

ஸ்ரீ பகவன்நாமா பப்ளிகேஷன்ஸ்
Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

பாகம் –6

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்கந்தம் 10 அத்தியாயம் 55 முதல்
ஸ்கந்தம் 11 அத்தியாயம் 13 வரை

Released by Maran's Dog, Toronto , Canada

இஞ்சிக்கொல்லை
R. சிவராம சாஸ்திரிகள்
அவர்களால் 1908ல் மொழி
பெயர்க்கப்பட்டது.

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ராம நாம வங்கியின் ப்ரசாரப் பிரசுரப் பிரிவு
ராம மந்திரம் –2, விநாயகம் தெரு,
சென்னை – 600 033. ☎: 24893736

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

TITLE	:	SRIMAD BHAGAVATHAM, TAMIL VACHANAM
AUTHOR	:	INZIKOLLAI R. SIVARAMA SASTRIGAL WRITTEN IN 1908
SIZE	:	CROWN OCTAVE
EXTENT	:	2736 PAGES CONSISTING OF SEVEN VOLUMES
PRICE	:	RS.600/ SET
FIRST EDITION	:	1996
SECOND EDITION	:	2004
THIRD EDITION	:	2007

பகவன் நாம விஷயம்

பகவன் நாம ரஸோதயம்

நாம ஸாம்ராஜ்யம்

மனாசே ஸ்லோக

பக்த ஸாம்ராஜ்யம்

பக்த ரத்தினங்கள்

பகவன்நாமரஸாயனம்

நாமப்ரபாவம்

ராம நாம மகிமை

ராமநாமத்தின்பெருமை

திருமாலை

ஸ்ரீபகவன் நாம மகிமை

ஆயிரம் நாமகுறிப்புகள்

ஜய கல்யாண ஸுக்திலஹரீ

நாமவைபவம்

நாமச் சிறப்பு

நாமவிசேஷம்

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளீயீடு :

ஸ்ரீமஹாபெரியவா ட்ரஸ்டின்

தேவீ நாமஸ்தோத்திர மஞ்ஜரீ பாகம் 1,2

ஸ்ரீ வாஞ்சிய க்ஷேத்ர மாஹாத்ம்யம்

ஸ்ரீ நடராஜ ஸ்தவ மஞ்ஜரீ

ஸ்ரீ நடராஜ நாம மஞ்ஜரீ

ஸ்ரீ சிவ நாம மஞ்ஜரீ

ஸ்ரீ பாலாஸபர்யா

ஸ்துதி த்ரயீ

ஸ்ரீ ஸ்கந்த ஸ்தவ மஞ்ஜரீ

ஸ்ரீ மீனாக்ஷீ ஸ்தோத்ர மஞ்ஜரீ

ஸ்ரீ தத்தாத்ரேய ஸ்துதி மஞ்ஜரீ

ஸ்ரீ மத்யார்ஜுனக்ஷேத்ரமாஹாத்ம்யம்

ஸ்ரீவிஷ்ணுஸ்துதிமஞ்ஜரீ

ஆத்மநாதஸ்துதிமஞ்ஜரீ

ஸ்ரீபகவதீஸ்துதிமஞ்ஜரீ

ஸ்ரீ ஸ்வாமிநாதஆத்ரேயனின் எழுத்துக்களில்

ஸ்ரீமத் பாகவத சங்க்ரஹம்

ஸ்ரீமத் ராமாயண சங்க்ரஹம்

ராம மாதுரி நாம சாம்ராஜ்யம் பக்த சாம்ராஜ்யம்

ஐயாவாளின் நாமஅனுபவங்கள்

தியாகராஜ அனுபவங்கள்

துளஸி ராமாயணம்

துளஸிதாஸரின் திவ்ய சரித்திரம்

ஹனுமான் சாலீசா

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

ஸ்ரீ ராம நாம வங்கியின் ராம நாம நோட்டு வாங்குவோருக்கும் மற்ற உதவிகள் செய்வோருக்கும் அளிக்கப்படும் ப்ரஸாதங்கள்.

ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்

ஸ்ரீமத் ராமாயண ரகசியம்

கலியுக தர்ம சாஸ்திரம்

பூஜா கல்பம்

கோஸம்ரக்ஷணம் (பசு பாதுகாப்பு)

ஆசாரமும் ஆஹாரமும்

ஸ்ரீ வாசுதேவ ப்ரம்மம் திவ்ய சரித்திரம்

மன அமைதி வேண்டுமா?

போதேந்த்ர அமுதம் (போதேந்திரரின் பொன்மொழிகள்)

நாம வைபவம்

நாம விசேஷம்

நாமச் சிறப்பு

ஸ்ரீ ஆலங்குடி சுவாமிகள் திவ்ய சரித்திரம்

ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு ஸஹஸ்ர நாமம்

சுந்தரகாண்டம்

தினசரி ராமாயணம்

தினசரி பாகவதம்

ராம நாம மஹிமை

ஸ்ரீ ஸூக்தம்

புருஷ ஸூக்தம்

ஸ்ரீபகவன் நாம மகிமை

ஆயிரம் நாமகுறிப்புகள்

ஜய கல்யாண ஸூக்திலஹரீ

ஸ்ரீமத் பாகவதம்-தமிழ் வசனம்

பாகம்–6

பொருளடக்கம்.

ஸ்கந்தம்–10

		பக்கம்
55.	ப்ரத்யும்ன ஜனனம்	1
56.	சத்தியபாமையின் விவாகம்	7
57.	கிருஷ்ணன் சததன்வாவைக் கொன்றது	15
58.	கிருஷ்ணன் காளிந்தி முதலியவர்களை.....	22
59.	நரகாசுர வதம்	31
60.	கிருஷ்ணன் ருக்மிணியுடன் பரிகாசமாய்.....	40
61.	கிருஷ்ணனுடைய புத்திர பௌத்ர சந்ததி	54
62.	அநிருத்தனுடைய சரிதம்	61
63.	பாணாசுர யுத்தம்	67
64.	நிருகருடைய கதை	77
65.	பலராமன் யமுனா நதியை இழுத்தது	85
66.	பகவான் பௌண்ட்ரகனைக் கொன்றது	90
67.	பலராமன் துவிதனைக் கொன்றது	96
68.	கௌரவர்கள் ஸாம்பனைக் கட்டியது	100
69.	நாரதர் கிருஷ்ணனுடைய கிருஹஸ்த.....	107
70.	ஸ்ரீகிருஷ்ணனுடைய நித்தியக் கடமைகள்	115
71.	கிருஷ்ணன் ராஜஸூயத்திற்காக இந்திரப்ரஸ்தம்.....	124
72.	பீமசேனர் ஜராசந்தனைக் கொன்றது	133
73.	கிருஷ்ணன் அரசர்களை விடுவித்தது	140
74.	தர்மபுத்திரர் ராஜசூய யாகம் செய்தது	145
75.	தர்மபுத்திரர் அவபிருதஞ் செய்தது	155
76.	ப்ரத்யும்னன் சால்வனுடன் யுத்தஞ் செய்தது	162
77.	சால்வவதம்	166

		பக்கம்
78.	தந்தவக்கிர வதம்	173
79.	பலராமன் தீர்த்தயாத்திரை செய்தது	179
80.	குசேல சரித்திரம்	184
81.	பகவான் குசேலருக்கு ஐஸ்வர்யத்தை.....	191
82.	ஸ்ரீகிருஷ்ணன் முதலியவர்கள் சூரிய.....	198
83.	திரௌபதியும் ருக்மிணி முதலியவர்களும்...	207
84.	வசுதேவர் யாகஞ் செய்தது	217
85.	கிருஷ்ணன் தாய்தந்தைகளுக்கு ஞானத்தை.....	232
86.	அர்ச்சுனன் சுபத்திரையை அபகரித்தது	243
87.	சுருதி கீதை	253
88.	விருகாசுரன் வரம் பெற்றது	312
89.	தேவர்களில் விஷ்ணு மேலானவர்.....	319
90.	ஸ்ரீகிருஷ்ணன் லீலைகளின் சுருக்கம்	328

ஸ்கந்தம்–11

1.	யதுகுலத்தை ப்ராஹ்மணர்கள் சபித்தது	337
2.	வஸுதேவருக்கு நாரதர் பாகவத தர்மத்தை ...	342
3.	மாயையும் பூஜாவிதியும்	354
4.	நாராயண மஹரிஷியின் மஹிமை	370
5.	பகவானிடத்தில் பக்தி....	377
6.	தேவர்கள் கிருஷ்ணனை வைகுண்ட.....	389
7.	பகவான் உத்தவருக்கு உபதேசித்தது	399
8.	மலைப்பாம்பு முதலியவைகளிடம்	413
9.	குரரம் முதலியவைகளிடத்தில்....	424
10.	தத்வக்ஞான ஸாதனங்கள்	431
11.	பக்த முக்த லக்ஷணங்கள்	439
12.	ஸாது ஸங்கத்தின் மஹிமை	449
13.	ஹம்ஸோ பாக்யானம்.	455

அத்தியாயம்–55

ப்ரத்யும்ன ஜனனம்

வாஸுதேவருடைய அம்சமான மன்மதன் முற் காலத்தில் ருத்திரனுடைய கோபத்தால் எரிக்கப்பட்டு சரீரமில்லாதவனாக இருந்தான். அவன் திரும்பவும் சரீரத்தை அடைய விரும்பி ஸ்ரீ கிருஷ்ணனை அடைந்தான். அந்த மன்மதன் ஸ்ரீ கிருஷ்ணனுடைய வீரியத்திற்கு ருக்மிணியிடத்தில் ப்ரத்யும்னன் என்ற பெயருடன் பிறந்தான். அவன் ஸகல குணங்களிலும் கிருஷ்ணனுக்கு சமமாக இருந்தான். அவன் பிறந்த பத்து நாளைக்குள், இஷ்டப்படி ரூபமெடுக்கச் சக்தியுள்ளவனான சம்பரனென்ற அஸுரன் அந்தக் குழந்தையைத் தனக்குச் சத்ருவென்று நினைத்து, ஒருவருக்குந் தெரியாமல் அந்தக் குழந்தையை அபஹரித்து, ஸமுத்திரத்தில் போட்டுத் தன்னுடைய கிருஹஞ்சென்றான்.

பின்பு ஸமுத்திரத்திலுள்ள ஒரு பருத்த மத்ஸ்யமானது அந்தத் குழந்தையை விழுங்கிற்று. அதன் பின் வலையர்கள் ஸமுத்திரத்தில் மீன் பிடிப்பதற்காக வலையை வீசும்பொழுது குழந்தையை விழுங்கிய மீனும், மற்ற மத்ஸ்யங்களும் வலையில் அகப்பட்டு வலையர்களால் பிடிக்கப் பட்டன. அந்தப் பருத்த மத்ஸ்யத்தை வலையர்கள் சம்பரனிடம் காணிக்கையாக கொடுத்தார்கள். அத்புதமான அந்த மத்ஸ்யத்தை சமையல்காரர்கள் பாகசாலைக்குக் (சமையல் கட்டு) கொண்டு போய் கத்தியால் பிளந்தார்கள். அதன் வயிற்றில் அத்புதமான ஒரு குழந்தை இருக்கக் கண்டு

மாயாவதியினிடம் அந்தச் சிசுவைக் கொடுத்தார்கள். அதனைக் கண்டு மாயாவதி, "இதென்ன மத்ஸ்யத்தின் வயிற்றில் குழந்தையிருக்கிறேதே" என்று ஸந்தேஹிக்கும் பொழுது நாரதர் அவ்விடம் வந்து அவளை நோக்கி, மத்ஸ்யத்தின் வயிற்றில் இந்தக் குழந்தை வந்த விஷயத்தை நன்றாகச் சொன்னார்.

அந்த மாயாவதி யென்பவள் மன்மதனுடைய பத்னியாகிய ரதிதேவி. அவள் சம்பரனுடைய பாகசாலையில் அன்னம்,பருப்பு, முதலியவைகளைச் சமையல் செய்யும்படி சம்பரனால் ஏற்படுத்தப்பட்டி ருந்தாள். மேலுமவள் ருத்திரனுடைய கோபத்தால் மன்மதன் எரிக்கப்பட்டுச் சரீரமற்றவனான பின் அவனுக்கு எப்பொழுது சரீரம் உண்டாகப் போகிறதென்று அதனை எதிர்பார்த்துக்கொண்டு, சம்பரனுடைய கிருஹத்தில் வசித்திருந்தாள். அப்ப டிப்பட்ட மாயாவதி மிக அழகுள்ள அந்தக் குமாரனைப் பார்த்து முகம் மலர்ந்து, மன்மதனே இந்தக் குழந்தையென்று தெரிந்துகொண்டு அவனிடத்தில் மிக்க அன்பு வைத்திருந்தாள். ஸ்வல்ப காலத்தில் அந்தக் குழந்தை யௌவன வயதை யடைந்தான். அப்பொழுது அவன் தன்னைப் பார்க்கும் ஸ்திரீ களுக்கு விளையாட்டையுண்டுபன்னினான்.

அப்பொழுது அந்த மாயாவதி தாமரைப் புஷ்பத்தின் இதழ் போன்ற கண்களுள்ளவரும், தொங் குகின்ற கைகளுள்ளவரும், மிக்க ஸௌந்தரியமுள்ள வரும், தனக்குப் பர்த்தாவுமான ப்ரத்யும்னரை வெட்கச் சிரிப்புள்ள பார்வையால் பார்த்துக் கொண்டு, அவரிடம் மன்மத விகாரமுள்ளவளாகி நின்றாள்.

அதனைக்கண்ட ப்ரத்யும்னர், "ஓ அம்மா ஸாதாரண ஸ்திரீபோல நீ வேறு எண்ணங்கொண்டிருப்பது ஸரியல்ல; நீ எனக்குத் தாயல்லவா? என்றார். அதனைக் கேட்ட ரதியானவள் (மாயாவதி), "நீர் ஸ்ரீமந் நாராயணருடைய புத்திரர்; நான் ரதி; நீர் மன்மதன்; ஆனதால் நான் உமக்குப் பத்தினி; இந்தச் சம்பரன் உம்மைக், குழந்தையாக இருக்கும் பொழுதே (பிறந்து பத்து நாளைக்குள்) கிருஷ்ணனுடைய கிருஹத்திலிருந்து அபஹரித்து ஸமுத்திரத்தில் போட்டான். அப்பொழுது ஒரு மத்ஸ்யம் விழுங்கிற்று அதன் வயிற்றிலிருந்து உம்மை நான் எடுத்துக் கொண்டேன். தாயான ருக்மிணி புத்திரனை விட்டுப் பிரிந்து குரரிபக்ஷி போல் கதுறுகிறாள். ஆனதால் இந்த சம்பரனை மோஹனம் முதலிய மாயையால் கொல்லும்; உமக்கு இவன் சத்ரு; பிறரால் கொல்ல முடியாதவன். அநேக மாயைகளை அறிந்தவன்" என்று சொல்லி ஸகல மாயைகளையும் நாசஞ் செய்யக் கூடிய மஹாமாயா வித்தையை உபதேசித்தாள்.

17–24. அந்த பிரத்யும்னர் அதனைப் பெற்றுக்கொண்டு சம்பரனிடஞ் சென்று, 'யுத்தத்திற்கு வா' என்று அழைத்தார். ஸஹிக்க முடியாத நிந்தா வார்த்தைகளைச் சொல்லி, அவனுக்குக் கோபத்தை யுண்டுபண்ணினார். அதனைக் , கேட்ட சம்பரன் காலால் மிதிக்கப்பட்ட ஸர்ப்பம் போல மிகவும் கோபங்கொண்டு, சிவந்த கண்களுள்ளவனாகி, கதாயுதத்தைக் கையிலெடுத்துக்கொண்டு வெளியில் வந்தான். மேலுமவன் வஜ்ரம் போல் கெட்டியான கதாயுதத்தைச் சுழற்றி, ப்ரத்யும்னரை நோக்கி

ப்ரயோகித்தான். அதனைக் கண்ட ப்ரத்யும்னர் தமது கதையால் அந்தக் கதாயுதத்தை அடித்து, மிக்க கோபத்துடன் தமது கதாயுதத்தை சம்பரன் மீது பிரயோகித்தார். அப்பொழுது அந்த அஸுரன் மயனுடைய மாயா பலத்தால் ஆகாயத்தில் மறைந்திருந்து கிருஷ்ணனுடைய புத்திரனாகிய ப்ரத்யும்னர் மீது அஸ்திரங்களை வர்ஷித்தான். அவைகளால் பீடிக்கப் பட்ட ப்ரத்யும்னர் ஸகல மாயைகளையும் நாசஞ் செய்யக் கூடியதும், ,அதிக ஸத்வ குணம் பொருந்தி யதுமான வித்தையைப் ப்ரயோகித்தார். அஸுரனும், காந்தர்வம், பைசாசம், குஹ்யகம், உரகம், ராக்ஷஸம் முதலிய பல அஸ்திரங்களைப் ப்ரயோகித்தான். ப்ரத்யும்னர் கூர்மையான கத்தியை யெடுத்து அவை களையும், கிரீட குண்டலங்களுள்ளதும், சிவந்த மீசையுள்ளதுமான சம்பரனுடைய தலையையும் வெட்டினார். தேவர்கள் புஷ்பங்களை வர்ஷித்து ஸ்துதித்தார்கள்.

25–30. பின்பு ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் ஸாமார்த்தியமுள்ளவளான மாயாவதி ப்ரத்யும்னரைத் தூக்கிக் கொண்டு கிருஷ்ணனுடைய அந்தப்புரஞ் சென்றாள். மின்னலுடன் மேகம் வந்தாற் போல அந்தப்புரத்தில் ஆகாயத்திலிருந்து ரதியுடன் இறங்கிய ப்ரத்யும்னரைக் கண்டு அவ்விடத்திலுள்ள ஸ்திரீகள் ஸ்ரீ கிருஷ்ணனென்று நினைத்து வெட்கப்பட்டு ஒளிந்து கொண்டார்கள். ப்ரத்யும்னர் மேகம் போல கருத்த நிறமுள்ளவராகவும் பீதாம்பரத்தைத் தரித்தவ ராகவும், தொங்குகின்ற கைகளுள்ளவராகவும், சிவந்த கண்களுள்ளவராகவும், கருத்தும் வக்ரமுமான மயிர்களால்

அலங்கரிக்கப் பெற்றதும், புன்சிரிப்புள்ளதும், அழகு பொருந்தியதுமான முகமுள்ளவராகவுமிருந்ததனால் ஸ்ரீகிருஷ்ணன் என்றே நினைக்கக்கூடியதாக இருந்தது. பின்பு அவர்கள் கிருஷ்ணனுக்கும் இவருக்குமுள்ள ஸ்வல்ப பேதத்தை மெள்ள மெள்ளக் கண்டு பிடித்து, உத்தம ஸ்திரீயுடனிருக்கும் அவருடைய ஸமீபஞ் சென்றார்கள்.

31–34. அப்பொழுது ப்ரத்யும்னரைப்பார்த்து அழகாகப் பேசக்கூடிய ருக்மிணியானவள் ஸ்நேஹத் தால் பால்சுரந்த ஸ்தனங்களுள்ளவளாகி, முன்பு காணாமற்போன தன்னுடைய குழந்தையை நினைத்துக் கொண்டாள். மேலும் அவள், "இந்த புருஷ ச்ரேஷ்டன் யார்? தாமரைக் கண்ணனாகிய இவன் யாருடைய புத்திரன்? எவளுடைய கர்பத்திலி ருந்தவன்? எவ்வித புண்ணியஞ்செய்து இவனை இவள் புத்திரனாக அடைந்திருக்கிறாள்? என்னுடைய குழந்தை ப்ரஸவ கிரஹத்திலிருந்தே காணாமற் போயிற்று; அந்தக்குழந்தை எவ்விடத்திலாவது ஜீவித்திருக்குமானால் இவனுக்குச் சமமான வயது, சரீரம் இவைகளுள்ளதாக இருக்கும். ஆனால் இவன் ஆகிருதி,அவயவங்கள், கண்ட ஸ்வரம் (பேச்சுக் குரல்), நடை, சிரிப்பு, பார்வை இவைகளில் ஸ்ரீ கிருஷ்ணனை ஒத்திருக்கிறான். இதெப்படிப் பொருந்தும், அல்லது, காணாமற்போன என்னுடைய குழந்தை இவன் தானோ; இவனென்ற நினைக்கிறேன்; இவனிடத்தில் எனக்கு மிக்க ப்ரியமுண்டாகியிருக்கிறது; இடது கை துடிக்கிறது" என்று யோசித்தாள்.

35–39. அந்தச் ஸமயத்தில் உத்தம ச்லோகராகிய

கிருஷ்ணன் தேவகி, வஸுதேவர் இவர்களுடன் அவ்விடம் வந்தார். ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ப்ரத்யும்னருடைய பிறப்பு முதலியவைகள் நன்றாகத் தெரியுமானாலும் மௌனமாக இருந்தார். அப்பொழுது அவ்விடம் வந்த நாரதர், பிறந்தவுடன் குழந்தையைச் சம்பரன் தூக்கிக் கொண்டு போனது முதலியவைகளை விஸ்தாரமாகச் சொன்னார். இந்த அத்புதமான செய்தியைக் கேட்ட கிருஷ்ணனுடைய அந்தப்புர ஸ்திரீகள் வெகுநாளாகக் காணாமற்போய் இப்பொழுது திரும்பவும் வந்தவரான ப்ரத்யும்னரைப் பார்த்து மிகவும் ஸந்தோஷித்தார்கள். மேலும் தேவகி, வஸுதேவர், ராம கிருஷ்ணர்கள், அவர்களுடைய ஸ்திரீகள் ஆகிய இவர்கள் தம்பதிகளான ப்ரத்யும்னன் ரதிகளைத் தழுவி மிகவும் ஆனந்தத்தையடைந்தார்கள். பின்னும் த்வாரகாவாஸிகளான ஜனங்கள், காணாமற்போன ப்ரத்யும்னன் வந்ததைக் கண்டு, "மரணமடைந்தவன் பிழைத்து வந்தாற்போல இவன் தைவாதீனமாகத் திரும்பி வந்தான்" என்று சொல்லிக் கொண்டார்கள்.

40. அந்த ப்ரத்யும்னர் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு சமமான ஆகிருதியுள்ளவராக இருந்ததால் அந்த ஸ்திரீகள், தமது பர்த்தாவென்று நினைத்தது ஆச்சரியமல்ல. நினைத்த மாத்திரத்தில் மனத்தைக் கலக்குகிறவனாகிய மன்மதனை நேரில் பார்த்தால் மனம் ஏன் கலங்காது? மேலும், லக்ஷ்மீக்கு வாசஸ்தலமாகிய கிருஷ்ணனுடைய ப்ரதிபிம்பமும், மன்மதனுமாகிய ப்ரத்யும்னர் ஸ்திரீகளுடைய மனத்தை அபஹரிப்பதில் என்ன ஆச்சரியம்?

அத்தியாயம் – 56

ஸத்யபாமையின் விவாஹம்

ஸத்ராஜித் என்பவர் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஒரு ஸமயம் அபராதஞ் செய்து அதனை நிவர்த்தித்துக் கொள்வதற்காகத்தம்முடைய கன்னிகையான ஸத்யபாமையையும், ஸ்யமந்தகமென்ற ரத்னத்தையும் ஸ்ரீ கிருஷ்ணனுக்குக் கொடுத்தார் என்று சுகர் சொல்ல அதனைக்கேட்ட பரீக்ஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி, "ஓ ப்ராஹ்மண, ஸத்ராஜித் என்பவர் கிருஷ்ணனுக்கு என்ன அபராதஞ் செய்தார்? ஸ்யமந்தகமென்ற ரத்தினம் அவருக்கு எப்படி கிடைத்தது? அவர் எதற்காகத்தமது பெண்ணாகிய சத்யபாமையைக் கிருஷ்ணனுக்குக் கொடுத்தார்?" என்று கேட்டார்.

8–9. அதனைக் கேட்ட சுகர் அரசனை நோக்கி, ஸத்ராஜித் என்பவர் ஸூர்யனை உபாஸித்து ஸூர்யனிடம் பக்தி செய்தார்; அவருடைய பக்தியால் ஸூர்யன் மிகவும் ஸந்தோஷத்தை அடைந்து, அவருக்குத் தோழனாகவுமிருந்தார். அதனால் ஸூர்யன் ஸத்ராஜித் என்பவருக்கு ஒரு ரத்தினத்தைக் கொடுத்தார். அந்த ரத்தினத்தைக்கழுத்தில் ஹாரமாகத் தரித்துக் கொண்டு ஸத்ராஜித் த்வாரகைக்கு வந்தார். அவர் ஸூர்யன் போலப் ப்ரகாசித்ததனால் அவருடைய தேஜஸ்ஸால் ஸத்ராஜித்தென்று தெரிந்து கொள்ள முடியாமலிருந்தது. அவருடைய தேஜஸ்ஸால் கண் தெரியாதவர்களாகி ஜனங்கள் ஸூர்யன் என்று

ஸந்தேஹித்துச், சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணனை நோக்கி, "ஓ நாராயண!' சங்கம், சக்கிரம், கதாயுதம் இவைகளைத் தரிப்பவரே! தாமோதர! தாமரைமலர்ப் போன்ற கண்களுள்ளவரே! கோவிந்த! யதுநந்தன! உமக்கு நமஸ்காரம்; இந்த ஸூர்யன் உம்மைத் தர்சிப்பதற்காக வருகிறார்; அவருடைய தேஜஸால் மனிதர்களுடைய கண்கள் அடக்கப்படுகின்றன; தேவர்கள் உம்முடைய மார்க்கத்தைத் தேடுகிறார்களல்லவா ? நீர் இப்பொழுது யதுவம்சத்தில் அவதரித்து மறைந்திருப்பதால் உம்மைத் தர்சிப்பதற்காக ஸூர்யன் வருகிறார்" என்று சொன் னார்கள். அதனைக் கேட்ட கிருஷ்ணன் சிரித்து, "இவர் ஸூர்யனல்ல; ஸத்ராஜித் ரத்தினத்துடன் வருகிறார்" என்றார்.

10–29. பின்பு ஸத்ராஜித் தம்முடைய கிருஹஞ் சென்று, மங்கள கார்யங்களைச் செய்து ப்ராஹ்ம மணர்களைக் கொண்டு ஸ்வஸ்திவாசனம் முதலிய வைகளைச் செய்து, அந்த ரத்தினத்தைப் பூஜா கிருஹத்தில் ஸ்தாபித்தார். அந்த ரத்தினம் ஒவ்வொரு தினத்திலும் எட்டுபாரம் ஸ்வர்ணத்தையுண்டுபண்ணிற்று எந்த விடத்தில் இந்த ரத்தினம் பூஜிக்கப்படுகிறதோ, அந்த விடத்தில் பஞ்சம், அகால மரணம், அமங்களம், மன வருத்தம், சரீரவ்யாதி, அசுபங்கள் இவைகள் நேரிடுகிறதில்லை. மேலும் அவ்விடத்தில் மாயாவி கள் வஸிக்க மாட்டார்கள். பின்னொருகால் ஸ்ரீ கிருஷ்ணன் உக்ரஸேனருக்காக அந்த ரத்தினத்தைக் கொடுக்கும்படி ஸத்ராஜித்தைக் கேட்டார். அவர் பணத்தாசையால் "கிருஷ்ணன் கேட்கும் பொழுது

கொடாமலிருந்தது ஸரியல்ல" என்று எண்ணாமல் ரத்னத்தைக் கொடுக்கவில்லை.

பின்பு ஒரு நாள் ஸத்திராஜித் என்பவருடைய ஸஹோதரனாகிய ப்ரஸேனன் என்பவன் அந்த ரத்தினத்தைத் தரித்துக்கொண்டு குதிரையின் மீதேறி வேட்டைக்குச் சென்றான். அப்பொழுது ஒரு சிங்கம் ப்ரஸேனனைக் கொன்று அந்த ரத்னத்தை எடுத்துக் கொண்டு ஒரு குஹையில் சென்றது. அந்த சிங்கத்தை ஜாம்பவான் கொன்று, அந்த ரத்தினத்தை எடுத்துக் கொண்டு தம்முடைய குஹைக்குச் சென்று, ரத்தினத்தைக் குழந்தைக்கு விளையாட்டுச் ஸாமானாகச் செய்தார். (தொட்டிலில் கட்டினார். பகவானிடத்தில் ஸமர்பியாமல் அனுபவிப்பவர்கள் கெடுதியடைவார்களென்று காட்டப்பட்டது) பின்பு ஸத்ராஜித் ஸஹோதரரைக் காணாமல் மிகவும் வருத்தமடைந்தார். மேலும் அவர், 'ரத்தினத்துடன் காட்டிற்குச்சென்ற என்னுடைய ஸஹோதரன் கிருஷ்ணனால்தான் கொல்லப்பட்டிருக்கவேண்டும்' என்று சொன்னார். (கிருஷ்ணன் ரத்தினத்தில் ஆசை பட்டிருந்தமையால்) அதனைக் கேட்டு ஜனங்களும் அப்படியே ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ள ஆரம்பித்தார்கள்.

அதனைக் கேட்ட பகவான், தமக்கு நேர்ந்த அப கீர்த்தியை நிவர்த்தித்து கொள்வதற்காகப் பட்ட ணத்து ஜனங்களை அழைத்துக் கொண்டு, ப்ர ஸேனன் சென்ற மார்க்கமாகச் சென்றார். வனத்தில் ப்ரஸேனனும் அவனுடைய குதிரையும் சிங்கத்தால் கொல்லப்பட்டிருப்பதையம் அந்தச் சிங்கம் மலையின்

தாழ்வரையில் கொல்லப்பட்டிருப்பதையும் பார்த்தார்; ஜனங்களுக்கும் காண்பித்தார். மேலும் அவர் ஜனங்களை வெளியில் நிறுத்தி தாமொருவராகக் குஹைக்குட் சென்றார். அது மிக்க இருளுள்ளதாக இருந்தது. அந்தக் குஹையில் குழந்தைக்கு விளை யாட்டு ஸாமானாகச் செய்யப்பட்டிருக்கும் அந்த ரத்தினத்தைக் கிருஷ்ணன் பார்த்து, அதனையெடுத்துக் கொள்ளுவதற்காக குழந்தையின் ஸமீபத்தில் நின்றார், ஒரு பொழுதும் பார்க்கப்படாத குழந்தையின் அருகிலிருந்த உபமாதா (வேலைகாரி) பயந்து உரக்கக்கதறினாள்.

அதனைக் கேட்டு மிக்க பலசாலியான ஜாம் பவான் மிக்க கோபத்துடன் ஓடிவந்தார். பின்னும் அவர் ஸ்ரீகிருஷ்ணனுடைய மஹிமையை அறியாமல், அவரை ஸாமான்ய மனிதனாக நினைத்துத் தமக்கு யஜமானனானாலும் அவருடன் யுத்தஞ் செய்தார். அது மாமிசத்திற்காக இரண்டு பருந்துகள் யுத்தஞ் செய்தாற்போலிருந்தது. அவ்விருவர்களும் இடிபோலக் கெட்டியான முஷ்டிகளால் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டு இருபத்தெட்டு நாள் இரவும் பகலும் இடைவிடாமல் யுத்தஞ் செய்தார்கள். கிருஷ்ண னுடைய முஷ்டிகளால் அடிக்கப்பட்ட ஜாம்பவானு டைய கை கால் முதலிய அவயவங்கள் சோர்வு அடைந் தன; அவருடைய சரீரம் முழுவதும் வியர்வையை அடைந்தது; பலங்குறைந்தது.

அப்பொழுது ஜாம்பவான் மிகவும் ஆச்சரிய மடைந்து கிருஷ்ணனை நோக்கி, "நீர் ஸகல ப்ராணி களுக்கும் ப்ராணனாகவும், இந்திரியங்களின்

சக்தியாகவும், ஹிருதயத்தின் சக்தியாகவும், தேஹ பலமாகவும் இருக்கிறீர் என்பது எனக்குத் தெரியும். மேலும், நீர் மஹாவிஷ்ணு; புராணபுருஷன்; எல்லாவற்றையும் படைத்தவர்; அதிபதி; நீர் ஸகல ப்ரஜாபதிகளையும் ஸிருஷ்டித்தவர்; ஸிருஷ்டிக் கப்பட்ட ஸகல வஸ்துக்களுக்கும் நீர் உபாதான காரணம். (முக்கிய காரணம்) மேலும் நீர், கால ஸ்வரூபியாகவும் இருக்கிறீர்; பரமேச்வரர்;ஸகல ஆத்மாக்களுக்கும் ஆத்மாவாக இருப்பவர்; நீர் ஸ்ரீ ராமனாக அவதரித்திருக்கம்பொழுது ஸமுத்தி ரனிடம் கோபங்கொண்டு அதனைப் பார்த்தீர். அதனால் முதலை, திமிங்கலம் முதலியவைகளடங்கிய சமுத்திரம் மேலும் கீழுமாகக் கலங்கி மார்க்கத்தைக் கொடுத்தது. அதன் வழியாக அணை கட்டினீர். அதனால் உம்முடைய கீர்த்தி ப்ரகாசிக்கிறது. பின்பு அந்த ஸேதுவின் வழியாக லங்காநகரஞ் சென்று அந்த பட்டணத்தை எரித்தீர். பின்பு உம்முடைய பாணங்களால் வெட்டப்பட்ட ராவணனுடைய தலைகள் பூமியில் விழுந்தன. அப்படிப்பட்ட பகவான் என்று எனக்குத் தெரியும்" என்றார்.

30–34. இப்படித் தம்மைத் தெரிந்து கொண்ட ஜாம்பவானைத் தேவகியின் புத்திரராகிய கிருஷ்ணன் க்ஷேமத்தைச் செய்யக்கூடிய தமது திவ்ய ஹஸ்தத்தால் தடவிக்கொடுத்து, "ஓ கரடிகளுக்கு அதிபதியே வீணான அபகீர்த்தி எனக்கு வந்திருப்பதால் அதனை நிவர்த்தித்துக் கொள்வதற்காக இந்த ரத்னத்தைத் தேடிக்கொண்டு இவ்விடம் வந்தேன்" என்று மிகுந்த கிருபையுடன் பக்தனை நோக்கி மேகம் கர்ஜிப்பது

போல உரக்கச்சொன்னார். அதனைக்கேட்ட ஜாம்பவான அந்த ரத்தினத்தைப் பகவானிடத்தில் ஸமர்பித்துத் தமது பெண்ணாகிய ஜாம்பவதி யென் பவளையும் கொடுத்தார். பின்னும் அவர், மற்றும் சிறந்த ரத்தினங்களால் ஸ்ரீகிருஷ்ணனைப் பூஜித்தார். அதனால் பகவான் ஸந்தோஷித்து, மிக ப்ரீதியுடன் ஜாம்பவானுக்கு மோக்ஷத்தைக் கொடுத்தார்.

35–47. குஹையின் வாயிற்படியிலிருந்து ஜனங்கள் பன்னிரண்டு நாட்கள் கிருஷ்ணனுடைய வரவை எதிர்பார்த்திருந்தும் கிருஷ்ணன் குஹையி லுருந்து வெளியில் வராததனால் மிகவும் துக்கித்து, த்வாரகைக்குச் சென்றார்கள். அதனைக்கேட்டு தேவகியும், ருக்மிணி தேவியும், வஸுதேவரும், ஸஹிருத்துக்களும், பந்துக்களும், கிருஷ்ணனைப் பாராமல் துக்கித்தார்கள். மேலும் த்வாரகாவாஸி களான ஜனங்கள் ஸத்ராஜித்தை நிந்தித்துக்கொண்டு, "கிருஷ்ணன் க்ஷேமமாகத் திரும்பிவரவேண்டும்" என்று சந்திரபாகாவென்ற துர்க்காதேவியைப் பூஜித் தார்கள். இப்படி அவர்கள் துர்க்கையைப் பூஜிக்க, அவள் அவர்களை ஆசிர்வதித்தாள். அதனால் ஸ்ரீகிருஷ்ணன் குஹையிலிருந்து வெளிக்கிளம்பி ரத்தினத்துடனும் ஜாம்பவதியுடனும் ஜனங்களைச் ஸந்தோஷிக்கச் செய்தார். மரணமடைந்தவன் திரும்பி வந்தாற்போல் பகவான் ரத்தினத்துடனும், ஜாம்பவதியுடனும் வந்ததைக் கண்ட எல்லோரும் மிக்க ஆனந்தத்தை அடைந்தார்கள். அதன்பின் ஸ்ரீகிருஷ்ணன் உக்ரஸேனருடைய முன்பாக ஸபையில் ஸத்ராஜித்தை அழைப்பித்து ரத்தினங்கிடைத்த மார்க்கத்தைச் சொல்லி, ரத்னத்தை அவரிடம் கொடுத்தார்.

அப்பொழுது ஸத்ராஜித் மிகவும் வெட்கமடைந்து, தலைகுனிந்து தாம் செய்த குற்றத்தால் மனவருத்த மடைந்து, ரத்தினத்தை வாங்கிக்கொண்டு தம்முடைய கிரஹஞ் சென்றார். பின்னும் அவர், "மிக்க பலிஷ்டராகிய கிருஷ்ணனுக்கு அபராதஞ் செய்து அவருடைய விரோதத்தை ஸம்பாதித்துக் கொண்டோமே இதனால் என்ன கெடுதி நேருமோ, இதற்கு என்ன செய்யலாம். எதைச் செய்தால் எனக்கு க்ஷேம முண்டாகும்? எதைச் செய்தால் ஜனங்கள் நிந்திக்காமலிருப்பார்கள். நான் தீர்க்கமான ஆலோ சனையில்லாமல் பணத்தில் ஆசையால் மூடனாகிக் கிருஷ்ணனுக்கு அபராதஞ் செய்தேனே; ஆனதால் அதனை நிவர்த்தித்துக் கொள்வதற்காக அந்த ரத்தினத்தையும், என்னுடைய பெண்ணாகிய ஸ்திரீ ரத்தினத்தையும் கிருஷ்ணனிடம் சமர்பித்து கிருஷ்ண னை மணப்பிள்ளையாகச் செய்து கொள்ளுகிறேன்.

இப்படிச்செய்தால் அவர் நம்மிடத்தில் ப்ரியப் படுவார். இது நல்ல உபாயம். இல்லாவிட்டால் இதற்கு நிவர்த்தியில்லை" என்று யோஜித்து அந்த ரத்தினத்தை எடுத்துக்கொண்டு தமது பெண்ணாகிய ஸத்தியபாமையுடன் கிருஷ்ணனிடஞ் சென்று, பெண்ணையும், ரத்தினத்தையும் பகவானிடம் ஸமர்பித்தார். அந்தப் பெண் மேலான ஸ்வபாவம், ரூபம், ஔதார்யம் முதலிய நற்குணம் பொருந்தியவள்; அவளை அநேகர் கல்யாணஞ் செய்துகொள்ள விரும்பித் தங்களுக்குக் கொடுக்கும்படி ஸத்ராஜித்தைக் கேட்டதுண்டு. அப்படிப்பட்ட உத்தம குணங்கள் பொருந்திய ஸத்தியபாமையை ஸ்ரீ கிருஷ்ணன் விதிப்படி விவாஹஞ் செய்து கொண்டார். மேலும்

ஸ்ரீகிருஷ்ணன் ஸத்ராஜித்தை நோக்கி, "இந்த ரத்தினம் நமக்கு வேண்டாம், ஸூர்ய பக்தராகிய உம்மிடத்திலேயே இருக்கட்டும். இதன் பயனை நாம் அடைவோம்" என்றார். (உமக்குப் புத்திரனில்லாததனால் உம்முடைய தனங்கள் யாவும் என்னுடையதுதான் என்று கருத்து).

நோட்டு

எட்டுபாரம்: நான்கு நெல்கள் கொண்ட நிரை. குஞ்சம். ஐந்து குஞ்சம் பணமெனப்படும்; எட்டு பணங்கள் கொண்டது தரணமெனப்படும்; எட்டு தரணங்கள் கொண்டது கர்ஷமெனப்படும்; நான்கு கர்ஷங்கொண்டது பலமெனப்படும்; நூறு பலங் கொண்டது துலாமெனப்படும்; இருபது துலாங் கொண்டது பாரமெனப்படும்.

♣ ♣ ♣ ♣

கிருஷ்ணன் சததன்வாவைக் கொன்றது

பாண்டுவின் புத்திரர்களாகிய தர்மபுத்திரர் முதலியவர்களும், குந்தியும் அரக்குமாளிகையில் எரிக்கப்பட்டு மரணமடைந்தார்கள் என்ற ஸமாசாரத்தை ஸ்ரீகிருஷ்ணன் கேள்விப்பட்டு அவர்கள் ஜீவித்திருக்கிறார்களென்ற உண்மையை அறிந்தவரானாலும் அறியாதவர்போல திருதராஷ்டிரர் முதலியவர்களை துக்கப்ரச்னஞ் செய்வதற்காக பலராமனுடன் ஹஸ்தினாபுரஞ் சென்றார். அவ்விடத்தில் பீஷ்மர், திருதராஷ்டிரர், விதுரர், காந்தாரி, த்ரோணர் ஆகிய இவர்களைப் பார்த்து இராமகிருஷ்ணர்கள் 'ஐயோ கஷ்டம்' என்று சொல்லி ஸமதுக்கர்களாக அழுதார்கள்.

3–24. அந்த ஸமயம் துவாரகையில் அக்ரூரர், கிருதவர்மா, இவர்கள் சததன்வா என்பவரை நோக்கி, "இந்த ஸத்ராஜித் பெண்ணை நமக்குக் கொடுப்பதாக உறுதிசொல்லி, அப்படிச் செய்யாமல் நம்மை விரோதித்து ஸ்ரீகிருஷ்ணனுக்குக் கொடுத்தான். மேலும் ஸஹோதரனாகிய பிரசேனன் மரணமடைந்த பின் இவன் ஏன் உயிரையிழக்கவில்லை? ஆனதால் இவனுடைய ரத்தினத்தை ஏன் பிடுங்கிக் கொள்ளக் கூடாது" என்று சொன்னார்கள். அதனைக் கேட்டமிக்க அஸத்தாகிய சததன்வா புத்தி மயங்கி, அவர்களுடைய வார்த்தையை அங்கீகரித்து, மரணம் சமீபத்து விட்டதனால், ஸத்ராஜித்தை தூங்கும் ஸமயத்தில் கொன்றான். ஸ்திரீகள் அனாதர்கள்

போல கதறும்பொழுது அவர்களை லக்ஷ்யஞ் செய்யாமல் கசாப்புக்கடைக்காரன் பசுவைக் கொல்வது போல ஸத்ராஜித்தைக் கொன்று, அந்த ரத்தினத்தை எடுத்துக்கொண்டு சென்றான். ஸத்திய பாமையும் தன்னுடைய தகப்பனார் சததன்வாவினால் கொல்லப் பட்டதைப் பார்த்து மிக்க துக்கத்தை அடைந்து, "கஷ்டம்; நான் அடிக்கப்பட்டேன்! ஓ அண்ணா! ஓ அண்ணா" என்று கதறினாள். மேலும் அவள் எண்ணெய்க் கொப்பரையில் மரித்த தந்தையை வைத்துவிட்டு அஸ்தினாபுரஞ் சென்றாள். பின்னு மவள் அவ்விடத்தில் ஸ்ரீகிருஷ்ணனைத்தர்சித்து, மிகுந்த தாபமுள்ளவளாகித் தந்தையின் மரணத்தைத் தெரிவித்தாள். பகவான் ஸகல விஷயங்களையும் அறிந்தவரானாலும், அதைக்கேட்டு உலக வழக்கப் படி, "நமக்கு மிகுந்த கஷ்டம் நேர்ந்தது" என்று சொல்லிக் கண்ணீரைப் பெருக்கி அழுதார். பலராமனும் துக்கித்தார். பின்பு ஸ்ரீகிருஷ்ணன் பலராமன், ஸத்தியபாமை இவர்களுடன் த்வாரகா நகரஞ் சென்று சததன்வாவைக் கொன்று, அந்த ரத்தினத்தைப் பிடுங்கிக் கொள்ள வேண்டுமென்று முயன்றார். அதனைக் கேள்விப்பட்ட சததன்வா வென்பவன் பயந்து உயிரை காப்பாற்றிக் கொள்ள விரும்பி கிருதவர்மாவென்பவரிடஞ் சென்று, தனக்கு ஒத்தாசை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டான்.

அதனைக்கேட்ட கிருதவர்மா வென்பவன் எல்லாவற்றிற்கும் ஈச்வரர்களான ராமகிருஷ்ணர் களுக்கு நான் அபராதஞ் செய்யமாட்டேன்.

அவர்களுக்கு அபராதஞ் செய்பவன் க்ஷேமத்தை அடைவானா? அவர்களை விரோதித்ததால் கம்ஸனும்,அவனைச் சார்ந்தவர்களும் நாசமடைந் தார்கள். ஜராஸந்தன் பதினேழுதரம் அவர்களுடன் யுத்தஞ்செய்தும் அபஜயத்தையடைந்து ரதமில்லாமல் நடந்து சென்றான். ஆனதால் அவர்களை ஜயிப்பதற்கு யாரால் முடியும்" என்றான். அதனைக் கேட்ட சததன்வா அக்ரூரரிடஞ் சென்று. அவரைத் தனக்கு ஸஹாயஞ் செய்ய வேண்டுமாறு கேட்டுக் கொண்டான்.

அதனைக் கேட்ட அக்ரூரர், "ஈச்வரர்களான ராமகிருஷ்ணர்களுடைய பலத்தையறிந்தவன் அவர்களை விரோதித்துக் கொள்வானா? எவர் இந்த ஜகத்தை விளையாட்டாகப் படைக்கிறாரோ. எவர் காப்பாற்றுகிறாரோ, ஸம்ஹரிக்கிறாரோ, எந்தப் பகவானுடைய மாயையால் மோஹித்து ப்ரஜா பதிகளும் எவருடைய உண்மையை அறியவில்லையோ, எவர் ஏழு வயது சிறுவனாக இருக்கும் பொழுது ஒரு கையால் கோவர்த்தன மலையைத் தூக்கி, சிறுவன் நாய்க் குடையைப்பிடித்தாற் போல் குடையாகப் பிடித்தாரோ, அந்தக் கிருஷ்ணனை நமஸ்கரிக்கின்றோம். அவர் அத்புதமான கர்மங்களைச் செய்தவர்; நாசமில்லாதவர்; எல்லாவற்றிற்கும் ஆதியாக இருப்பவர்; கூடஸ்தர்; (கூடம் போலிருப்பவர்; துட்டானுடைய பட்டரைக்குக் கூடமென்று பெயர். அது தன்னிடம் வந்த தங்கம் முதலியவைகளை ஆபரணங்களாக மாற்றித் தான் விகாரத்தை அடையாமலிப்பதுபோல் விகாரமற்றவரென்று கருத்து.) எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக இருப்பவர்.

ஆனதால் அவருக்கு அபராதஞ் செய்யமாட்டேன்? என்றார். அதனைக் கேட்ட சததன்வா, அந்த ரத்தினத்தை அவரிடங்கொடுத்து விட்டு, நூறு யோஜனை தூரம் செல்லக்கூடிய குதிரையின் மீதேறிச்சென்றான். ராமகிருஷ்ணர்களும் கருட த்வஜமுள்ள ரதத்தின் மீதேறிக்கொண்டு குருவை (மாமனாரை) கொன்றவனான சததன்வாவைத் தூரத்தினார்கள். பின்பு மிதிலா நகரத்தின் அருகிலுள்ள தோட்டத்தில் சததன்வாவின் குதிரை களைத்துக் கீழே விழுந்தது. சததன்வா அதை விட்டிறங்கிக் காலால் நடந்து ஓடினான். ஸ்ரீ கிருஷ்ணனும் மிகுந்த கோபத்துடன் அவன்பின் ஓடினார். இப்படிப் பதாதியாக ஓடும் சததன்வாவின் பின் பகவான் ஓடி கூர்மையான முனையுள்ள சக்கரத்தினால் அவனுடைய தலையை வெட்டி அவனுடைய வஸ்திரத்தில் ரத்தினமிருக்கிறதாவென்று தேடினார். பின்னுமவர் பலராமனிடஞ் சென்று. சததன்வாவை வீணாகக் கொன்றோம். அவனிடத்தில் ரத்தினமில்லை" என்றார். அதனைக் கேட்ட பலராமன், "அந்த ரத்தினத்தைச் சததன்வா எவனி டத்திலாவது கொடுத்திருக்க வேண்டும். ஆனதால் நீ துவாரகா நகரஞ் சென்று அந்த புருஷனைத் தேடவேண்டும். எனக்கு ஜனகமஹாராஜன் மிகவும் மித்திரரானதால், அவரைப் பார்ப்பதற்காக மிதிலா நகரம் போகிறேன். நீ த்வாரகைக்குப்போகலாம் என்று சொல்லிப் பலராமன் மிதிலைக்குச் சென்றார்.

25–27. அப்பொழுது மிதிலா நகரத்து அரச னாகிய ஜனக மஹாராஜன் அந்தப் பலராமனைப் பார்த்து, சீக்கிரமாக எழுந்து மிகுந்த ப்ரியத்துடன்

பூஜிக்கத்தக்கவரான பலராமனைப் பூஜித்தார். அதனைப் பெற்றுகொண்ட பலராமன் அந்த நகரத்தில் சில வருஷகாலம் வஸித்தார். அந்தச் ஸமயத்தில் திருதராஷ்ட்ரருடைய குமாரனாகிய துர்யோதனன் மகாத்மாவாகிய ஜனகரால் பூஜிக்கப் பட்டு, பலராமனிடம் கதாயுதத்தை அப்பியஸித்தார்.

28–42. ஸ்ரீகிருஷ்ணன் தம்முடைய பார்யையான ஸத்தியபாமைக்குப்பிரியத்தைச் செய்ய விரும்பின வரானதால் த்வாரகா நகரஞ்சென்று ஸத்திய பாமையை நோக்கி, "சததன்வாவைக்கொன்றும் ரத்தினம் கிடைக்கவில்லை" என்பதைச் சொன்னார். பின்னுமவர் மரணமடைந்தவரான ஸத்ராஜித்தை உத்தேசித்துச் செய்யவேண்டிய உத்திரகிரியைகள் எல்லாவற்றையும் பந்துக்களுடன் செய்வித்தார். அப்பொழுது ஸத்ராஜித்தைக் கொல்லும்படி சததன்வாவைத் தூண்டினவர்களான அக்ரூரரும், கிருதவர்மாவும் மிகவும் பயந்து நடுங்கினவர்களாக அயல்தேசஞ் சென்றார்கள். (அக்ரூரர் ஸ்ரீகிருஷ்ண னுடைய அனுமதியின் மீது தான் த்வாரகையை விட்டுச் சென்றார்; கிருதவர்மாவை பகவான் உபேக்ஷித்தாரென்று கருத்து.) அக்ரூரர் த்வாரகையை விட்டுச் சென்றபின் த்வாரகா நகரத்தில் அரிஷ்டங் களுண்டாயின. ஜனங்களுக்கு சரீர வ்யாதிகளும் மன வருத்தங்களும நேர்ந்ததுமின்றி இடிவிழுவது, பூமி அசைவது முதலிய கெடுதிகளும் ஸம்பவித்தன, அப்பொழுது சில பெரியோர்கள் ஸகல மஹர்ஷி களாலும் த்யானஞ் செய்யப்படும் ஸ்ரீகிருஷ்ணன் இருக்குமிடத்தில் அரிஷ்டங்கள் சம்பவிக்குமா? இவை அவருடைய ஸங்கல்பத்தால் உண்டாகின்றன

என்று நினையாமல் ஸ்ரீ கிருஷ்ணனுடைய மஹிமையை மறந்து, "முன்னொருகால் காசி தேசத்தில் மழை பெய்யாமல் பஞ்சமும் நேர்ந்தது. அப்பொழுது அந்தத் தேசத்து அரசன் அவ்விடம் வந்த ச்வபல்கரென்பவருக்குத் தம்முடைய புத்திரியான காந்தினியென்பவளைக் கல்யாணஞ் செய்வித்தார். பின்பு மழை பெய்து ராஜ்யம் செழித்தது. அவருடைய புத்திரரான அக்ரூரரும் அவ்வளவு மஹிமையுள்ளவர்; அவர் எவ்விடத்தில் வஸிக்கிறாரோ அவ்விடத்தில் மழை பெய்யும்; தாபங்கள் உண்டாகா; வைசூரி முதலிய உபத்திரவங்கள் இல்லை என்று சொல்லிக் கொண்டார்கள். அதனைக்கேட்ட பகவான் அக்ரூரர் த்வாரகையில் இல்லாமலிருப்பது மாத்திரத்தால் அரிஷ்டங்களுண்டாகவில்லை; அந்த ரத்தினம் இவ்வாமலிருப்பதுங் காரணம்' என்று யோசித்து, தூதர்களையனுப்பி அக்ரூரரை வரவழைத்தார். அவருக்கு மரியாதை செய்தார்; ப்ரியமான வார்த்தைகளை சொன்னார்.

பின்பு ஸ்ரீகிருஷ்ணன் எல்லோருடைய அபிப்பிராயத்தையும் அறிந்தவராகையால் சிரித்துக்கொண்டு அக்ரூரை நோக்கி, "ஓ அக்ரூரரே சததன்வா ஸ்யமந்தகமென்ற ரத்தினத்தை உம்மிடங் கொடுத்திருக்கிறாரென்பது முன்னமேயே நமக்குத் தெரியும். ஸத்ராஜித்துக்கு ஆண் ஸந்ததியில்லாததலால் அவருடைய பெண்ணாகிய ஸத்தியபாமையின் புத்திரர்கள் அந்த ரத்தினத்தை அடைய வேண்டியவர்களாகிறார்கள். மாதாமஹருக்குச் செய்யவேண்டிய தர்ப்பணம், பிண்டதானம் முதலியவைகளை பெண்ணின் பிள்ளைகள் செய்துவிட்டு அவருடைய

தனத்தை எடுத்து கொள்ளவேண்டுமென்று சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் இந்த ரத்தினமானது, மற்றவர்களால் காப்பாற்ற முடியாதது. நீர் நல்ல வ்ரதங்களை அனுஷ்டித்த வரானதால் உம்மிடத்திலேயே இருக்கட்டும். ஆனதால் இந்த ரத்தினத்தின் விஷயமாக நான் சொல்வதைப் பலராமன் ஒப்புக்கொள்ளவில்லை. (நம்பவில்லை) ஓ மிகுந்த அதிஷ்டமுள்ளவரே அந்த ரத்தினத்தைக் காண்பித்து, பந்துக்களுக்கு என்னிடமிருக்கும் ஸம்சயத்தை நிவர்த்தியும்; நீர் அநேக யாகங்களை அனுஷ்டித்து வருவதால் அந்த ரத்தினம் உம்மிடத்தில் தான் இருக்கிறது" என்று நல்வார்த்தையாக சொன்னார். அதனைக்கேட்ட ச்வபல்கருடைய புத்திரராகிய அக்ரூரர் வஸ்திரத்தில் மறைத்து வைத்திருந்த ஸூர்யன் போன்ற அந்த ரத்தினத்தை ஸ்ரீ கிருஷ்ணனிடங் கொடுத்தார். அதனைப் பகவான் பந்துக்களுக்குக் காண்பித்துத் தனக்கு நேர்ந்த அபவாதத்தை (ஸ்ரீ கிருஷ்ணனே அக்ரூரரை தேசாந்திரம் அனுப்பினாரென்பதை) நிவர்த்தித்து அந்த ரத்தினத்தை அக்ரூரரிடமே கொடுத்தார்.

43. எல்லாவற்றிற்கும் அதிபதியும், எங்கும் இருப்பவருமான பகவானுடைய இந்த சரித்திரம் பாபத்தை போக்கக்கூடியது; மேலான மங்களத்தைக் கொடுக்கக்கூடியது; ஆனதால் இதை எவன் படிக்கிறானோ. பிறர் சொல்லக் கேட்கிறானோ, த்யானஞ் செய்கிறானோ, அவன் அபகீர்த்தியை அடையமாட்டான். (அதற்கு காரணமான) பாபம் நிவர்த்தியடையும். ஸகல க்ஷேமத்தையும் அடைவான்.

அத்தியாயம்–58

கிருஷ்ணன் காளிந்தி முதலியவர்களை விவாஹம் செய்துக்கொண்டது

புருஷோத்தமராகிய பகவான் த்ருபத மஹா ராஜனுடைய வீட்டில் வெளிப்பட்டவர்களாகிய பாண்டவர்களைப் பார்ப்பதற்காக யுயுதானர் முதலியவர்களுடன் இந்திரப்ரஸ்தத்திற்குச் சென்றார். எல்லாவற்றிற்கும் அதிபதியான ஸ்ரீ கிருஷ்ணன் வருவதைக்கண்ட வீரர்களான பாண்டவர்கள் எழுந்தி ருந்தார்கள். அது, ப்ராணனைக் கண்டு இந்திரியங்கள் ஸந்தோஷிப்பது போல இருந்தது. மேலும் வீரர்களான பாண்டவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனை ஆலிங்கனஞ் செய்து கொண்டார்கள். அதனால் அவர்கள் பாபங்களற்றவர் களானார்கள்.

பின்னுமவர்கள் அன்பு பொருந்திய சிரிப்புள்ள பகவானுடைய முகத்தைத்தர்சித்து ஸந்தோஷத்தை அடைந்தார்கள். பின்பு ஸ்ரீகிருஷ்ணன் தர்மபுத்திரரை யும், பீமஸேனரையும் நமஸ்கரித்தார். அர்ஜுனனை ஆலிங்கனஞ்செய்து கொண்டார். நகுல ஸஹதேவர்கள் கிருஷ்ணனை நமஸ்கரித்தார்கள். பின்பு கிருஷ்ண பகவான் உத்தமமான சிங்காதனத்தில் உட்கார்ந்தார். அப்பொழுது தோஷமற்றவளான த்ரௌபதி வெட்கத்துடன் மெள்ள மெள்ள நடந்து வந்து ஸ்ரீகிருஷ்ணனை நமஸ்கரித்தாள். பாண்டவர்கள் ஸாத்யகியைப் பூஜித்தார்கள். மற்றவர்களும் பாண்ட வர்களால் பூஜிக்கப்பட்டு உட்கார்ந்தார்கள். பின்பு பகவான் தம்முடைய பிதாவின் ஸஹோதரியான

(அத்தை) குந்தியை நமஸ்கரித்தார். அவள் அன்பு பொருந்திய பார்வையால் பகவானைக் கடாக்ஷித்து, பந்துக்களுடைய க்ஷேமத்தை விசாரித்துக் கண்ணீரைப் பெருக்கினாள். பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் குந்தியை நோக்கி, 'நாட்டுப் பெண்ணுடன் க்ஷேமமா?' என்று கேட்டார்.

8–10. அதனைக்கேட்ட குந்தி அன்பு அதைர்யம் ஆகிய இவைகளுடன் கண்ணீரைப் பெருக்கி அதனால் தொண்டையடைத்தவளாகி ஸகல கஷ்டத்தையும் நிவர்த்திப்பவரான ஸ்ரீ கிருஷ்ணனை தர்சித்து தன்னால் அனுபவிக்கப்பட்ட கஷ்டங்களை நினைத்து "ஓ கிருஷ்ண! எப்பொழுது நீர் பந்துக்களான எங்களுடைய ஞாபகத்துடன் என்னுடைய ஸஹோ தரனாகிய அக்ரூரரை அனுப்பினீரோ அப்பொழுதே நாதனுள்ளவர்களாக ஆனோம். நீர் ஸகல பிராணி களுக்கும் மித்திராகவும், ஆத்மாவாகவும் இருக்கிறீர். அதனால் உமக்கு தம்மைச் சார்ந்தவன், பிறன் என்ற பேதபுத்தியில்லை. ஆனால் யார் உம்மை த்யானஞ் செய்கிறார்களோ, அவர்களுடைய ஹிருதயத்திலிருந்து ஸகல தாபங்களையும் நிவர்த்திக்கிறீர்?" என்றாள்.

11–12. பின்பு தருமபுத்திரர் கிருஷ்ணனை நோக்கி, "யோகிகளாலும் பார்க்க முடியாதவராகிய உம்மை அல்ப புத்தியுள்ளவனாகிய நான் இன்றைய தினம் தர்சித்தேன். இம்மாதிரி நான் என்ன புண்ணியஞ் செய்தேனோ அறியேன்" என்று சொல்லி மழைக்காலமாகிய நான்கு மாஸங்களும் இவ்விடத்தி லேயே வஸிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஸ்ரீகிருஷ்ணனும் அதனை ஒப்புக்கொண்டு இந்திர

ப்ரஸ்தத்தில் வஸிக்கும் ஜனங்களுக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணிக்கொண்டு அவ்விடத்தில் வஸித்தார்.

13–19. ஒருநாள் அர்ஜுனன் வானரத்வஜமுள்ள ரதத்தின் மீதேறிக் காண்டவமென்ற வில்லையும் குறைவற்ற பாணங்களுள்ள தூணீரங்களையும், எடுத்துக் கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனுடன் வனத்திற்குச் சென்றார். சத்துரு வீரர்களைக் கொல்பவராகிய அந்த அர்ஜுனன் அநேக துஷ்டமிருகங்களால் நிறைந்த வனத்தில் புகுந்து, புலி, பன்றி, எருமை, ருரு, சரபம், கவயம், கட்க மிருகம், மான்கள், சல்யக மிருகம், முயல், முதலியவைகளை பாணங்களால் அடித்தார். அடிக்கப்பட்ட மிருகங்களில் சுத்தமானவைகளை வேலைக்காரர்கள் எடுத்துப் பர்வகாலத்தில் தர்ம புத்திரரிடம் ஸமர்பித்தார்கள். அர்ஜுனனோ களைப்படைந்து, தாஹமுள்ளவராகி யமுனா நதிக்குச் சென்றார். மஹாரதர்களான அவ்விருவர்களும் சுத்தமான யமுனையின் ஜலத்தில் ஸ்நானபானஞ் செய்து களைப்பை நிவர்த்தித்து கொண்டார்கள்.

அப்பொழுது அவர்கள் தங்களுக்குச் சமீபத்தில் ஒருபெண் ஸஞ்சரிப்பதைக் கண்டார்கள். அவள் அழகான கண்களுள்ளவளாகவும், மனோஹரங்களான பற்களால் பிரகாசமுள்ளவளாகவுமிருந்தாள். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணனால் தூண்டப்பட்டு அர்ஜுனர் அந்தப் பெண்ணிடம் வந்து, "ஓ நல்ல சுபாவமுள்ளவளே நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? எதைச்செய்ய விரும்பு கிறாய்? பர்த்தாவைத்தேடுகிறவள் போலத் தோன்றுகிறாய்? எல்லாவற்றையும் சொல்லு என்று கேட்டார்.

20–23. அதனைக்கேட்ட அந்தக் கன்னிகை அர்ஜுனனை நோக்கி, 'நான் தேவராகிய ஸூர்யனுடைய பெண். எல்லோராலும் பூஜிக்கத்தக்க ஸ்ரீ மஹாவிஷ்ணுவைப் பர்த்தாவாக அடைய விரும்பி, மிக்க தவஞ்செய்து கொண்டிருக்கிறேன். லக்ஷ்மீபதியாகிய அந்தப் பகவானைத்தவிர வேறொருவரையும் நான் கல்யாணம் பண்ணிக் கொள்வதில்லை. அனாதர்களை ஸம்ரக்ஷிப்பவரான ஸ்ரீ பகவான் என்னிடத்தில் ஸந்தோஷத்தை அடையட்டும். எனக்குக் காளந்தியென்று பெயர். யமுனையின் ஜலத்தில் எனது பிதாவாகிய ஸூர்யனால் ஏற்படுத்தப் பட்ட கிருஹத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் தர்சனங் கிடைக்கும் வரையில் வஸிக்கிறேன்' என்று சொன்னாள். அதனைக்கேட்டு அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணனிடம் தெரிவித்தான். ஸ்ரீ கிருஷ்ணன் முன்னமேயே இந்த ஸமாசாரத்தை அறிந்தவரானதால் அதைக் கேட்டுக் காளிந்தியை ரதத்திலேற்றிக்கொண்டு இந்திரப் பிரஸ்தஞ் சென்று தருமபுத்திரரிடஞ் சென்றார்.

24–27. அப்பொழுது பாண்டவர்கள் கேட்டுக் கொண்டபடி அப்பொழுதே ஸ்ரீ கிருஷ்ணன் விச்வகர்மாவைக் கொண்டு அவ்விடத்தில் அத்புதமான பட்டணத்தையுண்டு பண்ணினார். இப்படி ஸ்ரீ கிருஷ்ணன் பந்துக்களுக்குப் பிரியத்தைச் செய்வதற்காக அவ்விடத்தில் வஸித்து ஒப்புயர்வற்ற மஹிமையுள்ளவரானாலும் அர்ஜுனருக்குச் ஸாரதியாக இருந்தார். அப்பொழுது இந்திரனால் காப்பாற்றப்பட்ட காண்டவமென்ற வனத்தை அக்னிக்குக் கொடுத்து அவரைத்திருப்தி செய்தார். அதனால் அக்னி பகவான் காண்டிபமென்றவில்லையும், வெண்மை நிறமுள்ள

குதிரைகளையும் ரதத்தையும் குறைவற்ற பாணங் களுள்ள தூணீரங்களையும், சத்துருக்களால் பிளக்க முடியாத கவசத்தையும் அர்ச்சுனனுக்குக்கொடுத்தார். காண்டவவனத்தில் வஸித்துக்கொண்டிருந்த மயனை ஸ்ரீகிருஷ்ணன் ஸம்ரக்ஷித்தார். அதனால் மயன் ஸந்தோஷித்து கிருஷ்ணனுடைய மித்திரனான தரும புத்திரருக்கு அத்புதமான ஒரு ஸபையையுண்டு பண்ணினான். பின்னொரு ஸமயம் அந்த ஸபையில் துர்யோதனன் ஜலத்தைப் பூமியென்றும் பூமியை ஜலமுள்ள ஸ்தலமென்றும் ப்ரமித்தான்.

28–30. பின்பு ஸ்ரீகிருஷ்ணன் தர்மபுத்திரரிடம் விடைபெற்று பந்துக்களுக்குச் சொல்லிக் கொண்டு ஸாத்யகி முதலியவர்களுடன் த்வாரகைக்குச் சென்றார். அவ்விடத்தில் நல்ல ரிதுவில் சுப நக்ஷத்திரங் கூடிய சுபதினத்தில் காளிந்தியைப் பகவான விவாஹஞ்செய்து கொண்டார். பந்துக்கள் மிக்க ஆனந்தத்தை அடைந்தார்கள்.

31. அவந்தி தேசத்து அரசர்களான விந்தன், அநுவிந்தன் என்ற இருவர்களும் துர்யோதனனைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய ஸஹோதரியான மித்திரவிந்தா யென்பவள் ஸ்ரீகிருஷ் ணனை விவாஹஞ் செய்துகொள்ள விருப்பமுள்ள வளாக இருந்தாள், அதனை அவ்விருவர்களும் ஒப்புக்கொள்ளாமல் தடைசெய்தார்கள். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் தமக்கு அத்தையான ராஜாதிதேவியின் புத்திரியாகிய அந்த மித்திரவிந்தா என்பவளை எல்லா அரசர்களும் பார்த்திருக்கும் பொழுது பலாத்காரமாகக் கொண்டு வந்தார்.

32–46. கோஸல தேசத்தில் நக்னஜித் என்ற ஒரு அரசன் இருந்தார். அவர் மிக்க தர்மிஷ்டர். அவருக்கு ஸத்யா என்ற பெயருள்ள ஒரு கன்னிகை இருந்தாள். அந்த அரசன் தம்மிடமிருக்கும் ஏழு எருதுகளை எவன் ஜயிக்கிறானோ, அவனுக்குத் தம்முடைய பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொடுப்பதாகப் ப்ரதிஜ்ஞை செய்திருந்தார். அவர் எருதுகள் கூர்மை யான கொம்புகளுள்ளவையும் பிறரால் ஜயிக்க முடியாதவையும், துஷ்ட ஸ்வபாவமுள்ளவையுமாக இருந்தன அதனால் அவைகளை ஒருவராலும் ஜயிக்க முடியவில்லை. அதனைக் கேள்விப்பட்டு ஸ்ரீகிருஷ்ணன் மிகுந்த ஸைன்னியத்துடன் அந்த நகரத்திற்குச் சென்றார். அந்த அரசன் ஸ்ரீகிருஷ்ணன் வருகிறதைத் தெரிந்துக் கொணடு மிகுந்த பிரியத்துடன் ஆசனத்தை விட்டு எழுந்து எதிரில் சென்று அழைத்து, பூஜித்து, விசேஷ மர்யாதை செய்தார்.

ஸ்ரீகிருஷ்ணனும் அவரைச்லாகித்தார். நல்ல புருஷனை அடையவேண்டுமென்று வ்ரதங்களை அனுஷ்டித்துக் கொண்டிருந்த அந்த ராஜகுமாரியும் ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்து, என்னால் அனுஷ்டிக்கப்பட்ட வ்ரதம் உண்மையானால் இவரே எனக்குப் பர்த்தாவாக வேண்டும்; என்னுடைய எண்ணம் பூர்த்தியாகவேண்டும்" என்று ப்ரார்த்தித்தாள். மேலும் அரசன் ஸ்ரீகிருஷ்ணனைப் பூஜித்து, 'ஓ நாராயண! ஜகதீச! ஆத்மானந்தத்தால் பூர்ணராக இருக்கும் உமக்கு மிக்க அல்பனாகிய நான் என்ன செய்யவேண்டும்? லக்ஷ்மீதேவியும் ப்ரஹ்ம தேவரும், லோகபாலர்களும். தம்முடைய பாத தூளியைத் தரிக்கிறார்கள். பின்னும் நீர் தம்மால்

செய்யப்பட்ட மர்யாதையைக் காப்பாற்றுவதற்காக லோகத்தில் விளையாட்டாக அவதரிக்கிறீர். அப்படிப்பட்ட பகவானாகிய உமக்கு என்னால் செய்யக் கூடியதென்ன? நான் எதைச்செய்து உம்மை ஸந்தோஷிக்கச் செய்வேன்' என்றார். அதனைக் கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் அரசனை நோக்கி, "ஓ ராஜன்! க்ஷத்திரியன் தன் ஜாதிக்குரியவைகளைச் செய்ய வேண்டுமேயொழியப் பிறரை யாசிக்கக் கூடாது என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உம்முடைய ஸம்பந்தம் வேண்டுமென்று ஆசையால் உம்முடைய பெண்ணை எனக்குக் கன்னிகாதானஞ் செய்யவேண்டுமென்று யாசிக்கிறேன். ஆனால் கன்னிகைக்காகப் பணம் முதலியவை கொடுக்க மாட்டேன்" என்று சிரித்து கொண்டு மேகம் போல் உரக்கச்சொன்னார்.

அதனைக் கேட்ட அரசன் ஸ்ரீ கிருஷ்ணனை நோக்கி, "ஓ நாத! என்னுடைய பெண்ணுக்குத் தகுதியான வரன் உம்மைவிட வேறொருவருமில்லை. ஸகல குணங்களும் உம்மிடத்திலேயே வஸிக்கின்றன. லக்ஷ்மீதேவி உம்முடைய சரீரத்தில் நித்தியமாக வஸிக்கிறாள். ஆனால் பெண்ணின் விவாஹ விஷயத்தில் வரனுடைய பராக்கிரமத்தைப் பரீக்ஷிப்பதற்காக ஒரு ப்ரதிஜ்ஞை செய்திருக்கிறேன். அதென்னவென்றால். இதோ ஏழு எருதுகளிருக்கின்றனவல்லவா! இவைகள் பழக்கப்பட்டவையல்ல; பிறரால் ஜயிக்கப்படாதவைகள்; இவைகளை யார் ஜயிக்கிறானோ, அவனுக்கு பெண்ணைக் கொடுக்கிறோமென்று ப்ரதிஜ்ஞை செய்திருக்கிறேன். அநேக இராஜகுமாரர்களை இந்த எருதுகள் கிழித்துக் கொன்றன.

ஓ யதுக்களைச் ஸந்தோஷப் படுத்திகிறவரே! லக்ஷ்மீபதியே! நீர் எருதுகளை அடக்குவீரானால் என்னுடைய பெண்ணுக்கு தகுதியான வரனாவீர்" என்று சொன்னார். அதனைக்கேட்ட பகவான் அப்படியே செய்கிறோமென்று ஒப்புக்கொண்டு, கச்சை கட்டிக்கொண்டு தம்மை ஏழு வகையாகச் செய்து கொண்டு விளையாட்டாக அவைகளை நிக்கிரஹித்தார் (அடக்கினார்). பின்னுமவர் மதம், பலம் இவைகளற்றவைகளான அந்த எருதுகளைக் கயிற்றால் கட்டி இழுத்தார். அது சிறுவன் மரப்பொம்மைகளை இழுத்தாற் போலிருந்தது.

47–52. பின்பு அரசன் ஆச்சர்யமடைந்து ஸந்தோஷித்துத் தம்முடைய புத்திரியை ஸ்ரீ கிருஷ்ணனுக்குத் தானஞ் செய்தார். ஸ்ரீகிருஷ்ணனும் தமக்குத் தகுந்த பத்னியான அவளைப் பெற்றுக் கொண்டார். அரசனுடைய பத்தினிகளும் ஸ்ரீ கிருஷ்ணனை மணப்பிள்ளையாக அடைந்து மிகுந்த ஆனந்தத்தை அடைந்தார்கள். அப்பொழுது மஹோத்ஸவம் நடந்தது. சங்கம், பேரி, ஆனகம் முதலிய வாத்தியங்கள் முழங்கப்பட்டன. ப்ராஹ்மணர்கள் ஆசிர்வதித்தார்கள். புருஷர்களும், ஸ்திரீகளும் நல்ல வஸ்திரங்களாலும், மாலைகளாலும் அலங்கரிக்கப் பெற்று ஸந்தோஷமாக வஸித்தார்கள். பின்பு அரசன் தம்பதிகளை ரதத்திலேற்றி, மிகுந்த ஸேனைகளுடன் மிக்க ப்ரியத்துடன் த்வாரகைக்கு அனுப்பினார். மேலும் அவர் லக்ஷம் பசுக்களைக் கன்யாதனமாகக் கொடுத்தார். பின்னுமவர் ஆபரணங்களாலும், நல்ல வஸ்திரங்களாலும் அலங்கரிக்கப்பெற்ற மூன்று ஆயிரம் யௌவனப் பெண்களையும் ஒன்பது ஆயிரம்

யானைகளையும், அதற்கு நூறுமடங்கு ரதங்களையும் (9,00,000), அதற்கு நூறு மடங்கு (9,00,00,000) குதிரைகளையும், அதற்கு நூறு மடங்கு (9,00,00,00,000) காலாட்களையும் கொடுத்தனுப்பினார்.

53–55. இப்படி ஸ்ரீ கிருஷ்ணன் ஸத்யா என்பவளைக் கல்யாணஞ் செய்து கொண்டு போகிறார் என்பதைக் கேள்விப்பட்டு அநேக அரசர்கள் வழியில் பாணங்களைப் ப்ரயோகித்துப் பகவானைத் தடுத்தார்கள். அவர்கள் அந்த எருதுகளால் ஜயிக்கப்பட்டவர்கள். அப்பொழுது அர்ஜுனன் காண்டிவமென்ற வில்லையெடுத்து அவர்களை அடித்து துரத்தினார். அது சிங்கம் அல்ப மிருகங்களைத் துரத்தினாற் போலிருந்தது. பின்பு தேவகியின் புத்திரராகிய பகவான் த்வாரகைக்குச்சென்று ஸத்யையுடன் ரமித்தார்.

56. பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் பிதாவின் ஸஹோதரியான ச்ருதகீர்த்தியின் புத்திரியான பத்ரா என்பவளை அவளுடைய ஸஹோதரர்களுடைய அனுமதியினால் விவாஹஞ்செய்து கொண்டார்.

57. பின்னுமவர் மத்ரதேசத்து அரசனுடைய புத்திரியும், லக்ஷணமுள்ளவளுமான லக்ஷ்மணா என்பவளைத் தாமொருவராகச் ஸ்வயம்வரத்தில் அபஹரித்தார். அது கருடன் அமிருதத்தை அபஹரித்தாற் போலிருந்தது.

58. இன்னும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு இம்மாதிரியாக பல ஸ்திரீகளுண்டு; நரகாஸுரனைக் கொன்று

அவனுடைய அரண்மனையிலிருந்து அநேக ஸ்திரீகளைக் கொண்டுவந்தார்.

♣♣♣♣♣

அத்தியாயம்–59

நரகாஸுரவதம்

அதனைக்கேட்ட அரசன் சுகரை நோக்கி, "பகவான் பூமியின் புத்திரனாகிய நரகனை எப்படிக் கொன்றார்? ராஜ கன்னிகைகள் நரகனால் எப்படி அபஹரிக்கப் பட்டிருந்தார்கள்? இந்தக் கிருஷ்ணனுடைய சரிதத்தைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

2–13. அதனைக் கேட்ட சுகர் அரசனை நோக்கி, "முன்னொருகால் பூமியின் புத்திரனாகிய நரகனென்ற அஸுரன் மஹேந்திரனுடைய குடையையும், அவன் மாதாவாகிய அதிதியின் குண்டலங்களையும், மணி பர்வதமென்ற ஸ்தலத்தையும் பிடுங்கிக் கொண்டான். பின்பு மஹேந்திரன் ஸ்ரீ கிருஷ்ணனிடம் வந்து நரகனுடைய நடையை தெரிவித்தார் (ஸத்திய பாமையின் கிரஹத்தில்) அதனைக் கேட்ட பகவான் ஸத்தியபாமையுடன் கருடன் மீதேறிக் கொண்டு

பிராக்ஜோதிஷமென்ற நரகனுடைய நகரத்திற்குட் சென்றார். அந்த நகரமானது மலைகளால் செய்யப் பட்ட கோட்டைகளாலும், ஆயுதங்களாலும், ஜலத்தாலும், அக்னியினாலும், காற்றினாலும் சுற்றப் பட்டுச் சத்துருக்களால் பிரவேசிக்க முடியாததாக இருந்தது. பின்னும் கோரமும், கெட்டியுமான முரபாசங்களாலும் சுற்றப்பட்டிருந்தது. அதனைக் கண்ட கிருஷ்ணன் மலைகளைக் கதாயுதத்தால் உடைத்தார். அக்னி, ஜலம், வாயு இவைகளை சக்கரத் தால் அடக்கினார். முரபாசங்களைக் கத்தியினால் வெட்டினார். சங்க சப்தத்தால் யந்திரங்களை நிறுத்தினார். மிக்க பருத்த கதாயுதத்தால் ப்ராகாரத்தை உடைத்தார். பாஞ்சஜன்யமென்ற சங்கத்தின் சப்த மானது பிரளய காலத்திய இடிபோல் பயங்கரமாக இருந்தபடியால் அதனைக்கேட்டு ஜலத்தில் படுத்துக் கொண்டிருந்த ஐந்து தலையுள்ள முரனென்பவன் எழுந்திருந்து, மூன்று முனைகளுள்ள சூலத்தைச் சுழற்றிகொண்டு ஸ்ரீகிருஷ்ணனுக்கு எதிரில் ஓடி வந்தான்.

அந்தச் சூலமானது பிரளய கால ஸூர்யனைப் போலப் பார்க்கப் பயங்கரமாக இருந்தது. மேலும் அந்த அஸுரன் ஐந்து முகங்களால் மூவுலகங்களையும் விழுங்குகிறவன்போலக் காணப்பட்டான். அந்த அஸுரன் கிருஷ்ணனை எதிர்த்தது, கருடனை ஸர்ப்பம் எதிர்த்தாற்போலிருந்தது. மேலுமந்த அஸுரன் அந்த சூலாயுதத்தைச் சுழற்றிக் கிருஷ்ணன் மீது பிரயோகித்து அதட்டி ஐந்து முகங்களாலும் அட்டஹாஸஞ் செய்தான். அந்தச் சப்தமானது ஆகாயம், பூமி எல்லா திக்குகள், அண்ட கடாஹம்

இவைகளில் பரவியது. அப்பொழுது கிருஷ்ணன் அநேக பாணங்களை பிரயோகித்து, அந்த சூலத்தை மூன்று துண்டுகளாக வெட்டினார். அந்த அஸுரனு டைய முகங்களிலும் பாணங்களைப் பிரயோகித்தார். பின்பு அஸுரன் கதாயுதத்தைச் சுழற்றி மிகுந்த கோபத்துடன் கிருஷ்ணன் மீது ப்ரயோகித்தான். அதனைக்கண்ட கிருஷ்ணன் பாணங்களைப் பிரயோகித்து அந்த கதாயுதத்தை ஆயிரந் துண்டாக வெட்டினார். பின்பு அஸுரன் இரு கைகளையும் தூக்கிக்கொண்டு கிருஷ்ணனை நோக்கி ஓடிவந்தான். அதனைக் கண்ணுற்ற பகவான் சக்கராயுதத்தைப் பிரயோகித்து அஸுரனுடைய தலையை வெட்டினார். அஸுரன் மரணமடைந்து இந்திரனால் உடைக்கப் பட்ட சிகரமுள்ள மலைபோல் ஜலத்தில் விழுந்தான்.

அதனைக்கண்ணுற்ற தாம்ரன், அந்தரிக்ஷன், ச்ரவணன், விபாவஸு, வஸு, நபஸ்வான், அருணன் என்ற முரனுடைய பிள்ளைகள் தகப்பனாருடைய வதத்தைச் ஸஹியாமல் அதற்குப் பதில் செய்ய விரும்பி, நரகனால் தூண்டப்பட்ட பீடனென்ற ஸேனாபதியை முன்னிட்டுக் கொண்டு பட்டணத்தி லிருந்து வெளியில் வந்தார்கள். ஆயுதங்களுடன் வெளியில் வந்து மிகுந்த கோபங்கொண்டு பாணங்களை யும், கத்திகளையும் சக்திகளையும், கதாயுதங்களையும், யஷ்டிகளையும், ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் பிரயோகித் தார்கள். குறைவற்ற பராக்கிரமமுள்ள ஸ்ரீகிருஷ்ண பகவான் தமது பாணங்களால் அந்த ஆயுதங்களை எள்ளளவாக பேதித்தார். பின்னும் அவர் அந்த வீரர்களுடைய கை, கால் துடை, தலை இவைகளை வெட்டி, அவர்களை யமலோகத்திற்கு அனுப்பினார்.

14–22. இப்படி முரனுடைய புத்திரர்கள் கிருஷ்ணனால் கொல்லப்பட்டதைக் கேட்டு நரகாஸுரன் ஸமுத்திரத்திலிருந்து உண்டானவைகளும், மதம்பெருக்குள்ளவைகளுமான யானைப் படைகளுடன் வெளியில் வந்து, ஸத்தியபாமையுடன் கருடன் மீது மின்னலுடன் கூடிய மேகம்போல் பிரகாசிக்கும், ஸ்ரீகிருஷ்ணனை எதிர்த்தான். பின்னுமவன் சதக்னி யென்ற சக்தியால் கிருஷ்ணனை அடித்தான். அவனுடைய ஸைன்னியங்கள் பலவகையான ஆயுதங்களால் அடித்தார்கள். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் அந்த நரகனுடைய ஸைன்னியத்தைக் கூர்மையான பாணங்களால் அடித்தார். அந்த ஸைன்னியமானது ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாணங்களால் அடிக்கப்பட்டு கை, கால், துடை, கண்டம், ஆகிய இவைகள் வெட்டுண்டு நாசமடைந்தன. பின்னும் யானைகளும் குதிரைகளும் கொல்லப்பட்டன.

இன்னும் ஸ்ரீகிருஷ்ணன் நரகாஸுரனுடைய யோதர்களால் ப்ரயோகிக்கப்பட்ட ஆயுதங்களையும் அஸ்திரங்களையும் மூன்று மூன்று பாணங்களால் வெட்டினார். ஸ்ரீகிருஷ்ணனுக்கு வாஹனமாகவிருக்கும் கருடன் இறக்கைகளாலும், நகங்களாலும், மூக்கினாலும் நரகனுடைய ஸைன்யங்களை அடித்தார். அதனால் மிகவும் பீடிக்கப்பட்டு ஸைன்யங்கள் பட்டணத்தை நோக்கிச் சென்றன. நரகன் மாத்திரம் யுத்தஞ்செய்தான். அப்பொழுது கருடனால் அடிக்கப் பட்டு பயந்து ஓடிய தன்னுடைய ஸைன்னியத்தைப் பார்த்து மிக்க கோபங்கொண்டு நரகன் சக்தியென்ற ஆயுதத்தால் கருடனை அடித்தான். முன்னொரு ஸமயம் கருடனி டத்தில் வஜ்ராயுதம் முனை மழுங்கிற்று. அப்படிப்பட்ட

கருடன் புஷ்ப மாலையால் அடிக்கப்பட்ட யானை போல அசையாமலிருந்தார். பின்பு நரகன் ஸ்ரீ கிருஷ்ணனைக் கொல்வதற்காகச் சூலாயுதத்தை எடுத்துக்கொண்டான். அதனைக் கண்ணுற்ற ஸ்ரீ கிருஷ்ணன் அதனைப் ப்ரயோகிப்பதற்கு முன்னமேயே சக்கரத்தைப் ப்ரயோகித்து யானையின் மீதிருக்கும் நரகனுடைய தலையை வெட்டினார். இப்படி சக்கிரத்தால் வெட்டப்பட்ட அவனுடைய தலையானது குண்டலங்கள், அழகான கிரீடம் இவைகளுள்ளதாகப் பூமியில் விழுந்தது. நரகனைச் சார்ந்தவர்கள் 'ஹாஹா' என்று கதறினார்கள்: மஹர்ஷிகள் 'நல்லது' என்று ச்லாகித்தார்கள். தேவர்கள் புஷ்பங்களை வர்ஷித்துப் பகவானைத் ஸ்தோத்திரஞ் செய்தார்கள்.

23–31. அதன்பின் பூமிதேவி ஸ்ரீகிருஷ்ணனிடம் வந்து ஸுவர்ணாலங்காரமுள்ள உத்தம ரத்தின குண்டலங்களையும், வைஜயந்தியென்ற வனமாலை யையும், வருணனுடைய குடையையும், மேருவிலுண்டான உத்தமமான ரத்தினத்தையும் கொடுத்து, பகவானை நமஸ்கரித்து, மிக்க பக்தியுடன் வணங்கி, அஞ்சலி செய்து பின்வருமாறு ஸ்தோத்திரஞ் செய்தாள். எப்படியெனில் "தேவர்களுக்கு அதிபதியாகிய தேவ! சங்கம், சக்கரம், கதாயுதம் இவைகளை தரிப்பவரே (பக்தர்களைக் காப்பாற்றுவதற்காகவென்று கருத்து) பக்தர்களை அனுக்கிரஹிப்பதற்காகத் தமது இஷ்டப்படி சரீரத்தையெடுத்துக் கொள்பவரும் பரமாத்மாவுமான உமக்கு நமஸ்காரம். (எந்த மந்திரத்தால் குந்தியை பகவான் அனுக்கிரஹித்தாரோ அதைச் சொல்லி நமஸ்கரிக்கிறாள்.) தாமரை மலரைத் தொப்புளில் வைத்துக் கொண்டிருப்பவருமான

உமக்கு நமஸ்காரம் (ஜகத்திற்கு காரணம் என்று காட்டப்பட்டது) தாமரை மலர் மாலையைத் தரித்த வராகிய உமக்கு நமஸ்காரம் (நல்ல கீர்த்தியாகிய மாலையைத் தரித்தவரென்று கருத்து) தாமரை மலர் போல் தாபத்தை நிவர்த்திக்கக்கூடிய நேத்திரங்களை யுடையவரான உமக்கு நமஸ்காரம். தாமரை மலர் ரேகையுள்ளதான பாதங்களுள்ள உமக்கு நமஸ்காரம். ஒப்புயர்வில்லாத ஐச்வர்யங்களுள்ள உமக்கு நமஸ்காரம். ஸகலப்ராணிகளுக்கும் இருப்பிடமும், எங்கும் வியாபித்தவரும் எல்லாவற்றிற்கும் முந்தியவரும், ஜகத் காரணங்களாகிய மஹத்தத்துவம் முதலியவைகளுக்கும் காரணமாக இருப்பவரும், சைதன்ய ஸ்வரூபியுமான உம்மை நமஸ்கரிக்கிறேன். மேலும் உத்பத்தியற்றவரும், இந்த ஜகத்தை படைப்பவரும், ப்ரஹ்மமும், அளவற்ற சக்தியுள்ளவரும், ஸகல ப்ராணிகளின் ஸ்வரூபியாக இருப்பவரும், பரமாத்மாவுமான உமக்கு நமஸ்காரம்.

ஓ ப்ரபுவே! நீர் லோகத்தைப் படைப்பதற்காக, அதிக ரஜோ குணத்தையும், ஸம்ஹரிப்பதற்காகத் தமோ குணத்தையும், தரிக்கிறீர். ஆனாலும் குணங்களால் நீர் மறைக்கப்படுகிறதில்லை. மேலும் நீர் காலம், ப்ரதானம், புருஷன் ஆகிய இவைகளின் ஸ்வரூபமாகவிருக்கிறீர். நீர் எல்லாவற்றிற்கும் மேலானவர். நான் (பூமி) ஜலம், தேஜஸ், வாயு, ஆகாயம், தன்மாத்திரைகள், அதிஷ்டான தேவர்கள், மனம் இந்திரியங்கள், அஹங்காரம், மஹத் தத்துவம் ஆகிய சராசரங்களடங்கிய ஸகல ஜகத்தும் உம்முடைய ஸ்வரூபமேயாம். உம்மைவிட வேறாக இருக்கிறதென்று நினைப்பது ப்ரமையேயாம். ஓ சரணமடைந்தவர்களைக் காப்பாற்றுகிறவரே நரகனுடைய புத்திரனாகிய

பகதத்தனென்ற இவன் உம்முடைய பாதாரவிந்தத்தைச் சரணமடைந்திருக்கிறான். ஆனதால் இவனைக் காப்பாற்றும். பாபங்களை நிவர்த்திக்கக் கூடியதான உம்முடைய தாமரை மலர் போன்ற கையை இவனுடைய தலையில் வையும்" என்று ப்ரார்த்தித்தாள்.

32–37. இப்படி பூமிதேவி பக்தியுடன் வணக்கமாகத் ஸ்தோத்திரஞ் செய்ய, ஸ்ரீ கிருஷ்ணன் பகதத்தனுக்கு அபயத்தைக் கொடுத்து, ஸகல ஐச்வரியங்கள் நிறைந்ததான நரகனுடைய அரண்மனையில் ப்ரவேசித்தார். அந்த அந்தபுரத்தில் பதினாறு ஆயிரம் ராஜகுமாரிகள் இருந்தார்கள். அவர்கள் நரகனால் பலாத்காரமாக அபஹரிக்கப்பட்டவர்கள். அந்தப் பெண்கள் புருஷோத்தமராகிய ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்து, 'தைவம் தங்களுக்குப் பர்த்தாவை ஸமீபத்தில் தருவிக்கிறது' என்று நினைத்து அவர்களெல்லோரும் 'இவர் எனக்குப் பர்த்தாவாக ஆகட்டும். அதனைப் ப்ரஹ்மதேவர் ஒப்புக்கொள்ளட்டும்' என்று ஒவ்வொருவரும் ப்ரார்த்தித்து கொண்டார்கள். பின்பு கிருஷ்ணன் அழகான சுத்த வஸ்திரந்தரித்த அந்தப் பெண்களைப் பல்லக்கில் வைத்து, த்வாரகைக்கு அனுப்பினார். மேலும் ரதங்கள் குதிரைகள், பொக்கிஷம் முதலியவைகளையும் த்வாரகா நகரத்திற்கு அனுப்பினார். பின்னுமவர் ஐராவதத்தின் குலத்தில் பிறந்தவைகளும், நான்கு தந்தமுள்ளவைகளும், வெண்மை நிறமுள்ளவையுமான அறுபத்து நான்கு யானைகளையும் தமது பட்டணத்திற்கு அனுப்பினார்.

38–41. பின்பு ஸ்ரீகிருஷ்ணன் சத்தியபாமையுடன் ஸ்வர்க்க லோகஞ் சென்று அதிதியினிடத்தில்

குண்டலங்களைக் கொடுத்தார். மஹேந்திரனும், இந்திராணியும் பகவானைப் பூஜித்தார்கள். அப்பொழுது ஸத்தியபாமை பாரிஜாதத்தைப் பூமிக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டு கொண்டதால் பாரிஜாத விருக்ஷத்தை வேரோடு பிடுங்கி கருடன் வைத்துக் கொண்டு த்வாரகாநகரஞ் செல்ல முயன்றார். அப்பொழுது தேவர்கள் தடை செய்தார்கள். அவர்களை ஜயித்துப் பட்டணத்திற்கு வந்து, ஸத்தியபாமை வீட்டு தோட்டத்தில் பாரிஜாதத்தை நட்டுவைத்தார். அதன் புஷ்ப, வாஸனை, தேன் இவைகளில் ஆசைப்பட்டு வண்டுகள் ஸ்வர்க்கத்திலிருந்து அதனுடன் பூமிக்கு வந்தன. தேவர்கள் தங்களுடைய கிரீடம் படும்படி பகவானுடைய பாதங்களில் நமஸ்கரித்துத் தங்கள் கார்யங்களை ஒவ்வொரு ஸமயத்திலும் முடித்துக் கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட தேவர்களும் பாரிஜாதத்திற்காக கிருஷ்ணனுடன் யுத்தஞ் செய்தார்கள். அவர்களுடைய தமோ குணம் வியக்கத்தக்கது.

42–43. பின்பு ஒரு நல்ல முஹூர்த்தத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் அநேக ஸ்வரூபத்தைத் தரித்து (தேவகி முதலியவர்கள் வீடுகளிலும் ஒரே காலத்தில் இருந்தாரென்று தாத்பரியம்), மனத்தாலும் நினைக்கமுடியாத அத்புத கர்மங்களைச் செய்பவரான பகவான் பிராகிருத ஜனங்கள் போல ஒப்புயர்வில்லாத அந்த ஸ்திரீகளுடைய அரண்மனைகளில் எப்பொழுதும் வஸித்து லக்ஷ்மியின் அம்சமுள்ளவர்களான ஸ்திரீகளுடன் தம்முடைய ஆனந்தத்தால் பூர்ணராகி, கிருஹஸ்த தர்மத்தை அனுஷ்டித்து வந்தார்.

44–46. எவருடைய மார்க்கத்தை ப்ரஹ்மதேவர்

முதலியவர் அறியவில்லையோ, அப்படிப்பட்ட லக்ஷ்மீ பதியைப் பர்த்தாவாக அடைந்த அந்த ஸ்திரீகள் அன்பு பொருந்திய சிரிப்புள்ள பார்வை, புதிதாகிய ஸங்கம காலத்திய வார்த்தை, வெட்கம் ஆகிய இவைகளை அடைந்தார்கள். மேலும் அந்தப் பெண்கள் அநேக வேலைக்காரிகளால் தாங்கள் உபசரிக்கப் பட்டிருந்தாலும் எதிர் கொண்டழைப்பது, ப்ரியப் படுவது, பயப்படுவது, ஆஸனங் கொடுப்பது. பாதங்களை அலம்புவது, தாம்பூலங் கொடுப்பது, விசிறுவது, சந்தனம் பூசுவது, புஷ்பமாலையால் அலங்கரிப்பது, தலை வாறுவது, படுக்கை போடுவது, ஸ்நானஞ் செய்து வைப்பது பழம் முதலியவைகளை கொடுப்பது முதலியவைகளை செய்து ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஸுஷ்ரூஷை செய்தார்கள்.

♣♣♣♣♣

அத்யாயம் –60

கிருஷ்ணன் ருக்மிணியுடன் பரிஹாஸமாய்ப் பேசியது

1–9 ஒருஸமயம் ஜகத்திற்குக் குருவாகிய ஸ்ரீ கிருஷ்ணன் கட்டிலில் ஸுகமாக உட்கார்ந்து கொண்டிருக்கும்பொழுது, ருக்மிணி தேவி விசிறியால் விசிறி பகவானை உபசரித்துக் கொண்டிருந்தாள். எந்த பகவான் இந்த ஜகத்தை விளையாட்டாகப் படைக்கிறாரோ, காப்பாற்றுகிறாரோ, ஸம்ஹரிக்கி றாரோ அந்தப் பகவான் தம்மால் ஏற்படுத்தப்பட்ட தர்ம ஸேதுக்களைக் காப்பாற்றுவதற்காக யதுகுலத்தில் அவதரித்திருக்கிறார். இப்படிப் பகவான், ருக்மணி இவர்களிருக்கும் அரண்மனையில் முத்துமாலைகளும், கொடுங்கைகளும் ரத்தின தீபங்களும், ப்ரகாசித்தன. மேலும் அந்த கிருஹம் வாஸனையுள்ள தூபங் களாலும், மல்லிகை புஷ்பத்தின் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

வண்டுகள் புஷ்பத்தின் தேனைக்குடித்து சப்தித்துக் கொண்டிருந்தன. சந்திரனுடைய கிரணங்கள் ஜன்னலின் வழியாகப் பிரவேசித்திருந்தன. பாரிஜாத வனத்தின் வாஸனையுடன் காற்று வீசியது. அப்படிப்பட்ட கிருஹத்தில் பாலின் நுரை போன்றதும் மிருதுவும் சுத்தமுமான ஹம்ஸ தூளிகா மஞ்சத்தில் ஸுகமாக உட்கார்ந்திருக்கும் ஜகதீசனாகிய கிருஷ்ணனுடைய ஸமீபத்தில் ருக்மிணி தேவி ரத்ன மயமான பிடியுள்ள சாமரத்தைத் தன் தோழியின் கையிலிருந்து வாங்கி அதனால் பகவானை

விசிறி உபசரித்தாள். அவளுடைய ரத்தின மயமான பாதஸரங்கள் மிருதுவாகப் சப்தித்தன. மேலும் அவள் கையில் அணிந்திருந்த மோதிரம், வளை இவை களாலும் ஸாமரத்தாலும் பிரகாசித்தாள். பின்னும் அவளுடைய வஸ்திரத்தின் நுனியால் மறைக்கப் பட்டிருக்கும் ஸ்தனங்களில் இருக்கும் குங்குமங்களுடைய காந்தியால் சிவந்த ஹாரங்களுள்ளவளாகவும், இடுப்பில் அணிந்திருக்கும் மேலான ஒட்டியாண முள்ளவளாகவும் கிருஷ்ணனுடைய ஸமீபத்தில் நின்றாள். இப்படி மானிட உருவங் கொண்ட லக்ஷ்மீ தேவி போன்றவளும், கிருஷ்ணனையே கதியாகக் கொண்டவளும், பகவானுடைய அவதாரத்திற்குத் தகுதியான ஸ்வரூபமுள்ளவளும், தலைமயிர், குண்டலம், ஹாரம், கழுத்து, முகம் இவைகளால் பிரகாசிப்பவளும், சிரிப்பாகிய அமிருதத்தை பரவச் செய்பவளுமான ருக்மிணியைப் பார்த்துக் கிருஷ்ணன் சிரித்துக் கொண்டு பின்வருமாறு சொல்லலானார்.

10–21. "ஓ ராஜகுமாரியே! லோகபாலர்களுக்குச் சமமான ஐச்வர்யமுள்ளவர்களும், மிக்க மஹிமையுள் ளவர்களும், அழகுள்ளவர்களும், ரூபம், உதாரகுணம், தேஹ பலம் இவைகள் உள்ளவர்களுமான சிசுபாலன் முதலிய அநேக அரசர்கள் உன்னைக் கலியாணஞ் செய்து கொள்ள விரும்பி, குண்டின நகரம் வந்திருந் தார்கள். அவர்களுக்கு உன்னை விவாஹஞ் செய்து கொடாமல் உன்னுடைய ஸஹோதரரும் பிதாவாகிய பீஷ்மகரும் எனக்குக் கொடுத்தார்கள். ஆனாலும் உனக்குச் சமமான சிசுபாலன் முதலியவர்களை விட்டு உனக்குத் தகுதியில்லாத என்னை நீ ஏன் விவாஹஞ் செய்து கொண்டாய்? நான் ஜராஸந்தன் முதலிய

அரசர்களிடம் பயந்து ஸமுத்திரத்தைச் சரண மடைந்திருக்கிறேன். பெரும்பாலும் எனக்கு ராஜ்யமில்லை. எவர்களுடைய நடை இப்படிப்பட்ட தென்று அறியமுடியாததோ, எவர்கள் ஜனங் களுடைய மார்க்கத்தை அடையாதவர்களோ, அவர்களை விவாஹஞ்செய்து கொண்ட ஸ்திரீகள் பெரும்பாலும் துக்கப்படுவார்கள்.

ஓ அழகான இடுப்புள்ளவளே; நான் தரித்திரன்; ஏழைகளான ஜனங்கள் என்னிடத்தில் பிரியப் படுவார்கள்; ஆனதால் பணக்காரர்கள் பெரும்பாலும் என்னை ஸேவிக்க மாட்டார்கள். மேலும், எந்த ஸ்திரீபுருஷர்கள் இருவர்களுக்கும் குலம், ஐச்வரியம், ஸ்வரூபம் ஆகிய இவைகள் ஸமமாக இருக்குமோ, அவ்விருவர்களுக்கும் விவாஹமும், ஸ்நேஹமும் உசித மென்று சொல்லப்படுகிறது. இவர்களில் ஒருவர் மேலானவரும், மற்றொருவர் தாழ்ந்தவருமானால் அவ்விருவர்களுக்கும் நேரும் விவாஹமானது மேலானதல்ல. ஓ விதர்ப்ப தேசத்து அரசனுடைய புத்திரியே நான் பிக்ஷுகளால் ஸந்தோஷமாகச் ஸ்லாகிக்கப் பெற்றவன்; குணமற்றவன்; இதனை நீ அறியாமல் நீடித்த ஆலோசனையில்லாமல் என்னை விவாஹஞ் செய்து கொண்டாய். ஆனதால் எந்தப் புருஷனை விவாஹஞ் செய்து கொண்டால் இவ்வுலகத்திலும், பரலோகத்திலும் ஸகல காமனை களும் கிடைக்குமோ, அப்புருஷனை இப்பொழுது கல்யாணஞ் செய்துகொள்; அப்படியானால் முன்னமேயே சொல்லக் கூடாதாவென்றால், சிசுபாலன், ஸால்வன், ஜராஸந்தன், தந்தவக்த்ரன், உன்னுடைய தமையனாகிய ருக்மி ஆகிய இவர்கள் வீர்யமதங் கொண்ட என்னை

விரோதித்துக் கொண்டிருந்தமையால் அவர்களுடைய கர்வத்தை அடக்குவதற்காக அவர்களை ஜயித்து உன்னைக் கொண்டுவந்தேன். நான் அஸத்துக்களுடைய தேஜஸ்ஸை அபஹரிப்பவன்; ஸ்திரீ, புத்திரன், பணம், தேஹம், வீடு ஆகிய இவைகளில் எனக்கு ஆசையில்லை. அவைகளில் உதாஸீனனாக இருக்கிறேன். ஆத்ம லாபத்தால் பூர்ணனாக இருக்கிறேன். தீபம் எப்படி ஸாக்ஷியாக இருக்கிறதோ, அப்படி ஸாக்ஷியாக இருக்கிறேனே யொழிய நான் கர்மங்களைச் செய்கிறதில்லை (கர்த்தாவல்ல) என்று சொன்னார். "ஸ்ரீ கிருஷ்ணனுக்கு அநேகம் ஸ்திரீகளிலிருந்தாலும் என்னிடத்திலேயே மிக்க ப்ரியம்" என்று ருக்மிணி கர்வமடைந் திருந்ததனால், அவளுடைய கர்வத்தை அடக்குவதற்காகப் பகவான் இப்படிச் சொன்னார்.

22–24. இதற்குமுன் பகவான் இப்படி ஒருபொழுதும் சொன்னதில்லை. அப்படிப்பட்ட பகவானுடைய அப்ரியமான வார்த்தையைக் கேட்டு ருக்மிணி தேவி பயந்து, மனத்தில் நடுக்கமடைந்து கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு மிக்கக் கவலையை அடைந்தாள். நக காந்தியால் சிறந்ததும், மிருதுவுமான பாதத்தால் பூமியைக் கீறிக் கொண்டிருந்தாள். கண்ணீர் மையை கரைத்துக் கொண்டு ஸ்தனங்களில் விழுந்து, அவ்விடத்திலிருக்கும் குங்குமத்தை நனைத்தது. மேலும், தலை குனிந்தவளாகிக் கண்ணீரால் கண்டமடைத்துப் பேசமுடியாதவளாக இருந்தாள். இப்படி ருக்மிணி அப்ரியமான வார்த்தையைக் கேட்டு பயந்தாள். தன்னை பகவான் விட்டு விடுவாரோ என்று துக்கத்தை (தாபத்தை) அடைந்தாள்.

அதனால் ப்ரக்ஞை தவறிற்று. கையிலணிந்த கங்கணம் நழுவியது; ஸாமரமும் கீழே விழுந்தது. பின்னும் அவள் நான்கு பக்கங்களிலும் பரவிய தலைமயிர் உள்ளவளாகிக் காற்றினால் தள்ளப்பட்ட ரஸ்தாளி வாழைபோல பூமியில் விழுந்தாள்.

25–31. பகவான் பரிஹாஸமாகச் சொல்கிறார் என்பதை அறியாமல் மிக்க விச்வாஸத்தால் மூர்ச்சை யடைந்து பூமியில் விழுந்த ருக்மிணி தேவியைப் பார்த்து ஸ்ரீகிருஷ்ணன் அவளிடத்தில் தயைசெய்து சீக்கிரம் கட்டிலை விட்டிறங்கி, நான்கு கைகளால் அவளைத் தூக்கி அவளுடைய தலைமயிர்களை முடிந்து தாமரை மலர் போன்ற கையால் அவளுடைய முகத்தைத் துடைத்தார். (ருக்மிணிக்குத் தடவிக்கொடுப்பது முதலியவைகளை ஒரே காலத்தில் செய்வதற்காக நான்கு கைகளுள்ளவரானாரென்று கருத்து) கண்ணீர் நிறைந்த கண்களையும் ஸ்தனங் களையும் துடைத்தார். பின்னும் ஸாதுக்களைக் காப்பாற்றுபவரான ஸ்ரீகிருஷ்ணன் தம்மையே கதியென்று நினைத்தவளும், பதிவ்ரதையும் பரிஹாஸ வார்த்தையை அறியாமல் மோஹித்தவளும், அதனால் தீன ஸ்வபாவமுள்ளவளும், துக்கித்தவளுமான ருக்மிணியை ஆலிங்கனஞ் செய்து கொண்டு பின் வருமாறு ஸமாதானஞ் செய்தார். "ஓ விதர்ப்ப தேசத்து ராஜகுமாரியே! நீ என்னிடத்தில் மிகுந்த ப்ரியமுள்ளவளென்பது எனக்குத் தெரியும். உன்னுடைய வார்த்தையைக் கேட்க விரும்பிப் பரிஹாஸஞ் செய்தேன். மிக்க ப்ரியத்தால் துடிக்கும் உதடுகளுள்ளதும், சிவந்த கடைக்கண்களுள்ளதும் அழகான புருவங்களுள்ளதுமான உன்னுடைய முகத்தைப்

பார்ப்பதற்காகவே இப்படிச் சொன்னேன். ஸ்திரீ யுடன் பரிஹாஸமாகப் பேசிக்கொண்டு யாமத்தைக் கழிப்பதே கிருஹஸ்தர்களுக்கு மேலான லாபம். ஆனதால் என்னிடத்தில் கோபிக்கவேண்டாம்" என்றார்.

32–33. இப்படிக் கிருஷ்ணனால் ஸமாதானஞ் செய்யப்பட்ட ருக்மிணிக்கு "பகவான் நம்மைத் தள்ளி விடுவாரோ" என்ற பயம் நீங்கியபின்பு அழகான ஸகல அவயவங்களுள்ளவளும், ஒருபோதும் பகவானை விட்டுப் பிரியாத லக்ஷ்மீதேவியுமான ருக்மிணி வெட்கம், சிரிப்பு இவைகளால் அழகான கடாக்ஷத்தால் புருஷோத்தமராகிய ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்துக்கொண்டு பின்வருமாறு சொல்லத் தொடங்கினாள். எப்படியென்றால்

34. (ஸ்ரீ கிருஷ்ணனால் சொல்லப்பட்ட வார்த்தையை அங்கீகரித்து, அதற்கு வேறு அர்த்த மென்று பதில் சொல்லுகிறாள்.) "ஓ தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரே! நீர் சொன்னது உண்மையே. உமக்கு நான் சமமானவளல்ல. நீர் தம்முடைய மஹிமையிலிருப்பவர். ப்ரஹ்மா முதலிய வர்களுக்கும் அதிபதி; நான் ஸத்வம் முதலிய ப்ராகிருத குண ஸ்வபாவமுள்ளவள்; இந்த உண்மையை அறியாதவர்கள் என்னை நமஸ்கரிப்பார்கள். அப்படிப்பட்ட எனக்கும் உமக்கும் எவ்வளவு தாரதம்யம். (11வது ச்லோகத்தில் உனக்குச் ஸமானமில்லாத என்னை ஏன் விவாஹஞ் செய்து கொண்டாய் என்று பகவான் சொன்ன வார்த்தையிலுள்ள அஸமானன் என்ற பதத்திற்கு நான் உமக்கு ஸமமானவல்லவென்று அர்த்தம்.) இது

உண்மையே என்று சொன்னாள். மேலும் தாமரைக் கண்ணன் என்பதால் மற்ற வகையில் உமக்கும் எனக்கும் ஸாம்யத்தைப் பற்றி யோஜிக்க வேண்டாம். (கண்ணைப்பார்த்தாலேயே உமக்கு நான் தகுதி யில்லாதவளென்று தெரியவருகிறது என்று தாத்பர்யம்.)

35. "மேலும், அரசர்களிடம் பயந்து ஸமுத்திரத்தில் வசிப்பதாகச் சொன்னீரல்லவா ? அது உண்மையே! ஓ ஸகல லோகங்களைக் காவால் அளந்தவரே! சைதன்யகனராகிய நீர் சப்தம் முதலிய குணங்களிடம் பயந்தவர் போல் விஷயங்களுக்கு எட்டாத ஹிருதய குஹையில் ஸ்திரமாக வஸிக்கிறீர். 'பலசாலிகளை விரோதித்துக் கொண்டிருக்கிறேன்' என்று சொன்னதும் உண்மைதான்! எப்பொழுதும் விஷயங்களிலேயே ப்ரவர்த்தித்துக் கொண்டிருக்கும் இந்திரியங்களுடன் நீர் விரோதமுள்ளவர்; 'எனக்குச் சிங்காஸனம் இல்லை' என்று சொன்னதும் ஸரியானதே. அரசர் களுடைய சிங்காஸனம் அவிவேகிகளால் அடையக் கூடியதானதால், உம்முடைய பக்தர்களே அதை விரும்புகிறதில்லை. நீர் விரும்பமாட்டீர் என்பதில் என்ன ஸந்தேஹம் ?"

36. "எவனுடைய நடை பிறரால் அறிய முடியாததோ, எவர்கள் வேத மார்க்கத்தை அடையாத வர்களோ, அவர்களைக் கல்யாணஞ் செய்து கொண்ட ஸ்திரீகள் பெரும்பாலும் துக்கப்படுவார்கள்" என்று சொன்னதும் உண்மையே! உம்முடைய பாதார விந்தத்தில் மதுவைப் பானஞ் செய்த முனிகளுடைய மார்க்கமே அஜ்ஞான ஜனங்களால் அறியமுடியாதது.

உம்முடைய மார்க்கம் எப்படி அறியமுடியுமென்று கருத்து) மேலும், அவர்கள் லௌகிக விஷயங்களை இச்சிக்கிறதில்லை. அலௌகிய விஷயங்களையே இச்சிக்கிறார்கள். அப்படியிருக்க, உமக்கு லௌகிக விஷயங்களில் ஆசையிருக்குமா ?"

37. 'நான் தரித்திரன். என்னிடத்தில் தரித்திரர்களே ப்ரியப்படுவார்கள். ஆனதால், பணக்காரர்கள் என்னை ஸேவிக்கமாட்டார்கள்' என்று சொன்னீ ரல்லவா ? அதுவும் உண்மையானதேயாம் உம்மைப் ப்ரஹ்மா முதலிய தேவர்களும் பூஜிப்பதால் உம்மைவிட மேலானதொன்றுமில்லை (நிஷ்கிஞ்சன என்ற பதத்திற்கு தரித்திரன் என்று அர்த்தங் கொள்ள கூடாது. எவனைக் காட்டிலும் மேலான வஸ்து இல்லையோ, அவர் என்று அர்த்தங்கொள்ள வேண்டுமென்று கருத்து). தன கர்வங்கொண்டு, அதனால் விவேகமற்றிருப்பவர்கள் (உம்மைச் சிக்ஷகர் என்று அறியார்கள்.) ஆனதால் அவர்கள் தங்கள் பிராணனையே திருப்தி செய்பவர்கள் (உம்மை ஸேவிக்கமாட்டார்களென்று தாத்பரியம்). ப்ரஹ்மா முதலிய லோகபாலர்களிடத்தில் உமக்கு மிக்க ப்ரியம். அவர்களும் உம்மிடத்தில் ப்ரியப்படுவார்கள்."

38. 'உனக்கும் எனக்கும் ஸாம்யம் இல்லாததால் நம் இருவர்களுக்கும் நேர்ந்த விவாஹம் ஸரியல்ல' என்று சொன்னீரல்லவா ? அதுவும் உண்மையே உம்முடைய மஹிமைக்கும் எனக்கும் எவ்வளவு பேதமிருக்கிறது ? நீர் ஸகல புருஷார்த்த ஸ்வரூபியாக இருப்பவர்; பரமானந்த ஸ்வரூபி; உம்முடைய ஸ்வரூபத்தை அடைவதற்காக புத்திசாலிகள் உம்மைச்

ஸேவித்து, ஸேவிய ஸேவக பாவத்தை அடைந்திருப் பார்கள். விஷயஸுகங்களை ஆச்ரயித்துக் கொண்டு, துக்கப்படுகிற ஸ்திரீ புருஷர்களுடைய ஸமாஜம் அவர்களுக்கு உசிதமாக இராது.'

39. 'பிக்ஷுக்கள் என்னைச் ச்லாகிப்பார்கள்' என்று சொன்னதும் உண்மையே! ஸகல ஆஸைகளை யும் ஒழித்தவர்களான முனிவர்கள் உம்முடைய மாஹாத்மியத்தைச் சொல்லுகிறார்கள் (பிக்ஷுக்க ளென்றால் மஹரிஷிகளென்று அர்த்தமென்று சொல்லப்பட்டது). எல்லா ஜகத்திற்கும் ஆத்மாவாக இருக்கிறீர் (உம்மை கல்யாணஞ் செய்து கொண்டது வீணல்ல. எதற்காக எல்லாவற்றையும் ஸம்பாதிக் கிறோமோ, அந்த ஆத்மாவாக இருப்பதால் உம்மை அடைந்தேன் என்று கருத்து) மேலும், ஆத்ம ஞானத்தைக் கொடுப்பவர் என்பதைத் தெரிந்து கொண்டுதான் உம்மைக் கல்யாணஞ் செய்து கொண்டேன். (எவர் ஆத்மாவைக் கொடுப்பவரோ, பலத்தைக் கொடுப்பவரோ என்று ச்ருதியில் சொல்லப் பட்டிருக்கிறது.) ப்ரஹ்மதேவர், மஹேந்திரன் முதலியவர்களுடைய ஐச்வரியம் (அதிகாரம்) உம்முடைய புருவத்தால் தூண்டப்பட்ட கால வேகத்தால் நாசஞ் செய்யப்படுகிறது. மற்றவர்கள் விஷயத்தில் கேட்க வேண்டுமா? அதனால் தான் அவர்களை விட்டு உம்மை விவாஹஞ் செய்து கொண்டேன்'.

40. 'சிங்கமானது அல்ப மிருகங்களைக் கொன்று தன்னுடைய பாகத்தை அபஹரித்தாற் போல, நீர் சார்ங்கமென்ற வில்லின் சப்தத்தால் சிசுபாலன் முதலிய அரசர்களைத் துரத்திவிட்டு என்னை

அபஹரித்தீரல்லவா? அப்படிப்பட்ட உமக்குப் பயமேது? அரசர்களிடம் பயந்து ஸமுத்திரத்தில் வஸிக்கிறீர் என்பது பொருந்துமா?'

41. உம்முடைய பாதாரவிந்தத்தைச் ஸேவிப்ப தற்காக அங்கன், ப்ரது சக்கரவர்த்தி, பரதன், யயாதி, கயன் முதலிய சிறந்த அரசர்கள் உம்மையே த்யானஞ் செய்து ராஜ்யத்தை விட்டுக் காட்டிற்குச் சென்றார்கள். ஓ தாமரைக் கண்ணனே; உம்மை அடைந்தவர்கள்; துக்கத்தை அடைவார்களா? (துக்கப்படமாட்டார் களென்று கருத்து.)

42. 'ஸமானனாகிய அரசனைத் தேடிக் கல்யாணஞ் செய்துகொள்' என்று சொன்னீரல்லவா? நீர் ஸகல குணங்கள் பொருந்தியவர்; உம்முடைய பாத பத்மம் ஸகல ஜனங்களுக்கும் மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியது; லக்ஷ்மிக்கு இருப்பிடமானது; அப்படிப்பட்ட பாதத்தின் மஹிமையை ஸாதுக் களுடைய முகமாகச் ச்ரவணஞ் செய்யும் விவேகியான எவள் உம்மைவிட்டு எப்பொழுதும் பயமுள்ளவனும், மரண தர்மமுள்ளவனுமான மனிதனை அடைவாள்?'

43. 'நீர் ஸகல ஜகத்திற்கும் அதிபதி; எல்லாருக்கும் ஆத்மாவாக இருப்பவர்; இவ் வுலகத்திலும், பரலோகத்திலும் ஸகல இஷ்டத்தையும் கொடுப்பவர்; உம்முடைய பாதத்தை ஸேவிப்பவர் களுக்கு ஸம்ஸாரம் நாசமாகிவிடும் ஆனதால் உம்முடைய பாதம் எனக்குச் சரணமாகட்டும்.'

44. 'மேலும், சத்துருக்களைச் ஸம்ஹரிப்பவரே!

பரமசிவன், ப்ரஹ்மதேவர் ஆகிய இவர்களுடைய ஸபையில் கானஞ் செய்யப்படுகின்ற உம்முடைய கதையை எவள் கேட்கவில்லையோ, அதிருஷ்டமில்லாத அந்தப் பெண்ணுக்குக் கழுதைப் போல சுமை சுமப்பவர்களும், எருதுகள் போல எப்பொழுதும் வேலை செய்து கஷ்டப்படுகிறவர்களும், நாய்கள் போல பிறரால் அவமதிக்கப் பெற்றவர்களும், பூனைகள் போலக் கடோரர்களும், வேலைக்காரர்கள் போலச் ஸ்வாதந்திரியமில்லாதவர்களுமான அரசர்கள் புருஷர்களாக ஆகட்டும்.

45. எவள் உம்முடைய பாதமாகிய தாமரை மலரின் மதுவைப் பானஞ் செய்யவில்லையோ, அவள் தோல், மீசை மயிர், நகம், தலைமயிர் ஆகிய இவைகளால் மூடப்பட்டும், உள்ளே மாமிஸம், எலும்பு, ரத்தம், பூச்சி, அமேத்யம், கபம், பித்தம், வாதம் இவைகளுள்ளதும், பிழைத்திருந்தும் பிணத்துக்கு ஒப்பானதுமான சரீரத்தைத் தன்னுடைய பார்த்தாவென்று நினைப்பாள், அவளே மூடபுத்தி யுள்ளவள்.

46. ஓ தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரே! தம்முடைய ஆத்மாவினிடத்திலேயே ரமிப்பவரே! உம்முடைய பாதங்களில் எனக்கு பக்தியானது இருக்கட்டும். என்னிடத்திலும் (ப்ரகிருதியினிடத் திலும்) மிகுந்த ஆசை உமக்கு இல்லை. அப்படி ஒன்றையும் விரும்பாதவரானாலும் உம்முடைய பாதஸேவையே எனக்குப் பெரிய லாபம். மேலும், நீர் இந்த ஜகத்தை விருத்தி செய்வதற்காக ரஜோ குணத்தை ஆச்ரயித்து என்னைக் கடாக்ஷிக்கிறீர்.

அதுவே எனக்கு மிகுந்த அனுக்கிரஹம்.

47–48. ஓ மதுவைக் கொன்றவரே! உனக்குச் சமமான புருஷனைக் கலியாணம் பண்ணிக்கொள் என்று உம்மால் சொல்லப்பட்டது பொய்யல்ல. காசி தேசத்தரஸுடைய கன்னிகைகளான அம்பா, அம்பாலிகா, அம்பிகா என்ற மூவர்களுக்குள் அம்பா என்பவள் கன்னிகையாக இருக்கும்பொழுதே ஸால்வனிடத்தில் எப்படி ஆசைப்பட்டாளோ, அதுபோலக் கலியாணமான பிறகும் வியபசாரிகளான சில ஸ்திரீகளுடைய மனமானது வெவ்வேறு புருஷனை இச்சிக்கிற வழக்கமுண்டு. அப்படி வியபசாரியான ஸ்திரீயை வித்துவானாக இருப்பவன் வைத்துக் கொள்ளக் கூடாது. அப்படிப் போஷிப்பானானால் இவ்வுலகம், பரலோகம் இவ்விரண்டிலும் ஸுகத்தையடைய மாட்டான்" என்று சொன்னாள் (ஆனதால் என்னுடைய மனத்தை பரீக்ஷிப்பதற்காகவே இம்மாதிரி சொன்னா ரென்று கருத்து).

49–57. அதனைக் கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் ருக்மிணியை நோக்கி, "ஓ பதிவ்ரதையே! இம்மாதிரி யான உன்னுடைய வார்த்தையைக் கேட்கவேண்டு மென்ற ஆசையால் இம்மாதிரி சொன்னேன். உன்னால் சொல்லப்பட்டது எல்லாம் உண்மையே. என்னிடத்தில் மிகவும் பக்திகொண்டவளான நீ எந்தெந்தக் காமங்களை விரும்புகிறாயோ, மோக்ஷம் வரையிலுள்ள அவைகளெல்லாம் உனக்கு இருக்கின்றன. ஓ தோஷமற்றவளே! பரிஹாஸ வார்த்தைகளால் உன்னுடைய புத்தியை நான் கலக்கியும் உன்னுடைய மனமானது என்னிடத்திலேயே ஸ்திரமாக இருந்தபடியால்

பதிவ்ரதா தர்மத்தையும் அதிகமான விஸ்வாசத்தையும் அடைந்தவளாகிறாய். எவர்கள் தபஸ், வ்ரதம் இவை களை அனுஷ்டித்தும், விஷயத்தில் ஆசை கொண்டவர்களாகி, மோக்ஷத்திற்கு அதிபதியாகிய என்னை என்னுடைய மாயையால் மோஹித்து, தம்பதிகளுடைய விஷய ஸுகத்திற்காக ஆராதிக் கிறார்களோ, பின்னும் அவர்கள் மோக்ஷம் வரையிலுள்ள ஸகல ஸம்பத்துக்களையும் கொடுக்கக் கூடியவராக என்னை ஆராதித்தும், மோக்ஷத்தை விரும்பாமல் ஸம்பத்துக்களையே விரும்புகிறார்களோ, அவர்கள் அதிருஷ்டமில்லாதவர்கள். விஷயஸுகம் தாழ்ந்த ஜன்மத்திலும் கிடைக்கும். ஆனதால் அவர்கள் தாழ்ந்த ஜன்மத்தை அடைவார்கள்.

ஓ கிருஹத்திற்கு அதிபதியாக இருப்பவளே ஒருவித பலத்தையும் விரும்பாமல் என்னிடத்தில் நீ பக்தி செய்தாய். இம்மாதிரியான பக்தியானது ஸம்ஸாரத்தை நிவர்த்திக்கக் கூடியது; இது உனக்கேற் பட்டது தைவச் செயலேயாம். துஷ்டர்களுக்கு இம்மாதிரியான பக்தி ஏற்படுகிறதில்லை. விஷயங்களிலே ஆசையுள்ளவளும், தன்னுடைய ப்ராணனைத் திருப்தி செய்து கொள்வதிலேயே நோக்கமுள்ளவளும் வஞ்சிக்கும் ஸ்வபாவமுள்ளவளுமான பெண்ணுக்கு இம்மாதிரியான பக்தி ஏற்படுவதற்கு நியாயமே இல்லை. மேலும் உன்னைப்போல பர்த்தாவினிடத்தில் பிரீதியுள்ளவளான பத்தினியை ஒரு வீட்டிலும் நான் பார்த்ததில்லை. உன்னுடைய விவாஹ காலத்தில் உன்னைக் கல்யாணஞ் செய்து கொள்வதற்காக வந்திருந்த எல்லா அரசர்களையும் விட்டு (அவர்களிடம் ஆசைப்படாமல்) என்னுடைய

சரித்திரங்களைக் கேள்விப்பட்டு ரஹஸ்யமாக ஒரு ப்ராஹ்மணனை அனுப்பினாயல்லவா? மேலும் விவாஹ காலத்தில் யுத்தத்தில் உன்னுடைய ஸஹோதரனை நான் ஜயித்து, மீசை முதலியவைகளை க்ஷௌரஞ் செய்து அவமானப்படுத்தினேன்.

பின்னர் சொக்கட்டான் விளையாடும் பொழுது அவனைப் பலராமன் கொன்றார். இவைகளைப் பார்த்தும் நீ ஒன்றையும் சொல்லாமலிருந்ததுமின்றி அதனை அடிக்கடி ஸ்மரிப்பதால் நேரும் துக்கத்தையும் ஸஹித்திருந்தாய். (பகவான் நம்மை விட்டுவிடுவாரோ என்ற பயத்தால்) அதனால் நீ என்னை ஜயித்தவளாகிறாய். இன்னும் உன்னுடைய விவாஹ ஸமயத்தில் "நாளைய தினமெனக்கு விவாஹ ஸமயமென்று நிச்சயிக்கப் பெற்றிருப்பதால் அந்த ஸமயம் நீர் வராமல் தாமதித்தால் நான் உயிரை விடுவேன்' என்று ப்ராஹ்மண முகமாக தெரிவித் தாயல்லவா? அப்பொழுது ப்ராஹ்மணன் திரும்பி உன்னிடம் வருவதற்கு முன் "கிருஷ்ணரிடஞ் சென்ற ப்ராஹ்மணன் இன்னும் வரவில்லையே' என்று ப்ராணனை விட்டுவிடுகிறதென்று நிச்சயஞ் செய்து கொண்டாயல்லவா? அதற்கு நம்மால் பதில் சொல்ல முடியாது. அதைப் பற்றி ஸந்தோஷிக்கிறோம்" என்று சொன்னார்.

58–59. இப்படிப் பகவான் விளையாட்டான வார்த்தைகளைச் சொல்லி லக்ஷ்மீதேவியின் அம்ஸமான ருக்மிணி தேவியுடன் மனுஷ்ய பாவனையை அந்தப் ப்ரபு மற்ற ஸ்திரீகளுடைய வீடுகளிலும் அனுஸரித்து

ரமித்தார். இப்படியே லோக குருவாகிய கிருஹஸ்தராக இருந்து கிருஹஸ்த தர்மத்தையனுஷ்டித்தார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம் – 61

கிருஷ்ணனுடைய புத்திர பௌத்திர ஸந்ததி

அந்த ஸ்ரீகிருஷ்ணனுடைய ஒவ்வொரு ஸ்திரீ களிடத்திலும் பத்து புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்களெல்லோரும் ஸகல விதத்திலும் கிருஷ்ணனை அனுஸரித்தார்கள்; ஒவ்வொரு ஸ்திரீகளும் தங்கள் வீட்டிலியே ஸ்ரீகிருஷ்ணன் வஸிப்பதைப் பார்த்து அவருடைய உண்மையை அறியாதவர்களானதால் தங்களிடத்திலேயே பகவானுக்குப் ப்ரியமென்று நினைத்திருந்தார்கள். மேலும் அந்த ஸ்திரீகள் அந்த கிருஷ்ணனுடைய தாமரை மலர் போன்ற முகம் நீண்ட கைகள், கண்கள், அன்பு பொருந்திய சிரிப்பு பார்வை மனோஹரமான வார்த்தை இவைகளால் ஸீகித்தார்களேயொழிய தங்களுடைய விளையாட்டு களால் ஸ்ரீகிருஷ்ணனுடைய மனத்தை அபஹரிக்க முடியாதவர்களாக இருந்தார்கள். அவர் மிக்க

மஹிமை பொருந்தியவர்; பகவானுடைய பத்தினிகளான பதினாறாயிரம் ஸ்திரீகளும் புன்சிரிப்புள்ள ஸ்வல்ப பார்வையால் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறார்கள். அதனால் மனோஹரமான புருவத்தில் அசைவுண்டாகிறது. அதனால் விலாஸங்கள் உண்டாகின்றன. இப்படி மன்மதனை வ்ருத்திச் செய்யக்கூடிய செய்கைகளை அந்த ஸ்திரீகள் செய்து பகவானுடைய மனத்தைக் கலக்குவதற்கு (ஆசைப்படும்படி செய்வதற்கு) முடியவில்லை. ப்ரஹ்மா முதலிய தேவர்களும் எவருடைய மார்க்கத்தை அறியாமல் தேடுகிறார்களோ, அந்த லக்ஷ்மீபதியான பகவானைப் பர்த்தாவாக அடைந்து, அன்பு பொருந்திய சிரிப்புள்ள பார்வை, புதிதாகிய ஸங்கமத்தில் ஆசை ஆகிய இவைகளால் மிக்க ஸந்தோஷத்தை அடைந்தார்கள்.

மேலும் அந்த ஸ்திரீகள் தங்களுக்கு அநேக வேலைக்காரிகளிருந்தாலும் எதிர் கொண்டழைப்பது, ஆஸனங் கொடுப்பது, பூஜிப்பது, காலை அலம்புவது, தாம்பூலம், கொடுப்பது, விசிறுவது, ச்ரமத்தை நிவர்த்திப்பது பூசுவது, புஷ்பத்தால் அலங்கரிப்பது, தலை வாருவது, படுக்கை போடுவது, ஸ்நானஞ் செய்விப்பது, பழம் முதலியவைகளைச் ஸமர்ப்பிப்பது முதலியவைகளால் ஸ்ரீ கிருஷ்ணனை உபசரித்தார்கள். அந்த ஸ்திரீகளில் ஒவ்வொருவருக்கும் பத்துப் புத்திரர்கள் ஜனித்தார்கள் என்று முன்பு சொன்னோமல்லவா? கிருஷ்ணனுடைய ஏட்டு பட்ட மஹஷிகளுடைய புத்திரர்களான ப்ரத்யுனன் முதலியவர்களைச் சொல்லுகிறேன். ப்ரத்யும்னன், சாருதேஷ்ணன், சுதேஷ்ணன், சாருதேவன். ஸுசாரு, சாருகுப்தன், பத்ரசாரு, சருபத்திரன், விசா, சாரு

ரமித்தார். இப்படியே லோக குருவாகிய கிருஹஸ்தராக இருந்து கிருஹஸ்த தர்மத்தையனுஷ்டித்தார்.

♣♣♣♣

அத்தியாயம் – 61

கிருஷ்ணனுடைய புத்திர பௌத்திர ஸந்ததி

அந்த ஸ்ரீகிருஷ்ணனுடைய ஒவ்வொரு ஸ்திரீ களிடத்திலும் பத்து புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்களெல்லோரும் ஸகல விதத்திலும் கிருஷ்ணனை அனுஸரித்தார்கள்; ஒவ்வொரு ஸ்திரீகளும் தங்கள் வீட்டிலியே ஸ்ரீகிருஷ்ணன் வஸிப்பதைப் பார்த்து அவருடைய உண்மையை அறியாதவர்களானதால் தங்களிடத்திலேயே பகவானுக்குப் ப்ரியமென்று நினைத்திருந்தார்கள். மேலும் அந்த ஸ்திரீகள் அந்த கிருஷ்ணனுடைய தாமரை மலர் போன்ற முகம், நீண்ட கைகள், கண்கள், அன்பு பொருந்திய சிரிப்பு, பார்வை மனோஹரமான வார்த்தை இவைகளால் ஸீகித்தார்களேயொழிய தங்களுடைய விளையாட்டு களால் ஸ்ரீகிருஷ்ணனுடைய மனத்தை அபஹரிக்க முடியாதவர்களாக இருந்தார்கள். அவர் மிக்க

மஹிமை பொருந்தியவர்; பகவானுடைய பத்தினிகளான பதினாறாயிரம் ஸ்திரீகளும் புன்சிரிப்புள்ள ஸ்வல்ப பார்வையால் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறார்கள். அதனால் மனோஹரமான புருவத்தில் அசைவுண்டாகிறது. அதனால் விலாஸங்கள் உண்டாகின்றன. இப்படி மன்மதனை வ்ருத்திச் செய்யக்கூடிய செய்கைகளை அந்த ஸ்திரீகள் செய்து பகவானுடைய மனத்தைக் கலக்குவதற்கு (ஆசைப்படும்படி செய்வதற்கு) முடியவில்லை. ப்ரஹ்மா முதலிய தேவர்களும் எவருடைய மார்க்கத்தை அறியாமல் தேடுகிறார்களோ, அந்த லக்ஷ்மீபதியான பகவானைப் பர்த்தாவாக அடைந்து, அன்பு பொருந்திய சிரிப்புள்ள பார்வை, புதிதாகிய ஸங்கமத்தில் ஆசை ஆகிய இவைகளால் மிக்க ஸந்தோஷத்தை அடைந்தார்கள்.

மேலும் அந்த ஸ்திரீகள் தங்களுக்கு அநேக வேலைக்காரிகளிருந்தாலும் எதிர் கொண்டழைப்பது, ஆஸனங் கொடுப்பது, பூஜிப்பது, காலை அலம்புவது, தாம்பூலம், கொடுப்பது, விசிறுவது, ச்ரமத்தை நிவர்த்திப்பது பூசுவது, புஷ்பத்தால் அலங்கரிப்பது, தலை வாருவது, படுக்கை போடுவது, ஸ்நானஞ் செய்விப்பது, பழம் முதலியவைகளைச் ஸமர்ப்பிப்பது முதலியவைகளால் ஸ்ரீ கிருஷ்ணனை உபசரித்தார்கள். அந்த ஸ்திரீகளில் ஒவ்வொருவருக்கும் பத்துப் புத்திரர்கள் ஜனித்தார்கள் என்று முன்பு சொன்னோ மல்லவா? கிருஷ்ணனுடைய ஏட்டு பட்டமஹஷி களுடைய புத்திரர்களான ப்ரத்யும்னன் முதலியவர் களைச் சொல்லுகிறேன். ப்ரத்யும்னன், சாரு தேஷ்ணன், சுதேஷ்ணன், சாருதேவன். ஸுசாரு, சாருகுப்தன், பத்ரசாரு, சருபத்திரன், விசா, சாரு

என்று ருக்மிணியிடத்தில் பத்துப் புத்திரர்கள் ஜனித்தார்கள். அவர்களெல்லாரும் கிருஷ்ணனுக்குச் சமமானவர்கள், பானு, ஸுபானு, ஸ்வர்ப்பானு, ப்ரபானு, பானுமான், சந்திரபானு, பிர்ஹத்பானு, ரவிபானு, ஸுரீபானு, ப்ரதிபானு என்றவர்கள் ஸத்ய பாமையின் புத்திரர்கள். ஸாம்பன், ஸுமித்திரன், புருஜித், சதஜித், ஸஹஸ்ரஜித், விஜயன், சித்திரகேது, கீர்த்திமான், த்ரவணன், க்ரது இவர்கள் ஜாம்ப வதியின் புத்திரர்கள். ஸாம்பன் முதலிய புத்திரர்கள் பிதாவிற்கு சமமானவர்கள். பானு, சந்திரன், அச்வ ஸேனன், சித்திரகு, வேகவான், விருஷன், ஆமன், சங்கு, வஸு, ஸுரீ மானாகிய கிருதி ஆகிய இவர்கள் நாக்னஜித்தின் புத்திரர்கள். ச்ருதன்கவி, விருஷன், வீரனாகிய ஸுபாஹு புத்திரன், ஏகலன், சாந்தி தர்சம், பூர்ணமாஸம், ஸோமகன் ஆகிய இவர்கள் காளிந்தியின் புத்திரர்கள்.

ப்ரகோஷன், காத்திரவான், ஸிம்ஹன், பலன், ப்ரபலன், ஊர்த்வகன், மஹா சக்தி, ஸஹன், தேஜஸ், அபராஜிதன் என்பவர்கள் மாத்திரியின் (லக்ஷ்மணா யென்பவள்) புத்திரர்கள். விருகன், அர்கன், அனிலன், கிருத்திரன், பஹ்வன்ன், நாதன், மஹாசன், பாவனன், வஹ்நியென்பவர்கள் மித்ர விந்தையின் புத்திரர்கள். ஸங்கிரமஜித், ப்ரஹத்ஸேனன், சூரன், ப்ரஹாணன், அரிஜித், யஜ்ஞன், ஸுபத்திரன், வாமன், ஆயு, ஸத்யகன் ஆகிய இவர்கள் பத்ரையின் புத்திரர்கள். தீப்திமான், தாம்ரபத்திரன் முதலியவர்கள் விஷ்ணுவின் அம்சமாகிய பலராமனுக்கு ரோஹிணி யிடம் ஜனித்த புத்திரர்கள். ருக்மியின் புத்ரியாகிய ருக்மவதி என்பவளிடத்தில் ப்ரத்யும்னருக்கு

போஜகடமென்ற பட்டணத்தில் அனிருத்தனென்ற புத்திரன் பிறந்தான். இவர்களுடைய புத்திரர்களும், பௌத்திரர்களும் கோடிக் கணக்காக இருந்தார்கள். கிருஷ்ணனுடைய புத்திரர்களுக்குத் தாய்கள் பதினாறா யிரத்திற்கு அதிகமானவர்கள்" என்று சுகர் சொன்னார்.

23–25. அதனைக் கேட்ட அரசன் சுகரை நோக்கி "ருக்மியென்பவன் ஸ்ரீகிருஷ்ணனால் அவமதிக்கப் பெற்றவனானதால் ஸ்ரீ கிருஷ்ணனைக் கொல்வதற்கு ஸமயம் பார்த்துக் கொண்டிருப்பவனல்லவா? அப்படிப் பட்ட ருக்மி என்பவன் சத்ருவின் புத்திரனாகிய ப்ரத்யும்னனுக்குத் தன்னுடைய பெண்ணை எப்படி விவாஹஞ் செய்வித்தான்? நடந்தவை, நடப்பவை, வருங்கார்யம், இந்திரியங்களுக்குப் புலப்படாதவை, வெகுதூரத்திலிருப்பவை, சுவர் முதலியவைகளால் மறைக்கப்பட்டவை ஆகிய இவைகள் எல்லாவற்றையும் யோகிகள் நேரில் பார்ப்பதுபோலத் தெரிந்து கொள்ளுகிறார்கள் ஆனதால் விரோதிகளான ருக்மி, ஸ்ரீகிருஷ்ணன் இருவர்களுக்கும் ஸம்பந்தம் எப்படி ஏற்பட்டது? அதனைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

26–27. அதனைக்கேட்ட சுகர் அரசனை நோக்கி, ருக்மி என்பவன் ஸ்ரீ கிருஷ்ணனால் அவமதிக்கப் பெற்றதால் கிருஷ்ணனிடத்தில் விரோத புத்தியுள்ள வனானாலும் ஸஹோதரியான ருக்மிணியின் ப்ரியத் திற்காக அவருடைய புத்திரனாகிய ப்ரத்யும்னனுக்குத் தன்னுடைய பெண்ணை மணஞ் செய்வித்தான். மேலும் ப்ரத்யும்னன் மன்மதனுடைய அவதாரமான தால் அவனைச் ஸ்வயம்வரத்தில் ருக்மவதி பார்த்து

ஆசைப்பட்டதனால் அவ்விடம் ஸ்வயம் வரத்திற்காக வந்திருந்த அரசர்களை ஜயித்து ப்ரத்யும்னன் ருக்மவதியை அபஹரித்தான் (ருக்மியும் ஸம்மதித்தானென்று தாத்பர்யம்).

28. ருக்மிணியின் புத்திரியான சாரூமதியென்பவளை கிருதவர்மாவின் புத்திரன் மணஞ் செய்து கொண்டான். (எல்லா ஸ்திரீகளுக்கும் ஒவ்வொரு பெண்ணுண்டு. அந்தப் பெண்களின் கல்யாணத்தைச் சொல்வதற்காகவே மூத்தகுமாரியின் விவாஹஞ் சொல்லப்பட்டது).

29–44. பின்பு ருக்மி யென்பவன் பெண்ணின் புத்திரனாகிய அநிருத்தனுக்குப் புத்திரனுடைய புத்திரியான ரோசனை யென்பவளை மணஞ் செய்வித்தான். அந்த ஸம்பந்தம் தர்மத்திற்கு ஒத்த தல்லவென்று ருக்மிக்குத் தெரியும். ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலும் அவனுக்கு விரோதமுண்டு. ஆனாலும் ஸஹோதரியான ருக்மிணியின் ப்ரீதிக்காக அந்த விவாஹத்தை நடத்தினான். அந்த கல்யாணத்திற்காக ருக்மிணி, பலராமன் கிருஷ்ணன், ஸாம்பன், ப்ரத்யும்னன் முதலியவர்கள் போஜகடமென்ற பட்டணத்திற்குச் சென்றார்கள். பின்பு கல்யாணம் நடந்தது. அதன்பின் காளிங்கன் முதலிய கர்வமுள்ள அரசர்கள் ருக்மியை நோக்கி, "பலராமன் சொக்கட்டான் விளையாடத் தெரியாதவர். ஆனாலும் அந்த விளையாட்டில் மிக்க பிரியமுள்ளவர். ஆனதால் அவருடன் சொக்கட்டான் விளையாடி அவரை ஜயித்து விடலாம்" என்றார்கள். அதனைக் கேட்ட ருக்மியானவன் பலராமனை அழைத்து, அவருடன்

சொக்கட்டான் விளையாடினான். அப்பொழுது பலராமன் நூறு, ஆயிரம், பதினாயிரமென்று பந்தயங் கட்டினார். அதனை ருக்மி ஜயித்தான். அதனைக் கண்ணுற்ற காளிங்கன் பற்கள் வெளியில் தெரியும்படி சிரித்தான். அது பலராமனுக்குக் கோபத்தை உண்டு பண்ணியது. பின்பு ருக்மியென்பவன் லக்ஷத்தைப் பந்தயமாக வைத்தான். அதனை பலராமன் ஜயித்தார். அப்பொழுது ருக்மி கபடமாக 'நான் ஜயித்தேன்' என்று பொய் சொன்னான். பின்பு, பலராமன் இயற்கையில் சிவந்த கண்களுள்ளவராகையால், பர்வகாலத்தில் ஸமுத்திரம் போல பொங்கிய கோபமுள்ளவராகி பத்து கோடியை பந்தயமாக வைத்தார். அதனையும் பலராமன் ஜயித்தார். அப்பொழுது ருக்மி "நான் தான் ஜயித்தேன்; இந்த மத்தியஸ்தர்கள் சொல்லட்டும்" என்றான்.

அப்பொழுது ஆகாசவாணி, "பலராமன் தான் ந்யாயமாக ஜயித்தார்; ருக்மி சொல்வது பொய்" என்றது. அதனையும் லக்ஷ்யஞ் செய்யாமல் ருக்மியானவன் காலம் குறுகிவிட்டதனால் துஷ்டர்களான அரசர்களால் தூண்டப்பட்டு, பலராமனை நோக்கி, "நீங்கள் வனத்தில் ஸஞ்சரிக்கும் இடையர்கள்; உங்களுக்கு சொக்கட்டான் விளையாட்டுத் தெரியாது அரசர்கள் சொக்கட்டான் ஆடுவார்கள்; பாணங்களால் யுத்தஞ் செய்வார்கள். உங்களைப் போன்றவர்களுக்கு அவை எப்படி தெரியும்" என்று பரிஹாஸஞ் செய்தான். அப்பொழுது மற்ற அரசர்களும் பரிஹாஸஞ் செய்தார்கள். அப்பொழுது பலராமன் மிக்க கோபங்கொண்டு பரிகமென்ற ஆயுதத்தால் அந்த ருக்மியைக் கொன்றார். பின்னுமவர் களிங்கதேசத்து

அரசனாகிய காளிங்கனைப் பத்தாவது அடியில் பிடித்து அவனுடைய பற்களையுடைத்தார். அவன் பற்கள் வெளியில் தெரியும்படி சிரித்தானல்லவா? மற்ற அரசர்களும் பரிகத்தால் பலராமனால் அடிக்கப் பட்டு கைகள், துடைகள், சிரஸ் ஆகிய இவைகள் வெட்டுண்டு, ரத்தப் ப்ரவாகமுள்ளவர்களாகி ப்யந்து ஓடினார்கள். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் தம்முடைய மைத்துனரை பலராமன் கொன்றதைப் பார்த்தும் ருக்மிணி பலராமன் இவர்களுக்கு ஸ்நேஹம் குறையுமோவென்று பயந்து ஒன்றையும் சொல்லாமல் மௌனமாக இருந்தார். பின்பு பலராமன் முதலிய தாசார்ஹர்கள் கல்யாணம், சத்ருவதம் முதலியவைகளைக் கிருஷ்ணனுடைய மஹிமையால் முடித்துக்கொண்டு தம்பதிகளை ரதத்தில் வைத்துக்கொண்டு போஜகட மென்ற பட்டணத்திலுருந்து த்வாரகாநகரஞ் சென்றார்கள்.

[இந்த அத்யாயத்தில் கிரந்தாக்ஷரத்தில் அச்சிட்டி ருக்கும் புஸ்தகத்தில் 7, 8–வது ச்லோகங்கள் வ்யாக்கியானக் காரர்களால் அங்கீகரிக்கப்படவில்லை. ஆதலால் அவைகளின் அர்த்தம் எழுதப்படவில்லை.]

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–62

அனிருத்தனுடைய சரிதம்

1. அரசன் சுகரை நோக்கி "யதுக்களில் உத்தம னாகிய அனிருத்தன் பாணனுடைய பெண்ணாகிய உஷையை எப்படிக் கல்யாணஞ்செய்துகொண்டார். அதன்நிமித்தம் விஷ்ணுவிற்கும் பரமசிவனுக்கும் பெருத்த யுத்தம் எப்படி நேர்ந்தது; அதெல்லாவற்றை யும் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

2–9. மஹாவிஷ்ணுவிற்குப் பூமியைத்தானஞ் செய்த பலிசக்ரவர்த்தியின் நூறு புத்திரர்களுக்குள் பாணனென்பவன் ஜ்யேஷ்டன். (மூத்தவன்) அவனுக்கு ஆயிரங் கைகளுண்டு; அவன் பரமசிவன் நர்த்தனஞ் செய்யும்பொழுது பக்கவாத்தியத்தை முழக்கினான்; அவன் சோணிதமென்ற பட்டினத்தில் வஸித்தான். அவன் ஸத்திய பிரதிஞன். த்ருடமானவ்ரதமுள்ளவன். அவனுக்குப் பரமசிவனுடைய அனுக்கிரஹத்தால் எல்லா தேவர்களும் வேலைக்காரர்களாக விருந்தார்கள். அதனால் ஸகல ப்ராணிகளுக்கும் அதிபதியும் எல்லாவற்றையும் காப்பாற்றுபவரும், பகதர்களிடத்தில் ப்ரீதியுள்ள வருமான பகவான், ஸந்தோஷித்து பாணனை நோக்கி "உனக்கிஷ்டமான வரத்தைக்கொடுக்கிறேன்" என்றார். அதனைக் கேட்ட பாணன் "தன்னுடைய பட்டணத்தைக் காப்பாற்றவேண்டும்" என்று கேட்டுக் கொண்டான். பின்னுமொருக்கால் மதமுள்ளவனாகிய அந்த பாணன் தன் பக்கத்திலிருக்கும் பரமசிவனுடைய பாதங்களில் ஸூரியன் போல ப்ரகாசிக்கும் கிரீடம் படும்படி

நமஸ்கரித்து ஓ மஹாதேவ! ஸகல லோகங்களுக்கும் குருவும், ஈச்வரனும், ஆசையுள்ள புருஷர்களுடைய இஷ்டத்தை கல்பக விருக்ஷம் போல பூர்த்தி செய்ப வருமான உமக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். எனக்கு ஆயிரம் கைகளைக் கொடுத்திருக்கிறீர். அவைகள் சுமையாகவிருக்கின்றனவேயொழிய வேறில்லை. இந்த முவ்வுலகங்களிலும் உம்மைவிட என்னுடன் யுத்தஞ் செய்யத்தகுதியான புருஷன் வேறொருவருமில்லை. கைகளில் மிகவும் தினவு உண்டாகிறது; ஓ எல்லாவற்றிற்கும் முந்தியவரே! அந்தக் கைகளால் மலைகளைபொடியாக்கிக் கொண்டு திக்கஜங்களிடம் யுத்தத்திற்குச் சென்றேன். அவைகளும் பயந்து ஓடின" என்றான்.

10–11. அதனைக்கேட்ட பரமசிவன் மிக்க கோபத்துடன் "ஓ மூட! எனக்குச் சமமான எந்தப் புருஷனால் உன்னுடைய கொடியானது எப்பொழுது வெட்டப் படுமோ, அவன்தான் உன்னுடைய கர்வத்தை அடக்குவான்" என்றார். அதனைக் கேட்ட மூடனாகிய பாணன் ஸந்தோஷமடைந்து தனது அரண்மனை சென்று பரமசிவனுடைய ஆக்ஞையின்படி தன்னுடைய மதத்தை அடக்கும் புருஷன் எப்பொழுது வருவான் என்று எதிர்பார்த்திருந்தான்.

12–15. பாணனுக்கு உஷா என்று ஒரு பெண்ணுண்டு. அவள் ஸ்வப்பனத்தில் அனிருத்தனைப் பார்த்து அவனிடம் ஆசைகொண்டு பின்னும் அவனைக் காணாமல், ஓ நாயக, எவ்விடத்திலிருக்கிறீர் என்று சொல்லிக் கொண்டு (அனிருத்தனை முன் பார்த்தவளுமல்ல;) விழித்துக் கொண்டாள். ஆனால்

அவள் அவனைப் பற்றி கேட்டவளுமல்ல. இப்படி தூங்கி விழித்துக் கொள்ளும் ஸமயத்தில் "ஓ நாத! எவ்விடத்திலிருக்கிறீர்" என்று தோழிகளுடைய மத்தியில் எழுந்திருந்து மிகவும் வெட்கத்தை அடைந்தாள். பாணனுடைய மந்திரி கும்பாண்ட னென்பவன், அவனுடைய பெண்ணாகிய சித்திரலேகா என்பவள் உஷைக்குத் தோழியானதால், அவள் உஷையை நோக்கி "ராஜகுமாரியே! பர்த்தாவைக் காணாமல் தேடுகிறாயே உனக்கு இன்னும் விவாஹம் ஆகவில்லையே இதென்ன" என்று கேட்டாள்.

16–17. அதனைக்கேட்ட உஷை சித்திரலேகையை நோக்கி "ஸ்வப்னத்தில் ஒரு மனிதனைக்கண்டேன், அவர் கருத்த திருமேனியுள்ளவராயும், தாமரைமலர் போன்ற கண்களுள்ளவராகவும், பீதாம்பரத்தை தரித்தவராகவும், பருத்த கைகளுள்ளவராகவும், ஸ்திரீ களுடைய மனத்தை அபஹரிப்பவராகவுமிருந்தார். அப்படிப்பட்டவர் எனக்கு அதராமிருதத்தைக் கொடுத்து என்னை துக்கிக்கச் செய்துவிட்டு எங்கேயோ போய்விட்டார். அவரைத் தேடுகிறேன்" என்றாள்.

18–35. அதனைக்கேட்ட சித்திரலேகை உஷையை நோக்கி "உன்னுடைய துக்கத்தை நிவர்த்திக்கிறேன். எந்தப் புருஷன் உன்னுடைய மனத்தை அபஹரித் தவனோ; அவனை வரவழைக்கிறேன் எனக்கு உத்திரவு கொடு" என்று சொல்லித் தேவர்கள், கந்தர்வர்கள், ஸித்தர்கள், சாரணர்கள், பன்னகர்கள், தைத்யர்கள், வித்யாதரர்கள், யக்ஷர்கள், மனிதர்கள் ஆகிய இவர்களை சித்திரபடத்தில் எழுதினதுமின்றி மனிதர்களில் விருஷ்ணிகளையும், சூரனையும்,

வஸுதேவரையும் பலராமனையும் ஸ்ரீகிருஷ்ணனையும், ப்ரத்யும்னனையும், அனிருத்தனையும் யெழுதி உஷைக்கு காண்பித்தாள். ப்ரத்யும்னனைப் பார்த்து உஷை வெட்கப்பட்டாள் (மாமனாரென்று). பின்னுமவள் அனிருத்தனைப் பார்த்துத் தலை குனிந்து இவன்தான் அவன் என்று சிரித்துக்கொண்டு சொன்னாள்.

அதனைக்கேட்ட சித்திரலேகை, அவன் ஸ்ரீ கிருஷ்ணனுடைய பௌத்திரனென்று தெரிந்துக் கொண்டு யோகமஹிமையால் ஆகாசமார்க்கமாக த்வாரகைக்குச் சென்றாள். அவ்விடத்தில் அந்தபுரத்தில் கட்டிலில் படுத்துத்தூங்கிக் கொண்டிருந்த அனிருத்தனை தன்னுடைய யோக மஹிமையால் சோணிதபுரத்திற்குக்கொண்டு வந்து தனது தோழிக்கு அவனைக்காண்பித்தாள் அந்த உஷை மிக்க அழகுள்ள அந்தப் புருஷனைப் பார்த்து முகம் மலர்ந்து புருஷர்களுடைய சஞ்சாரமில்லாத தன்னுடைய வீட்டில் வைத்து அவனுடன் ரமித்து வந்தாள். மேலுமவள் விலையுயர்ந்த வஸ்திரம், மாலை, சந்தனம், தூபம், தீபம், ஆஸனம், பானம், பக்ஷ்யம், நல்வார்த்தை, ஸீச்ருஷை இவைகளால் அனிருத்தனைப் பூஜித்தாள். இப்படி அனிருத்தன் அந்தபுரத்தில் நாளுக்கு நாள் விசேஷ ஸ்நேஹமுள்ள இந்த உஷையுடன் விஷயஸுகத்தையனுபவித்து சென்ற நாட்கள் இவ்வளவென்றறியாமல் வெகுநாட்களைக் கழித்தான். இப்படி சிலநாள் சென்றபிறகு அந்தப்புரத்தின் காவலாட்கள் மறைக்கமுடியாததான சிலகாரணங்களால் உஷை புருஷனுடைய ஸம்பந்தத்தை அடைந்திருக்கிறாள் என்பதைத்தெரிந்துகொண்டு,

பாணாஸுரனிடஞ்சென்று 'ஓ அரசனே தவறுதலில் லாமல் நாங்கள் காத்துக்கொண்டு வரும்பொழுதும் உம்முடைய புத்திரியான உஷைக்கு புருஷனுடைய ஸம்பந்தம் ஏற்பட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது. புருஷ சஞ்சாரமில்லாத அந்தப்புரத்தில் வஸிப்பவர் களுக்கு இதுமாதிரியான தோஷம் ஏற்படுவதற்கு நியாயமில்லை. அதன்காரணத்தை நாங்கள் அறியோம்" என்று சொன்னார்கள். அதனைக் கேட்ட பாணா ஸுரன் மிக்க வருத்தத்துடன் சீக்கிரமாக அந்தப் புரஞ்சென்றான்.

அவ்விடத்தில் ப்ரத்யும்னனுடைய புத்திரனாகிய அனிருத்தனையுங்கண்டான். அவன் மூவுலகங்களிலும் அழகியபுருஷனும் கருத்த திருமேனியுள்ளவனும், பீதாம்பரத்தை தரித்தவனும், தாமரை மலர் போன்ற கண்களுள்ளவனும் பருத்த கைகளுள்ளவனும், குண்டலம் தலைமயிர் சிரிப்புள்ள பார்வை இவைகளாலழகிய முகமுள்ளவனும், அழகிய பத்தினி யுடன் சொக்கட்டான் விளையாடுபவனுமாகவிருந்தான். மேலுமவனுடைய கழுத்தில் ஒரு மல்லிகா புஷ்ப மாலை போடப்பட்டிருந்தது. அது உஷையால் தரிக்கப்பட்ட மாலையாகையால் அவனைப்பார்த்து பாணாஸுரன் மிகவும் ஆச்சர்யமடைந்தான். அப்பொழுது அனிருத்தன் ஆயிரங்கைகளுடனும், ஆயுதங்களைத் தரித்த யோதர்களுடனும் அவ்விடம் வந்த பாணாஸுரனைக்கண்டு அவனைக் கொல்ல விரும்பி, இரும்பினால் செய்யப்பட்ட பரிகமென்ற ஆயுதத்தை எடுத்துக்கொண்டு யமன்போல் நின்றான். பின்னுமவன் சிறந்த பன்றியானது நாய்களைக் கொன்றாற்போலத் தன்னைப் பிடிப்பதற்காக நெருங்கி

வரும் யுத்தவீரர்களையடித்தான். அவர்கள் தலை, கைகள், தூடைகள், இவைகள் உடைக்கப்பட்டவர் களாகி அந்த வீட்டிலிருந்து பயந்து ஓடினார்கள். அதனைக் கண்ணுற்ற பலியின் புத்திரனாகிய பாணாஸுரன் நாகபாசங்களால் அனிருத்தனைக் கட்டினான். அதனைக் கண்ட உஷை மிகுந்த துக்கத்தால் பரவசையாகி கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு அழுதாள்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம் – 63

பாணாஸுரயுத்தம்

1–21. த்வாரகா நகரத்தில் அனிருத்தனைக் காணாமல் அவனுடைய பந்துக்கள் துக்கித்து வர்ஷா காலமாகிய நான்கு மாதங்களைக் கழித்தார்கள். (ஒரு பக்ஷத்தை ஒருமாதமென்று வேதத்தில் சொல்லி யிருப்பதால் இரண்டு மாதமென்றுஞ் சிலர் சொல் வதுண்டு) இந்த ஸமயத்தில் நாரதர் விருஷ்ணிகளிடஞ் சென்று அனிருத்தனுடைய ஸமாசாரத்தைத் தெரிவித்தார். அதனைக்கேட்டு ப்ரத்யும்னன், யுயுதானன், கதன், ஸாம்பன், ஸாரணன், நந்தன், உபநந்தன், பதரன், முதலிய ராமகிருஷ்ணர்களைச் சார்ந்தவர்கள் பன்னிரெண்டு அக்ஷௌஹிணி ஸைன்யங்களுடன் சோணிதபுரஞ்சென்று ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஸஹாயத்தால் முற்றுகை போட்டார்கள். பட்டணத்து ஸமீபத்திலிருக்கும் தோட்டங்களும், கோபுரங்களும், ப்ராகாரம் முதலியவைகளும் நாசஞ் செய்யப்பட்டன. அதனைக் கண்ணுற்ற பாணன் பனிரெண்டு அக்ஷௌஹிணி ஸைன்யங்களுடன், மிக்க கோபங் கொண்டு பட்டணத்தை விட்டு வெளியில் வந்தான். பகவானாகிய பரமசிவன் தம்முடைய புத்திரர் களுடனும், ப்ரமதகணங்களுடனும் விருஷபத்தின் மீதேறி ராமகிருஷ்ணர்களுடன் யுத்தஞ்செய்தார். ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் பரமசிவனுக்கும் யுத்தம் நேர்ந்தது. ப்ரத்யும்னன் ஸுப்ரஹ்மண்யரை எதிர்த்தான். பல ராமன், கும்பாண்டன், கூபகர்ணன் ஆகிய இவர் களை எதிர்த்தார். ஸாம்பன், பாணனுடைய புத்திரனிடம் யுத்தஞ் செய்தான். பாணன் ஸாத்யகியுடன் யுத்தம்

செய்தான். அந்த யுத்த வேடிக்கையை பார்ப்பதற்காக ப்ரஹ்மா முதலிய தேவர்களும், மஹரிஷிகளும், ஸித்தர் களும், சாரணர்களும், விமானங்களில் ஏறிக் கொண்டு ஆகாசத்தில் வந்தார்கள், அப்பொழுது பூதங்கள், ப்ரேதங்கள், குஹ்யகர்கள், டாகினிகள், யாதுதானர்கள், பேதாளங்கள், விநாயகர்கள், பூதமாதாக்கள் பிசாசங்கள், கூச்மாண்டங்கள் ப்ரஹ்ம ராக்ஷஸர்கள் ஆகிய பரமசிவனுடைய கணங்களை ஸ்ரீகிருஷ்ணன் கூர்மையான பாணங்களால் அடித்தார்.

அப்பொழுது பரமசிவன் ஸ்ரீ கிருஷ்ணன் மீது பல வகையான அஸ்திரங்களை ப்ரயோகித்தார். ஸ்ரீ கிருஷ்ணன் ஆச்சரியப்படாமல் பதில் அஸ்திரங்களை ப்ரயோகித்து அந்த அஸ்திரங்களைத்தடுத்தார். எப்படியெனில் ப்ரஹ்மாஸ்திரத்தை ப்ரஹ்மாஸ் திரத்தாலும், வாயுவின் அஸ்திரத்தை பர்வதாஸ்திரத் தாலும், அக்கினி அஸ்திரத்தை வருணாஸ்திரத்தாலும், பாசுபதாஸ்திரத்தை வைஷ்ணவாஸ்திரத்தாலும் அடக் கினார். பின்னும் ஸ்ரீகிருஷ்ணன் ஜ்ரம்பணமென்ற அஸ்திரத்தை ப்ரயோகித்துப் பரமசிவனை மோஹிக்கச் செய்துவிட்டு பாணனுடைய ஸைன்யத்தை கத்தி, கதாயுதம், பாணம் முதலியவைகளால் அடித்தார். ஸுப்ரம்ஹண்யர் ப்ரத்யும்னருடைய பாணங்களால் அடிபட்டு சரீரத்தில் ரத்தம்பெருக மயில் வாஹனத் துடன் பயந்து ஓடினார். பலராமனுடைய முஸலத்தால் அடிக்கப்பட்டு கும்பாண்டனும், கூபகர்ணனும் பூமியில் விழுந்தார்கள். இப்படி ஸேனாதிபதிகள் அடிபட்டதனால் ஸைன்யங்கள் பயந்து ஓடின. அதனைக் கண்ணுற்ற பாணன் ஸாத்யகியைவிட்டு ஸ்ரீகிருஷ்ணனை எதிர்த் தான். மேலும் ஒரே காலத்தில் ஐநூறு வில்லுகளை

நாணேற்றி வளைத்து ஒவ்வொன்றிலும் இரண்டு இரண்டு பாணங்களைப் பூட்டினார். அதனைக் கண்ட ஸ்ரீகிருஷ்ணன் அந்த வில்லுகளெல்லா வற்றையும் வெட்டினார். பின்னுமவர் பாணா ஸுரனுடைய ஸாரதியையும், ரதத்தில் கட்டிய குதிரைகளையுங் கொன்று, ரதத்தையும் உடைத்து, சங்க வாத்தியத்தை முழக்கினார். அப்பொழுது பாணாஸுரனுடைய மாதாவான கோடராவென்பவள் தலைமயிரை அவிழ்த்துக்கொண்டு வஸ்திரமில்லாமல் புத்திரனை காப்பாற்றவேண்டி ஸ்ரீ கிருஷ்ணனுடைய முன்பாக வந்து நின்றாள். அதனைக் கண்ட பகவான் அவளைப் பாராமல் முகத்தைத் திருப்பிக்கொண்டார். அந்த ஸமயம் பார்த்து பாணாஸுரன் தன்னுடைய பட்டணத்திற்குட் பிரவேசித்தான்.

22–25. பின்பு பரமசிவனுடைய ப்ரமத கணங்கள் பயந்து ஓடியதால் மூன்று தலைகளுள்ளதும், மூன்று கால்களுள்ளதுமான மாஹேச்வர ஜ்வரமானது பரமசிவனால் தூண்டப்பட்டு கிருஷ்ணனுடைய முன்னிலையில் வந்து நின்றது. பின்பு அதனைக் கண்ணுற்ற பகவான் அதன்மீது வைஷ்ணவ ஜ்வரத் தைத் தூண்டினார். இரண்டு ஜ்வரங்களும் யுத்தஞ்செய்தன. வைஷ்ணவ ஜ்வரத்தால் மாஹேச் வரஜ்வரம் அடிக்கப்பட்டு பயந்து ஸ்ரீ கிருஷ்ணனிடம் வந்து அவரைச் சரணமடைந்து பின்வருமாறு ஸ்தோத்திரஞ் செய்யலாயிற்று எப்படியெனில்

26. "அளவற்ற சக்தியுள்ளவராகிய உம்மை நமஸ் கரிக்கிறேன்.நீர் ப்ரஹ்மா முதலிய மேலானவர்களுக்கும் அதிபதியாகவிருப்பவர்; எல்லாவற்றையும் சேஷ்டிக்கச்

செய்பவர்; சுத்தராயிருப்பவர்; சைதன்யஸ்வரூபி; இந்த ஜகத்தைப் படைப்பவர்; அதனைக் காப்பாற்றுபவர்; பின்னுமதனை ஸம்ஹரிப்பவர்; மேலும் எது விகாரங்களில்லாததால் ஸாக்ஷாத்தாகச் சொல்ல முடியாததோ, வேதத்தால் அறிந்து கொள்ளக் கூடியதோ. அப்படிப்பட்ட பரப்ரம்ஹம் நீரே.

27. மேலும் காலம், தைவம், கர்மா, ஜீவன், ஸ்வபாவம் த்ரவ்யம், க்ஷேத்திரம், ப்ராணன், அஹங் காரம் இந்திரியங்கள் ஆகிய இவைகளுடைய சேர்க்கையே தேஹம். அதற்கு பீஜமாகவிருப்பதும் கர்மம்; அதிலிருந்து முளைப்பது தேஹம், இப்படிக் கர்மா வினால் தேஹமும், தேஹத்தால் கர்மமென்றும் பரம்பரையாய் வந்துகொண்டிருக்கிறது, இதுவே உம்முடைய மாயை. அப்படிப்பட்ட மாயைக்கு வசப்படாதவரான உம்மை நமஸ்கரிக்கிறேன்.

28. உமக்கு ஸாமான்ய ஜனங்களைப்போல கர்மாதீனமான சரீரமாவது ஜனனமாவது இல்லை. நீர் லீலையாகப் பூமியில் பலவிதமாக அவதரித்து தேவர்களைக் காப்பாற்றுகிறீர். அதற்காக வர்ணாச்ரம தர்மங்களையும், அவைகளை அனுஷ்டிப்பதற்காக ஸாதுக்களையும் ஸம்ரக்ஷிக்கிறீர். அதற்காகவே துஷ்டர்களைச் சிக்ஷிக்கிறீர். இப்பொழுதும் பூமியின் சுமையை நிவர்த்திப்பதற்காகவே அவதரித்திருக்கிறீர்.

29. மிகவும் ஸஹிக்கமுடியாததான உம்முடைய தேஜஸ்ஸான ஜ்வரத்தால் நான் மிகவும் கஷ்டமடைந் தேன். ஜனங்கள் விஷயங்களில் ஆசையால் எது வரையில் உம்முடைய பாதத்தை ஸேவிக்கவில்லையோ,

அதுவரையில் அவர்கள் கஷ்டப்படுவது உசிதம்" என்று சொன்னது (ஆனதால் என்னை காப்பாற்ற வேண்டுமென்று கருத்து).

30. அதனைக்கேட்ட பகவான் மாஹேச்வர ஜ்வரத்தை நோக்கி "ஓ த்ரிசிரஸே! உன்னிடத்தில் நான் சந்தோஷத்தையடைகிறேன். வைஷ்ணவ ஜ்வரத் தினின்று நீ பயப்படவேண்டாம். நம்மிருவர்களுக்கும் நேர்ந்த ஸம்வாதத்தை எவன் நினைக்கிறானோ, அவனை நீ உபத்திரவிக்க வேண்டாம், இதுவே உனக்கு என்னால் செய்யப்படும் ஆக்ஞை. நீ அதனைக் காப்பாற்றிக் கொண்டு பயமில்லாமல் ஸஞ்சரி" என்று அனுக்ரஹித்தார். அதனைக் கேட்ட அந்த ஜ்வரம் ஸ்ரீ கிருஷ்ணனை நமஸ்கரித்துத் தனதிஷ்டப்படி சென்றது.

31–34. பின்பு பாணாஸுரன் ரதத்திலேறிக் கொண்டு ஸ்ரீகிருஷ்ணனிடம் யுத்தத்திற்காக வந்தான். மேலுமவன் ஆயிரங்கைகளிலும் பலவிதமான ஆயுதங் களை வைத்துக்கொண்டு பாணங்களையும், ஆயுதங் களையும் அஸ்திரங்களையும் அடிக்கடி ப்ரயோகித் தான். அதனைக்கண்ட பகவான் கூர்மையான முனையுள்ள சக்கிரத்தால் பாணாஸுரனுடைய கைகளை வெட்டி னார். அது மரத்தின் கிளைகளை வெட்டினாற் போலிருந்தது. இப்படிப் பகவானால் பாணா ஸுரனுடைய கைகள் வெட்டப்பட்டபொழுது பக்தர்களிடத்தில் ப்ரீதியுள்ளவராகிய பரமசிவன் ஸ்ரீ கிருஷ்ணனிடம் வந்து அவரைப் பின்வருமாறு துதிக்கலானார். எப்படியெனில் :–

35–37. நீர் பரப்ரம்ஹம்; மேலான தேஜஸ்;

வேதத்தில் மறைந்துகொண்டிருப்பவர்; சுத்தசித்தர் களான யோகிகள் ஆகாசம் போன்ற உம்மை அறிவார்கள். (நீர் எல்லாவற்றிற்கும் அவிஷயராகை யால் மூடனாகிய இந்த பாணாஸுரன் உம்முடைய ஸ்வரூபத்தையறியாமல் யுத்தஞ்செய்தது ஆச்சர்யமல்ல என்பது கருத்து) மேலும் உமக்கு ஆகாயம் தொப்பி ளாகவும். அக்னி முகமாகவும், ஜலம் வீர்யமாகவும், த்யுலோகம் தலையாகவும், திக்குகள் காதுகளாகவும், பூமி பாதமாகவும் சந்திரன் மனமாகவும், ஸுர்யன் கண்ணாகவும், நான் (பரமசிவன்) அஹங்கார மாகவும், ஸமுத்திரம் வயிறாகவும், இந்திரன் முதலிய லோகபாலர்கள் கைகளாகவும், ஓஷதிகள் ரோமங் களாகவும், மேகங்கள் தலைமயிர்களாகவும், ப்ரஹ்ம தேவர் புத்தியாகவும், ப்ரஜாபதியானவர் ஆண் குறியாகவும், தர்மம் ஹிருதயமாகவும், இருக்கின்றன. ஆனதால் நீர் லோகங்களால் கற்பிக்கப்பட்ட புருஷன் (அத்திப் பழத்திற்குள் வஸிக்கும் புழுக்கள் எப்படி அந்தப்பழத்தை அறிய முடிய்யாதவைகளோ, அப்படியே உம்முடைய சரீரத்திற்குள்ளிருப்பவர்களால் உம்மை யறியமுடியாதென்று தாத்பர்யம்)

38–41. ஓ தடையற்ற மஹிமையுள்ளவரே நீர் ஜகத்தின் க்ஷேமத்திற்காகவும், தர்மத்தைக் காப்பாற்று வதற்காகவும் பூமியில் அவதரிக்கிறீர், லோகபாலர் களான நாங்களும் உம்மால்காப்பாற்றப்பட்டு (உம்முடைய அனுக்கிரஹத்தால்), ஏழுலோகங்களையும் ஸம்ரக்ஷிக் கிறோம். மேலும் நீர் ஒருவர்; ஸஜாதீய பேதமற்றவர்) புராண புருஷன்; (மூன்று அவஸ்தையுள்ள புருஷர் களுக்கு ப்ரகிருதியாகவிருப்பவரென்று கருத்து) தமக்கு இரண்டில்லாதவர் (விஜாதீய பேதமற்றவர்) சுத்தர்;

தாமாக ப்ரகாசிக்கும் ஞானஸ்வரூபி; எல்லாவற்றிற்கும் காரணராகவிருப்பவர்; உமக்குக் காரணமொன்று மில்லை; எல்லாவற்றிற்கும் ஈசன்; (சுத்த ப்ரம் ஹத்திற்கு உபாதிகளுடைய ஸம்பந்தம் ஏற்பட்டால் அதிலிருந்து ஜீவர்கள் உண்டாகிறார்கள்.) "அக்னியிலி ருந்து அல்பமான நெருப்புப்பொறிகள் உண்டாவது போல் இந்த ஆத்மாவினிடமிருந்து ஸகல ஜீவாத் மாக்களும் உண்டாகிறார்கள்" (ச்ருதி) அப்படி ஒருவரானாலும் ஸகல விஷயங்களையும் ப்ரகாசிக்கச் செய்வதற்காக ஒவ்வொரு சரீரத்திலும் வெவ்வேறாகத் தோன்றுகிறீர். ஆனாலும் நீர் ஸம்ஸாரியல்ல. ஏனென்றால் ஓ மஹிமை பொருந்தியவரே! ஸுர்யன் மேகங்களால் மறைக்கப்பட்டாலும், அந்த மேகங்களையும், மற்ற பதார்த்தங்களையும் எப்படி ப்ரகாசிக்கச் செய்கிறாரோ அப்படி தாமாக ப்ரகாசிப் பவரான நீர் அஹங்காரத்தால் மறைக்கப்பட்டிருந் தாலும், ஸத்வம் முதலிய குணங்களையும், ஜீவர்களையும் ப்ரகாசிக்கச் செய்கிறீர்.

மேலும் ஜனங்கள் உம்முடைய மாயையால் மோஹித்து புத்திரன், களத்திரம், வீடுமுதலியவை களில் ஆசைகொண்டு துக்க ஸமுத்திரத்தை அடைந்து அழுந்தி விடுகிறார்கள். (ஸ்தாவர ஜன்மத்தை அடை கிறார்கள்) சிலஸமயம் மேலே கிளம்புகிறார்கள். (தேவாதி ஜன்மத்தை அடைகின்றார்கள். ஸகல ஜனங்களையும் மோஹிக்கச்செய்யும் மாயை உம்மை ஆச்ரயித்திருப்பதால் உமக்கு ஸம்ஸார ஸம்பந்தம் எப்படி ஏற்படுமென்று கருத்து.)

42–43. உம்மால் கொடுக்கப்பட்ட மனித சரீரத்தை

யடைந்தும் எவன் இந்திரியங்களை ஜயிக்காமலும் உம்முடைய பாதங்களையும் ஸேவிக்கவில்லையோ, அவன் ஆத்மவஞ்சகன்; அவனைப்பற்றி துக்கிக்க வேண்டும். பின்னும் ஆத்மாவாகவும், ப்ரியரும், ஈச்வரனுமாகிய உம்மை எந்தமனிதன் ஸேவியாமல் புத்திரன் முதலியவர்களையே போஷித்துக்கொண்டு விஷயத்தில் முழ்கியிருக்கிறானோ, அவன் துக்கிக்கத் தக்கவன். மேலுமவன் அமிருதத்தை விஷமென்று நினைத்து அதைப் பூஜியாமலிட்டவனுக்குச் ஸமமாவான். (பகவானை ஸேவியாதவன் துக்கப்படுவான் என்று சொல்லப்பட்டது)

44–46. நான் (பரமசிவன்) ப்ரஹ்மதேவர், தேவர்கள், சுத்த சித்தர்களான மஹர்ஷிகள், ஆகிய நாங்களெல்லாரும் ஆத்மாவும், ஈச்வரனும், இஷ்டரு மாகிய உம்மை மூன்று கரணங்களாலும் சரணமடை கிறோம். ஓ தேவ! நீர் ஸகல ஜகத்தையும் படைப்பவர்; ஸம்ரக்ஷிப்பவர்; நாசஞ்செய்பவர்; ஸம புத்தியுள்ளவர் மிகவும் சாந்தர்; புத்தியை ப்ரவர்த் திக்கச் செய்பவர்; ஆத்மா எல்லாவற்றிற்கும் அதிபதி; (உம்மைக் காட்டிலும் உபாஸிக்கத்தக்க பிரபு வேறில்லையென்று கருத்து) ஸகலஜகத்திற்கும், ஆத்மாக்களுக்கும் இருப்பிடம்; ஸஜாதீய விஜாதீய பேதமற்றவர்; அப்படிப்பட்ட உம்மை மோக்ஷத்திற்காக ஸேவிக்கிறோம். இந்த பாணன் என்னுடைய அந்தரங்க பக்தன்; நான் இவனுக்கு அபயங்கொடுத்திருக்கிறேன். (காப்பாற்றுவதாக ஒப்புக்கொண்டிருக்கின்றேன்) ஆனதால் பலிச்சக்ரவர்த்தியை அனுக்கிரஹித்தது போல் இவனை அனுக்கிரஹிக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்தார்.

47–50. அதனைக் கேட்ட ஸ்ரீகிருஷ்ணன் பரம சிவனை நோக்கி "ஓ பகவன்! நீர் எதனைச் சொன்னீரோ, அதன்படி உம்முடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்கிறேன். உம்முடைய வார்த்தையை நன்றாக அனுமோதித்தேன். இவன் பலியின் புத்திரனானதால் இவனைக்கொல்வது ஸரியல்ல. "உன்னுடைய வம்சத்தில் பிறந்தவனை நான் கொல்லு கிறதில்லை" என்று ப்ரஹ்லாதருக்கு வரங்கொடுத் திருக்கிறேன். இவனுடைய கர்வத்தை அடக்குவதற் காகவே இவனுடைய கைகளை வெட்டினேன். பூமிக்குச் சுமையாகவிருந்த ஸைன்யத்தையும் கொன்றேன். இவனுக்கு நான்கு கைகள் வெட்டுப் படாமல் மிகுந்திருக்கின்றன, இவன், கிழத்தனம், சாவு இவைகளில்லாமல் உம்முடைய பார்ஷதர்களில் முக்கியனாகி பயமற்று ஸஞ்சரிக்கட்டும் என்று அனுக்கிரஹித்தார்.

51–54. இப்படி ஸ்ரீ கிருஷ்ணனால் அனுக் கிரஹிக்கப் பெற்ற பாணாஸுரன் அனித்திருத்தனையும், உஷையையும் ரதத்திலேற்றி ஸ்ரீ கிருஷ்ணனிடம் ஸமர்பித்தான். பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் அக்ஷௌஹிணி கணக்கான ஸைன்யங்களுடன் கூடியவனும், நல்ல வஸ்திரமுள்ளவனும், அலங்கரிக்கப்பெற்றவனும், உஷையுடன் கூடியவனுமான அனிருத்தனை முன்னிட்டு ருத்ரனிடம் விடைபெற்று தம்முடைய நகரஞ்சென்றார். அந்தப்பட்டணமானது த்வஜங்களா லும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பட்டணத்து ஜனங்களும், மித்திரர்களும், பந்துக்களும், ப்ராஹ்மணர்களும், சங்கம், ஆனகம், துந்துபி; ஆகிய வாத்யங்களுடன் எதிர்சென்று அழைத்தார்கள்.

கிருஷ்ணன் பரமசிவனுடன் யுத்தஞ்செய்த கதையையும் பாணனை ஜயித்த கதையையும் எவன் காலையில் எழுந்திருந்து நினைத்துக்கொள்கிறானோ, அவனுக்கு அபஜயமில்லை (எங்கும் ஜயமுள்ளவனாவானென்று கருத்து).

நோட்டு

ஸூர்யன் மேகங்களால்: ஸூர்யனுடைய சாயையே மேகம். பார்ப்வர்களுக்கு சூர்யன் மேகத்தால் மறைக்கப் பட்டிருப்பதாகத் தோற்றுகிறேதேயொழிய, உண்மை யில் மறைக்கப்படவில்லை. தன்னுடைய சாயையால் தனக்கு மறைவு ஏற்படுமா? எப்படி மேகங்களால் மறைக்கப்பட்டிருக்கும்பொழுது அந்த மேகங்களும் மற்ற உலகிலுள்ள வஸ்த்துக்களும், எதனால் ப்ரா காசிக்கின்றனவென்று யோசித்தால் அந்த ஸூர்யனா லேயே ப்ரகாசிக்கின்றன. இது போலவே அஹங்கார மென்பது பரமாத்வின் கார்யம். மூடர்கள் அதனால் ஆத்மா மறைக்கப்பட்டிருப்பதாக நினைக்கிறார்கள். உண்மையில் அதனால் ஆத்மா மறைக்கப்படவில்லை. அந்த ஆத்ம ப்ரகாசத்தாலேயே உபாதிகளாகிய குணங்களும், உபாதி ஸம்பந்தமுள்ள ஜீவர்களும் ப்ரகாசிக்கிறார்கள். எல்லாம் ஆத்ம ப்ரகாசத்தால் ப்ரகாசிக்கின்றன. ஆத்மா ஸம்சாரியாக ஆவதற்கு நியாயமில்லை. எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியும் ஸம்ஸார ஸம்பந்ததமில்லாத சுத்த ஸ்வரூபியுமான ஆத்மாவிற்கு ஸம்ஸாரமில்லையென்று தாத்பர்யம்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–64

நிருகருடைய கதை

ஓ பரீக்ஷித்து மஹாராஜனே! ஸாம்பன், ப்ரத்யும் னன், சாருபாநு, கதன் முதலிய யதுகுமாரர்கள் விளையாடுவதற்காக தோட்டத்திற்குச் சென்றார்கள். அவ்விடத்தில் வெகுநேரம் விளையாடிக்களைப் படைந்து தாஹமுள்ளவர்களாகி ஜலம் எங்கே இருக்கிறது என்று தேடினார்கள். அப்பொழுது ஒரு கிணற்றைப்பார்க்க அது ஜலமில்லாததாக இருந்தது மின்றி அதில் அற்புதமான ஓணான் இருக்கக் கண்டார்கள். அதுமலைபோல பருத்த சரீரமுள்ளதாக விருந்ததனால் அதனைப்பார்த்து மிகவும் ஆச்சர்ய மடைந்தார்கள். மேலுமவர்கள் மிக்க தயையுடன் கயிறுகளாலும், தோல்வார்களாலும் அதனைத் தூக்க முயன்றும், அவர்களால் முடியவில்லை. அதனால் அவர்கள் ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் தெரிவித்தார்கள்., தாமரைக்கண்ணனும், ஸகலஜகத்திற்கும் அந்தர் யாமியும், பகவானுமாகிய ஸ்ரீகிருஷ்ணன் அதனைக் கேட்டு அவ்விடம் சென்று அந்த ஓணானைப்பார்த்து இடக்கையால் விளையாட்டாக உயரத் தூக்கினார். உத்தம ஸ்லோகராகிய ஸ்ரீகிருஷ்ணனுடைய திவ்யமான கைபட்ட மாத்திரத்தில் அது, ஓணான் ஸ்வரூபத்தை விட்டு தேவ ஸ்வரூபத்தையடைந்தது. மேலும் அந்த தேவன் ஸ்வர்ணத்தின் நிறம்போன்ற நிறமுள்ளவனும், அத்புதமான வஸ்திரம், மாலை இவைகளால் அலங் கரிக்கப்பட்டவனாகவுமிருந்தான். அவனைக் கண்ணுற்ற ஸ்ரீகிருஷ்ணன் அவனுடைய உண்மையை யறிந்தவரா னாலும் அவனால் செய்யப்பட்ட தானத்தின் மஹிமையை

ஜனங்களுக்குத் தெரிவிப்பதற்காக அவனைநோக்கி "ஓ மிகுந்த அதிருஷ்டமுள்ளவனே! நீ யார்? உத்தமமான ஸ்வரூபமுள்ளவனாயிருக்கிறாய். உன்னை சிறந்த தேவனென்று நினைக்கிறேன் உனக்கு இம்மாதிரியான தாழ்ந்த ஜன்மம் உண்டாவதற்கு நியாயமில்லையே. எந்த பாபத்தால் இந்த ஜன்மத்தையடைந்தாய்? அதனைத் தெரிந்து கொள்ள நான் விரும்புவதால் எனக்கு சொல்லக்கூடுமானால் சொல்லும்," என்று கேட்டார்.

9–30. ஆனந்தஸ்வரூபியான ஸ்ரீ கிருஷ்ணனால் கேட்கப்பட்டு அந்த தேவன் ஸூர்யன்போலப் பிரகாசிக்கும் கிரீடம் படும்படி பகவானுடைய பாதங்களில் நமஸ்கரித்து கிருஷ்ணனை நோக்கி "ஓ பிரபுவே! நான் இக்ஷ்வாகுவின் புத்திரனாகிய நிருகனென்ற அரசன். கொடையாளிகளுடைய ப்ரஸ்தாவத்தில் என்னை யொருவனாகச் சொல்வார்கள். என்னுடைய பெயரை நீரும் கேட்டிருக்கலாம். ஓ நாத! ஸகல ப்ராணிகளுடைய புத்திக்கு ஸாக்ஷியாக விருக்கும் உமக்கு எதுதான் தெரியாது? ஆனாலும் உம்முடைய ஆக்ஞையால் சொல்லுகிறேன். பூமியில் எவ்வளவு மணல்கள் இருக்கின்றனவோ, ஆகாயத்தில் எவ்வளவு நக்ஷத்திரங்களிருக்கின்றனவோ, மழை தாரைகள் எவ்வளவோ அவ்வளவு பசுக்களை நான் தானம் பண்ணியிருக்கிறேன். அவ்வளவு பசுக்களும் நல்ல ஸ்வபாவமுள்ளவைகள்; அதிக பாலைக் கொடுக்க கூடியவைகள்; அழகுள்ளவைகள்? கபிலைகள்; (காராம்பசுக்கள்) நியாயமாக ஸம்பாதிக்கப்பட்டவைகள்; கன்றுள்ளவைகள்? கொம்புள்ளவைகள்; வெள்ளியால லங்கரிக்கப்பட்ட குளம்புள்ளவைகள்; வெண்பட்டு,

புஷ்பமாலை, ஆபரணம் இவைகளாலலங்கரிக்கப்பட்டவைகள்; இப்படி அலங்கிருதமான பால் பசுக்களை நற்குணங்கள், ஸ்வபாவம் இவைகள் பொருந்தியவர்களும், தரித்திரர்களும், வ்ரதங்களை அனுஷ்டித்தவர்களும், தபஸ்விகளும், வேதத்தைப் பிறருக்குச் சொல்லிவைப்பவர்களும், யௌவன வயதுள்ளவர்களுமான ப்ராஹ்மணர்களை வஸ்திரம் முதலியவைகளால் பூஜித்து அவர்களுக்கு தானஞ் செய்தேன். மேலும் இப்படி பசு, பூமி, ஹிரண்ணியம், வீடு, குதிரை, யானை, வேலைக்காரிகளுடன் கூடிய கன்னிகைகள், 'எள்ளு, வெள்ளி, படுக்கை, வஸ்திரம், ரத்னம், ரதங்கள் ஆகிய இவைகளை தானஞ் செய்தேன். பின்னும் யாகங்கள் செய்யப்பட்டன; கிணறு, குளம் வெட்டுவிப்பது முதலிய பூர்த்த தர்மங்களையும், செய்தேன்.

இப்படியிருக்கையில் ஒரு ப்ராஹ்மணனுடைய பசுவானது காணாமற்போய் என்னுடைய பசுக் கூட்டத்தில் கலந்தது. அதனை நான் அறியாமல் ப்ராஹ்மணனுக்கு அதனையும் கூட்டத்தோடு தானஞ் செய்து விட்டேன். தானம் பெற்றுக்கொண்ட ப்ராஹ்மணன் அவைகளை ஓட்டிக்கொண்டு போகும்பொழுது அந்தப் பசுவின் யஜமானனாகிய ப்ராஹ்மணன் இது என்னுடைய பசு என்று அதனை கூட்டத்திலிருந்து பிரித்து ஓட்ட யத்தனித்தார். அப்பொழுது தானம் பெற்றவர் "இந்த பசுவை எனக்கு நிருக மஹாராஜன் கொடுத்தார் என்றார். இப்படி அவ்விருவர்களாலும் விவாதப்பட்டு என்னிடம் வந்து தானம் வாங்கியவர் உம்மால் கொடுக்கப்பட்ட இந்தப் பசுவை, இந்த ப்ராஹ்மணன் கொண்டுபோகிறாரென்றும், மற்றொருவர்

என்னுடைய பசுவை இவர் திருடிக்கொண்டார் என்றும் பேசிக்கொண்டார்கள். அதனை கேட்டு நான் உண்மை தெரியாமல் மோஹித்தேன். அப்பொழுது அந்த இரண்டு ப்ராஹ்மணர்களையும், மிகவும் கெஞ்சிக்கேட்டுக் கொண்டேன். நான் இப்பொழுது உண்மையை யறியாதவனாயிருப்பதால் எப்படிச் செய்வது தர்ம மென்பது தெரியவில்லை. ஆனதால் மிகவும் கஷ்டப்படுகிறேன். இந்த ஒரு பசுவிற்குப் பதிலாக லக்ஷம் பசுவை கொடுக்கிறேன். நீங்கள் ஸமாதானத்தையடைந்து என்னை யனுக்கிரஹிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன்.

அதனைக் கேட்ட அந்தப்பசுவின் யஜமானனாகிய ப்ராஹ்மணன், இந்தப் பசுவைத் தவிர வேறு எனக்கு ஒன்றும் வேண்டாம் என்று சொல்லிவிட்டுச் சென்றார். மற்றொருவர் பத்து லக்ஷம் பசுக்கொடுத்தாலும் எனக்கு வேண்டாம் என்று சொல்லி விட்டுப் போனார். இந்த ஸமயத்தில் எனக்கு மரணகாலம் ஸமீபித்ததால் யமதூதர்கள் என்னை யமலோகமழைத்து போனார் கள். அவ்விடத்தில் யமன் என்னை நோக்கி "ஓ அரசனே! நீர் புண்யத்தின் பயனை முதலில் அனுபவிக்கிறீரா? அல்லது பாபத்தின் பயனை யனுபவிக்கிறீரா? நீர் செய்த தானத்தின் பயன் முடிவற்றது என்று கேட்டார். அதற்கு நான் அவரை நோக்கி ஓ தேவ! நான் பாபத்தின் பயனை முதலில் அனுபவிக்கிறேன்" என்று சொன்னேன். அதனைக் கேட்டு யமன் விழு என்று சொன்னார். பின்பு ஓணான் சரீரத்துடன் பூமியில் விழுந்தேன். ப்ராஹ்மண பக்தியுள்ளவனும், தாதாவும், உம்முடைய பக்தனும், உம்முடைய தர்சனத்தை எதிர்பார்த்தவனுமாகிய

எனக்கு முந்திய ஞாபகம் இப்பொழுதுமிருக்கிறது. ஆனதால் ஓ ப்ரபுவே! யோகிகள் உபநிஷத்தாகிய கண்ணால் ஹிருதயத்தில் உம்மை த்யானஞ் செய்கிறார்கள். நீர் இந்திரியங்களுக்குப் புலப்படாதவர் நீர் ஓணான் ஜன்மத்தையடைந்து கஷ்டப்படும் எனக்கு தர்சனங் கொடுத்தது ஆச்சரியமேயாம். உம்முடைய தர்சனம் ஸம்ஸாரத்தை நிவர்த்திக்ககூடியது.

ஓ தேவர்களுக்குந்தேவனே! ஜகத்திற்கு அதிபதியே! கோவிந்த! புருஷோத்தம! நாராயண! இந்திரியங்களுக்கு அதிபதியே! புண்யஸ்லோக! (நல்வினையை கொடுப்பவர்) அழிவில்லாதவரே! அண்டினவர்களை காப்பாற்றுகிற வரே! தேவலோகஞ் செல்லுகிற எனக்கு விடை கொடும். நான் எவ்விடத்திலிருந்தாலும் என்னுடைய மனமானது உம்முடைய பாதத்தை த்யானஞ் செய்யட்டும். எல்லாவற்றையும் படைத்தவரும், விகாரமற்றவரும், மாயையென்ற சக்தியுள்ளவரும், எல்லாவற்றிற்கும் ஆச்ரயரும், ஆனந்தரூபியும், யக்ஞம் முதலிய கர்மங்களுக்குப் பயனைக் கொடுப்பவருமான உம்மை நமஸ்கரிக்கிறேன். என்று சொல்லி அவருக்கு ப்ரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து அவரிடம் விடைபெற்று உயர்ந்த விமானத்தின் மேலேறி எல்லா ஜனங்களும் பார்த்திருக்கும்பொழுது தேவலோகஞ் சென்றார்.

31–44. அப்பொழுது ப்ராஹ்மணர்களை தைவமாகக் கொண்டவரும், தர்மஸ்வபாவமுள்ளவரும், தேவகியின் புத்திரருமான கிருஷ்ணன் தர்மத்தின் ரஹஸ்யத்தை அரசர்களுக்குத் தெரிவிப்பதற்காக சிரித்துக்கொண்டு தம்முடைய பரிஜனத்தை நோக்கி "அக்னிக்குச் சமமான தேஜஸ்வியானாலும், ப்ராஹ்மணனுடைய

ஸ்வத்தில் அல்ப பாகத்தை அபஹரித்தாலும் அது ஜரிக்காது; அப்படியிருக்க தன்னை ஈச்வரனென்று நினைத்து அஹங்காரமடைந்திருக்கும் அரசர்கள் ப்ராஹ்மண ஸ்வத்தை அபஹரித்தால் அதனை ஜரித்துக்கொள்ளமுடியுமா? நான் ஹாலாஹலத்தை விஷமென்று நினைக்கவில்லை. அதனை, மணி, மந்திரம், ஓஷதம் இவைகளால் அடக்கலாம். ப்ராஹ்மணனுடைய ஸ்வத்தே விஷமென்று சொல்லப் பட்டிருக்கிறது. அதனை யொருவராலும் நிவர்த்திக்க முடியாது. விஷம் புஜித்தவனை மாத்திரம் கொல்லும்; அக்னியை ஜலத்தால் அணைத்துவிடலாம்; ப்ராஹ்மணனுடைய ஸ்வத்தாகிய அரணியிலிருந்து உண்டான அக்னியானது குலம் முழுவதையும் நாசஞ்செய்யும்.

ப்ராஹ்மணனுடைய ஸ்வத்தை அவருடைய அனுமதியில்லாமல் அபஹரித்தால் அது மூன்று தலைமுறையை நாசஞ்செய்யும். பலிஷ்டர்களுடைய ஆச்ரயத்தால் பலாத்காரமாக அபஹரித்து அனுபவித்தால் அவனுக்கு முந்திப்பத்து தலைமுறைகளையும், பிந்தி பத்துத்தலை முறைகளையும் நாசமாக்கிவிடும். எந்த அரசர்கள் பிராஹ்மணனுடைய ஸ்வத்தை விரும்புகிறார்களோ, அவர்கள் கெடுதியை இச்சிப்பவர்களாகிறார்கள். அதனால் அவர்கள் மூடர்கள். தனக்குவரும் கெடுதியை அறியாதவர்கள்; அரசர்களானாலும், அரசர்களுக்குச் ஸமானர்களானாலும், எவர்கள் ப்ராஹ்மணனுடைய ஸ்வத்தை அபஹரிக்கிறார்களோ, அவர்கள் ஸ்வத்தைப் பறி கொடுத்த குடும்பிகளான ப்ராஹ்மணர்கள் அழும் போது, கண்ணீர் ஜலத் துளிகள் எவ்வளவு பூமியில் விழுமோ, அவ்வளவு

காலம் கும்பீபாகமென்ற நரகத்தை அடைவார்கள். பின்னுமந்த ப்ராஹ்மணர்கள் கோபத்தால் மண்ணை வாரியிறைத்தால் அதில் எவ்வளவு தூளிகளிருக்குமோ, அவ்வளவுகாலம் கும்பீபாகத்தில் வஸிப்பார்கள். ப்ராஹ்மணனுக்கு ஒரு ஜீவனத்தைத் தானே கொடுத்து அதனை பிந்தி அபஹரித்தாலும், பிறரால் கொடுக்கப்பட்ட ஜீவனத்தை அபஹரித்தாலும், அவன் அறுபதினாயிரம் வர்ஷங்கள் அமேத்யத்தில் புழுவாக ஜனிப்பான். ஆனதால் ப்ரம்ஹ ஸ்வத்தானது எனக்குவேண்டாம் இதில் இச்சையுண்டாக வேண்டாமென்று கருத்து)

ப்ராஹ்மண ஸ்வத்தில் ஆசைவைத்தால் அந்த அரசர்களுக்கு ஆயுஸ்குறையும். சத்ருக்களால் ஜயிக்கப் பட்டு ராஜ்யத்தை இழந்து பயத்தை அடைவார்கள். ஓ என்னைச் சார்ந்தவர்களே! ப்ராஹ்மணன் குற்றஞ் செய்தாலும் அவர்களுக்கு நீங்கள் த்ரோஹஞ்செய்யக் கூடாது. ப்ராஹ்மணன் உங்களை அடித்தாலும், பலதரம் வைதாலும் அவனையெப்பொழுதும் நமஸ்கரியுங்கள். நான் ஒவ்வொருகாலத்திலும் மிக்க ஜாக்கிரதையாக ப்ராஹ்மணர்களை நமஸ்கரிப்பது போல் நீங்களும் ப்ராஹ்மணர்களை நமஸ்கரியுங்கள். அப்படியில்லாவிடில் சிஷிக்கப்படுவீர்கள். இந்த நிருக மஹாராஜன் தமது பசுக்களில் சேர்ந்திருந்த ப்ராஹ்மணனுடைய பசுவைத்தெரியாமல் தானஞ் செய்ததால் ஓணான் ஜன்மத்தை அடைந்து கஷ்டப்பட்டது போல ப்ராஹ்மணனுடைய ஸ்வத்தை அபஹரிப்பவன் துக்கப்படுவான்" என்று ஸகல லோகத்தையும் பரிசுத்தப்படுத்துகிறவரான ஸ்ரீ கிருஷ்ணபகவான் த்வாரகாவாஸிகளான ஜனங்களுக்கு

உத்திரவு செய்து தம்முடைய அரண்மனைக்குட் பிரவேசித்தார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–65

பலராமன் யமுனாநதியை இழுத்தது

1–8. ஓ பரீஷித்து மஹாராஜனே! பலராமன் ஒருகால் ரதத்தில் ஏறிக்கொண்டு பந்துக்களைப் பார்ப்பதற்காக நந்தகோகுலஞ் சென்றார். அவ்விடத்தில் சில கோபர்களும் கோபிகைகளும் பலராமனை ஆலிங்கனஞ் செய்துகொண்டார்கள். பலராமன் தாய் தந்தைகளை நமஸ்கரித்தார். அவர்கள் "ஓ ஜகதீசனாகிய பல! தம்பியான ஸ்ரீ கிருஷ்ணனுடன் வெகுகாலம் எங்களைக்காப்பாற்று என்று சொல்லி ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி அதனால் பலராமனை நனைத்தார்கள். மேலும் பலராமன் பெரியோர்களான கோபர்களை நமஸ்கரித்தார். இப்படி வயதிற்கும், பாந்தவ்யத்திற்கும் தக்கபடி பலராமன் கோபர்களை நமஸ்கரித்தும், கோபர்களால் நமஸ்கரிக்கப்பட்டு மிருந்தார். சிலர் பலராமனை கையைப்பிடித்தும், சிரித்தும், உபசரித்தும் க்ஷேமம் விசாரித்தார்கள் பலராமனும் அவர்களை க்ஷேமம் விசாரித்தார்.

மேலும் நந்நகோபர்கள் தாமரைமலர் போன்ற கண்களுள்ளவராகிய ஸ்ரீ கிருஷ்ணனையே மனத்தில் நினைத்துக்கொண்டு ஸகல ஆசைகளையும் ஒழித்தவர் களாகி பலராமனை நோக்கி "ஓ ராம! நீங்கள் உங்களுடைய புத்திரர்கள், களத்திரம் ஆகிய இவர் களுடன் க்ஷேமமாக இருக்கிறீர்களா? எங்களுடைய ஞாபகமிருக்கிறதா? நம்முடைய பந்துகளெல்லோரும் க்ஷேமமாக விருக்கிறார்களா? பாபியாகிய கம்ஸன் தைவச் செயலாக அடிக்கப்பட்டான். பந்துக்கள்

தைவச்செயலால் க்ஷேமத்தை அடைந்தார்கள். சத்ருக்களை ஜயித்தும், கொன்றும் தைவாதீனமாக த்வாரகா நகரத்தை அடைந்தீர்கள்" என்று ப்ரியத்தால் தழுதழுத்த (கத்கத) கண்டஸ்வரத்துடன் கேட்டார்கள்.

9–15. கோபிகைகள் ராமனைத் தர்சித்து மிக்க பிரியத்துடன் அவருடைய ஸமீபஞ்சென்று "பட்டணத்து ஸ்திரீகளின் மனத்தை அபஹரிப்பவரான ஸ்ரீகிருஷ்ணன் ஸுகமாக வஸிக்கிராறா? நீண்ட கைகளுள்ளவரான பகவான் முந்தி நாங்கள் அவரை ஸேவித்துக் கொண்டிருந்ததை நினைத்துக் கொள் வதுண்டா? மேலும் தாய், தந்தை, ஸஹோதரர்கள், பர்த்தாக்கள், புத்திரர்கள், ஸஹோதரிகள் ஆகிய விடமுடியாத எல்லா பந்துக்களையும் விட்டு எந்த ஸ்ரீகிருஷ்ணனை ஆச்சரயித்திருந்தோமோ, அப்படிப் பட்ட நம்முடைய ஞாபகமிருக்கிறதா? அவ்வளவு ப்ரீதியுள்ளவர்களான எங்களைவிட்டு விஸ்வாஸத்தை மறந்து மதுரா நகரஞ் சென்றார். அப்படிப்பட்ட கிருஷ்ணனுடைய வார்த்தையைப் பட்டணத்து ஸ்திரீகள் எப்படி நம்புகிறார்கள்? கிருஷ்ணன் ஸஞ்சல சித்தமுள்ளவர்; செய்த உபகாரத்தை மறப்பவர்; ஆனாலும் ஸமயத்திற்குத் தக்கபடி அழகாக பேசக் கூடிய கிருஷ்ணனுடைய வார்த்தையை எவர்கள்தான் நம்பமாட்டார்கள்? அதனால்தான் அழகான கிருஷ்ணனுடைய புன்சிரிப்புள்ள பார்வையால் மன்மததாபத்தை அடைந்து மோஹித்து அவருடைய வார்த்தையை பட்டணத்து ஸ்திரீகள் நம்புகிறார்கள். (சில ஸ்திரீகள் சொல்லுகிறார்கள்) ஓ கோபிகைகளே! கிருஷ்ணனுடைய கதையை விட்டு மற்ற கதையை சொல்லுங்கள். நம்மைவிட்டுப் பிரிந்த அவருக்கும்

காலம் போகிறது (ஸுகமாக); அவரைவிட்டுப் பிரிந்த நமக்கும் காலஞ் செல்லுகிறது (துக்கமாக); ஆகையால் அவருடைய கதையைச் சொல்வதால் நமக்கென்ன பயன்? என்று சொல்லி பகவானுடைய சிரிப்பு, வார்த்தை அழகான பார்வை, நடை, அன்புடன் ஆலிங்கனஞ்செய்து கொள்வது ஆகிய இவைகளை நினைத்து அழுதார்கள்.

16–26. அதனைக்கேட்ட பலராமன் பலவகையாக ஸமாதானஞ் சொல்ல ஸமர்த்தரானதால் ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லியனுப்பிய வார்த்தைகளைச் சொல்லி அவர்களை ஸமாதானஞ்செய்தார் இப்படி பலராமன் சைத்ரம், வைசாகம் ஆகிய இரண்டு மாஸங்கள் கோகுலத்தில் வஸித்தார். பலராமன் ராத்திரிகளில் யமுனாநதியின் கரையிலுள்ள வனங்களில் ஸ்திரீகளுடன் கோபிகைகளுக்கு ஸந்தோஷத்தை யுண்டு பண்ணிக் கொண்டு விளையாடினார் அப்பொழுது பூர்ணசந்திரன் பிரகாசித்தான் குமுதம் முதலிய புஷ்பங்கள் வாஸனையுடன் காற்றுவீசியது. அப்பொழுது வாருணீயானவள் (அமிருதத்துடன் ஸமுத்திரத்திலுண்டான மத்யம்) வருணனால் தூண்டப்பட்டு மரத்தின் பொந்திலிருந்து பெருகி அந்த வனத்தை வாஸிக்கசெய்தது. அந்த மதுவின் வாஸனையை முகர்ந்து பலராமன் ஸ்திரீகளுடன் அவ்விடம் வந்து அதனைப் பானஞ்செய்தார். மேலுமவர் தாம் கானஞ் செய்துகொண்டும், ஸ்திரீகளால் கானஞ் செய்யப்பட்டும் ஸ்திரீகளுடைய நடுவில் பிரகாசித்தார். அது பெண் யானைகளின் நடுவில் ஐராவதம் விளங்கினாற் போலிருந்தது, அப்பொழுது ஆகாயத்தில் துந்துபி வாத்யங்கள் முழக்கப்பட்டன; புஷ்பமாரி பெய்தது;

கந்தர்வர்களும், மஹர்ஷிகளும் பலராமனுடைய சரிதத்தை துதித்தார்கள். இப்படி பலராமன் ஸ்திரீகளால் துதிக்கப்பெற்றும் மதித்தவராகவும், மதத்தால் கலங்கிய கண்களுள்ளவராகவும், புஷ்பமாலையைத் தரித்தவராகவும், வைஜயந்தியென்ற மாலையை தரித்தவராகவுமிருந்தார். அவருடைய சிரிப்புள்ள முகமானது வியர்வைத்துளிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அப்படிப்பட்ட பலராமன் ஜலக்ரீடை செய்வதற்காக யமுனாநதியியை அழைத்தார். அதனைக் கேட்ட யமுனாநதி "இவர் மதங்கொண்டவர்" என்று இவருடைய வார்த்தையை லக்ஷ்யஞ் செய்யாமல் வரவில்லை. அதனைக்கண்ட பலராமன் யமுனையை நோக்கி "அடிபாபியே! என்னால் அழைக்கப்பட்டும் நீ வராததனால், இஷ்டப்படி ஸஞ்சரிப்பவளான உன்னை கலப்பையால் பலவகையாகச் செய்கிறேன் (பேதிக்கிறேன்) என்று சொல்லி கலப்பையின் நுனியால் கோபத்துடன் இழுத்தார்.

27–29. அதனைக்கேட்ட யமுனாநதி பயந்து பலராமனுடைய பாதங்களில் நமஸ்கரித்து "ஓ ராம! ராம! மிகுந்த பராக்கிரமமுள்ளவரே! உம்முடைய பராக்கிரமத்தை நானறியேன். நீர் ஆதிசேஷனாக விருந்து பூமியைத் தாங்குகிறீர், ஓ ஸகல ஜகத் ஸ்வரூபியாகவிருப்பவரே! உம்முடைய உண்மையான ஸ்வரூபத்தையறியாதவளான என்னை விட்டுவிட வேண்டும். நீர் பக்தர்களிடம் ப்ரீதியுள்ளவர்; உம்மை நான் சரணமடைகிறேன்" என்று கேட்டுக் கொண்டாள்.

30–34. அதனைக் கேட்ட பலராமன் யமுனையை

Released by Maran's Dog, Toronto , Canada

விட்டுவிட்டு ஸ்திரீகளுடன் ஜலத்தில் ப்ரவேசித்தார். அது பெண் யானைகளுடன் யூதபதியான ஆண் யானை ஜலத்தில் இறங்கினாற்போலிருந்தது. பின்பு ஜலக்ரீடை செய்து கரையில் வந்தார். அப்பொழுது லக்ஷ்மீதேவி கருமை நிறமுள்ள வஸ்திரங்களையும், விலையுயர்ந்த ஆபரணங்களையும் எப்பொழுதும் வாடாத மாலையையும் கொடுத்தாள். பலராமன் அவைகளை பெற்றுக்கொண்டு கருத்த நிறமுள்ள வஸ்திரங்களை யுடுத்திக்கொண்டும், சந்தனம் முதலிய வைகளைப் பூசிக்கொண்டும் அலங்கிருதராக ஐராவதம் போல் ப்ரகாசித்தார். இப்பொழுது கூட யமுனையில் கலப்பையால் இழுக்கப்பட்டதின் அடையாளமிருக்கிறது. அதனால் பலராமனுடைய பராக்கிமத்தின் ஞாபகமுண்டாகிறது. இப்படி கோபிகைகளுடைய அன்புபொருந்திய விளையாட்டுகளில் நோக்கத்துடன் பலராமன் கிரீடித்து அந்த எல்லா ராத்திரிகளையும் ஒரு ராத்திரி போலக் கழித்து வந்தார்.

Released by Maran's Dog, Toronto , Canada

♣ ♣ ♣ ♣

Released by Maran's Dog, Toronto , Canada

அத்தியாயம் –66

பகவான் பௌண்ட்ரகனைக் கொன்றது

பலராமன் கோகுலத்தில் வஸிக்கும் பொழுது கரூசதேசத்து அரசனாகிய பௌண்டரகனென்பவன் தன்னையே வாஸுதேவனென்று நினைத்துக் கொண்டான். மேலும் மூடர்கள் அவனை "நீர்தான் வாஸுதேவனாக அவதரித்திருக்கிறீர், நீர் பகவதம்சம்" என்று ஸ்தோத்திரஞ்செய்தார்கள். அதனால் அவன் தன்னை வாஸுதேவன் என்று நினைத்து அஹங்காரத்தை அடைந்தான். இப்படி மூடர்களால் அரசனாகச் செய்யப்பட்ட அந்த பௌண்ட்ரகன் அறியமுடியாத மார்க்கமுள்ள ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஒரு தூதனை அனுப்பினான். அந்த தூதன் த்வாரகைக்கு வந்து ஸபையிலிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணனை நோக்கி "பிராணிகளைக் காப்பாற்றுவதற்காக பூமியில் அவதரித்திருக்கும் வாஸுதேவன் நானொருவன்தான்; வேறொருவருமில்லை. நீ பொய்யான பெயரை விட்டு விடு; என்னுடைய அடையாளங்களை நீ பயமில்லாமல் வைத்துக் கொண்டிருக்கிறாய்; அவைகளை நீ விட்டு என்னை சரணமடைய வேண்டும். இல்லாவிடில் என்னுடன் யுத்தஞ்செய்யவேண்டும்" என்று பௌண்ட்ரகன் சொன்னதாக சொன்னான்.

7–9. அல்ப புத்தியுள்ளவனாகிய பௌண்ட்ரகனுடைய பேத்தலைக்கேட்டு உக்ரஸேனர் முதலிய ஸபையிலிருந்தவர்கள் மிகவும் சிரித்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் தூதனை நோக்கி "ஓ மூட! எந்த அடையாளங்களை வைத்துக்கொண்டு

பேத்துகிறாயோ, அவைகளை விட்டுவிடும்படி செய்கிறேன். மேலும் நீ எப்பொழுதும் வாயை மூடிக்கொண்டு கழுகு முதலிய பறவைகளால் சூழப்பட்டுப் பூமியில் படுத்துத் தூங்குவாயோ (மரணத்தை அடைவாய்) அப்பொழுது நாய்களுக்கு சரணமாவாய்" என்று சொல்லு, என்றார்.

10–24. அதனைக்கேட்ட தூதன் பௌண்ட்ரகனிடம் வந்து கிருஷ்ணனுடைய வார்த்தையைத் தெரிவித்தான் ஸ்ரீ கிருஷ்ணனும் ரதத்தின் மீதேறி காசிதேசஞ் சென்றார் (காசிராஜன் பௌண்ட்ரகனுக்கு மித்திரனானதால், அவ்விடத்தில் அவனுமிருந்தானென்று கருத்து) ஸ்ரீ கிருஷ்ணனுடைய, முயற்சியைக் கண்ட பௌண்ட்ரகன் இரண்டு அக்ஷௌஹிணி ஸைன்யங்களுடன் வெளியில் வந்தான். அவனுடைய மித்திரனாகிய காசிராஜனும் அவனுடைய பின் புறத்தைக் காப்பாற்றிக்கொண்டு மூன்று அக்ஷௌஹிணி ஸைன்யங்களும் அவன்பின் சென்றார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் பௌண்ட்ரகனைக் கண்டார். அவன் சங்கம், சக்கிரம், கத்தி, கதாயுதம், சார்ங்கம், ஸ்ரீவத்ஸம், கௌஸ்துபம், வனமாலை, பீதாம்பரம் கருடத்வஜம், விலையற்ற ரத்னா பரணங்கள், மகரகுண்டலங்கள் ஆகிய இவைகளை தரித்திருந்தான். இப்படி நடன் கிரித்திரிமமான வேடந்தரித்தாற் போல், கிரித்திரிம வேடம் பூண்டவனாகிய பௌண்டரகனைப் பார்த்து ஸ்ரீ கிருஷ்ணன் மிகவும் சிரித்தார். அப்பொழுது சூலம், கதாயுதம், பரிகம், ப்ராஸம், சக்தி,யஷ்டி, தோமரம், கத்தி, பட்டஸம், பாணம் ஆகிய இவைகளால் சத்ருக்கள் ஸ்ரீகிருஷ்ணனை அடித்தார்கள். அப்பொழுது ப்ரளய காலத்தில் அக்னி

ப்ரஜைகளை யெரித்தாற்போல் ஸ்ரீ கிருஷ்ணன் கதாயுதம், கத்தி சக்கிரம், பாணம் இவைகளால் ரதம், யானை, குதிரை, காலாட்படை ஆகிய இவைகளுள்ள சத்ரு ஸைன்யத்தை அடித்தார். குதிரைகளும், யானைகளும், ரதங்களும், கோபுர கழுதைகளும், ஓட்டகங்களும் சக்கிரத்தால் வெட்டப்பட்டு விழுந்தன. தைர்யசாலிகள் அந்த யுத்ததலத்தைப் பார்த்து ஸந்தோஷிக்கக்கூடியதாகவிருந்தது; மேலும் அந்த யுத்த களமானது ப்ரளயகாலத்திய ருத்திரன் விளையாடும் ஸ்தலம் போலிருந்தது.

அப்பொழுது பகவான் பௌண்ட்ரகனை நோக்கி "ஓ பௌண்ட்ரகனே! தூதமுகமாக எதனைச் சொல்லி யனுப்பினாயோ, அந்த அஸ்திரங்களை ப்ரயோகிக்கிறேன்; என்னுடைய அடையாளங்களை நீ தரித்ததனால் அவைகளை விட்டுவிடும்படி செய்கிறேன்; யுத்தஞ்செய்ய எனக்கு விருப்பமில்லா விட்டால் உன்னைச் சரணமடைகிறேன்" என்று சொல்லி கூர்மையான பாணங்களை ப்ரயோகித்து பௌண்ட்ரகனுடைய ரதத்தை உடைத்து மஹேந்திரன் வஜ்ரத்தால் மலையின் சிகரத்தை யுடைத்தாற்போல சக்கிராயுதத்தால் பௌண்ட்ரகனுடைய தலையை வெட்டினார். பின்பு காசிராஜனுடைய தலையை பாணங்களால் வெட்டிப் பூமியில் தள்ளினார். அது தாமரை மொட்டுப்போல் பூமியில் விழுந்தது. இப்படிப் பகவான் பௌண்ட்ரகனையும், காசி ராஜனையும் கொன்று த்வாரகைக்குச் சென்றார். ஸித்தர்கள் அவருடைய கதைகளைக்கானஞ் செய்தார்கள்; மேலும் பௌண்ட்ரகன் எப்பொழுதும் கிருஷ்ணனை போல் வேடந்தரித்து பகவானையே த்யானஞ் செய்துக்

கொண்டிருந்ததனால் ஸகல பந்தங்களும் ஒழித்து பகவத்ஸ்வரூபியாக ஆனான்.

25–30. காசிராஜனுடைய தலையானது வெட்டப் பட்டு அரசனுடைய அரண்மனை வாசலில் விழுந்தது; அதனைக்கண்ட ஜனங்கள் 'இது யாருடைய முகம்' என்று ஸம்சயித்தார்கள், பின்பு அரசனுடைய தலையென்று அறிந்து அந்தப்புர ஸ்திரீகளும், புத்திரர்களும், பந்துகளும், பட்டணத்து ஜனங்களும் "ஓ ராஜன்! நாத! உம்மை விட்டுப் பிரிந்த நாங்கள் அடிக்கப்பட்டோம்" என்று அழுதார்கள். அந்தக் காசி ராஜனுடைய புத்திரனாகிய ஸுதக்ஷிணனென் பவன், பிதாவிற்கு உத்திரக்ரியைகளை செய்து முடித்து 'என்பிதாவை கொன்றவனைக் கொன்று பிதாவை ஆராதிக்கிறேன்" என்று நிச்சயித்துக் கொண்டு தன்னுடைய உபாத்தியாயருடைய அனுமதியின் மீது பரமசிவனை மிக்க ஸாவதானனாகப் பூஜித்தாள். அதனால் பகவான் ஸந்தோஷித்து ஸுதக்ஷிணனை நோக்கி "இஷ்டமான வரத்தைக் கேள், கொடுக்கிறேன்" என்று சொன்னார். அதனைக்கேட்ட ஸுதக்ஷிணன் "என்னுடைய பிதாவைக் கொன்றவரைக் கொல்லும் உபாயத்தைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான். அதனைக் கேட்டப் பரமசிவன் "ஓ ஸுதக்ஷிண! ரித்விக்குகள் போன்ற அக்னியை அபிசாரவிதியால் பூஜி. அந்த அக்னியை ப்ராஹ்மண பக்தியில்லாதவனிடத்தில் ப்ரயோகித்தால் அக்னி ப்ரமத கணங்களுடன் கார்யத்தை முடிப்பார்; என்று சொன்னார்.

31–36. அதனைக்கேட்டு ஸுதக்ஷிணன் ஸ்ரீ

கிருஷ்ணனைக் கொல்லவிரும்பி அந்த விருதத்தைய னுஷ்டித்தான். பின்பு குண்டத்திலிருந்து மிக்க பயங்கர ஸ்வரூபத்துடன் அக்னி பகவான் கிளம்பி னார். காச்சப்பட்ட தாம்பரம்போல சிவந்த தலைமயிர், மீசை இவைகளுள்ளவராக விருந்தார். மேலும் அவருடைய கண்கள் நெருப்புத்தணல் போலிருந்தன, சிங்கப்பற்களும், புருவமும், முகமும், பயங்கரங்களாக விருந்தன். மேலுமந்த புருஷன் வஸ்திரமில்லாமலும் மூன்று முனையுள்ள சூலத்தைச் சுழற்றிக்கொண்டு, கடைவாய்களை நாக்கினால் நக்கிக்கொண்டுமிருந்தார். அவருடைய கால்கள் பனைமரம் போலிருந்தன; இப்படி பயங்கர ஸ்வரூபத்துடன் பூமியை அசைப்பது போல் த்வாரகையை நோக்கி அந்தப்புருஷன் சென்றான். அதனைக்கண்ட த்வாரகா வாஸிகளான ஜனங்கள் காட்டுத்தீயைக்கண்ட மிருகங்கள் போல் பயந்து ஸபையில் சொக்கட்டான் விளையாடுகின்ற ஸ்ரீ கிருஷ்ணனிடஞ்சென்று, "ஓ முவ்வுலகங்களுக்கும் அதிபதியாகவிருப்பவரே இந்த அக்னி, பட்டணத்தை எரிக்கிறது; காப்பாற்றும்" என்றார்கள்.

37–42. அதனைக் கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன், தம்முடைய பந்துக்கள் பயப்படுவதைப் பார்த்து, "பயப்பட வேண்டாம் உங்களை நான் ஸம்ரக்ஷிக்கிறேன்" என்று சொன்னார். மேலுமவர் ஸகல ஜனங்களுடைய ஹிருதயத்திற்கும் ஸாக்ஷியாக விருப்பதால் "இது பரம சிவனுடைய ஸம்பந்தமான கணம்" என்று தெரிந்து கொண்டு அதனை ஜயிப்பதற்காகத் தம்முடைய பக்கத்திலிருக்கும் சக்கிரத்தை அனுப்பினார். அந்த சக்கிரமானது கோடிஸூர்யன் உதித்தாற்போல பிரகாசித்தது; மேலும் ப்ரளயகால அக்னி போல

ஜ்வலித்தது; தன்னுடைய தேஜஸ்ஸால் திக்குகளையும் ஆகாயத்தையும், பூமியையும், ப்ரகாசிக்கச் செய்தது; அப்படிப்பட்ட முகுந்தருடைய அஸ்திரமாகிய சக்ரமானது அந்த அக்னியை அணைத்தது. இப்படி சக்கிராயுதத்தால் ஜயிக்கப்பட்ட அந்த அக்னியானது திரும்பி காசிதேசஞ்சென்று ஸுதக்ஷிணனையும், அவனுடைய ரித்விக்குகளையும் தஹித்தது. பின்பு ஸ்ரீ கிருஷ்ணனுடைய சக்கிரம் காசிக்குச் சென்று கோபுரம், ப்ராகாரம், ஸபை, வீடுகள் பசுக்கள் கட்டும் சாலை, குதிரை லாயம், யானை கட்டும் ஸ்தலம், பொக்கிஷம், அன்னசாலை, முதலியவைகளை தஹித்து நாசஞ்செய்து ஸ்ரீ கிருஷ்ணனுடைய பக்கஞ்சென்றது.

43. எந்த மனிதன் உத்தமச்லோகராகிய பகவானுடைய இந்த சரித்தத்தை பிறருக்குச் சொல்லுகிறானோ, எவன் பக்தியுடன் பிறர் சொல்லக்கேட்கிறானோ, அவனுக்கு ஸகல பாபங்களும் நிவர்த்தியடைகின்றன.

அத்தியாயம்–67

பலராமன் த்விவிதனைக் கொன்றது.

பரீக்ஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி "அத்புதமான சரிதங்களைச் செய்பவர்ான பலராமன் இன்னும் எதனைச்செய்தார்? அதனைச்சொல்ல வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

2–11. அதனைக்கேட்டு சுகர் அரசனை நோக்கி பின்வருமாறு சொல்லத்தொடங்கினார். எப்படியெனில்:–

"நரகாஸுரனுக்கு த்விவிதனென்ற ஒரு வானரன் தோழனாகவிருந்தான். அவன் ஸுக்ரீவனுடைய மந்திரி, மைந்தனென்பவனுடைய, ஸஹோதரன்; அவன் தன்னுடைய தோழனாகிய நரகனை கிருஷ்ணன் கொன்றதால் கிருஷ்ணனுடைய தேசமாகிய ஆனர்த்த தேசத்திலுள்ள பட்டணங்களிலும் கிராமங்களிலும் இடைச்சேரிகளிலும் அக்னியை வைத்து தஹித்தான். பின்னுமவன் மலைகளைப்பிடுங்கி தேசத்தில் போட்டு, அதனால் ஜனங்கள் முதலியவர்களை பொடி செய்தான். இப்படி ஆனர்த்ததேசத்தை மிகவும் உபத்திரவித்தான். இன்னும் பத்தாயிரம் யானை பலமுள்ளவனான அந்த த்விவிதன் சில ஸமயம் ஸமுத்திரத்தின் நடுவில் நின்று கைகளால் ஜலத்தை வாரியிரைத்து கரைக்கு ஸமீபத்திலிருக்கும் தேசங்களை முழுகச்செய்தான். மேலும் மஹர்ஷிகளுடைய ஆச்ரமங்களில் இருக்கும் மரங்களை முறித்தான. விஷ்டை, மூத்திரம் இவைகளால் யாகத்தின் அக்னிகளை அணைத்தான். பின்னுமவன் குளவியானது புழுவைக் கூட்டிற்குள் வைத்து மூடுவதுபோல புருஷர்களையும், ஸ்திரீகளையும்

மலையின் குஹையில் வைத்து கற்பாறைகளால் மூடினான். குல ஸ்திரீகளின் கற்பை அழித்தான். இப்படி ஆனர்த்த தேசத்திற்குக் கெடுதிசெய்து வந்தான். ஒருகால் அவன் ரைவதகமென்ற மலையில் காதிற் இனிமையான சப்தத்தைக்கேட்டு அவ்விடஞ்சென்றான். அவ்விடத்தில் தாமரை மாலையுள்ளவரும், அழகிய சரீரமுள்ளவரும், மத்யத்தைக் குடித்து மதித்தவரும், சிவந்த கண்களுள்ளவரும், மதித்த சிறந்த யானை போன்றவருமான பலராமனைக் கண்டான். பின்னும் துஷ்டனாகிய அந்த வானரன் மரத்தின் கிளைகளிலிருந்து மரங்களை அசைத்துக்கொண்டு கர்வத்தால் தன்னைக் காண்பித்துக்கொண்டு "கில கில" என்று சப்தித்தான்.

12–23. அதனைக்கேட்ட பலதேவருடைய ஸ்திரீகள் ஸ்வபாவத்தால் சபலர்களானாலும், சிரிப்பில் பிரியமுள்ளவர்களானதாலும், சிரித்தார்கள். அப்பொழுது அந்த வானரன் எதிரில் நிற்பது, புருவத்தை அசைப்பது, ஆகிய இவைகளைச்செய்து பலராமனை லக்ஷ்யஞ்செய்யாமல் தன்னுடைய பின்பக்கத்தை அவர்களுக்குக் காண்பித்தான். அதனைக் கண்ணுற்ற பலசாலியான பலராமன் மிக்ககோபங்கொண்டு அந்த வானரனைக் கல்லால் அடித்தார். அந்த கல் தன் மேல் படாமல் ஒதுக்கங்கொடுத்து அந்த வானரன் மத்யக்குடத்தை யெடுத்துக்கொண்டு அவரைப்பரிஹஸித்தான். அதனால் பலராமன் கோபங்கொண்டார். பின்னும் துஷ்டனாகிய அந்த த்விவிதன் மத்யக்குடத்தை உடைத்ததுமல்லாமல் ஸ்திரீகளுடைய வஸ்திரங்களைக் கிழித்துப் பலவாறாக பலராமனை லக்ஷ்யஞ்செய்யாமல் அபகாரஞ்செய்தான். அப்பொழுது

அவனுடைய கெட்டநடையையும், அவனால் தேசம் உபத்திரவிக்கப்பட்டிருப்பதையும் பார்த்து சத்ருவைக் கொல்வதற்காக மிக்க கோபங்கொண்டு முஸலத்தையும், கலப்பையையும் எடுத்துக்கொண்டார். அதனைக் கண்ட த்விவிதனும் ஸாலமென்ற மரத்தைப் பிடுங்கி வேகமாக பலராமனுடைய தலையில் அடித்தான். பலராமன் மலைபோல் தலையில் விழுகின்ற மரத்தைப் பிடித்துக்கொண்டு முஸலத்தால் அவனை அடித்தார். இப்படி முஸலத்தால் அடிக்கப்பட்டு அவனுடைய தலையுடைந்து ரத்தம் பெருகியது. அதனால். நச்சங்குப் பொடிகளுள்ள மலைபோல அவன் ப்ரகாசித்தான்.

த்விவிதன் அந்த அடியை லக்ஷ்யஞ்செய்யாமல் வேறுமரத்தைப்பிடுங்கி இலைகளையுதிர்த்து அதனால் பலராமனை அடித்தான். அதனைப் பலராமன் நூறு துண்டுகளாக வெட்டினார். இப்படி இவ்விருவர்களும் யுத்தஞ்செய்யும்பொழுது த்விவிதனால் மரங்கள் பிடுங்கப்பட்டதனால், அந்தவனத்தில் மரங்களற்றும் போயின. பின்பு த்விவிதன் காட்டில் மரமில்லாததால் கற்களை எடுத்து வர்ஷித்தான். அதனையும் பலராமன் முஸலாயுதத்தால் பொடியாக்கினார். பின்பு த்விவிதன் பனைமரம்போன்ற கைகளை முஷ்டி செய்துகெண்டு அதனால் பலராமனுடைய மாரில் குத்தினான். பலராமனும் முஸலத்தையும், கலப்பை யையும் வைத்துவிட்டு அவனுடைய கழுத்தை இருகக் கட்டினார். அதனால் த்விவிதன் ரத்தத்தைக் கக்கிக் கொண்டு மரணமடைந்து விழுந்தான். அதனால் அந்த வனமும் அவ்விடத்திலிருந்த மரங்களும், ஜலாதாரங் களும் நடுங்கின. அந்த மலையானது பெருங்காற்றிலகப்

பட்ட ஓடம்போல அசைந்தது. ஆகாயத்தில் ஸித்தர் களும், தேவர்களும், மஹர்ஷிகளும், புஷ்பங்களை வர்ஷித்து "ஜய ஜய" யென்றும், "நல்லது நல்லது" என்றும் "நமஸ்காரம்" என்றும் சொன்னார்கள். லோகத்திற்கு உபத்திரவத்தைச் செய்துகொண்டிருந்த த்விவிதனைப் பலராமன் கொன்று, ஜனங்களால் துதிக்கப்பெற்றுத் தமது நகரஞ்சென்றார்.

அத்தியாயம்–68

கௌரவர்கள் ஸாம்பனைக் கட்டியது.

ஓ பரீக்ஷித்து மஹாராஜனே! ஜாம்பவதியின் புத்திரனாகிய ஸாம்பனென்பவன் துர்யோதனனுடைய புத்திரியான லக்ஷ்மணாயென்பவளை ஸ்வயம்வரத்தில் அபஹரித்தான். அதனைக்கண்ணுற்ற கௌரவர்கள் மிக்ககோபங்கொண்டு "இந்த சிறுவன் தன்னிடத்தில் ஆசைப்படாமலிருக்கும் இந்தபெண்ணை நம்மை யெல்லோரயும் லக்ஷ்யஞ்செய்யாமல் பலாத்காரமாக அபஹரித்தான். இம்மாதிரிகெட்ட நடையுள்ள இவனைக்கட்டிவிடுங்கள். விருஷ்ணிகளால் என்ன செய்ய முடியும்? அந்த விருஷ்ணிகள் நம்மால் தயவாக விடப்பட்ட பூமியை அனுபவித்துக் கொண்டி ருப்பவர்கள்; ஒருகால் ஸாம்பன் கட்டுப்பட்டதைக் கேள்விப்பட்டு விருஷ்ணிகள் யுத்தத்திற்கு வந்தால் ப்ராணாயாமம் முதலியவைகளால் அடக்கப்பட்ட இந்திரியங்கள் போல சாந்தியை அடைவார்கள்" என்று கர்ணன், சலன், பூரி, யஜ்ஞகேது, துர்யோதனன், பீஷ்மர் ஆகிய இவர்கள் யோசித்து ஸாம்பனைப் பின் தொடர்ந்தார்கள். அதனைக்கண்ட ஸாம்பன் ஒருவனானாலும், சிங்கம் போல பயமற்று அழகான, வில்லையெடுத்துக்கொண்டு நின்றான். கர்ணன் முதலிய அந்த கௌரவர்களால் அடிக்கப்பட்டு ஸாம்பன் அல்பமிருகங்களால் ஏற்படும் அவமானத் தைச் சிங்கம்போல் அதனை ஸஹிக்கவில்லை; அவன் எண்ணமுடியாத மஹிமையுள்ள பகவானுடைய புத்திரனல்லவா? பின்னுமவன் தன்னுடைய வில்லில் நாண் கயிற்றைக்கட்டி வளைத்து நாணோசைகொண்டு

கர்ணன் முதலிய ஆறு ரதிகர்களையும் அவ்வளவு பாணங்களால் ஒரே ஸமயத்தில் அடித்தான். எப்படி யென்றால்– நான்கு பாணங்களால் அவர்களுடைய ரதத்தில் கட்டிய குதிரைகளையும், ஒவ்வொரு பாணத்தால் ஸாரதிகளையும், சிறந்த வில்லுள்ள அந்த ரதிகர்களை அடித்தான். அதனைக் கண்டு அவர்கள் ச்லாகித்தார்கள். பின்னுமவர்களில் நால்வர்கள் ஸாம்பனுடைய நான்கு குதிரைகளையும், ஒருவன் ஸாரதியையும், அடித்தார்கள். மற்றொருவன் வில்லை வெட்டினான். இப்படி கௌரவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு அவனை ரதமில்லாத பதாதியாகச்செய்து அவனைக்கட்டி லக்ஷ்மணனையுடன் தங்களுடைய பட்டணத்திற்குக் கொண்டுபோனார்கள்.

13–22. அப்பொழுது நாரதர் த்வாரகைக்குச் சென்று விருஷ்ணிகளுக்கு ஸாம்பனுடைய விஷயத் தைத் தெரிவித்தார். அதனைக்கேட்ட விருஷ்ணிகள் உக்கிரஸேனரால் தூண்டப்பட்டு கௌரவர்களுடன் யுத்தஞ்செய்ய முயற்சித்தார்கள். அதனைக் கண்ணுற்ற விருஷ்ணிகளுக்குட் சிறந்தவரான பலராமன் விருஷ்ணிகளுக்கும், கௌரவர்களுக்கும் சண்டை நேரிடக்கூடாதென்று நினைத்து விருஷ்ணிகளை ஸமாதானஞ்செய்து ஸூர்யன்போன்ற தேஜஸ்ஸுள்ள ரதத்திலேறிக்கொண்டு ஹஸ்தினாபுரஞ்சென்றார். ப்ராஹ்மணர்களும், விருஷ்ணிகளில் பெரியோர்களும், அவரைச் சுற்றிக்கொண்டு சென்றார்கள். அது சந்திரன் கிருஹங்களால் சூழப்பட்டாற்போலிருந்தது. அப்படிப்பட்ட பலராமன் ஹஸ்தினாபுரத்தின் வெளியிலிருக்கும் தோட்டத்திலிருந்து கொண்டு திருதராஷ்ட்ரருடைய மனத்தைத் தெரிந்து கொள்வதற்காக

உத்தவரை அனுப்பினார். அந்த உத்தவர் பட்டணத்திற்குள் பிரவேசித்து திருதராஷ்ட்ரர், பீஷ்மர், த்ரோணர், பாஹ்லிகர், துர்யோதனன் ஆகிய இவர்களிடஞ்சென்று பெரியோர்களை நமஸ்கரித்து பலராமன் வந்திருக்கிறாரென்பதைத் தெரிவித்தார். அவர்கள் பலராமன் வந்திருப்பதைக் கேட்டு மிக்க ப்ரியமுள்ளவர்களாகி உத்தவருக்கு மர்யாதை செய்து மங்கள த்ரவியங்களை யெடுத்துக்கொண்டு பட்டணத்திலிருந்து பலராமனிருக்குமிடம் விதிப்படி அர்க்கியங் கொடுத்துப் பூஜித்தார்கள். மேலுமவர்களில் அவருடைய மஹிமையை அறிந்தவர்கள் பலராமனை நமஸ்கரித்தார்கள். பின்னும் ஒருவருக்கொருவர் ஸந்தித்து விசாரித்தார்கள். அப்பொழுது பலராமன் கௌரவர்களை நோக்கி "மஹாராஜனாகிய உக்ரஸேனர் உங்களுக்கு ஆஜ்ஞாபனஞ் செய்கிறார். அதனை ஸாவதானமாகக் கேட்டு தாமதியாமல் செய்யுங்கள், என்னவென்றால் நீங்கள் எல்லாரும் ஒன்றுகூடி ஸாம்பனொருவனை ஜயித்து அதர்ம மார்க்கமாகக் கட்டினீர்களல்லவா? அது ஸரியல்ல. பந்துக்கள் விரோதமில்லாமல் அன்புள்ளவர்களாகவிருக்கவேண்டும்" என்று சொல்லும்படி சொன்னார் என்றார்.

23–29. இப்படி வீர்யம், சௌர்யம், பலம் தன்னுடைய சக்தி ஆகிய இவைகளுக்குச் சமமாக பலராமன் சொல்லிய வார்த்தையைக்கேட்ட கௌரவர்கள் மிக்க கோபங்கொண்டு "இது மிகவும் ஆச்சர்யம்; கிரீடம் வஸிக்கக்கூடிய தலையில் பாதரக்ஷை ஏற விரும்புகிறது; குந்தியைக் கல்யாணஞ்செய்த விஷயத்தில் விருஷ்ணிகளுக்கும், நமக்கும் ஸம்பந்தம் ஆனதால் இவர்களுக்கு அரசனுடைய ஆஸனத்தைக்

கொடுத்து நமக்குச் சமமாகச் செய்துகொண்டோம். சாமரம், சங்கம், வெண்குடை, கிரீடம், ஆஸனம், படுக்கை ஆகிய இவைகளை எங்களுடைய அனுமதியால் இவர்கள் ஆக்ஞாபிக்கிறார்கள்; நம்முடைய தயையால் கொடுக்கப்பட்டதைப் பூஜிக்கும் யாதவர்கள் வெட்கமில்லாமல் நம்மை ஆஜ்ஞாபிக்கிறார்கள்; நமக்கு விரோதஞ் செய்பவர்களான யாதவர்களிடமிருந்து அரசர்களுக்கு அடையாளமான குடை முதலியவைகளைப் பிடுங்கவேண்டும். பீஷ்மர், த்ரோணர், அர்ஜுனன் முதலிய கௌரவர்களால் சம்மதித்துக் கொடுக்கப்படாதவைகளை மஹேந்திரனானாலும் எப்படி எடுத்துக் கொள்ளமுடியும்? சிங்கத்திற்கு ஸ்வாதீனமான வஸ்து ஆட்டினால் அபஹரிக்க முடியுமா? (இனி உக்ரஸேனன் அரசனாகவிருக்கத் தகாதவன்) என்று குலத்தாலும் பந்துக்களாலும், ஸம்பந்தத்தாலும், மதித்தவர்களும் அஸத்துக்களுமான கௌரவர்கள் சொல்லி பட்டணத்துக்குள் ப்ரவேசித்தார்கள்.

30–40. பலராமன் கௌரவர்களுடைய துஷ்ட நடையைப்பார்த்தும், நிந்தாவார்த்தைகளைக்கேட்டும், மிக்ககோபத்தால் பயங்கரமான முகமுள்ளவராகி பலவகையான மதமுள்ள அஸத்துக்கள் சாந்தியை அடையமாட்டார்கள்; பசுக்களைத் தடியால் அடித்து அடக்குவதுபோல் அஸத்துக்களைச் சிக்ஷித்து நிக்ரஹிக்கவேண்டும்; என்ன ஆச்சரியம்; ஸ்ரீகிருஷ்ணனும் யாதவர்களும் கோபங்கொண்டு யுத்தத்திற்கு முயற்சித்தார்கள்; அவர்களை நான் ஸமாதானஞ் செய்து இவ்விடம் வந்தேன். மூடர்களும் சண்டையில் ப்ரியமுள்ளவர்களும் துஷ்டர்களுமான கௌரவர்கள்

என்னை லக்ஷ்யஞ்செய்யாமல் கெட்ட வார்த்தைகளைச் சொன்னார்கள். போஜர்களுக்கும், விருஷ்ணிகளுக்கும், அந்தகர்களுக்கும், அதிபதியாகிய உக்ரஸேனருடைய உத்திரவை இந்திரன் முதலிய லோகபாலர்களும் சிரஸால் வஹிக்கிறார்கள். ஸுதர்மாயென்ற தேவ ஸபையும், தேவவிருக்ஷமான பாரிஜாதமும் பூமிக்குக் கொண்டுவரப்பட்டு அவரால் அனுபவிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட உக்ரஸேனர் அரசனாகவிருக்கத் தகுதியில்லாதவரென்று இவர்கள் சொல்லுகிறார்கள். மேலும் எல்லாவற்றிற்கும் அதிபதியான லக்ஷ்மீதேவி எவருடைய பாதங்களை ஸேவிக்கிறாளோ, அந்த லக்ஷ்மீபதியாகிய ஸ்ரீ கிருஷ்ணனுக்கு அரசனுக்குரிய ஸாமக்ரிகள் (குடைசாமரம் முதலியவை) தகுதியல்ல வென்கிறார்கள்.

எவருடைய பாததூளியை கங்கையைவிட பரிசுத்தமானதென்று ப்ரஹ்மா, பரமசிவன் லக்ஷ்மீதேவி ஆகிய நாங்கள் சிரஸால் தரிக்கிறோமோ, நாங்கள் எவருடைய அம்சமோ, அப்படிப்பட்ட பகவானுக்கு அரசர்களுக்குரிய சிங்காஸனம் உரியதல்ல வென்கிறார் கள். கௌரவர்களால் கொடுக்கப்பட்ட ஸ்வல்ப பூமியை விருஷ்ணிகள் அனுபவிக்கிறார்களாம் நாம் பாதரக்ஷைகளாம், கௌரவர்கள் தலைகளாம். ஐச்வர்ய மதங்கொண்டு அஹங்காரிளாகி மத்யபானஞ் செய்தவன் போல அஸம்பந்தமாக (கோணலாக) பேசுகிற அஸத்துக்களுடைய வார்த்தையைச் சிக்ஷிப்ப வனான யார் ஸஹிப்பான்? ஆனதால் இப்பொழுது பூமியில் கௌரவர்களில்லாமல் நாசஞ்செய்து விடுகிறேன்" என்று முவ்வுலகங்களையும் எரிப்பவர் போல கலப்பையையெடுத்து கொண்டு எழுந்திருந்தார்.

41–47. மேலுமவர் ஹஸ்தினாபுரத்தை கலப்பையால் குத்திப் பிளந்து கங்கையில் தள்ளுவதற்காக தூக்கினார். இப்படி கலப்பையால் குத்திப்புரட்டப்பட்ட நகரமானது ஜலத்தில் கப்பல் போல அசைந்தது. அதனைக்கண்ட கௌரவர்கள் பயந்து உயிர் பிழைக்க விரும்பி குடும்பத்துடன் பலராமனையே சரணமடைந்தார்கள். மேலுமவர்கள் லக்ஷ்மணையுடன் ஸாம்பனை முன்னிட்டு அஞ்ஜலி பந்தஞ்செய்து "ஓ ராம! ராம! எல்லாவற்றிற்கும் ஆதாரமாக விருப்பவரே! உம்முடைய மஹிமையை அறியோம். மூடர்களும் கெட்ட புத்தியுள்ளவர்களு மான எங்களுடைய குற்றத்தை மன்னிக்கவேண்டும்; இந்தஜகத்தைப் படைப்பதற்கும், ஸம்ரக்ஷிப்பதற்கும் நீர் காரணராகவிருப்பவர்; உமக்குவேறு காரணமில்லை.

ப்ரஹ்மா முதலியவர்கள் உமக்கு இந்த ஜகத்தை விளையாட்டு ஸாமான்களென்று சொல்லுகிறார்கள். ஓ ஆயிரந்தலையுள்ளவரே! இந்த பூமண்டலத்தை நீர் தலையால் சுமக்கிறீர். ப்ரளயகாலத்தில் ஸகல ஜகத்தையும் தனக்குள் அடக்கிக்கொண்டு தாமொரு வராக விருக்கிறீர். ஓ பலராம! உமக்கு துஷ்டர்களைச் சிக்ஷிப்பதற்காக கோபமேயொழிய மாத்ஸர்யத்தாலேற் பட்டதல்ல. நீர் பூமியை பரிபாலிப்பதில் நோக்க முள்ளவர்; ஓ ஸகல பிராணிகளின் ஸ்வரூபியாக விருப்பவரே! ஸகல சக்திகளையும் தரிப்பவரே! அழிவற்றவரே! ஜகத்தின் க்ஷேமகர்மங்களைச் செய்பவரே! உம்மை நமஸ்கரிக்கிறோம். நாங்களெ ல்லோரும் உம்மை சரணமடைகிறோம்" என்றார்கள்.

48–53. இப்படிச் சரணமடைந்தவர்களும், பயந்து நடுங்கியவர்களுமான கௌரவர்களுடைய வார்த்தை யை கேட்ட பலராமன் "பயப்படவேண்டாம்", என்று அவர்களுக்கு அபயங்கொடுத்தார். அப்பொழுது துர்யோதனன் அறுபது வயதுள்ள பன்னிரெண்டு ஆயிரம் யானைகளையும், லக்ஷங்குதிரைகளையும், ஆறு ஆயிரம் ரதங்களையும், ஆயிரம் வேலைக்காரி களையும் கன்யாதானமாகக் கொடுத்தான். பலராமன் அதெல்லாவற்றையும் பெற்றுக்கொண்டு புத்திரனுட னும், நாட்டுப்பெண்ணுடனும், பந்துக்களால் ச்லாகிக்கப்பெற்று த்வாரகைக்குச் சென்றார். பின்பு பலராமன் ஹஸ்தினாபுரஞ்சென்று பந்துக்களைக் கண்டு யாதவர்களுடைய ஸபையில் கௌரவர் களுடைய விஷயத்தைத் தெரிவித்தார் இப்பொழுதும் அந்த ஹஸ்தினா நகரம் கங்கையில் தென்பக்கத்தில் உயர்ந்து பலராமனுடைய பராக்கிரமத்தைக் காண்பித்துக் கொண்டிருக்கிறது.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–69

நாரதர் கிருஷ்ணனுடைய கிருஹஸ்த தர்மத்தைப்பார்த்து ஆச்சர்யமடைந்தது.

ஒரு ஸமயம் நாரத மஹர்ஷி நரகாஸுரன் அடிபட்டதையும், அநேக ராஜகுமாரிகளை கிருஷ்ணன் ஒருவர் விவாஹஞ்செய்துக் கொண்டதையும் கேள்விப்பட்டு ஸ்ரீ கிருஷ்ணனைப்பார்க்க விரும்பி த்வாரகைக்குச் சென்றார். ஒரே புருஷன் ஒரே காலத்தில் பதினாறு ஆயிரம் கிருஹத்திலிருந்து அவ்வளவு ஸ்திரீகளை கல்யானஞ் செய்துகொள்வது மிகுந்த ஆச்சர்யமானதால், அதனைப் பார்க்க வேண்டுமென்ற விருப்பம் தேவர்ஷியாகிய நாரதருக்கு உண்டாயிற்று. அந்த த்வாரகா நகரத்தில் அநேக உத்தியானங்களும், அதிலுள்ள மரங்கள் புஷ்பித்தும், அந்தப் புஷ்பங்களின் மதுவைப் பானஞ்செய்து வண்டுகள் சப்தித்துக்கொண்டுமிருந்தன.

மேலும் ஓடைகளில் நீலோத்பலங்களும், தாமரைகளும், குமுதங்களும் புஷ்பித்திருந்தன. ஹம்ஸங்களும் ஸாரஸ பக்ஷிகளும் சப்தித்துக் கொண்டிருந்தன. பின்னும் அந்த நகரத்தில் ஸ்படிகங்களாலும். வெள்ளிகளாலும் மரகத ரத்னங் களாலும் செய்யப்பட்டவைகளும், ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப்பட்டவைகளுமான ஒன்பது லக்ஷம் மாடிகளுமிருக்கின்றன. வீதிகளும் கடைத்தெருவுகளும் நாச்சந்தி மண்டபங்களும், ஸபைகளுமிருக்கின்றன. பின்னும் வீதிகள் ஜலந்தெளிக்கப்பட்டும், சுத்தஞ் செய்யப்பட்டும், வீட்டு வாயிற்படிகள் குப்பையில்லாமல்

பெருக்கப்பட்டும், வீதிகளில் த்வஜங்களும், பதாகைகளும் கட்டப்பட்டு வெய்யிலை மறைத்துக்கொண்டு மிருக்கின்றன. அந்த நகரத்தில் மிக்க அழகு பொருந்திய ஸ்ரீகிருஷ்ணனுடைய அந்தப்புரம் ஒன்று இருக்கிறது. அதனை ஸகல லோக பாலர்களும் பூஜிக்கிறார்கள். விச்வகர்மாவின் ஸாமர்த்தியம் முழுவதும் அதில் காட்டப்பட்டிருக்கிறது. மேலுமதில் கிருஷ்ணனுடைய பதினாறாயிரம் ஸ்திரீகளுக்கும் அரண்மனைகளிருக்கின்றன. அதில் நாரதர் ஒரு கிரஹத்தில் ப்ரவேசித்தார். அந்த அரண்மனை பவழத் தூண்களாலும், இந்திர நீலச்சுவர்களாலும், இந்திர நீலமயமான பூமிகளாலும், வைடூர்யப் பலகைகளாலும், கொடுங்கைகளாலும், முத்துமாலைகளாலும், தந்தங்களால் செய்யப்பட்டு ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டதுமான கட்டில் முதலியவைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மேலும் அந்த கிருஹங்களில் ரத்னஹாரங்களாலும், நல்ல வஸ்திரங்களாலும், அலங்கரிக்கப்பட்ட வேலைக்காரிகளும், சட்டை தலைப்பாகை, ரத்ன குண்டலங்கள் இவைகளால் அலங்கரிக்கப்பட்ட வேலைக்காரர்களும் வஸிக்கிறார்கள். ரத்ன தீபங்களின் ஒளியால் இருளில்லாமல் பிரகாசமாகவிருக்கிறது. கொடுங்கைகளில் வஸிக்கும் மயில்கள் ஜன்னல் வழியாக வெளியில் வரும் அகருதூபத்தின் புகையை மேகமென்று நினைத்து கூத்தாடுகின்றன. அப்படிப்பட்ட அந்த கிருஹத்தில் அதற்குடையவளான ராஜகுமாரி (ருக்மிணி) தங்கப்பிடியுள்ள சாமரத்தை கையிலெடுத்து கிருஷ்ணனை விசிறி உபாஸித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு சமமான ரூபம், குணம்

வயது, அலங்காரம் இவைகளுள்ள அநேக வேலைக்காரிகள் அவளைச் சுற்றிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது நாரதரைக்கண்ட ஸ்ரீ கிருஷ்ணன், கட்டிலிலிருந்து சீக்கிரமாக இறங்கி, நாரதருடைய பாதத்தில் தம்முடைய கிரீடம் படும்படி நமஸ்கரித்து அஞ்ஜலிசெய்து கொண்டு தன்னுடைய ஆஸனத்தில் உட்கார்த்தி வைத்தார். மேலுமவர் நாரதருடைய பாதங்களை அலம்பி அந்தத்தீர்த்தத்தைத் தம்தலையில் ப்ரோக்ஷித்துக்கொண்டார். அவர் ஜகத்திற்கு மேலானவரானாலும் ஸாதுக்களுக்கு அதிபதியானாலும் ப்ராஹ்மணர்களையே தைவமாகக் கொண்டவரானதால் இப்படிச் செய்தது உசிதம்; அவருடைய பாதாரவிந்தத்திலிருந்து பெருகிய கங்கா தீர்த்தமானது எல்லாவற்றையும் பரிசுத்தப்படுத்துகிறது. இப்படி தேவர்ஷிகளுக்குட் சிறந்தவராகிய நாரதரை நர நாரயணர்களாக அவதரித்த ஸ்ரீ கிருஷ்ணன் விதிப்படி பூஜித்து அமிருதப் பெருக்குள்ள பிரியமான வார்த்தைகளைச்சொல்லி "உமக்கு என்னால் செய்யக் கூடியதென்ன ?" என்று கேட்டார்.

17–18. அதனைக்கேட்ட நாரதர் "ஓ ப்ரபுவே! ஸகலஜகத்திற்குமதிபதியே, எல்லா ஜனங்களிடத்தும் நீர் பிரீதி செய்வதும், துஷ்டர்களைச் சிக்ஷிப்பதும் ஆச்சர்யமல்ல. நீர் ஜகத்தைத் தரிப்பதற்காகவும், ரக்ஷிப்பதற்காகவும், அதற்கு மோக்ஷத்தைக் கொடுப்பதற்காகவும், தமதிஷ்டப்படி அவதரிக்கிறீர் என்பதை நான் அறிவேன் (எல்லா ஜனங்களிடத்திலும் பிரீதி செய்வது உமக்கு இயற்கையானதால் என்னைப் பூஜித்திரேயொழிய என்னிடத்திலுள்ள கௌரவத்தால் பூஜிக்கவில்லை என்று கருத்து) உம்முடைய

பாதாரவிந்தத்தைத் தர்சித்தேன். அது ஸகலஜனங்களுக்கும் மோக்ஷத்தைக்கொடுக்கூடியது; மிகுந்த ஞானமுள்ள ப்ரஹ்மா முதலியவர்களாலும் ஹிருதயத்தில் த்யானிக்கக்கூடியது; ஸம்ஸாரமாகிய கிணற்றில் விழுந்தவனை வெளியில் தூக்கி விடக்கூடியது; உம்முடைய ஸ்மரணமானது எப்பொழுதும் எனக்கு இருக்கும்படி அனுக்கிரஹிக்க வேண்டும்" என்று சொன்னார்.

19–22. பின்பு நாரதர் அந்த கிருஹத்திலிருந்து வெளியில்வந்து யோகேச்வரராகிய கிருஷ்ணனுடைய யோகமாயையின் மஹிமையை பார்க்கவிரும்பி இன்னொரு கிருஹத்தில் பிரவேசித்தார். அவ்விடத்தில் ஸ்ரீகிருஷ்ணன் பத்னியுடனும், உத்தவருடனும் சொக்கட்டான் விளையாடிக்கொண்டிருந்தார். பின்னுமவர் மிகுந்த பக்தியுடனும் நாரதரைக்கண்டு எழுந்திருந்து விதிப்படிப் பூஜித்து ஒன்றையும் அறியாதவர்போல "எப்பொழுது வந்தீர்? எல்லாவற்றிலும் பூர்ணரான உமக்கு அபூர்ணர்களான எங்களால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. ஆனாலும் நான் செய்யவேண்டியதைச் சொல்லும். என்னுடைய ஜன்மாவை ஸபலமாக்கிவிடும்" என்று சொன்னார். அதனைக்கேட்ட நாரதர் மிகவும் ஆச்சர்யப்பட்டு பதில்சொல்லாமல் எழுந்திருந்து மௌனமாக மற்றொரு கிருஹஞ்சென்றார்.

23–39. அவ்விடத்தில் ஸ்ரீகிருஷ்ணன் குழந்தைகளை யெடுத்துவைத்துக் கொஞ்சிக்கொண்டிருக்கக் கண்டார். அதனைப் பார்த்து நாரதர், மற்றொரு வீட்டிற்குள் சென்றார். அவ்விடத்தில் ஸ்ரீ கிருஷ்ணன்

ஸ்நானஞ்செய்ய யத்தனித்துக்கொண்டிருந்தார், அவ்விடமிருந்து மற்றொரு கிருஹஞ்சென்று நாரதர், அவ்விடத்தில் அக்னி ஹோத்திரஞ் செய்துகொண்டிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணனை தர்சித்தார்; இப்படி நாரதர் ஒவ்வொரு கிருஹத்திற்கும் சென்றார். ஸ்ரீ கிருஷ்ணன் ஒருவீட்டில் பஞ்சயக்ஞங்களை அநுஷ்டித்துக்கொண்டும், மற்றொருவிடத்தில் ப்ராஹ்மணர்களுக்கு போஜனஞ் செய்வித்து கொண்டும், இன்னுமொரு வீட்டில் அதிதிகளுக்கு உபயோகித்து மிகுதியான அன்னத்தைப் புசித்துக்கொண்டும், இன்னுமொருவீட்டில் மௌனமாக ஜபஞ்செய்துகொண்டும், இன்னுமொரு வீட்டில் கத்தி, கேடகம் இவைகளை தரித்து மார்க்கத்தில் ஸஞ்சரித்துகொண்டும், மற்றொரு வீட்டில் குதிரையின் மீதேறுகிறவரும். பின்னுமொரு வீட்டில் யானை, ரதம் இவைகளில் ஏறுகிறவரும், மற்றுமொரு வீட்டில் கட்டிலில் படுத்து கொண்டவரும், வந்திகளால் ஸ்துதிக்கப்பெற்றவரும், உத்தவர் முதலிய மந்திரிகளுடன் ஆலோசிப்பவரும், மற்றொருவீட்டில் தாஸிகளுடன் ஜலக்ரீடை செய்பவரும், இன்னுமொரு வீட்டில் ப்ராஹ்மணர்களுக்கு அலங்கரிக்கப்பட்ட பசுக்களை தானஞ்செய்து கொண்டும், இதிஹாஸ புராணங்களைக் கேட்டுக்கொண்டும் மற்றொரு வீட்டில் தம் பத்னியுடன், பரிஹாஸவார்த்தை பேசி அவளை சிரிக்கச்செய்து கொண்டும், ஒரு கிருஹத்தில் தர்மத்தை யநுஷ்டித்துக் கொண்டும், மற்றொரு வீட்டில் அர்த்த காமங்களை யனுபவித்துக்கொண்டும், மற்றொருவீட்டில் ப்ரகிருதியை விட மேலான (ப்ரகிருதி ஸம்பந்தமில்லாத) பரம புருஷனை (தம்மை) த்யானஞ் செய்துக்கொண்டும், இன்னுமொருவீட்டில்

ஆசார்யனுக்கு இஷ்டமான வஸ்துக்களைக்கொடுத்துச் சுச்ரூஷை செய்துகொண்டும், சில வீட்டில் சிலருடன் சண்டை செய்து கொண்டும், மற்றொரு கிருஹத்தில் ஸமாதானஞ் செய்துகொண்டும், மற்றொருவீட்டில் பலராமனுடன் ஸாதுக்களின் க்ஷேமத்தை யோசித்துக் கொண்டும், இன்னுமொரு கிருஹத்தில் புத்திரர்களுக்கும், பெண்களுக்கும் உசிதமான காலத்தில் முறையே உபநயனம், விவாஹம் இவைகளைச் செய்து கொண்டும், மற்றொருவிடத்தில் புத்திரனுக்கு தகுதியான பெண்ணை தேடிக்கொண்டும், மற்றொருவிடத்தில் கன்னியாதானங் கொடுப்பவரும், பெண், மணப் பிள்ளை ஆகிய இவர்களை அனுப்பிக்கொண்டும், அவர்களை அவர்கள் வீட்டிலிருந்து அழைத்துக் கொண்டும், மற்றொருவிடத்தில் ஸகல ஜனங்களும் ஸந்தோஷிக்கும்படி குழந்தைகளுக்கு கல்யாண மஹோத்ஸவத்தைச் செய்துகொண்டும், மற்றொரு வீட்டில் யாகங்களை யனுஷ்டித்து ஸகல தேவர்களைப் பூஜித்துக்கொண்டும், மற்றொருவீட்டில் கிணறு, குளம் வெட்டுவிப்பது தேவாலயம் கட்டுவிப்பது, தோட்டம் போடுவது, முதலிய பூர்த்ததர்மத்தை அனுஷ்டித்துக்கொண்டும், மற்றொருவீட்டில் ஸிந்து தேசத்திலுண்டான குதிரையின் மீதேறி வேட்டைக்குச் சென்றுகொண்டும், மற்றொருவீட்டில் சுத்தமான பசுக்களைக் கொண்டு யாகஞ்செய்து கொண்டும், மற்றொரு வீட்டில் அவ்விடத்திலிருக்கும் ஜனங்களை பரீக்ஷிப்பதற்காக வேறு வேஷந்தரித்து ஸஞ்சரிப்ப வருமாக விருந்தார். இப்படிப்பட்ட மனிதனாக அவதரிக்கும் பகவானுடைய யோகமாயையின் மஹிமையைப்பார்த்து நாரதமஹர்ஷி சிரித்து ஸ்ரீ கிருஷ்ணனை நோக்கி "ஓ யோகேச்வர! உம்முடைய

யோகமாயை யோகிகளாலும் பார்க்க முடியாதது; உம்முடைய பாதஸேவையால் அது என்னுடைய மனத்தில் தோன்றியது. அதனால் அதனைத் தெரிந்து கொண்டேன். ஆனதால் ஓ கிருஷ்ண! விடை கொடுத்தனுப்பும், லோகங்களை பரிசுத்தப் படுத்துகின்ற உம்முடைய லீலைகளை கானஞ் செய்துகொண்டு உம்முடைய கீர்த்தி பரவிய லோகங் களில் ஸஞ்சரிக்கிறேன். என்றார் (உம்முடைய மனுஷ்யபாவனையால் நான் மோஹிக்கிறேன். ஆனதால் என்னை அனுப்புமென்ற கருத்து)

40–43. அதனைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணன் நாரதரை நோக்கி "ஓ ப்ராஹ்மண! நான் தர்மத்தைச் சொன்னவன்; அதனைச்செய்பவன்; அதனை அனுமோதிப்பவன்; ஆனதால் ஜனங்கள் தர்மத்தைச் செய்யும்படி அனுஷ்டித்துக் காண்பித்துக்கொண்டிருக் கிறேன். ஓ புத்திர! நீ இதைப்பார்த்து மோஹிக்க வேண்டாம்" என்று சொன்னார். அதனைக்கேட்ட நாரதர் கிருஹஸ்த தர்மங்களை எல்லாவீட்டிலும் அனுஷ்டித்துக்கொண்டிருக்கும் பகவானை ஒருவராக (பலஸ்வரூபங்களில்லாமல்) தர்சித்தார். அளவற்ற மஹிமையுள்ள ஸ்ரீகிருஷ்ணனுடைய யோகமாயையின் மஹிமையைப் பார்த்து நாரதர் மிக்க ஸந்தோஷத்தை அடைந்து ஆச்சர்யமடைந்தார். இப்படி அர்த்தம் காமம், தர்மம், ஆகிய இவைகளில் ச்ரத்தையுள்ளவரான ஸ்ரீ கிருஷ்ணனால் நாரதர் பூஜிக்கப்பட்டு அந்த ஸ்ரீ கிருஷ்ணனையே நினைத்துக்கொண்டு சென்றார்.

44–45. இப்படி ஸ்ரீமந் நாராயணன் ஸகல ஜனங் களுடைய க்ஷேமத்திற்காக அநேக அவதாரங்களைச்

செய்து பதினாறு ஆயிரம் ஸ்திரீகளுடைய வெட்கம் அன்பு இவைகள் பொருந்திய பார்வை, சிரிப்பு இவை களை அடைந்து ரமித்தார். மேலும் ஜகத்தைப் படைப்பதற்கும், காப்பாற்றுவதற்கும், ஸம்ஹரிப்பதற் கும் காரணராகிய ஸ்ரீகிருஷ்ணன் எந்த அற்புதமான சரிதங்களைச் செய்தாரோ, அவைகளை எவன் கானஞ்செய்கிறானோ, கேட்கிறானோ, அதனை அனுமோதிக்கிறானோ, அவனுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பவரான பகவானிடத்தில் பக்தியுண்டாகும்.

அத்தியாயம்–70

ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஆஹ்னிகம்.

(நாரதர் ஒவ்வொரு கிருஹங்களில் பகவானுடைய கிருஹஸ்த தர்மத்தைத் தர்சித்தாரல்லவா? அதனை க்ரமமாகச்சொல்லுகிறார்) விடியற்காலம் ஸமீபித்த பொழுது கோழிகள் சப்தித்தன. அப்பொழுது ஒவ்வொரு வீடுகளிலும் ஸ்ரீ கிருஷ்ணனால் ஸ்திரீகள் ஆலிங்கனஞ்செய்து கொள்ளப்பட்டிருந்தமையால் அவர்கள் கோழிகளை வைதார்கள் (கோழிகளுடைய சப்தத்தைக் கேட்டுப் பகவான் தங்களைவிட்டு எழுந்திருந்து விடுவாரென்று பயந்து கோழிகளை வைதார்களென்று கருத்து) மந்தாரவனத்திலிருந்து வாஸனையுள்ளகாற்று வீசியது. அதனால் வண்டுகள் சப்தித்தின. பறவைகள் வந்திகள்போல் சப்தித்து கிருஷ்ணனை எழுப்பின. அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணனால் ஆலிங்கனஞ் செய்துகொள்ளப்பட்டு அவருடைய கைகளின் மத்தியை அடைந்து ருக்மிணி ஸ்ரீகிருஷ்ணனைவிட்டுப் பிரியவேண்டுமேயென்ற காரணத்தால் அந்தப்பறவை சப்திப்பது முதலியவை களை ஸஹிக்கவில்லை. அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் ப்ரஹ்ம முஹூர்த்தத்தில் எழுந்திருந்து கைகால்களை அலம்பி ஆசனமனஞ்செய்து தெளிந்திருக்கும் இந்திரியங்களுள்ளவராகி ப்ரகிருதி ஸம்பந்தமற்றதும், அகண்டமும், உபாதி ஸம்பந்தமில்லாததும், நித்ய மானதும், தானாக ப்ரகாசிப்பதும், எப்பொழுதும் அவித்யையின் ஸம்பந்தமற்றதும், இந்த ஜகத்தை படைப்பது முதலியவைகளுக்கு காரணமாகிய தமது சக்திகளால் தன்னுடைய, இருப்பையும் ஆனந்தத்தையும்

காண்பிப்பதும் ப்ரஹ்மமென்று சொல்லப்படுவதுமான பரமாத்மாவை த்யானஞ்செய்தார். (குணங்கள் ஒன்றோடொன்று சேருவதற்குமுன் கேவல ஸத்தா மாத்திரனாகவிருந்தாரென்று கருத்து) பின்பு சுத்தமான ஜலத்தில் ஸ்நானஞ்செய்து வஸ்திரங்களை யுடுத்திக் கொண்டு ஸந்தியோபாஸனம் முதலிய கர்மங்களை விதிப்படி செய்தார். பின்னும் ஸாதுக்களுக்குட் சிறந்தவரான ஸ்ரீ கிருஷ்ணன் அக்னி கார்யத்தைச் செய்து காயத்ரியை ஜபித்தார். பின்பு ஸூர்யன் உதயமானார். அதன் பின், காயத்திரியின் உபஸ்தானத்தைச் செய்து தம்முடைய அம்சமான தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் பிதிருக்களுக்கும் தர்ப்பணஞ்செய்து பெரியோர்களான ப்ராஹ்மணர் களைப் பூஜித்து பசுக்களை தானஞ்செய்தார்.

அவைகள் தலையீற்றுள்ளவைகள்; தங்கத்தால் அலங்கரிக்கப்பட்ட கொம்புள்ளவைகள்; நல்ல ஸ்வபா முள்ளவைகள்; முத்துமாலைகளால் அலங்கரிக்கப் பட்டவைகள்; வஸ்திரத்தால் அலங்கரிக்கப் பெற்றவைகள்; வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட குளம்புள்ளவை; ப்ராஹ்மணர்களுக்கும் அலங்காரம் செய்து மேற்சொல்லியபடியுள்ள பசுக்களையும் எள்ளு, பட்டு இவைகளையும் கொடுத்தார். இப்படி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீடுகளிலும் செய்துவந்தார். பின்பு பசுக்கள், ப்ராஹ்மணர்கள், தேவதைகள் பெரியோர்கள், ஆசார்யர்கள், மற்ற ஸகல பூதங்கள் ஆகிய தம்மிடத்திலிருந்து உண்டான வைகளை நமஸ்கரித்து மங்கள த்ரவியங்களை ஸ்பர்சித்தார் (தொட்டார்) அதன் பின் பூலோகத்திற்கே ஆபரணமாகவிருக்கும் தம்முடைய சரீரத்தை மிகவும்

திவ்யமான வஸ்திரம், ஆபரணம், சந்தனம், புஷ்பம் ஆகிய இவைகளால் அலங்கரித்துக்கொண்டார். பின்பு நெய்யில் தம்முடைய ப்ரதிபிம்பத்தை பார்த்தார். அதன்பின் கண்ணாடி, பசு, விருஷபம், ப்ராஹ்மணன், தேவதை ஆகிய இவைகளைத் தர்சித்தார். பிறகு அந்தப்புரத்தில் வஸிக்கும் ஜனங்களுக்கும், பட்டணத்து ஜனங்களுக்கும் இஷ்டமான வஸ்துக்களைக் கொடுத்து ஸந்தோஷப்படுத்தித் தாமும் ஆனந்தத்தை அடைந்தார். சந்தனம், புஷ்பம், தாம்பூலம் முதலியவைகளை ப்ராஹ்மணர்களுக்கும் முன்னதாகக் கொடுத்து, பின்பு மித்திரர்களுக்கும், அதன்பின் ஜனங்களுக்கும், அதன்பின் தம்முடைய பத்தினிகளுக்கும், கொடுத்து எஞ்சியவைகளைத்தாம் உபயோகித்துக் கொண்டார். அதற்குள் ஸுக்ரிவம் முதலிய குதிரைகளைப்பூட்டி அற்புதமான ரதத்தை தாருகன் வாசலில் நிறுத்தி, கிருஷ்ணனை நமஸ்கரித்து நின்றான்.

அதனைக்கண்ட பகவான் ஸாத்யகி, உத்தவர் இவர்களுடன் ஸாரதியின் கையைப்பிடித்துக்கொண்டு ரதத்தின் மீது ஏறினார். அது ஸூர்யன் உதயபர்வதத் தை அடைந்தாற்போலிருந்தது. அந்தப்புர ஸ்திரீகள் வெட்கத்துடனும் அன்புடனும் கிருஷ்ணனை கடாக்ஷித்து, ச்ரமப்பட்டு விடைகொடுத்தார்கள். இப்படி பகவான் அநேக ஸ்திரீகளுடைய வீட்டிலிருந்து, அநேக கிருஷ்ணனாக வெளியில்வந்து, ஒரு கிருஷ்ணனாகி, ஸபைக்குச்சென்றார். இப்படி ஸ்ரீ கிருஷ்ணன் எல்லாவிருஷ்ணிகளாலும் சுற்றப்பட்டு ஸுதர்மா என்ற ஸபைக்குச்சென்றார். அந்த ஸபையி லிருப்பவர்களுக்குப் பசி, தாஹம் முதலிய ஆறுவகை

விகாரங்களில்லை. அந்த ஸபையில் உத்தமமான ஆஸனத்தில் கிருஷ்ணன் உட்கார்ந்து தம்முடைய தேஜஸ்ஸால் திக்குகளைப் ப்ரகாசிக்கச் செய்தார். மற்ற யாதவர்கள் அவரைச் சுற்றிக்கொண்டிருந்தார்கள். அது ஆகாயத்தில் நக்ஷத்திரங்களுடைய மத்தியில் சந்திரன் பிரகாசிப்பது போலிருந்தது. அப்பொழுது சிரிக்கும்படி பேசக்கூடியவர்கள் (விகடகவிகள்), பலவகையான ஹாஸ்யங்களால் கிருஷ்ணனுக்குச் சந்தோஷத்தை உண்டு பண்ணினார்கள். நர்த்தனஞ் செய்யும் புருஷர்களும், ஸ்திரீகளும், மிருதங்கம், வீணை, முரஜம், புல்லாங்குழல், தாளம், சங்கம், இவை களை முழக்கிக்கொண்டு நர்த்தனஞ்செய்தார்கள். பாடகர்கள் பாடினார்கள். ஸூதர்களும், மாகதர் களும், வந்திகளும் ஸ்தோத்திரஞ்செய்தார்கள்.

மேலும் அங்கிருந்த சில ப்ராஹ்மணர்கள் புண்ய ச்லோகர்களான முந்திய அரசர்களுடைய சரிதங் களைச் சொன்னார்கள்; அப்பொழுது ஒரு புருஷன் ஸ்ரீகிருஷ்ணனை பார்ப்பதற்காக வந்தான். காவலாட்கள் பகவானிடத்தில் தெரிவித்து ஸதஸ்ஸில் அவனை அழைத்துச்சென்றார்கள். அந்தப் புருஷன் அஞ்ஜலி பந்தஞ்செய்து பரமேச்வரனாகிய கிருஷ்ணனுக்கு நமஸ்காரஞ்செய்து "ஜராஸந்தன் திக்விஜயஞ் செய்யும் பொழுது எந்த அரசர்கள் அவனைக்கண்டு வணங்கவில்லையோ, அவர்களை பலாத்காரமாகக் கொண்டுவந்து காராகிருஹத்தில் அடைத்து வைத்தி ருக்கிறான். இப்படி கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் இரண்டு லக்ஷம் அரசர்கள் என் முகமாகத் தங்களிடம் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள். எப்படியேனில் "ஓ கிருஷ்ண! அளவற்ற மஹிமையுள்ளவரே! சரணாகதர்

களுடைய பயத்தை நிவர்த்திப்பவரே! பேத புத்தி யுள்ளவர்களான நாங்கள் ஸம்ஸாரத்திலிருந்து பயந்து உம்மைச் சரணமடைகிறோம். இந்த ஜனங்கள் காம்ய கர்மங்களையும் நிஷித்த கர்மங்களையும் விரும்பு கிறார்கள். தனக்கு க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியதும், உம்மால்சொல்லப்பட்டதுமான நல்ல கர்மத்தைச் செய்கிறதில்லை. அப்படிப்பட்ட ஜனங்களுக்கு பிழைத்திருக்கவேண்டுமென்கிற ஆசையை ஒரு க்ஷணத்தில் எந்த காலமானது போக்கடிக்கிறதோ, அந்த காலஸ்வரூபியான உமக்கு நமஸ்காரம். ஓ ஈச! நீர் ஸாதுக்களை ரக்ஷிப்பதற்கும் துஷ்டர்களைச் சிக்ஷிப்பதற்கும், பூமியில் அவதரித்திரிக்கிறீர். அப்படி யிருக்க உம்முடைய உத்திரவை மீறி நடக்கிறவன் க்ஷேமத்தை அடைகிறதென்றும் உம்முடைய பக்தர்கள் துக்கிப்பதென்றும், இரண்டும் யுக்தமில்லை.

மேலும் உம்மை ஸேவித்து யோகிகளால் அடையக் கூடிய இயற்கையான ஸுகத்தை நாங்கள் அடையாமல் உம்முடைய மாயையால் மோஹித்து ஸ்வப்னம் போன்ற விஷய ஸுகத்தில் ஆசைகொண்டு எப்பொழுதும் பயமுள்ளதும், பிணத்துக்கொப்பானது மான இந்தச் சரீரத்தால் களத்திரம், புத்திரன் இவைகளைப்பற்றி யோஜிப்பதாகிய சுமையைச் சுமக்கிறோம். சிங்கமானது ஆடுகளை ஜயித்தாற்போல எங்களெல்லோரையும் ஜராஸந்தன் காராகிருஹத்தில் அடைத்து வைத்திருக்கிறபடியால் சரணமடைந்தவர் களுடைய துக்கத்தை நிவர்த்திக்கும் பாத முள்ளவராகிய நீர் ஜராஸந்தனென்ற கர்மபாசத்தை நாசஞ்செய்து எங்களைக் காப்பாற்றும். அந்த ஜராஸந்தன் லக்ஷம் யானை பலமுள்ளவனானதால்

அவனை ஜயிக்க எங்களால் முடியவில்லை. ஓ சக்ராயுதத்தையுடையவரே! இவன் பதினேழு தரம் உம்மால் ஜயிக்கப்பட்டும், பதினெட்டாவது தடவை மனிதவடிவங்கொண்டவரும், அளவற்ற பராக்கிரம முள்ளவருமான உம்மை ஜயித்து மிக்க கர்வங் கொண்டு உம்மைச்சார்ந்தவர்களான எங்களை உபத்திரவிக்கிறான். இந்த விஷயத்தில் எதனைச் செய்யவேண்டுமோ அதனைச் செய்யும். ஜராஸந்தனால் அடக்கப்பட்ட அரசர்கள் உம்மைப் பார்க்க விரும்பினவர்களாக உம்முடைய பாதத்தைச் சரணமடைகிறார்கள். தீனர்களான அவர்களுக்கு க்ஷேமத்தைச்செய்யும்" என்று சொன்னான்.

33–37. இப்படி அந்த தூதன் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது ஸூர்யன்போல் மிக்க தேஜஸ்ஸுள்ளவரும், பொன்னிறமான ஜடைகளுள்ள வரும், தேவர்ஷியுமாகிய நாரதர் அவ்விடம் வந்தார். அவரைக்கண்ட கிருஷ்ணன் ஸகல லோகபாலர்களுக்கு அதிபதியானாலும் எழுந்திருந்து தலை வணங்கி நமஸ் கரித்தார். ஸபையிலிருப்பவர்களும் கிருஷ்ணனைச் சார்ந்தவர்களும் ஸந்தோஷமாக நாரதரை நமஸ்கரித் தார்கள். இப்படி நாரதரைப் பூஜித்து ஆஸனத்திலுட் கார்த்தி கிருஷ்ணன் பிரியமான வார்த்தைகளைச் சொல்லலானார். எப்படியென்றால் "மூவ்வுலகங்களும் பயமில்லாமல் க்ஷேமமாகவிருக்கின்றனவா? நீர் ஸகல லோகங்களிலும் ஸஞ்சரிப்பதனால் அந்தந்த லோக விருத்தாந்தம் எங்களுக்குத் தெரியவருகிறது. அதுவே எங்களுக்குப் பெரிய லாபமாகவிருக்கிறது. ஈச்வரனால் ஸிருஷ்டிக்கப்பட்ட லோகங்களில் உமக்குத் தெரியாத தொன்றுமில்லை ஆதலால் பாண்டவர்களுடைய

ஸமாசாரத் தைப்பற்றி உம்மைக் கேட்கிறேன்" என்றார்.

38–45. அதனைக்கேட்ட நாரதர் "ஓ மிக்க மஹிமையுள்ளவரே! ஸகலப் பிராணிகளிடத்திலும் தம்முடைய சக்திகளால் மறைக்கப்பட்டு கட்டையில் அக்னிபோல நீர் வஸிக்கிறீர். மேலும் நீர் ப்ரஹ்ம தேவருக்கும் மோஹத்தை யுண்டுபண்ணக்கூடிய மாயாவியாகவிருக்கிறீர். அப்படிப்பட்ட உம்முடைய பலவித மாயையை நான் பார்த்தேன் (ஆனதால் நீர் அறியாதவர்போல் பாண்டவர்களை பற்றி கேட்பது எனக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லை) மேலும் நீர் உண்மையில்லாததான இந்த ஜகத்தை ஸத்தியம் போலத் தம்முடைய மாயையால் தோன்றச்செய்து அதனைப்படைத்தும், ஸம்ஹரித்தும், எல்லாவற்றையும் விட விலக்ஷணமான ஸ்வரூபமுள்ளவராகப் பிரகாசிக்கிறீர். அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம். உம்முடைய அபிப்பிராயத்தை யாரால் நன்றாகத் தெரிந்துகொள்ள முடியும்? பின்னும் நீர் அனர்த்தத்தைக் கொடுக்கக்கூடிய சரீரத்தையடைந்து ஸம்ஸாரியாக விருப்பவனும் அதிலிருந்து மோக்ஷத்தையடைய உபாயத்தை யறியாதவனுமான ஜீவனுக்காக பூமியில் அவதாரங்களைச்செய்து தம்முடைய கீர்த்தியாகிய தீபத்தைப் பிரகாசிக்கச் செய்திருக்கிறீர். (அக்ஞானமா கிற இருட்டைப் போக்கடிப்பதற்காக) அப்படிப்பட்ட உம்மைச் சரணமடைகிறேன். ஆனாலும் மனுஷ்ய பாவனையுள்ள உமக்கு அத்தையின் புத்திரனாகிய தர்மபுத்திரருடைய எண்ணத்தைத் தெரிவிக்கிறேன். பாண்டுவின் புத்திரராகிய தர்மபுத்திரர் ராஜஸூய மென்ற சிறந்த யாகத்தைச்செய்து உம்மைப் பூஜிக்கப் போகிறார். அதனை நீர் அனுமதிக்க வேண்டும். அந்த

சிறந்த யாகத்தில் உம்மைப் பார்ப்பதற்காக தேவர்களும் கீர்த்தியுள்ள அரசர்களும் வரப்போகிறார்கள். வேதமூர்த்தியான உம்மை த்யானித்தும் உம்முடைய சரிதங்களைக்கேட்டும், உம்முடைய குணங்களை உச்சரித்தும் சண்டாளன் முதலியவர்களும் பரிசுத்தியை அடைகிறார்கள். உம்மைத் தர்சித்தவர்களும், ஸ்பர்சித்தவர்களும் சுத்தியடைவதற்கு என்ன ஆக்ஷேபம்? ஸகல லோகங்களுக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியவரே! உம்முடைய கீர்த்தியானது ஸகல லோகங்களுக்கும் அலங்காரமாக விருக்கிறது. பாதாளத்திலும், ஆகாயத்திலும், பூமியிலும் பிரஸித்த மாகவிருக்கிறது. மேலும் உம்முடைய பாதத்திலிருந்து பெருகிய ஜலமானது ஆகாயத்தில் மந்தாகினி யென்றும், பாதாளத்தில் போகவதியென்றும், பூமியில் கங்கையென்றும் பெயரையடைந்து லோகத்தைப் பரிசுத்தப்படுத்துகிறது" என்று சொன்னார்.

46–48. அதனைக்கேட்ட அவ்விடத்திலிருந்த யாதவர்கள் கிருஷ்ணனுடைய அபிப்பிராயத்தை (தர்ம புத்திரருடைய யாகத்திற்குப் போகவேண்டுமென்பதை) ஒப்புக்கொள்ளாமலிருக்கும் பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் அழகான வார்த்தைகளால் அவர்களை மயக்கிக் கொண்டு உத்தவரை நோக்கி "ஓ உத்தவ! நீர் நமக்கு மேலான கண்ணாகவும், மித்திரராகவும், மந்திரா லோசனையின் உண்மையை யறிந்தவராகவுமிருக்கிறீர். ஆனதால் இப்பொழுது நாம் எதனை ச்ரத்தையுடன் செய்யவேண்டும் சொல்லும்" என்று கேட்டார். இப்படி எல்லாவற்றையுமறிந்தவரான கிருஷ்ணன் அறியாதவர் போலக்கேட்க அவருடைய உத்திரவினால் உத்தவர் பதில் சொல்ல ஆரம்பித்தார்.

நோட்டு

ஆறுவகை விகாரங்கள் – பசி, தாஹம், சோகம், மோஹம், கிழத்தனம், மரணம், ஆறு ஊர்மிகள். ஸூதர்கள், ப்ராஹ்மண ஸ்திரியினிடத்தில் க்ஷத்திரிய னுக்குப் பிறந்தவன். மாகதர்கள் க்ஷத்திரிய ஸ்திரீயினிடத்தில் வைச்யனுக்கு ஜனித்தவன். வந்திகள் அரசர்களை ஸ்துதிப்பவர்கள். காம்யகர்மங்கள் பலனை யுத்தேசித்துச் செய்யும் கர்மங்கள் நிஷித்தம். வேதத்தில் எதைச்செய்யக் கூடாதென்று தடுக்கப் பட்டிருக்கின்றனவோ அவை.

♣♣♣♣

அத்தியாயம்–71

கிருஷ்ணன் ராஜசூயத்திற்காக இந்திரப் ப்ரஸ்தஞ் சென்றது.

தேவர்ஷியாகிய நாரதருடைய வார்த்தையைக் கேட்டும், ஸதஸ்யர்களுடைய அபிப்பிராயத்தையும், ஸ்ரீ கிருஷ்ணனுடைய அபிப்பிராயத்தையும் அறிந்தும் மிக்க புத்திசாலியான உத்தவர் கிருஷ்ணனை, பார்த்து "ஓ தேவ! உமக்கு அத்தையின் புத்திரராகிய தர்மபுத்திரர் யாகஞ்செய்யப் போகிறதாயும், அதற்கு உம்மை ஒத்தாசை செய்ய வேண்டுமென்றும் தேவர்ஷியாகிய நாரதர் சொன்னாரல்லவா? அதனையுஞ் செய்ய வேண்டும். சரணமடைந்திருக்கும் அரசர்களையும் காப்பாற்ற வேண்டும். ஆனால் ராஜஸூயஞ் செய்பவன் திக்குகளை ஜயிக்கவேண்டும். அப்பொழுது ஜராஸந்தனை வதஞ்செய்யும்படி நேரும். அதனால் ராஜஸூயம், சரணமடைந்தவர்களைக் காப்பாற்றுவது என்ற இரண்டு கார்யமும் ஸித்திக்கும். அதனால் நமக்கு அநேக கார்யங்கள் ஸித்திக்கும். ஓ கோவிந்த! அரசர்களைக் காராகிருஹத்திலிருந்து விடுவிப்பதால் உமக்குக் கீர்த்தியுண்டாகும். ஜராஸந்தன் அநேகம் யானை பலமுள்ளவன்; அவனுக்குச் ஸமமான பலமுள்ளவன, பீமஸேனன் ஒருவன்தான். ஆனாலும் ஜராஸந்தனுக்கு அநேக அக்ஷௌஹிணீ சைன்னியங்களிருப்பதால் சைன்னியங்களுடன் யுத்தத்திற்கு வந்தால் அவனை பீமஸேனனாலும் ஜயிக்கமுடியாது. ஆனால் த்வந்த யுத்தத்தில் (இரண்டு பேர்களாக மாத்திரம் சண்டை செய்வது) பீமஸேனன் அவனை ஜயிக்கவேண்டும். (பீமஸேனனால் அவனுக்கு

மரணமென்று ஏற்பட்டிருக்கிறது என்று கருத்து) அந்த ஜராஸந்தன் ப்ராஹ்மணர்களைத் தைவமாகக் கொண்டவன். ஆனதால் ப்ராஹ்மணன் அவனை யாசித்தால் ஒருபொழுதும் அதனைத் தள்ளமாட்டான். ஆனதால் பீமஸேனன் ப்ராஹ்மண வேஷங்கொண்டு அவனை யாசித்தால் த்வந்த யுத்தஞ் செய்ய ஒப்புக் கொள்வான். அப்பொழுது பீமன் உம்முடைய முன்பாக அவனுடன் யுத்தஞ் செய்தால் அவனைக் கொல்வான்; ஸந்தேஹமில்லை. ரூபமில்லாத கால ஸ்வரூபியாகவிருக்கும். உம்முடைய ஸன்னிதானத்தால் ஹிரண்யகர்ப்பர், ஜகத்தைப் படைக்கிறார். உம்முடைய ஸன்னிதானத்தால் பரமசிவன் ஜகத்தை ஸம்ஹரிக்கிறார். (ஜகத்தை உண்டு பண்ணுவதற்கும் ஸம்ஹரிப்பதற்கும் முறையே ப்ரஹ்மா, பரமசிவன் நிமித்தமேயொழிய உம்முடைய ஸன்னிதானமே முக்கிய காரணம் அதுபோல் ஜராஸந்தன் வதத்தில் பீமஸேனன் நிமித்த காரணமேயொழிய உம்முடைய ஸன்னிதானமே முக்கிய காரணமாகிறது என்று கருத்து.)

மேலும், கோபிகைகள் சங்கசூடனைக் கொன்று தங்களைக் காப்பாற்றியதை எப்படி கானஞ் செய்கிறார்களோ, மஹர்ஷிகளும் நாங்களும் உம்மால் செய்யப்பட்ட கஜேந்திர மோக்ஷத்தையும், ராவண வதத்தையும், கம்ஸனைக் கொன்று வசுதேவர், தேவகி இவர்களைக் காப்பாற்றியதையும் எப்படி கானஞ் செய்கிறோமோ, அப்படி ராஜ பத்தினிகளும் குழந்தைகளை ஸமாதானஞ் செய்வது முதலிய காலங்களில் 'ஓ! குழந்தைகளே! அழவேண்டாம். ஸ்ரீ கிருஷ்ணன் ஜராஸந்தனைக் கொன்று உங்களுடைய

தந்தையை ஸம்ரக்ஷிப்பார்' என்று உம்முடைய சுத்த மான கீர்த்தியைக் கானஞ் செய்கிறார்கள். (ஆனதால் அவர்களிடம் தயை செய்து காப்பாற்றவேண்டுமென்று கருத்து) ஜராஸந்தனைக் கொன்றால் அநேக கார்யங்கள் முடியும். (சிசுபாலன் முதலியவர்கள் கொல்லப்படுவார்கள் என்று தாத்பர்யம்) ஜராஸந்தன் முதலியவர்களுடைய பாபத்தின் பயனாலும், அவனால் நிர்ப்பந்திக்கப்பெற்ற அரசர்களுடைய புண்ணிய பரிபாகத்தாலும், ஜராஸந்தன் கொல்லப்படுவான்; ஸந்தேஹமில்லை" என்று சொன்னார். (ஆனதால் இந்த யாகம் உமக்கு இஷ்டமானதேயாம். யாகத்திற்கு நீர் சென்றால் எல்லாக் கார்யமும் ஸித்திக்குமென்று கருத்து.)

11–17. இப்படி ஸகல கார்யங்களுக்கும் தகுதியாக உத்தவர் சொல்ல அதனைக்கேட்ட நாரதரும், பெரியோர்களான யாதவர்களும், கிருஷ்ணனும் ஒப்புக் கொண்டார்கள். அப்பொழுது தேவகியின் புத்திரராகிய ஸ்ரீகிருஷ்ணன் தர்மபுத்திரருடைய யாகத் திற்கு போகவேண்டும் என்று தாருகன், ஜைத்ரன் முதலிய வேலைக்காரர்களுக்கும், பெரியோர்களுக்கும் சொன்னார். பின்னுமவர் தம்முடைய பத்தினிகளை அவர் அவர்களுடைய புத்திரர்களுடனும், ஸாமக்ரிகளு டனும், பயணப்படுத்தினார். பலராமனையும் உக்ரஸேனரையும் புறப்படும்படி சொல்லி விட்டு, தாருகனால் கொண்டு வரப்பட்ட தம்முடைய ரதத்தி லேறினார், மேலும் ரதங்கள், யானைகள், குதிரைகள், காலாட்படைகள் அடங்கிய ஸேனைகள் புறப்பட்டன. மிருதங்கம், பேரி ஆனகம், சங்கம், கோமுகம் இவைகள் முழங்கப்பட்டன. அதனால் திக்குகளில் மிக்க சப்தம்

பரவியது. பதிவ்ரதைகளான கிருஷ்ணனுடைய ஸ்திரீ கள் உத்தமமான வஸ்திரம். ஆபரணம், சந்தனம், புஷ்பம் இவைகளால் அலங்கரித்துக் கொண்டு குதிரைகள், தங்கப் பல்லக்கு முதலிய வாஹனங்களில் ஏறிக்கொண்டு சென்றார்கள். கத்தி முதலிய ஆயுதங் களைத்தரித்த யாதவர்கள் அவர்களைச் சுற்றிக்கொண்டு சென்றார்கள். வேலைக்காரிகளும், வேலைக்காரர் களுடைய ஸ்திரீகளும், தாஸிகளும், ஒட்டகம், எருது, எருமை, கோவேரிக் கழுதை, அச்வதரி (குதிரைக்குக் கழுதையினிடம் உண்டானது), வண்டிகள், பெண் யானை இவைகளின் மீது ஏறிக்கொண்டு சென்றார்கள். மேலுமவர்கள் விளாமிச்சம் வேர் முதலியவைகளால் செய்யப்பட்ட கூடாரங்கள், கம்பளம், வஸ்திரம் முதலிய மற்ற ஸாமக்ரிகளையும் வண்டி முதலியவை களில் ஏற்றிக் கொண்டு போனார்கள். மேலும், அந்த ஸைன்னியமானது பருத்த த்வஜபடம், குடை, சாமரம், மேலான ஆயுதங்கள், ஆபரணங்கள், கிரீடம், கவசம் ஆகிய இவைகளுள்ளதும் பயங்கரமான சப்தமுள்ளதுமாக இருந்தது; ஆனதால் திமிங்கிலம், அலை இவைகளால் கலங்கியதும், ஸூரியனுடைய கிரணங்களால் நிறைந்ததுமான ஸமுத்திரம் போலிருந்தது.

18–20. பின்பு நாரதமஹர்ஷி கிருஷ்ணனால் பூஜிக்கப்பட்டு அவரைத் தர்சித்ததால் மிக்க ஸுகத்தை அடைந்து அவரையே த்யானஞ் செய்து கொண்டு ஆகாயமார்க்கமாகக் சென்றார். பின்பு பகவான் அரசர்களுடைய தூதனை நோக்கி 'ஓ தூதா! அரசர்களைப்பயப்பட வேண்டாமென்று சொல்லு. ஜராஸந்தனை நாசஞ் செய்கிறேன்' என்று பிரியமான

வார்த்தைச் சொல்லி அனுப்பினார். அதனைக்கேட்ட தூதன் அரசர்களிடஞ்சென்று நடந்த ஸமாசாரத்தைத் தெரிவித்தான். அந்த அரசர்களும் ஸ்ரீகிருஷ்ணனுடைய தர்சனத்தை எதிர் பார்த்திருந்தார்கள்.

21–36. பின்பு பகவான் ஆனர்த்தம், ஸௌவீரம், குருக்ஷேத்திரம், ரைவதகம் முதலிய மலைகள், நதிகள், பட்டணங்கள், கிராமங்கள், இடைச்சேரி முதலியவைகளைத் தாண்டி விருஷத்வதீ, ஸரஸ்வதி, பாஞ்சாலதேசம், மத்ஸ்யதேசம் ஆகிய இவைகளைத் தாண்டி இந்திரப் ப்ரஸ்தஞ் சென்றார். மனிதர்களால் தர்சிக்க முடியாதவராகிய ஸ்ரீகிருஷ்ணன் வருவதைக் கேள்விப்பட்ட தர்மபுத்திரர் உபாத்தியாயருடனும், மித்திரர்களுடனும் பட்டணத்திலிருந்து வெளியில் வந்தார். அப்பொழுது வாத்யங்கள் முழங்கப்பட்டன; பாடகர்கள் பாடினார்கள், ப்ராஹ்மணர்கள் வேதத்தை கோஷித்தார்கள். இப்படி தர்மபுத்திரர் ஸ்ரீகிருஷ்ணனை எதிர்கொண்டழைத்தது இந்திரியங்கள் ப்ராணனையழைத்தாற் போலிருந்தது. தர்ம புத்திரர் ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்து மிக்க ஸ்நேஹத்தால் உருகின ஹிருதயமுள்ளவராகி, கிருஷ்ணனைப் பார்த்து வெகுகாலமானதாகையால் அடிக்கடி தழுவினார். இப்படி லக்ஷ்மிதேவிக்கு வாஸஸ்தலமாகிய ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரீரத்தைத் தர்மபுத்திரர் ஆலிங்கனஞ் செய்து கொண்டதனால் பாபமற்றவராகி ஆனந்த கண்ணீரைப் பெருக்கி, மயிர்க்கூச்சலை அடைந்து, இவ்வுலகத்தை மறந்து மேலான ஆனந்தத்தை அடைந்தார். அம்மானுடைய புத்திரரான (அம்மாஞ்சேய்) ஸ்ரீ கிருஷ்ணனைப் பீமஸேனர் ஆலிங்கனஞ் செய்து மிக்க ஆனந்தத்தை

அடைந்தார். பின்னும் அர்ஜுனரும், நகுல, ஸஹதேவர்களும் ஸந்தோஷமாகப் பகவானைக் கட்டிக் கொண்டார்கள். அப்பொழுது பகவான் தர்மபுத்திரருக்கும், பீமசேனருக்கும் நமஸ்காரஞ் செய்தார். நகுல ஸஹதேவர்கள் பகவானை நமஸ்கரித்தார்கள். பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் ப்ராஹ்மணர்களையும், பெரியோர்களையும் நமஸ்கரித்து, எல்லோராலும் பூஜிக்கப்பட்டு குருக்களையும், ஸ்ருஞ்ஜயர்களையும், கேகயர்களையும் பூஜித்தார். ஸூதர்களும், மாகதர்களும், வந்திகளும், ஸ்தோத்திரஞ் செய்தார்கள். பாடகர்கள் பாடினார்கள்; விகடகவிகள் விகடஞ் செய்தார்கள்; மிருதங்கம், சங்கம்,படஹம், வீணை, புல்லாங்குழல் ஆகிய வாத்தியங்கள் கோஷிக்கப்பட்டன. ப்ராஹ்மணர்கள் தாமரைக் கண்ணராகிய ஸ்ரீ கிருஷ்ணனைத் துதித்தார்கள்.

நர்த்தனஞ் செய்பவர் நர்த்தனஞ் செய்தார்கள். இம்மாதிரி மித்திரர்களால் உபசரிக்கப்பெற்றுப் புண்யச்லோகர்களுக்குட் சிறந்தவராகிய ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களால் துதிக்கப்பட்டு, பட்டணத்தில் பிரவேசித்தார். அந்த நகரத்தில் வீதிகள் யானைகளுடைய மத ஜலத்தால் நனைக்கப்பட்டிருந்தன. பலவகையான த்வஜங்களும் கட்டப்பட்டிருந்தன. பூர்ண கும்பங்கள் வைக்கப்பட்டிருந்தன. புருஷர்களும், ஸ்திரீகளும் புதிய பட்டுக்களாலும், ஆபரணம், புஷ்பம், சந்தனம் இவைகளாலும் அலங்கரித்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு வீடுகளிலும் தீபங்களும், பலிகளும் வைக்கப்பட்டிருந்தன; ஜன்னல் வழியாக தூபத்தின் புகை வெளிவருவதால் வாஸனையாகவும், அழகான பதாகைகளுள்ளனவாகவுமிருந்தன. ஒவ்வொரு

வீடுகளிலும் தங்கக்கலசங்கள் வைக்கப்பட்டிருந்தன. கலசத்திற்குக் கீழ்ப்பட்ட பாகம் வெள்ளியால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அப்பொழுது மனிதர்களுடைய கண்களுக்குமிக்க திருப்தியுண்டுபண்ணுகிற பகவான் வருவதைக் கேள்விப்பட்ட பட்டணத்திய ஸ்திரீகள் பகவானைத் தர்சிக்க வேண்டுமென்ற மிக்க ப்ரியத்தால் வஸ்திரம், தலைமயிர் ஆகிய இவைகள் அவிழ்ந்தவர்களாகி வீட்டு வேலைகளை விட்டு, படுக்கையில் தங்கள் பர்த்தாவையும் விட்டு, ராஜவீதியில் வந்தார்கள். ராஜவீதி யானை, குதிரை, ரதம், காலாட்படை இவைகளால் நெருக்கமாக இருந்ததனால் தங்கள் கிரஹத்தின் மாடியின் மீதேறி ஸ்ரீ கிருஷ்ணனையும் அவருடைய பத்தினிகளையும் தர்சித்து மனத்தால் அவரைத் தழுவி, புஷ்பங்களை வர்ஷித்து அன்பு பொருந்திய பார்வையால் நல்வரவா என்று கேட்டார்கள். மேலும் ஸ்ரீகிருஷ்ணனுடைய பத்தினிகளைப் பார்த்துப் பட்டணத்து ஸ்திரீகள், "இந்தக் கிருஷ்ணனுடைய பத்தினிகள் என்ன புண்ணியஞ் செய்தார்களோ, இவர்கள் புருஷோத்தமராகிய பகவானுடைய புன்சிரிப்புள்ள முகத்தைத் தர்சித்தும், அவரால் கடாக்ஷிக்கப்பட்டும் நேத்திரானந்தத்தை அடைந்து சந்திரனுடன் நக்ஷத்திரங்கள் போல வஸிக்கிறார்கள்" என்று சொல்லிக்கொண்டார்கள்.

37–40. ஒவ்வொரு தொழில்களிலும் முக்கியர்களாக இருப்பவர்களும், பட்டணத்து ஜனங்களும் வீதிகளில் ஒவ்வொரு இடத்திலும் கிருஷ்ணனைத் தர்சித்து மங்கள த்ரவியங்களை வைத்துக்கொண்டு பகவானைப் பூஜித்து சுத்தர்களானார்கள். அந்தப்புர ஜனங்கள் கண்கள் மலர்ந்து

மிக்க ப்ரியத்துடன் எதிரில் வந்து அழைத்தார்கள். இப்படி எல்லோராலும் பூஜிக்கப்பட்டு கிருஷ்ணன் ராஜகிருஹஞ் சென்றார். குந்திதேவி ஸஹோதரனுடைய புத்திரராகிய கிருஷ்ணனைக் கண்டவுடன் ஆஸனத்திலிருந்து எழுந்திருந்தாள். அவருடைய நாட்டுப்பெண்ணும் யெழுந்திருந்தாள். பின்னும் அந்த குந்தி மூவுலங்களுக்கும் அதிபதியான ஸ்ரீகிருஷ்ணனை மிக்க ப்ரியத்துடன கட்டிக்கொண்டாள். தேவர்களுக்கும் தேவராகிய ஸ்ரீ கிருஷ்ணனை வீட்டிற்கு அழைத்து வந்த தர்மபுத்திரர், மிக்க ஆனந்தத்தால் பரவசமாகி அவரைப் பூஜிப்பதற்காக, இன்னது செய்யவேண்டியதென்பதை அறியாமலிருந்தார்.

41–44 அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் பிதாவின் ஸஹோதரியான குந்தியையும், ஆசார்ய பத்தினிகளையும் நமஸ்கரித்தார். த்ரௌபதியும், ஸஹோதரியான ஸுபத்திரையும் கிருஷ்ணனை நமஸ்கரித்தார்கள். பின்பு குந்தியால் தூண்டப்பட்டு த்ரௌபதி ருக்மிணியையும், ஸத்யபாமையையும், ஜாம்பவதியையும், காளிந்தியையும், மித்திரவிந்தையையும், நக்னஜித்தின் புத்திரியான ஸதியையும், மற்றும் கிருஷ்ண பத்னிகளையும், வஸ்திரங்களாலும், புஷ்பங்களாலும், ரத்னங்களாலும், ஆபரணங்களாலும் பூஜித்தார்கள். இப்படிக் கிருஷ்ணன் பத்னிகளுடனும், மந்திரிகளுடனும், ஸைன்னியத்துடனும் புதிது புதிதாகத் தர்மபுத்திரரால் உபசரிக்கப்பெற்றுச் ஸுகமாக வஸித்தார்.

45–46 ஸ்ரீகிருஷ்ணன் இந்திரப்ரஸ்தத்தில் சிலமாத காலம் வஸித்து, அர்ஜுனனுடன் ரதத்திலேறி

விளையாடிக்கொண்டு தருமபுத்திரருக்குப் ப்ரியத்தைச் செய்தார். அப்பொழுது காண்டிவமென்ற வனத்தை அக்னிக்குக் கொடுத்து, அக்னியை திருப்தி செய்தார். மயனென்ற அஸுரனை ஸம்ரக்ஷித்தார். அந்த மயன் தருமபுத்திரருக்குத் திவ்யமான ஸபையை நிர்மாணித்தான்.

♣♣♣♣

அத்தியாயம்–72

பீமஸேனர் ஜராஸந்தனைக் கொன்றது.

ஒருநாள் தர்மபுத்திரர் தம்முடைய ஸஹோதர்களுடன் சிங்காஸனத்தில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது மஹர்ஷிகளும், ப்ராஹ்மணர்களும், க்ஷத்திரியர்களும், வைச்யர்களும், ஆசார்யர்களும் குலத்தில் பெரியோர்களும், ஜ்ஞாதிகளும், ஸம்பந்திகளும், பந்துக்களும் உட்கார்ந்திருந்தார்கள். அந்த ஸமயத்தில் தர்மபுத்திரர் ஸ்ரீகிருஷ்ணனை நோக்கி, "ஓ கோவிந்த! பிரபுவே! ராஜஸூயமென்ற யாகஞ்செய்து சுத்தமான உம்முடைய விபூதிகளைப் பூஜிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அதனை முடித்து வைக்க வேண்டும். ஓ ஈச உம்முடைய பாதுகைகளை எவர்கள் ஸேவிக்கிறார்களோ, பாபத்தைப்போக்கக்கூடிய அந்தப் பாதங்களை எவர்கள் த்யானஞ் செய்கிறார்களோ. எந்தப் புத்திமான்கள் அவைகளைப் பற்றிச் சொல்லுகிறார்களோ, "ஓ தாமரைமலரைத் தொப்பிளி லுடையவரே! அவர்கள் ஸம்ஸாரத்திலிருந்து முக்தியை அடைவார்கள். மற்றவர்களால் அடையமுடியாது. ஓ தேவர்களுக்கும் தேவரே உம்முடைய பாதஸேவையின் மஹிமையை ஜனங்கள் பார்க்கட்டும். எவர்கள் பக்தியின் மஹிமையையறிந்து உம்மைச் ஸேவிக்கிறார்களோ, எவர்கள் கர்மத்தையே ப்ரதானமென்று நினைத்து உம்மைச் ஸேவிக்கவில்லையோ, இந்த இரண்டு இனத்தாராகிய குருக்களுக்கும் ஸிருஞ்ஜயர்களுக்கும் கிடைக்கும் பயனைக் காண்பியும். நீர் ஸகல ப்ராணிகளுக்கும் ஆத்மாவாக இருப்பவரும்

ஸமபுத்தியுள்ளவரும், தம்முடைய ஸுகானுபவம் உள்ளவரும் பரப்ரஹ்மமூமாக இருப்பதால், உமக்குத் தம்மைச்சார்ந்தவர், பிறர் என்ற பேதபுத்தியில்லை. கற்பகவிருக்ஷம்போல உம்மை ஆசிரயிப்பவர்களுக்கு அவர்களுடைய ஸேவைக்குத்தக்கபடி பயனைக்கொடுக் கிறீர். அதில் வித்தியாஸமில்லை" என்று சொன்னார்

7–11. அதனைக்கேட்ட பகவான் தர்மபுத்திரரை நோக்கி, "ஓ ராஜன், சத்ருக்களைக் கொல்பவரே நல்ல நிச்சயமுள்ளவராக இருக்கிறீர்; சுபமான கீர்த்தி லோகத்தில் பரவப்போகிறது. நீர் செய்ய வேண்டு மென்று விரும்பிய இந்தச் சிறந்த யாகமானது, மஹர்ஷிகள், பிதிருக்கள், தேவர்கள், மித்திரர்கள், ஆகிய இவர்களெல்லோருக்கும் இஷ்டமானதேயாம். ஸகல அரசர்களையும் ஜயித்துப் பூமியை வசப்படுத்திக் கொண்டு அதற்கு வேண்டிய ஸாமக்கிரிகளை ஸம்பாதித்து இந்தமஹாயாகத்தைச் செய்யும்; உம்மு டைய இந்த ஸஹோதரர்கள் லோகபாலர்களுடைய அம்சமுள்ளவர்கள்; (அவர்களைக்கொண்டு அரசர்களை ஜயித்துவிடலாமென்று கருத்து) இந்திரியங்களுக்கு வசப்பட்டவர்களால் ஜயிக்க முடியாத என்னை இந்திரியங்களை நிக்கிரஹித்தவரான நீர் ஜயித்து விட்டீர், என்னிடத்தில் பக்திசெய்து, என்னையே கதியாகக் கொண்டவர்களை தேஜஸ்ஸாலும், கீர்த்தியாலும், ஐச்வர்யத்தாலும், ஸைன்னியம் முதலியவைகளாலும், தேவர்களாலும், ஜயிக்க முடியாது. அப்படியிருக்க அரசர்களால் உம்மை எப்படி ஜயிக்க முடியும்?" என்றார்.

12–21. அதனைக்கேட்ட தர்மபுத்திரர் முகம் மலர்ந்து மிக்க ப்ரியத்துடன் விஷ்ணுவின் தேஜஸ் உள்ளவர்களான ஸஹோதரர்களை, திக்குகளை ஜயிக்கும்படி அனுப்பினார். எப்படியெனில்:–தெற்கு திக்கில் ஸிருஞ்ஜயர்களையும் ஸஹாதேவனையும், மேற்கில், நகுலனை மத்ஸ்யர்களுடனும், வடக்கில் அர்ஜுனனை, கேகயர்களுடனும், கிழக்கில் பீமஸேன னை, மத்ரதேசத்தார்களுடனும் அனுப்பினார். அவர்கள் அவ்விடஞ் சென்று சூரர்களான அரசர்களை ஜயித்து, ஏராளமான தனத்தைத் தர்மபுத்திரரிடம் ஸமர்ப்பித்தார்கள். ஜராஸந்தன் ஒருவன்மாத்திரம் ஜயிக்கப்படவில்லை; அதனைப்பற்றி அரசன் ஆலோசித்துக்கொண்டிருக்க, ஸ்ரீகிருஷ்ணன் அவனை ஜயிக்கும் விஷயத்தில் உத்தவர் சொன்ன உபாயத்தைச் சொன்னார்.

பின்பு பீமஸேனர், அர்ஜுனன், ஸ்ரீ கிருஷ்ணன் ஆகிய மூவர்களும், ப்ராஹ்மண வேஷங்கொண்டு ஜராஸந்தன் வசிக்கும் கிரிவ்ரஜஞ் சென்றார்கள்; அதிதிகளுக்குப் பூஜை செய்யக்கூடிய ஸமயத்தில் கிருஹஸ்தனாகிய ஜராஸந்தனிடஞ் சென்று, ப்ராஹ்மண வேஷம் பூண்ட அந்த அரசர்கள், "ஓ அரசனே நாங்கள் வெகு தூரத்திலிருந்து உம்மிடத்தில் யாசகர்களாக வந்திருக்கிறோம். ஆனதால் நாங்கள் எதனை விரும்புகிறோமோ, அதனைக்கொடும், உமக்கு க்ஷேமமுண்டாகும். பொறுமையுள்ளவர்கள் எதைத்தான் ஸஹிக்கமாட்டார்கள்? துஷ்டர்கள் எதைத்தான் செய்யமாட்டார்கள்? கொடையாளிகள் எதைத்தான் கொடுக்கமாட்டார்கள்? சத்ரு, மித்திரன் என்ற பேதமில்லாமல் ஸமமாக நினைப்பவர்கள்

யாரை பிறர் என்று நினைப்பார்கள்? (ஆனதால் இதைக் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதில்லை என்று கருத்து.) எவன் அநித்யமான சரீரத்தைக் கொண்டு நித்தியமான கீர்த்தியை ஸம்பாதிப்பதில் நோக்கமில்லாமலிருக்கிறானோ, அவனைப் பற்றித் துக்கிக்க வேண்டும். ஹரிச்சந்திரன், ரந்திதேவன், முத்கலன், சிபி, பலி, வேடன், கபோதம் (புறா) முதலிய அநேகர்கள் நிலையற்ற சரீரத்தைக் கொடுத்து ஸ்திரமான கீர்த்தியை அடைந்தார்கள்" என்று சொன்னார்.

22–27. அதனைக் கேட்ட ஜராஸந்தன் அவர்களுடைய பேச்சுக் குரல், ஆகிருதி, நாண் கயிறால் அடிக்கப்பட்ட மணிக்கட்டு ஆகிய இவைகளால் க்ஷத்திரியர்கள் என்று தெரிந்து கொண்டு, "இவர்களை முந்திப் பார்த்திருக்கிறோம்; இவர்கள் க்ஷத்திரியர்கள். ப்ராஹ்மண வேஷந் தரித்திருக்கிறார்கள். ஆனாலும் இவர்கள் என்னுடைய ஆத்மாவைக் கேட்டாலும் அதனைக் கொடுத்து விடுவேன். முன்னொருகால் மகாவிஷ்ணு இந்திரனுக்கு க்ஷேமத்தைச் செய்ய விரும்பி, ப்ராஹ்மண வேஷங்கொண்டு பலிசக்ரவர்த்தியை யாசித்தார். அவன் அதன் உண்மையை அறிந்திருந்தும், சுக்ராசார்யரால் தடுக்கப்பட்டும் அவருடைய மனோரதத்தைப் பூர்த்தி செய்தான். அதனால் அவனுக்கு ஸகல திக்குகளிலும் சுத்தமான கீர்த்தியுண்டாயிற்று. க்ஷத்திரியன் ப்ராஹ்மணர்களுக்கு உபகாரஞ் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாமல் நிலையற்ற சரீரத்திற்காக் கீர்த்தியை ஸம்பாதிக்காமல் ஜீவித்திருப்பதால் என்ன ப்ரயோஜனம்?" என்று

யோசித்துக் கம்பீர புத்தியுள்ளவனான ஜராஸந்தன் அவர்களை நோக்கி, "இஷ்டத்தைக் கேளுங்கள்; என்னுடைய தலையானாலும் கொடுக்கிறேன்" என்றான்.

28–33. அதனைக் கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் ஜராஸந்தனை நோக்கி, "ஓ மஹாராஜரே யுத்தஞ் செய்ய வேண்டுமென்ற விருப்பத்துடன் வந்திருக்கிறோம். நாங்கள் க்ஷத்திரியர்கள்; எங்களுக்கு யுத்தத்தை விட வேறொன்றும் வேண்டியதில்லை. இவர் பீமஸேனர்; இவர் அர்ஜுனர்; நான் இவர்களுடைய அம்மான்சேய் ஆகிய கிருஷ்ணன்; உமக்கு சத்ரு" என்று சொன்னார். அதனைக் கேட்ட ஜராஸந்தன் மிகவும் சிரித்தான். மேலும் அவன் கிருஷ்ணனை நோக்கி, "ஓ மூடர்களே! அப்படியானால் உங்களுக்கு யுத்தங்கொடுக்கிறேன். நீ யுத்தத்தில் பயந்து மதுரையைவிட்டு ஸமுத்திரத்தைச் சரணமடைந்தவன் (த்வாரகைக்குச் சென்றவன்). ஆனதால் உன்னுடன் யுத்தஞ் செய்யமாட்டேன். இந்த அர்ஜுனன் வயதிலும், பலத்திலும் எனக்குச் சமனல்ல. பீமஸேனன் எனக்குச் சமமான பலமுள்ளவனானதால் இவனுடன் யுத்தஞ் செய்கிறேன்" என்று சொல்லிப் பருத்த கதாயுதத்தைப் பீமஸேனனிடங் கொடுத்தான். மற்றொரு கதாயுதத்தைத் தானெடுத்துக் கொண்டு பட்டணத்தை விட்டு வெளியில் வந்தான்.

34–36. பின்பு அவ்விரு வீரர்களும் மேடு பள்ளமில்லாத ஸமமானபூமியில் வஜ்ரம்போன்ற அந்த ஆயுதங்களால் அடித்துக்கொண்டார்கள்.

மேலுமவர்கள் இடமாகவும், வலமாகவும் சுற்றி யுத்தஞ் செய்வது, நடர்கள் நாட்டியசாலையில் சுற்றுவது போலிருந்தது. அப்பொழுது இரண்டு யானைகள் முட்டிக்கொண்டால், அதன் தந்தங்கள் ஒன்றோடொன்று நெருங்கி சப்தித்தாற் போல, அவர்களுடைய கதாயுதங்கள் ஒன்றோடொன்று அடிபட்டதனால், இடிபோல சடசடவென்று சப்தமுண்டாயிற்று. இப்படி அவ்விருவர்களும் தோல், இடுப்பு, கால்கள், கைகள், துடைகள் இவைகளில் கதாயுதத்தால் அடித்துக்கொள்ளும் பொழுது அவ்விரு கதாயுதங்களும் எருக்கங்கழிகள் போல் பொடியாயின. இப்படி மிக்க கோபத்துடன் யானைகள் போல் யுத்தஞ்செய்தார்கள். இப்படி கதைகள் பொடியான பின், இரும்புக்குச்சமமான முஷ்டிகளால் அடித்துக் கொண்டார்கள்.

முஷ்டிகளாலும் உள்ளங்கைகளாலும் அவர்கள் அடித்துக்கொள்ளும் பொழுது இடிபோலும், வஜ்ரம்போலும் கடுமையான சப்தமுண்டாயிற்று. அவ்விருவர்களும் ஸமமான பலம் உள்ளவர்கள்; ஸமமான தேஜசுள்ளவர்கள்; ஆனதால் ஒருவருக் கொருவர் தோல்வியன்னியில் யுத்தஞ்செய்தார்கள். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் ஜராஸந்தனுடைய பிறப்பையும் அவன் மரணத்தையும், பின்பு ஜரையால் பிழைக்கச்செய்ததையும் அறிந்தவராகையால், பீமஸே னரைத் தம்முடைய தேஜஸ்ஸால் பலமுள்ளவராகச் செய்து (கடாக்ஷத்தால் அவருக்குப் பலத்தைக் கொடுத்து யோசித்தார்.) மேலுமவர் சத்துருவைக் கொல்லும் உபாயத்தை அறிந்து ஒரு மரத்தின் கிளையைப் பிளந்து, இதுபோல் சத்துருவைப்

பிளக்கவேண்டுமென்று ஜாடை காண்பித்தார். அதனை யறிந்த மிக்க பலசாலியான பீமன் சத்துருவின் காலைப் பிடித்துப் பூமியில் தள்ளி ஒரு காலைத் தன் காலால் மிதித்துக்கொண்டு மற்றொறு காலைப் பிடித்து குதத்திலிருந்து கிழித்தான். இப்படி பீமஸேனனால் ஜராசந்தனுடைய சரீரம் கிழிக்கப் பட்டது. ஒவ்வொரு துண்டிலும் ஒரு கால், ஒரு தொடை, இடுப்பு, ஒரு ஸ்தனம், ஒரு தோள், ஒரு கண், ஒரு கை, ஒரு புருவம், ஒரு காது ஆகிய இவைகள் உள்ளதாக இருந்ததை ஜனங்கள் பார்த்தார்கள். ஜராஸந்தன் கொல்லப்பட்டவுடன் ஹா ஹா என்ற சப்தமுண்டாயிற்று. அர்ஜுனனும், ஸ்ரீ கிருஷ்ணனும், பீமஸேனரைத் தழுவிப் பூஜித்தார் கள். பின்பு ஸ்ரீகிருஷ்ணன் ஜராஸந்தனுடைய புத்திரனாகிய ஸஹதேவனுக்கு அந்த ராஜ்யத்தைக் கொடுத்து,அந்த தேசத்தில் அபிஷேகஞ் செய்வித்தார். ஜராஸந்தனால் நிக்கிரஹிக்கப்பட்ட அரசர்களை விடுவித்தார்.

♣♣♣♣♣

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada

அத்தியாயம்–73

கிருஷ்ணன் அரசர்களை விடுவித்தது

ஜராசந்தன் யுத்தத்தில் ஜயித்து இரண்டு லக்ஷத்து எண்ணூறு அரசர்களை மலையின் குஹையில் அடைத்து வைத்திருந்தானல்லவா? அவர்கள் ஸ்ரீகிருஷ்ணனுடைய அனுக்கிரஹத்தால் வெளியில வந்தார்கள். அப்பொழுது எல்லோரும் அழுக்குள்ள வஸ்திரத்தை தரித்தவர்களும் பசியால் இளைத்த சரீரமுள்ளவர்களும், உலர்ந்த முகமுள்ளவர்களும், தடுக்கப்பட்டிருந்ததால் கஷ்டப்பட்டவர்களுமாக இருந்தார்கள். மேலுமவர்கள் வெளியில் வந்து ஸ்ரீ கிருஷ்ணனைத் தர்சித்தார்கள். ஸ்ரீகிருஷ்ணன் மேகம் போன்ற கருத்த திருமேனியுள்ளவரும், பீதாம்பரத்தைத் தரித்தவரும், ஸ்ரீவத்ஸமென்ற அடையாளமுள்ளவரும், நான்கு கைகளுள்ளவரும், தாமரை மலரின் இதழ் போல நீண்ட கண்களுள்ளவரும், அழகு பொருந்திய புன்சிரிப்புள்ள முகம் உள்ளவரும், மகர குண்டலங்களால் ப்ரகாசிப்பவரும் தாமரை மலர், கதாயுதம், சங்கம், சக்கரம் இவைகளைக் கைகளில் தரிப்பவரும், கிரீடம், ஹாரம், வளை அரைநாண், தோள்வளை ஆகிய இவைகளால் அலங்கரிக்கப் பெற்றவரும், கௌஸ்துப ஹாரத்தால் ப்ரகாசிக்கும் கழுத்துள்ளவரும் வனமாலையுள்ளவருமாக இருந்தார். அவரைக்கண்ட அரசர்கள், கண்களால் பானஞ் செய்பவர்கள் போலவும், நாக்கினால் நக்குகிறவர்கள் போலவும், மூக்குகளால் முகருகிறவர்கள் போலவும், கைகளால் கட்டிக்கொள்பவர்கள் போலவும் கிருஷ்ணனுடைய பாதங்களில் நமஸ்கரித்தார்கள்.

அதனால் அவர்கள் பாபம் நீங்கி சுத்தர்களானார்கள். மேலும் அவர்களுக்குக் கிருஷ்ணனைத் தர்சித்தவுடன் இவ்வளவு காலம் அனுபவித்த ச்ரமம் நிவர்த்தியாயிற்று. பின்னும் அவர்கள் அஞ்சலி செய்து, "ஓ தேவர்களுக்கும் தேவராகிய ஈச! சரணமடைந்தவர்களுடைய உபத்திரவத்தை நிவர்த்திப்பவரே! அழிவற்றவரே! கோரமான ஸம்ஸாரத்திலிருந்து நிர்வேதத்தையடைந்த எங்களைக் காப்பாற்றும். ஓ! நாத! இந்த ஜராஸந்தனிடத்தில் நாங்கள் அஸுயையை அடையவில்லை. அரசர்களுக்கு ராஜ்யத்தை விட்டுவிடும்படிச் செய்வது அனுக்கிரஹமேயாம். ஐச்வர்ய மதமுள்ள அரசர்கள் க்ஷேமத்தை அடையமாட்டார்கள். உம்முடைய மாயையால் மோஹித்து ஐச்வர்யத்தையே நித்யமென்று நினைக்கிறார்கள்.

மூடர்கள் கானலை ஜலமென்று நினைப்பது போல மாயா மயமான விகாரங்களை நித்திய வஸ்து என்று நினைக்கிறார்கள். நாங்கள் முந்தி ஐச்வர்ய மதங்கொண்டு புத்தியில்லாமல் பிறரை ஜயிக்க வேண்டுமென்ற விருப்பத்துடன் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு ஸைன்யங்களை நாசஞ் செய்து கொண்டிருந்தோம். மதத்தால், சிக்ஷிப்பவர் நீர் இருக்கிறீர் என்பதை நினையாமல் இருந்தோம். ஆனதால் மிகுந்த வீர்யமுள்ள காலஸ்வரூபியான நீர் எங்களை ராஜ்ஜியமில்லாமல் கஷ்டப்படும்படி செய்தீர். இப்பொழுது உம்முடைய தயையால் மதமற்று பாதங்களைத் த்யானிக்கிறோம். இந்தச் சரீரமானது ஒவ்வொரு க்ஷணத்திலும் குறைகிறது. ரோகங்கள் உண்டாகுமிடமாக இருக்கிறது; அப்படிப்பட்ட சரீரத்தால் கானல் போன்ற ராஜ்யத்தை

அடையவேண்டுமென்று நாங்கள் இப்பொழுது விரும்பவில்லை. மரணமடைந்த பிறகு ஸ்வர்க்கம் முதலிய போகங்களையும் நாங்கள் விரும்பவில்லை. (அது கேட்பதற்கு மாத்திரம் இனிமையாக இருக்க கூடியது.) ஆனதால் ஸம்ஸாரிகளான எங்களுடைய மனமானது உம்முடைய பாதங்களிலேயே ஏப்பொழுதும் இருக்கும்படியான உபாயத்தைச் சொல்ல வேண்டும். வாஸுதேவரும் பரமாத்மாவும் ஸகல பாபங்களையும் நிவர்த்திப்பவருமான ஸ்ரீ கிருஷ்ணனுக்கு நமஸ்காரம்" என்றார்கள்.

17–23. இப்படித் தம்மால் விடுவிக்கப்பட்ட அரசர்களால் துதிக்கப்பெற்ற ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களிடத்தில் மிகுந்த தயை அடைந்து "இன்று முதல் நீங்கள் கேட்டுக் கொண்டபடி என்னிடத்தில் உங்களுக்கு ஸ்திரமான பக்தியுண்டாகும். நான் எல்லாவற்றிக்கும் ஆத்மாவாகவும் அதிபதியாகவும் இருக்கிறேன்; நீங்கள் சொன்னது உண்மையே; ஐச்வர்யமதமானது மனிதர்களுடைய புத்தியை மாற்றித் தனதிஷ்டப்படி ஸஞ்சரிக்கச்செய்கிறது. மேலும் கார்த்தவீர்யன், நஹுஷன், வேனன், முதலிய அரசர்களும், ராவணன், நரகன் முதலியவர்களும் ஐச்வர்ய மதங்கொண்டவர்களாக இருந்ததால் ராஜ்யத்தை இழந்தார்கள். ஆனதால் சரீரம் முதலியவை ஜனன மரணங்களுள்ளவை (ஆத்மாவிற்கு ஜனனமாவது மரணமாவது இல்லை; ஆத்மா நித்யமென்று கருத்து) என்பதை நீங்கள் தெரிந்து கொண்டு என்னிடத்தில் பக்திசெய்து, யாகங்களைச் செய்து கொண்டு ப்ரஜைகளைக் காப்பாற்றுங்கள்; மேலும் நீங்கள் புத்திர பௌத்திர ஸந்ததிகளை உண்டுபண்ணிக்

கொண்டு ஸுகதுக்கங்களையும், க்ஷேமத்தையும், கஷ்டத்தையும் சமமாக நினைத்து அனுபவித்துக் கொண்டு (ஸுகங்கிடைத்தபொழுது ஸந்தோஷிக்க வேண்டாம். துக்கம் வந்த பொழுதும் துக்கிக்க வேண்டாமென்று கருத்து) என்னிடத்திலேயே சித்தத்தைச் செலுத்திக்கொண்டு ஸுகமாக ஸஞ்சரியுங்கள். தேஹம் முதலியவைகளில் உதாஸீனர்களாகி, ஆத்மாவிடத்தில் ஆசை உள்ளவர்களாகி என்னிடத்திலேயே சித்தத்தைச்செலுத்தி முடிவில் ப்ரஹ்மமாகிய என்னை அடைவீர்கள்" என்று அனுக்கிரஹித்தார்.

24–30. ஸகல லோகங்களுக்கும் அதிபதியாகிய ஸ்ரீகிருஷ்ணன் அந்த அரசர்களுக்கு எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்விக்கும்படி சில புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் உத்திரவு கொடுத்தார். பின்பு ஸ்ரீகிருஷ்ணனால் தூண்டப்பட்ட ஸஹதேவன் (ஜராஸந்தனுடைய புத்திரன்), அந்த அரசர்களை ராஜாக்களுக்குரிய வஸ்திரங்களாலும் ஆபரணங்களாலும், மாலைகளாலும், சந்தனத்தாலும் தாம்பூலம் முதலிய பல வகையான போக்கிய வஸ்துக்களாலும் பூஜித்தார். இப்படி அந்த அரசர்கள் கிருஷ்ணனுடைய அனுக்கிரஹத்தால் ஸ்நானம் செய்து, அலங்காரஞ் செய்துகொண்டு, உத்தமமான அன்னத்தைப் புஜித்துக் குண்டலம் முதலிய ஆபரணங்களைத் தரித்து கஷ்டத்திலிருந்து நிவர்த்தி அடைந்து, மழைக்காலஞ் சென்றபின் நவக்கிரஹங்கள் போலப் ப்ராகாசித்தார்கள். பின்னுமவர்கள் நல்ல குதிரைகள் கட்டிய ரதத்தில் ஏறிக்கொண்டு ஸஹதேவனுடைய பிரிய வார்த்தைகளால் பூஜிக்கப்பட்டு, கிருஷ்ணனுடைய சரிதங்களையே த்யானஞ்செய்து கொண்டு தங்கள்

தங்கள் தேசஞ் சென்றார்கள். மேலும் அவர்கள், தங்கள் தங்கள் பந்துக்களுக்கு ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதத்தைச் சொன்னதுமல்லாமல் பகவானுடைய உத்தரவின்படி நடந்து வந்தார்கள்.

31–35. ஸ்ரீ கிருஷ்ணன் பீமஸேனனைக் கொண்டு ஜராஸந்தனைக் கொன்று, ஸஹதேவனால் பூஜிக்கப் பட்டு பீமஸேனன், அர்ஜுனன் இவர்களுடன் இந்திரப்ரஸ்தஞ் சென்றார். அவ்விடத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் முதலிய மூவர்களும் சங்கத்தை ஊதினார்கள். அந்தச் சப்தமானது பந்துக்களுக்குச் ஸுகத்தையும், சத்துருக்களுக்குத் துக்கத்தையும், கொடுக்கக்கூடியதாக இருந்தது. அதனைக்கேட்ட இந்திர ப்ரஸ்தத்தில் வஸிக்கும் ஜனங்களும், தர்ம புத்திரரும், ஜராஸந்தன் அடிபட்டான் என்று தெரிந்துகொண்டார்கள். அதன்பின் பீமன், அர்ஜுனன், கிருஷ்ணன் ஆகிய மூவர்களும் தர்மபுத்திரரை நமஸ்கரித்து, தங்களால் செய்யப்பட்ட கார்யங்களைத் தெரிவித்தார்கள். அதனைக் கேட்ட தர்மபுத்திரர் ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு மிகுந்த பிரியத்தால் ஒன்றையுஞ் சொல்லாமலிருந்தார்.

♣♣♣♣

அத்தியாயம்–74

தர்மபுத்திரர் ராஜஸூய யாகஞ் செய்தது.

தர்மபுத்திரர் ஜராஸந்தன் வதம் முதலிய ஸ்ரீ கிருஷ்ணனுடைய மஹிமையைக் கேட்டு மிக்க ப்ரியத்துடன், "ஓ! தாமரைமலர் போன்ற கண் களுள்ளவரே! மூவுலகங்களுக்கும் ஆசார்யர்களாக இருப்பவர்களும், ஸகல லோகங்களும்' லோக பாலகர்களும், உம்முடைய ஆஜ்ஞையைச் சிரஸால் தரிக்கிறார்கள். அப்படிப்பட்ட நீர் அஹங்காரிகளான எங்களுடைய இஷ்டப்படி நடக்கிறீர். இது மிகவும் உசிதமல்ல (மனிதபாவனையை அனுசரிக்கிறீர் என்று கருத்து) ஆனால் நீர் பரிபூர்ணரானதால் உத்தரவு செய்வது, பிறருடைய உத்தரவைத் தரிப்பது இவைகளால் உமக்கு தேஜஸ்ஸின் விருத்தியாவது, குறைவாவது நேருகிறதில்லை. ஏனென்றால் நீர் ஒருவர்; உமக்குச் சமமான வஸ்து வேறொன்றும் இல்லை; நீர் ப்ரஹ்மம்; ஸகல ஜீவர்களுக்கு நியந்தாவாகிய பரமாத்மா; ஆனதால் உமக்கு கர்மங்களால் தேஜஸ் விருத்தி அடைகிறதென்பதில்லை (கர்மத்தால் விருத்தியடைகிறதில்லை, இளைக்கிறதில்லை என்ற ச்ருதியின்படி) ஸூர்யனுடைய தேஜஸ்ஸானது உதயத்தால் விருத்தியடைகிறதுமில்லை. அஸ்தமனத் தால் குறைகிறதுமில்லையல்லவா? (ஆனதால் எல்லோருக்கும் மேற்பட்டவரான நீர் தாழ்ந்தவர்களான எங்களிஷ்டப்படி நடப்பது எங்களிடத்திலுள்ள தயையாலேயே ஒழிய வேறில்லை. அதனால் உமக்குக் குறைவில்லை என்று தாத்பர்யம்.) ஓ! ஒருவராலும் ஜயிக்கப்படாதவரே மூடர்கள், நான், என்னுடையது,

நீ, உன்னுடையது, என்று எப்படி பேதபுத்தியை அடைகிறார்களோ, அப்படி உம்முடைய பக்தர்களுக்கு புத்தி உண்டாகிறதில்லையென்று சொல்லி, யாகம் ஆரம்பிக்க வேண்டிய காலத்தில் (வஸந்தம் முதலிய காலம்) வேதாத்தியயனஞ் செய்தவர்களான ப்ராஹ்மணர்களைக் கிருஷ்ணனுடைய அனுமதியால் ரித்விக்குகளாக வரித்தார். இப்படி தர்மபுத்திரரால் வ்யாஸர், பரத்வாஜர், ஸுமந்து, கௌதமர், அஸிதர், வஸிஷ்டர், ச்யவனர், கண்வர், மைத்ரேயர், கவஷர், திருதர், விச்வாமித்திரர், வாமதேவர், ஸுமதி, ஜைமினி, க்ரது, டைலர், பராசரர், கர்க்கர், வைசம்பாயனர், துர்வாஸர், கச்யபர், தௌம்யர், பரசுராமர், ஆஸுரி, வீதிஹோத்திரர், மதுச்சந்தஸ், வீரஸேனர், அகிருதவ்ரணர் ஆகிய இவர்கள் ரித்விக்குகளாக வரிக்கப்பட்டார்கள் மேலும் மற்ற ப்ராஹ்மணர்களும், பீஷ்மர், துரோணர்: கிருபர், திருதராஷ்டிரர், அவருடைய பிள்ளைகள், மிக்க புத்திசாலியான விதுரர், மற்ற க்ஷத்திரியர்கள் வைச்யர்கள், சூத்திரர்கள் ஆகிய எல்லோரும் தர்மபுத்திரரால் அழைக்கப்பட்டு யாகத்தைப் பார்ப்பதற்காக இந்திரப்பிரஸ்தத்திற்கு வந்தார்கள்.

அப்பொழுது ப்ராஹ்மணர்கள் தங்க கலப்பையால் யாக பூமியை உழுது, விதிப்படி அரசனுக்குத் தீக்ஷை செய்வித்தார்கள். இந்த யாகத்தில் பாத்திரங்களெல்லாம் வருணனுடைய யாகத்தில் போல ஸ்வர்ண மயங்களாக இருந்தன. இந்திரன் முதலிய லோகபாலகர்களும் ப்ரஹ்மதேவரும், பரமசிவனும், அவரவர்களுடைய கணங்களும், ஸித்தர்களும், உரகர்களும், மஹர்ஷிகளும், யக்ஷர்களும், ராக்ஷஸர்களும்,

கருடர்களும், கின்னரர்களும், சாரணர்களும், அரசர்களும், ராஜபத்தினிகளும் தர்மபுத்திரரால் அழைக்கப்பட்டு பாண்டுவின் புத்திரராகிய தர்ம புத்திரருடைய யாகத்தைப் பார்ப்பதற்காக வந்தார்கள். மேலும் அவர்கள் கிருஷ்ண பக்தராகிய தர்மபுத்திரருடைய யாகத்தை நல்லதென்று ஆச்சர்யமில்லாமல் ஒப்புக் கொண்டார்கள்.

17–30. தேவர்கள் வருணனுக்கு யாகஞ் செய்வித்தது போல தேவர்கள் போன்ற மிக்க தேஜஸ்ஸுள்ள ப்ராஹ்மணர்கள் தர்மபுத்திரருக்கு ராஜஸூய யாகஞ் செய்வித்தார்கள். ஸோமலதையைப் பிழியும் தினத்தில் (ஸுத்தியாஹஸ்) யாகம் செய்விக்கும் மிக்க யோக்கியர்களான, ரித்விக்குகளையும், ஸதஸ்ஸியர்களையும் தர்மபுத்திரர் மிகவும் பக்தியுடன் பூஜித்தார். அப்பொழுது ஸபையிலிருப்பவர்களில் யாரை முதலில் பூஜிக்கலாம் என்று யோசிக்கும்போது அதற்குரியவர்கள் அநேகர்கள் இருந்தார்கள். இன்னாரைத்தான் முதலில் பூஜிக்கிற்தென்ற நிச்சயமில்லாமல் ஸதஸ்ஸியர்கள் ஸம்சயப்பட்டார்கள். அப்பொழுது ஸஹாதேவர் "ஸாத்வதர்களுக்கு அதிபதியான ஸ்ரீ கிருஷ்ணனை முதலில் பூஜிக்கவேண்டும். அவரே அதற்குத் தகுதியானவர். இவர் ஸகல தேவஸ்வரூபி; தேசம், காலம், தனம், யாகம், அக்னி, ஆஹுதி, ஸாங்கியம், யோகம், ஜகத் ஆகிய இவைகளெல்லாம் இந்தக் கிருஷ்ணனேயாம். ஓ ஸதஸ்ஸியர்களே! இவருக்கு சமமானவர்கள் ஒருவருமில்லை. இந்த ஜகத் முழுவதும் இவருடைய ஸ்வரூபமேயொழிய வேறில்லை. இவர் தன்னுடைய மஹிமையில் இருந்துகொண்டு (மற்றொன்றையும்

அபேக்ஷியாமல்) தானே இந்த ஜகத்தைப் படைக்கிறார். காப்பாற்றுகிறார்; ஸம்ஹரிக்கிறார். இவர் நித்தியர்; எல்லா ஜனங்களும் பலவகையான கர்மங்களை செய்து, தர்மம் முதலியன க்ஷேமத்தை அடைவதற்கு இவருடைய அனுக்கிரஹமே காரணமாய் இருக்கிறது. (கர்மங்களும் அவைகளின் பயனும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு சுவாதீனங்களென்று கருத்து) அதனால் மிகுந்த மஹிமை பொருந்தியவரும், ஸகல பிராணிகளுக்கும் ஆத்மாவும், பேதபுத்தி இல்லாதவருமான ஸ்ரீ கிருஷ்ணனுக்கு அக்கிரபூஜை செய்தால் குறைவற்ற பலன் கிடைக்கும்; ஸகல பிராணிகளையும், ஆத்மாவையும் பூஜித்ததாக ஆகும். ஆனதால் கிருஷ்ணனையே முதலில் பூஜிக்கவேண்டும்" என்று கிருஷ்ணனுடைய மஹிமையை யறிந்தவராகையால் சொன்னார்.

அதனைக் கேட்ட ஸதஸ்யர்கள் எல்லோரும் நல்லது, நல்லது என்று ஒப்புக்கொண்டார்கள். அதனைக் கேட்ட தர்மபுத்திரர் ஸதஸ்யர்களுடைய அபிப்பிராயத்தை அறிந்து மிக்க பிரியத்துடன் ஸ்ரீ கிருஷ்ணனைப் பூஜித்தார். மேலும் அவர் பகவானுடைய பாதங்களை அலம்பி, லோகத்தைப் பரிசுத்தப்படுத்தக் கூடிய அந்தத் தீர்த்தத்தைத் தம்முடைய பத்தினிகள், ஸஹோதரர்கள், மந்திரிகள், குடும்பம், இவர்களுடைய தலையில் ப்ரோக்ஷித்துத் கொண்டார். பின்னும் பட்டு முதலிய வஸ்திரங்களாலும் விலையுயர்ந்த ஆபரணங்களாலும் பகவானை அலங்கரித்து, ஆனந்தத்தால் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு அவரைத் தர்சிக்க முடியாமல் நின்றார். (மிக்க பிரியத்துடன் தர்சித்தார் என்று கருத்து) இப்படி தர்ம

புத்திரரால் பூஜிக்கப்பெற்ற ஸ்ரீ கிருஷ்ணனைத் தர்சித்த எல்லா அரசர்களும் அஞ்ஜலி செய்து ஜய! ஜய! என்று சொல்லி நமஸ்கரித்தார்கள். புஷ்பங்கள் வர்ஷிக்கப்பட்டன.

31–39. அதனைப் பார்த்த சிசுபாலன் பகவானுடைய குணங்களை சபையில் சொல்லியதால் கோபங்கொண்டு தனது ஆஸனத்தைவிட்டு எழுந்திருந்து பின் வருமாறு கிருஷ்ணனை யுத்தேசித்துக் கடுஞ்சொற்களைச் சொல்லலானன்; எப்படியெனில்:– "காலமானது எல்லாவற்றிற்கும் அதிபதி; அதனை ஜயிக்க ஒருவராலும் முடியாது என்று பெரியோர்கள் சொல்லுவது உண்மையே. இந்த ஸதஸ்ஸிலிருக்கும் பெரியோர்களுடைய புத்திகூட சிறுவனுடைய வார்த்தையில் மாறிவிட்டது. ஸதஸ்யர்களான ஓ பெரியோர்களே! நீங்கள் பாத்திரத்தை (பூஜிக்கத்தக்கவன்) அறிந்தவர்களுக்குட் சிறந்தவர்களானதால் கிருஷ்ணனைப் பூஜிக்க வேண்டுமென்று சிறுவன் சொல்லும் வார்த்தையை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டாம். மிகுந்த தபஸ்விகளும், வித்தையுள்ளவர்களும் வ்ரதங்களை அனுஷ்டித்தவர்களும். ஞானிகளும், பாபமற்றவர்களும், லோகபாலகர்களாலும் பூஜிக்கப்பட்டவர்களும் ப்ரஹ்மஷ்டர்களுமான மஹர்ஷிகள் இதோ இருக்கின்றார்கள். இவர்களைப் பூஜிக்காமல் தாழ்ந்த குலத்தில் பிறந்த இந்த இடையனை எப்படிப் பூஜிக்கலாம்? காக்கைக்குப் புரோடாசத்தைக் (ஹவிஸ்) கொடுக்கலாமா? இந்தக் கிருஷ்ணன் ஜாதி, ஆச்ரமம், குலம் இவைகளில்லாதவன்; ஒரு தர்மத்தையும் அனுஷ்டிக்காதவன்; தனது இஷ்டப்படி நடப்பவன்; குணமற்றவன்; இவனை எப்படிப் பூஜிக்கலாம்?

இவர்களுடைய குலமானது, யயாதி மஹாராஜனால் சபிக்கப்பட்டிருக்கிறது; ஸாதுக்களால் தள்ளப்பட்டது; வீணாக மத்திய பானத்திலேயே ஆசையுள்ளது; அப்படிப்பட்ட குலத்திற் பிறந்த இந்தக் கிருஷ்ணன் பூஜைக்குரியவனா? மேலும் இவர்கள் ப்ரஹ்மரிஷிகள் வஸிக்கக்கூடிய புண்ணியமான தேசங்களைவிட்டு. அமங்களமான ஸமுத்திரத்தின் நடுவிலிருந்து கொண்டு திருடர்களாக ஜனங்களை உபத்திரவிக்கிறார்கள்" என்று பலவிதமான கடுஞ்சொற்களைச் சொன்னான். மரணம் ஸமீபித்தவனாகிய சிசுபாலனுடைய இம்மாதிரியான வார்த்தையைக் கேட்டும், பகவான் ஒன்றையுஞ் சொல்லாமல் மௌனமாக இருந்தார். அது நரியினுடைய கத்தலைக்கேட்டுச் சிங்கம் மௌனமாக இருந்தாற் போலிருந்தது.

40–47. இப்படி சிசுபாலனால் சொல்லப்பட்ட நிந்தா வார்த்தைகளைக் கேட்டு, ஸதஸ்ஸியர்கள் அதனைச் ஸஹியாமல் காதுகளை மூடிக்கொண்டு சிசுபாலனை நிந்தித்துக்கொண்டு வெளியில் சென்றார்கள். பகவானையாவது, பக்தர்களையாவது யாராவது நிந்தித்தால் அதனைக் கேளாமல் அந்த இடத்தை விட்டு வெளியில் போகவேண்டும். அப்படியில்லாமல் எவன் அவ்விடத்திலேயே இருந்து அதனைக் கேட்டுக் கொண்டிருக்கின்றானோ, அவன் புண்ணியத்தை இழந்து விடுகிறான். பின்பு பாண்டவர்களும் மத்ஸ்யர்களும், கேகயர்களும், ஸிருஞ்ஜயர்களும் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு சிசுபாலனைக் கொல்ல முயற்சித்தார்கள். அதனைக் கண்ட சிசுபாலன் பயப்படாமல் கத்தியையும், கேடகத்தையும் எடுத்துக் கொண்டு கிருஷ்ணனைச்

சார்ந்தவர்களை அதட்டினான். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் தாம் எழுந்திருந்து, தன்னைச் சார்ந்தவர்களைத் தடுத்துச் சக்கிரத்தை பிரயோகித்துச் சத்ருவாகிய சிசுபாலனுடைய தலையை வெட்டினார். சிசுபாலன் கொல்லப்பட்ட பொழுது மிகவும் கோலாஹல சப்தம் உண்டாயிற்று. சிசுபாலனைச் சார்ந்த அரசர்கள் உயிர்பிழைக்க விரும்பி பயந்து ஓடினார்கள். அப்பொழுது ஸகல ஜனங்களும் பார்த்துக்கொண்டிருக்க, ஆகாயத்திலிருந்து குறைக் கொள்ளி விழுந்தாற்போல சிசுபாலனுடைய சரீரத்திலிருந்து கிளம்பிய தேஜஸ்ஸானது கிருஷ்ணனிடம் பிரவேசித்தது. அந்தச் சிசுபாலன் மூன்று ஜன்மமாகப் பகவானிடத்தில் விரோதம் வைத்து, அவரையே எப்பொழுதும் தியானித்திருந்தமையால் பகவத் ஸ்வரூபத்தை அடைந்தான். எண்ணமே (பாவனை) க்ஷேமத்திற்குக் காரணமாகிறது.

48–54. பின்பு தர்மபுத்திரர் ரித்விக்குகளுக்கும், ஸதஸ்ஸியர்களுக்கும் விசேஷமான தக்ஷிணை கொடுத்து யாகத்தை முடித்தார். இப்படி கிருஷ்ணன் தர்மபுத்திரருக்கு யாகத்தை நடத்திவைத்து, பந்துக்களுடைய வேண்டுகோளின்படி சில மாதகாலம் அவ்விடத்தில் வஸித்தார். பின்பும் கிருஷ்ணனைத் துவாரகைக்கு அனுப்ப தர்மபுத்திரர் ஸம்மதியாமலிருக்கும் பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் அவரிடம் விடைபெற்று, பத்னிகளுடனும், மந்திரிகளுடனும் தன்னுடைய பட்டணஞ் சென்றார். ஓ பரீக்ஷித்து மஹாராஜனே! வைகுண்டத்தில் வஸித்த ஜய, விஜயர்களுக்கு ப்ராஹ்மண சாபம் நேர்ந்த விஷயத்தைப்பற்றி விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறோம்.

இம்மாதிரி தர்மபுத்திரர் ராஜஸூயத்தைச் செய்து முடித்து ப்ராஹ்மணர்கள் க்ஷத்திரியர்கள் இவர்களுடைய மத்தியில் மஹேந்திரன் போலப் ப்ரகாசித்தார். அந்த யாகத்திற்காக வந்திருந்த தேவர்களும், மனிதர்களும் அரசனால் பூஜிக்கப்பட்டு, கிருஷ்ணனைப் பற்றியும் யாகத்தைப்பற்றியும் ச்லாகித்துக்கொண்டு தங்களிருப்பிடஞ் சென்றார்கள். துரியோதனன் மிக்கப் பாபியானதாலும், குருகுலத்திற்கு வியாதி போன்றவனானதாலும் அவன் ஒருவன் மாத்திரம் தர்மபுத்திரருடைய ஐச்வர்யத்தைப் பார்த்து பொறாமை அடைந்தான்.

55. எவன் ஸ்ரீ கிருஷ்ணனால் செய்யப்பட்ட சிசுபாலவதம், அரசர்களைக் காப்பாற்றியது, தர்மபுத்திரருடைய யாகம் ஆகிய இவைகளைப் படிக்கிறானோ, அவன் ஸகல பாபங்களற்றவனாகிய சுத்தனாவான்.

நோட்டு.

ரித்விக்குகளாக:—ஹோத்தா, போதா, அத்வர்யு, நேஷ்டா, உத்காதா; ப்ரஹ்மா முதலியவர்கள். இந்த அத்தியாயத்தில் 32வது ச்லோகம் முதல் 7—சுலோகங்களால் சிசுபாலன் பகவானை நிந்தித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் அந்த ச்லோகங்களுக்கு பகவானை ஸ்துதித்ததாகவும் அர்த்த மேற்படுகிறது. எப்படியேனில் ஸ்ரீ பகவான் கால ஸ்வரூபியாயிருப்பதனால் அந்தக்காலத்தை ஒருவாராலும் ஜயிக்க முடியாது என்ற வார்த்தை உண்மையே. வித்வான்களானாலும் லோகத்தில் சில ஜன்மங்கள்

மூடர்களுடைய வார்த்தையை அங்கீகரிக்கிறார்கள். (அதற்கு பகவானுடைய ஸங்கல்பமே காரணமென்று கருத்து) இவனைப் பூஜிக்கலாம்; இவன் தகுதியானவன், என்று தெரிந்துகொள்ள நீங்கள் சக்தியுள்ளவர்களானதால், சகாதேவன் சொன்ன வார்த்தையைச் சிறுவன் வார்த்தையென்று அலக்ஷியம் செய்யாதீர்கள் (கிருஷ்ணனையே பூஜிக்க வேண்டுமென்று கருத்து) ஸபையிலிருப்பவர்கள் துஸ்விகளானாலும், வித்வான்களானாலும், வ்ரதத்தை அனுஷ்டிப்பவர்களானாலும், ஞானத்தால் மோஹ மற்றவர்களானாலும், ப்ரஹ்மிஷ்டர்களானாலும், லோக பாலகர்களால் பூஜிக்கப்பட்டவர்களானாலும் அவர்களை விட்டு ஸ்ரீ கிருஷ்ணனை ஏன் பூஜிக்கக்கூடாது? இவர் வேதங்களையும், பூமியையும் காப்பாற்றுபவர்; (கோபம் என்றதின் அர்த்தம்); வேதத்திற்கு விரோதமான பாஷண்ட மதத்தை ஆச்ரயித்தவர்களை ஸம்ஹரிப்பவர்; (குலபாம்ஸன் என்பதின் அர்த்தம்) அகாக என்று பதம்பிரித்தால் சுகதுக்கமற்றவரென்று அர்த்தம்; அப்படிப்பட்ட ஸமபுத்தியுள்ளவன் (ஆப்தகாமன்) எப்படி எல்லாவற்றையும் அடைய தகுந்தவனோ, அப்படி இந்த பகவான் ஏன் அக்ர பூஜையை அடையக்கூடாது? மேலும் இவருக்கு இன்ன ஜாதி, இன்ன ஆச்ரமம் இன்ன குலமென்பதுமில்லை. (எல்லாவற்றையும் கடந்த ப்ரஹ்மம் என்று தாத்பர்யம்) ஸகல தர்மங்களையும் கடந்தவர்; ஸாமான்ய ஜனங்கள் போல தர்மாதர்மத்திற்குக் கட்டுப்பட்டவரல்ல என்று தாத்பர்யம். (அதனால் தமதிஷ்டப்படி ஸஞ்சரிப்பவர்; பரமேச்வரனென்று கருத்து.) குணஸம்பந்தமற்றவர்; யயாதி இவருடைய குலத்தைச் சபித்தும் சாதுக்கள் அதனை

தள்ளிவிட்டார்களா? (அந்தக் குலத்தையே ஆச்ரயிக்கிறார்களென்று கருத்து) நல்ல ஆசாரமுள்ளது. (வேதத்திற்கு விரோதமான அடையாளத்தைத் தரிக்கின்ற பாஷண்டர்களை யாதவர்கள் சிக்ஷிக்கிறார்கள். ஆனதால் யாதவர்களை காட்டிலும் தர்மசிந்தனையுள்ளவர் வேறு யார் இருக்கிறார்கள்? என்று தாத்பரியம்.)

தர்மபுத்திரர் அவபிருதஞ் செய்தது

அதனைக்கேட்ட பரீக்ஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி "ஓ ப்ராஹ்மண! ஒருவரிடத்திலும் விரோத புத்தி இல்லாதவராகிய தர்மபுத்திரருடைய ராஜஸூய யாகத்தைப் பார்த்து எல்லா அரசர்களும், மஹர்ஷிகளும், தேவர்களும் ஸந்தோஷித்தார்கள்; ஆனால் துர்யோதனன் மாத்திரம் ஸந்தோஷப்படாமல் பொறாமையை அடைந்தானென்று சொன்னீரல்லவா? அதற்கு என்ன காரணம்? அதனைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

3–30. அதனைக்கேட்ட சுகர் அரசனை நோக்கி "மஹாத்மாவும் உமக்குப் பிதாமஹருமான (பிதாவின் பிதா) தர்மபுத்திரர் ராஜஸூயஞ் செய்தபொழுது பந்துக்கள் அவரிடத்திலுள்ள விஸ்வாஸத்தால் யாகத்தில் வேலைசெய்தார்கள். பீமஸேனன் சமையல் கட்டிற்கு அதிபதியாகவும், துர்யோதனன் பொக்கிஷத்திற்கு அதிபதியாகவுமிருந்தான். ஸஹதேவன் வந்தவர்களைப் பூஜித்து மர்யாதை செய்துவந்தான். நகுலன் ஸாமக்ரிகளை ஸம்பாதித்துக் கொண்டிருந்தான். அர்ஜுனன் ஸாதுக்களுக்குச் சுச்ரூஷை செய்து வந்தார். ஸ்ரீகிருஷ்ணன் ஸாதுக்களுடைய பாதங்களை அலம்புவதான கார்யத்தைச் செய்துக்கொண்டிருந்தார். த்ருபதருடைய புத்திரனாகிய திருஷ்டத்யும்னன் பரிவேஷணம்(பரிமாறுவது) செய்துவந்தான். மிக்க கம்பீர மனமுள்ளவரான கர்ணன் தானாதிகாரியாக விருந்தான். யுயுதானன், விகர்ணன், ஹார்திக்யர், விதுரர்,

பாஹ்லீக புத்திரன், பூரி, ஸந்தர்கள் முதலியவர்கள் மற்றும் பலவிதமான கார்யங்களைச் செய்துக் கொண்டிருந்தார்கள், இப்படி தர்மபுத்திரருடைய பந்துக்கள் அவருடைய ப்ரீதிக்காக ஜாக்கிரதையாக வேலையைச் செய்து வந்தார்கள். அப்பொழுது தர்மபுத்திரர் ரித்விக்குகளையும், ஸதஸ்யர்களையும், பெரியோர்களையும், விசேஷ மித்திரர்களையும், ப்ரிய வார்த்தைகளாலும், தக்ஷிணைகளாலும், மர்யாதையாலும் பூஜித்தார். சிசுபாலன் ஸ்ரீகிருஷ்ண னுடைய பாதத்தை அடைந்தான். அதன் பின் கங்கையில் அவபிருதஸ்நானம், நடந்தேறியது. அந்த அவபிருத மஹோத்ஸவத்தில் மிருதங்கம், சங்கம், பணவம், தூரி, ஆனகம், கோமுகம் முதலிய பலவகை யான வாத்யங்கள் முழங்கப்பட்டன.

தாஸிகள் நர்த்தனஞ்செய்தார்கள். பாடகர்கள் கூட்டங்கூட்டமாக பாடினார்கள். மேலும், வீணை புல்லாங்குழல், கரதாளம் இவைகளுடைய சப்தம் ஆகாயத்தில் பரவியது. பலவகையான த்வஜங்கள், பதாகைகள், சிறந்த யானைகள், ரதங்கள், குதிரைகள், காலாட்கள், ஆகிய ஸைன்யங்களுடன் அரசர்கள் அலங்கரித்துக்கொண்டு வெளிக்கிளம்பினார்கள். மேலும் யாதவர்கள், ஸிருஞ்ஜயர்கள், காம்போஜர்கள், குருக்கள், கேகயர்கள், கோஸலர்கள் ஆகிய இவர்கள் ஸைன்யங்களுடன் பூமியை அசைத்துக்கொண்டு யஜமானனை முன்னிட்டுச் சென்றார்கள். ஸதஸ்யர்களும், ரித்விக்குகளும், மற்றும் ப்ராஹ்மண ச்ரேஷ்டர்களும், வேதத்தை கோஷித்தார்கள். தேவர்களும், மஹர்ஷி களும், பிதுருக்களும் கந்தர்வர்களும், புஷ்பங்களை வர்ஷித்து ஸ்தோத்திரஞ் செய்தார்கள். மேலும்

புருஷர்களும், ஸ்திரீகளும், சந்தனத்தாலும், புஷ்ப மாலையாலும், ஆபரணங்களாலும், வஸ்திரங்களாலும், அலங்கரித்துக்கொண்டு எண்ணெய், வெண்ணெய், நெய் முதலிவைகளை ஒவ்வொருவர்களின் மீது இறைத்துக்கொண்டு விளையாடினார்கள். மேலும் மஞ்சள், குங்குமம், சந்தனம் முதலியவைகளை புருஷர்கள் தாஸிகளின் மீது பூசினார்கள். இப்படி அலங்கரிக்கப்பெற்று அவர்கள் விளையாடினார்கள். மேலும் ராஜபத்னிகள், தேவஸ்திரீகள் போல யோதர்களால் காப்பாற்றப்பட்டு கிருஷ்ணனுடைய பத்னிகளால் நெய் முதலியவைகளால் நனைக்கப்பட்டு வெட்கச்சிரிப்புள்ள முகத்துடன் ப்ரகாசித்தார்கள். மேலுமவர்கள் ஸ்தனம் முதலிய அவயவங்களை மூடிக்கொள்ளாமல், தங்கள் பர்தாவின் ஸஹோதரர் களையும் மற்ற ஸ்நேஹிதர்களையும் யந்திரங்களால் (ஜலத்தை பிறர்மீது வாரியிறைக்கும் யந்திரங்கள்) ஜலம் முதலியவைகளையிறைத்தும், அவர்களால் இறைக்கப்பட்டும், ஈரமான வஸ்திரமுள்ளவர்களாக விளங்கினார்கள்.

அதனைக்கண்ட காமிகள் மனங்கலங்கியது; அப்பொழுது ஸாம்ராட்டாகிய தர்மபுத்திரர் உத்தம மான குதிரைகள் கட்டியதும், ஸுவர்ணத்தால் அலங்கரிக்கப்பட்டதுமான ரதத்தில் தம் பத்னிகளுடன் விளங்கினார். அது ராஜஸூயயாகமே அதற்கு அங்கங்களான இஷ்டிகளுடன் ப்ரகாசிப்பது போலிருந் தது. அப்பொழுது ரித்விக்குகள் பத்னீ ஸம்யாஜமென்ற யாகவிசேஷங்களையும், அவபிருத கர்மங்களையுஞ் செய்து அரசனை ஆசமனஞ் செய்யச்சொல்லி கங்கையில் த்ரௌபதியுடன் ஸ்நானஞ் செய்வித்தார்கள்.

தேவர்கள் துந்துபி வாத்யங்களை முழங்கினார்கள். மனிதர்களும் துந்துபிகளை கோஷித்தார்கள். தேவர் களும், மஹர்ஷிகளும், பிதிருக்களும், மனிதர்களும் புஷ்பங்களை வர்ஷித்தார்கள். அப்பொழுது எல்லா ஜாதி ஜனங்களும், எல்லா ஆச்ரமிகளும் ஸ்நானஞ் செய்தார்கள். அவபிருதகாலத்தில் ஸ்நானஞ்செய்தவன் மிக்க பாபியானாலும் உடனே சுத்தனாகிவிடுவான். பின்பு அரசன் புதிய பட்டு வஸ்திரங்களையுடுத்தி அலங்கரித்துக்கொண்டு ரித்விக்குகளையும், ஸதஸ்யர் களையும், ப்ராஹ்மணர்களையும், ஆபரணங்களாலும், வஸ்திரங்களாலும் பூஜித்தார். இப்படி தர்மபுத்திரர் அவபிருதஸ்நானஞ்செய்து ஸ்ரீமந் நாராயணனையே மனத்தில் த்யானஞ்செய்து கொண்டு பந்துக்களுக்கும், மித்திரர்களுக்கும், ஞாதிகளுக்கும் மர்யாதை செய்தார்.

அவ்விடத்திலிருந்த எல்லா ஜனங்களும், ரத்ன குண்டலங்களாலும் புஷ்பமாலைகளாலும், சட்டை, தலைப்பாகை, பட்டு, விலையுயர்ந்த ஹாரங்கள் இவைகளாலும் அலங்கரிக்கப்பெற்று தேவர்கள்போல ப்ரகாசித்தார்கள். ஸ்திரீகள் குண்டலங்கள், தங்க ஒட்டியாணம், முதலியவைகளால் விளங்கினார்கள். பின்பு மஹாத்மாக்களான ரித்விக்குகள், ப்ரஹ்ம வித்துக்களான ஸதஸ்யர்கள் யாகத்திற்காக வந்திருந்த ப்ராஹ்மணர்கள், க்ஷத்திரியர்கள், வைச்யர்கள், சூத்திரர்கள், தேவர்கள், மஹர்ஷிகள், பிதிருக்கள், பூதங்கள், லோகபாலர்கள், அவர்களைச் சார்ந்தவர்கள், ஆகிய எல்லாரும் அரசனால் பூஜிக்கப்பட்டு அரசனிடம் விடைபெற்று தங்கள் தங்களிருப்பிடஞ் சென்றார்கள். அமிருதத்தைப் புஜித்த மனிதன் போதுமென்ற திருப்தியை எப்படி அடையமாட்டானோ,

அப்படி அவர்கள் கிருஷ்ண பக்தராகிய தர்மபுத்திர ருடைய ராஜஸூய மஹோத்ஸவத்தை அனுபவித்து அதனையே ச்லாகித்துத் திருப்தியடையவில்லை. பின்பு அரசனாகிய தர்மபுத்திரர் மித்திரர்கள், ஸம்பந்திகள் கிருஷ்ணன் முதலிய பந்துக்கள் ஆகிய இவர்களை சிலகாலம் இந்திரப்ரஸ்தத்திலேயே வஸிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவர்கள் தங்களைவிட்டுப்பிரிய மனமில்லாதவரான தர்ம புத்திரர் கேட்டுக்கொண்டபடி அவ்விடம் வஸித்தார் கள். ஸ்ரீ கிருஷ்ணனும் ஸாம்பன் முதலியவர்களை த்வாரகைக்கு அனுப்பிவிட்டுத் தாம் ஒரு வருஷகாலம் அவ்விடத்தில் வஸித்தார். இப்படி தர்மபுத்திரர் மனோரதமாகிய மஹாசமுத்திரத்தை, ஸ்ரீ கிருஷ்ணனு டைய ஸஹாயத்தால் தாண்டி (ராஜஸூயத்தைச் செய்து) கவலையற்றவராகவிருந்தார்.

31–40. ஒரு ஸமயம் அந்தப்புரத்தில் தர்ம புத்திரருடைய ஸம்பத்தைப்பார்த்து துர்யோதனன் ராஜஸூயத்தின் மஹிமையை நினைத்து பொறாமை கொண்டான். மேலும் மயனால் உண்டு பண்ணப் பட்ட அந்தப்புரத்தில் ஸபையில் சிறந்த அரசர்களால் அடையக்கூடிய ஸம்பத்தும், அஸுரச்ரேஷ்டர்களுக்குக் கிடைக்கக்கூடியவைகளும், மஹேந்திரனுடைய ஸம்பத்துக்களும் பொருந்தியிருந்தன. அப்படிப்பட்ட ஐச்வர்யங்களுடன் த்ரௌபதி தன் பர்த்தாக்களுக்குச் சுச்ரூஷைசெய்து கொண்டிருந்தாள். ஸ்ரீ கிருஷ்ணனிடத் திலேயே பக்திசெய்து கொண்டிருக்கும் தர்ம புத்திரருடைய ஐச்வர்யத்தைப்பார்த்து துர்யோதனன் அஸூயைப்பட்டான். (பக்தர்களுடைய ஐசுவர்யத்தில் அஸூயைப்படுகிறவர்கள் க்ஷேமத்தை அடையமாட்டார்

கமென்று கருத்து) மேலும், தர்மபுத்திரர் ஒருகால் மயனால் நிர்மிக்கப்பட்ட ஸபையில் ஸ்வர்ண ஸிஹ்மாஸனத்தில் உட்கார்ந்திருந்தார். அவருடைய சகோதரர்கள் அவரைச் சுற்றிக்கொண்டிருந்தார்கள். தர்மபுத்திரருக்கு கண்ணாகவிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணனும் அவ்விடமிருந்தார். அவ்விடத்தில் ஸ்ரீகிருஷ்ணனுடைய அநேக ஸ்திரீகளுமிருந்தார்கள். அவர்கள் இடுப்பிலும் பாதங்களிலும் அணிந்திருக்கும் ஆபரணங்கள் சப்தித்தன. மேலுமவர்கள் அழகிய முகங்களுள்ளவர் களாகவும், அசைகின்ற குண்டலங்களுள்ளவர்களாகவும், ஹாரங்களுள்ளவர்களாகவும் இருந்தார்கள். பார மேஷ்டிய ஸம்பத்துள்ள தர்மபுத்திரரை வந்திகள் ஸ்தோத்திரஞ்செய்தார்கள்.

அப்பொழுது மிக்க அஹங்காரியான துர்யோதனன் தன்னுடைய ஸஹோதரர்களுடன் கத்தியையெடுத்துக் கொண்டு கிரீடம், மாலை இவைகளால் அலங்கரிக்கப் பெற்று, காவலாட்களை அதட்டிக்கொண்டு அந்த ஸபையில் ப்ரவேசித்தான். அவன் தரையை ஜலமென்று ப்ரமித்து வஸ்திரத்தின் நுனியைத் தூக்கிக்கொண் டான். ஜலமுள்ளவிடத்தை தரையென்று நினைத்து விழுந்தான்; இப்படி மயனுடைய மாயையால் மோஹித்த துர்யோதனனைப்பார்த்து பீமஸேனனும், மற்ற ஸ்திரீகளும் மற்ற அரசர்களும் சிரித்தார்கள். அவர்களைச் சிரிக்க வேண்டாமென்று தர்மபுத்திரர் தடுத்தார். அப்படியும் அவர்கள் கிருஷ்ணனால் அனுமதிக்கப்பெற்று பரிஹஸித்தார்கள். ஸபையில் துர்யோதனனைப் பார்த்து ஜனங்கள் சிரிக்கும்பொழுது ஹா ஹா என்ற சப்தமுண்டாயிற்று. தர்மபுத்திரர் வருத்தமடைந்தார். ஸ்ரீ கிருஷ்ணன் பூமியின் சுமையை

நிவர்த்திப்பதற்காக துர்யோதனனை ஸபையில் மோஹிக்கச்செய்து பரிஹாஸஞ் செய்தவர்களையும் தடுக்காமலிருந்தார். அதன்பின்பு துர்யோதனன் வெட்க மடைந்து, தலைகுனிந்து மௌனமாக ஸபையிலிருந்து வெளியில் வந்து ஹஸ்தினாபுரஞ்சென்றான். ஓ பரீக்ஷித்து மஹாராஜனே! ராஜஸூய மஹாயாகத்தில் துர்யோதனன் அஸூயை அடைந்த காரணத்தை கேட்டீரல்லவா ? அதனைச்சொன்னேன்" என்றார்.

♣♣♣♣♣

பிரத்யும்னன் ஸால்வனுடன் யுத்தஞ்செய்தது.

ஓ மஹாராஜ! விளையாட்டாக மனித வடிவங் கொண்டவரான ஸ்ரீ கிருஷ்ணன் ஸால்வனைக் கொன்றார். அந்த அத்புதமான சரிதத்தையும் சொல்லுகிறேன், கேளும்; ருக்மிணியின் விவாஹத்திற் காக வந்தவர்களான யாதவர்களால் ஜராஸந்தன் முதலியவர்கள் ஜெயிக்கப்பட்டார்களல்லவா? அப்பொழுது சிசுபாலனுக்குத் தோழனாகிய ஸால்வன் என்பவன் எல்லா அரசர்களும் கேட்டுக் கொண்டிருக்க, "பூமியில் யாதவர்கள் இல்லாமலிருக்கும்படிச் செய்கிறேன்; என்னுடைய பராக்கிரமத்தைப் பாருங்கள்" என்று ப்ரதிஜ்ஞை செய்தான். மூடனாகிய ஸால்வன் மேற் சொன்னபடி உறுதி செய்து ஒரு பிடி புழுதியைப் புஜித்துக்கொண்டு ஒரு வர்ஷ காலம் பரமசிவனை ஆராதித்தான். இப்படி ஒரு வருஷஞ்சென்ற பின், பரமசிவன் அவனிடத்தில் ஸந்தோஷத்தை அடைந்து, வரங்கொடுக்கிறேனென்று சொல்ல, அவரை நோக்கி ஸால்வன் "தேவர்களாலும், அஸுரர்களாலும் மனிதர் களாலும், கந்தர்வர்களாலும், உரகர்களாலும், ராக்ஷஸர்களாலும் பேதிக்க முடியாததும், இஷ்டப்படிச் செல்லக்கூடியதும், விருஷ்ணிகளுக்குப் பயங்கரமுமான ஒரு விமானம் வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான். அதனைக் கேட்ட பரமசிவன் மயனுக்கு உத்தரவு கொடுக்க, அவன் இரும்பினால் ஒரு விமானத்தை நிர்மித்து, ஸௌபமென்ற அந்த விமானத்தை ஸால்வனுக்குக் கொடுத்தான். அம்மாதிரியான விமானம் பிறருக்குத் துர்லபம்; அநேக

மாயைகளுக்கு இருப்பிடம்; இஷ்டப்படி செல்லக் கூடியது. அதனைப் பெற்றுக்கொண்டு ஸால்வன் கிருஷ்ணனால் செய்யப்பட்ட விரோதத்தை நினைத்துக் கொண்டு மிகுந்த ஸைன்யங்களுடன் துவராகா நகரஞ் சென்று அந்த நகரத்தை முற்றுகை போட்டான்; தோட்டங்களை அழித்தான்; கோபுரங்களையும், மாடிகளையும், வாயிற்படிகளையும் இடித்தான். மேலும் அவன் அந்த விமானத்திலிருந்து ஆயுதங்களை வர்ஷித்தான்; மரங்களையும் மணல்களையும் வர்ஷித்தான்; மேலும் அவனுடைய மாயையால் இடிகளும், ஆலங்கட்டிகளும், சுழல் காற்றும் உண்டாயின. தூளியால் திக்குகள் மறைக்கப்பட்டன. இப்படி கிருஷ்ணனுடைய நகரமானது இந்த ஸால்வனால் உபத்திரவிக்கப்பட்டு, திரிபுரத்தால் பூமி கஷ்டப்பட்டது போல சரமத்தையடைந்தது.

இப்படி துவாரகா நகரத்தில் வஸிக்கும் ஜனங்கள் ஸால்வனால் உபத்திரவிக்கப்படுவதைப் பார்த்து ப்ரத்யும்னன் பயப்படவேண்டாமென்று ஜனங்களை ஸமாதானஞ் செய்து ரதத்துடன் வெளியில் வந்தான். ஸாத்யகி, சாருதேஷ்ணன், ஸாம்பன், அக்ரூரர், அவருடைய ஸஹோதரர்கள், ஹார்த்திக்யர், பாலவிந்தர், கதர், சுகர், ஸாரணர் முதலிய முக்கியமான யுத்த வீரர்களும் அவரவர்களுடைய ஸைன்னியங்களுடன் வெளியில் வந்தார்கள். பின்பு ஸால்வனைச் சார்ந்தவர் களுக்கும், யாதவர்களுக்கும் யுத்தம் நேர்ந்தது. அது மயிர்க்கூச்சல் உண்டுபண்ணக் கூடியதாகவும், தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் நேர்ந்த யுத்தம் போலவும் இருந்தது. அப்பொழுது ஸூரியன் இருட்டைப் போக்கடிப்பது போல, ருக்மிணியின்

புத்திரராகிய பிரத்யும்னர் ஸால்வனுடைய மாயை களைத் திவ்யமான அஸ்திரங்களால் அடக்கினார். தங்கக்கட்டுள்ளதும், இரும்பு முனைகளுள்ளதுமான இருபத்தைந்து பாணங்களால் ஸால்வனுடைய ஸேனாதிபதியை அடித்தார். ஸால்வனையும் மற்றுமுள்ள ஸைன்னியங்களையும் ஒவ்வொரு பாணங்களாலும், ஸாரதியைப் பத்து பாணங்களாலும், குதிரைகளை மும்மூன்று பாணங்களாலும் அடித்தார். அதனைக் கண்ட இரண்டு ஸைன்னியங்களும் ப்ரத்யும்னனு டைய அத்புதமான செய்கைகளை ச்லாகித்தார்கள். அந்தச் ஸால்வனுடைய விமானமானது மாயாமய மானதாலும், மயனால் செய்யப்பட்டதானதாலும், சில ஸமயம் அநேகமாகவும், சில ஸமயம் ஒன்றாகவும், சில ஸமயம் ஆகாயத்தில் இருப்பதாகவும், ஒரு ஸமயம் மலையிலிருப்பதாகவும், மற்றொரு ஸமயம் ஜலத்திலிருப்பதாகவும் தோன்றியது.

ஆனதால் கொள்ளிக்கட்டையைச் சுழற்றினாற் போல நான்கு பக்கங்களிலும் சுழன்று கொண்டிருக்கும் அந்த விமானம் பிறரால் அறிய முடியாததாக இருந்தது. ஸால்வனும் அவனுடைய விமானமும், ஸைன்யங்களும் எந்தெந்தவிடத்தில் காணப்படுகின்றன வோ, அந்தந்தவிடத்தில் யாதவ ஸேனாதிபதிகள் பாணங்களைப் ப்ரயோகித்தார்கள். இப்படி யாதவர் களால் பிரயோகிக்கப்பட்ட பாணங்கள் அக்னி போலவும், ஸூர்யன் போலவும், ஸர்ப்பம் போலவும் இருந்தமையால் ஸால்வன் அவைகளால் அடிக்கப்பட்டு மூர்ச்சை அடைந்தான். ஸால்வனுடைய ஸேனாதிபதிகள் விருஷ்ணிகளை ஆயுதங்களாலும், அஸ்திரங்களாலும் அடித்தார்கள். அப்படியும் அவர்கள் யுத்த ஸ்தலத்தை

விட்டு ஓடவில்லை. இவ்வுலகத்தில் கீர்த்தியையும் பரலோக ஸுகத்தையும் விரும்பினவர்களாக இருந்தார்கள். அப்பொழுது ஸால்வனுடைய மந்திரியா கிய த்யுமானென்பவன் இரும்பினால் செய்யப்பட்ட கதாயுதத்தால் ப்ரத்யும்னனையடித்து கர்ஜ்ஜித்தான். அதனால் ப்ரத்யும்னனுடைய மார்பானது அடியட்டு பிரத்யும்னன் மூர்ச்சையையடைந்தான். அப்பொழுது தாருகனுடைய குமாரனான ஸாரதி, யுத்தத்தின் தர்மத்தை அறிந்தவனானதால் பிரத்யும்னரை யுத்த ஸ்தலத்தை விட்டு வேறு இடத்திற்குக் கொண்டு போனான். பின்பு ஒரு முஹூர்த்தத்தில ப்ரத்யும்னன் மூர்ச்சை தெளிந்து ப்ரஜ்ஞையையடைந்து ஸாரதியை "ஓ ஸாரதியே! யுத்தகளத்தைவிட்டு என்னுடைய ரதத்தை இவ்விடம் கொண்டு வந்தது நல்ல கார்யமில்லை. யதுகுலத்திற் பிறந்தவன் யுத்தத்திலிருந்து பயந்து ஓடுகிற வழக்கமில்லை, நான் ஒருவன்தான் உன்னால் அபகீர்த்தியையடைந்தேன். கிருஷ்ணன், பலராமன் இவர்களைக் கண்டு நான் என்ன சொல்வேன்? என் ஸஹோதரன் பத்னிகள் என்னுடைய அதைர்யத்தைப் பார்த்து, "ஓ வீர! யுத்தத்தில் சத்ருக்கள் என்ன செய்தார்கள் என்று கேட்பார்களே" என்று சொன்னான். அதனைக் கேட்ட ஸாரதி, பிரத்யும்னனை நோக்கி, "ஓ ப்ரபுவே! ரதிகனாகவிருப் பவன் ஸாரதிக்கு ஆபத்து வந்தால் ஸாரதியைக் காப்பாற்ற வேண்டும்; ரதிகனுக்கு ஆபத்து நேர்ந்தால் அவனை ஸாரதி காப்பாற்ற வேண்டும் என்பது யுத்தத்தின் தர்மம். அதனை நான் தெரிந்துகொண்டு உம்மை யுத்த ஸ்தலத்திலிருந்து இவ்விடம் கொண்டு வந்தேன்; நீர் சத்துருவினுடைய கதையால் அடிபட்டு மூர்ச்சை யடைந்திருந்தீர்" என்று சொன்னான்.

ஸால்வவதம்

அதனைக் கேட்ட ப்ரத்யும்னன் ஜலத்தைத் தொட்டு சுத்தனாகி வில்லையெடுத்து முயற்சியுடன் ஸாரதியை நோக்கி, "த்யுமானுடைய ஸமீபத்திற்கு என்னுடைய ரதத்தை நடத்து" என்றார். பின்னுமவர் யுத்த ஸ்தலம் வந்து, தன்னுடைய ஸைன்னியத்தை அடிக்கும் த்யுமானை எட்டு நாராச பாணங்களாலும் அடித்தார். அவனுடைய குதிரைகளை நான்கு பாணங்களாலும், ஒரு பாணத்தால் ஸாரதியையும், இரண்டு பாணங்களால் வில்லையும், த்வஜத்தையும் அடித்ததுமின்றி, மற்றொரு பாணத்தால் த்யுமானுடைய தலையையும் வெட்டினார். பின்பு கதன்,. ஸாத்யகி, ஸாம்பன் முதலியவர்கள் ,ஸால்வனுடைய ஸைன்யத்தை அடித்தார்கள். யாதவர்களால் அடிக்கப் பட்ட ஸால்வனுடைய ஸைன்னியங்கள் தலை வெட்டுண்டு ஸமுத்திரத்தில் விழுந்தன. இப்படி ஸால்வனுக்கும் யாதவர்களுக்கும் இருபத்தேழு நாட்கள் பயங்கரமான யுத்தம் நடந்தது. அந்த ஸமயத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் த்வாரகையிலில்லை. தர்மபுத்திரருடைய ராஜஸூயத்திற்காக இந்திரப்ரஸ்தஞ் சென்றவர், அவ்விடத்திலேயே வஸித்தார். அப்பொழுது பகவான் இந்திரப்ரஸ்தத்தில் சில கடுமையான அபசகுனங்களைப் பார்த்துப் பந்துக்களை நோக்கி, "பலராமன், மற்ற மித்திரர்கள் ஆகிய இவர்களுடன் நான் இவ்விடம் வந்துவிட்டேன். இந்த ஸமயத்தில் சிசுபாலனைச் சார்ந்தவர்கள் என்னுடைய பட்டணத்தை உபத்திரவிப்பார்கள். ராஜஸூயம் முடிந்தது.

சிசுபாலனைக் கொன்றேன். (வந்த கார்யம் முடிந்த தென்று தாத்பர்யம்) அபசகுனங்கள் காணப்படுகின்றன. நான் த்வாரகைக்குப் போகவேண்டும்" என்று பாண்டவர்கள், குந்தி, மஹர்ஷிகள், மற்ற பெரியோர்கள் ஆகிய எல்லோருக்கும் சொல்லிக் கொண்டு த்வாரகைக்கு வந்தார்.

9–18. ஸ்ரீகிருஷ்ணன் த்வாரகை சென்று அவ்விடம் யுத்தம் நடப்பதைப் பார்த்து, பலராமனைப் பட்டணத்தைத் காப்பாற்றும்படி சொல்லி, தாருகனை நோக்கி, "ஓ ஸாரதியே! என்னுடைய ரதத்தை ஸால்வனிடம் நடத்து. அவன் மாயாவியானதால் அவனைக் கண்டு பயப்படவேண்டாம்" என்றார். அதனைக் கேட்ட தாருகன் ரதத்த நடத்தி யுத்தஸ்தலங் கொண்டுவந்தான். இப்படிப் பகவான் யுத்தகளம் வந்ததைச் சத்துருக்களும், யாதவர்களும் பார்த்தார்கள். அப்பொழுது ஸால்வனுடைய ஸைன்யங் கள் வெகுவாகக் கொல்லப்பட்டிருந்தன. ஸால்வன் கிருஷ்ணனைப் பார்த்து சக்தியென்ற ஆயுதத்தைப் ப்ரயோகித்தான். அந்தச் சக்தி பயங்கரமான சப்தத்துடன் குரைக்கொள்ளிபோல் ஜ்வலித்துக் கொண்டு வருவதைப் பார்த்து ஸ்ரீகிருஷ்ணன் சில பாணங்களை ப்ரயோகித்து நூறு துண்டாக வெட்டினார். ஸால்வனையும் பதினாறு பாணங்களால் அடித்து, ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் ஸௌபமென்ற விமானத்தையும் அநேக பாணங்களால் அடித்தார். ஸூர்யனுடைய கிரணங்கள் ஆகாயத்தில் பரவினாற் போல் பாணங்கள் அந்த விமானத்தின் மீது விழுந்தன. அதனைக்கண்ட ஸால்வன் சார்ங்கமென்ற வில்லைப் பிடித்திருக்கும் பகவானுடைய இடது கையைப்

பாணத்தால் அடித்தான். அதனால் அடிக்கப்பட்டு அந்தச் சார்ங்கமென்ற வில் கீழே விழுந்தது. அது மிகவும் ஆச்சரியப்படக் கூடியதாக இருந்தது. அதனைக்கண்ட ஸகல ப்ராணிகளும் ஹா, ஹா என்று கதறினார்கள். ஸால்வன் அட்டஹாஸஞ் செய்து ஸ்ரீகிருஷ்ணனை நோக்கி, "நீ என்னுடைய தோழனாகிய சிசுபாலனுடைய பத்னியாகிய ருக்மிணி யை அபஹரித்தாயல்லவா? மேலும், சிசுபாலனைச் ஸபையில் வதஞ்செய்தாயல்லவா? பின்னும் ஒருவராலும் ஜயிக்கப்படாதவன் என்று அஹங்கார மடைந்திருக்கிறாய். ஓ மூட! ஆனதால் என் முன்பாக நில். உன்னை யமலோகத்திற்கு அனுப்புகிறேன்" என்றான்.

19–21. அதனைக் கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன், "ஓ மூட! வீணாக பிதற்றுகிறாய். ஸமீபத்தில் நேர்ந்திருக்கும் மரணத்தை நீ தெரிந்துகொள்ளவில்லை. சூரர்கள் தங்கள் பராக்கிரமத்தைக் காண்பிப்பார்களேயொழிய அதிகமாகப் பேசமாட்டார்கள்" என்று சொல்லிக் கதாயுதத்தை யெடுத்து மிக்க வேகமாகச் சுழற்றி ஸால்வனை அடித்தார். கதாயுதம் அவனை அடித்துத் திரும்பியவுடன் ஸால்வன் மாயையில் மறைந்து கொண்டான்.

22–28. பின்பு ஒரு முஹூர்த்தத்தில் தேவகியால் அனுப்பப்பட்டு வந்த புருஷன் ஸ்ரீ கிருஷ்ணனிடம் வந்து, தேவகியினால் அனுப்பப்பட்டு வந்த புருஷன் என்று சொல்லி, "ஓ கிருஷ்ண! கிருஷ்ண! மிக்க பராக்ரமமுள்ளவரே! பிதாவிடத்தில் பிரியமுள்ளவரே! ஸௌனிகன் (கசாப்புக்காரன்) பசுவைக் கொண்டு

போனாற்போல் உம்முடைய பிதாவாகிய வஸுதேவரை ஸால்வன் கட்டிக்கொண்டு போனான்" என்று அழுது கொண்டு சொன்னான். அந்த அப்ரியமான வார்த்தை யைக் கேட்டுப் பகவான் மனுஷ்ய பாவனையை அனுசரித்து மிக்க வருத்தத்துடன் ஸாமான்ய ஜனங்கள் போல, "தேவர்களாலும், அசுரர்களாலும் ஜயிக்க முடியாதவரும், ஜாக்கிரதையுள்ளவருமான பலராமனை ஜயித்து, அல்பனாகிய ஸால்வன் என்னுடைய பிதாவை அபகரித்துச் சென்றான். தைவச் செயலே மேலானது" என்று சொல்லி துக்கித்தார். இந்தச் ஸமயத்தில் ஸால்வன் வஸுதேவரைப் போல மாயையால் ஒரு ப்ரகிருதியை செய்து, அதை கிருஷ்ணனுக்குக் காண்பித்து, "இதோ உன்னுடைய பிதாவாகிய வஸுதேவர் இருக்கிறார். எவர் நிமித்தம் நீ ஜீவித்திருக்கிறாயோ அவரைக் கொல்லுகிறேன். உனக்குப் பலமிருக்குமானால் வஸுதேவனைக் காப்பாற்று" என்று சொல்லிக் கத்தியால் அந்த மாயா வஸுதேவருடைய தலையை வெட்டி. அந்தத் தலையை யெடுத்துக் கொண்டு ஆகாயத்திலிருக்கும் விமானத்திலேறினான்.

29–30. பின்பு பகவான் இயற்கையில் எல்லா வற்றையும் அறிந்தவரானாலும் மனித பாவனையால் பந்துக்களைப்போல் தாமும் ஸ்வல்பகாலம் துக்கித்தார். அதன்பின் ஸால்வனால் செய்யப்பட்ட மயனுடைய மாயையென்று தெரிந்துகொண்டார். அப்பொழுது அவ்விடத்தில் தேவகியால் அனுப்பப் பட்ட தூதனும் வசுதேவருடைய உடலும் காணப்பட வில்லை. அதனால் இது ஸ்வப்னத்தில் பார்க்கப்படும் வஸ்து போன்றது; ஸால்வனுடைய மாயை உண்மை

யல்ல என்று பகவான் நன்றாகத் தெரிந்துகொண்டு விமானத்திலிருக்கும் ஸால்வனைக் கண்டு அவனைக் கொல்ல முயற்சித்தார்.

31–38. இப்படிச் சில மஹர்ஷிகள் முன்பின் ஆலோசனையில்லாமல் சொல்லுகிறார்கள். தாங்கள் முன் சொல்லியதற்கு விரோதமாகச் சொல்லுகிறோமேயென்று நினைக்கிறதில்லை. சோகமாவது, மோகமாவது ஸ்நேஹமாவது, அஜ்ஞானத்தால் உண்டாகும் பயமாவது பகவானுக்கு உண்டாகக்கூடுமா? அவருடைய ஜ்ஞானமும் (ஸ்வரூப ஜ்ஞானமும்) விஜ்ஞானமும் (ப்ராப்யமான விஷய ஜ்ஞானம்) ஆகிய இவைகள் ஒருவிடத்திலும் தடைப்படாதது; அவர், தேவர்களால் துதிக்கப்பெற்றவர்; மேலும், அக்ஞர்கள் அவருடைய பாதங்களைச் ஸேவித்து ஆத்மஜ்ஞானத்தை அடைகிறார்கள். அனாதியான வித்தியாஸமான எண்ணத்தை (நான் இளைத்திருக்கிறேன்; துக்கப்படுகிறேன் என்ற எண்ணம்) நிவர்த்தித்துக்கொள்கிறார்கள். அதனால் இயற்கையான, ஆனந்தமான பதத்தை அடைகிறார்கள். ஸாதுக்களுக்குக் கதியாகிய பரம புருஷனுக்கு மோஹமேது? (6–வது ச்லோகம் முதல் இதுவரையில் சொல்லியது பிறர் சொல்வதென்று தாத்பர்யம். தம்முடைய அபிப்ராயமென்னவெனில்) அமோகமான பராக்ரமமுள்ளவரான பகவான் அநேக ஆயுதங்களைப் ப்ரயோகித்துத் தம்மை அடிப்பவனாகிய ஸால்வனை அடித்ததுமின்றி, கதாயுதத்தால் அவனுடைய கவசத்தையும் விமானத்தையும் உடைத்தார். கிருஷ்ணனுடைய கதாயுதத்தால் ஆயிரம் துண்டாக உடைக்கப்பட்டு கவசமும், விமானமும் ஜலத்தில் விழுந்தன. அதன்பின் ஸால்வன் அந்த

விமானத்தை விட்டுப் பூமியில் வந்து கதாயுதத்தையெடுத்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணனை நோக்கி எதிர்த்து ஓடிவந்தான். அவனைக் கண்ணுற்ற பகவான் கதாயுதத்துடன் அவனுடைய கையைப் பல்லமென்ற பாணத்தால் வெட்டி, ப்ரளயகால ஸூரியன்போல் ஜ்வலிக்கும் அற்புதமான சக்கரத்தை ஸால்வனைக் கொல்வதற்காக எடுத்துக்கொண்டார். அதனால் அவர் ஸூர்யனுடன் கூடிய உதய பர்வதம் போல ப்ரகாசித்தார்.

மேலுமவர் அந்தச் சக்கரத்தைப் ப்ரயோகித்து மிக்க மாயாவியான ஸால்வனுடைய கிரீடம், குண்டலம் இவைகளுள்ள தலையை வெட்டினார் அது மஹேந்திரன் வஜ்ரத்தால் விருத்திராசுரனுடைய தலையை வெட்டினாற்போலிருந்தது. அப்பொழுது மனிதர்கள் ஹா ஹா என்றார்கள். அந்த மிக்க பாபியான ஸால்வனையடித்தவுடன் ஆகாயத்தில் தேவர்கள் துந்துபி வாத்தியங்களை முழங்கினார்கள். பின்பு தந்தவக்கிரன் தன்னுடைய தோழர்களுக்கு பிரியத்தைச் செய்யவிரும்பி, கோபத்துடன் ஸ்ரீகிருஷ்ணனை எதிர்த்தான். (இந்த அத்தியாயத்தில் 6–வது ச்லோகம் முதல் 30–வது ச்லோகம் வரையில் ஸால்வன் த்வாரகையில் யுத்தஞ் செய்த ஸமயத்தில் கிருஷ்ணன் இந்திரப் ப்ரஸ்தத்திலிருந்ததாகவும், அபசகுனங்களைப் பார்த்து பயந்து துவாரகைக்கு வந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இது பொருந்தாது. தர்மபுத்திரர் துர்யோதனனுடன் சொக்கட்டான் விளையாடும் ஸமயத்தில் ஸால்வனுடைய யுத்தமென்று சொல்வதுதான் பொருந்தும்; ஏனென்றால், தர்மபுத்திரர் முதலியவர்கள் காம்யவனத்தில் வஸிக்கும்

பொழுது ஸ்ரீகிருஷ்ணன் அவர்களைச் ஸமாதானஞ் செய்யும் ஸமயத்தில் தருமபுத்திரரை நோக்கி, "ஸால்வனுடைய யுத்தத்தில் நான் கவலை கொண்டிருந்தமையால் உங்களுடைய சொக்கட்டான் விளையாட்டை மறந்துவிட்டேன்" என்று சொன்னதாக வ்யாசர் சொல்லியிருக்கிறார். மேலும், முன் அத்தியாயத்தில் பலராமனைப் பகவான் த்வாரகைக்கு அனுப்பியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க அபசகுனங்களைக் கண்டு, "பலராமனுடன் நான் இவ்விடம் வந்து விட்டபடியால் சிசுபாலனைச் சார்ந்தவர்கள் என்னுடைய பட்டணத்தை உபத்ரவிப்பார்கள்" என்று சொல்வது பொருந்துமா? ஆனதால் பகவான் இந்திர ப்ரஸ்தத்தில் வஸிக்கும் பொழுது ஸால்வன் த்வாரகைக்கு வந்தானென்பது உண்மையல்லவென்பது தாத்பர்யம். இந்த விஷயமே 31–வது ச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.)

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–78

தந்தவக்த்ரவதம்

தந்தவக்த்ரன் என்பவன் தன்னுடைய தோழனாகிய சிசுபாலன், ஸால்வன், துர்ப்புத்தியுள்ளவனான பௌண்ட்ரகன் ஆகிய இவர்கள், பரலோகஞ் சென்றிருந்தாலும் அவர்களுக்குப் பிரியத்தைச் செய்ய விரும்பி தான் ஒண்டியாக, பதாதியாகப் பூமியை அசைத்துக்கொண்டு கதாயுதத்தைக் கையில் தாங்கி ஸ்ரீகிருஷ்ணனிடம் ஓடிவந்தான். அவனைக் கண்ணுற்ற பகவான் கதாயுதத்தைக் கையிலெடுத்து ரதத்தை விட்டிறங்கிக் கரை ஸமுத்திரத்தைத் தடுப்பது போல அவனை மறித்தார். கரூச தேசத்திற் கதிபதியான தந்தவக்த்ரனும் கதாயுதத்தையெடுத்துக்கொண்டு கிருஷ்ணனை நோக்கி, "தைவச்செயலால் உன்னைக் கண்டேன். ஓ கிருஷ்ண! எனக்கு பந்துவானாலும் எங்களுடைய மித்திரர்களை நாசஞ் செய்ததுமின்றி எங்களையும் கொல்ல விரும்புகிறாய்.

அதனால் உன்னை வஜ்ரம் போன்ற கதாயுதத்தால் கொல்லுகிறேன். சரீரத்தில் உண்டான வியாதியை நிவர்த்தித்துக் கொண்டாற் போல பந்துஸ்வரூபியும் உண்மையில் சத்ருவுமான உன்னைக் கொன்று மித்திரர்களுக்குப் ப்ரியத்தைச் செய்கிறேன்" என்று அங்குசத்தால் யானையை அடித்தாற்போல் கடுஞ்சொற்களால் கிருஷ்ணன் மனத்திற்கு வருத்தத்தையுண்டுபண்ணி கதாயுதத்தால் ஸ்ரீ கிருஷ்ணனுடைய தலையில் அடித்து அட்டஹாஸஞ் செய்தான். அதனால் அடிக்கப்பட்டும் கிருஷ்ணன் அசையாமல் பருத்த

கௌமோதிகியென்ற கதையால், தந்தவக்திரனுடைய மார்பில் அடித்தார். இப்படி அடிக்கப்பட்ட தந்தவக்திரன் முகத்திலிருந்து ரத்தத்தைக் கக்கிக்கொண்டு கை, கால், தலைமயிர்களைப் பரப்பிக்கொண்டு மரணமடைந்து பூமியில் விழுந்தான். முன் சிசுபாலனுடைய சரீரத்திலிருந்து தேஜஸ் கிருஷ்ணனை அடைந்தது போல தந்தவக்திரனுடைய சரீரத்திலிருந்து கிளம்பிய மிகவும் ஸூக்ஷ்மமான தேஜஸ்ஸானது எல்லாரும் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது கிருஷ்ணனை அடைந்தது.

11–16. அதன்பின்பு அவனுடைய ஸஹோதரனாகிய விடூரதன் என்பவன் பிராத்ரு சோகமுள்ளவனாகிக் கத்தி, கேடகம் இவைகளை எடுத்துக்கொண்டு சத்ருவைக் கொல்ல வேண்டுமென்ற விருப்பத்துடன் ஓடி வந்தான். ஓ அரசர்களுக்குட் சிறந்தவரே! கிருஷ்ணன் சக்கரத்தைப் ப்ரயோகித்து ஓடிவருகிற விடூரதனுடைய குண்டலம், கிரீடம், இவைகளுள்ள தலையை வெட்டினார். இம்மாதிரி பகவான் ஸௌபமென்ற விமானத்தையும், ஸால்வனையும், தந்தவக்திரனையும், விடூரதனையும், மற்ற பராக்கிரம சாலிகளையும் கொன்று, தேவர்களாலும், மனிதர்களாலும் துதிக்கப் பெற்றுத் துவாரகைக்குள் ப்ரவேசித்தார். முனிவர்களும், ஸித்தர்களும், கந்தர்வர்களும், வித்யாதரர்களும், மஹோரகர்களும், அப்ஸரஸ்ஸுகளும், பிதிருக்களும், யக்ஷர்களும், கின்னரர்களும், புஷ்பங்களை வர்ஷித்து ஸ்ரீகிருஷ்ணனுடைய விஜயத்தைத் துதித்தார்கள். விருஷ்ணிகளுக்குட் சிறந்தவரும் கிருஷ்ணனைச் சுற்றிக்கொண்டு சென்றார்கள். த்வாரகா நகரம் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

ஜகதீசரும் யோகேசுவரருமான ஸ்ரீ கிருஷ்ணன் இம்மாதிரி ஜயித்தாரென்றும் ஜயிக்கப்பட்டாரென்றும் மூடர்கள் நினைக்கிறார்கள்.

17–35. பின்பு கௌரவர்களும் பாண்டவர்களும் யுத்தஞ்செய்வதற்காக முயலுகிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டுப் பலராமன் தீர்த்தயாத்திரைக்குப் போகிறேனென்ற வ்யாஜத்தால் ஒருவருடைய பக்ஷத்திலும் சேராமல் யாத்திரைக்குக் கிளம்பினார். பிரபாஸ தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து தேவதர்ப்பணம், ரிஷி தர்ப்பணம், பிதிரு தர்ப்பணம், மனித தர்ப்பணம் ஆகிய இவைகளைச் செய்து. அநேக ப்ராஹ்மணர்களுடன் மேற்கே போகின்ற ஸரஸ்வதி நதிக்குச் சென்றார். பின்பு மதூதகம், பிந்துஸரஸ், திருணகூலம், ஸுதர்சனம், விமலமான ப்ரஹ்ம தீர்த்தம், சக்கிர தீர்த்தம், கிழக்கு முகமாகச் செல்லுகிற ஸரஸ்வதி, யமுனையின் கரையிலுள்ள தீர்த்தங்கள், கங்கையின் கரையிலுள்ள தீர்த்தங்கள் ஆகிய இவைகளையடைந்து நைமிசமென்ற அரண்யத்திற்குச் சென்றார். அவ்விடத்தில் எல்லா மஹர்ஷிகளும் ஸத்திரத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். வெகு நாளாக ஸத்திரத்தை அனுஷ்டித்தவர்களான மஹர்ஷிகள் பலராமனை நமஸ்கரித்து, விதிப்படி பூஜித்து அவருடன் வந்தவர்களையும் பூஜித்தார்கள். இப்படி நைமிசாரண்யவாஸிகளான மஹர்ஷிகளால் பூஜிக்கப்பட்டு பலராமன் ஆஸனத்தில் உட்கார்ந்தார். ஆனால் வ்யாஸருடைய சிஷ்யரான ரோமஹர்ஷணர் மாத்திரம் பலராமனைக் கண்டு எழுந்திருக்கவில்லை; வணங்கவுமில்லை; அஞ்சலி செய்யவுமில்லை. மற்ற மஹர்ஷிகளை விட மேலான

ஆஸனத்தில் உட்கார்ந்திருந்தார். அவரைப் பார்த்துப் பலராமன் கோபங்கொண்டார். மேலுமவர், "தாழ்ந்த குலத்தில் பிறந்த இந்த ரோமஹர்ஷணன் எல்லா மஹர்ஷிகளுக்கும் மேலாக உட்கார்ந்திருக்கிறான். தர்மத்தைக் காப்பாற்றுபவர்களான நம்மையும் லக்ஷ்யஞ் செய்யவில்லை. ஆனதால் இவனைக்கொல்வது யுக்தம். இவன் பகவானாகிய வ்யாஸமஹர்ஷிக்குச் சிஷ்யனாக விருந்து இதிஹாஸங்களையும், புராணங்களையும், தர்ம சாஸ்திரங்களையும் அவரிடம் அத்தியயனஞ் செய்தும் வணக்கமில்லாதவனாகவும் வீணாகத் தன்னைப் பண்டிதனென்று நினைத்தவனாகவு மிருக்கிறான். வேஷதாரிபோல் வித்வானென்ற வேஷத்தைத் தரித்துக் கொண்டிருக்கிறானேயொழிய வித்தையால் நற்குணங்களையடையவில்லை.

தர்மிஷ்டர்கள் போல வேஷந்தரித்தவர்கள் மிக்க பாபிகள்; ஆனதால் இவனைக் கொல்லுகிறேன். இதற்காகவே (துஷ்டர்களைச் சிக்ஷிப்பதற்காக) நான் பூமியில் அவதரித்திருக்கிறேன்" என்று சொல்லி பலராமன் துஷ்டர்களைக் கொல்வதை நிறுத்திக் கொண்டவரானாலும் தமது கையிலிருந்து தர்ப்பத் தின் நுனியால் ரோமஹர்ஷணரை அடித்தார். அதனைக் கண்ணுற்ற மஹர்ஷிகள் மனதில் துக்கத்தை அடைந்து ஹா ஹா என்று சொல்லி பலராமனை நோக்கி, "இந்த ரோமஹர்ஷணரைப் புராணஞ் சொல்லும்படி ஏற்படுத்தி இவருக்கு ப்ரஹ்மாஸனத் தையும், தீர்க்கமான ஆயுஸ்ஸையும் கொடுத்துப் புராணஞ் சொல்வதால் இவருக்குச் ச்ரமமில்லாமலி ருக்கும்படியும் அனுக்கிரஹஞ் செய்திருந்தோம். இதை யறியாதவர்போல நீர் இவரைக் கொன்றீரே. இது

அதர்மமேயாம். நீர் ப்ராஹ்மணனைக் கொன்றதால் ப்ராயச்சித்தஞ் செய்து கொள்ளவேண்டும். நீர் யோகேச்வர்ரானதால் வேதத்திற்கும் நீர் கட்டுப்பட்ட வரல்ல. ஆனாலும் நீர் அனுஷ்டியாதவரையில் மற்ற ஜனங்களும் தர்மத்தை அனுஷ்டிக்க மாட்டார்கள். ஆனதால் லோகத்தை காப்பாற்றுவதற்காகவாவது நீர் ப்ராயச்சித்தஞ் செய்துகொள்ள வேண்டும்" என்றார்கள். அதனைக் கேட்ட பலராமன், "இந்த ப்ரஹ்மஹத்யா தோஷ நிவர்த்திக்காக என்ன ப்ராயச்சித்தஞ் செய்ய வேண்டும்? முக்கிய பக்ஷமான ப்ராயச்சித்தத்தை விதியுங்கள்; அதனை லோகத்தை யனுக்கிரகிப்பதற் காக அனுஷ்டிக்கிறேன். தீர்க்கமான, ஆயுஸ், தேஹ பலம், இந்திரிய பலம் முதலியவைகள் இவருக்கு உண்டாக வேண்டுமென்று நீங்கள் எப்படி விரும்பு கிறீர்களோ அப்படி யோகமாயையின் மஹிமையால் செய்கிறேன். அதனைச் சொல்லுங்கள்" என்றார். அதனைக் கேட்ட மஹர்ஷிகள் பலராமனை நோக்கி, "அஸ்திரம், உம்முடைய வீர்யம், மிருத்யு, எங்களுடைய வார்த்தை ஆகிய இவைகள் வ்யர்த்தமாகாமலிருக்கும்படி செய்யும்" என்றார்கள்.

36–40. அதனைக்கேட்ட பலராமன் மஹர்ஷிகளை நோக்கி, "இவருடைய புத்திரரான உக்ரச்ரவஸ் என்ப வர் உங்களுக்குப் புராணஞ் சொல்வார். அவருக்கு நீங்கள் விரும்பியபடி தீர்க்கமான ஆயுஸ்ஸும் தேஹ பலம் முதலியவைகளும் உண்டாகும். பிதாவே புத்திரனாக ஜனிக்கிறான் என்று வேதத்தில் சொல்லியிருப்பதால் ரோமஹர்ஷணருக்கும் உக்ரச்ர வஸ்ஸுக்கும் பேதமில்லை. இன்னும் என்னால் செய்யப்பட வேண்டியதென்ன? உங்களுடைய

இஷ்டத்தை தெரிவியுங்கள். அறியாமல் செய்த ப்ரஹ்மஹத்யா தோஷத்திற்கு ப்ராயசித்தத்தையும் யோசித்து சொல்லுங்கள். நீங்கள் வித்வான்களல்லவா?" என்று கேட்டார். அதனைக் கேட்ட மஹர்ஷிகள் பலராமனை நோக்கி, "இல்வலனுடைய புத்திரன் பல்வலன் என்று ஒரு அஸுரன் இருக்கிறான். அவன் பர்வகாலத்தில் இவ்விடம் வந்து ரக்தம், அமேத்யம், மூத்திரம், மத்யம் மாம்ஸம், வட்புஜலம் ஆகிய இவை களை வர்ஷித்து எங்களுடைய யாகத்திற்கு விக்நினஞ் செய்கிறேன். அந்தப் பாபியான அஸுரனைக் கொல்லும். அதுவே எங்களை ஆராதித்ததாகும். பின்பு நீர் இந்த பாரதவர்ஷம் முழுவதும் ஒரு வர்ஷகாலம் ப்ரதக்ஷிணமாகச் ஸஞ்சரித்து அங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்தால் இந்த ப்ரஹ்ம ஹத்யா தோஷம் நிவர்த்தியாகும்" என்றார்கள்.

♣♣♣♣♣

அத்தியாயம்–79

பலராமன் தீர்த்தயாத்திரை செய்தது.

பின்பு பர்வகாலம் வந்தது. அப்பொழுது பயங்கரமான பெருங்காற்று வீசியது. அதனால் மணல்கள் வர்ஷிக்கப்பட்டன. நான்கு பக்கங்களிலும் துர்வாஸனை வீசியது; பல்வலன் என்ற ராக்ஷஸன் அமேத்யத்தை யாகசாலையில் வர்ஷித்தான். அவனும் சூலாயுதத்துடன் காணப்பட்டான். அவனுடைய சரீரமானது பருத்தும் உடைந்த மை மலைபோலு மிருந்தது (மிக்க கருமை நிறமுள்ளது) அவனுடைய தலைமயிர்களும், மீசையும் காய்ச்சப்பட்ட தாம்ர ஊசிகள் போலிருந்தன அவனுடைய முகமானது சிங்கப்பற்களால் பயங்கரமாகவிருந்தது. அவனைக் கண்ணுற்ற பலராமன் சத்ரு ஸைன்யத்தைக் கொல்லக் கூடிய முஸலத்தையும், அஸுரர்களை வதஞ்செய்யக் கூடிய கலப்பையையும் நினைத்தார். நினைத்தவுடன் அவைகள் பலராமனுடைய ஸமீபம் வந்தன.

அப்பொழுது பலராமன் மிக்க கோபங்கொண்டு ப்ராஹ்மணர்களுக்கு த்ரோஹஞ்செய்பவனும் ஆகாயத் தில் ஸஞ்சரிப்பவனுமான பல்வலனை கலப்பையின் நுனியால் இழுத்து முஸலத்தால் அவனுடைய தலையில் அடித்தார். அதனால் அடிக்கப்பட்டு நெற்றி உடைந்தது; ரத்தம் பெருகியது; அவன் தீனமாகக் கத்திக்கொண்டு பூமியில் விழுந்தான். அது வஜ்ரத்தால் அடிக்கப்பட்டு மலைவிழுந்தது போலிருந்தது, அப்பொழுது விருத்திராஸுரனைக்கொன்ற மஹேந்தி ரனைத் தேவர்கள் உபசரித்ததுபோல் மஹர்ஷிகள்

பலராமனை ஸ்தோத்திரஞ்செய்து ஆசிர்வதித்து அபிஷேகஞ்செய்தார்கள். மேலுமவர்கள் வாடாத தாமரை மலர்களுள்ளதும், அழகு பொருந்தியதுமான வைஜயந்தியென்ற மாலையையும், திவ்யமான வஸ்திரங்களையும், ஆபரணங்களையும் கொடுத்தார்கள்.

8–25. பின்பு பலராமன் மஹர்ஷிகளிடம் விடை பெற்று ப்ராஹ்மணர்களுடன் கௌசிகீ நதிக்குச்சென்று அதில் ஸ்நானஞ்செய்து ஓர் சிறந்த ஸரஸ்ஸுக்குச் சென்றார். அதிலிருந்து பெருகிவரும் நதிதான் ஸரயுவென்று சொல்லப்படுகிறது. அந்த ஸரயு வழியாக ப்ராயாகஞ்சென்றார். அவ்விடத்தில் ஸ்நானஞ்செய்து தேவதர்ப்பணம் முதலியவைகளை ச்செய்து புலஹாச்ரமம் (ஹரிக்ஷேத்திரம்) சென்றார். பின்பு கோமதி, கண்டகி, விபாசா, சோணா என்ற நதிகளில் ஸ்நானஞ்செய்தார். பிறகு கயாக்ஷேத்திரஞ் சென்று ச்ராத்தஞ்செய்து கங்கை ஸமுத்திரம் இரண்டுஞ்சேரும் ஸ்தலம் சேர்ந்தார். அதில் ஸ்நானஞ் செய்து மஹேந்திர மலைக்குச்சென்று அவ்விடத்தில் பரசுராமரை தர்சித்து நமஸ்கரித்து ஸப்தகோதாவரி, வேணி, பம்பா, பீமரதி ஆகிய நதிகளையடைந்து அவ்விடத்தில் ஸுப்ரமண்யரைப் பூஜித்து அங்கிருந்து பரமசிவனுக்கு இருப்பிடமான ஸ்ரீ பர்வதஞ் சென்றார். அதன்பின் த்ராவிடதேசத்தில் மிக்க புண்யகரமான வெங்கிடாசலத்தையும் அதில் வஸிக்கும் ஸ்ரீ மஹா விஷ்ணுவையும் தர்சித்து காமகோடி என்ற காஞ்சி பட்டணம் சென்றார். அவ்விடத்திலிருந்து ஸ்ரீரங்கம் சென்றார். அது மிகவும் புண்யஸ்தலம்; அவ்விடத்திலி ருந்து ஸ்ரீ மஹாவிஷ்ணு எப்பொழுதும் ஸான்னித்தியஞ் செய்துகொண்டிருக்கிறார். அவ்விடத்தில் காவேரி

நதியும் ஓடுகிறது. அவ்விடத்திலிருந்து ரிஷபாத்ரி, ஹரிக்ஷேத்திரம், தென்மதுரை இவைகள் சென்று, ராமேச்வரம் சென்றார். அவ்விடத்தில் ஸமுத்திரத்தில் ஸ்ரீ ராமனால் கட்டப்பட்டிருக்கும் அணையைத் தர்சித்தார். அது மஹாபாபங்களையும் போக்கடிக்க கூடியது. அவ்விடத்தில் பலராமன் ப்ராஹ்மணர்களுக்கு லக்ஷம் பசுக்களைத்தானம் செய்தார். பின்பு கிருதமாலா, தாம்ரபர்ணீ இந்த நதிகளையடைந்து மலயம் என்ற குலபர்வதம் சென்றார். அவ்விடத்தில் வஸிக்கும் அகஸ்திய மஹர்ஷியைத் தர்சித்து, நமஸ்கரித்து, அவரால் ஆசீர்வதிக்கப்பெற்று, அவரிடம் உத்திரவு பெற்று, தெற்கு ஸமுத்திரம் சென்றார்.

அவ்விடத்திலிருக்கும் கன்னியா என்ற துர்க்கா தேவியைதர்சித்தார். அவ்விடமிருந்து அனந்தபுரம் சென்று பஞ்சாப் ஸரஸம் என்ற தீர்த்தஞ்சென்றார். அதில் விஷ்ணுவின் ஸான்னித்தியம் எப்பொழுதும் இருக்கிறது. அதில் ஸ்நானஞ்செய்து லக்ஷம் பசுக்களைத் தானஞ்செய்தார். பின்பு அவ்விடமிருந்து கேரளம், ஸோமகர்த்தகம் என்ற தேசங்களையடைந்து கோகர்ணமென்ற சிவக்ஷேத்திரம் சென்றார். அவ்விடத் தில் பார்வதியை தர்சனஞ்செய்து சூர்ப்பாரகமென்ற க்ஷேத்திரஞ்சென்றார். அவ்விடமிருந்து தாபி, பயோஷ்ணி, நிர்விந்தியா என்ற நதிகளில் ஸ்நானஞ் செய்து தண்டகைக்குச் சென்று ரேவா நதியை அடைந்தார். அதன் கரையில் மாஹிஷ்மதி என்ற பட்டணமிருக்கிறது. அவ்விடமிருந்து மனுதீர்த்தஞ் சென்று திரும்பவும் ப்ரபாஸக்ஷேத்திரம் வந்தார். அவ்விடத்திலுள்ள ப்ராஹ்மணர்கள் "கௌரவர்களும் பாண்டவர்களும் யுத்தம் செய்ததால் எல்லா அரசர்களும்

மரணமடைந்தார்கள்" என்று சொல்லிக்கொண்டார்கள் அதனைக்கேட்ட பலராமன் பூமியின் சுமை நிவர்த்தி யாயிற்று என்று நினைத்தார். மேலுமவர் பீமன், துர்யோதனன், ஆகிய இருவர்களும் கதாயுத்தஞ் செய்து கொண்டிருப்பதைத் தடுக்க வேண்டுமென்ற விருப்பத்துடன் குருக்ஷேத்திரஞ் சென்றார். தர்ம புத்திரர், அர்ஜுனன், நகுலஸஹ தேவர்கள் ஆகிய இவர்கள் பலராமனைக்கண்டு நமஸ்கரித்து எதைச் சொல்வதற்கு வந்திருக்கிறாரோ என்று நினைத்து மௌனமாக விருந்தார்கள்.

26–29. அந்த ஸமயத்தில் துர்யோதனனும் பீமஸேனனும் கதாயுதத்தை யெடுத்துக்கொண்டு மிக்க கோபத்துடன் ஒருவரையொருவர் ஜயிக்கவேண்டு மென்ற விருப்பத்துடன் மண்டலம் முதலிய கதி விசேஷங்களைக்காட்டி யுத்தஞ்செய்து கொண்டிருந் தார்கள். பலராமன் அவர்களைப்பார்த்து "ஓ துர்யோதன! ஓ பீமசேன! உங்களில் ஒருவர் மிக்க பலமுள்ளவர்; மற்றொருவர் கதா யுத்தத்தை நன்றாய் அப்பியஸித்தவர்; ஆனதால் நீங்களிருவர்களும் ஸமமான பராக்கிர முள்ளவர்கள். அதனால் ஜயமாவது அபஜயமாவது உண்டாகவில்லை. வீணில் சண்டை செய்வதில் என்ன ப்ரயோஜனம்? யுத்தத்தை நிறுத்திவிடுங்கள்" என்று சொன்னார். அதனைக்கேட்டும் அவ்விருவர்களும் ஒருவருக்கொருவர் முன்னடந்த கெட்ட நடையையும், துஷ்ட வார்த்தையையும் நினைத்துக்கொண்டு, பலராமனுடைய வார்த்தையை அங்கீகரிக்கவில்லை. அப்பொழுது பலராமன் "இவர்களுடைய முன்ஜன்மத்திய கர்மவசத்தால் நம்முடைய வார்த்தையை இவர்கள் கேட்கவில்லை" என்று நினைத்து த்வாரகா நகரஞ்

சென்று உக்கிரஸேனர் முதலிய பந்துக்களுடன் சேர்ந்தார்.

30–34. பின்பு பலராமன் நைமிசாரண்யத்திற்கு திரும்பவும் வந்தார். அவ்விடத்திலுள்ள மஹர்ஷிகள் யஜ்ஞஸ்வரூபியும் ஒருவரிடத்திலும் விரோதபுத்தி இல்லாதவருமான அவருக்கு யாகஞ்செய்வித்தார்கள். அந்த மஹர்ஷிகளுக்கு பலராமன் சுத்தமான ஆத்மஞானத்தைக்கொடுத்தார். (உபதேசித்தார்) அந்த ஞானத்தால் ஸகல ஜகத்தையும் ஆத்மாவிடத்திலும், ஆத்மாவை ஸகல ஜகத்திலும் இருப்பதாகப்பெரியோர் கள் பார்க்கிறார்கள். இப்படி பலராமன் தமது பத்னியுடனும், பந்துக்களுடனும், ஸ்நேஹிதர்களுடனும், அவபிருத ஸ்நானஞ்செய்து வஸ்திரம் முதலியவை களால் அலங்கரிக்கப்பெற்று, சந்திரிகையுடன், சந்திரன் விளங்குவதுபோல் ப்ரகாசித்தார். மிக்க பலிஷ்டரும், நாசமற்றவரும் அளவற்ற மஹிமையுள்ளவரும், மாயை யால் மனிதவடிவங்கொண்டவருமான பலராமனுடைய சரிதங்கள் இம்மாதிரி அளவற்றவையாகவிருக்கின்றன. அப்படிப்பட்ட பலராமனுடைய சரிதங்களை காலை யிலும் மாலையிலும் எவன் த்யானஞ்செய்கிறானோ, அவனிடத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணு ப்ரியப்படுவார்.

♣ ♣ ♣ ♣

குசேல சரித்திரம்

பரீக்ஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி, "ஓ பகவன்! மகாத்மாவாயும் அளவற்ற வீரியமுள்ள வருமான ஸ்ரீ கிருஷ்ணன் இன்னும் எவைகளைச் செய்தாரோ, அந்த அத்புதமான சரித்தங்களைக் கேட்க விரும்புகிறேன். ஓ ப்ராஹ்மண! ஆசையாகிய பாணத்தால் அடிக்கப்பட்டு துக்கத்தையடைந்தவனும், பாகவத கதையின் ஸாரத்தை அறிந்தவனுமான எவன் உத்தம ச்லோகராகிய பகவானுடைய அத்புதமான சரிதங்களைக் கேட்டு போதுமென்ற திருப்தியை அடைவான்? எது பகவானுடைய குணங்களைச் சொல்லுகிறதோ அதுவே வாக்காகும். எவைகள் பகவானைப் பூஜிக்கின்றனவோ, அவைகளே கைகள். ஸ்தாவரங்களிலும், ஜங்கமங்களிலும் வஸிக்கும் பகவானை எது த்யானஞ் செய்கிறதோ அதுவே மனம். அவருடைய புண்யமான கதைகளை எது கேட்கிறதோ, அதுவே காது. ஸ்தாவரமாகவும் ஜங்கமமாகவுமிருக்கிற பகவானுடைய பிம்பத்தை எது நமஸ்கரிக்கிறதோ, அதுவே தலை. அந்தந்த பகவத் ஸ்வரூபத்தை எது தர்சிக்கிறதோ, அதுவே கண், பகவானுடையவும் பக்தர்களுடையவும் பாத தீர்த்தத்தை எவை அடைகின்றனவோ, அவைகளே அவயங்கள். ஆனதால் கிருஷ்ணனுடைய சரிதத்தைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

5–11. அதனைக்கேட்ட சுகர், ஸ்ரீ கிருஷ்ணனை மனத்தில் த்யானஞ் செய்து பின்வருமாறு

சொல்லலானார். எப்படியெனில்– "ஸ்ரீகிருஷ்ணனுக்கு குசேலரென்று ஒரு ப்ராஹ்மணன் தோழராக இருந்தார். அவர் ப்ரஹ்மத்தை அறிந்தவர்களுக்குட் சிறந்தவர்; இந்திரியங்களின் விஷயங்களான ரூபம் முதலியவைகளில் ஆசையற்றவர், இந்திரியங்களை ஜயித்தவர்; மனதையடக்கியவர்; தைவச் செயலால் கிடைத்ததைக் கொண்டு ஜீவிப்பவர்; அவருடைய பத்னியாகிய குசேலா என்பவளும் தைவச் செயலால் கிடைத்த அன்னத்தைப் பார்த்தாவாகிய குசேலருக்குக் கொடுத்துத் தான் போஜனம் செய்யாமல், பசியால் வருத்தப்பட்டவளாகவே இருந்தாள். அந்தப் பதிவ்ரதையான குசேலா என்பவள் ஒருநாள் பர்த்தாவை நோக்கி பயத்தால் நடுக்கமடைந்து துக்கித்து, "ஓ ப்ராஹ்மண! உமக்கு லக்ஷ்மீபதியாகிய ஸ்ரீ கிருஷ்ணன் தோழரல்லவா? அவர் ப்ராஹ்மண பக்தியுள்ளவர்; சரணமடைந்தவர்களைக் காப்பாற்றுகிறவர்; ஓ மிகுந்த அதிஷ்டமுள்ளவரே! ஸாதுக்களுக்குக் கதியாயுள்ள அந்தப் பகவானிடம் சென்றால் குடும்பியும், ஏழையுமான உமக்கு ஏராளமான பணத்தைக் கொடுப்பார். அந்தப் பகவான் இப்பொழுது போஜர்களுக்கும் விருஷ்ணிகளுக்கும், அதிபதியாகத் த்வாரகா நகரத்தில் வஸிக்கிறார். அவர் தம்முடைய பாதாரவிந்தத்தைத் த்யானிப்பவர்களுக்குத் தமது ஆத்மாவையும் கொடுக்கிறார். அப்படியிருக்க ஜகத்திற்கு அதிபதியாகிய அந்த பகவான் விஷய ஸுகத்தைக் கொடுப்பார் என்பதில் என்ன ஸந்தேஹம்?" என்று சொன்னாள்.

12–26. இப்படி பத்னியால் பலவாறாகப் பிரார்த்திக்கப்பட்டுக் குசேலர், "உத்தம ச்லோகராகிய

பகவானைத் தர்சிப்பதே மேலான லாபம்" என்று நினைத்து, த்வாரகைக்குப் போக நிச்சயித்தார். பின்னுமவர் பத்தினியை நோக்கி, "ஓ நல்ல ஸ்வபாவ முள்ளவளே! நம்முடைய கிருஹத்தில் பகவானுக்குக் கொடுக்கக் கூடிய வஸ்து ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டார். அதனைக் கேட்ட அவள் நாலு பிடி அவலரிசியை பிறரை யாசித்து வாங்கி, அதனைக் கந்தத் துணியில் முடிந்து பர்த்தாவிடம் கொடுத்தாள். அந்தப் ப்ராஹ்மண ச்ரேஷ்டர் அதனை வாங்கிக்கொண்டு, "ஸ்ரீகிருஷ்ணனுடைய தர்சனம் எனக்கு எப்படிக் கிடைக்கும்?" என்று யோசித்துக் கொண்டு த்வாரகா நகரஞ் சென்றார். அந்த நகரத்தில் மூன்று குல்மங்களையும் (ஸைன்யங்களிருக்குமிடம்) மூன்று வீதிகளையும் தாண்டிச் சென்றார்.

அவ்விடத்தில் கிருஷ்ண பக்தர்களான அந்தகர்கள், விருஷ்ணிகள் இவர்களுடைய கிருஹங்கள் இருக்கின்றன. அவ்விடத்தில் ஸாமான்ய ஜன்மங்கள் போக முடியாது. அதற்கப்புறம் ஸ்ரீகிருஷ்ணனுடைய பதினாறு ஆயிரம் ஸ்திரீகளுடைய அந்தப்புரங்களிருக்கின்றன. அதற்குள் மிக்க அழகு பொருந்திய ஒரு கிருஹத்தில் குசேலர் ப்ரவேசித்தார். அப்பொழுது ப்ரஹ்மானந்தத்தை அடைந்தவர்போல இருந்தார். அவ்விடத்தில் ருக்மிணியினுடைய கட்டிலில் உட்கார்ந்திருந்த ஸ்ரீ கிருஷ்ணன் வெகு தூரத்திலேயே குசேலரைக் கண்டு சீக்கிரமாய் எழுந்திருந்து எதிரில் வந்து இரு கைகளாலும் கட்டி கொண்டார். இம்மாதிரி தாமரைக் கண்ணனாகிய ஸ்ரீ கிருஷ்ணன் தோழராகிய ப்ராஹ்மணனை ஆலிங்கனஞ் செய்து அவருடைய சரீர ஸ்பரிசத்தால் அதிக ஆனந்தத்தை யடைந்து

ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கினார். பின்பு குசேலரை தம்முடைய கட்டிலில் உட்கார வைத்து, பூஜாத் திரவியங்களைக் கொண்டு வந்து குசேலருடைய பாதங்களை அலம்பி, அந்த ஜலத்தைத் தம்முடைய சிரஸில் புரோக்ஷித்துக் கொண்டார். [ஸகல லோகங்களையும் பரிசுத்தப்படுத்துகிறவரானாலும்] பின்னும் ஸ்ரீகிருஷ்ணன் திவ்யமான வாஸனையுள்ள குங்குமப்பூ சேர்ந்த சந்தனத்தைத் தமது கையால் பூசி, வாஸனையுள்ள தூபங்களாலும், தீபத்தாலும் தோழராகிய குசேலரைப் பூஜித்தார். அதன்பின் தாம்பூலங்கொடுத்து, நல்வரவாவென்று கேட்டார். அப்பொழுது ருக்மிணிதேவி சாமரத்தையெடுத்து அழுக்கடைந்த வஸ்திரமுள்ளவரும், சரீரம் இளைத்திருப்பதால் வெளியில் தெரிகின்ற நரம்புகள் உள்ளவருமான குசேலரை விசிறினாள்.

இப்படி சுத்தமான கீர்த்தியுள்ள ஸ்ரீகிருஷ்ணனால் பூஜிக்கப்பட்ட குசேலரைக் கண்டு அந்தப்புர ஜனங்கள் மிகவும் ஆச்சரியமடைந்து, பிக்ஷுகனும், பணமில்லாதவனும், அழகில்லாதவனுமான இந்தப் ப்ராஹ்மணனால் என்ன புண்ணியம் செய்யப்பட்டதோ? மூன்று லோகத்திற்கும் அதிபதியாகிய லக்ஷ்மீபதியான கிருஷ்ணன் கட்டிலிலிருக்கும் ருக்மிணி தேவியை விட்டுவிட்டு பலராமனைப்போல் இந்தப் பிராம்மணரை கட்டிக்கொண்டார்' என்று சொல்லிக் கொண்டார்கள்.

27–43. பின்பு ஸ்ரீ கிருஷ்ணனும், குசேலரும், ஒருவருக்கொருவர் கையைப் பிடித்துக்கொண்டு தாங்கள் குருகுல வாஸம் செய்யும்பொழுது நடந்த

கதைகளைப் பற்றிப் பேசிக்கொண்டார்கள். அப்பொழுது கிருஷ்ணன் குசேலரை நோக்கி, "ஓ ப்ராஹ்மண! ஆசார்யருடைய கிருஹத்தில் வஸித்து, அவரிடம் விடைபெற்றபின் ஸமாவர்த்தனஞ் செய்துகொண்டு உமக்குத் தகுதியான பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொண்டீரா? இல்லையா? பெரும்பாலும் உம்முடைய மனது விஷயங்களை விரும்புகிறதில்லை. ஓ வித்வானாகிய தோழனே! பணத்திலும் உமக்கு ஆசையில்லை என்பது எனக்குத் தெரியும். நான் எப்படி லோகங்களைக் காப்பாற்றுவதற்காக ஒன்றையும் விரும்பாமல் ஸகல கர்மங்களையும் செய்கிறேனோ, அப்படி சிலர் கர்மங்களை யனுஷ்டிப்பார்கள்: ஓ ப்ராஹ்மண! நாமிருவரும் ஆசாரியருடைய கிருஹத்தில் வஸித்து வித்தியாப்பியாஸம் செய்தோமல்லவா? அந்த ஞாபகம் உமக்கு இருக்கிறதோ? ப்ராஹ்மணன் தெரிந்துகொள்ள வேண்டியதை [ஆத்ம தத்வத்தை] அறிந்து, ஸம்ஸாரத்தைத் தாண்டுகிறான்.

எவன் இந்தச் சரீரத்தை உண்டுபண்ணுகிறானோ, அந்த பிதா முதலாவது குருவெனப்படுகிறார். எவர் உபநயனஞ் செய்வித்துக் கர்மங்களை யனுஷ்டிக்கும் படி செய்கிறாரோ, அவர் இரண்டாவது குருவாகிறார். அவ்விருவர்களையும் என்னைப்போல் பூஜிக்க வேண்டியதுதான். எல்லோருக்கும் ஞானத்தைக் கொடுப்பவர் மூன்றாவது குரு. [நானே அந்த குரு ஸ்வரூபியாக இருக்கிறேன் என்று கருத்து] இந்த மனுஷ்ய ஜன்மத்தில் வர்ணம் (ஜாதி) ஆச்ரமம் இவைகளுள்ள மனிதர்களுக்குள் எவர்கள் உண்மையை அறிந்தவர்களோ, அவர்கள் ஆசார்ய ஸ்வரூபியான என்னால் உபதேசிக்கப்பெற்று ஸம்ஸார ஸமுத்திரத்தை

தாண்டுகிறார்கள். [ஞானோபதேசஞ் செய்யும் குருவை விட மேலானவர்களில்லையென்று தாத்பர்யம்]. ஆசாரியனுக்குச் சுச்ரூஷை செய்கிறவனிடத்தில் ஸகல ப்ராணிகளின் ஸ்வரூபியாகவிருக்கும் நான் எப்படி ஸந்தோஷத்தை அடைகிறேனோ, அப்படி யாகஞ் செய்தவனிடத்தில், நல்ல குலத்தில் பிறந்தவனிடத்திலும், தபஸ்வியினிடத்திலும், மனத்தை அடக்கியவனிடத்திலும் ஸந்தோஷப்படுகிறதில்லை. ஓ ப்ராஹ்மண! ஆசார்யனுடைய கிருஹத்தில் நாமிருவர்களும் வஸித்த பொழுது நடந்த விஷயங்கள் ஞாபகமிருக்கிறதா? ஆசார்யருடைய பத்னி ஒரு நாள் விறகுவெட்டி வரும்படி நம்மிருவர்களையும் ஆக்ஞாபித்தாள்.'

நாமிருவர்களும் விறகு கொண்டு வருவதற்காகக் காட்டிற்குச் சென்றோம். அப்பொழுது மழைக்கால மில்லாதிருந்தும் திடிரென்று மிக்க மழை பெய்தது; காற்றும் வீசியது; மேகங்கள் கடுமையாக சப்தித்தன; கடுமையான இடிகள் விழுந்தன; அப்பொழுது ஸூர்யன் அஸ்தமயத்தை அடைந்தான். இருள் திக்குகளில் பரவியது; எங்கும் ஒரே ஜலமயமாக இருந்ததால் பள்ளம் மேடு இவைகள் தெரியவில்லை. அந்தச் ஸமயத்தில் நாமிருவர்களும் காற்று மழையால் உபத்திரவிக்கப்பட்டு ஒருவருக்கொருவர் கைகளைப் பிடித்துக் கொண்டு கிழக்கு முதலிய திக்குகளை யறியாமல் வனத்தில் சுற்றிக்கொண்டிருந்தோம். அதனை யறிந்து ஸாந்தீபினி என்ற நம்முடைய ஆசாரியர் காலையில் ஸூர்யன் உதயமானவுடன் வனம் வந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் நம்மை பார்த்து, "ஓ குழந்தைகளே! எல்லாப் பிராணிகளுக்கும் தங்கள் ஸரீரத்தில் மிக்க ப்ரியமிருக்கும். அதையும் லக்ஷ்யஞ்

Released by Maran's Dog, Toronto , Canada

செய்யாமல் நீங்கள் என் விஷயத்தில் மிகவும் துக்கத்தை அடைந்திருக்கிறீர்கள். சுத்தமான எண்ணத்துடன் ஸகல ப்ரயோஜனத்தையுமுண்டு பண்ணக்கூடிய ஆத்மாவை சமர்பிப்பதே ஆசாரியர் களுக்குச் சிஷ்யர்களால் செய்யக்கூடிய உபகாரம். ஓ ப்ராஹ்மண ச்ரேஷ்டர்களே! உங்களிடத்தில் நான் சந்தோஷம் அடைந்தேன். உங்களுடைய எண்ணங்கள் எல்லாம் பலிக்கட்டும். அயாதயாமமென்ற வேதங்கள் (என்னிடம் அத்யயனஞ் செய்யப்பட்ட சுக்ல யஜுர்வேதம்) இவ்வுலகத்திற்கும் பரலோகத்திற்கும் உபயோகப்படட்டும்" என்று அனுக்ரஹித்தார். இம்மாதிரி அநேக கார்யங்கள் நாம் ஆசார்யருடைய கிருஹத்தில் வஸிக்கும்பொழுது நடந்தன. ஆசார்யருடைய அனுக்கிரஹத்தால்தான் புருஷன் பூர்ணனாகிறான்" என்றார்.

44–45. அதனைக்கேட்ட குசேலர், "ஓ தேவர் களுக்கும் தேவ! ஜகத்திற்குக் குருவே! உம்முடன் சேர்ந்து நான் குருகுலவாஸஞ் செய்ததனால் எதுதான் என்னால் அடையப்படவில்லை? (கிருதார்த்தனாக இருக்கிறேன் என்று கருத்து) ஓ ப்ரபுவே! உம்முடைய சரீரமானது வேத ஸ்வரூபமானது; ஸகல க்ஷேமங்களை யும் கொடுக்கக்கூடியது. அப்படிப்பட்ட நீர் குருகுல வாஸஞ் செய்து வேதாத்யயனஞ் செய்தது மிகவும் மனுஷ்ய பாவனையை அனுஸரித்ததேயாம்" என்று சொன்னார்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–81.

குசேலருக்குப் பகவான் ஐச்வர்யத்தைக் கொடுத்தது.

இப்படி குசேலருடன் ஸ்ரீ கிருஷ்ணன் பேசிக் கொண்டு ஸகல ப்ராணிகளுடைய எண்ணத்தையும் அறிந்தவரானதால் (இவர் கொண்டுவந்திருக்கும் அவலைக் கொடுப்பதற்கு வெட்கப்படுகிறார் என்பதை யறிந்து) சிரித்தார். மேலும் ப்ராஹ்மண பக்தியுள்ள வரும், ஸாதுக்களுக்குக் கதியுமான அந்தப் பகவான் தோழராகிய குசேலரை அன்புடன் கடாக்ஷித்து "ஓ ப்ராஹ்மண உம்முடைய கிருஹத்திலிருந்து எனக்குக் கொடுப்பதற்காக எதனைக் கொண்டு வந்தீர்? பக்தர்கள் ஸ்வல்பத்தைக் கொடுத்தாலும் அது எனக்கு அதிகமாகவேயாகும். பக்தியில்லாதவர்கள் ஏராளமாக எனக்குக் கொடுத்தாலும் அதனால் எனக்கு ஸந்தோஷ மில்லை. இலையையாவது, புஷ்பத்தையாவது, பழத்தை யாவது, ஜலத்தையாவது, சுத்த ஸ்வபாவமுள்ள எவன் பக்தியுடன் எனக்கு ஸமர்ப்பிக்கிறானோ, அதனை நான் புஜிப்பேன்" என்றார்.

6–12. அதனைக்கேட்டு குசேலர் மிகவும் வெட்கம டைந்து லக்ஷ்மீபதியாகிய பகவானிடத்தில் அந்த அவலைக் கொடுக்காமலேயே தலைகுனிந்திருந்தார். அப்பொழுது ஸகல ப்ராணிகளின் அந்தக்கரணத்திற்கு ஸாக்ஷியாகவிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணன் குசேலர் தம்மிடம் வந்திருக்கும் கார்யத்தைத் தெரிந்துகொண்டு இவர் ஸம்பத்து வேண்டுமென்ற விருப்பத்துடன் என்னை ஆராதிக்கவில்லை. ஆனாலும் பதிவ்ரதையான பத்தினியால் ப்ரார்த்திக்கப்பட்டு அவளுக்கு ப்ரியத்தைச்

செய்ய விரும்பி என்னிடம் வந்திருக்கிறார். அதனால் மனிதர்களுக்கு கிடைக்காத ஸம்பத்துக்களை இவருக்குக் கொடுக்கிறேன்" என்று யோசித்து கந்தைத் துணியில் முடிந்துவைத்துக் கொண்டிருக்கும் அவலை இதென்ன என்று தாமாகப் பிடுங்கிக்கொண்டார். பின்னுமவர் அதை எடுத்து "ஓ தோழ! அவலில் எனக்கு மிகவும் பிரியமன்றோ. ஸகல ஜகத்ஸ்வரூபி யான எனக்கு இந்த அவலால் விசேஷ திருப்தி யுண்டாகும்" என்று சொல்லி ஒரு பிடி அவலை எடுத்துப் புஜித்து இரண்டாவது பிடியெடுத்து புஜிக்க யத்தனித்தார். அதனைக் கண்ணுற்ற ருக்மிணி தேவி சீக்கிரமாக கிருஷ்ணனுடைய கையைப் பிடித்துக் கொண்டாள். மேலுமவள் "ஓ ஸகல ஜகத்ஸ்வரூபியாக விருப்பவரே! இந்த லோகத்திலும், பரலோகத்திலும், ஸகல ஸம்பத்தையும் கொடுப்பதற்கு இதுவே போது மன்னது. இதுவே உம்மை ஸந்தோஷப் படுத்தக்கூடியது" என்று சொன்னாள். (இரண்டாவது பிடி அவலையும் நீர் புஜித்தால் லக்ஷ்மியாகிய நானும் ப்ராஹ்மணனுக்கு ஸ்வாதீனப்படவேண்டும். முதலில் புஜித்த அவலாலேயே என்னுடைய கடாக்ஷத்தாலுண்டாகும் ஸம்பத்துக்கள் யாவும் உண்டாயினவென்று கருத்து).

13–39. குசேலர் ஸ்ரீ கிருஷ்ணனுடைய கிருஹத்தில் அன்றைய ராத்திரி வஸித்து உத்தமமான அன்னத்தைப் புஜித்து விசேஷஸுகத்தையடைந்து தம்மை ஸ்வர்க்கத் திலிருப்பவராக நினைத்துக்கொண்டார். மறுநாள் காலையில் ஸகல ஜகத்தையும் காப்பாற்றுகிறவரும், தமது ஆனந்தத்தால் பரிபூர்ணருமான பகவான் குசேலரை நமஸ்கரித்து கொஞ்சதூரம் கூடச்சென்று விடை கொடுத்தனுப்பினார். இப்படி பணங்கொடாமல்

குசேலரை ஊருக்கு அனுப்பியும் அவர் தோழராகிய கிருஷ்ணனை யாசிக்கவில்லை. மஹானாகிய ஸ்ரீ கிருஷ்ணனைத் தர்சித்தால் மிக்க ஸுகத்தை அடைந்து வெட்கத்துடன் (தன்னுடைய மனதிற்குண்டான கார்ப்பண்யத்தால்) தம்முடைய வீட்டை நோக்கிப் புறப்பட்டு பின்வருமாறு தனக்குள் யோசிக்கலானார். எப்படியெனில்– "ப்ராஹ்மணர்களைத் தைவமாகக் கொண்ட ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ப்ராஹ்மணர்களிடத் திலிருக்கும் பக்தியைப் பார்த்தேன். லக்ஷ்மீதேவியை மார்பில் வைத்துக்கொண்டிருக்கும் பகவான் என்னை ஆலிங்கனஞ்செய்துகொண்டார். தரித்ரனும் பாபியு மான எனக்கும், லக்ஷ்மிக்கு வாஸஸ்தலமாகிய ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் எவ்வளவு தாரதம்யமிருக்கிறது? ப்ராஹ்மணனென்ற காரணத்தால் என்னை பகவான் இருகைகளாலும் ஆலிங்கனஞ் செய்துகொண்டார்.

மேலுமவர் தம்முடைய ஸஹோதரர்களைப்போல பத்னியின் கட்டிலில் உட்கார்த்திவைத்தார். ருக்மிணி தேவி சாமரத்தையெடுத்து விசிறி களைப்பை நிவர்த் தித்தாள். பின்னும் ஸ்ரீ கிருஷ்ணன் தேவர்களுக்கு அதிபதியானாலும், என் பாதங்களைப் பிடித்துவிடுவது முதலிய உபசாரங்களைத்தாமேசெய்து தேவர்களைப் போல என்னைப் பூஜித்தார். (தேவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனைப் பூஜிப்பது போல என்னை ஸ்ரீ கிருஷ்ணன் பூஜித்தாரென்றும் தாத்பர்யமுண்டு) அந்தப் பகவானுடைய பாதத்தைப் பூஜித்தால், ஸ்வர்க்கம், மோக்ஷம், பாதாளத்திலுள்ள ஸம்பத்து, பூமியிலுள்ள ஐச்வர்யம், மற்ற எல்லா ஸித்திகள் ஆகிய இவைகள் ஸித்திக்கும். ஆனால் பணத்தை பகவான் நமக்குக் கொடுக்கவில்லை அதன் காரணமென்னவென்றால்

"தரித்ரனாகவிருக்கும் இந்த ப்ராஹ்மணனுக்கு தனத்தைக்கொடுத்தால் அதனால் இவர் மதத்தை அடைந்து என்னை நினைக்க மாட்டார்" என்று என்னிடத்தில் தயையால் ஸ்வல்பமான தனத்தையும் கொடுக்கவில்லை" என்று யோசித்துக்கொண்டே தம்முடைய கிருஹத்தின் ஸமீபம் வந்தார். அந்த வீடானது ஸூர்யன் போலவும், அக்னிபோலவும், சந்திரன் போலவும் ப்ரகாசிக்கும் விமானங்களுள்ள தாகவிருந்தது. பலவகையான உத்யானங்களும் விளையாடும் தோட்டங்களும், அவைகளில் பல வகையான பறவைகள் சப்தித்துக் கொண்டுமிருந்தன குமுதம், தாமரை, செங்கழனீர் முதலிய புஷ்பங்களின் வாஸனையுள்ள ஜலத்தால் பூர்ணமான குளங்களுமிருந்தன.

புருஷர்களும், ஸ்திரீகளும் மேலான வஸ்திரம் ஆபரணம் முதலியவைகளால் அலங்கரிக்கப்பெற்றிருந் தார்கள். அந்த கிருஹத்தைக் கண்ணுற்ற குசேலர் "இது யாருடைய கிருஹம்? நம்முடைய கிருஹம் எப்படி இம்மாதிரியாயிற்று" என்று ஸந்தேஹித்த அந்த ப்ராஹ்மணனை தேவர்கள் போன்ற புருஷர் களும், ஸ்திரீகளும், வாத்யங்களை முழக்கிக்கொண்டும் பாடிக்கொண்டும் எதிரில் சென்று அழைத்தார்கள். அப்பொழுது குசேலருடைய பத்னியானவள் பர்த்தா வருகிறார் என்பதைக் கேள்விப்பட்டு பக்தி விசேஷத் தால் பரபரப்புக்குள்ளவளாகி மனித வடிவங்கொண்ட ல்ஷ்மீதேவிபோல் கிருஹத்திலிருந்து வெளியில் வந்தாள். பதிவ்ரதையான அந்த ஸ்திரீயானவள் பர்த்தாவைப்பார்த்து மிக்கப்பிரியத்தால் பெருகிய ஆனந்த கண்ணீருள்ளவளாகி கண்களை மூடிக்கொண்டு நமஸ்கரித்தாள். மனத்தால் ஆலிங்கனஞ்செய்து

கொண்டாள். ஸுவர்ண மாலைகளைத்தரித்த வேலைக் காரிகள் அவளைச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய நடுவில் தேவஸ்திரீ போல ப்ரகாசிக் கும் பத்தினியைப்பார்த்துக் குசேலர் ஆச்சர்யத்தை அடைந்து பத்னியுடன் தமது கிருஹத்திற்குட் சென்றார் அந்த கிருஹம் அநேக ரத்தின ஸ்தம்பங்களால் மஹேந்திரனுடைய கிருஹம் போல விளங்கிற்று. மேலும் அவ்விடத்தில் பாலின் நுரைப்போன்ற படுக்கைகளுக்கும், ஸுவர்ணமயமான ஸாமக்ரிகளுள்ள தந்தக்கட்டில், தங்கப்பிடியுள்ள சாமரங்களும், ஸுவர்ணமயமான ஆஸனங்களும், மிருதுவான விரிப்புகளும், முத்து மாலைகளால் ப்ரகாசிக்கும் கொடுங்கைகளும் இருந்தன. சுவருகள் சுத்தமான ஸ்படிக மயங்களாகவும், மரகத ரத்னமயங்களாகவும் இருந்ததனால் ரத்தின தீபங்களும், ஸ்திரீகளும் அவைகளில் ப்ரதிபலித்தார்கள்.

இம்மாதிரி ஸகல ஸம்பத்துகளும் பூர்ணமாக விருப்பதைக்கண்டு குசேலர் 'தனக்குண்டான ஸம்பத் திற்குக் காரணமின்னது' என்று அறியாமல் ஸ்திரசித்த முள்ளவராக பின்வருமாறு யோசிக்கலானார். எப்படியெனில் அதிருஷ்டமில்லாதவனும், எப்பொழுதும் தரித்ரனுமாகிய எனக்கு ஸம்பத்துண்டாவதற்கு மிகுந்த ஐச்வர்யமுள்ள ஸ்ரீ கிருஷ்ணனுடைய தர்சனமே காரணமாகிவிருக்கவேண்டும். அதை விட வேறொன்றும் காரணமாகவிருக்க ந்யாயமில்லை. தாசார்ஹர்களுக்குட் சிறந்தவரும் என்னுடைய தோழருமான ஸ்ரீ கிருஷ்ணன் மிக்க ஐச்வர்யமுள்ளவர் (ஆப்தகாமன், லக்ஷ்மீபதி) நேரில் சொல்லாமலேயே மேகம்போல் பக்தர்களுக்கு (நேரில் யாசியாமலிருப்பவர்

களுக்கு) ஸம்பத்தைக் கொடுக்கிறார். (ஸமுத்திரத்தை பூர்த்திசெய்யும்படி வர்ஷிக்கும் ஸ்வபாவமுள்ள மேகமானது தான் மிக்க மழையைப் பெய்தாலும் அதனை ஸ்வல்பமென்று நினைத்து வெட்கத்தால் பகலில் வர்ஷியாமல ஜனங்கள் தூங்கும்பொழுது வர்ஷித்து எப்படி வயலை நனைக்கிறதோ, அப்படி பகவான் ஸகல காமங்களையும் அடைந்தவரானதால் தம்முடைய ஐச்வர்யத்தைவிட பக்தர்களுக்குக் கொடுக்கும் ஐச்வர்யம் குறைந்ததென்றும், அவர்களுடைய பக்தி மேலானதென்றும் நினைத்து நேரில் சொல்லாமலேயே கொடுக்கிறார் என்று கருத்து) ஸ்ரீ கிருஷ்ணன் தாம் மிக்க ஐச்வர்யத்தை பக்தர்களுக்குக் கொடுத்தாலும் அதனை ஸ்வல்பமென்று நினைக்கிறார். பக்தர்கள் அல்பமாக பூஜித்தாலும் அதனை அதிகமாக நினைக்கிறார்.

மிக்க மஹிமைபொருந்தியவரான பகவான் மிக்க ப்ரீதியுடன் நான் கொண்டுபோன அவலைப் பெற்றுக் கொண்டார். ஆனதால் ஒவ்வொரு ஜன்மத்திலும் அந்தப் பகவானிடத்தில் எனக்கு ப்ரேமையும் அனுகூலத்தைச் செய்ய வேண்டுமென்ற விருப்பமும், உபகாரஞ் செய்யவேண்டுமென்ற எண்ணமும் உண்டாகட்டும். மேலும் நான் அவரையே ஸேவித்துக் கொண்டுமிருக்கவேண்டும். மிக்க மஹிமையுள்ளவரும், குணங்களுக்கு இருப்பிடமுமாகிய ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஸங்கத்தால் பக்தர்களுடைய சேர்க்கையுண்டாகும். மேலும் பகவான் பணக்காரர்கள் தனகர்வத்தை அடைத்து கெட்டுப்போவார்கள் என்று நினைத்து நல்ல ஞானமில்லாத பக்தனுக்கு ராஜ்யம் முதலிய பலவகையான ஸம்பத்துக்களைக் கொடுக்கிறதில்லை.

(எனக்கு ஸ்திரமான பக்தியில்லாததால் இவ்வளவு ஸம்பத்துக்களுண்டாயின. ஆனதால் ஸ்திரமான பக்தி உண்டாக வேண்டுமென்று தாத்பர்யம்) இம்மாதிரியான நிச்சியத்துடன் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் மிகுந்த பக்தியுள்ளவராகி விஷய ஆசையை விட்டு விடுவதற்கு உபாயத்தைச் செய்து ஸம்பத்தில் அதிக ஆசை வைக்காமலேயே பத்தினியுடன் போகங்களை அனுபவித்து வந்தார்

40–42. தேவர்களுக்கும் தேவராகிய ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ப்ராஹ்மணர்களைவிட மேலான தைவம் வேறொன்றுமில்லை. இப்படிப் பகவானுடைய சிறந்த தோழராகிய அந்த ப்ராஹ்மணன் ஒருவராலும் ஜயிக்கப்படாத பகவான் பக்தர்களுக்கு வசப்பட்டிருப்பதைப்பார்த்து அவரையே த்யானஞ்செய்து அதனால் அஹங்காரத்தை நிவர்த்தித்துக்கொண்டு பகவானிடத்தில் நிரந்தரமாக பக்திசெய்து ஸாதுக்கள் அடையக்கூடிய மேலான பதத்தை அடைந்தார். ப்ராஹ்மணர்களையே தைவமாகக்கொண்ட பகவான் ப்ராஹ்மணரிடத்தில் பக்தியுடன் அவலை புஜித்த இந்த உபாக்யானத்தை எவன் கேட்கிறானோ, அவனுக்கு பகவானிடத்தில் பக்தியுண்டாகும். அவன் கர்மபந்தத்திலிருந்து நிவர்த்தியடைவான்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–82

ஸ்ரீ கிருஷ்ணன் முதலியவர்கள் ஸூர்யகிரஹணத்திற்காக குருக்ஷேத்திரஞ் சென்றது

1–21. ராமகிருஷ்ணர்கள் துவாரகையில் வஸிக்கும் பொழுது ஸூர்யகிரஹணம் நேர்ந்து, ப்ரளய காலத்தில் ஸூர்யனுடைய பிம்பம் முழுவதும் மறைக்கப்படுவதுபோல அந்த கிரஹணம் ஸர்வக்ராஸ மாக இருந்தது இம்மாதிரி கிரஹணம் வரப்போகிற தென்று ஜ்யோதிஷ சாஸ்திரத்தை அறிந்தவர்கள் மூலமாகத் தெரிந்து கொண்டு தங்களுக்கு க்ஷேமத்தைச் செய்துகொள்ள விரும்பி எல்லோரும் ஸ்யமந்த பஞ்சகமென்ற ஸ்தலஞ்சென்றார்கள். ஆயுதத்தைத் தரித்தவர்களுக்குட் சிறந்தவரான பரசுராமன் முன்னொருகால் பூமியில் க்ஷத்திரிய வம்சமில்லாமல் செய்யவேண்டி, ஸகல அரசர்களையும் கொன்று, அந்தவிடத்தில் அவர்களுடைய ரத்தத்தால் ஐந்து மடுக்களையுண்டுபண்ணினார். மேலும், அந்தப் பரசுராமன் வீரர்களைக் கொண்றதாலுண்டான பாபத்தை நிவர்த்திப்பதற்காக அவிவேகிகள்போல் யாகஞ்செய்தார். உண்மையில் அவருக்குக் கர்மபந்த மில்லை. ஆனாலும், தாம் ப்ராயச்சித்தஞ் செய்து கொள்ளாவிட்டால் மற்றவர்களும் அனுஷ்டியார்க ளென்று எண்ணி, வீரர்களைக் கொன்றவர்கள் இம்மாதிரி ப்ரயாசித்தத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்று ஜனங்களுக்குத் தெரிவித்துக் கொண்டு, யாகத்தைச் செய்தார். அந்த மிகுந்த புண்ய காலத்தில், மிக்க புண்ய ஸ்தலமான அந்த க்ஷேத்திரத்திற்கு பாரதவர்ஷத்திலுள்ள பிரஜைகள் எல்லாரும்

வந்தார்கள். விருஷ்ணிகளும், அக்ரூரர், வஸுதேவர், ஆஹுகர் முதலியவர்களும் தங்கள் தங்கள் பாபத்தை நிவர்த்தித்துக் கொள்வதற்காக அவ்விடஞ் சென்றார்கள். ஆனால் கதன், ப்ரத்யும்னர், ஸாம்பன், ஸுசந்திரன், சுகன், ஸாரணன், ஸேனாதிபதியான கிருதவர்மா இவர்களுடன் அனிருத்தர் த்வாரகா நகரத்தைக் காப்பாற்றிக்கொண்டு இருந்தார். (அவர்கள் போக வில்லையென்று கருத்து) மற்ற யாதவர்கள் தேவவிமானம் போன்ற ரதங்களுடன், ப்லவகதி முதலியவைகளைக் காட்டிக்கொண்டு செல்லுகின்ற குதிரைகளுடனும், மேகம் போன்றனவும், கர்ஜிப்பவை யுமான யானைகளுடனும், வித்யாதரர்கள் போலப் பிரகாசிக்கும் காலாட் படையுடனும், அவர்களுடைய மனைவிகளுடனும் திவ்யமாலை, வஸ்திரம் முதலிய ஸாமக்ரிகளுடனும் குருக்ஷேத்திரஞ் சென்று தேவர்கள் போலப் ப்ரகாசித்தார்கள்.

மிக்க அதிருஷ்டமுள்ளவர்களான அவர்கள் அந்தப் புண்ய காலத்தில் உபவாஸமிருந்து, ஸ்நானஞ் செய்து, வஸ்திரங்களாலும், புஷ்பமாலைகளாலும், ஸுவர்ண மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்ட பசுக் களை பிராஹ்மணர்களுக்குக் கொடுத்தார்கள். பின்னும் அவர்கள் கிரஹணம் விட்டபின்பும் பரசுராமனுடைய மடுக்களில் ஸ்நானஞ்செய்து, "ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் எங்களுக்குப் பக்தியுண்டாகட்டும்" என்று ப்ரார்த் தித்துக்கொண்டு சிறந்த ப்ராஹ்மணர்களுக்கு ஸுவர்ணத்தைக் கொடுத்தார்கள். இப்படி கிருஷ்ண னையே தைவமாக கொண்ட விருஷ்ணிகள், ஸ்ரீ கிருஷ்ணனுடைய உத்தரவின்மீது போஜனஞ்செய்து, அடர்ந்த நிழலுள்ள மரங்களுடைய அடியில்

உட்கார்ந்தார்கள். அப்பொழுது அந்த யாத்திரைக்காக மத்ஸ்யர்கள், உசீனரர்கள், கோஸல தேசத்தார்கள், விதர்ப்பர்கள், கௌரவர்கள், ஸிருஞ்ஜயர்கள், காம்போஜர்கள், மத்திரர்கள், கேகயர்கள், குந்திகள், ஆரட்டர்கள், கேரளர்கள், முதலியவர்கள் வந்திருந் தார்கள், அவர்கள் விருஷ்ணிகளுக்கு மித்திரர்களும், ஸம்பந்திகளும், பந்துக்களுமாக இருந்ததினால் அவர்களைச் சந்தித்தார்கள். மேலும், நந்தன் முதலிய மித்திரர்களையுங் கண்டார்கள். யசோதை முதலிய கோபிகைகளையும் கண்டார்கள். இம்மாதிரி ஒருவருக் கொருவர் பார்த்து கொண்டதனால் விசேஷ ஸந்தோஷத்தை அடைந்து, முகம் மலர்ந்தவர்களாகி, மயிர்கூச்சல் அடைந்து, ஆனந்த கண்ணீரைப் பெருக்கிக் கண்களால் ஆலிங்கனஞ் செய்துகொண்டு ஆனந்தத்தை அடைந்தார்கள்.

ஸ்திரீகள் ஸ்திரீகளைக்கண்டு அன்புள்ள கடைக் கண் பார்வையால் கடாக்ஷித்து, ஸ்தனங்கள் ஸதனங் களில் படும்படி ஆலிங்கனஞ் செய்துகொண்டார்கள். அவர்களில் பெரியோர்களை சிறியவர்கள் நமஸ்கரித் தார்கள். நல்வரவா? க்ஷேமமா? என்று விசாரித்து ஒருவருக்கொருவர் ஸ்ரீகிருஷ்ணனுடைய கதையைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். குந்தி தேவியானவள் ஸஹோதரர்களையும், ஸஹோதரிகளையும், அவர்களு டைய பெண் பிள்ளைகளையும், தாய் தந்தைகளையும், ஸஹோதர பத்தினிகளையும் ஸ்ரீ கிருஷ்ணனையும் தர்சித்துத் துக்கத்தை விட்டாள். அப்பொழுது குந்தி வஸுதேவரை நோக்கி, "அண்ணா என்னுடைய ஆபத்துக் காலங்களில் என்னை நினைக்காமலும், என் வார்த்தையைப் பேசாமலும் நீங்களிருப்பதால்

நான் அதிருஷ்டமில்லாதவளென்று நினைக்கிறேன், எவனுக்குத் தைவம் அனுகூலமாக இருக்கவில்லையோ, அவனை மித்திரர்களும், பந்துக்களும், புத்திரர்களும், தாய் தந்தைகளும் நினைக்க மாட்டார்கள்" என்றாள்.

22–23. அதனைக்கேட்ட வஸுதேவர் குந்தியை நோக்கி, "ஓ அம்ம எங்களிடத்தில் நீ கோபிக்க வேண்டாம். ஸகல ஜனங்களும் ஈசுவரனுக்கு வசப்பட்டு, எல்லா கார்யங்களையும் செய்கிறார்கள். சாமானிய ஜனங்களுக்கு பொம்மை முதலியவை எப்படி விளையாட்டு சாமானாக இருக்கின்றனவோ, அப்படி ஜனங்கள் பகவானுக்கு விளையாட்டுக் கருவிகளாக இருக்கிறார்கள். நாங்களெல்லாரும் கம்ஸனால் உபத்திரவிக்கப்பட்டு, ஒவ்வொரு திக்குகளிலும் பயந்து சென்றிருந்தோம். இப்பொழுதுதான் தைவச் செயலாக இருப்பிடம் வந்தோம்" என்றார்.

24–32. இம்மாதிரி வஸுதேவர், உக்ரஸேனர் முதலிய யாதவர்களால் கௌரவர்கள் பூஜிக்கப்பெற்று ஸ்ரீ கிருஷ்ணனைத் தர்சித்து மிக்க ஆனந்தத்தை அடைந்தார்கள். பீஷ்மர், துரோணர், திருதராஷ்ட்ரர், காந்தாரி, அவளுடைய புத்திரர்கள், பாண்டவர்கள், அவர்களுடைய ஸ்திரீகள், குந்திதேவி, ஸுஞ்ஜயர், விதுரர், கிருபர், குந்திபோஜர், விராடர், பீஷ்மகர், மஹானாகிய நக்னஜித், புருஜித், துருபதர், சைப்யர், திருஷ்டகேது, காசிராஜன், அகலமான கண்களுள்ள தமகோஷன், மைதிலன், மத்ரன், கேகயன், யுதாமன்யு, ஸுசர்மா, பாஹ்லிகன் முதலியவர்களும், அவர்களு டைய புத்திரர்களும், தர்மபுத்திரரைச் சார்ந்த மற்ற அரசர்களும், லக்ஷ்மிக்கு வாசஸ்தலமான ஸ்ரீ

கிருஷ்ணனுடைய திவ்ய சரீரத்தைத் தர்சித்து ஆச்சர்ய மடைந்தார்கள். மேலும் அவர்கள் ராமகிருஷ்ணர் களால் பூஜிக்கப்பெற்று, கிருஷ்ணனுடைய அனுக் கிரஹம் பெற்ற விருஷ்ணிகளைப் பின் வருமாறு சிலாகித்தார் எப்படியெனில், "ஓ போஜ தேசத்தரசனே எல்லா மனிதர்களுக்குள் உங்களுடைய ஜன்மமே பயனுள்ளது. யோகிகளாலும் பார்க்க முடியாதவரான ஸ்ரீகிருஷ்ணனை நேரில் எப்பொழுதும் தர்சித்துக் கொண்டிருக்கிறீர்கள். வேதங்களால் துதிக்கப்பெற்ற எந்தப் பகவானுடைய கீர்த்தியானது ஸகல லோகத்தையும் பரிசுத்தப்படுத்துகிறதோ, எவருடைய பாதத்திலிருந்து உண்டான ஜலமானது. (கங்கை); ஜகத்தைச் சுத்தப்படுத்துகிறதோ, எவருடைய வார்த்தையானது (வேதம்) எல்லா லோகங்களையும் பரிசுத்தப்படுத்துகிறதோ, காலத்தால் பூமியின் சக்தி கெடுக்கப்பட்டிருந்தாலும் எவருடைய பாதஸ்பர்சத்தால் மிக்க சக்தியுள்ளவளாகி பூமி எங்களுக்கு எல்லா வஸ்துக்களையும் உண்டுபண்ணுகிறாளோ, அப்படிப் பட்ட ஸ்ரீமந் நாராயணன், விஷயங்களில் ஆசை கொண்டு ஸம்ஸாரிகளாக இருக்கும் உங்களுடைய கிரஹத்தில் தாமாக அவதரித்திருக்கிறார். அதனால் அவருடைய தரிசனம் எப்பொழுதும் உங்களுக்குக் கிடைக்கிறது. அவரை ஆலிங்கனஞ் செய்துகொள் கிறீர்கள்; அவர்பின் செல்லுகிறீர்கள்; அவருடன் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்; அவருடன் படுக்கிறீர்கள்; அவருடன் சேர்ந்து உட்காருகிறீர்கள்; அவருக்கு ஞாதிகளாகவும் (ஸபிண்டர்கள்), மைத்துனன், மணப்பிள்ளை முதலிய ஸம்பந்தமுள்ளவர்களாகவு மிருக்கிறீர்கள்; அப்படிப்பட்ட உங்களுக்குப் பகவான் ஸ்வர்க்க ஸுகம், மோக்ஷ ஸுகம் இவைகளுக்கும்

அதிகமான ஆனந்தத்தைக் கொடுத்துக் கொண்டிருக் கிறார். அதனால் உங்களுடைய பிறப்பே மேலானது" என்று சொன்னார்கள்.

33–40. கிருஷ்ணன் முதலிய யாதவர்கள் வந்திருப் பதை நந்தர் கேள்விப்பட்டு வண்டிகளில் ஸாமக்ரிகளை ஏற்றி வைத்துக்கொண்டிருக்கும் கோபர்களுடன் அவர்களைப் பார்ப்பதற்காக யாதவர் களிருக்குமிடம் வந்தார். அவரைக்கண்டு விருஷ்ணிகள் மிக்க ஸந்தோஷத்துடன் எழுந்திருந்தார்கள். அது ப்ராணனைக் கண்டவுடன் இந்திரியங்கள் ஸந்தோஷத் தை அடைந்தாற்போலிருந்தது, பின்னுமவர்கள் நந்தரைப் பார்த்து வெகு நாளாகிவிட்டதனால் மிக்க ஆவலுடன் ஆலிங்கனஞ் செய்துகொண்டார்கள். அப்பொழுது வஸுதேவர் நந்தரைத்தழுவி, கம்ஸன் செய்த உபத்திரவங்களையும், அதனால் கிருஷ்ணனை கோகுலத்தில் வைத்திருந்ததையும் நினைத்து அப்படிப்பட்ட ஆபத்துக் காலத்தில் தமக்கு நந்தர் மிக்க உபகாரஞ் செய்தாரென்ற பிரியத்தால் ஒன்றுஞ் சொல்லமுடியாதவராக இருந்தார். ராமகிருஷ்ணர்களும் நந்தருக்கும், யசோதைக்கும் நமஸ்காரஞ்செய்து, ப்ரியத்துடன் அவர்களைத் தழுவி, ஆனந்தத்தால் கண்டமடைத்து மௌனமாக இருந்தார்கள் நந்தரும் யசோதையும் அந்த குழந்தைகளை மடியில்வைத்துக் கட்டிக்கொண்டு வெகுநாளாகப் பார்க்காமலிருந்ததா லுண்டான துக்கத்தை நிவர்த்தித்துக் கொண்டார்கள். ரோஹிணியும், தேவகியும் யசோதையை ஆலிங்கனஞ் செய்துகொண்டு, அவளால் செய்யப்பட்ட உபகாரத்தை நினைத்து, "ஓ கோகுலத்திற்கு அதிபதியாக இருப்பவளே எங்களிடத்தில் நீ வைத்திருந்த ப்ரியத்தை எவள்

மறந்துவிடுவாள் ? மஹேந்திரனுடைய ஐச்வர்யத்தைக் கொடுத்தாலும் அதற்குப் பதிலாகாது. தாய் தந்தைகள் இன்னாரென்று தெரிந்துகொள்ளக்கூடாத வயதிலே யே இந்த ராமகிருஷ்ணர்களை உன்னிடத்தில் அனுப்பினோம். அப்படிப்பட்ட குழந்தைகளை ப்ரிய மாகக் கண்களை இமைபோலக் காப்பாற்றினாயல்ல வா ? ஸாதுக்களுக்குத் தங்களைச் சார்ந்தவர்கள், பிறர் ஏன்ற பேத புத்தி இல்லை. ஆனதால் இந்தக் குழந்தைகள் உன்னுடைய கிருஹத்தில் ஸுகமாக வஸித்தார்கள். இப்படிப்பட்ட உபகாரத்திற்குப் பதில் செய்யமுடியாது" என்று சொன்னார்கள்.

41–48. கோபிகைகள் ஸ்ரீகிருஷ்ணனைக் கண்டு வெகு நாளாகிவிட்டதனால் மிக்க ப்ரியத்துடன் தர்சித்துக் கண்கொட்டலை நிந்தித்தார்கள். மேலும் அவர்கள் மனத்தில் பகவானை த்யானஞ் செய்து தன்மயமானார்கள். அது யோகிகளுக்கும் கிடைக்காதது. கிருஷ்ணனும் அப்படிப்பட்ட கோபிகைகளிடம், மற்றவர்கள் இல்லாதவிடத்தில் சென்று, அவர்களைத் தழுவி க்ஷேமம் விசாரித்து, சிரித்துக்கொண்டு "ஓ தோழிகளே நாம் சத்துருக்களைக் கொன்று பந்துக் களுக்கு க்ஷேமத்தைச் செய்வதற்காகக் கோகுலத்தை விட்டு சென்றோம். அவ்விடத்தில் தாமதித்தோம். அப்படிப்பட்ட எங்களுடைய ஞாபகம் உங்களுக்கு இருக்கிறதா ? எங்களை நன்றி மறந்தவர்களென்று அலக்ஷியஞ் செய்யாமலிருக்கிறீர்களா ? காற்று மேகங் களை எப்படி சிலகாலம் சேர்க்கிறதோ, சிலகாலம் பிரித்துவிடுகிறதோ, திருணங்களையும், பஞ்சுகளையும், தூளிகளையும் எப்படி காற்று சேர்த்துக்கொண்டும் பிரித்துக்கொண்டும் இருக்கிறதோ அப்படி பகவான்

பிராணிகளைச் சில காலம் சேர்த்து வைக்கிறார்; சில காலம் பிரித்து விடுகிறார்; திரும்பவும் சேர்த்து வைக்கிறார். பிராணிகள் என்னிடத்தில் பக்திசெய்தால் அது மோக்ஷத்தைக் கொடுக்கும். நீங்கள் என்னிடத் தில் செய்த பக்தியானது என்னையே உங்களுக்குக் கொடுத்தது, (மோக்ஷத்தைக் காட்டிலும் மேலான தென்று தாத்பர்யம்) இது தைவச் செயலேயாம். ஆகாயம், ஜலம், வாயு, தேஜஸ், பூமி இவைகள் எப்படி பூதங்களாலுண்டாகும் வஸ்துக்களுக்கு ஆதியாகவும், அந்தமாகவும், உள்ளாகவும், வெளியாக வும் இருக்கின்றனவோ, அப்படி எல்லாப் பிராணிகளுக்கும் நான் ஆதியாகவும், அந்தமாகவும், உள்ளாகவும். வெளியாகவும் இருக்கிறேன். இப்படி நான்கு வகையான பிராணிகள் தங்களுக்குக் காரணங் களான ஆகாயம் முதலிய பூதங்களில் இருக்கின்றன. ஆத்மாவானது அந்த பூதங்களில் போக்தாவாக (அனுபவிப்பவனாக) இருக்கிறதோ அவைகள் இரண்டும் அக்ஷரனாகிய என்னிடத்தில் தோன்றுகிறதைப் பாருங்கள்" என்று சொன்னார்.

49–50. இம்மாதிரி கிருஷ்ணன் ஆத்ம வித்யையைக் கோபிகைகளுக்கு உபதேசிக்க, அதனைத் த்யானஞ் செய்து அதனால் லிங்க சரீரத்தை நிவர்த்தித்துக் கொண்டு பகவத் ஸ்வரூபத்தை அடைந்தார்கள். மேலுமவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனை நோக்கி, "ஜகத்திற்கு காரணமான தாமரை மலரைத் தொப்புளில் உடையவரே உம்முடைய பாதாரவிந்தமானது மிக்க ஞானிகளான யோகிகளால் த்யானஞ் செய்யக்கூடியது; ஸம்ஸாரமாகிய பாழுங்கிணற்றில் விழுந்தவர்களை மேலே தூக்கிவிடக்கூடியது; அப்படிப்பட்ட பாதமானது

ஸம்ஸாரிகளான எங்களுடைய மனத்தில் எப்பொழுதும் இருக்கும்படி அனுக்கிரஹிக்க வேண்டும்" என்று கேட்டுகொண்டார்கள்.

♣♣♣♣♣

அத்தியாயம்–83

திரௌபதியும் ருக்மிணி முதலியவர்களும் பேசிக்கொண்டது

1–4. கோபிகைகளுக்கு குருவும், கதியுமான பகவான் அவர்களுக்கு அனுக்கிரஹஞ் செய்துவிட்டு தர்மபுத்திரர் முதலிய எல்லா பந்துக்களையும் ஷேமம் விசாரித்தார். இப்படி லோகநாதனாகிய ஸ்ரீ கிருஷ்ணனால் கேட்கப்பட்டும், பூஜிக்கப்பட்டவர்களுமான அவர்கள் பகவானுடைய பாதங்களைத் தர்சித்து, சுத்தர்களாகி மிக்க ஸந்தோஷத்துடன் "ஓ ப்ரபுவே! பெரியோர்கள் மனத்திலிருந்து அவர்கள் முகமாகப் பெருகிவரும் உம்முடைய பாதமாகிய தாமரை மலரின் மதுவை எவர்கள் பானஞ் செய்கிறார்களோ, (உம்முடைய சரித்திரத்தைப் பெரியோர்கள் முகமாகக் கேட்பவர்களென்று கருத்து) அவர்களுக்கு ஷேமக் குறைவு உண்டாகுமா? தேஹத்தை கொடுக்கக்கூடியதும், உம்மை மறக்க செய்யக்கூடியதுமான அவித்யையை அது (உம்முடைய சரிதத்தை கேட்பது) நாசஞ்செய்கிறது; புத்தியின் குணத்தால் ஏற்படும் மூன்று அவஸ்தைகளை நீர் கடந்தவர்; (ஜாக்ரத், ஸ்வப்பனம், ஸுஷுப்தி என்பது உமக்கில்லை என்று தாத்பர்யம்.) ஆனந்த ஸ்வருபி; காலத்தாலும், தேசத்தாலும் அளவிடக்கூடாதவர்; தடையற்ற ஞானமுள்ளவர்; ஆனால் காலமஹிமையால் வேதங்களுக்குக் கெடுதி நேரும்பொழுது தம்முடைய மாயையால் பூமியில் சரீரத்துடன் அவதரிக்கிறீர். பரமஹம்ஸர்களுக்கு நீரேகதி. அப்படிப்பட்ட உம்மை நாங்கள் சரணமடைகிறோம். சரீரம், வீடு இவைகளில்

ஆசையை விட்டுவிட்டோம்" என்றார்கள்.

5–14. ஓ பரீஷித்து மஹாராஜனே! உத்தம சுலோகர்களுக்குட் சிறந்தவரான ஸ்ரீ கிருஷ்ணனை ஜனங்கள் இம்மாதிரி ஸ்தோத்திரஞ் செய்யும்பொழுது கௌரவர்களுடைய ஸ்திரீகள் ஒருவருக்கொருவர் சேர்ந்து ஸ்ரீகிருஷ்ணனுடைய கதைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அது மூவுலகத்திய ஜனங்களாலும் கானஞ் செய்யப்பெற்றது. அதனைச் சொல்லுகிறேன், கேளும்; எப்படியெனில், அப்பொழுது திரௌபதி கிருஷ்ணனுடைய பத்னிகளை நோக்கி, "ஓ ருக்மிணியே! ஓ பத்ரையே" ஓ ஜாம்பவதியே! ஓ கௌஸலையே! ஓ ஸத்தியபாமையே! ஓ காளிந்தீ! ஓ மித்ரவிந்தையே! ஓ லக்ஷ்மணையே! ஓ ரோஹிணி! (ரோஹிணி என்பவள் பட்டமஹிஷி போன்றவள்) உங்களை ஸ்ரீகிருஷ்ணன் எப்படி விவாகஞ் செய்துக் கொண்டார்? அதனைச் சொல்லுங்கள்" என்று கேட்டாள்.

அதனைக் கேட்ட ருக்மிணி, "என்னைச் சிசுபாலனுக்குக் கல்யாணஞ் செய்விப்பதற்காக அநேக அரசர்கள் வில்லைக் கையில் வைத்துக்கொண்டு தயாராக இருக்கும்பொழுது, ஸ்ரீகிருஷ்ணன் அவர்களுடைய தலையில் காலை வைத்து (அவர்களை ஜயித்து) யுத்த ஸ்தலத்திலிருந்து என்னைக்கொண்டு போனார். அது சிங்கம் தன்னுடைய பாகத்தை எடுத்துக்கொண்டாற் போலிருந்தது. லக்ஷ்மிக்கு வாஸஸ்தலமாகிய அந்தப் பகவானுடைய பாதத்தையே நான் பூஜிக்க வேண்டும்" என்றாள். பின்பு ஸத்யபாமை, "என்னுடைய பிதாவான ஸத்ராஜித் என்பவர்,

தம்முடைய ஸஹோதரனாகிய பிரஸேனஜித்தை ஸ்ரீ கிருஷ்ணன் கொன்றாரென்று சொன்னார். அந்த அபவாதத்தை நிவர்த்தித்துக் கொள்வதற்காக ஸ்ரீ கிருஷ்ணன் வனஞ்சென்று, ஜாம்பவானுடைய குஹையில் ஜாம்பவானை ஜயித்து ஸ்யமந்தகமென்ற ரத்தினத்தை என்னுடைய பிதாவிடங் கொடுத்தார். அப்பொழுது என்னுடைய பிதா ஸ்ரீகிருஷ்ணன் மீது வீணாக அபவாதத்தைச் சொன்னோமே, அதனை எப்படி நிவர்த்தித்துக் கொள்ளுகிறது என்று யோசித்து, அக்ரூரர் முதலியவர்களுக்குக் கொடுப்பதாக நிச்சயஞ் செய்யப்பட்டவளானாலும் என்னை ஸ்ரீ கிருஷ்ணனுக்குக் கொடுத்தார்" என்றாள். அதன்பின் ஜாம்பவதி என்பவள், "என்னுடைய பிதாவாகிய ஜாம்பவான் 'இந்த கிருஷ்ணன் ஸீதையின் பர்த்தாவாகிய ஸ்ரீராமன், தமக்கு யஜமானன்' என்பதை அறியாமல் இவருடன் இருபத்தேழு நாட்கள் யுத்தஞ்செய்தார் பின்பு இவருடைய பலத்தைப் பரீஷித்து, பாதங்களில் நமஸ்கரித்து, ரத்தினத்தையும் என்னையும் இவருக்குக் கொடுத்தார்.

அதனால் நான் இவருக்குத் தாஸியாக இருக்கிறேன்" என்றாள். அதன் பிறகு காளிந்தியென்பவள், "ஸ்ரீ கிருஷ்ணனை பர்த்தாவாக அடைய வேண்டுமென்று நான் தபஸ் செய்து கொண்டிருந்தமையால் இவர் தோழனாகிய அர்ஜுனருடன் அவ்விடம் வந்து என்னைக் கல்யாணஞ் செய்து கொண்டார். அதனால் நான் அவருடைய வீட்டைப் பெருக்கிச் சுத்தஞ் செய்யும் வேலைக்காரியாக இருக்கிறேன்" என்றாள் அதன்பின் பத்திரா யென்பவள். "சிங்கமானது நாய் கூட்டங்களை ஜயித்து தன்னுடைய பலியையெடுத்துக்

கொண்டாற் போல் ஸ்ரீகிருஷ்ணன் என்னுடைய ஸ்வயம்வரத்தில் வந்து, அரசர்களையும் என் ஸஹோதரர்களையும் ஜயித்து என்னைக் கல்யாணஞ் செய்து கொண்டார். லக்ஷ்மீதேவிக்கு வாசஸ்தலமாகிய அந்தப் பகவானுடைய காலை அலம்புவதாகிய காரியமே எனக்கு ஒவ்வொரு ஜன்மத்திலும் கிடைக்க வேண்டும்" என்றாள். அதன் பிறகு ஸத்தியா என்பவள், "என்னுடைய பிதாவின் கிருஹத்தில் ஏழு எருதுகள் இருந்தன. அவைகள் மிக்க பலமுள்ளவை. சூரர்களுடைய மதத்தை அடக்குகிறவைகள்; கூர்மையான கொம்புள்ளவை.

அவைகளை எவன் ஜயிக்கிறானோ, அவனுக்கு என்னைக் கல்யாணஞ் செய்விக்கிறதென்று அரசர்களுடைய பலத்தைப் பரீக்ஷிப்பதற்காக என் பிதா நிச்சயம் செய்துகொண்டிருந்தார். அந்த எருதுகளை இந்த ஸ்ரீ கிருஷ்ணன் பிடித்து ஆட்டுக்குட்டிகளைப்போல் கட்டியிழுத்து நிக்கிரஹித்தார். அதனால் ஸந்தோஷித்து என் பிதா,என்னை ஸ்ரீ கிருஷ்ணனுக்கு கொடுத்ததுமின்றி ரதம், யானை, குதிரை, காலாட்படை இவைகளடங்கிய ஸைன்யத்தையும், வேலைக்காரிகளையும் கொடுத்தார். இப்படி என்னை அழைத்துப் பகவான் துவாரகைக்குச் செல்லும்பொழுது வழியில் அநேக அரசர்கள் யுத்தத்திற்கு வந்தார்கள். அவர்களை ஜயித்து என்னைத் துவாரகா நகரத்துக்குக் கொண்டு வந்தார். அப்படிப்பட்ட பகவானுக்கு நான் எப்பொழுதும் கைங்கரியஞ் செய்துகொண்டிருக்க வேண்டும்" என்றாள்.

15–16. மித்திரவிந்தா என்பவள், "நான்

கிருஷ்ணனிடத்திலேயே மனமுள்ளவளாக இருந்தமையால், அம்மானுடைய புத்திரனாகிய ஸ்ரீகிருஷ்ணனை வரவழைத்து என்னுடைய பிதா அக்ஷௌஹிணி கணக்கான ஸைன்யத்தையும், தோழிகளையும், என்னையும் கொடுத்தார். அந்த பகவானுடைய பாதத்தைத் தொடுவது ஒவ்வொரு ஜன்மத்திலும் எனக்குக் கிடைக்கவேண்டும். கர்மத்தால் ஸம்ஸாரத்தில் சுழன்று கொண்டிருப்பவர்களுக்கு அந்த பாதஸ்பர்ஸத்தால் (தொடுவது) க்ஷேமமுண்டாகிறது." என்றான்.

17–27. லக்ஷ்மணா என்பவள், "ஓ திரௌபதி! ஸ்ரீ கிருஷ்ணனுடைய அவதாரம், சரிதம் ஆகிய இவைகளை நாரத முகமாக அடிக்கடி நான் கேட்டதனால் என்னுடைய மனமும் அவரிடத்திலேயே சென்றது. (அவரையே கல்யாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டேன் என்று தாத்பர்யம்) மேலும், லக்ஷ்மீதேவி கூட அவரையே பார்த்தாவாக அடைந்திருப்பதால் மற்ற லோகபாலகர்களைவிட இவரே மேலானவர் என்று நினைத்து, மற்றவர்களிடத்தில் ஆசைப்படாமல் கிருஷ்ணனையே விவாஹஞ் செய்துகொள்வதென்ற நிச்சயமுள்ளவளாக இருந்தேன். ஓ பதிவ்ரதையே! பிருஹத்ஸேனரென்று என்னுடைய பிதா என்னுடைய அபிப்ராயத்தை தெரிந்துகொண்டு அதற்காக ஸ்வயம்வரம் ஏற்படுத்தினார். உன்னுடைய விவாஹத்தில் அர்ஜுனனை வெளிப்படுத்துவதற்காக மத்ஸ்ய யந்திரமேற்படுத்தப்பட்டது போல என்னுடைய ஸ்வயம்வரத்திலும் மத்ஸ்ய யந்திரம் ஏற்படுத்தப்பட்டது; ஆனால் உன்னுடைய ஸ்வயம்வரத்தில் ஏற்படுத்திய மத்ஸ்ய யந்திரம் வெளியில் மாத்திரம் மறைக்கப்பட்டிருந்தது. (ஸ்தம்பத்தை ஓட்டி உயரப்

பார்த்தால் அந்த மத்ஸ்யம் தெரியுமென்று கருத்து) என்னுடைய ஸ்வயம்வரத்தில் ஏற்படுத்தியதோ அப்படியல்ல; ஜலத்தில் , மாத்திரந்தான் தெரியும் (ஸ்தம்பத்தையொட்டி மேலே பார்த்தாலும் தெரியாது. ஸ்தம்பத்தின் அடியில் வைக்கப்பட்டிருக்கும் ஜலத்தில் அதன் பிரதிபிம்பம் மாத்திரம் தெரியும் அதனைப் பார்த்துக்கொண்டு மேலிருக்கும் மத்ஸ்யத்தைப் பேதிக்க வேண்டுமென்று கருத்து) அதனைக் கேட்டு ஸகல அஸ்திர சாஸ்திரங்களில் தேர்ந்த அரசர்கள் தங்கள் தங்கள் உபாத்தியாயர்களுடன் என்னுடைய பிதாவின் நகரம் வந்து சேர்ந்தார்கள். என்னுடைய தந்தை, வந்தவர்களான அரசர்களுக்கு அவரவர் களுடைய வயதிற்கும், பராக்கிமத்திற்கும் தக்கவாறு மர்யாதை செய்தார்.

பின்பு அவர்கள் என்னையே மனத்தில் நினைத்துக்கொண்டு அந்தச் ஸபையில் வைத்திருக்கும் வில்லையும், பாணத்தையும் எடுத்து லக்ஷ்யத்தை (குறி) அடிக்க முயன்றார்கள். சிலர் வில்லைத் தூக்கிப் பூமியில் வைத்தார்கள். சிலர் நாணேற்ற முடியாமல் சென்றார்கள். சிலர் நாணேற்றி இழுத்து, அதனால் அடிக்கப்பட்டுப் பூமியில் விழுந்தார்கள். மகததேசத்து அரசர்களும், சேதிதேசத்து அரசர்களுமான சில வீரர்களும், பீமன், துர்யோதனன், கர்ணன் ஆகிய இவர்களும் வில்லையெடுத்து நாணேற்றியும் மேலிருக்கும் லக்ஷ்யமிருக்கும் இடத்தை நன்றாகத் தெரிந்துகொள்ள முடியாதவர்கள் ஆனார்கள்; அர்ஜுனர் மத்ஸியத்தின் பிரதிபிம்பத்தை ஜலத்தில் பார்த்து, உயர லக்ஷ்யத்தின் ஸ்திதியை நன்றாகத் தெரிந்துகொண்டு மிக்க முயற்சியுடன் பாணத்தைப்

ப்ரயோகித்தார். அந்தப் பாணமானது லக்ஷ்யத்தைத் தொட்டதேயொழிய அதனை பேதிக்கவில்லை. இப்படி ராஜகுமாரர்கள் அதனை பேதிக்க முடியாமல் திரும்பிச் சென்றார்கள். 'நான் மிக்க வீரன்' என்ற அஹங்காரமுள்ளவர்களுடைய அஹங்காரம் அடங்கி யது. அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் விளையாட்டாக வில்லையெடுத்து நாணேற்றி, பாணத்தைப் பூட்டி ஒரு தடவை ஜலத்தில் மத்ஸ்யத்தின் பிரிதிபிம்பத்தைப் பார்த்து, பாணத்தைப் ப்ரயோகித்து லக்ஷ்யத்தைப் பேதித்துக் கீழே தள்ளினார். அப்பொழுது அபிஜித் என்ற முஹூர்த்தம். ஆகாயத்தில் தேவதுந்துபிகள் முழக்கப்பட்டன. பூமியில் 'ஜய' என்ற சப்தம் உண்டாயிற்று. தேவர்கள் மிக்க ஸந்தோஷமுள்ளவர் களாகி புஷ்பங்களை வர்ஷித்தார்கள்.

28–39. அப்பொழுது நான் புதிதாகிய பட்டு வஸ்திரம் உடுத்திக்கொண்டும், தலையில் உயர்ந்த புஷ்பங்களை அலங்கரித்துக் கொண்டும் வெட்கச் சிரிப்பினால் அழகிய முகமுள்ளவளாகி, பாதத்தில் அணிந்திருக்கும் ஆபரணங்கள் சப்திக்க, ஸுவர்ணத் தால் அலங்கரிக்கப்பெற்ற ரத்தின மாலையைக் கையில் எடுத்துக்கொண்டு அந்தச் ஸபைக்கு வந்தேன். மேலும் நான் தலை மயிர்களாலும், குண்டலங்களா லும், அழகிய கன்னங்களுள்ளதும், சிரிப்பு, கடைக்கண் பார்வை இவைகளுள்ளதுமான முகத்தை கொஞ்சம் தூக்கி அரசர்களைப் பார்த்து ஸ்ரீகிருஷ்ண னிடத்தில் ஆசை உள்ளவளாகி அவருடைய கழுத்தில் அந்த ரத்தினமாலையைப் போட்டேன். அப்பொழுது மிருதங்கம், படஹம், சங்கம், பேரி, ஆனகம் முதலிய வாத்யங்கள் முழக்கப்பட்டன. நடர்களும், தாஸிகளும்,

நர்த்தனஞ் செய்தார்கள். பாடகர்கள் பாடினார்கள் ஓ த்ரௌபதி! பகவானை நான் வரித்ததைக் கண்ணுற்ற மற்ற அரசர்கள் பொறாமை கொண்டார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் உத்தமமான நான்கு குதிரைகள் கட்டிய ரதத்தில் என்னை ஏற்றி வைத்து யுத்தத்திற்கு தயாராக இருந்தார். அப்பொழுது சிங்கம் மற்ற மிருகங்களை அலக்ஷ்யஞ் செய்தாற்போலத் தாருகன் எல்லா அரசர்களையும் லக்ஷ்யஞ் செய்யாமல் ரதத்தை நடத்தினான். அதில் சில அரசர்கள், நாய்கள் சிங்கத்தை எதிர்த்தாற்போல, பாணம், வில் இவைகளை எடுத்துக்கொண்டும் ஸ்ரீ கிருஷ்ணனைத் தடுத்தார்கள் அதனைக்கண்ணுற்ற ஸ்ரீகிருஷ்ணன் சார்ங்கம் என்ற வில்லையெடுத்துப் பாணங்களைப் பூட்டி அடித்தார்.

அதனால் சிலர் தலை வெட்டுண்டும் சிலர் கால்கள் வெட்டுப்பட்டும், சிலர் தலை வெட்டுண்டும் கீழே விழுந்தார்கள். சிலர் ஆயுதங்களைக் கீழே கிடத்தி பயந்து ஓடினார்கள். இப்படிப் பகவான் அரசர்களை ஜயித்து என்னை அபஹரித்து, த்வாரகா நகரத்தில் ப்ரவேசித்தார். அப்பொழுது அந்த நகரம் த்வஜங்களாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப் பட்டு வெயிலில்லாமல் நிழலுள்ளதாக இருந்தது; ஆகாயத்திலுள்ளவர்களாலும், பூமியிலுள்ளவர்களாலும் துதிக்கப்பெற்றிருந்தது. அப்படிப்பட்ட நகரத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் ப்ரவேசித்தது, ஸூர்யன் தமது கிருஹத் தில் ப்ரவேசித்தாற்போல் இருந்தது. என்னுடைய பிதாவாகிய பிருஹத்ஸேனர் மித்திரர்களையும், கிருஷ்ணனுடைய பந்துக்களையும் வஸ்திரங்களாலும், ஆபரணங்களாலும், சந்தனம் முதலியவைகளாலும்,

படுக்கைகளாலும் உபசரித்து யானை, குதிரை, ரதம்,காலாட்கள், வேலைக்காரிகள் மற்றும் ஸகல சம்பத்துக்கள் ஆகிய இவைகளையும் ஸ்திரீதனமாகக் கொடுத்தார். மேலுமவர் எல்லா விதத்திலும் பரிபூர்ணராகிய பகவானுக்கு மேலான ஆயுதங்களை யுங் கொடுத்தார். இப்படி நாங்கள் மிக்க தபஸ்செய்து எல்லா ஆசைகளையும் ஒழித்து, ஆத்மாராமராகிய [தம்முடைய ஆத்ம லாபத்தால் ஸந்தோஷிப்பவர்] ஸ்ரீ கிருஷ்ணனுடைய வீட்டு வேலைக்காரிகளாக ஆனோம்" என்றாள்.

40–43. அதனைக்கேட்ட பதினாறாயிரம் ராஜ குமாரிகளும், "நரகாஸுரன் திக்விஜயஞ் செய்யும் பொழுது அரசர்களை ஜயித்து எங்களைப் பலாத்காரமாக அபஹரித்து வைத்திருந்தான். நாங்கள் சம்சாரத்தை நிவர்த்திக்கூடிய ஸ்ரீகிருஷ்ணனுடைய பாதாரவிந்தத்தை தியானஞ் செய்து கொண்டிருந் தமையால் ஸ்ரீ கிருஷ்ணன் எல்லாக் காமங்களையும் அடைந்தவரானாலும், நரகாஸுரனைக் கொன்று எங்களைக்கல்யாணஞ் செய்துக்கொண்டார். ஓ பதிவ்ரதையான த்ரௌபதி! எல்லா பூமிக்கும் அதிபதியாக இருப்பதாகிய ஸாம்ராஜ்யத்தையும் நாங்கள் விரும்பவில்லை. இந்திரபதம் எங்களுக்கு வேண்டாம். மேற்சொல்லிய இருவகையிலுமுள்ள ஸுகத்தை அனுபவிக்க நாங்கள் இஷ்டப்படவில்லை. அணிமா முதலிய ஸித்திகளில் எங்களுக்கு ஆசையில் லை, ப்ரஹ்மபதத்தை விரும்பவில்லை. மோக்ஷத்திலும் எங்களுக்கு ஆசையில்லை. ஸாலோக்யம் முதலியவை களிலும் விருப்பம் இல்லை. ஆனால் லக்ஷ்மிதேவியின் ஸ்தனங்களிலுள்ள குங்குமத்தின் பாததூளியைத் தரிக்க

வேண்டுமென்று விரும்புகிறோம். கோபிகைகளும், வேடஸ்திரீகளும், திருணங்களும், கொடிகளும், கோபர்களும் அந்தப் பகவானுடைய பாதஸ்பரிசத்தை [அவருடைய பாதம் தங்கள் மீது படவேண்டுமென்று] விரும்பவில்லையா? அதுபோல் நாங்களும் பாததூளியை விரும்புகிறோம்" என்றார்கள். (அது மற்றவர்களுக்குக் கிடைக்காததாயினும் அவருடைய பக்தர்களுக்குக் ஸுலபமென்று கருத்து.)

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–84.

வஸுதேவர் யாகஞ்செய்தது.

அதனைக்கேட்டு குந்தி, காந்தாரி,த்ரௌபதி, ஸுபத்ரை மற்ற ராஜபத்னிகள் கிருஷ்ணனிடத்தில் பக்தியுள்ள கோபிகைகள் ஆகிய எல்லாரும் ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி ஆச்சர்யமடைந்தார்கள். இப்படி ஸ்திரீகள் ஸ்திரீகளுடனும், புருஷர்கள் புருஷர்களுடனும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது ராமகிருஷ்ணர்களை தர்சிப்பதற்காக மஹர்ஷிகள் வந்தார்கள். எவர்களெனில்– வ்யாஸர், நாரதர், ச்யவனர், தேவலர், அஸிதர், விச்வாமித்திரர், சதானந்தர், பரத்வாஜர், கௌதமர், பரசுராமன் அவருடைய சிஷ்யர்கள், பகவானாகிய வஸிஷ்டர்,காலவர், ப்ரகு, புலஸ்தியர், புலஹர், அத்திரி, மார்க்கண்டேயர், பிருஹஸ்பதி, த்விதர், திரிதர், ஏகதர், ப்ரஹ்மதேவருடைய புத்திரராகிய அங்கிரஸ், அகஸ்தியர், யாஜ்ஞவல்கியர், வாமதேவர், முதலிய மற்ற மஹர்ஷிகளும் வந்தார்கள். அவர்களைக்கண்டு அவ்விடம் உட்கார்ந்திருந்த அரசர்களும், பாண்டுபுத்திரர்களும், ராமகிருஷ்ணர்களும் ஆஸனத்திலிருந்து எழுந்திருந்து எல்லோராலும் நமஸ்கரிக்கப்பெற்றவர்களான மஹர்ஷிகளுக்கு நமஸ்காரஞ் செய்தார்கள். விதிப்படி அவர்களைப் பூஜித்தார்கள். மேலும் ஸ்ரீ கிருஷ்ணன் பலராமனுடன் நல்வரவா என்று கேட்பது, ஆஸனங்கொடுப்பது, பாத்தியம், அர்க்கியம், புஷ்பமாலை, தூபம், சந்தனம் முதலியவைகளால் அந்த மஹர்ஷிகளையுபசரித்தார். இம்மாதிரி பூஜிக்கப்பெற்று மஹர்ஷிகள் ஆஸனத்தில் ஸுகமாக உட்கார்ந்தார்கள். பின்னுமவர்கள்

பகவானுடைய வார்த்தையைக் கேட்பதில் ஆவலுள்ள வர்களாகி மௌனமாகவிருந்தார்கள். அப்பொழுது தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக பூமியில் அவதரித்தி ருக்கும் ஸ்ரீ கிருஷ்ணன் அந்த ஸபையை நோக்கி "யோகிகளுக்குட் சிறந்தவர்களான உங்களுடைய தர்சனம் தேவர்களுக்கு அரிது. அப்படிப்பட்ட தர்சனம் எங்களுக்குக் கிடைத்தது. இதுவே ஜன்மத்தின் பயன். ஆனதால் எங்களுடைய ஜன்மம் பயனுள்ளதாயிற்று. நாங்கள் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்தானஞ்செய்வது முதலியவைகளையே தபஸ் என்று நினைத்தவர்கள்; ப்ரதிமையையே தைவமென்று நினைத்தவர்கள்; அப்படிப்பட்ட அல்பர்களான எங்களுக்கு யோகேசர் களான உங்களைத்தொடுவது, கேட்பது, வணங்குவது, பாதங்களில் பூஜிப்பது ஆகிய இவைகள் கிடைப்பதற்கு ந்யாயமில்லை.

ஜலங்களாகிய புண்ணிய தீர்த்தங்களையும், மண், கல் இவைகளால் செய்யப்பட்ட தேவதைகளையும் ஸேவித்தால், அவைகள் வெகுகாலஞ் சென்றபின் ஸேவித்தவனுடைய பாபத்தைப் போக்கி பரிசுத்தப் படுத்துகின்றன. ஸாதுக்களைத் தர்சித்தவுடன் அவர் கள் பரிசுத்தப்படுகிறார்கள். மேலும் அக்னி ஸூர்யன், சந்திரன், நக்ஷத்திரங்கள், பூமி, ஜலம், ஆகாயம், வாயு, வாக்கு, மனம் ஆகிய இவைகள் பேதபுத்தியை யுண்டுபண்ணுகிறவைகள். ஆனதால் அவைகளை உபாஸித்தால் பேதபுத்தியாலுண்டான பாபம் நிவர்த் தியாகிறதில்லை. (அக்னி முதலியவைகளை ப்ரஹ்மம் என்று உபாஸிக்க வேண்டுமென்ற ச்ருதியின்படி உபாஸித்தாலும் பேதபுத்தி நிவர்த்தியாகிறதில்லை யென்று தாத்பர்யம்) ஸாதுக்கள் பேதபுத்தியற்றவர்களான

தால் அவர்களை ஸேவித்தால் அந்த முஹூர்த்தத்தி லேயே அவர்கள் அண்டினவர்களுடைய பேதபுத்தியை நிவர்த்திக்கிறார்கள். வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்று ஸ்வபாவமுள்ள சரீரத்தை நான் என்று எவன் நினைக்கிறானோ, களத்திரம், புத்திரன் முதலியவர் களை, தன்னைச் சார்ந்தவர்களென்று எவன் நினைக்கிறானோ, எவன் மண்ணினாலும், மரத்தாலும் செய்யப்பட்டவைகளையே தேவதையென்று நினைக் கிறானோ, எவன் ஜலத்தை தீர்த்தமென்று (சுத்தப்படுத்தக்கூடியது) நினைக்கிறானோ, ஸாதுக்களை ஆத்மாவென்றும், தன்னைச்சார்ந்தவர்களென்றும், தேவதைகளென்றும், தீர்த்தமென்றும், ஒருபொழுதும் நினைக்கவில்லையோ, அவன் கோபுரகழுதைக்குச் (கழுதையென்றும் சொல்வதுண்டு) சமமானவன் என்று சொன்னார்.

14–27. அதனைக்கேட்ட மஹர்ஷிகள் "இதென்ன தடையற்ற ஞானமுள்ளவராகிய பகவான் இப்படி நம்மை ஸ்தோத்திரஞ் செய்கிறார்" என்று புத்திமயக்க மடைந்து மௌனமாகவிருந்தார்கள். மேலுமவர்கள் பகவான் கர்மத்திற்கு வசப்பட்டவர்போலிருப்பதைப் பற்றி வெகுநேரம் யோஜித்து, கிருஷ்ணன் இப்படி கர்மத்திற்கு வசப்பட்டவர்போல நடப்பது மூடர்களை யும் கர்மத்தை அனுஷ்டிக்கும்படி செய்வதற்காகவே யொழிய வேறில்லை என்று ஜகத்குருவாகிய ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றிச் சொல்லிக்கொண்டார்கள். பின்னுமவர்கள் "நாங்கள் ஆத்மாவின் உண்மையை அறிந்தவர்களுக்குட் சிறந்தவர்களானாலும், ப்ரஜாபதி களுக்கும் அதிபதிகளானாலும் எவருடைய மாயையால் மோஹித்திருக்கிறோமோ, எவர் தம்முடைய

ஸங்கல்பத்தால் மனிதவேடங்கொண்டு கர்மத்திற்கு வசப்பட்டவன் போல கர்மங்களை அனுஷ்டிக்கிறாரோ, அப்படிப்பட்ட பகவானாகிய உம்முடைய நடை வியக்கத்தக்கது; பூமியானது குடம், மடக்கு என்ற பலவகையான பெயரையும் ஸ்வரூபத்தையும் அடைந்தாலும் ஸ்வரூபங்களும், பெயரும் எப்படி அநித்யங்களோ, அவைகளுடைய ஸம்பந்தம் எப்படி பூமிக்கு உண்மையில்லையோ, அப்படியே உண்மையில் நீர் கர்மஸம்பந்தமில்லாதவரானாலும் தாமாக தம்மை பலவகையாக படைக்கிறீர்; காப்பாற்றுகிறீர்; ஸம்ஹரிக் கிறீர்; ஆனாலும் உமக்குக்கர்மத்தின் ஸம்பந்தமில்லை. பரிபூர்ணராகிய நீர் அவதரித்து கர்மங்களை அனுஷ் டிப்பது என்பது லோகத்தை அனுஸரிப்பதேயாம் (உண்மையல்லவென்று கருத்து) ஆனாலும் பரம புருஷனாகிய நீர் பக்தர்களைக் காப்பாற்றுவதற்காக வும், துஷ்டர்களைச் சிக்ஷிப்பதற்காகவும், சுத்த ஸத்ஸ்வரூபத்தை தரிக்கிறீர் (அவதரிக்கிறீர்) மேலும் ஜாதி, ஆச்ரமம் இவைகளை அடைந்து தாம் அனுஷ்டித்து ஸநாதனமான வேதமார்க்கத்தையும் ஸம்ரக்ஷிக்கிரீர்.

தபஸ், வேதாத்தியயனம் ஆகிய இவைகளைச் செய்து கார்யம், காரணம், இவைகளுக்கு மேற்பட்ட ஸத்தாமாத்திர ப்ரஹ்மம் ஆகிய இவைகளை, வேதத்தைக்கொண்டு ஜனங்கள் அடைகிறார்கள். அப்படிப்பட்ட வேதம் உமக்கு சுத்தமான ஹிருதய மாகவிருக்கிறது. ஓ பரப்ரஹ்மமே. சாஸ்திரத்தால் அறியக்கூடியவரும், ஸகலசாஸ்திரங்களை யுண்டு பண்ணினவருமான உம்மை ப்ராஹ்மணர்கள் தெரிந்துக் கொள்ளுகிறார்கள் (வேதம் உமக்கு ஹிருதயமாக

விருப்பதால் வேதத்தைப் பரவச்செய்பவர்களான ப்ராஹ்மணர்களே உம்மை தெரிந்துகொள்ளுகிறார்கள்) அதனால் அப்படிப்பட்ட ப்ராஹ்மணர்களை நீர் பூஜிக்கிறீர். ப்ராஹ்மணர்களை தைவமாகக் கொண்ட வர்களில் நீர் சிறந்தவர். ஸகல க்ஷேமங்களையும் கொடுப்பவரும், ஸாதுக்களுக்குக் கதியுமான உம்முடைய ஸங்கம் கிடைத்ததால் இன்றையதினம் எங்களுடைய ஜன்மம் ஸபலமாயிற்று. எங்களுடைய வித்தையும், தபஸும், கண்களும் பயனுள்ளவையாயின. அப்படிப்பட்ட பகவானும், தடையற்ற ஞானமுள்ள வரும், கிருஷ்ணனுமாகிய உமக்கு நமஸ்காரம். மேலும் உம்முடைய மஹிமையை தம்முடைய யோக மாயையால் மறைத்துக்கொண்டிருக்கிறீர்.

அப்படிப்பட்ட பரமாத்வாவுமான உம்மை நமஸ்கரிக்கிறோம். யோகமாயையான திரையால் ஸ்வரூபத்தை மறைத்துக்கொண்டவரான உம்மை ஸிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் ஆகிய இவைகளுக்கு காரணமாகிய ஈச்வரனென்று இந்த அரசர்களும் விருஷ்ணிகளும் அறியார்கள். படுத்துத்தூங்கும் புருஷன் ஸ்வப்னத்தை உண்மையென்று நினைத்து மனத்தால் தோன்றிய சிங்கம் முதலியவைகளாகத் தம்மை எப்படி நினைத்துக்கொள்ளுகிறானோ, அவை களுக்கு மேலானதாக அறியவில்லையோ, அப்படி உம்முடைய மாயையால் புத்திமயக்கத்தை அடைந்து ஸ்வப்னம் போன்ற விஷயங்களில் ஆசைப்பட்டு விவேகமற்று உம்முடைய ஸ்வரூபத்தை அறியவில்லை. உம்முடைய இந்தப் பாதமானது ஸகல பாபங்களை போக்கக்கூடிய கங்காதீர்த்தத்தை யுண்டுபண்ணியது; வெகுகாலம் யோகப்யாஸஞ்செய்தாலும் ஹிருதயத்தில்

அது த்யானிக்கப்படுகிறதேயொழிய நேரில் பார்க்கப் படவில்லை. அப்படிப்பட்ட பாதத்தை நேரில் தர்சித்தோம். எங்களுக்கு உம்முடைய பாதங்களில் பக்தியுண்டாகும்படி அனுக்கிரஹிக்கவேண்டும்; முன்னோர்களான பெரியோர்கள் உம்மிடத்தில் அதிக பக்திசெய்து அதனால் ஜீவகோசத்தை யொழித்து (ஆசைகளை) உம்மை அடைந்தார்கள்." என்று ஸ்ரீ கிருஷ்ணனை ச்லாகித்து திருதராஷ்ட்ரர், தருமபுத்திரர் இவர்களிடமும் விடைபெற்று அந்த மஹர்ஷிகள் தங்கள் ஆச்சரமத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

28–33. அதனைக் கண்ணுற்ற மிக்க கீர்த்தியுள்ள வஸுதேவர் அவர்கள் பின்சென்று நமஸ்கரித்து மிக்க வணக்கமாக, அவர்களை நோக்கி "ஓ மஹர்ஷிகளே! ஸகல தேவஸ்வரூபிகளாகிய உங்களுக்கு நமஸ்காரம். எந்தகர்மத்தை எப்படி அனுஷ்டித்தால் கர்மபந்தம் நிவர்த்தியாகும்? அதனைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார். அதனைக்கேட்டு மஹர்ஷிகள் 'ஸமீபத்திலி ருக்கும் ஸ்ரீ கிருஷ்ணனைவிட்டு நம்மை வஸுதேவர் கேட்கிறாரே'யென்று ஆச்சர்யப்படுவதைப்பார்த்து நாரதர் "ஓ மஹர்ஷிகளே! வஸுதேவர் ஸ்ரீ கிருஷ்ண னை சிறுவனென்று நினைத்து நம்மைப்பார்த்து க்ஷேமத்தை அடையும் மார்க்கத்தைக் கேட்பது ஆச்சர்யமல்ல. கங்கையின் கரையிலே வஸிப்பவர்கள் தங்களுடைய பாபத்தை போக்கடித்துக் கொள்வதற் காக வேறுநதிக்குச் செல்லுகிறார்களல்லவா? ஸமீபத்திலிருப்பதே அலக்ஷ்யத்தை யுண்டுபண்ணும். ஆனதால் ஸ்ரீ கிருஷ்ணன் வஸுதேவருக்குப் புத்திரனாக எப்பொழுதும் ஸமீபத்திலிருப்பதால் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் லக்ஷ்யபுத்தியில்லை. வெள்ளெரிப்

பழம் முதலியவைகள் காலத்தால் எப்படி நசிக்கின் றனவோ, அப்படி எவருடைய ஞானம் காலத்தாலும் ஜகத்தைப்படைப்பது முதலியவையாலும் தடுக்கப்படு கிறதில்லையோ, குடம் முதலியவைகள் உலக்கை முதலியவைகளால் அடிக்கப்பட்டு நாசமடைகிறது போல, எவருடைய ஞானம் வேறு வஸ்துவால் கெடுக்கப்படுகிறதில்லையோ, பதார்த்தங்களில் முன்னிருந்த நிறம் முதலிய குணங்கள் மாறி வேறு குணங்கள் உண்டாவதால், பதார்த்தம் எப்படி வேறாக ஆகிறதோ அப்படி குணங்களாலும் எவருடைய ஞானம் தடைப்படுகிறதில்லையோ, அப்படிப்பட்ட தடையற்ற ஞானமுள்ளவரும், அத்விதீயருமான (தமக்குச் சமமான இரண்டாவது வஸ்து இல்லாதவர்) ஸ்ரீ கிருஷ்ணனை மூடர்கள் ஆசை முதலியவைகளா லும் கர்மங்களாலும், ஸுகதுக்கங்களாலும், ஸத்வம் முதலிய குணங்களுடைய தொடர்ச்சியாலும் மறைக்கப் பட்டவரென்று நினைக்கிறார்கள். மேற்காட்டிய ஆசை முதலியவை பகவானுடைய விபூதிகளேயொழிய வேறில்லை. தம்முடைய விபூதிகளால் தமக்கு மறைவு நேரிடுமா? இப்படி நினைப்பது மேகத்தாலும், பனியாலும், ராஹுவாலும், ஸூர்யன் மறைக்கப் பட்டிருப்பதாக ஜனங்கள் நினைப்பதுபோலிருக்கிறது" என்று சொன்னார்.

34–42. அதனைக்கேட்ட மற்ற மஹர்ஷிகள் வஸுதேவரை அழைத்து ராமகிருஷ்ணர்களும் மற்ற அரசர்களும் கேட்டுக்கொண்டிருக்க "எந்த கர்மத்தை அனுஷ்டித்தால் கர்மபந்தம் விலகுமென்று கேட்டீ ரல்லவா? ஸகல யாகங்களுக்குமதிபதியான ஸ்ரீமஹா விஷ்ணுவைச்ரத்தையுடன் பூஜித்தால் கர்மபந்தம்

நிவர்த்தியாகும். இது சித்தத்திற்கு சாந்தியை யுண்டு பண்ணக்கூடிய லகுவான உபாயமென்று பெரியோர்கள் சாஸ்திரங்களைக்கொண்டு கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த தர்மமானது மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடிய தாகவுமிருக்கிறது. மேலுமிந்த தர்மம் தனக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியது. (கர்மத்தாலும், பிரஜையாலும், தனத்தாலும் மோக்ஷம் கிடைக்கிற தில்லை. ஸகல கர்மங்களையும் விடுவதால் அநேகர் கள் மோக்ஷத்தையடைந்தார்கள் என்று ச்ருதியின்படி கர்மத்தை விடுவது மோக்ஷத்திற்கு உபாயமே யொழிய கர்மத்தைச் செய்வதால் மோக்ஷம் கிடைக்குமாவென்றால் முதலிலேயே கர்மத்தை விடுவது முடியாத காரியம் என்று அடுத்த ச்லோகங்களால் காண்பிக்கப்படுகிறது) நல்லமார்க்கமாக ஸம்பாதிக்கப்பட்ட சுத்தமான தனத்தைக் கொண்டு யாகஞ்செய்து ச்ரத்தையுடன் பரம புருஷனைப் பூஜிப்பதே க்ரஹஸ்தர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடிய மார்க்கம்.

இப்படி வித்வானாக விருப்பவன் யாகங்களைச் செய்து, தானங்களையனுஷ்டித்து அதனால் தனத்தைச் செலவிட்டு தனத்தாசையை விலக்கிக் கொள்ளவும் க்ரஹத்திலுள்ள போகங்களையனுபவித்து அதனால் களத்திரம், புத்திரன் இவர்களிடத்திலுள்ள ஆசையை நிவர்த்தித்துக்கொள்ளவேண்டும். ஸ்வர்க்கம் முதலிய லோகங்களுடைய ஸுகமானது ஸ்திரமில்லாதது என்று யோஜித்து அவைகளில் ஆசையை விலக்கிக் கொள்ளவேண்டும். முன்னோர்களான பெரியோர்கள் கிராமவாஸத்தில் ஆசையையொழித்து மிக்க தைரிய முள்ளவர்களாக தபஸ்செய்வதற்காகக் காட்டிற்குச் சென்றார்கள். ஒவ்வொரு மனிதனும் தேவர்களுக்கும்,

ரிஷிகளுக்கும், பிதிருக்களுக்கும் கடன் கொடுக்க வேண்டியவனாக இருக்கிறான். யாகஞ் செய்வதால் தேவர்களுடைய கடன் நிவர்த்தியாகும். வேதத்தை அத்தியயனம் செய்வதால் ரிஷிகளுடைய கடன் நிவர்த்தியாகும். அவைகளைச்செய்து முவ்வகையான கடன்களை நிவர்த்தித்துக்கொள்ளாமல் கர்மத்தை விட்டு மோக்ஷத்தை விரும்புகிறவன் நரகத்தையடை வான். ஆனதால் மிக்க புத்திசாலியான ஓ வஸுதேவ! உமக்கு இரண்டு கடன்கள் தீர்ந்து விட்டன. யாகங்களைச் செய்து தேவர்களுடைய கடனை நிவர்த்தித்துக்கொண்டு, வீட்டைவிட்டு காட்டிற்குப் போகலாம். ஆனால் சித்த சுத்தியில்லாதவர்கள் இப்பொழுது சொல்லப்பட்ட கர்மத்தையனுபவிக்க வேண்டும். நீர் மிகவும் மேலானவர். ஏனென்றால் நீர் மிக்க பக்தியுடன் ஜகத்திற்கு அதிபதியான ஸ்ரீமந் நாராயணனை முன் ஜன்மத்தில் பூஜித்தீர். அதனால் உங்களுக்கு அவர் புத்திரனாக அவதரித்திருக்கிறார்" என்று சொன்னார்கள்.

43–60. அதனைக்கேட்ட கம்பீரமனமுள்ள வஸு தேவர் அந்த மஹர்ஷிகளை நமஸ்கரித்து ஸந்தோஷப் படுத்தித் தமக்கு ரித்விக்குகளாகவிருந்து யாகஞ் செய்விக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இப்படி வஸுதேவரால் வரிக்கப்பட்ட மஹர்ஷிகள் தர்மத்தில் ஆசையுள்ளவரான வஸுதேவருக்கு விதிப் படி அந்த க்ஷேத்திரத்தில் யாகம் செய்வித்தார்கள். இப்படி வஸுதேவர் யாகத்திற்காகத் தீக்ஷைசெய்யும் பொழுது விருஷ்ணிகளும் மற்ற அரசர்களும் ஸ்நானஞ் செய்து நல்ல வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு அலங்கரித்துக்கொண்டார்கள். அந்த வஸுதேவருடைய

பத்தினிகளும் நல்ல ஆபரணம் வஸ்திரம் இவைகளை யணிந்து குங்குமஞ்சேர்ந்த சந்தனம் பூசிக்கொண்டு உத்தம வஸ்துக்களை யெடுத்துக்கொண்டு தீக்ஷா சாலைக்கு வந்தார்கள். அப்பொழுது மிருதங்கம், படஹம், சங்கம், பேரி, ஆனகம் முதலிய வாத்யங்கள் கோஷிக்கப்பட்டன. நடர்களும் தாஸிகளும் நர்த்தனம் செய்தார்கள். ஸூதர்களும், மாகதர்களும் ஸ்தோத்திரஞ் செய்தார்கள். இனிமையான குரலுள்ள கந்தர்வ ஸ்திரீகளும் கந்தர்வர்களும்பாடினார்கள். அப்பொழுது ரித்விக்குகள் கண்களில் மையிடப்பட்டவரும் வெண்ணையால் பூசப்பட்டவருமான வஸுதேவருக்கு பதினெட்டு பத்னிகளுடன் தீக்ஷாபிஷேகம் செய்வித்தார்கள். அது நக்ஷத்திரங்களுடன் கூடிய ஸோமராஜனுக்கு அபிஷேகஞ் செய்தாற்போலிருந்தது.

இப்படி யாகதீக்ஷை பெற்றவரான வஸுதேவர் வளை, ஹாரம், பாதஸரம், குண்டலம், பட்டு இவை களாலலங்கரிக்கப்பெற்ற பத்னிகளால் சூழப்பட்டு மற்ற ஜனங்களுடன் பிரகாசித்தார். அவருடைய ரித் விக்குகளும், ஸதஸ்ஸியர்களும், மஹேந்திரனுடைய யாகத்திற்போல பட்டு முதலியவைகளை அலங்கரித்துக் கொண்டு விளங்கினார்கள். ஸகல ஜீவர்களுக்கு மதிபதியான ராமகிருஷ்ணர்களும் தங்களுடைய புத்திர, மித்திர, களத்திரம் முதலிய பந்துக்களாகிய தம்முடைய விபூதிகளுடன் பிரகாசித்தார்கள். இப்படி வஸுதேவர் ப்ரகிருதியாகம், விகிருதியாகம் இவைகளைச் செய்து ஒவ்வொரு யாகத்திலும் விதிப்படி த்ரவ்யம் (புரோடாசம் முதலியவை) மந்திரம், க்ரியை ஆகிய இவைகளுக்கு அதிபதியாகிய ஸ்ரீமந் நாராயணனைப் பூஜித்தார். மேலுமவர் சாஸ்திரத்தில் சொல்லியபடி

உசிதமான காலத்தில் ரித்விக்குகளை அலங்காரஞ் செய்து அவர்களுக்கு பசுக்கள், பூமி, கன்னிகை முதலிய உத்தமவஸ்துக்களைத் தக்ஷிணையாகக் கொடுத்தார். பின்பு ரித்விக்குகள் பத்னிஸம்யாஜம். அவபிருதம் இவைகளையனுஷ்டித்து யஜமானனை முன்னிட்டு பரசுராமனுடைய மடுவில் ஸ்நானஞ் செய்வித்தார்கள். இப்படி வஸுதேவர் அவபிருத ஸ்நானஞ்செய்து வந்திருக்கும் ஸ்திரீகளுக்கும் ஆபரணம் வஸ்திரம் இவைகளைக்கொடுத்து நாய் வரையிலுள்ள ஸகலப் பிராணிகளுக்கும் அன்னமளித்தார். பின்னுமவர் தம்முடைய பந்துக்களையும் அவர்களுடைய ஸ்திரீ களையும், புத்திரர்களையும் விதர்ப்பம், கோஸலம், குரு, காசி, கேகயம் இந்த தேசத்திலிருந்து வந்தவர்களையும் ஸதஸ்ஸியர்களையும், ரித்விக்குகளையும், தேவ கணங்களையும், பூதகணங்களையும், பிதிருக்களையும், சாரணர்களையும் அவரவர்களுக்கு இஷ்டமான வஸ்துக்களைக் கொடுத்து பூஜித்தார்.

அவர்களெல்லோரும் ஸ்ரீ கிருஷ்ணனிடம் விடை பெற்று யாகத்தைப்பற்றி ச்லாகித்துக்கொண்டு தங்கள் தங்கள் இருப்பிடஞ்சென்றார்கள். திருதராஷ்டிரர், விதுரர், தர்மபுத்திரர், பீமன், அர்ஜுனன், நகுல ஸஹதேவர்கள், பீஷ்மர், துரோணர், குந்தி, நாரதர், வ்யாஸர் ஆகிய இவர்கள் பந்துக்களைத்தழுவி அவர்களிடத்திலுள்ள பிரீதி விசேஷத்தால் அவர்களை விட்டுப் பிரிய மனமில்லாமல் ச்ரமப்பட்டுச் சென்றார் கள். கிருஷ்ணன், ராமன், வஸுதேவர், உக்ரஸேனர் முதலியவர்கள் நந்தரையும், மற்ற கோபர்களையும் மிக்க அன்புடன் பூஜித்ததால் அவர்களுடைய வேண்டு கோளின்படி அவர்கள் சிலகாலம் வஸித்தார்கள்.

61–69. இப்படி வஸுதேவர் மனோரதமாகிய ஸமுத்திரத்தை எளிதில் தாண்டி, மித்திரர்களால் சூழப்பட்டு, மிக்க ஸந்தோஷத்துடன் நந்தருடைய கையைப்பிடித்துக்கொண்டு "ஓ ஸஹோதர! ஸ்நேஹ மென்ற பாசமானது ஒருவராலும் தள்ளமுடியாதது. வீரர்களாலும் பலத்தால் அதனைப் பேதிக்கமுடியாது. யோகிகளானாலும் ஞானத்தால் அதனை நிவர்த்திக்க முடியாது. ஏனென்றால் மூடர்களான எங்களுக்கு விவேகிகளான நீங்கள் ஒப்பற்ற உபகாரத்தைச் செய்தீர்கள். அதற்கு பதிலுபகாரம் செய்ய முடியா விடினும் ஸ்நேஹபாசம் அதிகமாக விருக்கிறது; முந்தி நீங்கள் செய்த உபகாரத்திற்குப் பதிலுபகாரம் செய்ய நாங்கள் அசக்தர்களாகவிருந்ததனால் அதனைச் செய்யாமலிருந்தோம்; இப்பொழுது தன கர்வத்தால் குருடர்களாகவிருப்பதால் எதிரில் நிற்பவர்களைக்கூட தெரிந்துக்கொள்ளாமலிருக்கிறோம். க்ஷேமத்தை அடைய வேண்டுமென்ற விருப்பமுள்ளவனுக்கு ஐச்வர்யம் வேண்டாம்.

ஐச்வர்யத்தால் குருடனாகி ஸாதுக்களையும் பந்துக்களையும் லக்ஷியம் செய்கிறதில்லை" என்று சொல்லி நந்தர்செய்த உபகாரத்தை நினைத்து பிரீதியால் தழுதழுத்த மனமுள்ளவராகி கண்ணீரைப் பெருக்கி அழுதார். இப்படி நந்தர் யதுக்களால் பூஜிக்கப்பட்டு ராமகிருஷ்ணர்களுக்குப் பிரியத்தைச் செய்ய விரும்பி இன்றையதினம் பிரயாணம், நாளைய தினம் பிரயாணம் என்று சொல்லிக்கொண்டு மூன்று மாஸங்கள் அவ்விடத்திலேயே வஸித்தார். பின்பு வஸுதேவர், உக்கிரஸேனர், கிருஷ்ணன், உத்தவர், பலராமன் முதலியவர்கள் விலையுயர்ந்த ஆபரணம்,

பட்டு இவைகளைக் கொடுத்து நந்தரை பிரயாணப் படுத்தினார்கள். நந்தரும் மற்ற கோபர்களும், கோபிகை களும் ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதங்களில் அழுந்திய தங்கள் மனத்தை யெடுத்துக்கொள்ள முடியாதவர் களாகவே (பகவானுடைய பாதத்தைத் தியானஞ் செய்துகொண்டு) மதுரா நகரம் சென்றார்கள். பின்பு மிக்க மஹிமை பொருந்திய பாண்டு புத்திரர்களும், குந்திதேவியும் ஸ்ரீ கிருஷ்ணனிடம் விடைபெற்று கண்ணீரால் கண்டமடைத்து தழுதழுத்த பேச்சுள்ளவர்களாகி தங்கள் பரிவாரங்களுடன் இந்திர ப்ரஸ்தஞ் சென்றார்கள். இப்படி பந்துக்கள் ஈவரவர்களுடைய இருப்பிடஞ் சென்ற பிறகு கிருஷ்ணனையே தைவமாக்கொண்ட விருஷ்ணிகள் மழைக்காலம் வந்துவிட்டதால் த்வாரகா நகரஞ் சென்றார்கள். மேலுமவர்கள் தீர்த்தயாத்திரையில் பந்துக்களைப் பார்த்ததையும், வஸுதேவருடைய யாகத் தையும் பட்டினத்து ஜனங்களுக்குச் சொன்னார்கள்.

நோட்டு.

மேலும் அக்கினி– "எவன் வாக்கை ப்ரஹ்மமென்று உபாஸிக்கிறானோ, எவன் மனத்தை ப்ரஹ்மமென்று உபாஸிக்கிறானோ" ச்ருதி, பேதபுத்தியை– பேதகிருத: யென்ற பதத்தை ஆறாம் வேற்றுமையாக வைத்துக் கொண்டால் பேதபுத்தியுள்ள புருஷனுடைய பாபத்தை போக்கடிக்கிறதில்லையென்று அர்த்தம். கோபுரகழுதை– ஸாதுக்களை ஆத்மாவாகவும், பந்துக்களாகவும், தைவமாகவும், பரிசுத்தப்படுத்துகிறவர்களாகவும், நினைக்கவேண்டும். எவன் ஆத்மாவின் உண்மையை அறிந்த ஸாதுக்களை மேற்காட்டியவண்ணம் நினைக்க

வில்லையோ, அவன் கோபுரகழுதைபோல் சுமை சுமப்பவனாகிறான். பசுக்களுக்காக புல் முதலியவை களைச் சுமக்கும் கழுதையென்றும் சொல்லலாம். எருதுபோலும் கழுதைபோலும் என்றும் அர்த்தஞ் சொல்வதுமுண்டு. புத்திமயக்கமடைந்து– பகவானை ஸேவித்து மேலானவர்களாகியிருக்கும் நம்மை பகவான் தம்மைக்காட்டிலும் உயர்ந்தவர்களென்று சொல்லுகிறாரே இதன் அபிப்பிராயமென்னவென்று ப்ரமித்தார்கள். மூடர்களையும்– நாம் ஸாதுக்களைப் பூஜித்தால் மற்ற அஜ்ஞ ஜனங்களும், கிருஷ்ணனே ஸாதுக்களை யுபாஸிக்கிறார். ஆனதால் நாமும் ஸாதுக்களைப் பூஜிக்கவேண்டுமென்று நினைத்து ஸாதுக்களைப் பூஜிப்பார்களென்ற அபிப்பிராயத்தால் இப்படி சொல்லுகிறார் என்று கருத்து. ப்ரஜாபதி களுக்கு– ப்ரஹ்மதேவர் முதலியவர்களுக்கும் அதிபதி யான பகவான் நம்மைப்பார்த்து மூடர்களும் ஸத்கர்மங்களை அனுஷ்டிக்கட்டும் என்ற எண்ணத் தால் கர்மங்களைச் செய்கிறீர் என்றதை அறியாமல் மோஹிக்கிறோம். ஆத்மாவின் உண்மையை அறிந்தவர் களுக்குட் சிறந்தவர்களானாலும் நாங்கள் மோஹத்தை அடைவதும், நீர் எல்லாவற்றிற்கும் ஈச்வரனானாலும் கர்மத்தைச் செய்வதும் ஆச்சர்யமென்று கருத்து. வீரராகவீயம். பூமியானது– "மண் பெண்டதே ஸத்தியம். அதன் விகாரமும், பெயரும் உண்மையல்ல" என்ற ச்ருதியின்படி மண்ணால் குடம், மடக்கு முதலிய பலவஸ்துக்கள் செய்யப்பட்டாலும் குடம், மடக்கு யென்ற பெயர்களும், அதன் உருவங்களும் அவையுண் டாவதற்கு முந்தியுமில்லை; குடம் முதலியவைகளை உடைத்துவிட்டால் பிந்தியும் அந்த நாமரூபங்களில்லை. எப்பொழுதும் தொடர்ச்சியாகவிருப்பது மண்யென்ற

காரணமொன்றேயாம். அப்படிப் போல் காரணமாகிய ஈச்வரன் ஒருவரே ஸத்யவஸ்து. அதன் கார்யமாகிய நாமரூபங்கள் அஸத்யங்கள் என்று கருத்து. கர்ம ஸம்பந்த–ஜனங்களுடைய நடை எப்படி கர்மாதீனமோ அப்படி பகவான் கர்மத்திற்கு வசப்பட்டு சேஷ்டிப்ப தில்லை. அவருடைய சேஷ்டைக்கு அவருடைய இச்சையே காரணம். காரணமாகவிருக்கும்பொழுது ஒருவராகவும், கார்யமாகவிருக்கும்பொழுது அநேகராகவுமிருக்கிறார். அநேகரென்றால் பல பெயருள்ளவரென்றும், பல உருவங்களுள்ளவரென்றும் அர்த்தம். ஒருவரென்பதால் உபாதானகாரணமென்றும், படைக்கிறாரென்பதால் நிமித்த காரணமென்றும் காட்டப்பட்டது; ஆனாலும் கார்யத்திலுள்ள தோஷங்கள் பகவானிடத்தில் ஸம்பந்திக்கிறதில்லை வீரராகவீயம்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–85

கிருஷ்ணன் தாய்தந்தைகளுக்கு ஞானத்தையுபதேசித்தது.

ஒருகால் ராமகிருஷ்ணர்களிருவர்களும் வஸுதேவரிடஞ் சென்று அவரை நமஸ்கரித்தார்கள். அப்பொழுது வஸுதேவர் ராமகிருஷ்ணர்களுடைய மஹிமையைப்பற்றி மஹர்ஷிகள் சொன்ன வார்த்தையை நினைத்து, அதில் மிக்க ச்ரத்தையால் ராமகிருஷ்ணர்களை ச்லாகித்து அவர்களை நோக்கி "ஓ கிருஷ்ண! கிருஷ்ண! மஹாயோகியே! ஓ ஸங்கர்ஷண! இந்த லோகத்திற்குக் காரணர்களாகிய ப்ராதானம், புருஷன் இவர்களைவிட நீங்களிருவர் களும் மேலானவர்கள் என்பது எனக்குத் தெரியும். (அநேகஸாதனங்களாலுண்டாகும் ஜகத்திற்கு ப்ரதான புருஷர்கள் எப்படிக் காரணமாவார்கள். நாங்கள் அவர்களுக்கு எப்படி காரணர்களாக விருக்கக்கூடும் என்றால் அடுத்த ச்லோகத்தால் ஸமாதானஞ் சொல்லப்பட்டிருக்கிறது) எந்த விடத்தில் எதனால், எதனிடமிருந்து, ஏதற்கு, எதன் பொருட்டு, எது எப்படி உண்டாகிறதோ, அப்படிப்பட்ட இந்த ப்ரபஞ்சமானது உம்முடைய ஸ்வரூபம்; நீர் ப்ரதானம்; (போக்கியம்) புருஷன்; (போக்தா) இவர்களுக்கும் அதிபதியாகவிருக்கிறீர் (ஜகத்திற்கு பகவான் காரணமென்று காட்டப்பட்டது) ஓ ஸகல ப்ராணிகளுக்கும் ஆத்மாவாக விருப்பவரே! தம்மால் ஸிருஷ்டிக்கப்பட்டப் பலவகையான ஜகத்தில் தாமே ப்ரவேசித்து கிரியா சக்தியாகவும், ஜ்ஞானசக்தியாகவு மிருந்து காப்பாற்றுகிறீர். ஜகத்திற்குக் காரணங்களான

ஸமத்ராத்மா முதலியவைகளுடைய சக்திகளெல்லாம் பரமபுருஷராகிய உம்முடையதேயாம். பாணத்திற்குப் பிறரை அடிக்கக் கூடிய சக்தி இயற்கையல்ல. அது புருஷனுடையதேயாம். அதுபோல் பரமபுருஷனுடைய சக்தியால் ஸமத்ராத்மா முதலியவைகள் ஜகத்திற்குக் காரணங்களாகின்றனவேயொழிய அவைகளுக்கு ஸ்வயமாக சக்தியில்லை. ஏனென்றால் அவைகள் அசேதனங்கள். ஆத்மாவோ சேதனன். இவர்களுக்கு ஸாம்யமில்லை. ஆனதால் பரமபுருஷனுடைய சேஷ்டையால் அவை சேஷ்டிக்கின்றன. அதுவே அவைகளுக்கு சேஷ்டையென்று சொல்லப்படுகிறது. (ப்ராணன் முதலியவை ஸ்வயமான சக்தியுள்ளவை களல்லவென்று அடுத்த மூன்று ச்லோகங்களால் காட்டப்படுகிறது)

மேலும் சந்திரனுடைய காந்தியும், அக்னியின் தேஜஸ்ஸும், ஸூர்யனுடைய ப்ரபையும், நக்ஷத்திரங் கள், மின்னல் இவைகள் ப்ரகாசிப்பதும், மலைகள் அசையாமலிருப்பதும், பூமியின் வாஸனையும் உண்மையில் பகவானாகிய உம்முடைய ஸ்வரூபமே யாம். (அந்த ப்ரகாசத்தால் ஸூர்யன் ப்ரகாசிப்ப தில்லை. சந்திரனும், நக்ஷத்திரங்களும், மின்னல்களும் ப்ரகாசிக்கிறதில்லை. அப்படியிருக்க அக்னி எப்படி ப்ரகாசிக்கும்? அவர் ப்ரகாசத்தை அனுஸரித்தே எல்லாம் ப்ரகாசிக்கின்றன. அவருடைய காந்தியால் எல்லாம் ப்ரகாசிக்கிறது. என்று ச்ருதியில் சொல்லப் பட்டிருக்கிறது; ஸூர்யனிடத்திலிருக்கும் தேஜஸ்ஸானது எப்படி ஸகல ஜகத்தையும் ப்ரகாசிக்கச்செய்கிறதோ, அந்த தேஜஸ்ஸும், சந்திரனிடத்திலும் அக்னியிடத்தி லும் இருக்கும் தேஜஸ்ஸும் என்னுடையதென்று

தெரிந்துக்கொள்ளும், பகவத்கீதா.) ஓ தேவ! ஜலமும் அவைகளின் ரஸமும், பிறரைத் திருப்திசெய்யும் குணமும், ஜீவிக்கச்செய்யும் குணமும் உம்முடைய ஸ்வரூபம். பின்னும் வாயுவின் வேகம், பலம், சேஷ்டை, நடை ஆகிய இவைகளும் உம்முடையதே யாம்; மேலும் நீர் கிழக்கு முதலிய திக்குகளாகவும், அதன் அவகாசங்களாகவும் (வெளிகள்), ஆகாயமாகவும், அதனை ஆச்ரயித்த சப்தமாகவும், நாதமாகவும், ஓங்காரமாகவும், உருவங்களைத் தனித்தனியாகக் காண்பிக்கும் நாமதேயங்களாகவும் இருக்கிறீர். இந்திரியங்கள் தங்கள் தங்கள் விஷயங்களை ப்ரகாசிக்கச்செய்யும் சக்தியும் நீரே. அவைகளுக்கு அதிஷ்டான தேவதைகளும் நீரே; பின்னும் புத்தியின் வ்யவஸாய சக்தியும் (நிச்சயிப்பது) முந்தி நடந்த விஷயங்களை நினைக்கும் சக்தியும் நீரே; பூதங்களுக்குக்காரணமாகிய தாமஸ அஹங்காரமும், நீரே; இந்திரியங்களுக்குக் காரணமாகிய ராஜஸமான அஹங்காரமும் நீரே; அதிதைவம், அத்யாத்மம் என்று பலவகையாக கல்பிக்கப்படும் தேவர்களுக்குக் காரண மான ஸாத்விக அஹங்காரமும் நீரே; ஸம்ஸாரிகளான ஜீவர்களுக்கு ஸம்ஸாரத்தை யுண்டுபண்ணும் ப்ரதானமும் நீரே; மண்ணால் செய்யப்பட்ட குடம் முதலியவைகளும், ஸுவர்ணத்தால் செய்யப்பட்ட வளைமுதலிய ஆபரணங்களும் நஸித்தாலும் அவை களுக்குக் காரணமாகிய மண், தங்கம் இவைகள் எப்படி நாசமடையாமல் இருக்கின்றனவோ, அப்படி அழியக்கூடிய ஜகத்திலுள்ள பதார்த்தங்களில் நாச மற்றவராகிய பரமபுருஷன் சேர்ந்திருந்தாலும் அந்த வஸ்துக்கள் அழியும்பொழுது தாம் நாசமடையாமல் அவைகளுக்குக் காரணமாகவும், ஸத்தியராகவும்

இருக்கிறீர். மேலும் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்களும் அதன் விருத்திகளான, மஹத்தத்வம் முதலியவைகளும், பரப்ரஹ்மமாகிய உம்மிடத்தில் யோகமாயையால் கல்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆனதால் ஜகத்தில் காணப்படும் வஸ்துக்கள் யாவும் அநித்யங்களேயாம். அவைகள் உம்மிடத்திலிருப்பதாக எப்பொழுது கற்பிக்கப்படுகின்றனவோ அப்பொழுது அவைகள் உண்மை போல் தோன்றுகின்றன. நீரும் அவைகளில் ப்ரவேசித்தவர் போல் தோன்றுகிறீர். மற்றக்காலங்களில் ஒருவராகவும் விகல்பமில்லாதவரா கவும் இருக்கிறீர். இப்படிப்பட்ட ஸகல ஜகத் ஸ்வரூபியான உம்முடைய உண்மையை அறியாமல் (பரமாத்மா ப்ரபஞ்சத்தின் ஸம்பந்தம் இல்லை என்பதை) தேஹம் முதலியவைகளில் அபிமானத்தை யடைந்து அதனால் கர்மங்களை தாங்கள் செய்வதாக அபிமானித்து ஜீவர்கள் ஸம்ஸாரத்தை அடைகிறார்கள்.

ஸகல ஜகத்திற்கும் அதிபதியான ஓ பகவான்! இப்படி அஞ்ஞானத்தால் சுற்றிக்கொண்டிருக்கும் ஜீவர் களுக்கு மனிதஜன்மம் கிடைப்பதரிது. அதிலும் குருடு ஊமை இவையில்லாமல் எல்லா இந்திரியங் களுடன் நல்ல சரீரத்தை அடைவது அரிதிலும் அரிது. அப்படிப்பட்ட ஜன்மத்தை அடைந்தும், நான் உம்மு டைய மாயையால் மோஹித்து உம்மை த்யானிக்காமல் காலத்தை வீணில் கழித்தேன். க்ஷேமத்தைக்கொடுக்கும் உபாயத்தைச் செய்யத்தவறினேன். மேலும் நீர் தேஹத்தை நான் என்றும், புத்திரன், களத்திரம் முதலியவைகளை தன்னைச் சார்ந்தவர்களென்றும் நினைப்பதாகிய ஸ்நேஹபாசத்தால் இந்த ஜகத்தைக் கட்டுகிறீர். (நான் உம்மை ஸேவியாமல் ஸம்ஸாரியாக

விருப்பதற்கும் உம்முடைய மாயையே காரணமென்று தாத்பர்யம்) ராமகிருஷ்ணர்களான நீங்களிருவர்களும் எங்களுடைய புத்திரர்களில்லை. பூமிக்குச் சுமையாக விருக்கும் அரசர்களைக் கொல்வதற்காக அவதரித்த ப்ரதான புருஷர்கள். இந்த விஷயம் உம்மாலேயே சொல்லப்பட்டிருக்கிறது; துக்கமடைந்தவர்களைக் காப்பாற்றுபவரான ஓ கிருஷ்ண! "இந்திரிய விஷயங் களில் ஆசை கொண்டு சரீரத்தை ஆத்மாவென்று நினைத்துப் பரம புருஷராகிய உம்மை புத்திரன் என்று நினைத்துத்தவறிப்போனது போதும், உம்முடைய பாதத்தைச் சரணமடைகிறேன், அது பக்தர்களுடைய ஸம்ஸாரத்தை நிவர்த்திக்கக்கூடியது. பெரியோர்களால் கானஞ்செய்யக்கூடியவரே! "நான் ஒவ்வொரு யுகத்திலும் தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக அவதாரங்களைச் செய்கிறேன். இப்பொழுது உங்களுக்கு புத்திரனாக அவதரித்திருக்கிறேன்" என்று ப்ரஸவகிருஹத்தில் சொன்னீரல்லவா? அப்படிப்பட்ட நீர் ஆகாயம்போல் ஒன்றில் ஸம்பந்திக்காதவரானாலும், உத்பத்தியற்றவரா னாலும் அவதரிக்கிறீர். ஆனதால் உம்முடைய மஹிமையை யாரால் அறியமுடியும்?" என்றார்.

21–25. அதனைக்கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் மிக்க வணக்கத்துடன் "ஓ அண்ண! உம்முடைய புத்திரனா கிய என்னை யுத்தேசித்து இப்படிச் சொல்லுவது பொருந்துமா? ஆனாலும் என்னை நிமித்தமாக வைத்துக்கொண்டு ஆத்மாவின் உண்மையை ஜகத்திற்குத் தெரியும்படி சொன்னீர். மேலும் நான் நீங்கள், இந்த பலராமன், இந்த த்வாரகா வாஸிகளான ஜனங்கள் ஆகிய சராசரங்களடங்கிய ஜகத்முழுவதும்

பரப்ரஹ்மஸ்வரூபமென்று நீர் நினைக்க வேண்டும். ஆகாயம் முதலிய பூதங்கள் அதன் கார்யமான குடம் முதலியவைகளில் எப்படித் தோன்றுகின்றனவோ, மறைகின்றனவோ, அப்படி இந்த ஆத்மாவும் தம்மால் ஸிருஷ்டிக்கப்பட்ட ஜகத்தில் பலவகையாகத் தோன்றுகிறார். ஆனாலும் ஆத்மா ஒருவர் ப்ரபஞ்சம் பலவகையானது. ஆத்மா தாமாக ப்ரகாசிப்பவர்; ஜகத் மற்ற ப்ரகாசத்தால் ப்ரகாசிக்கக்கூடியது? ஆத்மா நித்யவஸ்து, ஜகத் அனித்யமானது. ஆத்மா குண ஸம்பந்தமில்லாதவர் ப்ரபஞ்சம் குணமுள்ளது" என்று சொன்னார். அதனைக்கேட்ட வஸுதேவர் பேதபுத்தி யற்றவராகி மிக்க ப்ரியமடைந்து மௌனமாகவிருந்தார்.

26–32. அப்பொழுது ஸகல தேவதாஸ்வரூபியாகிய தேவகியானவள் "கிருஷ்ணன் ஆசார்யருடைய புத்திரனை யமலோகத்திலிருந்து திருப்பிக்கொண்டு வந்தார்" என்பதைக் கேள்விப்பட்டு அவ்விடம் வந்து மிக்க ஆச்சர்யமடைந்து கம்ஸனால் கொல்லப்பட்டத் தமது குழந்தைகளை நினைத்து கண்ணீரைப்பெருக்கி ராமகிருஷ்ணர்களை அழைத்து "ஓ பலராம! ராம! அளவற்ற மஹிமையுள்ளவரே! யோகேசர்களுக்கு மதிபதியாகிய ஸ்ரீ கிருஷ்ண! உங்களை ப்ரஜாபதிகளுக் கும் அதிபதிகளென்றும், ஆதி புருஷர்களென்றும் அறிவேன். நீங்கள் காலத்தின் மஹிமையால் சாஸ்திர விரோதமாக நடக்கும் அரசர்களைக்கொன்று பூமியின் சுமையை நிவர்த்திப்பதற்காக அவதரித்தவர்கள். ஓ ஜகத்ஸ்வரூபியே! உம்முடைய அம்சமாகிய புருஷனு டைய அம்சம் மாயை அதன் ஸ்வல்ப பாகத்தால் ஜகத் படைக்கப்படுகிறது; காப்பாற்றப்படுகிறது; ஸம்ஹரிக்கப்

படுகிறது; அப்படிப்பட்ட உம்மைச் சரணமடைகிறேன். வெகுகாலத்திற்கு முன் மரணமடைந்து யமலோகத்திலிருந்த குருவின் குழந்தையை ஆசார்யனுக்கு தக்ஷிணையாக கொடுத்தீர்களல்லவா? அதுபோல கம்ஸனால் கொல்லப்பட்ட என்னுடைய குழந்தைகளை திருப்பிக் கொண்டு வரவேண்டும்" என்று கேட்டாள்.

33–46. இப்படி மாதாவினால் தூண்டப்பட்ட ராமகிருஷ்ணர்கள் யோகமாயையின் மஹிமையால் ஸுதலலோகஞ்சென்றார்கள். அவ்விடத்திலிருந்த பலி சக்கிரவர்த்தி ஸகல ஜகத்திற்கும் தைவமும், தனக்கு முக்கிய தைவமுமான ஸ்ரீ கிருஷ்ணனைக்கண்டவுடன், ஆஸனத்திலிருந்து எழுந்திருந்து அதிக ஆனந்தத்தால் பூர்ணமான ஹிருதயமுள்ளவனாகிய தன்னுடைய பந்துக்களுடன் பகவானை நமஸ்கரித்தான்.

மேலுமவன், உத்தமமான ஆஸனங்கொடுத்து அவர்களை உட்கார்ச்செய்தான். பின்னுமவன் அவர்களுடைய பாதங்களை அலம்பி அந்த ஜலத்தை தன்னுடைய தலையில் புரோக்ஷித்துக் கொண்டது மன்றி தன்னுடைய பரிவாரங்களுக்கும் புரோக்ஷித்தான். அந்த பாததீர்த்தமானது ப்ரஹ்மதேவர் வரையிலுள்ள ஸகல ஜகத்தைப் பரிசுத்தப்படுத்தப்படுத்தக்கூடியது. இன்னுமந்த பலி சக்கிரவர்த்தி உத்தமமான வஸ்திரம், ஆபரணம், சந்தனம், புஷ்பமாலை, தூபம், தீபம், பக்ஷணங்கள் ஆகிய இவைகளையும், தன்னுடைய பணம், பந்துக்கள், சரீரம், முதலியவைகளையும் ஸமர்ப்பித்தும் பகவானைப் பூஜித்தார். அதன்பின்பு பலிசக்கிரவர்த்தி மிக்கப்ரீதியுடன் பகவானுடைய பாதங்களை த்யானஞ்செய்து மயிர்கூச்சலுள்ளவராகி

ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி தழுதழுத்த வார்த்தையுடன் "அனந்தரும்(ஆதிசேஷன்) எல்லாவற்றிலும் பருத்தவரும் (தம்முடைய படத்தின் ஒரு பக்கத்தில் ஸகல பூமியைத் தாங்குவதால்) எப்பொழுதும் ஆனந்த ஸ்வரூபியும், ஜகத்தைப்படைப்பவரும், ஸாங்கியம், யோகம், யாகம் இவைகளின் ஸ்வரூபியும், பரமாத்மாவும், பரப்ரஹ்மமுமான உம்மை நமஸ்கரிக்கிறேன். உங்களுடைய தர்சனம் பிராணிகளுக்குக் கிடைப்பது அரிதானாலும் ரஜஸ், தமஸ் இந்த ஸ்வபாவமுள்ளவர்களான எங்களுக்கு உம்முடைய அனுக்ரஹத்தால் கிடைத்தது. நீர் சுத்த ஸத்யஸ்வரூபி; சாஸ்திரத்தால் அறியக்கூடியவர்; அப்படிப்பட்ட உம்மிடத்தில் சிலதைத்யர்களும், தானவர்களும், கந்தர்வர்களும், ஸித்தர்களும், வித்யாதர்களும் உரகர்களும் யக்ஷர்களும், ராக்ஷஸர்களும், பிசாசர்களும், பூதங்களும், ப்ரமதகணங்களும், நாங்களும், மற்றுஞ்சிலர்களும் விரோதபுத்தியைவைத்து ஸாலோக்யம், ஸாமீப்யம், ஸாரூப்யம், ஸாயுஜ்யமென்ற உத்தமகதியை அடைந்தார்கள். (பகவானிடத்தில் விரோதத்தால் எப்பொழுதும் அவரையே த்யானஞ்செய்துகொண்டிருந்தமையால் பக்தர்களை விட மேலானகதியை அடைந்தார்களென்று கருத்து)

ஓ தாமரைமலர் போன்ற கண்களுள்ளவரே! எண்ணமே அவரவர்களுடைய க்ஷேமத்திற்குக் காரணமாகிறது. சிலர் (சிசுபாலன் முதலிய விரோதபுத்தியாலுண்டான பக்தியால் உம்முடைய ஸ்வரூபத்தை அடைந்தார்கள். சிலர் (கோபிகை முதலியவர்கள்) பகவானை பார்த்தாலென்று நினைத்து பக்திசெய்து உத்தமகதியை அடைந்தார்கள். ஸத்வகுணமுள்ள தேவர்களும் அவர்கள்போல் அந்தரங்க

பக்தர்களாக விருக்கவில்லை. ஓ யோகேசர்களுக்கு அதிபதியே யோகிகளாலும் உம்முடை யோகமாயை யின் ஸ்வரூபம் இது இம்மாதிரியென்று கண்டுபிடிக்க முடியவில்லை. அப்படியிருக்க எங்களால் எப்படி தெரிந்துகொள்ள முடியும்? ஒன்றிலும் ஆசைப்படாத வர்களான உம்முடைய பாதாரவிந்தத்தைத்தேடுகிறார் கள். அதனைவிட்டு கிருஹமாகிய பாழுங்கிணற்றில் நான் விழுந்திருக்கின்றேன். அப்படிப்பட்ட நான் அதிலிருந்து வெளியில்வந்து மரங்களுடைய விழுந்திருக்கும் பழங்களைப்புஜித்து சாந்தமனமுள்ள வனாகி ஒருவனாக ஸஞ்சரிக்கும்படியாவது, பெரியோர்களுடன் சேர்ந்து ஸஞ்சரிக்கும்படியாவது அனுக்ரஹிக்க வேண்டும். ஓ ஸகல ஜீவர்களுக்கும் அதிபதியாக விருப்பவரே! எதனை ச்ரத்தையுடன் அனுஷ்டித்தால் விதி நிஷேதங்களுக்குக் கட்டுப்படாம லிருப்பேனோ, அதனைச்சொல்லவேண்டும். என்னை பாபமற்றவனாகச் செய்யவேண்டும்" என்று ப்ரார்த்தித்தான்.

47–52. அதனைக்கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் பலியைநோக்கி "ஸ்வாயம்புவமன்வந்தரத்தில் மரீசி யென்ற ப்ரஜாபதிக்கு ஊர்ணா யென்பவளிடத்தில் ஆறு புத்திரர்கள் பிறந்தார்கள். பின்பு ஒரு ஸமயம் ப்ரஹ்மதேவர் தம்முடைய புத்திரியினிடம் ஆசை கொண்டு அவளைப் புணருவதற்கு முயற்சித்தார். அதனைக் கண்ணுற்ற மரீசியின் புத்திரர்கள் பரிஹாஸஞ்செய்தார்கள். அந்தப் பாபத்தால் அவர்கள் அஸுரஜன்மத்தை அடைந்து ஹிரண்யகசிபுவிற்கு புத்திரர்களாக ஜனித்தார்கள். அவர்களே யோக மாயையால் தேவகியின் கர்ப்பத்தில் ஜனித்து கம்ஸனால்

கொல்லப்பட்டார்கள் இப்பொழுது தேவகி அந்தக் குழந்தைகளை நினைத்து துக்கப்படுகிறாள். அவர்கள் உன்னுடைய ஸமீபத்திலிருக்கிறார்கள். மாதாவான தேவகியின் துக்கத்தை நிவர்த்திப்பதற்காக இந்தக் குழந்தைகளை அழைத்துப்போகவேண்டும். ஸ்மரன் உத்கீதன், பரிஷ்வங்கன், பதங்கன், க்ஷுத்திரபூ, கிருணி யென்ற ஆறு புத்திரர்களும் என்னுடைய அனுக்ரஹத் தால் சாடமோக்ஷத்தை அடைந்து கவலையற்றவர்களாகி தங்களுடைய லோகத்தை அடைந்து திரும்பவும் உத்தமகதியை அடைவார்கள்" என்று சொன்னார். அதனைக்கேட்ட பலிசக்கிரவர்த்தி அவ்விருவர்களையும் பூஜித்தான். அதன்பின் ராமகிருஷ்ணர்கள் அந்தக் குழந்தைகளை அழைத்துக்கொண்டு திரும்பவும் த்வாரகா நகரம் வந்து மாதாவினிடம் ஸமர்ப்பித்தார்கள்.

53–56. தேவகி அந்தக்குழந்தைகளைக் கண்டு மிகவும் ஸந்தோஷத்தை அடைந்து அடிக்கடி உச்சியில் முகர்ந்தாள். அவளுடைய ஸ்தனங்களில் பால் பெருகியது. மேலும் அவள் குழந்தைகளைத் தழுவி மடியில் வைத்து ஸ்தன்யபானஞ் செய்வித்தாள். எதனால் லோகம்ஸிருஷ்டிக்கப்படுகிறதோ, அப்படிப் பட்ட பகவானுடைய மாயையால் மோஹித்து தேவகி புத்திரர்களிடம் விசேஷ ப்ரியம் வைத்திருந்தாள். அந்தக் குழந்தைகள் தேவகியின் ஸ்தன்யத்தைப் பானஞ் செய்தன. கிருஷ்ணன் புஜித்து எஞ்சியதானதால் அமிருதமல்லவா; அதனை புஜித்ததாலும், ஸ்ரீ கிருஷ்ணனுடைய திவ்ய சரீர ஸ்பர்சத்தாலும் "நாம் தேவர்கள். சாபத்தால் பூமியில் ஜனித்தோம்" என்ற ஞானத்தை அடைந்து ஸ்ரீ கிருஷ்ணன் பலராமன் தேவகி ஆகிய இவர்களை நமஸ்கரித்து ஸகல

ப்ராணிகளும் பார்த்திருக்கும்பொழுது ஆகாயமார்க்க மாக தங்களுலகஞ் சென்றனர். இம்மாதிரியாக மரணமடைந்த புத்திரர்கள் திரும்பிவந்து ஆகாயஞ் சென்றது இவைகளைக் கண்ணுற்ற தேவகி 'இது ஸ்ரீகிருஷ்ணனால் செய்யப்பட்ட மாயையென்று நினைத்து ஆச்சர்யமடைந்தாள். ஓ பரதவம்சத்திய மஹாராஜா! அனந்தராகிய பகவான் இம்மாதிரி அத்புதமான செய்கைகளைச் செய்திருக்கிறார். அவைகள் கணக்கிட முடியாதவைகள்" என்று சுகர் சொன்னார்.

57–59. வ்யாஸ மஹர்ஷியின் புத்திரராகிய சுகரால் பரீக்ஷித்துக்கு உபதேசிக்கப்பட்ட இந்த ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதம் ஸகல ஜனங்களுடைய பாபத்தைப் போக்கக்கூடியது; பக்தர்களால் ப்ரீதியுடன் கேட்கக்கூடியது. அப்படிப்பட்ட அம்ருதகீர்த்தியான பகவானுடைய சரித்திரத்தை எவன் படிக்கிறானோ எவன் பிறருக்குச் சொல்லுகிறானோ, அவன் பகவானி டத்திலேயே சித்தத்தைச் செலுத்தி க்ஷேமத்திற்கு இருப்பிடமான (பயமற்ற) பதத்தை அடைவான்.

♣ ♣ ♣ ♣

அத்தியாம்–86

அர்ச்சுனன் சுபத்திரையை அபகரித்தது

பரீக்ஷித்து மகாராஜன் சுகரை நோக்கி, "ஓ ப்ராஹ்மண! ராம கிருஷ்ணர்களுக்குச் ஸஹோதரியும், எனக்குப் பிதாமகியுமான சுபத்திரையை அர்ச்சுனர் எப்படி அபகரித்தார்? அதனைச் சொல்ல வேண்டும்" என்றார்.

2–13. அதனைக்கேட்ட சுகர் அரசனை நோக்கி "அர்ஜுனன் தீர்த்த யாத்திரை செய்துவரும்பொழுது பூமியில் ஸஞ்சரித்துப் ப்ரபாஸ தீர்த்தஞ் சென்றான். அவ்விடத்தில் தமக்கு அம்மானுடைய புத்திரியாகிய ஸுபத்திரை என்பவளைப் பலராமன் துர்யோதன னுக்கு விவாஹஞ் செய்விக்க முயற்சிப்பதாகவும், மற்ற பந்துக்கள் அதற்கு சம்மதிக்கவில்லை என்றும் கேள்விப்பட்டு அவளைத் தாம் கல்யாணம் செய்து கொள்ள விரும்பி, ஸன்னியாசி வேஷம்பூண்டு, திருதண்டத்தை (மூன்று கழிகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டிவைத்துக் கொள்ளும் தண்டம்) தரித்து, த்வாரகா நகரஞ்சென்றான். அவ்விடத்தில் பட்டணத்து ஜனங்களும் பலராமனும் உண்மையான ஸன்னியாசியென்று நினைத்துப் பூஜித்தார்கள். இப்படி ஜனங்களால் பூஜிக்கப்பட்டுத் தமது கார்யத்திற்காக வர்ஷாகாலத்தை அவ்விடத்தில் கழித்து வந்தார். ஒரு நாள் பலராமன் ஸன்னி யாஸியை தம்முடைய கிருஹத்திற்கு அழைத்து வந்து, சிரத்தையுடன் பிக்ஷை செய்து வைத்தார். அதனை அர்ஜுனன் ஒப்புக்கொண்டு அவருடைய கிருஹத்தில்

போஜனஞ் செய்தான். அப்பொழுது அந்த ஸன்னியாசி, அந்த பலராமனுடைய கிருஹத்தில் ஸுபத்ராயென்ற அழகிய பெண்ணைக்கண்டார். அவளைப் பார்த்தவுடன் அவளிடத்திலுள்ள ப்ரீதியால் கண்கள் மலர்ந்து, மனங்கலங்கி அவளிடம் ஆசைப்பட்டார். அந்தப் பெண்ணும் ஸ்திரீகளுடைய மனத்தை அபஹரிக்கக்கூடிய அந்த ஸன்னியாஸியின் சரீரத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு வெட்கத்துடன் கடாக்ஷித்து அவரையே மனதில் த்யானஞ் செய்து, அவரையே பார்த்துக் கொண்டு அவர் மீது காதல் கொண்டாள். அர்ஜுனன் மிகவும் காமவெறி கொண்டு மனங்கலங்கி, அவளையே நினைத்துத் துக்கப்பட்டுக்கொண்டிருந்ததுமின்றி, அவளை அபஹரிப்பதற்கும் ஸமயத்தை எதிர்பார்த்திருந்தார்.

இப்படியிருக்கும் ஸமயத்தில் ஒரு நாள் தேவதா தரிசனஞ் செய்வதற்காக எல்லோரும் வாஹனத்தின் மீதேறி வெளியில் வந்தார்கள். அந்தச் ஸமயத்தில் வஸுதேவர், தேவகி, கிருஷ்ணன் இவர்களுடைய அனுமதியால் அர்ஜுனன் ரதத்தின் மீதேறி ஸுபத்ரையை அபஹரித்து, அதற்குத் தடை செய்தவர்களை பாணங்களால் அடித்துத் துரத்தித் தமது நகரஞ் சென்றார். அது சிங்கம் மற்ற மிருகங்களை ஜயித்துத் தன்னுடைய பாகத்தை எடுத்துக் கொண்டாற் போலிருந்தது. பின்பு அதனைக் கேட்ட பலராமன் பர்வகாலத்தில் ஸமுத்திரங் கலங்குவது போல மிக்க கோபங்கொண்டார். அதனைக் கண்ணுற்ற ஸ்ரீ கிருஷ்ணன் பலராமனுடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டு ஸமாதானஞ் செய்தார். மற்ற பந்துக்களும் பலராமனுக்கு நல்ல வார்த்தை சொன்னார்கள்.

அதனால் பலராமனுடைய கோபம் தணிந்தது. பின்பு பலராமன் ஸந்தோஷத்துடன் யானை, குதிரை, ரதம், வேலைக்காரிகள் மிகுந்த தனம் முதலியவைகளை ஸ்திரீதனமாக அனுப்பினார். அதனால் யாதவர்களும் பாண்டவர்களும் விசேஷப் ப்ரீதியுள்ளவர்கள் ஆனார்கள்.

14–38. ஸ்ரீகிருஷ்ணன் பக்தர்களிடத்தில் மிகவும் பிரியத்தைக் காண்பித்த மற்றொரு சரிதத்தைச் சொல்லுகிறேன், கேளும்; கிருஷ்ணனுக்கு ச்ருததேவ ரென்ற ஒரு ஸ்நேஹிதர் உண்டு. அவர் கிருஷ்ணனிடத்தில் எப்பொழுதும் பக்திசெய்து, அதனால் விஷயங்களில் ஆசையில்லாமல் சாந்தியை அடைந்தவர்; மிக்க விவேகமுள்ளவர். தைவச் செயலாகக் கிடைத்த அன்னத்தைக்கொண்டு தம்முடைய கார்யத்தை முடித்துக்கொண்டு, சரீரம் நசிக்காமலிருப்பதற்கு எவ்வளவு அன்னம் வேண்டுமோ அவ்வளவைப் புஜித்துக்கொண்டும், அதிகமாக ஆசைப்படாமல் வேதத்திற் சொல்லிய கர்மங்களை அனுஷ்டித்துக் கொண்டும், மிதிலா நகரத்தில் க்ருஹஸ்தராக வஸித்து வந்தார். அப்படியே அந்த தேசத்து அரசனாகிய 'பஹுளாச்வர்' என்பவரும் அஹங்காரமற்றவராகி கிருஷ்ண பக்தராக இருந்தார். அவ்விருவர்களையும் அனுக்கிரஹிப்பதற்காக பகவான் தாருகனால் கொண்டு வரப்பட்ட ரதத்திலேறி மிதிலா நகரஞ் சென்றார். அப்பொழுது நாரதர், வாமதேவர், அத்ரி, வ்யாஸர், பரசுராமன், அஸிதர், அருணர், சுகராகிய நான், பிரஹஸ்பதி, கண்வர், மைத்ரேயர், ச்யவனர் முதலிய மஹர்ஷிகளும் கிருஷ்ணன் பின் சென்றார்கள். ஸூர்யன் உதயமாகும் பொழுது

ஜனங்கள் அர்க்கியத்தைக் கையிலெடுத்துக் கொண்டு எழுந்திருந்து பூஜிப்பது போல தேசத்து ஜனங்களும் பூஜாத்ரவியங்களை கையில் வைத்துக்கொண்டு பூஜித்தார்கள். மேலும் ஆனர்த்தும், குரு, ஜாங்கலம், வங்கம், மத்ஸ்யம், பாஞ்சாலம், குந்தி, மது, கேகயம், கோஸலம், அர்ணம் ஆகிய தேசத்துப் புருஷர்களும், ஸ்திரீகளும் மற்றவர்களும் மேலான சிரிப்புள்ளதும், அழகான கண்களுள்ளதுமான ஸ்ரீ கிருஷ்ணனுடைய முகத்தை மிக்க ஆவலுடன் பார்த்தார்கள் அப்பொழுது பகவான் தம்மைத் தர்சித்ததால் அஞ்ஞானம் அற்றவர்களான அந்த ஜனங்களுக்கு தத்துவஞானத்தை உண்டு பண்ணிக் கொண்டும், பாபத்தைப்போக்கக் கூடிய தமது கீர்த்தியைத் தேவர்களும் மனிதர்களும் கான்ஞ்செய்ய அதனைக் கேட்டுக் கொண்டு மெள்ள மெள்ள விதேஹ தேசஞ் சென்றார்.

இப்படிப் பகவான் வருகிறதை கேள்விப்பட்டு மிதிலா நகரத்தில் வஸிக்கும் ஜனங்கள் பூஜைக்குரிய ஸாமக்ரிகளை எடுத்து எதிரில்வந்து அழைத்தார்கள். மேலும் அவர்கள் உத்தமச்லோகராகிய ஸ்ரீகிருஷ்ணனை தர்சித்து. தலையில் கைகளை கூப்பி நமஸ்கரித்தது மின்றி முந்தி கேள்விப்பட்ட அந்த மஹர்ஷிகளுக்கும் நமஸ்காரஞ் செய்தார்கள். அப்பொழுது அந்த தேசத்து அரசனாகிய பஹுளாச்வரரும், ச்ருத தேவரும் தங்களை அனுக்கிரஹிப்பதற்காகவே பகவான் வந்திருக்கிறா ரென்று நினைத்து அவருடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தார்கள். மேலும் அஞ்ஜலி செய்து ஸ்ரீ கிருஷ்ணனையும் மற்ற மஹர்ஷிகளையும் தங்கள் கிருஹத்திற்கு வந்து ஆதித்தியத்தை பெற்றுக்கொள்ள

வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். ஸ்ரீகிருஷ்ணன் அவர்களுடைய அபிப்பிராயத்தை அறிந்து, அவர் களுக்குப் பிரியத்தைச் செய்யவிரும்பி அவ்விருவர்கள் கிருஹத்திலும் இரண்டு ஸ்வரூபத்துடன் ப்ரவேசித்தார். ச்ருத தேவருடைய கிருஹத்திற்குப் பகவான் சென்றது பஹுளாச்வருக்கு தெரியாது. பஹுளாச்வருடைய கிருஹத்திற்கு பகவான் சென்றது ச்ருததேவருக்குத் தெரியாது. அப்பொழுது பஹுளாச்வர் தம்முடைய கிருஹத்திற்கு வந்த மஹர்ஷிகளை உத்தமமான ஆஸனத்தில் உட்கார வைத்தார். அஸத்துக்களால் அந்த மஹர்ஷிகளுடைய பெயர்கள் கூடக் கேட்க முடியாதவை. மேலும் அந்த அரசன் மிக்க பக்தியுடன் மனத்தில் ஸந்தோஷத்தை அடைந்து ஆனந்தக் கண்ணீரைப்பெருக்கி, அவர்களை நமஸ்கரித்து, அவர்களுடைய பாதங்களை அலம்பி, லோகத்தைப் பரிசுத்தப்படுத்தக் கூடிய அந்த ஜலத்தைத் தம் குடும்பத்தினர் மீதும், தம் தலையிலும் புரோக்ஷித்துக் கொண்டார்.

பின்னும் சந்தனம், புஷ்பம், வஸ்திரம், ஆபரணம், தூபம், தீபம், அர்க்கியம், பசுக்கள், விருஷபம் ஆகிய இவைகளால் ஈசுவரனுக்கு ஒப்பான அந்த மஹர்ஷி களைப் பூஜித்து ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதங்களை மடியில் வைத்துப் பிடித்துக்கொண்டு ஸந்தோஷத் துடன் "ஓ ப்ரபுவே! நீர் ஸகல பிராணிகளுக்கும் ஆத்மாவாகவும், ஸாக்ஷியாகவும், தாமாகப் பிரகாசிப் பவராகவும் இருக்கிறீர். அப்படிப்பட்ட உம்முடைய பாதாரவிந்தத்தை ஸ்மரித்துக்கொண்டிருந்த எங்களுக்குத் தர்சனங்கொடுத்தீர். உமக்கு அனந்தன் பந்துவாயிருந்தும், லக்ஷ்மீதேவி பத்னியாக இருந்தும்,

ப்ரஹ்மதேவர் புத்திரனாக இருந்தும் நீர் உம்முடைய வார்த்தையை மெய்ப்பிக்கச் செய்வதற்காக என் கண்ணுக்குப் புலப்பட்டீர். ஒரு விஷயத்திலும் ஆசையில்லாமல் சாந்தர்களாக இருக்கும் முனிவர்களுக்கு நீர் ஆத்மானந்தத்தைக் கொடுப்பவர். அப்படிப்பட்ட உம்முடைய உண்மையை அறிந்த எவன் உம்முடைய பாதத்தைச் ஸேவிக்காமல் விடுவான்? (ஒருவனும் விடமாட்டானென்று கருத்து.) நீர் ஸம்ஸாரிகளான ஜனங்களை அதிலிருந்து காப்பாற்றுவதற்காக யதுவம்சத்தில் அவதரித்து, ஸகல ஜனங்களுடைய பாபத்தை நிவர்த்திக்கக் கூடிய அற்புதமான செய்கைகளைச் செய்து கீர்த்தியைப் பரவச் செய்தீர் ஸ்ரீகிருஷ்ணனும், தடையற்ற ஞானமுள்ளவரும், நாராயண மஹர்ஷியாக அவதரித்துத் தபஞ் செய்பவருமான உமக்கு நமஸ்காரம். ஓ மிக்க மஹிமை பொருந்தியவரே! சில நாள் என்னுடைய கிருஹத்தில் இந்த மஹர்ஷிகளுடன் வஸித்து உம்முடைய பாததூளியால் இந்த நிமி வம்சத்தைப் பரிசுத்தப் படுத்தும்" என்று கேட்ட பஹுளாச்வரால் பிரார்த்திக்கப் பெற்ற பகவான் மிதிலையிலுள்ள மனிதர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் ஆனந்தத்தைக் கொடுத்து அவ்விடம் வஸித்தார்.

39–50. ச்ருததேவரும் தமது கிருஹத்திற்கு வந்த ஸ்ரீ கிருஷ்ணனையும். மஹர்ஷிகளையும் நமஸ்கரித்து மிக்க ஸந்தோஷத்துடன் வஸ்திரத்தை உயர எறிந்து பிடித்து நர்த்தனஞ் செய்தார். மேலும் அவர் பஹுளாச்வர் போலப் பலகை, தர்ப்பம், திருணம் முதலிய ஆஸனங்களில் அவர்களை உட்காரவைத்து. நல்வரவாவென்று கேட்டு, பத்னியுடன் நமஸ்கரித்து

அவர்களுடைய பாதங்களை அலம்பினார். அந்தத் தீர்த்தத்தால் தம்முடைய பந்துக்களுக்கு ஸ்நானஞ் செய்வித்ததுமின்றி தாமும் ஸ்நானஞ் செய்தார். ஸகல மனோரதங்களையும் அடைந்தவன் போல் மிக்க ஆனந்தங்கொண்டார். பின்னுமவர் பழங்கள், பூஜா திரவியங்கள், விளாமிச்சம்வேர், வாஸனையுள்ள தீர்த்தம், கஸ்தூரி முதலிய வாசனாத்ரவ்யம், துளசி, தர்ப்பம், தாமரை மலர், ஸத்வ குணத்தை விருத்தி செய்யக்கூடிய அன்னம் ஆகிய இவைகளைக்கொண்டு பூஜித்தார். அவைகள் பிறரை உபத்திரவிக்காமல் ஸம்பாதிக்கபட்டவைகள்; "ஸ்ரீகிருஷ்ணனுடைய ஸ்வரூப பூதர்களும் ஸகல தீர்த்தங்களையும் சுத்தப்படுத்தக் கூடிய பாத தூளியுள்ளவர்களுமான இவர்களின் சேர்க்கை, கிருஹமாகிய பாழுங்கிணற்றில் விழுந்து ஸம்ஸாரியாக இருக்கும் எனக்கு எப்படிக் கிடைக்கக் கூடும்" என்று தனக்குள் யோசித்து, ஸுகமாக உட்கார்ந்திருக்கும் அவர்களிடம் பத்னி, புத்திரன், பந்துக்கள் இவர்களுடன் சென்று, அவர்களுடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டு, "எப்பொழுது நீர் இந்த ஜகத்தை ஸத்வம் முதலிய உம்முடைய சக்திகளால் படைத்து அதில் பிரவேசித்தீரோ, அப்பொழுதே நம்முடைய கண்ணுக்குப் புலப்பட்டீர். அப்படிப்பட்ட பரம புருஷனாகிய நீர் இப்பொழுது தர்சனங் கொடுத்தீர். படுத்துத் தூங்கும் புருஷன் மனத்தாலும் தன்னுடைய அவித்யையாலும் ஸ்வப்ன லோகத்தை ஸிருஷ்டித்து அதில் பிரவேசித்த வன் போல எப்படித் தோன்றுகிறானோ, அதுபோல் நீரும் மாயையால் ஜகத்தைப் படைத்து, அதில் பிரவேசித்தவர் போலத் தோன்றுகிறீர். எப்பொழுதும் உம்முடைய சரித்திரங்களைக் கேட்போர்களும்,

சொல்லுகிறவர்களும், உம்மைப் பூஜிப்பவர்களும், நமஸ்கரிப்பவர்களுமான பக்தர்களுடைய சுத்தமான ஹிருதயத்தில் நீர் பிரகாசிக்கிறீர்; [எப்பொழுதும் ச்ரவணம், கீர்த்தனம் முதலிய பக்தி செய்பவர்களுக்கு ஹிருதயத்தில் பிரகாசிக்கிறீர்; நான் உம்மை நேரில் பார்க்கிறேன் என்னுடைய பாக்கியம் அதிகம் என்று தாத்பரியம்] ஜனங்களுக்கு நீர் இருதயத்தில் இருப்பவ ரானாலும் கர்மங்களிலேயே நோக்கமுள்ளவர்களுக்குத் தூரத்திலிருப்பவராக ஆகிறீர்; அஹங்காரம் முதலிய வைகளால் க்ரஹிக்க முடியாதவரானாலும் பக்தி செய்பவர்களுக்குச் ஸமீபத்திலிருப்பவராக ஆகிறீர்; மேலும் தேஹம் முதலியவைகளில் அபிமானத்தை விட்டவர்களான பக்தர்களுக்கு பரமாத்மாவாக ப்ரகாசிப்பவரும், தேஹம் முதலியவைகளில் அபிமான முள்ள ஸம்ஸாரிகளுக்கு மிருத்யு போன்ற ஸம்ஸாரத் தைக் கொடுப்பவரும், மஹத்தத்துவம் முதலியகார்யத் தையும் ப்ரகிருதியையும், உபாதியாக உடையவரும், தம்முடைய மாயையால் மறைக்கப்படாதவரும், மற்றவர்களுடைய ஞானத்தை மறைப்பவருமான உம்மை நமஸ்கரிக்கிறேன். உம்மை நேரில் தரிசிக்கும் வரையில் மனிதர்களுக்குக் கஷ்டமேயொழிய அதற்குப் பிறகு கஷ்டமில்லை. ஆனதால் நான் என்ன செய்ய வேண்டும்? வேலைக்காரனாகிய என்னை உத்தரவு செய்யும்" என்று கேட்டுக்கொண்டார்.

51–58. அதனைக் கேட்ட பகவான். அண்டினவர் களுடைய துக்கத்தை நிவர்த்திப்பவராகையால் ச்ருத தேவருடைய கையைத் தமது கையால் பிடித்து, சிரித்துக் கொண்டு "ஓ ப்ராஹ்மண! இந்த மஹர்ஷிகள் உம்மை அனுக்கிரஹிப்பதற்காக இவ்விடம் வந்திருக்

கிறார்கள். இவர்கள் தங்களுடைய பாததூளிகளால் லோகங்களைப் பரிசுத்தப்படுத்திக்கொண்டும் ஸஞ்சரிக் கிறார்கள், தேவர்களும், புண்ணிய தீர்த்தங்களும், புண்ணிய க்ஷேத்திரங்களும் தர்சனம் கொடுப்பது, பூஜிப்பது இவைகளால் மனிதனைத் தாமதித்துப் பரிசுத்தப்படுத்துகின்றன. அவைகளுக்கு அவ்விதமான யோக்கியதையும் ஸாதுக்களுடைய பார்வையாலேயே கிடைக்கின்றன. ப்ராஹ்மணன் ஜன்மத்தாலேயே ஸகலப் பிராணிகளில் சிறந்தவன்; அதிலும் தபஸ்வி யாக இருப்பவன் சிறந்தவன். அதிலும் கிடைத்ததைக் கொண்டு ஸந்தோஷிப்பவன் மிக்க சிறந்தவன். அதிலும் என்னை யுபாஸிப்பவன் சிறந்தவனென்பதில் என்ன ஆட்சேபம்? நான் ஸகல வேத ஸ்வரூபியாக இருக்கிறேன்.

ப்ராஹ்மணன் ஸகல ஸ்வரூபியாயிருக்கிறான். ஆனதால் ப்ராஹ்மணனைக் காட்டிலும் நான்கு கைகளுள்ள இந்த ஸ்வரூபம் எனக்கு இஷ்டமான தல்ல. இதை அறியாத ஜனங்கள் ப்ரதிமையை தேவனென்று நினைத்து, ப்ராஹ்மண ஸ்வரூபியாக இருக்கும் என்னை அவமதிக்கிறார்கள். அசையும் பொருள், அசையாப் பொருள் இவைகளடங்கிய ஜகத்தும், அதற்குக் காரணமாகிய மஹத்தத்வம் முதலியவைகளும் பகவானுடைய ஸங்கல்பத்தால் உண்டானவை. ஆனதால் எல்லாம் பகவத் ஸ்வரூபம் என்று ப்ராஹ்மணன் தெரிந்துகொள்கிறான். ஆனதால் இந்த மஹர்ஷிகளைச் ச்ரத்தையுடன் எப்பொழுதும் நீர் பூஜிக்க வேண்டும். ப்ராஹ்மணர்களை பூஜித்தால் என்னை நேரில் பூஜித்ததாகும். ப்ராஹ்மணர்களை அவமானஞ் செய்து என்னைப் பலவகையான பூஜா

த்ரவ்யங்களால் பூஜித்தாலும் அது பயனைக் கொடுக்கிறதில்லை" என்று சொன்னார்.

59–60. ஸ்ரீகிருஷ்ணனால் ஆக்ஞாபிக்கப்பட்டுச்ருத தேவர் ஸ்ரீ கிருஷ்ணனையும் இந்த மகரிஷிகளையும் ஒன்றாக நினைத்துப் பூஜித்து உத்தம கதியை அடைந்தார். பஹுளாச்வரும் அப்படியே ப்ராஹ்மணர் களைப் பூஜித்து உயர்ந்த பதத்தை அடைந்தார். ஓ பரீஷித்து மஹாராஜனே! பக்தர்களிடத்தில் பிரீதியுள்ளவராகிய ஸ்ரீ கிருஷ்ணன் அவ்விடத்தில் சில காலம் வசித்து, ஸகல வேதங்களும் பரமாத் மாவையே நிரூபிக்கின்றன என்பதைச் ஸ்ருததேவருக்கும் பஹுளாச்வருக்கும் உபதேசித்து, துவாரகா நகரஞ் சென்றார்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–87

ஸ்ருதி கீதை

பரீக்ஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி "ஓ ப்ராஹ்மண ஸகல வேதங்களும் குணமுள்ள வஸ்துவைச் சொல்லக்கூடியவைகள், ப்ரம்ஹ்மமோ இப்படிப்பட்டதென்று குறிப்பிடமுடியாதது; குணங் களற்றது; கார்யம்; காரணம் இவைகளைவிட மேலானது; ஒன்றிலும் ஸம்பந்தப்படாதது; அப்படிப்பட்ட ப்ரஹ்மத்தை வேதங்கள் எப்படி நேராக நிரூபிக்கின்றன?" என்று கேட்டார்.

நோட்டு.

முன் அத்தியாயக் கடைசியில் எல்லா வேதங்களும் ப்ரஹ்மத்தையே நிரூபிக்கின்றனவென்று பகவான் பக்தர்களுக்கு உபதேசித்து த்வாரகைக்குச் சென்றார் என்று சொன்னதைக் கேட்டு அரசன் ஸந்தேஹித்து கேட்கிறார். வேதங்கள் பதக்கூட்டங்களடங்கியவை களல்லவா? பதங்கள் நான்குவகையுள்ளன 1. ஜாதி சப்தங்கள். 2. குணசப்தங்கள். 3. கிரியாசப்தங்கள், 4. பெயர்சொற்கள். ப்ராஹ்மண என்ற சப்தமானது அந்த ஜாதியுள்ளவர்களை யெல்லாரையும் சொல்வ தால் அது போன்றவைகள் ஜாதிப்ரவர்த்தி நிமித்தங் களெனப்படுகின்றன. சுக்ல என்ற சப்தம் வெண்மை யென்ற குணமுள்ள வஸ்துக்கள் எல்லாவற்றையும் சொல்லுகிறது. அதனால் இதுபோன்றவை குணப்பிர விருத்தி நிமித்தங்களெனப்படுகின்றன. பாசக என்ற சப்தமானது சமைக்கும் தொழிலுள்ளவர்களைச்

சொல்வதால் இது போன்றவைகள் கிரியா ப்ரவிருத்தி நிமித்தங்களெனப்படுகின்றன. அர்த்தத்தைக்காண்பிப் பதற்கு சப்தத்தில் விருத்தியென்ற ஒரு வ்பாபாரமி ருக்கிறது அது முக்கியம், லக்ஷணா, கௌணமென்று முவ்வகையுள்ளது. அவைகளில் முக்கியவிருத்தியென்பது யோகம், ரூடம், யோகரூடமென்று முவ்வகையுள்ளது.

தாசரதியென்றால் தசரதருடைய குமாரனைக் காட்டுகிறது. இது காரணப்பெயராம். தேவதத்த னென்றால் ஒருவனுடைய பெயர். இதுரூடம் (இடுகுரி) பங்கஜம் என்றால் தாமரையை குறிக்கிறது ஆனால் அந்த சப்தத்திற்குசேற்றில் முளைத்தது என்ற அர்த்தமிருந்தாலும் சேற்றில் முளைக்கும் அல்லி முதலியவைகளை அது குறிக்கிறதில்லை ஆனதால் அது யோகரூடமெனப்படுகிறது (காரண இடுகுரி) லக்ஷணாயென்ற இரண்டாவது விருத்தி யானது முக்கிய விருத்தியால் ஏற்படும் அர்த்தம் அன்வயிக்காத விடத்தில் உபயோகப்படும்; கங்காயாம் கோஷ என்ற வாக்யத்திற்கு கங்கையில் இடைச்சேரியென்று முக்கிய விருத்தியால் அர்த்தம் ஏற்படுகிறது. ஆனால் கங்கையின் ஜலத்தில் இடைச்சேரி இருக்க முடியாதானதால் அந்த அர்த்தம் பொருந்தாததனால் இந்த இடத்தில் லக்ஷணாவிருத்தியையுபயோகித்து கங்கையின் கரை கங்காயாம் என்பதற்கு அர்த்த மென்று கொள்ளவேண்டும். இது லக்ஷணா விருத்தி யெனப்படுகிறது. அக்னிர்மாணவகயென்ற விடத்தில் ப்ரஹ்மசாரி அக்னியாக விருக்கிறார் என்று அர்த்த மேற்பட்டாலும் அந்த அர்த்தம் பொருந்தாதனதால் அக்னியின் குணமுள்ளவரென்று அர்த்தங் கொள்ள வேண்டும். இது கௌணவிருத்தியெனப்படுகிறது

இவைகளில் அவாந்திர பேதங்கள் அதிகமிருக்கின்றன. 'அப்படிப்பட்ட சப்தங்களின் கூட்டமாகிய வேதம் ப்ரஹ்மத்தை எப்படி நிரூபிக்கும். ப்ரஹ்மத்திற்கு ஜாதியில்லை. ஆனதால் இன்ன ஜாதியுள்ளதென்று குறிப்பிடமுடியாதே; குணமில்லாததால் குணசப்தங்க ளால் நிரூபிக்கமுடியாது. கிரியை இல்லாததால் கிரியா சப்தங்களாலும் காட்டமுடியாது. ஒருவகை யாலும் குறிப்பிடமுடியாத வஸ்துவை வேதங்களால் எப்படிக் காட்டமுடியும்? முக்கிய விருத்தியால் சப்தங்கள் ப்ரஹ்மத்தைக் காட்டமுடியாவிடினும் லக்ஷணா விருத்தியை யுபயோகிக்கலாமேவென்றால் அதுவும் பொருந்தாது. அந்த பரப்ரஹ்மம் கார்ய காரண ஸம்பந்தமில்லாததனால் முக்கிய விருத்தி யால் ஏற்படும் கார்ய காரணமாகிய அர்த்தத்தின் ஸம்பந்தமற்றதை லக்ஷணா விருத்தியால் எப்படிக் காட்டக்கூடும். குணஸம்பந்தமற்றதால் கௌணவிருத் தியுமுபயோகப்படாது. அப்படியிருக்க சப்தராசியான வேதம் எந்தவிருத்தியைக்கொண்டு ப்ரஹ்மமாகிய அர்த்தத்தைக்காட்டுகிறது என்று அரசனுடைய கேள்விக்குத் தாத்பர்யம்.

வீரராகவீயத்தில்–ப்ராஹ்மணன் ஸகல வேதஸ்வரூபி; நான் ஸகல தேவஸ்வரூபியென்று பகவான் 86–வது அத்யாயத்தில் சொல்லியிருப்பதால் வேதமாகிய ப்ரமாணத்தால் ப்ரஹ்மத்தை அறியவேண்டுமென்று தெரியவருகிறது. 85–வது அத்யாயத்தில் பலிசக்கிர வர்த்தி பகவானை ஸ்தோத்திரஞ் செய்தவிடத்திலும் 84–வது அத்யாயத்தில் மஹர்ஷிகளுடைய வார்த்தை யாலும் மேற்காட்டிய விஷயம் நன்றாக காட்டப்பட்டிருக்கிறது. "எல்லா வேதங்களும் எந்த பதத்தைச் சொல்லுகின்றனவோ,

ஸகல தபங்களும் எதனைச் சொல்லுகின்றனவோ" என்ற ச்ருதியாலும் "ஸகல வேதங்களால் அறியக் கூடியவன் நானே" என்ற ஸ்மிருதியாலும், ப்ரம்ஹ்மம் சித்தைக்காட்டிலும், அசித்தைக் காட்டிலும் விலக்ஷணமென்று காட்டப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ப்ரம்ஹ்மத்தை "ஸத்யம் ஜ்ஞான மனந்தம்" "எவன் எல்லாவற்றையுமறிந்தவனோ" என்ற ச்ருதிகள் நிரூபித்தாலும் "இந்த ஆத்மா ப்ரஹ்மம்" "நீ அதாகிறாய்" "இதெல்லாம் ப்ரஹ்மம்" என்ற ச்ருதிகளிலுள்ள பதங்கள் சித்தையும் அசித்தையும் சொல்பவைகளானதால் அவைகள் விலக்ஷணமான ப்ரஹ்மத்தைச் சொல்லுகின்றனவென்பது எப்படி பொருந்துமென்று ஸந்தேஹித்து அரசன் சுகரை கேட்கலானார்.

வேதங்கள் ஜாதி, குணம், கிரியை இவைகளுக்குள் ஒன்றை நிமித்தமாக வைத்துக்கொண்டு அர்த்தத்தைக் காண்பிக்கும் ஸ்வபாவமுள்ளவைகளல்லவா? அப்படிப்பட்ட சப்தங்கள் அவைகளுள்ள சித் அசித் இவையாகிய அர்த்தங்களைச் சொல்லுமேயொழுய அவைகளுக்கு விலக்ஷணமான வஸ்துவை எப்படிச் சொல்லும்? பொருளை யுணர்த்துவதற்குக் காரணமான ஜாதி முதலியவைகள் ப்ரஹ்மத்திடமில்லையே. லக்ஷணா விருத்தியால் ப்ருஹ்மமாகிய பொருளை வேதங்கள் உணர்த்துகின்றன என்று சொல்வது ஸரியல்ல. மேற்காட்டிய சுருதிகளாலும் ஸ்மிருதிகளாலும் முக்கிய விருத்தியைக் கொண்டே வேதங்கள் பரமாத்மாவை உணர்த்துகின்றனவென்று தெரியவருகிறது. வேதவாக்கியங்களில் சில முக்கிய விருத்தியாலும் ப்ருஹ்மத்தை சொல்லுகின்றனவென்று சொல்வதும் பொருந்தாது.

சில வாக்யங்கள் லக்ஷணா விருத்தியாலும் எல்லா வேதங்களும் என்று சர்வபதமிருக்கிறது என்பதை மனத்தில் வைத்துக்கொண்டு வேதங்கள் முக்கிய விருத்தியால் பிரம்ஹத்தைச் சொல்லக்கூடுமென்று அரசர் கேட்டார். சேதனம் போன்றதென்றாவது அசேதனம் போன்றதென்றாவது பிருஹ்மம் குறிப்பிட முடியாதது. ஏனென்றால் சேதனம் அசேதனம் இவைகளைவிட அது விலக்ஷணமானது. (வேறு).

விஜயத்வஜீயத்தில்:– அளவற்ற வேதங்களால் வர்ணிக்கப்படும் குணங்களுள்ளது எந்தப் ப்ருஹ்மமோ அதுவே ஸ்ரீ கிருஷ்ணனென்ற திவ்ய நாமத்துடன் அவதரித்திருக்கிறது. அதனால் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் எல்லா ஜனங்களும் பக்தி செய்ய வேண்டும். மற்ற விஷயங்களில் வைராக்கியத்தை அடையவேண்டும் என்ற விஷயத்தை இந்த அத்தியாயத்தில் நாரதருக்கும் நாராயண மஹர்ஷிக்கும் நேர்ந்த ஸம்வாதமாகிய இதிஹாஸத்தால் காட்டுவதாகப் பரீக்ஷித்து சுகரைக் கேட்டார். "ஸகல வேதங்களும் எந்த பதத்தைச் சொல்லுகின்றனவோ" என்று ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. வேதங்கள் ப்ரம்ஹத்தை முக்கிய விருத்தியால் (நேராக) சொல்லுகின்றனவா? அல்லது லக்ஷணவிருத்தியால் சொல்லுகின்றனவா? எப்படி சொல்லுகின்றன? ஏனென்றால் பிருஹ்மம் குறிப்பிடக்கூடியதல்லவே. (முக்கிய விருத்தியால் காட்டமுடியாதென்று தாத்பர்யம்) அதனால் எனக்கு உண்டாயிருக்கும் ஸம்சயத்தை நிவர்த்திக்க வேண்டுமென்று அரசன் கேட்கலானார்.

2. அதனைக்கேட்ட சுகர் அரசனை நோக்கி

ஜீவர்கள், விஷயங்களை அனுபவிப்பதற்காகவும் கர்மங்களை அனுஷ்டிப்பதற்காகவும் லோகாந்திரத்தில் அந்தந்த போகத்தை அனுபவிப்பதற்காகவும் மோக்ஷத்தை அடைவதற்காகவும், ஈசுவரன் புத்தி, இந்திரியங்கள், மனம், ப்ராணன் ஆகிய இவைகளைச் ஸிருஷ்டித்தார்.

நோட்டு

மூலத்தில் ப்ரபுவென்ற பதத்தால் உபாதிகளுக்கு வசப்படாதவர் என்று அர்த்தம் ஏற்படுவதால் நித்ய முக்தனென்று தெரியவருகிறது. ஜீவர்களுக்காக ஈசுவரன் ஜகத்தைச் ஸிருஷ்டிக்கிறாரே யொழிய வேறில்லை. ஆனாலும் பகவானுடைய ஸ்வரூபத்தை வேதங்கள் நிரூபிக்கவில்லை என்று சொல்ல முடியாது. ஆனதால் ஏதாவது ஒருவிருத்தியால் வேதங்கள் ப்ரும்ஹத்தை சொல்லுகின்றனவென்பது நிச்சயம். அந்தவிருத்தி இன்னதென்று விசாரிக்க வேண்டும். "எவன் ஸர்வஜ்ஞனோ" எவன் எல்லாவற்றிற்கும் அதிபதியோ, "அது பார்த்தது" "அது தேஜஸைச் ஸிருஷ்டித்தது" என்ற அனேக ச்ருதிகள் எல்லாவற்றையும் அறிந்தவரென்றும் எல்லாவற்றிற்கும் அதிபதியென்றும் எல்லாவற்றிற்கும் நியந்தாவென்றும், எல்லாராலும் உபாஸிக்கக் கூடியவர் என்றும் எல்லா கர்மங்களுக்கும் பலத்தைக் கொடுக்கக்கூடியவர் என்றும் ஸமஸ்த குணங்களுக்கும் இருப்பிடரென்றும் ஸச்சிதானந்த ஸ்வரூபியென்றும் பரமாத்மாவைச் சொல்லுகின்றன. மேலும் "நீ அதாகிறாய்" என்ற மஹாவாக்யம், ஜீவனே அப்படிப்பட்ட பரப்ரஹ்மமென்றும் ஐக்யத்தைச் சொல்லுகிறது. அந்த வாக்கியங்களில் "நீ அது" என்பதைச் சொல்லும் பதங்கள் இரண்டும் ஒரே

அர்த்தத்தை உணர்த்துகின்றன என்று தோற்றுகிறது. அவ்விரண்டு பதங்களுக்கும் ப்ரும்ஹம். அர்த்தம் என்று சொன்னால் தான் பொருந்தும். ஜீவனோ சிலவற்றை அறிந்தவன். ப்ரஹ்மமே எல்லாவற்றையும் அறிந்தது. இருவர்களிடத்திலுள்ள விருத்தமான "சில எல்லாம்" என்பதைத் தள்ளி விட்டால் இருவர்களிடத்திலும் ஞானம் என்பது தொடர்ந்திருக்கிறது. அப்பொழுது இரண்டு பதமும் ஒரே அர்த்தத்தை உணர்த்துகிற தென்று சொல்லக்கூடும். இதுவே ஜஹத்ஜஹல்லக்ஷணா எனப்படுகிறது.

இப்படிச் சொல்வதால் மேற்காட்டிய சுருதிகள் நிர்க்குணமான பிரம்ஹத்தையே சொல்வதாயிற்று. "ஸ்தூலமல்ல, அணுவல்ல" என்றது முதலிய ச்ருதிகள் உபாதிகளில்லை என்று சொல்வதால், நிர்குண ப்ரம்ஹமத்தையே சொல்லுகின்றன. இந்த ச்ருதி கீதையின் ஆரம்பத்திலும், முடிவிலும் சொல்லியிருப்பதைப் பார்த்தால் உபாதிகளைத் தடுத்து (நிஷேத முகமாக) வேதங்கள் ப்ரம்ஹத்தைச் சொல்லுகின்றன என்று ஏற்படுகிறது. உபாஸனையைச் சொல்லும் ச்ருதி வாக்கியங்கள் ப்ரம்ஹ ஞானத்திற்கு ஸாதனங்களாக இருப்பதால் ப்ரம்ஹத்தைப் பரம்பரையாகச் சொல்லுகின்றன.

வீரராகவீயத்தில்:– "ஜகத்தைச் ஸிருஷ்டித்து அதில் பிரவேசித்தார். அதில் ப்ரவேசித்து ஸத்தாகவும், த்யத்தாகவும் (பஞ்சபூதங்கள்) ஆனார்." இது முதலிய ச்ருதிகளால் ப்ரம்ஹமமே சேதன சரீரமாகவும், அசேதன சரீரமாகவும் இருப்பதால் அந்த சப்தங்கள் சேதனங்களையும், அசேதனங்களையும் சொன்னாலும்

ப்ரம்ஹமத்தையே நிரூபித்ததாக ஆகிறது என்ற பதிலை மனத்தில் வைத்துக்கொண்டு, முதலில் ஸிருஷ்டியை மாத்திரம் சொல்லுகிறார். ஈச்வரன் புத்தி முதலியவைகளைச் ஸிருஷ்டித்தார் என்பதால், தாம் அந்தராத்மாவாகையால் புத்தி முதலிய சப்தங்களுக்கு அர்த்தமாகிய மஹாபூதம் வரையிலுள்ள வஸ்துக்களாகத் தம்முடைய ஆத்மாவை மாற்றிக் கொண்டு சேதனம், அசேதனம் இவைகளடங்கிய ஜகத் ஸ்வரூபியாகி, அந்தச் சப்தத்திற்கு அர்த்தமாக ஆனார் என்று தாத்பரியம்.

லோகத்திலுள்ள சேதனம், அசேதனம் ஆகிய பதார்த்தங்கள் எல்லாம் பரமாத்மாவை விட்டு வேறாக இல்லாததால் விசேஷணங்களாகிய அந்தந்தப் பதார்த்தங்களை அந்தந்தச் சப்தங்கள் சொல்வதானாலும், விசேஷ்யமாகிய பரமாத்மாவையும் முக்கிய விருத்தி யாலேயே சொல்லுகின்றன. பரமாத்மா மிக்க கருணையுள்ளவரும், ஸமஸ்த காமங்களை அடைந் தவனும், ப்ரயோஜனத்தை அபேக்ஷிக்காதவனுமானதால் ஜகத்தை எதற்காகப் படைத்தார் என்றால், ஜீவர் களுக்கு இந்திரியங்களடங்கிய சரீரத்தைக் கொடுத்து, அதனால் தம்மை உபாஸிக்கும்படி செய்து, அவர் களை அனுக்கிரஹிக்க வேண்டுமென்ற விருப்பத்தாலேயே ஜகத்தைச் ஸிருஷ்டித்தாரென்பது, மூலத்திலுள்ள மூன்று பதங்களால் தெரிகிறது. இவை எல்லாவற்றை யும் அந்தப் பரமாத்மா தம்முடைய ஸங்கல்பத்தாலே யே ஏன் செய்யக்கூடாது? இதற்காக ஜகத்தைச் ஸிருஷ்டிக்க வேண்டுமா என்றால், பரமாத்மா ஜகத்தைச் சிருஷ்டித்தது விளையாட்டேயொழிய வேறில்லை. இது 'கல்பனாய' என்ற பதத்தால் காட்டப்படுகிறது.

விஜயத்வஜீயத்தில்:– ஸத்வம் முதலிய குணங்கள் இல்லாததால் நிர்க்குணமும், ஞானம், ஆனந்தம் முதலிய குணங்களுள்ளதுமான பரப்பிரம்ஹத்தை வேதங்கள் முக்கிய விருத்தியால் நிரூபிக்கின்றன என்று பதில் சொல்வதற்காக இந்த ச்லோகம் ஆரம்பிக்கப்பட்டிருக் கிறது. புத்தி முதலியவைகளை ஈச்வரன் சப்த பிரவர்த்திக்காகவும், புண்ணியத்திற்காகவும், (அத்தி யயன ப்ரவசனத்தால்) ஆத்மஸ்வரூப ஞானத்திற் காகவும், மோக்ஷத்திற்காகவும் ஸிருஷ்டித்தார். "முதலில் மனத்தால் நினைக்கிறான் பின்பு வாக்கினால் வ்யவ ஹரிக்கிறான்" என்ற ச்ருதியின்படி சப்த ப்ரவிர்த்திக்கு புத்தி முதலியவைகள் ஸாதனங்களாக இருக்கின்றன. "இந்த ஆத்மா ஸத்தியத்தாலும், தபஸ்ஸாலும், நல்ல ஞானத்தாலும், ப்ரஹ்மசர்யத்தாலும் அடையக் கூடியவர்" என்ற ச்ருதியின்படி ஞானம் ப்ரஹ்மத்தை அடைவ தற்குச் ஸாதனமென்று ஏற்படுகிறது. "அந்தப் பரமாத் மாவை இம்மாதிரியாகத் தெரிந்து கொண்டவன் மரண தர்மமற்றவனாக ஆகிறான். ஞானத்தால் மோக்ஷத்தை அடைகிறான்" என்ற சுருதியின்படி மோக்ஷத்திற்கு ஞானம் ஸாதனமென்று ஏற்படுகிறது. ஆனதால் புத்தி முதலியவைகள் இருந்தால் தான் மனத்தால் ஸங்கல்பித்து, வாக்கினால் சப்தங்களை உச்சரிக்க முடியும். அப்படி வைதீக சப்தங்களை உச்சரிப்பதால் புண்ணியம் உண்டாகிறது. அதனால் பகவத் ப்ரஸாதமும், அதனால் ஸாரூப்பியம் முதலிய மோக்ஷமும் கிடைக்கிறது. ஆதலால் சப்தங்கள் பிரம்ஹத்தை நேரில் சொல்லுகின்றன என்று ஏற்படுகிறது.

3. மேற்காட்டியபடி வேதங்கள் ப்ரம்ஹத்தை நிரூபிக்கும் வகையானது மிக்க பெரியோர்களால் ஒப்புக்

கொள்ளப்பட்டது. அதனை எவன் சிரத்தையுடன் தெரிந்து கொள்ளுகிறானோ, அவன் தேஹம் முதலி யவைகளின் அபிமானத்தை ஒழித்து மோக்ஷத்தை அடைவான்.

நோட்டு

வீரராகவீயத்தில்:— மேற்காட்டியபடி வேதங்கள் பரமாத்மாவைச் சொல்லுகின்றன என்பது ஸாமான்னிய ஜனங்களுக்குத் தெரியாது. ஸாமான்னிய ஜனங்கள் அந்தந்த சப்தம் அந்தந்த அர்த்தத்தைத் தான் சொல்லுகிறதென்று தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்க, ஸகல ஜனங்களாலும் ஒப்புக்கொள்ளப் பட்ட அர்த்தத்தை விட்டு, எல்லா வேதங்களும் ப்ரம்ஹத்தையே முக்கியமாகச் சொல்லுகின்றன என்று பொருந்துமாவென்றால், மேற்காட்டியபடி ஸகல வேதங்களுக்கும் ப்ரஹ்மமே முக்கியப் பொருளாகிறது என்ற விஷயமானது உபநிஷத்தின் அர்த்தத்தை விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டியதாக இருக்கிறது. வேதாந்த சாஸ்திரத்தைப் படிக்காதவர்கள் வேதத்திலுள்ள சப்தங்களுக்கு இயற்கையான அர்த்தத் தையே பொருளென்று நினைப்பார்கள். வேதாந்தத்தின் அர்த்தத்தை யுணர்ந்தவர்கள் ப்ரம்ஹமமே அந்தச் சப்தங்களுக்குப் பொருளென்று அறிவார்கள். அதனால் அதற்கு என்ன கெடுதி? கடம் என்ற சப்தத்திற்கு இன்னது அர்த்தமென்று ஒருவன் அறியாவிடில், அதனால் அந்தச் சப்தத்திலுள்ள பொருளை உணர்த்தும் வியாபாரம் கெடுக்கப்படுமா? இம்மாதிரி ப்ரம்ஹமமே வேதத்தின் அர்த்தமென்பது வாமதேவர் முதலிய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

இதனைச் சிரத்தையுடன் எவன் தெரிந்துக் கொள்கிறானோ, அவன் மோக்ஷத்தை அடைவான். அவன் வேறொன்றையும் விரும்பமாட்டான், வாம தேவர், ப்ரஹ்லாதர் முதலியவர்கள் பரப்ரம்ஹமம் எல்லாவற்றிற்கும் அந்தராத்மாவாக இருப்பதையும் எல்லாம் பரமாத்மாவின் சரீரமாக இருப்பதையும் தெரிந்து கொண்டு, "நான் மனுவாக ஆனேன்; நான் ஸூர்யனானேன்" என்ற வாக்கியத்திலுள்ள "நான் என்ற பதத்திற்குத் தன்னைச் சரீரமாயுடைய பரமாத்மா பொருளென்றும், சூரியன் மனு என்ற பதத்திற்கு அவர்களை சரீரமாயுடைய பரமாத்மா பொருளென்றும் தெரிந்துகொண்டு, எல்லாச் சப்தங்களும் பரமாத்மாவையே நிரூபிக்கின்றன என்று நிச்சயித்திருக்கிறார்கள் என்று தாத்பரியம்.

விஜயத்வஜீயத்தில்:— ஈச்வரனுடைய புத்தியில் இருந்துதான் இந்த உபநிஷத்தானது பெரியோர் களுக்கும், பெரியோர்களான ப்ரம்ஹதேவர் முதலிய வர்களால் அத்தியயனம் செய்யப்பட்டது. ஆனதால் ப்ரம்ஹத்தின் குணத்தை நிரூபிக்கின்ற இந்த வேதத்தை எவன் அத்தியயனம் செய்கிறானோ, அவன் வைராக் கியத்தை அடைந்து மோக்ஷத்தை அடைவான்.

4–12. இந்த விஷயத்தில் நாராயண மஹர்ஷியால் நாரதருக்கு உபதேசிக்கப்பட்ட ஒரு இதிஹாஸத்தை உமக்குச் சொல்லுகிறேன். ஒருகால் பகவத் பக்தரான நாரதர் லோகங்களில் ஸஞ்சரித்து நாராயண மஹர்ஷியைத் தர்சிப்பதற்காகப் பதரிகாச்ரமஞ் சென்றார். அவ்விடத்தில் அந்த நாராயண மஹர்ஷி இந்த பாரத வர்ஷத்தில் ஜனங்களுக்கு ஸம்சாரத்தை நிவர்த்தித்து

மோக்ஷத்தைக் கொடுப்பதற்காகத் தர்மம், ஜ்ஞானம், சாந்தி இவைகளுடன் வெகுகாலமாகத் தபஸ் பண்ணிக் கொண்டிருந்தார். கவாப க்ராமவாஸிகளான மஹர்ஷிகளும் அவரைச் சுற்றிக்கொண்டிருந்தார்கள். அந்த ஸமயத்தில் நாரதர் அந்த மஹர்ஷியைக் நமஸ்கரித்து இப்பொழுது நீர் எதைக் கேட்டீரோ, அந்த விஷயத்தைப்பற்றியே அந்த மஹர்ஷியைக் கேட்டார். அதனைக்கேட்ட அந்த மஹர்ஷியை மற்ற மஹர்ஷிகள் கேட்டுக் கொண்டிருக்கும் பொழுது நாரதரை நோக்கி, "ஓ நாரத! நீர் பகவானைத் தர்சிப்பதற்காக ச்வேதத்வீபஞ் சென்றபொழுது ஜன லோகத்திலுள்ள ப்ரம்ஹாவின் மானஸ புத்திரர்களும் இந்திரியங்களை ஜயித்தவர்களுமான ஸனகர் முதலிய மஹர்ஷிகள் ப்ரம்ஹ விசாரஞ் செய்தார்கள். அந்த ப்ரம்ஹ விசாரத்தால் எல்லாவேதங்களும் ஒரே வஸ்துவைச் சொல்லுகின்றன என்று ஏற்படுகிறது. நீர் இப்பொழுது என்னைப்பார்த்து எதனைக் கேட்டீரோ, அதே கேள்வி அப்பொழுது ஏற்பட்டது. அந்தக் கேள்விக்கு என்ன பதில் ஏற்பட்டதோ அதனைச் சொல்லுகிறேன் கேளும்; அந்த மஹர்ஷிகள் எல்லோரும் படிப்பிலும் தபஸ்ஸிலும் ஸ்வபாவத்திலும் ஸமமானவர்கள். அவர்களுக்குத் தம்மைச்சார்ந்தவன், சத்ரு, உதாஸீனன் என்ற பேதபுத்தி இல்லை. அப்படிப் பட்ட மஹர்ஷிகள் ஸநந்தனர் என்பவரைச் சொல்லும் படி ஏற்படுத்தி மற்றவர்கள் அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

13–14. அப்பொழுது ஸநந்தனர் சொல்லுகிறார்: எப்படியென்றால் வந்திகள் விடியற்காலத்தில் படுத்திருக்கும் சக்கரவர்த்தியை அவனுடைய பராக்கிர மத்தைக் காட்டும் ச்லோகங்களைச் சொல்லி எப்படி

எழுப்புவார்களோ, அதுபோலப் ப்ரளய காலத்தில் இந்த ஜகத் முழுவதையும் சக்திகளுடன் உபஸம்ஹாரம் செய்துகொண்டு யோகநித்திரை செய்யும் பரமாத்மா வைச் ஸிருஷ்டிக்கவேண்டிய ஸமயத்தில் பரப்ப்ரம்ஹத் தின் அடையாளமுள்ள வாக்கியங்களைக் கொண்டு வேதங்கள் ஸ்தோத்திரஞ் செய்து எழுப்பின. எப்படியெனில்:–

ச்ருதிகீதை.

சுருதிகள் சொல்லுகின்றன. ஒருவராலும் ஜயிக்கப் படாதவரே! ஜய ஜய! அசையும்பொருள் அசையாப் பொருள் இவைகளடங்கிய ஜகத்திற்குக் கெடுதியைச் செய்வதற்காகக் குணங்களைப் பிரகாசப்படுத்தி கொண்டிருக்கும் இந்த மாயையை நாசஞ்செய்யும். (வ்யபிசாரியானவள் பிறரை வஞ்சிப்பதற்காக நற் குணங்களுள்ளவள் போல் எப்படி அபிநயஞ் செய்கி றாளோ, அப்படி இந்த மாயையானது உண்டு பண்ணுகிறதென்று தாத்பரியம்) நீர் ஸகல ஐச்வரியங் களையும் அடைந்தவரானதால் மாயையைச் சுவாதீன படுத்திக்கொண்டவர். மேலும், நீர் எல்லா ஜீவர் களுக்கும் அந்தர்யாமியாக இருந்து ஸகல சக்திகளையும் பிரகாசிக்கச் செய்கிறீர். (ஆனதால் ஜீவர்களுக்கு ஸ்வாதந்திரியம் இல்லாததால் ஞானம் முதலியவை களைக் கொண்டு மாயையை நிவர்த்தித்துக்கொள்ள அவர்களால் முடியாதென்று தாத்பர்யம்) தடையற்ற ஞானம் ஐச்வர்யம் இவைகளுள்ள நீர் ஜீவர்களுக்கு அவித்தையை நிவர்த்திக்கிறீர் என்ற விஷயத்தில் வேதங்களாகிய நாங்களே ப்ராமணங்களாக இருக்கிறோம். சில காலம் (ஸிருஷ்டி முதலிய சமயம்) மாயையுடன்

கிரீடிப்பவராகவும் சில ஸமயம் ஸத்திய ஞானானந்த ஸ்வரூபத்துடன் இருப்பவருமாக உம்மை வேதங்கள் சொல்லுகின்றன.

நோட்டு

வேதங்கள்:– "எதனிடமிருந்து இந்தப் பிராணிகள் உண்டாகின்றனவோ, உண்டான பிராணிகள் எதனால் ஜீவிக்கின்றனவோ, எதனிடத்தில் லயிக்கின்றனவோ" "எவர் முதலில் ப்ரம்ஹதேவரைப் படைத்திறாரோ, வேதங்களை அவருக்கு உபதேசிக்கிறாரோ." "ஆத்மா, புத்தி இவைகளைப் பிரகாசிக்கச் செய்பவரான அந்தத் தேவனை, மோக்ஷத்தை அடைய வேண்டுமென்ற விருப்பத்தையுடைய நான் சரணம் அடைகிறேன்." "எவர், ஆத்மாவில் இருக்கிறாரோ" இது முதலிய ச்ருதி வாக்கியங்கள்.

வீரராகவீயத்தில்:–"எல்லோரையும் ஜயித்ததான ப்ரகிருதியையும் ஜயித்தவரே, மேன்மையை அடையும், மேன்மையையடையும்." நீர் இயற்கையில் ஞானம், வைராக்கியம், பூர்ணமான ஐச்வரியம், வீர்யம், கீர்த்தி, காந்தி இவைகளால் நிறைந்தவராகையால் ஜீவர்களுக்கும் ஸம்ஸாரத்தை உண்டு பண்ணுகின்ற ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்களுள்ள ப்ரகிருதியை நாசஞ்செய்து (இயற்கையில் நீர் ஒப்புயர் இல்லாதவரானாலும், ப்ரகிருதியை நாசஞ்செய்து) ஜீவர்களுக்கு உபகரித்ததால் அதிக மேன்மையுண்டாகும் என்று தாத்பரியம். 'தோஷ கிருபீதகுணம்' என்ற பாடத்தில், தோஷங்கள் அநேகம் இருந்ததாலும் அவைகளைத் தள்ளி குணம் ஸ்வல்பமாக இருந்தாலும்

அதனை எடுத்துக்கொள்ளும் ஸ்வபாவமுள்ள நீர் அபராதிகளான ஜீவர்களிடத்தில் உள்ள அபராதத்தை மனத்தில் வைத்துக் கொள்ளாமல் குணத்தைக் க்ரஹித்து மாயையை நாசஞ்செய்து அவர்களை அனுக்கிரஹிக்க வேண்டுமென்று அர்த்தம் கொள்ள வேண்டும். அசையும் பொருள்கள், அசையாப் பொருள்கள் இவைகளாகச் செய்யப்படப்போகிற ப்ரகிருதி குணங்களுக்கும், அதனை ஆசிரயிக்கப் போகிற ஜீவர்களுக்கும் தங்கள் தங்கள் கார்யத்தைச் செய்யும்படியான ஸாமர்த்தியத்தை நீரே கொடுக்கிறீர். (உம்முடைய அனுக்கிரகமில்லாவிடில் ப்ரகிருதி முதலியவைகள் தங்கள் தங்கள் வேலையைச் செய்யச் சக்தி அற்றவைகளாக இருக்கின்றன. அவைகளுக்கு அப்படிப்பட்ட சக்தியை நீர் கொடுப்பதால் ஜீவர்களுக்கு ஸம்ஸார ஸம்பந்தத்தை உண்டு பண்ணுகிறவரும் நீரே என்று ஏற்படுகிறது. ஆனதால் அந்த மாயையை நாசஞ் செய்யுமென்று கருத்து.) நீர் ப்ரகிருதி, புருஷன் இவர்களுடன் ஜகத் ஸ்வரூபமாக இருப்பதால் உம்மையே வேதஞ் சொல்லுகிறது. (எல்லாவற்றிற்கும் காரணமாகவும், காரிய ஸ்வரூபியாகவும் பரமாத்மா இருப்பதால் சேதனம், அசேதனம் இவைகளைச் சொல்லும் சப்தங்கள் யாவும் பரப்பிரம்மத்தையே சொல்லுகின்றன என்று ஸமாதானம் சொல்லப்பட்டது என்று கருத்து.)

விஜயத்வஜீயத்தில்:– "பிரகிருதியான ஸ்ரீ தேவி, பூதேவி என்ற ஸ்வரூபங்களுடன் ஸ்ரீ மகாவிஷ்ணு வினிடம் தூங்குகிறது. வேதமானது ப்ரளயத்தில் ப்ரஹ்மத்தை ஸ்தோத்திரஞ் செய்கிறது." "ஆதியந்தம் இவைகளில்லாத ஸரஸ்வதியானது ஒன்றானாலும்,

வெவ்வேறு வாக்கியங்களால் ப்ரபுவாகிய நாராயணனை ஸ்தோத்திரஞ் செய்கிறது" என்றபடி ச்ருதிகள் நாராயணனை ஸ்தோத்திரஞ் செய்கின்றன. வேதங்கள் அநேகமானாலும், பகவானுடைய ஆக்ஞையால் துர்க்கையின் ஸ்வரூபத்தை எடுத்துக்கொண்டு ஸ்தோத்திரஞ் செய்கிறது. எப்பொழுதும் விழித்துக் கொண்டிருக்கும் பகவானை வேதங்கள் எழுப்புகின்றன என்பது பொருந்துமா என்றால், எழுப்புவது போல என்று அர்த்தங் கொள்ளவேண்டும். வேதங்கள் சொல்லுகின்றன என்பதால் ஸ்திரீ, சூத்திரன் இவர்கள் வேதத்தை அத்தியயனம் பண்ணக்கூடாதாகையால் அதன் அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளட்டும் என்ற அபிப்பிராயத்தால் வேதம் தன் பொருளை வெளியிட்டது என்று தாத்பரியம். ஒருவராலும் ஜயிக்கப்படாத ஸ்ரீமந் நாராயண! துக்கம், அஜ்ஞானம் முதலிய துர்க்குணங்களால் ஆனந்தம் ஞானம் முதலிய ஜீவகுணங்களை மறைக்கும் மாயையை நிவர்த்தியும். அப்படிச்செய்வதால் பக்தர்களிடத்தில் உமக்கு இருக்கும் .வாத்ஸல்யமானது வெளிப்படும். (லோகத்திலுள்ள அரசர்கள் சத்துருக்களை ஜயிப்பது போல ஸ்ரீமந் நாராயணனைப் பார்த்துப் பிறரை ஜயித்து விடுமென்று சொல்வது பொருந்தாது. ஏனென்றால் அவர் எப்பொழுதும் ஜயமுள்ளவர் எல்லாரையும் ஜயிக்கும் ப்ரகிருதியையும் ஜயித்தவர் ஆனதால் அவரைப் பார்த்துச்சொல்லும் ஜய என்ற சப்தத்திற்கு மாயையை விலக்கி பக்தர்களை அனுக்கிரஹிக்க வேண்டுமென்று அர்த்தங்கொள்ள வேண்டும். நீர் இயற்கையில் பூர்ணமான ஐசுவரியம் முதலிய குணங்களுள்ளவர். (உம்முடைய ப்ரதிபிம்பமான ஜீவன் ப்ரகிருதியால் மறைக்கப்பட்டுத் தன்னுடைய குணத்தை அறியாதவனாக இருக்கிறான்).

ஓ மகாவிஷ்ணுவே! ஜகத்திற்கு ஆஸ்ரயமான ப்ரம்ஹா முதலியவர்களுடைய சகல சக்திகளும் உம்மிடமாகவே பிரகாசிக்கின்றன. வேதமானது ஸிருஷ்டி காலத்தில் ஜீவனுடனும் ப்ரகிருதியுடனும் ஸஞ்சரிக்கும் உம்முடைய மனத்தை அனுசரிக்கிறது. ப்ரளய காலத்தில் ஜீவர்களுக்குச் சரீரமில்லாததால் அவர்கள் விஷயத்தில் வேதம் உபயோகப்படுகிறதில்லை. அப்பொழுது நாராயணனுடைய ஸ்தோத்திரத்தில் உபயோகப்படுகிறது. ப்ரளயத்தின் 8–வது பாகமாகிய ஸிருஷ்டி காலத்தில் வேதமானது ஜீவர்களுக்கும் உபயோகப்படுகிறது. ஆனதால் அப்பொழுது பரமாத்மாவையே வேதம் சொல்லுகிறது என்று தாத்பரியம்.

16. "ஸ்தாவரங்களுக்கும் ஜங்கமங்களுக்கும் இந்திரன் அரசனாக இருக்கிறான்" "அக்னியானவர் த்யுலோகத்திற்குட் சிறந்தவர்." என்ற சுருதிகளின்படி இந்திரன் அக்னி முதலியவர்களை வேதம் சொல்லுகிறது. அப்படியிருக்க பரமாத்மாவைச் சொல்லுகிறதென்று எப்படிச் சொல்லக்கூடும் என்றால் சமாதானம் சொல்லப்படுகிறது. இந்திரன் முதலிய எல்லா பதார்த்தங்களும் ப்ரம்ஹமமென்று பெரியோர்கள் தெரிந்து கொள்ளுகிறார்கள். எல்லா பதார்த்தங்களும் ப்ரம்ஹத்தினிடமிருந்து உண்டாகின்றன. ப்ரம்ஹத்தினிடமே லயிக்கின்றன. பிரளய காலத்தில் பாக்கியாயிருக்கும் வஸ்து பிரம்ஹம் ஒன்றே. மண்ணினால் செய்யப்பட்ட குடம் மடக்கு முதலியவைகள் மண்ணிலிருந்து உண்டாகியும் கடைசியில் மண்ணிலேயே எப்படி லயிக்கின்றனவோ, அப்பொழுது குடம், மடக்கு என்ற பெயரும் உருவங்களும் நாசமடைந்து மண் என்ற காரணம் மாத்திரம் எப்படி பாக்கியிருக்கிறதோ,

Released by Maran's Dog, Toronto , Canada

அப்படியே இந்திரன், சந்திரன் அக்னி முதலியவர்கள் விகாரமில்லாததான ப்ரம்ஹத்தினிடமிருந்து உண்டாகி கடைசியில் அதனிடத்திலேயே லயிக்கிறார்கள். அப்பொழுது இந்திரன், சந்திரன், அக்னியென்ற பெயர்களும் உருவங்களும் நசிக்கின்றன காரணமாகிய ப்ரம்ஹம் மாத்திரம் பாக்கியாக இருக்கிறது. ஆனதால் எதை மனத்தால் நினைத்தாலும் எதை வாக்கினால் உச்சரித்தாலும் பரமாத்மாவாகிய உம்மையே நினைத்த தாகவும் உச்சரித்ததாகவும் மஹர்ஷிகள் நினைக்கிறார் கள். (ஆனதால் வேதங்கள் இந்திரன் அக்னி முதலிய எந்தப் பதார்த்தங்களைச் சொன்னாலும் பரமாத்மா வையே சொல்லுகின்றனவென்பது தாத்பர்யம்) பூமியில் ஸஞ்சரிக்கும் ஜனங்கள் எவ்விடத்தில் காலை வைத்தாலும் அவைகள் பூமியில் வைத்ததாக ஆகுமே யொழிய வேறில்லை.

வீரராகவீயத்தில்:—'இந்த ஸகல ப்ரஜைகளும் பரமாத்மாவிடத்திலிருந்து உண்டாகின்றன' என்றது முதலில் ச்ருதிகளில் சொல்லியபடி ஸிருஷ்டி காலத்தில் ப்ரகாசித்த ஜகத் முழுவதும் ப்ரம்ஹ மென்றே வேதங்கள் சொல்லுகின்றன. மண்ணுண் டையிலிருந்து உண்டான குடம் முதலியவைகள் அவைகளை விட எப்படி வேறாக ஆகிறதில்லையோ, அப்படி காரணரூபியான பரப்பிரம்ஹத்தினிடமிருந்து உண்டான ஸகல ஜகத்தும் பரப்ப்ரம்ஹத்தைக் காட்டிலும் வேறல்ல. ஆனதால் வேதங்கள் தாத் பர்யத்தாலும் முக்கிய விருத்தியாலும் பரமாத்மாவையே சொல்லுகின்றன. மாடி முதலிய ஸ்தலங்களில் ஜனங்கள் நடந்தால் அது பூமியில்நடந்ததாக ஆகிறதில்லையா? அதுபோல இந்திரன், அக்னி முதலியவர்களைச்

சொன்னால் அவர்களுக்கு ஆதாரமாகிய ப்ரம்ஹத்தையே நிருபித்ததாக ஆகிறது.

விஜயத்வஜீயத்தில்:—இந்த பதினாறாவது ச்லோ கம் விஜயத்வஜீய வ்யாக்யானமுள்ள புஸ்தகத்தில் பின்வருமாறு காணப்படுகிறது. 'விகாரமற்றவராகிய நீர் நித்ய தமஸ்ஸான காலத்தில் மேன்மையை அடைந்தீர். ஸிருஷ்டிக்குமுன் தமஸ்ஸால் மறைக்கப் பட்டிருந்தது. ச்ருதி, மூலப்பிரகிருதியைவிட மேலான வர் என்று தாத்பர்யம்) மேலும் 'இதைவிட இது மேலானது; அதனைவிட இது மேலானது' என்று சொல்லினும் வேதத்தில் எல்லாவற்றிற்கும் மேலான தென்று உம்மைச் சொல்லியிருப்பதாலும் உம்மைவிட மேலானது இருப்பதாகச் சொல்லாததாலும் நீரே மேலானவரென்று தெரிந்துகொள்ளப்பட்டது. ஆனதால் ப்ரம்ஹதேவர் முதலிய தேவர்கள் மனத்தால் நினைக் கப்பட்டாலும் வாக்கினால் சொல்லப்பட்டாலும் உம்மை நினைத்ததாகவும் சொன்னதாகவும் ஏன் ஆகமாட்டாதென்று (பரமாத்மாவைச் சொன்ன தாகவே ஆகும்) என்று நினைக்கிறார்கள். பூமியில் காலை வைப்பதாக நினைத்து ஜனங்களால் வைக்கப்பட்ட காலடிகள் பூமியில் வைக்கப்படாமல் போகுமா?

17. மாயைக்கு அதிபதியாகிய ஓ பரப்ரம்ஹமமே! உம்முடைய கீர்த்தியானது ஸகல ஜனங்களுடைய பாபங்களை நிவர்த்திக்கிறதானதால் பெரியோர்களான ஞானிகள் அதனை அடைந்து ஸகல துக்கங்களையும் பாபங்களையும் நிவர்த்தித்துக் கொள்ளுகிறார்கள். அப்படியிருக்க தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தை அடைந்து அதனால் ஆசை த்வேஷம் முதலிய அந்தக்

கரண தர்மங்களையும், கிழத்தனம் மரணம் முதலிய காலத்தின் குணங்களையும் நிவர்த்தித்துக் கொண்டிருப்பவர்கள் அகண்டமான ஆனந்த ஸ்வரூபத்தை ஸேவிப்பவர்கள். என்பதில் என்ன சந்தேகம்? "தாமரையிலையில் ஜலம் எப்படி ஸம்பந்தப்படுகிறதில்லையோ அப்படி பாபமில்லா புருஷர்களிடத்தில் கர்மங்கள் ஸம்பந்திக்கிறதில்லை" 'புண்ணியம், பாபம் இரண்டையும் விடுகிறான்' ச்ருதிகள்.

வீரராகவீயத்தில்:– ஜகத்தைப் படைத்து அதனைக் காப்பாற்றி அதனை ஸம்ஹரிப்பவராகிய ஓ பகவன்! உம்முடைய கதையைச் சொல்லுகிறவர்களுக்கு ஸகல பாபங்களும் நிவர்த்தியாகின்றனவாகையால் விவேகிகள் அந்தக் கதையாகிய அமிருத ஸமுத்திரத்தில் மூழ்கி ஆதிபௌதிகம், ஆதிதைவிகம், ஆத்யாத்மிகம் என்ற தாபங்களை விட்டு விட்டார்கள் அப்படியிருக்க ஸ்வரூப ஞானத்தையடைந்து ஆசை, த்வேஷம், ஜரை, மரணம் ஆகிய இவைகளை நிவர்த்தித்துக் கொண்டு நித்திய மான ஞானம். ஆனந்தம் இவைகளில் ஸ்வரூபமான பதத்தை ஸேவிப்பவர்கள், ஆத்யாத்மிகம் முதலிய தாபங்களை அடைகிறதில்லையென்பதில் என்ன ஸந்தேஹம்?

18. மஹத்தத்வம் முதலியவைகள் பரமாத்மாவின் அனுக்கிரஹத்தால் சமஷ்டி, வியஷ்டி, ஸ்வரூபத்தைப் படைத்தன. மேலும், அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஜ்ஞானமயம், ஆனந்தமயம் என்ற ஐந்து கோசங்களில் பரமாத்மா அணுப்பிரவேசித்து அவைகளை சேஷ்டிக்கச் செய்கிறார். மேலுமவர் புருஷனுடைய வகைபோலொத்த வகையுள்ளவர்;

அன்னமயாதி கோசங்களுக்கு கடைசியில் எல்லாவற்றிற்கும் மேலானவராகச் சொல்லப்பட்டவர்; ஸ்தூலம், ஸூக்ஷ்மம் இவைகளுக்கு ஸாக்ஷியாக இருப்பவர்; காலத்தாலும், தேசத்தாலும் பாதிக்க முடியாத ஸத்தியஸ்வரூபி. அப்படிப்பட்ட பரமாத்மாவாகிய உம்மைச் ஸேவியாமலிருக்கும் மனிதர்களுடைய ஜீவனம் பிரயோஜனமற்றது. அவர்கள் துருத்திபோல் ஜீவிக்கிறார்கள் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

நோட்டு

"எவர் ஆத்மாவினுடைய உண்மையான ஸ்வரூபத்தை யறியாமல் ஆத்மாவை கர்த்தாவென்று, ஸுக துக்க முள்ளவனென்றும் நினைத்து உண்மையான ஸ்வரூபத்தை மறைத்து விடுகிறார்களோ, அப்படிப்பட்ட சரீர அபிமானமுள்ளவர்கள் தேவ சரீரம், மனித சரீரம், பசு பட்க்ஷி சரீரம் முதலியவைகளை அவரவர்களுடைய கர்மத்திற்குத் தக்கபடி அடைந்து அக்ஞானமுள்ளவர்களாகி ஸம்ஸாரத்தை அடைகிறார்கள்" ச்ருதி. "இந்த மனுஷ்ய ஜன்மத்தில் மனிதன் ஆத்மாவின் உண்மையை அறியாவிட்டால் மிக்க கெடுதியை விளைவிக்கும் ஸம்ஸாரத்தை அடைகிறான்" –ச்ருதி. இவைகள் பகவத் பக்தி இல்லாதவனை நிந்திக்கின்றன.

வீரராகவீயத்தில்:– ஓ பரப்பிரம்மமே! எந்த ஜனங்கள் உம்மை ஸேவிக்கத் தகுதியான மனுஷ்ய ஜன்மத்தையடைந்தும், ப்ராணன், இந்திரியம் இவைகளைத் திருப்தி செய்து கொண்டும், உம்மைச் சேவியாமலிருக்கிறார்களோ, அவர்கள் துருத்திபோல மூச்சு விடுகிறவர்களேயாம். (அவர்களுடைய ஜீவனம்

பிரயோசனமற்றது என்று தாத்பர்யம்.) மஹத்தத்வம், அஹங்காரம் முதலியவைகள் உம்முடைய அனுக் கிரஹத்தால் ஜகத்தைப் படைத்தன. மஹத்தத்வம், ப்ரதானம் முதலியவைகள் ஜகத்திற்குக் காரணங்க ளானாலும், "அது அநேக வஸ்துக்களாக ஆவோம் என்று ஸங்கல்பித்தது" என்ற ச்ருதியின்படி அசேத னங்களாகிய ப்ரதானம் முதலியவைகளுக்கு மேற் சொல்லிய ஸங்கல்பம் பொருந்தாதாகையால் பரமாத் மாவே ஜகத்காரணம் என்று கொள்ள வேண்டும். அதனால் தான் பரமாத்மாவின் அனுக்கிரஹத்தால் மஹத்தத்வம் முதலியவைகள் ஜகத்தைப் படைத்தன வென்று சொல்லப்பட்டது. "சம்பாப் பயிர்கள் மழையை எதிர்பார்க்கின்றன" என்ற வாக்கியத்தில் மழை பயிர்களை அனுக்கிரஹித்ததென்றால், அவ்விடத்தில் அனுக்கிரஹம் என்ற சப்தத்திற்கு எப்படிக் கௌணமாக அர்த்தம் வைத்துக்கொள்ளுகிறோமோ, அப்படி இவ் விடத்திலும் கௌணமான அனுக்கிரஹமென்றே அர்த்தம் வைத்துக்கொண்டு ப்ரதானம் முதலியவைகளை ஜகத் காரணங்களென்று ஏன் சொல்லக்கூடாது என்று பூர்வபக்ஷம் ஏற்படலாம். ஆனாலும், "இது எல்லாம் அதுவே; அது ஸத்தியமானது; அதுவே ஆத்மா" என்ற சுருதியின்படி காரணமே ஆத்மா வென்று ஏற்படுவதால், மேற்சொல்லிய பூர்வபக்ஷம் பொருந்தாது.

அசேதனங்களாகிய ப்ரதானம் முதலியவைகள் காரணங்களென்று சொல்லாவிடினும், சேதனனாகிய ஜீவனே காரணமென்று சொல்லலாம் என்று பூர்வ பக்ஷம் ஏற்படலாம். ஆனாலும், அன்னமயம் முதலிய ஐந்து கோசங்களைச் சொல்லி கடைசியான ஆனந்த

மயனுக்குத் தலை முதலியவைகளையும் சொல்லியிருப் பதால் ஜீவனென்று சொல்வதும் பொருந்தாது. புருஷனைப் போலச் சுருதியில் சொல்லப்பட்டவர் பரமாத்மாவாகிய நீரே சேதனம், அசேதனம் இவை களைவிட நீர் வேறானவர், அன்னமயம் முதலிய நான்கு கோசங்கள் அழியும் பொழுது பாக்கியாகவும் ஸத்தியாகவும் இருப்பவர் ஒருவரே.

விஜயத்வஜீயத்தில்:– மஹத்தத்வம், அஹங்காரம் முதலியவைகள் உம்முடைய அணுப்பிரவேசமாகிய அனுக்கிரஹத்தால் ப்ரஹ்மாண்டத்தைப் படைத்தன. அப்படிப்பட்ட மிக்க உபகாரியான உம்மிடத்தில் ப்ரீதியில்லாமல் எல்லாவற்றையும் பொய்யென்று எவர்கள் சொல்லுகிறார்களோ, அவர்கள் துருத்தி போல் மூச்சு விடுகின்றவர்களேயாம். மேலும் மனிதர் களில் சிறந்தவர்கள், இந்திரன் முதலிய தேவர்கள், மஹரிஷிகள், கந்தர்வர்கள், ப்ரம்ஹதேவர் ஆகிய இவர்களுக்குள் எவர்கள் நித்தியமும் அளவற்ற ஆனந்தமுள்ளதும், காரிய காரணங்களை விட மேலா னதுமான உம்முடைய ஸ்வரூபத்தையறிந்து சிஷ்யர் களுக்கு அம்மாதிரி உபதேசித்து, ஜகத்தில் உம்முடைய ஸ்வரூபத்தைப் பரவச் செய்கிறார்களோ, அவர்கள் புருஷோத்தமராகிய உம்மை அடைகிறார்கள்.

19. முன் ச்லோகங்களில் ஸகல ச்ருதிகளும் ஸகல ஜகத் ஸ்வரூபியான பரமாத்மாவைச் சொல்லுகின்றன ஆனதாலும், அவரிடம் பக்தி செய்யாதவர்களுக்குக் கெடுதியுண்டாவதாலும் ஈச்வரனை உபாசிக்கவேண்டு மென்று சொல்லப்பட்டது. இந்த ச்லோகத்தில் பகவா னுடைய உபாஸனையைப் பற்றிச் சொல்லப்படுகிறது.

மஹர்ஷிகளுடைய ஸம்பிரதாயத்தை அனுஷ்டித்திருக்கும் ஸ்தூல திருஷ்டிகள் மணிபூரகமென்ற ஸ்தானத்தில் ப்ரம்ஹத்தைத் தியானஞ் செய்கிறார்கள். மூலத்தில் கூர்ப்ப திருச என்று இருப்பதால் கூர்ப்ப என்றால் மணல் என்று அர்த்தம். அதனால் மறைக்கப்பட்ட கண்களுள்ளவர்கள். அதாவது ஸ்தூல திருஷ்டியுள்ள வர்கள் என்று ஏற்படுகிறது; அல்லது கூர்ப்படம் என்றால் ஸூக்ஷ்மமென்று அர்த்தம். அதனால் ஸூக்ஷ்ம திருஷ்டிகள் என்றும் அர்த்தம் சொல்லலாம். இப்படி அர்த்தம் கொண்டால் ஸூக்ஷ்ம திருஷ்டியுள்ள மஹர்ஷிகள் ஹிருதயத்திலிருக்கும் பரப்ரம்ஹத்தைப் பார்த்து அதில் ப்ரவேசிப்பதற்காக மணிபூரகத்திலிருப் பதாக உபாஸிக்கிறார்கள் என்று அர்த்தம் கொள்ள வேண்டும். ஆருணிகளோவென்றால் நாடிகளுடைய பிரிவுக்கு மார்க்கமான ஹிருதயத்தில் ஸூக்ஷ்மமாக விருக்கும் பரப்ரம்ஹத்தை உபாசிக்கிறார்கள். ஓ அனந்தரே! அந்த இருதயத்திலிருந்து, ஸூஷும்னா வென்ற நாடியானது தலைவரையில் போகின்றது. அதில் உம்முடைய ஞான்னித்தியமிருக்கிறது. அது நாடிகளுக்குட் சிறந்தது. அதனையடைந்தவன் திரும்பவும் ஸம்ஸாரத்தை யடைகிறதில்லை.

நோட்டு

"புருஷருடைய ஹிருதயத்திலிருந்து நூற்றொரு நாடிகள் போகின்றன. அவைகளுக்குள் ஒரு நாடி மூர்த்தாவைப் பேதித்துக் கொண்டு போகிறது. மரண காலத்தில் அந்த வழியாக வெளியில் போகிறவன் மோக்ஷத்தையடைகிறான். பலவகையான கதியுள்ள மற்ற நாடிகள் வெளியில் போவதற்குக் காரணங்க ளாக ஆகின்றன." –ச்ருதி.

வீரராகவீயத்தில்:–பரமாத்மா ஜகத் காரணமான தால் அவர் உபாஸிக்கப்பட வேண்டியவரானாலும், அநேகர் பல வகையாகப் பலவிடங்களில் அவரை உபாஸிக்கிறார்களென்பதும், எல்லா உபாஸனைகளுக்கும் மோக்ஷமே பலன் என்பதும் இந்த ச்லோகத்தில் சொல்லப்படுகிறது.

வேதாந்தத்தில் சொல்லிய உபாஸனா மார்க் கத்தை அறிந்த ஸூக்ஷ்ம புத்தியுள்ள அருண வம்சத்தில் பிறந்த சில மஹர்ஷிகள் ஹிருதயத் திலிருக்கும் ஸூக்ஷ்ம ஸ்வரூபியான உம்மை உபாஸிக் கிறார்கள். மற்றுஞ்சில மஹர்ஷிகள் வயிற்றில் இருக்கும் ஜாடராக்னி ஸ்வரூபியான உம்மை உபாசிக்கிறார்கள். மற்றுஞ்சிலர் ஸூஷும்னா என்ற நாடி மார்க்கத்தி லிருக்கும் உம்மை உபாஸிக்கிறார்கள். ஓ அனந்தரே! உம்முடைய ஞான்னியத்திற்கு முக்கிய ஸ்தலமாகிய புருவங்களின் மத்தியம் வரையில் அந்த ஸூஷும்னா நாடி செல்லுகிறது. அந்த நாடியை அடைந்த எல்லா உபாஸகர்களும் திரும்பவும் ஸம்ஸாரத்தை அடைகிறதில்லை.

20. அக்னி இயற்கையில் தாரதம்மியமில்லாத வரானாலுங் கட்டைக்குத் தக்கப்படி தாரதம்மிய முள்ளவராகத் தோன்றுவதுபோல நீர் உண்மையில் ஒரே வகையுள்ளவரானாலும் தம்மாற்செய்யப்பட்ட பலவகையான சரீரங்களில் பிரவேசித்தவர் போலிருந்து, உயர்ந்தவர் போலும், தாழ்ந்தவர்போலும், பிரகா சிக்கிறீர். எப்பொழுதும் ஜகத்திற்குக் காரணராக இருப்பதால் இப்பொழுது ஜகத்தில் பிரவேசித்தீரென் பதில்லை; (மிக்க ப்ரகாசமுள்ள ஸூர்யன் ஆகாசம்

முழுவதையும் ஒரேவகையாகப் பிரகாசிக்கச் செய்ப வரானாலும் மழைக்காலத்தில் பிரகாசக் குறைவுள்ளவர் போலும், சரத்காலத்தில் அதிகப் பிரகாசமுள்ளவர் போலும் தோன்றுவதுபோல பரமாத்மா சரீரம் முதலிய உபாதிகளின் ஸம்பந்தத்தால் தாழ்ந்தவர் போலவும் மேலானவர் போலவும் தோன்றுகிறாரே யொழிய உண்மையில் தாரதம்மியமில்லையென்பது கருத்து.) ஆனதால் கர்மங்களின் பயனில் ஆசை யில்லாதவர்கள் பொய்யாகிய இந்தச் சரீரங்களில் ஸத்தியமாகிய உம்முடைய ஸ்வரூபத்தைத் தாரத ம்மியமில்லாமலிருப்பதாகவே தெரிந்து கொள்ளுகிறார்கள். (ஈச்வரனை, வயிறு, ஹிருதயம் முதலிய ஸ்தானங்களில் உபாஸிக்கிறார்கள் என்று சொன்னதால் ஜீவனைப் போல் பரமாத்மாவுக்கும் தாரதம்மியம் ஏற்படுகிறது. அவர் எல்லோராலும் எப்படி உபாஸிக்கக்கூடியவரா வார்? என்ற பூர்வபக்ஷம் இந்த ச்லோகத்தால் நிவர்த்திக்கப்பட்டது.) "ஒரு தேவனே சகலப் பிராணிகளிடத்திலும் மறைந்திருக்கிறார். மேலுமவர் எங்குமிருப்பவர். ஸகலப் பிராணிகளுக்கும் அந்தராத் மாவாக இருப்பவர், கர்மங்களுக்கு அதிபதி. ஸகலப் பிராணிகளுக்கும் இருப்பிடம்; எல்லாவற்றிற்கும் ஸாக்ஷி; கேவலம் சைதன்னிய ஸ்வரூபி; குணமற்றவர்" –ச்ருதி.

வீரராகவீயத்தில்:– பரமாத்மா கார்யமாகிய ஜகத்தில் பிரவேசித்திருப்பதாலும், தோஷஸம்பந்த மற்றவராகையாலும் அவர் உபாஸிக்கத் தகுந்தவர் என்று இந்த சுலோகத்தால் காட்டப்படுகிறது. ஓ பகவன்! அக்னியானது உண்மையில் தாரதம்மிய மில்லாததனாலும் கட்டைக்குத் தக்கபடி உயர்வு தாழ்வு உள்ளதாக எப்படித் தோன்றுகிறதோ, அப்படி

நீர் எல்லாவற்றிற்கும் முக்கிய காரணராக இருந்து செய்யப்பட்ட பலவகையான சரீரங்களில் அந்தராத் மாவாக இருந்து உயர்வு தாழ்வை அனுசரிக்கிறீர். மேலும், பலவகையான உம்முடைய குணங்களை ஸ்தோத்திரஞ் செய்யும் சுத்த சித்தர்களான யோகிகள் இந்தச் சரீரங்கள் நாசமடைந்த பொழுதும், உம்மை நாசமடையாதவரென்றும், கார்யங்களில் பிரவேசித் தவரானாலும் அவைகளின் தோஷ ஸம்பந்தமற்றவ ரென்றும், அகண்டமான ஆனந்தமென்றும் உபாஸிக் கிறார்கள்.

விஜயத்வஜீயத்தில்:– அக்னி கட்டைகளைக் கொண்டுபோனால் தான் போவது போலும், திரும்பவும் கொண்டு வந்தால் தான் வருவது போலும் எப்படித் தோற்றுகிறதோ, அப்படி உம்மால் செய்யப் பட்ட பலவகையான சரீரங்களில் பிரவேசித்திருக்கும் ஜீவனை போல உம்மையும் அஞானிகள் நினைக்கிறார்கள். ஞானிகளாகிய பெரியோர்கள் அநித்தியங்களான இந்தச் சரீரங்களில் நித்தியரான நீர் பலவகையாக வஸிக்கிறீர் என்று சுத்தமான மனத்தால் த்யானஞ் செய்கிறார்கள். "ஈசுவரன் எல்லாவற்றிக்கும் காரண மென்று ப்ராஹ்மணன் தெரிந்துகொள்ளுகிறான். அதனால் அவன் மேலானவனாகி அவனுக்கும் மேலான ஸ்ரீமந் நாராயணனை அடைகிறான். கட்டையைக் கொண்டு வந்தால், அதிலிருக்கும் அக்கினியும் எப்படிக் கொண்டு வரப்படுகிறதோ அப்படி தேஹத்திலிருக்கும் மஹா விஷ்ணு தேஹத்துடன் வருகிறார். அதற்கு அவருடைய இச்சையே காரணம்; பெரியோர்கள் அநித்தியமான சரீரங்களில் நித்யராகி பகவான் பலவகையாக வஸிக் கிறார் என்று தெரிந்துகொள்ளுகிறார்கள்" –தந்திர பாகவதம்.

21. தன்னுடைய கர்மத்தால் கிடைத்த இந்த மனித சரீரம் முதலியவைகளில் போக்தாவாக இருக்கும் புருஷனைச் ஸகல சக்திகளால் பூர்ணமாகிய உம்முடைய அம்சமென்று சொல்லுகிறார்கள். உம்முடைய ஸ்வரூபமானது வெளியிலும் உள்ளேயும் ஆவரணமற்றது. ஆனதால் ஜீவனுடைய உண்மையை அறிந்த வித்வான்கள் வேதத்திற் சொல்லிய கர்மங்களை, அனுஷ்டித்து சமர்ப்பிப்பதற்கு ஸ்தலமாயுள்ளதும், ஸம்ஸாரத்தை நிவர்த்திப்பதுமான உம்முடைய பாதார விந்தத்தை மிக்க சிரத்தையுடன் உபாஸிக்கிறார்கள்.

வீரராகவீயத்தில் :– உம்மால் செய்யப்பட்ட தேவ மனுஷ்ய சரீரங்களில் இருக்கும் புருஷனை ஸகல சக்திகளுள்ளவரான உம்முடைய ஸங்கல்பத்தால் ஏற்படுத்தப்பட்டவரென்றும், உள் வெளியென்ற பேதமில்லாமல் எங்கும் வியாபித்திருக்கக் கூடியவரென்றும், மற்றவற்ற புருஷனென்றும் வேதங்கள் நிரூபிக்கின்றன. ஆனதால் விவேகிகள் இந்த மனித ஜன்மத்தை உம்மை ஆராதிப்பதற்கு உபயோகமென்று நினைத்து, வேதங்களால் நிரூபிக்கப்பட்டதும், ஸம்ஸாரத்தை நிவர்த்திப்பதுமான உம்முடைய பாதார விந்தத்தை மிகுந்த பக்தியுடன் உபாஸிக்கிறார்கள்.

விஜயத்வஜீயத்தில்:– சகல புருஷர்களிடத்திலும் எல்லா புத்திகளிலும் லக்ஷ்மீ ப்ரஹ்மா முதலியவர்களிடத்திலும் இருந்து மேலான செய்கைகளைச் செய்பவரும் நீர்தானென்று சொல்லுகிறார்கள். அண்டத்திற்கு உள்ளும் வெளியிலும் கெட்ட காரியம் செய்பவனிடத்திலுமிருந்து பாபத்தைச் செய்கிறவரும் நீரே என்று சொல்லுகிறார்கள். நீர் ஸகல புருஷர்களின்

இந்திரியங்களுடைய சக்தியை அவைகளுக்குத் தக்கபடி விஷயங்களில் ப்ரவர்த்திக்கச் செய்கிறீர். ஆனதால் எல்லாம் பிறரை அபேக்ஷியாமல் உம்மாலேயே செய்யப்படுகிறது. "லக்ஷ்மீதேவி, ப்ரஹ்மா, ருத்திரன் முதலியவர்களிடத்தில் ஸ்ரீமஹா விஷ்ணு வசித்துதம்மையே பூஜித்துக் கொள்கிறார். அஸத்துக்களிடத்தில் காணப்படும் கெட்ட நடை அவனுக்குக் கெடுதியைக் கொடுக்கிறதானாலும் ஈசுவரனைப் பூஜித்ததாகவே ஆகிறது" –சுருதி.

22. ஓ ஈச்வர! உம்முடைய ஸ்வரூபத்தின் உண்மையைத் தெரிந்து கொள்வது கஷ்டமானதால் அதனைப் பிரகாசிக்கச் செய்வதற்காகவே பூமியில் நீர் அவதரிக்கிறீர். அப்படிப்பட்ட சரிதமாகிய பெரிய ஸமுத்திரத்தில் மூழ்கி சில பெரியோர்கள் தாபமற்றவர்களாகி மோக்ஷத்தைக்கூட விரும்புகிறார்களில்லை. இப்படிப்பட்ட பக்தர்கள் அரிதிலும் அரிதே. மேலும வர்கள் உம்முடைய பாதாரவிந்தத்தில் ஹம்ஸங்கள் போல் ரமித்துக்கொண்டிருக்கும் பக்தர்களுடைய சேர்க்கையால் கிருஹம் முதலிய ஆசைகளை யொழித்து விடுகிறார்கள். "ஸகல தேவர்களும் முமுக்ஷுக்களும் ப்ரம்ஹத்தை அறிந்தவர்களும் எதனை நமஸ்கரிக்கிறார்களோ" ச்ருதி.

விஜயத்வஜீயத்தில்:– அறியமுடியாத ஸ்வரூபமுள்ளவரே வேதமாகிய பெரிய ஸமுத்திரத்தில் அலைந்து ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டுச் சில பெரியோர்கள் வேதங்களால் நிரூபிக்கப்படும் உம்மையாகம் முதலிய கர்மங்களைச் செய்து உபாஸிக்கிறார்கள். "வேதமாகிய ஸமுத்திரத்தைக் கடந்து

மிகவும் கஷ்டப்பட்டு பரமேச்வரனாகிய உம்மைக் கண்டுபிடித்து மஹர்ஷிகள் மோக்ஷத்தையடைந்தார்கள். வேதத்திற் சொல்லிய கர்மங்களுக்குப் பலத்தைக் கொடுப்பவரான உம்மைத் த்யானம் செய்கிறார்கள்; யாகத்தால் உபாஸிக்கிறார்கள்" :—குசிக ச்ருதி.

23. பரமாத்வாகிய உம்மை உபாஸிப்பதற்கு உபயோகமான இந்தச் சரீரமானது ஆத்மா போலவும், ஸ்நேஹிதன் போலவும், பிரியன் போலவுமிருக்கிறது. அப்படியிருந்தும் ரக்ஷிப்பதில் நோக்கமுள்ளவரும், அனுகூலரும் பிரியமுள்ளவருமான உம்மைச் ஸேவிக்காமல், தேஹம் முதலியவைகளைக் காப்பாற்றிக் கொண்டு, ஆத்ம ஸ்வரூபத்தை அறியாமல் மிக்க பயத்தைக் கொடுக்கக்கூடிய ஸம்ஸாரத்தில் ஜனங்கள் சுழன்று கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் ஆத்ம காதியென்று சொல்லப்படுகிறார்கள்.

வீரராகவீயத்தில்:— 21வது ச்லோகத்தில் இந்த தேஹம் பரமாத்மாவைச் ஸேவிப்பதற்கு உபயோகமானது என்று சொல்லப்பட்டது. அப்படியே அந்த விஷயத்தில் அந்தச் சரீரத்தை உபயோகப்படுத்தாவிடில் சரீரம் வீணாய்ப்போய்விடுமென்றும், அனர்த்தத்தைக் கொடுக்குமென்றும் இந்த ச்லோகத்தில் காட்டப்பட்டது. இந்த மனித சரீரமானது உம்முடைய ஸேவையில் உபயோகப்படுமானால் ஆத்மா போலவும் மித்திரன் போலவும், ப்ரியன்போலவுமிருக்கும். ஜனங்கள் சப்தம் முதலிய விஷயங்களில் ஆசைகொண்டு உம்மை ஸேவிக்கிறதில்லை. நீர் ஜனங்களுக்கு க்ஷேமத்தைச் செய்வதில் நோக்கமுள்ளவராகவும், ப்ரியராகவும், ஆத்மாவாகவும் இருக்கிறீர்.

ஜனங்களோ முந்திய கர்ம வாஸனையுள்ளவரர்கி, அற்பமான தேஹத்தையடைந்து மிக்க பயங்கரமான ஸம்ஸாரத்தில் அலைகிறார்கள். ஆனதால் அவர்கள் ஆத்மகாதிகள் எனப்படுகிறார்கள்.

விஜயத்வஜீயத்தில் :— சில யோகிகள் உம்முடைய பாதாரவிந்தத்தில் ஹம்ஸங்கள் போல ரமித்துக் கொண்டிருக்கும் ஸந்ந்யாஸிகளுடைய சேர்க்கையால் வீடு முதலியவைகளில் ஆசையை யொழித்து உம்மையடைவதற்குச் ஸாதனமான இந்தச் சரீரத்தை ஆத்மாவாகவும் பிரியனாகவும் நினைக்கிறார்கள். மேலும் அவர்கள் அனுகூலத்தைச் செய்பவரும், பிரியரும், ஆத்மாமாகிய, உம்மிடத்தில் பக்தியுள்ளவர்களாகி மோக்ஷத்தையும் விரும்புகிறதில்லை.

24. யோகிகள், ப்ராணன், இந்திரியங்கள் ஆகிய இவைகளை அடக்கி, ஸ்திரமான யோகஞ் செய்து ஹிருதயத்தில் எதை யுபாஸிக்கிறார்களோ, அந்த ஆத்மதத்துவத்தைச் சத்ருக்களான சிசுபாலன் முதலியவர்களும் எப்பொழுதும் த்யானஞ் செய்ததால் அடைந்தார்கள். கோபிகை முதலிய ஸ்திரீகள் ஆதி சேஷனுடைய உடல்போன்ற கையில் மனத்தை வைத்து அந்த ஆத்மாவை அடைந்தார்கள். ஸமபுத்தியுள்ள நாங்களும் உம்முடைய பாதமாகிய தாமரை மலரின் மதுவைப் பானஞ் செய்கிறோம். ஆனதால் எல்லோரும் ஸமமாக இருக்கிறோம்.

வீரராகவீயத்தில்:— 'ஸமதிருச' என்பதைப் பகவானுக்கு விசேஷணமாகச் செய்து நீர் ஸம திருஷ்டியுள்ளவரானதால் உமக்கு எல்லோரும்

ஸமானர்களேயாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

விஜயத்வஜீயத்தில்:—பரமாத்மாவையுபாஸியாமல், 'நான் ப்ரம்ஹதேவன் என்று வேறு வகையாக உபாஸிப்பவர்கள் ஆத்மகாதிகளெனப்படுகிறார்கள். அவர்கள் பகவானிடத்தில் பக்தி செய்கிறதில்லை. நித்யம் துக்கத்தைக் கொடுக்கும் அல்ப சரீரத்தை அடைந்து ஸம்ஸாரத்தில் கஷ்டப்படுவார்கள். எவர்கள் மோக்ஷத்திற்காகப் பகவானை ஸேவிக்கிறார்களோ அந்த பக்தர்களான மஹர்ஷிகளைத் த்வேஷிப்பவர்களும் மஹாவிஷ்ணுவைத் துவேஷித்தவன் போலக் கெடுதியை அடைகிறார்கள்.

25. ஓ பகவன்! நீர் நித்திய ஸித்தமான வஸ்து. மற்றவையெல்லாம் உமக்குப்பின் உண்டானவை. ஆனதால் உம்முடைய ஸ்வரூபத்தை யாரால் அறிய முடியும்? உம்மிடமிருந்து பிரும்ஹதேவர் உண்டானார். அதன்பின் ஆத்யாத்மிக, ஆதிதைவிக தேவகணங்கள் உண்டாயின. மற்றவையெல்லாம் அவர்களுக்குக் கீழ்ப்பட்டவை. எப்பொழுது நீர் எல்லாவற்றையும் உபஸம்ஹரித்து யோக நித்திரை செய்கிறீரோ, அப்பொழுது ஆகாயம் முதலிய ஸ்தூலமும், மகத்தத்வம் முதலிய ஸூக்ஷ்மமும் ஸ்தூல ஸூக்ஷ்மங்களாலேற்பட்ட சரீரமும், காலத்தின் வேகமும், இந்திரியங்களும், ப்ராணனும், சாஸ்திரம் முதலியவைகளும் ஒன்றுமில்லை. (ஞானசாதனமேயில்லையென்று கருத்து).

வீராராகவீயத்தில்:— எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கும் உம்முடைய ஸ்வரூபத்தை உமக்குப்பின் ஜனித்து, நாசமடைகின்ற எவன் தெரிந்து

கொள்வான்? சாஸ்திரத்தால் நான் உம்முடைய ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். முதலில் உம்மிடத்திலிருந்து ப்ரம்ஹதேவர் உண்டானார். அதன்பின் நிவிருத்திமார்க்கமுள்ள மரீசி முதலிய ப்ரஜாபதிகளுமுண்டானார்கள். அதன் பிறகு தேவர்களுண்டானார்கள். நீர் எப்பொழுது சாஸ்திரத்தை ஹிருதயத்தில் உபஸம்ஹரித்து நித்திரை செய்கிறீரோ, அப்பொழுது சேதனவஸ்துக்களாவது, அசேதன வஸ்துக்களாவது அவ்விரண்டுள்ள காரியங்களாவது, காலத்தின் வேகமாவது ஒன்றுமில்லை.

விஜயத்வஜீயத்தில்:— "ஆதிசேஷனுடைய உடலில் படுத்துக் கொண்டிருப்பவரான உம்முடைய ஸ்வரூபம் உம்மால்தான் அறியமுடியும். ஸத்யலோகத்திற்கு அதிபதியான ப்ரஹ்மதேவரால் அறியமுடியாது. மற்ற தேவர்களாலும் அறியமுடியாது. அவர்கள் உற்பத்தியுள்ளவர்கள்" என்ற ஸாங்கிருத ச்ருதியின் அர்த்தம், இந்த ச்லோகத்தால் காட்டப்படுகிறது. ஸ்மரிப்பவர்களிடத்தில் ப்ரியமுள்ள பகவன்! ஆதிசேஷருடைய உடலில் படுத்திருக்கும் உம்முடைய ஸ்வரூபத்தை நீர் தான் அறியவேண்டும், மற்றவர்களால் அறிய முடியாது. உம்முடைய எல்லா மஹிமையையும் நாங்கள் வர்ணிக்கச் சக்தியற்றவர்களாக இருக்கிறோம். உத்பத்தி நாசமில்லாத உம்முடைய ஸ்வரூபத்தை எவன் தெரிந்து கொள்ளப் போகிறான்? உம்மிடத்திலிருந்து ப்ரம்ஹதேவரும், அதன்பின் அதிகாரத்தை அடையப் போகின்ற தேவகணங்களும், உண்டானார்கள்.

26. சிலர் இல்லாத திரவியம் உண்டாகிறதென்றும், ஸத்தான த்ரவியம் நசிக்கிறதென்றும்

சொல்லுகிறார்கள். (தார்க்கியர்கள் என்று தாத்பர்யம்.) மற்றுஞ்சிலர் ஆத்மாவை வெவ்வேறு என்று சொல்லு கிறார்கள். (தேஹத்தை ஆத்மாவென்று நினைத்த சார்வாகர்கள் ஆத்மா பருத்திருப்பதாகவும் இளைத்தி ருப்பதாகவும், மனுஷ்யனாக இருப்பதாகவும், மிருகமாக இருப்பதாகவும், சொல்லுகிறார்கள் என்று கருத்து) இன்னுஞ் சிலர் தேவர்களும், மனுஷ்யர்களும் ஒருவருக்கொருவர் உபகாரம் செய்து கொள்வதால் கர்ம பலம் வியாபாரத்திற்குச் ஸமமானது என்று சொல்லுகிறார்கள் (மீமாம்ஸகர்கள்). புருஷனை ஸத்வம் முதலிய மூன்று குணங்களுள்ளவர் என்று மற்றுஞ் சிலர் சொல்லுகிறாரகள். அப்படிச் சொல்லு கிறவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் மதத்தை ஆபாச யுத்திகளால் ஸ்தாபிக்கிறார்கள். இம்மாதிரியான மத பேதங்கள் உம்முடைய உண்மையையறியாததால் ஏற்பட்டிருக்கின்றன. ஆனதால் ப்ரகிருதி புருஷர்களைக் காட்டிலும் விலக்ஷணரும், ஞானஸ்வரூபியுமான உம்முடைய உண்மையைத் தெரிந்து கொண்டால் மேற்காட்டிய பேதங்கள் ஏற்படமாட்டாது.

விஜயத்வஜீயத்தில்:— ஓ பகவன்! நீர் எப்பொழுது வேதத்தை உபஸம்ஹரித்துக்கொண்டு (அத்தியயனம் செய்பவர்கள் இல்லாததால்) எப்பொழுது யோக நித்திரை செய்கிறீரோ, அப்பொழுது ஸ்தூலமாகிய அண்டம் முதலியவைகளும் ஸூக்ஷ்மமாகிய மஹத்தத்வம் முதலிய வைகளும் இரண்டும் சேர்ந்த அக்னி முதலியவைகளும் இல்லை. காலத்தினுடைய மஹிமையும் அப்பொழுது இல்லை. அப்பொழுது வேறு ஒரு வஸ்துவுமில்லை. ஓ உத்பத்தியற்றவரே. ஸூக்ஷ்மரூபியான உம்மிடத்திலிருந்து ஸ்தூலமாகிய ஜகத் உண்டாயிற்றென்பதையும். அதனி

டத்தில் லயிக்கிறதென்பதையும், எல்லாவற்றிற்கும் மேலான பரமாத்மாவிடத்தில் பேதபுத்தி வைப்பதையும் வ்யவஹாரம். என்று எவர்கள் நினைக்கிறார்களோ அவர்கள் வேதம் முதலியவைகளைக்கொண்டு உம்மைத் தோத்திரஞ் செய்யும் வாயுவின் அனுக்கிரஹத்தால் அப்படிச் சொல்லுகிறார்கள்.

குறிப்பு

வ்யவஹாரம் —உம்மை ஸேவிப்பதாகிற பணத்தைக் கொடுப்பவனுக்குச் ஸமகமாகிய வஸ்துவைக் கொடுக் கிறதென்ற ஸங்கல்பம்.

27. ஸத்வம் முதலிய முக்குண சரூபமான இந்த ஜகத்தானது உண்மையில் இல்லாததானாலும், உம்மிடத்தில் இருப்பது போல் தோற்றுகிறது. அது மனத்தின் விளையாட்டேயாம். (அதிஷ்டானமாகிய ப்ரம்ஹம் இருப்பதால் ஜகத்தும் இருப்பதாகத் தோன் றுகிறது என்று தாத்பரியம்.) அப்படியே ஜகத்தில் தனியாகப் புருஷன் ஒருவன் இருப்பதாகத் தோன் றுவதும் பொய்யேயாம் ஆத்மாவின் உண்மையை யறிந்தவர்கள் போக்தாவாகிய புருஷன்: போக்கிய மாகிய ஜகத் இவைகளெல்லாம் ப்ரம்ஹமென்று தெரிந்து கொள்ளுகிறார்கள். (எல்லா ப்ரம்ஹத்தி னுடைய காரியமானதால் எந்தக் காரியம் எதை முக்கிய காரணமாக உடையதோ அது அந்த ஸ்வரூபமாக இருக்குமென்பது கருத்து). தங்கத்தில் அபேக்ஷை யுள்ளவன் அதனால் செய்யப்பட்ட வளை முதலிய வைகளை விட்டுவிடுவானா? அவைகளும் ஸ்வர்ண மல்லவா? அதுபோல், தம்மால் ஸிருஷ்டிக்கப்பட்ட

ஜகத்தும் அதில் ப்ரவேசித்த புருஷ ஸ்வரூபமும் ப்ரஹ்மமென்றும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

வீரராகவீயத்தில்:– மனுஷ்யர்கள் வரையிலுள்ள பிராணிகளுக்கு மனமானது ஸகல கார்யங்களையுஞ் செய்வது போல் தோன்றினாலும் ஜகத்ஸ்வரூபியான உம்மைக் காண்பிக்கிறதில்லை. உம்மையுபாஸித்து, சுத்தமான சித்தமுள்ளவர்கள் இந்த ஜகத் முழுவதும் பரமாத்ம ஸ்வரூபமென்று தெரிந்து கொள்ளுகிறார்கள். ஸூக்ஷ்மமான சேதனம் அசேதனம் இவைகளடங்கிய காரணமான ப்ரஹ்மமே காரியமாகிய ஜகத்தைவிட வேறு அல்லாததால் ஜகத்தும் உபாதேய (அங்கீகரிக்கக் கூடியது) மாகிறது. ஸுவர்ணத்தின் கார்யமான வளை முதலியவைகள் ஸுவர்ணமானதால் அவைகளை எடுத்துக் கொள்ளுகிறார்களே யொழிய விட்டுவிடுகிறதில்லை. ஆனதால் பரமாத்மாவினால் செய்யப்பட்டதும் பரமாத்மாவினால் ப்ரவேசிக்கப்பட்டதுமான ஜகத் பரமாத்ம ஸ்வரூபமென்று நிச்சயிக்கப்பெற்றது.

விஜயத்வஜீயத்தில்:– ஜீவன், ஸத்வம் முதலிய குணங்களுடைய ஸ்வரூபி; (குணங்களுக்குக் கட்டுப்பட்டவன்.) என்று சொல்வதும் அஜ்ஞானத்தால் ஏற்பட்டதேயாம். ஞான ஸ்வரூபியாகிய உம்மிடத்தில் அந்த குணங்களுடைய ஸம்பந்தம் இல்லை. முக்குண ஸ்வரூபமாகிய மனமானது உம்மிடத்திலும் இருப்பது போல் இருக்கிறது. இப்படி சொல்வது அஸுத்துக்களுடைய மதம். ஆத்ம தத்துவத்தை யறிந்த மனிதர் முதலியவர்கள் உம்மை உண்மையில் ஸகல ஜீவ ஸ்வரூபியென்று அறிகிறார்கள். "அஸுர பாவமுள்ள

ஜனங்கள் ஸ்ரீ மஹா விஷ்ணுவை ஸத்வம் முதலிய குணங்கள், தேஹம், இந்திரியம் ஆகிய இவைகளுள்ளவரென்று சொல்லுகிறார்கள்; தேவர்கள் (தேவ ஸ்வபாவமுள்ளவர்கள்) ஸ்ரீ மஹா விஷ்ணுவை முக்குணங்களுக்கு மேற்பட்டவரென்றும், ஸுகத்தால் நிறைந்தவரென்றும் சொல்கிறார்கள் ஜீவர்கள் குணங்களுக்கு வசப்பட்டவர்களானதால் உபத்திரவத்தை அடைகிறார்கள். உபத்திரவமற்றவரான பகவானுடைய அனுக்கிரஹத்தை அடைகிறார்கள்" – சைதன்னிய விவேகம்.

28. ஓ பகவன்! எவர்கள் உம்மை ஸகலப் பிராணிகளுக்கும் இருப்பிடமென்று நினைத்து உபாஸிக்கிறார்களோ, அவர்கள் மிருத்யுவை அலக்ஷ்யம் செய்து மிருத்யுவின் தலையில் காலை வைப்பார்கள். எவர்கள் உம்மை உபாஸிக்கவில்லையோ, அவர்கள் வித்வான்களானாலும் அவர்களைப் பசுக்களைப் போல நீர் வாக்கினால் கட்டுகிறீர். உம்முடைய பக்தர்கள் தங்களையும், மற்றவர்களையும் பரிசுத்தப்படுத்துகிறார்கள். மற்றவர்கள் அப்படிப் பரிசுத்தப்படுத்துகிறதில்லை.

வீரராகவீயத்தில்:– எவர்கள் ஸகல ப்ராணிகளுக்கும் ஆதாரமாக இருப்பவரென்று உம்மை உபாஸிக்கிறார்களோ, அவர்கள் மிருத்யுவை லக்ஷ்யஞ் செய்யாமல் மிருத்யுவின் தலையில் காலை வைக்கிறார்கள். எவர்கள் மேற்காட்டியபடி உம்மையுபாஸிக்கவில்லையோ, அவர்களுக்கு சாஸ்திரங்களை உபதேசித்து, முரட்டு மாடுகளை மூக்கு கயிறுகள் முதலியவைகளால் அடக்குவது போல நல்ல மார்க்கத்திற்குக் கொண்டு வருகிறீர். எவர்கள் சாஸ்திரம் படிப்பதற்கு

அதிகாரமில்லாமல் இருக்கிறார்களோ, அவர்களை உம்முடைய பக்தர்கள் பரிசுத்தப்படுத்துகிறார்கள். (எவர்கள் ஸாதுக்களிடத்திலும் பிரியப்படுகிறதில்லையோ, அவர்களுக்கு ஒரு பொழுதும் நல்ல கதியில்லை யென்று தாத்பரியம்.)

விஜயத்வஜீயத்தில்:– தங்கத்தால் செய்யப்பட்ட வளை முதலிய ஆபரணங்கள் எப்படி தங்கமாகவே இருக்குமோ அதுபோல உம்மால் ஸிருஷ்டிக்கப்பட்ட ஜகத்தில் பிரவேசித்த நீர் ஜகத்ஸ்வரூபியேயாம் (எல்லாற்றிலும் மஹாவிஷ்ணு வியாபித்திருக்கிறார் என்று தாத்பர்யம்). எவர்கள் உம்மைச் ஸகல பிராணிகளுக்கும் அதிஷ்டானமென்று உபாஸிக்கி றார்களோ, அவர்கள் ப்ரம்ஹத்தையடைவதற்குத் தடையாயுள்ள ஸம்ஸாரத்தை லக்ஷ்யஞ் செய்யாமல் அதிலிருந்து விடப்படுவார்கள். "தங்கத்தால் செய்யப் பட்ட வளையிலுள்ள தங்கத்தை, வளையைத் தள்ளி எப்படி வேறாக எடுக்கமுடியாதோ, அது போல தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள் ஆகிய இவர் களிடத்திலிருக்கும் பகவத் ஸ்வரூபத்தைப் பிரித் தெடுக்க முடியாது. ஜீவர்கள் வெவ்வேறானாலும், பகவானை ஒருவரென்றும் ஸகல ஸ்வரூபியென்றும் நினைக்கவேண்டும். இம்மாதிரி, பகவானுடைய ஸ்வரூ பத்தைத் தெரிந்து கொண்ட மஹர்ஷிகள் ப்ரஹ் மத்தை யடைவதற்கு விரோதமான ஸம்ஸாரத்தை லக்ஷ்யஞ் செய்யாமல் விஷ்ணுபதத்தை அடைகி றார்கள்" –கருட புராணம்.

29. ஓ பகவன்! உமக்கு இந்திரியங்களில்லை. ஆனாலும், ஸகல ப்ராணிகளுடைய இந்திரியங்களுக்குச்

சக்தியை உண்டுபண்ணுகிறீர்; தாமாகவே ப்ரகாசிக்கிறீர். (இயற்கையான ஞான சக்தியுள்ளவருக்கு இந்திரியங் களுடைய அபேக்ஷை இல்லை என்று தாத்பர்யம்) சிற்றரசர்கள் தங்கள் ராஜ்ஜியத்திலுள்ள ஜனங்களால் கொடுக்கப்பட்ட வஸ்துக்களைத் தாங்கள் புஜித்து, சக்கரவர்த்திக்குக் கப்பங்கட்டி, அவருடைய உத்தரவின் படி நடப்பதுபோல மனிதர்களால் கொடுக்கப்படும் ஹவ்யம், கவ்யம் முதலியவைகளைப் புஜிக்கும் அவித்தையுள்ள தேவர்கள் உம்மைப் பூஜிக்கிறார்கள். உம்மிடம் பயந்து, அவரவர்களுடைய வேலையை சரியாக நடத்தி வருகிறார்கள். "அவருக்குக் கார்யமாவது, இந்திரியமாவது இல்லை. அவருக்கு ஒப்புயர்வுமில்லை." "இவருடைய சக்தி மேலானது, பலவகையானது; ஞானசக்தியும், கிரியா சக்தியும் இயற்கையானது." "இவருக்கு கை கால்களில்லை. ஆனால் வேகமாய் நடப்பவர்; பதார்த்தங்களை எடுப்பவர். இவருக்கு கண்களில்லை. ஆனாலும் பார்க்கிறார். இவருக்குக் காதுகளில்லை; ஆனாலும் எல்லாவற்றையுங் கேட்டுத் தெரிந்துகொள்ளுகிறார். இவரால் அறியப்பட வேண்டிய வஸ்து ஒன்றுமில்லை; இவரை ஒருவனும் தெரிந்து கொள்ளவில்லை" –சுருதிகள். இவரிடமிருந்து பயந்து காற்று வீசுகிறது; இவருடைய பயத்தால் ஸூர்யன் உதயமாகிறான். அக்னி, இந்திரன், மிருத்யு முதலியவர்களும் இவரிட மிருந்து பயந்தே தங்கள் தங்கள் வேலையைச் செய்கிறார்கள் – ச்ருதி.

வீரராகவீயத்தில்:– தேவர்கள் உம்மால் கொடுக்கப் பட்ட போகங்களை அனுபவிக்கிறார்கள்.

விஜயத்வஜீயத்தில்:– எந்த வித்வான்கள் உம்மையே

ஸேவிக்கிறார்களோ, அவர்களைப் பசுக்களைப் போல் வேதத்தில் சொல்லிய கர்மங்களை அனுஷ்டிக்கும்படி செய்கிறீர். உம்மிடத்தில் அதிகமான பிரீதி செய்த பக்தர்கள் ஜகத்தைப் பரிசுத்தப்படுத்துகிறார்கள். உம்மிடத்தில் பக்தி செய்யாதவர்கள் பரிசுத்தப்படுத்தப் படுகிறதில்லை ஸகல சக்திகளையும் தரிப்பவர் நீர் ஒருவரே: வேதங்களாகிய எங்களுக்கு சக்கிரவர்த்தியாக விருப்பவர்; நீர் ஒருவரேயாம் தேவர்கள் எல்லோரும் மனிதர்களால் கொடுக்கப்பட்டதைப் புஜித்து உம்முடைய உத்தரவைச் சிரஸால் தரிக்கிறார்கள்.

30. ஓ நித்யமுக்தரே! மாயையுடன் எப்பொழுது நீர் விளையாடுகிறீரோ, அப்பொழுது உம்முடைய ஸங்கல்த்தால் கர்மங்கள் ப்ரகாசிக்கின்றன. அவை களால் உண்டான சரீரங்களுடன் தாவர ஜங்கமங்கள் உண்டாகின்றன. ஆகாயம் போல் ஸமரும், மிக்க கருணையுள்ளவரும், வாக்குக்கும் மனதிற்கும் எட்டாதவரும், சூன்யம் போன்றவருமான உமக்குத் தம்மைச் சார்ந்தவன், பிறன் என்ற பேதபுத்தியில்லை. (முன்சுலோகத்தில் ஸகல ஜனங்களுடைய இந்திரியங் களையும் விஷயங்களில் பிரவிருத்திக்கும்படி செய்ப வரான பகவானை இந்திரியங்களுக்கு வசப்பட்ட வர்கள் ஸேவிக்கிறார்களென்று சொல்லப்பட்டது. இந்த ச்லோகத்தில் பரமாத்மாவிடமிருந்து எல்லாம் உண்டானதால் அவர்கள் பரமாத்மாவை உபாஸிக் கிறார்களென்று காட்டப்பட்டது.)

வீரராகவீயத்தில்:– விரஹமென்ற பாடத்தில் ஸ்தாவரம், ஜங்கமம் ஆகிய ப்ராணிகள் ப்ரகிருதியால் ஏற்பட்ட சரீரமுள்ளவர்கள் (எல்லா ஜனங்களுக்கும்

ப்ரகிருதி ஸம்பந்தம் தள்ள முடியாதது.) இப்படிப் பட்ட ஜனங்களில் சிலருக்குப் ப்ரகிருதி ஸம்பந்தம் நிவர்த்தியடையுமானால் அவர்களுக்கு மோக்ஷம் கிடைக்கிறது. அதுவும் பரமாத்மாவாகிய உன்னுடைய கடாக்ஷத்தால் தான் உண்டாகிறது. ஓ துஷ்ட குணமில்லாதவரே! உம்மைவிடக் கருணையுள்ளவன் ஒருவனுமில்லை. ஆனதால் உமக்குக் காப்பாற்றக் கூடாதவன் என்பதுமில்லை ஸகல ப்ராணிகளுக்கும் சரீரமாக இருப்பதால் எல்லாம் உம்மால் ரக்ஷிக்கக் கூடியதேயாம். ஆகாயம் எங்கும் வ்யாபித்திருந்தாலும், தோஷ ஸம்பந்தமில்லாமல் இருப்பது போல் நீர் எங்கும் வியாபித்திருந்தாலும், கெட்ட குணங் களுடைய ஸம்பந்தமற்றவராக இருக்கிறீர். அதனால் சூன்யம் போல் இருக்கிறீர். (அப்படிப்பட்ட உமக்குப் பேத புத்தியில்லையென்று தாத்பர்யம்).

விஜயத்வஜீயம்:– சிற்றரசர்கள் சக்கிரவர்த்தியின் உத்தரவைத் தலையால் சுமப்பது போலப் ப்ரஜாபதிகள் எந்த எந்த வேலையில் நியமிக்கப் பட்டிருக்கிறார் களோ, அவர்கள் உம்மிடம் பயந்து தங்கள் தங்கள் வேலையை நடத்துகிறார்கள். ஆனதால் எல்லா ஜனங்களுக்கும் பரமாத்மாவிடமிருந்தே முக்தி கிடைக் கிறதென்று தெரிந்துகொள்ள வேண்டும். ஓ உற்பத்தி யில்லாதவரே ஸ்தாவர ஜங்கம ப்ராணிகளெல்லாம் பரமாத்மாவிடமிருந்தே ஸம்ஸாரத்தை அடைகின்றன, (மோக்ஷம் பரமாத்மாவிற்கு அதீனமானதால், ஸம் ஸாரமும் பரமாத்மா தீனமென்று கருத்து).

31. இயற்கையில் ஜீவர்கள் அநேகர்களென்றும், எங்குமிருப்பவர்கள் என்றும் இருக்குமானால் உம்மால்

அவர்கள் சிக்ஷிக்கப்படுகிறார்கள் என்று சொல்ல முடியாது. (அவர்கள் ஒருவருக்கொருவர் ஸமர்களான தாலும் நியந்தா, நியம்யன் என்றது ஏற்படாது. அப்படிச் சொல்லாவிடில் (ஜீவர்கள் ஸ்வதந்திரர் களென்று) உம்மால் நியம்யர்கள், அவர்களுக்கு நீர் நியந்தாவென்று சொல்வது பொருந்தும். எப்படி யென்றால் ஜீவர்கள் உபாதி ஸம்பந்தத்தால் உம்முடைய கார்யங்களே யொழிய வேறில்லை. அவர் களுக்கு நீர் காரணமாக இருப்பதால் நீர் அவர்களுக்கு நியந்தாவாக (அதிபதி) ஆகிறீர். உம்முடைய ஸ்வரூபம் எல்லாவற்றிலும் தொடர்ந்திருக்கிறது. அறியப்பட்ட வஸ்துக்கள் தோஷமுள்ளவையாதலால், என்னால் அறியப்பட்டதென்று சொல்லக் கூடாது. (அவித் தையாகிய உபாதியுள்ள பரமாத்மாவின் அம்சங்களே ஜீவர்களென்று தாத்பரியம்.)

வீரராகவீயத்தில்:— "ஜீவர்கள் அநேகர்கள், நித் யர்கள்; எங்கும் இருப்பவர்கள். ஆனதால் அவர்கள் ஒருவனுக்குள் அடங்கினவர்களல்லர்" என்ற நியம மானது பொருந்தாது. ஜீவன் அணுவென்றால் தான் பொருந்தும். "வியாபகமான எந்தப் ப்ரஹ்மத்தினால் ஜகத் படைக்கப்பட்டதோ, அந்தப் ப்ரஹ்மமானது அந்த ஜகத்தில் அந்தர்யாமியாக இருந்து நியந்தாவாக இருக்கிறது. ஆனதால் ஸகல ஜகத்திற்கும் பரமாத் மாவே நியந்தா" என்று எவர்கள் அறியவில்லையோ, அவர்களுடைய மதம் ப்ரமாண விருத்தமானதால் ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல.

வியஜத்வஜீயம் :— ஓ ஒப்பற்றவரே! ஜீவர்க ளுக்குள் எல்லாவற்றையும் அறிந்தவனான (ஸர்வக்ஞன்)

ப்ராஹ்மணனைக் காட்டிலும் மேலானவன் இல்லாதது போலப் ப்ராஹ்மணனை விட மேலானவராக உம்மைக் காட்டிலும், மேலானவன் ஒருவனு மில்லை. (நீரே எல்லாவற்றிற்கும் அதிபதி. ப்ராணன், ஸ்ரீதேவி முதலியவர்களும் உமக்குத் தாழ்ந்தவர்கள்.) ஓ எங்கும் நிறைந்திருப்பவரே! ஜீவர்கள் ப்ராணனுக்குச் சுவாதீனப் பட்டவர்கள். அநேகர்கள், ஆனால் "ப்ரம்ஹம் ஒன்று" என்ற ச்ருதி வாக்கியத்திற்கு விரோதம் வருமே என்றால் அந்த ச்ருதி ஜீவர்கள் ஒன்று என்று சொல்லவில்லை. ப்ரம்ஹம் ஒன்று என்று சொல்லுகிறது.

32. பரமாத்மாவிடத்திலிருந்து ஜீவர்கள் உண்டா கிறார்கள். அதனால் பரமாத்மா அவர்களுக்கு நியந் தாவாக இருக்கிறார் என்று சொல்வதானால் ஜீவர்கள் அநித்யர்களென்று ஏற்படும். ஒவ்வொரு நாளும் சில ஜீவர்கள் நசிக்கிறார்கள், சிலர் ஜனிக்கிறார்கள் என்றும் ஏற்படும். ஜீவர்கள் நாசத்தை அடைவதே மோக்ஷ மென்றும் ஏற்படுமேயென்றால், உபாதிகளின் ஜனனத்தை ஜீவர்களுக்கு ஜன்மமென்று சொல்லுகிறோம். உண் மையில் ஜீவர்களுக்கு உற்பத்தியில்லையென்று இந்த ச்லோகத்தில் கூறப்படுகிறது. —ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவர்கள் உத்பத்தியற்றவர்களானதால் ப்ரகிருதி ஜீவரூபியாக ஆயிற்று என்பதும், புருஷன் என்பதும், புருஷன் ஜீவரூபியானான் என்பதும் பொருந்தாது. (ச்ருதியில் புருஷனை அஜன் என்றும், ப்ரகிருதியை அஜா என்றும் சொல்லியிருக்கிறது). ஆனதால் ப்ரகிருதியை புருஷன் இவ்விருவர்களுடைய ஸம்பந்தத்தால் ப்ராணன் முதலிய உபாதிகளுள்ள ஜீவர்கள் உண்டாகிறார்கள். ஜலத்தில் குமிழி உண்டாக வேண்டுமானால் ஜலத்தால் மாத்திரம்

உண்டாகிறதில்லை. காற்றினால் மாத்திரம் உண்டாகிற தில்லை இரண்டும் சேர்ந்தால்தான் குமிழி உண்டா கிறது. ஜலம் நிமித்த காரணம், காற்று உபாதான காரணம். (முக்கிய காரணம்). அதுபோல ப்ருகிருதி நிமித்த காரணம்; புருஷன் உபாதான காரணம். "அடி மைத்ரேயி இந்த ஆத்மா நாசமற்றவர்" என்று சுருதியின்படி, ஜீவன் நித்யனென்று ஏற்படுவதால் உபாதியின் ஜன்மத்தை ஜீவனுடைய ஜனனமாகச் சொல்லுகிறோமேயொழிய உண்மையில் ஜீவனுக்கு ஜனனமில்லை. அது போல உபாதி நாசம் ஜீவனுடைய நாசமாகச் சொல்லப்படுகிறதேயொழிய, உண்மையில் ஜீவனுக்கு நாசமில்லை. எப்படி, தேனில் மற்ற புஷ்பரசங்கள் சேர்ந்து இன்ன புஷ்பத்தின் ரசமென்று பிரித்தெடுக்க முடியாமல் தேனாக லயிக்கின்றனவோ, எப்படி நதியின் ஜலம் ஸமுத்திர ஜலத்தில் சேர்ந்து நாம ரூபங்கள் விட்டு ஒரே ஜலமாக ஆகின்றனவோ, அப்படி ஜீவன் உண்மையில் ஜனனமில்லாதவனானதால் பலவகையான பெயர், குணங்கள் ஆகிய இவைகளுடன் காரணமாகிய உம்மிடத்தில் லயத்தையடைகிறான். (உபாதி நாச மடைந்தால் ஜீவத்வம் போய்விடுகிறது. ஸ்வரூபமாக இருக்கிறாரென்று தாத்பரியம். ஜீவன் ப்ரகிருதிக்கு வசப்பட்டவன்; ப்ருகிருதி ஈச்வரனுக்கு வசப்பட்டது.)

வீரராகவீயம்:– ப்ருகிருதி, புருஷன் ஆகிய இருவர்களுக்கும் உத்பத்தியில்லை. ஆனாலும் ஜலம் வாயு இவ்விரண்டும் சேர்ந்து ஜலத்தில் குமிழியை உண்டாக்குவது போல ப்ருகிருதி, புருஷன் இவ்விருவர் களின் சேர்க்கையாலேயே ஆதாரமாக இருக்கும் உம்மிடத்தில் பலவகையான நாம ரூபங்களுள்ள

ப்ராணிகள் உண்டாகிறார்கள். நதிகள் ஸமுத்திரத்தில் விழுவது போலும், தேனில் மற்ற புஷ்ப ரஸங்கள் சேருவதுபோலும், பிரளயகாலத்தில் அந்தப் பிராணிகள் உம்மிடத்தில் லயத்தை அடைகிறார்கள். (பதார்த் தங்களுக்கு அநேக அவஸ்தைகள் நேர்ந்தாலும் அந்த அவஸ்தைகள் அநித்யங்களே யொழிய, பதார்த்தம் நித்யம். முன் அவஸ்தையை விடுவது நாசமென்றும், பிந்திய அவஸ்தையை அடைவது ஜனனமென்றும் சொல்லப்படுகிறது.)

விஜயத்வஜீயம்:– ஓ உத்பத்தியற்றவரே! ஒரு வகையாக எங்குமிருப்பவரும், தோஷமற்றவரும், நாசமற்றவருமான பரமாத்மாவையறிந்த ஆசார்யனால் உபதேசிக்கப்பட்ட புருஷன் அஜ்ஞானத்தால் கல்பிக் கப்பட்ட ஸம்ஸாரத்திலிருந்து விடப்படுவான். ப்ரு கிருதி, புருஷன் இவர்கள் உத்பத்தியற்றவர்கள். (அவர் கள் நித்ய முக்தர்களென்று கருத்து.) எவ்விடத்தில் பரமாத்மாவோ, அவ்விடத்தில் ப்ருகிருதி எவ் விடத்தில் ப்ருகிருதியோ, அவ்விடத்தில் பரமாத்மா என்று தேசத்தாலும் காலத்தாலும் சேர்ந்திருக்கும். அவ்விருவர்களிடமிருந்து ஜலத்தில் குமிழிபோல ஜீவர்களுண்டாகிறார்கள் என்று தெரிந்துகொண்ட ஆசாரியனிடம் உபதேசம் பெற்றவர்கள் மோக்ஷத்தை அடைவார்கள். "பரன், ப்ரகிருதி இவ்விருவர்கள் இயற்கையில் முக்தர்கள்" என்ற ஜ்ஞானமுள்ள ஆசார்யனுடைய உபதேசத்தால் ஸம்ஸார பந்தத்தை நிவர்த்தித்துக் கொள்ளுகிறான்." – கலாபச்ருதி. "பரனும், ப்ரகிருதியும் தேசத்தாலும் எங்கும் ஸமமாக வ்யாபித்திருக்கின்றன. அவ்விருவர்களுடைய சேர்க்கையால் புருஷர்கள் உண்டாகிறார்கள்" – கௌடரவ்ய ச்ருதி.

33. புத்திசாலிகள் மேற்காட்டியபடியுள்ள உம்முடைய மாயையை அறிந்து ஸம்ஸாரத்தை நிவர்த்திப் பவரான உம்மிடத்தில் மனத்தைச் செலுத்துகிறார்கள். உம்மை உபாஸிக்கிறவர்களுக்கு ஸம்ஸார பயம் எப்படி உண்டாகும்? (உண்டாகாதென்று தாத்பரியம்) குளிர்காலம், மழைக்காலம், கோடை காலமென்ற மூன்று அவயவங்களுள்ள உம்முடைய புருவ நெரித்தலாகிய காலமானது உம்மைச் சரணமடையாத வர்களுக்கு இறப்பு பிறப்பாகிய ஸம்ஸாரத்தை உண்டு பண்ணுகிறது.

விஜயத்வஜீயம்:—ஓ ஸகல ஜகத்திற்கும் பிதாவாக இருப்பவரே! ஆனந்தத்தால் நிறைந்தவரே! எல்லாவற்றிலும் மேலானவரே! (மூலத்திலிருக்கும் த.தொ. என்ற பதத்தை 'தத' ஓ என்று பிரித்துக்கொள்ளவும், அ.உ இரண்டும் சேர்ந்தால் ஓ என்று ஆகிறது. அதனால் மேற்காட்டிய அர்த்தம் ஏற்பட்டது) இந்திரன் முதலிய தேவர்களுடைய பெயருக்குப் பொருளாயுள்ள ஐச்வர்யம் முதலிய குணங்கள் யாவும் மதுவின் ஸமுத்திரத்தில் புஷ்ப ரஸங்கள் போல உம்மிடத்தில் லயிக்கின்றனவென்றும், எல்லாவற்றையும் காட்டிலும் பரமாத்மா மேலான குணமுள்ளவரென்றும், மனிதர்களில் புத்திசாலிகளான ஜனங்கள் தெரிந்து கொள்கிறார்கள், "பரனுக்கும் ஜீவனுக்குமுள்ள பேதம் ஆதியற்றது, அந்தமற்றது. இது ஸ்வயமாகவும் நசிக்கிறதில்லை; பிறராலும் நசிக்கிறதில்லை. இப்படி தெரிந்து கொண்டவர்களுக்கு ஸ்ரீ மஹாவிஷ்ணு. அதிக ஜன்மங்களைக் கொடுக்கிறதில்லை." ஸ்மிருதி ஆனதால் உம்மை ஆசிரயித்தவர்களுக்கு உம்முடைய புருவமானது பயத்தை உண்டுபண்ணுகிறதில்லை. (பயத்தை

நிவர்த்திக்கறதென்று தாத்பர்யம்)

34. எவர்கள் ஆசார்யனுடைய பாதத்தை உபாஸியாமல், இந்திரியங்களையும் ப்ராணனையும் ஜயித்து அடக்கமுடியாத மனமாகிய குதிரையை அடக்க முயற்சிக்கிறார்களோ, அவர்கள் ஓடக்கார னில்லாமல் ஸமுத்திரத்தில் கஷ்டப்படும் கப்பல் வியாபாரிகள்போல இந்த ஸம்ஸார ஸமுத்திரத்தில் கஷ்டப்படுவார்கள். (முன் ச்லோகத்தில் காட்டியபடி மனதைப் பகவானிடத்தில் செலுத்தவேண்டுமானால் மனம் அலையாமல் ஒருவகைப்பட வேண்டும். அது குருவை உபாஸித்தால்தான் கிடைக்குமென்று இந்த ச்லோகத்தில் காட்டப்பட்டது.

விஜயத்வஜீயத்தில்:— எந்த விவேகிகள் உம்மைப் பூஜிக்கித்தக்க யோக்கியதை உள்ளவர்களோ, அவர்கள் இந்திரியம், ப்ராணன் ஆகிய ஸாரதி, குதிரை இவைகளால் மிக்க சபல ஸ்வபாவமுள்ள புத்தியை, பயனை விரும்பாமலிருக்கச் செய்ய முயற்சித்து மேலாக ஜீவிக்கிறார்கள். அவர்கள் அநேக துக்க ஸமுத்திரத்தைத் தாண்டுவிப்பதான குருவின் பாதத்தை ஆச்ரயித்தே அப்படிப்பட்ட பயனையடை கிறார்கள்.

35. பரமானந்த ஸ்வரூபியான நீர் இருக்கும் பொழுது பந்துக்கள், புத்திரன், தேஹம், களத்திரம், பணம், வீடு, பூமி இவைகளில் ஆசை வைத்து ஸ்வல்ப ஸுகத்தை விரும்பும் மனிதர்களுக்கு என்ன ஸுகம் கிடைக்கப் போகிறது? ஒருவித ஸுகமுமில்லை. ஆனதால் உம்மையே உபாஸிக்கவேண்டும் என்பதை

அறியாமல், ஸ்திரீ ஸுகத்தில் ஆசைப்பட்டு, அனித்யமும் ஸாரமற்றதுமான ஸம்ஸாரத்தில் மூழ்கியிருப்பவர்களை எதுதான் ஸுகப்படுத்தும்?

விஜயத்வஜீயம்:– எவனுக்குத் தேவரிடத்தில் மிக்க பக்தியும், அது போல குருவினிடத்திலும் முக்கிய பக்தியிருக்கிறதோ அந்த மஹாத்மாவிற்கு விஷயங்கள் பிரகாசிக்கின்றன. பகவானை அடைவதற்கு ஆசார்யனுடைய அனுக்கிரஹத்தைவிட வேறு ஸாதனம் ஒன்றுமில்லை. ஆசார்யனுடைய உபதேசத்தால் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை அடைவான். ஸம்ஸயமில்லை" என்று ச்ருதி ஸ்மிருதியின் அர்த்தங் காட்டப்பட்டது.

36. மஹர்ஷிகள் உம்முடைய பாதாரவிந்தத்தை ஹிருதயத்தில் தியானஞ் செய்து, அஹங்காரமற்றவர்களாகி, பாபத்தை நிவர்த்திக்கும் பாத ஜலமுள்ளவர்களானாலும், பூமியிலுள்ள பல புண்ணிய தீர்த்தங்களுக்கும் க்ஷேத்திரங்களுக்கும் செல்லுகிறார்கள். (பெரியோர்களுடைய சேர்க்கை உண்டாகுமென்று). புருஷர்களுடைய விவேகத்தை மாற்றும் ஸ்திரீ ஸுகத்தை விரும்புகிறதில்லை. ஒரு தடவை உம்மைத் தியானிப்பவர்களும் விஷயத்தில் ஆசையை யொழித்து விடுகிறார்கள். அப்படியிருக்க, மஹர்ஷிகள் ஒழிக்கிறார்களென்பதில் என்ன ஸந்தேஹம்?

வீரராகவீயம்:– தீர்த்தங்களையும் பரிசுத்தப் படுத்துவதற்காகச் ஸஞ்சரிக்கிறார்கள்.

வீஜயத்வஜீயம்:–ப்ரஹ்மத்தை அறியாமல் ஸ்திரீ ஸுகத்தில் ஆசை கொண்டு ஸஞ்சரிப்பவர்களுக்கு

மோக்ஷத்தைக் கொடுத்து யார் ஸுகப்படுத்துவான்? ஆனதால் பரிசுத்தியையுண்டுபண்ணும் சாஸ்திரங்களை ஆச்ரயித்த தேவர் முதலியவர்கள் பாபத்தை நிவர்த்திக்கும் உம்முடைய பாதத்தை ஹிருதயத்தில் தியானிக்கிறார்கள். நித்ய ஸ்வரூபியும். சித்ஸ்வரூபியுமான உம்மிடத்தில் மனத்தைச் செலுத்துகிறார்கள். ஓ புருஷோத்தம! அஹங்காரத்தை அடைகிறதில்லை.

37. ஸத்தாகிய ப்ரம்ஹத்தினிடமிருந்து உண்டான ஜகத்தும் ஸத்தாகவே இருக்கவேண்டும். (எதனிடத்திலிருந்து எது உண்டாயிற்றோ, அது ஸ்வரூபமேயாம். ஸ்வர்ணத்திலிருந்து உண்டான வளை முதலியவை சுவர்ணமாகக் காணப்படுகின்றன) என்றால் காரணம் விருத்தமாக இருக்கிறது. (இரண்டும் ஒன்று என்று அபேதத்தைச் சொல்லவில்லை. பேதமில்லையென்பதைச் சொல்லுகிறோமென்றால், அதுவும் அபேதமென்றுதான் ஏற்படுகிறது) சில இடத்தில் மாறுதலாகவும் காணப்படுகிறது. (பிதாவினிடத்திலிருந்து) உண்டான புத்திரன் பிதாவைவிட வேறாக இருக்கிறான் உலக்கையால் குடத்தை உடைத்தால் அதன் ஸ்வபாவமும் உலக்கையும் ஒன்றாக ஆகுமா?) அதிலிருந்து உண்டானதென்றால் அதை உபாதான காரணமாகக் கொண்டது என்று அர்த்தங்கொள்ள வேண்டும். புத்திரனுக்குப்பிதா நிமித்த காரணமேயொழிய உபாதான காரணல்லவென்றாலும் சிலவிடத்தில் மித்யையாக இருக்கிறது, (கயிற்றைச் ஸர்ப்பம் என்று நினைக்குமிடத்தில் அசைவது, கோணல், முதலிய குணங்களை உபாதான காரணமாகக் கொண்ட குணமாக இருக்கவில்லை.) அவித்தையுடன் கூடி உபாதான காரணமென்று சொல்வது பொருந்தாது.

அப்படிப்பட்ட வஸ்துவல்ல. ஆனதால் ஜகத் உண்மையில் ஸத்தியவஸ்துவல்ல. ஆனாலும் வ்யவஹாரத்துக்காகப் ப்ரம்ஹமானது உபயோகப்படுகிறது. (ஒரு இடத்திலி ருக்கும் வஸ்துவை மற்றொரு இடத்தில் ஆரோபித்தால் அது ப்ரம்ஹமென்று லோகப்பிரஸித்தம். இல்லாததான வஸ்துவைப் ப்ரம்ஹமென்று எப்படி சொல்லக்கூடும் என்றால்) அந்த பரம்பரா நியாயத்தால் இந்த ப்ரம்ஹம் ஏற்பட்டிருக்கிறது. (வஸ்து இருப்பதுபோல் தோன்றும் ஸம்ஸ்காரத்தால் ப்ரம்ஹம் உண்டாகலாம். உண்மையில் வஸ்து இருக்கவேண்டுமென்ற நியம மில்லை. ஆனதால் ப்ரம்ஹமானது அனாதி. அதனால் அந்த பரம்பரா நியாயத்தை அனுசரித்து ஜகத் இருப்பதாக வ்யவஹாரம் உண்டாகிறது. ஜகத்தானது வேதத்தால் சொல்லப்பட்டதாகையால் அதனை இல்லை என்று எப்படிச் சொல்லலாம்? என்றால் ஓ பகவன்! உம்முடைய வாக்காகிய வேதமானது கர்மத் தில் ச்ரத்தையுள்ள மந்த புத்திகளான ஜனங்களைக் கௌண விருத்தி, லக்ஷணா விருத்தி, முதலிய விருத்தி களால் பிரமிக்கச்செய்கிறது. (சாதுர்மாஸ்ய யாகம் செய்தவனுக்கு அதனுடைய பயன் குறையாதது என்று ஒருச்ருதியில் சொல்லப்பட்டிருந்தாலும், கர்மத்தால் ஸம்பாதிக்கப்பட்ட பலமானது குறைகிற தென்று மற்றொரு ச்ருதி சொல்லுகிறபடியால் முன் காட்டிய ச்ருதி அதன் மேன்மையைச் சொல்லிற்று என்று தாத்பர்யம்)

வீரராகவீயத்தில்:– 'ஸத்தாயிருக்கிற பரப்பிரும்மத் தினிடமிருந்து உண்டான இந்த ஜகத்தும் ஸத்திய மாகத்தானிருக்கவேணடும் என்று சொல்வது யுக்தி விரோதமாகையால், பொருந்தாது என்று சொல்வது

ஸரியல்ல. அது ஒரு இடத்திலும் விபசாரத்தை அடைகிறதில்லை. ஒரு இடத்திலும் பொய்யாக ஆகிறதில்லை. ஸத்வ விலக்ஷணமாகிய இரண்டு தர்மங்களுள்ள த்ரவ்யமாகவும் இல்லை. ப்ரம்ஹம மானது வ்யவஹாரத்திற்கு உபயோகப்படுகிறது. கர்மங்களில் ச்ரத்தையுள்ளவர்களை உம்முடைய வாக்காகிய வேதமானது பிரமிக்கச் செய்கிறது.

வீஜயத்வஜீயம்:– இந்த ஜகத்திற்கு விஷ்ணு அதிபதியேயொழிய ஜீவன் அதிபதியல்ல. இதற்கு என்னைக்காட்டிலும் வேறொருவனுமதிபதியல்ல. சேதனனாக இருப்பதால் என்ற தர்க்கம் சிலவிடத்தில் வ்யபிசரிக்கிறது, சிலவிடத்தில் பொய்யாக இருக்கிறது. (ஜீவனும் ஈச்வரனும், வெயிலும் நிழலும் போல விருத்த தர்மங்களுள்ளவர்கள். அதனால் அவ்விரு வர்களும் வேறு என்று தாத்பரியம்,)எல்லாச் சரீரங்களிலும் ஸுக துக்கங்களை அனுபவிப்பதால் சரீரத்தின் பரிணாமமே ஜீவன்" என்ற கூடபண்க மதத்தில் சொல்லப்பட்ட யுக்தியும் பொய்யாக இருக்கிறது. அணுவாகிய சரீரத்திலிருந்த ஜீவன் கர்மவ சத்தால் யானைச்சரீரத்தை அடைந்தால் விகாரமுள்ள வனாகி விடுவான். ஆனதால் மேற்காட்டிய யுக்தி பொய்யாக ஆகிறது. தர்க்கங்கள் தோஷமுள்ளவையாக இருப்பதால் அவைகள் மூடர்களுடைய புத்திக்குப் ப்ரம்ஹத்தை உண்டு பண்ணுகின்றன. இப்படி வேதத்திற்கு விரோதமாய்ச் சொல்வது அந்த பரம் பரையாக வந்திருக்கிறது; உம்முடைய பலவித குணங் களையும் கர்மங்களையும் நிரூபிப்பதில் வேகமுள்ள வேதம் பலவிதமாகச் சொல்லி வேதத்தின் உண்மை யான தாத்பரியத்தை அறியாத மூடர்களை ப்ரமிக்கச்

செய்கிறது.

38. முன் ச்லோகத்தில் ஜகத் ஸத்யமென்பதற்கு ஸாதகமான யுக்தியில்லையென்று சொல்லப்பட்டது, இந்த ச்லோகத்தில் ஜகத் ஸத்யமென்பதற்குப் பாதகமான யுக்திகள் காட்டப்படுகின்றன. ஸிருஷ்டிக்கு முன் இந்த ஜகத் இல்லை. "சிருஷ்டிக்கு முன் ஸத்தாகிய ப்ரம்ஹமே இருந்தது." – ச்ருதிகள். பிரளயத்திற்குப் பின் இருக்கப் போகிறதில்லை, ஆனதால் கேவல ஆத்மாவாகிய உம்மிடத்தில் தோன்றும் இந்த ஜகத்தானது மித்யையேயாம். (முற்காலத்திலும், பிற்காலத்திலும் எது இல்லையோ, அது மத்திய காலத்திலும் இல்லை யென்று தாத்பர்யம்) அதனால் வேதங்கள் த்ரவ்யங் களுடைய பேதங்களுள்ள மார்க்கத்துடன் உம்மைச் ஸமமமாக நிரூபிக்கின்றன. (மண் முதலிய த்ரவ்யங் களின் விகாரங்கள் குடம் முதலியவை. அவைகளின் குடமென்ற பெயர், அதன் உருவம் ஆகிய இவை ஸத்தியமல்ல. காரணமாகிய மண் என்பதே ஸத்யம். அது போல் பிரஹ்மமே ஸத்ய வஸ்து; ஆகாயம் முதலியவை அநித்யமென்று வேதங்கள் சொல்லு கின்றனவென்று தாத்பரியம்) ஆனதால் பொய்யான ஜகத்தை ஸத்யமென்று நினைப்பவர்கள் மூடர்கள்.

வீரராகவீயம்:– "ஸிருஷ்டிக்கு முற்காலத்தில் இந்த ஜகத்தில்லை; பிரளயத்திற்குப் பிற்காலத்திலும் இல்லை, ஆனதால் மத்திய காலத்தில் உம்மிடத்தில் தோண்றுவது மித்யை. ஆனதால் மண் முதலிய த்ரவ் யங்களுடைய விகாரங்களாகிய குடம் முதலியவை களுடைய பெயர், உருவங்கள் எப்படி அநித்யமோ (வ்யவஹாரத்திற்கு மாத்திரம் உபயோகமோ),

காரணமாகிய மண் என்பது மாத்திரம் நித்யமோ, அப்படியே காரணமாகிய ப்ரம்ஹமும் நித்தியம். ஜகத் அநித்யமென்று வேதங்கள் உம்மைப்பற்றிச் சொல்லு கின்றன" என்று சொல்வது பொருந்தாது. அந்த வேதத்தின் உண்மையான அர்த்தத்தை அறியாத மூடர்கள் மேற்காட்டிய வண்ணம் ஜகத்து பொய் என்று சொல்லுகிறார்கள். ('அந்த வேதவாக்கியத்தால் கார்யம் பொய்யென்றும்' காரணம் ஸத்யமென்றும் சொல்லப்படவில்லை. கார்யம் காரணத்தைவிட வேறல்ல என்று மாத்திரம் சொல்லப்படுகிறது என்று தாத்பர்யம்.)

விஜயத்வஜீயத்தில்:– ஜீவனை ஈச்வரனாகச் சொல்வதற்கு பாதகமான யுக்திகள் காட்டப்படுகின்றன. ஜீவர்கள் கர்ப்பத்திலிருக்கும்பொழுது (உண்டாவதற்கு முன்) ஈச்வரனாக இருந்ததில்லை. பிந்தியகாலத்திலும் ஈச்வரனாகவிருக்கப்போகிறதில்லை. ஆனதால் மத்தியிலும் (ஜனன மரணத்திற்கு) ஜீவனை ஈச்வர னென்று சொல்லமுடியாது ஜீவன் உத்தமனென்றும், பணக்காரனென்றும் நல்ல குலத்தில் பிறந்தவனென்றும், மூடர்கள் ப்ரமித்துச் சொல்லுகிறார்களே யொழிய உண்மையில் வித்வான்கள் மேற்காட்டிய உத்தம குணங்கள் ஈச்வரனாகிய உம்முடையவைகளென்றும் ஔபசாரிகமாக ஜீவனிடத்தில் சொல்லப்படுகின்றன, அப்படி சொல்வதற்கும் நீரே காரணமென்றும் தெரிந்து கொள்ளுகிறார்கள்.

39. ஜகத்து உண்மையில்லாவிடில் சேதனனுக்கு அதில் ஸம்பந்தமேற்பட நியாயமில்லை. ஆனதால் ஜீவன் ஸம்ஸாரியென்றும், ஈச்வரன் நித்யமுக்தனென்றும்

சொல்வது எப்படி பொருந்தும்? கர்மகாண்டத்தின் அர்த்தமென்னவென்றால் –அந்த ஜீவன் எப்பொழுது மாயையுடன் அவித்யையை ஆச்ரயிக்கிறானோ அப்பொழுது தேஹம் இந்திரியம் முதலியவைகளை ஆத்மாவென்று நினைத்து அதனுடைய தர்மங்களையும் அடைந்து இயற்கையான ஆனந்தம் முதலிய குணங்களை மறந்து ஸம்ஸாரத்தை அடைகிறான். (கர்மகாண்டம் அதைச் சொல்லுகிற தென்று கருத்து) ஸர்ப்பமானது தோலை விட்டு விடுவதுபோல நீர் அந்த மாயையை விட்டு விடுகிறீர். மேலும் நீர் ஸகல ஐச்வர்யங்களையும் எப்பொழுதும் அடைந்தவர்; எட்டு மஹா விபூதிகளிலிருந்து ப்ரகாசிக்கிறீர்.

வீரராகவீயம்:– அந்த ஜீவன் உம்முடைய மாயையால் மோஹித்து. ப்ரகிருதிபரணா ஸ்வரூபமான தேவ சரீரம் முதலிய விஷயங்களை அனுபவித்துக் கொண்டு தேஹத்தில் அபிமானத்தை அடைகிறான். அதனால் ஜனனமரணம் முதலிய ஸம்ஸாரத்தை அடைகிறான். ஞானம், ஐச்வரியம் இவைகள் மறைக்கப்படுகின்றன. நீர் இயற்கையில் ஸகல ஐச்வர்யங்களை அடைந்தவர்; அணிமா முதலிய விபூதிகளுள்ளவர்; அதனால் மாயைக்கு வசப்படுகிறதில்லை. (ஜீவன் மாயைக்கு வசப்பட்டவன்; பரமாத்மா மாயைக்கு ஸ்வாதீனனல்ல. இதுவே இவ்விருவர்களுக்குமுள்ள பேதமென்று கருத்து.)

வீஜயத்வஜீயம்:–புருஷன் ச்ருதியில் சொல்லப்பட்ட உம்முடைய குணங்களை ஸ்மரிக்கிறான். அதன் பின் ஸம்ஸாரத்தில் இருந்து விடுபடுகிறான். அதன்பின் ஸாயுஜ்யம், ஸாரூப்யம், ஸாலோக்யம்

என்ற முக்தியை அடைகிறான். பரமனாகிய உம்மால் அபஹரிக்கப்பெற்ற சக்தியுள்ள மாயையை விடுவது மன்னியில் நாசஞ்செய்கிறான். அதுவும் உம்முடைய சக்தியேயாம். மேலும், அஸுரர்களை மோஹிக்கச் செய்வதற்குப் பரமசிவன் முதலியவர்களைப் பூஜிக்கிறீர். மற்ற தேவர்களால் பூஜிக்கப்படுகிறீர்.

40. வெளியிலிருக்கும் விஷயங்களில் ஆசையை யொழித்து, பகவானை உபாஸிப்பவர்களானாலும் எவர்கள் ஹிருதயத்திலிருக்கும் அஜ்ஞான வாஸனையின் மூலத்தை நாசஞ்செய்ய வில்லையோ, அவர்களுடைய ஹிருதயத்தில் நீர் இருந்தாலும் அவர்களால் உம்மை அடையமுடியாது. கழுத்தில் ரத்ன ஹாரமிருந்தாலும் அதனை மறந்தவனுக்கு அவன் ஸமானனாவான். யோகிகளென்று பெயர் வைத்துக்கொண்டு இந்திரியங்களை திருப்திசெய்து வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு ஸம்ஸாரம் நிவர்த்தியடையாததால் இவ்வுலகத்தில் ஸுகமில்லை. ஈச்வர பதத்தை அடையாததால் மேலுலகத்திலும் ஸுகமில்லை.

வீஜயத்வஜீயத்தில்:– யதிகளானாலும், எவர்கள் விஷயங்களில் ஆசை கொண்டு ஸம்ஸாரத்தில் நிவர்த்தியடைய வில்லையோ அவர்களால் உம்மை அறியமுடியாது. கழுத்தில் ஹாரமிருப்பதான ஞாபகமில்லாத புருஷன் கழுத்தில் ஹாரமிருந்தாலும் அதனை எப்படி அறியமாட்டானோ, அதுபோல மேற்காட்டிய வர்கள் ஈசுவரனை அடைகிறதில்லை. நிவிருத்தி மார்க்கத்தை அடைந்த யோகிகளுக்கு அபயத்தைக் கொடுத்து காலம் முதலியவைகளிடமிருந்துக் காப்பாற்றுகிறீர்.

41. ஆறு வகையான குணங்களுள்ளவரே! உம்முடைய ஸ்வரூப ஞானமுள்ளவன் உம்மிடமிருந்து உண்டான புண்ணிய பாபங்களின் பயனாகிய ஸுக துக்கங்களில் ஸம்பந்தப்படுகிறதில்லை. அப்பொழுது தேஹாபிமானிகளைக் கட்டுப்படுத்தக்கூடிய விதி நிஷேதங்கள் அவனிடத்தில் ஸம்பந்திக்கிறதில்லை. ஒவ்வொரு யுகத்திலும் ஏற்படுத்தப்பட்ட ஸம்பிரதாயப் படி உம்முடைய சரிதங்களைச் சிரவணஞ் செய்து, உம்மை மனத்தில் த்யானஞ் செய்வதால் அவனுக்கு மோக்ஷமாகிய கதியாக இருக்கிறீர்.

வீரராகவீயம்:– இந்த ஸம்ஸாரத்தில் பகவானாகிய உம்மையறிந்தவன் பயனைக் கொடுக்க ஸித்தமாக இருக்கும் புண்ய பாபங்களுடைய பயனாகிய ஸுகதுக்கங்களில் ஸம்பந்தப்படமாட்டான். அந்த அவஸ்தையில் பிறருடைய நிந்தைகளையாவது, ஸ்தோத்திரத்தையாவது அவன் கவனிக்கமாட்டான், அப்படிப்பட்டவனுக்கு நீர் மோக்ஷத்தைக் கொடுக்கிறீர். (பரலோகத்தில் ஸுகத்தை அடைகிறானென்று சொல்லப்பட்டது) இவ்வுலகத்திலும் உம்முடைய பக்தர்களுடன் அளவற்ற கல்யாண குணங்களுள்ள உம்முடைய கதாமிருதத்தைக்கேட்டு ஸுகத்தை அடைகிறான்.

வீஜயத்வஜீவியம்:– ஸகல பிராணிகளுடைய வாக் முதலிய இந்திரியங்கள் நித்யமுக்தரான மகா விஷ்ணு, அவருக்கு ஸ்வாதீனப்பட்டவளான ஸ்ரீதேவி ஆகிய இவர்களை அடையவில்லை. இந்த யோகிகளால் எவர்களுக்கு ஞானம் உபதேசிக்கப்படுகிறதோ, அவர்களுடைய இந்திரியங்கள் விஷ்ணுவை அடையும்;

உமிக்குள் இருக்கும் அரிசி தூசியை அடையாதது போல் ரஜோகுணமுள்ள மனிதர்கள் ஸ்ரீ மஹா விஷ்ணுவை அடையார்கள்.

42. ஓ பகவன்! ப்ரஹ்மா முதலியவர்களும் உம்முடைய மஹாத்மியம் முழுவதையும் அறியவில்லை. நீர் அனந்தரானதால் உம்முடைய மஹிமையை நீரும் அறியவில்லை. ஏழு ஆவரணங்களுள்ள அண்டங்கள் ஒரே காலத்தில் காலத்தால் உமக்குள் சுற்றுகின்றன. அது ஆகாயத்தில் தூளி சுற்றுவது போலிருக்கிறது. அதனால் ஸகல வேதங்களும் அனாத்மாவை நிஷேதித்து, உம்மையே சொல்லுகின்றன. (வேதம் பரமாத்மாவை விதி முகமாக சொல்ல வில்லை; நிஷேத முகமாகச் சொல்லுகிறதென்று காட்டப்பட்டது).

வீரராகவீயம்:– இப்படி வேதங்கள் பகவானை ஸ்தோத்திரஞ் செய்து, உம்முடைய மஹிமை அளவற்றதானதால் முழுவதையும் எங்களால் சொல்ல முடியாதென்று முடிக்கின்றன. ப்ரம்ஹா முதலிய தேவர்களும் உம்முடைய மஹிமையின் கோடியை அடையவில்லை (மனிதர்களால் அறிய முடியுமாவென்று கருத்து) உம்முடைய ஸ்வரூபம் மஹிமை இவைகள் காலத்தாலும், தேசத்தாலும் அளவிடக்கூடாதானதால் உம்மாலேயே அறியமுடியாது. உம்முடைய ஒவ்வொரு மயிர்காலிலும் ஏழு ஆவரணங்களுள்ள அநேக ப்ரஹ்மாண்டங்கள், ஆகாயத்தில் தூளிகள் பக்ஷிகளுடன் ஸஞ்சரிப்பது போலச் ஸஞ்சரிக்கின்றன. ஆனதால் உமக்கு ஸஜாதீயமான வஸ்து ஒன்றுமில்லையென்று வேதங்கள் சொல்லி, உம்மை தாத்பர்யவிருத்தியால் சொல்லுகின்றன.

43–50. இப்படி ஆத்மதத்வத்தை ஸனந்தனர் முகமாக ப்ரஹ்மதேவருடைய புத்திரர்களான ஸித்தர்கள் கேட்டு தெரிந்துகொண்டு ஸனந்தனரைப் பூஜித்தார்கள். ஆகாயத்தில் ஸஞ்சரிப்பவர்களும், மஹாத்மாக்களுமான ஸனகர் முதலியவர்களால் ஸகல ச்ருதி, ஸ்மிருதி, புராணம், இதிஹாஸம் இவைகளின் ரஹஸ்யமானது எடுக்கப்பட்டது. ப்ரஹ்மதேவருடைய புத்திரராகிய நீரும் ஸகல காமங்களையும் நிவர்த்திக்கும் இதனை ச்ரத்தையுடன் மனத்தில் வைத்துக் கொண்டு லோகங்களில் ஸஞ்சரியும். (ப்ரம்ஹதாயாத என்பதற்கு எளிதில் ப்ரம்ஹத்தை அடைந்தவர்) கேட்ட விஷயத்தை மனதில் தரிக்கும் சாமார்த்தியமுள்ளவரும், கிருத கிருத்தியரும், இந்திரியத்தை ஜயித்தவர்களின் வ்ரதும் போன்ற விரதமுள்ளவருமான நாரதர், குருவாகிய நாராயண மஹர்ஷியால் சொல்லப்பட்டதைக் கேட்டு, அவரை நோக்கி "சுத்தமான கீர்த்தியுள்ள பகவானாகிய அந்தக் கிருஷ்ணனை நமஸ்கரிக்கிறேன். அந்தப் பகவான் ஸகல பிராணிகளுக்கும் அபயத்தை கொடுப்பதற்காக அம்சாவதாரத்தை அடைகிறார். ஸகல பிராணி களுக்கும் மோக்ஷத்தைக் கொடுப்பதற்காகச் சுத்தமான வித்யைகளைத் தரிப்பவரும், அவைகளை அபேக்ஷித்த வர்களுக்கு உபதேசித்து ஸுகப்படுத்துகிறவருமான உம்மை நமஸ்கரிக்கிறேன்" என்று அவரிடத்திலும், சுத்த சித்தர்களான அவருடைய சிஷ்யர்களிடத்திலும் விடைபெற்று, என்னுடைய பிதாவாகிய வியாஸ ருடைய ஆச்ரமஞ்சென்றார். அவ்விடத்தில் பகவானாகிய வ்யாஸர் ஆஸனங் கொடுத்து நாரதரைப் பூஜித்தார். நாரதர் ஆஸனத்தில் உட்கார்ந்து நாராயண மஹர் ஷியின் முகமாகக் கேட்டபடி சொன்னார். ஓ அரசனே! நீர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லப்

பட்டது. இதனைத் தெரிந்துகொண்டால் ப்ரம்ஹம் குறிப்பிட முடியாததானாலும், குணங்களற்றதானாலும் அதை வேதங்கள் நிரூபிக்கின்றனவென்று ஸம்சய மில்லாமல் தெரிந்து கொள்வான்.

51. எவர் இந்த ஸகல லோகங்களுக்கும் ஸிருஷ்டி பரிபாலனம், ஸம்ஹாரம் இவைகளைப் பற்றி ஆலோசிப்பவரோ, (ஜகத்திற்கு நிமித்த காரணரென்று காட்டப்பட்டது) எவர் இந்த ஜகத்தைப் படைப்பது, பரிபாலிப்பது, ஸம்ஹரிப்பது இவைகளைச் செய்கிறாரோ (உபாதான காரணமென்று காட்டப்பட்டது) எவர் ப்ரகிருதி புருஷர்களுக்கும் காரணமோ, இந்த ஜகத்தைப் படைத்து அதில் ஜீவனுடன் ப்ரவேசித்து அந்தச் சரீரத்தை அவனுக்கு உபயோகஸ்தானமாகச் செய்து அவனைக் காப்பாற்றுகிறாரோ, எவரை அடைந்த ஜீவன் கார்யம், காரணம் என்ற பேதமாகிய அவித்தையை விட்டுவிடுகிறானோ, தூங்குகிறவன் சரீரத்தை விட்டு விடுகிறானல்லவா (தூங்குகிறவனுக்குத் தேஹமிருப்பதாக மற்றவர்கள் பார்க்கிறார்களே யொழிய அவன் தான் சரீரமுள்ளவனென்று எப்படி நினைக்கவில்லையோ, அப்படி ஜீவன் முக்தனுக்குச் சரீரமிருந்தாலும் அவனுக்கு அதில் அபிமானமில்லை யென்று கருத்து) அப்படிப்பட்ட ஈச்வரனும் ஸ்வரூபமாக இருப்பதால் மாயையை திரஸ் கரித்தவரும், ஸகல பயத்தையும் நிவர்த்திப்பவருமான ஸ்ரீ ஹரியை எப்பொழுதும் த்யானஞ் செய்ய வேண்டும்.

♣ ♣ ♣ ♣

விருகாஸுரன் வரம்பெற்றது.

பரீஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி "ஓ ப்ராஹ்மண! பரமசிவன் விஷய போகங்களில் ஆசையில்லாமல் (ஸ்மசானத்தில் வஸிப்பது, வஸ்திர மில்லாமலிருப்பது, பிக்ஷை வாங்குவது) இருக்கிறார். மஹாவிஷ்ணுவோ லக்ஷ்மீபதியாக பீதாம்பரம் முதலிய வைகளைத் தரித்துக் கொண்டிருக்கிறார். இப்படி இவ்விரண்டு தேவர்களுடைய ஸ்வபாவம் ஒன்றுக் கொன்று வேறுபாடுள்ளதாகவிருக்கிறது. தேவர்கள் அஸுரர்கள் மனிதர்கள் ஆகிய இவர்களுக்குள் எவர்கள் பரமசிவனை யுபாஸிக்கிறார்களோ அவர்கள் பெரும்பாலும் ஐச்வர்யத்தையடைகிறார்கள். மஹா விஷ்ணுவை உபாஸிப்பவர்கள் தரித்திரர்களாகவிருக் கிறார்கள். அதன் காரணத்தைச் சொல்லவேண்டும் என்று கேட்டார். (தரித்ரனான தேவதையை உபாஸிப்பவர்கள் பணக்காரர்களாகவும்; 'பணமுள்ள தேவதையை உபாஸிப்பவர்கள் ஏழைகளாகவுமிருப்பது எப்படிப் பொருந்துமென்று தாத்பர்யம்.)

2–7. அதனைக்கேட்ட சுகர் அரசனை நோக்கி "வைகாரிகம்! தைஜஸம், தாமஸம், என்று அஹங்காரம் மூவ்வகையானது. அந்த மூவ்வகை லிங்கத்துடனும், சக்தியுடனும், பரமசிவன் சேர்ந்திருப்பதால் அவர் குணஸம்பந்தமுள்ளவர். அதிலிருந்து பதினாறு விகாரங்கள் உண்டாயின. அவைகளில் எதை யுபாஸிக்கிறானோ அதற்குத் தகுதியான ஐச்வர்யத்தை யடைகிறான். மஹாவிஷ்ணுவோ குணஸம்பந்த

மில்லாதவர். எல்லாவற்றிற்க்கும் ஸாக்ஷியாகவிருப்பவர்; ப்ருகிருதையைவிட மேலான புருஷர்; அவரை யுபாஸிக்கும் புருஷன் குணசம்பந்தமில்லாதவனாக ஆகிறான். உம்முடைய பிதாமஹராகிய தர்மபுத்திரர் அச்வமேத யாகங்களைச் செய்து பகவத் விஷயமான தர்மங்களைக்கேட்டு இந்த ஸம்சயத்தைப்பற்றியும் ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்துக்கேட்டார். மனிதர்களுக்கு க்ஷேமத்தைச் செய்வதற்காக யதுகுலத்தில் அவதரித்தி ருக்கும் ஸ்ரீ கிருஷ்ணன் அதனைக்கேட்டு பதில் சொன்னார். அதனை உமக்கு சொல்லுகிறேன். எப்படியென்றால்:–

8–39. "எவனுக்கு அனுக்ரஹஞ் செய்யவேண்டு மென்று நினைக்கிறேனோ, அவனுடைய தனத்தை அபஹரிப்பேன். அதனால் மிகவும் துக்கித்தவன் போலிருக்கிற புருஷனைப் பந்துக்கள் இவர் ஏழை யென்று விட்டுவிடுவார்கள். மேலுமவன் தனம் சம்பாதிப்பதற்காக முயன்றும் அந்த முயற்சி வீணாகி அதனால் வைராக்கியத்தையடைவான். பின்பு என்னுடைய பக்தர்களான ஸாதுக்களுடன் ஸ்நேஹம் செய்துகொள்வான். அதன்பின் அவனை அனுக்கிர ஹிப்பேன். ஜனங்கள் பரப்ரஹ்மமும், சித்ஸ்வரூபியும், ஸூக்ஷ்மஸ்வரூபியும், ஆராதிக்க முடியாதவருமான என்னை ஸேவியாமல் மற்ற தேவதைகளை யுபாஸிக் கிறார்கள். பின்பு அவர்கள் சீக்கிரத்தில் ஸந்தோஷப் படுகின்ற தேவர்களை யுபாஸித்து ஐச்வர்யத்தை யடைந்து அதனால் கர்வங்கொண்டு, வரங்கொடுத்த தேவர்களை மறந்து விடுவதுமின்றி, அவர்களை லக்ஷ்யம் செய்கிறதுமில்லை. ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் முதலியவர்கள் சாபம் கொடுப்பதற்கும் அனுக்கிரஹம்

செய்வதற்கும் வல்லமையுள்ளவர்கள்; ஆனாலும் பிரஹ்மதேவனும், பரமசிவனும் சீக்கிரத்தில் கோபங் கொண்டு சாபங் கொடுப்பவர்களுமாகவிருக்கிறார்கள். மஹாவிஷ்ணுவோ அப்படிச் செய்கிறதில்லை. முன்னொருகால் பரமசிவன் விருகனென்ற அஸுரனுக்கு வரங்கொடுத்து மிகவும் ஸங்கடத்தை யடைந்தார். அந்த இதிஹாஸத்தை இந்த விஷயத்தில் உதாஹரணமாகச் சொல்லுகிறேன். எப்படியெனில் சகுனியென்பவனுடைய புத்திரனாகிய விருகனென்ற அஸுரன் மார்க்கத்தில் நாரதரை ஸந்தித்து அவரை நோக்கி "ஓ ப்ராஹ்மண! ப்ரஹ்மா, விஷ்ணு பரமசிவன் இந்த மூன்று தேவர்களில் சீக்கிரமாக ஸந்தோஷப்படுகிறவர் யார்? அதனைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டான்.

அந்த துஷ்டனுடைய வார்த்தையைக்கேட்டு நாரதர் "மூன்று தேவர்களில் பரமசிவன் ஸ்வல்பமாக யுபாஸிக்கப்பட்டாலும் ஸந்தோஷத்தையடைவார். அவருக்கு ஸ்வல்ப அபராதம் செய்தாலும் சீக்கிரத்தில் கோபித்துக்கொள்வார். ஆனதால் சீக்கிரத்தில் பயனையடைய வேண்டுமானால் பரமசிவனை யுபாஸிக்க வேண்டும். அந்தப் பரமசினை ராவணன், பாணாசுரன் இவர்கள் வந்திகள்போல ஸ்தோத்திரம் செய்தார்கள். அதனால் அவர் ஸந்தோஷமடைந்து ஒப்பற்ற ஐச்வர்யத்தை அவர்களுக்குக் கொடுத்தார். பின்பு அதனால் மிக்க ஸங்கடத்தையுமடைந்தார், என்று சொன்னார். (ராவணன் பரமசிவனிடம் வரம்பெற்று கைலாஸ பர்வதத்தை அசைத்தான். பாணாஸுரன் தன்னுடைய பட்டணத்திற்குப் பரம சிவனைக் காவலாக வைத்துக்கொண்டான்; அதனால்

பரமசிவனுக்கு ஸங்கடம் நேர்ந்ததென்று கருத்து) அதனைக் கேட்ட அஸுரன் கேதார ஷேத்திரஞ் சென்று தன்னுடைய மாம்ஸத்தை அக்னியில் ஹோமஞ்செய்து பரமசிவனை யுபாஸித்தான். இப்படி ஆறு நாட்கள் சென்றும் பரமசிவன் ப்ரத்யக்ஷம் ஆகாததால், மிகவும் நிர்வேதத்தையடைந்து, அஸுரன் அந்த தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, ஏழாவது நாளில் தன்னுடைய தலையை வெட்டிக்கொள்ள ஆரம்பித் தான். அப்பொழுது மிக்க கருணையுள்ளவரான பரமசிவன் ஸந்தோஷத்தையடைந்து, அக்னிபோன்ற தேஜஸ்ஸுள்ளவராகி, அக்னி குண்டத்திலிருந்து கிளம்பி அஸுரனுடைய இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு தலையை வெட்டாமலிருக்கும்படி தடுத்தார்.

அந்த பகவானுடைய திவ்ய ஹஸ்தம்பட்டதினால் அவனுடைய சரீரம் பூர்ணமாயிற்று. அப்பொழுது பரமசிவன் அஸுரனை நோக்கி "நான் ஜலத்தைக் கொடுத்து யுபாஸிக்கும் மனிதர்களிடத்திலும் ஸந்தோஷப்படுகிறவன். அப்படியிருக்க என்னை ஸந்தோஷிக்கச் செய்வதற்காக உன்னுடைய சரீரத்தை ஏன் வீணில் கஷ்டப்படுத்துகிறாய்? இதுவரையில் செய்த தபம் போதும். வேண்டியதைக்கேள் கொடுக் கிறேன் என்றார்:– அதனைக்கேட்ட பாபியான அந்த அஸுரன் பரமசிவனை நோக்கி "எவனுடைய தலையில் நான் கையை வைக்கிறேனோ, அவன் நாசத்தை அடையவேண்டும்" என்று ப்ராணிகளுக்கு பயத்தைக் கொடுக்கக்கூடிய வரத்தைக் கேட்டான், அதனைக்கேட்டுப் பரமசிவன் வருத்தமடைந்து வெளியில் சிரித்துக்கொண்டு ஸர்ப்பத்திற்குப் பாலைக்

கொடுத்தார். பின்பு அவர் ஆகட்டுமென்று அந்த அஸுரனுக்கு வரங்கொடுத்தார். பின்பு அந்த அஸுரன் பரமசிவனால் கொடுக்கபட்ட வரம் உண்மையானதா அல்லவாவென்று பரீக்ஷிப்பதற்காகப் பரமசிவனுடைய தலையில் கையை வைப்பதற்காக யத்தனித்தான் அதனைக்கண்டு பரமசிவன் பயந்து ஓடினார். அஸுரன் பின் தொடர்ந்து சென்றான். பூமி முழுவதும் அலைந்தார் திக்குகளில் எல்லை வரையில் ஓடினார். அஸுரனும் பின் தொடர்ந்து சென்றான். இந்திரன் முதலிய தேவர்கள் அதற்குச் செய்யவேண்டியது இன்னதென்று அறியாமல் மௌனிகளாகவிருந்தார்கள். அப்பொழுது பரமசிவன் வைகுண்டஞ்சென்றார். அவ்விடத்தில் ஸ்ரீமந் நாராயணன் வஸிக்கிறார்.

அவர் விஷயங்களில் ஆசையற்ற சாந்தர்களான யோகிகளுக்குக்கதி. அந்த வைகுண்டஞ் சென்றவர் களுக்கு ஸம்ஸார ஸம்பந்தமில்லை. அப்பொழுது ஸ்ரீமஹாவிஷ்ணு விருகாஸுரனையும், அப்படிப்பட்ட துக்கமுள்ள பரமசிவனையும், வெகு தூரத்திலேயே பார்த்துத் தமது யோக மாயையால் ப்ரஹ்மசாரி வேடங்கொண்டு அக்னிபோன்ற தேஜஸுடன் ஜ்வலித்துக்கொண்டு மேகலை, அஜினம், தண்டம் ஜடமாலை இவைகளைத் தரித்து அஸுரனுக்கு எதிரில் சென்று, தர்பத்தைக் கையில் வைத்துக் கொண்டு, அவனை நமஸ்கரித்து "ஓ சகுனியின் புத்திர! நீ வெகுதூரம் வந்ததால் களைத்திருக்கிறாய் கொஞ்சநேரம் ச்ரமத்தை நிவர்த்தித்துக்கொள். ஸகல ப்ராணிகளுக்கும் சரீரமானது ஸகல புருஷார்த்தங் களைக் கொடுக்கக்கூடியது. (அதனால் சரீரத்தை

ச்ரமப்படுத்த வேண்டாமென்று கருத்து) ஸகல ஜனங்களும் பிறருடைய ஸஹாயத்தால் காரியத்தை முடித்துக்கொள்ள விரும்புகிறார்கள். ஆனதால் உன்னுடைய அபிப்ராயத்தை என்னிடம் சொல்லக் கூடுமானால் சொல்லு" என்று கேட்டார். அதனைக் கேட்ட அஸுரன் பகவானுடைய அமிருத மயமான வார்த்தையால் ச்ரமமற்றவனாகி பரமசிவனிடம் வரம் பெற்ற விஷயத்தைச் சொன்னான். அதனைக்கேட்ட அந்த ப்ரஹ்மசாரி அஸுரனை நோக்கி "பரம சிவனுடைய வார்த்தையை நான் நம்பமாட்டேன். அவர் தக்ஷருடைய சாபத்தால் பிசாசத் தன்மையை அடைந்து, பிரதேங்களுக்கும், பிசாசங்களுக்கும், அதிபதியாகவிருக்கிறார்.

ஓ அஸுரச்ரேஷ்ட! அவருடைய வார்த்தையில் உனக்கு நம்பிக்கையிருக்குமானால் உன்னுடைய தலை யில் கையை வைத்துப்பார். பரமசிவன் வார்த்தை பொய்யாக விருக்குமானால் இப்படி திரும்பவும் பொய் சொல்லாமலிருக்கும்படி பொய் சொல்பவரான பரமசிவனை கொன்றுவிடலாம்" என்று மனோஹரங் களான வார்த்தைகளைப் பேசி அவனுடைய புத்தியைக்கலைத்தார். துர்புத்தியுள்ளவனாகிய அஸுரன் அந்த வார்த்தைக்கிணங்கி தன்னுடைய தலையில் தன் கையை வைத்துக்கொண்டான். உடனே வஜ்ரத்தாலடிக்கப்பட்டாற் போல தலை உடைந்து கீழேவிழுந்தான். அப்பொழுது ஆகாயத்தில் ஜயமென்றும், நமஸ்காரமென்றும், நல்லது என்றும் சப்தமுண்டாயிற்று. தேவர்களும், மஹர்ஷிகளும், பிதிருக்களும், கந்தர்வர்களும், புஷ்பங்களை வர்ஷித் தார்கள். பரமசிவனுக்கு ஆபத்து நீங்கிற்று. ஸங்கடம்

நீங்கிய பரமசிவனை நோக்கி ஸ்ரீ மஹாவிஷ்ணு "மஹாதேவ! இந்தப்பாபியான அஸுரன் தனது பாபத்தால் நாசமடைந்தான். பெரியோர்களுக்கு அபராதஞ்செய்து எவன் க்ஷேமத்தை அடைவான்? அப்படியிருக்க ஜகத்திற்குக் குருவும் அதிபதியுமான உம்மிடத்தில் குற்றஞ்செய்தவன் க்ஷேமத்தை அடைவானா" என்றார்.

40. வாக்குக்கும் மனதிற்கும் எட்டாத அளவற்ற சக்தியுள்ள பரமாத்மாவாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணு விருகாஸுரனைக் கொன்று பரமசிவனுக்கு நேர்ந்த ஆபத்தை நிவர்த்தித்தான். இச்சரிதத்தை எவன் சொல்லுகிறானோ, கேட்கிறானோ அவனுக்கு ஸம்ஸார பயமாவது, சத்ருபயமாவது நேரிடுகிறதில்லை.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–89

ப்ருகு மஹர்ஷி தேவர்களில் விஷ்ணு மேலானவரென்று கண்டுபிடித்தது

முன்னொருகால் ஸரஸ்வதி நதிக்கரையில் மஹர்ஷிகள், ஸத்ரஞ் செய்தார்கள் (யாகவிசேஷம்) அப்பொழுது ப்ரஹ்மா, விஷ்ணு பரமசிவன் ஆகிய மூன்று தேவர்களுக்குட் சிறந்தவர் யார்? என்று விவாதமுண்டாயிற்று. அதனை தெரிந்து வருவதற்காக ப்ரஹ்மதேவருடைய புத்திரராகிய ப்ருகு மஹர்ஷியை அங்குள்ளவர்கள் அனுப்பினார்கள். அவர் ப்ரஹ்ம தேவருடைய மஹிமையை பரீக்ஷிப்பதற்காக அவரை துதிக்காமல் மௌனமாகவிருந்தார். அதனால் ப்ரஹ்ம தேவர் கோபங்கொண்டு ஜ்வலித்தார்; ஆனாலும் தம்மிடத்திலுண்டான கோபாக்னியைத் தமது தேஜஸ்ஸால் அடக்கிக் கொண்டார்.

அது ஜலத்தால் அக்னியை அணைத்தாற் போலிருந்தது. பின்பு மஹர்ஷி கைலாசஞ்சென்றார். அவரைக்கண்ட பரமசிவன் தமக்கு ஸஹோதரராகிய மஹர்ஷியை ஆலிங்கனஞ் செய்துகொள்ள யத்தனித் தார். அப்பொழுது மஹர்ஷி பரமசிவனை நோக்கி "நீர் அமங்களமான கார்யங்களை செய்கிறீர், அதனால் உமக்கு ஆலிங்கனம் கொடுக்கமாட்டேன்" என்றார். அதனைக்கேட்டுப் பரமசிவன் கோபங்கொண்டு ஜ்வலிக்கும் நேத்திரமுள்ளவராகி சூலமென்ற ஆயுதத் தையெடுத்து மஹர்ஷியைக் கொல்லவாரம்பித்தார். அதனைக்கண்ணுற்ற பார்வதி பரமசிவனுடைய பாதங்களில் நமஸ்கரித்து நல்வார்த்தை சொல்லி

ஸமாதானஞ் செய்தாள். இப்படி மஹர்ஷி மிகவும் ச்ரமப்பட்டுப் பரமசிவனிடமிருந்து விடுபட்டு வைகுண்டஞ் சென்றார் அவ்விடத்தில் லக்ஷ்மீதேவியின் மடியில் ஸ்ரீமந் நாராயணன் படுத்திருக்கக் கண்டார் பின்பு மஹர்ஷி அந்த நாராயணனை காலால் மார்பில் உதைத்தார்; அதன்பின் ஸாதுக்களுக்கு ஆச்ரயமான ஸ்ரீமஹாவிஷ்ணு தம்முடைய படுக்கையி லிருந்து இறங்கி மஹர்ஷியை நமஸ்கரித்து "ஓ ப்ராஹ்மண நல்வரவா? இந்த ஆஸனத்தில் க்ஷண நேரம் உட்காரும்; நீர் வந்தது எனக்குத்தெரியாததால் உமக்கு மரியாதை செய்யத்தவறினேன். அந்தக் குற்றத்தை மன்னிக்கவேண்டும். உம்முடைய பாத தீர்த்தம் புண்ணிய தீர்த்தங்களையும் பரிசுத்தப்படுத்து கிறது. அப்படிப்பட்ட பாததூளியால் என்னையும், என்னைச்சார்ந்த லோகபாலர்களையும் பரிசுத்த படுத்தும். இன்றைய தினம் நான் லக்ஷ்மீதேவிக்கு முக்கிய ஸ்தானமாக ஆனேன், உம்முடைய பாதம் பட்டதால் பரிசுத்தமாகவிருக்கும் என்னுடைய மார்பில் லக்ஷ்மீதேவி இனி வஸிப்பாள்" என்றார்.

13–21. இம்மாதிரி கம்பீரமான மஹா விஷ்ணு வின் வார்த்தையைக்கேட்டு ஸந்தோஷத்தை அடைந்து மிக்க பக்தியால் ஆனந்தக் கண்ணீரைப்பெருக்கி திரும்பவும் ஸரஸ்வதி நதிக்கரை சென்று தம்மால் அனுபவிக்கப்பட்ட விஷயங்களை மஹர்ஷிகளுக்குத் தெரிவித்தார். அதனைக்கேட்டு மஹர்ஷிகள் ஆச்சரி யத்தை அடைந்து ஸந்தேஹமற்றவர்களாகி ஸ்ரீ மஹா விஷ்ணுவே மேலானவரென்று நினைத்தார்கள். "அவரிடத்தில் சாந்தி (பொறுமை) தர்மம், ஸ்வரூப ஞானம் நான்கு வகையான வைராக்கியம், எட்டு

வகையான ஐச்வர்யம், பாபத்தை நிவர்த்திக்கக்கூடிய கீர்த்தி, ஆகிய இவைகளிருக்கின்றன. அவரை ஸேவித் தவர்களுக்கு பயமில்லை. மேலுமவர் இந்திரியங்களை அடக்கி சாந்தர்களாய் ஸமபுத்தியுள்ளவர்களாகி ஒன்றிலும் பற்றுதலில்லாமலிருக்கும் ஸாதுக்களுக்குக் கதியாகவிருப்பவர். அவருக்கு ஸத்வமே இஷ்டமான சரீரம்; ப்ராஹ்மணர்கள் இஷ்டதைவம், சாந்தர்களும், வைராக்கியமுள்ளவர்களுமான ஸாதுக்கள் அவரை யுபாஸிப்பார். குணமுள்ளமாயையால் ஸிருஷ்டிக்கப் பட்ட ராக்ஷஸர்கள், அஸுரர்கள், தேவர்கள் ஆகிய மூவர்களும் அவருக்கு சரீரம். அவைகளில் ஸத்வ குணமே புருஷார்த்தத்தைக் கொடுக்கக்கூடியது" என்று ஸரஸ்வதி நதிக்கரையிலுள்ள மஹர்ஷிகள் தெரிந்துகொண்டு மற்றவர்களுக்கும் இதனைத் தெரிவித்து புருஷோத்தமராகிய நாராயணருடைய பாதாரவிந்தங்களை ஸேவித்து அவருடைய பாதத்தை அடைந்தார்கள். இப்படி சுகமஹர்ஷியின் முகமாகிய தாமரை மலரிலிருந்து பெருகிய அமிருதமும், ஸம்ஸார தாபத்தை நிவர்த்திப்பதுமான பரமபுருஷனுடைய சரிதத்தை எவன் இருகாதுகளால் கேட்கிறானோ, அவன் ஸம்ஸாரதாபத்தை நிவர்த்தித்துக் கொள்வான்.

22–25. ஒரு சமயம் த்வாரகா நகரத்தில் ஒரு ப்ராஹ்மணனுடைய பத்னி ப்ரஸவித்தாள். அந்தக் குழந்தை பூமியில் விழுந்தவுடன் மரணமடைந்தது. அந்த ப்ராஹ்மணன். அந்தக் குழந்தையை யெடுத்துக் கொண்டு கிருஷ்ணனுடைய அரண்மனை வாசற்படி சென்று மிக்க தீனமான மனத்துடன் "ப்ராஹ்மண த்வேஷியும், வஞ்சகனும், லுப்தனும் ஸதா விஷயங் களிலேயே நோக்கமுள்ளவனுமாகிய அரசனுடைய

குற்றத்தால் என்னுடைய குழந்தை மரணமடைந்தது. பிறருக்கு ஹிம்ஸை செய்வதை விளையாட்டாக கொண்டவனும், துஷ்ட ஸ்வபாவமுள்ளவனும், இந்திரியங்களை ஜயிக்கர்தவனுமான அரசனுடைய ராஜ்யத்திலிருக்கும் ஜனங்கள் ஏழைகளாகி மிக்க துக்கத்தை அடைவார்கள்" என்று அந்த ப்ராஹ்மணன் இம்மாதிரி மூன்றுதரம் சொல்லி அழுதார்.

27–44. அதனைக்கேட்ட அர்ஜுனர் ஸ்ரீ கிருஷ்ணனுடைய முன்பாக ப்ராஹ்மணனை நோக்கி "ஓ ப்ராஹ்மண! உம்முடைய வாஸஸ்தலமான இவ்விடத்தில் தனுஸ்ஸை தரிக்கும் க்ஷத்திரியன் என்பவனே இல்லையா? ப்ராஹ்மணர்களால் யாகஞ் செய்யமுடியும்; எவர்களுடைய ராஜ்யத்திலுள்ள ப்ரஜைகள் பணமில்லாமல் ஏழைகளாகவும், பத்னி யில்லாதவர்களும், புத்திரனில்லாதவர்களாகவுமிருக் கிறார்களோ, அவர்கள் அரசர்களல்ல; வேஷதாரிகள் போல தங்கள் வயிற்றை நிரப்பிக்கொள்வார்கள்; ஆனதால் மிக்க தீனர்களான உங்களுடைய ப்ரஜைகளை நான் காப்பாற்றுகிறேன். அப்படிச் செய்யாவிடில் அக்னி ப்ரவேசஞ்செய்வேன்" என்றார். அதனைக்கேட்ட ப்ராஹ்மணன் அர்ஜுனனை நோக்கி "பலராமன், ஸ்ரீகிருஷ்ணன், ப்ரத்யும்னர், அநிருத்தர் ஆகிய இவர்களால் எது காப்பாற்றமுடியவில்லையோ, அதனை நீ எப்படிக்காப்பாற்றுவாய்? ஜகதீசர்களால் செய்யமுடியாத கார்யத்தைச் செய்வதாக ப்ரதிஜை செய்வது மூடத்தனம். ஆனதால் உன் வார்த்தையை நம்பமாட்டேன்" என்றார். அதனைக்கேட்ட அர்ஜுனர் "ஓ ப்ராஹ்மண! நான் பலராமனல்ல; ஸ்ரீ கிருஷ்ணனுமல்ல; ப்ரத்யும்னனுமல்ல; நான் குந்தியின்

புத்திரனாகிய அர்ஜுனன். என்னுடைய வில்லிற்கு காண்டீவமென்று பெயர். யுத்தத்தில் என்னுடைய பலத்தைப் பார்த்து பரமசிவன் ஸந்தோஷித்தார், அப்படிப்பட்ட என் பலத்தை அலக்ஷ்யஞ் செய்ய வேண்டாம். யமனை ஜயித்து உம்முடைய குழந்தையை திருப்பிக்கொண்டு வருகிறேன்" என்றார். அதனைக் கேட்டு ப்ராஹ்மணன் அர்ஜுனனை மிக்கபலசாலி யென்று நம்பி தம்முடைய வீடு சென்றார். பின்பு அந்த ப்ராஹ்மணனுடைய பத்தினிக்கு ப்ரஸவகாலம் நேர்ந்தபொழுது ப்ராஹ்மணன் அர்ஜுனரிடம் வந்து குழந்தை ஜனிக்கப்போகிறது, அதனைக்காப்பாற்றும் என்று கேட்டுகொண்டான்.

அப்பொழுது அர்ஜுனர் ஆசமனஞ்செய்து சுத்தராக பரமசிவனை நமஸ்கரித்து காண்டீவத்தை வளைத்து திவ்யமாகிய அஸ்திரங்களை ஸ்மரித்து அநேக அஸ்திரங்களாலும், பாணங்களாலும், குறுக்கா கவும், மேலும் கீழுமாகவும் ப்ரஸவகிருஹத்தை மறைத்தார். (ப்ராணக்கூடு கட்டினார்.) அப்பொழுது ப்ராம்ஹண ஸ்த்ரீ ப்ரஸவித்தாள். குழந்தை அழுது கொண்டு ஜனித்தது. உடனே அது கண்ணுக்குப் புலப்படாமலே ஆகாயஞ்சென்றது. அப்பொழுது ப்ராஹ்மணன் ஸ்ரீ கிருஷ்ணன் முன்பாக அர்ஜுனரை நிந்தித்து "என்னுடைய மூடத்தன்மையைப் பாருங்கள். பராக்கிரமம் இல்லாதவனுடைய வார்த்தையை நம்பினேன் ப்ரத்யும்னர், அனிருத்தர், பலராமன், ஸ்ரீ கிருஷ்ணன் இவர்களால் காப்பாற்ற முடியாததை வேறு யார் காப்பாற்றப்போகிறார்? தைவத்தால் கொடுக்கப் பட்டதை எவன் மூடத்தன்மையால் காப்பாற்றுவதாக நினைக்கிறானோ, அந்த பொய் பேசும் அர்ஜுனனுடைய

வில்லையும் நிந்திக்கவேண்டும்" என்று சொன்னார். அதனைக்கேட்ட அர்ஜுனர் தம்முடைய வித்தையின் மஹிமையால் ஸம்யமனி பட்டணஞ்சென்றார். அவ்விடத்தில் யமனுடைய ஸமீபத்தில் அந்த ப்ராஹ்மணக் குழந்தையில்லை. அதன்பின் அவ்விடமிருந்து இந்திரலோகஞ் சென்றார். அவ்விடத்திலும் அந்தக் குழந்தையில்லை. அவ்விடமிருந்து அக்னி திக்கு நிருதி திக்கு, மேற்கு, வடக்கு முதலிய திக்குகளில் சென்று அவ்விடங்களில் அந்தக் குழந்தையைக் காணாமல் பாதாலம் முதலிய ஸகல லோகங்களிலும் ஆயுதபாணியாக ஸஞ்சரித்தும், ப்ராஹ்மணக்குழந்தை அகப்படவில்லை. அதனால் தம்முடைய ப்ரதிஜ்ஞை நிறைவேறாமல் அக்னி ப்ரவேசஞ்செய்ய முயன்றார்.

45–60. அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனரைத் தடுத்து "ப்ராஹ்மணனுடைய புத்திரர்களை உனக்குக் காண்பிக்கிறேன். என்னை அலக்ஷ்யஞ் செய்யவேண்டாம்; எவர்கள் நம்மை நிந்திக்கிறார்களோ, அவர்களே நம்முடைய கீர்த்தியைப்பரவச் செய்வார்கள்" என்று சொல்லி திவ்யமான தம்முடைய ரதத்தின் மீதேறி மேற்கு திக்கை நோக்கி சென்றார். ஏழுமலைகளிலுள்ள ஏழுத்வீபங்களையும், ஏழு ஸமுத்ரங்களையும், லோக லோகமென்ற மலையையும், தாண்டி மிகுந்த இருளுள்ளவிடஞ்சென்றார். அந்த இருளில் ஸைன்யம், ஸுக்ரீவம், மேகபுஷ்பம், வலாஹகம் என்ற குதிரைகள் நடக்கமுடியாமலிருந்தன. அதனைக்கண்ணுற்ற யோகேசர்களுக்குமதிபதியான பகவான் ஆயிரம் ஸூரியன் போல் ப்ரகாசிக்கும் சக்கரத்தை முன் நடத்தினார். அந்த சக்கரமானது வில்லில் பூட்டி

ப்ரயோகிக்கப்பட்ட ராமனுடைய பாணம் ஸைன்யத்தில் ப்ரவேசித்தாற் போல் ப்ரகிருதி பரிணாம ஸ்வரூபமும், கோரமும், ஆகாயத்தை மறைக்கக் கூடியதுமான மிகுந்த இருளை நிவர்த்தித்துக் கொண்டு, மனம் போன்ற வேகத்துடன் முன்னடந்தது. சக்கரம்போகிற மார்க்கமாக அந்த இருளைக்கடந்து அதற்கு வெகு தூரத்திலிருக்கும் பகவானுடைய தேஜஸை நோக்கி கிருஷ்ணன் செல்லுவதை கண்ணுற்ற அர்ஜுனன் கண்களை மூடிக்கொண்டார். அதன் பின் கிருஷ்ணன் ஜலத்தில் ப்ரவேசித்தார். அதில் காற்றினால் அதிக அலைகள் அலைந்து கொண்டிருந்தன. அவ்விடத்தில் அத்புதமான ஒரு கிருஹத்தைக் கண்டார்.

அவருடைய ஆயிரம் படங்களிலிருக்கும் ரத்தினங்களுடைய காந்திகளால் அந்த கிருஹம் பிரகாசித்தது. இரண்டு ஆயிரம் கண்களால் அந்த ஆதிசேஷன் ப்ரகாசித்தார். மேலுமவர் வெள்ளி மலைப்போல வெளுத்த சரீரமுள்ளவராக விருந்தும் அவருடைய கழுத்தும், நாக்குகளும் கருமையாகவிருந்தன. அப்படிப்பட்ட ஆதிசேஷனுடைய உடலில் புருஷோத்தமராகிய நாராயணன் உட்கார்ந்திருந்தார். அவர் மிக்க மஹிமையுள்ளவர், மேகம் போன்ற கருத்த திருமேனியுள்ளவர் பீதாம்பரத்ததைதரித்தவர், ப்ரஸன்னமான் முகமுள்ளவர்; அழகிய நீண்ட கண்களுமுள்ளவர், கிரீடத்திலுள்ள மேலான ரத்தினங்களுடைய காந்தியால் அழகான தலை மயிருள்ளவர்; தொங்குகின்ற எட்டு கைகளுள்ளவர்; கௌஸ்துபத்தை தரித்தவர்; ஸ்ரீ வத்ஸமென்ற அடையாளமுள்ளவர்; வனமாலையுள்ளவர்; "ப்ரஜாபதிகளுக்கும் அதிபதி, மேலும் ஸுநந்தர், நந்தர் முதலிய பார்ஷத கணங்களும், புஷ்டி

ஸ்ரீ, கீர்த்தி, மாயை, சரீரமுள்ள சக்கரம் முதலிய ஆயுதங்கள், அணிமா, முதலிய விபூதிகள், ஆகிய இவைகள் அவரை யுபாஸிக்கின்றன. அப்படிப்பட்ட பகவானைக்கண்டு ஸ்ரீ கிருஷ்ணன் நமஸ்கரித்தார். அர்ஜுனரும் மிக்க நடுக்கத்துடன் நமஸ்காரஞ் செய்தார். அஞ்ஜலி செய்துகொண்டு நிற்கும் கிருஷ்ணனையும், அர்ஜுனரையும் நோக்கி அந்தப் பகவான் "உங்களைப்பார்ப்பதற்காக ப்ராஹ்மணனுடைய குழந்தைகளை இவ்விடம் வரவழைத்தேன். நீங்கள் என்னுடைய அம்சம். தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக பூமியில் அவதரித்தவர்கள். பூமிக்குச் சுமையாகவிருக் கும் அரசர்களை சீக்கிரத்தில் கொன்று என்னுடைய ஸமீபம் வரவேண்டும். நீங்கள் பூர்ண காமர்கள் (தர்மத்தையனுஷ்டித்தாலும் உங்களுக்கு அதனால் மேன்மையில்லை. அனுஷ்டிக்காவிடினும் பாபமில்லை.) ஆனாலும் நீங்கள் தர்மத்தை அனுஷ்டித்துப் பிறரையும் அனுஷ்டிக்கும்படி செய்யுங்கள்" என்று கம்பீரமாகச் சொன்னார்.

61–66. அதனைக்கேட்டு ஸ்ரீ கிருஷ்ணனும் அர்ஜுனரும் அப்படியே செய்கிறோம் என்று ஒப்புக் கொண்டு மிக்க ஸந்தோஷத்துடன் த்வாரகா நகரம் வந்து ப்ராஹ்மணனிடம் குழந்தைகளைக் கொடுத்தார் கள். அப்பொழுது அர்ஜுனர் விஷ்ணுவின் மஹிமை யைப்பார்த்து மிக்க ஆச்சர்யமடைந்து லோகத்தில் ஜனங்களிடத்தில் காணப்படும் ஸ்வல்பமஹிமையையும் கிருஷ்ணனுடைய அனுகிரஹத்தால் ஏற்பட்டதென்று நினைத்தார். இப்படி ஸ்ரீ கிருஷ்ணன் அத்புதமான அநேககாரியங்களைச் செய்தும் அநேக யாகங்களைச் செய்துகொண்டும் விஷயங்களை அனுசரித்துக்

கொண்டிருந்தார்.. மேலும் அவர் அந்தந்தகாலத்தில் ப்ராஹ்மணர்கள் முதலிய ஜனங்களுக்கு இஷ்டத்தை கொடுத்து இந்திரன் போல ஸம்ரக்ஷித்தார். துஷ்டர்களை அர்ஜுனன் முதலியவர்களால் நாசஞ் செய்தார். தர்மபுத்திரர் முதலியவர்களைக் கொண்டு தர்மத்தைப் பரவச்செய்தார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–90

ஸ்ரீ கிருஷ்ணலீலைகளின் சுருக்கம்.

த்வாரகா நகரத்தில் ஸ்ரீ:யதுபதியாகிய பகவான் ஸுகமாக வஸித்தார். அந்த நகரத்தில் ஸகல ஸம்பத்துக்களும் நிறைந்திருந்தன. விருஷ்ணிகள் பகவானை யுபாஸித்துக் கொண்டிருந்தார்கள். மேலும் அந்தநகரத்தில் மின்னல் போன்ற காந்தியுள்ள யுவதிகள் மேலான அலங்காரத்துடன் மாடிகளில் பந்து முதலியவை விளையாடுகிறார்கள். மதம் பெற்ற யானைகள் வீதிகளில் நெருக்கமாக நிற்கின்றன. யோதர்களும், குதிரைகளும், ரதங்களும் அலங்கரிக்கப் பெற்றிருந்தன தோட்டங்கள் விசேஷமாகவிருந்தன. அதிலுள்ள மரங்களில் வண்டு முதலியவை சப்தித்தன. அப்படிப்பட்ட நகரத்தில் பகவான் பதினாறு ஆயிரம் ஸ்வரூபமெடுத்துக்கொண்டு அவ்வளவு ஸ்திரீகளுடைய. அந்தபுரத்தில் அவர்களுடன் விளையாடினார். மேலு மந்தப்பகவான் உத்பலம்; கல்ஹாரம் முதலியவைகள் மலர்ந்து அவைகளின் தூளிபரவி அதனால் வாஸனை யுள்ள ஜலத்தால் நிறைந்த தடாகங்களில் அந்த ஸ்திரீகளுடன் ஜலக்ரீடை செய்தார். ஸ்திரீகளை ஸ்ரீ கிருஷ்ணன் ஆலிங்கனஞ்செய்து கொள்ள, அதனால் அவர்களுடைய ஸ்தனங்களிலிருக்கும் குங்குமப்பூ சேர்ந்த சந்தனம் பகவானுடைய மார்பில் ஸம்பந்தித் தது. அப்பொழுது கந்தர்வர்கள் மிருதங்கம், பணவம், ஆனகம், வீணை ஆகிய வாத்யங்களை கோஷித்து, பகவானுடைய சரிதத்தைக் கானஞ்செய்தார்கள். ஸூதர்களும், மாகதர்களும், வந்திகளும் ஸ்தோத்திரஞ் செய்தார்கள். அந்த ஸ்திரீகள் சிரித்துக்கொண்டு

ஜலத்தை கிருஷ்ணன் மீது இறைத்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணனும் அவர்கள் மீது ஜலத்தை இறைத்து குபேரன் யக்ஷ ஸ்திரீகளுடன் விளையாடினாற்போல் க்ரீடித்தார். அந்த ஸ்திரீகளுடைய வஸ்திரமானது நனைந்ததால் அவர்களுடைய துடை, ஸ்தனம் முதலி யவை ப்ரகாசித்தன. ஜலத்தை வாரியிறைப்பதால் தலைமுடிச்சு அவிழ்ந்து புஷ்பங்கள் கீழேவிழுந்தன. அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனைக் கெட்டியாக ஆலிங்கனஞ் செய்துகொண்டு மன்மத விகாரத்தால் ப்ராகாசிக்கும் முகங்களுள்ளவர்களாக விருந்தார்கள். பின்னும் ஸ்ரீ கிருஷ்ணன் அந்த ஸ்திரீகளால் ஆலிங்கனஞ் செய்யப்பட்டு அவர்களுடைய ஸ்தனங் களிலிருந்த குங்குமங்களால் பூசப்பட்ட மார்புள்ள வராகி விளையாட்டிலுள்ள அபிநிவேசத்தால் தலைமுடிச்சு அவிழும்படி ஸ்திரீகளால் ஜலம் வாரி இறைக்கப்பட்டு ஸ்திரீகளின் மீது ஜலத்தைவாரி இறைத்துக்கொண்டும், அனேக பெண் யானைகளுடன் ஆண்யானை விளையாடினார்ப்போல கிரீடித்தார்.

இப்படி விளையாடும் ஸ்ரீ கிருஷ்ணனுடைய நடை, பேச்சு, பார்வை, சிரிப்பு, விளையாட்டு, ஆலிங்கனம் இவைகளால் அந்த ஸ்திரீகளுடைய மனம் அபஹரிக் கப்பட்டது; மேலும் ஸ்ரீ கிருஷ்ணனும் அவருடைய அந்த ஸ்திரீகளும் நடர்களுக்கும் நர்த்தகர்களுக்கும் ஆபரணம், வஸ்திரம் இவைகளைக் கொடுத்தார்கள். பின்னும் அந்த ஸ்திரீகள் ஸ்ரீ கிருஷ்ணனையே மனத்தில் நினைத்துக் கொண்டு பயித்தியங் கொண்டவர்கள் போல் கொஞ்சகாலம் மௌனமாக விருந்து பின்பு அவரையே நினைத்து மூடர்களாகி எதனைச் சொன்னார்களோ, அதனைச் சொல்லுகிறேன்.

15. ஓ குரரி பக்ஷியே! ஈச்வரனுடைய மஹிமையால் ஜகத்தானது தூங்கும்பொழுது நீ ஏன் சப்திக்கிறாய்? ஆனால் உன்மீது குற்றமில்லை. தாமரைக்கண்ணனாகியஸ்ரீகிருஷ்ணனுடைய கம்பீரமான சிரிப்புள்ள பார்வையினால் சித்தம் அபஹரிக்கப்பட்டதால் நீ கத்துகிறாய்.

16. ஓ சக்ரவாகமே! இரவில் பந்துவைக்காணாமல் கண்ணை மூடிக்கொண்டு கேட்பவர்கள் விசனப்படும்படி சப்திக்கிறாய். நாங்கள் கிருஷ்ணனுக்கு வேலைக்காரிகளாகவிருந்து அவருடைய பாதங்களிலுள்ள புஷ்பமாலையைத் தலையில் வைத்துக்கொள்ளவேண்டுமென்று ஆசைப்படுவது போல நீயும் ஆசைப்படுகிறாயா?

17. ஓ ஸமுத்திரமே! எப்பொழுதும் தூக்கமில்லாமல் விழித்துக்கொண்டு ஏன் சப்திக்கிறாய்? ஸ்ரீ கிருஷ்ணன் எங்களை ஆலிங்கனம் செய்துக்கொள்ளும் பொழுது, குங்குமம் முதலிய அடையாளங்களை அபஹரித்துக் கொண்டதால், நாங்கள் எப்படி பிரலாபிக்கிறோமோ, அப்படி உன்னுடைய ஸ்வத்தாகிய கௌஸ்துபம் முதலியவைகளை பகவான் அபஹரித்துக் கொண்டதால் கஷ்டதசையையடைந்து வருந்துகிறாயா?

18. ஓ சந்திர! பகவானுடைய ரஹஸ்ய வார்த்தைகளை நாங்கள் மறந்து எப்படி மௌனமாக விருக்கிறோமோ, அதுபோல நீயும் யக்ஷ்மா என்ற வியாதியால் உபத்திரவிக்கப்பட்டு குறைந்தவனாகி இருளை நிவர்த்திக்கச் சக்தியற்றவனாகியிருக்கிறாயா?

19. ஓ தென்றல் காற்றே! ஸ்ரீ கோவிந்தனுடைய கடைக்கண் பார்வையால் பிளக்கப்பட்ட எங்களுடைய ஹிருதயத்தில் மன்மதனை விருத்தி செய்கிறாயல்லவா? உனக்கு நாங்கள் என்ன அபராதம் செய்தோம்?

20. அழகு பொருந்திய மேகமே! யதுக்களுக்குட் சிறந்தவராகிய ஸ்ரீ கிருஷ்ணனுக்கு நீ தோழனென்பது நிச்சயம். நீ எங்களைப் போல மிக்க ப்ரேமையுடன் ஸ்ரீ வத்ஸம் என்ற அடையாளமுள்ள ஸ்ரீ பகவானை த்யானஞ் செய்கிறாய். அதனால் தான் அவரை நினைத்து ஹிருதயம் உருகி கண்ணீரை, பெருக்குகிறாய். அவரிடத்தில் ஸ்நேஹம் செய்வது துக்கத்தைக் கொடுக்கக்கூடியது.

21. ஓ குயிலே! ப்ரியமாகப் பேசுபவரான ஸ்ரீ கிருஷ்ணனுடைய வார்த்தை போல் பேசுகிறாய். உன்னுடைய வார்த்தை மரணமடைந்தவர்களைப் பிழைக்கச் செய்வதாகவிருக்கிறது. ஆனதால் உனக்கு என்னால் செய்யப்படவேண்டிய பிரியமான காரியமென்ன? அழகிய வார்த்தையால் சொல்லு.

22. ஓ பார்வதியே! நீ அசைகிறதில்லை, பேசுகிறதில்லை. பெரிதான விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கிறாய். அதனால் நல்ல புத்திசாலியாக விருக்கிறாய். நாங்கள் வஸுதேவபுத்திரனாகிய கிருஷ்ணனுடைய பாதத்தை, ஸ்தனங்களில் தரிக்கவேண்டுமென்று விரும்புவதுபோல நீயும் உன்னுடைய சிகரங்களில் ஸ்ரீகிருஷ்ணனுடைய பாதத்தைத் தரிக்கவேண்டுமென்று விரும்புகிறாயா?

23. ஓ ஸமுத்திரத்தின் பத்னிகளாகிய நதிகளே! நாங்கள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய அன்பு பொருந்திய பார்வையையடையாததால், ஹிருதயம் வாடி எப்படி மிக்க கஷ்டத்தை அனுபவிக்கிறோமோ, அப்படி உங்கள் பர்த்தாவாகிய ஸமுத்திரமானது இந்த கோடைகாலத்தில் மேகத்தின் வழியாக உங்களை விருத்திபண்ணாததால் நீங்கள் இளைத்திருக்கிறீர்கள். தாமரைமலர் புஷ்பிக்கவில்லை; மடுக்களில் ஜலம் வற்றிப்போயிற்று.

24. ஓ ஹம்ஸமே! நல்வரவா? இவ்விடத்திலுட் காரு. பாலைக்குடி. ஸ்ரீ கிருஷ்ணனுடைய கதையைச் சொல்லு. நீ கிருஷ்ணனுடைய தூதனென்று எங்களுக்குத்தெரியும். ஸ்ரீ கிருஷ்ணன் ஸுகமாகவிருக் கிறாரா? அவருடைய ப்ரியம் நிலையில்லாதது ஆனதால் முந்தி எங்களுக்குச் சொன்ன வார்த்தைகளை நினைத்துக் கொண்டிருக்கிறாரா? அற்பனாகிய கிருஷ்ணனுடைய தூதனே அவரை நாங்கள் எப்படி அடைவோம்? அவரிடத்தில் எங்களைப் பற்றி சொல்வதானால் எப்பொழுதும் அவரைவிட்டுப் பிரியாமல் இருக்கும் லக்ஷ்மீதேவி இல்லாத காலத்தில் சொல்லு.

25–27. இப்படி யோகேச்வரர்களுக்கும் அதிபதி யாகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் மனத்தைச்செலுத்திய ஸ்திரீகள் விஷ்ணு ஸம்பந்தமான கதியை அடைந்தார் கள்; பகவானுடைய குணமானது பிறரால் கானம் பண்ணப்பட்டாலும் தன்னால் உச்சரிக்கப்பட்டாலும், கேட்டவர்களுடைய மனத்தை பலாத்காரமாய் அபஹரிக்கிறது. பகவானை தர்சிப்பவர்களுடைய

மனத்தை அபஹரிப்பதில் என்ன ஸந்தேஹம்? எந்த ஸ்திரீகள் ஜகத்குருவாகி ஸ்ரீகிருஷ்ணனை தங்களுடைய பர்த்தாவென்று நினைத்து கால் பிடிப்பது முதலியவை களைச் செய்து உபசரித்தார்களோ அவர்களுடைய தபஸ்ஸைப்பற்றியும் சொல்லவேண்டுமோ?

28–36. ஸாதுக்களுக்குக் கதியான ஸ்ரீ கிருஷ்ணன் இம்மாதிரி வேதத்திற் சொல்லிய தர்மத்தை அனுஷ்டித்துக்கொண்டு தர்மம், அர்த்தம், காமம் இவைகளுக்குக் கிருஹமே ஸ்தானமாயிருக்கிறது என்பதைக் காண்பித்தார். இப்படி கிருஹஸ்த தர்மத்தை அனுஷ்டித்துவரும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு 16800 ஸ்திரீகள் இருந்தார்கள். அவர்களுக்குள் எட்டுஸ்திரீகள் பட்டமஹிஷிகள் என்று முன்னமே சொல்லியிருக்கிறோம். கிருஷ்ணன் தம்முடைய ஒவ்வொரு பத்னிகளிடத்திலும் பத்து புத்திரர்களை உண்டுபண்ணினார். அவர்களில் பதினெட்டு புத்திரர்கள் மஹாரதர்கள்; மிக்க கீர்த்தியுள்ளவர்கள்; அவர்களுடைய பெயரைச் சொல்லுகிறேன் கேளும். ப்ரத்யும்னன், அனிருத்தன், தீப்திமான், பானு, ஸாம்பன், மித்திரன், ப்ரஹத்பானு, மித்திரவிந்தன், விருகன், அருணன், புஷ்கரன், தேவபாஹு, ச்ருத தேவன், ஸுநந்தன், சித்ரபானு, வருதன், கவி, ந்யக்ரோதன், என்பவர்களாம்; திருவக்ரா என்பவளி டத்திலுண்டானவன் உபக்ரோசனென்பவன். அவன் கிருஷ்ணனையே அனுஸரித்திருந்தான். அவன் நாரதருக்கு சிஷ்யனாக இருந்து பகவானிடத்திலேயே சித்தத்தைச் செலுத்தியிருந்தான். அவன் ஸாத்வததந் திரத்தை செய்தான். அதில் ஸ்திரீ சூத்திரர் இவர்களுக்கு வைஷ்ணவமான ஸம்ஸ்காரம் சொல்லப்

பட்டிருக்கிறது. அதனையறிந்தவன் முக்தியடைவான்.

37–48. கிருஷ்ணனுடைய புத்திரர்களுக்குள் ருக்மிணியின் புத்திரனாகிய ப்ரத்யும்னன் சிறந்தவனாகவிருந்தான். அவன் ருக்மியின் புத்ரியை விவாஹம் செய்துகொண்டு அனிருத்தனென்ற புத்திரனைப்பெற்றான். அவன் பதினாயிரம் யானை பலமுள்ளவன். அந்த அனிருத்தன் ருக்மியின் பிள்ளையின் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு வஜ்ரனென்ற பிள்ளையைப்பெற்றான். அவன்தான் அந்த குலத்தில் மிகுதியாக விருந்தவன். அவனுடைய புத்திரன் ப்ரதிபாஹு; அவனுடைய புத்திரன் ஸுபாஹு; அவனுடைய புத்திரன் உக்ரஸேனன். அவனுடைய புத்திரன் சதஸேனன்; இந்த குலத்தில் பிறந்தவர்கள் தரித்திரர்களாகவாவது, படிக்காதவர்களாகவாவது, அல்பாயுஸுள்ளவர்களாகவாவது, பராக்கிரமமில்லாதவர்களாகவாவது, ப்ராஹ்மண பக்தியில்லாதவர்களாகவாவது இருக்கிறதில்லை.

யதுவம்சத்தில் பிறந்த புருஷர்களைக் கணக்கிடுவதற்கு அநேக வருஷங்களைக் கழித்தாலும் முடியாது ஆனாலும் யதுகுமாரர்களுக்கு ஆசார்யர்கள் 30088100 என்று கேள்விப்பட்டிருக்கிறோம். வஸுதேவருடைய வம்சத்திற்கேபதினாயிரம் லக்ஷம்புத்திரர்களுண்டேன்றால் யதுவம்சத்தை யாரால் கணக்கிடமுடியும். தேவாஸுரயுத்தத்தில் எந்த அஸுரர்கள் அடிபட்டார்களோ, கொடிய ஸ்வபாவமுள்ள அவர்கள் மனுஷ்யர்களாக ஜனித்து ஜனங்களை உபத்திரவித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களை நிக்கிரஹிப்பதற்காக பகவானால் தூண்டப்பட்டு, தேவர்கள் யதுகுலத்தில்

ஜனித்தார்கள். அது நூற்றொரு வம்சமாகப் பிரிந்திருந்தது. அவர்களெல்லோருக்கும் கிருஷ்ணன் அதிபதியாகவிருந்தார். அவர்களெல்லோரும் கிருஷ்ணனுடைய மனத்தை அனுஸரித்திருந்ததால் விருத்தியடைந்தார்கள். மேலுமவர்கள் படுக்கும்பொழுதும், ஸஞ்சரிக்கும் பொழுதும், பேசும்பொழுதும், ஸ்நானஞ் செய்யும் பொழுதும், பூஜிக்கும்பொழுதும், ஸ்ரீ கிருஷ்ணனையே மனத்தில் நினைத்திருந்தமையால் தம்முடைய சரீரத்தை அறியவில்லை.

49–50. புண்ணிய ச்லோகர்களுக்குள் உத்தமராகிய ஸ்ரீ கிருஷ்ணன் குருக்ஷேத்திரம் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களில் தம்முடைய யோகமாயையால் ஏற்படுத்தப்பட்ட யாக விதிப்படி ஸகல தேவ ஸ்வரூபியாகிய தம்மை பூஜிப்பதற்காக பட்டமஹிஷிகளுடன் தீக்ஷை செய்துகொண்டு யாகஞ்செய்தார்.

51. யதுகுலத்திலவதரித்த பகவானுடைய கீர்த்தியாகிய தீர்த்தமானது கங்கையைவிட மேலானதாயிற்று. ஸ்ரீ கிருஷ்ணனை த்வேஷித்தவர்களும், ஸ்நேஹித்தவர்களும் அவருடைய ஸாரூப்பியத்தை அடைந்தார்கள். எந்த லக்ஷ்மீதேவியின் அனுக்கிரஹத்திற்காக ப்ரஹ்மா முதலியவர்கள் முயல்கிறார்களோ, அந்த லக்ஷ்மீ ஸ்ரீ கிருஷ்ணனை ஆச்ரயித்திருக்கிறாள். கிருஷ்ணனுடைய திவ்விய நாமமானது கேட்கப்பட்டாலும், உச்சரிக்கப்பட்டாலும் பாபத்தை நிவர்த்திக்கிறது. ரிஷிகளுடைய வம்சங்களில் தர்மமானது ஸ்ரீகிருஷ்ணனால் ஸ்தாபிக்கப்பட்டது. மேலும் அவர் எல்லாவற்றையும் ஸம்ஹாரஞ்செய்யும் காலஸ்வரூபி, மிக்க மஹிமை பொருந்திய சக்கிராயுதமுள்ளவர்;

அப்படிப்பட்ட பகவான் பூமியின் சுமையை நிவர்த்தித் தாரென்பது ஆச்சர்யமல்ல.

52. ஸ்ரீ கிருஷ்ணன் தேவகியினிடத்தில் ஜனித்தாரென்ற ப்ரவாதமேயொழிய அவருக்கு உத்பத்தியில்லை. அவர் ஸகல ப்ராணிகளிடத்திலும் அந்தர்யாமியாக வஸிப்பவர்; ஸகல ப்ராணிகளுக்கும் ஆச்ரயமாகவிருப்பவர்; யாதவர்களால் ஸேவிக்கப் பட்டவர்; அப்படிப்பட்ட பகவான் தமது கைகளால் அதர்மத்தை நிவர்த்தித்துக் கொண்டும் பிருந்தா வனத்திலுள்ள ஸ்தாவரஜங்கம பிராணிகளுக்கு ஸம்ஸார துக்கத்தை நிவர்த்திசெய்து கொண்டும், அழகிய சிரிப்புள்ள முகத்தால் கோபிகைகளுக்கும், பட்டணத்து ஸ்திரீகளுக்கும், மன்மதனை விருத்தி செய்து (இவ்வுலகத்தில் போகத்தைக்கொடுத்து அதன் வழியாக மோக்ஷத்தைக்கொடுத்து கொண்டும்) எல்லோருக்கும் மேலானவராக ப்ரகாசித்தார்.

53–54. இப்படிப் பகவான் தம்மாலேற்படுத்தப் பட்ட தர்மத்தை காப்பாற்றுவதற்காகத் தமது இச்சைப்படி மத்ஸ்யம், கூர்மம்; முதலிய அவதாரங் களைச் செய்து, அந்த அந்த அவதாரங்களுக்குத் தக்கபடி அத்புதமான சரிதங்களைச் செய்தார். அந்தச் சரிதங்கள் கேட்டமாத்திரத்தில் கர்மபந்தத்தை நிவர்த்திக்கின்றன. அப்படிப்பட்ட பகவான் யதுகுலத் தில் அவதரித்துச்செய்த அத்புத லீலைகளைக் கேட்கவேண்டும். அதனால் அவரிடத்தில் பக்திவிருத் தியாகும் அவருடைய கதையைக் கேட்பதாலும், உச்சரிப்பதாலும், அவரையே த்யானிப்பதாலும் தாண்டமுடியாத ஸம்ஸாரத்தைத்தாண்டி அவருடைய பதத்தை அடைவான். அப்படிப்பட்ட பதத்தை அடையவிரும்பி அநேக அரசர்கள் நாட்டைவிட்டு காட்டிற்குச் சென்றார்கள்.

ஸ்ரீமத்பாகவதம்.

ஸ்கந்தம்–11.

அத்யாயம்–1

யதுகுலத்தை ப்ராஹ்மணர்கள் சபித்தது.

ஸ்ரீ கிருஷ்ணன் பலராமனுடன் அஸுரர்களைக் கொன்று யாதவர்களுடன் வஸித்து மிக்க சண்டை யையுண்டு பண்ணி பூமியின் சுமையை நிவர்த்தித்தார். மேலும் துர்யோதனன் முதலியவர்கள் கபடமாக சொக்கட்டான் விளையாடுவது, பரிஹஸிப்பது த்ரௌப தியின் தலைமயிரைப் பிடித்திழுப்பது முதலிய அனேக கெட்ட கார்யங்களைச் செய்ததால் தர்ம புத்திரர் முதலிய பாண்டு குமாரர்கள் மிக்க கோபங் கொண்டார்கள். அந்தப் பாண்டவர்களை நிமித்தமாக வைத்துக்கொண்டு, ஸர்வேச்வரராகிய ஸ்ரீ கிருஷ்ணன் இரண்டு கக்ஷியிலும் சேர்த்திருந்த அரசர்களைக் கொன்று பூமியின் சுமையை நிவர்த்தித்தார். பூதனை முதலிய சிலரைத் தாமே கொன்றார். ப்ரலம்பன் முதலிய சிலரை பலராமனைக் கொண்டு கொன்றார். பந்துக்களாகவிருந்த அஸுரர்களை ஒவ்வொரு நிமித்தத்தையுண்டுபண்ணி யாதவர்களைக் கொண்டு கொன்றார்) பூமிக்குச் சுமையாகவிருக்கும் மற்ற அரசர் களுடைய ஸைன்யத்தைத் தம்மால் ஸம்ரக்ஷிக்கப்பெற்ற யாதவர்களைக் கொண்டு கொன்றார். பின்னுமளவிடக் கூடாத மஹிமையுள்ள ஸ்ரீ கிருஷ்ணன் பூமிக்குச் சுமையாக விருந்தவர்களைக் கொன்றும் பூமியின் பாரம் நிவர்த்தியடையவில்லையென்றே நினைக்கிறேன்;

யதுகுலம் ஸஹிக்கமுடியாததாக விருக்கிறது இந்த யாதவர்கள் என்னை ஆச்சரயித்திருப்பதாலும், யானை, குதிரை, ரதம், காலாட்கள் முதலிய ஸைன்யங்கள் அதிகமாக விருப்பதால் இதனைக் கொல்வதற்குப் பிறரால் முடியாது (நாம் நேரில் கொல்வதும் சரியல்ல) ஆனதால் இவர்களில் ஒருவருக்கொருவர் விரோதத்தை யுண்டுபண்ணுகிறேன்; அதனால் அவர்கள் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டு மரணமடைவார்கள்! மூங்கில் ஒன்றோடொன்று உரைந்து அதனாலுண்டான அக்னியால் எரிக்கப்படு வது போல யதுகுலம் நாசமடையும்; அதன்பின் நாம் வைகுண்டஞ் செல்வோம்" என்று தமக்குள் யோசித்து ஸத்யஸங்கல்பராகிய ஈச்வரன் பிராஹ்மண சாபமென்ற நிமித்தத்தால் தன்னுடைய வம்சத்தைக் கொன்றார்.

பின்னுமந்தப் பகவான் மிக்க அழகுபொருந்திய தமது திவ்ய சரீரத்தால் ஜனங்களுடைய கண்களை திருப்தி செய்தும், தம்முடைய இனிமையான வார்த்தைகளால் வாக்குகளையும், தம்மை ஸ்மரிப்பவர் களுடைய சித்தத்தையும் அபஹரித்தார். அவருடைய காலடியைத் தர்சித்தவர்கள் அதன் அழகைப்பார்த்து அவ்விடத்திலேயே அசையாமல் நிற்கிறார்கள். இம்மாதிரி கிருஷ்ணாவதார காலத்திலிருந்த ஜனங் களை அனுக்ரஹித்தார். பிந்திய ஜனங்களிடத்தில் கருணையால் பகவான் தம்முடைய கீர்த்தியைக்கேட்டு நல்லகதியை அடையட்டுமென்ற எண்ணத்துடன் பூமியில் கீர்த்தியை ஸ்தாபித்து தம்முடைய பதத்தை அடைந்தார், என்று சுகர் சொன்னார்.

8–9. அதனைக் கேட்ட அரசன் சுகரை நோக்கி

"ஓப்ராஹ்மண! யாதவர்கள் ப்ராஹ்மண பக்தியுள்ள வர்களல்லவா? கொடையாளிகள்; எப்பொழுதும் பெரியோர்களுடைய சேர்க்கையுள்ளவர்கள்; கிருஷ்ண னையேத்யானித்துக் கொண்டிருப்பவர்கள் அப்படிப் பட்ட யாதவர்களுக்கு ப்ராஹ்மண சாபம் எப்படி நேர்ந்தது? எதற்காக ப்ராஹ்மணர்கள் சபித்தார்கள்? எப்படி சபித்தார்கள்? ஒரே மனமுள்ளவர்களான யாதவர்களுக்கு எப்படி விரோதமுண்டாயிற்று? அதெல்லாவற்றையும் சொல்லும்" என்று கேட்டார்.

10–14. அதனைக் கேட்ட சுகர் அரசனை நோக்கி "ஸ்ரீ கிருஷ்ணன் மிக்க அழகு பொருந்திய சரீரமுள்ள வரானாலும் விஷயங்களிலேயே ஆசைக்கொண்டு காமியாகவிராமல் மங்களமான கர்மங்களைச் செய்து கொண்டு தாம் ஸகலகாமங்களையும் அடைந்தவரான தால் கர்மங்களின் பயனை விரும்பாமலும், த்வாரகா நகரத்தில் கிருஹஸ்தராகவிருந்து தர்ம கர்மங்களை யனுஷ்டித்துக் காண்பித்து பிறரையும் அனுஷ்டிக்கச் செய்தும் தம்முடைய கீர்த்தியைப் பரவச்செய்து கொண்டும் தம்முடைய வம்சத்தை ஸம்ஹரிக்க வேண்டுமென்று நினைத்தார். பூபாரத்தை நிவர்த்திப்ப தற்காக அவதரித்த வரானதால் அந்தக் காரியம் பாக்கியாகவிருப்பதால் அப்படி நினைத்தார். இப்படி பகவான் வஸுதேவருடைய கிருஹத்தில் வஸித்து மிக்க புண்ணியத்தைக் கொடுக்கக்கூடியவைகளும், மிக ஸுககரங்களும், அவைகளைக் கானஞ்செய்ப வர்களுக்குக் கலியின் தோஷத்தை போக்கடிப்பவை களுமான சரிதங்களைச் செய்து தமது வம்சத்தை ஸம்ஹரிக்க விரும்பி விச்வாமித்ரர், அஸிதர், கண்வர், துர்வாஸர், ப்ரகு, அங்கிரஸ், காச்யபர், வாமதேவர்,

அத்ரி, வஸிஷ்டர், நாரதர் முதலிய மஹர்ஷிகளை வரவழைத்து (சில கார்யத்திற்காக வரவழைத்து அந்தக் கர்மங்கள் செய்த பின்) த்வாரகைக்கு ஸமீபத்திலிருக்கும் பிண்டாரக மென்ற தீர்த்தத்திற்குப் போகும்படி அவர்களை அனுப்பினார். அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஆஜ்ஞையின்படி பிண்டாரகமென்ற தீர்த்தஞ்சென்றார்கள். அப்பொழுது அவ்விடத்தில் யதுகுமாரர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அந்தக் குமாரர்கள் ஸாம்பனுக்கு பெண் வேஷம் போட்டு அவளை முன்னிட்டு மஹர்ஷிகளை நோக்கி "வீணாகாத பார்வையுள்ளவர்களே! இவள் கர்ப்பிணி யாக விருக்கிறாள். இவளுக்கு ப்ரஸவகாலம் ஸமீபித்திருக்கிறது; இவள் உங்களைக் கேட்பதற்கு வெட்கப்படுகிறாள். ஆனதால் நாங்கள் கேட்கிறோம். இவள் ஆண் குழந்தையினிடம் பிரியமுள்ளவளாக விருக்கிறாள், இவளிடத்தில் பிறக்கும் குழந்தை ஆண் குழந்தையா? பெண் குழந்தையா சொல்லுங்கள்" என்று மிக்க வணக்கமுள்ளவர்கள் போல் கேட்டார்கள்.

15–23. அதனைக்கேட்ட மஹர்ஷிகள் கோபங் கொண்டு "ஓ மூடர்களே! உங்களுடைய குலத்தை கொல்லக்கூடிய உலக்கை பிறக்கும்" என்று சொன்னார்கள். அதனைக்கேட்டு அந்தக் குமாரர்கள் மிகவும் பயந்து ஸாம்பனுடைய வயிற்றைப்பார்க்க அதில் இரும்புமயமான ஒரு உலக்கையிருந்தது. அதனைக் கண்ட அந்தக் குமாரர்கள் "அதிருஷ்டமில்லாதவர் களான நாம் என்ன கார்யம் செய்தோம்? ஜனங்கள் நம்மை என்ன சொல்வார்கள்? என்று கவலைப்பட்டு அந்த உலக்கையை யெடுத்துக் கொண்டு தங்கள் வீடு சென்றார்கள். மேலுமவர்கள் அந்த உலக்கையை

ஸபையில் உக்ரஸேனர் முன்பாகவைத்து நடந்த சமாசாரத்தைத் தெரிவித்தார்கள். அதனைக்கேட்ட த்வாராகாவாஸிகள் "ப்ராஹ்மண சாபம் வீணாகாது; அவர்கள் சொல்லியபடி உலக்கையுமிருக்கிறது; இதென்ன ஆச்சர்யம் என்று பயந்தார்கள். யாதவர் களுக்கு அரசனாகிய உக்ரஸேனர் அந்த உலக்கையைப் பொடியாக்கி அப்பொடிகளை ஸமுத்திரத்தில் எறியச் செய்து பாக்கியான இரும்பையும் ஸமுத்திரத்தில் போட்டார். அந்த இரும்புத்துண்டை ஒரு மீன் விழுங்கிற்று. இரும்பு பொடிகள் அலையடித்து ஸமுத்திரக்கரையில் ஓதுங்கி கோரைகளாக முளைத்தன. பின்பு மீன் பிடிப்பவர்கள் ஸமுத்திரத்தில் வலைவீசி மீன் பிடித்தார்கள். அப்பொழுது இரும்புத்துண்டை விழுங்கிய மத்ஸ்யம் மற்ற மத்ஸ்யங்களுடன் வலை யில் சிக்கிக்கொண்டது. அதைப் பிடித்து, அதைப் பிளந்து, அதன்வயிற்றிலிருந்து இரும்புத் துண்டை ஒரு வேடன் அம்பின் நுனியில் வைத்துக்கொண்டான். ஸ்ரீ கிருஷ்ணனுக்கு இந்த விஷயங்கள் யாவும் தெரியும். ஆனாலும் அவர் காலஸ்வரூபியாகவிருந்து யதுவம்சத்தை ஸம்ஹரிக்க விரும்பியவரானதால் இவைகளை வேறாகமாற்ற ஸாமர்த்திய முள்ளவரானா லும் ப்ராஹ்மண சாபத்தை மாற்ற இஷ்டமில்லாமல் அதனை ஒப்புக்கொண்டிருந்தார்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–2

வஸுதேவருக்கு நாரதர் பாகவத தர்மத்தை யுபதேசித்தது

ஓ பரீஷித்து மஹாராஜ! கோவிந்தருடைய கைகளால் காப்பாற்றப்பட்ட த்வாரகா நகரத்தில் நாரதர் ஸ்ரீ கிருஷ்ணனை யுபாஸிக்க விரும்பி எப்பொழுதும் வஸித்துவந்தார். ஓ அரசனே! மனிதன் எங்கும் மிருத்யுபயமுள்ளவனானதால் இந்திரியமுள்ள எவன் தான் சிறந்த தேவர்களாலும் உபாஸிக்கக்கூடிய ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதாரவிந்தத்தை உபாஸிக்க மாட்டான்? அவர் ஒருநாள் வஸுதேவருடைய கிருஹத்திற்குச் சென்றார். வஸுதேவர் தேவர்ஷியாகிய நாரதரைப் பூஜித்து ஆஸனத்தில் உட்காரச் செய்து நமஸ்கரித்து "ஓ பகவன்! தாய் தந்தைகளுடைய வரவு எப்படி குழந்தைகளுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கிறதோ, உத்தமச்லோகராகிய பகவானிடத்தில் பக்தியுள்ள பெரியோர்களுடைய வரவு எப்படி ஸம்ஸாரிகளுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியதோ, அப்படி பகவத் ஸ்வரூபியான உம்முடைய வரவு ஸகல ப்ராணிகளுக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியது. தேவர்களுடைய நடை பிராணிகளுக்கு துக்கத்தையும் (அதிகமழை பெய்வதால்) ஸுகத்தையுங் கொடுக்கிறது. ஸ்ரீமந் நாராயணனையே மனத்தில் நினைத்திருப்பவர்களான உம்மைப் போன்ற ஸாதுக்களுடைய நடை, பிராணிகளுக்கு ஸுகத்தையே உண்டுபண்ணுகிறது. எந்த மனிதர்கள் கர்மங்களைச் செய்து எப்படி தேவர்களை உபாஸிக்கிறார்களோ, அதற்குத் தக்கபடி தேவர்களும் கர்மத்தின்படி

மனிதர்களுக்கு நிழல் போல் உபசரிக்கிறார்கள். ஸாதுக்கள் அப்படியல்ல. தீனர்களிடத்தில் மிக்கவாத் ஸல்யமுள்ளவர்கள் (தம்மை ஆச்ரயிக்காவிடிலும் தீனர்கள ப்ரீதி செய்கிறார்களென்று கருத்து), ஓ ப்ராஹ்மண! உம்முடைய வரவாலேயே கிருதார்த்தனாக விருக்கிறேன். ஆனாலும் நீர் எதனை யனுஷ்டித்து ஈச்வரனுடைய அனுக்ரஹத்தை அடைந்தீர்? அந்தப் பாகவத தர்மத்தைச்சொல்லும். அதனை ச்ரத்தையுடன் கேட்ட மாத்திரத்தில் பயத்திலிருந்து நிவர்த்தியடைவான். நான் முன்ஜன்மத்தில் அனந்தராகிய பகவானை புத்திரன் பிறக்க வேண்டி பூஜித்தேன் முக்தியைக் கொடுப்பவரானாலும் அவருடைய மாயையால் மோஹித்து மோக்ஷத்திற்காக பூஜிக்கவில்லை. ஆனதால் பலவகையான வ்யஸனமுள்ளதும், எங்கும் பயமுள்ளதுமான ஸம்ஸாரத்திலிருந்து சீக்கிரத்தில் நீவர்த்தியடைவேனோ அப்படி எனக்குபதேசிக்க வேண்டும். நீர் நல்ல வ்ரதங்களை அனுஷ்டித்தவர்" என்று கேட்டுக் கொண்டார்.

10–14. ஓ அரசனே! புத்திசாலியாகிய வஸுதேவருடைய வார்த்தையைக்கேட்டு தேவர்ஷியாகிய நாரதர் ஸ்ரீ நாராயணனுடைய குணங்களை நினைத்து மிக்க ப்ரீதியுடன் "ஓ ஸாத்வதர்களுக்குட் சிறந்தவரே! நல்லகார்யத்தில் முயற்சித்தீர்; ஜகத்தைப்பரிசுத்தப் படுத்தும் பாகவததர்மங்களைப்பற்றி கேட்டீரல்லவா? இந்தப் பாகவத தர்மத்தைக்கேட்டாலும், படித்தாலும், த்யானஞ்செய்தாலும், அதில் பிரியம்வைத்தாலும், அதனை அனுமோதித்தாலும், தேவர்களுக்கும் ஜகத் திற்கும் த்ரோஹஞ்செய்பவர்களானாலும் சுத்தர்களாவார்கள். மிக்கக்கல்யாண ஸ்வரூபமுள்ளவரும்,

தம்முடைய திவ்யநாமங்களை ச்ரவணஞ்செய்பவர்களுக்கும், உச்சரிப்பவர்களுக்கும் புண்யத்தைக்கொடுப்பவருமான ஸ்ரீமந்நாராயணனை ஸ்மரிக்கும்படி செய்தீர். இந்த விஷயத்தில் ரிஷபருடைய புத்திரர்களுக்கும் நிமிக்கும் நேர்ந்த ஸம்வாதமாகிய வெகுநாளைக்கு முன் நடந்த இதிஹாஸத்தை உதாரணமாகச் சொல்லுகிறேன்.

15–31. ஸ்வாயம்புவ மனுவின் புத்திரனாகிய ப்ரியவ்ரதருக்கு ஆக்னீத்ரென்பவர் புத்திரர். அவருடைய புத்திரர் நாபியென்பவர், அவருடைய புத்திரர் ரிஷபரென்பவர்; மோக்ஷதர்மத்தை லோகத்திற்கு உபதேசிப்பதற்காக பகவானுடைய அம்சமே ரிஷபராக அவதரித்தது என்று சொல்லுகிறார்கள்; அவருக்கு நூறு புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்கள் ப்ரஹ்மத்தை அறிந்தவர்கள். அவர்களில் பரதரென்ற மூத்தவர் நாராயணனிடத்தில் மிக்கபக்தியுள்ளவர்: அவருடைய பெயரால்தான் இந்த வர்ஷம் பாரத வர்ஷமென்று பெயரடைந்தது; (முன் அஜநாபமென்ற பெயருள்ள வர்ஷம், பாரதமென்ற பெயரடைந்தது) அவர் இந்தப்பூமியை பரிபாலித்து ஸகல போகங்களையும் அனுபவித்து பின்பு காட்டிற்குச் சென்று தபஸ்செய்து, ஸ்ரீ ஹரியை மூன்று ஜன்மங்களில் உபாஸித்து அவருடைய பதத்தை அடைந்தார். மற்ற புத்திரர்களில் ஒன்பது குமாரர்கள் ஒன்பது த்வீபங்களுக்கு அதிபதிகளாகவிருந்தார்கள். எண்பத்தொன்று குமாரர்கள் கர்மமார்க்கத்தைப் பூமியில் பரவச் செய்துகொண்டிருந்தார்கள். கவி, ஹரி, அந்தரிக்ஷர், ப்ரபுத்தர், பிப்பலாயனர், ஆவிர்ஹோத்திரர், தரமீளர், சமஸர், கரபாஜனர், என்ற ஒன்பது குமாரர்கள் ஆத்ம தத்துவத்தை அப்யஸிப்பதில் ச்ரமப்

பட்டவர்களும், தத்வத்தை நிரூபிப்பவர்களும், திகம்பரர்களும், ஆத்மவித்யையில் ஸமர்த்தர்களுமாகவிருந்தார்கள். அவர்கள் இந்த ஜகத்தை பகவத் ஸ்வரூபமாகவும் ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபமாகிய அதனைத் தாமாகவும், பார்த்துக்கொண்டுப் பூமியில் ஸஞ்சரித்தார்கள். அவர்கள் ஒன்றிலும் பற்றுதலில்லாமல் மஹர்ஷிகள், சாரணர்கள், பூதநாதர், வித்யாதரர்கள், ப்ராஹ்மணர்கள், பசு, தேவர்கள், ,ஸாத்யர்கள், ஸித்தர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள், நாகர்கள் ஆகிய இவர்களுடைய லோகங்களில் தங்களிஷ்டப்படி ஸஞ்சரித்தார்கள். ஒருகால் பாரதவர்ஷத்தில் நிமியாகஞ் செய்துகொண்டிருக்க அந்த யாகசாலைக்கு அந்த யோகிகள் வந்தார்கள். ஸூர்யன் போன்ற அந்தப் பாகவதர்களான யோகிகளைக்கண்டு யஜமானன், ஆஹவனீயம் முதலிய அக்னிகள், ப்ராஹ்மணர்கள் ஆகிய எல்லோரும் எழுந்திருந்தார்கள்.

நிமி அவர்களை ப்ரஹ்ம வித்துக்களென்று தெரிந்துகொண்டு மிக்கப்பிரியத்துடன் ஆஸனங் கொடுத்து விதிப்படி பூஜித்தார். மேலுமவர் ஸனகர் முதலிய ப்ரஹ்மதேவருடைய புத்திரர்கள்போல் ப்ரகாசிக்கும் அந்த யோகிகளை நோக்கி மிகுந்த வணக்கத்துடன் "விஷ்ணுபக்தர்கள் லோகங்களைப் பரிசுத்தப்படுத்துவதற்காக லோகங்களில் ஸஞ்சரிப்பார்கள். ஆனதால் உங்களை ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பார்ஷதர்களென்று நினைக்கிறேன். ஒரு க்ஷணத்தில் நாசமடையக்கூடியதானாலும் மனுஷ்ய ஜன்மம் கிடைப்பது அரிது. (புருஷார்த்தங்களை அடைவதற்கு ஸாதனமாகவிருக்கிறது) அந்த ஜன்மத்திலும் விஷ்ணு பக்தர்களாகிய ஸாதுக்களுடைய தர்சனங்கிடைப்பது

அரிது. ஓ பாபமற்றவர்களே! எதனைச் செய்தால் முக்கியமான க்ஷேமத்தை (மோஷத்தை) அடையலாம். அதனைச் சொல்லவேண்டும். இந்த ஸம்ஸாரத்தில் அரைக்ஷணமாகிலும் ஸாதுக்களுடைய சேர்க்கை நேர்ந்தால் அதுமிக்க ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியது. எந்த தர்மங்களை அனுஷ்டித்தால் பகவான் ஸந்தோஷித்து பக்தனுக்கு தம்மையும் கொடுப்பாரோ, அப்படிப்பட்ட பாகவத தர்மங்களை நான் கேட்க கூடுமானால் சொல்லுங்கள்" என்று கேட்டார்.

32–43. ஓ வஸுதேவ! இப்படி நிமியால் கேட்கப்பட்ட அந்த யோகிகள் அவரைச்வாகித்து ஸதஸ்யர்களும், ரித்விக்குகளும் கேட்டிருக்க பதில் சொன்னார்கள். அவர்களில் கவியென்பவர் அரசனை நோக்கி 'தேஹமும் முதலியவைகளை ஆத்மாவென்று நினைத்து எப்பொழுதும் பயத்தை அடைந்திருக்கும் புருஷன் இந்த ஜகத்முழுவதும் ஈச்வர–ஸ்வரூபமென்று நினைத்தால் பயம் நிவர்த்தியடையும், ஆனதால் ஸ்ரீ பகவானுடைய பாதாரவிந்தத்தை யுபாஸிப்பதே ஸகல பயத்தையும் நிவர்த்திக்கக்கூடியதென்று நினைக்கிறேன் (பரமக்ஷேமமின்னதென்று காட்டப்பட்டது.) அஞ்ஞானிகள் ஸுகமாக ஆத்மதத்வத்தைத் தெரிந்து கொள்வதற்காக பகவான் தாம் எந்த உபாயங்களைச் சொல்லியிருக்கிறாரோ, அவைகள் பாகவததர்மங்கள். (பகவான் மனு முதலியவர்களைக்கொண்டு வர்ணாச்ரம தர்மங்களை லோகத்திற்குக் காண்பித்து மிகவும் ரஹஸ்யமான ஆத்மதத்வத்தைத் தாமே சொன்னாரென்று கருத்து) கண்களை மூடிகொண்டும், ஓடிக் கொண்டு அவைகளை அனுஷ்டித்தாலும் தவறுதலை அடைகிறதில்லை ப்ரத்யவாயத்தை அடைகிறதில்லை.

பயனை அடையாமலிருக்கிறதில்லை (ச்ருதி, ஸ்மிருதி ஆகிய இரண்டும் இரண்டு கண்கள், ஒன்றில்லாதவன் காணனெனப்படுகிறான். இரண்டு மில்லாதவன் அந்தனெனப்படுகிறான். யாகம் முதலிய கர்மங்களை அனுஷ்டிப்பவனுக்கு இடையூறு உண்டாகிறதில்லை. ஓடிக்கொண்டென்றால் சீக்கிரமாக அனுஷ்டிப்ப தென்றும், மூடிக்கொண்டென்றால் தெரியாமலென்றும் அர்த்தங்கொள்ளவேண்டும்) சரீரத்தாலும், வாக்கினாலும், மனத்தாலும், இந்திரியங்களாலும், புத்தியாலும், அஹங்காரத்தாலும், அனுஸரிக்கப்பெற்று எதனைச் செய்கிறானோ, அதெல்லாவற்றையும் பரமபுருஷனா கிய ஸ்ரீமந் நாராயணனுக்கு என்று ஸமர்பிக்கவேண்டும். இதுதான் பாகவததர்மமென்று கருத்து.

தேஹத்தில் அபிமானம் வைப்பதால் பயமுண்டா கிறது; ஈச்வரனிடத்தில் பக்தி செய்யாதவனுக்கு பகவானை நினைக்காமலிருப்பதும், தேஹத்தை நானென்று நினைக்கும் விபரீத ஞானமுமுண்டாகிறது. அதுவும் பகவானுடைய மாயையாலுண்டாகிறது. ஆனதால் வித்வானாகவிருப்பவன் ஸர்வேசனாகிய அந்தப் பகவானை மிக்கப் பக்தியுடன் உபாஸிக்க வேண்டும். மேலும் குருவையே தேவதையாக நினைக்க வேண்டும். ('என்னுடைய மாயையானது முக்குண ஸ்வரூபமானது, தேவஸம்பந்தமுள்ளது; தாண்டமுடி யாது; என்னையே எவர்கள் சரணமடைகிறார்களோ அவர்கள் இந்த மாயையைத் தாண்டுகிறார்கள்" பகவத்கீதா. அஞ்ஞானத்தால் ஏற்பட்ட பயம் ஞானத்தால் நிவர்த்தியடையுமேயொழிய பரமேச்வர பஜனத்தால் என்ன ப்ரயோஜனமென்றால் அவரை யுபாஸித்தால் தான் மாயையைத் தாண்டலாமென்று காண்பிக்கப்

Released by Maran's Dog, Toronto , Canada

பட்டது) விஷயங்களில் மனஞ்செல்லுவதால் ஏகாந்த மான பக்தி எப்படி உண்டாகும் என்றால் விஷ யமென்பது உண்மையானதல்ல. ஆனதால் மனத்தை அடக்குவதால் அபயமுண்டாகுமென்று இந்த ச்லோகத்தால் காட்டப்படுகிறது– ஸிருஷ்டிக்குமுன் இல்லாமலிருந்த இந்த ப்ரபஞ்சமானது உண்மையில் இல்லாததானாலும் இருப்பதாகத் தோன்றுகிறதல்லவா "மனத்தால் ஸங்கல்பிக்கும்பொழுது ஸ்வப்னம், மனோரதம் ஆகிய இவைகள் எப்படி யுண்டாகின்றன வோ, அப்படி ப்ரபஞ்சம் தோன்றுகிறது. (புருஷன் மனத்தால் ஒரு மனோரதத்தை நினைத்து அதனையே த்யானஞ்செய்தால் அது உண்மையில் அவனால் அடையப்படாவிடினும் எப்படித் தோன்றுகிறதோ, ஸ்வப்னம் எப்படி ஸத்யம் போல தோன்றுகிறதோ, அப்படி ஜகத்தோன்றுகிறதென்று தாத்பர்யம்)

ஆனதால் கர்மங்களை ஸங்கல்பிப்பதும் விகல்பிப் பதுமான மனத்தை விஷயங்களில் செல்லாமல் அடக்கி பகவானிடத்தில் செலுத்த வேண்டும். ஆனதால் அபயங்கிடைக்கும். (பயம் நிவர்த்தியாகும்) இப்படிச் செய்வது மிக்கக் கடினமானாலும் அதற்கு ஸுகமான உபாயமொன்றிருக்கிறது. அதென்னவெனில்– சக்கிரபாணியாகிய ஸ்ரீ பகவானுடைய மங்களகரமான அவதாரங்களையும், சரிதங்களையும் அதையே ப்ரயோஜனமாகக்கொண்ட திவ்ய நாமங்களையும் கேட்டுக்கொண்டும், வெட்கமில்லாமல் கானஞ்செய்து கொண்டும் ஆசையை யொழித்து ஸஞ்சரிக்கவேண்டும். (இப்படி பகவானை உபாஸித்தால் ப்ரேமையென்ற பக்தியுண்டாகும்) இப்படி பகவானுடைய திவ்ய நாமங்களை உச்சரித்தால் அவரிடத்தில் ப்ரேமை

விருத்தியாகும். அதனால் ஹிருதயம் உருகுகிறது. பின்பு பகவான் பக்திக்கு வசப்பட்டவர் என்பதைத் தெரிந்துகொண்டு உரக்க சிரிக்கிறான். இவ்வளவு காலம் என்னை பகவான் உபேக்ஷித்தார் என்று அழுகிறான். மிகுந்த ஆசையால் கதறுகிறான். ஓ ஹரியே! என்னை அனுக்ரஹியும் என்று ஸந்தோஷ மாக கானஞ்செய்கிறான். மேலுமவன் ஆகாயம், வாயு, அக்னி, ஜலம், பூமி, ஸூர்யன், முதலிய தேஜஸ்ஸுகள், ப்ராணிகள், திக்குகள், விருக்ஷங்கள், மலைகள், நதிகள், ஸமுத்திரங்கள் முதலிய லோகத்திலுள்ள எல்லாவற்றையும் நாராயணனுடைய சரீரமென்று நினைத்து அதனையே கதியென்று நமஸ்கரிக்க வேண்டும். (இம்மாதிரியான கதி ஆருடர்களான யோகிகளுக்கும் அநேக ஜன்மங்களாலும் கிடைப்பது அரிது. அப்படியிருக்க நாமத்தையுச்சரிப்பதால் ஒரு ஜன்மத்தில் எப்படி கிடைக்குமென்றால்– அடுத்த ச்லோகத்தில் ஸமாதானஞ் சொல்லப்படுகிறது)

ஆஹாரத்தைப் புஜிப்பவனுக்கு ஒவ்வொரு கபளத்திலும், ஸுகம், வயிறுநிரம்புவது, பசியடங்கு வது முதலியவை முறையே ஒரே காலத்திலுண்டாவது போல ஸ்ரீ ஹரியை ஸேவிப்பவனுக்கு, பக்தி (ப்ரேமை), பகவானுடைய ஸ்வரூபம் தோன்றுவது, அதனால் ஸுகத்தை அடைந்து மற்ற விஷயங்களில் வைராக்யம் ஆகிய மூன்றும் ஒரேகாலத்தில் உண்டாகின்றன. இப்படி ப்ரேமை முதலிய மூன்றும் உண்டான பின்பும் தொடர்ச்சியாக பகவானை ஸேவித்தால் பக்தி வைராக் யம், பகவானுடைய ஸ்வரூபானுபவம் ஆகிய மூன்றும் ஸ்திரமாகின்றன. அதன்பின்பு பாகவதனாகிய அந்தப் புருஷன் சாந்தியை அடைவான்" என்று சொன்னார்.

44–55. அதனைக்கேட்ட நிமி "பாகவதன் சாந்தியை அடைவானென்று சொல்லப்பட்டதே; பாகவதன் என்றால் அவன் எதனைச்செய்து கொண்டிருப்பான்? அவன் ஸ்வபாவமெப்படியிருக்கும்? எப்படி ஸஞ்சரிப்பான்? எதனைச்சொல்வான்? எந்த அடையாளமுள்ளவனாகவிருப்பான்? அதனைச் சொல்லுங்கள்" என்று கேட்டார். அதனைக்கேட்ட ஹரியென்பவர் அரசனை நோக்கி எவன் ஸகல ப்ராணிகளிடத்திலும் வஸிக்கும் பகவானுடைய ஒப்புயர்வற்ற ஐச்வர்யத்தை பார்க்கிறானோ, (உயர்வு தாழ்வாகப் பார்க்கவில்லையென்று கருத்து) குறைவற்ற ஐச்வர்யம் முதலியவைகளுள்ள பகவானிடத்தில் ஸகல பிராணிகளையும் எவன் பார்க்கிறானோ, அவன் பாகவதர்களுக்குட் சிறந்தவன். அல்லது ஸகல ப்ராணிகளிடத்திலும் தான் ப்ரஹ்மஸ்வரூபியாகவிருப்பதாகவும், ப்ரஹ்ம ஸ்வரூபமான அதிஷ்டானத்தில் ஸகல பிராணிகளிருப்பதாயும் எவன் பார்க்கிறானோ, அவன் பாகவதர்களுக்குட் சிறந்தவன். எவன் ஈச்வரனிடத்தில் ப்ரேமையையும் ஈச்வர பக்தர்களிடத்தில் மைத்ரியையும் அஞர்களிடத்தில் கிருபையையும், விரோதிப்பவர்களிடத்தில் உபேக்ஷையையும் செய்கிறானோ, அவன் மத்தியமன். (நடுத்தரம்). எவன் தேவதா பிரதிமைகளையே ச்ரத்தையுடன் பூஜிக்கிறானோ, ஈச்வர பக்தர்களைப் பூஜிக்கிறதில்லையோ, மற்றவர்களை கவனிக்கிறதில்லையோ அவன் ப்ராகிருத பக்தன். (பக்தி இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிறது காலம் சென்ற அளவில் உத்தமனாகி விடுவானென்று தாத்பர்யம்) பகவானிடத்தில் மனத்தைச்செலுத்தியவன் இந்திரியங்களால் விஷயங்களை கிரஹிக்கமாட்டான். அப்படி க்ரஹித்தாலும் அதனால் ஸந்தோஷத்தை

அடையான். அவைகளை விரோதிக்கவும் மாட்டான். இந்த ஜகத் விஷ்ணுவின் மாயாமயமென்று நினைத்திருப்பான். அவன் பாகவதர்களுக்குட் சிறந்தவன். எவன் பகவானை த்யானித்து சரீரத்தின் ஜனன மரணம், ப்ராணனுடைய தர்மமான பசி, மனத்தின் தர்மமான பயம், புத்தியின் தர்மமான ஆசை, இந்திரியங்களுடைய தர்மமான ச்ரமம் ஆகிய ஸம்ஸார தர்மங்களால் மோஹிக்காமலிருக்கிறானோ, அவன் பாகவதர்களுக்குட் சிறந்தவன்.

எவனிடத்தில் காமம், கர்மம், முந்திய வாஸனைகள் ஆகிய இவைகள் உண்டாகிறதில்லையோ, எவனுடைய மனம் வாஸுதேவரையே ஆச்ரயித்திருக்கிறதோ, அவன் பாகவதர்களுக்குட் சிறந்தவன். (எப்படி ஸஞ்சரிப்பானென்பதற்கு பதில் சொல்லப்பட்டது) எவன் 'நான் நல்லகுலத்தில் பிறந்தவன் நான் தபஸ்வி, நான் ப்ராஹ்மணன், நான் ஸன்யாஸி, நான் உயர்ந்தஜாதி, என்று தேஹத்தில் அஹங்காரமற்றிருக்கிறானோ, அவன் நாராயணனுக்கு ப்ரியனாகிறான். எவனுக்குதான் பிறர் என்ற பேதமும் தன்னுடையது பிறருடையதென்று பேதபுத்தியுள்ளவனோ, எவன் சாந்தனோ, அவன் பாகவதர்களுக்குட் சிறந்தவன்; பகவானுடைய பாதாரவிந்தமானது பகவானிடத்தில் மனதைச் செலுத்திய ப்ரஹ்மா முதலியவர்களாலும் தேடப்பட்டிருக்கிறது (அடையப்படவில்லை) அப்படிப்பட்ட பாதாரவிந்தத்தைக் காட்டிலும் ஸாரமான வஸ்து வேறொன்றுமில்லையென்று, எவன் பகவானை உபாஸிக்கிறானோ, அவன் முவ்வுலகத்தின் ராஜ்யங்கிடைப்பதாயினும் அரை நிமிஷங்கூட பகவானுடைய பாதாரவிந்தத்தை மறக்கமாட்டான். அவனே விஷ்ணு

பக்தர்களுக்குட் சிறந்தவன். அழகான நடையுள்ள பகவானுடைய பாதங்களிலுள்ள விரல்களுடைய நகமாகிய சந்திரனால் எவனுடைய ஹிருதயத்திலுள்ள ஸகலதாபங்களும் நிவர்த்திக்கபடுகின்றனவோ (எவன் பகவானை இடைவிடாமல் த்யானிக்கிறானோ) அந்தப்பக்தனுடைய ஹிருதயத்தில் திரும்பவும் ஸூர்யனுடைய தாபமுண்டாகுமா? ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் திவ்ய நாமத்தை அலக்ஷ்யமாக உச்சரித்தாலும் ஸகல பாபங்கள் நிவர்த்தியாகின்றன. அப்படியிருக்க ப்ரேமையாகிய கயிற்றால் ஹிருதயமாகிய தாமரை மலரில் பகவானுடைய பாதத்தை எவன் கட்டுகிறானோ (த்யானிக்கிறானோ) அவனுடைய ஹிருதயத்தை விட்டுப் பகவான் அப்புறஞ்செல்லுகிறதில்லை. (அவ்விடத்திலேயே வஸிக்கிறார்) அவனே பாகவதர்களுக்குட் சிறந்தவனென்று சொல்லப்படுகிறான்.

நோட்டு.

கவியென்ற யோகியானவர் 33–வது ச்லோகத்தால் மிகவும் க்ஷேமமான கார்யம் ஸ்ரீபகவானுடைய பாதாரவிந்தத்தை உபாஸிப்பது என்றார். 34–வது ச்லோகத்தால் பாகவத தர்மம் இன்னது என்கிறதைச் சொன்னார். 36–வது ச்லோகத்தால் "ஓ அர்ஜுன! எதனைச் செய்கிறாயோ. எதனை புஜிக்கிறாயோ எதனை ஹோமம் செய்கிறாயோ, எதனை கொடுக்கிறாயோ, தபஞ்செய்கிறாயோ அதனை எனக்கு அர்ப்பணம் செய்" என்ற கீதையின் அர்த்தம் காண்பிக்கப்பட்டது. ஸகல ப்ராணிகளிடத்திலும்– 45,46,47–வது ச்லோகங்களால் பாகவதனுடைய தர்மம் சொல்லப்பட்டது.

வீரராகவீயத்தில்:– ப்ரஹ்மத்தை யறிந்தவர்கள்– மூலத்தில் ப்ரஹ்மபாரகமென்றிருப்பதால் சிலர் வேதத்தை யறிந்தவர்களென்றும், சிலர் ப்ரஹ்மத்தை யறிந்தவர்களென்றும், சிலர் இரண்டையும் அறிந்தவர்களென்றும் சொல்லுகிறார்கள். த்வீபங்களுக்கு– இளாவர்த்தம், ப்ரஹ்மவர்த்தம், ஆர்யாவர்த்தம், மலயம், கேது, பத்ரஸேன, இந்திரஸ்பிருகு, விதர்ப்ப, கீகட என்று ஒன்பது த்வீபங்கள். குருவையே– பகவானுடைய மாயையால் சரீரத்தில் ஆத்மா என்ற புத்தியும் ஜகத்து ப்ரஹ்மஸ்வரூபம் இல்லை என்ற புத்தியும் உண்டாகிறது. ஸ்வப்னம்– ஸ்வப்னமானது அநித்தியமானாலும் நித்யம்போல் எப்படித் தோன்றுகிறதோ அது போல் தேஹமானது ஆத்மாவாக இல்லாமலிருந்தாலும் ஆத்மா அஸ்வதந்தரனாக இல்லாமலிருந்தாலும், அப்படியிருப்பதாகத் தோன்றுவதால் அதற்குக் காரணமாகிய மனத்தை அடக்கவேண்டும்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–3

மாயையும் பூஜாவிதியும்

நிமியென்ற அரசன் அந்த நவயோகிகளை நோக்கி "ஓ பகவான்களே! இந்த ஜகத்தை விஷ்ணுவின் மாயாமயமென்று பார்ப்பவன் பாகவதர்களுக்குட் சிறந்தவன் என்று சொல்லப்பட்டதே மாயாவி களையும் மோஹிக்கச் செய்வதான விஷ்ணுவின் மாயையைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஸம்ஸார தாபத்தால் மிகவும் தாபத்தையடைந்த நாம் அந்தத் தாபத்திற்கு ஔஷதமாகவிருக்கும் விஷ்ணு கதாமிருதமாகிய உங்களுடைய வார்த்தையைக் கேட்டுத் திருப்தியடையவில்லை. ஆனதால் சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

3–20. அதனைக்கேட்டு அந்தரிக்ஷரென்பவர் நிமியைநோக்கி "நிர்குணமாகிய ப்ரஹ்மம் ஸகுண மென்றும் இரண்டாவது உள்ளதென்றும் எதனால் நினைக்கப்படுகிறதோ, ஈஸ்வரன் இந்த ஜகத்தை எதைகொண்டு ஸிருஸ்டித்தாரோ, அது மாயை, (மாயையின் ஸ்வரூபத்தை நேரில் சொல்லமுடியாத தினால் ஸிருஷ்டி முதலிய கார்யத்தின் வழியாகச் சொல்லப்பட்டது.) இந்திரியங்களால் உண்டுபண்ணப் பட்ட ப்ரஹ்மஞானமே ஜாகரமெனப்படுகிறது. அந்தக்கரணத்தாலுண்டு பண்ணப்பட்ட ப்ரஹ்மமே ஸ்வப்னமெனப்படுகிறது. அந்த ஜாக்ரம், ஸ்வப்னம் இவைகளுடைய ஸம்ஸ்காரத்துடன் கூடிய உபாதான காரணமே ஸுஷுப்தமெனப்படுகிறது. ஆனதால் இந்த மூன்றும் ஸத்தியமானதல்ல. இந்த மூன்று

அவஸ்தைகளிலும் தொடர்ச்சியாக விருந்தும், இம் மூன்று அவஸ்தைகளைவிட வேறானதுமான வஸ்துவே ஸத்தியமானது. (தூங்கிவிழித்தபின் ஸ்வப்னத்தில் கண்டவைகளில்லாததால் ஸ்வப்னம் மித்யையென்று தெரியவருகிறது, ஜாக்ரம், ஸுஷுப்தம் இந்த இரண்டு அவஸ்தைகளுக்கு பாதகமில்லாததால் அவை களை மித்யையென்று எப்படி சொல்லலாம் என்றால் அடுத்த ச்லோகத்தால் ஸுதானஞ் சொல்லப் படுகிறது) தெரிந்துகொள்பவன், தெரிந்துகொள்வது, அறியப்படுவது என்ற பேதமானது எப்படி ஸ்வப்னத்தில் ஏற்படுகிறதோ, அப்படி ஜாக்ரத்திலும், ஸுஷுப்தத்திலும் மேற்காட்டிய முவ்வகையான பேதம் மாயையாலேற்படுகிறது.

உண்மையில் சுத்தமாகிய ஞானமொன்றே வேதத் தால் நிஷேதிக்கப்பட்டிருப்பதாலும், சில ஸமயம் இல்லாமலிருப்பதாலும் ஜாக்ரம், ஸுஷுப்தம் இவைகள் பொய்யானவை. மரணமடைந்த புத்திரன் முதலிய பந்துக்களை எப்பொழுதும் நினைப்பதால் அவர்களை ஸ்வப்னத்தில் நேரில் பார்க்கிறானல்ல வா? அது மனோரதமெனப்படுகிறது. அந்த மனோ ரதத்திலும் ஸ்வப்னத்தில் காணப்படுகின்ற தெரிந்து கொள்ளுகிறவன் தெரிந்து கொள்வது, அறியப்படுவது ஆகிய மூன்றும் எப்படி மித்யையோ அப்படி ஜாக்ரத்திலும் காணப்படும் அவை மித்யை யானவை (பொய்) என்று தெரிந்துகொண்டவன் ஸம்சயமற்ற வனாவான். அவை எதனால் பொய்யென்று சொல்லப்படுகிறது என்றால் உண்மையான ஸ்வரூபத்தை அடையாமலிருப்பதாலும், ஸுஷுப்த ஜாக்ரத்தில்லா மலிருப்பதாலும், அவை எப்படி மித்யையானவையோ,

அப்படிப்போல ஜாக்ரம், ஸுஷுப்தம் இவைகளும் மித்யாபூதமானவை, ஸகல பிராணிகளுக்கும் காரணராகவிருக்கும் புராண புருஷன் ஜீவனுக்கு விஷயபோகத்திற்காகவும், மோக்ஷத்திற்காகவும், இந்த மஹாபூதங்களைக் கொண்டு பலவகையான பிராணி களை எந்த சக்தியால் ஸிருஷ்டித்தாரோ, அதுவே மாயை. இப்படி பகவான் ஐந்து மஹா பூதங்களைக் கொண்டு ஸிருஷ்டிக்கப்பட்ட பிராணிகளிடத்தில் அந்தர்யாமியாகப் ப்ரவேசித்து மனோரூபியாகவும், இந்திரியங்களின் ஸ்வரூபியாகவும், ஆத்மாவைப் பிரித்துக்கொண்டு விஷயங்களை அனுபவிக்கச் செய்கிறார். அந்தர்யாமியாகிய பகவானால் ப்ரகாசிக்கும் இந்திரியங்களைக் கொண்டு அந்த ஜீவன் விஷயங்களை அனுபவித்து இந்த சரீரத்தை ஆத்மா வென்று நினைத்து சரீரம் முதலியவைகளில் அபிமானம் வைக்கிறான்.

மேலுமந்த ஜீவன் கர்மவாஸனைகளுடன் கூடிய கர்மங்களை கர்மேந்திரியங்களால் செய்து அந்தக் கர்மத்தின் பயனாகிய ஸுகதுக்கங்களை அனுபவித்து ஸம்ஸாரத்தில் சுற்றுகிறான். பலவகையான துக்கத்தை வஹிப்பவனாகி புருஷன் இப்படி கர்ம கதிக்குத் தக்கபடி ஜனன மரணங்களை ப்ரளயகாலம் வரையில் அனுபவிக்கிறான். மஹா பூதங்களுக்கு நாசகாலம் நேர்ந்த பொழுது ஸ்தூல ஸூக்ஷ்மஸ்வரூபமாகிய கார்யப்ரபஞ்சத்தை ஆதி அந்த மற்றதாகிய கால மானது, அவ்யக்தத்தில் சேர்க்கிறது. அதன் பின்பு நூறு வர்ஷ காலம் மழை பெய்யாமலிருக்கும். அந்த காலத்தில் மிக்க உஷ்ணமான வெய்யிலுள்ள ஸூர்யன் மூவ்வுலகங்களையும் தஹிப்பான். அப்பொழுது

ஸங்கர்ஷணருடைய முகத்திலிருந்து அக்னி வாயு வினால் தூண்டப்பட்டு பாதாளம் முதல் உயரக் கிளம்பி நான்கு புறத்திலும் ஜ்வலிக்கும். அதன்பின் ஸம்வர்த்தகமென்ற மேகங்கள் நூறு வர்ஷகாலம் யானையின் துதிக்கை போன்ற ப்ரமாணமுள்ளதாக மழைபெய்யும். அப்பொழுது விராட்டானது ஜலத்தில் லயத்தை அடையும், விராட் சரீராபிமானியான வைராஜன் அதனைவிட்டு அவ்யக்தத்தை அடைகிறான். அக்னி எரிப்பதற்குக் கட்டையில்லாவிடில் அணைய வில்லையா? அதன்பின் பூமியின் குணமாகிய கந்தம் ப்ரளயகால வாயுவினால் அபஹரிக்கப்படும். அந்தப் பூமி ஜலத்தில் லயிக்கிறது. அந்த ஜலத்தின் ரஸமும் வாயுவினால் அபஹரிக்கப்பட்டு ஜலம் தேஜஸ்ஸில் லயிக்கிறது. அந்த தேஜஸின் ரூபமானது ப்ரளய காலத்திய இருளால் அபஹரிக்கப்படும், அப்பொழுது அந்த தேஜஸ் வாயுவில் லயிக்கிறது. வாயுவின் குண மான ஸ்பர்சமானது ஆகாசத்தால் அபஹரிக்கப்படும்.

அந்தவாயு ஆகாசத்தில் லயிக்கிறது. கால ஸ்வரூபியான ஈச்வரனால் "ஆகாயத்தின் குணமான சப்தம் அபஹரிக்கப்படும்; அந்த ஆகாயம் தாமஸா ஹங்காரத்தில் லயிக்கிறது. இந்திரியங்களும் புத்தியும் ராஜஸாஹங்காரத்தில் லயிக்கிறது. மனதும் வைகாரிக தேவர்களும் ஸாத்விகமான அஹங்காரத்தில் லயிக் கிறார்கள். அஹங்காரம் தன்னுடைய கார்யங்களுடன் மஹத்தத்வத்தில் லயிக்கிறது. (மஹத்தத்வம் ப்ரகிருதி யில லயிக்கிறது. ப்ரகிருதி ப்ரஹ்மத்தினிடம் லயிக்கிறது) ஸிருஷ்டி, பரிபாலனம் நாசம் ஆகிய இவைகளுக்குக் காரணமாகவிருப்பது பகவானுடைய மாயை. இது முக்குண ஸ்வரூபமுள்ளது. இன்னும்

எதனைக் கேட்க விரும்புகிறீர்" என்றார்.

21–37. அதனைக் கேட்ட நிமியென்ற அரசன் "மனத்தை ஜயிக்காதவர்களால் தாண்டமுடியாத ஈச்வர ஸம்பந்தமான இந்த மாயையை ஸ்தூலபுத்தி உள்ளவர்கள் எப்படி தாண்டுவார்கள்! ஓ மஹர்ஷியே! அதனைச் சொல்லும்" என்று கேட்டார். அதனைக் கேட்ட ப்ரபுத்தர் "ஸ்திரீயுடன் சேர்ந்து விஷயஸுகத்தில் ஆசைகொண்டு துக்கம் வராமலிருப்பதற்காகவும் ஸுகத்தை அடைவதற்காகவும், ஜனங்கள் கர்மங்களைச் செய்கிறார்கள். ஆனாலும் பயன் அவர்களுடைய இஷ்டப்படி கிடைக்காமல் மாறுகிறது. மேலும் ஜனங்கள் பணத்தை மிகவும் கஷ்டப்பட்டு ஸம்பாதிக்கிறார்கள். அது துக்கத்தைக் கொடுக்கக் கூடியது. அதனை விசேஷ முயற்சிசெய்து ஸம்பாதிப்பதால் என்ன ப்ரயோஜனம்? கிருஹம், குழந்தைகள், பந்துக்கள், பசுக்கள் ஆகிய இவைகள் அநித்யங்களானதால் இவைகளை ஸம்பாதிப்பதால் தான் என்ன ப்ரயோஜனம்? இது போலவே பரலோகஸுகமும் கர்மத்தாலேற்படுவதானதால் அதுவும் நித்யமானதல்ல. சக்கிரவர்த்திகளுக்கு தமக்கு ஸமமான ஸுகமுள்ளவர்களிடத்தில் விரோதமும், மேற்பட்டவர்களிடத்தில் அஸூயையும், தம்முடைய ஸுகம் கெட்டுப் போய் விடுமோ என்ற பயமும் எப்படி உண்டாகிறதோ, அப்படி கர்மபலத்தில் ஆசைப்பட்டவனுக்கு பயம் நேருமென்று தெரிந்து கொள்ள வேண்டும். ஆனதால் மேலான க்ஷேமத்தைத் தெரிந்துகொள்ள விரும்பிய புருஷன் வேதத்தை முறைப்படி அத்யயனஞ் செய்தவரும், பரப்ரஹ்மத்தின் ஸாக்ஷாத்காரமுள்ளவரும், சாந்தியுள்ளவருமான

ஆசார்யனைச் சரணமடையவேண்டும். மேலும் அந்த ஆசார்யனுக்குக் கபடமில்லாமல் சுச்ரூஷை செய்து குருவை ஆத்மாவாகவும், தேவதையாகவும் நினைத்து அவரிடமாக பாகவத தர்மங்களை அப்யஸிக்க வேண்டும். அந்தப் பாகவத தர்மத்தால் எல்லாவற்றிற்கும் ஆத்மாவாகவும், ஆத்மாவைக் கொடுப்பவருமான பகவான் ஸந்தோஷப்படுவார். மனத்தால் ஒன்றையும் விரும்பாமலிருப்பது, ஸாதுக்களிடம் ஸங்கஞ்செய்வது, தாழ்ந்தவர்களிடத்தில் தயை, ஸமமானவர்களிடத்தில் ஸ்நேஹம் மேற்பட்ட வர்களிடத்தில் வணக்கம், மண், ஜலம் முதலியவைகளால் சுத்தி செய்து கொள்வது, வீணான வார்த்தை சொல்லாமல் மௌனமாகவிருப்பது, தனக்குரிய தர்மத்தை யநுஷ்டிப்பது, பொறுமை, வேதாத்யயனம், கபடமின்மை, ப்ரஹ்மசர்யம் (ருது காலம் தவிர ஸ்திரீ மற்ற காலங்களில் ஸங்கமமில்லாதிருப்பது) பிறருக்கு ஹிம்ஸை செய்யாமலிருப்பது ஸுகதுக்கங்களை ஸமமாக நினைப்பது, எல்லாவற்றையும் தாமாகவும், ஈச்வரனாகவும் நினைப்பது, ஒண்டியாக ஸஞ்சரிப்பது, வீடு முதலியவைகளில் அபிமானமற்றிருப்பது, ஜனங்களில்லாதவிடத்தில் விழுந்திருக்கும் கந்தை மரப் பட்டை இவைகளை உடுத்திகொள்வது, கிடைத்ததில் ஸந்தோஷப்படுவது, பகவானுடைய குணங்களைச் சொல்லும் சாஸ்திரத்தில் ச்ரத்தைவைப்பது, மற்ற சாஸ்திரங்களை நிந்திக்காமலிருப்பது, ப்ராணாயாமஞ் செய்து மனத்தை அடக்குவது, மௌனத்தால் வாக்கை அடக்குவது பயனில் ஆசைப்படாததால் கர்மத்தை நிக்ரஹிப்பது, உண்மை பேசுவது, அந்தக் கரணத்தை அடக்குவது, வெளியிலிருக்கும் இந்திரியங்களை அடக்குவது, அத்புத கர்மங்களைச் செய்த ஸ்ரீமந் நாராயணனை ஸ்மரிப்பது

அவருடைய திவ்யநாமங்களை உச்சரிப்பது ஸகல கர்மங்களையும் பகவானைப் பூஜிப்பதற்காகச் செய்கிறோமென்று நினைப்பது. ஆகிய இவைகளை குருமுகமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். மேலும் யாகஞ் செய்வது, தானம் செய்வது, தபஸ், நல்ல ஆசாரம், தனக்குப் ப்ரியமாகிய சந்தனம் புஷ்பம் முதலியவை, களத்திரம், புத்திரன், வீடு, ப்ராணன் ஆகிய இவைகளை பரமாத்மாவினிடம் ஸமர்ப்பிப்பதையும் குருமுகமாக அப்ஸயிக்கவேண்டும் பின்னும் ஸ்ரீ கிருஷ்ணனையே தனக்கு நாதர்யென்று நினைத்த பக்தர்களிடத்தில் ப்ரீதிசெய்வதும் ஸ்தாவர ஜங்கம பிராணிகளுக்குச் சுச்ரூஷை செய்வது அதிலும் மனிதர்களுக்கு விசேஷமாக சுச்ரூஷை செய்வது அதிலும் ஸாதுக்களுக்கு மிகவும் சுச்ரூஷைசெய்வது ஸாதுக்களிடம் சேர்ந்து பரிசுத்தமான பகவானுடைய கீர்த்தியை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்வது, ஒருவருக்கொருவர் பகவானுடைய குணங்களில் ரமிப்பது, ஸந்தோஷப்படுவது, ஸுகப்புடுவது ஆகிய இவைகளை அப்யஸிக்கவேண்டும்.

இப்படி மனிதர்கள் பகவானிடத்தில் ப்ரேமை லக்ஷணமான பக்தியை அடைந்து பாபக்கூட்டத்தை நிவர்த்திப்பவரான ஸ்ரீஹரியை ஸ்மரித்தும் பிறரை ஸ்மரிக்கச் செய்துகொண்டும் மயிர்கூச்சலை அடைவார்கள். சில ஸமயம் அழுகிறார்கள். சில ஸமயம் அச்யுதரான பகவானை த்யானித்து சிரிக்கிறார்கள். சில வேளை ஸந்தோஷப்படுகிறார்கள் சில வேளை லோக வ்யவஹாரமற்று நமஸ்கரிப்பார்கள். சில ஸமயம் நர்த்தனஞ் செய்கிறார்கள். கானஞ் செய்கிறார்கள் பகவானுடைய லீலையை அனுஸரித்து அபினயஞ்

செய்கிறார்கள். இப்படி பரமாத்மாவை அடைந்து ஆனந்தமுள்ளவர்களாகி மௌனமாக விருக்கிறார்கள். இப்படி பாகவத தர்மங்களை அப்யஸிக்கவேண்டும். அதனால் பக்தி யுண்டாகி அதனால் நாராயணனையே தியானஞ் செய்து தாண்டமுடியாத மாயையை சீக்கிரத்தில் தாண்டுகிறான்" என்றார்.

38–44. அதனைக்கேட்ட அரசன் "நீங்கள் ப்ரஹ்மத்தை அறிந்தவர்களுக்குட் சிறந்தவர், ஆனதால் நாராயணன் என்ற ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தைச் சொல்லுங்கள் (பகவான், பரமாத்மா, என்ற சப்தங்களால் சொல்லப்படும் ப்ரஹ்மம் ஒன்றுதானா, அல்லது அதில் விசேஷமுண்டா என்று கருத்து) என்று கேட்டார். அதனைக் கேட்ட பிப்பலாயனர் அரசனை நோக்கி "இந்த ஜகத்தை படைப்பது, காப்பாற்றுவது, ஸம்ஹரிப்பது, ஆகிய இவைகளுக்கு எவர் காரணமோ, எவருக்குக் காரணமில்லையோ, அவரே பரமாத்மா; அதுவே பரமதத்வம் மேலும் ஸ்வப்னம், ஜாக்ரம், ஸுஷுப்தி ஆகிய அவஸ்தைகளில் எது தொடர்ந்திருக்கிறதோ, ஸமாதி முதலியவைகளில் எது தொடர்ந்திருக்கிறதோ, அதுவே பரதத்வம். பின்னும் ப்ராணன், இந்திரியங்கள், மனம் ஆகிய இவைகள் எவருடைய அனுக்கிரஹத்தால் தன் கார்யத்தைச் செய்கின்றனவோ, அதுவே பரப்ரஹ்மம் என்று தெரிந்து கொள்ளும். (நாராயண முதலிய நாமங்களால் சொல்லப்பட்டாலும் பரதத்வம் ஒன்று தானென்று தாத்பர்யம்) மனம், வாக்கு, கண், புத்தி, ப்ராணன், மற்ற இந்திரியங்கள் ஆகிய இவைகள் இந்த பரமாத்மதத்வத்தை ப்ராகாசிக்கச் செய்கிறதில்லை. அக்னியினிடத்திலிருந்து உண்டான நெருப்புப்

பொறிகள் அந்த அக்னியை தஹிக்குமா? அதனைப் பிரகாசிக்கச் செய்யுமா? (மனம் வாக்கு முதலியவை களுக்கு பரமாத்மதத்வம் சக்தியைக் கொடுப்பதானதால் அவைகளால் ஆத்மதத்வத்தை ப்ராகாசிக்க செய்ய முடியாதென்று கருத்து) "உபநிஷத்தால் காட்டக்கூடிய அந்தப் புருஷனை கேட்கிறோம்" என்ற ச்ருதியின்படி சப்தத்திற்கு விஷயமானது ப்ரஹ்மதத்வம் என்று தோன்றுகிறது ஆனாலும் வேதமானது சப்தங்களை நிஷேதித்து ஆத்ம விஷயத்தில் ப்ரமாணமாகிறது நேரில் ப்ரஹ்மத்தைச் சொல்லுகிறதில்லை.

மற்றவைகளை நிஷேதிப்பதால் ப்ரஹ்மத்தைச் சொன்னதாக ஆகிறது. (இன்னதென்று ப்ரஹ்மத்தை வேதம் குறிப்பிட்டு காட்டாவிடிலும் இதல்ல, இதல்ல வென்று நிஷேதித்து எஞ்சியது ப்ரஹ்மம் என்று நிஷேதிப்பதால் ப்ரஹ்மத்தை குறிப்பிடுகிறதென்று கருத்து) ப்ரஹ்மம் இல்லாவிடில் வேதத்தில் சொல்லிய நிஷேதம் ஸித்திக்காது (ஒன்றிருந்தால்தான் இது அதல்ல இது அதல்லவென்று சொல்லக்கூடும். ஆனதால் நிஷேதங்கள் எல்லையுள்ளவையென்று தாத்பர்யம்) ஸ்தூல ஸூக்ஷ்மமாகிய ப்ரபஞ்சம் எல்லாம் ப்ருஹ்மமே. ஏனென்றால் ப்ரஹ்மம் அவைகளுக்குக் காரணமானதால் கார்யம் காரணத்தைக் காட்டிலும் வேறல்லவென்று ஸ்ருதி சொல்வதால் ப்ரபஞ்சம் ப்ரஹ்மமேயாம். மாயாசக்தியுள்ள அந்த வஸ்து முதலில் ஸத்வம், ரஜஸ், தமஸ், என்ற மூன்று குணங்களுடைய ஸாம்யமாகிய ப்ரதானமாகவும், பின்பு கிரியாசக்தியால் ஸூத்ராத்மாவாகவும் பின்பு ஞானசக்தியால் மஹத் தத்வமாகவும், அதன் பின்பு ஜீவோபாதியான அஹங்காரமாகவும் இருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

ஆனதால் அந்தந்த அபிமானி தேவர்களாகவும், இந்திரியங்களாகவும், விஷயங்களாகவும், அவைகளை ப்ராகாசிக்கச் செய்பவராகவும் ப்ரஹ்மமே விளங்குகிறது. மேலும் பரமாத்மா உண்டாகிறதில்லை. மரணமடை கிறதில்லை; பருக்கிறதில்லை (விருத்தி, பரிணாமம், முதலிய விகாரங்களில்லையென்று கருத்து) இளைக் கிறதில்லை; பால்யம், யௌவனம் முதலிய அநித்யமான அவஸ்தைகளின் காலத்தைப்பார்ப்பவர்; (மேற்காட்டிய அவஸ்தைகள் அவருக்கில்லையென்று கருத்து) எல்லாவிடங்களிலும், எப்பொழுதும் நாசமற்ற ஞான ஸ்வரூபமாகவிருப்பவர். (கருமையென்ற ஞானமுண்டாயிற்று, மஞ்சள் நிறமென்ற ஞானம் நசித்தது என்று தோன்றுகிறதால் ஞானத்தை நித்திய மென்று சொல்வது பொருந்துமாவென்றால், ஸமா தானஞ் சொல்லப்படுகிறது.) ஞானம் நித்யமானதே.

இந்திரியங்களால் விகல்பிக்கபட்ட கருமை மஞ்ச ளென்ற விருத்திகள் நசிக்கின்றனவேயொழிய ஞானத்திற்கு ஒருகாலும் நாசமில்லை, ஜராயுஜம், அண்டஜம், ஸ்வேதஜம், உத்பிஜ்ஜமென்ற நான்கு வகையாக பிராணிகளிடத்தில் ப்ராணன் ஜீவனை அனுஸரிக்கிறான். இந்திரியங்களும் (ஜாக்ரத்தில்) அஹங் காரமும் (ஸ்வப்னத்தில்) லயத்தை அடைந்திருக்கும் பொழுது லிங்க சரீரமில்லாததால் (உபாதியில்லாதனால்) ஆத்மா விகாரமற்றவனாக இருக்கிறான். அதனால்தான் ஆத்மாவினுடைய ஞாபகம் நமக்கு உண்டாகிறது (ஸுகமாகத் தூங்கினேன் ஒன்றையும் அறியவில்லை யென்று தூங்கிவிழித்தவுடன் நினைக்கிறானல்லவா? ஸுஷுப்தி காலத்தில் இந்திரியம் முதலிய எல்லாம் அடங்கியிருந்ததால் ஆத்மா சுத்தமாகவும் விசேஷ

ஞானமில்லாமல் ஸாகஸ்வரூபியாகவும், ஸாஷாத்தி ஸாக்ஷியாகவுமிருப்பதால் தூங்கிவிழித்தவுடன் மேற்காட்டிய வண்ணம் நினைக்கிறான். ஆனாலும் அவித்யை தன் ஸம்ஸ்காரங்கள் ஆகிய இவைகளிருப் பதால் பின்பு விஷயங்களில் ப்ரவிருத்தியுண்டாகிறது) எப்பொதும் ஸ்ரீமந் நாராயணனுடைய பாதத்தை த்யானித்து (மற்ற ஆசைகளை யொழித்து) அதனாலுண்டாகிய பக்தியால் (பக்தியாகிய ஜலத்தால்) மனத்திலுள்ள அழுக்குகளை அலம்பி சுத்தஞ் செய்து கொள்ளுகிறானோ, அப்பொழுது மிக்க சுத்தமான மனத்தில் ஆத்மதத்வம் ப்ரகாசிக்கும். சுத்தமான கண்களுக்கு ஸூர்யனுடைய ப்ரகாசம் தோன்றுகிற தல்லவா? (ஆத்ம வஸ்து ஸித்த வஸ்து வானதால் சித்தம் சுத்தமானவுடன் தோன்றும் என்று கருத்து) என்று சொன்னார்.

45–59. அதனைக் கேட்ட நிமி என்ற அரசன் யோகிகளை நோக்கி "எதனை யநுஷ்டித்தால் புருஷன் இவ்வுலகத்தில் ஸகல கர்மங்களை விட்டு மேலான ஞானத்தை அடைவானோ, அந்தக் கர்ம யோகத்தைச் சொல்லுங்கள். இந்தக் கேள்வியை முன்னொருகால் இக்ஷ்வாகுவின் முன்பாக ப்ரஹ்மபுத்திரர்களான ஸனகர் முதலியவர்களைக் கேட்டேன், அவர்கள் (எல்லாவற்றையும் அறிந்தவர்களானாலும்) பதில் சொல்லவில்லை, அதன் காரணமென்ன? சொல்ல வேண்டும்" என்று கேட்டார். அதனைக் கேட்ட ஆவிர் ஹோத்திரர் என்பவர் அரசனை நோக்கி "கர்மம், அகர்மம், விகர்மம் என்று வேதத்தில் மூன்றுவகை சொல்லப்பட்டிருக்கிறது. அது லௌகிக மல்ல. வேதம் ஈச்வர ஸ்வரூபமானதால் அதன் தாத்பர்யத்தைத்

தெரிந்து கொள்வதில் வித்வான்களும் மோஹிக்கிறார் கள் (புருஷனுடைய வாக்யத்தில் சொன்னவனுடைய அபிப்பிராயத்தின்படி அர்த்தங் கண்டுபிடிக்கலாம். வேதம் புருஷனால் செய்யப்படாத தானதால் முன்பின் சொல்லியிருப்பதை ஆலோசித்து அர்த்தம் கண்டுபிடிக்க வேண்டுமானதால், அது ச்ரம்மான கார்யமென்று தாத்பர்யம். வேதத்தில் எதைச் செய்ய வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறதோ அது கர்மமெனப்படுகிறது. எதுசெய்யக் கூடாதென்று விலக்கப்பட்டிருக்கிறதோ அது அகர்மம். (விஹித கர்மத்தைச் செய்யாமலிருப்பது விகர்மம்) இந்த வேத மானது விஷயங்களை பரோக்ஷமாகச் சொல்லுகிறது.

குழந்தைகளுக்கு தகப்பன் வியாதிநிவர்த்திக்காக மருந்து கொடுக்கவிரும்பி இது கற்கண்டு இது தித்திக்கும் என்று சொல்லி மருந்தைக் கொடுக்க வில்லையா? அதுபோல வேதமும் மறைபொருளாகச் சொல்லுகிறது. கர்மங்களை விடுவதற்காகவே கர்மங்களைச் செய்யவேண்டுமென்று விதிக்கிறது. ஆனாலும் முதலிலேயே கர்மத்தை விடக்கூடாது. இந்திரியங்களை ஜயிக்காத அஜ்ஞன் வேதத்தில் சொல்லப்பட்ட கர்மங்களை அனுஷ்டியாமல் விட்டு விடுவானானால், விஹித கர்மங்களை அனுஷ்டிக்காத தனால் அதர்மம் உண்டாகிறது. அதனால் ஜனன மரணமாகிய ஸம்ஸாரத்தை அடைகிறான். ஆனதால் வேதத்தில் சொல்லிய கர்மங்களை அனுஷ்டித்து அதன் பயனில் ஆசைகொள்ளாமல் அதனை பகவானிடத்தில் ஸமர்பிக்க வேண்டும். கர்மத்தில் ச்ரத்தை யுண்டா வதற்காக கர்மத்தால் இந்த பயன் கிடைக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. (கர்மத்திற்கு பயனைச்

சொன்னால் அதைச்செய்ய வேண்டுமென்று ச்ரத்தை உண்டாகும். இதற்கு இவ்வளவு பயனிருக்கிறதே, இதற்கும் மேலான பயனைக் கொடுக்கக்கூடிய கர்மமிருக்கிறதோ என்று விசாரிப்பான், விசாரித்தால், யாகம் முதலிய ஸகல கர்மங்களுக்கும் ஞானமே பயனென்று தெரிந்து கொள்வான். அதன் பின்பு நிஷ்காமமாக கர்மங்களை அனுஷ்டிப்பான். அப்படி அனுஷ்டிப்பதால் ஆத்ம ஜ்ஞானத்தை அடைவானென்று கருத்து. (இது வரையில் வைதிகமான கர்மயோகம் சொல்லப்பட்டது. இனிதாந்திரிகமான கர்மயோகஞ் சொல்லப்படுகிறது)

பரமாத்மஸ்வரூபியான ஜீவனுடைய அஹங்காரத்தை நிவர்த்தித்துக்கொள்ள விரும்பியவன் ஆகமசாஸ்திரத்தில் சொல்லியபடி பகவானை உபாஸிக்கவேண்டும். எப்படியென்றால்:– ஆசார்யரிடம் அனுக்கிரஹம் பெற்று அவரிடம் பூஜாவிதியை தெரிந்துகொண்டு (ராமன், கிருஷ்ணன் முதலிய) மஹா புருஷனைப் பூஜிக்கவேண்டும். சுத்தனாக அந்தமூர்த்திக்கு எதிரில் உட்கார்ந்து ப்ராணாயாமம், பூதசுத்தி முதலியவைகளால் தேஹத்தை சோதித்து அங்கந்யாஸங்களால் சரீர ரக்ஷை செய்துகொண்டு பகவானைப் பூஜிக்கவேண்டும். ப்ரதிமை, ஹிருதயம் முதலியவைகளில் கிடைத்த பூஜாத்ரவ்யங்களைக் கொண்டு பூஜிக்கவேண்டும். முதலில் பூமியை சுத்தஞ் செய்து கொள்ளவேண்டும். பின்பு, புஷ்பம் முதலியவைகளை புழு முதலியவைகளில்லாமல் சோதிக்க வேண்டும். பூதசுத்தி முதலியவைகளால் சரீரத்தை சோதிக்க வேண்டும். பகவத் ப்ரதிமைகளை ஜலத்தால் அலம்புவது முதலியவையால் சோதிக்கவேண்டும்.

ஆஸனத்தை தீர்த்தத்தால் ப்ரோக்ஷிக்கவும்; பாத்யம் முதலியவைகளை ஸித்தமாக வைத்து ப்ரதிமையில் ஆவாஹனஞ்செய்து, ஹிருதயம் முதலிய அங்கந்யாஸஞ் செய்துகொண்டு, மூலமந்திரத்தை உச்சரிக்கவேண்டும். ஹிருதயம் முதலிய அங்கங்கள், ஸுதர்சனம் முதலிய உபாங்கங்கள் பரிவாரங்கள் இவைகளுடன் பகவானுடைய சாந்தமான மூர்த்தியை பாத்யம், அர்க்யம், ஆசமனியம், ஸ்நானம். வஸ்திரம், ஆபரணம், சந்தனம், புஷ்பம், அக்ஷதம், புஷ்பமாலை, தூபம், தீபம், நைவேத்யம் முதலிய உபசாரங்களால் பூஜித்து ஸ்தோத்திரஞ்செய்து நமஸ்கரிக்கவேண்டும். நிர்மால்யத்தைத் தலையில் வைத்துக்கொண்டு ப்ரதிமையானால் ஸம்புடத்திலும், வேறானால் ஹிருதயத்திலும் வைத்துக்கொள்ளவும்.

நோட்டு

வீரராகவீயத்தில்:– ஜகத்ஸ்வரூபமாக ஆகவேண்டுமென்று விரும்பிய பரமபுருஷன் எதனைக்கொண்டு இந்த ஜகத்தைப்படைத்தாரோ, அது மாயை, ஸத்வம் முதலிய குணங்களற்றதும் சரீர ஸம்பந்தமில்லாததும், தானாகப் ப்ரகாசிப்பதுமான ஸ்வரூபத்தில் சரீர சம்பந்தமுள்ளதென்றும் தேஹமே ஆத்மாவென்ற ப்ரமை முதலிய விபரீதஜ்ஞானம் எதனால் உண்டாகிறதோ அது மாயை, ஜாக்ரம்–ஜாகிருதவஸ்தையில் இந்திரியங்கள் தேஹம் முதலிய விஷயங்களில் பிரவேசிப்பதால் தேஹம் முதலியவைகளே ஆத்மாவென்றும், ஸ்திரமென்றும் ப்ரமை உண்டாகிறது. ஸ்வப்பனத்தில் கண்ட சரீரங்களை ஸ்திரமென்று நினைப்பது, அந்தக் காரணத்தாலுண்டான ப்ரஹ்மம்,

ஸுஷுப்தி அவஸ்தையில் இந்திரியங்களும் அந்தக் கரணமுமில்லாதிருப்பதால் இரண்டு அவஸ்தைகளிலும் ஏற்பட்ட வாஸனையாகி வித்தை எஞ்சியிருக்கிறது. இம்மூன்றும் ப்ரகிருதியின் குணம், ஆனதால் இந்த மூன்று அவஸ்தைகளும் எப்பொழுது ஜீவனுக்கு இல்லாமலிருக்குமோ அந்த அவஸ்தையே துரீயாவஸ்தையெனப்படுகிறது. ஜீவனுடைய ஸ்வரூபமானது உண்மையில் சுத்தமானது. ராகம், த்வேஷம் முதலிவைகளுடைய ஸம்பந்தமற்றது; ஜாக்ரம் முதலிய அவஸ்தைகளற்ற ஞான ஸ்வரூபமானது; அப்படியிருந்தும் ப்ரகிருதி பரிணாமமாகிய சரீரத்தின் ஸம்பந்தத்தால் இந்திரியங்கள், அந்தக்கரணம். வாஸனாபீஜம் இவைகளால் மூன்று அவஸ்தைகளுள்ளதாகத் தோற்றுகிறது.

ஸ்வப்பனத்திற் காணப்படும் வஸ்துக்கள் அநித்தியங்களானாலும், நித்தியம் போலத் தோற்றவில்லையா? இப்படி மூன்று அவஸ்தைகளுள்ளதாகத் தோற்றுவதும் அதற்கு காரணமாகிய தேஹம் இந்திரியம், இவைகளில் தொடர்ந்திருப்பது முதலியவையெல்லாம் ஞான ஸ்வரூபியாகிய ப்ரத்ய காத்மாவிடத்தில் புண்ய பாபங்களின் பயனேயாம். ஆத்மாவிடத்தில் மாயா கார்யமான முவ்வகையானது, அநித்யாமானதாலும் (முக்திகாலத்தில் இல்லை) அவஸ்துவிஷேசத்திலில்லாத தாலும் இயற்கையல்ல; கர்மத்தின் பயனே. ஸ்வப்னத்திலுண்டான ஸுகம் எப்படி கர்மத்தின் பயனோ. அநித்யமோ, அப்படி அவஸ்தைகளும் கர்மத்தின் பயனேயாம் என்று தெரிந்துகொண்டவன், அல்பஸுகத்தில் ஆசைப்படாமல் சாந்தியடைவான். விராட்–ப்ரஹ்மாண்டம் ஜலத்தில் லயிக்கிறது. அதன்

உள்ளிருக்கும் ஜீவவர்க்கமானது ப்ரதானத்தை அடைகிறது. ஆசார்யனை– "உடைந்த ஓடத்திலேறிச் சென்ற புருஷன் எப்படி கரைசேரமாட்டானோ, அப்படி ஞானமில்லாத புருஷனையடைந்தவன் மோக்ஷத்தை அடையமாட்டான்."

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–4

நாராயண மஹர்ஷியின் மஹிமை

நிமியென்ற அரசன் நவயோகிகளை நோக்கி "ஸ்ரீ ஹரியானவர் தமதிஷ்டப்படி அவதரித்து ஏந்தெந்த கர்மங்களைச் செய்தார்? எவைகளைச் செய்வார்? அதனை சொல்லுங்கள்" என்று கேட்டார். அதனைக் கேட்ட த்ரமீளரென்பவர் அரசனை நோக்கி "அனந்தராகிய பகவானுடைய குணங்கள் அனந்தங்கள். அவைகளெல்லாவற்றையும் சொல்லுகிறதாக நினைப் பவன் மூடன். பூமியிலிருக்கும் தூளிகளை சில காலத்தில் பிரித்தெண்ணினாலும் எண்ணலாம். ஸகல சக்திகளுக்குமிருப்பிடமான பகவானுடைய குணங்களை எண்ண முடியாது. அப்படிப்பட்ட ஆதிதேவராகிய நாராயணன் தம்மால் ஸிருஷ்டிக்கப்பட்ட மஹா பூதங்களால் ப்ரஹ்மாண்டமாகிய பட்டணத்தை நிர்மித்து அதில் தம்முடைய அம்சமாக பிரவேசித்து புருஷனென்ற பெயரை அடைந்தார். எவருடைய சரீரமானது இந்த மூவ்வுலகங்களுக்கும் ஆதாரமாகவும், ஆதேயமாகவும் இருக்கிறதோ, எவருடைய இந்திரியங் களால் பிராணிகளுடைய இந்திரியங்கள் தங்கள் தங்கள் சக்தியை அடைகின்றனவோ, எவருடைய ஞானம் இயற்கையானதோ, எவருடைய பிராணனிடத் திலிருந்து ஸகல பிராணிகளுக்கும் தேஹபலம், இந்திரிய சக்தி, கிரியை முதலியவை உண்டாகின்றன வோ, ஸத்வம் முதலியகுணங்களால் எவர் இந்த ஜகத்தைப்படைத்து ரக்ஷித்து ஸம்ஹரிக்கிறாரோ, அந்த ஆதிகர்த்தா நாராயணனேயாம். எவருடைய ரஜோகுணத்தால் முதலில் ப்ரஹ்மதேவர் இவ்வுலகத்தை

படைத்தாரோ, எவருடைய ஸத்வ குணத்தால் விஷ்ணு இந்த ஜகத்தை ஸம்ரக்ஷிக்கிறாரோ, அந்த விஷ்ணு யாகங்களுக்கு அதிபதியாகவும் (அவைகளின் பயனைக் கொடுப்பவர்) ப்ராஹ்மணர்களையும், அவர்களுடைய தர்மத்தையும் காப்பாற்றுபவராகவும் இருக்கிறாரோ, எவருடைய தமோ குணத்தால் ருத்திரன் ஜகத்தை ஸம்ஹரிக்கிறாரோ, இப்படி ப்ரஹ்மா முதலியவர்கள் எவருடைய அனுக்கிரஹத்தால் இவ்வுலத்தைப் படைப் பது, ரக்ஷிப்பது, ஸம்ஹரிப்பது முதலியவைகளைச் செய்கிறார்களோ, அவரே முதன்மையான புருஷன். தக்ஷருடைய புத்திரியான மூர்த்தியென்பவளிடத்தில் தர்மருக்கு நாராயணன், நரன் என்ற இரண்டு ஸ்வரூபமாக பகவான் அவதரித்தார். அந்த பகவதம் சத்தை மஹரிஷிகளெல்லோரும் பூஜிக்கிறார்கள்.

அந்த நாராயணன் தபஸ்வி, மிக்க சாந்தர், அவர் நாரதர் முதலியவர்களுக்கு ஆத்மஸ்வரூபத்தை யுபதேசித்தார். தாமும் அனுஷ்டித்தார். அதனை கண்ணுற்ற மஹேந்திரன் இவர் என்னுடைய ஸ்தானத்தை அடைய விரும்புகிறார் என்று ஸந்தேஹித்து அப்ஸரஸ்ஸுகளை பதரிகாச்ரமத்திற்கு அனுப்பினர். பின்பு அப்ஸரஸ்ஸுகளின் கூட்டமும், வஸந்தருதுவும், தென்றல் காற்றும் அவருடைய ஆச்ரமஞ் சென்றன. அந்தக் கூட்டமானது நாராயண ருடைய மஹிமையை அறியாமல் ஸ்திரீகளுடைய பார்வையாகிய பாணத்தால் மஹர்ஷியை அடித்தது (ஆசைப்படச் செய்தது). அப்பொழுது மஹர்ஷி இந்திரனால் செய்யப்பட்ட அபராதமென்று தெரிந்து கொண்டார். மஹர்ஷிக்கு உண்மை தெரிந்ததென்பதை யுணர்ந்து அந்த அப்ஸரஸ் முதலியவர்கள் பயந்து

நடுங்கினார்கள். அவர்களை நோக்கி மஹர்ஷியானவர் "ஓ ஸாமார்த்தியமுள்ள மன்மதனே, தென்றல் காற்றே! ஓ தேவஸ்திரீகளே! உங்களுக்கு அதிதிபூஜை செய்கிறேன், அதனைப் பெற்றுக்கொள்ளுங்கள். இந்த ஆச்ரமத்தில் வஸித்து இதனை பயனுள்ளதாகச் செய்யுங்கள். பயப்படவேண்டாம்" என்று கர்வமில்லாமல் சொன்னார்.

9–11. ஓ மஹாராஜ! அபயத்தைக் கொடுப்பவரான நாராயண மஹர்ஷி இப்படி சொல்ல அதனைக் கேட்ட தேவர்கள் வெட்கத்தால் தலைவணங்கி "ஓ ப்ரபுவே! நீர் எல்லாவற்றிற்கும் மேலானவர்; விகாரமற்றவர்; ஆத்மாராமர்களும், தீரர்களுமான யோகிகளால் நமஸ்கரிக்க பெற்ற பாதாரவிந்தமுள்ளவர்;; அப்படிப்பட்ட மஹிமையுள்ள நீர் எங்களைக் கண்டு மனங்கலங்காமலிருப்பது. எங்களிடத்தில் தயை செய்வது முதலியவை ஆச்சரியமல்ல. மேலும் ஸ்வர்க்கம் முதலிய ஸ்வல்பஸுகத்தை விரும்பாமல் உம்முடைய ஸ்தானத்தை அடைவதற்காக உம்மை ஸேவிப்பவர்களுக்கு தேவர்கள் விக்கினத்தைச் செய்கிறார்கள். (தங்களுடைய லோகத்தையும் தாண்டி மேலான ஸுகத்தை அடைவதற்கு முயற்சிப்பதால் தடை செய்கிறார்களென்று கருத்து) யாகங்களைச் செய்து தேவர்களுக்கு ஹவிர்ப்பாகங் கொடுப்பவர் களுக்கு அவர்கள் இடையூறு செய்கிறதில்லை. நீர் ஸகல தேவர்களுக்கும் அதிபதியானதால் உம்மை ஸேவிக்கும் பக்தர்களைக் காப்பாற்றுகிறீர். ஆனதால் அவர்கள் விக்கினங்களுடைய தலையை மிதிக்கிறார்கள். உம்மிடத்தில் பக்திசெய்யாமல் தபஸ்ஸை மாத்திரம் அனுஷ்டிப்பவர்கள் பசி, தாஹம், குளிர், உஷ்ணம்,

பனி, காற்று, நாக்கின் ருசி, சிச்னத்தின் உபயோகம் முதலியவைகளுள்ள எங்களை அடைந்து விஷய ஸுகத்தை அனுபவிப்பார்கள். சில தபஸ்விகள் மேற்காட்டிய ஸுகமுள்ள எங்களை லக்ஷ்யஞ்செய்யா மல் கோபித்துக்கொள்வார்கள். அதனால், அவர்கள் விஷயபோகங்களையும் இழந்து கஷ்டப்பட்டுச்செய்த தபஸ்ஸையும் இழந்துவிடுவார்கள் அது நதியை தாண்டி மாட்டின் குளம்படி போன்ற ஸ்வல்ப இடத்தில் தலையிலிருக்கும் மூட்டையை போடுகிறவன் போலாகிறது." (தபஸ்விகளானாலும் கோபிப்பவர் களானாலும் விஷயபோகங்களையும் இழந்து புண்யத்தையும் இழந்து விடுகிறார்களென்று கருத்து) என்று கருணையுண்டாகும்படி சொன்னார்கள்.

12–16. அதனைக்கேட்ட நாராயண மஹர்ஷி தம்முடைய யோகமஹிமையால் உண்டுபண்ணப்பட்ட வர்களும், மிக்க அலங்காரமுள்ளவர்களும், தமக்குச் சுச்ரூஷை செய்பவர்களுமான ஸ்திரீகளை தேவர்களுக் கும் தேவஸ்திரீகளுக்கும் காண்பித்தார் (அவர்களுடைய கர்வத்தை அடக்குவதற்காக) அந்த ஸ்திரீகள் லக்ஷ்மீ தேவி போலிருந்தார்கள்; அவர்களுடைய ரூபம், காம் பீர்யம் இவைகளைப்பார்த்து அந்த தேவஸ்திரீகள் காந்தியற்றவர்களாகி அவர்களுடைய வாஸனையை முகர்ந்து மோஹித்தார்கள். அப்பொழுது நாராயண மஹர்ஷி தேவஸ்திரீகளை நோக்கி "இந்த ஸ்திரீகளுக் குள் யார் உங்களுக்குச் சமமான ரூபமுள்ளவர்களோ, அவளை ஸ்வர்க்கத்துக்கு அழைத்து போகலாம். எங்களுக்குச் சமமானவள் ஒருவளுமில்லையென்று சொல்வீர்களானால் யார் ஸ்வர்க்கத்துக்கு ஆபரணம் போல அழகாகவிருப்பாளோ, அவளை அழைத்துப்

போகலாம்" என்றார். அதனைக் கேட்ட தேவர்கள் அப்படியே செய்கிறோமென்று சொல்லி அவரை நமஸ்கரித்து அப்ஸரஸ்ஸுகளுக்குள் சிறந்தவளான ஊர்வசியை அழைத்துக்கொண்டு ஸ்வர்க்கலோகஞ் சென்றார்கள். மேலுமவர்கள் ஸுதர்மாயென்ற ஸபையில் மஹேந்திரனை நமஸ்கரித்து ஸகல தேவர்களும் கேட்டுக்கொண்டிருக்க நாராயண மஹர்ஷியின் மஹிமையைத் தெரிவித்தார்கள். அதனைக் கேட்டு தேவேந்திரன் ஆச்சர்யமடைந்து நடுங்கினார்.

17–23. "ஸ்ரீ மஹாவிஷ்ணு ஹம்ஸாவதாரஞ் செய்து ஆத்மயோகத்தைச் சொன்னார். மேலும் தத்தாத்ரேயர், ஸனகர் முதலியவர்கள், நம்முடைய பிதாவாகிய ரிஷபர் ஆகிய இவர்களுடைய ஸ்வரூபியாக அவதரித்து ஆத்மயோகத்தைச் சொன்னார். பின்னுமந்த மஹாவிஷ்ணு ஹயக்ரீவாவதாரஞ் செய்து வேதங்களைத் திருப்பிக்கொண்டு வந்தார் (மதுவென்ற அஸுரனால் அபஹரிக்கப் பெற்ற வேதங்களை திருப்பிக் கொண்டு வந்தார்) மத்ஸ்யமாக அவதரித்து பூமியையும், ஓஷதிகளையும் காப்பாற்றினார். வராஹவதாரஞ் செய்து ஹிரண்யாக்ஷனைக் கொன்று ஜலத்திலிருந்து பூமியை உயரத்தூக்கினார். தேவர்களும் அஸுரர்களும் அமிருதங் கடையும் பொழுது ஆமையுருவங்கொண்டு (கூர்மாவதாரஞ் செய்து) தம் முதுகில் மந்தரமலையைத் தாங்கினார். பின்னும் அந்த மஹாவிஷ்ணு முதலையால் பீடிக்கப்பட்டு உபத்திரவத்தை அடைந்த யானையை ஸம்ரக்ஷித்தார். பின்னுமவர் ஸமுத்திரத்தில் விழுந்து கரையேர முடியாமல் ஸ்தோத்திரஞ் செய்தவர்களான மஹர்ஷிகளைக் காப்பாற்றினார் (கச்யபருக்காக ஸம்பத்து வெட்டி

வருவதற்காக வாலகில்யர்கள் சென்று ஸமுத்திரத்தில் விழுந்தார்கள். அதனைக்கண்ணுற்ற மகேந்திரன் பரிஹாஸஞ் செய்தான், அப்பொழுது பகவான் அவர்களை ரக்ஷித்தார்) விருத்திராஸுரனைக் கொன்று ப்ரஹ்மஹத்யா தோஷத்தை அடைந்த மகேந்திரனுடைய பாபத்தை நிவர்த்தித்து ஸம்ரக்ஷித்தார்) நரஸிம்மராக அவதரித்து ஹிரண்ய கசிபுவைக் கொன்று அவனால் சிறைப்படுத்தப்பட்டிருந்த தேவஸ்திரீகளை விடுவித்து ஸாதுக்களுக்கும் அபயத்தைக் கொடுத்தார். தேவர்களுக்கு அஸுரர்களுக்கும் யுத்தம் நேர்ந்ததால் அதில் அஸுரர்களை ஜயித்து தேவர்களைத் காப்பாற்றினார்.

ஒவ்வொரு மன்வந்தரங்களிலும் அம்சாவதாரங்களைச் செய்து லோகங்களை ஸம்ரக்ஷிக்கிறார். பின்னுமவர் வாமனராக அவதரித்து பலியினிடத்தில் பூமியை யாசித்து அதனை தேவர்களுக்குக் கொடுத்தார். இன்னுமவர், ஹைஹயகுலத்தை எறிப்பதற்கு அக்னியாக ப்ருகு வம்சத்தில் பரசுராமனாக அவதாரஞ் செய்து பூமியிலுள்ள துஷ்ட அரசர்களை இருபத்தொரு தடவைக் கொன்றார். இன்னுமவர் ஸ்ரீராமனாக அவதரித்து ஸமுத்திரத்தில் அணைகட்டி ராவணனைக் கொன்று லோகத்தில் தமது கீர்த்தியை ஸ்தாபித்து பிரகாசிக்கிறார். அப்படிப்பட்ட பகவான் உத்பத்தியற்றவரானாலும் யதுகுலத்தில் அவதரித்திருக்கிறார். இனி இவர் புத்தராக அவதரித்து யாகஞ் செய்யத் தகாதவர்களும், யாகஞ் செய்பவர்களுமான அஸுரர்களை வாதத்தால் மோஹிக்கச் செய்வார். பின்னுமவர் கல்கியாக அவதரித்து கலியுகத்தில் சூத்திரர்களான அரசர்களைக் கொல்வார். ஜகத்திற்கு

அதிபதியும், மிக்க கீர்த்தியுள்ளவருமான பகவானுடைய பல அவதாரங்களும் சரித்திரங்களும் இம்மாதிரியானவை. அவைகளைச் சொன்னேன்" என்றார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–5

பகவானிடத்தில் பக்தி செய்யாதவர்களின் கதி.

நிமியென்ற அரசன் நவயோகிகளை நோக்கி "ஓ ஆத்மாவின் உண்மையை அறிந்தவர்களுக்குட் சிறந்தவர்களே! பகவானாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவை எவர்கள் பூஜிக்கவில்லையோ, எவர்கள் மனத்தை ஜயிக்காமல் விஷயங்களில் நோக்கமுள்ளவர்களோ, அப்படிப்பட்ட பக்தியில்லாதவர்களுக்கு என்ன கதி கிடைக்கும்? அதனைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டார். (பகவானிடத்தில் பக்தி செய்யாதவர்களுக்கு விக்கினமுண்டாகும் என்று முன் அத்தியாயத்தில் சொல்லியிருப்பதால் அவர்களுக்கு என்ன கதியென்று கேட்கலாயிற்று).

2–17. அதனைக் கேட்ட சமஸ்ரென்டவர் அரசனை நோக்கி புருஷோத்தமருடைய முகம், கை, துடை, கால் இவைகளிலிருந்து ப்ராஹ்மண, க்ஷத்திரிய, வைச்ய, சூத்திர என்ற ஜாதிகள் ஆச்ரமங்களுடன் முறையே குணபேதத்தாலுண்டாயின. (ஸத்வகுணத் தால் ப்ராஹ்மணனும், ஸத்வம், ரஜஸ் இவைகளால் க்ஷத்திரியனும் ரஜஸ், தமஸ், இவைகளால் வைச்ய னும், தமோகுணத்தால் சூத்திரனுமென்று கருத்து) இவர்களில் எவர்கள் 'நாம் பகவானிடத்திலிருந்து உண்டானோம்' என்று தெரிந்து கொண்டாவது, தெரிந்துகொள்ளாமலாவது ஈச்வரனை யுபாஸியாமலி ருக்கிறார்களோ, அவர்கள் தங்களுடைய வர்ணா ச்ரமத்தை விட்டு கீழே விழுகிறார்கள். ஆனால் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் கதையைக் கேட்காதவர்களும்,

பகவானுடைய திவ்யநாமங்களை யுச்சரிக்காதவர்களு மான ஸ்திரீகள், சூத்திரர்கள் ஆகிய இவர்களிடத்தில் உம்மைப்போன்ற ஸாதுக்கள் தயை செய்யவேண்டும். (அறியாத் தன்மையால் பகவானை உபாஸிக்காமலி ருப்பவர்கள் அனுக்கிரஹிக்கப்படுவார்களென்று கருத்து) ப்ராஹ்மணன், க்ஷத்திரியன், வைச்யன் ஆகிய இவர்கள் உபநயனம், அத்யயனம் முதலிய ச்ருதியில் சொல்லிய ஸம்ஸ்காரமுள்ளவர்களானதால் அவர்கள் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பாதத்தை அடைவதற்குரிய உபாயத்தை அனுஷ்டிப்பதற்கு அதிகாரமுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் வேதத்தில் சொல்லிய அர்த்தவாதங்களால் மோஹித்து, ஸ்வர்க்கம் முதலிய பயனை அடையவிரும்பி கர்மங்களை அனுஷ்டிக்கிறார்கள்.

மேலுமவர்கள் தேன் போன்ற வேதவாக்கியத்தில் (அர்த்தவாதம்) ஆசைகொண்டு நாங்கள் இந்த கர்மத்தை அனுஷ்டித்து ஸ்வர்க்கஞ் சென்று அப்ஸரஸ்ஸுக்களுடன் ஸுகமாக விளையாடப் போகிறோம் என்று பிரியமான வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். பின்னுமவர்கள் கர்மங்களை யனுஷ்டித்தாலும் அவைகள் பந்தமாகாமலிருக்கும்படி அனுஷ்டிக்கத் தெரியாதவர்கள். தன்னைத் தெரிந்தவர் களாக நினைத்துக் கொண்டவர்களானதால் வணக்க மில்லாதவர்கள். அதனால் அவர்கள் விவேகிகளைக் கேட்டும் தெரிந்து கொள்ளுகிறதில்லை. பின்னுமவர்கள் ஸர்ப்பங்கள் போல் மிக்க கோபமுள்ளவர்கள். ரஜோகுணமுள்ளவர்களானதால் ஆபிசாரம் முதலிய கோரமான கார்யங்களையே ஸங்கல்பிப்பவர்கள்; அஹங்காரமுள்ளவர்கள்; பாபிகள்; கீர்த்தியில்

நோக்கமுள்ளவர்கள்; ஸ்திரீகளிடத்திலேயே ஆசை கொண்டவர்; ஆனதால் அவர்கள் ஈச்வர பக்தர்களை பரிஹாஸஞ்செய்வார்கள். எவர்கள் ஸ்திரீகளையே உபாஸித்துக் கொண்டும் (பெரியோர்களை உபாஸி யாமல்) இருக்கிறார்களோ, எவர்களுடைய வீட்டில் அதிதிபூஜை முதலிய நற்காரியங்கள் நடைபெறாமலி ருக்கின்றனவோ, எவர்கள் ஸ்திரீகளுடைய புணர்ச்சி யிலேயே நோக்கமுள்ளவர்களாக விருக்கிறார்களோ, அவர்கள் இது என்னால் அடையப்பட்டது; இதனை அடையப்போகிறேன்; இது இருக்கிறது; இது கிடைக்கப்போகிறது என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். மேலும் அவர்கள் அன்னம், தக்ஷிணை இவைகளை விதிப்படி கொடாமல் யாகம் செய்கிறார்கள்.

பின்னுமவர்கள் ஹிம்ஸையிலுள்ள தோஷத்தை அறியாமல் ஜீவனத்திற்காக பசுக்களைக் கொல்வார்கள். பின்னுமவர்கள் பணம் முதலிய ஸம்பத்துக்கு, அதிபதியாகவிருப்பது, மேலான குலத்தில் பிறந்திருப் பது, வித்தை கொடுப்பது, அழகு, பலம், யாகம் முதலிய கர்மங்கள் ஆகிய இவைகளால் கர்வமடைந்து விவேகமற்று பகவானையும் அவருடைய பக்தர்களான ஸாதுக்களையும் அவமதிப்பார்கள். மேலுமவர்கள் ஸகல பிராணிகளிடத்திலும் ஆத்மாவாகவும், ஈச்வர னாகவும் ஆகாயம் எங்கும் வியாபித்திருந்தாலும் ஒன்றிலும் ஸம்பந்திக்காமலிருப்பது போல பகவான் ஒன்றிலும் ஸம்பந்திக்கிறதில்லை யென்பதையும், எல்லோராலும் அடையத்ததகுந்த புருஷார்த்தமென்று வேதங்களால் நிரூபிக்கப்பட்டவரென்பதையும் அறியா மல், ஸ்திரீகளுடைய ஸம்போகம், மத்தியபானம்

முதலியவைகளை வேதங்கள் நிரூபிக்கின்றனவென்று சொல்லுகிறார்கள். (நிவிர்த்தி மார்க்கத்தைச் சொல்லும் வேதத்தை பிரவிர்த்திமார்க்கத்தைச் சொல்கின்றனவென்று சொல்கிறார்களென்று கருத்து) ஸ்திரீஸங்கமம், மாம்ஸத்தை புஜிப்பது, மத்தியங்குடிப்பது ஆகிய இவைகள் வேதவாக்கியங்களுக்கு பின்வருமாறு அர்த்தங்கொள்ளவேண்டும்; எப்படியென்றால் ஸ்திரீ சங்கமம், மாம்ஸபோஜனம், மத்தியபானம் இவைகளைச் செய்யவேண்டுமென்று வேதம் விதிக்கவில்லை. இவைகளைச் செய்ய மனிதன் விரும்புவானானால் ருது காலத்தில் ஸ்திரீஸங்கமம் செய்யட்டும் யாகத்தில் மாம்ஸத்தை புஜிக்கட்டும்; [illegible]த்திராமணியில் மத்திய பானம் செய்யட்டும்.

மற்றகாலங்களில் செய்யவேண்டாம் என்று அவைகளுக்கு வேதத்தில் காலம் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆனாலும் அவைகளைச் செய்யாமல் அவைகளிலிருந்து நிவர்த்தியடைவதே மேலானது என்பது அந்த வாக்கியங்களுக்கு முக்கிய கருத்து. மேலும் மேற்காட்டிய மூடர்கள் பணத்தை சரீரம் முதலியவைகளுக்காக உபயோகப் படுத்துகிறார்கள். அதனுடைய பயனை யறியாமல் மிக்க வீர்யமுள்ள ஸம்ஸாரத்தை அடைந்து கஷ்டப்படுகிறார்கள். பணத்தால் தர்மத்தையே ஸம்பாதிக்க வேண்டும் அதனால் ஞானம், அபரோக்ஷஞானம் அதன்பின் மோக்ஷம் இவைகள் உண்டாகின்றன. (பரமாத்மாவை யடைவதற்கு ஸாதனமாகிய தர்மத்தை ஸம்பதிப்பதற் காகவே பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனை அந்த விஷயத்தில உபயோகப்படுத்துகிறதில்லை என்று கருத்து). மேலும் ஸௌத்திராமணியில்

மத்தியத்தை முகரலாமென்று சொல்லப்பட்டதே யொழிய பானஞ்செய்யும்படி அனுமதி கொடுக்கப்பட வில்லை. அதுபோலவே யாகத்தில் தேவதையை யுத்தேசித்து பசுவைக் கொல்வதற்கு வேதம் அனுமதித்ததேயொழிய தான் புஜிப்பதற்காக பசுவைக் கொல்லும்படி வேதத்தில் சொல்லப்படவில்லை. அது போலவே புத்திரன் யுண்டுபண்ணுவதற்காக ஸ்திரீகளிடத்தில் ஸங்கமம் செய்யலாமென்று சொல்லப்பட்டதேயொழிய தனதிஷ்டப்படி ரதிக்காக ஸ்த்ரீ ஸங்கமம் விதிக்கப்படவில்லை. மூடர்கள் மேற் சொல்லியதை மிக்க சுத்தமான தர்மமென்று யறியார்கள். எவர்கள் மேற்சொல்லிய தர்மத்தை அறியாமல் கர்வங்கொண்டு தங்களை ஸாதுக்களென்று நினைத்துக் கொண்டு பசுக்களைக் கொன்று தங்களுடைய சரீரத்தைப் போஷிக்கிறார்களோ அவர்கள் மரணமடைந்த பிறகு, பரலோகத்தில் அந்த பசுக்கள் அவர்களைப் புஜிக்கும்.

பின்னும் எவர்கள் பிறருடைய சரீரத்திலிருக்கும் தன்னுடைய ஆத்மாவாகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவை த்வேஷிக்கிறார்களோ, புத்திரன் முதலியவர்களிடத் திலும் தங்கள் சரீரத்திலும் அபிமானம் வைக்கிறார் களோ, அவர்கள் நரகத்தை அடைகிறார்கள். எவர்கள் தர்மம், அர்த்தம், காமம் இவைகளையே ப்ரதானமாகக் கொண்டு சரீரம் முதலியவைகளை சாச்வதமென்று நினைத்து தத்வஜ்ஞானத்தை அடை யாமல் மூடர்களாக விருக்கிறார்களோ, அவர்கள் தாமே தன்னுடைய ஆத்மாவைக் கொல்லுகிறார்கள். (மூடர்கள் ஸாதுக்களால் அனுக்கிரஹிக்கப்பட்டு நல்ல கதியையடைவார்கள். விவேகிகள் தாமாகவே

ஸம்ஸாரத்தைத் தாண்டுவார்கள். மிக்க மூடர்களல்லாமலும், விவேகிகளல்லாமலும் மத்திய ஸ்திதியிலிருப்பவர்கள் நரகத்தை அடைகிறார்கள் என்று தாத்பர்யம்) எவர்கள் ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தை யறியாமல் ஆத்மாவை வேறாகச் சொல்லுகிறார்களோ, அவர்கள் ஆத்மகாதிகளெனப்படுகிறார்கள். அவர்கள் விஷயங்களில் நிவிருத்தியை யடையாதவர்கள்; கர்மத்தையே ஞானமென்று நினைத்தவர்கள்; அவர்களுடைய மனோரதமானது காலத்தால் கெடுக்கப்படுமாகையால் அவர்கள் துக்கத்தை உபாஸியாமலிருந்தால் வீடு, புத்திரன், மித்திரன், பணம் முதலியவைகளை விட்டு நரகத்தை யடைகிறார்கள்" என்று சொன்னார்.

18–42. அதனைக்கேட்ட நிமி என்ற அரசர் அந்த யோகிகளைப் பார்த்து "அந்த பகவான் எந்தெந்த காலத்தில் எந்தெந்த வர்ணமுள்ளவர்? எவ்வித ஸ்வரூபமுள்ளவர்? மனிதர்கள் எந்த நாமத்தைச் சொல்லி எந்த விதிப்படி பகவானைப் பூஜிக்க வேண்டும்? அதனைச்சொல்லும்" என்று கேட்டார். அதனைக் கேட்ட கரபாஜனரென்பவர் அரசனை நோக்கி "கிருதம், த்ரேதா, த்வாபரம், கலி என்ற நான்கு யுகங்களிலும் பகவான் பலவகையான நிறம், பெயர் ஸ்வரூபம் இவைகளுள்ளவராக விருப்பதால் அவரை மனிதர்கள் பல முறையாகப் பூஜிக்கிறார்கள் கிருதயுகத்தில் பகவான் வெண்மை நிறத்துடன் நான்கு கைகளுடனும் ஜடை, மரப்பட்டை இவைகளைத் தரித்தவராகி மான்தோல், யஜ்ஞோபவீதம், ஜபமாலை, தண்டம், கமண்டலு இவைகளை தரித்து பிரஹ்மசாரி வேஷத்துடனிருக்கிறார். அந்த காலத்திய

மனிதர்கள் ஒருவருக்கொருவர் விரோதமற்று சாந்தர்களாகியும் ஸகலப் பிராணிகளிடத்திலும் ஸம புத்தியுள்ளவர்களாகவும் இருந்து சமம், தமம், இவைகளுள்ள த்யானயோகத்தைச் செய்து பகவானை ஆராதித்தார்கள். அப்பொழுது பகவான் தர்மங்களை நிர்வஹிப்பதனால் தர்மரென்றும், யோகங்களுக்கு அதிபதியாகையால் யோகேச்வரனென்றும் வைகுண்டரென்றும், ஹம்ஸரென்றும், ஈச்வரரென்றும், ப்ரத்யக்ஷும் முதலிய ப்ரமாணங்களுக்கு புலப்படாததனால் அவ்யக்தரென்றும் பரமாத்மாவென்றும், பலவகையான குணங்களுள்ளவராகவும், திவ்விய நாமங்களுள்ளவராகவும், சொல்லப்படுகிறார். த்ரேதா யுகத்தில பகவான் சிவந்த நிறமுள்ளவராகவும், நான்கு கைகளுள்ளவராகவும் மூன்று மேகலைகளுள்ளவராகவும், பொன்னிறமான தலை மயிர்களுள்ளவராகவும், வேதஸ்வரூபியும் ஸ்ருக், ஸ்ருவம் இவைகளை அடையாளமுள்ளவராகவுமிருக்கிறார்.

அந்த காலத்தில் மனிதர்கள் தர்மத்தில் நோக்கமுள்ளவர்களாகவும், ப்ரஹ்மவித்துக்களாகவுமிருந்தார்கள். அவர்கள் வேதத்திற்சொல்லிய கர்மங்களை யனுஷ்டித்து ஸகல தேவஸ்வரூபியான ஸ்ரீமந் நாராயணனைப் பூஜிக்கிறார்கள். அப்பொழுது பகவான் விஷ்ணு, யஜ்ஞர், ப்ரச்னிகர்ப்பர், ஸர்வதேவர், உருக்கிரமர், விருஷாகபி, ஜயந்தர், உருகாயர் என்று சொல்லப்படுகிறார். த்வாபரயுகத்தில் பகவான் காசாம்பூ போன்ற நிறமுள்ளவராகவும், பீதாம்பரத்தைத் தரித்தவராகவும், சக்கிரம் முதலிய ஆயுதங்களுள்ளவராகவும், ஸ்ரீவத்ஸம் முதலிய அடையாளங்களுள்ளவராகவும் இருக்கிறார். அப்பொழுது மனிதர்கள்

பரமாத்மாவையறிய வேண்டுமென்ற விருப்பமுள்ளவர் களாகி குடை, சாமரம் முதலிய உபசாரங்களுடன் வேதத்திற் சொல்லிய முறைப்படி ஆகமமுறைப்படியும் பகவானைப் பூஜிக்கிறார்கள். மேலும் அந்த காலத்தில் மனிதர்கள் வாஸுதேவராகிய பகவானுக்கு நமஸ்காரம்; ஸங்கர்ஷண மூர்த்திக்கு நமஸ்காரம். ப்ரத்யும்ன ஸ்வரூபியும், அனிருத்த ஸ்வரூபியும் பகவானுமாகிய உம்மை எப்பொழுதும் நமஸ்கரிக்கிறோம். நாராயண மஹர்ஷியாகிய உமக்கு நமஸ்காரம். மஹாபுருஷராகிய உமக்கு நமஸ்காரம். ஜகத்திற்கு அதிபதியும், ஜகத் ஸ்வரூபியும், ஸகலப்ப்ராணிகளுக்கும் ஆத்மாவுமாகிய உமக்கு நமஸ்காரம்" என்று ஸ்தோத்திரஞ் செய்கிறார் கள். கலியுகத்தில் பலவகையான ஆகமவிதிப்படி ஜனங்கள் பகவானைப் பூஜிப்பதைச் சொல்லுகிறேன், கேளும் (கலியில் ஆகமவிதியே முக்கியமென்று கருத்து) கலியுகத்தில் பகவான் இந்திர நீலம் போன்ற நிறமுள்ளவராக விருக்கிறார். புத்திசாலிகளாகிய ஜனங்கள் சங்கம், சக்கிரம், கௌஸ்துபம், பார்ஷதர்கள் இவர்களுடன் கூடிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியை பகவானுடைய திவ்விய நாமங்களையே பெரும்பாலும் உச்சரித்து பூஜிக்கிறார்கள். மேலுமவர்கள் "ஓ புருஷோத்தம! உம்முடைய பாதாரவிந்தத்தை நமஸ்கரிக்கிறேன். அது எப்பொழுதும் த்யானம் பண்ணக்கூடியது; களத்திரம், புத்திரன் முதலியவர் களால் ஏற்படும் அவமானத்தை நிவர்த்திக்கக்கூடியது; இஷ்டத்தைக் கொடுக்கக்கூடிய கங்கை முதலிய தீர்த்தங்களுக்கு இருப்பிடமானதால் மிக்க பரிசுத்தத்தை கொடுக்கக்கூடியது; பரமசிவன் ப்ரஹ்மதேவர் இவர்களால் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டது. சரணம டையக்கூடியது; அண்டினவர்களுடைய உபத்திரவத்தை

நிவர்த்திக்கும் ஸ்வபாவமுள்ளது; ஸம்ஸாரமாகிய ஸமுத்திரத்தைத் தாண்டுவிக்கும் ஓடமாகவிருப்பது; ஓ மஹாபுருஷ! நீர் ஸ்ரீராமனாக அவதரித்து பிதாவினு டைய வார்த்தையை பரிபாலிப்பதாகிய தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக விடமுடியாத தேவர்களாலும் விரும்பக் கூடியதுமான ராஜ்ஜியத்தில் ஆசையை யொழித்து காட்டிற்குச் சென்றீர். அவ்விடத்தில் ஸ்வர்ணமயமான மானைப் பார்த்து அதனிடத்தில ஸீதை ஆசைப்பட அதனைப் பிடிப்பதற்காக அதன் பின் சென்றீர். அப்படிப்பட்ட உம்முடைய பாதார விந்தத்தை நமஸ்கரிக்கிறேன்" என்று ஸ்தோத்திரஞ் செய்கிறார்கள். இப்படி ஒவ்வொரு யுகத்திலும் மனிதர்கள் அந்தந்த யுகத்திற்குத் தக்கபடி ஸகல க்ஷேமங்களுக்கும்மதிபதியான பகவானைப்பூஜிக்கிறார்கள்.

மேலும் கலியுகத்தில் அநேக தோஷங்களிருந்தா லும் அதன் குணத்தையறிந்த பெரியோர்கள் கலியுகமே மேலானதென்று ச்லாகிக்கிறார்கள். ஏனென்றால் கலியுகத்தில் பகவானுடைய திவ்விய நாமங்களைச் சொல்வதனாலேயே ஸகல புருஷார்த்தங்களும் கிடைக்கின்றன. ஸம்ஸாரிகளான பிராணிகளுக்கு பகவானுடைய திவ்விய நாமங்களை உச்சரிப்பதால் ஸம்ஸார துக்கம் நிவர்த்தியாகி சாந்தியுண்டாகிறது. ஆனதால் இதனைவிட மேலான லாபம் வேறொன்று மில்லை. கிருதும் முதலிய யுகங்களில் உள்ள மனிதர்கள் கலியுகத்தில் தாங்கள் ஜனிக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். (கிருதயுகத்தில் த்யானஞ்செய்தும், த்ரேதாயுகத்தில் யாகங்களைச் செய்தும் த்வாபரயுகத் தில் விதிப்படி பூஜிப்பதாலும் எதனையடைகிறானோ, அந்த பயனை கலியுகத்தில் பகவானுடைய திவ்விய

நாமங்களை உச்சரிப்பதாலேயே அடைகிறான்.) கலி யுகத்தில் சிலவிடங்களில் ஜனங்கள் ஸ்ரீமந் நாராயண னிடத்தில் பக்தியுள்ளவர்களாக விருப்பார்கள். ஓ மஹாராஜ! திராவிட தேசத்திலுள்ள ஜனங்கள் பெரும்பாலும் விஷ்ணு பக்தர்களாகவிருப்பார்கள். எந்த தேசத்தில் தாம்பிரபர்ணி. கிருதமாலா, பயஸ்வினீ, மிக்கபுண்ணிய நதியான காவேரி, மஹா நதியாகிய ப்ரதீசி ஆகிய இந்த நதிகள் ஓடுகின்றனவோ, அவைகளின் தீர்த்தத்தை எவர்கள் பானஞ்செய் கிறார்களோ அந்த மனிதர்கள் சுத்த சித்தர்களாகி பெரும்பாலும் பகவானிடத்தில் பக்தியுள்ளவர்களாக விருப்பார்கள். எவன் எல்லா ஜகத்தும் ஸ்ரீமந் நாராயண ஸ்வரூபமென்று நினைத்து மூன்று கரணங்களாலும் பகவானை சரணமடைகிறானோ, அவன் தேவர்கள், ரிஷிகள், பூதங்களும், பிதிருக்கள், மற்ற பந்துக்கள் ஆகிய இவர்களுக்கு வேலைக்கார னாகவாவது, கடனுள்ளவனாவாவது ஆகமாட்டான், பரமாத்மாவாகிய பகவான், எல்லா தேவரும் முதலிய வைகளில் அபிமானத்தைவிலக்கி தம்முடைய பாதத்தை சரணமடைகிறானோ அவனுடைய ஹிருதயத்தில் தாமிருந்து அவனுக்கு தவறுதலால் நேரும் பாபங்களையும் நிவர்த்திக்கிறார்' என்று சொன்னார்.

43–50. அதனைக்கேட்ட நிமி என்ற அரசன் உபாத்தியாயரை முன்னிட்டு அந்த யோகிகளைப் பூஜித்தார். பின்பு ஸகல ஜனங்களும் பார்த்துக் கொண்டிருக்க அந்த யோகிகள் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்தார்கள். அரசன் பாகவத தர்மங்களை அனுஷ்டித்து உத்தமகதியை அடைந்தார்;

ஆனதால் ஓ வஸுதேவரே! நீரும் விஷயங்களில் ஆசையையொழித்து மிக்க ச்ரத்தையுடன் பாகவத தர்மங்களை யனுஷ்டித்து உத்தமகதியையடைவீர். உங்களிருவர்களுக்கும் மஹாவிஷ்ணு புத்திரனாக அவதரித்திருப்பதால் உங்களுடைய கீர்த்தி லோகத்தில் பரவியது. மேலும் நீங்கள் ஸ்ரீகிருஷ்ணனைப் புத்திர னென்று நினைத்து மிக்க ஸ்நேஹத்துடன் பார்ப்பது, ஆலிங்கனம் செய்து கொள்வது, பேசுவது, படுப்பது, உட்காருவது, சேர்ந்து போஜனம் செய்வது ஆகிய இவைகளை அனுஷ்டித்ததால் உங்களுடைய ஆத்மா சுத்தமாயிற்று. சிசுபாலன், பௌண்ட்ரன். ஸால்வன் முதலியவர்கள் சயனம் ஆஸனம், நடை, பார்ப்பது முதலியவைகளில் ஸ்ரீ கிருஷ்ணனை விரோத புத்தியால் தியானித்தும் அவருடைய ஸாரூப்பியத்தை அடைந்தார்கள்.

அவரிடத்தில் ஸ்நேஹமுள்ளவர்களுக்கு உத்தமகதி கிடைப்பதில் என்ன ஸந்தேஹம்; ஸ்ரீ கிருஷ்ணன் ஸகலப்பிராணிகளுக்கும் ஆத்மாவாகவும் அதிபதியாக வுமிருக்கிறார். அவர் மாயையால் மனித வேடம்பூண்டு தம்முடைய மஹிமையை மறைத்துக்கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட பரமபுருஷனை புத்திரனென்று நினைக்கவேண்டாம். மேலும் ஸ்ரீ கிருஷ்ணன் பூமிக்குச் சுமையாகவிருக்கும் துஷ்டர்களான அரசர்களைக் கொண்று ஸாதுக்களைக் காப்பாற்றுவதற்காக பூமியில் அவதரித்திருக்கிறார். பின்னும் அவருடைய கீர்த்தி யானது ஸகல ஜனங்களுக்கும் மோக்ஷத்தைக் கொடுப் பதற்காக பரவியிருக்கிறது' என்று நாரதர் சொன்னார்.

51–52. அதனைக் கேட்ட மிக்க பாக்கியமுள்ள

Released by Maran's Dog, Toronto , Canada

வஸுதேவரும் தேவகியும் மிகவும் ஆச்சர்யத்தை யடைந்து மோஹத்தை விட்டு ஞானத்தை அடைந்தார்கள். இந்தப் புண்ணியமான இதிஹாஸத்தை எவன் ச்ரத்தையுடன் மனத்தில் தரிக்கிறானோ, அவன் இந்த ஜன்மத்திலேயே மோஹத்தை விட்டு ப்ரஹ்ம ஸ்வரூபத்தையடைவான்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–6

தேவர்கள் கிருஷ்ணனை வைகுண்டத்திற்கு அழைத்தது.

பின்பு பிரஹ்மதேவர், ஸனகர் முதலியவர்கள், ப்ரஜாபதிகள், ஸகலப்ரஜைகளுக்கும் அதிபதியான பரமசிவன், அவருடைய கணங்கள், இந்திரன், மருத்துகள், ஆதித்தியர்கள், வஸுக்கள், அச்வினீ தேவர்கள், ரிபுக்கள், அங்கிரஸ்ஸுக்கள், ருத்திரர்கள், விச்வேதேவர்கள், ஸாத்தியர்கள், கந்தர்வர்கள், அப்ஸரஸுகள், நாகர்கள், ஸித்தர்கள் சாரணர்கள், குஹ்யகர்கள், ரிஷிகள், பிதிருக்குள், வித்யாதரர்கள், கின்னரர்கள் ஆகிய எல்லோரும் கிருஷ்ணனைக் தரிசிக்க வேண்டுமென்ற விருப்பத்துடன் த்வாரகா நகரஞ் சென்றார்கள். மேற்காட்டிய தேவர்கள் அடிக்கடி ஸ்ரீமந் நாராயணனைத் தரிசித்தவர்களானாலும் பகவான் கிருஷ்ணனாக அவதரித்து ஜனங்களுக்கு ஸந்தோஷத்தைக் கொடுத்து ஸகல ஜனங்களுடைய பாபத்தை நிவர்த்திக்கும் தம்முடைய கீர்த்தியை பரவச் செய்து கொண்டுமிருப்பதால் அந்த ஸ்வரூபத்தைத் தரிசிக்க விரும்பி ஸகல ஸம்பத்துக்களால் நிறைந்த த்வாரகா நகரம் வந்து ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஸ்வரூபம் மிகவும் அத்புதமானதால் அதனைப் பார்த்தும் தேவர்களுக்கு போதுமென்ற திருப்தியுண்டாகவில்லை. மேலுமிந்த தேவர்கள் தேவலோகத்திலுண்டான புஷ்பமாலைகளால் பகவானைப் பூஜித்து (கிருஷ்ணனுடைய சரீரம் மறையும்படி புஷ்பங்களைச் சாத்தி) விசித்திரமான பதங்கள், அர்த்தங்கள் இவைகளுள்ள ச்லோகங்களைச்

சொல்லி ஜகதீசனாகிய கிருஷ்ணனை பின்வருமாறு ஸ்தோத்திரஞ் செய்தார்கள்..

7–19. "ஓ நாத! கர்மமாகிற பாசத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்காக ஜனங்கள் உம்மிடத்திலேயே மனத்தைச் செலுத்தி உம்முடைய பாதாரவிந்தத்தை ஹிருதயத்தில் த்யானிக்கிறார்கள். அப்படிப்பட்ட பாதத்தை புத்தி, இந்திரியம், ப்ராணன், மனஸ், வாக்கு இவைகளுடன் நாங்கள் நமஸ்கரிக்கிறோம் (கைகள், கால்கள், முழங்கால், மார்பு, தலை, கண்கள், மனஸ், வாக்கு, இவைகளால் நமஸ்கரிப்பதே அஷ்டாங்க நமஸ்காரம் என்று சொல்லப்படுகிறது. யோகிகள், பகவானை ஹிருதயத்தில் மாத்திரம் பார்க்கிறார்கள். நாங்கள் நேரில் பார்க்கிறோம். அதனால் எங்களுடைய பாக்கியம் அதிகமென்று கருத்து)

ஒன்றாலும் ஜயிக்கப்படாதவரே! நீர் ஆவரணமற்ற ஆத்மஸுகத்தில் ரமித்துக் கொண்டிருப்பவர். ஆசை முதலியவைகள் உமக்கில்லை. நீர் மாயையின் குணங்களுக்கு அதிபதியாகவிருப்பவர்; ஆனதால் முக்குண ஸ்வரூபமான மாயையைக்கொண்டு இந்த ப்ரபஞ்சத்தைத் தம்மிடத்தில் ஸிருஷ்டித்து, ஸம்ரக்ஷித்து, ஸம்ஹரிக்கிறீர், அப்படிப்பட்ட ப்ரபஞ்சம் மனத்தாலும் நினைக்க முடியாததாகவிருக்கிறது. நீர் மாயைக்கு அதிபதியானதால் உமக்குக் கர்மபந்தமில்லை. (நீர் கர்மங்களைச் செய்துகொண்டிருந்தாலும் ஆத்மாராம ராகையால் முமுக்ஷுக்கள் உம்மை த்யானிக்கிறார்கள் என்று கருத்து) எல்லோராலும் ஸ்துதிக்கக் கூடியவரே! உம்முடைய சரிதங்களை சிரத்தையுடன்

கேட்பதாலும், உம்முடைய மூர்த்தியை தியானிப்பதாலும், ஜனங்கள் சுத்தர்களாவது போல உபாஸனை, சாஸ்திரம், அத்யயனம், தானம், தபஸ், யாகம் முதலியவைகளைச் செய்வதால் அப்படி சுத்தர்களாக ஆகிறதில்லை. (எல்லோரையும் பரிசுத்தப்படுத்துவதற்காகவே கர்மங்களைச் செய்து கீர்த்தியை லோகத்தில் பரவச் செய்கிறீர் என்று கருத்து) ஓ பகவான்! உம்முடைய பாதத்தை மஹரிஷிகள் மோக்ஷத்தை அடைய விரும்பி மிக்க ப்ரேமையுடன் ஹிருதயத்தில் த்யானிக்கிறார்கள். பக்தர்கள் உமக்குச் சமமான ஐச்வர்யத்தை அடையவிரும்பி, வாஸுதேவர்கள் முதலிய வ்யூஹோபாஸனையில் பூஜிக்கிறார்கள். அவர்களிலும் ஆத்மாவின் உண்மையை அறிந்த சிலர் ஸ்வர்க்கத்தைத் தாண்டி, வைகுண்டத்தை அடைவதற்காக மூன்று காலங்களிலும் பூஜிக்கிறார்கள்.

அப்படிப்பட்ட உம்முடைய பாதமானது எங்களுடைய விஷய வாஸனைகளை நாசஞ் செய்யட்டும். ஓ ஈச! ப்ரஹ்மணர்கள், ஆஹவனீயம் முதலிய யாஹாக்னியில் ஹோமஞ்செய்வதற்காக ஹவிஸ்ஸை இருகைகளால் யெடுத்துகொண்டு வேதத்தில் சொல்லியபடி இந்திரன் முதலிய ஸ்வரூபமாக எதனை த்யானிக்கிறார்களோ, (எந்த தேவதையை யுத்தேசித்து ஹவிஸ்ஸை யெடுத்துக்கொள்ளுகிறார்களோ, அந்த தேவதையைத் தியானஞ்செய்து பின்பு வஷட் என்று சொல்ல வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது) யோகிகள் உம்முடைய மாயையை (அணிமா முதலியவை) அறிய விரும்பி ஆத்மயோகத்தில் எதனை த்யானிக்கிறார்களோ, பாகவதர்கள் (முக்தர்கள்) எதனை ஸேவிக்கிறார்களோ, அந்த உம்முடைய

பாதமானது எங்களுடைய விஷய வாஸனைகளை நாசஞ்செய்யட்டும். நீர் பக்தர்களால் ஸமர்ப்பிக்கப் பட்ட வனமாலையை தரிக்கிறீர். உம்முடைய மார்பில் வஸிக்கும் லக்ஷ்மீதேவி ஸபத்னிபோல் அந்த வனமாலையினிடத்தில் விரோதபுத்தி வைக்கிறாள் ஆனாலும் நீர் அந்த லக்ஷ்மீயை லக்ஷ்யஞ் செய்யாமல் பக்தர்களால் ஸமர்ப்பிக்கப்பட்டதென்ற காரணத்தால் அந்த மாலையை தரித்து அதனால் பூஜிக்கப்பட்ட வராக ஆகிறீர். அப்படிப்பட்ட உம்முடைய பாதம் எங்களுடைய விஷயவாஸனைகளை நாசஞ்செய்யட்டும். ஓ பகவன்! உம்முடைய பாதமானது சரணமடைகிற எங்களுடைய பாபத்தை நிவர்த்திக்கட்டும்.

அது பலிசக்கிரவர்த்தியை நிக்ரஹித்த பொழுது லோகங்களை மூன்றடிகளாக அளந்தது; இரண்டாவது அடியில் ஸத்யலோகஞ் சென்றதால் விஜயத்வஜம் போல உயரமாகவிருந்தது; மூன்று வகையாக ப்ரவஹித்த கங்கா நதியுள்ளது; அஸுர ஸைன்யத் திற்கு பயத்தையும் தேவஸைன்யத்திற்கு ஸந்தோஷத்தை யுண்டுபண்ணியது; தேவர்களுக்கு ஸ்வர்க்கத்தைக் கொடுத்தது; அஸுரர்களை நிக்கிரஹித்தது; ஓ பகவன்! நீர் ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவர்களுக்கும் மேலான புருஷோத்தமர்; கால ஸ்வரூபி; அப்படிப் பட்ட உமக்கு ப்ரஹ்மா முதலிய ஸகல ப்ராணிகளும் மூக்குக் கயிற்றால் அடக்கப்படும். எருதுகள் போல் வசமானவர்களேயாம். அந்த ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் ஒருவருக்கொருவர் (ராகத்வேஷத்தால்) யுத்தஞ் செய்வதாலும், அவர்கள் ஜயிப்பதும் அபஜயத்தை அடைவதும் உம்முடைய அதீனமேயாம் அப்படிப்பட்ட உம்முடைய பாதம் எங்களுக்கு

க்ஷேமத்தைக் கொடுக்கட்டும். மேலும் ஜகத்தைப் படைப்பது, ரக்ஷிப்பது, ஸம்ஹரிப்பது ஆகிய இவை களுக்கு நீர் காரணராகவிருக்கிறீர். ப்ரகிருதி, ஜீவன், மஹத்தத்வம் ஆகிய இவைகளுக்கு நியந்தாவாகிய கால மென்று உம்மைப் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அந்த காலமே ஸம்வத்ஸர ஸ்வரூபமானது; மூன்று நாபியுள்ளது; (மூன்று சாதுர்மாஸ்யங்கள்) எல்லா வற்றையும் ஸம்ஹரிப்பதில் ப்ரவிருத்தித்தது; மிக்க வேகமுள்ளது; அந்த ஸ்வரூபியுமாகவிருப்பதால் நீர் புருஷோத்தமர். புருஷன் உம்மிடமிருந்து சக்தியை அடைந்து மாயா ஸம்பத்தால் ஜகத்தின் கர்ப்பம் போன்ற மஹத்தத்வத்தைத் தரித்தான்.

அந்த மஹத், அந்த மாயாஸம்பந்தத்தால் ஆவரணங்களுள்ளதும், ஸ்வர்ணம்போல ப்ரகாசிப்பது மான அண்டகோசத்தை யுண்டு பண்ணிற்று. ஆனதால் ஸ்தாவரம், ஜங்கமம் ஆகிய எல்லாவற்றிற்கும் நீர் அதிபதி; ஓ இந்திரியங்களுக்கு அதிபதியே! மாயையின் குணத்தால் விருத்தியடைந்த (இந்திரியங்களால் கொண்டுவரப்பட்ட) சப்தம் முதலிய விஷயங்களை அனுபவித்தாலும் அவைகளில் நீர் ஸம்பந்தப்படுகிற தில்லை. உம்மைத் தவிர மற்றவர்கள் (யோகிகள்) உண்மையில் இல்லாதவைகளானாலும் சப்தம் முதலிய விஷயங்களைக் கண்டு பயப்படுகிறார்கள். மன்மதனுடைய பாணங்கள் போன்ற பதினாறு ஆயிரம் ஸ்திரீகள் புன்சிரிப்புள்ள பார்வையால் தங்களுடைய அபிப்பிராயத்தைக் காண்பிவித்து அதனால் அழகிய புருவங்களால் மன்மத தாபத்தை உண்டு பண்ணக்கூடியவர்களாயிருந்தும் உம்மை மோஹிக்கச் செய்ய சக்தியற்றவர்களாக ஆனார்கள்.

ஆனதால் நீர் விஷயங்களால் ஜயிக்கப்படாதவர். அவரவர்களுக்குரிய ஆச்ரம தர்மங்களை அனுஷ்டித்துக் கொண்டிருக்கும் ஜனங்கள் வேதங்களால் வர்ணிக்கப் படும் உம்முடைய கீர்த்தியை காதுகளாலும் உம்முடைய பாதத்திலுண்டாகிய கங்காதீர்த்ததை சரீரத்தாலும் ஸேவிக்கிறார்கள். ஆனதால் உம்முடைய கதாம்ருதமாகிய ஜலமுள்ள நதிகளும் (கீர்த்தி) உம்முடைய பாதத்திலிருந்து உண்டான கங்கையும் முவ்வுலகத்தின் பாபத்தைப் போக்கடிக்கின்றன" என்று ஸ்தோத்திரஞ் செய்தார்கள்.

20–27. இம்மாதிரி ப்ரஹ்மதேவர் தேவர்களுடன் பகவானை ஸ்தோத்திரஞ் செய்து ஆகாயத்திலிருந்து கொண்டு கோவிந்தரை நோக்கி "ஓ ஸகல ஜகத் ஸ்வரூபியாகவிருக்கும் ப்ரபுவே! பூமியின் சுமையை நிவர்த்திக்கவேண்டுமென்று முந்தி நான் உம்மிடத்தில் தெரிவித்து கொண்டேன். அதனை நீர் அங்கீகரித்து அப்படியே செய்தீர். ஸத்திய ப்ரதிக்ஞர்களான ஸாதுக்களிடத்தில் தர்மத்தை ஸ்தாபித்தீர். ஸகல ஜகத்தின் பாபத்தை நிவர்த்திக்கும் சுத்தமான கீர்த்தியை எல்லாதிக்குகளிலும் பரவச்செய்தீர். மேலும் நீர் அற்புதமான ரூபத்துடன் யதுவம்சத்தில் அவதரித்து அற்புதமான செய்கைகளை ஜகத்தின் க்ஷேமத்திற்காகச் செய்தீர். ஓ ஈச! அந்த சரிதங்களைக் கலியுகத்தில் ஸாதுக்கள் வாக்கினால் உச்சரித்தும் பிறர் சொல்லக் கேட்டும் சுத்தர்களாவார்கள். ஓ புருஷோத்தம! நீர் யதுவம்சத்தில் அவதரித்து 125 வருஷங்களாயின. எல்லாவற்றிற்கும் ஆதாரமாகவிருக்கும் ப்ரபுவே! தேவர்களுடைய கார்யத்தில் இப்பொழுது ஒன்றும் பாக்கியில்லை ப்ராஹ்மண சாபத்தால் இந்த யது

வம்சமானது பெரும்பாலும் நாசமடைந்தது. ஓ வைகுண்ட! உமக்கு இஷ்டமிருக்குமானால் உம்முடைய ஸ்தானத்தையடைந்து ஸேவகர்களான எங்களைக் காப்பாற்றும்" என்று ப்ரார்த்தித்தார்.

28–33. மாயையால் மனிதவடிவங்கொண்டவராகிய பகவான் ப்ரஹ்மா முதலிய தேவர்களால் இம்மாதிரி துதிக்கப்பெற்று ப்ரஹ்மதேவரை நோக்கி "ஓ ப்ரஹ்மதேவரே! நீர் சொல்வது யாவும் ஏற்கனவே என்னால் ஆலோசிக்கப்பட்டவைதான். தேவர்களாகிய உங்களுடைய எல்லா கார்யங்களும் செய்யப்பட்டன. பூமியின் சுமை நிவர்த்திக்கப்பட்டது. ஆனாலும் இந்த யதுவம்சமானது பராக்கிரமத்தாலும், ஐச்வர்யத்தாலும், கர்வங்கொண்டு மர்யாதை தவறி கரைபுரண்ட ஸமுத்திரம் போல லோகத்தை உபத்திரவிக்கும் போலிருக்கிறது; மிக்க கர்வங் கொண்டவர்களான யாதவர்களுடைய குலத்தை நான் நாசஞ் செய்யாமல் வைகுண்டம் சென்றால் யாதவர்களால் இந்த லோகம் நாசம் பண்ணப்படும். ப்ராஹ்மண சாபத்தால் இந்த குலத்திற்கும் நாசமும் ஆரம்பித்திருக்கிறது. இதனை நாசம் செய்துபின் வைகுண்டம் வருகிறேன்" என்றார். லோகநாதனாகிய இந்த பகவானுடைய வார்த்தையைக் கேட்டு ப்ரஹ்மதேவர் அவரை நமஸ்கரித்து தேவர்களுடன் தமது லோகஞ்சென்றார்.

34–40. பின்பு த்வாரகா நகரத்தில் மிக்க உத்பாதங்கள் (அபசகுனங்கள்) காணப்பட்டன. அவைகளை பார்த்து யாதவர்களுக்குட் வயது முதிர்ந்தவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனிடஞ் சென்றார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களை நோக்கி "ஓ பெரியோர்களே!

நம்முடைய நகரத்தில் எங்கும் மிக்க உத்பாதங்கள் காணப்படுகின்றன. மேலும் நம்முடைய குலத்திற்கு ப்ராஹ்மணசாபம் நேரிட்டிருக்கிறது; அது நிவர்த்திக்க முடியாதது; நமக்கு பிழைத்திருக்க வேண்டுமென்ற விருப்பமிருக்குமானால் இவ்விடத்தில் வஸிக்கக்கூடாது; மிக்க புண்ணியகரமான ப்ரபாஸ தீர்த்தத்திற்கு இன்றைக்கே போவோம். தாமதிக்க வேண்டாம். முன்னொருகால் சந்திரன் தக்ஷருடைய சாபத்தால் ராஜயக்ஷ்மா என்ற ரோகத்தையடைந்து அதனை நிவர்த்தித்து கொள்வதற்காக ப்ரபாஸ தீர்த்தஞ்சென்று அதில் ஸ்நானஞ் செய்தார். அதனால் அவருக்கு அந்த வியாதி நிவர்த்தியானதுமன்றி கலைகளும் விருத்தி யாயின. நாமும் அந்த தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து பிதிருக்களுக்கும் தேவர்களுக்கும் தர்ப்பணஞ் செய்து ப்ராஹ்மணர்களுக்குப் பலவகையான ருசியான அன்னங்களைக் கொடுத்து உத்தம பாத்திரங்களில் ச்ரத்தையுடன் தானங்களைச் செய்வோம். கப்பலால் ஸமுத்திரத்தைத் தாண்டுவது போல வருகிற ஆபத்தை மேற்காட்டிய தர்மத்தால் நிவர்த்தித்துக் கொள்வோம்" என்று சொன்னார். அதனைக் கேட்ட யாதவர்கள் ப்ரபாஸதீர்த்தம் செல்லுகிறதென்ற நிச்சயத்துடன் வண்டிகளைப் பூட்டினார்கள்.

41–51. அதனைக் கண்ட உத்தவர் பகவானுடைய வார்த்தையைக் கேட்டும் கோரமான உத்பாதங்களைப் பார்த்து ரஹஸ்யத்தில் கிருஷ்ணனுடைய ஸமீபஞ் சென்று ஜகத்திற்கு அதிபதிகளாகிய ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் அதிபதியாகிய பகவானுடைய பாதங்களில் நமஸ்கரித்து "ஓ தேவ! தேவர்களுக்கு அதிபதியே! யோகிகளுக்கு அதிபதியே! நாமங்களைக்

கேட்பதாலும் உச்சரிப்பதாலும் புண்ணியத்தைக் கொடுப்பவரே! நீர் ப்ராஹ்மண சாபத்தை நிவர்த்திக் கும் ஸாமார்த்தியம் உள்ளவரானாலும் அப்படிச் செய்யாமலிருப்பதால் இந்த யதுகுலத்தை நாசஞ் செய்து வைகுண்டம் செல்வீரென்பதில் ஸந்தேஹம் இல்லை; ஓ கேசவ! உம்முடைய பாதாரவிந்தத்தை அரைக்ஷணமேனும் விட்டுப் பிரிந்திருக்க எனக்கிஷ்ட மில்லை. ஆனதால் வைகுண்டத்திற்கு என்னையும் அழைத்துப் போகவேண்டும். உம்முடைய சரிதமானது ஜனங்களுக்கு மிக்க க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது. காதிற்கு அமிருதமாகிய உம்முடைய கதையைப் பானம் பண்ணின ஜனங்கள் மற்ற விஷயங்களில் ஆசைப்படமாட்டார்கள்.

அட்டியிருக்க படுப்பது, உட்காருவது, ஸஞ்சரிப்பது, ஸ்நானஞ் செய்வது, விளையாடுவது, போஜனஞ் செய்வது இவைகளில் உம்முடன் கூடவிருந்து உம்மை ஸேவித்த பக்தர்களான நாங்கள் உம்மை எப்படி விட்டுப் பிரிவோம்? உம்மால் அனுபவிக்கப் பட்டு நிர்மால்யமான மாலை, சந்தனம், ஆபரணம் இவைகளைத் தரித்தும் நீர் புஜித்து எஞ்சிய அன்னத்தை புஜித்தும் உம்மை ஸேவிக்கும் நாங்கள் மாயையை ஜயிப்போம். காற்றை ஆஹாரமாய்க் கொண்ட மஹர்ஷிகளும், ஊர்த்வரேதஸ்ஸுள்ளவர் களும், சாந்தர்களும், சுத்தர்களுமான ஸந்நியாஸிகள் உம்முடைய ப்ரஹ்ம ஸ்வரூபத்தை யடைகிறார்கள். ஓ முக்கிய யோகியே! கர்மமார்க்கத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் நாங்கள் உம்முடைய பக்தர்களுக்கு உம்முடைய சரிதங்களைச் சொல்லிக் கொண்டு ஸம்ஸாரத்தை எளிதில் தாண்டுகிறோம். மேலும்

உம்முடைய நடை சிரிப்புள்ள பார்வை, விளையாட்டு, இவைகளை நினைத்துக் கொண்டும் உம்மால் சொல்லப்பட்ட வார்த்தைகளை உச்சரித்துக்கொண்டும் ஸம்ஸார்ரத்தை நிவர்த்தித்துக்கொள்வோம்" என்று கேட்டு கொண்டார்.

52. அதனைக் கேட்ட தேவகியின் புத்திரராகிய பகவான் தமக்கு முக்கிய பக்தரும், ப்ரியரும், வேலைக்காரருமாகிய உத்தவரை நோக்கி பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்.

அத்தியாயம்–7

பகவான் உத்தவருக்கு உபதேசித்தது

ஸ்ரீ கிருஷ்ணன் உத்தவரை நோக்கி "ஓ மிகுந்த அதிருஷ்டமுள்ளவரே! நீர் எதனைச் சொன்னீரோ அது உண்மையே. ப்ரஹ்மதேவர், பரமசிவன், லோக பாலர்கள் ஆகிய எல்லோரும் என்னுடைய வரவை எதிர் பார்த்திருக்கிறார்கள். ப்ரஹ்மதேவரால் ப்ரார்த்திக்கப்பட்டு எதற்காக நான் பூமியில் அவதரித் தேனோ அந்த தேவர்களுடைய கார்யம் யாவும் முடிந்துவிட்டது. இந்த யாதவகுலமானது ப்ராஹ்மண சாபத்தால் எரிக்கப்பட்டிருப்பதால் யாதவர்கள் ஒருவருக்கொருவர் யுத்தஞ்செய்து நாசமடைவார்கள். இது முதல் ஏழாவது நாளில் ஸமுத்திரம் இந்துப் பட்டணத்தை மூழ்கச்செய்யும்.

இந்த லோகத்தை என்றைய தினம் நான்விட்டு மேல்லோகம் செல்லுகிறேனோ, அன்றைய தினமுதல் இவ்வுலகம் மங்களமற்றதாகி விடும். ஓ ஸாதுவே! சீக்கிரத்தில் கலிபுருஷன் உலகத்தில் வியாபித்துவிடு வான். ஆகையால் நீர் இவ்விடத்தில் வஸிக்கவேண்டாம். நான் பூமியைவிட்டுச் சென்றபின் கலியுகத்தில் ஜனங்கள் அதர்மத்தைச் செய்வதிலேயே நோக்க முள்ளவர்களாக இருப்பார்கள், நீர் சரீரத்திலும், பந்துக்களிடத்திலும் ஸ்நேஹத்தை யொழித்து என்னி டத்தில் மனத்தைச்செலுத்தி ஸமபுத்தியுள்ளவராகி பூமியில் ஸஞ்சரியும்; மனத்தாலும், வாக்கினாலும், கண்களாலும், காதுகளாலும் எது க்ரஹிக்கப்படுகிற தோ அது மாயாமயமென்றும், நிலையற்றதென்றும்

தெரிந்துகொள்ளும். விஷயங்களில் ஆசையுள்ள புருஷனுக்கு உண்டாகும் பேதபுத்தியே ப்ரமையானது. அதுவே குணத்தையும் தோஷத்தையும் அடைகிறது. இது குணம், இது தோஷம் என்ற பேதபுத்தியுள்ள புருஷனை யுத்தேசித்து கர்மம், அகர்மம், விகர்மம் இவைகள் வேதங்களால் விதிக்கப்பட்டதேயாம். ஆனதால் இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கிக் கொண்டு இந்த விஸ்தாரமான ஜகத்தை ஆத்ம ஸ்வரூபமான நானாகவும் பார்க்கவேண்டும். வேதங்களின் தாத்பர்யத்தைத் தெரிந்து கொள்வது, அவைகளின் அர்த்தத்தை அனுபவிப்பது ஆகிய இவைகளுடன் கூடியவனும், ஸகலப்பிராணிகளுக்கும் ஆத்மாவாகவிருப்பவனும் இந்த ஆத்மானுபவத்தாலேயே ஸந்தோஷமடைந்தவனுமான உமக்கு விக்னங்கள் ஏற்படாது.

ஞானியாக விருப்பவன் விதிநிஷேதங்களைக் கடந்தவனானாலும் முந்திய அப்யாஸத்தால் கெட்ட கார்யங்களைச் செய்யமாட்டான். ஆனால் அதனைச் செய்தால் தோஷம்வரும் என்கிற எண்ணத்தால் செய்கிறதில்லை என்பதில்லை. அது போலவே வேதத்திற்சொல்லிய நல்ல கர்மங்களை அனுஷ்டிப்பான். ஆனால் இதைச்செய்தால் குணமுண்டு என்கிற எண்ணத்தால் செய்கிறதில்லை. அவனுடைய நடை சிறுவனுடைய நடைபோன்றதேயாம், (ஸங்கல்ப விகல்பமற்றது என்று தாத்பர்யம்.) இப்படி ஞானம், விஞானம் இவைகளுடைய நிச்சயமுள்ளவனாகி ஸகல ப்ராணிகளிடத்திலும் ஸ்நேஹத்துடன் சாந்தியுள்ளவனாக ஜகத்தை என்னுடைய ஸ்வரூபமென்று நினைப்பவன் திரும்பவும் ஸம்ஸாரத்தை அடையமாட்டான்"

என்று சொன்னார்.

13–18. அதனைக்கேட்ட மஹா பாகவதராகிய உத்தவர் ஆத்மதத்வத்தையறிய விரும்பி பகவானை நமஸ்கரித்து, ஓ யோகேச! யோகத்தை அறிந்தவர் களுக்கு நிதியாகவிருப்பவரே யோகத்தால் ப்ரகாசிக்கும் ஸ்வரூபமுள்ளவரே! லோகத்தை உண்டுபண்ணினவரே! எல்லாவற்றையும் விட்டுவிடவேண்டுமென்று என்னுடைய க்ஷேமத்திற்காக உபதேசித்தீரே; விஷயங்களிலேயே நோக்கமுள்ளவர்களால் எப்படி எல்லாம் விடப்படும்? அதிலும் உம்மிடத்தில் பக்தி செய்யாதவர்களால் விஷயங்களைவிட முடியாது என்று நான் யோசிக்கிறேன். உம்முடைய மாயையால் ஏற்பட்ட தேஹத்தில் நான் என்ற அபிமானமும் புத்திரன் முதலியவர்களிடத்தில் என்னுடையது என்ற அபிமானமும் வெகுநாளாக உண்டாகி வேரூன்றி இருக்கிறது.

அதனைவிட்டு விடவேண்டுமென்று நீர் உபதேசித்தீரே; எப்படி சீக்கிரத்தில் அந்த அபிமானத்தை யொழிக்க முடியும்? ஆனதால் அதன் உபாயத்தை ஸேவகனாகிய எனக்கு உபதேசிக்க வேண்டும். பிரஹ்மா முதலிய ஸகலப் பிராணிகளும் உம்முடைய மாயையால் மோஹித்து விஷயங்களையை புருஷார்த்தமென்று நினைத்திருக்கிறார்கள். தாமாகப் பிரகாசிப்பதும் ஸத்தியமுமான உம்முடைய ஸ்வரூபத்தைப்பற்றிச் சொல்வதற்கு உம்மைவிட வேறொருவராலும் முடியாது. நீர் தோஷமற்றவர்; தேசத்தாலும் காலத்தாலும் அளவிடக்கூடாதவர்; எல்லாவற்றையும் அறிந்தவர்; ஈச்வரன்; அழிவற்றவைகுண்டத்தில் வஸிப்பவர்; நர நாராயணராக அவதரித்தவர்; அப்படிப்

பட்ட உம்மை இந்த சரீரத்தில் துக்கங்களால் துபிக்கப்பட்டு நிர்வேதத்தையடைந்து நான் சரணமடை கிறேன் என்று பிரார்த்தித்தார். (லோகத்தில் சிலர் கெட்ட நடையுள்ளவர்களாகவிருப்பார்கள்; சிலர் மற்றவர்களால் ஸேவிக்கப்பட்டும் பயனைக்கொடுக்கும் காலத்தில் சிலர் அழிந்துபோவார்கள்; சிலர் மூடர்கள். சிலர் பிறரைக் காப்பாற்றுவதில் சக்தியில்லாதவர்கள்; சிலர் தன்னுடைய ஸ்தானத்தை விட்டு நழுவியவர் கள்; ஆனதால் அவர்களால் என்ன பிரயோஜனம்? இம்மாதிரியான குறைகள் உம்மிடத்தில் ஒன்றுமில்லை என்று இந்த ச்லோகத்தில் காட்டிய ஐந்து விசேஷணங்களால் காட்டப்பட்டது.)

19–31. அதனைக்கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் உத்தவரை நோக்கி "லோகத்தின் உண்மையை பரீக்ஷிப்பவர்களான சில மஹர்ஷிகள் பெரும்பாலும் ஆத்மாவைத் தாமாகவே விஷய வாஸனைகளிலிருந்து நிவிர்த்தியடையும்படி செய்கிறார்கள். (பசு முதலிய சரீரங்களிலும்) ஆத்மாவிற்கு ஆத்மாவே குருவாகிறார். மனிதன் விஷயத்தில் ஸம்சயமேயில்லை. ப்ரத்யக்ஷம், அனுமானம் இவைகளைக் கொண்டு புருஷன் க்ஷேமத்தையடைகிறான். மனுஷ்ய ஜன்மத்தில் ஸாங்க்யம், யோகம் இவைகளை அறிந்த விவேகிகள் என்னை ஸகல சக்தியுள்ளவனென்று நன்றாய்த் தெரிந்துகொள்வார்கள். ஒன்று இரண்டு காலுள்ளது, மூன்று கால்களுள்ளது, நான்குகால்களுள்ளது, அநேக கால்கள் உள்ளது, கால்களில்லாதது என்ற பலவகையான சரீரங்கள் ஸிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் புருஷ சரீரமே எனக்குப் பிரியமானது. இந்தப் புருஷ சரீரத்தில் அஹங்காரம் முதலியவைகளைக்

காட்டிலும் வேறாகவிருக்கும் என்னை விவேகிகள் காரணங்களைக்கொண்டு அனுமான ப்ரமாணத்தால் தேடுகிறார்கள். ஜடமாகிய புத்திமுதலியவைகளுக்கு ப்ரகாசமானது ஸ்வப்ரகாசனாகிய ஈச்வரனால்தான் உண்டாகவேண்டும். ஆனதால் அவைகளுக்கு ஸாமர்த்தியத்தைக் கொடுக்கும் ஈச்வரன் ஒருவர் இருக்கிறார் என்ற அனுமான ப்ரமாணத்தால் தெரிந்து கொள்ளுகிறார்கள். மிக்க தேஜஸ்ஸுள்ள யதுவிற்கும் அவதூதருக்கும் ஏற்பட்ட ஸம்வாதமாகிய ஒரு இதிஹாஸத்தை இந்த விஷயத்தில் உதாஹரணமாகச் சொல்லுகிறேன். முன்னொருகால் தர்மங்களை யறிந்த வரான யதுவென்பவர் ஒருவிடத்திலும் பயமில்லாமல் ஸஞ்சரிப்பவரும், விவேகியும் யௌவன வயதுள்ளவரும், அவதூதருமான ஒருப்ராஹ்மணனைக் கண்டு "ஓப்ராஹ்மண! தர்மங்களைச் செய்யாதவராகிய உமக்கு இம்மாதிரியான ஸூக்ஷ்மபுத்தி எப்படி யுண்டாயிற்று? இந்த புத்தியையடைந்த வித்வானாகிய நீர் சிறுவன் போல் ஸஞ்சரிக்கிறீரே; பெரும்பாலும் ஜனங்கள் தீர்க்கமான ஆயுஸ், கீர்த்தி, ஐச்வர்யம் இவை களை அடைவதற்காக அர்த்தம் காமம் இவைகளை விசாரிப்பதுமன்றி ஆத்மவிசாரமும் செய்கிறார்கள். நீர் மிகவும் ஸுமார்த்தர்; வித்வான்; அழகிய சரீரமுள்ளவர்; ஸ்வல்பமாகப் பேசுகிறீர்; ஒன்றையும் செய்கிறதில்லை; ஒன்றையும் விரும்புகிறதில்லை; எல்லாவற்றையும் அறிந்திருந்தாலும் மூடன்போலவும், ஸாமர்த்திய முள்ளவரானாலும் பையித்தியங் கொண்டவர் போலவும், அழகுள்ளவரானாலும் பிசாசம் போலவும் ஸஞ்சரிக்கிறீர். மேலும் சகல ஜனங்களும் காமம் லோபம் இவைகளாலுண்டாகிய அக்னியால் எரிக்கப்பட்டு கஷ்டப்படுகிறார்கள். நீர்

மாத்திரம் கங்காஜலத்தில் மூழ்கிய யானை போல தாபத்தையடையாமல் ஆனந்தத்தை யடைந்திருக்கிறீர். புத்திரன், மித்திரன், களத்திரம் முதலிய பந்துக்களில் லாதவரும், விஷய போகங்களில்லாதவருமான உமக்கு இவ்வளவு ஆனந்தம் உண்டாவதற்கு என்ன காரணம்? அதைச்சொல்லவேண்டும்" என்று கேட்டு அவரைப் பூஜித்து வணக்கத்துடன் அவர் பக்கத்தில் நின்றார்.

32–38. அதனைக் கேட்ட அந்த ப்ராஹ்மணன் யதுவை நோக்கி "ஓ அரசனே! என்னுடைய புத்தி யால் அநேகர்களை ஆசார்யர்களாக ஆச்ரயித்தேன். அவர்களிடமிருந்து சில விஷயங்களைத் தெரிந்து கொண்டு முக்தனாக ஸஞ்சரிக்கிறேன். அவர்களைச் சொல்லுகிறேன் கேளும்; பூமி, வாயு, ஆகாயம், ஜலம், அக்னி, சந்திரன், ஸூர்யன், மாடப்புறா, மலைப் பாம்பு, ஸமுத்திரம், விளக்கு, விட்டிற்பூச்சி; தேனீ, யானை, வேடன், மான், மத்ஸ்யம், பிங்களாயென்ப வள், குரரம் என்ற பறவை, சிறுவன்,சிறுபெண், பாணத்தைச் செய்யும் கொல்லன், ஸர்ப்பம், பட்டுப்பூச்சி, குளவி ஆகிய 24 குருக்களை நான் ஆச்ரயித்தேன். இவைகளுடைய ஸ்வபாவத்திலிருந்து எவைகளை க்ரஹித்துக் கொள்ளலாமோ அவைகளை அப்ய ஸித்துக் கொண்டேன். ஓ யயாதியின் புத்திரராகிய யதுவே! எதனிடமிருந்து எதை எப்படிக் கற்றுக் கொண்டேனோ அதனைச் சொல்லுகிறேன், தெரிந்து கொள்ளும். பூமியானது ஸகலப் பிராணிகளால் மிதிப்பது முதலியவைகளைச் செய்து உபத்திரவிக்கப் பட்டாலும் அந்த ஹிம்ஸையை எப்படி ஸஹிக்கிறதோ அப்படி பிராணிகளால் புருஷன் உபத்திரவிக்கப் பட்டாலும் "அவர்கள் தைவத்தால் தூண்டப்பட்டு

நம்மை உபத்திரவிக்கிறார்களெயொழிய தாமாக உபத்திரவிக்கவில்லை" என்று நினைத்து தம்முடைய தர்மத்திலிருந்து ஒருபொழுதும் தவறக்கூடாது என்று தெரிந்துகொண்டேன். மேலும் மலையானது எப்படி பிறருடைய உபயோகத்திற்காகவே உண்டாகிறதோ, கொடி, மலையருவி முதலியவைகளை பிறருக்கே எப்படி உபயோகப்படுத்துகிறதோ, மரங்கள் பழம், இலை, நிழல், கிளை, கட்டை முதலியவைகளால் பிறருக்கே எப்படி உபயோகப்படுகிறதோ,

தோ, அதுபோல பலவகையாலும் பிறருக்கு உபகரிக்க வேண்டுமென்ற குணத்தை பூமியின் அம்சமாகிய மரம், மலை இவைகளிடமிருந்து ஸாதுவாகவிருப்பவன் தெரிந்து கொள்ளவேண்டும்.

39–41. ப்ராணன் சரீரத்தை விட்டு வெளியிற் செல்லாமலிருப்பதற்கு ஆஹாரமாத்திரம் அபேக்ஷிக் கிறதேயொழிய இந்திரிய விஷயங்களான ரூபம் முதலியவைகளை அபேக்ஷிக்கிறதில்லை. அதுபோல முனியாக விருப்பவன் தேஹதாரணத்துக்கு வேண்டிய ஆஹாரத்தைப் புஜித்து அதனால் ஸந்தோஷப்பட வேண்டுமேயல்லாமல் ரூபம், ரஸம், முதலியவைகளை விரும்பக்கூடாது. (அழகான ஸ்திரீகளைப் பார்ப்பது, இனிமையான கானத்தைக் கேட்பது முதலியவை கூடாதென்றும், ப்ராணதர்ரணத்தைச் செய்யாவிடில் மனம் போய்விடுமானதால் ஞானம் நசிக்குமென்றும் கருத்து.) அப்படி விஷயங்களில் ஆசைப்படுவானாகில் வாக்கு, மனம் இவைகள் விக்ஷேபத்தை அடையும். மேலும் வாயுவானது காட்டிலும், காட்டுத்தீயிலும் பந்தப்படாமலிருப்பதுபோல் பலவகையான குணங்

களுள்ள விஷயங்களில் பிரவேசித்தாலும் யோகியானவன் அதன் தர்மங்களில் ஸம்பந்திக்கக்கூடாது பின்னும் வாயு வாஸனை முதலியவைகளுடன் ஸம்பந்திப்பது போல் தோன்றினாலும் உண்மையில் எப்படி அந்தக் குணங்களுடன் ஸம்பந்தப்படுகிறதில்லையோ, அப்படி ஆத்மாவின் உண்மையை அறிந்த யோகியானவன் இந்த சரீரத்தில் ஆத்மா பிரவேசித்து பால்யம், யௌவனம் முதலிய அவஸ்தைகளை அடைந்தவன் போல் தோன்றினாலும் உண்மையில் ஆத்மாவிற்கு அதன் ஸம்பந்தமில்லையென்று தெரிந்து கொள்ள வேண்டியது.

42–43. ஆகாயமானது எங்கும் வ்யாபித்திருப்பதால் ஒன்றிலும் ஸம்பந்தப்படாமலும் அளவிடக் கூடாமலும் எப்படி இருக்கிறதோ, அதுபோல் ஆத்மா ப்ரஹ்ம ஸ்வரூபமாக எங்கும் வ்யாபித்திருப்பதால் ஸ்தாவர ஜங்கம பிராணிகளில் மறைந்திருந்தாலும் ஒன்றிலும் சேராதவரென்றும், அளவிடக் கூடாதவரென்றும் தெரிந்து கொள்ளவேண்டும். மேலும் வாயுவினால் தூண்டப்பட்ட மேகம் முதலியவைகளுடன் ஆகாயம் எப்படி ஸம்பந்தப்படுகிறதில்லையோ, அப்படி பூமி ஜலம், தேஜஸ், இவைகளைக் கொண்டு காலத்தால் ஸிருஷ்டிக்கப்பட்ட சரீரத்துடன் ஆத்மா ஸம்பந்திக்கிறதில்லை.

44. இயற்கையில் பலமற்றவனும், ஜனங்களிடத்தில் பிரியமுள்ளவனும், இனிமையாகப் பேசுகிறவனும், மனிதர்களை சுத்தப்படுத்துகிறவனுமாகிய யோகி ஜலம் போல் பார்ப்பது, தொடுவது, சொல்வது ஆகிய இவைகளால் தோழனை சுத்தப்படுத்துகிறான்.

45–47. மேலும் தேஜஸ்ஸுள்ளவனாகவும் (அதிக ஞானத்தால்) மிக்க தபஸ்ஸால் ஜ்வலிப்பவனாகவும், பிறரால் அவமதிக்க முடியாதவனாகவும் வயிற்றைப் பாத்திரமாகக் கொண்டவனாகவும் இருக்கும் யோகி (சேர்த்து வைத்துக் கொள்ளாதவன்) எல்லாவற்றையும் (ருசியுள்ளது, ருசியற்றது) புஜிப்பவனானாலும் பாபத்தை அடையமாட்டான். அக்னியெல்லாவற்றையும் எரித்தாலும் அதனால் அக்னிக்கு தோஷமேற்படவில்லையல்லவா? மேலும் முனியானவன் அக்னிபோல் சில ஸமயம் மறைந்தும், சில ஸமயம் வெளியில் தெரிந்தும் ஸஞ்சரிப்பான். க்ஷேமத்தை அடையவிரும்பியவர்கள் அவனை உபாஸிப்பார்கள். அப்பொழுது அவர்களால் கொடுக்கப்படும் அன்னத்தைப் புஜிக்கிறான். அதனால் அவர்களுடைய முன்செய்த பாபங்களும் (ஸஞ்சிதம்) வரும் பாபங்களும் (ஆகாமி) நிவர்த்தியடைகின்றன.

பின்னும் அக்னி கட்டையில் பிடித்து ஜ்வலிக்கும் பொழுது கட்டை நீண்டதானால் அக்னியும் நீண்டதாகக் காணப்படுகிறது. கட்டை கோணலாகவிருந்தால் அக்னியும் அந்த வடிவமுள்ளதாகக் காணப்படுகிறது. ஆனால் உண்மையில் அக்னி ஒருவகையானதே. அப்படிப் போல ப்ரபுவாகிய ஈச்வரன் ப்ராஹ்மணன் சூத்திரன் முதலிய இந்த ஜகத்தைத் தம்முடைய மாயையால் படைத்து அதில் ப்ரவேசித்து சேஷ்டிக்கிறார். மேலானவன், தாழ்ந்தவனென்ற பேதம் ஆத்மாவிற்கு இயற்கையில்லை; ஆத்மா ஒருவகையுள்ளவனேயானாலும் தேவ சரீர ஸம்பந்தம் நேர்ந்தபொழுது மேலானவனென்றும் பசு சரீர ஸம்பந்தம் வந்த ஸமயத்தில் தாழ்ந்தவனென்றும் சொல்லப்படுகிறான்.

ஆனதால் மேன்மை தாழ்வுயென்பது சரீரமாகிய உபாதியாலேற்பட்டதேயொழிய இயற்கையானதல்ல)

48–49. சந்திரனுடைய கலைகள் சிலகாலம் விருத்தியடைகின்றன, சிலகாலம் குறைகின்றன. ஆனாலும் மண்டலத்திற்கு விருத்தியாவது குறைவாவது உண்மையில் எப்படி இல்லையோ, அப்படி ஜனனம் முதல் மரணம் வரையிலுள்ள விகாரங்கள் சரீரத்திற்கேயொழிய ஆத்மாவினுடையதல்ல. ஆத்மா ஜனிக்கிறதில்லை; விருத்தியடைகிறதில்லை; வேறு நிலைமையை அடைகிறதில்லை; குறைகிறதில்லை; நாசமடைகிறதில்லை; மேலும் அக்னியின் ஜ்வாலைகளை எப்படி உண்டாகிறதும் அணைகிறதுமாக விருக்கிறதோ, அப்படி ஆத்மாவின் ஸம்பந்தமான சரீரங்களுக்கும் காலவேகத்தால் ஜனன மரணமேற்படுகிறது. ஆனாலும் அதனை ஜனங்கள் லக்ஷ்யஞ் செய்யவில்லை. (தேஹமும் முதலியவைகள் ஸ்திரமில்லாத வையானதால் அவைகளில் ஆசை கொள்ளாமல் வைராக்யத்தை அடையவேண்டுமென்று கருத்து.)

50–51. ஸூர்யன் தம்முடைய கிரணங்களால் ஜலத்தை கிரஹித்து அவைகளை ஸமயத்தில் (மழை காலத்தில்) வர்ஷிப்பது போல் யோகியானவன் இந்திரியங்களால் விஷயங்களைக் கிரஹித்து (அவற்றை விரும்புபவன் வரும்) காலத்தில் கொடுக்கிறான். ஆனாலும் 'இது என்னால் ஸம்பாதிக்கப்பட்டது என்றாவது, இதைப் பிறருக்குக் கொடுத்தேன்' என்றாவது அபிநிவேசத்தை அடைகிறதில்லை. மேலும் ஜலத்தில் ப்ரதிபிம்பித்த ஸூர்யமண்டலம் போல் ஆத்மா உபாதிகளில் ப்ரதிபலித்து, அதனால் மந்த

புத்தியுள்ளவர்கள் ஆத்மா வெவ்வேறு என்று நினைக்கிறார்கள் (உண்மையில் பேதமற்றது)

52–72. ஒருவரிடத்திலும் ஒருபோதும் அதிக ப்ரியமாவது வார்த்தையாவது வைத்துக் கொள்ளக் கூடாது. அப்படியல்லாமல் அதிகப் ப்ரியம் வைத்தால் மாடப்புறாபோல் தைன்யமடைந்து தாபத்தை அடைவான். ஒரு மாடப்புறா தன் மனைவியுடன் ஒரு காட்டில் மரத்தில் கூடுகட்டிக் கொண்டு வஸித்தது. அவ்விருபுறாக்களும் ஒன்றின்மீது ஒன்று மிக்க ப்ரியம் வைத்திருந்தன. மேலுமவைகள் கண்ணை கண்ணிலும், சரீரத்தை சரீரத்திலும், புத்தியை புத்தியுடன் சேர்த்து விசேஷ ஸ்நேஹ முள்ளவைகளாகவிருந்தன. பின்னும் அவைகள், படுப்பது, ஸஞ்சரிப்பது, உட்காருவது, வஸிப்பது, விளையாடுவது, ஆஹாரம் புஜிப்பது ஆகிய இவைகளை இரண்டுமாகச் சேர்ந்து செய்கிறதே யொழிய விட்டுப் பிரிவதில்லை. இப்படி அவ்விரண்டு புறாக்களும் காடுகளில் பயமற்று சேர்ந்து ஸஞ்சரித்து வந்தன. ஓ அரசனே! அவைகளில் பெண்பறவை எதனை விரும்பியதோ, அதனுடைய கடைக்கண் பார்வை முதலியவையால் திருப்தியடைந்து ஆண்பறவை அந்த அந்த இஷ்டத்தை ச்ரமப்பட்டாவது ஸம்பாதித்துக்கொடுத்து அதனை நிறைவேற்றியது. சில நாளில் பெண்பறவை கர்ப்பத்தை அடைந்து ப்ரஸவகாலத்தில் ஆண்பறவையின் முன்னிலையில் முட்டைகளை ப்ரஸவித்தது. சில காலஞ் சென்றபின் அவைகளிலிருந்து குஞ்சுகள் வெளிப்பட்டன. அவைகள் ஊஹிக்க முடியாத பகவானுடைய சக்திகளான காலம், கர்மம், ஸ்வபாவம் ஆகிய இவைகளால் கை கால் முதலிய அவயங்களை அடைந்து, அழகிய சரீரம்

இறக்கை முதலியவை களுள்ளவையாக விருந்தன. மேலுமவைகள் காதிற்கு இனிமையாக சப்தித்தன. அவைகள் மனோஹரமாக விளையாடின. அவைகளுடைய இறக்கை மிருதுவாக விருந்தன. இப்படிப்பட்ட அந்தப் பறவைக் குஞ்சுகளை பார்த்து தாய் தந்தை களான பறவைகள் மிக்க ப்ரியத்துடன் அவைகளை போஷித்தன. அவைகளுடைய இனிமையான சப்தத்தைக் கேட்டும் விளையாட்டைப் பார்த்தும் ஸந்தோஷத்தை அடைந்தன. இப்படி அந்தப் பறவைகள் விஷ்ணுவின் மாயையால் மோஹமடைந்து ஒருவருக்கொருவர் விசேஷ ஸ்நேஹத்துடன் இளம் வயதிலுள்ள தங்கள் குழந்தைகளை போஷித்து வந்தன.

ஒரு நாள் தாய்தந்தைகளான பறவைகள் உணவு தேடிவருவதற்குக் காட்டிற்கு சென்று தாமதித்தன. அந்த ஸமயத்தில் மரத்தில் விளையாடிக் கொண்டி ருக்கும் பறவைக் குஞ்சுகளை ஒரு வேடன் பார்த்து வலையை விசிறிப்பிடித்தான். அப்பொழுது குஞ்சுகளைப் போஷிப்பதிலேயே எப்பொழுதும் நோக்கமுள்ள அவ்விரண்டு பறவைகளும் உணவு ஸம்பாதித்துக் கொண்டு வந்து தன் குஞ்சுகள் வலையில் சிக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தன. அவைகளைக் கண்ட வுடன் குஞ்சுகள் கதறின. அதனைக் கண்ணுற்ற பெண்பறவை தானும் கதறிக்கொண்டு அவைகள் ஸமீபஞ் சென்றது, மேலும் விஷ்ணுவின் மாயையால் அந்தக் குஞ்சுகளிடத்தில் விசேஷ ப்ரியம் வைத்து வலை வீசியிருப்பதை மறந்து தானும் வலையில் சிக்கிக்கொண்டது. 'பின்பு ஆண்பக்ஷி ப்ராணனைக் காட்டிலும் அதிகமென்று நினைத்திருந்த குழந்தை

கட்டுப்பட்டிருப்பதைப் பார்த்து மிகவும் துக்கித்தது. "ஓ ஜனங்களே! நான் ஸ்வல்ப புண்யஞ் செய்தவன்; புத்தியில்லாதவன்; எனக்கு நேர்ந்த கெடுதியை பார்த்தீர்களா? நான் இவ்வுலகத்திய ஸுகத்தை அனுபவித்துப் போதுமென்று திருப்தியை அடைய வில்லை. பரலோக ஸுகத்தையும் ஸம்பாதித்துக் கொள்ளவில்லை.

அப்படியிருக்க தர்மம், அர்த்தம், காமம் இவைகளைக் கொடுக்கும் கிருஹம் நாசமடைந்தது; என் மனைவி பர்த்தாவாகிய என்னையே தைவமாகக் கொண்டவள்; எனக்கு ஸமமான குணமுள்ளவள்; அனுகூலமாகவிருப்பவள்; அப்படிப்பட்ட மனைவி சூன்யமாகிய வீட்டில் என்னை வைத்து ஸாதுக்களான குழந்தைகளுடன் ஸ்வர்க்கத்திற்குப் போகிறாள். குழந்தைகளும் மனைவியும் மரணமடைந்த பின் நான் எதற்காக ஜீவிக்கவேண்டும்" என்று ப்ரலாபித்து வலையில் கட்டுப்பட்டு ப்ரக்ஞையற்றிருக்கும் பறவை களைப் பார்த்துத் தானும் அந்த வலையில் விழுந்தது. அதனைக் கண்ணுற்ற வேடன் பெண்புறா, ஆண்புறா குழந்தைகள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு மிக்க ஸந்தோஷத்துடன் தன்னுடைய வீட்டிற்குச் சென்றான்.

73–75. அதுபோல் கிருஹஸ்தனாகிய புருஷன் ஸுகதுக்கங்களில் ஆசைக்கொண்டு மனத்தின் சாந்தியையடையாமல் குடும்பத்தைப் போஷித்து குடும்பத்துடன் கஷ்டப்படுவான். இந்த மனித சரீரம் மோக்ஷத்திற்கு மார்க்கமாகவிருக்கிறது. அதை அடைந்தும் எவன் மேற்காட்டிய பறவைபோல் குடும்பத்தில்

ஆசைவைக்கிறானோ அவனை ஆரூடச்யுதன் (மேலான பதத்தையடைந்தும் அதிலிருந்து விழுந்தவன்) என்று சொல்லுகிறார்கள். (புத்திரன் முதலியவர்களிடத்தில் ஆசைப்படுவது பறவைகளுக்கும் கெடுதியை விளைவிக்கிறது. ஆனதால் மனிதர்கள் அவைகளில் பற்றுதலில்லாமலிருக்க வேண்டுமென்று கருத்து).

♣ ♣ ♣ ♣

மலைப்பாம்பு முதலியவைகளிடம் கற்றுக்கொண்டது

ஓ அரசனே! பிராணிகளுக்கு இந்திரியங்களாலுண்டாகும் ஸுகம், துக்கம் இவைகள் ஸ்வர்க்கத்திலும் நரகத்திலும் நேரிடுகின்றன. ஆனதால் வித்வானாக விருப்பவன் இந்திரிய ஸுகத்தை விரும்பக்கூடாது. (ப்ராரப்தமாகிய கர்மத்தின் பயனை அனுபவிக்க வேண்டிய தவசியமாகையால் அதற்காக வீணில் முயன்று அதனால் ஆயுஸ்ஸை செலவிடக்கூடாது என்று தாத்பர்யம்.) மேலும் மலைப்பாம்பு போல் ரஸமுள்ளதானாலும், ரஸமற்றதானாலும், ஸ்வல்பமானாலும், அதிகமாகவிருந்தாலும் தைவச் செயலால் கிடைத்த அன்னத்தைப் புஜித்து அதற்காக முயற்சிக்காமல் உதாஸீனனாகவிருக்க வேண்டும். (எவ்வளவு ஆஹாரம் புஜித்தால் சரீரமிருக்குமோ அவ்வளவு ஆஹாரத்தை மாத்திரம் புஜிக்கவேண்டும். அதற்காகவும் தான் முயற்சி செய்யவேண்டாம் என்று கருத்து). தைவச்செயலாக ஆஹாரம் கிடைக்காவிடிலும், தைவமே நமக்கு ஆஹாரத்தைக் கொடுக்கும் என்ற நிச்சயத்துடன் ஆஹாரமில்லாமல் வெகுநாளானாலும் அதற்காக யாதொருமுயற்சியும் செய்யாமல் படுத்திருக்கவேண்டும். மேலும் இந்திரியபலம், மனோபலம், சரீரபலம் இவைகளுள்ளவனானாலும், யாதொரு முயற்சியும் செய்யாமல் படுத்திருக்க வேண்டும். ஆனாலும் தூங்ககூடாது. (ஆத்மாவிடத்தில் மனமுள்ளவனாகவிருக்க வேண்டுமென்று கருத்து) கண் காது முதலிய இந்திரியங்களுள்ளவன்

ஆனாலும் ஒன்றையும் பார்க்கக்கூடாது; கேட்கவும் கூடாது (இம்மாதிரி மலைப்பாம்பினிடமிருந்து கற்றுக் கொண்டேன் என்று கருத்து)

5–6. தெளிந்தும், ஆழமுள்ளதும், ப்ரவேசிக்க முடியாததும், தாண்டமுடியாததும், கரையற்றதும், கலக்க முடியாததும், அலைகளில்லாமல் அசைவற்று இருப்பதுமான ஸமுத்திரம்போல் யோகியானவன் வெளியில் தெளிந்தும் கம்பீர்யமுள்ளவனாகவும், இம்மாதியான அபிப்பிராயமுள்ளவனென்றும் அறிய முடியாதவனாகவும், பிறரால் தாண்டமுடியாதவனும் (தேஜஸ்ஸுள்ளவனாகவிருப்பதால்) காலத்தாலும் தேசத்தாலும் அளவிடக் கூடாதவனாகவும், (ஸ்வரூபத் தையறிந்ததனால்) விகாரத்தையடையாதவனாகவும் (ஆசை முதலியவைகள் இல்லாததனால்) இருக்க வேண்டும். மேலும் மழை காலத்தில் அநேக ஆறுகள் ஸமுத்திரத்தில் விழுந்தாலும், ஸமுத்திரம் எப்படி விருத்தியடைகிறதில்லையோ, கோடை காலத்தில் அந்த நதிகளின் ஜலம் ஸமுத்திரத்தில் சேராமலிருந் தாலும் ஸமுத்திரம் எப்படி குறைகிறதில்லையோ, அப்படி யோகியானவன் ஸ்ரீமந் நாராயணனிடத்திலே யே மனத்தைச் செலுத்தி விஷய போகங்கள் அதிகமாகக் கிடைத்தாலும் அதனால் ஸந்தோஷிக்கக் கூடாது; விஷய போகங்கள் கிடைக்காவிடினும் அதனால் துக்கப்படக்கூடாது என்பதை ஸமுத்திரத் தினிடம் கற்றுக் கொண்டேன்.

7–8. விளக்கு விட்டிற் பூச்சியானது தீப ஜ்வாலையைப் பழமென்று நினைத்து அதில் விழுந்து மரணமடைவது போல் முனியானாலும் தேவ

மாயையாகிய ஸ்திரீயைப் பார்த்து அவளுடைய அழகான பார்வை முதலியவைகளால் ஏமாற்றப்பட்டு இந்திரியங்களை அடக்கமுடியாமல் விஷயங்களில் மூழ்கி ஸம்ஸாரியாக ஆகிறான். மேலும், ஸ்திரீ, தங்கம், ஆபரணம், வஸ்திரம் முதலிய த்ரவ்யங்கள் மாயையால் செய்யப்பட்டவை களேயொழிய உண்மை யானவையல்ல. அப்படிப்பட்ட த்ரவியங்களைத்தான் அனுபவிக்கலாமென்று நினைத்து மூடனாகிய மனிதன் விவேகமற்று விளக்கு விட்டிற் பூச்சி போல நாசத்தை அடைகிறான். (ரூபம், ரஸம், கந்தம், ஸ்பர்சம், சப்தமென்று விஷயங்கள் ஐந்து. அவைகளில் ஆசைப் படக்கூடாது. ரூபத்தில் ஆசைப் பட்டு விளக்கு விட்டிற் பூச்சி மரணமடைகிறது, வண்டுகள் வாஸனையில் ஆசைப்பட்டும், யானைகள் ஸ்பர்சத்தில் ஆசை கொண்டும், மான்கள் சப்தத்தில் ஆசைகொண்டும, மீன்கள் ரஸத்தில் ஆசைப்பட்டும் நசிக்கின்றன).

9–12. பின்னும் வண்டானது எப்படி ஒவ்வொரு புஷ்பத்திலுமிருந்து அவைகளை உபத்திரவியாமல் ஸ்வல்பம் ஸ்வல்பமாகத் தேனை எடுத்துக் கொள்ளு கிறதோ, அப்படி முனியாகவிருப்பவன் கிருஹஸ்தர் களை உபத்ரவியாமல் சரீரஸ்திதிக்கு வேண்டிய ஆஹாரத்தை (எவ்வளவு ஆகாரம் புஜித்தால் சரீரம் ஜீவிக்குமோ அவ்வளவு) பெற்று கொள்ளலாம். அதனையும் கொஞ்சம் கொஞ்சமாக கிரஹிக்க வேண்டும். இப்படிச் செய்யாமல் ஒரே கிருஹஸ்தனு டைய வீட்டிலேயே இருப்பனாகில் அந்த கிருஹஸ்தனுடைய ஸுகதுக்கங்களால் இவனுடைய மனம் கலங்கும் அதனால் ஸம்ஸாரத்தை அடைவான்.

வண்டானது ஒரே தாமரை மலரில் அதன் வாஸனையில் ஆசைக்கொண்டு வஸித்குமானால் அஸ்தமன காலத்தில் அந்த மலர் மூடிக்கொள்ளும்பொழுது அது கட்டுப்படுகிறதல்லவா? பின்னும் தேன் ஈயானது பருத்த புஷ்பங்களிலிருந்தும், சின்ன புஷ்பங்களிலிருந்தும் ஸாரமாகிய தேனை எப்படி எடுத்துக் கொள்ளுகிறதோ, அப்படி விவேகியான புருஷன் அணுவானாலும், பருத்ததானாலும் சாஸ்திரங்களில் எது ஸாரமோ அதனை கிரஹித்துக் கொள்ளவேண்டும். முனியானவன் பிக்ஷையெடுத்து அன்னத்தை 'இது ஸாயங்காலம் புஜிப்பதற்கு இருக்கட்டும்; இது நாளைக்காக இருக்கட்டும்' என்று சேர்த்து வைத்துக் கொள்ளக்கூடாது. கையையும் வயிற்றையும் பத்திர மாக வைத்துக் கொள்ளவேண்டும். (கையில் வாங்கி வாயில் போட்டுக்கொள்ள வேண்டுமேயல்லாமல் சேர்த்து வைக்கக் கூடாதென்று கருத்து) இப்படி செய்யாமல் 'ஸாயங்காலம் புஜிப்போம், நாளைக்குப் புஜிப்போம்' என்று சேர்த்து வைப்பவன் கெட்டுப் போவான். தேனீக்கள் தேனைச் சேர்த்து வைத்து அதனைத் தாங்கள் புஜிக்காமலேயே பிறரால் கொல்லப்படுகின்றனவல்லவா? (தேனீக்களிடம் மேற் காட்டியதைத் தெரிந்து கொண்டேன்).

13–14. முனியாகவிருப்பவன் மரத்தால் செய்யப் பட்ட ஸ்திரீ ப்ரதிமையையும் காலால்கூட தொடக் கூடாது. (எவ்வகையிலும் ஸ்திரீ ஸம்பந்தம் கூடாது என்று கருத்து.) அப்படித் தெரிந்துவானாகில் பெண் யானையின் சரீரத்தைத் தொடுவதால் ஆண்யானை கட்டுப்படுவதுபோல் கெடுதியடைவான். (யானையைப் பிடிப்பவர்கள் காட்டில் பள்ளம்வெட்டி அதனை

திருணங்களால் மறைத்து பெண்யானையைக்காட்டி, காட்டிலுள்ள ஆண்யானையை அதன் வழியாக நடத்தி பள்ளத்தில் தள்ளுகிறார்கள். பின்பு அவர்களுக்கு அது வசப்படுகிறது) விவேகியாகவிருப்பவன் ஸ்திரீயைத் தனக்கு மிருத்யுவென்று நினைத்து ஒரு பொழுதும் அவள் வழி செல்லாமலும் அவளிடத்தில் ஆசைப்படாமலுமிருப்பான். அப்படியிராமல் ஆசைப் படுவானாகில் இவனைக்காட்டிலும் பலசாலிகளான மனிதர்கள் இவனைக் கொன்றுவிடுவார்கள். ஒரு பெண் யானையின் மீது ஆசைகொண்ட ஆண் யானையை அதனைவிட பலசாலிகளான மற்றயானை கள் கொல்லவில்லையா?

15–16. தேனீக்கள் தான் புஜியாமலும் பிறருக்குக் கொடாமலும் தேனை ரஹஸ்யமான விடத்தில் சேர்த்துவைக்கின்றன. அதனை மனிதன் தெரிந்து கொண்டு எப்படி எடுத்துக்கொண்டு போகிறானோ, அப்படி மனிதர்கள் தாங்கள் அனுபவிக்காமலும் பிறருக்குக்கொடாமலும் ச்ரமப்பட்டு பணத்தைச்சேர்த்து வைக்கிறார்கள். அதனை மற்றவன் அபஹரித்துக் கொள்ளுகிறான்; அவனைக் காட்டிலும் பலசாலியாக விருப்பவன் அவனிடமிருந்து அந்தப் பணத்தை அபஹரித்து கொள்ளுகிறான். (ஆனதால் பிறருக்குக் கொடாமலும் தான் அனுபவியாமலும் தனத்தைச் சேர்த்து வைத்தால் அதனைப் பிறர் கொண்டு போவார்கள் என்பதைத் தேன்பூச்சியினிடமிருந்து தெரிந்துகொண்டேன்) மேலும் தேனீக்கள் ச்ரமப் பட்டு ஸம்பாதித்துவைத்த தேனை மற்றவன் எப்படி எளிதில் அடைகிறானோ, அதுபோல ச்ரமப்பட்டு ஸம்பாதித்த த்ரவ்யங்களைக்கொண்டு கிரஹ

கிருத்தியங்களை நடத்தும் கிருஹஸ்தர்களுடைய அன்னத்தை முந்தி புஜிப்பதற்காக ஸந்நியாஸி பாத்தியமுள்ளவனாக விருக்கிறான். (ஸந்நியாஸியும் ப்ரஹ்மசாரியும் சமைத்த அன்னத்தில் பாகமுள்ளவர் கள். அவர்களுக்குக் கொடாமல் தான் மாத்திரம் புஜிக்கும் கிருஹஸ்தன் சாந்திராயணம் என்றவிருதத் தை அனுஷ்டிக்கவேண்டு மென்று ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனதால் தன்னுடைய முயற்சியில்லாமலேயே போகங்கள் கிடைக்கின்றன. அதற்காக ச்ரமப்படவேண்டாம்.)

17–18. வனத்தில் வேடனுடைய பாட்டைக் கேட்டு மோஹித்து அசைவற்று நின்ற மானானது வேடனால். அடிக்கப்படுகிறதல்லவா? அதுபோல காட்டில் ஸஞ்சரிக்கும் யதியானவன் க்ராம்யமான கானத்தைக் கேட்கலாகாது (பகவத் விஷயமான கானத்தைத் தவிர மற்றவை) கேட்டால் விஷயங்களில் ப்ரவிருத்தியுண்டாகும்; மேலும் மான் வயிற்றில் பிறந்தவரான ரிச்யச்ருங்கரென்பவர் ஸ்திரீகளால் செய்யப்பட்ட நர்த்தனம், கானம், வாத்தியம் இவைகளைப் பார்த்தும், கேட்டும் அவர்களுக்கு விளையாட்டு மிருகம்போல் வசப்பட்டிருந்தார்.

19–21. ஜனங்களுக்கு நாக்கு (ஜிஹ்வேந்திரியம்) மிக்க கெடுதியை விளைவிக்கிறது. அதனை ஜயிப்பது மிகவும் கஷ்டம்; மத்ஸ்யமானது தூண்டிமுள்ளிலிருக் கும் மாம்ஸத்தில் ஆசைப்பட்டு மரணமடைவதுபோல நாக்கை ஜயிக்காதவன் ரஸத்தில் ஆசைகொண்டு மிக்க கெடுதியை அடைவான். விவேகிகள் இந்திரியங் களை ஜயிப்பதற்காக ஆஹாரத்தைத் தள்ளிவிடுகிறார்கள்.

அதனால் எல்லா இந்திரியங்களையும் ஜயிக்கிறார்கள். ஆனால் நாக்கை மாத்திரம் ஜயிக்கமுடியவில்லை ஆஹாரம் புஜிக்காதவனுக்கு நாக்கின் வியாபாரமானது விருத்தியாகிறதே யொழிய குறைகிறதில்லை; நாக்கை ஜயிக்காமல் மற்றவைகளை ஜயித்தவன் இந்திரியங் களை ஜயித்தவனென்று சொல்லப்பட மாட்டான். (ஆனதால் நாக்கை ஜயித்தால் மற்றவை யாவும் ஜயிக்கப்பட்டதாகும். → ISKCON GURU)

22–23. ஓ ராஜகுமாரராகிய யதுவே! விதேஹ மென்ற பட்டணத்தில் பிங்களா என்ற தேவரடியாள் (தாஸி) ஒருவள் இருந்தாள். அவளிடமாக நான் ஸ்வல்பம் தெரிந்துகொண்டேன். அதனைச் சொல்லு கிறேன் கேளும். அந்த வ்யபசாரிணியான பிங்களா யென்பவள் தன்னுடைய சரீரத்தை நன்றாயலங் கரித்துக் கொண்டு ஒருநாள் இரவில் தன்னுடைய வீட்டின் வாசற்படியில் நின்று புருஷர்களை உள்ளே அழைத்துப்போவதில் நோக்கமுள்ளவளாக காத்துக் கொண்டிருந்தாள். பணத்தில் ஆசையுள்ள அந்த தாஸி தெருவில் போகிற ஜனங்களில் பணக்காரர்களும், தனக்குப் பணங் கொடுப்பவர்களுமான மனிதர்களை, தனக்குப் புருஷனென்று நினைத்து அவர்களுடன் ரமித்தாள். அவர்கள் தன்வீட்டை விட்டுச் சென்ற பின் "இவனைப்போல் மிக்க பணம் கொடுக்கும் பணக்காரன் வேறுயாராவது வருவானா" என்று துராசைகொண்டு வாயற்படியில் நிற்பதும் உள்ளே போகிறதும் வெளியில் வருவதுமாகவிருந் தாள். இப்படி இரவில் முன்பாதியைக் கழித்தாள். இப்படிப் பணத்தில் ஆசைகொண்ட அவளுடைய முகமும், மனமும் வாடின. பணம் ஸம்பாதிக்க

வேண்டுமென்ற ஆலோசனையாலேயே அவளுக்கு மிக்க வைராக்கியம் உண்டாயிற்று. அது ஸுகத்தை யுண்டுபண்ணியது. இம்மாதிரியவள் நிர்வேதத்தை யடைந்து எதனைச் சொன்னாளோ அதனை சொல்லுகிறேன் கேளும். புருஷனுகு நிர்வேதம் உண்டானால் அது ஆசை யாகிற கயிற்றைக் கத்தி போல் அறுத்துவிடும். நிர்வேதமில்லாதவர்கள் தேஹாபிமானத்தை விடமாட்டார்கள். பிங்களை சொல்லியதாவது; "இந்திரியங்களை ஜயிக்காமல் விவேகமற்று நான் மிக்க அற்பனாகிய மனிதனிடமி ருந்து இஷ்டத்தையடைய விரும்பினேன். என்னுடைய மிகுந்த மோஹத்தைப் பாருங்கள். ஆச்சர்யம்! பகவான் எப்பொழுதும் நம்முடைய ஸமீபத்திலிருந்து பணம் முதலிய இஷ்டங்களைக் கொடுத்து நம்மை ஸந்தோஷப்படுத்த ஸித்தராக விருக்கிறார்.

அப்படிப்பட்ட பகவானை ஸேவியாமல் இஷ்ட மான வஸ்துவைக்கொடுக்க சக்தியற்றவனும், துக்கம், பயம், உபத்திரவம், மோஹம் இவைகளைக் கொடுப் பவனும், அற்பனுமாகிய மனிதனை மூடையாகிய நான் ஸேவித்தேன். மேலும் நான் பணத்தில் ஆசைகொண்டு சரீரத்தைவிற்று ஸ்திரீகளிடத்திலேயே ஆசைப்பட்ட வனும், பொருளாசை கொண்டவனும் பிறரால் துக்கிக்கக்கூடியவனுமான மனிதனுடன் ரமித்து, ஸங்கேத ஸ்தலத்தில் (படுக்கையிடம்) செய்யவேண்டிய வியாபாரங்களைச் செய்து மிக்க நிந்திக்கக்கூடிய ஜீவனத்தால் எனது ஆத்மாவை ச்ரமப்படுத்தினேன். ஆச்சர்யம்! இந்த சரீரமாகிய வீடானது எலும்புகளா கிய தூண்கள், மோசனம் முதலியவைகளாலும் தோல், மயிர், நகம்

இவைகளாலும் கட்டப்பட்டிருக்கிறது. அது அமேத் தியம்; மூத்திரம் இவைகளால் நிறைந்திருக்கிறது. எப்பொழுதும் ஜலப்பெருக்குள்ள ஒன்பது துவாரங் களுள்ளது. அப்படிப்பட்ட சரீரத்தை என்னைக் காட்டிலும் எவன் புருஷனென்று அடைவாள்? இந்தபட்டணத்தில் நான் ஒருவள்தான் அறியாதவள் (மூடபுத்தியுள்ளவள்). ஆத்மாவைக்கொடுப்பவராகிய பகவானாகிய பர்த்தாவைவிட்டு மற்றவனை புருஷனாக அடைய விரும்பினேனல்லவா? அந்தப் பகவான் ஸகலப்பிராணிகளுக்கும் ஸுஹிருத்தாகவும் மிக்க அன்புள்ள நாயகனாகவுமிருக்கிறார். ஆனதால் என்னுடைய ஆத்மாவை அவரிடம் ஸமர்பித்து (விலைபோகக்கொடுத்து) லக்ஷ்மீதேவிபோல் அவருடன் ரமிப்பேன்.

மற்ற மனிதர்களும், தேவர்களும் இறப்புப் பிறப்புள்ளவர்கள்; காலத்திற்குப் பயந்தவர்கள்; அவர்கள் தங்கள் ஸ்திரீகளுக்கு என்ன இஷ்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். (ஆனதால் இவ்வுலகத்திலும், பரலோகத்திலும் பகவானைக்காட்டிலும் ஸேவிக்கக் கூடியவன் வேறொருவனுமில்லை என்று தாத்பர்யம்) என்னால் செய்யப்பட்ட ஏதோ ஒரு புண்யத்தால் பகவானாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவுக்கு என்னிடம் ஸந்தோஷம் உண்டாயிருக்கிறது. அதனால் தான் துராசையுள்ளவளான எனக்கும் இம்மாதிரியான நிர்வேதம் உண்டாயிற்று. அதனால் மிகவும் ஸுகத்தை யடைகிறேன். நான் மிக்க பாக்கியமுள்ளவள்; அப்படி இல்லாவிடில் நிர்வேதமுண்டாவதற்குக் காரணங் களான கஷ்டங்கள் எனக்கு நேரிடாது. அப்படிப்பட்ட ச்ரமம் உண்டானதால் நிர்வேதம்

(போதுமென்ற எண்ணம் ஸ்வராக்யம்) உண்டாயிற்று அந்த நிர்வேதத்தால் வீடு முதலியவைகளில் ஆசையை ஒழித்து மனிதன் சாந்தியை அடைவான். க்ராம்யர்களான மனிதர்களிடம் ஆசைப்பட்டிருந்த நான் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் உபகாரத்தைத் (நிர்வேதத்தை) தலையில் வஹித்து, துராசையை யொழித்து, அதிபதியாகிய அந்தப் பகவானைச் சரணமடைகிறேன். ஆனதால் தைவச்செயலாகக் கிடைத்ததைக்கொண்டு ஸந்தோஷமாக ஜீவித்து ஸந்தோஷத்தைக் கொடுப்பவரும், ஆத்மாவுமான இந்த பகவானுடன் விளையாடுகிறேன். ஸம்ஸாரமாகிய பாழுங்கிணற்றில் விழுந்தவனும், விஷயங்களில் மூழ்கி விவேகமற்றவனும், காலமாகிய ஸர்ப்பத்தால் பிடிக்கப்பட்டவனுமான ஆத்மாவைக் காப்பாற்றுவதற்கு அந்தப் பகவானைவிட யாரால் முடியும்? இந்த ஜகத்முழுவதும் காலமாகிய ஸர்ப்பத்தால் விழுங்கப் படுகிறது என நினைத்து, ஸாவதானனாகி விஷயபோகங்களில் ஆசைப்படாமல் மனிதன் எப்பொழுது வைராக்கியத்தை அடைகிறானோ, அப்பொழுது தானே ஆத்மாவைக் காப்பாற்றுகிறவனாகிறான். (ப்ரேமையாலேயே ஸேவிக்கிறேன் என்று கருத்து)

இம்மாதிரியான நிச்சயத்துடன் அந்தப் பிங்களா யென்பவள் புருஷர்களிடத்திலுள்ள ஆசையாலுண்டாகிய துராசையையொழித்து படுக்கையில் படுத்தான். இந்த பிங்களை புருஷர்களிடம் ஆசை கொண்டு உள்ளே போவதும், வெளியே வருகிறதும், வாயிற்படியில் நிற்பதுமாக விருந்தாள். ஆசையை ஒழித்த வுடன் அவள் கவலையற்று ஸுகமாகத் தூங்கினா ளல்லவா? ஆனதால் விஷயங்களில்

ஆசைப்படுவது மிக்க துக்கத்தை விளைவிக்கும்; ஆசைப்படாமலிருப்பது மிகுந்த ஸுகத்தைக் கொடுக்கும் இதை பிங்களாயென் பவளிடமிருந்து தெரிந்து கொண்டேன் என்று கருத்து).

அத்தியாயம்–9

குரரம் முதலியவைகளிடத்தில் அப்யஸித்த குணங்கள்.

மனிதர்களுக்கு எந்த வஸ்துக்களில் மிக்க ஆசையி ருக்கிறதோ அதனைச்சேர்த்து வைத்துக்கொள்வதால் துக்கமுண்டாகுமேயல்லாமல் ஸுகமுண்டாகிறதில்லை. இதனைத் தெரிந்து எவன் சேர்த்து வைத்துக் கொள்ளாமலிருக்கிறானோ, அவன் அளவற்ற ஸுகத்தை அடைகிறான். ஒரு குரரமென்ற பக்ஷி மாம்ஸத்தை வைத்துக்கொண்டிருந்தது. அதனைக்காட்டிலும் பல சாலிகளான மற்ற பக்ஷிகள் ஆஹாரங்கிடைக்காததால் அதனை ஹிம்ஸித்தன. அப்பொழுது அந்தப் பறவை தன்னிடமிருந்து மாம்ஸத்தை கீழே போட்டது. பின்பு மற்ற பறவைகள் அதனருகில் செல்லவில்லை. அதனால் அது மிக்க ஸுகத்தை அடைந்தது.

3–4. சிறுவனுக்கு எப்படி மானம் அவமானம் இவைகளில்லையோ, கவலையில்லையோ அதுபோல் எனக்கும், மானம் அவமானம் இவ்விரண்டும் இல்லை. வீடு, புத்திரன் இவைகளுள்ளவர்களுக்கு எவ்வித கவலையிருக்குமோ, அதுவும் எனக்கில்லை. ஆத்மா விடத்தில் ப்ரியமுள்ளவனாகி, ஆத்மாவுடன் விளை யாடிக்கொண்டு சிறுவன்போல் ஸஞ்சரிக்கிறேன். மேலும் எவன் ஒன்றையும் தெரிந்துகொள்ளாமல் முயற்சியற்று இருக்கிறானோ, எவன் எல்லாவ ற்றையும் தெரிந்துகொண்டவனோ, அவ்விருவர்களும் கவலையற்றவர்கள். பரமானந்தத்தில் மூழ்கியவர்கள். சிறுவனிடமிருந்து கவலையற்றிருப்பதை கற்றுக்

கொண்டேனென்று கருத்து)

5–10. ஒரு சிறு பெண் (சிறுமி) தாய் முதலிய பந்துக்கள் வீட்டிலில்லாத காலத்தில் தன்னை கல்யாணஞ்செய்து கொள்வதற்காக பார்க்கவந்தவர் களுக்கு அன்னமளிப்பதற்காக ரஹஸ்யமாக நெல்லைக் குத்தினாள். அப்பொழுது அவள் கையிலணிந்திருந்த வளைகள் மிகவும் சப்தித்தன. அதனைக்கேட்டு அந்தப் பெண் மிக்க வெட்கமைடைந்து சப்தமுண்டாகா மலிருப்பதற்காக ஒவ்வொன்றாக உடைத்தாள். ஒவ்வொரு கையிலும் இரண்டுவளைகள் மிஞ்சின. பின்பு முன் போல நெல்லைக்குத்தும் பொழுது அவ்விரண்டு வளைகளும் ஒன்றோடொன்று சேர்ந்து சப்தித்தன. அப்பொழுது ஒருவளையை உடைத்தாள். ஒன்று எஞ்சியது. அதனால் சப்தமுண்டாகவில்லை. ஆனதால் லோகத்தின் உண்மையைத் தெரிந்துகொள்வதற்காக ஸஞ்சரித்த நான் இதை அந்தச் சிறு பெண்ணிடமாகத் தெரிந்துகொண்டேன். அநேகர்கள் சேர்ந்து ஒருவிடத்தில் வஸித்தால் சண்டைக்கு ஹேதுவாகும். இருவர்களாக வஸித்தால் வார்த்தைக்கு இடமாகும்; ஆனதால் அந்தச் சிறுமியின் வளை போல் ஒருவனாகவே ஸஞ்சரிக்க வேண்டும்.

11–13. ஸுகமாக ஆஸனத்தில் உட்கார்ந்து ச்வாஸத்தை அடக்கி பல விஷயங்களில் செல்லுகிற மனத்தை வைராக்கியத்தால் தடுத்து அப்யாஸ விசே ஷத்தால், லக்ஷ்யத்தில் ஸ்திரமாக செலுத்த வேண்டும். லயம், விக்ஷேபம் இவைகளை ஸ்வபாவமாகக் கொண்ட மனமானது பகவானிடத்தில் செலுத்தப்பட்டு ஸ்திரப் படுமானால் கிரமமாக கர்மவாஸனைகளை யொழிக்கும்.

ஸத்வகுணம் விருத்தியாகும். அப்பொழுது ரஜோ குணமும், தமோகுணமும் நசிக்கும். அப்பொழுது எரிப்பதற்குக் கட்டையில்லாமல் அக்னி சாந்தமாவது போல் மனத்திற்கு விருத்திகளற்றுப்போவதால் ப்ரஹ்ம மாகாரமாகவிருந்து சாந்தியடையும். அம்பைக் கோணலின்றி ருஜுவாகச் செய்வதில் நோக்கமுள்ள வனுடைய அருகில் அரசன், பேரி முதலிய வாத்ய கோஷங்களுடன் சென்றாலும் அரசன் போகிறா னென்பது எப்படி அவனுக்குத் தெரியாதோ அப்படி விருத்திகளற்று ஆத்மாகாரமாகவிருக்கும், மனமுள்ள வன் வெளியில் நடப்பதையாவது முன் நடந்ததை யாவது ஒன்றையுமறியாதவனாகவிருப்பான்.

14–15. ஸர்ப்பம் எப்படி ஜனங்களிடம் பயந்து தனியாக ஸஞ்சரிக்கிறதோ, (யோகிகளானாலும் அநேகர்களுடன் வஸிக்கக் கூடாதென்பது சிறுமியி னிடமாக அப்யஸிக்கப்பட்டது. ஸாமான்ய ஜனங்க ளுடன் சேரக்கூடாதென்பது ஸர்ப்பத்தினிடம் கற்றுக் கொண்டேனென்று தாத்பர்யம்) எப்படி ஸ்திரமாக வீட்டை வைத்துக்கொள்ளவில்லையோ, எப்பொழுதும் ஜாக்கிரதையாக விருக்கிறதோ,, ரஹஸ்யமாக கண்டு பிடிக்க முடியாததாயிருக்கிறதோ, (விஷமுள்ளதோ அல்லது விஷமில்லாததோவென்று) அப்படி முனியாக விருப்பவனுமிருக்கவேண்டும். அதிகமாகப் பேசக் கூடாது. சரீரம் ஸ்திரமில்லாததால் அதன் வாஸத் திற்காக வீடுகட்டுவது துக்கத்தையே விளைவிக்கிறது. அதனால் ப்ரயோஜனமில்லை.ஸர்ப்பமானது பிறரால் செய்யப்பட்ட கிருஹத்தில் ப்ரவேசித்து ஸுகமாக விருத்தியடைகிறதல்லவா ?

16–21. ப்ரளயகாலத்தில் நாராயணர் ஒருவரே முந்தித் தம்முடைய மாயையைக்கொண்டு ஸிருஷ்டிக்கப்பெற்ற இந்த ஜகத்தை கால சக்தியைக்கொண்டு ஸம்ஹரித்து தாமொருவராகவிருந்தார், அவர் ஜாதீயபேதமற்றவர்; விஜாதீயபேதமற்றவர்; (ஸத்வம் முதலிய சக்திகள் ஸாம்யாவஸ்தையை அடைந்த பொழுது ப்ரதானம், புருஷன் இவைகளுக்கு அதி பதியாக தம்மைக்காட்டிலும் வேறு ஆதாரமற்றவராக விருந்தார்.) அவரே உபாதியற்றவர்; பரமானந்த ஸ்வ ரூபி; கைவல்யமென்ற சப்தத்தின் பொருள்; ப்ரஹ்ம தேவர், முக்தர்கள் ஆகிய இவர்களால் அடையக் கூடியவர்; பின்பு அவர் தம்முடைய மஹிமையான காலத்தில் முக்குண ஸ்வரூபமாகிய மாயையைத் தூண்டி அதைக்கொண்டு மஹத்தத்வத்தைப் படைக்கிறார். ஓ ஆசை முதலிய சத்ருக்களை ஜயித்தவரே! (ஸம்ஸாரத் திற்குக் காரணமான மஹத்தத்வத்தை ஸிருஷ்டிக்கிறார் யென்பதைக் கேட்டு பயப்பட வேண்டாமென்று கருத்து) அந்த மாயாகார்யமான மஹத்தத்வம் பலவகையான ஜகத்தை அஹங்காரத்தின் வழியாக படைக்கிறதென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அதனிடத்தில் இந்த ஜகத்தானது கோர்க்கப் பட்டிருக்கிறது. அதனால் ஜீவன் ஸம்ஸாரத்தை அடைகிறான். அந்தக் காரணத்தால் அதனை ஸமித்ராத்மாவென்கிறார்கள். பட்டுப்பூச்சியானது ஹிருதயத்திலிருந்து உண்டான பட்டு நூல்களை முகத்தால் விஸ்தரித்து அதனால் விளையாடி திரும்பவும் எப்படி விழுங்குகிறதோ அதுபோல மஹேச்வரன் ஜகத்தைப் படைத்து ஸம்ஹரிக்கிறார்.

22–23. குளவியானது புழுவைக் கூட்டிலடைத்து

அதைச்சுற்றி சப்தித்துக்கொண்டிருக்கிறது. அதனைக் கேட்டு உள்ளிருக்கும் புழு மனத்தை அதிலேயே செலுத்தி முந்திய ஸ்வரூபத்தை விடாமலேயே குள வியாக ஆகிறது போல் ஸ்நேஹத்தாலாவது, த்வேஷத் தாலாவது, பயத்தாலாவது ஜனங்கள் மனத்தை எவ் விடத்தில் ஸ்திரமாகச் செலுத்துகிறார்களோ, அவர் கள் அதன் ஸாரூப்யத்தை அடைவார்கள்.

24–33. மேற்காட்டியவைகளிடமிருந்து மேற் காட்டிய குணங்களை யெடுத்துகொண்டேன். இனி என்னுடைய தேஹத்தினிடமாகத் தெரிந்துக்கொண் டதைச் சொல்லுகிறேன் கேளும், இந்த தேஹமானது மிக்க துக்கத்தைக் கொடுக்கக்கூடிய ஜனன மரணங் களுள்ளது; அதனால் வைராக்யம், விவேகம் இவை களுக்குக் காரணமாயுள்ளது; அதனால் எனக்குக் குருவாயிற்று. இதனால் உண்மையை ஆலோசித்து, பிந்தி இந்த சரீரத்தை நாய் முதலியவை பக்ஷிக்கட்டோகின்றனவானதால் இது பிறருடையதென்று நிச்சயித்து அதில் அபிமானத்தை ஒழித்து ஸஞ்ச ரிக்கிறேன். மேலும் இந்த சரீரத்தின் உபயோகத்திற் காகவே மனைவி, மக்கள், பணம், பசுக்கள், வேலைக் காரர்கள், வீடு, பந்துக்கள் இவர்களை போஷிக்கி றார்கள். அதற்காகவே மிக்க ச்ரமப்பட்டு பணத்தையும் ஸம்பாதிக்கிறார்கள். அப்படிப்பட்ட சரீரம் நசித்து விடுகிறது. பின்னும் அந்த தேஹம் தான் நசிக்கும் பொழுது வேறு சரீரத்தைக் கொடுக்கக் கூடிய கர்ம மாகிய விதையை யுண்டுபண்ணி வைக்கிறது. சரீரம் போன பிறகும் ஜீவனுக்குக் கஷ்டம் நிவர்த்தியடைய வில்லை) மரமானது விதையை உற்பத்திசெய்துவிட்டு நசிக்கவில்லையா? மேலும் அனேகம் ஸ்திரீகளை

மணஞ்செய்துகொண்ட ஒரு புருஷனை ஒவ்வொரு ஸ்திரீயும் தனியாக பிடித்திழுப்பதுபோல், மனிதனை நாக்கு ஒருபக்கத்திலிழுக்கிறது. ஒரு ஸமயம் தாஹம் உபத்ரவிக்கிறது; மற்றொரு ஸமயம் சிச்னமும் (ஆண்குறி) மற்றொருவேளை தோலும், பின்னுமொரு ஸமயம் வயிறும், மற்றொரு ஸமயம் காதும், இன்னு மொரு ஸமயம் மூக்கும், சஞ்சலமான கண் அதன் விஷயமான ரூபத்திலும், மற்ற கர்மேந்திரியங்கள் அதன் விஷயங்களிலும் ஜீவனை, அல்லது தேஹத்தை இழுத்துகொண்டு செல்லுகின்றன. (அதனால் தேஹத்தைப் பார்த்து வைராக்யம் விவேகம் இவைகளை அடைய வேண்டுமென்று கருத்து) மேலும் பரமேச்வரன் தம்முடைய சக்தியாகிய மாயையைக்கொண்டு மரங்கள், ஸர்ப்பங்கள், பசுக்கள், பறவைகள், கொசுக்கள், மீன்கள் முதலிய சரீரரத்தைப்படைத்து ஸந்தோஷித்தார். (புருஷ சரீரத்தில் ப்ரஹ்மத்தைத் தெரிந்துகொள்ளக்கூடிய புத்தியிருக்கிறது, இந்த மனித ஜன்மம் கிடைப்பது மிக்க அரிது. அனேக ஜனமங்களெடுத்த பின் மனித ஜன்மம் கிடைக்கும் அப்படி துர்லபமான தேஹத்தை அடைந்தும் அது அஸ்திரமானதால் அந்த சரீரம் நாசமடைவதற்கு முன்னமேயே க்ஷேமத்தை அடையுமுபாயத்தைச் செய்யவேண்டும்.) விஷய ஸுகத்தில் ஆசைப்படக்கூடாது. விஷய ஸுகம் தாழ்ந்த ஜன்மத்திலும் கிடைக்கிறது. இப்படி அநேக ஆசார்யர்களிடமாக ஞானதீபத்தை அடைந்து ஆசையை யொழித்து, அஹங்காரமற்று ஆத்ம ஸ்வரூபத்தில் ரமித்துக்கொண்டு இப்பூமியில் ஸஞ்சரிக்கிறேன், மஹர்ஷிகள் இந்த ப்ரஹ்மத்தை ப்ரபஞ்சமுள்ளதென்றும், ப்ரபஞ்சமற்றதென்றும் பல வகையாகச் சொல்லுகிறார்கள்; ஆனதால் ஒரே

குருவினிடமிருந்து பூர்ணமான ஜ்ஞானமுண்டாகிற தில்லை" என்று அந்த ப்ராஹ்மணன் (தத்தாத்ரேயர்) யதுவை நோக்கிச்சொல்லி அவரிடம் விடைபெற்று அரசனால் நமஸ்கரிக்கப்பெற்று, பூஜிக்கப்பெற்று, வந்தவழியே திரும்பிச் சென்றார். இம்மாதிரியான அவதூதருடைய வார்த்தையைக்கேட்டு நம்முடைய பெரியோர்களுக்குள் பெரியவரான யதுவானவர் ஸகல ஆசைகளையும் ஒழித்து ஸமபுத்தியுள்ளவராக ஆனார் என்று ஸ்ரீ கிருஷ்ணன் உத்தவருக்குச சொன்னார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–10

தத்வஜ்ஞான ஸாதனங்கள்.

1–11. ஸ்ரீ கிருஷ்ணன் உத்தவரை நோக்கி "என்னால் சொல்லப்பட்ட பாஞ்சராத்ரம் முதலிய தர்மங்களுக்கு விரோதமின்றி என்னையே ஆச்ரயித்து தனது ஜாதிக்கும், ஆச்ரமத்திற்கும, குலத்திற்கும் தகுதியான ஆசாரத்தை யநுஷ்டிக்கவேண்டும். தனக்குரிய தர்மத்தை அனுஷ்டிப்பதால் சித்தம் சுத்தமாகும். "அப்பொழுது ஜனங்கள் விஷயங்களை ஸத்யங்களென்று நினைத்து ஸகல கார்யங்களையும் ஆரம்பிக்கிறார்கள். அவைகளின் பயனோ விபரீதமாக ஆகிறது" என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். மேலும் இந்திரியங்களால் பலவகையான காமனைகள் ஏற்படுகின்றதல்லவா? அவைகள் பலவகையானதாலும் இந்திரியங்களாலுண்டானவையானதாலும் பயனற்றவை. மனத்தாலுண்டாகும் ஸ்வப்னம், மனோரதம் ஆகிய இவைகளே அவைகளுக்கு உதாஹரணங்களாகின்றன.

மோக்ஷத்தை விரும்பியவன் காம்ய கர்மங்களை யனுஷ்டிக்கவேண்டாம். நித்ய நைமித்திகமான கர்மத்தை அனுஷ்டிக்கவேண்டும். மேலும் நன்றாக ஆத்மவிசாரஞ் செய்பவன். கர்மங்களை செய்யவேண்டும் என்ற விதியையும் ஆதரிக்கவேண்டாம். பிறருக்கு ஹிம்ஸைசெய்யாமலிருப்பது முதலிய நியமங்களை மிக்க ஆதரவுடன் எப்பொழுதும் அனுஷ்டிக்க வேண்டும். சௌசம் முதலிய நியமங்களை ஆத்ம ஜ்ஞானத்திற்கு விரோதமின்றி தன்னுடைய சக்திக்குத் தக்கவாறு சில ஸமயம் அனுஷ்டிக்க வேண்டும்.

(யமம், நியமம் இவைகளின் ஸ்வரூபமும் 19–வது அத்யாயத்தில் காட்டப்பட்டிருக்கிறது) பின்னும் என்னைத் தெரிந்து கொண்டவனும் என்னுடைய ஸ்வரூபியும், சாந்தனுமாகிய குருவை மிக்க ஆதரவுடன் உபாஸிக்கவேண்டும். ஆசார்யனை உபாஸிப்பவன் எப்படியிருக்க வேண்டுமென்றால்– அஹங்காரமற்றவனாகவும், மாத்ஸர்யமில்லாதவனாகவும், சோம்பலில்லாதவனாகவும், புத்திரன் முதலியவர்களிடத்தில் தன்னுடையதென்ற மமதையில்லாதவனாகவும், ஆசார்யனிடத்தில் ஸ்திரமான ப்ரீதியுள்ளவனாகவும், பரபரப்பில்லாதவனாகவும், விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற விருப்பமுள்ளவனாகவும், அஸூயையற்றவனாகவும், (குணங்களை தோஷமாகச் சொல்வது அஸூயை) வீண்வார்த்தைப் பேசாதவனாகவுமிருக்க வேண்டும்; மேலும் ஸகலதேஹத்திலுமிருக்கும் ஆத்மா ஒருவரானதால் ஸகல சரீரங்களிலும், ஆத்மாவிலும் ஸுகம் ஸமமானது.

ஆனதால் புத்திரன், களத்திரம், வீடு, வயல், பந்துக்கள், பணம் இவைகளைமாத்திரம் என்னுடையவையென்று ஏன் நினைக்கவேண்டும்? என்று எண்ணி அவைகளில் உதாஸீனனாகவிருக்க வேண்டும். எரிக்கும் அக்கினியானது தன்னால் எரிக்கத்தக்கக் கட்டையைக் காட்டிலும் எப்படி வேறானதோ, ப்ரகாசத்தையுண்டுபண்ணும் அக்னி எப்படி ப்ரகாசிக்கும் வஸ்துக்களைக்காட்டிலும் வேறானதோ, அப்படி ஆத்மா எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருப்பதனால்

பார்க்கப்படும் வஸ்துக்களை காட்டிலும் வேறானவர். பின்னும் ஆத்மா தாமாக ப்ரகாசிப்பவரானதால் ஜடங்களைக் காட்டிலும் விலக்ஷணர். ஆனதால் ஸ்தூல, ஸூக்ஷ்மங்களைக் காட்டிலும் ஆத்மா விலக்ஷணர். ஆனதால் தேஹவிலக்ஷணராகிய ஆத்மா எல்லா தேஹங்களிலும் ஒருவரானதால் புத்திரன் முதலியவர்களிடத்தில் மமதை செய்யவேண்டாம். ஆத்மாவிற்கு நாசம், ஜனனம் இவைகளில்லை. ஆத்மா அணுவுமல்ல, பெரிதுமல்ல, அநேகமுமல்ல. அவைகள் சரீரதர்மங்களேயாம். ஆனாலும் ஆத்மா சரீரஸம்பந்தத்தை அடைந்து அந்த தர்மங்களுள்ளவர் போலத் தோன்றுகிறார். (நாசம், ஜனனம், அணுவாவிருப்பது, பெரிதாகவிருப்பது, அநேகமாகவிருப்பது இவையெல்லாம் சரீரத்தின் தர்மமானதால் அந்தந்த உபாதி ஸம்பந்தத்தால் ஆத்மாவிற்கும் அவைகளிருப்பதாகத் தோன்றுகிறதேயொழிய உண்மையில் இல்லை. ஈச்வரனுக்கு ஸ்வாதீனமான மாயையின் குணங்களால் இந்த சரீரம் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. அதனை ஆத்மாவென்று நினைத்ததால் ஸம்ஸாரமேற்பட்டது. அது ஆத்மஜ்ஞானத்தால் நிவர்த்தியாகவேண்டும் ஆனதால் ஆத்மவிசாரஞ் செய்து இந்த சரீரத்திலபரமாத்மாவிருப்பதாகத் தெரிந்துகொண்டு ஸ்தூல ஸூக்ஷ்மங்களை ஆத்மாவென்று நினைத்திருந்ததைக் கிரமமாக மாற்றிக்கொள்ளவேண்டும்.

12–13. மேல் அரணி, கீழ் அரணி இவைகளைச் சேர்த்துக் கடைவதாலுண்டான அக்னியானது ஸமித்துகளை யெரித்து ஸமித்து இல்லாதபொழுது சாந்தமாவதுபோல் ஆசார்யனால் சிஷ்யனுக்குபதேசிக்கப்பெற்ற வித்யை(ஜ்ஞான) குணங்களாலுண்டான

மாயையை நிவர்த்திக்கிறது. அப்பொழுது பரமானந்த ஸ்வரூபமாகிறான். ஆசார்யனே கீழ்அரணி. சிஷ்யன் மேலரணி; அவர் சிஷ்யனுக்குபதேசிப்பதே சேர்க்கை, அதனாலுண்டாகும் வித்தையே அக்னி. (சுத்தமானதால் அக்னியென்று சொல்லப்பட்டது.)

14–30. (ஆத்மா தாமாக ப்ராகாசிப்பவர்; ஜ்ஞான ஸ்வரூபி; நித்யர்; ஒருவர்; அதைகாட்டிலும் மற்றவை யெல்லாம் அநித்யங்கள். மாயாகார்யங்கள். ஆனதால் அவைகளில் ஆசைப்படாமல் ஆத்மஜ்ஞானத்தை அடைந்தால் மோக்ஷத்தை அடைவானென்ற வேதத்தின் தாத்பர்யம், மேற்காட்டிய ச்லோகங்களால் 'காட்டப் பட்டது, இனி இதற்கு விரோதமாகச் சொல்பவர்களு டைய அபிப்பிராயத்தைக்காட்டி நிராகரிக்கப்படுகிறது.) கர்மங்களை அனுஷ்டிக்கும் ஜீவர்கள் அவைகளின் பயனாகிய ஸுகதுக்கங்களை அனுபவிக்கிறார்கள்.

அவர்கள் அனேகர்கள்; ஸ்வர்க்கம் முதலிய போகஸ்தானமாகிய லோகமும், அனுபவிக்கும் காலமும், அனுபவிப்பவர்களும், நித்யர்களென்றும், புஷ்பமாலை சந்தனம் முதலிய போக்யவஸ்துக்களும் ப்ரவாஹ நித்யங்களென்றும், அவைகள் உண்மையானவைகளே யொழிய மாயாமயங்களல்ல. இதுகுடம், இது வஸ்திரம் என்று பலவகையாக ஜ்ஞானமுண்டாகிறதனால் ஆத்ம ஜ்ஞானம் நித்யமல்ல; ஒன்றல்லவென்றும் நினைக் கிறாயா? (நான் என்ற ஜ்ஞானத்தால் அறியப்படுகிறதே ஆத்மா. ஒவ்வொரு சரீரத்திலும் ஒவ்வொரு ஆத்மா, கர்மங்களை யனுஷ்டிப்பவனும், (கர்த்தா) ஸுக துக்கங்களை யனுபவிப்பவனுமாக (போக்தா) இருக்கி றான். விகாரமற்று ஆத்மா ஒருவனாகவிருக்கிறானென் பதில்லை. ஸுகங்களை அனுபவிக்கும் ஸ்தலங்களா கிய ஸ்வர்க்கம் முதலியவைகளும், அனுபவ காலமும் போக்தாவாகிய புருஷனும் நித்யங்கள். போக்கிய

வஸ்துக்களும் நித்யங்களே. ஜ்ஞானம் பலவகையாக உண்டாவதால் ஆத்மஜ்ஞானம் ஒன்றல்ல. இந்த ஜகத்தைப் படைப்பவரான ஈச்வரன் ஒருவர் இருக்கிறாரென்பதில்லை. இது ஸ்வதந்திரமானது என்று (ஜைமினியின் அபிப்பிராயம்) ஓ உத்தவ! மேற்காட்டிய மதத்தையொப்புக் கொண்டாலும் பிராணிகளுக்கு தேஹஸம்பந்தத்தாலும், ஸம்வத்ஸரம் முதலிய காலத்தின் அவயத்தாலும், ஜன்மம் முதலிய விகாரங்களேற்படுகின்றன. ஜீவர்களை ஸ்வதந்திரர்க ளென்று ஒப்புக்கொண்டால் துக்கத்தைக் கொடுக்கும் கர்மங்களை அனுஷ்டித்து துக்கத்தை. ஏன் அனுபவிக்கிறார்கள்? ஆனதால் கர்மங்களைச் செய்வதில் ஜீவர்களுக்கு ஸ்வாதந்திரியமில்லையென்று காணப்படுகிறது. ஸ்வாதந்திரியமில்லாதவனுக்கு என்ன புருஷார்த்தங் கிடைக்கும்? நல்ல கர்மங்களை அனுஷ்டித்து ஸுகத்தை அனுபவிக்கலாமென்ற ஜ்ஞானமில்லாத மூடர்கள் துக்கத்தை அடைகிறார்கள் என்று சொல்வதும் பொருந்தாது. ஏனென்றால் எவன் வித்வானோ அவன் ஸுகத்தை அடைகிறானென்ப தில்லை. மூடன் துக்கத்தை அடைகிறானென்பது மில்லை. ஆனதால் நாம் நல்ல கார்யத்தைச் செய்து ஸுகமாக விருக்கிறோமென்று நினைப்பது வீணான அஹங்காரமேயாம். (ஈச்வரனுக்கு வசப்பட்டுக் கர்மங்களைச் செய்கிறார்களென்று கருத்து) ஸுகத்தை ஸம்பாதித்துக்கொள்ளும் உபாயமும், துக்கத்தை வர வொட்டாமல் தடுப்பதற்கு உபாயமும் ஜீவர்களுக்குத் தெரியுமானால் மிருத்யுவை வரவொட்டாமல் தடுப்பதற்கு உபாயமும் தெரிந்திருக்கலாம். (அப்படி யில்லையென்று கருத்து) கொலைக்களத்திற்கு சென்ற வனுக்கு மற்ற விஷயங்கள் ஸந்தோஷத்தை எப்படி உண்டு பண்ணுகிறதில்லையோ, அப்படி ஸமீபத்தில் மிருத்யுவிருக்கும்பொழுது எதுதான் மனிதனுக்கு

ஸந்தோஷத்தைக்கொடுக்கும் (ஆனதால் இவ்வுலகத்தில் ஸுகமேயில்லை) ஸ்வர்க்கத்தில் ஸுகமிருப்பதாகக் கேட்டிருந்தாலும் அது இவ்வுலகத்திய ஸுகம் போன்றதேயாம். ஏனென்றால் அவ்விடத்தில் பிறர் ஸுகப்படுவதைப்பார்த்து ஸஹியாமலிருப்பது, குணங்களை தோஷமாகச் சொல்வது, குறைவு, நாசம் இவைகளிருக்கின்றன. மேலுமவைகளை அடைவதற்கு யாகத்தைச் செய்யவேண்டும்.

அதற்குப் பலவகையான இடையூறுகளிருக்கின்றன. ஆனதால் கிருஷிபோல் அதுவும் ஸுகமானதல்ல. இடையூறின்றி யாகம் முதலிய தர்மங்களை அனுஷ்டித்து ஸ்வர்க்கம் முதலிய லோகத்தை ஸம்பாதித்தாலும் அதன் ஸுகத்தைப்பற்றிச் சொல்லுகிறேன் கேளும். தீக்ஷிதர்கள் இவ்வுலகத்தில் யாகங்களைச்செய்து தேவதைகளைப் பூஜித்து ஸ்வர்க்க லோகத்திற்குச் செல்லுகிறார்கள். அவ்விடத்தில் தேவர்களைப்போல் தங்களுடைய கர்மத்தால் ஸம்பாதிக்கப்பெற்ற போகங்களை அனுபவிக்கிறார்கள். மேலும் ஸகல போக்யவஸ்துக்களுள்ள சுத்தமான விமானத்தில் கந்தர்வர்களால் கானஞ்செய்யப்பட்டு தேவஸ்திரீகளின் நடுவில் அழகிய சரீரத்துடன் வஸிக்கிறார்கள். மேலும் சலங்கை கட்டியதும் இஷ்டப்படிச் செல்லக்கூடியதுமான விமானத்தில் ஸ்திரீகளுடன் ஏறிக்கொண்டு நந்தனம் முதலிய தோட்டங்களில் விளையாடுகிறார்கள். அப்பொழுது தாங்கள் பூமியில் விழப்போகிறதை நினைக்கிறதில்லை. புண்யமிருக்கும் வரையில் ஸந்தோஷமாகவிருப்பார்கள். புண்யம் குறைந்தவுடன் காலத்தால் தூண்டப்பட்டுப் பூமியில் விழுகிறார்கள். வேதவிதியை மீறி எவன் அதர்மத்தில் விருப்பமுள்ளவனாகி அஸத்துக்களுடன் சேர்ந்து இந்திரியங்களுக்கு வசப்பட்டு போகங்களில்

ஆசைக்கொண்டு ஸ்திரீஸுகத்தை விரும்பி ப்ராணிகளை ஹிம்ஸிக்கிறானோ. பசுக்களைக்கொன்று ப்ரேதம், பூதகணம் ஆகிய இவைகளைப் பூஜிக்கிறானோ, அவன் வெகுகாலம் நரகத்தை அடைந்து ஸ்தாவர ஜன்மத்தை அடைவான். இப்படி தேஹத்தால் துக்கத்தைக்கொடுக்கக் கூடிய கர்மங்களைச்செய்து அதனால் மரண தர்மமுள்ளவனுக்கு ஸுகமேது? ஸ்வர்க்கம் முதலிய லோகங்களுக்கு அதிபதிகளான இந்திரன் முதலியவர்களுக்கும் என்னிடமிருந்து பயமுண்டாகிறது. இரண்டு பரார்த்தம் வரையில் ஜீவிப்பவரான ப்ரஹ்மதேவருக்கும் என்னிடமிருந்து பயமிருக்கிறது. (ப்ரவிருத்திமார்க்கம் அனர்த்தத்தைக் கொடுக்கிறதானதால் அதில் வைராக்கியத்தை அடைவதே மேலானதென்று கருத்து)

31–34. இந்திரியங்கள் கர்மங்களைச் செய்கின்றன. ஸத்வம் முதலியகுணங்கள் இந்திரியங்களைத் தூண்டுகின்றன. இந்திரியங்களுடன் ஸம்பந்தித்த ஜீவன் கர்மங்களின் பயனை அனுபவிக்கிறான், (ஆத்மா ஒன்றையுஞ் செய்யவில்லை. பயனை அனுபவிப்பதும் ஆத்மாவிற்கு உபாதியாலேற்பட்டதே யொழிய உண்மையிலில்லையென்று தாத்பர்யம்) குணங்களாலேற்படும் போகம், கர்மம் இவை எதுவரையிலிருக்கிறதோ அது வரையில் ஆத்மா அனேகமென்று தோன்றும். எதுவரையில் ஆத்மா பலவென்று தோன்றுகிறதோ, அதுவரையில் பரதந்திரனாகத்தன்னை நினைத்துக் கொள்வான். எதுவரையில் பரதந்திரன் என்று நினைக்கிறானோ, அதுவரையில் ஈச்வரனிடமிருந்து பயமுண்டாகும். இப்படி இருப்பவர்கள் துக்கத்தை அடைந்து மோஹிப்பார்கள். குணக்ஷோபமுண்டாகும் பொழுது என்னை காலம், ஆத்மா, ஆகமம், லோகம், ஸ்வபாவம், தர்மம் என்று பலவகையாகச்

Released by Maran's Dog, Toronto , Canada

சொல்லுகிறார்கள்" என்று சொன்னார்.

35–37. அதனைக்கேட்டு உத்தவர் பகவானை நோக்கி "குணங்களாலுண்டான சரீர ஸம்பந்தமுள்ள புருஷனுக்கு கர்மம், ஸுகம் துக்கம் முதலியவைகளில் லாமலெப்படியிருக்கும்? அவைகளில் அஹங்கார்த்தை அடையாமலிருந்தால் அவைகள் பந்தங்களாகிறதில்லை என்றால் அப்படிப்பட்டவன் எப்படி இருப்பான்? எப்படி விளையாடுவான்? எந்த அடையாளங்களுள்ளவனாகவிருப்பான்? எதனைப் புஜிப்பான்? எதனை விடுவான்? எப்படி படுத்திருப்பான்? அல்லது உட்கார்ந்திருப்பானா? நடந்து போவானா? ஓ அச்யுத! ஒருவனே நித்யபந்தனாகவும், நித்யமுக்தனாகவும், எப்படி இருக்கக்கூடுமென்று எனக்கு ப்ரமை உண்டாகிறது. கேள்விகளை அறிந்தவர்களுக்குட் சிறந்தவரான நீர் இதனைச் சொல்லவேண்டும்" என்று ப்ரார்த்தித்தார்.

நோட்டு.

வீரராகவீயத்தில்:– 35வது ச்லோகத்தில் தேவாதி சரீரங்கள் அநேகங்களானதாலும், கார்யமானதாலும். அநித்யங்களானதாலும், ப்ரவிருத்தி கர்மங்களை விட்டு விடலாமென்றும் போக்ய வஸ்துக்கள் புருஷார்த்தமாகாததனால் அவைகளில் ப்ரியம் வைக்கக் கூடாதென்றும் பூர்வபக்ஷமேற்படுகிது. ஆனாலும் அது ஸரியல்ல. தேவாதி சரீரங்கள் அநித்யங்களானாலும், அந்த சரீரத்தை அடைந்த ஜீவர்கள் நித்யர்கள். விஷயங்களின் பரம்பரையும் நித்யம். ஆனதால் ப்ரவிருத்திதர்மம், பயனை அனுபவிக்கும் ஸ்வபாவமுள்ள ஜீவர்களுக்கு புருஷார்த்த ஸாதனமாகிறது. அதனை விட்டுவிடக்கூடாது.

அத்தியாயம்–11

பத்தமுக்த லக்ஷணங்கள்

பக்தன் (ஸம்ஸாரி) முக்தனென்ற வியவஹாரம் எனக்கு ஸ்வாதீனங்களான ஸத்வம் முதலிய குணங்களாலேற்படுகிறதேயொழிய உண்மையிலில்லை. (உபாதிகளாலேற்பட்டதென்று கருத்து) அந்த குணங்களுக்கு மாயை காரணமாகவிருக்கிறது. ஆனதால் பந்தம் (கட்டு) என்பதுமில்லை. மோக்ஷமென்பதுமில்லை. மேலும் சோகம், மோஹம், ஸுகம், துக்கம், தேஹம் ஆகிய இவைகள் மாயையாலேற்படுகின்றன. ஆனதால் ஸம்ஸாரமென்பது உண்மையிலில்லை. புத்தியின் வேறு அவஸ்தையே ஸ்வப்னமாகிறதல்லவா? ஓ உத்தவ! வித்யா என்றும் அவித்யா யென்றும் இரண்டு சக்திகள் மாயையைக்கொண்டு என்னால் உண்டுபண்ணப்பட்டிருக்கின்றன.

அவை பிராணிகளுக்கு முறையே மோக்ஷம், ஸம்ஸாரம் ஆகிய இவைகளைக் கொடுக்கின்றன. அவைகள் அனாதிகள் (எப்பொழுது அவித்யையைப் பரவச் செய்கிறானோ அப்பொழுது ஸம்ஸாரமும் வித்யையை பரவச்செய்யும்பொழுது மோக்ஷமும் தோன்றுகிறதென்று தாத்பர்யம்) மிக்க புத்திசாலியாகிய ஓ உத்தவ! ஜீவனுக்கும் எனக்கும் பேதமில்லை. ஜீவன் என்னுடைய அம்சமேயொழிய வேறில்லை. அப்படிப்பட்ட ஒருவனுக்கே அனாதியான அவித்யா ஸம்பந்தத்தால் பந்தமும் (ஸம்ஸாரம்) வித்யா ஸம்பந்தத்தால் மோக்ஷமுமேற்படுகிறது (சந்திரன் ஒருவனானாலும் ஜலத்தில் ப்ரதிபலித்தால் பிம்பம், ப்ரதிபிம்பம் என்ற பேதம் எப்படி உபாதிஸம்பந்தத்தாலேற்படுகிறதோ, ஜலம் அசைந்தால் ப்ரதிபிம்பமும் அசைவதாக எப்படித் தோற்றுகிறதோ, அப்படி அவித்யையில் ப்ரதிபலிப்பது என்னுடைய அம்சமே, ஜீவன். அவனுக்கு அவித்யையால் பந்தமேற்படுகிறது. மேலும் ஜலம்

நிறைந்த குடத்திலும், குளத்திலும் சந்திரன் ப்ரதி பலித்தால் அந்த ப்ரதிபிம்பம் உபாதி பேதத்தால் குடத்தில் தோன்றுவதைவிட குளத்தில் தோன்றுவது வேறென்று நினைக்கபடுகிறதல்லவா? அப்படி ஜீவன் உபாதி ஸம்பந்தத்தால் அனேகனாகத் தோன்றுகிறானே யொழிய உண்மையில் என்னுடைய அம்சமே; குடம் உடைக்கப்பட்டால் அதில் தோன்றிய சந்திர பிம்பம் உபாதி நாசத்தால் பிம்பத்துடன் ஒன்றாகி விடுகிறது. ஆனாலும் குளத்திலுள்ள ப்ரதிபிம்பம் அப்படியே இருக்கிறது. அதுபோல் ஒரு ஜீவன் உபாதி நாசத்தால் என்னை அடைந்தாலும் உபாதி யுள்ளவன் ஸம்ஸாரியாக விருக்கிறான் என்று கருத்து ஓ உத்தவ! ஈச்வரன் முக்தன். 'ஜீவன் ஸம்ஸாரி. அவ்விருவர்களும் ஒரே சரீரத்திலிருக்கிறார்கள். ஆனால் ஜீவன் ஈச்வரனுக்கு வசப்பட்டவனாகவும், ஈச்வரன் நியந்தா வாகவும் இருக்கிறார். ஜீவன் சோகமுள்ளவன்; ஈச்வரன் ஆனந்தமுள்ளவர்; அவ்விருவர்களும் விருத்த தர்மமுள்ளவர்கள் அவ்விருவர்களுக்குமுள்ள வித்யாஸத்தைச் சொல்லுகிறேன்.

6. இரண்டுபறவைகள் ஒரு மரத்தில் வஸித்தாற் போல் தேஹத்தில் அதைக்காட்டிலும் வேறாக ஜீவன், ஈச்வரன் ஆகிய இருவர்களிருக்கிறார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் ஸமானர்கள்; (சித்ரூபிகளானதால்) தோழர்கள் (பிரிந்திருக்கிறதில்லை, ஒரே மனமுள்ளவர்கள்) இம்மாதிரியென்று குறிப்பிட முடியாததான மாயை யால் அநித்யமான சரீரத்தில் பறவைகள் மரத்தில் கூடுகட்டிகொண்டு வஸிப்பது போலிருக்கிறார்கள்; அவ்விருவர்களுக்குள் ஜீவன் சரீரமாகிய மரத்தில் பழுக்கும் பழமாகிய கர்மபலனை அனுபவிக்கிறான். மற்றொருவனாகிய ஈச்வரன் அதனை அனுபவிக்கிற தில்லை. ஆனாலும் மிக்க ஆனந்தம், ஜ்ஞானம், பலம் ஆகிய இவைகளுள்ளவனாகவிருக்கிறான். ("மேல் நோக்கிய வேர்களுள்ளதும், கீழ்நோக்கிய கிளை களுள்ளதுமான அச்வத்தமரம்" என்று ச்ருதியிலும்,

பகவத்கீதையிலும் ஸம்ஸாரத்தை விருக்ஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் மேற்காட்டிய ச்லோகத்தின் அர்த்தம் "த்வாஸுபர்ணா" என்று ச்ருதியின் பொருளேயாம்.)

7. எவன் சரீரமாகிய மரத்தின் பழமான ஸுகதுக்கங்களை அனுபவிக்கிறதில்லையோ, அந்த ஈச்வரன் தம்மையும்; ஜீவனையும், நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார். ஆனதால் அவர் வித்வானெனப்படு கிறார். கர்மத்தின் பயனை அனுபவிப்பவனாகிய ஜீவன் தன்னுடைய ஸ்வரூபத்தையும், ஈச்வரனுடைய ஸ்வரூபத்தையும் அறியான். எவன் அவித்யையுடன் சேர்ந்திருக்கிறானோ, அந்த ஜீவனே வெகுநாளாக பத்தனாகிறான். (ஸம்ஸாரியென்று கருத்து) எவன் அவித்யையின் ஸம்பந்தமற்று வித்யயை அடைகிறா னோ, அவனே நித்ய முக்தனாகிறான்.

8. தூங்கிவிழித்தபின் ஸ்வப்னத்தில் கண்டவைகளை மனத்தால் நினைக்கிறான். அப்பொழுது அவைகள் தோன்றுகின்றன. ஆனாலும் இது ஸ்வப்னம், உண்மை யல்லவென்று தெரிந்துவிட்டதனால் அந்த ஸுக துக்கங்களை எப்படி தூங்கிவிழித்தவன் அனுபவிக் கிறதில்லையோ, அப்படி ஆத்மாவிற்கும், சரீரம் முதலியவைகளுக்கும், ஸம்பந்தமில்லை. ஆத்மா எல்லாவற்றைக்காட்டிலும் விலக்ஷணன்" என்ற ஜ்ஞானமுள்ளவித்வான். முந்திய ஸம்ஸ்காரத்தால் தேஹத்திலிருந்தாலும் அவன் தேஹத்தில் இருப்ப வனாகமாட்டான். (அஜ்ஞானனாகவிருக்கும்பொழுது சரீரம் முதலியவைகளில் அபிமானத்தை வைத்து அதன் ஸுகதுக்கங்களை தன்னுடையதென்று அனுபவிக்கிறான். ஜ்ஞானமுண்டான பின் அவித்யை யில்லாததால் சரீர ஸம்பந்தமிருப்பதாகத் தோன்றினா லும் அதில் அவனுக்கு அபிநிவேசமில்லை. அதனால் ஸுகத்தையாவது துக்கத்தையாவது அடைகிறதில்லை. முக்தனுக்கு சரீரமிருந்தாலும் அது பந்தகமாகிற

தில்லை என்று கருத்து.) ஸ்வப்னம் பொய்யானதால் அதிலுண்டாகும் ஸுகதுக்கங்களால் ஆத்மாவிற்கு உண்மையில் யாதொரு பயனுமில்லை. ஆனாலும் அதனை உண்மையென்று நினைத்து அதிலுண்டான ஸுகதுக்கங்களை அனுபவிப்பதுபோல் மூடன் தான் சரீரத்திலிருப்பதாகவும் அதன் ஸுகதுக்கங்கள் தன்னைச்சார்ந்தவை என்றும் நினைக்கிறான். (பக்த ஜீவனுக்கும் முக்தஜீவனுக்குமுள்ள பேதம், இதுமுதல் பத்துச்லோகங்களால் காட்டப்படுகிறது.)

9–10. எவன் ஜ்ஞானமுள்ளவனோ, அவன் இந்திரியங்களின் விஷயங்களாகிய ரூபம் முதலியவை களை க்ரஹித்தாலும், குணங்களால் குணங்கள் க்ரஹிக்கப்படும்பொழுதும், நான் பார்க்கிறேன் என்று அஹங்காரத்தை அடையாமல் ஆசை, த்வேஷம் இவைகளற்றிருப்பான். (ஓ அர்ஜுன! குணங்கள், கர்மங்கள் இவைகளின் பிரிவினுடைய உண்மையை அறிந்தவன், இந்திரியங்கள் விஷயங்களை கிரஹிக் கின்றன என்று நினைத்து அவைகளில் ஆசைப்பட மாட்டான். பகவத்கீதா.) மூடன் கர்மாதீனமான இந்த சரீரத்தில் வஸித்து இந்திரியங்களால் செய்யப்படும் கர்மங்களைத் தான் செய்வதாக நினைத்து ஸம்ஸாரத் தை அடைகிறான் (ப்ரகிருதியின் குணங்களால் எல்லாகர்மங்களும் செய்யப்படுகின்றன. ஆனாலும் ஜீவன் அஹங்காரத்தால் புத்தி மயக்கமடைந்து அந்தக் கர்மங்களைத்தான் செய்வதாக நினைக்கிறான்" பகவத்கீதை. 8,9,10–ச்லோகங்களால் முக்தன் சரீர முள்ளவனானாலும் அபிமானமற்று ஸுகதுக்கத்தில் ஸம்பந்தப்படாமலிருப்பானென்று சொல்லப்பட்டது.)

11–12. மேற்காட்டியபடி படுப்பது, உட்காருவது, ஸஞ்சரிப்பது, ஸ்நானஞ்செய்வது, பார்ப்பது, தொடுவது, முகருவது, புஜிப்பது, கேட்பது முதலிவைகளில் மூடன் எப்படி அபிநிவேசத்தை அடைகிறானோ, அப்படி வித்வான் ஆசைப்படாமல் இந்திரியங்கள்

விஷயத்தை புஜிக்கும்பொழுது அதற்கு ஸாக்ஷியாக விருப்பான். (தான் கிரஹிப்பதில்லை) ஆகாயம் எங்கும் வ்யாபித்திருந்தாலும் எப்படி ஒன்றிலும் ஸம்பந்திக்கிறதில்லையோ, ஸூர்யன், ஜலம் முதலியவைகளில் ப்ரதிபலித்தாலும் எப்படி அதன் குணங்களை அடைகிறதில்லையோ; வாயு எங்கும் ஸஞ்சரித்தாலும் எப்படி ஒன்றிலும் ஸம்பந்தத்தை அடைகிறதில்லையோ; அப்படி ஜ்ஞானி, ப்ருகிருதியின் கார்யமான தேஹத்திலிருந்தாலும் ஒன்றிலும் பற்று தலை அடையமாட்டான். அந்த வைராக்கியமாகிய கூர்மையான கத்தியால் எல்லா ஸம்சயங்களையு மொழித்து பேதபுத்தியை விட்டுவிடுவான்; தூங்கி விழித்தவன் ஸ்வப்னத்தில் கண்டவைகளை உண்மை யல்லவென்று தெரிந்துகொள்ளவில்லையா?

13. எவனுடைய ப்ராணன், இந்திரியங்கள், மனம், புத்தி இவைகளுடைய விருத்திகள் ஸங்கல்பமற்றிருக் கின்றனவோ, அவன் தேஹத்திலிருப்பவனானாலும் அதன் குணங்களால் விடப்பட்டவனேயாம். (இது வரையில் பத்தனுக்கும் முக்தனுக்கும் சொல்லப்பட்ட லக்ஷணங்கள்; அவரவர்களால் அறியக்கூடியவை; பிறரால் அறியக்கூடிய லக்ஷணங்கள் பிந்திய ச்லோகங்களால் காட்டப்படுகின்றன).

14–24. துஷ்டர்களாலாவது, புலி முதலிய மிருகங் களாலாவது சரீரத்திற்கு உபத்திரவம் நேர்ந்தால் எவன் துக்கப்படாமலிருக்கிறானோ, தைவச்செயலாக பிறரால் பூஜிக்கப்படும்பொழுதும் எவன் ஸந்தோஷப் படவில்லையோ, அவன் ஜ்ஞானியாவான் ("எவன் குத்தி உபத்திரவிக்கிறானோ, எவன் சந்தனம்பூசிகிறா னோ, அவ்விருவர்களிடத்திலும் முறையே எவன் கோபியாமலும், ஸந்தோஷியாமலுமிருக்கிறானோ, அவனே ஸமபுத்தியுள்ளவன்" – யாஜ்ஞவல்கியர்;)

எவன் தன்னை ஸ்தோத்திரஞ் செய்பவர்களையாவது, தனக்கு உபகாரஞ் செய்பவர்களையாவது ஸ்துதிக் கிறதில்லையோ, தனக்கு அபகாரஞ்செய்பவர்களை எவன் நிந்திக்கிறதில்லையோ, எவன் பிறருடைய குணதோஷங்களைக் சொல்லுகிறதில்லையோ, எவன் எல்லாவற்றையும், ஸமமாக பார்க்கிறானோ, அவன் ஜ்ஞானியாவான், ஜ்ஞானி நல்லது, கெட்டது முதலிய ஒன்றையும் செய்யமாட்டான், ஒன்றையும் சொல்லவும் மாட்டான். ஒன்றையும் நினைக்கமாட்டான். இப்படி லௌகிக வ்யவஹாரத்தை மறந்து ஆத்மாவினிடத்தில் ரமித்து மூடன் போல ஸஞ்சரிப்பான். மேலும் எவன் சாஸ்திரங்களை முழுவதையும் படித்து அவைகளின் அர்த்தங்களை நன்றாய் தெரிந்துகொண்டும் பரமாத் மாவை த்யானஞ்செய்யவில்லையோ, அவனுடைய படிப்பு பயனற்றது. அவன் மலடான பசுவைக் காப்பாற்றியவனுக்கு சமானன். மேலும் கறவையில்லாத பசுவையும், காமத்துக்குபயோகப்படாத மனைவியை யும், பிறருக்கு அதீனமான தேஹத்தையும், அஸத்தான புத்திரனையும், (எவனால் இவ்வுலகத்திய ஸுகமும், பரலோகஸுகமும் கிடைக்கவில்லையோ அந்தப் புத்திரன் அஸத்து எனப்படுகிறான்.) அதிதிகளுக்கு உபயோகப்படுத்தாத பணத்தையும், என்னுடைய குணங்களை யுச்சரிக்காத வாக்கையும் மிக்க ச்ரமப்பட்டு ஜனங்கள் ரக்ஷிக்கிறார்கள். (அதனால் துக்கத்தை அடைவார்களென்று கருத்து)

இந்த ஜகத்தைப் பரிபாலிப்பது படைப்பது, ஸம்ஹரிப்பது ஆகிய எனது சரிதம், லோகத்தைப் பரிசுத்தப்படுத்தக்கூடியது. அந்த சரிதத்தை எவனு டையவாக் உச்சரிக்கவில்லையோ, ஸ்ரீ ராமனாகவும், ஸ்ரீ கிருஷ்ணனாகவும் அவதரித்த என்னுடைய அவதார கதைகளை எவன் கானஞ்செய்யவில்லையோ, அவனு டைய வாக்கு பயனற்றதேயாம். புத்திசாலியாக விருப்பவன் அப்படிப்பட்ட வாக்கைவைத்துக் கொள்ளக்கூடாது. இப்படி உண்மையாக விசாரித்து தேஹம் முதலிவைகளை ஆத்மாவென்று நினைத்திருந்

ததை (ப்ரஹ்மஞானத்தை) விட்டு அதனால் சுத்தமான மனத்தை எங்கும் வ்யாபித்திருக்க என்னிடத்தில் ஸமர்பித்து சாந்தியடையவேண்டும். பரப்ரஹ்மத்தினி டத்தில் மனத்தைச் செலுத்தி ஸ்திரமாக வைத்துக் கொள்ள முடியாவிடில் பயனை விரும்பாமல் கர்மங்களை அனுஷ்டித்து அவைகளை என்னிடம் ஸமர்ப்பனஞ் செய்யவேண்டும். ஓ உத்தவ! என்னு டைய ஸந்தோஷத்திற்காக தர்மம், காமம், அர்த்தம், இவைகளை அடைந்து என்னையே ஆச்ரயித்து மிக்க ச்ரத்தையும் என்னுடைய கதைகளைக் கேட்டுக் கொண்டிருக்கவேண்டும். அவைகள் மிக்க மங்களத்தைக் கொடுப்பவைகள்; லோகத்தைப் பரிசுத்தப்படுத்துபவை கள்; மேலும் என்னுடைய அவதார கதைகளை கானஞ்செய்யவேண்டும். இப்படி அனுஷ்டித்துவந்தால் ஸநாதனனாகிய என்னிடத்தில் ஸ்திரமான பக்தி யுண்டாகும். இப்படி ஸாதுக்களுடைய சேர்க்கையால் பக்தியை அடைந்து என்னை த்யானிப்பான். அப்படி த்யானஞ்செய்பவன் ஸாதுக்களால் காண்பிக்கப்பெற்ற என்னுடைய பதத்தை விரைவில் அடைவான்" என்றார்.

25–27. அதனைக்கேட்ட உத்தவர் பகவானை நோக்கி "ஓ உத்தமச்லோகரே! ஸாதுக்களுடைய ஸங்கத்தால் பக்தியுண்டாகுமென்று சொன்னீரே. எப்படிப்பட்டவன் ஸாதுவென்று உம்முடைய அபிப்பிராயம்? அந்த ஸாதுக்கள் எதனை பக்தியென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்? எப்படிப்பட்ட பக்தி உம்மிடத்தில் உபயோகப்படும்? நீர் ப்ரகிருதி, புருஷன் ஆகிய இருவர்களுக்கும் அதிபதியாகவிருப்ப வர்; ஆகாயம்போல் ஒன்றிலும் சேராதவர்; பரப்ரஹ் மம்; தமது இச்சையால் பலவகையான சரீரங்களை அங்கீகரித்துப் பூமியில் அவதரிக்கிறீர். ரஹஸ்யமான இந்த விஷயத்தை நீர்தான் சொல்லவேண்டும். உம்மை நான் சரணமடைகிறேன், என்று கேட்டுக்கொண்டார்

28–32. அதனைக்கேட்ட பகவான் உத்தவரை

நோக்கி "பிறர் துக்கிப்படதைப் பார்த்து ஸஹியாமலிருப் பது; ஒருவருக்கும் த்ரோஹஞ் செய்யாமலிருப்பது; பொறுமையுள்ளவனாகவிருப்பது, ஸத்வ குணத்தையே ஆச்ரயித்திருப்பது; அஸூயை முதலியவையில்லாமலி ருப்பது; ஸுகதுக்கங்களில் ஸமபுத்தியுள்ளவனாக விருப்பது; எல்லோருக்கும் உபகாரஞ்செய்வது; காமங்களால் மனங்கலங்காமலிருப்பது; இந்திரியங்களை ஜயிப்பது, கல் நெஞ்சமுள்ளவனாகவில்லாமலிருப்பது; நல்லொழுக்கமுள்ளவனாகவிருப்பது; ஒன்றிலும் பற்றுதலில்லாமலிருப்பது; திருஷ்டமான பயன், அதிருஷ்டமான பயன் இவைகளில் ஆசையில்லாம லிருப்பது; ஸ்வல்பமான ஆஹாரமுள்ளவனாகவிருப்பது; மனத்தை அடக்குவது; தனக்குரிய தர்மத்தை அனுஷ் டிப்பதில் ஸ்திரபுத்தி; என்னையே ஆச்ரயித்திருப்பது; முனியாகவிருப்பது; ஸாவதானனாகவிருப்பது; விகாரமற்றிருப்பது; ஆபத்துக்காலத்திலும் தைர்யத்தை விடாமலிருப்பது; பசி, தாஹம், சோகம், மோஹம, கிழத்தனம் மரணம் ஆகிய தோஷங்களை ஜயிப்பது; மானத்தை அபேக்ஷியாமலிருப்பது; பிறருக்கு மானத்தைக்கொடுப்பது; பிறருக்கு ஜ்ஞானத்தை யுபதேசிக்க வல்லமையுள்ளவனாகவிருப்பது; கபடமில்லாமல் இருப்பது; கருணையுள்ளவனாகவி ருப்பது ஆகிய குணங்களுள்ளவன் ஸாதுவெனப்படு கிறான். மேலும் வேதமுகமாக என்னால் சொல்லப் பட்ட நல்ல கர்மங்களை அனுஷ்டிப்பதால் சித்தசுத்தி முதலியவை உண்டாகிறதென்றும், அதனை செய்யா விடில் பாபமுண்டாகுமென்பதையும் தெரிந்துகொண் டும் ஈச்வரனிடத்தில் பக்திசெய்வதாலேயே, சித்தசுத்தி முதலியவை உண்டாகின்றன என்றும், நினைத்து, ஸகல தர்மங்களையும்விட்டு என்னிடத்தில் எவன் பக்தி செய்கிறானோ, அவனும் ஸாதுக்களில் சிறந்த வனாகிறான். எவர்கள் என்னை கால தேசங்களால் அளவிடக்கூடாதவரென்றும், ஸகல ஸ்வரூபியென்றும், ஸத், சித், ஆனந்தம், இந்த ஸ்வரூபியென்றும் தெரிந்துகொண்டு வேறொரு தேவதைகளையும்

நினைக்காமல் என்னையே ஸேவிக்கிறார்களோ, அவர்கள் பக்தர்களுக்குட் சிறந்தவர்கள்.

33–48. என்னுடைய ப்ரதிமை, பக்தர்கள் இவர்களைத் தர்சிப்பது, தொடுவது, பூஜிப்பது, சுச்ரூஷை செய்வது, ஸ்தோத்திரஞ் செய்வது, வணங்குவது, அவைகளுடைய குணங்களையும் சரிதங்களையும் சொல்வது, என்னுடைய கதையைக் கேட்பதில் ச்ரத்தையுள்ளவனாகவிருப்பது, என்னை த்யானஞ்செய்வது, கிடைத்த வஸ்துவை எனக்கு அர்ப்பணம் செய்வது, தன்னை ஈச்வரனுக்குத் தாஸ னென்று நினைத்து ஆத்மாவை என்னிடம் ஸமர்ப்பிப் பது, ஜன்மாஷ்டமி முதலிய தினங்களில் என்னுடைய அவதாரம் சரித்திரம் இவைகளைச் சொல்லி ஸந்தோஷிப்பது, தேவாலயத்தில் வாத்யம், நர்த்தனம், கானம் இவைகளைச்செய்து உத்ஸவம் கொண்டாடுவது, சாதுர்மாஸ்யம், ஏகாதசி முதலிய தினங்களில் என்னுடைய ப்ரதிமைகளை புஷ்பங்களால் அலங் கரித்து வெளியில் தூக்கிக்கொண்டு செல்வது, வைதிகமாகவாவது, தாந்திரிகமாகவாவது, தீக்ஷை செய்துகொண்டு என்னுடைய விருதத்தைத் தரிப்பது, என்னைப் பூஜிப்பதிலும் என்னுடைய ப்ரதிபிம்பத்தின் ப்ரதிஷ்டையிலும் ச்ரத்தைவைப்பது, புஷ்பத்தோட்டம், உபவனம் (பழங்களை முக்கியமாய் உடையது) விளையாடும் ஸ்தலம், பட்டினம் முதலியவைகளை பிறருடன் சேர்ந்து ஏற்படுத்துவது, தேவாலயத்தில் குப்பையில்லாமல் பெருக்குவது, சாணத்தால் மெழுகுவது, ஜலம்தெளிப்பது, கோலம்போட்டு அலங் கரிப்பது, முதலிய சுச்ரூஷையைக் கபடமில்லாமல் செய்வது, அஹங்காரம், டம்பம் இவைகளில்லாமலி ருப்பது, செய்ததைச் சொல்லாமலிருப்பது ஆகிய இவைகள் பக்தியெனப்படுகின்றன. மேலும் மற்ற தைவங்களுக்கு உபயோகப்படுத்திய தீபம், அன்னம் முதலியவைகளை எனக்கு உபயோகிக்கக்கூடாது; எந்தெந்த வஸ்துக்களில் தனக்கு ப்ரியமிருக்கிறதோ; அவைகளை எனக்கு நிவேதனம் செய்யவேண்டும்.

ஓ உத்தவ! ஸூர்யன் அக்னி, ப்ராஹ்மணன், பசு, விஷ்ணுபகவான், ஆகாயம், வாயு, ஜலம், பூமி, ஆத்மா, ஸகலப்ராணிகள் ஆகிய இவைகளில் என்னைப் பூஜிக்கலாம். ஸூர்யனிடத்தில் வேதத்தால் ஸ்தோத்திரஞ்செய்து என்னை பூஜிக்கவேண்டும். அக்னியில் ஆஜ்யம் முதலிய ஹவிஸ்ஸை ஹோமஞ்செய்து என்னைப் பூஜிக்கவேண்டும். அன்னம் முதலியவைகளால் அதிதிகளைத் திருப்தி செய்து ப்ராஹ்மணர்களிடத்தில் என்னைப் பூஜிக்கவேண்டும். புல் முதலிய ஆஹாரங்களை பசுக்களுக்குக் கொடுத்து அவைகளில் என்னை பூஜிக்கவேண்டும். விஷ்ணுபக்தனை பந்துக்களைப் போல் ஆதரித்துப் பூஜிக்கவேண்டும். ஹிருதயாகாசத்தில் முக்கிய ப்ராணனாகப் பாவித்து உபாஸிக்கவேண்டும். ஜலத்தில் தர்ப்பணம் முதலியவைகளால் என்னையுபாஸிக்கவேண்டும். பூமியில் ரஹஸ்ய மந்திரங்களுடைய யந்திரங்களை எழுதி என்னை த்யானிக்க வேண்டும். ஆத்மாவிலோவென்றால் யோகங்களால் என்னை யுபாஸிக்கவேண்டும். மேற் சொல்லிய ஸ்தானங்களில் என்னுடைய ஸ்வரூபத்தை சங்கம், சக்கிரம், கதாயுதம், தாமரைமலர். இவைகளை நான்கு கைகளில் தரித்தும் சாந்தமுமாக இருப்பதாக த்யானம் செய்யவேண்டும். ஜ்யோதிஷ்டோமம் முதலிய இஷ்டதர்மத்தாலும் குளம், கிணறு முதலியவைகளை வெட்டுவிப்பது முதலிய பூர்த்த தர்மங்களாலும் எவன் என்னை யுபாஸிக்கிறானோ, அவனுக்கு என்னிடத்தில் ஸ்திரமான பக்தியுண்டாகும். அந்த பக்தி ஸாதுக்களுடைய சேர்க்கையாலுண்டாகிறது. ஓ உத்தவ! ஸாதுக்கள் என்னை ஆச்ரயித்திருப்பதால் ஸாதுக்களுடைய சேர்க்கையால் உண்டாகும் பக்தியே, பெரும்பாலும் ஸம்ஸாரத்தை நிவர்த்திக்கும். அதைக்காட்டிலும் வேறு உபாயமில்லை. இனி என்னால் சொல்லப்படும் விஷயம் மிகவும் ரஹஸ்யமானாலும் நீர் எனக்கு வேலைக்காரரும், ப்ரியமுள்ளவரும், அனுகூலத்தை விரும்பியவருமாகவிருப்பதால் அதனை சொல்லுகிறேன், கேளும்.

அத்தியாயம்–12

ஸாது ஸங்கத்தின் மஹிமை.

1–15. ஓ உத்தவ! ஸாதுக்களுடைய ஸங்கம் (சேர்க்கை) எல்லா ஆசைகளையும் நிவர்த்திக்கக் கூடியது. அப்படிப்பட்ட ஸாதுக்களின் ஸங்கத்தால் நான் எவ்வளவு ஸந்தோஷமடைவேனோ, அவ்வளவு ஸந்தோஷத்தை யோகமார்க்கத்தாலடைய மாட்டேன். (வசப்படமாட்டேன்) மேலும், விவேகம், ஸாமான்ய தர்மம், வேதாத்தியனம், தபஸ், ஸந்யாஸம், அக்னி ஹோத்திரம் முதலிய இஷ்டதர்மங்கள் கிணறு குளம் வெட்டுவிப்பது முதலிய பூர்த்ததர்மம், கொடுப்பது, ஏகாதசி முதலிய வ்ரதங்களை யனுஷ்டிப்பது, தேவ பூஜை, ரஹஸ்ய மந்திரங்களை ஜபஞ்செய்வது. புண்ய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்வது முதலியவை, நியமங்கள், யமங்கள் ஆகிய இவைகளால் எனக்கு அவ்வளவு ஸந்தோஷமுண்டாகிறதில்லை.

பின்னும் திதியின் புத்திரர்களான அஸுரர்கள், ராக்ஷஸர்கள், பறவைகள், மிருகங்கள், கந்தர்வர்கள், அப்ஸரஸ்ஸுகள், நாகர்கள், ஸித்தர்கள், சாரணர்கள், குஹ்யர்கள், வித்யாதரர்கள், மனுஷ்யர்களில் வைச்யர்கள், சூத்திரர்கள் ஸ்திரீகள், சண்டாளன் முதலிய தாழ்ந்த ஜாதியார்கள், இன்னும் ரஜஸ் தமஸ் இந்த ஸ்வபாவமுள்ளவர்கள் ஆகிய இவர்கள் ஸாதுக்களுடைய சேர்க்கையால் ஒவ்வொரு யுகத்திலும் என்னுடைய பதத்தை அடைந்திருக்கிறார்கள். மேலும் விருத்ரன், ப்ரஹ்லாதன் முதலியவர்கள், விருஷபர்வா, பலி, பாணன், மயன், விபீஷணன், ஸுக்ரீவன், ஹநுமான், ஜாம்பவான், யானை, ஜடாயு, வியாதாரி தராசு பிடிப்பவன்) தர்மவ்யாதன், குப்ஜா (கூனி)

கோகுலத்திலுள்ள கோபிகைகள், தீக்ஷிதபத்னிகள் ஆகிய இவர்கள் வேதங்களை அத்யயனஞ் செய்ய வில்லை. பெரியோர்களை யுபாஸிக்கவில்லை; வ்ரதங் களை அனுஷ்டிக்கவில்லை; தவஞ் செய்யவில்லை; ஆனாலும் ஸாதுஸங்கஞ் செய்ததால் என்னை அடைந்தார்கள். பின்னும் கோபிகைகளும், பசுக்களும், மரங்களும் (யமளார்ஜுனம்) காளியன் முதலிய விவேகமில்லாத ஜந்துக்களும், ஸாதுக்களுடைய ஸங்கத் தால் என்னிடம் மனதைச்செலுத்திய காரணத்தால் மாத்திரம் கிருதார்த்தங்களாகி என்னை அடைந்தன. எந்த பதம் ஸாங்கியத்தாலும், யோகத்தாலும், தபஸ்ஸினாலும், தானத்தாலும், விருதங்களாலும், யாகங்களாலும், வேதாத்யயனங்களாலும், ஸன்னியா ஸத்தாலும் அடையமுடியாததோ, அந்தப் பதத்தை மேற்காட்டிய கோபிகை முதலியவர்கள் அடைந்தார்கள்.

மேலும் நான் அக்ரூரரால் அழைக்கப்பட்டு, பலராமனுடன் மதுராநகரஞ் சென்றிருந்தபொழுது அந்த கோபிகைகள் என்னிடத்தில் மிக்க ப்ரியத்துடன் சித்தத்தைச் செலுத்தி என்னை விட்டுப் பிரிந்ததால் துக்கத்தை யடைந்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு வேறு ஒரு வஸ்துவாலும் ஸுகம் உண்டாகவில்லை. மேலும் அவர்கள் பிருந்தாவனத்தில் ஒவ்வொரு ராத்திரியையும் மிக்க ப்ரியனாகிய என்னுடன் சேர்ந்து அரைக்ஷணம் போலக் கழித்தவர் களானதால் என்னைவிட்டுப் பிரிந்தகாலத்தில் அவர்களுக்கு இரவுகள் கல்பங்கள் போலவிருந்தன. பின்னுமவர்கள் ஸமுத்திரத்தில் சேர்ந்த நதியின் ஜலங்கள் நாமரூபங்களைவிட்டு ஒரே ஜலமாக ஆகிறது போலும், மஹர்ஷிகள் ஸமாதியிலிருக்கும் பொழுது ஜகத்து முழுவதும் ப்ரஹ்மத்தினிடம் சேர்ந்து நாம ரூபங்களை விட்டு ஒன்றாகவிருக்கிறது என்று தெரிந்து

கொண்டு தங்களையாவது ஜகத்தையாவது ப்ரஹ் மத்தைக்காட்டிலும் வேறாக எப்படி நினைக்கிற தில்லையோ, அதுபோல அந்த கோபிகைகள் தங்களு டைய ஆத்மாவையும் ஜகத்தையும் மறந்து என்னையே த்யானஞ் செய்து கொண்டிருந்தார்கள். என்னுடைய ஸ்வரூபத்தின் உண்மையையறியாத பெண்களாகிய அநேக கோபிகைகள், தங்களுடைய பர்த்தாவென்றும், ஜாரனென்றும் என்னையே த்யானித்து பரப்ரஹ்மமா கிய என்னை அடைந்தார்கள். ஆனதால் ஓ உத்தவ! நீரும் வேதத்திற் சொல்லிய விதி நிஷேதங்களைக் கவனியாமல் ப்ரவிருத்தி தர்மம், நிவிருத்தி தர்மம், கேட்கப்பட்டது, கேட்கவேண்டியது இவைகளை விட்டு எல்லா ப்ராணிகளுக்கு ஆத்மாவாகவிருக்கும் என்னை ஒருவனையே சரணமடையும். அதனால் எங்கும் பயமற்றவராக ஆகிவிடுவீர் என்று சொன்னார்.

16.அதனைக் கேட்ட உத்தவர் ஸ்ரீ கிருஷ்ணனை நோக்கி "ஓ யோகேசர்களுக்குமதிபதியே! முந்தி ஸ்வ தர்மத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்று சொன்னீர். பின்பு எல்லா தர்மங்களையும் விட்டு என்னைச் சரண மடையென்று சொல்கிறீர். அதனால் மனத்திலுள்ள ஸம்சயம் நிவர்தியடையவில்லை கர்மங்களை அனுஷ் டிக்க வேண்டுமா? வேண்டாமா? இம்மாதிரியான உம்முடைய வார்த்தையைக் கேட்டு மனம் மோஹிக்கிறது. அதன் நிச்சயத்தைச் சொல்லும்" என்று கேட்டார். (இந்த கேள்விக்கு 8–ச்லோகங்களால் பதில் சொல்லப் பட்டிருக்கிறது, எப்படியெனில்)

17–24. அதனைக் கேட்ட பகவான் உத்தவரை நோக்கி "மாயையை ஸ்வாதீனப்படுத்திக் கொண்ட பரமாத்மா, ஜகத் ஸ்வரூபியாக ப்ரகாசிக்கிறார். ஜீவர் களுக்கு அனாதியாக அவித்யையுண்டாகியிருப்பதால்

கர்த்தாபோக்தா என்ற ஸம்ஸாரம் ஏற்படுகிறது. அதனால் விதி நிஷேதங்களுக்கு ஜீவன் கட்டுப் படுகிறான். அந்த நிலைமையுள்ளவனுக்கு சித்தசுத்தி யுண்டாக வேண்டியதற்காக கர்மங்களை அனுஷ்டிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. சித்தசுத்தியுண் டாகுமானால் கர்மங்களிலுள்ள ப்ரீதியைவிட்டு (பகவானை யுபாஸிப்பதற்காக தடையாகவிருப்பதால்) ஸ்திரமாக பக்திசெய்யவேண்டுமென்று சொல்லப் பட்டது. ஜ்ஞானமுண்டானால் ஒன்றுஞ் செய்ய வேண்டியதில்லை. (ஆனதால் அவஸ்தா பேதத்தை யுத்தேசித்து சொல்லப்பட்டதென்று தாத்பர்யம்) இந்த பரமாத்மா ஆதாரம் முதலிய ஆறு சக்கரங்களில் ப்ரகாசிப்பவர்; பரமென்ற நாதமுள்ள ப்ராணனுடன் ஆதாரசக்கரத்தில் ப்ரவேசித்தார். அவர் மனோமயமான ஸூக்ஷ்மரூபத்தை அடைந்து பின்பு மத்யமென்ற ஸ்வரூபத்துடன் மணிபூரகம் விசுத்தமென்ற சக்கரங்களில் ப்ரவேசித்து உதாத்தம் முதலிய ஸ்வரங் களுள்ளதும் ஹ்ரஸ்வம் முதலிய பேதங்களுள்ளதுமான அக்ஷரஸ்வரூபியாகி ஸ்தூலரூபத்தை அடைகிறார். (ஆதாரம், மணிபந்தம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆஜ்ஞா என்று ஆறு சக்கரங்கள் ஸ்தூலரூபம் என்றால் வேதஸ்வரூபியாக ஆகிறார் என்று கருத்து. "வாக்குக்கு நான்கு ஸ்தலங்கள். அவைகளை வித்வான்கள் அறிகிறார்கள். அவைகளில் மூன்று ஆதாரம் முதலியவை. மனிதர்கள் பேசுவதே நான்காவது" சுருதி. "எது ஆதார சக்கரத்திலுண்டாகி ப்ராணனுடைய சேர்க்கையால் அறுபத்து மூன்று அக்ஷரங்களை யுண்டு பண்ணுகிற தோ, முதலில் பச்யந்தியென்றும் பின்பு மத்தியம் என்றும், பின்பு வாக்கு என்றும் பெயரை அடைந்த அதனைச் சரணமடைகிறேன்) கட்டையிலிருக்கும் இடுக்குகளில் அக்னியானது உஷ்ண ஸ்வரூபமாக இருக்கிறது. பின்பு அது கடையப்பட்டு வாயுவின்

ஒத்தாசையால் நெருப்புப் பொறியாகப் பிரகாசித்து, ஸமித்து ஆஜ்ஜியம் முதலியவைகளால் விருத்தியடை கிறது. அதுபோலவே இந்த சப்தமானது மேற்காட்டிய படி ஸூக்ஷ்ம ஸ்வரூபமாகவிருந்து பின்பு விருத்தியாகிறது. இம்மாதிரி பேசுவது என்ற வாக்கின் வியாபாரம் என்னுடையதேயாம். மேலும் கை, கால், பாயு, உபஸ்தம் என்ற கர்மேந்திரியங்களுடைய வியாபாரமாகிய கர்மம், நடை, மூத்திரத்தை விடுவது, அமேத்தியத்தை விடுவது முதலியவையும் என்னுடையதேயாம். பின்னும் க்ராணேந்திரியத்தின் வ்யாபாரமான முகருவதும், ரஸனத்தின் வியாபார மான ருசியும், கண்ணின் வியாபாரமான பார்ப்பதும், காதின் வியாபாரமான கேட்பதும். ஸ்பர்சத்தின் வியாபாரமான தொடுவதும், மனத்தின் ஸங்கல்பமும், புத்தி சித்தம் இவைகளுடைய விஜ்ஞானம், அஹங்காரத் தின் கார்யமான அபிமானமும், பிரதானத்தின் கார்யமான ஸூத்திரமும், ஸத்வம் முதலிய குணங்களு டைய விகாரமும் என்னுடையதேயாம் இந்த ஜீவன் முதலில் அவ்யக்தனாகவும் ஒருவனாகவுமிருந்தான். சில காலஞ் சென்றபின் மாயா சக்தியால் வாக்கு முதலிய இந்திரிய சக்திகள் வெளிப்பட்டு பலவகை யாகவிருப்பது போல் தோன்றுகிறான். அந்த ஜீவனே முக்குணங்களுக்கு இருப்பிடமான ப்ரஹ்மதேவன். ஆனாலும் வயலில் விதைக்கப்பட்ட விதை பலவகை யாக ஆகிறதுபோல பலவகையாகத் தோற்றுகிறான். (இந்த ஜகத் பரமாத்வாவின் கார்யமானதால் அவரை விடவேறில்லை) வஸ்திரமானது குறுக்கான நூல்களி லும் நீண்ட நூல்களிலும் சேர்ந்து எப்படி நூல்களில் இருக்கிறதோ, அதுபோல இந்த ஜகத்தானது ஆத்மாவிடத்தில் இருக்கிறது. இந்த ஸம்ஸாரமாகிய மரம் அனாதியானது, ப்ரவர்த்தி ஸ்வபாவமுள்ளது.

இந்த விருக்ஷம் கர்மங்களையும், கர்மபலன்களையும், உண்டு பண்ணுகிறது. இந்த மரத்திற்கு புண்ணியம் பாபம் இரண்டும் விதைகள்; அனேக வாஸனைகளே வேர்கள். மூன்று குணங்களே நாளங்கள். ஐந்து பூதங்களே கிளைகள்.சப்தம் முதலிய ஐந்து விஷயங்களே ரஸங்கள், பதினோறு இந்திரியங்களே சிறு கிளைகள், ஜீவாத்மா, பரமாத்மா என்ற இரண்டு பக்ஷிகள் இதில் கூடு கட்டிக் கொண்டிருக்கின்றன. வாதம், பித்தம், ச்லேக்ஷ்மம் ஆகிய இம்மூன்றும் இந்த மரத்திற்குப் பட்டைகளாகவிருக்கின்றன. இந்தமரம் ஸூர்யமண்டலம்வரையில் உயர்ந்திருக்கிறது. இந்த மரத்தின் ஒரு பழத்தை (துக்கத்தை) கிராமத்தில் ஸஞ்சரிக்கிற கழுகுகள் புஜிக்கின்றன (கிருஹஸ்தர்களான காமிகள் துக்கத்தை அனுபவிக்கிறார்கள்) வனத்தில் வஸிக்கும் ஹம்ஸங்கள் (பரமஹம்ஸர்களான யோகிகள்) மற்றொரு பழத்தை (ஸுகத்தை) புஜிக்கின்றன. எவர்கள் உத்தமர்களான ஆசார்யமுகமாக மாயாமயனாகிய பரமாத்மாவைத் தெரிந்துகொள்ளுகிறார்களோ, அவர்களே வேதத்தின் உண்மையான அர்த்தத்தைத் தெரிந்து கொண்டவர்களாகிறார்கள். ஆனதால் இம்மாதிரி ஆசார்யனுடைய உபதேசத்தால் உண்டான பக்தியாலும், ஜ்ஞானமாகிய கோடரியாலும், லிங்கசரீரத்தை நிவிருத்தி அடைந்து அந்த ஸாதனங்களை விட்டுவிடும்" என்றார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–13

ஹம்ஸோ பாக்கியானம்.

1–3. (ஜீவனிடத்தில் தமஸ் முதலிய குணங்களிருக்கின்றனவல்லவா? அவை வித்யையுண்டாவதற்கும் ப்ரதிபந்தகங்களல்லவா? எப்படி வித்யையுண்டாகுமென்றால் அதன் விபரம் ஏழு ச்லோகங்களால் சொல்லப்பட்டிருக்கிறது) ஆனந்தம் முதலியவை எப்படி ஆத்மாவின் தர்மங்களோ, அப்படி ஸத்வம் முதலிய குணங்கள் ஆத்மாவின் தர்மங்களாக விருக்குமானால் அவைகளை நிவிருத்தித்துக் கொள்ளமுடியாது. ஸத்வம், ரஜஸ், தமஸ் புத்தியின் குணங்களேயொழிய ஆத்மாவினுடையவையல்ல. ஆனதால் ஸத்வகுணத்தால் ரஜஸ், தமஸ் ஆகிய குணங்களை நிவர்த்தித்துக் கொள்ளவேண்டும். அந்த ஸத்வகுணத்தை (ஸத்யம் முதலியவை) உபசமஸ்வரூபமான ஸத்வத்தாலேயே அடக்கவேண்டும். என்னிடத்தில் பக்திசெய்வதாகிய தர்மம் ஸத்வகுணத்தாலுண்டாகும்; ஸத்வகுணத்தைக் கொடுக்கும் வஸ்துக்களையுபயோகிப்பதால் விருத்தியடையும் (அதனால்தான் மேற்காட்டிய தர்மமுண்டாகிறது) மேற்காட்டிய தர்மம், ரஜஸ், தமஸ் ஆகிய குணங்களை நாசஞ்செய்யும். ஸத்வம் விருத்தியானால் அதுமிக்க மேலானது; ரஜோகுணம், தமோகுணம் ஆகிய இவ்விரண்டும் நசித்தால் அவைகளாலுண்டாகும் அதர்மம் நாசத்தை அடையும் (ராகம், த்வேஷம் ரஜஸ்ஸின் கார்யங்கள். தவறுதல், சோம்பல் இவைகள் தமஸ்ஸின் காரியங்கள்)

4–7. சாஸ்திரம், ஜலம், ப்ரஜைகள், தேசம், காலம், கர்மம், ஜன்மம், த்யானம், மந்திரம், ஸம்ஸ்காரம் ஆகிய பத்து வஸ்துக்களால் குணங்கள் விருத்தியடைகின்றன. மேற்காட்டியவைகளில் எதைப் பெரியோர்கள் புகழ்கிறார்களோ, அவைகள் ஸத்வகுணத்தை விருத்திசெய்கின்றன. எவைகளைகெட்டவையென்று

பெரியோர்கள் நிந்திக்கிறார்களோ, அவை தமோகுணத்தை விருத்திசெய்கின்றன. எவைகளை பெரியோர்கள் நிந்திக்கவில்லையோ, ஸ்துதிக்கவுமில்லையோ, அவைகள் ரஜோகுணத்தை விருத்திசெய்யும். ஆனதால் ஸத்வகுணத்தை விருத்திசெய்து கொள்வதற்காக ஸாத்விகமானவைகளையே உபாஸிக்கவேண்டும் (உபனிஷத் முதலியவை ஸாத்விக சாஸ்திரம். கர்மகாண்டம் ராஜஸம், பாஷண்டம், தாமஸம், கங்காஜலம் முதலியவை ஸாத்விகஜலம், வாஸனையுள்ள ஜலம், ராஜஸம். மத்யம் முதலியவை தாமஸம், ஸன்யாஸிகள் முதலியவர்கள் ஸாத்விகர்கள். கர்மங்களில் ச்ரத்தை யுள்ளவர்கள் ராஜஸர்கள். அதர்மத்தைச் செய்பவர் கள் தாமஸர்கள். ஜனங்களில்லாதிருக்குமிடம் ஸாத் விகதேசம், வீதி ராஜஸம். சொக்கட்டான் விளையாடு மிடம் தாமஸம், ப்ரஹ்ம மூஹூர்த்தம் த்யானத் திற்கு ஸாத்விககாலம். ஸாயங்காலம் ராஜஸம், அர்த்த ராத்ரி தாமஸம். நித்யகர்மம் ஸாத்விகம். பயனையுத் தேசித்துச் செய்யும் காம்யகர்மம் ராஜஸம். சத்ருவைக் கொல்வது முதலியவைகளுக்காகச் செய்யப்படும் அபிசாரம் முதலியவை தாமஸம், வைஷ்ணவதீக்ஷை, சைவதீக்ஷை முதலியவைஸாத்விகஜன்மம். சக்திதீக்ஷை ராஜஸஜன்மம். அல்ப தேவதாதீக்ஷை தாமஸஜன்மம் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை த்யானஞ்செய்வது ஸாத்விகம். ஸ்திரியை நினைப்பது ராஜஸம், சத்துருவை த்யானிப்பது தாமஸம், ப்ரணவம் முதலிய மந்திரங்கள் ஸாத்விக மந்திரங்கள். காம்யமந்திரங்கள் ராஜஸங்கள். அல்ப மந்திரங்கள் தாமஸங்கள். மனத்தை சுத்தப்படுத்தும் ஸம்ஸ்காரமும் ஸாத்விகம். தேஹத்திற்கும் கிருஹத் திற்கும் செய்துகொள்ளும் ஸம்ஸ்காரம் ராஜஸ தாமஸம். அதனால் தர்மமும், அதனால் ஜ்ஞானமும் உண்டாகிறது.

எதுவரையில் அடரோகஜ்ஞானமும் குணங்களுடைய

நாசமும் உண்டாகிறதோ, அப்பொழுது அந்த ஜ்ஞான முண்டாகிறது. மூங்கில்கள் ஒன்றோடொன்று உரைந்து கொள்வதால் அக்னியுண்டாகிறது; அதுவனம் முழு வதையும் எரித்துத் தானாக அணைவதுபோல குணங்களுடைய ஸம்பந்தத்தாலுண்டாகிய தேஹம் தன்னிடத்திலுண்டான ஜ்ஞானத்தால் தனக்கு ஆச்ரயமான குணங்களை நாசஞ்செய்து தானும் நாசமடைகிறது" என்றார்.

8. அதனைக்கேட்டு உத்தவர் ஸ்ரீ கிருஷ்ணனை நோக்கி "ஓ கிருஷ்ண! சப்தம் முதலிய விஷயங்கள் பெரும்பாலும் ஆபத்தை விளைவிக்கின்றனவென்று மனிதர்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்; ஆனாலும் நாய்கள் போலும், கழுதைகள் போலும், ஆடுகள் போலும், விஷயங்களையே அனுபவிக்கிறார்களே, அதன் காரணமென்ன ?" என்று கேட்டார் (நாய்கள் அதட்டப் பட்டாலும் பெண் நாயை பின் தொடருகிறது, கழுதை பின்னங்கால்களால் உதைப்பட்டாலும் பெண் கழுதை யை விடுகிறதில்லை. ஆடுகள் கொல்வதற்காக கொண்டு வரப்பட்டிருக்கும் பொழுதும் காமவெறியை அடைகிறது)

9–14. அதனைக் கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் உத்த வரை நோக்கி "விவேகமில்லாதவன் சரீரத்தை நான் என்று நினைக்கிறான். அந்த அபிநிவேசம் அவனுடைய ஹிருதயத்தில் ஸ்திரமானதால் துக்கத்தைக் கொடுக்கும். ரஜோகுணம் அவனுடைய மனத்தில் வ்யாபரிக்கிறது. (உண்மையில் மனம் ஸத்வகுணமுள்ளதானாலும்) மனத்தில் ரஜோகுணம் அதிகரித்தால் 'இதை இம் மாதிரி அனுபவிக்க வேண்டும்' என்ற ஸங்கல்ப முண்டாகும். அதன்பின் ரூபம் முதலியவைகளின் பெருமையை த்யானிப்பான். அதனால் காமம் பருத்து, மனத்தால் தாங்க முடியாததாகும். அப்படிப்பட்ட

மனமுள்ளவன் அல்ப புத்தியுள்ளவனெனப்படுவான். பின்பு அவன் ரஜோகுணத்தின் வேகத்தால் புத்தி மயக்கமடைந்து, இந்திரியங்களுக்கு வசப்பட்டு விஷயங்களை அனுபவிப்பதற்காக முயல்கிறான். (கர்மங்களைச் செய்கிறான்) அதனால் துக்கத்தையே அடைகிறான். (சரீரத்தில் நான் என்று பொய்யாக அபிமானத்தை வைப்பதால் விஷய போகங்களில் ஆசையுண்டாகிறதென்று கருத்து) மனிதனுடைய மனமானது ரஜோ குணம், தமோகுணம் ஆகிய இவைகளால் கலங்கியதானாலும், விவேகியாக இருப்பவன், அதனை தோஷமென்று நினைத்து மனத்தை அடக்கி அவைகளில் ஸம்பந்தப்படமாட்டான். (விஷயங்களை தோஷமுள்ளவைகளென்று நினைத்து மனத்தை அடக்க சக்தியில்லாதவனுக்கு லகுவான உபாயம் சொல்லப்படுகிறது) சோம்பலின்றி தவறுதலையடையாமல், காலத்திற்குத் தக்கபடி ஸுகமான ஆஸனத்தில் உட்கார்ந்து ச்வாஸத்தை ஜயித்து. மனத்தை என்னிடத்தில் செலுத்த வேண்டும். பல விஷயங்களில் சென்று கொண்டிருக்கும் மனத்தை அவைகளில் செல்ல விடாமல் தடுத்து பகவானாகிய என்னிடத்தில் செலுத்துவதே யோகமென்று என்னுடைய சிஷ்யர்களான ஸனகர் முதலியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்" என்று சொன்னார்.

15. அதனைக் கேட்ட உத்தவர் பகவானை நோக்கி உம்முடைய சிஷ்யர்கள் ஸனகர் முதலியவர்களுக்கு அந்த காலத்தில் எந்த ஸ்வரூபத்துடன் யோகத்தை யுபதேசித்தீர்? அதனைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

16–21. அதனைக் கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் உத்தவரை நோக்கி "ப்ரஹ்மதேவருடைய மனத்திலிருந்து உண்டான ஸனகர் முதலியவர்கள் தந்தையாகிய ப்ரஹ்மதேவரை நோக்கி "ஓ ப்ரபுவே! ஜனங்களுடைய மனம் இயற்கையில் ஆசை முதலியவைகளுள்ளதான

தால் விஷயங்களை அனுபவிக்க வேண்டுமென்று விரும்பி அவைகளில் பிரவேசிக்கிறது. அந்த விஷயங்கள் (சப்தம் முதலியவை) மனத்தில் பிரவேசிக்கின்றன. (வாஸனை ரூபமாக) ஆனதால் விஷயங்களை விட்டு மோக்ஷத்தையடைய விரும்புகிறவனால் அவைகளை எப்படி விடமுடியும்" என்று யோகத்தின் ஸூக்ஷ்ம ஸ்வரூபத்தைப் பற்றி கேட்டார்கள். அதனைக் கேட்ட ப்ரஹ்மதேவர் தான் தேவர்களுக்கும் தேவனானாலும், தானாக உண்டானவரானாலும், பிராணிகளை ஸ்ருஷ்டிப்பவரானாலும் அந்தக் கேள்வியின் உண்மையான அர்த்தத்தை (எதை அறியாததால் இக்கேள்வியோ) தெரிந்துகொள்ளவில்லை. ஏனென்றால் அவருடைய மனம் கர்மத்தில் சென்று கலங்கியிருந்தது. அப்பொழுது ப்ரஹ்மதேவர் அந்தக் கேள்விக்கு மறுமொழி சொல்வதற்காக என்னை த்யானம் செய்தார். நான் ஹம்ஸவேடங்கொண்டு அவருடைய ஸமீபஞ் சென்றேன். அப்பொழுது ஸனகர் முதலியவர்கள் என்னுடைய ஸமீபம் வந்து ப்ரஹ்மதேவரை முன்னிட்டு என்னை நமஸ்கரித்து நீர் யார் என்று கேட்டார்கள். இம்மாதிரி உண்மையைத் தெரிந்துகொள்ள விரும்பிய மஹர்ஷிகளால் கேட்கப்பட்டு நான் எதனை அவர்களுக்கு சொன்னேனோ அதை உமக்குச் சொல்லுகிறேன் கேளும். எப்படியேனில்:–

22–42. ஓ மஹர்ஷிகளே! நீர் யார் என்று கேட்டீர்களல்லவா? என்னுடைய ஆத்மாவைப்பற்றி யார் என்று கேட்பீர்களாகில் ஆத்மா அனேகமாக இருக்குமானால் இம்மாதிரியாக நீங்கள் கேட்கக்கூடும். (ஆத்மா ஒருவனானதால் யார் என்று கேட்பது பொருந்தாது என்று கருத்து) உபாதியற்ற பரமாத்மாவிடத்தில் ஜாதி முதலியவைகள் ஒன்றுமில்லாததால் எதைக் கொண்டு உமக்கு நான் பதில் சொல்லுவேன். அல்லது சரீரத்தைப் பற்றிக் கேட்பீர்களாகில் இந்த சரீரங்கள் யாவும் ப்ரிதிவீ முதலிய ஐந்து பூதங்களால்

செய்யப்பட்டவைகளானதால் அவைகள் ஒன்றுக் கொன்று ஸமமானவைகளேயாம். மேலுமவைகள் பரமாத்மாவைவிட பேதமில்லாதவைகள்; ஆனதால் உங்களுடைய கேள்வியானது வ்யவஹாரத்திற்கு ஏற்பட்டதேயொழிய உண்மையில் பிரயோஜனமற்றது. மேலும் மனத்தாலும், வாக்கினாலும், கண்ணாலும், மற்ற இந்திரியங்களாலும் எதுக்ரஹிக்கப்படுகிறதோ, அதெல்லாம் "நானே என்னைக் காட்டிலும் வேறல்ல" என்று தத்வ விசாரத்தால் தெரிந்து கொள்ளுங்கள். (ஸகல ஸ்வரூபியாக இருக்கிறேனென்று கருத்து) ஓ குழந்தைகளே! ஜனங்களுடைய மனமானது சப்தம் முதலிய விஷயங்களில் ப்ரவர்த்திக்கிறது. அந்த விஷயங்கள் மனத்தில் வாஸனா ரூபமாக இருக்கின்றன, ஆனாலும் அந்த மனது, விஷயங்கள் ஆகிய இரண்டும் ஜீவனுக்கு உபாதியே யொழிய ஸ்வரூபமல்ல. (நான் கர்மங்களைச் செய்கிறேன்; அதன் பயன்களை அனுபவிக்கிறேன் என்று நினைப்பது ஜீவனுடைய ஸ்வரூபமல்ல. அவனுடைய இயற்கையான ஸ்வரூபம், பரமாத்மாவாக விருப்பதேயாம். ஆனாலும் விஷயங்களில் ஸம்பந்தித்த சித்தத்தைத் தானென்று நினையாமல் தன்னை ப்ரஹ்மமென்று சப்தம் முதலிய விஷயங்களைப் பொய்யானவை யென்றும் த்யானிப்பவன் தம்முடைய உண்மையான ஸ்வரூபமாக ஆகி விடுகிறான் என்று கருத்து) ஆனதால் உண்மையில் ஜீவன் பரமாத்ம ஸ்வரூபியாக விருப்பதால் சப்தம் முதலிய விஷயங்களில் செல்லுகின்ற மனத்தையும் அடிக்கடி அனுபவிப்பதால் மனத்திலிருக்கும் விஷய வாஸனைகளையும் விட்டு விடவேண்டும். பின்னும் ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்ற அவஸ்தைகள் முறையே ஸத்வம் முதலிய குணங்களால் ஏற்படும் புத்தியின் விருத்திகளாம். அவைகள் ஜீவனுடைய ஸ்வபாவங்கள் அல்ல. மேற்கண்ட மூன்று அவஸ்தைகளிலும் தொடர்ந்து இருக்கும் ஜீவன் அவைகளுக்கு ஸாக்ஷியேயாம். அவைகளைக்

காட்டிலும் வேறானவன் (ஜாக்ரத் முதலிய அவஸ்தைகள் ஜீவனுக்கு இயற்கையானவையல்ல என்று கருத்து) ஆனதால் ஸம்ஸாரத்தை யுண்டுபண்ணுகிற புத்தியால் ஆத்மாவுக்கு சப்தம் முதலிய விஷயங்களின் ஸம்பந்தம் ஏற்படுகிறது. ஆனதால் மேற்கண்ட மூன்று அவஸ்தைகளைக் கடந்த என்னுடைய ஸ்வரூபமாகத் தன்னை நினைத்துக் கொண்டு அந்த புத்தியின் ஸம்பந்தத்தை விட்டுவிடவேண்டும். அப்படிப்பட்டவனை விஷயங்களும் விஷய வாஸனைகளுள்ள மனமும் விட்டு விடும். ஜீவன் உண்மையில் ஆனந்த ஸ்வரூபி; அவனுக்கு அஹங்கார ஸம்பந்தமேற்பட்டதனால் அந்த அஹங்காரம், ஆனந்தம் முதலிய ஸ்வரூபத்தை மறைத்துவிட்டது.

இதன் உண்மையை யுக்தியால் தெரிந்து கொண்டவன் 'துக்கத்தைக் கொடுக்கக்கூடியது' என்று நினைத்து விஷயங்களில் ஆசைப்படாமல் தான் பரமாத்ம ஸ்வரூபியென்றும் ஜாக்ரத் முதலிய அவஸ்தைகளைக் கடந்தவனென்றும் நினைப்பான், அபிமானத்தை யொழிக்க வேண்டும். விஷயங்களில் அபிமானமும் பேதபுத்தியும் எதுவரையில் நிவர்த்தியடையவில்லையோ, அதுவரையில் இந்தப்புருஷன் உண்மையைத் தெரிந்து கொள்ளாதவனானதால் விழித்துக் கொண்டிருந்தாலும் தூங்கினவனுக்குச் சமமேயாம். ஸ்வப்னத்தில் காணப்படும் விழிப்பு எப்படியோ, அது போன்றது. இவனுடைய விழிப்பு ஸ்வப்னத்தில் காணப்படும் வஸ்துக்கள் யாவும் எப்படிப் பொய்யானவையோ, அப்படி தேஹம் முதலிய வஸ்துக்களும், வர்ணம், ஆச்ரமம் முதலிய பேதங்களும, ஸ்வர்க்கம் முதலிய லோகங்களும், அவைகளைக் கொடுக்கும் கர்மங்களும் ஆத்மாவைக் காட்டிலும், வேறல்ல. ஆனதால் அவைகள் பொய்யானவைகளே. (யாகம் முதலிய கர்மங்களும் வேதங்களால் அவைகளின் பயனாகிய ஸ்வர்க்கம் முதலியவைகளும், சொல்லப்பட்டிருந்தாலும் வேதம் மூடனுக்காக

ஏற்பட்டதானதால் ஜ்ஞானியின் விஷயத்தில் அவைகள் பொய்யென்று. கருத்து) இந்த ஸ்தூல தேஹம் முதலியவைகள் பால்யம், கௌமாரம், யௌவனம் முதலிய ஸ்வல்பகாலமுள்ள அவஸ்தைகளுள்ளது. அவைகளை எல்லா இந்திரியங்களைக் கொண்டு எவன் அனுபவிக்கிறானோ, அவனே ஸ்வப்னத்தில் முந்திய அவஸ்தையில் பார்க்கப்பட்டு வாஸனா ரூபமாக மனத்திலிருக்கும் விஷயங்களை அனுபவிக்கிறான்.

எவன் ஸுஷுப்தியில் அவைகளை உபஸம்ஹரிக் கிறானோ, இம்மூன்று அவஸ்தைகளிலும் தொடர்ந்து அவைகளுக்கு ஸாக்ஷியாகவிருப்பவன் எவனோ அந்த ஆத்மா ஒருவனேயாம். அவனே இந்திரியங்களுக்கு அதிபதி (ஜாக்ரதவஸ்தையை ஸகல இந்திரியங்களும் பார்க்கின்றன. ஸ்வப்னத்தை மனம் பார்க்கிறது. ஸுஷுப்தியில் ஸம்ஸ்கார விசேஷமான புத்தியிருக் கிறது. அந்த மூன்று அவஸ்தைகளுக்கும் விச்வன், தைஜஸன், ப்ராஜ்ஞன் என்ற மூவர்களும் முறையே அதிபதிகள்; ஆனாலும் உபாதி ஸம்பந்தத்தால் விச்வன் முதலிய நாமதேயங்களே யொழிய உண்மை யில்லையென்று கருத்து) ஆனதால் மேற்காட்டிய ஜாக்கிரத் முதலிய அவஸ்தைகள் குணங்களாலேற் பட்டவைகள்; அவைகள் மனத்திற்கே யொழிய ஆத்மாவினுடையதல்ல. என்னுடைய மாயையால் பர மாத்மாவாகிய என்னிடத்தில் கல்பிக்கப்பட்டிருக்கின்றன என்று நிச்சயமாக ஆத்மாவைத் தெரிந்து கொண்டு ஆத்மாவின் உண்மையை அறிந்து அநுமானம், ஸாதுக்களுடைய உபதேசம், கூர்மையான ஜ்ஞானமா கிய கத்தி ஆகிய இவைகளைக்கொண்டு மனத்திலிருக் கும் ஸம்சயமாகிய ஆதியை (கவலையை) நிவர்த்தித்துக் கொள்ளவேண்டும். மேலும் இந்த ஜகத்துப் பொய் யானது. பார்க்கபடுவதாலும், நசிக்கும் ஸ்வபாவமுள்ள தானதால் மனோவிலாஸமாக விருப்பதால் ஸ்வப்னம் போல் என்றும் மூன்று காரணங்களாலும் மிகவும் சஞ்சலமாக விருப்பதால் சுற்றும் குரைக்கொள்ளி

போன்றது என்றும் அனுமானத்தால் ஜகத்தை பொய் யென்று நிச்சயிக்கவேண்டும். ஆனதால் குணங்களு டைய பரிணாமத்தால் மூன்று வகையாக ஏற்படும் பேதம், ஸ்வப்னம் போல பொய்யானதேயாம்.

அதுவே மாயை. ஜ்ஞான ஸ்வரூபியான பரமாத்மா உபாதி ஸம்பந்தத்தால் அனேகராகத் தோன்றுகிறார். ஆனதால் பார்க்கப்படும் ப்ரபஞ்சத்தில் ஆசை வைக்காமல் அதிலிருந்து பார்வையை திருப்பி இயற்கையான ஆனந்தானுபவமுள்ளவனாக விருக்க வேண்டும். அந்த அனுபவம் ஸ்திரமாக இருப்பதற்காக ஒன்றிலும் பற்றுதலில்லாமலும், மனம், வாக்கு சரீரம் ஆகிய இவைகளுடைய வ்யாபாரமற்றவனாகவும் இருக்கவேண்டும். சரீரமுள்ளவரையில் ஆஹாரம் முதலிய அவச்யமான கார்யங்களில் ப்ரவிருத்திப்பானா னாலும் ஜகத்தை வஸ்துவல்லவென்று தெரிந்து விட்டவனானதால் அதில் மோஹிக்கமாட்டான் ஆனாலும் சரீரமிருக்கும் வரையில் அந்த வாஸனை தொடர்ந்து மத்யபானஞ் செய்து மதங்கொண்டு விவேகமற்றவன் வஸ்திரமுடுத்திக் கொண்டிருப்பதை யாவது, வஸ்திரமில்லாமலிருப்பதையாவது எப்படித் தெரிந்து கொள்ள மாட்டானோ, அப்படி ஸ்வரூபத் தையறிந்த ஸித்தன் தெய்வ செயலாக சரீரமிருந்தாலும், இல்லாவிட்டாலும், ஆஸனத்திலிருந்து எழுந்திருந்தா லும், அந்த அஸ்திரமான சரீரத்தில் அபிமானம் வைக்க மாட்டான். சரீரம் கர்மாதீனமாக ஏற்பட்டது. தன்னை யுண்டுபண்ணிய கர்மவேகம் எது வரையிலிருக்குமோ அந்த காலத்தை ப்ராணனுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அது ஸ்வப்னத்தில் காணப்படும் வஸ்து போன்றது. ஆனதால் ஸமாதி வரையிலுள்ள யோகத்தை அடைந்து ஆத்மஸ்வரூபத்தை அடைந்தவன் சரீரத்தில் அபிமானத்தை அடையமாட்டான்.

ஓ ப்ராஹ்மணர்களே! ஸாங்கியம் யோகம் ஆகிய

இவைகளுடைய உண்மையை உங்களுக்குச் சொன்னேன்; உங்களுக்கு இந்தத் தர்மத்தை சொல்ல வேண்டுமென்ற விருப்பத்தால் வந்த மஹா விஷ்ணு வென்று என்னைத் தெரிந்து கொள்ளுங்கள். மேலும் ஆத்மா அனாத்மா விவேகமாகிய ஸாங்கியத்திற்கும், அஷ்டாங்க யோகத்திற்கும், மனத்தால் நினைக்கப்படும் தர்மத்திற்கும் (ரிதம்) அனுஷ்டிக்கப்படும் தர்மத்திற்கும் (ஸத்யம்) ப்ரபாவத்திற்கும். ஸ்ரீ, கீர்த்தி, தமம் இவை களுக்கும் நான் முக்கிய ஸ்தானமாகவிருக்கிறேன். பின்னும் குணஸம்பந்த மற்றவனும், ஒன்றையும் அபேக்ஷியாதவனும், எல்லாவற்றிற்கும் ஸஹிருத்தும், ப்ரியனும், ஆத்மாவுமாகிய என்னிடத்தில் ஸமமாக விருப்பது, ஒன்றிலும் பற்றுதலில்லாமலிருப்பது ஆகிய குணங்கள் இருக்கின்றன. அவைகள் முக்குணங்களின் பரிணாமத்தாலேற்பட்டவையல்ல, நித்யமானவைகள்" என்று சொன்னேன். அதனைக்கேட்ட ஸனகர் முதலியவர்கள் ஸம்சயமற்றவர்களாகி மிக்க பக்தியுடன் என்னைப் பூஜித்து ஸ்துதித்தார்கள். இம்மாதிரி அந்த மஹர்ஷிகளால் பூஜிக்கப் பெற்று நான் ப்ரஹ்மதேவர் பார்த்திருக்க என்னுடைய லோகஞ் சென்றேன்.

♣ ♣ ♣ ♣

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada



Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

பாகம் –1

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்கந்தம் 1 அத்தியாயம் 1 முதல்
ஸ்கந்தம் 3 அத்தியாயம் 19 வரை

Released by Maran's Dog, Toronto , Canada

இஞ்சிக்கொல்லை
R. சிவராம சாஸ்திரிகள்
அவர்களால் 1908ல் மொழி
பெயர்க்கப்பட்டது.

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ராம நாம வங்கியின் ப்ராசாரப் பிரதாப் பிரிவு
ராம மந்திரம் –2, விளாங்கம் தெரு,
சென்னை – 600 033. ☎: 24893736

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்
தமிழ் வசனம்

TITLE	:	SRIMAD BHAGAVATHAM, TAMIL VACHANAM
AUTHOR	:	INZIKOLLAI R. SIVARAMA SASTRIGAL WRITTEN IN 1908
SIZE	:	CROWN OCTAVE
EXTENT	:	2736 PAGES CONSISTING OF SEVEN VOLUMES
PRICE	:	RS.600/ SET
FIRST EDITION	:	1996
SECOND EDITION	:	2004
THIRD EDITION	:	2007

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பகவன் நாம போதேந்திர
ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின்
பாத கமலங்களிலும்

பரஞ்ஜர் மஹாத்மா
ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள்
அவர்களின்
பாத கமலங்களிலும்

சமர்ப்பணம்

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்

புத்தக விலைப்பட்டியல்...

அரியதும், பழையதுமான க்ரந்தங்களையும், நாமறிந்தாராத விஷயங்களையும் வெளியிடும் பணியில்...

ரூ.	
1500	ஸ்ரீமத் பாகவதம் ப்ரதி பத அர்த்தம்
700	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் மூலம் தமிழில் பெரிய எழுத்தில்
600	ஸ்ரீமத் பாகவதம் வசனம் 7 பாகம்
550	ஸ்ரீமத் பாகவதம் மூலம் தமிழில் பெரிய எழுத்தில்
450	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் மூலம் தமிழில்
350	ஸ்ரீ துளஸீ ராமாயணம் மூலமும் வசனமும்
300	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் வசனம்
300	ஞானேஸ்வரி
250	ஸ்ரீமத் பாகவதம் மூலம் தமிழில்
200	நாராயணீயம் ப்ரதிபத அர்த்தம்
200	ஸ்ரீகிருஷ்ண சைதன்யர்
200	கர்க ஸம்ஹிதை
200	நந்த நந்தன்
150	உஜ்ஜ்வல நீலமணி
140	பார்த்தஸாரதி
100	த்வாரிகாதீசன்
100	பகவான் வாசுதேவன்
100	திருப்பாவை உபன்யாஸம்
100	ஸ்ரீபகவன் நாம ரஸோதயம்
100	பக்த துகாராம் திவ்யசரித்திரம்
100	ஸ்ரீ மத் பாகவத கதாம்ருதம்
60	கீதகோவிந்தம் ப்ரதிபத அர்த்தம்
60	ஸ்ரீ ஞானேஸ்வர் திவ்ய சரித்திரம்
60	ஸ்துதி மணிகள்
60	ஸ்ரீமத் பகவத் கீதை ப்ரதி பத அர்த்தம்
60	ராதே/பருந்தாவனராதே!!
60	பாதுகா ஸஹஸ்ரம் -பாசுரங்கள்
60	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்-பாசுரங்கள்
50	நாராயணீயம் -பாசுரங்கள்
50	ஹரி ஸங்கீர்த்தன மாலா
50	தர்ம சாஸ்திரம்
50	ஸ்ரீமத் பாகவத ஸங்க்ரஹம்
40	கோவிந்தபுரம் பஜன பத்ததி
40	தக்ஷிண ஸம்ப்ரதாய பஜன மாலா
40	ஸ்ரீமத் ராமாயணம் ஸங்க்ரஹம்
40	ஏகநாதர் திவ்ய சரித்திரம்
40	ஸ்ரீ ருக்மிணி கல்யாணம்-பாசுரங்கள்
35	தக்ஷிண ஸம்ப்ரதாய கல்யாண மாலா
35	அபங்க முத்தாரம்
35	நாம ஸங்கீர்த்தனாவளி
30	வ்ரஜ ரஸம்
30	ப்ரேம சாம்ராஜ்யம்
30	பக்தி
	பஞ்சகீதை
	ஸ்ரீ க்ருஷ்ண கர்ணாம்ருத ரஸாயனம்
	ஸ்ரீ க்ருஷ்ண கீதாம்ருதம்
	சிவானந்த லஹரீ - ப்ரதிபத அர்த்தம்
	ஸௌந்தர்ய லஹரீ - ப்ரதிபத அர்த்தம்
	ஐயாவாளின் நாம அனுபவங்கள்
	ஸ்ரீ சுந்தர காண்டம்



25	ஸ்ரீ ராம மாதுரீ
25	பக்த ரத்தினங்கள்
25	பாண்டுரங்க லீலைகள் -பாசுரங்கள்
25	கிருஷ்ண கர்ணாம்ருதம் -பாசுரங்கள்
25	தியாகராஜர் அனுபவங்கள்
25	ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் கீர்த்தனைகள்
25	ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம்
25	பக்தை மீரா
25	பக்த ஸாம்ராஜ்யம்
25	நாம ஸாம்ராஜ்யம்
25	ஸ்ரீ லலிதா பஜனை கீர்த்தனைகள்
25	மனாசே ஸ்லோக
25	பகவன் நாம ரஸாயனம்
20	ஸ்ரீ பாத ஸப்ததி
20	ஸ்ரீ யாக்ஞவல்கியர் திவ்ய சரித்திரம்
20	ஸ்ரீ துளஸி தாஸர் திவ்ய சரித்திரம்
20	ஸௌந்தர்யலஹரி - தமிழ் பாடல்கள்
15	ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம்
15	குருவாயூரப்பன் அந்தாதி-பாசுரங்கள்
15	தயாசதகம்-பாசுரங்கள்
15	ஸம்க்ஷேப ராமாயணம் -பாசுரங்கள்
15	ஸ்ரீ ஆண்டாள் கல்யாணம்
15	ஸ்ரீ ராதா மாதவ - பஜனை பத்ததி
15	நவராத்திரி கீர்த்தனைகள்
15	பக்தி ஸந்தேஹ த்வாந்த பாஸ்கரம்
15	ஸ்ரீ ப்ரும்மேந்திராள் திவ்ய சரித்திரம்
15	நந்தன் சரித்திரக் கீர்த்தனைகள்
15	ஸ்ரீ ப்ரும்மேந்திராள் கீர்த்தனைகள்
15	ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் திவ்ய சரித்திரம்
15	திருமாலை
15	**Divine History**
	(Hindi, English, Malayalam, Telugu, Tamil)
	Sri Bodendral
	Sri Sridhara Ayyaval
	Sri Sadguru Swamigal
10	கீத கோவிந்தம்
10	ஹரி பாட்
10	ஸ்ரீ ஸமர்த்த ராமதாஸர் திவ்ய சரித்திரம்
7	திருவரங்கன் திருவந்தாதி- பாசுரங்கள்
7	பரமார்த்த ஸ்துதி- பாசுரங்கள்
7	நாமாயணம்
6	ஸ்ரீ போதேந்திராள் கீர்த்தனைகள்
6	ஸ்ரீ போதேந்திராள் நாம வந்தனம்
6	நாமப்ரபாவம்
5	ஸ்ரீபோதேந்திராள் அஷ்டோத்திரம்
5	ஸ்ரீ ராம நாம மஹிமை
5	அபங்கப்ரவாஹம்
4	ஸ்ருதிகளிலிருந்து ராமநாமத்தின் பெருமை
3	புருஷ ஸூக்தம்
3	ஸ்ரீ ஸூக்தம்

Released by Maran's Dog, Toronto , Canada

100 Nos விநியோகவெளியீடு

75	ஸ்ரீ ராம நாமாவளி
75	ஸ்ரீ நவீன ராமாயணம்
75	ஸாதுக்கள் மஹிமை
75	ப்ராத ஸ்மரண ஸ்தோத்திரம்
100	நெய்க்குடத்தை
100	பாசுரப்படி ராமாயணம்
100	ஸ்ரீ ஸப்த ரிஷி ராமாயணம்
100	ஸ்ரீ சந்திர ஸேகராஷ்டகம்
100	ஸ்ரீபோதேந்திராள்சரித்திரசுருக்கம்

Sanskrit Prasadhams

தேவீ நாமஸ்தோத்திர மஞ்ஜரீ
ஸ்ரீ வாஞ்சிய க்ஷேத்ர மாஹாத்ம்யம்
ஸ்ரீ நடராஜ நாம மஞ்ஜரீ
ஸ்ரீ நடராஜ ஸ்தவ மஞ்ஜரீ
ஸ்ரீ பாலா ஸபர்யா
ஸ்ரீசிவ நாம மஞ்ஜரீ
ஸ்துதி த்ரயீ
ஸ்ரீ மீனாக்ஷீ ஸ்தோத்ரமஞ்ஜரீ
ஸ்ரீஸ்கந்த ஸ்தவ மஞ்ஜரீ
ஸ்ரீதத்தாத்ரேய ஸ்துதிமஞ்ஜரீ
ஸ்ரீமத்த்யார்ஜுனக்ஷேத்ர மாஹாத்ம்யம்
ஸ்ரீவிஷ்ணுஸ்துதிமஞ்ஜரீ
ஆத்ட நாதஸ்துதிமஞ்ஜரீ
ஸ்ரீபகவத்ஸ்துதிமஞ்ஜரீ
அனுமன் நாற்பது
கோபால விம்ஸதி
ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்
ஸ்ரீமத் ராமாயணரஹஸ்யம்
கலியுக தர்ம சாஸ்திரம்
பூஜா கல்பம்

Released by Maran's Dog, Toronto , Canada

கோஸம்ரக்ஷணம்
தினசரிராமாயணம்
தினசரிபாகவதம்
ஆசாரமும் ஆஹாரமும்
பூஜா ராமாயணம்
ஸ்ரீ வாசுதேவ ப்ரம்மம் திவ்ய சரித்திரம்
மன அமைதி வேண்டுமா?
ஜய கல்யாண ஸ்ரீக்தி லஹரீ
நாமவைபவம்
நாமச் சிறப்பு
நாமவிசேஷம்
ஸ்ரீபகவன் நாம மகிமை
ஆயிரம் நாமக் குறிப்புகள்
போதேந்த்ர அமுதம்
ஸ்ரீ ஆலங்குடி சுவாமிகள் திவ்ய சரித்திரம்
ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு ஸஹஸ்ர நாமம்
ஸ்ரீ த்யாகப்ரும்ம அஷ்டோத்திரம்
100 / 100
ஸ்ரீ கீதா ஸாரம் -பாசுரங்கள்
நாரத பக்திசூத்ரம்
நித்ய ஸ்லோக பத்ததி

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவத ரகசியம்

1000 பக்கங்கள்

இந்த நூல் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ ராம நாம வங்கியின்
நாம உதவிகளுக்கு
நாமத்தை ஆஸ்ரயிப்பவர்களுக்கு
ப்ரஸாதமாக வழங்கப்படுகிறது.

ஸ்ரீமத் பாகவதம்

மூலம் தமிழில்

904
பக்கங்கள்
விலை
ரூ.250/-

ஸ்ரீமத் பாகவத விஷயம்

கர்க ஸம்ஹிதை
நந்த நந்தன்
பார்த்தஸாரதி
பகவான் வாசுதேவன்
த்வாரிகாதீசன்
ஸ்துதி மணிகள்
ஸ்ரீமத் பாகவத ஸங்க்ரஹம்
தினசரி பாகவதம்
ஸ்ரீமத் பாகவத கதாம்ருதம்

ஸ்ரீமத் பாகவதம்

பெரிய எழுத்தில்
மூலம் தமிழில்

1064 பக்கங்கள்
விலை ரூ. 550/-

ஸ்ரீமத் பாகவதம்
ப்ரதி பத அர்த்தம்

மூல ஸ்லோகங்கள் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும், பதப்பிரிப்பும்
அர்த்தமும் தமிழில்,
7 பாகங்கள் - 6224பக்கங்கள்
விலை ரூ. 1500/

ஸ்ரீ பகவன் நாம்மா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

ஸ்ரீமத் ராமாயண விஷயம்

ராமாயண ஸங்க்ரஹம்
(SANSKRIT)
தினசரி ராமாயணம்
சுந்தரகாண்டம்

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

மூலம் தமிழில்

899 பக்கங்கள்
விலை ரூ. 450/-

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

தமிழ் வசனம்

7 பாகங்கள்
1322 பக்கங்கள்
விலை ரூ. 300/

ஸ்ரீமத் ராமாயண ரஹஸ்யம்

616 பக்கங்கள்

இந்த நூல் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ ராம நாம வங்கியின்
நாம உதவிகளுக்கு
நாமத்தை
ஆஸ்ரயிப்பவர்களுக்கு
ப்ரஸாதமாக வழங்கப்படுகிறது.

ஸ்ரீ துளஸீ ராமாயணம்

தமிழில் மூலமும் உரையும்

விலை ரூ. 350/-

764 பக்கங்கள்
8 வண்ணப்படங்கள் அடங்கியது

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

நந்தலாவின் எழுத்துக்களில்

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமஹாபாரதம்

ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்

இராமாயண ரஹஸ்யம்

பகவான் வாசுதேவன்

நந்த நந்தன்

பார்த்தஸாரதி

த்வாரிகாதீசன்

கர்கஸம்ஹிதை

உஜ்வல நீலமணி

ஸ்ரீ ஞானேஸ்வர்

பக்த துகாராம்

ஏகநாதர்

ராதே!பருந்தாவன ராதே!!

வ்ரஜ ரஸம்

ப்ரேம சாம்ராஜ்யம்

பக்தி

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

முன்னுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் கலிகாலத்தில் பிறக்கப் போகும் ஜனங்களின் துக்கம், மனக்கவலை, அறியாமை இவற்றைப் போக்கி, அவர்களுக்கு பரம அனுக்ரஹம் செய்யவே, தன் திவ்ய லீலை களை விவரிக்கும் ஸ்ரீ பாகவதத்தின் மூலம், ஸாதுக் களின் காதுக்கு அம்ருதமாயுள்ள தன் புகழை உலகில் பரவச் செய்தார். இந்த அம்ருதத்தை காதுகள் ஆகிய பாத்திரத்தில் வாங்கி அனுபவிக்கும் மனிதன், பக்திக்கும் முக்திக்கும் இடையூறாக இருக்கும் கர்மவாஸனையாகின்ற பந்தம் நீங்கப்பெற்று அவற்றை அடைகிறான் என்று ஸ்ரீபாகவதம் 9வது ஸ்கந்தம் 24வது அத்யாயம் 61,62 ஸ்லோகங்களில் கூறப்பட்டிருக்கிறது. மேலும், ஸ்ரீபாகவதத்தில் கலியில் கலுஷிதமான ஜீவன்களுக்கு ஏற்ற பகவன் நாம கீர்த்தனம், பகவானிடம் உறவு கொண்டுள்ள ஸாதுக்களின் ஸங்கம், க்ருஷ்ண பக்தியை வளர்க்கும் கதாச்ரவணம் இவற்றின் மஹிமையே கூறப்பட்டு இருக்கிறது.

வியாசர் ஸகல ஸாஸ்திரங்களையும் வெளியிட்டும், மன நிம்மதியின்றி எல்லா ஸாஸ்த்ரங்களின் ஸாரமாக பகவத் குண கீர்த்தன பிரதானமான ஸ்ரீபாகவதத்தை வெளியிட்டார். அதன் பின்னரே அவர் நிம்மதியடைந்தார். இதில் வேதோபனிஷத் ஸாரமே நிரம்பியுள்ளது.

Released by Maran's Dog, Toronto , Canada

பாகவதமே பகவான். பகவானே பாகவதம். ஸ்ரீக்ருஷ்ணன் தன் அவதார கார்யம் முடிந்தவுடன் பாகவதத்திலே நுழைந்து விட்டான். பாகவதத்தில் நுழைந்த பகவானை அதை படிப்பதாலேயே பார்க்க முடியும்.

இந்த பாகவதாம்ருதம் யாவருக்கும் எளிதில் கிடைக்கும்படி ஸ்ரீ பாகவத்தின் பாவ அர்த்ததுடன் கூடிய இந்த தமிழாக்கத்தை வெளியிட்டிருக் கிறோம். யாவரும் படித்து அனுபவித்து ஸ்ரீகிருஷ்ண க்ருபைக்கு பாத்திரர்கள் ஆகும்படி பிரார்த்திக் கிறோம்.

நாவுண்டு நீயுண்டு நாமம் தரித்து ஒத
பாவுண்டு தெஞ்சே பயமுண்டோ
பூவுண்டு வண்டு உறங்கும் சோலை மதில் அரங்கத்தே
உலகையுண்டு உறங்குவான் ஒருவனுண்டு.

இங்ஙணம்

"ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்"

ஸ்ரீமத் பாகவதம்-தமிழ் வசனம்

பாகம்–1

பொருளடக்கம்

		பக்கம்
முன்னுரை		1
	ஸ்கந்தம் –1	
1.	சௌனக ப்ரச்னம்	67
2.	ஸூதர் ப்ரத்யுத்தரம்	84
3.	பகவதவதாரங்கள்	94
4.	வியாசர் கவலை அடைந்தது	105
5.	வியாசருக்கு நாரதர் உபதேசம்	111
6.	நாரதருடைய முன் ஜன்மம்	123
7.	அர்ஜுனன் அச்வஸ்த்தாமாவை சிக்ஷித்தது	131
8.	பகவானை குந்தி ஸ்தோத்திரம் செய்தது	144
9.	பீஷ்மர் தர்மம் உரைத்தது	154
10.	ஸ்ரீகிருஷ்ணன் துவாரகை சென்றது	165
11.	துவாரகா வாசிகள் பகவானை உபசரித்தது	172
12.	பரீக்ஷித்தின் உற்பத்தி	181
13.	த்ருதராஷ்ட்ரர் வெளியில் சென்றது	188
14.	தர்மபுத்திரருக்கு நேர்ந்த அபசகுனங்கள்	199
15.	தர்மபுத்திரர் பரலோகம் சென்றது	206
16.	பரீக்ஷித் தர்மத்தைத் கண்டது	216
17.	பரீக்ஷித் மஹாராஜன் கலியை நிக்ரஹித்தது	223
18.	பரீக்ஷித்துக்கு நேர்ந்த ப்ராஹ்மண சாபம்	230
19.	கங்கை கரைக்கு சுகர் வந்தது	238

ஸ்கந்தம் –2

		பக்கம்
1.	விராட்புருஷனுடைய அவயவங்கள்	245
2.	பகவானிடத்தில் மனத்தை செலுத்தும் வகை	256
3.	பகவத் குணங்களின் மேன்மை	269
4.	பரீக்ஷித் ஜகத் சிருஷ்டியைப் பற்றி கேட்டது	274
5.	ஜகத்சிருஷ்டி	279
6.	விராட் புருஷனுடைய விபூதிகள்	288
7.	பகவானுடைய லீலாவதாரம்	297
8.	பரீக்ஷித்தின் கேள்வி	313
9.	சுகருடைய மறுமொழி	318
10.	தத்துவங்களின் உற்பத்தி உரைத்தது	328

ஸ்கந்தம்–3

1.	விதுரருக்கும் உத்தவருக்கும் சம்வாதம்	338
2.	உத்தவர் ஸ்ரீ கிருஷ்ண சரிதத்தை வர்ணித்தது	348
3.	ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதங்கள்.	355
4.	விதுரர் மைத்ரேயரைச் சந்தித்தது	360
5.	மைத்ரேயருக்கும் விதுரருக்கும் ஸம்வாதம்	366
6.	விராட் ஸிருஷ்டி	375
7.	விதுரருடைய பிரச்னங்கள்	381
8.	ப்ரஹ்மதேவருடைய உற்பத்தி	388
9.	ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ப்ரஹ்மதேவர் ஸ்தோத்திரஞ்	395
10.	பத்து வகையான சர்க்கங்கள்	405
11.	காலத்தின் ஸ்வரூபம்	410
12.	ஸனகர் முதலியவர்களுடைய ஸிருஷ்டி	417
13.	வராஹாவதாரம்	424
14.	திதி தேவி கர்ப்பத்தை அடைந்தது	433
15.	ஜய விஜயர்களுடைய சாபம்	442
16.	ஜய விஜயர்களுக்கு அனுக்கிரகம்	455
17.	திதிக்குப் புத்திரர்கள் பிறந்தது	462
18.	யக்ஞவராஹருக்கும் ஹிரண்யாக்ஷனுக்கும் யுத்தம்	467
19.	ஹிரண்யாக்ஷவதம்	472

ஸ்ரீமத் பாகவதம்

முன்னுரை

இது ஸ்ரீ பகவானுடைய அற்புத லீலைகளையும் அனந்த கல்யாண குணங்களையும் முக்கியமாய் வர்ணிக்கும் சுகருக்கு இது வ்யாச மஹர்ஷியால் சுகருக் கு உபதேசிக்கப் பட்டது, ஸ்ரீ சுகர் பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சொன்னார், அப்பொழுது சூதர் அவ்விட மிருந்து இக்கதையை ஸ்ரீ சுகபகவானின் அனுமதியின் பேரில் தெரிந்து கொண்டார். பிறகு அவர் நைமி சாரண்யத்தில் வசிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்குச் சொன்னார்.

ஸ்ரீமத் பாகவதம் என்பது யாது?

ஸ்ரீமத் பாகவதம் என்ற புராணம் எல்லா வற்றிலும் மேலானது (1) ஸகல உபநிஷத்துக் களால் நிரூபிக்கப்படும் பரமாத்மா இதனால் வர்ணிக்கப்பட்டிருக்கிறார். (2) வ்யாஸ மஹர்ஷியானவர் விஸ்தாரமான வேதங்களை பிரித்தும் பாரதம் முதலிய இதிஹாசங்களைச் செய்தும் தனது மனது ப்ரஸன்னமாகாததால் பகவானுடைய குணங்களையே முக்கியமாக வர்ணிக்க வேண்டும் என்று இதைச் செய்தார். (3) கீதா, ஸஹஸ்ரநாம, ராமாயண, இந்த சப்தங்கள் தனியே உச்சரிக்கப்பட்டாலும், அவை

முறையே பகவத்கீதை, விஷ்ணு சகஸ்ரநாமம், ஸ்ரீவால்மீகி ராமாயணம் என்பவற்றையே குறிப்பிடுதல் போல பாகவதம் என்ற சப்தமும் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் குணத்தைச் சொல்லும் விஷ்ணு பாகவதத்தையே காட்டுகிறது.(4) மேலும் இது ஸகல லோகங்களாலும் நமஸ்கரிக்கப்பட்ட பாதங்கள் உள்ள ஸ்ரீசுகமஹர்ஷியாலும் அத்யயனம் செய்யப்பட்டது. (5) இது மோக்ஷத்தை விரும்பிய பரீக்ஷித்து மஹாராஜனுக்கு சுகமஹர்ஷியால் மோக்ஷசாஸ்திரம் என்று உபதேசிக்கப் பட்டுள்ளது.

ஆட்சேபம்: "ஹேமாத்ரி என்னும் பெயருள்ள ஒரு ப்ரபுவினுடைய அரண்மனை வித்வான்களின் முக்கியரான போப தேவர் என்ற பண்டிதர் இருந்தார். அவர் கோபால பக்தனாக இருந்த அந்தப் ப்ரபுவை ஸந்தோஷப்படுத்துவதற்காக அவருடைய நியமனப்படி இந்தப் புராணத்தை எழுதி அரசனிடம் கொடுத்தார். அரசன் அதை முழுதும் மற்ற பண்டிதர்களுடன் பரிசோதித்து அதில் உள்ள பதச்சேர்க்கை முதலியவைகளால் ஆச்சர்யப்பட்டு அதனை உலகில் பரவச்செய்ய விரும்பி அதனை அனேகம் பிரதிகள் எழுதுவித்து பண்டிதர்களைக் கொண்டு வ்யாக்யானமும் செய்து பரவச்செய்தார்" என்ற ஒரு கதையை பெரியோர்களால் சொல்லக்கேட்டு இருக்கிறோம்; அப்படியிருக்க வ்யாஸர் செய்தார் என்பது பொருந்துமா ? என்றால்':–

ஸமாதானம்: இந்த விஷ்ணுபாகவதம் போப தேவர் செய்ததன்று. ஹேமாத்ரி என்ற ப்ரபு ஒரு

நாள் சபையில் வித்வான்களை நோக்கி," இரண்டு முகூர்த்தங்களில் பாகவதத்தின் அத்யாயச் சுருக்கங்களை ச்லோகமாகச் சொல்ல உங்களில் யார் சக்தியுள்ளவர்" என்று கேட்டார். அப் பொழுது போபதேவர் என்ற பண்டிதர் நாளைய தினம் சொல்கிறேன் என்றார். மறுநாள் பாகவதாத்யாயஸாரம் என்ற கதானு க்ரமணிகையை செய்து அந்த ப்ரபுவிடம் கொடுத்தார்.

அதன் முதல் ச்லோகம் பின்வருமாறு:" வித்வானாகிற போபதேவரால் மந்திரியாகிய ஹேமாத்ரியின் திருப்திக்காக இதில் ஸ்ரீமத் பாகவதத்தின் அத்யாய ஸாரம் நிரூபிக்கப் படுகின்றது." இதனால் ப்ரபு திருப்தி அடையா மலிருந்து அவருடைய நியமனப்படி பக்தி முக்தாபலம், பக்திலஹரி என்ற இரண்டு பக்தி நிரந்தங்களைச் செய்தார். அதனால் ப்ரபு பண்டிதரை மிகவும் கௌரவப்படுத்தினார்.

தவிர போபதேவர் செய்த க்ரந்தங்களின் விவரமானது பக்திமுத்தாபலம் என்னும் க்ரந்த த்தின் வியாக்யானத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதாவது ஸாஸ்திரங்களை படித்த வர்களுக்குள் சிறந்தவரான போப தேவரால் வ்யாகரணவிஷயமாக 10 க்ரந்தங்களும் மனிதர் களின் வைத்ய விஷயமாக 15 க்ரந்தங்களும் 16 வ்யாக்யானங்களும் ஸாஹித்ய விஷயமாக 3 க்ரந் தங்களும் செய்யப்பட்டன. அவைகள் யாவும் ஸல்லோராலும் கொண்டாடத்தக்கவைகளே. தவிரவும் இந்த போபதேவர் ஸ்ரீமத் பாகவத

க்ரந்தத்தை 22 தடவை படித்தார் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அவரால் வேத வ்யாஸ ஸ்தோத்திரமும் ஸ்லோகமாக செய்யப் பட்டு இருக்கிறது. மேற்காட்டிய காரணங் களால் முன்னே சொன்ன ஆக்ஷேபத்துக்கு இடமே இல்லை. தவிரவும் ஸ்ரீமத் பாகவதத்தின் முதல் ச்லோகத்தின் வ்யாக்யானத்தில் ஸ்ரீதரா சார்யாள் அவர்கள் "பாகவதம் என்பது வேறு என்று சந்தேகப்படக்கூடாது" என்பதாகச் சொல்லி இருக்கிறார்.

ஆட்சேபம்: ஸ்ரீமத் பாகவதம் வ்யாசரால் செய்யப்பட்டது என்பது முற்றிலும் பொருந்தாது. அந்த மஹர்ஷியினால் செய்யப்பட்ட மஹா பாரதம், ஸ்காந்தம், விஷ்ணு புராணம் முதலிய கிரந்தங்கள் எளிதில் படிக்கக்கூடியவை களாகவும் எளிதில் அர்த்தம் செய்து கொள்ள க்கூடியவைகளாகவும் இருக்கின்றன. இந்த பாகவதத்திலோ மேற்காட்டியவைகள் முற்றிலும் மாறிஇருக்கின்றன. ஒருவரால் செய்யப்பட்ட க்ரந்தங்களில் இவ்வளவு மாறுதல்கள் இருக்க நியாயமில்லை. ஆகையால் இதன் கர்த்தா வ்யாஸர் அல்லர் என்பதேயாம்.

சமாதானம்: சொல்லிய ஆக்ஷேபம் சரியானதே. ஆனாலும், ஸ்ரீவ்யாஸ பகவான் ஸ்ரீ நாராயணனுடைய அவதாரம். அவர் வேத–ராசியை ஜனங்கள் அத்யயனம் செய்ய முடியாமல் புத்திக் குறைவுள்ளவர்களாக இருக்கும் காலத்தில் அக்குறையை நீக்கு வதற்காக வேதங்களை நான்கு சாகைகளாகப்

பிரித்தார். அவற்றைப் படிப்பதற்கும் கேட்பதற்கும் அதிகாரம் இல்லாத ஸ்திரீகள், சூத்ரர்கள் இவர்களுக்காக மஹாபாரதம், இதிஹாஸம் முதலியவைகளை எளிதில் அர்த்தமாகும்படி எளிய நடையில் எழுதி வெளியிட்டார். அப்படியே வேதார்த்தத்தை பகவத்கீதை, ப்ரம்ஹஸூத்திரம் இவை களால் வெளியிட்டார். இப்படி மந்தாதிகாரிகளை உத்தேசித்து எளியவைகளைச் செய்தார். உத்தமாதி காரியான வித்வான்களுக்கு உபயோகப்படும்படி ஸகல வேதங்களால் நிரூபிக்கப்படும் பரமாத்மா வை கடினமான சந்தர்ப்பத்தால் வர்ணித்தார். ஆகையால் அதிகாரி பேதத்தால் நடையின் பேதம் ஏற்பட்டதே ஒழிய கர்த்தாவின் பேதத்தால் ஏற்பட்டதல்ல.

ரகுவம்சம், மேகசந்தேசம், நளோதயம், ஹரிச்சந்திரோபாக்யானம், நளோபாக்யானம் இவைகள் மஹா கவியான காளிதாஸரால் செய்ய ப்பட்ட கிரந்தங்கள். இவைகளின் பதங்கள், அவைகளின் சேர்க்கை, விருத்தி, பாகம் முதலியவைகள் வெவ்வேறாக காணப்படுகின்றன, அதனால் இவைகளை காளிதாஸர் எழுதவில்லை எனச் சொல்லக்கூடுமா?

மேலும், ஆத்மபோதம், ஸௌந்தர்யலஹரி இவைகள் ஸ்ரீமத் பகவத்பாதர்களால் செய்யப் பட்டவைகளானாலும், ஒன்றுக்கொன்று மேற்காட்டிய விஷயங்களில் மாறுபட்டுள்ளவைகளாக இருக்கின்றன. ஆகையால் ஸர்வக்ஞர்களாயும் பகவானுடைய அவதார பூதராயுமான வ்யாஸ மஹர்ஷியினுடைய வாக்கானது கங்காப் பிரவாஹம்

போலத் தடையற்றது.

ஆட்சேபம்: பாகவதம் என்பது தேவீபாகவதமே ஒழிய வ்யாஸ மஹர்ஷியால் செய்யப்பட்டது அல்ல. ஏனென்றால் "ஸ்ரீமத் பாகவதத்தை எழுதி ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்தில் வைத்துத் தானஞ்செய்பவருக்கு மோக்ஷம் கிடைக்கும்" மத்ஸ்ய புராணம். இதே விஷயத்தை ஸ்ரீ தரா சார்யாள் முதலியவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பற்றி கொஞ்சம் யோசிப்போம். ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்துக்கும் ஸ்ரீமத் பாகவதத் திற்கும் என்ன சம்பந்தம். ஸ்ரீமகாவிஷ்ணுவுக்கு கருடன் வாகனம் என்று பிரசித்தமே தவிர, சிங்கம் வாகனம் என்பது ஓர் இடத்திலும் சொல்லப்படவில்லை. வேறு வாகனமிருப்பதாகவும் தெரியவில்லை; பகவானே நரஸிம்ஹாவதாரஞ் செய்தவராகையால் ஸிம்மம் என்று சொல்லி இருக்கிறதென்று யோசிப்போமானால் பரமாத் மாவின் ஸ்வரூபமாகிய ஸிம்மத்தின் மீது அவரை நினைப்பிக்கும் க்ரந்தத்தை வைத்து தானஞ்செய்வது நியாயமாகுமா? ஆகையால் தேவீபாகவதம் என்று சொல்வதே உக்தமம். ஸிம்மம் ஸ்ரீதேவியின் வாகனமாகையால், அதில் வைத்துத் தானஞ் செய்வது மோக்ஷத்தைக் கொடுக்கும் என்பது பொருந்தும்.

ஸமாதானம்: முன்னே காட்டியுள்ள ஆக்ஷேபம் முற்றிலும் பொருந்தாது. ஸகல ஸ்வரூபியான ஸ்ரீ பகவானுக்கு, ஆஞ்சநேயர், குதிரை, யானை இவைகள் வாகனமாக இருக்கின்றன. இப்பொழுது தேவாலயங்களில் உத்ஸவ காலத்தில்

மேற்காட்டிய வாகனங்களில் பகவானை அலங்கரிப்பது வழக்கமாக இருந்துவருகிறது. "விஷ்ணுவின் வாகனங்களைச் சொல்கிறோம்: முதல்நாள் ஹம்ஸம், இரண்டாம் நாள் ஸிம்மம், முன்றாம் நாள் ஆஞ்சநேயர், நான்காம் நாள் ஆதிசேஷன், ஐந்தாம் நாள் கருடன், ஆறாம் நாள் யானை, ஏழாம் நாள் ரதம், எட்டாம் நாள் குதிரை, ஒன்பதாம் நாள் பல்லக்கு, பத்தாம் நாள் புஷ்பகம்" வைகானஸ தந்திரம், – தெய்வீக யக்ஞாதிகாரம், உத்ஸவ படலம்."பகவான் உத்ஸவ தினங்களில் ஹம்ஸம், ஸிம்மம், ஹனுமான், ஆதிசேஷன், கருடன், யானை, ரதம், குதிரை, பல்லக்கு, புஷ்ப மண்டபம் ஆகிய வாஹனங்களில் முறையே வீற்றிருந்து அர்ச்சாவதாரத்தின் மஹிமையை காண்பிக்கிறார்; அதிகாரிகை இதே விஷயம் வைசம்பாயன காரிகையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் பகவானுடைய அனந்த கல்யாண குணங்களை வர்ணித்து இருக்கும் ஸ்ரீமத் பாகவதம் ஸ்ரீமந் நாராயண ஸ்வரூபமே தவிர வேறில்லை. அதை ஸிம்ஹாஸனத்தில் வைத்து தானம் செய்வதில் கொஞ்சமேனும் ந்யாய விரோதமில்லை; 'ரிஷியின் அம்சம் இல்லாதவன் காவியம் எழுதமாட்டான்; விஷ்ணுவின் அம்சம் இல்லாதவன் அரசனாகிறதில்லை' என்றபடி அரசன், விஷ்ணுவின் அம்சம் உள்ள வனாகையால் ஸிம்ஹாஸனத்துக்குரியவனாகிறான். அப்படி இருக்க பகவானுக்கு ஸிம்ஹாஸனம் உண்டென்று ஏன் சொல்லக்கூடாது? ஹேமாத்ரி முதலிய க்ரந்தங்களில் தானப் பிரகரணத்தில் ரோகிகளின் வ்யாதி நிவர்த்திக்காக, அந்தந்த வ்யாதிக்குத்

தக்கபடி ஒரே தேவதையை அநேக வாகனங்களில் பூஜித்து தானம்செய்யும்படி சொல்லப் பட்டிருக்கிறது. அப்படிப்போல் ஸம்ஸார வ்யாதியால் உபத்திரவம் அடைந்தவனுக்கு அதன் நிவர்த்திக்காக இம்மாதிரியான தானம் பிராய சித்தமாகச் சொல்லப்பட்டது. தேவீ பாகவதம் முதலிய சக்தியை நிரூபிக்கும் க்ரந்தங்களில் தேவிக்கு ஸிம்மவாஹனம் என்று சொல்லப்பட்டு இருந்தாலும் ஸிம்மம் ஸ்ரீதேவியின் வாகனமே ஒழிய பகவானுடையதல்ல, என்று சொல்ல முடியாது. ஏனென்றால் ஸ்ரீதேவி மஹாவிஷ்ணுக்கு பத்னியாகையால் தான் பர்த்தாவினுடைய வாகனங்களில் தனதிஷ்டப்படி ஒருவேளை கருடன்மீதும், ஒருகால் ஸிம்மத்தின்மீதும் பின்னர் யானைமீதும் ஏறி ஸஞ்சரிக்கலாமே ஒழிய அவருக்குச் சொந்தமான வாகனம் இன்னதென்று கல்பிப்பது பொருந்தாது. வீடு, தோட்டம், வயல், பணம், வேலைக்காரர்கள், வேலைக்காரிகள், வாகனம், பசு, ஆபரணம், கடன் இவைகளில் பர்த்தாவுக்கு அதிகாரமே ஒழிய பத்னிக்கு அதிகாரம் இல்லையென்று மனுஸ்மிருதி முதலிய வைகள் சொல்லுகின்றன. ஸ்திரீ ஒருபொழுதும் ஸ்வாதந்திரயத்தையடையத்தக்கவளல்ல. புருஷன் உடைய வாகனங்களில் அவர்களுடைய பத்னி ஏறினதால் அவைகள் அவர்களுடையதாகி விடுமா? அப்படி உலகத்தில் வழக்கமும் இல்லை.

ஆட்சேபம்: ஸ்ரீ வ்யாஸ மஹர்ஷியானவர் இந்தப் பாகவத சாஸ்திரம் எல்லா உபநிஷத்துக்களுக்கு ஸமமானது என்று காட்டுவதற்காகவே ஸகல

வேதார்த்தங்களைச் ஸ்லோக ரூபமாகச் செய்தார். சில இடங்களில் வேதத்தில் உள்ளபதச் சேர்க்கையே காட்டி இருக்கிறார். வேதத்தின் அர்த்தம் அறியாமலேயே சம்பிரதாயப்படி படிப்பதால் மேலான பலன் கிடைப்பது போல் வேதத்திற்குச் சமமான ஸ்ரீமத்பாகவத கிரந்தத்தை தானஞ் செய்வதாலும் மோக்ஷம் கிடைக்கும் என்று சொல்லப்பட்டது. இதனால் புத்தகதானத்திற்கே இவ்வளவு பலன் கிடைக்குமாகில், குருமுகமாக சாஸ்த்ரமுறைப்படி இதைத் தெரிந்துகொண்டவனுக்கு முக்தி கிடைப்பது நிச்சயம் என்று பொருள். மோக்ஷத்தை விரும்பியவர்களும் இடையூராகிய பாபத்தை நிவர்த்தித்துக் கொள்ள முடியும். அதனால் பாகவத தானத்தால் மோக்ஷம் கிடைக்குமென்று வியாசமஹர்ஷி சொன்னார். "புத்தியள்ளவன் கலியுகத்தில் தானத்தாலேயே பாபத்தை நிவர்த்தித்துக் கொள்ளவேண்டும்"–விஷ்ணு ஸ்மிருதி. "மூவுலகத்திலும் தானத்தைவிட மேலானது ஒன்றுமில்லை. தானத்தால் ஸ்வர்க்கம், லக்ஷ்மி, சத்ருஜயம், வித்யை, ஸ்திரீகள், வ்யாதிநிவர்த்தி ஆகியவைகள் கிடைக்கும். —ஸௌர புராணம். இவ்வுலகத்திலும், பரலோகத்திலும் தானமே முக்கியமான க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது. இதுவே மோக்ஷத்துக்கு ஸாதனம் என்று வேதம் சொல்லுகிறது. ப்ரஹ்ம கைவர்த்த புராணம். க்ருதயுகத்தில் தபஸும், த்ரேதா யுகத்தில் ஞானமும், துவாபர யுகத்தில் யக்ஞமும், கலியுகத்தில் தானமும் க்ஷேமத்தைக் கொடுக்கும் —மனுஸ்மிருதி. ஆகையால் தானமே மேலானது —ச்ருதி. "ஸ்ரீகிருஷ்ண பகவான்,

அர்ஜுனனுடைய வார்த்தையை கேட்டு தர்ம புத்திரரை தமது கையால் தடவிச் சொன்னதாவது, ஓ அரசனே ப்ருஹ்ம ஹத்தியை, கள் குடிப்பது, திருடுவது, ஆசார்ய பத்னியைப் புணர்வது முதலிய பாபங்கள் தானத்தாலேயே நிவர்த்தி யாகின்றன. புத்திரன், பணம், புண்ணியம் முதலியவைகள் தானத்தாலேயே கிடைக்கின்றன —ஸ்காந்தம்.

ஆட்சேபம்: பாகவதத்திற்கு வ்யாக்யானம் செய்த ஸ்ரீதராசார்யார் முதலானவர்கள் முதல் ஸ்லோகத்துக்கு வ்யாக்யானம் செய்யும்பொழுது பாகவதலக்ஷணமாகக் காட்டிய வசனங்கள் பின் வருமாறு கண்டுகொள்க.

எந்தக் க்ரந்தத்தில் காயத்ரி மூலமாக தர்ம விஸ்தாரம் வர்ணிக்கப்பட்டிருக்கிறதோ விருத்ரா ஸுரனின் கதை எதில் இருக்கிறதோ அந்த 18000 க்ரந்தங்களுள்ளதே பாகவத புராணம் என்று சொல்லப்பட்டது. —மத்ஸ்ய புராணம். எதில் ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யை விருத்ராஸுர வதம் 18000 க்ரந்தங்கள் 12 ஸ்கந்தங்கள் ஆகிய இவைகள் இருக்கின்றனவோ எது காயத்ரியால் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறதோ அதை பாகவதம் என்று சொல்லுகிறார்கள் —ஸ்காந்தம். ஓ அம்பரீஷா! ஸம்ஸார பந்தம் நிவர்த்தியாக வேண்டுமானால் சுகரால் சொல்லப்பட்ட பாகவதத்தை பிறர் சொல்லக்கேட்கவேண்டும். தானாகவாவது படிக்க வேண்டும்—பத்மபுராணம். இது ப்ருஹ்ம ஸூத்ரங்களுடைய அர்த்தம்; மஹாபாரதத்தின் உண்மையான அர்த்தம் காயத்ரீ மந்திரத்துக்கு

பாஷ்யம். புராணங்களுடைய ஸாரம் வேதத்தின் அர்த்தங்களால் நிறைந்தது. 12 ஸ்கந்தங்கள் உள்ளது; 100 விச்சேதமுள்ளது, 18000 க்ரந்தங்கள் உள்ளது; பாகவதம் என்ற பெயருள்ளது— கருட புராணம்.

இதில் சொல்லியுள்ள லட்சணங்கள் யாவும் தேவீ பாகவதத்தில் பொருந்தி இருக்கின்றனவே ஒழிய விஷ்ணு பாகவதத்தில் பொருந்தியவைகளாக இல்லை. மேலும் மஹா மாயா ரூபியான சக்தியின் மஹிமையால் மஹாவிஷ்ணு ஹயக்ரீவர். ஆனார். தேவீ பாகவதம் ஸ்கந்தம் 1. அத்யாயம் 5, ஹயக்ரீவபரமாத்மா அகஸ்தியமஹர்ஷிக்கு உபதேசித்த தேவீ விஷயமான க்ரந்தங்களுக்கு ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யையென்று பெயர். அந்த வித்யை விஷ்ணுபாகவதத்திலாவது, மற்ற புராணங்களிலாவது சொல்லப்படாததானாலும், தேவீபாகவதமே பாகவதமென்பதற்கு அர்த்தம்.

ஸமாதானம்: பாகவதம் என்றால் விஷ்ணு பாகவதமென்றே அர்த்தம் கொள்ளவேண்டும். ஹயக்கிரீவ ப்ருஹ்மவித்யை என்றால் ஹயக்ரீவ பரப்ருஹ்மத்துக்கு மற்றவர் சொன்ன வித்தை என்றாவது ஹயக்ரீவர் பிறருக்குச் சொன்ன வித்தை என்றாவது அர்த்தம் செய்யக்கூடாது. ஹயக்ரீவர் பிறரிடம் உபதேசம் பெற்றார் என்றாவது பிறர்க்கு உபதேசித்தார் என்றாவது ஒரு க்ரந்தத்திலும் சொல்லவில்லை. பிரளய காலத்தில் எல்லா வித்தையும் காணாமல் கொண்டு

வந்தார், ஆதலால் ஹயக்கிரீவரால் கொண்டு வரப்பட்ட வித்யை என்றே அர்த்தம் செய்ய வேண்டும். மேலும் ப்ரஹ்ம சப்தத்துக்கு வேதம் என்று அர்த்தம் வைத்துக்கொண்டால் வேத வித்யை என்றும், உண்மை என்று அர்த்தம் கொண்டால் தத்வ ஞானம் என்றும், தபஸ் என்று அர்த்தம் கொண்டால் தபோ வித்யை என்றும், நான்கு முகங்கள் உள்ள ப்ருஹ்மதேவர் என்று அர்த்தங்கொண்டால் ப்ருஹ்மதேவருக்கு உபதேசம் செய்யப்பட்ட ப்ருஹ்ம வித்யை என்றும், ப்ராஹ்மணர்கள் அர்த்தம் செய்யக்கூடிய வித்யை யென்று அர்த்தம் ஏற்படுகிறதே ஒழிய தேவீ விஷயமான வித்யை என்ற அர்த்தம் ஏற்படவில்லை. ஆகையால் ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யை விஷ்ணு பாகவதத்திலேயே நிரூபிக்கப்பட்டு இருக்கிறது.

ஆட்சேபம்: தேவீ விஷயமான க்ரந்தங்களில் அகஸ்திய மஹர்ஷிக்கு ஹயக்ரீவர் மகாவித்யை உபதேசித்தார் என்று சொல்லி இருப்பது பொருந்துமா ?

ஸமாதானம்: பொருந்தும். ஹயக்ரீவரால் எடுத்து வரப்பட்டவைகளில் அகஸ்திய மஹர்ஷிக்கு உபதேசிக்கப்பட்ட மந்திரங்களும் சேர்ந்தவையாம். பூர்ணிமா திதியில் தானம் செய்யவேண்டும் என்று சொல்லி இருக்கிறது. சிவாலயங்களிலும், விஷ்ணு ஆலயங்களிலும் பஞ்ச பர்வங்களில் பூர்ணிமா திதியில் விசேஷமான ஆராதனம் செய்கிறார்கள். தேவீ ஆலயங்களில் பூர்ணிமா திதியில் யாதொரு விசேஷ ஆராதனமும்

நடப்பதாகத் தெரியவில்லை. மேலும் ஏகாதசி, பூர்ணிமா இந்தத் தினங்களில் ஹயக்ரீவரை ஜபித்தவன் மகானுபாவனாக ஆகிறான். ஹயக்ரீவோபநிஷத் ப்ருஹ்ம ஸூத்திரங்களுடைய அர்த்தமே "பாகவதம்" என்ற கருட புராணத்தில் சொல்லிய லக்ஷணம், தேவீ பாகவதத்தில் கொஞ்சமேனும் இல்லை விஷ்ணு பாகவதத்திலேயே பொருந்தி இருக்கிறது.

ஸ்ரீமத் பாகவத மஹிமை

முன்னொரு காலத்தில் நைமிசாரண்யத்தில் வசிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகள் ஸூதரை நோக்கி கோரமாகிய இக்கலியுகத்தில் பிராணிகள் அதர்மத்தில் ஆசையுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு பக்தி, ஞானம் வைராக்யம் விவேகம் ஆகிய இவைகள் எதனால் உண்டாகும்? எது பலவிதமான ச்ரேயஸ்ஸான தனங்களில் மேலானது? எது சுத்தமானவைகளுக்கும் பரிசுத்தியை உண்டு பண்ணுகிறது? எது ஸ்ரீ கிருஷ்ணனுக்கு மிகவும் பிரியத்தை உண்டு பண்ணக்கூடியது? சிந்தாமணியானது இவ் வுலகத்திய சுகத்தை மட்டும் கொடுக்கும். மகேந்திரன் ஸ்வர்க்க ஸுகத்தை மாத்திரம் கொடுப்பான். ஆச்சார்யர்களுக்கு சந்தோஷ முண்டானால் யோகிகளுக்கும் கிடைக்க அரிய தான வைகுண்ட பதத்தையும் கொடுப் பார்கள். ஆனதால் அதைச் சொல்லவேண்டும் என்று கேட்டார்கள்.

இதைக் கேட்ட ஸூதர் சௌனகரை நோக்கி, உமக்கு இவ்விஷயத்தில் பிரியம் உண்டானதால் எது ஸம்சார தாபத்தை நிவர்த்தி செய்யுமோ, எது ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு சந்தோஷத்தை உண்டு பண்ணுமோ, எது பக்தியை விசேஷமாக வ்ருத்தி செய்கிறதோ, அதனை யோசித்துச் சொல்லுகிறேன். ஜாக்கிரதையாக கேளுங்கள். பரீக்ஷித்து மஹாராஜனுக்கு சுகரால் உபதேசிக் கப்பட்ட ஸ்ரீமத் பாகவத சாஸ்திரமே சித்த சுத்தியை உண்டுபண்ணக்கூடியது; ஜன்மாந்திரத்தில்

புண்ணியம் செய்தவன்தான் பாகவதத்தைக் கேட்பான், படிப்பான். சபையில் பரீக்ஷித்துக்கு சுகர் பாகவத கதையைச் சொல்லும் பொழுது தேவர்கள் அனைவரும் அமிர்த குடத்தை எடுத்துக்கொண்டு வந்து சுகரை நமஸ்கரித்து இந்த அமிர்தத்தை அரசன் புஜிக்கட்டும். நாங்கள் பாகவதமாகிய அமிருதத்தை பானஞ் செய்கிறோம். நீர் அமிர்த குடத்தை அரசனுக்கு கொடுத்துவிட்டு கதாமிருதத்தை எங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். அதனைக் கேட்டு சமீபத்தில் இருக்கும் சக்ரவர்த்தியானவர், ரத்னத்துக்கும், காசமணிக்கும் எவ்வளவு பேதமோ அவ்வளவு தாரதம்யம் பகவத் கதைக்கும் அமிருதத்துக் குமுள்ளது என்று யோசித்து தேவர்களை நோக்கி சிரித்தார். சுகரும், தேவர்கள் பகவத் பக்தி இல்லாதவர்கள் என்று நினைத்து கதாம்ருதத்தை தேவர்களுக்குக் கொடுக்க சம்மதிக்கவில்லை. ஆகையால் பாகவதக் கதையானது தேவர்களுக்கும் அரிதாயிற்று. பின்பு பரீக்ஷித்து மகாராஜனுக்கு ஸ்ரீமத் பாகவதக் கதையால் மோக்ஷம் கிடைத்ததைப் பார்த்து ப்ருஹ்மதேவர் ஆச்சரியம் அடைந்து ஸத்ய லோகத்தில் தராசைக் கட்டி மோக்ஷ சாதனங்கள் எல்லாவற்றையும் நிறுத்தார். ஸ்ரீமத் பாகவதமே பாரமுள்ளதாக இருந்தது. மற்றவை இலகுவாகவிருந்தன. அதனைக் கண்டு ஸகல மஹர்ஷிகளும் மிகவும் ஆச்சரியப்பட்டு ஸ்ரீமத் பாகவதத்தை பகவானுடைய ஸ்வரூபமாக நினைத்தார்கள். அதனைப் படிப்பதாலும், கேட்பதாலும் உடனே மோக்ஷம் கிடைக்கும். இந்த

க்ரந்தத்தை ஏழு தினங்களில் முழுமையும் விதிப்படி கேட்டால் ஸகல பலன்களும் ஸித்திக்கின்றன. இதனை ஸனகர் முதலான யோகிகள் நாரதருக்கு முன் காலத்தில் உபதேசித்தார். தேவர்ஷியாகிய நாரதரும் ப்ருஹ்மத்தை வர்ணிக்கும் இந்தக் க்ரந்தத்தை கேட்டார். ஏழு நாட்களில் இதைக் கேட்க வேண்டிய முறையும் நாரதருக்கு அவர்களால் உபதேசிக்கப்பட்டது, என்று சொன்னார்.

இதைக் கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்கும் முறையைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற விருப்பம் நாரதருக்கு உண்டான காரணம் என்ன? அவர் பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை நன்றாக அறிந்தவர் அல்லவா? மேலும் ஸனகர் முதலிய ப்ருஹ்ம புத்திரர்களோடு நாரதருக்கு ஸம்வாதம் எவ்விடத்தில் நேர்ந்தது? இதற்குப் ப்ரத்யுத்தரம் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

அதனைக் கேட்டு ஸூதர் பின்வருமாறு விடை சொல்லலானார். "ஹே சௌனகரே சுகர் என்னை அந்தரங்க சிஷ்யனாக நினைத்து எனக்கு எதனை உபதேசித்தாரோ அதனை உமக்கு சொல்லுகிறேன். முன் ஒரு காலத்தில் விசாலா நகரத்தில் நான்கு மஹரிஷிகள் ஸாது ஸங்கம் செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் சேர்ந்தார்கள். அப்பொழுது அவ்விடத்தில் தெய்வச்செயலால் தேவர்ஷியாகிய நாரதரும் வந்தார். அவர்கள் நாரதரைக்கண்டு,

ஓ ப்ருஹ்மபுத்திரரே! நீர் ஒரு விஷயத்திலும் ஆசை இல்லாதவர்: அப்படி இருந்தும் மிக்க வேகமாக எவ்விடம் செல்லுகிறீர்? உம்முடைய முகம் வாடினதாகக் காணப்படுகிறது, அதற்குக் காரணம் என்ன? ஜனங்கள் பொருள் செலவழித்த காலத்தில் எப்படி வருத்தப்படுவார்களோ அப்படி சூன்ய சித்தராக இருக்கிறீர். நீர் இப்படி இருப்பது உசிதமல்ல. ஆதலால், அதன் காரணத்தைச் சொல்ல வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

அதைக் கேட்டு நாரதர் விடை சொன்னதாவது:– "நான் பூமியையே எல்லாவற்றிலும் மேலானது என்று நினைத்து, புஷ்கரம், பிரயாகை, காசி, கோதாவரி, ஹரிக்ஷேத்திரம், குருக்ஷேத்திரம், ஸ்ரீரங்கம், இராமேச்வரம் முதலிய தீர்த்தங்கள் சென்று எங்கும் அலைந்தேன். அப்படியும் மனதுக்கு சந்தோஷம் ஏற்படவில்லை. இந்தப் பூமி முழுவதையும் கலி அதர்மத்துடன் வியாபித்துக் கொண்டுவிட்டான். அதனால் சத்யம், தபஸ், சௌசம், தயை, கொடுப்பது ஆகிய இவை ஓர் இடத்திலாவது இருப்பதாகக் காணப்படவில்லை. எல்லா ஜனங்களும் தங்கள் தங்கள் வயிறு நிரம்ப புஜிப்பதில் மாத்திரம் ஆசையுள்ள வர்களாகவும், கபடமாகப் பேசும் தன்மை உள்ளவர் களாகவும், பாஷண்டர் களிடத்தில் (வேதவிரோதிகள்) ப்ரீதி உள்ளவர் களாகவும் இருக்கிறார்கள். ஒவ்வொரு வீடுகளிலும் ஸ்திரீகளே பிரபுவாயிருந்து அதிகாரம் செய் கிறார்கள். மைத்துனனே புத்தி சொல்லுகிறான். எல்லோரும் பெண்களை விலைக்குவிற்கிறார்கள்.

தம்பதிகள் ஒருவருக்கொருவர் கலகஞ்செய்து கொள் கிறார்கள். ஆசிரமங்கள், புண்ய தீர்த்தங்கள், நதிகள், தேவாலயங்கள் ஆகிய இவைகள் பெரும்பாலும் துஷ்டர்களால் கெடுக்கப்பட்டன. யோகி, சித்தன், ஞானி நல்ல கர்மாவைச் செய்பவன் ஆகிய இவர்கள் ஒருவரும் காணப்படவில்லை. நல்ல காரியங்கள் யாவும் கலியாகிய அக்னியால் எரிந்து சாம்பலாக்கப்பட்டன. ஒவ்வொரு தேசத்திலும் ஜனங்கள் அன்ன விக்ரயம் செய்கிறார்கள். ப்ராஹ்மணர்கள் வேதத்தை விற்கிறார்கள். ஸ்திரீகள் பெரும்பாலும் விபசாரம் செய்கிறார்கள். இம்மாதிரியான கலியின் விளையாட்டை எங்கும் பார்த்துக் கொண்டு நான் யமுனையின் கரைக்கு வந்தேன். அதுதான் ஸ்ரீ கிருஷ்ண பகவான் விளையாடின இடம். அவ்விடத்தில் ஒரு அற்புதத்தைக் கண்டேன். அதாவது யௌவன வயதுடைய ஒரு பெண் மனவருத்தத்துடன் அவ்விடம் இருந்தார். அவளுடைய பக்கத்தில் இரண்டு வயது சென்றவர்கள் பிரக்ஞை இல்லாதவர்களாக பெருமூச்சு விட்டுக்கொண்டு படுத்திருக்கக் கண்டேன். அந்தப் பெண் அவர்களுக்குப் பணிவிடை செய்தும், அழுது கொண்டும், தன்னைக் காப்பாற்றுகிறவர் யார் என்று பத்து திக்குகளையும் பார்த்துக் கொண்டு இருந்தாள். வெகு தூரத்திலேயே அவர்களைப் பார்த்து மிகுந்த ஆச்சரியம் அடைந்து உண்மையை தெரிந்து கொள்ள விரும்பி அவர்களுடைய சமீபம் சென்றேன். அந்தப் பெண் என்னை நோக்கி, "ஓ சாதுவே க்ஷணகாலம் தாங்கள் இவ்விடம் இருக்கவேண்டும்.

என்னுடைய கவலையை தீர்க்க வேண்டும். தங்களைப்போல் உள்ள சாதுக்களை தரிசித்தால் ஸகல பாபங்களும் நிவர்த்தியாகும் என்பதில் ஸந்தேகமில்லை. தங்களுடைய தரிசனம் வரும் க்ஷேமத்தைக் காட்டுகின்றது. தங்களுடன் ஸம்வாதம் செய்தால் பலவகையிலும் கவலை தீர்ந்துவிடும்." என்று தெரிவித்துக் கொண்டாள்.

அதைக்கேட்டு அந்தப் பெண்ணை நோக்கி "நீ யார்? இவ்விருவர்களும் யார்? ஓ தேவி! நீ கவலைப்படும் காரணம் என்ன? இவைகளை விஸ்தாரமாகச் சொல்" என்று கேட்டேன்.

அதனைக் கேட்டு அந்தப்பெண் சொன்னதாவது: எனக்கு பக்தி என்று பெயர். இவ்விருவரும் என்னுடைய புத்திரர்கள். ஒருவனுக்கு ஞானம் என்று பெயர். மற்றவனுக்கு வைராக்யம் எனப் பெயர். இவ்விருவர்களும் காலமஹிமையால் கிழத்தனத்தை யடைந்தார்கள். இந்தப் பெண்கள் கங்கை முதலிய நதிகள். என்னை சேவிப் பதற்காக வந்தவர்கள், மேலும் நான் தங்களிட த்தில் என் விஷயத்தை விஸ்தாரமாக தெரிவிக்க வேண்டியவளாக இருக்கிறேன். அதாவது நான் திராவிட (தமிழ்) தேசத்தில் பிறந்தவள். கர்நாடக தேசத்திலும், மஹாராஷ்ட்ர தேசத்தின் சில பாகங்களிலேயும் வளர்ந்தவள். கூர்ஜர தேசத்தில் கிழத்தனத்தை அடைந்தேன். மிக்க பாவியான கலியின் சாபத்தால் பாஷண்டர்கள் என்னுடைய அவயங்களை துண்டித்துவிட்டார்கள். ஆகையால் தேகபலம் குறைந்து புத்திரர்களுடன் மிகுந்த சிரமத்தை

அடைந்து இந்த பிருந்தாவனம் சேர்ந்தேன். இவ்விடம் வந்தவுடன் அழகான சரீரம் உள்ள யௌவனமுடையவளாக ஆனேன். இதோ படுத்துக்கொண்டு இருக்கும் இவ்விரு குழந்தைகளும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கிழத்தனமுள்ளவர்களாக இருப்பதால் அவர்களைப் பார்த்து நானும் துக்கிக்கிறேன். உலகத்தில் தாய் வயது சென்றவளாகவும் புத்திரர்கள் யௌவனமுள்ளவர்களாகவும் இருப்பது பழக்கம். இப்பொழுது புத்திரர்கள் வயது சென்றவர்களாகவும், புத்திரர்களுடைய தாயாகிய நான் யுவதியாகவும் இருக்கக் காரணம் யாது? நாங்கள் நால்வரும் எப்பொழுதும் சேர்ந்தே சஞ்சரித்துக் கொண்டிருக்கிறோம். தாங்கள் யோகிகளுக்குள் சிறந்தவர்களாகையால் இவ்விஷயத்தை அறிந்து சொல்ல வல்லமை உள்ளவராவீர். ஆதலால் என்னிடம் கிருபை வைத்து என்னுடைய சந்தேகத்தைத் தீர்க்கவேண்டும்'' என்று கேட்டாள்.

அதைக் கேட்ட நான் அந்தப் பெண்ணை நோக்கி "ஓ பால்யப்பெண்ணே நான் எல்லா விஷயத்தையும் ஞானக் கண்ணால் அறிந்து சொல்கிறேன். நீ கவலைப்பட வேண்டாம் ஸ்ரீ நாராயணன் உனக்கு க்ஷேமத்தைச் செய்வார் என்று சமாதானம் செய்து ஒரு க்ஷணநேரத்தில் அவ்விஷயங்களைத் தெரிந்துகொண்டு, பின்னும் அந்தப் பெண்ணைப் பார்த்து பின்வருமாறு சொன்னேன். பெண்ணே இந்தக்கலியுகம் மிகவும் மோசமானது. அதனால் நல்லொழுக்கம், யோகமார்க்கம், தவம் ஆகிய இவைகள்

கெடுக்கப்பட்டன. எல்லா ஜனங்களும் அசுரர்கள் போல் கெட்ட காரியத்தையே செய்கிறார்கள். ஸாதுக்கள் துக்கப்படுகிறார்கள். அஸாதுக்கள் சந்தோஷிக்கிறார்கள். இந்தக்காலத்தில் எவன் நல்ல காரியத்தை அனுஷ்டிக்கிறானோ அவனே தீரன் என்று சொல்லப் படுகின்றான். இந்தப் பூமி ஒவ்வொரு வருஷங்களிலும் முறையே ஸ்பர்சிக்க தகாதவர்களும் பார்க்கத்தகாதவர்களும் ஆதிசேஷனுக்குச் சுமையாகிவிட்டாள். நல்ல கர்மங்கள் ஒரிடத்திலும் காணப்படவில்லை. உன்னையும் உன்னுடைய புத்திரர்களையும் இக்காலத்தில் ஒருவரும் பார்க்கிறதில்லை. ஜனங்கள் விஷயங்களில் ஆசைக்கொண்டு காரியம் அகாரியம் என்ற பகுத்தறிவு இல்லாதவர்களாகி உன்னை ஆதரிக்காமல் உபேக்ஷித்தபடியால் நீ இளைத்திருக்கிறாய். இந்த பிருந்தாவனத்தின் மஹிமையால் நீ யுவதி ஆனாய். பக்தியானது இவ்விடத்தில் இல்லாததினால் இவர்களுக்கு கிழத்தனம் போகவில்லை என்று மறுமொழி சொன்னேன். அப்போது அந்தப்பெண் மிக்க பாபியான கலியை பரீக்ஷித்து மகாராஜன் ஏன் உலகத்தில் வைத்திருந்தார்? கலியுகம் வந்தவுடன் முன்னிருந்த ஸகல வஸ்துக்களின் ஸாரங்களும் எங்கே போயின? மிகுந்த தயையுள்ள ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் ஏன் பார்த்திருந்தார்? என்று கேட்டாள். அதைக்கேட்டு நான் பின்வருமாறு சொன்னேன்: ஸ்ரீ கிருஷ்ணபகவான் பூமியில் இருந்து வைகுண்டம் சென்ற தினத்திலேயே உலகத்தில் கலி வந்துவிட்டான். அப்பொழுது அரசனாக இருந்த பரீக்ஷித்து திக்விஜயம்

செய்துவரும் காலத்தில் வழியில் கலியைக் கண்டார் அவனும் அவரை சரணம் அடைந்தான்.

அவர் தவம், யோகம், சமாதி ஆகிய இவைகளால் அடையக்கூடாத உத்தமமான பிரயோசனம் பகவானுடைய நாமங்களை பஜனை பண்ணுவதனால் இக்கலியில் எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது என்று நினைத்து கலியுகத்தில் பிறக்கும் மனிதர்களுடைய ஸௌக்கியத்தின் பொருட்டே கலியைக் கொல்லவில்லை. கெட்ட காரியங்களைச் செய்வதனால் வஸ்துக்களுடைய ஸாரம் போய்விட்டது. ப்ராஹ்மணர்கள் ஒவ்வொரு வீட்டிலும் அரிசிக்கு ஆசைப்பட்டு பாகவத கதையைச் சொல்ல ஆரம்பித்ததால் கதையின் ஸாரம் போய்விட்டது. மேலும் ப்ராஹ்மணர்கள் மிக்க கோரமான பல காரியங்களையும் செய்து நாஸ்திகர்களாக (பரலோகத்தில் சிரத்தை இல்லாதவர்களாக) ஒவ்வொரு தீர்த்தக் கரைகளில் வஸிப்பதால் தீர்த்தத்தின் ஸாரம் போய்விட்டது. காமம், கோபம், லோப விஷயங்களில் ஆசை ஆகிய இவைகளால் கலங்கிய மனம் உள்ளவர்கள் தவம் செய்வதால் தவத்தின் ஸாரம் போய்விட்டது. மனிதர்கள் மனதை அடக்காமல் உலோபம் உம்பம் இவைகளை அடைந்து பாஷண்ட மதத்தை ஆசிரயித்தும் தியான யோகத்தின் ஸாரம் போய்விட்டது. வித்வான்களும் மோக்ஷத்தையடைய முயற்சியாமல் எருமைகள் போல் ஸ்திரீகளுடன் ரமித்து புத்திரர்களை உண்டு பண்ணுவதிலேயே சாமர்த்தியத்தை அடைந்திருக்கிறார்கள். பெரியோர் களுடைய சம்பிரதாயப்படியுள்ள விஷ்ணுபக்தி

ஒரிடத்திலும் இல்லை. இம்மாதிரி ஒவ்வோரிட ங்களிலும் வஸ்துக்களின் ஸாரம் போய் விட்டது. ஆனால் இது யுகத்தின் தர்மம். எவர் மீது குற்றஞ் சொல்லக்கூடும்? அதனால் தானே சமீபத்தில் இருக்கும் புண்டரீ காக்ஷன் (தாமரைக்கண்ணன்) இதை சகித்துக் கொண்டி ருக்கிறார் என்று சொன்னேன். இதனைக்கேட்டு அந்த பெண்ணானவள் "ஓ தேவ ரிஷியே! நீர் மிகவும் மேலானவர் என்னுடைய அதிர்ஷ்ட வசத்தால் நீர் இவ்விடம் வந்தீர். ஸாதுக் களுடைய தரிசனம் ஸகல சித்திகளையும் கொடுக்கும். தங்கள் உபதேசத்தால் ப்ரஹ்லாதர் என்பவர் மாயையைக் கடந்து ஆத்ம ஸ்வரூபத்தை அடைந்தவராக விளங்குகிறார். மேலும் தங்களுடைய கிருபையால் துருவர் என்பவர் சாஸ்வதமாகிய (துருவ) பதத்தை அடைந்தார். ஆகையால் ஸகல க்ஷேமத்தைக் கொடுப்பவரும் ப்ருஹ்மதேவரின் புத்திரருமாகிய தங்களை நமஸ்கரிக்கிறேன். என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள். அதனைக்கேட்டு நான் பின்வருமாறு சொன்னேன். "ஓ சிறு பெண்ணே! ஏன் கவலைப்படுகிறாய்? ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரை மலர்போன்ற பாதங்களை இடைவிடாது தியானஞ்செய்: துக்கம் ஒருபோதும் நேரிடாது. துச்சாதனன் முதலியவர்களால் செய்யப்பட்ட உபத்திரவித்திலிருந்து திரௌபதியைக் காப்பாற்றினார். கோப ஸ்திரீகளை ஸம்ரக்ஷித்தார். அவர் இப்பொழுது தேசாந்திரம் போகவில்லை. உன்னிடத்தில் தமது ப்ராணனைக்காட்டிலும்

விசேஷமான ப்ரியம் வைத்திருக்கிறார். பக்தியாகிய உன்னால் அழைக்கப்பட்டு அவர் நீசர்களுடைய வீட்டுக்கும் வருகிறார். கிருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம் இம்மூன்று யுகங்களிலும் முறையே ஸத்யம், ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகள் மோக்ஷத்துக்கு ஸாதனங்களாக இருந்தன. இக்கலியுகத்தில் பக்தி மாத்திரத்தாலேயே மோக்ஷம் கிடைக்கிறது; ஆனது பற்றியே ஞான ஸ்வரூபியாகிய பகவான் உனக்கு சரீரத்தை உண்டு பண்ணினார். பின்பு நீ ஒருக்கால் இரு கைகளையும் கூப்பிக்கொண்டு நான் என்ன செய்யவேண்டும் என்று பகவானைக் கேட்டாய். அப்பொழுது அவர் என் பக்தர்களை போஷிக்க வேண்டும் என்று ஆக்ஞாபித்தார். நீயும் அதனை ஒப்புக் கொண்டாய். அதனால் பகவான் சந்தோஷித்து முக்தியை உனக்கு ஊழியப் பெண்ணாக இருக்கும்படி செய்தார். பின்னும் ஞானம், வைராக்கியம் என்ற இவர்களை உன்னிடம் ஒப்படைத்தார். பின்பு நீ வைகுண்டத்தில் உன்னுடைய நிஜ ரூபத்துடன் இவர்களை போஷித்து வந்தாய். பூமியில் பக்தி விருத்தியாக் வேண்டியதற்காக சாயா ஸ்வரூபமயமான ரூபத்துடன் முக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய இவர்களுடன் பூமிக்கு வந்தாய். கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் ஆகிய இம் மூன்று யுகங்களிலும் மிகுந்த ஆனந்தத்துடன் இருந்தாய். கலியில் முக்தி என்னும் பெண் பாஷண்டர்களாகிய வியாதியால் மிகவும் குறைந்துவிட்டாள். அவள் உன்னுடைய அனுமதியினால் வைகுண்டத்துக்கு மறுபடியுஞ் சென்றாள்..

உன்னால் நினைக்கப்படும் போதெல்லாம் வைகுண்டத்திலிருந்து வருவதும் போவதுமாக இருக்கிறாள். ஞானம், வைராக்கியம் இவ்விருவர் களும் புத்திர சிநேகம் கொண்டு உன்னால் காப்பாற்றப்பட்டும், இக்கலியில் ஜனங்கள் அவர்களை உபேஷித்து விட்டபடியால் வயது சென்றவர்களாகி விட்டார்கள். ஆனாலும் உன்னுடைய கவலையை நான் போக்கடிக்கிறேன். இக்கலியுகத்துக்குச் ஸமமான யுகம் வேறில்லை. இந்த யுகத்திலும் ஒவ்வொரு ஜனங்கள் இடத்திலும் உன்னை ஸ்திரமாக இருக்கும்படி செய்கிறேன். அப்படிச் செய்யாவிடில் நான் விஷ்ணு பக்தன் அல்ல. கலியில் முக்கிய பாவிகளான ஜனங்களும் பகவத் பக்தியை பெற்று வைகுண்டத்தை அடைகிறார்கள். யமன், பிசாசங்கள், ராக்ஷதர்கள், அசுரர்கள் ஆகிய இவர்கள் பக்தி உள்ளவர்களை உபத்திரவிக்க மாட்டார்கள். பக்தியால் பகவான் வசப்படுவது போல தவம், வேதம், ஞானம், நல்லகர்மா இவைகளால் ஸ்வாதீனப் படுவதில்லை. அந்த விஷயத்தில் புண்ணியம் செய்தால் தான் பக்தி பண்ணவேண்டுமென்ற விருப்பமுண்டாகும்.கலியில் பக்தியே மேலானது. பக்தியை நிந்தித்ததால் துர்வாஸர் துக்கத்தை அடைந்தார். அனேக விரதங்களாலும், புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் பண்ணுவதாலும், போகங்களாலும், யாகங்களாலும், முக்தியைக் கொடுக்கக்கூடியது, என்று சொன்னேன். "இதனைக் கேட்டு பக்தியாகிய அந்தப்பெண் என்னை நோக்கி "ஓ நாரதரே நீர் மிகவும் மேலானவர். உம்மிடத்தில் எனக்கு மிகுந்த பிரீதி

உண்டாகி யிருக்கிறது. உம்மை ஒருபொழுதும் விடமாட்டேன். உம்முடைய மனதில் எப்பொழுதும் வசிப்பேன். தங்களுடைய அனுக்கிரஹத்தால் என் கவலை தீர்ந்துவிட்டது. ஆனாலும் என்னுடைய இந்த புத்திரர்களுக்கு மூர்ச்சை தெளிய வில்லை. இவர்களை எழுப்பிவிடும்'' என்று வேண்டிக் கொண்டாள்.

அப்பொழுது எனக்கு அவளிடத்தில் தயை உண்டாயிற்று. பின்பு நான் அவ்விருவர்களுடைய காதில் உபநிஷத் வாக்கியங்களையும் கீதா வாக்கியங் களையும் சொல்லி ''ஓ ஞானமே விழித்துக்கொள். ஓ வைராக்கியமே எழுந்திரு'' என்று இரைந்து சொன்னேன். அப்பொழுது அவர்கள் கொட்டாவி விட்டுக்கொண்டு எழுந்து இருந்தார்கள். ஆனாலும் பசி, தாகம் முதலிய வற்றால் வருத்தப்பட்டு மறுபடியும் படுத்துத் தூங்க யத்தனித்தார்கள். அது கண்டு நான் என்ன செய்கிறது என்று பகவானை த்யானஞ் செய்தேன். அப்பொழுது ''ஓ மஹர்ஷியே! ஏன் விசனப்படுகிறீர். புண்ணிய கர்மாக்களை அனுஷ்டிப்பீர் ஆனால், இவர்களுடைய தூக்கமும் கிழத்தனமும் நீங்கும். அந்தக் கர்மங்களை சில ஸாதுக்கள் உபதேசிப்பார்கள். அதனால் பக்தியானது உலகம் முழுவதும் பரவிவிடும் என்று ஆகாசத்தில் இருந்து ஒரு தொனி உண்டாயிற்று. அதனை நானும் மற்றவர்களும் கேட்டு ஆச்சரியம் அடைந்தோம். பின்பு ஆகாச வாணியால் சொல்லப்பட்டபடி எப்பொழுது, எந்தவிடத்தில் எவர்கள் எந்த கர்மங்களை நமக்கு உபதேசிப்பார்களோ என்று நான்

யோசித்து ஞானம், வைராக்யம் இவ்விருவர் களையும் அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு ஒவ்வொரு புண்ய தீர்த்தங்களுக்கும் சென்று இவ்விஷயத்தைப் பற்றி ஒவ்வொரு மஹர்ஷி களையும் கேட்டுக் கொண்டே சஞ்சரித்தேன். ஒருவரும் எந்தக் கர்மாவை அனுஷ்டிக்க வேண்டும் என்று நிச்சயமாகச் சொல்லவில்லை. சிலர் இதைச் செய்ய முடியாத காரியம் என்றும், பின்னும் சிலர் இதனைத் தெரிந்து கொள்வதே சிரமம் என்றும் சொன்னார்கள். சிலர் பேசாமலே இருந்துவிட்டார்கள். சிலர் இதனைக் கேட்டு இருந்த இடத்தைவிட்டே ஓடிப் போனார்கள். மேலும் எல்லா வேதங் களாலும், கீதா வாக்கியங்களாலும் விழித்துக் கொள்ளாத ஞான வைராக்கியங்கள் வேறு எந்த உபாயத்தால் எழுந்திருக்கப் போகிறார்கள்.? நாரத மஹர்ஷியாலும் அறியப்படாத விஷயம் மற்ற மஹர்ஷிகளால் சொல்லமுடியுமா? என்று ஜனங்கள் ரகசியமாக பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். அப்பொழுது எனக்கு யாதொரு நிச்சயமும் உண்டாக வில்லை. ஆனாலும் பதரிகா வனம் சென்று தவம் செய்யத் தொடங்கினேன். அவ்விடத்தில் மிக்க தேஜஸ் விகளான ஸனகர் முதலிய யோகிகளைக் கண்டேன். கண்டவுடன் விசேஷ ஆனந்தம் அடைந்து அவர்களை நோக்கி ஓ யோகி சிரேஷ்டர்களே! நான் செய்த பாக்ய விசேஷத்தால் தங்களைக் கண்டேன்.

நீங்கள் ஐந்து வயதுள்ளவர்களானாலும் முன்னோர்களுக்கும் முந்தியவர்கள். எப்பொழுதும்

வைகுண்டத்திலேயே இருப்பவர்கள். ஸ்ரீ மஹா விஷ்ணுவின் லீலைகளை கானஞ் செய்பவர்கள். எப்பொழுதும் பகவானையே சரணமடைந்தவர்கள். ஆகையால் ஜரை (கிழத்தனம்) உங்களை உபத்திரவிப் பதில்லை. ஆகையால் என்னை அனுக்கிரஹிக்க வேண்டும். ஆகாச வாணியால் சொல்லப்பட்ட கர்மங்கள் எவை? பக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகள் எல்லா வர்ணாச்சரமங்களிலும் ஸ்திரமாய் வசிக்கும்படி என்ன உபாயம் செய்யலாம் அதனைச் சொல்லவேண்டும் என்று கேட்டேன். அப்பொழுது அவர்கள் என்னைப் பார்த்து ஓ தேவரிஷியே இவ்விஷயத்தில் லகுவான உபாயமொன்றிருக்கிறது. நீர் வைராக்கியத்தை அடைந்தவர்களுள் மேலானவர். பகவத் பக்தர்களுட் சிறந்தவர். ஆகையால் பக்தியை உலகத்தில் ஸ்தாபிப்பதற்கு நீர் தகுதியானவரே அனேக மகரிஷிகள் அனேக மார்க்கங்களை காட்டியிருக்கிறார்கள். ஆனாலும் அவைகள் பெரும்பாலும் ஸ்வர்க்கத்தையே கொடுக்கக் கூடியவைகளாகவிருக்கின்றன. மேலும் ச்ரமப்பட்டு செய்யக் கூடியவைகளாயுமிருக்கின்றன; மோக்ஷத்தை கொடுக்கும் மார்க்கம் மிகவும் ரஹஸ்யமானது. அதனை உபதேசிப்பவர்கள் கிடைப்பதரிது. ஆகாச வாணியால் சொல்லப்பட்ட கர்மம் யாதெனில் ஜ்ஞான யக்ஞமேயாம். சிலர் திரவ்ய யஜ்ஞத்தை (யாகம்) அனுஷ்டிக்கிறார்கள். பின்னும் சிலர் தபோ யஜ்ஞத்தையும் மற்றும் சிலர் யோக யஜ்ஞத்தையும், இன்னும் சிலர் ஸ்வாத்யாய யக்ஞத்தையும் (வேதங்களை அத்யயனம் செய்வது) அனுஷ்டிக்கிறார்கள். இவைகளில் ஜ்ஞான யஜ்ஞமே

மேலானது. அது சுகரால் பரீக்ஷித் மஹாராஜனுக்கு உபதேசிக்கப்பட்ட பாகவதத்தைக் கேட்பதேயாகும். அந்தப் பாகவத சாஸ்த்ரத்தைக் கேட்பதால் பக்தி ஜ்ஞான வைராக்கியங்களுக்கு நேர்ந்த கஷ்டமும் விலகும். மேலும், சிங்கத்தின் சப்தத்தைக் கேட்ட செந்நாய்கள் போலப் பாகவதக் கதையைக் கேட்ட மாத்திரத்தில் கலியின் தோஷங்கள் யாவும் ஓடுகின்றன. பக்தியானது, ஜ்ஞானம் வைராக்யம் ஆகிய இவைகளுடன் ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு ஜனங்களிடத்திலும் நன்றாய் ப்ரகாசிக்கும் என்று உபதேசித்தார்கள்.

அப்பொழுது நான் அவர்களைப் பார்த்து "ஓ ப்ரம்ஹ தேவரின் குமாரர்களே! வேதாந்த வாக்யங்களாலும், கீதா பாடத்தாலும் விழித்துக் கொள்ளாத அவர்கள் பாகவத பாடத்தால் எழுந்திருப்பார்களா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் பின்வருமாறு விடை சொன்னார்கள். ஸ்ரீமத் பாகவத கதையானது உபநிஷத்துக்களின் ஸாரத்தால் செய்யப்பட்டதாகையால் இது மிகவும் மேலானது. பாலில் நெய் இருந்தாலும் அது எப்படி தனியாகத் தெரியவில்லையோ அதுபோல வேதத்தில் ஸாரமானது எங்கு இருந்தாலும் நன்றாய்ப் பிரகாசிக்கவில்லை. ஆனாலும், அந்தப் பாலைக் காய்ச்சிக் கடைந்து அதிலிருந்து தனியாக நெய் எடுக்கப்பட்டால் அது தேவர்களுக்கு மிகவும் திருப்தியை உண்டு பண்ணுகிறது. தவிரவும் கரும்பில் அடி முதல் நுனி வரையில் சர்க்கரை இருந்தாலும் அதனைப் பிரித்தெடுத்த பிறகுதான் புஜிக்கக்

கூடியதாகிறது. அது போலவே வேதத்திலுள்ள ஸாரங்கள் எல்லாவற்றையும் எடுத்து ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்டது. இது பக்தி, ஞானம், வைராக்யம் இவைகளை உலகத்தில் ஸ்தாபிப்பதற்காகவே வெளியிடப்பட்டது. முன் னொருகால் ஸ்ரீவேதவ்யாஸ மஹர்ஷி ஸ்ரீமத் மஹாபாரதத்தைச் செய்தும், வேதங்களை அத்யயனஞ் செய்தும் உபநிஷத்துக்களின் உண்மையான அர்த்தத்தைத் தெரிந்து கொண்டும், பகவத் கீதையைச் செய்தும், அக்ஞானம் விலகாமல் தாபமடைந்து ஸரஸ்வதி நதிக்கரையில் கவலைப் பட்டுக் கொண்டிருக்கும்பொழுது உம்மால் நான்கு ச்லோகங்கள் உபதேசிக்கப்பட்டன; அவைகளைக் கேட்டு அவர் உடனே கவலை தீர்ந்தவராக, அவைகளைக் கொண்டு பாகவதத்தைச் செய்தாரல்லவா ?அப்படி இருக்க பாகவதத்தை கேட்பதால் துக்கம் விலகுமாவென்று நீரே கேட்பது மிகவும் ஆச்சர்யமாக விருக்கிறது' என்று சொன்னார்கள். பின்பு நான் அவர்களைக் கொண்டாடி, அவர்களை நோக்கி இந்த ஞான யஜ்ஞத்தை எவ்விடத்தில் செய்யலாம் ? எவ்வளவு நாட்களில் பாகவதம் கேட்கப்படவேண்டும் ? அதன்முறை எப்படி ? பாகவத சாஸ்த்ரத்தின் மஹிமையை ஸகல வேதங்களுமறிந்த தாங்களே சொல்லவேண்டும்' என்று கேட்டுக் கொண்டேன்.

அப்பொழுது அவர்கள், "ஓ நாரதரே! கங்கையின் ஸமீபத்தில் ஆனந்த வனமென்பது ஒன்று உண்டு. அது மிகவும் ஏ்காந்தமான இடம். ஜலஸௌக்யமுள்ளது; அனேக மஹர்ஷிகள்

அவ்விடத்தில் வஸிக்கிறார்கள்' அவ்விடத்தில் வஸிக்கும் பறவை முதலியவைகளுக்கும் இயற்கையான விரோதம் இல்லை. அவ்விடத்தில் பாகவத கதையைச சொல்லுவதாகிய ஜ்ஞான யஜ்ஞத்தை நீர் நடத்த வேண்டும், அவ்விடத்திற்கு பக்தியானவள் தன் புத்ரர்களுடன் வருவாள். அந்தக் கதையைக் கேட்ட மாத்திரத்தில் அவர்கள் யௌவன வயஸை அடைவார்கள்' என்று சொல்லி என்னை அழைத்துக் கொண்டு பாகவத கதையைக் கேட்பதற்காக ஆனந்தவனம் சென்றார்கள். அப்பொழுது இதனைக் கேட்டுப் பூலோகம், தேவலோகம், ப்ரஹ்மலோகம் ஆகிய இவ்விடங்களிலிருந்து பகவத் பக்தர்கள் எல்லோரும் ஆனந்தவனம் சென்றார்கள். அன்றியும் ப்ரகு, வஸிஷ்டர், ச்யவனர், கௌதமர், மேதாதிதி, தேவலர், தேவராதர், பராசுராமர், விச்வாமித்ரர், சகலர், மார்க்கண்டேயர், பிப்பலாதர் முதலிய மஹர்ஷிகளும், வ்யாஸர், பராசரர் முதலிய யோகிகளும், சாயாசுகர், ஜாஜலி, ஜஹ்னு முதலியவர்களும் தங்கள் தங்களுடைய ஸ்திரீகள், புத்ரர்கள், சிஷ்யர்கள் முதலியவர்களுடன் கங்காதீரஞ் சென்றார்கள். மேலும் ஆறு சாஸ்த்ரங்களும், பதினேழு புராணங்களும், நான்கு வேதங்களும், கங்கை முதலிய நதிகளும், புஷ்கரம் முதலிய குளங்களும், க்ஷேத்ரங்களும் பத்து திக்குக்களும், தண்டகை முதலிய வனங்களும், மேரு முதலிய மலைகளும் திவ்ய சரீரமுள்ளவைகளாய்க் கதையை கேட்பதற்காக அவ்விடம் வந்து கூடின. மேலும் தேவர்கள், கந்தர்வர்கள், கின்னரர்கள் ஆகிய இவர்களும்

வந்தார்கள். எல்லோருக்கும் ஆசார்யர்களான ஸனகர் முதலியவர்களை ப்ரகுமஹர்ஷி தாம் நேரில் அழைத்து வந்தார். அப்பொழுது அந்த ஜ்ஞான யஜ்ஞத்தில் நான் தீக்ஷை செய்து கொண்டு அந்தக் குமாரர்களுக்கு ஆஸனங் கொடுத்து நமஸ்காரஞ்செய்து அவர்களைப் பூஜித்தேன். அங்கே ஒருபக்கத்தில் மஹர்ஷிகளும் மற்றொரு பக்கத்தில் தேவகணங்களும், இன்னொரு பக்கத்தில் வேதம் உபநிஷத் முதலியவைகளும், மற்றொரு பக்கத்தில் தீர்த்தங்களும், இன்னொரு பக்கத்தில் ஸ்திரீகளும், தங்களுக்குத் தகுந்த ஆஸனங்களில் உட்கார்ந்தார்கள். 'ஜய்' என்றும், 'நமஸ்காரம்' என்றும் சப்தங்கள் மிகுதியா யுண்டாயின, சங்க வாத்தியங்கள் முழங்கின. ஆகாசத்தில் தேவர்கள் விமானங்களிலிருந்து கல்பக விருக்ஷத்தின் புஷ்பங்களின் மழையைப் பெய்தார்கள். இப்படி எல்லோரும் ஒரே மனமாய் பாகவத மாஹாத்மியத்தைக் கேட்க விரும்பியிருக்கும் பொழுது என்னை உத்தேசித்து ப்ரஹ்ம குமாரர்கள் பின்வருமாறு சொன்னார்கள்: 'ஸ்ரீமத் பாகவத கதையை ஜனங்கள் எப்பொழுதும் கேட்வேண்டும். அதனைக் கேட்டமாத்திரத்தால் பகவான் மனதில் ஆவிர்ப்பவிக்கிறார். இது பதிமிண்ணாயிரம் க்ரந்தங்களடங்கியது. பன்னிரண்டு ஸ்கந்தங்கள் உள்ளது. பரிக்ஷித்து மஹா ராஜனுக்கு சுகரால் உபதேசிக்கப்பட்டது. இதுவே மோக்ஷத்தை கொடுக்கக்கூடியது. மற்றப் பலவையான சாஸ்த்ரங்கள் புத்திக்கு மயக்கத்தை யுண்டுபண்ணுகின்றன. எந்த வீட்டில் பாகவத கதை படிக்கப்படுகிறதோ

அதுவே புண்ய க்ஷேத்ரமாகும், அச்வமேதயாகங்கள், நூறு வாஜபேயங்கள் இவைகளை ஆயிரம் செய்தாலும், அதனாலுண்டாகும் புண்யமானது பாகவத கதையைப் படிப்பதனா லுண்டான ஸுகிருதத்தின் 16ல் ஒரு பாகத்திற்கும் ஸமமாகாது. ஒவ்வொரு நாளும் பாகவதத்தில் ஒரு ச்லோகத் தையாவது அதன் பாதியையாவது அவசியம் படிக்க வேண்டும். ஒவ்வொரு வேதங்களின் முதல் மந்த்ரங்கள் வேத மாதாவாகிய காயத்ரீ மஹாமந்தரம், புருஷ ஸூக்தம், வேதங்கள், பாகவதம், த்வாதசாக்ஷரம், ஸூர்யன், ப்ரயோகம், ஸம்வத்ஸரமாகிய காலம், ப்ராஹ்மணர்கள், அக்னிஹோத்ரம், காமதேனு, த்வாதசி திதி, துளஸி, வஸந்தருது, புருஷோத்தமராகிய நாராயணர், ஆகிய இவர்களுக்குள் தாரதம்யமில்லை. எவன் ஒவ்வொரு நாளும், பாகவதத்தை படித்து அதன் அர்த்தத்தை தெரிந்துகொள்ளுகிறானோ, அவனுக்கு கோடி ஜன்மங்களில் செய்யப்பட்ட பாபங்களும் நிவர்த்தியாகின்றன. தவிரவும், மரண காலத்தில் இந்தச் சுக சாஸ்த்ரத்தைக் கேட்பதால் வைகுண்டத்தையடைவார்கள். இந்தப் பாகவத புஸ்தகத்தை ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்தில் வைத்து விஷ்ணுபக்தர்களுக்குத் தானம் செய்கிறவன் ஸ்ரீகிருஷ்ணனுடைய ஸாயுஜ்ய பதத்தையடைகிறான். பிறந்தது முதல் ஒரு பொழுதாவது பாகவத கதையைக் கேட்காதவன் சண்டாளனுக்கும், கழுதைக்கும் ஸமானனென்று சொல்லப்படுகிறான். தவிரவும், அவனை பக்தர்கள் உயிருள்ள பிணமென்றும், பூமிக்குச்சுமையாயிருப்பவனென்றும் சொல்லுகிறார்கள். இந்த கதையை இந்திரியங்களை

ஜயித்து, மனத்தை அடக்கி வெகுநியமத்துடன் கேட்கவேண்டுமாதலால் அவ்வளவு நியமத்தை அனுஷ்டிப்பது இக்கலி காலத்து ஜனங்களால் முடியாததாகுமென்றும், இவர்களுக்கு ஆயுஸ் மிகக் குறைந்ததென்றும் யோசித்து சுகர் ஏழு நாளில் இதைக் கேட்கவேண்டுமென்று ஒரு விதி நியமித்திருக்கிறார்.

அந்த விதிப்படி ஏழு நாளில் பாகவதத்தை கேட்பதனால் ஸகல யாகங்கள் செய்த பலன்களும், ஸகல வ்ரதங்களை அனுஷ்டித்த பலன்களும், ஸகல தீர்த்தங்களில் ஸ்நானம் செய்த பலன்களும் உண்டாகும் என்று எனக்கு உபதேசித்தார்கள் என்று ஸூதர் சௌனகர் முதலிய மஹர்ஷி களுக்குச் சொன்னார். இதைக் கேட்டுச் சௌனகர், பாகவத புராணம் மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியதென்றும், மற்றவைகளைக் காட்டிலும் மேலானதென்றும், தாங்கள் சொல்லக் கேட்டு மிகவும் ஆச்சர்யமடைந்தோம். அவ்வளவு மேன்மை அந்தச் சாஸ்த்ரத்திற்குக் கிடைத்த காரணமென்ன? சொல்ல வேண்டும் என்றார். அதனைக் கேட்டு ஸூதர் அவரை நோக்கிச் சொன்னார். "ஓ சௌனகரே! ஸ்ரீ கிருஷ்ண பகவான் பூமியை விட்டுத் தம் உலகம் போகும் முன்னிலையில் உத்தவர், பகவானை நோக்கித் தாங்கள் வைகுண்டம் சென்றால் பக்தர்களை யார் ஸம்ரக்ஷிப்பார்? கலியுகத்தில் ஜனங்கள் துஷ்டர்களாகிவிடுவார்கள்; நிர்குணமாகிய உம்முடைய ஸ்வரூபத்தை ஜனங்கள் உபாஸிப்பது மிகவும் கஷ்டம். அதற்காகவே தாங்கள் பூமியில் அவதாரஞ் செய்திருக்கிறீர்கள். ஆகையால்

இவ்வுலகத்திலேயே வஸிக்க வேண்டுமேயொழிய மேலுலகம் செல்லக் கூடாது என்று வேண்டிக் கொண்டார். இதனைக் கேட்டு பகவான், 'பக்தர்களுக்காக நாம் செய்யவேண்டியதென்ன? என்று யோசித்து? தேஜோ ரூபியாக ஸ்ரீமத் பாகவதத்தில் ப்ரவேசித்தார். அதனாலேதான் அது எல்லாவற்றிலும் மேலானது. அதனைக் கேட்பதாலும், படிப்பதாலும் துக்கம், தாரித்ரியம், பாபம் முதலாகிய இவைகள் நிவர்த்தி யாகின்றன. ஏழு நாளில் இந்த க்ரந்தம் முழுவதையும் விதிப்படிக் கேட்டால் தேவர்களாலும் தாண்ட முடியாத விஷ்ணுவின் மாயையைக் கடந்து ஸ்வரூபஜ்ஞானத்தை அடையலாம். 'ஓ சௌனகர் முதலியவர்களே! இப்படி பாகவதத்தின் மஹிமையை வர்ணித்தவுடன் ஆனந்தவனத்தில் பக்தியின் புத்ரர்களான ஜ்ஞான வைராக்கியர்கள் மிக்க பலத்துடனும் அழகான சரீரத்துடனும் எழுந் திருந்தார்கள். பக்தியும், ஹே கிருஷ்ண!, ஹே கோவிந்த! ஹே முராரே! என்று சொல்லிக் கொண்டு விசேஷ சந்தோஷமடைந்தாள். பின்னும் அவர்களுடைய ஆஜ்ஞையால் பகவத்பக்தருடைய மனதில் வஸித்து வந்தாள். மேலும் அவ் விடத்தில் ஸ்ரீமந்நாராயண மூர்த்தி நீருண்ட மேகம் போலக் கறுத்த திருமேனியோடு நான்கு கைகளிலேயும் சக்ரம் முதலிய ஆயுதங்களை ஏந்திப் பீதாம்பரத்தையுடுத்திக் கொண்டு துளஸி மாலையால் அலங்கரிக்கப் பட்டுக் கோடி மன்மதனைப் போல அழகு உள்ளவராகி பக்தர்களுக்கு தர்சனங் கொடுத்தார். அப்பொழுது எல்லோரும் பரமானத்தத்தை யடைந்து பகவானை ஸ்தோத்ரம் செய்தார்கள். மேலும் ஸ்ரீமத் பாகவதமே மேலானதென்றும்

தெரிந்து கொண்டார்கள்.

ப்ராஹ்மணர்களுடைய பொருள்களை அபஹரிப் பதாகிய மஹாபாபங்களைச் செய்தவர்களும் ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்பதனால் பரிசுத்தராகி விடுகிறார்கள் என்பதில் ஸந்தேக மில்லை. துங்கபத்ரா நதிக்கரையில் ஒரு பட்டணத்தில் ஆத்மதேவரென்ற ஒரு ப்ராஹ்மண ச்ரேஷ்டரிருந்தார். அவர் ஸகல வேதங்களையும் அத்யயனஞ் செய்தவர். ஸூர்யன் போன்ற தேஜஸ் உள்ளவர். தன்னுடைய வர்ணாச்ரம தர்மங்களைக் குறைவின்றி நடத்தி வருபவர். ஆனால் அவர் மிகுந்த ஏழை. அவருக்குத் துந்துலீ என்ற பத்னியொருத்தியுண்டு. அவள் மிகவும் அழகுள்ளவள், மேலான குலத்தில் பிறந்தவள், ஆனாலும் வெகுவாகப் பேசுகிறவள், வீட்டு வேலைகளில் மிகவும் ஸாமார்த்திய முள்ளவள். சண்டையில் மிகுந்த ப்ரியமுள்ளவள். தான் சொன்னதே சரியென்று ஸ்தாபிக்கும் ஸ்வபாவமுள்ளவள். அந்தத் தம்பதிகளிருவர்களும் பல வகையான தர்மங்களை அனுஷ்டித் தார்கள். அப்படியும் அவர்களுக்குப் பெண்ணாவது பிள்ளையாவது பிறக்கவில்லை. அதனால் கவலையடைந்து அந்த ப்ராஹ்மணன் வீட்டை விட்டுக் காட்டுக்குச் சென்றார். அவ்விடத்தில் மத்யானகாலத்தில் ஒரு குளத்தில் ஸ்நானம் பண்ணித் தாஹத்தைத் தீர்த்துக் கொண்டு தெய்வச் செயலால் அவ்விடம் வந்த ஒரு ஸன்யாசியின் அருகிற் சென்று அவரை நமஸ்கரித்துப் பெருமூச்சு விட்டு அவருடைய பக்கத்தில் நின்றார். அவரைப் பார்த்து

ஸன்யாஸியானவர், ஓ ப்ராஹ்மண! நீர் ஏன் துக்கப்படுகிறீர் என்று கேட்டார். அதனைக் கேட்டுப் ப்ராஹ்மணன் அந்த ஸன்யாஸியை நோக்கி, எனக்குப் புத்திரனில்லை என் வீட்டில் இருக்கும் பசுவும் மலட்டாயிருக்கிறது, என்னால் வைத்து வளர்க்கப்பட்ட மரமும் புஷ்பிக்கிறது மில்லை காய்க்கிறதுமில்லை, என் வீட்டிற்கு கொண்டு வந்த பழங்களும் காய்ந்து போகின்றன. குழந்தைகளிலில்லாமலும், பாக்யமில்லாமலும் இருக்கும் நான் பிழைத்திருந்து என்ன ப்ரயோஜனம் என்று சொல்லி மிகவும் கதறினார்.

அதனைக் கேட்டு அந்த ஸன்யாஸியானவர் அவருடைய நெற்றியில் எழுதப்பட்டிருக்கும் அக்ஷரங்களை வாசித்துப் பார்த்து ப்ராஹ்மணனை நோக்கி, ஓ ப்ராஹ்மண! உமக்கு ஏழு ஜன்மம் வரையில் பிள்ளை பிறக்காது, ஸகரர் என்னும் ராஜன் புத்ர சோகத்தை அடைந்தாரல்லவா? ஆகையால் பிள்ளை பிறக்கவில்லை யென்று நீர் வருத்தப்படுவது நியாயமில்லை. ஆகையால் குடும்பத்தின் ஆசையை யொழித்து ஸன்யாஸஞ் செய்துகொள்ளும் என்றார். அதனைக் கேட்டும் ப்ராஹ்மணன் கொஞ்சமேனும் அதற்கு ஸம்மதிக் காமல் விஷய ஸுகத்திலேயே ஆசைப்பட்டு பிள்ளை பிறக்கும்படி அனுக்ரஹிக்க வேண்டுமென்று பலவாறாக வேண்டிக் கொண்டார். ஸன்யாஸி யானவர்; "ஓ ப்ராஹ்மண! தெய்வச் செயலை மாற்றுவதற்கு யாரால் முடியும்? அதனை மாற்ற முயன்றால் துக்கத்தையே அடையும்படி நேரிடும். ஆகையால் உமக்கு புத்ரஸுகம்

கிடைக்காது. ஆயினும் உமக்கு ஒரு பழத்தைக் கொடுக்கிறேன். இதனை உம்முடைய பத்னியிடம் கொடுத்து புஜிக்கும்படி செய்யும். உத்தமமான புத்ரன் பிறப்பான் என்று சொல்லிப் பழத்தைக் கொடுத்தார். ப்ராஹ்மணன் அதைப் பெற்றுக் கொண்டு தம்முடைய வீட்டிற்கு வந்து தமது பத்னியிடம் கொடுத்து அவளை நோக்கி, இது முதல் ஒரு வருஷம் வரையில் ஒருவேளை போஜனம் செய்துகொண்டு, ஸத்யம், சௌசம், தயை, இவைகளில் தவறாமல் நியமத்துடன் நீ இருக்கவேண்டும். இப்பழத்தை புஜி. நல்ல பிள்ளை பிறக்கும், என்று சொல்லிவிட்டு, கிராமாந்தரம் போய்விட்டார். அந்தத் துந்துலீ என்பவள் தன்னுடைய தோழிகளின் முன்பாக இவ்விஷயங்கள் எல்லாவற்றையும் சொல்லி வருத்தப்பட்டாள். எப்படியென்றால் இந்தப் பழத்தை நான் புஜித்த மாத்திரத்தில் வயிற்றில் கர்ப்பம் உண்டாய்விடும். வயிறு பெருத்துவிடும். ஆசாரம் குறைந்துவிடும். தேஹத்தில் வலிமை குறையும். வீட்டு வேலைகளை எப்படிச் செய்ய முடியும்? வயிற்றுக்குள்ளிருக்கும் கர்ப்பமானது வெளி வருவது மிகவும் கஷ்டம், ஒருக்கால் சிசு வயிற்றில் குறுக்காக விழுந்துவிட்டால் நான் உயிரையிழக்கும்படி நேரிடுமே! ப்ரஸவ காலத்தில் உண்டாகும் உபத்ரவத்தை நான் எப்படி ஸஹிப்பேன்? இந்த ஒருவருஷம் நியமமா யிருப்பது மிகவும் கஷ்டம். நான் ப்ரஸவித் திருக்கும்பொழுது வீட்டிலிருக்கும் எல்லா தனங்களையும், பர்த்தாவின் ஸஹோதரியானவள்

அபஹரித்துவிடுவாள். ப்ரஸவித்தபிறகு குழந்தையைக் காப்பாற்றுவது மிகவும் கஷ்டம். ஆகையால், மலடியாகவாவது விதவையாகவாவது இருப்பதே மேலானதென்று நினைக்கிறேன். என்று சொல்லி அப்பழத்தை அவள் புஜிக்கவில்லை. பின்பு ப்ராஹ்மணன் தமது பத்னியை நோக்கிப் பழத்தை புஜித்தாயா என்று கேட்க அவள் புஜித்தேன் என்றும் அவருக்குச் சொன்னாள். இந்தச் சமயத்தில் அந்த துந்துலியின் ஸஹோதரி ஒருத்தி தெய்வச் செயலாய் அவள் வீட்டுக்கு வந்தாள். அப்பொழுது துந்துலீ அவளிடத்தில் இவ்விஷயம் முழுவதையும் சொன்னாள். அதைக் கேட்டு அவள் துந்துலியை நோக்கி நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். நான் இப்பொழுது கர்ப்பமாயிருக்கிறேன், நான் ப்ரஸவிக்கிற வரையில் நீ வீட்டிற்குள்ளேயே இருந்து கர்ப்பிணியாகயிருப்பதுபோலப் பிறருக்குச் சொல்லிக்கொண்டு இரு. உன் வீட்டிலிருக்கும் பணம் முழுவதையும், நீ என் புருஷனுக்கு கொடுத்துவிடுவாயானால், எனக்குப் பிறக்கும் குழந்தையை உனக்குக் கொடுத்து விடுகிறேன். உன் வீட்டில் வந்திருந்து, குழந்தையையும் வளர்க்கிறேன். இந்தப் பழத்தைப் பசுவுக்குக் கொடுத்து விடு, என்று சொன்னாள். அவளும் அப்படியே செய்தாள். பின்பு அவள் ப்ரஸவித்ததும் அந்தக் குழந்தையை அதன் தகப்பன் ரஹஸ்யமாகத் துந்துலியினிடம் கொடுத்தான். துந்துலியும் 'ஸுகமாய் ப்ரஸவித்தேன்' என்று தன்னுடைய பர்த்தாவிடம் தெரிவித்தாள். அந்த ஆத்மதேவர் மிகுந்த ஸந்தோஷமடைந்து

ஜாதகர்மம் முதலியவைகளைச் செய்தார். அப் பொழுது துந்துலியானவள் தனது பர்த்தாவை நோக்கி, 'ஸ்தனத்தில் பாலில்லை, எத்தனை நாள் அன்யர்களுடைய பாலைக் கொண்டு குழந்தையை வளர்க்க முடியும். என்னுடைய தங்கையின் குழந்தை இறந்து போய் விட்டதால் அவளுக்குப் பால் மிகுதியா யிருக்கிறது. அவளை வரவழைத்து வீட்டில் வைத்துக் கொண்டு குழந்தையை வளர்க்கும்படி செய்ய வேண்டும்' என்று சொன்னாள், அவரும் அதற்கு சம்மதித்து அப்படியே செய்தார். அந்தக் குழந்தைக்கு துந்துகாரி என்று பெயர் வைக்கப்பட்டது. அதற்குப்பின் மூன்று மாதம் கழித்து வீட்டிலிருந்த பசுவானது ப்ரஸவித்தது. நல்ல தேஜஸ்வியும், அழகுள்ளவனுமான புத்ரன் பிறந்தான். ஆனால் அக்குழந்தைக்கு காது மட்டும் பசுவின் காது போலிருந்தது, அதனால் அவனுக்கு கோகர்ணனென்னு பெயரிடப்பட்டது. அவன், வித்வானாயும், சுத்தனாயும், ஆசாரமுள்ளவனாயு மிருந்தான். துந்துகாரியோ மிகவும் துஷ்டனாகியும், திருடனாகியும், அசுத்தனாகியும், மஹா பாபியாகியுமிருந்தான். இப்படிச் சில காலம் சென்ற பிறகு துந்துகாரியானவன் தாஸிகள் இடத்தில் ஆசைப்பட்டுப் பணம் முழுவதையும் செலவழித்துத் தாய் தகப்பன் இருவர்களையும் அடித்து வீட்டிலிருக்கும் பாத்திரங்களையும் பிடுங்கிக் கொண்டு போனான். அப்பொழுது அவனுடைய தகப்பனாராகிய ஆத்மதேவர், அபுத்ரனாயிருப்பதே மேலானது; இந்தத்

துஷ்டப்பிள்ளையையடைந்து நான் மிகவும் கஷ்டப்படுகிறேன். என்னை இப்பொழுது யார் காப்பாற்றுவார்கள்? என்று கத்தினார். அப் பொழுது கோகர்ணன் ஸம்ஸாரத்தின் துக்கங்களை அவருக்குச் செவ்வையாக எடுத்துரைத்து வைராக்யத்தை உண்டுபண்ணினான். பின்பு அவர் புத்ரனுடைய உபதேசத்தால் வீட்டை விட்டுக் காட்டுக்குச் சென்று ஒவ்வொரு நாளும் பாகவதத்தில் பத்தாவது ஸ்கந்தத்தைப் படித்து அதனால் ஸ்ரீகிருஷ்ண ஸாயுஜ்யத்தையடைந்தார். பிறகு அந்தத் துந்துகாரியென்பவன், தாயாரை நோக்கி வீட்டில் பணம் எங்கேயிருக்கிறது? சொல்லு, இல்லாவிடில் உன்னை கொல்வேன், என்று அதட்டினான். அதனால் அவள் ஒருநாள் இரவில் ஒரு கிணற்றில் விழுந்து மரண மடைந்தாள். கோகர்ணனென்பவன் விஷயங்களில் ஆசையில்லாதவனாகித் தீர்த்தயாத்ரை செய்து கொண்டிருந்தான். துந்துகாரியென்பவன் வீட்டிலேயே ஐந்து தாஸிகளை வைத்துக் கொண்டு அவர்களைப் போஷிப்பதற்காக கெட்ட காரியங்களையே செய்து வந்தான். அந்தத் தாஸிகள் நகை வேண்டுமென்ற விருப்பத்தால் அவனை நிர்ப்பந்தித்தார்கள். அதற்காக அவன் தேசாந்தரம் சென்று நல்லவஸ்தரங்கள் நகைகள் முதலியவைகளைத் திருடிக் கொண்டு வந்து கொடுத்தான். இப்படி மிகுதியான பணத்தையும் நகைகளையும் இவன் திருடிக்கொண்டு வந்திருக் கிறான் என்று தெரிந்து அந்தத் தாஸிகள் ஒரு நாள் ராத்ரி இவன் இவ்வளவு வஸ்துக்களையும்

திருடிக்கொண்டு வந்திருப்பதனால் அரசனுடைய சேவகர்கள் இவ்விடம் வந்து நம்மை பிடித்துக் கொள்வார்களே என்று யோஜித்து ஒருவருக்கும் தெரியாமல் கயிறுகளால் இவனைக் கட்டி கழுத்தில் சுருக்கிட்டார்கள். அப்படியும் அவன் சீக்கிரத்தில் மரிக்கவில்லை. அப்பொழுது அவர்கள் அக்னியை அவன் முகத்திற்போட்டு உபத்ரவிக்க அவன் இறந்தான். பின்பு அவன் சரீரத்தை ஒருவருக்கும் தெரியாமல் ஓரிடத்தில் அடக்கம் செய்தார்கள். மறுநாள் துந்துகாரி எங்கேயென்று கேட்பவர்களுக்குப் பணம் ஸம்பாதிப்பதற்காக தேசாந்தரம் போயிருக்கிறானென்றும், ஒரு வருஷத்தில் திரும்பி வருவானென்றும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இறந்துபோன துந்துகாரி அவனுடைய பாபத்தால் ப்ரேத ஜன்மத்தையடைந்து வாயு சரீரத்துடன் அங்குமிங்கும் அலைந்து கொண்டு வெயில், குளிர், பனி, மழை இவைகளை ஸஹித்தும்; பசி, தாஹத்தால் துன்பத்தை யடைந்தும் மிகவும் துக்கித்துக் கொண்டிருந்தான். சில காலத்தில் கோகர்ணன் துந்துகாரி இறந்து போனானென்பதைக் கேள்விப்பட்டு அவனை உத்தேசித்து கயாக்ஷேத்திரத்தில் ச்ராத்தம் செய்ததுமின்றி ஒவ்வொரு தீர்த்தங்களிலும் அவனை உத்தேசித்துப் பிண்டதானம் முதலிய வைகளையும் செய்தான்.

பிறகு சில காலத்தில் தன்னுடைய பட்டணம் வந்து தன்னுடைய வீட்டின் திண்ணையில் அன்று ராத்ரிப் படுத்திருந்தான். அப்பொழுது

ப்ரேத ரூபியாயிருக்கும் துந்துகாரி, அவ் விடத்தில் படுத்திருக்கும் தன் பந்துவைப் பார்த்து, ஒருக்கால் ஆடுபோலவும், பின்னு மொருக்கால் யானை போலவும், எருமை போலவும், இந்திரன் போலவும், அக்னி போலவும், புருஷன் போலவும், பலவகையான ரூபத்தை எடுத்துக் கொண்டான். கோகர்ணன் அவனைப் பார்த்து, 'நீ, யார்? ப்ரேதமா அல்லது பிசாசமா அல்லது ராக்ஷஸனா? என்று கேட்டான். இதைக்கேட்டு விடை சொல்லமுடியாமல் அழுது கொண்டு அது ஜாடை காட்டினது. அப்பொழுது கோகர்ணன் இருகையிலும் ஜலத்தையெடுத்து ப்ரோக்ஷித்தான். அதனால் அது தன்னுடைய பாபங்கள் விலகி விடை சொல்ல ஆரம்பித்தது. 'நான் உன்னுடைய ஸஹோதரன், எனக்கு துந்துகாரியென்று பெயர். நான் செய்த பாப கர்மங்களால் ப்ராஹ்மண ஜன்மம் போய்விட்டது; அனேக ப்ராணிகளை ஹிம்ஸித்துத் தாஸிகளைப் போஷித்து வந்தேன்; கடைசியில் அவர்களாலேயே கொல்லப்பட்டேன்; அதனால் ப்ரேத ஜன்மத்தை அடைந்து கஷ்டப்படுகிறேன்; நீ எனக்குப் பந்துவாகையால் என்னிடத்தில் தயைசெய்து என்னைக் காப்பாற்று' என்றது.

அதனைக் கேட்ட கோகர்ணன், 'ஓ' துந்துகாரியே உனக்காக கயா க்ஷேத்திரத்தில் விதிப்படி பிண்டதானஞ் செய்தேன். அப்படியிருக்க உனக்கு ப்ரேதமாயிருக்கும் தன்மை ஏன் போகவில்லை? இனி நான் செய்யவேண்டிய

தென்ன ? என்று கேட்டான். அதைக் கேட்டு அந்த ப்ரேதமானது நூறு கயா ச்ரார்த்தம் செய்தாலும் என்னுடைய பாபம் நிவர்த்தி யாகாது. ஆகையால் வேறு ஓர் உபாயத்தை யோஜிக்கவேண்டும் என்றது. அதைக்கேட்டு கோகர்ணன், உன்னுடைய பாபங்கள் விலக்கத் தகுந்த உபாயத்தை ஆலோசித்து அதை அனுஷ்டிக்கிறேன். அதுவரையில் நீ கவலை யற்றவனாகியிரு என்று சொல்லிவிட்டு, ராத்ரி முழுவதும் அது விஷயமாக யோசித்தும் யாதொரு நிச்சயமும் தோன்றாதவனாயிருந்தான்.' காலையில் அந்தப் பட்டணத்திலிருக்கும் ஜனங்கள் எல்லோரும் தேசாந்தரத்திலிருந்து வந்த கோகர்ணனைப் பார்த்து, க்ஷேமம் விசாரித்தார்கள். கோகர்ணன் ராத்ரியில் நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் அவர்களிடம் தெரிவித்தான். அவர்கள் யோசித்து ஒன்றும் தோன்றாமல் ஸூர்ய பகவானைக் கேட்க வேண்டுமென்று சொன்னார்கள். உடனே கோகர்ணன் ஸூர்யனை ஸ்தோத்திரம் செய்து அவர் வேகத்தைத் தடுத்துவிட்டான். அப் பொழுது ஸூர்யபகவான், ஏழுநாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்டால் ப்ரேதத்வம் நிவர்த்தியாகும் என்று அனுக்ரஹித்தார். அதனைக் கேட்டு கோகர்ணன் பாகவத கதையைப் படிப்பதற்கு முயற்சித்தான். அதனைக் கேட்பதற்காகப் பல தேசங்களிலிருந்தும், பல கிராமங்களிலிருந்தும் நொண்டிகள், கண்ணில் லாதவர்கள், ரோகிகள் ஆகிய இவர்கள் வந்தார்கள். இன்னும் அநேகம் பெரியோர்களும்

கூடினார்கள். அவ்விடத்துக் கருகிலிருந்த ஏழு கணுக்களுள்ள ஒரு மூங்கிலில் வாயு சரீரத்தை யுடைய அந்த ப்ரேதம் ஸ்ரீமத் பாகவதத்தை கேட்பதற்காக வந்து சேர்ந்தது. அப்பொழுது கோகர்ணன் விஷ்ணுபக்தனாகிய ஒரு ப்ராஹ்மணனைக் கேட்பவராக வைத்துக் கொண்டு பாகவத கதையை வர்ணித்தார். முதல்நாள் கதை முடிந்தவுடன், அருகிலிருந்த மூங்கிலில் ஒரு கணு வெடித்ததுமின்றி ஏழாவது நாளில் ப்ரேதமானது தனது பூர்வ சரீரத்தைவிட்டு மேகம்போலக் கருத்த திருமேனியுடன், பீதாம்பரம், கிரீடம், குண்டலம், துளஸீமாலை இவைகளால் அலங்கரிக்கப்பட்டு திவ்ய ரூபத்தையடைந்து கோகர்ணனை நோக்கி "ஓ ஸாதுவே நான் உன்னால் க்ஷேமத்தை யடைந்தேன் என்று ச்லாகித்தது. இந்த சமயத்தில் விஷ்ணு தூதர்கள் வைகுண்டத்திலிருந்து விமானத்துடன் வந்தார்கள். எல்லோரும் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே, துந்துகாரி அவ்விமானத்தில் ஏறினான். அப்பொழுது கோகர்ணன் விஷ்ணு தூதர்களைநோக்கி 'ஓ விஷ்ணு தாஸர்களே இவ்விடத்திலிருக்கும் எல்லா ஜனங்களும் ஸ்ரீமத் பாகவதக் கதையைக் கேட்டார்களே; ஆதலால் பலத்தில் பேதமுண்டாகக் காரணமென்ன என்று வினவினான். அதனைக்கேட்ட ஹரி தாஸர்கள், ஓ ஸாதுவே எல்லோரும் ச்ரவணம் பண்ணினவர்களானாலும் இந்த ப்ரேதமானது, செய்தது போல மற்றவர்கள் செய்யவில்லை; ஆகையால் தான் பலன் வேறாயிற்று. 'இது பலத்தைக் கொடுக்குமோ கொடாதோ என்று

சந்தேகப்பட்டு ஜபித்த மந்தரமும் பலவிடங்களில் மனத்தைச் செலுத்திக்கொண்டு செய்த ஜபமும்; விஷ்ணு பக்தர்களில்லாத தேசமும், பாத்ரமான ப்ராஹ்மணர்களில்லாத ச்ராத்தமும், வேதாத்யயனஞ் செய்யாதவனுக்குக் கொடுத்த தானமும், அனாசாரமுள்ள குலமும் ஆகிய இவைகள் ப்ரயோசன மற்றவைகள். குருவின் வார்த்தையில் நம்பிக்கையும், தன்னைத் தீனனாக நினைத்துக் கொள்வதும், மனஸை அட்க்கிக் கொள்வதும், கதையைக் கேட்பதில் ஸ்திரமான புத்தியும் ஆகிய இவைகளுடன் கதையைக் கேட்பது மேலானது. இன்னொரு தடவை இந்தக் கதையைக் கேட்டால் எல்லோருக்கும் வைகுண்டம் கிடைக்கும். ஓ கோகர்ணா! உனக்குப் பகவானாகிய கோவிந்தர் கோலோகத்தைக் கொடுப்பார் என்று சொல்லி வைகுண்டம் சென்றார்கள்.

பின்பு கோகர்ணன் ஆவணி மாதத்தில் மறுபடியும் படனத்தை நடத்தினான். அவர்களும் கேட்டார்கள். கதை முடிந்தவுடன் அநேக விமானங்களுடன் நாராயணமூர்த்தியே நேரில் வந்து சங்கத்தை ஊதினார். பின் அவர் கோகர்ணனைக் கட்டிக் கொண்டு தமக்குச் சமமாக அவனைச் செய்து மற்ற எல்லோர்களையும் விமானத்தில் வைத்துக் கொண்டு கோலோகம் சென்றார். ஸப்தாஹ யஞ்ஞத்தின் மஹிமை இப்பேர்ப்பட்டது. ஸப்தாஹ யஜ்ஞத்தால் கிடைக்கும் பலம் காற்று, ஜலம், இலை இவைகளைப் புஜித்து கடும் தபஸ் செய்வதாலும், யோகத்தாலும் அடையமுடியாது. இந்த இதிகாஸத்தை சித்ரகூட பர்வதத் திலிருக்கும் சாண்டில்ய மஹர்ஷியும் படித்து

பரமானந்தத்தையடைகிறார். இது மிகவும் பரிசுத்தமானது. ஒரு தடவை கேட்ட மாத்திரத்தில் ஸகல பாபத்தையும் நிவர்த்திக்கக் கூடியது. ச்ராத்த காலத்தில் படித்தால் பித்ருக்களுக்கு த்ருப்தி உண்டாகும். இதனை நித்யம் படித்தால் மோக்ஷமும் கிடைக்கும்.

'ஓ சௌனகரே ஸ்ரீமத் பாகவதத்தை ஏழுநாளில் படிப்பதற்குச் சில விதிகள் உண்டு. எப்படி யென்றால் முதல் ஜ்யோதிஷ சாஸ்திரம அறிந்தவர்களை கொண்டு நல்லமுஹூர்த்தம் பார்த்து அதில் ஆரம்பிக்க வேண்டும். ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி இந்த மாதத்தில் ஆரம்பிப்பது மேலானது. 'இன்னகாலத்தில் பாகவதம் படிக்க ஆரம்பிக்கப் போகிறோம், அதனைக் கேட்க தாங்கள் எல்லோரும் வரவேண்டும். ஏழு நாளுமிருக்க முடியாமல் போனால் ஒரு நாளாவது கேட்க வேண்டும். இந்த ஜ்ஞான யஜ்ஞத்தில் ஒரு க்ஷணம் கிடைப்பது மிகவும் அரிது. ஆகையால் குடும்பத்துடன் எல்லோரும் வர வேண்டும் என்று ஒவ்வொரு தேசங்களிலும் கிராமங்களிலும் பத்திரிகை மூலமாக ப்ரஸித்தப் படுத்தவேண்டும். வந்தவர்களுக்கு இடம் முதலியவைகளைக் கொடுத்து உபசரிக்கவேண்டும். வாழை, மாந்தளிர் முதலிய மங்கள த்ரவ்யங்களால் மண்டபத்தை அலங்கரித்து நான்கு திக்குகளிலேயும் த்வஜங்கள் கட்டி வந்தவர்களுக்கு உட்காரத் தகுந்த இடங்களைச் செய்விக்கவேண்டும். மேலும் கதை சொல்பவருக்கு, திவ்யமான ஆஸனம் அமைத்து வைக்கவேண்டும். கதை சொல்லு

கிறவர் வைராக்ய முள்ளவராகவும், வேத சாஸ்திரங்களை யறிந்தவராகவும், விஷ்ணு பக்தராகவும், அதிக ஆசையில்லாதவராகவும், உதாரணம் சொல்வதில் ஸமர்த்தராயும், ப்ராஹ்மணராகியும் இருக்க வேண்டும். சொல்லுகிறவர்க்கு உதவி செய்வதற்காக அவர் போன்ற மற்றொருவர் அவருடைய பக்கத்திலிருக்கவேண்டும். சொல்லுகிறவர் வ்ரதம் — ஆரம்பிப்பதற்கு முன்பு க்ஷௌரம் செய்து கொள்ளவேண்டும். அருணோதயத்திற்குள் தம்முடைய நித்யகர்மங்களைச் சுருக்கமாகவாவது முடித்துக் கொண்டு கதையை ஆரம்பிக்க வேண்டும். மண்டபத்தில் ஸ்ரீமத் பாகவத புஸ்தகத்தையும் பகவானுடைய விக்ரஹத்தையும் நன்றாகப் பூஜித்து ப்ரதக்ஷிண நமஸ்காரஞ் செய்து கடைசியில், 'ஹே கிருஷ்ண! ஸம்ஸாரமாகிய ஸமுத்திரத்தில் முழுகியிருக்கும் தீனனாகிய என்னைக் காப்பாற்றும்' என்று ஸ்தோத்திரம் செய்யவேண்டும். பிறகு கதை சொல்லு பவருக்கு வஸ்த்ரம், ஆபரணம் முதலியவைகள் கொடுத்து, 'சுகரால் சொல்லப்பட்ட ஸ்ரீமத் பாகவதத்தை அறிந்த ப்ராஹ்மணோத்தம! இந்தக் கதையை உபதேசித்து என்னுடைய அஜ்ஞானத்தைப் போக்கும், என்று கேட்டுக் கொள்ள வேண்டும். பணம், வீடு, புத்ரன் இவைகளில் அபிமானத்தை யொழித்து சுத்தசித் தனாயிருந்து கதையை கேட்கவேண்டும். கதையைச் சொல்லுகிறவர் ஸூர்யோதயம் முதல் முன்றரை யாமம் கதை சொல்ல வேண்டும். மத்யா ன்னத்தில் மாத்யான்ஹிக கர்மத்திற்காக இரண்டு நாழிகை நிறுத்திவிட வேண்டும். மல மூத்ர

உபத்ரவமில்லாம விருப்பதற்காக மிதமாய் புஜிக்க வேண்டும். கதை கேட்கிறவன் ஒரு தடவை ஹவிஸை புஜிக்கலாம். சக்தியிருந்தால் ஏழு நாள் உபவாஸமிருப்பது மேலானது. அல்லது நெய், பால், இவைகளை புஜிக்கலாம். பழங்களையாவது புஜிக்கலாம். எப்படியிருந்தால் கதை கேட்க விக்னமில்லாமலிருக்குமோ அப்படி சக்திக்கனுகுணமாக நடத்த வேண்டும். ஆனால் ஸ்திரீஸங்கம், பாயில் படுப்பது இவைகள் கூடாதெனவாம். ஒவ்வொரு நாளும் கதை முடிந்த பிறகே போஜனம் பண்ண வேண்டும். வேதங்களையும், பக்தர்களையும், ப்ராஹ்மணர்களையும் நிந்திக்க கூடாது.

இப்படி ஏழு நாளான பிறகு புஸ்தகத்தையும், அதன் கதையைச் சொல்லுகிறவர்களையும் பூஜித்து, கதை கேட்டவர்களுக்கு ப்ரஸாதம் (துளசி) கொடுக்கப்படவேண்டும். பின்பு மிருதங்கம், தாளம், வீணை முதலியவைகளோடு பகவானுடைய குணத்தைக் கானம் பண்ணவேண்டும். அதன் பிறகு கதை சொன்னவருக்கும், மற்ற ப்ராஹ் மணர்களுக்கும், யாசகர்களுக்கும் தனம் அன்னம் முதலியவைகளைக் கொடுக்கவேண்டும். கேட்கிறவர்கள் ஸன்யாஸியாயிருந்தால் மறுநாள் பகவத் கீதையைப் படிக்கவேண்டும். கிரஹஸ் தராயிருந்தால் தசமஸ்கந்தத்தில் எவ்வளவு சுலோகங்களிருக்கின்றனவோ, அவ்வளவு ஹோமம் பண்ண வேண்டும். ஹோமம் பண்ணச் சக்தியில்லாவிட்டால், யஜ்ஞத்தின் மத்தியில் நேர்ந்த ஸகல தோஷங்களையும் நிவர்த்திப்பதற்காக விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தைப் படிக்கவேண்டும்.

அதன் பிறகு பன்னிரண்டு ப்ராஹ்மணர்களுக்கு போஜனம் செய்துவைத்து அவர்களுக்கு ஸுவர்ணம், பசு, இவைகளைக் கொடுக்க வேண்டும். சக்தியிருக்குமானால் மூன்று பலம் தங்கத்தால் சிங்கத்தின் உருவத்தைச் செய்து அதில் பாகவத புஸ்தகத்தை வைத்து அதைப் பூஜித்து அதை ஆசார்யனுக்கு கொடுக்க வேண்டும். இது ஜ்ஞான யஜ்ஞமாம்.

ஓ சௌனரே! ஆனந்த வனத்தில் ஸனகாதிகள் ஜ்ஞான யஜ்ஞத்தை விதிப்படி முடித்தபிறகு தெய்வச் செயலால் அவ்விடம் சுகர் வந்தார். அவர் வ்யாஸருக்குப் புத்ரர் ஞானமாகிய ஸமுத்திரத்திற்குச் சந்திரன் போன்றவர். ஆத்ம லாபத்தால் பூர்த்தியடைந்தவர். எப்பொழுதும் ஸ்ரீமத் பாகவதத்தைப் படிப்பவர். பதினாறு வயதுள்ளவர். அவரைக் கண்டு அங்கிருந்த ஸதஸ்யர்கள் எல்லோரும் விதிப்படி பூஜிக்க அவர் ஸ்ரீமத் பாகவதத்தின் முதலாவது ஸ்கந்தத்தின் இரண்டு மூன்று ச்லோகங்களில் குறிக்கப்பட்ட விஷயத்தை விஸ்தாரமாகச் சொன்னார். அப்பொழுது பகவான் தம்முடைய பக்தர்களான ப்ரஹ்லாதர், மஹாபலி, உத்தவர் ஆகிய இவர்களுடன் அவ்விடம் வந்து அவர்களை அனுக்ரஹித்ததுமல்லாமல் ஜ்ஞான யஜ்ஞும் நடக்கும் இடத்தில் நாம் இப்படியே ஸான்னித்யம் செய்கிறோம்' என்று அனுக்ரஹித்தார். ஆனதால் ஸ்ரீமத் பாகவதமானது, ஸம்ஸாரமாகிய ஸமுத்ர்த்தில் முழுகிய ஜனங்களைக் காப்பாற்றுகிறேன் என்று கர்ஜித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்.

இதனைக் கேட்டு சௌனகர் ஸூதரை நோக்கி "ஸூதரே சுகர் பரீக்ஷித்துக்கு எந்தக் காலத்தில் உபதேசித்தார்? கோகர்ணர் படித்த காலம் எது? ஆனந்தவனத்தில் குமாரர்கள் சொன்ன ஸமயம் எது? என்று கேட்டார். அவற்றைக் கேட்ட ஸூதர், சௌனகரை நோக்கி" சௌனகரே! ஸ்ரீகிருஷ்ணபகவான் வைகுண்டம் சென்ற நாள் முதல் நூற்று முப்பது வருஷங்களுக்குப் பிறகு கலியுகத்தில் புரட்டாசி மாதம் நவமியில் சுகர் பரீக்ஷித்துக்கு ஸ்ரீமத் பாகவதத்தைச் சொல்ல ஆரம்பித்தார். அது முதல் இருநூறு வருஷங்களுக்குப் பிறகு ஸ்ரீமத் பாகவத கதையைச் சொன்னார். அதில் இருந்து நூற்றுமுப்பது வருஷத்துக்குப் பிறகு (மூவாயிரம் வருஷமென்று சிலர் சொல்லுகிறார்கள்) சுக்லபக்ஷ நவமியில் ப்ரஹ்மபுத்திரர்களான ஸனகாதிகள் சொன்னார்கள். நான்குவித புருஷார்த்தங்களை கொடுக்கிறதற்கு இக்கலியில் ஸ்ரீமத் பாகவத சாஸ்திரத்தைத் தவிர மேலானது ஒன்றுமில்லை. மிகவும் ரஹஸ்யமானது, ஸகல சாஸ்த்திரங்களுடைய ஸாரமானது. ஆகையால் இதனை பக்தியுடன் படியுங்கள் என்று ஸூதர் சொல்லி முடித்தார். (பத்ம புராணம், உத்ர காண்டம் அத்யாயம் ஒன்று முதல் ஆறுவரையில்)

பாகவத பேதங்கள்

அடியில் கண்டபடி ஒரு தமிழ் புஸ்தகத்தால் தெரியவருகிறது. எப்படி யெனில்: பாகவதமானது ஏழு வகையுள்ளது.

1. இதிஹாஸ பாகவதம்: இது வ்யாஸ மஹர்ஷியால் செய்யப்பட்டது. 18,000 ஸ்லோகம் அடங்கியது. இதில் அத்யாயங்கள் 200 இருக்கின்றன. மேலும் இது 12 ஸ்கந்தங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. பரீக்ஷித் மஹாராஜனுக்குச் சுகரால் உபதேசிக்கப்பட்டது.

2. புராண பாகவதம்: இது நாரதரால் ருக்மிணீதேவிக்குச் சொல்லப்பட்டது. இதைச் செய்தவர் வ்யாஸ மஹர்ஷியே. மேலும் இது 600 அத்யாயங்களுள்ளது.

3. ஸம்ஹிதா பாகவதம்: வைசம்பாயனரால் ஜனமேஜயருக்கு உபதேசிக்கப்பட்டது. 50,000 க்ரந்தங்கள் அடங்கியது. 1100 அத்யாயங்கள் அடங்கிய 12 கண்டங்களாகப் பிரிக்கப் பட்டது.

4. உபஸம்ஹிதா பாகவதம்: இது ஸூதர் ஸனகருக்கு அகஸ்திய மஹர்ஷியால் உபதேசிக்கப் பட்டது. இதிலுள்ள 70,000 ஸ்லோகங்கள், 2,000 அத்யாயங்களாகவும் 100 பரிச்சேதங் களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

5. விஷ்ணு ரஹஸ்ய பாகவதம்: இது காச்யபருக்கு ஹாரீதரரால் சொல்லப்பட்டது. இடையிலே தண்டகங்கள் கலந்த 1,00,000 (லக்ஷம்) ஸ்லோகங்களுள்ளது. ஆயிரம் அங்கங்களுள்ளது. 10,000 அத்யாயங்களுள்ளது.

6. விஷ்ணு யாமள பாகவதம்: இது

பராசரால் மைத்ரேயருக்கு உபதேசிக்கப்பட்டது. இதில் 80,000 ச்லோகங்களிருக்கின்றன. மேலும் 800 அத்யாயங்களுள்ளது. 8 ஸ்தானங்களுள்ளது.

7. கௌதம ஸம்ஹிதா பாகவதம்: கௌதமர் கௌசிகருக்குச் சொன்னது. 100 அத்யாயங்கள் உள்ளது. 10,000 ஸ்லோகங்களுள்ளது. 4,00,000 ஸ்லோகங்களுள்ள கௌதம ஸம்ஹி தையில் க்ரந்தலக்ஷண கண்டத்தில் பாகவத லக்ஷணமென்ற முதல் அத்யாயத்தில் மேல் காட்டிய விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸப்தாஹவிதி

முன்னொரு காலத்தில் பரமசிவன் பார்வதியை நோக்கி ஏ! பார்வதீ! ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைப் படிப்பவன், முதலில் வ்யாஸரையும், சுகரையும் நமஸ்கரித்து மஹா விஷ்ணுவை த்யானம் செய்து கொண்டு, முதல் நாளில் முதலாவது ஸ்கந்தம் முதல் ஹிரண்யா க்ஷவதம் வரையில் படிக்க வேண்டும். இரண்டாம் நாளில் பரதனுடைய சரிதம் வரையிலும், மூன்றாம் நாளில் பகவான் ப்ரஹ்லாதரை அனுக்ரஹித்த கதை வரையிலும், நான்காம் நாளில் பத்தாவது ஸ்கந்தத்தில் ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் வரையிலும், ஐந்தாம் நாளில் ருக்மிணி கல்யாணம் வரையிலும், ஆறாம் நாளில் உத்தவருடைய ஸம்வாதம் வரையிலும், ஏழாம் நாளில் முடிவு வரையிலும் படிக்க வேண்டும். படிக்கும்போது அத்யாயத்தின் நடுவில் நிறுத்தக் கூடாது. அப்படி நிறுத்தினால் மறுபடியும் அந்த

அத்யாயத்தை அடிமுதல் படிக்க வேண்டும். படிக்கும்போது அர்த்தத்தைத் தெரிந்துகொண்டே படிக்கவேண்டும். சொல்லுகிறவன் வடக்கு முகமாகவும் கேட்கிறவன் கிழக்கு முகமாவும் அல்லது மாறுதலாகவும் இருக்கலாம். ஒவ்வொரு அத்யாயம் படித்தவுடனும் ஐந்து குந்துமணி நிறையுள்ள தங்கத்தைத் தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டும். முழுவதும் முடிந்தபிறகு பசுவை தக்ஷிணையாகக் கொடுக்கலாம். அந்தப் பசுவின் கொம்புகள் ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப் படவேண்டும். ஏ தேவீ! இம்மாதிரியான விதிப் பிரகாரம் ஸ்ரீமத் பாகவதத்தை யார் படிக்கிறார்களோ, கேட்கிறார்களோ அவர்களுக்கு ஸர்வாபீஷ்டமும் நிறைவேறும். இதனைப் படிக்குங்காலத்தில் ஸகல தேவர்களும், ஸகல மஹரிஷிகளும் ஸ்ரீ விஷ்ணுவின் பார்ஷதர்களும் மஹாவிஷ்ணுவும் அவ்விடத்தில் எப்பொழுதும் மிகுந்த ஆனந்தத்துடன் வஸிக் கிறார்கள், என்று சொன்னார். பத்ம புராணம், பாதாள காண்டம், அத்யாயம் 71.

ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்ட காலம்

கலியுகத்தில் முதல் ஆயிரம் வருஷங்களில் ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்டது.

த்வாபர யுகத்தில் பகவான், வ்யாஸரூபியாய் அவதரித்து வேதங்களைப் பிரித்து, அவைகளை பைலர் முதலானவர்களிடம் ஒப்புவித்தார். பின்பு அவற்றைப் படித்தல், முதலியவைகளில் அதிகாரம் இல்லாத ஸ்த்ரீகள், சூத்ரர்கள் முதலியவர்

களுக்காக, அவைகளின் அர்த்தத்தையே, மஹா பாரதமாகச் செய்து வெளியிட்டார். மேலும் அவரால் மஹா புராணங்களும், உப புராணங்களும் வெளியிடப்பட்டன. கடைசியில் ஸ்ரீமத் பாகவதமும் செய்யப்பட்டது.

ஆக்ஷேபம் — பெரியோர்கள் ஆத்மச்லாகை (தன்னைத் தானே புகழ்வது) செய்து கொள்ள மாட்டார்களாகையாலும், இதிஹாஸ புராணங்களில் வ்யாஸ மஹர்ஷியை ச்லாகித்திருப்பதாலும் சொல்வது பொருந்துமா?

ஸமாதானம்:- அப்படியில்லை. வ்யாஸமஹர்ஷி வேதங்களைப் பிரித்துத் தாம் செய்த மஹா பாரதத்தைச் சுருக்கமாய்ச் செய்யும்படி தமது சிஷ்யர்களான வைசம்பாயனர், ஜைமினி யென்னும் இவர்களுக்கு ஆக்ஞாபனஞ் செய்தார். அவர்களும் தனியே பாரதச் சுருக்கம் செய்தார்கள். இப்பொழுது வழங்கிவரும் பாரதம் வைசம்பாயனர் செய்ததேயாம். மேலும் புராணங்கள், வெகு காலத்திற்கு முந்தியே மார்க் கண்டேயர் முதலிய மஹர்ஷிகளால் செய்யப் பட்டிருந்தன. ஆனாலும் கால மஹிமையால் அவைகளில் சிலவற்றில் சில பாகங்களும் பின்னும் சிலவற்றில் சில ஸர்க்கங்களும் சிலவற்றில் ஸந்தர்ப்பம், விஷயம் இவைகளைச் சொல்லும் — ஸ்லோகங்களும் காணாமல் போயின. சில புராணங்கள் பூர்த்தியாகச் செய்யப்படாமலிருந்தன. இப்படி பற்பல வகையாக குறையுள்ள புராணங்களை வ்யாஸ மஹர்ஷி அந்தந்த புராண நடைக்குச்

சமமான நடையிலேதான் சீர்த்திருத்தினார். பின்னும் அவருடைய சிஷ்யர்கள் அவைகளுக்கு உபோத்காதம் (முகவுரை) அவைகளிலுள்ள ச்லோகம் முதலியவைகளின் ஸங்க்யை, அனுக்ர மணிகை, அந்தந்த புராணத்தைச் சொன்னவர்கள், கேட்டவர்கள் அவர்களுக்குள் நேர்ந்த ஸம்வாதம் முதலியவைகளை எழுதிச் சேர்த்தார்கள்.

பின்பு அவைகளை விட மேலானதாக வ்யாஸ மஹர்ஷி ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்து தம்முடைய புத்ரராகிய சுகருக்கு உபதேசித்தார். பின்பு ஸூதர் அந்த பாகவதத்தைச் சுகரிடமிருந்து தெரிந்து கொண்டு சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்குச் சொன்னார். ஆகையால் இந்த விஷ்ணு பாகவதம் வ்யாஸரால் செய்யப்பட்டதேயாம். மற்ற புராணங்கள் அவரால் சீர்திருத்தப்பட்டதேயாம்.

பரீக்ஷித்து மஹாராஜனுக்குக் கலியும் வந்த பிறகு தர்ம புத்ரர் ராஜ்யாபிஷேகம் செய்வித்ததாக பாகவதம், விஷ்ணு புராணம், பாரதம் முதலிய வைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னமேயே பாகவதம் செய்யப்பட்டிருக்குமாகில் பரீக்ஷித்தின் சரித்திரம் அதில் சொல்ல நியாய மில்லை, ஆகையால் இது கலியுகத்தின் ஆரம் பத்தில் செய்யப்பட்டதேயாம்.

ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தவர்

பாகவதத்தைச் செய்தவர் ஸ்ரீ வேதவ்யாஸ மஹரிஷி. வேதங்களைப் பிரித்த காரணத்தால் இவருக்கு இப்பெயருண்டாயிற்று. இவர் மஹா

விஷ்ணுவின் அவதாரம். இவருடைய பிதா பராசர மஹர்ஷி. இவருடைய தாய் ஸத்யவதி. இவள் வஸுவின் வீர்யத்தைப் புஜித்த மத்ஸயத் தினிடம் உண்டானவள். ஆனது பற்றி இவளுக்கு மத்ஸயகந்தி என்னும் பெயர் சிலகாலம் வழங்கின துண்டு. பராசர மஹர்ஷி ஒருக்கால் தீர்த்த யாத்திரை செய்துவரும் பொழுது வழியில் ஆற்றில் ஓடம் தள்ளிக் கொண்டிருக்கும் வலையன் கன்னியான மத்ஸயகந்தியைக் கண்டார். மேலுமவர் அவளுடைய லாவண்யத்தைக் கண்டு மோஹித்து அவளிடம் ஆசை கொண்டார். அப்பொழுது நல்வாசனையுண்டாகும்படி அனுக்ரஹித்தார். அதுமுதல் அவளுக்கு யோஜனகந்தியென்று பெயர் வழங்கினது. அவ்விருவர்களுக்கும் பிறந்தவர் வ்யாஸமஹர்ஷி.

அவர் வேதங்களைப் பிரித்தும் ஸ்த்ரீ, சூத்ரர் களுக்காக ஐந்தாவது வேதமாகிய பாரதத்தையும் செய்தார். அப்படியும் அவர் மனத்திற்கு சந்தோஷ முண்டாகாததனால் கவலையுள்ளவராக ஸரஸ்வதீ நதிக்கரையில் சம்யப்ராஸமென்ற ஆச்ரமத்தில் வசித்தார். அப்பொழுது தெய்வச் செயலாய் அவ்விடம் வந்த நாரதரிடம் உபதேசம் பெற்று ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தார்.

கதை நடந்த க்ஷேத்ரம்

கலியுகத்தில், ஸூதர் நைமிசாரண்யத்தில் வஸிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்கு இந்த பாகவத கதையைச் சொன்னார். மேலும்

நைமிசமென்பது ஒரு புண்யக்ஷேத்ரம் ஆனது பற்றி அவ்விடத்தில் அநேக மஹர்ஷிகள் வஸிப்பார்கள். அனேக பெரியோர்கள் அவ்விடத்திற்கு வருவது முண்டு. ப்ரஹ்மதேவர் ப்ராஹ்மணர்களை நோக்கி இந்த மனோமயாகிய சக்ரத்தை ப்ரயோகிக்கிறேன்; இதனுடைய நேமி (முனை) எவ்விடத்தில் மழுங்குமோ அதுவே தபஸ் செய்ய தகுதியான க்ஷேத்ரம் என்று சொல்லி ஸூர்யனுக் கொப்பான சக்ரத்தை மனத்தால் ஸிருஷ்டித்து, பரமசிவனைக் குறித்து நமஸ்காரம் செய்து அதை ப்ரயோகித்தார். அதைப் பார்த்திருந்த ப்ராஹ்மணர்களும் மிகுந்த ஸந்தோஷத்துடன் அதன்பின் சென்றார்கள். அது கீழே விழுந்து அதன் நேமி மழுங்கின இடத்திற்கு நைமிசமென்று பெயருண்டாயிற்று. அவ்விடத்தில் மஹர்ஷிகள் வஸித்தார்கள். வாயு புராணம். அந்த க்ஷேத்ரத்தை நைமிஷமென்று சொல்வதுண்டு. ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் கௌரமுகரென்ற மஹர்ஷியை நோக்கி ஒரு நிமிஷத்திற்குள் அஸுர ஸைன்யங்கள் இவ்விடத்தில் கொல்லப்பட்டபடியால் இவ்விடத்திற்கு நைமிஷமென்று பெயருண்டாகட்டும். இது ப்ராஹ்மணர்கள் முக்யமாய் வஸிக்கும் இடம் என்று சொன்னார் வராஹபுராணம்.

மஹர்ஷிகளுக்கு உபயோகமாகிய மரங்கள் நிமிஷங்களென்று சொல்லப்படுகின்றன. அவைகள் ஏராளமாக இருக்குமிடமே நைமிஷமெனப் படுகிறது. அல்லது நிமிஷரென்னும் மஹர்ஷி தபஸ் செய்த இடமாகையால் நைமிஷமென்று அதற்குப் பெயருண்டாயிற்று. விஜயத்.

ஸூதருடைய வரலாறு

"இந்த விராட்ரூபியான மஹாபுருஷனுடைய முகத்திலிருந்து ப்ராஹ்மண ஜாதியும், கைகளிலிருந்து க்ஷத்திரிய ஜாதியும், துடைகளிலிருந்து வைச்ய ஜாதியும், பாதங்களிலிருந்து சூத்ரர்களும் உண்டானார்கள். என்று ஸ்ருதியில் சொல்லப்பட்டிருப்பது போல அவருடைய ரோமாஞ்சத்திலிருந்து (மயிர்க்கூச்சிலிருந்து) ஸூத ஜாதியி உண்டாயிற்று. அவரே ரோமஹர்ஷணர். மஹாபாரத தாத்பர்ய நிர்ணயம் – அத்யாயம் 90, பகவானுடைய கதையைக் கேட்டுக் கொண்டு இருக்கும்போது பக்தி விசேஷத்தால் மயிர்க்கூச்சிலுண்டானபடியால் அவருக்கு ரோமஹர்ஷணர் என்று பெயருண்டாயிற்று. இவர் ஸூத ஜாதியிற் பிறந்தவர் –அபியுக்தர்கள். அவருக்கு ஸ்ரீ வேத வ்யாஸ மஹர்ஷியானவர் ஸகல புராணங்களையும், இதிஹாஸங்களையும் உபதேசித்தார்.

பிறகு ரோமஹர்ஷணர் நைமிசாரண்யத்தில் வஸிக்கும் மஹர்ஷிகளுக்குப் புராணங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்படியிருக்கையில் ஒருநாள் பலராமன் அவ்விடம் வந்தார். அவரைக் கண்டவுடன் ஸகல மஹர்ஷிகளும் எழுந்திருந்து விதிப்படி மரியாதை செய்தார்கள். அப்பொழுது ரோமஹர்ஷணர் மாத்திரம் ஆஸனத்திலிருந்து எழுந்திருக்கவில்லை. அதைக் கண்ட பலராமன் மிகவும் கோபங்கொண்டார். பிறகு அவர் 'தாழ்ந்த குலத்தில் பிறந்தவராகிய இந்த ரோமஹர்ஷணர் நம்மைக்கண்டு எழுந்திருக்காமலும், இந்த மஹர்ஷிகளின் முன்பாக உயரமான ஆஸனத்திலுட்கார்ந்து

மிருக்கிறார், இவரை நிக்ரஹிக்கவேண்டும்' என்று எண்ணிக் கையிலிருந்த தர்ப்பத்தால் அவரையடித்தார். அதனால் ரோமஹர்ஷணரும் உடனே இறந்தார். அப்பொழுது மஹர்ஷிகளனைவரும் பலராமனை நோக்கி பிரபுவே! நீர் செய்தது தர்மத்திற்கொத்ததல்ல. இவருக்கு நாங்கள் ப்ரஹ்மாஸனத்தைக் கொடுத்து அவருடைய தேஹத்தில் ச்ரமம் உண்டாகாமலிருக்கும்படியும், அவர் வெகுகாலம் ஜீவித்திருக்கும்படியும் அனுக்ரஹித்திருந்தோம். நீர் லோகத்தை அனுக்ரஹிப்பதற்காக அவதரித்தவராகையால், எங்களுடைய வார்த்தை பொய்யாகமலிருக்கும்படிச் செய்ய வேண்டும். இந்த தோஷத்தை நிவர்த்தித்துக் கொள்வதற்காக நீர் ப்ராயச்சித்தத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்றார்கள். அதைக் கேட்ட பலராமன் அவர்களை நோக்கி பிதாவிற்கும் புத்திரனுக்கும் பேதமில்லையென்று ஸ்ருதியில் சொல்லப்பட்டிருப்பதனால், ரோமஹர்ஷணருடைய குமாரராகிய உக்ரச்ரவஸ் என்பவர் அந்த ஆஸனத்தில் உட்கார்ந்து உங்களுக்குப் புராண கதைகளைச் சொல்லட்டும். அவருக்கு எவ்வளவு நாள் கதை சொன்னாலும் தேஹத்தில் ச்ரமமில்லாமலிருக்கட்டும். மேலும் வெகுநாள் ஜீவித்திருப்பார் என்று சொல்லி தீர்த்த யாத்திரைக்குச் சென்றார். (பாகவதம் ஸ்கந்தம் 10, அத்தியாயம் 78)

மேல் காட்டியபடி ரோமஹர்ஷணருக்குப் பிறகு அந்த உக்ரச்ரவஸ், அந்த ஆஸனத்திலிருந்து மஹர்ஷிகளுக்குப் புராணங்களைச் சொல்லிக்

கொண்டிருந்தார். அந்த ரோமஹர்ஷணர் ஸூத ஜாதியில் பிறந்தவராகையால் அவருக்கு ஸூத ரென்று பெயருண்டு. அவருடைய பிள்ளைக்கும் ஸூதரென்று பெயர் வழங்கி வருகிறது. பல ராமன் பாரதயுத்தம் நடக்கும்போது நைமிசாரண்யஞ் சென்றார். ஆகையால் அதுவரையில் அவ்விடத்தில் கதை சொல்லிக் கொண்டிருந்தவர் ரோமஹர்ஷணரேயாம். பிறகு அவருடைய புத்ரராகிய உக்ரச்ரவஸே புராணஞ்சொன்னார். ஆகையால் ஸ்ரீமத் பாகவதத்தைச் சொன்னவர் உக்ரச்ரவஸ் என்ற ஸூதரேயாம். இவர் ஸகல புராணங்களையும் இதிஹாஸங்களையும் அறிந்தவர். த்ரையாருணி, கச்யபர், ஸாவர்ணி, அகிருதவ்ருணர், சிம்சுபாயனர், ஹாரீதர் ஆகிய ஆறு பேர்களும் வ்யாசமஹர்ஷியின் சிஷ்யராகிய என் தகப்பனார் இடமிருந்து ஒவ்வொரு ஸம்ஹிதையை அத்யயனஞ் செய்தார்கள். நான் இவர்கள் எல்லோருக்கும் சிஷ்யனாக இருந்து எல்லா புராண ஸம்ஹிதைகளையும் தெரிந்து கொண்டேன் என்று ஸூதர் சொன்னார். (பாகவதம் ஸ்கந்தம் 12 அத்யாயம் 6, ச்லோகம் 5 , 6)

சுகருடைய சரிதம்

முன்னொரு காலத்தில் மஹாமேரு பர்வதத்தில் ஸ்ரீவேத வ்யாஸ மஹர்ஷி உத்தமனாகிய புத்ரனையடைய வேண்டித் தபஸ் செய்தார். அதனால் பரமசிவன் ஸந்தோஷப்பட்டு அவரை நோக்கி 'ஓ மஹர்ஷியே உம்முடைய இஷ்டப்படி மிகுந்த தேஜஸுள்ளவனும், கீர்த்தியுள்ள

வனுமாகிய புத்ரன் உண்டாவான்' என்று அனுக்ரஹித்தார். பிறகு ஒருக்கால் ஒப்பற்ற ரூபமுள்ள கிருதாசி என்ற அப்ஸரஸ்த்ரீ அவ்விடம் வந்தாள். அவளைக் கண்டவுடன் இவருக்கு மன்மத தாபமுண்டாகியது. அப்பொழுது மஹர்ஷியானவர் கிளி வேஷத்தையெடுத்துக் கொண்டார். பிறகு மிகவும் தைர்யத்தால் மன்மத தாபத்தை மஹர்ஷியடக்க முயன்றும் அது குறையாமல் விருத்தியாயிற்று. மேலும் அவருடைய வீர்யம் நழுவினது. அதிலிருந்து உண்டான புத்ரர்தான் சுகரென்ற பெயரையடைந்தார். இவர் பிறந்தவுடனே கங்கா நதியானவள் திவ்ய சரீரத்துடன் அவ்விடம் வந்து அவருக்கு ஸ்னானஞ் செய்துவைத்தாள். ஆகாயத்திலிருந்து தண்டம், கிருஷ்ணாஜினம் ஆகிய இவைகள் விழுந்தன. விச்வாஸு முதலிய கந்தர்வர்கள் கானஞ்செய்தார்கள், தேவதுந்துபிகள் முழங்கின. இந்திரன் முதலிய லோக பாலர்களும் அவ்விடம் வந்ததுமின்றி புஷ்பங்களை வர்ஷித்தார்கள். பரமசிவன் பார்வதியுடன் அக்குழந்தைக்கு விதிப்படி உபனயனம் செய்தார். மஹேந்திரன் அற்புதமான கமண்டலுவை கொடுத்தார் இவருடைய பிதாவாகிய வ்யாஸ மஹர்ஷி பிறந்தவுடன் ஸகல வேதங்களும் தோன்றியது போலச் சுகருக்கும் வேதங்களும், ஸகல புராணங்களும், இதிஹாஸங்களும் தோன்றின. மேலும் அவர் ப்ரஹஸ்பதி பகவானை ஆசார்யராகவரித்தார். ஆனதால் அந்தச் சுகர் எல்லாவித்தைகளையும் அப்யஸித்தவர். அவர் பால்யவயதுள்ளவரானாலும் தேவர்களாலும் மஹர்ஷிகளாலும் மற்றவர்களாலும்

கொண்டாடக் கூடியவராக இருந்தார். மேலும் அவருடைய மனஸானது மோக்ஷ தர்மத்திலேயே விருப்பமுள்ளதாக விருந்ததேயொழிய விஷயத்தில் செல்லவில்லை. பிறகு அவர் தம்முடைய பிதாவாகிய வ்யாஸ மஹர்ஷியை நோக்கி மோக்ஷ தர்மங்களைச் சொல்லவேண்டும் என்று கேட்டார். அதைக்கேட்ட வ்யாஸ மஹர்ஷியானவர் தன் புத்ரரை நோக்கி மோக்ஷ தர்மம் தெரிந்து கொள்ள வேண்டுமானால் மிதிலா நகரத் தரசராகிய ஜனகரிடம் போய் தெரிந்து கொள்ளும் என்றார். அதைக் கேட்ட சுகர் அப்படியே மிதிலா நகரம் சென்று ஜனகருடைய அரண்மனைக்கு போகும் போது அவ்விடமிருந்த காவலாட்களால் தடுக்கப்பட்டார். ஆனாலும் கோபங்கொள்ளவில்லை. வெகுதூரம் நடந்து வந்த தால் சரீரத்திற்கு நேர்ந்த ச்ரமத்தையும், பசி தாஹம் இவைகளால் நேர்ந்த துக்கத்தையும் ஸஹித்தார். பிறகு அவ்விடமிருந்த ஒரு காவலாள் அவரை வணங்கி உள்ளே அழைத்து நிழலில் உட்காரச் செய்தான். அதனாலும் அவர் ஸந்தோஷிக்கவில்லை. பிறகு மந்திரியானவர் மிக வணக்கத்துடன் வந்து சுகரை வணங்கி அந்தப் புரத்திற் கழைத்துபோய் திவ்யமான ஆஸனத்தில் உட்காரவைத்தார். பிறகு மிகவும் ரூபவதிகளான சிறு பெண்கள் அனேகர்கள் அவ்விடம் வந்து உத்தமமாகிய அன்னத்தால், வாத்ய கோஷங்களாலும் நர்த்தனங்களாலும் பிரியமான வார்தைகளாலும் உபசரித்தார்கள். மேலும், அவரைத் தோட்டத்திற்கழைத்துப்போய் அழகான மரங்களையும், பக்ஷிகளையும், தாமரஸ ஓடை

களையும் காண்பித்தார்கள். இப்படி அவர்களால் உபசரிக்கப்பட்டும் அவைகளில் பிரியப்படாமலேயே மோக்ஷ மார்க்கத்தையே த்யானித்துக் கொண்டு அன்றைய ராத்திரியைக் கழித்தார். மறுநாள் காலையில் ஜனகமஹாராஜன் இவரை சபைக்கு வரவழைத்து உபசரித்து மோக்ஷ தர்மத்தை உபதேசித்தார். (மஹாபாரதம், சாந்திபர்வம், அத்யாயம் 323 - 325)

ஸ்ரீ கிருஷ்ணாவதார காலம்

ஸ்ருஷ்டி முதல் 28வது மஹாயுகத்திற்குட் பட்ட த்வாபர யுகத்தின் முடிவில், தேவகியின் இடம் பகவான் அவதரித்தார். 28 வது மஹா யுகத்தில் த்வாபரயுகத்தின் கடைசியில் யது வம்சத்தில் பகவான் அவதரிக்கப் போகிறாரென்று கர்க்காசார்யர் முன்னமே சொல்லியிருக்கிறார் விஷ்ணு புராணம் 5வது பாகம், அத்யாயம் 23.

மேற்காட்டிய த்வாபர யுகமானது நிகழும் கலியுகத்திற்கு முந்தியேயாம். பகவான் பூலோகத்தில் கிருஷ்ணனாக அவதரித்து 125-வருஷங்கள் பூமியில் வஸித்து, பிறகு வைகுண்டம் சென்றார். ஓ ப்ரபுவே! யதுவம்சத்தில் அவதரித்து 125 வருஷங்களாயின. ஸ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம் 11 அத்யாயம் 6.

"வஸுக்கள், அச்வினீ தேவர்கள், மருத்துக்கள், ஆதித்யர்கள், ருத்ரர்கள், ஸாத்யர்கள் ஆகிய இவர்களுடன் மஹேந்திரனனான். என் முகமாகப்

பின்வருமாறு விக்ஞாபனம் செய்கிறான். கெட்ட நடத்தையுள்ள அஸுரர்களைக் கொன்று பூமியின் பாரத்தை நிவர்த்தி செய்தீர். ஸ்வர்க்கத்தில் இருக்கும் எல்லாத் தேவர்களும் உங்களால் யஜமானனுள்ளவர்களாக ஆகட்டும். நீங்கள் பூமியில் அவதரித்து 125 வருஷங்கள் ஆயின. உங்களுக்கு இஷ்டமிருந்தால் வைகுண்டம் வரலாம் விஷ்ணு புராணம் பாகம் 5, அத்யாயம் 37.

இப்படித் தேவர்கள் ப்ரார்த்தித்தவுடன் ஸ்ரீ பகவான் உத்தவரை நோக்கி, இன்றைய முதல் 7வது நாளில் ஸமுத்ரம் இந்தப் பட்டணத்தைக் கவர்ந்து கொள்ளும். அவ்வுலகத்தை நான் விட்டவுடன் இவ்வுலகம், மங்களகார்யமற்றதும், கலியினால் அவமதிக்கப்பட்டதுமாய் விடும் ஸ்ரீ மத் பாகவதம் ஸ்கந்தம் 11, அத்யாயம் 7.

"என்றைய தினத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஸ்வர்க்கம் சென்றாரோ அன்றைய தினமே கலியுகம் வந்தது. விஷ்ணு புராணம் பாகம் 4, அத்யாயம் 24.

இதனால் தேவர்கள் ப்ரார்த்தித்தவுடன் தாமதம் இன்றிப்பகவான் வைகுண்டஞ் சென்றாரென்று தெரிய வருகிறது.

ஆகையால் 28 வது மஹாயுகத்தில் த்வா பாயுகத்தின் கடைசி பாகத்தில் பகவான் அவதரித்து 125 வருஷங்கள் பூலோகத்தில் வஸித்தார். பின்பு வைகுண்டம் செல்லும்போது கலி வந்து விட்டது (த்வாபரயுகம் முடிந்தது.)

Released by Maran's Dog, Toronto , Canada

"என்றைய தினம் ரோஹிணி நக்ஷத்திரமோ அன்றைய தினம் ராத்திரி இருட்டில் தேவகியினிடம் பகவான் அவதரித்தார். பாகவதம் ஸ்கந்தம் 10, அத்யாயம் 3.

"நான் வருஷா காலத்தில் ச்ராவண மாஸத்தில் க்ருஷ்ண பக்ஷத்திய அஷ்டமி திதியில் தேவகியினிடம் அவதரிக்கப் போகிறேன் விஷ்ணு புராணம், பாகம் 5, அத்யாயம் 1.

"ச்ராவண மாஸத்தில் க்ருஷ்ணபக்ஷத்திய அஷ்டமி திதியில் ரோகிணி நக்ஷத்திரத்தில், அர்த்தராத்திரி காலத்தில், சந்த்ரோதயமாகும் ஸமயத்தில், அபிஜித் முஹூர்த்தத்தில், தேவகியிடம் மஹாவிஷ்ணு வானவர் அவதரித்தார். அதே காலத்தில் அவருடைய மாயையும் யசோதையினிடம் கோகுலத்தில் புத்ரியாகப் பிறந்தாள். ஹரிவம்சம் பாகம் 1, அத்யாயம், 25.

மேற்காட்டிய ப்ரமாணங்களால் 28 வது மஹாயுகத்தில் த்வாபர யுகத்தில் 8, 63, 875வது வருஷத்தில் ச்ராவண மாஸத்தில் கிருஷ்ண பக்ஷம் அஷ்டமீ திதியில், ரோகிணி நக்ஷத்திரத்தில், அர்த்தராத்ரியில், பகவான் அவதரித்தாரென்று நிச்சயிக்கப்படுகிறது. ஆகையால் பகவான் அவதரித்த காலம் முதல் நிகழும் 24 வது பரிவிருத்தியில் ஸௌம்யவருஷம் வரையில் **5230** வருஷங்கள் ஆயினவென்று பெரியோர்களால் சொல்லப் படுகிறது.

♣ ♣ ♣ ♣

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்ரீ கிருஷ்ணாய பரமாத்மனே நம:

அத்யாயம்-1

சௌனக ப்ரச்னம்.

Released by Maran's Dog, Toronto , Canada

"எதனிடமிருந்து ஸகல ப்ரபஞ்சங்களும் உண்டாகின்றனவோ, எதனால் காப்பாற்றப்படுகின்றனவோ, எதனிடத்தில் லயிக்கின்றனவோ, அது ப்ரஹ்மம்" என்ற ச்ருதியில் சொல்லியபடியுள்ள தடஸ்த லக்ஷணமுள்ளவரும், அன்வய வ்யதிரேகங்களால் ஸகல ஜகத்காரணரும், எல்லாவற்றையும் அறிந்தவரும், ஸ்வயமாய் ப்ரகாசிப்பவருமான எந்தப்பரமேச்வரர், நான்கு முகங்களுள்ள ப்ரஹ்மதேவருக்கு வேதங்களை மனத்தால் உபதேசித்தாரோ, (அந்த வேதங்களைத் தெரிந்து கொள்வதில், வித்வான்களும் மோஹிக்கிறார்கள்.) தேஜஸ், ஜலம், பூமி ஆகிய இவைகள் ஒன்றில் ஒன்று மாறுதலாகத் தோன்றுகிறது போல எந்தப் பரமாத்மாவிடம் (அவர் ஸத்யராகையால் முக்குணங்களுடைய கார்யமும், ஸத்யமாகத் தோற்றுகிறதோ, அந்த ஸத்ய ஸ்வரூபியாகிய பரமாத்மாவைத் த்யானிக்கிறோம். அவர் தம்முடைய தேஜஸினால் மாயாகார்யமாகிய ப்ரபஞ்சத்தைத் தாண்டினவர்.

2. வேதவ்யாஸ மஹாமுனியால் செய்யப்பட்டதும், அழகு பொருந்தியதுமான, ஸ்ரீமத் பாகவத க்ரந்தத்தில் மோக்ஷத்தைக் கூட விரும்பாமல் செய்யும், ஈச்வரருடைய ஆராதனரூபமாகிய உத்தம தர்மமானது காட்டப் பட்டிருக்கிறது. பிறருடைய மேன்மையை ஸஹிக்காம

Released by Maran's Dog, Toronto , Canada

விருப்பதாகிய மாத்ஸர்யமில்லாத ஸாதுக்களால், அறியக்கூடியதும் (ஜீவன், மாயை, ஜகத் என்னுமிவை கள் பரமாத்மாவைவிட வேறானவையல்ல) மேலான ஸுகத்தைக் கொடுக்கக்கூடியதும், மூன்று வகையான தாபங்களைப் போக்கக்கூடியதும், உண்மையுமான வஸ்துவானது இதில் நன்றாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. மற்ற சாஸ்த்ரங்களாலும் இதர ஸாதனங்களாலும் ஈச்வரனை ஹிருதயத்தில் நிலைக்கச் செய்யமுடியுமா? ஆகையால் அவைகளால் என்ன பிரயோஜனம். இந்த ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்க விரும்பிய புண்யவான் களுடைய மனத்தில் கேட்ட க்ஷணத்திலேயே பகவான் ஸ்திரமாக வஸிக்கிறார்.

3. வேதமாகிய கல்பக விருக்ஷம் அதனுடைய பழம் ஸ்ரீமத் பாகவதமேயாம். இது வைகுண்டத்திலி ருந்து நாரதரால் எனக்கும், என்னால் சுகருக்கும், அவர் முகமாகப் பூமியிலும் நழுவியது. (பரவிற்று) இது அமிருத த்ரவமுள்ளது (ருசியுள்ளது) ரஸரூபமா யுள்ளது. ஓ! ரஸத்தையறிந்தவர்களே! அதன் விசேஷ பாவனையில் ஸமார்த்தியமுள்ளவர்களே! மேற்காட்டிய பழத்தை முக்தர்களாக இருக்கும் பொழுதும், அடிக்கடி புஜியுங்கள்.

4–231/2. ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் க்ஷேத்ரமாகிய நைமிசமென்னும் வனத்தில், சௌனகர் முதலிய மஹர்ஷிகள், ஸ்வர்க்கலோகத்தை யடைவதற்காக, ஆயிரம் வருஷங்கள் ஸத்ரமென்னும் யாகத்தை யனுஷ்டித்து வந்தார்கள். அப்பொழுது ஒருநாள் அவர்கள் காலையில் அக்னிகார்யங்களை முடித்துக் கொண்டு, எல்லோராலும் பூஜிக்கப்பட்டு, ஸுகமாய்

உட்கார்ந்திருக்கும் ஸூதரை நோக்கி மிக்க ப்ரீதியுடன் "ஓ பாபமற்றவரே! புராணங்கள், இதிஹாஸங்கள், தர்மசாஸ்த்ரங்கள் இவைகளை நீர் படித்திருப்பதுடன் அவ்வவற்றின் அர்த்தத்தைப் பிறருக்கும் தெரியும்படி சொல்லியுமிருக்கிறீர். ஓ ஸாதுவே! வேதங்களை யறிந்தவர்களுக்குட் சிறந்தவராகிய வ்யாஸபகவானுக்கு தெரிந்தவைகளும், பரம்(ஸகுணப்ரஹ்மம்) அபரம் (நிர்குணப்ரஹமம்) இவைகளை நன்றாய் அறிந்த மற்ற மஹர்ஷிகளுக்குத் தெரிந்தவைகளும், அவர்களுடைய அனுக்ரஹத்தால் தங்களால் உண்மையாக அறியப்பட்டவைகளே! ஆசார்யர்கள், ரஹஸ்யமான விஷயத்தையும், ப்ரியனாகிய சிஷ்யனுக்குச் சொல்வது வழக்கம். ஆகையால் [எப்பொழுதும் க்ஷேமத்தையே கொடுப்பது இன்னதென்று ஸகல க்ரந்தங்களைப் படித்து தாங்கள் நிச்சயமாகத் தெரிந்து கொண்டதை எங்களுக்கு உபதேசிக்கவேண்டும்.] ஓ ஸூதைக்குரியவரே! இந்தக் கலியுகத்தில் ஜனங்கள் பெரும்பாலும் அதிக காலம் ஜீவித்திருப்பதில்லை; சோம்பலுள்ளவர்கள்; அதிலும் மிகவும் மந்தபுத்தியுள்ளவர்கள்; தவிரவும் பாக்யக் குறைவுள்ளவர்கள்; (விக்னங்களால் வருத்தப் பட்டவர்கள்)வியாதி முதலியவைகளால் துன்பமடைந்த வர்கள்; ஆகையால் வெகுகாலம் அநேக சாஸ்த்ரங்களைக் குருமுகமாய்க் கேட்கவும், அவைகளில் சாரத்தை தாமாகத் தெரிந்துகொள்ளவும் சக்தியற்றவர்கள்; பலவகை கர்மங்களைச் சொல்லும் அநேக சாஸ்த்ரங்களோ, தனித்தனியே தெரிந்துகொள்ள வேண்டியவைகளாக இருக்கின்றன. ஆனதால் எதனால் பரமாத்மாவின் ப்ரஸாதம் ஸித்திக்குமோ அந்த ஸாரமான விஷயத்தை தங்களுடைய புத்திக்குத் தோன்றியபடி எடுத்து உபதேசிக்க வேண்டும்.

அதனால் ஸகல ப்ராணிகளும் க்ஷேமத்தையடைவார்கள். ஓ! ஸூதரே! தங்களுக்கு இவ்விஷயம் யாவும், தெரிந்த வையே. நமக்கு க்ஷேமமுண்டாகட்டும். அளவில்லாத, ஐச்வர்யம் முதலியவைகளுள்ள, ஸாத்வதர்களுக்கு நாதனாகிய புருஷோத்தமன், தேவகியினிடம் வஸுதேவருக்குப் புத்ரனாக எதனைச் செய்வதற்காக அவதரித்தாரோ அந்தச் சரிதத்தைக் கேட்க விரும்பும் எங்களுக்கு தாம் உபதேசிக்கவேண்டும். எந்த பகவான் பூமியில் அவதரித்ததால் ப்ராணிகளுக்கு க்ஷேமம், ஐச்வர்யம், இவைகள் கிடைத்தனவோ, கோரமாகிய ஸம்ஸாரத்தை (இறப்புப்பிறப்பை) அழிந்தவன் எவருடைய திவ்யநாமங்களை உச்சரித்த மாத்ரத்தில் அதிலிருந்து விடுபடுகிறானோ, எவருடைய நாமத்தை கண்டு பயமும் பயப்படுகிறதோ, மேலும் இந்திரியங்களை ஜயித்தவர்களான முனிகள் எவருடைய பாதங்களையே ஆச்ரயித்திருக்கிறார்களோ, எவருடைய பாதத்திலிருந்து உண்டான கங்கையின ஜலமானது, தர்சிப்பவர்களையும், தொடுகிறவர்களையும், ஆசமனம் செய்பவர்களையும், பரிசுத்தர்களாகச் செய்கிறதோ; புண்ய ச்லோகர்களால் கொண்டாடக்கூடிய அந்தப் பகவானுடைய சரிதம் ஸம்ஸாரதுக்கத்தைப் போக்குமாகையால் சுத்தனாக வேண்டுமென்ற எண்ணமுள்ள எவன்தான் அதைக் கேட்கமாட்டான். ஆகையால் நாரதர் முதலிய ஞானிகளால், எப்பொழுதும், கானஞ் செய்யப்பட்டதும், ஸம்ஸார துக்கத்தை நிவர்த்திப்பதுமான, மேலான அந்த சரிதத்தை கேட்க நாங்கள் மிக ச்ரத்தையுள்ளவர் களாக இருக்கிறோம். ப்ரஹ்மா,ருத்ரன், முதலிய மூர்த்தி பேதத்தைத் தரிப்பவரும், தம்முடைய மாய மஹிமையால் லீலைகளைச் செய்பவருமாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அவதார கதைகளைச் சொல்ல

வேண்டும். அவைகளைப் போதிக்க தாங்கள் வல்லமை யுள்ளவர்களே. உத்தமச்லோகராகிய பகவானுடைய சரிதத்தைக்கேட்கக் கேட்க எங்களுக்கு போதுமென்ற திருப்தியுண்டாகிறதில்லை, பகவானுடைய சரிதமானது, கேட்பவர்களான ரஸிகர்களுக்கு அடிக்கடி இன்பத்தை கொடுக்கும். ஸ்ரீமஹா விஷ்ணுவானவர் மாயையால் மனிதனாக அவதரித்து, பலராமனுடன் சேர்ந்து மனிதர்களால் செய்யமுடியாத கோவர்த்தன பர்வதத்தை தூக்கியது முதலிய லீலைகளைச் செய்தாரல்லவா? இப்பொழுது கலியுகம் வந்துவிட்ட படியால், நாங்கள் விஷ்ணுவின் பதத்தையடைய விரும்பி மேல் சொல்லிய பகவானுடைய சரிதத்தைக் கேட்பதற்காகவே தீர்க்க ஸத்ரஞ் செய்வதான காரணத்தைக் கொண்டு இந்த நைமிசாரண்யத்தில் வஸிக்கிறோம். ஸமுத்ரத்தைத் தாண்ட விரும்பியவர் களுக்கு ஓடக்காரன் கிடைத்தாற்போல அதர்மத்திற்கு பந்துவாகிய இந்தக்கலியைக்கடக்க விரும்பிய எங்களுக்கு, உம்முடைய தர்சனம் தெய்வச்செயலால் நேர்ந்தது. தர்மத்தைக் காப்பாற்றி வந்தவரும், யோகிகளுக்கு அதிபதியுமான ஸ்ரீகிருஷ்ணபகவான் மனித சரீரத்தைவிட்டு தன்னுடைய ஸ்வரூபத்தை யடைந்தபின்பு தர்மம் யாரைச் சரணமடைந்தது சொல்லவேண்டும் என்று கேட்டார்கள்.

நோட்டு.

ஸ்ரீ வேதவ்யாஸபகவான் பாகவத சாஸ்த்ரத்தைச் செய்யவிரும்பி இடையூறின்றி முடியவேண்டியதற்காக பெரியோர்களுடைய ஸம்ப்ரதாயப்படி பரமாத்மாவை ஸ்மரிப்பதாகிய மங்களத்தைக் காட்டுகிறார். – ஸ்ரீ தரியம்.

1–1. எவரிடமிருந்து–ஸ்ரீ பாதராயணர் என்னும் வ்யாஸ பகவான், ஸகல ஜனங்களையும், ஸம்ஸார பந்தத்திலிருந்து நிவர்த்தித்து, அனுக்ரஹிப்பதற்காக வேதாந்தத்தாலே அறியக்கூடியதும், மற்றப்ரமாணங் களுக்குப புலப்படாததுமான பரப்ரஹ்மத்தை எல்லா வர்ணத்தார்களும் அறியச்செய்ய நினைத்து, ஸ்ரீமத் பாகவதமென்னும் க்ரந்தத்தை நாரதருடைய உபதேசத் தால் செய்யவிரும்பினார். அது, விக்னமில்லாமல் முடியவேண்டியதற்காக பரமாத்மாவை த்யானஞ் செய்தார். "எதனிடமிருந்து இந்த ப்ரபஞ்சம் உண்டாகின்றதோ"–"இந்த ஆகாசரூபமாகிய ஆனந்த மில்லாமற்போனால் எவன் ஜீவிப்பான்" என்ற அன்வயவ்யதிரேகச்ருதிகளால் ப்ரஹ்மம், ஜகத்காரண மென்றும், அர்த்தேஷு அபிக்ஞ: என்று அன்வயஞ் செய்து, ஸகல பதார்த்தத்தையறிந்தவர் என்று அர்த்தஞ்செய்வதால், ப்ரஹ்மத்தினிடத்தில் எல்லா வற்றையும் அறிந்திருப்பது முதலிய ஸகலகல்யாண குணங்களிருப்பதாயும், காட்டப்பட்டது. பரமாத்மா வானவர், ப்ரஹ்மதேவருக்கு தேஜஸ், ஜலம், பூமி இவைகளை ஒன்றோடொன்று கலந்து ஸிருஷ்டிக்கும் வகையை உபதேசித்தது போல ப்ரீதியுடன் வேதத்தையும் உபதேசித்தார். "வேதங்கள் முடிவில்லாத துகள்" என்றபடி வேதங்களை பூராவாகத் தெரிந்து கொள்ள முடியாததாகையால், தடையற்ற ஞானமுள்ள யோகிகளும் மோஹிக்கிறார்கள். "அந்த விஷ்ணுவின் மேலான பதத்தை எப்பொழுதும் ஸூரிகள் பார்க்கிறார்கள்." என்றபடி நித்திய ஸூரிகள், நாராயணனுடைய திவ்ய மங்களதேஹத்தின் ஒப்பற்ற காந்தியை தர்சித்து மோஹிக்கிறார்கள். மேல்காட்டிய மூன்று பூதங்களுடைய த்ரிவிருத்கரண ஸ்ருஷ்டியானது,

எவரிடத்தில் பொய்யாக இருக்கிறதோ (அது பகவானிடத்தில் ஸம்பந்திக்கிற தில்லையென்று கருத்து) மேலும் எவர் தன்னுடைய தேஜஸினால் ஸகல தோஷங்களையும் நாசம் செய்கிறாரோ முக்காலத்திலும் இருப்பவராகையால் எவர் நித்யரோ, ருத்ரன் முதலியவர்களைவிட சிறந்தவராகையால பரனோ, அந்த பர ப்ரஹ்மத்தை த்யானிக்கிறோம்– பாகவத சந்த்ரிகா.

ஒருகால் அஸுரர்கள் பூமியில் அரசர்களாகப் பிறந்து அந்த பாரத்தால் பூமி மிக வருத்தமடைந்தாள். அப்போது ப்ரஹ்மா, ருத்ரன் முதலிய தேவர்கள், பூமிக்கு நேர்ந்த ச்ரமத்தை நிவர்த்திக்குபடி ஸ்ரீ மஹா விஷ்ணுவை வேண்டிக்கொண்டார்கள். பகவான், அவர்களுடைய ப்ரார்த்தனைக்கிசைந்து, வெகுகாலமாய் தபஸ் செய்துகொண்டிருக்கும் ஸத்யவதியினிடம் பராசரருக்கு புத்ரனாக அவதரித்தார். இவர்தான் வ்யாஸரென்று சொல்லப்படுகிறார். இவர் மந்தபுத்தி யுள்ள ஜனங்களிடத்தில் மிகுந்த கருணையுள்ளவராய் வேதங்களை பிரித்து அதன் அர்த்தத்தை நன்றாய் காட்டுவதற்காக ப்ரஹ்ம ஸூத்ரங்களைச்செய்தார். பின்பு அதைப் படிக்கத்தகாத ஸ்த்ரீகள் சூத்ரர்களுக்காக புராணங்களையும் வெளியிட்டார். பின்னும் அவர் வேதத்தின் அர்த்தத்தை நன்றாய் காட்டுகிறதும் 12 ஸ்கந்தமுள்ளதும், 18,000 க்ரந்தங்களடங்கியதுமான பாகவத புராணத்தைச் செய்ய ஆரம்பித்து, தான் எப்பொழுதும் ப்ரஹ்ம ஸாக்ஷாத் காரமுள்ளவரான்லும் இயற்கையில் விக்ன ஸம்பந்தமில்லாதவரானாலும், க்ரந்தாரம்பத்தில் செய்யவேண்டிய ஸம்ப்ரதாயத்தை வித்வான்களுக்குத் தெரிவிப்பதற்காக, நாராயண

ஸ்மரணமாகிய மங்களத்தைச் செய்தார். அதாவது பரனைத் த்யானஞ்செய்கிறோம். க்ரந்தத்தின் ஆரம்பத்தில் நமஸ்கரிக்கக்கூடிய தேவதைகள் இருவகையானவைகள். 1. ஆதிகாரிகதேவதை—ஸூரியன் முதலிய க்ரஹங்கள். 2. அபிஷ்டதேவதை.— பகவான். இருவகையான தேவதைகளின் ஸ்வரூபியும் ஸகல கல்யாண குணங்கள் நிறைந்தவருமான பரமாத்மாவே இந்த பாகவத ஸாஸ்த்ரத்தால் வர்ணிக்கப்படுகிறார். நாராயணனைவிட பரன் வேறொருவருமில்லை "அந்த புண்டரீகாக்ஷனே தேவன், அந்த நாராயணனே பரன்" - ஹரிவம்சம்.

"ப்ரஹ்மத்தை யறிந்தவன் பரனை யடைகிறான்"
—ச்ருதி.

இவர் ஜகத்திற்கு காரணமாயிருப்பவர், "எவரிடமிருந்து இந்த பூதங்கள் உண்டாகின்றவோ, எவரால் உண்டானவைகள் ஜீவிக்கின்றனவோ, எவரிடம் லயிக்கின்றனவோ ? அதுவே ப்ரஹ்மம்" —ச்ருதி.

நான் எல்லாவற்றிற்கும் உற்பத்தி ஸ்தானம், என்னிடமிருந்தே எல்லாம் உண்டாகின்றன. எல்லா பிராணிகளையும் ஸ்ருஷ்டிக்கிறவனும், காப்பாற்றுகிறவனும், நாசஞ்செய்கிறவனும், நானொருவனே" —ஸ்மிருதி.

மேல்காட்டிய அன்வயத்தால் விஷ்ணுவே ஜகத் காரணரென்று ஏற்படுகிறது.

ஆக்ஷேபம்: ருத்ரன் முதலியவர்களும், ஜகத்திற்குக்

காரணமென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே அப்படிக்கிருக்க மேற்காட்டியது எப்படி பொருந்தும்.

ஸமாதானம்: வேதத்தில் சிலபாகத்தில் அப்படி சொல்லப்பட்டிருந்தாலும், பெரும்பாலும் விஷ்ணுவே ஜகத்காரணம் என்றே சொல்லப்பட்டிருக்கிறது 'எல்லா வேதங்களும் எந்தபதத்தைச் சொல்லுகின்றனவோ' —ச்ருதி.

"ஸகல வேதங்களாலும் அறியக்கூடியவன் நானே"
—ஸ்மிருதி.

ஆக்ஷேபம்:— பரமாணுவே ஜகத்காரணம், என்று ஏன் சொல்லக்கூடாது ?

ஸமாதானம்:— அப்படியல்ல, ப்ரத்யக்ஷத்திற்கும் ஆகமத்திற்கும் விரோதமில்லாத யுக்தியால், ப்ரஹ்மமே ஜகத்காரணமென்று சொல்லக்கூடும். புத்ரனுக்கு பிதாவே காரணமென்று தெரியவருகிறதல்லவா ? அது போல் ப்ரஹ்மதேவர் முதலியவர்களுக்கு சேதனனே காரணமாயிருக்க வேண்டும், மாயை முதலியவைகள் அசேதனமாகையால் அவைகளைக் காரணமென்று சொல்லக்கூடாது. இந்தவிஷயம் ச்ருதியில் பலவிடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பரமாணுவே ஜகத்திற்கு காரணமென்று சொல்பவர்கள் ச்ருதி விருத்தமான யுக்தியைக் காட்டுவதனால் அது ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல. அந்த பரமாத்மா எல்லாவற்றையும் பொதுவாகவும் விசேஷமாகவும் அறிந்தவர். அதனால் ப்ரஹ்மதேவருக்கு வேதங்களை யுபதேசித்தவர். அவருடைய அனுக்ரஹமில்லாதவரையில் ப்ரஹ்ம தேவர் முதலியவர்களும் மோஹிக்கிறார்கள். தேஜஸ்,

ஜலம், பூமி, இவைகளின் கார்யம் எப்படி ஸத், அஸத் இவைகளைவிட வேறாக ஆகிறதில்லையோ? பகவானால் செய்யப்படுகிறபடியால் ஈச்வர ஸிருஷ்டி, ஜீவஸ்ருஷ்டி, ஜடஸிருஷ்டி, ஆகிய இவைகள் மூன்றும் பொய்யானதல்ல. மாயைக்கடந்த ஆனந்தானுபவ ரூபராயுமிருக்கும் பரமபுருஷனைத் த்யானிக்கிறோம். தேஜஸ் ஒன்றானாலும்,தான் தன் கார்யமான பூமி முதலியவைகளில் பிரவேசித்து சிலகாலத்தில் வெளிப் படுவது போல, பகவான் ஜகத்தை ஸிருஷ்டித்து, அவைகளில் பிரவேசிக்கிறார். பின்பு பக்தர்களை அனுக்ரஹிப்பதற்காக கிருஷ்ணன் முதலிய அவதாரஞ் செய்கிறார். இதுவே ஈச்வர ஸிருஷ்டியெனப்படும், ஸூர்யன் முதலிய தேஜஸினால் ஜலத்தில் அனேக ப்ரதிபிம்பங்கள் ஸ்தூலசரீரம் முதலிய உபாதிகளால் ஈச்வரனுடைய ப்ரதிபிம்பங்களாகிய ஜீவர்கள் உண்டாகிறார்கள். இதுவே ஜீவஸர்க்கம் எனப்படும். மண்ணினால் குடம் முதலியவைகளை யுண்டு பண்ணுவதுபோல ஈச்வரன் அஹங்காரம் முதலியவை களை ஸிருஷ்டிக்கிறார். இதுவே ஜடஸர்க்கம்,– விஜயத் வஜீயம்:

1–4: லக்ஷணம்– இருவகை (1) தடஸ்தலக்ஷணம்– மேற்காட்டியது 2. ஸ்வரூப லக்ஷணம்–ஸத்யஸ்வரூபி. ஸகலத்தையுமறிந்தவர் ஸகல சக்தியுள்ளவரென்பது அன்வயம்– ஆகாசம் முதலிய கார்யங்களின் ஸத்தை யானது, ஆத்மாவின் ஸத்தையால் என்பது. வ்யதிரேகம்–எதிலில்லாததால் அது இல்லையோ அது (உதா) ஆகமஸத்தையில்லாததனால் ஆகாசபுஷ்பங் களில்லை– ஸ்ரீத.

பரமாத்மா, ஸத்ரூபியாய் ஏல்லாவற்றிலும் அனுவ்ருத்தித்திருப்பதால் எல்லாவற்றிற்கும் காரண மாகிறார் (உதா) மண்ணானது அதன் கார்யமாகிய குடம், மடக்கு, தோண்டி முதலியவைகளிலும், தங்கமானது அதன் கார்யமாகிய குண்டலம் முதலிய நகைகளிலும், படர்ந்திருக்கிறது– ஸ்ரீத.

5. அறிந்தவரும் – ப்ரதானம் (மாயை) ஜகத்காரண மானாலும் அதல்லவென்று காட்டப்பட்டது. "மாயை ஜடமாகையாலும், வேதத்தில் ஸிருஷ்டிக்க ஸங்கல் பித்தாரென்று சொல்லியிருப்பதாலும், அம்மாதிரியான ஸங்கல்பம் மாயையினிடம் ஏற்பட நியாயமில்லாததனா லும், மாயை ஜகத்காரணமல்ல– வ்யாஸஸூத்ரம்.

2–1 ப்ரகாசிப்பவர்.– இதனால் சேதனனாகிய ஜீவனைவிட மேலானவரென்று காட்டப்பட்டது.

2–2 உபதேசித்தாரோ.–"எல்லாவற்றிற்கும் முந்தி ஹிரண்யகர்ப்பர் உண்டானார். அவர் ஸகல பூதங்களுக்கும் ஒரே யஜமானனாக விருந்தார். அவர் பூமியையும் அந்தரிக்ஷத்தையும், காப்பாற்றிவந்தார் என்ற ச்ருதிப்படி ப்ரஹ்மதேவருக்கும் மேலானவரென்று காட்டப்பட்டது. எவர் முதலில் ப்ரஹ்மாவை யுண்டு பண்ணுகிறாரோ, எவர் அவருக்கு வேதங்களை உபதேசிக்கிறாரோ, அந்த ஸ்வப்ரகாசரான தேவனை மோக்ஷமடைய விரும்பிய நான் சரணமடைகிறேன்." –ச்ருதி.

மனதால்– ப்ரஹ்மதேவர் பிறரிடத்தில் வேதாத்ய யனஞ் செய்தாரென்று ஓரிடத்திலும் சொல்லப்

படாமலிருந்தாலும் பரமாத்மாவின் ஸங்கல்ப மாத்ரத்தால் ப்ரஹ்மதேவருக்கு வேதங்கள் தோன்றினவென்று தாத்பர்யம்.

வேதங்கள்.— ப்ரஹ்மா தானாக வேதங்களைத் தெரிந்துகொண்டவரல்லவென்பது கருத்து.— ஸ்ரீத.

ப்ரஹ்மதேவருக்கும் ஞானத்தையுபதேசித்தவரும், இயற்கையில் அளவற்ற நித்ய ஞானமுள்ளவரும், எல்லாவற்றையும் ப்ரகாசிக்கச் செய்பவரும் மற்ற தேஜஸை அபேக்ஷியாமலேயே ப்ரகாசிப்பவரும். ஸத்ய ஸ்வரூபியாயுமுள்ள பரமாத்மாவே ஜகத்காரணம், அவரே திவ்ய மங்களஸ்வருபி, அவரை த்யானிப்பதால் ஸகல க்ஷேமங்களும் கிடைக்கும்.

இந்த புராணத்தில் காயத்ரியின் அர்த்தமாகிய பரப்ரஹ்மவித்யை நன்றாய் காட்டப்பட்டிருக்கிறது.— அந்த காயத்ரீ, வேதமாதா, இது வேதத்தையே ப்ரமாணமாய் கொண்டது. "எதில் காயத்ரியை அனுஸரித்து தர்மங்கள் விஸ்தாரமாக வர்ணிக்கப்படுகின்றனவோ, எதில் வ்ருத்ராஸுரவதத்தின் கதை சொல்லப்பட்டிருக்கிறதோ அது பாகவதமென்று சொல்லப்படுகிறது. அதை எழுதி ஸுவர்ணத்தால் செய்யப்பட்ட ஸிம்ஹ ப்ரதிமையுடன் புரட்டாசி மாஸத்திய பௌர்ணமியில் எவன் தானஞ்செய்கிறானோ அவன் உத்தமகதியையடைகிறான். இது 18,000 க்ரந்தங்களுள்ளது"— மத்ஸ்யபுராணம், "ஓ அம்பரீஷ! உனக்கு ஸம்ஸார பந்தம் நிவர்த்தியாக வேண்டுமானால் சுகஸ்வாமியால் உபதேசிக்கப்பட்ட ஸ்ரீமத் பாகவதத்தை பிறர் சொல்லக் கேளும் தானாகவாவது படியும்," — பத்மபுராணம்,

ஸகலஜகத்தையும், படைத்து அவைகளைக் காப்பாற்றுகிறவர் என்றாலும் ஸ்வயம் ப்ரகாசர் என்றாலும் காயத்ரியின் அர்த்தமானது காட்டப்பட்டிருக்கிறது. 6. மாறுத— கோடைகாலத்தில் மாத்யாஹ்னவேளையில் வனம் முதலிய சூன்யமாகிய விடங்களில், வெயிலை ஜலமென்று நினைத்து தாஹமுள்ள ஜனங்கள் அதனால் தாஹத்தைப் போக்கிக்கொள்ளலாமென்று அதையனுஸரிக்கிறார்களல்லவா ? அவ்விடத்தில் தோற்றுகிற ஜலமானது வாஸ்தவமல்ல. ஆச்ரயமாகிய தேஜஸ் உண்மையானதால் (வ்யவஹாரகாலத்தில்) ஜலமிருப்பதுபோல தோன்றுகிறதுபோல ஸத்வம், ரஜஸ், தமஸ், ஆகிய முக்குணங்களால் உண்டாகியிருக்கும் ஸிருஷ்டிகள் யாவும், ஸத்யமன்று. ஆச்ரயமாகிய ஆத்மாவின் ஸத்தையால் ஸத்தாகத் தோற்றுகிறது. ஸ்ரீத, 11.— வ்யாச மஹா— வ்யாச மஹாமுனியால் செய்யப்பட்ட இந்தப் பாகவதமென்ற க்ரந்தத்தில் பக்தியாகிய தர்மம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆபிசார ப்ரயோகமாகிய ச்யேனயாகம் போல் இது பாபமுள்ளதல்ல. மோக்ஷஸாதனமாகையால், மிகவும் மேலானது. மாத்ஸர்யம் முதலிய துர்க்குணமில்லாத ஸாதுக்களால் அனுஷ்டிக்கக்கூடியது. இதனால் நித்ய வஸ்துவாகிய பரமாத்மாவே அறியக்கூடியவர். அவரே அக்னிமுதலிய ரூபமாகவிருந்து ஸ்வர்க்கம் முதலியவைகளைக் கொடுக்கிறார். முவ்வகையான தாபத்தைப் போக்குகிறார், புண்யசாலிகள் இந்த கிரந்தத்தைக் கேட்க வேண்டுமென்று விரும்பிய க்ஷணத்திலே அவர்களுடைய ஹிருதயத்திலே பகவான் ஸ்திரமாக வஸிக்கிறார். மற்ற க்ரந்தங்கள் இதுபோல பக்தியையுண்டுபண்ணி அதனால் ஈச்வரனை மனத்திலிருக்கச் செய்கிறதில்லை. ஆகையால் இதுவே உத்தமமானது.—சந்திரிகா. அழகு—

"தோஷமற்ற ஸகல புராணங்கள் பாகவதமில்லாத காலத்தில் ஸாதுக்களுடைய ஸபையில் ப்ரகாசிக்கும்" என்றபடி பந்தகமாகாத "ஓ அர்ஜுன! நீ செய்கிறதை யும், புஜிக்கிறதையும், ஹோமஞ்செய்கிறதையும் தானஞ் செய்கிறதையும், தபஸ்செய்வதையும் எனக்கு அர்ப்பணம் செய்துவிடு"– பகவத்கீதை. என்றபடி பலனையுத்தேசியாமல் செய்யும் கர்மங்களே மேலான வைகள். அவைகளே கபடமற்ற தர்மங்கள். "பகவானுடைய நாமங்களைச் சொல்லுவது முதலிய பக்தியே மனிதர்களுக்கு மேலான தர்மம். அதனாலேயே பகவான் ஸந்தோஷப்படுகிறார்" என்றபடி பக்தியே மேலானதர்மம்.– விஜயத்வஜீயம். மோக்ஷத்தை விரும்பியவர்களுக்கு மிகரமணீயமானது– ஸ்ரீத. 28– அமிருதத்ரவ– மோக்ஷத்திற்கு ஸாதனமாகிய பக்திரஸமுள்ளது. இதை சரீரம் போகும்வரையில் பானஞ்செய்யுங்கள். சந்த் செய்யப்பட்ட–கர்த்தா வினுடைய மேன்மையால் க்ரந்தத்திற்கு மேன்மை காட்டப்பட்டது. அறியக்கூடியதும்.– ஞானகாண்டத் தை உயர்ந்ததென்று காட்டப்பட்டது.– புண்ய 23– புண்யம் செய்யாதவர்களுக்கு ஸ்ரீமத் பாகவதத்தை கேட்கவேண்டுமென்ற ஆசையுண்டாகாது. 24– ஸ்திர மாக.– தேவதாகாண்டத்தைவிட மேலானதென்று கருத்து. மேற்காட்டியபடி கர்ம காண்டம் தேவதா காண்டம். ஞானகாண்டம் மூன்று பாகங்களடங்கிய வேதார்த்தம் முழுவதும் தெரிந்துகொள்ளக் கூடியதா யிருப்பதால் ஸகல சாஸ்த்ரத்தை விட இது மேலானது. ஆகையால் ஸாதுக்கள் முகமாய் கேட்டுத் கொள்ள வேண்டும்– ஸ்ரீத. பரவிற்று– சிஷ்ய பரம்பரையாய். நசுக்கிவிடாமல் ஜாக்ரதையாய் கொண்டுவரப்பட்ட தென்று காட்டப்பட்டிருக்கிறது. சுகருக்கு உபதேசஞ்

செய்தது முதலியவைகள் பாகவதஞ்செய்த காலத்திற்கு பிந்திய காலத்தில் நடந்ததானாலும் வருங்கார்யமும் நடந்தது போலவே சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீத. அமிருதம் சுகமென்றால் கிளியால் கொத்தப்பட்ட பழம் மிகரஸமுள்ளதென்று பிரஸித்தம் அமிருதம்– மேலான ஆனந்தம் அதேரஸம், அதையுடையது," அவரே ரஸம், ரஸத்தை யடைந்தே இவன் ஆனந்தமுடையவனாக ஆகிறான்" ச்ருதி. ரஸரூப:– மற்ற பழங்களில் எப்படி மேற்புறத் தில் தோலும் அதற்குள்ளே ரஸமுமிருக்கிறதோ? அடபடி இதில் தோல் முதலிய ரஸமற்ற பாகங்களில்லை;

ஆக்ஷேபம்– பழமென்றும் அதையே ரஸமென்றும் சொல்வது பொருந்துமா? ரஸமுள்ள பழமென்று சொல்ல வேண்டாமா?

ஸமாதானம்:– மற்ற பழங்கள் போல தோல் முதலியவைகளில்லாமல் ரஸமாகவே இருக்கிறதென் பதை காண்பிப்பதற்காக ரஸமென்று சொல்லப்பட்டது. பூமியில் விழுந்த ரஸமென்றால் அது த்ரவரூபமாய் போய்விடாமல் புஜிக்கதக்க பழமென்பதால் காட்டப் பட்டது முக்தர்– ஆத்மாவிடத்திலேயே ரமித்து கொண்டிருப் பவர்களும், மற்ற க்ரந்தங்களில் ஆசையில்லாத வர்களுமான மஹர்ஷிகளும் பகவானிடம் யாதொரு காரணமுமில்லா மல் பக்தி செய்கிறார்கள். இம்மாதிரியான குண முள்ளவர் ஸ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம்,1–"அத்யாயம்" 7. ஸ்வர்க்க லோகத்தை– ஸ்வர்காய– பகவான். அவரே லோகம் (பக்தர்களுக்குருட்டிடம்) அவரை யடைவதற்காக–ஸ்ரீத ஸ்வர்க்க– மேலான ஆனந்தம், அப்பேர்பட்டலோகம் பரமபதம், அதையடைவதற்காக– ஸத்ரம்– எந்த யாகத்தில் ரித்விக்குகளே யஜமானர்களாக விருக்கிறார்களோ

அது முனி.. ஸத்ரம்—ஸாதுக்களைக் காப்பாற்றுகிறது. —விஜ. அக்னி—நித்ய நைமித்திக ஹோமங்களை— முனி. புராணங்கள் 1.ப்ரஹ்ம புராணம் 2. பாத்மம். 3. விஷ்ணுபுராணம். 4. சிவபுராணம் 5. நாரதபுராணம் 6. மார்கண்டேயம், 7. ஆக்னேயம். 8. பவிஷ்யபுராணம். 9. ப்ரஹ்மகைவர்த்தம். 10 லிங்க புராணம் 11. வராஹபுராணம் 12. ஸ்காந்தம். 13. வாமனம். 14 கூர்மபுராணம். 15. மத்ஸ்யபுராணம். 16.கருடபுராணம். 17. ப்ரஹ்மாண்டம். 18வது ஸ்ரீமத் பாகவதபுராணம். 24—பல— அனேகசாஸ்த்ரங்களை அப்யஸித்தாலும் அவ்வளவு பலன் கிடைக்கிறதில்லை யென்று கருத்து ஸ்ரீத. 3—31 க்ஷேம.—ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் கதையைக் காலதாமதமின்றிக் கேட்க வேண்டுமென்று விரும்பி சுருக்கமாய் ஆசிர்வாதஞ் செய்தார்கள். "ஒரு முஹூர்த்தமாவது ஒரு க்ஷணமாகிலும் ஸ்ரீ வாஸுதேவரை ஸ்மரிக்காமலி ருப்பதே கெடுதிக்கு காரணம்.— ஸ்ரீத. 32—ஸாத்—பகவத் பக்தர்கள். ஸ்ரீத. 4—14 நாரதர்— இவர் ப்ரஹ்மதேவருடைய மனத்திலிருந்து உண்டா னவர். இவர் தேவர்ஷி இவருடைய குணங்கள் மஹாபாரதம் ஸபாபர்வத்திலும், சாந்திபர் வத்திலும் நன்றாக வர்ணிக்கப் பட்டிருக்கின்றன. இவர் கானவித்தையை அப்யளித்த கதை அத்புத ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர் ஞானத்தை பிறகுக்குபதேசிப்பதாலும், அக்ஞானத்தைப் போக்குவதாலும் நாரதரென்ற பெயரை யடைந்தார். 21— உத்தம—எவருடைய பெயரை உச்சரித்த மாத்ரத்தில் புண்யம் கிடைக்குமோ, அவர் சொல்லவேண்டும்— மஹர்ஷியின் கேள்விகள் ஆறு.

அவைகளில் 1. சாஸ்த்ரங்களுடைய ஸாரமானது எது, 2. ஸ்ரீ கிருஷ்ணபகவான் செய்த கார்யங்கள் எவை, 3 ஸிருஷ்டி முதலிய லீலைகள், 4 அவதார கதைகள். 5. பகவானுடைய சரிதம், 6. தர்மத்தை ஸம்ரக்ஷித்தது. ஸ்ரீத.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–2.

ஸூதர் ப்ரத்யுத்தரஞ் சொன்னது.

ரோமஹர்ஷணருடைய புத்ரரான ஸூதர் அந்த ப்ராஹ்மணர்களுடைய நல்வார்த்தைகளைக் கேட்டு ஸந்தோஷித்து அவர்களுடைய கேள்வியை ச்லாகித்துப் ப்ரத்யுத்தரஞ் சொல்ல ஆரம்பித்துப் பின்வருமாறு தன் குருவை வணங்கினார்.

2–31/2. சுகர் அதி பால்யவயதிலே (உபநயனஞ் செய்யப்படாமலிருக்கும் வயதிலே) கர்மமார்க்கத்தில் விருப்பமில்லாதவராய், துறவியாகப் போகும்பொழுது, பிதாவாகிய வ்யாஸர் பிள்ளையை விட்டுப் பிரியமன மில்லாதவராய் ஓ! புத்ரா! என்று உரக்க அழைத்தார். அப்பொழுது மரங்கள் விடைகூறின. (மரங்களின் ரூபமாயிருந்து பிதாவின் ப்ரீதியைக் குறைப்பதற்காகச் சுகரே அப்படிக்கூறினார் என்பதாம்) அவர் ஸகல ப்ராணிகளுடைய ஹ்ருதயத்தில் வசிப்பவர், அந்த சுக மஹாயோகியை நமஸ்கரிக்கிறேன். எவர் ஸம்ஸாரமா கிய இருட்டைக்கடக்க விரும்பிய ஜனங்களிடத்தில், கருணை வைத்து ஒப்பற்ற, மஹிமையுள்ளதும், ஸகல வேதங்களின் ஸாரமாயும், நிகரில்லாததாயும், ஆத்ம தத்துவத்தைக் காட்டுவதில் தீபமாயுள்ளதுமான, ரஹஸ்யமாகிய புராணத்தை வெளியிட்டாரோ, வ்யாஸருடைய புத்ரரும், முனிகளுக்குக் குருவுமாகிய அந்தச்சுகருக்கு நமஸ்காரம் செய்கிறேன். நாராயண ரையும், மனிதர்களுக்குட் சிறந்தவரான நரனையும், ஸரஸ்வதி தேவியையும், வ்யாஸரையும் நமஸ்காரஞ் செய்து பின்பு (ஜயத்தை) க்ரந்தத்தைச் சொல்லுகிறேன்.

4–35. 'ஓ மஹர்ஷிகளே! நன்றாய்க் கேட்டீர்கள், தாங்கள் கேட்டவிஷயம் உலகத்திற்கே மங்களத்தைக் கொடுக்கக்கூடியது. எதனால் பரமாத்மா ஸந்தோஷி ப்பாரோ அம்மாதிரி ஸ்ரீ கிருஷ்ணன் விஷயமாகக் கேட்டீர்கள். பலனை உத்தேசியாமல் இடையூறின்றி ஸ்ரீ மஹா விஷ்ணுவிடத்தில் செய்யும் பக்தியே மேலான தர்மம். அதனால் பரமாத்மா மிகவும் ஸந்தோஷமடை கிறார். பகவானாகிய வாஸுதேவரிடத்தில் பக்தி செய்தால், வைராக்யமும் காரணமற்ற உண்மையான ஞானமுமுண்டாகும். புருஷர்கள் குறைவின்றி தங்களுக்குரிய தர்மங்களை யனுஷ்டித்தும் அதனால் பகவானுடைய கதையைக்கேட்க வேண்டுமென்ற ஆசையுண்டாகாவிட்டால் அது பயன்படாததேயாகும். மஹாவிஷ்ணுவின் கதையாகிய அமிர்தத்தைப் பானஞ் செய்தும் (கதையைக் கேட்டும்) சித்தமுருகுதல், ஆனந்தத்தால் கண்ணீர் பெருகுதல், மயிர்க் கூச்சலிடல், என்னும் இவைகள் எவனுக்கு உண்டாகவில்லையோ, அவன் ஆத்மதத்துவத்தை பலதடவை குருமுகமாகக் கேட்டாலும் அதன் உண்மையை அறியமாட்டான். (பகவத்பக்தி, வைராக்யம், ஆத்மஞானம், என்னும் இவைகளே மேலான தர்மமென்று கருத்து). மோக்ஷத் திற்கு உபயோகமாகிய தர்மத்திற்கு இரண்டாவது புருஷார்த்தமாகிய அர்த்தம் பலனென்றும் தர்மத்தை விட்டுபிரியாத அந்த அர்த்தத்திற்குக் காமம் ப்ரயோஜன மென்றும் சிலர் சொல்வது மஹரிஷிகளால் ஒப்புக் கொள்ளபடவில்லை. இது பிரசித்தமான விஷயம். இந்திரியங்களை திருப்தி செய்வதே (விஷயானுபவம்) காமத்திற்கு பலனென்று சொல்வதும் சரியல்ல. ஆனால் ஜீவிப்பதற்குப் போதுமான அளவு விஷயத்தை அனுபவிப்பதே பலனாம். தத்துவத்தைத் தெரிந்து

கொள்ள விரும்பியவனுக்கு கர்மங்களால் கிடைக்கும் பலன் பயன்படாது. உண்மையை அறியவேண்டுமென்ற விருப்பமே அவனுக்குப் பலன். மேலும், நாசமற்றதான ஞானஸ்வரூபத்தையே தத்வமென்று, உண்மையை யறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். அதனையே உப நிஷத்தை அத்யயனஞ் செய்தவர்கள் ப்ரஹ்மம் என்றும், ஹிரண்யகர்ப்பனை உபாஸிப்பவர்கள், பரமாத்மாவென் றும், ஸாத்வதர்கள் பகவான் என்றும் சொல்லுகிறார்கள் "ஆகையால் ச்ரத்தையுள்ள முனிகள் வேதாந்தம் முதலிய சாஸ்த்ரங்களைக் குருமுகமாகக் கேட்டு, ஸ்திரமான ஞானம்,வைராக்யம், பக்தி இவைகளை அடைந்து ஜீவனுக்கும், பரமாத்மாவுக்கும் பேதமில்லை என்று தெரிந்துகொள்கிறார்கள். ஓ! ப்ராஹ்மண ச்ரேஷ்டர்களே! அவரவர்களுடைய ஜாதிக்கும், ஆச்ரமத்திற்கும் தகுதியான தர்மத்தை ஸாங்கமாய் (குறைவின்றி) அனுஷ்டித்தால், அவர்களிடத்தில் ஸ்ரீ நாராயணன் ப்ரியப்படுகிறார். இதுவே அதற்குப் பலமாகும். ஆகையால் பகவானுடைய கதையைக் கேட்கும்போதும் அவருடைய நாமபஜனம் செய்யும் போதும், அவரைத்யானஞ் செய்யுங்காலத்திலும், அவரைப் பூஜிக்கும் போதும், வேறு விஷயத்தில் மனத்தைச் செலுத்தாமலிருக்க வேண்டும்.விவேகிகள் பகவத்யானமாகிற கத்தியால் அஹங்கார ஸம்பந்தத்தை யுண்டுபண்ணும் கர்மபந்தத்தை வெட்டுகிறார்கள். ஆகையால் பகவானுடைய கதையைக் கேட்பதில் விருப்பமில்லாதவர் யார்? (எல்லோரும் விரும்புவார்கள்) ஓ! ப்ராஹ்மணர்களே! புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வதால் பாபங்கள் நீங்குகின்றன, பின்பு பெரியோர்களுடைய சேர்க்கையுண்டாகின்றது. பிறகு தர்மத்தில் ச்ரத்தையும் அதன்பின் வாஸுதேவருடைய

கதையைக்கேட்க விருப்பமும், பின்பு அதில் ப்ரீதியு மாகிய இவைகள் முறையே உண்டாகின்றன. தம் கதையைக் கேட்பவர்களுக்கும், நாமபஜனஞ் செய்பவர் களுக்கும், புண்யத்தைக்கொடுப்பவரும், ஸாதுக்களுக்கு அனுகூலத்தை செய்பவருமான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா தம்முடைய கதையை கேட்பவர்களுடைய ஹ்ருதயத்தில் வசித்துக்கொண்டு காமம், கோபம் முதலியவைகளை நாசஞ்செய்கிறார். எப்பொழுதும் பகவத் பக்தர்களை ஸேவிப்பதாலும், பாகவத சாஸ்த்ரத் தைப் படிப்பதாலும் பெரும்பாலும் அக்ஞானம் விலகும். அதனால் உத்தமச்லோகராகிய (புண்யகரமான பெயருள்ள) பகவானிடம் ஸ்திரமான பக்தியுண்டாகும். அப்பொழுது ரஜோகுணம், தமோகுணம் ஆகிய இவைகளாலுண்டாகும் காமம், க்ரோதம் முதலிய வற்றால் அவர்களுடைய மனஸ் விகாரமடையாமல் ஸத்வகுணமுள்ளதாய் சாந்தமாயிருக்கும். இப்படி பகவானிடம் பக்தி செய்கிறவனுடைய மனஸானது அதன் மஹிமையால் சாந்தமாய் விடும். ஆசைகளும் ஒழிந்துவிடும்; பின்பு பரமாத்மாவின் உண்மையான ஸ்வரூபஞானமுண்டாகும். ஆத்மரூபியான ஈச்வரனு டைய ஸாக்ஷாத்காரமுண்டானவுடன் அஹங்காரம் அடியோடே நாசமடைகிறது. ஸம்சயங்கள் யாவும் நிவர்த்தியாகின்றன. ப்ராரப்தகர்மம் தவிற மற்றவைகள் நசிக்கின்றன. ஆகையால் வித்வான்கள் பகவானாகிய வாஸுதேவரிடத்தில் எப்பொழுதும் மிகுந்த ஸந்தோஷத் துடன் பக்திசெய்கிறார்கள். அதனால் அவர்களுடைய சித்தம் சுத்தமாகிறது. பரமபுருஷன் ஒருவரானாலும் உலகத்தைக் காப்பாற்றுவதற்கு ஸத்வ குணத்தாலும், ஸ்ருஷ்டிப்பதற்கு ரஜோ குணத்தாலும், ஸம்ஹரிப்ப தற்கு தமோ குணத்தாலும், முறையே ஹரி, (விஷ்ணு)

பிரஹ்மா, ருத்ரன் என்னும் பெயரடைகிறார். ஆனால் ஸ்த்வமூர்த்தியான வாஸுதேவரிடமிருந்து மனிதர் களுக்கு க்ஷேமங்கள் யாவும் கிடைக்கின்றன. அக்னியானது கட்டையைப்பிடித்து எரிக்கும்போது அந்தக் கட்டையாகிற உபாதி ஸம்பந்தத்தால் புகை உண்டாகிறது. அதிலிருந்து வேதங்களில் சொல்லிய கர்மங்களுக்கு யோக்யமான அக்னி விருத்தியடைகிறது அதுபோல லயஸ்வரூபமாகி தமஸ்ஸினிடமிருந்து ரஜோகுணமும், அதனிடமிருந்து ஸத்வகுணமும், அதன்னால் ப்ரஹ்மப்ராப்தியும் உண்டாகிறது. முன் காலத்தில் பெரியோர்களான முனிவர்கள் சுத்த ஸத்வ மூர்த்தியும், பகவானுமாகிய, மஹாவிஷ்ணுவை (இந்த்ரியங்களுக்குப் புலப்படாதவரை) பஜித்தார்கள். ஆகையால் அந்த மார்க்கத்தை அனுஸரிப்பவர்கள், ஸம்ஸாரத்திலிருந்து க்ஷேமத்தை அடைவார்கள். மோக்ஷத்தை விரும்பியவர்கள், கோரஸ்வரூபமுள்ள பரமசிவன், பித்ரு கணங்கள், முதலியவைகளை உபாஸியாமல் அவர்களை நிந்திக்காமலும், சாந்தங் களான, நாராயணனுடைய கலைகளை, (அம்சங்கள்) உபாஸிக்கிறார்கள். ரஜோகுணம், தமோகுணம், இந்த ஸ்வபாவமுள்ள ஜனங்கள், ஐஸ்வர்யம், புத்ரன், அழகு, இவைகளை அடையவிரும்பி தங்களுக்கு ஸமமான ஸ்வபாவமுள்ள, பித்ருக்களையும், ருத்ரன், ஹிரண்ய கர்பன், முதலியவர்களையும், ஸேவிக்கிறார்கள். வேதங்கள், யாகத்தின் ஸ்வரூபத்தைச் சொல்லுகின்ற வைகளானாலும் யாகத்தால் ஆராதிக்கப்படும் தேவதை விஷ்ணுவாகையால், அவைகள் யாவும், வஸுதேவரு டைய புத்ரனாகிய பகவானையே சொல்லுகின்றன.

யோக சாஸ்த்ரங்கள் எல்லாம் ப்ராணாயாமம்

முதலியவைகளை, நிரூபிப்பவைகளானாலும், அவைகள் பகவானை அடைவதற்கு உபாயமாகையால் அந்தப் பரமாத்மாவையே சொல்லுகிறவைகளாகின்றன. மற்ற கர்மங்களும், அந்தப் பரம புருஷனுடைய ஆராதனத் திலேயே உபயோகிக்கப்படுகின்றன. ஞானசாஸ்த்ரம், தபஸ். தர்மசாஸ்த்ரம், கர்மத்தின் பலனாகிய ஸ்வர்க்கம், முதலியவைகள் யாவும், பரமாத்ம பரங்களேயாகின்றன. நிர்குணராயும், எங்கும் நிறைந்தவருமான அந்த பகவானே காரணரூபமாயும், கார்யரூபமாயுமிருந்து, முக்குண ஸ்வரூபமாயுள்ள தம்முடைய மாயையால் முதலில் உலகத்தை ஸ்ருஷ்டித்தார். மேலும் அவர் அந்த மாயையால் உண்டாகி ப்ரகாசிக்கும் ஆகாயம் முதலியவைகளில் உட்பிரவேசித்து இயற்கையில் தாம் குணமற்றவரானாலும், குணமுள்ளவர்போலத் தோன்று கிறார். அவர் விஞ்ஞானத்தால் (சித்சக்தி) நிறைந்தவர் கட்டைகளில் ஜ்வலிக்கும் அக்னி உண்மையில் ஒன்றானாலும், ஆச்ரய பேதத்தால் வெவ்வேறாகத் தோன்றுகிறது போல ஜகத்ரூபியான பரமபுருஷன் ஒருவரானாலும், ஒவ்வொரு ப்ராணிகளிடத்திலும், வெவ்வேறாகக் காணப்படுகிறார். அந்தப் புருஷோத்த மனே பூதஸூக்ஷ்மங்கள், இந்த்ரியங்கள், மனம் ஆகிய இவைகளால் உண்டுபண்ணப்பட்ட ப்ராணிகளிடத்தில் ப்ரவேசித்து விஷயங்களை அனுபவிக்கச்செய்கிறார். லோககர்த்தாவாகிய ஈச்வரன் திர்யக் (புறவை பசு முதலிவைகள்) தேவர்கள், மனிதர்கள் இவைகளில் ஸத்வ மூர்த்தியாய் அவதரித்து உலகங்களைக் காப்பாற்று கிறார். இவைகளே லீலாவதாரமெனப்படுகின்றது.

நோட்டு.

11–22. பால்ய– எனக்கு உபநயனம் செய்ய

வேண்டும் என்று ஆசார்யரிடம் வராதவர், அல்லது, தான் ஒருவராகப்போனார்.– ஸ்ரீத– தேஹம் முதலிய வைகளில் அபிமானமற்றவர்.– இவர் ருத்ரனுடைய அவதாரம்– விஜய. 12–4– ஸரஸ்வதி தேவியென்றால் ஸ்ரீதேவி,நரனென்றால் வாயுபகவான் – விஜ, ஜயம்– ஸம்ஸாரத்தை ஜயிப்பதால் இப்பெயர் கிடைத்தது, 14–நாரண தாரண– "ஓ அர்ஜுன! நான் வேதங்களாலும், தபஸினாலும், யாகத்தாலும் அறியமுடியாதவன்" என்ற ஸ்மிருதியின்படி பக்தியைவிட வேறு காரண மற்ற–ஸ்ரீத.– வீர. விஷ்ணுவின் பிரஸாதத்தால் உண்டான ஞானம். விஜ.

12–24 தர்ம–மோக்ஷத்திற்கு ஸாதனமாகிய தர்மத்திற்கு பணம் பலனல்ல. தர்மத்திற்காகவென்று, ஸம்பாதிக்கப்பட்ட பணத்திற்கு காமம் ப்ரயோஜன மாகாது. விஜ 11–12 ஹரி–

ஆக்ஷேபம்:– விஷ்ணு ஒருவரே ப்ரஹ்மா, பரமசிவன், என்ற பெயரை அடைகிறார் என்று சொன்னதால், மூன்று தேவர்களும் ஒருவரென்றும், ஒருவருக்கொருவர் பேதமில்லாதவர்களென்றும் ஏற்படுகிறது. "ப்ரஹ்மாவும், சிவனும் நாராயணனே" ச்ருதி. நாராயணர் என்ற பெய்ருடைய ப்ரஹ்மதேவர் கல்பத்தின் முதலில் ஜனங்களை ஸிருஷ்டித்தார். பிறகு அந்த பகவானாகிய விஷ்ணுவானவர் காலாக்னி ருத்ரரூபியாயிருந்து ஸகல லோகத்தையும் ஸம்ஹரித் தார். பகவான் ஒருவரே உலகத்தை ஸ்ருஷ்டிப்பது, பரிபாலிப்பது, நாசம் பண்ணுவது, ஆகிய கார்யங்களை முறையே ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் ஆகிய பெயருடன்

நடத்திவருகிறார்."– ஸ்மிருதி, ஆகையால் மஹாவிஷ்ணு மும்மூர்த்திகளுக்குள் ஒருவரென்றே ஏற்படுகிறது. மேலும், இம்மூவர்களைக் காட்டிலும் மேலான பரதத்வம் ஒன்றிருப்பதாகவும் ஏற்படுகிறது. அந்தப் புருஷனால் ஜகத்முழுவதும் பூர்ணமாயிருக்கிறது." "அதைக்காட்டிலும் எது மேற்பட்டதோ, அது ரூபமற்றது எவர்கள் இதையறிகிறார்களோ அவர்கள் மரண தர்மமில்லாதவர்களாக ஆகிறார்கள்."– ச்ருதிகள் "இவர் அமிர்தத்துக்கு ஹேதுவாயிருப்பவர்"– ச்ருதி இதனால் மும்மூர்த்திகளுக்கும் மேலான பகவத் ஸ்வரூபமே ஸகல ஜகத்திற்குக் காரணம். அதை பஜிப்பவர்களே மோக்ஷத்தையடைவார்கள். நாராயணனை பஜிப்பவர்கள் மோக்ஷத்தையடையமாட்டார்கள். அவர் பரமாத்மாவுமல்ல.

ஸமாதானம்:– மும்மூர்த்திகளும் ஒருவரேயென்று சொல்வது ந்யாயமல்ல "நாராயணனிடமிருந்து ப்ரஹ்மா உண்டாகிறார், நாராயணனிடமிருந்து ருத்ரன் உண்டாகிறார், நாராயணனிடமிருந்து பன்னிரண்டு ஆதித்யர்களும், பதினோரு ருத்ரர்களும், எட்டு வஸுக்களும், எல்லாவேதங்களும் உண்டானார்கள்" "நாராயணன் ஒருவரேயிருந்தார். ப்ரஹ்மாவும், ருத்ரனும் அப்பொழுது இல்லை. நாராயணர் ஒருவரேயிருந்தார். சங்கரராவது, ப்ரஹ்மாவாவது அப்பொழுது இல்லை. "அவர் முனியாகவிருந்து ஸங்கல்பித்தார். அவரிடமி ருந்து இவையாவும் உண்டாயின." "எவருடைய தொப்பிளில் தோன்றிய தாமரஸ புஷ்பத்திலிருந்து மஹாத்மாவான ப்ரஜாபதி உண்டானாரோ." "அதில் ப்ரஹ்மா உண்டானார்." "அவர் முந்தி மூன்று கண்களுள்ளவரும், மூன்று தலைகளுள்ளவரும்,

மூன்று கால்களுள்ளவருமான ஸம்ஹாரமூர்த்தியை யுண்டுபண்ணினார்" ப்ரஹ்மதேவர், தக்ஷர் முதலியவர் கள், காலம், மற்ற ஸகல ப்ராணிகள் இவைகள் யாவும் மஹாவிஷ்ணுவின் விபூதிகளேயாம். மேலும், ருத்ரன், காலன், அந்தகன் நான்குவிதமான ப்ராணிகள், இவைகள் ஜனார்த்தனனுடைய வீபூதியே. மேற்காட்டிய ச்ருதிகளாலும், ஸ்மிருதிகளாலும், ப்ரஹ்மா, ருத்ரன் இருவர்களும், மஹாவிஷ்ணுவால் ஸிருஷ்டிக்கப்பட்ட வர்கள் என்று தெரியவருகிறது. நாராயணனைக் காட்டிலும் மேற்பட்ட வேறு தத்வமிருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஸகல ஜகத்தும் புருஷனேயாம். ஜகத்தானது அவனை உபஜீவிக்கிறது." "அவருக்கு ஸமானனும் மேற்பட்டவனும் காணப்படவில்லை" ச்ருதிகள் ஓ! அர்ஜுனா! என்னைக்காட்டிலும் மேலானதொன்று மில்லை." ஸ்மிருதி. ப்ரளய காலத்தில் எல்லாம் ப்ரகிருதியில் லயித்திருக்கும் பொழுது ஸகல ஜகத் ரூபியான நாராயணன் ஒருவரேயிருக்கிறார். புண்டரீ காக்ஷனைவிட வேறு மேலான தெய்வமில்லை. மேல்காட்டிய ப்ரமாணங்களால் மஹாவிஷ்ணுவே மேலானவைரென்று ஏற்படுகிறது.

ஆக்ஷேபம்– மும்மூர்த்திகளும் ஒருவரென்றும், விஷ்ணுவைக்காட்டிலும் மேலான தத்வமிருக்கிற தென்றும் ப்ரமாணங்களை காட்டியிருக்கிறோமே.

ஸமாதானம்– அதிற்சொல்லிய சிவ, சம்பூ ஈச, முதலிய சப்தங்களுக்கு நாராயணனென்றே அர்த்தங் கொள்ளவேண்டும். ருத்ரன் முதலியவர்கள் கர்மத்துக்கு வசப்பட்டவர்களென்று சொல்லியிருக்கிறது. வாஸு

தேவன் கர்மவச்யரென்று ஓரிடத்திலும் சொல்லப் படவில்லை. ஆகையால் நாராயணனே எல்லா தெய்வங்களிலும் மேலானவர். அவரை அடைவதற்கு அவரே காரணம். வீர.15–6 ஞானசா –கபிலரால் சொல்லப்பட்ட ப்ரகிருதி புருஷ விஷயமான க்ரந்தம், தபஸ், சாந்த்ராயணம் முதலியவை. வீர. லீலாவதார– ஈச்வரனுடையவை கர்மாதீனமல்ல வென்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–3

பகவதவதாரங்கள்

உலகங்களை ஸிருஷ்டிப்பதற்காக, பகவான் ஆதியில் மஹத்தத்வம், அஹங்காரம் முதலியவைகளுடன் கூடியதும், 16 கலைகளுள்ளதுமான புருஷதேஹத்தை எடுத்துக்கொண்டார். பின்பு ஜலத்தால் உலகமுழுவதும் மூடப்பட்டிருக்க, அவர் அந்த ஜலத்தில் படுத்து யோகநித்ரை செய்தார். அப்பொழுது அவருடைய மடுப்போலிருக்கும் தொப்புளிற் தோன்றிய தாமரை புஷ்பத்திலிருந்து ஒருவர் உண்டானார்;அவரே மரீசி முதலிய ப்ரஜாபதிகளுக்கு அதிபதியாகிய ப்ரஹ்மதேவர். மேற்சொல்லிய புருஷரூபத்தில் ஏற்பட்டிருக்கும் அவயவங்களின் அமைப்புகளால் தேவர்கள், மனிதர்கள் முதலியவர்கள் ஸிருஷ்டிக்கப்பட்டு உலகமானது விஸ்தாரமாகிற்று. மேற்காட்டிய பகவத் ரூபமே சுத்தமானது மேலான ஸத்வகுணமுள்ளது ஞானக் கண்ணுள்ள யோகிகள் இந்த பகவத் ஸ்வரூபத்தை அனேகங்கால்கள், கைகள், முகங்கள், தலைகள், கண்கள், மூக்குகள், காதுகள் என்னும் இவைகளால் அற்புதமான தாகவும், அனேக கிரீடங்கள், குண்டலங்கள் முதலிய வைகளால் ப்ரகாசிப்பதுமாக பார்க்கிறார்கள்:அந்த தேஹத்திலிருந்தே அனேக அவதாரங்கள் வெளிப் படுகின்றன.காரியம் முடிந்தவுடன் அதனிடத்திலேயே அடங்குகின்றன. மேலும் அந்த ரூபம் நாசமற்றது. அதனுடைய அம்சம், ப்ரஹ்மதேவர். அவருடைய அம்சமுள்ளவர்கள், மரீசி முதலிய ப்ரஜாபதிகள். அவர்களாலே தேவர்களும், மனிதர்களும், பசு, பக்ஷி முதலியவைகளும், ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன.

6–28. புருஷ தேஹத்தை அங்கீகரித்த அந்த தேவனே கௌமாரமென்ற ஸிருஷ்டியில் ப்ராஹ்ம மணராயிருந்து, ப்ரஹ்மசர்ய வ்ரதத்தை அனுஷ்டித்து வந்தார். இது ஒரு அவதாரம். மேலுமவர் பன்றி சரீரமெடுத்து பாதாளலோகஞ் சென்று, அவ்விடமிருந்த பூமியை இவ்வுலகத்திற்கு கொண்டு வந்தார். இது மற்றொரு அவதாரம். தவிர ரிஷி ஜன்மாவில் தேவ ரிஷியான நாரதராய் அவதரித்து ஸாத்வத தந்த்ர மென்ற பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தைச் செய்து வெளியிட்டார். அதில் சொல்லிய கர்மங்கள் துக்கத்தைக் கொடுக்கிறதில்லை, (பகவானுடைய ஆராதன ரூபங்களாகையால்) அந்த மஹாபுருஷனே தர்மகலையின் ஸிருஷ்டியில் நரன், நாராயணன் என்ற திவ்யநாமங்களுடன் ரிஷிகளாக அவதரித்தார். அந்த நான்காவது அவதாரத்தில் இந்த்ரியங்களையும் மனத்தையும் அடக்கி கடுமையான தபஸ் செய்தார். அவரே கபிலரென்ற மேலான பெயருடன் ஸித்த புருஷனாக 5–வது அவதாரஞ்செய்து காலமஹிமையில் ஒளிந்து போன தத்வங்களின் உண்மையைத் தெரிவிக்கும் ஸாங்க்ய சாஸ்த்ரத்தை ஆஸுரி என்ற ப்ராஹ்மணருக்கு உபதேசித்தார். பின்னுமொரு சமயத்தில் அத்ரி மஹர்ஷியானவர் மஹாவிஷ்ணுவை நோக்கி "உமக்கு சமமான புத்ரன் எனக்கு உண்டாகும் படி அனுக்ரஹிக்க வேண்டும்" என்று பிரார்த்திக்க பகவான் அப்போர்ப்பட்ட புத்ரன் தம்மைத்தவிர வேறொருவரும் இல்லாமையால் தம்மை அத்ரி ஏமாற்றி விட்டாரென்று வெறுப்பில்லாமல், தானே தத்தாத்ரே யராக அவதரித்தார். மேலும் அவர் அலர்க்கன் என்ற அரசனுக்கும், ப்ரஹ்லாதன் முதலியவர்களுக்கும், ஆன்வீக்ஷகியை (ஆத்மவித்தையை) உபதேசித்தார்.

பின்னுமவர் ஆகூதி என்பவளிடம் ருசி என்பவருக்கு 'யக்ஞர்' என்ற பெயருடன் அவதரித்து ஸ்வாயம்புவ மன்வந்த்ரத்தில் தாம் இந்த்ரனாகவிருந்து தம்முடைய புத்ரர்களான யாமன் முதலிய தேவர்களுடன், உலகத் தைக் காப்பாற்றினார். இன்னும் அந்த பகவான் ஆக்னீதரருடைய புத்ரராகிய நாபி என்பவருக்கு மேருதேவியினிடத்தில் ரிஷபரென்ற பெயருடன் அவதரித்து எல்லா ஆச்ரமங்களிலும் மேலான பரமஹம் ஸாச்ரமத்தை யோகிகளுக்கு உபதேசித்தார். பின்னு மொருக்கால் மஹர்ஷிகளால் ப்ரார்த்திக்கபட்டு ப்ருது வென்ற ராஜர்ஷியாக அவதரித்து, பசுவின்ரூபத்தை தரித்து பூமியினிடமிருந்து ஸகல வஸ்துக்களையும் கறந்து உலகத்தைக்காப்பாற்றியதால், இந்த அவதாரம் மிகவும் விரும்பத் தக்கதாயிருந்தது. தவிரவும் சாக்ஷுஷமன்வந்தரத்தில் ஸத்யவ்ரதருக்காக மாயையால் காண்பிக்கப்பட்ட ப்ரளயத்தில், மத்ஸ்யரூபத்தை தரித்து பூமியாகிய ஓடத்தில் வைவஸ்வத மனுவாக ஆகப்போகிற ஸத்யவ்ரதரை வைத்து காப்பாற்றினார். அந்தப்ரபுவே, தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து ஸமுத்ரத்தை அமிருதத்திற்காகக் கடையும்போது, ஆமை உருவம் கொண்டு மத்தாகிய மந்தரமலையை, முதுகில் தாங்கினார். அவரே தன்வந்தரியாக அவதரித்தும், பிந்தி மோஹினி வேஷங்கொண்டு, அஸுரர்களை மோஹிக்கச் செய்து, தேவர்களுக்கு அமிருதத்தைக்கொடுத்து புஜிக்கவும் செய்தார். மிக்க பலிஷ்டனாகிய, ஹிரண்யகசிபுவை நரஸிம்ம சரீர மெடுத்து பாயைப் பின்னுகிறவன் கோரையைப் பிளப்பது போல் நகங்களால் துடையில் கிழித்து அவனைக்கொன்றார். இது பதினான்காவது அவதாரம். பின்னுமொரு ஸமயத்தில், மஹாபலியென்ற அஸுரன்

யாகஞ்செய்யும்பொழுது, பகவான் வாமனரூபியாக அவனுடைய யாகசாலை சென்று மூன்றடி பூமியை யாசித்தார். மேலும் அதனால் அவனிடமிருந்து ஸ்வர்க்க ராஜ்யத்தை பிடுங்கிக்கொண்டு அவனை நிக்ரஹித்தார். இது பதினைந்தாவது அவதாரம். பின்னுமொருக்கால் பூமியில் பரசுராமனாக அவதரித்து தர்ம விரோதஞ் செய்யும் அரசர்களை கோபத்துடன் இருபத்தொருதரம் கொன்று பூமியில் க்ஷத்ரிய வம்சமில்லாமலொழியச் செய்தார். இது பதினாறாவது. அந்த பரமபுருஷனே ஸத்யவதியிடத்தில் பராசரருக்கு வ்யாஸராய் அவதரித் தார். இவருடைய காலத்தில் மந்தபுத்தியுள்ளவர்களாக யிருந்த படியால் வேதங்கள் சாகை சாகையாக பிரிக்கப்பட்டன. மேலும், ராவணன் முதலிய ராக்ஷஸர் களை கொல்வதற்காக ஸ்ரீ ராமாவதாரஞ்செய்து, ஸமுத்ரத்தில் அணைகட்டியது முதலிய ஆச்சர்யங் களைக் காட்டினார். இது பதினெட்டாவது அவதாரம். பின்பு விருஷ்ணி குலத்தில் பலராமன், ஸ்ரீ கிருஷ்ணன் என்ற திவ்ய நாமதேயங்களுடன் அவதரித்துப் பூமியின் பாரத்தை நிவர்த்தித்தார். இது பத்தொன்பதாவது அவதாரம். பின்பு கலியுகத்தில் கீகடம் (மத்ய கயை) என்ற தேசத்தில் புத்தனென்ற பெயருடன் ஜினருக்கு (சுத்தோதனனென்று சிலர்) புத்ரனாக அவதரிப்பார். கலியின் முடிவில் யுகஸந்தியில் அரசர்களெல்லோரும் பெரும்பாலும் திருடர்களாக ஆய்விடுவார்கள். அப்பொழுது ஜகத்திற்கு குருவாகிய பகவான் கல்கியென்ற பெயருடன் விஷ்ணுயசஸ் என்பவருக்குப் புத்ரனாக அவதரிப்பார். இது இருபத்தொன்றாவது அவதாரம்.

ஓ! "ப்ராஹ்மணர்களே! குறையாத, ஜலமுள்ள

பெரிதாகிய ஏரியிலிருந்து அனேக வாய்க்கால்கள் ஒடுவது போல, ஸத்வ மூர்த்தியாகிய விஷ்ணுவின் அவதாரங்கள் கணக்கிட முடியாதவைகள். ரிஷிகள், முனிகள், தேவர்கள், மனுவின் புத்ரர்கள், ப்ரஜாபதிகள் எல்லோரும் மஹாவிஷ்ணுவின் அம்சாவதாரமே தவிர வேறில்லை. மேலும், முன்காட்டிய படியுள்ள பகவானுடைய அம்சங்கள், கலைகள், விபூதிகள், ஸாக்ஷாத் விஷ்ணுவாகிய கிருஷ்ணன் இவர்கள், அஸுரர்களால் உலகத்திற்கு உபத்ரவம் நேரும்போது அவர்களை நிக்ரஹித்து உலகத்தைச் ஸுகிக்கச் செய்கிறார்கள்.

29. இந்தப் பகவானுடைய அதிரஹஸ்யமான அவதாரங்களைக் காட்டும் ச்லோகங்களைக் காலையிலும், மாலையிலும், சுத்தனாய் பக்தியுடன் படித்தவன் ஸம்ஸார துக்கத்திலிருந்து நிவர்த்தியடைகிறான்.

30–39. ரூபமில்லாதவனும், சித்ரூபியாயுமிருக்கும் ஜீவனுக்குப் பகவானுடைய மாயையின் குணங்களாகிய மஹத்தத்வம் முதலியவைகளால் இந்த ஸ்தூலசரீர மேற்படுத்தப்பட்டது. வாயுவை (காற்றை) ஆச்ரயித்த மேகங்கள் ஆகாயத்திலிருப்பதாயும், பூமியின் தூளிக்காற்றிலிருப்பதாகவும், அக்ஞர்கள் நினைப்பது (ஆரோபிப்பது) போல எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாயிருக்கும் ஆத்மாவினிடம் சரீரம் ஆரோபிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஸ்தூல சரீரத்திற்கு மேற்பட்டதும் கை, கால் முதலிய அவயவ பரிமாணங்களற்றதும், பார்க்கப்படாததும், கேட்கப்படாததாயும், ஸூக்ஷ்மமாயும், ஜீவனுடைய உத்கிறந்தி (வெளியில் போவது) முதலியவைகளுக்கு ஸாதனமாயுமுள்ள லிங்க சரீரமும் முன்காட்டியதுபோல ஆரோபிக்கப்படுகிறது. ஸ்தூல

சரீரம் லிங்கசரீரமாகிய இவைகள் பரமாத்மாவினிடம் ஆரோபிக்கப்படுவதற்குக்காரணம் அவித்யையே, உண்மையில் ஆத்மாவிற்கு இவ்விரண்டின் ஸம்பந்தமுமில்லை. இம்மாதிரியான உண்மையான ஸ்வரூபஜ்ஞானம் எந்தக்காலத்தில் உண்டாகிறதோ அப்பொழுது ஜீவன், ஞான ஸ்வரூபியான ப்ரஹ்மாத்ம பாவத்தையடைவான். ஈச்வரனுடைய மாயையானது ஓய்வடையுமானால் அப்பொழுது ஜீவன் ப்ரஹ்மமாக ஆகிறான். பரமானந்த ரூபியாய் விளங்குகிறான். அந்தர்யாமியான பகவான் ஒன்றையுஞ் செய்யாமலிருப்பவரானாலும் கர்மங்களை செய்கிறவரென்றும், உத்பத்தியில்லாதவரானாலும் பிறந்தாரென்றும், கவிகள் வேதத்தின் ரஹஸ்யமான விஷயத்தை வர்ணிப்பது ஜீவனுக்கு பிறப்பு முதலியவைகளுண்டென்று சொல்வதுபோல மாயையேதவிற வேறில்லை. வீண்போகாத லீலைகளுள்ளவரும், ஸகல ப்ராணிகளிடம் மறைந்திருப்பவருமான ஈச்வரனே இந்த லோகத்தைப் படைக்கிறார்;காப்பாற்றுகிறார்; ஸம்ஹரிக்கிறார். ஆனாலும் ஸ்வதந்தரராகையால் ஆறு இந்த்ரியங்களுக்கு யஜமானராயிருப்பதால் அதுகளின் விஷயங்களை வெகு தூரத்திலிருந்தே க்ரஹிக்கிறார். அவைகளில் ஸம்பந்தப்படுகிறதில்லை. மூடன் எப்படி நடனம் (நர்த்தனம் செய்கிறவனால்) செய்யப்படும் அபினயத்தை அறியமாட்டானோ அப்படி அற்பபுத்தி யுள்ளவன் ஸகல ஜகத்தைப் படைப்பவரும், ஸங்கல்பத்தால் ரூபங்களையும் வாக்கினால் பெயர்களையும், விஸ்தரிப்பவருமான பகவானுடைய லீலாவிபூதிகளை யுக்தி(தர்க்கம்) முதலியவைகளின் ஸாமர்த்யத்தால் அறியமாட்டான். ஆனால், நல்மார்க்கத்தை ஸ்தாபிப்பவரும், சத்ருக்களை ஜயிக்கும் வீர்யமுள்ளவரும் சக்ராயுதம் தரித்தவருமான பரமாத்மாவின் ஸ்வரூபத்தை,

இடைவிடாமல் கபடமற்று பகவானுடைய பாதங்களாகிய தாமரஸ புஷ்பத்தின் வாஸனையை ஸேவிக்கும் பக்தனே ச்ரமபட்டு தெரிந்துகொள்ளுகிறான். ஓ ப்ராஹ்மணர்களே! இதைத் தெரிந்து கொண்டு ஸகல லோகத்திற்கும் நாதராகிய ஸ்ரீ வாஸுதேவரிடம், எவர்கள் இடைவிடாமல் மனத்தைச் செலுத்துகிறார்களோ, அவர்களுக்குக் கர்ப்பவாஸம் முதலிய துக்கத்தை உண்டுபண்ணும் பிறப்பு இறப்பு நேரிடமாட்டாது. ஆதையால் எல்லாவற்றையும் அறிந்த அந்த பக்தர்களே தன்யர்கள் (மேலானவர்கள்)

40–44. ஸர்வஜ்ஞரான வேதவ்யாஸ மஹர்ஷி உத்தமச்லோக (நல்வினையை கொடுப்பதால் மேலான பெயருள்ள) ராகிய பகவானுடைய சரித்தத்தைக் காட்டுகிறதும். வேதங்களுக்கு ஸமமாயுள்ளதுமான ஸ்ரீமத் பாகவத புராணத்தைச் செய்து முடித்தார். பிறகு உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டி ஸகல மங்களங்களுக்கும் இருப்பிடமாயும், அர்த்தத்தாலும், சப்தத்தாலும் மிகவும் மேலானதுமான அந்தப் புராணத்தை, யோகிகளுக்குட் சிறந்தவரும், தம்முடைய புத்ரரத்னமுமாகிய சுகருக்கு உபதேசித்தார். அந்தச்சுகர் எல்லாவேதங்களிலும், இதிஹாஸங்களிலுமிருந்து அவற்றின் ஸாரத்தை எடுத்து செய்யப்பட்ட இந்தச் சாஸ்த்ரத்தை, கங்கைக்கரையில் மிகுந்த வைராக்கியத்துடன், ப்ராயோபவேசஞ் செய்திருக்கும் பரீக்ஷித்து மஹாராஜனுக்கு, அனேக மஹர்ஷிகள் கேட்டிருக்கும் போது சொன்னார். இவ்விதமாக அது பூமியில் பரவியது. ஓ! ப்ராஹ்மணர்களே! அந்த ஸமயத்தில் நான் அவ்விடம் போனேன். மேலும் அவ்விடத்தில் உட்கார்ந்திருந்த மிகுந்த தேஜஸுள்ள அந்த ப்ரஹ்ம

ரிஷியான சுகருடைய அனுக்ரஹம் பெற்றேன்; நீங்களனைவரும் 'அதன் விஷயத்தை தெரிந்துகொள்ள வேண்டும்' என்று மிகுந்த ஆவலுள்ளவர்களாய் இருப்பதால் நான் சுகரிடம் கேட்டபடி, என்புத்திக் கெட்டியவரையில் சொல்லுகிறேன். (கிருஷ்ணபகவான் தர்மம், ஞானம் இவைகளுடன் தமது லோகஞ்சேர்ந்த பிறகு கலியில் ஞானக்கண்ணில்லாமல் கஷ்டப்படும் ஜனங்களுக்கு இந்த புராணமாகிய ஸூர்யன் உதயமாகி இருக்கிறது.)

நோட்டு.

17–22. 16 கலைகள்– இந்த்ரியங்கள் 11, ஐந்து பூதங்கள், இந்த பதினாறு கலைகள், பகவானுடைய சரீரம் உண்மையில் இப்போர்ப்பட்டதல்ல. ஆனாலும், விராட்தேஹத்தின் அந்தர்யாமியாயிருக்கும் பகவானை விராட்ரூபமாக உபாஸிப்பதற்குபயோகமாகச் சொல்லப் பட்டது. ஸ்ரீத. 18–12. [illegible]ளமார– இவருக்கு ஸனத்குமாரரென்று பெயர். ஆனால் இவர் ஸனகர் முதலியவர்களில் சேர்ந்தவரல்ல. விஜயத் ஆதிபுருஷன் ப்ரஹ்மதேவருடைய ஸ்வரூபமாகவிருந்து ஸனத்குமாரர் முதலியவர்களாக அவதரித்தார். பிறகு ஈச்வரனை யுபாஸித்தார். அவர்கள் அனுப்ரவேசாவதார ரூபிகளெனப்படுவார்கள். மேலுமவர்கள் அவித்யையுள்ளவர்களேயாம். ஆனாலும் பகவானையுபாஸித்துக் காலாந்தரத்தில் ஞானத்தை யடைவார்கள். வீர இது இந்த ஒரு அத்யாயத்தில் 21 அவதாரங்கள் நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. ஆனாலும் அவைகள் வரிசையாகச் சொல்லப்படவில்லை. ஆனாலும் இவ்விடத்தில் சொல்லிவருவதில் முதலாவது என்பதேயாம். ஸ்ரீத.

16 தேவர்ஷி–மஹிதாஸரென்ற மஹர்ஷி. விஜ20. தர்ம– யமனுடைய அம்சம். ஸ்ரீத. கபிலர்– இவர் ப்ரஸித்தராகிய கபிலரல்லவென்று சிலர். விஜ. 31 வெறுப்–மூலத்தில் அனஸூயயா என்றிருப்பதால், அத்ரியின் பத்னியாகிய அனஸூயை யென்பவளால் அடையப்பட்டார்.– வீர. விஜ. 19–4. யாம– ஒவ்வொரு மன்வந்தரத்திலும் தேவர்களுடைய பெயர் மாறுகிறதுண்டு– விஜ. நாபி–ஸ்வாயம்புவ மனுவின் புத்ரர்– வீர. இந்த்ரனுடைய புத்ரன்.– முனிமஹர்ஷி– வேனனைக்கொன்ற பிறகு.– வீர மாயையால்– மன்வந்தரத்தின் முடிவில் ப்ரளயமில்லாமற் போனாலும், அக்காலத்தில் மார்க்கண்டேயருக்குக் காண்பித்தது போல காண்பிக்கப்பட்டது– ஸ்ரீத. துடையில்– மடியில் வைத்துக்கொண்டு. விஜ வாமன– துஷ்டர்களுடைய கர்வத்தைக் குறைப்பதால் இப்பெயர் கிடைத்தது– ஸ்ரீத. கோபத்துடன்.– சக்தியில்லாதவனுக்குக் கோபமுண்டாகுமேயல்லாமல், ஸாமர்த்யமுள்ளவர்களுக்கு கோபமுண்டாக ந்யாய மில்லையாகையால் கோபங்கொண்டவர்போல வென்பது கருத்து– விஜ. ரிஷிகள்– மனுவின் புத்ரர்களாகிய ப்ரியவ்ரதர் முதலியவர்கள்.– விஜ. கலைகள்– குமாரர்கள், நாரதர் முதலியவர்கள். கலாவதாரபூதர்கள், அதிலும் குமாரர் முதலியவர்கள் ஞானமுள்ளவர்கள் ப்ருது முதலியவர்கள் பகவானு டைய சக்தி விசேஷமுள்ளவர்கள்– ஸ்ரீத. விபூதிகள்– "எந்தப்ராணிகள் விபூதியுள்ளனவைகளோ, எது அழகு பொருந்தியதோ, எது பலமுள்ளதோ, அவைகள் யாவும் என்னுடைய தேஜஸ்ஸின் அம்சத்திலிருந்து உண்டானவர்கள்" பகவத்கீதை. ரூபமில்லாத–ஜீவனுக்கு தேஹஸம்பந்தம் விஷ்ணுவின் மாயையால் ஏற்பட்ட

தாகையால் ஞானத்தால் அந்த அவித்யை நிவர்த்தி யாகிறதென்பது இதுமுதல் ஐந்து ச்லோகங்களால் காட்டப்பட்டிருக்கிறது. ஸ்ரீத. ஆரோபி- நான் தேவன், இந்த சரீரம் என்னுடையது, என்ற அபிமானத்திற்கு விஷயமாகச் செய்யப்பட்டிருக்கிறது. உண்மையில் தேவர்கள் முதலிய சரீரம் ஜீவனுடைய ஸ்வரூபமல்ல.

ஆக்ஷேபம்– தேவசரீரம் முதலியவைகள் அவை களுக்கு அபிமானியாகிய ஜீவனால் தரிக்கப்படுகிற தாகையால் அவனுடையதென்று ஏன் சொல்லக்கூடாது?

ஸமாதானம்– "எவனுக்கு ஆத்மா சரீரமோ எவன் ஆத்மாவினிடத்திலிருக்கிறானோ" என்ற ச்ருதிப்படியும். ஜீவனும் பரமபுருஷனால் தரிக்கப்படுகிறபடியால் எல்லாவற்றிற்கும் பரமாத்மாவே முக்யமான ஆதாரம்– வீர. ஆகாயம் வாயு இவைகள் கண்ணிற்குப் புலப்படாதவைகளானாலும், மேகக்கூட்டத்தை ஆகாசமென்றும், பூமியிலிருந்து கிளம்பும் தூளிகளை வாயுவென்றும் சொல்வதுபோல, அக்ஞஜனங்கள் ப்ரதிமையைப் பார்த்து அதையே ஈச்வரனென்று சொல்லுகிறார்கள். அதனால் ஸர்வ ஸாக்ஷியான பகவான், இந்த்ரியங்களால் பார்க்கக்கூடியவர் (த்ருச்யர்) என்றும் சித்ரூபியான அவர் ஜடரென்றும் ஏற்படுகிறது. ஆகையால் இது ப்ராந்தியேயாம்.– விஜ. ஸூக்ஷ்மம்– "இவன் அவ்யக்தன், நினைக்கமுடியாதவன் விகாரமற்ற வன்"– பகவத்கீதை. ஒன்றையும்– புண்யபாபங்களற்ற வர், கர்மாதீனமான சரீரமில்லாதவர்–வீர. ரஹஸ்யம்.– உத்பத்தியை அடையாமலே பலவகையாக உண்டா கிறார்" என்ற ச்ருதியில் உத்பத்தியடையாதவரென்றால்

ஜீவன்போல் கர்மாதீனமாக ஜன்மமில்லாதவரென்றும் தனதிஷ்டப்படி பகவானுக்கு உத்பத்தியுண்டென்றும் அர்த்தம். அதைக் கவிகளே அறிவார்கள். "தீரர்கள் அந்தப் பகவானுடைய சரீரத்தை அறிகிறார்கள்" ச்ருதி: ஆகையால் பகவானுடைய ஜன்மகர்மங்கள், ஜீவனுடையது போன்றவைகள் என்று நினைக்கக் கூடாது என்பது வேதவாக்யத்தாலேயே காட்டப் பட்டிருக்கிறது– வீர லீலைகள் ஜீவன் அனாதியாகிய கர்மத்தால் புண்ய பாபங்களைச் செய்து அதனால் ஸகல துக்கங்களை அடைவதுபோல் பகவானுடைய செய்கைகள் அவரைக்கட்டுப்படுத்துகிறதில்லை. மேலும் அவைகள் அவருக்கு லீலைகளாகும். அவைகள் வீண் போகாதவைகள் என்றதால் ஜீவனுடைய கர்மங்கள் அனேக விக்னமுள்ளவைகள் என்று காட்டப்பட்டன. இப்படி பலவகையிலும் ஜீவனைக்காட்டிலும் மேலானவரென்பது தாத்பர்யம். ஆறு– ஞானம், சக்தி, தேஹபலம், ஐச்வர்யம், வீர்யம் தேஜஸ் இவைகளுக்கு அதிபதி. அல்பபுத்தி– நான், என்னுடையது என்ற அபிமானமுள்ளவன். நடன– வேஷதாரியானவன், பலவகையான வேஷங்களைத் தரித்தாலும் எப்படி இவன் வேறாக ஆகிறதில்லையோ, அப்படி பகவான் மத்ஸ்யம், ஆமை முதலியவைகளின் உருவங்கொண்டாலும் அவருடைய உண்மையான ரூபம் மாறுகிறதில்லை மேலும் வேஷம் தரிப்பது முதலிய சேஷ்டைகள் அவனுக்கு விளையாட்டாயிருப்பது போல் பகவானுக்கும் அவைகள் லீலைகளேயாகும். அறிந்த– பகவந்த: என்ற பதத்திற்கு நீங்கள் என்று அர்த்தங்கொண்டு ஏ சௌனகர் முதலியவர்களே! நீங்கள் மேலானவர்கள். ப்ராயோபவேசம்– ஜீவித்திருப்பதில் ஆசையில்லாமல் ஆஹாரமில்லாமலிருக்கிறதாகிய வ்ரதம் வீர.–விஜய.

அத்யாயம்–4.

வியாஸர் கவலை யடைந்தது.

அதனைக் கேட்டுத் தீர்க்கஸத்ரம் செய்துகொண்டிருக்கும் மஹர்ஷிகளுக்குள் வயது சென்றவரும், கூட்டத்தில் முக்யரும், ரிக்வேதியுமாகிய சௌனகரென்பவர் ஸூதரைக் கொண்டாடிப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினார்.

2–13. "ஓ மிகுந்த பாக்யமுள்ள ஸூதரே! பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சுகஸ்வாமியால் சொல்லப்பட்ட புண்யகரமான ஸ்ரீமத் பாகவதகதையை எங்களுக்குச் சொல்லவேண்டும். கதை சொல்வதில் தாங்கள் மிக்க ஸாமர்த்யமுள்ளவர்கள். இந்தக்கதை எந்தயுகத்தில் எந்தவிடத்தில் நடந்தது எதற்காக யாரால் தூண்டப்பட்டு, இந்த கிரந்தத்தை வ்யாஸமஹாமுனிவர் செய்தார். மேலும் அவருடைய புத்ரரான சுகரென்பவர் மஹாயோகி; தாம், பிறர் என்ற பேதபுத்தியில்லாமல் எல்லாவற்றையும் ப்ரஹ்ம ஸ்வரூபமாகப் பார்ப்பவர். பரமாத்மாவினிடத்திலேயே புத்தியைச் செலுத்தியவர், மாயையாகிய தூக்கத்தைவிட்டு விழித்தவர். இவருடைய ஸ்வபாவம் வெளியில் தெரியாது. பார்வைக்கு மூடன்போல் தோன்றுகிறவர். இவர் குரு ஜாங்கலமென்னும் தேசத்தில் ஹஸ்தினாபுரத்தில் பயித்தியம் பிடித்தவன் போலவும், ஊமையன் போலவும், மூடன் போலவும் ஸஞ்சரிக்கும்போது, இவருடைய உண்மையைப் பட்டணத்து ஜனங்கள், எப்படித்தெரிந்து கொண்டார்கள்? இவர் எல்லா ஆசைகளையும் ஒழித்துத் துறவியாய்ப் போகும்போது பிதாவாகிய

வ்யாஸமஹர்ஷி புத்ரஸ்நேஹத்தால் அவர் பின்செல்ல வ்ழியில் ஜலக்ரீடை செய்துகொண்டிருந்த அப்ஸர ஸ்த்ரீகள், வஸ்த்ரமில்லாதவரும், யுவாவுமாகிய சுகரைக் கண்டு வெட்கப்படவில்லை. இவருக்குப்பின்னே வருகின்றவரும், மரவுரியை யுடுத்திக்கொண்டவரும் வயது சென்றவருமான வ்யாஸ மஹர்ஷியைப் பார்த்த வுடன் வெட்கமடைந்து தம்தம் ஆடைகளையுடுத்திக் கொண்டார்கள். இந்த ஆச்சர்யத்தைக் கண்ணுற்ற மஹர்ஷியானவர், அவர்களை இது விஷயமாகக் கேட்க அவர்கள் மஹர்ஷியை நோக்கி "புருஷன், ஸ்திரீ, என்ற பேதபுத்தி உமக்கிருக்கிறது. சுத்த திருஷ்டியுள்ள உம்முடைய புத்ரருக்கு அம்மாதிரியான எண்ணமில்லை" என்று பிரத்யுத்தரஞ் சொன்னார்கள். அப்போர்ப் பட்ட சுகருக்கும், பாண்டுவின் வம்சத்தில் பிறந்த பரீக்ஷித்து மஹாராஜனுக்கும் எப்படி ஸம்வாதம் (பேச்சு) நேர்ந்தது? அதனாலல்லவா இந்த பாகவத கதை வெளிப்பட்டது. இவர் கிருஹஸ்தர்களுடைய வீட்டிற்குப் பிக்ஷைக்காகச் சென்றால் அந்த கிருஹத்தை சுத்தப்படுத்துவதற்காக ஸ்வல்பகாலம் (மாடு கறப்பதற்கு எவ்வளவுகாலம் பிடிக்குமோ அவ்வள காலம்) காத்திருப்பார். இவர் ஒரே இடத்திலிருந்து பாகவத கதையைச் சொன்னது மிக ஆச்சர்யம். ஏ! ஸூதரே! ஜனங்கள் அபிமன்யுவின் புத்ரராகிய பரீக்ஷித்து மஹா ராஜனைப் பாகவதர் (பகவானுடைய பக்தர்கள்)களுக் குட் சிறந்தவராகச் சொல்லுகிறார்கள். அவருடைய பிறப்பு, மிகவும் அத்புதமானது. ஆகையால் அவருடைய சரிதத்தைச் சொல்லவேண்டும். பாண்டவர்களுக்குக் கீர்த்தியை விருத்தி செய்தவரான அந்தச்சக்ரவர்த்தி தமது அளவற்ற ராஜ்யத்தையும், லக்ஷ்யஞ்செய்யாமல், என்ன காரணத்தால் கங்கையின் கரையில் ப்ராயோப

வேசஞ் செய்தார். ஓ! ஸூதரே! சத்ருக்கள் உத்தம வஸ்துக்களை காணிக்கையாக எடுத்துவந்து தங்களுடைய க்ஷேமத்திற்காக அவருடைய பாதபீடத்தை (கால் வைத்துக்கொள்ளும் ஆஸனம்) நமஸ்கரிக்கிறார்களோ அவ்வளவு பராக்ரமமுள்ள மஹாராஜன் யௌவனமுள்ளவராயினும், ஒழிக்கமுடியாத பணத்தின் ஆசையையும், ப்ராணனிடத்திலுள்ள அபிமானத்தையும், விடவேண்டுமென்று எப்படி விரும்பினார்? உத்தமச்லோகராகிய பகவானிடத்திலேயே ,மனத்தைச் செலுத்தியவர்கள், லோகத்திற்கு க்ஷேமம், ஐச்வர்யம் இவைகளை உண்டுபண்ணுவதற்காக ஜீவிக்கிறார்களே தவிர சொந்தமான கார்யத்திற்காகவல்ல. ஆகையால் இந்த அரசன், சரீரத்தைவிட விரும்பிய காரணம் யாது? (பிறருக்கு உபயோகமான சரீரத்தை தான் கெடுப்பது ந்யாயமல்லவென்பது கருத்து) வேதத்தின் அர்த்தம் தவிர இதிஹாஸ புராணங்களின் அர்த்தங்களைச் சொல்வதில் மிக்க ஸாமர்த்யமுள்ள வரென்று உங்களை நினைக்கிறேன். ஆகையால் என்னால் கேட்கப்பட்ட எல்லா விஷயங்களையும் சொல்லவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

14–18 இவற்றைக்கேட்ட ஸூதர் சொல்லத் தொடங்கினார் மூன்றாவது த்வாபரயுகத்தின் கடைசியில் வஸுவின் வீர்யத்திற்குண்டான ஸத்யவதியினிடம், பராசரருக்கு புத்ரனாக அவதரித்த ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அம்சம் இந்த வ்யாஸ மஹாமுனியே. இவர் மஹாயோகி. நடந்தது, நடக்கப்போகிறது இவைகளை அறிந்தவர். அவர் ஒருக்கால் ஸரஸ்வதீ நதிக்கரையில் ஆசமனஞ் செய்து சுத்தராய் ஸூர்யோதய காலத்தில், தாம் தனியாய் உட்கார்ந்து "அறியக்கூடாத

வேகமுள்ள காலமஹிமையால் யுகதர்மங்கள் கலந்து போய்விட்டன. ஜந்து பூதங்களுக்கும் சக்தி குறைந்து விட்டது, ஜனங்களுக்கு ச்ரத்தை, தேஹபலம், ஸத்வகுணம், ஆயுஸ் இவைகளும் குறைந்துபோயின. புத்தியோ கெட்டமார்க்கத்தில் செல்லுகிறது" என்று ஞானக்கண்ணால் பார்த்து எல்லா ஜாதியார்களுக்கும் எல்லா ஆச்ரமிகளுக்கும் என்னசெய்தால் அனுகூலம் உண்டாகுமென்று எல்லோருக்குமுபகாரமான விஷயத்தைச் செய்ய விரும்பி யோசித்தார்.

19–23. வேதத்தில் சொல்லப்பட்டதும், நான்கு ரித்விக்குகளால் முடிக்கக்கூடியதும், சுத்தமானதுமான யாகமே ஜனங்களுக்கு அனுகூலத்தைச் செய்யக்கூடிய தென்று நிச்சயித்து அந்தக் கர்மம் எப்பொழுதும் தொடர்சியாய் நடந்தேறி வருவதற்காக ஒன்றாயிருந்த வேதராசியை நான்காகப் பிரித்தார். மேலும் அந்த நான்கு பாகங்களும் ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வம், என்று பெயர்களுண்டாயின. (பாரதம் முதலிய) இதிகாசங்களும்,(பாகவதம் முதலிய) புராணங்களும், ஐந்தாவது வேதமென்று சொல்லப்படுகின்றன. மேற் காட்டிய 'ரிக்,யஜுஸ், ஸாமம், அதர்வ'என்ற நான்கு வேத சாகைகள் பைலர், வைசம்பாயனர், கவியாகிய ஜைமினி, ஸுமந்து என்கிற மஹர்ஷிகளிடம் முறையே ஒப்புவிக்கப்பட்டன. என்னுடைய பிதாவாகிய ரோம ஹர்ஷணரிடம் இதிஹாஸங்களும், புராணங்களும், கொடுக்கப்பட்டன. மேற்சொல்லிய மஹர்ஷிகளே தங்கள் தங்களுடைய வேதசாகைகளை பல வகையாகப் பிரித்தார்கள். அவைகள் அல்ப புத்தியுள்ள இக்காலத்து ஜனங்களால் அத்யயனஞ் செய்யப்படுகின்றன. அவர்கள் தங்கள் தங்கள் சிஷ்யர்களுக்கும் அத்யயனஞ்

செய்வித்து, அவைகளை உலகத்திற் பரவச் செய்தார்கள். யார் யார் எந்த எந்த சாகைகளை அத்யயனஞ் செய்தார் களோ, அவர்வர்களுக்கு அந்த அந்த சாகைகள் சொந்தமாயின.

24–32. தீனர்களிடத்தில் ப்ரீதியுள்ள பகவானாகிய வ்யாஸ மஹர்ஷியால் இப்படி வேதங்கள் பிரிக்கப் பட்டன. ப்ராஹ்மணர், க்ஷத்ரியர், வைச்யர் ஆகிய இவர்களுக்குள், அதமர்களாகிய த்விஜபந்துக்களுக்கும், ஸ்திரீகளுக்கும், சூத்ரர்களுக்கும், வேதத்தைக் கேட்க அதிகாரமில்லாததனால், அவர்கள் இதிஹாஸத்தால் க்ஷேமத்தை யடையட்டுமென்னுங் கருணையால், வ்யாஸமஹர்ஷி மஹா பாரதம் என்ற க்ரந்தத்தைச் செய்தார். ஓ! ப்ராஹ்மணர்களே, இப்படி எப்பொழுதும் எல்லாப் பிராணிகளுக்கும் க்ஷேமத்தை செய்வதிலேயே நோக்கமுள்ள அந்த மஹர்ஷியானவர் எல்லாவற்றையு மறிந்தவராயிருந்தும் அவருடைய மனத்திற்கு சாந்தி உண்டாகவில்லை; அதனால் அவர் ஸந்தோஷமில்லா மல் ஸரஸ்வதி நதியின் சுத்தமான கரையில் தாம் ஒருவராயிருந்து யோஜித்து பின்வருமாறு சொல்லலா னார். "நான் வ்ரதமுள்ளவனாய் வேதங்களை அத்யயனஞ் செய்தேன். குருக்களையும், அக்னியையும் பூஜித்தேன். ஆசார்யனுடைய கட்டளையின்படி கபடமற்று நடந்தேன். பாரதமென்ற வ்யாஜத்தால், வேதத்தின் அர்த்தத்தை எல்லோருக்கும் தெரியும்படி வெளியிட்டேன். அதில் ஸ்திரீகளாலும், சூத்ரர்களாலும், அறியக்கூடியவைகளான தர்மங்கள் காட்டப்பட்டன. அப்படியிருந்தும் என்னுடைய ஆத்மா(ஜீவன்) இயற்கையில் பூர்ணனானாலும், ப்ரஹ்மவர்சஸ் உள்ளவர்களுக்குட் சிறந்தவனானாலும், ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை யடையாதவன் போலத் தோற்றுகிறான்.

இதற்கென்ன காரணம்? இது ஆச்சர்யமாயிருக்கிறது ஆனால் பாகவத தர்மங்கள் விஸ்தாரமாக வெளியிடப் படவில்லை. அவைகளில் பரம ஹம்ஸர்களுக்கு மிகவும் ப்ரியமிருக்குமே. அவைகளே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிற்கு ப்ரியமானவைகள், அதனால்தான் நம்முடைய மனத்திற்கு ஆனந்தமுண்டாகவில்லையோ" என்று யோஜித்து ஆத்மாவை சூன்யனாக நினைத்து வருத்தமடைந்தார்.

33. இந்த ஸமயத்தில் ஸரஸ்வதி நதிக்கரையில் இருக்கும் அந்த வ்யாஸமஹர்ஷியின் ஆச்ரமத்திற்கு நாரதர் வந்தார். அப்பொழுது அந்த மஹர்ஷியானவர் தேவர்களால் பூஜிக்கப்பட்ட நாரதரைக் கண்டு எதிர் கொண்டழைத்து சாஸ்த்ரமுறை தவறாமல் அவரைப் பூஜித்தார்.

நோட்டு.

25–3. தீர்க்க– அநேக வர்ஷங்களால் முடிக்கக்கூடிய யாகம்– சந்த் 14– பேத– மூலத்தில் நிர்விகல்பக என்றிருப்பதால் நிச்சய ஞானமுள்ளவர். ஸமதிருக்– மித்ரன். சத்ரு,. மற்றவர் ஆகிய இவர்களிடத்தில் ஸமபுத்தியுள்ளவர். ஏகாந்தமதி– ஜனஸஞ்சாரமற்ற விடத்தில் வஸிப்பதில் ப்ரியமுள்ளவர். மூட–– எல்லாவற்றையும் அறிந்தவராயிருந்தும் தன்னுடைய ஸாமர்த்யத்தை வெளியிடாதவர்– சந்த். 16–விழித்த–– "ஸகல ப்ராணிகளுக்கும் எது ராத்ரியோ, அதில் யோகியானவன் விழித்துக் கொண்டிருக்கிறான்.பகவத் 26–33. மூன்றாவது– மஹாயுகத்தில். 26–28. வேதத்தின்– இவர் ஸூதஜாதி யாகையால் வேதத்தில் இவருக்கு அதிகாரமில்லையென்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–5.

வ்யாஸருக்கு நாரதர் உபதேசித்தது.

பின்பு மிகுந்த கீர்த்தியுள்ளவரும், எப்பொழுதும் வீணையைத் தரித்தவரும், தேவர்ஷியுமான நாரதர் ஸமீபத்தில் ஸுகமாய் உட்கார்ந்திருக்கும் ப்ரஹ்மர்ஷி யாகிய, வ்யாஸமஹர்ஷியை நோக்கி ப்ரஸன்னமுக முள்ளவராய்ப் பின்வருமாறு சொல்லத்துடங்கினார்; "ஓ! மஹா பாக்யமுள்ள பராசர புத்ரரே! உம்முடைய சரீராபிமானியான ஆத்மாவானது (ஜீவன்) அந்தச் சரீரத்தாலும், மனத்திற்கு அபிமானியான ஆத்மா வானது, அந்த மனத்தாலும் ஸந்தோஷப்படுகிறதா? அறியவேண்டிய ஸகல தர்மங்களையும் பூர்ணமாகக் காட்டுவதும், ஆச்சர்யத்தை யுண்டுபண்ணுகிறதுமான மஹா பாரதத்தை விஸ்தாரமாகச் செய்தவர் நீரன்றோ? ஆகையால் விஷயம் யாவும் உமக்குத் தெரிந்திருக்க லாமே. மேலும் நீர் நித்யவஸ்துவாகிய, பரமாத்ம ஸ்வரூபத்தை நன்றாக விசாரித்து அறிந்தவரல்லவா? அப்படியிருந்தும், ஒன்றையும் அறியாதவர் போல ஏன் துக்கிக்கிறீர்?" என்று கேட்டார்.

4–11. இதனைக் கேட்ட வ்யாஸ மஹா முனியானவர், பின்வருமாறு சொல்லத் தொடங்கினார். "தாங்கள் சொன்னவைகள் யாவும் என்னிடம இருக்கின்றன. ஆனாலும் என்மனத்திற்கு ஸந்தோஷம் உண்டாகவில்லை. அதன் காரண மின்னதென்றும் விளங்கவில்லை பரம் (கார்யம்) அபரம் (காரணம்) இவைகளுக்கு அதிபதியும், ஸங்கல்பமாத்ரத்தால் முக்குணங்களைக் கொண்டு ஜகத்தை ஸிருஷ்டிப்பவரும்

அவைகளைக் காப்பாற்றுபவரும் பின்னும் அவைகளை நாசஞ்செய்பவரும், அவைகளில் ஸம்பந்தப் படாதவருமான புராண புருஷனை, நீர் உபாஸித்தவர், ரஹஸ்யங்களான விஷயங்கள் யாவும் தங்களுக்குத் தெரியும். மேலும் நீர் ஸூர்யன்போல மூவுலகத்திலும் ஸஞ்சரிப்பதால் எல்லாவற்றையும் அறிந்தவர். ஸகல ப்ராணிகளினுள்ளில் ஸஞ்சரிக்கிற ப்ராணவாயுபோல எல்லாருடைய புத்தியின் ப்ரவர்த்தியையும் அறிந்தவர். ஆனதுபற்றி ப்ரஹ்ம புத்ரராகிய உம்மைக் கேட்கிறேன் வேதங்களை முறைப்படி அத்யயனஞ்செய்து, அதன் உண்மையான அர்த்தத்தைபறிந்து, வ்ரதங்களை யனுஷ்டித்து, யோகத்தால் ப்ரஹ்மஸ்வரூபத்தையும் அறிந்தேன். அப்படியிருந்தும் எந்தப் பாகம் எனக்கு மிகவும் குறைவாயிருக்கிறதோ அந்த பாகத்தை யுபதேசிக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்தார். அதனைக்கேட்ட நாரதர், வ்யாஸமஹாமுனியை நோக்கி, "இயற்கையில் பரிசுத்தமான பகவானுடைய யசஸ்ஸை, (குணங்களை) வர்ணிப்பதால் பரமாத்மா ஸந்தோஷிப்பார். மற்ற ஞானத்தால் பகவான் திருப்தி அடையமாட்டார்; ஆகையால் தர்மாதி ஞானத்தைக் குறைந்ததாக நினைக்கிறேன். உம்மால் அந்த பகவானுடைய குணங்கள் பெரும்பாலும் முக்யமாக வர்ணிக்கப்படவில்லை. மஹாபாரதம் முதலியவைகளில் ஈச்வரனுடைய குணங்கள் வர்ணிக்க பட்டிருந்தாலும் தர்மங்களையும் அதன் ஸாதனங்களையும், முக்யமாக, மஹர்ஷிகள் ஸ்மிருதிகளில் சொல்லியிருப்பதுபோல, பரமாத்மாவின் மஹிமையையே ப்ரதானமாக நீர் வர்ணிக்கவில்லை. எச்சிற்குழியில் கிடக்கும் சித்ரான்னம் முதலியவைகளைக் காக்கைகள் தின்று திருப்தி அடையுமேயொழிய, மானஸ ஸரஸில் ஸஞ்சரிக்கும்

ஹம்ஸங்கள். அவைகளில் ஆசைப்படுகிறதில்லை. அப்படிப்போல லோகத்தைப் பரிசுத்த படுத்தும் பகவானுடைய மஹிமையை வர்ணிக்காத க்ரந்தங்கள், அற்புதமான பதச்சேர்க்கையுள்ளவைகளானாலும், அவற்றால் காமிகள் ஸந்தோஷப்படுவார்களே யொழிய ப்ரஹ்மிஷ்டர்களான பரமஹம்ஸர்கள் திருப்தியடைகிற தில்லை. ஒவ்வொரு ச்லோகத்திலும் அபசப்தங்கள் இருந்தாலும், நாசமற்றவராகிய பகவானுடைய திவ்ய நாமங்களும், மஹிமையும் வர்ணிக்கபட்டிருந்தால் அந்த க்ரந்தம் ஜனங்களுடைய பாபங்களை போக்கும். அதைச் சொல்பவர்களிருந்தால் பெரியோர்கள் கேட்பார்கள். கேட்பவர்களிருந்தாலும் அவர்கள் சொல்லுவார்கள். இரு வகையாருமில்லாத போது தாமே கானஞ்செய்வார்கள்.

12–22. உபாதிகளின் ஸம்பந்ததத்தை நிவர்த்திக்கும், ப்ரஹ்மஞானமும், பகவத்பக்தியில்லாதவனுக்குப் பலனை (அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தைக்) கொடுக்கிறதில்லை. மேலும் கர்மங்கள் எப்பொழுதும் துக்கரூபங்கங்களே. ஆதலால் பலனையுத்தேசித்துச் செய்யப்பட்டனைகள் ஆனாலும், பலனை யுத்தேசியாமல் செய்யப்பட்டவை களானாலும், பகவானிடம் அர்ப்பிக்கபடாதவரையில் அவைகள் ப்ரகாசிக்கிறதில்லை. ஓ! மஹாபாக்யமுள்ள வ்யாஸமஹர்ஷியே! நீர் உண்மையான ஞானமுள்ளவர்; சுத்தமான கீர்த்தியுள்ளவர்; ஸத்யத்திலேயே ஆசை உள்ளவர்; வ்ரதங்களை யனுஷ்டித்தவர்; ஆகையால் ஸகலபந்தங்களும் நிவர்த்தியாக வேண்டியதற்காகப் பகவானுடைய பலவகையான லீலாவிபூதிகளை ஒரே மனதாகச் சிந்தியும். பகவானுடைய சரித்தில் ஆசையில்லாமல், மற்ற சரிதங்களைச் சொல்ல

விரும்பியவர்களுடைய புத்தியானது தேவதா ரூபங்களையும், அநேக நாமங்களையும், சிந்தித்து நிலைபெறாமல் பெருங்காற்றிலகப்பட்ட கப்பல் போல, ஒரு நிலையாய் இருக்கிறதில்லை. ஜனங்கள் இயற்கையாகவே காம்ய கர்மங்களில் ஆசையுள்ளவர்கள். அந்தக்கர்மங்கள் ஞானிகளால் நிந்திக்கக்கூடியவைகளானாலும் அவைகளை தர்மங்களென்றே சொல்லியிருக்கிறீர். ஆகையால் அவைகளை ப்ராகிருத ஜனங்களும் அப்படியே நினைத்திருக்கிறார்கள். "கர்மங்களாலும், ப்ரஜையாலும், தனத்தாலும், மோக்ஷத்தையடைய முடியாது" என்ற ச்ருதியின்படி காம்ய கர்மங்கள் சிறந்தவைகளல்ல என்று ஞானிகளுடைய வார்த்தையை அக்ஞர்கள் நம்புவதற்கு ந்யாயமில்லாமல் இருக்கிறது. இப்படி நீர் செய்தது, ஒரு பெரிய சாஸ்த்ர விருத்தமான கார்யம். ஆனது பற்றி, காலத்தாலும், தேசத்தாலும், அளவிடக் கூடாத ப்ரபுவின் ஸகலஸ்வரூபத்தை நிவிர்த்தி மார்க்கததைக்கொண்டு வித்வான்தான் தெரிந்து கொள்வான். அது அக்ஞனால் அறிய முடியாது. ஆகையால தேஹம் முதலியவைகளில் அபிமானம் உள்ளவர்களும், ஸத்வம் முதலிய குணங்களால் விஷயத்தில் செல்லுகிறவர்களுமான ப்ராகிருதஜனங் களுக்காகப் பகவானுடைய லீலைகளை வர்ணியும். பின்னும் உலகத்தில் தன் ஜாதிக்கும், ஆச்ரமத்திற்கும் உரியதான தர்மத்தைவிட்டு பகவானுடைய தாமரை மலர் போன்ற பாதங்களை ஸேவித்துக் கொண்டு இருந்தவன் பக்தியின் பயனை அடைவதற்கு முன்னமே பலன் பாதியில் மரணம் அடைந்தாலும், பக்தியின் தொடர்ச்சியற்றுப் போனாலும் அவனுக்கு அந்த

வாஸனையிருக்குமாகையால் ஒரு போதும் அந்த க்ஷேமக்குறைவு நேரிடாது. மேலும் ஈச்வரனிடம் பக்தி செய்யாமல் தன்னுடைய தர்மத்தை நன்றாய் அனுஷ்டித்தாலும் அதனால் என்ன கிடைக்கப்போகிறது? (ஒன்றும் இல்லையென்பது தாத்பர்யம்) ப்ரஹ்மதேவர் முதல் ஸ்தம்பமென்ற புழு வரையில் ஸம்ஸாரத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் எல்லா ப்ராணிகளாலும், எந்தவஸ்து அடையப்படவில்லையோ அதையடைய முயற்சிக்கவேண்டும். எப்படி நாம் விரும்பாமல் இருக்குங்காலத்திலும், துக்கம் நேரிடுகிறதோ அப்படியே விஷயஸுகமும் எந்தவிடத்திலும் அந்த அந்தக்காலத்தில் கர்மத்தின் மஹிமையைக்கொண்டு ஜனங்களால் அடையப்படுகிறது. கர்மத்தை மாத்ர மனுஷ்டித்தவன் ஸம்ஸாரதுக் கத்தையடைவது போல, ஒருவன் பகவத் பக்தி செய்து அந்த ஜன்மாவில் அது பூர்த்தியடையாமல் தாழ்மையான வேறு ஜன்மமடைந்திருந்தாலும் அதில் அவனுக்கு துக்கம் நேரிடுகிறதில்லை பகவானுடைய பாதங்களில் பக்தி செய்தவன் மறுஜன்மத்திலும் அவைகளை மறக்கமாட்டான்; அவைகளுக்கு வசப்படுவான். ஈச்வரனை விட்டு ஜீவன் எப்படி வேறில்லையோ அப்படி ப்ரபஞ்சம் பகவானைவிட வேறில்லை அவரிடமிருந்தே இந்த ஜகத் உண்டானது அவராலேயே காப்பாற்றப்படுகிறது. அந்த பரமாத்மாவை நீரே தெரிந்து கொள்வீர்; ஆனாலும் ஸ்வல்ப பாகத்தைத் தெரிவித்தேன்; வீணாகாத ஞானமுள்ள நீர் பிறப்பில்லாத பரம புருஷனுடைய அம்சமேயாம். மேலும் நீர் இயற்கையில் ஜனனமரணமில் லாதவரானாலும், உலகத்தின் க்ஷேமத்திற்காக சரீரமெடுத்துக் கொண்டீர். ஆகையால்

இவ்விஷயத்தைத் தெரிந்துகொள்ளும். அந்தமஹா மஹிமை பொருந்திய பரம புருஷனுடைய சரிதத்தை வர்ணியும். சாஸ்த்ரங்களைக் கேட்பது (ச்ரவணம்) யாகஞ் செய்தல், குளம், கிணறு, வெட்டுவித்தல், ப்ரியமான வார்த்தை சொல்லுதல், மஹாதானஞ் செய்தல் ஆகிய இவைகளின் பலன் என்னவென்றால் உத்தமச்லோகராகிய பகவானுடைய குணங்களை வர்ணிப்பதேயாம். இதுவே சாச்வதமாகிய பலன். இதற்கு உதாரணமாக என்னுடைய முன்ஜன்ம விருத்தாந்தத்தைச சொல்லுகிறேன்.

23–38. நான் முன்ஜன்மத்தில் ப்ராஹ்மணர் களுடைய வீடுகளில் வேலைசெய்து கொண்டிருந்த சூத்ரஸ்த்ரீயின் புத்ரனாகவிருந்தேன். அப்பொழுது மழைகாலத்தில் ஒரே இடத்தில் வஸிப்பதாகிய சாதுர் மாஸ்யவ்ரதத்தை யனுஷ்டித்த சில ஸன்யாஸிகளுக்கு பால்யத்திலேயே நான் சுச்ரூஷை செய்துவந்தேன். பால்யமுள்ளவனானாலும், விளையாட்டு ஸாமான்களை வைத்துக்கொள்ளாமலும், பால் சாபல்யமில்லாமலும், இந்த்ரியங்களை ஜயித்து அவர்கள் ஏவினதைச் செய்வதிலேயே நோக்கமுள்ளவனாயிருந்தேன். அப்பொழுது ஸமபுத்தியுள்ள அவர்களுக்கு ஸ்வல்ப மாய்ப்பேசும் என்னிடத்தில் கருணையுண்டாயிற்று. ஒருநாள் அவர்கள் புஜித்த பிறகு, பாத்ரத்தில் எஞ்சி இருந்த, அன்னத்தை அவர்களுடைய அனுமதியின் பேரில் நான் புஜித்தேன். அதனால் ஸகல பாபங்களும் நிவர்த்தியாகிச் சுத்தனானேன். இப்படிச் சித்தம் சுத்தமான போது, அவர்கள் அனுஷ்டிக்கும் பகவத் பக்தியாகிய தர்மத்திலேயே எனக்கு ப்ரியம் நேர்ந்தது அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய லீலைகளைக்

கானஞ் செய்துகொண்டிருந்தார்கள். இனியவைகளான அவைகளை நான் எப்பொழுதும் அந்தரங்க ப்ரியத்துடன் கேட்டேன். அதனால் எனக்கு பக்தி அதிகரித்தது. அதிலேயே விசேஷ நோக்கமுள்ள எனக்குப் பகவானிடம் ஸ்திரமான பக்தியுண்டானதால், அப்பொழுதே பரப்ரஹ்மமானது ப்ரபஞ்ச ஸம்பந்த மற்றதென்றும், அதுவே நானென்றும், என்னிடத்தில் ஸ்தூல ஸூக்ஷ்மசரீரங்கள் அவித்யையால் (பொய்யாக ஆரோ பிக்கப்பட்டனவேயொழிய, உண்மையிலில்லை என்றும் நான் தெரிந்து கொண்டேன். இப்படி மழைகாலம், சரத்காலம் ஆகிய இரண்டு ருதுக்களிலும் மஹாத்மாக்களாகிய, அந்த ஸன்யாஸிகளால் சொல்லப்பட்ட மஹாவிஷ்ணுவின் மஹிமையை மூன்று காலங்களிலும் ச்ரவணஞ்செய்தேன். அதனால் சிறந்த பக்தியுண்டானது மன்றி, ரஜோகுணமும், தமோ குணமும், என்னைவிட்டு விலகின. அவர்களுக்குச் சுச்ரூஷை செய்வதிலேயே ஆசையுள்ளவனும், வணக்கமுள்ளவனும், பாப மில்லாதவனும், ச்ரத்தை யுள்ளவனும், இந்த்ரியங்கள் ஜயித்தவனும், பால்ய வயதுள்ளவனும், எப்பொழுதும் கூடவே ஸஞ்சரிப்பவனுமாகிய எனக்கு அந்த முனிவர்கள் தீனர்களிடத்தில் ப்ரீதியுள்ளவர்களாகையால் விச்வரூபயாத்ரைக்கு முன்னிலையில், ப்ரஹ்ம வித்தையை யுபதேசித்தார்கள். அது மிகவும் ரஹஸ்ய மானது. ஈச்வரனால் நேரில் சொல்லப்பட்டது. அதனால் நான் ஸகல ப்ரபஞ்சங்களையும் ஸிருஷ்டிக்கும் வாஸு தேவராகிய பகவானுடைய மாயாமஹிமையைத் தெரிந்துகொண்டதுமன்றி அவருடைய பதத்தை அடையும் ஸாதனத்தையும் தெரிந்து கொண்டேன். ஓ! நன்றாய் வ்ரதங்களையனுஷ்டித்த ப்ராஹ்மணோத்தம!

வ்யாதியையுண்டுபண்ணும் த்ரவ்யங்கள், வேறு பதார்த்தத்தின் சேர்க்கையால் ரோகத்தை நிவர்த்திப்பது போல, கர்மமானது ஸம்ஸாரமாகிய வ்யாதியைக் கொடுக்கக்கூடியதானாலும், பரமாத்மாவிடம் ஸமர்ப்பிக்கப் பட்டால், அது முவ்வகையான தாபங் களையும் போக்குகிறது என்ற தர்மரஹஸ்யத்தையும், அவர்கள் எனக்கு உபதேசித்தார்கள். கர்மயோகங்கள் எல்லாம், ஸம்ஸாரத்தைக் கொடுக்கின்றவைகள் ஆனாலும், மேற்காட்டிய ஈச்வரனுடைய ஸந்தோஷத்திற்காகச் செய்கிறோம் என்ற எண்ணத்துடன் செய்து அவரிடத்தில் ஸமர்ப்பிக்கப்படுமானால் அவை பந்தகங்களாகிறதில்லை. பகவானுடைய ஸந்தோஷ மாகிய பலனை விரும்பிச் செய்யப்படும் கர்மமானது, பக்தியோகத்துடன் கூடிய ஞானத்தை உண்டு பண்ணுகிறது. "எதனைச் செய்கிறாயோ, எதனைப் புஜிக்கிறாயோ, எதனை ஹோமஞ்செய்கிறாயோ, எதனைக்கொடுக்கிறாயோ அதனை என்னிடம் கொடுத்துவிடு" என்ற பகவான் உடைய ஆக்ஞையின்படி பெரியோர்கள் கர்மங்களைச் செய்கிறார்கள். கிருஷ்ணனுடைய கல்யாண குணங்களையும், திவ்ய நாமங்களையும், வாக்கினால் உச்சரிக்கிறார்கள் அவரை த்யானஞ்செய்கிறார்கள். பக்தியோகத்தால் நல்ல ஞானமுள்ள புருஷனானவன்" வஸுதேவருடைய புத்ரராயும், ப்ரத்யும்னராயும், அனிருத்தராயும், ஸங்கர்ஷண மூர்த்தியாயுமிருக்கும் பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறோம்" என்று த்யானஞ்செய்து, யக்ஞபுருஷனாகிய பகவானை உபாஸிக்கிறான். அந்த ஈச்வரனுக்கு மேற்காட்டிய மந்த்ரத்தால் குறிக்கப்பட்ட சரீரத்தை விட வேறு சரீரமில்லை.

39–40 பகவானுடைய கட்டளைப்படி நடந்த

எனக்கு, அந்தப் பகவான், தம்முடைய ஞானம் முதலிய வைகளுக்குச் சமமான ஞானத்தையும் ஐச்வர்யத்தையும், தம்மிடத்தில் பக்தியையும் கொடுத்தார். அனேக சாஸ்த்ரங்களைக் குருமுகமாக கேட்ட வ்யாஸரே! ப்ரபுவாகிய பகவானுடைய மஹிமையை நீரும் வர்ணியும். அதனால் வித்வான் களால் அறியவேண்டிய விஷயங்கள் யாவும் உம்மால் அறியப்படும். துக்கத் தினால் வருத்தமடைந்தவர்களுக்கு அதனை நிவர்த்தி செய்யும் உபாயம் இதுவேயொழிய வேறில்லை.

நோட்டு.

28–17. ஆத்மா–சரீரவ்யாதி, மனோவ்யாதி முதலிய துக்கங்களில்லாமல், பகவத் பஜனத்தால் ஸந்தோஷ மடைந்திருக்கிறானா. சந்த். வீர. 21– பாரதம்தேசத்தாலும், காலத்தாலும், அளவிடக்கூடாத பரப்ரஹ்மத்தை விசாரித்தும் அர்த்தத்தாலும், சப்தத்தாலும், மஹத்தான சப்த ப்ரஹ்மமாகிய வேதத்தையும் நன்றாய் விசாரித்திருக்கிறீர். ஆனதால் தாங்கள் பூமியில் அவதரித்ததின் கார்யம் முடிந்து விட்டது. அப்படியி ருந்தும், அவதரித்த கார்யத்தைச் செய்யாதவர்போல் கவலைப்படுகிறீர்.– பரம் –ப்ரஹ்மா, ருத்ரன் இவர்கள். 30–அபரம்– இந்த்ரன் முதலியவர்கள். ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் மேலானவர். வீர. யோகத் தால்– "யாகம், நல்ல ஆசாரம் இந்த்ரிய நிக்ரஹம், பிறருக்கு ஹிம்ஸை செய்யாமலிருப்பது தானம் வேதாத்யயனம் முதலிய கர்மங்களுக்குள் யோகத்தால் ஆத்மாவின் உண்மையை அறிவதே மேலானது"– யாக்ஞ்யவல்க்யஸ்மிருதி அத்புதமான– யமகம் முதலிய சப்தாலங்காரங்களும்,

உத்ப்ரேக்ஷை முதலிய அர்த்தாலங்காரங்களும் பொருந்தியிருந்தாலும். ஸ்ரீத. கானம்– விசேஷ ஆனந்தத்தை உண்டுபண்ணுவதால் கானஞ்செய்கிறார் கள். ஸ்தோத்ரஞ்செய்து பாபங்களைப் போக்கடித்துக் கொள்ளுகிறார்கள். ஸ்ரீத. "பரம ஹம்ஸர்களுக்கு அவை ப்ரியமானவைகள். அவைகளே பகவானுக்கு ப்ரியமானவைகள்." என்றபடி பாகவத தர்மங்களை வர்ணிக்காமலிருக்கும் க்ரந்தங்கள் பரமஹம்ஸர்களால் ஆதரிக்கக்கூடியவையல்லவென்று காட்டப்பட்டது– வீர. நிலைபெறாமல் "ஓ அர்ஜுன! பரமாத்மாவைவிட வேறு ஒன்றுமில்லை என்னும் புத்தியானது ஒருவகையேயாம். அந்த நிச்சயமில்லாதவர்கள் இந்த்ரன, அக்னி முதலிய தேவதைகளைச் சிந்தித்து புத்தியைப் பலவகையாகச் செலுத்துகிறார்கள்." பகவத் கீதை– என்னபலன்? பகவத் பக்தியின்றி தர்மத்தை மாத்ரம் அனுஷ்டிப்பவனிடம் பகவான் ப்ரீதி செய்கிறதில்லை. அதனால் பாபம் நீங்குகிறது மில்லை. அதனால் ஆரம்பித்த கார்யம் பூர்த்தியாகிறது மில்லை ஸ்ரீத. சுற்றி– ஸ்வர்க்கம் முதலிய மேலுலகங் களிலும், பூமி முதலிய கீழ் உலகங்களிலும் ஸஞ்சரிக்கும் ஜனங்கள், அவர்களால் முந்திச் செய்யப்பட்ட பாபபுண்யங்களால் துக்கத்தையும் ஸுகத்தையும் அடைவதுபோல புண்ய பாபங்களைக் கொண்டு மோக்ஷத்தையடைய முடியாதாகையால், அதனை அடைவதற்கு முயற்ச்சிக்கவேண்டும். சந்த்– ப்ரபஞ்சம்– அசையும் பொருள் அசையாப்பொருள் இவைகளடங்கியது. "இந்த ப்ரபஞ்ச முழுவதும் பரப்ரஹ்மம்."–ச்ருதி. ஸ்வல்ப– "நல்ல ஆசார்யர்களை யடைந்த புருஷன் பரமாத்மாவைத் தெரிந்துகொள்ளு கிறான்" ச்ருதி– வ்யாஸரென்ற திவ்யநாமத்துடன் பகவான்

ப்ரகாசிப்பதுபோல ப்ரபஞ்சமென்ற பெயருடனும் அவரே விளங்குகிறார்– சந்த். நான்–பெரியோர் களுடைய சேர்க்கையால் க்ஷேமம் கிடைக்கு மென்பது காட்டப்பட்டது. சாதுர்மாஸ்யம்–ஒவ்வொரு வர்ஷத்தி லும் நான்கு மாஸங்கள் ஸஞ்சாரத்தை நிறுத்தி ஒரே இடத்தில் வஸிக்கவேண்டும் என்று ச்ருதியில் சொல்லியிருக்கிறபடி ஸன்யாசிகள், "வர்ஷக் காலமானது ப்ராணிகள் உண்டாகும் ஸமயமானதால் பெரும்பாலும் மார்க்கங்கள் ஜந்துக்களால் நிறைந்து இருக்கும் ஆகையால் அவர்களுக்கு ஹிம்ஸை நேரிடாமலிருப்பதற்காக நான்கு பக்ஷங்கள் இந்தக் கிராமத்திலேயே வஸிப்பதாக உத்தேத்திருக்கிறோம். உங்களுடைய ஸௌகர்யத்தைத் தெரிவிக்கவேண்டும்." அவர்கள் அப்படிக் கேட்ட ஸன்யாஸியை நோக்கி, தாங்கள் இவ்விடத்திலேயே ஸுகமாய் வஸியுங்கள், எங்களால் கூடிய சுச்ரூஷைச்செய்து நாங்கள் க்ருதார்த்தர்களாக ஆகிவிடுகிறோம்" என்று பதில் சொல்லுவார்கள். பின்பு ஆஷாடமாஸத்திய பூர்ணமி முதல் நான்கு பக்ஷங்கள் ஒரே இடத்தில் போக்குவார்கள். இதுவே சாதுர்மாஸ்ய விரதமெனப்படும். பிறகு ஐந்தாவது பக்ஷத்தின் பிரதமையில் ஸஞ்சாரத்திற்கு ஆரம்பிப்பார்கள். அதுவே விச்வரூப யாத்ரையாகும். புஜித்தேன்–எச்சிலான ஸ்தலத்தை சுத்திசெய்வது முதலியவற்றையுஞ் செய்தேன்.– விஜ. ஆக்ஞை– ச்ருதிகளும் ஸ்மிருதிகளும் பகவானுடைய கட்டளை. ப்ரத்யும்ன– இதுமுதல் இரண்டு ச்லோகங்களால் பகவானுடைய குணங்களையும் நாமங்களையும் ஸ்மரிப்பதும், பலத்தையுத்தேசியாமல் கர்மானுஷ்டா னம் செய்யும் ப்ரகாரங்களும். அப்படிச் செய்பவனே

மேலானவனென்றும் காட்டப்பட்டிருக்கிறது."ஓம் தத்ஸத் என்பது பரப்ரஹ்மத்தை முவ்வகையாக சொல்வதாக ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது" என்று பகவான் சொல்லிருப்பதனால் வாஸுதேவ, ப்ரத்யும்ன, அனிருத்த, ஸங்கர்ஷண இந்த நான்கு ரூபமாய் இருக்கும் பகவானுக்கு நமஸ்காரம் பண்ணுகிறோம் என்பதால் பகவானுடைய திவ்ய நாமத்தை உச்சரிக்கவேண்டிய வகை காட்டப்பட்டது. மூலத்தில் தீமஹி–த்யானம் செய்கிறோம்' என்று இருப்பதால் ப்ரணவ சப்தத்தால் காட்டப்பட்ட அனந்த கல்யாணகுணங்கள் நிறைந்த பகவானைத் த்யானம் பண்ணுகிற ப்ரகாசமும், ரக்ஷிப்பது என்ற அர்த்தமுள்ள ' அவ' என்ற தாதுவிலிருந்து ப்ரணவம் ஏற்பட்டதாகையால் எல்லாரையும் ரக்ஷிப்பதாகிய பரமாத்மாவின் குணமும், மேலும் அந்த ப்ரணவம் அகாரம், உகாரம், மகாரம் இம்மூன்று அக்ஷரங்களால் அமைந்திருப்பதால் எல்லாவற்றிற்கும் பரமாத்மா காரணமென்றும், எல்லாவற்றிற்கும் அதிபதியென்றும் காட்டப்பட்டிருக்கிறது. தவிரவும், வாஸுதேவ என்பதால் பரமாத்மாவானவர் எல்லாவற்றிற்கும் ஆதாரமென்றும், எல்லோருக்கும் அந்தராத்மாவென்றும், ப்ரத்யும்ன என்பதால்,"அவ்விடத்தில ஸூர்யன் ப்ரகாசிக்கிற தில்லை, சந்த்ரனும் நக்ஷத்ரங்களும், மின்னல்களும் அக்னியும் விளங்குகிறதில்லை" என்ற ச்ருதிப்படி நிகரில்லாத ப்ரகாசமுள்ளவர் என்பதும்; அனிருத்த என்பதால் ஸர்வவ்யாபகரென்றும். ஸங்கர்ஷண என்பதால் இந்த்ரியங்களுக்குப் புலப்படாத விஷயங்களைத் தெரிவிப்பவரென்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. வீர ஐச்வர்யம்– அணிமா முதலியவைகள். பக்தி–இடை விடாமல் பகவானை ஸ்மரிப்பது– ஸ்ரீத.

அத்யாயம்–6.

நாரதருடைய முன்ஜன்மம்.

ஸத்யவதியின் புத்ரராகிய வ்யாஸமஹர்ஷியானவர், தேவர்ஷியாகிய நாரதருடைய பிறப்பு, சரிதம், ஆகிய இவைகளைக் கேட்டுப் பின்னும் அவரை நோக்கி ஓ! நாரதரே! உமக்கு ஞானோபதேசஞ் செய்த ஸன்யாஸிகள் சென்றபிறகு, பால்யவயதுள்ளவரான நீர் என்ன செய்தீர்? ப்ரஹ்மதேவருடைய புத்ரரே! அபரவயதில் என்ன செய்துகொண்டிருந்தீர்? தேஹவியோக காலம் நேர்ந்த போது சரீரத்தை எப்படிவிட்டீர்? ஜீவன் ஒரு சரீரத்தைவிட்டு மற்றொரு சரீரமடைந்தபின் முன் ஜன்மத்தின் விஷயங்கள் காலமஹிமையால் மறந்து போகின்றனவே அப்படிக்கிருக்க முன்காலத்தில் நடந்த விஷயம் எப்படித் தங்கள் ஞாபகத்திலிருக்கிறது? என்றார். அதனைக்கேட்ட நாரதர் வ்யாஸமஹர்ஷியை நோக்கி "எனக்கு ஞானோபதேசஞ்செய்த ஸன்யாஸிகள் தேசாந்தரம் போனபிறகு சிறுவயதுள்ள நான் என்ன செய்தேனென்றால், என் தாயாருக்குக் குழந்தை நானொருவனே; ஆனதுபற்றியும் எனக்கு வேறு கதியில்லாததனாலும் என்னுடைய தாயார் என்னிடம் மிகவும் ப்ரியம் வைத்திருந்தாள். அவள் ஒன்றையும் அறியாதவள்; வேலைசெய்து ஜீவிப்பவள்; மரத்தால் செய்யப்பட்ட ப்ரதிமை மனிதர்களால் ஆட்டி வைக்கப் படுவதுபோல, இந்த ஜனங்கள்யாவும் ஈச்வரனுக்கு ஸ்வாதீனப் பட்டிருக்கிறார்கள். என்தாயார் என்னுடைய யோகக்ஷேமத்தை வஹிக்க விரும்பினவளானாலும் அதை நடத்த ஸாமர்த்யமற்றவளாக விருந்தாள். திக்கு, தேசம், காலம் ஆகிய இவைகளின் பிரிவையறியாத ஐந்து வயதுள்ள சிறுவனாகிய நான்மாத்ரு ஸ்நேஹத்தா

அந்த ப்ராஹ்மண கிருஹத்திலேயே வஸித்தேன். ஒருநாள் ராத்ரி என் தாயார் மாடு கறப்பதற்காக வீட்டிற்கு வெளியே வரும்போது ஒருபாம்பைக் காலால் மிதித்தாள். அப்பொழுது அனாதையான அவளை அந்தஸர்ப்பம் காலனால் தூண்டப்பட்டு கடித்தது. உடனே அவள் மரணமடைந்தாள். அப்பொழுது நான் "ஈச்வரன் பக்தர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுப்பதி லேயே நோக்கமுள்ளவராகையால் நமக்கு நேர்ந்த மாத்ருதுக்கம் அனுக்ரஹமேயொழிய வேறில்லை என்று நினைத்து வடக்குத்திக்கை நோக்கிப் புறப்பட்டேன். ஸம்பத்துள்ள அனேக தேசங்களையும், கிராமங்களையும், கோகுலங்களையும், ரத்னம் விளையும் பூமிகளையும், பயிரிடுபவர்கள் வஸிக்கும் இடங்களையும், மலையடிவாரங்களையும், பாக்குமரம் முதலியவைகளின் தோட்டங்களையும், தானாக முளைத்த மரங்களிருக்குங் காடுகளையும், மரங்கள் வைத்து விருத்திசெய்யப்பட்ட இடங்களையும், பல வகையான தாதுக்களால் அழகான மலைகளையும், யானைகளால் முறிக்கப்பட்ட கிளைகளுள்ள மரங்களை யும், நல்ல ஜலமுள்ள குளங்களையும், தேவர்கள் ஜலக்ரீடை செய்யும் தாமரஸ ஓடைகளையும், அவைகளிலிருக்கும் அழகான குரலுள்ள பக்ஷிகளையும், தேனீக்களையும், அவைகளால் அலங்கிருதமான தாமரைத்தடாகங்களையும், பார்த்துகொண்டு நான் ஒருவனாக அவைகளைக் கடந்துசென்று, பயங்கரமாகிய ஒரு வனத்தைக் கண்டேன். அது கோரைகளும், மூங்கில்களும், வண்டுகளால் துளைக்கப்பட்ட மூங்கில்களும், நாணல்களும், தர்ப்பங்களும், அடர்ந்து இருப்பதாலும், ஸர்ப்பங்களும், கோட்டான்களும், நரிகளும் வஸிக்குமிடமாயிருந்தாலும் மிகவும் பயங்கர

மாயிருந்தது. அப்பொழுது நான் வெகுதூரம் நடந்த தால், பசி, தாஹமுண்டாகி, அவற்றால் இந்த்ரியங்கள், சரீரம் இவைகளின் வலிமை குறைந்து களைப்படைந் தேன். பின்பு ஒரு நதியின் மடுவில் ஸ்நானஞ்செய்து, ஆசமனம் பண்ணிச்ரமத்தை நிவர்த்தித்துக் கொண்டேன். பின்பு மனிதர்களுடைய ஸஞ்சாரமில்லாத அந்தக் காட்டில் ஒரு அரசமரத்தின்கீழ் உட்கார்ந்து ஸன்யாஸிகளிடம் உபதேசம் பெற்றப்படி ஹிருதயத்தி லிருக்கும் பரமாத்மாவை த்யானஞ் செய்தேன். பகவானுடைய பக்தியால் மனத்தை ஒருவகைப்படுத்தி அவருடைய தாமரை போன்ற பாதத்தை த்யானஞ் செய்யும்போது என்னுடைய இருகண்களிலிருந்து ஆனந்தபாஷ்யம் பெருகியது. அப்பொழுது ஸ்வல்ப காலத்தில் என்னுடைய ஹிருதயத்தில் பகவத் ஸ்வரூபம் ப்ரகாசித்தது ஓ! வ்யாஸ மஹர்ஷியே! விசேஷ ப்ரேமையால் மயிர்க்கூச்சலுண்டாயிற்று. அதனால் மிக்க ஸுகமுள்ளவனாய் ஆனந்த ப்ரவாஹத்தில் மூழ்கி என்னையும் பகவத் ஸ்வரூபத்தையும் மறந்திருந்தேன். இப்படியிருக்க மிக்க அழகுள்ளதும், ஸகல துக்கங்களை யும் போக்கடிக்கக்கூடியதுமான அந்தப்பகவானுடைய ரூபம் மறைந்தது. உடனே அதனைக்காணாமல் மிகவும் மனவருத்தமடைந்து சீக்ரமாக எழுந்திருந்தேன். மறுபடியும் அந்த பகவத் ஸ்வரூபத்தைப் பார்க்கவிரும்பி மனத்தையடக்கி அதே ரூபத்தை ஹிருதயத்தில் த்யானஞ்செய்தேன். அப்படியும் அந்த ரூபம் நேரில் தோன்றவில்லை. ஒரு தடவை பார்த்ததால் த்ருப்தி யுண்டாகாததனால் மனக்கவலையடைந்தேன்.

21–26. இப்படிக் காட்டில் கவலையுடனிருக்கும் என்னை நோக்கி வேதவாக்யங்களுக்கு விஷயமாகாத

பகவான் "ஓ! குழந்தாய்! கர்மம் முதலிய தோஷங்கள் அற்றுப்போகாத யோகிகளால் என்னைப் பார்க்க முடியாது. ஆனதால் இந்த சூத்ர ஜன்மத்தில் நீ என்னைப் பார்க்கத் தகுந்தவனல்ல. ஆனால் ஒரு தரம் என் ரூபத்தைக் காண்பித்த காரணமென்னவெனில்.. ஒரு தரம் என் ரூபத்தைப் பார்த்தவனுக்குப் பின்னும் பார்க்கவேணுமென்ற எண்ணம் உண்டாகும். அதனால் என்னிடமே மனத்தைச் செலுத்தியவர்களுக்கு ஸகல மனோதோஷங்களும் நிவர்த்தியாய் விடுகின்றன. வெகுகாலம் ஸாதுக்களுக்குச் சுச்ரூஷை செய்ததால் உனக்கு என்னிடத்தில் ஸ்திரமான பக்தியுண்டாயிற்று. ஆனதால் தோஷத்தை யுண்டுபண்ணும் இவ்வுலகத்தை விட்டு என்னுடைய பார்ஷதனாக ஆய்விடுவாய் என்னிடத்தில் உனக்கு உண்டான பக்தியொருபொழு தும் குறையாமலிருக்கும். மேலும் ப்ரளய காலத்திலும் என்னுடைய அனுக்ரஹத்தால் முந்திய ஞாபகம் தவறாமலிருக்கும்" என்று அனுக்ரஹித்தார். இப்படி அனுக்ரஹிக்கப்பட்ட நான் மஹாபூதமாயும், ஆகாச சரீரமுள்ளவரும், எல்லாருக்கும் அதிபதியாயும், எல்லாருக்கும் ஸமீபத்திதலிருப்பவரானாலும், ஒருவராலும் அறியப்படாதவருமான அந்தப் புருஷனுக்கு நமஸ்காரஞ்செய்தேன்.

27–32. பின்பு அனந்த (நாசமற்ற)னுடைய திவ்ய நாமங்களை வெட்கப்படாமல் உச்சரித்துக்கொண்டும் அவரால் செய்யப்பட்ட ரஹஸ்யமான லீலாவிபூதிகளை நினைத்தும் மற்ற ஆசைகளை யொழித்தும், கர்வம், மாத்ஸர்யம் இவைகளை விலக்கிக் காலத்தை எதிர்பார்த்து ஸந்தோஷமாகப் பூமியில் ஸஞ்சரித்தேன். இப்படி ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலேயே மனத்தைச் செலுத்தி,

ஒன்றிலும் பற்றுதலில்லாமல் சுத்த சித்தனாகவிருந்தேன். இப்படிக்கிருக்கையில் சுத்தமான ஆகாசத்தில் மின்ன லுடன் மேகவரிசை தோன்றினாற்போல திடீரென்று மரணகாலம் நேர்ந்தது. அப்பொழுது சுத்தமான அந்தப்பார்ஷத சரீரத்திற்குப் பகவதிச்சைப்படி நான் போகும்போது ப்ராரப்தகர்மம் நசித்து ஐந்து பூதங்களா லேற்பட்டிருந்த பழய சரீரம் கீழேவிழுந்தது. பிறகு நான் இந்த மூவுலகத்தையும் காரணரூபமாய் அடக்கிக் கொண்டு ப்ரளயகாலத்தில் ஸமுத்ர ஜலத்தில் ஸ்ரீ நாராயணன் சயனஞ் செய்துகொண்டிருக்கும்போது, பின்பு அவரிடம் சயனஞ்செய்ய விரும்பிய ப்ரஹ்ம தேவரின் ச்வாஸத்தின் வழியாக அவருடைய ஹிருத யத்தில் ப்ரவேசித்தேன். பிறகு 1000 சதுர்யுகங்கள் கொண்ட ப்ரஹ்மதேவருடைய ராத்ரி முடிந்தவுடன் மறுநாள் காலையில் ப்ரஹ்மதேவர் ஜகத்தை ஸிருஷ்டிக்க யத்தனித்தார். அப்பொழுது அவருடைய இந்த்ரியங்களிலிருந்து மரீசி முதலிய ப்ரஜாபதிகளும் நானும் உண்டானோம். நான் குறைவின்றி ப்ரஹ்மசர்ய விருதங்களையனுஷ்டித்து, மூவுலகத்தில், உள்ளிலும் வெளியிலும் மஹாவிஷ்ணுவின் அனுக்ரஹத்தால் ஒரிடத்திலும் தடையற்ற நடையுள்ளவனாகிச் சஞ்சரிக்கிறேன்.

33–37. தவிரவும், இந்த வீணை ஈச்வரனால் கொடுக்கப்பட்டது. இது ஷட்ஜம் முதலிய ஸ்வரங்களா கிய நாதப்ரஹ்மத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. ஆனதால் மூர்ச்சனை முதலியவைகளுடன் ஸ்ரீ நாராயணனுடைய கதையைக் கானஞ்செய்து கொண்டே ஸஞ்சரிக்கிறேன். பகவானுடைய மஹிமையை நான் கானஞ் செய்யும்போது, ஜகத்தை பரிசுத்தப்

படுத்தும் பாதங்களுள்ளவரும், எல்லோராலும் ப்ரியப் படக்கூடிய லீலைகளுள்ளவருமான பகவான் என்னால் அழைக்கப்பட்டவர் போல என் மனத்தில் வந்திருந்து தர்சனங் கொடுக்கிறார். விஷயத்தில் ஆசையால் அடிக்கடி அவைகளையே கவர்ந்து கொண்டிருக்கும் சித்தமுள்ளவர்களுக்கு பகவானுடைய லீலைகளை வர்ணிப்பதே ஸம்ஸாரஸாகரத்தை தாண்டச்செய்யும் ஓடமென்று நிச்சயிக்கப்படுகிறது. காமம் முதலிய ஆறுவகை சத்துருக்களால் பீடிக்கப்படும் மனது பகவானை ஸேவிப்பதால் சுத்தமாவதுபோல யமம் முதலிய யோக ஸாதனங்களால் சுத்தப்படுகிறதில்லை. தோஷமற்றவரே என்னுடைய பிறப்பு, என்னுடைய சரிதம் முதலிய ரஹஸ்யங்களைப்பற்றி உம்மால் கேட்கப்பட்டவைகளெல்லாவற்றையும் உம்முடைய மனம் ஸந்தோஷப்படும்படி விஸ்தாரமாகச் சொன்னேன் என்று சொன்னார்.

38–39. ஓ! சௌனகர் முதலிய மஹர்ஷிகளே! இப்படி தெய்ச்செயலாய் வந்த நாரதர் ஸத்யவதியின் புத்ரராகிய வ்யாஸருடன் ஸம்பாஷணை செய்து 'நான் போய்வருகிறேன்' என்று சொல்லி வீணையை மீட்டிக்கொண்டே சென்றார். நாரதர் உலகமெங்குஞ் சென்று சார்ங்கமென்ற வில்லைத்தரித்த ஈச்வரனுடைய சரிதத்தை வாக்கினாலும், வீணையைக் கொண்டும் கானஞ்செய்து, ஸகல லோகத்தையும் ஸம்ஸாரதுக்கத் திலிருந்து காப்பாற்றுகிறார்; ஆகையால் இவரே பாக்யசாலி. இது இப்படி இருப்பது ஆச்சரியம்.

நோட்டு.

ஸன்யாஸிகள் மூலத்தில் பிக்ஷுவென்றிருப்பதால்

ஞானபிக்ஷை கொடுப்பவர்களென்று அர்த்தம்– விஜ. யோகம்–இல்லாதவைகளை ஸம்பாதிப்பது. க்ஷேமம்– ஸம்பாதித்தவைகளைக் காப்பாற்றுவது– வீர. தாயார் என்னிடத்தில் மிக்கப்ரியம் வைத்திருந்தபடியால் பெரியோர்கள் பின் நான் போகவில்லை– விஜ. ஸ்நேஹத்தால்– எப்பொழுது இதன் நேஹம் குறையு மென்று எதிர்பார்த்திருந்தேன் ஸ்ரீத. நினைத்து– "எவனையனுக்ரஹிக்க வேண்டுமென்று விரும்புகிறேனோ அவனுடைய பணத்தையும் பந்துக்களையும் நாசஞ் செய்கிறேன்"– ஸ்ருதி. புறப்பட்டேன்– மாதாவிற்கு அபரக்ரியை செய்தபிறகு– விஜ க்ராமங்கள்–"ப்ராஹ்மணர்களும் அவர்களுடைய வேலைக்காரர்களும் வஸிக்குமிடம், அல்லது சூத்ரர்கள் அவர்களுடைய வேலைக்காரர்களும் வஸிக்குமிடம்"– ப்ரகு வேத– எதையடையாமல் வாக்குகள் மனத்துடன் திரும்புகின்றனவோ– ச்ருதி திருப்தி– விஷயத்தில் ஆசையுள்ளவனுக்கு ஒருதடவை விஷயத்தையனுபவித் தால் திருப்தியுண்டாகாததுபோல– வீர. மஹாபூதம்– ரிக்வேதம் முதலியவைகள் இந்த மஹாபூதத்தின் நிச்வாஸமே"– ச்ருதி. காலத்தை– ப்ராரப்த கர்மத்தின் முடிவை– ஸ்ரீத. ப்ரவேசித்தேன்– "ப்ரஹ்மதேவர் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் தேஹத்தில் ப்ரவேசித்து அவருடன் ஒன்றாய் கலந்து யோகநித்ரையை யடைந்தார்"– கூர்மப்புராணம்.1000 சதுர்யுக– மனுஷ்யமானத்தால் 1000 சதுர்யுகமானால் ப்ரஹ்மதேவருக்கு ஒரு பகல் முடியும், அவ்வளவு காலங்களடங்கியது ஒரு ராத்ரியாகும். இம்மாதிரியான பகலும் ராத்ரியும் சேர்ந்தால் ஒருதினம், அப்படி 30 தினங்கள் ஒருமாதமாகும், அப்போர்பட்ட மாஸங்களில் 12 கொண்டது ஒரு வர்ஷம், அப்படி நூறு வர்ஷங்கள்

ப்ரஹ்மதேவருக்கு பரமாயுஸ். இதுவே ப்ராஹ்மமான மெனப்படும். மரீசி– வஸிஷ்டர் முதலிய மஹர்ஷிகளும்– வீர.– வெளியிலும்– கர்மிகள் முவ்வுலகத்திலும் வெளியில் வரமாட்டார்கள், தபஸ், முதலியவைகளால் ப்ரஹ்மலோகத்தை யடைந்தவர்கள். இதற்குள் வருகிறதில்லை. ஸ்ரீத ஈச்வரனால்– ப்ரஹ்மதேவரால் கொடுக்கப்பட்டது– சந்த். மூர்ச்சனை.– ஸ்வரத்தின் ஆரோஹாவரோஹம்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–7.

அர்ஜுனன் அச்வத்தாமாவைச் சிக்ஷித்தது.

சௌனக் மஹர்ஷியானவர், ஸூதரை நோக்கிப் "பிறகு பகவானாகிய வ்யாஸமஹர்ஷி, நாரதருடைய அபிப்பிராயத்தை யறிந்து எதனைச்செய்தார்" என்று கேட்டார்.

2–8. இதனைக்கேட்ட ஸூதர், சௌனகரை நோக்கி ப்ரஹ்ம பத்னியாகிய ஸரஸ்வதி நதியின் மேல் கரையில் 'சமயாப்ராஸம்' என்னும் ஒரு ஆச்ரமமுண்டு. அது மஹர்ஷிகள் யாகஞ் செய்யுமிடம். மேலும் அது இலந்தை மரங்களால் அலங்கரிக்கப்பட்டது. அந்த முக்யமான ஆச்ரமத்தில் வ்யாஸ மஹர்ஷியானவர், ஆசமனஞ்செய்து, சுத்தராய் உட்கார்ந்து, மனத்தை ஒரு வகைப்படுத்தி த்யானஞ்செய்தார். பக்தி யோகத்தால் சுத்தமாயும், ஸ்திரமாயுமுள்ள மனத்தில் புருஷோத்தமனையும், அவரை ஆச்ரயித்த மாயையும் தர்சித்தார். "மேலும் ஜீவன் உண்மையில் மாயையைக் கடந்த ஸ்வரூபமுள்ளவனானாலும், அந்த மாயைக்கு வசப்பட்டு பிரமித்து, தான் முக்குண ஸம்பந்த முள்ளவனென்றும், மாயாகுணங்களால் செய்யப்படும் கார்யங்களைத் தான் செய்வதாக நினைத்துமிருக்கிறான்" என்றும் தெரிந்துகொண்டார். பின்னும் அந்த அனர்த் தத்தை போக்கக்கூடிய பக்தியோகத்தையும் அறிந்தார். பின்னும் அவர் உலகத்திற்கு ஏற்பட்டிற்கும், இவ்வித மான அக்ஞானத்தை நிவர்த்திப்பதற்காக, ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தார். அதனைக் கேட்ட மாத்ரத்தில் பரமபுருஷனாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில்,

ஸ்திரமான பக்தியுண்டாகிறது. அதனால் சோகம் மோஹம், பயம், ஆகிய இவைகள் நிவர்த்தியாகின்றன. மேலும் அவர் தம்மால் செய்யப்பட்ட அந்த ஸம்ஹிதையைப் பரிசோதித்து நிவிர்த்திமார்க்கத்தில் ஆசையுள்ள தம்முடைய குமாரராகிய சுகருக்கு அதை உபதேசித்தார்" என்று சொல்லி முடித்தார்.

9–20. இதனைக்கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஓ ஸூதரே! அந்தச்சுகர் ஒருவிஷயத்திலும் ஆசையில்லாதவர்; நிவிர்த்திமார்க்கத்திலேயே நோக்க முள்ளவர்; ஆத்மாவிடமே ரமிப்பவர்; அப்படியிருக்க அந்தப் பெரிதாகிய க்ரந்தத்தை எதற்காக அவர் அப்யஸித்தார் என்று கேட்டார். அதனைக்கேட்டு ஸூதர் சௌனகரை நோக்கி, "ஓ சௌனகரே! மஹர்ஷிகள், ஆத்மாராமர்களானாலும், பகவத் ஸ்வரூபத்தை நன்றாய் அறிந்தவர்களாகையால் ஸம்சய மற்றவர்களானாலும், க்ரந்தங்களைப் படிப்பதில் ஆசையில்லாதவர்களானாலும், பகவானிடத்தில் பலனை உத்தேசியாமலே பக்திசெய்கிறார்கள், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சரிதங்கள், வைராக்யமடைந்த மனத்தையும் வசப்படுத்திக்கொள்ள ஸாமர்த்யமுள்ள வைகள், ஆனதால் சுகமஹர்ஷி, பகவத் குணங்களில் விசேஷ ஆசையுள்ளவராகி அந்தப் பெரியதாகிய உபாக்யானத்தை அப்யஸித்தார். அவர் வ்யாஸ மஹர்ஷியின் புத்ரர். அவரிடத்தில் விஷ்ணு பக்தர்கள் ப்ரியப்படுவார்கள். ஓ! மஹர்ஷிகளே! பரீக்ஷித் என்ற ராஜரிஷியின் பிறப்பு, அவர்செய்த கார்யங்கள், அவருடைய மரணம், பாண்டவர்களுடைய மஹா ப்ரஸ்தானம், இவைகளை கிருஷ்ணகதையைச் சொல்லு வதற்கு உபயோகமாகச் சொல்லுகிறேன். எப்படியெனில்,

கௌரவர்களும், ஸிருஞ்ஜயர்களும், யுத்தத்தில் அடிக்கப்பட்டு ஸ்வர்க்கமடைந்தார்கள். பீமஸேனன் தன்னுடைய கதாயுதத்தால் துர்யோதனனுடைய துடையை அடித்து முறித்தான். பின்பு "த்ரோணருடைய புத்ரராகிய அச்வஸ்தாமாவென்பவர் த்ரௌபதியின் புத்ரர்களை நாசஞ்செய்வதே தம்முடைய யஜமானாகிய துர்யோதனனுக்கு ப்ரியமான கார்யம்" என்று நினைத்து உபபாண்டவர்கள் தூங்கும் ஸமயத்தில் அவர்களுடைய தலையை வெட்டினார். இது துர்யோதனனுக்கு ப்ரியமன்று. மேலும் அதை எல்லோரும் வெறுக்கக் கூடிய கார்யம் என்று நிந்தித்தார்கள். அப்பொழுது அக்குழந்தைகளுடைய தாயாகிய த்ரௌபதிதேவி புத்ரசோகத்தால் பரிதபித்துக் கண்ணீரைப் பெருக்கி அழுதாள். அந்தஸமயத்தில் அவளை நோக்கி அர்ஜுனன், "ஓ! நல்ல ஸ்வபாவமுள்ளவளே! என்னுடைய காண்டீவத்தில் பாணங்களைத்தொடுத்து அவைகளை ப்ரயோகித்து ப்ராஹ்மணர்களுக்குள், அதமனும், ஆயுத பாணியும் ஆததாயியுமான அச்வஸ்தாமாவினுடைய தலையை உன்னிடம் கொடுத்து உன்னுடைய துக்கத்தை நிவர்த்திக்கிறேன். அந்தத் தலையை ஆஸனமாகச் செய்து புத்ரசோகத்தை போக்கிக்கொள் வாய்" என்று ஸமாதானஞ்செய்தான். இப்படி அழகான வார்த்தைகளைச் சொல்லி ஸமாதானஞ்செய்து தகுந்த முயற்சியுடன் குரு புத்ரராகிய அச்வஸ்தாமாவை அர்ஜுனன் துரத்தினார். அவருக்கு மித்ரரும், ஸாரதியு மாயிருப்பவர் ஸ்ரீ கிருஷ்ணனே. அவருடைய வில் பயங்கரமானது. ரதமோ, ஹனுமத்வஜமுள்ளது. சிசுக்களைக் கொன்றவரான அந்த அச்வஸ்தாமா பின் தொடர்ந்துவரும் அர்ஜுனரை வெகுதூரத்தில் கண்டு பயந்து ப்ராணனைக் காப்பாற்றிக்கொள்ள

வேண்டி, பூமியில் எதுவரையில் போகக்கூடுமோ அதுவரையில் "சிவபெருமானிடத்தில் பயந்து ப்ரஹ்ம தேவர் ஓடியதுபோலத் திரும்பிப்பாராமலே ஓடினார். அப்படியும் தம்மைக் காப்பாற்றக்கூடியவர் கிடைக்காத தனாலும், குதிரைகள் களைத்துப்போனபடியாலும் அவர் ப்ரஹ்மாஸ்த்ரமே தன்னைக் காப்பாற்றுமென்று நினைத்தார். பின்பு ஆசமனஞ்செய்து சுத்தராய், ப்ரயோகித்த அஸ்த்ரத்தைத் திருப்பும் வகையறியாத வராயிருந்தும் ப்ராணனுக்குக் கெடுதி நேரிடும் ஸமயமாகையால் அந்த அஸ்த்ரத்தை ப்ரயோகித்தார்.

21–26. பின்பு எல்லா திக்குகளிலும் அந்த அஸ்த்ரத்தின் தேஜஸ் பரவியது. அதனைக்கண்டு அர்ஜுனன் தம்முயிர்க்குச் சேதம் வந்ததென்று நினைத்து ஸாரதியாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானை நோக்கி "ஓ! கிருஷ்ண! கிருஷ்ண! மிகுந்த பராக்ரம முள்ளவரே! பக்தர்களுக்கு நேரும் பயத்தை நிவர்த்திப் பவரே! ஸம்ஸாரத்தால் கஷ்டப்படும் ஜனங்களுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பவர் தாமொருவரே. நீரே முந்திய புருஷன். நீரே எல்லாவற்றிற்கும் பிரபு. ப்ரகிருதியைக்காட்டிலும் வேறானவர். ஆனந்த ஸ்வரூபத்திலிருப்பவர். நீர் மாயையைக்கடந்தவரானாலும், மாயைக்கு வசப்பட்டு ஸம்ஸாரத்தில் மூழ்கியிருக்கும் ஜனங்களுக்கு தர்மம் முதலிய புருஷார்த்தங்களைக் கொடுக்கிறீர். வேறிடத்தில் மனஸைச் செலுத்தாமல் தம்மையே பஜிப்பவர்கள் இந்த திவ்யமங்கள சரீரத்தை த்யானஞ் செய்கிறார்கள். ஓ! தேவர்களுக்குத்தேவனே! இதோ மிகவும் பயங்கரமான தேஜஸ் எங்கும் பரவிவருகிறதே, இது இன்னதென்று தெரியவில்லை. இதனைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

27–28. அதனைக்கேட்டுக் கிருஷ்ணபகவான் அர்ஜுனனை நோக்கி த்ரோணருடைய புத்ரராகிய அச்வஸ்தாமாவினால் ப்ரஹ்மாஸ்த்ரம் ப்ரயோகிக்கப் பட்டிருக்கிறது. இது அதன் தேஜஸ்ஸை தவிர வேறில்லை அவருக்கு அதனைத் திருப்பி பெற்றுக்கொள்ளும் வழி தெரியாமையால் இதுவரையில் உபயோகிக்காம லிருந்து இப்பொழுது தம் உயிருக்குச் சேதம் வருஞ் சமயமாகையால் தம்மைக்காப்பாற்றிக் கொள்ளவேண்டி அதனை உபயோகித்திருக்கிறார். அதனைத் தடுக்க முடியாது. உனக்கு அந்த ப்ரஹ்மாஸ்த்ரம் நன்றாகத் தெரியுமாகையால் அதனை ப்ரயோகித்து எதிரியின் அஸ்த்ரத்தை நாசஞ்செய் என்றார்.

29–39. இப்படிப் பகவான் சொல்லிய வார்த்தையைக் கேட்டுச் சத்ருக்களைக் கொல்லும் வல்லமையுள்ள அர்ஜுனன் ஆசமனஞ்செய்து, ஸ்ரீ கிருஷ்ணபகவானை ப்ரதக்ஷிணஞ் செய்து எதிரியின் அஸ்த்ரத்தை யடக்குவதற்காக ப்ரஹ்மாஸ்த்ரத்தை ப்ரயோகித்தார். அவ்விரண்டு அஸ்த்ரங்களுடைய தேஜஸ்ஸுகளும், ப்ரளய காலத்தில், அக்னியும், ஸூர்யனும் விருத்தியடைவது போல பூமி, அந்தரிக்ஷம் ஆகிய இவைகளை ஆக்ரமித்து ப்ரகாசித்தன. அவ்விருவர்களுடைய அஸ்த்ரங்களின் தேஜஸானது மூவ்வுலகங்களையும் தஹித்தது, அந்தத் தாபத்தை ஸஹியாமல் ஜனங்கள் இது ப்ரளயகாலத்திய அக்னி என்றே நினைத்தார்கள். அப்பொழுது ப்ரஜைகள் உபத்ரவப்படுகிறதையும், லோகங்களுக்கு நாசம் நேர்ந்ததையும் பார்த்து அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணனுடைய அனுமதிப்படி அந்த இரண்டு அஸ்த்ரங்களையும் உபஸம்ஹரித்தார். பிறகு அச்வஸ்தாமாவின் ஸமீபம் சென்று பசுவை

ரசனையால் கட்டுவது போல் கோபத்தால் சிவந்த கண்களுள்ளவனாகிய கிருபியின் புத்ரரைக்கட்டினார். பின்னுமவரைத் தம்முடைய கூடாரத்திற்குக் கொண்டு போக முயன்றார். அப்பொழுது தாமரைமலர் போன்ற கண்களுள்ள கிருஷ்ணபகவான் மிகுந்தகோபத்துடன் அர்ஜுனனை நோக்கி "ஏ பார்த்த! இவன் ராத்ரியில் தூங்கிக்கொண்டிருந்த யாதொரு அபராதமும் செய்யாத குழந்தைகளைக் கொன்றவன், ப்ராஹ்மணர்களுக்குள் அதமன், ஆனதால் இவனைக் கொல்லவேண்டுமே தவிர காப்பாற்றுவது உசிதமல்ல. மத்யம் முதலியவை களைக் குடித்து மதித்திருப்பவன், அஜாக்ரதையா யிருப்பவன், பயித்யங்கொண்டவன், தூங்குகிறவன், பாலியவயதுள்ளவன், முயற்சிக்காதவன், சரணமென்று வந்தவன், ரதமில்லாதவன் பயந்து ஓடுகிறவன், ஆகிய இம்மாதிரியான சத்ருக்களை தர்மத்தையறிந்தவர்கள் கொல்லமாட்டார்கள். எவன் ப்ராணிகளிடத்தில் தயையில்லாமல் பிறரைக்கொன்று தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ளுகிறானோ அந்த துஷ்டனை சிக்ஷிப்பதே அவனுக்கு க்ஷேமமெனப்படும். தண்டிக்கப் படாதவரையில் பாபம் விலகாது; அதனால் நரகத்தையடைவான். மேலும் த்ரௌபதியின் முன்பாக உன் குழந்தைகளைக் கொன்றவருடைய தலையை உன்னிடம் சேர்ப்பிக்கிறேன்" என்று நான் கேட்டிருக்கும் போது உறுதி செய்திருக்கிறாய். இவன் தன்னுடைய யஜமானனாகிய துர்யோதனனுக்கு இஷ்டமில்லாத கார்யத்தைச் செய்தவன். குலத்திற்கு அபகீர்த்தியை யுண்டு பண்ணினவன்; மிகுந்த பாபீ, ஆததாயீ. உன்னுடைய புத்ரர்களை நரிசஞ்செய்தவன். ஆனதால் இவனைக் கொல்லவேண்டும் என்று (அர்ஜுனனுடைய புத்தியைப் பரிசோதிப்பதற்காகச்) சொன்னார்.

40–41. இம்மாதிரி கிருஷ்ணபகவானால் தூண்டப்பட்டும் மஹாத்மாவாகிய அர்ஜுனன் அச்வஸ்தாமா தமது பின்னைகளைக் கொன்றவரானாலும், குருபுத்ரராகையால் வதஞ் செய்ய இஷ்டப்படவில்லை. பின்பு மித்ரராகிய ஸ்ரீ கிருஷ்ணன் ஸாரத்யஞ் செய்ய அர்ஜுனன் தம்முடைய கூடாரஞ் சேர்ந்து புத்ரநாசத்தால் துக்கிக்கும் த்ரௌபதியை நோக்கி ஓ! த்ரௌபதி! உன்னுடைய புத்ரர்களைக் கொன்றவர் இதோ இருக்கிறார். உன்னிஷ்டப்படி இவருக்குச் சிக்ஷை செய்கிறேன் என்றான்.

42–48. யாகத்தில் கொல்லுவதற்காக யூபத்தில் கட்டப்பட்ட பசுபோல கயிற்றினால் கட்டப்பட்டவரும் கெட்டகார்யம் செய்ததால் தலைகுனிந்தவருமான குரு புத்ரரைக்கண்டு த்ரௌபதியானவள்; நல்ல ஸ்வாபமுள்ளவளாகையால் ஆசார்யருடைய புத்ரரென்று கௌரவத்தாலும், தைன்யமடைந்தவரென்ற தயையாலும் அவருக்கு நமஸ்காரஞ்செய்தாள். பின்னும் பதிவ்ரதையான த்ரௌபதியானவள், அவரைக்கட்டிக் கொண்டு வந்ததை ஸஹியாதவளாகி தன்னுடைய பர்த்தாவை நோக்கி "இவரை விட்டுவிடவேண்டும். இவர் ப்ராஹ்மணர்;தவிரவும் குருபுத்ரராகையால் ஆசார்யர். ரஹஸ்யமந்த்ரங்கள், உபஸம்ஹாரம், ப்ரயோகம் ஆகிய இவைகளுடன் எல்லா அஸ்த்ரங்களையும் இவருடைய பிதாவான த்ரோணரிடமிருந்து தாங்கள் அப்யஸித்தீர்கள். அவரே புத்ரரூபியாக இருக்கிறார். அதனால்தான் சூரனாகிய புத்ரனை அடைந்த கிருபியானவள் த்ரோணருடைய பாதிசரீரமாயிருந்தும் அவருடன் உடன்கட்டையேறவில்லை. தாங்கள் ஸகலதர்மங்களையும் அறிந்தவர்கள்; மிகுந்த பாக்யமுள்ளவர்கள்; ஆதலால் ஆசார்யருடைய

வம்சமானது, துக்கப்படும்படி தாங்கள் செய்வது உசிதமல்ல அது எப்பொழுதும் பூஜிக்கத்தக்கது; நமஸ்கரிக்கக்கூடியது; மேலும் இவரைக்கொன்று விட்டால் இவருடைய மாதாவும், பர்த்தாவையே தைவ மாகக் கொண்டவளுமான கிருபி என்பவள் புத்ர நாசத்தால் நான் வருத்தமடைகிறது போல துக்கப் படுவாளல்லவா? ப்ராஹ்மணவம்சத்திற்குக் கோப முண்டாகும். க்ஷத்ரியர்கள் செய்தார்களேயாகில், அந்த க்ஷத்ரிய வம்சம் பரிவாரங்களுடன் துக்கிக்கும்படி நேரும். ஆதலால் ப்ராஹ்மணகுலத்தால் நம்முடைய க்ஷத்ரிய குலம் எரிக்கப்படவேண்டாம்" என்று சொன்னாள்.

49–50. ஓ! ப்ராஹ்மணர்களே! தர்மத்திற்கொத்ததும், ந்யாய விரோதமில்லாததும், தயையுள்ளதும், கபட மற்றதும், ஸமபுத்தியுடன் சொல்லப்பட்டதும், மேன்மையுள்ளதுமான (பூஜிக்கக்கூடியது)த்ரௌபதியின் வார்த்தையைக் கேட்டு அருகிலிருந்த அரசனாகிய தர்மபுத்ரர், நகுலர், ஸஹதேவர், ஸாத்யகி, அர்ஜுனன், தேவகியின் புத்ரரான கிருஷ்ணபகவான், மற்றவர்கள், ஸ்த்ரீகள் ஆகிய எல்லோரும் அது உசிதமென்று ஒப்புக்கொண்டார்கள்.

51. அப்பொழுது பீமஸேனன் "இவரைக் கொல்வதே அவருக்கு க்ஷேமகரமான கார்யம், இவர் நித்ரை செய்து கொண்டிருக்கும் சிசுக்களை வீணாக வதஞ் செய்தார்; அதனால் இவருக்காவது, இவருடைய யஜமானனாகிய துர்யோதனனுக்காவது, யாதொரு ப்ரயோஜனமுமில்லை." என்று மிகுந்த கோபத்துடன் சொன்னான்.

52–58. மேல்காட்டிய இவர்களுடைய வார்த் தையைக் கேட்டு நான்கு கைகளுள்ள ஸ்ரீகிருஷ்ண பகவான், தம்முடைய மித்ரரத்னமாகிய அர்ஜுனனை நோக்கி "ஓ! அர்ஜுன! ப்ராஹ்மணனைக் கொல்லக் கூடாதென்ற சாஸ்த்ரத்தாலும், ஆததாயியை வதஞ் செய்யலாமென்றும் சாஸ்த்ரமிருப்பதால் அந்த சாஸ்த்ரம் என்னுடைய ஆக்ஞாரூபமாகையாலும் அப்படியே நீ செய்யவேண்டும். தவிரவும் த்ரௌபதியினிடம் உன்னால் செய்யப்பட்ட ப்ரதிக்ஞையையும், நிறை வேற்றவேண்டும்; பீமஸேனனுக்கும், த்ரௌபதிக்கும் எனக்கும் இஷ்டமானதைச் செய் என்று சிரித்துக் கொண்டு ஆக்ஞாபித்தார். இதனைக் கேட்டவுடனே பகவானுடைய அபிப்ராயமின்னதென்று, அர்ஜுனன் தெரிந்துகொண்டு, கத்தியினால் அந்த ப்ராஹ்மண ருடைய தலையிலிருக்கும் ரத்னத்தை மயிர்களுடன் எடுத்துப்பின்பு, கட்டை அவிழ்த்து அவ்விடமிருந்து துரத்தினான். அப்பொழுது அவருக்கு பாலஹத்யாதி தோஷத்தாலும் ஸஹஜமான ரத்னமில்லாததனாலும், தேஜஸ் குறைந்து விட்டது. க்ஷௌரஞ்செய்துவிடுதல், பணத்தை யபஹரித்துக்கொள்ளுதல், இருக்குமிடத்தை விட்டுத் துரத்திவிடுதல், ஆகிய இவைகள் வதத்திற்குச் சமமானவைகள். ப்ராஹ்மணதமர்கள் கொல்லக்கூடிய குற்றஞ்செய்தாலும், அவர்களுக்கு மேற்காட்டிய வதமே யொழிய, தேஹநாசஞ் செய்வது உசிதமல்ல. பின்பு பாண்டுபுத்ரர்கள், த்ரௌபதியுடன் புத்ரசோகமுள்ள வர்களாகி இறந்து போன தம்முடைய பந்துக்களுக்குச் செய்யவேண்டிய தஹனம் முதலிய உத்தர ஸம்ஸாரங்களைச் செய்து முடித்தார்கள்.

நோட்டு.

ப்ரஹ்மபத்னி"– ப்ரஹ்மாவையே தெய்வமாயுடையவள். அல்லது ப்ராஹ்மணர்களால் ஸேவிக்கப்பட்டது– ஸ்ரீத. சம்யா– யாகத்திற்கு உபயோகமான சம்யா என்னும் மரத்தின்கிளை விழுந்தவிடத்தில் ஏற்பட்ட ஆச்ரமம். மஹர்ஷிகளின் ஆஹாரத்திற்கு உபயோகமாகிய இலந்தைப் பழங்களுள்ளதென்பது தாத்பர்யம்.– விஜ. சோகம்–ஈச்வரன் எல்லாவற்றையும் அறிந்தவர். ஸர்வசக்தியுள்ளவர். அவருடைய மாயையால் நிஜரூபத்தை மறந்தவன் ஜீவன். அவனுக்கு பகவத்பக்தியால் ஞானமுண்டாகிறது. அதனால் மோஷத்தையடைகிறான். "ஆனந்தரூபமாகிய சித்சக்தியால் நிறைந்தவர் ஈச்வரன், அவித்யையால் தன்னுடைய உண்மையான ரூபத்தையறியாதவனும், ஸகல துக்கங்களுக்கு இருப்பிடமுமாயிருப்பவனே ஜீவன்," ஸ்வாமி மாயையானது எவருடைய வசத்திலிருக்கிறதோ. அவர் ஈச்வரனெனப்படுகிறார். எவன் அந்த மாயைக்கு வசப்பட்டு கஷ்டப்படுகிறானோ அவன் ஜீவன் என்று சொல்லப்படுகிறான்' ஸம்ஸாரத்திலுண்டான முவ்வகை தாபத்தாலுண்டானது சோகம், சரீரத்தை ஆத்மாவென்று நினைப்படதே மோஹம். நரகம் முதலியவைகளில் உண்டாவது பயம். அவைகளைப் போக்குவது பக்தியெனப்படுகிறது– சந்த். ஆசையில்லாத– நல்ல சிஷ்யனை ஸம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையில்லாதவர்– விஜ. க்ரந்தங்களை– "மோஹத்தால் கலங்கியிருக்கும் உன்னுடைய புத்தியானது எப்பொழுது தெளியுமோ? அப்பொழுது கேட்டது, கேட்கவேண்டியது இவைகளிலிருந்து நிர்வேதத்தையடைவாய்," பகவத்கீதை, பலனை– அனேக

ஜன்மங்களில் பரமாத்மாவை நேரில் பார்த்தவர்களும், முக்தியில் விசேஷ ஆனந்தமுள்ளவர்களுமான சுகர் முதலியவர்களுக்கு பாகவதத்தில் ஆசையுண்டாயிற்று என்பதில் என்ன ஆச்சர்யம்.– விஜ. ஆசையுள்ளவராகி– பகவானுடைய கல்யாணகுணங்கள் யாவும் அனுபவத்தாலேயே அறியக்கூடியவைகள் என்று வேதாந்த சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், ஸ்வாத்யாயத்தால் யோகத்தை அடையவேண்டும், யோகத்தால் ஸ்வாத்யாயமுள்ளவனாக ஆகிறான்' என்றபடி பகவானுடைய குணங்களை வர்ணிக்கும் க்ரந்தத்தை அப்யஸிப்பது அவச்யமேயாம். மேலும் பகவானுடைய அவதாரங்களும், அவைகளின் குணங்களும், பக்தர்களும், அவர்களுடைய குணங்களும், வேதாந்தத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. அவைகள் யாவும் இந்த பாகவதத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறதுமன்றி வேதாந்தத்தில் சொல்லியிருக்கும் குணங்களைவிட அதிகமாக பகவத்குணங்கள் நன்றாகக் காட்டப்பட்டிருக்கின்றன. வீர. அப்யஸித்தார்– பிறருக்குமுபதேசித்தார். விஜ. சிவபெருமானிடம்– பரமசிவன் ப்ரஹ்மதேவருடைய ஐந்தாவது தலையை வெட்டுகிறதற்காக வரும்போது அவர் ஓடினார். ஆர்கியென்று ஒருபாடமுண்டு. அதற்கு பரமசிவனுடைய மூன்றாவது கண்ணின் தேஜஸினால் எரிக்கப்பட்டு பயந்து சனீஸ்வரன் ஓடினார் என்று அர்த்தங்கொள்ளவேண்டும்.–விஜ.

முன்னொருக்கால் ப்ரஹ்மதேவர் தன்னால் ஸிருஷ்டிக்கப்பட்ட ஒரு அப்ஸர ஸ்த்ரீயினிடம் ஆசைப்பட்டு மான்வேஷங்கொண்டு ரமிக்க முயற்சித்தார். அப்பொழுது பரமசிவன் அவரைத்துரத்தினார். அர்க

யென்னும் ஒரு பாடமுண்டு. அதற்கு ஸூர்யன் ஓடியது போலவென்று அர்த்தம். அதாவது வித்யுன்மாலி யென்று ஒரு ராக்ஷஸனிருந்தான். அவனுடைய தபஸினால் பரமசிவன் ஸந்தோஷமடைந்து அவனுக்குத் தங்க விமானமொன்றைக் கொடுத்தார். அவன் அந்த விமானத்திலேறிக் கொண்டு ஸூர்யன் பின்னே போய்க்கொண்டிருந்தான். அப்பொழுது ராக்ஷஸனுடைய விமானத்தின் காந்தியானது, ஸூர்யதேஜஸை விட மேலானதாக விருந்தபடியால் அந்த விமானத்தை உருகிப்போகச்செய்தார். அதனால் பரமசிவன் கோபங் கொண்டு ஸூர்யனை துரத்த ஸூர்யன் பயந்து ஓடினார். அப்பொழுது பரமசிவனுடைய கடும் பார்வையால் ஸூர்யன் எரிக்கப்பட்டு காசியில் விழுந்தார். அவருக்கு இப்பொழுதும் லோலார்கனென்று (அலைந்த ஸூர்யன்) பெயர் வழங்கிவருகிறது. இது வாமனபுராணத்தில் விஸ்தாரமாய் சொல்லப்பட்டிருக் கிறது.– ஸ்ரீத. தக்ஷப்ரஜாபதியானவர் பரமசிவனுக்கு ஹவிர்பாகங்கொடாமல் யாகஞ்செய்ய அப்பொழுது பரமேச்வரன் வீரபத்ரராக அவதரிக்க அவரிடமிருந்து ஓடினார்– வீர. ஆர்கியென்றபாடத்தில்– ஸூர்யனு டைய பிள்ளையாகிய மிருத்யுவானவர் பரமசிவனைக் கண்டு ஓடினார்– சந்த். கிருஷ்ண–பூமியிலுள்ள ஸகல ஜனங்களுக்கும் ஸுகத்தை யுண்டுபண்ணுகிறவர்– ஸ்ரீத. மிகுந்த– மூலத்தில் மஹாபாஹு வென்றிருப்ப தால் க்ஷத்ரியர்களை யுண்டுபண்ணிய கைகளுள்ளவர் என்று காட்டப்பட்டது– வீர. நரகபாபத்தைச்செய்த மனிதர்கள் அதற்குத் தக்கபடி அதனால் சிக்ஷிக்கப் படுவார்களானால் அவர்கள் சுத்தர்களாகி புண்யசாலிகள் போல ஸ்வர்க்கத்தை யடைகிறார்கள்”–ஸ்மிருதி

ஆததாயி– அக்னிவைப்பவன், விஷங்கொடுப்பவன், ஆயுதம்பிடித்தவன், பணம், பூமி, பார்யை இவைகளை யபஹரிப்பவன் ஆகிய ஆறு பெயர்கள். மேல்காட்டிய ஆததாயியை ஆலோசிக்காமலேயே கொன்றுவிடலாம்– ஸ்ரீத. பாதிசரீரம்– “பத்னியென்பவள் பர்த்தாவினுடைய சரீரத்தின் பாதிபாகம்” –ச்ருதி.

♣♣♣♣

அத்யாயம்–8

பகவானைக் குந்தி ஸ்தோத்ரஞ் செய்தது.

பின்பு அந்த பாண்டவர்கள் யுத்தத்தில் இறந்து போன பந்துக்களுக்குத் தர்ப்பணம் (எள்ளுஞ்ஜலமும்) செய்வதற்காக ஸ்ரீ க்ருஷ்ண பகவானுடன் ஸ்த்ரீகளை முன்னிட்டுக்கொண்டு கங்கையின் கரை சேர்ந்தார்கள். மேலும் அவர்கள், அந்தக் கங்கா ஜலத்தில், ஸ்நானஞ் செய்து தர்ப்பணம் பண்ணி, பகவானுடைய பாதத்தி லிருந்து உண்டானதால் பரிசுத்தமாயிருக்கும் அந்தத் தீர்த்தத்தில் பின்னும் ஸ்நானஞ் செய்தார்கள்.

3–11. பிறகு அவ்விடத்தில் தம்முடைய தம்பி களுடன் உட்கார்ந்திருக்கும் தர்மபுத்ரரையும், த்ருதராஷ்டரரையும், புத்ரசோகமுள்ள காந்தாரியையும், குந்தியையும், த்ரௌபதியையும் நோக்கி ஸ்ரீ க்ருஷ்ண பகவானானவர், மஹர்ஷிகளுடன் "பந்துக்கள் மரண மடைந்தார்களென்று நீங்கள் துக்கப்படுவது நியாயமல்ல காலமஹிமையால் ப்ராணிகளுக்கு நேரிடும் நரகம் தடுக்கமுடியாதது என்று ஸமாதான வார்த்தைகளைச் சொல்லி, துர்யோதனனால் அபஹரிக்கப்பட்டிருந்த அஜாதசத்ருவின் (எவ்விடத்திலும் விரோத புத்தி யில்லாதவர்) ராஜ்யத்தை அவருக்கு வசப்படுத்தினார். மேலும் த்ரௌபதிதேவியின் தலைமயிரைப் பிடித்து இழுத்ததால் ஆயுஸ் குறைந்தவர்களான துச்சாஸனன் முதலியவர்களைக் கொல்வித்தார். மஹேந்த்ரனுடைய கீர்த்தியை உபேந்த்ரர் உலகத்தில் பரவச்செய்தது போல முக்ய கல்பங்களுள்ள மூன்று அச்வமேத யாகங்களைச் செய்வித்துப் பரிசுத்தமான அவருடைய

கீர்த்தியை விஸ்தாரப்படுத்தினார். பிறகு வ்யாஸ மஹா முனி முதலியவர்களைப் பூஜித்து அவர்களால் தாம் கொண்டாடப்பட்டு ஸாத்யகி, உத்தவர் முதலானவர் களுடன் பாண்டவர்களுக்குச் சொல்லிக்கொண்டு ரதத்தின் மீதேறி த்வாரகையை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது உத்தரையானவள் மிகவும் பயந்தவளாய் ஸ்ரீ க்ருஷ்ணனிடம் வந்து அவரை நோக்கி "மஹா யோகியே! தேவர்களுக்கும் தேவரே! ஸகல ஜகத்திற்கும் அதிபதியே! என்னைக் காப்பாற்றும். பயத்தை நிவர்த்திப்பவர் நீர் ஒருவரேயொழிய மற்றவைகளெல் லாம் ஒன்றுக்கொன்று பயத்தை யுண்டுபண்ணுகின்றன ஏ நாத! அக்னிபோல் கொதித்துக் கொண்டிருக்கும் எஃகுமுனையுள்ள பாணமானது எனக்கு எதிரில் வருகிறது. அதனால் என் சரீரம் எரிக்கப்பட்டாலும் எனக்கு ஸம்மதம், என் வயிற்றிலிருக்கும் சிசுவுக்கு மாத்ரம் கெடுதி நேரிடாமல் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக்கொண்டாள். பக்தர்களிடம் வாத்ஸல்ய முள்ள பகவான் அதனைக்கேட்டு 'இது பாண்டவர்களை நாசஞ்செய்வதற்காக அஸ்வஸ்தாமாவினால் ப்ரயோகிக்கப்பட்ட அஸ்த்ரம்' என்று நிச்சயித்தார்.

12–37. அப்பொழுது பாண்டவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு எதிரில்வரும் பாணங்களைப் பார்த்து அதனைத் தடுப்பதற்காக சிறந்த அஸ்த்ரங்களை எடுத்தார்கள். ஸ்ரீ பகவான் தம்மிடத்திலேயே மனத்தைச் செலுத்திய பக்த சிரோமணிகளான பாண்டவர்களுக்கு நேர்ந்த விஸனத்தைப் பார்த்து அந்த அஸ்த்ரம் வேறு அஸ்த்ரங்களால் தடுக்க முடியாததாகையால் தம்முடைய ஸுதர்சனமென்ற சக்ரத்தை ப்ரயோகித்து, அதனால் அவர்களை

ரக்ஷித்தார். மேலும் ஸகல ப்ராணிகளிடத்திலும் அந்தர்யாமியாயிருக்கும் யோகேசராகிய அந்த க்ருஷ்ண பரமாத்மாவானவர் விராடபுத்ரியான உத்தரையின் வயிற்றிலிருக்கும் கர்பத்தைத் தம்முடைய மாயையால் மறைத்தார். ஏ சௌனகரே! ப்ரஹ்மாஸ்த்ரமென்பது மற்றவைகளால் தடுக்க கூடியதல்ல. வீணாய்ப் போகாதது. ஆனாலும் விஷ்ணுவின் தேஜஸையடைந்து அடங்கினது. பகவான் மாயையால் ஸிருஷ்டி, பரிபாலனம், ஸம்ஹாரம் ஆகிய இவைகளைச் செய்கிறவராகையாலும், ஸகல ஆச்சர்யரூபியாயிருப்ப தாலும், அவரிடத்தில் மேற்சொல்லிய விஷயத்தை அத்புதமென்று நினைக்கவேண்டாம். இப்படிப் பாண்டவர்கள் பகவானுடைய ஒத்தாசையால் ப்ரஹ்மாஸ்த்ரத்திலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். அப்பொழுது பதிவ்ரதையான குந்திதேவியானவள் த்வாரகா நகரத்திற்கு ப்ரயாணமாயிருக்கும் க்ருஷ்ண பகவானை நோக்கி தன்னுடைய புத்ரர்களுடனும், த்ரௌபதியுடனும், பகவத் ஸ்வரூபத்தை அறியாத வளான நான் எல்லாவற்றிற்கும் முந்தியபுருஷனை நமஸ்கரிக்கிறேன். அவர் ஸகலத்திற்கும் ஈச்வரன். ப்ரகிருதி (மாயை)க்கு மேற்பட்டவர். ஸகலத்திற்கும் மேற்பட்டவர். ஸகலப்ராணிகளாலும் பார்க்கமுடியாத வர். ஆனால் ப்ராணிகளுடைய உள்ளிலும் வெளியிலும் இருப்பவர். மாயையாகிய திரையால் மறைக்கப்பட்டவர். இந்திரியங்களுக்குப் புலப்படாதவர். நாசமில்லாதவர். அந்தப் பரமபுருஷனாகிய நீர், வேஷதாரி(நடன்) போல தேஹாபிமானமுள்ளவர்களால் அறியப்படுகிறீரில்லை. சுத்தசித்தர்களும் மனனம்செய்யும் ஸ்வபாவமுள்ளவர் களுமான பரமஹம்ஸர்களும், உம்முடைய ஸ்வரூபத் தைத் தேடுகிறார்கள். அப்படியிருக்க, ஸ்திரீகளாகிய

நாங்கள் பக்தியோகத்தை யடைவதற்காக உம்மை எப்படி தர்சிப்போம்? க்ருஷ்ணன், வாஸுதேவர், தேவகீநந்தனர் (தேவகியின் புத்ரர்) கோவிந்தர் என்னும் திவ்ய நாமங்களுள்ளவரும், நந்தனென்ற கோபரு (யாதவர்)க்குப் புத்ரரும், தாமரைமலருடன் கூடிய நாபியுள்ளவரும், தாமரஸ புஷ்பமாலையுள்ளவரும், தாமரைமலர் போன்ற கண்கள், கால்கள் ஆகிய இவைகளுள்ளவருமான உமக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். ஏ! ப்ரபுவே! துஷ்டனாகிய கம்ஸனால் துன்பப்படுத்தப் பட்ட தேவகியை எப்படிக் காப்பாற்றினீரோ அப்படியே என்னையும் என்னுடைய புத்ரர்களையும் கூட்டங் கூட்டமாக ஆபத்துக்கள் வந்தாலும், அவைகளிலிருந்து ஸம்ரக்ஷிக்கிறீர் (தமக்கு மாதாவிடமிருக்கும் ப்ரீதியைக் காட்டிலும் என்னிடம் அதிக விச்வாஸமென்பது கருத்து) விஷம், அக்னி, ராக்ஷஸர்கள், அஸத்துக்களுடைய ஸபை, வனவாஸ கஷ்டம், ஒவ்வொரு யுத்தத்திலும் மஹாரதர்களாகிய பீஷ்மர் முதலியவர்களுடைய அஸ்த்ரங்கள், கடைசியாக அச்வத்ஸ்தாமாவின் ப்ரஹ்மாஸ்த்ரம் ஆகிய இவைகளிலிருந்து உம்மால் காப்பாற்றப்பட்டோம். மேலும் துர்யோதனனால் தூண்டப்பட்டு, எங்களை சபிப்பதற்காக வந்த துர்வாஸ மஹாமுனியை ஸகல ஜகத்துடன் திருப்தியடையச் செய்து அவரிடமிருந்தும் காப்பாற்றினீர். நீர் ஸகல ஜகத்திற்கும் குருவாயிருப்பவர், தங்களுடைய தர்சன மானது மோக்ஷத்தை கொடுக்கத்தக்கது, அப்போர்ப்பட்ட உம்முடைய தர்சனம் ஆபத்காலங்களில் கிடைப்பதால் அந்த விபத்து அடிக்கடி வந்தாலும் ஸம்மதம். மேலான குலத்தில் பிறந்திருப்பது, ஐச்வர்யம், சாஸ்த்ரங்களை படித்திருப்பது, அழகு ஆகிய இவைகளால் மிகுந்த கர்வமுள்ள புருஷன் உம்முடைய பெயரை உச்சரிக்க

மாட்டான். தரித்ரனாலேயே அந்த திவ்யநாமதேயம் இடைவிடாமல் சொல்லப்படும். (ஸம்பத் க்ஷேமத்திற்கு விரோதியென்று கருத்து) தங்களுக்கு பக்தர்களே பணம். முக்குணங்களின் வ்ருத்திகள் தங்களிடத்தில் ஸம்பந்தக்கிறதில்லை. நீர் ஆத்மாவிலேயே ரமிப்பவர்; சாந்தர்; மோக்ஷத்தைக்கொடுக்கும் ஸாமர்த்யமுள்ளவர்; இப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரஞ்செய்கிறேன். நீர் தேவகியின் புத்ரரானாலும், ப்ராகிருத சிசுக்கள் போன்றவரல்ல. உம்மைக் காலரென்றும், எல்லாவற்றிற் கும் ஈச்வரரென்றும்; ஆதியந்தமற்ற ப்ரபுவென்றும், எல்லாரிடத்திலும் ஸமமாக ஸஞ்சரிப்பவரென்றும் நான் நினைக்கிறேன். உமக்கு ஓரிடத்திலும் பக்ஷபாத மில்லை. ஜனங்கள் ஒருவருக்கு ஒருவர் சண்டை செய்வதற்கும் நீரே நிமித்தம்; வேறில்லை மேலும் சிலர் விரோதிகளென்றும். சிலர் மித்ரர்களென்றும் பேதபுத்தி உமக்கில்லை. நீர் மனுஷ்ய சரீரமெடுத்து அவர்கள்போல் அபினயஞ் செய்வதால் உம்மிடத்தில் பேதபுத்தி யிருப்பதாகத் தோன்றுகிறதேயொழிய உண்மையிலில்லை. (அனுக்ரஹத்தையாவது நிக்ரஹத் தையாவது செய்கிறதில்லை) தங்களுடைய அபிப்ராயம் ஒருவராலும் அறியமுடியாதது. ஜகத்ருபியாயிருக்கும் ப்ரபுவே! பிறப்பில்லாதவரும், ஒன்றையுஞ்செய்யாதவரும், பரமாத்மாவாக விருப்பவருமான நீர்,வராஹ(பன்றி) மாகியும், மத்ஸ்யமாகியும், வாமனராகியும் அவதரித்தீ ரென்பது பொருந்துமா? அது லோகத்தை அனுஸரித்ததேயொழிய உண்மையில் உமக்கு ஜன்மமில்லை. கோகுலத்தில் நந்தருடைய கிரஹத்தில், தயிர்பானையை உடைத்ததற்காக யசோதை, உம்மைக் கட்டுவதற்கு கயிற்றை எடுத்தாளல்லவா? அப்போது நீர் கண்களிலிருந்த மை கரையும்படி கண்ணீரைப்

பெருகிக் கொண்டு கலங்கிய கண்களுள்ளவராய்த் தலைகுனிந்து மிகவும் பயந்தவர் போல் அபினயஞ் செய்தீரல்லவா? அது எனக்கு மோஹத்தை யுண்டு பண்ணுகிறது. உண்மையில் ஜனனம், மரணம் முதலியவைகளும் உம்மிடமிருந்து பயப்படுகிறது. உம்முடைய சரிதம் ஜகத்திற்கு மோஹகரமாகையால் உம்முடைய ஜன்மங்களைப் பலவகையாய்ப் பெரியோர் கள் சொல்லுகிறார்கள். அதாவது "புண்ய ச்லோகராகிய யதுவின் கீர்த்தியை விருத்தி செய்வதற்காக அவருடைய வம்சத்தில், மலயபர்வதத்தை கௌரவப் படுத்துவதற்கு, அதில் சந்தனவிருக்ஷம் முளைத்தது போல் அவதரித்தீர்" என்று சிலர் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் "வஸுதேவர், தேவகி இவர்களால் ப்ரார்த்திக்கப்பட்டு உண்மையில் பிறப்பில்லாதவரானா லும், தேவ விரோதிகளை நாசஞ்செய்து இவ்வுலகத் திற்கு க்ஷேமத்தை யுண்டுபண்ணுவதற்காக தேவகியின் புத்ரராக அவதரித்தீர்" என்று கூறுகிறார்கள். மற்றுஞ் சிலர் "பூமியில் துஷ்டர்கள் அதிகமாயிருந்த படியால் மிகுந்த பாரத்தால் ஸமுத்ரத்தின் நடுவில் தத்தளிக்குங் கப்பல்போல் கஷ்டப்படும் பூமியின் பாரத்தை நிவர்த்திப்பதற்காக ப்ரஹ்மதேவருடைய வேண்டு கோளின்படி அவதரித்தீர்" என்று சொல்லுகிறார்கள் இன்னுஞ்சிலர் "ஆத்மாவின் ஆனந்த ஸ்வரூபத்தை யறியாமல் தேஹம் முதலியவைகளில் அபிமானம் வைத்துக் கர்மங்களைச் செய்துகொண்டு கஷ்டப்படும் ஜனங்களுக்கு மேற்காட்டிய துக்கத்தை நிவர்த்திக்க வேண்டி கேட்பதற்கும் ஸ்மரிப்பதற்கும் தகுதியான லீலைகளைச் செய்வதற்காக ஜன்மாவை அங்கீகரித்தீர்" என்கிறார்கள். எந்த ஜனங்கள் உம்முடைய சரிதத்தை பிறர்சொல்லக் கேட்கிறார்களோ, தம் வாக்கினால்

உச்சரித்து கானஞ்செய்கிறார்களோ, அடிக்கடி நினைக்கிறார்களோ, நினைத்து ஆனந்தப்படுகிறார்களோ, அவர்கள் பிறப்பு, இறப்பு ஆகிய இவைகளைப் போக்குகிற உம்முடைய பாதங்களை வெகு சீக்ரமாக அடைவார்கள்.

38–44. பக்தர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும் ப்ரபுவே! தங்களிடம் விசேஷ ப்ரியமுள்ளவர் களும், தங்களுக்கு வேலைக்காரர்களுமான எங்களை விட்டுப்போவது உசிதமல்ல துர்யோதனன் முதலிய அரசர்கள் நிமித்தமாக விசேஷ பாபங்கள் செய்த எங்களுக்கு உம்முடைய பாதாரவிந்தத்தைத் தவிர வேறு கதியில்லை. மேலும் இந்த்ரியங்களுக்கு அதிபதி யான ஜீவனில்லாத வரையில் எப்படி நாமரூபங்கள் பயன்படுகிறதில்லையோ அப்படி உம்முடைய ஸான்னித்யமில்லாத வரையில் யாதவர்களுடன் கூடிய பாண்டவர்களாகிய எங்களுடைய கீர்த்தியும், ஸம்பத்தும் பயன்படாதவைகளேயாம். மேலும், எங்களுடைய ராஜ்யத்திற்குட்பட்ட இந்த பூமியானது உம்முடைய பாதங்களிலுள்ள த்வஜரேகை, வஜ்ரரேகை, அங்குசரேகை முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு விளங்குகிறது. நீர் அப்புறம் போனால் இந்தப்பூமி பிரகாசிக்காது. உம்முடைய கடாக்ஷ வீக்ஷண்யத்தால் இந்த தேசத்தில் ஐச்வர்யம் விருத்தியடைகின்றன.செடி கொடி முதலியவைகள் நன்றாய் விருத்தியடைகின்றன. ஓ! ஜகத்பதியே! ஜகத்ரூபியாயிருப்பவரே! ஜகத்தில் அந்தர்யாமியாயிருப்பவரே! பந்துக்களான பாண்டவர் களிடத்திலும், விருஷ்ணிகளிடத்திலும் எனக்கிருக்கும் ஸ்நேஹ(அபிமான)மாகிய பந்தத்தை நிவர்த்தியும். ஓ! மதுரா நகரத்தரசனாகிய க்ருஷ்ணா! கங்கையின்

ப்ரவாஹமானது இடையில் நேரும் விக்னங்களை லக்ஷ்யஞ்செய்யாமல் ஸமுத்ரத்தையே யடைவதுபோல என்னுடைய மனஸும் வேறிடஞ்செல்லாது இடை விடாமல் உம்மையே பஜிக்கும்படி அனுக்ரஹிக்க வேண்டும். ஓ! க்ருஷ்ண! அர்ஜுனனுக்கு மித்ரரே! விருஷ்ணிகளுக்குட் சிறந்தவரே! பூமிக்குக் கெடுதி செய்யும் அரசர்களை நாசஞ் செய்பவரே! குறைவற்ற வீர்யமுள்ளவரே! ஏ கோவிந்த! (காமதேனுவின் ஐச்வர்யத்தை யடைந்தவர்) பசுக்கள், ப்ராஹ்மணர்கள், தேவர்கள் ஆகிய இவர்களின் உபத்ரவத்தை போக்கடிப் பவரே! யோகிகளுக்கு அதிபதியும், ஜகத்திற்கு குருவாயு மிருப்பவரே! பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன் என்று ஸ்தோத்ரம் பண்ணினாள்.

45–46. இந்தப்படி குந்திதேவியால் இனிமையான வாக்யங்களைக் கொண்டு ஸ்தோத்ரஞ் செய்யப்பட்ட பகவான் தம்முடைய ஸகல மஹிமைகளையும் வெளியிட்டு கொஞ்சம் சிரித்து, தமது மாயையால் அவளை ப்ரமிக்கச்செய்தார். பின்பு குந்தியின் ப்ரார்த் தனைப்படி "எப்பொழுதும் என்னிடத்திலுனக்கு ஸ்திரமாக பக்தி இருக்கட்டும்" என்று அனுக்ரஹித்து ஹஸ்தினாபுரஞ் சேர்ந்து அவ்விடத்தில் ஸுபத்ரை முதலிய ஸ்த்ரீகளுக்கு சொல்லிக்கொண்டு தமது பட்டணத்திற்குப் போக முயற்சித்தார். அப்பொழுது இவ்விடத்தில் தாங்கள் சிலகாலம் வஸிக்கவேண்டும் என்று தர்மபுத்ரர் அன்புடன் கேட்டுக்கொள்ள, பகவானும் அதை அங்கீகரித்து அவ்விடத்தில் வஸித்தார்.

47–53. பிறகு பகவானுடைய அபிப்ராயத்தை

அறியாத வ்யாஸமஹர்ஷி முதலியவர்களாலும், அத்புதகார்யங்களைச் செய்யும் க்ருஷ்ண பகவானாலும், பலவகையான இதிஹாஸங்களை கொண்டு தர்மபுத்ரர் ஸமாதானஞ் செய்யப்பட்டும் அதனால் அவருக்கு துக்கம் நீங்கவில்லை. ஓ ப்ராஹ்மணர்களே! தர்ம புத்ரர் யுத்தத்தில் இறந்துபோன பந்துக்களையே நினைத்து, அவிவேகமுள்ளவராய் அபிமானம், மோஹம் என்னும் இவைகளுக்கு வசப்பட்டு பின்வருமாறு சொல்லலானார். 'துராத்மாவாகிய என்னுடைய மனத்தில் ஸ்திரமாயிருக்கும் அறியாத்தன்மை மிகவும் ஆச்சர்யப்படத்தக்கது. நாய், நரி முதலியவைகளுக்குச் சொந்தமான இந்த சரீரத்திற்காக அனேக அக்ஷௌஹிணி ஸைன்யங்களைக் கொன்றேன். பாலர்கள், ப்ராஹ்மணர்கள், மித்ரர்கள், பிதிருவ்யர்கள், ஸஹோதரர்கள், குரு ஆகிய இவர்களுக்கு த்ரோஹஞ்செய்த நான், அனேகவர்ஷங்கள் பாபத்தின் பலனாகிய நரகத்தை அனுபவித்தாலும் ஒருபொழுதும் மோக்ஷத்தையடையப் போகிறதில்லை.யுத்தத்தில் சத்ருக்களைக் கொல்வது அரசர்களுக்கு தர்மமேயொழியப் பாபமில்லை' என்று சாஸ்த்ரத்தில் சொல்லியிருப்பது என் விஷயத்தில் பொருந்தாது. ஏனென்றால் 'அரசன் தன்னுடைய ப்ரஜைகளுக்கு, சத்ருக்களால் உபத்ரவம் நேரிடும்போது, அவர்களைக்கொல்வது ந்யாயம்' என்பது சாஸ்த்ரத்தி னுடைய தாத்பர்யம். துர்யோதனனால், ப்ரஜைகள் காப்பாற்றப்பட்டு ஸுகமாய் வஸிக்கும்போது ராஜ்யமடையவேண்டுமென்ற ஆசையால் மாத்ரம் நான் சண்டைசெய்து பந்துக்களைக் கொன்றேனாகையால், என் புத்திக்கு ஸமாதானமாகவில்லை இப்படிப் புருஷர்களைக்கொன்றதால் அவர்களுடைய பந்துக்களான ஸ்த்ரீகளுக்கும் நான் த்ரோஹஞ் செய்தவனாகிறேன்.

இந்தப் பாபம் க்ரஹஸ்தாச்ரமத்தில் செய்யக்கூடிய ஸத்கர்மங்களால் நிவர்த்தித்துக் கொள்ளமுடியாது. அநேக ப்ராணிகளை (அறியாத்தன்மையால்) கொன்ற தால் நேர்ந்த இந்த பாபத்தை புத்தி பூர்வமாகச் செய்யும் ஹிம்ஸையுள்ள யாகத்தால் நிவர்த்திசெய்து கொள்ளவும் முடியாது. 'கலங்கிய ஜலத்தால் கலங்கிய ஜலத்தை சுத்தப்படுத்த முடியுமா? மத்யத்தால் உண்டான அசுத்தியானது, மத்யத்தால் நிவர்த்தி யாகுமா?' என்று பலவாறாகத் துக்கித்தார்.

நோட்டு

பயத்தை–மிருத்யுவிற்கு வசப்பட்டிருக்கும் மனிதனால் மற்றொருவனை மிருத்யுவினிடமிருந்து காப்பாற்ற முடியாதென்று கருத்து– வீர. அறியாத– பீஷ்மர் மரணமடையப் போகிறார், அதற்காக எல்லோரும் கங்கையின் கரைக்குச் செல்லவேண்டும், அவ்விடத்தில் அவரிடமாக தர்மங்களைக் கேட்கச்செய்து அதனால் தர்மபுத்ரருடைய துக்கத்தைப் போக்கவேண்டுமென்பது பகவானுடைய அபிப்பிராயம்.– ஸ்ரீ த. அக்ஷௌஹிணி– ரதங்கள் 21870, யானைகள் 21801, குதிரைகள் 65610, காலாட்கள் 109350 யாகத்தால்– "எவன் அச்வமேதஞ் செய்து பகவானை பூஜிக்கிறானோ அவன் ப்ரஹ்மஹத் யை முதலிய பாபங்களிலிருந்து விடுபடுகிறான்" என்று ச்ருதியில் சொல்லப்பட்டிருந்தாலும் என்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–9

பீஷ்மர் தர்மம் உரைத்தது.

இப்படி தர்மபுத்ரர் "பந்துக்களுக்கு த்ரோஹஞ் செய்தோமே" என்று பயந்து ஸகல தர்மங்களையும் தெரிந்துகொள்ள விரும்பி பீஷ்மர் வஸிக்கும் குருக்ஷேத்ரம் சென்றார்.

ப்ராஹ்மணர்களே! அப்பொழுது அவருடைய தம்பிகளும், பகவானும், வ்யாஸரும், தௌம்யர் முதலானவர்களும், உத்தமமான குதிரைகள் பூட்டிய ரதங்களிலேறிக்கொண்டு அவர்பின் சென்றார்கள். மேலும் ஸ்ரீ க்ருஷ்ணபகவானும் அர்ஜுனருக்கு ஸாரத்யம் செய்துகொண்டு சென்றார். அவர்களுடைய நடுவில் அந்தத் தர்மபுத்ரர் குஹ்யகர்களால் சூழப்பட்ட குபேரன்போல ப்ரகாசித்தார்.

4–8. அவ்விடத்தில் ஸ்வர்க்கத்திலிருந்து விழுந்திருக்கும் தேவரைப்போல், பூமியில் கிடக்கும் பீஷ்மரைக்கண்டு, பாண்டவர்களும், அவர்களுடைய பரிவாரங்களும், ஸ்ரீ க்ருஷ்ணபகவானும், அவருக்கு நமஸ்காரஞ் செய்தார்கள். அந்த ஸமயத்தில் ஸகல ப்ரஹ்மர்ஷிகளும், சிறந்த தேவர்ஷிகளும், ராஜர்ஷிகளும், அந்தப்பீஷ்மரைப் பார்ப்பதற்காக வந்து கூடினார்கள். மேலும், பர்வதர், நாரதர், தௌம்யர், வ்யாஸபகவான், ப்ரஹதச்வர், பரத்வாஜர், அவருடைய சிஷ்யர்கள், ரேணுகையின் புத்ரராகிய பரசுராமர், வஸிஷ்டர், இந்த்ரப்ரமதர், ச்ருதர், கிருதஸ்மதர், அஸிதர், நக்ஷீவான், கௌதமர், அத்ரி, விச்வாமித்ரர்,

ஸுதர்சனர், காச்யபர், ப்ரஹஸ்பதி, சுகர் முதலிய நிர்மல ஸ்வபாவமுள்ள மற்றவர்களும் தங்கள் தங்கள் சிஷ்யர்களுடன் அவ்விடமே வந்துசேர்ந்தார்கள்.

9–24. தேசத்தையும் காலத்தையும், நன்றாக அறிந்த பீஷ்மர் வந்தவர்களைத் தனியே தெரிந்துகொண்டு மிக்க பாக்யசாலிகளான மஹர்ஷிகளைப் பூஜித்தார். மேலும் ஸமீபத்தில் உட்கார்ந்திருப்பவரும், ஜகதீசரும், மாயையால் சரீரமெடுத்தவருமான ஸ்ரீ க்ருஷ்ண பகவானைப் பார்த்து, அவருடைய மஹிமையை அறிந்தவராகையால், அவரை ஹிருதயத்தில் வைத்து அர்ச்சித்தார். பின்னும் அவர் மிகுந்த வணக்கத்தோடும் ப்ரேமையோடும், பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் பாண்டவர்களைப் பார்த்து அபிமானத்தால் கண்ணீரைப் பெருக்கி அதனால் கண் தெரியாதவராய்ப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினார். "ஏ தர்மபுத்ர! நீங்கள் ப்ராஹ்மணர்களையும் தர்மத்தையும், ஸ்ரீ க்ருஷ்ண பகவானையும் ஆச்ரயித்தவர்களாகவிருந்தும் கஷ்டப்பட்டு ஜீவிப்பது ந்யாயமல்ல இது வெறுக்கக் கூடிய கார்யம். உங்களுடைய பிதாவும் அதிரதருமாகிய பாண்டு மரணமடைந்த பிறகு உங்களுடைய மாதாவாகிய குந்திதேவி பால்யவயதுள்ள குழந்தைகளுடன் அடிக்கடி மிகுந்த கஷ்டத்தை அனுபவித்தாள். மேகங்கள் வாயுவுக்கு வசப்பட்டிருப்பதுபோல, ஜனங்கள் காலத்திற்கு வசப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் உங்களுக்கு நேர்ந்த கஷ்டங்கள் யாவும் அந்தக் காலத்தால் செய்யப்பட்டவைகளேயாம். எந்த பக்ஷத்தில் அரசனாகிய தர்மபுத்ரரும், கதாயுதத்தைக் கையில் பிடித்த பீமஸேனனும் காண்டீவமென்னும் வில்லையுடைய அர்ஜுனனும் இருக்கிறார்களோ, மேலும்

அவர்களுக்கு க்ருஷ்ணபகவான் மித்ரரோ அவ்விடத்திலும் ஆபத்துநேரிட்டதென்பது காலத்தின் மஹிமையேயாம்:

இதோ இருக்கும் க்ருஷ்ண பகவானுடைய எண்ணத்தைத் தெரிந்துகொள்ள ஒருவராலும் முடியாது. கவிகளும், யோகிகளும், இவருடைய ஸ்வரூபத்தை அறிய விரும்பியும், அதை அறியாமல் மோஹிக்கிறார்கள். ஏ! தர்மபுத்ரரே! மேற்சொல்லிய காரணத்தால் 'இவையாவும் ஈச்வரனுக்கு வசப்பட்டவை என்று நிச்சயித்து அந்த ஈச்வரனை அனுஸரித்து அனாதர்களான ப்ரஜைகளைக் காப்பாற்றும்; ஸிருஷ்டிக்கு முந்தியிருந்த புராண புருஷராகிய பகவான் இவர்தான். இவரே நாராயணன் ஆனாலும் தம்முடைய மாயையால் லோகத்தை ப்ரமிக்கச் செய்து கொண்டு (தன் ஸ்வரூபத்தைக் காட்டாமல்) விருஷ்ணிவம்சத்தில் ப்ரகாசிக்கிறார். இவருடைய மஹிமை மிகவும் ரஹஸ்யமானது; அதனைப் பகவானாகிய பரமசிவனும், தேவர்ஷியாகிய நாரதரும், கபிலருமே அறிவார்கள். நீங்கள் இவரை அம்மானுடைய பிள்ளை (அம்மான் சேய்) என்றும் உங்களுடைய இஷ்டப்படி நடப்பவரென்றும், பிரதி உபகாரத்தை எதிர்பாராமல் உபகாரஞ்செய்பவர் என்றும், நினைத்து அவரை மந்த்ரியாகவும், தூதராகவும், ஸாரதியாகவும், ஸ்நேஹவிசேஷத்தால் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அப்படி நினைப்பது அறியாத்தன்மையே. ஸகல ஜகத்ருபியும், ஸமமாயிருப்பவரும், ஒருவராய் விளங்குபவரும், அஹங்காரமில்லாதவரும், ஆசை முதலியவைகளில்லாதவருமான, இந்தப் பகவானுக்கு மேலான கார்யமென்றும், கீழான கார்யமென்றும், தகுதியுடையது

என்றும், வேறுபாடு தோன்றுகிற பேதபுத்தி ஒரிடத்திலும் உண்டாகிறதில்லை. ஆனாலும் இடைவிடாமல் பக்தி செய்பவர்களிடத்தில் இவருக்கு க்ருபை உண்டாகிறது. இப்போது நான் உயிரைவிடஸித்தனாயிருக்கையில், ஸ்ரீ க்ருஷ்ணபகவான் எனக்கு தர்சனங் கொடுப்பதற்காக நேரில் இவ்விடம் வந்திருக்கிறார். ஆகையால் இடைவிடாமல் பக்திசெய்பவர்களிடத்தில் பகவானுக்கு உண்டாகும் க்ருபையை பாருங்கள். மனிதனானவன் தன்னுடைய மனதை பகவானிடத்தில் பக்தியுடன் செலுத்தியும் அவருடைய பெயரையே வாக்கினால் உச்சரித்துக்கொண்டும் சரீரத்தைவிடுவானாகில் அவன் காமங்களாலும் கர்மங்களாலும் பாதிக்கப்படமாட்டான் ஆகையால் தேவர்களுக்கும் தேவரும், சிரிப்பினாலும், சிவந்தகண்களாலும், அழகான முகமுள்ளவரும், த்யானத்திற்கு விஷயமானவரும், நான்கு கைகளுள்ளவருமான பகவான் நானிந்த சரீரத்தை விடுகிறவரையில் என் முன்பு இருக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

25. இதனைக்கேட்டு தர்மபுத்ரர் சரதல்ப (ப்ராணப் படுக்கை)த்தில் படுந்துக் கொண்டிருக்கும் பீஷ்மரை நோக்கி மற்ற மஹர்ஷிகள் கேட்டுக்கொண்டிருக்கும் போது பலவகையான தர்மங்களைச் சொல்லவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

26–28. ஸகல தர்மங்களையு மறிந்தவராகிய பீஷ்மர் மனுஷ்ய ஜாதிக்குப் பொதுவானவைகளும், வர்ணாச்ரமங்களுக்கு உரியவைகளும், வைராக்ய ஸம்பந்தத்தால் ஏற்படும் நிவிருத்தி ரூபமாயும் ஆசையின் ஸம்பந்தத்தால் ஏற்படும் ப்ரவிருத்தி ரூபமாயுமுள்ள

தர்மங்களையும், ராஜதர்மங்கள், தானதர்மங்கள், மோக்ஷதர்மங்கள், ஸ்த்ரீதர்மங்கள், பகவத்தர்மங்கள், ஆகிய இவைகளையும், தனித்தனியாகப் பிரித்துச் சுருக்கமாகவும், விஸ்தாரமாகவும் சொன்னார். மேலும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்களையும், அவைகளை அடைவதற்கு தகுந்த உபாயங்களையும், அனேக இதிஹாஸங்களிலும், உபாக்யானங்களிலும் சொல்லியபடி வர்ணித்தார்.

29–31. இப்படி தர்மங்களை யுபதேசித்துக் கொண்டிருக்கும்போது உத்தராயணம் வந்தது. இஷ்டப்படி மரணமடையச் சக்தியுள்ள யோகியாகிய பீஷ்மரால் தமது மரணத்திற்காக எதிர்பார்க்கப்பட்டிருந்த காலம் இதுவேயாம். அப்பொழுது ஆயிரம் ரதிகர்களைக் காப்பாற்றும் வல்லமையுள்ள பீஷ்மர் மௌனமாக (வார்த்தைகளை அடக்கிக்கொண்டு) ஆதிபுருஷரும், பீதாம்பரத்தை ,தரித்தவரும், நான்கு கைகளுள்ளவரும் எதிரில் உட்கார்ந்திருப்பவருமாகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் ஸகல ஆசைகளையும் ஒழித்து சுத்தமாக விருக்கும் மனத்தை கண்களை மூடிக் கொள்ளாமலேயே செலுத்தினார். மேலும் அவருக்கு இம்மாதிரி பரிசுத்தமாகிய த்யானவிசேஷத்தால் அசுபங்கள் விலகின. பகவானுடைய கருணைநிறைந்த பார்வையால் ஆயுதங்களாலுண்டாகிய காயங்களும் அவற்றின் உபத்திரவமும் நீங்கின. சகல இந்திரியங்களும் பலவிடங்களில் செல்லாமல் ஒருவழிப்பட்டன. பின்னும் ஸாத்வதர்களுக்குட் சிறந்தவரும், ஒப்பற்ற மஹிமையுள்ளவரும் தம்முடைய ஸ்வரூபமான பரமானந்தத்தை யடைந்தவரும், ஸிருஷ்டிக்குக் காரணமாகிய ப்ரகிருதியின் ஸம்பந்தத்தை சிலகாலம் லீலையாக அங்கீகரிப்பவருமான பகவானிடத்தில்

ஒருவித ஆசையுமில்லாத தமது புத்தியைச் செலுத்தினார். இப்படி எல்லாவகையிலும் பகவத் பரராயிருந்து சரீரத்தை விடுகிறவரையில் ஸ்ரீ கிருஷ்ணனை பின்வருமாறு ஸ்தோத்ரஞ் செய்யலானார்.

32–35. "மூவ்வுலகத்திலும் மிகுந்த அழகுள்ளதும், பச்சிலை போல் நீலவர்ணமுள்ளதுமான திவ்யசரீரத்தை யடைந்தவரும், ஸூர்ய கிரணம்போல் பொன்னிறமான வஸ்த்ரத்தை தரித்தவரும், நான்குபுறத்திலும் தொங்கும் சிறந்த தலைமயிர்களால் அழகான முகமுள்ளவரும். அர்ஜுனனுக்கு தோழருமான பகவானிடத்தில் பலனையுத்தேசியாமல் எனக்கு ஸ்திரமான பக்தியுண்டாகட்டும். மேலும் யுத்தத்தில் அர்ஜுனனுக்கு ஸாரத்யஞ் செய்யும்போது குதிரைகள் ஓடியதால் பூமியிலிருந்து கிளம்பிய தூளிகள் எவருடைய தலைமயிரில் படிந்தனவோ, எவருடைய முகம் அப்படிப்பட்ட மயிர்களோடு கூடிய வேர்வை ஜலத்துளிகளால் அலங்கரிக்கப்பட்டதோ, எவருடைய கவசம் என்னுடைய பாணங்களால் மூடப்பட்டு ப்ரகாசித்ததோ, அந்த கிருஷ்ண பகவானிடத்தில் என்னுடைய மனஸானது ரமிக்கட்டும்; பின்னும் எந்த பகவான் தம்முடைய ஸ்நேஹிதனாகிய அர்ஜுனனுடைய வார்த்தையின்படி இரண்டு பக்கத்து ஸைன்யங்களுடைய நடுவில் ரதத்தைச்செலுத்தி சத்ரு ஸைன்னியத்திலிருப்பவர்களனைவரையும் 'இவர் த்ரோணர், இவர் பீஷ்மர், இவர் க்ருபர்' என்று சுட்டிக்காட்டிப் பார்வையாலேயே அவர்களுடைய ஆயுஸைக்குறைத்து, அதனால் அர்ஜுனனுக்கு ஜயத்தை யுண்டுபண்ணினாரோ. அந்த கிருஷ்ணனிடத்திலேயே என் மனம் ஸந்தோஷமடையட்டும்.

36–42. அர்ஜுனன் சத்ரு ஸைன்யத்தில் யுத்தத் திற்கு ஸன்னத்தனாயிருந்த, நான் முதலிய் பந்துக்களைப் பார்த்து இவர்களைக் கொல்வதால் பாபம் நேரிடுமென்ற எண்ணத்துடன் யுத்தஞ்செய்வதில் ஆசையில்லாதவனாக விருக்கும்போது, அவனுக்கு ஆத்மவித்யை யுபதேசித்து, அந்த எண்ணத்தை எவர் மாற்றினாரோ, அந்த பரமபுருஷனுடைய பாகங் களையே என் மனஸ்த்யானிக்கட்டும்; மேலும் ஸ்ரீ கிருஷ்ணன் ஆயுதமெடுக்காமல் யுத்தத்தில் ஒத்தாசை செய்வதாகப் பாண்டவர்களுக்கு ப்ரதிஜ்ஞை செய்தவரானாலும், ஸ்ரீ கிருஷ்ணனை ஆயுதமெடுக்கச் செய்கிறேன் என்று என்னால் செய்யப்பட்ட ப்ரதிஜ் ஞையை நிறைவேற்றுவதற்காக, அர்ஜுனனுடைய ரதத்தைவிட்டுக் கீழே இறங்கி சக்ராயுதத்தை எடுத்துக் கொண்டு யானையைக்கொல்வதற்கு சிங்கம்வந்தாற் போல பூமி அசையும்படியாகவும். மேல்வஸ்த்ரந்தவறி விழும்படியாகவும் வெகு வேகமாயோடி வந்தார். அப்பொழுது நான் சிரித்துக்கொண்டு அவரை பாணங்களாலடித்தேன். அதனால் அவருடைய கவசம் உடைந்தது; சரீரமுழுவதும் ரக்தத்தால் நனைந்தது. அப்பொழுது அர்ஜுனனால் தடுக்கப்பட்டும் அவனை மீறிக்கொண்டு என்னைக் கொல்வதற்காக ஓடிவந்தார். அந்தப் பகவானாகிய முகுந்தரே எனக்குக் கதி. பின்னும் அவர் ஒரு வகையில் குதிரையோட்டுங் கோலையும். மற்றொருகையில் குதிரைகளின் கடிவாளங்களையும் பிடித்து ஸாரதி வேஷம்பூண்டு, அனேக அகார்யங்களைச் செய்தாவது அர்ஜுனனுடைய ரதத்தைக் காப்பாற்றிக்கொண்டிருந்தார். இந்த பகவானைத் தர்சித்ததால் சண்டையில் அடிபட்டு

மரணமடைந்தவர்களனைவரும் பகவத் ஸாரூப்யத்தை அடைந்தார்கள். ஆகையால் மரணமடையும் தசை யிலிருக்கும் என்னுடைய சித்தம் இந்தப் பரம புருஷனிடத்தில் கலந்திருக்கட்டும். மேலும் அழகான நடை, லீலை, சிரிப்பு, ஸ்நேஹமான பார்வை இவை களால் கௌரவப்படுத்தப்பட்டவர்களும், பகவானிடத் திலேயே ஸதா மனதைச் செலுத்தி அவரால் செய்யப்பட்ட லீலைகளை அனுஸரிப்பவர்களுமான கோபஸ்த்ரீகள் வேறு விஷயத்தில் சித்தமில்லாதவர்களாக பகவத் ஸ்வரூபமாகிய பரமானந்த ரூபத்தை யடைந்தார்கள். ஆனதுபற்றி அவரிடமே என்னுடைய சித்தம் வஸிக்கவேண்டும். தவிரவும் தர்மபுத்ரர் ராஜஸூய யாகஞ் செய்தபோது, அநேக முனிவர்களாலும், அரசர்களாலும் நிறைந்த யாகசஸையின்நடுவில் இந்த கிருஷ்ணபகவான் எல்லாராலும் பார்க்கக்கூடிய அத்புத சரீரமுள்ளவராய்ப் ப்ரகாசித்ததுமல்லாமல் எல்லாருக்கும் முந்தி பூஜிக்கப்பட்டார். அந்த புருஷோத்தமனாகிய இவர் என்னுடைய கண்களுக் கெதிரில் ப்ராகாசிக்கிறார். எனக்கு மிகுந்த பாக்யம் கிடைத்தது. இது மிகுந்த ஆச்சர்யம். காற்றானது மூங்கிலை எரிப்பதற்கு அக்னியை யுண்டு பண்ணுவது போல எந்தப்பகவான் பூமியின் பாரத்தைத் துலைப் பதற்காக கௌரவர்களுக்கு இந்த்ரிய சாபல்யத்தை யுண்டுபண்ணினாரோ, பக்தர்களுடைய உபத்ரவத்தை நிவர்த்திக்கும் பாதங்களை யுடையவரும், எதிரிலிருப் பவருமான பகவானை ஹிருதயத்தில் வைத்துக் கொண்டு இந்த மனித சரீரத்தை விட்டுவிடுகிறேன்.

43. ஸூர்யன் ஒருவனானாலும் பார்ப்பவர்களுடைய கண்களின் தோஷத்தால் பலவகையாகத் தோன்றுகிறது

போல பகவான் ஒருவரானாலும், தன்னால் ஸிருஷ்டிக்கப் பட்ட ஒவ்வொரு ப்ராணிகளின் ஹிருதயத்திலும் வெவ்வேறாகத் தோற்றுகிறார். இதற்கு அவித்யையே காரணம் (அதிஷ்டான பேதத்தால் பேதமேயொழிய உண்மையில் பேதமில்லை என்பது கருத்து) என்று தெரிந்துகொண்டேன். பேதபுத்தியும், மோஹமும் நாசமாயின. ஆதியந்தமில்லாத ஆத்ம ஸ்வரூபத்தை அவருடைய கிருபையால் நன்றாய் தெரிந்து கொண்டேன். தன்யனாகிவிட்டேன் என்றார்

44–48. இப்படிச்சொல்லிவிட்டு மனோவ்யாபாரம், வாக்வாயாபாரம், கண்களின் வ்யாபாரம் ஆகிய இவைகளை கிருஷ்ணனிடத்தில் செலுத்தி ச்வாஸத்தை அடக்கி பரமாத்மாவிடம் லயித்தார். அப்பொழுது அவ்விடமிருந்து எல்லோரும் பீஷ்மரானவர் உபாதி ஸம்பந்தமில்லாத பரப்ரஹ்மமாக ஆனதைக்கண்டு ஸாயங்காலத்துப் பறவைகள்போல் மௌனமாய் இருந்தார்கள். அப்பொழுது தேவர்களும், மனிதர்களும் துந்துபி வாத்யங்களை முழக்கினார்கள். அங்கிருந்த அரசர்களுக்குள் ப்ரஹ்மிஷ்டர்கள் ச்லாகித்தார்கள். ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி பெய்தது. பரமாத்ம ஸ்வரூபத்தையடைந்த அந்த பீஷ்மருக்கு உத்ரக்ரியை களை தர்மபுத்ரர்செய்து ஸ்வல்பகாலம் துக்கித்தார் அப்பொழுது மஹர்ஷிகள் மிகுந்த ஸந்தோஷத்துடன் பகவானுடைய ரஹஸ்யமாகிய பெயர்களைச்சொல்லி கிருஷ்ணனை ஸ்தோத்ரம்பண்ணி அவரையே த்யானஞ் செய்துகொண்டு தங்களுடைய ஆச்ரமஞ் சென்றார்கள்.

49–50. பிறகு தர்மபுத்ரர் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடன் ஹஸ்தினா பட்டணம் போய் புத்ரசோகத்தால் துக்கிக்கும் காந்தாரியையும்

த்ருதராஷ்ட்ரராலும், ஸ்ரீ வாஸு தேவராகிய பகவானாலும் அனுமோதிக்கப்பட்டு வம்சபரம் பரையாய் கிடைத்த ராஜ்யத்தை தர்மமாகப் பரிபாலித்தார்.

நோட்டு

தேசத்தை– தான் பாணங்களின் மீது படுத்திருப்பதனால் எதிர்கொண்டழைப்பதற்கும், நமஸ்கரிப்பதற்கும் இது ஸமயமல்லவென்று மனத்தால் பகவானை பூஜித்தார். மித்ரரோ– ஸ்ரீ கிருஷ்ணன் பாண்டவர்களுக்கு மித்ரராயிருந்து காலத்தையே அனுஸரித்திருந்தார் என்று காட்டப்பட்டிருக்கிறது. "த்ரவ்யம், கர்மம், காலம், ஸ்வபாவம், ஜீவனம் ஆகிய இவைகள் பகவானுடைய அனுக்ரஹத்தால் கிடைக்கின்றன. அவருடைய அனுக்ரஹமில்லாதவரையில் மேற்சொல்லியவைகள் மனிதனுக்குக் கிடைக்கலாம்"– வீர. முந்தியிருந்த– ஜகத் ஸிருஷ்டிக்குமுன் ஸத்தாகவே இருந்தது. நாராயணன் ஒருவரே இருந்தார்"– ச்ருதி. பகவான்– பகவான் புருஷன் என்ற சப்தங்கள் சாச்வதராகிய வாஸுதேவரையே குறிக்கின்றன" "ஓ! மைத்ரேய! பகவான் என்ற சப்தமானது பரப்ரஹ்ம மாகிய வாஸுதேவரைச் சொல்லுகிறதேயொழிய மற்றவைகளைச் சொல்லுகிறதில்லை" ஸ்ரீத– ஒருருவாய்– இந்த ஜகத்தில் பரமாத்மாவைக் காட்டிலும் வெவ்வேறான வஸ்துக்களில்லை. அனேக வஸ்துக்களி ருப்பதாகப் பார்ப்பவன் ஸம்ஸாரத்தை யடைகிறான்" எப்பொழுது இவனுக்கு எல்லாம் ஆத்மஸ்வரூபமாகத் தோற்றுகிறதோ அப்பொழுது எதைக் கொண்டு எதைப் பார்க்கப்போகிறான்– நான்கு கை– பீஷ்மருக்கு

நான்கு கைகளுள்ளதாக பகவத் ஸ்வரூபம் ப்ரகாசித்தது. வீர– ஒப்பற்ற மஹிமை– எந்த நிலமையில் வேறுவிஷயத்தைப் பார்க்கமாட்டானோ வேறு விஷயத்தைக் கேட்கிறதில்லையோ அதுவே பூமா எனப்படும்" "மேலும் கீழும் முன்னும் பின்னும் இருபக்கங்களிலும் அவரே இருக்கிறார். காணப்படும் ஜகத் முழுமையும் அவரே" என்ற ச்ருதிகளில் சொல்லிய அனுப்ரவேசஞ் செய்தார். ஒருவராகவிருக்கும் பரமாத்மாவை பலவகையாக நினைக்கிறார்கள்"– ச்ருதி. லயித்தார்– பீஷ்மர் ப்ரஹ்மத்தினிடம் பேதமில்லாமல் கலந்து விட்டாரென்று அர்த்தங் கொள்ளக்கூடாது. "அப்பொழுது ஸத்துடன் சேருகிறான்" என்று ச்ருதியில் சொல்லியபடி ஸம்பந்தித்தார் என்றே அர்த்தம். மேற்காட்டிய ச்ருதியிலும் அபேதமாகக் கலக்கிறான் என்றே சொல்லப்பட்டிருப்பதாய் அர்த்தங்கொள்வோமானால் ஸுஷுப்தியில் பரமாத்மாவிடம் கலந்து ஒன்றாக ஆன ஜீவன் மறுபடி பிரிய ந்யாயமில்லை. மேலும்– அந்தக்கரணரூபமாகிய உபாதி நாசத்தால் அபேதத்தை யடைந்த ஜீவன் விழித்துக்கொள்ளும்போது மேற் காட்டிய உபாதி ஸம்பந்தத்தையடைந்து பரமாத்மா வினிடமிருந்து பிரிகிறான் என்று சொல்லுவதும் பொருந்தாது. மனது ப்ராணனாகிய ப்ரஹ்மத்தினிடம் பறவைபோலக் கட்டுப்பட்டிருப்பதாகச் சுருதியில் சொல்லியிருப்பதால் லயிக்கிறதில்லை– சந்த்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–10

ஸ்ரீ க்ருஷ்ணன் த்வாரகை சென்றது.

இதனைக்கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஓ! ஸூதரே! தர்மசிந்தனையுள்ளவர்களுக்குள் சிறந்த வராகிய தர்மபுத்ரர் ராஜ்யத்தில் ஆசைப்பட்டு யுத்தத்திற்கு வந்தவர்களான துர்யோதனன் முதலிய வர்களைக் கொன்று, தம்முடைய தம்பிகளுடன் ராஜ்யத்தை அடைந்து, மிகுந்த போகங்களை யனுபவித்து ராஜ்யத்தை எப்படி பரிபாலித்தார்? பிறகு எதனைச் செய்தார்? அதைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

2–3. அதைக்கேட்ட ஸூதர் சொல்லத் தொடங்கினார். குரு வம்சமாகிய வனமானது அதிலிருந்து உண்டான கோபமாகிய அக்னியால் எரிக்கப்பட்டபோது, ஸம்ஸார்த்தை விருத்தி செய்பவ ராகிய பகவான் அதை மறுபடியும் முளைக்கச்செய்து (பரீக்ஷித்தைக் காப்பாற்றி) தர்மபுத்ரருக்கு ராஜ்யத்தைக் கொடுத்து மிகுந்த ஆனந்தத்தை யடைந்தார். பின்பு, பீஷ்மருடைய வார்த்தைகளைக் கேட்டதாலும், ஸ்ரீ க்ருஷ்ணனுடைய உபதேசத்தாலும், தர்மபுத்ரருக்கு 'நான் செய்கிறவன்' 'பலனை யனுபவிக்கிறவன்' என்ற மோஹம் நீங்கியது 'ஜகத்தானது பரமேச்வராதீனமே யொழிய ஸ்வதந்த்ரமுள்ளதன்று என்று ஞானமுண்டா யிற்று. அப்படிப்பட்ட தர்மபுத்ரர் நாசமற்றவரான பகவானை மஹேந்த்ரன்போல ஆச்ரயித்து, ஸமுத்ரத் திற்குட்பட்ட பூமியைத் தம்முடைய தம்பிகளுடன் பரிபாலித்தார்.

4–6. ஒருவரிடத்திலும் விரோத புத்தியில்லாத வராகிய தர்மராஜன் அரசு புரிந்து வரும் நாளில் காலத்தில் மழைபெய்தது; பூமியானது ஜனங்களுக்கு வேண்டிய வஸ்துக்களை யுண்டுபண்ணிற்று; பெரிய மடியுள்ள பசுக்கள் பாலால் கொட்டில் முழுவதையும் நனைத்தன. ஆறுகள் பூரணப்ரவாஹ முள்ளவைகளாகி, வயல்களுக்கு ஜலத்தைக்கொடுத்துப் பயிர்களை விருத்திசெய்து வந்தன. ஸமுத்ரம் முத்து முதலிய ரத்னங்களை விசேஷமாக உண்டுபண்ணிற்று. மலைகள் மனோசிலை முதலிய தாதுக்களை விருத்திசெய்தன. எல்லா ருதுக்களிலும் கொடிகள், மரங்கள் ஆகிய இவைகள் பழங்களாலும், புஷ்பங்களாலும் நிறைந் திருந்தன. நெல், பயறு, கடலை, கோதுமை முதலிய தான்யங்களை அவ்வவற்றின் பயிர்கள் விருத்திசெய்தன. மேலும் மனோவ்யாதி, சரீரவ்யாதி, குளிர்ச்சி, உஷ்ணம் இவைகளால் நேரிடும் உபத்ரவம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம், ஆத்யாத்மிகம் ஆகிய முவ்வகை தாபங் களும் ஜனங்களுக்கு ஒருபோதும் நேரிடவேயில்லை.

7–18. அப்பொழுது ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தியானவர், ஹஸ்தினா பட்டணத்தில் சில மாஸங்கள் வஸித்துத் தம்முடைய மித்ரர்களின் துக்கத்தை நிவர்த்தித்து, ஸஹோதரியான ஸுபத்ராதேவிக்கு அதிக ப்ரியத்தை யுண்டுபண்ணி, பின்பு தர்மபுத்ரரைத் தழுவி நமஸ்கரித்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு ரதத்திலேறினார். அப்பொழுது சிலர் பகவானை ஆலிங்கனம் செய்ய நமஸ்கரித்தார்கள். இப்படி பகவான் த்வாரகைக்குப் போக, முயற்சித்ததைப் பார்த்து, ஸுபத்ரை, த்ரௌபதி, குந்தி, உத்தரை, விதுரர், தர்மபுத்ரர், த்ருதராஷ்ட்ரர், யுயுதஸு

(த்ருதராஷ்டருக்கு வைச்யஸ்த்ரியினிடம் பிறந்தவர்) கிருபர், நகுல, ஸஹதேவர்கள், பீமஸேனர், தௌம்யர் முதலாகிய எல்லோரும் பகவானைவிட்டுப் பிரிந்திருப் பதை ஸஹியாமல், வருத்தப்பட்டார்கள். மனோஹர மாகிய பகவானுடைய கதையை ஒருதடவை கேட்டதினாலேயே, நல்ல ஞானமுண்டாகிறது; சரீரம் முதலியவைகளில் அபிமானம் விலகுகிறது; ஆகையால் வித்வான்கள், அதனையொருபொழுதும் விட மாட்டார்கள். அப்படியிருக்க அவரை எப்பொழுதும் பார்ப்பது, ஆலிங்கனம் செய்துகொள்வது, பேசுவது, சேர்ந்துபடுத்துக்கொள்வது, ஒரே இடத்தில் உட்காருவது, சேர்ந்து புஜிப்பது, ஆகிய இவைகளால் அந்த பகவானிடத்திலேயே புத்தியைச் செலுத்திய பாண்டவர்களால் அவரைவிட்டுப் பிரிந்திருக்க முடியுமா? ஆகையால் அவர்களெல்லாரும் கண் கொட்டாமலேயே அவரைப் பார்த்துக்கொண்டு, விசேஷ ஸ்நேஹமுள்ளவர்களாய் அந்த அந்த இடங்களில் நின்றார்கள். அவர்களுடைய மனஸானது, அவர்பின் சென்றது. அப்பொழுது ஸ்ரீ க்ருஷ்ணபகவான் அரண்மனையிலிருந்து வெளியில் வரும்போது, அவர்மீதிருந்த ப்ரியத்தால், ஸுபத்ரை முதலிய ஸ்த்ரீகள், 'கண்ணீரைப்பெருக்குவது அமங்கலம்' என்று நினைத்து, அடக்கிக் கொண்டார்கள். மேலும் அப்பொழுது, மிருதங்கம், சங்கம், பேரி, வீணை, பணவம், கோமுகம், சர்சரீ, ஆனகம், கண்டா, துந்துபி ஆகிய பத்துவகை வாத்யங்களும் முழங்கின. கௌரவ ஸ்த்ரீகள் அனைவரும் ப்ரேமை, வெட்கம், சிரிப்பு இவைகளுடன், மேல்மாடியிலிருந்து பகவானைத் தர்சித்து, அவர்மீது புஷ்பங்களை வர்ஷித்தார்கள். ஸ்ரீ பகவானிடத்தில் மிகுந்த ப்ரீதியுள்ளவரும், சுருட்டை

மயிருள்ளவருமாகிய அர்ஜுனர், தம்மிடத்தில் மிக்க விச்வாஸமுள்ளவராகிய ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவிற்கு, ரத்னகாம்புள்ளதும், முத்துமாலைகளால் அலங்கரிக்கப் பட்டதுமான வெள்ளைக்குடையைப் பிடித்தார். உத்தவரும், ஸாத்யகியும் மிக அத்புதங்களான சாமரங்களையெடுத்து விசிறினார்கள். இப்படி பகவான், புஷ்பம் முதலியவைகளால் வீதியில் பூஜிக்கப்பட்டு ப்ரகாசித்தார்.

19—30. அப்பொழுது ப்ராஹ்மணர்கள் மனுஷ்யாவதாரமெடுத்த பகவானுக்குத் தகுதியானவைகளும், சுத்த ஸ்வரூபத்திற்குத் தகாதவைகளுமான ஆசீர்வாதங்களைச் செய்தார்கள். உத்தமச்லோகராகிய ஸ்ரீ க்ருஷ்ணனிடத்திலேயே மனத்தைச் செலுத்தினவர்களான பட்டணத்திலிருக்கும் ஸ்த்ரீகள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளும் வார்த்தைகள் எல்லோருக்கும் த்ருப்திகரமானவைகளாகவும், ஸகல உபநிஷத்துகளுக்கு ஸம்மதமானவைகளுமாயிருந்தன. எப்படியென்றால் க்ருஷ்ணனுடைய தேஜஸ்ஸைப் பார்த்து ஆச்சர்யமடைந்த சில ஸ்த்ரீகளை நோக்கி சிலர் சொல்லுகிறார்கள். ப்ரளயகாலத்தில் ஜீவோபாதிகளான ஸத்வம் முதலியவைகள் ஈச்வரனிடத்தில் அடங்கியிருக்கும்போது குணங்களுடைய சேர்க்கைக்குமுன் எவர் ப்ரபஞ்ச ஸம்பந்தமில்லாத ரூபத்துடன் ஒருவராகவிருந்தாரோ, அவரே இந்த க்ருஷ்ண பகவானாக அவதரித்திருக்கிறார். (ஸிருஷ்டிக்குமுன்னும், ப்ரளயத்திலும், ப்ரபஞ்ச ஸம்பந்தமில்லாமலிருப்பவர் இவரே என்று கருத்து) அந்த பரமாத்மாவே ஸகல வேதங்களையும் வெளியிட்டு மறுபடியும் தன்னுடைய காலசக்தியால் தூண்டப்பட்டதும், ஜீவர்களை

மோஹிக்கச்செய்வதும், ஸிருஷ்டிக்க விரும்பியதுமான ப்ரகிருதியை அனுஸரித்தார். அந்தப்ரகிருதியே பெயர் ரூபம் இவைகளில்லாத ஜீவனிடத்தில அவைகளை யுண்டுபண்ணிற்று. யோகிகள் இந்த்ரியங்களை ஜயித்து, ச்வாஸத்தையடக்கி விசேஷ பக்தியால் சுத்தமான மனமுள்ளவர்களாய் எவருடைய பதத்தையடைகிறார் களோ; அந்தப்புருஷன் இவரே. நம்முடைய புத்தியைப் பரிசுத்தப்படுத்துவதற்கு தகுந்தவர், இவரேயொழிய யோகம் முதலியவைகளால் முடியாது. அடி தோழி! ஆத்மாவின் ரஹஸ்யத்தையறிந்த வித்வான்கள், எவரை ஸ்தோத்ரஞ்செய்கிறார்களோ, வேதங்களிலும், ரஹஸ்யமான ஆகமங்களிலும், எவர் வர்ணிக்கப்படுகிறாரோ, எந்த ஈச்வரன் ஜகத்தை உண்டுபண்ணுவது பரிபாலிப்பது, நாசஞ்செய்வது ஆகிய பற்றுதலில்லையோ, அவரே க்ருஷ்ணனுடைய சரீரமெடுத்துக் கொண்டிருக்கிறார். எந்த காலத்தில் அரசர்கள் தமோ குணங்களுள்ளவர்களாகி தங்கள் ப்ராணனை மாத்திரம் போஷிக்கிறார்களோ அந்தக்காலத்தில், ஐச்வர்யம், செய்த பிரதிஜ்ஞையைக் காப்பாற்றுவது, உண்மையை யுபதேசிப்பது, தயை, கீர்த்தி ஆகிய இவைகளை வெளிப்படுத்துவதற்காக ஒவ்வொரு யுகத்திலும் இவரே ஸத்வகுணரூபியாய் அவதரிக்கிறார். யதுவினுடைய குலம் மிகவும் மேலானது, மதுராநகரம் மிகவும் புண்ய பூமியுள்ளது. புருஷோத்தமரும், ப்ரியமான கீர்த்தியுள்ளவருமான பகவான் தம்முடைய அவதாரத்தாலும் நடையினாலும், அவைகளை அலங்கரிக்கிறார். ஆச்சர்யம்! த்வாரகாநகரத்தின் பாக்யம் அத்புதமானது; எல்லா நகரங்களிலும் ஸ்வர்க்கம் மேலானது என்ற ஸ்வர்க்கத்தின் கீர்த்தியைப் போக்கக்கூடியது; அதில் வஸிக்கும் ஜனங்கள், தங்களை அனுக்ரஹிப்பதற்காகவே

அவ்விடத்தில் வஸிப்பவரும், புன்சிரிப்புள்ள பார்வை யுள்ளவருமான ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவை எப்பொழுதும் தர்சிக்கிறார்கள். அந்தப் பகவானுடைய பத்னிகள் முன் ஜன்மத்தில் வ்ரதங்கள், ஸ்நாநம், ஹோமம் முதலியவைகளால் ஈச்வரனையுபாஸித்தவர் களென்பதில் ஸந்தேஹமில்லை. தவிரவும் கோபஸ்த்ரீகள் எல்லோரும், அவருடைய அதரத்தைப் பானஞ்செய்கிறார்கள் தவிரவும் அதையே மனததில் நினைத்து மோஹிக்கிறார்கள். பலிஷ்டர்களான சிசுபாலன் முதலியவர்களை ஸ்வயம்வரத்தில் ஜயித்து பகவானால் விவாஹஞ்செய்து கொள்ளப்பட்டவர் களும், ப்ரத்யும்னன், ஸாம்பன் முதலியவர்களுக்குத் தாயார்களுமான ருக்மிணி, ஸத்யபாமா முதலியவர் களுடைய வீடுகளிலும், நரகாஸுரனைக் கொன்று ஸ்ரீ க்ருஷ்ணனால் அபஹரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மற்ற ஸ்த்ரீகளுடைய கிருஹங்களிலும், பகவான் எப்பொழுதும் அவர்களுக்கு வேண்டியதை ஸம்பாதித்துக் கொடுத்து அவர்களை ஸந்தோஷப்படுத்திக்கொண்டு வஸிக்கிறார். ஆனதால் ஸ்த்ரீகளுக்கு ஸ்வாதந்த்ரயம், சௌசம் இவைகளில்லாமலிருந்தும், ஸ்த்ரீயாக விருப்பதே மேலானதென்று விளங்குகிறது" என்று பேசிக்கொண்டார்கள்.

31. இம்மாதிரியான பட்டணத்து ஸ்த்ரீகளுடைய வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ க்ருஷ்ணன், பார்வையா லேயே, அவர்களை ச்லாகித்துச் சிரித்துக்கொண்டு சென்றார். அப்பொழுது தர்மபுத்ரர் சத்ருக்களிடத்தில் ஸந்தேஹப்பட்டு, பகவானைக்காப்பாற்றுவதற்காக அவரிடம் ப்ரியத்தால் சதுரங்க ஸைன்யத்தையனுப் பினார். பின்பு ஸ்ரீ க்ருஷ்ணபகவான் வெகுதூரம் தம்மை

பின்தொடர்ந்து வந்தவர்களும், தம்மைவிட்டுப் பிரிய மனமில்லாதவர்களும், ஸ்திரமான பக்தியுள்ளவர்களு மான கௌரவர்களைத் திருப்பிவிட்டுத் தமது நகரம் நோக்கி புறப்பட்டார். அவர் குருஜாங்கலம், பாஞ்சால்ம், சூரசேனம், யமுனையின் கரையிலிருக்கும் தேசம், ப்ரஹ்மாவர்தம், மத்ஸ்யம், ஸரஸ்வதி நதிக்கரையிலுள்ள தேசம், ஜலமில்லாத தேசம், அல்ப ஜலமுள்ள தேசம், ஸௌவீரம், ஆபீரம், ஸைந்தவம் ஆகிய இவைகளைத் தாண்டி ஆனர்த்த தேசம் போனார். குதிரைகள் கொஞ்சம் களைப்படைந்தன. அந்தந்த இடத்தில் வஸிப்பவர்கள் பகவானை எதிர்கொண்டழைத்துப் பூஜித்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணபகவான் ரதத்தைவிட்டு இறங்கி ஜலமிருக்குமிடஞ் சென்று ஸந்தியோபாஸ்தி செய்தார்.

நோட்டு.

பிரகிருதி– மாயை "மாயையை ப்ரகிருதியென்றும், மாயையை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டிருப்பவனை மஹேச்வரனென்றும் தெரிந்து கொள்ள வேண்டும்." ச்ருதி– சுத்தமான மேலான ஸூக்ஷ்மபுத்தியினால் பார்க்கப்படுகிறார்"– ச்ருதி.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்—11

துவாரகாவாஸிகள் பகவானை உபசரித்தது

இப்படி ஸ்ரீ கிருஷ்ணபகவான் மிகுந்த ஐசுவரியம் உள்ள தன்னுடையதான ஆனர்த்த தேசத்தையடைந்து திவ்யமாகிய சங்கத்தை ஊதினார். அப்பொழுது மிகவும் வெண்மையான மத்ய பாகமுள்ளதும், பகவான் உடைய உதடுகளின் காந்தியால் சிவந்ததுமான அந்தச் சங்கமானது செந்தாமரை புஷ்பத்தில் உரக்கச் சப்தித்துக் கொண்டிருக்கும் ஹம்ஸம் போல விளங்கிற்று. அதனைக் கேட்டு அந்தத் தேசத்தில் வஸிப்பவர்கள் கிருஷ்ணன் வருகிறார் என்பதை தெரிந்துகொண்டு அவரை விட்டுப் பிரிந்திருந்ததாலுண்டான தாபத்தை விட்டுச் சந்தோஷமடைந்தார்கள். மேலும் அவர்கள் எல்லோரும் ஸம்ஸார பயத்தைப் போக்கக்கூடிய அந்தச் சப்தத்தைக் கேட்டவுடன் தங்கள் யஜமானனாகிய ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையுள்ள வர்களாக அவருக்கு எதிரில் சென்றார்கள். அந்த பகவான் தன்னுடைய ஆத்மாவிலேயே ரமிப்பவர். ஆனந்தானு பவத்தால் எப்பொழுதும் பூர்ணகாமர்; எல்லோருக்கும் அனுகூலத்தைச் செய்பவர். அப்போர்ப்பட்ட பகவான் இடத்தில் சூரியனிடத்தில் தீபத்தைக் கொடுப்பது போல ஜனங்கள் காணிக்கைகளைச் சமர்ப்பித்து, பிதாவைக் கண்ட குழந்தைகள் போல மலர்ந்த முகமுள்ள வர்களாய், கத்கத ஸ்வரத்துடன் தங்களைக் காப்பாற்றும் அந்தப்பகவானை நோக்கி, வேறாத ப்ரஹ்மதேவராலும், ஸனகர் முதலியவர்களாலும், இந்திரன் முதலியவர் களாலும் நமஸ்கரிக்கப்பட்ட தாமரை மலர் போன்ற உம்முடைய பாதங்களுக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்.

அவைகள் இவ்வுலகத்தில் ஸுகத்தை விரும்பியவர் களுக்கு முக்கிய கதியானவைகள். ஸகல வஸ்துக் களையும் பக்குவஞ்செய்யும் ஸ்வபாவமுள்ள காலமானது எல்லாவற்றிற்கும் மேலானதனாலும் உம்முடைய பாதங் களுக்கு சுவாதீனப்பட்டதேயாம். (உம்முடைய பாதார விந்தங்களை ஆசிரயித்தவர்களுக்குப் பிறப்பு , கிழத்தனம், மரணம் முதலியவைகள் இல்லையென்பது கருத்து:)

'ஓ ஜகத்திற்கு அந்தர்யாமியாயிருப்பவரே தாம் எங்களுக்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டும். நீரே ஸகலத்திற்கும் மாதா, மித்திரர், பிதா, பதி, நீரே நல்ல ஆசாரியர். முக்கியமாகிய தெய்வம், உம்மை யனுசரித் ததாலேயே நாங்கள் தன்யர்களானோம். ஸ்வர்க்கவாஸி களான தேவர்களாலும் பார்க்க முடியாததும் பிரியமான சிரிப்பு, மனோகரமான பார்வை ஆகிய இவை களுடன் கூடிய முகமுள்ளவரும், ஸகல விதத்திலும் அழகு பொருந்திய தம்முடைய சரீரத்தை எப் பொழுதும் நாங்கள் தரிசிக்கும்படி நேர்ந்ததால் நாங்களே நாதனுள்ளவர்கள். தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரே! நீர் பந்துக்களைப் பார்க்கவேண்டி குரு நகரத்திற்காவது மதுரா நகரத்திற்காகவது சென்றால், அப்பொழுது நாங்கள் சூரியனில்லாத ஸமயத்தில் கண்கள் போல ஒவ்வொரு நிமிஷத்தையும் கோடி வருஷங்களுக்குச் சமமாகக் கழிக்கிறோம்' என்று ஸ்தோத்ரஞ் செய்தார்கள்.

10–34 இப்படி ஜனங்கள் செய்த ஸ்தோத்திரத்தைக் கேட்டுப் பக்தர்களைக் காப்பாற்றும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவர்களைக் கடாக்ஷித்தால் அனுக்ரஹித்துக் கொண்டு பட்டணத்திற்குள் சென்றார். அந்த நகரம்

ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் சமமாயுள்ள பலசாலிகளான போஜர்கள், மனுக்கள், தாசார்ஹர்கள், குகுரர்கள், அந்தகர்கள், விருஷ்ணிகள் ஆகிய இவர்களால் போகவதி என்னும் பட்டணம் நாகங்களால் ரட்சிக்கப்படுவது போல, காப்பாற்றப்பட்டிருந்தது. மேலும் அந்தப் பட்டணமானது எல்லா ருதுக்களிலும் புஷ்பிப்பவைகளும் பலிப்பவைகளுமான புண்ய விருஷங்களாலும் கொடிகளாலும், கொடி வீடுகளாலும், உத்யான வனங்களாலும் (பழங்களையே பிரதானமாயுள்ள மரங்கள் உள்ளது), புஷ்பத்தோட்டங்களாலும், விளையாடும் தோட்டங்களாலும், தாமரையோடைகளாலும் அழகாய் இருந்தது. கோபுர வாசல்களிலும் வீட்டு வாசல்களிலும் மங்கள தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. வீதிகளில் பலவகையான த்வஜங்கள் கட்டப்பட்டு வெயிலினாது தாபமில்லாமலிருந்தது. ராஜவீதி, கடைவீதி, நாற் சந்திகள், மற்ற வீதிகள் ஆகிய இவைகள் குப்பையில்லாமல் சுத்தஞ் செய்யப்பட்டிருந்தன. பழங்கள், புஷ்பங்கள், அட்சதைகள் முதலிய மங்கள திரவியங்கள், இறைக்கப்பட்டிருந்தன; வாசனை ஜலம் தெளிக்கப் பட்டிருந்தது. ஒவ்வொரு வாசலும் தயிர், அட்சதை, பழங்கள், கரும்பு இவைகளாலும், பூர்ண கும்பங்களாலும், தூபங்களாலும், தீபங்களாலும், பலிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பின்னும் வஸுதேவர், அக்ரூரர், உக்ரஸேனர், அற்புதமான பராக்கிரமுள்ள பலராமர், பிரத்யும்னன், சாருதேஷ்ணன், ஸாம்பன், கதன் முதலியவர்கள் மிகவும் பிரியராகிய பகவான் வருகிறார் என்று கேள்விப்பட்டு யானையை முன் நடத்தி, ப்ராஹ்மணர்களை முன்னிட்டுக் கொண்டு அதிக ஸந்தோஷத்தால் படுக்கை, போஜனம் இவைகளிலும் மனமில்லாதவர்களாக ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு எதிரே

சென்றார்கள். மேலும் அப்பொழுதும் சங்கம் முதலிய வாத்தியங்கள் முழங்கின. வேதங்கள் கோஷிக்கப்பட்டன. இப்படி எல்லோரும் விஸ்வாசத்தால் உண்டான பரப்பரப்புள்ளவர்களாக ரதங்கள் மீதேறிக்கொண்டு எதிர்க்கொண்டு சென்றார்கள். சிறந்த தாஸிகளும் கூட்டம் கூட்டமாக வாகனங்களின் மீதேறிக்கொண்டு அவரைப் பார்க்க வேண்டுமென்ற மிகுந்த ஆசையுடன் சென்றார்கள். அவர்கள் காதில் அணிந்திருந்த குண்டலங்களுடைய காந்தியால் அவர்களுடைய முகம் பிரகாசித்தது. ரஸாபினயஞ் செய்யக்கூடிய நடர்களும், தாளம் முதலியவைகளை யனுசரித்து நர்த்தனஞ் செய்பவர்களும், பாடுகிறவர்களும், ஸூதர்களும், மாகதர்களும், வந்திகளும் உத்தமச்லோகராகிய பகவானுடைய அற்புதமான சரிதத்தைக் கானஞ் செய்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் தம்மைப் பார்ப்பதற்காக வந்த பந்துக்களுக்குத் தக்கபடி வணங்குவதாலும், நமஸ்கரிப்பதாலும், தழுவுவதாலும், கையைப் பிடிப்பதாலும், புன்சிரிப்புக் கொண்ட பார்வையாலும், சண்டாளன் வரையிலுள்ள எல்லாருக்கும் அபயங் கொடுத்து, அவரவர்களுக்கு இஷ்டமான வரங்களை அளித்து மரியாதை செய்தார்.

மேலும் ஆசாரியர்களும், ப்ராஹ்மணர்களும், பெரியோர்களும், மற்றவர்களும் அவரவர் ஸ்திரீகளுடன் பகவானுக்கு ஆசீர்வாதஞ் செய்தார்கள்; வந்திகள் ஸ்தோத்திரம் செய்தார்கள்; துவாரகா பட்டணத்தில் கிருஷ்ணன் இராஜவீதியில் வரும்பொழுது குல ஸ்திரீகள் அவரைத் தரிசிப்பதற்காக மாடிகளின் மீதேறினார்கள். லக்ஷ்மிதேவிக்கு இருப்பிடமாகிய

பகவானுடைய சரீரத்தைத் துவாரகா வாஸிகளான ஜனங்கள் எப்பொழுதும் பார்த்தவர்களானாலும் அவர் களுக்குப் போதுமென்ற திருப்தி உண்டாகவில்லை. அவருடைய மார்பு, கைகள், பாதங்கள் ஆகிய இவைகள் லக்ஷ்மிதேவிக்கும், லோகபாலர்களுக்கும், பக்தர் களுக்கும் முறையே வஸிக்குமிடமாக இருக்கின்றன. அப்போர்ப்பட்ட ஸ்ரீ கிருஷ்ண பகவான் வழியில் வெள்ளைக் குடை, சாமரங்கள் ஆகிய இவைகளால் பூஜிக்கப்பட்டும். பூக்களால் வர்ஷிக்கப் பெற்றும் பீதாம்பரத்தாலும், துளசி மாலையாலும் பிரகா சித்தார். அது சூரியன், சந்திரன், இந்திரன், வில், மின்னல், இவைகளுடன் மேகம் சேர்ந்து பிரகாசித்தது போலிருந்தது. பின்னுமவர் வஸுதேவர், தேவகி இவர் களுடைய அரண்மனை சென்று, வஸுதேவருக்கும் தேவகி முதலிய ஏழு தாயார்களுக்கும் சந்தோஷமாக நமஸ்காரஞ் செய்தார். அவர்களும் இவரைத் தழுவி னார்கள். தேவகி முதலிய ஸ்திரீகள் கிருஷ்ணனை மடியில் உட்கார வைத்துக்கொண்டு ஆனந்தக்கண்ணீ ரால் அவருக்கு அபிஷேகம் செய்தார்கள். பிறகு அந்தப் பரமாத்மா 16,000 பத்தினிகளுடைய அரண் மனைகள் அடங்கிய தமது அரண்மனைக்குச் சென்றார். அது ஸகல வஸ்துக்களாலும் நிறைந்ததும் சிறந்த துமாக விருந்தது. அப்பொழுது அங்கிருந்த ருக்மணி முதலிய ஸ்திரீகள் தேசாந்தரத்திலிருந்து வந்த தங்கள் உடைய பர்த்தாவைச் சமீபத்தில் கண்டு அளவற்ற ஆனந்தமடைந்து ஆசனத்திலிருந்து சரீரத்தாலும் அந்தக்கரணத்தாலும் சீக்கிரமாக எழுந்திருந்தார்கள். அவர்கள், பர்த்தா தேசாந்திரம் போயிருக்கும் காலத்தில் செய்யவேண்டிய விரதங்களை யனுஷ்டித்துக் கொண்டு இருந்தவர்கள். கடைக்கண்ணால் பார்ப்பவர்களாலும்

வெட்கத்தால் தலை குனிந்தவர்களாகவுமிருந்தார்கள். ஓ சௌனகரே கம்பீர மனமுள்ள பகவானைக் காணாத போது மனத்தாலும், நேரில் பார்த்த போது பார்வைகளாலும் (புத்ரர்களைக் கொண்டு தழுவ செய்பவர்கள் போல) ஸ்ரீ கிருஷ்ணனை ஆலிங்கனம் செய்து கொண்டார்கள். (ப்ரீதியாகப் பார்த்தார்கள் என்பது கருத்து) அப்பொழுது தங்களுடைய கண்களி லுண்டான ஆனந்த ஜலத்தை வெட்கத்தால் அந்த ஸ்திரீகள் அடக்கிக்கொண்டிருந்தும் அது அடங்காமல் பெருகியது; ஸ்ரீ கிருஷ்ணன் எப்பொழுதும் அவர் களுடைய பக்கத்திலேயே வஸிக்கிறார். ஆனாலும் அவர்களுக்கு அவருடைய பாதங்கள் புதியவைகளாக தோன்றுகின்றன. சஞ்சல ஸ்வபாவமுள்ள ஸ்ரீதேவியும் அவரிடத்திலேயே ஸ்திரமாக வசிப்பதால் எவளுக்குத் தான் அவரிடம் பிரேமை யிராது?

35–40 காற்றானது மூங்கில் காட்டில் அவைகளைக் கொண்டே அக்னியை உண்டுபண்ணி அதனால் அவை களை எரிப்பதுபோல ஸ்ரீ கிருஷ்ணன், தாம் ஆயுதம் எடுக்காமலே பூமிக்குப் பாரமாயிருந்த அனேக அக்ஷௌஹிணி சைன்யங்களால் விருத்தியடைந்த தேஜஸுள்ள அரசர்களுக்குள் ஒருவருக்கொருவர் விரோ தத்தை உண்டு பண்ணி, அதனால் அவர்களை நாசஞ் செய்து சாந்தியடைந்தார். இப்படி பகவான் பிராகிருத புருஷன்போல பூமியில் மாயாவதாரஞ் செய்து அநேக உத்தமஸ்திரீகளின் நடுவிலிருந்து விளையாடினார். ஸ்திரீகள் கம்பீரமாகிய அபிப்பிராயத்தைக் காண் பிக்கும் கடாக்ஷமுள்ளவர்கள், மனோகரமான மந்தகாச முள்ளவர்கள். வெட்கமுள்ளவர்கள். அவர்களால் பரம சிவனும் மோகித்து வெட்கமடைந்துவில்லை எறிந்தார்.

ஸ்திரீகள் அப்போர்ப்பட்ட சக்தியுள்ளவர்களானாலும் தங்களுடைய விலாசங்களால் கிருஷ்ணனை ஆசைப்படச் செய்ய முடியாதவர்களாகவிருந்தார்கள். (சம்சாரத்தில் பற்றுதல் இல்லாதவரென்பது கருத்து.) இப்படி ஸ்ரீ கிருஷ்ணன் வைராக்யமுள்ளவராக விருந்து ஜனங்கள் தங்களைப்போல அவரையும் ஸம்சாரியென்றே நினைக்கிறார்கள். அதனால் தான் அஜ்ஞர்களென்று சொல்லப்படுகிறார்கள். ஆத்மாவினிடமிருக்கும் ஆனந்தம் முதலிய குணங்களில் ஆத்மாவை ஆசிரயித்திருக்கும் புத்தியானது சம்பந்திக்காமல் இருப்பது போல், பகவான் பிரகிருதி காரிய மாகிய சம்சாரத்திலிருந்தும் அதன் குணங்களாகிய சுகம், துக்கம் இவைகளுடன் சம்பந்தப்படாமல் இருக்கிறார். அதுவே அவருடைய ஐசுவரியமென்று சொல்லப்படுகிறது. அகங்காரமானது ஆத்மாவைத் தனது வசப்பட்டவனாக நினைப்பதுபோல் ஸ்ரீ கிருஷ்ணனுடைய உண்மையை அறியாதவர்களான அந்த ஸ்திரீகளெல்லோரும் கிருஷ்ணன் தங்கள் இடத்தில் ஆசை கொண்டவர், தங்களையே அனுஸரித்திருப்பவர் என்று அஜ்ஞானத்தால் நினைத் திருந்தார்கள்.

நோட்டு

ஸூர்ய-ஜகத்தைத் தம்முடைய தேஜஸால் பிரகா சிக்கச் செய்பவரும், வேறு பிரகாசத்தை அபேட் சியாமல் விளங்குகிறவருமான சூரியனுக்குத் தீபத்தால் எப்படி பிரயோசனமில்லையோ அப்படி ஸகல வித காமங்களால் பூர்ணராகிய பகவானுக்கு ஜனங்களால்

கொடுக்கப்படும் காணிக்கைகளால் ஒருவித பயனுமில்லை என்று காட்டப்பட்டது, கத்கதஸ்வர-ஆனந்தம், துக்கம் இவைகள் நேரும்போது கண்ணீர் பெருகி அதனால் கண்டம் அடைத்துப்போகும். அப்பொழுது தாராள மாகப் பேசமுடியாமல் சிரமப்பட்டுப் பேசும் ஸ்வர மேயாம். ஸனகர்-மூலத்தில் வைரிஞ்ச என்றிருப்பதால் அதற்குச் சங்கரனென்று அர்த்தம் விஜ, பசுவின் கன்றுகளைப் ப்ரஹ்மதேவர் அபகரித்த பிறகு அவரால் நமஸ்கரிக்கப்பட்டது. பகவான் பாணாசுரனிடத்தில் யுத்தஞ் செய்யும்போது, சங்கரனால் ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டது. சந்த். க்ஷேமம்-மோக்ஷம் விஜயமாதா - பிறந்தது முதல் போஷிப்பதால். மித்ரர்- எல்லா வற்றிற்கும் அந்தராத்மாவாக விருப்பத்துடன் ஸத்காரி யத்தைச் செய்யும்படி தூண்டுவதால். பிதா-இது ஹிதமென்றும், இது அஹிதமென்றும் உபதேசித்து, சாஸ்திரத்தைக் கொண்டு சிட்சிப்பதால், பதி-பர்த்தா, ஜீவனம் முதலியவைகளைக் கொடுத்துக் காப்பாற்று வதால், ஆசாரியர்-அர்ஜுனனை நிமித்தமாய் வைத்துக் கொண்டு உலகத்தில் கீதா சாஸ்திரத்தைப் பரவச் செய்ததாலே. தெய்வம்- மோட்சத்தைக் கொடுப்பதால் சந்த், ஸுதர்கள்- புராணத்தை யறிந்தவர்கள் ஸுதர்களென்று சொல்லப்படுகிறார்கள். வம்சாவளியைச் சொல்புவர்கள் மாகதர்களெனப்படு வார்கள். ஸமயத்திற்குத் தக்கபடி பேசக்கூடிய புத்தி சாலிகள் வந்திகளெனப்படுவார்கள். மேகம்-இது அபூதோபமை யென்று சொல்லப்படுகிறது, மேகம் போன்றவர் பகவான், சூரியன் போன்றது வெண்குடை, புஷ்பவர்ஷம் போன்றது நட்சத்திரங்கள் என்பர் சிலர்.

சூரியன் போன்றது கீரிடம், சந்திரன் போன்றது வெண்குடை, இந்திரனுடைய வில் போன்றது வனமாலை மின்னல் போன்றது பீதாம்பரம். ஏழு தாயார்–வசு தேவருக்குப் பதினெட்டு ஸ்திரீகள். அவர்களெல் லோரையும் நமஸ்கரித்தார். அவர்களுக்குள் முக்கிய மானவர்கள் ஏழு ஸ்திரீகள், 1. தேவகீ, 2. ச்ருததேவா, 3. சாந்திதேவா, 4. உபதேவா, 5. ஸ்ரீதேவா, 6. தேவரக்ஷிதா, 7. ஸஹதேவா, தழுவ –தேசாந்திரத் திலிருந்து வந்த பகவானைப் ப்ரத்யும்னன் முதலிய வர்களைக் கொண்டு கட்டிக் கொள்ளச்செய்வது போல மனத்தால் தியானம் செய்தார்கள், பின்னும் மிகுந்த ஆசையுடன் பார்த்தார்கள். பரமசிவனும்– மூலத்தில் அமதன: என்று பதம் பிரித்து இப்படி ஸ்ரீ தரஸ்வாமி அர்த்தஞ்செய்தார். மதன: என்று பதம் பிரிப்பதால் மன்மதன் என்று அர்த்தம் –வீர, விஜ.

அத்தியாயம் 12

பரீக்ஷித்தின் உற்பத்தி

சௌனக மகரீஷியானவர் ஸூதரைப் பார்த்து 'ஓ ஸூதரே! அசுவத்தாமாவினால் பிரயோகிக்கப்பட்ட ப்ரஹ்மாஸ்த்ரத்தின் தேஜஸால் எரிக்கப்படும் உத் தரையின் கர்ப்பத்தை ஸ்ரீ கிருஷ்ணபகவான் மறுபடி பிழைக்கச் செய்தாரென்று சொன்னீர்களே, மிக்க புத்திசாலியும் மகாத்மாவுமான அக்குழந்தையின் பிறப் பையும், அதன் சரித்திரத்தையும், அவருக்கு சுகர் ஞானோபதேசம் செய்ததையும், அவருடைய முடி வையும், மரணமடைந்த பிறகு அவருக்கு நேர்ந்த கதியையும் சிரத்தையுடன் கேட்க விரும்புகிறேன். சொல்லக்கூடியதானால் சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

4–6 இதனைக் கேட்டு ஸூதர் சொல்லுவதாவது தர்மபுத்திரர் கிருஷ்ணனுடைய பாதங்களைச்சேவித்து ஸகல ஆசைகளையும் ஒழித்துத் தகப்பன் குழந்தை களைக் காப்பாற்றுவதுபோல பிரஜைகளைச் சந்தோ ஷப்படுத்திக் காப்பாற்றி வந்தார். அவருக்குப் பகவானுடைய அனுக்கிரஹத்தால் ஸகல சம்பத்துகளும், ராஜசூயம் முதலிய யாகங்களின் பலனாகிய உத்தம லோகங்களும், திரௌபதி முதலிய ஸ்திரீகளும், பீமசேனன் முதலிய தம்பிகளும், ஸகல பூமியும். ஜம்பூத்வீபத்திற்கு ஆதிபத்யமும், ஸ்வர்க்கம் வரையில் பரவிய கீர்த்தியும் கிடைத்தன. பசியுள்ளவனுக்கு அன்னத்தின் மேலே விருப்பமிருக்குமே யொழி வேறு

விஷயத்தில் ஆசையுண்டாகிறதில்லை. அதுபோல் ஸ்ரீ பகவானிடத்திலேயே சித்தத்தைச் செலுத்தி, அதனால் ரமித்துக் கொண்டிருக்கும் தர்மபுத்ரருக்கு தேவர்களாலும் விரும்பத்தக்க சுகங்கள் கிடைத்திருந்தும் அவைகளால் அவர் சந்தோஷமடையவில்லை.

7–14 1/2, ஓ சௌனகரே! உத்தராதேவியின் கர்ப்பத்திலிருந்த சிசுவானது அச்வஸ்த்தாமாவினுடைய ப்ரஹ்மாஸ்திரத்தின் தேஜஸ்ஸால் எரிக்கப்படும்பொழுது ஒரு புருஷன் அந்தச் சிசுவிற்கு நேரில் தோன்றினார். அவர் கட்டைவிரல் அளவுள்ளவர், சுத்தர், சுவர்ண கீரிடமுள்ளவர், மிக்க அழகான பார்வையுள்ளவர், பீதாம்பரம் தரித்தவர், ஜன்மம் முதலிய விகாரங்கள் அற்றவர், அழகு பொருந்தியவைகளும், நீண்டவை களுமான கைகளுள்ளவர், சுத்த ஸ்வர்ண குண்டலங் களுள்ளவர், 'என் பக்தனுக்கும் உபத்திரவம் நேரிடு கிறதா?' என்ற கோபத்தால் சிவந்த கண்கள் உள்ளவர், கதாயுதத்தைத் தரித்தவர். மேலும் அவர் குறைக்கொள்ளி போன்ற தம் கதையைச் சுழற்றிக் கொண்டு. அக்குழந்தைக்கு நான்கு புறத்திலும் சஞ்சரித்து, சூரியன் பனியைப் போக்குவதுபோல அஸ்திர தேஜஸ்ஸை அக்குழந்தையின் சமீபம் வர வொட்டாமல் தடுத்துக்கொண்டுமிருந்தார். அவரைப் பார்த்து அந்தக் குழந்தையானது இவர் யாரென்று ஆச்சரியத்துடன் ஆலோசித்துக் கொண்டிருந்தது. இப்படி ஒன்பது மாத காலஞ் சென்றது. பத்தாவது மாதத்தில் அளவிடக் கூடாத ரூபமுள்ளவரும், தர்மத்தைப் பரிபாலிப்பவரும், எங்கும் நிறைந்தவரு மான அந்தப் பிரபுவானவர் அக்குழந்தை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே அவ்விடத்தில் மறைந்தார்.

அதன் பிறகு வரும் மேலான சிரேயஸை காண்பிக்கத் தக்க சுப லக்னம் நேர்ந்தது. அதிலிருந்த சுபகிரகங்கள் ஒருவருக்கொருவர் மித்ரர்களாக இருந்தார்கள். அப் போர்ப்பட்ட சமயத்தில் பாண்டுவின் வம்சத்தை விருத்திசெய்யும் புத்திரனானவன் பாண்டுவே மறு படியும் பிறந்ததுபோல அவதரித்தான். அப்பொழுது தர்மபுத்ரர் மிகுந்த சந்தோஷத்துடன் தௌம்யர், கிருபர் முதலிய ப்ராஹ்மணர்களைக் கொண்டு ஜாதகர்மம் ஸ்வஸ்திவாசனம் ஆகிய இவைகளைச் செய்வித்தார். மேலும், அவர் தானத்திற்குரிய பாத்திரம் தேசம் காலம் என்னும் இவைகளை அறிந்தவரா கையால், உத்தமமாகிய அந்தப் புண்ணிய காலத்தில் ஸ்வர்ணம், பசு, பூமி, கிராமங்கள் சிறந்த குதிரைகள் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்தது மல்லாமல் போஜனமும் செய்வித்தார்.

15–17 1/2. அப்பொழுது ஜ்யோதிஷ சாஸ்திரத்தை நன்றாய்க் கற்றுணர்ந்த எல்லாப் ப்ராம்ஹ்மணர்களும் மிகுந்த சந்தோஷமுள்ளவர்களாய் வணக்கமுள்ள அவ் வரசனை நோக்கி, 'ஓ புருஷவம்சத்திய அரசர்களில் சிறந்தவரே தடுக்க முடியா தெய்வ வசத்தால் புரு வம்சத்தின் தொடர்ச்சியற்றுப் போகும் சமயத்தில் அந்த வம்சத்தில் பிறந்தவர்களான உங்களுடைய க்ஷேமத்திற்காக) ஸ்ரீ மகா விஷ்ணுவே இப்புத்ர ரத்னத்தை அனுக்ரகித்திருக்கிறார். விஷ்ணுவினால் கொடுக்கப்பட்டவனாகையால் இவன் விஷ்ணுராத னென்று பிரசத்தியடைவான். இவன் மிகுந்த கீர்த்தி யுள்ளவனும், பாகவதர்களுள் சிறந்தவனுமாவான். இவ் விஷயத்தில் ஸம்சயப்பட வேண்டாம் என்றார்கள்.

18–29 1/2, இதனைக் கேட்ட தர்மராஜன் ப்ராஹ்ம

விஷயத்தில் ஆசையுண்டாகிறதில்லை. அதுபோல் ஸ்ரீ பகவானிடத்திலேயே சித்தத்தைச் செலுத்தி, அதனால் ரமித்துக் கொண்டிருக்கும் தர்மபுத்ரருக்கு தேவர்களாலும் விரும்பத்தக்க சுகங்கள் கிடைத்திருந்தும் அவைகளால் அவர் சந்தோஷமடையவில்லை.

7–14 1/2, ஓ சௌனகரே! உத்தராதேவியின் கர்ப்பத்திலிருந்த சிசுவானது அச்வஸ்த்தாமாவினுடைய ப்ரஹ்மாஸ்திரத்தின் தேஜஸ்ஸால் எரிக்கப்படும்பொழுது ஒரு புருஷன் அந்தச் சிசுவிற்கு நேரில் தோன்றினார். அவர் கட்டைவிரல் அளவுள்ளவர், சுத்தர், சுவர்ண கீரிடமுள்ளவர், மிக்க அழகான பார்வையுள்ளவர், பீதாம்பரம் தரித்தவர், ஜன்மம் முதலிய விகாரங்கள் அற்றவர், அழகு பொருந்தியவைகளும், நீண்டவை களுமான கைகளுள்ளவர், சுத்த ஸ்வர்ண குண்டலங் களுள்ளவர், 'என் பக்தனுக்கும் உபத்திரவம் நேரிடு கிறதா?' என்ற கோபத்தால் சிவந்த கண்கள் உள்ளவர், கதாயுதத்தைத் தரித்தவர். மேலும் அவர் குறைக்கொள்ளி போன்ற தம் கதையைச் சுழற்றிக் கொண்டு. அக்குழந்தைக்கு நான்கு புறத்திலும் சஞ்சரித்து, சூரியன் பனியைப் போக்குவதுபோல அஸ்திர தேஜஸ்ஸை அக்குழந்தையின் சமீபம் வர வொட்டாமல் தடுத்துக்கொண்டுமிருந்தார். அவரைப் பார்த்து அந்தக் குழந்தையானது இவர் யாரென்று ஆச்சரியத்துடன் ஆலோசித்துக் கொண்டிருந்தது. இப்படி ஒன்பது மாத காலஞ் சென்றது. பத்தாவது மாதத்தில் அளவிடக் கூடாத ரூபமுள்ளவரும், தர்மத்தைப் பரிபாலிப்பவரும், எங்கும் நிறைந்தவரு மான அந்தப் பிரபுவானவர் அக்குழந்தை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே அவ்விடத்தில் மறைந்தார்.

அதன் பிறகு வரும் மேலான சிரேயஸை காண்பிக்கத் தக்க சுப லக்னம் நேர்ந்தது. அதிலிருந்த சுபகிரகங்கள் ஒருவருக்கொருவர் மித்ரர்களாக இருந்தார்கள். அப் போர்ப்பட்ட சமயத்தில் பாண்டுவின் வம்சத்தை விருத்திசெய்யும் புத்திரனானவன் பாண்டுவே மறு படியும் பிறந்ததுபோல அவதரித்தான். அப்பொழுது தர்மபுத்ரர் மிகுந்த சந்தோஷத்துடன் தௌம்யர், கிருபர் முதலிய ப்ராஹ்மணர்களைக் கொண்டு ஜாதகர்மம் ஸ்வஸ்திவாசனம் ஆகிய இவைகளைச் செய்வித்தார். மேலும், அவர் தானத்திற்குரிய பாத்திரம் தேசம் காலம் என்னும் இவைகளை அறிந்தவரா கையால், உத்தமமாகிய அந்தப் புண்ணிய காலத்தில் ஸ்வர்ணம், பசு, பூமி, கிராமங்கள் சிறந்த குதிரைகள் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்தது மல்லாமல் போஜனமும் செய்வித்தார்.

15–17 1/2. அப்பொழுது ஜ்யோதிஷ சாஸ்திரத்தை நன்றாய்க் கற்றுணர்ந்த எல்லாப் ப்ராம்ஹ்மணர்களும் மிகுந்த சந்தோஷமுள்ளவர்களாய் வணக்கமுள்ள அவ் வரசனை நோக்கி, 'ஓ புருஷவம்சத்திய அரசர்களில் சிறந்தவரே தடுக்க முடியா தெய்வ வசத்தால் புரு வம்சத்தின் தொடர்ச்சியற்றுப் போகும் சமயத்தில் அந்த வம்சத்தில் பிறந்தவர்களான உங்களுடைய க்ஷேமத்திற்காக) ஸ்ரீ மகா விஷ்ணுவே இப்புத்ர ரத்னத்தை அனுக்ரகித்திருக்கிறார். விஷ்ணுவினால் கொடுக்கப்பட்டவனாகையால் இவன் விஷ்ணுராத னென்று பிரசத்தியடைவான். இவன் மிகுந்த கீர்த்தி யுள்ளவனும், பாகவதர்களுள் சிறந்தவனுமாவான். இவ் விஷயத்தில் ஸம்சயப்பட வேண்டாம் என்றார்கள்.

18–29 1/2, இதனைக் கேட்ட தர்மராஜன் ப்ராஹ்

Released by Maran's Dog, Toronto , Canada

மணர்களை நோக்கி, புண்ய ச்லோகர்களும் ராஜர்ஷி களுமான நம்முடைய முன்னோர்கள் போல இக் குழந்தையும் நல்ல கீர்த்தியுள்ளவனாய் இருப்பானா? என்று மிக்க ஆதரவுடன் கேட்டார். அப்பொழுது ப்ராஹ்மணர்கள் தர்ம புத்ரரை நோக்கி, 'ஓ குந்தியின் புத்ரரே! இவன் மனுவின் புத்ரராகிய இக்ஷ்வாகுபோல, பிரஜைகளைக் காப்பாற்றுவான், தசரத புத்ரராகிய ஸ்ரீ ராமன் போல ப்ராஹ்மணர்களிடம் பிரியமுள்ள வனாவான். வீணாகாத பிரதிக்ஞையுள்ளவனாயி ருப்பான். ஔசீனர தேசத்திற் கதிபதியான சிபிச் சக்ரவர்த்தி போலச் சரணமென்று வந்தவர்களைக் காப்பாற்றுவான், மிகுந்த தாதா, துஷ்யந்தருடைய புத்ரனான பரதன் போலத் தன் பந்துக்களுக்கும், யாகம் செய்பவர்களுக்கும் விசேஷ கீர்த்தியை உண்டு பண்ணுவான். மேலும் இவன் உம்முடைய தம்பியாகிய அர்ஜுனன், கார்த்தவீர்யன் ஆகிய இவர்கள் போல வில்லைப் பிடித்தவர்களுக்குள் சிறந்தவனாவான், அக்னி போல ஸமீபத்தில் நெருங்க முடியாதவனாவான், சிங்கம் போலப் பராக்கிரமமுள்ளவனாவான்' ஹிம்வத் பர்வதம்போல ஸாதுக்களால் ஸேவிக்கத்தக்கவனா வான், பூமிபோலப் பொறுமையுள்ளவனாவான், மாதா பிதிருக்கள், புத்ரர்களின் விஷயமாய் நேரும் சிரமங் களைச் சகிப்பதுபோல ப்ரஜைகள் விஷயமாக உண்டாகும் சிரமத்தைப் பொறுத்துக் கொள்ளும் ஸ்பாவமுள்ளவனாவான். எல்லோரையும் சமமாய்ப் பார்ப்பதில் ப்ரஹ்மதேவரையொத்தவனாவான், அண்டின வர்களிடத்தில் தயவு செய்யும் விஷயத்தில் பரமசிவன் போன்றவனாவான். லக்ஷ்மீபதியாகிய மஹாவிஷ்ணு போல ஸகல பிராணிகளுக்கும் இருப்பிடமாவான், ஸ்ரீ கிருஷ்ணன்போல ஸகல நற்குணங்களால் ஏற்படும்

மஹிமையுள்ளவனாவான், கொடுப்பதில் ரந்திதேவன் போன்றவனாவான். யயாதிபோலத் தர்மசிந்தையுள்ள வனாயிருப்பான், பலிசக்கரவர்த்தி போலத் தைரிய முள்ளவனாவான், பிரஹ்லாதர் போல ஸ்ரீ கிருஷ்ண னிடம் பக்தியுள்ளவனாவான். மேலும் இவன் அநேக அசுவமேத யாகங்களைச் செய்வான். பெரியோர் களை ஸேவிப்பான். இவனுடைய புத்ரர்கள் ராஜ ரிஷிகளாக விருப்பார்கள். கெட்ட மார்க்கத்தை அனுஷ்டிப்பவர்களைச் சிக்ஷிப்பான், தர்மத்தை ஸம்ர க்ஷிப்பதற்காகக் கலியை நிக்ரஹிப்பான். பின்னுமிவன் (சிருங்கி என்ற) ப்ராஹ்மண புத்திரனால் தூண்டப் பட்ட தக்ஷகனால் தனக்கு மரணம் நேரிடப் போவதாய்க் கேள்விப்பட்டு, ஸகல ஆசைகளையும் ஒழித்து வைராக்கியத்தை யடைவான். பிறகு வியாஸ புத்ரராகிய சுகரிடம் ஆத்ம தத்வத்தை உபதேசம் பெற்று, கங்கைக் கரையில் இந்தச் சரீரத்தை விட்டு நிர்ப்பயமான விஷ்ணுபதத்தை யடைவான் என்று வருங் காரியத்தைச் சொல்லி தர்ம புத்திரரால் ஸம்மானிக்கப்பட்டுத் தங்களிருப்பிடம் சென்றார்கள்.

30–31 1/2 பிறகு அந்தக் குழந்தை மாதாவின் கர்ப்பத்தில் தன்னால் பார்க்கப்பட்டவரை மனத்தில் தியானஞ் செய்து கொண்டே 'அந்தப் புருஷன் இவர் தானோ, இவர்தானோ என்று ஒவ்வொருவரிடமும் பரீக்ஷித்தான். ஆனதுபற்றி அவனுக்கு, 'பரீக்ஷித்' என்ற பெயருண்டாயிற்று. அந்த ராஜகுமாரன் சுக்ல பக்ஷத்தில் பதினைந்து கலைகளால் சந்திரன் நாளுக்கு நாள் விருத்தியடைவதுபோல, தர்மபுத்ரர் முதலிய வர்களால் போஷிக்கப்பட்டு வளர்ந்தான். ஸகலவித்தை களும் அவனையடைந்தன. அப்பொழுது தர்மராஜன்

பந்துக்களின் வதத்தால் நேர்ந்த பாவங்களை நிவர்த் தித்துக் கொள்வதற்காக அசுவமேதஞ் செய்யவேண்டு மென்று விரும்பினார். ஆனாலும் 'நியாயமான வரி வாங்குவதாலும், குற்றவாளிகளுக்கு அவர்களுடைய குற்றத்திற்குத் தக்கபடி அபராதம் விதிப்பதாலும் ஸம்பாதித்த பொருள் பிரஜைகளை ரக்ஷிப்பதற்கே போதுமானதாயிருந்ததாகையால் அந்தப் பொருளைக் கொண்டு யாகத்தை முடிக்க முடியாதே என்ன செய்கிறது என்று கவலைப்பட்டிருந்தார்.

33–361/2 அப்பொழுது அவருடைய அபிப்ராயத் தையறிந்து ஸ்ரீ கிருஷ்ணனால் தூண்டப்பட்ட பீமசேனன் முதலியவர்கள் வடக்குத் திக்கில் சென்று மருத்தருடைய யாகத்திற்கு உபயோகப்பட்டு மிகுந்து கிடக்கும் தனத்தைக் கொண்டு வந்தார்கள். அவை களைக் கொண்டு யாக சாமகிரிகளைச் சம்பாதித்துத் தர்மபுத்ரர் ஸ்ரீ கிருஷ்ணனை வைத்துக் கொண்டு குறைவில்லாமல் நிறைவேற்ற வேண்டும் என்ற பயம் உள்ளவராய், பாப நிவர்த்திக்காக மூன்று தரம் அசுவ மேதத்தை யனுஷ்டித்து, யக்ஞ புருஷராகிய பகவானை ஆராதித்தார். ஸ்ரீ கிருஷ்ணனும் ப்ராஹ்மணர்களைக் கொண்டு தர்மராஜனுக்கு யாகஞ் செய்வித்து மித்ரர்களான பாண்டவர்களுடைய இஷ்டப்படி சில காலம் அவ்விடத்தில் வசித்தார். பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் அரசனிடத்திலும் திரௌபதியினிடத்திலும் விடை பெற்றுத் தம்முடைய பந்துக்களுடனும், அர்ஜுனன் உடனும் துவாரகா நகரஞ் சென்றார்.

நோட்டு

இந்த அத்தியாயத்தில் வைராக்கியத்தின் பிரகாரமும், பகவான் பக்தர்களிடத்தில் தயையுள்ளவரென்பதும், காட்டப்பட்டிருக்கிறது விஜ. சகல ஸம்பத்துக்களும் –காமாதுரனுக்கு ஐசுவரியத்தில் பிரியமிருக்குமே யல்லாமல் வைராக்கிய முள்ளவனுக்கு அவைகளில் பிரீதி உண்டாகிறதில்லை என்று காட்டப்பட்டது விஜ, புண்ணிய காலத்தில்-"கொப்பூழ்க் கொடி அறுப்பதற்கு முன் சூதகமில்லை" "புத்திரன் பிறந்த காலத்திலும் வியதபாத புண்ணிய காலத்திலும் செய்யப்பட்ட தானங்கள் குறையாத பலனைக் கொடுக்கின்றன," – ஸ்மிருதி "ப்ராஹ்மணர்களுடைய வீட்டில் புத்திரன் பிறந்த காலத்தில் ஸகல தேவர்களும் பிதிரு தேவர்களும் அந்த வீட்டிற்கு வருகிறார்கள். ஆதலால் அந்தக் காலம் 'நூறு சூர்ய கிரகணங்களைக் காட்டிலும் மேலான புண்ணிய காலம்" -ஸ்மிருதி. சிபி- இவர் தம்மைச் சரணமடைந்த புறாவைக் காப்பாற்றவேண்டிப் பருந்துக்கு தம்முடைய மாமிசத்தைக் கொடுத்தார் ஸ்ரீத. இவர் உசினருடைய புத்ரர் - வீர. விஜ.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–13

திருதராஷ்டிரர் வெளியில் சென்றது

விதுரர் தீர்த்த யாத்திரை செய்வதற்காக ஹஸ்தினா புரத்திலிருந்து புறப்பட்டுச் ஸகல தீர்த்தங்களுக்கும் சென்று, அவைகளில் ஸ்நானம் முதலியவைகளைச் செய்து, வழியில் மைத்ரேயரைக் கண்டு, அவரிடமாக ஸ்ரீமத் நாராயணனே தமக்குக் கதியென்று தெரிந்துக் கொண்டு, அதனால் அறிய விரும்பியதை அறிந்தும் ஹஸ்தினாபுரஞ் சென்றார். மேலும், கர்மயோகம், ஞானயோகம் ஆகிய இவைகளைப்பற்றி விதுரர் கேட்ட கேள்விகளுக்கு மைத்திரேயர் சிலவற்றிற்குப் பதில் சொல்லி வரும்பொழுதே விதுரருக்கு ஸம்சயங்கள் யாவும் நீங்கின. ஸ்ரீ கோவிந்தரிடத்தில் ஸ்திரமான பக்தி உண்டாயிற்று. அதனால் அதற்குமேல் அவர் கேட்கவில்லை.

3–6 தர்மபுத்திரர், அவருடைய தம்பிகள், திருதராஷ்டிரர் யுயுத்ஸு, ஸஞ்சயர், கிருபர், குந்தீதேவி, காந்தாரி, திரௌபதி, ஸுபத்ரை உத்தரை, த்ரோணருடைய பத்தினியாகிய க்ருபி, இன்னும் மற்ற பந்துக்களின் ஸ்திரீகள், பாண்டுவின் பந்துக்கள் ஆகிய எல்லோரும் தங்களுடைய பிள்ளைகளுடனும், ஸ்திரீகளுடனும் எதிர்சென்று வெகுநாள் தீர்த்தயாத்திரை செய்து திரும்பிவந்த பந்துவாகிய விதுரரைக் கண்டு மிகுந்த சந்தோஷத்துடன் அழைத்தார்கள். அப்படி அழைத்ததானது கை, கால் முதலிய அவயவங்கள் ப்ராணனைக் கண்டு சந்தோஷமடைந்தது போலிருந்தது. மேலும் அவர்கள் விதுரரிடம் வந்து முறைப்படி ஆலிங்கனம்

நமஸ்காரம் முதலியவைகளைச் செய்து வெகுநாள் பிரிந்திருந்ததனால் மிகுந்த ஆசையுள்ளவர்களாய் ஆனந்தக்கண்ணீரைப் பெருக்கினார்கள். அரசனாகிய தர்மராஜனும் ஆசனத்தில் உட்கார்ந்திருக்கும் அந்த விதுரரைப் பூஜித்தார்.

7–11, பிறகு ஆகாரத்தை யுண்டு களைதீர்ந்து ஸுகமாய் உட்கார்ந்திருக்கும் அவரை நோக்கி, தர்ம புத்திரர் பின்வருமாறு கேட்கலானார். பறவைகளால் தங்கள் தங்கள் குஞ்சுகள் சிறகுகளால் மறைத்துக் காப்பாற்றப்படுவது போல நாங்களனைவரும், எங்களுடைய மாதாவுடன் விஷம், அக்னி முதலிய ஆபத்துக்களிலிருந்து உம்மால் காப்பாற்றப்பட்டோம். ஆதலால் எங்களுடைய ஞாபகம் உமக்கிருக்கிறதா? பூமி முழுவதும் சுற்றிய தங்களுக்குத் தேச யாத்ரை எப்படி நடந்தது? எந்தெந்த தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தீர்கள்? எந்தெந்த க்ஷேத்திரம் சென்றீர்கள்? உங்களைப் போன்ற பகவத் பக்தர்களே மிக்க பரிசுத்தமானவர்கள். ஆதலால் அவர்கள் தங்களுடைய மனதில் எப்பொழுதும் பகவான் வஸிப்பதால் தீர்த்தங்களைப் பரிசுத்தப்படுகிறார்கள். மேலும் ஸ்ரீ பகவானையே தெய்வமாகக் கொண்ட நமது சிநேகிதர்களும் பந்துக்களும் யாதவர்களும் உம்மால் பார்க்கப் பட்டார்களா? அவர்களைப் பற்றிக் கேள்விபட்டதுண்டா? அவர்களுடைய பட்டணங்களில் சுகமாக இருக்கிறார்களா?! என்றார்.

12–15 அதனைக் கேட்டு விதுரர் தீர்த்தயாத்திரையின் நிமித்தமாகச் சென்ற விடங்களில் நடந்த சமாசாரங்களைப் பூர்ணமாகத் தர்மராஜனுக்கு சொன்னார்.

ஆனால் யதுகுலத்திற்கு நேர்ந்த கெடுதியை மாத்திரம் சொல்லவில்லை. மனிதர்களால் துக்கம் சகிக்க முடியாதது. ஆகையால் அதை அவர்கள் விரும்புகிற தில்லை யல்லவா ? தவிரவும் விதுரர் மிகுந்த கருணை யுள்ளவர். துக்கமுள்ளவர்களைப் பார்த்துச் சகிக்க மாட்டார். 'ஆனதால் யதுக்களுக்குக் கெடுதி யுண்டாயிற்று என்று சொன்னவுடன் பாண்டவர்கள் வருத்தப்படுவார்கள். அவர்களைப் பார்ப்பது மிகவும் கஷ்டமான கார்யம்' என்று நினைத்தே அதைச் சொல்லவில்லை. பின்பு அந்த விதுரர் பெரிய தமையனராகிய திருதராஷ்டிரருக்கு ஆத்ம தத்துவத்தை உபதேசித்தும், மற்றுமுள்ளவர்களுக்குப் பிரியத்தை விருத்திசெய்து கொண்டும் சில காலம் அவ்விடத்தில் வசித்தார். அவர்கள் விதுரரைத் தெய்வமாக நினைத்துப் பூஜித்தார்கள். மாண்டவ்ய மஹர்ஷியின் சாபத்தால் யமனே இப்படி ஜன்மத்தை அடைந்து விதுரராக பிறந்தவர்; யமன் இப்படி அநேக வர்ஷங்கள் பூலோகத்திலிருக்கும் காலத்தில் அவருடைய உலகத்தில் அர்யமா வென்பவர் பாபிகளுக்கு தக்க சிக்ஷை விதித்துக்கொண்டு அந்த வேலையை நடத்தி வந்தார்.

16. பகவானுடைய சகாயத்தால் தர்மபுத்திரர் ராஜ்யத்தை அடைந்து, தம்முடைய குலவிருத்திக்குக் காரணரும், பௌத்ரருமாகிய பரீக்ஷித், லோகபாலர்கள் போன்ற தம்பிகள் ஆகிய இவர்களுடன் விசேஷ ஐசுவர்யங்களைப் பெற்று ஆனந்தமடைந்தார்.

17–18. பிறகு கிருஷ்ண பகவான் தர்மபுத்திரர் முதலியவர்களிடம் விடைபெற்று, பின் தொடர்ந்துவரும்

பந்துக்களைத் தடுத்துத் திருப்பிவிட்டு அர்ஜுனன், உத்தவர், ஸாத்யகி என்பவர்களுடன் துவாரகா நகரம் சென்றார். இப்படி கிருஹ கிருத்யங்களிலேயே ஆசை யுள்ளவர்களாகவும், அவற்றால் மதித்தவர் களாகவும் அவர்கள் வெகு காலம் கழித்தார்கள். காலத்தை மீறுவதற்குப் ப்ரஹ்மதேவராலும் முடியாதன்றோ ?

19–29. அப்பொழுது விதுரர் அஜ்ஞர்களாகவே இவர்கள் வெகுகாலத்தைப் போக்கிவிட்டார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு திருதராஷ்டிரரை நோக்கி, 'ஓ அரசனே! சமீபத்தில் பயம் நேரிடுகிறதைப் பாரும். சீக்கிரம் பட்டணத்தை விட்டு வெளியில் போகவேண்டும். கால மஹிமையால் நேரும் பயம் ஓரிடத்திலும் ஒரு வகையாலும் தடுக்கமுடியாத தாகையால் அது நம்மெல்லோருக்கும் சமீபித்துவிட்டது. அந்தக் காலம் நேரிடு மானால் ப்ராணனுக்கே அபாயம் உண்டா கிறது. அப்படி யிருக்கையில் பணம் முதலியவைகள் போய் விடுகிறதே என்பதில் என்ன ஆச்சர்யம் ? பிதா, சகோதரர்கள், சிநேகிதர்கள், புத்திரர்கள் ஆகிய இவர்கள் எல்லோரும் சண்டையில் கொல்லப் பட்டார்கள். வயது சென்று விட்டது. சரீரத்தில் ஜரை வந்துவிட்டது; இயற்கையிலேயே நீர் கண் இல்லாதவர். இப்போது கிழத்தனத்தால் உமக்குக் காதுகளும் கேட்கும் சக்தியுள்ளவைகளாயிருக்கவில்லை. புத்தியும் குறைந்திருக்கிறது. பற்கள் உதிர்ந்துபோயின. வயிற்றில் அக்கினி குறைந்து போயிற்று. வியாதி அதிகரித்திருக்கிறது. கபத்தின் வேகம் அதிகமா யிருக்கிறது. இவ்வளவு கஷ்டமான நிலைமையிலும் இன்னும் பிழைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் உமக்கிருப்பது ஆச்சரியப்படத்தக்கதே. மேலும் நீர்

வீட்டில் நெருப்பு வைத்தும், விஷம் கலந்த அன்னத்தைக் கொடுத்தும், இராஜ்யம் முதலிய ஐசுவர்யங்களை அபகரித்தும், இன்னும் பலவகையான கெடுதிகளைப் பாண்டவர்களுக்குச் செய்ததுமல்லாமல் அவர்களுடைய பத்னியை ஸபையில் அவமானப் படுத்தியும் இருக்கிறீர். அவைகளை நினைத்து நினைத்து மிகுந்த கோபத்துடன் பீமஸேனன் வீட்டைக் காத்திருக்கும் நாய்க்குச் சோறு போடுவது போல உமக்கு அன்னம் போடுகிறான். அதனைப் புஜிக்கிறீர், இது மேலான ஜீவனமா? இவ்வளவு தைன்ய மடைந்தும் இனியும் வெகுகாலம் ஜீவிக்க வேண்டு மென்று விரும்புகிறீர். ஆனாலும் கால மகிமையால் வஸ்திரங்கள் கிழிந்துபோவதுபோல உம்முடைய சரீரம் கிழத்தனத்தால் குறைகிறது. கீர்த்தி முதலிய வையிலும், பிரயோஜனமற்ற சரீரத்திலும் அபிமானம் முதலியவைகளை விட்டு எவன் சரீரத்தை விடு கிறானோ அவனே தீரனென்று சொல்லப்படுகிறான். அவன் இன்ன கதியை அடைந்தான் என்று பிறரால் அறிய முடியவில்லை. தவிரவும் குருவின் உபதேசத் தாலாவது, தானாகவாவது, ஸம்ஸாரத்தில் வைராக்யத் தையடைந்து ஸ்திர சித்தமுள்ளவனாகி, ஸ்ரீ மஹா விஷ்ணுவை மனதில் தியானஞ் செய்துகொண்டு வீட்டை விட்டுப் போகிறவனே உத்தமன். இனி வருங்காலம் பெரும்பாலும் நற்குணங்களைக் குறைக்கக் கூடியதாகையால் நீர் பந்துக்களுக்குத் தெரியாமல் வடக்குத் திக்கை நோக்கிச் செல்லும் என்றார்.

30–31. அஜமீட வம்சத்தில் பிறந்த கண்களில்லாதவ (குருட)ரான திருதராஷ்டிரர் தம்பியான விதுரருடைய வார்த்தைக் கேட்டு, பந்துக்களிடம் தமக்கிருக்கும்

ஸ்திரமான அபிமானத்தை விட்டு, தம்பியால் உப தேசிக்கப்பட்ட வழியே வடக்கு திக்கை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது அவருடைய பத்னியும் நல்ல நடத்தையுள்ளவளும், மிக்க பதிவிரதையுமான காந்தாரி என்பவள் தன் புருஷன் பின் சென்றாள். அவ்விருவர்களும் ஹிமய மலைக்குப் போனார்கள். சூரர்களுக்குச் சண்டையில் ஸந்தோஷ முண்டாவது போல் இராஜ்யத்திலிருந்து ஒழிவடைந்தவர்களுக்கு அந்தப் பர்வதமானது மிகுந்த ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியது.

32–35. அன்றைய தினம் காலையில் தர்மபுத்ரர் ஸந்தியோபாஸ்தி செய்து, அக்னி கார்யத்தை முடித்து, எள், பசு, ஸுவர்ணம் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குத் தானஞ்செய்து குருக்களை நமஸ்கரிப் பதற்காக வழக்கப்படி அவர்களுடைய அரண்மனை சேர்ந்தார். அவ்விடத்தில் விதுரர், திருதராஷ்டிரர், காந்தாரி ஆகிய அவர்களையுங் காணாமல் மிகவும் நடுக்கமுள்ளவராய் அங்கிருக்கும் ஸஞ்சயரை நோக்கி, ஓ காவல்கணருடைய புத்ரரே; நம்முடைய பிதிரு வ்யரைக் காணோமே, அவர் எங்கே போனார்? வயது சென்றவரே, தவிரவும் கண்களில்லாதவ வராயிற்றே, தாயாரான காந்தாரியும் எவ்விடம் சென்றாள்? அவள் புத்ர சோகமுள்ளவளே; இவர் களுக்குச் சிநேகிதராகிய விதுரர் போனவிடம் தெரியவில்லையே? நாம் அறியாமையால் ஏதாவது குற்றஞ் செய்தேனோ? அதனால் திருதராஷ்டிரர் என்னிடத்தில் கோபங்கொண்டு மற்ற பந்துக்கள் இறந்து போன துக்கத்தால் தமது பார்யையுடன் கங்கையின் ஜலத்தில் விழுந்து மரணமடைந்தாரா?

எங்களுடைய பிதாவாகிய பாண்டு மஹாராஜன் காலஞ் சென்றபோது சிசுக்களாகிய எங்களை விதுரரும் திருதராஷ்டிரருமே காப்பாற்றினார்கள், அப்படிப்பட்டவர்கள் எவ்விடஞ் சென்றார்கள்? சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

36–38 1/2. இதனைக் கேட்டு ஸஞ்சயர் தம் யஜமானனைக் காணாமல் கவலையுள்ளவராக மிகுந்த தைன்யத்துடன் சிநேகத்தாலுண்டான அதைரியத்தால் வருத்தப்பட்டு உடனே மறுமொழி உரைக்கவில்லை. பின்பு அவர் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே தைரியத்துடன் திருதராஷ்டிரருடைய பாதங்களை நினைத்துக்கொண்டே தர்மபுத்திரரை நோக்கி அவர்கள் போனவிடம் எனக்கும் தெரியாது: மஹாத்மாக்களான அவர்கள் என்னையும் ஏமாற்றிவிட்டார்கள்; நானும் அவர்களைக் காணாமல் கவலையுள்ளவனாயிருக்கிறேன்' என்றார்.

39–41 1/2. இப்படி அவ்விருவர்களும் பேசிக்கொண்டு இருக்கும் பொழுது நாரதர் தும்புருவுடன் அவ்விடத்திற்கு வந்தார். அவரைக் கண்டு தர்ம புத்திரர் தம்பிகளுடன் எழுந்திருந்து நமஸ்காரஞ் செய்து விதிப்படி பூஜித்து, ஓ நாரதரே! மிகுந்த மஹிமை பொருந்திய உம்முடைய தரிசனம் தெய்வச் செயலால் கிடைத்தது. எங்களுடைய பிதாவின் ஸஹோதரர்களான விதுரரும், திருதராஷ்டிரரும், புத்ர சோகமடைந்த காந்தாரியும் இன்னவிடம் போனார்களென்று தெரியவில்லை. அவர்களைக் காணாமல் துக்கமாகிய சமுத்திரத்தில் சழ்கியிருக்கிறோம். அது கரையற்றது, இந்த சமயத்தில்

கப்பல்காரர்போல நீங்கள் வந்திருக்கிறீர்கள், எங்களைக் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

42–63. இதைக் கேட்டு நாரதர் தர்மபுத்திரரை நோக்கி, 'ஓ தர்மபுத்திரரே! ஜகத் யாவும் ஈசுவரனுக்கு வசப்பட்டவை. (பிராணிகளைச் சேர்த்துவைப்பவர் அவரே. அவைகளைப் பிரிப்பவரும் அவரே) ஆகையால் ஒருவரைப் பற்றியும் துக்கிக்காதீர். மூக்குக் கயிறுள்ள எருதுகள் போலும் தந்திரியில் (பிணையல்) சிறு கயிறுகளால் கட்டப்பட்ட பசுக்கள் போலவும் எல்லா லோகங்களும், லோக பாலர்களும் வேதங்களாகிய நீண்ட கயிற்றில் வர்ணாசிரமம் முதலிய சிறுகயிறுகளால் கட்டப்பட்டு, பரமேசுவரனுடைய கட்டளையை நிறைவேற்றுகிறார்கள். உலகத்தில் விளையாட்டுக் கருவிகளை விளையாடுகிறவன் தனதிஷ்டப்படி சிலவேளை சேர்த்தும், பிரித்தும் வைப்பதுபோல மனிதர்கள் சேர்ந்திருப்பதற்கும் பிரிந்து போவதற்கும் பகவான் உடைய விருப்பமே காரணம். இவ்வுலகத்தை ஜீவரூபமாக நித்யமென்று நினைத்தாலும் எவ்விதத்திலும் பந்துக்களைப் பற்றித் துக்கிக்க நியாயமில்லை. மோகத்தால் அபிமானம் வைத்ததாலேயே துக்கம் நேரிடுகிறது. மேலும் ஜகத்தை நித்யா நித்யமென்று சொல்வது பொருந்தாது. ஆகையால் அஞ்ஞானத்தால் ஏற்பட்ட அதைரியத்தை விட்டு விடும். ஆனால் என்னை விட வேறு கதியில்லாத திருதராஷ்டிரர் முதலியவர்கள் நானில்லாமல் எப்படி ஜீவிப்பார்கள், என்று கேட்கலாம், அப்படி நினைப்பது சரியன்று. பத்துப் பூதங்களாலுண்டான இந்தச்சரீரம் காலத்திற்கும், கர்மத்திற்கும் வசப்பட்டது. ஆகையால் நம்முடைய சரீரமே அழியும் சுபாவமுள்ளது. மலைப்

பாம்பின் வாயில் அகப்பட்டவனால் எப்படி மற்றவனை இரட்சிக்க முடியாதோ அதுபோல், நாம் பிறரைக் காப்பாற்றுவது சாத்தியமன்று. கைகளுள்ள ஜந்துக்களான மனிதர்கள் முதலியவர்களுக்குக் கைகளில்லாத பசு முதலியவைகளும், நாற்கால் பிராணிகளுக்குப் புல் முதலியவைகளும், புலி முதலிய பெரிய ஜந்துக்களுக்கு அல்படலமுள்ளவைகளும் எப்படி ஆகாரமாகின்றனவோ அப்படி எல்லா ஜீவனும் வேறு ஜீவனுக்கு ஆகாரமா யிருக்கிறது. ஆதலால் எல்லாம் மரணடயமுள்ளதாகவே காணப்படுகின்றன. ஏ தர்மபுத்திரரே! இந்த ஜகத் யாவும் பகவானுடைய ஸ்வரூபமேயொழிய வேறில்லை. அவர் ஒருவரே, போக்தர் (அனுபவிப்பவர்) போக்தா வின். ஸ்வரூபமாய் இருப்பவர் அவரே. போக்கிய ருபமாயுமிருப்பவர் அவரே. ஆனாலும், மாயையால் பலவகையாகத் தோன்றுகிறார். ஏ மகராஜ! ஸகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாக வசிக்கும் பகவான் தேவவிரோதிகளான அசுரர்களைக் (அசுரர் களுடைய அம்சமுள்ள இராஜாக்களைக்) கொல் வதற்காகக் காலங்காலமாய் துவாரகையில் வசிக்கிறார். தேவகாரியம் அநேகமாக முடிந்துவிட்டது. மிச்சமான பாகத்தை முடிக்கக் காலத்தை எதிர்ப் பார்த்திருக்கிறார். பகவான் இவ்வுலகத்திலிருக்கும் வரையில் நீங்களும் இவ்வுலகத்தில் வசிக்கலாம். திருதராஷ்டிரர் தம்பியாகிய விதுரருடனும், காந்தாரி யுடனும் இமயமலையின் தென்பாகத்தில் மகர்ஷி களுடைய ஆசிரமம் போயிருக்கிறார், அவ்விடத்தில் கங்கா நதியானது ஸப்தரிக்ஷிகளுடைய பிரீதியின் நிமித்தம் ஏழு வகையாக ஓடிற்று. அதனால் ஸப்த ஸ்ரோதஸ் என்று பெயருண்டாயிற்று. அந்தத் தீர்த்தத்தில் ஒவ்வொரு காலத்திலும் திருதராஷ்டிரர் ஸ்நானஞ்

செய்து அக்னிகாரியஞ்செய்து ஜலத்தைப் புசித்து, சாந்தமனமுள்ளவராய் ஆசைகளையும் ஒழித்து, சாஸ் திரத்தில் சொல்லியபடியுள்ள ஆசனத்தையடைந்து சுவாசத்தை யடக்கி, இந்திரியங்களை விஷயங்களில் செல்ல வொட்டாமல் அடக்கிப் பகவானையே மனத்தில் தியானஞ் செய்து அதனால் ராஜஸ, தாமஸ தோஷங்களை நிவர்த்தித்துக்கொண்டு, மனத்தை ஸ்தூல தேஹத்திலிருந்து புத்தியுடன் ஒன்றாகச் சேர்த்து, அந்தப் புத்தியைப் பார்க்கப்படும் விஷயங்களிலிருந்து க்ஷேத்ரக்ஞனுடன் சேர்த்து, அந்த க்ஷேத்ரக்ஞனைப் பார்க்கிறவரிடமிருந்து பிரித்து, கடாகாசத்தைக் கடத்திலிருந்து பிரித்து மகாகாசத்தில் சேர்ப்பது போல ஸகலத்திற்கும் ஆதாரமாகிய ப்ரஹ்மத் தினிடம் சேர்த்து, மாயையின் வாஸனையை யழித்து, இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கி, ஆகாரங் களை நிவர்த்தித்துக் கட்டைபோல அசையாமல் இருக்கிறார். ஸகல கர்மங்களையும் விட்டவரான அவருக்கு நீர் இடையூறாக வேண்டாம். மேலும் இன்று முதல் ஐந்தாவது நாளில் அவர் சரீரத்தை விடப் போகிறார். அந்தச் சரீரம் உடனே எரிந்து போகும் திருதராஷ்டிரருடைய சரீரம் பர்ணசாலை யுடன் கார்ஹபத்யம் முதலிய அக்னிகளால் எரிக்கப் படும்போது ஆசிரமத்திற்கு வெளியிலிருக்கும் அவருடைய பத்னியும் பதிவ்ரதை யுமான காந்தாரி யானவள் உடன் கட்டையேறிச் சரீரத்தை விட்டு விடுவாள், விதுரர் இந்த ஆச்சரியத்தைக் கண்டு திருதராஷ் டிரருக்கு நல்ல கதி கிடைத்ததால் சந்தோஷித்து அவரை விட்டுப் பிரிந்ததால் கொஞ்சம் துக்கத்தை அடைந்தும் தீர்த்த யாத்திரைக்குப் போவார். ஆகையால் அவர்களை அழைத்து

வருவதற்காகவது, அவருடைய சரீரத்தைத் தகிப்பதற்காகவது நீர் போக வேண்டியதில்லை என்று சொல்லி, நாரதர் தும்புருவுடன் ஸ்வர்க்கம் சென்றார். தர்மபுத்திரரும் நாரதருடைய வார்த்தையைக் கேட்டு அதை மனத்தில் வைத்துச் ஸகல துக்கங்களையும் நிவர்த்தித்துக் கொண்டார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம் 14

தர்மபுத்திரருக்கு நேர்ந்த அபசகுனங்கள்

பந்துக்களைப் பார்ப்பதற்கும், புண்ணிய ச்லோக ராகிய கிருஷ்ணனுடைய அபிப்ராயத்தைத் தெரிந்து கொள்ளுவதற்கும் துவாரகா நகரஞ் சென்றிருந்த அர்ஜுனன், சென்று சில மாஸங்களாகியும் திரும்பி வரவில்லை, அப்பொழுது அஸ்தினாபுரத்தில் மிக்க கோரங்களான அபசகுனங்கள் ஏற்பட்டன. மனிதர்கள் உடைய மனதில் கோபம், ஆசை, பொய், ஆகிய இவைகளுண்டாயின. மனிதர்கள் பாபமான காரியத்தைச் செய்து ஜீவித்தார்கள். பெரும்பாலும் ஜனங்கள் கபடமாகப் பேசினார்கள். தோழர்களும் வஞ்சனையாக பேசிக் கொண்டார்கள். பிதா, மாதா, மித்ரன், சகோதரர்கள், தம்பதிகள் ஆகிய இவர்கள் யாவரும் ஒருவருக்கொருவர் கலகம் செய்து கொண் டார்கள். தகப்பன்மார்கள் பணம் வாங்கிக் கொண்டு பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொடுத்தார்கள். புத்திரர்கள் பிதாவைக் காப்பாற்றுவதில்லை. ப்ராஹ்மணர்கள் வேதத்தில் சிரத்தை இல்லாதவர்கள் ஆனார்கள். மேலும் சூத்திரர்கள் வேதத்தைப் படிக்க ஆரம்பித்தார்கள். இப்படிக் காலகதி கோரமா யிருந்தது. இப்படி காலமானது மாறிப் போனதால், மனிதர்களுக்கு ஏற்பட்டிருக்கும் லோபம் முதலிய மனத்தின் துர்க்குணங்களையும், அதர்மத்தை அனுஷ் டிப்பதாகிய சரீர துர்க்குணத்தையும், மிகுந்த அபச குனங்கள் நேரிடுவதையும் கண்டு தர்மபுத்திரர் பீமசேனனை நோக்கி, 'ஓ பீம! பந்துக்களைப் பார்ப் பதற்காகவும், புண்ணிய ச்லோகராசிய கிருஷ்ணன்

னுடைய எண்ணத்தைத் தெரிந்து கொள்ளு வதற்காகவும் துவாரகா நகரம் சென்ற அர்ஜுனன், ஏழு மாதங்களாகியும் இன்னும் வரவில்லை, அதன் காரணமும் இன்னதென்று தெரியவில்லை, எவருடைய அனுக்கிரகத்தால் இராஜ்யம், ஸ்திரீ, ப்ராஹ்மணன், குலவிருத்தி, சத்ருக்களை ஜயிப்பது, ஐசுவரியம், உத்தம லோகங்கள் ஆகிய இவைகள் நமக்குக் கிடைத்தனவோ, அந்தப் பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய சரீரத்தை விடப் போகிறாரென்று தேவர்ஷியாகிய நாரதர் சொன்ன காலம் வந்து விட்டது போலிருக்கிறது. அந்தப் பகவானை விட்டுப் பிரிவதைக் காட்டிலும் வேறு நமக்கு கெடுதி நேரிட நியாயமில்லை. ஓ புருஷசிரேஷ்டா! ஆகாயத்தில் உண்டானவைகளும், பூமியில் உண்டாகின்றவைகளும், சரீரத்தில் காணப்படுகின்றவைகளுமான அபசகுனங் களைப்பார். புத்திக்கு மோகமும் மிக்க கடுமையுமான பயம் வரப்போகிறதென்பதை இவைகள் காட்டு கின்றன. இடக்கண்ணும், இடத்தொடையும் அடிக்கடி துடிக்கின்றன. இருதயத்தில் நடுக்க முண்டாகிறது. அந்த தைஹிகமான அபசகுனத்தால் வெகு சீக்கிரத்தில் கெடுதி நேரிடுமென்று காட்டப்படுகிறது.

13-23. இந்தப்பெட்டை நரியானது குறைக் கொள்ளியை வாயில் கௌவிக்கொண்டு உதயமாகும் சூரிய மண்டலத்தைப் பார்த்து ஊளையிடுகிறது. நாயானது என்னைப் பார்த்துப் பயமில்லாமல் அழுகிறது. என்னைப் பசு முதலிய மேலானவைகள் இடமாகவும், கழுதை முதலியவைகள் வலமாகவும் சுற்றுகின்றன, குதிரைகள் அழுகின்றன. வரும் மரணத்தைக் குறிக்கும் மாடப்புறாவும், கோட்டானும்

அதற்கு விரோதியான காக்கையும் விகாரமாகக் கத்துகின்றன. இவைகளைக் கேட்க மனம்நடுங்கு கிறது; ஜகத்தானது சூனியமாய் விடுமென்று நினைக் கிறேன். திக்குகள் அழுக்கடைந்து நன்றாய் விளங்க வில்லை, பரிவேஷம் (சூரியன், சந்திரன் இவர்களைச் சுற்றிக் கோட்டைக் கட்டுவது) உண்டாயிருக்கிறது; பூமியானது மலைகளுடன் அசைகிறது. மேகங்களின் மறைவில்லாமல் ஆகாயம் சுத்தமாயிருக்கும்போதும் இடியுண்டாகிறது; அகாலத்தில் மேக கர்ஜிதம் கேட்கிறது. மண்காற்று கடுமையாக வீசுகிறது. இருட்டுப் பரவுகிறது. மேகங்கள் வெறுக்கக் கூடிய வையாக எல்லா விடங்களிலும் இரத்த மழையைப் பொழிகின்றன; சூரியனுடைய தேஜஸ் மங்கிவிட்டது ஆகாயத்தில் கிரகங்கள் யுத்தஞ் செய்கின்றன, ருத்ரருடைய பரிவாரங்களாகிய பூதகணங்கள் மற்ற ப்ராணிகளுடன் சேர்ந்து எங்கும் பரவியிருப்பதால் ஆகாயம், பூமி இவைகள் தீப்பட்டவைபோலிருக் கின்றன. ஆறுகளும், நதிகளும் (மேற்கு முகமாய்ச் செல்லுகிறவைகள்), குளங்களும் ஏரிகளும், பிரஜை களுடைய மனமும் கலங்கிவிட்டன. ஆஜ்யம் (நெய்) முதலியவைகளை ஹோமஞ் செய்வதால் அக்னி ஜ்வலிக்கிறதில்லை, இந்தக் காலம் எதனைச் செய்யப் போகிறதோ தெரியவில்லை. மேலும் குழந்தைகள் ஸ்தன்ய பானஞ் செய்யவில்லை. தாயார்களுடைய ஸ்தனங்களில் பாலும் பெருகவில்லை. பூக்கள் கண்ணீரைப் பெருக்கி அழுகின்றன. கொட்டிலி லிருக்கும் ஹ்ருஷபங்கள் சந்தோஷமாக இருக்கவில்லை. தேவதாப் பிரதிமைகள் அழுகின்றவை போலிருக் கின்றன, அவை அசைகின்றன. இந்தச் தேசமும், கிராமங்களும், பட்டணங்களும், உத்தியானங்களும்,

இரத்தினம் விளையும் பூமிகளும், ஆசிரமங்களும் பிரகாசியாமல் இருப்பதுடன் அவைகளில் வசிப்பவர்களும் சந்தோஷமற்றவர்களாய் இருக்கிறார்கள், இவைகள் நமக்கு எவ்விதமான துக்கத்தைக் காண்பிக்கப் போகின்றனவோ, இப்படிப்பட்ட பெரிய உற்பாதங்களைப் பார்க்கும் போது மற்ற புருஷர்களுடைய பாதங்களில்லாத வஜ்ரரேகை முதலியவைகளால் அலங்கிருதமான ஸ்ரீ பகவானுடைய பாதங்களின் ஸ்பரிசம் பூமிக்கு இல்லாமல் பூமிதேவி பாக்கியக்குறை உள்ளவளாய் ஆகிவிடுவாள்போலத் தோன்றுகிறது என்றார்.

24–45. இப்படி தர்மராஜரும் பீமஸேனரும் பேசிக் கொண்டிருக்கும்போது அர்ஜுனன் துவாரகா நகரத்திலிருந்து திரும்பிவந்து தர்மபுத்திரரை நமஸ்கரித்தான். அப்பொழுது அர்ஜுனன் முன்போலிராமல் மிக்க மனவருத்தமுள்ளவனாகவும், தலையைக் குனிந்து இரு கண்களிலும், நீரைப் பெருக்கித் துக்கித்தவனாயுமிருந்தான்; இப்படிச் சோபையில்லாமலிருக்கும் அர்ஜுனனைப் பார்த்து தர்மபுத்திரர் பயந்து, பந்துக்களின் நடுவில் தம்பியை நோக்கி, ஓ அர்ஜுன துவாரகா நகரத்தில் நம்முடைய பந்துக்களாகிய யாதவர்கள், போஜர்கள், தாசார்ஹர்கள், ஸாத்வதர்கள், வ்ருஷ்ணிகள், தூயரும் பூஜ்யருமாகிய, மாதாமகர், அம்மானாகிய வசுதேவர், அவருடைய தம்பிகள் உக்ரசேனருடைய சகோதரிகளும், வசுதேவருடைய பத்தினிகளுமான தேவகி முதலிய ஏழு ஸ்திரீகள், அவர்களுடைய புத்திரர்கள், மருமகள் ஆகிய இவர்கள் க்ஷேமமாயிருக்கிறார்களா? கெட்ட பிள்ளையுள்ள அரசனாகிய உக்ரசேனர், அவருடைய

தம்பியாகிய தேவகர் ஆகிய இவர்கள் பிழைத்திருக்கிறார்களா? மேலும் ஹிருதிக (ச்வல்பர்)ருடைய பிள்ளையான அக்ரூரர், ஜயந்தன், கதன், சாரணன், ஸத்யஜித் அல்லது சத்ருஜித் முதலியவர்கள் க்ஷேமமாய் இருக்கிறார்களா? மேலும் சாத்வதர்களுக்கு அதிபதியான பலராமன் ஸகல விருஷ்ணிகளுக்குள் மகாரதரும் யுத்தத்தில் கம்பீர வேகமுள்ளவருமான பிரத்யும்னர், ஸுஷேணர், சாருதேஷ்ணர் ஜாம்பவதியின் புத்திரராகிய சாம்பர், மற்ற ரிஷப குமாரர்கள், பகவானுடன் சஞ்சரிக்கும் சுருததேவர், உத்தவர் முதலியவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனையும் பல ராமனையும் ஆசிரயித்த யாதவ சிரேஷ்டர்களாகிய சுநந்தர், தந்தர் முதலியவர்கள் ஆகிய பந்துக்கள் எல்லாரும் க்ஷேமமாயிருக்கிறார்களா? மேலும் அவர்கள் நம்மிடத்தில் பிரியத்துடன் நம்மை நினைத்துக் கொண்டிருக்கிறார்களா? ப்ராஹ்மணர்களிடம் விசேஷ பக்தியுள்ளவரும், பக்தர்களிடத்தில் பிரீதியுள்ளவருமான ஸ்ரீ கிருஷ்ண பகவான், உலகங்களுடைய மங்களத்திற்காகவும் க்ஷேமத்திற்காகவும் (கிடைத்ததைக் காப்பாற்றுவதற்காகவும்) துவாரகா நகரத்தில் மித்திரர்களுடன் ஸுதர்மையில் ஸுகமாக வசிக்கிறாரா? எந்த ஸ்ரீ பகவானுடைய இருகைகளால் காப்பாற்றப்பட்ட துவாரகையில் பந்துக்கள் நன்றாகப் பூஜிக்கப்பட்டு மிகுந்த ஆனந்தத்துடன் பார்ஷதகணங்கள் போல ஸஞ்சரிக்கிறார்களோ, அந்த ஸ்ரீ பகவான் பலராமனுடன் யதுகுலத்தில் பிரகாசிக்கிறாரா? ஸத்யபாமா முதலிய பதினாயிரம் ஸ்திரீகளும் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய பாதஸேவையே தபஸ் முதலியவைகளைக் காட்டிலும் மேலானது என்று நினைத்து அவருக்குச் சிசுருஷை செய்து வருகிறார்களா?

அவர்களுக்குப் பகவான் தம்முடைய பலத்தால் தேவர்களை ஜயித்து, அவர்களால் அனுபவிக்கக் கூடியவைகளும் இந்திராணிக்குத் தகுதியானவை களுமான பாரிஜாதம் முதலியவைகளைக் கொடுத் தாரல்லவா? எந்தப் பகவான் தேவர்களை ஜயித்து, தேவ சிரேஷ்டர்கள் வசிக்கக்கூடிய சுதர்மா என்ற சபையை பலாத்காரமாகப் பூமியில் கொண்டுவந்து, அதில் தம்முடைய கைகளின் பலத்தை அவலம்பித்து, ஜீவிக்கும் யாதவர்கள் வஸிக்கும்படியாகச் செய்தாரோ, அந்தப் பரமபுருஷன் ஸுகமாக வாசஞ் செய்கிறாரா? (அவர் பூமியில் வஸித்தால்தான் நமக்கும் ஜனங்கள் ளுக்கும் க்ஷேமமுண்டாகுமென்பது கருத்து) மேலும் குழந்தாய் அர்ஜுன! உனக்குத் தேஜஸ் குறைந்திருப் பதாகத் தோற்றுகிறதே, சரீரத்தில் வியாதி இல்லாம லிருக்கிறதா? வெகுநாளாகத் துவாரகா நகரத்தில் வசித்ததால் பந்துக்கள் உன்னைக் கௌரவப்படுத்த வில்லையா? அல்லது அவமதித்தார்களா? அல்லது பிரியமற்ற நிஷ்டூர வார்த்தைகளைச் சொன்னார்களா? அதனால் மனவருத்த மடைந்தாயா? அல்லது யாசகர்களுக்குச் சிலவற்றைக் கொடுப்பதாகப் ப்ரதிக்ஞை செய்து, பின்பு ஆசையால் அவற்றை அவர்களுக்குக் கொடுக்கத் தவறிப் போனாயா? எல்லாரையும் நீ காப்பாற்றும் ஸ்பாவமுள்ள வனன்றோ? அப்படிப்பட்டவன், ப்ராஹ்மணன், குழந்தை, பசு, வயது சென்றவர், வியாதியுள்ளவர், ஸ்திரீ, மற்றைப் ப்ராணிகள் இவர்களில் சரண மடைந்தவரைக் காப்பாற்றாமல் விட்டுவிட்டாயோ? ஆசைப்படக்கூடாத ஸ்திரீயினிடம் ஆசைபடாமலிருக் கிறாயா? விரும்பக்கூடிய ஸ்திரீ அழுக்கு வஸ்திரம் முதலியவைகளுள்ளவளானாலும் அவளிடம் அனுராகம்

வைக்காமலிருக்கிறாயோ? அல்லது வழியில் மேலான வர்களாலாவது, ஸமமானவர்களாலாவது? ஜயிக்கப் படாமலிருக்கிறாயோ? அல்லது குழந்தைகளுக்கு அன்னமிடாமல் புசித்தாயோ? (அதிதிகள் வேலைக் காரர்கள் கர்ப்பிணி, ரோகிகள், கன்னிகைகள் இவர்களுக்கு ஆகாரங் கொடாமல் புசித்தாயோ?) இன்னும் மற்ற கெட்ட காரியங்கள் எவையேனும் உன்னால் அனுஷ்டிக்கப்பட்டனவோ? மிகவும் பிரியரும், அந்தரங்க பந்துவுமான ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப் பிரிந்தோமேயென்று வருத்தப்படுகிறாயோ? உனக்கு இதை விட வேறு வியாதி ஒன்று மிருக்க நியாயமில்லை என்று கேட்டார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்15

தர்மபுத்திரர் பரலோகஞ்சென்றது.

1–7, இம்மாதிரி தர்மபுத்திரர் பலவகையாகச் சந்தேகம்படும்படி அர்ஜுனனுடைய சரீரத்தில் காந்தியின் குறைவு முதலியவைகள் உண்டாயிருந்தன. அவர் ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப் பிரிந்ததால் விசேஷ வருத்தமடைந்தார். அந்தத் துக்கத்தாலேயே தாமரை மலர்போன்ற அவருடைய முகமும் ஹிருதயமும் வாடி இருந்தன. தேஜஸ் குறைந்திருந்தது. பிரபுவாகிய அந்த ஸ்ரீ கிருஷ்ணபகவானையே மனத்தில் தியானித்துக் கொண்டிருந்ததனால் சீக்கிரமாக விடைசொல்ல முடியாதவராயிருந்தார்.

பிறகு மிகச் சிரமப்பட்டுத் துக்கத்தை மனத்தில் அடக்கிக் கைகளால் கண்களைத் துடைத்து, பகவான் தம்மிடம் வைத்திருந்த சக்யம். மைத்ரி, ஸமஹ்ருத் துவம் முதலியவைகளை நினைத்துக் கொண்டும் துக்கத்தினால் கண்டமடைத்து அரைகுறையான வார்த் தையுள்ளவராகத் தமையனை நோக்கி. ஓ மகாராஜ! ஸ்ரீ கிருஷ்ண பகவான் பந்துவாக விருந்து என்னை ஏமாற்றினார். தேவர்களாலும் ஆச்சரியப்படக்கூடிய என்னுடைய மிகுந்த தேஜஸ்ஸை அபஹரித்தார். எந்தப் பகவான் பூமியை விட்டுப்போனதால் இவ்வுலகம் முழுவதும் ப்ராணனில்லாத சரீரம் போலப் பார்க்க அழகாக இருக்கவில்லையோ, (துரித்திரன் போலவென்றும் சொல்வதுண்டு) தவிரவும், துருபத மகாராஜனுடைய சபையில் திரௌபதியின் சுயம்வரத்திற்காக வந்தவர்களும், மன்மதனால் மதித்த

வர்களுமான அரசர்களுடைய தேஜஸை எவர் தமது பார்வையாலேயே அபகரித்தாரோ, எவருடைய அனுக்கிரகத்தால் நான் மத்ஸ்ய யந்திரத்தைப் பிளந்து திரௌபதியைக் கல்யாணஞ் செய்து கொண்டேனோ, எவருடைய ஸான்னித்தியத்தால் காண்டவ வனத்தை அக்கினி பகவானுக்குக் கொடுத்து அதற்கு விரோதஞ்செய்யும் தேவேந்திரனை ஜயித் தேனோ, எவருடைய ஒத்தாசையால் மயனால் உண்டு பண்ணப்பட்டதும், மிகவும் ஆச்சரியகரமானதும், மாயா மயமாயுள்ள சபையானது நம்மால் அடையப் பட்டதோ, மேலும் எவருக்காக வந்த அரசர்கள் மிக்க உத்தம வஸ்துக்களைக் காணிக்கையாகக் கொடுத்தார்களோ, எந்த பரம புருஷன் சமீபத்தில் இருந்தால் உங்களுடைய தம்பியும் அநேக யாஜனை பலமுள்ளவருமான பீமஸேனர் ராஜஸூயயாகத் திற்காக ஜராசந்தன் என்பவனைக் கொன்றாரோ, ஜராசந்தனால் காராகிருகத்தில் அடைக்கப்பட்டிருந்த அரசர்கள் எவரால் விடுவிக்கப்பட்டு உங்களுடைய யாகத்திற்குக் காணிக்கைகளுடன் வந்தார்களோ, ராஜஸூயயாகத்தில் மஹாபிஷேகத்தையடைந்ததும், மேலானதுமான திரௌபதியின் தலைமயிரை துச்சாதனன் பிடித்து இழுக்கும்பொழுது உம்முடைய பத்னியாகிய அவள் எந்தப் பகவானை ஸ்மரித்தாளோ, எவர் உடனே அவ்விடம் வந்து சேர்ந்தாரோ, எவரை நமஸ்கரிக்கும் பொழுது திரௌபதியின் கண்ணீர் எவருடைய காலில் விழுந்ததோ, எவர் துச்சாசனன் முதலியவர்களுடைய ஸ்திரீகள் தலைமயிரை விரித்துக்கொண்டு அழும்படி செய்தாரோ, மேலும் பதினாயிரம் ஸிஷ்யர்களுடன் போஜனம் செய்பவரான துர்வாசஸஸ் என்னும் மஹர்ஷி

நமது சத்துவாகிய துர்யோதனனால் தூண்டப்பட்டு, நம்முடைய ஆசிரமம் வந்தபொழுது எந்தப் பகவான் (கீரையை) தாம் புசித்து அதனால் மூவுலகத்தில் இருக்கும் துர்வாசஸ் முதலிய மகரிஷிகளையும் திருப்தியடையச் செய்து நம்மைக் காப்பாற்றினாரோ, யாருடைய தேஜஸ்ஸினால் பரமசிவன் பார்வதியுடன் கூட ஆச்சரியமடைந்து பாசுபதமென்ற தமது அஸ்திரத்தை எனக்குக் கொடுத்தாரோ, மற்றுமுள்ள தேவர்களும் அவரவர்களுடைய அஸ்திரங்களையும் கொடுத்தார்களோ, இச்சரீரத்துடனேயே நான் ஸ்வர்க்க லோகத்தில் இந்திரனுடைய ஆசனத்தையும் அடைந்தேனோ, மேலும் ஸ்வர்க்கத்திலேயே வெகு காலம் வசித்துத் தேவர்களுக்கு விரோதியான அசுரர்களைக் கொன்றேனோ, அந்தப் பரமபுருஷன் என்னை இப்பொழுது ஏமாற்றிவிட்டார். கரையற்ற கௌரவ ஸைன்யமாகிய சமுத்திரத்தை எவருடைய ஒத்தாசையால் நான் ஒருவனாகத் தாண்டினேனோ, பின்னும் சத்துருக்களால் அபகரிக்கப்பட்ட பசுக்களையும் அவர்களுடைய தேஜஸ்ஸிற்கு இருப்பிடமான இரத்தினக் கிரீடங்களையும் பிடுங்கிக் கொண்டேனோ, பீஷ்மர், கர்ணர், துரோணர், சல்யர் இவர்களுடைய ஸைனியங்கள் மிகுந்த பலமுள்ள க்ஷத்திரியர்களால் அலங்கரிக்கப்பட்டவையானாலும், அவைகளின் நடுவில் எந்தக் கிருஷ்ண பகவான் என்னுடைய ரதத்தில் சாரதியாகவிருந்து ஒவ்வொரு சேனாதிபதிகளுடைய ஆயுஸ்ஸையும், மனோபலத்தையும், தேகபலத்தையும் பார்வையாலேயே குறைத்து விட்டாரோ, விஷ்ணுபக்தனாகிய ப்ரஹ்லாதன் இடத்தில் ஹிரண்யகசிபுவினால் தூண்டப்பட்ட அரசர்களுடைய கொடுமைபோல் எந்தக் கிருஷ்ணனால்

காப்பாற்றப்பட்ட என்னிடத்தில் அளவற்ற மஹிமையுள்ளவர்களான துரோணர், பீஷ்மர், கர்ணன், அசுவத்தாமா, ஸுசர்மா, சல்யர், ஜயத்ரதர், பாஹ்லீகர் இவர்களால் ப்ரயோகிக்கப்பட்ட அஸ்திரங்கள் வீணாகப்போயினவோ, மேலும்; ஜயத்ரதனைக் கொல்லும்பொழுது தண்ணீர் குடிக்காததனால், குதிரைகள் களைத்துப்போக, இரதத்திலிருந்து எந்தப் பகவான் கீழே இறங்கி, பாணத்தால் பூமியைப் பிளந்து. அதிலிருந்து ஜலத்தையுண்டுபண்ணினாரோ, அப்பொழுது எவருடைய மஹிமையால் சத்ருக்கள் மெய்மறந்து என்னை அடிக்காமலிருந்தார்களோ, அந்த மகாபுருஷரும், மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியவருமாகிய பகவானை சாரதியாய் வைத்துக் கொண்டேனோ, நான் மிகவும் அற்ப புத்தியுள்ளவன். அந்த அபராதத்தால்தான் என்னை அவர் ஏமாற்றிவிட்டாரோ, தெரியவில்லை!

18–27. லக்ஷ்மீபதியாகிய பகவான், "ஓ பார்த்த! (குந்தியின் புத்ரன்) ஓ அர்ஜுன! ஓ குரு நந்தனா! (கௌரவர்களைச் சந்தோஷப்படுத்திகிறவன்) ஏ தோழா! என்று சிரித்துக்கொண்டு பலவகையாக வேடிக்கை வார்த்தைகளைப் பேசினார் அல்லவா? அவைகள் யாவும் இப்பொழுது என் மனத்திலிருக்கின்றன.ஒரே படுக்கையில் படுத்துக்கொள்வது, ஒரே ஆசனத்தில் உட்காருவது, சேர்ந்தே ஸஞ்சரிப்பது புசிப்பது, தம்முடைய குணங்களை தோத்திரம் செய்து கொள்வது, ஆகிய இவைகளால் எங்களிருவர்களுக்கும் மனமும் ஒன்றுபட்டிருந்ததால் சில சமயம் நீர் சொன்ன படி செய்தார் அல்லவா என்று நான் கிருஷ்ணனைப்

பரிகாசஞ் செய்தாலும் தகப்பன் பிள்ளை செய்த பிழையைப் போலவும், அற்ப புத்தியுள்ள என்னுடைய குற்றத்தை விசேஷ மஹிமை பொருந்திய வராகையால் ஸகித்திருந்தார், என்னிடத்தில் மிகவும் மித்ரரும், அளவற்ற பிரீதியுள்ளவரும், அனுகூலத்தைச் செய்ய விரும்பியவருமான புருஷோத்தமனை விட்டுப்பிரிந்து, வழியில் அந்தப் பகவானுடைய களத்திரங்களைக் காப்பாற்ற முயன்றும் சக்தியற்றவனாக அஸத்துக்களால் ஸ்திரீயானவள் போல கோபர்களால் ஜயிக்கப் பட்டேன். இந்த காண்டீபம், பாணங்கள், ரதம், குதிரைகள், ரதியாகிய நான் ஆகிய எல்லாம் முன்னிருந்தவைகளானாலும் பகவானிருந்த. வரையில் அவையெல்லாம் காரியத்திற்கு உபயோகப்பட்டன; பகவான் ஸ்வர்க்கம் போன பிறகு ஒருக்ஷணத்திற்குள் சாம்பலில் செய்த ஆஹுதிபோலவும், வஞ்சகனுக்குத் தானம் செய்தது போலவும், களர் பூமியில் பயிரிடுதல் போலவும் பிரயோசனமற்றவைகளாயின. ஓ மகாராஜ! துவாரகா நகரத்தில் வசிக்கும் பந்துக்களுடைய க்ஷேமத்தை விசாரித்தீரல்லவா? அவர்கள் எல்லாரும் ப்ராஹ்மண சாபத்தால் மூடர்களாய், மத்யத்தைக் குடித்து மதங்கொண்ட..வர்களாய் ஒருவருக்கொருவர் பந்துக்களல்லாதவர்கள் போல் முஷ்டியால் அடித்துக் கொண்டு, நான்கு ஐந்து பெயர்கள் தவிர மற்றவர்கள் எல்லாரும் இறந்தார்கள், பிராணிகள் ஒருவரை யொருவர் காப்பாற்றுவதும், ஒருவரை யொருவர் கொல்வதுமாகி எல்லாம் பகவானுடைய இச்சையே தவிர வேறில்லை, ஜலத்தில் மத்ஸ்யம் முதலிய ஜந்துக்களில் பெரியவைகள் சிறிய ப்ராணிகளைக் கொல்வதுபோல் ஸகல ப்ராணிகளிலும் பலசாலிகள் அற்ப பலமுள்ளவர்களை ஜயிக்கிறார்கள், இப்படியே

யாதவர்களும் ஒருவருக்கொருவர் அடித்துக்கொள் ளும்படி பகவான் செய்து பூமியின் பாரத்தைப் போக்கினார், தேசத்திற்கும் காலத்திற்கும் தகுந்த வைகளும், மனத்தின் தாபங்களைப் போக்கக் கூடிய வைகளுமான கோவிந்தனுடைய வார்த்தைகளை நினைக்க நினைக்க அவைகள் மனதை அபஹரிக் கின்றன என்று பிரலாபித்தார்.

28–31. இப்படி அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரைமலர் போன்ற பாதங்களை நினைத்து அவரிடம் விசேஷ பக்தியை அடைந்தார். அதனால் சித்த சுத்தி உண்டாயிற்று. சண்டையில் பகவானால் உபதேசிக்கப்பட்ட ஞானமானது, கால மகிமையாலும், கர்ம வசத்தாலும் தமோ குணத்தாலும் மறைக்கப்பட்டிருந்தது, அதனால் அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய திவ்ய சரணங்களைத் தியானித்து பூர்ணமான பக்தியை அடைந்துமனத்தில் இருந்து எல்லா அழுக்கும் நீங்கினவராய் முந்திய ஞானத்தை நினைத்துக்கொண்டார்.

முக்குணங்கள் புண்யபாபங்கள், ஸ்தூல சரீரம் ஆகிய இவைகளின் பற்றுதல் (சம்பந்தம்) அற்றுப் போயிற்று. உத்பத்தி முதலியவைகள் விலகின. ஸ்வரூப ஞானம் உண்டானது. ஸகல ஸம்ஸயங்களும் நாசமாயின. ஆனதால் அர்ஜுனன் எந்த வகையிலும் துக்கமற்றவனானான்.

32–33. இம்மாதிரி பகவான் வைகுண்டம் சென்ற தையும், யதுகுலத்தின் நாசத்தையும் அர்ஜுனன் இடமாகத் தர்மபுத்திரர் தெரிந்து கொண்டு அந்தக்

அந்தக்கரணத்தையடக்கித் தானும் ஸ்வர்க்கம் போக விரும்பினார். குந்திதேவியும் அர்ஜுனன் வார்த்தையைக்கேட்டு பகவானிடத்தில் இடைவிடாமல் பக்தி செய்து அவரிடத்திலேயே மனத்தைச் செலுத்தி ஸம்சாரத்திலிருந்து வைராக்யத்தை யடைந்தாள். (ஜீவன் முக்தியை அடைந்தாளென்பது கருத்து)

34–35. காலில் தைத்த ஒரு முள்ளைப் பின்னும் ஒரு முள்ளினால் எடுப்பதுபோல, பகவான் யது குலத்தில் கிருஷ்ணனாக அவதரித்து, பூமியின் பாரத்தை நிவர்த்தித்து, அந்தச் சரீரத்தையும் விட்டுவிட்டார். பூமிக்குப்பாரமாயிருந்த, சரீரமும், அதைப் போக்கடித்த கிருஷ்ண சரீரமும் பகவானுடையதாகையால் அவைகளில் அவருக்கு சமான ப்ரீதியே தவிர பேதமில்லை. மேலும் வேஷதாரியான நடன் மறுபடி வேஷத்தைக் கலைத்து விடுவதுபோல ஈசுவரன் மத்ஸ்யம், கூர்மம் (ஆமை) முதலிய உருவங்களையெடுத்து, அவைகளை விட்டு விடுகிறார். அப்படியே கிருஷ்ணனாகவிருந்து பூமிக்குப் பாரமாயுள்ள அரசர்களை நாசஞ் செய்து அந்தச் சரீரத்தையும் விட்டுவிட்டார்.

36–38 1/2. எல்லோராலும் கேட்கக் கூடிய திவ்ய சரிதமுள்ள பகவான் என்றைய தினம் இவ்வுலகத்தை விட்டு வைகுண்டஞ் சென்றாரோ, அன்றையதினமே அஞ்ஞர்களைக் கலி சூழ்ந்து கொண்டது. அப்பொழுது பட்டணத்திலும், தேசத்திலும், வீடுகளிலும். மனத்திலும் கலி நெருங்குவதால் பணக்காரர்களுக்கு நல்ல பாத்திரத்தில் தானஞ் செய்ய வேண்டுமென்ற எண்ண மில்லாமலிருப்பது, பொய் சொல்வது, கபடமாகப் பேசுவது, பிறரை ஹிம்சிப்பது ஆகிய

அதர்மங்கள் யாவும் பரவின, அதனைப் பார்த்து வித்வானாகிய தர்மபுத்திரர் இவ்வுலகத்தைவிட்டுப் போக முயற்சித்தார். பின்பு, அவர் தமக்குச் ஸமான குணங்கள் பொருந்தியவருமான பரீக்ஷித்திற்கு ஹஸ்தினாபட்டணத்தில் ராஜ்யாபிஷேகஞ் செய்வித்து, சூரஸேனருடைய புத்திரராகிய வஜ்ரரையும் மதுரா நகரத்திற்கு அரசனாகச் செய்தார்.

39–50. பின்பு மிக்க ஸாமார்த்தியமுள்ள தர்மபுத்ரர் பிராஜாபத்யம் என்ற இஷ்டியைச் செய்து அக்னிகளை ஆத்மாவில் ஆரோபித்துக்கொண்டார். அப்பொழுது சரீரத்தில் அணிந்து கொண்டிருந்த வளை முதலிய ஆபரணங்களையும், பட்டு முதலியவைகளையும் விட்டு மோஹம், அஹங்காரம் முதலியவைகளை விட்டவராய், ஸகல பந்தங்களையும் நிவர்த்தித்துக் கொண்டார், ஸகல இந்திரியங்களை மனத்திலும், அதனைப் ப்ராணனிடத்திலும், அதனை அபானனிடத்திலும், அதனை வ்யாபாரத்துடனும், மிருத்யுவினிடத்திலும், அதனை ஐந்து பூதங்களால் ஏற்பட்ட சரீரத்திலும், அதனைக் குணத்திலும, அதனை அவித்தையிலும், அதனை ஜீவனிடத்திலும் அந்த ஜீவனை நாச மற்றவரும் கூடஸ்தருமாகிய பரப்ரஹ்மத்திலும் லயப் படுத்தினார். மேலுமவர் மரவுரியை உடுத்திக்கொண்டு ஆஹாரமில்லாமலும் மௌனியாகவும், தலையை அவிழ்த்துக்கொண்டு மூடன் போலவும், பைத்தியம் பிடித்தவன்போலவும், பிசாசு போலவும், ஒன்றையும் பாராதவராய்ச் செவிடன் போலப் பிறர் சொல்வதைக் கேளாமல் பெரியோர்களான முன்னோர்கள் போன வழியாக வடக்குத் திக்கை நோக்கிச் சென்றார். அப்பொழுது எதை அடைந்தவர்கள் மறுபடியும்

ஸம்ஸாரத்தை அடையமமாட்டார்களோ, அந்தப்பர மாத்வையே தியானித்துக் கொண்டிருந்தார். அவருடைய தம்பிகள் அனைவரும் நிச்சயமுள்ளவர்களாய்த் தர்ம புத்திரர் பின் சென்றார்கள். அதர்மத்தின் ஒத்தாசை யுள்ள கலியானது பிரஜைகளைப் பார்த்து அவருடைய சமீபத்திலும் சென்றது. அப்பொழுது ஸகல தர்மங் களையும் நன்றாக அனுஷ்டித்தவர்களான தர்ம புத்திரர் முதலியவர்கள் ஸ்ரீ நாராயணருடைய சரணங்களே நமக்குச் சரணமென்று நினைத்து, அதனால் பக்தி அதிகரித்தவர்களாகி, சித்தசுத்தியை யடைந்து, பரம புருஷனாகிய ஸ்ரீ நாராயணனிடத்தில் ஸ்திர புத்தியுள்ளவர்களாய், யோகிகளால் அடையக் கூடியதும் ஸம்ஸாரிகளுக்குக் கிடைக்காததுமான மேலான கதியை அடைந்தார்கள். மேலும் ஞானியாகிய விதுரரும் ப்ரபாஸ தீர்த்தக்கரையில் ஸ்ரீ கிருஷ்ணன் இடத்தில் சித்தத்தைச் செலுத்தி. இந்தச் சரீரத்தை விட்டுப் பித்ரு தேவதைகளால் அழைக்கப்பட்டுத் தமது உலகஞ் சென்றார். அப்பொழுது திரௌபதியும் தன்னுடைய பதிகளுக்குத் தன்னிடத்தில் ப்ரீதியில் லாமையைப் பார்த்து வாஸுதேவரிடம் இடை விடாமல் பக்தி செய்து உத்தமகதியையடைந்தாள்.

51. பகவான் வைகுண்டம் சென்றதும், பாண்டவர்கள் பகவானை யடைந்ததுமாகிய இக்கதைகள் மிகவும் பரிசுத்தமானவைகள். இவைகளைச் ச்ரத்தையுடன் கேட்பவர்களுக்கு ஸ்ரீ மஹாவிஷ்ணுவிடத்தில் பக்தியும், அதனால் மோக்ஷமும் கிடைக்கும்.

நோட்டு

ஸக்யம்:அனுகூலத்தைச் செய்ய விரும்பியிருப்பது. மைத்ரி: உபகாரியாகவிருப்பது, ஸஹிருத்வம் பந்துவாகவிருப்பது. ஸ்ரீத. ஸக்யம்-சமான வயது உள்ளவராக இருப்பதால் ஏற்படக்கூடியது. மைத்ரி உபகாரத்தால் ஏற்படக்கூடியது; அதிகப் ப்ரேமை யால் உண்டாகக் கூடியது, சந்த்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்-16

பரீக்ஷித்து தர்மத்தைக் கண்டது

1-4 'பரீக்ஷித்து பிறந்தபோது அவருடைய ஜாதகத்தைப் பார்த்து ஜ்யோதிஷ சாஸ்திரமறிந்த ப்ராஹ்மணோத்தமர்கள் சொன்னபடியே பின், ஹஸ்தினாபுரத்தில் உத்தரையின் புத்திரர் அரசனாக இருந்து ப்ராஹ்மணர்களுடைய கட்டளையின்படி பாகவதர்களுக்குள் சிறந்தவராகி இராஜ்யத்தைக் காப்பாற்றிவந்தார். அவர் உத்தரனுடைய பெண்ணாகிய இராவதீ என்பவளை விவாஹஞ் செய்துகொண்டார். பின்னும் அவர் கிருபரைக் குருவாக வைத்துக் கொண்டு கங்கையின் கரையில் மூன்று அச்வமேத யாகங்களைச் செய்தார். அவைகளில் தேவர்கள் நேரில் வந்து ஹவிர்ப்பாகங்களைப் பெற்றுக் கொண்டார்கள். மேலும் அவர் திக் விஜயஞ் செய்து வரும்பொழுது வழியில் ஒரு எருதையும் பசுவையும் ஒரு சூத்திரன் காலால் உதைக்கக் கண்டார். அவன் ராஜவேஷம் பூண்டிருந்தான். அவனே கலிபுருஷன், அவனைத் தமது பலத்தால் நிக்ரஹித்தார் என்று ஸூதர் சௌனகருக்குச் சொன்னார்.

5–10 'இதனைக் கேட்டு சௌனகர் "ஓ ஸூதரே! பரீக்ஷித் மஹாராஜா கலியை நிக்ரஹிக்க காரணமென்ன? அவன் அரசனாகவும் சூத்ரனாகவுமிருந்து பசுவைக் காலால் ஏன் உதைத்தான்? அந்த விஷயம் பகவத் கதையிலடங்கினதாலும், ஈசுவரனுடைய பாதங்களாகிய தாமரைப் புஷ்பங்களிலிருந்து பெருகி

வரும் மதுவைப் பானஞ் செய்து திருப்தியடைந் திருக்கும் மஹான்களுடைய கதையில் சேர்ந்ததாலும் அதைச் சொல்ல வேண்டும். அற்ப ஆயுள் உள்ள வர்களும் மரிக்கும் ஸ்பாவ முள்ளவர்களுமான மனிதர் களுக்கு மோட்சத்தில் விருப்பமிருக்குமாகில் பகவான் உடைய கதையைக் கேட்பது முதலியவைகளால் அவர்கள் ஆயுஸ்ஸைக் கழிக்க வேண்டுமே அல்லாமல் கெட்ட விஷயங்களால் வீணாக அதைச் செலவிடக் கூடாது. இந்த யாகத்திற்காக மஹர்ஷிகள் அந்தகனை (யமனை) வரவழைத்திருக்கிறார்கள். பகவானுடைய லீலைகளையே கேட்கவேண்டும். சோம்பல், புத்திக் குறைவு, அற்பமான ஆயுள் ஆகிய இவைகளுள்ள புருஷனுடைய ஆயுஸ்ஸானது இராத்திரியில் தூக்கத் தாலும்' பகலில் ஸம்ஸாரத்திற்கு உபயோகமான காரியங்களிலும் செல்லுகிறது. ஆகையால் பகவான் உடைய கதையைக் கேட்பதில் காலத்தை உபயோகியா தவர்களுடைய ஜீவனம் வீணானது என்றார்கள்.

11–17 இதனைக் கேட்டு ஸூதர் சௌனகரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார். பரீக்ஷித்து மகாராஜன் திக்விஜயம் செய்து வருங்காலத்தில் தம் உடைய ஆளுகைக்குட்பட்ட குருஜாங்கலம் இவை களில் கலி வந்து பிரவேசித்தாரென்ற அப்ரியமான வார்த்தையைக் கேட்டவுடன் யுத்தத்தில் மிகவும் சாமார்த்தியம் உள்ளவராகையால் ஆயுதத்தை எடுத்துக் கொண்டு கறுத்த குதிரைகள் கட்டிய இரதத்திலேறிப் புறப்பட்டார். அந்த இரதமானது சிம்மத்வஜமுள்ளது. ஸகல அலங்காரமுள்ளது. யானைகள், குதிரைகள் ரதங்கள், காலாட்படைகள் ஆகிய இவைகளுள்ள சேனைகள் அவரைச் சூழ்ந்து

கொண்டன. அவர் பத்ராச்வம், கேதுமாலம், கிம் புருஷம், பாரதம், உத்தரகுரு ஆகிய வர்ஷங்களில் சென்று அங்கிருக்கும் அரசர்களை ஜயித்து அவர் களிடம் கப்பம் பெற்றுக்கொண்டார். ஒவ்வொரு வர்ஷங்களிலும் வஸிக்கும் ஜனங்கள் பரீக்ஷித்தின் முன்னோர்களாகிய பாண்டவர்களுடைய சரித்தத்தைச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அதில் கிருஷ்ண பகவானுடைய மஹிமையும் இடையில் வர்ணிக்கப் படுகிறது. அச்வஸ்த்தாமாவினுடையை அஸ்திரத்தினிட மிருந்து பரீக்ஷித்தைக் காப்பாற்றின கதையையும், விருஷ்ணிகளுக்கும் குந்தி புத்திரர்களுக்கும் ஏற்பட் டிருந்த விசேஷ சிநேகத்தைப் பற்றியும், அவர்களுக்குப் பகவானிடமிருந்த அதிக பக்தியைப் பற்றியுஞ் சொல்லிக் கொண்டார்கள். அவற்றைக் கேட்டு, 'பரீக்ஷித்து மகாராஜன் கண்கள் மலர்ந்தவராக விசேஷ சந்தோஷத்துடன் அவர்களுக்கு விலையுயர்ந்த வஸ்திரங்கள், ஹாரங்கள் ஆகிய இவைகளை வெகுமதி செய்தார். பின்னுமவர் மிகுந்த பக்தியுள்ள பாண்டவர்களிடத்தில் விசேஷ பிரீதியால் பகவான் சாரத்தியஞ் செய்தது, சபாநாயராகவிருப்பது, பாண்டவர் களுடைய மனம்போல் நடப்பது, தோழனாயிருப்பது, தூதனாயிருப்பது, ராத்திரியில் கத்தியைக் கையில் வைத்துக்கொண்டு தூங்காமல் காப்பாற்றுவது, அவர்கள் ஏவினதைச் செய்வது, அவர்கள் மஹிமையைப் பற்றி தோத்திரஞ் செய்வது, ஆகிய கதைகளையும் சொல்லி ஸகல ஜகத்தும் பகவானை நமஸ்கரிப்பதையும் பார்த்து ஈசுவரனுடைய சரணங்களில் பக்தி செய்தார்.

18–25 இப்படி அந்தப் பரீக்ஷித்து மகாராஜன் முன்னோர்கள் செய்தபடி ஒவ்வொரு நாளும் தாமும்

நடத்தி வந்தார். அப்பொழுது சமீபத்தில் ஒரு ஆச்சரியத்தைக் கண்டார். அதென்னவெனில் தர்ம மானது விருஷப ரூபமெடுத்து ஒரு காலைப் பூமியில் ஊன்றிக்கொண்டு குழந்தைகள் இறந்து போனதால் துக்கப்படும் தாய் போலக் காந்தி குறைந்து கண்ணீரைப் பெருக்கி அழுது கொண்டிருக்கும் ஒரு பசுவை நோக்கி பின்வருமாறு கேட்டது. மங்களமாகிய ஸ்பாவமுள்ளவளே! சௌக்யமாயிருக்கிறாயா? உன் னுடைய முகம் வாடியிருக்கிறது. தேகத்தில் காந்தி குறைந்திருக்கிறது. ஓ அம்மா! மனத்தில் கவலையுள்ள வளாகத் தோன்றுகிறாய். தேசாந்திரம் போயிருக்கும் பந்துக்களைப் பற்றி வருத்தப்படுகிறாயா? அல்லது ஒரு காலால் நிற்கும் என்னைப் பற்றி துக்கிக்கிறாயா? அல்லது கெட்ட அரசர்களால் அனுபவிக்கப்படும் உமது சரீரத்தைப் பற்றி கவலைப்படுகிறாயா? அல்லது யாகங்கள் விதிப்படி செய்யப்படாததால் அசுரர்கள் அவைகளை அபகரிக்கிறார்களேயென்று வருத்தப்படுகிறாயா? காலத்தில் மழை பெய்யாமல் இருப்பதால் கஷ்டப்படும் ப்ரஜைகளைப் பார்த்துச் ச்ரமப்படுகிறாயா? அல்லது பர்த்தாவினால் காப்பாற்றப் படாத ஸ்திரீகளையும, தாயார், தகப்பன் முதலியவர் களால் ரட்சிக்கப்படாத பாலர்களையும், ராக்ஷஸர்கள் போலக் குரூரஸ்பாவமுள்ளவர்களால் உபத்திரவிக்கப் பட்ட சிசுக்களையும், துராசாரமுள்ள ப்ராஹ்மணர் களிடத்திலிருக்கும் வாக்தேவியையும், ப்ராஹ்மணர் களைச் சம்ரட்சிக்காத க்ஷத்திரியர்களை சேவித்துக் கொண்டிருக்கும் மேலான குலத்தில் பிறந்தவர்களைப் பற்றிக் கவலையடைகிறாயா? அல்லது கலியினால் வியாபிக்கப்பட்ட க்ஷத்திரியர் தங்களைப் பற்றியும் இஷ்டமானவிடங்களிலும் இஷ்டப்பட்ட காலங்களிலும்

படுத்துக் கொள்வது, உட்காருவது, புசிப்பது, குடிப்பது, மைதுனம் ஆகிய இவைகளில் ஆசையுள்ள ப்ராணிகளைப் பற்றியும் துக்கிக்கிறாயா அம்மா?! அல்லது துஷ்டர்களைக் கொன்று உன்னுடைய பாரத்தை நிவர்த்திப்பதற்காக அவதாரஞ் செய்த ஸ்ரீ கிருஷ்ணபகவான் வைகுண்டஞ் சென்றதால் மோக்ஷத்தைக் கொடுக்கும் அவருடைய சரிதங்களை நினைத்து அவருடைய விரகத்தைச் ஸகிக்காமல் துன்பமடைகிறாயா? மிக்க பலசாலியான காலத்தின் மஹிமையால் உன்னுடைய அழகு போய்விட்டதா? நீ வருத்தப்படுங் காரணமென்ன? சொல்ல வேண்டும் என்று கேட்டது.

26–35 இதைக் கேட்டுப் பூமிதேவி தர்மதேவதையை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானாள் "ஓ தர்மமே! நான் வருத்தப்படும் விஷயமின்னதென்று உனக்கே தெரிந்திருக்கலாம், உலகத்திற்குச் சௌக்கியத்தைக் கொடுக்கும் நான்கு கால்களோடு நீ இருந்ததற்கு எவர் காரணமோ, எவரிடத்தில் சத்தியம், சுத்தனாக விருப்பது, தயை, பொறுமை, கொடுப்பது, சந்தோஷம், கபடமில்லாமலிருப்பது. மனது ஸ்திரமாயிருப்பது, வெளியிலிருக்கும் இந்திரியங்களை ஜயிப்பது, தனது தர்மத்தை யனுஷ்டிப்பது, சத்ரு மித்ரர் என்ற பேத புத்தியில்லாமலிருப்பது, பிறர் செய்த அபாரதத்தைப் இருப்பது, இலாபங் கிடைத்தாலும் அதில் உதாசீனனாக பொறுப்பது, சாஸ்திரங்களை விசாரிப்பது ஆத்மஞானம், வைராக்கியம் எல்லா வற்றிற்கும் எஜமானனாக விருப்பது; காரியங்களில் சாமர்த்தியம், அழகு, தைர்யம், மிருது ஸ்பாவமுள்ள வனாகவிருப்பது, பக்தி, விசேஷ வணக்கம், சுபாவம்;

மனோபலம், ஞானபலம், இந்திரியபலம், மேலான ஞானம் முதலியவைகளில் கம்பீர மனமுள்ளவராக இருப்பது, அசையாத சித்த முள்ளவராக விருப்பது சிரத்தை, கீர்த்தி, மானம், அகங்காரமில்லாமலிருப்பது ஆகிய இவைகளும் மற்ற எல்லாராலும் ஆசைப்படக் கூடியவைகளுமான மகாகுணங்கள் எப்பொழுதும் வஸித்துக் கொண்டிருந்தனவோ, அந்தக் குண நிதியாகிய ஸ்ரீநிவாஸன் இவ்வுலகத்திலில்லாததனால் பாப ஸ்பாவமுள்ள கலி இவ்வுலகத்தில் வியாபித்தான். அதனால் எனது ஸ்வரூபத்தையும், உன்னையும் தேவர்களையும், மஹர்ஷிகளையும், பிதிருக்களையும், மற்ற சாதுக்களையும், எல்லா ஜாதியார்களையும், ஆச்ரமிகளையும் பற்றிக் கவலைப்படுகிறேன், ப்ரஹ்ம தேவர் முதலியவர்கள் எந்த லக்ஷ்மீதேவியின் கடாக்ஷத்திற்காக வெகுகாலம் தபஸ் செய்தார்களோ, அந்த லக்ஷ்மீதேவியானவள் மேலானவர்களால் ஆசிரயிக்கப்பட்டவளானாலும், தான் வஸிக்குமிடமான தாமரைமலர்களின் வனத்தை விட்டுப் பகவானுடைய பாதங்களாகிய தாமரைப் புஷ்பங்களை மிகுந்த ப்ரீதியுடன் ஸேவிக்கிறாள்; வஜ்ரம், அங்குசம், துவஜம் ஆகிய இந்த ரேகைகளுள்ள அந்தப் பகவானுடைய திவ்ய விபூதிகளையறிந்து மூவுலகிலும் மேலானவளாக இருந்தேன். இப்படி கர்வமுள்ள என்னை ஈசுவரன் கடைசியில் விட்டுப்பிரிந்தார், அவர் எனக்குப் பாரமா யிருந்த அஸுராம்சமுள்ள அரசர்களுடைய அனேக அக்ஷௌஹிணியை நாசஞ் செய்வதற்காகவும், நான்கு பாதங்களுடன் உலகத்தில் உன்னை ஸஞ்சரிக்கும்படி செய்வதற்காகவும் யதுகுலத்தில் அவதரித்தார்.

36 எந்தப் புருஷோத்தமர் பிரியமான பார்வை,

அழகான சிரிப்பு, மனோஹரமான பேச்சு ஆகிய இவைகளால் ஸத்யபாமை முதலியவர்களுடைய மானத்தையும் தைர்யத்தையும் போக்கடித்தாரோ, எவருடைய பாதத்தின் அடி வைப்பினால் அலங்கரிக்கப் பட்ட எனக்கு மயிர்க்கூச்சலுண்டானதோ, அந்தப் பரமபுருஷனை விட்டுப் பிரிந்திருக்க யாரால் முடியும்" என்றாள்.

37. இப்படி இருவரும் பேசிக் கொண்டிருக்கும் பொழுது பரீக்ஷித்து என்ற ராஜரிஷியானவர் குருக்ஷேத்திரத்தில் கிழக்கு முகமாய் ப்ரவஹிக்கும் ஸரஸ்வதி நதிக்கரை வந்தார்.



அத்தியாயம்- 17

பரீக்ஷித் மகாராஜன் கலியை நிக்ரஹித்தது

1–15. அவ்விடத்தில் பரீக்ஷித் மஹாராஜர் ஒரு எருதையும், ஒரு பசுவையும், ஒரு சூத்திரன் ராஜ வேஷந்தரித்துக் கையில் தடியை எடுத்து அடித்துக் கொண்டிருக்கக் கண்டார். அவைகளில் தாமரைத் தண்டு போல் வெளுப்பான விருஷபமானது (எருது) மிகவும் பயந்து மூத்திரம் பெய்வதுபோல் நடுக்கம் அடைந்து, அந்தச் சூத்திரனால் அடிக்கப்பட்டு ஒரு காலால் நின்று மிகவும் துன்பமடைந்திருந்தது. பால் முதலியவைகளைக் கொடுக்கும் அந்தப் பசுவானது கன்றில்லாமல் அழுதுகொண்டிருந்தது. அல்லாமல் இளைத்துமிருந்தது. புல் முதலிய ஆஹாரத்தில் விருப்பமுள்ளதாகவுமிருந்தது. அதனைச் சூத்திரன் காலால் உதைத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஸுவர்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட இரதத்தின் மீதேறியிருக்கும் அந்தப் பரீக்ஷித் மஹாராஜன் வில்லில் நாணை பூட்டிக்கொண்டு பின்வருமாறு மேகம் கர்ஜிப்பது போலக் கம்பீரமாகக் கேட்கத் தொடங்கி 'அட மூட நீ யார்? என்னால் காப்பாற்றப்படுகிற தேசத்தில் பலிஷ்டனான நீ, பலமில்லாதவர்களை உபத்திரவிக்கின்றனை. உனது வேஷத்தால் அரசனாகத் தோன்றுகின்றனை. சூத்திரனுடைய காரியத்தை செய்கின்றனை யாதலால் வேஷதாரி போலிருக்கின்றாய் ஸ்ரீ கிருஷ்ண பகவானும், அர்ஜுனனும் இத்தேசத்தை விட்டு வெகு தூரஞ் சென்றுவிட்டபடியால் இரஹஸ் யத்தில் பலமில்லாதவர்களை ஹிம்ஸிக்கின்றனை. ஆகையால் நீ என்னால் கொல்லத்தகுந்தவன். ஓ

தாமரைத் தண்டு போல வெளுத்த சரீரத்துடன் விருஷப ரூபமெடுத்து ஒரு காலால் ஸஞ்சரிப்பவரே! நீர், தேவதைகளுக்குள் யார்? உம்மைப் பார்க்க எங்களுக்கு வெகு துக்கமாயிருக்கிறது. கௌரவர்களுடைய வைகளால் காப்பாற்றப்படும் பூமியில் துக்கத்தால் உண்டாகும் கண்ணீர் விழுகிற வழக்கமில்லை. ஆதலால் நீர் துக்கிக்கவேண்டாம். சூத்திரனிடமிருந்து பயம் உமக்கு நிவர்த்தியாகிவிட்டது. ஓ அம்மா! பசுவே! துஷ்டர்களை நான் சிக்ஷித்து வரும்பொழுது நீ ஏன் அழவேண்டும்? எந்த அரசனுடைய இராஜ்யத்தில் துஷ்டர்களால் ஸாதுக்களுக்கு உபத்திரவம் நேரிடு கிறதோ அவனுடைய கீர்த்தி, ஆயுள், பாக்யம் ஆகிய இவைகள் குறைவு படுவதல்லாமல் அவனுக்குக் நல்ல லோகமும் கிடைக்கிறதில்லை. உபத்திரவப் பட்டவர் களுடைய துன்பத்தை நிவர்த்திப்பதே அரசர்களுக்கு முக்கியமாகிய தர்மம். ஆனதால் பிராணிகளுக்கும் கெடுதியைச் செய்கின்ற மிக்க அஸத்தாகிய இவனைச் சிக்ஷிக்கிறேன். ஓ விருஷபமே! உன்னுடைய மூன்று கால்களை எவன் வெட்டினான்? ஸ்ரீ கிருஷ்ணன் அனுஸரித்த அரசர்களுடைய இராஜ்யத்தில் ஜனங்கள் உன்னைப் போலிருப்பது உசிதமல்ல. நிரபராதியும் ஸாதுவுமாகிய உனக்குக் கெடுதியைக் குறைக்கும் அஸத் யார்? அவனைச் சொல் உனக்கு க்ஷேமம் உண்டாகும். குற்றஞ் செய்யாதவர்களை எவன் உபத்திரவிக்கிறானோ அவனுக்கு என்னிடமிருந்து பலவகையிலும் பயமுண்டாகும். கொஞ்சமாவது பயமில்லாமல் குற்றமற்றவர்களுக்குக் கெடுதி செய்பவன் தேவனானாலும் தோள் வளைகளுள்ள அவனுடைய கையை, வெட்டி விடுவேன். கெட்ட நடையுள்ளவர்களை,

சாஸ்திர முறைப்படி சிக்ஷிக்கும் அரசர்களுக்குத் தமது தர்மத்தை யனுஷ்டிப்பவர்களைக் காப்பாற்றுவதே ஸ்வதர்மம் என்று சொன்னார்.

16–19½. இதனைக் கேட்டு தர்மமானது அரசனை நோக்கி, ஓ மஹாராஜ! எவர்களுடைய குணங்களால் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவர்களுக்கு, தூதனாக விருப்பது முதலியவைகளைச் செய்தாரோ, அந்தப் பாண்டவர்களின் குலத்தில் பிறந்தவர்களான நீங்கள் பயந்தவர்களுக்கு அடய வார்த்தை சொல்வதே உசிதம். ப்ராணிகளுக்குத் துக்கமுண்டாகுங் காரணத்தைப் பற்றிப் பல வகையான மதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சிலர் ஆத்மாவே துக்கத்திற்குக் காரணமென்றும், லோகாயதகர்கள் நவகிரஹங்களின் அதிதேவதையே துக்கத்திற்குக் காரணமென்றும், மீமாம்ஸகர்கள் கர்மமே காரணமென்றும், சிலர் ஸ்வாபவமே காரணமென்றும், சிலர் ஈசுவரனே காரணமென்றும், சொல்லுவதால் ஊகிக்க முடியாததும், குறிப்பிடக் கூடாததுமான ஏதோ ஒரு காரணத்திலிருந்து துக்கம் உண்டாகிறது. ஒன்றையும் நிச்சயமாகச சொல்லக் கூடவில்லை. இப்படி மதபேதத்தால் மோஹித்து இருப்பதால் எந்தப் புருஷனிடமிருந்து துக்கங்கள் நேரிடுகின்றனவோ அந்தப் புருஷன் இன்னாரென்று நாம் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனது பற்றி அதன் காரணத்தை நீரே உம்முடைய புத்தியால், யோசித்துத் தெரிந்து கொள்ளும் என்று சொல்லிற்று.

20–27. இதனைக் கேட்டு அரசன் யோசித்து மோஹமும் இல்லாதவராகத் தர்மத்தை நோக்கிப் பின்வருமாறு சொன்னார். தர்மமமாகிய வார்த்தையைச் சொல்வதால்

நீ தர்மமேயாம். விருஷபத்தின் சரீரத்தை தரித்து இருக்கின்றனை. அதர்மத்தை யனுஷ்டித்தவனுக்கு எவ்வித ஸந்தோஷமேற்படுமோ அது கோட் சொன்னவனுக்கு (அவனைக் காட்டிக் கொடுத்தவனுக்கு) உண்டாகிறது. அல்லது ஈசுவரனுடைய ஸங்கல்பமானது ப்ராணிகளுடைய மனத்திற்கும், வாக்குக்கும் எட்டாத தாகையால் அதை அறியமுடியாததென்பது நிச்சயம். தபஸ், சௌசம், தயை, ஸத்யம் ஆகிய நான்கு தர்மத்திற்குப் பாதங்களாகக் கிருதயுகத்தில் ஏற்படுத்துப் பட்டன. அதர்மத்தின் பாதங்களாகிய கர்வம், ஆசை, மதம் இவைகளால் தர்மத்தின் மூன்று பாதங்கள் முறிக்கப்பட்டன. இப்பொழுது நான்காவது பாதமாகிய ஸத்யத்தை அஸத்யத்துடன் கூடி கலி பிடிக்க முயற்சிக்கின்றன. இவள் பூமி தேவியே. இவளுடைய பாரத்தைப் பகவான் நிவர்த்தித்தார் அவருடைய திவ்யமாகிய அடிவைப்பினால் ஸந்தோஷமடைந்து இருந்தாள். இப்பொழுது அந்தப் பகவானை விட்டுப் பிரிந்து பூமிதேவியானவள், ப்ராஹ்மணர்களைக் காப்பாற்றாதவர்களும் ராஜவேஷத்தை மாத்திரம் தரித்த வர்களுமான சூத்திரர்கள் தமக்கு அதிபதியாக ஆகிவிடுவார்களே என்று கண்ணீரைப் பெருக்கிப் பாக்கியமற்றவள் போல் துக்கிக்கிறாள் என்று சொல்லித் தர்ம தேவதையையும், பூமியையும் ஸமாதானஞ் செய்தார்.

28-33. பின்னும் மஹாரதராகிய அவ்வரசன் அதர்மத்திற்குக் காரணமாகிய கலியைச் சிக்ஷிப்பதற்காகக் கூர்மையான கத்தியை எடுத்தார். அப்பொழுது கலியானவன் அரசன் தன்னைக் கொல்ல விரும்பியதைத் தெரிந்துகொண்டு இராஜவேஷத்தை விட்டு மிகவும்

பயந்தவனாக அவருடைய சரணங்களில் நமஸ்கரித் தான். அப்பொழுது தம்முடைய காலில் விழுந்த கலியைப் பார்த்து, தீனர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ள வரும், தைர்யமுள்ளவரும், கொண்டாடக்கூடியவரும், சரண்யருமான அரசன் கருணையுடன் அவனைக் கொல்லாமலிருந்ததுமன்றி அவனை நோக்கிச் சிரித்துக் கொண்டு அர்ஜுனனுடைய கீர்த்தியை காப்பாற்றி வரும் நாங்கள், கைகூப்பிச் சரணமடைந்தவர்களைக் கொல்லுகிறதில்லை. ஆனாலும் நீ, அதர்மத்திற்குப் பந்துவானதால் நமக்குச் சொந்தமான இவ்விடத்தில் வசிக்கக்கூடாது. இராஜ சரீரத்தில் நீ வசிக்கும்போது ஆசை, பொய்சொல்லுதல், திருடுவது, துஷ்டனாயிருப்பது, தன்னுடைய தர்மத்தை விட்டுவிடுவது, அலக்ஷ்மீ கபடம், கலஹம், டம்பம் ஆகிய அதர்மத்தின் கூட்டமும் உன்னை யனுஸரிக்கிறது. ஆதலால் அதர்ம பந்துவாகிய ஏ கலியே! ஸத்யம், தர்மம் ஆகிய இவைகள் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும், ப்ரஹ்மாவர்த்தத்தில் நீ வசிக்கக் கூடாது. இவ்விடத்தில் யாகத்தின் விதியை நன்றாக அறிந்தவர்கள் யக்ஞேசரராகிய பகவானை யாகத்தால் பூஜிக்கிறார்கள். மேலும் யாக ஸ்வரூபியான பகவான் யாகஞ் செய்பவர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கிறார். தவிரவும், ,ஸ்தாவர ஜங்கமங்களாகிய எல்லாப் ப்ராணிகளிடத்திலும் வாயுவைப் போல் அந்தர்யாமியாயிருந்து அவரவர்கள் இஷ்டத்தை நிறைவேற்றுகிறார் என்று சொன்னார்.

34–36. அதனைக் கேட்டு அந்தக் கலி மிகவும் நடுக்கமுள்ளவனாகி முயற்சியுள்ள யமனைப்போலக் கத்தியைக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் பரீக்ஷித்தை நோக்கி, ஓ ஸார்வபௌமரே! தங்களுடைய

உத்தரவுப்படி எவ்விடத்திலாவது வசிக்கிறேன். எவ்விடத்திலிருந்தாலும், வில்லையும் பாணத்தையும் கையில் வைத்துக் கொண்டிருக்கும் உம்மை பார்ப்பேன். தர்ம சிந்தையுள்ளவர்களுக்குள் சிறந்தவரே! எவ்விடத்தில் வசிக்கும்படி நீர் ஆஞ்ஞாபிக்கிறீரோ அவ்விடத்திலேயே வசிப்பேன். அப்போர்ப்பட்ட ஸ்தானத்தை எனக்குக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.

37–39. அப்பொழுது இம்மாதிரி கலியால் பிரார்த்திக்கப்பட்ட பரீக்ஷித்து மஹாராஜா. சொக்கட்டான் ஆட்டம், மத்யபானம், ஸ்திரீ ஸங்கமம், ப்ராணி ஹிம்ஸை ஆகிய நான்கு அதர்ம ஸ்தானங்களிலும் வசிக்கும்படி ஆஞ்ஞாபித்தார். அதிலும் திருப்தியடையாமல் பின்னும் சிலவிடங்கள் கொடுக்க வேண்டுமென்று கலி கேட்டுக்கொள்ள, அப்பொழுது அரசன் ஸுவர்ணத்திலிருக்கும்படி சொன்னார். அதனாலும் கலி திருப்தி யடையாமலிருக்க, பின்னும் அரசன் பொய், மதம், காமம், ரஜோ குணம், விரோதம் ஆகிய ஐந்து இடங்களையும், கலிக்குக் கொடுத்தர். இப்படி உத்தரையின் புத்திரரால் கொடுக்கப்பட்ட இந்த விடங்களில் அவருடைய உத்தரவின்படி கலி வசித்துக்கொண்டிருந்தான்.

40-44. ஆனதால் க்ஷேமத்தை விரும்பியவர்கள் இவைகளை ஸேவிக்கக் கூடாது. அவைகளில் ஆசைப்படவே கூடாது. பிறகு அவர் தபஸ், சௌசம், தயை இவைகளை உலகத்தில் பரவச் செய்து முறிந்துபோன தர்மத்தின் மூன்று பாதங்களையும் விருத்தி செய்தார். பூமியையும் விருத்தி செய்தார். அந்தப் பரீக்ஷித்து என்பவர், தர்ம புத்திரர்

காட்டிற்குப் போகும் முன்னிலையில் அவரால் தமக்குக் கொடுக்கப்பட்ட இராஜ்யத்தை அடைந்து விசேஷ கீர்த்தியுள்ளவராய் பிரகாசித்தார். அபிமன்யுவின் புத்திரராகிய அந்த அரசன் இவ்வளவு மஹிமையுள்ளவர். அவர் ராஜ்ய பாலனஞ் செய்யும் காலமாகிய இப்பொழுது நீங்கள் ஸத்ரஞ் செய்ய ஆரம்பித்திருக்கிறீர்கள்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்-18

பரீக்ஷித்திற்கு நேர்ந்த ப்ராஹ்மண சாபம்

1-10 எந்தச் சக்கரவர்த்தியானவர் தாயாருடைய கர்ப்பத்திலிருக்கும்போது அச்வஸ்த்தாமாவினுடைய அஸ்திரத்தால் எரிக்கப்பட்டும் அதியற்புதமாகிய செய்கைகளுள்ள ஸ்ரீ கிருஷ்ணனுடைய அனுக்ரஹத்தால் மரணமடையவில்லையோ எவர் ப்ராஹ்மணருடைய சாபத்தால் தக்ஷனால் தமக்கு உயிர்ச் சேதம் நேர்ந்ததும் அதனால் கொஞ்சமேனும் கவலைப்படாமல் இருந்தாரோ, சுகருடைய சிஷ்யராகிய அந்த மஹா ராஜன் ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலேயே தமது மனதைச் செலுத்தி, ஸகல ஆசைகளையும் ஒழித்து, பகவான் உடைய ஸ்வரூபத்தையறிந்து கங்கா நதிக்கரையில் சரீரத்தைவிட்டார். எந்தப் புருஷர்கள் உத்தமச் லோகருடைய கதைகளைச் சொல்வதால் காலத்தைக் கழிக்கிறார்களோ, எவர்கள் மரணகாலத்திலும் பகவான் உடைய சரணாரவிந்தங்களைத் தியானஞ் செய்கிறார் களோ அவர்களுக்கு மோஹம் உண்டாவதில்லை. மேற்சொல்லிய அபிமன்யுவின் புத்திரராகிய சக்ரவர்த்தி அரசனாயிருக்கும்போது லோகத்தில் கலி வந்திருந்தாலும் அதர்மம் பரவாமலிருந்தது. என்றைய தினம் எந்த க்ஷணத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் பூமியை விட்டு மேலுலகஞ் சென்றாரோ, அன்றைய தினமே லோகத்தில் அதர்மத்தை விருத்தி செய்யும் கலி பிரவேசித்தான். தேனீ போல் ஸாரத்தைக் க்ரஹிப்பவராகிய பரீக்ஷித்து மஹாராஜன் கலியைக்கொன்று விடவில்லை. அவன் உடைய சக்தி பரவாமலிருக்கச் செய்தார். ஏனென்றால், அந்தக் கலியின் காலத்தில் ஸங்கல்ப மாத்திரத்தில்

புண்யங்களும், செய்கையால் பாபங்களும் சித்திக் கின்றன. தைர்யமற்றவர்களிடம் சூரனாகியும், தைர்யம் உள்ளவர்களிடம் பயப்படும் ஸ்வாவமுள்ளவனாயு மிருக்கிற கலியானவன் அஜாக்ரதை உள்ளவர்களைப் பிடித்துக்கொள்ள செந்நாய்போல மிக்க ஜாக்கிரதை யுள்ளவனாக இருக்கிறான் (அவன் என்ன கெடுதியைச் செய்யப் போகிறான் என்பது கருத்து) ஓ மஹர்ஷிகளே! உங்களால் கேட்கப்பட்டதும் மிக்க புண்யகரமுமான பரீக்ஷித்தின் சரிதத்தை ஸ்ரீ வாஸுதேவருடைய திவ்ய கதைகளுடன் சொன்னேன். ஆதலால் க்ஷேமத்தை விரும்பிய மனிதர்கள் பகவானுடைய குணங்கள், சரித்திரங்கள் ஆகிய இவைகளடங்கிய கதைகளையே சொல்ல வேண்டும். அவைகளையே கேட்க வேண்டும். மற்ற கதைகளை ஸேவிக்கக் கூடாதென்பது கருத்து, என்று ஸூதர் சொன்னார்.

11–18 இதனைக் கேட்டு மஹர்ஷிகள் அவரை நோக்கி, 'ஓ ஸூதரே! நீர் மரண தர்மமுள்ள எங்களுக்கு அமிருதமான ஸ்ரீ கிருஷ்ண கதையைச் சொன்னதால் வெகுகாலம் ஜீவித்திருக்கும் எங்களால் இப்பொழுது அனுஷ்டிக்கப்படும் ஸத்ரத்தை யாதொரு குறைவுமின்றி முடிப்பது அரிதாகையால் அதன் பூர்ண பலத்தை அடைவோமென்பது நிச்சயமில்லை, ஆகிலும், அதனைச் செய்து கொண்டு புகையினால் கறுத்த சரீரமுள்ள வர்களாகிக் கஷ்டப்படும் எங்களுக்கு ஸ்ரீ கோவிந் தருடைய பாதங்களாகிய தாமரை மலரின் தேனைக் கொடுத்தீரல்லவா? பகவத் பக்தர் களுடைய சேர்க் கையின் சிறிது பாகத்திற்குச் ஸ்வர்க்கமாவது, மோக்ஷமாவது, மற்ற ராஜ்யம் முதலியவைகளாவது ஸமமானவையல்ல. மஹான்களுக்கு முக்கியமான

கதி பரம புருஷனே. அவரிடத்தில் ப்ராகிருத குணங்களில்லை. அவரிடத்தில் பொருந்தியிருக்கும் கல்யாண குணங்கள் இவ்வளவென்று பரமசிவன், ப்ரஹ்மா முதலிய தேவர்களாலும் அறிய முடியவில்லை. அப்பேர்ப்பட்ட பகவானுடைய கதையைக் கேட்டு ரஸிகனான எவன்தான் போதுமென்று திருப்தி அடைவான்? ஆதலால் பகவத் பக்தர்களுக்குள் முக்கியரும் எல்லாவற்றையு மறிந்தவருமான நீர் மிக்க கம்பீரமாயும், பரிசுத்தமாயுமுள்ள மஹா விஷ்ணுவின் சரிதத்தைக் கேட்க விரும்பும் எங்களுக்கு விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும். மஹா பாகவத சிரோமணியான அந்தப் பரீக்ஷித்து மஹாராஜன் சுகரால் உபதேசிக்கப்பட்ட ஞானத்தால் மோக்ஷமென்ற பெயருள்ள ஸ்ரீ நாராயணனுடைய சரணத்தையடைந் தாரல்லவா? மிகுந்த புண்யத்தைக் கொடுப்பதும், மிகவும் அற்புதமுமாகிய யோகத்தைக் காட்டுவதும், நாசமற்றவராகிய பகவானுடைய சரீரத்தால் அலங்கரிக் கப்பட்டதும், பக்த பக்தர்களுக்கு மனோஹரமாய், பரீக்ஷித்துக்குச் சுகரால் உபதேசிக்கப்பட்டதுமான ஸ்ரீமத் பாகவதமென்ற ஆக்யானத்தை நன்றாகத் தெரியும்படி சொல்ல வேண்டும் என்று ப்ரார்த்தித் தார்கள்.

18–23 இதனைக் கேட்டு ஸூதர் சொல்லுகிறார். ஆச்சரியம், யான் விலோம ஜாதியுள்ளவனானாலும் என்னுடைய பிறப்பும் இப்பொழுது பெரியோர்களைச் ஸேவித்ததால் சபலமாயிற்று. மிக்க மகான்களாகிய புருஷர்களுடன் பேசக் கூடிய பாக்யம் கிடைத்த தாலேயே தாழ்ந்த குலத்தில் பிறந்ததால் உண்டான மனக்கவலை நீங்கியது. எந்தப் புருஷன் அளவற்ற

சக்தி, அளவற்ற குணங்கள் ஆகிய இவைகளுள்ளவரோ, நாசமற்றவரோ; அதனால் அனந்தரென்று சொல்லப் படுகிறாரோ, மகான்களுக்கு முக்கிய கதியாயிருக்கும் அந்தப் புருஷோத்தமருடைய குணங்களைச் சொல்லுகிற எனக்குத் துக்கமே நேரிடாது. லக்ஷ்மீ தேவியானவள் தன்னைப் ப்ரார்த்திக்கும் ப்ரஹ்மா முதலிய தேவர்களை லக்ஷியம் செய்யாமல் தன்னை விரும்பாதவரான ஸ்ரீ நாராயணனுடைய பாததூளியை சேவிக்கிறாள். அவருக்குச் சமமானவராவது, மேற்பட்ட வராவது ஒருவருமில்லை. இதனாலேயே அவருடைய மஹிமை நன்றாக விளங்கும். தவிரவும், எவருடைய சரண நகத்திலிருந்து பெருகியதும், ப்ரஹ்மதேவரால் சேவிக்கப்பட்டதுமான கங்காஜலம் பரமசிவன் முதலிய எல்லோரையும் பரிசுத்தப்படுத்துகிறதோ, அந்த முகுந்தனைத் தவிர வேறு யாரைப் பகவான் என்று சொல்லக்கூடும்? அந்த ஸர்வேசனிடம் அந்தரங்கத்தைச் செலுத்தியவர்கள் தைர்யமுள்ள வர்களாகத் தேகம் முதலியவைகளில் வெகுநாளாக உண்டாகியிருக்கும் விசேஷ அபிமானத்தை யொழித்து, அஹிம்சை, சமம் இவைகளுடன் கூடி பரமஹம் சர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆனதால் ஸூர்யனுக்குச் சமமான தேஜஸுள்ள ஓ மஹர்ஷிகளே! பகவான் உடைய சரிதத்தைச் சொல்லுகிறேன். பறவைகள் தம்முடைய சக்திக்குத் தக்கபடி ஆகாயத்தில் பறக்குமே அல்லாமல் வெகு உயரத்தில் சக்தியை மீறிப் பறக்க அவைகளால் முடியுமா? வித்வான்கள் தமது புத்திக்கு எட்டியவரையில் மஹாவிஷ்ணுவின் லீலைகளை வர்ணிக் கிறார்கள். அப்படிப்போல எனக்குத் தெரிந்தவரையில் பகவானுடைய சரிதத்தைச் சொல்லுகிறேன் என்று பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்.

24–31 பரீட்சித்து மஹாராஜன் ஒரு நாள் காட்டில் வேட்டையாடி வரும்போது மிருகங்களை நாடிச் சென்றதால் மிகுந்த பசி தாகமுள்ளவராய், ஏரி குளங்களைத் தேடிப் போகும்போது ஒரு ஆசிரமத்தைக் கண்டார். பின்பு அதனுள் சென்று அவ்விடத்தில் கண்களை மூடிக்கொண்டு நிஷ்டையிலிருக்கும் ஒரு மஹர்ஷியைக் கண்டார். அந்த மஹர்ஷி இந்திரியங் களையும் ஸ்வாசத்தையும் அடக்கிக் கொண்டிருந்தார். அவருடைய புத்தியானது விஷயங்களிற் செல்ல வில்லை. ஜாக்ரத், சுவப்னம், சுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளையும் தாண்டி விகாரமற்ற ப்ருஹ்ம ஸ்வரூபியாயிருந்தார். அவருடைய ஜடைகள் நாலு பக்கங்களிலும் அவரை மறைத்துக் கொண்டிருந்தன. தவிரவும் மானின் தோலைப் போர்த்துக் கொண்டு இருந்தார், அவரை நோக்கி அரசன் மிகுந்த தாகத்தால் அதிக வருத்தப்பட்டுத் தண்ணீர் கொடுக்கும்படி பல தரம் வேண்டிக்கொண்டார். இப்படி மகாராஜன் கேட்டு அவருக்கு குடிக்க நீர் கொடாமலிருந்தது இன்றி ஆசனங் கொடுப்பது உட்காருவதற்கு இடம் காட்டுவது. அர்க்கியம், ப்ரியமான வார்த்தை முதலியவைகளாலும் அவரை உபசரிக்கவுமில்லை. அப்பொழுது அரசன், 'மஹர்ஷி தம்மை அவமதித்தார்' என்று நினைத்துப் பசி, தாகம் இவைகளால் துன்பப்பட்டவராகையாலும் அவருக்கு மஹர்ஷியினிடம் கோபமும் விரோதமும் உண்டாயின. இம்மாதிரியான கெட்டகுணம் இதற்கு முன் நேர்ந்தது இல்லை, பின்பு அரசன் ஆசிரமத்திலிருந்து வெளியில் வரும்போது, 'இந்த மஹர்ஷி உண்மையில் நாம், வந்தது தெரியாமல் நிஷ்டையிலிருக்கிறாரா, அல்லது க்ஷத்திரியன் வந்தாலென்ன, போனாலென்னவென்று

கபடமாகக் கண்களை மூடிக்கொண்டிருக்கிறாரா? என்று பரீட்சிப்பதற்காக உயிரிழந்த ஒரு பாம்பை வில் கழியின் நுனியால் தூக்கி அவருடைய கழுத்தில் போட்டுத் தமது பட்டணம் சென்றார்.

32–38 அப்பொழுது மிகுந்த தேஜஸ்வியான சிருங்கி யென்னும் அந்த மஹர்ஷியின் புத்திரன் தோழர் களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அந்த இடத்தில் அரசன் செய்த காரியத்தைக் கேள்விப் பட்டு, தன் தோழர்களை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானான்." ஆச்சரியம் அதர்மம் மேலிட்டது. நாய்களைக் காவலுக்காக வைப்பதுபோல க்ஷத்திரியர்களைப் ப்ராஹ்மணர்கள் காவலாளர்களாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். வாசலில் காத்துக்கொண்டு இருக்கும் அவன் எப்படி பூஜிக்கத் தக்கவனாவான்? பலியைப் புஜிக்கும் காக்கைகள் போலும் (ஜனங் களால் கொடுக்கப்படும் வரியைக் கொண்டு ஜீவிப்பவ னென்பது கருத்து). வாசலைக்காத்திருக்கும் நாய்கள் போன்ற கொழுத்த க்ஷத்திரியர்கள் யஜமானனுக்குக் குற்றஞ்செய்யும்படி நேர்ந்ததே. கெட்ட மார்க்கத்தில் சஞ்சரிப்பவர்களைச் சிக்ஷிப்பவரான ஸ்ரீ கிருஷ்ண பகவான் வைகுண்டஞ் சென்றாலும் மரியாதை தவறினவர்களை நான் நிக்ரஹிக்கிறேன் என்னுடைய பலத்தைப் பாருங்கள் என்று சொல்லி கோபத்தால் கண்கள் சிவக்க, கௌசிகீ நதியின் ஜலத்தால் ஆசமனஞ் செய்து, என்னுடைய பிதாவிற்கு அபராதஞ் செய்தவனும், மரியாதை தவறினவனும், குலத்திற்கு நெருப்புத் தணல் (குலத்தைக் கெடுப்பவனென்று கருத்து) போன்றவனுமாகிய அரசனை இது முதல் ஏழாவது நாளில் தக்ஷகன் கடித்து எரிந்து விடுவானாக

என்று சபித்தான். பின்பு ஆசிரமம் வந்து அந்த இடத்தில் பிதாவின் கழுத்தில் சர்ப்பத்தைக் கண்டு மிகவும் துக்கப்பட்டுக் கதறினான்.

38–39 1/2 இதைக் கேட்டு சமீகரென்னும் அந்த மஹர்ஷியானவர் மெள்ள கண்களைத் திறந்து தம்முடைய தோளில் உயிரில்லாத பாம்பிருக்கக்கண்டு அதனை எடுத்து எறிந்துவிட்டுத் தமது புத்திரனை நோக்கி, 'ஓ குழந்தாய் ஏன் அழுகிறாய்? எவர்கள் உனக்கு எவ்விதக் குற்றத்தைச் செய்தார்கள்?' என்று கேட்டார்.

40–50 1/2 அதனைக் கேட்டு, சிருங்கியென்பவர் நடந்த விஷயம் எல்லாவற்றையும் உண்மையாகத் தெரிவித்தார். அதனைக் கேட்டும் மஹர்ஷியானவர் தம்முடைய புத்திரன் மகாராஜனைச் சபித்தது உசிதமல்லவென்று நினைத்து, அவனை நோக்கிப் பின்வருமாறு தர்மத்தின் இரகசியத்தை உபதேசித்தார். ஓ ஒன்றையு மறியாதவனே! அரசன் செய்த சிறு குற்றத்திற்காகப் பெரிதாகிய சிக்ஷையைச் செய்தது உசிதமன்று. பெரியதாகிய பாபத்தைச் செய்தாய். ஓ விவேகமற்றவனே! அரசன் மகாவிஷ்ணுவின் அம்சம் உள்ளவனாகையால் அவனைச் ஸாமானிய மனிதனாக நினைக்கக் கூடாது. அவனுடை தேஜஸ் ஸகிக்க முடியாதது. அவனால் காப்பாற்றப்பட்டு ஜனங்கள் ஒருவரிடத்திலும் பயமில்லாதவர்களாக வசிக்கிறார்கள். மகாவிஷ்ணுவின் அம்சமுள்ள அவ்வரசனில்லாவிடில் ஜனங்கள் ஆடுகளின் கூட்டம்போல் க்ஷணகாலத் திற்குள் நாசமடைவார்கள். தேசத்தில் அரசனில்லாத வரையில் ஜனங்களுடைய தனங்களை அபகரிக்கும்

திருடர்கள் மிகுதியாய் விடுவார்கள். ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்வார்கள். கடுமையாகப் பேசுவார்கள். பசுக்கள், ஸ்திரீகள், பணங்கள் ஆகிய இவைகளை அபகரிப்பார்கள். ஆகையால் அதனாலுண்டாகும் பாபம் நம்மைச் சேர்ந்ததாகும். (அரசனைச் சபித்தாலென்பது கருத்து) மேலும், வர்ணாசிரம தர்மங்கள் குறைந்து விடும். நல்லொழுக்கம் மறைந்துவிடும். நாய்கள் போலவும், குரங்குகள் போலவும் அர்த்தம், காமம் இவைகளிலேயே ஜனங்கள் மிகவும் ஆசை கொள்வார்கள். அதனால் வர்ண ஸங்கரம் உண்டாகும், தவிரவும் பரீக்ஷித் மகாராஜனோ தர்மத்தைக்காப்பாற்றி கிறவர். சக்ரவர்த்தி, மிகுந்த கீர்த்தியுள்ளவர், பகவத் பக்தர். அச்வமேத யாகஞ் செய்தவர். மேலும் என்னிடம் வந்த சமயத்தில் பசி தாகத்தால் ச்ரமம் அடைந்து தீனராயிருந்தவர். ஆனது பற்றி அவரைச் சபிப்பது நியாயமல்ல. குற்றஞ்செய்யாத வேலைக்காரர் களிடம் செய்த அபராதத்தைச் ஸகல ஜகத்ரூபியான பகவான் பொறுத்துக் கொள்ளட்டும். விஷ்ணு பக்தர்களை ஒருவன் நிந்தித்தாலும், ஏமாற்றினாலும், அவமதித்தாலும், அடித்தாலும் அவர்கள் ப்ரதி செய்ய சாமர்த்தியமுள்ளவர்களானாலும் ஒன்றுஞ் செய்கிறதில்லை என்று சொல்லித் தமது புத்திரன் செய்த குற்றத்தைப் பற்றி மஹர்ஷி பச்சாதாப மடைந்து, அரசன் செய்த குற்றத்தை மனத்தில் நினைக்காமலேயே இருந்தார். பெரும்பாலும் சாதுக்கள் பிறர் செய்த கெடுதியால் அவர்களிடத்தில் கோபித்து வருத்தமடைகிறதில்லை. உபகாரத்தால் சந்தோஷம் அடைகிறதுமில்லை. ஏனென்றால் ஆத்மாவானது உண்மையில் சுகத்திலாவது துக்கத்திலாவது ஸம்பந்திக்கிறதில்லை.

அத்தியாயம்-19

கங்கைக்கரைக்குச் சுகர் வந்தது

பரீக்ஷித்து மகாராஜன் தம்முடைய பட்டணஞ் சென்ற பிறகு மஹர்ஷியின் ஆசிரமத்தில் தாம் செய்து வந்த குற்றத்தை நினைத்து வருத்தப்பட்டுத் தமக்குள் தாம் பின்வருமாறு யோசிக்கலானார்: 'யாதொரு அபராதமுஞ் செய்யாதவரும், தேஜஸ்ஸை அடக்கிக் கொண்டவருமான தபஸ்வியினுடைய கழுத்தில் ஸர்ப்பத்தைப் போட்டேன். அது மிகக் கெட்ட கார்யம். 'பாபத்தைச் செய்யக்கூடாது' என்ற தெய்வத்தின் கட்டளையை மீறினதாக ஆயிற்று, ஆனதால் தடுக்க முடியாத துக்கம் சீக்கிரத்தில் நேரிடும். இனி நான் இப்படிப்பட்ட கெட்ட காரியத்தைச் செய்யாமல் இருப்பதற்காகவும், செய்த பாபத்திற்குப் ப்ராயச்சித்த மாகவும் அந்தத் துக்கம் எனக்கே நேரில் வரவேண்டும் (புத்திரன் முதலியவர்களுக்கும் நேரிட வேண்டாம் என்பது கருத்து) நான் ப்ராஹ்மணர்களுக்குக் கோபத்தை யுண்டுபண்ணினதால் ப்ராஹ்மண குலமாகிய அக்னி யானது மிக்க பாபியான என்னுடைய இராஜ்யம், சைன்யம், பூர்ணமான செல்வம் ஆகிய இவைகளை இப்பொழுதே எரிக்கட்டும். ப்ராஹ்மணர்கள், தேவர்கள் பசுக்கள் ஆகிய இவர்கள் விஷயத்தில் மறுபடியும் எனக்கு இப்படிப்பட்ட கெட்ட புத்தி யுண்டாக வேண்டாம் என்று சிந்தித்தார்.

4-17. இந்தச் சமயத்தில் சமீக மஹர்ஷியின் சிஷ்யன் ஒருவன் குருவின் அனுமதிப்படி வந்து, சிருங்கியின்

சாபத்தை அரசனிடம் தெரிவித்தான். அதனைக்கேட்டு மகாராஜன் 'விஷயங்களில் மிகுந்த ஆசையுள்ள நான் வைராக்யமடைவதற்குத் தட்சகனுடைய விஷாக்னியே காரணமென்றும், அது சீக்கிரமாக நேரிடவேண்டும்' என்றும் நினைத்தார். பின்னுமவர் இவ்வுலகம், பரலோகம் ஆகிய இவ்விரண்டையும் துச்சமென்று தள்ளிவிட்டு, ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதஸேவையையே பெரிதாக நினைத்துக் கங்கைக் கரையில் பிராயோபவேசஞ் செய்ய முயற்சித்தார். எந்த நதியானது துளஸியுடன் சேர்ந்த மகாவிஷ்ணுவின் பாததூளியை விட மிக்க புண்யகரமான ஜலப்பிரவாகமுள்ளதோ, லோகபாலர்களுட்பட எல்லாரையும் வெளியிலும் அந்தரங்கத்திலும் பரிசுத்தப் படுத்துகிறதோ, அந்தக், கங்காநதியைச் சாகுந் தருணத்திலிருக்கும் எவன்தான் ஸேவிக்க மாட்டான்? இப்படி அந்த நதிக்கரையில் பிராயோபவேசஞ் செய்வதாகத் தீர்மானித்து வேறு விஷயத்தில் மனதைச் செலுத்தாமல் ஸ்ரீ கிருஷ்ணன் உடைய சரணங்களையே தியானித்து, ஸகல ஆசை களையும் விட்டுவிட்டு முனியாக விருந்தார். அப்பொழுது அத்ரி, வசிஷ்டர், ச்யவனர், சரத்வான், அரிஷ்டநேமி, ப்ருகு, ஆங்கிரஸ், பராசரர், விசுவாமித்ரர், பரசுராமர், உதத்யர், இந்திரப்பரதமர், இத்மவாஹர், மேதாதிதி, தேவலர், ஆர்ஷ்டிஷேணர், பரத்வாஜர், கௌதமர், பிப்பலாதர், மைத்ரேயர், ஔர்வர், கவஷர், அகஸ்தியர், த்வைபாயனர், பகவானான நாரதர் மற்ற தேவரிஷிகள் ப்ரஹ்மரிஷிகள், ராஜரிஷிகள், அருணர் முதலியவர்கள் ஆகிய இவர்களெல்லோரும் தங்கள் தங்கள் சிஷ்யர் களுடன் அவ்விடம் வந்தார்கள். அவர்களெல்லோரும் தீர்த்தயாத்திரை செய்கிறோம் என்று வ்யாஜமாக லோகத்தைப் பரிசுத்தி செய்துகொண்டு சஞ்சரிப்பவர்கள்.

அப்பொழுது அவ்வரசன் பலவகையான ரிஷி கோத்தரத்தில் சிறந்தவர்களான அவர்களை முறை தவறாமல் பூஜித்து நமஸ்காரஞ் செய்தார். அவர்கள் சுகமாக உட்கார்ந்தபொழுது பின்னுமவர்களுக்கு நமஸ்காரஞ் செய்து அவர்கள் முன்பாக இரு கை களையும் கூப்பிக்கொண்டு சுத்த சித்தமுள்ளவராய்த் தமது இஷ்டத்தைப் பின்வருமாறு வெளியிட்டார். பெரியோர்களால் அனுக்ரஹிக்கக்கூடிய ஸ்பாவமுள்ள நான் மிகவும் தன்யனாகவிருக்கிறேன். ப்ராஹ்மணர் களுடைய சுத்தமான பாததீர்த்தத்தைபடையாத க்ஷத்திரிய குலம் நிந்திக்கக் கூடியதே. மிக்க பாப ஸ்பாவமுள்ள வனும், ஸம்சார ஸுகத்திலேயே எப்பொழுதும் ஆசையை வைத்தவனுமான எனக்கு வைராக்யத்தை யுண்டுபண்ணுவதற்காகவே ப்ராஹ்மண சாபம் நேரிடும்படி செய்து பரமபுருஷன் என்னையனு க்ரஹிக்கிறார். பகவானையே மனத்தில் த்யானிக்கிறேன். மேலும் பெரியோர்களான உங்களையும், கங்காதேவி யையும் சரணமடைகிறேன். ப்ராஹ்மண சாபத்தால் தூண்டப்பட்ட தக்ஷகன் என்னை வஞ்சித்து இஷ்டப் படி கடிக்கட்டும். நீங்கள் மகாவிஷ்ணுவின் சரிதத்தைக் கானம் செய்யுங்கள். நான் பின்பு எந்தச் சரீரத்தை யடைந்தாலும் அந்தந்த ஜன்மாவில் ஈசுவரனிடத்திலும் அவருடைய பக்தர்களிடத்திலும் எனக்கு விசேஷ சிநேக முண்டாகட்டும் என்று சொல்லித் தம்முடைய பிள்ளையான ஜன்மேஜயரிடம் இராஜ்யத்தைஒப்பித்து. கங்கையின் தென் கரையில் தர்ப்பங்களைக் கிழக்கு நுனியாகப் பரப்பி, அவைகளின் மீது வடக்கு முகமாய் வீற்றிருந்தார்.

18–21. இப்படி அரசன் ப்ராயோபவேசஞ் செய்த

பொழுது தேவர்கள் அனைவரும், அவரைக் கொண்டாடிப் புஷ்பங்களை வர்ஷித்தார்கள், துந்துபி வாத்தியங்களை முழங்கினார்கள். தவிர, பிரஜைகளையனுக்கிரஹிக்கும் ஸ்வபாவமுள்ள அவ்விடம் வந்திருந்த மஹர்ஷிகள் அவரைச் சிலாகித்து ஸாதுவாதஞ் செய்து அவரை நோக்கி, 'ராஜ ச்ரேஷ்டரே கிருஷ்ண பகவான் இடத்தில் விசேஷ பக்தியுள்ளவரும், இராஜ்யம் முதலியவைகளில் ஆசையில்லாதவருமான பாண்டவ குலத்தில் பிறந்த உமக்கு இம்மாதிரி எண்ணம் நேர்ந்தது இயல்பேயாம்' என்று சொல்லி அவர்கள் ஒருவருக்கொருவர் இந்தப் பாகவத சிரோமணியான சக்ரவர்த்தி இந்தச் சரீரத்தை விட்டு மாயா ஸம்பந்தமில்லாததும், துக்கமற்றதுமான பரமபதத்தை அடையப்போகிறபடியால் அது வரையில் நாம் எல்லோரும் இவ்விடத்திலேயே வசிப்போம் என்று நிச்சயித்துக்கொண்டார்கள்.

22–24. அப்பொழுது பக்ஷபாதமில்லாததும், தேன் போல ரஸமுள்ளதும், கம்பீரமாகிய அர்த்தமுள்ளதும் உண்மையானதுமான மஹர்ஷிகளின் வார்த்தையைக் கேட்டு பரீக்ஷித்தானவன் மகாவிஷ்ணுவின் சரிதத்தைக் கேட்க விரும்பியவராய் அவர்களை நோக்கி, ஸத்ய லோகத்தில் சரீரத்துடன் இருக்கும் வேதங்கள் போல நீங்கள் அனைவரும் இவ்விடம் வந்தீர்கள். பிறரை அனுக்ரஹிப்பதை விட வேறு பிரயோஜனம் இவ் வுலகத்திலும், மேலுலகத்திலும் உங்களுக்கில்லை. ஆகையால் உங்களைக் கேட்கிறேன். சாகுந்தருணத்தில் இருப்பவர்கள் செய்யவேண்டிய சுத்தமாகிய தர்மம் யாது? யோசித்து சொல்லுங்கள் என்று கேட்டார்.

25–39. அந்தச் சமயத்தில் வ்யாஸருடைய புத்திரர்

ஆகிய சுகர் அவதூத வேஷமுள்ளவராய், பாலர் களுடன் தெய்வச்செயலாய் அவ்விடம் வந்தார். அவரிடத்தில் ஆசிரமத்துக்குரிய அடையாளமாவது ஜாதியைக் காட்டும் குறியாவது யாதொன்றுமில்லை. அவர் ஆத்ம லாபத்தாலேயே சந்தோஷமடைந்தவர். அப்பொழுது பதினாறு வயதுள்ளவராயிருந்தார், அழகான கைகளும், கால்களும், தொடைகளும், தோள்களும். கன்னங்களும், கண்களும், உயர்ந்த மூக்குகளும், சமமான காதுகளுமுடையவராய்ப் பிரகாசித்தார். சதைகளில் மறைந்த நரம்புகளுள்ளவர், விசாலமும் உயர்ந்ததுமான மார்புள்ளவர், சுழல்போன்ற நாபி யுள்ளவர். மூன்று மடிப்புகளால் அழகான வயிறு உள்ளவர், திக்குகளையே வஸ்திரமாகக் கொண்டவர். சுருண்டும் பரந்து மிருக்கும் தலைமயிருள்ளவர். மிகவும் மேலான யௌவன முள்ள வயதுள்ளவராகையால் ஸ்திரீகளுடைய மனதை அபஹரிப்பவர். அழகான சிரிப்புள்ளவர். இப்படிப்பட்ட அவரைப்பார்த்து அவருடைய லக்ஷணத்தையறிந்தவர்களான மஹர்ஷிகள் எதிர்கொண்டழைத்தார்கள். அப்பொழுது சக்ரவர்த்தி ஆனவர் வந்த அதிதியாகிய சுகருக்கு நமஸ்காரம் செய்தார். பின்பு அவருடன் வந்த அக்ஞர்களான ஸ்திரீகளும் பாலர்களும் திரும்பி போனார்கள். சுகர் பெரிதான ஆஸனத்தில் உட்கார்ந்தார். அப்பொழுது ப்ரஹ்மரிஷிகள், தேவரிஷிகள், ராஜரிஷிகள் இவர் களுடன் மத்தியிலிருக்கும் சுகர் சுக்ரன் முதலிய கிரகங்களுடையவும் அசுவினி முதலிய நட்சத்திரங்களு டையவும், மற்ற தாரைகளுடையவும் நடுவிலிருக்கும் சந்திரன் போலவும் பிரகாசித்தார். இப்படி சாந்தமனம் உள்ளவரும் தடையற்ற மேதையுள்ளவருமான சுகரை மகா பாகவதரான பரீட்சித்து மகாராஜன் பின்னும்

நமஸ்கரித்து அஞ்சலிபந்தம் செய்து, தலைவணங்கி, ஸாவதானமாய் நின்று, பின்வருமாறு மிருதுவாகச் சொல்லலானார்; ஓ பிராஹ்மண! க்ஷத்திரியனாகிய நான் ஸாதுக்களால் ஸேவிக்கக்கூடியவனாகிறேன், என்னுடைய பாக்கியம் வியக்கத்தக்கது, நீங்கள் அதிதியாக வந்து கிருபையால் என்னைப் பரிசுத்தப் படுத்தினீர்கள்; பாதத்தை வைத்தமாத்திரத்தில் வீடு முதலிய யாவும் பரிசுத்தமாய் விடக்கூடிய உங்களைத் தரிசித்தலாலும் ஸ்பர்சித்தலாலும், உங்களுடைய பாதங்களை அலம்புதலாலும்' ஆஸனங்கொடுத்த தனாலும் யான் பரிசுத்தமடைவதில் யாது சந்தேகம்? விஷ்ணுவைக் கண்ட அசுரர்கள் போலத் தங்களைத் தரிசித்த மாத்திரத்தில் மகா பாபங்களும் உடனே நீங்குகின்றன, பாண்டவர்களிடத்தில் மிகுந்த ப்ரியம் உள்ள ஸ்ரீ கிருஷ்ண பகவான் என்னிடத்தில் சந்தோஷமடைந்தார், அத்தையின் குமாரர்களிடம் மிகுந்த பிரியத்தால் அந்த வம்சத்தில் பிறந்த எனக்கும் தங்களுடைய தரிசனத்தைச் செய்வித்தார். அவருடைய அனுக்ரஹமில்லாமற் போனால் உங்களுடைய தரிசனம் மரணமடைய சித்தனாயிருக்கும் எனக்குக் கிடைக்குமா? தாங்கள் ஸித்தர்கள். உங்களுடைய பக்தியோ கண்டுபிடிக்க முடியாதது; நீங்கள் மிகவும் தாதாவாகையால் எல்லோரையும் யாசிக்க செய்பவர், ஆகையால் ஸித்திப் பெற்றவரும், யோகிகளுக்குப் பரம குருவுமாகிய உங்களை ஒரு விஷயம் கேட்கிறேன், அஃதாவது, 'மரணமடையும் ஸமயத்தையுடைய வன் என்ன செய்யவேண்டும்? எதனைக் கேட்கவேண்டும் எதனை நினைக்கவேண்டும்? எதனை உபாஸிக்க வேண்டும்? எவற்றைச் செய்யக்கூடாது? இவைகளைச் சொல்லவேண்டும்? நீங்கள் கிருகஸ்தர்களுடைய

வீட்டில் மாடு கறப்பதற்கு எவ்வளவு காலம் செல்லுமோ அவ்வளவு காலம் கூட நிற்கிற வழக்கம் இல்லையே: ஆனதால் சீக்கிரம் சொல்லவேண்டும் என்று பிரார்த்திதார்.

40. இந்தப்படி பரீக்ஷித்து மகராஜனால் கேட்கப் பட்டவுடன் ஸகல தர்மங்களையுமறிந்த சுகர் ப்ரத்யுத்தரம் சொல்லவாரம்பித்தார்.

♣ ♣ ♣ ♣

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்கந்தம் 2

அத்தியாயம் 1

விராட் புருஷனுடைய அவயவங்கள்

சுகமஹர்ஷியானவர் பரீக்ஷித்து மஹாராஜனைப் பார்த்து ' ஓ அரசனே! உம்மால் கேட்கப்பட்ட கேள்வி மிகவும் மேலானது. உலகத்திற்கு அனுகூலத்தைச் செய்யக்கூடியது; ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்தவர்கட்குப் பிரியமானது; கேட்கத்தகுந்தவைகள், சொல்லத் தகுந்தவைகள், நினைக்கத்தகுந்தவைகள் ஆகிய இவை களில் இது மிகவும் சிறந்தது. ஓ ராஜசிரேஷ்டரே! ஆத்ம ஸ்வரூபத்தையறியாதவர்களும், ஐந்து வகையான, இம்சைகளைச் செய்பவர்களுமான கிருஹஸ்தர்களுக்குக் குருமுகமாகத் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் அனேகமிருக்கின்றன. (மோக்ஷத்தை விரும்பியவர்கள் தெரிந்து கொள்ளக்கூடியது, ப்ரஹ்மம் ஒன்றுதான் என்று தாத்பரியம்.) மேலும் ஜனங்களுடைய ஆயுளானது இரவில் தூக்கத்தாலும் பகலில் பணத்து ஆசையாலும், கிடைத்த பணத்தால் குடும்பத்தைப் போஷிப்பது முதலியவைகளாலும், யௌவனமானது மைதுனத்தாலும் வீணாகக் கழிக்கப்படுகிறது. பின்னும் ஜனங்கள் அநித்யங்களான தேகம், குழந்தைகள், பார்யை ஆகிய ஸாமக்ரியைகளில் மிகுந்த அபிமானம் வைத்திருக்கிறார்கள். மேலும் அவர்கள் சரீரம் முதலியவைகள்நாசமடைவதை நேரில் பார்த்திருந்தும்

அவைகளை நித்யங்களென்றே நினைக்கிறார்கள். ஓ பரத வம்சத்தில் பிறந்தவரே! ஸகல ஜகத் ஸ்வரூபியும் அவை களுக்கு அதிபதியும், ஸம்ஸாரத்தைப் போக்கடிப்ப வராயுள்ள புருஷோத்தமருடைய சரிதத்தையே கேட்க வேண்டும். அதுவே மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியது. அதுவே உச்சரிக்கக்கூடியது. மனனஞ் செய்யக்கூடியது. எவன் மரணமடையும் சமயத்தில் நாராயணனை ஸ்மரிக்கிறானோ அதுவே அவனுக்கு உத்தமமான லாபம். ஆத்ம ஸ்வரூப விசாரமாகிய ஸாங்கியம், அஷ்டாங்க யோகம், தன் ஜாதிக்கும் ஆசிரமத்திற்கும் உரிய தர்மங்கள் ஆகிய இவைகளை அனுஷ்டிப்பதால் மரண காலத்தில் ஸ்ரீமந் நாராயணனை ஸ்மரிக்கும்படி நேரும். அதுவே இந்த ஜன்மத்தின் ப்ரயோஜன மெனப்படுகிறது. ஓ மஹாராஜ! விதி நிஷேதங்களைக் கடந்தவர்களும், நிர்க்குண ப்ரம்ஹ ஸ்வரூபத்தை யறிந்தவர்களுமான முனிகளும் பெரும்பாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் குணங்களைத் தியானஞ் செய்து கொண்டே காலத்தைக் கழிக்கிறார்கள். ஆகையால் நான் த்வாபர யுகத்தின் கடைசியில் என்னுடைய பிதாவாகிய வ்யாஸ மஹர்ஷியினிடமிருந்து ப்ரஹ்ம ஸ்வரூபத்தை தெரிவிக்கும் இந்த ஸ்ரீமத் பாகவத புராணத்தை அத்யயனஞ் செய்தேன். ஓ ராஜரிஷியே! நான் இயற்கையில் ப்ரஹ்ம ஸ்வரூபத்தையறிந்த வனானாலும் உத்தமமான புண்யத்தைக் கொடுக்கும் பகவானுடைய சரிதத்தில் விசேஷ ப்ரேமையால் அந்த உபாக்கியானத்தை அப்யஸித்தேன். நீர் மஹாபுருஷனாகிய விஷ்ணுவின் பக்தராகையால் உமக்கு அதைச் சொல்லுகிறேன். அதில் சிரத்தை யுள்ளவர்களுக்கு முகுந்தரிடத்தில் (மோக்ஷத்தைக்

கொடுப்பவர்) பக்தியுண்டாகும். விஷயங்களில் நிர் வேதத்தையடைந்தவர்களும் மோக்ஷத்தை விரும்பியவர் களுமான யோகிகளுக்கு மஹாவிஷ்ணுவின் திவ்ய நாமங்களைக் கானம் பண்ணுவதே அபயத்தைக் கொடுக்கக்கூடியது: ஆதலால் ஸித்தர்களுக்கும், ஸித்தியடைய வேண்டியவர்களுக்கும் இதை விட அனுகூலமான மார்க்கம் வேறில்லை. புத்திரன் முதலிய வர்களிடத்தில் அபிமானம் வைத்து அறியாமலே வீணாகக் கழிக்கப்பட்ட அனேக வர்ஷங்களால் என்ன பிரயோசனம்? எந்தக் காலத்தில் ஆயுளானது வீணாகக் கழிக்கப்படுகிறதென்று தெரிந்துகொள்ளு கிறானோ அந்தக் காலமே மேலானது.

அதனால் நல்ல காரியத்தைச் செய்ய முயற்சி யுடையவனாவான். முன்னொரு காலத்தில், கட்வாங்கன் என்ற ஒரு ராஜரிஷியானவர் (தேவாஸுர யுத்தத்தில் தேவர்களுடைய பக்ஷத்திலிருந்து அஸுரர்களை ஜயித்தார். அப்பொழுது அவரிடத்தில் தேவர்கள் ஸந்தோஷப்பட்டு 'வேண்டியதைக் கேளும், என்றார்கள். கட்வாங்கன் 'நான் எத்தனை காலம் ஜீவித்திருப்பேன், என்று கேட்டான். பின்பு தேவர்கள், இன்னும் ஒரு முஹூர்த்தந்தான் உன்னுடைய ஆயுளில் பாக்கி இருக்கிறது' என்று பதில் சொன்னார்கள்.) தம்முடைய ஆயுளில் மீதியிருக்கும் காலம் இவ்வளவு என்று தெரிந்து கொண்டு ஒரு முஹூர்த்தத்துக்குள் ஸகல ஆசைகளையும் ஒழித்து, ஸ்ரீ மஹாவிஷ்ணுவைச் சரணமடைந்து அவருடைய ஸாயுஜ்யத்தை அடைந்தார். ஓ மஹாராஜ! உமக்கு இது முதல் ஏழு நாள் ஆயுள் இருக்கிறது, ஆகையால் பரலோகத்தில் ஸுகத்தைக் கொடுக்கும் கார்யத்தைச் செய்யும்.

மரணகாலம் ஸமீபித்தபோது புருஷன் பயமில்லாத வனாகப் புத்திரர்களிடத்தில் தான் வைத்திருந்த அபி மானத்தை வைராக்கியமாகிய ஆயுதத்தால் நாசஞ் செய்ய வேண்டும். மேலும் ஸன்யாஸஞ் செய்து கொண்டு புத்திரன் முதலியவர்களை விட்டுப் பிரிந்தோமே என்று விசாரப்படாமல், கங்கை முதலிய புண்ய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து, ஜனங்களுடைய நெருக்கமில்லாத சுத்தமான விடத்தில் விதிப்படி ஆஸனத்தில் உட்கார்ந்து ப்ரஹ்மத்தைத் தெரிவிக்கும் மூன்று அக்ஷர ஸ்வரூபமாகிய ப்ரண வத்தைத்தியானிக்க வேண்டும். அதனால் சுவாஸத்தை ஜயித்து, ப்ரம்ஹ பீஜமாகிய ப்ரணவத்தை நினைத்துக் கொண்டே மனத்தை அடக்க வேண்டும். புத்தியாகிய (நிச்சயரூபமானது) ஸாரதியுள்ள புருஷன் மனத்தைக் கொண்டு (கடிவாளம்) (ரூபம், ரஸம், கந்தம், சப்தம், ஸ்பர்சம் ஆகிய) ஐந்து விஷயங்களில் செல்லும் இந்திரியங்களைத் தடுக்க வேண்டும். மேலும் கர்ம வாஸனைகளால் இழுக்கப்படும் மனித்தை மங்களத்தைக் கொடுக்கும் ஈசுவர ஸ்வரூபத்தில் புத்தியைக் கொண்டு செலுத்த வேண்டும். பின்னும் பகவத் ரூபத்தில் ஏதாவது ஒரு அவயவத்தை இடைவிடாமல் மனத்திற் கொண்டு த்யானிக்க வேண்டும். பிறகு அந்த மனத்தை பரப்ரஹ்மனிடத்தில் செலுத்தி, (பரமானந்த ஸ்வரூபமாகச் செய்து) வேறு ஒன்றையும் நினைக்காமல் இருக்க வேண்டும். எதனைத் தியானம் செய்ததால் மனமானது ஆசை முதலியவைகளால் கலங்காமல் தெளியுமோ அப்படிப்பட்டது ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பாதமேயாம். ஒருகால் ரஜோகுண சம்பந்ததால் கலக்கமும், தமோகுணத்தால் மோஹமும் மனத்திற்கு ஏற்படுமானால் அப்பொழுது தாரணையால் மனத்தை

அடக்க வேண்டும், அது ரஜோ குணம், தமோ குணம் ஆகிய இவைகளால் ஏற்படும் ஸகல தோஷங்களையும் போக்கக் கூடியது. த்யானஞ் செய்கிறவர்களுக்கு மேலான க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது (இவ்வளவு மஹாத்யமுள்ளது தாரணையென்று தாத்பர்யம்) என்று சொன்னார்.

22. இதைக் கேட்டு பரீக்ஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி, 'ஓ ப்ராஹ்மணோத்தம! எப்படி தாரணைச் செய்ய வேண்டும்? எதில் மனத்தைச் செலுத்த வேண்டும்? எப்படிப்பட்ட தாரணை மனத்தில் தோஷங்களைப் போக்கும்? அதனை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்' என்று கேட்டார்.

23–39 அதைக் கேட்டுச் சுகர் பின்வருமாறு பதில் சொல்லலானார். ஓ மஹாராஜ சாஸ்திரத்தில் சொல்லியபடி ஆஸனத்தை அடைந்து மூச்சை அடக்கி, அபிமானங்களை ஒழித்து, இந்திரியங்களை ஜயித்துப் பகவத் ஸ்வரூபமாகிய ஸ்தூல ப்ரபஞ்சத்தில் நிச்சய ரூபமாகிய புத்தியையும் மனதையும் செலுத்த வேண்டும். முன் கல்பத்திலிருந்ததும், இப்பொழுது இருக்கிறதும், அடுத்த கல்பத்தில் இருக்கக் கூடியது மான ப்ரபஞ்சமானது விராட் புருஷனுடைய ஸ்வரூ பத்தில் காணப்படுகிறது. அந்த பகவத் ஸ்வரூப மானது பெரியவைகளை விடப் பெரிதானது, அந்தப் புருஷனுக்கு இந்த ஜகத்தே சரீரமாயிருக்கிறது. மேலும் (மஹத்தத்வம், அஹங்காரம் ஐந்து பூதங்கள் ஆகிய) ஏழு ஆவரணங்களுள்ள அண்ட கோசமாகிய சரீரத்திலிருக்கும் புருஷனுக்கு வைராஜன் என்று பெயர். இவரே தாரணைக்கு ஆஸ்ரயமாயிருப்பவர்.

(ஸ்தூல ரூப தாரணையால் சூட்சும ரூபத்தில் பக்தி உண்டாகுமென்பது கருத்து) மேற்காட்டிய வைராஜ னென்னும் புருஷனுக்குப் பாதாளத்தைப் பாதமாகவும், ரஸாதலத்தைப் புறங்கால்களாகவும், மஹாதலத்தைப் பாதங்களின் இரு பக்கங்களாகவும், தலா தலத்தை கணைக்கால்களாகவும், ஸுதலத்தை இரு முழங்கால் களாகவும், விதலம் அதலம் ஆகிய இவைகளை இரண்டு தொடைகளாகவும், பூதலத்தை ஜகனமாகவும், ஆகாசத்தை நாபியாகவும் ஸ்வர்க்கத்தை மார்பாகவும், மஹர்லோகத்தைக் கழுத்தாகவும், ஜனலோகத்தை முகமாகவும், தபோ லோகத்தை நெற்றியாகவும், ஸத்ய லோகத்தைச் சிரஸ் ஆகவும் சொல்லுகிறார்கள். மேலும், அநேக சிரஸுள்ள அந்தப் புருஷனுக்கு இந்திரன் முதலிய தேவர்கள் கைகள். திக்குகளே அவருக்குக் காதுகள் (இந்திரிய கோளகங்கள்,) சப்தமே ச்ரோத்ரேந்திரியம்.

அந்தப் பரமபுருஷனுக்கு அச்வினீ தேவர்களே மூக்குகள், கந்தமே கிராணேந்திரியம். ஜ்வலிக்கும் அக்னியானது அவருக்கு முகமாகும். த்யுலோகமே கண்கள், ஸூர்யனே சக்ஷுரிந்திரியம், இரவும், பகலும் ஆகிய இரண்டும் இமைகள். சதுர்முக ப்ரஹ்மாவின் பதம் அவருடைய புருவ நெரித்தலாகும். ஜலத்திற்கு அபிமானியான வருணன் அவருக்கு முகவாய்க்கட்டை, ரஸங்களே அவருடைய நாக்கு, தேசத்தாலும், காலத்தாலும் அளவிடக் கூடாதவராகிய அந்தப் புருஷோத்தமனுக்கு வேதங்கள் சிரஸாக விருக்கின்றன. யமனே சிங்கப்பற்கள், ஸ்நேகத்தின் அம்சங்களே பற்கள். ஜனங்களை மோஹிக்கச் செய்யும் மாயையே அவருடைய சிரிப்பு. அவருடைய கடைக்கண்

பார்வையே அளவற்ற ஸ்ருஷ்டி. (ஸகல ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியானது பகவானுடைய கடாக்ஷ தீனமென்பது கருத்து). வெட்கமே மேலுதடு. உலோபமே கீழுதடு. தர்மமே ஸ்தனம், அதர்ம மார்க்கமே பின்பக்கம். ப்ரஜாபதிதேவரே அவருக்கு ஆண்குறி. மித்ரா வருணர்களே விருஷணங்கள், ஸமுத்ரங்கள் வயிறு. பர்வதங்களே அவருடைய எலும்புகள், கங்கை முதலிய நதிகளே அவருடைய நாடிகளாகின்றன. மரங்களே உரோமங்கள். ஓ ராஜ சிரேஷ்டரே! வாயு பகவானே அளவற்ற வீர்யமுள்ள வைராஜருக்குப் ப்ராணன். காலமே அவருடைய (நடை) கதி. முக்குணங்களாலுண்டாகும் ஸம்ஸாரமே அவருக்குக் கர்மங்கள் அந்தப் பரமேச்வரனுக்கு மேகங்களே தலைமயிர்கள். ஓ பரீக்ஷித் மஹாராஜனே! ஸந்தியா காலங்கள் அந்தப் ப்ரபுவிற்கு வஸ்திரமாக விருக்கின்றன. அவ்யக்தமே (ப்ரதானம்) அவருக்கு ஹ்ருதயமாயிருக்கிறது. ஸகல ஓஷதிகளையும் வ்ருத்தி செய்யும் சந்திரனே மனஸ், மஹத் தத்வமே அவருடைய விஞ்ஞான சக்தி, ருத்ரனே அவருக்கு அந்தக்கரணம், குதிரை அசுவதரீ, (கழுதைக்கும் பெண் குதிரைக்கும் உண்டானது,) ஒட்டகம், யானை ஆகிய இவைகள் அவருக்கு நகங்கள், ஸகல மிருகங்களும், பசுக்களும் அவருடைய ஸ்ரோணிதேசம், பறவைகள் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும் அவருடைய வேலைத் திறமை, மனுவே புத்தி, மனித வர்க்கமே இருப்பிடம், கந்தர்வர்கள், வித்யாதரர்கள், சாரணர்கள், அப்ஸரஸ்திரீகள் ஆகிய இவைகளே ஷட்ஜம் முதலிய ஸ்வர ஸ்மிருதிகள், அஸுர ஸைன்யமே அவருடைய பராக்ரமத்திற்கு இருப்பிடம். ப்ராஹ்மணர்களே அவருக்கு முகம், க்ஷத்திரியர்களே கைகள், வைசியர்களே தொடைகள், சூத்ரர்களே

பாதங்கள் (சித்தம் ஸ்திரமாக இருப்பதற்காக விராட், ஜீவன், ஈசுவரர் ஆகிய இவர்களை ஒன்றாக உபாஸிக்க வேண்டு மென்பது கருத்து) மேலும் பலவகையான பெயருள்ள வஸுருத்ரர்கள் முதலிய தேவர்களுடன் ஹவிஸினால் செய்யக்கூடிய திரவ்ய யாகமானது அந்தப் பரம புருஷனைப் பூஜிக்கும் கர்மமேயாம், வைராஜருடைய அவயவங்கள் இம்மாதிரியானவைகள் எல்லாவற்றிற்கும், பெரியவரான இந்தப் பரமபுருஷன் இடத்தில் மோக்ஷமடைய விரும்பியவர்கள் மனத்தைச் செலுத்த வேண்டும். இதைவிட மேலானது ஒன்று இல்லை. ஸகல பிராணிகளுடைய புத்தி விருத்தி களால் ஸகலத்தையும் அனுபவிக்கிறவரும், எல்லா வற்றிற்கும் அந்தராத்மாகவும், ஸத்ய ஸ்வரூபியாய் இருக்கும் அவரையே பூஜிக்கவேண்டும்; அவரைக் காட்டிலும் வேறு இடத்தில் ஆசைபடக் கூடாது. அப்படி ஆசைப்படுவதால் ஸம்ஸாரத்தை அடையும் படி நேரிடும். ஸ்வப்னத்தில் சில ஸமயத்தில் அநேக ஜீவர்களைக் கல்பித்து, ஜீவன் அந்தந்த இந்திரியங்களைக் கொண்டு எல்லாவற்றையும் பார்ப்பதுபோல ஈசுவரன் தாம் ஒருவராக இருந்து எல்லாவற்றையும் தம்முடைய வித்யா சக்தியால் அனுபவித்து, அவைகளில் ஸம்பந்தப்படாதவராகவும் ஆனந்த நிதியாகவும் பிரகாசிக்கிறார்.

நோட்டு

ஆத்மஸ்வரூ–லக்ஷ்மீ, ப்ரம்ஹா முதலிய சேத னங்கள் எப்பொழுதும் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு உள்ளவைகளாக இருக்கிறதை அறியாதவர்கள் ...விஜ, ஸாமக்ரீ... ஆத்ம தைன்ய' என்னும் பாடத்தை ஆசிரயித்து, 'தனக்குக் குறைவை உண்டு பண்ணக்

கூடியவைகள்' என்று அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. விஜ , மனனம்... ஓ மைத்ரேயி! ஆத்மாவைப் பற்றியே விசாரிக்க வேண்டும். குரு முகமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த ஒருவராகிய ஆத்மாவையே அறியுங்கள். மற்ற வார்த்தைகளை விட்டுவிடுங்கள் ... ஸ்ருதிகள், ஸாங்கியம்... ஞான யோகத்தாலே சாங்கியர் களுக்கும், கர்ம யோகத்தால் யோகிகளுக்கும் பகவத்கீதை, அஷ்டாங்க ... யமம், நியமம், தியானம், தாரணம், ஆஸனம், பிராணயாமம், பிரத்யாஹாரம், ஸமாதி என்று எட்டு அங்கமுள்ளது. விதி நிஷேதம்... இதனைச் செய் என்று சாஸ்திரத்தில் சொல்லியிருப்பது விதியாகும், இதனைச் செய்யவேண்டாம் என்று சொல்லியிருப்பது நிஷேதமாகும் ... மேற்சொல்லிய விதி நிஷேதமென்பதற்கு விதி நிஷேதங்களைச் சொல்லும் வேதத்தால் காண்பிக்கப்படுகிற காம்ய கர்மங்களென்று அர்த்தம் கொள்ள வேண்டும். அவசியம் அனுஷ்டிக்க வேண்டியதாக வேதத்திற் சொல்லப்பட்ட பஞ்ச மஹா யக்ஞங்களே விதியென்றாவது, ஸுராபானம் செய்யக் கூடா தென்பதே நிஷேதமென்றாவது இவ்விடத்தில் அர்த்தம் அல்ல... வீர, நிர்குண ...ரஜோகுணம், தமோகுணம் இவைகளுடன் சேர்ந்த ஸத்வகுணமற்றது ...வீர, கடைசியில் மூலத்தில் த்வாபாரதெள என்று இருப்பதால் அதற்கு 'கலி யுகத்தின் ஆதியில்' என்று அர்த்தம் கொள்ள வேண்டும். வ்யாஸ மஹர்ஷியும், சந்தனு சக்ர வர்த்தியும் ஒரே காலத்தில் இருந்ததாகச் சொல்லப் பட்டிருப்பதால் ... வீர வ்யாஸ மஹர்ஷியானவர் தம்முடைய அறுநூறாவது வயதில் திருதராஷ்டிரரை உண்டுபண்ணினார் என்று சொல்லியிருப்பதாலும், துவாபரயுகத்தின் கடைசியில் பாரதக்கதை நடந்ததாகச்

சொல்லியிருப்பதாலும், துவாபரயுகத்தில் கிருஷ்ண அவதாரத்திற்கு முந்தி என்று அர்த்தம் கொள்ள வேண்டும்... விஜய. ப்ரம்ஹ ஸ்வரூபத்தில் 'ப்ரம்ஹ ஸம்ஹிதம், என்று இருப்பதால் வேதத்திற்குச் சமமானது, பாகவதம் ... பகவான் நேரில் உபதேசித்த நான்கு ஸ்லோகங்களைக் கொண்டு செய்யப் பட்டதால் அல்லது பகவத் ஸ்வரூபத்தை நன்றாய் வர்ணிப்பதால்... வீர. சொல்லுகிறேன்... முக்தனாகிய என்னாலும் அப்யஸிக்கப்பட்ட இந்த பாகவத புராணமானது, மோக்ஷத்தை அடையவேண்டிய வராகிய உமக்கு உபயோகமானது என்று தாத்பரியம் ...வீர, அவயவத்தை..யுகத்தை...வீர. பெரிதானது ... இவர் பூமியைவிடப் பெரியவர், அந்தத்தைக் காட்டிலும் பெரியவர் இவ்வுலகங்களைக் காட்டிலும் பெரியவர் ஸ்ருதி. ஸ்வர்க்கத்தை, முலத்தில் ஜ்யோதிரனீகம் என்று இருப்பதால் நக்ஷத்ர லோகம் என்று அர்த்தம் கொள்ளவேண்டும், பறவைகள்...வாத ஸ்வரூபிகளான தித்திரி முதலிய பக்ஷிகள்...வீர. திறமை...எவரால் ஹம்ஸங்கள் வெண்மை நிறமுள்ளவைகளாகவும், கிளிகள் பச்சை நிறமுள்ளவைகளாகவும், மயில்கள் பலவகை நிறமுள்ளவைகளாகவும் ஸ்ருஷ்டிக்கப் பட்டனவோ அவர் நமக்கு விருத்தியை உண்டு பண்ணுவார். மூலத்தில் வ்யாகரணம் என்று இருப்பதில் அதற்கு ஆச்சரியத்தை யுண்டுபண்ணும் வார்த்தை என்று அர்த்தம். சந்த். இருப்பிடம் மனுஷ்ய ஜன்மாவானது ஞானத்திற்கும், பக்தி முதலிய ஸ்தானங்களுக்கும் உபாயமாயிருக்கிறது. யாகம் முதலிய கர்மங்கள் ஞானம் முதலியவைகளுக்குக் காரணமாய் இருப்பதால், அக்கர்மங்களில் அதிகாரமுள்ளவர் களுக்கே ப்ரஹ்மோ பாஸனத்தில் அதிகாரம ஏற்படுகிற

படியால் மனுஷ்ய சரீரமே எல்லாவற்றிற்கும் உபயோக மான்து சந்த். அஸுரஸைன்ய அஸுரானீக வீர்ய என்று ஒரு பாடமுண்டு. அதற்கு ப்ரஹ்லாதனே ஸ்மரணம் என்று அர்த்தம் கொள்ளவேண்டும், வீர.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்- 2

பகவானிடத்தில் மனத்தை செலுத்தும் வகை

1–21. பிரளயகாலத்தில் ப்ரஹ்ம தேவரானவர் மேற் காட்டியபடி விராட் புருஷனிடத்தில் மனத்தைச் செலுத்தினார். (வைராஜ தாரணையைச் செய்தார்.) அதனால் பகவான் ஸந்தோஷமடைந்து ப்ரஹ்மதேவருக்கு மறந்து போயிருந்த ஸ்ருஷ்டி சக்தியை மறுபடியும் அனுக்கிரஹித்தார். அதனால் ப்ரஹ்மதேவர் வீணாகாத ஞானமுள்ளவராகவும், நிச்சயமாகிய புத்தியுள்ள வராகவும் ப்ரளயத்திற்கு முன்பு இருந்தது போலவே உலகத்தை ஸ்ருஷ்டித்தார் (தாரணையானது, இம் மாதிரியான மஹாத்மியமுள்ளது என்று கருத்து) வேதங்கள் யாவும் கர்மங்களையும், அவற்றின் பலன்களையும் சொல்லுகின்றன. ஆனாலும் ஸ்வர்க்கம் முதலியவைகளில் புருஷார்த்தம் ஒன்று மில்லை. அதைக் கேட்ட மாத்திரத்தில் மனதிற்கு ஆசையைக் கொடுக்கிறதே யொழிய வேறில்லை. (பெயரால் அழகுள்ளது) ஸ்வப்பனத்தில் கண்ட வஸ்துக்கள் நாம் விழித்துக் கொண்டபொழுது இல்லாமற் போவதுபோல மாயா ரூபமான கர்ம மார்க்கத்தில் அலைந்தும் கொஞ்சமேனும் ஒப்பற்ற ஸுகம் கிடைக்கிறதில்லை. ஆகையால் விவேகமுள்ளவன் தேக நிர்வாகத்திற்கு வேண்டியவரையில் தோக்கிய வஸ்துக்களை அபேக்ஷிப்பான். அவைகளிலும் ஆஸக்தியில்லாமல் ஜாக்ரதையாக இருப்பான். மேலும் இவைகள் ஸுகத்தைக் கொடுக்கக் கூடியவைகளல்ல என்ற நிச்சயமுள்ளவனாகவும் இருப்பான். ஆனதுபற்றி, தேகத்திற்குவேண்டிய விஷயங்கள் ஸுலபமாக அவனுக்குக் கிடைக்குமானால் அவன்

இக்கர்மங்களில் முயற்சி செய்யமாட்டான். கர்மங்களோ மிகவும் ச்ரமத்தைக் கொடுக்கின்றன. எவ்வாத்தேசங் களிலும் எப்பொழுதும் பிறரை அபேக்ஷியாமல் ப்ரயாஸமின்றிக் கிடைக்கும் பூமியாகிய படுக்கை ஸித்தமாக இருக்க, பணச் செலவினால் கிடைக்கக் கூடியதும், இஷ்டமான காலங்களில் அகப்படாததுமான கட்டில் முதலிய படுக்கையை ஞானமுள்ளவன் அபேக்ஷிப்பானா? தன்னுடை கைகளிருக்கத் தலை யணைகளால் என்ன ப்ரயோஜனம்? தவிரவும், அன்னத்தை வைத்துக்கொண்டு புஜிக்க அஞ்சலி (சேர்ந்த இருகைகள்) ஸ்வாதீனத்திலிருக்க, பல வகையான பாத்திரங்களை அபேக்ஷிக்கவும் வேண்டுமா? மேலும் திக்குகளும், மரவுரிகளும் உடுத்திக் கொள்ளக்கூடியவைகளாக விருக்கும்போது, பட்டு, வஸ்திரம் முதலியவைகளை ஏன் ஸம்பாதிக்க வேண்டும்? வழியில் கந்தைத்துணி அகப்படாதா? பிறரையே போஷிக்கும் ஸ்வபாவமுள்ள (பழம் முதலியவை களாலென்பது கருத்து) மரங்கள் ஆகாரத்தைக் கொடாமலிருக்குமா? தீர்த்தத்தைக் கொடுக்கும் நதிகள் வரண்டு போயினவா? வஸிப்பதற்கு மலைகளில் குகைகளிருக்கின்றனவே? அவைகள் அரசர்களால் மூடப்பட்டனவா? ஆகையால் பிறரை யாசியாமலே தேக யாத்திரையை நடத்திக்கொள்ளலாம். மேற் கூறியவைகள் கிடைக்காவிடினும் சரணாகதர்களான நம்மைப் பகவான் ஸம்ரக்ஷிக்கமாட்டாரா? இப்படி இருக்க பணத்தால் கர்வங்கொண்டு கார்யம் அகார்யம் இவைகளை அறியாத மமதை கொண்டவர்களை விவேகிகள் ஏன் உபாஸிக்கிறார்கள். ஸ்ரீ மந் நாராயண ரையே (மற்றவர்களை விட்டு) ஸேவிக்கவேண்டும். அவர் எல்லோருடைய சித்தத்திலும் தாமாகவே

எப்பொழுதுமிருப்பவர். ஆத்ம ரூபியாயிருப்பவராகையால் அவர் எல்லாருக்கும் பிரியர். சரீரம் முதலியவைபோல அநித்யரல்லர். ஸத்ய ஸ்வரூபியாயிருப்பவர். ஸேவிக்கக் கூடிய குணங்களால் நிறைந்தவர். நாசமற்றவர். அவரை ஸேவிப்பதால் ஸம்சாரத்தைக் கொடுக்கும் அவித்யை முதலியவைகள் நாசமடைகின்றன. கர்ம ஜடர்களாயும் ஞான ஹீனர்களாயுமுள்ள மனுஷ்ய பசுக்கள் விஷயங்களிலேயே ஆசை கொள்கிறார்கள். தாரணையைச் செய்கிறதில்லை. மேலும், யமலோகத் திலிருக்கும் வைதரணீ நதியில் தம்முடைய கர்ம வசத்தால் துக்கத்தை யனுபவிப்பது போல ஸம் ஸாரத்தில் மூழ்கி துக்கப்படுகிறார்கள். இப்படிக் கஷ்டப்படும் ஜனங்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் விவேகியான புருஷன் பகவானைச் சிந்திப்பதாகிய தாரணையைச் செய்யாமலிருப்பானா? சிலர் தம்முடைய ஹிருதயத்திலிருக்கும் அவகாசத்தில் நான்கு கைகள் உள்ளவரும், தாமரைமலர், சக்ரம், சங்கம், கதை ஆகிய இவைகளைத் தரிப்பவரும், ப்ராதேசமாத்ர சரீரமுள்ளவருமாக வஸிக்கும் பரம புருஷனை இடை விடாமல் தியானிக்கிறார்கள். அந்தப் புருஷன் தாமரை மலர்போன்ற நீண்ட கண்களுள்ளவர். முகமலர்ச்சி யுள்ளவர். கதம்ப (கடம்பம்) புஷ்பத்தின் தாதுகள் போல் பொன்னிறமுள்ள வஸ்திரத்தைத் தரித்தவர். மிகுந்த காந்தி பொருந்திய இரத்னங்களிழைத்த ஸ்வர்ணமயமான தோள் வளைகள், கிரிடம், குண்டலம் ஆகிய ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்டவர். அவருடைய பாதங்கள் யோகிகளுடைய மலர்ந்த ஹ்ருதய கமலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட வைகள். மார்பில் லக்ஷ்மியுள்ளவர். கௌஸ்துப ஹாரம் தரித்தவர். குறையாத காந்தியுள்ள வனமாலையால்

பிரகாசிப்பவர். மேலும், விலையுயர்ந்த அரைநாண், மோதிரம். வளை முதலிய ஆபரணங்களால் விளங்கும் திவ்ய தேஹமுள்ளவர். அவருடைய முகமானது புன்சிரிப்புள்ளது, மேலும் கறுப்புநிறமுள்ளவைகளும், காந்தியுள்ளவைகளும், பளபளப்புள்ளவவைகளுமான சுருட்டை மயிர்களால் அழகானது. கம்பீரமாகிய சிரிப்பு, பார்வை. புருவ நெரித்தல் ஆகிய இவைகளால் ஜனங்களை அனுக்கிரஹிக்கும் ஸ்வாபவமுள்ளது, இம்மாதிரியான பகவத் ஸ்வரூபத்தை மனது ஸ்வாதீனப்படுகிற வரையில் தியானிக்க வேண்டும். எப்படியெனில், மேற்காட்டிய பாதம் முதல் சிரிப்பு வரையிலுமுள்ள பகவானுடைய அவயவங்களும் சேஷ்டைகளும் ஒவ்வொன்றாகத் தியானிக்கப்பட வேண்டும். மனது அவைகளிலே பதிந்து, விஷயங்களில் செல்லாமலிருந்தபோது அதைவிட்டு வேறு அவய வத்தை த்யானிக்கவேண்டும். இப்படி ஒவ்வொரு நாளும் நித்ய கர்மங்களை முடித்துக்கொண்டு சுத்தனாகப் பரமபுருஷனுடைய பெரிதாகிய ரூபத்தை தியானஞ் செய்யவேண்டும். அவரிடத்தில் பக்தியுண்டாகும் வரையில் அவருடைய ரூபத்தைத் தியானஞ் செய்யவேண்டும். அவர் ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் மேலானவர்; ஜகத்திற்கு அதிபதி. எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாயி ருப்பவர். ஓ மஹாராஜ! ஒருவன் இப்படி சித்தம் சுத்தியானபிறகு ஸகல ஆசைகளையும் ஒழித்து இந்தச் சரீரத்தை விட வேண்டுமென்று விரும்பு வானாகில், புண்ய க்ஷேத்திரத்தில் உத்தராயணம் முதலிய காலங்களில் ஸ்திரமாயும், ஸுககரமுமான ஆஸனத்தில் உட்கார்ந்து, ப்ராணாயாமஞ் செய்து ஸுவாஸத்தை அடக்கி, வேறு விஷயங்களில் பற்றுதல் இல்லாதவனாக மனத்தால் ப்ராணனையும், இந்திரியங்

களையும் அடக்கிக்கொள்ளவேண்டும். மேலும் அந்த மனத்தை நிர்மலமாகிய புத்தியாகச் (நிச்சயரூபமானது) செய்து, அந்தப் புத்தியை அதற்கு ஸாக்ஷியாக விருக்கும் ஜீவனிடத்தில் சேர்க்க வேண்டும். அந்தச் சுத்தமாகிய ஆத்மாவை பரப்ரஹ்மத்தினிடம் லயிக்கச் செய்து சாந்தியையடைந்து கார்யத்திலிருந்து ஒழிவடைய வேண்டும். தேவர்களுக்கும் மேலான காலத்தாலும், அந்தப் பரமாத்ம ஸ்வரூபம் பாதிக்கப்படுகிறதில்லை. ஜகத்திற்கு, அதிபதிகளான தேவர்களும் அந்த ஸ்வரூபத்திற்குப் பிரபுக்களல்ல. அந்த ஆத்மாவிடத்தில் ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய குணங்களும் மாறுதலும், மஹத் தத்வம், பிரதானம் ஆகிய இவைகளும் இல்லை ஆத்மாவை விட வேறானவைகளை (இவை ஆத்மாவல்ல என்று விசாரித்து, தேகம் முதலியவைகளில் ஆத்மத்வ புத்தியை விட்டு ஒவ்வொரு க்ஷணத்திலேயும் வேறிடத்தில் பிரியம் வைக்காத தங்களுடைய ஹ்ருதயத்தில் விஷ்ணுவின் பதத்தையே பக்தர்கள் தியானஞ் செய்கிறார்கள். ஆகையால் அதுவே மேலானது என்கிறார்கள். இந்தப்பதத்தையடைந்தவனே கிருதகிருத்யன். இம்மாதிரி சாஸ்த்ர விசாரத்தில் உண்டான விசேஷ ஞானத்தால் விஷய வாஸனைகளை எரித்துப் ப்ரஹ்ம பாவத்தை அடைந்த முனியானவர் கீழ் முகமான வாயுவானது வெளியில் போகாமலிருக்கும்படி, தம்முடைய பாத மூலத்தால் (குதிகால்) ஆஸனத்தை அடைத்துக்கொண்டு சிரமம் இல்லாதவராக, தொப்புள், ஹிருதயம், மார்பு, முகவாய்க்கட்டை, புருவங்களின் மத்திய பாகம், தலை ஆகிய ஆறு ஸ்தானங்களிலும் அந்தந்த வாயுவைச் செல்லும்படி செய்யவேண்டும். பின்னும் நாபியாகிய மணிபூரகத்திலிருந்து வாயுவை ஹ்ருதயமாகிய

அநாஹதத்தில் செல்லச் செய்து அதிலிருந்து மார்பாகிய விசுத்தி ஸ்தானத்திற்குந் போகச் செய்து, சித்தத்தையடக்கிக்கொண்டு, அதை விசுத்த ஸ்தானத்தின் மேற்பாகமாகிய தாது மூலத்திற்கு மெதுவாக கொண்டு போக வேண்டும். அதிருந்து ஆக்ஞா சக்கரமாகிய புருவங்களின் மத்ய பாகத்தில் அந்த வாயுவைச் செலுத்தவேண்டும். அப்போது காதுகளையும், கண்களையும், மூக்குகளையும், முகத்தையும் மூடிக் கொண்டு வாயுவை வெளியில் விடாமல் அடக்கிக் கொண்டிருக்கவேண்டும். வேறு விஷயங்களை விரும்பக் கூடாது. இப்படி ஆக்ஞா சக்கரத்தில் ப்ராணனை அரை முஹூர்த்த காலம் நிறுத்திக்கொண்டிருந்து, பிறகு தடையற்ற ஞானமுள்ளவனாக ப்ரஹ்ம ஸ்வரூபத்தையடைந்து, ப்ரஹ்மாந்தரமாகிய தலையைப் பேதித்து வாயுவை வெளிப்படுத்தி, தேகத்தை விடவேண்டும்.

22–31. ஓ மஹாராஜ! இந்தப் ப்ரஹ்மாண்டத்தில் ப்ரஹ்மலோகம் போகிறவனானாலும் அணிமா முதலிய ஐச்வர்யங்களுள்ள தேவர்கள் வஸிக்கும் ஸ்வர்க்கம் முதலிய இடங்களுக்குச் செல்லுகிறவனானாலும் மனத்தையும், இந்திரியங்களையும் தன்னுடன் கூடவே அழைத்துக்கொண்டு போகிறான். வாயுவிற்குள் அடங்கிய லிங்க சரீரமுள்ள மஹா யோகிகள், மஹர்லோகம் முதலியவைகளிலும், ப்ரஹ்மாண்டத்திற்கு வெளியிலும் போவார்கள் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். உபாஸனை, தபஸ், அஷ்டாங்க யோகம் ஞானம் ஆகிய இவைகளை அனுஷ்டிப்பவர்கள் அர்சிராதி மார்க்கமாய்ப் போவார்கள். அந்த வழியில் போனவர்கள் மறுபடியும் திரும்புகிறதில்லை.

அப்படிப்பட்ட கதியானது யாகம் முதலியகர்மங்களால் கிடைக்கிறதில்லை. ப்ரஹ்மலோக மார்க்கத்தில் சென்றவன் முதலில் அக்னிக்கு அபிமானியான தேவதையை அடைகிறான். பிறகு ஜ்யோதிஸின் ரூபமாகிய ஸுஷும்னா நாடி வழியாய் ஒன்றிலும் ஆசைப்படாதவனாக உத்தமமான, சிம்சுமாரமென்ற ஜ்யோதி சக்கரத்தை யடைகிறான். பின்பு ஸூர்யன் முதலியவர்களுக்கு ஆசிரயமான அந்த விஷ்ணுவின் சக்கரத்தைத் தாண்டி சுத்தமான லிங்க சரீரத்துடன் தானொருவனாகப் ப்ரஹ்மத்தை அறிந்தவர்கள் வஸிக்கக்கூடியதும், எல்லோராலும் நமஸ்கரிக்கப் பட்டதுமான மஹர்லோகத்தை அடைகிறான். அந்த ஸ்தானத்தில் அநேக கால ஜீவிகளான ப்ருகு முதலியவர்கள் ஆனந்தமாக வஸிக்கிறார்கள். பிறகு அவர்கள் அந்தக் கல்பத்தின் முடிவில் ஸங்கர்ஷண பகவானுடைய முகத்திலிருந்து உண்டான அக்னியால் உலகங்கள் எரிக்கப்படுவதைப் பார்த்து, அதன் உஷ்ணத்தைச் ஸகியாமல் அந்த உலகத்திலிருந்து ஸனகர் முதலியவர்கள் வஸிக்கும், இரண்டு பரார்த்தம் வரையில் அழியாமலிருக்கக் கூடிய ப்ரஹ்ம லோகத்தை அடைகிறார்கள். அவ்விடத்தில் சோகம், ஜரை, கிழத்தனம் மரணம், துக்கம், பயம் ஆகிய இவைகள் இல்லை. ஆனாலும் அந்த உலகத்தில் இருப்பவர்கள், 'ப்ரஹ்மலோகம் சோக மோகங்களற்றது ஸ்வர்க்காதிகளுக்கு மேலானது என்று நினையாமல் கர்மஜடர்களாக, ஸம்ஸாரத்தில் கஷ்டப்படும் அக்ஞர்களைப்பற்றி வருத்தப்படுகிறார்கள். அதைத் தவிர வேறு துக்கம் அவ்விடத்திலில்லை. அந்த லோகத்தையடைந்தவன் ப்ரஹ்ம ப்ரளயத்தில் லிங்க தேகத்துடன் பூமியின் ஸ்வரூபத்தையடைந்து ஜலத்தை

அடைந்து, தாமஸியாமல், பயமில்லாதவனாகி தேஜோமயனாகி வாயுவை யடைந்து அணுபவம் முடிந்தவுடன் ஆகாச சரீரத்தைக் அடைகிறான். பின்னும் அவன் க்ராணேந்திரியத்தைக் கொண்டு வாஸனையையும், ரஸனேந்திரியத்தைக் கொண்டு ரஸத்தையும், நேத்ரத்தைக் கொண்டு உருவத்தையும் த்வகிந்திரியத்தைக் கொண்டு ஸ்பர்சத்தையும், ச்ரோத் ரேந்திரியத்தைக் கொண்டு ஆகாயத்தின் குணமாகிய சப்தத்தையும், கர்மேந்திரியங்களைக் கொண்டு அவை களின் வியாபாரங்களையும் அடக்கிக்கொள்ளுகிறான். மேலும் அவன் பூதஸூக்ஷ்மங்கள், பத்து இந்திரியங்கள் ஆகிய இவைகளுக்கு லய ஸ்தானமாயும், மனோமய மாயும்,தேவதா ரூபமாயுள்ள ஆவரணமாகிய அஹங் காரத்தை அடைந்த பிறகு அதனுடன் விஞ்ஞான தத்வத்தை அடைகிறான். பின்னும் அவன் குணங்கள் லயிக்கும் இடமான பிரதானத்தை அடைகிறான். (லயிக்கிறான்). இப்படி உபாதிகள்யாவும் லயமடைந்த பிறகு ஆனந்த ஸ்வரூபியான ஜீவன் விகாரமற்றதும், ஆனந்த ஸ்வரூபியுமான ஆத்மாவை அடைகிறான். ஓ மஹாராஜ! இம்மாதிரியான பதத்தை யடைந்தவன் மறுபடியும் திரும்புகிறதில்லை.

32–37. ஸத்யோமுக்தி, க்ரமமுக்தியென்ற இரண்டு மார்க்கங்களும் வேதங்களில் சொல்லப்பட்டவைகள். இவைகளை ஸ்ரீ பகவானாகிய வாஸுதேவர் முன்னொரு காலத்தில் ப்ரஹ்மதேவருக்கு உபதேசித்தார். நீர் இப்பொழுது அவைகளை அறிய விரும்பியபடியால் உமக்குச் சொன்னேன். ஸம்ஸாரத்தில் கஷ்டப்படும் ஜனங்கள் மோக்ஷத்தையடைவதற்கும் பல மார்க்கங்கள் இருந்தாலும் பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில்

பக்தியையுண்டு பண்ணும் மேற்காட்டிய மார்க்கமே மேலானது. அதுவே ஸுகமாய் அனுஷ்டிக்கக்கூடியது இடையூறற்றது, தவிரவும் முன்னொரு ஸமயத்தில் ப்ரஹ்மதேவர் ஒரே சித்தராக இருந்து, ஸகல வேதங்களையும் மூன்று தடவை படித்துப் பார்த்து, மேற் சொல்லிய மார்க்கமே பகவத் பக்தியைக் கொடுக்கக் கூடியது என்று நிச்சயித்தார். மேலும் பரமாத்மா ஆனவர், ஸகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாய் இருப்பதைக் கொண்டும் புத்தி முதலியவைகளைக் கொண்டும், ஸித்திக்கும் அனுமானத்தைக் கொண்டும், எல்லோராலும் பார்க்கப்படுகிறார். ஆகையால் ஓ பரீக்ஷித்து மஹாராஜனே! எந்த இடத்திலும், எக்காலத்திலும் மனிதர்கள் ஸ்ரீமந் நாராயணனையே ஸ்மரிக்க வேண்டும் அவருடைய கதையைக் கேட்க வேண்டும் திவ்ய நாமங்களை உச்சரிக்க வேண்டும், ஆகையால் ஸ்ரீ பகவானுடைய கதையாகிய அமிருதத்தைச் சுரோத்ரமாகிய பாத்திரத்தால் எவர்கள் புஜிக்கிறார்களோ, விஷய ஆசையால் கலங்கிய அவர்களுடைய சித்தமானது சுத்தமாய் விடுகிறதுமன்றி அந்தப் புண்யசாலிகள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பதத்தையும் அடைவார்கள்.

நோட்டு

ஸ்ருஷ்டித்தார். தாதாவானவர் முன்னிருந்தது போல ஸ்ருஷ்டித்தார் –ஸ்ருதி பிரளய காலத்தில் முன் கல்பத்திலுள்ள ப்ரஹ்மதேவருடன் ஸ்ருஷ்டி விஷயமான ஞானம் நஷ்டமாகி விட்டது. பிறகு ஸ்ருஷ்டி காலத்தில் இந்தக் கல்பத்திய ப்ரஹ்மதேவர் முன் அத்யாயத்தில் சொன்னபடி பகவானிடம் மனதைச்

செலுத்தி, அதனால் ஸ்ருஷ்டி ஞானத்தையடைந்தார். இப்படி அர்த்தஞ் சொல்லவேண்டும். இல்லாவிடில் முன் கல்பத்திய ப்ரஹ்மதேவரே இந்தக் கல்பத்திலுமிருந்து ஸ்ருஷ்டித்தாரென்று ஏற்படும், அப்படிச் சொல்வது ஸரியல்ல, ஒவ்வொரு கல்பத்திலும் ப்ரஹ்மதேவர் வேறு என்று கொள்வதே நியாயம். அவர்களெல்லோரும் ப்ரளயம் வந்தவுடன் ப்ரஹ்மதேவருடன் முக்தியடைகிறார்கள், ப்ரளய காலத்தில் ப்ரஹ்ம லோகத்திலிருப்பவர்கள் எல்லோரும் முத்தியை அடைகிறார்கள். ஸ்ருதிகள், தவிரவும், பகவானுடைய அளவற்ற கிருபையை அடைந்தவர்கள் மறுபடியும் பிறந்தார் களென்று சொல்வதும் உசிதமல்ல. ஆதலால் மூலத்திலிருக்கும் ஸ்மிருதி என்ற பதத்திற்கு ஸ்ருஷ்டி ஞானமென்று இவ்விடத்தில் அர்த்தங்கொள்ள வேண்டும். ஆகேஷபம் வைராஜ தாரணையால் ஸ்ருஷ்டி ஞானம் உண்டாகிற தென்றால், அந்தத் தாரணையானது அந்த ஞானத்தால் தான் உண்டாக வேண்டும், ஆதலால் அந்யோந்யாசிரய தோஷம் நேரிடுகிறது. சமாதானம் பகவானுடைய கொப்பூழில் தாமரைப் புஷ்பத்திலிருந்து ப்ரஹ்மதேவர் உண்டானார். அவருடைய தபஸினால் நாராயணன் ஸந்தோஷித்தார். அப்பொழுது ஓ சதுர்முகரே! மறுபடியும் நீர் தபஸ், ஞானம் இவைகளை யனுஷ்டிக்கவேண்டும். அவைகளால் ஆவரணம் விலகும். அப்பொழுது நீர் என்னிடத்தில் லோகங்களையும் அவைகளில் என்னையும் பார்க்கலாம் என்று பகவான் சொன்னார். பிறகு ப்ரஹ்மதேவர் ஸ்ருஷ்டிக்கப்படும் ஸகல பதார்த்தங்களையும் முன்னமே பார்த்து, அவை களைப் பகவானுடைய அவயவங்களாகப் பாவித்து அந்தத் தாரணையால் ஸ்ருஷ்டி ஞானம்

ஸாமர்த்தியம் இவைகளையடைந்தார், வீர. நிச்சயமாகிய –வியவஸாய புத்தி என்று மூலத்திலிருப்பதால் ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்று முயற்சி செய்தவர், விஜயத், வேதங்கள் ஸகல வேதம் முதலிய சப்தங்களுக்கு இந்தப் பரமாத்மாவே அர்த்தமாயிருக்கிறார். பகவான் உடைய இச்சையால் உண்டான ஸம்ஸாரத்தில் அலைந்து கொண்டு ஒன்றையும் அறியாதவனாகி, கர்ம வாஸனையினால் பலவகையான ஜன்மங்களை யடைந்து கஷ்டப்படும் ஜீவன் இந்திரன் முதலிய சப்தங்களுக்கு அந்த அந்தத் தேவதைகளை அர்த்தம் என்று நினைக்கிறான் அது ஸரியல்ல. அந்தத் தேவர்களிடத்தில் குறைவற்ற ஐசுவர்யமாவது, புருஷார்த்தமாவது, இல்லை, மேலும் அவர்களை உபாஸிப்பதால் புருஷார்த்தமொன்றும் கிடைக்கிறது இல்லை, ஆகையால் ஸ்ரீமந் நாராயணனையே ஸேவிக்கவேண்டும், ஸ்மரிக்கவேண்டும், அவரே ஸகல வேதங்களுக்கும் அர்த்தம். விஜயத். விவேகமுள்ளவன் ஸகல நாமங்களும் ஸ்ரீமந் நாராயணனையே சொல்லு கின்றன என்பதை எப்பொழுதும் மறவாமலிருப்பவன், தாய் தந்தை முதலிய பந்துக்களை விட மிகவும் ஜனங்களுக்கு வேதங்கள் அனுகூலத்தையே உபதேசிப் பவைகள் ஆகையால் ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களுள்ள ஜனங்களுடைய புத்திக்கு அநுகுணமாக ஸ்வர்க்கம் முதலிய ஸ்திரமில்லாத பலத்தைக் கொடுக்கும் கர்மங்களையும், ஸாச்வதமான மோக்ஷ ஸாதனங்களையும், அவ்வேதங்கள் உபதேசிக் கின்றன. அக்ஞர்கள் ஸ்வர்க்கம் முதலியவைகளையே அடையவிரும்பி அதன் ஸ்தானங்களை அனுஷ்டிக் கிறார்கள், ஆகையால் வேதங்கள் அற்பமுள்ள கர்மங்களை உபதேசித்து ஜனங்களை ஏமாற்றிவிட்டன.

என்று சொல்வது உசிதமல்ல வீர. கிடைக்கிறது இல்லை கர்மபலம் தாழ்ந்ததென்று காட்டப்பட்டது. கர்மங்களில் நம்மால் அனுபவிக்கக்கூடியது, நம் முடைய முயற்சில்லாமலேயே அவசியம் ஸித்திக்கும் என்று அதற்காகச் சிரமப்படமாட்டான்...சந்த. மமதை நான் ஈச்வரன். நான் போகமுள்ளவன், நான் ஸித்தன், நான் பலமுள்ளவன், ஸுகமுள்ளவன், பணக்காரன், மேலான குலத்தில் பிறந்தவன், ஆனதால் எனக்குச் சமானமானவன் லோகத்திலொருவனும் இல்லை என்று கர்வங்கொண்டார்கள், ப்ரியர்; ஜனங்கள் பணம், களத்திரம், புத்ரன் ஆகிய இவை களை ஆத்மாவின்' ஸௌக்கியத்திற்காவே ஸம்பாதிக் கிறார்கள். ஆத்மாவிற்கு ஆக்மாவாக இருப்பவர் பிரியரென்பதில் என்ன ஆக்ஷேபம் வீர. ஸத்யஸ்வரூபி புருஷார்த்த ஸ்வரூபி, வீர. ப்ராதேச கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் (தர்ஜனிக்கு) இடையிலுள்ள நீளம் ஸ்ரீத. ஜகத்தின் அளவு எவ்வளவோ அந்த அளவுள்ளவர் சந்த் மூவுலகமும் பகவானுக்குச் சரீரமானாலும் கட்டைவிரல் ப்ரமாணம் உள்ள ஹ்ருதய கமலத்தில் உபாஸிப்பதற்காக அடங்கிய சரீரம் வீர. உட்கார்ந்து இது மரணம் அடையச் சித்தமாக விருப்பவன் செய்யக்கூடிய கார்யம் இன்னதென்று சொல்லப்பட்டது. இனியும் அவனால் செய்யப்படவேண்டிய கார்யம் சொல்லப்படுகிறது பூமியின் ரூபத்தை மிகுந்த புண்யத்தால் ப்ரஹ்மம லோகஞ் சென்றவர்கள் மறு கல்பத்தில் அவர்கள் உடைய புண்யத்திற்குத் தக்கபடி அதிகாரிகள் தேவதைகளாக ஆகிறார்கள், ஹிரண்யகர்ப்பர் முதலிய வர்களையும் உபாஸித்துப் ப்ரஹ்மலோகஞ் சேர்ந்த வர்கள் ப்ரஹ்மாண்டத்தைப் பேதித்து தமதிஷ்டப்படி

விஷ்ணுபதத்தை அடைகிறார்கள். ஆனதால் பகவத் பக்தர்கள் ப்ரஹ்மாண்டத்தை பேதித்துச் செல்லும் வகை காட்டப்படுகிறது. ஈஸ்வராதிஷ்டிதமான ப்ரகிருதியிலிருந்து மஹத்தத்வம் உண்டாகிறது. அதன் அம்சம் அஹங்காரமாகும். அதனுடைய அம்சம் ஆகாயமாகும். அதனுடைய அம்சம் வாயுவாகும் (ஸ்பர்சதன்மாத்திரையால்) அதனுடைய அம்சம் (ரூபதன்மாத்திரையால்) தேஜஸ்ஸாகும். அதன் அம்சம் (ரஸதன்மாத்திரையால்) ப்ருதிவியாகும். அவைகள் யாவும் சேர்ந்தது பதினான்கு லோகங்கள் ஆகிய விராட்புருஷ சரீரமாம். அது ஐம்பது கோடி விஸ்தாரமுள்ளது. அதற்குப் ப்ருதிவியே அண்டகடாஹ மெனப்படுகிறது. அதன் முதலாவது ஆவரணமானது கோடி யோசன விஸ்தாரமுள்ளது. ஜலம் முதலிய ஒவ்வொரு ஆவரணங்களும் ஒன்றைவிட மற்றொன்று பத்து மடங்கு பெரியவைகளாம். அவைகளில் எட்டாவதான ப்ரகிருதியின் ஆவரணம் மிகவும் பெரிதானது. அர்ச்சிராதி அக்னி ஜ்யோதிஸ், பகல் சுக்லபக்ஷம், ஆறு மாஸ்யங்கள், உத்தராயணம் ஆகிய இவைகளின் அபிமான தேவதைகளடங்கிய மார்க்கத்தில் சென்றவர்கள் ப்ரஹ்மத்தையடைகிறார்கள். ஸத்யோமுக்தி எப்பொழுது இவனுடைய ஹ்ருதயத்திலிருக்கும் கர்மங்கள் யாவும் நாசமடைகின்றனவோ, பிறகு மனிதன் மரண தர்மமில்லாதவனாக ஆகிவிடுகிறான் ஸ்ரீத, க்ரமமுக்தி முன்காட்டிய அர்ச்சிராதி மார்க்கத்தை அடைந்தவர் களுக்கிக் கிடைப்பது –வீர. மூலத்தில் இரண்டு மார்க்கம் என்றிருப்பதால் தூமாதி மார்க்கமும், அச்சிராதி மார்க்கமும் என்று தாத்பர்யம். சந்த.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்– 3

பகவத் குணங்களின் மேன்மை

ஓ மஹாராஜ! வித்வான்களாகிய மனிதர்கள் சாகுந்தருணத்தில் செய்யவேண்டிய கார்யம் பகவான் உடைய கதையைக் கேட்பது முதலியவைகளே என்று சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. நீர் கேட்ட விஷயம் இதுவே. ப்ரம்ஹதேஜஸை அடைய விரும்பிய அவன் வேதங்களுக்கு அதிபதியாகிய ப்ரம்ஹ தேவரையும், இந்திரியங்களின் வல்மையை விரும்பிய அவன் இந்திரனையும், புத்ர ஸம்பத்தை விரும்பிய அவன் தக்ஷர் முதலிய ப்ரஜாபதிகளையும் பக்ஷ்ய போஜ்யங்களை விரும்பியவன் அதிதி தேவியையும், ஸ்வர்க்கத்தை விரும்பியவன் விச்வேதேவர்களையும், ஜனங்களை வசப்படுத்த விரும்பியவன் ஸாத்யர் களையும், ஸம்பத்தை விரும்பியவன், அக்னி பகவா னையும், பணத்தை விரும்பியவன் வீர்யத்தைக் கொடுப்பவர்களாகிய ருத்ரர்களையும், தீர்க்கமான ஆயுஸ்ஸை விரும்பியவள் அசுவினீ தேவர்களையும், சரீர புஷ்டியை விரும்பியவன் பூதேவியையும், பிரதிஷ்டியை (ஸ்தானத்தை விட்டு நழுவாமலிருப்பது) விரும்பிய புருஷன் உலகத்திற்குத் தாயார்களான ஆகாசம், பூமி இவைகளையும்; அழகை விரும்பிய அவன் கந்தர்வர்களையும், ஸ்திரீயை விரும்பியவன் ஊர்வசி என்கிற அப்ஸரஸ்ஸையும், எல்லோருக்கும் யஜமானனாயிருக்க வேண்டுமென்று விரும்பியவன் யக்ஞ ரூபமான மஹாவிஷ்ணுவையும், மோக்ஷத்தை விரும்பியவன் வருணனையும், வித்தையை விரும்பிய அவன் பரமசிவனையும், தம்பதிகள் ஒருவருக்கொருவர்

பிரியாமலிருக்க வேண்டியதை விரும்பியவன் பதிவிரதையான உமாதேவியையும், தர்மத்தை விரும்பிய அவன் உத்தம ச்லோகராகிய மஹாவிஷ்ணுவையும், ஸந்தானத்தை (வம்சத்தின் தொடர்ச்சி) விரும்பிய அவன் பிதுருக் களையும்; உபத்திரவ நிவர்த்தியை விரும்பியவன் யக்ஷர்களையும், பலத்தை விரும்பிய அவன் மருத்துக்களையும், இராஜியத்தை விரும்பியவன் மனுக்களாகிய தேவர்களையும், சத்துருவைக் கொல்ல விரும்பியவன் நிருதியையும், போகத்தை விரும்பியவன் ஸோமனையும், வைராக்யத்தை விரும்பியவன் ப்ரகிருதிக்கு மேற்பட்ட பரமபுருஷனையும் பூஜிக்க வேண்டும். இப்படிப் பல தேவர்களைப் பூஜிப்பவர் களுக்கு பகவத் பக்தர்களுடைய ஸங்கத்தால் பகவான் இடத்தில் ஸ்திரமான பக்தி உண்டாகிறது. இதுவே மேலான புருஷார்த்தம், பகவானுடைய கதையானது ஆசை, துவேஷம் ஆகிய இவைகளின் ஸம்பந்தமற்ற ஞானத்தை உண்டு பண்ணுகிறது. சித்தத்தைச் சுத்தி செய்கிறது. இவ்வுலகத்திலும், மேலுலகத்திலும் விஷயத்தில் வைராக்கியத்தையுண்டுபண்ணுகிறது. மோக்ஷ மார்க்கமாகிய பக்தி யோகத்தையும் உண்டு பண்ணுகிறது. ஆகையால் குரு முகமாய்ச் செய்த ச்ரவணம் முதலியவைகளால் ஸுகமடைந்த புருஷன் எவன் தான் பகவானுடைய கதையில் ஆசைப்படமாட்டான்? என்று பரிக்ஷித் மகா ராஜனுக்குச் சுகர் சொன்னாரென்று ஸூதர் சொன்னார்.

13–25 அதனைக் கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி, ஓ வித்வானாகிய ஸூதரே! சுகருடைய வார்த்தையைக் கேட்டு, பரீக்ஷித் மஹாராஜன் வியாஸ

புத்திரராயும், மிக்க ஞானியுமான அவரை நோக்கி, பின்னும் எதனைக் கேட்டார்? பகவத் பக்தர்களான ஸாதுக்களுடைய ஸபையில் பகவத் கதையே நடந்து கொண்டிருக்கும். அதனால் ஈசுவரனுடைய கதையைக் கேட்பதில் மிகுந்த ஆசையுண்டாகும். ஆனதுபற்றி அதனைக் கேட்கவேண்டுமென்ற விருப்பமுள்ள எங்களுக்குச் சொல்லவேண்டும். மேலும், மஹாரதரும், பாண்டு குலத்தில் பிறந்தவரும், பாகவதோத்தருமாகிய அந்த அரசன் பால்ய வயதில் விளையாட்டு சாமான்களைக் கொண்டு கிருஷ்ணனையே பூஜித்தார். அதுவே அவருக்கு விளையாட்டாயிற்று. அவருக்கு பாகவதத்தை உபதேசஞ் செய்த வியாஸ புத்திரராகிய சுக மஹர்ஷியானவர் கிருஷ்ணனிடத்திலே விசேஷ பக்தியுள்ளவர், ஆனதால் அவ்விருவர்களும் மஹா ஸாதுக்கள். ஸாதுக்களுடைய கூட்டத்தில் திவ்ய குணங்களால் அலங்கரிக்கப்பட்ட பகவத் கதை நடக்கும், உத்தமச்லோகராகிய பகவானுடைய கதையைச் சொல்லிக் கொண்டு கழித்த காலமே மனிதனுடைய ஆயுஸ்ஸில் மேலானது. லௌகிக வியவஹாரங்களால் கழிக்கப்படும் காலமானது வீணானதே. ஒவ்வொரு நாளும் உதயமாகிறவரும், அஸ்தமனத்தை அடைகிற வருமான அந்த ஸூர்யன் வீணாய்க் காலம் கழிப்ப வருடைய ஆயுஸ்ஸை அபகரிக்கிறார். அப்போர்ப் பட்டவர்களுடைய ஆயுஸுக்குப் பிழைத்திருப்பதைத் தவிர வேறு பிரயோசனமில்லை? பசுக்கள் ஆகாரத்தைப் புஜிக்கவில்லையா? மைதுனம் செய்யவில்லையா? ஆகையால் மேற்காட்டிய வீண் காலம் கழிப்பவன் இவைகள் போன்றவனேயாம். பின்னும் எவனுடைய காதில் பகவானுடைய சரிதம் ஒருபொழுதும் ப்ரவேசிக்கவில்லையோ, அவன்

நாயிக்குச் சமமானவன், கிராமத்திலிருக்கும் பன்றிக்கு ஒப்பானவன். சுமைகளைச் சுமக்கும் ஒட்டகம் போன்றவன், (காலால் உதைக்கும் ஸ்திரீயைத் தள்ள முடியாமல் மிக்க காமியாயிருப்பதால்) கழுதை போன்றவன், எந்த மனுஷ்யனுடைய இரு காதுகளும் பகவானுடைய குணங்களைக் கேட்கவில்லையோ, அவைகள் ஸர்ப்பம் முதலியவைகள் ப்ரவேசிக்கக் கூடிய பிலங்களேயாகும். எவன் நாக்கினால் பகவத் கதையைக் கானம் பண்ணவில்லையோ, அவனுடைய சப்தம் யாவும் தவளையின் சப்தம் போன்றவைகளே, எவனுடைய தலையானது முகுந்தனை நமஸ்கரிக்க வில்லையோ, அது பட்டுக்களால் செய்யப்பட்ட தலைப்பாகை, இரத்தின கிரீடம் இவைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தாலும் பெரிய சுமையேயாம். எவனுடைய கைகள் பகவானைப் பூஜிக்கவில்லையோ, அவைகள் தங்க வளையல்களால் அலங்கரிக்கப் பட்டவைகளானாலும் பிணத்தின் கைகளேயாகும். எவனுடைய கண்களிரண்டும் பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தைத் தரிசிக்கவில்லையோ, அவைகள் மயில் தோகையிலிருக்கும் கண்களேயாம். எந்தப் புருஷனுடைய பாதங்களிரண்டும் பகவானுடைய விசேஷ ஸான்நித்யமுள்ள புண்ய க்ஷேத்திரங்களுக்குப் போகவில்லையோ, அவைகள் மரத்தின் வேர்களுக்கு ஒப்பானவைகள். எவன் பகவத் பக்தர்களுடைய பாதங்களில் ஒட்டிய தூளியைத் தரிசிக்கவில்லையோ, எவன் பகவானுடைய பாதத்திலிருக்கும் துளஸியின் வாஸனையை மோந்து அதைச் ச்வாகிக்கவில்லையோ, அவன் பிழைத்திருக்கும் பிணமேயாம். பகவானுடைய கதையைக் கேட்டு எவனுக்கு முகத்தில் ஸந்தோஷமும், கண்களில் ஆனந்தாஷ்டமும், தேகத்தில்

மயிர்க்கூச்சலும் உண்டாகவில்லையோ, அவனுடைய ஹ்ருதயம் கருங்கல்லேயாகும். இது மிகவும் ஆச்சரியம் ஓ ஸூதரே! மனஸுக்குப் பிரியமாக நீர் பேசுகிறீர். ஆகையால் பாகவதர்களுக்குள் சிறந்தவரும், ஆத்ம வித்தையை நன்றாயறிந்தவரும் வியாச மஹாமுனியின் புத்திரருமான சுக மஹரிஷி பரீக்ஷித் மஹாராஜனை நோக்கி எதனைச் சொன்னாரோ, அதனைச் சொல்லவேண்டும் என்று கேட்டார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–4

பரீக்ஷித் ஜகத் ஸ்ருஷ்டியைப் பற்றிக் கேட்டது.

1–10. இம்மாதிரியான சௌனகருடைய வார்த்தையைக் கேட்ட ஸூதர் சௌனகரை நோக்கி பின்வருமாறு சொன்னார். உத்தரையின் புத்திரன் பரீக்ஷித்து மஹாராஜன் ஆத்ம ஸ்வரூபத்தின் உண்மையைத் தெரிவிக்கும் சுகருடைய வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ கிருஷ்ண பகவானையே உபாஸிக்க வேண்டும். அவரே பரமாத்மா என்று நிச்சயித்தார். மேலும் தேகம், பார்யை, புத்திரன், வீடு, யானை முதலியவை, திரவ்யம், பந்துக்கள் பூர்ணமாகிய இராஜ்யம் ஆகிய இவைகளில் வெகு நாளாக ஏற்பட்டிருந்த அபிமானத்தை விட்டுவிட்டார். நீங்கள் என்னைக் கேட்டதுபோல அவ்வரசனும் இந்த விஷயத்தைப் பற்றி ஸ்ரீ கிருஷ்ணனுடைய மாஹாத் மியத்தைக் கேட்பதில் மிக்க சிரத்தையுள்ளவராகப் பரமாத்ம ஸ்வரூபத்தை அறியவேண்டித் தாம் சீக்கிரத்தில் மரணமடையப் போகிறோமென்ற நிச்சயம் உள்ளவராகத் தர்மம், அர்த்தம், காமம், ஆகிய இவை களில் ஆசையில்லாதவராய், பகவானாகிய வாஸு தேவரிடத்தில் மிகுந்த பக்தியுடன் சுகரை நோக்கி, ஓ பாபமற்றவரே! ப்ராஹ்மணோத்தம! எல்லாவற்றையும் அறிந்தவரான உம்மால் சொல்லப்பட்ட வார்த்தை ஆத்ம ஞானத்தை உண்டுபண்ணக்கூடியதாயிருக்கிறது. நீர் மஹாவிஷ்ணுவின் கதைகளைச் சொல்லும் பொழுது என்னுடைய அஞ்ஞானம் விலகுகிறது. ஆனாலும் பகவான் தம்முடையமாயையால் பூமியில் அவதரித்துப்ரஹ்மா, பரமசிவன் முதலிய தேவர்களாலும்

அறியக்கூடாத இந்த ஜகத்தை அந்தப் பரமபுருஷன் எந்தச் சக்தியைக் கொண்டு உண்டு பண்ணுகிறார்? பின்னும் அதை எப்படிக் காப்பாற்றுகிறார்? மேலும், அதைப் ப்ரளய காலத்தில் எப்படி ஸம்ஹரிக்கிறார்? அவருடைய சக்தியானது அளவற்றது. பின்னும் அந்தப் புருஷன் இராமகிருஷ்ணாதி அவதாரங்களைச் செய்து விளையாடுகிறதுமல்லாமல் ப்ரஹ்மா முதலிய வர்களின் ரூபியாயுமிருந்து பலவகையான காரியங் களைச் செய்கிறார். அவருடைய சரிதம் மிக்க ஆச்சரியகரமானது. கவிகளாலும் அறிய முடியாதது, ஒருவனாகிய அந்தப் புருஷன் ஒரே காலத்தில் ப்ரக்ருதியின் குணங்களைக் கிரஹிக்கிறாரா? அல்லது ப்ரஹ்மா, ருத்ரன் முதலியவர்களின் ரூபமாயிருந்து பலவகையான லீலைகளைச் செய்து, கிரமமாக மேற்கூட்டிய ப்ரக்ருதியின் குணங்களையங்கீகரிக்கிறாரா? நீர் வேதங்களின் அர்த்தத்தையும், பரப்ரஹ்ம ஸ்வரூபத்தையும் நன்றாக அறிந்தவர். ஆகையால் இந்த ஸம்சயத்தைப் போக்கவேண்டும் என்று கேட்டார்.

11–26. இம்மாதிரியான அரசனுடைய வார்த்தையைக் கேட்ட சுகர் இந்திரியங்களுக்கு அதிபதியாகிய மஹாவிஷ்ணுவை ஸ்மரித்து, பிரத்யுத் தரஞ் செல்ல ஆரம்பித்துப் பரமாத்வை நமஸ்கரித் தார். எப்படியெனில் பரமபுருஷனை நமஸ்கரிக் கிறேன். அவர் அளவற்ற சக்தியுள்ளவர், இரஜோ குணத்தைக்கொண்டு லோகத்தை ஸ்ருஷ்டிப்பவர். ஸத்வ குணத்தைக்கொண்டு ஜகத்தைக் காப்பாற்றுகிறவர். பின்னும் அதைத் தமோ குணத்தைக்கொண்டு ஸம்ஹரிப்பவர். ஸகல பிராணிகளுக்கும் அந்தர்யாமியா

யிருப்பவர். அவருடைய ஸ்வரூபம் அறியமுடியாதது. மேலும், தர்ம சிந்தையுள்ள ஸாதுக்களுக்கு நேரிடும் துக்கத்தைப் போக்கடிக்கக் கூடியவர். துஷ்டர்களைச் சிக்ஷிப்பவர். ஸகல தேவஸ்வரூபியாயிருந்து பலனை கொடுப்பவர். பரமஹம்ஸர்கள் சுத்தமான சித்தத்தால் எதனை அடிக்கடி தேடுகிறார்களோ, அந்த ஆத்ம ஸ்வரூபத்தைப் ப்ரகாசிக்கச் செய்பவர். அப்படிப்பட்ட பகவானுக்கு அடிக்கடி நமஸ்காரஞ் செய்கிறேன். மேலும் அவர் பக்தர்களை ஸம்ரக்ஷிப்பவர். பக்தி இல்லாதவர்களுக்கு வெகு தூரத்திலிருப்பவர் (அறிய முடியாதவர்) அவருடைய ஐசுவரியத்திற்கு ஸமமான அல்லது மேலான ஐசுவரியம் ஒருவருக்குமில்லை. அந்த ஐசுவரியத்தால் ஸ்வரூபமாகிய பரப்ரஹ்மத் தினிடமே ஆனந்தப்படுகிறவர். அவரை நமஸ்கரிக்கிறேன். அந்தப்பரமபுருஷனுடைய திவ்ய நாமங்களை உச்சரிப் பதாலும், பூஜிப்பதாலும், அவருடைய கதையைக் கேட்பதாலும் ஸகல பாபங்களும் நாசமடைகின்றன. ஆகையால் அந்தத் திவ்ய மங்கள கீர்த்தியுள்ள பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். விவேகிகள் பகவானுடைய பாதங்களை உபாஸித்து இவ்வுலகத் திலும் மேலுலகத்திலுமுள்ள ஆசையை ஒழித்துச் சிரமமின்றி, ப்ரஹ்மாத்ம பாவத்தை அடைகிறார்கள். அந்தப் பகவானை நமஸ்கரிக்கிறேன். தபஸ்விகளாக ஆனாலும், தானத்தால் புண்யத்தை ஸம்பாதித்தவர் களானாலும், கீர்த்தியுள்ளவர்களானாலும் அவை களைப் பகவானிடத்தில் அர்ப்பணம் செய்யாவிடில் க்ஷேமத்தை அடைகிறதில்லை. ஆனதுபற்றி, அந்தப் புருஷனுக்கு அடிக்கடி நமஸ்காரம் செய்கிறேன். தவிரவும், கிராதர்கள் (மிருகம் முதலியவைகளை ஹிம்ஸிக்கிறவர்கள்), ஹூணர்கள் (வெண்நிறமாய்

இருப்பார்கள்) தெலுங்கு தேசத்தில் வசிக்கும் தாழ்ந்த ஜாதியான ஆந்திரர்கள், புளிந்தர்கள் (மிகுந்த ஹிம்ஸையில் பிரியமுள்ளவர்களான வேடர்கள்). சண்டாளர்கள், வலையர்கள், கழுகின் மாம்ஸத்தை புஜிக்கும் ஹீன ஜாதிகள், மிலேச்சர்கள், ஆயுதம் முதலியவைகளைச் சாணை பிடிப்பவர்கள் முதலிய பாபிஷ்டர்களும் பகவத் பக்தர்களை ஆச்ரயித்து சுத்தி யடைகிறார்கள். அந்த ப்ரபுவுக்கு நமஸ்காரம். மேலும் அவர் மனோதைரியமுள்ளவர்களால் ஆத்மாவென்று உபாஸிக்கக்கூடியவர், எல்லாவற்றிற்கும் ஈசுவரன்; வேத ஸ்வரூபீ. தபஸின் ரூபமாயிருப்பவர் குற்றமற்ற வர்களான ப்ரஹ்மா, பரமசிவன் முதலிய தேவர்களால் ஊகிக்கக்கூடிய திவ்ய சரீரமுள்ளவர். எல்லோராலும் உபாஸிக்கக்கூடிய அந்தப் பரமாத்மா என்னிடத்தில் தயவு செய்யட்டும். பின்னும் அவர் லக்ஷ்மீபதி: ஸகல யாகங்களுக்கு பலத்தைக் கொடுக்கக்கூடியவர்; ஸகல பிரஜைகளையும் ஸ்ருஷ்டிப்பவர், ஸகல லோகத்துக்கும் பிரபு கர்ம பூமியிலிருக்கும் கர்மிகளுக்கு ஸகல புருஷார்த்தத்தையும் கொடுப்பவர் அந்தகர்களுக்கும், வ்ருஷ்ணிகளுக்கும் ஸாத்வதர்களுக்கும் பெரியோர் களுக்கும் ப்ரபுவாயிருப்பதோடு அவர்களால் அடையக் கூடியவராயுமிருக்கிறார். எல்லாவற்றையும் காப்பாற்றும் அந்தக் கிருஷ்ண பகவான் என்னிடத்தில் தயவு செய்யட்டும். கவிகள் அவருடைய பாதாரவிந்தத்தை தியானஞ் செய்து அதனால் சித்தசுத்தியை அடைந்து, ஆத்ம ஸ்வரூபத்தைத் தங்களுடைய புத்திக்குத் தக்கபடி தெரிந்துகொள்கிறார்கள். ஞானத்தைக் கொடுக்கும் அந்த முகுந்தன் என்னிடத்தில் ஸந்தோஷம் அடையட்டும். கல்பத்தின் ஆதியில் ப்ரஹ்மதேவருக்கு ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும் சக்தியை (பூர்வ ஞாபகத்தை)

உண்டு பண்ணுவதற்காகப் பகவானால் தூண்டப்பட்டு. அவருடைய முகத்திலிருந்து ஸரஸ்வதியுண்டானாள். மஹரிஷிகளுக்கும் சிரேஷ்டராகிய அந்தப் பரமாத்மா என்னிடத்தில் கருணை செய்யட்டும். மேலும் அவர் மஹாபூதங்களைக் கொண்டு ஸரீரங்களை ஸ்ருஷ்டித்து அவைகளில் அந்தர்யாமியாய்ப் புருஷனென்ற டெயர் அடைந்து, பதினாறு கலாரூபியாயிருந்து அவைகளின் குணங்களைப் ப்ரகாசிக்கச் செய்கிறார். அந்தப் ப்ரபு என்னுடை வார்த்தைகளை ச்ருங்காரம் முதலிய ரஸங்கள் நிறைந்தனவாகவும். கேட்பவர்களுக்கு ஸந்தோஷத்தை யுண்டு பண்ணக் கூடியவைகளாகவும் செய்யட்டும், வேத வ்யாஸ ரூபியாயும், ப்ரஹ்ம ரூபியாயும், பக்தர்களுக்கு ஞானமாகிய மதுவைக் கொடுத்தவருமான அந்தப் பகவானை நமஸ்கரிக் கிறேன். 'ஓ மஹாராஜ! ப்ரஹ்மதேவர் தமக்கு மஹாவிஷ்ணு உபதேசித்தபடி நாரதருக்கு இதே விஷயத்தை உபதேசித்தார். அதை உமக்குச் சொல்லுகிறேன்' என்றார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–5

ஜகத்ஸ்ருஷ்டி

1–8 ஓ மஹாராஜ! அது எப்படியெனில், நாரதர் ப்ரம்ஹதேவரை நோக்கி, ஓ தேவர்களுக்கும் தேவரே; ஸகல பிராணிகளையும் ஸ்ருஷ்டிப்பவரே ஸகல பிராணிகளுக்கும் முற்பட்டவரே உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். ஆத்ம ஸ்வரூபத்தின் உண்மையைக் காட்டும் ஞானமானது எதனாலுண்டாகுமோ அதனை உபதேசிக்க வேண்டும். ஓ ப்ரபுவே! இந்த ஜகத்தானது எவரால் பிரகாசிக்கிறதோ எவரை ஆசிரயித்திருக் கிறதோ, எவரால் ஸிருஷ்டிக்கப்பட்டதோ, எவரிடத்தில் லயிக்கிறதோ, எவருக்கு ஸ்வாதீனமாக இருக்கிறதோ, எவருடைய உருவமாகவுமிருக்கிறதோ, எது ஸத்யம் ஆனதோ அதை உண்மையாகச் சொல்ல வேண்டும். நீர் உண்டானவைகளுக்கும், உண்டாகின்றவை களுக்கும், உண்டாகப் போகின்றவைகளுக்கும் அதிபதி. இந்த ஜகத்தைக் கையிலிருக்கும் நெல்லிக்கனியைப் போல ஞானத்தால் அறிந்திருக்கிறீர். ஆகையால் எல்லாம் உம்மால் அறியப்பட்டவைகளே. நீர் எவரிடமிருந்து ஞானத்தை அப்யஸித்தீர்? உமக்கு ஆதாரமாயிருப்பது யாது? நீர் யாருக்கு ஸ்வாதீனப் பட்டவர்? எவருடைய ஸ்வரூபியாக இருக்கிறீர்? ஒருவராயிருந்து பஞ்ச பூதங்களைக் கொண்டு ஸங்கல்பத்தாலே ஸகல பிராணிகளையும் ஸ்ருஷ்டிக் கிறீர். மேலும் பட்டுப்பூச்சி பட்டை உண்டு பண்ணு வதுபோல ஸ்ருஷ்டிக்கப்பட்ட ப்ராணிகளுக்குப் பிறரால் உபத்திரவம் உண்டாகாமல் தம்மிடத்தில் வைத்து

ச்ரமமில்லாமல் தம்முடைய சக்தியாகிய ப்ரகிருதியைக் கொண்டு நீர் காப்பாற்றுகிறீர். ஓ பிரபுவே; இவ் வுலகத்தில் உயர்ந்தவைகளும் தாழ்ந்தவைகளும், மத்ய நிலைமையிலுள்ளவைகளும், மனிதன் முதலிய இரண்டு கால் ஜந்துக்களும் வெண்மை முதலிய குணங்களால் ஏற்படக்கூடியவைகளும், ஸ்தூலங்களும் சூக்ஷ்மங்களும் உம்மிடத்திலிருந்தே உண்டாகின்றன என்று நினைக்கிறேன். இப்படி உமக்குப் பிரபஞ்சம் சரீரமாயிருப்பதால் நீர் எல்லோரிலும் மேலானவர். உமக்குத் தாழ்ந்தவர்களான மற்றவர்கள் உம்மை உத்தேசித்துத் தபஸ் செய்கிறார்கள். அவர்களுக்கு நீர் பலத்தைக் கொடுக்கிறீர். அப்போர்பட்ட நீர் கடும் தவம் செய்ததால் எனக்கு ஸந்தேஹமும் துக்கமும் உண்டாகின்றன. ஆகையால் எல்லாவற்றையும் அறிந்தவரே எல்லாவற்றிற்கும் அதிபதியே என்னால் கேட்கப்பட்ட விஷயங்களை எனக்குத் தெரியும்படிச் சொல்லவேண்டும்' என்று வேண்டிக் கொண்டார்.

9–29 அதனைக் கேட்ட ப்ரஹ்மதேவர் நாரதரை நோக்கி ஓ குழந்தாய்! நீ ஸந்தேகப்பட்டுக் கேட்ட விஷயம் மிகவும் மேலானது. பகவானுடைய மஹிமையைச் சொல்லும்படி என்னை நீ தூண்டின படியால் என்னிடத்தில் உனக்குக் கருணையிருப்பதாக தெரியவருகிறது. ஆனால் என்னை ஸகல ஜகத்திற்கும் ஈசுவரனென்று நீ சொன்னது புத்தி பூர்வகமாய் சொல்லும் பொய்யல்ல. என்னைக் காட்டிலும் பரமாத்மா மேற்பட்டவரென்று தெரிந்துகொள்ளாததால் இவ்வளவு மஹிமை எனக்கு இருப்பதாகச் சொல்லு கிறாய். இந்த ஜகத்தானது பரமபுருஷனுடைய தேஜஸினால் ப்ரகாசிக்கிறதேயொழிய என்னால்

ப்ரகாசிக்கிறதென்பதில்லை. ஆனால் காரண ரூபமாய் அவரிடம் அவ்யக்தமாயிருந்த ஜகத்தை நான் ஸ்ருஷ்டியால் வெளிப்படுத்துகிறேன். ஸூர்யனும், அக்னியும், சந்திரனும், அசுவினி முதலிய நக்ஷத்ரங் களும், அந்தப் பரமாத்மனுடைய தேஜஸினாலேயே பிரகாசிக்கின்றன. அந்தப் பகவானாகிய வாஸு தேவருக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். அவருடைய மாயை ஜயிக்க முடியாதது. அதனால் தான் என்னையே ஜகத் காரணனென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். அந்த மாயையும் எவரை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ள முடியாமல் எவருடைய முன்பாக நிற்பதற்கும் வெட்கப்படுகிறதோ, அவரே எல்லாவற்றிற்கும் காரணம். அந்த மாயையின் மஹிமையால் புத்திமோஹத்தை யடைந்த ஜனங்கள், நான், என்னுடையது, என்னும் அபிமானத்தை அடைகிறார்கள். மேலும் மஹா பூதங்கள், புண்ய பாபங்கள், காலம், ஸ்வபாவம், ஜீவன் ஆகிய இவைகளெல்லாம் உண்மையில் ஸ்ரீ வாஸுதேவரூபமே தவிர வேறானவையல்ல. (காரியங்கள்யாவும் காரண ரூபமென்று கருத்து.) எல்லா வேதங்களும் ஸ்ரீமந் நாராயணனையே வர்ணிக்கின்றன. ஸகல தேவர்களும் அவருடைய சரீரத்திலிருந்து உண்டானவர்கள். ஸ்வர்க்கம் முதலிய லோகங்களுக்கும் அவரே அதிபதியாக இருக்கிறார். ராஜஸூயம், அச்வமேதம், வாய்பேய்ம் முதலிய ஸகல யாகங்களாலும் அந்த ஸ்ரீ நாராயணனே ஆராதிக் கப்படுகிறார். ப்ராணாயாமம் முதலிய யோகங்களும் அவற்றாலேற்படும் தபஸும் (மனஸ் ஒருவழையாயிருப்பது), அதனால் கிடைக்கும் ஞானம், அதனால் ஏற்படும் பயனும் ஸ்ரீ நாராயணன் இடமிருந்தே கிடைக்கின்றன. அவர் எல்லாவற்றிற்கும்

ஸாஷியாயிருப்பவர். கூடஸ்தர். ஸகல பிராணிகள் உடைய ஸ்வரூபமாயுமிருக்கிறார். எல்லாவற்றிற்க்கும் ஈசுவரன். நான் அவரால் உண்டுபண்ணப்பட்டவன். அவருடைய கடாக்ஷ விசேஷத்தால் அனுக்ரகிக்கப் பட்டு ஸ்ருஷ்டிக்க வேண்டியவைகளைப் படைக் கிறேன். அவர், குணங்களில் ஸம்பந்தப்படாதவர். ஆனாலும் அவர் காப்பாற்றுவது, ஸ்ருஷ்டிப்பது, ஸம்ஹரிப்பது ஆகிய மூன்று காரியங்களுக்காக ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்று குணங்களை மாயையால் அங்கீகரிக்கிறார். 'புருஷன் எப்பொழுதும் இருக்கிறான். ஆனால் ஸத்வம் முதலிய குணங்கள் மஹாபூதங்களை ஆசிரயித்துக் காரியமா (அதிபூதம்) யிருப்பதிலும், ஞானத்தை அவலம்பித்துக் காரணமாய் இருப்பதிலும் (அத்யாத்மம்.), இந்திரியங்களை ஆசிரயித்துக் கர்த்தாவாக இருப்பதிலும், அபி மானத்தைப் புருஷனுக்கு உண்டுபண்ணிப் பந்தத்தை உண்டாக்குகின்றன. ஓ ப்ராஹ்மணராகிய நாரதரே! மாயையை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டவராகிய பகவான் மேற்சொல்லிய மூன்று வித உபாதிகளாலும் நன்றாய் அறிய முடியாத ஸ்வரூபத்தையுடையவர். அவர் எனக்கும் மற்ற எல்லாவற்றிற்கும் அதிபதி. மாயைக்கு அதிபதியான அந்தப் பகவான் பலவிதமான சரீரமெடுக்க வேண்டி, தெய்வச் செயலாய்க் கிடைத்த காலத்தையும், கர்மத்தையும், ஸ்வபாவத் தையும் தமது மாயையைக் கொண்டு அங்கீகரிக் கிறார். மேலும் அவரை ஆசிரயித்த காலத்தால் ஸத்வம் முதலிய குணங்கள் ஸமமாயிராமல் தாரதம்யத்தையடைகின்றன. அந்தப் புருஷனை ஆசிரயித்த ஸ்வபாவத்தால் வேறு உருவத்தை அடைகிறதாகிய பரிணாமம் உண்டாகிறது. பின்னும்

அந்தப் பரமாத்மாவை ஆசிரயித்த கர்மத்தினிடம் இருந்து மஹத்தத்வம் உண்டாயிற்று. பின்பு ரஜோ குணம் ஸத்வ குணம் இவைகளுடன் கூடியதும், விகாரத்தையடைந்ததுமான மஹத் தத்வத்திலிருந்து தமோகுணத்தை பிரதானமாயுடையதும், ஐந்து பூதங்களின் ஸ்வரூபமாயும், ஞானேந்திரிய ரூபமாயும், கர்மேந்திரிய ஸ்வரூபமாயுமுள்ள அஹங்காரம் உண்டாயிற்று. பிறகு அந்த அஹங்காரம் வேறு ரூபத்தை அடைந்து வைகாரிகம், தைஜஸம், தாமஸம் என்று மூவகையாயிற்று. அவைகளில் வைகாரிகன், ஸத்வ குணத்தைப் பிரதானமாக உடையவன். கர்மேந்திரியங்களை உண்டுபண்ணும் சக்தியுள்ளவன். தாமஸன் தமோ குணத்தையே பிராதனமாகக் கொண்டவன். ஞானேந்திரியங்களை உண்டு பண்ணும் சக்தியுள்ளவன். பூதங்களுக்கு முந்தின வனாகிய அந்தத் தாமஸன் வேறு ரூபத்தையடையும் பொழுது ஆகாசம் உண்டாயிற்று. சப்தமானது அதனுடைய ஸூக்ஷ்ம ரூபமாயும் குணமாயுமிருக்கிறது. மேலும் அது பார்க்கிறவன், பார்க்கப்படுகிற வஸ்து இவ்விரண்டிற்கு அடையாளமுமாயுமிருக்கிறது; வேறு உருவத்தை அடைந்த அந்த ஆகாசத்திலிருந்து வாயு உண்டாயிற்று. அதன் குணம் ஸ்பர்சமேயாம். அந்த ஆகாயத்தின் ஸம்பந்தத்தால் வாயுவானது சப்தம் உள்ளதாகவும் ஆகிறது. தேக தாரண நிமித்தமாகிய பிராணன், மனோபல வேகம், தேக பலம் ஆகிய இவைகள் வாயுவினால் உண்டாகின்றன. ஆகாசம், வாயு ஆகிய இவைகளின் ஸம்பந்தத்தால் தேஜஸா னது உண்டாகிறது. அது காலம், கர்மம், ஸ்வபாவம் ஆகிய இவைகளின் மஹிமையால் ரூபம் ஸ்பர்சம், சப்தம் ஆகிய இவைகளை அடைகிறது.

அதிலிருந்து, கந்த குணமுள்ள (வாஸனையுள்ள) ப்ருதிவியை யுண்டாக்குகிறது. அந்த ஜலம் தன் காரியமாகிய பிருதிவியில் காரண ரூபமாயிருப்பதால் ரஸம் சப்தம், ரூபம், ஆகிய இவைகள் உள்ளதாயிற்று.

30–42 மேலும் வைகாரிகமான அஹங்காரத்திலிருந்து மனஸ், திக்கு வாயு, ஸூர்யன், வருணன், அசுவினீ தேவர்கள், அக்னி, இந்திரன், உபேந்திரன், மித்ரன், ப்ரஹ்மா ஆகிய பத்துத் தேவர்களும் உண்டானார்கள். தைஜஸ அஹங்காரத்திலிருந்து பத்து இந்திரியங்கள் உண்டாயின. மேலும் ஞானசக்தியான புத்தியும், கிரியாசக்தியான பிராணனும், தைஜஸனுடைய கார்யங்களாகையால் சுரோத்ரம் (காது) துவக் (தோல்), கிராணம் (மூக்கு), சக்ஷுஸ் (கண்) ஜிஹ்வா (நாக்கு) ஆகிய ஞானேந்ரியங்கள் ஐந்தும், வாக்கு, கை, உபஸ்தம் கால் பாயு ஆகிய கர்மேந்திரியங்கள் ஐந்தும் தைஜஸனிடமிருந்தே உண்டாகின்றன. இம்மாதிரி உண்டான ப்ருதிவி முதலிய பூதங்களுடைய குணங்களும் (வாஸனை முதலியவைகள்) இந்திரிய குணங்களாகிய பார்த்தல் முதலியவைகளும் மனத்தின் குணங்களும் ஒன்றோடொன்று சேராமல் தனித்து இருந்தன. ஓ பரப்ரஹ்ம! ஸ்வரூபத்தையறிந்தவர்களுக்குள் சிறந்த நாரத, அப்பொழுது அவை ப்ரஹ்மாண்டத்தை உண்டு பண்ணச் சக்தியற்றவைகளாக இருந்தன; அத்தருணத்தில் பகவானுடைய சக்தி விசேஷத்தால் தூண்டப்பட்டு அவைகள் ஒன்றோடொன்று சேர்ந்து ப்ரதான குண பாவத்தை அங்கீகரித்து ஸமஷ்டி வியஷ்டியாகிய ப்ரமராண்ட சரீரங்களை உண்டு பண்ணின. இப்படி அநேக

வர்ஷங்கள் சென்ற பிறகு பரமாத்மாவானவர் அசேதனமாக ஜலத்தில் மிதக்கும் அந்த அண்டத்திற்குக் காலம், கர்மம், ஸ்வபாவம் ஆகியவைகளை ஆச்ரயித்துச் சைதன்யத்தை உண்டு பண்ணினார். அதாவது அந்த அண்டத்தைப் பிளந்துக் கொண்டு அந்த மஹாபுருஷன் வெளியில் வந்தார். அவர் அநேக தலைகளையும் முகங்களையும் கண்களையும் கைகளையும் தொடைகளையும் கால்களையும் உடையவராக இருந்தார். மேலும் அந்த மஹா புருஷனுடைய முகத்திலிருந்து ப்ராம்ஹண ஜாதியும், கைகளிலிருந்து க்ஷத்ரிய ஜாதியும், தொடைகளில் இருந்து வைசிய ஜாதியும், பாதங்களிலிருந்து சூத்ர ஜாதியும் உண்டாயின. மேலும் அந்தப் புருஷன் உடைய கடி இடுப்பு முதலியவைகளிலிருந்து கீழ் உலகங்களும், ஜகனம் முதலியவைகளிலிருந்து மேல் உலகங்களும் உண்டாயினவென்று வித்வான்கள் சொல்லுகிறார்கள். அதெப்படியெனில், அவருடைய பாதங்களிலிருந்து பூலோகமும், நாபியிலிருந்து புவர் லோகமும், ஹ்ருதயத்திலிருந்து ஸ்வர்லோகமும், மார்பிலிருந்து மஹர்லோகமும், கழுத்திலிருந்து ஜன லோகமும், இரண்டு ஸ்தனங்களிலுமிருந்து தபோ லோகமும், தலையிலிருந்து நித்யமானது வைகுண்டம் என்று சொல்லப்படுகிறதுமான ஸத்யலோகமும் உண்டாயின. பின்னும், அவருடைய கடியிலிருந்து அதலமும், தொடைகளிலிருந்து விதலமும் முழங் கால்களிலிருந்து மிக்க பரிசுத்தமான ஸுதலமும், கணைக்கால்களிலிருந்து தலாதலமும் குல்பங்களில் இருந்து மஹாதலமும், நுனிக்கால்களிலிருந்து ரஸா தலமும், பாதங்களிலிருந்து பாதாளமும் உண்டாயின. (உலகங்கள் பதினான்கு என்று பக்ஷம் காட்டப்பட்டது.)

மேலும், அந்தப் புருஷனுடைய பாதங்களிலிருந்து பூலோகமும், நாபியிலிருந்து புவர்லோகமும், தலையில் இருந்து ஸுவர் லோகமும் உண்டாயினவென்றும் விராட் புருஷனுடைய அவயவங்களில் லோகத்தைக் கற்பிக்கிறார்கள். (லோகங்கள் மூன்று என்ற பக்ஷமானது காட்டப்பட்டிருக்கிறது.)

நோட்டு

முந்தினவனாகி—மூலத்தில் பூதாதி என்றிருப்பதால், அதற்குப் பஞ்ச பூதங்களுக்கு முதன்மையாகிய ஆகாச என்று அர்த்தம்—சந்த். தாமஸாஹங்காரதிற்கே பூதாதி யென்றும் பெயருண்டு—வீர. சப்தமானது தாமஸன் இடமிருந்து முதலில் சப்தம் உண்டாயிற்று என்று ப்ரசித்தமாக இருக்கிறது. ஆனாலும் அந்தச் சப்த மானது ஆகாசத்தினுடைய ஸூக்ஷ்ம ரூபமாயும், அதன் குணமாகவும் மிருக்கிறது. ஆகையால் அதன் வழியாகச் சப்தம் உண்டாயிற்று என்பது கருத்து —ஸ்ரீத. பார்க்கிறவன் சுவரின் மறைவில் செல்லும் யானை முதலியவை களைக் கண்ட ஜனங்கள் யானையென்று உரக்கச் சொல்ல, அதனைக் கேட்ட அவன் ஜனங்கள் யானையைப் பார்க்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளுகிறானல்லவா? அதனால் அந்தச் சப்தமானது பார்க்கப்பட்ட வஸ்து (பார்க்கிறவர்கள் ஆகிய இவர்களுக்கு அடையாளம்...சந்த்—வீர. வைகாரிக —ஸாத்வீக அஹங்காரத்திலிருந்து ஸகல இந்திரியங் களும் உண்டாயின—ஸ்ரீத, வீர, மனஸ் அதற்கு அதிஷ்டான தேவதைகயாகிய சந்திரனும் உண்டானான். திக்கு இந்த பத்துத் தேவதைகளும் முறையே சுரோத்ரம், துவக், சக்ஷுஸ், ஜிஹ்வா, கிராணம்,

வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் ஆகிய இவைகளுக்கு அதிதேவதைகள். மேற்காட்டிய இந்திரி யங்கள் அதிதேவதைகளுடன் உண்டானவையென்று தாத்பரியம் கொள்ள வேண்டும்—வீர தைஜஸனிடம் இருந்து ஞானேந்திரியங்களும் கர்மேந்திரியங்களும் தைஜஸனிடமிருந்து உண்டாயின.—ஸ்ரீத ராஜஸாஹங் காரத்துடன் கூடிய ஸாத்வீக அஹங்காரத்தினிடமிருந்து என்று அர்த்தங் கொள்ளவேண்டும். அப்படியில்லா விடில் 30—வது ஸ்லோகத்தின் அர்த்தத்திற்கு விருத்த மாகும். ஆக்ஷேபம் 30—வது ஸ்லோகத்திற்கு மூலத்தில் கண்டபடி அதிஷ்டான தேவதைகள் உண்டானார்கள் என்று மாத்திரம் அர்த்தம் வைத்துக் கொண்டோ மானால் 31 வதான இந்த ஸ்லோகத்தில் இந்திரியங்கள் உண்டாயினவென்று அர்த்தங்கொள்ளலாம், ஒன்றுக் கொன்று விரோதமில்லை. ஸமாதானம் அப்படியல்ல இந்திரியங்களில்லாமல் அதிதேவதைகளுக்குத் தேகம் உண்டாக நியாயமில்லை, மேலும், ஆதித்யன் முதலிய தேவதைகள் நான்முகக் கடவுளால் ஸ்ருஷ்டிக்கப் பட்டவர்களாகச் சொல்லப்பட போகிறபடியால் அண்டங்களை ஸ்ருஷ்டிப்பதற்கு முன் அவர்களை ஸ்ருஷ்டிக்க நியாயமில்லை,—வீர. சரீர நோபயம் ஸஸிருஜுர்ஹ்ருத என்ற பாடத்தை யங்கீகரித்து அவைகள் பஞ்சீகரணத்தால் ஸ்தூல, பாவத்தையும், ஸூக்ஷ்மமாக விருப்பதையும் மேற்காட்டிய இரண்டு வகையுமற்றதாகிய கால கர்மஸ்வபாவத்தையும் அங்கீ கரித்து இந்தப் ப்ரம்ஹாண்டத்தைப் படைத்தன அல்லது ஒரு தத்துவத்திற்கும் காரியமாக இல்லாததும், காரணமாக இல்லாததுமாகிய ப்ரம் ஹாண்டத்தை ஸ்ருஷ்டித்தன —வீர.

அத்தியாயம்–6

விராட் புருஷனுடைய விபூதிகள்

ஜனங்களுடைய வாக்கும், அதற்கு அதிஷ்டான தேவதையாகிய அக்னியும் விராட் புருஷனுடைய முகத்திலிருந்து உண்டானவை. மேலும் அவருடைய தோல் முதலிய ஏழு தாதுக்களிலிருந்து காயத்ரீ முதலிய சந்தஸ்ஸுகள் உண்டாயின. ஹவ்யம் (தேவர்களுக்குக் கொடுக்கும் அன்னம்). அமிர்தம் (மேற்காட்டிய இருவகையிலும் பாக்கியான மனுஷர் களுக்குக் கொடுக்கக்கூடிய அன்னம்) ஆகிய இவை களும், ஆறு வகையான ரசங்களும், ஜனங்களுடைய நாக்கும் அதற்கு அதிதேவதையான வருணனும் அவருடைய நாக்கிலிருந்து உண்டாயின. மேலும் ஸகல பிராணிகளுடைய ப்ராணன்களுக்கும் மற்ற வாயுவிற்கும் அவருடைய மூக்குகள் முக்கியமான இருப்பிடம், ஔஷதிகளும், அசுவினீ தேவர்களும் மோதம், ப்ரமோதம் என்ற ஸாமான்ய விசேஷ வாஸனைகளும் அவருடைய கிராணேந்திரியத்தில் இருந்து உண்டானவை. அவருடைய சக்ஷுரிந்திரியம் ஆனது ஏழுவித உருவங்களுக்கும், சந்திரன், அக்னி, முதலிய தேஜஸ்களுக்கும் முக்கியமான ஸ்தானம். இரு கண்களும் (நேத்திர கோளங்கள்) த்யுலோகத்திற்கும், ஸூர்யனுக்கும் ஸ்தானங்களாயிருக்கின்றன. மேலும் அவருடைய காதுகள் திக்குகளுக்கும், தீர்த்தங்களுக்கும் முக்கிய ஸ்தானங்களாயிருக்கின்றன. ச்ரோத்ரேந்திரியம் ஆனது ஆகாசத்திற்கும் சப்தத்திற்கும் உற்பத்தி ஸ்தானமென்று சொல்லப்படுகிறது. அந்த மஹாபுரு ஷனுடைய சரீரமானது ஸகல பதார்த்தங்களுடைய

ஸாராம்சத்திற்கும், நிகரில்லாத ஸௌந்தர்யத்திற்கும் இருப்பிடமாயிருக்கிறது. அவருடைய துவக்கிந்திரியானது (தோல்) ஸ்பர்சம், வாயு யக்ஞம் ஆகிய இவைகளுக்கு ஸ்தானமென்று சொல்லப்படுகிறது. அவருடைய உரோமங்கள் யாகத்திற்கு ஸாதனமான உத்பிஜ்ஜ ஜாதியான அரசு, அத்தி, கருங்காலி, பலாசம் முதலிய விருக்ஷங்களுக்கும், அவருடைய தலைமயிர்கள் மேகங்களுக்கும், அந்த புருஷனுடைய மீசை, தாடி இவைகள் மின்னலுக்கும், நகங்கள் கற்களுக்கும், இரும்புகளுக்கும் இருப்பிடமாய் இருக்கின்றன. அவர் உடைய கைகள் உலகத்தைக் காப்பாற்றும் திக்பாலர்களுக்கும், காலடி வைப்பதானது பூலோகம், புவர்லோகம்: ஸுவர்லோகம் ஆகிய இவைகளுக்கும், க்ஷேமத்திற்கும் (கிடைத்ததைக் காப்பாற்றுவது). சரணத்திற்கும் (பயத்திலிருந்து ரக்ஷிப்பதற்கும்) காரணமா யிருக்கின்றன. பகவானுடைய பாதாரவிந்தமானது ஸகல இஷ்டங்களையும் கொடுக்கக்கூடியது. அந்த மஹா புருஷனுடைய சிகையானது ஜலங்களுக்கும், வீர்யத் துக்கும், ஸ்ருஷ்டிக்கும் பர்ஜன்யனுக்கும் ப்ரஜா பதிக்கும் காரணமாயிருக்கிறது. ஓ நாரதரே, அவர் உடைய பாயு என்னும் இந்திரியமானது, மல விஸர்ஜனத்திற்கும், யமனுக்கும், மித்ரனென்னும் தேவதைக்கும், ஆச்ரயமாக விருக்கிறது. மேலும் அவருடைய குதமானது நிருதிக்கும். ஹிம்ஸைக்கும், மிருத்யுவுக்கும். நரகத்திற்கும் ஆச்ரயமாயிருக்கிறது. அவருடைய பின் பாகமானது அவமானம், அதர்மம், அஜ்ஞானம் ஆகிய இவற்றுக்கும், அவருடைய நாடி களானவை ஆறுகள், மேற்கு முகமாய்ச் செல்லும் நதிகள் ஆகிய இவைகளுக்கும், அந்தப் புருஷனுடைய எலும்புகளானவை மலைகளுக்கும் ஆச்ரயங்களாக

இருக்கின்றன. பின்னும் அவருடைய வயிரானது அன்னம் முதலிய ப்ரதான ரஸங்களுக்கும் ஸமுத்திரங்களுக்கும், ப்ராணிகளுடைய லயத்திற்கும், ஹ்ருதயம் ஆனது மனத்திற்கும் ஸ்தானமாயிருக்கின்றன. மேலும் அவருடைய ஆத்மாவானது (சித்தம்) தர்மத்திற்கும், எனக்கும். உனக்கும் ஸனகர் முதலியவர்களுக்கும்: பரமசிவனுக்கும் ஸகல ஞானத்திற்கும், ப்ராணிகளின் ஸமூஹத்திற்கும் முக்ய இருப்பிடமாயிருக்கிறது. ஆகையால் நானும், நீரும், பரமசிவனும் உமக்கு மூத்த ஸஹோதரர்களான ஸனகர் முதலிய யோகிகளும், தேவர்களும், அஸுரர்களும்; மனிதர்களும், நாகங்களும், (யானைகளும்) பறவைகளும், மிருகங்களும், ஸர்ப்பங்களும் கந்தர்வர்களும், அப்ஸர ஸ்திரீகளும், யக்ஷர்களும், பூதகணங்களும், பசுக்களும், பிதிருக்களும், ஸித்தர்களும், வித்யாதாரர்களும், சாரணர்களும், ஜல ஜந்துக்களும் ஸ்தலத்தில் சஞ்சரிக்கும் ஜந்துக்களும், ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் ஜந்துக்களும், நவக்கிரஹங்களும்: நக்ஷத்திரங்களும்; தூமகேது முதலியவைகளும், மேகங்களும் மின்னல்களும், மற்றும் பலவகையான பிராணிகளும், உண்டாகின்றவைகளுமான ஸமஸ்தமும் அந்த மஹா புருஷ ஸ்வரூபமே தவிர வேறில்லை. பன்னிரண்டு அங்குல ப்ரமாணமுள்ள ஸ்வரூபமடைய அந்த மஹாபுருஷனால் இந்த ஜகத்தானது முழுவதும் வ்யாபிக்கப் பட்டிருக்கிறது. ப்ராணன் ஆனவன் (ஸூர்யன்) தன்னுடைய மண்டலத்தைப் ப்ரகாசிக்கச் செய்துகொண்டு வெளியிலும் ப்ரகாசிக்கிறார். இவர் அமிருதத்திற்கும் அபயத்திற்கும் அதிபதி. மேலும் கர்மபலத்தை அதிக்ரமித்தவர். ஆசையால் நித்ய முக்தர். ஆனாலும் ஜகத்ரூபியாயிருப்பதே அவருடைய அளவற்ற மஹிமையாயிருக்கிறது. அந்த

மஹா புருஷனுடைய அம்சமாகிய உலகங்களிலேயே ஸகல பிராணிகளும் வஸிக்கிறார்களென்று சொல்லப் படுகிறது. மூன்று லோகங்களுக்கும் மேலான மஹர் லோகத்திற்கும் மேலான லோகங்களில் அமிருதம் க்ஷேமம் அபயம் ஆகிய இவைகள் வைக்கப்பட்டிருக்கின்றன, மூவுலகங்களின் வெளியில் அவருடைய மூன்று பாதங்களிருக்கின்றன. அவைகள் ப்ரம்மசர்யம், வானப்ரஸ்தம், ஸந்யாஸம் முதலிய ஆச்ரமங்களேயாகும். மேற்காட்டிய ஆச்ரமிகள் புத்திர ரூபமாக உண்டாகாதவர்கள். மூவுலகத்தின் உள்ளே மற்றொரு பாதம் இருக்கிறது. அதுவே ப்ரம்மசர்ய வ்ரதமற்ற கிருஹஸ்தாச்ரமம் எனப்படுகிறது.

21–47. க்ஷேத்ரக்ஞனாகிய ஜீவன் போகத்திற்கும் மோக்ஷத்திற்கும் ஸாதனமாகிய இரண்டு மார்க்கங்களிலும் ஸஞ்சரிக்கிறான்; அவைகளின் தூமாதி மார்க்கம் என்பது வித்தைக்கு (ஞானத்திற்கு) ஸாதனமாகிய உபாஸனைகளால் கிடைக்கக்கூடியது. ஜீவன் முன் சொன்ன இருவகையான மார்க்கங்களையும் தன் உடைய அதிகாரத்திற்குத் தக்கபடி அடைகிறான். இப்படிவிராட் புருஷனுடைய உள்ளே இருப்பவர்களுக்கு விசித்திரமான பலன் கிடைக்கிறது. ஆனால் எதனிடத்திலிருந்து ப்ரம்மாண்டம் உண்டாயிற்றோ அதனிடமிருந்து ஐந்து பூதங்கள், இந்திரியங்கள், அதன் விஷயங்கள் ஆகிய இவைகளின் ஸ்வரூபியாயிருக்கும். விராட்புருஷன் உண்டானார். (அவர் ப்ரம்மாண்டத்திற்கு அபிமானியாயிருப்பவர்) அவைகளுக்குக் காரணமாயிருக்கும் பரமேசுவரன், அநேக கிரணங்களால் ஸூர்யன் ப்ரகாசிப்பது போல ஜகத் ரூபமாகிய விராட் புருஷனுடைய தேகத்தையும்

ப்ரம்மாண்டத்தையும் அவர் அதிக்கிரமித்துப் ப்ரகாசிக் கிறார் (ஈசுவரன் விலக்ஷண ரென்பது கருத்து). ஜகத் முழுவதும் அந்த ஸர்வேசனுடைய ஸ்வரூபமாயிருக்கு மானால் யாகமும், அதற்கு ஸாதனங்களும் பகவத் ரூபங்களென்று ஏற்படுகிறதே; யாகத்தால் பரம புருஷனை ஆராதிப்பது எப்படியெனில் (பின்வருமாறு) சொல்லப்படுகிறது) ஓ நாரத! மஹாத்மாவாகிய இவருடைய கொப்பூழில் தோன்றிய தாமரைப் புஷ்பத்திலிருந்து நான் உண்டானபோது பரமாத் மாவை ஆராதிப்பதற்காகயாக ஸாமக்ரிகளைத் தேடியும் எல்லாம் அவருடைய அவயங்களாக இருந்தனவே யொழிய அவைகளைக் காட்டிலும் வேறானவைகள் ஒன்றும் கிடைக்கவில்லை, ஆகையால் யாகத்திற்கு வேண்டிய பசுக்கள், யூபத்திற்கு உபயோகமாகிய மரங்கள், தர்ப்பங்கள், பாத்திரங்கள், நெல் முதலிய தானியங்கள், நெய் முதலிய வேறாம திரவ்யங்கள், ஸோமரஸம், ஸுவர்ணம் முதலிய உலோகங்கள், மண், ஜலம், ரிக், யஜுஸ்,ஸாமம் என்ற வேதங்கள், வெளத்ரம் முதலிய கர்மங்கள் ஜ்யோதிஷ்டோமம் முதலிய பெயர்கள். ஸ்வாஹாகாரம் முதலியவைகள். தேவதா தியானங்கள் ப்ராயச் சித்தம், செய்தவை களைப் பகவதர்ப்பணஞ் செய்வது, நான் வஸிக்கும் இந்தப் பகவானுடைய நாபியாகிய யாகசாலை ஆகிய ஸாமக்ரியைகளை அந்த மஹா புருஷனுடைய அவயங்களாலேயே ஸம்பாதித்தேன். இப்படி அவருடைய அவயவங்களால் யக்ஞ புருஷனாகிய அந்தப் பகவானையே பூஜித்தேன்; பிறகு கச்யபர் முதலிய ஒன்பது ப்ரஜாபதிகளும் மிகவும் ஸாவதானர்களாய் இந்திரன் முதலிய தேவர்களின் ரூபமாய் வியக்தரும், ப்ரஹ்மரூபமாய் அவ்யக்தருமான அந்த மஹா புருஷனைக் குறித்து யாகஞ் செய்தார்கள். பிறகு

மனுக்களும்; மற்ற மஹர்ஷிகளும் பிதிருக்களும், தேவர்களும், அஸுரர்களும். மனிதர்களும் அவரவர் களுக்கு வேண்டிய ஸமயத்தில் ப்ரபுவாகிய அவரை உத்தேசித்து யாகஞ் செய்தார்கள். இந்த ஸகல ஜகத்துக்களும் பகவானாகிய நாராயணனிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகவான் ப்ருகிரு தியின் ஸகல குணங்களையும் அடக்கிக் கொண்டு ஸ்ருஷ்டிக்கு முன்னே தாம் நிர்க்குணராக இருந்தார். அவருடைய ஆக்ஞையாலே நான் உலகத்தைப் படைக்கிறேன், பரமசிவன் ஸம்ஹரிக்கிறார், அவர் தம்முடைய ஸ்வரூபத்தால் காப்பாற்றுகிறார். இப்படி மூன்று வகையான சக்தியுள்ளவராக இருக்கிறார். காரியகாரண ரூபமாகிய ஸகல பதார்த்தங்களும் பகவானை விடவேறாக இருக்க வில்லை. ஓ நாரத உம்மால் கேட்கப்பட்ட எல்லா விஷயத்திற்கும் பதில் சொன்னேன். நான் விசேஷபக்தியுடன் ஹ்ருதயத்தில் பகவானைத்தியானித்தபடியால் என்னுடைய வாக்குப் பொய் சொல்லுகிறதில்லை. மனஸும் இந்திரியங் களும் கெட்ட மார்க்கத்தில் பிரவர்த்திக்கிறதில்லை வேத ஸ்வரூபியாயும் தப ஸ்வரூபியாயுமிருக்கும் நான் பிரஜாபதிகளால் நமஸ்கரிக்கப்படுகிறேன். மேலும் நான் எனக்குக் காரணமாகிய பகவானைத் தெரிந்து கொள்ளவேண்டி யோகத்தால் முயற்சி செய்தும் அவரைத் தெரிந்து கொள்ளமுடியவில்லை. அவர் உடைய சரணங்கள், சரணாகதர்களுக்கு ஸம்ஸார பந்தத்தைப் போக்குகின்றன. க்ஷேமத்தையும், ஸகல மங்களத்தையும் கொடுக்கின்றன. அந்தச் சரணங் களுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். ஆகாசமானது தன்னுடைய முடிவை அறியாதது போலவே அவர் உடைய மாயா வைபவத்தை அவரும் அறியவில்லை.

அப்படியிருக்கப் பிறருக்குத் தெரியுமா? என்றாலும், பரமசிவனாலும், உங்களாலும் ஆத்மஸ்வரூபம் அறிய முடிகிறதில்லை. மற்ற தேவர்களால் அறியமுடியுமா? அந்தப் பகவானுடைய மாயையால் நாம் கலங்கிய புத்தியுள்ளவர்களாய் நம்முடைய ஞானத்திற்குத் தக்கபடி இந்த ப்ரபஞ்சத்தைத் தெரிந்துகொள் கிறோம். (அவருடைய ஸ்வரூபம் முழுவதையும் தெரிந்துகொள்ள முடியவில்லை) எந்தப் பகவான் உடைய அவதார சரிதங்களை நாமும் பிறரும் கானம் செய்தபோதிலும் அவருடைய உண்மையைத் தெரிந்து கொள்ள முடியவில்லையோ. அந்தப் பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். அந்தப் புருஷனே எல்லாவற்றிற்கும் முந்தியவர். அவர் பிறப்பில்லாதவர். ஒவ்வொரு கல்பத்திலும் தம் மாலேயே தம்மை ஸ்ருஷ்டிக்கிறார். காப்பாற்றுகிறார், ஸம்ஹரிக்கிறார். அந்தப் புருஷன் சுத்தன். ஞான ஸ்வரூபி. எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாயிருப்பவர். தேகம் முதலியவைகளின் ஸம்பந்தமற்றவர். ஸத்ய ஸ்வரூபி. பூர்ணர், பிறப்பு நாசம் இவைகளில்லாதவர், நித்யர், ஒப்பற்றவர் ஓ நாரத மஹரிஷியே எவர் களுடைய சரீரமும் இந்திரியங்களும் மனஸும் மிகவும் சாந்தங்களாகவிருக்குமோ. அந்த முனிவர் களே மேற்காட்டிய ஆத்ம ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்வார்கள். துஷ்டர்கள் சொல்லுகிற சாஸ்திரவிருத்தமான யுக்திகளால் அவை கலங்குமாகில் அந்த ஆத்மஸ்வரூபம் அவர்களுக்குப் புலப்படாமல் மறைந்துவிடும். ப்ரகிருதியைப் பிரவர்த்திக்கச் செய்யும் புருஷன் பரமாத்மாவின் முதன்மையான அவதாரமேயாம். மேலும் காலம், ஸ்வபாவம். காரியம் காரணம், மனம், ஐந்து மஹாபூதங்கள், அஹங்காரம், ஸத்வம் முதலிய

குணங்கள், ஸமஷ்டி சரீரம். ஸ்வராட், ஸ்தாவரங்கள் ஜங்கமங்கள் ஆகிய இவைகள் யாவும் அவருடைய அம்சங்களேயாம். மேலும் நான் பரமசிவன், யாகம், (விஷ்ணு) தக்ஷர் முதலிய இந்த எல்லாப் பிரஜாபதிகள், நீர் ஸனகர் முதலியவர்கள், இந்திரன் முதலிய லோகபாலர்கள், கருடன் முதலியவர்கள். மனு. மாந்தாதா முதலிய அரசர்கள். லோகத்தின் பாலர் களாகிய அனந்தன். வாசுகி முதலியவர்கள் ஆகிய இவர்களும் கந்தர்வர்கள், வித்யாதரர்கள், சாரணர்கள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், ஸர்ப்பங்கள். யானைகள். மஹரிஷிகளுக்குள் சிறந்தவர்களாகிய வஸிஷ்டர் முதலியவர்கள் பிதிருகணங்களில் மேலானவர்களும் ஸித்தர்களில் சிறந்தவர்களும், தைத்யர்களுக்குள் சிறந்தவர்களும், தானவர்களுக்கு மேலானவர்களும் மற்ற, ப்ரேதங்கள். பிசாசங்கள், பூதங்கள், கூஷ்மாண்ட கணங்கள், ஜலஜந்துக்கள் மிருகங்கள், பசுக்கள் ஆகிய இவைகளுக்குள் சிறந்தவைகளுமாகிய எவை பூஜிக்கத்தக்கவைகளோ, காந்தி, வேகம் தேக பலம். பொறுமை. அழகு கெட்ட காரியஞ் செய்வதில் வெட்கம், ஸமிருத்தி புத்தி; அற்புதமாகிய வர்ணம். உருவமற்றதாயிருப்பது. உருவமுள்ளதாக விருப்பது ஆகிய இவைகளுள்ளவைகளாக எவைகளிருக்கின்றனவோ; அவைகளெல்லாம் பரமாத்மாவின் விபூதிகளேயொழிய வேறில்லை, ஆனாலும், ஓ மஹரிஷியே மிகுந்த மஹிமை பொருந்திய அந்தப் பரமாத்மாவினுடைய முக்யமான லீலாவதாரங்களென்று எவை சொல்லப் படுகின்றனவோ அவை கேட்பவர்களுடைய காதுகளின் தோஷங்களைப் போக்கக்கூடியவை. மிகவும் மனோஹரமானவை அவைகளை உமக்குச் சொல்லுகிறேன்.

நோட்டு

ஸகல–விரும்பக்கூடிய ஸகல வஸ்துக்களுக்குள் மேலானவராகிய பகவானுடைய பாதம் – வீர வேறில்லை. – "இந்த ஜகத் முழுவதும் புருஷனே" – ஸ்ருதி. ப்ராண – "இந்த ஆதித்யனே ப்ராணன்" – ஸ்ருதி ப்ராண வாயு வானது சரீரத்தில் ப்ராணன், அபானண் முதலிய பெயரை அடைந்து தானிருக்கும் சரீரத்தை சேஷ்டிக்கச் செய்துகொண்டு வெளியிலும் ஸஞ்சரிப்பதுபோல்–சந்த. ஜகத்ரூபி– ஜகத்ரூபியானாலும் அதனால் அவருடைய மஹிமை குறைவுபடுகிறதில்லை யென்ற ஸ்ருதியில் தாத்பரியம் காட்டப்பட்டது ஸ்ரீத. – மஹர்லோகம் – பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் ஆகிய மூன்று லோகங்களிலும் அனித்ய ஸுகமே தவிர நித்ய சுகமில்லை. மஹர்லோகமானது கிரம முக்தி ஸ்தானமானாலும் கல்பாந்தரத்தில் அவ்விடத்திலிருப்பவர்கள் அதை விட்டு விட வேண்டியிருப்பதால் அதிலும் நித்ய ஸுகமில்லை. மூவுலகமும் ஸங்கர்ஷணருடைய முகத்தின் அக்கினியால் எரிக்கப்படும் அந்த உஷ்ணத்தைப் பொறுக்காமல் பிருகு முதலியவர்கள் ஜனலோகம் செல்லுகிறார்கள் ஸ்ரீத.– வெளியில் – பிரகிருதி, பிராகிருதர்கள் ஆகிய இவைகளுக்கு வெளியில் இருக்கின்றன அவைகள் ஜன்மமற்ற முக்தர்களால் அடையத்தக்கவை – வீர. அதுவே – ஸம்ஸாரிகளான ஜீவவர்க்கங்களால் அடையக்கூடியது –வீர. படைக்கிறேன் – அந்தப் புருஷனே எனது உருவங்கொண்டு படைத்தலையும், தம் உருவத்தாலே காப்பாற்றுவதையும், ருத்திரருடைய ஸ்வரூபத்தை அடைந்து ஸம்ஹாரத்தையுஞ் செய்கிறார்.

அத்தியாயம்–7

பகவானுடைய லீலாவதாரம்

"நாசமற்றவரான ஸ்ரீ நாராயணன் ஸகல யக்ஞஸ்வரூபமான வராஹ சரீரத்தை யெடுத்துப் பூமியைத் தூக்க முயற்சித்தபோது ஸமுத்திரத்தில் பிரவேசித்த வனும், தைத்யர்களுள் முந்தினவனுமான ஹிரண்யாக்ஷன் என்ற அஸுரனைச் சிங்கப்பல்லால் குத்திக் கிழித்தார். அது மஹேந்திரர் வஜ்ராயுதத்தால் மலையையுடைத்தாற் போலிருந்தது. மேலும் அந்தப் புருஷோத்தமன் 'ருசி' என்ற பிரஜாபதிக்கு ஆகூதி என்ற ஸ்திரியினிடத்தில் ஸுயக்ஞரென்ற பெயருடன் அவதரித்தார். பிறகு "தக்ஷிணா என்பவளைக் கல்யாணம் செய்து கொண்டு அவளிடத்தில் 'ஸுயாமா' என்ற பெயருள்ள தேவர்களைப் பெற்றார். அப்பொழுது அந்த ஸுயக்ஞர் தாம் இந்திரனாக இருந்து உலகத்தைக் காப்பாற்றி வந்தார். அப்பொழுது ஸ்வாயம்புவ மனுவென்பவர், "நீர் மூவுலகத்திற்கும் நேர்ந்திருந்த பெரிதான உபத்திரவத்தைப் போக்கடித்தபடியால் உமக்கு 'ஹரி' என்று பெயர் உண்டாகட்டும்" என்று சொன்னார். ஓ ப்ராம்ஹணோத்தமரான நாரதரே பின்னும் அந்த மஹா புருஷன் கர்த்தமபிரஜாபதியின் வீட்டில் தேவஹூதியினிடத்தில் ஒன்பது ஸ்திரீகளுடன் கபிலராக அவதரித்தார். பிறகு அவர் தம் தாயான தேவஹூதிக்கு ப்ரஹ்ம வித்யையை உபதேசித்தார். அதனால் அவள் துக்கத்தைக் கொடுக்கக்கூடிய முக்குண ஸம்பந்தத்தை விட்டு அந்த ஜன்மத்திலேயே முக்தியை அடைந்தாள். முன்னொரு காலத்தில் நல்ல புத்திரன் வேண்டுமென்று அத்திரி மஹர்ஷியானவர்

தபஸ் செய்தார். அவருடைய தபஸினால் பகவான் சந்தோஷப்பட்டு, "நானே புத்திரனாக என்னால் (தத்தம்) கொடுக்கப்பட்டேன்" என்று சொல்லி, அதனால் தத்தாத்ரேயராக தத்தரென்ற அத்திரியின் புத்திரர் அவதரித்தார். அவருடைய பாத தூளிகளால் பரிசுத்தமான சரீரமுள்ள யது (யயாதியின் பிள்ளை) கார்த்தவீர்யார்ஜுனர் முதலியவர்கள் இவ்வுலகத்து ஸுகத்தையும், மேலுலகத்து ஸுகத்தையும் அடைந் தார்கள். மேலும் நான் பலவகையான உலகங்களை ஸ்ருஷ்டிக்க விரும்பித் தபஸ் செய்தேன். பூர்ணமாகிய அந்தத் தபஸினால் பகவான் ஸந்தோஷமடைந்து ஸனத்குமார, ஸனக ஸநந்தன ஸனத் ஸுஜாதர் என்ற பெயருடன் நான்கு வகையாக அவதரித்து, முன் கல்பத்தின் ப்ரளயத்தில் மறைந்துபோன ஆத்ம வித்தையை மஹர்ஷிகளுக்கு நன்றாக உபதேசித்தார். அதனைக் கேட்டவுடன் அவர்களுக்கு அபரோக்ஷ ஸாக்ஷாத்காரம் உண்டாயிற்று. இன்னும் அந்த மஹாபுருஷன் தர்மத்தின் பத்தினியும், தக்ஷருடைய பெண்ணுமான மூர்த்தி என்பவளிடத்தில் 'நரன், நாராயணன்', என்ற திவ்ய நாம தேயங்களுடன் இரண்டு வகையாக அவதரித்தார். அந்த அவதாரத்தில் கடுமையாக தபஸ் செய்தார். அப்பொழுது மன்மதன் உடைய சைன்யங்களாகிய ஊர்வசி முதலிய அப்சர ஸ்திரீகள் அவருடைய தபஸைக் கெடுக்க முயன்றும் முடியவில்லை. வித்வான்களாகிய ருத்ரன் முதலியவர் கள் கோபத்தால் க்ரூரமாயிருக்கும் பார்வையால் மன்மதனை ஜயித்தார்கள். ஆனாலும் தம் ஆத்மாவைத் தகிக்கும் (ஸகிக்க முடியாத) கோபாக்னியை ஜயிக்க வில்லை. (கோபத்திற்கு வசப்பட்டிருக்கிறானென்று கருத்து.) இவ்விதக் கோபமும் நாராயணாவதாரஞ்

செய்த பகவானுடைய மனதில் பிரவேசிக்கப் பயப்படு கிறது. அதற்குத் தாழ்ந்தவனாகிய காமம் அவருடைய மனத்தில் ப்ரவேசிக்க முடியுமா ?

8–54 உத்தான பாதனென்ற அரசனுடைய பத்தினியாகிய ஸுநீதியின் புத்திரர் துருவரென்று ஒருவர் இருந்தார். அவர் தம்முடைய பிதாவின் ஸமீபத்தில் ஸபத்னீ மாதாவான ஸுருசியினுடைய வார்த்தை யாகிய பாணத்தால் அடிக்கப்பட்டு, பால்ய வயதிலேயே தபஸ் செய்வதற்காகக் காட்டுக்குச் சென்றார். அவர் பகவானை ஸ்தோத்திரஞ் செய்யவே, புருஷோத்தமன் ஸந்தோஷப்பட்டு அவருக்குச் சாச்வத மாகிய பதத்தைக் கொடுத்தார். அந்த மேலான ஸ்தானத்தை அதற்குக் கீழாகவிருக்கும் ஸப்த ரிஷிகளும் ஸ்தோத்திரஞ் செய்கிறார்கள். (இது ஒரு அவதாரமென்று கருத்து) தவிரவும் வேணனென்ற அரசன் அதர்மத்தை அனுஷ்டித்து வந்ததால் ப்ராம் மணர்கள் அவனைச் சபித்தார்கள். வஜ்ரம் போன்ற அவர்களுடைய வாத்தையால் அவனுடைய ஐசுவர்யம் முதலியவைகள் நாசமாயின. அந்த வேனனுக்கு பகவான் ப்ருது என்றும் புத்திரனாக அவதரித்து, அவனை நரகத்திலிருந்து காப்பாற்றி அதனால் புத்திரன் என்ற சப்தத்தை உண்மையான அர்த்தமுள்ளதாகச் செய்தார். பின்னும் பூமி தேவி இடமிருந்து ஸகல வஸ்துக்களையும் கறந்தார். மேலும், அந்தப் ப்ரபுவானவர் ப்ரிய வ்ரதருடைய பௌத்திரரும் ஆக்னீத்ரருடைய புத்திரருமாகிய நாபி என்பவருக்கு ஸுதேவி என்பவளிடத்தில் ரிஷப ரென்ற திவ்ய நாமதேயத்துடன் அவதரித்தார். அப் பொழுது விஷயங்களின் ஆசையை ஒழித்து மிகவும்

சாந்தமாகிய அந்தக் கரணமுள்ளவராகி தம்முடைய ஸ்வரூபத்திலே இருந்து யோகியாய் மூடன்போல் சஞ்சரித்தார். அந்த நிலைமையைத் தான் மஹர்ஷிகள் பரமஹம்சாசிரமம் என்கிறார்கள். பின்னும், யக்ஞ புருஷராகிய அவர் என்னால் செய்யப்பட்ட யாகத்தில் ஹயக்ரீவராக அவதரித்தார். அந்த ஹயக்ரீவர் பொன்னிறமுள்ளவர். வேத ஸ்வரூபி. ஸகல யாக ஸ்வரூபி. சகலதேவஸ்வரூபி. வேதங்கள் யாவும் மூச்சுவிடும் அவருடைய மூக்கிலிருந்து உண்டாயின. பின்னும் ப்ரளய காலத்தில் பலவகையான வேதங்கள் என்னுடைய முகத்திலிருந்து நழுவிப்போனதால் வேத மார்க்கங் களைத் திருப்பி என்னிடம் கொடுப்பதற்காக அவை களை எடுத்துக்கொண்டு மத்ஸ்ய ரூபத்துடன் பகவான் சமுத்திர ஜலத்தில் விளையாடினார். அப்பொழுது ஸகல ப்ராணிகளுக்கும் ஆதரரும், பூமியைப் ப்ரதானமாயுடையவருமான அந்தப் பரம புருஷனை வைவஸ்வத மனு தர்சித்தார். தவிரவும், அந்த ஆதி புருஷன், தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து அமிருதத்திற்காகப் பாற்கடலைக் கடையும்பொழுது ஆமை உருவங்கொண்டு மத்தாயிருந்து மந்தர மலையைத் தம்முடைய முதுகில் தாங்கினார். அப்பொழுது அந்த மலை உராய்வதால் தினவைப் போக்கிக் கொண்டு ஸுகமாய்த் தூங்கினார். மேலும் தேவர்களுக்கு நேரும் கஷ்டங்களை நிவர்த்திக்கும் அந்த மஹாபுருஷன் சிங்கப் பற்களால் பயங்கரமாயும் குரூரமான புருவங்களுள்ளதுமான நரஸிம்ஹ சரீரத்தை எடுத்துக் கொண்டு, கதாயுதத்துடன் தமக்கு எதிரில் ஓடிவரும் ஹிரண்யகசிபு என்ற அசுரனைத் தமது மடியில் தள்ளி, நகங்களால் கிழித்துக் கொன்றார். முன்னொரு காலத்தில் ஒரு சிறந்த

யானையானது பெரிதான ஒரு ஏரியில் ஜலம் குடிக்க இறங்கினபொழுது அங்கிருந்த மிகுந்த பலசாலியான ஒரு முதலை அதைப் பிடித்துக் கொண்டது. அதனால் அந்த யானை மிகவும் துன்பமடைந்து துதிக்கையில் தாமரைப் புஷ்பத்தை வைத்துக் கொண்டு, 'ஆதி புருஷ! ஸகல லோகத்துக்கும் அதிபதியே கேட்பவர் களைப் பரிசுத்தப்படுத்தும் கீர்த்தியுள்ளவரே' என்னைக் காப்பாற்ற வேண்டும். உம்முடைய நாமங்களைக் கேட்பவர்களுக்கு ஸகல மங்களமும் உண்டாகின்றன" என உரக்கக் கதறிற்று. அளவற்ற மஹிமையுள்ள ஸ்ரீ நாராயணன் அதனைக் கேட்டுச் சக்ராயுதத்தைத் தரித்து, கருடன் மீது ஏறிக்கொண்டு அவ்விடம் வந்து சக்ராயுதத்தால் முதலையின் வாயைப் பிளந்து சரணமடைந்த யானையின் துதிக்கையைப் பிடித்து மிகுந்த கருணையால் அதை அக்குளத்திலிருந்து கரை சேர்த்தார். பின்னும் யக்ஞ புருஷனாகிய மஹாவிஷ்ணுவானவர் அதிதி தேவியின் புத்திரர் களான தேவர்களுக்குத் தம்பியாய் அவதரித்தவரானா லும், குணங்களால் சிறந்தவராயும், வாமன ரூபியாயு மிருந்து பலிச் சக்ரவர்த்தியினிடம் மூன்று அடி பூமியைப் பெற்று ஸகல உலகங்களையும் ஆக்ரமித்தார். உலகத்தில் தர்மம் தவறாமல் நடப்பவர்கள் சத்துருவைக் கொல்லும் ஸாமர்த்யமுள்ளவர்களானாலும அவர்கள் உடைய ஐசுவர்யத்தை அபஹரிப்பதற்கு யாசிக்கிற வழியைத் தவிர வேறு மார்க்கமில்லை. ஓ நாரத பலிச் சக்ர வர்த்தியானவன் பகவானுடைய பாதங்களை அலம்பி, அந்தச் சுத்தமான தீர்த்தத்தைத் தன்னுடைய தலையில் புரோக்ஷித்துக் கொண்டு (தனது புரோஹிதரான சுக்ராச்சாரியரால் தடுக்கப்பட்டும்) ப்ரதிக்ஞையை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தால்

மூவுலகத்தையும், தன்னுடைய சரீரத்தையும் சத்துரு வாகிய பகவானுக்குக் கொடுத்தான். அப்படிப்பட்ட பக்தனுக்கு பகவான் தேவராஜ்யத்தைக் கொடுப்பது போதாதென்று நினைத்துத் தமது ஸாலோக்யத்தைக் கொடுத்தார். மேலும் நீர் விசேஷ பக்தியுள்ளவராய், பகவானை நோக்கி யோக சாஸ்திரத்தை உபதேசிக்க வேண்டுமென்று கேட்டீர் அல்லவா? அப்பொழுது அவர் வாஸுதேவரே நம்மைக் காப்பாற்றுகிறவர் என்று நிச்சயமாய் நம்பியிருப்பவர்களால் சீக்கிரத்தில் அறியக்கூடியதும், பாகவத சாஸ்திரத்தில் வர்ணிக்கப் படுகிறதும் ஆத்மாவின் உண்மையைக் காட்டுகிறது மான ஞானத்தையும், யோகத்தையும் உமக்கு உபதேசித்தார். மேலும், மன்வந்தரங்களில் பகவான் மனுவின் வம்சத்தைக் காப்பாற்றுகிறவராய்ப் பத்துத் திக்குகளிலும் தம்முடைய தேஜஸை ஸ்தாபித்து, அதனால் துஷ்டர்களான அரசர்களை நிக்ரஹித்து தம்முடைய கீர்த்தியை ஸத்திய லோகத்திலும் பரவச் செய்கிறார். அந்தப் பரமாத்மாவேதான் தன்வந்த்ரியாக அவதரித்து தம்முடைய கீர்த்தி யென்கிற பெயரி னாலேயே மஹாரோக முள்ளவர்களுடைய வியாதியைப் போக்குகிறார்; பின்னும் தீர்க்கமான ஆயுஸைக் கொடுக்கக் கூடிய அந்தப் பகவான் யாகங்களில் ஹவிர்பாகத்தை (முந்தி அஸுரர்களால் தடுக்கப்பட்டிருந்ததை) அடைந்தார். மேலும், ஆயுர் வேதமாகிய வைத்திய சாஸ்திரத்தையும் உலகத்தில் பரவச் செய்தார். தவிரவும் மிகுந்த பராக்கிரமமுள்ள வரும், மஹாத்மாவுமான அந்த நாராயணன் பரசு ராமனாக அவதரித்துப் ப்ராம்மணர்களைத் துவேஷித்த வர்களும் நன்மார்க்கத்தை விட்டுத்தவறினவர்களும், நரகத்தை அடைய விரும்பினவர்களும் நாசத்தை

அடைவதற்கு என்றே தெய்வத்தால் விருத்தி பண்ணப் பட்டவர்களும் பூமிக்கு மிகுந்த உபத்திரவத்தைச் செய்பவர்களுமான க்ஷத்திரியர்களை இருபத்தோருதரம் கோடரியைக் கொண்டு கொன்றார். அந்த மஹா புருஷனே, என்னிடத்தில் தபவு செய்து, முகமலர்ச்சி யுள்ளவராய் இக்ஷ்வாகு வம்சத்தில் தம்முடைய அம்சங்களாகிய பரதன் முதலியவர்களுடன் தசரதருக்குப் பிள்ளையாக ஸ்ரீராமனென்ற பெயருடன் அவதரிப் பார். பிறகு பிதாவாகிய தசரதருடைய அனுமதியின் மேல் தம்பியாகிய லக்ஷ்மணருடனும், பார்யையான ஸீதாதேவியுடனும் தண்டகாரண்யஞ் செல்வார். அப்பொழுது இராவணன் அவரிடம் விரோதம் செய்து கொண்டதனால் பந்துக்களை யிழப்பான். பின்பு திரிபுர ஸம்ஹாரம் செய்வதற்கு முயற்சித்த பரமசிவன் போல ராவணனைக் கொல்வதற்காக இலங்கா நகரம் போக விரும்பிய ராமனைக் கண்டு ஸமுத்திரம் பயந்து நடுங்கும். மேலும் ஸீதையானவள் இலங்கா நகரத்திலிருப்பதால் அவளைப் பாராமல் கலங்கியதும், கோபத்தால்ப் சிவந்ததுமான ஸ்ரீ ராமன் உடைய பார்வையால் அந்த ஸமுத்திரத்திலிருக்கும் மகரங்களும், ஸர்ப்பங்களும், முதலைகளும் மிகவும் தாபத்தையடையும். பின்பு ஸமுத்திரம் வழிகாட்டும்; அதன் வழியாக ஸ்ரீராமன் இலங்கா நகரம் போவார்; அவ்விடத்தில் வஸிக்கும் ராவணன் மிகவும் பலமுள்ள வன்; அவன் ஐராவதத்துடன் யுத்தம் செய்யும் போது, அது தன்னுடைய தந்தங்களால் இராவணனுடைய மார்பில் குத்திற்று; பிறகு அவைகளை பிடுங்க முடியாமல் தலையை அசைக்கத் தந்தங்கள் முறிந்து போயின. அப்படி இராவணனுடைய மார்பில் பதிந்த யானையின் தந்தங்களுடைய காந்தியால் பத்துத்

திக்குகளும் ப்ரகாசிக்கின்றன. தவிரவும், அவன், எனக்கு ஸமமானவர்கள் உலகத்தில் யார் இருக்கிறார் கள் ? என்று கர்வத்தால் சிரிப்பதுமுண்டு. அப்படிப் பட்ட சத்ருவாகிய அந்த ராக்ஷஸனுடைய கர்வத்தை ஸைன்யத்தின் மத்தியில் வில்வினுடைய சப்தத்தாலேயே போக்கடித்து, அவனை நாசஞ் செய்யப் போகிறார். பிறகு அஸுராம்சமான அரசர்கள் வெகுவாய்ப் பூமியில் பிறந்ததனால் பூமிக்கு விசேஷ பாரம் ஏற்படுமாதலால் அதனை நிவர்த்திப்பதற்காக ஸாமான்ய ஜனங்களால் அறியக்கூடாத மார்க்கமுள்ள வரும், வெண்மை நிறமுள்ளது, கருமை நிறமுள்ளது மான தலைமயிர்களுள்ளவருமான ஸ்ரீ மஹாவிஷ்ணு வானவர் பலராமனாகவும் கிருஷ்ணனாகவும் அவதரித்து, தம்முடைய மஹிமையைக் காட்டும் லீலைகளைச் செய்வார். எப்படியெனில் அவர் குழந்தையாயிருக்கும்போது பூதனை யென்ற ராக்ஷஸியைக் கொல்வார். மூன்றுமாதங்கள் சென்ற பிறகு சகட ரூபியான அஸுரனை ஸம்ஹரிப்பார். முழங்கால்களைக் கொண்டு தவழும் போதே ஆகாசம் வரையில் உயர்ந்தவைகளான அர்ஜுன மரங்களின் நடுவில் புகுந்து அவைகளைப் பூமியில் தள்ளுவார். அவர் பகவதவதாரமாயில்லா விடில் இப்படிச் செய்யமுடியாது. தவிரவும், விஷ ஜலத்தைக் குடித்து மூர்ச்சையடைந்த இடையர்களையும்; பசுக்களையும் தம்முடைய அனுக்கிரஹமுள்ள பார்வையால் பிழைக்கச் செய்து யமுனையிலிருந்து அந்த மடுவைச் சுத்தப்படுத்துவதற்காக அதிலிருந்து மிகுந்த விஷ வேகமுள்ள காளியனென்ற ஸர்ப்பத்தை அதைவிட்டு ஓடும்படி செய்வார் பிறகு, அந்த அமானுஷ காரியத்தைப் பார்த்து கோபர்கள் ஆச்சரியமடைந்து

அன்று இரவு யமுனையின் கரையில் படுத்துத் தூங்கு வார்கள். கோடைக் காலமாகையால் அப்பொழுது நான்கு புறத்திலும் காட்டில் அக்கினி பற்றிக்கொள்ளும். அப்பொழுது ஒருவராலும் அறியக் கூடாத வீர்யமுள்ள பகவான் பலராமனுடன் கோபர்கள் அனைவரையும் கண்களை மூடிக் கொள்ளச் செய்து, அவர்களை அந்த ஆபத்திலிருந்தும் காப்பாற்றுவார். மேலும் அவருடைய தாயான யசோதையானவள் தன் வீட்டிலிருக்கும் கயிறுகளால் பிள்ளையான ஸ்ரீ கிருஷ்ணனைக் கட்டியும், அவைகள் முடிவதற்குப் போதாமலிருக்கும். அப்பொழுது, அந்தப் பகவான் கொட்டாவி விட்டு வாயைத் திறப்பார். யசோதை அவருடைய வயிற்றில் பதினான்கு லோகங்களையும் பார்த்துப் புத்திரனுடைய மஹிமையைத் தெரிந்து கொள்வாள். தவிரவும், வருணருடைய பாசத்தால் கட்டப்பட்டுள்ள நந்தகோபரை ஸம்ரக்ஷிப்பார். மயனுடைய புத்திரனால் பூமிக்குள் மறைக்கப்பட்டு இருந்த கோபர்களைக் காப்பாற்றுவார். பகல்முழுவதும் வேலைசெய்து களைத்து, இராத்திரி தூங்கிக் கொண்டிருக்கும் கோகுலவாஸிகளான ஜனங்களை வைகுண்ட லோகஞ் சேர்ப்பார். . இந்திரனை உத்தேசித்துக் கோபர்களால் ஒவ்வொரு வருஷத்திலும் செய்யப்பட்டு வரும் பூஜையானது ஒரு வருஷத்தில் நிறுத்தப்படும். அதனால் மிகவும் கோபங் கொண்டு பசுக்களை நாசஞ் செய்வதற்காக மழையை பெய்யச் செய்வார். அப்போது ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஏழு வயதுள்ளவரானாலும் கோவர்த்தனமென்னும் மலையை நாய்க்குடையைப் போல் எளிதில் ஒரு கையால் தூக்கிக் குடையாக ஏழுநாள் வரையிலும் பிடித்துப் பசுக்களையும், கோபர்களையும்

காப்பாற்றுவார். ஒரு நாள் ராத்திரியில் சந்திரிகை யால் வெண்ணிறமுள்ள காட்டில் ராஸக்கிரீடையில் பகவான் கானம் பண்ணுவார். அந்தப் பாட்டிலுள்ள பதங்கள் இனியவைகளாயிருக்கும், ராகாலாபனம் மிக்கமேலானதாக இருக்கும். அதனால் கோபிகை களுக்கும் மன்மத தாபம் விருத்தியாகும். அந்த ஸமயத்தில் அவர்களைச் சங்கசூடன் என்ற குபேரன் உடைய வேலைக்காரன் அபஹரித்துப் போவான். பகவான் அவனை ஸம்ஹரிப்பார். மேலும் பகன், கேசி, அரிஷ்டன் சாணூரன் முதலிய மல்லர்கள்,

குவலயாபீடமென்ற யானை, கம்ஸன், நரகாஸுரன் மௌண்ட்ரகன், ஸால்வன், தந்தவக்திரன், சம்பரன் விடூதரன், யவனன், ஏழு விருஷபங்கள் ஆகிய இவர்கள் ஸ்ரீ கிருஷ்ண பகவானாலும், பிரலம்பன், தேனுகன், துவிதனென்ற வானரன், பல்வலவன், ருக்மி முதலியவர்கள் பலராம ரூபியான மஹாவிஷ்ணு வினாலும், யுத்தத்தில் மிகுந்த ஸாமார்த்தியமுள்ள காம்போஜர், மத்ஸயர், குருக்கள், ஸிருஞ்ஜயர், கேகயர் முதலியவர்கள் பீமார்ஜுன ரூபமாகிய பரமபுருஷனா லும் கொல்லப்பட்டு வைகுண்டஞ் சேர்க்கப்படுவார் கள். பின்னும், கால மஹிமையால் ஜனங்களுக்கும் ஆயுஸும் புத்தியும் குறையும்போது, பகவான் ஒவ்வொரு யுகத்திலும்; ஸத்ய வதியினிடம் அவதரித்து, ஸமுத்திரம் போல விஸ்தாரமாகிய வேதங்களை அவர்களுக்குத் தக்கபடி சாகை சாகைகளாகப் பிரிப்பார். பின்னும் ஒரு காலத்தில் அஸுரர்கள் வேதமார்க்கத்தை ஆச்ரயித்து மயனால் செய்யப் பட்டதும் அறியக் கூடாத வேகமுள்ளதுமான (இரும்பு, வெள்ளி, தாமிரம் இவைகளால்

செய்யப்பட்ட) பட்டணங்களால் லோகங்களை உபத்திரவிப்பார்கள். அப்பொழுது பகவான் அவர்கள் உடைய புத்திக்கு மோஹத்தையும் (யுக்தமானவை களை விட்டுவிடுவது) ப்ரலோபத்தையும் (யுக்தமல்லாத வைகளை கிரஹிப்பது) உண்டாக்கும் பாஷண்ட வேஷத்தைத் தரித்து (புத்தாவதாரஞ் செய்து) தர்மம் போலத் தோன்றும் பாஷண்ட தர்மத்தை வெகுவாகச் சொல்வார். எப்பொழுது ஸாதுக்களுடைய கிருஹங்களிலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சரிதங்கள் கானஞ் செய்யப்படாமல் இருக்குமோ, எந்தக் காலத்தில் ப்ராம்மணர்களும், க்ஷத்ரியர்களும், வைச்யர்களும் பாஷண்டர்களாகவும், சூத்ரர்கள் அரசர்களாகவு மிருப்பார்களோ, எந்த ஸமயத்தில் ஸ்வாஹா, ஸ்வதா, வஷட் என்ற சப்தங்கள் கேட்க அரிதாகவிருக்குமோ, அப்பொழுது (கலியுகத்தின் முடிவில்) கல்கியாகிப் பகவான் அவதரித்துக் கலியை நிக்ரஹிப்பார். மேலும் நான் துஸும் (ஸ்ருஷ்டிக்கு முன்னிருந்த நிலையை யோஜிப்பது) மரீசி முதலிய ஒன்பது பிரஜாதிபதிகளும் ஜகத்தை ஸ்ருஷ்டிப்பதற்காக ஏற்பட்ட பகவான் உடைய மாயா விபூதிகளேயாம். தர்மமும், யக்ஞமும் (விஷ்ணு) மனுக்களும்; தேவ சிரேஷ்டர்களும் அரசர் களும், ஜகத்தைக் காப்பாற்றுவதற்காக நியமிக்கப் பட்ட விபூதிகளாகிறார்கள். அதர்மமும், ருத்ரரும், கோப ஸ்வபாவமுள்ள ஸர்ப்பங்களும், அஸுரர்களும், ஸம்ஹாரத்திற்காக ஏற்படுத்தப்பட்டவைகள். ஆகை யால் இந்த ஈச்வரனுடைய மாயா விபூதிகளெல்லாம் அளவற்ற ஆச்சர்யகரமான சக்தியுள்ளவைகள். பூமியின் தூளிகளைப் பிரித்து எண்ணக்கூடிய சக்தியுள்ள கவியாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் லீலா விபூதிகள் எல்லாவற்றையும் அறிய முடியாது.

ஆகையால் சுருக்கமாகச் சொன்னேன். அந்தப் பகவான் மிகவும் அசைந்து கொண்டிருந்ததும், ஸத்திய லோகத்திற்குக் கீழ்ப்பட்டதுமான ஸ்வர்க்கத்தைத் தம்முடைய தடையற்ற வேகத்தால் அசையாமல் இருக்கச் செய்தார். ஆகையால் எனக்கும்; உமக்கும் மூத்தவர்களான ஸநத்குமாரர் முதலியவர்களுக்கும், அந்தப் புருஷனுடைய மாயாபலம் இவ்வளவென்று தெரியாது. மற்றவர்கள் தெரிந்துகொள்ள நியாயமே யில்லை. ஆயிரம் முகங்களுள்ள ஆதிசேஷ பகவானும் அந்தப் பரமபுருஷனுடைய மஹிமையைக் கானம் பண்ணி, அதன் கரையை அடைய அசக்தராயிருக் கிறார். (முழுவதையும் சொல்ல முடியவில்லை) கடபமற்றுப் பகவானுடைய பாதங்களைப் பூஜிப்பவர் களிடத்தில் (பக்தி செய்பவர்களிடத்தில்) அவருக்குக் கருணை உண்டாகும். புருஷோத்தமருடைய மாயா பலத்தை நன்றாய்த் தெரிந்து கொண்டு அதையும் தாண்டுவார்கள். நாய், நரிகளுக்கு ஆஹாரமாகிய இந்த சரீரத்தில் அவர்களுக்கு மானமிராது. ஓ நாரத, ப்ரஹ்மாவாகிய நான், நீர், உமக்கு முன் பிறந்தவர்களான ஸனத்குமாரர் முதலியவர்கள், பகவானாகிய பரமசிவன், ப்ரஹ்லாதன்; ஸ்வாயம்புவ மனு, அவருடைய பத்தினியாகிய சதரூபை, அவருடைய பெண்கள், பிள்ளைகள் பிராசீனபர்ஹிஸ், ரிபு, என்னும் மஹரிஷி, வேனனுடைய பிதாவாகிய அங்கன், துருவன், இக்ஷ்வாகு, நளன், முசுகுந்தன், வைதேஹர், காதி, ரகு, அம்பரீஷன், ஸகரர், கயன், நஹுஷன், மாந்தாதா, அலர்க்கன், சததன்வா, நந்திதேவர், பீஷ்மர், பலி, அதூர்த் தரயன், திலீபர், ஸௌபரி, உதங்கர், சிபி.தேவலர்,பிப்பலாதர், ஸாரஸ்வதர் உத்தவர் பூரிஷேனர், பராசரர்,

விபீஷணன், ஹனுமான், சுகர், அர்ஜுனன், ஆர்ஷ்ணி ஷேணர், விதுரர், சுருததேவர் முதலிய மற்றவர்கள் ஆகிய எல்லோரும் பகவானுடைய யோகமாயையை அறிவோம். ஸ்திரீகளும், சூத்ரர்களும், ஹூணர்களும் (ஜாதி விசேஷங்கள்) வேடர்கள் பாபகர்மத்தைச் செய்து ஜீவிக்கிறவர்களும், பசு, பக்ஷி முதலிய திர்யக் ஜாதிகளும், பகவத் பக்தர்களுடைய சேர்க்கையாலேயே தேவமாயையைத் தெரிந்து கொண்டு, அதைத் தாண்டுகிறார்கள். சாஸ்திரங்களை அப்யசித்து, அவற்றை மனஸில் தரிக்கக்கூடிய சக்தியுள்ளவர்கள் மாயையை ஜயிப்பார்கள் என்பதில் சந்தேஹமே யில்லை. அந்தப் பரமாத்ம ஸ்வரூபமானது எப்பொழு தும் சாந்தமாயிருக்கிறது. தன்னை அடைந்தவர் களுக்கு ஸம்ஸார பயத்தைப் போக்கி அபயத்தைக் கொடுக்கிறது. அது சுத்தமாகிய ஞானஸ்வரூபம். தோஷமற்றது. எக்காலத்திலும் ஒரே தன்மை யுள்ளதாயிருப்பது. கார்யம், காரணம் இவைகளைவிட வேறானது. பலவகையான காரகம் கிரியை இவைகளுள்ள வேத சப்தங்களால் அந்த ஸ்வரூபம் நிரூபிக்கப்படுகிறதில்லை. மாயையானது புதிதாகக் கல்யாணஞ் செய்துகொண்ட சிறு பெண் போல வெட்கமுள்ளதாய் அந்த ஸ்வரூபத்திற்கு முன்பாக நிற்கிறதில்லை. (அதில் ஸம்பந்தப்படுகிறதில்லை.) அந்த ஸ்வரூபமே ப்ரஹ்மம். அது சோகமற்றது. எப்பொழுதும் ஸுகரூபமானது. அதனிடத்தில் மனத்தைச் செலுத்திய யோகிகள் வேறொன்றையும் அபேக்ஷிக்கிறதில்லை. மழை பெய்யச் செய்யும் மகேந்திரன் ஜலத்திற்காகக் கிணறு வெட்ட வேண்டி மண் வெட்டியை எடுத்துக் கொள்வானா? பல வகையான தாதுக்களால் உண்டான சரீரமானது

அந்தத் தாதுக்கள் பிரியும்போது நாசமடைந்தாலும் ஜீவன் ஆகாசம் போல் நாசமடைகிறதில்லை. ஏனென்றால் அவன் அதனுடன் உண்டானவனல்ல. ஜன்மம் முதலிய விகாரங்களற்றவன். அந்த ஜீவனுக்கு ஸகல வித க்ஷேமத்தையும் கொடுப்பவரும் அந்த மஹா புருஷனேயாம். மகத் தத்வம் முதலியவைகளின் பரிணாம விசேஷங்களால் ஏற்படும் சுபங்கள் அவரிடமிருந்தே உண்டாகின்றன. ஓ, குழந்தாய்! நாரத பகவானுடைய ஸ்வரூபத்தைச் சுருக்கமாகச் சொன்னேன். காரிய காரணங்களடங்கிய ஜகத்தில் அவரைக் காட்டிலும் வேறொன்றுமில்லை. (எல்லாம் பரமாத்ம ஸ்வரூப மென்று கருத்து.) ஸ்ரீமந் நாராயணனால் எனக்கு உபதேசிக்கப்பட்டபடி பகவானுடைய விபூதிகளை உனக்குச் சுருக்கமாகச் சொன்னேன். ஸகல ஸ்வரூபியாகவும், ஸகலத்திற்கு ஆதாரமாயிருக்கும் ஸ்ரீ நாராயணனிடத்தில் மனிதர் களுக்குப் பக்தியுண்டாகும்படி நீ இதை விஸ்தாரப் படுத்து. மோக்ஷத்திற்கு அதிபதியான ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் பூர்ணமாகிய பக்தி யிருக்குமானால், ஜீவன் மனுஷ்ய சரீரத்தில் ஆசைப்படமாட்டான். ஸ்திரமற்ற பார்யை, புத்திரன் முதலியவர்களால் என்ன பிரயோஜனம்? ஸகல பாபங்களையும் போக்கக்கூடிய உத்தம ச்லோகராகிய பகவானிடம் பக்தியுண்டாகாவிடில் அவன் செய்யும் தானங்களா லும் தபஸினாலும் ப்ரயோஜனமில்லை. மேலும் ஜாதிக்கும் ஆசிரமத்திற்கும் தகுந்த தர்மங்களை யனுஷ்டிப்பதாலும், சாஸ்திரங்களை படிப்பதாலும் பலனில்லை.

55. ஆகையால், ஸ்ரீ கிருஷ்ணனாகிய பரமாத்மா வினுடைய லீலைகளை வர்ணிப்பவர்களுக்கும், அதை

அனுமோதிப்பவர்களுக்கும், ச்ரத்தையுடன் நித்தியம் கேட்பவர்களுக்கும் அவித்யை விலகும் என்று ப்ரஹ்மதேவர் சொன்னார்" என்று நாரதருக்கும் ப்ரஹ்மதேவருக்கும் நடந்த ஸம்வாதத்தைப் பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சுகர் உபதேசித்தார்.

நோட்டு

நான்கு –மூலத்தில் சதுஸ்ஸன என்றிருப்பதால் அதற்கு நான்கு புருஷார்த்தங்களைக் கொடுப்பவர் ஆகையால் தத்தாத்ரேயருக்கே சதுஸ்ஸனா என்றும் மற்றொரு பெயர் – சந்த். ப்ரஹ்மதேவருடைய தபோமகிமையால் ஸனத். ஸநாதந, ஸகந்தன, ஸனக என்று நால்வகையாக அவதரித்தார் – வீர. ஸனகர், ஸனாதனர், ஸனந்தனர், ஸனத்குமாரர் என்ற திவ்ய நாமதேயங்களை அடைந்தார் – விஜ. முடியவில்லை இந்தக் கதை பதினோராவது ஸ்கந்தத்தில் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது. வெண்மை நிற பகவானுடைய தலைமயிர்களில் வெண்மை நிறமுள்ளவை சில. கருமை நிறமுள்ளவை சில. அப்படி யிருப்பது அழகேயாம். ஜரை (கிழத்தனம்) யால் ஏற்பட்டதல்ல ஓ மஹாமுனியே! வெண்மை நிறமுள்ளவையும் கருமை நிறமுள்ளவையுமான தம்முடைய கேசங்களை எடுத்தார். –விஷ்ணு புராணம் அந்த ஹரியும் வெண்மை நிறமுள்ள ஒரு மயிரையும், கருமை நிறமுள்ள ஒரு மயிரையும் எறிந்தார். அவை யதுகுலத்திலிருக்கும் ரோகிணி, தேவகி இருவர்களை யும் அடைந்தன. அவ்விரு கேசங்களில் வெண்மை நிறமுள்ளது பலராமனாக ஆயிற்று. கருமை

நிறமுள்ளது ஸ்ரீ கிருஷ்ணனாக அவதரித்தது. மஹா பாரதம். கேசம் அவதரித்தது என்பதால் பகவான் உடைய கேசமே துஷ்டர்களைக் கொல்ல ஸாமார்த்திய முள்ளது என்று காட்டப்பட்டது. பலராமன், ஸ்ரீ கிருஷ்ணன் ஆகிய இவர்களுடைய நிறமும் காட்டப் பட்டது. கேசமே அவதரித்தது என்று தாத்பரியமல்ல. ஸ்ரீ கிருஷ்ணன் ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவே என்று அர்த்தமுள்ள வசனத்தின் விரோதமேற்படுமாகையால் மேற்காட்டியபடியே அர்த்தங்கொள்ள வேண்டும். ஸ்ரீத, ஸ்திரீகளும் ஸ்திரீகளும் சூத்ரர்களும் வேதத்தை அத்யனஞ் செய்யக் கூடாது என்ற சுருதியின்படி வேதாத்யனத்திற்கு அனர்ஹர்களும் தாண்டுகிறார்கள்– முக்தியடைகிறார்கள். வேத சப்தங்களால் பத்தாவது ஸ்கந்தத்தில் ஸ்ருதி கீதையில் இந்த விஷயம் நன்றாய்க் காட்டப்பட்டிருக்கிறது.

அத்தியாயம்- 8

பரீஷித்தின் கேள்வி

அதனைக்கேட்ட பரீஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி ஓ தத்துவத்தைபறிந்தவர்களுக்குள் சிறந்தவரே! மிக்க அதிர்ஷ்டமுள்ளவரே, குணங்களை அதிக்கிரமித் வரராகிய பகவானுடைய குணங்களை, வர்ணிக்கும் படி திவ்ய திருஷ்டியுள்ள நாரதரைப் ப்ரஹ்மதேவர் தூண்டினாரல்லவா? பின்பு அந்த நாரதர் யார் யாருக்கு அந்தப் பகவத் குணங்களை எப்படி உபதேசித் தார்? அதனுடைய உண்மையை அறியவிரும்புகிறேன். அற்புதமான மகிமையுள்ள பகவானுடைய மங்களகர மாகிய கதைகளைச் சொல்ல வேண்டும். அவைகளைக் கேட்டு ச்ரத்தையாய் அவருடைய சரிதங்களை உச்சரிப் பவர்களுடைய மனத்தில் பகவான் வெகு சீக்கிரமாய்ப் ப்ரவேசிக்கிறார். விஷயங்களில் ஆசையொழிந்து மனஸைப் பகவானிடத்தில் செலுத்தி, சரீரத்தைவிட வேண்டும. சரத்காலமானது ஜலத்திலுள்ள தோஷத் தைப்போக்கி, அதை தெளியச் செய்வது போல் ஸ்ரீ கிருஷ்ண பகவான் காதின் வழியாகப் பக்தர்களுடைய ஹ்ருதய கமலத்தில் ப்ரவேசித்து மனோதோஷங்களை நாசஞ் செய்கிறார். சுத்தமான மனமுள்ள புருஷன் ஆசை, துவேஷம் முதலியவைகளை ஒழித்து கிருஷ் ணனுடைய பாதங்களை ஒருபொழுதும் விடமாட் டான். தேசாந்தரத்திலிருந்து வந்தவர்கள் தமக்குச் சொந்தமாகிய வீட்டை விடுவார்களா? தேஹத்தை யுண்டுபண்ணும் மகாபூதங்களுடைய ஸம்பந்தமற்ற வராகிய பகவானுக்கு தேஹம் எப்படி உண்டா கிறது? அல்லது காரணமில்லாமல் உண்டாகிறதா?

அதன் உண்மை உமக்குத் தெரியும். அதனைச் சொல்லவேண்டும். ஸகல லோகங்களின் அமைப்புள்ள புவன கோசமாகிய பத்மமானது எவருடையவயிற்றில் இருந்து உண்டானதோ. அந்தப் புருஷன் உண்மையில் அவயங்களில்லாதவரானாலும், லௌகிக புருஷனுக்கு எவ்வளவு அவயவங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு அவயவங்கள் உள்ளவரென்றும் அப்படிப்பட்ட அவயவங்களின் அமைப்புள்ளவெரென்று சொல்லப் படுகிறாரே, பகவானுடைய கொப்பூழில் தோன்றிய தாமரஸ புஷ்பத்திலிருந்து உண்டானவரும், ஐந்து பூதங்களாலேற்பட்ட சரீரமுள்ளவருமான ப்ரஹ்மதேவர் எவருடைய அனுக்கிரஹத்தால் ப்ராணிகளை ஸ்ருஷ்டிக்கிறார்? விராட்ரூபத்தை எப்படி நேரில் பார்த்தார்? அதைச் சொல்லவேண்டும் மாயைக்கு அதிபதியும் ஸகல கல்யாண குணங்களுக்கு இருப்பிட மாயும் ஜகத்தை உண்டுபண்ணுகிறவரும், அதைப் பரிபாலிப்பவரும், அதை ஸம்ஹரிப்பவருமான மஹா புருஷன் தம்முடைய மாயையைவிட்டு எவ்விடத்தில் சயனித்துக் கொள்கிறார்? தவிரவும் அந்த மஹா புருஷனுடைய அவயவங்களால், உலகங்களும், அவற்றின் அதிபதிகளும் ஸ்ருஷ்டிக்கப்பட்டார்கள் என்றும், லோகபாலர்களால் அந்தப் புருஷனுடைய அவயவங்கள் ஏற்பட்டன என்றும் சொல்லியிருக் கிறீரல்லவா? அதையும் விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும் மேலும், கல்பம் என்பதும், விகல்பம் என்பதும் எவ்வளவு காலங்கொண்டது? நடந்தது. நடக்கிறது, இனி நடப்பது ஆகிய காலங்களுள் எப்படி அனுமானிக்கப்படுகின்றன? ப்ரஹ்மதேவர் முதலிய வர்களின் ஆயுள் எவ்வளவு காலங்களடங்கியது? ஓ ப்ராஹ்மணோத்தம! காஷ்டை முதலாக அணுவாகியதும்,

வர்ஷம் முதலாகப் பெரிதாகியதுமான காலத்தின் பேதங்கள் எப்போர்ப்பட்டவைகள்? கர்மங்களால் அடையக்கூடிய ஸ்தானங்கள் எவை? அவைகளின் ஸ்வரூபம் யாது? ஸத்வம் முதலிய குணங்களும், குணமுள்ளவர்களான ஜீவர்களும் பரிணாமத்தை (வேறு ரூபத்தை) அடையுமிடும் போது புண்ய பாப கர்மங்களுடைய கூட்டம் எதனால், எப்படிக் கிரஹிக்கப்படுகிறது? (எந்தக் கர்மங்களை, எப்படிச் செய்தால், எவன் தேவாதி சரீரத்தை அடைவான் என்று கருத்து) தவிரவும் பூமி, பாதாளம், திக்குகள், ஆகாசம் கிரஹங்கள், நக்ஷத்திரங்கள் மலைகள், ஆறுகள், ஸமுத்திரம், த்வீபங்கள் ஆகிய இவைகள் உற்பத்தியையும், அவைகளில் வஸிக்கும் ப்ராணிகளின் உற்பத்தியையும் சொல்லவேண்டும். அண்டகோசத்தின் வெளியிலும், உள்ளேயுமுள்ள அளவும், மஹாபுருஷர் களுடைய சரிதமும் வர்ணங்கள் ஆசிரமங்கள் ஆகிய இவைகளின் நிச்சயமும் சொல்லப்படவேண்டும். பின்னும் பகவானுடைய ஆச்சர்யகரமான அவதாரங் களுடைய சரிதத்தையும் யுகங்களுடைய மானத்தையும் ஒவ்வொரு யுகத்தின் தர்மங்களையும், மனிதர்களுக்குப் பொதுவாகிய தர்மங்களையும், யார் யார், எவ்வித ஜீவனஞ் செய்கிறார்களோ அதற்குத் தகுந்த தர்மங் களையும், ராஜ தர்மங்களையும், ஆபத்தர்மங் களையும் கேட்க விரும்புகிறேன். தத்துவங்களுடைய ஸ்வரூபம், அவைகளின் காரணம், பகவானை ஆராதிக்கும் முறை. அஷ்டாங்க யோகத்தின் முறை, யோகாப்யாசஞ் செய்து அணிமா முதலிய ஐசுவரியங் களையடைந்து, அர்ச்சிராதி மார்க்கத்தை யடைதல்; லிங்க சரீரத்தின் லயம் இவைகளையும், வேதங்கள்; ஆயுர்வேதம் முதலிய உபவேதங்கள், தர்ம சாஸ்திரம்.

இதிகாஸம், புராணம் முதலியவைகளின் ஸ்வரூபத்தையும் நிரூபிக்கவேண்டும். மேலும் ஸகல பிராணிகளுடைய உற்பத்தி, ஸ்திதி ஸம்ஹாரம், , யாகம் குளம் வெட்டுவிப்பது முதலிய பூர்த்த தர்மம், அக்னிஹோத்ரம் முதலிய காம்ய கர்மங்கள் தர்மார்த்த கர்மங்கள் ஆகிய இவைகளை அனுஷ்டிக்கும் முறைகளையும் சொல்லவேண்டும். அணுசாயிகளான ஜீவர்களுடைய உற்பத்தியையும், பாஷண்ட தர்மத்தின் உற்பத்தியையும் ஆத்மாவிற்கு ஏற்படும் பந்த மோக்ஷங்களையும். ஆத்மா சுத்த ஸ்வரூபராக இருப்பதையும், ஸ்வதந்தரராகிய பகவான் தம்முடைய மாயையுடன் விளையாடுகிறதையும்; அந்த மாயையை விட்டு ஸாக்ஷிபோல உதாசீனராக இருப்பதையும், மற்றும் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள விரும்பி, தங்களைப் பிரார்த்திக்கும் சரணாகதனாகிய எனக்கு வரிசையாகச் சொல்லவேண்டும். ப்ரஹ்மதேவரால் இவைகள் அறியப்பட்டிருப்பது போல உம்மாலும் நன்றாய் அறியப்பட்டிருக்கின்றன. முன்னோர்கள் அனுஷ்டித்த தர்மத்தையே பிந்தியவர்கள் அனுஷ்டிக்கிறார்கள். ஓ ப்ராஹ்மண நான் போஜனம் செய்யாமல் விரதமுள்ளவனானாலும் தங்களுடைய முகமாகிய தாமரை மலரிலிருந்து பெருகிவரும் பகவத் கதையாகிய அமிருதத்தைப் பானஞ் செய்வதால் ப்ராணனுக்கு யாதொரு உபத்திரவமுமில்லை. ஆகையால், நாரதருக்கு ப்ரஹ்மதேவர் உபதேசித்த படி எனக்குக் தாங்கள் உபதேசிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார்.

27–29. அவற்றைக் கேட்ட சுகர் அரசனிடம் மிகவும் சந்தோஷமடைந்து, 'பகவானுடைய சரிதத்தைச்

சொல்லுகிறேன்' என்று ஒப்புக்கொண்டு, ப்ரஹ்ம கல்பத்தில் ப்ரஹ்ம தேவருக்கு ஸ்ரீநாராயணனால் உபதேசிக்கப்பட்டதும் வேதத்திற்கு சமமானதுமாகிய பாகவதத்தையே பாண்டு குலத்தில் பிறந்தவரும், மேலானவருமான பரீக்ஷித்து மஹாராஜன் கேட்டவைகளுக்குக் கிரமமாய் மறுமொழி சொல்ல ஆரம்பித்தார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–9

சுகருடைய மறுமொழி

ஓ மஹாராஜ அனுபவ ஸ்வரூபியான பரமாத்மாவிற்குத் தேஹமும் முதலியவைகளின் ஸம்பந்தம் ஸம்பவிக்கிறதில்லை. சொப்பனத்தில் கண்ட தேஹத்தின் சம்பந்தம் உண்மையில் ஜீவனுக்கு இல்லை யல்லவா? ஆகையால் பரமாத்மாவிற்கு ஸம்ஸார சம்பந்தமானது மாயையேயொழிய உண்மையிலில்லை. மேலும், அந்த ஜீவன் பலவகையான ரூபமுள்ள மாயையால் பல விதமான ரூபமுள்ளவனாகத்தோன்றுகிறான். இந்த மாயையினுடைய குணங்களில் (விஷயங்களில்) ரமித்துக் கொண்டு 'நான், என்னுடையது' என்ற அபிமானத்தை அடைகிறான். காலம் (புருஷன்), மாயை (ப்ரக்ருதி) ஆகிய இவைகளைக் காட்டிலும் மேலான தன்னுடைய மஹிமையில் எப்பொழுது ஜீவன் ரமிக்கிறானோ அப்பொழுது 'நான், என்னுடையது' என்ற இருவகையான அபிமானத்தை விட்டு மோஹம் நீங்கி, நிஜ ரூபமாக இருக்கிறான். (பக்தி யோகத்தால் மாயா சம்பந்தம் அற்றுப்போனால் மோக்ஷமும் கிடைக்குமென்பது தாத்பர்யம்.) ஸ்ருஷ்டி காலத்தில் ப்ரஹ்மதேவர் கபடம் அற்றுத் தபஸ் செய்து பகவானை சந்தோஷப்படுத்தினார். அதனால் நாராயணன் அவரிடத்தில் பிரியப்பட்டுத் தம்முடைய சத்திய ஸ்வரூபத்தை அவருக்குக் காட்டி ஜீவனுடைய தத்துவ ஞானத்திற்காக எதனைச் சொன்னாரோ, அதை நான் உமக்குச் சொல்லுகிறேன். முற்காலத்தில் பக்தர்களுக்கு முக்கிய குருவாயும் தேவர்களுக்கு முந்தினவருமான ப்ரஹ்மதேவர் தமக்கு இருப்பிடம்

ஆகிய தாமரை புஷ்பத்திலிருந்து இந்த ஜகத்தை எப்படி ஸ்ருஷ்டிக்கிறது என்று யோசித்தார். அப்படியும் அவருக்கு அது விஷயமாய் ஒன்றும் தோன்றவில்லை. ஓ பரீக்ஷித்து மஹாராஜனே! இப்படியிருக்கையில் ஒரு சமயத்தில் ஜலத்திலிருந்து தபி என்று இரண்டு தரம் தொனியுண்டாயிற்று அவ்விரண்டு அக்ஷரங்கள் ஸ்பர்சமென்ற (ககாரம் முதல் மகாரம் வரையிலுள்ள அக்ஷரங்கள்.) அக்ஷரங்களில் பதினாறாவதும் இருபத்தொன்றாவதுமாக இருந்தன. பணத்தின் ஆசையை ஒழித்தவர்களுக்கு அவையே பணமாயிருக்கின்றன. பிறகு ப்ரஹ்மதேவர் அந்த வார்த்தையைக் கேட்டு, இதைச் சொன்னவர் யாராயிருக்கலாமென்று நான்கு புறத்திலும் திரும்பித் திரும்பிப் பார்த்ததும் அவ்விடத்தில் ஒருவரையும் காணததால் மறுபடியும் அந்தத் தாமரை புஷ்பத்திலிருந்து இதைப்பற்றி யோசித்துத் தம்மைத் தபஸ் செய்யும்படி பகவான் ஆஜ்ஞாபித்திருப்பதாக நிச்சயித்துத் தபஸிற்கு முயற்சித்தார். பின்பு வீணாகாத ஞானமுள்ளவரும் மிக்க தபஸ்வியுமான அந்த ப்ரஹ்மதேவர் ஞானேந்திரியங்களையும், கர்மேந்திரியங்களையும், மனஸையும், ப்ராணனையும் ஜயித்து, தேவமானத்தால் ஆயிரம் வர்ஷங்கள் தபஸ் செய்தார். அதனால் ஸகல லோகங்களுக்கும் தாபம் உண்டாயிற்று. இப்படித் தபஸ் செய்து ப்ரஹ்மதேவர் பரமாத்மாவைச் சந்தோஷப்படுத்தினதால் அந்தப் பகவான் தமது வைகுண்ட லோகத்தை அவருக்குக் காட்டினார். அதைக் காட்டிலும் மேலானது ஒன்றுமில்லை; அது க்ஷ்டம், மோஹம் முதலிய தோஷமற்றது. புண்யஞ் செய்தவர்களான வித்வான்களால் ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டது. மேலும் ரஜோகுணமும்

தமோகுணமும், அவைகள் கலந்த ஸத்வ குணமுமே அந்த உலகத்திலில்லை. (சுத்த ஸத்வ குணமே அவ்வுலகத்தில் ப்ரகாசிப்பதென்பது தாத்பரியம்.) தவிரவும் காலத்தின் ஸாமர்த்தியம் அவ்விடத்தில் உபயோகப் படுகிறதில்லை. மாயை, ராகம், உலோபம் ஆகிய இவைகளும் அந்த லோகத்திலில்லை. பின்னும், தேவர்களாலும், அஸுரர்களாலும் பூஜிக்கப்பட்ட பார்ஷத கணங்கள் அவ்விடத்தில் வஸிக்கிறார்கள். மேலும் அந்தப் பார்ஷதர்களெல்லோரும் நீருண்ட மேகம் போன்ற நிறமுள்ளவர்கள். தாமரை மலர் போன்ற கண்களுள்ளவர்கள். பீதாம்பரத்தைத் தரித்த வர்கள். மனோஹரமாயும், சுத்தமாயுமுள்ள தேக காந்தியுள்ளவர்கள். மிகுந்த அழகுள்ளவர்கள். நான்கு கைகளுள்ளவர்கள். மிகுந்த ப்ரகாசமுள்ள உத்தம ரத்தினகளிழைத்த திவ்ய ஆபரணங்களால் அலங் கரிக்கப்பட்டவர்கள். சிலர் பவழம், வைடூரியம் தாமரைத் தண்டு இவைகள் போன்ற நிறமுள்ளவர்கள். குண்டலம், கிரீடம், மாலை இவைகளால் பிரகாசிப் பவர்கள் மிகுந்த காந்தியுள்ள மஹாத்மாக்களுடைய விமானங்களால் அந்த லோகமானது ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறது. மின்னல்களுடன் கூடிய மேகங் களால் ஆகாசம்போல, உத்தம ஸ்திரீகளின் காந்தியால் விளங்குகிறது. மேலும் அவ்விடத்தில் லக்ஷ்மிதேவி நிஜஸ்வரூபத்துடன் பகவானுடைய பாதாரவிந்தங்களைப் பலவகையான விபூதிகளால் பூஜிக்கிறாள். மேலும், அவள் ஊஞ்சலின்மீதேறித் தன்பர்த்தாவாகிய நாராயணனுடைய ஸகல கல்யாண குணங் களையும் கானம் செய்து கொண்டு ஆனந்தமாய் வஸிக்கிறாள். அப்பொழுது வஸந்த ருதுவும், அதன் பின் செல்லுகின்ற வண்டுகளும், கூடக் கானம்

செய்கின்றன. இம்மாதிரியான அந்தக் க்ருஹத்தில் யஜ்ஞபுருஷனும், ஸகல ஜகத்திற்கு அதிபதியும், பக்தர்களுக்குப் ப்ரபுவும் ஸ்ரீயப்பதியுமான பகவானைப் ப்ரஹ்மதேவர் தரிசித்தார். ஸனனந்தர் நந்தர் முதலிய பூஜ்யர்களான பார்ஷதர்கள் அவரை ஸேவிக் கிறார்கள். அந்தப் பகவான் தம்முடைய வேலைக் காரர்களுக்கு அனுக்கிரகம் செய்வதிலேயே நோக்க முள்ளவர். புன்சிரிப்புக் கொண்டதும், சிவந்த கண்களுள்ளதுமான முகமுள்ளவர். பார்க்கப்பிரியமானவர். கிரீடமுள்ளவர். குண்டலங்களால் ப்ரகாசிப்பவர். நான்கு கைகளுள்ளவர். பீதாம்பரத்தால் அலங் கரிக்கப்பட்டவர். மார்பில் வஸிக்கும் லக்ஷ்மியுள்ளவர். உயர்ந்த சிம்மாசனத்திலிருப்பவர் ப்ரக்ருதி புருஷன், மஹத்தத்வம், அஹங்காரம் ஆகிய நான்கு சக்தி களாலும் ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் மனஸ், ஐந்து பூதங்கள், ஐந்து தன்மாத்திரைகள் ஆகிய இருபத்தைந்து தத்துவங்களாலும் சூழப்பட்டவர். தமக்கு இயற்கையானதும் மற்றவர்களுக்குத் தபஸ் முதலியவைகளால் கிடைக்கக் கூடியவைகளுமான ஐசுவர்யங்களால் தமது ஸ்வரூபத்திலேயே ரமித்துக் கொண்டிருப்பவர்.

18–24 அப்போர்ப்பட்ட பகவானுடைய ஸ்வரூ பத்தைப் ப்ரஹ்மதேவர் பார்த்து, அதனால் உண்டாகிய ஆனந்தத்தால் பூர்ணரானார். அப் பொழுது அவருக்கு மயிர்க்கூச்சலுண்டாயிற்று. பகவானிடத்திலுள்ள பக்தி விசேஷத்தால் அவருடைய இரு கண்களிலிருந்தும் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. பின்னுமவர் பரம ஹம்ஸாசிரமத்தால் அடையக்கூடிய பகவானுடைய பாதாரவிந்தத்தை

நமஸ்கரித்தார். அப்பொழுது பகவான் தம்மிடத்தில் விசேஷ பிரீதியுள்ளவரும், ப்ரஜைகளை ஸ்ருஷ்டிப் பதில் தம்மால் ஏவக்கூடியவரும், அதற்காகத் தம்மைக் குறித்து தபஸ் செய்தவரும் ஸமர்த்தருமான அந்தப் ப்ரஹ்ம தேவரை நோக்கி மிகுந்த ப்ரியத்துடன் அவருடைய கையைப் பிடித்துக் கொண்டு புன் சிரிப்புடன், ஓ வேதத்தை முகத்தில் வைத்துக் கொண்டிருக்கும் ப்ரஹ்ம தேவரே! லோகங்களை ஸ்ருஷ்டிப்பதற்காக வெகுகாலம் தபஸ் செய்து என்னைச் சந்தோஷப்படுத்தினீர். கபடமுள்ள யோகி களால் என்னை ஸந்தோஷப்படுத்த முடியாது. ஆனதால் உமக்கு இஷ்டமான வரத்தைக் கேளும். உமக்கு க்ஷேம முண்டாகும். என்னைப் பார்க்கிற வரையில் தான் ச்ரேயஸை யடைவதற்கு முயற்சிக்க வேண்டும் என்னுடைய வைகுண்ட லோகத்தை நேரில் பார்ப்பது என்னுடைய ப்ரியத்தைப் (பக்தனுக்கு வரங் கொடுக்க வேண்டுமென்றதை) காட்டுகிறது. ஆகையால், அதுவும் என்னுடைய கிருபையால் உமக்கு கிடைத்ததே தவிர வேறில்லை. மேலும் 'தப' என்ற என்னுடைய வார்த்தையைக் கேட்டுத் தபஸ் செய்தீர். தபஸ் என்பது எனக்கு ஹ்ருதயமாயிருக்கிறது. அதற்கு நான் ஆத்மா (ஸ்வரூபம்) வாக இருக்கிறேன். ஆகையால் ஸ்ருஷ்டிக்க வேண்டிய காலத்தில் அதற்கு வேண்டிய ஞானமற்றவராய் நீர் மோஹமடைந் திருக்கும் பொழுது உம்மைத் தபஸ் செய்யும்படி சொன்னவன் நானே. நான் தபஸைக் கொண்டே இந்த ஜகத்தைச் ஸ்ருஷ்டிக்கிறனே. தபஸினாலேயே அதைப் பரிபாலிக்கிறேன். தபஸி னாலேயே அதை ஸம்ஹரிக்கிறேன். தபஸே என் னுடைய சக்தியாயிருக்கிறது என்று சொன்னார்.

25–30 அதனைக் கேட்டு ப்ரஹ்மதேவர் ஸ்ரீ நாராயணனை நோக்கி, 'ஓ பகவன்! நீர் ஸகல பிராணிகளுக்கும் ப்ரபுவாக அவர்களுடைய புத்தியில் வசிப்பவராகையால் தடையற்ற திவ்ய ஞானத்தால் ஒவ்வொருவருடைய எண்ணத்தையும் நன்றாய்த் தெரிந்துகொள்ளுகிறீர். ஏ நாத உருவமில்லாதவரான உம்முடைய ஸ்தூல சூக்ஷ்ம உருவங்களை நான் நன்றாய்த் தெரிந்துகொள்ளும்படி ப்ரார்த்திக்கும் எனக்குச் சொல்ல வேண்டும். நீர் உம்முடைய மாயா சக்தியால் தானே ஸகல ஸ்வரூபியாயிருந்து ஜகத்தைச் ஸ்ருஷ்டித்தும், பரிபாலித்தும், ஸம்ஹரித்தும் பட்டுப் பூச்சி போல விளையாடுகிறீரல்லவா? வீண்போகாத ஸங்கல்பமுள்ளவரே! அந்த உம்முடைய லீலைகளை நான் நன்றாய்த் தெரிந்து கொள்ளும்படி அனுக்கிரஹிக்க வேண்டும். (ப்ரஜைகளை ஸ்ருஷ்டிப் பதில் பயந்து நான் தத்துவ ஞானத்தை விரும்ப வில்லை.) உம்முடைய உத்தரவின்படி சோம்பல் இல்லாமல் ஸ்ருஷ்டியைச் செய்வேன். ஆனாலும் அந்தக் காலத்தில் 'நான் ஜகத்தைச் ஸ்ருஷ்டிப்பவன். எல்லாவற்றிற்கும் மேலானவன் என்ற அஹங்காரம் முதலியவைகள் எனக்கு உண்டாகாமலிருப்பதற்காகத் தத்துவ ஞானத்தை உபதேசிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன். ஹே ஈசுவர! மித்திரன் தோழனைக் கௌரவப்படுத்துவது போல் நீர் என்னுடைய கையைப் பிடித்து, பூஜித்து, ஜனங் களை ஸ்ருஷ்டிக்கும் அதிகாரத்தைக் கொடுத்து இருக்கிறீர். நான் தங்களுடைய ஆக்ஞா ரூபமாகிய இக்காரியத்தைச் செய்து வரும்பொழுது மேலானவர் களையும், தாழ்ந்தவர்களையும், மத்ய நிலமை உள்ளவராகவும் பிரித்து ஸ்ருஷ்டிப் பேனல்லவா?

அப்பொழுது பகவான் நம்மை மித்திரனைப் போல் கௌரவப்படுத்தினார். நான் ஸ்வதந்திரன் என்று மிகுந்த கர்வம் எனக்கு உண்டாகக் கூடுமே. அம்மாதிரியான மதம் என்னைக் கெடுத்து விடாமல் இருக்கும்படி அனுக்கிரஹிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

31–39 அதனைக் கேட்ட பகவான் ப்ரஹ்ம தேவரை நோக்கி, ஓ ப்ரஹ்மதேவரே! உம்மால் கேட்கப் பட்டபடி சாஸ்திரத்தைப் படிப்பதால் உண்டாகிய ஞானம், அனுபவத்தால் உண்டாகிய விஞ்ஞானம், பக்தி, அவைகளின் ஸாதனம் ஆகிய இவைகள் மிகவும் ரகசியமானவைகளானாலும் அவைகளை உமக்கு உபதேசிக்கிறேன். நான் எவ்வளவு ஸ்வரூப முள்ளவனோ. எப்படி உண்டாகிறேனோ அப்பேர்ப் பட்ட உண்மையான ஸ்வரூப ஞானமானது என்னுடைய அனுக்கிரஹத்தால் உமக்கு உண்டா கட்டும். ஜகத் ஸ்ருஷ்டிக்கு முன்னே நான் ஒருவனே இருந்தேன். ஸ்தூலம், ஸூக்ஷ்மம் இவைகளுக்குக் காரணமாகிய ப்ரதானம் ஆகிய இவைகள் என்னைக் காட்டிலும் வேறாக ஒன்றுமிருந்ததில்லை. பின்பு நானே இந்த ஜகத் ரூபியாய் இருக்கிறேன். ப்ரளய காலத்தில் எந்த வஸ்து நாசமடையாமல் இருக்குமோ அதுவும் நானே. மேலும், ஆகாசத்தில் இரண்டு சந்திரன் இருப்பதாகத் தோன்றுகிறதுபோல எதன் உடைய மஹிமையால் ஆத்மாவிடம் இல்லாதவைகள் தோன்றுகின்றனவோ கிரஹ மண்டலத்திலிருக்கும் ராஹுவானவன் கண்ணுக்குப் புலப்படாததுபோல எதனுடைய மஹிமையால் ஆத்மாவிடத்தில் இருப்பவைகள் மறைக்கப்படுகின்றனவோ, அதை என்

உடைய மாயையென்று தெரிந்து கொள்ளவேண்டும். மஹா பூதங்கள், தங்களால் ஏற்பட்ட பலவகையான சரீரங்களில் பிறகு ப்ரவேசித்ததாகத் தோன்றுவது போல, ஜகத்தில் காரண ரூபியாய் நான் இருப்பவனே யொழிய அவைகளில் பின்பு ப்ரவேசித்தவனல்ல. ஆத்மாவினுடைய உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டியவன், 'எல்லா அவஸ்தையிலும் எது அன்வயத் தாலும், வ்யதிரேகத்தாலும் எக்காலத்திலும், எல்லா விடத்திலும் இருக்குமோ அதே பரமாத்மா என்று தெரிந்து கொள்ளவேண்டியது. இப்பொழுது என்னால் சொல்லப்பட்டதை ஒரே மனதாகச் சிந்தியும். கல்பங்களில் பலவகையான ஸ்ருஷ்டிகளிலும் உமக்கு அபிமானம் உண்டாகாமலிருக்கட்டும் என்று ஸகல ஜனங்களுக்கும் அதிபதியான ப்ரஹ்மாவை அனுக்ர ஹித்து அவர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்த உருவத்தைப் பகவான் மறைத்துக் கொண்டார். பிறகு அந்தப் ப்ரஹ்மதேவர் கண்ணுக்குப் புலப் படாமல் மறைந்த மஹாவிஷ்ணுவிற்கு அஞ்சலி செய்து ப்ருத்வி முதலிய பூதங்களாகிய சாதனங் களைக் கொண்டு முன் கல்பத்திலிருந்ததுபோல் இந்த ஜகத்தைப் படைத்தார்.

40–46 அந்தப் ப்ரஹ்மதேவர் ப்ரஜைகளுக்கு க்ஷேமத்தைச் செய்ய விரும்பி யமம், நியமம் முதலிய வைகளைச் செய்து வந்தார். அவருடைய புத்திரர் களுக்குள் மிகவும் பிரியராகிய நாரதர் தம்முடைய ஸ்வபாவத்தாலும், வணக்கத்தாலும், இந்திரிய நிக்ர ஹத்தாலும், பிதாவாகிய ப்ரஹ்மதேவரைச் சந்தோஷப் படுத்தி அவருக்குச் சிச்ரூஷை செய்து வந்தார். அந்தப் பாகவதோத்தமராகிய நாரதர் மாயைக்கு அதிபதியான

மஹாவிஷ்ணுவின் மாயையை நன்றாய்த் தெரிந்து கொள்ள விரும்பியவர். அவருடைய சிசுரூஷையால் ப்ரஹ்மதேவருக்கு ஸந்தோஷமுண்டாயிற்று. அப் பொழுது நாரதர் இந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டார். அவருக்குப் ப்ரஹ்மதேவர் மிகவும் பிரியத்துடன் பத்து வித புராண லக்ஷணமுள்ள பாகவத புராணத்தை உபதேசித்தார். அந்த நாரதர் ஸரஸ்வதீ நதிக்கரையில் ப்ரஹ்ம தியானஞ் செய்து கொண்டிருந்த அதிக தேஜஸுள்ள வ்யாஸ மஹர்ஷிக்கு இந்த விஷயத்தை உபதேசித்தார். விராட் புருஷனிடமிருந்து இந்த ஜகத் எப்படி உண்டாயிற்றென்று கேட்டீரல்லவா? அது முதலிய கேள்விகளுக்குப் பதில் , சொல்லுகிறேன் கேளும் என்றார்.

நோட்டு

உருவம்–ஸத்யம், ஞானம் முடிவில்லாதது என்று ஸ்ருதியில் சொல்லியுள்ளபடியுள்ளது. குணம்– திவ்ய மங்கள குணங்கள். எவர் எல்லாவற்றையும் ஸாமான்யமாகவும் விசேஷமாகவும் அறிந்தவரோ, எவருடைய மேலான சக்தியும், இயற்கையான ஞானம், பலம், கிரியை ஆகிய இவைகளும் பல வகையாகக் காணப்படுகின்றனவோ சந்த். மாயை என்று–ப்ரக்ருதியின் அனுஸந்தான காலத்தில் ஆத்ம ஸ்வரூபம் நன்றாகப் ப்ரகாசிக்கிறதில்லை. ஆத்மாவின் தோற்றம் இருக்கும்போது அசேதனமாகிய ப்ரக்ருதியானது தோன்றுவதில்லை. தேஜஸிருக்கும் போது இருட்டிக்கிறதில்லை. இருட்டிலிருக்கும் போது தேஜஸ் ப்ரகாசிக்கிறதில்லை. வீர.– எந்த வஸ்துவானது ஸகல காமத்தையும் அடைந்தவனாகிய என்னுடைய ப்ரயோசனமின்றி வேதம் முதலியதில்

தோன்றுகிறதோ, எது என்னிடத்தில் பாதகமாக ஆகிறதில்லையோ, அதே மாயை (ஜீவன், ப்ரக்ருதி ஆகிய இவர்கள் மாயை என்று கருத்து) யதார்த்தமாகத் தோன்றும் என்னுடைய பிரதிபிம்ப பூதனாகிய ஜீவனும், உண்மையாகத் தோன்றும் (மூல) ப்ரக்ருதியும் மாயையெனப்படுகின்றன. ஸ்ரீ மஹா விஷ்ணுவின் சக்தியே முக்கியமாய் மாயை யெனப்படுகிறது. ப்ரக்ருதி, ஜீவர்களை மாயையென்று செல்வது ஔபசாரிகப் ப்ரயோகம், ஆனால், ஜீவன், ப்ரக்ருதி, கர்மம், காலம் ஆகிய இவைகள் எப்பொழுதும் என்னிடத்தில் வஸிப்பவைகளானாலும் அவைகளால் பாதகமில்லாததனால், அவைகள் என் இடமிருப்பதாகச் சொல்லப்படுகிறதில்லை. அரசன் ரதத்தின் மீதேறிப் போகும்போது அவருக்குக் குடை பிடிப்பது முதலிய உபசாரங்கள் செய்து கொண்டு இருப்பவர்களுக்கு ரதிகர்கள் என்று பெயர் கிடைக்குமா? விஜ. ப்ரவேசித்தவனல்ல மஹாபூதங்கள் அவைகளாலேற்பட்ட கூடம் முதலியவைகளில் ப்ரவேசித்திருந்தாலும் அவைகளை உடைப்பது, வெட்டு வது ஆகிய இவைகளில் அந்த மஹாபூதங்கள் ஸம்பந்திக் கிறதில்லை.–வீர. அன்வயவத்தாலும் காரியங்களில் காரண ரூபமாக விருப்பது; ஜாக்ரத் முதலிய அவஸ் தைகளில் ஸாக்ஷியாக விருப்பது. வ்யதிரேகம் காரணமாக இருக்கும் போது காரியமாக இல்லாமல் இருப்பது –ஸ்ரீத. அன்வயம் இது அறியக் கூடியதே என்பது வ்யதிரேகம்– மற்றவை அறியக் கூடியவை அல்லவென்பது. பரமாத்மா ஒருவரைத் தெரிந்து கொண்டதனால் எல்லாம் அறியப் பட்டவையாகிறது. ஆனதால் அதுவே அறியக் கூடியது. –வீர.

அத்தியாயம் 10

தத்துவங்களின் உற்பத்தியுரைத்தது.

இந்தப்பாகவதத்தில் ஸர்க்கம், விஸர்க்கம், ஸ்தானம் போஷணம், ஊதி, மன்வந்தரம், ஈசானு கதை, நிரோதம் முக்தி ஆசிரயம் என்ற பத்து வகையான லக்ஷணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும் பத்தாவதாகிய ஆசிரயத்தின் உண்மையைத் தெரிவிப் பதற்காக ஒன்பதுகளுடைய ஸ்வரூபத்தை சப்தத் தாலும், அர்த்தத்தாலும் பெரியோர்கள் வர்ணிக் கிறார்கள். ஆகாசம் முதலிய பஞ்சபூதங்களும், சப்தம் முதலிய விஷயங்களும், இந்திரியங்களும் மஹத் தத்து வமும், அஹங்காரமும், ஸத்வம் முதலிய குணங்கள் உடைய பரிணாம விசேஷத்தால் பரமேச்வரனிடம் இருந்து உண்டாவதே ஸர்க்கமெனப்படும். வைராஜ னால் செய்யப்படும் சராசர சிருஷ்டியே விஸர்க்கம் எனப்படும். பகவான் அவதாரஞ் செய்து ஜகத்தைப் பரிபாலிப்பது எல்லாவற்றிற்கும் மேலானவராக இருப்பது ஸ்திதி யெனப்படும். பக்தர்களை அனுக்கிர ஹிப்பதே போஷணமெனப்படும். மன்வந்தரங்களில் அனுஷ்டிக்கப்படும் தர்மம் மன்வந்தர மென்று சொல்லப்படுகிறது. கர்மங்களின் வாஸனைகள் ஊதி எனப்படுகின்றது. பல்வகையான உபாக்யானங்கள் அடங்கிய பகவானுடைய அவதார கதைகளும், பக்தர்களுடைய சரிதங்களும் ஈசானு கதையென்று சொல்லப்படுகின்றன, பகவான் யோக நித்திரை செய்யும்போது ஜீவன் தன்னுடைய உபாதிகளுடன் அவரிடத்தில் லயிப்பதே நிரோத மெனப்படுகிறது. அவித்தையால் அத்யஸ்தமாகிய அநாத்ம ரூபத்தை

ஞானத்தால் தொலைத்து, தன்னுடைய நிஜரூபமாக இருப்பதே முக்தியாகும். ஸ்ருஷ்டியும் லயமும் எதன் இடமிருந்து உண்டாகின்றனவோ, எது பரமாத்மா என்றும் ப்ரஹ்மம் என்றும் சொல்லப்படுகிறதோ, அதே ஆசிரய மெனப்படுகிறது. ஆத்யாத் மிகனென்ற ஜீவனே ஆதிதெய்வீகம் (கண் முதலியவைகளுக்கு அதிதெய்வமான சூரியன் முதலியவை) ஆகிறான். கண்கள் முதலிய இந்திரிய கோளங்கள் அடங்கிய புருஷோபாதியாகிய தேஹமே ஆதிபௌதிகம். அறிகிற வன், அறியப்படுகிறது, ஸாதனம் ஆகிய மூன்றுக்குள் ஒன்றை விட்டு மற்றவை அறியக் கூடாத வைகளா கையால் இம்மூன்றையும் எவர் சாக்ஷியாக விருந்து தெரிந்து கொள்கிறாரோ அவரே பரமாத்மா. அவருக்கு வேறு ஆச்ரயமில்லை. எல்லாவற்றிற்கும் அவர் ஆச்ரய மாயிருப்பவர்.

10–34. விராட் புருஷன் ப்ரம்மாண்டத்தை பேதித்துக் கொண்டு எப்பொழுது வெளியில் வந் தாரோ (தனியாக இருந்தார் என்று கருத்து) அப் பொழுது தாம்சுத்தராகையால் தாம்வஸிப்பதற்குச் சுத் தமான ஸ்தானம் வேண்டுமென்ற எண்ணத்துடன் பரிசுத்தமான ஜலத்தை ஸ்ருஷ்டித்தார். அந்த ஜலத்தில் வஸித்தாலும் ஜலம் அவரிடத்திலிருந்து உண்டான தாகும். அவருக்கு நாராயணனென்று பெயருண்டா யிற்று. அவருடைய அனுக்கிரஹத்தால் தான் உபா தான காரணம், கர்மம், காலம் முதலிய நிமித்த காரணம் ஆகிய இவைகள் தங்களுடைய கார்யத்தை உண்டுபண்ணுகின்றன. அவருடைய அனுக்கிரஹமில் லாதவரையில் அவைகளுக்குக் கார்யத்தை உண்டு பண்ணக்கூடிய சக்தி ஏற்படுகிறதில்லை. அந்தப் புருஷன்

தாம் பலவகையான ஸ்வரூபத்தை அங்கீகரிக்க வேண்டுமென்ற ஸங்கல்பத்தை அடைந்து யோக நித்திரையிலிருந்து எழுந்திருந்து மிகுந்த ப்ரகாசமுள்ள திவ்ய தேஹத்தைத் தம்முடைய மாயையின் சம்பந்தத் தால் ஆத்யாத்மிகம், ஆதி தெய்வீகம், ஆதி பௌதிகம் என்று மூவகையாகப் பிரித்தார். அதெப்படி எனில் கிரியா சக்தியால், பலவகையாகச் சேஷ்டிக்கும் புருஷனுக்கு இந்திரிய சக்தி, மனத்தின் சக்தி, தேஹ சக்தி ஆகிய இவைகள் உண்டாயின. சூக்ஷ்ம ரூபியாகிய அந்த ஆத்மாவினிடமிருந்து முக்கியப் ப்ராணன் உண்டானான், அரசனை அவருடைய வேலைக்காரர்கள் அனுசரிப்பதுபோலப் ப்ராணன் அவருடையதாதலால் ஸகல இந்திரியங்களும் சேஷ் டிக்கின்றன. ப்ராணன் சேஷ்டிக்காவிடில் அவைகளும் சேஷ்டிக்கிறதில்லை, அந்தப் ப்ராணன் ப்ரபுவின் வயிற்றில் பரவும்போது, பசி, தாகம் ஆகிய இவைகள் உண்டாயின. பிறகு புஜிக்கவேண்டுமென்றும், குடிக்க வேண்டுமென்றும் விருப்பம் உண்டாயிற்று. பிறகு அந்தப் ப்ரபுவினிடமிருந்து முகமானது உண்டாயிற்று (பிரிந்தது). அதிலிருந்து ஜிஹ்வேந்திரியத்திற்கு அதிஷ் டானமாகிய தாலுவும் (நாக்கும்), அதிலிருந்து ஜிஹ்வேந்திரியமும், அதிலிருந்து அதனால் கிரஹிக்கப் படும் ஆறுவகையான ரஸங்களும் உண்டாயின. பேசவேண்டுமென்ற விருப்பம் அவருக்கு உண்டான பொழுது முகத்திலிருந்து அக்னியும், (இந்திரியாபிமானி தேவதை) வாக் என்னும் இந்திரியமும், அவ்விரண் டின் வியாபாரமாகிய பேச்சும் (இந்திரிய விஷயம்) உண்டாயின. அந்த அக்னி வெகுகாலம் ஜலத்தால் தடுக்கப்பட்டிருந்தது. ப்ராணவாயுவானது அதிகமாக அசையும் பொழுது மூக்குகள் உண்டாயின. அவை

களில் கந்தத்தை வஹிக்கும் வாயு உண்டானார். (ப்ரவேசித்தார்) கந்தத்தை கிரகிக்க விரும்பும்பொழுது அவ்விடத்தில் கிராணேந்திரியம் உண்டாயிற்று. எப்பொழுது ப்ரகாசமில்லாமலிருந்ததோ, அப்பொழுது தன்னையும் இதர வஸ்துக்களையும் பார்க்க, விரும்பிய போது கண்கள், உருவத்தைக் கிரகிக்கும் சக்தி, சக்ஷுரிந்திரியம் அதற்கு அபிமானி தேவதையாகிய ஆதித்யன் ஆகிய இவைகள் உண்டாயின. யோக நித்திரை செய்யும் ப்ரபுவைத் தேவர்கள் எழுப்புங் காலத்தில் அந்தச் சப்தத்தைக் கிரகிக்க அவர் விரும் பினார். அப்பொழுது காதுகளும், திக்குகளும் ,ச்ரோத்ரேந்திரியமும், சப்தத்தைக் கிரகிக்கும் சக்தியும் உண்டாயின. மேலும் வஸ்துக்களின் மெதுவாயிருக் கும் தன்மை, கடினமாயிருக்கும் தன்மை கனமுள்ளதாக விருப்பது, கனமில்லாமலிருப்பது, குளிர்ச்சி, உஷ்ணம் ஆகிய இவைகளைக் கிரகிக்க விரும்பும்போது துவக்கிந்திரியத்திற்கு அதிஷ்டானமாகிய தோல் உண் டாயிற்று. அதில் இந்திரியமும் தேவர்களும் உண் டானார்கள். ஸ்பரிசமாகிய குணமுள்ள வாயுவானது மேற்காட்டிய துவக் இந்திரியத்தின் உள்ளிலும் வெளி யிலும் வ்யாபித்திருக்கிறது. பின்னும் பலவகையான கார்யங்களைச் செய்ய விரும்பிய அவரிடமிருந்து கைகள் முளைத்தன. அவ்விரண்டு கைகளுக்கும் இந்திரன் தேவதையானான். எடுப்பது (ஆதானம்) அவைகளின் கார்யமாம். இன்னும், தமதிஷ்டப்படி நடக்க விரும்பிய அந்த ஆத்மாவிடமிருந்து பாதங்கள் முளைத்தன. அவைகளுக்கு யக்ஞஸ்வரூபியாகிய மஹாவிஷ்ணுவே தேவதையாக இருக்கிறார். நடப்பது அவைகளின் காரியம். யாகத்திற்கு உபயோகமான ஹவிஸ்ஸை வெகுதூரம் நடந்து ஸம்பாதிப்பதே அவை

களின் ப்ரயோஜனம். பிறகு குழந்தை, ஆனந்தம், அமிருதம் (ஸுகம் அல்லது ஸ்வர்க்கம்) ஆகிய இவை களை அடைய விரும்பிய அவரிடமிருந்து சிஸ்னம் (ஆண்குறியும் பெண்குறியும்) உண்டாயின. ஸ்திரீ களுடைய ஸம்போகத்தால் ஏற்படும் ஸுகத்திற்குக் காரணமும், இந்திரியம், தேவதை ஆகிய இவை களுக்கு ஆசிரயமுமான உபஸ்தேந்திரியம் அந்த சிஸ்னத்திலிருந்து உண்டாயிற்று. தாதுக்களின் மலத்தை (புஜித்த அன்னம் முதலியவைகளுடைய ஸாரமற்ற பாகத்தை) வெளிப்படுத்த விரும்பிய அந்தப் புருஷ னிடமிருந்து குதமானது உண்டாயிற்று. அதிலிருந்து பாயுவென்ற இந்திரியமும், அதனிடமிருந்து அதிதேவ தையான மித்திரனும் உண்டானார்கள். மலத்தை வெளிப்படுத்துவது இந்திரியம் அதன் ஸ்தானம் ஆகிய இரண்டையும் ஆசிரயித்தது. ஒரு தேஹத்தில் இருந்து மற்றொரு தேஹத்திற்குப் போகவிரும்பிய ப்ரஹத்தினுடைய ஸமஷ்டி அபானவாயுவினிடம் இருந்து நாபியாக உண்டாயிற்று. அதில் அபானனும், அதற்கு அதிஷ்டமான தேவதையாகிய மிருத்யுவும் உண்டாயின. மரணமானது பிராணன், அபானன் ஆகிய இவைகளைக் க்ரஹிக்க வேண்டுமென்று விரும்பிய அந்தப் ப்ரபுவினிடமிருந்து வயிறு, ஆந்த்ரம் (மாம்ஸ விசேஷம்), நாடிகள் ஆகிய இவைகள் உண்டாயின. அந்த நாடி, ஆந்த்ரம் ஆகிய இவை களுக்கு நதிகளும் ஸமுத்ரமும் (முறையே) தேவதைகள். அவைகளால் துஷ்டியும், புஷ்டியும் உண்டாயின. தம்முடைய ப்ரக்ருதியைச் சிந்திக்கும் அந்தப் ப்ரபு வினிடமிருந்து ஹ்ருதயம் உண்டாயிற்று. அதனிடம் இருந்து சந்திரனென்று ப்ரஸித்தியுள்ள மனஸ் உண் டாயிற்று. மேற்சொல்லிய ஹ்ருதயமே காமத்திற்கும்,

ஸங்கல்பத்திற்கும் இருப்பிடம் துவக் (மேல்தோல்) சர்மம் (உள்ளேயிருப்பது) மாம்ஸம் ரத்தம் மேதஸ் மஜ்ஜை எலும்பு ஆகிய ஏழு தாதுக்களும் பூமி, ஜலம், தேஜஸ் ஆகிய இவைகளின் ஸ்வரூபமாயுள்ளவைகள். ப்ராணன்கள் ஆகாயம் ஜலம், வாயு ஆகிய இவை களால் உண்டான இந்திரியங்களாவும் விஷயங்களில் செல்லும் ஸ்வபாவமுள்ளவை. சப்தம் முதலிய குணங் கள் அஹங்காரத்திலிருந்து உண்டானவை. ஸகல விகாரங்களுக்கும் (காமம், ஸங்கல்பம், ஸம்சயம், சிரத்தை, வெட்கம் முதலியவைகளுக்கும்) ஆதாரமா யுள்ளது மனதேயாம், விஞ்ஞான ஸ்வரூபமாயிருப்பதே (பலவகையான பிரபஞ்ச ரூபமாக ஆகவேண்டுமென்று பகவானுடைய எண்ணம்) புத்தியெனப்படுகிறது. பூமி முதலிய எட்டு ஆவரணங்களுள்ள மேற்சொல்லிய ரூபமானது பகவானுடைய ஸ்தூல ரூபம். ஸூக்ஷ்ம சரீரமானது மேற்காட்டிய ஸ்தூல ரூபத்துக்குக் காரணமாயிருப்பது. அது மிகவும் ஸூக்ஷ்மமாகையால் இந்திரியங்களுக்குப் புலப்படாதது. பேதமற்றது, ஆதி, மத்யம், அந்தம் ஆகிய இவைகளற்றது. எப்பொழுதும் ஒரே வகையுள்ளது. (இளைப்பு, விருத்தி முதலியவை களற்றது என்று கருத்து) வாக்குக்கும், மனத்திற்கும் மேலானது.

35–47. மேற்காட்டியபடி என்னால் உமக்கு உப தேசிக்கப்பட்ட பகவானுடைய ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபங் கள் மாயையால ஏற்பட்டவைகளாகையால் அவைகளை வித்வான்கள் உண்மையானவைகளாக அங்கீகரிக்கிறது இல்லை. (உபாஸனத்திற்காகப் பகவானிடம் ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபங்கள் ஆரோபிக்கபட்டனவென்று கருத்து) ஓ மஹாராஜ அந்தப் பகவான் ப்ரஹ்மதேவ ஸ்வரூபியாக

இருந்து, சப்தங்களின் பொருளாக விருக்கும் உருவங் களையும்; சப்தங்களைக் கொண்டு பெயர்களையும் ஸ்ருஷ்டிக்கிறார். மேலும் அவர் மாயையால் கர்மங்கள் அற்றவர்போல தோன்றினாலும் உண்மையில் கர்மங்கள் அற்றவர். ஒன்பது ப்ரஜாபதிகள் மனுக்கள் தேவர்கள், ரிஷிகள், பிதிரு கணங்கள் ஸித்தர்கள்; சாரணர்கள், கந்தர்வர்கள், வித்யாதாரர்கள், அஸுரர்கள், குஹ்யகர்கள் கின்னரர்கள் அப்ஸரஸுகள், நாகர்கள், ஸர்ப்பங்கள், கிம்புருஷர்கள், மாத்ரு கணங்கள், ராக்ஷஸர்கள், பிசாசங்கள் ப்ரேத கணங்கள், பூத கணங்கள், விநாயக கணங்கள் கூஷ்மாண்டங்கள், உன்மாதங்கள், வேதாலங் கள், யாதுதானர்கள் கிருஹங்கள், பறவைகள், மிருகங் கள், பசுக்கள், விருக்ஷங்கள், மலைகள், மலைப்பாம்பு கள், ஸ்தாவர ஜங்கமங்கள் என்ற இரண்டு வகை யுள்ளவையும், ஜராயுஜம், அண்டஜம், ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம் என்று நான்கு வகையுள்ளவைகளுமான ப்ராணிகள், ஜல ஜந்துக்கள், ஸ்தல ஜந்துக்கள் ஆகிய எல்லாவற்றையும் தரிக்கிறார். (ப்ரபஞ்ச ஸ்வரூபமாக இருக்கிறார் என்று கருத்து.) மேற்காட்டிய ப்ராணி களில் மேலானவை. மத்ய நிலையுள்ளவை, தாழ்ந்தவை ஆகிய இவைகள் புண்யம், பாபம், இரண்டின் கலப்பு ஆகிய கர்மங்களின் பலனேயாம். ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய இவைகளால் கர்மங்களின் கதி மூவகை யானது. ஸத்வத்தால் ஸ்வர்க்கம் முதலியவைகளும், ரஜஸ்ஸினால் பசு, புத்திரன் முதலியவைகளும் தமஸ்ஸினால் 21 நரகங்களும் உண்டாகின்றன. மேற் காட்டிய மூன்று வகையான கதிகளில் ஒன்றானது மற்ற இரண்டுகளால் அடக்கப்படும் பொழுது ஒவ் வொன்றிலும் மூன்று வகை ஏற்படுகின்றது. அந்தப் பகவானே இந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்து திர்யக் ஜாதி

ஆகவும், மனிதனாகவும். தேவனாகவும் அவதரித்து ஸ்ருஷ்டித்த ஜகத்தைப் பரிபாலனம் செய்தும், தர்ம ரூபியாக விருந்து அதனைப் போஷிக்கிறார். பின்பு ப்ரளய காலத்தில் மேகக்கூட்டத்தைக் காற்றானது கலைத்ததுபோல, அந்த மஹாபுருஷனே காலாக்னி ருத்ரரூபியாக விருந்து ஸம்ஹரிக்கிறார். மிகுந்த ஜ்ஞானமுள்ள அந்தப் பகவான் இப்போர்ப்பட்ட மஹிமை யுள்ளவர் என்று சொல்லப்படுகிறார். ஆனாலும் வித்வான்கள் அவரை இம்மாதிரியான குணமுள்ள வராக அறியமாட்டார்கள். ஏனெனில், இந்த ஜகத்தை உண்டு பண்ணுவது முதலியவைகளால் பரமாத்மாவிற்கு சம்பந்த மிருப்பதாகச் ஸ்ருதியின் தாத்பர்யமல்ல. மாயையைக் கொண்டு பகவானிடத்தில் ஆரோபிக்கப் பட்ட கர்த்ருவம் முதலியவைகள் அவரிடத்தில் உண்மையில் இல்லை என்று சொல்லுவதற்காக வேதமானது அவைகளை அனுமதித்தது. ப்ரஹ்மதேவ ருடைய கற்பமானது அவாந்தர கல்பத்துடன் சுருக்க மாகச் சொல்லப்பட்டது. இந்த மஹாகல்பத்தில் மஹத்தத்துவம் முதலியவைகளின் ஸ்ருஷ்டியும். ஸ்தாவரங்களின் ஸ்ருஷ்டியும் சொல்லப்பட்டிருக் கின்றன. இந்தப் பிரகாரமானது மற்ற மஹாகல்பம் முதலியவைகளுக்கும் பொதுவேயாம். காலத்தின் அளவையும் கல்பத்தின் லக்ஷணத்தையும் அதன் அவாந்தரவிபாகத்தையும் பாத்ம கல்பத்தையும் சொல்லுகிறேன். கேளும் என்றார்.

48–50. இம்மாதரியான ஸூதருடைய வார்த்தையை கேட்ட சௌனகர் அவரை நோக்கி, பாகவதர்களுக்குள் சிறந்தவராகிய விதுரர், மிகுந்த அபிமானமுள்ள பந்துக் களை விட்டுப் பிரிந்து பூமியிலிருக்கும் ஒவ்வொரு

தீர்த்தங்களிலும் சென்று யாத்திரை செய்தாரல்லவா? அந்த விதுரருக்கும், மைத்ரேயருக்கும் எந்த விடத்தில் பரமாத்மா விஷயமான ஸம்வாதம் நேர்ந்தது? அந்தப் பகவானாகிய மைத்ரேயரால் அவருக்கு உபதேசிக்கப் பட்ட ஆத்ம தத்துவம் யாது? விதுரர் பந்துக்களை விட்டுப் பிரிவதற்கு என்ன காரணம்? அவர் மறு படியும் ஏன் திரும்பிவந்தார்? அவருடைய சரிதம் எல்லாவற்றையும் சொல்லவேண்டும் என்று பிரார்த் தித்தார்.

51. அதனைக் கேட்டு ஸூதர், 'ஓ மஹரிஷிகளே பரீஷித்து மஹாராஜனால் கேட்கப்பட்டுச் சுக மஹா முனியானவர் எதனை அவருக்கு உபதேசித்தாரோ அதனைக்ரமமாக உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

நோட்டு

விஸர்க்கம் பகவான் தமோகுணத்தை அங்கீகரித்துச் செய்யும் லயம்சந்த். ப்ரஹ்மதேவரால் செய்யப்படும் ஸர்க்கம் வீர. ஸ்ருஷ்டி காலத்தில் பரமாத்மாவினிடம் இருந்து குணங்களுடைய வித்யாஸத்தால் உண்டாகும் மஹத்தத்துவத்தால் ஐந்து பூதங்கள், சப்தம் முதலிய வைகள், இந்திரியங்கள், புத்தி ஆகிய இவை முதல் அண்டம் வரையிலுள்ளவைகளின் உற்பத்தியே ஸர்க்கம். அண்டத்திற்குட்பட்ட புருஷனால் ஸ்ருஷ் டிக்கப்படும் பலவகையான ஸ்ருஷ்டியே விஸர்க்கம் விஜ். முக்திஜீவன் கர்மத்தால் கற்பிக்கப்பட்ட தேவாதி சரீரத்தைவிட்டுத் தன்னுடைய ஸ்வரூபமாகிய ஞானம், ஆனந்தம் முதலியவைகளுடனிருப்பது சந்த், பாபம் இல்லாமலிருப்பது முதலிய எட்டுக் குணங்களுடைய

வனாகத் தன்னைத் தெரிந்து கொண்டிருப்பது வீர, ப்ராகிருதம், வைகிருதம், ஸ்தூலம் ஸூக்ஷ்மம் ஆகிய இவைகளை விட்டு, சித்ஸ்வரூபியாயும், ஆனந்த ஸ்வரூபியாயும் இருப்பதுவிஜ. ஆதிபௌதிகம் சப்தம் முதலியவைகளுக்கும் ஆந்தரனாகவிருப்பவனே ஆதி பௌதிகன் வீர. ஸாக்ஷியாக இம்மூன்றுகளில் இந்திரியமாகிய ஸ்தானமில்லாவிடில் சப்தம் முதலிய விஷயங்கள் அறியப்படுகிறதில்லை. ஆனதால் ஜீவர்கள் மூன்று வகையான ஸன்னிகர்ஷமுள்ள பதார்த்தங் களை இந்திரியங்களால் அறிந்துகொள்ளுகிறாகள். பரமாத்மாவானவர்மூன்றையும் நேரில் பார்ப்பவர் வீர. ஆச்ரயமானஅசிதாஸ்ரயமான ஜீவனுக்கும் ஆச்ரயமாய் இருப்பவர். எப்படி ரதத்திலுடைய சக்கரத்திலுள்ள ஆரங்களில் நேமியும் (சக்கரத்தின் முனை) மத்யமாகிய குடத்தில் ஆரங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றனவோ, அப்படியே பூத மாத்திரைகள் ப்ரஞ்ஞாப மாத்திரை யிலும், அவைகள் ப்ராணனிடத்திலும் வைக்கப்பட்டு இ ருக்கின்றனஸ்ருதி. வீர.நாராயணன் 'ஜலங்களுக்கு நாரமென்று பெயர். அவைகள் ஸ்தானமாயிருந்தன. அதனால் நாராயணன்' என்று சொல்லப்பட்டார் ஸ்மிருதி.

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்கந்தம் 3

அத்தியாயம்-1

விதுரருக்கும்உத்தவருக்கும் ஸம்வாதம்

சுகர் பரீக்ஷித்து மகாராஜனை நோக்கி, "ஓ மகாராஜ! எல்லாவற்றிற்கும் அதிபதியும், ஹிருதயத்தில் வஸிப்பவருமான இந்த ஸ்ரீ கிருஷ்ண பகவான் பாண்டவர்களுக்குத் தூதராக அஸ்தினாபுரம் சென்றபொழுது அரசனாகிய துரியோதனனை லட்சியம் செய்யாமல் விதுரருடைய கிருஹத்திற்குச் சென்றாரல்லவா, அவ்வளவு மஹிமை பொருந்தியதும், ஸகல சம்பத்துக்களால் நிறைந்ததுமான தம்முடைய அந்த வீட்டை விட்டு விதுரர் முன்னொரு காலத்தில் காட்டில் சென்று அவ்விடத்தில் ஸர்வக்ஞரான மைத்ரேயரைச் சந்தித்து, இந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டார்" என்று சொன்னார். அதனைக் கேட்ட அரசன் சுகரை நோக்கி, "ஓ பிரபுவே! பகவானாகிய மைத்ரேயரும், விதுரரும் எவ்விடத்தில் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசிக் கொண்டார்கள்? மிகவும் சிறந்தவரான மைத்ரேயரை நோக்கிச் சுத்த சித்தரான அந்த விதுரரால் செய்யப்பட்டதும், பெரியோர்களால் அனுமோதித்துக் கௌரவப்படுத்தப்பட்டதுமான ப்ரச்னம் (கேள்வி) அற்ப விஷயமுள்ளதாக இராது. ஆகையால அதைச் சொல்ல வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

5-45 ஓ சௌனகர் முதலிய மஹர்ஷிகளே! இம்மாதிரி அரசனுடைய வார்த்தையைக் கேட்டு மஹர்ஷிகளுக்குள் சிறந்தவரும், பல விஷயங்களை

அறிந்தவருமான சுகர் மிகுந்த ப்ரியத்துடன் அரசனை நோக்கி, "திருதராஷ்டிர மகாராஜன் அதர்ம சிந்தையால் விவேகமில்லாதவராய் மிகவும் துஷ்டர்களான துரியோதனன்முதலிய புத்திரர்களை அதர்ம மார்க்கமாய்ப் போஷித்தும், தம்முடைய தம்பியாகிய பாண்டுவினுடைய குமாரர்களும், தகப்பனை இழந்தவர்களுமான தரும புத்திரர் முதலானவர்களை அரக்கு மாளிகையில் வஸிக்கச் செய்து அதில் அக்னியையும் வைத்தார். பிறகு துரியோதனன் சபையில் திரௌபதியின் தலைமயிரைப் பிடித்து இழுத்து வரச் செய்யும் பொழுது, அவள் தன்னுடைய ஸ்தனங்களிலிருக்கும் குங்குமம் கரையும்படி கண்ணீரைப் பெருக்கி அழுதாள். அப்பொழுது தனது மருமகளாகிய திரௌபதிக்கு நேர்ந்த துக்கத்தையும் புத்திரர்களுடைய கெட்ட நடையையும் பார்த்திருந்தும் மௌனமாக இருந்தார்.

மேலும் துரியோதனன் முதலியவர்கள் மிகுந்த சாதுவாகிய தருமபுத்திரரைச் சொக்கட்டான் ஆட்டத்தில் ஜயித்து நாட்டிலிருந்து காட்டிற்குப் போகச் செய்தார்கள். அப்பொழுது அவர் சத்தியத்திற்குட்பட்டுப் பன்னிரண்டு வருஷம் வனவாஸஞ் செய்தும், ஒரு வருஷம் அஞ்ஞாதவாஸஞ் செய்தும், பிறகு தம்முடைய பாகத்தைத் தமக்குக் கொடுக்கும்படி வேண்டிக் கொள்ள அப்பொழுதும் தமோ குணத்தால் அந்தத் திருதராஷ்டிர மகாராஜன் கொடுக்கவில்லை. பின்னும், ஜகத்திற்குக் குருவாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் தரும புத்திரரால் தூண்டப்பட்டு, அஸ்தினாபுரஞ் சென்று சபையில் சில வார்த்தைகளைச் சொன்னார். அவைகள் பீஷ்மர், முதலானவர்களுக்கு அமிருதமாக விருந்தன. துரியோதனன், திருதராஷ்டிரர்

முதலானவர்கள் க்ஷேமத்தைக் கொடுக்கும் புண்ணிய மில்லாதவர்களாகையால், அவைகளைப் பெரியவை களாக நினைக்கவில்லை. பின்னுமொரு சமயத்தில் திருதராஷ்டிரர் பாண்டவர்களுக்கு அவர்களுடைய பாகத்தைக் கொடுக்கும் விஷயமாய் ஆலோசிப்பதற்காக விதுரரைத் தம்முடைய அரண்மனைக்கு வரவழைத் தார். விதுரர் காரியம், அகாரியம் இவைகளை நன்றாக யோசித்துச் சொல்பவர்களுக்குள் சிறந்தவர், "விதுரருடைய வார்த்தை மிகவும் மேலானது" என்று ப்ரசித்தமாயிருக்கிறது. அப்பொழுது விதுரர் தமை யனை நோக்கி, "ஓ மகாராஜ! தரும புத்திரருக்கு ஓரிடத்திலும் விரோத புத்தியில்லாமையால் அவர் தம் சகோதரர்களுடன் உம்மால் செய்யப்பட்ட சகிக்க முடியாத அபகாரங்களைப் பொறுத்துக் கொண்டிருக் கிறார். தவிரவும், பீமசேனராகிய சர்ப்பமானது மிகுந்த கோபத்துடன் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக் கிறது. அந்த சர்ப்பத்தினிடம் நீர் எப்பொழுதும் மிகவும் பயந்து கொண்டிருக்கிறீரல்லவா? மேலும் ப்ராஹ்மணர்களையே தெய்வமாக கொண்டவராகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் குந்தியின் புத்திரர்களைத் தம்மைச் சேர்ந்தவர்களாக அங்கீகரித்திருக்கிறார். யாதவர்களுக்கு அதிபதியும், பூமியிலிருக்கும் ஸகல அரசர்களை ஜயித்தவருமாகிய அந்தப் பகவான் துவாரகா நகரத்தில் சுகமாக வஸிக்கிறார்.

மேலும், தோஷமே துரியோதனனென்ற பெயருடன் சரீரமெடுத்துக் கொண்டு உம்முடைய க்ருகத்தில் ப்ரவேசித்திருக்கிறது. இவனை அபத்யம் (எந்தக் குழந்தையால் பிதா நரகத்தையடையாமலிருப்பானோ அந்தக் குழந்தை) என்று நினைத்துப் போஷிக்கிறீர்.

இவன் பரம புருஷராகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் இடத்தில் விரோதபுத்தியுள்ளவன். இவனால் உமக்கு க்ஷேம்மம் கிடைக்காது, சம்பத்து உம்மை விட்டு விலகியது; கெட்ட நடையுள்ள இந்தப் புத்திரனை நாட்டை விட்டுத் துரத்தி விடவேண்டும். குலத்தின் க்ஷேமத்திற்காக ஒருவனைப் பரித்தியாகம் செய்வது நியாயமேயாகும், தரும புத்திரருக்கு அவருடைய பாகத்தைக் கொடுத்துவிடும்" என்றார். அதனைக் கேட்ட துரியோதனன் மிகுந்த கோபங்கொண்டு உதடுகள் துடிக்கக் கர்ணன், துச்சாதனன், சகுனி என்னும் இவர்களுடன் சாதுக்களால் விரும்பக்கூடிய ஸ்வபாமுள்ள விதுரரை யுத்தேசித்து, "தாசியின் புத்திரனாகிய விதுரன் கபட ஸ்வபாவமுள்ளவன். நம்முடைய அன்னத்தை புசித்தவனாயிருந்தும் நமக்கே விரோதம் செய்கிறான். சத்ருக்களுக்கு அனுகூலஞ் செய்வதில் ஜாக்ரதையாக இருக்கிறான். இவனை இந்த ஆலோசனை சபைக்கு எவன் அழைத்தான்? இவனை உயிருடன் பட்டணத்தை விட்டுத் துரத்த வேண்டும்" என்று அவமதித்துச் சொன்னான். இம்மாதிரி விதுரர் திருதராஷ்டிரருடைய முன்பாகத் துரியோதனனுடைய நிஷ்டுரவார்த்தை களாகிய பாணங்களால் அடிக்கப்பட்டும் அதனால் வருத்தப்படவில்லை. ஆனால், மாயையின் மஹிமை அளவிடமுடியாதது என்று ஆச்சரியமடைந்தார்.

பிறகு அவர் (விதுரர் அஸ்தினாபுர பட்டணத்தை விட்டு வெளியில் போய்ப் பீமசேனர் முதலியவர்களு டன் சேர்ந்த யுத்தத்திற்கு வருவாரோவென்று சந்தே கிக்க வேண்டாம் என்ற விஷயத்தை துரியோதனன் முதலியவர்களுக்குத் தெரிவிப்பதற்காக) தம்முடைய

வில்லை அவர்களுடைய அரண்மனை வாசலில் வைத்துவிட்டு, தம்மைத் துரத்த முயற்சிப்பதற்கு முன்னமேயே பட்டணத்திற்கு வெளியில் சென்றார். கௌரவர்களுடைய பாக்கிய ரூபியாகிய அந்த விதுரர் புண்ணியத்தைச் சம்பாதிக்க விரும்பி க்ஷேத்திராடனஞ் செய்ய ஆரம்பித்தார். க்ஷேத்திரங்களில் பகவான் ப்ரஹ்மா, ருத்திரன் முதலிய அநேக சரீரங்களுடன் ஸான்னியத்யஞ் செய்கிறார். வனங்கள், புண்யகரமாகிய தோட்டங்கள், மலைகள், கொடிவீடுகள், சுத்தமான ஜலமுள்ள நதிகள், ஏரிகள், பகவானுடைய மூர்த்திகளால் அலங்கரிக்கப்பட்ட க்ஷேத்திரங்கள் ஆகிய இவைகளில் சஞ்சரித்தார். மேலும், அவர் ஒவ்வாரு தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்தும் சுத்தமாகிய ஜீவனமுள்ளவராகப் பூமியில் படுத்துக் கொண்டு, மரவுரியை உடுத்திக் கொண்டு தம்முடைய பந்துக்களாலும், "இவர் விதுரர்" என்று தெரிந்து கொள்ள முடியாத ஸ்வரூபமுள்ளவராக ஸ்ரீ மகா விஷ்ணுவிற்குப் ப்ரியமாகிய வ்ரதங்களை அனுஷ்டித் தார். இப்படிப் பாரத வர்ஷம் முழுவதும் சஞ்சரித்துக் கடைசியில் ப்ரபாஸ தீர்த்தஞ் சென்றார். அந்தக் காலத்தில் தருமபுத்திரர் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய சகாயத்தால் ஸகல பூமியையும் பரிபாலித்து வந்தார். அப்பொழுது அவருடைய சைன்யம் ஒன்றுதான் பூமியிலிருந்தது. அரசர்களுக்கு அடையாளமாகிய வெள்ளைக் குடை ஒன்றே நிலைத்திருந்தது. மூங்கில்கள் ஒன்றோடொன்று சேர்ந்து அக்னி யுண்டுபண்ணி அதனால் அவைகள் எரிக்கப்படுவது போலக் கௌரவர்கள் நாசமடைந்தார்கள் என்று ஜனங்கள் சொல்லிக் கொள்வதை விதுரர் ப்ரபாஸ தீர்த்தக் கரையில் கேட்டு, வருத்தத்துடன் மௌனமாக

அவ்விடத்திலிருந்து மேற்கு முகமாய்ச் சரஸ்வதி நதியை நோக்கிச் சென்றார். அவ்விடத்தில் திரிதர், உசனஸ், மனு, பிருது, அக்கினி. அஸிதர், வாயு, ஸுதாஸர், கோ (பசு), சுப்பிரமண்யர், ச்ராத்த தேவர் என்னும் இவர்களுடைய பெயரால் ஏற்படுத்தப்பட்ட பதினொரு தீர்த்தங்கள் இருக்கின்றன. மேலும், மஹர்ஷிகளாலும், தேவர்களாலும் ஏற்படுத்தப்பட்ட விஷ்ணுவின் ஆலயங்கள் இருக்கின்றன. அவைகளின் மேற்புறத்திலிருக்கும் கும்பங்கள் பகவானுடைய சக்கரம் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு இருப்பதால் அவற்றைக் கண்டவுடன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய ஞாபக முண்டாகிறது. அவைகள் எல்லாவற்றையும் விதுரர் சேவித்தார்.

பிறகு, அவ்விடமிருந்து ஸௌராஷ்டிரம், ஸௌவீரம், மத்ஸ்யம், குருஜாங்கலம் என்னும் தேசங்களைத் தாண்டி, சிலகாலம் சென்றபின் யமுனையின் கரை சென்றார். அவ்விடத்தில் பகவத் பக்தராகிய உத்தவ ரைக் கண்டார். அவர் வசுதேவ புத்திரராகிய பகவானுடன் சஞ்சரிப்பவர். மிகவும் சாந்தர். ப்ரகஸ் பதியின் முந்திய சிஷ்யர், ப்ரசித்தர். இப்படிப்பட்ட உத்தவரை விதுரர் மிக்க பிரியத்துடன் தழுவி, பகவானால் போஷிக்கக்கூடிய தம்முடைய பந்துக்கள் க்ஷேமமாக வஸிக்கிறார்களாவென்று பின்வருமாறு விசாரிக்கத் தொடங்கினார். எப்படியெனில், தம்முடைய நாபியிலிருந்து உண்டான ப்ரஹ்மதேவர் உடைய வேண்டுகோளின்படி தாமே இரண்டு விதமாகப் பூமியில் அவதரித்துப் ப்ரஜைகளுக்கு ஆனந்தத்தை யுண்டு பண்ணிக் கொண்டிருக்கும் பலராமனும், ஸ்ரீ கிருஷ்ண பகவானும் சூரசேனருடைய

க்ருஹத்தில் க்ஷேமமாக வஸிக்கிறார்களா? பூஜ்யராகிய வசுதேவர் சுகமாக இருக்கிறாரா? அவர் சகோதரிகளுக்கு இஷ்டமான உத்தம வஸ்த்துக்களைக் கொடுத்து, பிதாபோல் அவர்களைப் பூஜிப்பவர்களல்லவா? யாதவ ஸைனியத்திற்கு அதிபதியான ப்ரத்யும்னர் க்ஷேமமாக இருக்கிறாரா? அவர் முன் ஜன்மத்தில் மன்மதனாக இருந்தவர். ப்ராஹ்மணர்களுடைய அனுக்கிரஹத்தால் ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு ருக்மணி தேவியினிடம் பிறந்தவர். தாமரை மலர் போன்ற கண்களுள்ள ஸ்ரீ கிருஷ்ண பகவான் இராஜ்யத்தை விரும்பாமல் உக்ரசேனருக்கு இராஜ் யாபிஷேகஞ் செய்வித்தாரல்லவா? சாத்வதர்களுக்கும், வ்ருஷ்ணிகளுக்கும், போஜர்களுக்கும், தாசார்ஹர்களுக்கும் அதிபதியான அந்த அரசன் சௌக்கியமாக இருக்கிறாரா? ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் சமமானவரும், ரதிகர்களுக்குள் முந்தியவரும், பகவானுடைய புத்திரருமாகிய சாம்பனென்பவர் க்ஷேமமாயிருக்கிறாரா? அவரை ஜாம்பவதி கடுமையான விரதங்களைச் செய்து புத்திரனாக அடைந்தாள். அவர் முன் ஜன்மத்தில் பார்வதிக்குப் புத்திரனாக இருந்த சுப்ரமண்யனேயாம். அர்ச்சுனனிடத்தில் அஸ்திர வித்தையை அப்பியசித்தவரும்; பகவானைச் சேவித்து யதுக்களுக்கும் அரிதாகிய பகவத் கதியை அடைந்தவருமான யுயுதானர் (ஸாத்யகி) க்ஷேமமா? பகவானிடத்தில் அதிகப் பக்தியுள்ளவரும், பாபமற்றவரும், விவேகியுமான அக்ரூரர் க்ஷேமமா? அவர் ஸ்ரீ கிருஷ்ணன் நடந்த இடத்தில் அவருடைய திவ்யமாகிய பாதம் வைத்த புண்ணிய ஸ்தலத்திலுள்ள தூளிகளின் விசேஷ பிரேமையால் தைரியம் தளர்ந்தவராகப் புரளுகிறவரல்லவா? வேதமானது யாக விதியாகிய பொருளையடக்கிக் கொண்டிருப்பது போல் தேவகி

ஆனவர் ஸ்ரீ மகாவிஷ்ணுவைத் தன்னுடைய வயிற்றில் தரித்தாளல்லவா? அவளுக்குச் சமமானவள் அதிதி தேவியே தவிர வேறில்லை, அந்தக் கிருஷ்ண பகவான் உடைய மாதா க்ஷேமமாக இருக்கிறாளா? அநிருத்தர் க்ஷேமமாக இருக்கிறாரா? அவர் பக்தர்களுக்கு அபீஷ்டத்தைக் கொடுப்பவர். அவரே சாஸ்திரத்திற்குக் காரணரென்றும், மனத்தைப் ப்ரவர்த்திக்கச் செய்பவர் என்றும், அந்தக்கரணத்தின் நான்காவது தத்துவமென்றும் தேவர்கள் சொல்லுகிறார்கள். தங்களுடைய ஆத்மாவிற்குத் தெய்வமாகிய ஸ்ரீ கிருஷ்ணனையே உபாசிப்பவர்களான ஹ்ருதிகர், சத்யபாமையின் புத்திரர் சாருதேஷ்ணர், கதர் முதலிய மற்ற பந்துக்கள் அனைவரும் க்ஷேமமாக இருக்கிறார்களா? தரும புத்திரர் தம்முடைய கைகள் போலிருக்கும் அர்ச்சுனன், ஸ்ரீ கிருஷ்ண பகவான் இவர்களுடன் தர்மமாக லோக மரியாதையைக் காப்பாற்றி வருகிறாரா? அர்ச்சுனன் உடைய ஒத்தாசையால் தர்மபுத்திரருக்குக் கிடைத்த இராஜ்யலக்ஷ்மியைக் கண்டு துரியோதனன் மிகவும் வருத்தப்பட்டானல்லவா? பீமசேனர் கதாயுத்தஞ் செய்யும்பொழுது அவருடைய பாதங்களின் சஞ்சாரத்தைச் சகியாமல் பூமி அசையுமே. அவர் வெகு நாளாகத் தமக்கு அபராதஞ் செய்தவர்களான சத்துருக்களைத் தக்கபடி சிட்சித்தாரா? அர்ச்சுனன் கிராத வேஷங் (வேட வடிவங்) கொண்ட பரமசிவனுடன் யுத்தஞ் செய்யும் சமயத்தில் அர்ச்சுனனுடைய பாணங்களால் அவர் மறைக்கப்பட்டு மிகவும் சந்தோஷமடைந்தாரல்லவா? ரதிகர்களுக்குள் மிகுந்த கீர்த்தியுள்ள இந்த அர்ச்சுனன் சத்ருக்களைக் கொன்றாரா? குந்திதேவியின் ஸ்தன்ய பானத்தால் வளர்ந்தவர்களும், இமைகளுடன் கண்கள் சேர்ந்து

இருப்பதுபோலக் குந்தி புத்திரர்களுடன் விசேஷ பிரேமையுடன் வசிப்பவர்களுமான நகுல சகாதேவர்கள் இருவர்களும் இரண்டு கருட பட்சிகள் மகேந்திரன் இடத்திலிருந்து அமிருதத்தைக் கொண்டு வந்தாற் போலத் தங்களுடைய ராஜ்யத்தை எதிரிகளிடமிருந்து வசப்படுத்திக் கொண்டு சந்தோஷிக்கிறார்களா? அதிரதரும், லோகத்தில் முக்கிய வீரராயுமுள்ள பாண்டு மகாராஜன் வில்லையே ஒத்தாசையாக வைத்துக் கொண்டு நான்கு திக்குகளையும் ஜயித்தார். அப்பேர்ப் பட்ட சூரனாகிய பர்த்தா இறந்தபிறகு குந்தியானவள் தன்னுடைய புத்திரர்களுக்காகவே உயிருடனிருந்தாள். ஓ, உத்தவரே துர்க்கதியை யடையத் தயாராக இருக்கும் திருதராஷ்டிரரைப் பற்றித் துக்கிக்கிறேன். அவர் தம்பியாகிய பாண்டு மகாராஜன் இறந்த பிறகு அவருடைய புத்திரர்களுக்குத் துரோகஞ் செய்ததால் சகோதரனுக்குத் துரோகஞ் செய்தவரானார். மேலும், அவர் தம்முடைய பிள்ளைகளான துரியோதனர்கள் உடைய இஷ்டப்படி என்னைப் பட்டணத்திலிருந்து துரத்தினாரல்லவா? ஆனாலும் மனுஷிய சரீரம் எடுத்து, அவர்களுடைய சித்தத்தைப் பலவகையில் செல்லும்படியாகத் தூண்டும் பகவானுடைய மார்க்கத்தை அவருடைய அனுக்கிரகத்தால் தெரிந்து கொண்டு நான் மற்றவர்கள் கண்களுக்குப் புலப்படாத வனாகிச் சஞ்சரிக்கிறேன். இதில் எனக்கு ஆச்சரியம் யாதுமில்லை. ஸ்ரீ கிருஷ்ண பகவான் துரியோதனன் முதலியவர்களைக் குற்றஞ் செய்த க்ஷணத்திலேயே கொல்லக்கூடிய சாமர்த்தியம் உள்ளவரானாலும் அப்பொழுதே அவர்களைக் கொல்லாமலிருந்தும், தாம் தூதராகி அவர்களிடம் சென்றும், அவர்களால் அவமதிக்கப்பட்டும், உதாசீனராய் இருப்பதற்கு யாது

காரணமென்று யோசிப்போமேயானால், வித்தை, தனம், மேலான குலத்தில் பிறப்பது ஆகிய மூன்று வகையாலும் ஏற்படும் மதத்தால் விவேகமற்றவர்களும், அளவற்ற சைனியர்களுடன் பூமியை அசைப்பவர்களு மான கெட்ட அரசர்களையும் நாசஞ் செய்து, பூமியின் பாரத்தைக் குறைப்பதற்காகவேயென்று நிச்சயிக்க வேண்டியதாயிருக்கிறது. உண்மையில் பிறப்பில்லாத மகாபுருஷன் துஷ்டர்களைச் ஸம்ஹரிப்பதற்காகவே ஜன்மத்தை அங்கீகரித்தார். மேலும் அவர் (அகர்த்தா) ஒன்றையுஞ் செய்யாதவரானாலும், மனிதர்களுக்குக் கர்மத்தில் ச்ரத்தை யுண்டாவதற்காகவே லீலைகளைச் செய்கிறார். இப்படி யில்லாவிடில் குணங்களை அதிக்கிரமித்தவராகிய பரமாத்மாவிற்குக் கர்மாதீன மாகிய சரீரம் எப்படி ஏற்படக் கூடும்? ஆதலால், தம்முடைய ஆக்ஞைக்குட் பட்டவர்களும் சரணம் அடைந்தவர்களுமான ஸகல லோக பாலகர்களுக்காக பூமியில் அவதரித்தவரும், ஜன்மமற்றவரும், சம்சாரத் தைப் போக்கக் கூடிய கீர்த்தியுள்ளவருமான ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய கதைகளைச் சொல்லும் என்றார்.

நோட்டு

பதினொரு –1. திரித தீர்த்தம். 2. உசனஸ் தீர்த்தம் 3. மனு 4. பிருது தீர்த்தம் 5. அக்கினி தீர்த்தம் 6. அஸித தீர்த்தம் 7. வாயு தீர்த்தம் 8. ஸுதாஸ தீர்த்தம் 9. கோ தீர்த்தம் 10. ஸுப்ரமண்ய தீர்த்தம் 11. சிரார்த்ததேவ தீர்த்தம்

அத்தியாயம்–2

உத்தவர் ஸ்ரீகிருஷ்ண சரிதத்தை வர்ணித்தது

விதுரருடைய பிரியமான வார்த்தையைக் கேட்டுப் பாகவத சிரோமணியான உத்தவர் அதிகப் பிரேமையால் ஸ்ரீ கிருஷ்ணனை மனத்தில் நினைத்துக்கொண்டு ப்ருதியுத்தரஞ் சொல்ல முடியாதவராயிருந்தார். அந்த உத்தவர் ஐந்து ப்ராயமுள்ள சிறுவனாயிருக்கும்போது ஒருநாள் பாலக்கிரீடையில் ப்ரதிமை ஒன்றை ஸ்ரீ கிருஷ்ணனாகப் பாவித்து, அதற்குப் பூஜை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது அவருடைய தாயான வள் காலையில் போஜனஞ் செய்யவேண்டியதற்காகப் பலவகையான நல்வார்த்தைகளை சொல்லி அவரை யழைத்தாள். அப்படியும் அவருக்கு ஆகாரத்தில் விருப்பம் உண்டாகவில்லை. பகவத் பக்தர்களுக்குள் சிறந்தவராகிய அப்போர்ப்பட்ட உத்தவர் பகவானுடைய சேவையாலேயே காலத்தைக் கழித்து ஜரையையடைந்தவராகையால் பகவானுடைய பாதங்களைத் தியானித்து, அதிலேயே ரமித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் விதுரருடைய கேள்விக்குப் ப்ரதியுத்தரஞ் சொல்ல முடியுமா? அவர் பகவானுடைய பாதாரவிந்த மதுவினால் விசேஷ ஆனந்த மடைந்து, மிகவும் திடமான பக்தி யோகத்தில் மூழ்கினவராகி ஒரு முகூர்த்தம் மௌனமாயிருந்தார். அப்போது அவர் உடைய எல்லா அவயவங்களிலும் மயிர்கூச்ச லுண்டாயிற்று கண்கள் மூடினவைகளாயிருந்தன. துக்கத்தால் கண்ணீர் பெருகியது. பகவத் விஷயமான விசேஷ ப்ரேம ரசம் நிறைந்தவரும் கிருதார்த்தருமாகி இருந்தார். பிறகு கொஞ்ச நேரம் சென்றபின்,

பகவானாகிய லோகத்திலிருந்து இவ்வுலகத்திற்கு வந்து கண்களைத் துடைத்துக்கொண்டு பகவான் செய்த லீலைகளை நினைத்து ஆச்சரயமுள்ளவராகி, விதுரரை நோக்கி பின்வருமாறு சொல்லலானார்: ஸ்ரீ கிருஷ்ணன் ஆகிய சூரியன் அஸ்தமயத்தையடைந்த போது காலமாகிய பெரிய சர்ப்பமானது நம்முடைய வீடுகளைக் கவர்ந்துகொண்டது. இந்த நிலைமையில் உம்மால் கேட்கப்பட்ட பந்துக்களுடைய க்ஷேமத்தைப் பற்றி எதனைச் சொல்வேன்? இவ்வுலகத்திற்கு அதிருஷ்டக்குறைவுண்டாயிற்று. யாதவர்கள் எல்லோரும் இங்கிதத்தை யறிந்தவர்களானாலும், மிகவும் ஸமர்த்தர்களானாலும், ஒரே இடத்தில் வசிப்பவர்கள் ஆனாலும் ஸகல பூதங்களுக்கும் இருப்பிடமாகிய ஈசுவரனை யாதவர்களுக்குள் சிறந்தவராக நினைத்தார் களே யொழிய மகாவிஷ்ணுவென்று தெரிந்து கொள்ளவில்லை. பாற்கடலில் இருக்கும் மத்ஸ்யங்கள் தங்களுடன் சகவாசஞ் செய்த சந்திரனையும் ஒரு வகையான ஜல ஜந்துவாக நினைத்தனவே யொழிய அமிருத ஸ்வருபியென்று தெரிந்துகொள்ளவில்லை. அவைகள் போன்ற யாதவர்களுக்குப் பாக்கியம் மிகவும் குறைந்துவிட்டது. சில யாதவர்கள் பகவான் உடைய மாயையால் மோகித்து, "இவர் யது குலத்தில் பிறந்தவர். நமக்குப் பந்து" என்று சொல்கிறார்கள்.

சிசுபாலன் முதலிய சிலர் விரோத புத்தியுள்ளவர் களாய் பகவானை நிந்தித்தார்கள். ஆனால் பகவான் இடத்திலேயே மனத்தைச் செலுத்தியவர்களுடைய (என்னை போன்றவர்களுடைய) புத்தியானது மேற் காட்டியவர்களுடைய வார்த்தையைக் கேட்டும் பிரமிக்கவில்லை, மேலும் பகவான் நன்றாகத் தவஞ்

செய்யாதவர்களும், பார்த்துத் திருப்தியடையாத கண்களுள்ளவர்களுமான மனிதர்களுக்குத் திவ்ய சரீரத்தைக் காண்பித்து ஜனங்களுடைய கண்களைக் க்ரஹித்துக் கொண்டு மறைந்தார். அந்தக் திவ்ய சரீரமானது மனுஷ்ய லீலைகளுக்குத் தகுதியானது அவருடைய மனத்திற்கும் ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியது. மிகுந்த சௌபாக்கியத்திற்கும் இருப்பிடம். ஆபரணங்களுக்கு அழகைக் கொடுக்கக் கூடிய அவயவங்களுள்ளது. மேலும் தரும புத்திரருடைய ராஜசூய யாகத்தில் வந்திருந்த ஸகல ஜனங்களும் ஆனந்தகரமாகிய அந்தச் சரீரத்தைப் பார்த்து ப்ரஹ்ம தேவர் ஸ்ருஷ்டி விஷயத்தில் தமக்கிருக்கும் சாமர்த்தியம் முழுவதையும் இந்தச் சரீரத்தில் காட்டியிருக்கிறார் என்று நினைத்தார்கள். அந்தக் திவ்ய மூர்த்தியினுடைய அனுராகமுள்ள சிரிப்பு விநோதம் விளையாட்டான பார்வை ஆகிய இவைகளில் அதிக ஆசை கொண்ட கோபஸ்திரீகள் அனைவரும் அவரவர்கள் செய்து கொண்டிருந்த காரியங்களை முடிக்காமலே பகவானையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். மேலும் அவர்களுடைய மனமானது பகவானிடத்திலேயே பதிந்து அவர் பின் சென்றது. அந்தப் பகவானுக்கு சாந்தம், அசாந்தம் என்று இருவகையான ஸ்வரூபம் உண்டு. அவைகளில் சாந்த ஸ்வரூபமாகிய சாதுக்கள், அசாந்த ஸ்வரூபமாகிய துஷ்டர்களால் உபத்திரவிக்கப் படும்போது காரியகாரணங்களுக்கு அதிபதியான பகவான் விசேஷ கருணையுள்ளவராக மாயையின் சம்பந்தத்தை அடைந்து (மகத் தத்துவத்தைக் காரியமாக உடையது அவ்யக்தம்) உண்மையில் பிறப்பில்லாதவரானாலும் எப்பொழுதும் சித்தமாக இருக்கும் அக்னியானது சில சமயத்தில் கட்டை

முதலியவைகளில் பிரகாசிப்பது போல் அவதரிக்கிறார் (பிரகாசிக்கிறார்). ஆனாலும் அளவற்ற வீரியம் உள்ள அந்தப் பகவான் வஸுதேவருடைய வீட்டில் காராகிருகத்தில்) பிறந்ததாக அபிநயஞ் செய்ததையும் கோகுலத்தில் வஸித்ததையும், கம்ஸனிடத்தில் பயந்தவர்போல் மதுரையை விட்டுப் போனதையும், ஒரு சமயத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான், தேவகி, வஸுதேவர் இவர்களுக்கு நமஸ்காரம் செய்து அவர் களை நோக்கி, ஓ அண்ண! ஓ அம்ம! கம்ஸனிடம் பயந்தவர்களான நாங்கள் உங்களுடன் சகவாசஞ் செய்து உங்களுக்குச் சிச்ருஷை செய்ய முடியாதவர் களானோம். அந்த விஷயத்தில் தயவுசெய்ய வேண்டும்! என்று கேட்டுக்கொண்டதையும் நினைக்கும்போது அவைகள் என் மனதிற்கு வருத்தத்தைப் உண்டு பண்ணுகின்றன. (ஆனாலும் அவரை ஈசுவரனல்ல வென்று எப்படி சொல்லக்கூடும்?) அவர் அசைகின்ற தம்முடைய புருவமாகிய யமனைக் கொண்டு பூமியின் பாரத்தைப் போக்கினார். (அவருடைய புருவத்தின் அசைப்பே துஷ்டர்களுக்கு யமனாக விருந்தது) அவர் உடைய பாதங்களின் தூளியை ஒரு தடவை சேவித்த வன் மறுபடி பிறப்பானா? மேலும் பகவானிடம் விரோத புத்தியுள்ள சிசுபாலன் தருமபுத்திரருடைய இராஜசூயத்தில் யோகிகளால் விரும்பக்கூடிய உத்தம பதத்தைப் பகவானுடைய அனுக்கிரஹத்தால் அடைந்தானென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அவரை விட்டுப் பிரிந்த துக்கத்தை யாரால் ஸகிக்க முடியும்? மேலும், யுத்தத்தில் அரசர்கள் அழகாக ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரை மலர்போன்ற முகத்தைத் தரிசித்து அர்ச்சுனனுடைய அஸ்திரத்தால் சுத்தர்களாகி விஷ்ணு பதத்தை

அடைந்தார்கள். அவருக்குச் சமமானவரும், மேலானவரும் உலகத்தில் ஒருவருமில்லை. அவர் ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் அதிபதி. பரமானந்த ஸ்வரூபியாகையால் ஸகல கர்மத்தையும் அடைந்தவர். இந்திரன் முதலிய லோகபாலர்கள், காணிக்கைகளுடன் அவர் உடைய தரிசனத்திற்காக வந்து, தங்களுடைய கிரீடம் அவருடைய பாத பீடத்தில் படும்படி நமஸ்கரிக்கிறார்கள். அதனாலுண்டாகும் சப்தமானது அவரைத் துதிப்பது போலிருக்கிறது. அந்த மகாபுருஷன் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும் உக்கிரசேனருடைய பக்கத்தில் நின்று, அரசர்களிடம் வேலைக்காரர்கள் சொல்லும் சம்பிரதாய வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டு கைங்கரியங்களைச் செய்து வந்தார். அதை நினைக்கும்போது என் மனம் நடுங்குகிறது. மேலும், பூதனையென்னும் துஷ்ட ராக்ஷஸியானவள் கொல்ல வேண்டுமென்று எண்ணத்துடன் காலகூட விஷயம் ஆகிய ஸ்தன்யத்தை அவருக்கு கொடுத்தும், அவள் இடத்தில் பகவான் கோபியாமலும் அவள் செய்த அபகாரத்தை நினைக்காமலும், யசோதைக்கு தகுதியாகிய உத்தம கதியை அவளுக்குக் கொடுத்தருளினார். பகவானுடைய கருணை வியக்கத்தக்கது. ஆகையால் அவரை விட்டு வேறு யாரைச் சரணம் அடைவோம்? அசுரர்களானாலும் பகவானிடத்தில் விரோதத்தாலாவது எப்பொழுதும் மனத்தைச் செலுத்தியவர்கள் ஆகையால் அவர்களும் பாகவதர்களேயாம். அவர்கள் யுத்தத்தில் கருடனையும்; அவர் மீது ஏறிவரும் சக்ரபாணியாகிய பகவானையும் தர்சித்தார்கள். முன்னொரு சமயத்தில் இந்தப் பூமியின் பாரத்தை நிவர்த்திப்பதற்காகத் ப்ரஹ்மதேவரால் ப்ரார்த்திக்கப்பட்டு ஸ்ரீ நாராயணன் ஸ்ரீ கிருஷ்ணன்

என்ற திவ்ய நாமதேயத்துடன் வஸுதேவருக்குத் தேவகியிடம் காராக்கிருகத்தில் புத்திரனாக அவதரித்தார். அப்பொழுது வஸுதேவர் கம்ஸனிடம் பயந்து வேண்டிக்கொள்ள, அவ்விடமிருந்து கோகுலஞ்சென்று, பலராமனுடன் பதினோரு வருஷங்கள் அவ்விடத்தில் வஸித்தார். யமுனையின் கரையில் கன்று மேய்க்கும் சிறுவர்களுடன் கன்றுகளை மேய்த்து கொண்டு விளையாடினார். அந்த நதியின் கரையிலிருக்கும் மரங்களின் கிளைகளில் பறவைகள் இனிமையாகச் சப்தித்துக் கொண்டிருந்தன. மேலும்; சிங்கக் குட்டி போல அழகாய்ப் பார்க்கும் ஸ்வபாவமுள்ள அந்தப் பகவான் சிறு வயதில் கோபர்கள் பார்த்து ஆனந்திக்கக் கூடிய கௌமார சேஷ்டைகளைக் காட்டியருளினார். சிலவேளை சிரிப்பதுபோலும், சில சமயம் அழுவது போலும் அபிநயஞ் செய்தார். அவரே சொற்ப காலத்திற்குப் பின் லக்ஷ்மிதேவிக்கு இருப்பிடமான வெண்மை நிறமுள்ள பசுக்களையும், விருஷங்களையும் வேணுகானஞ் செய்து சந்தோஷப்படுத்தினார். மேலும் அவர் கம்ஸனால் அனுப்பப்பட்டவர்களும், இஷ்டப்படி உருவமெடுக்கக் கூடியவர்களும், மாயாவிகளுமான அசுரர்களைச் சிறுவர்கள் ஆடும் ப்ரதிமைகளைப் போல நாசஞ் செய்தார். பின்னும் யமுனையிலிருந்து காளியன் என்ற சர்ப்பத்தின் விஷத்தால் கொதித்து இருந்த ஜலத்தைக் குடித்துப் பசுக்களும், கோபர்களும், மரணமடைந்தபோது அவர்களைப் பிழைக்கச்செய்து அந்தச் சர்ப்பத்தை, நிக்ரஹித்து அந்த ஜலத்தைச் சுத்தமாக செய்தார். பின்னும் அவர் இந்திரனை உத்தேசித்துச் செய்யும் பூஜையை நிறுத்தி, பசுக்களுக்குப் பூஜை செய்யும்படி நந்தரிடம் சொல்லி, அந்த மஹோத்ஸவத்தை ப்ராஹ்மணர்களைக் கொண்டு

முடித்து ஏராளமான இருந்த பணத்தை நல்ல விஷயத்தில் செலவிட்டார். பிறகு மகேந்திரன் கோபித்து அதிக மழை பெய்யச் செய்தான். அப் பொழுது பகவான் கோவர்த்தன மலையாகிய குடையைப் பிடித்துக் கோகுலத்தைக் காப்பாற்றினார். பின்னும் அவர் சரத்காலத்தில் நிர்மலமாகிய சந்திரிகையால் பிரகாசிக்கும் ராத்திரியில் அநேக ஸ்திரீகளுடைய மத்தியிலிருந்து இனிமையாக வேணுகானஞ் செய்து கொண்டு விளையாடினார்.

அத்தியாயம்–3

ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதங்கள்

1–23 பிறகு அந்தப் பகவான் தம்முடைய தாய் தந்தையர்களுக்கு க்ஷேமத்தைச் செய்ய விரும்பிப் பலராமனுடன் கோகுலத்திலிருந்து மதுரா நகரஞ் சென்று அவ்விடத்தில் உயரமான இராஜ மஞ்சத்தி லிருப்பவனும் தம்முடைய சத்துருக்களில் பிரதானனு மாகிய கம்ஸனைக் கொன்று, உயிரற்ற அவனுடைய சரீரத்தைப் பூமியில் இழுத்தார். மேலும் அவர் ஸாந்தீபனி என்பவரைக் குருவாக வரித்து, வேதங்களை அவைகளின் அங்கங்களுடன் அவரிடமிருந்து ஒரு தரம் உபதேசித்த மாத்திரத்திலேயே க்ரஹித்துக் கொண்டார். சில நாளைக்கு முன் இறந்து போன குரு புத்திரனை, பஞ்சஜனனென்ற ராக்ஷஸனுடைய வயிற்றைக் கிழித்து, அழைத்து வந்து, குருதக்ஷணை யாக ஆசார்யரிடம் சமர்ப்பித்தார். பீஷ்ம மகாராஜ னுடைய புத்திரியும், லக்ஷ்மீதேவி போன்றவளுமாகிய ருக்மிணி தேவியின் ரூபலாவண்யத்தால் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பி விதர்ப்ப தேசத்தில் வந்து கூடிய அரசர்களுடைய சிரசில் பாதங்களை வைத்து மிகுந்த இலாகவத்துடன் தம் முடைய சொத்தாகிய அந்த ருக்மிணியை அபகரித் தார். பின்பு அவளைக் காந்தர்வ விதிப்படி கல்யாணஞ் செய்துகொண்டார். பின்னும் அவர் அங்குக் குத்தப் படாதவைகளான வ்ருஷபங்களை ஜயித்து, நக்னஜித் தின் புத்திரியை விவாகஞ் செய்து கொண்டார். அப்பொழுது ஏற்கனவே அந்த வ்ருஷபங்களை அடக்கமுடியாமல் வெட்கப்பட்டு அப்புறம் சென்ற

அரசர்கள் அந்த ராஜகுமாரியிடம் ஆசைகொண்டு ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் யுத்தத்திற்கு வந்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களை ஆயுதங்களாலேயே கொன்றார். ஆனால் பகவானுக்குக் கொஞ்சமேனும் காயமில்லை. மேலும் அவர் தாம் சுதந்திரரானாலும் ஸ்திரீகளுக்கு வசப்பட்டவர் போல சத்யபாமையின் பிரீதிக்காக பாரிஜாத வ்ருக்ஷத்தைப் பூமிக்குக் கொண்டுவந்தார். அப்பொழுது ஸ்திரீகளின் கிரீடா மிருகம்போன்ற இந்திரன் மிகவும் கோபங்கொண்டு சைனியங்களுடன் பகவானுடன் யுத்தம் செய்தான். மேலும் அவர் ஆகாயம் வரையில் பரவிய சரீரமுள்ள வனும், பூமியின் புத்திரனுமாகிய நரகாசுரனைச் சக்ராயுதத்தால் கொன்றார். பின்பு பூமிதேவியால் ப்ரார்த்திக்கப்பட்டு நரகனுடைய புத்திரனாகிய பகதத் தனுக்கு இராஜ்யத்தைக் கொடுத்து நரகனுடைய அந்தப்புரத்தில் ப்ரவேசித்தார். அவ்விடத்தில் நரகாசுரனால் அநேக தேசங்களிலிருந்து கொண்டுவரப் பட்ட இராஜ கன்னிகைகள் இருந்தார்கள், அவர்கள் அனைவரும், உபத்திரவ மடைந்தவர்களுக்குப் பந்து வாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானைக் கண்டவுடன் எழுந்திருந்து, சந்தோஷம், வெட்கம், ஆசை ஆகிய இவைகளுடன் பார்த்தார்கள். பிறகு அவர்களெல்லோரு க்கும் தனியாக அந்தப்புரங்களை ஏற்படுத்தி, அவை களில் ஒரே சமயத்தில் தம்முடைய மாயையால் அநேக ரூபமெடுத்துக் கொண்டு விதிப்படி அவர்களை விவாகம் செய்துகொண்டார். பின்பு தமது மாயையை விஸ்தரிப்பதற்காக அந்த ஒவ்வொரு ஸ்திரீயினிடத்தி லும் தமக்கு சமமான பத்துப்புத்திரர்களை உண்டு பண்ணினார். மேலும் அவர் தமது பட்டணத்தை முற்றுகை செய்தவர்களான காலயவனன், மாகதன்,

ஸால்வன் ஆகிய இவர்களை முசுகுந்தர் முதலியவர் களை நிமித்தாமாக வைத்துக் கொண்டு தாமே கொன்றார். தம்மைச் சார்ந்தவர்களுக்குக் கீர்த்தியை உண்டு பண்ணினார். சம்பரனையும், துவிதனையும், பாணனையும், முரனையும், பல்வலனையும், தந்தவக்தி ரன் முதலியவர்களையும் கொன்றார். மற்றவர்களைப் ப்ரத்யும்னன் முதலியவர்களைக் கொண்டு கொல்வித் தார். மேலும் பாண்டவர்களுடைய பட்சத்திலும் துரியோதனனுடைய கட்சியிலும் யுத்தத்திற்குச் ஸித்தர்களாக இருப்பவர்களும், சகோதரர்களும், புத்திரர்களுமாகிய அரசர்களெல்லோரையும் நாசஞ் செய்தார். அந்த ஸைன்யத்தால் குருக்ஷேத்ர பூமியானது அசைந்தது. கர்ணன், துச்சாஸனன், சகுனி ஆகிய இவர்களுடைய துராலோசனையால் துரியோத னுடைய ஐசுவர்யமும், ஆயுசும் குறைந்ததுமன்றி அவனுடைய ஸைனியங்களும் நாசமடைந்தன. கடைசியில் துரியோதனுடைய தொடைகளும் முறிக்கப்பட்டன. அவன் பூமியில் விழுந்தான். அப் பொழுது அவனைப் பார்த்தும் சந்தோஷப்பட வில்லை. ஆனாலும், த்ரோணர், பீஷ்மர், அர்ஜுனர், பீமசேனர் ஆகிய இவர்களால் அக்ஷௌஹிணி ஸைன்யங்கள் கொல்லப்பட்டன. அதனால் பூமியின் பாரம் கொஞ்சம் குறைந்தாலும், அளவற்ற யாதவ ஸைன்யமானது , என்னுடைய அம்சர்களான ப்ரத்யும்னர் முதலியவர்களால் காப்பாற்றப்பட்டுச் சத்துருக்களால் ஜயிக்க முடியாததாக இருக்கிறது. அது பூமி பாரமல்லவா? அதை நாசஞ் செய்வதற்கு என்ன உபாயம்? மத்ய பானஞ்செய்து சிவந்த கண்களுடன் மதங்கொண்டு அவர்கள் ஒருவருக்கொரு வர் யுத்தஞ்செய்தாலொழிய அவர்களைக் கொல்ல

உபாயமில்லை. நான் என்னுடைய லோகஞ் சென்றால் யாதவர்களெல்லோரும் சண்டைசெய்து நாசமடைவார்கள் என்று ஆலோசித்து, தருமபுத்திரருக்கு இராஜ்யாபிஷேகஞ் செய்வித்து, வர்ணாசிரம தர்மங்களை அனுஷ்டித்துக் காண்பித்து, சந்தோஷிக்கச் செய்தார். பின்னும் புருவின் வம்சம் தொடர்சியற்று போகாமல் இருப்பதற்காக அபிமன்யுவினால் உத்தரையினிடம் கர்ப்பம் உண்டு பண்ணப்பட்டதல்லவா? அந்தக் கர்ப்பமானது அச்வஸ்த்தாமாவினுடைய அஸ்திரத்தால் எரிக்கப்படும்போது அக்குழந்தையை ஸ்ரீ கிருஷ்ணன் காப்பாற்றினார். மேலும் அவர் தருமபுத்திரருக்கு மூன்று அசுவமேத யாகங்களை நடத்தி வைத்தார். அந்த தருமபுத்திரரும் ஸ்ரீ கிருஷ்ண பகவானை ஆச்ரயித்தவராய்த் தம்முடைய தம்பிகளுடன் பூமியைப் பரிபாலித்தார். ஸகல ஜகத்ருபியாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானும் சிரௌத கர்மங்களையும், ஸ்மார்த்த கர்மங்களையும் அனுஷ்டித்து, துவாரகா நகரத்தில் காமங்களை அனுபவித்தார். ஆனால் ஆத்ம தத்துவத்தை அறிந்தவராகையால் அவைகளில் அபிமானம் வைக்கவில்லை. மேலும், அவர் தம்முடைய புன்சிரிப்பு உள்ள பார்வையாலும், அமிருதம், போன்ற வார்த்தையாலும், குற்றமற்ற சரித்திரத்தாலும், லக்ஷ்மீதேவிக்கு வாசஸ்தலமாகிய சரீரத்தாலும், பூலோகத்தையும், மேலுலகத்தையும் சந்தோஷிக்கச் செய்தார். இரவில் ஸ்திரீகளுக்குச் சந்தோஷத்தை உண்டு பண்ணி அவர்களிடத்தில் க்ஷணநேரம் பிரீதி செய்பவரான ஸ்ரீ கிருஷ்ண பகவான் யாதவர்களை விசேஷமாகச் சந்தோஷப்படுத்தினார். இப்படி ஸ்ரீ கிருஷ்ண பகவான் வெகு வருஷங்கள் க்ருஹஸ்தாச்ரமத்தை அனுஷ்டித்து கர்மங்களை அனுபவித்த பிறகு அவைகளில்

வைராக்கியம் அடைந்தார். கர்மங்கள் யாவும் தெய்வாதீனங்காளாயிருக்கின்றன. அவைகளை அனுபவிக்கும் புருஷனும் அந்தத் தெய்வத்துக்கு வசப்பட்டவனாகவே இருக்கிறான். அப்படியிருக்க, யோகாப்பியாசத்தால் ஈசுவரனை அனுசரித்த எவன்தான் அவைகளில் ஆசைப்படுவான்?

24–28 பிறகு ஒருகால் துவாரகா நகரத்தில் யதுகுமாரர்களும், போஜ குமாரர்களும் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அவ்விடத்தில் வந்த ப்ராஹ்மணர்களுக்கு அவர்கள் கோபத்தை உண்டு பண்ணினார்கள். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய அபிப்பிராயத்தை அறிந்த ப்ராஹ்மணர்கள் அந்தக் குமாரர்களைச் சபித்தார்கள். சில மாதம் சென்ற பின்பு, வ்ருஷ்ணிகளும், போஜர்களும், அந்தகர்களும் ரதங்களின் மீதேறிக் கொண்டு தெய்வத்தால் புத்தி மாறினவர்களாகி, மிகவும் சந்தோஷத்துடன் ப்ரபாஸமென்ற தீர்த்தம் சென்றார்கள். அந்தப் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, பிதிரு தர்ப்பணம், தேவதர்ப்பணம், ரிஷிதர்ப்பணம் ஆகிய இவைகளை முடித்துக் கொண்டு உத்தமமான பசுக்களையும், சுவர்ணத்தையும், வெள்ளியையும், படுக்கைகளையும், வஸ்திரங்களையும், மான் தோல் முதலியவைகளையும், கம்பளங்களையும், குதிரைகளையும், ரத்தினங்களையும், யானைகளையும், கன்னிகைகளையும், ஜீவனத்துக்குப் போதுமான தானியம் விளையக்கூடிய பூமியையும், ப்ராஹ்மணர்களுக்கு கொடுத்தார்கள். மேலும் பசுக்கள், ப்ராஹ்மணர்கள் ஆகிய இவைகளுக்காகவே ஜீவிப்பவர்களும், சூரர்களுமான அவர்கள் மேலான ரசமுள்ள அன்னத்தையும் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்து அவர்களுக்கு நமஸ்காரம் செய்தார்கள்.

அத்தியாயம் 4

விதுரர் மைத்ரேயரைச் சந்தித்தது

1–18. பின்பு அவர்கள் ப்ராஹ்மணர்களிடம் விடைபெற்று மத்யத்தைக் குடித்து, அதனால் மயக்கம் அடைந்து மர்ம ஸ்தானங்களைப் பிளக்கக்கூடிய கெட்ட வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டார்கள். மேலும், மத்யபானஞ் செய்து புத்தி மாறிப்போனதால் சூரியன் அஸ்தமனத்தை அடைந்து பிறகு மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்ந்து கொள்வது போலக் கலகம் செய்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ண பகவான் தம்முடைய மாயையின் காரியமாகிய அந்தக் கலகத்தைப் பார்த்து சரஸ்வது நதியில் ஆசமனஞ் செய்து ஒரு அரசமரத்தின் கீழ் உட்கார்ந்திருந்தார். அதற்கு முன்னமேயே என்னை நோக்கி, ஓ உத்தவ, நீ பத்ரிகாச்ரமம் போ என்று தம்முடைய குலத்தைக் கொல்லவேண்டுமென்று விரும்பியவரும், பக்தர்கள் உடைய உபத்திரவத்தைப் போக்கடிப்பவருமாகிய ஸ்ரீ பகவான் சொல்லியிருந்தார். அப்படியும் நான் அவர் உடைய அபிப்பிராயத்தை அறிந்திருந்தும் அவர் உடைய பாதங்களை விட்டுப் பிரிய மனமில்லாதவனாக ஸ்ரீ கிருஷ்ணன் பின் சென்றேன். பிறகு சரஸ்வதி நதியின் கரையில் ஒருவராய் உட்கார்ந்திருப்பவரும், ப்ரீதியுள்ளவரும்; நாதருமாகிய பகவானைக் கண்டேன், அவர் லக்ஷ்மிக்கு வஸிக்குமிடம்; ஆச்ரயம் அற்றவர்; கறுத்த திருமேனியுள்ளவர் ரஜோகுணம் இல்லாதவர், மிகவும், சாந்தர், அழகான கண்கள் உள்ளவர், நான்கு கைகளுள்ளவர். பீதாம்பரம் தரித்தவர், இடத்தொடையில் வலக்காலை வைத்துக்

கொண்டு சிறிய அஸ்வத்த மரத்தில் சாய்ந்து கொண்டு இருப்பவர், விஷய சுகத்தில் ஆசையில்லாதவர், ஆனந்தத்தால் நிறைந்தவர். அப்பொழுது வ்யாஸ மகா முனிக்கு மித்திரரும், கிருதகிருத்யருமாகிய மைத்ரேயர் தெய்வச் செயலால் அவ்விடம் வந்தார். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ண பகவான் பக்தராகிய மைத்ரேயர், முன்பாகப் ப்ரியம், சிரிப்பு ஆகிய இவைகளுள்ள பார்வையால் சிரமத்தை நிவர்த்தித்துக்கொண்டு என்னை நோக்கி, ஓ உத்தம உம்முடைய மனத்தில் இருக்கும் எண்ணமென்னதென்று எனக்குத் தெரியும், முன்ஜன்மத்தில் நீர் ப்ரஜாபதிகளான வஸுக்களுடைய யாகத்தில் என்னைப் பூஜித்தீர். ஆதலால் என்னுடைய ஸ்தானத்தை யடைய வேண்டுமென்று நீர் நினைத்தது மற்றவர்களுக்குத் துர்லபமேயாகும், ஓ சாதுவே! மனுஷ்ய லோகத்தை விட்டு நான் வைகுண்டம் செல்லும் சமயத்தில் மிகுந்த பக்தியுடன் என்னை நீர் தரிசித்து என்னுடைய அனுக்கிரகம் பெற்றபடியால் இதுவே உமக்குக் கடைசியான ஜன்மம். முந்திய பாத்மகல்பத்தில் என்னுடைய கொப்பூழில் தோன்றிய, தாமரஸ புஷ்பத்திலிருந்து ப்ரஹ்மதேவருக்கு என் மகிமையைக் காண்பிக்கும் ஞானத்தை உபதேசித்தேன். அதனை வித்வான்கள், பாகவத ஞானமென்றார்கள். அதனை உமக்கு உபதேசிக்கிறேனி என்றார். இப்படிப் பரமபுருஷன் மிகுந்த ப்ரீதியுடன் சொல்லி ஒவ்வொரு க்ஷணத்திலும் என்னை அனுக்கிரகிக்கும் போது, எனக்கு அவரிடத்தில் பக்திமேலிட்டு அதனால் மயிர்கூச்சலுண்டாயிற்று. துக்கத்தால் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு கத்கத ஸ்வரத்துடன் கை கூப்பிப் பகவானை நோக்கி ஓ ஈச உம்முடைய பாதார விந்தங்களை ஆச்ரயித்தவர்களுக்கு நான்கு

புருஷார்த்தங்களில் எதுதான் கிடைக்காது? ஆனாலும் எனக்குத் தருமம் முதலியவைகளில் ஆசை இல்லை. உம்முடைய பாதங்களைச் ஸேவிப்பதிலேயே விருப்பம் உள்ளவனாக இருக்கிறேன். கர்மங்களுடைய சம்பந்தம் அற்றவராகிய நீர் கர்மங்களை அனுஷ்டிப்பது, ஜன்மம் அற்றவரானாலும் பூமியில் அவதரிப்பது, காலரூபியாகிய நீர் சத்துருக்களிடம் பயந்து ஓடுவது, சமுத்திர மத்யத்திலுள்ள துவாரகா நகரத்தில் ஒளிந்து வஸிப்பது. ஆத்மாவினால் சந்தோஷப்படுகிறவரானாலும் அநேக ஸ்திரீகளைக் கல்யாணம் செய்துகொண்டு கிருஹஸ்தாசிரமத்தை அடைந்திருப்பது, ஆகிய இவைகளைக் கண்டு வித்வான்களுடைய புத்தியும் மோஹத்தை அடைகிறது. மேலும் ஓ தேவ! தடையற்றதும், பூர்ணமும், சம்சயமற்றதுமான ஆத்ம ஞானமுள்ளவராகிய நீர் ராஜ காரியங்களைப்பற்றி ஆலோசிக்க வேண்டிய ஸமயத்தில் வெகு ஜாக்கிரதை யுள்ளவராகிய என்னை வரவழைத்து ஒன்றுமறியாதவர்போல் ராஜ்யத்தில் என்னுடைய அபிமதத்தைக் கேட்கிற வழக்கமல்லவா? அதனை நினைக்கும்போது என் மனம் மோஹத்தை அடைகிறது. ஓ ஸ்வாமியே! ஆத்மாவின் உண்மையைத் தெரிவிக்கக்கூடியதும், மேலானதுமான எந்த ஞானத்தைப் பூர்ணமாக நீர் ப்ரஹ்மதேவருக்கு உபதேசித்தீரோ, அது என்னால் தெரிந்துகொள்ளக் கூடியதானால் அதை உபதேசியும். அதனால் சம்சார துக்கத்தைப் போக்கிக் கொள்ளுவேன் என்று ப்ரார்த்தித்தேன்.

19–22. பிறகு தாமரை மலர்போன்ற கண்களுள்ளவரும் குருவுமாகிய ஸ்ரீ பகவான் என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துக்கொண்டு தம்முடைய

உத்தமகதியை எனக்கு உபதேசித்தார். இம்மாதிரி பகவானுடைய பாதங்களாகிய தீர்த்தத்தை ஆராதித்து ஆத்மஞானத்தை அடைந்தேன். பின்பு அவருடைய பாதங்களில் நமஸ்கரித்து அவரைப் ப்ரதக்ஷிணஞ் செய்து அவருடைய விரஹத்தைச் ஸஹிக்காமல் மனவருத்ததுடன் இவ்விடம் வந்தேன். அவரைத் தரிஸித்ததால் உண்டான சந்தோஷமுள்ளவனும், அவரை விட்டுப் பிரிந்ததால் உண்டான துக்கமுள்ளவனுமாகிய நான் அவருக்கு மிகவும் இஷ்டமான பதரிகாசிரமத்தை உத்தேசித்துப் போகிறேன். அவ்விடத்தில் நர நாராயணரென்று திவ்ய நாமதேயங்களுடன் பகவான் முனி வேஷம் பூண்டு பிறருக்கு இம்சை இல்லாமலும், மற்றவர்களால் அனுஷ்டிக்க முடியாததுமான தபஸை வெகு காலமாகச் செய்து வருகிறார் என்று சொன்னார்.

23–25. அதைக் கேட்டு வித்வானாகிய விதுரர் சகிக்க முடியாத பந்துக்களின் நாசத்தை. உத்தவர் முதமாகத் தெரிந்துகொண்டு, அந்தத் துக்கத்தை விவேகத்தால் அடக்கிக் கொண்டார். அப்போது விதுரர், கிருஷ்ணை பக்தர்களுக்குள் முக்கியரும், பாகவதர்களுக்கு உத்தமரும். பதரிகாசிரமம் செல்லுபவருமான உத்தவரை நோக்கி, ஓ உத்தவ! யோகீசுவராகிய ஈசுவரன் ஆத்மாவின் உண்மையை காண்பிக்கும் எந்த மேலான ஞானத்தை உமக்கு உபதேசித்தாரோ அதனை நீர் எனக்கு உபதேசிக்கவேண்டும். ஏன் என்றால், விஷ்ணு பக்தர்கள் பக்தர்களைக் காப்பாற்றுவதற்காக உலகத்தில் சஞ்சரிக்கிறார்களே யொழிய, அவர்களுக்குச் சொந்தமான காரியம் வேறு ஒன்றும் இல்லை என்று ப்ரியமாகக் கேட்டுக்கொண்டார்.

26–27. அதனைக் கேட்டு உத்தவர் விதுரரை நோக்கி ஓ விதுரா! பகவான் பூலோகத்தை விட்டு வைகுண்டம் செல்லும் காலத்தில் உமக்கு உபதேசம் செய்வதற்காக மைத்ரேய மகாமுனிக்கு ஆக்ஞாபனம் செய்திருக்கிறார். ஆனதால் அவரை ஆத்மஞானத் திற்காக நீர் உபாசிக்கவேண்டும் என்று சொல்லி அன்று ராத்ரி யமுனா நதியின் மணல் திட்டில் ஸகல ஜகத் ஸ்வரூபியான பகவானுடைய கதைகளை விதுரருக்குச் சொல்லிக்கொண்டு அந்த அமிருதத்தில் ஸ்நானஞ் செய்து, தாபமில்லாதவராக அன்றிரவை ஒரு க்ஷணம் போல கழித்து மறுநாள் பதரிகாசிரமஞ் சென்றார் என்று சுகர் சொன்னார்.

28. அதனைக் கேட்டு பரீட்சித்து மகாராஜன் சுகரை நோக்கி, ஓ ப்ராஹ்மண! அதிரதர்களும், அவர்களுடைய சேனாபதிகளுமாகிய வ்ருஷ்ணிகள், போஜர்கள் ஆகிய இவர்கள் நாசமடைந்த பிறகு, ப்ரஹ்மா, விஷ்ணு, சிவபெருமான் ஆகிய இவர்களுக்கு மேலானவராகிய பகவான் தம்முடைய சரீரத்தை விட்டுவிட்டாரல்லவா? அப்பொழுது உத்தவர் மாத்திரம் எப்படியிருந்தார்? என்று கேட்டார்.

29–32. அதனைக் கேட்டு சுகர், அரசனை நோக்கி, ஓ மகாராஜ வீணாகாத சங்கற்பமுள்ள பகவான் மிகவும் விருத்தி யடைந்திருந்த தம்முடைய குலத்தைப் ப்ராஹ்மண சாபத்தை நிமித்தமாகவுடைய தம்முடைய சக்தியைக் கொண்டு நாசஞ்செய்து தம்முடைய தேகத்தைவிட்டுவிட விரும்பியபொழுது, நான் இவ்வுலகத்தை விட்டு மேலுலகஞ் சென்றால் எனக்கு ஸ்வாதீனமான ஞானத்தை அடைவதற்கு

இந்திரியங்களை ஜயித்தவர்களுக்குள் உத்தமராக இருக்கும் உத்தவரே தகுதியானவர், மேலும், என் இடத்திலிருக்கும் குணங்கள்யாவும் கொஞ்சமேனும் குறைவின்றி இவரிடத்தில் இருக்கின்றன. இவர் விஷயங்களால் கலக்க முடியாதவர். ஆதலால் இவர் ஆத்ம ஞானத்தை ஜனங்களுக்கு உபதேசித்துக் கொண்டு இருக்கட்டும் என்று யோசித்து மூவுலகத் திற்கும் குருவாயும் வேதங்களுக்குக் காரணராயும் இருக்கும் அந்த பகவான் இவரைப் பூமியில் வஸிக்கும் படி ஆக்ஞாபித்தார் உத்தவரும் அந்த உத்தர்வின்படி பத்ரிகாசிரமத்தில் பகவானைச் ஸமாதியில் பூஜித்து வந்தார்.

32–36. ஓ குரு சிரேஷ்ட விதுரரும், பரமாத்மா வாகிய கிருஷ்ணன் லோகானுக்ருஹார்த்தமாய்ப் பூமியில் அவதரித்து நடத்திய உத்தமமான சரிதங்களை உத்தவர் சொல்லக்கேட்டு, ஞானிகளுக்குத் தைரியத்தை விருத்தி செய்யக்கூடியதும் மற்றவர்களால் செய்ய முடியாததுமான பகவானால் செய்யப்பட்ட சரீர தியாகத்தையும் தெரிந்துகொண்டு (பகவான் விதுரருக்கு மைத்ரேயரை ஞானோபதேசம் செய்யும்படி ஆக் ஞாபனம் செய்தார் என்றதை) உத்தவருடைய வார்த்தையால், தம்முடைய ஞாபகம் அவருக்கு இருந்ததையும்; நன்றாகத் தெரிந்துகொண்டது இல்லாமல் பாகவதராகிய உத்தவர் பதரிகாசிரமம் சென்ற பிறகு ஸ்ரீ கிருஷ்ண பகவானையே தியானஞ் செய்து அழுதார். பிறகு பாகவதர்களுக்குள் சிறந்த வராகிய விதுரர் யமுனா நதியிலிருந்து மைத்ரேயர் வஸிக்கும் இடமாகிய கங்கா தீரத்திற்குச் சில தினங்களில் சென்றார்.

அத்தியாயம்–5

மைத்ரேயருக்கும் விதுரருக்கும் ஸம்வாதம்

1–16 ஓ மகாராஜ! இப்படி குருக்களில் சிறந்த வராகிய விதுரர், கங்கையின் கரையில் உட்கார்ந்து இருப்பவரும், அளவற்ற ஞானமுள்ளவரும், பகவத் தியானத்தால் சுத்தரும், நல்ல ஸ்வபாவமுள்ளவராக இருப்பதாகிய குணத்தால் திருப்தியடைந்தவருமான மைத்திரேயரைக் கண்டு, அவருடைய சமீபஞ் சென்று, ஓ மகரிஷியே! ஜனங்கள் சுகத்தை அடைய வேண்டியதற்காகக் கர்மங்களைச் செய்கிறார்கள். ஆனால் அவைகளால் சுகமாவது, துக்க, நாசமாவது ஏற்படுகிறதில்லை. அவைகளால் துக்கமே நேரிடுகிறது. ஆதலால் சம்சாரத்தில் எதனைச் செய்வது யுக்தமோ அதனைச் சொல்ல வேண்டும். பூர்வ ஜன்மத்திய கர்ம வசத்தால் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் பக்தி செய்யாதவனும், அதர்ம ஸ்வபாவமுள்ளவனும், துக்கத்தை அடைந்தவனுமாகிய ஜனத்தை அனுக்கிர கிப்பதற்காகவே திவ்ய மங்களங்களான விஷ்ணுவின் சரீரங்கள் இவ்வுலகத்தில் சஞ்சரிக்கின்றன. ஓ சாதுக்களில் சிறந்தவரே! எந்த உபாயத்தால் பகவானை ஆராதித்தால் இருதயம் சுத்தமாகும்? எதில் பகவான் வாசஞ் செய்து அனாதியாகிய அபரோக்ஷ ஞானத்தை கொடுப்பார்? அந்த சுக ரூபமான மார்க்கத்தை உபதேசிக்க வேண்டும். முக்குண சரூபமாகிய மாயைக்கு அதிபதியும்; படைப்பது முதலியவைகளுக்கு அதிபதி யும், சுதந்திரருமாகிய பகவான் பூமியில் அவதரித்து எந்தக் காரியங்களைச் செய்தார்? ஒரு விஷயத்திலும் ஆசை அற்றவரான அந்தப் ப்ரபு இந்த உலகத்தை முன் காலத்தில் எப்படி ஸ்ருஷ்டித்தார்? மறுபடியும்

தம்மால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஜகத்திற்கு ஜீவனத்தைக் கற்பித்து எப்படிக் காப்பாற்றுகிறார்? மறுபடியும் அந்தப் பரமாத்மாவே வியாபாரம் அற்றவராக இந்த ஜகத்து முழுவதையும் தம்முடைய இருதயாகாசத்தில் அடக்கிக் கொண்டு யோக மாயையிடம் எப்படிச் சயனஞ் செய்தார்? யோகிகளுக்கு அதிபதியும், ப்ரபஞ்சத்தின் உள் ப்ரவேசித்தவருமாகிய அந்தப் பகவான் தாம் ஒருவரானாலும் ப்ரஹ்மா முதலிய அநேக உருவங்களை எப்படித் தரிக்கின்றார்? மேலும் அவர் மத்ஸ்யம், கூர்மம் முதலிய அவதாரங்களைச் செய்து ப்ராஹ்மணர்களுக்கும், பசுக்களுக்கும், தேவர் களுக்கும் அனுகூலமான காரியங்களைச் செய்கிறார். புண்ய ஸ்லோகர்களுக்குள் ச்ரேஷ்டராகிய அந்தப் பகவானுடைய சரிதங்களைக் கேட்டு என்னுடைய மனம் திருப்தி யடையவில்லை. ஸகல லோகத்திற்கும் அதிபதியாகிய புருஷன் எந்த எந்தத் தத்துவங்களைக் கொண்டு லோக பாலர்களையும்,லோகங்களையும், லோகா லோக பர்வதங்களையும் கற்பித்தார்? மேலும் ஸகல ப்ராணிகள், அதன் கூட்டம் ஆகிய இவை களுடைய பேதமானது அவரவர்களுடைய கர்மத் திற்குத் தக்கபடி எற்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது? ஓ ப்ராஹ்மணச்ரேஷ்ட! தாமாக உண்டானவரும், லோகங்களைச் ஸ்ருஷ்டித்தவருமான ஸ்ரீமந் நாராயணன் ப்ரஜைகளுடைய ஸ்வபாவத்தையும், கர்மாவையும், பெயரையும் எப்படி வெவ்வேறாகச் செய்தார்? அவற்றை எனக்குச் சொல்லும். ஓ பகவன்! ப்ராஹ்மணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள் (பர) சூத்ரர்கள் (அபர) ஆகிய இவர்களால் அனுஷ்டிக்க வேண்டிய வ்ரதங்களை வ்யாஸ மகர்ஷியின் முகமாக அடிக்கடி கேட்டிருக்கின்றேன். அவைகள் அற்ப

பலத்தைக் கொடுக்கக் கூடியவைகள். ஆதலால் அவை களைக் கேட்கப் போதுமென்ற திருப்தி உண்டாயிற்று. ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய கதையைக் கேட்பதில் அப்படிப்பட்ட திருப்தி உண்டாகிறதில்லை. ஏனெனில், அந்தக் கதாமிருதமானது புருஷனுடைய காதுவழியாக உட்சென்று சம்சார துக்கத்தைக் கொடுக்கும் அபிமானத்தைப் வீடு முதலானவைகளில் என்னுடைய தென்பதை) போக்கடிக்கிறது. ஆகையால் சாதுக்களின் கூட்டத்தில் நாரதர் முதலிய விவேகிகளால் கொண்டாடப்பட்ட ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய கதையிலிருந்து எவன்தான் திருப்தியடைவான்? பகவத் குணங்களைச் சொல்ல வேண்டுமென்ற விருப்பமுள்ள வரும், உமக்கு மித்திரருமான வ்யாஸ மகர்ஷியானவர் எனக்குப் பாரதக் கதையைச் சொன்னார். அதில் கிராம்ய சுகங்கள் வருணிக்கப்பட்டிருந்தாலும் அவை களைத் துச்சமென்று சிந்தித்து பகவானுடைய கதையிலேயே மனம் பதிந்திருக்குமானால் விஷயங் களில் வைராக்கியமுண்டாகும். பகவானுடைய கதையை நினைப்பதனால் சுகமடைந்தவனுக்கு ஸகல துக்கங்களும் நீங்கிவிடுகின்றன. மேலும், எவர்கள் பாகவதத்தின் கருத்தையறியாதவர்களோ அவர்கள் துக்கிக்கத் தகுந்தவர்கள். வீணான வார்த்தை சிந்தை இவைகளுள்ள அவர்களுடைய ஆயுளைத் தேவனாகிய காலமானது குறைத்து விடுகிறது. ஆதலால் இவர்களைப் பற்றித் துக்கிக்கிறேன். ஓ மைத்திரேய! இந்த லோகத்துக்கு க்ஷேமத்தை யுண்டு பண்ணுகிற வரும், சம்சார துக்கமுள்ளவர்களுக்குப் பந்துவுமாகிய ஸ்ரீ மகா விஷ்ணுவினுடைய சாரமான கதையைப் புஷ்பங்களிலிருந்து வண்டானது தேனை எடுப்பது போல நீர் எடுத்துரைக்க வேண்டும். ஜகத்தைச்

ஸ்ருஷ்டிப்பதற்கும், அவைகளைப் பரிபாலிப்பதற்கும், நாசஞ் செய்வதற்கும் எவர் சத்வம் முதலிய குணங்களை அடைந்தாரோ, அவரே பின்பு பூமியில் அவதரித்துப் புருஷர்களால் செய்ய முடியாத எந்த எந்தக் காரியங்களைச் செய்தாரோ அவைகளைச் சொல்லும் என்று கேட்டார்.

17–50 இப்படி விதுரர் மனிதர்களுடைய க்ஷேமத் திற்காகக் கேட்க, அதனைக் கேட்டு, குஷாரவருடைய புத்திரராகிய மைத்ரேய மஹர்ஷி விதுரரை நோக்கி, அவரைக் கொண்டாடி, "ஓ சாதுவே! நீர் நன்றாகக் கேட்டீர். இதனால் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் மனதைச் செலுத்தியவரான உமக்குக் கீர்த்தி விருத்தியடையும். ஜனங்கள் உம்மால் அனுக்கிரகிக்கப் பட்டார்கள். ஓ விதுர! நீர் ஸ்ரீ மகா விஷ்ணுவிடத்தில் ஏகாந்த பக்திசெய்து, அவரை சுவாதீனப்படுத்திக் கொண்டிருக்கிறீர்; மேலும் நீர் வ்யாஸ மகர்ஷியின் புத்திரரானதால் "பகவத் கதையைச் சொல்ல வேண்டும்" என்று நீர் ப்ரச்னம் செய்வது ஆச்சரியம் அல்ல. பகவத் பக்தியில்லாதவர்களைச் சிட்சிப் பவராகிய யமன், ஆணிமாண்டவ்யருடைய சாபத்தால் வ்யாஸருடைய ப்ராதாவாகிய விசித்திரவீரியனுடைய களத்திரம் போன்ற தாசியினிடம் வ்யாஸ மகர்ஷிக்குப் புத்திரனாகப் பிறந்தார். அவர் நீர் தான். மேலும் நீர் ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கும், பாகவதர்களுக்கும் ப்ரியர். அதனால்தான் பகவான் பரலோகஞ் செல்லும் சமயத்தில் உம்முடைய ஞாபகம் வைத்துக்கொண்டு உமக்கு ஞானோபதேசஞ் செய்யும்படி எனக்கு ஆக்ஞாபனஞ் செய்தார். ஆதலால் யோக மாயையின் ஆச்சர்ய சக்தியால் கற்பிக்கப்பட்டவைகளும்,

ஜகத்தின் உற்பத்தி, பரிபாலனம் ஆகிய இவைகளையே ப்ரயோசனமாக வுடையவகைளுமான பகவானுடைய லீலைகளைக் க்ரமமாய் வருணிக்கிறேன். ஸ்ருஷ்டி காலத்தில் பலவகையாகத் தோன்றுகிறவரும், எல்லாப் ப்ராணிகளின் ஸ்வரூபமாக விருப்பவரும், எங்கும் இருப்பவருமாகிய பகவானுக்குத் தாமொருவராக இருக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாகும் சமயமான ஸ்ருஷ்டிக்கு முந்திய காலத்தில் அவர் ஒருவரே இருந்தார். அந்தப் பரமாத்மாதான் பார்க்கிற வராய் (திருஷ்டாவாக) இருந்து கொண்டு, பார்க்கப் படும் வஸ்துவை (திருச்யத்தை) பார்க்கவில்லை. ஏன் என்றால் அவர் தாம் ஒருவரேயாக அப்பொழுது ப்ரகாசித்துக் கொண்டிருந்தார். மாயை முதலிய சக்திகள் அடங்கியிருந்ததால் தம்மை இல்லாதவர் போல் நினைத்தார். (பார்க்கப்படும் வஸ்து இல்லாவிடில் பார்க்கிறவனென்ற வியவகாரம் இல்லாததனால் என்பது கருத்து). ஆனால் அவர் (திருக்) சக்தியுள்ளவர். காரிய காரண ஸ்வரூபமான அந்த ஸத்தாகிய திருஷ்டாவினு டைய சக்தியே மாயை என்று சொல்லப்படுகிறது. ஓ மகா பாக்கியமுள்ளவரே! ப்ரபுவாகிய பகவான் அந்த மாயையைக் கொண்டே உலகத்தைப் படைத்தார். சித்சக்தியுள்ள பரமாத்மாவானவர் காலத்தின் சக்தியால் கலங்கின குணங்களுள்ள மாயையினிடத்தில் தம்முடைய அம்சமாயிருக்கும் புருஷனைக் கொண்டு சிதாபாஸமாகிய வீர்யத்தை வைத்தார். காலத்தால் தூண்டப்பட்ட அந்த மாயையினிடமிருந்து அஞ் ஞானத்தைப் போக்கக் கூடிய விஞ்ஞான ரூபமாகிய மகத்தத்துவமானது தன்னுடைய தேகத்தில் அடங்கி இருக்கும் ஜகத்தை வெளிப்படுத்திக் கொண்டு உண்டாயிற்று. அம்சம், சிதாபாஸம், குணங்கள்

காலம் ஆகிய இவைகளுக்கு ஸ்வாதீனமாக அந்த விஞ்ஞானாத்மாவானவர் பகவானுடைய கடாக்ஷத் தால் இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிக்கவேண்டிய நிமித்தம் வேறு உருவத்தை அடைந்தார். அந்த மகத் தத்துவத் திலிருந்து காரியம் காரணம், கர்த்தா ஆகிய இவை களுக்கு ஆசிரயமும், பூதங்கள், இந்திரியங்கள், மனஸ் ஆகிய இவைகளின் உருவமாயுமிருக்கும் அகங்காரம் ஆனது உண்டாயிற்று. அது வைகாரிகம், தைஜஸம், தாமஸம் என்று மூன்று வகையுள்ளது. வைகாரிகம் என்ற அகங்காரம் வேறு உருவத்தை அடைய, அதனிடமிருந்து மனம் உண்டாயிற்று. இந்திரியங் களுக்கு அதிபதிகளும், சப்தம் முதலிய விஷயங்களைப் ப்ரகாசிக்கச் செய்பவர்களுமான காரிய தேவதைகளும் வைகாரிகர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். ஞானேந்திரியங்களும், கர்மேந்திரியங்களும் தைஜஸங் கள் என்று சொல்லப்படுகின்றன. சூட்சும பூதமாகிய சப்தமானது தாமஸ அகங்கார தத்துவத்திலிருந்து உண்டாயிற்று. அதனிடமிருந்து, ஆத்மாவிற்குச் சரீரம் ஆகிய ஆகாசமானது, எல்லாவற்றிற்கும் அதிபதியான பகவானால் பார்க்கப்பட்டு, காலம், ப்ரக்ருதி, சிதா பாஸம் இவைகளுடைய சேர்க்கையால் உண்டாயிற்று. ஆகாசத்திலிருந்து உண்டான ஸ்பர்சமானது வேறு உருவத்தை யடைந்து வாயுவை உண்டுபண்ணிற்று. அந்த வாயுவும் வேறு உருவத்தை அடைந்து ஆகாச சம்பந்தத்தால் விசேஷ உருவ பலத்துடன் ரூபதன்மாத்ரையை உண்டுபண்ணிற்று. அதுவே யோகத்தைப் ப்ரகாசிக்கச் செய்யும் ஜ்யோதிஸ்ஸாகும். அந்த ஜ்யோதிஸ்ஸானது வேறு உருவத்தை அடைந்து வாயுவுடன் பரமேசுவரனால் கடாக்ஷிக்கப்பட்டு, காலம், மாயை, அம்சம் ஆகிய இவைகளுடைய

சேர்க்கையால் ஜலத்தை உண்டு பண்ணிற்று. அந்த ஜலமானது தேஜசுடன் விகாரத்தை அடைந்து பகவானுடைய கடாக்ஷம் பெற்று, காலம், மாயை அம்சம் ஆகிய இவைகளுடைய சம்பந்தத்தால் கந்தத்தைக் குணமாயுடைய பூமியை உண்டு பண்ணிற்று. ஆகாசம் முதலிய பூதங்களுக்குள் எதற்கு எது காரணமோ, எதற்கு எது காரியமோ, அந்தக் காரிய பூதங்களுக்குக் காரண பூதங்களுடைய சேர்க்கையால் மேல்மேலும் அதிகமான குணங்கள் உண்டாகின்றன. காலலிங்கமாகிய விகாரம், மாயா லிங்கமாகிய விட்சேபம், அம்சலிங்கமாகிய சைதன்யம் ஆகிய இவைகளுள்ளவர்களும், மகத்தத்துவம் முதலிய வைகளுக்கு அபிமானிகளாயுமுள்ள இந்தத் தேவர்கள் விஷ்ணுவின் அம்ச பூதர்களேயாம். இந்தத் தேவர்கள் அநேகர்களாகையால் ப்ரம்மாண்டத்தை உண்டு பண்ண அசக்தர்களாக ப்ரபுவாகிய மகாவிஷ்ணுவிடம் வந்து கை கூப்பி, "ஓ தேவ! உம்முடைய பாதாரவிந்தத்தை நமஸ்கரிக்கிறோம். அது சரணம் அடைந்தவர்களுக்குத் தாபத்தை நிவர்த்திக்கும் குடையாக இருக்கிறது. அந்தப் பாதார விந்தத்தின் மூலத்தை ஆசிரயித்து யதிகள் சம்சார துக்கத்தை அடைகிறதில்லை. ஆகையால், ஓ, பகவான் எப்பொழுதும் ஞானப்ரகாசமுள்ள உம்முடைய பாதச் சாயையை ஆச்ரயிருக்கிறோம். ஓ, பகவான்! சுத்த சித்தர்கள், விஷயத்தில் ஆசை இல்லாத தம்முடைய மனத்தில் உம்முடைய முகமாகிய தாமரைப் புஷ்பத்தில் வஸிக்கக்கூடிய வேதங்களாகிய பட்சி களைக் கொண்டு எதனைத் தேடுகிறார்களோ, பாபங் களைப் போக்கடிக்கும் ஜலமுள்ள அநேக நதிகளுள் சிறந்தவளாகிய கங்கையானவள் எதனிடமிருந்து உண்டானாளோ அந்த உம்முடைய பாதாரவிந்தத்தைச் சரணமடைகிறோம்.

தைரிய முள்ளவர்கள் மிக்க ச்ரத்தையுடன் பகவத் குணங்களைக் கேட்டு, அதனால் பக்தியடைந்து, அதனால் தம்முடைய இருதயத்தைச் சுத்தமாகச் செய்து கொண்டு, அதில் எதனைத் தியானஞ் செய்து வைராக்யம், ஞானம் ஆகிய இவைகளை அடைகிறார் களோ, அந்தப் பாதங்களை ஆச்ரயிக்கிறோம். ப்ரபஞ்சத்தைச் ஸ்ருஷ்டிப்பதற்கும், பரிபாலிப்பதற்கும், நாசஞ் செய்வதற்கும் அவதரித்தவரான உம்முடைய பாதாரவிந்தத்தை நாங்களெல்லோரும் சரணமடை கிறோம். அதை நினைத்த மாத்திரத்தில் பக்தர்களுக்கு ஸகல பயமும் நீங்குகிறது. ஓ தேவ! இந்திரியம் முதலிய பலவகையான சாமக்கிரியுள்ள இந்த அற்பமான தேகத்தில் "நான், என்னுடையது" என்ற துரபிமானம் வைத்திருக்கும் புருஷர்களுக்குத் தங்களுடைய தேகத்தில் வஸிப்பவராகிய உம்முடைய பாதாரவிந்தம் வெகு தூரத்திலிருப்பதாக ஆகி விடுகிறது. அதைச் சரணமடைகிறோம். மாயைக்கு அதிபதியான பரம புருஷ! பெரியோர்களால் கானம் பண்ணக்கூடியவரே! எவர்கள் இந்திரியங்களை வெளியிலிருக்கும் விஷயங்களில் செலுத்தி உம்மிடத்தில் மனதைச் செலுத்தாமல் இருக்கிறார் களோ அவர்கள் உம்முடைய லீலைகளைக் கானம் பண்ணிக் கொண்டு ப்ரகாசிக்கும் பக்தர்களையும் பார்க்க மாட்டார்கள்.

ஓ தேவ! உம்முடைய கதாஅமிருதத்தைப் பானம் செய்து, மிகுந்த பக்தியால் சுத்த சித்தர்களாக இருப்பவர்கள் வைராக்கியத்தை அடைந்து, உடனே வைகுண்ட லோகஞ் சேருகிறார்கள். சிலர் பரமாத்மாவினிடத்தில் ஸ்திரமாக மனதைச் செலுத்து வதாகிய உபாயத்தால் மிக்க பலமுள்ள ப்ரக்ருதியை

ஜயித்து உம்மையே அடைகிறார்கள். ஆனால் அது ச்ரமமான மார்க்கம். உம்மைச் ஸேவிப்பதாகிய மார்க்கம் மிகவும் ச்ரமமற்றது. எல்லாவற்றிற்கும் ஆதியாக இருப்பவரே! உலகங்களைச் ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்ற விருப்பத்தால் முக்குணங்களைக் கொண்டு நாங்கள் அனைவரும் உம்மால் உண்டு பண்ணப்பட்டோம். அந்தக் குணங்களின் ஸ்பாவம் ஒன்றுக்கொன்று விரோதமாக இருப்பதால் நாங்கள் ஒன்றுசேராமல் இருக்கிறோம். உம்முடைய விளை யாட்டுக்குச் சாதனமான ப்ரம்மாண்டத்தைப் படைத்து உம்மிடம் சமர்ப்பிக்க எங்களால் முடியவில்லை.

பிறப்பில்லாதவரே! அனுபவிக்க வேண்டிய காலத்தில் போகத்தை எப்படி சமர்ப்பிப்போம்? நாங்கள் அன்னத்தை எப்படிப் புசிப்போம்? இந்த ஜீவர்கள் விக்கின மில்லாதவர்களாக நும்மிருவர் களுக்கும் பாகத்தைக் கொடுத்துக் கொண்டு எப்படித் தாமும் அன்னத்தைப் புசிப்பார்கள்? தேவர்களாகிய எங்களுக்கும் எங்களுடைய காரணத்திற்கும் நீரே காரணம். விகாரமற்றவர், புராண புருஷர். பிறப்பு அற்றவர். காரணமாகிய மாயையினிடத்தில் எல்லா வற்றையும் அறிந்த மகத் தத்துவ ஸ்வரூபமாகிய ரேதஸ்ஸை முதலில் வைத்தீர். ஓ பரமாத்மாவே! மகத்தத்துவம் முதலிய நாங்கள் எவருக்காக உண்டாயிருக்கிறோமோ, அந்தத் தங்களுக்கு எங்களால் செய்யக்கூடிய காரியம் என்ன? உங்களுடைய அனுக்கிரகம் இல்லாதவரையில் ப்ரம்மாண்டத்தைச் ச்ருஷ்டிக்க எங்களால் முடியாது. ஆகையால் உம்முடைய ஞானத்தையும், சக்தியையும் எங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அத்தியாயம்–6

விராட் ஸ்ருஷ்டி

1–29. இப்படி மகத்தத்துவம் முதலிய சக்திகள் ஒன்றோடொன்று சேராமல் உலகத்தைச் ஸ்ருஷ்டிக்கச் சக்தியற்றவைகளாக் இருப்பதைக் காலமென்ற சக்தியைத் தரித்தவரும் அளவற்ற லீலையுள்ள வருமான ஈசுவரன் பார்த்து, இருபத்து மூன்று தத்துவங்களின் கூட்டத்தில் தாம் ஒரே சமயத்தில் அனுப்பிரவேசஞ் செய்தார். க்ரியாசக்தியுடன் அதில் ப்ரவேசித்த பகவான் சிருஷ்டி சக்தியை அவைகளுக்கு ஞாபகப்படுத்திக் கொண்டு தனித்தனியாக இருந்த அவைகளை ஒன்றோடொன்னு சேர்த்தார். பின்பு ஸ்ருஷ்டி சக்தியை அடைந்த அந்த இருபத்து மூன்று தத்துவங்களும் பகவான் உடைய தூண்டுதலால் தங்கள் தங்கள் அம்சங்களைக் கொண்டு விராட் சரீரத்தைப் படைத்தன. இப்படிப் பரமாத்மாவினுடைய அனுப்ரவேசத்தால் அவைகள் உடைய அம்சங்கள் வேறு ரூபத்தை (பரிணாமத்தை) அடைந்தன. சுவர்ணம் போன்ற இந்தப் புருஷன் ஹிரண்மயன்) அண்ட கோசத்தின் நடுவில் ஜலத்தில் ஸகல ஜீவர்களுடன் வஸித்தார்.

தெய்வ சக்தி, க்ரியா சக்தி, ஆத்ம சக்தி இம்மூன்று சக்திகளுள்ளவரும், இருபத்துமூன்று தத்துவங்களால் உண்டுபண்ணப் பட்டவருமாகிய விராட் புருஷனானவர் தம்மை ஒருவகையாகவும், பத்து வகையாகவும், மூன்று வகையாகவும் பிரித்தார். பரமாத் மாவின் முதல் அவதாரமாகிய அவர் ஸகல பிராணிக ளுடைய ஆத்மாவின் அம்சம். அவரிடத்திலேயே

இந்தப் பூதக்கிரமங்கள்யாவும் தோன்றுகின்றன. விராட் புருஷன், ஸாத்யாத்மன் (இந்திரியங்களுடன் கூடியவன்) ஸாதிபூதன் (வியஷ்டி தேகங்களுள்ளவன்) ஸாதிதைவன் (தெய்வங்களுடன் கூடியவன்), என்று மூன்றுவகையாகவும், ப்ராணரூபத்தால் பத்து வகை யாகவும், இருதயத்தால் ஒருவகையாகவும் இருக்கிறார். பகவான் தத்துவங்களுடைய ப்ரார்த்தனையை நினைத்துக்கொண்டு அவைகளுக்குப் பலவகையான வ்ருத்தியைக் கற்பிப்பதற்காக தம் உடைய தேஜஸ்ஸால் விராட்டைப்பற்றி யோசித்தார். இப்படிப் பகவான் யோசித்தபோது, தேவர்களுக்குச் சில ஸ்தானங்கள் உண்டாயின. அவைகளைச் சொல்லுகிறேன். கேளும், அந்த விராட் புருஷனுக்கு முதலில் முகம் உண்டா யிற்று, லோக பாலராகிய அக்னியானவர் தம்முடைய சக்தியாகிய வாக்குடன் அந்த முகத்தில் ப்ரவேசித்தார். அந்த வாக்கினாலே ஜீவன் சப்தங்களை உச்சரிக் கிறான். பிற்கு தாதுவானது உண்டாயிற்று. லோக பாலராகிய வருணன் ஜிஹ்வேந்திரியத்துடன் அதில் ப்ரவேசித்தார். ஜீவன் அந்த இந்திரியத்தாலேதான் ரஸங்களைக் கிரஹிக்கிறான், பிறகு மூக்குகள் உண்டாயின.

அசுவினீ தேவர்கள் தங்களுடைய அம்சமாகிய க்ராணேந்திரயத்துடன் அதனைத் தங்களுடைய ஸ்தானமாக்கிச் கொண்டார்கள். அந்த இந்திரியத் தாலேயே ஜீவன் கந்தத்தைக் கிரஹிக்கிறான். பின்பு கண்கள் உண்டாயின. சூரியன் சட்சுரிந்த்ரியத்துடன் அவைகளில் ப்ரவேசித்தார். அதனால் உருவ ஞானம் உண்டாகிறது. பிறகு அந்த விராட்புருஷனுக்குச் சர்மங்கள் உண்டாயின. அந்த ஸ்தானத்தில் லோகபாலரான வாயுவானவர் தம்முடைய அம்சம் ஆகிய துவக்கிந்திரியத்துடன் ப்ரவேசித்தார். ஜீவன்

அந்த இந்திரியத்தைக் கொண்டே ஸ்பர்சத்தைக் கிரஹிக்கிறான். பின்பு அந்தப் புருஷனுக்குக் காதுகள் உண்டாயின. அவைகளில் திக்குகள் தங்களுடைய அம்சமாகிய சுரோத்திரேந்திரியத்துடன் ப்ரவேசித்தன. அந்த இந்திரியத்தைக் கொண்டே ஜீவன் சப்தத்தைக் கிரஹிக்கிறான். அந்தப் புருஷனுடைய சர்மாவை ஓஷதிகள் தங்களுடைய அம்சமாகிய உரோமங்களுடன் ப்ரவேசித்தன, ஜீவன் அவைகளைக் கொண்டே தினவைத் தெரிந்து கொள்ளுகிறான். பிறகு அந்தப் புருஷனுக்கு ஆண்குறி (மேட்ரம்) உண்டாயிற்று. ப்ரஹ்மதேவர் தம்முடைய அம்சமாகிய ரேதஸ்ஸுடன் அந்த ஸ்தானத்தை அடைந்தார் ஜீவன் அந்த ரேதஸ்ஸைக் கொண்டே ஆனந்தத்தை அடைகிறான். பிறகு அந்த விராட் புருஷனுக்குகுதமானது உண்டா யிற்று. மித்திரனானவர் தம்முடைய அம்சமாகிய பாயுவுடன் அந்த ஸ்தானத்தை அடைந்தார். அந்தப் பாயுவைக் கொண்டே ஜீவன் மலவிசர்ஜனம் முதலியவைகளைச் செய்கிறான். அந்த விராட் புருஷனுக்குக் கைகள் உண்டாயின.ஸ்வர்க்கத்திற்கு அதிபதியான இந்திரன் தம்முடைய அம்சமாகிய வார்த்தையுடன் (கிரய, விக்ரய சக்தி) அவைகளில் ப்ரவேசித்தார். அந்தச் சக்தியைக் கொண்டே ஜீவன் விருத்தியை (ஜீவிகையை) அடைகிறான். பின்னுமந்தப் புருஷனுக்குப் பாதங்கள் உண்டாயின. அவைகளில் மஹாவிஷ்ணுவானவர் தம்முடைய அம்சமாகிய கதி (நடை)யுடன் ப்ரவேசித்தார். அதைக் கொண்டே ஜீவன் போக வேண்டிய இடங்களுக்குச் செல்லுகிறான். அந்தப் புருஷனுக்கு இதயம் உண்டா யிற்று. சந்திரனானவர் தம்முடைய அம்சமாகிய மனசுடன் அந்த இருதயத்தில் ப்ரவேசித்தார். அந்த மனத்தாலேயே

ஜீவன் சங்கல்பம் முதலிய விகாரங்களை அடைகிறான். பின்னும் அவருக்குப் புத்தியுண்டாயிற்று, ப்ருகஸ்பதி பகவான் தம்முடைய அம்சமாகிய ஞானத்துடன் அந்த ஸ்தானத்தை அடைந்தார். அந்தப் போதத்தாலேயே அறியவேண்டிய விஷயங்களை ஜீவன் தெரிந்து கொள்ளுகிறான். இந்த விராட் புருஷனுக்கு அபிமானம் (அகங்காரம்) உண்டாயிற்று. அதனை ருத்திரன் அடைந்தார். அதனால் செய்யவேண்டியவைகளைச் செய்கிறான். அந்த விராட் புருஷனுக்கு ஸத்வம் (சித்தம்) உண்டாயிற்று. அந்த ஸ்தானத்தை ப்ரஹ்மா தம்முடைய அம்சமாகிய சேதனையுடன் அடைந்தார். அந்தச் சேதனையாலேயே இந்த ஜீவன் விஞ்ஞானத்தை அடைகிறான். மேலும் அந்தப் புருஷனுடைய தலையிலிருந்து த்யுலோகமும் பாதங்களிலிருந்து பூலோகமும், நாபியிலிருந்து ஆகாசமும் உண்டாயின. த்யுலோகம் முதலியவைகளில் குணங்களுடைய பரிணாமபூதகர்களான தேவர்கள் முதலியவர்கள் தோன்றுகிறார்கள் பலிஷ்டமான சத்வகுணத்தால் தேவர்கள் த்யுலோகத்தை அடைந்தார்கள். மனிதர்கள் பசு முதலியவைகளுடன் ரஜோகுண ஸம்பந்தத்தால் பூலோகத்தை அடைந்தார்கள், மேற்காட்டிய இரண்டு லோகங்களுக்கும் மத்தியிலுள்ளதும், பகவானுடைய நாபி ரூபமுமான ஆகாசத்தை ருத்திரருடைய பார்ஷத கணங்கள் தமோகுண ஸ்வபாவத்தால் அடைந்தார்கள்.

30–40. மேலும் அந்த விராட் புருஷனுடைய முகத்திலிருந்து வேதமோதும் ப்ராஹ்மண ஜாதியும் உண்டாயின. ஓ குருசிரேஷ்ட! அதனால் ப்ராஹ்மணன் நான்கு வர்ணத்திற்கும், அதிபதியும் குருவுமானான்.

அவருடைய இரு கைகளிலிருந்து பரிபாலன ரூபமாகிய விருத்தியும் க்ஷத்ரிய ஜாதியும் உண்டாயின. க்ஷத்ரியன் அந்த விருத்தியை அனுசரித்தான், அந்த க்ஷத்ரியன் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அம்ச பூதர்களாகிய ப்ராஹ்மணன் முதலியவர்களைத் திருடர்கள் முதலிய வர்களுடைய உபத்திரவங்களிலிருந்து காப்பாற்றுகிறான். ப்ரபுவாகிய அந்த விராட் புருஷனுடைய தொடைகளில் இருந்து பயிர்த்தொழில் முதலிய ஜீவன ஹேதுக்களும், வைசிய ஜாதியும் உண்டாயின. வைசியன் அந்த விருத்தியைக் கைக்கொண்டான். அவருடைய பாதங்களில் இருந்து சிசுரூஷையும், சூத்ர ஜாதியும் உண்டாயின. சூத்ரன் மேலான ஜாதியார்களுக்குச் சுச்ரூஷை செய்வதையே தனது விருத்தியாக வைத்துக் கொண்டான். அந்த சிசுரூஷையால் மஹாவிஷ்ணு சந்தோஷப்படுகிறார். மேற்காட்டியபடி நான்கு ஜாதிகளும் அவைகளின் விருத்திகளுடன் உண்டாகி, ஆத்ம சுத்திக்காக ச்ரத்தையுடன் தங்களுக்குரிய தர்மத்தைக் கொண்டு தங்களுக்குப் பிதாவாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவைப் பூஜித்தார்கள் ஓ விதுரரே, காலம், கர்மம், சுபாவம், ஆகிய சக்திகளுள்ள பகவானுடைய யோகமாயா பலத்தாலுண்டான அந்த விராட் ரூபத்தைப் பூர்ணமாக வருணிக்க எவன்தான் விரும்புவான்? (ஒருவராலும் வருணிக்க முடியாதென்று கருத்து) ஓ விதுரரே, ஆனாலும் பகவன் நாமங்களை தவிர வேறு வார்த்தைகளை உச்சரித்ததால், அசுத்தமாயிருக்கும் என்னுடைய வார்த்தையச் சுத்தப் படுத்துவதற்காக நான் குருவினிடம் தெரிந்துகொண்ட படி என்னுடைய புத்திக்கு எட்டியவரையில் ஸ்ரீ ஹரியின் கீர்த்தியைச் சொல்லுகிறேன். புண்யச் லோகராகிய பகவானுடைய குணங்களைக்

சொல்வதே புருஷர்களுடைய வாக்குக்கு முக்கியமாகிய லாபம் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். வித்வான்களால் சொல்லப்படும் ஸ்ரீ பகவானுடைய கதையைக் கேட்டதே காதுகளின் முக்கிய பலனாகும். பகவானுடைய மஹிமையானது யோகத்தால் பக்குவமாகிய புத்தியுள்ள ப்ரஹ்மதேவரால் பல வர்ஷங்களிலும் அறியமுடியவில்லை. பகவானுடைய மாயையானது மாயாவியாகிய பகவானையும் மோஹிக்கச் செய்யக்கூடியது. ஆச்சரியம். ஏனென்றால் ஸ்ரீமஹா விஷ்ணுவும் தம்முடைய மாயகதியை தாமும் அறிந்தவரல்ல. (அளவிடக் கூடாதென்று கருத்து) எவரைத் தெரிந்து கொள்வதற்காகப் ப்ரவர்த்தித்த வாக்குகளும். மனசும் அகங்காரத்திற்கு அதிஷ்டான தேவதையாகிய ருத்ரரும், புத்திக்கு அதிஷ்டான தேவதையாகிய ப்ரஹ்மாவும் இந்திரியங்களுக்கு அதிஷ்டான தேவதைகளாகிய இந்தத் தேவர்களும், இன்னும் மற்றவர்களும் அதனைத் தெரிந்து கொள்ள முடியாமலே திரும்பினார்களோ அந்தப் பகவானுக்கு நமஸ்காரம்.

அத்தியாயம்–7

விதுரருடைய ப்ரச்னங்கள்

1–7 வ்யாஸ மஹர்ஷியின் புத்திரரும் வித்வானுமாகிய விதுரர் மேற்காட்டியபடி சொல்லி வரும் மைத்ரேயரை நோக்கித் தம்முடைய வார்த்தை யால் அவரைச் சந்தோஷிக்கச் செய்து கொண்டு, "ஓ ப்ராஹ்மணோத்தம! சித்ரூபியும், விகார மற்றவருமாகிய பகவானுக்குக் கர்மங்கள் உண்டென்று சொல்லுவதும், நிர்க்குணராகிய (குணங்களற்றவராகிய) அவருக்குக் குணங்களிலிருக்கின்றன வென்றும், அவைகள் அவருக்கு விளையாட்டிற்காக (லீலை) ஏற்பட்டவை களென்று சொல்லுவதும் எப்படிப் பொருந்தும்? குழந்தைகளுடைய சேஷ்டைகளுக்கு எப்படி விளையாட்டே ப்ரயோசனமோ, அப்படியே பகவான் உடைய சேஷ்டைக்கும் லீலையே பலன் என்று சொல்லுவதும் பொருந்தாது. ஏனென்றால், குழந்தைகள் விளையாட்டுக் கருவிகளுடன் அவற்றில் ப்ரவ்ருத்திப் பதற்குக் காமம் காரணமாகிறது. மற்ற குழந்தைகள் இருப்பதால் அவர்களுடன் சேர்ந்து விளையாட வேண்டுமென்ற இச்சை உண்டாகிறது. பகவான் இயற்கையில் திருப்தியுள்ளவராகையால் அவருக்குக் காமம் உண்டாவதற்கு நியாயமில்லை. மேலும் அவர் ஒரு விஷயத்திலும் ஆசையில்லாதவர்; அத்விதீயர். ஆகையால் அவருக்கு இம்மாதிரியான விருப்பம் உண்டாயிற்று என்று சொல்வது பொருந்தாது. அவ்வித்தையை உபாதியாயுடைய ஜீவனுடைய போகத்திற்காகப் பகவான் ஸ்ருஷ்டி முதலியவைகளைச் செய்கிறார் என்று சொல்லுவதும் நியாய

விரோதமேயாம். எப்படியெனில் , "பகவான் முக்குண ஸ்வரூபியான தம்முடைய மாயையால் இந்த ஜகத்தைச் ஸ்ருஷ்டிக்கிறார்; பின்பு அதனைக் காப்பாற்றுகிறார்" பிறகு அதை மறைத்து விடுகிறார் என்று சொல்லப் படுகிறது. தேசத்தாலும், காலத்தாலும், அவஸ்தையா லும் (நிலைமை), இயற்கையாலும், மற்ற வஸ்துவினா லும் நாசஞ் செய்யப்படாத ஞானமுள்ள ஜீவனுக்கு சம்பந்தம் ஏற்பட்டதென்று சொல்வது யுக்தமல்ல. மேலும் பகவான் ஒருவரே ஸகல சரீரங்களிலும் அந்தர்யாமியாக வஸிக்கிறார். அப்படிக்கிருக்க ஜீவனுக்கு ஆனந்தம் முதலியவைகளின் குறைவாவது, துக்கமாவது கர்மங்களால் நேரிடுகிறது என்று எப்படி சொல்லலாம்? ஓ வித்வானாகிய மகர்ஷியே! அறியாத் தன்மையாகிய துக்கத்தில் என் மனம் சிக்கிக் கொண்டிருக்கிறது. ஓ ப்ரபுவே! என்னுடைய பெரியதாகிய மோஹத்தை நிவர்த்திக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்துக் கொண்டார்.

8–14 மேற்காட்டிய விஷயத்தைத் தெரிந்துகொள்ள விரும்பிய விதுரரால் இம்மாதிரி கேட்கப்பட்ட மைத்ரேயர்; பகவானிடத்தில் சித்தத்தைச் செலுத்திய வராக, தத்துவத்தை அறிந்தவராகையால் ஆச்சரியம் இல்லாதவராய், ஆச்சரியமடைந்தவர்போல் விதுரரை நோக்கி, "ஓ விதுரரே! நித்ய முக்தராகிய பகவானுக்குத் தன்யமும், சம்சார பந்தமும் உண்டென்று சொல்வது யுக்திக்கு விரோதம். அதுவே பகவானுடைய மாயையாகும். எப்படி சொப்பன சாட்சியாயிருக்கும் புருஷன் ...என்னுடைய தலை வெட்டப்பட்டது என்று நினைக்கிறானோ (உண்மையில் தலை வெட்டப்பட வில்லை) அப்படி நினைப்பது பொய்யல்லவா? மேலும், ஜலத்தில் பிரதி பிம்பித்த சந்திரனுக்கு

Released by Maran's Dog, Toronto , Canada

ஜலமாகிய உபாதியால் அசைவது முதலியவை ஏற்படுவதுபோல, அனாத்மாவாகிய தேஹம். முதலிய வைகளுடைய தருமமானது தேஹத்தில் அபிமானம் உள்ள ஜீவனுக்கே ஒழிய ஈசுவரனுக்கு இல்லை. அந்த அனாத்மாவின் குணமானது நிவர்த்தி தருமத்தாலும். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தயையினாலும், பக்தியோகத்தாலும், அந்தந்த ஸ்தானத்துக்குத் தக்கபடி மெள்ள மெள்ள மறைந்து போகும். தூங்கினவனுக்கு எப்படி ஸகல துக்கங்களும் நாசம் அடைகின்றனவோ, அப்படிப்போல் அந்தர்யாமியாகிய பரமாத்மாவினிடத்தில் ஜீவனுடைய இந்திரியங்கள் ஸ்திரமாக எப்பொழுது அடங்கியிருக்குமோ அப்பொழுது எல்லாத் துக்கங்களும் நிவர்த்தியாகும்; பகவானுடைய குணங்களைச் சொல்வதாலும், அவைகளைக் கேட்பதாலும் ஸகல துக்கங்களும் நிவர்த்தியாகின்றன. அவருடைய பாதாரவிந்தத்திலுள்ள துளியின் சேவை யானது மனத்தால் அடையப்படுமானால் துக்கங்கள் நிவர்த்திக்கப்படுமென்பதில் என்ன சந்தேகம்? என்று ப்ரத்யுத்தரஞ் சொன்னார்.

15–20 "ஓ ப்ரபுவே! உம்மால் சொல்லப்பட்ட தகுந்த ப்ரத்யுத்தரமாகிய கத்தியால் என்னுடைய சம்சயம் போக்கடிக்கப்பட்டது: மேலும் என்னுடைய மனமானது ஈசுவரன் ஸ்வதந்திரர் என்ற விஷயத்தை யும், ஜீவன் பரதந்திரன் என்பதையும் நன்றாகத் தெரிந்துகொண்டது. ஓ வித்வானாகிய மஹர்ஷியே! ஸ்ரீ பகவானுடைய சக்தியாகிய மாயையால் ஜீவனுக்கு ஆத்மானந்தம் முதலியவைகள் கிடைக்காமல் போகின்றன என்று உம்மால் நன்றாக நிரூபிக்கப்பட்டது. அந்த மாயை உண்மையானதல்ல. காரணமற்றது. தேஹம்

முதலிய ப்ரபஞ்சத்திற்கு காரணமாயுள்ளது, அது வெளியிலில்லை, (எந்த வஸ்து காரணமற்றதும், சூன்யமுமாயுருக்கிறதோ அதை நீர் நன்றாகச் சொன்னீர் என்பது கருத்து.) லோகத்தில் எவன் தேஹம் முதலியவைகளில் அபிமானம் வைத்து மூடனாயிருக்கிறானோ, எவன் ப்ரக்ருதிக்கு மேற்பட்ட பரமபுருஷனை அடைந்திருக்கிறானோ அவ்விருவர் களும் சுகத்தை அடைகிறார்கள். மத்தியிலிருப்பவர் கள் துக்கத்தை அடைகிறார்கள். (அக்ஞர்களுக்கும் ஞானிகளுக்கும் ஸம்சயமில்லை. அதனால் துக்கமில்லை யென்பது கருத்து.) சத்யம் போலத் தோன்றுகிறதும், அனாத்மாவுமான ப்ரபஞ்சம் உண்மையில்லை என்று நான் நிச்சயித்து, அந்த தோற்றத்தை உம்முடைய பாத ஸேவையாலே போக்கிக் கொள்வேன். பகவத் பக்தர்களான பெரியோர்களுடைய சேவையாலே, கூடஸ்தரும் மதுவைக் கொன்றவருமாகிய பகவான் உடைய பாதங்களில் விசேஷப் ப்ரேமையுண்டாகும். அதனால் சம்சார துக்கம் நீங்கும். தேவர்களுக்கும் தேவராகிய பகவானைச் ஸாதுக்கள் எப்பொழுதும் கானஞ் செய்வார்கள். அப்போர்ப்பட்ட மஹான்களுடைய ஸேவையானது விசேஷ புண்யஞ் செய்தவர்களுக்கும் கிடைக்க அரிதானாலும் எனக்குக் கிடைத்தது

21–41 ப்ரபுவாகிய பகவான் முதலில் மஹத் தத்துவம் முதலியவைகளையும், இந்திரியங்களையும், க்ரமமாக ஸ்ருஷ்டித்து அவைகளின் அம்சங்களைக் கொண்டு விராட் சரீரத்தையும் உண்டு பண்ணி அதனிடம் அனுப்பிரவேசஞ் செய்தார். அந்த விராட் புருஷனே முதலில் உண்டானவர். அவருக்கு ஆயிரம் பாதங்களும், ஆயிரம் தொடைகளும், ஆயிரம்

கைகளுமிருக்கின்றன. இவ்வுலகங்கள் யாவும் அவர் இடத்திலேயே நெருக்கமில்லாமல் வஸிக்கின்றன. பத்துவிதமான ப்ராணனும் (ஐந்து ப்ராணன்களுடன், வாக்கு முதலிய இந்திரியங்கள், ஐந்தும் சேர்ந்து பத்து என்பது கருத்து,) இந்திரியங்கள், அவைகளின் அபிமானி தேவதைகள், விஷயங்கள் ஆகிய மூவகையான ப்ராணன்களும் அந்த விராட் புருஷன் இடத்தில் வஸிக்கின்றன. அவரிடத்திலிருந்தே ப்ராஹ்மணர் முதலிய நான்கு வர்ணங்களும் உண்டா யின" என்று சொன்னீர்களல்லவா? அவரிடத்தில் பலவகையான ஸ்வரூபமுள்ள ப்ரஜைகள் தங்களுடைய பிள்ளைகளுடனும், பேரன்களுடனும், கொள் பேரன்களுடனும், மற்றும் வம்சத்திலுண்டானவர் களுடனும் வஸிக்கிறார்கள் அல்லவா? அவர்களுடைய விபூதிகளைச் சொல்லவேண்டும். மேலும் ப்ரஜாபதி களுக்கு அதிபதியாகிய அந்தப் புருஷன் எந்த எந்தப் ப்ரஜாதிபதிகளைச் ஸ்ருஷ்டித்தார்? ஸர்க்கம், அநுஸர்க்கம், மனுக்கள், மன்வந்தரத்தின் அதிபதிகள், இவர்களுடைய வம்சத்திலுண்டானவர்கள்; வம்சத்தின் சரிதம், கீழுலகங்கள், மேலுலகங்கள், பூலோகம், அவைகளுடைய நிலைமை, அளவு ஆகிய இவை களையும் சொல்ல வேண்டும். திர்யக் (பசு முதலிய வைகள்), மனிதர்கள், தேவர்கள், மலைப்பாம்புகள், பறவைகள் முதலிய கர்ப்பத்திலிருந்தும், அண்டத்தில் இருந்தும், வேர்வையிலிருந்தும், பூமியிலிருந்தும் உண்டாகும் நான்கு வகையான ப்ராணிகளுடைய ஸ்ருஷ்டியின் விவரத்தையும் சொல்லவேண்டும்.

மேலும், ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரர் ஆகிய இவர்களின் உருவத்தை எடுத்துக் கொண்டு ஸ்ருஷ்டி, பரிபாலனம்; சம்ஹாரம் ஆகிய இவைகளைச் செய்து

வரும் ஸ்ரீ பகவானுடைய கம்பீரமான சரிதத்தையும், உருவம், ஆதாரம், ஸ்வபாவம் இவைகளால் ஏற்படும் வர்ணாச்ரம விபாகங்களையும், ரிஷிகளுடைய பிறப்பு, சரிதம் ஆகிய இவைகளையும், வேதங்களின் பிரித்தலையும், யாகங்களினுடைய விஸ்தாரங்களையும், பக்தி யோகம் ஞானம், ஸாங்க்யம் ஆகிய இவைகள் உடைய மார்க்கத்தையும், பகவானால் செய்யப்பட்ட தந்திரத்தையும் பாஷாண்ட மார்க்கத்தின் பேதத்தையும்; ப்ரதிலோமஜாதிகளுடைய ஆசாரத்தையும், குணங்களாலும் கர்மங்களாலும் ஜீவர்களுக்கு ஏற்படும் எல்லா கதிகளையும், தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் இவைகளுக்கு அவிருத்தமான உபாயங்களையும், வார்த்தை (பயிர் முதலிய) தண்டநீதி, வ்ரதம் இவைகளுடைய விதியையும், ச்ராத்த விதியையும், பித்ருக்களுடைய ஸ்ருஷ்டியையும், கிருஹங்கள், அசுவினி முதலிய நக்ஷத்திரங்கள், மற்ற நக்ஷத்திரங்கள், காலசக்கரம் ஆகிய. இவைகளின் ஸ்திதியையும், தானம், தபஸ், யாகங்கள், பூர்த்த தர்மங்கள் ஆகிய இவைகளுடைய பலனையும், சக்தனாகிய புருஷனுக் கேற்பட்ட தர்மத்தையும், ஆபத் தர்மத்தையும், தர்மத்திற்குக் காரணமாகிய பகவான் எந்த மார்க்கத்தால் சந்தோஷப்படுவாரோ, எவர்களிடத்தில் தயை செய்வாரோ அவை யெல்லாவற்றையும் சொல்லவேண்டும்.

ஓ ப்ராஹ்மணோத்தம! தம்மை அனுசரித்திருக்கும் சிஷ்யர்களுக்கும், புத்திரர்களுக்கும், தீனர்களிடத்தில் ப்ரியமுள்ள ஆசார்யர்கள் அவர்களால் கேட்கப்படாத விஷயங்களையும் உபதேசிப்பார்கள். ஓ பகவன்! அந்த மகத்தத்துவம் முதலியவைகளுடைய லயமானது எவ்வளவு வகையுள்ளது? ப்ரளயகாலத்தில் இந்தப்

பரமேசுவரனுடைய சமீபத்தில் எவைகள் இருக்கின்றன? எவைகள் அவர் நித்திரை செய்யும் பொழுது தூங்குகின்றன? மேலும் ஜீவனுடைய உண்மையையும், பரமேசுவரனுடைய ஸ்வரூபத்தையும், உபநிஷத்துக்களால் உண்டாகும் ஞானத்தையும், எந்த அம்சத்தால் ஜீவனுக்கும் பரமாத்மாவிற்கும் ஐக்கியம் ஏற்படுகிறது என்பதையும் சொல்லவேண்டும். ஓ தோஷமற்றவரே! வித்வான்களால் எவைகள் ஞானத்திற்குச் சாதனங்களென்று சொல்லப்படுகின்றனவோ, அவைகளையும் உபதேசிக்கவேண்டும்.

ஞானம், பக்தி, வைராக்யம் ஆகிய இவைகள் குருவின் உபதேசமில்லாமல் எப்படி சித்திக்கும்? ஆதலால் மாயையால் மறைக்கப்பட்ட திவ்யசக்ஷுஸ்ஸுள்ளவனும், அதனால் அந்தகனும் (கண்ணில்லாதவன்), ஸ்ரீ பகவானுடைய கர்மங்களைத் தெரிந்துகொள்ள விரும்பிக் கேட்பவனுமாகிய எனக்கு மித்திரரான நீர் அவைகளைச் சொல்லும். ஓ பாபமற்றவரே, ஜீவனுக்கு அடியதானம் செய்வதால் கிடைக்கும் பலனுடைய பதினாறிலொரு பாகம் ஸகல வேதங்களாலும், யக்ஞங்களாலும், தபசுகளாலும், தானங்களாலும் கிடைக்காது. ஆதலால் என்னை அனுக்கிரகிக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்தார்.

42. ஓ மஹாராஜ! இப்படிக் குருக்களில் சிறந்தவராகிய விதுரர் முனிவர்களுள் சிறந்தவராகிய மைத்ரேயரை நோக்கி, முன்கற்பத்தைப் பற்றிக் கேட்க, பகவானுடைய கதையைச் சொல்வதில் தூண்டப்பட்டபடியால் மிக்க சந்தோஷத்துடன் சிரித்துக் கொண்டு மைத்ரேயர் ப்ரத்யுத்தரஞ் சொல்ல ஆரம்பித்தார்.

அத்தியாயம்–8

ப்ரஹ்மதேவருடைய உற்பத்தி

1–9. "விதுரரே! பகவானையே முக்கிய தெய்வமாய்க் கொண்ட நீர் எந்த வம்சத்தில் பிறந்தீரோ ஜனங்களைக் காப்பாற்றும் அந்த பூருவம்சமானது சாதுக்களால் ஸேவிக்கத் தக்கது. பகவானுடைய சரித்திர பரம்பரையை நீர் அடிக்கடி புதிதாகப் பண்ணுகிறீர். அற்ப ஸுகத்திற்காக்ப் பெரிதாகிய துக்கத்தை அடைந்தவர்களான மனிதர்களுக்கு அந்த சம்சார துக்கம் நீங்குவதற்காகப் பாகவத புராணத்தை ஆரம்பிக்கிறேன். பகவான் அதனைத் தாம் நேராக ரிஷிகளுக்கு உபதேசித்தார்.

அதெப்படியெனில்: முன்னொரு சமயத்தில் சனத் குமாரர் முதலிய மகர்ஷிகள் பாதாளத்திலிருக்கும் தடையற்ற ஞானமுள்ள சங்கர்ஷண பகவானை நோக்கி அவருக்கு மேற்பட்ட ஸ்வரூபத்தை அறிய விரும்பினவர்களாகப் ப்ரச்னம் செய்யவாரம்பித்தார் கள். அந்தப் பகவான் வாஸுதேவனென்ற பெயருள்ள தமக்கு ஆச்ரயமாகிய ஜ்யோதிஸ்ஸைத் தியானஞ் செய்து கொண்டிருப்பவர். அந்தர் முகமாகச் செய்யப் பட்ட தாமரை மலர்போன்ற நேத்திரத்தை ஸனத்குமாரர் முதலியவர்களுடைய க்ஷேமத்திற்காக பகிர்முகமாகச் செய்து அவர்களைப் பார்த்தார். மேலும் பாதாளத்தில் வஸிக்கும் நாக கன்னிகைகள் விசேஷப்ரேமையுடனும், பலவகையான காணிக்கைகள் உடன் தங்களுக்கு நல்ல புருஷன் கிடைக்கவேண்டும் என்ற எண்ணமுள்ளவர்களாய்ச் சங்கர்ஷண பகவான்

கால் வைத்துக்கொண்டிருக்கும் எந்தத் தாமரை புஷ்பத்தைப் பூஜிக்கிறார்களோ, அதனை மேற்சொல்லிய மகர்ஷிகள் ஆகாச கங்கையின் ஜலத்தால் நனைந்த தமது ஜடையின் சமூகங்களால் தொட்டுக்கொண்டும் (நமஸ்கரித்து என்று அர்த்தம்) அநேக கிரீடங்களில் இழைத்திருக்கும் உயர்ந்த இரத்தினங்களுடைய காந்திகளால் ப்ரகாசிக்கும் ஆயிரம் பணங்களுள்ள அந்த சங்கர்ஷண பகவானுடைய சரிதங்களைச் சொல்லிக்கொண்டும். அதிகப்ரேமையால் தடங்கின வாக்குள்ளவர்களாகக் கேட்டார்கள்.

அப்பொழுது அந்த சங்கர்ஷணர் நிவர்த்தி தர்மத்தில் ஆசையுள்ள ஸனத்குமாரருக்கு உபதேசித்தார். அந்த ஸனத் குமாரர் விரதங்களை அனுஷ்டித்தவரான சாங்கியாயனருக்குச் சொன்னார். பரமஹம்சர்களுடைய தர்மத்தில் முக்கியராகிய அந்த சாங்கியாயனர், பகவானுடைய விபூதிகளைச் சொல்ல விரும்பின வராய்த் தம்மிடத்தில் வணக்கத்துடன் வந்த எனது குருவாகிய பராசரருக்கும் ப்ரஹஸ்பதிக்கும் உபதேசித் தார். மிக்க தயையுள்ளவரான புலஸ்தியரால் புராணத்தைச் சொல்லும்படி அனுக்கிரஹிக்கப் பெற்ற அந்தப் பராசர மகர்ஷி எனக்கு உபதேசித்தார். ஓ விதுரரே! ச்ரத்தையுடன் கேட்க விரும்பிய உமக்கு நான் அதைச் சொல்லுகிறேன்.

18–20. இந்த ஜகத்தானது எந்தக் காலத்தில் சமுத்திர ஜலத்தால் மூடப்பட்டிருந்ததோ, அப்பொழுது மறைக்கப்படாத சித்சக்தியுள்ளவரும், ஆதிசேஷனாகிய படுக்கையில படுத்தவரும், தம்முடைய ஸ்வரூபானந்த திலேயே ரமிப்பவரும், கர்மங்களற்றவரும், தாம்

ஒருவராக இருப்பவருமான பகவான் கண்களை மூடிக் கொண்டு யோகநித்திரை செய்தார். (மாயா விலாசத் துடன் விளையாடிவிட்டு) மேலும் அவர் தம்முடைய சரீரத்திற்குள் பூத சூட்சுமங்களை அடக்கிக்கொண்டு காலரூபமாகிய சக்தியைத் தூண்டுகிறவராகக் கட்டையில் மறைந்திருக்கும் அக்கினிபோல் தமக்கு இருப்பிடமாகிய ஜலத்தில் வஸித்தார்.

இப்படி ஆயிரம் சதுர்யுகங்கள் ஜலத்தில் யோகநித்திரை செய்து, முன்னமேயே தம்மை எழுப்பு வதற்காக ஏற்படுத்தப்பட்ட காலசக்தியால் கிரியைகளை அடைந்து, தம்முடைய தேஹத்தில் லோகங்கள் லயித்திருப்பதைக் கண்டார். அப்பொழுது பூதசூட் சுமங்களைப் ப்ரவர்த்திக்கச் செய்யும் ஞானமுள்ள வராகிய அந்தப் பகவானுடைய நாபியிலிருந்து அவர் உடைய சரீரத்திற்குள்ளிருந்தும், மிகவும் சூட்சமமும் ஆகிய பூத சூட்சமமானது கால வசத்தால் வ்ருத்தியடைந்த ரஜோ குணத்தின் சம்பந்தத்தால் உண்டாகப் போகிறதாகி வெளிப்பட்டது. (பூத சூட்சுமங்கள் ரஜோகுண சம்பந்தத்தால் தாமரஸ புஷ்பமாக ஆயிற்று என்பது கருத்து.) கர்மங்களைத் தெரிவிக்கும் காலத்தால் ஸ்ரீபகவானிடமிருந்து உண்டான அந்தப் பத்மகோசமானது சூரியன் போலத் தன்னுடைய காந்தியால் விஸ்தாரமாகிய ஜலத்தைப்ரகாசிக்கச் செய்துகொண்டு வெளிப்பட்டது. ஜீவனுடைய போகத்திற்கு உடயோகமானவைகளை வெளிப்படுத்தும் ஸகல ஜகத் ரூபமுமான அந்தப் பத்மத்தில் (தாமரஸ புஷ்பத்தில்) அந்த விஷ்ணுவே அந்தர்யாமியாகிப் ப்ரவேசித்தார். அந்தத் தாமரஸ புஷ்பத்திலிருந்து வேத ஸ்வரூபியாகிய ப்ரஹ்மதேவர்

உண்டானார். அவரையே ஜனங்கள் சுவயம்பூ என்று சொல்லுகிறார்கள். (முன் கற்பத்தின் முடிவில் ஸ்ரீமந் நாரயணருடன் யோகநித்திரையில் ப்ரஹ்மதேவர் கலந்திருந்தார்;

(பிறகு நாராயணன் விழித்துக் கொண்டபோது அவரிடமிருந்தே பாத்ம கற்பத்தில் பத்மத்தின் வழியாக அந்த ப்ரஹ்மதேவர் வெளியானார் என்பது கருத்து) அவர் அந்தத் தாமரஸ புஷ்பத்தின் நடுவில் இருந்து நான்கு புறத்திலும் பார்த்துக் கொண்டிருக்க, ஒவ்வொரு திக்குகளிலும் ஒவ்வொரு முகமாக அவருக்கு நான்கு முகங்கள் உண்டாயின. ப்ரளய காலத்திய காற்றினால் அசைந்த பெரிதாகிய அலைகளுள்ள ஜலத்திலிருந்து உண்டான தாமரஸ புஷ்பத்தில் இருப்பவராகிய அந்த ஆதிதேவர் அந்தப் புஷ்பத்தையும், லோகங்களின் தத்துவத்தையும், தம்மையும் நன்றாகத் தெரிந்து கொள்ளவில்லை. அப்பொழுது அவர், 'தாமரஸ புஷ்பத்தில் இருக்கும் நான் யார்? இந்த ஒரு புஷ்பம் மாத்திரம் எங்கிருந்து ஜலத்தில் உண்டாயிற்று? இதற்கு ஆதாரம் கீழாக ஏதாவது இருக்கவேண்டும்" என்று யோசித்து, அந்தப் புஷ்பத்தின் தண்டிலுள்ள துவாரத்தின் வழியாக ஜலத்திற்குட் சென்றார் அவ்விடத்தில் அந்தத்தாமரைத் தண்டின் மூலத்தைத் தேடிப்பார்த்தும் அவருக்கு அது தெரியவில்லை. ஓ விதுரரே! தம்முடைய உற்பத்திக்குக் காரணமாயிருப்பதைத் தேடிச் செல்லும் அவர் ஜலத்திற்குள் இருக்கும் இருட்டிற்கு அப்புறம், மூன்று முனைகளுள்ளதும் (நடந்தது, நடக்கிறது, நடக்கப் போவது ஆகிய மூன்று முனைகள்) ப்ராணிகளுடைய ஆயுளைச்

செலவழித்து அவர்களுக்குப் பயத்தை உண்டுபண்ணு கிறதும், பெரியதும், ஸ்ரீ மகாவிஷ்ணுவின் சுதர்சனம் என்ற அஸ்திரமுமான கால சக்கரத்தைக் கண்டார். (வெகு நாளாகத் தேடினார் என்பது கருத்து.)

21–31. பிறகு அவர் தம்முடைய எண்ணம் நிறைவேறாமல் மறுபடியும் தமக்கிருப்பிடமாகிய புஷ்பத்தை அடைந்து, ஸ்வாசங்களை அடக்கி, மனத்தை ஒருவகைப்படுத்தித் தியானஞ் செய்து கொண்டிருந்தார். இப்படி நூறு வருஷங்கள் சென்றன. யோகத்தால் ஞானம் விசேஷமாக வ்ருத்தி யடைந்தது. முந்தித் தேடியும் எவர் காணப்படவில்லையோ, அவர் அவருடைய இருதயத்தில் தாமாகவே ப்ரகாசித்தார். அந்தப் புருஷன் தாமரைத் தண்டுபோல வெண்மை நிறமுள்ளதும். ஆதிசேஷனுடைய நீண்ட உடலாகிய மஞ்சத்தில் சயனித்துக் கொண்டிருந்தார். அந்த ஆதி சேஷன் தம்முடைய அனேக படங்களிலிருந்தும் உத்தம இரத்தினங்களுடைய காந்தியால் ப்ரளய காலத்திய இருட்டை விலக்கி ஜலத்தில் வஸித்து வந்தார்.

மேலும் அந்தப் புருஷன் மரகதமலையின் காந்தியைக் காட்டிலும் அழகுள்ளவராக இருந்தார். சந்த்யா காலத்தில் சிவந்த மேகங்கள் அந்த மலையின் மத்தியிலிருப்பது போல, பீதாம்பரத்தைத் தரித்து கொண்டிருந்தார். அந்த மலையின் ஸ்வர்ண சிகரம் போல அவருடைய கிரீடம் ப்ரகாசித்தது. அந்த மலையிலிருக்கும் மேகங்கள், ஓஷதிகள், புஷ்பங்கள் ஆகிய இவைகள் போல அவருடைய வனமாலை விளங்கிற்று. அதிலிருக்கும் மூங்கில்கள் போல அவருடைய கைகள் ப்ரகாசித்தன. அதிலிருக்கும்

மரங்கள் போல அவருடைய பாதங்கள் விளங்கின. அவர் தமக்குத் தகுதியான பருமன், உயரம் ஆகிய இவைகளுடன் கூடியதும், மூவுலகத்தையும் தனக்குள் அடக்கிக் கொண்டதுமான திவ்ய சரீரமுள்ளவர், பலவகையான திவ்யமான ஆபரணங்களாலும் வஸ்திரங்களாலும் அலங்கரிக்கப்பட்டவர்: மேலும் தங்கள் தங்கள் இஷ்டத்தை அடைவதற்கு வேதத்தில் சொல்லியபடி பூஜிப்பவர்களுக்கு அவர்களுடைய காமத்தைக் கொடுக்கக்கூடிய தம்முடைய பாதமாகிய தாமரை புஷ்பத்தை ப்ரகாசப் படுத்துகிறவர்.

அந்தப் பாதங்களிலிருக்கும் நகங்கள் சந்திரன் போலப் ப்ரகாசிக்கின்றன. அவைகளின் காந்தியானது புஷ்பத்தின் இதழ்போன்ற விரல்களில் பரவுகிறது, அவருடைய முகமானது ஜனங்களுடைய துக்கத்தை நீக்கும் சிரிப்புள்ளது. மிகுந்த காந்தியுள்ள குண்டலங் களால் அழகானது. சிவந்த உதடுகளுள்ளது, அழகான மூக்குள்ளது. மனோகரமாகிய புருவங்களுள்ளது. அப்போர்ப்பட்ட முகத்தால் தம்மைப் பூஜிப்பவர்களைக் கௌரவப்படுத்துகிறவர். கதம்ப புஷ்பத்தின் தாதுக்கள் போல பொன்னிறமுள்ள வஸ்திரத்தாலும், மேகலையா லும் ப்ரகாசிக்கும் இடுப்புள்ளவர். விலை உயர்ந்ததும், ஸ்ரீ வத்ஸத்துடன் கூடிய மார்புக்குத் தகுதியானது மான ஹாரத்தால் ப்ரகாசிப்பவர். மேலும் அவர் சந்தன மரம் போன்றவர். உத்தமமான தோள்வளை களில் இழைக்கப்பட்ட இரத்தினங்களால் ப்ரகாசிக்கும் அவருடைய கைகள் கிளைகள் போலிருந்தன. அந்த மரத்தின் வேர்கள் போல் அவருடைய மூலம் ஒருவராலும் காண முடியாதது. மரமானது சிறந்த ஸர்ப்பங்களின் உடல்களால் சுற்றப்பட்டிருப்பது போல அவர் ஆதிசேஷனால் சுற்றப்பட்டவர்.

பின்னும் அவர் பர்வதம் போல் ப்ரகாசித்தார். தாவர ஜங்கமங்களுக்கு இருப்பிடமாக இருப்பவர். பர்வதம் சிறந்த ஸர்ப்பத்தால் ஆசிரயிக்கப்படுவது போல் ஆதிசேஷனால் ஆச்ரயிக்கப்பட்டவர். பர்வதம் சமுத்திர ஜலத்தில் மறைந்திருப்பது போல ப்ரளய ஜலத்தில் மறைந்தவர், மைனாகம் முதலியவை சுவர்ண சிகரமுள்ளவையாக இருப்பது போல் ஸ்வர்ண கிரீடமுள்ளவர். பர்வதத்தில் இரத்தனங்கள் இருப்பது போலக் கௌஸ்துப ரத்னத்தைத் தரித்தவர், வேதங்களாகிய வண்டுகளால் ப்ரகாசிப்பதும், தம்முடைய கீர்த்தி ரூபமாயுள்ளதுமான வனமாலை யுள்ளவர். சூர்யன், சந்திரன், வாயு, அக்கினி ஆகிய இவர்களாலும் அடையமுடியாதவர், முக்காலத்திலும் ப்ரகாசிப்பவைகளும், நான்கு புறத்திலும் சஞ்சரிப்பவை களும் யுத்தத்திற்குச் சாதனங்களுமான ஸுதர்சனம் முதலியவைகளாலும் அடைய முடியாதவர், இம் மாதிரியான புருஷனை பார்த்து ஹரியென்று தெரிந்து கொண்டார்.)

32–33. இப்போர்ப்பட்ட பகவத் ஸ்வரூபத்தைப் பார்த்தபொழுதே ப்ரஹ்மதேவர் அந்தப் பகவானுடைய நாபியில் தோன்றிய தாமரைப் புஷ்பத்தையும், தம்மையும், ஜலத்தையும், வாயுவையும், ஆகாசத்தையும் கண்டார், இந்த ஐந்தை காட்டிலும் வேறொன்றும் அவருக்குப் புலப்படவில்லை. அவர் ரஜோகுணத்தின் சம்பந்தத்தை அடைந்து, ஜனங்களைச் ஸ்ருஷ்டிக்க விரும்பியவராக, மேற்காட்டிய ஐந்தைக் கொண்டே ஸ்ருஷ்டிகரணங்களைப் பார்த்து, பலவகையான ஜகத்ஸ்ருஷ்டியைப்பற்றி யோசித்து, ஸ்தோத்திரஞ் செய்யத் தகுந்தவரான ஸ்ரீமந் நாராயணனைப் பின்வருமாறு ஸ்தோத்திரஞ் செய்ய ஆரம்பித்தார்.

அத்தியாயம்–9

ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ப்ரஹ்மதேவர் ஸ்தோத்திரஞ் செய்தது

1–26 ஓ பகவன்! வெகுநாளாக உபாசித்ததனால் நான் உம்மை நன்றாகத் தெரிந்து கொண்டேன். உம்முடைய ஸ்வரூபத்தை ஜனங்கள் தெரிந்து கொள்ளாமலிருப்பதே குற்றமாகும். உம்மைத் தவிர வேறு ஒரு வஸ்துவுமில்லை. ஆதலால் அறியக் கூடியவர் நீர் ஒருவரே. உம்மைக் காட்டிலும் வேறு வஸ்து இருப்பதாகத் தோன்றினாலும், அது சுத்த சத்வகுணமுள்ளதன்று. மேலும் மாயையின் குண சம்பந்தத்தால் நீரே பல வகையாகத் தோன்றுகிறீர். ஓ பகவன்! சித்சக்தியின் ஆவிர்ப்பவத்தால் தமோ குணங்கள் நீங்கிய நீர் பக்தர்களை அனுக்கிரகிப் பதற்காக இந்த உருவத்தை அங்கீகரித்திருக்கிறீர். இந்த உருவமானது அனேக அவதாரங்களுக்குக் காரணமாய் உள்ளது. இந்த உருவத்தின் நாபியிற்றோன்றிய தாமரை புஷ்பத்திலிருந்து நான் உண்டானேன். ஓ! பரமாத்மன்! தடையற்ற ப்ரகாசமுள்ளதும், பேதமற்றதும் ஆனந்தத்தைக் காட்டிலும் வேறானதும், பூதங்களுக்கும் இந்திரியங்களுக்கும் காரணமாயிருப் பதுமான பகவத் ரூபமானது இந்த உம்முடைய உருவத்தைக் காட்டிலும் வேறானதென்று நான் நினைக்கவில்லை. அதனால்தான் இந்த ஸ்வரூபத்தை ஆச்ரயித்திருக்கிறேன்.

ஓ, உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்பவரே, உபாஸகர்களான நமக்கு க்ஷேமத்தைச் செய்வதற்காக, நீர், தியானம் பண்ணும்போது அந்த இந்த உருவத்தைக்

காண்பீத்தீர். அப்பேர்ப்பட்ட பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறோம். ஈசுவரன் இல்லை என்று சொல்பவர்களும், நரகத்தை அனுபவிக்கக் கூடியவர் களுமான புருஷர்களால் நீர், ஆதரிக்கப்படுகிறதில்லை. எவர்கள் உங்களுடைய பாதங்களாகிய தாமரை புஷ்பத்தின் வாசனையைக் க்ரஹிக்கிறார்களோ, எவர்கள் உம்முடைய கதைகளைக் கேட்கிறார்களோ, எவர்கள் மிகுந்த பக்தியால் உம்முடைய சரணத்தை ஆச்ரயிக்கிறார்களோ அவர்களுடைய இருதய புண்டரீகத்திலிருந்து நீர் ஒரு பொழுதும் விலகுகிறது இல்லை. (எப்பொழுதும் அவ்விடத்திலேயே வஸிக்கிறீர் என்பது தாத்பரியம்) ஜனங்கள் மோக்ஷத்தைக் கொடுக்கும் உம்முடைய பாதத்தை எதுவரையில் ஆச்ரயிக்கவில்லையோ அதுவரையில் பணம், வீடு, மித்திரர்கள் ஆகிய இவர்களுக்காக பயம், துக்கம், ஆசை, அவமானம், அதிக ஆசை ஆகிய இவைகளும், உபத்திரவத்திற்குக் காரணமாகிய "என்னுடையது" என்ற கெட்ட அபிமானமும் உண்டாகின்றன. எவர்கள் ஸகல அசுபங்களையும் போக்கடிக்கக் கூடிய உம்முடைய கதைகளைக் கேட்பது, நாமங்களை உச்சரிப்பது, முதலியவைகளில் ஆசையில்லாதவர் களாகவும், புத்தி கெட்டவர்களுமாக இருக்கிறார்களோ, அவர்கள் மிகவும் அதமர்கள். மேலும், அவர்கள் லோபத்தால் கெடுக்கப்பட்ட மனது உள்ளவர்களும் தீனர்களுமாகிப் போகத்தினுடைய சொற்ப ஸுகத்திற்காகத் துக்கத்தைக் கொடுக்கக் கூடிய கர்மங்களை அடிக்கடி செய்கிறார்கள். ஓ, பகவான்! பசி, தாகம், வாதம், பித்தம் ஸஹிக்க முடியாத சிலேஷ்மம், சீதம், உஷ்ணம் காற்று சகிக்க முடியாத மழை, மன்மதனாகிய அக்கினி மிகுந்த கோபம்

ஆகிய இவைகளால் ஒருவருக்கொருவர் துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த ஜனங்களைப் பார்த்து என்னுடைய மனம் துக்கிக்கிறது. ஓ ஈச! இந்திரியங்கள் விஷயங்கள் ஆகிய இவைகளாகிய மாயையின் பலமுள்ளதும், ஆத்மாவைக் காட்டிலும் வேறானது மாகிய தேஹம் முதலியவைகளுடைய உண்மையை ஜனங்கள் எப்பொழுது தெரிந்து கொள்ளுகிறார்களோ, அது வரையில் கர்மங்களுடைய பலனுள்ளதும், ப்ரயோசன மற்றதுமான சம்சாரமானது ஒழிவடைகிறது இல்லை. மேலும், ஜனங்களும் அதுவரையில் துக்கக் கூட்டத்தை அடைகிறார்கள்.

ஓ தேவ்! பகலில் பல விஷயங்களில் சென்று கஷ்டப்படும் இந்திரியங்களுள்ளவர்களும், ராத்திரியில் தூங்குகிறவர்களும், பலவகையான மனோரதத்தால் சொப்பனம் நேர்ந்த போது உடனே விழித்துக் கொள்வதால் சொப்பன சுகத்தையும் இழந்தவர்களும், இப்படி எல்லாக் காரியங்களிலும் தெய்வத்தால் தடுக்கப்பட்ட முயற்சியுள்ளவர்களுமான புருஷர்கள் ரிஷிகளானாலும் (விவேகிகளானாலும்) உம்முடைய கதையைக் கேட்பதிலும், நாமங்களை உச்சரிப்பதிலும் ஆசையில்லாதவர்களாக இருப்பார்களேயானால் அவர்கள் சம்சாரத்தை அடைகிறார்கள். ஓ நாத! குரு முகமாகத் தங்களுடைய மார்க்கத்தைச் ச்ரவணம் பண்ணின புருஷர்கள் உம்மிடத்தில் பக்தி செய்வார்கள்.

பக்தியோகத்தால் சுத்தமான அவர்களுடைய ஹ்ருதய கமலத்தில் நீர் வஸிக்கிறீர், ஓ பெரியோர் களால் கானம் பண்ணக்கூடியவரே! உம்முடைய

பக்தர்கள் தங்களுடைய மனத்தால் உம்முடைய உருவத்தைத் தங்களுடைய இஷ்டப்படி (குருமுகமாகத் தெரிந்து கொள்ளலாம்) தியானம் பண்ணுகிறார்கள். அவர்களை அனுக்கிரகிப்பதற்காக நீர் உண்மையான ஸ்வரூபத்தை அவர்களுக்குக் காண்பிக்கிறீர். அத்விதீயரும் பல விதமான ஜனங்களிடத்தில் அந்தர்யாமியாய் அவர்களுக்கு அனுகூலத்தைச் செய் பவருமான நீர் பக்தி செய்யாதவர்களுக்கு அரியதாகிய பூத தயையால் எப்படி சந்தோஷப்படுத்துகிறீரோ, அதுபோல மிகுந்த உபசாரங்களால் பூஜிப்பவர்கள் இடத்திலும், காமனையால் பூஜிக்கும் தேவர்களிடத்தி லும் சந்தோஷப்படுகிறதில்லை. ஆனதால் புருஷர் களால் செய்யப்படும் யாகம் முதலிய அநேக ஸத்கர்மங்களுக்கும், தானத்திற்கும், கடுந்தபஸுக்கும், விரதானுஷ்டானத்திற்கும், பகவானுடைய ப்ரியமே ச்ரேஷ்டமாகிய பலன். பகவானாகிய உம்மிடத்தில் சமர்ப்பிக்கப்படும் தருமமானது நாசமடைகிறதில்லை.

எப்பொழுதும் ஸ்வரூப சைதன்யத்தாலேயே பேத ஞானத்தைப் போக்குகிறவரும், வித்யாசக்தியுள்ள வருமான பரம புருஷனாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். மேலும் ஜகத்தைப் படைப்பது, பரிபாலிப்பது, சம்ஹரிப்பது ஆகிய இவைகளுக்குக் காரணமாகிய மாயையின் விலாசத்துடன் விளையாடு கிறவரும், எல்லாவற்றிற்கும் நியந்தாவுமான உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். எந்தப் பகவானுடைய அவதாரங்கள், குணங்கள், செய்கைகள் ஆகிய இவைகளால் ஏற்படும் திவ்ய நாமங்களை (தேவகீ, நந்தன, தாசரதி, சர்வஞ்ஞ, பக்த வத்ஸல, கம்சாரே, கோவர்த்தனாத்தரண என்பது முதலியவைகள்)

சாகுந்தருணத்தில் எவர்கள் (பகவந்நாமத்தை) உச்சரிக்கிறார்களோ, அவர்களுடைய பல ஜன்மங்களில் சம்பாதிக்கப்பட்ட பாபங்கள் யாவும் அந்த க்ஷணத்திலிலேயே நீங்குகின்றன. மேலும் அவர்கள் ஆவரணமற்றதும் உற்பத்தியற்றதும், சத்யமுமான ப்ரஹ்ம ஸ்வரூபத்தை அடைகிறார்கள். அந்தப் பகவானைச் சரணமடைகிறேன்.

எவர் தம்மையே அதிஷ்டானமாயுடைய ப்ரதானத்தை முக்குண ரூபமாகப் பிரித்து ஜகத்தின் உற்பத்தி, பரிபாலனம், சம்ஹாரம் ஆகிய இவைகளுக்கு முறையே காரணர்களாக இருக்கும் நான்,(ப்ரம்ஹா) பரமசிவன், விஷ்ணு ஆகிய மூன்று பாதங்களுள்ளதும் (வேர்களுள்ளது) மரீசி முதலிய ப்ராஜாபதிகளாகிய அநேக கிளைகளுள்ளதும், ஒன்றாயிருப்பதுமுமான லோக விருக்ஷமாக இருக்கிறாரோ, அந்த உம்மை நமஸ்கரிக் கிறேன். இவ்வுலகத்திலிருக்கும் ஜனங்கள் கெட்ட காரியத்திலேயே ப்ரவர்த்திக்கிறார்கள். மேலும், உம்மால் சொல்லப்பட்டதும் க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியதுமான உம்மைப் பூஜிப்பதாகிய காரியங்களைச் செய்கிறதில்லை. அப்பேர்ப்பட்ட ஜனங்களுடைய ஜீவித ஆசையை (பிழைத்திருக்க வேண்டுமென்ற எண்ணத்தை) எவர் கால ஸ்வரூபியாயிருந்து போக்குகிறாரோ அவருக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். மேலும், இரண்டுபராார்த்தம்வரையில் (ப்ரஹ்மதேவருடைய ஆயுளின் பாதியாகிய ஐம்பது வருஷங்களுக்குப் பராார்த்தமென்ற பெயர்,) அழியாமலிருப்பதும், ஸகல லோகங்களால் நமஸ்கரிக்கப்பட்டதுமான இந்தப் பதத்தை அடைந்த நானும் கால ஸ்வரூபியாகிய உம்மைக் கண்டு பயப்படுகிறேன்.

உம்மைத் தெரிந்து கொள்வதற்காக அநேக வருஷங்கள் தவஞ் செய்தேன். ஆதலால் யாகம் முதலிய சத்கர்மங்களுக்கு அதிபதியாகிய உம்மை நமஸ்கரிக்கிறேன். நீர் விஷய சுகத்தில் ஆசையில்லாத வரானாலும், திர்யக், மனுஷ்யர்கள், தேவர்கள் முதலிய வர்களின் சரீரத்தை உமது இஷ்டப்படி அங்கீகரித்து உம்மால் செய்யப்பட்ட தருமத்தின் மரியாதையைக் காப்பாற்றிக் கொண்டு இருக்கிறீர். அப்பேர்ப்பட்ட புருஷோத்தமராகிய உம்மை நமஸ்கரிக்கிறேன். எவர் ஐந்து பர்வங்களுள்ள அவித்தைக்கு வசப்படாத வரானாலும், ஸகல லோகங்களையும் வயிற்றில் வைத்துக் காப்பாற்றிக் கொண்டு, பயங்கரமான அலைகளுள்ள சமுத்திர ஜலத்திற்குள் ஆதிசேஷனாகிய மெதுவான படுக்கையில் படுத்து, ஜனங்களுக்கு நித்திரா சுகம் இப்பேர்ப்பட்டது என்பதைக் காண்பிக்கிறாரோ, எவருடைய நாபியில் தோன்றிய தாமரஸ புஷ்பத்திலிருந்து மூவுலகத்தையும் ஸ்ருஷ்டிக்கும் நான் எவருடைய அனுக்ரஹத்தால் உண்டானேனோ, எவருடைய வயிற்றில் ஸகல உலகங்களும் வஸிக்கின்றனவோ, எவர் யோக நித்திரையின் முடிவில் தாமரைமலர் போன்ற கண்களைத் திறக்கின்றாரோ, அந்தப் பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன்.

அப்பேர்ப்பட்ட இந்தப் பகவான் ஸகல உலகத் திற்கும் அனுகூலத்தைச் செய்பவர். அந்தர்யாமியா யிருப்பவர். நமஸ்கரித்தவர்களிடத்தில் ப்ரியமுள்ளவர். அந்தப் ப்ரமபுருஷன் எந்த ஞானத்தாலும், ஐசுவரியத் தாலும் இந்த ஜகத்தைச் சுகப்படுத்துகிறாரோ, அப்பேர்ப்பட்ட ஞானத்தை எனக்குக் கொடுக்கட்டும்.

அதனால் நான் இந்த ஜகத்தை முன் கல்பத்திலிருந்ததுபோல் ஸ்ருஷ்டிப்பேன். குணாவதார முள்ளவரும், முகமலர்ச்சியுள்ளவருமான இந்தப் பகவான் தம்முடைய சக்தியாகிய லக்ஷ்மீதேவியுடன் எந்த எந்த சரிதங்களைச் செய்யப்போகிறாரோ, அவைகளெல்லாம் எனக்குத் தோன்றட்டும். அந்தப் பகவானுடைய ஆக்ஞையால் ஜகத்தை (பகவானையே ப்ரபாவமாயுடையது) நான் ஸ்ருஷ்டிக்கும் பொழுதும் என்னுடைய மனமானது அந்தப் பகவானிடத்திலேயே ரமிக்கட்டும். ஸ்ருஷ்யின் வைஷம்யத்தால் ஏற்படும் பாபத்தைப் போக்கடித்துக் கொள்வேன்.

அளவற்ற சக்தியுள்ள அந்தப் பரம புருஷன் ப்ரளய ஜலத்தில் வஸிக்கும்பொழுது அவருடைய கொப்பூழிலிருந்து விஞ்ஞான சக்தியாகிய நான் உண்டானேன். அப்பேர்ப்பட்ட நான் விசித்திரமான இந்தப் ப்ரபஞ்சத்தை விஸ்தாரப்படுத்தும்பொழுது வேதத்தினுடைய அவயமாகிய என்னுடைய வாக்கின் உச்சாரணங்கள் கெட்டுப் போகாமலிருக்கட்டும். மேலும், மிகுந்த கருணையுள்ளவராகிய அந்தப் புராண புருஷன், விசேஷ விசுவாசமுள்ள சிரிப்புடன் மலர்ந்த கண்களுள்ளவராகிய என்னிடம் வந்து ஜகத்தை உண்டுபண்ணுவதற்காகத் தேன்போல இனிமையான வார்த்தையால் என்னுடைய மனக்கவலையைத் தீர்க்க வேண்டும். இப்படி ப்ரஹ்மதேவர் தம்முடைய உற்பத்திக்குக் காரணமாயிருக்கும் பகவானைத் தபஸினாலும் உபாசனையாலும், சித்தத்தை யொரு வன்கட்டுத்துவதாகிய ஸமாதியாலும் தரிசித்து, மனத்திற்கும் வாக்குக்கும் எட்டியவரையில் ஸ்தோத்திரஞ் செய்து ச்ரமப்பட்டவர்போல

மௌனமாக இருந்தார்.

27–44 மதுவென்னும் அசுரனைக் கொன்றவராகிய பகவான் ப்ரளய கால ஜலத்தால் வருத்தப்பட்ட மனமுள்ளவரும் லோகத்தைப் படைக்கும் விஞ்ஞானத் திற்காக முயற்சிப்பவரும், தம்முடைய அம்சமுமான ப்ரஹ்மதேவருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டு, "ஓ வேதகர்ப்பரே! சோம்பலை அடையாதீர். ஸ்ருஷ்யில் முயற்சியும். எதற்காக என்னைப் ப்ரார்த்திக்கிறீரோ, அதனை முன்னமேயே அனுக்கிர கித்திருக்கிறேன். மறுபடியும் நீர் தவம் செய்யும். என் விஷயமாகிய உபாசனையையும் அனுஷ்டியும். அவை களால் நம்முடைய ஹ்ருதயத்தில் ஸகல லோகங்களும் தோன்றும் (இதுவரையில் மறந்திருந்தவைகள்). மேலும் பக்தியுள்ளவராகிய நீர் உம்மிடத்திலும், லோகத்திலும், எங்கும் பரவியிருக்கும் பரப்ரஹ்மமாகிய என்னையும் என்னிடத்திலுள்ள ஜீவர்களையும் பார்ப்பீர். கட்டை களில் அக்கினி யிருப்பதுபோல ஸகல பிராணிகள் இடத்திலும் நானிருப்பதாக ஜனங்கள் எப்பொழுது பார்க்கிறார்களோ, அப்பொழுது அஞ்ஞானம் விலகும். மேலும் எப்பொழுது ஜீவன், தன்னைப் பூதங்கள், இந்திரியங்கள், குணங்கள் ஆகிய இவைகளின் சம்பந்தமற்றவனாகவும், ஸ்வரூபமாகிய என்னுடன் லயித்தவனாகவும் பார்க்கிறானோ, அப்பொழுது மோட்சத்தை அடைகிறான். பலவகையான கர்மங்களைக் கொண்டு அநேக ப்ரஜைகளைச் சிருஷ்டிக்க விரும்பிய உம்முடைய மனம் இவ்விஷயத்தில் ப்ரமையை அடையாது. என்னுடைய அனுகூலம் மேலானது. ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கும்போதும் உம்முடைய மனமானது என்னிட த்திலேயே அதிக ஆசக்தியுள்ளதாக இருக்குமாகையால்

பாபியான ரஜோகுணமானது முந்திய ரிஷியான உம்மிடத்தில் சம்பந்திக்கிறதில்லை. நான் ப்ராணி களால் அறிய முடியாதவனானாலும், பூதங்கள், இந்திரியங்கள், சத்வம் முதலிய குணங்கள், அகங்காரம் ஆகிய இவைகளுடைய சம்பந்தமற்றவனென்று உம்மால் அறியப்பட்டிருக்கிறேன். தாமரைப் புஷ்பத்தின் தண்டு வழியாக அதன் காரணத்தைத் தேடி நீர் சென்றபோது, உமக்கு என் விஷயமாக சந்தேகமிருந்த படியால், (இதற்குக் காரணமொன்றிருக்க வேண்டும். அதுவோ தெரிய வில்லை. ஆனதால் இருக்கிறதா இல்லையாவென்ற சம்சயம்) என்னுடைய ஸ்வரூபத்தை வெளியில் காண்பிக்கவில்லை. ஓ ப்ரஹ்மதேவரே! ஆச்சரியமான என் கதையின் அடையாளமுள்ளதாக என்னை ஸ்தோத்திரம் செய்ததும், தபஸ்செய்ததும் ஆகிய இவைகள் என்னுடைய அனுக்கிரகத்தால் உண்டான வையேயாகும். ஸ்ருஷ்டிக்க விரும்பிய நீர் குணங்களின் ஸம்பந்தமுள்ளவன் போலத் தோன்றும் என்னை அவைகளின் ஸம்பந்தமற்றவனாகவே வருணித்துக் கொண்டு ஸ்தோத்திரம் செய்தபடியால் உம்மிடத்தில் ப்ரியமுள்ளவனாக இருக்கிறேன். இந்த ஸ்தோத்திரத் தால் எந்த மனிதன் ஒவ்வொரு நாளும் என்னைச் சந்தோஷப்படுத்துகிறானோ, அவனிடத்தில் நான் மிக்க ப்ரியத்துடன் அவனுடைய இஷ்டங்களைப் பூர்த்தி செய்வேன். மேலும் குளம், கிணறு ஆகிய இவைகளை வெட்டுவிப்பது முதலிய பூர்த்த தர்மம், தபஸ், யக்ஞம், தானம், யோகம், ஸமாதி ஆகிய இவைகளால் கிடைக்கும் க்ஷேமமாகிய பலன் என்னுடைய ப்ரீதியென்றே ஞானிகள் நினைக்கிறார் கள். நான் ஜீவர்களுக்கு ஆத்மாவாக இருப்பவன். ப்ரியமானவர்களுக்குள் மிக்க ப்ரியமானவன். அதனால்

T-V-m 8.3-2

என்னிடத்தில் ஆசைப்பட வேண்டும். ஆதலால் ஸகல வேதஸ்வரூபமாயும் என்னிடத்திலிருந்து உண்டானதுமாகிய உம்முடைய ஸ்வரூபத்தாலேயே (வேறு ஸாதனத்தை அபேட்சியாமல்) ப்ரஜைகளைச் ஸ்ருஷ்டியும். என்னிடத்திலிருப்பவர்களை வெளிப் படுத்தும், என்று தாமரை மலர் போன்ற நாபியுள்ள வரும், ப்ரதானம் (மாயை) புருஷன் (ஜீவன்) இவர்களுக்கு அதிபதியுமான ஸ்ரீமந் நாராயணன் அனுக்ரஹித்து, ஸ்ருஷ்டிக்க வேண்டியதைப் ப்ரகாசப் படுத்தி அவருடைய கவலையைத் தீர்த்து மறைந்தார்.

அத்தியாயம்–10

பத்துவகையான ஸர்க்கங்கள்

1–2. அதனைக் கேட்டு விதுரர். மைத்ரேயரை நோக்கி, 'ஓ பகவன்! உலகங்களுக்குப் பிதாமகரும் ப்ரபுவுமாகிய ப்ரஹ்மதேவர் புருஷோத்தமன் மறைந்த பிறகு தேகத்திலுண்டானவைகளும் மனத்திலிருந்து உண்டானவைகளுமான ப்ரஜைகளை எவ்வளவு வகையாய்ப்படைத்தார்? தவிரவும், என்னால் கேட்கப் பட்ட மற்ற எல்லாக் கேள்விகளுக்கும் க்ரமமாக உத்தரஞ் சொல்லி என்னுடைய சம்சயங்களை நீக்க வேண்டும். நீர் ஸகலத்தையும் அறிந்தவர்களுக்குள் சிறந்தவர்' என்று கேட்டுக்கொண்டார்.

3–9. அதனைக் கேட்டு அந்த மைத்ரேய மகர்ஷி மிகவும் ப்ரியத்துடன் அவைகளை மறவாமலேயே தமது மனத்தில் வைத்துக்கொண்டு ப்ரத்யுத்தரம் சொல்ல ஆரம்பித்தார். ப்ரஹ்மதேவர் ஸ்ரீமந் நாராயண னுடைய ஆக்ஞையின்படி. அவரிடத்திலேயே தம்முடையை மனத்தைச் செலுத்தி தேவமானத்தில் நூறு வருஷகாலம் தவம் செய்தார். அப்பொழுது ப்ரஹ்மதேவர் எதிலிருந்து தவம் செய்தாரோ அந்தத் தாமரைப் புஷ்பத்தையும் ஜலத்தையும் ப்ரளய காலக் காற்றானது அசைத்தது. அதனைக் கண்ணுற்ற ப்ரஹ்மதேவர் தம்முடைய வித்தையாலும், மிகவும் விருத்தியடைந்த தபஸினாலும் மிக்க விஞ்ஞான பலமுள்ளவராக அந்த வாயுவையும் ஜலத்தையும் பானஞ் செய்தார். பிறகு அவர் தமக்கு இருப்பிடமும், ஆகாசத்தில் வியாபரித்ததுமான தாமரைப்

புஷ்பத்தைப் பார்த்து "பூர்வ கல்பத்தில் லயமடைந்த லோகங்களை இந்தப் புஷ்பத்தைக் கொண்டு ஸ்ருஷ்டிப்பேன்" என்று யோசித்தார். பின்பு அவர் ஸ்ரீமந் நாராயணனால் ஜகத் ஸ்ருஷ்டியில் தூண்டப் பட்டு. பதினான்கு வகையாக ஆகக் கூடிய அந்தத் தாமரை புஷ்பத்தை மூன்று வகையாகப் பிரித்தார் (மூவுலகமாக வென்பது கருத்து). ப்ராணிகளுடைய போக ஸ்தானமாகிய மூவுலகத்தின் ஸ்ருஷ்டியானது இம்மாதிரி சொல்லப்பட்டது. (மூவுலகமும் காம்ய கர்மத்தின் பலமாகையால், ப்ரஹ்மதேவரின் ஒவ்வொரு பகலிலும் அவை ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன என்பது கருத்து) பலனை உத்தேசியாமல் செய்த நல்ல கர்மங்களின் பலமே ப்ரஹ்ம பதம் என்றார். (மகர்லோகம் முதலிய சத்யலோகம் வரையிலுள்ள லோகங்கள் நிஷ்காம கர்மங்களின் பலன்களாகையால் இரண்டு பரார்த்தம் வரையில் அவைகளுக்கு நாசமில்லை.)

10. அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி "ப்ரபுவாகிய ஓ ப்ராஹ்மணோத்தம! அனேக உருவமுள்ளவரும், ஆச்சரியகரமாக காரியங்களுள்ள வருமாகிய ஸ்ரீமந் நாராயணருக்குக் காலமென்ற ஸ்வரூபம் உண்டென்று சொன்னீரல்லவா? அதனை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

11–31 1/2. பிறகு மைத்ரேயர் விதுரரை நோக்கி, காலமென்பது மகத் தத்துவம் முதலியவைகளுடைய பரிணாமத்தால் ஏற்படுகிறது. அதற்கு உற்பத்தியும் இல்லை. முடிவும் இல்லை. அந்தக் காலத்தை நிமித்த காரணமாக வைத்துக் கொண்டு, பரம புருஷன் தம்மை விளையாட்டாகச் ஸ்ருஷ்டித்துக் கொண்டார்.

விஷ்ணுவின் மாயையால் ப்ரஹ்மமானது இந்தப் ப்ரபஞ்ச உருவமாக ஆகி, அவ்யக்த ஸ்வரூபமுள்ளதும் எல்லாவற்றிற்கும் மேலானதுமான காலத்தால் தனியாகப் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் ப்ரபஞ்சமானது இப்பொழுது ப்ரகாசித்துக் கொண்டிருப்பதுபோலப் பூர்வ கற்பத்திலும் இருந்தது. அடுத்த கற்பத்திலும் இம்மாதிரியாகவே இருக்கும். அதனாலுண்டாகும் ப்ராகிருதம், வைகிருதம் என்ற பேதமுள்ள சர்க்கமானது ஒன்பது வகையுள்ளது. அந்த சர்க்கத்திற்குக் காலத்தாலும், திரவியத்தாலும, குணங்களாலும் மூன்று வகையான ப்ரளயம் ஏற்படுகிறது. பரமாத்மாவினிடமிருந்து குணங்களுடைய வித்தியாசத்தால் ஏற்படும் மகத் தத்துவத்தின் ஸ்ருஷ்டி. முதலாவது, திரவியம், ஞானம் இவைகளால் ஏற்படும் அகங்காரத்தின் ஸ்ருஷ்டி. இரண்டாவது, பூத ஸ்ருஷ்டி. மூன்றாவது, அது தன்மாத்திரையுள்ளது, த்ரவிய சக்தியுள்ளது. நான்காவது இந்திரிய ஸ்ருஷ்டி. அது ஞானம், கருமம் ஆகிய் இவைகளின் ஸ்வரூபம். ஐந்தாவது மன ஸ்ருஷ்டி. அதுவே வைகாரிக தேவ ஸ்ருஷ்டி எனப்படுகிறது. ஆறாவது அவித்தையின் ஸ்ருஷ்டி. அந்த அவித்தை ஜீவர்களுக்கு ஆவரணத்தை யும், விக்ஷேபத்தையும் உண்டுபண்ணுகிறது. இந்த ஆறு வகையான சர்க்கங்களும் ப்ராக்ருதமெனப்படு கின்றன. வைகிருதமான சர்க்கங்களையும் சொல்லு கிறேன், எவரைத் தியானஞ் செய்த மாத்திரத்தில் சம்சார துக்கம் நீங்குமோ, ரஜோ குணத்தை யடைந்த அந்தப் பரம புருஷனுக்கு இது லீலையேயாம். தாவரங்களுடைய ஸ்ருஷ்டியே வைகிருத ஸ்ருஷ்டியில் முக்கியமானது. அதுவே ஏழாவது ஸ்ருஷ்டியாகும். அந்தத் தாவர ஸ்ருஷ்டியானது ஆறுவகையானது. எப்படியெனில், புஷ்பிக்காமல் காய்க்கும் அரசு,

அத்தி; பலா முதலிய மரங்கள் ஒருவகையாம். புஷ்பித்துப் பழுக்கும் யவம், நெல், பயறு முதலிய வைகள் மற்றொரு வகையாம். புஷ்பங்களையே ப்ரதானமாயுள்ள மல்லிகை முதலிய கொடிகள் மற்று ஒருவகையாம். மூங்கில் முதலியவைகள் பின்னொரு வகையாம். மற்ற கொடிகள் ஒரு வகையாம். மற்ற மரங்களும் ஒருவகையாம். இவைகள் யாவும் நடை அற்றவை. ஆகாரமற்றவை. வெளியில் ப்ரகாசிக்காத சைதன்யமுள்ளவை, உள்ளே ஸ்பரிசத்தை அறியக் கூடியவை. பலவகையான பருமன், உயரம் முதலியவை களுமுள்ளவை, எட்டாவது திர்யக் திருஷ்டி. அது பசு, ஆடு, எருமை கிருஷ்ணசாரம், பன்றி, கவயம், குரு, செம்மறியாடு, ஒட்டகம் ஆகிய இரண்டு குளம்புகளுள்ள ஒன்பது வகையான ப்ராணிகள். கழுதை, குதிரை, அச்வதரம் கௌரம், சரபம், சமர் என்ற ஒற்றைக் குளம்புள்ள ஆறு வகையான பிராணிகள். நாய், நரி, செந்நாய், புலி, பூனை, முயல் சல்யுகம், சிம்மம், குரங்கு, யானை, ஆமை, உடும்பு ஆகிய ஐந்து நகங்களுள்ள பன்னிரண்டு வகையான ப்ராணிகள் மகரம் முதலிய ஜலத்தில் சஞ்சரிக்கும் பிராணிகள், கழுகு, பருந்து, கொக்கு, சேனம், பாஸம், பல்லூகம், மயில், ஹம்ஸம், சாரசம், சக்ரவாகம், காக்கை, கோட்டான் முதலிய பறவைகள் ஆகிய இருபத்தெட்டு வகையுள்ளது. இவைகள் யாவும் ஞானமில்லாதவை மிகவும் தமோ குணமுள்ளவை. கிராணேந்திரியத்தாலேயே தங்களுக்கு இஷ்டமானவை களை அறிந்துகொள்ள கூடியவை. தீர்க்கமாகிய ஆலோசனையற்றவை. (பசுக்களுக்கு, பசி தாகத்திலேயே அறிவு என்று கருத்து) ஒன்பதாவது மனிதர்களுடைய ஸ்ருஷ்டியோ ஒருவகையானது. அதற்கு ஆகாரம், சஞ்சரிப்பது ஆகிய இவைகள் பூமியிலேயே

ஏற்படுகின்றன. அம்மனிதர்களிடத்தில் ரஜோ குணமே அதிகம். கருமங்களைச் செய்வதிலேயே அவர்கள் ஆசையுள்ளவர்கள். துக்கத்தையே சுகமாக நினைத்த வர்கள் இம்மூன்று ஸ்ருஷ்டிகளுமே வைகிருத ஸ்ருஷ்டிகளென சொல்லப்படுகின்றன. வைகாரிக மென்று சொல்லப்பட்ட தேவ ஸிருஷ்டியும், வைகிருத ஸிருஷ்டியாகும். கௌமார ஸிருஷ்டியானது, ப்ராக்ருதம் வைகிருதம் இரண்டும் சேர்ந்ததாக ஆகும். (அவர்களுக்கு தேவத்வம், மனுஷ்யத்வம் இரண்டும் உண்டென்பது கருத்து) இந்த வைகிருதமான தேவ ஸ்ருஷ்டியானது தேவர்கள், பிதிருக்கள், அசுரர்கள். கந்தர்வர்கள், அப்ஸரசுகள், யக்ஷரக்ஷஸ்ஸுக்கள், சித்தசாரண வித்யாதரர்கள், கின்னரர் முதலியவர் கள், பூதம் பிரேத பிசாசங்கள் ஆகிய எட்டு வகை யுள்ளது, இப்படி ப்ரஹ்மாவினால் செய்யப்பட்ட சர்க்கங்கள் பத்துவகை யென்றும் சொல்லப்பட்டிருக் கின்றன. இதற்குமேல் மனுக்களையும், மன் வந்த்ரங்களையும் சொல்லுகிறேன், ஸ்ரீமத் நாராயணன் ரஜோ குணமுள்ளவராகப் ப்ரஹ்மதேவ ஸ்வரூபத்தை யடைந்து தம்மைத் தாமே தம்மைக்கொண்டு படைக்கிறார். அவர் வீணாகாத சங்கற்பமுள்ளவர். ஒ விதுரரே எல்லாவற்றிற்கும் ஈசுவரனாகிய பரமாத்மா மாயாவி ஆகையால் குணங்களுடைய சம்பந்தமுள்ள இவரிடத்திலிருந்து ஒன்றன்பின் மற்றொன்று உண்டாயிற்று என்று சொல்ல வேண்டியதில்லை. நதியில் அநேகம் சுழல்கள் ஒரே காலத்தில் உண்டாகவில்லையா? மேலும் தேவர்கள் அசுரர்கள் முதலியவர்களில், இந்தக் கற்பத்தில் எவர்கள் இருக்கிறார்களோ, அவர்களே வேறு பெயருடனும், வேறு உருவத்துடனும் பிந்திய கற்பங்களிலும் இருக்கிறார்கள்.

அத்தியாயம்–11

காலத்தின் ஸ்வரூபம்

1–15 "காரியரூபமாகிய ப்ரபஞ்சத்தின் எந்த அம்சமானது கடைசியானதோ (பிரிக்க முடியாததோ) எது காரியமாயிருக்கும் தன்மையை அடையாததோ, மேலும் எது சமுதாயமாயிருக்கும் தன்மையை அடையாததோ அதே பரமாணுவென்று தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு அவயவங்கள் உண்டென்று மனிதர்கள் ப்ரமிக்கிறார்கள். (இது காலத்தின் சூட்சும ரூபம்) காரியம் மாத்திரமாயும், மாறுதலை அடையாத தாயுமுள்ள அந்த வஸ்துவின் சேர்க்கையே மிகவும் பெரியது. அது பேதமற்றது. விசேஷமற்றது. ஓ சாதுக்களுக்குள் மேலானவரே! இந்தப்ரபஞ்சமானது பரமாணுவாயிருக்கும்பொழுது இதை எந்தக் காலம் வ்யாபித்திருந்ததோ, அதுவே காலப் பரமாணு. காரியமாயிருக்கும் ப்ரபஞ்சம் முழுவதையும் எந்தக் காலம் வ்யாபித்திருக்கிறதோ, அதுவே மகாகாலம். இரண்டு காலப் பரமாணுக்கள் சேர்ந்தால் அணுவாகிறது. மூன்று அணுக்களால் திருஸரேணு உண்டாகிறது. வீடுகளில் சன்னல் வழியாகப் ப்ரகாசிக்கும் வெயிலில் பறந்துகொண்டிருக்கும் தூளிகளே திருஸரேணு எனப்படும். மூன்று கால திருஸரேணுக்களால் த்ருடி யுண்டாகின்றது. நூறு த்ருடி கொண்டது வேதமெனப்படுகிறது. மூன்று வேதங்கொண்டது லவமெனப்படுகிறது. மூன்று லவங்கள் நிமிஷமாகின்றது, மூன்று நிமிஷங்களால் க்ஷணம் உண்டாகிறது. ஐந்து க்ஷணங்களால் காஷ்டை ஏற்படுகிறது. பதினைந்து காஷ்டைகளால்

லகு ஏற்படுகிறது. பதினைந்து லகுக்களால் நாடிகை (நாழிகை) உண்டாகிறது. இரண்டு நாடிகைகள் ஒரு முகூர்த்தமாகும். ஆறு அல்லது ஏழு நாழிகை கொண்டது ப்ரஹரமென்றும், யாமமென்றும் சொல்லப்படுகிறது. ஆறு பலம் தாமிரத்தால் செய்யப் பட்ட உயரமான வடிவமுள்ள பாத்திரத்தில், இருபது குன்றிமணி நிறையுள்ள தங்கத்தால் செய்யப்பட்டவை களும், நான்கு அங்குல விஸ்தாரமுள்ளவைகளுமான நான்கு ஊசிகளால் துவாரஞ் செய்து அந்தப் பாத்திரத்தை ஜலத்தில் மிதக்கச் செய்து அந்தப் பாத்திரம் ஜலத்தில் எவ்வளவு காலத்தில் மூழ்குமோ அந்தக் காலமே நாழிகையாகும். நாலு யாமம் கொண்டது மனிதர்களுக்கு ஒரு பகலாம், ராத்திரியும் அவ்வளவு காலமேயாம். இவ்விரண்டும் சேர்ந்தது ஒருநாள் என்று சொல்லப்படுகிறது. பதினைந்து நாட்கள் கொண்டது ஒரு பக்ஷமாகும். அது சுக்லமென்றும், கிருஷ்ணமென்றும் இருவகையுள்ளது. அவ்விரண்டு பக்ஷங்கள் கொண்டது ஒரு மாதமாகும். அது பித்ரு தேவதைகளுக்கு ஒருநாள் ஆகும். அதிலும் சுக்லபக்ஷம் பகலாகும. கிருஷ்ணபக்ஷம் ராத்திரியாகும். இரண்டு மாதம் கொண்டது ஒரு ருது. ஆறு மாதம் கொண்டது ஒரு அயன மெனப்படுகிறது. அதிலும் தக்ஷிணாயணம், உத்தராயணம் என்று இருவகை யுண்டு; தக்ஷிணாயணம் தேவர்களுக்கு ஒரு ராத்திரியாகும். உத்தராயணமோ அவர்களுக்கு ஒரு பகலாகும். ஆதலால் மனுஷ்ய மானத்தில் பன்னிரண்டு மாதம் கொண்டது தேவர்களுக்கு ஒரு நாளாகின்றது. மனுஷ்ய மானத்தில் நூறு வருஷங்கள் மனிதர்களுக்குப் பரமாயுஸ் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கால ஸ்வரூபியான் சூரிய பகவான், கிரகங்கள், அசுவனி

முதலிய இருபத்தேழு நக்ஷத்திரங்கள், மற்ற தாரைகள் ஆகிய இவைகளுள்ள காலச் சக்கரத்திலிருந்து கொண்டு பரமாணு முதல் வருஷம் வரையிலுள்ள காலமானத்தால் ஜகத்தில் சஞ்சரிக்கிறார். மேலும், மேற்சொல்லிய சம்வத்ஸர ஸ்வரூபமாகிய காலத்திற்கு சம்வத்ஸரம், பரிவத்ஸரம், இத்வத்ஸரம், அனுவத்ஸரம், வத்ஸரமென்று ஐந்து பேதங்கள் (ஸௌரம், பார்ஹஸ்பத்யம், ஸாவனம், சாந்திரம், நக்ஷத்ரம் என்ற மான பேதத்தால்) ஏற்படுகின்றன. எந்தப் பரமபுருஷன் இம்மாதிரியான கால ஸ்வரூபியாயிருந்து பலவகையாகக் காரியங்களை உண்டுபண்ணி (விதைகளுக்கு முளைக்கும் சக்தியை உண்டுபண்ணிக் கொண்டு) சம்சாரிகளுக்கு ஸ்வர்க்கம் முதலிய பலனை, யாகம் முதலிய சத் கர்மங்களால் கொடுத்துக் கொண்டும், புருஷர்களுடைய மோஹத்தை நீக்குவதற்காக ஆகாசத்தில் சஞ்சரிக்கிறாரோ; ஐந்து வகையான வத்ஸரங்களை எவர் உண்டு பண்ணுகிறாரோ, அப்பேர்ப்பட்ட தேஜோரூபியான சூரியனைப் பூஜிக்க வேண்டும்" என்றார்.

16–17 அதனைக் கேட்டு விதுரர், "ஓ பகவானாகிய மைத்ரேயரே! பிதிருக்கள், தேவர்கள், மனிதர்கள் ஆகிய இவர்களுடைய மானத்தைச் சொன்னீர். மேலும், நீர் கால ரூபியான பகவானுடைய ஸ்வரூபத்தை நன்றாக அறிந்தவர். யோகத்தால் கிடைத்த ஞானக் கண்ணால் வித்வான்கள் எல்லாவற்றையும் அறிகிறார்கள். ஆகையால் மூவுலகத்திற்கு வெளியில் இருக்கும் ஞானிகளுடைய கதியையும் சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

18–21 அதனைக் கேட்டு மைத்ரேயர், "தேவ மானத்தால் அளக்கப்பட்ட பன்னீராயிரம் வருஷங்களைக் கொண்டு க்ருதயுகம், த்ரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம் என்று நான்கு யுகங்கள் ஏற்படுத்தப்பட்டன; நாலாயிரத்தெண்ணூறு (4800) வருஷங்கள் கொண்டது க்ருதயுகம் மூவாயிரத்தறுநூறு வருஷங்கள் கொண்டது, (3600) த்ரேதாயுகம். இரண்டு ஆயரத்து நாநூறு வருஷங்கள் கொண்டது,(2400) த்வாபர யுகம். ஆயிரத்து இருநூறு வருஷங்கள் கொண்டது,(1200) கலியுகம். க்ருதயுகத்தில் முதல் நாநூறு வருஷங்கள் யுகத்தின் சந்தி எனப்படுகின்றன. கடைசி நானூறு வருஷங்கள் சந்தியாம்ச மெனப்படுகின்றன. த்ரேதாயுகத்தில் முதல் முந்நூறு வருஷங்கள் சந்தி என்றும், கடைசி முந்நூறு வருஷங்கள் சந்தியாம்ச மென்றும், துவாபர யுகத்தில் முதல் இருநூறு வருஷங்கள் சந்தி என்று கடைசி இருநூறு வருஷங்கள் சந்தியாம்சமென்றும், கலியுகத்தில் முதல் நூறு வருஷங்கள் சந்தியென்றும், கடைசி நூறு வருஷங்கள் சந்தியாம்சமென்றும் சொல்லப்படுகின்றன. சந்தி, சந்தியாம்சம் என்னும் இவ்விரண்டிற்கும் நடுவிலிருக்கும் பாகமே யுகமெனப் படுகிறது. அந்தக் காலத்தில்தான் யுக தர்மங்கள் நன்றாகப் ப்ரகாசிக்கும். க்ருதயுகத்தில் தருமமானது நான்கு பாதங்களுடன் மனிதர்களை அனுசரிக்கிறது. மற்ற யுகங்களில் அந்த தருமத்திற்கு ஒவ்வொரு பாதம் குறைகிறது. இந்த மூவுலகத்தைக் காட்டிலும் வெளியிலிருக்கும் மஹர் லோகம் முதல் ப்ரம்ஹ லோகம் வரையில் ஆயிரம் சதுர்யுகம் கொண்டது ஒரு பகலாகும். இரவும் அவ்வளவு காலமேயாகும். அதில் ப்ரஹ்ம தேவர் தூங்குகிறார். ராத்திரி முடிந்து.

பகல் ஆரம்பிக்கும்பொழுது ஸ்ருஷ்டி ஆரம்பிக்கப்படு கிறது. அந்தப் ப்ரஹ்மதேவருடைய பகலில் பதினான்கு மனுக்கள் உண்டு. எழுபத்தொரு யுகங்களுக்குக் கொஞ்சம் அதிகமான காலம் ஒவ்வொரு மனுக்களின் காலமாகும். ஒவ்வொரு மன்வந்தரங்களிலேயும் அந்தந்த மனுவின் வம்சத்தில் பிறந்த அரசர்களும், ரிஷிகளும், தேவர்களும் தேவர்களுக்கு அதிபதிகளும், அந்த மனுக்களை அனுசரிக்கிறார்கள். இது ப்ரஹ்ம தேவரால் ஒவ்வொரு நாளும் செய்யப்படும் ஸ்ருஷ்டி. இது இவ்வுலகத்தையும் வ்ருத்தி செய்யக்கூடியது. திர்யக்ஜாதிகளும், மனிதர்களும், பித்ருக்களும், தேவர்களும் இதில் ஸ்ருஷ்டிக்கப் படுகிறார்கள். மேலும் ஒவ்வொரு மன்வந்தரங்களிலும் பரம புருஷன் சத்வகுண முள்ளவராக மனு முதலியவர்களின் ஸ்வரூபமாக இருந்து இந்த ஜகத்தைக் காப்பாற்றுகிறார். பின்னும் அவர் பகலின் முடிவில் தமோகுணத்தின் சொற்ப பாகத்தை அங்கீகரித்துக் காலகதியால் எல்லாவற்றையும் தமக்குள் அடக்கிக் கொண்டு வியாபார மற்றவராய் இருக்கிறார். அப்பொழுது பூமி முதலிய மூன்று உலகங்களும், சந்திரன், சூரியன் ஆகிய இவர்களுடைய ப்ரகாசமில்லாமல் மறைந்து இருக்கின்றன. பிறகு பகவானுடைய சக்தியாகிய சங்கர்ஷண முகாக்கினியால் முவுலகமும் எரிக்கப்படும் பொழுது அந்தத் தாபத்தைப் பொறுக்காமல் பிருகு முதலிய மகர்ஷிகள் மகர்லோகத்திலிருந்து ஜனலோகம் செல்லுகிறார்கள். அப்பொழுது சமுத்திரங்கள் ப்ரளய காலத்திய காற்றினால் அசைக்கப்பட்டுப் பெரியதாகிய அலைகளுடன் பயங்கரமான ஆடம்பர முள்ளவை களாக உலகங்களை மூழ்கச் செய்யும். அந்தக் காலத்தில் அந்த ஜலத்திற்குள் ஆதிசேஷனாகிய

ஆசனத்தில் பகவான் யோக நித்திரை செய்து கொண்டிருக்கிறார். ஜனலோகத்தில் வஸித்தவர்கள் அவரை ஸ்தோத்திரம் செய்து கொண்டிருப்பார்கள். இம்மாதிரியான ராத்திரி, பகல்களால் ப்ராணிகளின் வயதைவிட அதிகமான ப்ரஹ்மதேவருடைய வயதும் அபகரிக்கப் பெற்றுக் குறைந்துபோகிறது. அந்தப் ப்ரஹ்மதேவருடைய ஆயுளின் பாதிப்பாகம் பரார்த்தம் என்று சொல்லப்படுகிறது. முதல் பரார்த்தம் சென்று விட்டது. இப்பொழுது இரண்டாவது பரார்த்தம் நடக்கிறது. முந்திய பரார்தத்தின் முன்பாகத்தில் ப்ராஹ்மம் என்ற பெரியதாகிய கற்பம் நடந்தது. சப்தப்ரஹ்மமென்று சொல்லப்படுகிற ப்ரஹ்மதேவர் உண்டான காலமாகையால் அதற்குப் ப்ராஹ்மம் என்று பெயர் கிடைத்தது. அதற்கு அடுத்த கற்பத்தைப் பாத்ம கல்பம் என்று சொல்லுகிறார்கள். அந்தக் கற்பத்தில் பகவானுடைய நாபியாகிய ஏரியிலிருந்து லோகமாகிய பத்மம் (தாமரைப் புஷ்பம்) உண்டாயிற்று. இதுவே முதலாவது கற்பம். இரண்டாவது வராஹ கற்பமென்று சொல்லப்படுகிறது. அதில் பகவான் வராஹமாக (பன்றி) அவதரித்தார். உபாதியற்றவரும், நாசமற்றவரும், உற்பத்தியற்றவரும், ஜகத் காரணரும் ஆகிய பகவானுக்கு இரண்டு பரார்த்தங்களடங்கிய ப்ரஹ்மதேவருடைய ஆயுளானது நிமிஷமாம்! பரமாணுமுதல் இரண்டு பரார்த்தம் வரையிலுள்ள மேற்சொல்லிய காலமானது வீடு முதலியவைகளில் அபிமானமுள்ள சம்சாரிகளுக்கு யஜமானனே யொழியப் பரிபூரணரான புருஷோத்தமருக்கு அதிபதியல்ல. மஹத்தத்துவம் முதலிய ஆவரணங்கள் உள்ளதுமான அண்டகோசமானது வெளியில் ஐம்பது கோடி விஸ்தாரமுள்ளது. அளவில் ஒன்றுக்கொன்று

பத்து மடங்கு அதிகங்களான பூமி முதலிய ஆவரணங்களுள்ள மேற்சொல்லிய அண்டகோசமும், மற்ற கோடிக் கணக்கான அண்டங்களும் எதனிடத்தில் ப்ரவேசித்து பரமாணுக்கள் போலத் தோன்று கின்றனவோ, அதுவே அக்ஷரம்; எல்லாக் காரணங் களுக்கும் காரணம்; மகாத்மாவாகிய புருஷனுடைய சரீரம்; அதுவே பரப்ரஹ்மம்.

அத்தியாயம்–12

ஸனகர் முதலியவர்களுடைய ஸ்ருஷ்டி

1–8. ஓ விதுரரே! பரமாத்மாவினுடைய காலமென்ற பெயருள்ள மஹிமையைச் சொன்னேன் வேதகர்ப்பராகிய ப்ரஹ்மதேவர் ஜகத்தை யுண்டு பண்ணியதைச் சொல்லுகிறேன் தெரிந்து கொள்ளும். முதலில் ப்ரஹ்மா அந்ததாமிஸ்ரம், தாமிஸ்ரம் மஹாமோஹம், மோஹம், தமஸ் ஆகிய ஐந்து அஜ்ஞான விருத்திகளை யுண்டுபண்ணினார். பின்பு , தம்மால் ஸிருஷ்டிக்கப் பட்டவைகள் பாபத்திற்கு ஏதுக்களாயிருப்பதைப் பார்த்து, அதில் சந்தோஷம் அடையவில்லை. பின்பு பகவானைத் தியானம் செய்து அதனால் சித்த சுத்தியுள்ளவராக ஸனகர், ஸநந்தனர், ஸனாதனர், ஸனத்குமாரர் ஆகிய நான்கு குமாரர்களை உண்டுபண்ணினார். அவர்கள் கர்மங்களற்றவர்கள். இந்திரியங்களை ஜயித்தவர்கள். ப்ரஹ்மதேவர் அவர்களை நோக்கி, "ஓ குழந்தைகளே! நீங்கள் பிரஜைகளைச் ஸிருஷ்டியுங்கள்" என்று ஆக்ஞாபித்தார். அவர்கள் வாஸுதேவரையே தியானஞ் செய்துகொண்டு மோக்ஷஸாதனமாகிய நிவிருத்தி தருமத்தையே அனுஷ்டிப்பவர்களாகையால் அதனை ஒப்புக்கொள்ளவில்லை. அப்பொழுது புத்திரர்களாகிய அவர்கள் பிதாவின் கட்டளையைக் கடந்ததால் ப்ரஹ்மதேவருக்குக் கோபம் உண்டாயிற்று. ஆனாலும் அவர் அதை அடக்கிக் கொள்ள முயன்றார். அப்படியும் கோபம் அடங்காமல் ப்ரஹ்மதேவருடைய புருவங்களின் மத்ய பாகத்திலிருந்து ஒரு புத்திரன் உண்டானான். அந்தக் குமாரரே நீல லோஹிதர்.

அவர் ப்ரஹ்மதேவருடைய கோபத்தின் அம்சம். தேவர்களுக்கு முந்தி யுண்டானவரும், பரமசிவனென்று சொல்லப்படப் போகின்றவருமான அந்தக் குமாரர் ப்ரஹ்மதேவரை நோக்கி "ஓ ஜகத்தைப் போஷிப் பவரே! எனக்கு இருப்பிடங்களையும், பெயர்களையும் ஏற்படுத்தும்" என்று அழுது வேண்டிகொண்டார்.

9–14. பத்மத்திலிருந்து உண்டான ப்ரஹ்மதேவர் அதனைக் கேட்டு. "ஓ தேவர்களுக்குள் சிறந்தவரே! நீர் அழ வேண்டாம். உமக்கு இருப்பிடங்களையும், பெயர்களையும் ஏற்படுத்துகிறேன். நீர் ப்ராகிருத சிசுவைப்போல் அழுதபடியால் உம்மை ருத்திரனென்று ஜனங்கள் சொல்லுவார்கள். இருதயம், இந்திரியங்கள், பிராணன், ஆகாசம், வெளியிலிருக்கும் வாயு, அக்கினிஜலம், பூமி, சூரியன், சந்திரன், தபஸ் ஆகிய இவைகள் உமக்கு வாசஸ்தலங்களாக முன்னமேயே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் உமக்கு மன்யு, மனு, மஹாகாலன், மஹான், சிவன், ரிதத்வஜன், உருரேதஸ், பவன், காலன், வாமதேவன், திருதவிருதன் என்ற பெயர்களுண்டாகும், தவிரவும் உமக்கு, தீ விருத்தி, ரசனா, உமா, நியுத், ஸர்ப்பி, இளா, அம்பிகா, இராவதீ, ஸுதா, தீக்ஷா, ருத்ராணீ என்ற பெயருள்ள ஸ்திரீகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

ஆதலால் மேற்சொல்லிய நாமதேயங்களுடன் மேற்காட்டிய ஸ்தானங்களில் ஸ்திரீகளுடன் வசித்து அநேக பிரஜைகளை உண்டு பண்ணும். நீர் ப்ரஜாபதிகளுக்கும் மேலானவர்" என்று பிரியமாகச் சொன்னார்.

15–20. இம்மாதிரி பிதாவினால் ஆக்ஞாபிக்கப் பட்ட அந்த நீலலோஹிதர் ஆகிருதி சுபாவம் ஆகிய இவைகளில் தமக்குச் சமானர்களாகிய ப்ரஜைகளை உண்டுபண்ணினார். அந்த ருத்திரரால் ஸிருஷ்டிக்கப் பட்ட ப்ரஜைகள் கூட்டங் கூட்டமாக ஜகத்தை விழுங்குகிறவர்கள் போல எங்கும் பரவியிருந்தார்கள். அதனை கண்ட ப்ரஹ்மதேவர் ஸந்தோஷமடைந்து, ருத்திரரை நோக்கி, "ஓ தேவசிரேஷ்டரே! உம்மால் ஸிருஷ்டிக்கப்பட்ட ப்ரஜைகள் என்னையும், திக்குகளையும் பார்வையால் எரிப்பவர்கள்போல் இருக்கிறார்கள். ஆதலால் நீர் இனி ஸிருஷ்டிக்க வேண்டாம். ஸகல ப்ராணிகளுக்கும் ஸுகத்தைக் கொடுக்கக்கூடிய தவத்தைச் செய்யும். உமக்கு க்ஷேமமுண்டாகட்டும். ஸகல பிராணிகளுடைய இருதய குகையில் வஸிப்பவரும், தேஜோரூபியும், பகவானாயுமுள்ள பரமாத்மாவைத் தபஸினாலேயே புருஷன் அடைகிறான். ஆதலால் நீரும் தபஸ் செய்தால் அதன் பலத்தால் • ஜகத்தை முன் கற்பத்திலிருந்தது போல் ஸிருஷ்டிப்பீர்" என்றார். அதனைக் கேட்ட ருத்திரரும் வாக்குகளுக்கு அதிபதியான ப்ரஹ்மதேவருடைய வார்த்தையை அங்கீகரித்து, அவரிடம் விடைபெற்றுக் கொண்டு தபஸ் செய்வதற்காக வனம் சென்றார்.

21–27. பிறகு ப்ரஹ்மதேவர் ஸிருஷ்டி விஷயமாகத் தியானம் செய்தார். அவருக்கு அப்பொழுது பகவான் உடைய சக்திவிசேஷத்துடன் கூடிய மரீசி, அத்திரி, அங்கிரஸ், புலஸ்தியர், புலஹர், க்ரது, பிருகு, வசிஷ்டர், தக்ஷர், நாரதர் ஆகிய பத்துப் புத்திரர்கள் உண்டானார்கள். அவர்கள் லோகத்தின் சந்தானத்திற்குப்

காரணமாயிருப்பவர்கள். அதெப்படியெனில் அவருடைய மடியிலிருந்து நாரதரும், கட்டை விரலிலிருந்து தக்ஷரும், ப்ராணனிடமிருந்து வசிஷ்டரும், தொக்கிந் திரியத்திலிருந்து ப்ருகுவும், கையிலிருந்து க்ரதுவும் நாபியிலிருந்து புலஹரும், காதுகளிலிருந்து புல்ஸ்தியரும், முகத்திலிருந்து அங்கிரசும், மனத்தில் இருந்து மரீசியும் உண்டானார்கள். மேலும் அவர் உடைய வலப்பக்க ஸ்தனத்திலிருந்து ஸ்ரீமந் நாராயண னுக்கு வாசஸ்தானமாகிய தருமம் உண்டாயிற்று. அவருடைய பின் பக்கத்திலிருந்து அதர்மம் உண்டா யிற்று. உலகத்திற்குப் பயங்கரனாகிய ம்ருத்யுவே அதற்கு அதிதேவதை. மேலும் அவருடைய ஹிருதயத் திலிருந்து காமமும், புருவங்களிலிருந்து கோபமும், உதட்டிலிருந்து லோபமும், முகத்திலிருந்து வாக்குக்கு அதிதேவதையும், ஆண்குறியிலிருந்து சமுத்திரங்களும், பாயுவிலிருந்து பாபத்திற்கு இருப்பிடமாகிய நிருதியும் உண்டானார்கள். பின்னும் அவருடைய நிழலிலிருந்து தேவஹூதிக்குப் பர்த்தாவாக ஆகப்போகிற கர்த்தமப் பிரஜாபதி உண்டானார். இப்படி ப்ரஹ்மதேவருடைய தேகத்திலிருந்தும் மனத்திலிருந்தும் இந்த ஜகத் உண்டாயிற்று.

28–32. ஓ விதுரரே! ப்ரஹ்மதேவர் தம்மிடமிருந்து உண்டானவளும், மனோகரமாகிய உருவமுள்ளவளு மான வாக்குக்கு அதிதேவதையை அவள் இஷ்டப் படாமலிருக்கும் போதும் தாம் ஆசைப்பட்டார், என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அப்பொழுது மரீசி முதலியவர்கள் அதர்மத்தைச் செய்ய முயன்ற தங்கள் உடைய பிதாவை நோக்கி, "மன்மதனை ஜயிக்காமல் உம்முடைய பெண்ணிடத்தில் நீர் ஆசைப்படுவது

உசிதமல்ல. இது நம்முடைய முன்னோர்களால் அனுஷ்டிக்கப்பட்டதுமில்லை. உமக்குப் பிந்தியவர் களாலும் செய்யக்கூடியதில்லை. ஓ ஜகத்குருவே! மிக்க தேஜஸுள்ளவர்களானாலும் இம்மாதிரியான காரியத்தில் முயற்சிப்பது நியாயமல்ல. மகான்களால் அனுஷ்டிக்கப்படும் காரியங்களைச் செய்து லோகங்கள் க்ஷேமத்தை அடைகின்றன. (நீர் இம்மாதிரியான கெட்ட காரியத்தைச் செய்தால் மற்றவர்களும் இதைச் செய்து நரகத்தை அடைவார்களென்று கருத்து.) நீர் காரணத்தில் சூட்சுமரூபமாக இருந்த ஜகத்தை உம்முடைய ப்ரகாசத்தால் ப்ரகாசிக்கச் செய்தவர். இப்படிப் பட்ட உமக்கு நமஸ்காரம் செய்கிறோம். தர்மத்தைக் காப்பாற்றவேண்டும்" என்று பிரார்த்தித் தார்கள்.

33–35. அதனைக் கேட்ட ப்ரஹ்மதேவர் வெட்கம் அடைந்து அவளை விட்டுவிட்டார். (அந்த ஆசையை யொழித்தாரென்பது கருத்து.) அவளை திக்குகள் கிரஹித்துக் கொண்டன. அது பனியால் ஏற்படும் தமஸ்ஸாகும். பின்பு ஒருகால் ஜனங்களை எப்படி ஸிருஷ்டிக்கிறதென்று அவர் தியானம் செய்யும்போது அவருடைய நான்கு முகங்களிலிருந்தும் வேதங்கள் வெளிப்பட்டன. சாதுர்ஹோத்ரம் (ஹோதா முதலிய நான்கு ரித்விக்குகள் செய்யவேண்டிய கர்மம்) அவைகளின் தந்திரம், உபவேதங்கள், நீதிசாஸ்திரம், தருமத்தின் நான்கு பாதங்கள், ஆசிரம தர்மங்கள் ஆகிய இவைகளும் உண்டாயின.

36. அதனைக் கேட்டு விதுரர் மைத்ரேயரை நோக்கி "ஓ தபஸ்ஸையே தனமாகக் கொண்டவரே!

ப்ரஜாபதிகளுக்கும் அதிபதியாகிய அந்தப் ப்ரஹ்மதேவர் எந்த எந்த வேதங்களை, எந்த எந்த முகத்தால் ஸிருஷ்டித்தார்? அவற்றைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

37–48. அதனைக் கேட்டு மைத்ரேயர் ப்ரத்யுத்தரம் சொல்லலானார். ப்ரஹ்மதேவர், ரிக், யஜுஸ், சாமம், அதர்வம் என்ற நான்கு வேதங்களைக் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திக்குகளை நோக்கியிருக்கும் தம்முடைய முகங்களால் உண்டுபண்ணினார். சாஸ்திரம் (ஹோதாவினால் செய்யப்பட வேண்டியது), இஜ்யை (அத்வர்யு செய்யவேண்டியது) ஸ்துதி, ஸ்தோமம் (உத்காதாவினால் செய்யப்பட வேண்டியது), ப்ராயசித்தம் (ப்ரஹ்மாவினால் செய்யப்பட வேண்டியது) ஆகிய இவைகளையும் உண்டுபண்ணினார். மேலும் அவர் ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வ வேதம், ஸ்தாபத்யம் (விசுவகர்மாவினால் செய்யக்கூடியது) ஆகிய இவைகளையும் படைத்தார். பின்னும் எல்லாவற்றையும் அறிந்த அவர் இதிகாசம், புராணம் ஆகிய ஐந்தாவது வேதத்தை எல்லா முகங்களாலும் உண்டுபண்ணினார். அவருடைய முந்திய முகத்தில் இருந்து ஷோடசி, உக்தியம், சயனம், அக்னிஷ்டோமம், அப்தோர்யாமம், அதிராத்ரம், வாஜ்பேயம், கோஸவம் ஆகிய இவைகளும் வித்யை, தானம், தபஸ் சத்தியம் என்ற தருமத்தின் நான்கு பாதங்களும் ஆசிரமங்களும், அவைகளின் தருமங்களும் உண்டாயின. மேலும் ஆசிரமங்களில் ப்ரம்மசரிய ஆச்ரமத்தில் ஸாவித்ரம், ப்ரஜாபத்யம், ப்ரஹ்மம், ப்ரஹத் என்று நான்கு வகையுண்டு. கிரஹஸ்தாசிரமத்தில் வார்த்தை, சஞ்சயம், சாலீனம் சிலோஞ்சம் என்று நான்கு

வகையுண்டு. வானப்பிரஸ்தர்களுக்குள் வைகானஸர்கள், வாலகில்யர்கள், ஔதும்பரர்கள், பேனபர்கள் என்ற நான்கு வகையுண்டு. சன்யாச ஆசிரமத்திலும் குடீசகர்கள், பஹூதர்கள், ஹம்ஸர்கள். நிஷ்கிரியர்கள் என்று நால்வகை யுண்டு. ஆத்மா அனாத்மா இவை களை தெரிவிக்கும் ஆன்வீக்ஷகி, கர்ம வித்தையாகிய த்ரயீ, க்ருஷி முதலிய வார்த்தை தண்டநீதி ஆகிய நான்கு வித்யைகளும் நான்கு வ்யாஹ்ருதிகளும். நான்கு முகங்களிலிருந்து உண்டாயின. அவருடைய ஹிருதயாகாசத்திலிருந்து ப்ரணவமும், ரோமங்களில் இருந்து உஷ்ணிக் சந்தசும், எலும்புகளிலிருந்து ஜகதீச் சந்தசும் மஜ்ஜையிலிருந்து பங்தி சந்தசும் ப்ராணனிடமிருந்து ப்ரஹதீச் சந்தசும் உண்டாயின. ஸ்பர்சமென்ற எழுத்துக்களே அவருடைய ஜீவன். ஸ்வரமென்ற அக்ஷரங்களே அவருக்கு தேஹம். ஊஷ்மாவென்ற அக்ஷரங்களே அவருக்கு இந்திரியங்கள் அந்தஸ்தமென்ற எழுத்துக்களே அவருக்குப் பலமாய் இருக்கின்றன. அவருடைய விளையாட்டினால் ஏழு ஸ்வரங்களும் உண்டாகின்றன. ஓ விதுரரே! இப்படி சப்த ப்ரஹ்மஸ்வரூபியான அவருடைய உருவமானது வ்யக்தமாகும் பொழுது பலவகை சக்தியுள்ளதாகவும், (இந்திரன் முதலியவர்களின் உருவமாக) அவ்யக்தமாய் இருக்கும் போது ப்ரஹ்மமாகவும் ப்ரகாசிக்கிறது.

அத்தியாயம்– 13

வராஹாவதாரம்

1–4 மைத்ரேயரால் சொல்லப்பட்டதும் மிகவும் புண்யகரமுமான வார்த்தையைக் கேட்ட விதுரர் ஸ்ரீ கிருஷ்ண கதையில் மிகுந்த ஆதரவுடன், "ஓ மஹா முனியே! ப்ரஹ்மதேவருக்குப் ப்ரியமுள்ள புத்திரராகிய அந்த ஸ்வாயம்புவ மனுவானர் ப்ரியமுள்ள பத்தினியை அடைந்து எதனைச் செய்தார்? அரசர்களுக்குள் முந்தியவாக்கிய அவருடையச் சரித்தத்தைக் கேட்க ச்ரத்தையுள்ளவனாக இருக்கிறேன். அவர் ஸ்ரீ மஹா விஷ்ணுவை ஆசிரயித்தவர், பகவானுடைய குணங்களைக் கேட்பது, முகுந்தருடைய பாதாரவிந்தத்தை ஹிருதயத்தில் தியானிப்பது ஆகிய இவைகளே வெகு காலமாகச் ச்ரமப்பட்டு வித்தியாப்யாஸம் செய்ததின் பலனாகும். ஆதலால் அவருடைய சரித்தத்தைச் சொல்ல வேண்டுமி என்று கேட்டார்.

5–13 அதனைக் கேட்ட மைத்ரேயர் பகவத் கதையைச் சொல்லும்படி தாம் தூண்டப்பட்டபடியால் மயிர்க் கூச்சலுள்ளவராகி வணக்கமுள்ளவரும், ஆயிரந்தலையுள்ள பகவானுடைய பாதபீடருமாகிய (பகவான் விதுரருடைய மடியில் ப்ரியத்தால் கால் நீட்டிச் சயனம் செய்கிற வழக்கம்) விதுரரை நோக்கிச் சொல்லலானார். ஸ்வாயம்புவ மனு தம்முடைய பத்தினியுடன் எப்பொழுது உண்டானாரோ அப்பொழுது அவர் இரு கைகளைக் கூப்பி வணங்கி, ப்ரஹ்மதேவரை நோக்கி, "நீர் ஒருவரே இந்த ஸகல ஜகத்தையும் உண்டுபண்ணினவர். அதற்கு விருத்தியை

ஏற்படுத்தியவர். போஷிப்பவர். நீர் பிறரை அபேட்சியாத வரானாலும் உம்முடைய ப்ரஜை களாகிய நாங்கள் எதனைச் செய்தால் உமக்குச் சிசுரூஷை செய்ததாக ஆகும்? ஓ ஸ்தோத்திரம் செய்யக் கூடியவரே! எதனைச் செய்தால் இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் எங்கும் கீர்த்தி உண்டாகும்? எங்களால் செய்யக்கூடிய அந்தத் தர்மங்கள் இவை களென்று சொல்லவேண்டும். உமக்கு நமஸ்காரம் செய்கிறேன்" என்று கேட்டார். அப்பொழுது ப்ரஹ்ம தேவர் புத்திரனை நோக்கி, "குழந்தாய், உம்மிடத்தில் மிகவும் பிரிய மடைந்தேன். உங்களிருவர்களுக்கும் க்ஷேமம் உண்டாகட்டும். என்னால் உபதேசிக்கப்படும் காரியத்தைக் கபடமற்றவராய்ச் செய்யும். புத்திரர்கள் தங்களுடைய சக்திக்குத் தக்கபடி மாத்சர்யமில்லாத வர்களாக (ஸனகர் முதலியவர்களே செய்யவில்லையே. அப்படியிருக்க நாம் பிதாவின் கட்டளைப்படி நடக்கவேண்டுமா வென்று நினைக்காமல்) ப்ரீதியுடன் பிதாவின் கட்டளையின்படி நடந்தார்களானால் பிதாவைப் பூஜித்ததாகும். இதுதான் புத்திரர்கள் செய்ய வேண்டிய காரியம். ஆனதால் நீர் இவளிடத்தில் உமக்குச் சமமான குணசாலிகளான குழந்தைகளை உண்டு பண்ணிக்கொண்டு பூமியை தருமமமாகப் பரிபாலியும். மஹாவிஷ்ணுவை யாகத்தால் பூஜியும். ப்ரஜைகளைக் காப்பாற்றினால் எனக்கு மேலான சிசுரூஷை செய்ததாகும். மேலும் யக்ஞ ஸ்வரூபியாகிய பகவான் எவர்களிடம் சந்தோஷப் படவில்லையோ அவர்கள் செய்யும் காரியம் யாவும் ப்ரயோசன மற்றவை. அவர்கள் தமது ஆத்மாவினாலேய ஆதரிக்கப் படுகிறதில்லை. அந்தப் பகவானும் ப்ரஜாபாலனம் செய்யும் உம்மிடத்தில் சந்தோஷப்படுவார்" என்றார்.

14–19 அதனைக் கேட்ட ஸ்வாயம்புவ மனுவானவர் ப்ரஹ்மதேவரை நோக்கி, "ஓ பாபங்களைப் போக்குகிறவரே உம்முடைய ஆக்ஞையின்படி நடக்கிறேன்; எனக்கும் ப்ரஜைகளுக்கும் வாசஸ்தலம் இன்னதென்று சொல்ல வேண்டும். ஸகல ப்ராணி களுக்கும் இருப்பிடமாகிய பூமியானது ஜலத்தில் மூழ்கியிருக்கிறது. ஓ தேவ! இந்தப் பூமிதேவியை உயரக் கொண்டு வருவதற்காக முயற்சிக்க வேண்டும்" என்றார். அதனைக் கேட்டு ப்ரஹ்மதேவர் ஜலத்தில் மூழ்கியிருக்கும் பூமியை உயரக் கொண்டுவருவதைப் பற்றித் தமக்குள் யோசிக்கலானார். ப்ரளய கால ஜலத்தை எல்லாவற்றையும் குடித்தேன். பூமியில் ப்ரஜைகள் வஸிக்கும்படி செய்தேன். தேவர்கள், அஸுரர்கள், பித்ருக்கள், மனிதர்கள், பசுக்கள், பறவைகள், மலைப்பாம்புகள், மலைகள், யானைகள், இன்னும் பலவகையான ப்ராணிகளைச் ஸிருஷ்டித்து வரும்போது பூமி ஜலத்தில் மூழ்கிப் பாதாளம் சென்றது. ஸிருஷ்டிப்பதில் பகவானால் தூண்டப்பட்ட நாம் இந்தச் சமயத்தில் என்ன செய்யலாம், எப்படிப் பூமியை வெளியில் கொண்டுவருவேன்? ஆனால்லும் எந்தப் பகவானுடைய ஹிருதயத்திலிருந்து நான் உண்டானேனோ அந்தப் பகவானே இவ்விஷயத்தில் தகுந்த உபாயத்தைச் செய்ய வேண்டும்" என்று பகவானைத் தியானம் செய்தார்.

20–27 அந்தச் சமயத்தில் அந்தப் ப்ரஹ்மதேவர் உடைய மூக்குத் துவாரத்திலிருந்து ஒரு பன்றிக்குட்டி வெளிப்பட்டது. அது கட்டைவிரல் அளவுள்ளதாக இருந்தது. மேலும் அது அவர் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே ஆகாசத்திலிருந்தபடி யானை போலப்

பெரிய சரீரமுள்ளதாக விருத்தி அடைந்தது அது ஆச்சரியப்படக்கூடியதாக இருந்தது. அதனைக் கண்ட மரீசி முதலியவர்களும் ஸனகர் முதலியவர் களும், ஸ்வவாயம்புவ மனுவும் "இதென்ன ஆச்சரியம்! பன்றி உருவத்துடன் பெரிய ப்ராணியொன்று திவ்ய சரீரமுள்ளதாக இருக்கிறது. இது ப்ரஹ்மதேவருடைய மூக்கிலிருந்து வெளிப்பட்டது. கட்டைவிரல் அளவு உள்ளதான இதன் தலை ஒரு க்ஷணத்தில் மலை போன்றதாகி விட்டதே. ஒருகால் பகவானே இந்தச் சரீரத்துடன் அவதரித்திருக்கிறாரோ? மனத்திற்குக் கவலையாய் இருக்கிறதே" என்று யோசித்துக் கொண்டு இருந்தார்கள். அப்பொழுது மலைபோன்ற சரீரமுள்ளவரும், வராஹ ரூபம் தரித்தவருமான பகவான் கர்ஜித்தார். அந்தச் சப்தத்தால் திக்குகளில் எதிரொலி உண்டாயிற்று. அதனைக் கேட்டு ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் சந்தோஷமடைந்தார்கள். தபோலோகம், ஸத்யலோகம் இவைகளில் வஸிப்பவர் கள் நம்முடைய துக்கத்தைப் போக்கக்கூடிய மாயா வராஹத்தின் அந்தச் கர்க்கர சப்தத்தைக் கேட்டுப் பரிசுத்தங்களான மூன்று வேதங்களால் ஸ்தோத்திரம் செய்தார்கள்.

28–35 வேதங்களால் ஸ்தோத்திரம் செய்யப்படும் சரீரமுள்ள அந்தப் பகவான் அந்தப் ப்ராஹ்மணோத் தமர்களால் உச்சரிக்கப்பட்டவைகளும், தம்முடைய குணங்களை அனுமதித்தவைகளுமாகிய வேதங்களைக் கேட்டுக் கொண்டு ஜலத்திற்குள் ப்ரவேசித்தார். பூமியை வெளியில் கொண்டுவருகிற முயற்சியுடன் வராஹமாக (பன்றி) அவதரித்த பகவான் ஆகாசத்தில் வாலை உயரத் தூக்கிக் கொண்டும் கடினமான

சரீரமுள்ளவரும் அதிகக் கடினமாகிய மயிருள்ளவரும், குளம்புகளால் மேகங்களை அடித்தவரும், தம்முடைய சிங்கப் பற்களுடைய தேஜஸினாலும், நேத்திர காந்தியாலும், மற்ற ப்ரகாசத்தை அபேட்சியாமல் ப்ரகாசித்திருந்தார். பிடரி மயிர்களை உதறிக் கொண்டு மிருந்தார். மேலும் அவர் யக்ஞ ஸ்வரூபி. வராஹமாக அவதரித்தவர், பயங்கரமாகிய பார்வை உள்ளவரானாலும் ப்ராஹ்மணர்களைச் சந்தோஷமாகப் பார்த்தார். அப்பொழுது அவர் பூமி சென்ற வழியை வாக்கினாலேயே தெரிந்துகொண்டு ஜலத்திற்குள் சென்றார். வஜ்ஜிரத்தால் செய்யப்பட்ட மலைபோலக் கெட்டியான சரீரமுள்ள அந்த வராஹம் வேகமாகக் குதித்ததால் சமுத்திரமானது மிகவும் உபத்திரவப்பட்டு அலைகளாகிய நீண்ட கைகளை நீட்டிக் கொண்டு, "ஓ யக்ஞ வராஹ ரூபியான பகவன்! என்னைக் காப்பாற்றும்" என்று உரக்கக் கதறினது போலிருந்தது. அப்பொழுது மூன்று கணுக்களுள்ள (ப்ராதஸ்ஸவநம், மத்யந்தினஸவநம், ஸாயம்ஸவநமென்ற) யக்ஞ ரூபியான பகவான் கரையற்ற சமுத்திர ஜலத்தைத் தம்முடைய நீண்ட குளம்புகளால் பிளந்து கொண்டு பாதாளம் சென்று பூமியைக் கண்டார். ப்ரளய காலத்தில் இவர் ஜலத்தில் சயனம் செய்துகொண்டு பூமியை வயிற்றில் வைத்துக் காப்பாற்றினார். அவர் ஸகல ஜீவராசி களுக்கும் ஆதாரமாயிருப்பவர். அப்பொழுது அவர் தம்முடைய சிங்கப் பல்லால் பூமியைத் தூக்கிக் கொண்டு மிகவும் ப்ரகாசித்தார். அந்த ஜலத்தில் அசுரர்களுக்குள் முந்தியவனான இரண்யாக்ஷன் என்பவன் கதாயுதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அவருக்கெதிரில் ஓடிவந்தான். அவன் விசேஷ கோபமுள்ளவன். ஸகிக்க முடியாத பராக்கிரமுள்ளவன்.

யானையைச் சிங்கம் கொன்றார் போல அவர் பிரயாசம் இன்றி அந்த அசுரனைக் கொன்றார். மேலும் அவர் மலையின் தாழ்வரையில் விளையாடி, அதன் தாதுக்களால் சிவந்த கன்னங்களுள்ள யானைபோல ஹிரண்யனுடைய ரத்தத்தால் சிவந்த கன்னமுள்ளவரும், பச்சிலைபோல நீல வர்ணமுள்ளவராகவும் வெண்மை நிறமுள்ள பல்லின் நுனியில் பூமியை வைத்துக் கொண்டவராகவும் இருந்தார். அவரை ஈசுவர னென்று தெரிந்து கொண்டு மஹர்ஷிகள் ப்ரஹ்மதேவரை முன்னிட்டு வேத மந்திரங்களால் பின்வருமாறு துதித்தார்கள்.

36–48 ஒருவராலும் ஜயிக்கப்படாதவரே! யாகத்தை விருத்தி செய்பவரே! சத்துருவை ஜயித்தீர். வேதமாகிய உம்முடைய சரீரத்தை உதறிக் கொள்ளும். உமக்கு நமஸ்காரஞ் செய்கிறோம். உம்முடைய உரோம கூபங்களில் (மயிர்க் கால்களில்) சமுத்திரங்கள் வஸிக்கின்றன. நீர் பூமியைப் பாதாளத்திலிருந்து கொண்டுவருவதற்காக வராஹமாக அவதரித்தவர். அப்போர்ப்பட்ட உமக்கு நமஸ்காரம். ஓ தேவ! யக்ஞ ஸ்வரூபியாகிய உம்முடைய தோளில் காயத்ரி முதலிய சந்தஸ்ஸுகளும், மயிர்களில் தர்ப்பங்களும், நேத்திரங்களில் ஆஜ்யமும் (நெய்), கால்களில் சாதுர்ஹோத்ரமும் (ஹோதா முதலியவர்கள் செய்ய வேண்டிய காரியம்), முகத்தின் முன்பாகத்தில் இருக்கும் மூக்குகளில் ஸ்ரவமும், வயிற்றில் இடையும் (தக்ஷிண பாத்திரம்), காதுகளில் சமஸ்ஸும்; வாயில் ப்ராசித்திரமும், க்ரஸனமென்ற முகத்திற்குள்ளிருக்கும் பாகத்தில் க்ரஹங்களும் இருக்கின்றன. பக்ஷிப்பது அக்னிஹோத்ரமாகும். நீர் அடிக்கடி அவதாரத்தால்

ப்ரகாசிப்பதே தீக்ஷை (தீக்ஷணியேஷ்டி). உம்முடைய கழுத்தே உபஸ்தங்கள். உம்முடைய இரு சிங்கப் பற்களே பிராயணீய உதயநீய இஷ்டிகள். நாக்கானது ப்ரவர்க்கியமாகிறது. யக்ஞ ரூபியாகிய உம்முடைய தலையானது ஸப்யம், ஆஸத்யம் என்ற அக்கினிகளாகும். உம்முடைய ஐந்து ப்ராணன்களும் இஷ்ட காசயனங்களாகும். உம்முடைய ரேதஸ்ஸே சோமரசமாகும். பால்யம் முதலிய அவஸ்தையானது வனங்களாகும். உம்முடைய சரீரத்திலிருக்கும் மாம்சம் முதலிய தாதுக்கள் அக்கினிஷ்டோமம் முதலிய ஸமஸ்தைகளாகும். சரீரத்தின் சந்திகள் துவாதசாஹம் முதலிய சத்திரங்களாகின்றன. நீர் யக்ஞ ஸ்வரூபி (ஸோமம் இல்லாதவை யக்ஞங்கள்) க்ரதுஸ்வரூபி (ஸோமம் உள்ளவைகள் கிரதுக்களாம்) மேலும் அனுஷ்டானமே சந்திபந்தங்கள். ஸகல மந்திர ஸ்வரூபி, ஸகல தேவதா ஸ்வரூபி, ஸகல திரவிய ஸ்வரூபி, ஸகல யாக ஸ்வரூபி, ஸகல கிரியா ஸ்வரூபி, வைராக்கியத்துடன் கூடிய பக்தியால் சித்தம் ஸ்திரப்பட்டு அதனாலுண்டாகும் அபரோக்ஷ சாக்ஷாத்காரமாகிய ஞானத்தைக் கொடுப்பவர். ஸகல வித்தைகளையும் உபதேசிக்கும் குரு. அப்படிப்பட்ட பகவானாகிய உமக்கு நமஸ்காரம். ஓ பூமியைத் தரிக்கும் பகவன்! மலைகளுடன் கூடிய பூமியானவள் சிங்கப்பல்லின் நுனியைக் கொண்டு உம்மால் தூக்கப்பட்டவளாகப் ப்ரகாசிக்கிறாள். இந்த உம்முடைய உருவமானது சேற்றுடன் தாமரைக் கொடியைத் தந்தங்களில் தரித்து ஜலத்திலிருந்து வெளியில் வரும் சிறந்த யானையின் உருவம்போல் விளங்குகிறது. மேலும் சிங்கப்பல்லில் பூமியைத் தரித்துக் கொண்டிருக்கும் வேதரூபமாகிய உம்முடைய ஸ்வரூபமானது,

சிகரத்தில் மேகத்தைத் தரிக்கும் குலபர்வதம் போலிருக்கிறது. அரணியில் அக்னியிருப்பதுபோல எந்தப் பூமியினிடத்தில் உம்முடைய தேஜஸ்ஸை (தாரணம் முதலிய சக்தியை) வைத்திருக்கிறீரோ, எந்தப் பூமியானது உமக்குப் பத்தினியாக இருக்கிறாளோ, அந்தப் பூமிதேவியைத் தாவரங்கள் அடங்கிய ஜகத்திற்கு வாசஸ்தலமாகச் செய்யும். நீர் லோகத்திற்குப் பிதாவல்லவா? உமக்கும் இந்தப் பூமிக்கும் நமஸ்காரம் செய்கிறோம். ஓ ப்ரபுவே! பாதாளஞ்சென்று பூமியைக் கொண்டு வரலாமென்று உம்மைத் தவிர வேறு யாரால் நினைக்க முடியும்? ஆனாலும் ஸகல ஆச்சரியங்களுக்கும் இருப்பிடமாகிய நீர்

மிகவும் அற்புதமான இந்தக் காரியத்தைச் செய்தது ஒரு ஆச்சரியமல்ல. மிகவும் அற்புதமான இந்த ஜகத்தானது உம்மால் ஸிருஷ்டிக்கப்பட்டதல்லவா ஓ ஈச! தேவ மயமாகிய உம்முடைய சரீரத்தை உதறிக் கொள்ளும் போது பிடரி மயிர்களால் இறைக்கப்பட்ட மங்களரமான ஜலத்துளிகளால் தபோலோகம், சத்யலோகம் இவைகளில் வஸிக்கும் நாங்கள் பரிசுத்தர்களாகச் செய்யப்பட்டுக் காப்பாற்றப்பட்டோம். ஓ பகவான்! கரையற்ற கர்மங்களுடைய உம்முடைய சரிதங்கள் எல்லாவற்றையும் எவன் அறிய விரும்புகிறானோ, அவனுடைய எண்ணம் நிறைவேறுகிறது இல்லை. (பகவானுடைய சரிதங்கள் அறிய முடியாதவையென்பது கருத்து) மேலும் உம்முடைய யோக மாயையின் குண சம்பந்தத்தால் இந்த ஜகத்யாவும் மோகித்திருக்கிறது, அப்படிப்பட்ட மஹிமை பொருந்திய ஓ ஈச; எல்லா ஜகத்திற்கும் க்ஷேமத்தை உண்டு பண்ணும்.

48–52 ப்ரஹ்மிஷ்டர்களான அந்த மகர்ஷிகளால் இம்மாதிரி துதிக்கப்பட்ட பகவான் தம்முடைய குளம்புகளால் கலக்கப்பட்ட ஜலத்தில் (முன்போல ஜலத்தில் மூழ்காமலிருக்கும் வண்ணம் ஜலத்திற்குத் தரிக்கும் சக்தியைக் கொடுத்து) பூமியை ஸ்தாபித்துச் சென்றார். கானம் பண்ணத் தகுந்த மாயா விலாசங்களுள்ள ஸ்ரீ மஹாவிஷ்ணுவினுடைய இந்தக் கதையானது மிகவும் அழகானது. விரும்பத்தக்கது. இதைப் பக்தியுடன் கேட்பவர்கள், கேட்கச் செய்பவர்கள் ஆகிய இவர்களுடைய ஹிருதயத்தில் சீக்கிரமாக ஜனார்த்தனர் ப்ரசன்னராக வஸிக்கிறார். ஸகல மங்களத்தையும் கொடுக்கக்கூடிய ப்ரபுவாகிய அவர் எவனிடத்தில் சந்தோஷமடைகிறாரோ. அவனுக்கு எதுதான் கிடைக்காது? மற்ற அற்ப பலன்களால் என்ன பிரயோசனம்? பரமபுருஷன் தம்மையே பூஜிப்பவர்களுடைய ஹிருதயத்தில் வஸிப்பதுமல்லாமல் மேலான தம்முடைய பதத்தையும் அவர்களுக்குக் கொடுக்கிறார். ஆதலால் உலகத்தில் முன்காலத்தில் நடந்த பகவானுடைய சரிதங்களாகிய அமிருதத்தைக் காதுகளாகிய அஞ்சலி (சேர்ந்த கைகள்) யால் பானஞ் செய்த எந்தப் புருஷன்தான் போதுமென்று திருப்தியடைவான்? அந்த பகவத் கதை சம்சார பந்தத்தைப் போக்கக் கூடியது. விவேகமற்ற பசுக்கள் தவிர மற்றவர்களுக்கு அந்த பகவத் கதையில் ஆசையொழியாது.

அத்தியாயம்–14

திதிதேவி கர்ப்பத்தை அடைந்தது

1–4. மைத்ரேயர் முகமாக வராஹாவதாரஞ் செய்த ஸ்ரீ ஹரியினுடையய கதையைக் கேட்ட விதுரர் திருப்தியடையாமல் கை கூப்பிக்கொண்டு பகவத் கதையைக் கேட்பதாகிய விரதமுள்ளவராய் மைத்ரேயரை நோக்கி, "ஓ முனிகளுக்குள் சிறந்தவரே! யக்ஞ ஸ்வரூபியான அந்த ஹரியினால் தைத்யர் களுக்குள் முந்தியவனாகிய, ஹிரண்யாக்ஷன் கொல்லப் பட்டான்" என்று நீர் சொல்லக்கேட்டேன். பகவான் பூமியைத் தம்முடைய ஸ்ருங்கத்தின் நுனியால் ப்ரயாசமின்றிக் கொண்டு வந்தாரல்லவா? அப்பொழுது அவருக்கும் அந்த அசுரனுக்கும் யுத்தம் நேர்ந்த காரணமென்ன? ஓ ரிஷியே! அதனைச் சுருக்கமாகக் கேட்டும் என்னுடைய மனம் திருப்தியடையவில்லை. ஆதலால் அவனுடைய பிறப்பு முதலியவைகளைச் ச்ரத்தையுடன் கேட்க விரும்புகிறேன். அவைகளை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும் என்று மறுபடியும் கேட்டார்.

5–15. "ஓ வீரராகிய விதுரரே! நன்றாகக் கேட்டீர். அந்தப் பகவானுடைய அவதார கதையானது மனிதர்களுக்கு மிருத்யு பாசத்தைப் போக்கக்கூடியது, உத்தானபாதருடைய புத்திரனாகிய துருவனென்ற குழந்தையானவன் நாதரிடமிருந்து இந்த அவதாரக் கதையைக் கேட்டு ம்ருத்யுவின் தலையில் காலை வைத்து விஷ்ணுபதத்தை அடைந்தான். (துருவன் பார்ஷதர்களால் கொண்டுவரட்டட்ட விமானத்தில்

ஏறும்போது சமீபத்தில் வந்த ம்ருத்யுவின் தலையில் காலை வைத்து விமானத்தில் ஏறினான்), முன்னொரு காலத்தில் தேவர்களுக்குப் ப்ரஹ்மதேவரால் சொல்லப்பட்ட ஒரு சிறு இதிகாசகத்தை நான் கேட்டிருக்கிறேன்" என்று மைத்ரேயர் சொல்ல ஆரம்பித்தார். "ஓ விதுரரே! தக்ஷருடைய பெண்ணாகிய திதிதேவியானவள் மன்மதனால் பீடிக்கப்பட்டு, சந்தியா காலத்தில் தன்னுடைய பர்த்தாவாகிய மாரீசரை இச்சித்தாள். எப்படியெனில், அவர் சூரியன் அஸ்தமனத்தை அடையும்போது அக்கினியை நாவாகவுடையவரும், யக்ஞங்களுக்கு, அதிபதியுமான பரமபுருஷனை ஹவிஸ்ஸினால் பூஜித்து அக்னி ஹோத்திரசாலையில் உட்கார்ந்து த்யானம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது திதியானவள் அவர் சமீபம் சென்று, "ஓ வித்வான் ஆகிய மஹரிஷியே! மன்மதன் வில்லை கையில் எடுத்து, ரஸ்தாளி வாழையை யானை உபத்திரவித்தாற் போல உம்மை உத்தேசித்து என்னை பீடிக்கிறான். நான் தீனையாகவிருக்கிறேன், ஸபத்தினிகளுடைய (சக்களத்திகள்) ஸமிருத்திகளைப் பார்த்து எரிக்கப்படும் என்னிடத்தில் அனுக்கிரஹஞ் செய்யவேண்டும். எந்த ஸ்திரீகள் உம்மைப் போன்ற பர்த்தாவை அடைந்தார்களோ, எவர்கள் பர்த்தாவின் இடத்தில் அதிக பஹுமானத்தை வைத்தவர்களோ, அவர்களுடைய கீர்த்தியானது உலகங்களிலும் பரவும். பர்த்தாவே, பார்யையிடத்தில் நல்ல புத்திரனாகப் பிறக்கிறானென்று சாஸ்திரம் சொல்லுகிறது. முன்னொரு காலத்தில் எங்களுடைய பிதாவும், பெண்களிடத்தில் பிரியமுள்ளவருமான தக்ஷர் பெண்களை நோக்கி. "ஓ குழந்தைகளே!

யாரை நீங்கள் விவாகஞ் செய்து கொள்ளப் போகிறீர்கள்" என்று தனித்தனியே கேட்டுப் பெண்களுடைய அபிப்பிராயத்தை தெரிந்துகொண்டு உம்முடைய ஸ்வபாவத்தை அனுசரித்தவர்களான பதின்மூன்று பெண்களையும் உமக்குக் கொடுத்தார். (ஆனதால் எங்களுக்குள் பேதபுத்தி வைக்கக்கூடாதென்பது,) ஓ தாமரை மலர்போன்ற கண்களுள்ளவரே! உபத்திரவப்பட்டவர்கள் பெரியோர்களைச் சரணம் அடைந்தால் வீண்போகாதல்லவா? ஆதலால் எனக்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

16–29. இப்படி தீனையாயும், வெகுவாகப் பேசுகிறவளும், மன்மதனால் பீடிக்கப்பட்டவளுமான அந்தத் திதியை நோக்கி மாரீசரானவர், "ஓ பயந்தவளே! உன்னுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்கிறேன். தருமம், அர்த்தம், காமம் ஆகிய இந்தத் திரிவர்க்கமும் ஸ்திரீயினால் சித்திப்பதால், அவளுக்குப் பிரியமானதை எவன்தான் செய்யமாட்டான்? நல்ல களத்திரமுள்ள புருஷன் மற்ற ஆசிரமிகளுக்கும் உபகாரஞ் செய்து (அன்னம் முதலியவைகளைக் கொடுப்பதால்) தன்னுடைய ஆசிரம தர்மத்தை அனுஷ்டிப்பதால், கப்பலால் சமுத்திரத்தை தாண்டுவது போலத் துக்க சமுத்திரத்தைத் தாண்டுகிறான்' க்ஷேமத்தை விரும்பிய புருஷனுக்கு எவளைப் பாதி சரீரமென்று சொல்லுகிறார்களோ, புருஷன் எவளிடத்தில் ஸகல பாரத்தையும் ஒப்பித்துக் கவலையற்றவனாகச் சஞ்சரிக்கிறானோ. தூக்கத்திற்கு அதிபதி (அரசன்) திருடர்களை ஜயிப்பது போல், எந்த ஸ்திரீயின் பலத்தால் க்ருஹஸ்தன் மற்ற ஆசிரமிகளால் ஜயிக்க

முடியாதவையான இந்திரியங்களைச் சிரமமின்றி அடக்குகிறானோ. (ஸ்திரீயுள்ளவனுடைய இந்திரியங்கள் பெரும்பாலும் பர ஸ்திரீகளிடம் செல்லுகிறது இல்லை யென்று கருத்து) ஓ வீட்டிற்கு அதிபதியாய் இருப்பவளே! அப்படிப்பட்ட பலவகையிலும் உபகாரஞ் செய்கிற உனக்கு என் ஆயுள் முழுவதும் பதிலுபகாரஞ் செய்தாலும் ஜன்மாந்திரங்களில் செய்தாலும் அது பதிலாகாது. மேலும் குணத்தைக் க்ரஹிக்கும் எவர்கள் பதில் செய்வோம் என்று நினைக்கிறார்களோ, அவர்கள் பதில் செய்ய முடியாதவர்களே யாவார்கள். ஆனாலும் உனக்குப் புத்திரன் பிறக்கும் உபாயத்தைச் செய்கிறேன். என்னை நிந்திக்காமல் ஒரு முகூர்த்தக் காலம் பொறுத்துக்கொள்: ஏனென்றால் இந்தக் காலமானது மிகவும் பயங்கரமானது. பயங்கரங்கள் ஆகிய ப்ராணிகள் சஞ்சரிக்கக்கூடியது. இந்தச் சமயத்தில் ருத்ரருடைய பூதகணங்கள் சஞ்சரிப்பார்கள். ஓ பதி விரதையே, இந்த சந்தியா காலத்தில் பரமசிவன் வ்ருஷபத்தின் மீதேறித் தம்முடைய பார்ஷத கணங்களுடன் எங்கும் சஞ்சரிக்கிறார். அந்தப் பரமசிவனுடைய ஜடைகளில், சுடலையில் வீசும் காற்றினால் கிளம்பிய தூளிகள் படிந்திருக்கின்றன, நான்கு புறத்திலும் பறந்து மிருக்கின்றன. காந்தி யுள்ளவைகளுமாகவுமிருக்கின்றன, மேலும் அவர் பொன்னிறமான தம்முடைய சரீரத்தில் விபூதியைத் தரித்துக் கொண்டிருக்கிறவர், அப்படிப்பட்ட உன்னுடைய தேவரன் (பர்த்தாவின் சகோதரன்) மூன்று கண்களால் பார்த்துக் கொண்டிருக்கிறார். லோகத்தில் அவருக்கு பந்துவாவது, மற்றவனாவது (உதரசீனன்), மித்திரனாவது, சத்ருவாவது இல்லை, (எல்லாரிடத்திலும் சமமாயிருப்பவரென்று கருத்து),

அவருடைய சரணங்களால், நிர்மால்யம் போல் தள்ளப்பட்டதும், தோஷமுள்ளதென்று நிச்சயிக்கப் பெற்றதுமான மாயையை (அவருடைய விபூதியை) சம்சாரிகளான நாங்கள் மிகுந்த ப்ரசாதமென்று விரும்புகிறோம். அவித்யையைத் தாண்ட விரும்பிய வித்வான்கள் அவருடைய தோஷமற்ற சரிதத்தைக் கானஞ் செய்கிறார்கள். அவருக்குச் சமமானவனும், மேலானவனும் உலகத்தில் ஒருவருமில்லை. அப்படிப் பட்ட சாதுக்களுக்கதிபதியான அவர் பிசாசத்தின் நடை போன்ற ஆசாரத்தை அனுஷ்டிக்கிறார். பின்னும் அவர் ஆத்ம ஸ்வரூபத்திலேயே ரமிப்பவர். அவருடைய அபிப்ராயத்தை (உலகத்திற்குப் புத்தியைச் சொல்கிறார் என்பதை) அறியாதவர்களும், நாய்க்கு ஆகாரமாக இருக்கும் சரீரத்தையே ஆத்மா என்று நினைத்து, அதை நல்ல வஸ்திரங்களாலும், மாலை களாலும், ஆபரணங்களாலும், சந்தனம் பூசுவது முதலியவைகளாலும் அலங்கரிப்பவர்களுமான அக்ஞர்கள் அவருடைய சரிதத்தைப் பரிகசிப்பார்கள். அவரால் ப்ரஹ்மா முதலியவர்கள் ஸ்ருஷ்டி முதலிய வேலைகளில் ஏற்படுத்தப்பட்டு, தங்கள் தங்கள் அதிகாரத்தைக் காப்பாற்றுகிறார்கள். இந்த ஜகத்திற்கு அவரே காரணம், மாயையானது அவருக்குச் ஸ்வாதீனப்பட்டிருக்கிறது. அப்போர்ப்பட்ட திவ்ய விபூதிகள் பொருந்திய பரமேசுவரன், பிசாசத்தின் செய்கையை அனுஷ்டிப்பது என்ன காரணத்தால் என்று ஊகிக்க முடியாததாக இருக்கிறது" என்றார்.

30–36. அதனைக்கேட்ட திதியானவள் மன்மதனால் கலங்கின இந்திரியங்களுள்ளவாய்த் தாசிபோல் வெட்கத்தை விட்டு அவருடைய

வஸ்திரத்தைப் பிடித்துக் கொண்டாள். அந்த மாரீசர் செய்யக்கூடாத அந்தக் காரியத்தில் தம்முடைய பார்யை நிர்பந்தம் செய்வதை அறிந்து அதிர்ஷ்ட ஸ்வரூபியான பரமேசுவரனுக்கு நமஸ்காரம் செய்து ரகஸ்யத்தில் அவளுடன் சேர்ந்தார். பிறகு ஸ்நானஞ் செய்து ப்ராணாயாமஞ் செய்து மௌனமாகத் தோஷ மற்றதும், சாஸ்வதமானதும், தேஜோ ரூபமாயுமுள்ள பரமாத்மாவைத் தியானஞ் செய்தார்.

ஓ பரத வம்சத்தில் பிறந்தவரே! திதி தேவியானவள் அந்தக் கர்மதோஷத்தால் வெட்கமடைந்து அந்த மஹர்ஷியிடம் வந்து தலை குனிந்தவளாக, "ஓ பிராமணோத்தம! ஸகல பூதங்களுக்கும் அதிபதியுமான பரமசிவனுக்கு நான் அபராதஞ் செய்தேனெல்லவா? அதனால் அவர் கோபங்கொண்டு என்னுடைய வயிற்றில் உண்டாகும் கர்ப்பத்தை கெடுத்து விடாமல் இருக்கும்படி அனுக்கிரகிக்க வேண்டும். மஹாதேவரும் உக்கிரரும், எல்லாவற்றையும் உண்டுபண்ணுகிறவரும், மங்களத்தைச் செய்பவரும், பக்தர்களைக் காப்பாற்று பவரும் சத்துருக்களைச் சிக்ஷிப்பவரும். அஸத்துக்கள் இடத்தில் கோபமுள்ளவரும் ஆகிய ருத்ரருக்கு நமஸ்காரம். வேடர்களாலும் (தயையில்லாதவர்கள்) தயவுசெய்யக் கூடிய ஸ்திரீகளாகிய நம்மிடத்தில் அனுக்கிரக ஸ்வபாவமுள்ளவரும், ஸதீதேவிக்குப் பர்த்தாவுமான அந்த பகவான் தயவு செய்யட்டும் (ஸ்திரீகளுடைய ஸ்வபாவத்தை அறிந்தவர்) என்று கேட்டுக்கொண்டாள்.

37–51. இப்படித் தன்னுடைய கர்ப்பத்திற்கு க்ஷேமத்தை விரும்புகிறவளும், நடுங்குகிறவளும்,

மூவுலகத்திற்கும் தகுந்தவளும். தமது பார்யையுமான திதிதேவியை அந்த மாரீசர் நோக்கி, சந்தியா கால நியமங்களை முடித்துக் கொண்டு, "ஓ கோப ஸ்வபாவம் உள்ளவளே! உன்னுடைய சித்தம் அசுத்தமாக விருந்தாலும், முஹூர்த்த தோஷத்தாலும் (ஸந்தியா காலமாயிருந்தபடியால்), என்னுடைய கட்டளையை மீறினதாலும், தேவர்களை அவமதித்ததாலும் உனக்குத் துஷ்டர்களான இரண்டு பிள்ளைகள் பிறப்பார்கள். அவர்கள் மூன்று உலகங்களையும் அந்தந்த லோக பாலகர்களையும் அடிக்கடி கதறச் செய்வார்கள். யாதொரு அபராதமும் செய்யாத ப்ராணிகள் அவர் களால் அடிக்கப்பட்டு மிகவும் தைன்யத்தை அடை வார்கள், உலகத்திலுள்ள ஸ்திரீகள் நிக்கிரகிக்கப் படுவார்கள். பெரியோர்களுக்கு அவர்கள் கோபத்தை யுண்டுபண்ணுவார்கள். அப்பொழுது லோகத்திற்கு அதிபதியும், அவைகளைப் பரிபாலிப்பவருமாகிய பகவான் கோபங்கொண்டு பூமியில் அவதரித்து வஜ்ராயுதத்தைத் தகித்த இந்திரன் பர்வதங்களை யுடைப்பதுபோல அவ்விருவர்களையும் கொல்லப் போகிறார்', என்று சொன்னார். அதைக் கேட்ட திதியானவள் பர்த்தாவை நோக்கி, "ஓ பிரபுவே! என் னுடைய புத்திரர்களைச் சக்ரபாணியாகிய பகவான் கொல்லட்டும், ப்ராஹ்மணர்களிடமிருந்து அவர் களுக்கு வதம் நேரிடவேண்டாம்" ப்ராஹ்மணர்களி டையே பயத்தை உண்டுபண்ணுகிறவர்களும் எந்தெந்த ஜன்மத்தை அடைந்தாலும், அவ்விடத்திலிருக்கும் நரகிகளும் (பாபிகளும்) அவர்களிடத்தில் தயவு செய்யமாட்டார்கள் என்றாள், அதைக் கேட்ட மாரீசர் திதியை நோக்கி, செய்த குற்றத்தைப் பற்றி உனக்குப் பச்சாதாபம் நேர்ந்தபடியாலும் உடனே

யுக்தம், அயுக்தம் இவைகளை விசாரித்ததாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவினிடத்திலும், பரமசிவனிடத்திலும் கௌரவ புத்தி உண்டானதாலும், என்னிடத்தில் பிரியமுண்டானதாலும் உன்னுடைய பிள்ளையாகிய ஹிரண்யகசிபுவின் புத்திரர்களுக்குள் ஒருவன் பெரியோர்களால் ஒப்புக்கொள்ளக் கூடியவனாக இருப்பான். பகவானுடைய குணங்களுடன் சுத்த மாகிய அவனுடைய கீர்த்தியையும் சேர்ந்து ஜனங்கள் கானம் செய்வார்கள்.

தாழ்ந்த மாற்றுள்ள தங்கத்தை அக்கினியில் புடம்போடுவது முதலிய உபாயங்களால் ஸுத்த ஸ்வர்ணமாகச் செய்வது போலப் பெரியோர்கள் அந்தக் குழந்தையின் ஸ்வபாவத்தை அனுசரிப்பதற்காக (தாங்களும் அவனைப்போல ஆகிறதற்காக) ஓரிடத்தி லும் துவேஷம் செய்யாமலிருப்பது முதலிய உபாயங் களால் தங்களுடைய ஆத்மாவைச் சுத்தப்படுத்திக் கொள்வார்கள்.எவருடைய ப்ரசாதத்தால் இந்த ஜகத் ப்ரகாசிக்கிறதோ எவருடைய ஸ்வரூபமாக இருக்கிறதோ அப்பேர்ப்பட்ட ஆத்மசாட்சியாக பகவான் அந்தக் குழந்தையினுடைய உண்மையான ஞானத்தால் சந்தோஷத்தை அடைவார். மேலும் அவன் பகவத் பக்தர்களுக்குள் சிறந்தவன்; அளவற்ற ஞானமுள்ளவன்; மிகுந்த ப்ரபாவமுள்ளவன்; பெரியோர்களுக்கும் பெரியவன்; மேலும் அவன் விசேஷ பக்தியால் சுத்தமான தன்னுடைய மனத்தில் ஸ்ரீமந் நாராயணனைத் தியானித்துக் கொண்டு, தேகம் முதலியவைகளின் அபிமானத்தை விட்டு விடுவான்.

பின்னும் அந்தப் புத்திரன் நல்ல ஸ்வபாவ

முள்ளவன். நல்ல குணங்களுக்கு உற்பத்தி ஸ்தானம்; பிறருடைய சம்பத்தைப் பார்த்துச் சந்தோஷப்படு கிறவன்; பிறருடைய துக்கத்தால் தானும் துக்கிப்பவன்; ஸத்ருவற்றவன்; வெயிலால், ஜகத்திற்கு உண்டாகும் தாபத்தைச் சந்திரன் போக்கடிப்பது போல லோகத்தின் துக்கத்தைப் போக்கடிப்பான். மேலும் உன்னுடைய பௌத்திரனாகிய அவன், தாமரை, மலர்போன்ற கண்களுள்ளவரும், பக்தர்களுடைய இஷ்டத்திற்குத் தக்கபடி உருவத்தைத் தரிப்பவரும், லக்ஷ்மிதேவியாகிய ஸ்திரீயை அலங்காரமாக உடையவரும், ப்ரகாசிக்கும் குண்டலங்களால் அழகான முகத்தை யுடைய வருமாகிய பகவானை உள்ளிலும், வெளியிலும், நேரிலும் தரிசிப்பான், என்று அனுக்கிரகித்தார். அதனைக் கேட்டு திதியானவள் தன்னுடைய புத்திரர் களுக்குப் பகவானால் வதம் நேரிடப்போகிறதாகத் தெரிந்து கொண்டு விசேஷ உற்சாகத்தை யடைந்தது மன்றி, பௌத்திரன் (பிள்ளையின் பிள்ளை) பகவத் பக்தனாக ஆகப்போகிறான் என்பதைத் தெரிந்து கொண்டதனால் மிகவும் சந்தோஷத்தையும் அடைந்தாள்.

அத்தியாயம்–15

ஜய விஜயர்களுடைய சாபம்

1–10 திதியானவள் சத்துருக்களுடைய தேஜஸ்ஸைப் போக்கடிக்கக்கூடிய அந்த காச்யபர் வீரியத்தை ஆயிர வருஷங்கள் (தேவர்களுக்கு இதனால் உபத்திரவம் நேரிடுமோவென்று சந்தேகப்பட்டுக் கொண்டு) தரித்திருந்தாள். அந்தக் கர்ப்பத்தினுடைய தேஜஸினால் சூரியன் முதலியவைகள் காந்தியற்றவை களாயின. லோகபாலர்களுக்கும் தேஜஸ் குறைந்தது; திக்குகளை இருள் சூழ்ந்து கொண்டது. அப்பொழுது தேவர்கள் ப்ரஹ்மதேவரிடம் சென்று, ஓ ப்ரபுவே, எதனால் நாங்கள் மிகவும் பயப்படுகிறோமோ, அந்த இருள் உண்டான காரணம் உமக்குத் தெரியுமா? உம்முடைய ஞானமானது காலத்தாலும் குறைவுபடு கிறதில்லை;; ஆதலால் உமக்குத் தெரியாத தொன்றும் இல்லை; ஓ தேவர்களுக்கும் தேவரே! ஜகத்திற்கு அதிபதியே! லோகபாலர்களுக்கும் அதிபதியே; எல்லாருடைய அபிப்ராயத்தையும் அறிந்தவரே! விஞானமாகிய பலமுள்ளவரும், மாயையால் ப்ரஹ்ம சரீரத்தை அடைந்தவரும், ரஜோ குணத்தை அங்கீகரித்தவரும் ப்ரபஞ்சத்திற்குக் காரணரும், ப்ரமாணங்களால் அறிய முடியாதவருமாகிய உமக்கு நமஸ்காரம்.

மேலும் நீர் ஜீவர்களைப் பரிபாலிப்பவர்; ஸகல லோகங்களும் உம்மிடத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நீர் எல்லாவற்றிற்கும் மேலானவர். காரிய காரண ஸ்வரூபியாயிருப்பவர்; அப்படிப்பட்ட உம்மை யார்

பலனை யுத்தேசியாமல் பூஜிக்கிறார்களோ அவர்கள் இந்திரியங்கள்;, மனம், ஸ்வாசம், ஆகிய இவைகளை ஜயித்து பக்குவமான யோகமுள்ளவர்களாக உம்முடைய ப்ரசாதத்தை அடைகிறார்கள்.

அவர்களுக்கு ஓரிடத்திலும் அவமானம் நேரிடுகிறது இல்லை. பசுக்கள் கயிறுகளால் கட்டப்படுவது போல் ஸகல ப்ரஜைகளும், உம்முடைய வாக்காகிய வேதங்களால் கட்டப்பட்டு, உம்மைப் பூஜிக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் நியந்தாவாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறோம். திதியினால் தரிக்கப்பட்டதும், காசியபர் உடைய வீரியத்தாலுண்டானதுமான கர்ப்பமானது அக்கினி கட்டையில் விருத்தியடைவது போல் வளர்கிறது. அதனால் திக்குகள் இருளால் மூடப்பட்டு இருக்கின்றன (நல்ல காரியங்கள் நடக்கவில்லை! ராத்திரி பகல் என்ற பிரிவு இல்லாததால்;) ஆதலால் நீர் உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்யும்; கருணை நிறைந்த பார்வையால் ஆபத்தை யடைந்த எங்களைப் பார்க்க வேண்டும் என்றார்கள்.

11–30 சிறந்த கைகளுள்ள ஓ விதுரரே! பகவான் ஆகிய ப்ரஹ்மதேவர் சிரித்து, (திதியின் கெட்ட செய்கையை நினைத்து) அழகான வார்த்தையால் தேவர்களைச் சந்தோஷிக்கச் செய்து கொண்டு பதில் சொல்ல ஆரம்பித்தார். எப்படியெனில், "ஓ தேவர்களே! என்னுடைய மானச புத்திரர்களும் உங்களுக்கு முந்தியவர்களுமான சனகர் முதலியவர்கள். விஷயங்களில் ஆசையில்லாதவர்களாய் ஆகாசத்தின் வழியாக லோகங்களில் சஞ்சரித்தார்கள். ஒருகால் அவர்கள் நிர்மல ஸ்வபாவமுள்ள பகவானாகிய மஹாவிஷ்ணுவின்

லோகமாகிய வைகுண்ட லோகம் சென்றார்கள். அந்த லோகம் எல்லோராலும் நமஸ்கரிக்கப்பட்டது! அவ்விடத்தில் வஸிப்பவர்கள் எல்லோரும் ஸ்ரீமந் நாராயணனுடைய சரீரம் போன்ற தேகமுள்ளவர்கள்! அவர்கள் ஒரு பயனையும் உத்தேசியாமலேயே பகவானை ஆராதிப்பவர்கள்; மேலும் அவ்விடத்தில் எல்லாவற்றிற்கும் முந்தியவரும், வேதங்களாலேயே அறியக் கூடியவரும், தர்ம ஸ்வரூபியுமான பகவான் சத்ய மூர்த்தியாகத் தம்முடைய பக்தர்களான நமக்கு க்ஷேமத்தைச் செய்து கொண்டு வஸிக்கிறார்.

அந்த லோகத்தில் கைவல்யமே சரீரத்துடன் வஸிக்கிறதென்று நினைக்கக் கூடியதும், நைச்ரேயஸம் என்ற பெயருள்ளதுமான ஒரு வனமிருக்கிறது; அதிலுள்ள மரங்கள் இஷ்டமான வஸ்துக்களைக் கொடுக்கக்கூடியவை; எல்லா ருதுக்களிலும் ஏற்படக் கூடிய அழகுள்ளது; அவ்விடத்தில் தேவர்கள் தங்களுடைய ஸ்திரீகளுடன் பகவானுடைய திவ்ய சரிதங்களைக் கானஞ் செய்கிறார்கள். அவைகள் ஜனங்களுடைய பாபத்தைப் போக்கக் கூடியவை; மேலும் அவர்கள் ஜலத்தின் மத்தியில் மலர்ந்திருக்கும் மாதவீ புஷ்பங்களுடைய வாசனையுள்ள காற்றையுங் கூட கவனியாமலிருக்கிறார்கள். (போகத்திற்கு சாதனங்களிருந்தாலும், அவைகளில் ஆசைப்படாமல் பகவத் குணங்களைக் கானம் செய்கிறார்கள்.)

பின்னும் அவ்விடத்திலிருக்கும் சிறந்த வண்டானது உரக்கக் கத்தும்போது, அதனைக் கேட்ட பாராவதங்கள் (புறாக்கள்), குயில்கள், சாரஸங்கள், சக்கரவாகங்கள், நச்சுக்குருவிகள், ஹம்சங்கள்,

கிளிகள், தித்திரிகள் (நெருப்புக்கோழிகள்), மயில்கள் ஆகிய பறவைகள் தங்களுடைய கோலாஹல சப்தத்தை நிறுத்தி விட்டு, 'இந்த வண்டானது பகவத் குணங்களைக் கானம் செய்கிறதோ? என்று ஒரு க்ஷண காலம் மௌனங்களாக இருக்கின்றன. மேலும், துளஸிமாலையுள்ள பகவான் துளஸியின் வாசனையில் பிரீதியுள்ளவராக இருப்பதைப் பார்த்து, மந்தாரம், குந்தம், மருதாணி, நீலோத்பலம், சம்பகம், அர்ண மென்ற புஷ்பம், புன்னை, நாகை மகிழம், தாமரசம், பாரிஜாதம் ஆகிய புஷ்பங்கள் துளஸியினால் செய்யப்பட்ட துபசைப் பற்றிப் புகழ்கின்றன. (அவ்விடத்தில் இருப்பவர்கள் மாத்சரியம் இல்லாத வர்களென்பது கருத்து.) மேலும், அவ்விடத்தில் ஸ்ரீ பகவானுடைய பாதாரவிந்தத்தில் நமஸ்காரஞ் செய்த மாத்திரத்தால் கிடைத்தவைகளும் (கர்மத்தால் கிடைத்தவர்களில்லையென்பது கருத்து).

வைடூர்யம், மரகதம், ஸ்வர்ணம் ஆதிய இவைகளால் செய்யப்பட்டவைகளுமான பக்தர்கள் உடைய விமானங்கள் வெகுவாக இருக்கின்றன. அந்த விமானத்திலிருப்பவர்களும் பகவானிடத்திலேயே மனமுள்ளவர்களுமான பக்தர்களுக்கு அவ்விடத்தில் இருக்கும் அழகான இடுப்பு, சிரிப்பு முதலியவைகளால் ப்ரகாசிக்கும் முகமுள்ள ஸ்திரீகளால் காமத்தை உண்டுபண்ண முடியவில்லை. பின்னும் அவ்விடத்தில் பகவானுடைய க்ருஹமானது தங்க வேலைகளால் அழகான ஸ்படிகச் சுவருள்ளதாக இருக்கிறது, அதில் லக்ஷ்மீ தேவியானவள்; தன்னுடைய ஸ்வரூபத்துடன், பாதங்களில் அணிந்த பாதசரங்களால் இனிமையான சப்தமுள்ளவளாகி, தோஷமற்றவளாய், (சஞ்சலையென்ற

தோஷமற்றவளாக) தன்னுடைய கையிலிருக்கும் தாமரைப் புஷ்பத்தால் அவ்விடத்திலுள்ள தங்கத் தூள்களைப் பெருக்குகிறவள் போலக் காணப்படுகிறாள். அவளுடைய அனுக்கிரகத்திற்காகவே ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் முயலுகிறார்கள்.

மேலும் ஓ தேவர்களே! அந்த லக்ஷ்மீதேவியானவள் தன்னுடைய உத்யானத்தில் பவழக்கரையுள்ளவைகளும் நிர்மலமாகிய ஜலமுள்ளவைகளுமான ஓடைகளில் தன்னுடைய தோழிகளுடன் துளஸியினால் பகவானைப் பூஜிக்கிறாள். அப்பொழுது ஜலத்தில் ப்ரதிபிம்பித்தும், அழகான தலைமயிருள்ளதும், மேலான மூக்குள்ளதுமான தன்னுடைய முகத்தைப் பார்த்து, பகவானால் சும்பனஞ் செய்யப்பட்டதென்று நினைத்தாள். (லக்ஷ்மியின் அழகும் பகவத்ததீனம்) எந்தக் கதைகளைக் கேட்ட மனிதர்களுக்குப் புண்யமும், அதிருஷ்டமும் குறைகின்றதோ, நரகத்தை அடைகிறார்களோ, அப்போர்ப்பட்டவைகளும், விவேகத்தைப் போக்கக் கூடியவைகளும். அர்த்தம், காமம் ஆகிய இவைகளைப் பற்றியவைகளுமான கெட்ட கதைகளைக் கேட்பவர்களும், பாபத்தைப் போக்கடிப்பவராகிய பகவானுடைய ஸ்ருஷ்டி முதலியவைகளைச் சொல்வதில் பிரியமற்றவர்களுமான ப்ராணிகள் அந்த வைகுண்டம் செல்கிறதில்லை.

தேவர்களான நம்மாலும் விரும்பப்பட்டதும், தர்மம், ஞானம் ஆகிய இவைகளுக்கு சாதனமுமான மனுஷ்ய ஜன்மத்தையடைந்தும் எவர்கள் பகவான் உடைய மாயையால் மோஹித்து அவரை ஆராதிக்க வில்லையோ, அவர்களும் அவ்விடம் செல்லுகிறது

இல்லை. எவர்கள் தேவர்களுக்கு தேவராகிய பகவானை அனுசரிக்கிறார்களோ, அவர்கள் நம்மாலும் ஆசைப்படக் கூடிய சுபாவமுள்ளவர்களேயாம். அவர் களுக்கு யமனுடைய உபத்திரவம் இல்லை. எவர்கள் ஒருவருக்கொருவர் தங்களுடைய யஜமானனாகிய பகவானுடைய குணங்களைக் கானம் செய்து, அதனால் தேகம் பரவசமாகி மயிர்க்கூச்சல் உண்டானவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் மேற்சொல்லிய வைகுண்டஞ் செல்வார்கள்.

ஜகத்திற்கு அதிபதியாகிய ஸ்ரீமந் நாராயணனுடைய வாசஸ்தலமும், ஸகல ஜகத்தினால் கொண்டாடக் கூடியதும்; தேவார்ஹமாயும், விசித்திரங்களான சிறந்த விமானங்களுடைய காந்தியுள்ளதுமான அந்த வைகுண்டத்திற்கு அம்முனிகள் தங்களுடைய யோகமாயா பலத்தால் சென்று, பரமானந்தத்தை அடைந்தார்கள். அவ்விடத்தில் அந்த மஹரிஷிகள் அற்புதமான விஷயங்களைப் பார்த்தும் அவைகளில் ஆசைப்படாமல் (பகவத் தரிசனத்தில் ஆசையால்) ஆறு ப்ராகாரங்களைத் தாண்டி ஏழாவது ப்ராகாரம் சென்று அவ்விடத்தில் இரண்டு துவாரபாலகர்களைக் கண்டார்கள். அவர்கள் ஒரே வயதுள்ளவர்கள்! விலையுயர்ந்த தோள் வளைகள், குண்டலங்கள், கிரீடம் ஆகிய இவைகளால் அழகாயிருப்பவர்கள். கையில் கதாயுதத்தைத் தரித்தவர்கள்; வனமாலை யினால் அலங்கரிக்கப்பட்டவைகள். கருமையான நிறமுள்ள நான்கு கைகளுள்ளவர்கள்.

மேலும், அவர்களுடைய முகத்தில் வக்கிரமான புருவங்களும், சிவந்த கண்களும்; பெரிய மூக்குகளும்

இருக்கின்றன. அப்பொழுது அந்த முனிகள் ஸ்வர்ணத்தாலும், வஜ்ரத்தாலும் செய்யப்பட்ட கதவுகளுள்ள ஆறு ப்ராகாரங்களுக்குள் ப்ரவேசித்தது போல, ஏழாவது ப்ராகாரத்திலும் த்வார பாலகர் களான அவ்விருவர்களும் பார்த்துக் கொண்டிருக்க, அவர்களைக் கேட்காமலேயே உள்ளே சென்றார்கள். அவர்கள் சமதிருஷ்டி உள்ளவர்களாகையால் எங்கும் பயமில்லாமல் சஞ்சரிப்பவர்கள். அவர்களை ஒருவரும் தடுக்கிறதில்லை. இப்படிப் பகவானைத் தரிசிப் பதற்காக உள்ளே செல்லுகிறவர்களும், வஸ்திரமில்லாத வர்களும், மிகவும் வயது சென்றவர்களானாலும், ஐந்து வயதுள்ளவர்கள் போல் தோன்றுகிறவர்களும், ஆத்மாவின் உண்மையை அறிந்தவர்களும், தடுக்கக் கூடாதவர்களுமாகிய அந்தச் ஸனகர் முதலிய முனிவர்களைப் பார்த்து, அந்தத் த்வாரபாலகர்கள் இருவர்களும் அவர்களுடைய தேஜஸை (தைரியத்தைப்) பற்றி பரிகாசஞ் செய்து பகவானுக்குப் ப்ரதிகூல ஸ்வபாவமுள்ளவர்களாகிப் பிரம்பினால் அவர்களைத் தடுத்தார்கள்.

31–34 இப்படி ஸகல தேவர்களும் பார்த்துக் கொண்டிருக்கும் போது ஸ்ரீ பகவானுடைய த்வார பாலகர்களால் தடுக்கப்பட்ட பூஜ்யர்களான அந்த மஹரிஷிகள், ஸகல லோகத்திற்கும் மிகுந்த ஸுகிருத்தாகிய பகவானுடைய தரிசனத்திற்கு விக்கினம் நேர்ந்ததால் கோபம் கொண்டு, கலங்கிய கண்களுடன் பகவானுக்கு மிகுந்த சிச்ருஷையைச் செய்து, அதனால் வைகுண்டவாசத்தை அடைந்து எல்லாவற்றையும் சமமாகப் பார்க்கும் ஸ்வபாவமுள்ள இந்த லோக ஜனங்களுக்குள் இவர்களுடைய

ஸ்வபாவம் வேறாகக் காணப்படுகிறதே, இதென்ன? ஓ த்வாரபாலகர்களே! மிகவும் சாந்தரும், துவேஷமற்ற வருமாகிய அந்த மஹாபுருஷனிருக்குமிடத்தில் யார் தான் போகக்கூடாது? (எல்லோரும் போகலாமென்று கருத்து.) நீங்களிருவர்களும் கபட ஸ்வபாவமுள்ளவர்கள் ஆகையால் உங்களைப் போல் மற்றவர்களும் கபடமாக இருப்பார்களென்று பிறரைப் பற்றிச் சந்தேகிக்கிறீர்கள். (பகவத் பக்தி இல்லாதவர்கள் இவ்விடம் வரமாட்டார்கள். பகவான் மிகவும் சாந்தராகையால் அவரிடத்தில் பயப்படவேண்டியது இல்லை. ஆகையால் நீங்கள் மிகவும் துஷ்டர்கள் என்று கருத்து) ஸகல ஜகத்தையும் தம்முடைய வயிற்றில் வைத்துக் காப்பாற்றும் பகவானுக்கு பேதபுத்தி இல்லை.

குடத்திற்குள் இருக்கும் ஆகாசமானது எப்படி மஹாகாசத்தில் அடங்கியதோ, அப்படியே பரமாத்மாவினிடத்தில் தாங்கள் அடங்கியவர்கள் என்று வித்வான்கள் பார்க்கிறார்கள். அப்பேற்பட்ட பகவானிடத்தில் மற்றவர்களிடத்தில் போல் பேத புத்தியாலுண்டாகும் பயமானது தேவர்கள் போல வேஷந் தரித்த உங்களால் உண்டு பண்ணப்பட்டது. ஆனதால் மந்தபுத்தியுள்ளவரும் ஸ்ரீ பகவானுடைய வேலைக்காரர்களுமாகிய உங்களுடைய க்ஷேமத் திற்காகவே யோசித்துச் சொல்லுகிறோம். நீங்கள் பேதபுத்தி உள்ளவர்களாகையால், காமம், குரோதம், உலோபம் ஆகிய மிக்க பாபிகளாகிய மூன்று சத்ருக்கள் வஸிக்கும் பூலோகத்திற்குச் செல்லுங்கள், என்றார்கள்.

35–36 அதனைக் கேட்ட அவ்விருவர்களும், ஸ்ரீ மஹா விஷ்ணுவின் வேலைக்காரர்களானாலும், ப்ராஹ்மண சாபம் அநேக அஸ்திரங்களாலும் நிவர்த்திக்க முடியாதது, என்ற நிச்சயமுள்ளவர்களாகி மிகவும் பயந்து அம்முனிவர்களுடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டு அவர்களை நோக்கி, ஓ மஹரிஷிகளே! குற்றஞ் செய்தவர்களான எங்களுக்குத் தக்கபடி சிக்ஷை விதித்தீர்கள். (தங்களிடத்தில் கொஞ்சமேனும் குற்றமில்லை யென்பது கருத்து.) ஆனாலும் நீங்கள் எங்களிடத்தில் கிருபை செய்து, பச்சாதாபமடைந்து, எங்களை அனுக்கிரஹிக்க வேண்டும். எங்களுடைய புத்திக் குறைவினால் நாங்கள் கீழுலகஞ் சென்றாலும், அவ்விடத்தில் எங்களுக்கு மோஹம் உண்டாகாமல் இருக்க வேண்டும். அப்படி மோஹம் உண்டானாலும் பகவானுடைய ஞாபகமிருக்க வேண்டும். அஃதிருந்தால் ஈசுவரனுடைய ஆக்ஞையை அதிக்ரமித்ததாலுண்டான தோஷமும் நீங்கிவிடும், என்று கேட்டுக் கொண்டார்கள்.

37–45 அப்பொழுது பெரியோர்களுக்கு மனோகரராகிய பகவான் தம்மைச் சார்ந்த த்வார பாலகர்கள் சாதுக்களுக்கு குற்றஞ் செய்தார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு, பரமஹம்சர்களான மஹர்ஷிகளாலும் தேடக்கூடிய தம்முடைய பாதங்களை அசைத்துக் கொண்டு (கால்நடையாக) லக்ஷ்மீதேவி யுடன் அவ்விடம் வந்தார். (என்னுடைய பாததரிசனத் திற்காக வந்தவர்களைத் தடுத்ததால் அவர்கள் கோபங் கொண்டார்கள். அந்தத் தரிசனத்தை அவர்களுக்குக் கொடுத்தோமன்னால் கோபம் தணிந்துவிடுமென்பது கருத்து) அந்த முனிவர்கள் அப்பொழுது அவ்விடம்

வந்த பகவானைத் தரிசித்தார்கள். அவர் அந்த முனிகளுடைய சமாதியால் அடையக் கூடிய பாக்கிய மேயாவார். மேலும் அவரை அந்த லோகத்துப் புருஷர்கள் குடை முதலியவைகளால் உபசரிக்கிறார்கள். அவருடைய பக்கங்களில் ஹம்சம் போன்ற சாமரங்கள் வீசப்படுகின்றன. அவைகளிலிருந்து வீசும் காற்றானது மிகவும் சுககரமாகவிருக்கிறது. அதனால் சந்திரன் போலப் ப்ரகாசிக்கும் வெண்குடையில் தொங்குகிற முத்து மாலைகள் அசைகின்றன. அவைகளிலிருந்து ஜலத்துளிகள் விழுகின்றன.

பின்னும் அந்தப் பகவான் எல்லாரிடத்திலும் தயைசெய்யும் நல்ல முகமுள்ளவர். ஆசைப்படக்கூடிய சத்குணங்களுக்கு வாசஸ்தலமாக இருப்பவர். ப்ரீதியுடன் பார்ப்பதால் மனத்திற்கு சந்தோஷத்தை உண்டு பண்ணுகிறவர். மேலும், அவர் சுவர்கத்திற்குச் சிரோரத்னமாக இருக்கும் தம்முடைய வைகுண்ட லோகத்தைத் தம்முடைய கருத்த மார்பிலிருக்கும் லக்ஷ்மீயால் ப்ரகாசிக்கச் செய்பவர். மேலும் பீதாம்பரம் தரித்த பெரியதாக பகவானுடைய நிதம்பத்தில் ப்ரகாசிக்கிற கடிசூத்ரத்தாலும், வண்டுகளால் சப்திக்கும் வனமாலையாலும் அந்த உலகம் விளங்குகிறது. மேலும், அந்தப் பகவான் அழகான கங்கணத்தைத் தரித்தவர். கருடனுடைய தோளில் ஒரு கையை வைத்தும், மற்றொரு கையால் தாமரைப் புஷ்பத்தைச் சுழற்றிக் கொண்டு மிருந்தார். அவருடைய கன்னங்கள் மின்னலை அவமதிக்கக் கூடிய மகர குண்டலங்களால் அலங்கரிக்கப்பட்டவை, முகமானது அழகான மூக்குள்ளது. பின்னும் அவர் ரத்னங்களிழைத்த கிரீடமுள்ளவர். கைகளுடைய

மத்தியில் ப்ரகாசிக்கின்ற கௌஸ்துப ஹாரமுள்ளவர். அவருடைய சரீரமானது மிகுந்த அழகுள்ளதாகையால், பக்தர்கள் அவருடைய திவ்ய தேகத்தைத் தரிசித்தவுடன், நானே மிகுந்த சௌந்திரியமுள்ளவன் என்ற லக்ஷ்மீதேவியுடைய அகங்காரம். இதனால் அடக்கப்பட்டதென்று நினைக்கிறார்கள்.

அப்போர்ப்பட்ட பகவானுடைய சரீரத்தைத் தரிசித்து அம்முனிகள் திருப்தி அடையாதவர்களாகி, மிகுந்த சந்தோஷத்துடன் அவருடைய பாதத்தில் தங்களுடைய சிரசு படும்படியாக நமஸ்கரித்தார்கள். அவர் ப்ரஹ்மாவாகிய என்னாலும், பரமசிவனாலும் உங்களாலும் (தேவர்களாலும், சேவிக்கத்தக்க திவ்ய சரீரத்தைப் ப்ரகாசப்படுத்துகிறவர்) அப்பொழுது அந்தப் புண்டரீகாக்ஷருடைய (தாமரைக் கண்ணன்) பாதங்களிலிருந்து துளஸியின் மதுவுடன் கூடிய காற்றானாது மூக்கு வழியாக அவர்களுக்குட் சென்றது. அவர்கள் ப்ரம்மானந்தத்தை அனுபவிக்கிறவர்களானாலும், அவர்களுடைய மனம் கலங்கினது. சரீரத்தில் மயிர்க் கூச்சலுண்டாயிற்று. பின்பு அவர்கள் பகவானுடைய கருத்த தாமரை மலர் போன்ற முகத்தையும்,அதில் சிவந்த அழகாய் உள்ள உதடுகளையும் குருக்கத்தி மலர் போல் வெண்மையான சிரிப்பையும் பார்த்து பூர்ண மனோரதமுள்ளவர்களாகத் திரும்பவும் இரத்தினங்கள் போன்ற நகங்களுக்கு ஆசிரயங்களான அவருடைய பாதங்களைத் தரிசித்துத் தியானஞ் செய்தார்கள். (எல்லா அவயவங்களுடைய லாவண்யத்தை ஒரே தடவையில் பார்த்து க்ரஹிக்க முடியாதவர்களாக அடிக்கடி பார்த்தார்களென்பது கருத்து.) அந்தப்

பகவான் யோக மார்க்கத்தைக் கொண்டு தேடுபவர்களால் தியானஞ் செய்யகூடியவர். அநேக ஞானிகளால் உபாசிக்கப்பட்டவர். புருஷரூபத்தைக் காண்பித்தவர். மற்றவர்களுக்குக் கிடைக்காதவைகளும், இயற்கையாகவே கிடைத்தவைகளுமான எட்டுவித ஐசுவர்யங்களுள்ளவர், அப்பேர்ப்பட்ட பகவானை அந்த ஸனகர் முதலிய மஹர்ஷிகள் பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்தார்கள்.

46 50 "ஓ பகவன்! நீர் ஸகல பிராணிகளுடைய ஹிருதயத்திலிருப்பவரானாலும், துஷ்டர்களுடைய கண்களுக்குப் புலப்படுகிறதில்லை. அப்பேர்ப்பட்ட நீர் எங்களுடைய கண்களுக்குப் புலப்பட்டீர். உம்மிடத்திலிருந்து உண்டானவரும், எங்களுக்குப் பிதாவுமான ப்ரஹ்மதேவர். உம்முடைய ரகசியத்தை உபதேசித்தபொழுதே, நீர் காதின் வழியாக எங்களுடைய ஹிருதயத்தை அடைந்திருக்கிறீர். ஓ பகவான்! உம்மைப் பரமாத்மா வென்றும், சுத்த சத்வ மூர்த்தியாகையால் பக்தர்களுக்கு ரதியை (ஆசையை) உண்டு பண்ணுகிறவராகவும், தெரிந்து கொள்ளுகிறோம். உம்முடைய கிருபையால் (அனுதாபம்) பக்தி யோகத்தை அடைந்து அதனால் மனத்திலிருக்கும் அகங்காரத்தை ஒழித்து, வைராக்யமடைந்த மஹரிஷிகள் உம்மை அறிவார்கள். மேலும், ஸ்தோத்திரம் பண்ணக்கூடியதும், பரிசுத்தியை உண்டு பண்ணக் கூடியதுமான உம்முடைய கதையின் ரசத்தை எவர்கள் அறிந்திருக்கிறார்களோ, எவர்கள் உம்முடைய பாதாரவிந்தத்தைச் சரணமடைந்து இருக்கிறார்களோ, அந்தப் பக்தர்கள் உம்முடைய அனுக்கிரகபரமான மோக்ஷத்தையும் விரும்புகிறதில்லை.

அப்படியிருக்க, பயமுள்ளதாகிய இந்திரபதம் முதலியவைகளை விரும்புவார்களா? ஓ பகவன்! உம்முடைய பக்தர்களைச் சபித்ததால் நாங்கள் தங்களுக்கு அபராதஞ் செய்தவர்களானோம். அதனால் எங்களுக்கு ஜன்மம் ஏற்படுமோ? வண்டானது முட்களால் வருத்தப்பட்டும் புஷ்பங்களில் ரமிப்பது போல அந்த ஜன்மாவிலும் எங்களுடைய மனமானது உம்முடைய பாதாரவிந்தத்தையே நினைத்திருக்கும் ஆனால் அந்த ஜன்மமும் எங்களுக்குக் கிடைப்பது சம்மதமேயாகும். ஆனால் துளசியானது உம்முடைய பாதத்தின் சம்பந்தத்தால் விளங்குவதுபோல் எங்களுடைய வாக்கும் தங்களுடைய குணங்களைச் சொல்வதாலேயே ப்ரகாசிக்க வேண்டும். எங்களுடைய காதுகளும் உம்முடைய கல்யாண குணங்களைக் கேட்பதாலேயே நிறைந்திருக்க வேண்டும்.

ஓ மிகுந்த கீர்த்தியுள்ளவரே! நீர் இந்த திவ்ய ஸ்வரூபத்தை நாங்கள் பார்க்கும்படி செய்ததால் எங்களுடைய கண்கள் சபலங்களாயின. இந்த ஸ்வரூபம் துஷ்டர்களுக்குப் புலப்படாது அந்தப் பகவானாகிய உமக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்' என்று சொன்னார்கள்.

அத்தியாயம்–16

ஜய விஜயர்களுக்கு அனுக்கிரகம்

1–2. அந்த ஸனகர் முதலிய யோகிகளுடைய வார்த்தையைச் சிலாகித்து வைகுண்டத்திலிருக்கும் சாக்ஷாத் பகவான், இந்த ஜயன் விஜயன் என்கிற இருவர்களும் என்னுடைய பார்ஷதர்களானாலும் இவர்கள் தர்மத்தை அதிக்ரமித்தவர்கள். ஆதலால் இவர்கள் விஷயத்தில் என்னுடைய பக்தர்களான உங்களால் செய்யப்பட்ட சிக்ஷையானது எனக்கும் அபிமதமேயாம், எனக்குப் ப்ராஹ்மணர்களே முக்கியமான தெய்வம். என்னுடைய வேலைக்காரர்களால் செய்யப்படும் குற்றமானது என்னால் செய்யப்பட்டதாகவே நினைக்கிறேன். நீங்கள் மன்னிக்கவேண்டும். எவனுடைய வேலைக்காரன் கெட்ட காரியத்தைச் செய்கிறானோ அவனைப்பற்றி ஜனங்கள் பேசிக் கொள்வார்கள் அல்லவா? அது குஷ்ட ரோகமானது தோலைக் கெடுப்பது போல யஜமானுடைய கீர்த்தியைக் கெடுத்துவிடுகிறது. என்னுடைய சுத்தமும் அமிருதமயமுமாகிய கீர்த்தியைக் கேட்பதால் அதில் ஸ்நானம் செய்யும் சண்டாளன் வரையிலுள்ள ஜகத்தானது பரிசுத்தமாகி விடுகிறது. உங்களிடமாக நல்ல கீர்த்தியை அடைந்து விளங்கும் நான் என்னுடைய கையானாலும் உங்களுக்கு விரோதம் செய்யுமானால் அதை வெட்டிவிடுவேன். ப்ராஹ்மணர்களைச் சேவித்ததால், பரிசுத்தமாகிய பாததூளி உள்ளவனாகவும், ஸகல பாபங்களையும் போக்கக் கூடியவனாகவும் நல்ல ஸ்வபாவத்தை அடைந்தவனுமாகவும் நான் இருக்கிறேன். அப்போர்ப்பட்ட என்னை

(வைராக்கிய முள்ளவனாலும்) லக்ஷ்மி ஒருபொழுதும் விடுகிறதில்லை. அவளுடைய கடாக்ஷத்தை ப்ரஹ்ம தேவர் முதலியவர்களும் அடைய விரும்பித் தபஸ் செய்கிறார்கள். ப்ராஹ்மணர்களுக்கு அன்னங் கொடுத்து அவர்கள் நெய் ஒழுகும்படி புசிக்க அவர்கள் முகமாய் நான் புசித்து எவ்வளவு திருப்தி அடைகிறேனோ அவ்வளவு சந்தோஷமானது யாகத்தில் யஜமானனால் கொடுக்கப்படும் ஹவிஸ்ஸை அக்கினி முகமாகப் புசிப்பதால் எனக்கு உண்டாகிறது இல்லை. ப்ராஹ்மணர்கள் குற்றஞ் செய்தாலும் அதைப் பொறுப்பதே உசிதம்.

எவர்களுடைய பாதத்தை அலம்பிய ஜலமானது பரமசிவனையும் மற்ற ஜகத்தையும் பரிசுத்தப்படுத்து கிறதோ, தடையற்றதும் பூர்ணமுமான யோக மாயையின் விபூதிகளை உடையவனாகிய நான் அந்தப் ப்ராஹ்மணர்களுடைய பாததூளியைச் சிரசால் தரிக்கிறேன். மேலும் என்னுடைய சரீரரமாகிய ப்ராஹ்மணர்களையும், பசுக்களையும் காப்பாற்று கிறவர்களில்லாமல் கஷ்டப்படும் மற்றப் ப்ராணிகளையும் பாப ஸ்வபாவமுள்ள எந்தப் புருஷர்கள் சர்ப்பம் போல் கோபமுள்ளவர்களாகி என்னை காட்டிலும் வேறென்று நினைக்கிறார்களோ, அவர்களை என்னுடைய வேலைக்காரனாகிய யமனிடத்திலிருக்கும் கழுகுபோன்ற தூதர்கள் உபத்திரவிக்கிறார்கள். எவர்கள் ப்ராஹ்மணர்களை என்னுடைய ஸ்வரூபமென்று நினைத்து சித்தத்தில் சந்தோஷத்துடனும், சிரித்த முகத்துடனும் பூஜிக்கிறார்களோ, பிரியமுள்ள வார்த்தையால் பேசிக்கொண்டு புத்திரனைப்போல் அழைக்கிறார்களோ, அவர்கள் என்னைப் பூஜித்தவர்களாக

ஆகிறார்கள். ஆதலால் இவ்விருவரும் யஜமானனாகிய என்னுடைய எண்ணத்தை (ப்ராஹ்மணர்களே தெய்வமென்பதை) அறியாமல், உங்களிடத்தில் குற்றஞ் செய்ததால், அதன் பலனை உடனே அனுபவித்து மறுபடியும் என்னுடைய சமீபம் சேரட்டும். இவர் களுக்குச் சீக்கிரமாக சாபத்தின் முடிவுக்காலத்தை ஏற்படுத்துவதே என்னைப்பற்றிச் செய்யும் அனுக்கிரமாகும்" என்று கேட்டுகொண்டார்.

13–25. அந்த யோகிகள் கோபமுள்ளவர்களானா லும் பின்பு பிரியாமானதும். மந்திர ஸ்வரூபமான அந்த வார்த்தையைக் கேட்ட அவர்களுடைய ஆத்மாவானது போதுமென்று திருப்தி அடையவில்லை. மேலும் அவர்கள் சொற்ப, அக்ஷரங்களுள்ளதும் மிகுந்த அர்த்தமுள்ளதும், சிறந்ததுமான பகவானுடைய வார்த்தையைக் காதுகொடுத்துக் கேட்டு அர்த்தத்தா லும் அபிப்பிராயத்தாலும் கம்பீரமாகிய அதனை நன்றாக யோசித்தும் பகவானுடைய எண்ணம் இன்னதென்று தெரிந்துகொள்ள முடியாதவர்களாக மிகுந்த சந்தோஷத்துடன் மயிர்க்கூச்சலை யடைந்து யோக மாயையால் தம்முடைய மேலான ஐசுவர்யத்தின் மேன்மையைக் காண்பிக்கும் பரமபுருஷனை நோக்கி, "ஓ பகவான், நீர் எல்லாவற்றிற்கும் அதிபதியாயிருந்து நான் அபராதஞ் செய்தேனென்றும் எனக்கு அனுக்கிரஹஞ் செய்யுங்களென்றும் சொல்லுகிற உங்களுடைய எண்ணம் இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை. ப்ராஹ்மணர்களிடத்தில் பக்தியுள்ள வராகிய உமக்குப் ப்ராஹ்மணர்கள் முக்கிய தெய்வம் என்பது ப்ரசித்தமே. தேவர்களுக்கும் தேவர்களான ப்ராஹ்மணர்களுக்கும் நீர் ஆத்மாவாகவும்

தெய்வமாகவும் இருக்கிறீர். உம்முடைய அவதாரங்களால் புராதனமான தர்மமானது காப்பாற்றப்படுகிறது. விகாரமற்றவராகிய நீர் தர்மத்திற்கு முக்கிய பலமாக ஆகிறீர். யோகிகள் உம்முடைய அனுக்கிரஹத்தால நிவிர்த்தி மார்க்கத்தை யடைந்து ஸம்சாரத்தைத் தாண்டுகிறார்கள். அப்பேர்ப்பட்ட உமக்குப் பிறர் அனுக்கிரஹஞ் செய்வதென்பது ஆச்சரியமாயிருக்கிறது. மேலும் பக்தர்களால் உம்முடைய பாதாரவிந்தத்தில் அர்ச்சிக்கப்பட்ட துளசி மாலையை வண்டானது விரும்புவதுபோல், லக்ஷ்மீதேவியானவள் பக்தர்களால் உம்முடைய பாதத்தில் சமர்ப்பிக்கப்படும் துளஸி மாலையில் வஸிக்கும் சிறந்த வண்டுக்கும் ஸ்தானமாகிய பாதத்தை விரும்பியவள்போல உம்மை ஒவ்வொரு சமயத்திலும் சேவிக்கிறாள். பணத்தை விரும்பியவர்கள் அவளுடைய பாததூளியைச் சிரசால் தரிக்கிறார்கள். சிறந்த பக்தர்களிடத்திலேயே தொடர்புடைய நீர், பலவித ஸுலக்ஷணங்களால் ஸேவிக்கும் மஹாலக்ஷ்மியையும் ஆதரிப்பதில்லை. உம்மிடத்தில் சேவிக்கக்கூடிய குணங்கள் யாவும் இருக்கின்றன்.

அப்படியிருக்க, ப்ராஹ்மணர்களுடைய பாத தூளியும் ஸ்ரீ வத்ஸமென்ற அடையாளமும் உம்மைப் பரிசுத்தப் படுத்துகிறதென்று எப்படிச் சொல்லக் கூடும்? பாதத்திலிருக்கும் துளஸி மாலையிலிருக்கும் வண்டைப் பார்த்து லக்ஷ்மீதேவியானவள் 'இந்த வண்டு சாரத்தைக் கிரஹிக்கும் ஸ்வபாவமுள்ளது, சபல ஸ்வபாவமுள்ளது. இதுவும் பகவானுடைய பாதத்திலிருக்கும் துளஸியில் ரமிக்கிறது, ஆகையால் பாதத்தின் வாவண்யம் அதிகம் ஆனதுபற்றி நான்

மார்பிலிருந்தாலும் ஸபத்னியாகிய துளஸியுடன் பாதத்தைச் சேவிப்பேன், என்று அனுசரிக்கிறாள். (அவளை நீர் ஆதரிக்கிறதில்லை) தர்ம மூர்த்தியாகிய உமக்கு மூன்று யுகங்களில் மூன்று பாதங்கள் இருக்கின்றன. (தபஸ், சௌசம், தயை) ப்ராஹ்மணர்களுக்காகவும். தேவர்களுக்காகவும், இந்த ஸ்தாவர ஜங்கமங்களடங்கிய ஜகத்தை சத்வ குணம் பொருந்தியதும், வரத்தைக் கொடுக்கிறதுமான உம்முடைய சரீரத்தால் அதற்கு விகாரமான ரஜஸ் தமஸ் ஆகிய இவைகளை அடக்கிக் காப்பாற்றுகிறீர். உம்மால் காப்பாற்ற வேண்டிய ப்ராமணோத்தமர்கள் உடைய கூட்டத்தைப் பிரியமான வார்த்தையாலும் பூஜையாலும் நீர் காப்பாற்றாமற்போனால், வேத மார்க்கமானது கெட்டுப் போய்விடும். லோகத்தில் சிறந்தவனால் அனுஷ்டிக்கப்படும் தர்மத்தையே மற்றவர்கள் பிரமாணமாகக் கொள்கிறார்கள். சத்வ குண நிதியும் ஜனங்களுக்கு க்ஷேமத்தைச் செய்ய விரும்பியவரும், தமது சக்தியால் தர்ம விரோதிகளை நாசஞ் செய்பவருமாகிய உமக்கு வேத மார்க்கம் கெட்டுப் போவது அபிதமல்ல. ப்ராஹ்மணர்களை வணங்குவதால் ஜகத்பதியாகிய உம்முடைய தேஜஸ் குறைகிறதில்லை. அது உமக்கு விளையாட்டேயாம். ஓ ஈச! இவர்களுக்கு நீர் எந்தச் சிக்ஷையை விதித்தாலும் ஜீவனத்தை ஏற்படுத்தினாலும் அதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம் அபராதஞ் செய்யாதவர்களான இவ்விருவர்களையும் நாங்கள் சபித்தபடியால் எங்களுக்கு தகுதியான சிக்ஷையை விதியும்" என்றார்கள்.

26. அதனைக் கேட்ட பகவான் "ஓ ப்ராஹ்மணர்களே!

இந்தப் பார்ஷதர்களிருவரும் அசுரஜன்மத்தை அடைந்து அந்த ஜன்மத்தில் கோபத்தால் மனத்தை என்னிடத்திலேயே செலுத்துவதாகிய யோகத்தைச் செய்து மறுபடியும் என்னுடைய சமீபத்தை அடைவார்கள். உங்களால் செய்யப்பட்ட சாபமானது என்னால் கொடுக்கப்பட்டதென்றே நினையுங்கள் என்றார்.

27–28. பின்பு அந்த மஹரிஷிகள் நேத்ரானந்தத் திற்கு பாத்திரமாயும், வேறு பிரகாசத்தை அபேக்ஷியா மல் சுயமாய்ப் ப்ரகாசிப்பவருமான ஸ்ரீ மஹாவிஷ்ணு வையும் அவருக்கு இருப்பிடமான வைகுண்ட த்தையும் பார்த்து, பகவானை பிரதக்ஷிணமாகச் சுற்றி நமஸ்காரஞ் செய்து அவரிடம் விடைபெற்று விசேஷ ஆனந்தத்து டன் மஹாவிஷ்ணுவின் விபூதியைப்பற்றிக் கொண்டாடிக்கொண்டு சென்றார்கள்.

29–37. பகவான் தம்முடைய பார்ஷதர்கள் இருவரையும் நோக்கி "நீங்கள் பயப்படவேண்டாம் உங்களுக்கு க்ஷேமமுண்டாகும். உங்களுடைய சாபத்தைப் போக்கடிக்க நான் ஸமர்த்தனானாலும் ப்ரஹ்ம தேஜஸ்ஸை அடக்க எனக்கு இஷ்டமில்லை. மேலும் முன்னொருகாலத்தில் நான் பிரளய கலகத்தால் தனித்திருக்கும்போது (அந்தப்புரத்திலிருந்து வெளியில் போன லக்ஷ்மீதேவியை) அந்தப்புரத்தில் பிரவேசிக்கும் லக்ஷ்மீதேவியைத் தடுத்தபடியால் உங்களுக்கு இந்த விஷயம் லக்ஷ்மீயினாலேயே சொல்லபட்டிருக்கிறது. ஆதலால் ப்ராஹ்மண அவமானத்தின் பலனை அனுபவித்து அந்த ஜன்மத்தில் விரோதத்தால் என்னை எப்பொழுதும் தியானம் செய்து சொற்ப

காலத்தில் என்னுடைய சமீபம் வருவீர்கள் என்று பகவான் த்வாரபாலகர்களுக்கு ஆக்ஞாபனம் செய்து அநேக விமானங்களுக்கு அலங்காரமாகவும், எல்லாவற்றிற்கும் மேலான காந்தி பொருந்தியதுமான தமது ஸ்தானஞ் சென்றார். பிறகு அந்தத் தேவ சிரேஷ்டர்கள் இருவரும் தடுக்க முடியாத ப்ரஹ்ம சாபத்தால் கர்வமற்றவர்களாக ஆனார்கள்.

ஓ குழந்தைகாள்! வைகுண்டத்திலிருந்து அவர்கள் விழும்போது விமானங்களிலிருப்பவர்கள் ஹா!ஹா! என்று கதறினார்கள். அந்தப் பார்ஷதர்களே காசியபருடைய வீரியத்திற்குத் திதியின் கர்ப்பத்தில் உண்டானவர்கள். இரட்டைப் பிள்ளைகளான அந்த அசுரர்களுடைய தேஜஸ்ஸால் அப்பொழுது உங்கள் உடைய தேஜஸ் குறைந்தவிட்டது. ஆனாலும் பகவான் க்ஷேமத்தைச் செய்வார். அவர் ஸகல ஜகத்தையும் படைத்தவர். காப்பாற்றுகிறவர் சம்கரிப்பவர் எல்லா வற்றிற்கும் முந்தினவர். அவருடைய யோக மாயை யோகேசர்களாலும் அறியமுடியாதது. அவரைச் சார்ந்தவர்களான நமக்கு அவரே க்ஷேமத்தைச் செய்வார். இந்த விஷயத்தில் நம்முடைய யோசனை பயன்படாதது என்று சொன்னார்.

அத்தியாயம் 17

திதிக்குப் புத்திரர்கள் பிறந்தது

1–15 இப்படி ப்ரஹ்மதேவரால் சொல்லப்பட்ட காரணத்தைக் கேட்டு தேவர்கள் எல்லோரும் சம்சயம் அற்றவர்களாக ஸ்வர்க்கம் சென்றார்கள். திதியானவள் தனது பர்த்தாவினுடைய கட்டளையினால் புத்திரன் உடைய சரிதத்தில் சந்தேகமுள்ளவளாக ஆயிரம் வருஷங்களைக் கழித்தாள். பிறகு இரண்டு குமாரர் களைப் பெற்றாள். அவ்விருகுழந்தைகள் பிறக்கும் போது பூமியிலும் அந்தரிக்ஷத்திலும், த்யுலோகத்தி லும் வரப்போகின்ற பயத்தைக் காட்டும் அநேக உத்பாதங்கள் உண்டாயின. மலைகளுடன் பூமி அசைந்தது. ஆகாசம் முழுவதும் ஜ்வலித்தது. குறைக் கொள்ளிகளும் இடிகளும் விழுந்தன. தூமகேதுக்கள் காணப்பட்டன. அடிக்கடி பூதாகார சப்தத்துடன் காற்றானது மரங்களை வேரோடு பிடுங்கிற்று. அந்தக் காற்றுக்கு தூளியே த்வஜமாகவும், காற்றின் ஸமூகம் ஸைன்யமாகவும் இருந்தன. சிரிப்பது போன்ற மின்னல்களுள்ள மேகங்களால் தேஜஸ் மறைக்கப்பட்டது, மேலும் ஆகாசமானது இருளால் சூழப்பட்டது. சமுத்திரத்தின் மத்தியிலிருக்கும் மகரம் முதலிய ஜந்துக்கள் கலங்கின. அலைகள் உயரக்கிளம்பின. கிணறு, குளம் முதலியவை கலங்கின. அவைகளிலுள்ள தாமரைகள் உலர்ந்து போயின. சந்திரன், சூரியர் இவர்களுக்கு ராஹுகக்ராஸம் நேர்ந்தது. (கிரஹணம்.)

மேலும் அவர்களைச் சுற்றிக் கோட்டை கட்டப் பட்டது, மேகமில்லாதபோது கர்ஜிதம் உண்டாயிற்று.

அதனால் குகை முதலிய இடங்களில் எதிரொலியும் உண்டாயிற்று. கிராமங்களில் பெண் நரிகள் அக்கினியைக் கக்கிக் கொண்டு பயங்கரமாக ஊளை யிட்டன. கோட்டான்களும், நரிகளும் சப்தித்தன, நாய்கள் பாடுகின்றவை போலும், அழுகின்றவை போலும் தலையைத் தூக்கிப் பலவகையாக்கக் குரைக்க ஆரம்பித்தன. ஓ விதுர! கழுதைகளும் கூட்டம் கூட்டமாகக் கூர்மையான குளம்புகளால் பூமியைப் பிளந்தும் தங்களுடைய ஜாதிக்குரியபடி சப்தித்தும், மதமுள்ளவைகளாக ஓடின. கழுதைகளின் சப்தத்தைக் கேட்டுப் பயந்து பறவைகள் தங்களுடைய கூடுகளிலிருந்து பூமியில் விழுந்தன. இடைச்சேரியி லும், காடுகளிலுள்ள பசுக்கள் (மிருகங்கள்) மேற்சொல்லிய சப்தத்தால் நடுங்கி மூத்திரத்தை விட்டதும் அன்றிச் சாணத்தையும் போட்டன. மேலும் பசுக்கள் பயந்தன; இரத்தங்களைக் கறந்தன. வருஷித்தன. தேவதா பிரதிமைகள் அழுதன. காற்றில்லாத போது மரங்கள் கீழே விழுந்தன. பாப கிரஹங்கள் சுபக் கிரஹ நக்ஷத்திரங்களையும் அதிக்ரமித்துச் சென்றன (அதிசாரம்) வக்ராதியால் உபத்திரவித்தன; ஒன்றுக் கொன்று மேற்காட்டியவை களும், மற்றவைகளுமாகிய அபசகுனங்களை கண்டு அவைகளின் உண்மையை அறியாதவர்களான எல்லாரும் பிரளயம் நேர்ந்துவிட்டதென்று நினைத்தார்கள். ப்ரஹ்மதேவருடைய புத்திரர்களான சனகர் முதலியவர்கள் மாத்திரம் பயப்படவில்லை.

19–31 அந்த ஆதிதைத்யர்கள் இருவரும் (திதியின் புத்திரர்கள் தைத்யர்கள்) தங்களுடைய பௌருஷத்தை வெளியிட்டுக் கொண்டு கருங்கல் போல்

வளர்ந்தார்கள்; இவர்களுடைய சுவர்ண கிரீடங்கள் உடைய நுனிகள் ஆகாயத்தை ஸ்பர்சித்திருந்தன. தோள்வளைகளுள்ள கைகள் திக்குகளின் எல்லை வரையிற் சென்றன. அரைநாண் முதலியவையுள்ள இடுப்பானது சூரியமண்டலத்திற்கு மேலாக இருந்தன. அவர்களுடைய அடி வைப்பினால் பூமி அசைந்தது. அப்பொழுது மாரீசர் அவ்விருவர்களுக்குள் எவனைத் திதியானவள் முதலில் பெற்றாளோ, அவனுக்கு ஹிரண்யாக்ஷனென்றும், தம்முடைய தேகத்திலிருந்து முதலில் திதியிடம் பிரவேசித்த வீரியத்தால் உண்டானவனுக்கு ஹிரண்யகசிபு என்றும் பெயர் வைத்தார். அந்த ஹிரண்யகசிபுவானவன் ப்ரஹ்ம தேவரிடம் வரம் பெற்று மிருத்யு பயமில்லாதவனாகி, கர்வமடைந்து உலகபாலர்களை ஜயித்து, ஸகல உலகங்களையும் ஸ்வாதீனமாக்கிக் கொண்டான். அவனுடைய தம்பியாகிய ஹிரண்யாக்ஷன் என்பவன் தமயனிடத்தில் விசேஷ ப்ரீதியுள்ளவன். மேலும் அவன் ஒவ்வொரு நாளும் கதாயுதத்தைக் கையில் பிடித்துக் கொண்டு யுத்தஞ் செய்ய விரும்பினவனாகத் தகுந்த எதிரியைத் தேடி ஸ்வர்க்கத்தில் அலைந்தான். அவன் ஸகிக்க முடியாத வேகமுள்ளவன்! அவன் அணிந்திருக்கும் ஆபரணமாகிய தங்கச் சலங்கைகள் இனிமையாகச் சப்திக்கின்றன. அவன் வைஜயந்தி என்னும் மாலையைத் தரித்தவன்; பெரிதாகிய கதாயுதத்தை தோளில் வைத்துக் கொண்டவன்; மனோ பலத்தாலும், தேகபலத்தாலும் கர்வமுள்ளவன்; ஒருவராலும் ஜயிக்க முடியாதவன்; எவரிடத்திலும் பயமற்றவன்; அப்படிப்பட்ட அந்த அசுரனைக் கண்டு கருடனைக் கண்ட சர்ப்பங்கள் போல் தேவர்கள் எல்லாரும் ஓளிந்து கொண்டார்கள்.

அந்த அசுர சிரேஷ்டன் தன்னுடைய தேஜஸ்ஸால் பயந்து இந்திரன் முதலிய தேவர்கள் ஒளிந்து கொண்டார்களென்று தெரிந்து கொண்டு மதத்துடன் கர்ஜித்தான். மிக்க பலமுள்ள அந்த அசுரன் அவ்விடத்திலிருந்து திரும்பி மிக்க ஆழமுள்ளதும், பயங்கரமான சப்தமுள்ளதுமான சமுத்திரத்தில் மதங்கொண்ட யானைபோல் விளையாடுவதற்காகப் பிரவேசித்தான். அவனைக் கண்ட மாத்திரத்தில் வருணனுடைய சைனியங்களாகிய ஜலஜந்துக்கள் பயத்துடன் மனங்கலங்கி அவனால் அடிக்கப்படாமல் இருந்தாலும் அவனுடைய தேஜஸ்ஸினாலேயே ஜயிக்கப்பட்டவைகளாக வெகுதூரம் ஓடிற்று.

அப்பொழுது அவன் தன்னுடைய தச்சுகளால் மிகுந்த அலைகளை உண்டுபண்ணிக் கொண்டு எஃகினால் செய்யப்பட்ட கதாயுதத்தால் அடித்துக் கொண்டு அநேக வருஷங்கள் சமுத்திரத்திலேயே சஞ்சரித்துப் பின்பு வருணனுடைய பட்டணம் சென்றான். அது விபாவரி என்ற பெயருள்ளது. அவ்விடத்தில் அவன் ஜலஜந்துக்களுக்கு அதிபதியும் பாதாள உலகத்தைக் காப்பாற்றுகிறவருமான வருணனைக் கண்டு சிரித்துக் கொண்டு பரிகாசத் திற்காக அவரை நமஸ்கரித்து, தாழ்ந்தவன் போல் அவரை நோக்கி, "ஓ மேலான அரசரே! நீர் உலக பாலர்களுக்கு அதிபதி; மிகுந்த கீர்த்தியுள்ளவர்; கர்வமுள்ளவர்களும் தங்களை வீரர்களென்று நினைத்தவர்களுமான துஷ்டர்களுடைய கர்வத்தை அடக்கக் கூடியவர், நீர் முன்காலத்தில் தைத்தியர் களையும், தானவர்களையும் ஜயித்து ராஜசூயமென்ற யாகத்தைச் செய்தீரல்லவா? ஆனது பற்றி

இப்பொழுது என்னுடன் யுத்தம் செய்யவேண்டும்" என்றான். இப்படி மிகுந்த கர்வத்துடன் பரிகாசம் செய்யும் அந்த ஹிரண்யாக்ஷனை நோக்கிச் சமுத்திர ராஜன் கோபத்தை அடக்கிக் கொண்டு, ஓ அசுர சிரேஷ்ட! நான் யுத்தஞ் செய்வது முதலியவகைளில் உற்சாகத்தை விட்டுவிட்டேன்.(சாந்தியை அடைந்து இருக்கிறேன்.) ஆனால் உன்னுடன் யுத்தம்செய்யத் தகுந்த புருஷன் பகவான் ஒருவரே, வேறு யாராலும் முடியாது. அவர் புராண புருஷர். உன்னைப் போன்ற வீரர்கள் அவரைத் துதிக்கிறார்கள், அவர் உன்னைப் போல் அசத்தாயிருப்பவர்களைக் கொல் வதற்காகவும், சாதுக்களை அனுக்ரஹிப்பதற்காகவும் பலவகையாக அவதரிக்கிறார். அவரிடஞ் சென்றால் கர்வமற்றவனாகி யுத்தகளத்தில் படுப்பாய், நாய்கள் உன்னைச் சுற்றிக் கொள்ளும், என்று சொன்னார்.

அத்தியாயம்–18

யக்ஞவராஹருக்கும் ஹிரண்யாக்ஷனுக்கும் யுத்தம்

1–5. மிகுந்த மதமுள்ளவனும் கம்பீர மனமுள்ளவனுமான அந்த ஹிரண்யாக்ஷன் சமுத்திர ராஜனுடைய வார்த்தையைக் கேட்டு நாரதரிடமாகப் பகவானிருக்குமிடத்தைத் தெரிந்து கொண்டு வெகு வேகமாகப் பாதாளலோகம் சென்றான். அவ்விடத்தில் சிங்கப் பல்லால் பூமியை உயரத்தூக்கி கொண்டு இருக்கும் வாரஹரூபியான பகவானைக் கண்டான். அவர் எல்லோரையும் ஜயிப்பவர். அவருடைய கண்கள் சிவந்தவைகளாக இருந்தன. அவைகளால் அசுரனுடைய காந்தியானது குறைந்தது, அவரைக் கண்ட அவன், "ஆச்சரியம். காட்டில் ஸஞ்சரிக்கும் மிருகமாகிய பன்றிக்கு இவ்வளவு தேஜஸ் இருக்கிறதே, என்று சிரித்தான். பின்னும் அவன் அவரை நோக்கி, "ஓ தேவர்களுக்குள் அதமனே! பன்றி யுருவங்கொண்ட வரே! ஒன்றையும் அறியாதவனே! பாதாள வாசிகளாகிய எங்களுக்கு ப்ரஹ்மதேவரால் இந்தப் பூமி கொடுக்கப்பட்டது, ஆனதால் இவளை விட்டுவிடு, நான் பார்த்திருக்கும் போது இந்தப்பூமியுடன் நீ க்ஷேமமாகத் திரும்பிப் போகமுடியாது. நமக்குச் சத்துருக்களாகிய தேவர்கள் உன்னை யுத்தத்தில் பலி கொடுப்பதற்காகவே வளர்ந்திருத்திருக்கிறார்களே ? நீ அசுரர்களை மறைத்திருந்து மாயையால் ஜயித்தவன். யோகமாயா பலமுள்ளவன் சொற்ப பராக்கிரம முள்ளவன். அப்படிப்பட்ட உன்னைக் கொன்று என் மித்திரர்களுடைய துக்கத்தைப் போக்கடிக்கிறேன். என்னுடைய கையிலிருக்கும் கதாயுதத்தால்

உன்னுடைய தலையை உடைக்கிறேன், அதனால் இப்பொழுது உன்னை பூஜிப்பவர்களும், முந்திய பக்தர்களுமாகிய தேவர்களும் மஹர்ஷிகளும் ஒத்தாசை இல்லாதவர்களாக ஆகிவிடுவார்களென்று சொன்னான்.

6–28. அப்பொழுது பகவான் சத்துருவினுடைய கெட்ட வார்த்தையாகிய தோமராயுதத்தால் அடிக்கப் பட்டும் தம்முடைய சிங்கப்பல்லின் நுனியிலிருக்கும் பூதேவி பயப்படுவதைப் பார்த்து அவனுடைய வார்த்தைகளைப் பொறுத்துக்கொண்டு ஜலத்தின் நடுவிலிருந்து வெளிவந்தார் அது யானையானது பெண் யானையுடன் முதலையால் பீடிக்கப்பட்டு ஜலத்திலிருந்து கிளம்பியது போலிருந்தது. அப்பொழுது அந்த அஸுரன் யானையின்டின் மகரம் போலதுபோல் அவர் பின் சென்றான். பின்னும் பயங்கரமான சிங்கப் பற்களுள்ள அந்த அஸுரன், "வெட்கமில்லாத அசத்துக்களுக்கு எதுதான் கெட்ட காரியம்" என்று இடிபோல் உரக்கச் சொன்னான். அப்பொழுது ப்ரஹ்ம தேவராலும். தேவர்களாலும் புஷ்பங்களைக் கொண்டு பூஜிக்கப்பட்டவரான அந்தப் பகவான் ஜலத்திற்கு வெளியில் வியவகார யோக்கியமாகிய இடத்தில் பூமியை வைத்து, அதில் தம்முடைய ஆதார சக்தியை ஸ்தாபித்தார்.

பின்பு, அவர் மிகுந்த கோபத்துடன், தம்மைப் பின் தொடர்ந்து வருகிறவனும் ஸ்வர்ண ஆபரணங்கள் உள்ளவனும் பெரிதான கதாயுதத்தைத் தரித்தவனும், ஸ்வர்ண மயமும் ஆச்சரயகரமுமான கவசமுள்ளவனும், கெட்ட வார்த்தைகளால் மர்மஸ்தானங்களைப்

பிளப்பவனுமாகிய அந்த அஸுரனை நோக்கி. "அட! நாங்கள் வனத்திலிருக்கும் மிருகங்களேயாம். இது உண்மையே. உன்னைப்போன்ற கிராம சிம்ஹத்தை (நாயை) தேடுகிறோம். தைரியமுள்ளவர்கள் யமனுடைய பாசத்தால் கட்டப்பட்ட உன்னுடைய ஆத்ம சிலாகையால் (தன்னைத்தானை புகழ்ந்து கொள்வது) லட்சியஞ் செய்யமாட்டார்கள். நாங்கள் பாதாளவாசிகளுடைய அடைக்கலமான சொத்தை அபகரிப்பவர்கள். வெட்கமில்லாதவர்கள் உன்னுடைய கதாயுதத்தால் வெட்டப்பட்டவர்கள். ஆனாலும் நிற்கிறோம். பலிஷ்டனாகிய உன்னுடன் விரோதத்தை உண்டுபண்ணிவிட்டு எவ்விடம் போவோம்? யுத்தத்திற்கு சன்னத்தர்களாக இருக்கிறோம். நீ காலாட் படைகளுக்கு அதிபதி, நம்மை ஜயிப்பதற்குச் சீக்கிரம் முயற்சி செய். நீ யோசனையில்லாதவன். பிரதிக்ஞையை நிறைவேற்றாதவன். சபைக்குரியவனல்ல, ஆதலால் நம்மைக் கொன்று பந்துக்களுடைய துக்கத்தை நிவர்த்திசெய்" என்றார்.

இப்படிப்பரம புருஷனால் பரிஹசிக்கப்பட்ட அஸுரன் மஹாசர்ப்பம் போல் மிகவும் கோபத்தால் கலங்கிய இந்திரியங்களுள்ளவனாகி பகவானுடைய சமீபம் வந்து கதாயுதத்தால் அவரை அடித்தான். சத்ருவாகிய அசுரன் மார்பில் கதாயுதத்தால் அடிக்கும்போது பகவான் அந்த அடி தம்முடைய சரீரத்தில் படாமலிருக்கும்படி குறுக்காக ஒதுக்கங் கொடுத்து ஏமாற்றினார். அது மிருத்யுவை யோகா ருடன் வஞ்சித்தது போலிருந்தது கோபமுள்ளவனும், பரபரப்பினால் உதட்டைக் கடித்துக்கொள்ளுகிறவனும், கதாயுதத்தை அடிக்கடி சுழற்றிக்கொண்டு

இருப்பவனுமான அசுரனைப் பகவான் எதிர்த்தார். அசுரன் கதாயுதத்தால் பிரபுவாகிய பகவானுடைய வலத்தோளை உத்தேசித்து அடித்தான்.

ஓ விதுர! அதன் அடி தம்மீது படுவதற்கு முன்னமேயே பகவான் யுத்தத்தை நன்றாக அறிந்த வராகையால் தம்முடைய கதாயுதத்தால் சத்துருவின் கதாயுதத்தை அடித்தார், இப்படி ஹிரண்யாக்ஷனும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் ஒருவரை யொருவர் ஜயிக்கவேண்டும் என்ற விருப்பத்துடன் மிகுந்த முயற்சியுள்ளவர்களாகப் பெரியவையான கதாயுதங்களைக் கொண்டு அடித்துக்கொண்டார்கள். இப்படி அவ்விருவர்களும் பூமிக்காக யுத்தம் செய்தார் கள். கூர்மையான கதைகளால் அவர்களுடை ய சரீரம் அடிக்கப்பட்டு இரத்தம் பெருகியது. அதனால் இருவர்களுக்கும் அதிகக் கோபமுண்டாயிற்று. பலவகையான நடையைக் காண்பித்தார்கள். அந்த யுத்தமானது மதித்த இரண்டு விர்ஷபங்கள் பசுவின் நிமித்ததம் சண்டை செய்வது போலிருந்தது. ஓ குரு வம்சத்தில் பிறந்தவரே! யக்ஞவராஹ ரூபியான பகவானுக்கும், அசுரனுக்கும் பூமியின் நிமித்தமாக நேர்ந்த யுத்தத்தைப் பார்ப்பதற்குப் ப்ரஹ்மதேவர் அவ்விடம் அனேக மஹரிஷிகளுடன் வந்தார். மேலும் ஆயிரம் மஹரிஷிகளுக்கும் அதிபதிகளாகிய அவர் பராக்கிரம கர்வமுள்ளவனும், பயமற்றவனும் செய்வதற்குப் பதில் செய்பவனும், பதில் செய்யமுடியாத பராக்கிரமமுள்ளவனுமாயிருக்கும் அஸுரனைப் பார்த்து, ஆதிவராஹ ஸ்வரூபியும். புராண புருஷனுமான ஸ்ரீமந் நாராயணனை நோக்கி, 'ஓ தேவ! உம்முடைய பாதங்களைச் சரணமடைந்த

தேவர்களுக்கும், ப்ராஹ்மணர்களுக்கும், பசுக்களுக்கும், அபராதஞ் செய்யாத பிராணிகளுக்கும் இந்த அஸுரன் கெடுதியைச் செய்தவன். பயத்தைச் செய்தவன் கெட்ட காரியத்தைச் செய்தவன், நம்மிடமிருந்தும் வரத்தை அடைந்தவன். தன்னுடன் யுத்தஞ் செய்யத் தகுந்த வீரனைத் தேடிக்கொண்டு உலகம் முழுவதும் அலைந்தவன். இவனை எதிர்த்துயுத்தம் செய்பவன் உலகத்திலொருவனுமில்லை. மிக்க உபத்திரவத்தைச் செய்தவன் மிக்க மாயாவி. கர்வமுள்ளவன். பயம் இல்லாதவன். மிக்க அசத்து, ஆதலால் ஓ தேவ! கோபங்கொண்ட ஸர்ப்பத்தினிடம் சிறுவன் விளையாடுவதுபோல் அவனுடன் விளையாடுவது உசிதமல்ல ஓ நாசமற்றவரே! பயங்கர உருவமுள்ள இந்த அஸுரன் தனக்குப் பலம் விருத்தியடையக்கூடிய காலத்தை அடைந்து விருத்தியடைவதற்கு முந்தியே பாபியாகிய இவனை நீர் உம்முடைய மாயா பலத்தால் நாசஞ் செய்யும். இந்த சந்தியா காலமானது மிகவும் கோரமானது. உலகங்களுக்கு நாசத்தைச் செய்யக்கூடியது. ஓ ஸகல ஜகத்ஸ்வரூபியாயிருப்பவரே! அபிஜித் என்னும் சுபமாகிய காலம் வந்துவிட்டது. தேவர்களுக்கு ஜயத்தை உண்டுபண்ணும். உமக்கு மித்திரர்களான எங்களுடைய க்ஷேமத்திற்காக இவனைக் கொல்லுக. தெய்வச் செயலால் இந்த அஸுரன் தனக்கு மிருத்யுவாக முன்னமே ஏற்பட்டிருந்த உம்மிடம் சேர்ந்தான். ஆதலால் இவனைக் கொன்று உலகத்திற்கு க்ஷேமத்தை உண்டு பண்ணும், என்று பிரார்த்தித்தார்.

அத்தியாயம்–19

ஹிரண்யாக்ஷ வதம்

1–29 அதனைக் கேட்ட பகவான் ப்ரஹ்மதேவர் கபடமற்றவராகச் சொல்லுகிறாரென்று நினைத்துச் சிரித்து (கால ஸ்வரூபியான என்னாலும் நல்ல முகூர்த்தம் எதிர்பார்க்கப்பட வேண்டுமாவென்று) ப்ரீதியுள்ள பார்வையால் அந்த வார்த்தையை அங்கீகரித்தார். பின்பு தமக்கெதிரில் பயமில்லாமல் சஞ்சரிக்கும் சத்ருவினுடைய கன்னத்திற்குக் கீழாகக் கதாயுதத்தால் அடித்தார். பிறகு அந்த அசுரன் தன்னுடைய கதையால் பகவானுடைய கதாயுதத்தை அடித்தான். அதனால் கதையானது அடிக்கப்பட்டுப் பகவானுடைய கையிலிருந்து சிதறிக் கீழே விழுந்தது. அது மிகவும் ஆச்சரியமாக விருந்தது. அப்பொழுது அஸுரன் ஆயுதமில்லாமலிருக்கும் பகவானைப் பார்த்து அது சத்ருவை ஜயிக்க தகுந்த சமயமானாலும் தர்மத்தை நினைத்துக் கொண்டு அடிக்க வில்லை. இப்படிப் பகவானுடைய கதை உடைந்தபின் தேவர்கள் ஹா ஹா என்று கதறும்போது பகவான் அந்தத் தர்மத்தைப் பெரிதாக நினைத்ததுமின்றிச் சக்கரத்தை நினைத்தார்.

அப்பொழுது அவருடைய மாஹாத்மியத்தை நன்றாக அறியாதவர்களான தேவர்கள் யுத்தத்தில் தைத்தியர்களுக்குள் தாழ்ந்தவனும் தம்முடைய பார்ஷதர்களுக்குள் முக்கியனுமான ஹிரண்யாக்ஷனுடன் யுத்தஞ் செய்பவரும் யுத்தத்தில் பரப்பரப்புள்ள சக்ராயுதத்தைத் தரித்தவருமாகிய பகவானைப்

பார்த்து, 'உமக்கு க்ஷேமமுண்டாகும்; இந்த அசுரனைக் கொல்லும், என்று சொன்னதுமல்லாமல் நான்கு புறத்திலும் பலவகையாகப் பேசிக்கொண்டார் கள். இம்மாதிரியான தேவர்களுடைய வார்த்தையைக் கேட்டும் தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரும், சக்ராயுதத்துடன் யுத்தத்திற்கு ஸன்னத்தராயிருப் பவருமான பகவானைப் பார்த்தும், அந்த அஸுரன் மிக்க கோபத்துடன் உதட்டைக் கடித்துக் கொண்டான். மேலும் பயங்கரங்களாகிய சிங்கப் பற்களுள்ள அவன் கண்களால் எரிப்பவன்போலப் பகவானிடம் ஓடி வந்து, 'நீ கொல்லப்பட்டாய்' என்று சொல்லிக் கதாயுதத்தால் அடித்தான். யக்ஞவராஹ ரூபியான பகவான் சத்ருவாகிய அஸுரன் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே வாயுவிற்குச் சமமான வேகமுள்ள அந்தக் கதாயுதத்தை வலக்காலால் சிரமமின்றி உதைத்தார்.

மேலும், "ஓ அஸுரனே! ஆயுதத்தை எடுத்துக் கொள். ஜயிக்க வேண்டுமென்ற விருப்பமுள்ளவனாக இருப்பதால் அதற்குத் தகுந்த முயற்சியைச் செய்" என்றும் சொன்னார். அதனைக் கேட்ட அஸுரன் அந்தக் கதையை வராஹரூபியான பகவானை உத்தேசித்துப் ப்ரயோகித்தான். தம்மைப் பார்த்து வேகமாக வரும் அந்தக் கதையைக் கண்ட பகவான் தம்மீது விழுவதற்கு முன்னமேயே அதைப் பிடித்துக் கொண்டார். அது கருடன் பெண் சர்ப்பத்தைப் பிடித்தது போலிருந்தது. பிறகு பகவான் அந்தக் கதையை அந்த அஸுரனுக்குக் கொடுக்க விரும்பியும் அவன் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவன்

தன்னுடைய பராக்கிரமம் தடைப்பட்டபடியால் மானங் குறைந்து காந்தியற்றவனாயிருந்தான்.

மேலும், ப்ராஹ்மணனை உத்தேசித்து ஆபிசார கர்மத்தைச் செய்பவர் போல் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை உத்தேசித்து ஜ்வலிக்கும் அக்கினி போன்ற மூன்று முனையுள்ள சூலத்தைப் ப்ரயோகித்தான். அந்த அஸுரனால் ப்ரயோகிக்கப்பட்டதும் ஆகாசத்தின் மத்தியில் காந்தியுடன் ப்ரகாசிப்பதுமான அந்தச் சூலத்தைப் பகவான் கூர்மையான முனையுள்ள சக்ராயுதத்தைக் கொண்டு இந்திரன் கருடனுடைய சிறகுகளை வெட்டியது போல வெட்டினார். பின்பு பகவானுடைய சக்ராயுதத்தால் தன் சூலம் வெட்டப் பட்டதைப் பார்த்த அஸுரன் மிக்க கோபத்துடன் கையை முஷ்டி பண்ணிக் கொண்டு மிகுந்த விஸ்தாரமுள்ளதும், விபூதிகளுள்ளதுமான அவருடைய மார்பில் குத்திக் கர்ஜித்துக் கொண்டு கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்தான்.

ஓ விதுரரே! அந்த ஆதிவராஹமூர்த்தியாகிய பகவான் இம்மாதிரி அவனால் அடிக்கப்பட்டும் புஷ்ப மாலையால் அடிக்கப்பட்ட யானைபோல அசையவே இல்லை. பின்பு அந்த அஸுரன் யோகமாயைக்கு அதிபதியாகிய பகவானிடத்தில் பலவகையான மாயையைச் செய்தான். அவைகளைக் கண்டு ஜனங்கள் ப்ரளய காலம் வந்துவிட்டதென்று நினைத்தார்கள். காற்று மிகவும் கடுமையாக வீசிற்று. தூளிகளாலுண்டான இருள் பரவிற்று. யந்திரங்களால் எறியப்பட்டது போல எல்லாத் திக்குகளிலும் கற்கள் விழுந்தன. ஆகாயத்திலிருக்கும் நட்சத்திரங்களின்

தேஜஸ் குறைந்தது. மேகங்கள், மின்னல், கர்ஜனம் ஆகிய இவைகளுடன் அமேத்யம், மூத்திரம் ஆகிய துர்நாற்றமுள்ளவைகளையும், மயிர்களையும், எலும்புகளையும் வர்ஷித்தன. மலைகள் பலவகையான ஆயுதங்களை விட்டன. மேலும் திக்கையே வஸ்திர மாய் உடையவர்களும், அவிழ்ந்த தலை மயிர்கள் உள்ளவரும் சூலாயுதத்தை தரித்தவர்களுமான ராக்ஷஸ ஸ்திரீகள் காணப்பட்டார்கள். யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், காலாட்படை, குதிரைபடை, இரதங்கள், யானைகள் முதலிய ஸைனியங்களால் கடுமையான வார்த்தைகள் சொல்லப்பட்டன. இம்மாதிரியான மாயையைப் பார்த்து மூன்று ஸவனங்களாகிய பாதங்களுள்ள அந்த மாயைகளை நாசம் பண்ணக் கூடிய தம்முடைய சக்ரத்தைப் பிரயோகித்தார்.

அப்பொழுது திதி தேவியானவள் தன்னுடைய பர்த்தாவாகிய மாரீசருடைய கட்டளையை நினைத்துக் கொண்டாள். அப்பொழுது அவளுடைய ஹிருதயம் ஆனது நடுங்கிற்று. அவளுடைய ஸ்தனத்திலிருந்து இரத்தம் பெருகிற்று. பின்பு அந்த அஸுரன் தான் செய்த மாயைகள் வீணாகிவிட்டதைப் பார்த்துப் பகவானுக்கு எதிரில் வந்து கோபத்துடன் இருகைகளால் அவரைக் கட்டி வஜ்ரம் போன்ற முஷ்டிகளால் அடித்தான். அப்பொழுது; பகவான் அந்த அஸுரனுடைய கன்னத்தில் தமது கையால் அடித்தார். அது மஹேந்திரன் விருத்திராசுரனை அடித்தது போலிருந்தது. ஸகல உலகங்களையும் ஜயிப்பவரான பரமபுருஷன் விளையாட்டாகச் சத்துருவை அடித்தபொழுது அவனுடைய சரீரம் நடுங்கிற்று. கண்களிரண்டும் வெளியில் வந்தன.

கைகளும், கால்களும், கழுத்தும் சிதறின. இப்படி அவனுடைய சரீரமானது பெருங்காற்றினால் பெரிய மரம் வீழ்வது போலக் கீழே விழுந்தது. இப்படிப் பகவானால் அடிக்கப்பட்டுப் பூமியில் படுத்தவனும், விசேஷ தேஜஸுள்ளவனும், பயங்கரமாகிய சிங்கப் பற்கள் உள்ளவனும், உதட்டைக் கடித்தவனுமாகிய அஸுரனைப் ப்ரஹ்மா முதலியவர்கள் பார்த்து "ஆச்சரியம், இம்மாதிரியான மரணம் யாருக்குக் கிடைக்கும்? யோகிகள் மோக்ஷத்தை அடைய விரும்பி எவரை ரஹஸ்யத்தில் சித்தத்தை ஒருவகைப் படுத்தித் தியானஞ் செய்கிறார்களோ, அந்தப் பரம புருஷனுடைய முகத்தை தரிசித்துக் கொண்டே அவரால் அடிக்கப்பட்டு அஸுரன் சரீரத்தை விட்டான். இவர்கள் பகவானுடைய பார்ஷதர்கள், பாபத்தால் இம்மாதிரியான ஜன்மத்தை அடைந்தவர் கள். இன்னும் சில ஜன்மத்திற்குப் பிறகு தங்களுடைய பதத்தை அடைவார்கள்" என்று சொல்லிக் கொண்டார்கள்.

30 அப்பொழுது தேவர்கள் பகவானை நோக்கி, "ஓ ஈச! ஸகல யாகங்களை விஸ்தரிப்பவரும், பரிபாலன சமயத்தில் சத்வார்த்தியாக அவதரிப்பவருமாகிய உமக்கு அடிக்கடி நமஸ்காரம் செய்கிறோம். ஜகத்திற்கு உபத்திரவத்தைச் செய்பவனாகிய இந்த அஸுரன் எங்களுடைய பாக்கியத்தால் கொல்லப் பட்டான். நாங்கள் கவலையற்றவர்களாக ஆனோம்" என்று ஸ்தோத்திரஞ் செய்தார்கள்.

31–38 ஸஹிக்க முடியாத பராக்கிரமமுள்ள ஹிரண்யாக்ஷனை ஆதிவராஹ ரூபியான பகவான்

கொன்று ப்ரஹ்மதேவர் முதலியவர்களால் கொண்டா டப்பட்டும் குறைவற்ற உத்ஸவமுள்ள தம்முடைய லோகம் சென்றார். "ஓ விதுர! நான் என்னுடைய குருவினிடமிருந்து தெரிந்துகொண்டபடி பகவான் வராஹாவதாரஞ் செய்து ஹிரண்யாக்ஷனைக் கொன்ற கதையைச் சொன்னேன்" என்று மைத்ரேயர் விதுரருக்கு உபதேசித்தார். ஓ பரிக்ஷித்து மஹாராஜனே! அதனைக் கேட்ட விதுரர் பாகவதோத்தமராகையால் மிகுந்த ஆனந்தமடைந்தார். உலகத்தில் புண்ய ச்லோகர்களும் (நல்வினையைக் கொடுக்கும் பெயருள்ளவர்கள்) மிகுந்த கீர்த்தியுள்ளவர்களுமாகிய அரசர்களுடைய கதையைக் கேட்பதினாலேயே சந்தோஷமுண்டாகிறது. ஸ்ரீவத்ஸமென்ற அடையாளம் உள்ள ஸ்ரீமஹாவிஷ்ணுவின் சரிதத்தைக் கேட்பதால் ஆனந்தம் உண்டாவதற்கு என்ன ஆட்சேபம்? கஜேந்திரமானது முதலையால் பிடிக்கப்பட்டு பகவான் உடைய பாதாரவிந்தத்தைத் தியானஞ் செய்யும் போது பெண் யானைகள் கதறின. அப்பொழுது அவர் யானையை அந்தக் கஷ்டத்திலிருந்து காப்பாற்றினார். கபடமற்ற மனமுள்ளவர்களும், அவரையே சரணமாக அடைபவர்களுமான மனிதர்களால் எளிதில் ஆராதிக்கக் கூடியவரும், அசத்துக்களால் ஆராதிக்க முடியாதவருமான பகவானை க்ருதக்ஞனான (செய்த உபகாரங்களை நினைப்பவன்) எவன்தான் உபாசிக்க மாட்டான்? ஆதிவராஹ மூர்த்தியின் க்ரீடாரூபமானதும், மிக்க அற்புதமானதுமான ஹிரண்யாக்ஷ வதத்தை எவன் கேட்கிறானோ, கானம் செய்கிறானோ, அனுமோதிக் கிறானோ அவன் ப்ரஹ்மஹத்யை செய்தவனானாலும், ஒரு க்ஷணத்திற்குள் சுத்தனாகி விடுகிறான். இந்த ஹிரண்யாக்ஷ வதம் என்கிற கதையானது மிகுந்த

புண்ணியத்தைக் கொடுக்கக்கூடியது; மிகவும் பரிசுத்தியை உண்டு பண்ணைக்கூடியது; தனத்தை உண்டு பண்ணைக் கூடியது; கீர்த்தியை விருத்தி செய்யக்கூடியது; தீர்க்கமான ஆயுளையும் அவரவர்கள் உடைய இஷ்டத்தையும் கொடுக்க வல்லது. யுத்தத்தில் பிராணனையும், இந்திரியங்களையும் காப்பாற்றக் கூடியது. மிகுந்த பராக்கிரமத்தைக் கொடுக்கக் கூடியது. ஓ மஹாராஜ! இக்கதையைப் பக்தியாய்க் கேட்பவர்கள் மரணமடையும் காலத்தில் ஸ்ரீமந் நாராயணனை அடைவார்கள்.

Sri Rama Nama Bank

நாம பெட்டகம்



Help Preserve Namas
from
Air, Water, Fire & Pests

Each pettagam
preserves
13 crores of
Nama

Sponsor
Steel cubboards
(Pettagam)
Rs. 3500/-

ஸ்ரீ ராம் ஜெய ராம் ஜெய் ஜெய ராம் என்ற
மஹா மந்த்ரம்

13 எழுத்துக்கள் கொண்டது.
அக்ஷரத்திற்கு 1 கோடியாக 13 கோடி கொள்ளளவு கொண்ட
பெட்டகங்களில் நாமம் ப்ரதிஷ்டை
செய்யப்படுகிறது.இப்பெட்டகங்கள் நாமத்தை ஈரம், காற்று,
மழை, தீ, பூச்சி இவைகளிலிருந்து சுமார் 60 வருடத்திற்கு
குறையாமல் நாமத்தைப் பாதுகாத்து பல கோடி நபர்கள் தர்சன
மாத்திரத்தினால் நாம ஸ்மரணம் பெற ஏதுவாகும்.

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

பாகம் –2

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்கந்தம் 3 அத்தியாயம் 20 முதல்
ஸ்கந்தம் 5 அத்தியாயம் 6 வரை

Released by Maran's Dog, Toronto , Canada

இஞ்சிக்கொல்லை
R. சிவராம சாஸ்திரிகள்
அவர்களால் 1908ல் மொழி
பெயர்க்கப்பட்டது.

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ராம நாம வங்கியின் ப்ரசாரப் பிரசுரப் பிரிவு
ராம மந்திரம் –2, விளாயகம் தெரு,
சென்னை – 600 033. ☎: 24893736

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

TITLE	:	SRIMAD BHAGAVATHAM, TAMIL VACHANAM
AUTHOR	:	INZIKOLLAI R. SIVARAMA SASTRIGAL WRITTEN IN 1908
SIZE	:	CROWN OCTAVE
EXTENT	:	2736 PAGES CONSISTING OF SEVEN VOLUMES
PRICE	:	RS.600/ SET
FIRST EDITION	:	1996
SECOND EDITION	:	2004
THIRD EDITION	:	2007

இதுவரை செய்துள்ள புத்த ஸேவை

சிலபுத்தகங்களைப்பற்றிசிலவிசேஷகுறிப்புகள்

1. **ஸ்ரீமத் பாகவதம் ப்ரதி பத அர்த்தம்**
   மூலஸ்லோகங்கள் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும், பதப்பிரிப்பும் அர்த்தமும் தமிழில், 7 பாகங்கள் - 6224 பக்கங்கள் **1500**
2. **ஸ்ரீமத் பாகவதம் - வசனம்**
   ஸ்ரீ இஞ்சிக்கொல்லை சிவராம சாஸ்திரிகள் - 7 பாகங்கள் - 2800 பக்கம் 1908-ல் வெளியிடப்பட்டகுமிக ப்ராசீனமான மொழிபெயர்ப்பு. ஸ்ரீதரீயம், வீரராகவீயம், விஜயத் விஜியம் இவைகளின் குறிப்பை உள்ளடக்கியது. ஸப்தாஹ க்ரமமாகபிரிக்கப்பட்டுள்ளது. **600**
3. **ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் - மூலம் - தமிழில்- பெரிய எழுத்தில்**
   24,000 ஸ்லோகங்கள் கொண்டது. பல்வேறு பாராயண க்ரமங்கள், செய்முறை, நைவேத்யம்இவைகளின்பட்டியல்கள்அடங்கியது. **700**
4. **ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் - மூலம் - தமிழில்** **450**
5. **ஸ்ரீ துளஸீ ராமாயணம் - மூலமும் வசனமும்**
   ஸ்ரீமான் ஸாஹிதி வல்லப ஆத்ரேய ஸ்வாமிகள் அவர்களின் 9 ஆண்டு கால உழைப்பின் வடிவம். துளஸிதாஸரின் சரித்திரம் விஸ்தாரமாக முன்னுரையில் கொடுக்கப்பட்டுள்ளது. மூலம் அதனுடைய அர்த்தம் இரண்டும் கொடுக்கப்பட்டுள்ளது. **350**
6. **ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் - வசனம்**
   7 காண்டங்கள் - 7 பாகம் ஸ்ரீ ஸாம்பமூர்த்தி சாஸ்திரிகள் இயற்றியது. எதையும் விஸ்தரிக்காமல் எதையும்விட்டுவிடாமல் அமைந்த சிறப்பான உரைநடை **300**
7. **ஸ்ரீமத் பாகவதம் - மூலம் - தமிழில் - பெரிய எழுத்தில்**
   18,000 ஸ்லோகங்கள் கொண்டது. பாத்ம புராணம், ஸ்காந்தபுராணம்இவைகளில்கூறப்பட்டுள்ளஸ்ரீமத்பாகவதமாஹாத்மியம் அடங்கியது. பல்வேறு அட்டவணைகள்கொண்டது. **550**
8. **ஸ்ரீமத் பாகவதம் - மூலம் - தமிழில்** **250**
9. **ஸ்ரீகிருஷ்ண சைதன்யர்**
   ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் நியமனத்துடன் - ச்யாமளா. பாகவத தர்மம் பத்திரிக்கையில் தொடராக வெளிவந்ததின் நூல்வடிவம் **200**
10. **சுதர்சிங்சக்ர அவர்களின் க்ருஷ்ணலீலைகள்**
    ஸ்ரீசக்ர அவர்ஸ்ரீமத்பாகவதத்துடன்பலபுராணவிஷயங்களைஆய்ந்து க்ருஷ்ணலீலைகளை நான்கு புத்தகங்களாகதொகுத்துள்ளார்.

நந்தலாவின் மொழிபெயர்ப்பு அவ்வளவு சரளமாக உள்ளது.படித்துஇன்புறுங்கள்.

முதல்புத்தகம்- **பகவான் வாஸுதேவன்**

இதில் மதுரா லீலைகள் கொடுக்கப் பட்டுள்ளது **100**

2-ம்புத்தகம்- **நந்தநந்தன்-**

இதில் ப்ருந்தாவன லீலைகள் விஸ்தரிக்கப் பட்டுள்ளது. **200**

3-ம்புத்தகம்- **பார்த்தஸாரதி.**

இதில் ஹஸ்தினாபுர லீலைகள் விவரிக்கப் பட்டுள்ளது. **100**

4-ம்புத்தகம்- **த்வாரகாதீசன் -**

ஸ்ரீமத் பாகவதம் உத்தரார்தம் கதா பாகம். ருக்மிணி கல்யாணம்முதல் அஷ்டமஹிஷிகளின் திருமணம் மற்றும் ஏராளமான ஸம்பவங்கள் கோர்வையாக சொல்லப்பட்டுள்ளது. **100**

11. திருப்பாவை - உபன்யாஸம்

திருப்பாவை-உபன்யாஸம் - ஸ்ரீக்ருஷ்ணப்ரேமிஸ்வாமிகள்அருளியது.

ஒலி நாடாவிலிருந்து எழுதியவர் - ஸ்ரீமதி லதாசப்ரமண்யம் **100**

12. ஸ்ரீ பகவன் நாம ரஸோதயம்

ஸ்ரீ பகவன் நாம போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்.தமிழில்அனுவாதம் ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் கலியுகத்தில் அனுஷ்டிக்க வேண்டிய ஸாதனை பகவன் நாம உச்சாடனமே. அதுவே அடைய வேண்டிய குறிக்கோளும். பாரத தேசத்தில் அவதரித்த மஹான்கள் அனைவரும் மக்களுக்கு இதையே காட்டினர்.பகவன் நாமம் மட்டிலும் போதுமானது என்ற நாம மஹிமையை வேதம், உபநிஷதம், ஸஹஸ்ரநாமம், இதிஹாஸம், புராணம் இவைகளிலிருந்து பகவன் நாம நிரூபணம் செய்தவர் ஸ்ரீபகவன் நாம போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஆவர். ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் இந்த நாம சித்தாந்தத்திற்கு தமிழ் உரைவழங்கியுள்ளார். நமக்காகவும் இனிவரும் தலைமுறையினர்களுக்காகவும் ஜாதி மத பேதமின்றி ஒவ்வொருவர் வீட்டிலும் பாதுகாக்கப்பட வேண்டிய புத்தகம் **100**

13.ஸ்ரீ லக்ஷ்மண் ராமச்சந்த்ர பாங்கர்கரின் நூல்கள்

மொழியாக்கம் நந்தலா

1 பக்த துகாராம் **100**

2 ஞானேஸ்வர் **60**

3 ஏகநாதர் **40**

14. ஸ்துதி மணிகள்

தொகுப்பு - ஸ்ரீ எஸ். த்வாரகா நாதன். ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ள அனைத்து ஸ்துதிகளும் தொகுக்கப்பட்டுள்ளது. விரிவான அட்டவணை அடங்கியது.

15. ஸ்ரீமத் பகவத் கீதை - ப்ரதிபத அர்த்தம்

ஆசிரியர் - சோமசுந்தர தீக்ஷிதர்.

ப்ரதிபத அர்த்தம் வரிசையில் எங்கள் முதல் நூல்.பதப்பிரிப்பும் அர்த்தமும் தமிழில். மூல ஸ்லோகங்கள் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும். அர்த்தம்அன்வயப் படுத்தப்பட்டுள்ளது. அதாவது கோர்வைப் படுத்தப்பட்டுள்ளது. **60**

16. தர்ம சாஸ்திரம்

வைத்யநாத திக்ஷிதியத்தின் சுருக்கம் **50**

17. கோவிந்தபுரம் பஜன பத்ததி

ஸ்ரீகிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் பஜனை ஸம்ப்ரதாய -ப்ராசீன பத்ததியின் ஸ்வரூபம் அறிந்துகொள்ள உதவும் தொகுப்பு .ஸ்ரீஸ்வாமிகள் அருளிச் செய்த ப்ரவரம் கொண்டது. **40**

18. தக்ஷிண ஸம்ப்ரதாய கல்யாண மாலா

காமலாபுரம் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பாகவதர். ஸ்ரீராதா கல்யாணம் - ஸ்ரீ சீதா கல்யாணம் - ஸ்ரீ ஆண்டாள் கல்யாணம் - ஸ்ரீ பத்மாவதி கல்யாணம் ஆகிய நான்கு கல்யாணங்கள் அடங்கியது. **35**

19. ஸ்ரீ ராம மாதுரீ

ஸ்ரீவாமிநாத ஆத்ரேயன்.100ஸ்லோகங்கள் வ்யாக்யானத்துடன் உள்ளது. **25**

20. பக்த ரத்தினங்கள்

பல பாகவதர்களின் குறிப்புகள் **25**

21. ஸ்ரீ பாத ஸப்ததி

P.R. கண்ணன் - தேவி பாத மகிமை. நாராயணீயம் இயற்றிய நாராயண பட்டத்திரி இயற்றியது. தமிழ் அர்த்தத்துடன் **20**

22. ஸ்ரீ யாக்ஞவல்க்யர் திவ்ய சரித்திரம்

ஸ்ரீமத் பாகவதம் - வசனம் எழுதிய ஸ்ரீ ஆர். இஞ்சிக் கொல்லை சிவராம சாஸ்திரிகள் இயற்றியது. **20**

23. ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் கீர்த்தனைகள் - 100

100 கீர்த்தனைகள் அர்த்தத்துடன் கொடுக்கப்பட்டுள்ளது.

தொகுப்பு வலங்கைமான் வெங்கடராம பாகவதர் **25**

24. ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம்

ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் - ஸத்குரு த்யாகப்ரும்மத்தின் பாகவத ரூபம் முழுமையாகவெளிப்படுகிறது.ஒருவித்தியாசமான சரித்திரம். அவருடைய பாடல்களை வைத்தே எழுதப்பட்டது. **25**

25. பகவன் நாம ரஸயானம்

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட நாம சித்தாந்தம். ஸ்ரீ போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் எட்டு நாம சித்தாந்த க்ரந்தங்களில் ஒன்று. ஆங்கரை

ரங்கஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு மேற்படியார் குமாரர் விசுவநாத சாஸ்திரிகள் அவர்களால் 1942ல் வெளியிடப்பட்டதின் மறுபதிப்பு 20

26. பக்தை மீரா (ஸ்ரீ மீராபாய் திவ்ய சரித்திரம்)

ஸ்ரீகிருஷ்ணப்ரேமிஸ்வாமிகள்-இப்புத்தகத்தைப் படித்துவிட்டு யாரும் கண்ணீர் சிந்தாமல் இருக்க முடியாது. நெஞ்சை உருக்கும் சரித்திரம் 20

27. பக்த ஸாம்ராஜ்யம்

ஸ்ரீ ஸ்வாமிநாத ஆத்ரேயன். பாகவத தர்மத்தின் விஷயங்கள் என்றோ எப்பொழுதோ நடந்தவை அல்ல. இன்றைக்கும் அதனை அனுஷ்டிப்பவர் விஷயத்தில் பகவான் எப்படி அருள் புரிகிறான் என்பதை விளக்கும் பல்வேறு சரித்திரங்களின் தொகுப்பு 25

28. நாம ஸாம்ராஜ்யம்

ஸ்ரீஸ்வாமிநாத ஆத்ரேயன்-இது மேலேகண்ட தொகுப்பின் தொடர்ச்சி 25

29. பக்தி ஸந்தேஹத்வாந்த பாஸ்கரம்

ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமிகள் இயற்றியகிரந்தம், பாகவததர்மத்தில் ஏற்பட்டக்கூடிய சந்தேகங்களை விளக்கும் நூல் 15

30. ஸ்ரீ ப்ரும்மேந்திராள் கீர்த்தனைகள்

ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் - அர்த்தம் தமிழில் கொடுக்கப்பட்டுள்ளது. தொகுப்பு ஸ்ரீ பா. நாகராஜன் 10

34. ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் சரித்திரம்

வலங்கைமான் வெங்கடராம பாகவதர்-ப்ராசின பக்த விஜயத்தை தழுவியது. மிகுந்த பாவ விஷயங்கள் பேசப்பட்டுள்ள சரித்திரம் 15

35. திருமாலை

தொண்டரடிப் பொடி ஆழ்வார் அருளிச் செய்தது. தமிழ் வசனம் ஆழ்வை ரா. கீதாசார்யன் 15

36. நாமாயணம்

நாம விஷயங்களும் நாம மஹிமைகளும் அடங்கியது ஸம்ஸ்கிருத ஸ்லோகங்கள் - ஆழ்வார் பாசுரங்கள் - பஜனை பாடங்கள் -இவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது. தொகுப்பு - வலங்கைமான் வெங்கடராம பாகவதர் மற்றும் ஆழ்வை ரா. கீதாசார்யன். பரிசாகக் கொடுக்க உகந்தது. 7

37. ஸ்ரீ ஞானேஸ்வரரின் ஹரிபாட்

தொகுப்பு - அபங்கம் வி. ஆர். ராதாக்ருஷ்ணன் - பாவஅர்த்தங்கள் உள்ளது. முதல் பதிப்பிலிருந்து வெகுவாக விரிவாக்கப்பட்டுள்ளது. 6

38. ஸ்ரீ போதேந்திராள் கீர்த்தனைகள்

ப்ராசீன கீர்த்தனைகள் - மற்றும் அபூர்வ கீர்த்தனைகள் அடங்கியது 6

39. ஸ்ரீ போதேந்திராள் நாம வந்தனம்

ஸ்ரீ போதேந்திராள் அதிஷ்டானத்தில் பின்பற்றப்படும் நாம வந்தனம் 6

ஸ்ரீமத் பாகவதம்-தமிழ் வசனம்

பாகம்-2

பொருளடக்கம்

பக்கம்

ஸ்கந்தம்-3

20. ஸிருஷ்டி 1
21. கர்த்தமருக்கு ஸ்ரீமஹாவிஷ்ணு தரிசனம் கொடுத்தது 9
22. தேவஹூதியின் விவாகம் 18
23. கர்த்தமருடைய யோக மஹிமை 24
24. கபிலாவதாரம் 34
25. கபிலருககும் தேவஹூதிக்கும் ஸம்வாதம் 41
26. தேவஹூதிக்குக் கபிலர் ஆத்ம தத்துவத்தை 49
27. பிரகிருதி புருஷ விவேகம் 61
28. யோகத்தின் ஸ்வரூபம் 68
29. பக்தி யோகம் 77
30. பாபிகளின் கதி 84
31. (தொடர்ச்சி) 90
32. உத்தம கதி 101
33. தேவஹூதி ஜீவன் முக்தியடைந்தது 108

ஸ்கந்தம் 4

1. மனுபுத்திரிகளின் வம்சம் 114
2. தக்ஷருக்கும் பரமசிவனுக்கும் விரோதம் நேர்தல் 126
3. ஸதியைப் பரமசிவன் யாகத்திற்குப் 133
4. ஸதிதேவி சரீரத்தை விட்டது 138
5. தக்ஷ வதம் 146
6. ப்ரஹ்மதேவர் பரமசிவனைப் பிரார்த்தித்தது 150
7. தக்ஷன் பிழைத்தது 158
8. துருவ சரிதம் 171

பக்கம்

9. துருவ சரிதம் (தொடர்ச்சி) 185
10. துருவர் புண்ய ஜனர்களுடன் யுத்தம் செய்தது 197
11. மனு துருவருக்குத் தத்துவத்தை உபதேசித்தது 202
12. துருவர் துருவபதத்தை அடைந்தது 208
13. அங்கராஜன் காணாமற் போனது 216
14. வேனனை மஹரிஷிகள் சிஷித்தது 223
15. பிருதுவின் உற்பத்தி 229
16. ஸூதர்கள் பிருதுவை துதித்தது 233
17. பிருது பூமியைக் கொல்ல முயன்றது 237
18. பூமிதேவி ஸகல பொருள்களையும் உண்டு 243
19. பிருதுவின் அசுவமேதக் குதிரை காணமற் போனது 248
20. பகவான் பிருதுவை அனுக்கிரஹித்தது 254
21. பிருது ராஜ்ய பரிபாலனஞ் செய்தது 261
22. பிருதுவிற்கு ஸனத்குமாரர் ஞானத்தை 271
23. பிருது சக்கரவர்த்தி வைகுண்டம் சென்றது 282
24. ருத்ர கீதம் 288
25. புரஞ்சனோபாக்யானம் 300
26. (முன் அத்தியாயத் தொடர்ச்சி) 311
27. (முன் அத்தியாயத் தொடர்ச்சி) 316
28. புரஞ்சனன் ஸ்திரீயாக மாறினது 321
29. நாரதர் தத்துவத்தை உபதேசித்தது 329
30. பிரசேதஸ்ஸூகளின் சரிதம் 343
31. (முன் அத்தியாயத் தொடர்ச்சி) 351

ஸ்கந்தம் –5

1. ப்ரியவிரதருடைய சரிதம் 357
2. ஆக்னீதருடைய சரிகம் 367
3. நாபியின் சரிதம் 373
4. ரிஷப சரிதம் 377
5. மோக்ஷதர்ம நிரூபணம் 381
6. தேஹத்தை விடுவதின் முறை 389

அத்தியாயம்–20

ஸிருஷ்டி

1–6. இம்மாதிரியான சூதருடைய வார்த்தையைக் கேட்ட சௌனகர் அவரை நோக்கி, சுவாயம்புவ மனுவானவர் பூமியாகிய இருப்பிடத்தை அடைந்த பகவானிடத்தில் லயித்திருக்கும் ஜீவர்களை வெளிப் படுத்த எதனைச்செய்தார் (எந்த உபாயத்தைக் கொண்டு ப்ராணிகளை ஸிருஷ்டித்தார்) விதுரர் மஹா பாகவதர் (பகவத் பக்தர்களுக்குள் சிறந்தவர்) கிருஷ்ண பகவானுக்கு முக்கிய மித்திரர், வியாசருடைய புத்திரர். மஹிமையில் அவருக்குக் குறையாதவர். ஸ்ரீ கிருஷ்ணனையும், அவருடைய பக்தர்களையும் மூன்று கரணங்களாலும் (ஸரீரம், வாக்கு, மனம்) ஆசிரயித்தவர். மேலும், திருதராஷ்டிரர் ஸ்ரீ கிருஷ்ணன் உடைய இஷ்டப்படி நடக்காமலிருந்தபடியால் அவரைப் பகவானிடத்தில் அபராதஞ் செய்தவரென்று நினைத்து அவரை விட்டவர். தீர்த்த யாத்திரையைச் செய்ததால் பரிசுத்தர். அவர் குசாவர்த்தத்தில் (கங்கா துவாரத்தில்) உட்கார்ந்திருப்பவரும் தத்துவத்தை அறிந்தவர்களுக்குள் சிறந்தவருமான மைத்ரேயரிடம் சென்று எதனைக் கேட்டார்? அவர்களிருவர்களும் பேசிக்கொள்ளும்போது நடந்த விஷயமான கதைகள் கங்கையின் ஜலங்கள் போல் பாபத்தைப் போக்கும் சக்தியுள்ளவைகள். ரஸத்தை அறிந்த எவன்தான் பகவானது லீலாமிருதத்தைப் பானஞ் செய்தது போதுமென்று திருப்தியடைவான்? ஆதலால் கானம் செய்யக்கூடிய கம்பீர சரிதமுள்ள பகவான் லீலைகளைச் சொல்லும். உமக்கு க்ஷேமமுண்டாகும்

என்று கேட்டார்.

7–11. அதனைக் கேட்ட சூதர் பகவானைத் தியானம் செய்து நைமிசாரண்யத்தில் வஸிக்கும் மகர்ஷிகளை நோக்கி பகவான் வராஹாவதாரஞ் செய்து பாதாளத்திலிருந்து பூமியைக் கொண்டு வந்த கதையையும், ஹிரண்யாக்ஷ வதத்தையும் கேட்டு விதுரர் மிகுந்த சந்தோஷமடைந்து மைத்ரேயரை நொக்கி; ஓ ப்ராஹ்மண! அவ்யக்தத்தின் மார்க்கத்தை அறிந்தவராகிய ப்ரஹ்மதேவர் ப்ரஜைகளைச் ஸிருஷ்டிப்பதற்காக ப்ரஜாபதிகளும் ஸ்வாயம்புவ மனுவும் ப்ரஹ்மதேவருடைய கட்டளையினால் இந்த ஜகத்தை எப்படிப் படைத்தார்கள்? அவர்கள் தங்கள் பார்யையுடன் சேர்ந்து ஸிருஷ்டித்தார்களா அல்லது தாங்களே உண்டுபண்ணினார்களா? அல்லது எல்லாருமாகச் சேர்ந்து ஸிருஷ்டித்தார்களா? என்று கேட்டார்.

12–54. அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி, "ஊகிக்க முடியாத ஜீவர்களுடைய அதிர்ஷ்டத்தாலும் ப்ரகிருதிக்கு அதிஷ்டாதாவாகிய பரமபுருஷனாலும் காலத்தாலும், பகவானிடத்திலிருந்து கலங்கிய முக்குணங்களிலிருந்து மஹத் தத்துவம் உண்டாயிற்று. ரஜோகுண பிரதானமாகிய அந்த மஹத்தத்துவத்திலிருந்து மூன்று குணங்களுள்ள அஹங்காரம் உண்டாயிற்று, பூதங்களுக்கு, ஆதியாய் இருக்கும் அந்த அஹங்காரமானது ஆகாசம் முதலிய மஹா பூதங்களையும் தன்மாத்திரைகளையும், ஞானேந்திரியம், கர்மேந்திரியம், அதன் தேவதைகள் இவைகளையும் ஐந்து ஐந்தாக உண்டுபண்ணிற்று.

அவைகள் தனியாக அண்டத்தைச் ஸிருஷ்டிக்கச் சக்தியற்றவைகளாகிப் பகவானுடைய அனுப்ரவேசத்தால் ஒன்று கூடி ஸ்வர்ண மயமான அண்டத்தை உண்டுபண்ணின. அது அசேதனமாக ஆயிரம் வருஷங்களுக்கு அதிகம் ஜலத்திலேயே இருந்தது. ஈசுவரன் அதில் ப்ரவேசித்தார். அவருடைய தொப்புளில் ஒரு தாமரை மலர் தோன்றியது, அது ஆயிரம் சூரியர்களைப் போல் ப்ரகாசித்தது, ஸகல பிராணிகளுக்கும் ஸ்தானமாயிருப்பது; அதிலிருந்து ப்ரஹ்மதேவர் உண்டானார். அவர் ஜலத்தில் சயனம் செய்து கொண்டிருக்கும் பகவானால் தூண்டப்பட்டு (நாம)ரூபாதிகளுடன் உலகங்களை முன் கல்பத்திலிருந்தது போல் அமைத்தார். முதலில் தாமிஸ்ரம், அந்த தாமிஸ்ரம், தமஸ், மோஹம், மஹா தமஸ் என்று ஐந்து பர்வதங்களுள்ள அவித்யையைத் தம்முடைய நிழலைக்கொண்டு (அபுத்திபூர்வம்) படைத்தார்.)

பிறகு அவர் சந்தோஷமின்றி அந்தச் சரீரத்தை விட்டார். அதுவே தமோமயமான ராத்திரியாம். பசி தாகம் இவைகளுக்கு காரணமான ராத்திரியை, அதிலிருந்து, உண்டான யக்ஷர்களும் ராக்ஷதர்களும் பெற்றுக்கொண்டார்கள். மேலும் அவர்கள் பசியாலும் தாகத்தாலும் வருத்தப்பட்டு, இவரைக் காப்பாற்ற வேண்டாம், புசியுங்கள் என்று சொல்லிக் கொண்டு அவரைத் தின்று விடுவதற்காக ஓடிவந்தார்கள். அப்பொழுது ப்ரஹ்மதேவர் பயந்து அவர்களை நோக்கி, என்னைத் தின்று விடவேண்டாம், ரட்சியுங்கள்; என்னுடைய புத்திரர்களான நீங்கள் யக்ஷர்களென்றும் ராக்ஷதர்கள் என்றும் பெயரடைவீர்கள், என்றார். பின்பு காந்தியுள்ளவராக எவர்களைப்

ப்ரதானமாகப் ஸிருஷ்டித்தாரோ, அவர்கள் தேவர்கள் ஆனார்கள். அவர்கள் அவரால் விடப்பட்ட பிரபா சரீரமாகிய பகலைப் பெற்றுக் கொண்டார்கள். பிறகு அவர் ஸ்திரீகளிடத்தில் விசேஷ ஆசையுள்ளவர்களாக அசுரர்களை ஜகனத்திலிருந்து உண்டு பண்ணினார். அவர்கள் அவரைப் புணருவதற்காக ஓடிவந்தார்கள். அப்பொழுது வெட்கமில்லாமல் சிரித்துகொண்டு பின் ஓடிவரும் அஸுரர்களைப் பார்த்துப் ப்ரஹ்மதேவர் பயந்து ஓடினார். பக்தர்களுடைய உபத்திரவத்தைப் போக்கடிப்பவரும் பக்தர்களுடைய இஷ்டப்படி ஸ்வரூபத்தையெடுத்துக்கொள்ளுபவருமான பகவானிடம் சென்று, "பிரபுவாகிய பரமாத்மாவே துக்கப்பட்டவர் களுடைய துக்கத்தைப் போக்கடிப்பவர் நீர் ஒருவரே. உம்முடைய பாதாரவிந்தத்தை ஆசிரயிக்காதவர்களுக்கு நீர் கஷ்டத்தைக் கொடுக்கிறீர்.

உம்முடைய ஆஜ்ஞையின்படி ப்ரஜைகளைச் ஸிருஷ்டித்தேன். அவர்கள் என்னைப் புணருவதற்கு முயற்சித்தார்கள்; என்னைக் காப்பாற்றும், என்று பிரார்த்தித்தார்; பிறருடைய அபிப்பிராயத்தை அறிந்த வராகிய பகவான் ப்ரஹ்மதேவருடைய தைன்யத்தைத் தெரிந்துகொண்டு' "இந்தக் காமத்தால் கலங்கிய சரீரத்தை விட்டுவிடும்" என்று சொன்னார். அதனைக் கேட்ட ப்ரஹ்மதேவரும் அப்படியே செய்தார்; அதுவே சந்தியை எனப்படுகிறது. அந்த சந்தியையாகிய ஸ்திரீயானவள் சப்திக்கும் ஆபரணங்கள் அணிந்த பாதங்களுள்ளவள். மதத்தால் கலங்கிய கண்கள் உள்ளவள். ஒட்டியானத்தால் பிரகாசிக்கும் பட்டை உடுத்திக்கொண்டவள். ஒன்றோடொன்று சேர்ந்தவை களும், உயர்ந்தவையுமான ஸ்தனங்களுள்ளவள்.

அழகான மூக்குள்ளவள், நல்ல பற்களுள்ளவள். மனோகரமான சிரிப்புள்ள பார்வையுள்ளவள். கருமையான தலைமயிருள்ளவள். பின்னுமவள் வெட்கத்தால் தன்னுடைய சரீரத்தை மறைத்துக் கொண்டும் இருந்தாள் "ஓ தர்மத்தின் அவதாரமாகிய விதுரரே! அஸுரர்கள் அந்த ஸ்திரீயைப் பார்த்து மோகித்து இவளுடைய ரூபம் வியக்கத்தக்கது. இவளுடைய யௌவன வயது ஆச்சர்யப்படத்தக்கது. நாமெல்லாம் இவளிடத்தில் ஆசைப்பட்டிருந்தாலும் இவள் ஆசையில்லாதவள் போல சஞ்சரிக்கிறாள்" என்று ஸ்திரீ ரூபம் கொண்ட சந்தியைப்பற்றிப் பலவகை யாக சந்தேகித்து; பின்பு அவளை நோக்கி, "நீ யார்? யாருடைய பெண்? நீ இவ்விடம் எதற்காக வந்தாய்? உருவமாகிய உத்தம வஸ்துவை வைத்துக்கொண்டு (அதனை எங்களுக்குக் கொடுக்காததனால்) அதிருஷ்டமற்றவர்களான எங்களை உபத்திரவிக்கிறாய்.

ஓ பெண்ணே! நீ யாராயிருந்தாலும் சரி (உன்னுடைய ஜாதி முதலியவைகளைத் தெரிந்து கொள்வதால் என்ன பிரயோசனம்?) உன்னுடைய தரிசனம் பாக்கியத்தால் கிடைத்தது. பந்து விளையாடுவதால் பார்ப்பவர்களுடைய மனத்தை அபகரிக்கிறாய் ஓ சிறந்த பெண்ணே! உயரக் கிளம்பும் பந்தைக் கையால் அடிப்பவளாகிய உன்னுடைய தாமரை மலர் போன்ற பாதமானது ஒரே இடத்தில் ஸ்திரமாக நிற்கவில்லை. பெரிதாகிய ஸ்தனங்களின் சுமையைத் தாங்க முடியாமல் தலைமயிர்களின் கூட்டமானது நிர்மலமாக இருக்கிறது. (மினு மினுப்புள்ளதென்பது கருத்து) என்று மிகுந்த பிரியத் துடன் பிரச்னஞ் செய்து புத்தி மயக்கமடைந்து

சந்தியைப் பெற்றுக் கொண்டார்கள். அவள் தனது சரீரத்தை முகந்து சிரித்துக் கொண்டு மறைந்தாள். பின்பு ப்ரஹ்மதேவர் காந்தியால் கந்தர்வ கணங்களையும், அப்ஸரோ கணங்களையும் படைத்தார். அந்தக் காந்தி பொருந்திய சந்திரிகா ரூபமான சரீரத்தை விட்டார். அதனை விசுவாவசு முதலியவர்கள் பிரியமாகப் பெற்றுக்கொண்டார்கள். பிறகு அவர் தம்முடைய சோம்பலைக் கொண்டு பூதங்களையும், பிசாசங்களையும் ஸிருஷ்டித்தார். அவைகள் வஸ்திரம் இல்லாதவைகளும், தலைமயிரை அவிழ்த்துக்கொண்டு மிருப்பதைக் கண்டு கண்களை மூடிக்கொண்டார். அப்பொழுது ப்ரஹ்மதேவரால் விடப்பட்ட ஜ்ரம்பணமென்ற (கொட்டாவி விடுவது) சரீரத்தை அவைகள் பெற்றுக்கொண்டன. அதையே நித்திரை யென்கிறார்கள். கொட்டாவி விடுவது, நித்திரை, உன்மாத்த மென்றவைகள் சோம்பலால் உண்டாகக் கூடியவைகள். ஆதலால் அதன் அவாந்தர பேதங்கள் ஆகும்), அந்த நித்திரையால் இந்திரியங்களுடைய வலிமைக் குறைவு எல்லாப் பிராணிகளிடத்திலும் காணப்படுகிறது. அதனைக் கொண்டு ஆசாரம் இல்லாதவர்களைப் புத்தி மயக்கமுள்ளவர்களாகப் பூதங்கள் செய்கின்றன. அவைகள் உன்மாதங்கள் எனப்படுகின்றன, பின்பு பகவானாகிய ப்ரஹ்மதேவர் தம்மை அன்னத்தைப் புசிப்பவராக நினைத்துக் கொண்டு சாத்தியர்களையும் பிதிர்கணங்களையும், பரோக்ஷமாக ஸிருஷ்டித்தார். பிதுருக்கள் தங்களை உண்டுபண்ணிய அந்தச் சரீரத்தைப் பெற்றுக் கொண்டார்கள். சாத்தியர்களுக்கும், பிதிருக்களுக்கும் வித்வான்களால் கொடுக்கப்படும் ஹவ்யங்களும், கவ்யங்களும் அந்தச் சரீரமேயாம். பிறகு அந்தப்

ப்ரஹ்மதேவர் சித்தர்களையும் வித்தியாதரர்களையும் பரோக்ஷமாக ஸிருஷ்டித்தார். அந்த அற்புதமாகிய அந்தர்த்தான (மறைந்திருப்பது) சக்தியை அவர்களுக்குக் கொடுத்தார். பின்பு தம்முடைய பிரதி பிம்பத்தைப் பார்த்துச் சிலாகித்துக்கொண்டு கின்னரர், கிம்புருஷர்களையும் ஸிருஷ்டித்தார். அவர்கள் அந்தச் சரீரத்தைப் பெற்றார்கள். அவர்கள் ஆணும் பெண்ணும் சேர்ந்து கிரீடித்துக்கொண்டு அவரையே கானஞ் செய்து கொண்டிருந்தார்கள். பின்பு அந்தப் ப்ரஹ்ம தேவர் ஸிருஷ்டி விருத்தியடையாமலிருப்பதைப் பார்த்து, போகமுள்ள (நீண்ட) தேகத்துடன் படுத்துக் கொண்டே பலவகையான சிந்தையுடன் அந்தச் சரீரத்தை விட்டார். அந்தத் தேகத்திலிருந்து உதிர்ந்த கேசங்கள் (மயிர்கள்) அஹிகளாயின (சர்ப்பங்கள்), கை, கால்கள் முதலியவைகளை அசைக்கும் அந்தத் தேகத்திலிருந்து சர்ப்பங்கள் உண்டாயின. அவைகளே குரூரங்களான நாகங்களெனப்படுகின்றன (மிகுந்த வேகமுள்ளவை). நீண்ட தேகத்திலிருந்து உண்டான தால் அவை நீண்ட சரீரமுள்ளவைகளும், நீண்ட கழுத்துள்ளவைகளாயு மிருந்தன பின்பு அவர் தம்மைக் கிருத கிருத்தியராக நினைத்து உலகங்களை விருத்தி செய்பவர்களான மனுக்களை மனத்தால் ஸிருஷ்டித் தார். அவர்களுக்குப் புருஷாகாரமாகிய சரீரத்தைக் கொடுத்தார்.அந்த மனுக்களைப் பார்த்து அவர்களுக்கு முன் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் ப்ரஹ்மதேவரை நோக்கி, (உலகத்தைப் படைத்தவரான) நீர் நல்ல காரியத்தைச் செய்தீர். மனுக்களின் ஸிருஷ்டியில் அக்கினி ஹோத்திரம் முதலிய கிரியைகள் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதால் நாங்கள் எல்லாரும் சேர்ந்து ஹவிஸ்ஸைப் புஜிக்கிறோம்" என்று

கொண்டாடினார்கள். பின்பு இந்திரியங்களை ஜயித்தவராகிய அந்தப் ப்ரஹ்மதேவர் தபஸ், உபாஸனை, யோகம்,சமாதி ஆகிய இவைகள் உள்ளவராய்த் தமக்கு இஷ்டர்களான ரிஷிகளான ப்ரஜைகளைச் ஸிருஷ்டித்து அவர்களுக்கு சமாதி யோகம், ஐசுவர்யம், தபஸ், வித்யை, வைராக்கியம் ஆகிய இவைகளுள்ள தம்முடைய தேஹத்தின் அம்சத்தைக் கொடுத்தார்.

அத்தியாயம்–21

கர்த்தமருக்கு ஸ்ரீ மஹாவிஷ்ணு தரிசனம் கொடுத்தது

1–5 "ஓ பகவானாகிய மைத்ரேயரே! ஸ்வாயாம்புவ மனுவின் வம்சமானது பெரியோர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டது. அதனிடமிருந்தே (ஸ்திரீ புருஷர் களுடைய சேர்க்கையாலே) ஜனங்கள் விருத்தி அடைந்தார்கள். அந்த வம்சத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும். மேலும் ஸ்வாயம்புவ மனுவின் புத்திரர்களாகிய பிரிய விரதர், உத்தானபாதர் ஆகிய இருவர்களும் ஏழு தீவுகள் அடங்கிய பூமியையும், தர்மத்தையும் எப்படிக் காப்பாற்றினார்கள்? பின்னும் அந்த மனுவிற்கு தேவஹூதி என்ற ஒரு பெண் உண்டென்றும் அவள் கர்த்தமர் என்ற பிரஜாபதியின் பாரியை என்றும் தங்களால் சொல்லப்பட்டதல்லவா? மகா யோகியாகிய அந்தக் கர்த்தமப் பிரஜாபதி ஆனவர் யோகலட்சணங்கள் பொருந்திய தேவஹூ தியினிடம் எவ்வளவு குழந்தைகளை உண்டு பண்ணினார்? ஓ ப்ராஹ்மணோத்தம! மேலும் ப்ரஹ்ம தேவருடைய புத்திரராகிய தக்ஷரும், ருசி என்பவரும், மனுவின் புத்திரியாகிய ப்ரஸூதி என்பவளையும். ஆஹூதி என்பவளையும் விவாகஞ்செய்து கொண்டு பிரஜைகளை எப்படி உண்டு பண்ணினார்கள்? அதை எனக்குச் சொல்லவேண்டும்" என்று விதுரர் கேட்டார்.

6–16 அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி, "ஓ விதுரரே! பகவானாகிய கர்த்தம பிரஜாபதியை நோக்கி, "ப்ரஜைகளைச் ஸிருஷ்டியும்"

என்று ப்ரஹ்மதேவர் ஆக்ஞாபித்தவுடன் கர்த்தமர் (ஸிருஷ்டி சக்தியை அடைவதற்காக) சரஸ்வதி நதிக்கரையில் பதினாயிரம் வருஷங்கள் தவம் செய்து, மனத்தை ஒருவகைப்படுத்தி, பக்தியுடன் ஸ்ரீமந் நாராயணனைப் பூஜித்தார். அவர் சரணாகதி செய்தவர்களுக்கு இஷ்டமானவரத்தைக் கொடுப்பவர். அப்பொழுது தாமரைக் கண்ணனாகிய பகவான் அதிக சந்தோஷமடைந்து வேதத்தாலேயே அறியக் கூடிய ப்ரஹ்ம ஸ்வரூபமாகிய தமது ஸ்வரூபத்தைக் காண்பித்தார். அவர் சுத்தர், சூரியன் போல் பிரகாசிப்பவர். தாமரைப் புஷ்பம் நீலோத்பல புஷ்பம் இவைகளால் செய்யப்பட்ட மாலையைத் தரித்தவர்; பளபளப்புள்ளவைகளும் கருமை நிறம் உள்ளவைகளுமான தலைமயிர்களால் அலங்கரிக்கப் பட்டு சுத்தமாகிய வஸ்திரமுள்ளவர். கிரீடமுள்ளவர். குண்டலங்கள் அணிந்தவர். விளையாட்டிற்காக புஷ்பத்தைத் தரித்தவர். மனத்திற்கு ஆனந்தத்தை கொடுக்கக்கூடிய சிரிப்பு, பார்வை ஆகிய இவைகள் உள்ளவர். கருடனுடைய முதுகில் தாமரை மலர் போன்ற பாதங்களை வைத்துக்கொண்டிருப்பவர். கௌஸ்துப ஹாரத்தைத் தரித்தவர். அவருடைய மார்பில் லக்ஷ்மீதேவி வஸிக்கிறாள். ஆகாயத்தில் தோன்றிய அப்படிப்பட்ட பகவானுடைய அந்தத் திவ்யசரீரத்தை தரிசித்த கர்த்தமர் மிகுந்த சந்தோஷமடைந்து மனோரதமுள்ளவராகி பிரியமுள்ள மனத்துடன் (ப்ரீதியையே ஸ்வபாவமாயுடைய மனதுள்ளளவரென்று கருத்து) கைகூப்பி நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்யக்கூடிய ஓ ஸ்வாமியே ஸகல ஜகத்திற்கும் இருப்பிடமாகிய உம்மைத் தரிசித்ததால் என்னுடைய கண்கள் பலனுள்ளவைகளாயின.

உத்தம ஜன்மங்களால் யோகசித்தி அடைந்த யோகிகளும் உம்முடைய தரிசனத்தையே விரும்புகிறார்கள். உம்முடைய பாதாரவிந்தமானது ஸம்சார்ரமாகிய ஸமுத்திரத்தைக் கடக்க ஓடமாக இருக்கிறது. உம்முடைய மாயையால் ஜனங்கள் மயக்கமடைந்து ஸம்சாரத்திலுள்ள சொல்ப காமங்களை விரும்பி அவைகளுக்காக உம்முடைய பாதத்தை உபாஸிக்கிறார்கள். அவைகளையும் கொடுக்கிறீர். (பலனை விரும்பிய மேலானவர்கள் அல்லவென்று தாத்பரியம்.) அப்படியும் காமதேனு போல கிருஹஸ்தாசிரமத்தில் தர்மம், அதர்மம் இவைகளை உண்டுபண்ணக்கூடியவளும் என்னுடை ஸ்வபாவமுள்ளவளுமாகி ஸ்திரீயைக் கல்யாணம் செய்து ஸகல புருஷார்த்தங்களுக்கும் பலமாயும் கற்பக விருஷம் போல் அண்டினவர்களுடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்பவருமான உம்முடைய பாதத்தைச் சரணமடைகிறேன். அது ஸகல புருஷார்தத்திற்கும் காரணம். (பலனை விரும்பும் பக்தர்களை நான் நிந்திப்பவனானாலும் அப்போர்ப்பட்டவனே) ஆகையால் நான் தர்ப்புத்தியுள்ளவன். ஓ! எல்லாவற்றிற்கும் அதிபதியே! நீர் ஸகல பிரஜைகளுக்கு அதிபதி. கயிற்றினால் பசுக்கள் கட்டப்படுவது போல் உம்முடைய ஆக்ஞையால் பலனை விரும்பிய உலகம் முழுவதும் கட்டப்பட்டிருக்கிறது. ஓ தர்ம ஸ்வரூபியே நானும் உலகத்தை அனுசரித்துக் காலஸ்வரூபியாகிய உமக்கு பூஜையைச் செய்கிறேன். (உம்முடைய இஷ்டப்படி நடக்கிறேன். கல்யாணத்தையும் செய்து கொள்ளுகிறேன்)

17–18 எவர்கள் உலகத்தையும், அதை அனுசரிப்

பவர்களையும் விவேகமிருந்தும் கர்மஜடர்களாகப் பசுப்போல் இருப்பவர்களையும் விட்டு உம்முடைய பாதமாகிய குடையை ஆச்ரயித்திருக்கிறார்களோ பின்னும் மத்யம போன்றதும் (சம்சார துக்கத்தை மறக்கச் செய்வதால்) அமிர்தம் போன்றதுமான (கிழத்தனம், மரணம் ஆகிய இவைகளைப் போக்குவதால் உம்முடைய குணங்களை வருணித்து அதனால் பசி, தாகம் முதலிய தேக தர்மத்தை நிவர்த்தித்துக் கொள்ளுகிறார் அவர்களுடைய ஆயுளைக் காலச் சக்கரமானது எடுத்துக்கொண்டு ஓடுகிறதில்லை (குறைக்கிறதில்லை). அது ஜகத்தை இழுத்துக் கொண்டு ஓடுகிற ஸ்வபாவமுள்ளது. அது அக்ஷர ரூபமாகிய பரப்ரஹ்மத்தினிடம் சுற்றுகின்றது. அந்தச் சக்கரத்திற்குப் பதிமூன்று மாதங்களே ஆரங்களாக விருக்கின்றன. முந்நூற்று அறுபது (360) தினங்களே பர்வங்கள் (கணுக்கள்) ருதுக்களே நேமிகள் க்ஷணம், லவம், திருடி முதலியவைகளே இலை போன்ற முனைகள். மூன்று சாதுர்மாஸ்யங்களே நாபிகள். மேலும் அது கடுமையான வேகத்துடன் ஜகத்தை இழுத்துக் கொண்டு ஓடுகிறது.

19–21 "ஓ பகவன்' பட்டுப்பூச்சி பட்டை உண்டு பண்ணுவதும், அதைச் சுற்றிக் கொள்வதும்போல நீர் ஒருவரே உலகத்தைப் படைக்க விரும்பி, தம்மிடத்தில் இருக்கும் யோகமாயையைக் கொண்டு சத்வம் முதலிய சக்திகளை அவலம்பித்து இந்த ஜகத்தைச் ஸிருஷ்டிக்கிறீர். காப்பாற்றுகிறீர். சம்ஹரிக்கிறீர். ஓ ஈச! உம்மை உபாசிப்பவர்களான எங்களுக்கு மாயையால் விஷய சுகத்தைக் கொடுப்பது உமக்குச் சம்மதமன்று. ஆனாலும் அனுக்கிரகத்திற்காகவே

அது உபயோகப்படட்டும். பிரகாசிக்கும் துளசியால் அலங்கரிக்கப்பட்ட உம்மைத் தரிசித்தேன். (இப்படிப் பட்ட உம்மைத் தரிசிப்பது க்ஷேமத்தை கொடுக்கக் கூடியது) அப்படிப்பட்ட உம்மை அடிக்கடி நமஸ்கரிக்கிறேன். நீர் ஞானத்தால் கர்ம பலனைக் கடந்தவர். மோக்ஷத்தைக் கொடுப்பவரென்று கருத்து). தம்முடைய மாயையைக் கொண்டு லோகதந்திரத்தை நடத்துகிறவர் பலனை விரும்பியவர்களாலும் பலனை விரும்பாதவர்களாலும் நமஸ்கரிக்கக் கூடிய பாதார விந்தமுள்ளவர். அற்ப இஷ்டத்தைக் கொடுப்பவர் என்று தோத்திரஞ் செய்தார்

22–35 இம்மாதிரி கர்த்தம ப்ரஜாபதியினால் கபடமின்றி ஸ்துதிக்கப்பட்ட ஸ்ரீமந் நாராயணன் கருணையுடைய முதுகிலிருந்துபடி ப்ரியம், சிரிப்பு ஆகிய இவைகளுள்ள பார்வையால் அசையும் புருவங்களுள்ள வராகி கர்த்தமரை நோக்கி பின் வருமாறு சொல்லலானார். ஓ கர்த்தம! எதற்காக நீர் என்னை தம்முடைய ஹிருதயத்தில் இந்திரியங்களை அடக்கி பூஜித்தீரோ, அந்த உம்முடைய அபிப்ராயத்தை அறிந்து முன்னமேயே அதற்கு வேண்டியதை ஸித்தஞ் செய்திருக்கிறேன்.

ஓ ப்ராஹ்மண! எவ்வளவு வருஷ காலம் அவளிடத்தில் உமக்கு ஆசை இருக்கிறதோ அவ்வளவு காலம் வரையில் அந்த ராஜ குமாரி உம்மை அடைவாள். மேலும் அவள் உம்முடைய வீரியத்தைத் தரித்து ஒன்பது வகையாகப் பிரசவிப்பாள். உம்முடைய வீரியத்திற்குண்டான பெண்களிடத்தில் மஹரிஷிகள் புத்திரர்களை உண்டு பண்ணுவார்கள்.

சுத்த சத்தராகிய நீர் என்னுடைய உத்தரவின்படி நடந்து. ஸகல கர்மங்களின் பலனை என்னிடம் சமர்ப்பித்து, கிருஹஸ்தாச்ரமத்தில் பிராணிகளிடத்தில் தயையுள்ளவராக இருந்து அபயத்தை கொடுத்து (ஸன்யாசத்தில்) என்னை அடைவீர்.

மேலும் ஸகல ஜகத்துடன் என்னிடத்தில் உம்முடைய ஸ்வரூபத்தையும் உம்மிடத்தில் என்னையும் பார்ப்பீர். நானும் உம்முடைய பத்தினியாகிய தேவஹூதியினிடத்தில் என்னுடைய அம்சமாக அவதரித்து தத்துவ ஸம்ஹிதையைச் செய்வேன், என்று சொல்லிப் பகவான் அவர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே ஸரஸ்வதி நதியால் சூழப்பட்ட பிந்து ஸரஸ்ஸிலிருந்து சென்றார். அப்பொழுது அவர் செல்லும் வழியில் ஸகல சித்தர்களும் அவரை ஸ்தோத்திரம் செய்தார்கள். கருடனுடைய பக்ஷங்களால் சாம வேதத்தின் மந்திரங்கள் உச்சரிக்கப்பட்டன. (பிருகத் தந்த்ரங்கள் இயற்கைகள் என்று ஸ்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது) அவைகளைக் கேட்டுக் கொண்டே பகவான் சென்றபிறகு கர்த்தமபிராஜா பதியானவர் அந்த பிந்து ஸரஸ்ஸின் கரையில் அந்தக் காலத்தை எதிர்பார்த்திருந்தார்.

36–44 ஓ விதுரரே! மனுவென்பவர் சுவர்ணாலங்காரமுள்ள ரதத்தின் மீதேறிப் பத்தினியுடனும் புத்திரியுடனும் பூமி முழுவதும் சுற்றி ஸ்ரீமந் நாராயணனால் குறிப்பிடப்பட்ட தினத்தில் அந்த ஸ்தலம் சென்றார். ஸ்ரீமஹா விஷ்ணு தம்முடைய பக்தராகிய கர்த்தமரிடத்தில் அதிகச் சந்தோஷத்தால் கண்ணீரைப் பெருக்க அதன் பிந்து (துளி) அவ்விடத்தில் விழுந்துபடியால்

'பிந்து ஸரஸ்' என்று அந்த ஸ்தலத்திற்கு பெயருண்டாயிற்று. அது ஸரஸ்வதி நதியின் சமீபத்திலுள்ளது அந்த ஸரஸ் புண்ணியத்தைக் கொடுக்கக்கூடியது. அதன் ஜலமானது அமிருதம்போல் ருசியுள்ளது. எவ்வளவு தடவை ஸ்நானம் செய்தாலும் அதனால் ரோக முண்டாகிறதில்லை. மகரிஷிகள் கூட்டம் கூட்டமாக அதனைச் சேவிக்கிறார்கள். அதன் கரையில் புண்ய விருஷங்களும், புண்ணியத்தைக் கொடுக்கும் கொடிகளும் கூட்டமாக இருக்கின்றன.

மேலும் அவ்விடத்தில் நல்ல மிருகங்களும், பறவைகளும் இனிமையாக சப்திக்கின்றன. எல்லா ருதுக்களிலும் புஷ்பங்கள் பழங்கள் ஆகிய இவைகளால் நிறைந்த மரங்களால் அலங்கரிக்கப் பெற்றது அடர்ந்த காடுகளிருப்பதால் அழகுள்ளதாக இருக்கிறது. மதித்த பறவைகள் கூவுகின்றன. மதித்த வண்டுகள் விளையாடுகின்றன. மயில்கள் மதங்கொண்டு ஆடுகின்றன. குயில்கள் மதத்துடன் ஒன்றுக் கொன்று கூப்பிடுகின்றன. கடம்பம், வஞ்சி, அசோகம், புன்னை மகிழம் வேங்கு குந்தம் (குருந்து மந்தாரம், வெட்பாலை, மா ஆகிய மரங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. மேலும் நீர்காக்கைகள், நீர்கோழிகளின், உட்பிரிவுகள், ஹம்ஸங்கள், சாரசங்கள், சக்கரவாகங்கள், சகோரங்கள் ஆகிய பட்சிகள் இனிமையாகச் சப்திக்கின்றன, இன்னும் மான்கள், காட்டுப் பன்றிகள், முள்ளம் பன்றிகள், பசு போன்ற கவயமென்ற மிருகங்கள், யானைகள், கோவாங் கூவங்கள் (வால்நீண்ட குரங்குகள்) குரங்குகள், சிம்ஹங்கள் கீரிகள், கஸ்தூரி மிருகங்கள் ஆகிய இவைகள் அவ்விடத்தில் இருக்கின்றன.

45–56 அரசர்களுக்கு முந்தியவரான அந்த மனுவானவர் தம்முடையபரிவாரங்களுடன் அந்தப் பிந்துசரஸை அடைந்து அவ்விடத்தில் அக்கினி காரியத்தை முடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் கர்த்தமரைக் கண்டார். அவர் கடுந்தபஸ்செய்த வராகையால் மிகுந்த தேஜஸால் பிரகாசித்திருந்தார். மேலும் அவர் தவம் செய்ததால் இளைத்த சரீரமுள்ள வரானாலும், பகவானுடைய கடைக்கண் பார்வையை அடைந்தபடியாலும், அவருடைய வார்த்தையாகிய அமிருதத்தைக் கேட்டபடியாலும், அதிகமாக இளைக் காத சரீரமுள்ளவராக இருந்தார். மேலும் அவர் மரவுரியைத் தரித்தவர். சாணை பிடிக்கப் படாத உயர்ந்தவர். ரத்தினம் போல் இருப்பவர். அப்போர்ப்பட்ட கர்த்தமரைக் கண்டு அரசன் அவருடைய சமீபம் சென்றார். அப்போது கர்த்தமர் தம்முடைய சமீபம் வந்து நமஸ்காரம் செய்யும் அரசனுக்குத் தக்கப்படி மரியாதை செய்தார். ஆசனங் கொடுத்து உட்காரச் சொன்னார். புகழ்ந்து பேசினார்.

பின்பு அந்தப் பிரஜாபதியானவர் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் கட்டளையை நினைத்துக்கொண்டு அரசனை நோக்கி, "ஓ மகாராஜா ! நீர் மகாவிஷ்ணுவின் அம்சம். அவருடைய சக்தியால்தான் உலகத்தைக் காப்பாற்றுகிறீர். மேலும், அந்த அந்தச் சமயத்திற்குத் தக்கபடி சூரியன், சந்திரன், அக்கினி, இந்திரன், வாயு, யமன், தர்மன், வருணன் ஆகிய இவர்களுடைய ஸ்வரூபத்தைத் தரிக்கிறீர். மேலும், சாதுக்களைக் காப்பாற்றுவதற்கும், அசத்துக்களைக் கொல்வதற்கும் சஞ்சரிக்கிறீர். அப்போர்ப்பட்ட ஸ்ரீ மகாவிஷ்ணு ஸ்வரூபியான உமக்கு நமஸ்காரம்.

ஜயிக்கும் ஸ்வபாவமுள்ளதும், மணிகளால் அலங்கரிக்கப்பட்டதுமான இரதத்தின் மீதேறிப் பயங்கரமானவில்லையெடுத்து நாணோசை செய்து அதனால் மனிதர்களைப் பயப்படச் செய்துகொண்டும் தம்முடைய சைனியங்களுடன் சூரியன்போல் நீர் சஞ்சரிக்காமலிருந்தால் ஸ்ரீமந் நாராயணனால் ஏற்படுத்தப் பட்ட வர்ணம் ஆச்ரமம் ஆகிய இவைகளுடைய மரியாதைகள் அசத்துக்களால் கெடுக்கப்படும் விஷயத்தில் ஆசைகொண்ட மனிதர்கள் பயமற்றவர் களாக அதர்மத்தை விருத்தி செய்வார்கள். நீர் உலகத்தை கவனியாமலிருந்தால் அசத்துக்களால் ஆக்கிரமிக்கப்பட்டு உலகம் கெட்டுப் போய்விடும், ஓ சூரராகிய மகாராஜா! என்னுடைய ஆசிரமம் தேடி வந்த காரியமென்ன ? அதனைத் தெரிவித்தால் அதிகச் சந்தோஷத்துடன் அங்கீகரிப்பேன் என்றார்.

தேவஹூதியின் விவாகம்

2–14. இப்படிச் சொல்லி மௌனமாக இருப்பவரும், நிவிர்த்தி மார்க்கத்தில் ஆசை உள்ளவருமான கர்த்தமரை நோக்கி அவ்வரசன் தன்னுடைய குணங்கள், சரிதங்கள் ஆகிய இவைகளுடைய மேன்மையைக் கேட்டு வெட்கத்துடன், "ஓ ப்ராஹ்மண! ப்ரஹ்மதேவர் தம்முடைய ஸ்வரூபமாகிய வேதங்களைக் காப்பாற்று வதற்காக (உலகத்தில் பரவச் செய்வதால்) தம்முடைய முகத்திலிருந்து உங்களை உண்டுபண்ணினார். நீங்கள் வேதங்களை நன்றாய் அறிந்தவர்கள். தபஸ்விகள். வித்தையுள்ளவர்கள். யோகாப்பியாசம் செய்தவர்கள். விஷயத்தில் ஆசை இல்லாதவர்கள். அநேகப் பாதங்கள் உள்ள அந்தப் பகவான் தம்முடைய அநேக கைகளிலிருந்து உங்களைக் காப்பாற்றுவதற்காக எங்களைப் படைத்தார். அவருக்குப் ப்ராஹ்மண ஜாதியே ஹிருதயம். க்ஷத்திரிய ஜாதியே சரீரம். ஆகையால் ப்ராஹ்மண ஜாதியும், க்ஷத்திரிய ஜாதியும் ஒன்றையொன்று காப்பாற்றுகின்றன. காரண ரூபியும், காரிய ரூபியும், விவகாரமற்றவருமான அந்தத் தேவனே எல்லாவற்றையு ம் காப்பாற்றுகிறார்.(உமக்கும் எனக்கும் ஏற்கனவே சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.) உம்மைத் தர்சித்ததாலேயே ஸகல ஸம்சயங்களும் நிவர்த்தியாயின.

ஜனங்களைக்காப்பாற்ற விரும்பிய எனக்குப் பகவானாகிய நீர் பிரியத்துடன் தர்மத்தை உபதேசித் தீர். புண்ணியம் செய்யாதவர்களுக்கு உம்முடைய

தரிசனம் கிடைக்காது. அப்போர்ப்பட்ட உம்மை நான் பார்த்து மங்களகரமாகிய உம்முடைய பாததூளியை நான் சிரஸில் வஹித்தது. உம்மால அனுக்ரஹிக்கப் பட்டது, உம்முடைய வார்த்தைகளைக் காதுகளால் கேட்டது ஆகிய இவைகள் தெய்வச் செயலால் கிடைத்ததேயொழிய வேறில்லை. ஆகையால் ஓ மகர்ஷியே! பெண்ணிடத்தில் மிகுந்த பிரியத்தால் சிரமப்படும் தீனனாகிய என்னிடத்தில் கிருபைசெய்து நான் தெரிவித்துக் கொள்வதைக் கேட்க வேண்டும்.

அதாவது ப்ரியவ்ருதன், உத்தானபாதன் இவர்களுடைய சகோதரியும் எனது குமாரியுமாகிய இந்தப் பெண் யௌவன வயது, நல்ல சுபாவம்; நற்குணங்கள் ஆகிய இவைகள் உள்ள பர்த்தாவை அடைய விரும்புகிறாள். மேலும் இவள் உம்முடைய ஸ்வபாவம், வித்தை, வயது, குணம் ஆகிய இவைகளை நாரத மகரிஷியினிடமாகத் தெரிந்துகொண்டு அதுமுதல் உம்மையே விவாகம் செய்துகொள்ளுகிறது என்று நிச்சயஞ் செய்து கொண்டாள். ஓ! ப்ராஹ்மண சிரேஷ்டரே, சிரத்தையுடன் என்னால் சமர்ப்பிக்கப் படும் எனது பெண்ணைப் பெற்றுக்கொள்ளும்! இவள் கிரஹஸ்தாச்ரம காரியங்களில் பலவகையிலும் உமக்கு ஒத்தவள். விஷயங்களில் ஆசையை ஒழித்தவன் ஆனாலும், தானாக வந்த விஷயத்தை மறுக்கக்கூடாது. அப்படியிருக்க விஷயத்தை விரும்பியவன் அதை மறுக்கலாமா? எவன் ஸ்வயமாகக் கிடைத்ததை லட்சியஞ்செய்யாமல் பிறகு கிருபணனை யாசிக்கிறானோ அவன் மிகுந்த கீர்த்தியுள்ளவனானாலும் அவனுடைய கீர்த்தியானது குறைந்துவிடும். பிறரை அவமதித்ததால் அவனுடைய மானமும் போய்விடும். ஓ வித்வானாகிய

ப்ராஹ்மண! நீர் விவாகம் செய்துகொள்வதற்காக முயற்சித்திருக்கிறீர் என்று கேள்விப்பட்டேன். விவாஹம் வரையில் ப்ரஹ்மச்சர்யத்தை அனுஷ்டிக் கிறதென்ற நீர் என்னால் கொடுக்கப்படும் கன்யா ரத்தினத்தைப் பெற்றுக்கொள்ளும்' என்று சொன்னார்.

15–23. அதனைக்கேட்ட கர்த்தமப் பிரஜாபதி அரசனை நோக்கி, 'நீர் சொல்வது சரியே நான் விவாஹம் செய்து கொள்ளவேண்டுமென்ற விருப்பம் உள்ளவனாக இருக்கிறேன். உம்முடைய குமாரத் தியையும் வேறொருவருக்கு கொடுப்பதாக நீரும் ப்ரதிக்ஞை செய்யவில்லை. இந்த முதன்மையான விவாஹமானது எங்களிருவருக்கும் தகுதியானதேயாம். ஓ மகாராஜா! விவாஹ விஷயத்தில் உம்முடைய குமாரிக்கு ஏற்பட்டிருக்கும் இஷ்டமானது பூர்த்தி யடையட்டும். தன்னுடைய தேஹகாந்தியாலேயே ஆபரணங்களால் ஏற்படும் சோபையைப் பரிஹஸிக்கும் உம்முடைய பெண்ணை யார்தான் விரும்ப மாட்டான்? இந்தப் பெண் மாடிமீது, காலிலிருக்கும் பாதஸரங்கள் சப்திக்கும்படி பந்து விளையாடும் போது, விச்வாவசு என்ற கந்தர்வன் பார்த்துப் புத்தி மயங்கி விமானத்திலிருந்து கீழே விழுந்தான். லக்ஷ்மீதேவியின் சரணங்களைச் சேவியாதவர்களால் பார்க்க முடியாதவளும், ஸ்திரீகளுக்குள் சிறந்தவளும், சுயமாகப் ப்ரார்த்திக்கிறவளும், உத்தானபாதருடைய சகோதரியும், மனுவின் புத்திரியுமாகிய இந்தப் பெண்ணை வித்வானாகிய எவன்தான் அங்கீகரிக்க மாட்டான்? ஆகையால் இந்தப் பெண்ணை விவாகஞ் செய்துக்கொள்ளுகிறேன். என்னுடைய வீரியத்தை தந்து அவள் கர்ப்பத்தை அடைகிறவரையில்

கிருஹஸ்த தர்மத்தை அனுஷ்டிப்பேன். பிறகு மஹாவிஷ்ணுவினால் உபதேசிக்கப்பட்டதும், இம்சை அற்றதும், ஞானத்தையே முக்யமாயுடையதுமான தர்மத்தை ஆசிரயிப்பேன் (சன்யாசஞ் செய்து கொள்வேன்). பலவகையான இந்த ஜகத்தானது எவரிடமிருந்து உண்டானதோ, எவரால் காப்பாற்றப் படுகின்றதோ, எவரால் சம்ஹரிக்கப்படுகிறதோ, ப்ரஜாபதிகளுக்கும் அதிபதியாகிய அந்த அனந்தனாகிய பகவான் எனக்கு இப்படிச் செய்யவேண்டுமென்று உபதேசித்திருக்கிறார் என்று சொல்லி அந்த மகரிஷியானவர் மனத்தில் ஸ்ரீ வாசுதேவரை தியானஞ் செய்துகொண்டு மௌனமாக இருந்தார. அவருடைய முகத்தை பார்த்த, தேவஹூதி அவரிடம் ஆசைக் கொண்டாள். பின்பு மனுவானவர் தம்முடைய பத்தினியாகிய சதரூபை, புத்திரியாகிய தேவஹூதி இருவர்களுடைய அபிப்பிராயத்தை நன்றாய் அறிந்த நற்குணங்கள் பொருந்திய அந்தப் ப்ராஹ்மணனுக்குத் தகுந்தவளான கன்னிகையை தானம் செய்தார். மகாராஜனுடைய பாரியையாகிய சதரூபை யென்பவள் ஆபரணங்கள், வஸ்திரங்கள், விளையாட்டுச் சாமான்கள் ஆகிய விலை உயர்ந்தவைகளைக் கன்னிகாதானமாகத் தம்பதிகளுக்குக் கொடுத்தாள்.

24–39. இப்படி அரசன் தன்னுடைய குமர்ரியைத் தகுந்த வரனுக்குக் கொடுத்து கவலையற்றவராகப் பெண்ணை விட்டுப் பிரிய மனமில்லாதவராகி, ஸ்நேகத்தால் மனம் கலங்கி, "அம்மா! குழந்தாய்" என்று சொல்லி கண்ணீரை பெருக்கி, அதனால் அவளுடைய தலைமயிரை நனைத்தார். பின்பு மகர்ஷியினிடம் விடைபெற்றுப் பத்தினியுடன்

இரதத்தின் மீதேறி சைன்யங்களுடன் தமது நகரஞ் சென்றார். வழியில் சரஸ்வதி நதியின் இருகரைகளிலும் மிகவும் சாந்தர்களான மகர்ஷிகளுடைய ஆசிரமங்களைத் தரிசித்தார். இப்படித்தமது பட்டணத்திற்கு வந்த அரசனைப் ப்ரஹ்மா வர்த்தத்திலிருக்கும் ஜனங்கள் மிகவும் சந்தோஷித்து, கானத்தாலும் ஸ்தோத்திரத்தாலும், வாத்திய சப்தத்தாலும் பூஜித்து எதிரில் சென்று அழைத்தார்கள். ஸ்ரீ நாராயணன் வராஹாவதாரம் செய்த காலத்தில் அந்த யக்ஞவராஹமானது தன்னுடைய சரீரத்தை சிலிர்த்துக் கொண்டது (அசைத்தது). அதிலிருந்து மயிர்கள் எவ்விடத்தில் உதிர்ந்தனவோ, அந்த ஸ்தலம், பர்ஹிஷ்மதீ என்ற பட்டணமாயிற்று. அது ஸகல சம்பத்துக்களால் நிறைந்திருந்தது. அந்த மயிர்களே பச்சை நிறமுள்ள தர்ப்பங்களாயின. அவைகளைக் கொண்டு மகர்ஷிகள் யாகவிரோதிகளான ராக்ஷஸர்களைத் துரத்தி யாகத்தை முடிக்கிறார்கள். பகவான் ஆகிய மனுவும் யக்ஞவராஹரிடமாகப் பூமியை அடைந்து அவ்விடத்தில் அந்த குசகாசங்களை பரப்பி, யக்ஞ புருஷனாகிய பகவானை முன்காலத்தில் பூஜித்தார். அந்த நகரஞ் சென்று, மூவகையான தாபத்தைப் போக்கக்கூடிய அரண்மனையில் தர்மத்திற்கு விரோதமில்லாமல் காமசுகங்களை அனுபவித்து முன்போல் வசித்தார். ஒவ்வொரு நாளும் விடியற் காலத்தில் கந்தர்வர்கள் தமது ஸ்திரீகளுடன் இந்த அரசனுடைய மேலான கீர்த்தியை, கானம் செய்கிறார்கள். அரசன் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் கதைகளை மிகுந்த பிரேமையுடன் சிரவணஞ் செய்து காலத்தைக் கழித்துவந்தார். இப்படி மனுவானர் பகவானிடத்திலே சித்தத்தைச்

செலுத்தி வரும்போது அந்தஸ்வாயம்புவ மனுவை, விஷயங்களிலேயே ஆசைப்படும்படி செய்யப் போகங்களால் முடியவில்லை. மேலும் அவர் பகவான் உடைய கதைகளைக் கேட்பதாலும், பகவானைத் தியானஞ் செய்வதாலும் அவருடைய கதையை வாக்கியங்களாக் அமைப்பதாலும், வாயால் சொல்வதாலும் காலத்தைக் கழித்து வந்தபடியால் அவருடைய காலத்தில் நடந்த யாமங்கள் (காலத்தில் அவயவங்கள்) ஸாரமற்றவையாக ஆகவில்லை (பலமுள்ளவையாயின). இப்படி அவர் தம்முடைய காலமாகிய எழுபத்தொரு யுகங்களிலும் ஸ்ரீவாசுதேவருடைய கதையாலேயே மூவகைத் தாபமற்றவராக இருந்தார்.

ஓ வியாச புத்திரனாகிய விதுர! பகவானை ஆசிரயித்தவர்களுக்குச் சரீரத்தில் உண்டாகும் ரோகங்களாவது, மனக் கவலையாவது, ஆகாசத்தில் இருந்து வரக்கூடிய உபத்திரவங்களாவது, சத்ருக்கள் இடமிருந்து பயமாவது, உஷ்ணம், சீதம் இவைகள் உண்டாகும் துக்கமாவது நேரிடுகிறதில்லை. அவரை மகர்ஷிகள் தர்மங்களைச் சொல்லும்படி கேட்க ஸகல பிராணிகளுக்கும் அனுகூலத்தைச் செய்பவரான அந்த மனு மனிதர்களுக்கும் அந்த அந்த ஜாதிகளுக்கும் ஆசிரமங்களுக்கும் உரியதான தர்மங்களை உபதேசித்தார். அரசர்களுக்குள் முந்தியவரும் வருணிக்கத் தக்கவருமான மனுவின் அற்புதமாகிய சரிதத்தைக் சொன்னேன். இனி அவருடைய பெண்ணாகிய தேவஹூதியின் மஹிமையைச் சொல்கிறேன் கேளும்" என்றார்.

அத்தியாயம்–23

கர்த்தமருடைய யோக மகிமை

தாய்தந்தையான சதரூருபையும், ஸ்வாயம்புவ மனுவும் ப்ரம்மாவர்த்தம் சென்றபின் அவர்களுடைய புத்திரியும் பதிவிரதையும், இங்கிதத்தை அறிந்தவளும் ஆன தேவஹூதி, பிரபுவாகிய பரமசிவனுக்குப் பார்வதி தேவிபோலக் கர்த்தமருக்குச் சிசுருஷை செய்துவந்தாள். அவள் விசுவாசத்தாலும் அந்தக் கரண சுத்தியாலும் (சமத்தாலும்), எல்லாரையும் விடத் தனது பர்த்தா மேலானவரென்று நினைத்திருந்தாலும் தமத்தாலும் (வெளியிலிருக்கும் இந்திரியங்களை அடக்குவது), கால் பிடிப்பது முதலியவற்றாலும், பிரியத்தாலும், இனிமையான வார்த்தையாலும், மிகுந்த தேஜஸ்வியாகிய தன்னுடைய பர்த்தாவைச் சந்தோஷிக்கச் செய்தாள்.

மேலும் அவள், காமத்தையும், கபடத்தையும், துவேஷத்தையும், ஆசையையும், நிஷித்த காரியத்தைச் செய்வதையும், கர்வத்தையும் விட்டவள், பர்த்தாவின் உடைய உத்தரவின்படி நடப்பதில் சாவதானமாய் முயலுபவள். பர்த்தாவை அனுசரித்தவள். அவருக்கு மிகுந்த க்ஷேமத்தை விரும்பியவள், வெகுகாலமாக விரதங்களை அனுஷ்டித்து அதனால் இளைத்தவள். அப்போர்ப்பட்ட மனுவின் குமாரியாகிய தேவஹூதியின் இடத்தில் கர்த்தமப் பிரஜாபதி சந்தோஷமடைந்து மிகுந்த கிருபையுடன், பிரேமையால் பேசமுடியாமல் கத்கத ஸ்வரத்துடன் பாரியயை நோக்கி, 'ஓ கம்பீர மனமுடையவளே! எனக்கு நீ கௌவரத்தை உண்டு

பண்ணுகிறவள்; சரீரமெடுத்தவர்களுக்கு (பிராணி களுக்கு) தங்கள் தங்கள் சரீரத்தில் அதிக ப்ரியம் இருக்கும். உன்னுடைய சரீரமோ மிகவும் மேலானது. அப்படியிருந்தாலும் அதனை லட்சியஞ் செய்யாமல், என்க்கு மிகவும் சிசுருஷை செய்து வந்தபடியாலும், என்னிடத்தில் மிகுந்த பக்தி வைத்திருப்பதாலும், நான் சந்தோஷமடைந்தேன். தனக்கு உரிய தருமத்தை அனுஷ்டித்து வந்தவனாகிய எனக்குக் கிடைத்த பகவத்பிரசாதங்கள் (திவ்யபோகங்கள்) என்னை நீ சேவித்துக் கொண்டிருந்தபடியால் உன்னாலும் அடையப்பட்டவைகளே; அவைகள் தபஸ், சமாதி, உபாசனை ஆகிய இவைகளில் மனத்தை ஒருவகைப் படுத்தியதால் கிடைத்தவை, உனக்கு திவ்ய திருஷ்டியைக் (ஞானக்கண்ணை) கொடுக்கிறேன். அதனைக் கொண்டு பயமற்றவைகளும்; துக்கம் அற்றவைகளுமான அவைகளை நேரில் பார்க்கலாம்; நீ சித்தையாக விருக்கிறாய். பதிவிரதா தர்மத்தால் கிடைத்த திவ்ய போகங்கள். அவைகள், "நாம் அரசர் என்ற அஹங்காரமுள்ள மற்றவர்களால் அடைய முடியாதவை, மற்ற மானுஷ போகங்களெல்லாம் பகவானுடைய புருவங்களின் அசைத்தலால் கெடுக்கப் பட்ட மனோரதமுள்ளவைகள். (அநித்யங்கள்); அவைகளால் என்ன பிரயோசனம்?" என்று சொன்னார்.

9–11 அதனைக் கேட்ட தேவஹூதி, தன்னுடைய பர்த்தாவாகிய கர்த்தமர் யோகமாயையிலும், உபாசனையிலும் மிகவும் தேர்ச்சியடைந்தவரென்று தெரிந்து கொண்டு கவலையற்றவளானாள். மேலும் அவள் வெட்கமுள்ள பார்வையால் அழகான சிரிப்பு உள்ள முகமுள்ளவளாகி, அதிக வணக்கத்தாலும்,

விசுவாசத்தாலும் சுத்தஸ்வரமுள்ள வளாகப் பர்த்தாவை நோக்கி, "ஓ ப்ராஹ்மணோத்தம! வீணாகாத யோக மாயைக்கு அதிபதியான உம்மிடத்தில் இவையாவும் இருக்கின்றனவென்பது எனக்குத் தெரியும். என்னுடைய விவாக காலத்தில் நீர் சொன்னபடி எனக்குக் கர்ப்பம் உண்டாகட்டும். பதிவ்ரதைகளான ஸ்த்ரீகளுடைய குணங்கள் சிறந்த விஷயத்தில் பிரசித்தமாகும். (எனக்குப் புத்திரன் உண்டாகி அதனால் என்னுடைய குணங்கள் லோகத்தில் பரவியபின்,திவ்ய சக்ஷுஸ்ஸை அடைகிறேன் என்று கருத்து.)

மேலும் நான் உம்முடைய ரூபலாவண்யத்தால் மோகித்து மன்மதனால் உபத்திரவிக்கப்பட்டிருக்கிறேன். உம்மைச் சேர்ந்து ரமிக்க வேண்டுமென்ற ஆசை யுள்ளவளாக இருக்கிறேன். பின்னும் என்னுடைய சரீரம் விரதங்களால் சிரமப்பட்டிருக்கிறது. அது போகத்திற்கு தகுந்ததாக ஆகும்படி செய்ய வேண்டும். தவிரவும், காம சாஸ்திரப்படி அதற்கு வேண்டிய சாதனங்களைச் சம்பாதிக்க வேண்டும். அதற்காக எது செய்யப்பட வேண்டியதோ, அதனைச் செய்யும் தகுதியான கிருகத்தைச் சம்பாதியும்" என்றாள்.

11–21 ஓ விதுரரே! அதனைக் கேட்ட கர்த்தமப் பிரஜாபதி தம்முடைய பார்யையின் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டி தம்முடைய யோக பலத்தால் உடனே ஒரு விமானத்தை உண்டு பண்ணினார். அது இஷ்டப்படி செல்லக் கூடியது, ஸகல இஷ்டங்களையும் கொடுக்கக்கூடியது, திவ்யமானது. ஸகல ரத்தினங்களுள்ளது. ஸகல சம்பத்துக்களும்

அதில் மேன்மேலும் விருத்தி யடைந்துள்ளது. இரத்தின மயமான தூண்களால் அலங்கரிக்கப்பட்டது. அதனுடைய சாமக்கிரியைகள் யாவும் திவ்யமானவை. எந்தக் காலத்திலும் சுகத்தை உண்டு பண்ணக்கூடியது. விசித்திரங்களான பட்டுத்தோரணங்கள பலவகையான புஷ்ப மாலைகளால் அலங்கரித்த மாலைகளிலுள்ள மதுவைப் பானஞ் செய்து வண்டுகள் சப்திக்கின்றன. மேலும் வெண்பட்டுகள், அரக்குப் பட்டுகள் முதலிய பலவகை வஸ்திரங்களால் பிரகாசிக்கின்ற கட்டில் முதலிய படுக்கைகளும் அதில் கம்பளம் விரிப்புகளும் சித்தமாக இருக்கின்றன. ஓ! பலவகையான வேலைத் திறமை காட்டப்பட்டிருக்கிறது. பலவிடங்களில்மரகத ரத்தினத்தால் தளவரிசை செய்த பவழத் திண்ணை களும் பிரகாசிக்கின்றன. வாயிற்படிகள் இரேழிகளில் இழைக்கப்பட்ட பவழங்களுடைய காந்தியாலும் வஜ்ர கதவுகளாலும் விளங்குகின்றன. இந்திரநீலக் கற்களால் மாடியின் மேற்புறத்தில் தங்கக் கலசவஜ்ரச் சுவர்களில், கண்கள்போல் பிரகாசிக்கும் மேலான பத்மராகங்கள் இழைக்கபட்டிருக்கின்றன. பல வகை யான கொடுங்கைகளாலும் விலையில்லாத தங்கத் தோரணங்களாலும் பிரகாசிக்கிறது. ஹம்ஸங்களும், புறாக்களும்,கிருத்ரிமமான (வேலை செய்து வைத்த பிரதிமைகள்) வைகளை தங்கள் ஜாதியைச் உண்மை யான பறவைகளென்று எண்ணி, அவைகள் இருக்கு மிடத்தில் செல்லுகின்றவைகளும், வருகின்றவை களுமாக இருக்கின்றன விளையாடும் இடங்கள், சயனக்கிருகம், உபயோகிக்குமிடம் வீட்டிற்கு வெளிப் பிரதேசங்கள், பிரகாரத்திற்கு வெளிப்பிரதேசங்கள் ஆகிய இவை சுககரங்களாக இருக்கின்றன. இந்த விமானமானது கர்த்தமருக்கு மோகத்தை உண்டு பண்ணுகிறது.

32–35 இப்பேர்ப்பட்ட விமானத்தைப் பார்த்தும் தேவஹூதியானவள் அதிகமாகப் பிரியப்படவில்லை. அப்பொழுது சகல பிராணிகளுடைய அபிப்ராயத்தைத் தெரிந்து கொள்ளும் சக்தியுள்ள கர்த்தம பிரஜாபதி, தம்முடைய புத்தியை நோக்கி, "ஓ தேவஹூதியே! இந்தப் பிந்துசரஸில் ஸ்நானம் செய்! இந்தத் தீர்த்தமானது ஸ்ரீ மகா விஷ்ணுவினால் ஏற்படுத்தப் பட்டது. மனிதர்களுக்கு சகல இஷ்டத்தையும் கொடுக்கக் கூடியது. இந்த விமானத்தின் மீதேறிக் கொள்" என்றார். நீலோத்பலம் போன்ற கண்களுள்ள தேவஹூதியானவள் சரஸ்வதி நதியின் ஜலமுள்ள அந்த சரஸில் மூழ்கினாள். அப்பொழுது அவளுடைய வஸ்திரங்கள் அழுக்குள்ளதாக இருந்தன. தலை மயிர்கள் ஜடையாக இருந்தன. சரீரம், ஸ்தனங்கள் ஆகிய இவைகள் அழுக்கினால் (வர்ணம் மாறி) இருந்தன. அந்தத் தேவஹூதி ஜலத்தில் மூழ்கியவுடன் ஜலத்திற்குள் ஒரு வீட்டில் ஆயிரம் பெண்கள் இருக்கக் கண்டாள். அவர்கள் எல்லோரும் சிறு வயதுள்ளவர்கள். அவர்களுடைய சரீரங்கள் நீலோத் பல புஷ்பங்கள்போல் வாசிக்கின்றன. அவர்கள் தேவஹூதியைக் கண்டமாத்திரத்தில் எழுந்திருந்து கைகூப்பி, "நாங்கள் உமக்கு இஷ்டமான காரியத்தைச் செய்யும் வேலைக்காரிகள்; என்ன செய்ய வேண்டும், ஆக்ஞாபிக்க வேண்டும்" என்று கேட்டார்கள். மேலும் அவர்கள் மேலான வாசனையுள்ள தைலம் தேய்த்து, தேவஹூதிக்கு ஸ்நானம் செய்துவைத்து, சுத்தமாகிய புதிய வெண்பட்டைக் கொடுத்து உடுத்திக் கொள்ளச் செய்தார்கள். விலை உயர்ந்தவைகளும் மிகுந்த காந்தி உள்ளவைகளுமான இரத்தினாபரணங்களால் அவளை அலங்கரித்தார்கள். அமிர்தம் போன்ற ருசியுள்ள

அன்னத்தையும், பானத்தையும் (குடிக்கக் கூடியவை கள்) அவளுக்கு கொடுத்தார்கள். பின்பு தேவஹூதி கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள். திவ்யமான ஹாரங்களாலும், சுத்தமான வஸ்திரங் களாலும் தன்னுடைய தேகம் அலங்கரிக்கப்பட்டு இருந்தது.

மேலும், மங்கள ஸ்நானத்தால் அழுக்கற்றதாகவும் இருந்தது. அந்தப் பெண்கள் அவளை மங்கள திரவியங்களைக் கொண்டும், சகல ஆபரணங்கள், சலங்கைகள், தங்கத்தால் செய்யப்பட்ட பாதசரங்கள், பலவகையான இரத்தினங்கள் இழைத்த ஒட்டியாணம், கண்டாபரணம் முதலியவை ஆகிய இவைகளால் அலங்கரித்தார்கள்; மேலும், முகமானது அழகான புருவங்களாலும், ரம்யமாகிய பற்களாலும், மனோகரம் ஆகிய பார்வையுள்ளது. தாமரை மலர் போன்றதும் ஆகிய நேத்திரங்களாலும் அழகாக இருந்தது. அப்பொழுது அவள், "இந்த சமயத்தில் பர்த்தாவாகிய மகரிஷி சமீபத்தில் இல்லை என்று நினைத்தாள்.

அப்படி நினைத்தவுடன் கர்த்தமப் பிரஜாபதி வசிக்குமிடத்தில் அவருக்கு முன்பாக, தேவஹூதி தம்முடைய பரிசாரிகைகளான பெண்களுடன் தான் இருக்கக் கண்டாள். அப்பொழுது அவள் ஜலத் திற்குள் ஆயிரம் பெண்களைப் பார்த்தது. அவர்கள் தம்மை உபசரித்தது. பர்த்தாவை ஸ்மரித்த மாத்திரத்தில் அந்தப் பெண்களுடன் மகரிஷியின் சமீபத்தில் தாமிருப்பது முதலியவைகள் யோக மகிமையால் ஏற்பட்டவையென்று யோசித்து மிகவும் ஆச்சரியமடைந்தாள்.

36–57 காமம் முதலிய சத்ருக்களை ஜயித்தவராகிய ஓ விதுரரே! அந்த மகரிஷி, மங்கள ஸ்நானம் செய்தவளும், பித்ரு கிரகத்திலிருக்கும் போதிருந்த சௌந்தரியமுள்ளவளும், அழகான ஸ்தனங்களுள்ளவளும், நல்ல வஸ்திரமுள்ளவளும், ஆயிரம் வித்யாதர ஸ்திரீகளால் சூழப்பட்டவளுமான தேவஹூதியைப் பார்த்து,. அவளிடத்தில் ஆசையுள்ளவராகிய, அந்த விமானத்தில் அவளை ஏற்றிக் கொண்டார். அந்த விமானத்தில் அந்த மகரிஷியானவர். தம்முடைய பத்னியுடன் சேர்ந்து வித்தியாதர ஸ்திரீகளால் உபசரிக்கப்பட்டு ஆகாயத்தில் நட்சத்திரங்களாகையால் சூழப்பட்டவரும் அழகான சரீரமுள்ளவரும், குமுத (ஆம்பல்) புஷ்பங்களை மலரச் செய்பவருமாகிய பூர்ண சந்திரன்போல் பிரகாசித்தார்,

எட்டு லோக பாலர்களும் விளையாடக் கூடிய மேருபர்வதத்தின் குகைகளில் அநேக ஸ்திரீகளுடன் குபேரன்போல் கிரீடித்தார். சித்தர்களும் அவரை ஸ்தோத்திரஞ் செய்தார்கள். அந்தக் குகைகள், மன்மதனை விருத்தி செய்யக்கூடிய காற்று வீசுவதால் அழகுள்ளவை; ஆகாச கங்கை உயர்ந்தவிடமிருந்து விழுகிறபடியால் இனிமையான சப்தமுள்ளவை. இப்படி அந்த மகரிஷியானவர். வைச்ரம்பகம், சுவரசனம், கந்தகம், புஷ்ப பத்ரகம், மானசம், சைத்ராத்யம் ஆகிய தேவர்களுடைய உத்தியான வனங்களில் பத்தினியுடன் ரமித்தார். மேலும், அவர் இஷ்டப்படி செல்லக்கூடியதும், மிகவும் பிரகாசிக்கிறதும், மேலானதுமாகிய விமானத்தின் மீதேறி வாயு பகவான்போல் எல்லா லோகங்களிலும்

சஞ்சரித்து, தேவர்களுக்கும் (விமானத்திலேறிச் சஞ்சரிப்பவர்கள்) மேலானவராக இருந்தார்.

சம்சாரத்தை நிவிர்த்திக்கக் கூடிய பகவானுடைய பாதங்களை ஆசிரயித்தவர்களும், தைரியமுள்ளவர்களுமான யோகிகளுக்கு எதுதான் கிடைக்காது? யோகியாகிய அந்தக் கர்த்தமர் பலவகையான அமைப்புள்ள விசித்திரமாகிய பூகோளத்தைத் தம்முடைய பத்தினியாகிய தேவஹூதிக்குக் காண்பித்துத் தம்முடைய ஆசிரமஞ் சென்றார். பின்பு அவர் ரதியில் ஆசையுள்ளவளும், மனுவின் புத்திரியுமான தேவஹூதியினிடத்தில் ஒன்பது பிரஜைகளை உண்டுபண்ணுவதாகிய எண்ணத்துடன் அநேக வருஷங்கள் இரமித்தார்.

தேவஹூதியும், அந்த விமானத்தில் சந்தோஷத்தை உண்டுபண்ணக்கூடிய மேலான படுக்கையில் அழகு பொருந்தியவரான பர்த்தாவுடன் சேர்ந்து, "இவ்வளவு காலஞ் சென்றது" என்பதைத் தெரிந்து கொள்ளாமல் ஆனந்தத்தில் மூழ்கியிருந்தாள். இப்படி அந்தத் தம்பதிகள் யோக மகிமையால் ரமித்துவரும் போது நூறு வருஷங்கள் கூட்டிய காலம் போல சென்றன. அப்பொழுது தேவஹூதியின் எண்ணத்தை (அநேக பிரஜைகளுண்டாக வேண்டுமென்றது) அறிந்தவரும், அப்படிச் செய்ய சாமர்த்தியமுள்ளவருமாகிய அந்த மகரிஷி, பத்தினியைத் தம்முடைய பாதிச் சரீரமாகப் பாவித்தும், ஆத்மக்ஞர் ஆகையால் அவளிடத்தில் ஆசை வைக்காமலும் தம்முடைய வீரியத்தை ஒன்பது வகையாக அவளிடத்தில் உபயோகித்தார். உடனே

அவள் ஒன்பது பெண்களைப் பெற்றாள். அந்தப் பெண்கள் எல்லோரும் அழகான சரீரமுள்ளவர்கள்; செந்தாமரைப் புஷ்பம் போன்ற வாசனையுள்ளவர்கள்; உடனே சன்யாசம் செய்துகொள்ள யத்தனிக்கும் மகரிஷியைப் பார்த்துப் பதிவிரதையான தேவஹூதி, சிரித்துக் கொண்டு, மனவருத்தத்துடன் தலைகுனிந்து, கால் நகத்தால் பூமியைக் கீறினவளாகக் கண்ணீரை அடக்கி கொண்டு, "ஓ பகவன்! எனக்கு நீர் செய்வதாகச் சொன்னவைகள் எல்லாம் உம்மால் செய்யப்பட்டன. ஆனாலும் சரணமடைந்தவளாகிய எனக்கு அபயப் பிரதானஞ் செய்யவேண்டும்.

ஓ பிராமண! நீர் காட்டிற்குச் சென்றால் உம்முடைய பெண்களுக்குச் சமானர்களான புருஷர் களைத் தேடி விவாகஞ் செய்யவேண்டுமே, அதனை யார் வகிப்பார்? மேலும் பெண்களால் பித்ருக்களின் ருணம் (கடன்) தீராததாகையால் சம்சார துக்கத்தைப் போக்கக்கூடிய பிரம்மவித்தாகிய புத்திரன் ஒருவன் வேண்டும். மேலும், பரமாத்மாவின் ஸ்வரூபத்தை விசாரியாமல் இந்திரிய விஷயங்களிலேயே ஆசை கொண்டு இவ்வளவு காலத்தைக் கழித்து விட்டது போதும். உம்முடைய உண்மையான மகிமையை நான் இது வரையில் தெரிந்து கொள்ளவில்லை. விஷய சுகத்தில் ஆசைப்பட்டு அதனையே தங்களிடம் அடைந்தேன். ஆனாலும் எனக்கு அதுவே அபயத்தைக் கொடுக்கடும். புத்திக்குறைவினால் அசாதுக்களிடம் சேருவதால் சம்சாரபந்தம் உண்டாகிறது. சாது சங்கஞ்செய்தால் மோக்ஷத்திற்குச் சாதனமாக ஆகிறது. இவ்வுலகத்தில் எவனுடைய செய்கைகள் தர்ம மார்க்கத்திலில்லையோ, வைராக்கியத்திற்கும் சாதனமாக

ஆகவில்லையோ, பகவானுடைய பாதசேவைக்கும் உபயோகப்படுகிறதில்லையோ, அவன் உயிரோ டிருந்தும் மரணமடைந்தவனேயாம். நான் பகவானுடைய மாயையால் வஞ்சிக்க (ஏமாற்ற)ப்பட்டு மோக்ஷத்தைக் கொடுக்கும் பிரபுவாகிய உம்மை அடைந்தும் அதில் விருப்பமில்லாதவளாக இருந்தேன்; ஆகையால் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று அழகான வார்த்தைகளைச் சொன்னாள்.

அத்தியாயம்–24

கபிலாவதாரம்

1–4. பின்பு தயாளுவாகிய கர்த்தமப் பிரஜாபதி விஷயத்தில் நிர்வேதத்தை அடைந்து இம்மாதிரி சொல்லி அதைர்யத்துடனிருக்கும் மனுவின் புத்திரியார் ஆகிய தேவஹூதியை நோக்கி "ஓ ராஜ குமாரியே குற்றமற்றவளே! நீ உன்னுடைய ஆத்மாவைப்பற்றி துக்கிக்கவேண்டாம். ஸ்ரீ பகவான் ஆகிய நாராயணன் சீக்கிரத்தில் உனக்குப் புத்திரனாக அவதரிப்பார். நீ விரதமுள்ளவளாக இந்தரியங்களை அடக்கிக் கொண்டு, உன்னுடைய தர்மத்தை அனுஷ்டிப் பதாலும் தவத்தினாலும், பாத்திரத்தில் தானம் செய்வதாலும், மிக்க சிரத்தையுடன் ஈச்வரனைப் பூஜி. உனக்கு க்ஷேமம் உண்டாகும். உன்னால் பகவான் பூஜிக்கப்பட்டு உன்னுடைய வயிற்றில ப்ரஹ்மவித்தாக அவதரித்து என்னுடைய கீர்த்தியை உலகத்தில் பரவச்செய்து கொண்டு, உன்னுடைய மனத்தில் அஹங்காரத்தைப் போக்கடிப்பார்" என்று ஸ்ரீமந் நாராயணனுடைய வார்த்தையை நினைத்துக்கொண்டு சொன்னார்.

5–20. அதனைக் கேட்ட தேவஹூதி அவருடைய வார்த்தையில் மிகுந்த ச்ரத்தை வைத்து, கூடஸ்தரும் எல்லாருக்கும் குருவுமாகிய பரமபுருஷனை ஆராதித்தாள். இப்படிச் சில காலம் சென்றபின் அந்தத் தேவஹூதியினிடத்தில் கர்த்தமருடைய வீரியத்திற்கு அரணியிலிருந்து அக்கினி போல் பகவான் புத்திரனாக அவதரித்தார். அந்தச் சமயத்தில் ஆகாசத்தில்

தேவதுந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்கின; மேகங்கள் மழையைப் பெய்தன. கந்தர்வர்கள் பாடினார்கள்; அப்ரஸரஸ்கள் நர்த்தனம் செய்தார்கள்; தேவர்கள் புஷ்பமாரி பெய்தார்கள்; ஸகல திக்குகளும், ஜனங்களும், ஜனங்களுடைய மனதுகளும் தெளிந்தன. சரஸ்வதீ நதிக்கரையிலிருக்கும் அந்தக் கர்த்தமருடைய ஆசிரமத்திற்குப் ப்ரஹ்மதேவர், மரீசி முதலிய மகர்ஷிகளுடன் வந்தார். ஓ காமம் முதலிய சத்துருக்களை ஜயித்தவராகிய விதுரரே! அப்பொழுது ப்ரஹ்மதேவர், சாங்கிய யோகத்தை நன்றாகத் தெரிவிப்பதற்காக, ஸத்வாம்சமாக அவதரித்த பரமாத்மாவாகிய பகவானைப் பார்த்து, சுத்தமான மனத்தால் அவருடைய எண்ணத்தைப் புகழ்ந்து சந்தோஷமடைந்த இந்திரி யங்களுடன் கர்த்தமரை நோக்கி, "ஓ குழந்தாய் பலஹூமானத்தைக் கொடுத்த கர்த்தம, என் சொற்படி கபடமற்று நீ நடந்தபடியால் என்னைப் பூஜித்த வனாகிறாய். பிதாவினுடைய உத்தரவை மீறாமல் அதன்படி நடப்பதே பித்ருக்களுக்குப் புத்திரர்கள் செய்யும் சிசுரூஷையாகும். உன்னுடைய இந்தப் பெண்களெல்லோரும் இந்த ஜகத்தைத் தங்களுடைய மகிமைகளால் பலவகையாக விஸ்தரிக்கப் போகிறார்கள். (புத்திர பௌத்திர பரம்பரையால் என்று கருத்து) ஆனதால் இந்தச் சிறந்த மகர்ஷிகளுக்கு உனது இஷ்டப்படி அவரவர்களுடைய ஸ்வபாவத்திற்குத் தகுதியாகக் கல்யாணம் செய்து கொடு; கீர்த்தியைப் பூமியில் பரவச்செய்; உன்னுடைய கிருஹத்தில் புத்திரனாக அவதரித்திருக்கும் கபில மகரிஷியானவர் புராண புருஷர்; தம்முடைய மாயையால் சரீரத்தை எடுத்துக்கொண்டவர்; பிராணிகளுக்குச் ஸகல அபீஷ்டங்களையும் கொடுக்கக் கூடியவர்; இது எனக்குத் தெரியும்.

ஓ மனுவின் புத்திரியாகிய தேவஹூதியே! ஸ்வர்ணமயமாகிய கேசங்களுள்ளவரும் (மயிர்கள்), தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரும், பத்மரேகை யுள்ள பாதங்களுள்ளவரும், கைடபனென்ற அசுரனைக் கொன்றவருமாகிய பகவான், ஞானம் (சாஸ்திரத்தினால் உண்டாகின்றது) விஞ்ஞானம் (அபரோக்ஷ ஞானம்) ஆகிய இவைகளாகிய உபாயங்களால் கர்ம வாசனை களை ஒழித்து அவித்யையால் (ஆத்ம சுருபத்தை அறியாததால்) உண்டான ஸம்சயமாகிய ஹிருதய கிரந்தியைப் போக்குவார். மேலும் இவர் சித்தகணங் களுக்கு அதிபதியாகவும், ஞான சாஸ்திரத்தின் ஆசாரியர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவராயும். கபிலரென்று பிரஸித்தி அடையப் போகிறார். மேலும் உனக்கு விசேஷ கீர்த்தியை விருத்தி செய்வார்" என்று அவ்விருவர்களுக்கும் சொல்லி ஸனகர் முதலிய குமாரர் களுடனும், நாரதருடனும், ஹம்ஸமாகிய வாகனத்தின் மீதேறிச் சத்யலோகம் சென்றார்.

21–25. இப்படிப் ப்ரஹ்மதேவர் தம்முடைய லோகஞ்சென்ற பிறகு, கர்த்தமர் பிதாவினுடைய உத்தரவின்படி லோகத்தைப் படைப்பவர்களான பிரஜாபதிகளுக்குத் தம்முடைய புத்திரிகளைக் கொடுத்தார். எப்படியெனில் மரீசி என்பவருக்குக் கலையென்பவளையும், அத்ரி மகரிஷிக்கு அனசூயை என்பவளையும், அங்கிரசுக்குச் சிரத்தை என்பவளை யும், புலஸ்தியருக்கு ஹவிர் பூ என்பவளையும், கிரதுவிற்குப் பதிவிரதையான கிரியை யென்பவளை யும், புலஹருக்கு கதி என்பவளையும், பிருகுவிற்குக் கியாதி என்பவளையும், வசிஷ்டருக்கு அருந்ததி என் பவளையும், அதர்வா வென்பவருக்கு சாந்தியையும்

(சாந்திக்கு அதிதேவதையென்று கருத்து) விவாகம் செய்துவைத்தார். அந்தச் சாந்தியால்தான் யாகமானது லோகத்தில் பரவச் செய்யப்படுகிறது. பின்பு அந்தக் கர்த்தமர் மணப்பிள்ளைகளாக இருக்கும் அந்தப் ப்ராஹ்மணோத்தமர்களையும் அந்தப் பெண்களையும் சந்தோஷப்படுத்தினார். பின்பு அந்த மகரிஷிகள் எல்லோரும் கர்த்தமரிடம் விடைபெற்றுத் தங்கள் தங்கள் ஆசிரமஞ் சென்றார்கள்.

26–34. பிறகு அந்தக் கர்த்தமப் பிரஜாபதி யானவர் ஸ்ரீ மகாவிஷ்ணுவே தமக்குப் புத்திரனாக அவதரித்திருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டு, ரஹசியத்தில் அவருடைய சமீபம் சென்று. 'சம்சாரத்தில் அவரவர்களுடைய பாப கர்மங்களால் மிகவும் எரிக்கப்படும் (கஷ்டப்படும்) ஜனங்களிடத்தில் வெகு காலத்திற்குப் பின் ஸகல தேவர்களும் தயவு செய்வார்கள். சன்யாசிகள் அநேக ஜன்மங்களில் அப்யசித்துப் பக்குவமான (சித்தித்த) பக்தி யோகத்தால் ஏகாந்தமான இடத்திலிருந்து எவருடைய பாதத்தைத் தரிசிக்க முயற்சிக்கிறார்களோ, அந்தப் பகவானாகிய நீர் கிராம்யர்களான தம்முடைய பந்துக்களைக் காப்பாற்றுவதற்குத் தம்முடைய லாகவத்தைக் கூட லட்சியம் செய்யாமல் நம்முடைய கிருஹத்தில் அவதரித்திருக்கிறீர், மேலும், முன்பு எனக்கு உம்மால் சொல்லப்பட்ட வார்த்தை (உமக்குப் புத்திரனாக அவதரிக்கிறேனென்பது) சத்தியமாக ஆகிவிட்டது. நீர் பக்தர்களுக்கு ஞானத்தை வ்ருத்தி செய்பவர். ஞானஸாதனமாகிய சாஸ்த்ரத்தை உலகில் பரவச்செய்ய விரும்பியவர். உம்முடைய பக்தர்களுக்கு எந்த ஸ்வரூபத்தில் ஆசையிருக்கிறதோ, அந்த அந்த

ஸ்வரூபத்தைப் பிரகிருதி சம்பந்தம் அற்றவரானாலும் நீர் எடுத்துக் கொள்ளுகிறீர். உம்முடைய உண்மையை அறியவேண்டிய வித்வான்கள் எப்போதும் உம்முடைய பாதபீடத்தில் நமஸ்காரம் செய்கிறார்கள். நீர் ஐசுவரியம், வைராக்யம், கீர்த்தி, ஞானம், வீரியம் அழகு ஆகிய இவைகளால் நிறைந்தவர். அப்போர்ப் பட்ட உம்மைச் சரணமடைகிறேன், நீர் பரமேசுவரன். பிரதான புருஷன் (பிரிகிருதிக்கு அதிஷ்டாதா) மகத்தத்துவ ஸ்வரூபியாயிருப்பவர். காலரூபி (அவை களை வேறு ரூபத்தை அடையச் செய்பவர்). ஞானம் உள்ளவர், அகங்காரரூபி. இந்திரியங்களைப் பரிபாலிப் பவர். சித் சக்தியைக் கொண்டு தம்மிடத்திலேயே பிரபஞ்சத்தை லயப்படுத்திக்கொண்டவர். சக்திகளைச் சுவாதீனப்படுத்திக் கொண்டவர். அப்போர்ப்பட்ட கபில மகரிஷியைச் சரணம் அடைகிறேன். நீர் எனக்குப் புத்திரனாக அவதரித்ததால் ஸகல ரிணங்களும் தீர்ந்துவிட்டன. மேலும் நான் ஸகல காமங்களையும் அனுபவித்தேன். ஆனதால் இனி சன்யாச மார்க்கத்தை அடைந்து, இருதயத்தில் உம்மைத் தியானித்து, துக்கமற்றவனாக இருப்பேன். அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

35–40. அதனைக் கேட்ட கபிலர், "ஓ மகரிஷியே! வைதிகமான காரியங்களிலும். லௌகிகமான காரியங் களிலும் உலகத்திற்கு என்னால் சொல்லப்பட்டது பிரமாணமேயாம். நான் உமக்குப் புத்திரனாக அவதரிக்கிறேன்" என்று சொன்னதைச் சத்தியமாகச் செய்வதற்காகவே ஜன்மத்தை அங்கீகரித்தேன். மேலும் தேஹம் முதலியவைகளில் அபிமானத்தை விட்டுவிட வேண்டுமென்று விரும்பியவர்களை உத்தேசித்து

ஆத்ம ஞானத்திற்கு உபயோகமான தத்துவங்களின் உண்மையைச் சொல்வதற்காகவும் அவதரித்தேன். பரமாத்மாவின் உண்மையைக் தெரிந்து கொள்வதாகிய மார்கம் மிகவும் சூட்சமமானது. அதனை நான் உபதேசித்திருந்தாலும், வெகு காலம் சென்றபடியால் அது ஒளிந்து போயிற்று. அதை லோகத்தில் பரவச் செய்வதற்காகவே இந்தச் சரீரத்தைத் தரித்துக் கொண்டிருக்கிறேன். உம்முடைய இஷ்டப்படி போகலாம். நான் அனுமதிக்கிறேன். என்னிடம் சமர்ப்பித்து ஜயிக்கமுடியாத சம்சாரத்தை ஜயித்து மோக்ஷத்தை அடைவதற்காக என்னை உபாசியும். ஸகல பிராணிகளுடைய ஹிருதய குகையிலிருப் பவனும், தானாகப் ப்ரகாசிக்கும் ஜோதிஸ்வரூபியும், பரமாத்மாவுமாகிய என்னை உம்முடைய ஆத்மாவின் இடத்தில் ஆத்மாவாகப் பார்த்து (பாவித்து) ஸகல துக்கங்களற்றதாகிய மோக்ஷத்தை அடைவீர். மேலும் என் மாதாவான தேவஹூதிக்கும் ஸகல கர்மங்களை நிவர்த்திக்கக்கூடிய அத்யாத்ம வித்யையை உபதேசிக் கிறேன். அதனால் இவள் சம்சாரத்தை கடந்து அபயத்தை அடைவாள்" என்று அனுக்கிரஹித்தார்.

41–47. அதனைக் கேட்ட கர்த்தமப் பிரஜாபதியானவர் புத்திரனைப் ப்ரதக்ஷிணம் செய்து காட்டிற்குச் சென்றார். மேலும் அவர் பிறருக்கு இம்சை செய்யாமலிருப்பதாகிய முனிவ்ரதத்தை அடைந்தும், ஆத்மாவையே முக்கியமான வீடாக வைத்துக் கொண்டும், ஆசைகளை யொழித்தும். அக்கினியில் இல்லாதவராக, நியதமான இருப்பிடமற்றவராகிச் சஞ்சரித்தார். சத்துக்கும். அசத்துக்கும் மேலானதும் குணங்களைப் பிரகாசிக்கச் செய்கிறதும், குண

சம்பந்தமற்றதும், ஏகாந்த பக்தியால் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கப்பட்டதுமான பரப் ப்ரஹ்மத்தினிடத்தில் மனத்தைச் செலுத்தினவராயும், அகங்காரமற்றவராயும், மமதை இல்லாதவராயும், குளிர் உஷ்ணம் இவைகளைச் ஸஹித்து எல்லாவற்றிற்கும் ஸமமான புத்தியுள்ளவரும், ஆத்மாவையே பார்ப்பவரும் ப்ரத்யகாத்மாவிடத்திலேயே ரமித்து அதனால் சாந்தமாவிருக்கும் புத்தியுள்ளவரும், தைரியமுள்ளவரும், அலைகளடங்கிய சமுத்திரம் போன்றவருமான அவர் ப்ரத்யகாத்மாவும், பகவானாயுமுள்ள ஸ்ரீ வாசுதேவரிடத்தில் மிகுந்த பக்தியுடன் மனத்தைச் செலுத்தியதால் ஸகல பந்தத்திலிருந்து தம்மை நிவர்த்தித்து கொண்டார். மேலும் அவர் ஸகல பிராணிகள் இடத்திலும் ஆத்மா இருப்பதையும் பகவானிடத்தில் ஸகல ப்ராணிகள் இருப்பதையும் கண்டார். இப்படி அவர் ஆசை துவேஷம் ஆகிய இவைகளற்ற சமமாயுமுள்ள மனத்தாலும் பரமாத்மாவினிடம் ஏகாந்தமாகப் பக்தி செய்ததாலும் பக்தர்களுடைய கதியை (மோக்ஷத்தை) அடைந்தார்.

அத்தியாயம்–25

கபிலருக்கும் தேவஹூதிக்கும் ஸம்வாதம்

1 –3 சௌனகர் சூதரை நோக்கி, "பகவான் உண்மையில் பிறப்பில்லாதவரானாலும் மனிதர்களுக்கு ஆத்ம ஞானத்தை யுண்டு பண்ணுவதற்காகத் தத்துவங்களைச் சொல்ல, கபிலரென்ற பெயருடன் அவதரித்தார். புருஷோத்தமரும், ஸகல யோகிகளுக்கும் மேலானவரும் சிரவணத்தால் அறியக்கூடியவருமான பகவானுடைய கீர்த்தியைக் கேட்கும் என்னுடைய இந்திரியங்கள் திருப்தியடையவில்லை. சுதந்திரராகிய பகவான் தம்முடைய மாயா பலத்தால் எந்தந்த காரியங்களைச் செய்தாரோ, உச்சரிக்கக்கூடிய அவைகளைச் சொல்ல வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

4–11 அதனைக் கேட்டு சூதர் பின்வருமாறு சொல்லத் தொடங்கினார். வியாச மகரிஷிக்கு மித்திரரான மைத்ரேய மகரிஷியானவர் ஆத்ம வித்தையை உபதேசிக்கும்படி விதுரரால் தூண்டப் பட்டு, பிரியத்துடன் அவரை நோக்கி "ஓ விதுரரே! இப்படிக் கர்த்தமப் பிரஜாபதி காட்டிற்குச் சென்ற பிறகு, கபில மகரிஷி மாதாவைத் திருப்தி செய்வதற்காக அந்தப் பிந்து சரசின் கரையிலேயே வஸித்தார். இப்படியிருக்கையில் ஒரு நாள் தேவஹூதியானவள் கர்ம சம்பந்தமற்றவரும், தத்துவ மார்க்கத்தின் மர்மத்தைக் காண்பிப்பவருமான தம்முடைய புத்திரர் ஆகிய கபிலரிடஞ் சென்று, ப்ரஹ்மதேவருடைய வார்த்தையை மனத்தில் வைத்துக் கொண்டு

"அளவற்ற ஐசுவரியமுள்ளவரே! அசத்துக்களான இந்திரியங்களைத் திருப்தி செய்து வைத்ததனால் (விஷயத்தில் ஆசைப்பட்டதனால்) மிகவும் களைத்துப் போனேன். அதனை விருத்தி செய்ததாலேயே விவேகத்தை (அஞ்ஞானத்தை) அடைந்தேன்.

நீர் தாண்ட முடியாத அந்த அஞ்ஞானமாகிய சமுத்திரத்தின் கரையைக் கண்டவர். உம்முடைய அனுக்கிரஹத்தால் திவ்யமாகிய சக்ஷுஸ் (கண்) எனக்குக் கிடைத்தது. எவர் புருஷர்களுக்குள் முந்திய வராகிய ஈசுவரனோ, அவரே நீர். அஞ்ஞானத்தால் விவேகமில்லாதவர்களுக்கு உதித்த சூரியன் போல் நீர் கண்ணாக இருக்கிறீர். ஓ தேவ! 'நான், என் உடையது,' என்ற மோகமானது உம்முடைய சங்கற்பத்தால் ஏற்பட்டிருக்கிறது. அந்த மோகத்தை நிவர்த்தி செய்வதற்கு நீரே தகுந்தவர். காப்பாற்றக் கூடியவரும் தம்முடைய பக்தர்களுடைய சம்சாரம் ஆகிய விருட்சத்திற்குக் கோடாரியாக இருப்பவரும், ஆத்ம தர்மத்தை அறிந்தவர்களுக்குள் சிறந்தவருமாகிய உம்மைப் ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவர்களைத் தெரிந்துகொள்வதற்காகச் சரணம் அடைந்து நமஸ்கரிக்கிறேன், என்று ப்ரார்த்தித்தாள்.

12–27 இம்மாதிரியான மாதாவினுடைய குற்றமற்ற அபிப்ராயத்தைக் கேட்டு, இது ஜனங்களுக்கு மோக்ஷத்தில் ஆசையை உண்டுபண்ணக் கூடியதென்று அதனைச் சிலாகித்து, மந்தஹாசத்தால் அழகான முகமுள்ளவராகிய சாதுக்களைக் காப்பாற்றும் பகவான் தேவஹூதியை நோக்கி "ஓ பாபமற்றவளே! எதனால் துக்கமும் ஸுகமும் மிச்சமின்றி

நிவர்த்தியாகுமோ, அந்த அத்யாத்ம யோகத்தை ஜனங்களுடைய க்ஷேமத்திற்காகச் சொல்லுகிறேன்.

ஸகல அவயங்களுடைய ஜகாக்ரயமுள்ள அந்த யோகத்தை முன் காலத்தில் கேட்க விரும்பிய மகர்ஷிகளுக்கு உபதேசித்தேன். ஆத்மா சம்சாரத்தில் கட்டுப்படுத்துவதற்கும் முக்தி யடைவதற்கும் மனதே காரணமென்று பெரியோர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். எப்படியெனில், மனதானது விஷயங்களில் பற்றுதலடையுமாகில் பந்தத்திற்கு ஏதுவாக ஆகிறது. அவைகளில் அது வைராக்யத்தை (ஆசையில்லாத் தன்மையை) அடையுமாகில் மோக்ஷத்திற்குக் காரணமாகிறது. "நான், என்னுடையது" என்ற காமம், உலோபம் முதலிய மலங்களுடைய சம்பந்தம் மனத்திற்கு அற்றுப் போனால், அப்பொழுது சுக துக்கமற்று, சமமாகவும், சுத்தமாகவும் ஆகிவிடுகிறது. இப்படிச் சுத்தமாகிய மனமுள்ள புருஷன், ஞானம், வைராக்கியம், பக்தி இவைகளுள்ள மனத்தால் ஆத்மாவை சத்வம் முதலிய குணசம்பந்தமற்றவர் என்றும், பிரகிருதியை விட மேலானவரென்றும், ஞான ஸ்வரூபியாயிருப்பதால் வைஷம்யமில்லாதவர் என்றும், மிகவும் அணுவாக இருப்பவரென்றும், வெட்டுவது முதலியவைகளுக்கு அகப்படாதவர் என்றும் தாமாகப் பிரகாசிப்பவரென்றும் உதாசீனர் என்றும் தெரிந்து கொள்வதுடன், ஆத்மாவை சம்சாரியாக்கச் செய்யும் சக்தி ப்ரகிருதிக்கு இல்லையென்றும் தெரிந்துகொள்வான். யோகி களுக்குப் ப்ரஹ்மசாக்ஷாத்காரம் சித்திப்பதற்கு ஸகல ஸ்வரூபியாகிய பகவானிடத்தில் பக்தி செய்வதே உபாயமாகும். அதற்குச் சமமான வேறு

உபாயமில்லை. கவிகள் சங்கத்தையே பந்தகமென்று சொல்லுகிறார்கள். அந்த சங்கமே சாதுக்களிடம் ஏற்படுமானால் மோக்ஷத்திற்கு ஏதுவாகின்றது. பொறுமையுள்ளவர்களும் கருணையுள்ளவர்களும், ஸகல பிராணிகளிடத்தில் பிரீதியுள்ளவர்களும், ஒருவரிடத்திலும் விரோத புத்தி இல்லாதவர்களும், சமம், தமம், முதலியவைகளுள்ளவர்களும் நல் நடையை ஆபரணமாயுடையவர்களுமாக இருப்பவர்களே ஸாதுக்களாவார்கள். மேலும், மேற்சொல்லிய ஸாதுக்களாகிய எவர்கள் மற்றவர்களிடத்தில் மனத்தைச் செலுத்தாமல் என்னிடம் த்ருடமான பக்தி செய்கிறார்களோ, மேலும் கர்மங்களையும், பந்துக்களையும் பரித்தியாகம் செய்கிறார்களோ,என் விஷயமான கதையைச் சொல்வதாலும், கேட்பதாலும் சந்தோஷப்படுகிறார்களோ என்னிடத்தில் மனத்தைச் செலுத்திய அவர்களுக்குப் பலவகையான தாபங்களால் உபத்திரவம் நேரிடுகிறதில்லை. ஸகல ஆசைகளையும் ஒழித்தவர்களான அவர்களே ஸாதுக்கள்.

ஓ பதிவிரதையே! அவர்கள் ஸகல தோஷத்தையும் போக்கடிப்பவர்கள். ஆனதால் அவர்களுடைய சகவாசம், சல்லாபம் முதலிய சங்கம் எப்பொழுதும் இருக்க வேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டும். ஸாதுக்களுடன் சங்கம் செய்வதால் என்னுடைய வீரியங்களை நன்றாகக் காண்பிக்கக் கூடியவைகளும், காதுக்கு இனிமையானவைகளுமான என்னுடைய கதைகள் நன்றாய் அறியப்படும். அந்தக் கதைகளைக் கேட்பதனால் சீக்கிரமாக மோக்ஷ மார்க்கத்தில் சிரத்தையும், அதனால் அதில் விசேஷ ஆசையும் பக்தியும் கிரமமாக உண்டாகும்.

என்னால் செய்யப்பட்ட ஸிருஷ்டி முதலியவைகளை ஆலோசிப்பதால் உண்டாகிய பக்தியால் இந்திரிய விஷயங்களிலிருந்து இவ்வுலகத்திய சுகம், பரலோகத்திய சுகம் ஆகிய இவைகளில் வைராக்யம் உண்டாகும். பின்னும் சிரமமற்ற யோகமார்க்கங்களால் சித்தத்தை அடக்குவதற்கு முயற்சிப்பான். ஜீவன் ப்ரகிருதியின் குணங்களைச் லேவியாமலிருப்பதாலும், வைராக்யத்தால் விருத்தியடைந்த ஞானத்தாலும், யோகத்தாலும், என்னிடம் வைத்த பக்தியாலும் பிரத்யகாத்மாவாகிய என்னை இந்தச்சரீரத்திலேயே அடைகிறான் என்றார்.

28–30 அதனைக் கேட்ட தேவஹூதியானவர் கபிலரை நோக்கி, "உம்மிடத்தில் செய்யவேண்டிய உசிதமாகிய பக்தி எது? ஸ்திரீயாகிய என்னால் செய்யக்கூடியது எது? எதனைச் செய்தால் உம்முடைய பதத்தைச் சீக்கிரமாக அடையலாம்? ஒப்பற்ற ஆனந்த ஸ்வரூபியான ஓ பகவன்! உண்மையைத் தெரிவிக்கும் அந்த யோகமானது எப்போர்ப்பட்டது? அதற்கு அங்கங்கள் எவ்வளவு? சிரமப்பட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியதானாலும், அதனைக் சுகமாக மந்த புத்தியுள்ள நான் எப்படித் தெரிந்து கொள்வேனோ, அப்படி அனுக்கிரஹித்துச் சொல்ல வேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

31–44 இம்மாதிரியான தாயாருடைய வார்த்தையைக் கேட்ட கபில மகரிஷி அவளுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டு, எந்தச் சரீரத்திலிருந்து தாம் உண்டானாரோ அதனிடத்தில் சிநேகமுள்ளவராகி, ஆத்ம ஸ்வரூபத்தைப் ப்ரகாசிக்கச் செய்யும் தத்துவ

சாஸ்திரத்தைச் சொன்னார். அதனைப் பக்தி உண்டு பண்ணும் யோகமென்று சொல்லுகிறார்கள். எப்படியெனில், விகாரத்தை அடையாத மனதும், சப்தம் முதலியவைகளைக் கிரஹிக்கும் ஞானேந்திரியங்களும், சாஸ்திரத்தில் சொல்லிய கர்மங்களைச் செய்யும் கர்மேந்திரியங்களும், சர்வ சர்த்தியாகிய பகவான் இடத்தில் இருக்குமானால் அந்த விருத்தியே பக்தி எனப்படுகிறது. அது பலனை உத்தேசியாமல் செய்யும் முக்தியைக் காட்டிலும் மேலானதாகும். புஜித்த ஆகாரத்தை வயிற்றிலிருக்கும் அக்கினி ஜீரணம் செய்கிறது போல் பக்தியானது யத்தனமில்லாமலேயே லிங்க சரீரத்தை போக்கடிக்கிறது, எவர்கள் என்னுடைய சரிதங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு சந்தோஷப்படுகிறார்களோ, மேலும் என்னுடைய பாத ஸேவையிலேயே பக்தி உள்ளவராகி என்னிடமே ஸகல விருப்பத்தையும் வைத்திருக்கிறார்களோ, அப்படிப்பட்ட சில புருஷர்கள் மோக்ஷத்தையும் விரும்புகிறதில்லை. பின்னும், ஸாதுக்களாகிய அவர்கள் என்னுடைய பிரசன்னமாகிற முகமுள்ளவைகளும் சிவந்த கண்களுள்ளவைகளும், பக்தர்களுக்கு வரத்தைக் கொடுப்பவைகளும், அழகாயிருப்பவைகளுமான ரூபங்களைத் தரிசித்து ஆசைப்படக்கூடிய வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பார்க்கக்கூடிய அவயவங்களைப் பார்ப்பதாலும், கம்பீரமான விளையாட்டுச் சிரிப்புள்ள அழகான வார்த்தைகளாலும் அவர்களுடையமனதும், இந்திரியங்களும் அபகரிக்கப்படுகின்றன. மோக்ஷத்தையும் விரும்பாத அந்தப் பக்தர்களை அவர்கள் செய்த பக்தி சூட்சமமாகிய (ஒருவராலும் நடக்கப்படாததால்) அர்ச்சிராதி மார்க்கமாக அழைத்துப் போகிறது.

மேலும் அவித்யை விலகின பிறகு சத்யலோகம் முதலியவைகளிலிருக்கும் போகத்தையும், அஷ்டாங்க யோகத்தையும், பாகவத ஸ்ரீயையும் எவர்கள் விரும்புகிறதில்லையோ, அவர்கள் அவைகளை என்னுடைய லோகத்தில் அடைவார்கள்.

ஓ சாந்த ஸ்வரூபமுள்ளவளே! என்னிடத்தில் பக்தி செய்தவர்கள் ஒருபொழுதும் கெட்டுப் போகிறதில்லை. எவர்கள் என்னைப் பிரியனாகவும், ஆத்மாவாகவும், புத்திரனாகவும், குருவாகவும் அனுகூலத்தைச் செய்யும் சுகிருத்தாகவும், இஷ்ட தெய்வமாகவும் நினைக்கிறார்களோ அவர்களை என்னுடைய காலச்சக்கரம் உபத்திரவிக்கிறதில்லை. ஆனதால் இந்த லோகம், பரலோகம் இரண்டு லோகத்திற்கும் செல்லும் தேகத்திலுள்ள அபிமானம், அதைச் சார்ந்த பந்துக்கள், பணம், பசுக்கள், வீடு மற்றுமுள்ளவை ஆகிய இவைகள் எல்லாவற்றையும் விட்டு (அபிமானத்தை விட்டு) சர்வக்ஞனனாகிய என்னை வேறிடத்தில் மனத்தைச் செலுத்தாமல் எவர்கள் உபாசிக்கிறார்களோ, அவர்களை சம்சாரத்திலிருந்து காப்பாற்றுகிறேன்.

பிரதானம் (மாயை) புருஷன் இவர்களுக்கு அதிபதியும் பகவானுமாகிய என்னைவிட வேறொருவனாலும் கடுமையான பயத்திலிருந்து காப்பாற்ற முடியாது. இந்த வாயுவானவன் என்னிடம் பயந்து வீசுகிறான். சூரியனும் என்னிடமிருந்தும் பயத்தால் பிரகாசிக்கிறான். இந்திரனும் என்னிடம் பயந்து வர்ஷிக்கிறான். அக்னியும் என்னிடம் பயந்து எரிக்கிறது. மிருத்யுவும் என்னிடத்தில் பயந்தே

சஞ்சரிக்கிறான். (எல்லோரும் பரமாத்மாவினிடம் பயந்து, தங்கள் தங்களுடைய வேலையை சரியாக நடத்திவருகிறார்களென்பது கருத்து.) மேலும் யோகிகள் ஞானம் வைராக்யம் ஆகிய இவைகளுள்ள பக்தி யோகத்தைக் கொண்டு மோக்ஷத்தை அடைவதற்காகப் பயமற்ற இடமாகிய என்னுடைய பாதத்தை அடைகிறார்கள். தீவிரமாகிய பக்தியால் மனத்தை என்னிடத்தில் ஸ்திரமாகச் செய்யும் புருஷர்களுக்கு இவ்வுலகத்தில் க்ஷேமத்தை அடையும் உபாயமாகும்.

அத்தியாயம்–26

தேவஹூதிக்குக் கபிலர் ஆத்மதத்துவத்தை உபதேசித்தது

1–9. பிரகிருதி, புருஷன், காலம் ஆகிய இந்தத் தத்துவங்களுடைய ஸ்வரூபத்தைத் தனியாகச் சொல்லுகிறேன். அதனைத் தெரிந்து கொண்டதனால் மோக்ஷத்தை அடையவேண்டுமென்று விருப்பமுள்ள புருஷன் பிரகிருதி சம்பந்தமுள்ள குணங்களிலிருந்து விடுபடுவான். (சம்சாரத்தைக் கொடுக்கக்கூடிய புண்ய பாபங்களால் என்பது கருத்து) புருஷன் மோக்ஷத்தை அடைவதற்குச் ஸாதனமும் அகங்காரத்தைப் போக்கக்கூடியதும், ஆத்மாவைக் காண்பிப்பதுமான ஞானமென்று எதனைச் சொல்லுகிறார்களோ, அதனை உமக்கு உபதேசிக்கிறேன். (தத்துவ ஞானம் மோக்ஷத்திற்குக் காரணமென்று ஸ்மிருதியில் சொல்லப் பட்டிருந்தாலும், ஆத்மாவைத் தெரிந்து கொள்வதற்கு அனாத்ம ஞானமும் சாதனமென்று கருத்து) ஆத்மாவானவர் உற்பத்தியற்றவர். ப்ரகிருதியைவிட மேலானவர்; குணங்களற்றவர்; ப்ரத்யக்ஷ பூர்த்தி ஸ்வரூபி (க்ஷணிக விஞ்ஞானம் ஆத்மாவல்ல வென்று கர்ட்டப்பட்டது) தாமாகப் ப்ரகாசிப்பவர்; அவருடைய சம்பந்தத்தாலேயே ஜகத்து ப்ரகாசிக்கிறது; தேஹம் முதலிய உபாதிகளுடைய சம்பந்தத்தால் அவைகள் உடைய தர்மங்களாகிய ஜனன மரணங்கள் ஆத்மாவிற்கு உண்டாகின்றனவேயொழிய உண்மையில் ஆத்மாவிற்குப் பிறப்பு, மரணம் ஆகிய இவைகளில்லை. சொப்பனத்தில் காணப்படும் வஸ்துக்கள் நசித்தாலும் திருஷ்டாவிற்கு நாசமில்லையல்லவா? அப்படி

சுத்தரும், வியாபகருமாகிய புருஷன், சூக்ஷ்மமானதும் (அவ்யக்தம்) ஸ்ரீ மகாவிஷ்ணுடையதும் முக்குண ஸ்வரூபம், லீலையாக வந்ததுமான ப்ரகிருதியை யதிருச்சையாக அடைந்தார். அப்பொழுது அந்தப் புருஷன் குணங்களைக் கொண்டு பலவகையான பிரஜைகளைச் ஸிருஷ்டிக்கும் ப்ரகிருதியைப் பார்த்துத் தம்முடைய ஞானத்தை மறைத்துக் கொண்டிருந்ததால் மோகமடைந்தார். இப்படிப் புருஷன் ப்ரகிருதியையே தாமென்று நினைத்துப் ப்ரகிருதியின் குணங்களால் செய்யப்படும் காரியங்களைத் தாம் செய்வதாக நினைக்கிறான். ஆனதால் ஒன்றையுஞ் செய்யாதவரும், எல்லாவற்றிற்கும் ஈசுவரனும், சாக்ஷியும், ஸுகரூபியுமான புருஷனுக்கு ஜனன மரணமாகிய சம்சார பந்தமும், பரதந்திரனாக இருப்பதும், ப்ரகிருதியினால் ஏற்பட்டதே யொழிய உண்மையிலில்லை. சரீரம் இந்திரியம் ஆகிய இவைகளில் புருஷன் அகங்காரத்தை (நானென்பதை) அடைவது, அதனால் கர்த்தாவாக ஆகிறது ஆகிய இவைகளுக்குப் ப்ரகிருதியே காரணம் என்று சொல்லுகிறார்கள். மேலும் ப்ரகிருதியைவிட விலக்ஷணனாகிய (சிதம்சம்) புருஷனே சுகத்தையும், துக்கத்தையும் அனுபவிப்பதற்குக் காரணமென்று சொல்லுகிறார்கள்." என்று சொன்னார்.

10. அதனைக் கேட்ட தேவஹூதி (சம்சாரியான புருஷனையும் அதற்குக் காரணமாகிய ப்ரகிருதியையும் தெரிந்துகொண்டு) கபிலரைப் பார்த்து, "புருஷோத்தம! ஸ்தூலமாகிய ஜகத்திற்குக் காரணமாகிய ப்ரகிருதியின் உடையவும், சூக்ஷ்மரூபமாகிய ஜகத்திற்குச் காரணமாகிய ஈசுவரனுடையவும் லக்ஷணத்தைச் சொல்லவேண்டும். ஏனேனில் ஸ்தூல சூக்ஷ்மமாகிய

ஜகத்து அவருடைய ஸ்வரூபமன்றோ" என்று கேட்டுக் கொண்டாள்.

11–18. அதனைக் கேட்ட பகவான் தேவஹூதியை நோக்கி, "ஸ்வபாவத்தில் விசேஷமற்றதும், விசேஷங்களுக்கு ஆசிரியமுமான ப்ரதானமே ப்ரகிருதியாகும். அது முக்குணங்களுள்ளது. அது மகத் தத்துவம் முதலியவைகளுடைய காரியமாகிறதில்லை; அது உற்பத்தி, நாசம் இவைகளற்றது (நித்யமானது) மேலும் அது காரிய காரண ரூபமாகயுள்ளது; ஓ அம்ம! பூமி, ஜலம், அக்கினி, வாயு, ஆகாச மென்ற ஐந்து பூதங்களும் கந்தம் முதலிய அதன் குணங்களும், காது துவக், கண், நாக்கு, மூக்கு, நாக்கு, கைகள், பாதங்கள் மேட்ரம், (ஆண்குறி) பாயு ஆகிய பத்து இந்திரியங்களும் மனஸ், புத்தி, அகங்காரம், சுத்தம் என்ற நான்குவகையான அந்தக் கரணமும், இருபத்து நான்கு தத்துவங்களும், ப்ரகிருதியின் காரியங்களாகும் (மேற்காட்டிய அந்தக் கரணம் ஒன்றாலும் சங்கற்பம் அத்யவசாயம் அபிமானம், சிந்தை என்ற விருத்திபேதத்தால் நான்குவகை என்று கருத்து) ஸகுண ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் இப்பேர்ப்பட்ட தென்றே பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்; ஆனால் சிலர் காலத்தை இருபத்தைந்தாவது தத்துவமென்றே சொல்கிறார்கள், ப்ரகிருதி சம்பந்தத்தை அடைந்து அஹங்காரத்தால் புத்தி மயக்கமடைந்த புருஷனுடைய ப்ரபாவமே காலம். அதனிடமிருந்தே பயமுண்டாகிறது" என்று சிலர் சொல்கிறார்கள். ஓ மனுவின் புத்திரியே! சத்வம் முதலிய குணங்களின் சமமான நிலைமையாகிய ஸ்வரூபமுள்ளதும், விசேஷமற்றதுமாகிய ப்ரகிருதியின்

சேஷ்டைக்கு எது காரணமோ அதுவே கர்மமென்றும், பகவான் என்றும் சொல்லப்படுகிறது.

19–23. எந்தப் பகவான் ஸகல ஜனங்களுக்கும் உள்ளே நியந்தாவாகவும், வெளியில் காலரூபியாகவும், தம்முடைய மாயையால் தத்துவங்களைக் அனுசரிக் கிறாரோ (அவைகளின் தர்மத்தில் சம்பந்திக்கிறது இல்லையென்று கருத்து) அந்தப் பரம புருஷன் ஜீவனுடைய அதிருஷ்டத்தால் ப்ரகிருதியில் குணங்கள் கலங்கிய போது (சத்துவம் முதலிய தாரதம்யத்தை அடைந்த போது) ஜகத்தின் உற்பத்திக்கு க்ஷேத்ரமாய் இருக்கும் தம்முடைய ப்ரகிருதியினிடத்தில் வீரியத்தை (ஸ்ருஷ்டி சாமர்த்தியத்தை) வைத்தார். அந்தப் ப்ரகிருதியானது மிகவும் ப்ரகாசிக்கும் மகத்தத்துவத்தை உண்டு பண்ணிற்று. அப்பொழுது ஜகத்தை முளைக்கச் செய்பவரும், (ஜகத்காரணர்) கூடஸ்தருமாகிய (விகாரமற்றவர்) பகவான், தம்முடைய சரீரமாகிய ப்ரகிருதியில் லயித்திருக்கும் பிரபஞ்சத்தை வெளிப் படுத்துவதற்காக தம்முடைய சங்கற்ப ரூபமாகிய ஞானத்தைக் கொண்டு ஜீவர்களுடைய ஞானத்தைக் குறைத்துக் கொண்டிருந்த கடுமையான தமோ குணத்தை அடக்கினார். எது ப்ரகாசமுள்ளதும், ராக துவேஷங்களற்றதும், ஸத்வகுணமுள்ளதுமாக இருக்கிறதோ, அந்தச் சித்தமே பகவத் தரிசன ஸ்தானமாகும். ஆனதால் எதனை வாஸுதேவரென்று சொல்லுகிறார் களோ, அதே மகத்தத்துவம் அதே சித்தம் (ஒருவரே அதிபூத ரூபத்தால் மகான் என்றும், அத்யாத்ம ரூபத்தால் சித்தமென்றும், உபாஸ்ய ரூபத்தால் வாஸுதேவரென்றும் பெயரடைகிறார்) அதிஷ்டா தாவாக இருப்பவர் க்ஷேத்ரஞ்ஞர். அஹங்காரத்திற்கு

அதிஷ்டாதா ருத்ரன், ஸங்கர்ஷணர், உபாஸ்யர். மனத்திற்கு சந்திரன் அதிஷ்டாதா. அனிருத்தர் உபாஸ்யர், புத்திக்குப் ப்ரஹ்மா அதிஷ்டாதா. ப்ரத்யும்னர் உபாஸ்யர், நூரை, அலைகள் முதலிய வைகள் இல்லாமலிருக்கும் ஜலம் போல் ஸ்வச்சமாயும் (பகவானுடைய பிம்பத்தைக் கிரஹிக்கக் கூடியது) விகாரமற்றதுமான (லயம், விக்ஷேபம் முதலியவைகள் இல்லாமலிருப்பது) சாந்தமாயுமிருக்கும் (ராகத் வேஷங்களற்றிருப்பது) சித்தத்தின் விருத்தியே மனத்திற்கு லக்ஷணமென்று சொல்லப்பட்டது.

24–29. பகவானுடைய வீர்யத்தாலுண்டான மகத்தத்வம் மாறுதலடைந்தபோது அதனிடமிருந்து கிரியா சக்தியுள்ள அஹங்காரமானது உண்டாயிற்று. அது வைகாரிகம், தைஜஸம், தாமஸம், என்று மூவகையுள்ளது. அதனிடமிருந்தே மனதும், இந்திரியங்களும் ஐந்து மகா பூதங்களும் சப்தம் முதலியவைகளும் உண்டாயின. ஆயிரம் தலைகள் உள்ளவரும், அனந்தரென்று சொல்லக்கூடியவரும், பூதங்கள் இந்திரியம், மனம் இவைகளின் ஸ்வரூபமா யுள்ள ஸங்கர்ஷணரென்ற புருஷனே அதற்கு அதிஷ்டாதாவாக இருக்கிறார். அந்த அஹங்காரம் கர்த்தாவாகவும், (தேவதாரூபம்) காரணமாகவும் (இந்திரிய ரூபத்தால்) காரியமாகவும், (பூதரூபத்தால்) சாந்தமாகவும், கோரமாகவும், மூடமாகவும், (மூக்குணங்களால்) இருக்கிறது. வைகாரிகாஹங்காரம் மாறுதலையடைந்தபோது அதனிடமிருந்த மனம் என்ற தத்துவம் உண்டாயிற்று. அதனுடைய ஸங்கல்பத்தாலும் விகற்பத்தாலும் காமன் உண்டாகிறான். அவரே அநிருத்தர் என்பவர்,

இந்திரியங்களுக்கு அதிபதி. சரத்காலத்திய நீலோத்பலம் போன்ற கறுத்த திருமேனியுள்ளவர். யோகிகளால் தியானஞ் செய்யக்கூடியவர்.

30–32. ஓ பதிவிரதையே! மாறுதலடைந்த தைஜஸ அஹங்காரத்திலிருந்து புத்தி உண்டாயிற்று. ப்ருத்வி முதலிய திரவியங்களுடைய ஸ்பூர்த்தி ஞானமும், இந்திரியங்களுக்குப் ப்ரகாசத்தை யுண்டுபண்ணும் சக்தியும் அதனிடமிருந்தே உண்டாகின்றன. சம்சயம் விபர்யாசம் (மித்யா ஞானம்) நிச்சயம் ஸ்வபாவம் ஸ்மிருதி தூக்கம் என்ற விருத்திகளால் புத்திக்கு லக்ஷணம் ஏற்படுகிறது. ஞானேந்திரியங்களுக்கும் கர்மேந்திரியங்களுக்கும் தைஜஸாஹங்காரத்திலிருந்து உண்டானவையே ப்ராணன். கிரியா சக்தியுள்ளது; புத்தியானது விஞ்ஞான சக்தியுள்ளது, (ப்ராணன் தைஜஸனாகையால் கர்மேந்திரியங்களும் தைஜஸங்களாயின. புத்தியும் தைஜஸமானதால் ஞானேந்திரியங்களும் தைஜஸங்கள்)

33–35. பகவானுடைய வீரியமான காலத்தால் தூண்டப்பட்ட தாமஸ அஹங்காரமானது மாறுதல் அடைந்து, அதனிடமிருந்து சப்தம் உண்டாயிற்று. அதனிடம் ஆகாசம் உண்டாயிற்று. சுரோத்ரம் சப்தத்துடன் சேர்ந்தது. அர்த்தத்தைச் சொல்வதாய் இருப்பது (வாசகம்) சுவர் முதலியவைகளால் மறைக்கப் பட்டவனைக் காண்பிப்பது. ஆகாசத்தின் தன்மாத் திரையாக இருப்பது ஆகிய இவைகள் சப்தத்திற்கு லக்ஷணமென்று கவிகள் சொல்லுகிறார்கள். ப்ராணி களுக்கு அவகாசத்தைக் கொடுப்பது, வெளி, உள் என்ற விவகாரத்திற்குக் காரணமாயிருப்பது.

ப்ராணன் இந்திரியங்கள்: மனம் ஆகிய இவைகளுக்கு ஸ்தானமாக இருப்பது ஆகிய இவைகளே ஆகாசத்திற்கு லக்ஷணம்.

36–38. சப்ததன்மாத்திரையுள்ள ஆகாசமானது கால கதியால் விகாரமடைந்தது. அதனிடமிருந்து ஸ்பர்சதன்மாத்திரை உண்டாயிற்று. அதிலிருந்து வாயு உண்டாயிற்று. ஸ்பர்சத்தைக் கிரஹிப்பதே துவக்கிந்திரியமாம். மெதுவாக இருப்பது, கடினமாக இருப்பது, குளிர்ச்சியாகயிருப்பது, உஷ்ணமாக இருப்பது; வாயுவிற்குத் தன்மாத்திரையாக இருப்பது ஆகிய இவைகள் ஸ்பர்சத்திற்கு லக்ஷணங்களாகும். அசைப்பது பலவிடங்களிலிருக்கும் வஸ்துக்களை ஒரேவிடத்தில் சேர்ப்பது, திரவியத்தின் வாசனையை மூக்கின் சமீபம் அல்லது தடையின்றி எங்கும் செல்வது, திரவியத்திற்கும். சப்தத்திற்கும் அதிபதியாக இருப்பது, ஸகல இந்திரியங்களுக்கும் பலத்தை உண்டுபண்ணுவது ஆகிய காரியங்கள் வாயுவின் லக்ஷணமாகும்.

39–41. ஸ்பர்ஸதன் மாத்திரையுள்ளதும், தெய்வத்தால் தூண்டப்பட்டதுமான வாயுவினிடம் இருந்து ரூபதன்மாத்திரை உண்டாயிற்று. அதனிடம் இருந்து தேஜஸ் உண்டாயிற்று. உருவத்தைக் கிரஹிப்பது சக்ஷுஸ்ஸாகும். ஓ பதிவிரதையே! திரவியங்களின் ஆகிருதியாக இருப்பதும், திரவியங்களைக் காட்டிலும் ப்ரதானமில்லாததாகத் தோன்றுகிறதும். திரவியத்தின் நிலைமை போன்ற நிலைமையுள்ளதாக இருப்பதும், தேஜசுக்கு அசாதாரணமாக இருப்பதும் ரூப

தன்மாத்திரையின் விருத்திகளாம். வஸ்துக்களை ப்ரகாசிக்கச் செய்வதும்: அரிசி முதலியவைகளை பாகஞ் செய்வதும் பசி, தாகம் இவைகளை உண்டுபண்ணுவதும், அதன் வழியாகப் புஜிப்பது பானம் செய்வதும், பனியைப் போக்கடிப்பது சோஷிக்கச் செய்வதும் தேஜஸ்ஸின் விருத்திகளா (காரியமான லக்ஷணங்கள்.)

42–44. ரூப தன்மாத்திரையுடன் கூடி தேஜஸானது தெய்வத்தால் தூண்டப்பட்டு விகாரத்தை அடைந்தது. அதனிடமிருந்து ரஸ தன்மாத்திரை உண்டாயிற்று. அதிலிருந்து ஜலமுண்டாயிற்று. ரஸத்தை கிரஹிக்கும் இந்திரியம் ரஸமாகும். அந்த ரஸமானது ஒன்றானாலும் திரவியங்களுடைய பேதத்தால் துவர்ப்பு; திக்திப்பு கசப்பு, உறப்பு, புளிப்பு உப்பு என்று பலவகையாகக் காணப்படுகிறது. ஈரமாக செய்வது, உருண்டையாகச் செய்வது, திருப்தியை உண்டு பண்ணுவது, ப்ராணனைக் காப்பாற்றுவது மிருதுவாகச் செய்வது, தாபத்தைப் போக்குவது கிணறு முதலியவைகளிலிருந்து அடிக்கடி எடுத்தாலும் குறையாமலிருப்பது, ஆகிய இவைகள் ஜலத்தின் வியாபாரங்களாகும். (காரியமாகிய லக்ஷணங்கள்).

45–47. ரஸ தன்மாத்திரையுள்ள ஜலமானது தெய்வத்தால் தூண்டப்பட்டு விகாரத்தை அடைந்தது அதனிடமிருந்து கந்த தன்மாத்திரை உண்டாயிற்று அதிலிருந்து ப்ருதிவி உண்டாயிற்று. கந்தத்தை கிரஹிக்கும் இந்திரியம் கிராணமாகும். அந்த கந்தமானது, கரம்பம், (பலவகை சேர்ந்த வாசனை

கெட்ட வாசனை, நல்ல வாசனை, சாந்தமாகியது (தாமரை மலருடையது), கடுமையான வாசனை, (பூண்டு வெங்காயம் முதலியவைகளுடையது.) புளித்த நாற்றம் என்ற திரவியங்களுடைய சேர்க்கையின் பேதத்தால் பலவகையாயுள்ளது. பகவானுடைய ப்ரிதிமைகளாக விருப்பது ஜலம் முதலியவைகளைவிட வேறாக இருப்பது, ஆகாசம் முதலியவைகளுக்கு விசேஷணமாக (உபாதியாக) இருப்பது. ஸகல பிராணிகளையும், அவைகளுடைய குணங்களையும் வெளிப்படுத்தவது ஆகிய விருத்திகள் ப்ருதிவியின் காரிய லக்ஷணங்களாகின்றன.

48–50 1/2. ஆகாசத்தின் விசேஷ குணமாகிய சப்தத்தைக் கிரஹிப்பதே சுரோத்ரம் என்று சொல்லப் படுகிறது. வாயுவின் விசேஷ குணமாகிய ஸ்பர்சமானது எதற்கு விஷயமோ அதுவே ஸ்பர்சம் (துவக்) தேஜஸின் விசேஷ குணமாகிய உருவமானது எதனால் கிரஹிக்கப் படுறதோ அது சக்ஷுஸாகும். ஜலத்தின் விசேஷ குணமாகிய ரசமானது எதனால் கிரஹிக்கப்படுகிறதோ அது ரஸனமென்று சொல்லப்படுகிறது. பூமியின் விசேஷ குணமாகிய கந்தமானது எதனால் கிரஹிக்கப் படுகிறதோ அது கிராணமாகும். ஒவ்வொன்றின் விசேஷ குணம் மற்றொன்றில் காணப்படுவதால் எல்லா விசேஷ குணங்களும் பூமியில் காணப்படுகின்றன. (ஆகாசத் திற்குக் குணம் ஒன்றுதானென்பது தாத்பரியம்.)

51–63. மகத்தத்துவம் முதலிய ஏழு தத்துவங்களும் (மகான், அஹங்காரம், பஞ்ச பூதங்கள்) ஒன்றோ டொன்று சேராமல் தனியாக இருந்தன. அதனால் அவைகள் போகத்திற்கு ஸ்தானமாகிய அண்டத்தை

உண்டுபண்ணச் சக்தி அற்றவைகளாக இருந்தன. அப்பொழுது ஜகத்திற்குக் காரணமாகிய பகவான் காலம், கர்மம், குணம் இவைகளுடன் அவைகளில் அனுப்ரவேசித்தார் (ஸ்ருஷ்டி சக்தியை அனுக்கிரஹித்தார்). அதனால் அவைகள் யாவும் க்ஷோபத்தையடைந்து ஒன்றாகச் சேர்ந்து அசேதனமாகிய அண்டத்தை உண்டுபண்ணின, அதிலிருந்து விராட்புருஷன் (ஸமஷ்ட்யபிமானி) உண்டானார். இந்த அண்டமானது விசேஷ மென்று பெயருள்ளது. ஜலம் முதலிய ஆவரணங்களால் சூழப்பட்டது அந்த ஆவரணங்கள். ஒன்றைவிட ஒன்று பத்து மடங்குபெரியவை. எல்லாவற்றிற்கும் வெளியில் ப்ரதானத்தால் சூழப்பட்டுள்ளது.

அந்த அண்டத்தில் பகவானுடைய ஸ்வரூபமாகிய லோகங்களின் விஸ்தாரம் காணப்படுகிறது. மிகுந்த ப்ரகாசமுள்ளதும், ஜலத்திலிருப்பதுமாகிய அந்த அண்டகோசத்திலிருந்து தேவர்களுக்கும் தேவராகிய மகாதேவன் எழுந்திருந்து இந்திரிய ஸ்தானங்களைப் படைத்தார். முதலில் இவருக்கு முகம் உண்டாயிற்று. அதில் வாக்கும் அதன் தேவதையான அக்னியும் ப்ரவேசித்தன. பின்பு மூக்கு உண்டாயிற்று, கிராணமானது பிராணனுடன் அவைகளை அடைந்தது. பிறகு கண்கள் உண்டாயின. அவைகளை, சக்ஷுரிந்தியமும், அதற்கு அதிஷ்டான தேவதையாகிய சூரியனும் அடைந்தார்கள். பின்பு காதுகள் உண்டாயின. கூரோத்திரேந்திரியமும் திக்குகளும் அவைகளில் ப்ரவேசித்தன. பிறகு அந்த விராட் புருஷனுக்குத் துவக்(தோல்) துவகிந்திரியத்திற்கு அதிஷ்டானம் உண்டாயிற்று. அதை மயிர்களும், மீசை முதலியவையும் ஓஷதிகளும் அடைந்தன. அதன் பிறகு சிசினம்

உண்டாயிற்று. அதனை உபஸ்தேந்திரியமாகிய ரேதஸ்ஸானது அடைந்தது. அதற்கு அதிதேவதையான ஜலம் அதை அடைந்தது. பின்பு குதமுண்டாயிற்று. அதனைப் பாயுவென்னும் இந்திரியமாகிய அபானன் அடைந்தான். அதற்கு அதிதேவதை லோகத்திற்குப் பயங்கரராகிய மிருத்யுவாம். பின்பு கைகள் உண்டாயின. அதனைப் பலமென்ற பாணீந்திரியம் அடைந்தது. அதற்கு அதிதேவதை மஹேந்திரன். அதன் பிறகு பாதங்களுண்டாயின. அவைகளைக் கதியென்ற பாதேந்திரியம் அடைந்தது அதற்கு அதிதேவதை உபேந்திரன். பின்பு நாடிகளுண்டாயின. அவைகளின் இரத்தம் நிறைந்திருந்தன. அதற்குத் தேவதைகள் நதிகள். அதன்பிறகு வயிறு உண்டாயிற்று. பசி, தாகம் இவைகள் அதை அடைந்தன. இவைகளுக்கு சமுத்திரம் அதிதேவதை. பின்பு ஹிருதயம் உண்டாயிற்று. அதை மனது அடைந்தது. அதற்கு அதிதேவதை சந்த்ரன். அந்த ஹிருதயத்தில் புத்தி ப்ரவேசித்தது. அதன் தேவதை ப்ரஹ்மா. பின்பு அஹங்காரம் உண்டாயிற்று. அதற்குத் தேவதை ருத்திரன். பின்பு சித்தம் உண்டாயிற்று. அதற்கு ஜீவன் அதிஷ்டாதா.

63–71. மேற்சொல்லியபடி அஹங்காரத்திலிருந்து உண்டான தேவர்கள் ப்ரவேசித்தும் விராட் புருஷனை எழுப்ப முடியவில்லை. எப்படியெனில், – அக்கினியானவர் வாக்குடன் முகத்தை அடைந்தும், பின்பு வாயுவானவர், கிராணத்துடன் மூக்குகளில் ப்ரவேசித்தும் அவர் எழுந்திருக்கவில்லை. சூரியன் சக்ஷுஸுடன் கண்களில் ப்ரவேசித்தும், திக்குகள் சுரோத்ரேந்திரியத்துடன் காதுகளின் புகுந்தும், ஓஷதிகள்

மயிர்களுடன் துவக்கில் ப்ரவேசித்தும், ஜலமானது ரேதஸுடன் சிசினத்தில் ப்ரவேசித்தும், மிருத்யு வானவர் கதியுடன் பாதங்களில் ப்ரவேசித்தும், இந்திரன் பலத்துடன் கைகளில் ப்ரவேசித்தும், நதிகள் இரத்தத்துடன் நாடிகளில் புகுந்தும், சமுத்திரமானது பசி, தாகத்துடன் வயிற்றில் ப்ரவேசித்தும், சந்திரன், மனத்துடன் ஹிருதயத்தில் ப்ரவேசித்தும் ப்ரம்மா புத்தியுடன் ஹிருதயத்தில் புகுந்தும், ருத்ரன் அஹங்காரத்துடன் ஹிருதயத்தில் ப்ரவேசித்தும் விராட் புருஷன் எழுந்திருக்கவில்லை.

72–74. ஜீவன், சித்தத்துடன் ஹிருதயத்தில் ப்ரவேசித்த பொழுது அந்த விராட் புருஷன் ஜலத்திலிருந்து எழுந்திருந்தார். நித்திரை செய்து கொண்டிருக்கும்போது ப்ராணன், இந்திரியங்கள், மனம், புத்தி ஆகிய இவைகள் எல்லாம் சேர்ந்தும் எவனில்லாமல் சரீரத்தை எழுப்பச் செய்யச் சக்தியற்றவைகளாக இருக்கின்றனவோ, அந்த ஜீவனுடைய ப்ரவேசத்தால்தான் விராட் புருஷன் எழுந்திருந்தார் அந்தப் ப்ரத்யகாத்மாவைப் பக்தியாலும், விரக்தியாலும், யோகாப்பியாசக்தாலுண்டான நிச்சய புத்தியாலும் காரியாகாரணங்களிலிருந்து பிரித்துத் தியானிக்க வேண்டும்.

அத்தியாயம்–27

ப்ரகிருதி புருஷ விவேகம்

1–76 "புருஷன் ப்ரகிருதியால் ஏற்பட்ட சரீரத்தில் இருந்தாலும், ப்ரகிருதியின் குணங்களில் (சுகதுக்கங்களில்) சம்பந்திக்கிறதில்லை. ஏனென்றால் புருஷன் குணங்களற்றவர். அகர்தா (கர்மங்களைச் செய்யாதவர்) விவகாரமற்றவர். இதற்கு ஜலத்தில் பிரதிபிம்பித்த சூரியன் உபமானமாகும். (ஜலத்திற்கு ஏற்படும் அசைதல் முதலியவை சூரியனிடத்தில் சம்பந்திக்கிறதில்லை.) அப்படிச் சுத்தராக இருக்கும் ஆத்மா ப்ரகிருதியின் குணங்களாகிய சத்வம் முதலியவைகளில் எப்போது சம்பந்தப்படுகிறாரோ, அப்பொழுது (அதன் காரியமாகிய) அஹங்காரத்தால் தம்முடைய உண்மையான உருவத்தை மறந்து தாமே கர்மங்களைச் செய்வதாக நினைக்கிறார். (ஆத்மாவின் இடத்தில் அவித்தியாசம் அனாதியாயுள்ளது; நானென்பது பிந்தி ஏற்பட்டது; கர்மங்களைச் செய்கிறவனென்ற அத்யாசமானது உபாதியால் ஏற்பட்டது என்று கருத்து). அந்த அபிமானத்தால் புண்ணிய பாபங்களுக்கு வசப்பட்டு அவைகளால் கிடைத்த சுகாதிகளாலும், சந்தோஷமடைய தேவனாகவும், மனிதனாகவும், பசு பட்சிகளாகவும் பிறப்பதாகிய சம்சாரத்தை அடைகிறார். அந்த சம்சாரமானது காணப்படும் வஸ்துபோல் மித்யையேயாம் (உண்மை இல்லை) ஆனாலும் விஷயங்களையே தியானஞ் செய்து கொண்டிருக்கும் ஆத்மாவிற்கு ஸ்வப்பனத்தில் தன் தலை வெட்டுவிப்பது முதலியவை காணப்படுவது போல் சம்சாரமானது உண்மையாகத் தோன்றுகிறதே

யொழியத் தோன்றாமலிருக்கிறதில்லை ஆனதால், கெட்ட மார்க்கத்திலேயே பிரவர்த்திருக்கும் மனத்தைத் தீவிரமான பக்தி யோகத்தாலும் வைராக்கியத்தாலும் மெதுவாகச் ஸ்வாதீனப்படுத்தி கொள்ள வேண்டும். மேலும் யமம் முதலிய மார்க்கங்களால் மிக்க சிரத்தையுடன் அடிக்கடி சித்தத்தை ஒருவகைப் படுத்திக் கொண்டு என்னிடத்தில் சித்தத்தைச் செலுத்துவதாலும், சத்தியத்தாலும் என் கதையைக் கேட்பதாலும், ஸகல பூதங்களிடத்திலும் ஸமமாக இருப்பதாலும் விரோதமற்றவராக இருப்பதாலும், அசத்துக்களுடைய சங்கத்தை விடுவதாலும், ஸ்திரீ சங்கமில்லாதிருப்பதாலும் இன்னத்தாலும் ஈசுவரனால் ஏற்படுத்தப்பட்ட தனது வர்ணாசிரமத்திற்குறிய தர்மத்தையனுஷ்டிப்பதாலும் பக்தி யோகத்தை செய்ய வேண்டும்.

பின்னும், தெய்வச் செயலாகக் கிடைத்ததைக் கொண்டு சந்தோஷத்தை அடைந்தும், மிதமாகப் புஜித்தும், மௌனியாகவும், ஏகாந்தமான இடத்தில் வசித்துக் கொண்டும் சாந்தனாகவும், எல்லாப் பிராணிகளிடத்திலும் சிநேகமுள்ளவனாகவும் தயவு உள்ளவனாகவும், கம்பீர மனமுள்ளவனாகவும் இருக்க வேண்டும். மேலும் புத்திரர்கள், மித்திரர்கள், களத்திரம் முதலியவைகளிலும், தேகத்திலும், "என்னைச் சார்ந்தவர்கள், நான்" என்ற அபிமானத்தையொழித்துப் பிரகிருதி, புருஷன் ஆகிய இவர்களைத் தெரிந்து கொண்டு ஜாக்கிரதம் முதலிய அவஸ்தைகளற்றவனாக இருக்க வேண்டும். அன்னிய விஷய ஞானத்தை விட்டுவிட வேண்டும். அப்படிப்பட்டவன் சக்ஷுஸில் இருக்கும் சூரியனைக் கொண்டு ஆகாயத்திலிருக்கும்

சூரியனைப் பார்ப்பது போல் அஹங்காரமுள்ள ஆத்மாவினால் சுத்தராகிய ஆத்மாவைத் தரிசிப்பான். மேலும் அப்பொழுது ஜீவன் பிரதானத்திற்கு (மாயைக்கு) பந்துவும் காரியத்தைப் பிரகாசிக்கச் செய்தும், ஸகல காரணங்களிலும், காரியங்களிலும் சேர்ந்ததும், எங்கும் நிறைந்ததும் அஹங்காரத்தில் சத்தாகத் தோன்றுகிறதுமாகிய ப்ரஹ்மத்தை அடைகிறான்.

ஜலத்தில் காணப்படும் சூரிய பிரதிபிம்பமானது எப்படி ஸ்தலத்திலிருக்கும் பிம்பத்தால் பார்க்கப்படு கிறதோ ஜலத்திலிருக்கும் சூரிய பிம்பத்தால் ஆகாசத் திலிருக்கும் சூரியன் எப்படிப் பார்க்கப்படுகிறாரோ, அப்படி ஆத்மாவின் பிரதிபிம்பங்களாகிய பூதங்கள் இந்திரியங்கள், மனது ஆகிய இவைகளிலுள்ள ஆத்ம பிரதிபிம்பங்களால் மூவைகையான அஹங்காரமுள்ளது. சத்தின் பிரதிபிம்பமுள்ள உருவமாகப் பார்க்கப் படுகிறது. இந்த சிதாபாசமுள்ள அஹங்காரத்தால் பரமாத்ம ஸ்வரூபம் அடையப்படுகிறது. மேலும் பூத சூட்சுமங்களும், இந்திரியங்களும் மனதும் புத்தி முதலியவைகளும், நித்திரையால் இல்லாதவை போலிருக்கும் போது எவர் நித்திரையற்றவராகி அஹங்காரமற்றவராகி இருக்கிறாரோ அவரே மேற்சாட்டிய பரமாத்மா எனப்படுகிறார்; அந்த ஸ்ருஷ்டிகாலத்தில் அஹங்காரம் முதலியவைகள் நாசமடைந்திருக்கும் போது உண்மையில் தான் நாசமடையாதவனாக இருந்தும் பணம் கெட்டுப் போனகாலத்தில் அதற்கு யஜமானன் அதன் நாசத்தைத் தன்னுடையதாகப் பாவித்துத் துக்கிப்பது போல் அஹங்காரத்தின் நாசத்தை ஆத்மா தன்னுடையதாகப் பாவித்துத்

துக்கிக்கிறான். அஹங்காரத்துடன் கூடிய திருஷ்யத்திற்கு (காணக்கூடியது) எது அதிஷ்டானமோ எது அவை களைப் ப்ரகாசிக்க செய்கிறதோ, அந்த ஆத்ம ஸ்வரூபத்தை மேற்காட்டியபடி ஆலோசிப்பவன் அடைவான்" என்றார்.

17–20 அதனைக் கேட்ட தேவஹூதியான்வள் ஸ்ரீ பகவானை நோக்கி, "ஓ பரப்ரஹ்மமே! ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவர்களும் நித்தியர்களாகையாலும், ஒருவரையொருவர் ஆசிரயித்தவர்களாகையாலும் புருஷனை விட்டுப் ப்ரகிருதி ஒருபொழுதும் தனித்திருக்கிறதில்லை. (பக்தி வைராக்கியம் ஆகிய இவைகளால் விவேகம் உண்டானாலும் ப்ரகிருதி. புருஷன் ஆகிய இவர்கள் ஒருவரையொருவர் விட முடியாதாகையால் எப்படி முக்தியடையக் கூடும் என்பது கருத்து.) ஓ ப்ரபுவே! பூமியைவிட்டு அதன்குணமாகிய கந்தமானது எப்படித் தனித்திருக்க முடியாதோ, எப்படி ஜலத்தை விட்டு அதன் குணமாகிய ரசமானது பிரிந்திருக்க முடியாதோ அப்படியே ப்ரகிருதியும், புருஷனும் தனித்திருக்க முடியாததே. கர்மங்களைச் செய்யாதவனாகிய புருஷனுக்கு (அகர்த்தாவிற்கு) எதன் சம்பந்தத்தால் கர்மபந்தம் நேரிடுகிறதோ; அந்தப் ப்ரகிருதியின் குணங்களிலிருக்கும்போது எப்படிப் புருஷன் முக்தனாக ஆகமுடியும்? சில சமயம் தத்துவங்களின் உண்மையை அறிந்ததால் சம்சார பந்தமானது பெரும்பாலும் நிவர்த்தியடைந்திருந்தாலும் சம்சார்த் திற்குக் காரணப்ரகிருதி சம்பந்தமாகியிருப்பதால். திரும்பவும் அந்தபந்தம் உண்டாகிறது (மிச்சமின்றிக் குறைகிறதில்லையென்று கருத்து.)

21–24 அதனைக் கேட்ட பகவான் மாதாவாகிய தேவஹூதியை நோக்கி, "புருஷன், பலனை உத்தேசியாமல் செய்யும் தர்மத்தாலும் (நிஷ்காமகர்மம்) நிர்மலமான மனத்தாலும், வெகு காலமாக என்னுடைய கதையைக் கேட்டு அதனால் விருத்தி செய்யப்பட்ட தீவிரமான பக்தியாலும் ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவர்களுடைய உண்மையைத் தெரிந்து கொள்வதா லும் அதிக வைராக்கியத்தாலும் தபஸுடன் கூடிய யோகத்தாலும் சித்தத்தை ஒருவகைப்படுத்தியதாலும், இரவும், பகலும் ப்ரகிருதியானது எரிக்கப்பட்டு (சக்தி குறைந்து) மெள்ள மெள்ள மறைந்துவிடும். அரணியானது அக்னியை உண்டு பண்ணுவதானாலும் அந்த அக்னியானது எரிக்கப்படவில்லையா? (தத்துவ ஞானத்தால் ப்ரகிருதி தகிக்கப்படுகிறதென்று கருத்து.) இப்படிப்பட்ட புருஷனுக்குப் ப்ரகிருதியானது புத்தபோக்யமாயிருப்பதாலும், (அனுபவித்த போகங்கள் உள்ள) அதனிடமுள்ள தோஷத்தை புருஷன் நன்றாய்த் தெரிந்து கொண்டபடியாலும் புருஷனால் அதுவிடப்படுகிறது. (மறுபடி உண்டாகிறதில்லை யென்று கருத்து) அப்படிப்பட்ட ப்ரகிருதியானது, தம்முடைய மஹிமையில் இருக்கும் (தம்முடைய ஆனந்தத்தை அடைந்த) ஈசுவரனுக்கு அசுபத்தை (சம்சார பந்தத்தை) உண்டு பண்ணுவதற்குச் சக்தியற்றதாக ஆகிறது. (ப்ரகிருதியின் சம்பந்தம் மாத்திரம் பந்தத்திற்குக் காரணமில்லை. அதைக் குணமென்று நினைத்து அதனிடம் ஆசைப்படுவது பந்தக மென்று கருத்து.)

25–30 மேலும் தூங்குகிறவனுக்கு சொப்பனம் மித்யையானது. அனர்த்தத்தை உண்டு பண்ணுவது

போல (தன்னுடைய தலைவெட்டப்பட்டது முதலியவை) தூங்கி விழித்தவனக்கு வாசனாவசத்தால் அந்த சொப்பனம் (சொப்பனத்தில் கண்டது) தோன்றினாலும் அவனுக்குக் கெடுதியை உண்டு பண்ணுகிறதில்லை. அதுபோல்லவே ஆத்மதத்துவத்தை அறிந்தவனும், என்னிடத்திலேயே மனத்தைச் செலுத்தியவனும் ஆத்மா ராம்னுமாகிய புருஷனுக்குப் ப்ரகிருதி அபகாரம் செய்கிறதில்லை. மேலும், அநேக ஜன்மங்களில் அத்யாத்ம வித்தையில் ஆசையுள்ளவன், ப்ரஹ்மலோகம் வரையிலுள்ள விஷயங்களில் வைராக்கியத்தை அடைந்து, என்னிடத்தில் பக்தி செய்து என்னுடைய மிகுந்த தயவினால் ஞானத்தை அடைந்து சம்சயமற்றவனாகிய, கைவல்யமென்கிற பெயருள்ளதும், தேகம் முதலியவைகளை விட வேறானதும் என்னை ஆசிரயித்ததுமான ஒப்பற்ற ஆனந்தத்தை அடைகிறான். யோகியானவன் லிங்க சரீரம் போனபின் எதனை அடைந்து அதிலிருந்து திரும்ப மாட்டானோ, அது மேற்காட்டிய ஆனந்தமேயாம். ஓ அம்ம! யோகத்தால் விருத்தி செய்யப்பட்டவைகளும், யோகத்தை தவிரமற்றவையால் கிடைக்காதவைகளுமான அணிமா முதலிய சித்திகளில் எவனுடைய மனம் ஆசைபடுகிறது இல்லையோ, அவன் என்னுடைய கதியை அடைவான். அவனைப் பார்த்து மிருத்யு பரிஹஸிக்கமாட்டான் (யோகியானாலும் யோகத்தால் கிடைக்கும் அணிமா முதலிய ஐசுவரியங்களில் ஆசை அடைந்தானேயாகில் அவனைப் பார்த்து மிருத்யு "நம்முடைய வலையில் இவன் சிக்கிக் கொண்டான்" என்று சிரிக்கிறான். ஆனதால் அணிமா முதலிய ஐச்வர்யங்கள் மோக்ஷத்திற்கு விக்கினங்களாக இருக்கின்றன. அவைகளில் ஆசைப்படக் கூடாதென்று கருத்து.

நோட்டு

கர்மங்களை: "இம்மாதிரியான ஆத்மா தேவ மனுஷ்யாதி சரீரத்தை அடைவது, சுகதுக்கங்களை அனுபவிப்பது முதலியவைகள் தேகத்தில் வைத்து இருக்கும் ஆத்மா அபிமானத்தாலும் சுதந்திராபி மானத்தாலும், ஏற்பட்டவைகளே யொழிய உண்மையிலிருப்பவைகளல்ல:–வீர, பந்துவும் 'பிதாரக்ஷகன், சேஷீ, பர்த்த' என்றபடி ஸகலவித பந்து அசத்தாகிய தேஹம் முதலியவைகளுக்குப் பிரகாசகம். அந்தப் ப்ரஹ்மாவினுடைய காந்தியால் இதெல்லாம் விளங்குகிறது" ச்ருதி வீர.

அத்தியாயம்–28

யோகத்தின் ஸ்வரூபம்
(தொடர்ச்சி)

1–7. "ஓ ராஜபுத்திரியே! எதனால் மனதானது தெளிந்து (ஆசை, துவேஷம் முதலியவைகளால் கலங்காமல், நன்மார்க்கத்தை (பகவத் ரூபத்தை) அடையுமோ, அந்த யோகத்தின் லக்ஷணத்தையும், அதன் ஸாதனங்களையும் சொல்வேன். அதாவது புருஷன் தன்னுடைய சக்திக்குத் தக்கபடி வர்ணாச்ரம தருமத்தை அனுஷ்டிக்க வேண்டும். விருத்த தர்மத்தை அனுஷ்டிக்கக்கூடாது. தெய்வச் செய்லாகக் கிடைத்ததைக் கொண்டு சந்தோஷத்தை அடையவேண்டும். பகவத் பக்தர்களைப் பூஜிக்கவேண்டும். மேலும் கிராம்ய தர்மத்தில் ஆசைப் படாமல் மோக்ஷத்திற்கு சாதனமாகிய தர்மங்களிலேயே ஆசை கொள்ளவேண்டும், சுத்தமாகிய அன்னத்தை சொற்பமாகப் புஜிக்கவேண்டும், (இரண்டு பாகத்தை அன்னத்தாலும், ஒரு பாகத்தை ஜலத்தாலும் நிரம்பி, நான்காவது பாகத்தைக் காற்றின் சஞ்சாரத்திற்கு விடவேண்டும் என்ற ஸ்மிருதியின்படி). ஜனங்கள் அற்றதும், உபத்திரவங்களற்றதுமான ஸ்தலத்தில் வசிக்கவேண்டும். பின்னும், ஒருவருக்கும் இம்சை செய்யாமலிருப்பது, உண்மை பேசுவது, பிறர் பொருளை அபகரிக்காமலிப்பது. எவ்வளவு வேண்டுமோ அதற்குமேல் பணத்தைச் சம்பாதியாமல் இருப்பது, இந்திரியங்களை ஜயிப்பது; சாந்த்ராயணம் முதலியவைகளை அனுஷ்டிப்பது; வேதங்களை அத்தியயனஞ் செய்வது, பகவானைப் பூஜிப்பது,

மௌனமாக இருப்பது, ஆசனத்தை அடைவது, ஸ்திரனாக இருப்பது, ப்ராணவாயுவை வசப்படுத்திக் கொள்வது, இந்திரியங்களை அவை அவைகளுடைய விஷயங்களிற் செல்லவொட்டாமல் செய்து ஹிருதயத்தில் வைத்துக்கொள்வது, மூலாதாரம் முதலிய ஸ்தானங்களுக்குள் ஒரு இடத்தில் மனத்துடன் ப்ராணனை நிறுத்துவது, பகவானுடைய லீலைகளைத் தியானம் செய்வது; மனத்தை ஆத்மாகாரமாகச் செய்வது முதலிய மார்க்கங்களாலும், தானம் முதலிய மற்றவையாலும் இயற்கையில் கெட்ட மார்க்கத்தில் செல்லும் துஷ்டமாகிய மனத்தைப் புத்தியைக் கொண்டு பரமாத்மாவினிடத்தில் செலுத்த வேண்டும். அதில் சோம்பலடையக் கூடாது.

8–10. சுத்தமாகிய விடத்தில் ஆசனத்தைப் போட்டு ஆசன ஜயமுள்ளவனாக (எவ்வளவு காலம் உட்கார்ந்திருந்தாலும் சிரமமற்றவனாக) ஸ்வஸ்திகம் என்ற ஆஸனத்தில் உட்கார்ந்து ருஜுவான் சரீரமுள்ளவனாகப் ப்ரணவத்தை அப்பியசிக்க வேண்டும். மேலும் பூரகம், கும்பகம் ரேசகம் ஆகிய இவைகளால் ப்ராணன் சஞ்சரிக்கும் மார்க்கத்தைச் சுத்தமாகச் செய்யவேண்டும். அல்லது அவைகளை மாறுதல் ஆகவாவது செய்யவேண்டும், எப்படியாவது சித்தம் விஷயங்களில் செல்லாமல் ஸ்திரமாக இருக்கும்படி செய்யவேண்டும், ஸ்வர்ணம் முதலிய உலோகமானது வாயு அக்கினி இவைகளைக் கொண்டு உருக்கப்பட்டால் எப்படிச் சுத்தமாகி விடுகிறதோ; அப்படிச் ஸ்வாசத்தை ஜயித்தயோகியின் சித்தமானது ரஜோகுணமற்றதாகச் சுத்தமாகிவிடும்; மேலும் ப்ராணாயாமத்தால் வாத பித்தம் முதலிய

தோஷங்களையும், தாரணத்தால் (வாயுடன் மனத்தை ஸ்திரப்படுத்துவது) பாபங்களையும், ப்ரத்யாகாரத்தால் விஷய ஸுகத்தையும், தியானத்தால் ஆசை முதலியவைகளையும் நாசம் செய்யவேண்டும்.

11–19. மனமானது நிர்மலமாகிய யோகத்தால் ஸ்திரமானபின் தன்னுடைய மூக்கின் நுனியைப் பார்த்துக் கொண்டு பகவானுடைய கலையைத் தியானஞ் செய்யவேண்டும். அந்தப் பகவத் சரீரமானது தர்மரை மலர் போல் ப்ரசன்னமாகிய முகமுள்ளது. தாமரை மலரின் மத்யம்போல் சிவந்த கண்களுள்ளது. நீலோத்பல மலர் போலக் கறுத்த திருமேனி உள்ளது, சங்கம், கதை, சக்ரம் இவைகளைத் தரித்திருப்பது! தாமரை புஷ்பத்தின் தாதுகள் போலப் பொன்னிறமான பீதாம்பரத்தைத் தரித்தது. ஸ்ரீ வத்ஸத்துடன் கூடிய மார்புள்ளது. கௌஸ்துபரத்தால் ப்ரகாசிக்கும் கண்டமுள்ளது. மதித்துவண்டுகளின் இனிமையான சப்தமுள்ள வனமாலையுள்ளது. சிறந்தஹாரம் கங்கணம், கீரிடம், தோள்வளை, பாதசரம் இவைகளால் அலங்கரிக்கப்பட்டது. கடிசூத்ரத்தால் ப்ரகாசிக்கும் மத்யபாகமுள்ளது. பக்தர்களுடைய இருதயமாகிய தாமரை மலரை ஆசனமாய் உடையது. (அதில் வஸிப்பவர்) மிகவும் பார்க்கத்தக்கது. (அழகுள்ளது) சாந்தமாயுள்ளது. மனத்திற்கும் கண்களுக்கும் சந்தோஷத்தை விருத்திசெய்யக்கூடியது. அழகான தரிசனமுள்ளது. ஸகல லோகங்களாலும் நமஸ்கரிக்கப்பட்டது. யௌவன வயதுள்ளது. பக்தர் களை அனுக்கிரஹிப்பதில் நோக்கமுள்ளது. அப்போப் பட்ட திவ்ய மங்கள விக்ர்ஹமுள்ளவரானப் பகவானை மனது வேறு விஷயத்தில் செல்லாமலிருக்கும்படி

தியானஞ் செய்யவேண்டும். அவர் கானஞ் செய்யக்கூடிய பரிசுத்தமான கீர்த்தியுள்ளவர். புண்ய ஸ்லோகர்களான பலி முதலியவர்களுக்கு கீர்த்தியை உண்டுபண்ணியவர். மேலும் அந்தப் பகவானை உட்கார்ந்திருப்பவராகவாவது, நடக்கிறவராகவாவது நிற்கிறவராகவாவது படுத்துக்கொண்டவராகவாவது, ஹிருதய குகையிலிருப்பவராகவாவது; பார்க்கக்கூடிய லீலைகளுள்ளவராகவாவது சுத்தமான மனத்தால் தியானம் செய்யவேண்டும்.

20–33. இப்படி அந்தப் பகவத் ஸ்வரூபத்தின் எல்லா அவயவங்களிலும் சித்தமானது பதிந்த பின்பு ஏதாவதொரு அவயவத்தைத் தியானஞ் செய்யவேண்டும். முதலில் பகவானுடைய பாதார விந்தத்தைத் தியானிக்க வேண்டும். அது வஜ்ர ரேகை துவஜரேகை அங்குச ரேகை, தாமரைமலர் ரேகை ஆகிய இவைகளுள்ளது. மேலானவைகளும், சிவந்தவைகளுமான நகங்களுடைய காந்தியால் ஹிருதயத்திலிருக்கும் இருளைப் போக்கக் கூடியது. அந்தப் பாதத்திலிருந்து உண்டான கங்கையின் ஜலத்தைத் தம்முடைய சிரசில் வஹித்ததால் பரமசிவனும் சிவனாக ஆனார் (மிகுந்த க்ஷேமத்தை அடைந்தார்.) மேலும் அந்தப் பாதமானது தியானம் செய்பவர்களுடைய மனத்திலிருக்கும் பாபமாகிய மலைக்கு வஜ்ரமாக விருக்கிறது (பாபத்தை நாசம் செய்கிறது) பின்பு அந்தப் பகவானுடைய இரண்டு முழங்கால்களை (இவைகள் சம்சார சம்பந்தமில்லாதவருடையவை) என்று தியானிக்க வேண்டும். அவைகள் ஸகல லோகங்களைப் படைத்தவரான ப்ரஹ்மதேவருக்கு மாதாவும் தாமரை மலர் போன்ற கண்களுள்ளவளும், தேவர்களால்

நமஸ்கரிக்கப்பட்டவளுமாகிய லக்ஷ்மி தேவியால் தன்னுடைய துடைகளில் வைத்து தூளிர் போன்ற இருகைகளால் ஸேவிக்கப்பட்டவை (பிடிக்கப்பட்டவை). மேலும் கருடனுடைய தோளில் ப்ரகாசிப்பவைகளும், பலத்திற்கு இருப்பிடமானவைகளும் (பலமுள்ளவை). காயாம்பூப்போல் விளங்குகிறவைகளுமான துடைகளையும் தியானிக்கவேண்டும். மேலும் கணுக்கால் வரையில் தொங்குகின்ற பீதாம்பரங்களின் மீது விளங்கும் கடிசூத்திரமுள்ள நிதம்பத்தையும் ஹிருதயத்தில் தியானிக்க வேண்டும்.

பின்பு அந்தப் பகவானுடைய தொப்புளை சிந்திக்க வேண்டும். ஸகல உலகங்களுக்கும் இருப்பிடம் ஆகிய வயிற்றிலிருந்தும் தொப்புளை சிந்திக்கவேண்டும். அதில் ப்ரஹ்மதேவருக்கும் உற்பத்தி ஸ்தானமும் ஸகலலோக ஸ்வரூபமான தாமரைப்புஷ்பம் இருக்கிறது. அதன்மீது சுத்தமாகிய முக்தஹாரத்தின் காந்தியால் வெண்மை நிறமுள்ளவரையும் இயற்கையில் சிறந்த மரகதரத்னம் போலிருப்பவைகளுமான பகவானுடைய ஸ்தனங்களை மனத்தால், சேவிக்க வேண்டும். பிறகு மஹாலக்ஷ்மிக்கு வாசஸ்தலமும், மனத்திற்கும் நேத்திரங்களுக்கும் ஸுகத்தை உண்டு பண்ணுகிறதுமான புருஷோத்தமனுடைய மார்பையும், கௌஸ்துப ரத்னத்திற்கு அழகை உண்டுபண்ணும் ஸகல லோகங்களால், நமஸ்கரிக்கப்பட்ட பகவான் உடைய கழுத்தையும், மந்திர மலையின் அசைதலால் கடைசல் பிடிக்கப்பட்ட கங்கணங்கள் உள்ளவைகளும், லோகபாலர்களால் ஆசிரயிக்கப்பட்டவைகளுமான கைகளையும், சஹிக்க முடியாத தேஜஸ்ஸுள்ளதும், ஆயிரம் முனைகளுள்ளதுமான சக்ராயுதத்தையும்,

தாமரை மலர்போன்ற கைகளில் ராஜஹம்சம் போல் ப்ரகாசிக்கும் சங்கத்தையும் பகவானுக்கு மிக்க பிரியம் ஆனதும், சத்ருக்களுடைய இரத்தத்தால் சிவந்ததுமான கௌமோதகியென்ற பகவானுடைய கதாயுதத்தையும் ஜீவனுடைய தத்துவ ஸ்வரூபமாகிய கௌஸ்துப ரத்ன ஹாரத்தையும், சப்திக்கும் வண்டுகளால் நிறைந்த வனமாலையையும் தியானிக்க வேண்டும். மேலும் பக்தர்களிடத்தில் கருணையால் அவதரித்திருக்கும் அந்தப் பகவானுடைய தாமரை மலர் போன்ற முகத்தை சிந்திக்க வேண்டும். அது ப்ரகாசிக்கும் மகரகுண்டலங்கள் அசைவதால் விளங்கும் சுத்தமான கன்னங்களுள்ளது. உயர்ந்த மூக்குள்ளது. மேலும் அது இரண்டு மீன்களுள்ள தாமரைப் பரிகசிக்கிறது. சுருண்ட தலைமயிர்களுள்ளது. விசேஷ காந்தி யுள்ளது. லக்ஷ்மீதேவிக்கு இருப்பிடமாயுள்ளது. மனோமயமானது. ப்ரகாசிக்கும் புருவங்களுள்ளது. பின்னும் அதிகக் கருணை பொருந்தியதும், மனோகரமுமான சிரிப்புடன் கூடியதும் விசேஷப் ப்ரசாதமுள்ளதுமான அவருடைய கடாக்ஷத்தை மூவகையான தாபத்தைப் போக்குவதற்காக இடை விடாது பாவனையால் ஹிருதயத்தில் பாவிக்க வேண்டும்.

மேலும் பகவானுடைய சிரிப்பானது நமஸ்கரித்த அனேக ஜனங்களுடைய கடுமையான துக்க சமுத்திரத்தைச் சோக்ஷிக்கச் செய்யக்கூடியது. மிகவும் மேலானது. ஸகல மகரிஷிகளையும் மோஹிக்கச் செய்யக்கூடியது. இம்மாதிரியான மந்தகாசத்தைத் தியானிக்கவேண்டும் தியானத்திற்கு விஷயமானவை களும் மேலான மேலுதடு, கீழுதடு இவைகளுடைய

காந்தியால் சிவந்த பற்களாகிய குந்த புஷ்பவரிசை யுள்ளவைகளுமான பகவானுடைய விசேஷ சிரிப்பைத் தியானிக்க வேண்டும். இப்படித் தன்னுடைய ஹிருதயாகாசத்திலிருக்கும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவிடத்தில். மிகுந்த ப்ரேமை ரசமுள்ள பக்தியினால் சித்தத்தைச் செலுத்தவேண்டும். அதனைவிட வேறொன்றையும் பார்க்க விரும்பக்கூடாது.

34–44. இம்மாதிரி ஸ்ரீ பகவானிடத்தில் விசேஷமாகப் பாவத்தைச் செலுத்தியும். பக்தியால் ஹிருதயம் உருகியும் சந்தோஷத்தால் மயிர்க்கூச்சல் அடைந்தும் அதிக ப்ரேமையால் பெருகிய ஆனந்த பாஷ்பத்தில் மூழ்கியும் பகவானாகிய மத்ஸ்யத்தைப் பிடிக்கும் உபாயமாகிய சித்தத்தை மெள்ள மெள்ளப் பகவத் ஸ்வரூபத்திலிருந்து பிரிக்கவேண்டும். (ஸபீஜ யோகத்தை நிர்பீஜ யோகமாகச் செய்யவேண்டும்) மனதானது எப்பொழுது வைராக்கியமுள்ளதாகவும் ஆசிரயமற்றதாகவும். ஒன்றையும் விஷயீகரிக்காததாக வும் இருக்குமோ அப்பொழுது தேகம் முதலிய உபாதிகள் நீங்கியபடியால் தன்னை ஒருவனாகவும் பரப்ரஹ்மமாகவும் பார்க்கிறான் (தியானம் செய்கிறவன். தியானம் பண்ணப்படுகிற வஸ்து என்று பேதமற்று ப்ரஹ்மமாக இருக்கிறானென்று கருத்து). தீபமானது தனக்கு ஆசிரயமாகிய திரி முதலியவைகள் அற்றுப்போனவுடன் மஹா தேஜஸாக ஆகிவிடுகிறது அல்லவா? இதுவே அதற்குத் திருஷ்டாந்தமாகும் இப்போர்ப்பட்ட நிலைமையை அடைந்தவன் திரும்பவும் சம்சாரத்தை அடைகிறதில்லை என்பது கருத்து.) அப்போர்ப்பட்ட புருஷன் அவித்யையின் சம்பந்தமற்ற மனத்தின் வைராக்கியத்தால் ப்ரஹ்ம நிஷ்டனாகி

அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தை அடைகிறான். சம்சாரியாக இருந்த காலத்தில் எது சுக துக்கங்களுக்குக் காரணமாயிருந்ததோ; அது இந்த நிலைமையில் இல்லை.

மேலும் மத்யத்தைக் குடித்தால் மயக்கமடைந்த வனுக்கு தன்னுடைய சரீரத்தில் வஸ்திரமிருக்கிற தென்றாவது இல்லையென்றாவது எப்படித் தெரியாதோ அப்படியே ஸ்வரூபத்தை அடைந்த சித்தன் அந்நித்திய மாகிய தன்னுடைய சரீரம் ஆசனத்திலிருப்பதையாவது, எழுந்து நடக்கிறதையாவது பார்க்கமாட்டான் (சுகதுக் கங்களை அனுபவிப்பானாவென்பது கருத்து). ஆனால் தேஹமானது முந்திய ஸம்ஸ்காரத்தால் (பழக்கம்) சேஷ்டிக்கும் எந்தக் கர்மத்தால் சரீரம் உண்டாக்கப் பட்டதோ, அந்தக் கர்மம் நசிக்கிறவரையில் இந்திரியங்களுடன் தேஹம் ஜீவித்திருக்கும். ஆனாலும் ஆத்மாவின் உண்மையை அறிந்த ஆருடன் சொப் பனத்தில் பார்க்கப்படும் வஸ்து போலிருக்கும் தேஹத்தி லும்; புத்திரன் முதலிய பந்துக்களிடத்திலும் அபிமானம் வைக்கமாட்டான். ஏனெனில் புத்திரன் மித்திரன் களத்திரம் முதலியவர்களை விராட்புருஷன் வேறாகக் காணப்படுவது போல ஆத்மாவென்று நினைக்கப்பட்டிருக்கும் தேஹம், இந்திரியம் முதலிய வைகளை விடத்தான் வேறாகவே இருக்கிறான். அக்கினியானது தன்னால் உண்டுபண்ணப்பட்ட புகை குறைக்கொள்ளி நெருப்புபொறி ஆகிய இவைகளைவிட வேறாகக் காணப்படுவது போல ஜீவனென்று சொல்லப் படுகிற பூதங்கள், இந்திரியங்கள் அந்தக்கரணம், பிரதானம் ஆகிய இவைகளைவிடப் ப்ரஹ்மமென்று சொல்லப்படுகிற திருஷ்டாவாகிய பரமாத்மாவானவர்

வேறென்று அறியவேண்டும். நான்கு வகையான பிராணிகளைத்தானாகவும், தன்னைச் ஸகல பிராணி களாகவும் பூதங்களை மஹாபூதஸ்வரூபங்களாவும் பார்ப்பான் (நினைப்பான்). மேலும் அக்கினியானது ஒரேவகையானாலும் கட்டை முதலியவைகளில் அதன் உருவத்திற்குத் தக்கபடி நீண்டும் குட்டையுமாக பலவகையாகத் தோன்றுவது போல் ஆத்மா ஒருவரா னாலும் பிரகிருதியின் குணபேதத்தால் பலவகையாகக் காணப்படுகிறார் ஆனதுபற்றி இந்த ஸ்ரீ மகா விஷ்ணுவின் மாயாசக்தியானது ஜீவனுக்குப் பந்தத்தை உண்டுபண்ணுகிறது. காரிய காரண ரூபமாயுள்ளது; அறிய முடியாத ஸ்வரூபமுள்ளது. அப்பேர்ப்பட்ட ப்ரகிருதியை ஜயித்து, ப்ரஹ்ம ஸ்வரூபமாக ஆகவேண்டும் என்று பகவான் தேவஹூதிக்கு உபதேசித்தார்.

அத்தியாயம்–29

பக்தி யோகம்

1–5 அதனைக் கேட்ட தேவஹூதியானவள் கபிலரை நோக்கி, "ஓ பகவன்! மகத்தத்துவம் முதலியவைகள் ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவைகளுக்கு சாங்கிய சாஸ்திரத்தில் சொல்லியபடி அபாதிதமான லட்சணம் உம்மால் சொல்லப்பட்டது. அதுவே பக்தியோகத்திற்குச் சாதனம். அந்தப் பக்தி யோகத்தின் மார்க்கத்தை விஸ்தாரமாகச் சொல்லும். பலவகையான சம்சாரத்தையும் என்க்குச் சொல்லும். அதன் ஸ்வரூபத்தைத் தெரிந்து கொண்டதனால் அதில் வைராக்கியம் உண்டாகும். மேலானவர் களுக்கும் மேலானவரும் மிகுந்த மஹிமையுள்ள வரும், கால ஸ்வரூபியாயுமிருக்கும் உம்மிடத்தில் பயந்தே ஜனங்கள் புண்ணியத்தைச் செய்கிறார்கள். தேஹம் முதலியவைகளில் அபிமானமுள்ளவனும், அஞ்ஞானம் கரையற்ற ஸம்சாரத்தில் வெகுநாளாகத் தூங்கியவனும் கர்மங்களில் ஆசைபட்டதால் கலைத்தவனு மாகிய புருஷனை விழிக்கச் செய்வதற்காக நீர் யோகத்தைப் ப்ரகாசிக்கச்செய்யும் சூரியனாக உதயமாகியிருக்கிறீர்" என்றாள்.

6–10 இம்மாதிரியான மாதாவினுடைய அழகான வார்த்தையைக் கேட்ட ப்கவான், மிகுந்த பிரியத்துடன் கருணையுள்ளவராகி அவளை நோக்கி, 'பக்தி யோகமானது மார்க்க பேதத்தால் பலவகையுள்ளது. புருஷர்களுடைய அபிப்பிராயமானது அவரவர்கள் உடைய ஸ்வபாவமாகிய குணங்களுடைய விருத்திகளால்

பலவகையாக மாறுகிறது. எவன் இம்சை டம்பம், மாத்சர்யம் இவைகளுள்ளவனாகவும் கோபமுள்ள வனாகவும், பேத புத்தியுள்ளவனாகவும் என்னிடம் பக்தி செய்கிறானோ அவன் தாமஸ பக்தன் எனப்படுகிறான். எவன் பேதபுத்தியுடன் கீர்த்தி ஐசுவரியம் முதலிய விஷயங்களுக்குக்காக என்னைக் பூஜிக்கிறானோ, அவன் ராஜஸ பக்தன் எனப்படுகிறான். எவன் பேத புத்தியுடன் பாப நிவ்ருத்தியை உத்தேசித்துக் கர்மத்தைச் செய்து, அவைகளை பரமாத்மாவினிடம் சமர்ப்பித்து யாகம் முதலியவை செய்ய வேண்டும் என்று செய்கிறானோ, அவன் சாத்விக பக்தனாகிறான்.

11–14 ஸகல குணங்களுக்கும் இருப்பிடமாகிய, புருஷோத்தமனுமாகிய என்னிடத்தில் என்னுடைய குணங்களைக் கேட்ட மாத்திரத்தாலேயே பலத்தில் ஆசையற்று, பேதபுத்தியற்று, சமுத்திரத்தில் கங்காஜலம் போல் எவனுடைய மனமானது இடைவிடாமல் என்னிடம் செல்லுகிறதோ அதுவே நிர்க்குண பக்தியாகும். மேலும், பக்தர்களுக்கு என்னைச் சேவிப்பதிலேயே விருப்பமிருக்கும். ஆதலால் ஸாலோக்கியம் (என்னுடன் ஒரே உலகத்தில் வஸிப்பது). ஸார்ஷ்டி (எனக்குள்ள ஐசுவரியத்தை அடைந்திருப்பது), ஸாமீப்யம் (என்னுடைய சமீபத்தில் வஸிப்பது), ஸாரூப்யம் (எனக்குச் சமமான ஸ்வரூபத்தை அடைவது) ஏகத்துவம் (என்னிடம் ஒன்றாகக் கலந்து போவது) ஆகிய இவைகள் கிடைத்தாலும் அவர்கள் அவைகளை விரும்புகிறதில்லை. (அப்படியிருக்க மற்றவையை விரும்புவார்களா ? என்று கருத்து) அதுவே மேலான பக்தியோகம் எனப்படுகிறது. அதனால் முக்குணங்களைக்

கடந்து ப்ரஹ்மபதத்தை அடைகிறான். (பக்தர்களுக்கு பகவத் சேவையே முக்யமான பலன், முக்தி இடையில் கிடைக்கும் பலன்.)

15–30 மேலும், பலத்தை உத்தேசியாமல் செய்யப் படும் நித்ய நைமித்திக கர்மங்களாலும், சிரத்தையுடன் நிஷ்காமனாகப் பகவானைப் பூஜிப்பதாலும், பரஹிம்சை இல்லாமல் இருப்பதாலும் என்னுடைய ப்ரதிமை களைத் தரிசிப்பது, ஸ்மரிசிப்பது, பூஜிப்பது, துதிப்பது, நமஸ்கரிப்பது ஆகிய இவைகளாலும் ஸகல பிராணிகளிடத்திலும் என்னைப் பாவிப்பதா லும் தைரியத்தாலும் வைராக்கியத்தாலும், பெரியோர் களைப் பூஜிப்பதாலும், தீனர்களிடத்தில் தயை செய்வதாலும் தனக்குச் சமமானவர்களிடத்தில் பிரீதி செய்வதாலும், சமத்தாலும் நியமத்தாலும், ஆத்மாவின் உண்மையை குருமுகமாகச் சிரவணஞ் செய்வதாலும் பகவானுடைய நாமங்களை உச்சரிப் பதாலும், கபடமற்றிருப்பதாலும், சாதுக்களுடைய சங்கத்தாலும், அஹங்காரத்தை ஒழிப்பதாலும் புருஷனுடைய சித்தமானது சுத்தமாகிறது. வாசனை யானது புஷ்பத்திலிருந்து வாயுவாகிய ரதத்தின் மீதேறி கிராணேந் திரியத்தை அடைவதுபோல யோகமுள்ளதும், சுத்தமுமான சித்தமானது ஆத்மாவை அடைகிறது. (மேற்காட்டிய குணங்கள் பக்தி யோகத்திற்கு என்று கருத்து.)

21–26 நான் ஸகல பிராணிகளிடத்திலும் வஸிக்கிறேன். அப்படிப்பட்ட என்னை லட்சியம் செய்யாமல் பூசை செய்வது போல் மனிதன் அபிநயஞ் செய்கிறான். ஸகல பிராணிகளிடத்திலும்

வஸிக்கும் ஈசுவரனாகிய என்னை விட்டு எவன் அறியாத்தன்மையால் ப்ரதிமை முதலியவைகளில் பூஜிக்கிறானோ, அவன் சாம்பலில் ஹோமம் செய்கிறவனேயாம். பிறரைத் துவேஷிக்கிறவன், என்னைத் துவேஷிக்கிறவனாகிறான் (எங்கும் நான் இருப்பதால்) ஆனதால் விரோத புத்தியுள்ளவனும் அஹங்காரமுள்ளவனுமாகிய புருஷனுடைய மனதானது சாந்தியை அடைகிறதில்லை. ஓ பாபம் அற்றவளே! பிராணிகளை நிந்திப்பவன். பலவகையான திரவியங்களால் விதிப்படி என்னைப் பூஜித்தாலும், அதனால் நான் சந்தோஷப்படுகிறதில்லை. பகவான் ஸகல பிராணிகளிடத்திலும் வஸிக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ளுகிற வரையில் என்னுடைய ப்ரதிமைகளைத் தங்களுடைய நித்திய கர்மத்திற்கு விரோதமில்லாமல் பூஜிக்க வேண்டும். மேலும் தனக்கும் பிறருக்கும் பேதமிருப்பதாக எவன் கொஞ்சமாவது பார்க்கிறானோ அவனுக்கு மிகுந்த பயத்தை உண்டு பண்ணுகிறேன்.

27–35 ஆனதால் ஸகல பிராணிகளிடத்திலும், அந்தர்யாமியாக வஸிக்கும் என்னைப் பேதபுத்தியற்ற வனாகப் ப்ரீதியுடன் தானத்தாலும், கௌரவப் புத்தியாலும் பூஜிக்க வேண்டும். அதிலும் அசேதனம் ஆகிய பிராணிகளைக் காட்டிலும் உயிருள்ளவை, மேலானவை.அவைகளைக் காட்டிலும் பிராணி வ்ருத்தியுள்ளவை மேலானவை. அவைகளைக் காட்டிலும் சித்தமுள்ளவை சிறந்தவையாம். அவைகளைவிட இந்திரியங்களுள்ளவை உயர்ந்தவை. அவைகளிலும் ஸ்பரிசத்தைத் தெரிந்து கொள்ளுகிறவைகளைக் காட்டிலும் ரசத்தை அறியக்கூடியவைகள்

சிறந்தவைகளாகும். அவைகளைக் காட்டிலும் கந்தத்தை அறியக் கூடியவை மேலானவையாம். அவ்வகளைவிட சப்தத்தை அறியக் கூடியவை மேலானவையாம். அவைகளைவிட உருவத்தின் பேதத்தை தெரிந்து கொள்ளுகிறவைகளும் (காக்கை முதலியவை) அவைகளைக் காட்டிலும் இரண்டு பக்கத்திலும் பற்களுள்ளவையும் (குதிரை முதலியன) சிறந்தவைகள். மேலும் காலில்லாதவைகளைக் காட்டிலும் அனேக காலுள்ளதும், அவைகளைவிட நான்கு கால்களுள்ள வைகளும், அவைகளைக் காட்டிலும் இரண்டு கால்களுள்ளவைகளும் சிறந்தவைகளாகும். பின்னும் அந்த மனிதர்களுக்குள் நான்கு ஜாதிகளே சிறந்தவைகள். அவைகளிலும் ப்ராஹ்மணனே உத்தமன். ப்ராஹ்மணர்களுக்குள் வேதாத்தியயனஞ் செய்தவன் மேலானவன். அவனைவிட வேதத்தின் அர்த்தத்தை அறிந்தவன் மேலானவன். அவனைக் காட்டிலும் சம்சயத்தைப் போக்குகிறவன் (மீமாம்சை படித்தவன்) உயர்ந்தவன். அவனைக் காட்டிலும் ஸ்வதர்மத்தை அனுஷ்டிப்பவன் சிறந்தவன். அவனைக் காட்டிலும் ஸகல ஆசையையும் ஒழித்தவன், மேலானவன். தருமம் முதலியவைகளை விரும்பமாட்டான். அவனால் அனுஷ்டிக்கப்பட்ட கர்மங்களும், அவைகளுடைய பலனும், தேஹமும், என்னிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஆனதால் எனக்கும் அதிக பேதமில்லை.

இப்படி ஸகல கர்மங்களையும் ஆத்மாவையும் என்னிடம் சமர்ப்பித்தவனும், எல்லாவற்றையும் சமமாகப் பார்ப்பதால் கர்த்தாவென்ற அபிமானமற்ற வனுமாகிய, புருஷனைக் காட்டிலும் மேலான ப்ராணி ஒன்றுமில்லை. ஆனதால் 'பகவானாகிய

ஈசுவரன் ஜீவனாக ஸகல ப்ராணிகளிடத்திலும் ப்ரவேசித்திருக்கிறார்' என்று மனத்தில் நினைத்து ஸகல ப்ராணிகளிடத்தில் கௌரவ புத்தியை அடையவேண்டும். நமஸ்கரிக்கவும் வேண்டும். ஓ மனுவின் புத்திரியே! பக்தி யோகம், யோகம் ஆகிய இரண்டையுஞ்சொன்னேன். இவைகளுள் ஏதாவது ஒரு மார்க்கத்தால் பரமாத்மாவை அடைய வேண்டும்.

36–45 எல்லாவற்றிற்கும் நியந்தாவாக இருப்பதே பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபம். மேலும், கர்மங்கள் உடைய சேஷ்டையுள்ளதும் ப்ரதான புருஷ ஸ்வரூபமாயிருப்பதுமே தெய்வம் எனப்படுகிறது. (அதிருஷ்டம்) பேதத்திற்கு (வஸ்துக்கள் வேறாக மாறுவது) காரணமாயிருப்பதே காலமென்று சொல்லப்படுகிறது. இவைகள் யாவும் பரமாத்மாவின் ஸ்வரூபமேயாம். (மகத்தத்துவம் முதலியவைகளுக்கு அபிமானிகளும் பேதபுத்தி உள்ளவர்களுமான ஜீவர்களுக்குப் பயத்தை உண்டு பண்ணுகிறவர், அந்தப் பகவானேயாம். ஸகல பிராணிகளுக்கும் ஆசிரயம் இருக்கும் ஈசுவரன் ஸகல பிராணிகளுடைய ஹிருதயத்தில் ப்ரவேசித்துப் பூதங்களைக் கொண்டே அவைகளை ஸம்ஹரிக்கிறார். விஷ்ணுவென்ற திவ்ய நாமமுள்ள பகவானே யாகத்திற்கும் பலத்தைக் கொடுப்பவர். எல்லாவற்றையும் ஸ்வாதினப் படுத்திக் கொள்பவர், கால ஸ்வரூபி அவருக்கு மித்திரனாவது, துவேஷியாவது, பந்துவாவது ஒருவருமில்லை. எவரிடமிருந்து, காற்று வீசுகிறதோ சூரியன் ப்ரகாசிக்கிறாரோ, எவரிடமிருந்து பயந்து நட்சத்திரங்கள் ப்ரகாசிக்கின்றனவோ, எவரிடமிருந்து பயந்து கொடிகளும், செடிகளும் (ஓஷதி)

தங்களுக்குரிய ருதுக்களில் புஷ்பங்களையும், பழங்களையும் உண்டு பண்ணுகின்றனவோ, எவர் இடமிருந்து பயந்து நதிகள் ஓடுகின்றனவோ, எவரிடமிருந்து பயந்து சமுத்திரமானது கரை புரளவில்லையோ, எவரிடமிருந்து பயந்து அக்கினி ப்ரகாசிக்கிறதோ எவரிடமிருந்து பயந்தே மலைகளால் நிறைந்த இந்த பூமியானது ஜலத்தில் மூழ்காமல் இருக்கிறதோ, எவருடைய உத்தரவினால் பிராணி களுக்கு ஆகாசமானது அவகாசத்தைக் கொடுக்கிறதோ, எவருடைய ஆக்ஞையால் மகத்தத்துவமானது ஏழு ஆவரணங்களுள்ள தன்னுடைய தேகத்தை லோகமாக விஸ்தாரப்படுத்துகிறதோ, சரம், அசரம் ஆகிய இவைகளடங்கிய ஜகத்தானது எவருடைய வசமாக இருக்கிறதோ, குணங்களுக்கு அபிமானிகள் ஆகிய அந்தப் ப்ரஹ்மா முதலிய தேவர்கள் அடிக்கடி இந்த ஜகத்தைப் படைப்பது முதலியவைகளை எவருடைய பயத்தால் செய்கிறார்களோ, அவரே பகவான். அவர் நாசமற்றவர். நாசத்தை உண்டு பண்ணுகிற காலஸ்வரூபியாயிருப்பவர். ஆதியற்றவர். எல்லாவற்றிற்கும் ஆதியைச் செய்பவர். மாறுதல் அற்றவர். புத்திரன் முதலிய ஜனத்தைப் பிதா முதலிய ஜனத்தைக் கொண்டு யுண்டு பண்ணுகிறவர். மிருத்யுவைக் கொண்டு அந்தகனையும் கொல்பவர்.

அத்தியாயம்–30

பாபிகளின் கதி
(முன்தொடர்ச்சி)

1–24. 'வாயுவினால் அசைக்கப்படும் மேகமானது வாயுவின் பலத்தை எப்படி அறியவில்லையோ அப்படி காலத்தால் தூண்டப்பட்ட ஜனங்கள் அதன் மஹிமையைத் தெரிந்து கொள்ளுகிறதில்லை. புருஷன் சுகத்தை அடைவதற்காக எந்தெந்த வஸ்துக்களைச் சம்பாதிக்கிறானோ, அவைகளைக் காலமானது நாசம் செய்கிறது. அதனால் புருஷன் துக்கிக்கிறான். மேலும், அநித்யமாகிய சரீரத்திற்காகவும், புத்திர மித்திர களத்திரங்களுக்காகவும், வீடு பூமி பணம் முதலியவை களை நித்யங்களாகப் பாவித்துச் சம்பாதிப்பதால் புருஷன் துர்புத்தியுள்ளவனாகிறான். சம்சாரத்தில் புருஷன் எந்த ஜன்மத்தை அடைந்தாலும் அதில் சுகத்தை அடைகிறதில்லை. அதிலிருந்து வைராக்கியமும் அவனுக்கு உண்டாகிறதில்லை. நரகத்தை அடைந்து கஷ்டப்படுபவனானாலும் நரகத்திய சுகம் (ஆகாரம்) கிடைக்கும்போது அந்தச் சரீரத்தைவிட்டு விட சம்மதிக்கிறதில்லை. அந்த மோஹமானது தேவ மாயையால் ஏற்படுகிறது. மேலும், மனைவி, பிள்ளை, வீடு, பசு, பணம் பந்து ஆகிய இவைகளில் நன்றாக அபிமானமடைந்த தன்னை "நான் கிருதார்த்தன்" என்று சிலாகிக்கிறான். மேலும் அவன் மேற்கண்ட வைகளைப் போஷிப்பதற்காகக் கவலையடைந்து அதனால் எரிக்கப்பட்டவனாகி கெட்ட அபிப்பிராயத்து உடன் மூடனாகி; இடைவிடாமல் பாபங்களை செய்கிறான். பின்னும் இவன் விபசாரியான

ஸ்திரீகளுடைய சம்போகம் முதலியவைகளை ரகசியத்தில் அனுபவித்தும். இனிமையாகப் பேசும் குழந்தைகளுடைய வார்த்தைகளைக் கேட்டு மனதும், இந்திரியங்களும் மயங்கினவனாகி, கபட தர்மமுள்ள வைகளும் துக்கத்தையே முக்கியமாக உடையவை களுமான கிருகங்களிலிருந்து துக்கத்தை விலக்கு வதற்கான காரியங்களைச் செய்துகொண்டு தன்னைச் சுகமுள்ளவனென்று பாவிக்கிறான். மேலும், அதிக இம்சையுள்ளவைகளைச் செய்து பலவிதமாகப் பணத்தைச் சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்று கிறான். அவர்களைப் பாபத்தைச் செய்து போஷிப்பதனால் புருஷன் நரகத்தை அடைகிறான். தவிரவும் கிருகத்திலும். புத்திரன் முதலியவர்கள் அனுபவித்து மிகுந்ததை அனுபவிக்கிறான். (போகமும் கிடைப்பது அரிதாக இருக்கிறது). மேலும், ஜீவனத் திற்காக எவன் எந்த விருத்தியைச் செய்கிறானோ, அது நிறைவேறாமல் நாசத்தை (லோபம்) அடையும் போது பணத்தாஸையுள்ளவனாகச் சம்பாதிக்கச் சக்தியற்றவனாகி, பிறருடைய பொருளில் ஆசை வைக்கிறான். இப்படிக் குடும்பத்தைப் போஷிக்கச் சக்தியற்றவனாக அதிருஷ்டக் குறையுள்ளவனாகிறான்.

இவன் செய்யும் முயற்சியெல்லாம் வீணாகிவிடு கிறது வேலையற்றவனாகி, தீனனாக மூடனாகி அதிகச் சிந்தையுடன் பெரு மூச்சுவிடுகிறான். அப்படிப்பட்ட புருஷனை அவனுடைய களத்திரம் முதலிய பந்துக்கள் முன்போல்(உபகாரமடைந்த காலத்தில்) ஆதரிக்கிறது இல்லை. லோபிகளான குடியானவர்கள் வயது சென்ற காளைமாட்டைப் போஷிப்பார்களா? அந்த நிலைமையில் அவனுக்கு வைராக்கியம் உண்டாகிறது

இல்லை. ஜ்ரையால் (கிழத்தனம்) சரீரம் விகாரத்தை அடைகிறது. மரிக்கக்கூடியவனாகக் கிருகத்திலிருக் கிறான். வீட்டைக்காத்திருக்கும் நாய்க்குச் சோறு போடுவதுபோல் வீட்டில் இருப்பவர்களால் ஆதரவின்றிக் கொடுக்கப்படும் அன்னத்தை புஜிக் கிறான். அதிக வியாதியுள்ளவனாகிறான், வயிற்றில் இருக்கும் அக்கினி மந்தமாகிறது. அதனால் ஆகாரம் குறைவடைகிறது. சேஷ்டை குறைகிறது பிராணவாயு வெளியில் போகும் தருணத்தில் கண் விழிகள் வெளியில் வருகின்றன. கபத்தால் பிராணன் சஞ்சரிக்கும் மார்க்கம் தடுக்கப்படுதிறது காசத்தாலும், ஸ்வாஸத்தாலும் மிகுந்த சிரமத்தை அடைகிறான். கண்டத்தில் "குர் குர்" என்ற சப்தம் உண்டாகிறது. அவ்வளவு அவஸ்தையுடன் படுத்திருப்பவனைச் சுற்றிப் பந்துக்கள் உட்கார்ந்து மிகுந்த துக்கத்துடன் அழைக்கிறார்கள். ஆனாலும் அவன் பேசுகிறதில்லை. காலனுடைய பாசத்திற்குச் ஸ்வாதீனனாகிறான். இப்படி மனிதன் குடும்பத்தைப் போஷிப்பதற்காக மரணம் வரையில் இந்திரியங்களைப் பலகர்மங்களில் செலுத்தி, அந்திய காலத்தில் மிகுந்த வேதனையால் புத்தி மயங்கினவனாகி அழுதுகொண்டிருக்கும் பந்துக்களின் மத்தியில் மரணமடைகிறான் அப்பொழுது இரண்டு எம தூதர்களைப் பார்க்கிறான். அவர்கள் கோபப்பார்வையால் பயங்கரமான ஸ்வரூபம் உள்ளவர்கள் அவர்களைக் கண்டு மனம் நடுங்கி விஷ்டை போடுகிறான். மூத்திரத்தை விடுகிறான். அவர்கள் 'இவனை யாதனா சரீரத்தில் அடைத்துக் கழுத்தில் காலபாசத்தைக் கட்டி, குற்றவாளியை அரசனுடைய சேவகர்கள் கொண்டுபோவது போல் இழுத்துக்கொண்டு போகிறார்கள். பின்னும்

அதட்டுகிறார்கள், அதனால் அந்தப் புருஷனுடைய ஹிருதயம் வெடித்துச் சரீரம் நடுங்குகிறது.

மேலும், போகும் வழியில் அவனுடைய சரீரத்தை நாய்கள் கடித்துப் புஜிக்கின்றன. அப்பொழுது மிகுந்த துன்பத்தை யடைந்து தன்னால் செய்யப்பட்ட பாபத்தை நினைத்து கொள்ளுகிறான். செல்லுகிற மார்க்கத்திலுள்ள மணல்கள் மிகவும் உஷ்ணங்களாக இருக்கின்றன. பசி, தாகம் மிகுதியாக உண்டாகின்றன. வெயில் மிகவும் கடுமையாயிருக்கிறது. சஹிக்க முடியாத காற்று வீசுகிறது. காட்டுத் தீயின் உபத்திரவம் மிகுதியாயிருக்கிறது. தங்குமிடமாவது குளம் முதலிய ஜலாதாரமாவது இல்லை. அந்த மார்க்கத்தில் நடக்க முடியாமல் பாபியான புருஷன் கஷ்டப்படுகிறான். அப்பொழுது கூடச்செல்லும் எமபடர்கள் கசையால் (குரடாவினால்) முதுகில் அடிக்கிறார்கள். அடிப்பட்டுச் சிரமத்துடன் மெள்ள மெள்ள நடக்கிறான். இப்படிப் பாபியானவன் அடிக்கடி எமபடர்களால் அடிக்கப்பட்டுக் கீழே விழுந்து மூர்ச்சை அடைந்து பின்பு எழுந்திருந்து பாபிகள் செல்லும் மார்க்கமாக எமலோகஞ் செல்லுகிறான. எமலோகமானது இப்பூமியிலிருந்து 99,000 யோசனை தூரமிருக்கிறது. அவ்வளவு தூரத்தையும் கடந்து மூன்று முகூர்த்தங்களுக்குள் எமபடர்கள் பாபியை யமலோகம் கொண்டு போகிறார்கள். பாபம் அதிகமாக இருக்குமானால் இரண்டு முகூர்த்தங்களில் இழுத்துக் கொண்டு செல்லுகிறார்கள்.

25–34. அவ்விடம் சென்றபின் ஒரு நரகத்தில் குறைக்கொள்ளி முதலியவைகளைக் கொண்டு

பாபியின் சரீரமானது எரிக்கப்படுகிறது. மற்றொரு இடத்தில் அவன் தன் சரீரத்தை தானே வெட்டிப் புஜிக்கிறான் அல்லது பிறரால், வெட்டிக் கொடுக்கப் பட்டு, தன்னுடைய சரீரத்தின் மாமிசத்தையே புஜிக்கிறான். மேலும் அந்த உலகத்தில் நாய்களும் கழுகுகளும் பாபிகளை ஜீவித்திருக்கும்பொழுதே கொத்தி நரம்புகளை இழுக்கின்றன. சர்ப்பம், தேள், கொசு முதலியவை கடித்து உபத்திரவிக்கின்றன, மேலும், பாபஞ் செய்தவர்கள் புருஷர்களானாலும், ஸ்திரீகளானாலும், புணர்ச்சியாலுண்டாகும் பாபத்தின் பலங்களாகிய அவயங்களைக் துண்டிப்பது, யானை முதலியவைகளைக் கொண்டு முறிக்கச் செய்வது, மலையின் சிகரத்திலிருந்து கீழே தள்ளுவது, ஜலத்தில் மூழ்கச் செய்வது, குழியில் புதைப்பது, முதலிய நரகவேதனைகளை யனுபவிக்கிறார்கள் ஓ அம்ம! நரகமும் (கஷ்டம்) ஸ்வர்க்கமும் (ஸுகமும்) இவ்விடத் திலேயே இருக்கின்றன. நரகத்திலுள்ள யாதனைகள் இவ்விடத்திலும் இருக்கின்றன. (எமலோகத்தில் இருப்பது பொய்யென்று நினைக்கவேண்டாம் என்று கருத்து) சம்சாரத்தில் தன்னுடைய குடும்பத்தையும் தன்னுடைய சரீரத்தையும் போஷித்து மரணம் அடைந்தவன் அவைகளை விட்டுச் செய்த பாபத்தின் பலனாகிய மேற்காட்டிய உபத்திரவங்களை அடைகிறான். இந்தச் சரீரத்தை விட்டபின்பு தானொருவனாக எமலோகஞ் செல்லுகிறான். (பந்துக்களொருவருங் கூட வருகிறதில்லை யென்பது கருத்து) பிராணிகளுக்கு அவனால் செய்யப்பட்ட துரோகத்தாலுண்டாகும் பாபமே அவனுக்கு எமலோக மார்க்கத்தில் பாதேயமாக (கட்டுச்சாதம்) இருக்கிறது. (அதன் பலனை அனுபவித்துக் கொண்டு போகிறான் என்பது

கருத்து) மேலும் அவன் பாபத்தைச் செய்து குடும்பத்தைப் போஷித்ததாலுண்டானதும், தெய்வத்தால் கொடுக்கப்பட்டதுமான பலனை நரகத்தில் அனுபவிக் கிறான், பணம் நஷ்டமான பொழுது அதற்குடையவன் துக்கிப்பதுபோல மிகவும் வருத்தத்தை அடைகிறான். அதர்மத்தையே செய்து குடும்பத்தைப் போஷிப்பவன் அந்த தாமிஸ்ரம் என்னும் கஷ்டமான நரகத்தை அடைகிறான். (நியாயமாகச் சம்பாதித்துக் குடும்பத்தைப் போஷிக்கவேண்டுமென்பது கருத்து) மனித சரீரத்திற்குத் தாழ்ந்த சரீரங்கள் எவ்வளவு இருக்கின்றனவோ, அவைகளைக் கிரமமாக அடைந்து சுத்தனாகி, (பாப பலத்தை அனுபவித்து) திரும்பவும் மனுஷ்ய சரீரத்தை அடைகிறான்.

Released by Maran's Dog, Toronto , Canada

(தொடர்ச்சி)

1–11 ஈசுவரனால் தூண்டப்பட்ட கர்மவசத்தால் ஜந்துவானவன் சரீரத்தை அடையவேண்டி ரேதஸ்ஸாகப் புருஷனிடத்தில் பிரவேசிக்கிறான். அது பின்பு ஸ்திரீயினுடைய கர்பத்தை அடைகிறது. அதன் பிறகு அந்த ரேதஸ்ஸானது ஒரு நாளில் சுக்கலமும் (புருஷனுடைய ரேதஸ்) சோணிதமும் (ஸ்திரீயின் உடையது) மிச்சரமாகிவிடுகிறது. ஐந்து நாட்களில் குமிழிபோல வட்டமாகி விடுகிறது. பத்து நாட்களில் இலந்தைப் பழம் போல் கொஞ்சம் கெட்டியாகிறது. அதன் பிறகு மாமிசமாக முட்டை போலாகிறது. ஒரு மாதமானவுடன் தலை உண்டாகிறது. இரண்டு மாதங்களில், கை, கால் முதலிய அவயவங்களுடன் சரீரம் உண்டாகிறது. மூன்று மாதங்களில் நகங்களும், மயிர்களும், எலும்புகளும், தோல்களும், ஆண் குறி அல்லது பெண்குறி முதலியவைகளும், துவாரங்களும் உண்டாகின்றன. நான்கு மாதங்களில் ஏழுவகையான தாதுக்களும் (இரத்தம், மாமிசம், மஜ்ஜை முதலியவை) ஐந்து மாதங்களில் பசி, தாகங்களும் உண்டாகின்றன. ஆறாவது மாதத்தில் ஜராயுவென்ற நரம்பினால் சுற்றப்பட்டு அந்தக் கர்ப்பமானது மாதாவினுடைய வயிற்றில் வலது பக்கத்தில் அலைந்து கொண்டிருக் கிறது. ஏழாவது மாதத்தில் அந்த ஜீவன் தன்னுடைய முன் ஜன்ம விருத்தாந்தத்தையும், தனக்கு மாயையால் பந்தமேற்ப்பட்டுத் தான்சரீரத்தை அடைந்ததையும் நினைத்துக் கொள்ளுகிறான். மாதாவினால் புஜிக்கப் பட்ட அன்னத்தாலும், பானத்தாலும் அந்தக்

Released by Maran's Dog, Toronto , Canada

தாதுக்கள் விருத்தியடைகின்றன. (ஆப்யாயநீ என்ற ஒரு நாடியின் ஒரு முனை சிசுவின் நாபியில் கட்டப்பட்டு இருக்கிறது. அதனுடைய மற்றொரு முனை ஸ்தீரியினுடைய நரம்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதன் வழியாக ஸ்திரீகளால் புஜிக்கப்பட்டவைகள் சிசுவின் வயிற்றில் செல்லுகின்றன. அதனால் அந்தச் சிசுவானது விருத்தியடைகிறது. (மார்க்கண்டேய புராணம்) மேலும், அந்தச் சிசுவானது அமேத்யம், மூத்திரம் இவைகளுள்ள குழியில் வஸிக்க மனம் இல்லாததானாலும் வேறுகதி இல்லாததனாலும் அநேக புழுக்கள் நிறைந்த அந்தப் பள்ளத்தில் வஸிக்கிறது. அவ்விடத்திலிருக்கும் புழுக்கள் மிகுந்த பசியுள்ளவைகளாகி மிகவும் மெதுவாகிய இந்தச் சிசுவின் சரீரத்தைக் கடிக்கின்றன. அதனால் ஒவ்வொரு க்ஷணத்திலும் இந்தக் குழந்தை மிகுந்த மூர்ச்சையை அடைகிறது. பின்னும், மாதாவினால் புஜிக்கப்பட்ட உறைப்பு, காரல், உஷ்ணம், உப்பு புளிப்பு ஆகிய அன்ன பானம் முதலியவைகள் அந்தச் சிசுவின் சரீரத்தை ஸ்பர்சிக்கும் போது எல்லா அவயவங்களிலும் அதற்கு வேதனை உண்டாகிறது. ஜராயுவினால் கட்டப்பட்டிருப்பதால் கழுத்து, முதுகு ஆகிய இவைகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. வெளியில் நரம்புகள் சுற்றிக் கொண்டிருக்கின்றன. ஆதலால் கூட்டில் அடைக்கப்பட்ட பறவைபோல் தனதிஷ்டப்படி செல்லமுடியாமல் அந்த சிசுவானது கஷ்டப்படுகிறது.

மேலும் அந்த ஜீவன் அப்பொழுது முந்திய கர்ம வசத்தால் அநேக ஜன்மங்களில் தன்னால் செய்யப் பட்ட கர்மங்களை நினைத்துக் கொள்கிறான்.

இப்படி மூச்சு விடுவதற்கும் முடியாமலிருந்து மாத்ரு கர்பத்தில் எவ்வித சௌக்யத்தை அடைகிறான்? (கஷ்டப்படுகிறான் என்று கருத்து) ஏழாவது மாதம் முதல் முன் ஜன்மத்திய ஞாபகமுள்ளவனாகி பிரசவ வாயுவினால் அசைக்கப்பட்டுத் தனக்குச் சகோதரம் ஆகிய (ஒரே வயிற்றிலுண்டானதால்) விஷ்டையில் உண்டாகும் புழுவைப் போல் ஒரே விடத்தில் நிலையாக இருக்கிறதில்லை. தேகத்தையே ஆத்மாவென்று நினைத்தவனும் கர்ப்பவாசத்திலிருந்து பயந்தவனும், ஏழு தாதுக்களால் கட்டப்பட்டவனும் ஆகிய அந்த ஜீவன் தன்னை மாதாவின் கர்ப்பத்தில் ஜனிக்கும்படியாகச் செய்தவராகிய பகவானைப் ப்ரார்த்தித்துக் கைகூப்பி ஸ்தோத்திரம் செய்கிறான்.

13–22 "அசத்தான எனக்கு, தக்கபடி இப்போர்ப் பட்ட கர்ப்பவாசத்தை எவர் உண்டுபண்ணினாரோ, ஜகத்தைக் காப்பாற்றுவதற்காகச் சரீரத்தை யெடுத்துக் கொண்டிருக்கும் அந்தப் பகவானுடைய தாமரை மலர் போன்றவைகளும், பூமியில் ப்ரகாசிக்கின்றவைகளும், பயமற்றவைகளுமான பாதங்களைச் சரணமடைகிறேன். பூதங்கள் இந்திரியங்கள், மனது ஆகிய இவைகள் அடங்கிய தேகமாகப் பரிணமித்திருக்கும் மாயையை ஆசிரயித்து இந்த மாதாவின் வயிற்றில் கர்மத்தால் கட்டப்பட்டவன்போல வஸிக்கும் நான்; துக்கப்படும் என்னுடைய ஹிருதயத்தில் தோன்றுகிறவரும், விகாரமற்றவரும், உபாதி சம்பந்தமற்றவரும், குறைவற்ற ஞானமுள்ளவருமாக இருக்கும் பகவானை நமஸ்கரிக்கிறேன்". (இந்தப் புருஷன் புண்யபாபங்கள் அற்றவன்' என்ற ச்ருதியின்படி சுத்தனாகிய ஜீவனுக்கும் பரமாத்மாவிற்கும் ஏன் இவ்வளவு

பேதமென்றால் அடுத்த ஸ்லோகத்தில் சமாதானங் கூறப்படகிறது.)

ஐந்து பூதங்களைக் கொண்டு செய்யப்பட்டிருக்கும் சரீரத்தால் பொய்யாக மறைக்கப்பட்டவனும், அந்தச் சரீரத்தின் சம்பந்தம் அற்றவனும், இந்திரியங்கள், குணங்கள், சிதாபாசம் ஆகிய இவைகளின் ஸ்வபமாயுள்ளவனுமாகிய நான் எங்கும் தடை படாத மஹிமை உள்ளவரும், எல்லாவற்றையும் அறிந்தவரும், ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவர்களைவிட மேலானவருமான இந்தப் புருஷனை நமஸ்கரிக்கிறேன். (ஜீவன் அவித்தையுள்ளவன். பரமாத்மா அவித்தை யற்றவர். அதுவே இருவர்களுக்குமுள்ள பேதம். எவருடைய மாயையால் ஜீவன் தன்னுடைய நிஜ ரூபத்தைமறந்து, குணங்களாலேற்படும் கர்ம பந்தமுள்ள சம்சார மார்க்கத்தில் அதிலுண்டான கஷ்டங்களை அனுபவித்துச் சஞ்சரிக்கிறானோ, அந்தப் பகவான் உடைய அனுக்கிரகத்தைக் காட்டிலும் வேறு உபாயத் தால் தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்வான்? ஞானத்தால் கர்ம பந்தம் விலகுமானாலும் அந்த ஞானம் ஈசுவரனுடைய அனுக்கிரகத்தாலேயே உண்டாக வேண்டுமாகையால் ஈசுவரனை நமஸ்கரிக்க வேண்டுமென்று கருத்து).

மேலும், ஸ்தாவரங்களிலும், ஜங்கமங்களிலும் அந்தர்யாமியாக இருப்பவராகிய அந்தத் தேவனைக் காட்டிலும் வேறு யாரால் எனக்கு முக்காலத்திய அறிவு கொடுக்கப்பட்டது? (அவராலேயே கொடுக்கப் பட்டது). ஜீவரூபமாகிய கர்ம மார்க்கத்தை அனுசரிப் பவர்களான நாம் மூவகையான தாபத்தை நிவிருத்திக்

கொள்வதற்காக அவரையே ஸேவிப்போம். ஓ பகவன்! இந்த மாதாவின் வயிற்றில் அமேத்யம் மூத்திரம் இவைகளில் விழுந்து ஜாடராக்கினியால் மிகவும் கொதித்ததேகமுள்ளவனும் வெளியில்போக விரும்பி மாதங்களை எண்ணிக் கொண்டு இருப்பவனுமாகிய இவனை எப்பொழுது இவ்விடத்திலிருந்து வெளிப் படுத்துவீர்? ஓ ஈச! மிகுந்த தயையுள்ளவரும், ஒப்பற்றவருமாகிய நீர் (தனக்குத் தானே உபமானம்) இவனுக்கு இம்மாதிரியான ஞானத்தைக் கொடுத்தீர் அல்லவா? அப்போர்ப்பட்ட நீர் உம்மால் செய்யப்பட்ட உபகாரத்தாலேயே சந்தோஷத்தை அடைய வேண்டும்.

நீர் செய்த உபகாரத்திற்குப் பதில் அஞ்சலியைவிட வேறொன்றும் செய்யமுடியாது. ஏழு நரம்புகளால் கர்ப்ப வாசத்தை அடைந்த பசு முதலியவை தங்கள் உடைய தேஹத்திலுள்ள சுக துக்கங்களை மட்டும் தெரிந்து கொள்ளுகின்றன. நான் உம்மால் கொடுக்கப் பட்ட ஞானத்தால் சமம், தமம் முதலியவைகளுள்ளவன் ஆகிய போக்தாபோல் தோன்றும் புராண புருஷராகிய உம்மை வெளியிலும், ஹிருதயத்திலும், நேரிலும் தரிசிக் கிறேன். (பசு முதலியவைகளுக்கு இவ்விதத் தரிசன மில்லை) ஓ விபுவே! பூமியானது பாழும் கிணற்றிற்கு ஒப்பானது. அதனை யடைந்தவுடன் தேவராகிய தங்களுடைய மாயையானது பிடித்துக் கொள்ளுகிறது. உடனே தேஹத்தில் நானென்ற புத்தியும், புத்திரன், மித்திரன் முதலியவைகளில் என்னைச் சார்ந்தவையென்ற எண்ணமும் உண்டாகிறது. அதனால் ஜீவன் சம்சார சக்கரத்தை அடைகிறான். ஆனதால் இந்தக் கர்ப்ப வாசம் மிகவும் கஷ்டமானாலும் வெளியில் செல்ல எனக்கு இஷ்டமில்லை. ஆகையால் தைர்யமாக

நான் இவ்விடத்திலேயே வஸித்து ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பாதங்களை ஸேவித்து பலவகையான ஜன்மங்கள் திரும்பவும் நேராம லிருக்கும்படி புத்தியைக் கொண்டு ஆத்மாவைச் சம்சாரத்திலிருந்து கரைசேர்க்கிறேன் என்று ஜீவன் சொல்லுகிறான்.

23–51 இப்படி நிச்சய புத்தியுடனிருக்கும் அவனைப் பத்து மாதங்கள் சென்றவுடன் பிரசவ வாயுவானது வெளிப்படுத்துவதற்காகத் தலைகீழாகத் திருப்பிவிடுகிறது. பின்பு அவன் தலைகீழாக இருந்து மிகுந்த வருத்ததுடன் கர்ப்பத்திலிருந்து வெளியில் வருகிறான். அப்பொழுது முந்திய எண்ணங்களெல்லாம் மாறி எல்லாம் மறந்துபோகின்றன. மூர்ச்சை அடைந்து பூமியில் விழுகிறான். மேலும் ஸ்திரீயினுடைய இரத்தத்தால் பூசப்பட்டு அமேத்தியத்திலுண்டாகும் புழுப்போலத் துடிக்கிறான். விவேகமற்றவனாகப் புத்தி, மயக்கம் மடைந்து அழுகிறான். மேலும், அந்தச் சிசுவைப் போஷிப்பவர்கள் அதன் அபிப்பிராயத்தை அறியாமல் அதற்கு இஷ்டமில்லாத ஆகாரம் முதலியவைகளைக் கொடுக்கிறார்கள். அப்பொழுது அந்த ஜீவன் அதனை வேண்டாமென்று சொல்லச் சக்தியற்றவனாயிருக்கிறான். பின்னும் வியர்வை நாற்றமுள்ள அசுத்தப்படுக்கையில் படுக்க வைக்கிறார் கள். அப்பொழுது அவன் உட்காருவதற்கும், எழுந்திருப்பதற்கும், அசைவதற்கும் முடியாமல் சொரிந்து கொள்வதற்கும் முடியாமல் அழுகிறான்.

இப்படி ஞானமற்றவனாக இருக்கும் மெதுவான தோலைக் காட்டுக் கொசுக்களும், மூட்டுப் பூச்சிகளும், கொசுக்களும் கடிக்கின்றன. இப்படி

பால்ய வயதில் (ஐந்து வயது வரையில்) துக்கத்தை அனுபவித்து, பௌகண்டத்தில் (16 வயது வரையில்) மிகுந்த கஷ்டத்தை அனுபவித்து யௌவன வயதை அடைந்தும் தன்னுடைய இஷ்டம் நிறைவேறாமல் துக்கமடைந்து அறியாத் தன்மையால் விசேஷ கோபம் உள்ளவனாகிய, தேகத்துடன் விருத்தி யடைகிற அபிமானத்தாலும், கோபத்தாலும் ஆத்ம நாசத்திற்காகக் காமியாகப் பிறருடன் விரோதம் செய்துகொள்ளுகிறான்.

ஐந்து பூதங்களால் ஏற்பட்ட சரீரத்தில் அக்ஞனாகிய ஜீவன் அடிக்கடி "நான் என்னுடையது" என்ற அபிமானத்தை அடைகிறான். அதனால் அந்த சரீரத்தைப் போஷிக்கவேண்டி கர்மங்களைச் செய்கிறான். பின்பு அந்தக் கர்மங்களால் கட்டப்பட்டு சம்சாரத்தை அடைகிறான். அந்தக் கர்மங்களே இவனுக்குத் துக்கத்தை உண்டுபண்ணிக்கொண்டு இவனை அனுசரிக்கின்றன. ஜீவன் அவித்தையாலும், கர்மத்தாலும் கட்டப்படுகிறான். தவிரவும் நல்மார்க்கத் திலிருப்பவர்களானாலும், தங்கள் வயிற்றை நிறைப்பவர்களும், ஸ்திரீ சங்கமம் செய்வதிலேயே விருப்பமுள்ளவர்களுமான பிராணிகளுடன் சேர்ந்து அவைகளில் ஆசைகொள்வார்களேயாகில் முன்னே காட்டியபடி நரகத்தை அனுபவிக்கிறார்கள். அசத்துக்களுடன் சேருவதால் சத்யம், சௌசம் (சுத்தனாக இருப்பது), தயை, மௌனம், புத்தி, பரமாத்ம விஷய ஞானம், வெட்கம், தனதான்ய முதலிய சம்பத்து, கீர்த்தி, பொறுமை மனத்தை அடக்குவது, வெளியிலிருக்கும் இந்திரியங்களை அடக்குவது மேலான தன்மை ஆகிய இவைகள்

யாவும் குறைகின்றன; ஆனதால் மனத்தை அடக்காத வர்களும் மூடர்களும் தேகத்தையே ஆத்மாவென்று நினைத்தவர்களும் விளையாடுவதற்காக வளர்க்கப்படும் மிருதங்கள்போல் ஸ்திரீகளுக்கு சுவாதீனப்பட்டவர் களும், துக்கிக்கத் தக்கவர்களுமான அசாதுக்களுடன் சேரக்கூடாது.

ஸ்திரீயினுடைய சேர்க்கையாலும், ஸ்திரீகள் இடத்தில் விசேஷ ஆசை சொண்டவனுடைய சேர்க்கையாலும், மோகமும், பந்தமும், எவ்வளவு உண்டாகுமோ அவ்வளவு மற்றவர்களுடைய சேர்க் கையால் உண்டாகிறதில்லை. (ஸ்திரீகளிடம் ஆசை வைப்பது அதிகக் கெடுதியை கொடுக்கும் என்பது கருத்து).

முன்னொருகால் ப்ரஹ்மதேவர் தம்முடைய புத்திரியின் அழகைப் பார்த்து மோகித்து அவளிடம் ஆசை கொண்டார். அப்பொழுது அவள் மான் வேடங்கொண்டு ஓடினாள். ப்ரஹ்மதேவரும் மான் உருவத்தைத் தரித்து வெட்கமில்லாதவராகி அவள்பின் சென்றார். அப்படி இருக்க அந்த ப்ரஹ்மதேவரால் சிருஷ்டிக்கப்பட்ட மரீசி முதலியவர்களால் உண்டு பண்ணப்பட்ட காசியபர் முதலியவர்களால் சிருஷ்டிக்கப்பட்ட தேவர்கள், மனிதர்கள் முதலியவர் களுக்குள் ஸ்ரீ நாராயண மகரிஷியைத் தவிர வேறு யார் தான் ஸ்திரீயாகிய மாயையில் இழுக்கப் படாதவர்கள் ? ஸ்திரீமயமாகிய என்னுடைய மாயையின் பலத்தைப் பாருங்கள். திக்குகளை ஜயிப்பவர்களானாலும் ஸ்திரீயினுடைய புருவ நெரித்தலால் ஜயிக்கப்படுகிறார்கள். ஆனதால் யோக

சித்தியை அடைய விரும்பிய என்னைச் சேவித்து, அதனால் ஆத்ம லாபத்தை அடைந்தவன் ஒரு பொழுதும் ஸ்திரீகளிடத்தில் ஆசை வைக்கக்கூடாது.

மோக்ஷத்தை விரும்பியவனுக்கு ஸ்திரீகள் நரகத்தைக் கொடுக்கக்கூடியவர்கள் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். தேவனால் உண்டு பண்ணப்பட்ட மாயையாகிய ஸ்திரீ யானவள் சிசுருஷை பண்ணுவதுபோல் புருஷனுடைய சமீபம் வருகிறாள் அல்லவா ? அதனைத் தனக்கு மிருத்யுவென்று நினைக்க வேண்டும். மேலும் அவள் புற்களால் மறைக்கப் பட்ட கிணற்றுக்கொப்பானவள். ஸ்திரீயையே நினைத்துக் கொண்டு மரணமடைந்தவன் ஸ்திரீ ஜன்மத்தை அடைகிறான். வேடனுடைய கானமானது மிருகத்திற்கு எப்படிக் கெடுதியை உண்டுபண்ணு கிறதோ அப்படி தனம், புத்திரன்,வீடு முதலியவை தனக்கு அனுகூலங்கள் போலத் தோன்றினாலும் அவைகளைத் தெய்வத்தாலேற்படுத்தப்பட்ட மிருத்யுக்களென்றே நினைக்க வேண்டும்.

மேலும், இந்த ஜீவன் தனக்கு உபாதியாகிய தேஹத்துடன் (லிங்க சரீரத்துடன்) எப்பொழுதும் கர்மங்களைச் செய்து கொண்டு அவைகளின் பலனை அனுபவிக்கிறான். ஜீவனுக்கு உபாதியாயிருக்கும் லிங்க தேகமானது ஜீவனை அனுசரிக்கிறது. பூதங்கள், இந்திரியங்கள், மனது ஆகிய இவைகள் அடங்கியதே தேகம். (ஜீவனுக்குப் போகத்தை அனுபவிக்குமிடம்.) அந்தத் தேஹமானது தன்னுடைய காரியத்தைச் செய்யச் சக்தியற்றதாக விருப்பது மரணம் எனப்படுகிறது. அந்தத் தேஹத்தில் உற்பத்தியே

ஜனனமெனப்படுகிறது; சக்ஷீரிந்திரியத்திற்கும் இருப்பிடம் ஆகிய நேத்திரகோளத்தில்உருவம் முதலியவைகளைப் பார்க்க எப்படிச் சக்தியில்லையோ, அப்படியே சக்ஷீரிந்தியத்திற்கும் சக்தியில்லை. இவ்விரண்டிற்கும் எப்படி யோக்கியதை இல்லையோ அப்படியே திருஷ்டாவாகிய ஜீவனுக்குப் பார்க்கும் தன்மையில்லை. (ஸ்தூலதேகத்தின் நாசத்தால் லிங்க சரீரத்திற்குக் கெடுதியுண்டாகிறது. அதுவே ஜீவனுக்கு மரணமென்று சொல்லப்படுகிறதே ஒழியச் ஸ்வபாவத்திலில்லை.) ஆனதால் ஜனனமரணங்களில் பயப்பட வேண்டாம். புத்திரன் பிறந்தது முதலியதால் சந்தோஷத்தை அடையவேண்டாம். ஜீவனுடைய தன்மை இம்மாதிரியென்றா அறிந்து, ஒன்றிலும் ஆசை வைக்காமலிருக்கவேண்டும். நன்றாக விசாரித்து உண்மையை அறிந்ததும், யோகம், வைராக்யம் ஆகிய இவைகளுள்ளதுமான புத்தியைக் கொண்டு தேஹம் முதலியவைகளில் அபிமானம் வைக்காமல் சஞ்சரிக்க வேண்டும். இவ்வுலகம் மாயையால் செய்யப்பட்டு இருக்கிறது.

நோட்:

இந்த அத்தியாயத்தில் **விஜயத்வஜீய** வியாக் யானத்தின்படி 51 சுலோகங்களிருக்கின்றன. மற்ற வியாக்யானங்களில் 49, 50 இந்த இரண்டு சுலோகங்களும் காணப்படவில்லை. அவைகளின் அர்த்தமாவது: புருஷனுடைய இந்திரியங்கள் தங்கள் தங்களுடைய சுகதுக்கங்களை அறியுமேயன்றி மற்றவையின் சுகதுக்கங்களை எப்படி அறிகிறதில்லையோ,

(நேநித்திரமானது காதின் சுகத்தை அறியாது) அப்படி ஈசுவரனுடைய அம்சங்களான ஜீவர்கள், பிறருடைய வைகளைத் தெரிந்துக் கொள்ளுகிறதில்லை. தேஹம் முதலியவைகளில் பற்றுதலில்லாத ஜீவனுக்கு ஞானமே புருஷார்த்தமாகிறது. சுகதுக்கம் முதலியவை ஆத்மாவிற்கு சம்பந்தமில்லாதவை. அவை தேகத்திற்கும் சம்பந்தமில்லாதவை.

இந்த முப்பத்தோறாவது அத்தியாயத்தை 32 ஆவதாகவும், இந்த ஸ்கந்தம் 14 ஆவது அத்தியாயம் உள்ளதாகவும் விஜயத்வஜீய வியாக்யானத்துடன் தேவநாகரியில் அச்சிட்டிருக்கும் புத்தகத்தில் காணப்படுகிறது. அத்தியாயக் கணக்கு மாறினாலும், ஸ்லோகத்திற்கு அர்த்தம் விடாமல் எழுதப்பட்டிருக் கிறது.

அத்தியாயம்–32

உத்தம கதி

எவன் கிருஹஸ்தனாகவிருந்து அதற்குரியவைகளான தர்மங்களையும், காமம், அர்த்தம் இவைகளையும் விரும்பி அவைகளை அனுஷ்டிக்கிறானோ எவன் பகவானை ஆராதிப்பதாகிய தர்மத்தை விட்டுக் காமத்தால் மூடனாகி, பகவானை விடக்கீழான தேவர்களையும், சிரத்தையுடன் பிதிருக்களையும் பூஜிக்கிறானோ, அவர்களை உத்தேசித்து விரதங்களைச் செய்கிறானோ. அந்தப் புருஷன் சந்திரலோகம் சென்று அவ்விடத்தில் புண்ய பலனை அனுபவித்துத் திரும்பி பூலோகம் வருகிறான். அனந்தாசனராகிய ஸ்ரீமகாவிஷ்ணு ஆதிசேஷனாகிய படுக்கையில் படுத்துத் தூங்கும் போது மேற்காட்டிய கிருஹஸ்தர்கள் செல்லக்கூடிய லோகமும் நாசமடைகிறது. (காம்யமான கர்மத்தைச் செய்தவர்களின் கதி சொல்லப்பட்டது.)

5–7. எவர்கள் காமத்தை விரும்பியாவது, அர்த்தத்தை விரும்பியாவது தங்கள் தர்மத்தை அனுஷ்டிக்கிறதில்லையோ எவர்கள் ஒன்றிலும் ஆசைப்படுகிறதில்லையோ, செய்த கர்மங்களைப் பகவானிடம் சமர்ப்பிக்கிறார்களோ, மிகவும் சாந்தர் களோ, சுத்தமான மனதுள்ளவர்களோ மோட்சத்திற்கு உபயோகமான தர்மத்தையே அனுஷ்டிப்பவர்களோ, மமதை அற்றவர்களோ, அஹங்காரமற்றவர்களோ அவர்கள் சுத்தமான ஸ்வதர்மத்தை அனுஷ்டித்து அதனால் சித்த சுத்தியை அடைந்தவர்களாகி சூரியமண்டலத்தின் வழியாக பரிபூரணராகிய

புருஷனை அடைகிறார்கள். அந்தப் புருஷன் காரணத்திற்கும் காரியத்திற்கும் அதிபதி; எல்லாவற்றிற்கும் காரணமாயிருப்பவர்; இந்த ஜகத்தைப் படைத்தவர்; அதனைச் ஸம்ஹரிப்பவர்.

8–10. ஹிரண்யகர்ப்பரை உபாசிப்பவர்கள் ப்ரஹ்மதேவருடைய ஆயுளான இரண்டு பரார்த்தம் வரையிலிருக்கக் கூடிய லோகத்தை அடைகிறார்கள், முக்குண ஸ்வரூபியும், மேலானவருமான ப்ரஹ்மதேவர் பூமி, ஜலம் தேஜஸ் வாயு, ஆகாசம், மனஸ், இந்திரியங்கள், அதன் விஷயங்கள், அகங்காரம் ஆகிய இவைகளுடன் கூடிய பிரஹ்மாண்டத்தை உபஹரிக்க விரும்பி, இரண்டு பரார்த்தங்களுக்குப் பிறகு அவ்யாகிருதி (சூட்சுமமான) ஸ்வரூபத்தை எப்பொழுது அடைகிறாரோ, அப்பொழுது ஹிரண்யகர்ப்பரை உபாசிப்பவர்களும் மனத்தை அடக்கினவர்களும், பிராணனை ஜயித்தவர்களும் வைராக்கியம் அடைந்தவர்களும் அபிமானமற்றவர்களுமான யோகிகள் பரமானந்த ஸ்வரூபியும் மேலானதும் புராண ஸ்வரூபமுமான பரப்ரஹ்மத்தை அந்த ஹிரண்யகர்பருடன் அடைகிறார்கள்.

11–16. ஆனதால், ஸகல பிராணிகளுடைய ஹ்ருதய கமலத்தில் வசிக்கும் அந்தப் பகவானிடத்தில் மனத்தைச் செலுத்தி அவரை நீ உபாசிக்கவேண்டும். அவருடைய மஹிமை உன்னால் என்னிடமிருந்து அறியப்பட்டதே. தாவரங்கள், ஜங்கமங்கள் ஆகிய இவைகளுக்கு முந்தியவரும் வேதகர்ப்பருமாகிய ப்ரஹ்மதேவர் யோகத்திற்கு அதிபதிகளும் யோகத்தை வெளிப்படுத்தியவர்களுமான மஹரிஷிகளுடன்

ஸனகர் முதலியவர்களுடனும் பேதஞானத்தாலும் அபிமானத்தாலும் பலனை உத்தேசியாமல் அனுஷ்டித்த கர்மங்களாலும் கர்த்தா வென்ற எண்ணத்தாலும் தங்களுடைய கர்மத்தின் பலனாகிய ஐசுவரியத்தை அனுபவித்துப் பிரளய காலத்தில் ஸகுணப் ப்ரஹ்மத்தை அடைந்து ஈச்வரரூபியான காலத்தின் மஹிமையால் குணங்கள் ஒன்றோடொன்று சேரும்போது (ஸ்ருஷ்டி காலத்தில்) முன்போல உண்டாகிறார். (ப்ரஹ்மதேவரும் சனகர் முதலியவர்களும் இம்மாதிரி பேத ஞானத்தால் தங்கள் தங்கள் அதிகாரமாகிய ஸம்சாரத்தையடைகிறார்கள். மற்றவர்கள் ஸம்ஸாரத்தை அடைகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை என்று கருத்து.)

16–22. எவர்கள் கர்மத்திலேயே ஆசையுள்ளவர்களாகி மிகுந்த சிரத்தையுடன் காம்ய கர்மங்களையும், நித்ய கர்மங்களையும் அனுஷ்டிக்கிறார்களோ. மேலும் எவர்கள் ரஜோ குணமுள்ள மனதுள்ளவர்களாகியும். காமத்தால் நிறைந்த சித்தமுள்ளவர்களாகியும் இந்திரியங்களுக்கும் வசப்பட்டவர்களாகியும் கிருஹஸ்த தர்மத்திலேயே மிகுந்த பிரீதியுடன் பிதிருக்களைப் பூஜிக்கிறார்களோ. தர்மம் அர்த்தம் காமம் ஆகிய இவைகளையே விரும்புகிறார்களோ. கானம் பண்ணக் கூடிய மிகுந்த மாகாத்மியமுள்ள ஸ்ரீமஹா விஷ்ணு வினுடைய கதையைக் கேட்பதில் ஆசையில்லாதவர்களோ பின்னும் நாசமற்றவராகிய பகவானுடைய கதாமிருதத்தை விட்டுக் கெட்ட கதைகளைக் கேட்கிறார்களோ, அவர்கள் தெய்வத்தால் கெடுக்கப் பட்டவர்கள்; அமேத்யத்தைப் புஜிக்கும் பன்றிகளுக்கு ஒப்பானவர்கள். கர்ப்பாதானம் முதல் மரணத்திற்குப் பிறகு செய்யக்கூடிய ஸமஸ்காரம் வரையிலுள்ள

கர்மங்களை அனுஷ்டித்த அந்த ஜனங்கள் தக்ஷிண மார்க்கமாகப் பிதிருலோகம் செல்லுகிறார்கள்; அவ்விடத்தில் தங்களுடைய புண்ய கர்மத்தின் பலனை அனுபவித்து அந்தப் புண்யம் நசித்தவுடன் திரும்பவும் இவ்வுலகத்திற்கு வந்து தங்கள் புத்திராதிகளிடத்தில் ஜனிக்கிறார்கள்.

22–43. ஆனதால் மிகுந்த பிரீதியுடன் பகவான் உடைய குணங்களைக் கேட்பது முதலிய பக்தியால் பரமேசுவரைப் பஜனம் செய். அவர் சேவிக்கத் தகுந்த பாதாரவிந்தங்களுள்ளவர்! ஸ்ரீ வாசுதேவரிடத்தில் பக்தி செய்யப்படுமானால் அது சீக்கிரத்தில் வைராக்கியத்தையும் பரப்ரஹ்ம தரிசனத்திற்கு உபயோகமான ஞானத்தையும் உண்டுபண்ணுகிறது; எந்தக்காலத்தில். இந்தப் பகவத் பக்தனுடைய சித்தமானது இந்திரிய வியாபாரங்களைக் கொண்டு ஒரே மாதிரியான விஷயங்களில், இது பிரியமானது, இது பிரியம் இல்லாதது என்ற பேதத்தை அடையாமலிருக்குமோ, அப்பொழுது அவன் ஸமதிருஷ்டியுள்ளதும், ஆசையற்றதும் ஹேயம் (விடக்கூடியது) உபாதேயம் (கிரஹிக்கக்கூடியது) இவைகளற்றதுமான அகிடபதத்தைப் (ஆனந்த ஸ்வரூபியாயிருப்பது) பார்க்கிறான்; ஞானமே பரப்ரஹ்மம் முதலிய சப்தங்களால் சொல்லப்படுகிறது; ஈசுவரனும் பரமாத்மாவுமான புருஷனொருவரே பார்க்கிறவர், பார்க்கப்படுகிறது, அதற்குச் சாதனங்கள் ஆகிய பலவகையாகத் தோன்றுகிறார்; யோகிகள் யோகத்தை நன்றாக அனுஷ்டித்து. அதனால் பிரபஞ்சத்தில் ஆசையை ஒழிக்கிறார்கள்; அதுவே அவர்கள் விரும்பிய யோகத்தின் பலனாகும். அகங்காரமென்பது ஒன்றானாலும் குணங்களால்

எப்படி மூன்றாக இருக்கிறதோ, அதே பூத ஸ்வரூபத்தால் எப்படி ஐந்து வகையுள்ளதோ, இந்திரிய ஸ்வரூபத்தால் பதினோரு வகையுள்ளதாக இருக்கிறதோ அண்டத்தை சரீரமாயுடைய ஜீவ ஸ்வரூபியாயும் இருக்கிறதோ மஹத்தத்துவம் முதலியவைகளால் உண்டுபண்ணப்பட்ட அந்த அண்டத்திலிருந்து எப்படி ஜகத்து தோன்றுகிறதோ, அப்படியே ஞான ஸ்வரூபியாகிய நிர்க்குண ப்ரஹ்மம் ஒன்றானாலும் அதுவே பகிர்முகங்களான (விஷயத்தில் செல்லுகிற) இந்திரியங்களைக் கொண்டு சப்தம் முதலிய தர்மங்களுள்ள பிரபஞ்சமாகத் தோன்றுகிறது. (உண்மையில் பிரபஞ்சமில்லை, மித்யையேயாம் என்று கருத்து) எப்பொழுது சிரத்தையுடனும், பக்தியுடனும் யோகத்தை அப்யஸித்து; அதனால் மனத்தை யொருவகைப்படுத்தி, ஆசைகளை யொழித்தது எவன் வைராக்கியத்தை அடைகிறானோ அவனுக்கு மேல் காட்டிய விஷயம் புலப்படும், (ப்ரம்ஹம், ஸத்யம், ஜகத் மித்யை என்பது.)

ஓ பூஜிக்கத்தக்கவளே! எதனால் பிரகிருதி புருஷன் ஆகிய இவர்களுடைய உண்மை தெரியுமோ, அப்படிப்பட்ட ஆத்ம ஞானத்தை உனக்குச் சொன்னேன்; நிர்க்குணமான ஞானயோகத்திற்கும், என்னையே ஆராதிப்பதாகிய பக்தி யோகத்திற்கும், பகவான் என்ற சப்தத்தின் அர்த்தமே பலனாகிறது அநேக குணங்களுக்கு ஆசிரயமாகிய திரவ்யமானது இந்திரியங்களால் பலவகையாகக் கிரஹிக்கப்படுவது போல் (பால் முதலிய வஸ்துக்கள் உருவத்திற்கும், ரசத்திற்கும், ஸ்பரிசத்திற்கும் ஆசிரயமாக இருக்கிறது. அது கண்ணால் வெளுப்பென்றும், நாக்கினால்

மதுரமென்றும் துவக்கினால் குளிர்ந்ததென்றும் கிரஹிக்கப்படுகிறதென்று கருத்து). பகவான் ஒருவர் ஆனாலும் சாஸ்திர மார்க்கங்களால் பலவகையாகக் கிரஹிக்கப்படுகிறார்; யாகங்களாலும். பூர்த்தங்களாலும் (குளம் கிணறு வெட்டுவிப்பது முதலியவை), தானத்தாலும் தபஸினாலும், வேதாத்தியயானத்தாலும், மீமாம்ஸையாலும், (தியானம்) மனத்தை அடக்குவதாலும் இந்திரியங்களைக் கெட்ட காரியத்தில் செல்ல ஒட்டாமல் தடுப்பதாலும், கர்ம சன்யாசத்தாலும் பலவகையான அங்கங்களுள்ள யோகத்தாலும் பக்தி யோகத்தாலும் காம்ய கர்மங்கள் நிஷ்காம கர்மங்கள் ஆகிய பிரவிருத்தி, நிவிருத்தி தர்மங்களாலும் ஆத்மாவின் உண்மையைத் தெரிந்து கொள்வதாலும், திருடமான வைராக்கியத்தாலும், ஸகுணராயும், நிர்க்குணராயும், தாமாகப் பிரகாசிப்பவருமான பகவான் அடையப்படுகிறார். நான்கு வகையுள்ள பக்தி யோகத்தை உனக்கு உபதேசித்தேன்; எது பிராணி களுக்குள் ஒடிக்கொண்டிருக்கிறோ (ஜனன மரணத்தை உண்டு பண்ணுகின்றதோ) அந்த அறியமுடியாத கதியுள்ள காலத்தின் ஸ்வரூபத்தையும் உனக்குச் சொன்னேன். ஓ அம்மா! எதனை அடைந்து ஜீவன் தன்னுடைய ஸ்வரூபத்தை மறந்து விடுகிறானோ அவித்தையாலும் கர்மங்களாலும் உண்டு பண்ணப் பட்ட பலவகையான அந்த ஸம்ஸாரத்தையும் நிரூபித்தேன் இதனைத் துஷ்டனுக்கு உபதேசிக்கக் கூடாது.

வணக்கமில்லாதவனுக்குச் சொல்லலாகாது, கர்வம் உள்ளவனுக்கும் துராசாரமுள்ளவனுக்கும் டம்பத் திற்காகத் தர்மத்தை அனுஷ்டிப்பவனுக்கும், அதிக

ஆசையுள்ளவனுக்கும், வீடு முதலியவைகளில் பற்றுள்ள புத்தியுள்ளவனுக்கும், என்னிடத்தில் பக்தியில்லாத வனுக்கும், என்னுடைய பக்தர்களைத் துவேஷிப் பவனுக்கும் ஒருபொழுதும் உபதேசிக்கக்கூடாது. சிரத்தையுள்ளவனும் பக்தனும் வணக்கமுள்ளவனும் அசூயையற்றவனும், பிராணிகளிடத்தில் மைத்திர முள்ளவனும் பெரியோர்களுக்குச் சிசுரூஷை செய்பவனும். பாஹ்ய விஷயங்களில் வைராக்கியம் அடைந்தவனும் சாந்தமாகிய மனமுள்ளவனும் ஞானம் உள்ளவனும் மாத்ஸரியமற்றவனும். சுத்தனுமாக இருப்பவனே இதனைத் தெரிந்து கொள்ளும் அதிகாரியாவான். எவனுக்கு நான் மிகவும் மித்திரனோ, அவனும் அதிகாரியாவான், ஓ அம்மா! எவன் என்னிடத்தில் மனத்தைச் செலுத்தி. ஒருதரமாவது இதனைக் கேட்கிறானோ தன் வாக்கினால் உச்சரிக்கிறானோ அவனும் என்னுடைய பதத்தை (அடைவான்). இது நிச்சயம்.

அத்தியாயம் 33

தேவஹூதி ஜீவன் முக்தியடைந்தது

கர்த்தமருடைய பத்னியாகிய தேவஹூதியானவள் கபிலருடைய வார்த்தையைக் கேட்டு மோஹமாகிய ஆவரணம் நீங்கியவளாகி, தத்துவ விஷயங்களால் அடையாளமிடப்பட்ட ஞானத்தைக் கொடுப்பவரான அந்தப் பகவானுக்கு நமஸ்காரஞ் செய்து ஸ்தோத்திரம் செய்தாள். உம்முடைய கொப்பூழில் தோன்றிய தாமரை மலரில் உண்டான ப்ரஹ்மதேவர் ஸிருஷ்டி காலத்தில் ஜலத்தில் சயனஞ் செய்து கொண்டும் பூதங்கள், இந்திரியங்கள், அதன் விஷயங்கள் ஆகிய இவைகளடங்கியதும், குணங்களுடைய ப்ரவாகம் உள்ளதும், காரிய காரணங்களுக்குக் காரணமுமான உம்முடைய திவ்ய சரீரத்தை தியானஞ் செய்தார். (உம்முடைய பிரசாதத்தால் ஸிருஷ்டி சக்தியை அடைந்தாரென்பது கருத்து) அந்தப் பகவானாகிய நீரே குணங்களுடைய ப்ரவாஹத்தால் பிரிக்கப்பட்ட சக்தியுள்ளவராகி உலகத்தைப் படைப்பது முதலியவைகளைச் செய்கிறீர்.

அந்த நீர் கிரியையற்றவர், ஸத்ய ஸங்கல்பமுள்ளவர்; ஜீவர்களுக்கு அதிபதி; ஊஹிக்க முடியாத அளவற்ற சக்தியுள்ளவர்; ப்ரளயகாலத்தில் இந்த ஜகத்து யாவும் எவருடைய வயிற்றிலிருந்ததோ, அந்தநீர் இந்த என்னுடைய வயிற்றில் எப்படி வஸித்திருக்கிறீர். மேலும் அப்போர்ப்பட்ட நீர் ஆலிலையில் ப்ரளய காலத்தில் எப்படி ஒருவராகச் ஸயனஞ் செய்து கொண்டிருந்தீர்? பின்னும் அந்த நீர் கால் விரலை வாயில் வைத்துக் கொள்ளும் சிசுவாக இருக்கிறீர். இதெல்லாம்

மாயையேயாம். ஓ விபுவே! நீர் வராஹம் முதலியவைகளாக அவதரித்ததுபோலத் துஷ்டர்களைச் சிக்ஷிப்பதற்காகவும், பக்தர்களைக் காப்பாற்றுவதற்காகவும், ஞான மார்க்கத்தைக் காண்பிப்பதற்காகவும் இப்பொழுது சரீரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறீர்.

ஓ பகவன்! உம்முடைய திவ்ய நாமதேயங்களைப் பிறர் சொல்லக் கேட்பதாலும், தன் வாக்கினால் உச்சரிப்பதாலும் உம்மை நமஸ்கரிப்பதாலும், உம்மை ஸ்மரிப்பதாலும் நாய் மாமிசத்தைப் புஜிப்பவன் ஆனாலும் ஜ்யோதிஷ்டோமம் முதலிய் யாகங்கள் செய்யத் தகுந்தவனாக (சுத்தனாக) ஆகிறான்; அப்படியிருக்க உம்மை நேரில் தரிசித்தவன் சுத்தனாகிறான் என்பதில் என்ன சந்தேகம்? (உம்மைத் தரிசித்ததால் நான் கிருதர்த்தையாக ஆனேன் என்று கருத்து.) எவனுடைய நாக்கின் நுனியில் உம்முடைய திவ்ய நாமங்களிருக்கின்றனவோ (நாமங்களை உச்சரிக்கின்றானோ), அவன் நாய் மாமிசத்தைப் புஜிக்கும் தாழ்ந்தவனானாலும், உம்முடைய நாம பஜனத்தால் மேலானவனாகிறான். எவர்கள் உம்முடைய நாமங்களை உச்சரிக்கிறார்களோ அவர்களே தவஞ் செய்தவர்கள்; ஹோமம் செய்தவர்கள்; புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தவர்கள், பரப்ரஹ்மம், விஷயங்களில் செல்லாமல் ஸ்திரமாக விருக்கும் மனத்தில் தியானிக்கக் கூடியவர்; தம்முடைய தேஜஸால் குணங்களை அடக்கினவர்; வேதகர்ப்பர்; ஸ்ரீ மகாவிஷ்ணு, அப்படிப்பட்ட கபிலராகிய உமக்கு நமஸ்காரஞ் செய்கிறேன்.

9–11 இப்படி தேவஹூதியால் துதிக்கப்பட்ட

கபிலரென்ற பரமபுருஷன் தம் தாயாரிடத்தில் பிரீதியுள்ளவராகி அவளை நோக்கி, "ஓ அம்ம! இஃதுவாய் அனுஷ்டிக்கக்கூடியதும், என்னால் உபதேசிக்கப்பட்டதுமான மார்க்கத்தை அனுஷ்டித்துச் சீக்கிரத்தில் ஜீவன் முத்தியை யடையப் போகிறாய்; என்னால் உபதேசிக்கப்பட்டதில் மிகுந்த சிரத்தை வைக்க வேண்டும். இது ப்ரஹ்மிஷ்டர்களால் அனுஷ்டிக்கப்பட்டது; இதை அனுசரிப்பதால் அபயமாகிய என்னை அடைவாய். இந்த என்னுடைய மதத்தை யறியாதவர்கள். சம்சாரத்தை (மிருத்யுவை) அடைகிறார்கள்" என்று எல்லோராலும் விரும்பக் கூடிய தம்முடையகதியையுபதேசித்து அவளிடம் விடைபெற்று சென்றார்.

12–32 பின்பு அந்தத் தேவஹூதியும் புத்திரனால் உபதேசிக்கப்பட்டபடி அந்த ஸரஸ்வதி நதியின் கரையிலிருக்கும் ஆசிரமத்தில் வெகுநாட்கிரதையுள்ள வளாகி யோகத்தை அனுஷ்டித்து வந்தாள். அடிக்கடி ஸ்நானம் செய்வதால் அவளுடைய தலைமயிர் ஜடைகளாயும், பொன்னிறமுள்ளவைகளாயும் இருந்தன. மேலும் அவள் மரவுரியை உடுத்திக் கொண்டிருந்தாள். அவளுடைய சரீரமானது கடுந்த பஸினால் மிகவும் இளைத்திருந்தது. அவள் கர்த்தம பிரஜாபதியினுடைய மஹிமையால் கிடைத்ததும், தேவர்களாலும் விரும்பக்கூடியதும், நிகரற்றதுமான தன்னுடைய கிருகஸ்த சுகத்தை விட்டு விட்டாள். பின்னுமவள் பால்போலும், நுரைபோலும் வெண்மை நிறமுள்ள மேல் விரிப்புள்ளவைகளும், தந்தத்தால் செய்யப்பட்டதும் ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப் பட்டவைகளுமான கட்டில் முதலியவைகள்,

தங்கத்தால் செய்யப்பட்டவைகளும் மெதுவான மெத்தை தைத்த ஆசனங்கள், ஸ்படிகக் கற்களாலும் மரகத ரத்தினங்களாலும் செய்யப்பட்ட சுவர்களுள்ள கிருகங்கள் இரத்தின தீபங்கள் மேற்கண்ட சுவர்களில் பிரதிபலிக்கும் ரத்தினாபரணங்களுள்ள வேலைக் காரிகள் ஆகிய இவைகளிலும் அபிமானத்தை ஒழித்தாள். இன்னும் அவளுக்குப் புஷ்பங்களால் நிறைந்த அநேக விருக்ஷங்களால் அழகானதும் இனிமையாகச் சப்திக்கின்ற பறவைகளுள்ளதும், தேனைக் குடித்து மதித்துப் பாடுகின்ற வண்டுகளுள்ள துமான ஒரு தோட்டமுண்டு. அதில் ஒரு ஓடை உண்டு. அதில் நீலோத்பலங்கள் மலர்ந்து வாசனை யுள்ள காற்று வீசுகிறது. அதில் கர்த்தமருடன் தேவஹூதி செல்லும்பொழுது கந்தர்வர்கள் பாடுவார் கள். அந்தத் தோட்டத்தில் வஸிப்பதற்கு தேவஸ்திரீ களும் விரும்புவார்கள். அதனிடத்திலும் தேவஹூதி அபிமானத்தை யொழித்தாள். பர்த்தாவாகிய கர்த்தமர் வனம் சென்றதாலும் புத்திரனையும் விட்டுப் பிரிந்தபடியாலும் மிகுந்த வருத்தமடைந்து வாடிய முகமுள்ளவளானாள். ஆத்ம தத்துவத்தை அறிந்தவளானாலும் கன்றை விட்டுப் பிரிந்த பசுவைப் போலத் துக்கமடைந்தாள். குழந்தாய்! ஓ விதுரரே! பின்பு அந்த தேவராகிய கபிலரையே மனத்தில் தியானஞ் செய்ததால் வெகுநாள் சென்ற பிறகு அவளுக்கு எல்லா ஆசைகளும் ஒழிந்தன. தன்னுடைய புத்திரனாகிய பகவான் சொன்னபடி பகவானுடைய ஸ்வரூபத்தை சமஸ்தமாயும் வியஸ்தமாகவும் ப்ரஸன்ன முகமுள்ளதாகவும் வெகுநாள் கபிலரையே தியானஞ் செய்து திவ்யமான வீடு முதலியவைகளிலிருக்கும் ஆசைகள் எல்லாவற்றையும் ஒழித்தாள். அப்பொழுது

அவளுடைய மனம் சுத்தமாக ஆயிற்று. ஸ்வானுபவத்தால் (ஸ்வப்ரகாசத்தால்) மாயையின் குணங்கள் மறைந்தன. பக்தி யோகத்தாலும், மிகுந்த வைராக்கியத்தாலும், உசிதமானவைகளை யனுஷ்டிப்பதாலும் ("வசதியான ஆகாரம், விளையாட்டு, யுக்தமான தூக்கம் விழிப்பு ஆகிய இவைகளுள்ளவனால் செய்யப்படும் யோகம் ஆனது துக்கத்தைப் போக்கும்" பகவத் கீதை) அதனால் உண்டான ப்ரஹ்மஜ்ஞானத்தாலும் அவள் ஜீவர்களுக்கு ஆச்ரயமாகிய பகவானிடத்திலும் புத்தியைச் செலுத்தினாள். அவளுக்கு ஜீவபாவம் நீங்கியபடியால் ஸகல துக்கங்களும் நாசமடைந்தன. சுகத்தை அடைந்தாள். எப்பொழுதும் ஸமாதியை அடைந்திருந்தபடியால் குணங்களால் ஏற்படும் ப்ரமைகள் நீங்கின. ஸ்வப்னத்தில் கண்ட வஸ்துக்களை தூங்கி விழித்தவன் போல் அஜ்ஞானமாகிய தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட அவள் தன்னுடைய சரீரத்தை மறந்திருந்தாள். அவளுடை சரீரத்தை வித்தியாதர ஸ்திரீகள் போஷித்தார்கள். ஆயினும் மனோவ்யாதி இல்லாமையால் அது பருத்திருந்தது. அழுக்குள்ள தானாலும் புகையுள்ள அக்கினிப் போல ப்ரகாசித்தது. அப்பொழுது ஸ்ரீ வாஸுதேவரிடத்திலேயே புத்தியைச் செலுத்தியவளாக இருந்தபடியால் அவள் தன் தேஹத்தை மறந்திருந்தாள். தவமாகிய யோகத்தைச் செய்து கொண்டிருந்தாள். அவளுடைய தலைமயிர்கள் அவிழ்ந்திருந்தன. தேஹம் வஸ்திரமில்லாததாக இருந்தது; ஆனாலும் ப்ரார்ப்த கர்மத்தால் சரீரம் இருந்தது. இப்படி அவள் கபிலரால் உபதேசிக்கப் பட்ட மார்க்கத்தையனுஷ்டித்துச் சீக்கிரமாக நித்ய முக்தமாகிய பரப்ரஹ்மத்தையடைந்தாள். ஓ! வீரராகிய விதுரரே! தேவஹூதியானவள் சித்தியடைந்த

க்ஷேத்திரமாகையால் மிகுந்த புண்ய க்ஷேத்ரமாகவும் ஸித்தீபதம் என்ற பெயருள்ளதுமாக லோகத்தில் ப்ரசித்தியடைந்தது. மேலும், யோகத்தால் மலங்களற்ற அந்தத் தேஹமானது ஒரு நதியாக ஆயிற்று. ஓ ஸௌம்ய! ஸ்வபாவமுள்ளவரே! அது நதிகளுக்குள் சிறந்த நதி. ஸித்தர்களால் சேவிக்கப்பட்டது. ஸித்தியைக் கொடுக்கக் கூடியது.

33–35 மகாயோகியும், பகவானுமாகிய கபிலரும் மாதாவினிடம் விடைபெற்று ஈசான்ய திக்கை (வடகிழக்கு) நோக்கிச் சென்றார். சித்தர்களும், சாரணர்களும் கந்தர்வர்களும், மகரிஷிகளும், அப்ஸரக கூட்டங்களும், சமுத்திரமும் ஸ்தோத்திரம் செய்தார்கள். சமுத்திர ராஜன் மிகவும் உபசரித்து வாசத்திற்கு இடம் கொடுத்தார். அவ்விடத்தில் கபிலர் யோகத்தைச் செய்துகொண்டிருந்தார். ஞான சாஸ்திரத்தில் சிறந்தவர்கள் இவரை ஸ்தோத்திரம் செய்தார்கள். அந்தப் பகவான் மூவுலகத்திற்கும், க்ஷேமத்தைச் செய்வதில் நோக்க முள்ளவராக இருந்தார்.

36–37 ஓ குற்றமற்றவரே! எதனைப் பற்றி நீர் கேட்டீரோ அந்த தேவஹூதிக்கும் கபிலருக்கும் நேர்ந்த சம்வாதத்தைச் சொன்னேன். இது பரிசுத்த மானது. எவன் இந்தக் கபிலரால் சொல்லப்பட்ட ரகசியமான, ஆத்ம யோகத்தைக் கேட்கிறானோ, வாக்கினால் உச்சரிக்கிறானோ அவன் கருடத் துவஜனாகிய பகவானிடத்தில் சித்தத்தைச் செலுத்தி; அவருடைய தாமரை மலர்போன்ற பாதத்தை அடைகிறான்.

சுபம்

மூன்றாவது ஸ்கந்தம் முற்றிற்று.

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்கந்தம் 4

அத்தியாயம் 1

மனுபுத்திரிகளின் வம்சம்

1–9 மனுவிற்குச் சதரூபையினிடத்தில் ஆகூதி, தேவஹூதி, பிரஸூதி என்ற மூன்று பெண்களும் (இரண்டு புத்திரர்களும்) பிறந்தார்கள். மனுவானவர் சகோதரனுள்ளவர்களானலும் ஆகூதி என்பவளை புத்திரன் இல்லாதவர்கள் புத்திரன் பிறக்க வேண்டி கன்யாதானம் செய்வது வழக்கம். மனுவிற்குப் புத்திரனிருந்தும் இன்னும் புத்திரர்கள் வேண்டுமென்ற ஆசையால் கன்யாதானம் செய்தார் என்று கருத்து). சதரூபையின்ஸம்மதத்தின் பேரில் புத்திரிகா தர்மத்தின் படி ("ஸகோதரனில்லாத இந்தப் பெண்ணை அலங்காரஞ் செய்து உமக்குக் கொடுக்கிறேன். இவளிடமுண்டாகும் பிள்ளை என்னுடைய பிள்ளை" என்று சொல்லி) ருசி என்பவருக்குக் கொடுத்தார். ப்ரஹ்மதேஜஸுள்ள அந்தப் பகவானாகிய ருசி என்ற ப்ரஜாபதியானவர் மேலான ஸமாதியால் ஸ்ரீ பகவானை ஆராதித்து ஆகூதியினிடத்தில் ஒரு புத்திரனையும், ஒரு புத்திரியையும் உண்டு பண்ணினார். அந்தப் புத்திரன் ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவின் அம்சமேயாம். யஜ்ஞரென்ற பெயருள்ளவர் அந்தப் பெண்ணானவள் லக்ஷ்மிதேவியின் அம்சமாம், அவளுக்குத் தக்ஷிணா என்று பெயர். அவள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை விட்டு பிரியாதவள். அப்பொழுது ஸ்வாயம்புவமனுவானவர் சந்தோஷத்துடன் தம்முடைய புத்திரியின் புத்திரரும் மிகுந்த யக்ஞரென்பவரைத் தம்முடைய புத்திரனாகத்

தம்முடைய கிரஹத்துக்கு அழைத்து வந்தார். ருசி யென்பவர் தக்ஷிணை என்பவளைப் புத்ரிகா வைத்துக் கொண்டார் பின்பு அந்த தக்ஷிணையென்பவள் கல்யாணஞ் செய்துகொள்ள விரும்பிய காலத்தில் யக்ஞங்களுக்கு அதிபதியான பகவானாகிய யக்ஞரைப் பர்த்தாவாக அடையவேண்டுமென்று ஆசை கொண்டாள். யக்ஞரும் (பக்தபராதீனராகையால்) ஸம்மதித்து கல்யாணம் செய்து கொண்டார். (ஒரே வயிற்றில் ஜனித்தவர்களானாலும் யக்ஞர் மஹா விஷ்ணுவின் அம்ச மாகையாலும் தக்ஷிணை லக்ஷ்மிதேவியின் அம்சமாகையாலும் விவாகம் நடந்தது.) அந்த யக்ஞரென்ற பகவான் தம்மைக் கலியாணஞ் செய்து கொண்டு ஸந்தோஷப்பட்டவளான அந்தத் தக்ஷிணையிடத்தில் சந்தோஷமடைந்து தோஷன், பிரதோஷன், சந்தோஷம், பத்ரன், சாந்தி, இடஸ்பதி, இத்மன், கவி, விபு, வஹ்னி, ஸுதேவன், ரோசனன் என்ற பன்னிரண்டு புத்திரர்களை உண்டுபண்ணினார். அவர்கள் ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில் 'துஷித' என்ற தேவர்களாக இருந்தார்கள். மேலும் அந்த மன்வந்தரத்தில் மரீசி முதலிய ஸப்தரிஷிகள், யஜ்ஞரே தேவகணங்களுக்கு அதிபதியான இந்திரன். மேலும் மிகுந்த தேஜஸுள்ள பிரியவிரதர் உத்தான பாதர் என்பவர் மனுவின் பிள்ளைகள். இவர்களுடைய புத்திரர்கள் அவர்களுடைய பிள்ளைகள் முதலியவர் களால் அந்த மன்வந்தரம் காப்பாற்றப்பட்டுவந்தது.

10–15 ஓ விதுர! மனுவானவர் தேவஹூதி யென்னும் தம்முடைய பெண்ணை கர்த்தமருக்குக் கொடுத்தார். அது சம்பந்தமான கதை பெரும்பாலும் என்னால் சொல்லப்பட்டு உம்மால் கேட்கப்பட்டது.

அந்த மனுவானவர் ப்ரஹ்மதேவருடைய புத்திரராகிய தக்ஷருக்குப் பிரஸூதி யென்பவளைக் கொடுத்தார். அந்த வம்சமும் உலகிலும் பெருகியது. கர்த்தமருடைய பெண்களெல்லாரும் ப்ரஹ்மரிஷிகளையே பர்த்தாவாக அடைந்தவர்கள். அவர்களில் பிரஸூதி என்பவள் உடைய குழந்தைகளைப் பற்றிச் சொல்வதைத் தெரிந்து கொள்ளும். கர்த்தமருடைய புத்ரியும் மரீசியின் மனைவியுமான கலா என்பவள் கச்யபர், பூர்ணிமா என்ற இருவர்களையும் பெற்றாள். அவர்கள் உடைய வம்சத்தால்இந்த ஜகத் முழுவதும் நிறைந்தது. (கச்யபருடைய வம்சம் ஆறாவது ஸ்கந்தத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. பூர்ணிமாவென்பவர் விரஜனையும் விச்வகனென்பவனையும் உண்டு பண்ணினார். தேவகுல்யா என்ற பெண்ணும் உண்டானாள்; அவளே ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பாதத்திலிருந்து உண்டான தேவகங்கை எனப்படுகிறாள். அத்திரி மஹரிஷியின் பத்னியாகிய அனுஸூயையானவள் தத்தர் துர்வாஸஸ், சந்த்ரன் ஆகிய மூன்று குமாரர்களைப் பெற்றாள். அம்மூவர்களும் முறையே மஹாவிஷ்ணு, பரமசிவன், ப்ரஹ்மா இவர்களுடைய அம்சமுள்ளவர்கள் என்றார்.

16 அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி "ஓ குருவே! தேவர்களில் சிறந்தவர்களான மும்மூர்த்திகள் எதனைச் செய்ய விரும்பி, அத்ரியின் வீட்டில் அவதரித்தார்கள்? அதனைச் சொல்ல வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

17–26 அதைக் கேட்டு மைத்ரேயர் விதுரரை நோக்கி, ப்ரஹ்மத்தை அறிந்தவர்களுக்குள் சிறந்த வராகிய அத்ரி மஹரிஷியைப் ப்ரஹ்மதேவர்

பிரஜைகளை ஸிருஷ்டிக்கும்படி ஆஜ்ஞாபித்த பொழுது மஹரிஷியானவர், அகலமான கண்களுள்ள தம்முடைய பத்தினியுடன் ரிக்ஷம் என்ற குலபர்வதஞ் சென்று தபஸ் செய்தார். அவ்விடத்தில் பலாச மரங்களும், அசோக மரங்களும் புஷ்பித்திருந்தன. மேலும் நிர்விந்தியை என்ற நதியின் ஜலம் ப்ரவஹிப் பதால் அந்தக் காடுமிகுந்த சப்தமுள்ளதாக இருக்கிறது. அந்த மலையில் மஹரிஷியானவர் பிராணாயாமஞ் செய்து அதனால் மனத்தையடக்கி நூறு வருஷகாலம் ஒரு காலால் நின்று, சீதோஷ்ணங்களற்றவராகவும், ஸுக துக்கங்களற்றவராகவும், காற்றைப் புஜித்துக் கொண்டு "எவர் ஜகத்திற்கு அதிபதியோ அவர் தமக்கு ஸமமான குழந்தையை எனக்குக் கொடுக்க வேண்டும். அவரைச் சரணமடைகிறேன்" என்று மனத்தில் யோசித்துக் கொண்டு இருந்தார். இப்படித் தபஸ் செய்யும் மஹரிஷியின் சிரஸின் வழியாக வெளியில் கிளம்பியதும், பிராணாயாமத்தால் விருத்தியானதுமாகிய மூவுலகமும் எரிக்கப்படுவதைப் பார்த்துப் ப்ரஹ்மதேவர், மஹாவிஷ்ணு, பரமசிவன் ஆகிய மூர்த்திகளும் அவருடைய ஆச்ரமம் சென்றார்கள். அப்பொழுது அவர்களை அப்ஸரஸ்ஸுகள், மஹர்ஷிகள், கந்தர்வர்கள், ஸித்தர்கள், வித்யாதரர் கள், உரகர்கள் ஆகிய இவர்கள் ஸ்துதித்தார்கள். அவர்கள் அவ்விடம் வந்ததும் ஒரு காலைப் பூமியில் வைத்துத் தபஸ் செய்யும் மஹர்ஷி, ஸமாதியிலிருந்து பகிர்முகராகித் தேவசிரேஷ்டர்களைத் தரிசித்தார். தண்டம் போல் பூமியில் விழுந்து புஷ்பம் முதலிய வைகளைக் கையில் வைத்துக்கொண்டுப் பூஜித்தார். பரமசிவன், ப்ரஹ்மதேவர், ஸ்ரீ மஹாவிஷ்ணு ஆகிய இவர்களும் முறையே விருஷபம், ஹம்ஸம், கருடன்

ஆகிய வாகனத்தின் மீதேறி, தங்கள் தங்களுடைய அடையாளமுள்ளவர்களாய் மேலும் அவர்களுடைய முகங்கள் க்ருபா த்ருஷ்டி உள்ளவைகளும், புன்னகை உள்ளவைகளுமாய் இருந்தன. அப்பொழுது தேஜஸினால் மஹரிஷியினுடைய இரு கண்களும் பார்க்க சக்தியற்றவைகளாயிருந்தும் அத்திரி மஹர்ஷியானவர் மிகவும் ச்ரமப்பட்டுக் கண்களை விழித்து மனத்தை அவர்களிடத்திலேயே செலுத்திக் கைகளைக் கூப்பிக் கொண்டு ஸகல லோகங்களிலும் சிறந்தவர்களான அவர்களை இனிமையாகவும், கம்பீர அர்த்தமுள்ளதாகவும், ஸ்தோத்திரம் செய்தார் எப்படியெனில்:

27–28 ஜகத்தை படைப்பது, பரிபாலிப்பது, ஸம்ஹரிப்பது ஆகிய இவைகளைச் செய்வதற்காக ஒவ்வொரு யுகங்களிலும் மாயையின் குணங்களைக் கொண்டு தனித்தனியே சரீரத்தை எடுத்துக் கொள்ளுகிற ஓ ப்ரஹ்மா, விஷ்ணு, மஹேச்வர! உங்களை நமஸ்கரிக்கிறேன்; உங்கள் மூவர்களில் யாரை நான் அழைத்தேன். புத்திரன் பிறக்க வேண்டி தேவர்களுக்குள் பிரதானராகிய ஒருவரைத்தானே தியானஞ் செய்தேன். அப்படியிருக்க மனத்திற்கு எட்டாதவர்களாகிய நீங்கள் மூவரும் இவ்விடம் வந்ததன் காரணம் என்ன? என்னிடம் தயவு செய்ய வேண்டும். இவ்விஷயத்தில் மிகவும் ஆச்சரியத்தை அடைகிறேன்; சொல்லவேண்டும், என்று ப்ரார்த்தித்தார்.

29–33 ஓ பிரபுவாகிய விதுரரே! அதனைக் கேட்ட அந்தத் தேவ ச்ரேஷ்டர் மூவரும் அத்ரியை நோக்கி

சிரித்து "ஓ ப்ராஹ்மண! நீர் எப்படி நினைத்துத் தியானம் செய்தீரோ, அது அப்படியே ஆகட்டும். நீர் நல்ல ஸங்கல்பம் உள்ளவர். எதனை (ஜகத் காரணத்தை) தியானித்தீரோ அது நாங்களேயாம். (எங்களுக்குள் பேதமில்லை. குணபேதத்தால் சரீர பேதமுள்ளவர்கள் என்று கருத்து) மேலும் உமக்கு எங்களுடைய அம்சமுள்ள புத்திரர்கள் ஜனிப்பார்கள். உமக்கு க்ஷேமமுண்டாகட்டும். அந்தப் புத்திரர்கள் தமக்கு லோகத்தில் மிகவும் கீர்த்தி அடைந்து உம்முடைய கீர்த்தியையும் பரவச் செய்வார்கள், என்று மஹரிஷியின் இஷ்டப்படி வரத்தை அளித்து அந்த தேவ ச்ரேஷ்டர்களும், அத்ரி மஹரிஷியால் பூஜிக்கப்பட்டு அந்தத் தம்பதிகள் (அத்திரியும், அனஸூயையும்) மறைந்தார்கள். பிறகு ப்ரஹ்ம தேவருடைய அம்சமாகச் சந்திரனும், மஹாவிஷ்ணுவின் அம்சமாகத் தத்தாத்ரேயரும், பரமசிவனுடைய அம்சமாகத் துர்வாஸஸ் என்பவரும் ஆகிய மூன்று குமாரர்கள் உண்டானார்கள். இனி அங்கிரஸ்ஸின் வம்சத்தைச் கேளும்.

34–35 அங்கிரஸ்ஸின் பத்னியாகிய சிரத்தை என்பவள் ஸினீவாலீ (காணப்படும் சந்திரகலை உள்ளது) குஹூ (நாசமடைந்த சந்திரக்லையுள்ள அமா) ராகா (பூர்ணிமா) அநுமதி (சுக்கிலசதுர்தசிக்கும் அபிமானியான தேவதை) என்ற நான்கு பெண்களைப் பெற்றாள். பின்னும் பகவானாகிய உசத்யர் ப்ரஹ்மவித்தாகிய ப்ருஹஸ்பதி ஆகிய இருவரும் அந்த அங்கிரஸ்ஸின் புத்திரர்கள். இவ்விருவர்களும் ஸ்வாரோசிஷ மன்வந்தரத்தில் மிகவும் கீர்த்தி பெற்றிருந்தார்கள்.

36–37 புலஸ்த்ய மஹரிஷியானவர், ஹவிர்புக் என்னும் பத்னியிடத்தில் அகஸ்திய மஹரிஷியையும், விச்ரவஸ்ஸையும் உண்டு பண்ணினார். அந்த அகஸ்தியர் ஜன்மாந்தரத்தில் வயிற்றில் இருக்கும் அக்னியாம். அந்த விச்ரவஸ் என்பவர் இலபிலா என்பவளிடத்தில் யக்ஷர்களுக்கு அதிபதியும் தேவனும் ஆன குபேரனை யுண்டுபண்ணினார். பின்னும் அந்த மஹரிஷியானவர் கேகஸி என்பவளிடத்தில் ராவணன், கும்பகர்ணன், விபீஷ்ணர் என்று மூன்று குமாரர்களை யுண்டுபண்ணினார்.

38. மிகுந்த புத்திசாலியான விதுரரே! புலஹருடைய பத்னியான கதி என்பவள் பதிவிரதை. அவர் கர்ம ச்ரேஷ்டன், வரீயான், ஸஹிஷ்ணு என்று மூன்று புத்திரர்களைப் பெற்றாள்.

39. க்ருது என்பவருடைய பத்னியாகிய கிரியை யென்பவள் அறுபதினாயிரம் புத்திரர்களைப் பெற்றாள். அவர்களே வாலகில்யர்களென்ற மஹரிஷிகள்; ப்ரஹ்ம தேஜஸால் ஜ்வலிப்பவர்கள்.

40–41 வஸிஷ்டர் ஊர்ஜை என்பவளிடத்தில் (அருந்ததிக்கு ஊர்ஜாவென்றும் பெயருண்டு. இவள் கர்த்தமருடைய ஒன்பதாவது பெண்) சித்திரகேது, ஸுரோசிஸ், விரஜஸ், மித்ரன், உல்பணர், வஸுபிருத், தியானர், த்யுமான் என்று ஏழுபுத்திரர்களை யுண்டு பண்ணினார். அவர்கள் சுத்தர்கள். ப்ரஹ்மரிஷிகளாக ஆனார்கள். (இவர்கள் மூன்றாவது மன்வந்தரத்தில் ஸப்த ரிஷிகள்.) சக்தி முதலிய புத்திரர்கள் வேறு ஸ்திரீயினிடம் உண்டானவர்கள்.

42. அதர்வா என்பவருடைய பத்னியாகிய சித்தி என்பவள் (கர்த்தமருடைய எட்டாவது பெண் இவளுக்குச் சாந்தியென்றும் பெயருண்டு) திருதவிருதன், தத்யஞ்சன், அச்வசிரஸ் என்ற புத்திரர்களைப் பெற்றாள். இனி ப்ருகுவின் வம்சத்தைத் தெரிந்து கொள்ளும்.

46–46 1/2 ஓ மிகுந்த அதிருஷ்டமுள்ளவரே! ப்ருகுவென்பவர் கியாதி என்ற பத்னியிடத்தில் (இவள் கர்த்தமருடைய ஏழாவது பெண்) தாதா, விதாதா என்ற இரண்டு புத்திரர்களையும் பகவத் பரையாகிய ஸ்ரீ போன்ற பெண்ணையும் பெற்றார். பிறகு மேருவானவர் ஆயதி என்றவளைத் தாதாவிற்கும், நியதி என்றவளை விதாதாவிற்கும் கொடுத்தார். பின்பு தாதாவிற்கு மிருகண்டரென்ற புத்திரனும் விதாதாவிற்குப் பிராணனென்பவரும் உண்டானார்கள். மிருகண்டருடைய புத்திரருக்கு மார்க்கண்டேயரென்று பெயர். பிராணருடைய புத்திரருக்கு வேதசிரஸ் என்று பெயர். அந்த வேதசிரஸ்ஸின் புத்திரர் சுக்கிரன். இவர் ப்ருகு வம்சத்திலுண்டான வராதலால் பார்க்கவரெனப்படுகிறார். ஓ விதுரரே! மேற் சொல்லிய ஒன்பது மஹரிஷிகள் தங்களுடைய வம்சத்தால் லோகத்தை விஸ்தரித்தார்கள். கர்த்தம ருடைய பெண்களுடைய வம்சத்தைச் சொன்னேன். இதனைச் ச்ரத்தையுடன் கேட்பவனுக்கு உடனே பாபங்கள் நீங்கும். ஆதலால் இது மேலானது.

47–59 ப்ரஹ்ம தேவருடைய புத்திரராகிய தக்ஷர், மனுவின் புத்திரியாகிய பிரஸூதியை விவாஹம் செய்து கொண்டு பதினாறு பெண்களை யுண்டு

பண்ணினார். அவர்கள் அழகான கண்களுள்ளவர்கள். அவர்களில் சிரத்தை, மைத்ரீ, தயை சாந்தி, துஷ்டி புஷ்டி, கிரியா, உன்னதி, புத்தி, மேதை, திதிக்ஷா, ஹ்ரீ, மூர்த்தி, யென்ற பதின் மூன்று பெண்களைத் தர்மத்திற்கும், ஒரு பெண்ணை (ஸ்வாஹா என்பவளை) அக்கினி பகவானுக்கும் பிதிருக்களுக்கு ஒரு பெண்ணையும் (ஸ்வதாவென்பவள்) ஸம்ஸாரத்தைப் போக்குபவரான பரமசிவனுக்கு ஒரு பெண்ணையும் (ஸதீயென்பவள்), பிதாவாகிய தக்ஷர் தானஞ் செய்தார். தர்மத்தின் பத்னியாகிய சிரத்தை ச்ருதனென்ற புத்திரனையும் மைத்ரியென்பவள் ப்ரஸாதனையும், தயையானவள் அபயனையும் சாந்தியென்பவள் ஸுகத்தையும் துஷ்டியென்பவள் முகத்தையும் (ஸந்தோஷம்) புஷ்டியானவள் ஸம்பனையும், கிரியை யென்பவள் யோகத்தையும், உன்னதியானவள் தர்ப் பனையும் (கர்வம்), புருத்தியானவள் அர்த்தத்தையும், மேதையென்பவள் ஸ்மிருதியையும், திதிக்ஷையென்ப வள் க்ஷேமத்தையும், ஹ்ரீயென்பவள் ப்ரச்ரயத்தையும், மூர்த்தி யென்பவள் நரன், நாராயணன் என்ற மஹர்ஷிகளையும் யுண்டுபண்ணினார்கள். அவ் விரண்டு மஹரிஷிகளும் ஸகல குணங்களும் உண்டாகு மிடமாக இருப்பவர்கள்! அவர்கள் பிறந்த லோகங்களும் சந்தோஷமடைந்தன. எல்லோருடைய மனங்களும், திக்குகளும், நதிகளும், சமுத்திரங்களும், காற்றும் ப்ரஸன்னங்களாயின. (தெளிந்தன) தேவ வாத்யங்கள் முழக்கப்பட்டன. புஷ்பங்கள் வர்ஷிக்கப் பட்டன. மஹரிஷிகள் ஸ்துதித்தார்கள். கின்னரர்களும், கந்தர்வர்களும் பாடினார்கள். தேவலோகத்திலுள்ள அப்ஸர ஸ்திரீகள் நர்த்தனஞ் செய்தார்கள். இப்படி எல்லா லோகங்களிலும் சுபமான காரியங்கள்

நடந்தன. ப்ரஹ்மா முதலிய தேவர்கள் அவ்விருவர் களை நோக்கி, மாயையால் இந்த ஜகத்தை (உண்மை இல்லாததை) ஆகாசத்தில் பட்டணம் உண்டுபண்ணு வது போல் காண்பிக்கிறாரோ, எவர் இப்பொழுது தர்மத்தின் கிருஹத்தில் மஹரிஷி வேஷங்கொண்டு அவதரித்திருக்கிறாரோ, அந்த ஸ்வப்ரகாசராகிய பரமபுருஷனுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். அந்தப் பகவான் ஜக்த்தின் மர்யாதையை ஸம்ரக்ஷிப்பதற்காக ஸத்வ குணத்தைக் கொண்டு ஸிருஷ்டிக்கப்பட்ட தேவர்களான எங்களைக் கிருபை நிறைந்த பார்வையால் கடாக்ஷிக்கட்டும். அவர் சாஸ்திரத்தால் ஊகிக்கத்தக்க தத்வமுள்ளவர். மேலும் அவருடைய நேத்திரமானது லக்ஷ்மீதேவிக்கு வாஸஸ்தலமும் சுத்தமுமான தாமரை மலரையும் பரிஹஸிக்கிறது என்று ஸ்தோத்திரஞ்செய்தார்கள். இம்மாதிரி தேவர்களால் கொண்டாடப்பட்ட அவ்விருவர்களும் தேவர்களால் தரிசிக்கப்பட்டவர்களாகி கந்தமாதன மென்ற பர்வதஞ் சென்றார்கள். மஹாவிஷ்ணுவின் அம்சபூதர்களாகிய அவ்விருவர்களே பூமியின் பாரத்தை குறைப்பதற்காக யதுகுலத்தில் ஸ்ரீ கிருஷ்ணனாகவும், குரு வம்சத்தில் அர்ஜுனனாகவும் அவதரித்திருக்கிறார்கள்.

60–62 அக்கினியின் பத்னியாகிய ஸ்வாஹா என்பவன் பாவகன், பவமானன், சுசியென்ற மூன்று புத்திரர்களைப் பெற்றாள். அவர்கள் அக்கினிக்கு அபிமான தேவர்கள், ஹோமஞ் செய்யப்பட்ட வைகளையே புஜிப்பவர்கள். அவர்களிடமிருந்து நாற்பத்துஐந்து அக்னிகள் (புத்திரர்கள்) உண்டானார் கள். மேற்காட்டிய புத்திரர்களும், அவர்களுடைய

தகப்பனார்களாகிய மூன்று பேர்களும், அவர்களுக்கும் பிதாவாகிய அக்கினியுமாகிய நாற்பத்து ஒன்பது (49) அக்கினிகளாயின. ப்ரஹ்மவாதிகள் (வேதத்தை அத்யயனஞ் செய்தவர்கள்) வைதிகமான யாக கர்மத்தில்: இவர்களுடைய பெயர்களைக் கொண்டே அக்கினி தேவதாகமான இஷ்டிகளைச் செய்கிறார்கள். இந்த அக்கினிகள் வைதிகாக்கினிகள். (லௌகிகங் களல்ல. லௌகிங்களான அக்கினிகள் பலவென்ற கருத்து).

63–64 அக்கினிஷ்வாத்தர்கள், பர்ஹிஷதர்கள், ஸௌம்யர்கள், ஆஜ்யபர்கள் என்ற நான்கு பித்ரு கணங்களும், ஸ்வதை யென்பவளின் (தக்ஷருடைய பதினைந்தாவது பெண்) பார்த்தாக்கள். இவர்களுள் ஸாக்கினிகள்; நிரக்கினிகளென்று இருவகையுண்டு. (அக்நௌகரணம் உள்ளவர்கள் ஸாக்கினிகள். அதில்லாதவர்கள் நிரக்கினிகள்.) அந்த ஸ்வதா தேவிக்கு வயுனா, தாரிணீ என்று இரண்டு பெண்கள் (மேனா, வைத்ரணீ என்பவர் சிலர்:) அந்த இரண்டு பெண்களும் ப்ரஹ்மத்தை உபதேசிப்பவர்கள். சாஸ்திரத்தால் உண்டான ஞானம், அனுபவ ஞானம் ஆகிய இவைகளுடைய கரையைக் கண்டவர்கள். ஊர்த்துவ ரேதஸ் உள்ளவர்களாகையால் இவர்களுக்குக் குழந்தைகளில்லை. ஆதலால் அவர்களுக்கு வம்சமில்லை.)

65–66 பரமசிவனுடைய பத்னியாகிய ஸதீதேவி யானவள் குணத்திலும், ஸ்வபாவத்திலும் தனக்கு ஸமமான பர்த்தாவை அடைந்தும் அவளுக்கு புத்திரனுண்டாகவில்லை. ஏனென்றால் அவளுடைய

பிதாவாகிய தக்ஷர் குற்றமற்றவராகிய பரமசிவன் இடத்தில் கோபித்துக் கொண்டு ப்ரதி கூலராக இருந்ததால் ஸதியானவள் பிரௌடையாகாத வயதிலேயே யோகமார்க்கத்தால் தன்னுடைய சரீரத்தை விட்டுவிட்டாள்.

நோட்டு

அக்கினியில் பக்குவமான புரோடாசம் முதலியவைகளைப் புஜிப்பவர்கள் அக்கினிஷ்வாத்தர் கள், தைத்திய தானவ, யக்ஷர்களுடைய பித்ருக்கள் பர்ஹிஷதர்கள். அக்கினிஷ்டோமம் முதலிய கர்மங்களின் தேவதைகள் ஸௌம்யர்கள். ஆகார ஆஜ்யபாக தேவதைகள் ஆஜ்யபர்கள்.

அத்தியாயம்–2

தக்ஷருக்கும் பரமசிவனுக்கும் விரோதம் நேர்தல்

1–3. அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி, "பெண்ணிடத்தில் ப்ரீதியுள்ளவரான தக்ஷர் அவளையும் லக்ஷயஞ் செய்யாமல் நல்ல ஸ்வபாவம் உள்ளவர்களுக்குள் சிறந்தவராகிய பரமசிவனிடத்தில் துவேஷம் வைத்த காரணமென்ன? அந்தச் சிவன் சரம் (அசையும் பொருள்,) அசரம் (அசையாப் பொருள்) ஆகிய இவைகளுக்குக் குரு) ஒருவரிடத்திலும் விரோதமில்லாதவர்; அவருக்குச் சாந்தியே சரீரமாக விருக்கிறது; மேலும அவர் ஆத்மாவினிடத்திலேயே ரமிப்பவர்; ஜகத்திற்குப் பெரியதாகிய தெய்வம்; அப்படிப்பட்டவரை எவன் விரோதித்துக் கொள்வான்? மணப்பிள்ளையாகிய பரமசிவனுக்கும், மாமனாராகிய தக்ஷருக்கும் விரோதம் உண்டானதன் காரணத்தைச் சொல்லவேண்டும். தவிரவும் ஸதீதேவியானவள் பிராணனை விட்டாள் என்று சொன்னீரே. ஒருவரும் ப்ராணனை விட சம்மதிக்கமாட்டார்களே. அதன் விவரத்தைச் சொல்லவேண்டும், என்று கேட்டார்.

4–19. அதனைக்கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி "முன்னொரு காலத்தில் ப்ரஜாபதிகள் ஸத்ர யாகஞ் செய்தார்கள். அந்த ஸத்ரத்தில் சிறந்த மஹரிஷிகளும் இந்திரன் முதலிய தேவர்கள் தங்களுடைய வேலைக்காரர்களுடனும், அக்கினிகள் உடனும் கூடியிருந்தார்கள். அப்பொழுது அந்த ஸத்ரத்திற்காகத் தக்ஷர் வந்தார். அவர் சூரியன் போன்ற தேஜஸ் உள்ளவர்; ஆனதால் தம்முடைய

தேஜஸ்ஸால் அந்த ஸபையைப்ரகாசிக்கச் செய்தார்; அவரைக் கண்டு அவருடைய தேஜஸ்ஸினால் காந்தி குறைந்தவர்களாகி ஸபையிலிருப்பவர்களெல்லோரும் அக்கினிக்கு அபிமானிகளாகிய தேவர்களும் தங்கள் தங்கள் ஆஸனத்திலிருந்து எழுந்திருந்தார்கள். ப்ரஹ்ம தேவரும். பரமசிவனும் மாத்திரம் எழுந்திருக்கவில்லை. ஸபையிலுள்ளவர்களால் பூஜிக்கப்பட்ட தக்ஷர் லோக குருவாகிய ப்ரஹ்மதேவருக்கு நமஸ்காரஞ் செய்து அவருடைய உத்தரவின்படி உட்கார்ந்தார். ஆனால் தாம் வருகிறதற்கு முன்னமேயே வந்திருப்பவரும் தம்மைக் கண்டு உபசரிக்காத வருமாகிய பரமசிவன் இடத்தில் கோபங்கொண்டார். மேலும் அவர் இருகண்களாலும் வக்கிரமாகச் சிவனைப்பார்த்து, கோபாக்கினியால் எரிப்பவர் போல, "ஓ ப்ரஹ்ம ரிஷிகளே! தேவர்களே! அக்கினிகளே! ஸாதுக்களுடைய ஆசாரத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள். அறியாத் தன்மையாவது மாத்ஸர்யமாவது எனக்கில்லை (அதனால் சொல்வதாக நினைக்க வேண்டாம்) இவன் லோகபாலர்களுடைய கீர்த்தியைக் குறைப்பவன்; வெட்கமில்லாதவன் ஸாதுக்களால் ஆதரிக்கப்பட்ட வரும் ஸம்பிரதாயப்படி அனுஷ்டியாமல் கர்வமுள்ள வனாகி அந்த மார்க்கத்தை கெடுத்து விட்டான் இவன் நல்லவன் போல் ப்ராஹ்மணர்கள் அக்னி ஆகிய இவர்களுடைய முன்பாக ஸாவித்திரி போன்ற என்னுடைய புத்திரியைப் பாணிக்கிரஹணஞ் செய்து கொண்டான்; அதனால் எனக்குச் சிஷ்யனானான்; என்னுடைய பெண்ணாகிய ஸதியானவள் மான் குட்டியின் கண்கள் போன்ற கண்களுள்ளவள்; இவனுடைய கண்கள் குரங்கின் கண்களை ஒத்திருக்கின்றன; அப்பேர்ப்பட்ட இவன் என்னைக்

கண்டவுடன் எழுந்திருந்து நமஸ்கரிக்க வேண்டியதாக விருக்க, வாக்கினால் கூட என்னை உபசரிக்கவில்லை; இவன் ஸத்கர்மங்களைச் செய்யாதவன் (லுப்தக்ரியன்) அசுத்தன்; அஹங்காரமுள்ளவன்; லோகத்தின் மரியாதையைக் கெடுப்பவன். அப்படிப்பட்ட இவனுக்குப் பெண்ணைக் கொடுக்க இஷ்டமில்லாதவனானாலும் நான் வேதத்தைச் சூத்திரனுக்குக் கொடுத்தாற் போல் குழந்தையைக் கொடுத்தேன் (அயோக்கியனுக்குப் பெண்ணைக் கொடுத்தேனென்று பச்சாதாபமடைந்தார்.) மேலுமிவன் ப்ரேதங்கள் வஸிக்கும் மயானத்தில் பூதகணங்களுடன் வஸ்திரமில்லாமல் தலைமயிரை விரித்துக்கொண்டு சிரித்தும், அழுது கொண்டும் பைத்தியங் கொண்டவன் போல் அலைகிறான். சிதையிலிருக்கும் சாம்பலைப் பூசிக்கொள்கிறான். ப்ரேதங்களுடைய மாலையை தரிக்கிறான், மனிதர் களுடைய எலும்புகளை ஆபரணங்களாகக் கொள்கிறான் சிவனென்ற பெயருள்ளவனே யொழிய அசிவன். (மங்களமான சுபாவமற்றவன், மதித்தவன். மதித்தவர்களால் கொண்டாடக்கூடியவன். தமோ குண ஸ்வபாவமுள்ள பிரமத கணங்களுக்கு அதிபதி, உன்மாதங்களுக்கு (சில பூதங்கள்) அதிபதி, சௌசம் (சுத்தி) அற்றவன். கெட்ட புத்தியுள்ளவன்; அப்படிப் பட்ட இவனுக்குப் பதிவிரதையான ஸதியென்பவளை ப்ரஹ்மதேவருடைய தூண்டுதலினால் கல்யாணஞ் செய்து கொடுத்தேன். கஷ்டம். என்று தமக்குப் ப்ரதிகூலரன்றி இருக்கும் பரமசிவனைத் தக்ஷர் நிந்தித்துக் கோபங் கொண்டவராகி ஜலத்தைத் தொட்டு "தேவகணங்களில் தாழ்ந்தவனாகிய இந்தச் சிவன் இந்திரன் முதலியவர்களுடன் யாகத்தில் பாகத்தை அடையவேண்டாம் என்று சபித்தார்.

அப்பொழுது அந்த ஸபையிலிருந்த சிறந்தவர்கள் தடுத்தும் அவர் ஸமாதானம் அடையவில்லை. பிறகு தக்ஷர் மிகுந்த கோபமுள்ளவராகி அவ்விடமிருந்து தம்மிருப்பிடஞ் சென்றார்.

20–26. இதைக்கேட்டுப் பரமசிவனுடைய கணங்களில் சிறந்தவராகிய நந்தியென்பவர் கோபத்தால் மிகவும் சிவந்த கண்களுள்ளவராகி இந்தத் தக்ஷன் தன்னைச் சிறந்தவனாக நினைத்துப் பதில் செய்யாதவராகிய பகவானுக்குத் துரோகஞ் செய்த படியால் இவன் பேதபுத்தியுள்ளவனாகித் தத்துவத்தை அறியாதவனாக ஆகட்டும். கபட தர்மமுள்ள ஸம்ஸாரத்தில் அபிமானம் உள்ளவனாகி, காம்யமாகிய சுகத்திற்கு ஆசைப்பட்டு வேதத்தில் சொல்லிய அர்த்த வாதத்தால் (கர்மத்தில் ஜனங்களுக்கு ஆசையுண்டாவதற்காக அதன் பலனை மேலானதென்று சொல்வது முதலியவை) ப்ரமித்துக் கர்மங்களையே அனுஷ்டிக்கட்டும்; மேலும் தேஹம் முதலியவைகளேயே ஆத்மாவென்று நினைத்து புத்தியால் ஆத்மாவின் உண்மையை மறந்து பசுப்போல் ஸ்திரீகளிடத்திலேயே மிகவும் ஆசையுள்ளவனாக ஆகட்டும். அவித்யையை வித்யையென்று நினைத்து மூடனாக இருக்கும் இந்த தக்ஷன் சீக்கிரம் ஆட்டு முகமுள்ளவனாக ஆகட்டும் என்று தக்ஷனுக்குச் சாபம் கொடுத்ததுமன்றி "பரமசிவனைத் தக்ஷன் சபிக்கும்போது அதனை எவர்கள் அனுமதித்தார்களோ, அந்தப்ராஹ்மணர்கள் சம்சாரத்தை (ஜனனமரணத்தை) யடையட்டும். புஷ்பங்கள் போல் அழகானவைகளும், தேனுடைய வாசனைப்போல் மனத்தை இழுக்கக் கூடியதுமான வேதத்தின் அர்த்தவாதங்களால் மனங்கலங்கினவர்களாக மோஹத்தை யடையட்டும்.

பரமசிவனைத் துவேஷித்தபடியால் ப்ராஹ்மணர்கள் தேஹத்தைப் போஷிப்பதற்காக எல்லாவற்றையும் புஜித்துக்கொண்டும், வித்யை தபஸ், விரதங்கள் ஆகிய இவைகளை ஜீவனத்துக்கே உபயோகித்தவர்களாகிப் பணம் தேஹம், இந்திரியம் ஆகிய இவைகளிலேயே ரமித்துக் கொண்டு யாசகர்களாக சஞ்சரிக்கட்டும் என்றும் சபித்தார்.

27–33. அதனைக் கேட்ட பிருகு என்பவர் "எவர்கள் சிவனுடைய தர்மத்தை அடைந்தவர்களோ, எவர்கள் அவர்களை அனுஸரித்தவர்களோ, அவர்கள் வேத விரோதிகளான பாஷண்டர்களாக ஆகட்டும், சௌசமற்றவர்களாகி மூடர்களாகி, ஜடை, விபூதி, எலும்பு, ஆகிய இவைகளைத் தரித்து, சிவதீக்ஷையை அடையட்டும். அந்தச் சிவதீக்ஷையில் ஸுரை (வெல்லத்தால் செய்யப்பட்டது). ஆஸவம் (மாவினால் செய்யப்பட்ட மத்யம்) ஆகிய இவை தேவதை போல ஆதரிக்கப்படுகிறது. பாஷண்ட தர்மத்தை ஆச்ரயித்து நீங்கள் புருஷர்களுக்கு ஸேதுவாக விருப்பது (மரியாதையாகவும்), வேதத்தையும் ப்ராஹ்மணர் களையும் நிந்திப்பதால் இந்தச் சாபம் உங்களுக்குத் தகுந்ததேயாகும். இந்த வேதமார்க்கமே சிரேயஸைக் கொடுக்கக் கூடியது. வெகுநாளாகப் ப்ரகாசிக்கிறது. முந்திய மஹரிஷிகள் இதனையே அனுஷ்டித்தார்கள். இது ஸ்ரீ மஹாவிஷ்ணுவிடமிருந்து உண்டானது. ஆனதால் மிகவும் மேலானதும், சுத்தமானதும்; அனாதி ஸித்தமுமான வேதமார்க்கத்தை நிந்தித்துப் பூத பதியையே தெய்வமாகக் கொண்ட பாஷண்ட மார்க்கத்தை நீங்கள் அடைவீர்கள் என்று சபித்தார். அது ப்ரஹ்ம தண்டமாகையால் நிவிருத்திக்க

முடியாதது. இதனைக் கேட்டுப் பகவான் கொஞ்சம் வருத்தமடைந்தவர் போலத் தம்முடைய கணங்களுடன் அவ்விடமிருந்து புறப்பட்டார்.

34–35. அந்தப்ரஜாபதிகளும் தேவர்களுக்குள் சிறந்தவராகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் எதில் பூஜிக்கப்படுகிறாரோ அந்த ஆயிரம் பரிவத்ஸரமுள்ள அந்த ஸத்ரத்தை முடித்து, கங்கை, யமுனை இந்த நதிகள் ஸங்கமத்தில் ஸ்நானஞ் செய்து சுத்தர்களாகத் தங்கள் தங்கள் இருப்படஞ் சென்றார்கள்.

நோட்டு

இந்த அத்தியாயத்தில் 13–வது ஸ்லோகம் முதல் 16–வது வரையிலுள்ள ஸ்லோகங்களால் தக்ஷர் பரமசிவனை நிந்திப்பதான எண்ணத்துடன் சொன்ன வார்த்தைகளுக்குப் பின் காட்டியபடியும் அர்த்தமேற் படுகிறது. லுப்தக்ரிய பரப்ரஹ்மம் ஸ்வரூபியாகையால் கர்மங்களற்றவர். அவரை விடச் சுத்தன் வேறு ஒருவருமில்லை. அஹங்காரமற்றவர் லோகமரியாதையை கெடுக்காதவர். ஆத்ம நிஷ்டனுக்குக் கர்மவித்யை உபதேசிப்பது எப்படி உசிதமன்றோ அப்படி தேவதேவராகிய பகவானுக்கு மனுஷ்ய ஸ்திரீயாகிய ஸதியைக் கொடுப்பது தகுதியில்லை என்று இஷ்டப்படவில்லை, பயித்தியங் கொண்டவன் போல என்றதால் உண்மையில் பயித்தியங் கொண்டவரல்ல. மயானத்தில் வஸிப்பது முதலியவை வைராக்யத்தைக் காண்பிப்பதேயாம், அசிவன் –இவரை விட மங்கள ஸ்வபாவமுள்ளவர் வேறொருவருமில்லை. அமத்த என்றபதம் பிரிப்பதால் மதமில்லாதவனென்று,

அர்த்தம், தமோ குண –தாழ்ந்தவர்கள் இடத்திலும் மிகுந்த பிரீதியுள்ளவர் என்ற மேலான குணம் காட்டப்பட்டது. அதிபதி மூலத்தில் பதி என்றிருப்பதால் அவர்களுடைய தோஷங்களை நீக்கிக் காப்பாற்று கிறவர் என்று கருத்து சௌசகெட்டவர்களுக்கும் புத்தியை உபதேசிப்பவர். தூர்ப்புத்தி– துஷ்டர்களி டத்திலும் "இவர் நம்மால் காப்பாற்றக்கூடியவர்கள்" என்ற புத்தியுள்ளவர் தூண்டுதலால் –இவருடைய உண்மையையறியாத பிராகிருத ஜனங்கள் "அயோக்யனுக்குப் பெண்ணைத் தக்ஷன் கொடுத்தான்" என்று சொல்வார்களே என்ற பயத்தை விட்டுச் சிவனை மணப்பிள்ளையாக அடைந்தேன் ஸ்ரீத, அர்த்தவாதத்தால் புஷ்பிணீயென்று மூலத்திலி ருப்பதால் வேதமாகிய விருக்ஷத்திற்கு ஸ்வர்க்கம் முதலியவை புஷ்பங்கள். மோக்ஷமே பலன். புஷ்பங்களைக் கண்டு அவைகளில் ஆசைப்பட்டுப் பிரமித்து அதன் பலனாகிய மோக்ஷத்தை விரும்பாத வர்களென்று அர்த்தம் விஜ. எல்லாவற்றையும் வெங்காயம் முதலியவைகள்ள விஜ.

அத்தியாயம்–3

ஸதியைப் பரமசிவன் யாகத்திற்குப் போகவேண்டாமென்றது

1–14 மணப்பிள்ளையாகிய பரமசிவனும், மாமனாராகிய தக்ஷரும் ஒருவருக்கொருவர் துவேஷ புத்தியுடன் வெகுகாலத்தைக் கழித்தார்கள். எப்பொழுது ப்ரஹ்மதேவர் ஸகல பிரஜாபதிகளுக்கும் அதிபதியாகத் தக்ஷருக்கு அபிஷேகஞ் செய்தாரோ, அப்பொழுது தக்ஷருக்குக் கர்வம் உண்டாயிற்று. (அதனால்தான் பரமசிவனைத் துவேஷித்தாரென்று கருத்து) அந்தத் தக்ஷ ப்ரஜாபதி ப்ரஹ்மிஷ்டர்களான ஈச்வரன் முதலியவர்களை அவமதித்து (பரமசிவனையும் அவரை அனுஸரித்தவர்களையும் அழைக்காமலும், பரமசிவனுக்குப் பாகம் கொடாமலும்) வாஜபேயஞ் செய்து 'ப்ரஹஸ்பதி ஸவம்' என்ற ச்ரேஷ்டமாகிய யாகத்தைச் செய்யவாரம்பித்தார். அந்த யாகத்தில் ஸகல ப்ரஹ்ம ரிஷிகளும், பிதுருக்களும், தேவரிஷிகளும், தேவதைகளும், அவர்களுடைய பத்தினிகளும் பூஜிக்கப்பட்டார்கள். இப்படி தக்ஷருடைய யாகத்தில் அவரால் பூஜிக்கப்பட்டு ஆகாசத்தில் செல்லும் தேவர்கள் தக்ஷருடைய யாகத்தைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள். ஸதி தேவியானவள் அதனைக் கேட்டாள். கைலாஸத்தில் தன்னுடைய கிருஹத்தின் ஸமீபத்தில் பல திக்குகளிலிருந்து செல்லும் கந்தர்வ ஸ்திரீகளையும் பார்த்தாள். அவர்கள் தங்கள் தங்கள் பர்த்தாவுடன் விமானத்தின் மீதேறி, நல்ல வஸ்திரத்தை யுடுத்திக் கொண்டு, ரத்னமயமான பதக்கங்களால் ப்ராகாசிக்கும் கழுத்துள்ளவராகவும்,

ப்ரகாசிக்கும் குண்டலங்களுள்ளவர்களாகவும் இருந்தார்கள். அப்பொழுது ஸதியானவள் தன்னுடைய பர்த்தாவாகிய பரமசிவனை நோக்கி மிகுந்த ஆசையுடன், "ஓ பரமசிவ! உம்முடைய மாமனாராகிய தக்ஷ பிரஜாபதியானவர் இப்பொழுது யாகஞ் செய்கிறாரல்லவா? தேவதைகளெல்லோரும் போகிறார் கள். உமக்கு இஷ்டமிருந்தால் நாமும் போவோம். என்னுடைய ஸஹோதரிகள் தங்கள் தங்கள் புருஷர் களுடன் அவ்விடம் வந்திருப்பார்கள். உம்முடன் அவ்விடம் சென்று என்னுடைய தாய் தந்தைகளால் கொடுக்கப்படும் ஸன்மானத்தை யடைய விரும்புகிறேன். மேலும் என்னுடைய சகோதரிகளையும் என்னுடைய தாயாரையும் பார்த்து வெகுநாளாகி விட்டது. என்னுடைய தாயார் என்னைப் பார்க்கவேண்டும் என்ற விருப்பமுள்ளவளாக இருப்பாள். ஓ எல்லாருக்கும் ஸுகத்தைக் கொடுப்பவரே! செய்யப்படும் யாகமானது மிகவும் சிறந்தது. ஆனதால் அவர்களையும், யாகத்தையும் (நாட்டப்படும் யூபத்தையென்று சிலர்) பார்க்க விரும்புகிறேன். ஓ ஜனனமற்றவரே! முக்குண ஸ்வரூபமும்; ஆச்சரியமுமாகிய இந்தப் ப்ரபஞ்சமானது உம்முடைய மாயையால் உம்மிடத்தில் செய்யப்பட்டு ப்ரகாசிக்கிறது. (ஆனதால் யாகத்தைப் பார்க்க வேண்டுமென்ற குதூஹலம் உமக்கில்லை.) ஆனாலும் நான் ஸ்திரீயல்லவா? உம்முடைய உண்மையை நான் அறியாதவள். ஆனதால் தீனையாக இருக்கிறேன். ஓ ஸம்ஸார ஸம்பந்தமற்ற பந்துக்களல்லாத மற்ற ஸ்திரீகள் கூடத் தங்கள் தங்கள் புருஷர்களுடன் கூட்டமாகச் செல்லுகிறார்கள். பாரும். ஹம்ஸம்போல் வெண்மை நிறமுள்ள அவர்களுடைய விமானங்களால் ஆகாசம் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. ஓ தேவசிரேஷ்ட,

பிறந்த வீட்டில் நடக்கும் உத்ஸவத்தைக் கேட்டுப் பெண்ணின் சரீரமானது அவ்விடம் போகவேண்டும் என்று விரும்பாமலிருக்குமா? பர்த்தாவினுடைய வீட்டிற்கும், ஆசாரியருடைய கிருஹத்திற்கும், மித்திரர்களுடைய கிருஹத்திற்கும் அவர்களால் அழைக்கப்படாமலிருந்தாலும் போகலாம். ஓ தேவ! நீர் என்னிடத்தில் மிகுந்த கருணைவைத்து எனக்குப் பாதி சரீரத்தைக் கொடுத்தீரல்லவா? அப்பேர்ப்பட்ட நீர் என்னுடைய எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும்" என்று மிகுந்த குதூஹலத்துடன் ப்ரார்த்தித்தாள்.

15–25 அதனைக் கேட்ட பகவான் ஸதிதேவியை நோக்கி, "ஓ நல்ல ஸ்வாவமுள்ளவளே 'பந்துக்கள் உடைய கிருஹத்திற்கு அழைக்காமலேயே போகலாம்' என்பது ஸரியானதே. ஆனாலும் அந்தப் பந்துக்கள் தங்களுடைய தேஹம் முதலியவைகளில் மிகுந்த அபிமானம் வைத்து (தங்களைச் சிறந்தவர்களாக நினைத்து) அதனால் மதித்துக் கோபங்கொண்டு நம்மிடத்தில் தோஷத்தை ஆரோபிக்காமல் இருந்தால் நாம் அவர்களுடைய வீட்டில் நடக்கும் உத்ஸவங்களைப் பார்க்கப் போகலாம். மேலும் வித்யை, தபஸ், பணம், அழகான தேஹம், யௌவனம், நல்ல குலம் ஆகிய இவைகளால் ஸாதுக்களுக்கு ஸத்குணங்கள் விருத்தி யாகும். துஷ்டர்களுக்கு மேற்கண்டவைகள் தோஷங் களாகின்றன. அவைகளால் விவேகம் கெடுக்கப் படுகிறது. அதனால் கர்வத்தை (நான் வித்வான். நல்ல குலத்தில் பிறந்தவன் என்ற அபிமானத்தை) அடைந்து ஜனங்கள் துராலோசனையுள்ளவர்களாகிப் பெரியோர்களுடைய (யோக்யதையை) பார்க்கிறதில்லை. ஆனதால் நிலையில்லாத சித்தமுள்ளவர்களான

மேற்காட்டியபடியுள்ள பந்துக்களுடைய வீட்டிற்குப் போகக்கூடாது. அவர்கள் புருவ நெரித்தலுள்ள பார்வையால் தங்கள் கிருஹத்திற்கு வந்த பந்துக்களைப் பார்க்கிறார்கள். வக்கிரவ புத்தியுள்ள வார்த்தைகளைக் கேட்பதால் மிகுந்த வருத்தம் உண்டாகிறது. அவ்வளவு துக்கம் சத்துருக்களாலும், அம்புகளாலும் உண்டாகிறதில்லை, (பந்துக்கள் அவமதித்தால் அந்தத் துக்கம் ஸஹிக்க முடியாதென்று கருத்து), அழகான புருவங்களுள்ளவளே! நீ தக்ஷ ப்ரஜாபதியின் பெண். பிதாவிற்கு உன்னிடம் மிகுந்த பிரீதியுண்டு. இவையெல்லாம் எனக்குத் தெரியும். ஆனாலும் நீ என்னை ஆச்ரயித்திருப்பதாலும், என்னிடத்தில் தக்ஷன் விரோதபுத்தி யுள்ளவனானதாலும், பிதாவாகிய அவன் உன்னைக் கௌரவப்படுத்த மாட்டான், அஸுரர்கள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவைத் துவேஷிப்பது போல் அஹங்காரமற்றவர்களாகிய ஸாதுக்களுடைய ஐசுவர்யத்தைப் பார்த்து; துஷ்டர்கள் அதை அடைய விரும்பியும், அந்தப் பதம் கிடைக்காததால் மனவருத்தம் அடைந்து அவர்களைத் துவேஷிக்கிறார்கள். (என்னிடம் தக்ஷன் விரோதம் வைத்திருப்பதற்கு இதுவே காரணம்.) ஓ அழகான இடுப்புள்ளவளே! ஸாது ஒருவரையொருவர் வணங்குவது, நமஸ்கரிப்பது, எதிர்கொண்டழைப்பது முதலியவைகளைச் செய்கிறது என்பது வழக்கமானாலும், அது அக்ஞர்களால் செய்யக் கூடியது. ஞானிகள் ப்ராக்ஞனுமாகிய பரமபுருஷனை உத்தேசித்து மனத்தால் நமஸ்காரம் முதலியவைகளைச் செய்வார்கள். தேஹத்தில் அபிமானமுள்ளவர்களை உத்தேசித்துச் செய்கிறது இல்லை. (ஆனதால் தக்ஷன் வந்த காலத்தில் மனத்தால் பரமபுருஷனை உத்தேசித்து நமஸ்காரம்

செய்தேனென்று கருத்து.) வஸுதேவரென்ற சப்தத்திற்கு ஸத்வமென்று அர்த்தம் (புண்யத்தால் ப்ரகாசிப்பது) அதில் ப்ரகாசிப்பவர் வாஸுதேவர் எனப்படுகிறார். அவர் ஆவரண மற்றவர். இந்திரியங்கள் அடங்கிய போது ப்ரகாசிப்பவர். இந்திரியங்களுக்குப் புலப்படாத அப்பேர்ப்பட்ட பகவானை எப்பொழுதும் மனத்தால் நமஸ்காரம் செய்து கொண்டிருக்கிறேன். (அதிதிகள் வரும் பொழுதுதான் நமஸ்கரிக்கிறேன் என்பதில்லை யென்று கருத்து) ஓ சிறந்த தொடைகள் உள்ளவளே! தக்ஷன் உன்னுடைய சரீரத்தை யுண்டுபண்ணின பிதாவானாலும் அவனும், அவனை யனுசரித்தவர்களும் உன்னால் பார்க்கடியவர்களல்ல. ஏன் என்றால் நான் யாகத்திற்குப் போயிருக்கும்போது குற்றஞ் செய்யாதவனாகிய என்னை அதிக்ஷேப வார்த்தை சொல்லி அவமானப்படுத்தினான். எனக்கு விரோதியாக இருக்கிறான். பல பேர்களால் கௌரவப்படுத்தப் பட்டவனுக்குப் பந்துக்களிடம் அவமானம் நேர்ந்தால் அவன் மரணமடைய வேண்டியதேயாகும். என்னுடைய வார்த்தையை அதிக்ரமித்து தக்ஷனுடைய யாகத்திற்கு நீ போவாயானால் உனக்கு க்ஷேமமுண்டாக மாட்டாது" என்று சொன்னார். அவனால் உண்டுபண்ணப்பட்ட சரீரத்தை விட்டு விடுவாய். திரும்பி வரமாட்டா யென்று கருத்து.)

அத்தியாயம்–4

ஸதிதேவி சரீரத்தை விட்டது

1–5. சங்கரன் ஸதியை நோக்கி இம்மாதிரிச் சொல்லி "இவள் பிறந்த வீட்டிற்கு போனாலும், போகாமல் இருந்தாலும் உயிரை விட்டபோகிறாள்!" என்று யோசித்து மௌனமானார். அதனைக் கேட்டும், ஸதியானவள் பந்துக்களைப் பார்க்கவேண்டுமென்ற விருப்பமுள்ளவளாகி, "பரமசிவன் பலாத்காரமாகத் தடுப்பாரோ, அல்லது உத்தரவு கொடுப்பாரோ" என்று ஸந்தேஹப்பட்டு வெளியில் வருகிறதும் உள்ளே போகிறதுமாக இருந்தாள். அப்பொழுது அந்தப் பவானியானவள், [பரமசிவனுடைய பத்னி"] பந்துக்களை பார்க்கவேண்டுமென்ற எண்ணத்திற்குத் தடையுண்டானதால் மனவருத்தமடைந்து, கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு கோபத்தால் நடுக்கம் உற்ற சரீரமுள்ளவளாகி, நிகரற்ற புருஷனாகிய சிவனை எரிப்பவள் போலக் கடுமையாகப் பார்த்தாள். பின்னும் அவள் பெருமூச்சு விட்டாள்: துக்கத்தாலும் கோபத்தாலும் அவளுடைய ஹ்ருதயம் வருத்தமடைந்தது; மேலும் ஸ்திரீ ஸ்வபாவத்தால் மூடபுத்தியுள்ளவளாகி தன்னிடத்தில தம்முடைய பாதி சரீரத்தைத் தனக்குக் கொடுத்தவரும், ஸாதுக்களுக்குப் பிரியருமான பரமசிவனைவிட்டுத் தாய் தந்தைகளுடைய வீட்டிற்குச் சென்றாள். இப்படித் தனியாக வேகமாகச் செல்லும் ஸதிதேவியை நோக்கிப் பரமசிவனுடைய கணங்களாகிய மணிமான், மதன் முதலிய அநேக பார்ஷத கணங்கள் விருஷபத்தை முன்னடத்தி அவள் பின்சென்று அவளை விருஷபத்தின் மீதேற்றி

வைத்து, சாரிகைகள் (நாணத்தான்குருவி). பந்து, கண்ணாடி, தாமரை மலர், வெண்குடை, சாமரங்கள், புஷ்பமாலை, கானத்திற்கு ஸாதனங்களாகிய துந்துபி சங்கம், புல்லாங்குழல மஹாராஜ விபூதிகளால் அவளை உபசரித்துக்கொண்டு பயமற்றவர்களாகச் அவள் பின் சென்றார்கள்.

6–23. இப்படி ஸதியானவள் தக்ஷருடைய யாகசாலைக்கு வந்தாள். அந்த யாகசாலையானது வேத சப்தத்தால் ப்ரகாசித்தது, பசுக்கள் அவ்விடத்தில் கொல்லப்படுகின்றன. அநேக ப்ரஹ்மரிஷிகளும் அவ்விடத்திலிருக்கிறார்கள், மண்ணினாலும், மரத்தாலும், இரும்பினாலும், ஸ்வர்ணத்தாலும், தர்ப்பத்தாலும், தோலினாலும் செய்யப்பட்ட பாத்திரங்களிருக்கின்றன. அந்த யாகசாலைக்கு வந்த ஸதிதேவியை அங்கிருந்தவர்களில் ஒருவரும் ஆதரிக்கவில்லை. ஏனென்றால் தக்ஷரிடம் பயந்திருந்தார்கள். ஆனால் அவருடைய ஸஹோதரிகளும், தாயாரும் இவளைக் கண்டு மிகுந்த ப்ரீதியுடன் ஆலிங்கனஞ் செய்துகொண்டார்கள். ஆனந்தபாஷ்பத்தைப் பெருக்கினார்கள். அப்படியும் ஸதியானவள் தகப்பனார் தன்னை ஆதரிக்காததால் ஸஹோதரி முதலியவர்களுடைய வார்த்தையாலும் அவர்கள் செய்யும் உபசாரத்தாலும் ஸந்தோஷம் அடையவில்லை. கொடுத்த ஆஸனத்திலும் உட்கார வில்லை. மேலும் அவள் ருத்ரனுக்குப் பாகம் கொடாமல் யாகம் நடத்தப்படுவதைப் பார்த்து, தன் பிதாவாகிய தக்ஷன் பகவானை அவமதித்ததையும் நினைத்து கோபங்கொண்டாள். அப்பொழுது ஸகல லோகங்களையும் எரிக்கிறவள்போல் கோபாக்கினியால் ஜ்வலித்தாள், அவளைப் பார்த்துப் கணங்கள்

தக்ஷனைக் கொல்வதற்காக யத்தனித்தார்கள். தேவியானவள் அவர்களைத் தடுத்துப் பரமசிவனிடம் த்வேஷமுள்ளவனும், கர்மங்களைச் செய்வதால் கர்வமடைந்தவனுமாகிய தக்ஷனை நோக்கி, எல்லாரும் கேட்டுக்கொண்டிருக்கும்போது, எவரைக் காட்டிலும் மேலானவன் லோகத்திலொருவனுமில்லையோ, எவருக்கு லோகத்தில் பிரியனில்லையோ, எவருக்குத் த்வேஷமில்லையோ, எவரிடத்தில் ஸகல பிராணிகளும் பிரியப்படுவார்களோ, அந்த எல்லாவற்றிற்கும் காரணராக இருப்பவரும், விரோதமற்றவருமான பகவானிடத்தில் உன்னைத் தவிர எவன்தான் விரோத புத்தியை அடைவான்? (ஒருவனும் பகவானைத் துவேஷிக்க மாட்டானென்று கருத்து.)

ஓ ப்ராஹ்மண! ஸாதுக்கள் பிறருடைய குணங்களைக் க்ரஹிப்பார்களேயொழியத் தோஷத்தைக் க்ரஹிக்கிறதில்லை. உம்மைப் போன்றவர்கள் (அஸூயை உள்ளவர்கள்) தோஷத்தைக் க்ரஹிப்பார்களே யொழியக் குணத்தை க்ரஹிக்கிறதில்லை. தோஷத்தைக் க்ரஹிக்காமலேயே ஸ்வல்பமான குணங்களையும் அதிகமாக விஸ்தரிப்பவர்கள் மிகவும் உத்தமர்கள் எனப்படுகிறார்கள் (மஹான்களுக்குள் சிறந்தவர்கள்). நீ தோஷத்தையே ஆரோபித்தாய். ஆனால் இது ஆச்சரியமல்ல. மரிக்கும் ஸ்வபாவமுள்ளதாகிய சரீரத்தையே ஆத்மாவென்று சொல்லுகிற அஸத்துக் களுக்கு எப்பொழுதும் மஹத்துக்களை நிந்திப்பது ஸஹஜமேயாகும். அது மஹா புருஷர்களுடைய பாதத்தில் ஒட்டிய தூளிகளால் நாசஞ் செய்யப்பட்ட தேஜஸுள்ளவர்களிடத்தில் அதுவே க்ஷேமத்திற்குக் காரணமாகிறது. (மஹாபுருஷர்கள் தங்களை

நிந்திப்பவனைப் பார்த்து ஸஹித்திருந்தாலும் அவர்களுடைய பாததூளி" அதை ஸஹியாமல் அந்த அஸத்தை நிக்கிரஹிக்கிறது ஆகையால் க்ஷேமத்திற்கு ஹேதுவாகிறது) இரண்டு அக்ஷரங்களுள்ள (சிவ) எவருடைய திவ்ய நாமத்தைப் பேச்சுடன் பேச்சாக ஒரு தடவை உச்சரித்தால் ஸகல பாவங்களும் உடனே நிவர்த்தியாகின்றனவோ அப்பேர்ப்பட்ட பரமசிவனைப் பாபியான நீ த்வேஷிக்கிறாய். ஆச்சரியம்! அவர் பரிசுத்தமான கீர்த்தியுள்ளவர். அவருடைய சரிதங்கள் பரிசுத்தியை உண்டுபண்ணக்கூடியவைகள். அவருடைய உத்தரவை மீறக்கூடாது. ப்ரஹ்மானந்தமாகிய மதுவை அடைய விரும்பியவர்கள் எவருடைய பாதமாகிய தாமரை மலரை மனதாகிய வண்டுகளால் ஸேவிக்கிறார்களோ, எவர் பக்தர்கள் விரும்பியதை அவரவர்களுடைய இஷ்டப்படி கொடுக்கிறாரோ, அந்த லோக பந்துவான பகவானுக்கு நீ துரோகம் செய்கிறாய். ப்ரஹ்மா முதலிய தேவர்கள் அந்தப் பகவானுடைய பாதத்தின் நிர்மால்யத்தைத் தலையில் வஹிக்கிறார்கள். அவர்கள் பகவான் ஜடைகளை விரித்துக்கொண்டு மயானத்தில் வஸிப்பதையும், அங்கிருக்கும் மாலை, சாம்பல், கபாலம் ஆகிய இவை களை ஆபரணங்களாகத் தரிப்பதையும் அறியார் களோ? உனக்குத்தான் தெரியுமோ? மேலும் தர்மத்தைக் காப்பாற்றுகிறவராகிய பகவானைப் பயமில்லாமல் எவர்கள் நிந்திக்கிறார்களோ அவர்களை சிக்ஷிக்கச் சக்தியுள்ளவனானால், பலாத்காரமாக அவருடைய நாக்கைத் துண்டிக்கவேண்டும். சக்தியற்ற வனானால், இரு கைகளால் காதுகளை மறைத்துக் கொண்டு வெளியே போகவேண்டும். அல்லது தானாவது ப்ராணனை விட்டுவிடவேண்டும். இதுவே

இவ்விஷயத்தில் தர்மமெனப்படுகிறது. (பகவன் நிந்தையைக் கேட்டு ஸஹிக்கக்கூடாதென்று கருத்து) ஆதலால் பரமசிவனை நிந்தித்தபடியால், உன்னால் உண்டுபண்ணப்பட்டதாகிய இந்த சரீரத்தை இனி நான் வைத்துக்கொள்ளுகிறதில்லை. மோஹத்தால் அசுத்தமாகிய அன்னத்தை புஜித்தாலும் அதைக் கக்கிவிடுவதே சுத்திக்கு காரணமென்று சொல்கிறார்கள். ஆத்மாவிலேயே ரமித்துக்கொண்டிருக்கும மனமானது வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் விதி, நிஷேதங்களில் செல்லுகிறதில்லை. தேவர்கள் ஆகாயத்தில் நடக்கிறது என்றும் மனிதர்கள் பூமியில் நடக்கிறதென்று ஏற்பட்டிருப்பது போல் எப்படியோ,அப்படி போல் அவரவர்களுக்கென்று ஏற்பட்டிருக்கும் தர்மத்தில் இருக்கவேண்டுமே யல்லாமல் அந்நியனை நிந்திக்க கூடாது. அக்நிஹோத்ரம் முதலிய கர்மங்களும், நிவிருத்தி மார்க்கங்களான சமம், தமம், முதலியவை களும் வேதத்தால் சொல்லப்பட்டிருப்பதால் அனுஷ் டிக்கக் கூடியவைகளேயாம். இரண்டு மார்க்கங்களும் ஒன்றுக்கொன்று விருத்தங்களாகையால் ஒரே காலத்தில் ஒரே புருஷனால் அனுஷ்டிக்க முடியாதவைகளாக இருக்கின்றன. ஆனதுபற்றி ஆசையுள்ளவன் கர்ம மார்க்கத்தையும், வைராக்கியமுள்ளவன் நிவிருத்தி மார்க்கத்தையும் அனுஷ்டிக்க வேண்டுமென்ற வியவஸ்தை வேதத்திலேயே ஏற்பட்டிருக்கிறது. பிரஹ்மத்தினிடத்தில் இரண்டு வகையான மார்க்கானுஷ்டானமும் ஸம்பந்திக்கிறதில்லை. (கர்மிக்கு நிவிருத்தி மார்க்கத்தை அனுஷ்டிக்காததாலும், சாந்தனுக்குக் கர்மத்தை அனுஷ்டிக்காததாலும் எப்படி தோஷமில்லையோ அப்படியே பகவானுக்கு இரண்டையும் அனுஷ்டிக்காததால் குற்றம் இல்லை

என்று கருத்து) ஓ பிதாவாகிய தக்ஷ! எங்களால் அனுபவிக்கப்படும் அணிமாதிகள் காரணமற்றவைகள் (நினைத்தமாத்திரத்தில் கிடைப்பவைகள்) ப்ரஹ்ம வித்துக்களால் அடையப்பட்டவைகள். இவை உனக்கெட்டாதவை. உன்னுடைய ஸ்மிருதிகள் யாகசாலையில் கிடைக்கக்கூடியவைகள். அந்த அன்னத்தையும் புஜித்தவர்களால் ஸ்துதிக்கப்பட்ட வைகள் (பரமசிவன் தரித்திரன் நான் ஐசுவரியம் உள்ளவனென்ற கர்வங் கொள்ளவேண்டாமென்று கருத்து). பரமசிவனுக்கு அபராதஞ் செய்தவனாகிய உன்னுடைய தேஹத்தாலுண்டான இந்தக் கெட்ட சரீரத்தால் என்ன பயன்? மஹாபுருஷனை நிந்தித் தவனால் உண்டுபண்ணப்பட்டதாகையால் இது நிந்திக்கக்கூடியது. கெட்டவனாகிய உன்னுடைய ஸம்பந்தத்தால் எனக்கும் வெட்கமுண்டாகிறது. வேடிக்கையாகப் பேசிக்கொள்ளும்போது விருஷப சத்வஜாராகிய பகவான் என்னை, "ஓ தாக்ஷாயணி" (தக்ஷனுடைய பெண்) என்று அழைத்து உன்னுடைய பெயரைச் சொல்வார். அப்பொழுது அதனைக் கேட்டுப் புன்னகையற்றவளாகி மிகுந்த துக்கத்தை யடைவேன்! ஆனதால் உன்னுடைய சரீரத்திலிருந்து உண்டான இந்தப் பிணத்துக்கொப்பான தேஹத்தை விட்டு விடுவேன்" என்று சொன்னாள்

24–30. காமன் முதலிய சத்ருக்களை அடக்கிய ஓ விதுரரே! இம்மாதிரி. யாகசாலையில் பட்டு வஸ்திரமுடுத்திய ஸதியானவள் தக்ஷனை நோக்கி சொல்லி ஆசமனஞ்செய்து வடக்கு முகமாகப் பூமியில் உட்கார்ந்து மௌனமாகக் கண்களை மூடிக் கொண்டு யோகத்தைச் செய்தாள். எப்படியெனில்,

நல்ல ஆஸனத்தில் உட்கார்ந்து பிராண வாயுவையும் அபான வாயுவையும் நாபியில் அடக்கி, அங்கிருந்து உதான வாயுவைக் கிளப்பி, மெள்ள மெள்ள ஹ்ருதயத்தில் புத்தியுடன் நிறுத்தி, அடக்கியிருந்த கண்டத்தின் வழியாகப் புருவங்களுடைய மத்திய பாகத்திற்குக் கொண்டு வந்தாள். இப்படி குற்றமற்ற வளாகிய அந்த ஸதியானவள், மஹான்களைக் காட்டிலும் மிகவும் மஹானாகிய மஹாதேவனால் மடியில் ப்ரீதியுடன் வைத்துக்கொள்ளப் பட்ட சரீரத்தில் வாயுவாகிய அக்கினியைத் தரித்தாள். பின்பு அவள் ஜகத்குருவாகிய பர்த்தாவினுடைய பாதாரவிந்தத்தையே தியானஞ்செய்து அதனால் சுத்தையாகிப் பர்த்தாவையே தர்சித்தாள். வேறொரு வரையும் பார்க்கவில்லை. ஸமாதியாகிய அக்கினியால் அவளுடைய தேஹமானது எரிக்கப்பட்டு ஜ்வலித்தது, தக்ஷனிடத்தில் கோபத்தால் சரீரத்தை விட்டாள்; ஆகாசத்திலிருப்பவர்களுக்கும் பூமியிலிருப்பவர்களுக்கும் அது ஒரு ஆச்சரியமாக இருந்தது. எல்லாராலும் பூஜிக்கக்கூடியவராகிய பரமசிவனுடைய பத்தினி ஆகிய ஸதியானவள் தக்ஷனால் கோபமுண்டு பண்ணப்பட்டு பிராணனை விட்டாள். 'ஹா' 'ஹா' என்று எல்லோரும் உரக்கச் சொன்னதுமல்லாமல் 'இந்தத் தக்ஷனுடைய துஷ்டத்தனம் மிகவும் வியக்கிக் கூடியது. லோகத்திலுள்ள சரம் (அசையும் பொருள்) அசரம் [அசையாப் பொருள்) யாவும் இவனுடைய பிரஜைகளல்லவா ? (எல்லாரிடத்திலும் இவனுக்குப் பொதுவாகவே ப்ரியமிருக்கவேண்டியது) ஸதியோ இவனுக்குப் பெண். கௌரவப்படுத்தப்பட வேண்டியவள். அப்படியிருக்க அவள் உயிரிழக்கும்படி அவமதித்தாள். பின்னுமவள் மரிக்க யத்தனிக்கும்

பொழுதும் தடுக்கவில்லை. பரமசிவனைத்வேஷித்தவன். கெட்ட அபிமானமுள்ளவன். ப்ராஹ்மணர்களில் தாழ்ந்தவன். இவனுக்குமிகுந்த அபகீர்த்தியுண்டாகப் போகிறது" என்றும் சொன்னார்கள்.

31. இம்மாதிரியான ஜனங்களுடைய வார்த்தையைக் கேட்டும். ஸதிதேவி பிராணனை விட்டதைப் பார்த்து பார்ஷத கணங்கள் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு தக்ஷனைக். கொல்வதற்காக ஓடிவந்தார்கள்.

32–34. அதனைப்பார்த்து அத்வர்யுவாகிய ப்ருகுவானவர் யாக விரோதிகளை நாஸஞ்செய்யக்கூடிய மந்திரங்களை உச்சரித்து, தக்ஷிணாக்கினியில் ஹோமஞ் செய்தார். உடனே அக்கினியிலிருந்து ரிபுக்களென்ற தேவர்கள் உண்டானார்கள். அவர்கள் துரஸ்ஸினால் ஸோமத்தை அடைந்தவர்கள். அவர்கள் குறைக் கொள்ளிகளாகிய ஆயுதத்தால் பார்ஷதர்களை எரிக்க, அவர்கள் ப்ரகாசிக்கும் ப்ரஹ்ம தேஜஸ்ஸைக்குப் பயந்து குஹ்யகர்களுடன் ஓடினார்கள்.

இந்த நான்காவது அத்தியாயத்தில் 23 வது ஸுலோகத்துடன் நான்காவது அத்தியாயம் முடிந்ததாக வும், மற்ற ஸுலோகங்கள் ஐந்தாவதென்றும். விஜயத் வஜீய வ்யாக்யானத்தில் கணக்கிடப் பட்டிருக்கிறது.)

அத்தியாயம்–5

தக்ஷ வதம்

1–4 தக்ஷனால் அவமதிக்கப்பட்டு ஸதிதேவி மரணமடைந்ததையும், பார்ஷத கணங்கள் அந்த யாகத்திலுண்டான தேவர்களால் துரத்தப்பட்டதையும், பகவானாகிய பரமசிவன் நாரதர் முகமாகத் தெரிந்து கொண்டு மிகவும் கோபங் கொண்டார்.. இரண்டு உதடுகளையும் கடித்துக் கொண்டார். மின்னல் போலும், அக்கினிஜ்வாலைகள் போலும் பிரகாசிக்கிற ஜடையைத் தூக்கிக் கர்ஜித்துப் பூமியில் அடித்தார். அதிலிருந்து பரமசிவனுடைய அம்சமுள்ள வீரபத்திரர் உண்டானார். அவர் பெரியதான சரீரமுள்ளவர். ஆகாசம் வரையில் வளர்ந்தவர். ஆயிரம் கைகள் உள்ளவர். மேகம் போன்ற காந்தியுள்ளவர். மூன்று சூர்யர்கள் போன்ற மூன்று கண்கள் உள்ளவர் பயங்கரங்களான சிங்கப் பற்களுள்ளவர். ஜ்வலிக்கும் அக்கினி போன்ற தலைமயிர்களுள்ளவர். கபால மாலையைத் தரித்தவர். பலவகையான ஆயுதங்களைத் தரித்தவர். அவர் பகவானை நோக்கி 'என்னால் உமக்குச் செய்யப் படவேண்டியது என்ன' என்று கைகூப்பிக் கேட்டார். அதனைக் கேட்ட பகவான் அந்தப் பூதத்தை நோக்கி, நீ என்னுடைய அம்சம் உள்ளவன். என்னுடைய படர்களுக்கு அதிபதி. ஆனதால் தக்ஷனையும் அவனுடைய யக்ஞத்தையும் நாசஞ்செய்" என்று ஆக்ஞாபித்தார்.

5–8 இப்படி கோபங்கொண்ட பரமசிவனால் ஆக்ஞாபிக்கப் பெற்ற வீரபத்திரர், தேவதேவரும்,

விபுவுமாகிய பகவானைப் பிரதக்ஷிணஞ் செய்து தம்மை மஹாபல முள்ளவராக நினைத்துக் கொண்டார். பின்னுமந்த வீரபத்திரர் ஜகத்தை ஸம்ஹரிக்கும் அந்தகனையும் நாசஞ் செய்யக்கூடிய சூலாயுதத்தை யெடுத்து, பாதஸரம் முதலிய ஆபரணங்கள் சப்திக்கும் படி தக்ஷனுடைய யாகசாலைக்குச் சென்றார். பகவானுடைய பார்ஷத கணங்களும் பயங்கரமாகக் கர்ஜித்துக் கொண்டு அவர்பின் சென்றார்கள். அப்பொழுது யஜமானன் ஸதஸ்யர்கள் ரித்விக்குகள், பிராம்மணர்கள், அவர்களுடைய பத்தினிகள் ஆகிய எல்லாரும் வடக்குத் திக்கில் உயரக் கிளம்பும் தூளியைப் பார்த்து, 'இதென்ன இருள்' எங்கிருந்து உண்டாயிற்று? காற்று வீசவில்லை; (உத்பாதத் தாலுண்டானதல்ல) பிராசீனபர்ஹிஸ் என்ற உக்கிரதண்டனாகிய அரசனுடைய ராஜ்யகாலம் ஆகியதால் திருடர்களில்லை. பசுக்களும் ஓட்டப்பட வில்லை. எதனால் தூளி உண்டாயிருக்கிறது? இப்பொழுது உலகத்திற்குப் பிரளயம் வரப்போகிறதா? என்ன, என்று யோசித்தார்கள்.

9–11 தக்ஷனுடைய பத்தினியாகிய பிரஸூதி முதலிய ஸ்திரீகள், "இந்தப் பிரஜாபதியான தக்ஷன் மற்ற பெண்கள் பார்த்திருக்கும்போது குற்றமற்றவள் ஆகிய ஸதி உயிரையிழக்கும்படி அவளை அவமானப் படுத்தினாரே, பிரளய காலத்தில் ஜடைகளை விரித்துக் கொண்டு, தம்முடைய சூலமாகிய ஊசியில் திக் கஜங்களைக் கோத்தும், தூக்கிக் கொண்டும் அட்ட ஹாஸமாக கர்ஜித்ததால் திக்கை வெடிக்கச் செய்து கொண்டும் நர்த்தனஞ் செய்கிறாரோ, அப்போர்ப்பட்ட ஸஹிக்க முடியாத தேஜஸுள்ள பகவானைக்

கோபமுள்ளவராகவும் புருவ நெரித்துள்ளவராகவும், பயங்கரங்களாகிய சிங்கப்பற்களால் நட்சத்திரங்களை உயரத் தூக்கியவருமாகவும் செய்த பிரஜாபதியாகிய தட்சருக்கு க்ஷேமம் கிடைக்குமா?" என்று பலவகையாக நடுங்கின மனத்துடன் சொல்லிக் கொண்டார்கள்.

12–26 அதனைக் கேட்ட தக்ஷருக்குப் பயத்தைக் குறிப்பிடக்கூடிய அபசகுனங்கள் ஆகாசத்திலும், பூமியிலும் காணப்பட்டன. ஓ விதுரரே! அதற்குள் அநேக ஆயுதவகைகளுள்ளவர்களும் குட்டையான சரீரமுள்ளவர்களும், சிவந்த நிறமுள்ளவர்களும், பொன்னிறமுள்ளவர்களும், மகரத்தின் வயிறு, முகம் போன்ற முகமுள்ளவர்களுமான பார்ஷதகணங்கள் அந்த யாகசாலையை நான்கு புறத்திலும் சூழ்ந்து கொண்டார்கள். சிலர் யாகசாலையின் பிராக்வம் சத்தை (கிழக்கிலும், மேற்கிலுமிருக்கும் தூண்களின் மீது போடப்பட்டு, கீழ்மேலாகவிருக்கும் காஷ்டம்) முறித்தார்கள். பத்தினிகளிருக்குமிடமான பத்தினி சாலையை (யாகசாலைக்கு முன்னிருக்கும்) ஸதஸ்ஸை யும், அக்னி த்ரசாலையையும், யஜமானனுடைய கிரஹத்தையும், இன்னுஞ் சிலர் யாகசாலையையும், பின்னும் சிலர் யாக பாத்திரங்களையும் நாசஞ் செய்தார்கள்; சில கணங்கள் அக்கினிகளை அணைத் தார்கள்; சிலர் அக்கினிகுண்டங்களில் மூத்திரத்தை விட்டார்கள். சிலர் உத்தரவேதியின் மேகலைகளை அறுத்தார்கள். சிலர் மஹரிஷிகளை உபத்திரவித்தார் கள். சிலர் முனிபத்தினிகளை அதட்டினார்கள்; சிலர் ஓடுகிற ஸபீபத்திலுள்ள தேவர்களைப் பிடித்துக் கொண்டார்கள். மணிமாவென்பவன் பிருகுவைக் கட்டினான்; வீரபத்ரர் பிரஜாபதியைக் கட்டினார்; சண்டீச்வரர் பூஷாயை (ஸூயனை)யும்தத, நந்திகேசு வரர் பனனென்பவரையும் பிடித்துக் கொண்டார்கள்

எல்லா ரித்விக்குகளும், ஸதஸ்யர்களும், மற்ற தேவர்களும் பார்ஷத கணங்களால் எறியப்படும் கற்களால் மிகவும் துன்பமடைந்து பலவகையாக ஓடினார்கள்; பிருகுவானவர் ஸதஸ்ஸில் விசைகளைக் காட்டிக்கொண்டு சிரித்ததால் ஸோமருவத்தை வைத்துக் கொண்டு ஹோமஞ் செய்யும் அவருடைய விசைகளை வீரபத்திரர் பிடுங்கினார்; பகரென்பவர் சிவனைத் தக்ஷன் நிந்திக்கும்போது கண்களால் ஜாடை காட்டியபடியால் அவரைக் கீழே தள்ளி அவருடைய இரண்டு கண்களைப் பிடுங்கினார்; மேலும் தக்ஷன் பகவானை நிந்திக்கும்பொழுது பற்களை வெளியில் தெரியும்படியாகச் சிரித்தவராகிய பூஷா வென்பவருடைய பற்களை வீரபத்திரர் உடைத்தார்.

பின்பு அந்த வீரபத்திரர் தக்ஷனைப் பூமியில் கிடத்தி, அவனுடைய மார்பில் உட்கார்ந்து கூர்மையான கத்தியால் அவனுடைய கழுத்தை வெட்டியும் அது உட்லைவிட்டு வேறாக எடுக்க முடியவில்லை; அப்பொழுது ஆயுதங்களாலும், அஸ்திரங்களாலும் அவனுடைய தோல் வெட்ட முடியாமலிருப்பதைப் பற்றி யோசிக்கலானார். அப்பொழுது அவர் யாகத்தில் பசுக்களை ஆயுதம் இல்லாமலேயே கொல்லும் உபாயத்தை நினைத்துக் கொண்டு தக்ஷனுடைய கண்டத்தைத் திருகி உடலைவிட்டு எடுத்து மிகுந்த கோபத்துடன் தட்சிணாக்கனியில் ஹோமஞ் செய்தார்; பின்னுமவர் அந்த யாகசாலையில் அக்கினியை வைத்துக் கொளுத்திக் கைலாஸஞ் சென்றார். அதைக் கண்ட பூதங்களும், பிரேதங்களும், பிசாசுக்களும் 'நல்லது நல்லது' என்று கொண்டாடினார்கள். மற்றவர்கள் நிந்தித்தார்கள்.

அத்தியாயம்–6

ப்ரஹ்மதேவர் பரமசிவனைப்ரார்த்தித்தது

1–41. பின்பு ருத்ர கணங்களுடைய சூலம். கத்தி, கதை, பரிகம் முத்கரம் ஆகிய ஆயுதங்களால் அடிக்கப்பட்டு அபஜயமடைந்த தேவகணங்கள், வெட்டப்பட்டகைகளும், துண்டிக்கப்பட்டகைகளுமான ஸகல அவயவங்களுள்ளவர்களாகிப் பயந்து ரித்விக்குகளுடனும், ஸதஸ்யர்களுடனும் ப்ரஹ்மதேவரிடம் சென்று அவரை நமஸ்கரித்து எல்லாவற்றையும் தெரிவித்தார்கள். வரும் காரியத்தை அறிந்தே ப்ரஹ்மதேவரும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் தக்ஷனுடைய யாகத்திற்குப் போகவில்லை. ப்ரஹ்மா தேவர்கள் உடைய வார்த்தையைக் கேட்டு அவர்களை நோக்கி, தேஜஸ்வியாகிய புருஷன் குற்றஞ் செய்தாலும், அவருக்கு அபராதஞ் செய்ய விரும்பினாலும் அது பெரும்பாலும் க்ஷேமத்தைக் கொடுக்காது. பெரியோர்கள் குற்றம் செய்யமாட்டார்கள். அப்படிச் செய்தால் நாம் அதனை ஸஹிக்கவேண்டுமேயல்லாமல் வேறொன்றையும் நினைக்கக்கூடாது.) அப்படியிருக்க நீங்கள் யக்ஞ பாகத்தை அவருக்குக் கொடாமல் அலக்ஷ்யஞ் செய்து அவருக்கு அபராதஞ் செய்திருக்கிறீர்கள். ஆனாலும் அந்தப் பகவான் சீக்கிரத்தில் சந்தோஷிக்கும் ஸ்வபாவமுள்ளவர். ஆனதால் தாமரை மலர் போன்ற அவருடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டு அவரைச் சந்தோஷிக்கச் செய்யுங்கள். எவர் கோபங்கொண்டால் லோக பாலர்களுடன் லோகங்கள் நாசமடையுமோ; அந்தப் பகவான் மனைவியை விட்டு பிரிந்திருக்கிறார்.

தக்ஷனுடைய கெட்ட வார்த்தையைக் கேட்டு மனவருத்தம் அடைந்திருக்கிறார். அவரை நீங்கள் யாகத்தின் க்ஷேமத்தை விரும்பியவர்களாகி வேண்டிக்கொள்ளுங்கள். மேலும் சுதந்திரராகிய அவருடைய பல பராக்கிரமங்கள் இவ்வளவென்று எனக்கும் தெரியாது. யக்ஞனுக்கும் தெரியாது (அக்காலத்தில் இந்திரனாக இருந்தவருக்கு யக்ஞனென்று பெயர்). உங்களுக்கும், மற்ற பிராணிகளுக்கும் மஹரிஷிகளுக்கும் தெரியாததேயாம். அப்படியிருக்க அந்த விஷயத்தில் உபாயம் யாரால் சொல்லமுடியும்?' என்று சொல்லி அந்தத் தேவர்கள் உடனும், ப்ரஜாபதிகளுடனும், பித்ருக்களுடனும் கைலாஸ பர்வதம் நோக்கிச் சென்றார். அந்த மலையானது திரிபுர ஸம்ஹாரஞ் செய்து பரமசிவனுக்குப் பிரியமான வாசஸ்தலம். அந்த மலையானது ஓஷதி, தபஸ், மந்திரம், யோகம் ஆகிய இவைகளில் இயற்கையாகவே சித்தியடைந்தவர்களான தேவர்களாலும், கின்னரர்களாலும் கந்தர்வர்களாலும். அப்ஸரஸ்ஸுகளாலும் எக்காலத்திலும் ஆசிரயிக்கப்பெற்றது. பலவகையான தாதுக்களால் அழகாயிருப்பவைகளும், அநேக ரத்னமயமான சிகரங்களாலும். பலவகையான மரங்கள், கொடிகள். குல்மங்கள் ஆகிய இவைகளாலும். தூய்மையான மலையருவிகளாலும், அநேக குகைகளுள்ள தாழ்வரைகளாலும் ப்ரகாசிக்கிறது. ஆனதால் பார்த்தாவுடன் கிரீடிக்கும் ஸித்தமாதகர்களுக்குச் சந்தோஷத்தை உண்டுபண்ணுகிறது. அவ்விடத்தில் மயில்கள் 'கேக,காக என்று ஸ்தித்கின்றன. மதித்த வண்டுகளுடைய மூர்ச்சனை (இராகத்தின் கதி விசேஷம்) கேட்கப்படுகிறது. பின் அவ்விடத்தில் இஷ்டத்தைக் கொடுக்கக் கூடியவைகளான மரங்களிருப்பதாலும், பக்ஷிகள் இனிமையாகச்

சப்திப்பதாலும், மலையானது கையைத் தூக்கிக் கொண்டு ப்ராஹ்மணர்களை அழைப்பது போலிருக் கிறது. யானைகள் ஓடிக்கொண்டிருப்பதால் மலை ஓடுவதுபோலும், மலையருவிகள் சப்திப்பதால் மலை சப்திப்பது போலும் இருக்கிறது.

இன்னும் அந்தப் பர்வதமானது மந்தாரம், பாரிஜாதம் ஸரளம், பச்சிலை, மரம், பனைமரம், மலைமகத்தி, வேங்கை அரஜீனம், ஓட்டு மாமரம், அடம்பம், நீபமென்ற அதன் பேதம், கொன்றை எருக்கு, சதபத்ரம், மாவலிங்கை. சிறு சண்பகம், குடஜம், மல்லிகை மாதவி, பலாமரம், அத்திமரம், அரசமரம், இருளிமரம், ஆலமரம், ஹிங்கு, பூர்ஜம், ஓஷதி, பூகம், ராஜபூகம், நாகைமரம், பேரீச்சைமரம், ஆம்ராதகம், மாமரம், பிரியாளு, இலுப்பை, இங்குதம், வண்டடித்த மூங்கில்கள் முதலிய விருக்ஷங்களால் ப்ரகாசிக்கிறது. மேலும் ஆம்பல், நீலோத்பலம், செந்தாம்ரை, வெண்தாமரை முதலிய புஷ்பங்கள் நிறைந்த குளங்களிருக்கின்றன. அவைகளில் பறவைகள் இனிமையாகச் சப்திக்கின்றன. பன்றிகள், சிங்கங்கள், கரடிகள், சல்யகம் (முட்பன்றிகள்), கவயங்கள், சாபங்கள், புலிகள், குருக்கன் எருமைகள்; கர்ண, உர்ண ஏகபத நாய், கஸ்தூரி மிருகங்கள் முதலியவை களால் விளங்குகிறது. வாழைத் தோட்டத்தால் சூழப்பட்ட தாமரை ஓடையுள்ளது.

மேலும் அவ்விடத்தில் கங்கா நதி ஓடுகிறது. அதன் ஜலத்தில் பரமசிவனுடைய பத்தினியாகிய ஸதி ஸ்நானஞ் செய்ததால் புண்யகரமாயிருக்கிறது. இப்படிப்பட்ட கைலாஸத்தைப் பார்த்து, தேவர்கள்

ஆச்சரியமடைந்தார்கள். பின்னுமவர்கள் அவ்விடத்தில் அலகாவென்ற அழகான பட்டணத்தைக் கண்டார்கள். ஸௌகந்திகமென்ற வனத்தையும் அதிக ஸௌகந்திகம் என்ற தாமரை மலர்களையும் கண்டார்கள். அந்தப் பட்டணத்திற்கு வெளியில் நந்தா, அலக நந்தாவென்ற இரண்டு நதிகள் ஓடுகின்றன. அவைகள் பகவானுடைய பாதாரவிந்த தூளியால் மிக்க புண்யம் பெற்றிருக் கின்றன. ஓ விதுரரே! அந்த நதிகளின் ஜலத்தில் ஆகாசத்தில் செல்லும் தேவ ஸ்திரீகள் விமானத்தில் இருந்து இறங்கி, தங்கள் பர்த்தாவுடன் ஸ்நானஞ் செய்து ரதியாலுண்டான சிரமத்தை நிவர்த்தித்துக் கொள்ளுகிறார்கள். மேலும் அவர்கள் ஸ்நானஞ் செய்ததால் அவர்களுடைய சரீரத்திலிருந்து கரைந்த குங்குமங்களால் ஜலமானது பொன்னிறமாக ஓடுகிறது. அதனை யானைகள் தாகமில்லாத காலத்திலும் குடிக்கின்றன. பெண் யானைகளையும் குடிக்கச் செய்கின்றன. அந்த அலகா பட்டணத்தில் ஸ்வர்ண மயமான விமானங்கள் பல இருக்கின்றன. புண்ய ஜனங்கள் (குபேரனுடைய வேலைக்காரர்கள்), அவர்களுடைய ஸ்திரீகள் ஆகிய இவர்களால் நிறைந்திருக்கிறது. மின்னலுள்ள மேகங்களால் ப்ரகாசிக்கும் ஆகாசம் போலிருந்தது, தேவர்கள் அந்தக் குபேரனுடைய பட்டணத்தையும் ஸௌகந்திகம் என்ற வனத்தையும் கடந்து சென்றார்கள். அந்த வனத்தில் இஷ்டமான வஸ்துக்களைக் கொடுக்கக் கூடியவைகளும், அழகான புஷ்பம், பழம், இலை ஆகிய இவைகளுள்ளவைகளுமான திவ்ய விருக்ஷங்க ளிருக்கின்றன. மேலும் தாமரைக் குளங்கள் இருக்கின்றன. அவைகளில் ஹம்சம் முதலிய பறவை களும் வண்டுகளும் சப்திக்கின்றன. காட்டு யானைகள்

செஞ்சந்தன மரங்களில் உராய்ந்து அதன் கந்தமுள்ள காற்று வீசுகிறது. அதனால் புண்ய ஸ்திரீகளுடைய மனம் ஸந்தோஷத்தை அடைகிறது. வைடூரிய கற்களால் செய்யப்பட்ட படிகள் உள்ள ஓடைகளும் இருக்கின்றன. கிம்புருஷர்கள் அவ்விடத்தில் வஸிக்கிறார்கள். அதற்குச் சமீபத்தில் தேவர்கள் ஒரு ஆலமரத்தைக் கண்டார்கள். அது நூறு யோஜனை தூரம் உயரமுள்ளது. எழுபத்தைந்து யோஜனை நீளமுள்ள கிளைகளால் விஸ்தாரமானது. எங்கும் மிகுந்த நிழலுள்ளது. தாபமற்றது. பறவைகளின் கூடுகளற்றது. யோக ஸ்வரூபமாயுள்ளது, மோக்ஷத்தை அடைய விரும்பியவர்களுக்குக் கதியாயுள்ளது. அந்த மரத்தின் அடியில் கோபமற்ற அந்தகன் போல் உட்கார்ந்திருக்கும் பகவானைத் தேவர்கள் கண்டார்கள். அவர் சாந்தமாகிய சரீரமுள்ளவர், சாந்தர்களாகிய ஸனந்தர் முதலிய ஸித்தர்களால் உபாஸிக்கப்பட்டவர். மேலும் குஹ்யர்களுக்கும் ரக்ஷஸ்ஸுக்களுக்கும் அதிபதியும், பகவானுக்கு மித்திரனுமான குபேரன் பகவானை உபாசித்துக் கொண்டிருக்கிறார். பின்னும் அந்தப் பகவான் வித்யை, தபஸ், யோகம் இவைகளுடைய மார்க்கத்தை லோகத்தில் பரவச்செய்து லோகத்துக்கு மங்களத்தைச் செய்பவர். அவைகளைத்தாமும் அனுஷ்டிப்பவர். அவைகளுக்கு அதிபதி. லோகத்திற்கு பந்து. அவர் உடைய சரீரமானது ஸந்தியாகால மேகம் போன்றது. விபூதி, யோகதண்டம், அஜினம் (மான்தோல்) ஆகிய தபஸ்விகளுக்கு இஷ்டமான அடையாளத்தையும், சந்திர கலையையும் அவர் தரித்திருந்தார். தர்பாஸனத்தில் உட்கார்ந்து நாரதருக்கும் மற்ற ஸாதுக்களுக்கும் ப்ரஹ்மத்தை உபதேசித்துக் கொண்டும் இருந்தார். வலதுகாலை இடது துடையின் மீது வைத்தும்,

வலது கையை வலது முழங்காலில் வைத்துக் கொண்டும், மணிபந்தத்தில் ஜபமாலையைத் தரிக்கும் தர்க்க முத்திரையுடன் உட்கார்ந்திருந்தார். ப்ரஹ்மானந்தத்தில் மூழ்கிய மனமுள்ளவராகவும் இருந்தார். அப்படிப்பட்ட முக்கிய முனியாகிய பகவானை லோகபாலர்களும் முனிகளும் கைகூப்பி நமஸ்கரித்தார்கள் அப்பொழுது தேவ ச்ரேஷ்டர்களாலும் அசுரச்ரேஷ்டர்களாலும் நமஸ்கரிக்கப்பட்ட பாதாரவிந்தமுள்ள ப்ரஹ்மதேவரை பரமசிவன் பார்த்து எழுந்திருந்து அவரை நமஸ்கரித்தார். அது மிகவும் பூஜ்யராகிய மகாவிஷ்ணுவானவர் (வாமனாவதாரத்தில்) காச்யபரை நமஸ்கரித்தது போலிருந்தது. பின்னும் பரமசிவனை ஸேவித்துக்கொண்டிருந்த ஸித்தகணங்களும் மஹரிஷிகளும், ப்ரஹ்மதேவரை நமஸ்கரித்தார்கள்.

42–53. இப்படிப் பரமசிவனாலும், அங்குள்ள மற்றவர்களாலும், நமஸ்கரிக்கப்பட்ட ப்ரஹ்மதேவர் பகவானை நோக்கிச் சிரித்துக்கொண்டு "ஓ ஈச்வர! ஜகத்திற்கு உற்பத்தி ஸ்தானமாகிய ப்ரகிருதி, பீஜமாகிய புருஷன் ஆகிய இவ்விரண்டிற்கும் எது மேலானதோ, பேதமற்றதோ, அந்த ப்ரஹ்மமே நீர் என்று எனக்கு தெரியும். சரீரமுள்ள சிவ, சக்தி இவைகளைக் கொண்டு நீர் கிரீடித்துக்கொண்டு பட்டுப்பூச்சி போல ஜகத்தை படைக்கிறீர். காப்பாற்றுகிறீர். ஸம்ஹரிக்கிறீர். தர்மம், அர்த்தம் இவைகளைக் கொடுக்கும் வேதத்தை ஸம்ரக்ஷிப்பதற்காக நீரே தக்ஷனை நிமித்தமாக வைத்துக் கொண்டு யாகத்தை படைத்தீர். லோகத்தில் வர்ணாசிரம தர்மங்களும், மரியாதையும் உம்மாலேயே ஏற்படுத்தப்பட்டன. அவைகளை ப்ராஹ்மணர்கள்

ச்ரத்தையுடன் அனுஷ்டித்து வருகிறார்கள். ஓ மங்கள ஸ்வரூபியாயிருப்பவரே! ஸத்கார்யஞ் செய்பவர்களுக்கு ஸ்வர்க்கம் மோக்ஷம் ஆகிய இவைகளைக் கொடுப்ப வரும் நீரே, பாப கர்மாக்களை செய்பவனுக்கு நரகம் முதலியவைகளும் உம்மாலேயே கொடுக்கப்படுகின்றன. எக்காரணத்தாலும் இது மாறுகிறதில்லை, (எல்லாக் கர்மங்களுக்கும் பலனைக் கொடுப்பவரும் நீரே.) மேலும், உம்முடைய சரணங்களில் ஆத்மாவை சமர்ப்பித்து ஸகல பிராணிகளிடத்திலும் நீர் வஸிப்பதாகவும்,ஸகலப்ராணிகளை ஆத்மாவிடத்தில் வஸிப்பவர்களாகவும் பார்க்கிறார்களோ, ஸமபுத்தி யுள்ளவர்களான அந்த ஸாதுக்கள் பெரும்பாலும் கோபத்தால் ஜயிக்கப்பட மாட்டார்கள். (பெரியோர் களுக்குக் கோபம் நேரிடாது.) அக்ஞன்தான் கோபித்துக் கொள்வான். எவர்கள் பேத புததியுள்ள வர்களோ, கர்மங்களிலேயே ஆசைப்பட்டவர்களோ, கெட்ட எண்ணமுள்ளவர்களோ, பிறருடைய க்ஷேமத்தைப் பார்த்து வருத்தப்படுகிறார்களோ, கெட்ட வார்த்தைகளை உச்சரித்துப் பிறருக்கு மிகவும் துன்பத்தை உண்டுபண்ணுகிறார்களோ அவர்கள் தெய்வத்தால் கொல்லப்படுகிறார்கள். உம்மைப் போன்ற ஸாதுக்கள் அவர்களைக் கொல்லவேண்டாம். ஏனென்றால் ஜயிக்கமுடியாத ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் மாயையால் ஜனங்கள் எப்போது, மோஹித்து பேதபுத்தியை அடைந்து அபராதஞ் செய்கிறார்களோ, அப்பொழுது ஸாதுக்கள் அவனிடத்தில் தயை செய்வார்களேயொழியப் ,பராக்கிரமத்தைச் செலுத்த மாட்டார்கள். (ஸாதுக்கள் பிறர் துக்கப்படுவதைப் பார்த்து சஹிக்காதவர்களாகையால் 'இது நம்முடைய அதிர்ஷ்டத்தால் நேர்ந்த கெடுதி; இவ்விஷயத்தில் அவன் என்ன குற்றஞ் செய்தான் என்று நினைப்பார்கள்.

மாயையானது கெடுதியைக் கொடுக்கக் கூடியது; அந்த மாயையை நீர் ஜயித்தவர். எல்லாவற்றையும் அறிந்தவர். அந்த புத்தி மயக்கம் அடைந்தவர்களும், கர்மங்களிலேயே மனத்தைச் செலுத்தி உமக்கு அபராதஞ் செய்தவர்களுமான அக்ஞர்களை அனுக்ரஹிக்க வேண்டும்; உம்மால் நாசஞ்செய்யப்பட்டு ஸமாப்தியடையாமல் இருக்கும் யாகத்தை உத்தரணஞ் செய்யவேண்டும். யக்ஞத்தின் பாகத்தை அடையத்தக்க வராகிய உமக்கு கெட்ட ரித்துவிக்குகள் பாகங் கொடுக்கவில்லை. உம்மாலேயே யாகமானது நிறை வேற்றப்படுகிறது. (யாகத்திற்குப் பலனைக் கொடுப்பவர் நீர்தான்.) இந்த யஜமானனாகிய தக்ஷன் பிழைக்கவேண்டும், ப்ருகுவிற்கு மீசை முளைக்க வேண்டும். கண்கள் உண்டாக வேண்டும்; முன் போல் பூஷாவிற்கு பற்கள் முளைக்க வேண்டும். ஆயுதங்களாலும், கற்களாலும் முறிக்கப்பட்ட தேவர்க ளுடைய அவயவங்கள் ஸ்வஸ்தங்களாக ஆகட்டும். உம்முடைய அனுக்கிரஹத்தால் எல்லோருக்கும் ஆரோக்கியம் உண்டாகட்டும். இப்பொழுது யக்ஞம் செய்து எது மிகுதியாக விருக்கிறதோ, அது இருக்கட்டும். ஓ ருத்ர! அந்த பாகத்தால் யக்ஞமானது முடிக்கப்படட்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

நோட்டு

மணிபந்த –மணிக்கட்டு "ஒருகாலை மற்றொரு துடையில் வைத்துக் கொண்டும், மற்றொரு முழங்காலில் கையை வைத்துக் கொண்டுமிருப்பது. வீராஸனமெனப்படுகிறது யோகஸாஸ்த்ரம். தர்க்க முத்திரை ஆள்காட்டி விரலுடைய நுனியும், கட்டை விரலுடைய நுனியும் சேர்த்து வைத்துக் கொண்டு கையை நீட்டி உபதேசிப்பது.

அத்தியாயம்–7

தக்ஷன் பிழைத்தது

1–5 ஓ நீண்ட கைகளுள்ள விதுரரே! இப்படி ப்ரஹ்மதேவரால் சமாதானஞ் செய்யப்பட்டு சந்தோஷமடைந்த பரமசிவன் பின்வருமாறு சொன்னார். "பிரஜைகளுக்கு அதிபதியாகிய ஓ ப்ரஹ்மதேவரே! குழந்தைகள் செய்த அபாரதத்தை நான் மனத்தில் வைத்துக் கொள்கிறதுமில்லை. வாக்கினால் சொல்லுகிறதுமில்லை. ஏனென்றால் அவர்கள் தேவமாயையால் புத்திமயங்கிக் குற்றத்தைச் செய்கிறார்கள். ஆனாலும் அவர்களுக்குச் சிட்சையைச் செய்தேன். தக்ஷப்பிரஜாபதியின் தலை எரிக்கப்பட்டதால் அவனுக்கு ஆட்டு முகமுள்ள தலையானது உண்டாகட்டும். பகரென்பவர் தம்முடைய யக்ஞ பாகத்தை மித்திரரென்பவருடைய கண்ணால் பார்க்கட்டும். பூஷாவானவர் மாவைப் புஜிக்கட்டும். அதையும் எஜமானனுடைய பற்களால் புஜிக்கட்டும். எனக்கு யாக சிஷ்டத்தைக் கொடுத்த படியால் தேவர்களுக்கு அவயவங்கள் உண்டாகட்டும். மற்ற அத்வர்யுக்கள் அசுவினி தேவர்களுடைய கைகளாலும், பூஷாவினுடைய கைகளாலும் கைகளுள்ளவர்களாக ஆகட்டும். பிருகுவானவர் ஆட்டின் மீசையுள்ளவராக ஆவார்" என்று அனுக்ரகித்தார்.

6–54 அதனைக் கேட்டு ஸகல பூதங்களும் (பிராணிகளும்) ஸந்தோஷத்துடன், "நல்லது, நல்லது" என்றார்கள். பிறகு தேவர்கள் பரமசிவனையும் ப்ரஹ்மதேவரையும் அழைத்துக் கொண்டு தக்ஷனுடைய யாகசாலைக்குச் சென்றார்கள். அவ்விடத்தில்

பகவானாகிய பரமசிவன் சொன்னபடி எல்லாவற்றையும் செய்து யாக பசுவின் தலையைத் தக்ஷனுடைய உடலுடன் சேர்த்தார்கள். அப்பொழுது பரமசிவன் கிருபை நிறைந்த பார்வையால் தக்ஷனைப் பார்க்கத் தூங்கி விழித்தவன் போல் தக்ஷன் பிழைத்து எழுந்திருந்து தனக்கு முன் நிற்கும் பரமசிவனைப் பார்த்தான்.

பரமசிவனிடத்தில் விரோதத்தால் அசுத்தமான மனமுள்ளவனாக இருந்த தக்ஷன் பகவானைத் தரிசித்தவுடன் சரத்காலத்திய மடுப்போல் சுத்த சித்தனாக இருந்தான். அப்பொழுது பரமசிவனை ஸ்தோத்திரஞ் செய்யவேண்டுமென்ற விருப்பமுள்ளவனானாலும் இறந்து போன ஸதியை- நினைத்து கண்ணீரைப் பெருக்கி அதனால் கண்ட மடைத்து கொஞ்ச நேரம் மௌனமாக இருந்து பிறகு தைரியத்துடனும் கபடமற்றும் பரமசிவனை நோக்கி, "ஓ பகவன்! நான் உம்மை அவமதித்தவனானாலும் எனக்கு உம்மால் செய்யப்பட்ட சிக்ஷையானது மிகுந்த அனுக்கிரகமேயாம்.

நீரும், விஷ்ணுவும் அதமர்களான ப்ராஹ்மணர்களிடத்திலும் உபேக்ஷை செய்கிறதில்லை. அப்படிக்கிருக்க ஸத்கர்மங்களைச் செய்பவர்களை உபேக்ஷிப்பீர்களா? நீர் ப்ரஹ்மதேவராக இருந்து வித்யை, தபஸ், விரதம் ஆகிய இவைகளையே அனுஷ்டிப்பவர்களான ப்ராஹ்மணர்களை ஆத்ம தத்துவத்தை காப்பாற்ற வேண்டி முகத்தால் முதலில் உண்டு பண்ணினீர். ஓ சிறந்தவரே! பசுக்களைத் தண்டம் வைத்துக் கொண்டு பரிபாவிப்பது போல் அந்த

ப்ராஹ்மணர்களை ஒவ்வொரு ஆபத்துக்காலத்திலும் காப்பாற்றுகிறீர். உம்முடைய உண்மையை அறியாமல் ஸபையில் கெட்ட வார்த்தைகளாகிய அம்புகளால் உம்மை அடித்தேன். அப்படி மிகவும் மஹானாகிய உம்மை நிந்தித்ததால் அதோகதியை அடைந்திருக்கும் என்னிடத்தில் கிருபா திருஷ்டியைச் செய்து என் குற்றத்தை மறந்து காப்பாற்றினீர். ஆனதால் பகவானாகிய நீர் உம்மால் செய்யப்பட்ட காரியத்தாலேயே சந்தோஷமடைய வேண்டும்" என்று (பதில் செய்ய என்னால் முடியாதென்பது கருத்து) ஸ்தோத்திரஞ் செய்து சிவனை ஸமாதானப்படுத்தி ப்ரஹ்மதேவரிடமும் விடைபெற்று உபாத்தியார் ரித்விக் முதலியவர்களுடன் யாகத்தை நடத்தினார்.

யக்ஞத்திற்கு நேர்ந்த விக்கினத்தாலுண்டான தோஷத்தின் பரிகாரத்திற்காகவும், வீரர்களான பிரமத கணங்களுடைய சேர்க்கையாலுண்டான தோஷத்தின் பரிகாரத்திற்காகவும், மூன்று கபாலங்களில் ஸம்ஸரிக்கப் பட்டதும், விஷ்ணு தேவதாகமுமான புரோடாசத்தை ரித்விக்குகள் செய்தார்கள். ஹவிஸ்ஸுடன் கூடிய அத்வர்யுவுடன் யஜமானன் சுத்தசித்தனாக மகா விஷ்ணுவை தியானஞ் செய்தான். அப்பொழுது ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் ஆவிர்ப்பவித்தார். (தோன்றினார்). அவருடைய காந்தியால் பத்து திக்குகளும் ப்ரகாசித்தன. அதனால் மற்றத் தேஜஸ்ஸுகள் அடக்கப்பட்டன.

மேலும் அவர் கருடன்மீது ப்ரகாசித்திருந்தார். கருட்னுக்குப் பிரஹத் ரதந்த்ரமென்ற ஸாமங்கள் பக்ஷங்களாக (இறக்கைகள்) இருக்கின்றன. பகவான்

கறுத்த திருமேனியுள்ளவர். பீதாம்பரம் தரித்தவர், சூரியன் போன்ற கிரிடமுள்ளவர். வண்டுகள் போல் கறுத்த தலை மயிர்களால் ப்ரகாசிக்கும் குண்டலங் களால் அழகான முகமுள்ளவர். சங்கம், தாமரை மலர், சக்கரம், பாணம், சார்ங்கமென்ற வில், கௌமோத்கீ யென்ற கதை, நந்தக மென்ற கத்தி, தோல் (கேடயம்) ஆகிய இவைகளுள்ளவைகளும், பக்தர்களைக் காப்பாற்றுவதில் பரபரப்புள்ளவைகளும், ஸ்வர்ணா பரணங்களால் ஸ்வர்ணமயங்கள் போலிருப்பவை களுமான கைகளுள்ளவர். அதனால் புஷ்பித்த கர்ணிகார விருக்ஷம் போலப் ப்ரகாசித்தார். மார்பில் ஸ்ரீ தேவியுள்ளவர். வனமாலையுள்ளவர். கம்பீரமாகிய சிரிப்பின் இலேசத்தால் ஜகத்தை சந்தோஷிக்கச் செய்பவர். அவருடைய இரு பக்கங்களில் சாமரங்களாகிய ராஜ ஹம்சங்கள் அசைகின்றன. அவருக்குமேல் வெண்குடையாகிய சந்திரன் ப்ரகாசித்தான். இப்படி வந்த ஸ்ரீமந் நாராயணனைப் பார்த்து ப்ரஹ்மா, இந்திரன், ருத்ரன் முதலிய தேவர்கள் சீக்கிரமாக எழுந்திருந்து நமஸ்கரித்தார்கள்.

மேலும், அவர்கள் பகவானுடைய தேஜஸ்ஸால் அடக்கப்பட்ட தேஜஸ்ஸுள்ளவர்களாகி, கத்கத ஸ்வரமுள்ளவர்களாகி கைக்கூப்பிக் கொண்டு சமீபம் சென்றார்கள். பின்னும் அவர்கள் அந்தப் பகவான் உடைய மகிமையை முழுமையையும் துதிக்க முடியாத வாக்குள்ளவர்களானாலும், தங்கள் புத்திக்குத் தக்கபடி பக்தர்களுக்கு அனுக்கிரகம் செய்வதற்காகச் சரீரம் எடுத்துக் கொண்டிருக்கும் பகவானை ஸ்துதித்தார்கள். தக்ஷர் மேலான பூஜாவஸ்துக்களை எடுத்துக் கொண்டு இருகைகளையும் கூப்பிக் கொண்டு ப்ரஜாபதிகளுக்குக்

குருவும், சுநந்தர், நந்தர், முதலியவர்களுடன் கூடிய வருமான பகவானிடம் சென்று அவரை நோக்கி, "ஓ பகவன்! நீர் உம்முடைய சுய ரூபத்திலிருப்பவர். புத்தி விருத்திகளற்றவர். சித்ரூபியாக இருப்பவர். நிகரற்றவர். பயமற்றவர். மாயையை வசப்படுத்திக் கொண்டு இருப்பவர். இப்படி ஸ்வதந்திரரானாலும், அந்த மாயா சம்பந்தத்தால் புருஷராகிய ராகதுவேஷங்கள் உள்ள வர்போல் ராமனாகவும், கிருஷ்ணனாகவும் இருக்கிறீர்! என்று ஸ்தோத்திரம் செய்தார்கள்.

பின்பு, ரித்விக்குகளெல்லோரும் 'ஓ உபாதிகள் உள்ளவரே! நந்திகேச்வரருடைய சாபத்தால் நாங்கள் கர்மங்களில் ஆசை கொண்டிருக்கிறோம். தங்களுடைய உண்மை எங்களுக்குப் புலப்படவில்லை. எதனுடைய சித்திக்காக, இதற்கு இதுதேவதை. இந்தக் கிரியை இப்படி அனுஷ்டிக்கப்பட வேண்டும்' என்ற வியவஸ்தை ஏற்பட்டிருக்கிறதோ, எது வேதத்தால் விதிக்கப்பட்டிருக்கிறதோ, 'அந்த அத்வரமென்ற (யாகம்) உம்முடைய ஸ்வரூபத்தை மாத்திரம் தெரிந்து கொண்டிருக்கிறோம்' என்றார்கள்.

பிறகு ஸதஸ்யர்கள் பகவானை நோக்கி, ஆசிரயத்தைக் கொடுப்பவரே! ஸம்ஸார மார்க்கம் மிகவும் கஷ்டமானது. அதில் இளைப்பாறுவதற்கு நிழல் முதலியவை இல்லை. மிகுந்த துக்கங்களே நடக்கமுடியாத இடங்களாக இருக்கின்றன. அந்த வழியில் சஞ்சரிக்கும் துஷ்ட யானை அந்தகனேயாம். விஷயங்களே கானலாக (மிருகதிருஷ்ணிகா) இருக் கின்றன. அகங்காரத்திற்கு இருப்பிடமாகிய சரீரமே சுமையாக இருக்கிறது. சுகதுக்கங்கள் படுகுழிகளாக

இருக்கின்றன. துஷ்டர்களாகிய புலி முதலியவைகளின் பயம் மிகுதியாயிருக்கிறது. சோகமாகிற காட்டுத்தீயின் உபத்திரவம் அதிகமாக இருக்கிறது. அப்படிப்பட்ட மார்க்கத்தில் செல்லும் பலவித காமனையுள்ள அக்ஞர்கள் உம்முடைய பாதங்களை எப்பொழுது அடைவார்கள் ? என்றார்கள்.

அதன் பிறகு ருத்ரன் "ஓ வரத்தைக் கொடுப்பவரே, உம்முடைய பாதமானது இஷ்டத்தை அடைய விரும்பிய எல்லாராலும் பூஜிக்கக் கூடியது. நிஷ்காமர் களான முனிகளும், மிகுந்த பிரியத்துடன் அதனைப் பூஜிக்கிறார்கள். அப்படிப்பட்ட பாதத்தில் புத்தியை செலுத்தியவனாக என்னை அக்ஞஜனங்கள் நிந்தித்தால் அதனை, உம்முடைய மேலான அனுக்கிரஹத்தால் பூர்ணனாகிய நான் மனத்தில் வைக்கிறதில்லை" என்றார். அதன்பின்பு பிருகுவானவர் "எவருடைய மாயையால் ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் ஆத்மஞ்ஞான மற்றவர்களாக அவித்யையாகிய தமஸ்ஸினால் தூங்கின வர்களாகிய (விவேகமில்லாமல்) ' ஆத்மாவிடத்தில் இருக்கும் உம்முடைய உண்மையை இப்பொழுதும் அறியவில்லையோ, அப்படிப்பட்டவரும், சரணம் அடைந்தவர்களுக்குப் பந்துவுமாகிய நீர் தயை செய்யவேண்டும்" என்றார்.

பின்பு ப்ரஹ்மதேவர் 'உம்முடைய இந்த ஸ்வரூபத்தைப் பதார்த்தங்களின் பேதத்தைக் கிரகிக்கக் கூடிய இந்திரியங்களைக் கொண்டு புருஷன் பார்க்க முடியாது. ஜீவன் இந்திரியத்திற்கும் அதன் விஷயத்திற்கும் ஸத்வம் முதலிய குணங்களுக்கும் ஆசிரயமாக இருப்பவன். நீர் மாயாமயமாகிய தேகம்

முதலியவைகளைக் காட்டிலும் வேறானவர்!' என்று ஆத்ம தத்துவத்தை உரைத்தார்.

அதன்பின் இந்திரன் "அசுரர்களை நாசஞ்செய்யும் ஆயுதங்களைத் தரிக்கும் எட்டுக் கைகளுள்ளதும், மனத்திற்கும், கண்களுக்கும் ஆனந்தத்தைக் கொடுப்பதும், ஜகத்தைத் தனக்குள் அடக்கிக் கொள்வதுமான இந்த உம்முடைய தேகமானது யுக்தமானதேயாம்" என்றான். ரித்விக்குகளுடையை பத்தினிகள் "ஓ கொப்பூழில் தாமரை மலருடையவரே! யக்ஞ ஸ்வரூபியாக இருப்பவரே! இந்த யாகமானது முன் காலத்தில் உம்மைப் பூஜிப்பதற்காகப் ப்ரஹ்மதேவரால் உண்டு பண்ணப்பட்டது. பின்பு தக்ஷரிடத்திலுள்ள கோபத்தால் பரமசிவன் இதை நாசஞ் செய்தார். பசுவைக் கொல்வது முதலியவைகள் இல்லாமலிருக்கும் அதனை தாமரை மலர் போன்ற நேத்திரத்தால் கடாக்ஷித்துப் பரிசுத்தமாகச் செய்யும்" என்றார்கள்.

மஹரிஷிகள் 'ஓ பகவன்! நீர் கர்மங்களை உமது இஷ்டப்படி செய்கிறீர். ஆனாலும் அதனுடைய பலனாகிய சுகதுக்கங்களில் சம்பந்திக்கிறதில்லை. மேலும் எந்த லக்ஷ்மிதேவியை மற்றவர்கள் ஐசுவரியத் திற்காகப் ப்ரார்த்திக்கிறார்களோ, அவள் உம்மைத் தானாக அனுஸரித்தும் அவனை நீர் லக்ஷ்யம் செய்கிறதில்லை. ஆனதால் உம்முடைய நடை உலக விருத்தமாக இருக்கிறது" என்றார்கள். ஸித்தர்கள் "எங்களுடைய இந்த மனதாகிய யானையானது துக்கமாகிய காட்டுத் தீயினால் எரிக்கப்பட்டும் தாகத்தை யடைந்தும் உம்முடைய கதையாகிய சுத்தமான அமிருத நதியில் மூழ்கி ஸம்ஸார தாபத்தை

நினையாமலிருப்பதுடன் ப்ரஹ்மத்தை யடைந்தவன் போல அதிலிருந்து திரும்பவுமில்லை" என்றார்கள். தக்ஷருடைய பத்தினியானவள் (ப்ரஸூதி) 'ஓ ஈச! லக்ஷ்மிக்கு இருப்பிடமா யிருப்பவரே! நல்வரவாகுக தயை செய்ய வேண்டும், உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். உம்முடைய பத்தினியாகிய லக்ஷ்மீ தேவியுட்ன் இவ்விடத்திலிருந்து எங்களைக் காப்பற்ற வேண்டும். தலையில்லாத உடல்போல் உம்முடைய சம்பந்தமில்லாத யாகம் ப்ராசிக்கவில்லை" என்றார்கள்.

லோகபாலர்கள் "ஓ பூமன்! ஞானக்கண்ணால் பார்க்கக் கூடிய உம்முடைய ஸ்வரூபமானது, விஷயத்தைக் கிரகிக்கும் எங்களுடைய இந்திரியங் களால் கிரகிக்க முடியுமா? நீர் ஐந்து மகாபூதங் களுடன் ஆறாவது (ஜீவனாக) புருஷனாகத் தோன்று கிறது உம்முடைய மாயையேயாம்" என்றார்கள். யோகேசர்கள் "ஓ ப்ரபுவே! ஸகல ஜகத் ஸ்வரூபியா யிருக்கும் உம்மிடத்தில் எவன் பேத திருஷ்டியில்லாமல் ஒன்றாகப் பார்க்கிறானோ அவனைக் காட்டிலும் பிரியனாகிய புருஷன் உமக்கொருவனுமில்லை. ஆனாலும் ஓ ஈச! அநன்யமாகிய பக்தியுடன் சரணம் அடைகிறவர்களை அனுக்கிரகிக்கவேண்டும். எல்லோர் இடத்திலும் நீர்பிரியமுள்ளவரல்லவா? மேலும் எவர் ஜகத்தைப் படைப்பது, பரிபாலிப்பது, ஸம்ஹரிப்பது ஆகிய கர்மங்களுக்கு அதிபதியோ, எவர்பலவகையாகப் பேதிக்கும் குணமுள்ள தம்முடைய மாயையால் ஆத்மாவிடத்தில் பலவிதமான புத்தியை உண்டுபண்ணு கிறாரோ, எவர் தம்முடைய ஸ்வரூப ஞானத்தால் ப்ரஹ்மத்தை நிவிருத்திக்கிறாரோ அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம் செய்கிறோம்" என்றார்கள்.

சப்த ப்ரஹ்மா பகவானை நோக்கி "எவருடைய தத்துவமானது என்னாலும், மற்றவர்களாலும் அறிய முடியாததோ அப்படிப்பட்டவரும் ஸத்வ மூர்த்தியும், தர்மம் முதலியவைகளை உண்டுபண்ணுகிறவரும், குணங்களற்றவருமாகிய உம்மை நமஸ்கரிக்கிறேன்" என்றார்.

அக்கினியானவர் "எவருடை தேஜஸ்ஸால் எனக்குத் தேஜஸ்ஸு உண்டாகிறதோ யாகத்தில் ஆஜ்யத்தால் நனைக்கப்பட்ட ஹவிஸை எவருடைய தேஜஸ்ஸால் வகிக்கிறேனோ, யக்ஞத்தைக் காப்பாற்றுகிறவரும், ஐந்து வகையான யக்ஞஸ்வரூபியும், ஐந்து யஜுஸ்ஸுகளைக் கொண்டு பூஜிக்கப்பட்டவருமாகிய யக்ஞ ஸ்வரூபியாகிய உம்மை நமஸ்கரிக்கிறேன்" என்றார்.

தேவர்கள் "பிரளய காலத்தில் தம்மால் ஸ்ருஷ்டிக்கப் பட்ட ஜகத்தை வயிற்றில் வைத்துக் கொண்டு ஜலத்தில் ஆதிசேஷனாகிய படுக்கையில் நீர் படுத்துத் தூங்குகிறீர். நீரே ஏல்லாவற்றிற்கும் முந்திய புருஷன். உம்முடைய ஆத்ம தத்துவமார்க்கத்தை ஜனலோக வாசிகள் தியானிக்கிறார்கள். அப்போர்ப்பட்ட நீர் எங்களுக்கெதிரில் ஸஞ்சரிக்கிறீர். வேலைக்காரர்களான எம்மைக் காப்பாற்றுகிறீர்" என்றார்கள். கந்தர்வர்கள் 'ஓ தேவ! மரீசி முதலிய ப்ரஜாபதிகளும், ப்ரஹ்மா, இந்திரன், தேவர்கள், ருத்திரன், ஆகிய இவர்களும் உம்முடைய அம்ச பூதர்களேயாம். இந்த ஜகத்தானது உமக்கு விளையாட்டுக் கருவியாக இருக்கிறது. அப்படிப்பட்ட பகவானாகிய உமக்கு எப்பொழுதும் நமஸ்காரம் செய்கிறோம்" என்றார்கள்.

வித்யாதரர்கள் "புருஷன், புருஷார்த்தத்திற்கு ஸாதனமாகிய சரீரத்தை யடைந்தும் உம்முடைய மாயையால் சரீரத்தால் (என்னுடையது, நான்), என்ற அபிமானத்தை வைத்து அஸத்தான விஷயத்தில் ஆசை வைத்துக் கொண்டிருக்கிறான். அப்படிப்பட்ட ஆத்ம மோஹத்தை உம்முடைய கதாமிருதத்தை ஸேவிப்பவன் நிவர்த்தித்துக் கொள்வான் என்றார்கள். ப்ராஹ்மணர்கள் "நீரே யாகம், நீரே ஹவிஸ், நீரே அக்கினி, நீரே மந்திரம், ஸமித், தர்ப்பம், பாத்திரங்கள் ஆகிய இவைகளும் நீரே, ஸதஸ்யர்களும் நீரே, யஜமானன் அவருடைய பத்தினி ஆகிய இவர்களும் உம்முடைய ஸ்வரூபம். தேவதை, ஸ்வதா அக்கினி ஹோத்ரம், ஸ்வதை, ஸோமம், ஆஜ்யம், பசு ஆகிய இவைகளும் உம்முடைய ஸ்வரூபமா யிருக்கின்றன; முன்னொரு காலத்தில் நீர் வராஹாவதாரம் செய்து பாதாளத்திலிருந்த பூமியை யானை தாமரைக் கொடியை கொண்டு வருவதுபோல் விளையாட்டாகச் சிங்கப்பல்லால் உத்தரணஞ் செய்தீர் அப்பொழுது யோகிகள் உம்மை துதித்தார்கள்; நீர் வேத ஸ்வரூபி, யாக ஸ்வரூபி, கிருது ஸ்வரூபி யூபமுள்ளது கிருதுவெனப்படுகிறது).

ஓ யக்ஞத்திற்கு அதிபதியாக இருப்பவரே! உம்முடைய நாமத்தை யுச்சரித்த மாத்திரத்தில் யாகத்திற்கு நேரிடும் விக்கினங்கள் யாவும் நாசமடை கின்றன. உம்முடைய தரிசனத்தை விரும்பியவர்களும், ஸத்கர்மங்களை அனுஷ்டிக்காதவர்களுமான எங்களுக்குத் தரிசனங் கொடுக்க வேண்டும். உமக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்" என்றார்கள்.

இப்படி பகவானை எல்லோரும் ஸ்தோத்திரஞ் செய்யும்பொழுது தக்ஷர் ருத்ரனால் கெடுக்கப்பட்ட யாகத்தை திரும்பவும் அனுஷ்டித்தார். அப்பொழுது ஸ்ரீ பகவான் ஸகல பாகத்தையும் தான் அனுபவிக்கிற வரானாலும் தமக்குக் கிடைத்த பாகத்தால் சந்தோஷித்தவர் போல் தக்ஷனை அழைத்து "நானும், ப்ரஹ்மதேவரும், பரமசிவனும் ஜகத்திற்குக் காரணர்கள். மேலானவர்கள். ஆத்மாவாக இருப்பவர்கள். ஈசுவரர்கள், சாக்ஷியாக இருப்பவர்கள். தாமாகப் ப்ரகாசிப்பவர்கள். உபாதியற்றவர்கள். நான் என்னுடைய முக்குண ஸ்வரூபமாகிய மாயையை ஆசிரயித்து இந்த ஜகத்தைப் படைத்தும், ரக்ஷித்தும், ஸம்ஹரித்தும், அந்த அந்த வேலைக்குத் தகுதியான ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற பெயரையும் அடைகிறேன். அப்படிப் பட்டதும், இரண்டாவதற்றதும், சிதருபியுமான பரப் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் ப்ரஹ்ம ருத்ரர்களை வேறென்று நினைப்பவர்கள் அக்ஞர்களாகின்றார்கள்.

புருஷன் தன்னுடைய கை, கால் முதலிய அவயவங்களுக்குள் எதையும் பிறருடையதாக எப்படி நினைக்கிறதில்லையோ, அப்படி வித்வான் எல்லாப் பிராணிகளையும் தானாக நினைக்கிறான். ஒரே ஸ்வருபமுள்ளவர்களானவர்களுக்குள் பேதமில்லை யென்று எவன் நினைக்கிறானோ அவனே சாந்தியை அடைவான்" என்று அனுக்கிரகித்தார்.

53–61 இப்படிப் பகவானால் ஆக்ஞாபிக்கப்பட்டு தக்ஷர் திரிக்பாலேஷ்டியால் பகவானைப் பூஜித்து, தேவர்களை, அங்கத்தாலும் (பிரயாஜம் முதலியவை), பிரதான கர்மத்தாலும் (தர்சபௌர்ணமாஸம்) பூஜித்தார்.

ருத்ரருடைய பாகத்தால் ருத்ரனையும், முடிவில் செய்யப்படுகிற கர்மத்தால் ஸோமபர்களான மற்ற தேவர்களையும் பூஜித்தார். இப்படி தக்ஷர் யாகத்தை முடித்து ரித்விக்குகளுடன் அவபிருத ஸ்நானஞ் செய்தார். தம்முடைய மஹிமையால் அடைந்த ஸித்தியுள்ள அந்தத் தக்ஷருக்குத் தேவர்கள் தர்மத்திலேயே உம்முடைய புத்தி செல்லட்டும்' என்று அனுக்கிரகஞ் செய்து ஸ்வர்க்கஞ் சென்றார்கள். இப்படி தக்ஷருடைய பெண்ணாகிய ஸதியானவள் சரீரத்தை விட்டு ஹிமவானுடைய பத்தினியாகிய மேனை என்பவளிடத்தில் ஜனித்தாள் என்றும், பிரளயகாலத்தில் அடங்கியிருந்த சக்தியானது மஹாபுருஷனையே திரும்பவும் அடைவதுபோல் அந்தப் பார்வதியானவள் மறுபடியும் பரமசிவனையே அடைந்தாளென்றும் தக்ஷ யாகத்தைக் கெடுத்த வராகிய பரமசிவனுடைய சரிதத்தைப் ப்ருஹஸ் பதியின் சிஷ்யராகிய உத்தவரிடமிருந்து கேட்டிருக் கிறேன். ஓ குரு வம்சத்தில் பிறந்தவராகிய விதுரரே! இந்த உபாக்யானம் பரிசுத்தியை யுண்டுபண்ணக் கூடியது. மேலானது, கீர்த்தியை விருத்தி பண்ணக் கூடியது. ஆயுளை விருத்தி செய்யக்கூடியது. ஸகல பாவங்களையும் நாசஞ் செய்யக்கூடியது. இதனை எவன் நித்தியம் பிறர் சொல்லக் கேட்கிறானோ, தன் வாக்கினால் பக்தியுடன் சொல்லுகிறானோ, அவனுடைய பாவங்கள் நாசமாகின்றன' என்று விதுரருக்கு மைத்ரேயர் சொன்னார்.

குறிப்பு

ஸ்வரூபத்தில் "தம்முடைய மஹிமையிலிருப்பவர்" சுருதி. பயமற்றவர். "இரண்டாவதாலல்லவா பயமுண்டாகிறது" சுருதி. மாயையை ஜீவன்மாயைக்கு

வசப்பட்டவன். பரமாத்மா மாயையை ஸ்வாதீனப் படுத்திக் கொண்டவர் என்று கருத்து. சுத்தர் –பாவ புண்யங்களற்றவர் வீர. தம்முடைய மஹிமையில் இருந்து கொண்டு மாயையைப் புருஷ ரூபமாகப் பரிணமிக்கச் செய்து, அதில் ஜீவரூபியாக இருந்து ஸ்வதந்திரரானாலும் கர்மவசியர் போலிருக்கிறார், வீர. ஸதஸ்யர்கள் ஈசுவரனில்லாத தக்ஷயாகத்தில் பணத்தாசையால் ஸதஸ்யர்களாக இருந்தோம் என்று பச்சாத்தாப மடைந்து வைராக்கியத்தை ஸ்துதிக் கிறார்கள். ஸ்ரீத. ஐந்து வகை "இந்த யக்ஞமானது அக்கினி ஹோத்திரம், தர்ச பூர்ணமாஸம், சாதுர்மாஸ்யம், பசு, ஸோமம் என்ற ஐந்து பேதங்களுள்ளது" –சுருதி. ஐந்து மந்திரங்கள் ஆச்ராவய என்ற நான்கு அக்ஷரங்கள். அஸ்துச் ரௌஷட் என்ற நான்கு அக்ஷரங்கள். 'யேய ஜாமஹே, என்ற ஐந்து அக்ஷரங்கள். வஷட் என்ற இரண்டு அக்ஷரங்கள் சுருதி.

அத்தியாயம்–8

துருவ சரிதம்

1–6. பின்னும் மைத்ரேயர் விதுரரை நோக்கி, ஸனகர் முதலியவர்களும், நாரதரும், ரிபுவென்பவரும், ஸம்ஸரும், அருணியும், யதியும். ப்ருஹ்மபுத்திரர்கள் ஆனாலும் இவர்கள் ஊர்த்துவரேதஸ்களாகையால் கிருஹஸ்த தர்மத்தை அனுஷ்டிக்கவில்லை, (ஆனதால் இவர்களுக்குச் சந்ததியில்லை என்று கருத்து.) அதர்மத்திற்குப் பத்தினி மிருஷை (பொய்) என்பவள். அவள் தம்பன் (பிறரை ஏமாற்றுவது) என்ற புத்திரனையும், மாயை (பிறரை ஏமாற்றுவதற்கு அனுகூலமான செய்கை) என்ற பெண்ணையும் பெற்றாள். நிருதியானவர் சந்ததியில்லாதவராக இருந்தபடியால் அந்தக் குழந்தைகளைத் தம்முடைய குழந்தைகளாக வளர்த்தார். அந்தத் தம்பன் சஹோதரியான மாயையை மணம் செய்துகொண்டு, அவளிடத்தில் லோபமென்பவனையும் (அதிக ஆசை), நிகிருதி என்ற பெண்ணையும் (வஞ்சகனாக இருப்பது) உண்டு பண்ணினான். ஓ மிகுந்த புத்திசாலியான விதுரரே! அவ்விருவர்களும் தம்பதிகளாக இருந்த குரோதமென்ற புத்திரனையும் (கோபம்) ஹிம்சை என்ற பெண்ணையும் உண்டுபண்ணினார்கள். அவர்களுக்குக் கலியென்பவனும் (பாபம்), அவனுடைய சகோதரியான துருக்தியும் (கெட்டவார்த்தை) குழந்தைகள். அவர்கள் யாதனை யென்பவளையும் (கடுமையான உபத்ரவம்) நிரயம் என்ற புத்திரனையும் (நரகம்) உண்டுபண்ணினார்கள். இவைகள் அதர்மமமாகிய மரத்திற்குக் கிளைகள். சம்சாரத்தைக்

கொடுக்ககூடியவைகள். ஆனதால் சூக்ஷமத்தையடைய விரும்பியவன் அவைகளை யனுஷ்டிக்கக்கூடாது. மேலான ஆசிரமத்தை அடைந்தவன் (சந்நியாசி) அவை களை ஒருபொழுதும் அனுஷ்டிக்கக்கூடாது இப்படிச் சுருக்கமாகப் பிரதி ஸர்க்கத்தைச் சொன்னேன் இந்த அதர்மத்தின் வம்சமானது புண்யகரமானது. (இவை அனுஷ்டிக்கத் தக்கவை இல்லை என்று தெரிந்து கொள்வதால் என்று கருத்து.) இதனை மூன்று தரம் சிரவணஞ் செய்தால் ஸகல பாவமும் நாச்மாகிவிடும்.

7–9. இதன் பின்பு ஸ்ரீ மகாவிஷ்ணுவின் அம்சபூதராகிய ப்ரஹ்மதேவருடைய புத்திரரான சுவாயம்புவ மனுவின் வம்சத்தையும் சொல்லுகிறேன். அவருடைய கதையைச் சொல்வதால் புண்ணியம் சித்திக்கும். சதரூபை என்பவளுடைய பர்த்தாவாகிய சுவாயம்புவ மனுவிற்குப் பிரியவிரதர், உத்தானபாதர் என்று இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்கள் ஸ்ரீ வாசுதேவருடைய அம்சபூதர்கள். ஜகத்தைப் பரிபாலிப்பதில் நோக்கமுள்ளவர்களாக இருந்தார்கள். அவ்விருவர்களில் உத்தானபாத ரென்பவருக்கு சுநீதி, சுருசி என்று இரண்டு பத்தினிகள் இருந்தார்கள். சுருசி யென்பவளிடத்தில் அரசராகிய உத்தானபாதர் மிகுந்த பிரீதியுள்ளவராக இருந்தார். சுநீதியினிடத்தில் அரசருக்குப் பிரியமில்லை. அவளுக்குத் துருவன் என்ற பெயருள்ள ஒரு புத்திரனிருந்தான். ஒருநாள் அரசருடைய மடியில் உத்தமனென்ற சுருசியின் குமாரன் உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்தான். அரசரும் அவனிடத்தில் மிகுந்த பிரீதியுடன் சந்தோஷமாக விளையாடினார். அப்பொழுது சுநீதியின் புத்திரனாகிய துருவனும் அரசனுடைய மடியின்

மீதேறி விளையாட விரும்பியவனாகி அரசனுடைய ஸமீபம் சென்றான். அவனை அரசர் லட்சியம் செய்யவில்லை. (அவனிடம் பிரியப்படவில்லை.)

10–13. அப்பொழுது ஸமீபத்திலிருந்த சுருசி அரசருடைய மடியிலேற விரும்பும் தன்னுடைய ஸபத்தினியின் புத்திரனாகிய துருவனை நோக்கி மிகுந்த கர்வத்துடன், "ஓ குழந்தாய்! என்னுடைய வயிற்றில் நீ ஜனிக்காததால் அரசருடைய ஆஸனத்தில் ஏறுவதற்குத் தகுந்தவனல்ல. "நீ சிறுவனாகையால் வேறு ஸ்திரீயின் கர்ப்பத்தில் ஜனித்தவன்" என்று தெரிந்து கொள்ளவில்லை. அரிதாகிய விஷயத்தை விரும்புகிறாய். ஆனதால் தபஸினால் மஹா புருஷனை ஆராதித்து, அவருடைய அனுகிரஹம் பெற்று என்னுடைய வயிற்றில் ஜனித்தாயானால் உனக்கு ஸிம்மாஸனம் கிடைக்கும்" என்று அரசன் முன்பாகவே அரசனை லட்சியம் செய்யாமல் பொறாமையுடன் சொன்னாள்.

14–23. அப்பொழுது அந்தத் துருவன் பாணத்தால் அடிக்கப்பட்டவன் போல் ஸபத்தினீ மாதாவினுடைய துஷ்ட வாரத்தையைக் கேட்டு வருத்தமடைந்தவனாகி, தண்டத்தால் அடிக்கப்பட்ட ஸர்ப்பம்போல் கோபத்தால் பெருமூச்சு விட்டு அழுதுகொண்டு அவ்விடமிருந்து தன்மாதாவினிடம் சென்றான். பிதாவாகிய அரசர் மௌனமாக இருந்தார். அப்பொழுது சுநீதியானவள் சமீபம் வந்து நிற்கும் புத்திரனை மடியில் ஏற்றி வைத்துக்கொண்டாள். அந்தக் குமாரன் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தான். மேலும் அவனுடைய உதடுகள் துடித்தன. அதனைப் பார்த்த சுநீதியானவள்

அந்தப்புரத்தில் சஞ்சரிக்கும் ஜனங்கள் மூலமாக நடந்த ஸமாஸாரத்தை தெரிந்துகொண்டு, ஸபத்தினியின் வார்த்தையை நினைத்து மிகவும் துன்பமடைந்தாள். காட்டுத்தீயினால் எரிக்கப்படும் கொடிபோன்ற அவள் ஸபத்தினியின் வார்த்தையை நினைத்து, தைரியத்தை விட்டுப் பிரலாபித்தாள். அவளுடைய தாமரைமலர் போன்ற கண்களிலிருந்து துக்க பாஷ்பம் பெருகிற்று. மேலும் பெருமூச்சுவிட்டாள். இப்படி மிகுந்த வருத்தத்துடன் துக்கத்தை நிவர்த்தித்துக் கொள்ளும் உபாயத்தை அறியாதவளாகி, தன் குழந்தையை நோக்கி, "ஒ குழந்தாய்! பிறரிடத்தில் குற்றமிருப்பதாக நினைக்கவேண்டாம். பிறருக்குத் துக்கத்தை உண்டு பண்ணுவதால் தானும் துக்கத்தை அனுபவிக்கும்படி நேரிடுகிறது. சுருசியினால் சொல்லப்பட்டது உண்மையே. அதிருஷ்ட மில்லாதவளாகிய என்னுடைய வயிற்றில் நீ ஜனித்தாய். என்னுடைய ஸ்தன்யத்தை (பால்)க் குடித்து வளர்ந்தாய். உன்னுடைய பிதாவாகிய அரசர் என்னைத் தம்முடைய பத்தினியென்று சொல்லிக்கொள்வதற்கும் வெட்கப்படுகிறார். ஆனதால் உத்தமன் (சுருசியின் பிள்ளை) போல் நீயும் ஸிம்மாஸனத்தை அடைய விரும்புவாயானால் உன்னுடைய ஸபத்தினி மாதாவினால் சொல்லப் பட்டபடி ஸ்ரீமந் நாராயணனுடைய பாதாரவிந்தத்தை ஆராதிக்கவேண்டும். மாத்ஸர்யத்தை விட்டுவிடு. சுத்த ஸத்துவராகிய பகவானுடைய பாதாரவிந்தத்தை ஆராதித்துப் ப்ரஹ்மதேவர் ப்ரஹ்மபதத்தை அடைந்தார். அது ப்ராணாயாமத்தால் மனத்தை யடக்கினவர் களாலும் நமஸ்கரிக்கக் கூடியது. மேலும், உன் பிதாமஹராகிய (பிதாவின் பிதா) மனுவும் பூர்ணமாக தக்ஷிணை கொடுத்து அநேக யாகங்களைச் செய்தும்,

எல்லாரிடத்திலும் அந்தர் ஆக பகவான் இருப்பதாக நினைத்தும், பகவானை ஆராதித்துப் பூமியிலுண்டான சுகத்தையும், ஸ்வர்க்க சுகத்தையும், மோஷ சுகத்தையும் அடைந்தார், ஆனதால் ஒ குழந்தாய், துருவ! பரமபுருஷன் பக்தர்களிடத்தில் வாத்ஸல்யம் உள்ளவர் மோக்ஷத்தை அடைய விரும்பியவர்கள் அவருடைய பாதாரவிந்த மார்க்கத்தைத் தேடுவார்கள். ஆனதால் நீ மனத்தை வேறு இடத்தில் செலுத்தாமல் சுத்தமான மனத்தில் அந்தப் பரமபுருஷனை ஸ்தாபித்து (தியானம் செய்து), ஆராதிக்க வேண்டும். ப்ரஹ்மா முதலியவர்களால் தேடப்படும் லக்ஷ்மீ தேவியாம் கையில் தாமரை மலருடன் அந்த மஹா புருஷனை அனுசரிக்கிறாள். அப்போற்பட்ட தாமரைக் கண்ணனாகிய புருஷோத்தமனைக் காட்டிலும் உன்னை காப்பாற்றகிறவர் வேறொருவரும் இல்லை என்றாள்.

24–28. க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடிய மாதாவின் வார்த்தையைக் கேட்டுத் துருவன் மனத்தால் இந்திரி யங்களை அடக்கிக்கொண்டு பிதாவின் பட்டணத் திலிருந்து வெளியில் சென்றான். அதனை அறிந்த நாரதர் மிகவும் ஆச்சர்யப்பட்டு துருவனுடைய அபிப் பிராயத்தை நன்றாகத் தெரிந்துகொண்டு பாபத்தை நிவர்த்திக்கக்கூடியதான தம்முடைய கையால் துருவனுடைய தலையைத் தொட்டு, "க்ஷத்திரியர்கள் உடைய தேஜஸ் ஆச்சரியப்படக்கூடியது. இவன் சிறுவனானாலும் ஸபத்தினீ மாதாவினால் சொல்லப் பட்ட நிந்தா வார்த்தைகளை மனத்தில் வைத்து கொண்டிருக்கிறான்" என்று எண்ணி அச்சிறுவனை நோக்கி, சிறுவனாகிய நீ ஐசுவரியத்தால் நிறைந்த வீட்டை விட்டு வெளியில் தனியாகப் போகிற

காரணமென்ன ? பந்துக்களால் அவமானஞ் செய்யப் பட்டு அதனால் துக்கிக்கிறவன் போலத்தோன்றுகிறது, (உண்மையைச் சொல்) என்று கேட்டார்.

29. அதனைக் கேட்ட துருவன் அவரை நோக்கி, "ஓ பகவன்! என்னுடைய மனத்திலிருக்கும் அபிப் பிராயம் உமக்கு எப்படித் தெரிந்தது ? தியானத்தால் தெரிந்துகொண்டீரா ? அல்லது யோக மஹிமையால் அறிந்தீரா ? மனத்திற்கு வருத்தத்தைக் கொடுக்கும் சுருசியின் வார்த்தையைப் பொறுக்காமல் வெளியில் வந்தேன்" என்றான்.

30–34. அதனைக்கேட்ட நாரதர் அவனை நோக்கி, "ஓ சிறுவனே! உனக்கு அவமானத்தையாவது ஸம்மானத்தையாவது அறியக்கூடிய வயது இன்னும் வரவில்லையே. இப்பொழுது நீ விளையாட்டு முதலிய வைகளின் ஆசை கொண்டிருக்க வேண்டியவன் அல்லவா ? மேலும், இது ஸம்மானம், அவமானம் என்ற விவேகம் வந்தாலும், அறியாத்தன்மையாலேயே அவமானத்தை அடைந்த ஜனங்கள் துக்கிக்கிறார்கள் ஸம்மானம்; அவமானம் முதலியவைகள் அவரவர்கள் உடைய காரியங்களாலேயே ஏற்படுகின்றன, ஆனதால் தெய்வத்திடம் சேராத வரையில் புருஷப் பிரயத்தினம் பலனைக் கொடுக்கிறதில்லை என்பதைத் தெரிந்துக் கொண்டு, தெய்வச் செயலால் கிடைத்ததை வைத்துக் கொண்டு சந்தோஷிக்கவேண்டும். உன்னுடைய மாதா உபதேசித்தபடி எவருடைய பிரஸாதத்தை அடைய விரும்புகிறாயோ, அவரை ஆராதிப்பது மிகவும் ச்ரமமென்று நினைக்கிறேன். முனிகள், விஷயங்களில் ஆசையை ஒழித்து கடுமையான யோகத்தை செய்து

அநேக ஜன்மங்களில் பகவானை உபாசித்து, அவருடைய மார்க்கத்தைத் தேடியும் அதை அடைய வில்லை ஆனதால் இந்தப் பிடிவாதத்தை விட்டுவிடு. க்ஷேமத்தை அடையவேண்டிய காலம் வரும்போது நீயே யத்தனிப்பாய். மேலும், சுகமாவது துக்கமாவது தெய்வத்தால் ஏற்படுத்தபட்டப்படி அந்த அந்தக் காலத்தில் ஜனங்களால் அனுபவிக்கப்படுகிறது. ஆனால் சுகத்தை அனுபவிப்பதால் புண்ணியம் குறைகிறது என்றும், துக்கத்தை அனுபவிப்பதால் பாவம் குறைகிறதென்றும் நினைத்து ஸந்தோஷத்துடன் காலம் கழித்தால் மோக்ஷத்தை அடைவான். தன்னைக் காட்டிலும் மேலான குணசாலியைப் பார்த்துச் சந்தோஷப்படவேண்டும். (அசூயை அடையக் கூடாதென்று கருத்து.) தாழ்ந்தவனைப் பார்த்து தயைசெய்யவேண்டும் (அலட்சியம் செய்யக்கூடாது) தனக்கு ஸமமானவர் களைப் பார்த்துப் பிரீதிசெய்ய வேண்டும் (விரோத புத்தியை அடையக்கூடாது) இப்படிக் காலத்தைக் கழிப்பவனுக்குத் தாபம் உண்டாகிறதில்லை" என்றார்.

35–38. அதனைக்கேட்ட துருவன் நாரதரை நோக்கி, "ஓ ப்ராஹ்மண! சுகத்தாலும் துக்கத்தாலும் கெடுக்கப்பட்ட மனதுள்ள புருஷர்களுக்கு சுககரமான சாந்தி மார்க்கமானது தயைசெய்து உம்மால் உபதேசிக் கப்பட்டது. என்னைப் போன்றவர்கள் இதனைக் தெரிந்துகொள்ள முடியாது. ஆனாலும் நான் க்ஷத்திரிய தர்மமுள்ளவனும், வணக்கமில்லாதவனும் (மனத்தை அடக்காதவன்), சுருசியின் கெட்ட வார்த்தைகளாகிய பாணங்களால் பிளக்கப்பட்ட ஹிருதய முள்ளவனுமாக இருக்கிறேன், ஆனதால், உம்முடைய வார்த்தைகள் மனத்தில் செல்லவில்லை.

மூவுலகத்திலும் சிறந்ததும், என்னுடைய முன்னோர் களாலும் மற்றவர்களாலும் அடையப்படாததுமான பதத்தை அடைய நான் விரும்புகிறபடியால் அதன் மார்க்கத்தை உபதேசிக்கவேண்டும். ப்ரஹ்மதேவருடைய புத்திரராகிய நீர் எப்பொழுதும் வீணையை மீட்டிக் கொண்டு சூரியன்போல் ஜகத்தின் க்ஷேமத்திற்காக ஸஞ்சரிக்கிறீர்! என்று வேண்டிக்கொண்டான்.

39–60. அதனைக்கேட்ட நாரதர் சிறுவனை நோக்கி, "உன்னுடைய மாதாவினால் உபதேசிக்கப் பட்ட மார்க்கமே க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியது. ஸ்ரீவாசுதேவரே பகவான்; அவரிடத்திலேயே மனத்தைச் செலுத்தி அவரையே ஆராதிக்க வேண்டும். தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகிய புருஷார்த்தங்களை விரும்பியவனுக்கு ஸ்ரீமந் நாராயணனுடைய பாதஸேவையே சரணமெனப் படுகிறது. ஆனதால் யமுனா நதியின் கரையில் மதுவன மென்று ஒரு புண்ணிய பூமியிருக்கிறது. அவ்விடத்தில் பகவான் எப்பொழுதும் ஸான்னித்தியஞ் செய்து கொண்டிருக்கிறார்.

நீ அவ்விடம் சென்று புண்யகரமான யமுனா தீர்த்தத்தில் மூன்று காலம் ஸ்நானஞ் செய்து, தேவதா நமஸ்காரம் முதலியவைகளைச் செய்து, தர்ப்பம் முதலிய ஆஸனத்தில் உட்கார்ந்து, திருவிருத்தாகிய பிராணாயாமத்தால் மனத்திலிருக்கும் அழுக்கை நிவர்த்தித்து, தைர்யமுள்ள மனத்தால் ஸ்ரீமந் நாராயணனைத் தியானிக்க வேண்டும். அவர் பக்தர்களிடத்தில் தயைசெய்யும் நோக்கமுள்ளவர். எப்பொழுதும் —— முகமலர்ச்சியுள்ளவர். அழகான மூக்குள்ளவர் நல்ல புருவங்களுள்ளவர். ரம்யமான

கன்னங்களுள்ளவர், தேவர்களுக்குள் மிகவும் அழகு பொருந்தியவர். யௌவன வயதுள்ளவர். மனோஹரங் களான அவயவங்களுள்ளவர். அவருடைய உதடுகளும் கண்களும் சிவந்தவைகள். மேலும் அவர் நமஸ்கரித் தவர்களுக்கு ஆச்ரயமாக இருப்பவர். சுகஸ்வரூபி. தயையால் நிறைந்தவர். ஸ்ரீ வத்ஸமென்ற அடையாளம் உள்ளவர். மேகம்போல் கறுத்த திருமேனியுள்ளவர், வனமாலையைத் தரித்தவர், சங்கம், சக்கரம் கதை, தாமரை மலர் ஆகிய இவைகளைத் தரித்த நான்கு கைகளுள்ளவர். கிரீடம் குண்டலங்கள், தோள்வளை, வளையம் ஆகிய இவைகளைத் தரித்தவர். கௌஸ்து பஹாரமுள்ள கண்டமுள்ளவர். பீதாம்பரத்தைத் தரித்தவர். காஞ்சி கலாபத்தால் (சரங்கையுள்ள அரை நாண்) சூழப்பட்டவர். ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்டுள்ள பாதங்களுள்ளவர். தரிசிக்கக்கூடியவர். மிகுந்த அழகுள்ளவர். சாந்தர். மனத்திற்கும் நேத்திரங் களுக்கும் ஸந்தோஷத்தை விருத்தி செய்பவர். மேலும் அவர் தம்மை ஆராதிப்பவர்களுடைய ஹிருதய கமலத்தில் நக காந்தியால் பிரகாசிக்கும் பாதார விந்தத்துடன் நின்று மனத்தைவிட்டு பிரியாமல் இருப்பவர்.

மேற்காட்டியபடியுள்ள பகவானுடைய ஸ்வரூபத்தைப் புன்னகை உள்ளதாகவும், பிரீதியான பார்வையுள்ளதாகவும், ஸ்திரமானதும் ஏகாக்கிரமுமான மனத்தால் தியானிக்கவேண்டும். அவர் வரத்தைக் கொடுப்பவர்களில் மேலானவர். மங்களமாய் பகவான் உடைய ஸ்வரூபத்தை மேற்காட்டியபடி தியானிப் பவனுடைய மனம் மிகுந்த சுகத்தை அடைந்து அந்த ஸ்வரூபத்தைக் கவர்ந்து அதிலிருந்து திரும்புகிறதில்லை.

ஓ ராஜபுத்திர! ஜபிக்கக்கூடிய மந்திரம் ஒன்றுண்டு. அது மிகவும் ரகசியமானது. அதனை ஏழு நாட்கள் ஜபித்தால் தேவர்களை நேரில் தரிசிக்கலாம். அதனை உபதேசிக்கிறேன். அதாவது 'பகவானாகிய வாஸு தேவருக்கு நமஸ்காரம்" என்றதாம். இதை ஜபித்து ஜலத்தாலும், சுத்தங்களான காட்டிலுண்டான கிழங்குகளாலும், பழங்களாலும். மேலான அருகம் புற்களாலும், பூர்ஜப்பட்டைகளாலும் பகவானுக்குப் பிரியமான துளஸியாலும், பலவகையான திரவியங் களாலும், தேசத்திற்கும் காலத்திற்கும் தக்கபடி ஸாளக்கிராமம் முதலிய ப்ரதிமைகளிலும் பகவானைப் பாவித்து ஆராதிக்க வேண்டும். இப்படிப் பூஜிப்பவன் மனத்தையடக்கினவனாகி காட்டில் கிடைக்கக்கூடிய கிழங்கு முதலியவைகளைச் சொற்பமாகப் புஜித்துக் கொண்டு பகவான் தமதிஷ்டப்படி அவதரித்துச் செய்யப்போகிற சரிதங்களால் ஏற்படும் அனுகூலத் தையும் தியானிக்கவேண்டும். (துருவனுடைய காலத்திற்குப் பிறகே பகவானுடைய அவதாரங்கள் என்று கருத்து) திரவியத்தால் பகவானுக்கு எந்த உபசாரங்கள் முந்தி செய்யப்பட்டனவோ அவை களை (துவாதசாக்ஷர) மந்திரத்தை ஜபித்துக்கொண்டு மனத்தாலேயே மந்திர மூர்த்தியான பகவானை உத்தேசித்து செய்யவேண்டும். இப்படிச் சரீரத்தாலும், வாக்கினாலும் மனத்தாலும் பக்தியுடன், அந்தரங்கத்து டன் பகவானுக்குச் சிசுரூஷை செய்தால் அந்த ஸாத்விக பக்தர்களுக்கு பகவான் தர்மம் முதலிய புருஷார்த்தங்களில் எது பிராணிகளுக்கு இதமானதோ அதனைக் கொடுக்கிறார். ஆனதால் இந்திரிய விஷயங்களில் ஆசைப்படாமல் (வைராக்யத்துடன்) மிகுந்த பக்தியுடன் இடைவிடாமல் பகவானிடத்தில்

பாவத்தைச் செலுத்தி அவரை ஆராதித்தால் முக்தியை அடையலாம்" என்றார்.

61. அதனைக் கேட்ட ராஜகுமாரன் அவரைப் பிரதக்ஷிண நமஸ்காரங்களால் உபசரித்து பகவான் உடைய பாதங்களால் அழகானதும், புண்யகரமுமான மதுவனத்திற்குச் சென்றான்.

62–64. துருவன் தபஸ்ஸிற்காக வனஞ் சென்ற பின்பு நாரதர் உத்தானபாதருடைய அந்தப்புரஞ் சென்றார். அப்பொழுது அரசர் நாரதரைப் பூஜித்து ஆசனங் கொடுத்து உட்காரச் செய்தார். பின்பு நாரதர் அரசரை நோக்கி, "ஓ மகாராஜ! எதனை மனத்தில் நினைத்து வருத்தப்படுகிறீர்? முகமானது வாடியிருக்கிறதே. தர்மம், அர்த்தம், காமம் ஆகிய இவைகளுக்குள் எதுவும் கெடாமலிருக்கிறதோ? என்று கேட்டார்.

65–67. அதனைக்கேட்ட அரசர் நாரதரை நோக்கி "ஓ ப்ராஹ்மண! ஐந்து வயதுள்ள என்னுடைய சிறுவனாகிய புத்திரனையும், அவனுடைய மாதாவை யும் ஸ்திரீகளின் கூட்டமானது தயையில்லாமல் பட்டணத்தை விட்டு வனம் போகும்படி செய்தது. (தன்னால் செய்யப்பட்டதென்று சொல்வதற்கு வெட்கப் பட்டு ஸ்திரீகள் செய்தார்களென்றார்) ஓ ப்ராஹ்மண! என்னுடைய குழந்தை வனத்தில் தனியாகச் சென்று பசியினால் வருத்தப்பட்டுத் தாமரை மலர்போன்ற முகம் வாடிப் படுத்துக் கொண்டிருப்பானே, அப்பொழுது அவனை அங்கிருக்கும் செந்நாய்கள் புஜிக்காமலிருக்குமா? மிகுந்த அஸத்தாகிய நான்

பிரீதியுடன் மடியின் மீதேறி வரும் குழந்தையினிடம் பிரீதி வைக்காமலிருந்தேனே. நான் ஸ்திரீயால் ஜயிக்கப் பட்டவன்; என்னால் செய்யப்பட்ட துஷ்டநடை ஆச்சரியப் படக்கூடியது" என்று பச்சாத்தாபமடைந்தார்.

68–70. அதைக் கேட்ட நாரதர் அரசரை நோக்கி, "ஓ மகாராஜ! உம்முடைய புத்திரனைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். அவனைத் தேவர்கள் காப்பாற்றுகிறார்கள். அவனுடைய மஹிமை உமக்குத் தெரியாது அவனுடைய கீர்த்தியானது ஸகல லோகங்களில் வியாபிக்கப்போகிறது. லோகபாலர் களாலும் செய்ய முடியாததான காரியத்தைச் செய்து உம்முடைய கீர்த்தியை லோகத்தில் பரவச் செய்து கொண்டு சீக்கிரத்தில் திரும்பிவருவான்" என்று சமாதானம் செய்தார். அரசரும் நாரதருடைய வாரத்தையை நம்பி ராஜ்யத்தில் பிரீதியில்லாமல் புத்திரனையே நினைத்துக் கவலையடைந்தார்.

71–81. துருவன் நாரதருடைய ஆக்ஞையின்படி மதுவனம் சென்று ஸ்நானம் செய்து அன்று இரவு உபவாஸமிருந்து சுத்தனாகப் பரமபுருஷனைப் பூஜித்தான். மூன்று நாட்களுக்கொருதரம் விளாம்பழம், இலந்தைப்பழம் இவைகளைத் தன்னுடைய சரீர ஸ்திதிக்குத் தக்கபடி புஜித்துக் கொண்டு, ஸ்ரீமந் நாராயணனை ஆராதித்தான். இப்படி ஒரு மாத காலம் சென்றது; பின்பு ஆறு நாளுக்கொருதரம் உலர்ந்த இலை, புல் முதலியவைகளைப் புஜித்துப் பகவானை ஆராதித்து, இரண்டாவது மாதத்தைக் கழித்தான். அதன் பிறகு ஒன்பது நாளுக்கொருதரம் ஜலத்தைப்புஜித்து உத்தமச்லோகராகிய பகவானைத்

தியானித்து மூன்றாவது மாதத்தையும் சிறிது நேரத்தைப் போல கழித்தான். அதன்பின் பன்னிரண்டு நாளுக்கொருதரம் காற்றை புசித்துச் சுவாஸத்தை யடக்கி தேவதேவராகிய பகவானைத் தியானம் செய்து நான்காவது மாதத்தைப் போக்கினான். பின்பு ஐந்தாவது மாதத்தில் மூச்சை யடக்கி ஒரு காலைப் பூமியில் ஊன்றிக்கொண்டு ப்ரஹ்மத்தைத் தியானம் செய்துகொண்டு கட்டைபோல அசையாமலிருந்தான். பல விஷயங்களில் செல்லுகிறதும், பூதங்களுக்கும், இந்திரியங்களுக்கும் ஆசிரியமுமான மனத்தை வேறு இடத்தில் செல்லாமல் அடக்கிப் பகவானுடைய ஸ்வரூபத்தைத் தியானம் செய்ததால், அந்த ஸ்வரூபத்தைத் தவிர வேறொன்றும் அவனுக்குப் புலப்படவில்லை. மஹத்தத்துவம் முதலியவைக்கு ஆதாரமும், பிரகிருதி புருஷன் ஆகிய இவைகளுக்கும் அதிபதியுமான ப்ரஹ்மத்தைத் தியானம் செய்யும் துருவனுடைய தேஜஸ்ஸை சஹிக்க முடியாமல் மூன்று லோகங்களும் நடுங்கின. ஓரிடத்தில் யானையானது ஒரு காலால் நிற்குமானால் அதன் கால் வைத்த பக்கத்தில் ஓடம் எப்படி அழுத்தப்படுமோ, அப்படித் துருவன் வலதுகால் கட்டை விரலை ஊன்றும் போது அந்த பக்கத்திலும் பூமியானது வணங்கிற்று. (ப்ரஹ்மத் தியானம் செய்வதால் சரீரம் பாரமாக இருந்தது.) இப்படித் துருவன் தன்னுடைய ப்ராணனையும், அதன் மார்க்கத்தையும் தடுத்து ஜகத்ஸ்வரூபியான ஸ்ரீ மஹாவிஷ்ணுவைத் தானாகப் பாவித்துத் தியானிக்கும்பொழுது ஸகல லோகங்களும் மூச்சுவிட முடியாமல் சிரமத்தையடைந்தார்கள். அதனைக்கண்டு இந்திரன் முதலிய லோகபாலர்கள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவைச் சரணமடைந்து "ஓ பகவான்!

சராசரங்களடங்கிய இந்த ஜகத்திற்கு இம்மாதிரியான உபத்திரவம் (பிராணநிரோதம்) இதுவரையில் ஏற்பட்டதில்லை. இந்தக் கஷ்டத்திலிருந்து எங்களைக் காப்பாற்றும், சரணமடையக் கூடியவராகிய உம்மைச் சரணமடைகிறோம் என்றார்கள்.

82. அதனைக் கேட்ட பகவான் அவர்களை நோக்கி "ஓ தேவர்களே! பயப்படாதீர்கள். உத்தான பாதருடைய புத்திரனாகிய துருவன் என்னையே தியானம் செய்கிறபடியால் லோகத்திற்கு இவ்வளவு உபத்திரவம் உண்டாகியிருக்கிறது. நீங்கள் உங்கள் உடைய கிரஹத்திற்குப் போகலாம். தபஸை நிறுத்தும் படி செய்கிறேன்" என்று அனுக்கிரஹித்தார்.

அத்தியாயம்–9

(தொடர்ச்சி)

1–5 பகவானுடைய வார்த்தையைக் கேட்ட தேவர்கள் பயமற்றவர்களாகி ஸ்வர்க்கம் சென்றார்கள். பகவானும் கருடன் மீதேறித் தம்முடைய பக்தனைப் பார்ப்பதற்காக மதுவனம் சென்றார். அத்தருணத்தில் துருவன் யோகாப்யாஸத்தால் அசையாத புத்தியைக் கொண்டு தன்னுடைய ஹிருதயமாகிய தாமரை மலரில் மின்னல் போலப் ப்ரகாசிக்கும் பகவத் ஸ்வரூபத்தைத் தரிசித்துக் கொண்டிருந்தான். பகவான் அவ்விடஞ் சென்றவுடன் அவனுடைய ஹ்ருதயத்தில் ப்ரகாசித்திருந்த தேஜஸ் மறைந்தது. உடனே கண்களைத் திறந்து பார்க்க, வெளியில் அதே விதமாகப்ரகாசிக்கும் பகவானைத் தரிசித்தான். பகவானைப் பார்த்தமாத்திரத்தில் பரபரப்புள்ளவனாகி, கண்களால் பருகுகிறவன்போலப் பார்த்தும், முகத்தால் முத்தமிட்டுக் கொள்கிறவன் போலும், கைகளால் தழுவுகிறவன் போலும் தண்டம்போல் பூமியில் விழுந்து நமஸ்காரம் செய்தான். மேலுமவன் பகவானை ஸ்தோத்திரம் செய்ய விரும்பியவனானாலும், பகவத் குணங்களை அறியாதவனாகையால் கவலைப்பட்டு இருந்தான். எல்லாருடைய ஹிருதயத்திலும் வசிப்ப வராகிய பகவான், துருவனுடைய அபிப்பராயத்தைத் தெரிந்து கொண்டு கைகளைக் கூப்பி, தமக்கெதிரில் நிற்கும் சிறுவனிடம் மிகுந்த தயையால் வேத ஸ்வரூபமாகிய் சங்கத்தால் அவனுடைய இரு கன்னங்களிலும் தடவினார். அதனால் அவருக்கு ஜீவன் ஈசுவரன் ஆகிய இவர்களுடைய உண்மை நன்றாகத்

தெரிந்தது. சாசுவதமாகிய ஸ்தானத்தை அடையப் போகிற அந்தத் துருவன் பிரஸித்தமான மேலான கீர்த்தியுள்ளவனாகிய பகவானை நோக்கி மெதுவாகப் பக்தி, பிரேமை இவைகளுடன் ஸ்தோத்திரம் செய்தான்.

6–17 "ஸகல சக்தியுள்ளவராகிய எந்தப் பகவான் என்னுடைய சரீரத்திற்குள் பிரவேசித்து கை, கால் , காது, துவக், பிராணன், வாக்கு ஆகிய இவைகளைப் பிழைக்கச் செய்தாரோ, (தன் தன் காரியத்தைச் செய்யச் சக்தியுள்ளதாகச் செய்தார்) அந்தப் பரம புருஷராகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். ஓ பகவன்! நீர் ஒருவரே முக்குணங்களுள்ள தம்முடைய மாயாசக்தியைக் கொண்டு மஹத் தத்துவம் முதலிய இந்த ஸகல ஜகத்தையும் ஸ்ருஷ்டித்து இதில் ப்ரவேசித்து, அஸத்துக்களான இந்திரியகுணங்களை அடைந்து அந்த அந்தத் தேவதையாகப்ரகாசிக்கிறீர். அது, அக்கினி ஒருவரானாலும் கட்டைகளை ஆசிரயித்துப் பல அக்கினிகளாகத் தோற்றுவது போலிருக்கிறது. (ஞானம் முதலிய சக்தியுள்ள புருஷன் நீர் ஒருவரேயொழிய வேறு ஒருவருமில்லை யென்று கருத்து) ஓ உபத்திரமடைந்தவர்களுக்குப் பந்துவாக இருப்பவரே! ப்ரஹ்மதேவரும் உம்மால் கொடுக்கப்பட்ட திவ்ய ஞானத்தைக் கொண்டு இந்த ஜகத்தைப் பார்த்தார். ஓ நாத! உம்மை அடைந்தவன் தூங்கி விழித்தவன் போன்றவன். உம்முடைய பாதமானது முக்தர்களுக்கும் சரணமாக இருக்கிறது. அப்படிப்பட்ட உம்முடைய பாதாரவிந்தத்தைச் செய்த உபகாரத்தை நினைப்பவனாகிய எவன் மறந்துவிடுவான் ? (உம்மைப் பூஜிக்காதவர்கள் கிருதக்னர்களாவார்கள்.) மேலும் நீர் பக்தர்களை

ஜனன மரண துக்கத்திலிருந்து காப்பாற்றுகிறவர். அப்படிப்பட்ட உம்மை எவர்கள் ஸ்வல்ப பலத்தை விரும்பிப் பூஜிக்கிறார்களோ, அவர்கள் உம்முடைய மாயையால் ஏமாற்றப்பட்ட புத்தியுள்ளவர்களேயாம். பிணத்துக்கொப்பான சரீரத்தால் அனுபவிக்கக் கூடிய சுகத்திற்காக கற்பக விருக்ஷம் போன்ற உம்மைப் பூஜிக்கிறார்களல்லவா ? விஷய சம்பந்தத்தாலுண்டாகும் சுகமானது நரகத்திலும் மனிதர்களால் அடையப் படுகிறது.

மேலும் உம்முடைய பாதாரவிந்தத்தைத் தியானிப் பதாலும், பக்தர்கள் முகமாக உம்முடைய கதைகளைச் சிரவணஞ் செய்வதாலும் எந்த சுகமுண்டாகிறதோ, அது ஆனந்த ரூபமாகிய ப்ரஹ்ம ஸ்வரூபத்திலும் உண்டாகிறதில்லை. அப்படிக்கிருக்க, பயங்கரமான யமனுடைய கத்தி போன்ற காலத்தால் விமானத்தில் இருந்து பூமியில் விழுகிறவர்களுக்கு அம்மாதிரியான சுகம் கிடைக்குமா ? (புண்யம் நசிக்கிறவரையில் ஸ்வர்க்க சுகத்தை யனுபவித்துப் புண்யம் குறைந்த வுடன் பூமிக்கு வருகிறார்கள். ஆனதால் ஸ்வர்க்க சுகமும் இதற்கொப்பானதாகுமா ?) ஓ அனந்த! உம்முடைய குணங்களுடைய கதாமிருதத்தைப் பானம் செய்து அதனால் மதித்துப் பலவகையான வியஸனங் களுள்ள ஸம்ஸாரத்தை பிரயாசையின்றித் தாண்டுவேன். ஆனதால் சுத்தசித்தர்களும் எப்பொழுதும் இடைவிடாமல் உம்மிடத்தில் பக்தி செய்பவருமான சாதுக்களுடன் சகவாசம் முதலிய எனக்கு இருக்கும் படி அனுக்கிரகிக்க வேண்டும். ஓ பத்மநாப! எவர் உம்முடைய பாதமாகிய தாமரைமலரின் வாசனையில் ஆசைபட்ட சித்தமுள்ளவர்களிடத்தில் (பக்தர்கள்)

சகவாஸம் முதலியவைகளைச் செய்கிறார்களோ, அவர்கள் மிகுந்த பிரியமான தேகத்தையும், புத்திரன், மித்திரன், வீடு, பணம், ஸ்திரீ ஆகிய இவைகளையும் நினைக்கிறதில்லை. ஓ ஜனனமற்றவரே! மஹத்தத்துவம் முதலிய அனேககாரணங்களுள்ள காரியகாரண விசேஷங்களுள்ளதும், திர்யக், மனிதர்கள், ப்ராஹ்மணன், மலைப்பாம்பு, தேவன், அசுரர்கள் ஆகிய இவர்கள் உடைய சரீரங்களால் வியாப்தமுமான இந்த உம்முடைய விராட் உருவத்தை நான் அறிவேன். இதைவிட மேலானதை நான் அறியேன். அது சப்தத்தால் சொல்ல முடியாதது. (வாக்குக்கு எட்டாதது). பிரளய காலத்தில் இவ்வுலகத்தை வயிற்றில் அடக்கிக் கொண்டு ஆதிசேஷனாகிய படுக்கையில் நீர் யோக நித்திரை செய்கிறீர். உம்முடைய சமுத்திரம் போன்ற கொப்பூழில் தோன்றிய ஸ்வர்ணமயமாக லோக ஸ்வரூபமுமான தாமரை மலரில் ப்ரஹ்மதேவர் உண்டானார். அப்படிப்பட்ட பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். நீர் நித்யமுக்தர், பரிசுத்தர், எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக இருப்பவர், விகாரம் அற்றவர். எல்லாவற்றிற்கும் ஆதியாக இருக்கும் புருஷன், ஐசுவரியமுள்ளவர், முக்குணங்களுக்கு அதிபதி. புத்தியின் ஸ்திதியைச் சித்சக்தியைக் கொண்டு பார்ப்பவர். ஆனதால் ஜீவனுக்கும் உமக்கும் அநேக பேதமிருக்கிறது. அப்படிப்பட்ட நீர் ஜகத்தைக் காப்பாற்றுகிறவர். யக்ஞத்திற்கு அதிஷ்டாதாவாகிய விஷ்ணுவும் நீரே. பலவகையான சக்தியுள்ளவைகளும் ஒன்றுக்கொன்று விருத்த கதியுள்ளவைகளுமான வித்யை முதலியவைகள் எவரிடமிருந்து கிரமமாக உண்டாகின்றனவோ அப்போர்ப்பட்டதும், ஜகத்திற்கு உற்பத்தி ஸ்தானமும், அகண்டமும், ஆதியந்தமற்றதும்,

ஆனந்த ஸ்வரூபமும், விகாரங்களற்றதுமான ப்ரஹ்மத்தைச் சரணமடைகிறேன். ஓ பகவன்! ஆனந்த ஸ்வரூபியான உம்முடைய பாதத்தை ஸகல பலனை காட்டிலும் மேலானது என்று நிஷ்காமர்கள் உபாசித்தாலும் தீனர்களாகிய எங்களையும் (ஸம்ஸாரிகளை) மிகுந்த தயையுடன் இளங்கன்றுள்ள பசுவானது கன்றுக்குப் பால் கொடுத்துக் காப்பாற்றுவதுபோல் ஸம்ரக்ஷிக்கிறீர் என்று ஸ்தோத்திரஞ் செய்தான்.

18–26 இப்படி துதிக்கப்பட்டவர் பக்தர்களிடத்தில் பிரீதியுள்ளவருமான பகவான் ஸத்ஸங்கல்பம் உள்ள புத்திசாலியாகிய துருவனை சிலாகித்து அவனை நோக்கி 'ஓ சிறுவனாகிய ராஜகுமாரனே! உன்னுடைய எண்ணம் இப்படிப் பட்டதென்று எனக்குத் தெரியும், அது மற்றவர்களால் அடைய முடியாததானாலும் அதனை உனக்கு கொடுக்கிறேன். எந்தப்பதமானது அழிவற்றதோ, விசேஷ காந்தியுள்ளதோ கிரகங்கள், அச்வநீ முதலிய நக்ஷத்திரங்கள், மற்றதாரைகள் முதலியவையுள்ள தேஜஸ்ஸுக்களுடைய சக்கரம் எவ்விடத்திலிருக்கிறதோ, மேலும் ஒரே கம்பத்தில் அநேகம் காளைகளைக் கட்டுவது போல் எதனிடத்தில் ஸகல ஜ்யோதிஸ்ஸுமிருக்கிறதோ, எது வெகுகாலம் இருக்கக் கூடிய (மூவுலகமும் நாசத்தையடைந்தாலும் எது நாசமடைகிறதில்லையோ), தர்மம், அக்கினி, கச்யபர், சுக்கிரன், ஸப்தரிஷி, நக்ஷத்திரம் ஆகிய இவைகள் எதனை பிரதக்ஷிணமாக சுற்றுகின்றனவோ, அந்தத் துருவ பதத்தைக் கொடுக்கிறேன். ஆனால் தர்மிஷ்டராகிய உன்னுடைய பிதா உனக்கு ராஜ்யத்தை கொடுத்து வனத்திற்குப் போவார். அப்பொழுது இருபத்து ஆறாயிரம் (26,000 வருஷம் நீ

ராஜ்யத்தைப் பரிபாலிப்பாய் உன் சகோதரனாகிய உத்தமன் வேட்டைக்குச் சென்று காணாமல் போய் விடுவான். அப்பொழுது அவனுடைய மாதா அவனை தேடிச்சென்று காட்டுத்தீயினால் மரணமடைவாள்.

பின்பு நீ பூர்ணமாகத் தக்ஷணை கொடுத்து யாகங்களை யனுஷ்டித்து அதனால் யக்ஞத்தில் ப்ரீதியுள்ள என்னை ஆராதித்து இவ்வுலகத்திய சுகங்களை யனுபவித்துக் கடைசியில் என்னைச் சிந்திப்பாய். அதன்பின் முன்னே காட்டிய மேலான பதத்தையடைந்த சப்தரிஷிகளுக்கும் மேலானவனாக இருப்பாய். அந்தப் பதத்திற்கு அழிவில்லை" என்று அனுக்கிரகித்து அந்தச் சிறுவன் பார்த்திருக்கும்போதே தம்மிடம் சென்றார்.

27 அந்தச் சிறுவனும் ஸ்ரீ மகாவிஷ்ணுவினுடைய பாதசேவையால் தன்னுடைய சங்கல்பம் பூர்த்தியை யடைந்தும் அதிக உற்சாகமில்லாதவனாகத் தன்னுடைய பட்டணம் சென்றான்" என்று மைத்ரேயர் விதுரருக்குச் சொன்னார்.

28 அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி "ஓ பகவான்! பகவான் பாதசேவை செய்து துர்லபமான பதத்தை ஒரே ஜன்மத்தில் அடைந்தும் துருவர் ஏன் தம்மைக் கிருதார்த்தராக நினைக்கவில்லை?" என்று கேட்டார்.

29–35 அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி, 'துருவன் சபத்தினீ மாதாவினுடைய நிந்தா வார்த்தைகளால் வருத்தமடைந்தவனாகி பக்தியை

கொடுப்பவரான பகவானைத் தரிசித்தும் மோக்ஷத்தைக் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்திக்கவில்லை. ஆனதால் இம்மாதிரி புத்தி மாறிவிட்டதேயென்று தாபமடைந்தான். எப்படியெனில் "ஸனந்தர் முதலிய ஊர்த்துவரேதஸ் உள்ள மஹரிஷிகள் அநேக ஜன்மத்தில் யோகம் முதலியவைகளை யனுஷ்டித்தும் எவருடைய பாதத்தை அடையவில்லையோ, அப்படிப் பட்ட பாதத்தின் சாயையை நான் ஆறுமாதத்தில் அடைந்து பேத புத்தியுள்ளவனாக இருந்தேன். பாக்கியக் குறைவுள்ளவனாகிய என்னுடைய அறியாத் தன்மை வியக்கக் கூடியது. ஸம்ஸாரத்தை நிவர்த்திக்கும் பரம புருஷனுடைய பாதங்களை அடைந்து அநித்திய சுகத்தையே விரும்பினேன். மிகுந்த அஸத்தாகிய நான் நாரத பகவானுடைய உண்மையான வார்த்தையைக் கேட்டு அதனை யனுஷ்டிக்கவில்லை. ஆனதால் பொறாமையுள்ளவர்களான தேவர்கள் என் புத்தியை மாற்றிவிட்டார்கள். லோகத்தில் ஆத்மாவைக் காட்டிலும் இரண்டாவது பதார்த்தமில்லை என்பது உண்மை யாயிருக்க என்னுடைய சகோதரன் எனக்குச் சத்துரு வென்று நினைத்து மனவருத்தப்படுகிறேன்.

இது தேவருடைய மாயையேயாம். தூங்குகிறவனால் ஸ்வப்னத்தில் காணப்படும் வஸ்துக்கள் ஸத்தியமாக அப்பொழுது தோன்றினாலும் அவைகள் மித்யை அல்லவா? ஸ்ரீ பகவான் கருணை செய்யும்படி ஆராதிப்பது அரிதானாலும் கடும் தபஸ் செய்து அவருடைய பிரஸாதத்தை அடைந்தும் நான் அவரிடம் பெற்றுக்கொண்ட வரமானது ஆயுஸ் இல்லாதவனுக்கு செய்யும் வைத்தியம்போல் வியர்த்தமானதேயாம். ஸம்ஸார சுகத்தைக் கொடுக்க வேண்டுமென்று

ராஜ்யத்தைப் பரிபாலிப்பாய் உன் சகோதரனாகிய உத்தமன் வேட்டைக்குச் சென்று காணாமல் போய் விடுவான். அப்பொழுது அவனுடைய மாதா அவனை தேடிச்சென்று காட்டுத்தீயினால் மரணமடைவாள்.

பின்பு நீ பூர்ணமாகத் தக்ஷணை கொடுத்து யாகங்களை யனுஷ்டித்து அதனால் யக்ஞத்தில் ப்ரீதியுள்ள என்னை ஆராதித்து இவ்வுலகத்திய சுகங்களை யனுபவித்துக் கடைசியில் என்னைச் சிந்திப்பாய். அதன்பின் முன்னே காட்டிய மேலான பதத்தையடைந்த சப்தரிஷிகளுக்கும் மேலானவனாக இருப்பாய். அந்தப் பதத்திற்கு அழிவில்லை" என்று அனுக்கிரகித்து அந்தச் சிறுவன் பார்த்திருக்கும்போதே தம்மிடம் சென்றார்.

27 அந்தச் சிறுவனும் ஸ்ரீ மகாவிஷ்ணுவினுடைய பாதசேவையால் தன்னுடைய சங்கல்பம் பூர்த்தியை யடைந்தும் அதிக உற்சாகமில்லாதவனாகத் தன்னுடைய பட்டணம் சென்றான்" என்று மைத்ரேயர் விதுரருக்குச் சொன்னார்.

28 அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி "ஓ பகவான்! பகவான் பாதசேவை செய்து துர்லபமான பதத்தை ஒரே ஜன்மத்தில் அடைந்தும் துருவர் ஏன் தம்மைக் கிருதார்த்தராக நினைக்கவில்லை?" என்று கேட்டார்.

29–35 அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி, 'துருவன் சபத்தினீ மாதாவினுடைய நிந்தா வார்த்தைகளால் வருத்தமடைந்தவனாகி பக்தியை

Released by Maran's Dog, Toronto , Canada

கொடுப்பவரான பகவானைத் தரிசித்தும் மோக்ஷத்தைக் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்திக்கவில்லை. ஆனதால் இம்மாதிரி புத்தி மாறிவிட்டதேயென்று தாபமடைந்தான். எப்படியெனில் "ஸனந்தர் முதலிய ஊர்த்துவரேதஸ் உள்ள மஹரிஷிகள் அநேக ஜன்மத்தில் யோகம் முதலியவைகளை யனுஷ்டித்தும் எவருடைய பாதத்தை அடையவில்லையோ, அப்படிப்பட்ட பாதத்தின் சாயையை நான் ஆறுமாதத்தில் அடைந்து பேத புத்தியுள்ளவனாக இருந்தேன். பாக்கியக் குறைவுள்ளவனாகிய என்னுடைய அறியாத் தன்மை வியக்கக் கூடியது. ஸம்ஸாரத்தை நிவர்த்திக்கும் பரம புருஷனுடைய பாதங்களை அடைந்து அநித்திய சுகத்தையே விரும்பினேன். மிகுந்த அஸத்தாகிய நான் நாரத பகவானுடைய உண்மையான வார்த்தையைக் கேட்டு அதனை யனுஷ்டிக்கவில்லை. ஆனதால் பொறாமையுள்ளவர்களான தேவர்கள் என் புத்தியை மாற்றிவிட்டார்கள். லோகத்தில் ஆத்மாவைக் காட்டிலும் இரண்டாவது பதார்த்தமில்லை என்பது உண்மையாயிருக்க என்னுடைய சகோதரன் எனக்குச் சத்துரு வென்று நினைத்து மனவருத்தப்படுகிறேன்.

இது தேவருடைய மாயையேயாம். தூங்குகிறவனால் ஸ்வப்னத்தில் காணப்படும் வஸ்துக்கள் ஸத்தியமாக அப்பொழுது தோன்றினாலும் அவைகள் மித்யை அல்லவா? ஸ்ரீ பகவான் கருணை செய்யும்படி ஆராதிப்பது அரிதானாலும் கடும் தபஸ் செய்து அவருடைய பிரஸாதத்தை அடைந்தும் நான் அவரிடம் பெற்றுக்கொண்ட வரமானது ஆயுஸ் இல்லாதவனுக்கு செய்யும் வைத்தியம்போல் வியர்த்தமானதேயாம். ஸம்ஸார சுகத்தைக் கொடுக்க வேண்டுமென்று

Released by Maran's Dog, Toronto , Canada

அபிமானமுள்ளவனாகிப் பிரார்த்தித்தேன். நான் புண்ணியமற்றவன். பகவானிடத்தில் நான் வரம் பெற்றுக் கொண்டது கேட்டதைக் கொடுக்க சித்தனாக இருக்கும் சக்கரவர்த்தியை தரித்திரன் தன் கையில் இருக்கும் சிறிய பாத்திரம் நிறைய அரிசி கொடுக்க வேண்டுமென்று பிரார்த்தித்து அரிசியைப் பெற்றுக் கொண்டது போலிருக்கிறது என்று நினைத்துத் துருவர் பச்சாதாபமடைந்தார். ஓ விதுரரே! பகவான் உடைய பாதாரவிந்த தூளியை அடைந்து அதனால் திருப்தி அடைந்திருக்கும் உம்மைப் போன்றவர்கள், பகவானுக்குச் சிச்ரிஷை செய்வதைவிட வேறு ஒன்றையும் விரும்பார்கள். தெய்வச்செயலாக கிடைத்தால் சந்தோஷமடைவார்கள்.

36–64 பின்பு துருவர் வருகிறாரென்பதைக் கேட்டும் உத்தானபாதர், 'மரணமடைந்தவன் திரும்பி வருகிறான்' என்றால் அதை ஜனங்கள் எப்படி நம்பமாட்டார்களோ அப்படி "பாபியான எனக்கு இம்மாதிரியான க்ஷேமமும் கிடைக்குமோ என்று" நம்பவில்லை. ஆனாலும் தேவரிஷியான நாரதருடைய வார்த்தையை நினைத்து விசேஷ சந்தோஷமடைந்து இம்மாதிரியான நல்ல ஸமாசாரம் சொன்னவனுக்கு விலை உயர்ந்த ஹாரத்தைக் கொடுத்தார். பிறகு மேலான குதிரைகள் கட்டியதும், ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப்பட்டதுமான ரதத்தின் மீதேறிக் கொண்டு ப்ராஹ்மணர்கள் தம்முடைய குலத்திலுள்ள பெரியோர்கள், மந்திரி, பந்துக்கள் ஆகிய இவர்களுடன் நகரத்தை விட்டு புறப்பட்டார். அப்பொழுது சங்கம், துந்துபி, புல்லாங்குழல் முதலிய வாத்தியங்களை கோஷித்தார்கள். ப்ராஹ்மணர்கள் வேதம்

உச்சரித்தார்கள். ஸுநீதி, ஸுருசி என்ற ராஜ பத்தினிகள் உத்தமனென்ற ராஜ குமாரனுடனும் பல்லக்கில் ஏறிக் கொண்டு அரசர்பின் சென்றார்கள்.

இப்படி அரசர் தம்முடைய புத்திரனைப் பார்க்க விரும்பி பட்டணத்துக்குச் சமீபத்திலிருக்கும் தோட்டத்தின் அருகில் வருகிற துருவரைக் கண்டு சீக்கிரம் ரதத்திலிருந்து இறங்கி அதிக பிரேமையால் பரவசராகி பெருமூச்சுவிட்டு புத்திரனை ஆலிங்கனம் செய்துகொண்டார். பின்னும் அந்த அரசர் புத்திரனைக் கண்டதால் பூர்ண மனோரதமுள்ளவராகி ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பாதஸேவையால் பாவங்களற்ற வராக இருக்கும் துருவருடைய தலையை மோந்து ஆனந்த பாஷ்பத்தைப் பெருக்கினார். அப்பொழுது ஸாதுக்களில் முந்தியவராகிய துருவர் பிதாவினுடைய பாதங்களை நமஸ்கரித்து அவரால் ஆசீர்வதிக்கப்பட்டு இரண்டு மாதாக்களையும் நமஸ்கரித்தார். ஸுருசி யானவள் வணங்கிய குமாரனைத் தூக்கி ஆலிங்கனம் செய்து பாஷ்பத்தால் கத்கத ஸ்வரத்துடன் "வெகுகாலம் ஜீவித்திரு" என்று ஆசீர்வதித்தாள். புருஷன் பகவான் இடத்தில் செய்யும் மைத்திரி முதலிய குணங்களால் பகவான் எவனிடத்தில் தயைசெய்கிறாரோ, அவனை ஸகல பிராணிகளும் நமஸ்கரிக்கிறார்கள். ஜலமானது பள்ளத்தில் பிரவேசிக்கிறது. (அதனால் ஸுருசியும் துருவரிடம் விசுவாசத்தை வைத்தாள்.) மேலும் உத்தமனும், துருவனும், ஒருவருக்கொருவர் ஆலிங்கனஞ் செய்துகொண்டு மயிர்க் கூச்சலையடைந்து அடிக்கடி ஆனந்த பாஷ்பத்தைப் பெருக்கினார்கள். ஸுநீதியென்ற துருவருடைய மாதாவானவள் தன்னுடையப் பிராணனைக் காட்டிலும் பிரியனாகிய புத்திரனைத்

தழுவி அவனுடைய சரீர ஸ்பர்சத்தால் மனக்கவலையை யொழித்தாள். சூரனைப் பெற்றவளாகிய அவளுடைய கண்களிலிருந்து ஆனந்த ஜலம் பெருகி ஸ்தனங்களில் விழுந்தது. அந்த ஸ்தனங்களிலிருந்து பால் பெருகியது. அந்தராஜமஹிஷியை நோக்கி ஜனங்கள் "காணாமல் போன உன்னுடைய புத்திரன் தெய்வச் செயலால் திரும்பி வந்திருக்கிறான். உன் கவலையை நிவர்த்திப் பான். பூமண்டலத்தைப் பரிபாலிப்பான், பக்தர்கள் உடைய கவலையைத் தீர்க்கும் பகவானை நீ ஆராதித்தாய். அவனைத் தியானம் செய்யும் வித்வான் கள் ஜயிக்க முடியாத ஸம்ஸாரத்தை ஜயிப்பார்கள்" என்று கொண்டாடினார்கள்.

இப்படி ஜனங்களால் சிலாகிக்கப்படும் துருவரை, உத்தமனுடன், அரசன் யானையின் மீதேற்றி வைத்துக் கொண்டு ஜனங்களால் துதிக்கப்பட்டு, தம்முடைய நகரத்திற்குட் சென்றான். அந்த பட்டணத்தில் ஒவ்வொரு வீட்டின் வாசலிலும், கோட்டை வாசல் களிலும், வாழைகளும், பாக்குக்கன்றுகளும், மகர தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. மேலும் மாந்தளிர்கள், வஸ்திரங்கள், புஷ்ப மாலைகள், முத்து மாலைகள் ஆகிய இவைகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தன. பூர்ணகும்பம் வைக்கப்பட்டிருந்தது. தீபங்கள் பிரகாசித்தன. மேலும் அந்த நகரமானது அலங்கிருதங்களான பிராகாரங்களாலும் கோபுரங் களாலும், வீடுகளாலும், தங்க வேலை செய்த விமான சிகரங்களுடைய காந்திகளாலும் மனோஹரமாக இருந்தது. பின்னும் ராஜமார்க்கங்களும், நாற்சந்தி களும், அவாந்தர வீதிகளும், பிரகாரத்தின் மீதிருக்கும் வீதிகளும் குப்பையில்லாமல் சுத்தம் செய்யப்பட்டும்;

ஜலம் தெளிக்கப்பட்டும், சந்தனத்தாலும், பொரிகளா லும், அக்ஷதங்களாலும், புஷ்பங்களாலும், பழங்களா லும், அரிசிகளாலும், பலிகளாலும் அலங்கரிக்கப் பட்டு மிருந்தன. ராஜ மார்க்கத்தில் வரும் துருவருக்குப் பட்டணத்திலிருக்கும் பதிவிரதைகளான ஸ்திரீகள் வெண்மையான கடுகு, அக்ஷதம், தயிர், பூர்ண கும்பம், அருகம்புல், புஷ்பம், பழம் முதலிய மங்கள திரவியங்களை ஸமர்ப்பித்து மிகுந்த பிரீதியுடன் ஆசீர்வாதம் செய்தார்கள். இப்படி எல்லோராலும் பூஜிக்கப்பட்டும், மனோஹரமான கானங்களைக் கேட்டுக் கொண்டும் துருவர் பிதாவின் உடைய கிருஹம் சென்றார். அந்த அரண்மனையானது மேலான இரத்தினங்களால் கட்டப்பட்டது. அந்த பிதாவினுடைய கிருஹம் சென்றார்.

அதில் பிதாவினால் பகுமானிக்கப்பட்டு ஸ்வர்க்கத்தில் தேவன்போல் வசித்தார். அவ்விடத்தில் பால்போலும் நுரைபோலும் வெண்மையான மேல் விரிப்புகளும், தந்தவேலை செய்யப்பட்டவைகளும், சுவர்ணத்தால் அலங்கரிக்கப்பட்டவைகளுமான கட்டில் முதலிய படுக்கைகளும் ஸ்வர்ணமயங்களான ஆஸனங்களுமிருக்கின்றன. அங்கிருக்கும் ஸ்படிகச் சுவர்களிலும் மரகதச் சுவர்களிலும் தீபங்களும், ஸ்திரீகளும் பிரதிபிம்பிக்கிறார்கள். மேலும் அழகான தோட்டங்களிருக்கின்றன. அவைகளில் பலவகையான தேவ விருக்ஷங்களு மிருக்கின்றன. பறவைகள் ஆணும் பெண்ணுமாகச் சப்திக்கின்றன. வண்டுகள் மதங்கொண்டவைகளாகிப் பாடுகின்றன. மேலும் அவ்விடத்திலிருக்கும் ஓடைகளுடைய படிகள் வைடூரியக் கற்களால் கட்டப்பட்டு இருக்கின்றன.

அந்த ஓடைகளில் தாமரைகள் நீலோத்பலங்கள், ஆம்பல்கள் ஆகிய இவைகளிருக்கின்றன. ஹம்ஸம், நீர்க்காக்கை, சக்கரவாகம், ஸாரஸங்கள் ஆகிய நீர்ப்பறவைகளும் வசிக்கின்றன.

65–67 பின்பு உத்தானபாதர் என்ற அந்த ராஜ ரிஷியானவர் தம்முடைய புத்திரராகிய துருவருடைய சரிதத்தை (துபஸ் செய்து பகவானிடம் வரம் பெற்றது) கேட்டு மிகவும் ஆச்சரியமடைந்தார். இப்படி சில காலம் சென்றபின் துருவர் இராஜ்ய பரிபாலனம் செய்யும் வயதை அடைந்தார். ஜனங்களும் அவரிடம் மிகுந்த பிரியமுள்ளவர்களாக இருந்தார்கள். அப்பொழுது அரசர் தாம் வயது சென்றவராக இருந்ததாலும் துருவருக்குப் பட்டாபிஷேகம் செய்தார். ஜனங்களுக்கு அது சம்மதமாக இருந்தது. பின்னுமவர் விஷயங்களில் ஆசையை ஒழித்து ஆத்ம தத்துவத்தை யோசித்து வனம் சென்றார்.

அத்தியாயம்–10

துருவர் புண்ய ஜனர்களுடன் யுத்தம் செய்தது

1–3. பின்பு துருவர் சிம்சுமாரரென்ற பிரஜாபதியின் புத்திரியாகிய பிரமி என்பவளை விவாகம் செய்து கொண்டு அவளிடத்தில் கல்பன், வத்ஸரண் என்ற இரண்டு புத்திரர்களை உண்டுபண்ணினார். பின்னும் மிகுந்த பலசாலியான அவர் வாயுவின் புத்திரியாகிய இளை யென்பவளைக் கல்யாணம் செய்துகொண்டு அவளிடத்தில் உத்கலனென்ற புத்திரனையும், சிறந்த புத்திரியையும் உண்டுபண்ணினார். அவருடைய ஸபத்தினி மாதாவின் புத்திரனாகிய உத்தமன் கல்யாணம் செய்துகொள்வதற்கு முன்னமேயே ஒருநாள் வேட்டைக்காக இமயமலை சென்று அவ்விடத்தில் மிக்க பலசாலியான புண்யஜனனால் (அசுரனால்) கொல்லப்பட்டான். அவனுடைய மாதாவாகிய ஸுருசியும் புத்திரசோகத்தால் மரணமடைந்தாள்.

4–28. பின்பு துருவர் தம்முடைய ஸஹோதரன் மரணமடைந்ததைக் கேட்டு கோபம், பொறாமை, துக்கம் ஆகிய இவைகளை அடைந்து ஜயசீலமான ரதத்தின் மீதேறி புண்ய ஜனர்கள் வசிக்கும் அலகா நகரத்தை நோக்கிப் புறப்பட்டார். வடக்குத்திக்கில் இமயமலை சென்று அவ்விடத்தில் அலகா நகரத்தைக் கண்டார். அதில் பரமசிவனுடைய வேலைக்காரர் களான ராக்ஷஸர்களும். குஹ்யர்களும் வசிக்கிறார்கள். பெரிதான கைகளுள்ளவராகிய அந்தத் துருவர் அவ்விடம் சென்று சங்கத்தை ஊதினார். அதன் சப்தத்தால் ஆகாசம், திக்குகள் ஆகிய இவைகளில்

எதிரொலி உண்டாயிற்று. ஓ விதுரரே! அதனைக் கேட்டு யக்ஷஸ்திரீகள் பயந்தார்கள். பிறகு மிக்க பலசாலிகளான உபதேவர்களெல்லாரும். அந்தச் சப்தத்தை சகிக்காதவர்களாகி ஆயுதங்களை கையில் எடுத்துக்கொண்டு பட்டணத்திற்கு வெளியில் வந்தார்கள். மஹாரதரும், பயங்கரமாகிய தனுஸைத் தரித்தவருமான துருவர் தம்மை எதிர்த்து வருகிற அந்த உபதேவர்களைப் பார்த்து மூன்று பாணங்களால் தனியே ஒவ்வொருவரையும் ஒரேகாலத்தில் அடித்தார். அந்துப் பாணங்கள் அவர்கள் நெற்றியில் பதிந்தன அவர்களெல்லோரும் தங்களை அபஜயமடைந்தவர் களாக நினைத்துத் துருவருடைய திறமையைப் பற்றிப் புகழ்ந்தார்கள். பின்பு அவர்கள் காலால் மிதிக்கப்பட்ட ஸர்ப்பங்கள் போல் துருவருடைய பராக்கிரமத்தைச் சகிக்காதவர்களாகி ஒவ்வொருவரும் ஆறு பாணங்களால் துருவரை தனித்தனியே அடித்தார்கள். பின்னுமவர்கள் பரிகங்கள், கத்திகள், பிராஸமென்ற ஆயுதங்கள், சூலங்கள், பரச்வதங்கள், சக்திகள், யஷ்டிகள், முஸண்டிகள், பலவகையான இறக்கைகளுள்ள பாணங்கள் ஆகிய இவைகளை வர்ஷித்தார்கள். அவர்கள் ஒரு லக்ஷத்து முப்பது ஆயிரம் பேர்கள். (1,30,000) எல்லோரும் விசேஷ கோபங்கொண்டவர் களாக இருந்ததுமல்லாமல் துருவர் செய்ததற்குப் பதில் செய்யவேண்டுமென்ற விருப்பமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். அப்பொது அவர்களுடைய ஆயுத வர்ஷத்தால் உத்தானபாதருடைய புத்திரராகிய துருவரும், அவருடைய இரதமும் அதில் கட்டப்பட்டு இருக்கும் குதிரைகளும், ஸாரதியும் மூடப்பட்டார்கள். அது மழையால் மலை மூடப்பட்டது போலிருந்தது. அப்பொழுது அதனைப் பார்த்திருந்த சித்தர்கள்

"மனுவின் வம்சத்திலுண்டான சூரியன் புண்யஜனர் களாகிய பெரிதான சமுத்திரத்தில் மூழ்கினார். ஹா ஹா" என்று உரக்கக்கூவினார்கள். அசுரர்கள் "ஜயித்தோம் ஜயித்தோம்" என்று உரக்கச் சொல்லி சந்தோஷித்தார்கள்.

அந்தச் சமயத்தில் பனி மூட்டத்திலிருந்து சூரியன் வெளிப்பட்டாற்போல் துருவருடைய இரதமானது அதிலிருந்து வெளியில் வந்தது. துருவரும் பயங்கரமாகிய தம்முடைய வில்லில் நாண் கயிற்றைக் கட்டி, சப்திக்கச்செய்து அதில் பாணங்களைத் தொடுத்துச் சத்துருக்களுடைய அஸ்திரங்களை அடித்தார். அது மேகக் கூட்டத்தை வாயு நாசஞ் செய்தது போலிருந்தது. அதனால் சத்துருக்கள் மனவருத்தமடைந்தார்கள். துருவருடைய வில்லிலிருந்து விடப்பட்ட பாணங்கள் அவர்களுடைய கவசங்களைப் பிளந்து இடி விழுந்தாற் போல சரீரத்திலும் பிரவேசித்தன. பல்லமென்ற பாணங்களால் அறுக்கப் பட்ட அழகான குண்டலங்களுள்ள தலைகளும், சுவர்ண மயமான பனைமரம் போன்ற துடைகளும் வலயங்களால் அழகான கைகளும், விலையுயர்ந்த மகரங்கள் தோள் வளைகள், கிரீடங்கள், தலைப் பாகைகள் ஆகிய இவைகளும் யுத்த பூமியை மறைத்துக் கொண்டிருந்தன. உயிருடனிருந்த சிலர் முறிக்கப்பட்ட அவயவங்களுள்ளவர்களாகி, சிங்கத்தின் இடம் பயந்த யானைகள்போல் யுத்த பூமியிலிருந்து பயந்து ஓடினார்கள். அப்பொழுது மனுவின் வம்சத்தில் பிறந்த உத்தமராகிய துருவருடன் எதிர்த்து யுத்தத்திற்கு வரக் கூடியவர்களில்லை. அதனைக்கண்ட துருவர் அந்தப் பட்டணத்திற்குட் சென்று அதன் அழகைப்

பார்க்க விருப்பமுள்ளவரானாலும் சத்ருக்கள் திரும்பவும் சண்டைக்கு வருவார்களோவென்று தம்முடைய ஸாரதியை நோக்கி, "மாயாவிகளுடன் நடையை ஜனங்கள் தெரிந்துகொள்ள முடியாது" என்று சொல்விக்கொண்டு அலகா நகரத்திற்குட் போகவில்லை. உடனே சமுத்திரத்திலுண்டாகும் சப்தம்போல் காற்றினால் பயங்கரமான சப்தமுண்டா யிற்று, தூளி கிளம்பியது, ஒரு க்ஷண காலத்தில் ஆகாசம் முழுவதும் மேகங்களால் மூடப்பட்டது. பயங்கரமான இடிகளும் மின்னல்களும் உண்டாயின. இரத்தம், சீழ், அமேத்யம் மூத்திரம், மேதஸ் முதலிய அசுத்தவஸ்துக்கள் வர்ஷிக்கப்பட்டன. கபந்தங்கள் (தலையில்லாத உடல்கள்) துருவருடைய முன்பாக ஆகாயத்திலிருந்து விழுந்தன. பின்பு ஆகாயத்தில் மலைகள் காணப்பட்டன. அவைகள் நான்கு பக்கங்களிலும் விழுந்தன, கதாயுதம், பரிகம், முஸலாயுதம், கத்தி ஆகிய இவைகளும் கற்களும் வர்ஷிக்கப்பட்டன. மேலும் விஷப்பார்வைகளுள்ள வைகளும், அக்கினி போன்ற கண்கள் உள்ளவைகளும் இடிபோன்ற மூச்சு உள்ளவைகளுமான ஸர்ப்பங்கள் தோன்றின. பின்னும் மதங்கொண்ட யானைகளும் சிங்கங்களும், புலிகளும் கூட்டங்கூட்டமாக எதிர்த்து ஓடி வந்தன. பிரளய காலத்தைப் போல் சமுத்திரம் ஆனது பெரிதான அலைகளுடன் பயங்கரமாகி ஸகல பூமியையும் மறைத்துக்கொண்டு கரை புரண்டது இம்மாதிரியானவைகளை அசுரர்கள் மாயையால் உண்டுபண்ணினார்கள். அவைகள் பார்ப்பவர்களுக்குப் பயத்தைக் கொடுத்தன.

29–30. இப்படி துருவரிடத்தில் அசுரர்கள் நிவர்த்திக்க

முடியாத மாயாப்பிரயோகஞ் செய்ததைக் கேள்விப் பட்டு மஹரிஷிகளெல்லாரும் ஒன்று சேர்ந்து துருவருக்கு க்ஷேமமுண்டாகும்படி அனுக்கிரஹித் தார்கள். எப்படியெனில் ஓ உத்தானபாதருடைய புத்திரராகிய துருவ! எந்தப் பகவானுடைய திவ்ய நாமத்தை யுச்சரித்து ஸகல ஜனங்கள் ஸம்ஸாரத்தைத் தாண்டுகிறார்களோ, எவர் சார்ங்கமென்ற வில்லைத் தரித்தவரோ அப்போர்ப்பட்ட தேவர் உம்முடைய சத்துருக்களை நாசஞ் செய்யட்டும்" என்றார்கள்.

அத்தியாயம்–11

மனு துருவருக்குத் தத்துவத்தை உபதேசித்தது

1–5 இப்படி மஹரிஷிகளால் அனுக்கிரகிக்கப்பட்ட துருவர் நாராயணாஸ்திரத்தை வில்லில் ஸந்தானஞ் செய்தார். விதுரரே! அப்பொழுது ஆத்மஞ்ஞான முண்டானவுடனே ஸகல துக்கங்களும் எப்படி நாசமடைகின்றனவோ, அப்படி குஹ்யர்களால் ப்ரயோகிக்கப்பட்ட மாயைகள் யாவும் நாசமடைந்தன. இப்படி நாரயணாஸதிரத்தை அவர் ப்ரயோகித்தவுடன் அதிலிருந்து கிளம்பியவைகளும், ஸ்வர்ணமயமான புங்கங்களுள்ளவைகளும், ஹம்ஸத்தின் இறக்கையுள்ள வைகளுமான பாணங்கள் பயங்கரமாகச் சப்தித்துக் கொண்டு மயில்கள் வனத்தில் ப்ரவேசித்தாற் போல சத்துரு சைன்னியத்தில் ப்ரவேசித்தன.. கூர்மையான முனைகளுள்ள அந்தப் பாணங்களால் உபத்ரவிக்கப் பட்ட அந்த புண்ய ஜனங்கள் மிகுந்த கோபமடைந்து ஆயுதங்களை எடுததுக் கொண்டு ஸர்ப்பங்கள் படம் எடுத்துக் கருடனை எதிர்த்தாற்போல் துருவருடைய முன்பாக ஓடிவந்தார்கள். துருவரும் அவர்கள் மீது பாணங்களைப்ரயோகித்து அவர்களுடைய கைகள், துடைகள், கழுத்து, வயிறு ஆகிய இவைகளை அறுத்து நாசஞ் செய்தார். யோகிகள் எந்த சூரிய மண்டலத்தைப் பேதித்து மேலுலகஞ் செல்லுகிறார் களோ, அந்த மண்டலத்தை அந்தப் புண்ய ஜனங்கள் பேதித்துப் பரலோகமடைந்தார்கள். இப்படி நிரபராதிகளான குஹ்யர்கள் துருவரால் இம்சிக்கப் பட்டார்கள்.

6–35 அப்பொழுது மனுவானர் மஹர்ஷிகளுடன்

அவ்விடம் வந்து உத்தானபாதருடைய புத்திரராகிய துருவரை நோக்கி, ஓ குழந்தாய்! கோபத்தை அடக்கிக் கொள். கோபமானது நரகத்திற்கு மார்க்கம், பாபத்திற்குக் காரணமாகிறது. அந்தக் கோபத்தால் குற்றமற்றவர்களான புண்ய ஜனர்களை நாசஞ் செய்தாய். நிரபராதிகளான உபதேவர்களை நீ கொல்ல ஆரம்பித்தது நம்முடைய குலத்திற்குத் தகுதியான தல்ல, நிந்திக்கக் கூடியது, ஓ சகோதரனிடம் பிரீதியுள்ளவனே! உன்னுடைய சகோதரனாகிய உத்தமனைக் கொன்றவன் ஒருவன். அதற்காக நிரபராதி களான அநேகர்களைக் கொன்றாய், சரீரத்தை ஆத்மாவாக நினைத்துப் பசுக்கள் ஒன்றுக்கொன்று எப்படி அடித்துக் கொள்கின்றனவோ, அப்படி பிராணிகளைக் கொல்வதென்பது பகவத் பக்தர்களான ஸாதுக்களுக்குத் தகுதியானதல்ல. நீயோ ஸகல பிராணிகளிடத்திலும் வசிக்கும் பகவானை ஆராதித்து மேலான அந்த விஷ்ணுபதத்தை யடைந்தவன். நீ பகவானுடைய ஹ்ருதயத்திலிருப்பவன். பகவத் பக்தர்களுக்குப் பிரியன். ஸாதுக்களுடைய விரதத்தை அனுஷ்டிப்பவன். அப்பேர்ப்பட்ட நீ இம்மாதிரியான கெட்ட காரியத்தை எப்படிச் செய்தாய்? திதிக்ஷை (பொறுமை), கருணை, மைத்திரீ ஆகிய இவைகளால் ஸகல ஜந்துக்களிடத்திலும் ஸம புத்தியுள்ளவனாக விருந்தால் ஸகல ஸ்வரூபியான பகவான் சந்தோஷம டைகிறார்.

பகவத் பிரஸாத முண்டானால் புருஷன் ப்ரகிருதியின் குணஸம்பந்தமற்றவனாகி ஜீவபாவத்தை விட்டு ஸுகஸ்வரூபமான ப்ரஹ்மபதத்தை அடைகிறான். ஸ்திரீகளும், புருஷர்களும் ஐந்து பூதத்தாலேற்பட்ட

சரீரமுள்ளவர்கள். அந்த ஸ்திரீ புருஷர்களுடைய சேர்க்கையால் ஸ்திரீ புருஷர்கள் உண்டாகிறார்கள். இம்மாதிரி ஸ்ருஷ்டி, பரிபாலனம், ஸம்ஹாரம் ஆகிய இவைகள் நடைபெறுகின்றன. அதில் புருஷன் நிமித்தமேயாம். அவர் குணங்களற்றவர், கார்யகாரண ஸ்வரூபமாகிய ஜகத்தானது அவருடைய ஸந்நிதியில் இரும்பு போல் சேஷ்டிக்கிறது; அந்தப் பகவான் காலத்தின் மஹிமையால் குணங்கள் தாரதம்யத்தை யடையும் பொழுது ஸ்ருஷ்டி முதலியவைகளின் சக்தியை அங்கீகரித்து தாம் ஒன்றையுஞ் செய்யாத வராக இருந்தும், கர்த்தாவாகவும் ஸம்ஹரிக்காத வரானாலும் ஸம்ஹரிப்பவராகவும் இருக்கிறார். அவருடைய சேஷ்டையானது ஊகிக்க முடியாதது.

அந்தப் பகவான் நாசமற்றவர்.· ஜகத்தை நாசஞ் செய்யும் கால ஸ்வரூபியாயிருப்பவர், ஆதியற்றவர். ஆதியைச் செய்பவர். விகாரமற்றவர். அப்படிப்பட்ட பகவான், பிதா முதலிய ஜனத்தைக் கொண்டு புத்திரன் முதலியவர்களை உண்டு பண்ணுகிறார். திருடன் முதலியவர்களை அரசன் முதலியவர்களைக் கொண்டு நாசஞ் செய்கிறார். அவர் ஸமமாக ப்ரஜைகளை நடத்துகிறாரே யொழிய அவருக்குத் தம்மைச் சார்ந்தவனென்ற புத்தியாவது துவேஷியென்ற புத்தியாவது இல்லை. ஒடுகிற வாயுவின் பின் தூளிகள் போவது போல் கர்மாதீனர்களாக பிரஜைகள் அவரை அனுஸரிக்கிறார்கள். ஆயுளின் விருத்தியாவது குறைவாவது அந்தப் பகவானுக்கு, இல்லை. அவர் கர்மாதீனர்களான பிரஜைகளில். அவரவர்களுடைய கர்மத்திற்குத் தக்கபடி சிலருக்கு அதன் குறைவையும் கொடுக்கிறார். அவர் கர்ம சம்பந்தமற்றவர். சிலர்

கர்மமே காரணமென்றும், சிலர் ஸ்வபாவமே காரண மென்றும் மற்றும் சிலர் காலமே காரணமென்றும், இன்னும் சிலர் தெய்வமே காரணமென்றும், சிலர் புருஷனுடைய கர்மமே காரணமென்றும் சொல்லு கிறார்கள். அந்த ஈச்வர ஸ்வரூபமானது யாரால் அறியக்கூடும்? அது அவ்யக்தம். அளவிடக் கூடாதது. மஹத் தத்துவம் முதலிய பலவகையான சக்திகள் அதனிடமிருந்தே உண்டாகின்றன. அது தானாக உண்டானது. அதன் எண்ணத்தையே தெரிந்து கொள்ள முடியாதது. (அதனை யார் அறிவார்களென்று தாத்பரியம்.)

ஓ குழந்தாய்! உன்னுடைய சகோதரனைக் குபேரனுடைய வேலைக்காரர்கள் கொன்றார்களென்று நினைப்பது சரியல்ல. ஸ்ருஷ்டியிலும், ஸம்ஹாரத்திலும் தெய்வம் காரணமாகிறது. அந்தப் பகவானே லோகத்தைப் படைப்பவர். காப்பாற்றுகிறவர். ஸம்ஹரிப்பவர். ஆனாலும் அஹங்காரத்தை யடைகிற குணங்கள், கர்மங்கள் ஆகிய இவைகளிலும் சம்பந்திக்கிறதில்லை. ஸகல பூதஸ்வரூபமாயும், பூதங்களுக்கு அதிபதியும், பூதபாவனருமாகிப் பகவான் தம்முடைய மாயாச் சக்தியைக் கொண்டு ஸிருஷ்டி, ஸ்திதி ஸம்ஹாரங் களாகிய கர்மங்களைச் செய்கிறார். அவர் பக்தி செய்யாதவர்களுக்கு மிருத்யுவாக இருப்பவர். பக்தர் களுக்கு அமிருதராக இருப்பவர். ஜகத்திற்கு முக்கியமான கதியாக இருப்பவர். அவரை மூன்று கரணங்களாலும் ஆராதிக்க வேண்டும், மூக்குக் கயிறுகளால் கட்டப் பட்ட விருஷபங்கள் போல் ப்ரஜாபதிகளும் அவரைப் பூஜிக்கிறார்கள்.

மேலும், ஐந்து வயதுச் சிறுவனாக இருக்கும் போது

நீ ஸபத்தினீ மாதாவின் வார்த்தையைச் சஹியாமல் மாதாவையும் விட்டுப் பிரிந்து வனஞ்சென்று எவரைத் தபஸினால் ஆராதித்து மூவுலகத்திற்கும் மேலானதான பதத்தை அடைந்தாயோ, உண்மையில் அஸத்தான இந்த ஜகத்தானது எவரிடத்தில் தோற்றுகிறதோ, அப்பேர்ப்பட்டவரும் குணங்களற்ற வரும், அக்ஷர ஸ்வரூபியுமான ஆத்மாவை விரோதமற்ற புத்தியால் தியானிக்க வேண்டும். மேலும் நீ ப்ரத்யகாத்மாவும், பகவானும், நாசமற்றவரும் ஆனந்த ஸ்வரூபியும், ஸகல சக்தியுள்ள வருமான புருஷோத்தம ரிடத்தில் பக்திசெய்து, 'நான் என்னுடையது என்ற அவித்யை நிவர்த்தித்துக் கொள்வாய்.

ஓ மஹாராஜனே! நீ சாஸ்திரங்களை யறிந்தவன். ஆனதால் மருந்தினால் ரோகத்தை நிவர்த்திப்பது போல க்ஷேம விரோதியான கோபத்தை அடக்கிக் கொள். கோபமுள்ள புருஷனைக் கண்டு லோகமானது மிகவும் நடுங்குகிறது. ஆனதால் அபயத்தை அடைய விரும்பிய வித்வான் கோபத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது. உன்னுடைய சகோதரனைக் கொன்றதற்காகப் புண்ணிய ஜனர்களை நீ நாசஞ் செய்தபடியால் குபேரனை அவமதித்தாயிற்று. ஆனதால் ஓ குழந்தாய்! அந்தக் குபேரனை வணக்கத்தாலும், வணக்கமான வார்த்தைகளாலும் ஸமாதனப்படுத்திக் கொள். மகான் களுடைய தேஜஸ்ஸானது நம்முடைய குலத்தைக் கெடுக்க வேண்டாம்" என்று ஸ்வாயம்புவ மனுவானவர் பௌத்ரராகிய துருவருக்கு உபதேசித்து, துருவரால் நமஸ்கரிக்கப்பட்டு மஹரிஷிகளுடன் தம்முடைய பட்டணஞ் சென்றார்.

நோட்டு

திதிக்ஷை—மஹான்களிடத்தில், தாழ்ந்தவர்களிடம் கருணை. ஸாமான்யர்களிடம் மைத்தீரி—ஸ்ரீத. அபாரதஞ் செய்தவர்களிடம் பொறுமை—வீர. ஸந்தோஷம டைகிறார். பகவான் ஸகல ஸ்வரூபமாயிருப்பதால் தேவ மனுஷ்ய சரீரங்களும் பகவத் ஸ்வரூபமேயாம். ஆனது பற்றி பிராணிகளுக்குத் துரோகஞ் செய்தால் பகவானுக்குத் துரோகஞ் செய்ததாக ஆகிறது. ஆனது பற்றி ஸகல பிராணிகளிடம் விசுவாஸம் வைப்பதால் பகவான் ஸந்தோஷமடைகிறார். வீர. ஜீவபாவத்தை —பிழைத்திருக்கும் பொழுது காமம், குரோதம் முதலியவைகளை விட்டு—வீர. இருப்பானது— அய்ஸ்காந்தத்தின் சக்தியால் —வீர.

அத்தியாயம்–12

துருவர் துருவ பதத்தை அடைந்தது

1–7. யக்ஷர்கள், சாரணர்கள், கின்னரர்கள் ஆகிய இவர்களால் துதிக்கப்பட்ட குபேரன் "துருவன் கோபம் இல்லாதவராகிச் சாந்தராக இருக்கிறார்" என்பதைத் தெரிந்து கொண்டு யுத்த பூமிக்கு வந்து துருவரை நோக்கி, "ஓ ராஜபுத்ர! உம்முடைய பிதாமஹராகிய மனுவின் உத்தரவின்படி நீர் விரோதத்தை விட்ட படியால் உம்மிடத்தில் நான் சந்தோஷமடைகிறேன். விரோதத்தை விட்டு விடுவது மிகவும் சிரமமான காரியம். நீர் யக்ஷர்களைக் கொல்லவில்லை. யக்ஷர்களும் உம்முடைய சஹோதரனைக் கொன்றவர் களல்ல. பிராணிகள் உண்டாவதற்கும் மரணமடை வதற்கும் காலமே காரணமாகின்றது. "நான், நீ" என்று புருஷனுக்கு உண்டாகும் பேதபுத்தியானது வியர்த்தம் ஆனது. அது அஜ்ஞானத்தால் ஏற்பட்டது. தேஹத்தை ஆத்மாவென்று நினைப்பதால் அந்தப் பேதபுத்தி யானது ஸ்வப்பனத்தில் வஸ்துக்கள் தோன்றுவது போல் பிரகாசிக்கிறது. அதனால் பந்த மோக்ஷங்கள் உண்டாகின்றன. ஆனதால் நீர் இவ்விடமிருந்து உம்முடைய நகரத்திற்குப் போகலாம். உமக்கு க்ஷேமம் உண்டாகும். ஸகல பிராணிகளையும் ஆத்மாவாகப் பாவித்துப் பகவானை ஆராதியும். அவர் இந்திரியங் களுக்குப் புலப்படாதவர். ஸகல ரூபமான சரீரம் உள்ளவர். பூஜிக்கக்கூடிய பாதாரவிந்த முள்ளவர், ஸம்ஸாரத்தைப் போக்குகிறவர். முக்குண ஸ்வரூபமான தம்முடைய மாயா சக்தியுடன் கூடியவர். அதை விட்டுப் பிரிந்துமிருப்பவர். ஓ உத்தானபாதருடைய

புத்திர! என்னிடமிருந்து உமக்கு இஷ்டமான வரத்தைப் பெற்றுக்கொள்ளும். ஸந்தேகப்படவேண்டாம் நீர் ஸ்ரீ மஹாவிஷ்ணுவிற்கு அந்தரங்க பக்தரென்று கேட்டிருக்கிறேன்" என்றார்.

8–9. அதனைக் கேட்ட மஹாபாகவதராகிய துருவர் இராஜராஜராகிய குபேரனை நோக்கி, "ஸ்ரீ மஹாவிஷ்ணுவினிடத்தில் நிலையான பக்தியிருக்கும் படி அனுக்கிரஹிக்கவேண்டும். அதனால் தாண்ட முடியாத துக்கங்களை நிவர்த்தித்துக் கொள்ளலாம்" என்றார். அதனைக் கேட்ட குபேரன் மிகுந்த பிரியத்துடன் துருவனுடைய இஷ்டப்படி அனுக் கிரஹித்து, அவர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே மறைந்தார். அரசரும் தம்முடைய நகரஞ் சென்றார்.

10–27. பின்பு பூர்ணமாகத் தக்ஷிணை கொடுத்து அநேக யாகங்களை அனுஷ்டித்து யக்ஞங்களுக்கு அதிபதியும், திரவியம், காமம், தேவதை இவைகளால் செய்யப்படும் கர்மங்களின் பலனைக் கொடுப்பவரும் ஆகிய பகவானை ஆராதித்தார். ஸகல ஸ்வரூபியாய் இருப்பவரும், நாசமற்றவருமான பகவானிடத்தில் தீவிரமான பக்தி செய்து, அதனால் தம்மிடத்திலும்; ஸகல பிராணிகளிடத்திலும் அந்தப் பிரபுவைத் தரிசித்தார். மேலும் துருவர் நல் நடைத்தையுள்ள வராகவும், ப்ராஹ்மணரிடத்தில் பிரீதியுள்ளவராகவும், தீனர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ளவராகவும்; தர்ம ஸேதுக்களைக்காப்பாற்றுகிற வருமாக இருந்தார். அதனால் பிரஜைகள் அவரை தங்கள் பிதாவென நினைத்தார்கள், அவர் இருபத்தாறு ஆயிரம் வருஷங்கள் பூமியைப் பரிபாலித்தார். இப்படி அவர்

சுகத்தை அனுபவிப்பதால் புண்யத்தின் குறைவையும் செய்துகொண்டு, யாகம் முதலிய தர்மங்களை அனுஷ்டித்துப் பாபத்தின் குறைவையும் செய்து கொண்டு தர்மம், அர்த்தம், காமம் இவைகளுக்கு உபயோகமாக வெகு காலத்தைக் கழித்து, இந்திரியங்களை ஜயித்தவராகி புத்திரனுக்குப் பட்டாபிஷேகம் செய்தார். பின்பு அவர் இந்த ஜகத்தானது ஆத்மாவினிடத்தில் மாயையால் செய்யப்பட்டிருக்கிறதென்றும். அவித்யையால் ஏற்பட்டதென்றும், ஸ்வப்பனத்தில் தோன்றும் கந்தர்வ நகரத்திற்கு கொப்பானதென்றும் தெரிந்து கொண்டார். பின்னுமவர் தேகம், களத்திரம், புத்திரன், மித்திரன், சைன்னியம், பொக்கிஷம், அந்தப்புரம், அழகான விஹார பூமிகள், சமுத்திரத்திற்குட்பட்ட பூமண்டலம் இவைகள் அநித்தியங்களென்று நிச்சயித்து, பதரிகாசிரமம் சென்றார். அவ்விடத்தில் சுத்தமாகிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து சமம், தமம் முதலியவைகளையடைந்து விதிப்படி ஆசனத்தை அடைந்தும், வாயுவை யடக்கி இந்திரியங்களை அந்தர் முகமாகச் செய்துகொண்டு பகவானுடைய விராட் ரூபத்தைத் தியானித்தார். பின்பு "தியானம் செய்கிறவன், தியானம் செய்யப்படுகிறது என்ற பேதபுத்தியற்றவராகி, ஸமாதியிலிருந்து ஸ்தூல தியானத்தை விட்டார். இப்படி எப்பொழுதும் பகவானிடம் பக்தி செய்யும் பொழுது அவருடைய கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் பெருகியது. ஹிருதயமானது சிநேகமுள்ளதாக இருந்தது. சரீரத்தில் மயிர்க்கூச்சலுண்டாயிற்று. சரீரத்தில் அபிமானம் ஒழிந்தது. "நான் என்ற எண்ணம் மாறிற்று. அப்பொழுது அவர் ஆகாயத்தில் இருந்து பூமியை நோக்கி வருகிற ஒரு விமானத்தைக்

கண்டார். அது பத்துக் திக்குகளையும் ப்ரகாசிக்கச் செய்து கொண்டு உதயமான பூர்ணிமா சந்திரன் போலிருந்தது. அந்த விமானத்தில் இரண்டு தேவர்கள் இருந்தார்கள். அவர்கள் நான்கு கைகளுள்ளவர்கள். கறுத்த திருமேனியுள்ளவர்கள். யௌவன வயதுள்ளவர்கள். சிவந்த தாமரை மலர்போன்ற கண்களுள்ளவர்கள். கதையைத் தரித்தவர்கள். நல்ல வஸ்திரத்தை உடுத்திக் கொண்டவர்கள் கிரீடம், ஹாரம், தோள்வளை, அழகான குண்டலங்கள் ஆகிய இவைகளால் அலங்கரிக்கப் பட்டவர்கள்! அவர்களைக் கண்டவுடன் துருவர், "இவர்கள் பகவானுடைய பார்ஷதர்கள்" என்று தெரிந்துகொண்டு எழுந்திருந்து ஸ்ரீமந் நாராயணனுடைய திவ்ய நாமங்களை உச்சரித்துக் கொண்டே பரபரப்பினால் பூஜாக் கிரமத்தை மறந்தவராகி அஞ்சலி செய்துகொண்டு நமஸ்காரம் செய்தார். இப்படி ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதத்திலே மனத்தைச் செலுத்தியவரும். அஞ்சலிபதஞ் செய்து கொண்டிருப்பவரும் வணக்கத் தால் வணங்கிய கழுத்துள்ளவருமான துருவரை நோக்கி ஸுநந்தர், நந்தர் என்ற அவ்விருவர்களும் "ஓ அரசனே! உமக்கு க்ஷேமமுண்டாகும். எங்களுடைய வார்த்தையை ஸாவதானமாகக் கேளும். நீர் ஐந்து வயதுச் சிறுவனாக இருக்கும் பொழுது தபஸ் செய்து எந்தப் பகவானைத் திருப்தி செய்தீரோ, ஸகல ஜகத்தையும் படைத்தவரும், சார்ங்கமென்ற வில்லைத் தரித்தவருமான அந்தத் தேவருடைய பார்ஷதர்களாகிய நாங்கள் உம்மை அழைத்துப் போவதற்காக வந்திருக்கிறோம். அடைய முடியாத விஷ்ணு பதமானது உம்மால் அடையக் கூடியதாயிற்று. ஸப்த ரிஷிகளும் அந்தப் பதத்தை

அடையாமல் அதன்கீழ் ஸஞ்சரிக்கிறார்கள். சந்திரன், சூரியன், கிருஹங்கள், நக்ஷத்திரம் முதலியவைகள் எதனைப் பிரதக்ஷிணமாகச் சுற்றுகின்றனவோ, அந்தப் பதமானது உம்முடைய முன்னோர்களாலும் மற்றவர் களாலும் அடையப்படாதது. எல்லோராலும் நமஸ்கரிக்கக்கூடியது. அந்த விஷ்ணுவின் மேலான பதத்தை நீர் அடையலாம். உத்தமச்லோகர்களுக்குள் சிறந்தவராகிய பகவான் இந்தச் சிறந்த விமானத்தை உமக்காக அனுப்பியிருக்கிறார். அதன் மீதேற வேண்டும்" என்றார்கள்.

28–42. ஸ்ரீமந் நாராயணருடைய வேலைக்காரர்களுள் சிறந்தவர்களான அந்தப் பார்ஷதர்களுடைய தேன் போன்ற இனிமையான வார்த்தையைக் கேட்டு, பகவத் பக்தர்களுக்குப் பிரியராகிய துருவர் ஸ்நானம் செய்து அலங்காரம் செய்து கொண்டு மஹர்ஷிகளை நமஸ்கரித்து ஸ்வஸ்திவாசனஞ் செய்வித்தார். அந்த விமானத்தைப் பிரதக்ஷிணஞ் செய்து பூஜித்தார். பார்ஷதர்களை நமஸ்கரித்தார். பின்பு ஸ்வர்ணமயமான சரீரமுள்ளவராகி அந்த விமானத்திலேற விரும்பினார். அப்பொழுது துந்துபி, மிருதங்கம், பணவம் முதலிய வாத்தியங்கள் சப்தித்தன. சிறந்த கந்தர்வர்கள் பாடினார்கள். புஷ்பமாரி பெய்தது. ஸ்வர்க்கலோகம் செல்லும் சமயத்தில் துருவர், "தீனையான ஸுநீதியை விட்டுப் போகிறோம்" என்று நினைத்தார். அவருடைய இம்மாதிரியான எண்ணத்தைத் தெரிந்து கொண்டு பார்ஷதர்கள் விமானத்தில் ஏறிக்கொண்டு மேலுலகம் செல்லும் ஸுநீதியை துருவருக்குக் காண்பித்தார்கள். பின்பு துருவர் விமானத்துடன் செல்லுகின்ற தேவர்களால் துதிக்கப்பட்டு, புஷ்பங்களால்

இறைக்கப்பட்டு மேலுலகஞ் சென்று கிருஹங்களைக் கண்டார். இப்படி மூவுலகத்தையும் தாண்டி மேலிருக்கும் விஷ்ணுபதத்தை அடைந்தார். எந்தப் பதமானது தானாகப்ரகாசிக்கிறதோ, எதனுடைய தேஜஸ்ஸால் மற்ற லோகங்கள் ப்ரகாசிக்கின்றனவோ. எந்த லோகத்திற்குத் தயையில்லாதவர்களும், நற்காரியங்களைச் செய்யாதவர்களும் செல்லுகிறது இல்லையோ, மேலும் சாந்தர்களும், ஸமமாகப் பார்ப்பவர்களும் சுத்தர்களும், ஸகல பிராணிகளையும் சந்தோஷிக்கச் செய்பவர்களும், பகவானுக்குப் பிரிய பந்துக்களுமான பக்தர்கள் எந்தப் பத்தை அடைகிறார்களோ, அந்தத் துருவபதத்தை உத்தான பாதருடைய புத்திரராகிய துருவர் அடைந்து, கிருஷ்ண பக்தி செய்ததனால் மூவுலகத்திற்கும் சூடாமணி போல் ப்ரகாசித்தார். பசுக்கள் கட்டும் ஸ்தம்பத்தில் கட்டப்பட்ட பசுக்கள் போல் கம்பீரமான வேகத்துடன் எப்பொழுதும் சுற்றிக்கொண்டிருக்கும் ஜ்யோதிச் சக்கரமானது அதனிடத்தில் கோக்கப்பட்டுச் சுற்றுகிறது. அப்பொழுது இந்தத் துருவருடைய மஹிமையைப் பார்த்து நாரதர் வீணையை மீட்டிக் கொண்டு இந்தச்லோகங்களைப் பிரசேதஸ்ஸுகளுடைய யாகத்தில் கானஞ் செய்தார். எப்படியெனில், பதியையே தெய்வமாகக் கொண்ட ஸுநீதியின் புத்திரருக்குக் கிடைத்த இந்த உத்தம கதியானது பகவத் தர்மத்தை அனுஷ்டிக்கும் ப்ரஹ்ம ரிஷிகளாலும் அடைய முடியாதது. அப்படியிருக்க க்ஷத்திரியர்களுக்குக் கிடைக்குமா? எந்தத் துருவர் ஐந்து வயதுச் சிறுவராக இருக்கும் போது ஸபத்தினீ மாதாவின் கெட்ட வார்த்தைகளாகிய பாணங்களால் அடிக்கப் பட்டு, மனவருத்தமடைந்து என்னுடைய உத்தரவினால்

காட்டிற்குச் சென்று, பக்தர்களால் ஜயிக்கப் படுகிறவரான விபுவாகிய பகவானை ஆராதித்து அவரைச் சுவாதீனப் படுத்திக்கொண்டாரோ, அந்தப் பதத்தை அடைய வேண்டுமென்று மற்ற க்ஷத்திரியனால் விரும்பக் கூடுமா? அநேக வருஷங்கள் முயற்சித் தாலும் அடைய முடியுமா? துருவர் ஆறு, ஏழு வயதுள்ளச் சிறுவராக இருக்கும்போதே சொற்ப தினங்கள் பகவானை ஆராதித்து அந்தப் பதத்தை அடைந்தார்.

43–51. ஓ விதுரரே! உம்மால் கேட்கப்பட்டவைக ளெல்லாம் என்னால் சொல்லப்பட்டன, மிகுந்த கீர்த்தியுள்ள துருவருடைய சரீதமானது சொல்லப் பட்டது. இது பணத்தை கொடுக்கக் கூடியது. கீர்த்தியை விருத்தி பண்ணக்கூடியது. ஆயுஸ்ஸை விருத்தி பண்ணக்கூடியது. புண்யகரமானது. க்ஷேமகரமானது. ஸ்வர்க்கத்தைக் கொடுக்கக் கூடியது. நிலையான ஸ்தானத்தைக் கொடுக்கக் கூடியது. மனச்சுத்தியைக் கொடுக்கக் கூடியது. புகழக் கூடியது. பாவத்தைப் போக்கக் கூடியது. இந்தப் பகவத் பக்தர்களுடைய சரிதத்தைச் சிரத்தையாக அடிக்கடி கேட்பதால் பகவானிடத்தில் பக்தி உண்டாகும், ஸகல துக்கங்களும் நிவர்த்தியாகும். மஹத்வத்தை விரும்பிய வர்களுக்குத் அந்த பலன் கிடைக்கும். நல்ல ஸ்வபாவம் முதலியன உண்டாகும். தேஜஸை விரும்பியவர்களுக்கு தேஜஸும், நல்ல மனத்தை விரும்பியவர்களுக்கு நல்ல மனதும் உண்டாகும். இந்த மேலான துருவருடைய சரிதத்தைப் பக்தியுடன் ப்ராஹ்மணர்களுடைய கூட்டத்திலும், காலையிலும், மாலையிலும், பூர்ணிமையிலும், அமாவாஸ்ஸையிலும், துவாதசி

தினத்திலும் சிரவணத்திலும், இராத்ரியிலும், வியதீயபாதத்திலும். ஸங்கிர மணத்திலும், ஞாயிற்றுக் கிழமையிலும் சிரத்தையாயுள்ளவர்களுக்குச் சொல்ல வேண்டும். நிஷ்காமனாகக் கேட்டால் அவன் ஆத்மாவினால் சந்தோஷமடைந்து ஸித்தி அடைவான். ஆத்மாவின் உண்மை அறியாதவனுக்கு ஞானத்தை எவன் உபதேசிக்கிறானோ, கருணை உள்ளவனாகிய அவனிடத்தில் தேவர்கள் கிருபை செய்கிறார்கள். ஓ குருக்களில் சிறந்தவரே! எந்தத்துருவர் குழந்தையாக இருக்கும்பொழுது விளையாட்டு சாமான்களையும், மாதாவின் அரண்மனையையும் விட்டு ஸ்ரீ மஹா விஷ்ணுவைச் சரணமடைந்தாரோ, அந்த சுத்தமான நடத்தையுள்ள துருவருடைய சரிதத்தை உமக்குச் சொன்னேன்" என்றார்.

நோட்டு

"துருவர் விமானத்தில் ஏறும்பொழுது யமன் வந்ததாகவும், அவன் தலையில் காலை வைத்து விமானத்தின் மீதேறினார்" என்ற அர்த்தமுள்ள ஸ்லோகம் சில புஸ்தகங்களில் காணப்படுகிறது.

அத்தியாயம்–13

அங்கராஜன் காணாமற் போனது

1–5 குஷாரவருடைய புத்திரராகிய மைத்ரேயரால் சொல்லப்பட்ட துருவர் வைகுண்டபதத்தை அடைந்ததான திவ்ய சரிதத்தைக் கேட்டு விதுரர் பகவானிடத்தில் விசேஷ பக்தியுள்ளவராகி மைத்ரேயரை நோக்கி, 'பிரசேதஸ்ஸுக்க ளென்பவர்கள் எவர்கள்? ஓ விரதமுள்ளவரே! அவர்கள் யாருடைய குமாரர்கள்? எந்த வம்சத்தில் பிறந்தவர்கள்? அவர்கள் எவ்விடத்தில் யாகத்தை அனுஷ்டித்தார்கள்? நாரதர் மஹா பாகவதரென்று நினைக்கிறேன். அவர் ஆத்மஞான முள்ளவர். பகவானை ஸேவிக்கும் விதியானது அவரால் சொல்லப்பட்டது. அந்தப் பக்திமானாகிய நாரதர் 'ஸ்வதர்மத்தை அனுஷ்டிப்பவர்களான பிரசேதஸ்ஸுகளால் யக்ஞ புருஷராகிய பகவான் ஆராதிக்கப்பட்டார்' என்று சொன்னாரல்லவா? மேலும் அந்த யாகத்தில் எந்த பகவத் கதைகளை வர்ணித்தார்? அவைகளெல்லாவற்றையும் கேட்க விரும்பியவனாகிய எனக்குச் சொல்லவேண்டும்', என்று பிரார்த்தித்தார்.

6–20 அதனைக் கேட்ட மைத்ரேயர், விதுரரை நோக்கி, 'துருவர் காட்டிற்குச் சென்றபின் அவருடைய புத்திரராகிய உத்கலரென்பவர் ராஜ்யத்தில் விருப்பம் இல்லாமல் ராஜ்யலக்ஷ்மியை அடையவில்லை. அவர் பிறந்தது முதல் மிகவும் சாந்தமான மனதுள்ளவர். ஆசையற்றவர். ஸமமாகப் பார்ப்பவர். உலகத்தில் ஆத்மா வியாபித்திருப்பதாகவும் ஆத்மாவிடத்தில்

லோகமிருப்பதாகவும் பார்ப்பவர். அப்போர்ப்பட்ட அந்த உத்கலர் இடைவிடாமல் யோகத்தை அப்யஸித்து அதனால் கர்ம வாஸனையைப் போக்கிச் சாந்தமும், பேதமற்றதும், ஞானரஸத்தால் ஒன்றாயும், ஆனந்த ஸ்வபமும், எக்காலத்திலும் இருப்பதுமான ப்ரஹ்ம ஸ்வபத்தை அடைந்தார். அதனால் அவருக்கு ஆத்மாவைக் காட்டிலும் வேறொன்றும் புலப்பட வில்லை.

மேலும் அவர் ஜடன்போலவும், கண்களில்லாத வன் (குருடன்) போலவும், காது கேட்காதவன் (செவிடன்) போலவும், பைத்தியங் கொண்டவன் போலும்; ஊமை போலும் குழந்தைகளுடைய மார்க்கத்தில் இருந்தார். ஆனால் அவருடைய புத்தியானது வேறாக இருந்தது. ஜ்வாலையற்ற அக்கினி போலிருந்தார். அப்பொழுது குலத்திலிருக்கும் பெரியோர்களும், மந்திரிகளும் அவரை அடனென்றும், பயித்தியங் கொண்டவனென்றும், நினைத்துப் பிரமியின் புத்திரராகிய அவருடைய பின் சகோதரராகிய வத்ஸர ரென்பவருக்குப் பட்டாபிஷேகம் செய்தார்கள்.

அந்த வத்ஸரருக்குப் பார்யையான ஸ்வத்தி யிடத்தில் புஷ்பார்ணன். சந்திரகேது, இஷன், ஊர்ஜன் வஸு, ஜயன் என்று ஆறு புத்திரர்கள் பிறந்தார்கள். புஷ்பார்ணருக்குப் பிரபா என்றும் தோஷா என்றும் இரண்டு பத்தினிகள். அவர்களில் பிரபாஎன்பவளுக்குப் பிராத (விடியற்காலம்), மத்தியந்தினம் (பகலின் மத்தியம்), சாயம் என்று மூன்று புத்திரர்கள் பிறந்தார்கள். தோஷா என்பவளுக்குப் பிரதோஷம், நிசீதம், வியஷ்டி, யென்பவர் புஷ்கரிணீ என்பவளிடத்தில் ஸர்வதேஜஸ் என்று புத்திரனை யுண்டு பண்ணினார்.

அந்த ஸ்வதேஜஸர் ஆகூதியென்ற பத்தினியிடத்தில் சக்ஷுஸ்ஸென்ற பெயருள்ள மனுவை உண்டு பண்ணினார். அந்த மனுவின் பத்தினியாகிய நட்வலா என்பவள், புரு, குத்ஸர், கிரிதர், தியும்னர், ஸத்யவான், ரிதர், விரதர், அக்கினிஷ்டோமம், அதிராத்ரம், ஸுத்யும்னர், கிபி, உல்முகர் என்று பன்னிரண்டு புத்திரர்களைப் பெற்றாள். அவர்களில் உல்முகரென்பவர் புஷ்கரிணீ என்பவளிடத்தில் அங்கன், ஸுமனஸன், கியாதி, கிரது, அங்கிரஸ், கயன் என்று உத்தமர்களான ஆறு புத்திரர்களை உண்டுபண்ணினார். அங்கனுடைய பத்தினியாகிய ஸுநீதை யென்பவள் துஷ்டனாகிய வேனனைப் பெற்றாள். அந்த வேணனுடைய துஷ்ட நடையால் வருத்தப்பட்டு அவருடைய பிதாவாகிய அங்க மஹாராஜன் நகரத்தை விட்டுச் சென்றார்.

வாக்காகிய வஜ்ராயுதமுள்ளவர்களான மஹர்ஷிகள் கோபத்தை அடைந்து வேனனைச் சபித்தார்கள். அதனால் அவன் மரணமடைந்தான். பின்பு அரசன் இல்லாத தேசத்தில் ஜனங்களுக்குத் திருடர்கள் முதலியவர்களின் உபத்திரவம் நேரிடும் என்று யோசித்து மஹர்ஷிகள் அவனுடைய வலது கையைக் கடைந்தார்கள். அதிலிருந்து நாராயணனுடைய அம்சமானது புத்திரனாக அவதரித்தது அவருக்கு பிருதுவென்று பெயருண்டாயிற்று. அவரே முந்திய அரசன் என்றார்.

21–24 அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி, ஓ பகவன்! நல்லொழுக்கமுள்ளவரும், ஸாதுவும், ப்ராஹ்மண பக்தியுள்ளவரும், மஹாத்மாவுமான அந்த வேனருக்குத் துஷ்ட நடை எப்படி ஏற்பட்டது?

எதனால் பிதா நகரத்தை விட்டு வெளியில் போகும்படி நேர்ந்தது. குற்றம் செய்தவர்களைச் சிக்ஷிப்பவராகிய அரசனைத் தர்மத்தையறிந்த மஹரிஷிகள் என்ன குற்றத்தை முன்னிட்டுச் சபித்தார்கள்? (வேனன் என்ன குற்றம் செய்தான்?) அரசன் லோகபாலர்களுடைய அம்சமுள்ளவனாகையால் அவன் குற்றம் செய்தாலும் பிரஜைகள் அவனைக் கொல்வது உசிதமல்லவே! நீர் மேலானவைகளையும், தாழ்ந்தவைகளையும் அறிந்தவராகையால் ஸுநீதையின் புத்திரருடைய சரிதத்தைக் கேட்க விரும்பிய சிரத்தையுள்ளவனாகிய எனக்குச் சொல்ல வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

25–28 அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி, அங்கனென்ற ராஜரிஷியானவர் அச்வமேதம் என்ற பெரிய யாகத்தைச் செய்தார். அதில் ப்ரஹ்மிஷ்டர்களாகிய ப்ராஹ்மணர்களால் அழைக்கப் பட்டும் தேவர்கள் வரவில்லை. அப்பொழுது ரித்விக்குகள் மிகவும் ஆச்சரியமடைந்து யஜமானனை நோக்கி, 'ஹோமஞ் செய்யப்படுகின்ற ஹவிஸ்ஸைத் தேவதைகள் கிரகிக்கவில்லை. ஓ மஹாராஜ, ஹவிஸ்ஸுகள் தோஷமற்றவைகள். சிரத்தையாக ஸம்பாதிக்கப்பட்டவைகள். மேலும் விரதங்களை அனுஷ்டித்த ப்ரஹ்மணர்களால் அயாதயாமங்களான (வீர்யம் போகாதவை). வேதங்கள் உச்சரிக்கப்பட்டன. தேவர்களுக்குக் கொஞ்சமேனும் 'குற்றம் செய்ததாகத் தெரியவில்லை (கர்மஸாக்ஷிகளான தேவர்கள் பாகத்தைப் பெற்றுக் கொள்ளாத காரணமென்ன வென்று தெரியவில்லை என்றார்கள்).

29–30 அதனைக் கேட்ட அங்கராஜன் மனவருத்தம்

அடைந்து ஸதஸ்யர்களை நோக்கி அவர்களுடைய ஆக்ஞையால் மௌனத்தை விட்டு, 'ரித்விக்குகளால் அழைக்கப்பட்டும் தேவர்கள் வரவில்லை. பாகத்தையும் பெற்றுக் கொள்ளவில்லை. என்னால் என்ன குற்றம் செய்யப்பட்டது சொல்லவேண்டும்' என்று கேட்டார்.

31–49 அதனைக் கேட்ட ஸதஸ்யர்கள் அரசனை நோக்கி, ஓ மஹாராஜா! இந்த ஜன்மத்தில் உமக்கு கொஞ்ச மேனும் பாவமில்லை. ஆனாலும் முன் ஜன்மத்தில் பாவமிருக்கிறது. அதனால்தான் நீர் அபுத்திரராக இருக்கிறீர். நல்ல புத்திரனை அடையும் படி யத்தனம் செய்யும். புத்திரன் பிறக்க வேண்டிய யக்ஞபுக்காகிய யக்ஞபுருஷனை ஆராத்தித்தால் அவர் புத்திரனைக் கொடுப்பார்.

மேலும் மனிதன் எதனை விரும்பி, பகவானை ஆராதிக்கிறானோ, அதெல்லாவற்றையும் அவர் அவனுடைய இஷ்டப்படி கொடுக்கிறார். அப்பொழுது தேவர்களும் பாகத்தைப் பெற்றுக் கொள்வார்கள். எவ்வளவு பகவானை ஆராதிக்கிறானோ, அவ்வளவு க்ஷேமமுண்டாகிறது என்று சொல்லி அந்த அரசனுக்குப் புத்திரனுண்டாவதற்காகச் சிபிவிஷ்ட ராகிய மஹாவிஷ்ணுவை உத்தேசித்து புரோடாசத்தை ஹோமஞ் செய்தார்கள். பின்பு அக்கினியிலிருந்து ஸுவர்ண மாலையுள்ளவரும், சுத்த வஸ்திரத்தைத் தரித்தவருமான ஒரு புருஷன் தங்கப் பாத்திரத்தில் பாயஸத்தை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தார். அப்பொழுது கம்பீர மனமுள்ள அரசன் ப்ராஹ்மணர் களுடைய அனுமதியினால் அந்தப் பாயஸத்தை இரு

கைகளால் வாங்கி மிகுந்த ஸந்தோஷத்துடன் முகர்ந்து தமது பத்தினியிடம் கொடுத்தார். அந்த ராஜ மஹிஷி புத்திரனைக் கொடுக்கக் கூடிய அந்தப் பாயஸத்தைப் பார்த்தாவிடமிருந்து கிரகித்துக் கொண்டு அதனைப் புஜித்து கர்ப்பிணியானாள். பின்பு பிரஸவ காலத்தில் குமாரனைப் பெற்றாள்.

அந்தக் குழந்தை சிறு வயதிலேயே அதர்ம வம்சத்தில் பிறந்தவரும், தன்னுடைய மாதாவின் பிதாவுமான மிருத்யுவின் குணங்களை அனுஸரித் திருந்தது. அவனுக்குத் தர்ம சிந்தையே இல்லை. அவன் எப்பொழுதும் வனத்தில் வேட்டையாடிக் கொண்டு வில்லும் கையுமாக 'இருந்து மிருகங்களைக் கொன்று கொண்டு அஸத்தாக இருந்தான். அதனைக் கண்டு ஜனங்கள் 'வேனன் வருகிறான்' என்று கத்துவார்கள். மேலும் விளையாடுமிடத்தில் தன்னுடன் விளையாடும் குழந்தைகளைக் கருணையில்லாமல் பசுக்களைப் போல் கொன்று விடுவான். அரசர் புத்திரனுடைய கெட்ட சரித்தத்தை அறிந்து பலவகையாகச் சிக்ஷித்தும் அவனுடைய ஸ்வபாவம் மாறாம லிருந்தபடியால் அங்கன் மிகவும் வருத்தம் அடைந்து தனக்குள் யோசிக்கலானார். எப்படியெனில் எவர்கள் அபுத்திரர்களோ அவர்கள் பகவானை ஆராதித்தவர்கள். துஷ்டனாகிய புத்திரனாலுண்டாகும் துக்கத்தை அவர்கள் அனுபவிக்கிறதில்லை. துஷ்டனாகிய புத்திரனால் அபகீர்த்தியும் அதர்மமும் ஸகல ஜனங்கள் உடைய விரோதமும், முடிவில்லாத மனவருத்தமும் உண்டாகின்றன. புத்திரனென்ற பெயரே ஆத்மாவிற்கு மோஹத்தை உண்டு பண்ணும் பந்தமாக இருக்கிறது. அதனால் கிரஹஸ்தாசிரமத்தில் பலவகையான துக்கங்களுண்டாகின்றன.

ஆனதால் விவேகமுள்ளவன் புத்திரன் வேண்டு மென்று விரும்பமாட்டான் என்று யோசித்து மிகவும் நிர்வேதத்தையடைந்து தூக்கமில்லாதவராகிப் பக்கத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் ஸுநீதை யென்ற வேனனுடைய மாதாவிற்கும் சொல்லாமல் பட்டணத்து ஜனங்களுக்கும் புலப்படாமல் அதிக ஐசுவரியமுள்ள தம்முடைய அரண்மனையிலிருந்து வெளியில் சென்றார். மறுநாள் புரோஹிதர், மந்திரிகள், மித்திரர்கள் முதலியவர்கள் அரசனைக் காணாமல் மிகுந்த துக்கமடைந்தவர்களாகி, பக்குவமாகாத புத்தியுள்ள யோகிகள் ஸமீபத்திலிருக்கும் பகவானை வைகுண்டம் முதலியவிடங்களில் தேடுவதுபோல் எங்கும் தேடினார்கள். பின்பு அவர்கள் அரசனைக் காணாமல் திரும்பவும் பட்டணத்திற்கு வந்து கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு அவ்விடத்தில் கூடியிருக்கும் மஹர்ஷிகளுக்கு நமஸ்காரஞ் செய்து அரசன் வசிக்குமிடம் தெரியவில்லை என்று சொன்னார்கள்.

அத்தியாயம்–14

வேனனை மஹர்ஷிகள் சிக்ஷித்தது

1–22. "பின்பு பிருகு முதலிய மஹர்ஷிகள் லோகத்தின் க்ஷேமத்தை விரும்பினவர்களாகி, அரசன் இல்லாவிடில் மனிதர்கள் பசுவிற்கு சமமானவர்கள் என்று யோசித்து சூரனைப் பெற்றவர்களாகிய ஸுநீதையின் இஷ்டப்படி வேனனுக்குப் பட்டாபிஷேகம் செய்தார்கள், அவனிடத்தில் மந்திரி முதலானவர்களுக்குப் பிரியமில்லை. கடுமையாகசிக்ஷிப்பவனாகிய வேனன் அரசனாக விருப்பதைக் கேட்டு ஸர்ப்பத்தைக் கண்ட எலிகள் போல் திருடர்கள் பயந்து மறைந்தார்கள். வேனன் ராஜாஸனத்திலிருந்து லோகபாலர்களுடைய ஐசுவரியத்தை அடைந்து கர்வங்கொண்டான். பெரியோர்களான ஸாதுக்களை அவமதித்தான். இப்படி அதிக கர்வத்துடன் தடையற்ற மதித்த யானை போல் இரதத்தின் மீதேறி ஆகாசத்தையும், பூமியையும் அசைப்பவன் போல ஸஞ்சரித்து, "ஒருவரும் யாகஞ்செய்யக்கூடாது தானஞ் செய்யக்கூடாது, அக்னி ஹோத்ரம் முதலியவைகளைப் ப்ராஹ்மணர்கள் ஓரிடத்திலும் அனுஷ்டிக்கக்கூடாது" என்று பேரியை அடித்து, தர்மஞ் செய்யாமலிருக்கும்படி கோஷித்தான். தீக்ஷிதர்களான ப்ராஹ்மணர்கள் எல்லாரும் சேர்ந்து, வேனனுடைய கெட்ட நடையைப் பற்றி, "கட்டையில் இரண்டு நுனிகளிலும் அக்கினி பிடித்துக் கொண்டால் நடுவிலிருக்கும் எறும்பு முதலியவைகள் எப்படி துன்பத்தையடைகின்றனவோ, அப்படி திருடர்களிடத்திலும், அரசனிடத்திலுமாக லோகத்திற்கு இருவகையிலும் விசேஷ துக்கம்

நேர்ந்திருக்கிறது. தேசத்திற்கு அரசனில்லாமலிருப்பது உபத்திரவத்தை உண்டு பண்ணுமென்றெண்ணி அயோக்கியனானாலும் இவனுக்கு பட்டாபிஷேகம் செய்தோம். இவன் ஜனங்களை உபத்திரவிக்கிறான். எதனைச் செய்தால் லோகத்திற்கு க்ஷேமமுண்டாகும்? பால்கொடுத்து ஸர்ப்பத்தை வளர்த்தவனுக்கு அந்த ஸர்ப்பம் அனர்த்தத்தை உண்டுபண்ணுவது போல இந்த வேனன் நமக்குக் கெடுதியை உண்டுபண்ணுகிறான். ஸுநீதையின் புத்திரனாகிய வேனன் ஸ்வபாவத்திலேயே துஷ்டன். அவனை அரசனாக வைத்து கொண்டோம். அவன் இப்பொழுது ப்ரஜைகளைக் கொல்ல விரும்புகிறான். ஆனாலும் அவனை நல்வார்த்தைகளால் ஸமாதானஞ் செய்வோம். அவனுடைய துஷ்ட நடையை அறிந்திருந்தும் அரசனாக வைத்துக் கொண்டோம். நாம் சொல்லியும் நம்முடைய வார்த்தையை அங்கீகரிக்காவிடில், நமக்குப் பாவமில்லை. பின்பு நம்முடைய தேஜஸ்ஸால் அவனை எரித்துவிடுவோம்" என்று யோசித்துக் கொண்டு கோபத்தை அடக்கிக்கொண்டவர்களாகி வேனனுடைய சமீபஞ்சென்று அவனை நோக்கி, "ஓ சிறந்த அரசனே! நாங்கள் தெரிவிப்பதைக் கேளும் நாங்கள் சொல்வது உமக்கு ஆயுஸ், ஐசுவரியம், கீர்த்தி, தேகபலம் ஆகிய இவைகளைக் கொடுக்க கூடியது; மனிதர்கள் வாக்கினாலும், சரீரத்தாலும் தர்மத்தைச் செய்வார்களானாலும் அது ஸகல துக்கங்களையும் நிவர்த்தித்து மிகுந்த க்ஷேமத்தைக் கொடுக்கிறது. பலனை உத்தேசியாமல் அனுஷ்டித்தால் அது மோக்ஷத்தையும் கொடுக்கும். அந்த தர்மத்தால் ப்ரஜைகளுக்கு க்ஷேமம் உண்டாகிறது. அந்த தர்மம் நசித்தால் அரசனுடைய ஐசுவரியம் நசிக்கும்

ஆனதால் உமக்குத் தர்மம் நாசத்தை அடைய வேண்டாம். க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவன் நியாயமான வரியைப்பெற்று, அஸாதுக்களான மந்திரிகளிடமிருந்தும், திருடர் முதலியவர்களிடமிருந்தும் பிரஜைகளைக் காப்பவன் இவ்வுலகத்தில் மிகுந்த சௌக்கியத்தையடைந்து பரலோக சுகத்தையுமடைவான். மேலும் எவனுடைய ராஜ்யத்தில் ஜனங்கள் வர்ணாசிரம தர்மங்களைவிடாமல் அனுஷ்டித்து யக்ஞபுருஷனாகிய பகவானை யாகஞ் செய்வது முதலிய ஸ்வதர்மத்தால் பூஜிக்கிறார்களோ, அந்த அரசன் பகவானுடைய ஆக்ஞையின்படி நடப்பவனாகையால் ஸகல பிராணிகளிடத்தில் அந்தர்யாமியாக இருப்பவரும், ஜகத்ரூபியுமான பகவான் அவனிடத்தில் பிரியப்படுகிறார் லோகபாலர்களும், மற்ற உலகங்களும் ஆதரவுடன் அவரைப் பூஜிக்கின்றன. அப்போர்ப்பட்ட ஜகதீஸ்வரராகிய பகவான் ஸந்தோஷமடைந்தால் எதுதான் கிடைக்காது? (எல்லாம் இலகுவாகக் கிடைக்கும்) ஸகல லோகங்கள், அவைகளைக் காப்பாற்றும் லோகபாலகர்கள் யக்ஞங்கள் ஆகிய இவைகளுக்கு அதிபதியும், வேத ஸ்வரூபியும், திரவ்ய ஸ்வரூபியும் தபஸ்வரூபியுமான அப்போர்ப்பட்ட பகவானைப் பலவகையான யாகங்களால் உம்முடைய க்ஷேமத்திற்காக ஆராதிப்பவர்களும், உம்முடைய தேசத்தில் வசிப்பவர்களுமான எங்களை விரோதியாமல் அனுசரிக்கவேண்டும். உம்முடைய தேசத்தில் ப்ராஹ்மணர்கள் யாகத்தைச் செய்து பகவானுடைய அம்சபூதர்களான தேவர்களைத் திருப்தி செய்வார்களானால், அவர்கள் மிகவும் ஸந்தோஷித்து உமக்கிஷ்டமானதைக் கொடுப்பார்கள் அவர்களை அலக்ஷ்யஞ்செய்வது உமக்குத் தகுதியல்ல" என்றார்கள்.

23–28. அதனைக்கேட்ட வேணன் அவர்களை நோக்கி, "நீங்கள் மிகவும் மூடர்கள், அதர்மத்தைத் தர்மமென்று நினைப்பவர்கள். ஆகாரம் முதலியவை களை கொடுத்துப் போக்ஷிக்கும் பிரபுவாகிய அரசனை விட்டு மற்றொருவனை உபாஸிக்க விரும்புகிறீர்கள். இது அக்கினி ஸாக்ஷியாக மணம் செய்து கொண்ட புருஷனை விட்டு ஜார புருஷனிடம் பிரீதி செய்வது போலிருக்கிறது. எவர்கள் மூடத்தன்மையால் அரசனாகிய ஈசுவரனை அலக்ஷ்யஞ் செய்கிறார்களோ, அவர்களுக்கு இவ்வுலகத்திலும் மேலுகத்திலும் மோக்ஷம் கிடைக்கிறதில்லை. பர்த்தாவிடம் பிரீதி வைக்காமல் ஜார புருஷனிடத்தில் மிகுந்த பிரேமையுள்ள கெட்ட ஸ்திரீகள் போல் நீங்கள் என்னிடம் பிரியப்படாமல் யாரோ ஒருவனிடத்தில் இவ்வளவு பக்திவைத்திருக்கிறீர்களே, அந்த யக்ஞ புருஷன் யார்? விஷ்ணு, பிரம்மா, பரமசிவன், இந்திரன், வாயு, யமன், சூரியன், பர்ஜன்யன் குபேரன், சந்திரன், பூமி, அக்கினி, வருணன், ஆகிய சாபானுக்ரஹ ஸாமர்த்தியமுள்ள தேவர்களெல்லாரும் அரசனுடைய தேகத்தில் வஸிக்கிறார்கள். ஆனதால் அரசன் ஸகல தேவ ஸ்வரூபி யெனப்படுகிறான். ஓ ப்ராஹ்மணர்களே! மாத்ஸரியத்தை விட்டு யாகம் முதலிய கர்மங்களால் என்னை ஆராதியுங்கள். சுவாமி பாகத்தை எனக்குக் கொடுங்கள். என்னை விட மேலானவன் (பாகத்தை முந்தி அடையத்தக்கவன்) யார் இருக்கிறான்?"

29–35. இப்படி வேனனுக்குப் புத்திமாறியது. கெட்ட மார்க்கத்தை அடைந்தான். ஐசுவரியம் குறையும் காலம் நேர்ந்தபடியால் மிகப் பாவியான

அந்த வேனன் மஹர்ஷிகளால் சொல்லப்பட்ட நன் மார்க்கத்தை ஒப்புக் கொள்ளவில்லை. ஓ விதுரரே! இப்படி மஹரிஷிகள் அனுகூலமான வார்த்தையைச் சொல்லியும் அதனை வேனன் தன்னைப் பண்டி தனாக நினைத்து ஒப்புக் கொள்ளாமல் மஹரிஷிகளை அலக்ஷ்யம் செய்தான். அதனால் அவர்கள் கோபம் கொண்டார்கள். பின்னுமவர்கள் பாவியும், இயற் கையில் கடுமையான ஸ்வபாவமுள்ள வனுமாகிய இவன் கொல்லப்படட்டும், இவன் ஜீவித்திருந்தால் ஜகத்தைச் சாம்பலாகச் செய்துவிடுவான்; இந்த அஸத்துக்கு ராஜ்யாஸனம் தகுந்ததல்ல. இவனைத் தவிர வேறு யார்தான் யக்ஞத்திற்கு அதிபதியான பகவானை வெட்கமில்லாமல் நிந்திப்பான்? அந்தப் பகவான் உடைய அனுக்கிரஹத்தாலல்லவா இவனுக்கு இம்மாதிரியான ஐசுவரியம் கிடைத்தது" என்று சொல்லிக் கொண்டு மிகுந்த கோபமுள்ள மஹரிஷிகள் பகவானை நிந்தித்ததால் ஆயுள் குறைந்த வனாகிய வேனனை ஹுங்காரத்தால் கொன்று தங்கள் ஆசிரமம் சென்றார்கள். பின்பு ஸுநீதை யானவள் தன்னுடைய வித்யா பலத்தால் புத்திரனுடைய சரீரத்தைக் காப்பாற்றி வைத்திருந்தாள்.

36–46. அந்த மஹரிஷிகள் ஒரு ஸமயத்தில், ஸரஸ்வதி நதியில் ஸ்நானம் செய்து அக்கினி கார்யத்தை முடித்துக்கொண்டு ஸரஸ்வதியின் கரையில் உட்கார்ந்து புண்ணியக் கதைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது லோகத்திற்குப் பயங்கரமான உத்பாதங்கள் உண்டாயின. அவைகளைக் கண்ட மஹரிஷிகள் "இப்பொழுது அரசனில்லாமல் இருக்கும் பூமிக்குத் திருடர்களால் கெடுதி நேராமல் இருக்குமா?" என்று யோசித்தார்கள். அப்பொழுது திருடர்கள் அங்குமிங்கும் திருடுவதற்காக அலைவதால் தூளி கிளம்பியது. இப்படி

லோகத்தில் திருடர்கள் மிகுதியானதையும், அதனால் ஜனங்களுக்குண்டான உபத்திரவத்தையும், அரசனில்லாததால் ஜனங்கள் சக்தியுள்ளவர்களானாலும் தோஷதர்சிகளான மஹரிஷிகள் தடுக்கவில்லை. ஆனால் "சாந்தனும் எல்லாவற்றையும் ஸமமாகப் பார்ப்பவனுமாகிய ப்ராஹ்மணனானாலும் தீனர்களை யுபேக்ஷிக்கலாகாது. அப்படி உபேக்ஷித்தால் துவாரமுள்ள குடத்திலுருந்து ஜலம் வெளியில் போவது போல் அவனுடைய தபஸ் குறைந்து விடுகிறது" என்று சாஸ்திரமிருப்பதால் நாம் பேசாமலிருக்கக்கூடாது. பின்னும் அங்கன் அரசர்களுக்குள் சிறந்தவர். அவனுடைய தொடர்ச்சியற்றுப் போகக்கூடாது அந்த வம்சத்திய அரசர்கள் ஸ்ரீ பகவானை ஆச்ரயித்தவர்கள். அவர்களுடைய வீர்யம் வீணாகிறதில்லை என்று மஹரிஷிகள் யோசித்து, அந்த வேனனுடைய துடையைக் கடைந்தார்கள். அதிலிருந்து பாஹுமக னென்ற ஒருவன் உண்டானான். அவன் காக்கைபோல கறுத்த நிறமுள்ளவன். மிகவும் குட்டையான சரீரமுள்ளவன். குட்டையான கைகள் உள்ளவன். பருத்த கன்னங்களுள்ளவன். குட்டையான கால்களு ள்ளவன். பள்ளமாகிய மூக்குள்ளவன். சிவந்த கண் களுள்ளவன். சிவந்த தலைமயிர்கள் உள்ளவன். அவன் மிகுந்த வணக்கத்துடன் உங்களுக்கு என்னால் என்ன செய்யப்பட வேண்டும்?' என்று கேட்டான். அவனை மஹரிஷிகள் 'இவ்விடத்திலிரு' என்றார்கள். அதனால் அவன் நிஷாதனானான். அவனுடைய வம்சத்தில் பிறந்தவர்கள் மலை, காடு இவைகளில் வசிக்கும் நிஷாதர்களானார்கள். அந்த பாஹுமகன் வேனனுடைய மிகுந்த கல்மஷத்தை அபஹரித்தவன். (வேனனுடைய பாபமே பாஹுமகனாகப் பிறந்ததென்று தாத்பரியம்)

அத்தியாயம்–15

பிருதுவின் உற்பத்தி

1–19 பின்பு மஹர்ஷிகள் அபுத்திரனாகிய அந்த வேனனுடைய இரு கைகளையும் கடைந்தார்கள். அவைகளிலிருந்து ஒரு புத்திரனும், புத்திரியும் உண்டானார்கள். அதனைக் கண்ட மஹரிஷிகள் அவ்விருவர்களையும் பகவானுடைய அம்சபூதர்கள் என்று தெரிந்து கொண்டு மிகுந்த ஸந்தோஷமடைந்து "இந்தப் புத்திரன் லோகத்தைக் காப்பாற்றுகிற விஷ்ணுவினுடைய கலையேயாம். இந்தப் பெண் பரம புருஷனை விட்டுப் பிரியாதவளான லக்ஷ்மீதேவியின் அம்சம். இவன் மிகுந்த கீர்த்தியை அடைவான். அரசர்களுக்கு முந்தியவனாவான். மேலுமிவன் பிருதுவென்ற பெயருடன் மஹாராஜனாக இருப்பான். அழகான பற்களுள்ளவளும், குணங்களுக்கும் ஆபரணங்களுக்கும் காந்தியை உண்டு பண்ணுகிற வளுமான இந்தத் தேவியானவள் அர்ச்சிஸ் என்ற பெயருடன் பிருதுவையே பர்த்தாவாக வரிப்பாள். லோகத்தைக் காப்பாற்றுவதற்காகப் பூமியில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அம்சமே பிருதுவாக அவதரித் திருக்கிறது. அதற்குப்பின் உண்டான இந்தப் பெண் பகவானிடத்தில் பிரீதியுள்ளவளாகிய லக்ஷ்மீ தேவியே" என்று புகழ்ந்தார்கள். கந்தர்வர்களுக்குள் சிறந்தவர்கள் கானஞ் செய்தார்கள். ஸித்தர்கள் புஷ்பங்களை வர்ஷித்தார்கள். தேவ ஸ்திரீகள் நர்த்தனம் செய்தார்கள். ஆகாசத்தில் சங்கம், தூர்யம், மிருதங்கம் முதலிய வாத்தியங்கள் கோஷிக்கப்பட்டன. தேவ கணங்களும், ரிஷி கணங்களும், பிதிரு கணங்களும் அவ்விடம்

வந்தார்கள். அப்பொழுது ஜகத் குருவாகிய ப்ரஹ்ம தேவர் வேனனது புத்திரருடைய வலது கையில் சக்கிர ரேகையிருப்பதையும், பாதங்களில் தாமரை மலர் ரேகை இருப்பதையும் பார்த்து, 'எவனுக்கு, சக்கிர ரேகை மற்ற ரேகைகளால் மறைக்கப்படாமல் இருக்கிறதோ அவன் பகவானுடைய அம்சம்' என்று பிருதுவைப் பகவானுடைய கலையென்று நினைத்தார். இவருக்குப் பட்டாபிஷேகம் செய்வதற்குப் ப்ராஹ்மணர்கள் ஆரம்பித்தார்கள். அப்பொழுது ஜனங்கள் அதற்கு வேண்டிய ஸாமான்களைச் சேர்த்தார்கள். மேலும் நதிகள், சமுத்திரம், மலைகள், மரங்கள், பசுக்கள், பறவைகள், மிருகங்கள், ஆகாயம், பூமி முதலிய ஸகல பூதங்களும் காணிக்கைகளைக் கொண்டு வந்தன. பிருதுவானவர் நல்ல வஸ்திரத்தை உடுத்திக் கொண்டு ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்டு, அலங்கிருதையான அர்ச்சிஸ் என்ற பத்தினி யுடன் மஹர்ஷிகளால் செய்யப்படும் பட்டா பிஷேகத்தை அனுபவித்து அக்கினி போல் ப்ரகாசித்தார். அப்பொழுது குபேரன் ஸ்வர்ணமயமான சிம்மாஸனத்தையும், வருணன் ஜலப்பெருக்குள்ள தும் சந்திரன் போன்றதுமான குடை...யையும், வாயுவானவர் வெண்சாமரங்களையும், தர்மன் கீர்த்தி ரூபமான மாலையையும், இந்திரன் மேலான கிரீடத்தையும், யமன் எல்லாரையும் சிக்ஷிக்கும் தண்டத்தையும், ப்ரஹ்மதேவர் வேதமாகிய கவசத்தையும், ஸரஸ்வதி யானவள் உத்தமமான ஹாரத்தையும் ஸ்ரீ மஹாவிஷ்ணு வானவர் சுதர்சனமென்ற சக்கரத்தையும், அவருடைய பத்தினியாகிய லக்ஷ்மிதேவி குறையாத ஸம்பத்தையும், ருத்ரர் கத்தியையும் கொடுத்தார்கள். இந்தக் கத்தியின் உறைமீது சந்திரன் போன்ற பத்து பிம்பங்கள்

இருக்கின்றன. பார்வதியானவள் நூறு சந்திரபிம்பம் உள்ள கேடயத்தையும், சந்திரன் அமிருதமயங்களான எட்டுக் குதிரைகளையும் , துவஷ்டாவானவர் மிகவும் அழகான இரதத்தையும், அக்கினி பகவான் ஆட்டின் கொம்பினாலும் பசுவின் கொம்பினாலும் செய்யப்பட்ட வில்லையும், சூரியன் தம்முடைய கிரணமயங்களான பாணங்களையும், பூமியானவள் யோகமயங்களான பாதுகைகளையும்; (அவைகளைக் காலில் தரித்தவுடன் இஷ்டமான இடத்திற்குச் செல்லலாம்) ஆகாயமானது ஒவ்வொரு நாளும் புஷ்பத்தையும், ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் ஸித்த கந்தர்வர்கள் நர்த்தனம், நல்ல கானம், வாத்தியங்கள் முழங்குதல் ஆகிய இவைகளில் ஸாமர்த்தியத்தையும், மஹரிஷிகள் ஸத்தியமான ஆசீர்வாதங்களையும் ஸமுத்திரமானது தன்னிடத்தில் உண்டான சங்கத்தையும் கொடுத்தனர். மேலும் மேற்கு முகமாகச் செல்லுகிற ஆறுகளும், மலைகளும், கிழக்கு முகமாகப் பிரவஹிக்கும் நதிகளும் மஹாத்மா வாகிய அந்த பிருதுவின் ரத மார்க்கங்களைத் தரித்தன.

20–26 அப்பொழுது ஸூதர்களும் மாகதர்களும், வந்திகளும் அரசனை ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித் தார்கள். அவர்களை நோக்கி, "ஓ ஸூத! ஓ மாகத! நல்ல குணமுள்ள ஓ வந்தியே! லோகத்தில் என்னை என்ன குணங்கள் கொண்டு நீங்கள் ஸ்தோத்திரம் செய்வீர்கள்? ஆனதால் என் விஷயத்தில் உங்களுடைய வார்த்தைகள் பொய்யாக ஆக வேண்டாம். ஓ அழகான வார்த்தையுள்ளவர்களே! சில காலம் சென்ற பிறகு என்னுடைய குணங்களை அலங்கரிக்கலாம். மேலும் ஸதஸ்ஸிலிருப்பவர்கள் என்னைத் துதிக்கும்படி உங்களுக்கு அனுமதி கொடுக்கமாட்டார்கள். உத்தம

சுலோகராகிய பகவானுடைய குணங்களைச் சொல்ல வேண்டியதாக இருக்க, தாழ்ந்தவனை ஸ்தோத்திரம் செய்யும்படி ஆக்ஞாபனம் செய்வார்களா? தன்னிடத்தில் இல்லாதவைகளான மஹான்களுடைய குணங்களைத் தன்னிடமிருப்பதாக எவன் சொல்லச் செய்வான்? அவனைப் பெரியோர்கள் இவன் சாஸ்திரங்களைப் படித்தால் இந்தக் குணங்கள் இவனுக்குண்டாகும் என்று பரிஹஸிப்பார்கள். அதனை மந்த புத்தியுள்ளவன் தெரிந்து கொள்ள மாட்டான். ப்ராஹ்மண வதம் முதலிய கெட்ட கார்யத்தைச் செய்தவர்கள் தங்களுடைய பெளருஷத்தை எப்படி நிந்தித்துக் கொள்கிறார்களோ அப்படி மஹான்கள் பிறரால் செய்யப்படும் ஸ்தோத்திரத்தைக் கேட்டு வெட்கத்தை அடைவார்கள். ஓ ஸூத! நான் சிறந்த கர்மங்களுள்ளவனென்று இப்பொழுது ஜனங்களுக்குத் தெரியாது. அப்படியிருக்க அக்ஞன் போல் என்னிடத்தில் சிறந்த குணங்களிலிருப்பதாக ஒப்புக்கொள்வேனா? என்று மேகம்போல் கம்பீரமாக சிரித்துக் கொண்டு சொன்னார்.

அத்தியாயம்–16

ஸூதர்கள் பிருதுவை துதித்தது

1–2. இம்மாதிரி சொல்லும் அரசனை நோக்கி, "அந்த ஸூத மாகதர்கள் மஹர்ஷிகளால் தூண்டப்பட்டு அமிருதம் போன்ற வாக்கினால் துதிக்க ஆரம்பித்தார்கள்.

3–27. "தேவர்களுக்குள் சிறந்தவராகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவே மாயையால் உம்முடைய உருவத்தைத் தரித்திருக்கிறார். ஆனதால் உம்முடைய மஹிமையை வர்ணிக்க எங்களால் முடியாது. வேனருடைய அங்கத்திலிருந்து உண்டான உம்முடைய பெளருஷத்தை வர்ணிப்பதற்கு வாக்மிகளுடைய புத்தியும் பிரமிக்கிறது. ஆனாலும் முனிகளால் தூண்டப்பட்ட நாங்கள் கம்பீர கீர்த்தியுள்ளவரும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் கலாவதாரமுமான உம்முடைய் கதாமிருதத்தில் பிரீதியுடன் சிறந்த உம்முடைய சரித்தத்தைச் சொல்லுகிறோம். இந்தப் பிருதுவென்னும் அரசன் தர்மத்தை அனுஷ்டிப்பவர்களுக்குள் சிறந்தவர். இவர் ஜனங்களைத் தர்மத்தை அனுஷ்டிக்கும்படி செய்பவர் தர்மத்தின் எல்லையைக் காப்பாற்றுகிறவர். அதற்கு விரோதிகளைச் சிக்ஷிப்பவர். லோகபாலர்களுடைய சரீரத்தை தரித்தவர். பூலோகத்திற்கும் மேலுலகத்திற்கும் அனுகூலமானதைத் தக்கபடி (யாகங்களைச் செய்வது ஜனங்களைப் போஷிப்பது முதலியவை) செய்பவர். இவர் சூரியனுடைய அம்சத்தை தரித்திருப்பதால் எட்டு மாஸங்களில் பூமியிலுள்ள ஜலத்தைக் கிரஹித்து மழைக்காலத்தில் ஜலத்தை சூரியன் வர்ஷிப்பது

போல் ஸமயத்தில் ஜனங்களுக்கே உபயோகப் படுத்துகிறார். பூமியின் அம்சத்தைத் தரித்திருப்பதால் பூமியானது எப்படி எல்லாவற்றையும் சஹிக்கிறதோ, அப்படி தீனர்கள் தம்முடைய தலையில் பாதத்தை வைத்தாலும் அதனைப் பொறுத்துக்கொள்கிறார். மேலும் மனித சரீரமெடுத்திருக்கும் இந்தப் பகவான் மழை பெய்யாமல் ஜனங்கள் கஷ்டப்படும்போது மஹேந்திரன்போல் அவர்களைக் காப்பாற்றுவார். அன்புள்ள பார்வையுள்ளதும், நிர்மலமான சிரிப்பினால் அழகாயுமுள்ள முகமாகிய சந்திரனால் லோகத்தை திருப்தி செய்வார். இவருடைய மார்க்கம் பிறரால் அறியமுடியாது. இவருடைய கார்யம் மிகவும் ரகசியமானது. இவர் கம்பீரமான மேதை யுள்ளவர். பொக்கிஷத்தைக் காப்பாற்றுகிறவர். அளவற்ற மாஹாத்யமியங்களுக்கும், குணங்களுக்கும் இருப்பிடமாக இருப்பவர். வருணனைப் போன்றவர். மறைக்கப்பட்ட ஸ்வரூபமுள்ளவர். வேனனாகிய அரணிக் கட்டையிலிருந்து உண்டான அக்கினி போன்ற இந்த அரசன் சத்துருக்களால் அடைய முடியாதவர். சகிக்க முடியாத தேஜஸ் உள்ளவர். சமீபத்தில் இருப்பவரானாலும் வெகுதூரத்திலிருப்பவர் போல் அவமதிக்க முடியாதவர். எல்லாப் பிராணிகள் இடத்திலிருக்கும் அத்யக்ஷரான அந்தராத்மா, பூதங்களுடைய உள்ளிலும் வெளியிலுமிருந்து அவர்கள் செய்யும் கர்மங்களை பார்த்துக் கொண்டு தாம் உதாஸீனராக இருப்பது போல இந்த அரசன் சாரர்களைக் கொண்டு தம்முடைய தேசத்திய பிரஜைகள் செய்யும் காரியங்களைத் தெரிந்து கொண்டு அவர்களால் செயயப்படும் நிந்தை; ஸ்தோத் திரம் ஆகிய இவைகளில் உதாஸீனராக இருக்கிறார்.

தமக்குத் துவேஷியாக இருப்பவனுடைய புத்திரன் ஆனாலும், குற்றம் செய்பாதவனானாலும் அவனைச் சிக்ஷிக்கிறதில்லை. அபராதம் செய்தவன் தம்முடைய புத்திரனானாலும் தர்ம மார்க்கத்தை அனுசரித்து அவனைச் சிக்ஷிக்கிறார். பகவானாகிய சூரியனுடைய கிரணங்கள் எது வரையில் பிரகாசிக்கின்றனவோ, அந்த மானஸ பர்வதம் வரையில் உள்ள தேச வாசிகளான ஜனங்கள் இவருடைய உத்தரவின்படி நடக்கிறார்கள். இவர் தம்முடைய நடத்தையால் ஸகல பிரஜைகளையும் சந்தோஷப்படுத்துவார். அதனால் பிரஜைகள் இவரை ராஜாவென்று சொல்லுவார்கள்.

மேலுமவர் திடமான விருதமுள்ளவர். ஸத்யப் பிரதிக்ஞர். ப்ராஹ்மணர்களிடத்தில் பிரீதியுள்ளவர். பெரியோர்களை ஸேவிப்பவர், ஸகல பிராணிகளையும் காப்பாற்றுகிறவர், அவர்களுக்கு மானத்தைக் கொடுப் பவர், தூனர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ளவர். 'பிற ஸ்திரீகளை மாதாவாகப் பாவிப்பவர், பத்தினியை தம்முடைய பாதிசரீரமாக நினைப்பவர். தகப்பனார் குழந்தைகளிடம் பிரீதி செய்வது போல் பிரஜைகள் இடத்தில் பிரீதி செய்பவர், ப்ரஹ்மிஷ்டர்களுடைய வேலைக்காரராக இருப்பவர். பிராணிகள் தங்களுடைய ஆத்மாவிடத்தில சிநேஹிப்பதுபோல ஜனங்கள் இந்த அரசனிடத்தில் பிரியப்படுகிறார்கள், பின்னுமவர் மித்திரர்களுக்கு சுகத்தை விருத்தி செய்பவர், வைராக்கிய முள்ளவர்களிடத்தில் அதிகப் பிரியம் உள்ளவர், அஸாதுக்களைத் தண்டிப்பவர், எவர் ஆறு வகையான ஐசுவரியமுள்ளவரோ, எவர் முக்குணங்களுக்கு அதிபதியோ, எவர் கூடஸ்தரோ (விகாரமற்றவர்). எவர் பரமாத்மாவோ, (பலவகையாகத் தோன்றினாலும்

அது அவித்தையால் ஏற்பட்டதாகையால் மித்யை யென்று சொல்லுகிறார்களோ) அந்த பரமாத்மாவின் அம்சமே இவர். இவர் உதயபர்வதம் வரையிலுள்ள பூமண்டலத்தைக் காப்பாற்றுவார். மேலும் ஜயசீலமான ரதத்தின் மீதேறி வில்லை எடுத்துக் கொண்டு சூரியன் போல் பூமியைச் சுற்றுவார். லோக பாலகர்களும் மற்ற அரசர்களும் இவருக்கு காணிக்கைகளை ஸமர்ப்பிக் கிறார்கள். ஸ்திரீகள் இவருடைய கீர்த்தியை கானஞ் செய்வதுடன் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அம்சமாக அவதரித்த ஆதிராஜனென்று தெரிந்து கொள்வார்கள் மேலும் இந்த அரசன் பிரஜைகளுடைய க்ஷேமத் திற்காகப் பசு வேடந்தரித்த பூமியினிடமிருந்த ஸகல வஸ்துக்களையும் கறப்பார். பின்னுமவர் தம்முடைய வில்லின் நுனியால் இந்திரன்போல் பர்வதங்களைப் பேதித்து பூமியைச் சமமாகச் செய்வார். வாலைத் தூக்கிக்கொண்டு சிங்கம் ஸஞ்சரிப்பது போல் இவர் சகிக்கமுடியாத தம்முடைய வில்லை சப்திக்கச் செய்துகொண்டு பூமியில் ஸஞ்சரிக்கும்பொழுது அஸத்துக்கள் பயந்து நூறு அச்வமேதங்களைச் செய்வார், கடைசியான யாகத்தில் இந்திரன் யாகக் குதிரையை அபஹரிப்பான். பின்னுமவர் தம்முடைய உத்யான வனத்தில் தெய்வச் செயலாக பகவானாகிய ஸனத்குமாரரைச் சந்தித்து அவரை ஆராதித்து அவரிடம் ப்ரஹ்மஞ்ஞானத்தை அடைவார் மிகுந்த பராக்ரமமுள்ள பிருதுவென்ற இந்த மஹாராஜனைப் பற்றி லோகத்தில் எல்லோரும் புகழ்ந்து பேசிக் கொள்வார்கள். அதனை அரசர் கேட்பார். இப்படி ஸகல திக்குகளையும் தேஜஸ்ஸால் லோகத்தின் உபத்ரவத்தை நிவர்த்தித்து சிறந்த தேவர்களாலும், ஸஜ்ஜனர்களாலும் துதிக்கப்பட்ட மகிமையுள்ளவராகிப் பூமியை பரிபாலிப்பார்" என்று துதித்தார்கள்.

அத்தியாயம்–17

பிருது பூமியைக் கொல்ல முயன்றது

1–2 வேனனுடைய புத்திரரும் பகவானுடைய அவதார பூதருமாகிய பிருது சக்ரவர்த்தியானவர் தம்முடைய குணங்களாலும், கர்மங்களாலும் பிரசித்தி அடைந்து ப்ராஹ்மணர் முதலியவர்களையும், வேலைக்காரர்கள், மந்திரிகள், புரோகிதர்கள், பட்டணத்திலிருக்கும் ஜனங்கள், தேசத்திலிருப்பவர்கள், வியாபாரிகள் முதலிய எல்லாரையும் அவர் அவர் களுடைய இஷ்டத்தைக் கொடுத்துத் திருப்தி செய்தார் என்று மைத்ரேயர் சொன்னார்.

3–7 அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி "பிருது பசுவின் வேடங்கொண்ட பூமியிடம் ஸகல வஸ்துக்களைக் கறந்ததாகச் சொன்னீர்களே, பூமிதேவி எதற்காகப் பசுவின் கர்பத்தைத் தரித்தாள்? அவளிடத்தில் எதனைக் கறந்தார்? எது கன்றாக இருந்தது? இயற்கையில் மேடுபள்ள முள்ள பூமியை எப்படிச் சமமாகச் செய்தார்? மேலும் அவருடைய யாகக் குதிரையை மஹேந்த்ரன் அபகரித்த காரணம் என்ன? ஓ ப்ராஹ்மணோத்தம! மேலும் அந்த ராஜரிஷ்டர் ப்ரஹ்மவித்துக்களுக்குள் சிறந்தவரான ஸனத் குமாரரிடமிருந்து தத்துவ ஞானத்தையும் அபரோக்ஷ ஞானத்தையும் அடைந்தார். இந்தப் பிருது முதலியவர்கள் பகவதவதார பூதர்களாகையால் அவர்களுடைய சரிதமானது ஸ்ரீ கிருஷ்ண பகவான் உடைய சரிதமேயாம். அது புண்ணிய கரமானது; அதனைக் கேட்பவனே நல்ல காதுள்ளவன், ஆனதால்

ஸ்ரீ கிருஷ்ணபகவான் முந்திய அவதாரங்களில் எதனைச் செய்தாரோ, அந்துப் பகவானுடைய சரிதத்தை ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலும் உம்மிடத்திலும் அந்தரங்க பக்தியுள்ளவனாகிய எனக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

8–11 ஸ்ரீ பகவானுடைய கதையைச் சொல்லும் படி விதுரரால் தூண்டப்பட்ட மைத்ரேயர் மிகுந்த பிரியத்துடன் விதுரரைப் புகழ்ந்து அவரை நோக்கி, ஓ விதுரரே! மஹரிஷிகள் பிருதுவிற்குப் பட்டா பிஷேகஞ் செய்து நீர் ஜனங்களை காப்பாற்ற வேண்டும் என்று ஆக்ஞாபித்தார்கள். அப்பொழுது பூமியில் அன்ன மில்லாமற் போனதால் பிரஜைகள் பசியினால் வருத்தப்பட்டுச் சரீரம் இளைத்து அரசனிடம் சென்று, 'ஓ மஹாராஜ! பொந்திலிருக்கும் அக்கினியால் மரங்கள் எரிக்கப்படுவது போல நாங்கள் வயிற்றில் இருக்கும் அக்கினியால் எரிக்கப்படுகிறோம். (புஜிப்பதற்கு அன்னம் கிடைக்கவில்லை என்று கருத்து). காப்பாற்றுவதில் ஸமர்த்தராகிய உம்மைச் சரணம் அடைகிறோம்! நீர் எங்களுக்கு ஜீவனத்தைக் கொடுக்கும் அரசனல்லவா? ஆகையால் நாங்கள் அன்னமில்லாமல் நாசமடைவதற்கு முந்தியே எங்களுக்கு அன்னம் கொடுத்துப் பசியை நிவர்த்திக்க முயற்சியும்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

12–21 ஓ குருக்களில் சிறந்தவரே! ப்ரஜைகளுடைய தீனமான வார்த்தையைக் கேட்டுப் பிருது சக்கிரவர்த்தி வெகுகாலம் யோசித்துச் செய்ய வேண்டிய கார்யம் இன்னதென்று தமக்குள் தீர்மானித்துக் கொண்டு பூமிதேவியினிடம் மிகுந்த கோபமுள்ளவராகி, வில்லைக்

கையிலெடுத்து, அதில் பாணத்தை ஸந்தானம் செய்தார். அப்பொழுது அவர் திரிபுர ஸம்ஹாரம் செய்த பரமசிவனுக்கு ஸமமாக இருந்தார். அவரைக் கண்டு பூமிதேவியானவள் மிகவும் பயந்து நடுக்க முள்ளவளாகி வேடனால் துரத்தப்பட்ட பெண் மான்போல் ஓடினாள். அதனைக் கண்ட வேனபுத்திரர் ஆகிய பிருது சக்ரவர்த்தி மிகவும் கோபத்தால் சிவந்த கண்களுள்ளவராகிப் பாணத்தை வில்லில் பூட்டிக் கொண்டே பூமியின் பின் ஓடினார். அந்தப் பூதேவியும் கிழக்கு முதலிய திக்குகளிலும், மூலைகளிலும் ஆகாசத் திலும், பூமியிலும், அந்தரிக்ஷமும் முதலிய எங்கும் ஓடியும் தன் பின் ஆயுதத்துடன் துரத்திவரும் அரசனைக் கண்டு மிருத்புவைக் கண்ட ப்ரஜைகள் போல் ஒருவராலும் காப்பாற்றப்படாதவளாகி மிகுந்த வருத்தத்துடன் அந்த பிருதுவினிடமே வந்தாள். பின்பு அவள் அந்தச் சக்ரவர்த்தியை நோக்கி, "ஓ மிகுந்த அதிருஷ்டமுள்ளவரே! தர்மங்களை அறிந்தவரே! ஆபத்தை அடைந்தவர்களிடத்தில் பிரீதியுள்ளவரே! நீர் ஸகல பிராணிகளையும் காப்பாற்றும் அதிகார்த்தை அடைந்திருந்தும் குற்றமற்றவளும், தீனையுமான என்னை ஏன் கொல்ல யத்தனிக்கிறீர்? என்னைக் காப்பாற்றும். தர்மங்களை அறிந்தவனென்று பிரசித்தி பெற்றவர் ஸ்திரீவதம் செய்யலாமா? குற்றஞ் செய்தவர்களான ஸ்திரீகளையும் ப்ராகிருத ஜனங்கள் ஆனாலும் கொல்ல மாட்டார்கள். அப்படிக்கிருக்க கருணை பொருந்தியவர்களும், தீனர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ளவர்களுமான உம்மை போன்ற ஸாதுக்கள் குற்றஞ் செய்யாத ஸ்திரீயைக் கொல் வார்களா? மேலும் நான் ஜனங்கள் வசிப்பதற்கு ஒரு கெட்டியான ஓடமாக ஜலத்தில் இருக்கிறேன்.

என்னைப் பிளந்துவிட்டால் இந்த ஜனங்களை ஜலத்தில் எப்படி வசிக்கச் செய்வீர்? ஆகையால் என்னைக் காப்பாற்றும்" என்று வேண்டிக் கொண்டாள்.

22–27 அதனைக் கேட்ட பிருது சக்கிரவர்த்தி அவளை நோக்கி, 'ஓ பூமிதேவியே! நீ யாகத்தில் தேவதாரூபியாக ஹவிர்பாகத்தைப் பெற்றுக் கொண்டும் தான்யம் முதலியவைகளை உண்டு பண்ணுகிறதில்லை. ஒவ்வொரு நாளும் வயிறு நிரம்பப் புற்களைத் தின்றும் பால்கறக்காமல் இருக்கும் பசுவைப்போல் நீ ப்ரஹ்மதேவரால் முந்தி ஸிருஷ்டிக்கப்பட்ட ஓஷதி, விதை ஆகிய இவைகளை இப்பொழுது வெளிப் படுத்தவில்லை. என்னுடைய ராஜ்ய காலத்தில் நீ இப்படிச் செய்வதால் என்னை அவமானம் செய்கிறதாக ஆயிற்று; ஆனதால் என்னுடைய உத்தரவை மீறி நடக்கும் உன்னைக் கொல்வேன். உன்னுடைய தேஹத்தைப் பேதித்து அந்த மாம்ஸத்தால் பசியால் வருத்தப்படும் இந்த ஜனங்களைக் காப்பாற்றுகிறேன். புருஷனானாலும் ஸ்திரீயானாலும் கர்வத்தை அடைந்து பிராணிகளிடத்தில் கருணையற்றிருந்தால் அவர்களைக் கொல்வது அரசர்களுக்குத் தர்மமேயாகும். (அது வதமல்லவென்று தாத்பர்யம்). நீ இப்பொழுது மதங் கொண்டு நிலை தவறி, கபட ஸ்வபாவமுள்ள வளாக இருப்பதால் உன்னைப் பாணங்களைக் கொண்டு எள்ளளவாகப் பேதித்து என்னுடைய யோக பலத்தால் இந்த ஜனங்களைத் தரிக்கிறேன்" என்று சொன்னார்.

28–36 அதனைக் கேட்ட பூமிதேவியானவள்

கோபஸ்வரூபமான சரீரத்தைத் தரித்து யமனைப் போலிருக்கும் பிருது சக்கிரவர்த்தியைக் கண்டு நடுங்கி நமஸ்கரித்து, கைகளைக் கூப்பிக் கொண்டு பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தாள். பரம புருஷனுக்கு நமஸ்காரம் செய்கிறேன். நீர் மாயையால் மத்ஸ்யம் முதலிய பல சரீரத்தை எடுத்துக் கொள்பவர். குணஸ்வரூபி போலத் தோன்றுகிறவர். மேலும் சரீரம், இந்திரியங்கள், அவைகளின் அதிஷ்டான தேவதைகள், சரீரத்தில் நானென்ற அஹங்காரம், இராகம், துவேஷம் முதலியவை ஆகிய இவைகளை ஸ்வபானு ஸந்தானத்தாலே நாசஞ் செய்தவர். அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம். எந்தப் பகவான் என்னை ஸகல பிராணிகளுக்கும் இருப் பிடமாக ஸிருஷ்டித்து என்னிடத்தில் நான்கு வகையான பிராணிகள் வசிக்கும் படியும் செய்தாரோ ஸ்வதந்த்ரராகிய அந்தப் பகவானே ஆயுதத்துடன் என்னைக் கொல்லுவதற்கு யத்தனிக்கிறார். வேறு யாரை நான் சரணமடைவேன்? எந்தப் பகவான் முதலில் சரம் அசரம் அடங்கிய இந்த ஜகத்தைத் தம்முடைய மாயையைக் கொண்டு ஸிருஷ்டித்தாரோ, எவருடைய மாயையானது ஊகிக்க முடியாததோ, அந்தப் பகவானாகிய நீரே அந்த மாயா பலத்தால் ஜகத்தைக் காப்பாற்ற இப்பொழுது யத்தனித்திருக் கிறீர். தர்மிஷ்டராகிய நீர் என்னைக் கொல்வது உசிதமா? ஈசுவரனுடைய நடை ஜனங்களால் அறிய முடியாதது.

உம்முடைய மாயையானது ஒருவராலும் ஜயிக்க முடியாத தாகையால் அந்த மாயையால் புத்தி மயக்கம் அடைந்து ஜனங்கள் உம்முடைய உண்மையைத்

தெரிந்து கொள்ளுகிறதில்லை. எவர் ப்ரஹ்மாவை உண்டுபண்ணுகிறாரோ, எவரைக் கொண்டு ஸகலஜகத்தையும் ஸிருஷ்டிக்கிறாரோ; எவர் இயற்கையில் ஒருவரோ, மாயையால் அநேகராகத் தோன்றுகிறாரோ, அவரே ஈசுவரன். அவர் மஹா பூதங்கள், இந்திரியங்கள், அதிஷ்டான தேவதைகள், புத்தி அஹங்காரம் ஆகிய இவைகளைக் கொண்டு ஸிருஷ்டி, பரிபாலனம், ஸம்ஹாரம் ஆகிய இவைகளை அனுசரிக்கிறார். மேலும் இவைகள் யாவும் அவருக்கு ஸ்வாதீனங்களாக இருக்கின்றன. அப்பேர்ப் பட்ட பரம புருஷனாகிய உம்மை நமஸ்கரிக்கிறேன். ஓ உற்பத்தியற்றவரே! பூதங்கள், இந்திரியங்கள், அந்தக்கரணம் இவைகளின் ஸ்வரூபமாகிய ஜகத்தை ஸ்தாபிக்க வேண்டி நீர் ஆதிவராஹவதாரம் செய்து என்னைப் பாதாளத்தில் இருந்து கொண்டுவந்தீர். ஜலத்திற்குமேல் ஓடம் போலிருக்கும் என்னிடத்தில் உம்மால் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கும் ப்ரஜைகளைக் காப்பாற்ற வேண்டி இப்பொழுது பிருது சக்கரவர்த்தியாக அவதரித்திருக்கிறீர். அப்படிப்பட்ட நீர் 'பால் கொடாத காரணத்தைக் கொண்டு என்னைக் கொல்ல விரும்புகிறீர்' என்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. ஈசுவரனுடைய மாயையால் புத்தி மயக்கமடைந்த என்னைப் போன்றவர்களால் பகவத் பக்தர்களுடைய அபிப்பிராயமே அறிய முடியாது. (பகவானுடைய அபிப்பிராயம் எப்படி அறியமுடியும் என்று கருத்து). ஆகையால் இந்திரியங்களை ஜயித்தவர்களுக்குக் கீர்த்தியைக் கொடுக்கும் அந்த மஹான்களுக்கு நமஸ்காரம் செய்கிறேன். (எதனைச் செய்தால் ஜிதேந்திரியர்களுடைய கீர்த்தி விருத்தி அடையுமோ, அதனைச் செய்ய வேண்டுமேயல்லாமல் தனதிஷ்டப்படிச் செய்யக் கூடாதென்று கருத்து)

அத்தியாயம்–18

பூமிதேவி ஸகல பொருள்களையும் உண்டுபண்ணியது

1–11. கோபத்தால் துடிக்கும் உதடுகளுள்ள பிருது சக்கரவர்த்தியைப் பூமிதேவி இப்படித் துதித்துப் பின்னும் அவரை நோக்கி, "ஓ மகாராஜ! கோபத்தை அடக்கிக் கொள்ளும். நான் சொல்வதைக் கேளும். (அலக்ஷ்யம் செய்யவேண்டாமென்று கருத்து). தேனீயானது மதுவை எடுத்து கொள்வது போல் வித்வான் எல்லாரிடத்திலிருமிருந்து ஸாரமானதை எடுத்துக்கொள்வான். உண்மையை அறிந்த மஹர்ஷிகள் ஜனங்களுக்கு இவ்வுலகம், மேலுலகம் ஆகிய இவைகளின் சுகத்திற்காகப் பலவகையான உபாயங்களைக் கண்டு பிடித்ததுமல்லாமல் அவைகளைப் பிரயோகித்துமிருக்கிறார்கள். (பயிர்தொழில் அக்னி ஹோத்ரம் முதலியவை) அப்படிப்பட்ட உபாயங்களைச் சிரத்தையுடன் அனுஷ்டிப்பவன் பலனை அடைவான். அவைகளை லக்ஷ்யம் செய்யாமல் காரியத்தை ஆரம்பிப்பவன் வித்வானானாலும் அவனால் ஆரம்பிக்கப்பட்ட காரியங்கள் பலனைக் கொடுக்கிறதில்லை. முந்தி ப்ரஹ்மதேவரால் ஸிருஷ்டிக்கப்பட்ட ஓஷதிகளை, விரதங்களை அனுஷ்டிக்காத அஸத்துக்கள் அனுபவித்தார்கள். லோகத்தை காப்பாற்றுகிறவர்களான நீங்களும் அதைக் கவனிக்கவில்லை, ரக்ஷிக்கவுமில்லை, பிரஜைகளெல்லோரும் திருடர்களாக ஆகிவிட்டார்கள். ஆனதால் நான் யக்ஞத்திற்காக ஓஷதிகளை காப்பாற்ற வேண்டி அவைகளை வெளிப்படுத்தாமல் மறைத்துக் கொண்டேன. இப்படி வெகுகாலம் சென்றதால் அந்த

ஒஷதிகள் பூமியிலற்றுப்போயின. அது விஷயத்தில் ஒரு உபாயம் சொல்லுகிறேன். அதன்படி அவைகளை அடையலாம், ஓ வீரராகிய அரசனே! பிராணிகளுக்குப் பலத்தைக் கொடுக்கக்கூடிய அன்னம் வேண்டுமென்ற விருப்பம் உமக்கிருக்குமானால் பசுவின் ஸ்வரூபம் உள்ளவளாகிய எனக்குத் தகுதியான கன்றையும் கறக்கிறவனையும், கறக்கும் பாத்திரத்தையும் ஏற்படுத்தும். அதனால் உம்மிடத்தில் நான் பிரீதி அடைந்து உமக்கு அபேக்ஷிதங்களான பொருள்களை உண்டு பண்ணுகிறேன். மேலும் என்னுடைய சரீரமானது மலை முதலியவைகளால் மேடுபள்ளமாக இருப்பதால் மழை ஜலமானது எங்கும் பரவுகிறதில்லை. ஆனதால் மழைக்காலத்தில் பெய்த மழை ஜலமானது பிந்திய ருதுக்களிலும் பரவி ஓடும் படியாக என்னை ஸமமாக (மேடுபள்ளமில்லாமல்) செய்யும் என்றாள்.

12–27. பிரியமானதும், அனுகூலமானதுமான அதனைக் கேட்ட அரசர், ஸ்வாயம்புவ மனுவைக் கன்றாக வைத்துக்கொண்டு தம்முடைய கையாகிய பாத்திரத்தில் ஸகல ஒஷதிகளையும் தாமே கறந்தார். (பசுவினிடமிருந்து உண்டாகிறதாகையால் அவைகளே க்ஷீரமென்றும், அதை கறக்கிறதென்றும் சொல்லப்படுகிறது). மற்ற வித்வான்களும் தங்கள் தங்கள் இஷ்டப்படி மேலான வஸ்துக்களைக் கறந்து கொண்டார்கள். எப்படியெனில் மஹரிஷிகள் பிருஹஸ்பதியைக் கன்றாக வைத்துக்கொண்டு இந்திரியங்களாகிய பாத்திரங்களில் வேதமாகிய சுத்தமான பாலைக் கறந்தார்கள். தேவர்கள் இந்திரனைக் கன்றாக வைத்துக்கொண்டு ஸ்வர்ண மயமான பாத்திரத்தில் ஸோமம், மனத்தில் சக்தி, இந்திரிய சக்தி, தேகசக்தி

ஆகிய இவைகளாகிய பாலைத் திதியின் புத்ரர்கள் அஸுரர்களுக்குள் சிறந்தவரான பிரஹ்லாதரைக் கன்றாக வைத்துக்கொண்டு இரும்பு பாத்திரத்தில் ஸுதரையையும் (வெல்லத்தாலும், மாவினாலும், மதுவினாலும் செய்யப்பட்டு மூன்று வகையானது) பனைமரம் முதலியவைகளிலிருந்து உண்டாகும். மத்யத்தையும் கறந்தார்கள். கந்தர்வர்களும், அப்ஸரஸ்ஸுகளும் விசவாசு என்ற கந்தர்வனைக் கன்றாக வைத்துக்கொண்டு பத்ம பாத்திரத்தில் (தாமரை) வாக்கின் இனிமை அழகு ஆகிய பாலைக் கறந்தார்கள். ஓ மிகுந்த அதிர்ஷ்டமுள்ள விதுரரே! சிராத்த தேவதைகளான பிதுருக்கள் அரியமா வென்பவரைக் கன்றாக வைத்துக்கொண்டு அயக்மமான (சூளையில் வைக்கப்படாத) மண் பாத்திரத்தில் கவ்யமாகிய க்ஷீரத்தைக் கறந்தார்கள். ஸித்தர்கள் கபிலரைக் கன்றாக வைத்து ஆகாயமாகிய பாத்திரத்தில் ஸங்கல்ப மாத்திரத்தாலுண்டாகும் அணிமா முதலிய ஸித்திகளையும், வித்தியாதாரர் முதலியவர்கள் ஆகாசத்தில் ஸஞ்சரிப்பதாகிய வித்யைகளையும் கறந்தார்கள். கிம் புருஷர்கள் முதலிய மாயையில் ஆசையுள்ளவர்கள், மயனென்பவனைக் கன்றாக வைத்துக் கொண்டு மறைகிறது. முதலிய அற்புதமான மாயைகளைச் செய்பவர்களுடையதும். நினைத்த மாத்திரத்தில் கிடைக்கக்கூடியதுமான மாயா சக்தியைக் கறந்தார்கள். யக்ஷர்களும், ரக்ஷஸ்ஸுகளும், மாம்ஸத்தைப் பூஜிக்கும் பிசாசங்களும், பூதகணங்களும் உருத்திரனைக் கன்றாக வைத்துக்கொண்டு கபாலத்தில் இரத்தமாகிய மத்யத்தைக் கறந்து கொண்டார்கள். படமில்லாத பாம்புகளும், தேள் முதலிய விஷ ஜந்துக்களும், படமெடுக்கக் கூடிய ஸர்ப்பங்களும் நாகங்களும்,

(கர்த்ருவின் ஸந்நதியிலுண்டானவை) தக்ஷகனைக் கன்றாக வைத்துக் கொண்டு பிலமாகிய பாத்திரத்தில் விஷமாகிய பாலைக் கறந்தன. பசுக்கள் பரமசிவன் உடைய வாகனமாகிய விருஷபத்தைக் கன்றாக வைத்துக்கொண்டு வனமாகிய பாத்திரத்தில் புற்களாகிய பாலைக் கறந்தன. மாம்ஸத்தைப் புஜிக்கும் புலி முதலியவைகள் சிங்கத்தைக் கன்றாக வைத்துக் கொண்டு பூச்சி முதலிய சரங்களையும் பழங்கள் முதலிய அசரங்களையும் கறந்தன. விருக்ஷங்கள் ஆலமரத்தைக் கன்றாக வைத்துக்கொண்டு தனியாக முளைக்கும் சக்தியாகிய பாலைக் கறந்தன. மலைகள் ஹிமவானென்ற பர்வதத்தைக் கன்றாக வைத்துக் கொண்டு தங்களுடைய தாழ்வரைகளில் பலவகையான தாதுக்களாகிய பாலைக் கறந்தன. இப்படி எல்லாப் பிராணிகளும் தங்கள் தங்கள் பாத்திரங்களில் தங்களுக்கிஷ்டமான வஸ்துக்களைப் பிருது சக்கரவர்த்தி யினால் காட்டப்பட்ட பூமிதேவியினிடமிருந்த பெற்றுக் கொண்டார்கள். அந்த பூமியானவள் ஸகல வஸ்துக் களையும் கொடுக்கக்கூடியவள். இப்படி பாத்திர பேதத்தாலும் வத்ஸ (கன்று) பேதத்தாலும் பல வகையான அன்னத்தை அவரவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

28–32. அதன் பின்பு அரசன் மிகவும் பிரியம் உள்ளவராகி பிராணிகளுக்கு ஸகல இஷ்டத்தையும் கொடுத்த பூமிதேவியைத் தமக்குப் புத்தரியாக வைத்துக் கொண்டார். மேலும் வேன புத்திரராகிய அனந்தச் சக்கரவர்த்தி தம்முடைய வில்லின் நுனியால் மலைகளை உடைத்து தூளியாகச் செய்து பெரும்பாலும் பூமியை ஸமமாகச் செய்தார். பின்பு

அந்த அரசன் ஜனங்களுக்கு ஜீவனத்தைக் கொடுத்துக் காப்பாற்றுகிறவராகையால் ஜனங்கள் வசிப்பதற்கு கிராமங்களையும், பட்டணங்களையும், பலவகையான துர்க்கங்களையும், இடைச்சேரிகளையும், பசுக்கள் வசிக்கும் இடங்களையும், ஸைன்னியம் தங்கியிருக்கும் இடங்களையும், தங்கம் முதலிய தாதுக்கள் விளையும் ஸ்தானங்களையும், பயிரிடுவோர்கள் (குடியானவர்கள்) வசிக்குமிடங்களையும், மலையின் சமீபத்திலுள்ள கிராமங்களையும் தனியே ஏற்படுத்தினார்.. அந்தச் சக்ரவர்த்தியின் ராஜ்ய காலத்திற்குமுன் இம்மாதிரியான ஏற்பாடில்லை. இப்பொழுது ஜனங்கள் அவரவர்களுக்கு இஷ்டமான இடங்களில் பயமில்லாமல் வசித்துக் கொண்டிருந்தார்கள்.

அத்தியாயம்–19

பிருதுவின் அச்வமேதக் குதிரை காணாமற் போனது

1–25 எந்தவிடத்தில் ஸரஸ்வதி நதி கிழக்கு முகமாகப் ப்ரவகிக்கிறதோ, எது ப்ரஹ்மவர்த்தமெனப் படுகிறதோ, அந்த மனுவின் க்ஷேத்திரமாகிய புண்ணிய பூமியில் அந்த பிருது சக்கரவர்த்தியானவர் நூறு அச்வமேதங்களை அனுஷ்டிப்பதாக ஸங்கல்பஞ் செய்தார். மஹேந்திரன் அரசனுடைய அபிப்ராயத்தை அறிந்து, தம்மைப்போல நூறு யாகஞ் செய்வதற்குப் பிருதுவும் ஆரம்பித்தார்" என்று நினைத்துப் பொறாமையை அடைந்தார். அந்த யாகத்தில் யக்ஞபதியும், ஸகல லோகங்களுக்குக் குருவும், ஸகல ஸ்வரூபியுமான ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் ப்ரஹ்ம தேவருடனும், பரமசிவனுடனும் பிரத்யக்ஷமாக அவ்விடத்தில் ப்ரகாசித்தார். அப்பொழுது லோகபாலர்களும், அவர்களுடைய வேலைக்காரர்களும், கந்தர்வர்களும், முனிகளும், அப்ஸரஸ்ஸுகளும், ஸித்தர்களும், வித்யாதரர்களும், தைத்தியர்களும், தானவர்களும், குஹ்யர்கள் முதலியவர்களும், ஸுநந்தர், நந்தர் முதலிய பகவானுடைய பார்ஷத கணங்களும், கபிலரும், நாரதரும், தத்தரும், ஸனகர் முதலிய யோகிகளும், பாகவதர்களும், அவர்களை ஸேவிக்க விருப்பமுள்ளவர்களும் அவ்விடம் வந்து கூடியிருந்தார்கள். மேலும் அந்த யாகத்தில் ஸகல காமங்களையும் கொடுக்கக்கூடிய பூமியானவள் ஹவிஸ்ஸையுண்டு பண்ணினது மல்லாமல் யஜமான் உடைய இஷ்டப்படி ஸகல பொருள்களையுமுண்டு

பண்ணினாள். நதிகள் பால், தயிர், அன்னம், பானம், நெய், மோர் முதலிய ரஸபதார்த்தங்களை உண்டு பண்ணின. பலவகையான சரீரமுள்ள மரங்கள் தேன் போலினிமையான பழங்களை யுண்டு பண்ணின. சமுத்திரங்கள் இரத்தினங்களைக் குவியலாகக் குவித்தன. பர்வதங்கள் நான்கு வகையான அன்னத்தை உண்டுபண்ணின. லோகபாலர்களும் மற்றவர்களும் காணிக்கைகளைக் கொண்டுவந்தார்கள். ஸ்ரீ மஹா விஷ்ணுவையே தெய்வமாகக் கொண்ட அந்தப் பிருது சக்கரவர்த்தியின் யாக ஸம்ருத்தியைப் பார்த்து இந்திரன் அசூயை அடைந்து அதற்கு விக்கினஞ் செய்தார். எப்படியெனில் கடைசியான யாகம் நடக்கும் போது மஹேந்திரன் மறைந்து யாகக்குதிரையை அபகரித்தார். இப்படி மிகுந்த வேகமாக ஆகாசத்தில் குதிரையுடன் செல்லுகிறவனும் அதர்மத்தில் தர்ம புத்தியை யுண்டுபண்ணுகிறவனும், வேஷதாரியான பாஷண்டனுமான மஹேந்திரனை அத்ரிமஹரிஷி கண்டார். பிருதுவினிடமும் தெரிவித்தார். அப்பொழுது பிருதுவின் புத்திரர் மிகுந்த கோபத்துடன் நில்லு நில்லு" என்று சொல்லிக் கொண்டு பின்தொடர்ந்தார். அப்பொழுது ஜடைகளைத் தரித்தவராயும் தர்மமே சரீரமெடுத்திருப்பது போலிருந்தபடியால் அவரிடம் பாணத்தைப் ப்ரயோஹியாமல் பிருதுவின் புத்திரர் திரும்பினார். அதனைக் கண்ட அத்திரியானவர் 'யக்ஞத்தைக் கெடுப்பவனும்' தேவர்களுக்குள் அதமனுமான இந்திரனைக் கொல்லும் என்று தூண்டினார். அதனைக் கேட்ட பிருதுவின் புத்திரர் மிகுந்த கோபத்துடன் யானையைச் சிங்கம்போல் ஆகாசத்தில் வேகமாகச் செல்லும் இந்திரனைப் பின் தொடர்ந்தார். அப்பொழுது தேவேந்திரன் அந்த

உருவத்தையும் குதிரையையும் விட்டு அந்தர்த்யானம் அடைந்தார் (மறைந்திருந்தார்). அப்பொழுது வீர பிருதுவின் புத்திரர் அந்தக் குதிரையுடன் பிதாவிடம் சேர்ந்தார். அவருடைய அற்புதமான காரியத்தைக் கண்டு மகர்ஷிகள் சந்தோஷித்து அவருக்கு விஜிதாச்வர் என்று (குதிரையை ஜயித்தவர்) பெயர் கொடுத்தார்கள். மறுபடியும் மஹேந்திரன் கடுமையான இருட்டை மாயையால் ஸிருஷ்டித்து அதில் மறைந்து கொண்டு ஸ்வர்ணமயமான ரசனையால் கட்டப்பட்ட யாகக்குதிரையை யூபத்தின் நுனியிலிருந்து தூக்கிக் கொண்டு போனார். அப்பொழுதும் அத்திரி மஹர்ஷியானவர் விஜிதாச்வருக்கு மஹேந்திரனைக் காண்பித்தார். அப்பொழுது இந்திரன் கபாலம், கட்வாங்கம் ஆகிய 'இவைகளைத் தரித்திருந்தபடியால் சூரனாகிய விஜிதாச்வர் அவரை உபத்ரவிக்கவில்லை. அதனைக் கண்ட அத்ரி மஹர்ஷி மஹேந்த்ரனை கொல்லும்படி விஜிதாச்வரரை தூண்டினார். விஜிதாச்வர் கோபத்துடன் பாணத்தைப்ரயோகித்தார். அதனைக் கண்ட மஹேந்திரன் பயந்து குதிரையை விட்டு, கண்ணுக்கு புலப்படாமல் மறைந்தார். சூரராகிய விஜிதாச்வர் தம்முடைய குதிரையைக் கிரகித்துக் கொண்டு பிதாவினுடைய யாகசாலை சென்றார். இப்படி இந்திரன் யாகக் குதிரையை அபகரிப்பதற்காக எந்த ரூபங்களை எடுத்துக் கொண்டாரோ அந்தத் துஷ்டமான ரூபங்களை சொல்ப ஞானம் உள்ளவர்கள் கிரஹித்துக் கொண்டார்கள். அவைகள் பாபத்திற்கு அடையாளங்கள். அவைகளே பாஷண்ட விங்கமெனப்படுகின்ற இந்திரனால் கிரஹிக்கப்பட்ட வைக்ளும், விடப்பட்ட நல்மார்க்கங்கள் போலத் தோன்றுகிறவைகளும், யுக்தி வாதங்களுள்ளவைகளு

மாகிய உபதர்மங்களைத் தர்மமென்று சிலர் நினைத்தார்கள். அவர்கள் ஜைனர்களும், பௌத்தர்களுமேயாவர்.

26–38 விசேஷ கீர்த்திமானாகிய பிருதுவானவர் அதனையறிந்து இந்திரனிடத்தில் கோபங் கொண்டு வில்லில் பாணத்தை ஸந்தானஞ் செய்தார். அப்பொழுது ரித்விக்குகள், இந்திரனைக் கொல்ல முயற்சித்தவரும், பார்க்க முடியாதவரும், மிகுந்த பராக்கிரமமுள்ளவருமான அரசனை நோக்கி, 'மிகுந்த புத்திசாலியாகிய ஓ மஹாராஜ! யாகஞ் செய்வதாக ஸங்கல்பஞ் செய்து கொண்டிருக்கும் நீர் விஹிதமான பசுவதத்தை விட வேறு வதஞ் செய்வது உசிதமல்ல. உம்முடைய யாகத்தைக் கெடுக்க யத்தனித்தவனும், உமது கீர்த்தியால் மழுங்கிய காந்தியுள்ளவனுமான இந்திரனை நாங்கள் சுக்ல யஜுர்வேத மந்திரங்களால் அழைத்து அவரை அக்கினியில் ஹோமஞ் செய்கிறோம். நீர் ஒன்றும் செய்ய வேண்டாம், என்று தடுத்தார்கள். ஓ விதுரரே பின்னுமவர்கள் ஸ்ருக்கைக் கையில் வைத்துக் கொண்டு ஹோமஞ் செய்தார்கள். அப்பொழுது ப்ரஹ்மதேவர் அவ்விடம் வந்து ரித்விக்குகளை நோக்கி, "ஓ ப்ரஹ்மணர்களே! யக்ஞத்தால் ஆராதிக்கப்படும் தேவர்கள் இந்திரனுடைய ஸ்வபாவமாகையால் அந்த இந்திரனைக் கொல்வது உசிதமல்ல. மேலும், இந்த யாகத்தைக் கெடுக்க விரும்பிய இந்திரனால் தர்ம மார்க்கத்திற்கு விருத்தமான பாஷண்ட மார்க்கம் உண்டு பண்ணப்பட்டது. இந்திரன் பலசாலியாகையால் அவருடன் விரோதிக்கக் கூடாதென்று கருத்து.) பிருது சக்கரவர்த்தி தொண்ணூற்று ஒன்பது யாகங்களுள்ளவராக இருக்கட்டும், நூறாவது யாகம்

பூர்த்தி யாகாதிருந்தாலும் இந்திரனை விடப் பிருது கீர்த்தியுள்ளவராக இருப்பார் என்று சொல்லிப் பிருதுவை நோக்கி, 'நீர் மோக்ஷ தர்மத்தை அறிந்தவர்: இந்திரனிடம் நீர் கோபங்கொள்வது உசிதமல்ல. இதுவரையில் உம்மால் நன்றாக அனுஷ்டிக்கப்பட்ட யாகங்கள் போதும். உமக்கு க்ஷேமமுண்டாகும். நீரும், இந்திரனும் உத்தமச்லோகராகிய பகவானுடைய அம்சம்; யாகத்திற்கு விக்கினம் நேர்ந்ததைப் பற்றி யோசிக்க வேண்டாம். ஓ மஹாபாக்ய முள்ளவரே! என்னுடைய வார்த்தையைச் சிரத்தையுடன் கேளும். தெய்வவிருத்தமான கார்யம் சௌகரியத்தாற் செய்ய முடியாததே யாகும். மனதில் கோபத்திற்கு இடங் கொடுத்தால் மோஹமும் உண்டாகுமே யல்லாமல் சாந்தி உண்டாகிறதில்லை. ஆனதால் இந்த யாகத்தை நிறுத்திவிடும். இதனால் தேவர்களுக்கு ஆக்ரஹம் உண்டாகிறது. அதனால் தர்மவிரோதமான பாஷண்ட மார்க்கங்கள் உண்டாயிருக்கின்றன. உம்முடைய யாகக் குதிரையை அபகரித்தவராகிய இந்திரனால் உண்டுபண்ணப்பட்டவைகளும், மனோஹரங்களுமான பாஷண்ட மார்க்கத்தில் ஜகத் ஆசைப்படுகிறது. பாரும், மேலும், வேனனுடைய அபசாரத்தால் ஒளிந்து போன சாஸ்திர சம்மதமான தர்மத்தைக் காப்பாற்றுகிறத

ற்காகவே நீர் பூமியில் அவதரித்த விஷ்ணுவின் கலையாக இருக்கிறீர். அப்படிப்பட்ட நீர் இந்த ஜகத்தின் உற்பத்தியை யோசித்து ப்ரஜாபதிகளுடைய சங்கல்பத்தை நிறைவேற்றும். மிகவும் பயங்கரமான பாஷண்ட மார்க்கமே இந்திரனுடைய மாயை, அது உபதர்மங்களுக்கு மாதாவாக இருக்கிறது. அதனை உலகத்தில் பரவாமல் தடுக்க வேண்டும்" என்று ஆக்ஞாபித்தார்.

39–42 இப்படி லோகக் குருவாகிய ப்ரஹ்மதேவரால் ஆக்ஞாபிக்கப்பட்ட அரசன் மஹேந்திரனிடம் விரோதத்தை விட்டு அவரிடம் சிநேஹித்தார். பின்பு யாகத்தை நிறுத்தி அவபிருத ஸ்நானஞ் செய்தார். அப்பொழுது அவருடைய யாகத்தில் பூஜிக்கப்பட்ட தேவர்கள் அவருக்கு வரம் கொடுத்தார்கள். ப்ராஹ்மணர்களுடைய வாக்கானது பொய்யாகாதானதால் ப்ராஹ்மணர்கள் அரசனிடம் தக்ஷிணையைப் பெற்று சந்தோஷமடைந்து அவரை நோக்கி, "ஓ மிகுந்த பராக்ரமுள்ளவரே! உம்முடைய யாகத்திற்காக வந்த பிதிருக்கள், தேவரிஷிகள், மனிதர்கள் ஆகிய எல்லாரும் உம்மால் தானத்தாலும், மானத்தாலும் பூஜிக்கப் பட்டார்கள்" என்று சொல்லி அரசர்களுக்குள் முந்தியவராகிய அவருக்கு ஆசீர்வாதஞ் செய்தார்கள்.

பகவான் பிருதுவை அனுக்கிரஹித்தது

1–16. பின்பு ஸ்ரீ மஹாவிஷ்ணு இந்திரனுடன் பிருதுவின் யக்ஞத்தால் நன்றாக ஆராதிக்கப்பட்டு அந்த அரசனை நோக்கி, "உம்முடைய அச்வமேதத்திற்கு விக்னஞ் செய்பவர் இவர்தான். உம்மை ஸம்ஹாரம் செய்வதற்காக வந்திருக்கிறார். இவருடைய குற்றத்தை மன்னிக்க வேண்டும். ஓ மஹாராஜ! மனிதர்களுக்குள் சிறந்தவர்களும், புத்திசாலிகளுமாகிய ஸாதுக்கள் பிராணிகளுக்குத் துரோகம் செய்கிறதில்லை. உண்மையில் சரீரம் ஆத்மாவல்ல. (ஒருவருக்கொருவர் துரோகம் செய்தாலும் சரீரம் ஆத்மா வில்லாததானால் துரோகம் செய்ததாக ஆகிறதில்லையென்று கருத்து.) உம்மைப்போன்ற புருஷர்களும் தேவ மாயையால் மோஹிப்பார்களேயானால் பெரியோர்களைச் ஸேவித்தது வியர்த்தமாக ஆகிறது. ஆனதால் வித்வானாக இருப்பவன், "அவித்தையாலும், கர்மத்தாலும் சரீரம் ஏற்பட்டிருக்கிறது" என்று தெரிந்துகொண்டு அதனிடத்தில் அபிமானம் வைக்கமாட்டான். சரீரத்தில் அபிமானத்தை யொழித்தவன் சரீரத்தால் உண்டு பண்ணப்பட்ட வீடு, குழந்தைகள், பணம் ஆகிய இவைகளில் மமதையை (என்னுடையதென்பதை) அடைவானா? இந்த ஆத்மாசரீரம் முதலியவைகளை விட வேறானது. ஏனென்றால் ஆத்மா ஒருவர். (சரீரம் பால்யம் முதலிய அவஸ்தைகளால் அநேகம்.) ஆத்மா சுத்தர். (சரீரம் அசுத்தமானது) ஆத்மா தாமாகப் பிரகாசிப்பவர். (சரீரம் ஜடம்) ஆத்மா குணங்களற்றவர். (சரீரம் குணமுள்ளது.) ஆத்மா

எங்குமிருப்பவர். (சரீரம் அளவிடங்கியது.) ஆத்மா மறைக்கப்படாதவர் (சரீரம், கிருஹம் முதலியவை களால் மறைக்கப்பட்டது.) ஆத்மா ஸாக்ஷியாக இருப்பவர் (சரீரம் பார்க்கப்படும் வஸ்து.) ஆத்மாவிற்கு ஆத்மா இல்லை. (சரீரம் ஆத்மா உள்ளது.)

எந்தப் புருஷன் தன்னிடத்தில் இருக்கும் ஆத்மாவைத் தெரிந்துகொள்கிறானோ அவன் தேஹத்திலிருப்பவனானாலும் பிருதிவியின் குணங்களில் ஸம்பந்தப படுகிறதில்லை. ஏனென்றால் அவன் ப்ரஹ்மமாகிய என்னிடத்திலிருப்பவன்., எந்தப் புருஷன் காமனை இல்லாதவனாகிச் சிரத்தையுட ன் சுதர்மத்தை அனுஷ்டித்து என்னை உபாஸிக்கிறானோ, அவனுடைய மனம் காலக்கிரமத்தில் தெளியும் மனம் தெளிந்துடின் குணஸம்பந்தத்தை விட்டுச் சாந்தியை அடைகிறான்: அதுவே எனக்கு ஸமமான நிலைமை, அதுவே கைவல்யம். அதுவே ப்ரஹ்மாவஸ்தை. எந்தப் புருஷன் ஆத்மா உதாஸீனரென்று தேஹம், ஞானேந்திரியங்கள்; கர்மேந்திரியங்கள் மனது ஆகிய இவைகளுக்கு அதிபதி யென்றும். கூடஸ்தரென்றும் தெரிந்து கொள்கிறானோ, அவன் மோக்ஷத்தை அடைகிறான். திரவ்யம், கிரியை, காரகம், சிதாபாஸம் ஆகிய இவைகளின் ஸ்வரூபமும், வெவ்வேறு அடையாளமுள்ளதுமாகிய தேகத்திற்கு ஸம்ஸாரமே யொழிய ஆத்மாவிற்கில்லை. ஆனதால் என்னிடத் திலேயே மனத்தச் செலுத்திய வித்வான்கள் ஆபத்து வந்தாலும், ஸம்பத்து வந்தாலும் அவைகளில் துக்கத்தையாவது சந்தோஷத்தையாவது அடைகிற தில்லை: நீர்வித்வானாகையால் சுகத்திலும், துக்கத்தி லும், உத்தமர்களிடத்திலும், சமபுத்தியுள்ளவராகி

இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கி என்னால் ஏற்படுத்தப்பட்ட மந்திரி முதலியவர்களுடன் ஸகல லோகத்தையும் காப்பாற்றும். அரசனுக்குப் பிரஜை களை ஸம்ரக்ஷிப்பதே முக்கிய தர்மம். பிரஜைகளால் செய்யப்படும் புண்ணியத்தில் ஆறிலொருபாகம் அரசனை அடைகிறது. அதனால் அரசன் பரலோகத்தில் சுகத்தை அடைகிறான். எந்த அரசன் பிரஜைகளிடம் ஆறிலொரு பாகம் வரியைப் பெற்றுக் கொண்டு அவர்களைக் காப்பாற்றவில்லையோ, அவன் பாவத்தை அடைகிறான். இப்படி ப்ராஹ்மணர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டதும், பரம்பரையாக வந்ததுமான தர்மத்தை முக்கியமாக அனுஷ்டித்தும், அர்த்த கர்மங்களில் அதிக ஆசைப்படாமலும் லோகத்தைக் காப்பாற்றும். ஜனங்கள் உம்மிடத்தில் அனுராகத்தை அடைவார்கள். கொஞ்ச காலத்தில் உம்முடைய வீட்டிற்குச் சில ஸித்தர்கள் வருவார்கள். அவர்களை தரிசிக்கலாம். ஸம புத்தியுள்ளவர்ககளிடத்தில் வசிக்கும் என்னை யாகங்களாலும், தபஸினாலும், யோகங்களாலும் இலகுவாக அடைய முடியாது. அப்போர்ப்பட்ட நான் உம்முடைய குணங்களாலும், ஸ்வபாவத்தாலும் கட்டப்பட்டிருக்கிறேன். ஆனதால் இஷ்டமானவரத்தை என்னிடம் பெற்றுக்கொள்ளும்" என்று அனுக்ரஹித்தார்.

17–31. லோகத்தை ஜயித்தவராகிய அந்தப் பிருது சக்ரவர்த்தியானவர் பகவானுடைய இம்மாதிரியான ஆக்ஞையைச் சிரஸால் வகித்தார். அப்பொழுது மஹேந்திரன் பிரீதியுடன் பிருதுவின் பாதங்களில் வணங்கினார். தாம் செய்த கார்யத்தை நினைத்து வெட்கமடைந்திருக்கும் அவரைப் பிருது சக்கரவர்த்தி

பிரீதியுடன் தழுவி, அவரிடமிருந்து விரோதத்தை விட்டார். ஸகல ஜகத்ருடியாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணு தம்முடைய லோகஞ் செல்ல வேண்டியவரானாலும், பிருகு சக்கரவத்தியால் மிகவும் பூஜிக்கப்பட்டு, அவருடைய விசேஷ பக்தியால் சந்தோஷமடைந்து, தாமரை மலர் போன்ற கண்களால் பிருதுவை அனுக் கிரஹித்து அவ்விடம் கொஞ்சநேரம் தாமதித்தார். அரசர்களுக்குள் முந்தியவராகிய அந்த பிருதுவானவர் அப்படிப்பட்ட பகவானைக் தரிசித்துக் கைகூப்பி ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி, அதனால் கண்டமடைத்துப் பேச முடியாதவராகி மனத்தில் பகவானைத் தியானித்துக் கொண்டிருந்தார். இப்படி கொஞ்ச நேரம் சென்றபின் பிருதுவானவர் கண்களை துடைத்துக்கொண்டு கண்களுக்கு எதிரிலிருப்பவரும், பூமியின் மீது காலை ஊன்றிக் கொண்டவருமான பகவானை நோக்கி, "ஓ கைவல்யத்திற்கு அதிபதியே, பிரபுவே. வரங்களைக் கொடுப்பவரே! அஹங்கார ஸ்வபாவமுள்ள ப்ரஹ்மதேவர் முதலியவர்களுக்கும் அதிபதியான உம்மிடத்திலிருந்து நாரகிகளான பிராணிகளுக்கும் கிடைக்கக்கூடிய வரத்தை வித்வான் அபேக்ஷிப்பானா? ஆனதால் எனக்கு வரத்தில அபேக்ஷையில்லை மகான்களுடைய முகமாகப் பெருகி வரும் உம்முடைய பாதாரவிந்தத்தின் மதுவானது கைவல்யத்திலும் கிடைப்பது அரிதாகையால் அந்தக் கைவல்யமும் எனக்கு வேண்டாம். உம்முடைய கதையைக் கேட்பதற்கு அநேக காதுகளை எனக்கு கொடும் இதுவே எனக்கு வேண்டிய வரம்.

ஓ உத்தமசுலோக! நல்வினையைக் கொடுக்கும்

பெயருள்ளவரே! உம்முடைய பாதாரவிந்தத்தின் மதுவானது (உம்முடைய சரிதமானது) மஹான்களால் உபதேசிக்கப்பட்டால் தத்வ மார்க்கத்தை மறந்தவர் களான அற்ப யோகிகளுக்கும் திவ்ய ஞானத்தைக் கொடுக்கும். ஆனதால் மற்ற வரங்களால் பயனென்ன? (பக்தியினாலேயே மோக்ஷங் கிடைக்குமென்று தாத்பர்யம்.) ஓ மங்களகரமான கீர்த்தியுள்ளவரே! பெரியோர்கள் முகமாக ஒரு தடவையாவது தெய்வச் செயலாகக் புண்யகரமான உம்முடைய சரிதத்தை கேட்டவன் குணத்தையறியும் சுபாவமுள்ளவனானால் அதில் ஆசைப்படாமலிருப்பானா? அப்படி ஆஸக்தி அடையாமலிருந்தால் அவன் பசுவிற்கு ஒப்பானவனா கிறான். லக்ஷ்மீதேவியானவள் ஸகல புருஷார்த்தங்களை அடையவிரும்பி அந்தப் பக்தியே தனக்கு வேண்டுமென்று கேட்டுக் கொண்டாள். ஸ்ரீதேவிபோல் நானும் ஸகல புருஷர்களுக்குள் சிறந்தவரும், ஸகல குணங்களுக்கு இருப்பிடமுமான உம்மை மிகுந்த ஆசையுடன் பூஜிக்கிறேன். ஒரே விஷயத்திற்காக முயற்சிப்பவர்களுமான எங்களிருவர்களுக்கும் கலகம் உண்டாகாமலிருக்குமா? ஓ ஜகதீச! நாங்கள் ஒரே காரியத்திற்காக முயன்றவர்களாகையால் லோக மாதாவாகிய லக்ஷ்மீதேவியுடன் எனக்கு விரோதம் உண்டானாலும் உமக்கு என்னிடத்தில் தான் பிரியமிருக்கும். நீர் தீனர்களிடத்தில் பிரீதி செய்யும் ஸ்வபாவமுள்ளவர்; மேலும் தம்முடைய மஹிமையால் திருப்தி யடைந்தவராகிய உமக்கு ஸ்ரீ தேவியால் என்ன பிரயோஜனம்? ஸாதுக்கள் ஞானம் வந்த பிறகும் மாயாகாரியத்தில் ஸம்பந்தப்படாதவரான உம்மையே தியானிக்கிறார்கள். ஓ பகவான்! அவர்களுக்கு உம்முடைய பாதங்களை ஸ்மரிப்பதைவிட வேறு

பயனிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மேலும் "இஷ்டமானவரத்தை கேட்கலாம்" என்று உம்மால் சொல்லப்பட்ட வார்த்தை என்னை ஏமாற்றுவதற்காகச் சொல்லப்பட்டதென்று நினைக்கிறேன். உம்முடைய வார்த்தையால் மோஹித்தே ஜனங்கள் கர்மத்தை செய்கிறார்கள். ஆனதால் ஓ ஈச! உம்முடைய மாயையால் பரமாத்ம ஞான மில்லாமலிருக்கும் ஜனத்தைக் காப்பாற்ற வேண்டும். தகப்பன் புத்திரனுக்கு அனுகூலத்தைச் செய்வதுபோல நீர் எனக்கு இதமானதைக் செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

32–40. அதனைக்கேட்ட பகவான் அரசனை நோக்கி, "இம்மாதிரியான எண்ணம் உண்டானது தெய்வாதீனமேயாம். என்னிடத்தில் பக்தி செய்வதால் என்னுடைய மாயாபந்தம் நிவர்த்தியாகும்; நீர் கேட்டுக் கொண்டபடி என்னிடத்தில் உமக்கு பக்தி உண்டாகட்டும். என்னுடைய ஆக்ஞையின் படி நடப்பவனுக்கு ஸகல மங்களமும் உண்டாகும். ஆனதால் என் உத்தரவின்படி நீர் நடக்கவேண்டும் என்னிடத்தில் ஏகாந்த பக்திசெய்பவர்கள் ஸ்வர்க்கம், மோக்ஷம், நரகம் ஆகிய இவைகளை ஸமமாகப் பார்க்கிறார்கள். நல்ல நிச்சயஞ் செய்து கொண்மூர் என்னுடைய வார்த்தையில் சிரத்தை வைத்து இந்திரனிடமிருந்து கோபத்தை நீர் விட்டபடியால் உம்மிடத்தில் நான் ஸந்தோஷமடைந்தேன். கோபத்தை யடக்குவது மிகவும் கஷ்டமான காரியமானாலும், நீர் கோபத்தை ஜயித்தபடியால் என்னை பூஜித்ததாக ஆயிற்று" என்று பிருது சக்ரவர்த்தியின் வார்த்தையைப் புகழ்ந்து, அரசரால் திரும்பவும் பூஜிக்கப்பட்டு அவரை அனுக்கிரஹித்தார். சக்ரவர்த்தியினுடைய

யாகத்திற்காக வந்தவர்களான தேவர்கள், மஹர்ஷிகள், பிதிருக்கள், கந்தர்வர்கள், ஸித்தர்கள், சாரணர்கள், பன்னகர்கள், கின்னரர்கள், அப்ஸரஸுக்கள் முதலிய தேவர்கள், ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் பூதங்கள் ஆகிய இவர்களெல்லாரையும் அரசர் ஸ்ரீ மஹாவிஷ்ணுவாகப் பாவித்து வாக்கினாலும் மனத்திலும், அஞ்சலியாலும், பக்தியாலும் பூஜித்தார். அவர்களும் மிகுந்த சந்தோஷத்துடன் தங்கள் தங்கள் இருப்பிடஞ் சென்றார்கள். பின்பு அரசரும் அவருடைய உபாத்தியாயரும் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது அவர்களுடைய மனத்தை அபஹரித்துக் கொண்டு பகவானே தம்முடைய லோகஞ் சென்றார். பிருது சக்ரவர்த்தியும் தமக்குத் தரிசனங் கொடுத்து மறைந்தவரும் தேவர்களுக்குத் தேவருமான வாஸுதேவருக்கு நமஸ்காரஞ் செய்து தம்முடைய நகரஞ் சென்றான்.

நோட்டு

பூமியின் மீது: தேவர்கள் பூமியின் மீது நிற்பது வழக்கமில்லை. ஆனாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் பிருதுவினிடத்தில் மிகுந்த சந்தோஷமுள்ளவராக இருந்தபடியால் தம்முடைய ஸ்வரூபத்தை மறந்து பூமியில் நின்றார். மேலும் அவர் சந்தோஷத்தால் பரவசராக இருந்தபடியால் பூமியில் விழாமலிருப் பதற்காகக் கருடனுடைய தோளைப் பிடித்துக் கொண்டார். பகவான் பக்தர்களுக்கு சுவாதீனரென்று கருத்து — ஸ்ரீ த., வீர.

பிருது ராஜ்யபாலனஞ் செய்தது

1–7 அரசன் நகரத்திற்கு வருவதற்கு முன்னமே ஜனங்கள் பட்டணத்தை அலங்கரித்தார்கள். எப்படியெனில் முத்துக்களாலும், புஷ்பங்களாலும், மாலைகளாலும், பட்டுகளாலும், சுவர்ண தோரணங்களாலும், அந்தப் பட்டணமானது நாலு பக்கங்களிலும் அலங்கரிக்கப்பட்டது. மேலும் மிக்க வாஸனையுள்ள தூபங்களால் வாஸனை ஏற்றப்பட்டு இருந்தது. வீதிகளிலும், நாற்சந்திகளிலும் சந்தனக் குழம்பு, அகில் குழம்பு இவைகளுள்ள ஜலம் தெளிக்கப்பட்டிருந்தது. புஷ்பங்கள், அட்சதங்கள், பழங்கள், பச்சை நிறமுள்ள திரவியங்கள், நெற்பொரிகள், தீபங்கள் ஆகிய இவைகளால் பூஜிக்கப்பட்டிருந்தன. வாசற்படிகளில் வாழைகளும், பாக்குக் கன்றுகளும் கட்டப்பட்டிருந்தன. மாவிலை தோரணங்கள் எங்கும் கட்டப்பட்டிருந்தன. பின்னும் நகரவாஸிகள் தீபங்கள், காணிக்கைகள், மங்கள திரவியங்கள் ஆகிய இவைகளை எடுத்துக்கொண்டு அரசனை எதிர்கொண்டு அழைத்தார்கள். அழகான குண்டலங்களால் பிரகாசிக்கும் கன்னிகைகளும் அரசனுக்கெதிரே சென்றார்கள்.

இப்படிப் பிரஜைகளால் உபசரிக்கப்பட்டு, சங்கம் துந்துபி முதலிய வாத்திய கோஷத்துடனும், ரித்விக்குகளுடைய ஸ்வஸ்திவாசன சப்தத்துடனும் அரசன் அரண்மனைக்குச் சென்றார். எல்லாராலும் துதிக்கப்பட்டும் அரசன் கர்வமடையவில்லை.

பட்டணத்திய ஜனங்களையும், தேசத்திய ஜனங்களை யும், அவரவர்களுக்குத் தக்கபடி பிரியத்துடன் உபசரித்தார். தோஷமற்ற சரிதமுள்ளவரும் மஹான் களுக்குள் சிறந்தவருமான அந்தச் சக்கரவர்த்தி யானவர் மேலான அனேக காரியங்களைச் செய்து; தம்முடைய கீர்த்தியை உலகத்தில் பரவச் செய்து பூமியைப் பரிபாலனஞ் செய்து பரமபதம் அடைந்தார்.

8. "ஓ சௌனக! தோஷமற்ற ஸகல குணங்களால் நிறைந்ததும் பெரியோர்களால் பூஜிக்கப்பட்டதுமான ஆதிராஜனுடைய கீர்த்தியை மேற்கண்டபடி வர்ணிக்கும் மைத்திரேயரை நோக்கிப் பாகவதர்களுக்குள் சிறந்தவரான விதுரர் பின்வருமாறு கேட்கலானார்" என்று ஸூதர் சொன்னார்.

9–10 "ஓ மைத்திரேயரே! பிராம்மணர்களால் பட்டாபிஷேகஞ் செய்யப்பட்ட அந்தப் பிருது சக்கரவர்த்தி தேவர்களால் அடையக்கூடிய கௌர வத்தை அடைந்து, ஸ்ரீமகாவிஷ்ணுவின் அம்சமுள்ள வராகிப் பூமியினிடமிருந்து சகலவஸ்துக்களைக் கறந்தாரல்லவா? அந்த ஆதிராஜருடைய விக்கிர மத்தால் அனுபவிக்கப்பட்ட காமத்தையே பிந்திய ஜனங்களும் லோக பாலகர்களும் மற்ற அரசர்களும் இப்பொழுதும் உபஜீவித்திறார்கள். அவருடைய கீர்த்தியை வித்வானாகிய எவன்தான் கேட்க விரும்ப மாட்டான்? ஆனதால் சுத்தமாகிய அவருடைய சரிதத்தைச் சொல்லும்" என்று விதுரர் கேட்டார்.

11–15 அதனைக் கேட்ட மைத்திரேயர் விதுரரை

நோக்கி, "கங்கா நதிக்கும் யமுனா நதிக்கும் மத்தியிலுள்ள க்ஷேத்திரத்தில் வசித்துக் கொண்டு, புண்ணியத்தைக் குறைக்க விரும்பி பிராரப்த கர்மத்தால் கிடைத்த போகங்களை அனுபவித்தார். மேலும் அவர் ஏழு துவீபங்களுக்கும் தாமே அரசராக இருந்தார். அவருடைய ஆக்ஞையானது பிராம்மணர்கள் பகவத் பக்தர்கள் ஆகிய இவர்களைத் தவிர மற்றவர்களிடம் தடையற்றிருந்தது. ஒரு காலத்தில் அந்த அரசன் மகாசத்ரத்தில் தீக்ஷை செய்துகொண்டார். அதில் ப்ரஹ்மரிஷிகளும், தேவரிஷிகளும், தேவர்களும் கூடியிருந்தார்கள். அந்த ஸதஸ்ஸில் அரசரால் தக்கபடி மரியாதை செய்யப்பட்ட பெரியோர்களெல்லோரும் உட்கார்ந்திருக்கும்பொழுது நக்ஷத்திரங்களின் நடுவிலிருந்து சந்திரன் எழுந்திருந்தாற்போல் அரசர் எழுந்திருந்தார். அவர் உயரமான சரீரமுள்ளவர்; பருத்தவைகளும், நீண்டவைகளுமான கைகளுள்ளவர்; பொன்னிற முள்ளவர்; செந்தாமரை போன்ற கண்களுள்ளவர். அழகான மூக்குள்ளவர். பிரஸன்ன முகமுள்ளவர். பருத்த தோள்களுள்ளவர். அழகான பற்களுள்வர். ரமணீயமான சிரிப்புள்ளவர். மூன்று மடிப்புள்ளதும் அரசு இலைபோன்ற வடிவமான வயிறுள்ளவர். சுழல் போன்ற கொப்பூழுள்ளவர், தேஜசுள்ளவர், சுவர்ணம் போல் பிரகாசிக்கும் தொடைகளுள்ளவர், உயரமான முன்காலுள்ளவர் சூட்சுமங்களும், சுருட்டைகளும், கருமை நிறமுள்ளவைகளுமான தலை மயிருள்ளவர். சங்கம் போன்ற கழுத்துள்ளவர். விலையுயர்ந்ததான ஒரு பட்டையுடுத்திக் கொண்டும் மற்றொன்றை உத்தரீயமாகவும் தரித்திருப்பவர். விரதத்திற்காக ஆபரணங்களைத் தரித்துக் கொள்ளாமலும் இருந்தார். ஆனாலும் அவருடைய ஸகல அவயவங்களும் காந்தி

பொருந்தியவைகளாக இருந்தன. கிருஷ்ணாஜினத்தைத் தரித்திருந்தார். தர்ப்பத்தைக் கையில் வைத்துக் கொண்டிருந்தார். உசிதமான காரியங்களைச் செய்தவர் தாபத்தைப் போக்கக் கூடியவைகளும், அழகானவை களுமான கருவிழிகளுள்ள கண்களுள்ளவர். இப்படிப் பட்ட அந்தச் சக்கரவர்த்தி எல்லாரையும் ஒரு தடவை பார்த்து ஸதஸ்லிருப்பவர்கள் ஸந்தோஷப் படும்படி கேட்க மதுரமாயும் அழகான பதங்களுள்ளதும் பிரஸன்னமாகவும் சுத்தமாகவும் கம்பீரமான அர்த்தமுள்ளதுமான வார்த்தையைப் பின்வருமாறு அவசரமில்லாமல் சொல்ல ஆரம்பித்தார்.

சபைக்குரியவர்களும் இவ்விடம் வந்திருப்பவர் களுமான ஓ ஸாதுக்களே! கேட்க வேண்டும் தர்மத்தைத் தெரிந்து கொள்ள விரும்பியவர்கள். தங்களுடைய இஷ்டத்தை ஸாதுக்களிடம் தெரிவிக்க வேண்டும். ப்ரஹ்மதேவர் என்னை ஜனங்களுக்கு அரசனாக ஏற்படுத்தியிருக்கிறார். அதனால் நான் பிரஜைகளைக் காப்பாற்றுகிறேன். அவர்களுக்கு ஜீவனத்தை உண்டுபண்ணுகிறேன். அவரவர்களுடைய தர்மத்தை அனுஷ்டிக்கும்படி செய்கிறேன். பிரஜைகளை ரட்சிப்பதால் கர்மசாக்ஷியான பகவான் ஸந்தோஷ மடைகிறார். மேலும் ஜனங்களைத் தர்மம் தவறாமல் காப்பாற்றும் அரசனுக்கு எந்த லோகம் கிடைக்குமென்று வேதமறிந்தவர்கள் சொல்லுகிறார்களோ, காமங்களைக் கொடுக்கும் அந்த உலகங்கள் என்னால் அடையப் படும். மேலும் எந்த அரசன் பிரஜைகளை தர்மத்தை அனுஷ்டிக்கும்படி செய்யாமல் அவர்களிடம் வரியை மட்டில் பெற்றுக் கொள்கிறானோ, அவன் பிரஜைகள் செய்யும் பாபத்தை அடைகிறான், அவன் செய்த

புண்யமும் நசித்து விடுகிறது.

ஆனதால் ஓ பிரஜைகளே! அரசனாகிய நான் நல்ல உலகத்தை அடையும்பொருட்டு அசூயையில்லா தவர்களாகிப் பகவானிடத்தில் மனதைச் செலுத்தி, தங்கள் தங்கள் தர்மத்தை அனுஷ்டியுங்கள் (கர்மத்தைச் செய்து அதனைப் பகவானுக்கு அர்ப்பணம் செய்யுங்கள்). இப்படிச் செய்வீர்களானால் எனக்கு நல்லது செய்ததாக ஆகும். ஓ சுத்தர்களான பிதிருக்களே! தேவர்களே! மகரிஷிகளே! நீங்கள் நான் சொன்னதை அனுமோதிக்க வேண்டும். பரலோகத்தில் கிடைக்கும் பலனானது செய்கிறவனுக்கும் தூண்டுகிற வனுக்கும் அனுமோதிப்பவனுக்கும் சமமேயாகும் (கர்மத்தை அனுஷ்டிப்பது அவசியமானாலும் அதனைப் பகவதர்ப்பணம் செய்ய வேண்டியதில்லை என்று சொல்லும் சிலரை நோக்கிச் சொல்லுகிறார்) ஓ மிகவும் பூஜ்யர்களே! 'யக்ஞபதியென்ற பரமேசுவரர் ஒருவர் இருக்கிறார்' என்று சிலர் சொல்லுகிறார்கள். இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் காந்தியுள்ளவை களான போகபூமிகளும் சரீரங்களும் சில விடங்களில் காணப்படுகின்றன. பகவானில்லாதவரையில் மேற் காட்டிய பலவகையான ஜகத் இருக்க முடியாதென்று கருத்து.) மேலும் மனு; உத்தானபாதர், துருவர், ராஜசிரேஷ்டராகிய பிரியவிரதர், என்னுடைய பிதாவிற்குப் பிதாவாகிய அங்க மகாராஜன், ப்ரஹ்லாதர், பலி ஆகியவர்களும், இவர்கள் போன்ற மற்றவர்களும் ப்ரஹ்மதேவரும், பரமசிவனும், தங்களுடைய அனுபவத்தால் கர்மங்களைப் பலனைக் கொடுப்பவர் பகவான் ஒருவர் இருக்கிறார் என்று நிச்சயித்திருக் கிறார்கள். மிருத்யுவின் தௌஹித்ரரும், துக்கிக்கத்

தக்கவரும் தர்ம விஷயத்தில் மோகமடைந்தவருமான வேனன் முதலியவர்களைத் தவிர மற்றவர்கள் மேற் காட்டிய ஸாதுக்களின் அபிப்பிராயத்தை அனுசரித் தவர்களேயாம்.

தர்மம், அர்த்தம், காமம், ஸ்வர்க்கம், மோட்சம் இவைகள் ஒன்றோடொன்று சேர்ந்து ஏகரூபமாக இருப்பதால், மேற்காட்டியபடி வித்வான்கள் நினைக்கிறார்கள். (வித்வான்களுடைய அனுபவத்தால் பகவானிருப்பதாகத் தெரிவதால் கர்மத்தாலேயே ஜகத் உண்டாகிறதென்பது சரியல்ல) மேலும் எவருடைய பாதாரவிந்தத்திலிருந்து உண்டான கங்கா நதியானது எப்படிப் பாவங்களைப் போக்கடிக்கிறதோ, எவரைச் சேவிக்க வேண்டுமென்ற விருப்பமே ஒவ்வொரு நாளும் விருத்தியடைந்து துஷ்விகளுக்கு அனேக ஜன்மத்தின் பாபங்களையும் போக்கடிக்கிறதோ, எவருடைய பாதத்தை ஆசிரயித்த புருஷன் மனத்தில் ஸகலமலங் களையும் நிவர்த்தித்துக் கொண்டு விஷயங்களில் பற்றுதல் நீங்கினவனாகி மிகுந்த ஞானபலமுள்ள வனாகிய துக்கத்தைக் கொடுக்கும் ஸம்ஸாரத்தைத் திரும்பவும் அடையமாட்டானோ, அப்படிப்பட்ட பகவானை நீங்கள் மனத்தாலும், வாக்கினாலும், சரீரத்தாலும் தங்களுக்குரிய கர்மங்களாலும் பூஜிக்க வேண்டும். பின்னும் நீங்களெல்லோரும் கபடமில்லாத வர்களாக உங்களுடைய அதிகாரத்திற்குத் தக்கபடி அர்த்தஸித்தியை உத்தேசித்து இஷ்டத்தைக் கொடுக்கும் பகவானுடைய தாமரை மலர்போன்ற பாதங்களை உபாஸியுங்கள்.

இந்தப் பகவான் உண்மையில் சுத்தரும்,

விஞ்ஞானகனரும், நிர்க்குணமாயிருந்ததும் கர்ம மார்க்கத்தில் பலவகையான குணங்களுள்ள யக்ஞஸ்வரூபியாக இருக்கிறார். அந்தக் குணங்கள் எவையென்றால், யாகத்திற்கு வேண்டிய திரவியங்கள் (நெல் முதலியவை), வெண்மை முதலிய குணங்கள், நெல்லைக் குத்தி அரிசியாக்குவது முதலிய கிரியைகள், மந்திரங்கள், யாகத்தால் கிடைக்கும் உபகாரம், ஸங்கல்பம், பதார்த்தங்களுடைய சக்தி, ஜ்யோதிஷ்டோமம் முதலிய பெயர்கள் ஆகிய இவைகளேயாம். பிரதானம், காலம், வாஸனை, அதிருஷ்டம் ஆகிய இவைகளால் உண்டுபண்ணப்பட்ட சரீரத்தில் இந்தப் பிரபுவானவர் புத்தி ரூபமாக இருந்து ஆனந்த ரூபியாகவும் யாகத்தின் பலனாகவும் பிரகாசிக்கிறார். அக்கினியானது உண்மையில் ஒரே வகையேயானாலும் தனக்கு ஆசிரயமாகிய கட்டையின் நீளம் முதலியவை களைத் தான் அடைந்திருப்பதுபோல் தோன்றுகிற தல்லவா? (பகவானை உபாஸிக்கும்படி சொல்லி விட்டுப் பக்தி செய்து கொண்டிருப்பவர்களைப் பற்றி புகழ்கிறார்.) ஸகல தேவர்களுக்கும் அதிபதியும், அஞ்ஞானத்தைப் போக்கி ஞானத்தைக் கொடுப்ப வருமான ஸ்ரீமகாவிஷ்ணுவை என்னுடைய பிரஜை களுக்குள் எவர்கள் அவரவர்களுடைய தர்மத்தை அனுஷ்டிப்பதால் பூஜிக்கிறார்களோ, அவர்கள் என்னை அனுக்கிரகிப்பவர்களாக ஆகிறார்கள்.

மேலும் பொறுமை, தபஸ், வித்தை ஆகிய இவைகளால் மிகவும் பிரகாசிப்பவர்களும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பக்தர்களுமான ப்ராஹ்மணர்களிடத்தில் மிகுந்த ஐசுவரியத்தாலுண்டாகும் அரசர்களுடைய மதமானது ஒருபொழுதும் செல்ல வேண்டாம்.

சாசுவதராகிய புருஷோத்தமருக்கு ப்ராஹ்மணர்களே தெய்வம், பெரியோர்களுக்குள் சிறந்தவராகிய ஸ்ரீ மஹாவிஷ்ணு ப்ராஹ்மணர்களுடைய பாதாரவிந்தத்தை நமஸ்கரித்ததினாலேயே நாசமற்றவளான லக்ஷ்மீ தேவியையும் உலகத்தில் பரிசுத்தமான கீர்த்தியையும் அடைந்தார். ஸகல ஜனங்களுடைய ஹிருதய குகையில் வசிப்பவரும், தாமாகப் பிரகாசிப்பவரும், ப்ராஹ்மணர்களிடத்தில் பிரீதியுள்ளவருமான பகவான், ப்ராஹ்மணர்களைச் சேவிப்பவனிடத்திலேயே ஸந்தோஷப் படுகிறார். ஆனதுபற்றி, பகவத் தர்மத்தில் ஆசை யுள்வர்களும், வணக்க முள்ளவர்களுமான நீங்கள் ப்ராஹ்மணர்களையே சேவிக்க வேண்டும். பிராம்மணர் களை சேவிப்பதானாலேயே புருஷனுடைய சித்தமானது மிகவும் சுத்தமாகிறது. ப்ராஹ்மணர்களை விட தேவர்களுக்கு முகமாக அக்கினியானது வேறு இருக்கிறதா? அவர்களைச் சேவிப்பதினாலேயே ஆத்மஞானமும் மோக்ஷமும் கிடைக்கும். (எப்பொழுதும் ப்ராஹ்மணர்களை சேவிப்பதால் அக்னியில் யாகம் முதலியவைகள் செய்ய முடியாவிடினும் அதனால் கிடைக்கும் ஸகல பலனும் இதனாலேயே உண்டாகிறது என்பது கருத்து) ஸகல உபநிஷத்துக்களால் பிரக்ஞான ஸ்வரூபரென்று சொல்லப்படும் நித்யரான பரமாத்மா வானவர் தத்துவத்தை அறிந்தவர்களால் சிரத்தையுடன் ப்ராஹ்மணர்களுடைய முகத்தில் ஹோமம் பண்ணப் படும் ஹவிஸ்ஸை எப்படிப் புஜிக்கிறாரோ, அப்படி சைதன்யமில்லாத அக்கினியில் ஹோமம் பண்ணப் படும் ஹவிஸ்ஸைப் புசிக்கிறதில்லை. எந்தப் ப்ராஹ்ம மணர்கள் நித்யமும், சுத்தமானதும், புராதனமுமான வேதத்தைச் சிரத்தை, தபஸ், மங்களம், மௌனம், ஸம்யமம், சித்தத்தை ஒருவகையாகச் செலுத்துதல்

ஆகிய இவைகளால் தரித்து, அதன் அர்த்தத்தை விசாரிக்கிறார்களோ, எந்த (வேதத்தில் இந்த ஜகத்தானது கண்ணாடியில் பிரதிபிம்பம்போல் பிரகாசிக்கிறதோ. அப்படிப்பட்ட ப்ராஹ்மணர்களுடைய பாதாரவிந்தத்தில் ஒட்டிய தூளியை என் ஆயுளுள்ள வரையில் கிரீடத்தில் வகித்துக் கொண்டிருப்பேன்; எப்பொழுதும் அதனைத் தரிப்பதால் ஸகல பாவங்களும் நாசமடைகின்றன; ஸகல குணங்களும் பிரகாசிக்கின்றன, குணங்களுக்கு இருப்பிடமாயும், நல்ல சுபாவத்தையே தனமாக உடையவனும், நன்றியுள்ளவனும், சிரத்தையுள்ளவனுமான புருஷனை ஸகல ஸம்பத்துக்களும் அடைகின்றன. ஆனதால் ப்ராஹ்மணர்களுடைய கூட்டமும், பக்தர்களுடைய கூட்டமும், பசுக்களுடைய கூட்டமும் பகவானும், அவரைச் சேர்ந்தவர்களும் என்னிடத்தில் தயவு செய்யட்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

44–51 அதனைக் கேட்டுப் பிதிருக்களும், தேவர் களும், ப்ராஹ்மணர்களும், ஸாதுக்களும் ஸந்தோஷத் துடன் 'நல்லது நல்லது' என்று சொல்லி அரசனை கொண்டாடினார்கள். உலகத்தில் நல்ல புத்திரனால் தகப்பன் நல்ல உலகத்தை அடைகிறான்' என்று வேதத்தில் சொல்லியிருப்பதானது உண்மையானது. ப்ராஹ்மணர்களுடைய சாபத்தால் அடிக்கப்பட்ட வேனன் ஸத்புத்திரராகிய உம்மால் நரகத்திலிருந்து காப்பாற்றப்பட்டான். ஹிரண்யகசிபு என்னும் அசுரன் பகவானை நிந்தித்து, அதனால் நரகத்தை யடைய வேண்டியவனாக இருந்தும், புத்திரனாகிய பிரகலாத ருடைய மகிமையால் நல்ல கதியை அடைந்தான். 'வீரர்களுக்குள் சிறந்தவராகிய ஓ அரசனே! ஸகல

லோகங்களுக்கும் நாதனாகிய பகவானிடத்தில் உமக்கு இம்மாதிரியான பக்தி உண்டாகி இருப்பதால் வெகுகாலம் பூமியைப் பரிபாலனஞ் செய்து கொண்டு ஜீவித்திரும், மங்களகரரும், பரிசுத்தமுமான கீர்த்தி யுள்ள ஓ மகாராஜ்! நல்வினையைக் கொடுக்கும் கீர்த்தியுள்ளவரும், ப்ராஹ்மணர்களையே தெய்வமாகக் கொண்டவருமான பகவானுடைய கதையை நீர் சொல்லுவதால் அரசனாகிய உம்மை முகுந்தராகவே நாங்கள் நினைக்கிறோம். ஓ நாதா! நீர் பிரஜை களுக்குத் தர்மத்தை உபதேசிப்பதானது அதிக ஆச்சரியமில்லை. கருணையுள்ள மகான்களுக்குப் பிரஜைகளிடத்தில் கருணை வைப்பது இயல்பேயாம். கர்மமார்க்கத்தில் கஷ்டப்படுகிறவர்களும் ஆத்மஞான மற்றவர்களுமான எங்களுக்கு அஞ்ஞானத்தைக் கடக்கும் மார்க்கமானது உம்மால் இப்பொழுது உபதேசிக்கப்பட்டது. எந்தப் பகவான் ப்ராஹ்மண ஜாதியில் பிரவேசித்து க்ஷத்திரியனையும், க்ஷத்திரிய னிடத்தில் பிரவேசித்து ப்ராஹ்மணர்களையும், அவ்விரண்டிலும் பிரவேசித்து இந்த ஜகத்தையும் தம்முடைய தேஜஸ்ஸைக் கொண்டு காப்பாற்று கிறாரோ, அந்த பகவத் சுரூபமும், மிகுந்த ஸத்வகுண முள்ளவரும், மகாபுருஷருமான உமக்கு நமஸ்காரம்" என்று சொன்னார்கள்.

அத்தியாயம்–22

பிருதுவிற்கு ஸனத்குமாரர் ஞானத்தை உபதேசித்தது

1–16. மிகுந்த பராக்கிரமுள்ள பிருதுவை நோக்கி இம்மாதிரி ஜனங்கள் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது சூரியன் போன்ற காந்தியுள்ள நான்கு மஹரிஷிகள் அவ்விடம் வந்தார்கள். ஆகாயத்திலிருந்து இறங்குகிறவர்களும், சித்தேசுவர்களும், தம்முடைய தேஜஸ்ஸினால் லோகத்தைப் பரிசுத்தப்படுத்துகிறவர் களுமான ஸனத்குமாரர் முதலியவர்களை அரசரும் அவருடைய வேலைக்காரர்களும் தரிசித்தார்கள் அவர்களைக் கண்டவுடன் வெளியிற்சென்ற பிராணன் களை திரும்பவும் அடைய வேண்டுமென்ற எண்ணத் துடன், ஸுதஸ்யர்களுடனும், மந்திரி முதலியவர் களுடனும் பிருது சக்கரவர்த்தி எழுந்திருந்து எதிர்கொண்டழைத்தார். அது ஜீவன், கந்தம் முதலிய குணங்களைக்கண்டு அவைகளைக் கிரஹிக்க ஆசைப் பட்டுத் தயாரானது போல இருந்தது. அவர்களுடைய கௌரவத்தால் அரசன் அவர்களுக்கு வசப்பட்ட வராகித் தலைவணங்கி, சாஸ்திர முறைப்படி அர்க்கியம் முதலியவைகளைக் கொடுத்துப் பூசித்தார். பின்னுமவர் பெரியோர்களுடைய அனுஷ்டானத்தின் படி அந்த சித்தர்களுடைய பாதங்களை அலம்பி அந்த சுத்தமான தீர்த்ததைத் தலையில் புரோக்ஷித்து கொண்டார். இன்னுமவர் சுவர்ணமயமான ஆஸனத்தில் அவர்களை வீற்றிருக்கச் செய்தார். அப்பொழுது அவர்கள் தங்கள் தங்கள் வேதிகளில் பிரகாசிக்கும் அக்கினிபோலப் பிரகாசித்தார்கள்

அரசர் சிரத்தையுடன், இந்திரியங்களை அடக்கிக் கொண்டும், பரம சிவனுக்கும் முந்தி பிறந்தவர் களுமான அந்த சித்தர்களை நோக்கி, "ஓ ஸகல மங்களங்களுக்கும் இருப்பிடமான சித்தர்களே! உங்களுடைய தரிசனம் யோகிகளுக்கும் கிடைப்பதரிது. உலகம் முழுவதும் சஞ்சரிப்பவர்களானாலும் எவர் களை ஜனங்கள் எங்குமிருக்கும் ஆத்மாவைப் போலப் பார்க்கவில்லையோ, எவர்கள் ஆத்ம தரிசனத்திற்குக் காரணர்களாக இருக்கிறார்களோ, அப்படிப்பட்ட உங்களுடைய தரிசனம் எனக்கு கிடைத்தது ஆச்சரியம்! என்ன புண்ணியஞ் செய்தேன். எதனிடத்தில் ப்ராஹ்மணர்களும் ஸ்ரீ பரமசிவனும், மஹா விஷ்ணுவும், அவருடைய பக்தர்களும், சந்தோஷப்படுகிறார்களோ, அவனுக்கு இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் எதுதான் கிடைக்காது? எவர்களுடைய கிருஹத்திற்குப் பெரியோர்கள் சென்று தீர்த்தம், திருமணம், பூமி. யஜமானன், அவனுடைய வேலைக்காரர்கள் ஆகிய இவர்களை அங்கீகரிக்கிறார்களோ. அவர்கள் பணமில்லா தவர்களானாலும் மேலானவர்கள். எவர்களுடைய கிரகமானது பெரியோர்களுடைய பாத ஸ்பர்சத்தால் சுத்தமாகிறதில்லையோ, அந்த கிருஹங்கள் ஸம்பந்துக் களால் நிறைந்திருந்தாலும் ஸர்ப்பங்கள் வசிக்கும் மரங்களுக்கொப்பானவைகளேயாம். ஓ ப்ராஹ்மண சிரேஷ்டர்களே! நல்வரவா, மோஷத்தையடைய விரும்பி, பால்யத்திலேயே பெரியவைகளான விரதங்களைச் சிரத்தையுடன் அனுஷ்டிக்கிறீர்கள். இந்திரியங்களைத் திருப்தி செய்வதற்காகவே புருஷார்த்தங்களைத் தெரிந்து கொள்கிறவர்களும், வியஸனங்களுக்கும் இருப்பிடமான சம்சாரத்தில் தங்களுடைய கர்மங்களால் மூழ்கினவர்களுமான

எங்களுக்கு க்ஷேமம் கிடைக்குமா? (பிறரை க்ஷேமம் விசாரிக்க வேண்டுமேயன்றி தங்களுடைய க்ஷேமத்தைத் தாங்களே விசாரிப்பது உசிதமா எனறால் அடுத்த சுலோகத்தால் சமாதானஞ் சொல்லப்படுகிறது. ஆத்மாவினிடத்திலேயே ரமித்துக்கொண்டிருக்கும் உங்களுக்கு க்ஷேமம், அக்ஷேமம் என்ற பேதங்களில்லா லாமையால் நீங்கள் க்ஷேமமா என்று கேட்பது உசிதமல்ல. ஆனதால் தபஸ்விகளுக்கு மித்திரர்களான உங்களிடத்தில் மிகுந்த பிரீதியுடன் நான் கேட்கிறேன். "சம்சாரிகளான நாங்கள் எதனைச் செய்தால் க்ஷேமத்தை யடைவோம்." அதனைச் சொல்லவேண்டும் யோகிகளுக்கு ஆத்மாவும், ஆத்மாவைப் பிரகாசிக்கச் செய்பவருமான பகவான் பக்தர்களை அனுக்கிரஹிப் பதற்காகவே சித்தர் வேஷங்கொண்டு சஞ்சரிக்கிறார் என்றார்.

17–40. பிருது சக்ரவர்த்தியினுடைய கம்பீர அர்த்தமுள்ளதுமான நல்ல வார்த்தையைக் கேட்டு ஸனத் குமாரர் சிரித்துக்கொண்டு, அரசனை நோக்கி, "ஓ மஹாராஜ! நன்றாகக் கேட்டீர். நீர் ஸகல பிராணி களுக்கும் அனுகூலத்தை செய்யும் சுபாவமுள்ளவர். மிகவும் வித்வான்; சாதுக்களுடைய நடை இம்மாதிரி யானது. சாதுக்களுடைய சம்பாஷனையும் கேள்வியும் எல்லோருக்கும் சுகத்தை உண்டு பண்ணுகிறது. ஓ மஹாராஜ! மதுவென்னும் அசுரனைக் கொன்றவரான பகவானுடைய பாதாரவிந்தத்தில் நிரந்தரமான பக்தி உமக்கிருக்கிறது. அந்த பக்தியானது நிவர்த்திக்க முடியாத, அந்தகரணத்தின் மலத்தைப் போக்கடிக்கும் சாஸ்திரங்களை நன்றாக விசாரித்தார். ஆத்மாவைத் தவிர மற்ற விஷயங்களில் வைராக்கியம், நிர்குண

ப்ரஹ்மத்தினிடத்தில் பிரீதி வைப்பது ஆகிய இவ்விரண்டும் மனிதர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியதென்று நிச்சயமாக ஏற்படுகிறது. ப்ரஹ்மத்தினிடத்தில் பிரீதியுண்டாக வேண்டுமானால் சிரத்தையாலும் பகவத் தர்மத்தை அனுஷ்டிப்பதாலும். அத்யாத்ம விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற விருப்பத்தாலும் பகவானை உபாசிப்பதாலும், புண்ணியகரமான பகவத் கதையைக் கேட்பதாலும் பிரஹ்மத்தினிடம் நிரந்தரமான பிரீதி உண்டாகிறது. பணத்தாலேயே சந்தோஷப்படுகிறவர்கள் தாமஸர்கள். இந்திரியங்களையே திருப்தி செய்து அதனால் சந்தோஷப் படுகிறவர்கள் ராஜஸர்கள், அவர்களோடு சேராமலிருப்பதாலும், அவர்களுக்கிஷ்டமான அர்த்த காமங்களில் ஆசைப்படாமலிருப்பதாலும், நிர்ஜனமான இடத்தில் வசிக்க வேண்டுமென்ற விருப்பத்தாலும், பரமாத்மாவிடத்தில் பிரீதி உண்டாகிறது. அவைகளும் பகவானுடைய குணாமிருதத்தை பானம் பண்ணாத வரையில் (கதையைக் கேட்காவிடில்) உண்டாகாது. மேலும் பரமஹம்சர்களாகிய பெரியோர்களுடைய அனுஷ்டானத்தை அனுஸரிப்பதாலும். பிறரை ஹிம்ஸிக்காமலிருப்பதாலும். ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதமாகிய மேலான மதுவைப் பானம் பண்ணுவதாலும், இந்திரியங்களை அடக்குவதாலும், பலத்தை உத்தேசித்துக் கர்மாக்களைச் செய்யாமலிருப்பதாலும் சீதம், உஷ்ணம் இவைகளைச் சகித்திருப்பதாலும். ஸ்ரீ விஷ்ணுபக்தர்களுடைய செவிகளுக்கு அலங்காரமான பகவத் குணங்களை அடிக்கடி உச்சரிப்பதாலும் காரிய காரண ஸ்வரூபமும் குணங்களற்றதுமான ப்ரஹ்மத்தினிடத்தில் விருத்தியடையும் பக்தியாலும் விஷயங்களில் ஆசையை ஒழித்து பரமாத்மாவிடத்தில்

மிகுந்த பிரீதி உண்டாகிறது. எப்பொழுது பிரம்மத்தினிடத்தில் பிரீதியுண்டாகிறதோ அப்பொது தான் நல்ல ஆசாரியனை அடைவான்; அப்பொழுது ஞானம், வைராக்கியம் இவைகள் விருத்தியடைந்து அவைகளுடைய பலத்தால் புருஷன் அவித்யை, ராகம், துவேஷம் அபிநிவேசம் இவைகளுள்ளதும், ஜீவனை மறைக்கக் கூடியதுமான அஹங்கார தத்துவமான ஹிருதயத்தில் மறுபடி இவைகள் முளைக்காமலிருக்கும் படி, அக்கினியானது தனக்கு ஆசிரியமான கட்டையைப் போல், எரிக்கிறான், ஹிருதயமாகிற உபாதியானது எரிக்கப்பட்டால் புருஷனுக்குக் கர்த்துருத்வம் முதலிய குணங்கள் நிவர்த்தியாகின்றன. அப்பொழுது புருஷன் தனக்கு வெளியிலிருக்கும் வஸ்துக்களையும், உள்ளிருக்கும் சுக துக்காதிகளையும் பார்க்கிறதில்லை. ஏனென்றால் திருச்யம் (பார்க்கக்கூடிய). திருஷ்டா (பார்ப்பவன்) ஆகிய இவர்களுக்கு எது மறைவை உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறதோ அது நஷ்டமாய்ப் போய் விட்டபடியால் அவனுக்கு அதன் காரியமாகிய சுகதுக்கங்கள் தோன்றுகிறதில்லை. ஸ்வப்பனத்தில் தன்னை அரசனென்று ஆரோபித்துக்கொண்டு சைன்யம் முதலியவைகளைத் தான் பார்ப்பவனென்றும், அவைகள் தன்னால் பார்க்கக் கூடியவைகளென்றும் நினைத்த புருஷனுக்கு அந்த ஸ்வப்னாவஸ்தை நிவர்த்தியான பிறகு அந்த பேத ஞானம் நிவர்த்தியடைகிறதல்லவா? அதுவும் அந்தக் கரணமிருக்கும் காலமாகிய ஜாக்ரதவஸ்தையிலும் (விழித்துக் கொண்டிருக்கும் பொழுதும்), ஸ்வப்பனாவஸ்தையிலும் தன்னையும் (திருஷ்டாவையும் இந்திரிய விஷயத்தையும் (திருச்யத்தையும்), அவைகளின் சம்பந்தத்திற்குக்

காரணமாகிய அகங்காரத்தையும் புருஷன் பார்க்கிறான். சுஷுப்தியில் இம்மாதிரியான பேத ஞானமில்லை. லோகத்தில் பிம்பம். பிரதி பிம்பம் இவைகளின் பேதத்திற்குக் காரணமாகிய ஜலம் கண்ணாடி முதலிய உபாதி ஆகியவைபாலேயே பேத ஞான முண்டாகிறது. உபாதியாகிய ஜலம் முதலியவைகள் இல்லாவிடில் பேதஞானமுண்டாகிறதில்லை. ஆற்றில் கரையோரத்திலிருக்கும் நாணல் முதலியவை தங்களுடைய வேர்களால் மடுவில் இருக்கும் ஜலத்தை அபஹரிப்பது போல, விஷயங்களால் புருஷனுடைய இந்திரியங்கள் இழுக்கப்படுகின்றன. அவைகளால் மனது இழுக்கப்படுகிறது. அந்த மனமானது புத்தியினிடமிருந்து சோதனையே (விசாரிக்கும் ஸாமார்த்தியத்தை) போக்கடிக்கிறது. இது அவிவேகி களால் அறியப்படவில்லை. பின்பு முன் நடந்ததை நினைத்துக் கொள்வதாகிய ஸ்மிருதியானது கெட்டுப் போகிறது. பின்பு விவேகம் மாறிவிடுகிறது. அதனையே ஆத்மநாசமென கவிகள் சொல்லுகிறார்கள். எதனால் மற்ற விஷயங்கள் மிகவும் பிரியங்களாக ஆகின்றனவோ, தன்னுடைய எந்த அபசாரத் தாலேயே ஆத்ம நாசம் ஏற்படுகிறதோ இதைக்காட்டி லும் மேற்பட்ட கெடுதி உலகத்தில் ஒன்றுமில்லை. விஷயங்களையும், காமத்தையும் தியானம் பண்ணு வதாலும், ஆத்மநாசத்தைச் சம்பாதித்துக் கொண்ட தினாலும் ஞானம், விசேஷ ஞானம் இவைகளில்லாத வனாகி ஸ்தாவர ஜன்மத்தை அடைகிறான். மேலும் ஸம்ஸாரத்தைக் கடக்கவிரும்பியவன் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகிய இவைகளுக்கு எவைகளுடைய சேர்க்கை மிகவும் விக்கினமாக இருக்கிறதோ, அந்த உக்கிரமான சம்சாரத்தில் ஆசைப்படக்கூடாது.

மேற்காட்டிய நான்கு வகையான புருஷார்த்தங்களில் நான்காவதாகிய மோக்ஷமே முக்கியமானது என்று சொல்லப்படுகிறது. முந்திய மூன்று புருஷார்த்தங்களும் அநித்யமானவைகள்; காலத்தின் பயமுள்ளவைகள். ப்ரஹ்ம தேவர் முதலிய மேலானவர்களும் தாழ்ந்தவர் களான நம்மை போன்றவர்களும் குணங்களுடைய சம்பந்தத்தால் கிரமமாக உண்டானவர்கள், காலத்தால் கெடுக்கப்பட்ட இஷ்டத்தையுடைய அவர்களுக்கு முக்கியமான க்ஷேமமில்லை. ஓ மஹாராஜ! ஆனதால் தேக்ம், இந்திரியங்கள். பிராணன் புத்தி, அஹங்காரம் இவைகளால் மறைக்கப்பட்ட ஸ்தாவர ஜங்கம ஸ்வரூபிகளான பிராணிகளுடைய ஹிருதயத்தில் எவர் பிரகாசிக்கிறாரோ, க்ஷேத்ரக்ஞனாகிய ஜீவனை எவர் சிட்சிக்கிறாரோ எவர் ப்ரத்யக் ரூபியாக ப்ரகாசிக் கிறாரோ அவர் ஒருவரே இருக்கிறார், அவரைத் தவிர வேறு ஒருவர் இல்லையென்று தெரிந்துகொள்ளும். எவரிடத்தில் இந்த ஜகத்தானது காரியமாகவும் காரணமாகவும் மாயையாகப் புஷ்பமாலையில் ஸர்ப்பம் என்கிற புத்திபோல தோன்றுகிறதோ. விவேகத்தால் நிவர்த்தியாகிறதோ. அப்பேர்ப்பட்ட நித்திய முக்தரும் பரிசுத்தரும் ஏக ஸ்வரூபியும். கர்மவாஸனையற்றவரான பரமாத்மாவைச் சரணமடைகிறேன். விஷயங்களில் பற்றுதலில்லாத புத்தியுள்ளவர்களும், இந்திரியங்களை ஜயித்தவர்களும் ஸாதுக்களுமான யதிகள் எவருடைய தாமரை மலர் போன்ற பாதங்களுடைய விரல்களின் காந்தியைத் தியானஞ் செய்து அகங்காரத்தை போக் கடித்துக் கொள்ளுகிறார்களோ, எல்லாப் பிராணி களாலும் சரணமடையக் கூடிய அப்பேர்ப்பட்ட ஸ்ரீ வாஸு தேவரை உபாஸியும். ஸம்ஸாரமாகிய சமுத்திர மானது காமம் முதலிய ஆறுவகைக் குணங்களாகிய

முதலை, மகரம் இவைகளுள்ளதால். அதனைக் கடப்பது மிகவும் கஷ்டம், சிலர் அதைக் கடப்பதற்குத் தகுந்த ஸாதனங்களில்லாதவர்களாகவே யோகம் முதலிய கடினமான மார்க்கத்தாலும் அதைக் தாண்ட முயல் கிறார்கள். ஆகையால் நீர் பகவானுடைய பூஜிக்கத் தக்க பாதத்தைப் படகாக வைத்துக் கொண்டு தாண்ட முடியாத ஜலமுள்ள சமுத்திரத்தைச் சுகமாகத் தாண்டும்" என்று சொன்னார்.

41–47. அப்பொழுது அரசன் ப்ரஹ்மத்தை அறிந்தவரும் ப்ரஹ்ம தேவருடைய புத்திரருமான ஸனத் குமாரரால் ஆத்ம விஷயமாக உபதேசிக்கப்பட்டதைக் கேட்டு அவரைப் புகழ்ந்து. "ஓ ப்ராஹ்மணோத்தம பக்தர்களிடத்தில் தயவு பண்ணும். ஸ்ரீ மஹா விஷ்ணு வினால் முந்தியே எனக்கு அனுக்கிரஹம் செய்யப் பட்டிருக்கிறது. அதனை நிறைவேற்று வதற்காகவே நீங்கள் வந்து இருக்கிறீர்கள் என்னுடைய சரீரமும் இராஜ்யம் முதலியவைகளும் சாதுக்களுடையதேயாம். அவைகள் எனக்குச் சாதுக்களால் கொடுக்கப் பட்டவைகளே. அப்படியிருக்க எதனை நான் குரு தக்ஷிணையாகக் கொடுப்பேன்? ஆனாலும் என்னுடைய பிராணன், புத்திரர்கள், வீடுகள்! அதிலுள்ள சாமக்கிரிகள், இராஜ்யம், பலம், பூமி, பொக்கிஷம் இவைகள் உங்களுக்கு அதீனங்களே. மேலும் ஸேனாபத்யம், இராஜ்யம், ஸகல உலகங்களுக்கும் அதிபதியாக இருப்பது ஆகிய இவைகள் வேதம், சாஸ்திரம் இவைகளை படித்தவனுக்கே தகுதியானது உலகத்திலுள்ள சொத்து எல்லாம் ப்ராஹ்மணர்களு டையதே. ஆனதால் தனது சொத்தை ப்ராஹ்மணன் அனுபவிக்கிறான்.

பிறருக்குக் கொடுக்கிறான். க்ஷத்திரியன் முதலிய மற்றவர்கள் ப்ராஹ்மணர்களுடைய அனுக்ர ஹத்தால் அன்னத்தைப் புசிக்கிறார்கள் (இராஜ்யம் முதலியவை ப்ராஹ்மணர்களுக்கே சுவாதீனங்கள் என்று கருத்து) வேதங்களை அறிந்தவர்களான எவர்களால் ஆத்ம விஷயமாக நிச்சயமான மார்க்கம் எனக்கு உபதேசிக்கப்பட்டதோ பூரண கிருபையுள்ள அந்த சாதுக்களுக்கு அஞ்சல் செய்ததை விட வேறு எதனை நான் செய்வேன்? அவர்கள் தீனர்களை ஸம்ஸாரத் திலிருந்து உத்தாரணஞ் செய்வதாகிய காரியத்தால் ஸந்தோஷமடையட்டும் தனக்கு ஸ்வாதீனமான தனம் ஏராளமாக இருந்தாலும் அவைகளால் அவர்களுக்குப் பிரத்யுபகாரஞ் செய்யமுடியா" என்று புகழ்ந்தார்.

48–53. இப்படி பிருது சக்ரவர்த்தியால் பூஜிக்கப்பட்ட அந்த யோகேசர்கள் அரசனுடைய சுபாவத்தைப் பற்றி சந்தோஷித்து எல்லோரும் பார்த்திருக்கும் பொழுது ஆகாயத்தில் சென்றார்கள். மகான்களுக்குள் சிறந்தவரான பிருது சக்கரவர்த்தியும் மனத்தை ஒரு வகைப்படுத்தி அத்யாத்ம வித்தையை அப்யஸித்து ஆத்மாவையே தியானித்துக் கொண்டு தம்மைக் கிருதார்த்தராக நினைத்தார். காலத்திற்கும், தேசத்திற்கும், தம்முடைய பலத்திற்கும், பணத்திற்கும் தக்கபடி உசிதமான கர்மங்களை அனுஷ்டித்து அவைகளைப் ப்ரஹ்மார்ப்பணஞ் செய்தார் அவர்கள் கர்மங்களை அனுஷ்டித்தாலும் பலனில் ஆசைப்படாமல் வெகு ஜாக்ரதையுள்ளவராகித் தம்முடைய ஆத் மாவைக் கர்மசாக்ஷியாகவும், பிரகிருதி சம்பந்தமற்ற வருமாக நினைத்தார். இராஜ்யலக்ஷ்மீயுடன் கிருஹத் தில் அவர் வசித்திருந்தாலும், அகங்காரமற்றிருந்ததால்

சூரியன்போல இந்திரியவிஷயங்களில்ஆசைப்படாமலி ருந்தார். இப்படி பிருது சக்ரவர்த்தியானவர் அத்யாத்ம யோகத்தால் பலனை விரும்பாமல் கர்மங்களை அனுஷ்டித்துக் கொண்டு அர்ச்சிஷ் என்னும் தம்முடைய ஸ்திரீயினிடத்தில் விஜிதாச்வன், தூம்ர கேசன், ஹர்யச்வன், திரவிணன் விருகன் என்ற ஐந்து குமாரர்களை யுண்டு பண்ணினார். மேலும், அவர் ஸகல லோக பாலகர்களுடைய குணங்கள் யாவையும் உடையவராயிருந்தார் பின்னுமவர் பகவானையே தியானஞ் செய்துகொண்டு ஜகத்தை ஒவ்வொரு காலத்திலும் சம்ரக்ஷித்துக் கொண்டும், மனத்தாலும், வாக்கினாலும், சரீரத்தாலும், நற்குணங்களாலும் பிரஜைகளை சந்தோஷப்படுத்திக்கொண்டும், சோம ராஜன் போலராஜா வென்ற டெயரைத் தரித்தார். மேலுமவர் சூரியன் பூமியிலிருந்து எட்டு மாதம் ஜலத்தைக் கிரஹித்து மழைக் காலத்தில் விடுவது போல், ஜனங்களிடம் வரியைப்பெற்றுக் கொண்டு காலத்தில் அவர்களுக்கே அதனை உபயோகித்தார், அவருடைய ஆக்ஞை தடையற்றிருந்தது அவர் அக்னி போன்ற தேஜஸ்வியாக இருந்தபடியால் பிறரால் நெருங்குமுடியாதவராக இருந்தார். மகேந்திரன்போல் ஜயிக்கமுடியாதவராகவும் இருந்தார். பின்னுமவர் பொறுமையில் பூமிபோலவும், தியுலோகம் போல் ஜனங்களுக்கு இஷ்டத்தைக் கொடுப்பவராகவும், பர்ஜன்யன் போல் ஜனங்களுடைய இஷ்டத்தை வர்ஷிப்பவராகவும், சமுத்திரம் போல் காம்பீர்யமுள்ள வராகவும், யமன் போல் சிட்சிப்பவராகவும், மகேந்திரன்போல் ஐசுவரியமுள்ளவராகரும், குபேரன் போல் பொக்கிஷமுள்ளவராகவும், வருணன் போல் பணத்தைக் காப்பாற்றுகிறவராகவும் இருந்தார்.

மேலுமவர் மிகுந்த பலமுள்ளவராக இருப்பதால் ஸகல ஸ்வரூபியாகவும், வாயு போன்றவராகவும், மன்மதன் போல் அழகுள்ளவராகவும், ஸிம்மம்போல மனஸ் வியாகவும், மனுப்போல பிரஜைகளிடத்தில் பிரீதியுள்ள வராகவும் பிரம்மதேவர் போல் பிரபுவாகவும், வேதங் களைக் சொல்வதில் பிரகஸ்பதிபோலவும், ஸ்ரீ மஹாவிஷ்ணுபோல இந்திரியங்களை ஜயித்தவராகவும் இருந்தார். மேலும் அவர் பசுக்கள், ஆசாரியர்கள், பிராமணர்கள், பகவத் பக்தர்கள் ஆகிய இவர்களி டத்தில் பக்தி செய்வது, வெட்கம், வணக்கம், நல்ல ஸ்வபாவம், பிறருடைய காரியத்தை செய்வது, ஆகிய இவைகளிலும் தமக்கே ஒப்பானவராக இருந்தார்; அந்தச் சக்கரவர்த்தியினுடைய கீர்த்தியை மூவுலகத் திலும் சாதுக்கள் கானஞ்செய்தபடியால் ஸீதாபதியான ஸ்ரீராமன்போல் அவர் சாதுக்கள், ஸ்திரீகள் முதலியவர்களுடைய காதுகளில் பிரவேசித்தார். (ஸ்ரீ ராமன் போல விசேஷ கீர்த்தியுள்ளவரென்று கருத்து.)

நோட்டு

வெளியில் சென்ற வயது சென்றவர்கள் யுவாவினுடை வீட்டிற்கு வந்தால் அந்த யுவாவின் பிராணன்கள் வெளியில் செல்லுகின்றன. பிறகு வந்தவர்களுக்கு எதிர்கொண்டழைப்பது முதலிய உபசாரஞ் செய்து அந்தப் பிராணன்களை அடைகிறான்" – ஸ்மிருதி.

அத்தியாயம்–23

பிருது சக்கரவர்த்தி வைகுண்டம் சென்றது

1–18 வேனருடைய புத்திரரும், தைரியமுள்ளவரும், ஸ்தாவரங்களுக்கும் ஜீவனத்தைக் கொடுப்பவரும், சாதுக்களுடைய தர்மத்தை விருத்தி பண்ணுகிற வருமான பிருது சக்கரவர்த்தியானவர், ஒரு காலத்தில் தாம் எதற்காகப் பூமியில் அவதரித்தாரோ, அந்தப் பகவானுடைய ஆக்ஞையானது முடிக்கப்பட்டதென்றும் தம்மால் செய்யப்பட்ட பட்டணம், கிராமம் என்ற ஏற்பாடுகள் மிகவும் விருத்தியடைந்திருப்பதையும், தாம் வயது சென்றவராக இருப்பதையும் பார்த்து விட்டு தம்மை விட்டுப் பிரிவதில் மிகுந்த துக்கமுள்ளவள் போலிருக்கிற பூமியைப் புத்திரர்களிடம் ஒப்புவித்து பிரஜைகள் யாவரும் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது தம்முடைய பத்தினியாகிய அர்ச்சீஸ் என்பவளுடன் தபோவனம் சென்றார். அவ்விடத்தில் விக்கினங்களால் தடுக்க முடியாத நியமத்தை அங்கீகரித்து தாம் ராஜ்ய பரிபாலனம் செய்யும் பொழுதும், சத்துருக்களுடைய பட்டணத்தை ஜயிக்க முயற்சித்தது போல வானபிரஸ்தர்களுக்கு இஷ்டமான தபஸ் செய்ய ஆரம்பித்தார்; சிலகாலம் கிழங்கு களையும், வேர்களையும், பழங்களையும், புஜித்தும், பின்னும் சில காலம் திருணங்கள், இலைகளைப் புஜித்தும் சில மாதம் ஜலத்தைப் புஜித்துக் கொண்டும், பின்னும் சில மாதங்கள் காற்றைப் புஜித்துக் கொண்டும், கோடைக் காலத்தில் ஐந்து அக்கினியின் மத்தியிலிருந்தும், மழைக் காலத்தில் மழையில் நனைந்து கொண்டும், மாசி, பங்குனி மாதங்களில் கழுத்தளவு

ஜலத்தில் இருந்து கொண்டும், தரையில் படுத்துக் கொண்டும், பொறுமையுள்ளவராகவும், இந்திரியங் களை ஜயித்தும் மௌனத்தை அடைந்தும், ஊர்த்வரேதஸ் உள்ளவராகவும், பிராணனை அடக்கிக் கொண்டும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை ஆராதிக்க விரும்பி உக்கிரமான தபஸ் செய்தார். கிரமமாக தபஸ் விருத்தியாகி அதனால் காமக் குரோதாதிகளை ஒழித்து, அந்த யோகத்தாலேயே ஸனத்குமார பகவானால் உபதேசிக்கப்பட்ட பரமபுருஷனை அடைந்தார். இப்படி பகவத் தர்மத்தை அனுஷ்டிப்பவரும், ஸாதுவும் சிரத்தையுடன் முயற்சிப்பவருமாகிய அந்த அரசன் உடைய சித்தமானது வேறு விஷயத்திற் செல்லாமல் பரப்ரஹ்மத்தினிடத்திலேயே ஸ்திரமாக இருந்தது. பகவானை எப்போதும் தியானம் செய்வதால், பூர்த்தியான அந்தப் பக்தியினால் சுத்த சித்தராகிய அரசனுக்கு வைராக்யத்துடன் ஞானமுண்டாயிற்று. அதனால் பலவித சம்சயத்திற்குக் காரணமான அஹங்காரம் நசித்தது. மேலும், அந்த அரசனுக்கு தேகம் முதலியவைகளில் ஆத்மாவென்ற புத்தியானது நசித்தது, ஆத்ம ஸ்வரூபம் பிரகாசித்தது. அதனால் கிடைத்த ஸித்திகளிலும் ஆசை ஒழிந்தது. எந்த ஞானத்தால் அஹங்காரம் முதலியவை நசித்ததோ, அதனையும் விட்டுவிட்டார். (அந்தப் பிரயத்தனத்தை யும் ஒழித்தார் என்பது கருத்து.) யோகியானவன் ஸ்ரீமகா விஷ்ணுவினுடைய கதையில் எதுவரையில் ஆசைப்படவில்லையோ, அதுவரையில் யோகத்தாலே கிடைக்கும் ஸித்திகளில் ஆசைப்படுவான். வீரர்களுக்குள் சிறந்தவராகிய அந்த அரசன் மேற்காட்டியபடி தம்முடைய சித்தத்தைப் பரமாத்மாவிடத்திற் செலுத்தி, பரப்ரஹ்ம ஸ்வரூபத்தை அடைந்து, உசிதமான

காலத்தில் தமது சரீரத்தை விட்டார். எப்படியெனில், குதத்தைக் குதிகால்களால் அடைத்து வாயுவை உயரக் கிளப்பி, நாபியில் நிலை நிறுத்தி, அவ்விடமிருந்து ஹிருதயம், சிரஸ், கண்டம், புருவங்களின் மத்யம் ஆகிய கோஷ்டங்களில் நிலை நிறுத்தி, அந்த வாயுவைப் ப்ரஹ்மரான்ந்ரத்தில் செலுத்தி, வாயுவை சமஷ்டி வாயுவிலும் தேகத்திலிருக்கும் பிருதிவியின் பாகத்தை சமஷ்டிபிருதவியிலும், தேஜஸ்ஸை சமஷ்டி தேஜஸ்ஸிலும், இந்திரிய த்வாரங்களாகிய ஆகாயத்தை ஆகாயத்திலும், திரவாம்சத்தை ஜலத்திலும் லயிக்கச் செய்தார். பின்னுமவர் மஹா பூதங்களுக்குள் பிருதிவியை ஜலத்திலும், அந்த ஜலத்தைத் தேஜஸ்ஸிலும் அந்த தேஜஸ்ஸை வாயுவிலும், வாயுவை ஆகாயத்திலும் லயிக்கச் செய்தார். இந்திரியங்களில் மனத்தையும், இந்திரியங்களை விஷயங்களிலும் உற்பத்தி கிரமமாக லயிக்கச் செய்து, இந்திரியங்களைப் பூதாதியிலும், அந்த அகங்காரத்தை மகத்தத்துவத்திலும் சேர்த்தார். ஸகல காரியங்களையும் உண்டுபண்ணக் கூடிய அந்த மகத்தத்துவத்தை மாயையை உபாதியாக உடைய ஜீவனிடத்தில் சேர்த்தார். பிறகு அந்தப் புருஷன் ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகளின் பலத்தால் ப்ரஹ்ம ஸ்வரூபியாக இருந்து அந்த உபாதியையும் விட்டுவிட்டார்.

19–28 அந்த அரசனுடைய பத்தினியாகிய அர்ச்சிஸ் என்பவள் அரசனுடன் காட்டிற்கு வந்தாள் அல்லவா? அவள் மிகவும் மிருதுவான சரீரமுள்ளவள்; காலால் நடக்கத்தகாதவள், ஆனாலும் அவள் பர்த்தா வினால் அனுஷ்டிக்கப்படும் விரதங்களை அனுஷ்டிப் பதாலும், அவரால் கௌரவப்படுத்தப்பட்ட படியாலும்

வருத்தப்படாதவளாக இருந்தாள். பின்னும் அவள் பர்த்தாவினுடைய சரீரம் மரணமடைந்ததைப் பார்த்துக் கொஞ்சம் அழுது மலையடிவாரத்தில் அந்தத் தேகத்தைச் சிதையில் வைத்துத் தகனஞ் செய்தாள். பின்பு, அப்பொழுது செய்ய வேண்டிய காரியங் களைச் செய்து, நதி ஜலத்தில் ஸ்நானஞ் செய்து ஆகாயத்தில் இருக்கும் தேவர்களை நமஸ்கரித்து, அக்னியை மூன்று தடவை பிரதக்ஷிணஞ் செய்து பர்த்தாவின் பாதத்தைத் தியானஞ் செய்து கொண்டு அக்கினியில் பிரவேசித்தாள். அப்பொழுது ஆகாயத்தில் இருந்து தேவ ஸ்திரீகள், தேவர்களுடன் பிருது சக்கரவர்த்தியுடன் உடன் கட்டையேறிய அர்ச்சிஸ் என்பவளைப் பார்த்துப் பலவகையாக ஸ்தோத்திரம் பண்ணினார்கள். அவ்விடத்தில் புஷ்பங்களை வர்ஷித்தார்கள்; தேவ வாத்தியங்கள் யாவும் முழங்கின; அப்பொழுது தேவ ஸ்திரீகள் எல்லோரும், யக்ஞங் களுக்கு அதிபதியாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவை லக்ஷ்மீ தேவி போல, இந்த ஸ்திரீயானவள் பர்த்தாவை அடைந்தாள்; இந்த அர்ச்சிஸ் என்பவள், பிருது சக்கரவர்த்தியுடன் நமக்கும் மேலிருக்கிற லோகத் திற்குச் செல்லுகிறாள். இவள் செய்த கர்மம் இன்ன தென்று ஊகிக்க முடியாதது; நிலையற்ற ஆயுளுள்ள எந்த மனிதர்கள் பூமியில் பகவானை அடையக் கூடிய நிஷ்காம கர்ம மார்க்கத்தைச் சாதிக்கிறார்களோ, அவர்களுக்கு எதுதான் கிடைக்காது? மிகவும் சிரமப்பட்டு பூமியில் மனுஷ்ய ஜன்மத்தை அடைந்தும் எவன் விஷயத்திலேயே ஆசைப்பட்டு க்ஷேமத்தை அடைவதற்கு முயற்சிக்கிறதில்லையோ, அவன் ஆத்ம துரோகியாகவும், ஏமாற்றப்பட்டவனாகவும் ஆகிறான்" என்று சொல்லிக் கொண்டார்கள்.

29–36 இப்படி தேவ ஸ்திரீகள் புகழ்ந்து கொண்டிருக்கும்பொழுது அர்ச்சிஸ் என்பவள் ஆத்ம வித்துக்களுக்குள் சிறந்தவராகிய பிருது சக்கரவர்த்தி எந்த லோகஞ் சென்றாரோ, அந்த லோகஞ் சென்றாள். பிருதுவானவர் இம்மாதிரியான மஹிமையுள்ளவர்; பகவத் பக்தர்களுக்குள் சிறந்தவர்; கம்பீர சரித்திரமுள்ளவர் அந்த அரசனுடைய சரிதத்தை உமக்குச் சொன்னேன். மிகவும் புண்ணியத்தைக் கொடுக்கக்கூடிய இந்த சரிதத்தைச் சிரத்தையுடன், சாவதானமாக எவன் படிக்கிறானோ பிறருக்குச் சொல்லுகிறானோ, கேட்கிறானோ அவன் பிருதுவின் மார்க்கத்தை அடைவான். இதைக் கேட்பதால் ப்ராஹ்மணன் ப்ரஹ்மதேஜஸ்ஸையும் க்ஷத்திரியன் லோகாதிபத்தியத்தையும், வைசியன் ஜனங்களுக்கு அதிபதியாயிருப்பதையும், சூத்திரன் உத்தமனாயிருப்பதையும் அடைவான். புருஷனானாலும், ஸ்திரீயானாலும் மிகவும் பக்தியுடன் இந்தச் சரிதத்தைக் கேட்டால் புத்திரனில்லாதவர்களுக்குப் புத்திரனும், பணமில்லாதவர்களுக்குப் பணமும், கீர்த்தியை விரும்பியவர்களுக்கு மிகுந்த கீர்த்தியும், வித்தையும் கிடைக்கும். இது புருஷர்களுக்கு க்ஷேமத்தை கொடுக்கக் கூடியது; அமங்களத்தை நிவர்த்திக் கூடியது. பணம், கீர்த்தி, ஆயுள், ஸ்வர்க்கம் இவைகளைக் கொடுக்கக் கூடியது; கலியால் உண்டாகும் பாவத்தைப் போக்கக் கூடியது. தர்மம் முதலிய புருஷார்த்தங்களை விரும்பியவன் சிரத்தையுடன் இதனைக் கேட்கவேண்டும். க்ஷத்திரியன் இந்தச் சரிதத்தைச் சிரவணஞ் செய்து, சத்துருவை நோக்கி யுத்தத்திற்குச் சென்றால் பிருது சக்கரவர்த்திக்கு மற்ற அரசர்கள் கப்பங் கட்டுவது போலச் சத்ருக்கள் அவனுக்குக் கப்பங் கட்டுவார்கள். வேறு

விஷயத்தில், ஆசையை யொழித்துப் பகவானிடத்தில் சுத்தமான பக்தியைச் செய்து, பிருது சக்கரவர்த்தியின் சரிதத்தைக் கேட்டாலும், படித்தாலும் பகவான் இடத்தில் மிகுந்த பக்தியுண்டாகும். ஓ விதுரரே! மேலான மஹாத்மியத்தைக் காண்பிக்கும் இந்தச் சரிதத்தில் சித்தத்தைச் செலுத்திய மனிதன் பிருது சக்கரவர்த்தியின் கதியை அடைவான். ஆனதால் ஒவ்வொரு நாளும் பிருதுவின் சரிதத்தைப் பிரீதியுடன் பிறருக்கு உபதேசித்தும், கேட்டுக் கொண்டு மிருப்பவன் விஷயங்களில் ஆசையையொழித்து, சம்ஸாரமாகிய சமுத்திரத்திற்குப் படகு போன்ற பாதங்களுள்ள ஸ்ரீ மஹாவிஷ்ணுவினிடத்தில் நிரந்தரமான பக்தியை அடைவான்.

அத்தியாயம்–24

ருத்ர கீதம்

1–5. பிருது சக்கரவர்த்திக்குப் பின்பு அவருடைய புத்திரரும், மிகுந்த கீர்த்தியுள்ள வருமான விஜிதாச்வர் அரசராக இருந்தார். அவர் தமது தம்பிகளுக்கு இராஜ்யத்தைப் பிரித்துக் கொடுத்தார். எப்படியென்றால், ஹர்யச்வருக்குப் கிழக்குத் திக்கையும், தூம்ரகேசருக்குத் தெற்கு திக்கையும், விருகர் என்பவருக்கு மேற்குத் திக்கையும் கொடுத்தார். அந்த விஜிதாச்வர் பிருது சக்கரவர்த்தியின் யாகத்தில் மஹேந்திரனிடமிருந்து அந்தர்த்யான சக்தியை அடைந்தபடியால், அது முதல் அவருக்கு அந்தர்த்தானர் என்னும் பெயருண்டாயிற்று. அவர் சிகண்டினீ என்னும் ஸ்திரியிடத்தில் பாவகன், பவமானன், சுசி என்ற புத்திரர்களை உண்டுபண்ணினார். இவர்கள் வசிஷ்ட மஹரிஷியின் சாபத்தால் மனுஷ்ய ஜன்மத்தையடைந்து. பிறகு யோகமார்க்கத்தால் தங்கள் ஸ்வரூபத்தையடைந்தவர்கள். அந்த அன்தர்த்தானர் நபஸ்வதீ என்ற ஸ்திரீயிடத்தில் ஹவிர்த்தான ரென்ற புத்திரனைப் பெற்றார். விஜிதாசுவர் குதிரையை அபஹரித்த இந்திரனைக் கொல்லாமலிருந்ததால் அந்தர்த்தானரென்ற பெயரும், அந்தர்த்தான சக்தியும் அவருக்குக் கிடைத்தது; மேலுமவர் வரி வாங்குவது, சிட்சிப்பது ஆகிய இவைகளால் ராஜாக்களுடைய விருத்தியானது மிகவும் பயங்கரமாக இருப்பதைப் பார்த்து, தீர்க்கசத்திரம் செய்கிறதென்ற வியாஜத்தால் ராஜ்யத்தைவிட்டு விட்டார் (அந்த யாகத்திலும், திரவியம், தேசம்

முதலியவைகளைப் பரமாத்மாவாகவே பாவித்து அதிலும் பரமாத்மாவாகிய பரம புருஷனை ஆராதித்து புண்யமாகிற ஸமாதியால் அந்த லோகத்தை சுத்தரும், பூர்ணருமான பகவானை யாகத்தால் பூஜித்து, தீவிரமான ஸமாதியால் அந்த உலகத்தை (பகவானா யிருப்பதை அடைந்தார்.) ஓ விதுரரே! ஹவிர்த்தான ரென அவர் ஹவிர்த்தானி என்பவளிடத்தில் பர்ஹிஷ்மதன், கயன், சுக்லன், கிருஷ்ணன், ஸத்யன், ஜிதவிரதன் என்ற ஆறு புத்திரர்களை உண்டு பண்ணினார். ஹவிர்த்தானருடைய புத்திரராகிய பர்ஹிஷ்மதர் கர்ம காண்டங்களிலும். யோகங்களிலும் ஸாமார்த்தியமுள்ளவராக இருந்தார். அவர் யாகஞ் செய்யும்பொழுது இந்தப் பூமி முழுவதும் யாகசாலையாகவும், கிழக்கு நுனியான தர்ப்பங்களால் பரப்பப்பட்டதாகவும் இருந்தது. அதனால் அவருக்குப் பிராசீனபர்ஹிஸ் என்று பெயருண்டாயிற்று, அவர் ஸமுத்திர ராஜனுடைய புத்திரியாகிய சதத்ருதி என்பவளை ப்ரஹ்மதேவருடைய தூண்டுதலால் விவாஹம் செய்து கொண்டார். கல்யாண காலததில் நன்றாய் அலங்கரிக்கப்பட்ட அந்தப் பெண்ணின் அழகைப் பார்த்து எல்லா ஜனங்களும் ஆசைப்பட்டார்கள். அது, கிளி வேஷங்கொண்ட ஸ்வாஹையிடம் அக்கினி ஆசைப்பட்டது போலிருந்தது. புதிதாக விவாஹம் செய்துகொண்ட அந்தப் பெண்ணுடைய பாதஸ்பரத்தின் சப்தத்தாலேயே தேவர்கள் அஸுரர்கள், கந்தர்வர்கள், மஹரிஷிகள், ஸித்தர்கள், மனிதர்கள், உரகர்கள் ஆகிய இவர்கள் ஜயிக்கப்பட்டார்கள். பிராசீன பர்ஹிஸ்ஸுக்குச் சதத்ருதி என்பவளியத்தில் பத்து புத்திரர்கள் உண்டானார்கள். அவர்களெல்லோரும் ஒரே மாதிரியான விரதமுள்ளவர்கள்; எல்லோரும்

தர்மத்தின் கரைக் கண்டவர்கள்; பிரசேதஸ் என்னும் பெயருள்ளவர்கள்; அவர்களைப் பிதாவாகிய பிராசீன பர்ஹிஸ் பிரஜைகளை ஸிருஷ்டிக்கும்படி ஆக்ஞாபித்தார். அவர்களும் வனஞ்சென்று பதினாயிர வர்ஷ காலம் தபஸ்செய்து ஸ்ரீ மஹாவிஷ்ணுவைப் பூஜித்தார்கள். நடுவழியில் பரமசிவனைத் தரிசித்த அவரால் உபதேசிக்கப்பட்டபடி மந்திரத்தை ஜபித்தும், ஸ்வரூபத்தைத் தியானஞ் செய்தும், பூஜித்து கொண்டு மிருந்தார்கள்" என்று மைத்திரேயர் சொன்னார்.

16–18. அதனைக் கேட்ட விதுரர், "பிரசேதஸ்ஸுகளுக்கு பரமசிவனுடைய தரிசனம் எப்படிக் கிடைத்தது? பரமசிவன் மிகுந்த பிரியத்துடன் அவர்களுக்கு எதனை உபதேசித்தார்? ஓ ப்ராஹ்மணோத்தம! பிராணிகள் பரமசிவனைத் தரிசிப்பது மிகவும் துர்லபமல்லவா? அந்தப் பரமசிவன் வைராக்கியமுள்ள முனிகளால் தியானஞ் செய்யப்பட்டவரல்லவா? அந்தப் பகவான் ஆத்மாராமராக இருந்தாலும், இந்த லோகத்தைக் காப்பாற்றுவதற்காகப் பயங்கரமான சக்தியுடன் ஸஞ்சரிக்கிறார். ஆனதால் அதனை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

19–26. அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி, "பிரசேதஸ்ஸுகள் பிதாவினுடைய ஆக்ஞையைச் சிரஸால் தரித்துத் தபஸ் செய்ய வேண்டுமென்ற விருப்பத்துடன் மேற்குத் திக்கை நோக்கிச் சென்றார்கள். அவ்விடத்தில் ஏறக்குறைய ஸமுத்திரம் போல் விஸ்தாரமான பெரிய ஒரு குளத்தைக் கண்டார்கள். அந்தக் குளமானது பெரியோர்களுடைய மனம்போல்

Released by Maran's Dog, Toronto , Canada

தெளிந்திருந்தது. நீலோத்பலங்கள், செந்தாமரை, இராத்ரியில் மலரக்கூடிய புஷ்பங்கள், ஸந்தியா காலத்தில் மலரும் புஷ்பங்கள், பகலில் மலரும் புஷ்பங்கள் ஆகிய இவைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மேலும் அந்த ஸரஸில் ஹம்ஸங்கள் ஸாரங்கள், சக்ரவாகங்கள், நீர்க்கோழி இவைகள் சப்தித்துக்கொண்டிருந்தன. மதித்த வண்டுகள் கானஞ் செய்வதால் கொடிகள், மரங்கள் ஆகிய இவைகள் மயிர்கூச்சலடைந்தவை போல மொட்டுகளை வெளியிட்டன. வாயுவானது தாமரைப் புஷ்பத்தின் தூளியை நாலு திக்குகளிலும் இரைத்தது. பின்னும் அவ்விடத்தில் தேவதைகள் பாடும் மார்க்கப்படி மிருதங்கம் பணவம் முதலிய வாத்திய கோஷங்களுடன் கந்தர்வர்கள் கானம் செய்வதைக்கேட்டு, அந்த ராஜபுத்திரர்கள் மிகவும் ஆச்சர்யமடைந்தார்கள் அந்த ஸமயத்தில் அந்த ஸரஸ்ஸிருந்து பரமசிவன் வெளியில் வந்தார். அவருடைய பிரமதகணங்கள் அவரை உபாஸித்துக் கொண்டிருந்தன. அவருடைய தேகமானது புடம்போட்ட தங்கம் போல் பிரகாசித்தது. அப்படிப்பட்ட பகவானை ராஜபுத்திரர்கள் தரிசித்து மிகுந்த தயையுடன் பிரஸன்ன முகமுள்ளவராக இருந்தார். தர்மத்தில் பிரீதியுள்ள அந்தப் பரமசிவன் தம்மைச் சரணமடைந்தவர்களும், விசேஷ பிரியமுள்ளவர்களுமான இராஜ புத்திரர்களை நோக்கி, "ஓ பிராசீனபர்ஹிஸ்ஸின் புத்திரர்களே! உங்களுடைய அபிப்ராயம் எனக்கு நன்றாகத் தெரியும்; உங்களுக்கு க்ஷேமம் உண்டாகும். உங்களை அனுக்ரஹிப்பதற்காகவே தரிசனம் கொடுத்தேன். எந்தப் புருஷன் அவ்யக்தம், பிரதானம், ஜீவன் இவைகளுக்கு மேலானவராகி ஸ்ரீ வாஸுதேவரிடத்தில் பக்தி

Released by Maran's Dog, Toronto , Canada

செய்கிறானோ அவனிடத்தில் எனக்கு மிகுந்த பிரியம். நூறு ஜன்மங்களில் வர்ணாசிரமத்திற்குரிய தர்மங்களை நன்றாக அனுஷ்டித்து வந்த புருஷன் ப்ரஹ்ம லோகத்தை அடைவான். (ப்ரஹ்மதேவராக ஆகிறான் என்பது கருத்து) அதைவிட மேலான புண்ணியஞ் செய்தவன் என்னை அடைகிறான். நானும் மற்ற தேவர்களும் அவரவர்களுடைய அதிகாரம் முடிந்தவுடன் எப்படி வைஷ்ணவ பதத்தை அடைகிறோமோ அப்படியே அதைவிட மேலான புண்ணியஞ் செய்து பகவத் பக்தனாயிருக்கும் புருஷன் அந்த சரீரம் போன பிறகு பிரபஞ்சஸம்பந்த மற்ற விஷ்ணுபதத்தை அடைகிறான். ஆகையால் பாகவதர்களாகிய நீங்கள் பகவானைப் போல என்க்குப் பிரியமானவர்களே! பாகவதர்களுக்கு என்னைவிடப் பிரியமானவர்கள் வேறு ஒருவருமில்லை, நான் உங்களுக்கு எதனை உபதேசிக்கிறேனோ; அது விசேஷ க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியது; பரிசுத்த மானது; மிகுந்த மங்களகரமானது; அதனை ஒன்றோடொன்று சேராமல் நீங்கள் ஜபிக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டுப் பரமசிவன் ஸ்ரீமந் நாராயணனைத் தியானித்துக்கொண்டு கைகூப்பி, தமக்கெதிரில் நிற்கும் இராஜபுத்திரர்களை நோக்கிப் பின் வருமாறு சொல்லலானார்.

27–79. "ஓ பகவன்! நீர் ஆத்மவித்துக்களுக்குள் சிறந்தவர்களாகிய யோகிகளுக்கு ஆனந்தத்தைக் கொடுப்பதற்காக ஒப்பற்ற பரமானந்த ரூபியாகப் பிரகாசிக்கிறீர். ஆகையால் எனக்கும் ஆனந்தப் பிரார்த்தி உண்டாகட்டும். அப்படிப்பட்ட ஸகல ஸ்வரூபியும் எல்லாவற்றிற்கும் நியந்தாவுமான உமக்கு

நமஸ்காரம் எவருடைய கொப்பூழில் லோக ஸ்வரூபமான தாமரை மலர் தோன்றியதோ, (ஸகல பிரபஞ்சத்திற்கும் காரணரென்று சொல்லப்பட்டது) எவர் ஸ்தூல பூதங்கள், தன் மாத்திரைகள், இந்திரியங்கள் ஆகிய இவைகளுக்கு நியந்தாவோ, எவர் சித்தத்துக்கு அதிஷ்டமான தேவதையாகிய வாஸுதேவரோ, விஹாரங்கள் அற்றவரோ, தாமாக பிரகாசிப்பவரோ அஹங்காரத்திற்கு அதிஷ்டான தேவதையாகிய ஸங்கர்ஷண ஸ்வரூபரோ, அவ்யக்தோ, நாசமற்றவரோ, முகத்திலுண்டான அக்னியினால் உலகங்களை எரிப்பவரோ. ஜகத்திற்கு விசேஷ ஞானத்தைக் கொடுப்பவரும். புத்திக்கு அதிஷ்டான தேவதையுமான பிரத்யும்னஸ்வரூபியோ' அப்படிப்பட்ட பகவானுக்கு நமஸ்காரம் அநிருத்த ஸ்வரூபியும், இந்திரியங்களுக்கு அதிபதியான மனத்தின் ஸ்வரூபியும், தேஜஸ்ஸைக் கொண்டு எங்கும் வியாபித்திருக்கும் சூரிய ஸ்வரூபியும், விருத்தி, க்ஷயம் இவைகள் அற்றவருமாகிய பரமாத்மாவிற்கு நமஸ்காரம் ஸ்வர்க்கம் மோக்ஷம் இவைகளுக்கு மார்க்கராயும் பரிசுத்தமான மனஸில் வஸிப்பவரும், அக்னி ஸ்வரூபியும் யாகத்தை விஸ்தரிப்பவரும், யாகத்திற்கு ஸாதனமாயிருப்பவருமாகிய பரம புருஷனுக்கு நமஸ்காரம், பிதிருக்களுக்கு அன்னமய ஸோம ஸ்வரூபியும், தேவர்களுக்கு அன்ன ரூபியும், வேதத்திற்கு அதிபதியும், யக்ஞத்திற்கு முக்ய ஸாதனராயும், பிராணிகளுக்குத் திருப்தியை உண்டு பண்ணுகிறவரும், ரஸரூபியுமான ஸ்ரீ பகவானுக்கு நமஸ்காரம், சகல பிராணிகளுடைய தேகசுரூபியாயும், பிருதிவியின் ஸ்வரூபமாயும், விராட்ரூபியாயும், மூன்று உலகத்தையும் பிராணரூபியாயிருந்து காப்பாற்று கிறவரும், தேஜஸ், காந்தி இவைகளின் ரூபியுமான

பகவானுக்கு நமஸ்காரம், விஷயங்களைப் பிரகாசிக்கச் செய்யும் ஆகாச ஸ்வரூபியும், உள், வெளி என்கிற விவகாரத்திற்கு காரணரும், புண்யலோகரூபியும், ஸ்வர்க்க ஸ்வரூபியும், விசேஷ தேஜஸுள்ளவருமாகிய பகவானுக்கு நமஸ்காரம் பிரவர்த்திமார்க்க சுரூபியும், நிவர்த்தி மார்க்க ஸ்வரூபியும், பிதிருத்துவம் தேவத்வம் இவைகளைக் கொடுக்கும் கர்மபலஸ்வரூபியும். அதர்மத்தின் பல ஸ்வரூபியும், துக்கத்தைக் கொடுக்கக் கூடிய மிருத்யு ஸ்வரூபியுமான பகவானுக்கு நமஸ்காரம். ஸகல கர்மங்களுக்கும் பலத்தைக் கொடுப்பவரும், எல்லாவற்றையுமறிந்தவரும் மேலான தர்ம ஸ்வரூபியும், தடையற்ற ஞானமுள்ள ஸ்ரீ கிருஷ்ண ஸ்வரூபியுமான உமக்கு நமஸ்காரம், புராண புருஷரும், ஸாங்கியம், யோகம் இவைகளுக்கு அதிபதியும், ருத்ர ரூபியும், கர்த்தா, கரணம், கர்மம் ஆகிய மூன்று வகையான சக்தியுள்ளவரும், ஞான ஸ்வரூபியும் கிரியா ஸ்வரூபியும், பலவகையான சிருஷ்டி சுரூபியான பகவானுக்கு நமஸ்காரம். ஓ பகவன்! உம்மை தரிசிக்க விரும்பிய எங்களுக்கு உம்முடைய திவ்ய ஸ்வரூபத்தைக் காண்பிக்க வேண்டும். அது பாகவதர்களால் பூஜிக்கப்பட்டது. ஸகல இந்திரியங்களுடைய விஷயங்கள் விஷயிகள் இவைகளின் ரூபமாயுள்ளது; பக்தர்களுக்குப்; பிரியமானது; பளபளப்புள்ள மழைக்கால மேகம்போல் கறுத்த திருமேனியுள்ளது, ஸகல ஸௌந்தர்யத்திற்கும், இருப்பிடமானது அழகு பொருந்தியவைகளும், நீண்டதுமான நான்கு கைகளுள்ளது; அழகான புருவங்களுள்ளது; ரமணீயமான மூக்குள்ளது; நல்ல பற்களுள்ளது. அழகான கன்னங்களால் பிரகாசிக்கும் முகமுள்ளது; ஒருவகையான குண்டலங்களால் அலங்கரிக்கப்பட்ட காதுகளை உடையது; பிரீதியுடன்

சிரித்த முகமுள்ளது; கருணை நிறைந்த கடாக்ஷ முள்ளது; தாமரை மலரின் தாதுகள் போல் பொன்னிறமுள்ள வஸ்திரமுள்ளது கிரீடம், கங்கணம் ஹாரம், பாதஸரம், அரைஞாண் இவைகளால் அலங்கரிக்கப்பட்டது; மேலும் சங்கம், சக்ரம் கதை, தாமரையாலே கௌஸ்துபம் ரத்தினம் இவைகளால் விசேஷ காந்தியுள்ளது ஸிம்மத்தின் தோள் போன்ற தோள்களுள்ளது; கௌஸ்துப ரத்தினத்தால் அழ்கான கண்டமுள்ளது; லக்ஷ்மீதேவி எப்பொழுதும் வஸித்துக்கொண்டிருப்பதால் தங்கம் உரைக்கும் உரைகல்லும் பரிகசிக்கக்கூடிய மார்புள்ளது; மூச்சு விடுவதாலும் உள்ளே வாயுவை இழுப்பதாலும் அசைகின்ற மூன்று மடிப்புகளால் அழகானதும் அரசிலைக்குச் ஸமமுமான வயிறுள்ளது.

பின்னும் அந்த சுரூபமானது கம்பீரமான கொப்பூழில் ஸகல ஜகத்தையும் உள்ளே அடக்கிக் கொள்வதுபோலப் பிரகாசிக்கிறது; கறுத்த திருமேனி யுள்ள இடுப்பில் பீதாம்பரமும் அதன்மேல் தங்க மயமான அரைஞாணும் நன்றாகப் பிரகாசிக்கிறது; கணைக்கால்களும், கால்களும் சமமாயிருப்பதினாலும். முழங்கால் உயரமில்லாததினாலும் மிகவும் பார்க்கக் கூடியதோ, பிரஹ்லாதன் முதலிய பக்தர்களுக்குப் பயத்தைப் போக்கடித்ததோ, அஞ்ஞானிகளுக்கும் மார்க்கத்தைக் காண்பிக்கும் உம்முடைய அந்தப் பாதாரவிந்தத்தை எனக்கு காண்பியும், சித்த சுத்தியை விரும்பியவர்கள் இந்த உருவத்தைத் தியானம் செய்யவேண்டும். ஸ்வதர்மத்தை அனுஷ்டிப்பவர் களுக்கு இந்த உருவத்தினிடத்தில் பக்தி செய்வதே அபயத்தைக் கொடுக்கக்கூடியது நீர் பக்தர்களால்

அடையக்கூடியவர்; மற்றவர்களால் அடையமுடியாதவர்; ஸ்வர்க்க ராஜ்யத்தை அடைந்தவர்களாலும் விரும்பக்கூடியவர்; ஆத்மாவை அறிந்தவர்களுக்குக் கதியாயிருப்பவர்; ஆராதிக்க முடியாதவரான அப்படிப்பட்ட உம்மை ஸாதுக்களுக்கும் அரிதான பக்தியால் ஆராதிக்கும் எந்தப் புருஷன் உம்முடைய பாதத்தைத் தவிர விஷயத்தில் ஆசைப்படுவான்? காலமானது தம்முடைய மஹிமையாலும் உத்ஸாகத்தாலும் மிகுந்த கோபத்துடன் உலகத்தை நாசம் பண்ணுகிறதானாலும் உம்முடைய பாதாரவிந்தத்தில் சரணமடைந்தவனை உபத்திரவிக்கிறதில்லை. பகவத் பக்தர்களுடன் அரைக்ஷணமாவது ஸல்லாபம் செய்வாதாலுண்டான சுகத்திற்கு ஸ்வவர்க்கத்தையும், மோக்ஷத்தையும் சமமென்று நான் நினைக்கவில்லை. அப்படியிருக்க மற்ற சுகங்கள் அதற்கு ஸமமாக ஆகுமா? ஆனதால் பாபங்களைப் போக்கக்கூடிய பகவானுடைய கீர்த்தியால் அந்தரங்கத்தில் ஸ்நானம் செய்தும், அவருடைய பாதத்திலிருந்து உண்டான கங்கா ஜலத்தில் ஸ்நானஞ் செய்தும், அதனால் பாபமில்லாதவர்களும், பிராணிகளிடத்தில் தயையுள்ளவர்களும் நல்ல ஸ்வபாவமுள்ளவர்களுமான ஸாதுக்களுடைய ஸங்கமம் எனக்குக் கிடைக்கும்படி அனுக்கிரஹிக்க வேண்டும் சாதுக்களுடைய சேர்க்கையால் சித்தம் சுத்தமாகி விஷயங்களில் செல்லும் அஞ்ஞானத்தையும் அடைகிறதில்லை. அப்பொழுது அந்த முனியானவன் ஆத்மாவைத் தரிசிப்பான். அந்த ஆத்ம ஸ்வரூபத்தில் இந்த ஜகத் பிரகாசிக்கிறது. அதுவே உண்மையானது. அதுவே ப்ரஹ்மம், ஆகாயம்போல் எங்கும் வியாபித்திருக்கும் தேஜஸ், அந்தப் பரமாத்மாவானவர் பலவகையான ஸ்வரூபமுள்ள மாயையைக் கொண்டு

ஜகத்தை உண்மையானது போல் சிருஷ்டித்தார். பின்னும் அதைக் காப்பாற்றினார். ஸம்ஹரித்தார்; அந்த மாயையைப் பகவான் ஜயித்தவர், பேதமற்றவர்; சுதந்திரர், பூதங்கள், இந்திரியங்கள், அந்தக்கரணம் இவைகளால் ஊகிக்கப்படுகிற இந்த ஆத்மாவைத் தங்களுக்குரிய கர்மங்களால் எந்த யோகிகள் சிரத்தையுடன் பூஜிக்கிறார்களோ அவர்களே வேதம், ஆகமம் இவைகளில் ஸமர்த்தர்கள். நீர் ஒருவரே மேற்காட்டிய குணமுள்ள புருஷன். ஸிருஷ்டிக்கு முந்தியிருந்தவர்; ஸகல சக்திகளும் உம்மிடத்திலேயே இலயித்திருக்கின்றன. நீர் ஒருவரானாலும், ரஜஸ்ஸினாலும், தமஸ்ஸினாலும் மஹத்தத்துவம், அஹங்காரம், வாயு, அக்கினி, ஜலம், பூமி, தேவர்கள், ரிஷிகள், மற்ற பூதகணங்கள் என்ற பேதத்தை அடைகிறீர்; மேலும் மற்ற பூதகணங்கள் சக்தியால் சிருஷ்டிக்கப்பட்ட நான்கு விதமான ஜகத்தில் தம்முடைய அம்சமாக அனுப்பிரவேசம் செய்திருக்கிறீர்; ஆனாலும் நீர் ஸம்ஸாரியல்ல; தேனீக்கள் தங்களால் உண்டு பண்ணப்பட்ட தேனைப்போல, அற்பமான விஷய சுகத்தை இந்திரியங்களைக் கொண்டு அனுபவிப்பவனே ஜீவன் என்று சொல்லப்படுகிறான். எவர் தம்முடைய சக்தியால் இந்த ஜகத்தை ஸிருஷ்டித்தாரோ, எவர் மேக வரிசைகளை அசைத்துச் கொண்டு உலகங்களை சம்ஹரிக்கிறாரோ, எவருடைய ஸ்வரூபம் ஊகிக்கக் கூடியதோ, அவரே நீர். இதனை இப்படிச் செய்ய வேண்டும் என்ற சிந்தையால் மிகவும் பிரமாதத்தை அடைந்தவனும், விஷயத்தில் அதிக ஆசையுள்ளவனும், கிடைத்த விஷயத்தில் விசேஷ அபிநிவேசமுள்ளவனுமான புருஷனை, பசியால் கடைவாய்களை நக்கிக் கொண்டிருக்கும் ஸர்ப்பமானது எலியைப்போல

நீர் ஸாவதானராக நாசஞ்செய்கிறீர், எந்த உம்முடைய பாதாரவிந்தத்தை நம்முடைய குருவாகிய ப்ரஹ்ம தேவரும் பதினான்கு மனுக்களும் ஸம்சயமின்றிப் பூர்ண விசுவாசத்துடன் பூசித்தார்களோ, அந்தப் பாதார விந்தத்தை வித்வானாகிய எவன் பூஜிக்கமாட்டான்? மேலும், ருத்ரருடைய பயத்தாலே நாசமடைந்த ஜகத்திற்குப் பயமில்லாமல் வகிக்கும் ஸ்தானமாக இருந்தீர். ஓ பரப்ப்ரஹ்மமே! பரமாத்மாவே! எனக்குத் தரிசனம் கொடுக்க வேண்டும்" என்று பகவானை ஸ்தோத்திரஞ் செய்து. ஓ ராஜபுத்ரர்களே! மேற் காட்டிய மந்திரத்தை விசுவாஸத்துடன் தங்களுக்குரிய தர்மத்தை யனுஷ்டித்துப் பகவானிடத்தில் சித்தத்தைச் செலுத்தி ஜபியுங்கள். ஸகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாக இருப்பவரும், தம்முடைய மஹிமை யிலிருப்பவருமான அந்த ஸ்ரீமந் நாராயணனையே தியானத்தாலும், நாம ஜபத்தாலும் பூஜியுங்கள். ஓ ராஜபுத்திரர்களே! நீங்களெல்லோரும் ரிஷிகள் விரதத்தை அனுஷ்டித்து சித்தத்தை ஒருவகைபடுத்தி மேற்சொல்லிய ஸ்தோத்திரத்தை அடிக்கடி ஜபியுங்கள். முற்காலத்தில் இந்த ஸ்தோத்திரத்தை பிருகு முதலிய மஹரிஷிகளுக்கும், எனக்கும் ப்ரஹ்மதேவர் உபதேசித் தார், அதை ஜபஞ் செய்ததால் அஞ்ஞானமற்றவர்களாகி ஸிருஷ்டி சக்தியை அடைந்து, பலவகையான பிரஜை களைப் பிரஜாபதிகள் – ஸிருஷ்டித்தார்கள். இந்த ஸ்தோத்திரத்தை எவன் ஒவ்வொரு நாளும் ஸாவதானனாக ஜபிக்கிறானோ, அவன் சீக்கிரத்தில் க்ஷேமத்தை அடைவான், பலவகையான க்ஷேமத்திலும் மோக்ஷமே முக்கியமானது. ஞானமாகிய படகை அடைந்தவன் கரையற்ற ஸம்ஸார ஸமுத்திரத்தை இலகுவாகத் தாண்டுவான். எந்தப் புருஷன் என்னால்

சொல்லப்பட்ட இந்த ஸ்தோத்திரத்தை ஒவ்வொரு நாளும் ஜபித்து ஆராதிக்க முடியாத ஸ்ரீமந் நாராயணனை ஆராதிக்கிறானோ, அவன் என்னுடை கீதத்தால் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டவரும், க்ஷேமங் களுக்கு முக்கிய அதிபதியுமான ஸ்ரீ பகவானிடமிருந்து இஷ்டமான சுகத்தை அடைவான். எவன் காலையில் எழுந்திருந்து சிரத்தையுடன் கைகூப்பிக்கொண்டு இந்தக் கீதையைக் கேட்கிறானோ. பிறருக்குச் சொல்லு கிறானோ அவன் கர்மங்களிலிருந்து விடு படுவான். ஓ இராஜபுத்திரர்களே! பரமாத்வினுடைய ஸ்தோத்திர ரூபமான இந்தக் கீதத்தை நீங்கள் ஒருமனதாக ஜபஞ் செய்துகொண்டு தபஸ் செய்யுங்கள். கடைசியில் உங்களுக்கு எது இஷ்டமோ அதனை அடைவீர்கள்" என்று ராஜபுத்ரர்களைப் பரமசிவன் அனுக்கிரஹித்தார்.

நோட்டு

கிளி வேஷங்கொண்ட—ஸப்த ரிஷிகளுடைய விவாஹ காலத்தில் அக்கினி பகவான் ஸப்த ரிஷிகளின் பத்தினிகளிடம் ஆசைகொண்டார், அதையறிந்த ஸ்வாஹை ஸப்த ரிஷிகளின் பத்தினி வேஷங்கொண்டு தனது பர்த்தாவைத் திருப்திசெய்து, பின்பு கிளிவேஷங்கொண்டு அவருடைய ரேதஸ்ஸை நாணற் காட்டில் சேர்த்தாளென்று புராணக் கதை.

அத்தியாயம்–25

புரஞ்சனோபாக்கியானம்

1–2 இப்படிப் பரமசிவன் ராஜபுத்ரர்களுக்கு உபதேசித்து, அவர்களால் பூசிக்கப்பட்டு அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது மறைந்தார். பின்பு அவர்கள் எல்லோரும் ருத்ரரால் உபதேசிக்கப் பட்ட அந்த ஸ்தோத்திரத்தை ஜபித்துக் கொண்டு ஜலத்திலிருந்து தபஸ் செய்தார்கள்.

3–6 ஓ விதுரரே! அவர்களுடைய பிதாவாகிய பிராசீனபர்ஹிஸ் என்பவர் கர்மத்திலேயே ஆசை கொண்டவராக இருந்தபடியால் ஆத்ம தத்துவத்தை அறிந்தவராகிய நாரதர் அவ்வரசனை நோக்கி, ஓ மஹராஜ்! "எந்தக் கர்மத்தால் ஆத்மாவிற்கு சுகத்தை உண்டு பண்ணப் போகிறீர்? துக்கத்தை நிவர்த்திக்கக் கூடியதும் சுகத்தைக் கொடுக்கக் கூடியதுமான மோக்ஷமானது கர்மமார்க்கத்தால் கிடைக்கிறதில்லையே" என்று கிருபையுடன் கேட்டார். அதனைக் கேட்ட அரசன் நாரதரை நோக்கி, "மிகுந்த பாக்கிய முள்ளவவரே! எனக்கு அந்த மார்க்கம் தெரியாது. என்னுடைய புத்தியானது கர்மத்திலேயே செல்லுகிறது. புத்திரர்கள், ஸ்திரீ பணம் இவைகளைப் புருஷார்த் தமாக நினைத்து ஸம்ஸார மார்க்கத்தில் ரமித்துக் கொண்டிருப்பவன் மோக்ஷத்தை எப்படி, அடைவான்? எதனால் கர்மத்திலிருந்து நான் நிவர்த்தி அடைவேனோ, அந்த சுத்தமான ஆத்மஞானத்தை எனக்கு உபதேசிக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

7–25 அதனைக் கேட்ட நாரதர், "ஓ பிராஜாபதியே! நீர் அநேக யாகங்களைச் செய்து அவைகளில் தயையில்லாமல் அநேகம் பசுக்களை ஹிம்ஸித்திருக்கிறீர்; அந்த பசுக்கள் யாவும் உம்மால் செய்யப்பட்ட ஹிம்ஸையை நினைத்துக் கொண்டு உம்மை ஹிம்ஸிப்பதற்காகக் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. நீர் மரணமடைந்து பரலோகஞ் சென்றால் இரும்புமயமான தங்களுடைய கொம்பு களால், மிகுந்த கோபத்துடன் உம்மைக் குத்தி உபத்திரவிக்கப் போகின்றன. இந்த விஷயத்தில் உதாரணமாக வெகுநாளைக்கு முந்தி நடந்த புரஞ்சனனுடைய சரிதத்தைச் சொல்லுகிறேன், கேளும். ஓ அரசனே! வெகுநாளைக்கு முன் புரஞ்சன னென்னும் ஓர் அரசர் மிகுந்த கீர்த்தியுள்ளவராக இருந்தார். அவருக்கு அவிஞ்ஞாதன் என்ற ஒரு தோழன் உண்டு. அவருடைய சரிதம் பிறருக்கும் தெரியாது. அந்த அரசன் தோழனுடன் தமக்குத் தகுதியான பட்டணத்தைத் தேடி, பூமி முழுவதும் அலைந்தும் தகுதியான இடம் கிடைக்காததால் வருத்தமடைந்தான். இஷ்டமான காமங்களை அனுபவிக்க விரும்பினவராகையால் பூமியிலிருக்கும் பட்டணங்களிலொன்றும் அவர் மனதிற்குப் பிடிக்க வில்லை. இந்தப் புரஞ்சனன் ஹிமவத பர்வதத்தின் தென்பாகத்திலிருக்கும் தாழ்வரைகளில் ஒரு நகரத்தைக் கண்டான். அந்த நகரமானது ஒன்பது கோட்டைவாசல்களுள்ளது. ஸகல லட்சணங்களுள்ளது; பிரகாரங்கள், தோட்டங்கள் அட்டாலங்கள், அகழிகள், பலகணிகள், கோபுரங்கள் ஆகிய இவை களாகும். தங்கத்தாலும், வெள்ளியாலும் செய்யப்பட்ட சிகரங்களுள்ள வீடுகளாலும் பிரகாசிக்கிறது;

நீலங்கள், ஸ்படிகம், வைடூரியம், முத்து, மரகதம், மாணிக்கம் இவைகளால் தளவரிசை செய்யப்பட்ட உப்பரிகைகளுள்ளது. அதனால் போகவதீ பட்டணம் போல் பிரகாசித்தது. மேலும், அந்தப் பட்டணத்தில் ஸபைகள், நாற்சந்தி மண்டபங்கள், ராஜவீதிகள், விளையாடுகிற ஸ்தலங்கள், கடைவீதி, ஜனங்கள் சிரம பரிஹாரம் பண்ணிக் கொள்ளும் இடம், துவஜபதாகைகள், பவழ பூமிகள் ஆகிய இவைகள் இருக்கின்றன. அந்த நகரத்தின் வெளியில் ஒரு தோட்டமிருக்கிறது. அதில் திவ்யமான விருக்ஷங்களும், கொடிகளும் இருக்கின்றன. அந்தத் தோட்டத்தில் குளமொன்று இருக்கிறது. அதில் ஹம்ஸம் முதலிய பறவைகள் சப்தித்துக் கொண்டிருக்கின்றன. பனித்துளிகளுடன் கூடியதும், புஷ்பத்தின் வாஸனை யுள்ளதுமான காற்றினால் அசைகின்ற தளிர், கிளைகள் இவைகளுள்ள மரங்களிருக்கின்றன. அவ்விடத்தில் இருக்கும் பலவகையான காட்டு மிருகங்கள் பிறரை ஹிம்ஸிக்கிறதில்லை. குயில்கள் காதுக்கு இனிமையாகச் சப்திப்பதால் வழிப் போக்கர்கள் தங்களைக் கூப்பிடுவதுபோல நினைக்கிறார்கள். அப்படிப்பட்ட பட்டணத்திலிருந்து தெய்வச் செயலாக வெளியில் வந்த ஒரு உத்தம ஸ்திரீயைப் புரஞ்சனன் பார்த்தான்; அவளுக்கு பத்து வேலைக்காரர்கள் இருக்கிறார்கள்; ஒவ்வொரு வேலைக்காரர்களுக்கும் அநேகம் வேலைக் காரர்கள் இருக்கிறார்கள். ஐந்து தலைகளுள்ள ஸர்ப்பமானது அவளைக் காப்பாற்றுகிறது. அவள் விவாஹமாகாதவள்; பர்த்தாவை அடைய விரும்பியவள், இஷ்டப்படி உருவமெடுக்கத் தகுந்தவள்; அழகான மூக்குள்ளவன்; ரமணீயமான பற்களுள்ளவள்; அழகான கன்னங்கள், மேலான முகம் இவைகளுள்ளவள்;

காதுகளில் ஸமமான குண்டலங்களைத் தரிப்பவள்; பொன் வர்ணமான எக்கு முடிச்சுள்ளவள்; யௌவன வயதுள்ளவள்; தங்க ஒட்டியாணமுள்ளவள்; பாதத்தில் அணிந்திருக்கும் பாதஸரங்களுடைய சப்தத்துடன் தேவதைபோல் ஸஞ்சரிப்பவள்; அவளுடைய ஸ்தனங்கள் கொஞ்சமாக வெளியில் பிரகாசிக்கின்றன; மேலும் அவைகள் ஸமவிருத்தங்கள்; இடைவெளி யற்றவை; மேலும் அவள் அந்த ஸ்தனங்களை வஸ்திரத்தின் தலைப்பினால் மறைத்துக் கொண்டு பெண்யானைபோல் ஸஞ்சரிக்கிறாள்; வெட்கத்துடன் சிரிப்பதால் அழகாயிருப்பவள்; பின்னும் அவள் மிகுந்த ஆசையுடன் அழகான கடாக்ஷத்தால் அரசரைப் பார்த்தாள்.

26–31 அவளைக் கண்ட அரசர், தாமரை மலர் போன்ற கண்களுள்ளவளே! நீ யார்? யாருடைய பெண்? எவ்விடத்திலிருந்து வந்தவள்? இந்தப் பட்டணத்தில் வஸித்துக் கொண்டு எதனைச் செய்ய விரும்புகிறாய்? இந்தப் பதினோரு ஸேவகர்கள் யார்? இதோ இருக்கிற ஸ்திரீகள் யார்? உனக்கு முந்தி வரும் ஸர்ப்பமானது யாது? நீ, தர்மமாகிய பர்த்தாவைத் தேடும் ஹ்ரீ தேவதையா? ஸ்ரீ மஹாவிஷ்ணுவைத் தேடும் லக்ஷ்மிதேவியா? மஹர்ஷிகள்போல இந்திரியங் களை ஜயித்தவளாகிப் புருஷனைத் தேடும் நீ யார்? உன்னுடைய பர்த்தா உன்னுடைய பாதத்தை அடைந்த தாலேயே ஸகல கர்மங்களையும் அடைந்தவராக ஆகிறார். உன்னுடைய கையிலிருந்த தாமரைமலர் எவ்விடத்தில் விழுந்தது? ஓ அழகான தொடைக ளுள்ளவளே! மேற்சொல்லிய ஸ்திரீகளுக்குள் உன்னை ஒருத்தியாகவே சொல்ல நியாயமில்லை; ஏனென்றால்,

தேவதைகள் பூமியின் மீது நிற்கமாட்டார்கள். நீயோ பூமியில் நிற்கிறாய், ஆனதால் வீரர்களுக்குள் சிறந்த வனாகிய என்னைப் பர்த்தாவாக அடைந்து, நீ இந்தப் பட்டணத்தை லக்ஷ்மீ தேவியானவள் மஹா விஷ்ணுவுடன் வைகுண்டத்தைப் போல் அலங்கரிக் கலாம். ஓ அழகானவளே! உன்னுடைய கடைக் கண்ணினால் என்னுடைய இந்திரியங்கள் கலங்கின. வெட்கமுள்ளதும் அபிப்பராயத்துடன் கூடியதுமான சிரிப்பினால் மன்மதன் என்னை உபத்திரவிக்கிறான். அதனால் என்னை நீ அனுக்கிரஹிக்க வேண்டும்; ஓ அழகான புன்சிரிப்புள்ளவளே! அழகான புருவங்கள் உள்ளதும் அழகான கருவிழிகளுள்ள கண்களுள்ளதும், நாலுடக்கங்களிலும் தொங்கும் கறுத்த மயிர்களுள்ளதும், இனிமையாகப் பேசக்கூடியதுமான முகத்தை வெட்கத்தால் திருப்பிக் கொண்டிருக்கிறாயே? அதனை எனக்குக் காண்பிக்க வேண்டும்" என்று யாசித்தார்.

32–42 சூரராகிய விதுரரே, இப்படிக் கெஞ்சிக் கேட்கும் புரஞ்சனனைப் பார்த்து, அந்தப் பெண் இவரிடத்தில் ஆசைகொண்டு புரஞ்சனனை நோக்கி, 'ஓ புருஷர்களுக்குள் சிறந்தவரே! என்னை யுண்டு பண்ணினவரையும் பெயர் வைத்தவரையும் கோத்திரத் தையும் நான் அறியேன். நான் வஸிக்கும் இந்த நகரத்தை யுண்டு பண்ணினவர் இன்னாரென்றும் எனக்குத் தெரியாது. ஆனால் இவ்விடத்தில் வஸிப்பது தான் எனக்குத் தெரியும்; இந்தப் புருஷர்கள் என்னுடைய தோழர்கள்; இந்தப் பெண்கள் தோழிகள்; நான் தூங்கும் பொழுது இந்த ஸர்ப்பமானது இந்தப் பட்டணத்தை விழித்துக் கொண்டு காப்பாற்றுகிறது. தெய்வாதீனமாக நீர் இவ்விடம் வந்தீர். என்னுடைய

பந்துக்களை வைத்துக் கொண்டு உம்மைக் கல்யாணஞ் செய்து கொள்கிறேன்! என்னுடன் கிராம்யமான போகங்களெல்லா வற்றையும் அனுபவிக்கலாம்; என்னால் உண்டுபண்ணப்படும் காம போகங்களை அனுபவித்துக் கொண்டு வெகுகாலம் ஒன்பது வாசல்கள் உள்ள இந்த நகரத்தில் வசியும். மேலும், உம்மை விட்டு ரதியை அறியாதவனும் வேகத்தால் நிஷேதிக்கப் படாதஸுகத்தில் ஆசையில்லாதவனும், பரலோக சிந்தையற்றவனும், இவ்வுலகத்திய சிந்தை யில்லாதவனும், பசுவிற்கு ஸமமானனுமாகிய எவனைப் பர்த்தவாக அடையப் போகிறேன்? பிரவிருத்தி தர்மமாகிய கிருஹஸ்த தர்மத்தில் அர்த்த காமங்கள், புத்திரஸுகம், மோக்ஷம், கீர்த்தி, துக்கமற்ற லோகங்கள் ஆகிய இவைகள் கிடைக்கின்றன. இதுவே தர்மம் இதனை ஸன்யாஸிகள் அறியமாட்டார்கள். கிருஹஸ்தாசிரமம், பிதிருக்கள், தேவர்கள், மஹரிஷிகள், மனிதர்கள், மற்ற பிராணிகள் ஆகிய இவர்களுக்கும், தனக்கும் ஸுகத்தைக் கொடுக்கக்கூடியதென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஓ சூரரே! என்னைப் போன்ற எந்த ஸ்திரீ தாமாக வந்தவரும், கீர்த்தி யுள்ளவரும், தாதாவாயும், பிரியமான பார்வையுள்ள வருமான உம்மைப் போன்ற புருஷனைப் பர்த்தாவாக வரிக்க மாட்டாள்? ஸர்ப்பத்தின் உடல்போன்ற உம்முடைய கைகளைப் பார்த்து எவளுடைய மனம் தான் ஆசைப்படாது? நீர் அனாதர்களுடைய மனக் கவலையை க்ருணை நிறைந்த பார்வையால் போக் கடிப்பதற்காக ஸஞ்சரிக்கிறீர்" என்றாள்.

43–62 இப்படி அவ்விருவர்களும் பேசிக் கொண்டு அந்தப் பட்டணத்தில் பிரவேசித்து அநேக வருஷங்கள்

ஸந்தோஷமாக வஸித்தார்கள். அவ்விடத்தில் புரஞ்சனன் பாடகர்களுடைய கானத்தைக் கேட்டும், ஸ்திரீகளுடன் விளையாடிக் கொண்டும் கோடை காலத்தில் ஜலக்கிரீடை செய்தும் ஸந்தோஷமாகக் காலத்தைக் கழித்தார். அந்த பட்டணத்திற்கு ஏழு வாசல்கள் மேலே இருக்கின்றன. இரண்டு வாசல்கள் கீழாக இருக்கின்றன. அதற்கு அதிபதி இன்னாரென்று தெரியவில்லை. ஐந்துவாசல்கள் கிழக்கேயிருக்கின்றன. தெற்கில் ஒன்றும், வடக்கில் மற்றொன்று மிருக்கிறது. இரண்டு வாசல்கள் மேற்கே இருக்கின்றன. கத்யோகம், ஆவிர்முகீயென்ற இரண்டு வாசல்களும் கிழக்கில் ஓரே இடத்திலிருக்கின்றன. அவைகள் வழியாகப் புரஞ்சனன் தியுமான் என்ற தோழனுடன் விப்பிரர் ஜிதமிமன்ற தேசத்திற்குப் போகிறார். நளினீ, நாளினீ என்ற இரண்டு வாசல்கள் ஓரே இடத்திலிருக்கின்றன. அவைகளின் வழியாக புரஞ்சனன் அவதூதமினென்ற தோழனுடன் ஸௌரபமென்ற தேசத்திற்குப் போவது வழக்கம். முக்கை யென்ற கிழக்கிலிருக்கும் வாசல் வழியாக அவ்வரசர் ரஸஜ்ஞனென்ற தோழனுடன் பஹூதனமென்ற தேசத்திற்கும் விடணனென்பவனுடன் ஆபணமென்ற தேசத்திற்கும் செல்வார். மேலுமவர் பிதிருஹூவென்ற தெற்கு வாசல் வழியாகச் சுருததரனென்ற தோழனுடன் தக்ஷிணபாஞ்சாலத் திற்குப் போகிறார். தேவஹூயென்ற வடக்கு வாசல் வழியாக சுருததரனுடன் உத்தர பாஞ்சாலஞ் செல்கிறார். ஆஹூயென்ற மேற்கு வாசல் வழியாக துர்மதனுடன் கிராமதமென்ற தேசத்திற்குப் போகிறார். நிருதியென்ற மற்றொரு மேற்கு வாசல் வழியாக உல்பணனென்பவனுடன் வைசஸம் என்ற தேசம் செல்லுகிறார்; மேலும் அந்தப் பட்டணத்திய

ஜனங்களுக்குள் நிர்வாக், பேசஸ்கிருத் என்னுமிருவர்கள் கண்ணில்லாதவர்கள். அவர்களில் நிர்வாக் என்ப வனுடைய ஸஹாயத்தால் கண்ணுள்ளவர்களுக்கு அதிபதியான புரஞ்சனன் நடக்கிறார். பேசஸ்கிருத் என்பவனுடைய ஒத்தாசையால் காரியங்களைச் செய்கிறார். அவர் விஷூசீனனுடன் அந்தப்புரஞ் சென்றால் அப்பொழுது ஸ்திரீ, புத்திரன் ஆகிய இவர் களால் ஏற்படும் மோஹத்தையாவது, ஸந்தோஷத் தையாவது அடைகிறார். இம்மாதிரி அவ்வரசர் மிக்க காமியாகி, விஷயங்களில் ஆசைப்பட்டு விவேக மில்லாமல் தம்முடைய பார்யையின் இஷ்டப்படி நடந்தார். எப்படியெனில் தம்முடைய பத்தினி மத்யத்தைக் குடித்தால் தாமும் மத்யபானஞ் செய்தார். அவள் சாப்பிடும்போது இவரும் புசித்தார். அவள் பக்ஷணங்களை உட்கொள்ளும்போது இவரும் பக்ஷணங்களை புசித்தார். அவள் கானஞ் செய்யும் பொழுதும் கானஞ் செய்கிறார். அவள் அழுதால் இவரும் அழுகிறார். அவள் சிரித்தால் இவரும் சிரிக்கிறார். அவள் பேசும்பொழுது இவரும் பேசினார். அவள் ஓடினால் இவரும் ஓடுகிறார். அவள் நின்றால் இவரும் நிற்கிறார். அவள் படுத்திருந்தால் இவரும் படுத்திருக்கிறார். அவள் உட்கார்ந்திருந்தால் இவரும் உட்காருகிறார். எதையாவது அவள் கேட்டுக் கொண்டிருந்தால் இவரும் காது கொடுத்து கேட்கிறார். அவள் பார்க்கும்பொழுது இவரும் பார்க்கிறார். அவள் வாசனையை முகரும்போது இவரும் வாஸனையைக் கிரஹிக்கிறார். அவள் எதனையாவது தொடும்பொழுது இவரும் தொடுகிறார். அவள் துக்கிக்கும்போது இவரும் தீனன்போல் துக்கிக்கிறார். இப்படிப் புரஞ்சனன் தமது ஸ்திரீயினால் வஞ்சிக்கப்பட்டு

எல்லாப் பிரகிருதிகளாலும் ஏமாற்றப்பட்டும், ஒன்றையும் விரும்பாமல் விளையாட்டு மிருகம்போல் அவள் செய்த காரியத்தையே செய்து கொண்டிருந்தார்.

நோட்டு

புரஞ்சனன்–தன்னுடைய கர்மங்களால் சரீரமாகிய பட்டணத்தை யுண்டு பண்ணுவதால் ஜீவனென்று அர்த்தம். அவிஞ்ஞாதன் ஒருவராலும் அறியப்படாத பெயருள்ளவர் பரமாத்மா. இவர் ஜீவனுக்குத் தோழன். "இரண்டு கருடபக்ஷிகள் ஒன்றுக்கொன்று தோழமை. ஒரே மரத்தில் வஸிக்கின்றன. அவைகளில் ஒன்று அந்த மரத்தில் பழுத்த பழத்தைப் புசிக்கிறது. மற்றொன்று பழத்தைப் புசியாமல் ஸாக்ஷியாக இருக்கிறது" –சுருதி. ஸ்ரீத : அந்த அத்தியாயத்தில் அன்யோபதேசமாக அத்யாத்ம விஷயத்தை நாரதர் உபதேசிக்கிறார். 'ஏன் ஸாக்ஷாத்தாக உபதேசிக்கவில்லை யென்றால் தேஹம் முதலியவைகளில் ஆத்மாவென்ற அபிமானமுள்ளவனும் உண்மையில் ஹிதமான புருஷார்த்தத்தை அறியாதவனும், விஷயசுகமே பரம புருஷார்த்தமென்று நினைத்தவனுமாகிய புருஷனுக்கு தத்துவத்தை யுபதேசிப்பதாலும் அவன் புத்தியில் ஏறமாட்டானென்று நினைத்து வெகுகாலமாக அப்யஸிக்கப்பட்ட ஸ்திரீகள், புருஷர்கள், கர்ப்பம், ஜனனம் கிழத்தனம். மரணம், ஜாக்ராவஸ்தை, ஸ்வப்னம், ஸுஷுப்தி முதலிய ஸம்ஸாரத்தை நிரூபித்து பின்பு அவைகளின் தோஷத்தை காண்பித்து இவைகளை நாம் விட்டுவிட வேண்டும்' என்ற எண்ணத்தை உண்டுபண்ணி, பின்பு தத்துவத்தை

யுபதேசித்தால் நன்றாகப் புத்தியில் ஸ்திரமாக இருக்கு மென்ற எண்ணத்தால் அன்யாபதேசமாக உபதேசித் தார். ஜீவனை அரசனாகவும், சரீரத்தை அவனுடைய நகரமாகவும் பரமாத்மாவை ஜீவனுக்குத் தோழனா கவும், புத்தியை பத்தினியாகவும் சொல்லப்பட்டி ருக்கிறது. 'அரசன் இருந்தார்' என்றதால் ஜீவன் அநாதியென்று ஏற்படுகிறது. மிகுந்த கீர்த்தி உள்ளவர் என்றதால் பாவமற்றவர்; கிழத்தனமற்றவர்; மரண மற்றவர்; சோகமற்றவர்; பசி தாகங்களற்றவர்; ஸத்யகாமர், ஸத்யஸங்கல்பர் என்ற சுருதியாலும், "இவர் ஆயுதத்தால் வெட்டமுடியாதவர்; தஹிக்க முடியாதவர்; ஜலத்தால் நாசஞ் செய்ய முடியாதவர்; வாயுவினால் உலர்த்த முடியாதவர்; ஆனதால் நித்யர்; எங்குமிருப்பவர்; அசையாதவர்; புராண புருஷர்; என்ற ஸ்மிருதியாலும் உத்கோஷிக்கப்பட்ட குணங் களுள்ளவரென்று ஏற்படுகிறது. அவிஞ்ஞாத– அறியப் படாத பெயருள்ளவர் (ஒருவருக்கும் அவருடைய பெயர் தெரியாது) பரமாத்மாவின் பெயர் ஒருவராலும் அறியப்படாததாகையால் அவரே தோழரென்று சொல்லப்பட்டிருக்கிறார். ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் அவிஞ்ஞாதரென்றப் பகவானுக்கு ஒரு பெயர் காட்டப்பட்டிருப்பதால் அவிஞ்ஞாதவென்ற பெயருள்ளவரென்றும் சொல்லலாம். 'பெயர் தெரியாது' என்றதால் ஜீவனுக்கு அவருடைய பெயரே தெரியாது. ஸ்வரூபம் எப்படித் தெரியும்? அதுவும் அதனால் அறியப்படாததே என்று கருத்து –வீர. அலைந்தும் நல்ல சரீரத்தையடைய வேண்டிப் பிரம்மாண்டத் திலுள்ள தேவசரீரம் முதலியவைகளிலும், ஸ்தாவர சரீரங்களிலும் பிரவேசித்து அலைந்தான். கதையின் அழகுக்காகப் பட்டணத்தை வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

பத்து வேலைக்காரர்கள்–பத்து இந்திரியங்கள். அவைகளுடைய விருத்திகளே. அவைகளின் பரிகாரர் கள். ஐந்து தலைகளுள்ள – ஐந்து வியாபாரங் களுள்ள பிராணன்; தெய்வாதீனமாக – பெயர் முதலியவை எனக்குத் தெரியாமலிருந்தாலும் ஒன்பது துவாரங்களுள்ள மனுஷ்ய சரீரத்தைத் தெய்வச் செயலாக அடைந்தீர். இதில் விஷய ஸுகங்களை அடையலாம், வீர. ஜலக்கிரீடைத்தில் ஹ்ராதினி என்றிருப்பதால் ஸகல இந்திரியங்களுடன் ஜாக்ரா வஸ்தையில் விஷயசுகத்தை அனுபவித்த, அந்த அவஸ்தையில் நேர்ந்த களைப்பைப் நிவர்த்தித்துக் கொள்வதற்காக ஸ்வப்னாவஸ்தையை அடைந்தார்; ஏழு வாசல்கள்–இரண்டு கண்கள், இரண்டு மூக்குகள், இரண்டு காதுகள், முகம் ஆகிய ஏழு. இரண்டு வாசல்கள் குதம்குறி ஆகிய இரண்டு. கத்யோதம்– மின்மினிப் பூச்சி போல் அற்ப பிரகாசமுள்ள இடது கண் ஆவிர்முகி–பிரகாசமுள்ள வலது கண், தியுமான – சக்ஷுந்திரியம், அதனுடன் பிரகாசிக்கும் விஷயத்தை அடைகிறான். நளினி, நாளினி இரண்டு மூக்குகள், அவைகளின் வழியாக வாயு தேவதாகமான கிராணேந்திரியத்துடன் ஜீவன் வெளியில் சென்று வாஸனையைக் கிரஹிக்கிறான். முக்கை–முகம். ரஸஜ்ஞ–நாக்கு பஹூமதன சித்திரான்னம் முதலியவை விபணம் வாகிந்திரியம். ஆபணம்– பேச்சு.

இதன் விபரங்கள் யாவும் இந்த நான்காவது ஸ்கந்தத்தில் இருபத்தொன்பதாவது அத்தியாகத்தின் மூலத்திலேயே சொல்லப்பட்டு இருக்கின்றனவாதலால் அதிகமாக எழுதுவதை இங்கு நிறுத்தினோம்.

அத்தியாயம்–26

(முன் அத்தியாயத் தொடர்ச்சி)

1–16. அந்த வீரராகிய அரசர் ரதத்தின் மீதேறி வேட்டைக்காக வனஞ்சென்றார். அந்த இரதத்தில் ஐந்து குதிரைகள் கட்டியிருக்கின்றன. அது வெகு வேகமாகச் செல்லக்கூடியது: இரண்டு ஈஷா தண்டமுள்ளது; இரண்டு சக்கரங்களுள்ளது; ஒரு அச்சுள்ளது; மூன்று துவஜ மரங்களுள்ளது; ஐந்து ஸந்திபந்தங்களுள்ளது; ஒரு கடிவாளமுள்ளது; ஒரு ஸாரதியுள்ளது; ஒருவர் உட்காரக்கூடிய ஸ்தலமுள்ளது; இரண்டு ஏர்க்கால்களுள்ளது; ஐந்து பிரஹரணமுள்ளது; ஏழு வருதமுள்ளது; இரதத்திற்கு மேற்புரத்தில் போட்டிருக்கும் புலித்தோல் முதலியவை) ஐந்து கதிகளுள்ளது; தங்கமயமான ஸாமக்கிரிகளுள்ளது; பதினோரு ஸேனாபதிகளுக்கு அதிபதியான அந்த புரஞ்சனன் ஸ்வர்ண கவசத்தை தரித்து. குறையாத பாணங்களுள்ள தூணீரமுள்ளவனாகி ஐந்து தாழ்வாரைகளுள்ள வனஞ் சென்று பாணம், வில் ஆகிய இவைகளை வைத்துக்கொண்டு மிக்க கர்வத்துடன் வேட்டையாடுவதில் மிகுந்த ஆசையுடன் வேட்டையாடினான். ஆனால் பத்தினியை மட்டில் அழைத்துப் போகவில்லை. மேலுமவர் அரசர்களுடைய ஸ்வபாவத்தை அங்கீகரித்து. கருணையற்றவராகி, கூர்மையான பாணங்களால் காட்டு மிருகங்களைக் கொன்றார்: (க்ஷத்திரியர்களுக்கு வேட்டையாடுவது தோஷமல்லவே, ஏன் அதனைத் தோஷமாகக் கூறப்படுகிறதென்றால் ஸநாதனஞ் சொல்லப்படுகிறது.) அரசர்கள் வேட்டையாடி மிருகங்களைக் கொல்ல

வேண்டுமென்ற விதியில்லை; ஆகையால் மிருகங்களைக் கொல்வார்களாகில் சிராத்தம் முதலியவைகளுக்காக மிருகங்களைக் கொல்லக்கூடாது; பிரஸித்தமான சிராத்தங்களாக இருக்கவேண்டும். அதிலும் சுத்தமான மிருகங்களையே கொல்லவேண்டும்; அதிலும் வனத்தில் அடிக்கலாமேயொழிய மற்றவிடத்தில் ஹிம்ஸிக்கக் கூடாது; அதிலும் எவ்வளவு வேண்டுமோ. அதற்கு மேல் எடுத்துக் கொள்ளக்கூடாது. வித்வானாகிய எந்தப் புருஷன் இம்மாதிரி நியதமான கர்மத்தை அனுஷ்டிக்கிறானோ அவனுக்கு ஞானமுண்டாகும் ஆதலால் அந்தர்கர்மம் பந்தமாகிறதில்லை. விதியை மீறிக் கர்மங்களைச் செய்பவன் கர்த்தாவென்ற அபிமானமுள்ளவனாகி, கர்மத்துக்குக் கட்டுப்படுகிறான் பின்பு குணங்களில் மூழ்கி நரகத்தை அடைகிறான். இப்படி அரசருடைய பலவகையான இறக்கைகளுள்ள பாணங்களால் பேதிக்கப்பட்டு அநேக மிருகங்கள் நாசமாயின. கருணையுள்ள வர்களால் அது ஸஹிக்க முடியாததாக இருந்தது. சசங்கள் முயல்கள், பன்றிகள், மஹிஷிகள், கவயங்கள், குருக்கள், (சல்யங்கள் முதலிய சுத்தமானவைகளையும், அசுத்தமானவைகளையும் கொண்டு அரசன் மிகவும் களைப்படைந்தார்; பின்பு தமது பட்டணத்திற்கு வந்து அந்தப்புரம் சென்று ஸ்நானஞ் செய்து உசிதமான ஆகாரத்தைப் புசித்து, சிரம பரிஹாரமடைந்து படுத்துக் கொண்டார், அப்பொழுது நல்ல சந்தனம் பூசிக்கொண்டார். புஷ்ப மாலைகளைத் தரித்தார் தூப வாஸனையை மோந்தார். ஸகல அவயவங்களையும் அலங்கரித்துக் கொண்டார். அப்பொழுது பத்தினியை பார்க்க வேண்டுமென்ற எண்ண முண்டாயிற்று. அப்பொழுது அவ்வரசர் வெளியிலிருக்கும் விஷயங்களில்

ஆசையில்லாதவராகவும், ஸந்தோஷத்தையடைந்தவரும், தம்மையும் பிறரையும் மறந்தவரும், மன்மதனால் பீடிக்கப்பட்ட மனமுள்ளவருமாக இருந்தபடியால் தம்முடைய பத்தினியை எங்கும் தேடிப்பார்த்தார். அப்படியும் அவள் காணப்படவில்லை. பின்பு மனவருத்தமடைந்து அந்தப்புர ஸ்திரீகளை நோக்கி ஓ ஸ்திரீகளே! நீங்களும் உங்களுடைய யஜமானிகளும் முன்போல க்ஷேமமாயிருக்கிறீர்களா? கிருஹத்தில் மாதாவாவது, பதிவ்ரதையான பத்தினியாவது இல்லாவிடில் அந்த கிருஹத்திலிருக்கும் ஸம்பத்துக்கள் பிரகாசிக்கிறதில்லை. சக்கரம் முதலியவைகளற்ற ரதம்போல இப்படிப்பட்ட வீட்டில் விவேகியான எவன்தான் தினனாக வஸிப்பான்? என்னுடைய பத்னியானவள் துக்கஸமுத்திரத்தில் மூழ்கும் என்னை அடிக்கடி ஸமாதானஞ் செய்து, ஸந்தோஷப் படுத்துவாளே; அவள் எவ்விடத்தில் இருக்கிறாள்?" என்று கேட்டார்.

17. அதனைக் கேட்ட ஸ்திரீகள், "சத்துருவைக் கொல்லும் பராக்ரமமுள்ள ஓ மஹாராஜனே! உம்முடைய பத்தினியானவள் என்ன எண்ணங் கொண்டிருக்கிறாள் என்பது எங்களுக்குத் தெரியவில்லை; தரையில் படுத்துக்கொண்டிருக்கிறாள், பாரும்" என்று சொன்னார்கள்.

28–26. அதனைக் கேட்ட புரஞ்சனர் தேஹாபிமானத்தை விட்டுப் பூமியில் படுத்திருக்கும் பத்தினியைப் பார்த்து மனங்கலங்கி மிகுந்த துக்கத்தை அடைந்தார். பின்பு அவர் மிகுந்த வருத்தத்துடன் மெதுவான வார்த்தைகளைச் சொல்லி அவளை

ஸமாதானஞ் செய்து தம்மிடத்தில் அவளுக்குப் பிரணய கோப மிருக்கிறதாகத் தெரிந்து கொண்டார். நல்வார்த்தை சொல்வதில் ஸமர்த்தராகிய அந்தப் புரஞ்சனன் அவளை மெள்ள மெள்ள ஸமாதானஞ செய்தார். அவளைத் தம்முடைய மடியில் வைத்துக் கொண்டு கால்களையும் பிடித்தார். மேலுமவர் பத்தினியை நோக்கி, "ஓ அழகானவளே! யஜமானர்கள், வேலைக்காரர்கள் குற்றம் செய்தாலும், அவர்களைத் தங்களுக்கு ஸ்வாதீனர்களாகச் செய்துகொண்டு சிக்ஷிக்கவேண்டும்; அப்படி சிக்ஷிக்கப்படாத வேலைக் காரர்கள் புண்ணியம் பண்ணாதவர்கள் என்பது நிச்சயம். பிரபு வேலைக்காரனைச் சிக்ஷிப்பது அனுக்கிரஹமாக ஆகிறது. பந்துக்களால் செய்யப்பட்ட சிக்ஷையைப் பற்றி எவன் துக்கிக்கிறானோ, அவன் அக்ஞனேயாம். ஓ தைரியமுள்ளவளே! அழகான புருவங்களாலும், புன்சிரிப்பினாலும், கடைக்கண் பார்வையாலும், கறுத்த மயிர்களாலும், அழகானதும் உயர்ந்த மூக்குள்ளதும், இனிமையான வார்த்தை யுள்ளதுமான முகத்தைப் பந்துவாகிய எனக்குக் காண்பிக்க வேண்டும். சூரனுடைய பத்தினியே! உனக்கு யார் குற்றம் செய்தாரோ அவர் ப்ராஹ்மணர்கள், பகவத் பக்தர்களாகிய இவர்களைத் தவிர வேறு யாராயிருந்தாலும் அவனை சிக்ஷிக்கிறேன். ஆனால் மூன்று லோகத்திற்கு வெளியிலும் கூட உனக்கு அபராதஞ் செய்தவன் பயமில்லாமல் சந்தோஷமாக வஸிக்கமாட்டான். (என்னிடத்திலிருந்து பயந்து தானாகவே மரணமடைவான்.) உன்னுடைய முகமானது இதற்குமுன் இம்மாதிரி இருந்ததில்லை; நெற்றியில். திலகமில்லை; முகமானது அழுக்கடைந் திருக்கிறது; சந்தோஷமற்றதாயிருக்கிறது; அழகான

உன்னுடைய ஸ்தனங்கள் துக்கத்தால் வாடினவை களாக இருக்கின்றன, கோவைப்பழம் போன்ற உதடு தாம்பூலச் சிரிப்பு இல்லாமலிருக்கிறது; ஆனதால் உன்னை விட்டுத் தனியாக வேட்டைக்குப் போனதால் குற்றஞ் செய்தவனாக ஆகிறேன்; ஆனாலும் நான் உனக்கு ஸ்வஹிருத்தானபடியால் என் குற்றத்தை மன்னிக்கவேண்டும்; மன்மதனால் பீடிக்கப்பட்டுத் தைரியமில்லாமல் வருத்தப்படுகிறவரும், ஸ்வாதீனப் பட்டவருமாகிய பர்த்தாவை எந்த ஸ்திரீ தான் ஆராதிக்கமாட்டாள்" என்று சமாதான வார்த்தை களைச் சொன்னார்.

அத்தியாயம்–27

(முன் அத்தியாயத் தொடர்ச்சி)

1–12 புரஞ்சனனுடைய பத்தினீயும், புரஞ்சனி யென்னும் பெயருள்ளவளுமான அந்தப் பெண் இம்மாதிரி புரஞ்சனனை, வசப்படுத்திக் கொண்டு ரமித்தாள். பிறகு அவள் ஸ்நானஞ் செய்து, நல்ல வஸ்திரங்களை உடுத்திக் கொண்டும் அலங்காரஞ் செய்து கொண்டும் மேலான அன்னத்தைப் புஜித்து அரசருடைய சமீபம் வந்தாள். அவளைப் பார்த்து அரசர் சந்தோஷமடைந்து அவளை ஆலிங்கனஞ் செய்து கொண்டு ரஹஸ்யத்தில் அவள் வார்த்தையைக் கேட்டு அதனால் புத்தி மயக்கமடைந்து, ஸ்திரீயினால் பீடிக்கப்பட்டவராகி, இரவு, பகல் என்ற எண்ணமற்று, தம்முடைய ஆயுஸ்ஸு செலவாகிறதென்பதைத் தெரிந்து கொள்ளாதவராக இருந்தார். அதனால் அவருக்குத் தம்முடைய ஆத்மாவாவது, பிறராவது, பிறருடைய ஸ்வரூபமாவது தெரியவில்லை. இந்தப் புரஞ்சனியினுடைய ஸ்வரூபமே அவரால் அறியப் பட்டது. இப்படி அவ்வரசர் மன்மதனால் கலங்கிய மனமுள்ளவராகி அவளுடன் ரமித்துக் கொண்டிருந்தார். அவருடைய யெள்வன வயது முழுவதும் அரை க்ஷணம் போல் சென்றது. அந்தப் புரஞ்சனனுக்கு நூற்றுப் பதினொரு பிள்ளைகள் பிறந்தார்கள். அப்பொழுது அவருடைய வயதில் பாதி சென்றது. பின்பு பித்ருகுலத்திற்கும், சஹோதரர்களுக்கு கீர்த்தியை விருத்திபண்ணக கூடிய நூற்றுப்பத்து பெண்கள் பிறந்தார்கள். புரஞ்சனனுடைய புத்திரி களான அவர்களெல்லோரும் நல்ல ஸ்பாவம்

உள்ளவர்கள்; ஔதார்ய குணமுள்ளவர்கள். அப்பொழுது புரஞ்சனன் தம்முடைய புத்திரர் களுக்குத் தகுந்த ஸ்திரீகளை விவாகச் செய்து வைத்ததுமன்றி பெண்களுக்கும் தகுந்த புருஷர்களை தேடி விவாஹஞ் செய்வித்தார். அந்தப் புத்திரர் களுக்கு ஒவ்வொருவர்களுக்கும் தனித்தனியே நூறு புத்திரர்கள் உண்டானார்கள். அதனால் பாஞ்சால தேசத்தில் புரஞ்சனனுடைய வம்சமானது விருத்தி யாயிற்று. அப்பொழுது அவ்வரசர் தம்முடைய புத்திரர்களையும் அவர்களுடைய புத்திரர்களையும் பார்த்து அவர்களிடத்தில் அபிமானம் வைத்து விஷயங்களில் மூழ்கியிருந்தார். பின்னுமவர் நீர் யாகங்களை அனுஷ்டித்தது போல் பலவகையான பசுவை உத்தேசித்து யாகங்களைச் செய்து, அவைகளில் பசுக்களைக் கொன்று தேவர்களையும், பிதிருக்களையும், பூதபதிகளையும், பூஜித்தார். இப்படி குடும்ப விஷயத்தில் ஆசையுள்ளவரும், தமக்கு அனுகூலமான கர்மங்களைச் செய்வதில் ஜாக்கிரதை யுற்றவருமான புரஞ்சனருக்கு ஸ்திரீகளிடத்தில் மிகுந்த ஆசையுள்ளவர்களுக்கு எது விரோதியோ, அந்த ஜரை (கிழத்தனம்) நேர்ந்தது.

13–18 அப்பொழுது சண்டவேகனென்ற ஒரு கந்தர்வராஜன் இருந்தான். அவனுக்கு மிக்க பலிஷ்டர் களான முந்நூற்று அறுபது கந்தர்வர்கள் வேலைக்காரர் களாக இருந்தார்கள். மேலும் அவனுக்கு வெண்மை நிறமுள்ளவர்களும், கருமை நிறமுள்ளவர்களுமான முந்நூற்று அறுபது ஸ்திரீகள் வேலைக்காரிகளாக இருந்தார்கள். அந்தச் சண்ட வேகனுடைய வேலைக் காரர்கள் புரஞ்சனனுடைய பட்டணத்தைப் பிடித்துக்

கொள்ள யத்தனித்தார்கள். அப்பொழுது அந்தப் பட்டணத்துத் தலைவனாகிய பிரஜாகரன் என்பவன் அந்த எழுநூற்றிருபது கந்தர்வர்களுடன் தானொரு வனாக நூறு வருஷம் யுத்தம் செய்தான். அந்தப் பிரஜாகரன் வெகுகாலம் யுத்தம் செய்தும் எதிரிகள் அநேகர்களாக விருந்துபடியால், தான் களைப்படைந்து பிராண சம்சயத்தை அடைந்து பட்டணத்து ஜனங் களுடனும், பந்துக்களுடனும் மிகவும் கவலை யடைந்தான். அந்தப் புரஞ்சனன் பாஞ்சால தேசத்தில் தம்முடைய வேலைக்காரர்களால் கொடுக்கப்படும் வஸ்துக்களைப் புஜித்து, ஸ்திரீயால் ஜயிக்கப்பட்டு பட்டணத்துக்கு நேர்ந்த பயத்தை அறியாதவராக வேயிருந்தார்.

19–30 இப்படியிருக்கையில் காலனுடைய பெண் துர்பகா என்னும் பெயருள்ள ஒருத்தி தனக்குத் தகுந்த புருஷனைத் தேடி, மூவுலகமும் அலைந்தாள். "ஓ பிராசன பார்ஹிஸ்ஸே! அவளைக் கல்யாணஞ் செய்து கொள்ள ஒருவரும் சம்மதிக்கவில்லை; அவள் முன் காலத்தில் தன்னை அங்கீகரித்த பூருவிடம் சந்தோஷித்து அவருக்கு வரத்தை (ராஜ்யத்தை) கொடுத்தவள், நான் ப்ரஹ்மலோகத்திலிருந்து பூமியில் சஞ்சரிக்கும் பொழுது தெய்வச் செயலாக என்னைக் கண்டாள்; தன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டாள்; அதற்கு நான் சம்மதிக்காததனால் அவள் என்னை நோக்கி, "ஓ முனியே! என்னுடைய வேண்டுக்கோளின்படி நீர் நடவாததினால் நீர் எப்பொழுதும் ஒரே விடத்தில் இல்லாமல் அலைந்து கொண்டிருப்பீர்" என்று நிவர்த்திக்க முடியாத சாபத்தைக் கொடுத்தாள். பின்பு

நான் அந்தக்கால கன்னிகையை நோக்கி, யவனர்களுக்கு அதிபதியான பயன் என்பவனைக் கல்யாணம் செய்துகொள்" என்று சொன்னேன். அதனைக் கேட்டு அவள் பயனிடம் சென்று, "ஓ வீர! யவனர்களுக்கு அதிபதியான உம்மை நான் வரிக்கிறேன்; உம்முடைய விஷயமாய்ச் செய்யப்பட்ட சங்கல்பமானது ஒரு பொழுதும் நாசமடைகிறதில்லை. லோகத்திலும் வேதத்திலும் எதனைக் கொடுக்கலாமென்றும், பிரதிக்ரஹிக்கலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறதோ அதனைப் பிறர் யாசிக்க எவன் கொடுக்கவில்லையோ, கொடுப்பதை எவன் பெற்றுக் கொள்ளவில்லையோ, அவ்விருவர்களும் அக்ஞர்கள். அவர்களைப் பற்றி சாதுக்கள் துக்கிக்கிறார்கள். உபத்திரவமடைந்தவர் களிடத்தில் தயை செய்வதே புருஷனுக்கு தர்மம். ஆகையால் என்னிடம் தயைசெய்து சந்தேகமின்றி கல்யாணம் செய்துகொள்ளும்" என்று வேண்டிக் கொண்டாள். அதனைக் கேட்ட யவனேசுவரன் எல்லாருக்கும் மரணமுண்டு பண்ண வேண்டுமென்ற எண்ணமுள்ள அந்தப் பெண்ணை நோக்கி, "நீ அஸத்தான ஸ்திரீகளுக்குள் சிறந்தவள். அதனால்தான் உன்னை ஒருவரும் விரும்பவில்லை. ஆனாலும் உனக்குத் தகுந்த புருஷன் ஒருவன் இருக்கிறான். நான் ஞானதிருஷ்யால் தெரிந்து கொண்டேன. இந்த லோகம் முழுவதும் உனக்கு புருஷனே. நீ ஒருவருக்கும் தெரியாத நடையுடையவளாகக் காமத்தால் உண்டு பண்ணப்பட்ட இந்த லோகத்தை அனுபவித்துக் கொண்டிரு. என்னுடைய யவன ஸைன்யத்துடன் சேர்ந்து பிரஜைகளை நாசஞ்செய்வாய். ப்ரஜ்வார னென்கிற இவன் (வைஷ்ணவ ஜ்வரம்) எனக்கு சஹோதரன்; நீ எனக்கு சஹோதரியாக இருக்கக்

கடவாய். உங்களிருவர்களுடன் இந்த லோகத்தில் பயங்கரமான சைன்யத்துடன் ஒருவருக்கும் தெரியாமல் சஞ்சரிக்கிறேன்" என்ற சிரித்துக் கொண்டு சொன்னான்.

நோட்டு

பிள்ளைகள்–இந்திரியங்களுடைய மாறுதல்கள். பெண்கள்–புத்தியின் வியாபாரங்கள், பிள்ளைகள் 111 என்றும் பெண்கள் 110 என்றும் சொல்லியிருப்பதால் கிருஹஸ்தர்களுக்குப் பெண்கள் குறைந்தும், புத்திரர்கள் அதிகர்களாகவுமிருப்பதே அழகு என்று காட்டப் பட்டது. சண்டவேகன்–பயங்கரமாகிய வேகமுள்ள காலம். கந்தர்வர்கள்–முந்நூற்று அறுபது பகல்கள், ஸ்திரீகள்–இராத்திரிகள். சுக்லபக்ஷ ராத்ரிகள் வெண்மை நிறமுள்ளவை. கிருஷ்ணபக்ஷ இராத்ரிகள் கருமைநிறமுள்ளவை. காலிகன்னிகா–ஜரையென்று சொல்லப்படும் கிழத்தனம். பயன்–மிருத்யுவே பயனெனப்படுகிறான்.

அத்தியாயம்–28

புரஞ்சனன் ஸ்திரியாக மாறினது

1–28. "ஓ பிராசீன பர்ஹிஸ்ஸே! பயனென்ப வருடைய சைன்யங்கள் மிருத்யுவின் ஆஞ்ஞையின்படி பிரஜ்வாரன், காலகன்யை ஆகிய இவர்களுடன் பூமியில் ஸஞ்சரித்தார்கள், ஒரு கால் அவர்கள் பூமியிலுள்ள ஸகல விதமான போகத்தால் நிறைந்ததும், முதிர்ந்த வயதுள்ள ஸர்ப்பத்தால் காப்பாற்றப்பட்டது மான புரஞ்சனனுடைய பட்டணத்தை முற்றுகை செய்தார்கள். கால கன்னிகையென்பவள் புரஞ்சன னுடைய பட்டணத்தை பலாத்காரமாக அனுபவித்து வந்தாள். அவளால் அனுபவிக்கப்படும் புருஷன் உடனே பலமற்றவனாக ஆகிவிடுவான். அவளால் அனுபவிக்கப்படும் அந்தப்பட்டணத்தில் நாலு பக்கங் களிலும் யவனனுடைய சைன்யங்கள் பிரவேசித்து மிகவும் உபத்திரவப்படுத்தினார்கள். அந்தக் கால கன்னிகை பட்டணத்தில் பிரவேசித்தது முதல் அந்தப் பட்டணத்திற்கு அபிமானியும் குடும்பத்தில் மமதை (என்னுடையது என்ற புத்தி) உள்ளவனுமான புரஞ்சனன் பலவகையான தாபங்களை யடைந்தான். அப்பொழுது புரஞ்சனனுக்குச் சரீரத்தில் சோபை குறைந்தது. அவன் மிகவும் தீனனாகவும், விவேகமற்ற வனாகவுமிருந்தான். அவனுடைய ஐசுவரியம் கந்தர்வர்களாலும், யவனர்களாலும் அபஹரிக்கப்பட்டது. அந்தப் பட்டணமானது நாசமாயிற்று. புத்திரர்களும், பேரர்களும், மந்திரி முதலியவர்களும், பத்தினியும் புரஞ்சனனிடத்தில் பிரீதியில்லாதவர்களாக இருந்தது மன்றி விரோதிகளாயுமிருந்தார்கள். அந்தப்

பாஞ்சாலதேசம் முழுவதும் சத்துருக்களால் பீடிக்கப் பட்டிருந்தது. புரஞ்சனன் காலகன்னிகையால் பீடிக்கப் பட்டான். இவைகளெல்லாவற்றையும் பார்த்து அவ்வரசன் அதற்குப் பதில் செய்ய முடியாதவனாக மிகுந்த கவலையடைந்தான். ஆனாலும் முன் அனுபவிக்கப் பட்ட காமங்களைத் திரும்பவும் அனுபவிக்க வேண்டு மென்ற எண்ணமுள்ளவனாக இருந்தான். ஆனாலுமவன் புத்திரர்கள். ஸ்திரீ ஆகிய இவர்களுடைய பிரீதி இல்லாததாலும் அந்த நகரமானது கந்தர்வர்களாலும் யவனர்களாலும், காலகன்னையாலும் நாசம் பண்ணப் பட்டிருந்தாலும் அதைவிட்டு வெளியே போவதற்கு முயன்றான். ஆனாலும், அதனை விட்டுபோக உண்மையில் ஸம்மதமில்லை. இந்த சமயத்தில் பயனென்பவனுடைய தங்கையாகிய பிரஜ்வாரன் அவ்விடம் வந்து தன்னுடை சஹோதரனுக்குப் பிரியத்தைச் செய்யவேண்டுமென்ற விருப்பத்தால் அந்தப் பட்டணத்தை எரித்தான். இப்படி அந்தப் பட்டணமானது எரியும் பொழுது அதற்கு அபிமானியான புரஞ்சனன், பட்டணத்து ஜனங்கள், தன்னுடைய பத்தினி, புத்திரன் முதலியவர்கள் ஆகிய இவர்களுடன் மிக்க துயரத்தையடைந்தான். இப்படி அந்த நகரத்தில் வஸிக்கமுடியாமல் உபத்திரவம் நேர்ந்தபடியால் மரத்தின் பொந்திலிருந்து ஸர்ப்பம் கிளம்புவதுபோல அதிலிருந்து வெளியில் செல்ல விரும்பினான். கந்தர்வர்களால் கைகால்கள் முறிக்கப் பட்டவனும், பௌருஷமற்றவனுமான அந்தப் புரஞ்சன னுடைய கழுத்தை யவனர்கள் பிடித்துக் கொண்டார் கள். அப்பொழுது அவன் அழுததுமன்றிப் பெண்கள் புத்திரர்கள், வீடு, பொக்கிஷம் முதலியவைகளை 'நான் என்னுடையது' என்று அபிமானத்தால்

தன்னுடையதாக நினைத்து, பத்தினியை விட்டுப் பிரிதல் நேர்ந்த காலத்தில் தனக்குள் யோசிக்கலானான். எப்படியெனில், நான் பரலோகஞ் சென்ற பின் அநாதையான என்னுடைய பத்தினி தனியாகக் குழந்தைகளுடன் துக்கப்பட்டுக்கொண்டு எப்படி ஜீவிக்கப்போகிறாள் ? நான் புஜிப்பதற்கு முந்தி அவள் புஜிக்கமாட்டாள். நான் ஸ்நானம் பண்ணாமலிருந்தால் அவளும் ஸ்நானம் செய்யமாட்டாள், நான் கோபங் கொண்டால் அவள் பயப்படுவாள். நான் அதட்டினால் மௌனமாக இருப்பாள். ஒவ்வொரு சமயத்திலும் எனக்குத் தக்க ஆலோசனை சொல்லி, புத்தி புகட்டுவாள். நான் தேசாந்தரம் போயிருந்தால் துக்கப்படுவாள். சூரனைப்பெற்றவளானாலும், பர்த்தாவினுடைய விரஹத்தை ஸஹியாமல் மரணம் அடைகிறதென்ற கிருஹஸ்த தர்மத்தை யனுஸரிப்பாள். மேலும் சமுத்திரத்தின் மத்தியில் படகு உடைந்து விட்டால் அதிலிருந்து ஜனங்கள் கஷ்டப்படுவது போல என்னுடைய ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் நான், பரலோகம் சென்றபின், மிகவும் சிரமப் படுவார்களே என்று யோசித்தான். இப்படி தீன புத்தியினால் துக்கித்தவனுமான

அவனைப் பிடிப்பதற்காகப் பயமென்பவன் அவ்விடம் வந்தான். பிறகு அந்த யவனேசுவரன் பசுவைப்போல புரஞ்சனனைக் கட்டி, தன்னுடைய வீட்டிற்குக் கொண்டு போனான். அப்பொழுது புரஞ்சனனுடைய வேலைக்காரர்கள் அழுதுகொண்டு அவன்பின் சென்றார்கள் மேலும் அந்த பட்டணத்தைக் காப்பாற்றிக்கொண்டிருந்த ஸர்ப்பமும், யவனங்களால் பிடிக்கப்பட்டு அவர்களுடன் செல்ல, அந்தப் பட்டணம் ஸ்வரூப நாசத்தையடைந்து காரணரூபமாக

ஆயிற்று. அப்பொழுது புரஞ்சனனை யவனர்கள் பலாத்காரமாய் இழுத்துக் கொண்டுபோனதால், அவன் விசேஷ துக்கத்தை யடைந்ததுமன்றி முந்தியிருந்த தோஷர்கள் ஒருவரையும் பார்க்கவில்லை. அப்பொழுது அந்தப் புரஞ்னனால் முந்தி யாகத்தில் ஹிம்ஸிக்கப் பட்ட பசுக்கள் இவர் செய்த குற்றத்தை நினைத்துக் கொண்டு மிகுந்த கோபத்துடன் கோடாரிகளால் அந்தப் புரஞ்சனனைப் பிளந்தன. அப்பொழுது அந்தப் புரஞ்சனன் கரையற்றதான நகரத்தில் மூழ்கி விவேகமில்லாமல் அநேக வர்ஷங்கள் நரகத்தை யனுபவித்து தன் பத்தினியைமனதில் நினைததுக் கொண்டிருந்ததனால் விதர்ப்பதேசத்தரசனுக்கு பெண்ணாகப் பிறந்தான். (மரண காலத்தில் எதை நினைத்துக்கொண்டு உயிரை விடுகிறானோ அந்த ஜன்மத்தையே அடைகிறான்.)

29–42. பின்பு மிக்க சூரனாகிய மலயத்வஜ பாண்டியன் மற்ற அரசர்களை ஜயித்து விதர்ப் பனுடைய பெண்ணை விவாஹம் செய்து கொண்டார். அந்த மலயத்வஜருக்கு வைதர்பியினிடத்தில் ஒரு பெண்ணும், ஏழு பிள்ளைகளும் பிறந்தார்கள். அவ்வேழு பேர்களும் ஏழு திரர்விட தேசத்தரசர்கள். அவர்களெல்லோருக்கும் அற்புதக் கணக்கான பிள்ளைகள் பிறந்தார்கள். அந்த வம்சத்திய பல அரசர்களால் இப்பூமி பிந்திய மன்வந்தரங்களிலும் காப்பாற்றப்படுகிறது. மலயத்வஜருடைய பெண்ணாகிய த்ருதவிரதை என்பவளை அகஸ்தியர் கல்யாணம் செய்து கொண்டு அவளிடத்தில் திருடசுருதர் என்னும் ஒரு புத்திரனை உண்டுபண்ணினார். அவருடைய புத்திரன் இத்மவாகரென்பர். மலயத்வஜ

பாண்டியர் தம்முடைய புத்திரர்களுக்குப் பூமியைப் பிரித்துக்கொடுத்து ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை ஆராதிக்க விரும்பி, சூலபர்வதம் சென்றார். அவருடைய பத்தினியான வைதர்ப்பியும், புத்திரர்கள், போகங்கள், வீடு முதலியவை ஆகிய இவைகளை விட்டுச் சந்திரனை சந்திரிகை அனுஸரிப்பது போலப் பர்த்தாவினுடைய பின் சென்றாள். தாம்ரபர்ணீ. நவோதகா என்ற நதிகள் அங்கு ஓடுகின்றன. அவைகளில் அந்த அரசன் ஸ்நானம் பண்ணுவதாலும் ஆசமனம் செய்வதாலும் இரண்டு விதமான (மானஸம், காயிகம்) பாபங்களையும் நிவர்த்தித்துக்கொண்டு கிழங்குகள், பழங்கள், வேர்கள், புஷ்பங்கள், இலைகள், திருணங்கள், ஜலம் ஆகிய இவைகளைப் புஜித்துக் கொண்டும் தபஸ் செய்தார். அதனால் அவருடைய சரீரம் இளைத்தது. குளிர், உஷ்ணம், காற்று, மழை, பசி, தாஹம், பிரியம் அப்ரியம், ஸுகம், துக்கம், இவைகளை ஜயித்தார். மேலும் தபஸ்ஸினாலும் வித்தையினாலும், கர்மவாசனை களை யொத்து, இந்திரியம் பிராணன், சித்தம் இவை களை ஜயித்து ஆத்மாவைப் ப்ரஹ்மத்தினிடம் சேர்த்தார். பின்னுமவர் ஸ்ரீ வாஸுதேவரிடத்தில் சித்தத்தைச் செலுத்திக் கட்டைபோல ஆசையாமல் தேவமானத்தால் நூறு வர்ஷங்கள் தபஸ் செய்தார். அதனால் பகவானைத் தவிர வேறு ஒன்றும் அவருக்குப் புலப்படவில்லை. இன்னுமவர் ஆத்மா வியாபகராகையாலும், தேஹம் முதலியவைகளைப் பிரகாசிக்கச் செய்பவராகையாலும், அந்தக் கரணத்திற்கு. சாக்ஷியாக இருப்பதாலும், சரீரம் முதலியவைகளை விட வேறானதென்று அறிந்து மற்ற விஷயங்களில் ஒழிவடைந்தார். ஸ்வப்பனத்தில் ஆத்மா ஸாக்ஷி பூதனென்று நன்றாய்த் தெரிய வருகிறது. ஸ்ரீ

மஹாவிஷ்ணுவாகிய குருவினால் நேரில் சொல்லப் பட்டதும், எங்கும் பிரகாசிப்பதுமான தீபத்தால் ஆத்மாவைப் பரப்ரஹ்மமாகவும், பரப்ரஹ்மத்தை ஆத்மாவாகவும் பாவித்து ஸம்ஸாரத்திலிருந்து நிவிருத்தியடைந்தார்.

43–50. அந்த மலயத்வஜருடைய பத்தினியாகிய வைதர்ப்பியானவள் மிகவும் தர்மத்தை யறிந்தவளா கையால் மரவுரியை உடுத்திக்கொண்டு விரதங்களை அனுஷ்டித்து இளைத்த சரீரமுள்ளவளாக, ஒற்றைப் பின்னளுள்ளவளாக பர்த்தாவுக்குப் பணிவிடை செய்துகொண்டு, போகங்களில் ஆசையை யொழித்து ஜ்வாலையற்ற அக்னிபோலப் புருஷனுக்கு ஸமீபத்தில் இருந்தாள். ஆனால் பர்த்தா சரீரத்தை விட்டுவிட்டார் என்பதை அறியாதவளாகையால் முன்போலச் சிசுருஷை செய்தும், அவருடைய பாதங்களைப் பூஜித்தும், அவைகளில் உஷ்ணம் காணப்படாததினால், நடுக்கம் அடைந்து கூட்டத்தை விட்டுப்பிரிந்த பெண்மான்போல தன்னைப்பற்றித் துக்கித்துக் கொண்டு கண்ணீரைப் பெருக்கினாள். அதனால் அவளுடைய ஸ்தனங்கள் நனைந்தன. பின்னுமவள், "ஓ ராஜரிஷியே! எழுந்திரும்; எழுந்திரும்; ஸமுத்திரத்திற்குட்பட்ட இந்தப் பூமியானது திருடர்களான க்ஷத்ரியாதமர்களிடம் இருந்து பயப்படுகிறது. அதனைக் காப்பாற்றும்" என்று அவருடைய காலில் விழுந்து அழுது. கட்டைகளால் சிதையுண்டாக்கி அதில் அவருடைய சரீரத்தை எரித்து, தானும் உடன்கட்டை ஏறுவதற்கு யத்தனித்தாள்.

51–55. அந்த ஸமயத்தில் வெகு நாளாகத்

தோழனாகிய அந்தப் ப்ராஹ்மணன் (அவிக்ஞாதன்) அவ்விடம் வந்து இனிமையான வார்த்தைகளை சொல்லி அவளை ஸமாதானம் செய்து, "நீ யார்? யாருடைய பெண்? இதோ படுத்திருப்பவன் யார்? எதற்காகத் துக்கிக்கிறாய்? நான் தோழனென்று உனக்குத் தெரியுமா? என்னால் முன்னே பலவகையான சுகத்தை நீ அனுபவித்தாய். ஆனால் என்னை இன்னாரென்று நீ அறியாய். ஆனாலும் அவிஞ்ஞாதனென்ற ஒரு தோழன் உனக்கு இருந்ததாக ஞாபகமிருக்கிறதோ? ஓ தோழனே (புருஷன் கூப்பிடுவது போல் அழைத்தது முன் ஜன்மத்தில் புருஷனாக இருந்தாய் என்பதைக் குறிக்கிறது) நாமிருவர்களும் ஹம்ஸபக்ஷிகளாக மானஸ ஸரஸ்ஸில் அநேக வர்ஷங்கள் வஸித்தோம். ஆனால் நமக்கு வஸிக்கும் வீடு நிலையில்லை. அப்படியிருக்கும் பொழுது நீ என்னை விட்டுப்பிரிந்து தனியாகக் கிராம்யசுகத்தில் ஆசைப்பட்டுப் பூமிக்குச் சென்று, அவ்விடத்தில் ஒரு பெண்ணால் உண்டுபண்ணப் பட்டதும் ஐந்து தோட்டங்களுள்ளதும், ஒன்பது வாசல்களுள்ளதும், காவற்காரனுள்ளதும் மூன்று பிரகாரங்களுள்ளதும், ஆறு குடும்பங்களுள்ளதும் ஐந்துவிபணங்களுள் ஐந்து ஸ்வபாவங்களுள்ளதும், ஸ்திரீயை அரசனாகவுடையதுமான நகரத்தைப் பார்த்தாய்"

56–57. இந்திரிய விஷயங்கள் ஐந்தும் தோட்டங்கள் மூக்கு முதலிய ஒன்பது துவாரங்களே வாசல்கள், பிருதிவி,அப்பு, தேஜஸ் பரிகாரங்கள், இஷ்டமான விஷயங்களைக் கொடுக்கும் இந்திரியங் களே குடும்பங்கள். கிரியா சக்தியே விபணங்கள். ஐந்து பூதங்களே அழிவற்ற பிரகிருதி சக்திக்கு

ஸ்வாதீனனாகிய புருஷன் இதில் பிரவேசித்து, தன்னுடைய ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்ளவில்லை.

58–65. "அந்தப் பட்டணத்தில் நீ பெண்ணாசை பிடித்து ஆத்மஞானமற்று ஸ்திரீயுடன் ரமித்துக் கொண்டிருந்த படியால் அவளுடைய சம்பந்தத்தால் இம்மாதிரியான கஷ்ட தசையை அடைந்தாய். நீ விதர்ப்பனுடைய பெண்ணல்ல; இவன் உனக்குப் பதியுமல்ல; புரஞ்சனி என்ற பெண்ணால் ஒன்பது வாசல்களுள்ள பட்டணத்தில் நீ அடைக்கப்பட்டாயல்லவா? இதுதான் என்னால் உண்டுப்பண்ணப்பட்டமாயை. அதனால் புருஷனாகிய ஆத்மாவை ஸ்திரீயாக நினைக்கிறாய். நாமிருவர்களும் ஹம்ஸர்கள்; சுத்தர்கள்; நம்முடைய ஸ்வரூபத்தை சொல்லுகிறேன்; கேளும் நான்தான் நீர்; எனக்கும் உமக்கும் பேதமில்லை. வித்வான்கள் உமக்கும் எனக்கும் கொஞ்சமேனும் பேதமிருக்கிறதாக நினைக்கமாட்டார்கள். புருஷன் எப்படி தன்னுடைய தேஹத்தை கண்ணாடியில் பார்க்கும்பொழுது பெரிதாகவும், ஒன்றாகவும் பார்க்கிறானோ, அவனே அதே சரீரத்தைப் பிறருடைய கண்ணில் மேற்சொல்லியபடியல்லாமல் மாறுதலாகப் பார்க்கிறானோ. அப்படிப்போல நம்மிருவர்களுக்கும் பேதமிருப்பதாக தோற்றமே யொழிய உண்மையில் பேதமில்லை. (அவித்யையாலும், உபாதியாலும் பேதமேற்படுகிறது) என்று அந்த ஹம்ஸம் சொல்ல, அதனால் விவேகமுண்டாகி, துக்கமற்றவனாகி வெகு நாளாக மறைந்திருந்த ஸ்வரூபஞானத்தை ஸ்திரீயாயிருந்த ஹம்ஸமானது அடைந்தது. ஓ பிராசீனபர்ஹிஸ்ஸே! ஸகல ஜகத்ரூபியான பகவான் அதீந்த்ரியத்தில் (அப்ரத்யக்ஷம்) பிரியமுள்ளவராகையால் இந்த ஆத்ம தத்துவத்தைக் கதாவியாஜமாக உமக்குச் சொன்னேன்" என்றார்.

அத்தியாயம்–29

நாரதர் தத்துவத்தை உபதேசித்தது

1. அதனைக் கேட்ட பிராசீனபர்ஹிஸ் என்பவர் நாரதரை நோக்கி, "பகவன்! உம்முடைய வார்த்தைக்குச் செவ்வையாக எனக்குப் பொருள் விளங்கவில்லை. அது கவிகளுக்குத் தெரியுமேயல்லாமல் கர்மஜடர்களான எங்களுக்குத் தெரியுமா? ஆனதால் அதனை ஸ்பஷ்டமாகச் சொல்ல வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

2–25 அதனைக் கேட்ட நாரதர் பிராசீனபர்ஹிஸ்ஸை நோக்கி, "புரஞ்சனனென்பவன் ஜீவனேயாம். தன்னுடைய கர்மங்களால் சரீரமாகிய பட்டணத்தை உண்டுபண்ணிக் கொள்வதால் புரஞ்சனென்று பெயர் கிடைத்தது. அந்தச் சரீரங்கள் ஒரு காலுள்ளதும், இரண்டு கால்களுள்ளதும், மூன்று கால்களுள்ளதும், அநேக கால்களுள்ளதும், காலில்லாததுமாகப் பலவகையாக இருக்கின்றன. அவிஞ்ஞாதரென்று ஒரு தோழனிருப்பதாகச் சொன்னோமல்லவா? அவர் பரமாத்மா; நாமங்களாலும், கர்மங்களாலும், குணங்களாலும் அறியப்படாதவராகையால் அவிஞ்ஞாதரென்று சொல்லப்பட்டது. ஜீவன் எப்பொழுது பிரகிருதியின் குணங்களெல்லாவற்றையும் (ஞானேந்திரிய, கர்மேந்திரிய விஷயங்களை) அனுபவிக்க வேண்டுமென்று விரும்புகிறானோ, அப்பொழுது ஒன்பது துவாரங்களுள்ளதும், இரண்டு கைகளுள்ளதும், இரண்டு கால்களுள்ளதுமான சரீரத்தையே நல்லதென்று நினைத்து அடைகிறான், 'நான், என்னுடையது'

என்ற அபிமான புத்தியே ஸ்திரீயென்று சொல்லப் படுகிறது. அதனுடைய ஆசிரயத்தாலேயே ஜீவன் இந்திரியங்களைக் கொண்டு விஷயங்களை அனுபவிக் கிறான்: சப்தம் முதலிய விஷயங்களைக் கிரகிக்கும் ஞானேந்திரியங்களும், கொடுப்பது முதலிய கர்மத்தைச் செய்யும் கர்மேந்திரியங்களும் தோழர்களென்று சொல்லப்பட்டன. இந்திரிய வியாபாரங்களையே தோழிகளென்று சொன்னேன். ஐந்து வியாபாரங்களுள்ள பிராணனையே ஐந்து தலையுள்ள ஸர்ப்பம் என்று சொன்னேன். பதினோரு படர்களுக்கதிபதியென்பது மனதாகும். அதுவே இருவகையான இந்திரியங் களுக்கும் அதிபதியாயுள்ளது. சப்தம் முதலிய ஐந்து விஷயங்கள் பிரகாசிப்பதால் பாஞ்சாலமென்று சொல்லப்பட்டது. மேலும் இரண்டு கண்கள், இரண்டு மூக்குகள், காதுகள், முகம், சிச்னம், குதம் என்ற ஒன்பது துவாரங்களுள்ள சரீரத்தையே பட்டணமென்று சொன்னேன். அந்தந்த இந்திரியங் களுடன் ஜீவன் இரண்டிரண்டு வாசல்கள் வழியாக வெளியில் செல்லுகிறான். கண்கள், மூக்குகள், முகம் என்ற ஐந்தும் கிழக்குத்திக்கிலிருக்கும் வாசல்கள். வலது காது, தெற்கு வாசல், இடது காது, வடக்கு வாசல், குதமும் சிசனமும் மேற்கு வாசல். கதயோதை, ஆவிர்முகீ என்ற இரண்டு வாசல்களும் கண்கள் விப்ராஜிதமென்பது உருவமேயாகும். அவைகளால் ஜீவன் உருவத்தைக் கிரகிக்கிறான். நளினீ, நாளினீ என்ற வாசல்கள் மூக்குகளேயாம். வாஸனையையே ஸௌரபன் என்று சொல்லப்பட்டது. க்ராணேத்திரியம் ஆனது அவதூதனென்று சொல்லப்பட்டது. முக்ய னென்பவன் முகமேயாம். ரஸஞனென்பவன் ரஸத்தை அறியும் ரஸனமே, விபணனென்பவன் ரஸத்தை

அறியும் ரஸனமே, விடணனென்பவன் வாகிந்திரியமே. அடணனென்பவன் வாக்குவிகாரமே. பஹு தனமென்பது சித்திரான்னமே. பிதிருஹு என்பது வலது காது. இடது காதானது தேவஹு என்று சொல்லப்படுகிறது. சண்டகவேகனுடைய வேலைக் காரர்களான கந்தர்வர்களும், கந்தர்வ ஸ்திரீகளும் முறையே பகல்களும், ராத்திரிகளுமேயாம். முந்நூற்று அறுபது ராத்திரிகளும் பகல்களும் சுற்றுவதால் ஜனங்களுடைய ஆயுஸ்ஸை அபகரிக்கின்றன. கால கன்னிகை என்பவன் கிழத்தனமேயாம். அதனால்தான் ஜனங்கள் ஒருவரும் அவளை விரும்பவில்லை. யவனேச்வரனென்பவன் மிருத்யுவேயாம். அவன் லோகத்தை நாசம் செய்வதற்காக அவளைத் தங்கையாக அங்கீகரித்தான். அவனுடைய ஸைன்யங்களே மனோ வியாதிகளுமாம். அவைகள் பிராணிகளுக்குத் துக்கத்தை உண்டுபண்ணுவதால் சத்துருக்கள். பிரஜ்வாரனென்பது பலவகையான ஜ்வரம், பிரவிருத்தி தர்மத்தைச் சொல்லும் சாஸ்திரம். தக்ஷிண பாஞ்சாலமென்றும் நிவிருத்தி தர்மத்தைச் சொல்லும் சாஸ்திரம் உத்தரபாஞ்சாலமென்றும் சொல்லப்படுகின்றன. (தர்மம், அர்த்தம், காமம், அவைகளின் நிவிர்த்தி இவைகளை நன்றாக நிரூபிப்பதால் பாஞ்சாலமென்று பெயர் கொடுக்கப்பட்டது.) வலது காது பிதிரு யானமென்றும், இடது காது தேவயான மென்றும், அவைகளின் வழியாகச் சுருததரனென்று சொல்லப்படுகிற சிரோத்ரேந்திரியத்துடன் ஜீவன் வெளியில் செல்லு கிறான். ஆஸுரி என்கிற மேற்கு வாசல் சிசனமேயாம். மேற்கு என்றால் கீழே இருக்கிறதென்று அர்த்தம், உபஸ்தேந்திரியத்தையே துர்மதனென்று சொல்லப் பட்டது. குதத்தையே நிருதியென்று சொல்லப்பட்டது.

வைபஸமென்பது நரக துக்கமேயாம். பாயுவே லுப்தகமெனப்படுகிறது; கை, கால்களே குருடர்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளைக் கொண்டு புருஷன் நடக்கிறது, செய்கிறது முதலிய வைகளை அனுஷ்டிக்கிறான், ஹிருதயமே அந்தப் புரமெனப்படுகிறது. மனதேவிபஷமசி எனப்படுகிறது. அந்த மனத்தின் குணங்களான ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய இவைகளால் பிரஸாதம் (தெளிவு) ஸந்தோஷம், மோஹம் ஆகிய இவைகளை அடைகிறான். புத்தியானது எப்படி சொப்பனத்தில் விகாரத்தை அடைகிறதோ, ஜாக்ரதவஸ்தையில் இந்திரியங்களை நடத்துகிறதோ, அப்படி அதனுடைய குணங்களில் சம்பந்தப்பட்ட திருஷ்டாவாகிய ஆத்மா அந்தப் புத்தியின் வியாபாரங்களை அனுஸரிக்கிறான். மேலும் இந்தச் சரீரமே ஜீவனுக்கு ரதமாக இருக்கிறது. இந்திரியங்களே குதிரைகள். ஸம்வத்ஸரம், வயது இவைகளே ரதத்தின் கதி (நடை); புண்யபாபமென்ற கர்மங்களே சக்கரங்கள், ஸத்வம் முதலிய குணங்களே துவஜம், ஐந்து பிராணன்களே ஸந்திபந்தங்கள், மனஸ்ஸே கடிவாளம், புத்தியே ஸாரதி, ஹ்ருதயமே ரதிகன், உட்காருமிடம். சுகதுக்கங்களே ஏர்க்கால்கள். ஐந்து இந்திரிய விஷயங்களே பிரகேஷபம். ஏழு தாதுக்களே ரதத்துக்கு மேல் பரப்பப்படும் புலித்தோல் முதலியவைகள். வெளியிலிருக்கும் விஷயங்களில் செல்லுவதே வேட்டையாடுவது, பதினோரு இந்திரியங்களே ஸைன்யங்கள். இப்படிப் பல வகையான அதிதைவம், அதிபூதம், அத்யாத்மம் ஆகிய இவைகளாலுண்டாகும் துக்கங்களால் ஜீவன் நூறு வருஷ காலம் கஷ்டமடைந்து, தமோகுணத்தால் மூடப்பட்டு பிராணனுடைய தர்மங்களான பசி

தாகங்களையும், இந்திரிய தர்மங்களான அந்தத்வம் (குருடனாயிருக்கை) முதலியவைகளையும், மனத்தின் தர்மங்களான காமம் முதலியவைகளையும், குணங்களற்ற ஆத்மாவிடத்தில் ஆரோபித்து, 'நான், என்னுடையது' என்கிற அபிமானத்தையடைந்து, விவேகமற்றவனாக அற்ப சுகத்தை தியானித்து இந்தச் சரீரத்தில் வசிக்கிறான். பகவானாகிய பரமாத்மா பரமகுருவென்று அறியாமல் ஜீவன் தான் ஸ்வப்ரகாச ஸ்வரூபியானாலும், பிரகிருதியின் குணங்களில் எப்பொழுது ஸம்பந்தப்படுகிறானோ, அப்பொழுது அந்தக் குணங்களில் அபிமானத்தையடைந்து கர்மங்களைச் செய்கிறான். சுக்லம், கிருஷ்ணம், உலோஹிதம் என்கிற கர்மங்களுக்குத் தக்கபடி ஜன்மங்களையும் அடைகிறான். சுக்லகுணத்தால் மிகுந்த பிரகாசமுள்ள லோகங்களை அடைகிறான். உலோஹித குணத்தால் துக்கத்தை உண்டு பண்ணக் கூடிய உலகத்தை அடைகிறான். கிருஷ்ண குணத்தால் மிகுந்த அஞ்ஞானம், துக்கம் இவைகளைக் கொடுக்கக் கூடிய லோகத்தை அடைகிறான். சிலசமயம் புருஷ ஜன்மத்தையும், சிலகாலம் ஸ்திரீ ஜன்மத்தையும், சிலசமயம் நபும்ஸகஜன்மத்தையும் கர்மங்களுக்கும், குணங்களுக்கும் தக்கபடி அடைகிறான். நாயானது பசியால் வருத்தமடைந்து வீடு வீடாக அலைந்தும், தன்னுடைய அதிருஷ்டத்திற்குத் தக்கபடி சிக்ஷையையாவது, ஆகாரத்தையாவது அடைவதுபோல ஜீவன் கர்மங்களையே மனத்தில் வைத்துக்கொண்டு பலவகையான மார்க்கத்தில் மேலும்,கீழும், நடுவிலுமாக அலைந்து, பிரியத்தையாவது அப்பிரியத்தையாவது தெய்வச்செயலாய் அடைகிறான். அதிதைவம், அதிபூதம், அத்யாத்மம் ஆகிய இவைகளாலுண்டாகும்.

மூன்று விதமான துக்கங்களில் ஒன்றாவது ஜீவனை விட்டு விலகுகிறதில்லை. அதை நிவர்த்திக்கும் உபாயத்தை எப்படிச் செய்யமுடியும்? அதை நிவர்த்திப்பதற்குச் செய்யப்படும் உபாயமே துக்க ரூபமாகக் காணப்படுகிறது. எப்படியெனில், பருத்த சுமையைத் தலையில் தூக்கிக் கொண்டு மிகவும் களைப்படைந்த புருஷன் அந்த சிரமத்தை நிவர்த்தித்துக் கொள்ளுவதற்காகச் சுமையை தோளில் இறக்கி வைத்துக் கொண்டால் சிரமம் நிவர்த்தியாகி விடுகிறதா? ஆனதுபற்றி, கர்மங்களால் உண்டாகும் துக்கத்தை நிவர்த்திப்பதற்காகச் செய்யும் உபாயமும் கர்மமயமாக இருப்பதால் அது துக்கத்தைக் கொடுக்குமேயல்லாமல் துக்கத்தை நிவர்த்திக்கிறதில்லை. சொப்பனத்திலுண்டாகும் சொப்பனமானது போலத் துக்கத்தைக் கொடுக்கும். கர்மங்களும், அதன் நிவர்த்திக்காகச் செய்யப்படும் உபாயமும் அவித்தையினால் ஏற்பட்டனவேயாம். சரீரம் முதலிய விஷயங்கள் உண்மையில் மித்யையானாலும் மனமாகிற உபாதியினால் சொப்பனத்தில் போலப் புருஷனுக்கு ஸம்ஸார பந்தத்தை யுண்டுபண்ணுகின்றனவே யொழிய, நிவர்த்தியாகிறதில்லை. ஆகையால் ஆத்மாவிற்கு மேன்மேலும் அனர்த்தத்தைக் கொடுக்கும் ஸம்ஸாரமானது, பகவானிடத்தில் மிகுந்த பக்தி செய்வதால் நிவர்த்தியாகும். மேலும் அந்த பக்தியானது வைராக்யத்தையும் ஞானத்தையும் உண்டுபண்ணும். ஓ ராஜ சிரேஷ்டரே! அந்தப் பக்தியோகமானது பகவானுடைய கதையைச் சிரத்தையுடன் கேட்பதினாலும் அத்யயனம் பண்ணுவதாலும் சீக்கிரத்தில் உண்டாகும். சுத்த சித்தர்களான பகவத் பக்தர்கள் எந்த விடத்தில்

பகவானுடைய குணங்களைச் சொல்வதிலும், கேட்பதிலும் மிகுந்த ஆசையுள்ளவர்களாயிருக்கிறார்களோ, அந்த இடத்தில் பகவத் கதையானது நடக்கும், அவ்விடத்திலேயே மதுவைக் கொன்றவரான ஸ்ரீ பகவானுடைய சரிதமாகிய அமிருதத்தால் நிறைந்த நதிகள் பெரியோர்களுடைய முகமாகப் பிரவஹிக்கும். அந்த அமிருதத்தைப் போதும் என்ற புத்தியில்லாமல் ஸாவதானர்களாக எவர்கள் பானம் பண்ணுகிறார்களோ அவர்களைப் பசி, தாகம், பயம், சோகம், மோகம் ஆகிய இவைகள் பாதிக்கிறதில்லை. பிராணிகள் இயற்கையிலுண்டான மேற்சொல்லிய பசி முதலிய வைகளால் உபத்திரவிக்கப்பட்டுப் பகவத்கதாமிருதத்தில் ஆசைப்படாமலிருக்கிறார்கள். ப்ரஹ்மதேவர், பகவானாகிய பரமசிவன், மனு, தக்ஷர் முதலிய பிரஜாபதிகள், ஸனகர் முதலிய யோகிகள், மரீசி, அத்திரி, அங்கிரஸ், புலஸ்தியர், புலஹர், கிருது, பிருகு, வஸிஷ்டர், நாரதனாகிய நான் ஆகிய இவர்களில்லோரும் ப்ரஹ்மத்தை அறிந்தவர்கள். மிகுந்த விவேகிகளான வித்வான்களும், தபஸ், வித்தை, ஸமாதி முதலிய உபாயங்களால் ஸர்வ ஸாக்ஷியான பரமாத்மாவை எப்பொழுதும் தேடிக்கொண்டிருக்கிறார்களே யொழியத் தெரிந்து கொள்ளவில்லை. ஏனென்றால், மிகுந்த விஸ்தாரமுள்ளதும், கரையற்றதுமான வேதத்தை அத்யயனஞ் செய்து; அதிலிருக்கும் மந்திரங்களிற் சொல்லிய அடையாளமுள்ள இந்திரன் முதலிய தேவர்களைப் பூஜிக்கிறார்கள்; பரமாத்மாவைத் தெரிந்து கொள்கிறதில்லை. பரமாத்மாவானவர் தியானம் முதலியவைகளால் பூஜிக்கப்பட்டு எப்பொழுது பிரஜைகளிடத்தில் அனுக்கிரஹம் செய்கிறாரோ, அப்பொழுது லோக விவகாரத்திலும்,

வைதிக மார்க்கத்தில் இருக்கும் புத்தியை விட்டுப் பரமாத்மாவை உபாஸிக்க முயற்சிப்பான். ஓ பிராசீன பர்ஹிஸ்ஸே! ஆனதால் அஞ்ஞானத்தால் உண்மை போல் தோன்றுகிறவைகளும், கேட்கப் பிரியமான வைகளும், நித்ய வஸ்து ஸம்பந்தமில்லாதவைகளுமான கர்ம பலன்களை விரும்ப வேண்டாம். அற்ப புத்தியுள்ள சிலர் வேதங்கள் கர்மங்களைச் சொல்லுகிற தென்று சொல்லுகிறார்கள். அவர்கள் அக்ஞர் களேயாம். எந்த இடத்தில் ஸாக்ஷாத் பகவான் பிரகாசிக்கிறாரோ, அந்த ஆத்மாவாகிய லோகத்தை வேதம் சொல்கிறதென்பதை அவர்கள் அறியவில்லை. நீர் "நான் அநேக யாகங்களைச் செய்தவன்" என்ற அபிமானத்தை அடைந்து இந்தப் பூமி முழுவதும் கிழக்கு நுனியாகத் தர்ப்பங்களைப் பரப்பி அநேக பசுக்களைக் கொன்று யாகங்களை அனுஷ்டித்தும், ஆத்ம ஞானத்திற்கு உபாயமாகிய வித்தையின் ஸ்வரூபத்தையும், கர்மத்தின் ஸ்வரூபத்தையும் நன்றாய்த் தெரிந்து கொள்ளவில்லை. ஸ்ரீ மஹாவிஷ்ணு ஸகல பிராணிகளுக்கும் ஆத்மாவாக இருப்பவர்; எல்லாவற்றிற்கும் காரணர்; ஈசுவரர்; அவரைச் சரணமடைந்தால் க்ஷேமமுண்டாகிறது. அவர் எல்லாருக்கும் வேண்டியவர். அவரிடத்திலிருந்து கொஞ்சமேனும் பயமுண்டாகிறதில்லை என்று எவன் தெரிந்து கொள்ளுகிறானோ, அவனே வித்வான், எவன் வித்வானோ, அவனே குரு. அவனே ஸ்ரீ மஹாவிஷ்ணு. உம்மால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் சொன்னேன். ரஹஸ்யமான விஷயத்தை நிச்சயமாகச் சொல்லுகிறேன் கேளும்'.

53–55 அற்பமாக ஸஞ்சரிப்பது, புஷ்பம்

தோட்டத்தில் ஸ்திரீயுடன் ரமித்து விளையாடுவதும், வண்டுகளுடைய கானத்தில் ஆசைப்பட்டதும், மற்ற பிராணிகளைக் கொன்று தங்களுடைய வயிற்றை நிரப்பிக் கொள்ளும் செந்நாய்களை லட்சியஞ் செய்யாமல் அவைகளுக்கு முன்செல்லுகிறதும், வேடனுடைய பாணத்தால் பிளக்கப்பட்டதுமான மானைத் தேடிக் கண்டுபிடியும். (ஆத்மாவே மானென்று சொல்லப்படுகிறது) ஸ்திரீகளிருக்கும் வீட்டையே புஷ்பத்தோட்டமென்று சொல்லப்பட்டது. அப்படிமான காமசுகத்தையே அற்ப ஸஞ்சாரமென்று சொல்லப் பட்டது. ஸ்திரீகளுடைய இனிமையான வார்த்தையே வண்டுகளுடைய கானம் என்று சொல்லப்பட்டது. புருஷனுடைய ஆயுஸ்ஸை அபகரிக்கின்ற அகோராத்ரம் முதலிய காலங்களே செந்நாய்களென்று சொல்லப்பட்டன. (அவைகளை லட்சியம் செய்யாமல் ஆத்ம விஷய ஆசைகொண்டு கிருகத்தில் சஞ்சரிக் கிறான் என்று தாத்பர்யம்.) எப்பொழுதும் புருஷனுடைய ஆயுஸ்ஸை அபகரிக்கத் தயாராயிருக்கும் மிருத்யுவே வேடனென்று சொல்லப்பட்டது. ஆனதால் நீர் ஜீவனுடைய சரிதத்தை மானுடைய சரிதத்திற் கொப்பானது என்று நினைத்து ஹ்ருதயத்தில் சித்தத்தில் கர்மங்களையும் அடக்கிக்கொள்ளும். காமிகளுடைய வார்த்தையால் நிறைந்த கிருஹஸ்தா சிரமத்தை விட்டுவிடும். பரம ஹம்ஸர்களுக்குச் சரணமான ஈசுவரனிடத்தில் பக்தி செய்யும். இப்படிக் கிரமமாக வைராக்கியத்தை அடையவேண்டும்

56–59 அதனைக் கேட்ட பிராசீனபர்ஹிஸ் என்ற அரசன் நாரதரை நோக்கி, "ஓ ப்ராஹ்மண! தங்களால் சொல்லப்பட்டதைக் கேட்டு மனதில் நன்றாய்

விசாரித்தேன். தங்களால் சொல்லப்பட்ட ஆத்மதத்து வத்தை எனக்குக் கர்மோபதேசஞ் செய்த உபாத்தியார்கள் அறியார்கள்? அறிந்திருந்தால் எனக்கு உபதேசிக்காமலிருப்பார்களா? அதனால் அந்த விஷயத்திலிருந்த மிகுந்த சம்சயமானது உம்மால் நிவர்த்திக்கப்பட்டது. ஆனால் மற்றொரு சம்சயமி ருக்கிறது. "எந்தப் பரமாத்மாவினிடத்தில் இந்திரியங்கள் செல்லுகிறதில்லையோ, அந்த விஷயத்தில் ரிஷி களானாலும் மோஹிக்கிறார்கள். எந்த சரீரத்தால் புருஷன் கர்மங்களைச் செய்கிறானோ, அந்தச் சரீரத்தை இவ்வுலகத்தில் விட்டுப் பரலோகத்தில் கர்மத்தால் கிடைத்த வேறு சரீரத்தையடைந்து ஜீவன் சுகதுக்கங்களை யனுபவிக்கிறான்" என்று வேதத்தை யறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். மேலும் வேதத்தில் சொல்லிய கர்மங்களை ஜனங்கள் சிரத்தையுடன் அனுஷ்டிக்கிறார்கள். பிறகு அந்தக் கர்மம் நம்மால் காணவில்லை, அது வெகுநாளைக்குப் பிறகு எப்படிப் பலத்தைக் கொடுக்கும்? இந்த சம்சயங்களை நிவர்த்திக்க வேண்டும்' என்று கேட்டார்.

60--82 புருஷன் எந்த சரீரத்தால் கர்மத்தைச் செய்கிறானோ, அந்த ஸ்தூல சரீரம் நாசத்தை யடைந்தாலும்' மனஸாகிய லிங்க சரீரத்துடன் அதன் பலத்தை அனுபவிக்கிறான்; புருஷன் படுத்துத் தூங்கும் அந்த ஸ்தூல தேகத்தை விட்டு லிங்கதேகத்தை அடைந்து தன்னுடைய கர்மாவைப் புஜிப்பதுபோல அந்தத் தேகத்திற்கு சமமான வேறு தேகத்தையாவது, பசு முதலியவைகளின் தேகத்தையாவது அடைந்து லோகாந்தரத்தில் கர்மபலத்தை அனுபவிக்கிறான்' 'நான் ப்ராஹ்மணன்; இது என்னுடையது' என்ற

அகங்காரத்தை அடைந்த மனத்தால் எந்தச் சரீரத்தைப் புருஷன் கிரகித்துக் கொள்ளுகிறானோ, அப்பொழுது அந்தத் தேகத்தால் செய்யப்பட்ட கர்மத்தையும் கிரகித்துக் கொள்ளுகிறான். அதனால் தான் மறுஜன்மம் உண்டாகிறது. ஞானேந்திரியங்கள், கர்மேந்திரயங்கள் இவைகளுடைய பிரவர்த்திகளைக் கொண்டு எப்படிச் சித்திரமானது ஊகிக்கப் படுகிறதோ, அப்படியே சித்தத்தின் வியாபாரங்களால் முன் சரீரத்தால் செய்யப்பட்ட கர்மமானது ஊகிக்கப் படுகிறது. மேலும் இந்த ஜன்மத்தில் பார்க்கப் படாததும், கேட்கப்படாததுமான ஸ்வரூபத்தைச் சொப்பனத்தில் பார்க்கிறானல்லவா? அதனால் முன் ஜன்மத்திய கர்மா இருக்கிறதென்று ஊகிக்கப்படுகிறது. ஓ மகாராஜா! ஜீவன் வாசனையை ஆசிரயித்தவனா கையால் அவனுக்குமுன் தேகத்திய கர்மமிருக்கிறதாக நம்பவேண்டும். முந்தி அனுபவிக்கப்படாத விஷயமானது மனத்தில் தோன்ற நியாயமில்லை. மனுஷ்யனுக்கு முந்திய ஜன்மங்களையும், வரும் ஜன்மங்களையும், நீச ஜன்மத்தையும் மனதே காண்பிக்கிறது. உமக்கு க்ஷேமம் உண்டாகும். முந்திப் பார்க்கப்படாததும், கேட்கப்படாததுமான விஷயம் மனத்தில் தோன்று கிறதற்கு தேசம், காலம், கர்மம், இவைகளே காரணம் என்று நினைக்க வேண்டும். இந்திரியங்களுக்குப் புலப்படும் ஸகல விஷயங்களும் எல்லாருடைய மனத்திலுமிருக்கின்றன. எல்லா ஜனங்களும் மனதுள்ள வர்களே யொழிய மனதற்றவர்களல்ல. சத்வகுணம் நிறைந்ததும் பகவத்தியானத்தில் பரிசுத்தமானதுமான மனத்தில் ஸகல விஷயங்களும் ஒரே காலத்தில் சந்திரனிடத்தில் சேர்ந்த ராகுபோல் பிரகாசிக்கும் அனாதியாகிய புத்தி, மனஸ், இந்திரிய விஷயங்கள்,

குணங்கள் இவைகளுடைய கூட்டமானது எது வரையில் இருக்குமோ, அதுவரையில் நான், என்னுடைய தென்கிற அகங்காரம் விடுகிறதில்லை. சொப்பனம், மூர்ச்சை, உபதாபம், மிருத்யு, ஜ்வரம் இவைகளிலும் இந்திரியங்களில்லாததாலும் மாதா வினுடைய கர்ப்பத்திலிருக்கும் பொழுதும் பால்ய வயதிலும் இந்திரியங்கள் பருக்காமலிருப்பதினாலும் அகங்காரமானது அமாவாஸ்யையில் சந்திரன்போல் காணப்படுகிறதில்லை. சொப்பனத்தில் அனர்த்தங்கள் வருவதுபோல உண்மையில் சரீரம் முதலியவைகள் இல்லாமலிருந்தும், விஷயங்களைப் புருஷன் தியானம் பண்ணுவதால் சம்சாரம் நிவர்த்தியடைகிறதில்லை. இப்படி ஐந்து தன்மாத்திரைகளுள்ளதும், முக்குண ஸ்வரூபமும், பதினாறு விகாரத்தால் விஸ்தார மடைந்ததுமான லிங்க தேகம், சேதனையுடன் கூடினவனே ஜீவனென்று சொல்லப்படுகிறான். புருஷன் யுத்தியினாலேயே தேகத்தை அடைகிறான்; தேகத்தை விட்டுவிடுகிறான், சந்தோஷம், சோகம், பயம், சுகம், துக்கம் இவைகளையும் அடைகிறான். அட்டையானது ஒரு திருணத்தை விட்டு மற்றொரு திருணத்திற்குப் போகும் பொழுது முந்திய திருணத்தை விடாமலேயே பிந்தியதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டும், பிறகு அதை விடுவது போல் மரணத்தையடையும் புருஷனும் வேறு சரீரத்தை அடைந்தே முந்திய சரீரத்தை விடுகிறான். ஓ ராஜசிரேஷ்டரே! பிராணிகளுக்கு மனதே சம்சாரத்தைக் கொடுக்கக்கூடியது. இந்திரியங்களால் விஷயங்களைத் தியானஞ் செய்து கொண்டு புருஷன் கர்மங்களை அடிக்கடி செய்கிறான். கர்மாவினாலே தான் அவித்யையின் பந்தம் ஏற்படுகிறது. சரீரம் முதலியவைகளுக்குக்

கர்மபந்தம் அவித்யையாலேயே ஆனதால் அவை களை நன்றாய்த் தெரிந்து கொள்ளுவதற்காக ஸகல காரணங்களாலும் பகவானைப் பூஜியும். எவரிட மிருந்து இந்த ஜகத் உண்டாகிறதோ, எவரால் காப்பாற்றப்படுகிறதோ அந்த பரமாத்ம ஸ்வரூபமே இந்த ஜகத் என்றும் பக்தி செய்ய வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் பக்தி செய்வதைபோலவே எல்லாப் பிராணிகளிடத்திலும் தடையற்ற ஞானமுள்ள பகவான் வசிப்பதாக நினைக்க வேண்டும். அப்பொழுது சொப்பனம் போல அதிருஷ்டமும் (பார்க்கப்படாதது), (பார்க்கப்பட்டது) திருஷ்டமும், நடந்ததும், நடக்கிறது, நடக்க போவதுமாகிய எல்லாம் நாசத்தையடையும்" என்று பாகவதர்களுக்குள் முக்கியரான நாரதபகவான் ஜீவாத்மா பரமாத்மாக்களுடைய ஸ்வரூபத்தை உபதேசித்து அரசனிடம் விடைபெற்று, சித்தலோகஞ் சென்றார்.

83–86 பிராசீனபர்ஹிஸ் என்னும் அரசன் அதனைக் கேட்டு, புத்திரர்களை யுண்டுபண்ணி ஜனங்களைக் காப்பாற்றுவதை எனது புத்திரர்கள் செய்யவேண்டுமென்று மந்திரிகளிடம் சொல்லி விட்டு, தவத்திற்காகக் கபிலருடைய ஆசிரமம் சென்றார். அவ்விடத்தில் தம்முடைய மனஸ்ஸை ஒருவகையாகச் செய்து ஸ்ரீ கோவிந்தனுடைய பாதாரவிந்தத்தைத் தியானஞ் செய்து ஆசைகளை யொழித்து ஸ்ரீ பகவானுக்குச் சமானராக ஆனார். தேவரிஷியாகிய நாரதரால் கீதாவியாஜமாகச் சொல்லப்பட்ட இந்த அத்தியாத்ம விஷயத்தை யார் கேட்கிறானோ, பிறருக்குச் சொல்லுகிறானோ, அவன் மோட்சத்தை யடைகிறான். பகவானுடைய சரிதத்தால் லோகத்தை

பரிசுத்தப்படுகிறதும் தேவரிஷியாகிய நாரதருடைய முகத்திலிருந்து வந்ததால் சித்த சுத்தியை உண்டு பண்ணக்கூடியதுமான இந்தச் சரிதத்தைக் கேட்பவன் சம்சாரத்தில் மூழ்க மாட்டான். ஸகல பந்தங்களும் அவனுக்கு நிவர்த்தி யாகும். ஓ விதுரரே, ஆச்சரிய கரமான இந்த அத்தியாத்மவிஷயத்தைக் கதா வியா ஜமாக உமக்குச் சொன்னேன். இதனால் கிருஹஸ் தாசிரமத்திலுள்ள அகங்காரமும், கர்ம பலத்தை எப்படி அனுபவிக்கிறது என்கிற சம்சயமும் நிவர்த்தியாகும்.

அத்தியாயம்–30

பிரசேதஸ்ஸுகளின் சரிதம்

1–2. அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி, "ஓ ப்ராஹ்மணோத்தம! பிராசீனபர்ஹிஸ்ஸின் புத்திரர்கள் ருத்ரரால் உபதேசிக்கப்பட்ட கீதத்தாலே ஸ்ரீ மஹாவிஷ்ணுவைச் சந்தோஷப்படுத்தி என்ன கதியை அடைந்தார்கள்? ஓ பிருகஸ்பதியின் சிஷ்யரே! ஸ்ரீமகா விஷ்ணுவுக்குப் பிரியராகிய பரமசிவனால் அனுக்கிரஹிக்கப்பட்ட அந்தப் பிரசேதஸ்கள் மோட்சத்தை அடைந்தார்களென்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் அவர்கள் இவ்வுலகத்திலும், பரலோகத் திலும் எதனை அடைந்தார்கள்" என்று கேட்டார்.

3–20. அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி "பிரசேதஸ்கள் சமுத்திரமத்தியில் ஜபயக்ஞ மாகிய தபசினால் நிரஞ்சனராகிய ஸ்ரீ மஹா விஷ்ணுவை சந்தோஷப்படுத்தினார்கள். பதினாயிரம் வருஷங்கள் சென்ற பிறகு, புராதனராகிய புருஷன் அவர்களுக்குத் தரிசனம் கொடுத்தார். அந்தப் பகவானுடைய காந்தியால் அவர்களுடைய சிரமமானது நிவர்த்தியாயிற்று. அப்பொழுது பகவான் மேருவின் சிகரத்தில் மேகமிருந்தாற்போல் கருடனுடைய தோளில் \வீற்றிருந்தார். மேலும் பீதாம்பரம் தரித் திருந்தார் கௌஸ்துப மணியால் அலங்கரிக்கப் பட்டிருந்தார் அவர் மிகவும் பிரகாசிக்கும் ஸ்வர்ண மயமான ஆபரணங்களால் பிரகாசிக்கின்ற கன்னங்கள், முகம், கிரீடம் ஆகிய இவைகளுள்ளவர்; எட்டு ஆயுதங்கள், மகரிஷிகள் தேவசிரேஷ்டர்கள் ஆகிய

இவர்களால் சேவிக்கப்பட்டிருந்தார்; கருடனாகிற கின்னரனால் அவருடைய கீர்த்தியானது கானஞ் செய்யப்பட்டிருந்தது (கருடனுடைய இறக்கைகளின் சப்தத்தால்). பருத்தவைகளான எட்டுக் கைகளின் மத்யத்தில் வசிக்கும் லக்ஷ்மீ தேவியினுடைய காந்தி போன்ற சோபையுள்ள வனமாலையால் அலங்கரிக்கப் பட்டவர்; அப்போர்ப்பட்ட பகவான் தம்மைச் சரணமடைந்த பிரசேதஸ்களை நோக்கி மேகம்போல் கம்பீரமாகக் கருணைநிறைந்த பார்வையுடன், "ஓ ராஜபுத்திரர்களே! உங்களுக்கு க்ஷேமமுண்டாகும்; இஷ்டமானதைக் கேட்கலாம் உங்களுடைய பக்தியால் நான் மிகவும் சந்தோஷப் பட்டிருக்கிறேன். உங்களுக்கும் எனக்குமுள்ள பிரீதி விசேஷத்தால் என்னுடைய ஐசுவரியம் முதலியவை உங்களு டையனவேயாம். எந்த மனிதன் ஒவ்வொரு நாளும் உங்களைப் படுக்கையில் நினைத்துக் கொள்கிறானோ அந்த மனிதனுக்கு சஹோர்தரர்களிடத்தில் பிரீதியும், ஸகல பிராணிகளிடத்தில் பிரியமும் உண்டாகிறது. மேலும் எவர்கள் காலையிலும், மாலையிலும் சுத்தர்களாக ருத்ர கீதத்தால் என்னை ஸ்தோத்திரம் செய்கிறார்களோ, அவர்களுக்கு இஷ்டமான வரங்களையும், நல்ல பிரக்ஞையையும் கொடுப்பேன். நீங்கள் தகப்பனாருடைய உத்தரவை சந்தோஷமாக நிறைவேற்றினபடியால் எல்லா லோகத்திலும் உங்களுக்கு மிகுந்த கீர்த்தியுண்டாகும். பின்னும் உங்களுக்கு மிகவும் பிரசித்தியுள்ளவனும், மிக்க குணசாலியும், ப்ரஹ்மபுத்திரர்களுக்குக் குறையாத வனுமான ஒரு புத்திரன் பிறப்பான். அவன் தன்னுடைய வீரியத்தால் அநேக பிரஜைகளை யுண்டுபண்ணி மூவுலகத்தையும் பூர்த்தி செய்வான்.

கண்டு என்னும் மகரிஷி தபஸ் செய்யும்பொழுது அவருடைய தபஸ்ஸைக் கெடுப்பதற்காக இந்திரனால் அனுப்பப்பட்ட ப்ரஹ்மலோசா என்னும் அப்ஸர ஸ்திரீயைக் கண்டு மகரிஷியானவர் மோஹித்து அவளுடன் வெகுகாலம் ரமித்தார். அப்பொழுது ஒரு பெண் பிறந்தது. அந்தப் பெண்ணை அந்த ப்ரஹ்ம லோசை யென்பவள் மரத்தில் போட்டுவிட்டு ஸ்வர்க்கம் சென்றாள். அந்தப் பெண்ணை விருக்ஷங்கள் கிரஹித்துக் கொண்டான. அந்தப்பெண் பசியினால் அழும்பொழுது ஓஷதிகளுக்கு அதிபதியான சோமராஜன் பெருவிரலைக் கொடுத்தார். அதிலிருந்து அமிருதம் பெருகி, அதனால் குழந்தைக்குப் பசி நீங்கியது. உங்களுடைய தகப்பனாராகிய பிராசீன பர்ஹிஸ் பிரஜைகளைச் சிருஷ்டிக்கும்படி ஆக்ஞாபனஞ் செய்து தபஸ் செய்வதால் அவருடைய உத்தரவின்படி நீங்கள் செய்யவேண்டும். அதற்காக அந்தக் கண்டுவின் புத்திரியைக் கல்யாணஞ் செய்து கொள்ளுங்கள். நீங்கள் எல்லோரும் ஒரேவகையான தர்மம், ஸ்வபாவம் உள்ளவர்களாகையால் அவள் ஒருத்தியே உங்கள் எல்லோருக்கும் பத்தினியாக இருப்பாள். உங்கள் எல்லோரிடத்திலும் சமமான பிரீதியுள்ளவளாக இருப்பாள், தேவமானத்தால் பத்து லட்சம் வருஷங்கள் பூமியிலுள்ள போகங்களையும் திவ்யமான போகங்களையும் என்னுடைய அனுக்கிரஹத்தால் அனுபவித்துப் பிறகு என்னிடத்தில் அழிவற்ற பக்தியைச் செய்து, அதனால் சித்த சுத்தியடைந்து சம்சாரத்தில் வைராக்கியத்தையடைந்தும் என்னுடைய லோகம் வருவீர்கள். கிருகஸ்தாசிரமத்திலிருப்பவர் களும் புண்யகர்மங்களைச் செய்து கொண்டு, என்னுடைய கதையைச் சொல்லிக் காலத்தைக்

இவர்களால் சேவிக்கப்பட்டிருந்தார்; கருடனாகிற கின்னரனால் அவருடைய கீர்த்தியானது கானஞ் செய்யப்பட்டிருந்தது (கருடனுடைய் இறக்கைகளின் சப்தத்தால்). பருத்தவைகளான எட்டுக் கைகளின் மத்யத்தில் வசிக்கும் லக்ஷ்மீ தேவியினுடைய காந்தி போன்ற சோபையுள்ள வனமாலையால் அலங்கரிக்கப் பட்டவர்; அப்போர்ப்பட்ட பகவான் தம்மைச் சரணமடைந்த பிரசேதஸ்களை நோக்கி மேகம்போல் கம்பீரமாக்கக் கருணைநிறைந்த பார்வையுடன், "ஓ ராஜபுத்திரர்களே! உங்களுக்கு க்ஷேமமுண்டாகும்; இஷ்டமானதைக் கேட்கலாம் உங்களுடைய பக்தியால் நான் மிகவும் சந்தோஷப் பட்டிருக்கிறேன். உங்களுக்கும் எனக்குமுள்ள பிரீதி விசேஷத்தால் என்னுடைய ஐசுவரியம் முதலியவை உங்களு டையனவேயாம். எந்த மனிதன் ஒவ்வொரு நாளும் உங்களைப் படுக்கையில் நினைத்துக் கொள்கிறானோ அந்த மனிதனுக்கு சஹோதரர்களிடத்தில் பிரீதியும், ஸகல பிராணிகளிடத்தில் பிரியமும் உண்டாகிறது. மேலும் எவர்கள் காலையிலும், மாலையிலும் சுத்தர்களாக ருத்ர கீதத்தால் என்னை ஸ்தோத்திரம் செய்கிறார்களோ, அவர்களுக்கு இஷ்டமான வரங்களையும், நல்ல பிரக்ஞையையும் கொடுப்பேன். நீங்கள் தகப்பனாருடைய உத்தரவை சந்தோஷமாக நிறைவேற்றினபடியால் எல்லா லோகத்திலும் உங்களுக்கு மிகுந்த கீர்த்தியுண்டாகும். பின்னும் உங்களுக்கு மிகவும் பிரசித்தியுள்ளவனும், மிக்க குணசாலியும், ப்ரஹ்மபுத்திரர்களுக்குக் குறையாத வனுமான ஒரு புத்திரன் பிறப்பான். அவன் தன்னுடைய வீரியத்தால் அநேக பிரஜைகளை யுண்டுபண்ணி மூவுலகத்தையும் பூர்த்தி செய்வான்.

கண்டு என்னும் மகரிஷி தபஸ் செய்யும்பொழுது அவருடைய தபஸ்ஸைக் கெடுப்பதற்காக இந்திரனால் அனுப்பப்பட்ட ப்ரஹ்மலோசா என்னும் அப்ஸர ஸ்திரீயைக் கண்டு மகரிஷியானவர் மோஹித்து அவளுடன் வெகுகாலம் ரமித்தார். அப்பொழுது ஒரு பெண் பிறந்தது. அந்தப் பெண்ணை அந்த ப்ரஹ்ம லோசை யென்பவள் மரத்தில் போட்டுவிட்டு ஸ்வர்க்கம் சென்றாள். அந்தப் பெண்ணை விருக்ஷங்கள் கிரஹித்துக் கொண்டான. அந்தப்பெண் பசியினால் அழும்பொழுது ஓஷதிகளுக்கு அதிபதியான சோமராஜன் பெருவிரலைக் கொடுத்தார். அதிலிருந்து அமிருதம் பெருகி, அதனால் குழந்தைக்குப் பசி நீங்கியது. உங்களுடைய தகப்பனாராகிய பிராசீன பர்ஹிஸ் பிரஜைகளைச் சிருஷ்டிக்கும்படி ஆக்ஞாபனஞ் செய்து தபஸ் செய்வதால் அவருடைய உத்தரவின்படி நீங்கள் செய்யவேண்டும். அதற்காக அந்தக் கண்டுவின் புத்திரியைக் கல்யாணஞ் செய்து கொள்ளுங்கள். நீங்கள் எல்லோரும் ஒரேவகையான தர்மம், ஸ்வபாவம் உள்ளவர்களாகையால் அவள் ஒருத்தியே உங்கள் எல்லோருக்கும் பத்தினியாக இருப்பாள். உங்கள் எல்லோரிடத்திலும் சமமான பிரீதியுள்ளவளாக இருப்பாள், தேவமானத்தால் பத்து லட்சம் வருஷங்கள் பூமியிலுள்ள போகங்களையும் திவ்யமான போகங்களையும் என்னுடைய அனுக்கிரஹத்தால் அனுபவித்துப் பிறகு என்னிடத்தில் அழிவற்ற பக்தியைச் செய்து, அதனால் சித்த சுத்தியடைந்து சம்சாரத்தில் வைராக்கியத்தையடைந்தும் என்னுடைய லோகம் வருவீர்கள். கிருகஸ்தாசிரமத்திலிருப்பவர் களும் புண்யகர்மங்களைச் செய்து கொண்டு, என்னுடைய கதையைச் சொல்லிக் காலத்தைக்

கழித்துக் கொண்டு மிருப்பவர்களுக்குக் கிருகஸ்தாசிரமம் பந்தமாக ஆகிறதில்லை. என்னுடைய சரிதங்களைக் கேட்பது, சொல்வது முதலியவைகளால் என்னை அடைந்தவர்களுக்குச் சோகம், மோகம், சந்தோஷம் இவைகள் உண்டாகிறதில்லை. சர்வஞ்ஞனாகிய நான் என்னுடைய கதையைச் சொல்லுகிறவர்கள் முகமாகக் கேட்பவர்களுடைய ஹிருதயத்தை அடைகிறேன்" (அவர்களுக்கு ப்ரஹ்ம சாட்சாத்காரம் உண்டாகிறது) என்று அனுக்கிரஹித்தார்.

21–51. ஸகல புருஷார்த்தங்களையும் கொடுப்ப வரான அந்தப் பகவானுடைய வார்த்தையைக் கேட்டு, பிரசேதஸ்ஸுகள் அவருடைய தரிசனத்தால் ரஜோ குணம், தமோகுணங்களற்றவராகி மிகவும் ஸுஹிருத் தாகிய பகவானைப் பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்தார்கள்; ஸகல துக்கங்களைப் போக்கடிப்பவரும் ஸகல க்ஷேமங்களையும் கொடுக்க கூடிய கம்பீர குணங்கள், திவ்ய நாமங்கள் ஆகிய இவைகளுள்ள வரும் மனஸ் வாக்கு இவைகளுடைய வேகத்தைக் காட்டிலும் மிகுந்த வேகமுள்ளவரும், ஸகல இந்திரியங் களுக்கு புலப்படாதவருமான உமக்கு நமஸ்காரம். சுத்த ஸ்வரூபரும், சாந்தரும், மனஸ்ஸாகிற உபாதியால் இரண்டாகத் தோன்றுகிறவரும், மாயையின் குணங்களாம் ப்ரஹ்மா முதலியவர் களுடைய சரீரத்தை எடுத்துக் கொண்டவருமான உமக்கு நமஸ்காரம். சுத்த ஸத்வ ஸ்வரூபியும், ஸம்ஸாரத்தைப் போக்கடிப்பவரும், தடையற்ற ஞானமுள்ளவரும், ஸாத்வதர்களுக்குப் பிரபுவுமாகிய ஸ்ரீ கிருஷ்ணனும், வாஸுதேவருமாகிய உமக்கு நமஸ்காரம், தாமரை மலர்போன்ற கண்களுள்ளவரும்.

தாமரைமலர் போன்ற பாதங்களுள்ளவருமான உமக்கு நமஸ்காரம். தாமரைப் புஷ்பத்தின் தாதுக்கள்போல் பொன்னிறமான வஸ்திரத்தைத் தரித்தவரும் ஸகல பிராணிகளிடத்திலும் வஸிப்பவரும் எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியுமான உமக்கு நமஸ்காரம் மிகவும் தீனர்களான எங்களிடத்தில் மிகுந்த கருணை செய்து ஸகல துக்கங்களையும் போக்கக்கூடிய உம்முடைய ஸ்வரூபமானது காண்பிக்கப்பட்டது. இதைவிட வேறு அனுக்கிரஹமுண்டோ? ஓ அமங்களத்தைப் போக் கடிப்பவரே! தீனர்களான வேலைக்காரர்களை ஸமயத்தில் ஞாபகம் வைத்துக் கொள்வதே பிரபுக்களின் குணம். அந்தக் குணமானது உம்மால் பிரகாசப் படுத்தப்பட்டது. நீர் அற்ப பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாக இருப்பதால் அவர்களுடைய இஷ்டத்தை ஏன் அறியமாட்டீர்? ஏ ஜகத் பதியே! மோக்ஷ மார்க்கத்தைப் பிரவர்த்திக்கச் செய்தவரும், புருஷார்த்த ஸ்வரூபியுமாகிய நீர் எப்பொழுதும் தயையுள்ளவராக இருக்கவேண்டுமென்பதே எங்களால் கேட்கப்படும் வரம். நீர் பரமான வஸ்துவைக் காட்டிலும் மேலானவர். உம்முடைய விபூதிகளுக்கு முடிவில்லாததால் அனந்தர் என்று சொல்லப்படுகிறீர். பாரிஜாத புஷ்பமானது சுலபமாய்க் கிடைத்திருக்க வண்டானது வேறு புஷ்பத்தை விரும்புமா? அதுபோல் உம்முடைய பாதாரவிந்தத்தை அடைந்த நாங்கள் எந்த வரத்தைத்தான் கேட்கப் போகிறோம்? உம்முடைய மாயையால் பிரமித்து "கர்ம மார்க்கத்தில் நாங்கள் சுழன்று கொண்டிருப்பதால் எங்களுக்கு ஒவ்வொரு ஜன்மத்திலும் உம்முடைய பக்தர்களுடைய ஸங்கமானது இருக்கும்படி அனுக்கிரஹிக்கிகவேண்டும் பகவத் பக்தர்களுடைய ஸங்கத்தினுடைய ஸ்வல்ப

பாகத்திற்கு, ஸ்வர்க்கத்தையும், மோக்ஷத்தையும் ஸமானமாகச் சொல்லமாட்டோம். அப்படியிருக்க மற்ற காமங்கள் ஸமமாக ஆகுமா? ஸத்துக்களுடைய ஸங்கத்தால் பகவானுடைய கதாப்பிரசங்கமும், ஆசையினுடைய ஒழிவும், பிராணிகளிடத்தில் விரோதமில்லாதிருத்தலும், உண்டாகின்றன. எந்தப் பெரியோர்களுடைய ஸதஸில் ஸன்யாஸிகளுக்குக் கதியாகிய ஸ்ரீமந் நாராயணனுடைய கதைகள் ஆசையை யொழித்த பெரியோர்களால் கானஞ் செய்யப்படுகின்றனவோ. சுத்தர்களாகிய அந்தப் பெரியோர்கள் லோகத்தைப் பரிசுத்தப்படுத்துவதற்காக ஸஞ்சரிக்கிறார்கள். அப்படிப்பட்ட உம்மைப் போன்ற ஸாதுக்களுடைய சேர்க்கையானது ஸம்ஸாரத்திலிருந்து பயந்தவனாகிய எனக்குப் பிடிக்காமலிருக்குமா? ஓ பகவன்! உம்முடைய தோழராகிய பரமசிவனுடன் சொற்பகாலம் நாங்கள் ஸல்லாபஞ் செய்ததடியால் நிவர்த்திக்க முடியாத ஸம்ஸாரமாகிய மிருத்யுவிற்கு மேலான வைத்தியராகிய உம்மை அடைந்தோம். (ஸாதுக்களுடைய ஸங்கத்தால் உண்டாகும் பலனை அடைந்தோமென்று கருத்து.) மேலும் நாங்கள் வேதங்களை நன்றாய் அத்யயனஞ்செய்து, ப்ராஹ்மணர்களையும் ஸித்தர்களையும் எப்பொழுதும் அனுஸரித்து, அவர்களுடைய பிரீதியை ஸம்பாதித்து, பெரியோர்களை நமஸ்கரித்து, மித்திரர்கள் ஸஹோதரர்கள் முதலிய பிராணிகளையும் அசூயை இல்லாமல் சமமாகப் பார்ப்பது முதலிய தபஸ்ஸை ஆகாரம் இல்லாமல் வெகுகாலம் அனுஷ்டிப்பது முதலியவைகளைச் செய்தோமல்லவா? அவையெல்லாம் அளவற்ற மகிமையுள்ள பரம புருஷராகிய உமக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணட்டும். இது ஒருவரம்.

மேலும் மனு, ப்ரஹ்மதேவர், பகவானாகிய பரமசிவன், தபஸ்ஸினாலும் ஞானத்தாலும் சுத்த சித்தர்களான மற்றவர்கள் ஆகியோ இவர்களாலும் உம்முடைய மஹிமை முழுமையும் அறியப்படவில்லை. ஆனாலும் அவர்கள் தங்களுடைய புத்திக்குத் தக்கபடி உம்மைத் துதிக்கிறார்கள். ஆனதால் நாங்களும் ஸ்தோத்திரஞ் செய்கிறோம். எல்லாரிடத்திலும் ஸமரும், ஆசை முதலியவைகளற்றவரும், மேலானவரும் எங்கும் நிறைந்தவரும், ஸத்வமூர்த்தியும், வாஸுதேவரும், பகவானுமாகிய உமக்கு நமஸ்காரம்" என்றார்கள். பக்தர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ளவரும் தடையற்ற வீர்யமுள்ளவரும், பிரசேதஸ்ஸுகளால் துதிக்கப்பட்டவரும், அவர்களிடத்தில் பிரீதியுள்ள வருமான ஸ்ரீ பகவான் இப்படி அவர்களால் துதிக்கப பெற்றுத் தம்முடைய லோகஞ் சென்றார். பகவானைத் தரிசித்துப் திருப்தியடையாமல் அந்த ராஜகுமாரர்கள் பகவத் தரிசனத்தையே விரும்பினவர்களாக இருந்தார்கள். பிறகு அவர்கள் ஜலத்திலிருந்து வெளியில் வந்தார்கள். பூமி முழுவதும் மரங்கள் அடர்ந்திருந்தன. ஸ்வர்க்கம் வரையில் செல்ல விரும்பியவைகள் போல் எல்லா மரங்களும் மிக்க உயரமாக வளர்ந்திருந்திருந்தன. (பிராசீனபர்ஹிஸ் தபஸ்ஸிற்குச் சென்ற படியால் பூமிக்கு அரசனில்லாமல் உழுது பயிரிடுவது முதலியவையற்றிருந்தபடியால் காடாக விருந்தது). அதனைக் கண்டவுடன் அந்த ராஜபுத்ரர்களுக்கு மிகுந்த கோபமுண்டாயிற்று, அப்பொழுது பூமியிலுள்ள மரங்களை நாசஞ் செய்வதற்காகப் பிரளயகாலத்திய காலாக்னி ருத்ரன் போல் அவர்கள் தங்களுடைய முகத்திலிருந்து அக்கினியையும், காற்றையும் உண்டு பண்ணினார்கள். அவைகளால் மரங்கள் நாசஞ்

செய்யப்படும்போது ப்ரஹ்மதேவர் அவ்விடஞ்சென்று பிரசேதஸ்ஸுக்களை ஸமாதானப்படுத்தினார். பின்பு எஞ்சிய மரங்கள் ப்ரஹ்மதேவருடைய தூண்டுதலால் தங்களுடைய பெண்ணைப் பிரசேதஸ்ஸுக்களுக்குக் கொடுத்தன. அவர்களும் ப்ரஹ்மதேவருடைய ஆக்ஞையால் அந்தப் பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொண்டார்கள். சாக்ஷுஷ மன்வந்தரத்தில் தக்ஷப் பிரஜாபதியாகவிருந்து ப்ரஹ்மதேவருடைய தூண்டு தலால் பிரஜைகளை ஸிருஷ்டித்தார். அவர் தம்முடைய இயற்கையான தேஜஸ்ஸால் தேஜஸ்வி களை அதிக்கிரமித்திருந்தபடியாலும், கார்யங்களில் மிகவும் சமர்த்தராக விருந்தபடியாலும் தக்ஷர் என்ற பெயரடைந்தார். அவரைப் ப்ரஹ்மதேவர் பிரஜை களை ஸிருஷ்டிக்கும்படி ஆக்ஞாபித்தார்.. தக்ஷர் மரீசி முதலியவர்களைப் பிரஜாபதிகளாக நியமித்தார். ப்ரஹ்மபுத்திரராகிய அந்தத் தக்ஷர் பரமசிவனை அலக்ஷ்யஞ் செய்ததால் மறு ஜன்மத்தில் மரங்களின் புத்திரியான மாரிஷையிடத்தில் பிறந்தார்.

அத்தியாயம்–31

(முன் அத்தியாயத் தொடர்ச்சி)

1–7 பிறகு அந்தப் பிரசேதஸ்ஸுகள் பல வர்ஷ காலம் ராஜ்யபாலனஞ் செய்து விவேகம் உண்டான வர்களாகிப் பகவானுடைய ஆக்ஞையை நினைத்துக் கொண்டு பார்யையும் குழந்தைகளையும் விட்டு ஸகல பிராணிகளையும் ஆத்மாவாக நினைத்து, ப்ரஹ்ம ஸத்திரத்தில் தீக்ஷைசெய்து கொண்டு மேற்கு சமுத்திரக்கரை சென்றார்கள். அந்த இடம் ஜாபாலியென்ற மஹரிஷி ஸித்தியடைந்த க்ஷேத்திரம். அவ்விடத்தில் அவர்கள் பிராணன், வாக்கு, மனம், கண் ஆகிய இவைகளை ஜயித்திருந்தார்கள். சாந்தமும் ருஜுவுமான சரீரமுள்ளவர்களாக இருந்தார்கள். சுத்தமான பரமாத்மாவிடத்தில் மனத்தைச் செலுத்தின வர்களாகவுமிருந்தார்கள். அப்பொழுது அவர்களைத் தேவர்களாலும், அசுரர்களாலும், துதிக்கப்பட்ட நாரதர் கண்டார். அவ்விடம் வந்த நாரதரைக் கண்ட பிரசேதஸ்ஸுக்கள் எழுந்திருந்து பிரதக்ஷிணஞ் செய்து, நமஸ்கரித்து முறைப்படி பூசித்து ஆஸனத்தில் உட்கார வைத்து அவரை நோக்கி, 'ஓ தேவரிஷியே! நல்வரவா ? தெய்வச் செயலாக எங்களுக்குத் தரிசனங் கொடுத்தீர். ஓ ப்ராஹ்மண! நீர் லோகத்தின் க்ஷேமத்திற்காகவே சூரியன் போல சஞ்சரிக்கிறீர். ஸ்ரீ பரமசிவனாலும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவினாலும் உபதேசிக் கப்பட்ட ஆத்ம தத்வத்தைக் கிருஹஸ்தாஸ்ரமத்தில் ஆசை கொண்டு நாங்கள் பெரும்பாலும் மறந்து விட்டோம். கடக்க முடியாத சம்சார சமுத்ரத்தைச்

சீக்கிரமாக நாங்கள் தாண்டும்படியாக ஆத்ம ஞானத்தைத் தெரியப்படுத்தும்" என்று பிரார்த்தித்தார்கள்.

8–29 அதனைக் கேட்ட நாரத மஹாமுனிவர் உத்தம சுலோகராகிய பகவானைத் தியானஞ் செய்து ராஜபுத்ரர்களை நோக்கி, எதனால் பகவான் சேவிக்கப்படுகிறாரோ, அந்த ஜன்மமே பயனுள்ளது; அந்தக் கர்மங்களே பயனுள்ளவை; அந்த ஆயுஸ்ஸே ஸபலம்; அந்த மனமே பிரயோஜனமுள்ளது; அந்த வாக்கே சிறந்தது. ஆத்மஞானத்தைக் கொடுக்கும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை சேவியாதவனுடைய ஜன்மத்தாலும், உபநயனத்தாலும், யாகதீக்ஷையாலும், தீர்க்கமான ஆயுஸ்ஸினாலும், சாஸ்திரத்தாலும், தபஸினாலும், வாக்கினாலும், சித்தவிருத்திகளாலும், கூர்மையான புத்தியாலும், பலத்தாலும், இந்திரிய சக்தியாலும், யோகத்தாலும், ஸாங்க்யத்தாலும், சன்யாஸத்தாலும், வேதத்தாலும், மற்ற க்ஷேமகரமான காரியங்களாலும் என்ன பயன்? ஸகல சிரேயஸ்ஸுக்களுக்கும் மேலான சிரேயஸ் பகவானேயாம். ஸகல பிராணிகளுக்கும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவே ஆத்மாவாக விருக்கிறார். அவரே ஸ்வரூபஞானத்தை யுண்டுபண்ணுகிறவர்; ப்ரியர், மரத்தினடியில் (வேரில்) ஜலம் கொட்டினால் எப்படி மரத்தின் (கிளை) முதலியவைகள் புஷ்டியை அடைகின்றனவோ, பிராணனைத் திருப்தி செய்வதால் இந்திரியங்கள் எப்படித் திருப்தியடைகின்றனவோ, அப்படிப் பகவானைப் பூஜித்தால் ஸகல பிராணி களையும் பூஜித்ததாக ஆகிறது. மழைக்காலத்தில் ஸூர்யனிடமிருந்து வெளியான ஜலங்கள் கோடைக் காலத்தில் அவரிடத்திலேயே பிரவேசிப்பது போல் ஸ்தாவர ஜங்கம பிராணிகளெல்லாம் ஸ்ரீ மஹா

விஷ்ணுவிடமிருந்தே ஸிருஷ்டி காலத்தில் வெளியா கின்றன. பிரளய காலத்தில் அவரிடத்திலேயே பிரவேசிக்கின்றன. இந்த ஜகத்தானது ஸ்ரீ மஹா விஷ்ணுவிற்கு வாஸஸ்தலம். அவரைக் காட்டிலும் வேறானதல்ல. ஸகல உபாதிகளற்றது; ஸூர்யனுடைய தேஜஸ்ஸானது வேறாகத் தோன்றினாலும் எப்படி அவரைவிட வேறானது இல்லையோ, ஜாக்ரதவஸ்தையில் இந்திரியங்கள் தோன்றினாலும் ஸுஷுப்தியில் எப்படி ஒன்றாக ஆகிவிடுகின்றனவோ, ப்ரஹ்மஞானமில்லாத போது திரவியம், கிரியை, ஞானம் ஆகிய இவை களுடைய பேதம் தோன்றினாலும் ஞானம்வந்தபின் எப்படிப் பேதம் நாசமடைகிறதோ, அப்படி சகல ஜகத்தும் பகவத் ஸ்வரூபமேயாம். ஆகாயத்தில் மேகம், இருட்டு, பிரகாசம் ஆகிய இவைகள் கிரமமாக எப்படி உண்டாகின்றனவோ, மறைகின்றனவோ, அப்படிப் பரப்ரஹ்மத்தினிடத்தில் ரஜஸ், தமஸ், ஸத்வம் ஆகிய குணங்களாலுண்டாகும் சக்திகள் உண்டாகின்றன. ஜகத்தின் ஸ்வபாவமிது, ஆனதால் காலம் பிரதானம், புருஷன் ஆகிய இவைகளின் ஸ்வரூபமாக விருப்பதால் ஸகலத்திற்கும் காரணரும், தம்முடைய தேஜஸ்ஸால் குணகார்யத்தை நாசஞ்செய்ப வரும், ஒப்பற்றவருமான பரமாத்மாவை நேரில் உபாஸியுங்கள்'. மேலும், சங்கற்ப விகற்பங்களற்ற வரும், தமக்கு ஸஜாதீயமான இரண்டாவது வஸ்து வில்லாதவரும், ப்ரஹ்ம ஞானத்திற்குப் பாதகமான துவைத ஞானம் நிவர்த்தியான பின் பிரகாசிக்கும் ஸ்வரூபமுள்ளவரும், ஆதி, மத்யம், அந்தம், ஆகிய இவைகளற்றவரும், ஸுகஸ்வரூபியும், ஞானஸ்வரூபி யுமான பரமாத்மாவை மேற்காட்டியபடி (ப்ரஹ்ம ஸ்வரூபமென்று) பூஜியுங்கள். ஸகல பிராணிகள்

இடத்திலும் தயை செய்வதாலும், கிடைத்ததைக் கொண்டு சந்தோஷப்படுவதாலும் ஸகல இந்திரியங்களை ஜயிப்பதாலும் ஸ்ரீமந் நாராயணன் சீக்கிரம் சந்தோஷப்படுகிறார். ஸகல ஆசைகளுமற்ற சுத்தமான மனத்தில் சாதுக்களால் தியானம் செய்யப்பட்ட பகவான் 'தாம் பக்தர்களுக்கு வசப்பட்டவர்' என்பதை நினைத்து அந்த மனத்திலேயே வஸிக்கிறார். பின்னும் எவர்கள் படிப்பினாலும், பணத்தாலும், குலத்தாலும், தர்மத்தாலும் கர்வங்கொண்டு ஏழைகளான சாதுக்களுக்கு கெடுதியைச் செய்கிறார்களோ, அந்தத் துர்புத்தியுள்ளவர்களால் செய்யப்படும் பூஜையைப் பகவான் அங்கீகரிக்கிறதில்லை. அவருக்கு ஏழைகளிடத்திலும் பகவானையே பணமாக நினைத்த சாதுக்களிடத்திலும் பிரியம். அவர் பக்தி ரஸத்தை நன்றாக அறிந்தவர். எந்தப் பகவான் தம்மை அனுசரித்த வளான ஸ்ரீ தேவியையும் அந்த லக்ஷ்மியையும் உபாஸிக்கும் அரசர்களையும் தேவர்களையும் லக்ஷ்யஞ்செய்கிறதில்லையோ, தம்மாலேயே பூர்ணராக விருக்கிறாரோ, தம்முடைய பக்தர்களிடத்திலேயே பிரீதியுள்ளவராக விருக்கிறாரோ, அந்தப் பகவானை எவன் தான் உபாஸிக்க மாட்டான்? உங்களுடைய வம்சத்தில் பிறந்த துருவரென்பவர் ஸபத்தினி மாதாவின் வார்த்தையை சகியாமல் மாதா முதலியவர்களை விட்டுக் காட்டிற்குச் சென்றார்; அப்பொழுது அவர் ஐந்து வயதுள்ளவர்; வழியில் அவரை நான் சந்தித்தேன். அவர் என்னுடைய உத்தரவின்படி பகவானை ஆராதித்து மற்றவர்களால் அடைய முடியாத மேலான பதத்தை அடைந்தார். சப்தரிஷிகளும் இப்பொழுது அதனைப் பார்த்து தலைகுனிந்திருக்கிறார்கள். ஆனதால் நீங்களும்

ருத்ரரால் உபதேசிக்கப்பட்ட கீதத்தால் ஸகல பிராணிகளுக்கும் அந்தர்யாமியாக விருக்கும் பகவானையுபாஸியுங்கள்" என்று ஆக்ஞாபித்து மற்றுஞ் சில புண்யகதைகளை அவர்களுக்குச் சொல்லி, ப்ரஹ்மலோகஞ் சென்றார். அந்த ராஜபுத்ரர்களும் லோகத்தின் பாபத்தைப் போக்கக்கூடிய பகவானுடைய சரிதத்தை நாரதரிடமாகக் கேட்டு, பகவானுடைய பாதத்தை தியானஞ் செய்து வைகுண்டஞ் சென்றார்கள்.

30–32 ஓ விதுரரே! உம்மால் கேட்கப்பட்ட பிரசேதஸ்ஸுகளுக்கும் நாரதருக்கும் நேர்ந்த சம்வாதமாகிய பகவத் சரிதத்தை உமக்குச் சொன்னேன். மனுவின் புத்திரரான உத்தானபாதருடைய வம்சம் நிரூபிக்கப்பட்டது. பிரியவிரதருடைய வம்சத்தையும் சொல்லுகிறேன். அவர் நாரதரிடமாக ஆத்மவித்தையை அடைந்து பூமியையும் சிலகாலம் பரிபாலித்துப் பின்பு பூமியைப் புத்திரர்களுக்கு, பிரித்துக் கொடுத்துப் பகவத் பதத்தை அடைந்தார் என்றார்.

33–35 இப்படி மைத்ரேயரால் சொல்லப்பட்ட பகவானுடைய ஸத் கதையை விதுரர் கேட்டுப் பகவானிடத்தில் மிகுந்த பக்தி யடைந்து, ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி, மைத்ரேயரை நமஸ்கரித்து ஹ்ருதயத்தில் பகவானுடைய பாதார விந்தத்தை தியானஞ் செய்தார். பின்னுமவர் மைத்ரேயரை நோக்கி "ஓ மஹா யோகியே! கருணை நிறைந்த சித்தமுள்ள உம்மால் ஸம்ஸாரத்தின் கரை காட்டப்பட்டது. ஏழைகளிடம் பிரீதியுள்ள பகவான் அவ்விடத்தில் வஸிக்கிறார்" தனக்கென்று! ஒன்றும்

வைத்துக் கொள்ளாத பக்தர்களை அவர் சென்று அடைகிறார் என்று சொல்லி அவரை நமஸ்கரித்து, பூர்ண மனோரதமுள்ளவராக அவரிடம் விடை பெற்றுப் பந்துக்களை பார்ப்பதற்காக ஹஸ்தினாபுரஞ் சென்றார்.

36. ஸ்ரீ பகவானிடத்திலேயே சித்தத்தைச் செலுத்திய அரசர்களுடைய இந்தச் சரித்திரத்தைக் கேட்பவனுக்குத் தீர்க்கமான ஆயுளும், செல்வமும் கீர்த்தியும், க்ஷேமமான கதியும், ஐச்வர்யமும் கிடைக்கும்.

ஸ்கந்தம் 5

அத்தியாயம்–1

ப்ரியவ்ரதருடைய சரிதம்

பரீக்ஷித்து மஹாராஜன் சுகமஹாமுனிவரை நோக்கி "ஓ முனியே! ப்ரியவ்ரதர் பாகவதர்களுக்குட் சிறந்தவர்; ஆத்மாவிடத்தில் ரமிப்பவர்; அப்படிப் பட்ட அரசன் கர்ம பந்தத்தைக் கொடுக்கக் கூடியதும், ஆத்மஸ்வரூபத்தை மறைக்கக் கூடியதுமான விஷய சுகத்தில் ஏன் ஆசைப்பட்டார்? கிருஹஸ்தாச்ரமத்தை அடைய வேண்டுமென்ற விருப்பம் ப்ராகிருத மனிதர் களுக்கு உண்டாகலாம். ஓ ப்ராஹ்மணோத்தம! வைராக்யமுள்ள அப்படிப்பட்ட புருஷர்களுக்கு விஷயத்தில் ஆசையுண்டாவது உசிதமா? ஓ ப்ரஹ்மரிஷியே, உத்தமச்லோகராகிய பகவானுடைய பாதங்களுடைய சாயையை ஆச்ரயித்து அதனால் சுகத்தை அடைந்த சித்தமுள்ள மஹான்களுக்கு குடும்பத்தில் எப்படி ஆசையுண்டாகும்? மேலும் ஸ்திரீ, புத்ரன், தனம் முதலிய விஷயங்களில் ஆசை கொண்டிருந்த அந்த ப்ரியவ்ரதருக்கு ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் பக்தியும் ஸித்தியும் எப்படி உண்டாயிற்று? இவ்விஷயத்தில் எனக்குண்டாகி யிருக்கும் மிகுந்த ஸம்சயத்தை நிவர்த்திக்க வேண்டும்" என்று கேட்டார்.

5–10 அதனைக் கேட்டச் சுகமஹாமுனி அரசனை நோக்கி, "நீர் நினைப்பது சரியே; ஆனாலும் உத்தம ச்லோகராகிய பகவானுடைய பாதங்களாகிய

தாமரை மலரின் மதுவை பானஞ்செய்து திருப்தியடைந்த மனமுள்ள பக்தர்களுக்கு விக்னத்தால் பாகவதர்களான பரம ஹம்ஸர்களுக்கிஷ்டமான பகவத் கதையானது ஒரு கால் தடுக்கப்பட்டி ருந்தாலும், முந்திய அப்யாச பலத்தால் பக்தியானது விட்டுப் போகிறதில்லை. ஓ மஹாராஜ்! அந்த ராஜகுமாரராகிய ப்ரியவ்ரதர் பாகவதர்களுக்குட் சிறந்தவராகி நார்த ருடைய பாதத்தை சேவித்து அதனால் ஆத்மாவின் உண்மையைத் தெரிந்து கொண்டு ப்ரஹ்மஸத்ரத்தில் தீக்ஷை செய்து கொள்ள ஆசை கொண்டிருந்தார். அப்பொழுது அவருடைய பிதாவாகிய மனு தம்முடைய புத்ரராகிய ப்ரியவ்ரதர் அரசர்களுக் கிருக்க வேண்டிய குணங்களால் அலங்கரிக்கப்பட்டி ருப்பதைக் கண்டு பூமியை பரிபாலனஞ் செய்யும்படி ஆக்ஞாபித்தார்.. அப்பொழுது ப்ரியவ்ரதர் ஸ்ரீ வாஸுதேவரிடத்தில் நிரந்தரமாக சித்தத்தைச் செலுத்தி அதனால் ஸகல இந்திரியங்களுடைய வ்யாபாரங்களை பகவதர்ப்பணஞ் செய்திருந்தபடியால், மீறக்கூடாதாயினும் பிதாவின் ஆக்ஞையை அனுஷ்டிக்க ஸம்மதிக்கவில்லை. ஏனென்றால் அரசனாக விருந்தால் ப்ரபஞ்சம்மித்யாபூதமானாலும் அதனால் ஆத்ம ஞானம் மறைக்கப்படுமென்று நினைத்திருந்தார். பின்பு பகவானாகிய ப்ரஹ்மதேவர் இந்த ஜகத்தை விருத்தி பண்ணுவதைப் பற்றி யோசித்து ஸகல ப்ராணிகளுடைய அபிப்ராயத்தை அறிந்தவராகி, ஸகல வேதங்கள், மரீசி முதலியவர்கள் ஆகிய இவர்களுடன் தம்முடைய லோகத்திலிருந்து ப்ரியவ்ரதர் வசிக்குமிடம் வந்தார். நடுவழியில் ஆகாயத்தில் சந்திரன் போல் ப்ரகாசிக்கும் அந்த ப்ரஹ்மதேவரை விமானத்தில் சஞ்சரிக்கும் சிறந்த தேவர்கள் பூஜித்தார்கள். மேலும்

ஸித்தர்கள் கந்தர்வர்கள், ஸாத்யர்கள், சாரணர்கள், கின்னரர்கள், முனிவர்கள் ஆகிய இவர்கள் கூட்டங்கூட்டமாக அவருடைய சரிதத்தை கானஞ் செய்தார்கள். பின்னும் அவருடைய காந்தியால் அந்த கந்தமாதனபர்வதத்தின் குஹையானது இருளின்றி ப்ரகாசித்தது. அப்பொழுது தேவர்ஷியான நாரதர் ஹம்ஸவாஹனத்தின் மீதேறி வந்த அவரை தம்முடைய பிதாவாகிய ப்ரஹ்மதேவரென்று தெரிந்து கொண்டு மனு ப்ரியவ்ரதர் ஆகிய இவர்களுடன் சீக்கிரமாக எழுந்திருந்து சாவதானராக கை கூப்பி முறைப்படி பூஜித்தார். ஓ மஹாராஜ! அந்த நாரதரால் ப்ரஹ்மதேவர் பூஜிக்கப்பட்டு அந்த ப்ரியவ்ரதரை நோக்கி தயவுடன் கூடிய புன்சிரிப்புள்ள பார்வை யுடன் பின்வருமாறு சொல்லலானார். (நாரதமஹர்ஷி ப்ரியவ்ரதருக்கு ஆத்மதத்வத்தை உபதேசிக்க விரும்பி கந்தமாதன பர்வதத்தின் குஹைக்கு அவரை அழைத்து வந்தார். அந்த சமயத்தில் அவரை ராஜ்யபாலனம் செய்யும்படி திரும்பி அழைத்துப் போவதற்காக மனுவும் அவ்விடம் வந்திருந்தார். அந்த சமயம் ப்ரஹ்மதேவர் அவ்விடம் வந்தார் என்று கருத்து.)

11–19 "ஓ குழந்தாய்! நான் சொல்வது உண்மையென்று தெரிந்துகொள்; அளவிடக் கூடாத மஹிமையையுள்ள பகவானிடத்தில் அசூயை அடைய வேண்டாம்; நான், நீர், இந்த மஹர்ஷி முதலிய எல்லோரும் ஸ்வாதந்திரியமில்லாதவர்களாக அந்த பகவானுடைய ஆஜ்ஞையை வஹிக்கிறோம். இப்பொழுது ஸ்ரீமந் நாராயணனே என் முகமாகச் சொல்வதால் நான் சொல்வதாய் நினைக்கக் கூடாது

என்று கருத்து.) தபஸ்ஸினாலும், வித்தையாலும், யோகபலத்தாலும், புத்திபலத்தாலும், அர்த்தங்களாலும், தர்மங்களாலும் பிறருடைய ஆச்ரயத்தாலாவது, தன்னுடைய தேஹபலத்தாலாவது ஒருவனாலும் அவரால் செய்யப்பட்ட கார்யத்தை கெடுக்க முடியாது. அவ்யக்தாகிய பகவானுடைய ஆஜ்ஞையால் சரீரத்தை பிராணிகளெல்லோரும் அடைகிறார்கள். அதனால் ஜன்மத்தையும் நாசத்தையும், சோகத்தையும், மோஹத்தையும், பயத்தையும், சுகதுக்கங்களையும் அடைகிறதுமின்றி கர்மங்களையுஞ் செய்கிறார்கள். மேலும் நாம் எல்லோரும் எவருடைய ஆஜ்ஞாபமாகிய, வேதமாகிய பிணையில், குணங்கள் கர்மங்கள் ஆகிய கயறுகளால் கட்டப்பட்டு மூக்குக் கயிற்றினாலாமுக்கப்பட்ட நாற்கால் ப்ராணிகள் மனிதர்களுக்குப் போல அந்தப் பகவானுக்கு வயப்பட்டவராக இருக்கிறோம். ஓ ப்ரியவ்ரத! காளைமாடுகள் யஜமானால் கொடுக்கப்பட்ட ஆகாரத்தை எப்படி புஜிக்கின்றனவோ, தனதிஷ்டப்படி புஜிக்க சக்தியற்றவைகளோ அப்படி குணங்கள், கர்மங்கள் ஆகிய இவைகளால் நாதனாகிய பகவான் எந்தெந்த தேகத்தை கொடுக்கிறாரோ, அதனை அடைந்து துக்கத்தையாவது சுகத்தையாவது அனுபவிக்கிறோம். மேலும் நாமெல்லோரும் கண்ணில்லாத குருடர்கள், அந்த பகவான் ஒருவரே கண்ணுள்ளவர்; அவரால் நாம் நிழலிலாவது, வெய்யிலிலாவது அழைத்துப் போகப்படுகிறோம். மோக்ஷத்தை அடைந்தவனும், ப்ராரப்த கர்மம் நசிக்கிறவரையில் அபிமான மற்றவனாகி தேகத்தை தரிக்க வேண்டியதுதான்; ஆனால் அவன் திரும்பவும் ஜன்மத்தைக் கொடுக்கும் குணங்களையாவது கர்மங்களையாவது அனுசரிக்க

மாட்டான். காமம் முதலிய ஆறு சத்ருக்களுள்ளவனும், இந்திரியங்களை ஜயிக்காதவனுமாகிய புருஷனுக்கு வனத்திலும் சம்ஸார பந்தம் விடுகிறதில்லை. இந்திரியங்களை ஜயித்தவனும் ஆத்மா ராமனுமாகிய புருஷனுக்கு கிருஹஸ்தாச்ரமம் என்ன கெடுதியைச் செய்யும்? சத்ருக்களை ஜயிக்க விரும்பியவன் துர்க்கமான இடத்திலிருந்து அவர்களை ஜயிக்க முயலுவது வழக்கம்; அதுபோல் சம்ஸாரியானவன் கிருஹஸ்தாச்ரமத்திலிருந்து ஆறு சத்ருக்களை ஜயிக்க முயற்சிக்க வேண்டும். ஆனால் நீர் பத்மநாபராகிய பகவானுடைய பாதாரவிந்தமாகிய கோட்டையிலிருந்து காமம் முதலிய சத்ருக்களை ஜயித்து ஸ்ரீ பகவானால் கொடுக்கப்பட்ட போகங்களை அனுபவித்த பிறகு மிகுந்த வைராக்யமடைந்து ஸ்வரூபத்தை அடையலாம் என்று ஆஜ்ஞாபித்தார்.

20–21 அதனைக் கேட்ட மஹா பாகவதராகிய ப்ரிய வ்ரதர் முவ்வுலகத்திற்கும் குருவாகிய ப்ரஹ்ம தேவரிடமுள்ள கௌரவத்தால் தலைகுனிந்து அப்படியே செய்கிறேனென்று ஒப்புக் கொண்டார். அப்பொழுது மனு விதிப்படி ப்ரஹ்மாவை பூஜித்தார். ப்ரியவ்ரதரும் நாரதரும் ப்ரியமாகவே பார்த்து இருந்தார்கள். (ப்ரியவ்ரதருக்கு யோகாப்யாஸத்திற்கு விரோதம் நேர்ந்த படியாலும், நாரதருக்கு ப்ரியவ்ரதரை சிஷ்யராகச் செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் நிறை வேறாததினாலும் அவ்விருவர்களும் ப்ரஹ்மதேவரிடம் அசூயைப்பட வேண்டி இருந்தாலும் ப்ரியமாகவே பார்த்திருக்கிறார்கள்.) அப்பொழுது நான்கு முகக் கடவுள் வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாததும், வ்யவஹாரத்தைக் கடந்ததுமான பரப்ரஹ்மத்தை

த்யானஞ் செய்துகொண்டே தம்முடைய லோகஞ் சென்றார். மனுவும் ப்ரஹ்மதேவரால் தமதிஷ்டத்தை நிறைவேற்றிக் கொண்டு நாரதருடைய அனுமதியின் பேரில் ப்ரியவ்ரதருக்கு பட்டாபிஷேகஞ் செய்து தாண்ட முடியாத விஷயங்களாகிய விஷஜலத்தால் நிறைந்த தடாகம் போன்ற சம்ஸார வாசனையை யொழித்தார்.

22–34 இப்படி அந்த ப்ரியவ்ரதர் ராஜ்யத்தை அடைந்து ஸகல ஜகத்திற்கும் பந்தம், நாசம் ஆகிய இவைகளைச் செய்யும் பகவானுடைய பாதார விந்தத்தை எப்பொழுதும் த்யானஞ் செய்து அதனால் ராகம் த்வேஷம் முதலிய மனத்தில் மலங்களற்ற வராகி சுத்த சித்தராக ப்ரம்ஹதேவர் முதலியவர் களுக்கும் ப்ரியராக பூமியை பரிபாலித்தார். பின்பு அந்த ப்ரியவ்ரதர் விச்வகர்மாவின் பெண்ணாகிய பர்ஹிஷ்மதி யென்பவளை விவாஹம் செய்து கொண்டு அவளிடத்தில், ஆக்னீத்ரன், இதமஜிஹ்வரன், யஜ்ஞுபாஹு, மஹாவீரன், ஹிரண்யரேதஸ், க்ருத ப்ரஷ்டன், ஸவனன், மேதா திதி, விதி ஹோத்ரன், கவியென்ற பத்துபுத்ரர்களையும் ஊர்ஜஸ்வதியென்ற ஒரு புத்ரியையும் உண்டுபண்ணினார்; அந்தப் பெண் பிள்ளைகளுக்குப் பின் பிறந்தவள்; அந்தப் புத்ரர்களெல்லோரும் குணத்திலும், ஸ்வபாவத்திலும், கார்யத்திலும், ரூபத்திலும், பராக்ரமத்திலும் பிதாவை யொத்தவர்கள். அவர்களுக்குள் கவி, மஹா வீரன் ஸவனன் ஆகியவரும் ஊர்த்வரேதஸ்ஸுக்களாக லிருந்ததுமல்லாமல், பால்யம் முதலாகவே ஆத்ம வித்தையை அப்யஸித்து பரமஹம்ஸாச்ரமத்தை அடைந்தார்கள். மேலுமவர்கள் அந்த ஆச்ரமத்திலிருந்து

சாந்தியை அடைந்து ஸகல ப்ராணிகளுக்கும் வஸிக்குமிடமாயும், ஸம்ஸாரத்திலிருந்து பயந்தவர் களுக்குச் சரணமாயுமுள்ள ஸ்ரீ வாஸுதேவருடைய பாதாரவிந்தத்தை இடைவிடாமல் த்யானித்தார்கள். அதனால் மிகுந்த பக்தியுண்டாயிற்று. அதனால் சித்தம் சுத்தமாயிற்று. அப்படிப்பட்ட சித்தத்தில் ஸகல ப்ராணிகளுக்கும் ஆத்மாவும், ப்ரத்யகாத்மா வுமான ஸ்வரூபம் ப்ரகாசித்தது. அதனிடத்தில் அபேத பாவனையால் தேஹம் முதலிய உபாதிஸம்பந்தமற்று ப்ரம்ஹபாவத்தை அடைந்தார்கள். மேலும் ப்ரியவ்ரதருக்கு மற்றொரு பத்னியிடத்தில் உத்தமன், தாமஸன், ரைவதன், என்று மூன்று புத்ரர்கள் பிறந்தார்கள். அவர்கள் மன்வந்தரத்திற்கு அதிபதிகள், இப்படி புத்ரர்கள் சாந்தி மார்க்கத்தை அடைந்திருக்க ப்ரியவ்ரதராகிய அரசன் பதினோரு அற்புத வர்ஷங்கள் (1100000000 வர்ஷங்கள்) தடையற்ற புருஷ ப்ரயத்னத்துடன் கூடிய பலமுள்ள புஜ தண்டங் களால் வில்லை எடுத்து நாண் சப்தஞ் செய் வதாலேயே (யுத்தமில்லாமலேயே) தர்ம விரோதிகளை நாசஞ் செய்து கொண்டும் பர்ஹிஷ்மதியினுடைய மிகுந்த சந்தோஷம், ஸ்திரீகளுக்கு இயற்கையான வெட்கம் புன்சிரிப்புள்ள பார்வை, இனிமையான விளையாட்டு ஆகிய இவைகளால் விவேகமற்றவர் போல் விஷயங்களில் ஆசை வைத்திருந்ததால், ஆத்மஸ்வரூபத்தை அறியாதவர்போலும் விஷய சுகத்தை அனுபவித்தார். மேலுமவர் பகவானை உபாசித்து அதனால் கிடைத்த மிகுந்த மஹிமை யுள்ளவராகி சூர்யனுடைய ரதத்திற்கு சமமான வேகமுள்ள தேஜோமயமான ரதத்தின் மீதேறி ராத்திரியையும் பகலாகச் செய்கிறேன், என்று

இரண்டாவது சூர்யன்போல் ஏழு தடவை சூர்யன்பின் சென்றார். அந்த சூர்யன் மேரு மலையை ப்ரதக்ஷிணமாகச் சுற்றிப் பூமியின் பாதி பாகத்தை ப்ரகாசிக்கச் செய்தும்; மற்றொரு பாகத்தை மறைத்துக்கொண்டும் இருக்கிறார். அந்த ப்ரியவ்ரத ருடைய ரதத்தின் சக்ர மார்க்கங்களே ஏழு சமுத்ரங்களாயின. அவைகளுக்குட்பட்ட பூமிகள், ஜம்பு, ப்லக்ஷ, சால்மலி, குசம், க்ரோஞ்சம், சாகம், புஷ்கரம் என்ற த்வீபங்களாயின. அவைகள் ஒன்றைவிட ஒன்று வெளியீலும் பரப்பிலும் இரண்டு மடங்கு அதிக மானவைகள். மேற்சொல்லிய சமுத்திரங்களில் ஒன்று உப்பு ஜலமுள்ளது, மற்றொன்று கரும்பு சாருள்ளது; மூன்றாவது மத்யமாகிய ஜலமுள்ளது, நான்காவது நெய் சமுத்திரம், ஐந்தாவது பால் சமுத்திரம், ஆறாவது கடைந்த தயிர் சமுத்திரம்; ஏழாவது சமுத்திரம்; சுத்த ஜலமுள்ளது. இந்த ஏழு சமுத்ரங்களும் ஏழு த்வீபங் களுக்கும் அகழிகளாக முறையே ஏற்படுத்தப்பட்டி ருக்கின்றன. பார்ஹிஷ்மதியின் பதியர்கிய ப்ரியவ் ரதரானவர் மேற்காட்டிய ஜம்பூத்வீபம் முதலிய ஏழு த்வீபங்களாலும் தம்மை அனுசரித்திருந்த ஆக்னீதரன், இத்மஜிஹ்வன், யஜ்ஞபாஹு, ஹிரண்யரேதஸ், கிரதுபிருஷ்டன், மேதாதிதி, விதிஹோத்ரன் என்ற பிள்ளைகளை முறையே அரசனாகச் செய்தார். ஊர்ஜஸ்வதீ என்றும் தம்முடைய பெண்ணை சுக்ராசார்யருக்கும் கல்யாணம் செய்து கொடுத்தார். அந்த சுக்ராசார்யருக்கு அவளிடத்தில் தேவயானை என்ற ஒரு பெண் பிறந்தாள்.

35. பகவானுடைய பாதாரவிந்தத்தை த்யானம் செய்து அதனால் இந்திரியங்களை ஜயித்தவனுக்கு

இம்மாதிரியான புருஷபலமிருப்பது ஆச்சர்யமல்ல. சண்டாளன் முதலியவனானாலும் பகவானுடைய திவ்ய நாமத்தை ஒரு தடவையாவது உச்சரிப்பானே யாகில் அவன் சம்ஸாரபந்தமற்றவனாக ஆகிறான்.

36–38 அந்த ப்ரியவ்ரதர் இம்மாதிரியாக அளவற்ற தேகபலம், பராக்ரமம் இவைகளுக்குள்ளவராகி, நாரத மஹர்ஷியினுடைய சரணாரவிந்த சேவாகாலத்தில் கிடைத்த ராஜ்யத்தை இவ்வளவு காலம் அனுபவித்து நிர்வேதத்தை அடைந்து தம்மை சுகமற்றவராக நினைத்து நான் செய்தது யாவும் பிசகு; அவித்தையால் ஏற்பட்ட விஷயமாகிற பாழுங்கிணற்றில் இந்திரியங்கள் என்னைத் தள்ளிவிட்டன; இந்த விஷயங்களை அனுபவித்தது போதும்; இந்த ஸ்திரீயாகிய பர்ஹிஷ்மதிக்கு விளையாட்டு மிருகமாக விருக்கும் என்னை நிந்திக்க வேண்டும், என்று தம்மை நிந்தித்துக் கொண்டார். பின்னுமவர் பரமாத்மாவின் ப்ரஸாதத்தாலே விவேகத்தை அடைந்து தம்மை அனுஸரித்திருக்கும் ஏழு புத்ரர்களுக்கு இந்த பூமியை பிரித்துக் கொடுத்து போகத்தை யனுபவிப்பவளான ஸ்திரீயையும், ஸகல ராஜ்யத்தையும், உயிரில்லாத சரீரத்தைப் போல் விட்டு, நிர்வேதமுள்ளவராக பகவானுடைய லீலைகளை த்யானஞ் செய்துகொண்டு, நாரதருடைய மார்கத்தையே திரும்பவும் அனுசரித்தார்.

39–41 அவருடைய சரிதத்தைப் பற்றிய ச்லோகங்கள் பின்வருமாறு கண்டு கொள்ளுக. எந்த ப்ரியவ்ரதர் ரதத்தின் மார்க்கத்தால் இருட்டைப் போக்கடித்து ஏழு சமுத்ரங்களை உண்டு

பண்ணினாரோ, அப்படிப்பட்ட அவ்வரசனால் செய்யப்பட்ட கார்யமான ஈச்வரனைத் தவிர வேறு யாரால் செய்ய முடியும்? அவர் பூமியில் த்வீபங்களை ஏற்படுத்தினார். நதிகளாலும், மலைகளாலும், காடு களாலும் ஒவ்வொரு த்வீபத்திலும், எல்லைகளையும் ஏற்படுத்தினார். பின்னும் விஷ்ணு பக்தர்களிடத்தில் ப்ரியமுள்ள அவர் யோகத்தாலும், மேலான கர்மத் தாலும் கிடைத்த பாதாளம், ஸ்வர்க்கம், பூமி ஆகிய லோகங்களில் உண்டான வைபவத்தை நரகத்திற்குச் சமமாக நினைத்தார்.

அத்தியாயம்–2

ஆக்னீத்ரருடைய சரிதம்

இப்படி தகப்பனாராகிய ப்ரியவ்ரதர் நிவிர்த்தி மார்கத்தை அடைந்தபோது, அவருடைய ஆக்ஞையின் படி ஆக்னீத்ரரென்பவர், ஜம்பூத்வீப வாஸிகளான ப்ரஜைகளை தம்முடைய வயிற்றில் பிறந்த குழந்தை களைப் போல் தர்மமாக பரிபாலித்தார். அவர் ஒரு கால் கிருஹஸ்தாச்ரமத்தை அடையவிரும்பி தேவ ஸ்திரீகள் விளையாட்டு ஸ்தலமாகிய மந்தரமலையின் குஹையில் ப்ரஹ்மதேவரை பூஜித்து, சித்தத்தை ஒருவகைப்படுத்தி தபஸ் செய்தார். அவருடைய அபிப்ராயத்தை தெரிந்துகொண்ட ப்ரஹ்மதேவர் தம்முடைய ஸதஸ்ஸில் கானஞ் செய்து கொண்டி ருக்கும். பூர்வசித்தீ என்னும் அபஸ்ரஸ்ஸை மந்தர மலைக்கு அனுப்பினார். அவளும் ஆக்னீத்ரருடைய ஆச்ரமத்தின் ஸமீபத்திலிருக்கும் மிக்க அழகான தோட்டத்திற்கு சென்றாள். அவ்விடத்தில் நெருக்கமாக முளைத்திருக்கும் மரங்களுடைய கிளைகளில் ஸ்வர்ணக்கொடிகள் படர்ந்திருக்கின்றன. அவைகளில் மயில் முதலியவைகள் ஆணும் பெண்ணுமாக ஷட்ஜம் முதலிய ஸ்வரங்களில் கத்துகின்றன. அதைக்கேட்டு ஸமீபத்திலுள்ள தாமரை ஓடையில் வஸிக்கும் நீர்கோழி, நீர்காகம், கொக்கு, ஹம்ஸம் முதலிய அநேக நீர் பறவைகள் விழித்துக்கொண்டு சப்திக்கின்றன. அவ்விடத்தில் அவள் அழகாய் நடப்பதால் அவளுடைய ஆபரணங்கள் சப்தித்தன. அதனைக் கேட்டு கண்களைமூடி தபஸ் செய்து கொண்டிருந்த

ஆக்னீத்ரர் கண்களைத் திறந்து ஸமீபத்தில் வரும் தேவஸ்திரீயைக் கண்டார். அவள் பெண் வண்டு போல் புஷ்பத்தை முகர்ந்து கொண்டிருந்தாள், தேவர் களுடைய மனத்திற்கும், கண்களுக்கும் ஸந்தோஷத்தை உண்டுபண்ணக்கூடிய நடை, விளையாட்டு வணக்க மான பார்வை, இனிமையான பேச்சு இவைகளைக் கொண்டு மனிதர்களுடைய மனத்தில் மன்மதனை ப்ரவேசிக்க செய்கிறாள். மேலும் அவள் தன்னுடைய முகத்திலிருந்து வெளிக்கிளம்பியதும், அமிருதம் போல ருசியுள்ளதும் மத்யம்போல் மதத்தை உண்டுபண்ணக் கூடியதுமான சிரிப்பு, பேச்சு இவைகளாலுண்டாகிய மூச்சுக் காற்றுள்ளவள். அதனை முகர்ந்து, மதித்த வண்டுகளால் சூழப்பட்டு அதனால் பயந்து வேகமாக நடக்கும்போது கொஞ்சம் அசைகின்ற ஸ்தனங்கள். தாமரைமலர்கள். ஒட்டியாணம் இவைகளுள்ளவள். அவளைக் கண்டவுடன் மன்மதன் இதுதான் ஸமயமென்று ஆக்னீத்ரரிடம் ப்ரவேசித்தான். ஆக்னீத்ரரும் மன்மதனுக்கு வசப்பட்டு ஜடன் போல அவளை நோக்கிப் பின் வருமாறு சொல்லலானார் "நீ யார்? மஹர்ஷிகள் வஸிக்கும் இந்த மலையில் எதனைச்செய்ய விரும்புகிறாய்? நீ பகவானாகிய பர தேவதையினுடைய ஒப்பற்ற மஹிமையுள்ள மாயையாக இருக்கவேண்டும். அடிதோழியே! நாண்கயிரற்ற இரண்டு வில்களை எதற்காக வைத்துக்கொண்டி ருக்கிறாய்? இந்திரியங்களை ஜயிக்காதவர்களும் மிருகத்துக் கொப்பானவர்களுமான என்னைப் போன்ற வர்களை ஸ்வாதீனப்படுத்திக் கொள்வதற்காக அவை களை வைத்துக் கொண்டிருக்கிறாயா? தாமரைமலரின் இதழ்போன்றவைகளும் மிகவும் கடுமையான கோடுக ளுள்ளதும், அழகான கணுக்களுள்ளதுமான இவைகள்,

பகவானாகிய மன்மதனுடைய பாணங்களேயாம். இவைகளை யாரிடத்தில் ப்ரயோகிக்கப் போகிறாய்? எனக்கு தெரியவில்லை, புத்தி மயக்கமடைந்த எங்களுக்கு உன்னுடைய பராக்ரமம் க்ஷேமத்தை உண்டு பண்ணட்டும். உன்னுடைய சிஷ்யர்களான இந்த வண்டுகள் ரஹஸ்யத்துடன் கூடிய ஸாமத்தை படிக்கின்றன. மேலும், மஹர்ஷிகள் வேதசாகையை அடைவதுபோல உன்னுடைய தலையிலிருந்து நழுவிய புஷ்பங்களை வண்டுகள் அடைகின்றன. (பாதஸரத்தின் சப்தத்தைக்கேட்டுச் சொல்லுகிறார்) ஓ ப்ராஹ்மண! (ஸ்திரீயையே ப்ராஹ்மணனென்று அழைக்கபபட்டது) உன்னுடைய பாதார விந்தத்தி லுள்ள பாதஸரத்திலிருக்கும் ரத்னங்களுடைய சப்தத்தைக் கேட்கிறோம். சப்திக்கிறவன் காணப்பட வில்லை. சப்தமோ மிகவும் ப்ரகாசமாக விருக்கிறது. நிதம்ப பிம்பத்தில் கதம்ப புஷ்பத்தின் காந்தி எப்படி யுண்டாயிற்று? (வஸ்த்ரத்தை நிதம்பத்தின் காந்தியாக சொல்லப்பட்டிருக்கிறது.) அந்த நிதம்பத்தில் குறைக்கொள்ளி இருக்கிறது. (ஒட்டியாணம் அக்னி போல் ஜ்வலிக்கிறது.) உன்னுடைய மறையுரி எங்கே? ஓ ப்ராஹ்மண! அழகான ஸ்தனங்களில் என்ன இருக்கிறது? நீ இளைத்த இடுப்புள்ளவளானாலும் சிரமப்பட்டு அவைகளை தரிக்கிறாய். அவைகளில் என்னுடைய கண்கள் பதிந்திருக்கின்றன. அந்த ஸ்தனங்களில் இம்மாதிரியான குங்குமப்பூ சேர்ந்த சந்தனமிருக்கிறது. அதனால் என்னுடைய ஆச்ரமம் முழுவதும் வாஸனையுள்ளதாகச் செய்கிறீர் ஓ மிக்க ஸுஹிருத்தே! உம்முடைய லோகத்தை எனக்குக் காண்பியும். அந்த லோகத்திலிருப்பவர்களுடைய மார்பானது இம்மாதிரி அபூர்வமான அவயங்களை

தரிக்கிறது. முகமானது இனிமையான பேச்சு, விலாஸம், அதராமிருதம் முதலியவைகளை தரிக்கிறது. உங்களுடைய லோகத்தில் எதனை புஜிப்பது வழக்கம்? ஹவிஸ்ஸின் வாஸனையானது வீசுகிறது. நீ விஷ்ணு வின் கலையாகையால் ஆஹாரத்தை நீ புஜிக்கிற தில்லையென்றே நினைக்கிறேன். உன்னுடைய முகமானது சரத்காலத்திய குளம் போல ப்ரஸன்னமாக விருக்கிறது. அந்த முகத்தில் கண்கொட்டவில்லாத மகரங்கள் போன்ற மகர குண்டலங்களுள்ள காது களும், மீனங்கள் போன்ற கண்களும், பல்வரிசை களுடைய அழகும், வண்டுகள் போன்ற கருத்த தலைமயிருமிருக்கின்றன ஆனதால் அந்தமுகமானது மகரங்கள், மீன்கள், பறவைகள், ஆகிய இவைகளுள்ள குளம் போலிருக்கிறது. உன்னுடைய தாமரைமலர் போன்ற கையினால் அடிக்கப்பட்ட பந்தானது சஞ்சலசித்தமுள்ள என்னுடைய கண்களை அசைக்கிறது. தலைமயிர் அவிழ்ந்திருக்கிறது. தூர்த்தனாகிய காற்றானது உன்னுடைய எக்கு முடிச்சை அபஹரிக்கிறது. அதனை நீ அறியவில்லையா? ஓ தபோதன! தபஸ்ஸை கெடுக்கும் இப்படிப்பட்ட ரூபத்தை எந்தத் தபஸ் செய்து அடைந்தீர் ஓ மித்ர! என்னுடைய இவ்விடத்தில் தபஸ் செய்யத் தகுந்தவராயிருக்கிறீர். ப்ரஹ்மதேவர் என்னிடத்தில் தயைசெய்து உன்னை அனுப்பியிருக்கிறார். ஓ ப்ராஹ்மண! ப்ரஹ்மதேவரால் கொடுக்கப்பட்ட உன்னை விடமாட்டேன். என்னுடைய மனமும் கண்களும் உன்னிடமே பதிந்திருக்கின்றன. உன்னை அனுஸரித்தவனாகியஎன்னை உனக்கு ஸ்வாதீனனாகச் செய்யவேண்டும். உன்னுடைய தோழிகளும் எனக்கு அனுகூலர்களாக விருக்கவேண்டும்" என்று விஷயத்தில்

ஆசையுள்ளவராகிய ஆக்னித்ரர் ஸ்திரீகளை இனிமையான வார்த்தையால் வசப்படுத்துவதில் ஸமர்த்தராகையால் அவளை தம்மிடம் ஆசைப்படும்படி செய்து கொண்டார்.

13–23. அந்த அப்ஸரஸ்ஸும் அவருடை புத்தி, ரூபம், ஸ்வபாவம், வித்தை, வயஸ், அழகு, ஔதார்யம் ஆகிய இவைகளால் புத்தி மயங்கினவளாகி ஜம்பூத் வீபத்திற்கு அதிபதியும் சூரர்களுக்கு அதிபதியுமான ஆக்னீத்ரருடன் வெகுகாலம் பூமியிலிருக்கும் ஸ்வர்க்க மாகிய ஒன்பது கண்டத்திலுமுள்ள சுகத்தை அனுபவித்தாள். அந்தப்பூர்வ சித்தியிடத்தில் நாபி, கிம்புருஷன், ஹரிவர்ஷன், இளாவிருதன், ரம்யகன், ஹிரண்மயன், குரு, பத்ராஸ்வன், கேது, மாலன் என்ற ஒன்பது புத்ரர்கள் பிறந்தார்கள், (புத் என்ற நரகத்திலிருந்து காப்பாற்றுகிற படியால் புத்ரனென்று) பின்பு அந்த பூர்வசித்தியானவள் ஒவ்வொரு வர்ஷங்களிலும் ஒவ்வொரு குழந்தைகளைப் பெற்று அந்த ஒன்பது குழந்தைகளையும் வீட்டிலேயே வைத்துவிட்டு ப்ரஹ்மதேவரிடஞ் சென்றாள். பின்பு அந்த ராஜபுத்திரர்களுக்கு மாதாவின் அனுக்ரஹத்தால் தேகபலம் முதலியவை இயற்கையிலுண்டாயிற்று. பிதாவாகிய ஆக்னீத்ரர் அவர்களுக்கு ஜம்பூத்வீபத்தி லுள்ள ஒன்பது கண்டங்களை ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்றாகப் பிரித்துக் கொடுத்தார். அவரவர்கள் தங்கள் கண்டத்திற்கு தங்களுடைய பெயரையே வைத்தார்கள். அதனால் அந்த ஒன்பது பெயருள்ள தாக ஒன்பது கண்டங்களும் வழங்கிவருகின்றன. ஆக்னீத்ரர் ஸகல காமங்களையும் அனுபவித்து திருப்தி அடைந்தவரானாலும் அந்த அப்ஸரஸ்ஸையே

மேலானவளாக ஒவ்வொரு நாளும் நினைத்து அவளுடைய லோகஞ் சென்றார். அவ்விடத்தில் பிதிருக்கள் சந்தோஷப்படுகிறார்கள். ஆக்னீத்ரருக்குப் பிறகு அவருடைய ஒன்பது புத்ரர்களும் மேருதேவீ, பிருதிரூபா , உக்ரதம்ஷ்டரீ, லதா, ரம்யா, ச்யாமா, நாரீ, பத்ரா, தேவவீதி என்ற மேருவின் புத்ரிகளை முறையே கல்யாணஞ் செய்து கொண்டார்கள்.

அத்தியாயம்–3

நாபியின் சரிதம்

நாபியென்பவர் புத்ரனில்லாதவராக புத்ரனை அடைய விரும்பி மேருதேவியினுடன் யஜ்ஞ புருஷராகிய ஸ்ரீமந் நாரயணரை யாகத்தால் பூஜித்தார். இப்படி சுத்த சித்தராக சிரத்தையுடன் யாகஞ் செய்தார். ப்ரவர்க்யம் நடந்தது. அப்பொழுது பாகவதர்களிடத்தில் கருணையால் அழகான அவயங் களுள்ளதும், ஸ்வதந்திரமும், ஸுகத்தைக் கொடுக்கக் கூடியதும், மனத்திற்கும், கண்களுக்கும் அழகானதுமான தம்முடைய ஸ்வரூபத்தை பக்தர்களுடைய இஷ்டத்தை நிவேற்றும் எண்ணமுள்ள பகவான் நாரயணன் பிறரால் அடைய முடியாதவரானாலும் த்ரவ்யம், தேசம், காலம், மந்திரம், ரித்விக், தக்ஷிணை, விதி முதலிய ஏழுவகையான உபாயஸம்பத்தியால் ப்ரகாசப் படுத்தினார். (தர்சனங் கொடுத்தாரென்று கருத்து) அந்த பகவத் ஸ்வரூபமானது இரண்டு கைகளுள்ளது; ஸுவர்ண மயம்; புருஷ ஸ்வரூபம்; பீதாம்பரத்தைத் தரித்தது, ஸ்ரீவத்ஸத்தால் அழகான மார்புள்ளது; மேலுமது சங்கம், பத்மம், வனமாலை, சக்ரம், கௌஸ்துபம், முதலியவைகளுள்ளது; மிகவும் பிரகாசிக்கின்ற கிரீடம், குண்டலங்கள், கைவளை, அரை ஞாண், ஹாரம், தோள்வளை; பாதஸரம் முதலிய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டது; அந்ததிவ்யரூபத்தை கண்ட ரித்விக்குகளும், யஜமானனும் தரித்திரனுக்குப் பணங்கிடைத்தாற் போல் மிக்க ஸந்தோஷமடைந்து வணக்கத்தால் தலை குனிந்தவர் களாக மிகுந்த கௌரவத்துடன் பூஜித்து ஸ்துதிக் கலானார்கள்.

ஓ மிகவும் பூஜ்யரே! உம்முடைய வேலைக்காரர் களான எங்களால் செய்யப்படும் பூஜையை அங்கீகரிக்க வேண்டும், "நமஸ்காரஞ் செய்கிறேன்" என்றதை சொல்வதுதான் எங்களுக்குத் தெரியும். ஓ ஈச்வர, ப்ரபஞ்சத்தையே அறிந்தவனும் அஸ்வதந்த் ரனுமான புருஷனால் பிரகிருதிக்கும் புருஷனுக்கும் கீழ்ப்பட்ட நாமம். ரூபம்! ஆகிருதி ஆகிய இவைகளைக் கொண்டு பரராகிய உம்முடைய ஸ்வரூபத்தை எப்படி நிரூபிக்க முடியும்? ஸகல ப்ராணிகளுடைய பாபத்தை போக்கக் கூடிய மங்களகரமாகிய உம்முடைய மேலான குணங்களுடைய கூட்டத்தின் ஸ்வல்ப பாகத்தைச் சொல்லிக் கொண்டிருப்பதே ஸாதாரண ஜனங்களுக்குத் தகுதியானது. ஓ மேலானவரே! உம்முடைய பரிஜனங்களால் கத்கத ஸ்வரமுள்ள ஸ்தோத்ரத்தாலும் ஜலத்தாலும், சுத்தமான தளிர், துளஸீ, அருகம்புல் ஆகிய இவைகளைக் கொண்டு செய்யப்படும் பூஜையால் ஸந்தோஷிக்கிறீர். அநேக அங்கங்களுள்ள இந்த யாகத்தாலும் உமக்குப் ப்ரயோஜன மொன்றுமில்லை. எப்பொழுதும் இயற்கையில் ஸகல புருஷார்த்தஸ்வரூபமான பரமானந்த ஸ்வரூபியான உமக்கு இதனால் என்ன ப்ரயோஜனம்? ஆனால் காமத்தை விரும்பிய நாங்கள் உம்மைப் பூஜித்து இஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ள ஸாதனமாக ஆகிறது. மேலும் ஓ பரமபுருஷ! நீர் நிரபேக்ஷரானாலும், ஸாபேக்ஷர் போல் தங்களுடைய க்ஷேமஸாதனத்தை அறியாத பாலர்களிடத்தில் மிகுந்த கருணையுடன் அவர்களால்தான் நன்றாய் ஆராதிக்கப்படாமலிருக்கும் பொழுதும் மோக்ஷமென்ற தம்முடைய மஹிமையை அவர்களுக்குக் கொடுக்கப் போகிறவராய் காணப்படுகிறீர். இந்த ராஜர்ஷியின்

யாகத்தில் பக்தர்களான எங்களுக்கு தர்சனங் கொடுத்ததே வரமாயிற்று. வைராக்யத்தாலுண்டான திவ்ய ஜ்ஞானமாகிய காற்றில் மலங்களற்றவர்களும், உம்முடைய ஸ்வரூபத்தை யொற்றவர்களும், ஆத்மா ராமர்களுமான மஹர்ஷிகளும் உம்முடைய மேலான குணங்களைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமே யல்லாமல் உம்மை நேரில் தர்சிக்க முடியாது. ஆனாலும் நடக்கும் பொழுது, தடுக்குவது, தும்புவது, கொட்டாவி விடுவது முதலிய அவஸ்தைகளில் உம்மை ஸ்மரிக்க முடியாத வர்களான எங்களுக்கு ஜ்வரம், மரணம் ஆகிய தசைகளிலும் ஸகல பாபங் களையும் போக்கக் கூடிய உம்முடைய நாமஸ்மரணம் உண்டாகும் படி அனுக்ரஹிக்க வேண்டும். மேலும் இந்த ராஜரிஷி யானவர் உம்மைப் போன்ற புத்ரன் வேண்டுமென்ற எண்ணமுள்ளவராகி ஸ்வர்க்கம், மோக்ஷம் ஆகிய இவைகளுக்கு அதிபதியான உம்மை ஸேவிக்கிறார். புத்ரனே புருஷார்த்தமென்று நினைத்திருக்கிறார். இது தரித்திரன் கீழானவஸ்துவை அடைய விரும்பி தனத்தையடைந்தாற் போலிருக்கிறது. ஆனால் இது ஆச்சரியமல்ல. இந்த ஸம்ஸாரத்தில் ஒருவராலும் முடியாததும், பார்க்கமுடியாத மார்க்கமுள்ளதுமான உம்முடைய மாயையால் ஜயிக்கப்படாதவன் யார்? அதனால் கவர்ந்து கொள்ளப்படாத பக்தியுள்ளவர் யார்? விஷயங்களாகிய விஷய பிரகிருதி சம்மந்த மில்லாதவன் யார்? எவன் மஹான்களுடைய சரணத்தையுபாஸித்தவனோ, அவன் இவைகளுக்குட் படமாட்டான். அநேக கார்யங்களைச் செய்பவரே ஸ்வல்பமான கார்யத்தை யுத்தேசித்து உம்மை மாந்தர்களான நாங்கள் அழைத்தது தேவராகிய உம்மை அவமதித்ததாக ஆயிற்று. ஸகல ஸ்வரூபியாகையால்

அதனை க்ஷமிக்க வேண்டும்." என்று வாக்ய நடையாக ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டவரும், பாரத வர்ஷத்திற்கு அதிபதியான நாபியினால் நமஸ்கரிக்கப் பட்டவருமான பகவான் கருணையுடன் பின்வருமாறு சொல்லலானார்.

17–19 ஓ மஹர்ஷிகளே, ஸத்யமான வாக்குள்ள நீங்கள் இந்த அரசனுக்கு "என்னைப் போன்ற புத்திரன் பிறக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்ட படியால் நான் ஒப்பற்றவனாகையால் நானே எனக்குச் சமன். ப்ராஹ்மணர்களுக்குட் சிறந்தவர்கள் எனக்கு முகமாகையால் அவர்களுடைய வார்த்தை பொய்யாக ஆகக்கூடாது. ஆனதால் ஆக்னீத்ரருடைய புத்ரராகிய நாபிக்கு நான் புத்ரனாக அவதரித்திருக்கிறேன். (இது அம்சாவதாரம்) என்று மேருதேவி கேட்டுக்கொண்டி ருக்கும் போது நாபிக்கு அனுக்ரஹஞ் செய்து மறைந்தார். இப்படி மஹர்ஷிகளால் பூஜிக்கப்பட்ட பகவான்நாபியின் இஷ்டத்தை நிறைவேற்ற வேண்டி அவருடைய ஸ்திரீயாகிய மேரு தேவியிடத்தில் சுத்தஸத்வமாகிய சரீரத்துடன் அவதரித்தார். இந்த அவதாரத்தில் நைஷ்டிக ப்ரஹ்மசாரிகள், காற்றையே வஸ்த்ரமாகக் கொண்டவர்களான தபஸ்விகள், ஜ்ஞானிகள் ஆகிய இவர்களுடைய தர்மத்தை வெளியிட்டார்.

அத்தியாயம்–4

ரிஷபசரிதம்

பிறந்தது முதல் நன்றாய் ப்ரகாசிக்கின்ற பகவானுடைய லக்ஷணங்களுள்ளவரும், ஸகலப்ராணி களையும் சமமாகப்பார்ப்பது, இந்திரியங்களை அடக்குவது, விஷயங்களில் ஆசைப்படாமலிருப்பது, ஸகல ப்ராணிகளுக்கும் நியந்தாவாக விருப்பது மிகுந்த விபூதியுள்ளவராகவிருப்பது ஆகிய இவைகளால் நாளுக்கு நாள் விருத்தியடைந்த மஹிமையுள்ள வருமான அந்த புத்ர ரத்னத்தை, மந்திரிகளும், ஜனங்களும் ப்ராஹ்மணர்களும், பூமியைப் பரிபாலனம் பண்ணத் தகுந்தவர் என்று நினைத்து. இவரே அரசனாக இருக்கவேண்டுமென்று நினைத்தார்கள். மேலும் அவர்களுடைய மேலானதும், கொண்டாடக் கூடியதுமான தேஹத்தாலும், தேஜஸ்ஸாலும், பலத்தாலும், உத்ஸாஹத்தாலும், அழகினாலும் கீர்த்தியாலும் அவருடைய தகப்பனாராகிய நாபி என்பவர் ரிஷபர் என்று அந்தக் குழந்தைக்கு பெயர் வைத்தார்.

3–7. அவருடைய ராஜ்யகாலத்தில் அந்த வர்ஷத்தில் (தேசத்தில்) இந்திரன் மழை பெய்யாம லிருக்கச் செய்தான். அதனைத் தெரிந்துகொண்ட அந்த ரிஷபதேவர் சிரித்து, தம்முடைய யோகமாயையால் அஜநாபமென்ற தன்னுடைய ராஜ்யம் முழுவதும் மழை பெய்யச் செய்தார். நாபி என்பவர் தமதிஷ்டப் படி நல்ல புத்திரனை அடைந்து மனுஷ்ய ஜன்மத்தை யடைந்தவரான பகவானாகிய புராணபுருஷனை

மாயையால் தம்முடைய புத்ரனென்று நினைத்து, "வத்ஸ! தாத!" என்று ப்ரியமான வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டு மிகுந்த ஸுகத்தை அடைந்தார். பின்பு அந்த நாபியானவர் பட்டணத்திய ஜனங்கள், மந்திரி முதலியவர்கள், தேசத்திய ஜனங்கள் ஆகிய எல்லோரும் ரிஷப தேவரிடத்தில் விசேஷ அனுராக முள்ளவர்களாக இருப்பதைத் தெரிந்துகொண்டு, அவருக்கு பட்டாபிஷேகம் செய்து ப்ராஹ்மணர்களி டத்தில் ஒப்புவித்து, மேருதேவியுடன் பதரிகாச்ரமஞ் சென்று, விக்னங்களின்றி நரநாராயணர் என்ற பகவானை தபஸ்ஸினால் ஆராதித்து சிலகாலஞ் சென்ற பின் ஜீவன் முக்தராக ஆனார். ஓ பரீக்ஷித்தே! அது விஷயமாக இரண்டு ச்லோகங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. அவைகள் பின்வருமாறு. நாபி என்ற அரசன் சுத்தமாகிய கர்மத்தைச் செய்து மஹா விஷ்ணுவை புத்ரனாக அடைந்தார். அவர்செய்த கார்யம் வேறுயாரால் செய்யப்படும். மேலுமவர் ப்ராஹ்மணர்களை பூஜித்து ப்ராஹ்மண பக்தி யுள்ளவராக யிருந்தபடியால் அவருடைய யாகத்தில் மஹர்ஷிகள் யஜ்ஞபதியான மஹாவிஷ்ணுவை அரசனுக்கு காண்பித்தார்கள், அவரைக் காட்டிலும் ப்ராஹ்மண பக்தியுள்ளவர் வேறுயாரிருக்கிறார் ?

8–12. பிறகு அந்த ரிஷபதேவர் தம்முடைய வர்ஷத்தை (தேசத்தை) கர்மபூமியென்று நினைத்து குருகுல வாசம் செய்து குருக்களிடம் விடைபெற்று கிருஹஸ்தர்கள் இம்மாதிரி இருக்கவேண்டும் என்று பிறருக்குத் தெரிவித்து ச்ரௌத கர்மங்களையும், ஸ்மார்த்த கர்மங்களையும் அனுஷ்டித்து, இந்திரனால் கொடுக்கப்பட்ட ஜயந்தி என்பவளிடத்தில் தமக்கு

சமானர்களான நூறு புத்ரர்களை உண்டு பண்ணினார். அவர்களுக்குள் மூத்தவராகிய பரதன் என்பவர் யோகியும் மேலான குணமுள்ளவருமாக இருந்தார். அவருடைய ராஜ்யம் முதல் இந்த வருஷத்திற்கு பாரதவர்ஷமென்று பெயர் வந்தது, அவருடைய பின் பிறந்தவர்களுக்குள் (தும்பிகளுக்குள்) குசாவர்த்தன, இளாவர்த்தன், ப்ரஹ்மாவர்த்தன், ஆர்யாவர்த்தன் மலையகேது, பத்ரஸேனன், இந்திரஸ்ப்ருக், விதர்பன், கீகடன், என்று ஒன்பது பேர்கள் முக்யமானவர்கள், பின்னும் கவி, ஹரி, அந்தரிக்ஷன், ப்ரபுத்தன், பிப்பலாயனன், ஆவிர் ஹோத்ரன் த்ரமீடன், சமஸன், கரபாஜனன் என்ற ஒன்பது பேர்கள் பாகவதர்கள், பாகவத தர்மத்தை காண்பிப்பவர்கள். அவர்களுடைய சரிதத்தை வஸுதேவர், நாரதர் இவர்களுடைய ஸம்வாதமாக பதினோராவது ஸ்கந்தத்தில் சொல்லு வோம் பாக்கியான எண்பத்தோரு பிள்ளைகளும் மிகவும் வணக்கமுள்ளவர்கள். வேதாத்யயனஞ் செய்த வர்கள்; தகப்பனாருடைய உத்தரவின்படி நடப்ப வர்கள். யாகத்தைச் செய்பவர்கள். கர்மாவினால் சுத்தர்கள்; ஜயந்தியின் பிள்ளைகளான அவர்கள் எல்லோரும் யாகம் செய்விப்பது முதலிய ப்ராஹ்மண தர்மத்தை யனுஷ்டித்து வந்தார்கள்.

13–18. பகவான் ரிஷபதேவரென்ற பெயருடன் அவதரித்து தாம் ஸ்வதந்தமற்றவராகவும், தாம் எப்பொழுதும் துக்க ஸம்பந்த மற்றவராயும், ஆனந்த ஸ்வரூபியும், ஈச்வரனுமாக விருந்தும், சம்சாரிபோல கர்மங்களைச் செய்து கொண்டு அந்தந்த காலத்தில் செய்யவேண்டிய தர்மத்தை தாம் அனுஷ்டித்து அதனால் பிறரை அனுஷ்டிக்கச் செய்துகொண்டும்,

சாந்தரும், ப்ராணிகளிடத்தில் ப்ரியமுள்ளவரும், கருணையுள்ளவரும், தர்மம், அர்த்த், காமம், கீர்த்தி, போகம், மோக்ஷம் இவைகளை அனுசரித்து க்ருஹஸ் தாச்ரமத்தை ஜனங்களை சரியாக அனுஷ்டிக்கச் செய்தார். லோகத்தில் பெரியோர்களால் செய்யப் படும் கார்யத்தையே மற்றவர்கள் அனுஷ்டிப்பது வழக்கம். மேலும் அந்த ரிஷபதேவர் ஸகல வேத ரஹஸ்யமான தர்மங்களை தாம் அறிந்திருந்தும், ப்ராஹ்மணர்களைச் கேட்டுக்கொண்டே ஸாமம் முதலிய உபாயங்களால் ராஜ்யபாலனஞ் செய்தார். த்ரவ்யம், தேசம், காலம், வயஸ், ச்ரத்தை, ரித்விக்குகள் பலவகையான தேவதைகளை உத்தேசித்து கர்மங்கள் ஆகிய இவைகளால் விருத்திசெய்யப்பட்ட யஞ்ஞங் களை ஒவ்வொன்றையும் முறைப்படி நூறுதரம் அனுஷ்டித்தார். ரிஷப தேவர் ராஜ்ய பரிபாலனம் செய்யுங்காலத்தில் ஒருவனும் பிறருடைய சொத்தில் கொஞ்சமேனும் ஆசைப்படுகிறதில்லை. ஆகாசத்தில் முளைத்த தாமரை புஷ்பத்தை யாராவது விரும்புவானா? எல்லா ஜனங்களும் அரசனிடத்தில் விசேஷ சிநேகம் வைத்திருந்தார்கள். அந்த ரிஷபதேவர் ஒரு கால் பூமியில் சஞ்சரிக்கும்போது ப்ரஹ்மா வர்த்தமென்ற கேஷத்திரஞ் சென்று, ப்ரஹ்மர்ஷிகள் கூடியிருக்கும் ஸதஸ்ஸில் ப்ரஜைகளெல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கும்போது வணக்கம், ப்ரியம். இவைகளுள்ளவர்களும், ஸாவதானர்களுமான தம்முடைய புத்ரர்களை நோக்கி புத்திபுகட்டும் வ்யாஜமாக பின்வருமாறு சொன்னார்.

அத்தியாயம்–5

மோக்ஷதர்ம நிரூபணம்

"ஓ புத்ரர்களே அமேத்யத்தை புஜிக்கும் பன்றி முதலியவைகளுக்கும், ஸுகதுக்கங்கள் பொதுவாக யிருப்பதால் அந்த விஷயங்களை இந்த தேஹம் அனுபவிக்கத் தக்கதல்ல. சித்தமானது எதனால் சுத்தி அடையுமோ எதனால் அழிவற்ற ப்ரஹ்மஸுகம் உண்டாகிறதோ, அந்த தபஸை அனுஷ்டிக்க வேண்டும். எவர்கள் ஸுகதுக்கங்களில் ஸமபுத்தி யுள்ளவர்களோ, மிகவும் சாந்தர்களோ, கோபமற்றவர் களோ, ஸகல பிராணிகளிடத்திலும் ப்ரீதியுள்ள வர்களோ, ஸாதுக்களோ, அவர்களே மஹான்கள். அந்த மஹான்களை ஸேவிப்பதே முக்திக்கு மார்க்கமாகிறது. ஸ்திரீகளிடத்தில் ஆசையுள்ளவர் களுடைய சேர்க்கையானது ஸம்ஸாரத்திற்குக் காரணமாகிறது. எவர்கள் ஈச்வரனாகிய என்னிடத்தில் ப்ரீதிசெய்வதையே புருஷார்த்தமாக உடையவர்களோ, தேஹத்தைப் போஷிக்கிற விஷயத்தைப் பற்றிய வார்த்தை, ஸ்திரீ, புத்ரன் ஆகிய இவைகளில் ப்ரீதி வைப்பதாகிய ஸம்ஸாரத்தில் ப்ரீதியில்லாதவர்களோ, தேஹத்தை நிர்வஹிக்கும் விஷயத்திலும் ஆசை யில்லாதவர்களோ, அவர்களே மஹான்கள். எப்பொழுது புருஷன், இந்திரியங்களை திருப்தி பண்ணி வைப்பதற்காக கர்மங்களைச் செய்கிறானோ அப்பொழுது, பாபத்தைச் செய்கிறான். முந்திய பாப கர்மத்தாலேயே துக்கத்தைக் கொடுக்கக்கூடிய இந்த சரீரம் உண்டாயிருக்கிறது. அதற்குக் காரணமாகிய

கர்மாவை பின்னும் செய்வது உசிதமல்ல, ஆத்ம தத்துவத்தைத் தெரிந்து கொள்ளுகிற வரையில் அஜ்ஞானத்தால் ஸ்வரூபம் மறைக்கப்பட்டிருக்கிறது. எதுவரையில் கர்மங்களிருக்குமோ அதுவரையில் மனமானது கர்ம ஸ்வபாவமுள்ளதாகயிருக்கும். அதனால் தான் சரீர பந்தம் உண்டாகிறது. அவித்யையினாலே ஆத்மாவானது மறைக்கப்பட்டிருக்கும் பொழுது முன் ஜன்மத்திய கர்மாவானது மனத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளுகிறது. எதுவரையில் ஸ்ரீ வாசுதேவரிடத்தில் ப்ரீதி உண்டாகிறதில்லையோ, அதுவரையில் தேக சம்பந்தம் விடுகிறதில்லை. எப்பொழுது இந்திரிய சேஷ்டையை மித்யை என்று தெரிந்து கொள்ளவில்லையோ, அப்பொழுது ஸ்வரூபஜ்ஞானமற்றதாகி ஸ்தீரீ சுகத்தை ப்ரதானமாயுடைய க்ருஹத்தை அடைந்து பல வகையான தாபங்களை அடைகிறான். புருஷன் ஸ்திரீயுடன் சேர்ந்து மிதுனீபாவத்தை அடைவதால் ஹிருதய க்ரந்தி உண்டாகிறது. அதனால் க்ருஹம், க்ஷேத்ரம், புத்ரன், மித்ரன் ஆகிய இவைகளில் (நான், என்னுடையது) என்ற மோஹம் உண்டாகிறது. கர்மத்தால் த்ருடமான மனதாகிய ஹிருதயக்ரந்தியானது எப்பொழுது குறையுமோ, அப்பொழுது இந்த மிதுனீபாவத்திலிருந்து நிவர்த்தி அடைகிறான். அஹங்காரத்தை ஒழித்து முக்தனாக பரமபதத்தையும் அடைகிறான். மேலும் பரமஹம்ஸனும் குருவுமாகிய என்னை சேவிப்பதாலும் என்னையே நினைத்துக் கொண்டிருப்பதாலும், ஆசையில்லாமல் இருப்பதாலும், சுக துக்கங்களை சஹிப்பதாலும், லோகாந்தரத்திலும் துக்கமிருக்கிறதென்று நினைப்பதாலும், தபஸ்ஸினாலும், காம்ய கர்மங்களை விடுவதாலும், என்னுடைய

கர்மங்களை அனுஷ்டிப்பதாலும், என்னுடைய கதையைச் சொல்வதாலும், என்னையே தேவதையாக நினைத்திருக்கும் சாதுக்களுடைய சங்கத்தாலும், என்னுடைய குணங்களைச் சொல்வதினாலும், விரோத புத்தியில்லாமலிருப்பதாலும் எல்லாவற்றையும் சமமாகப் பார்ப்பதாலும், சமத்தாலும், அத்யாத்ம யோகத்தாலும், ஜனங்களில்லாத இடத்தில் வசிப்பதாலும், ப்ராணன், இந்திரியம், மனது இவைகளை ஜயிப்பதாலும், பரமாத்மாவினிடத்திலிருக்கும் ச்ரத்தையாலும், ப்ரஹ்மசர்யத்தாலும், தவறுதலையாம விருப்பதாலும், வாக்நியமத்தாலும் என்னை ஹிருதயத்தில் பாவனை செய்ததால் ப்ரகாசிக்கும் ஜ்ஞானத்தாலும், விஜ்ஞானத்தாலும், யோகத்தாலும், தைர்யம், ப்ரயத்னம், விவேகம் ஆகிய இவைகளுள்ளவனாகி அஹங்காரமாகிய உபாதியை நிவர்த்தித்துக் கொள்வான். அவித்யையால் ஏற்பட்ட ஹிருதயக்ரந்தியை மேற்சொல்லிய யோகத்தால் நிவர்த்தித்து, சாதனமாகிய யோகத்திலிருந்தும் ஒழிவடைய வேண்டும். என்னுடைய லோகத்தை அடைய விரும்பியவனும், என்னுடைய அனுக்ரஹத்தையே புருஷார்த்தமாய் நினைத்தவனுமாகிய புருஷன், அரசனானாலும், குருவானாலும், புத்ரர்களுக்கும், சிஷ்யர்களுக்கும் இம்மாதிரி புத்தி புகட்ட வேண்டும். கர்ம ஜடர்களான ஜனங்களைக் கர்மத்தையே செய்விக்கக் கூடாது. மனிதன் காம்ய கர்மங்களைச் செய்யும்படி பிறரைச் செய்தால் அவனை சம்ஸார மாகிய கிணற்றில் தள்ளுகிறதாக ஆகிறது. அதனால் என்ன ப்ரயோஜனத்தை அடையப் போகிறான்? எவன் விசேஷ காமனையுள்ளவனாகி விஷயங்களில் ஆசைப்படுகிறானோ, அவன் ச்ரேயஸ்ஸை அடையும்

விஷயத்தில் தவறுதலடைந்தவன், அல்பசுகத்திற்காக ஒருவருக்கொருவர் விரோதமும், முடிவற்ற துக்கமும் நேரிடுகிறது. அதனை அறியவில்லை. இம்மாதிரி கெட்ட புத்தியுள்ளவனும், அவித்யையின் மத்தியிலிருப்ப வனுமான அஜ்ஞனை அதன் விஷயத்தை நன்றாக அறிந்த வித்வானாயிருப்பவன் திரும்பவும் அதையே செய்யும்படிச் சொல்வானா? கெட்ட மார்க்கத்தில் செல்லும் குருடனை அதே மார்க்கமாகச் செல்லும் படி யார்தான் சொல்லுவான்? எவன் சம்ஸாரத்தை அடைந்து கஷ்டப்படும் புருஷனுக்கு பக்தி மார்க்கத்தை உபதேசித்து அந்த பந்தத்தை நிவர்த்திக்கவில்லையோ, அவன் குருவுமல்ல, பந்துவுமல்ல, தகப்பனுமல்ல, தாயுமல்ல, தைவமுமல்ல, பதியுமல்ல, இந்த என்னுடைய சரீரமானது உளஹிக்க முடியாதது, (என்னுடைய இஷ்டப்படி எடுத்துக் கொள்ளப்பட்டது) தர்மத்திற்கு ஆச்ரயமான சுத்த சத்வமே ஹிருதயம், அதர்மத்தை தூரத்தில் தூரத்தி விட்டேன். அதனால் என்னை பெரியோர்கள் ரிஷபனென்று சொல்லு கிறார்கள். நீங்களும் சுத்த ஸத்வ மயமாக அவதரித் தவர்கள், ஆனதால் ஸஹோதரனாகிய பரதனை பிரியத்துடன் அனுஸரியுங்கள். அப்படி செய்வதே என்னை உபாஸித்ததாகும். பிரஜைகளை பரிபாலித் ததாகும். பூதங்களுக்குள் ஸ்தாவரங்கள் மேலானவை, அவைகளைக் காட்டிலும் சேதனமுள்ள ஜங்கமங்கள் மேலானவை. அவைகளிலும் மனிதர்கள் மேலானவர் கள், அவர்களை விட பூதங்கள், பிசாசுகள் முதலிய ப்ரமதகணங்கள் உத்தமர்கள். அவர்களைவிட கந்தர் வர்களும், ஸித்தர்களும், கின்னரர்களும் உயர்ந்தவர்கள். அவர்களைவிட அசுரர்கள் மேலானவர்கள். அவர்களை விட தேவர்கள் மேலானவர்கள். அவர்களிலும்

இந்திரன் முதலியவர்கள் சிறந்தவர்கள் அவர்களைவிட தக்ஷர் முதலிய ப்ரஹ்மபுத்ரர்கள் உயர்ந்தவர்கள். அவர்களில் ருத்ரன் உயர்ந்தவர். அவரைவிட ப்ரஹ்மதேவர் மேலானவர் அந்த ப்ரஹ்மதேவர் என்னையே தைவமாகக் கொண்டவர். எனக்கு ப்ராஹ்மணர்களே தைவம். ஓ ப்ராஹ்மணர்களே! ப்ராஹ்மணர்களுக்கு ஸமமானது ஒன்றுமில்லை. சிரத்தையுடன் ப்ராஹ்மணர்களிடம் மனிதர்களால் ஹோமஞ் செய்யப்பட்டதை எப்படி நான் புஜிக் கிறேனோ, அப்படி அக்னிஹோத்ரத்தில் ஹோமஞ் செய்வதால் திருப்தியடைகிறதில்லை. என்னுடைய புராதனமாகிய வேதமாகிய சரீரமானது ப்ராஹ் மணர்களால் தரிக்கப்பட்டிருக்கிறது. ப்ராஹ்மணர் களிடத்தில் ஸத்வம், சமம், தமம், ஸத்யம், அனுக்ரஹம், பொறுமை, தபஸ், அனுபவம் ஆகிய குணங்களிருக்கின்றன. ஆனதால் அவர்களை விட மேலானது ஒன்றுமில்லை. அனந்தனும், பரனைக் காட்டிலும் பரனும் ஸ்வர்க்கம் மோக்ஷம் ஆகிய இவை களுக்கு அதிபதியுமான என்னாலும் ப்ராஹ்மணர் களுக்கு காரியமொன்றுமில்லை. மற்றவர்களால் அவர்களுக்கென்ன ப்ரயோஜனம்? அவர்கள் என் னிடத்தில் பக்தியுள்ளவர்கள் ஏழைகள். ஓ புத்ரர்களே! ஸகல ப்ராணிகளையும் எனக்கிருப்பிடமாக அடிக்கடி மாத்ஸர்யமில்லாமல் நீங்கள் நினைக்க வேண்டும். அப்படி நினைப்படதே என்னை பூஜிப்பதாகும். மனது, வாக்கு, கண் முதலிய இந்திரியங்கள் ஆகிய இவை களுடைய வ்யாபாரத்தால் என்னை பூஜிப்படதே அவைகளுக்குப் பயன். என்னை ஆராதிக்கமலிருந்தால் காவ பாசத்திலிருந்து விடுதலையடைய முடியாது என்று உபதேசித்தார்.

28–30 ஸ்வபாவத்தில் நல்ல ஆசாரமுள்ளவர் களான புத்ரர்களுக்குப் புத்தி சொல்லும் வ்யாஜமாக, லோகத்திற்கு தர்மத்தை யுபதேசித்த பரமஸுஹிருத் தாகிய ரிஷபதேவர் இந்திரியங்களை அடக்கினவர் களும் காம்ய கர்மங்களை விட்டவர்களுமான மஹரிஷிகளுக்கு பக்தி, ஜ்ஞானம், வைராக்யம் ஆகிய இவைகளுள்ள பரமஹம்ஸ தர்மத்தையுபதேசித்தும், தம்முடைய புத்ரர்களுக்குள் மூத்தவரும் பரமபாகவதரும் பக்தர்களிடத்தில் ப்ரீதியுள்ளவருமான பரதருக்குப் பட்டாபிஷேகஞ் செய்தும் சரீர ஸம்ரக்ஷணைக்கு மாத்ரமுபயோகமான வ்யாபாரங்களுள்ளவராகி, பயித்தியங் கொண்டவன்போல் ஆகாயத்தை வஸ்த்ரமாக வைத்துக் கொண்டவராகி தலையை அவிழ்த்துக் கொண்டு ஆத்மாவிடத்தில் ஆஹவனீயாக்னியை ஆரோபித்துக் கொண்டு ப்ரஹ்மாவர்த்தத்திலிருந்து வெளியில் சென்றார். மேலுமவர் பிறர் தம்மிடத்தில் பேசினாலும் ஜனங்களுடைய நடுவில் ஜடன்போலும் குருடன்போலும், செவிடன்போலும், ஊமைபோலும், பிசாசம் போலும், பயித்யங் கொண்டவன் போலும் அவதூதவேஷந் தரித்து மௌன வ்ரதமுள்ளவராக விருந்தார். பட்டணங்கள், கிராமங்கள், ரத்னம் விளையும் பூமிகள் பயிரிடுவோர்கள் வசிக்குமிடம், புஷ்பதோட்டம் ஸைன்யங்களிருக்குமிடம், பசுக்களி ருக்குமிடம், இடையர்களிருக்குமிடம், யாத்ரைக்காரர் களுடைய கூட்டம் ரிஷிகளுடைய ஆச்ரமம் முதலிய விடங்களில் இவரை துஷ்டர்கள் அதட்டினார்கள். அடித்தார்கள். மூத்திரத்தைப் பெய்தார்கள். எச்சில் துப்பினார்கள். கல்லை எறிந்தார்கள். சாணத் தூள் இவைகளை எறிந்தார்கள். அசுத்தமான கெட்டவார்த்தை களாலும் ஹிம்ஸித்தார்கள். காட்டு யானையானது

காட்டுக் கொசுக்களால் செய்யப்படும் உபத்ரவத்தை எப்படி அறியாததோ அப்படி அந்த ரிஷபதேவர் அந்த ஹிம்ஸைகளை லக்ஷ்யஞ் செய்யாமலேயே பூமியில் தனியே ஸஞ்சரித்தார். மித்யாபூதமான தேஹம்,ஸத்போல் தோன்றுகிறது. அதில் நான், என்னுடையது என்ற அபிமானமற்று ஸ்வப்னத் திலிருப்பதால் அவருடைய மனது விகாரத்தை அடைகிறதில்லை.

31–35 பின்னுமவருடைய கைகள், கால்கள், மார்பு, விஸ்தாரமான தோள்கள், கழுத்து, முகம் அவயங்களுடைய இணைப்பு ஆகிய இவைகள் மிகவும் அழகாகவிருந்தன. இயற்கையில் புன்சிரிப்புள்ள முகமுள்ளவர்; புதிதாக மலர்ந்த தாமரை மலரின் இதழ் போன்றவைகளும், தாபத்தைப் போக்கக்கூடிய கருவிழிகள் உள்ளவைகளுமான கண்களால் பிரகாசிப் பவர். சமமானவைகளும் அழகு பொருந்தியவை களுமான கன்னங்கள், காதுகள், கழுத்துகள், மூக்குகள் ஆகிய இவைகளுள்ளவர். புன்சிரிப்புள்ள முகத்தால் பட்டணத்திய ஸ்திரீகளுடைய மனத்தில் மன்மதனை யுண்டு பண்ணுகிறார்; பின்புறத்தில் பொன்னிற முள்ள ஜடைதொங்குகிறது, அவதூதராக விருப்பதால் அவருடைய சரீரம் அழுக்கடைந்திருந்தது. அதனால் அவர் பிசாசம் முதலிய கிரஹம் பிடித்தவர் போல் காணப்பட்டார். மேலும் அந்த ரிஷபதேவர் இவ்வுலகத்தை யோகத்திற்கு விரோதியென்றும், அதற்குப் பதில்செய்வது வெறுக்கக்கூடிய தென்றும் நினைத்திருந்தார். பின்னுமவர் அஜகரமென்ற வ்ரதத்தை அடைந்து படுத்துக்கொண்டே புஜிக்கிறார்; குடிக்கிறார்; கடித்து புஜிக்கிறார்; மூத்திரம்

பெய்கிறார்; அமேத்யத்தை விடுகிறார். அமேத்யத் தாலேயே அவருடைய தேஹம் முழுவதும் பூசப் பட்டிருந்தது. அவருடைய அந்த அமேத்யவாசனை யால் நல்வாஸனையுள்ள காற்றானது பத்துயோஜனை தூரம் நான்கு திக்குகளையும் வாஸிக்கச் செய்தது, ஒரே இடத்திலிருந்து ப்ராரப்த கர்மத்தை அனுபவிப்பதே ஆஜகரவ்ரதமெனப்படுகிறது. ஆஜகரமென்றால் மலைப்பாம்பு என்று அர்த்தம்) பின்னுமவர் பசுக்கள், மான், காக்கை ஆகிய இவைகளுடைய நடைபோல் நின்றுகொண்டும், உட்கார்ந்து கொண்டும், படுத்துக் கொண்டும், அவைகளுடைய நடைபோன்ற நடை யுள்ளராகி குடித்தார்; மூத்திரம் பெய்தார். இப்படி பலவகையான யோகங்களை அனுஷ்டித்து கைவல் யத்திற்கு அதிபதியான ரிஷபதேவர் எப்பொழுதும் பரமானந்தத்தை அனுபவித்து ஸகல ப்ராணிகளுக்கும் ஆத்மாவாகிய ஸ்ரீ வாஸுதேவரிடம் அபேத பாவனை செய்திருந்தார். அவருக்கு உபாதி சம்பந்தம் கொஞ்சமேனுமில்லை. அவருக்கு தைவச்செயலாக ஸகல ஐச்வர்யங்களும் கிடைத்தன. அவைகளாவன ஆகாயத்தில் சஞ்சரிப்பது, மனம்போல் வேகமாகச் செல்வது, மறைந்து கொள்ளுகிறது, பிறருடைய சரீரத்தில் பிரவேசிப்பது, வெகு தூரத்திலிருப்பதைப் பார்ப்பது, வெகு தூரத்தில் நடப்பதைக் கேட்பது முதலியவை. அவைகளில் ரிஷப தேவர் சந்தோஷப்படவில்லை.

Released by Maran's Dog, Toronto , Canada

அத்தியாயம்–6

தேஹத்தை விடுவதின் முறை

அதனைக்கேட்ட பரீக்ஷித்து சுக மஹாமுனியை நோக்கி "ஓ பகவன்! ஆத்மாராமர்கள், யோகமாகிய அக்னியில் கர்மங்களாகிய விதைகளை வறுத்து முளைக்கச் சக்தியற்றவைகளாகச் செய்து தைவச் செயலாக கிடைத்த ஐசுவர்யங்களும் துக்கத்தைக் கொடுக்கக் கூடியவைகள் என்று அவைகளை விரும்பமாட்டார்கள்" என்றார்.

2–5. அதனைக்கேட்டச் சுகர், ஓ மஹாராஜ! நீர் சொன்னது உண்மையே சிலர் சஞ்சலமாகிய மனத்தை நம்புகிறதில்லை. மிருகங்கள் வேடனை நம்புகிறதில்லையல்லவா? அப்படியே பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. வ்யபிசாரியான ஸ்திரீ தன்னிடத்தில் பார்தா ப்ரீதியுள்ளவனாக விருப்பதைப் பார்த்து ஜாரபுருஷனை வரவழைத்து அவனைக் கொண்டு பர்த்தாவைக் கொல்வது போல், மனதானது புருஷனை வசப்படுத்திக்கொண்டு காமன் அவர்களுடைய தோழர்களான மன்மதன், லோபன், சோகம், மோஹம், பயம் முதலியவைகளுக்கு இடம் கொடுத்து யோகியை யோகத்திலிருந்து நழுவச் செய்கிறது. ஆனதால் மனது சஞ்சல ஸ்வாபவமுள்ளதாகையால் ஒருவிடத்தி லும் ஆசைவைக்கக்கூடாது. ஆசை வைப்பதால் அனேக யோகிகள் வெகுகாலமாக சம்பாதித்த தபஸ்ஸை இழந்தார்கள். ஆனதால் விவேகியாயிருப்பவன் கர்ம பந்தத்தைக் கொடுக்கும் மனத்தை தனக்கு வசப்பட்ட தென்று நினைப்பானா?

Released by Maran's Dog, Toronto , Canada

6–20. பிறகு அந்த ரிஷபதேவர் ஸகலலோக பாவர்களுக்கு அலங்கார பூதராகயிருந்தும் ஜடன் போல அவதூதவேஷம், பாஷை, நடை ஆகிய இவைகளால் பகவத் ப்ரபாவத்தை வெளியிடாதவராக தேஹத்தைவிடும் முறையை யோகிகளுக்குத் தெரியப் படுத்திக் கொண்டு தன்னுடைய சரீராபிமானத்தை விட்டுவிட விரும்பி பரமாத்மாவிடத்தில் தன்னுடைய ஆத்மாவை அபேதமாக மறைவன்னியில் சேர்த்து, விஷயவாசனைகளை யொழித்து, தேஹாபிமானத்தை விட்டு விட்டார். ஆனாலும் அவருடைய தேஹமானது யோகமாயையின் வாஸனையால் அபிமானாபாஸத்தைக் கொண்டு லோகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தது. ஒருகால் கொங்கணம், வங்கம், படகுடகம், தக்ஷணகர்நாடகம் முதலிய தேசங்களுக்கு தைவச் செயலாய் வந்தார். அவ்விடத்தில் குடகமென்ற மலையின் சமீபத்தில் கற்களை வாயில் கவ்விக்கொண்டு அவிழ்ந்த தலைமயிர்களுடன் வஸ்த்ரமில்லாதவராக பயித்தியங் கொண்டவன் போல சஞ்சரித்தார். பிறகு அந்தக்காட்டில் காற்றினால் மூங்கில்கள் ஒன்றோ டொன்று உராய்ந்து அதிலிருந்து காட்டுத்தீ உண்டாயிற்று. அது க்ரமமாக விருத்தியடைந்து, அந்த ரிஷப தேவருடைய சரீரத்துடன் அந்தக் காட்டை எரித்தது. அவருடைய சரீதத்தை கேட்ட கொங்கணம் வங்கம் இவைகளுக்கு அரசனாகிய அர்கத் என்பவர் ரிஷப தேவருடைய சரிதத்தை அப்யஸித்து 'கலியில் அதர்மம் விருத்தி அடையும்பொழுது தைவத்தால் மோஹமடைந்து தர்மமார்க்கத்தை விட்டு கெட்டதான பாஷண்டமார்க்கத்தில் மனுஷ்யர்களை ப்ரவர்த்திக்கச் செய்யப்போகிறான். அதனால் கலியில் மனுஷ்யர்களுக்குள் அதர்மர்களாயிருப்பவர்கள் தேவமாயையினால்

Released by Maran's Dog, Toronto , Canada

புத்திமயக்கமடைந்து, விதி, ஸௌசம், நல் நடத்தை இவைகளைவிட்டு தேவர்களை அலக்ஷ்யம் பண்ணுகிறதாகிய கெட்டவ்ரதங்களை தன்னுடைய இஷ்டப்படி க்ரஹித்துக்கொண்டும் ஸ்நானம் பண்ணாமலிருப்பது, ஆசமனஞ் செய்யாமலிருப்பது, அசுத்தனாக இருப்பது, தலைமயிரை கத்திரித்துக் கொள்வது முதலிய கெட்ட கார்யங்களைச் செய்து கொண்டும் அதர்மத்தை விருத்தி பண்ணும் கலியினால் மாறின புத்தியுள்ளவர்களாகி வேதம் ப்ராஹ்மணர்கள், யாகம், ஸ்ரீ மஹா விஷ்ணு மற்றப் பிராணிகள் இவைகளை பெரும்பாலும் நிந்திப்பார்கள். அதே மார்க்கமானது அந்த பரம்பரையாக அவர் களுடைய இஷ்டப்படி லோகத்தில் பரவி, அதில் ஜனங்கள் நம்பிக்கை அடைந்து நரகத்தை அடை கிறார்கள். இந்த ரிஷபதேவருடைய அவதாரமானது ரஜோகுண முள்ளவர்களுக்கு மோக்ஷமார்க்கத்தை உபதேசிப்பதற்காகவே ஏற்பட்டது. அதற்கு தகுதியான ச்லோகங்களை பெரியோர்கள் கானஞ் செய்கிறார்கள் அவையாவன – ஏழு சமுத்திரங்களுக்குட்பட்ட பூமியின் த்வீபங்களிலும், வர்ஷங்களிலும் இது மிகவும் புண்யகரமானது. அவ்விடத்திலிருக்கும் ஜனங்கள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் மங்களகரமான சரிதங்களையும், அவதாரங்களையும் கானஞ் செய்கிறார்கள். இந்த வம்சமானது கீர்த்தியால் சுத்தமானது. அந்த வம்சத்தில் ப்ரியவ்ரதர் என்பவர் இருந்தார். மேலும் புராண புருஷராகிய ஸ்ரீ மஹா விஷ்ணு அந்த பட்சத்தில் அவதரித்து மோக்ஷத்திற்குக் காரணமாகிய தர்மத்தை அனுஷ்டித்து வந்தார். இந்த ரிஷபதேவரால் அவஸ்துவென்று (வஸ்துவல்லவென்று) தள்ளப்பட்ட ஸித்திகளை யோகியானவன் ஆசைப்படுகிறதுமன்றி

Released by Maran's Dog, Toronto , Canada

அதற்காக ப்ரயத்னமும் செய்கிறான். ஆகையால் உற்பத்தியற்றவரான அந்த பகவானுடைய திக்கை அனுசரிப்பதற்குக்கூட எந்த யோகியால் முடியும்? ஸகல வேதங்களுக்கும், லோகங்களுக்கும், தேவர்களுக்கும், ப்ராஹ்மணர்களுக்கும், பசுக்களும் பரமகுருவாகிய ரிஷபதேவருடைய இந்த சரிதமானது ஸகல பாபத்தையும் போக்கக்கூடியது மிகுந்த க்ஷேமத்தைக் கொடுக்க கூடியது; இதை ச்ரத்தையுடன் எவன் ஒவ்வொரு நாளும் கேட்கிறானோ, பிறருக்குச் சொல்லு கிறானோ, அவனுக்கு பகவானாகிய வாஸுதேவரிடம் நிரந்தரமான பக்தியுண்டாகிறது. கவிகள் அந்த பக்தியில் பலவகையான பாபங்களுள்ள ஸம்ஸார தாபத்தால் பீடிக்கப்படும் ஆத்மாவை ஸ்நானஞ் செய்வித்து மோக்ஷமென்ற புருஷார்த்தங் கிடைத்தும் அதனை ஆதரிக்கிறார்களில்லை. ஏனென்றால் அவர்கள் எல்லாவற்றையும் பகவானுடையதென்றே நினைத்த வர்கள். ஓ பரீக்ஷித்தே! யதுகுலத்திற்கும் உங்களுக்கும் பதியும், குருவும், தைவமும், ப்ரியரும் குலத்திற்கு பதியுமான பகவான் உங்களுக்கு வேலைக்காரருமாக விருக்கட்டும். ஆனாலும் அவர் தம்மை பூஜிப்பவர் களுக்கு முக்தியைக் கொடுக்கிறார். பக்தியோகத்தை ஒருபொழுதும் கொடுக்கிறதில்லை. (பக்தியோகம் மேலானதென்று கருத்து) எப்பொழுதும் அனுபவிக்கப் பட்ட ஆத்ம ஸ்வரூபத்தால் ஆசைகளற்றவருமான எந்தப் பகவான் ச்ரேயஸ்ஸை அடையவேண்டிய விஷயத்தில் தவறுகளடைந்த ஜனங்களுக்கு மிக்கக் கருணையால் நிர்பயமான ஆத்மாவாகிய லோகத்தை யுபதேசித்தாரோ, அந்த ரிஷப தேவருக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்.

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada



Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

பாகம் –1

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்கந்தம் 1 அத்தியாயம் 1 முதல்
ஸ்கந்தம் 3 அத்தியாயம் 19 வரை

Released by Maran's Dog, Toronto , Canada

இஞ்சிக்கொல்லை
R. சிவராம சாஸ்திரிகள்
அவர்களால் 1908ல் மொழி
பெயர்க்கப்பட்டது.

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ராம நாம வங்கியின் ப்ராசாரப் பிரதாப் பிரிவு
ராம மந்திரம் –2, விளாங்கம் தெரு,
சென்னை – 600 033. ☎: 24893736

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்
தமிழ் வசனம்

TITLE	:	SRIMAD BHAGAVATHAM, TAMIL VACHANAM
AUTHOR	:	INZIKOLLAI R. SIVARAMA SASTRIGAL WRITTEN IN 1908
SIZE	:	CROWN OCTAVE
EXTENT	:	2736 PAGES CONSISTING OF SEVEN VOLUMES
PRICE	:	RS.600/ SET
FIRST EDITION	:	1996
SECOND EDITION	:	2004
THIRD EDITION	:	2007

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பகவன் நாம போதேந்திர
ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின்
பாத கமலங்களிலும்

பரஞ்ஜர் மஹாத்மா
ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள்
அவர்களின்
பாத கமலங்களிலும்

சமர்ப்பணம்

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்

புத்தக விலைப்பட்டியல்...

அரியதும், பழையதுமான க்ரந்தங்களையும், நாமறிந்தாராத விஷயங்களையும் வெளியிடும் பணியில்...

ரூ.	
1500	ஸ்ரீமத் பாகவதம் ப்ரதி பத அர்த்தம்
700	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் மூலம் தமிழில் பெரிய எழுத்தில்
600	ஸ்ரீமத் பாகவதம் வசனம் 7 பாகம்
550	ஸ்ரீமத் பாகவதம் மூலம் தமிழில் பெரிய எழுத்தில்
450	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் மூலம் தமிழில்
350	ஸ்ரீ துளஸீ ராமாயணம் மூலமும் வசனமும்
300	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் வசனம்
300	ஞானேஸ்வரி
250	ஸ்ரீமத் பாகவதம் மூலம் தமிழில்
200	நாராயணீயம் ப்ரதிபத அர்த்தம்
200	ஸ்ரீகிருஷ்ண சைதன்யர்
200	கர்க ஸம்ஹிதை
200	நந்த நந்தன்
150	உஜ்ஜ்வல நீலமணி
140	பார்த்தஸாரதி
100	த்வாரிகாதீசன்
100	பகவான் வாசுதேவன்
100	திருப்பாவை உபன்யாஸம்
100	ஸ்ரீபகவன் நாம ரஸோதயம்
100	பக்த துகாராம் திவ்யசரித்திரம்
100	ஸ்ரீ மத் பாகவத கதாம்ருதம்
60	கீதகோவிந்தம் ப்ரதிபத அர்த்தம்
60	ஸ்ரீ ஞானேஸ்வர் திவ்ய சரித்திரம்
60	ஸ்துதி மணிகள்
60	ஸ்ரீமத் பகவத் கீதை ப்ரதி பத அர்த்தம்
60	ராதே/பருந்தாவனராதே!!
60	பாதுகா ஸஹஸ்ரம் -பாசுரங்கள்
60	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்-பாசுரங்கள்
50	நாராயணீயம் -பாசுரங்கள்
50	ஹரி ஸங்கீர்த்தன மாலா
50	தர்ம சாஸ்திரம்
50	ஸ்ரீமத் பாகவத ஸங்க்ரஹம்
40	கோவிந்தபுரம் பஜன பத்ததி
40	தக்ஷிண ஸம்ப்ரதாய பஜன மாலா
40	ஸ்ரீமத் ராமாயணம் ஸங்க்ரஹம்
40	ஏகநாதர் திவ்ய சரித்திரம்
40	ஸ்ரீ ருக்மிணி கல்யாணம்-பாசுரங்கள்
35	தக்ஷிண ஸம்ப்ரதாய கல்யாண மாலா
35	அபங்க முத்தாரம்
35	நாம ஸங்கீர்த்தனாவளி
30	வ்ரஜ ரஸம்
30	ப்ரேம சாம்ராஜ்யம்
30	பக்தி
	பஞ்சகீதை
	ஸ்ரீ க்ருஷ்ண கர்ணாம்ருத ரஸாயனம்
	ஸ்ரீ க்ருஷ்ண கீதாம்ருதம்
	சிவானந்த லஹரீ - ப்ரதிபத அர்த்தம்
	ஸௌந்தர்ய லஹரீ - ப்ரதிபத அர்த்தம்
	ஐயாவாளின் நாம அனுபவங்கள்
	ஸ்ரீ சுந்தர காண்டம்



25	ஸ்ரீ ராம மாதுரீ
25	பக்த ரத்தினங்கள்
25	பாண்டுரங்க லீலைகள் -பாசுரங்கள்
25	கிருஷ்ண கர்ணாம்ருதம் -பாசுரங்கள்
25	தியாகராஜர் அனுபவங்கள்
25	ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் கீர்த்தனைகள்
25	ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம்
25	பக்தை மீரா
25	பக்த ஸாம்ராஜ்யம்
25	நாம ஸாம்ராஜ்யம்
25	ஸ்ரீ லலிதா பஜனை கீர்த்தனைகள்
25	மனாசே ஸ்லோக
25	பகவன் நாம ரஸாயனம்
20	ஸ்ரீ பாத ஸப்ததி
20	ஸ்ரீ யாக்ஞவல்கியர் திவ்ய சரித்திரம்
20	ஸ்ரீ துளஸி தாஸர் திவ்ய சரித்திரம்
20	ஸௌந்தர்யலஹரி - தமிழ் பாடல்கள்
15	ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம்
15	குருவாயூரப்பன் அந்தாதி-பாசுரங்கள்
15	தயாசதகம்-பாசுரங்கள்
15	ஸம்க்ஷேப ராமாயணம் -பாசுரங்கள்
15	ஸ்ரீ ஆண்டாள் கல்யாணம்
15	ஸ்ரீ ராதா மாதவ - பஜனை பத்ததி
15	நவராத்திரி கீர்த்தனைகள்
15	பக்தி ஸந்தேஹ த்வாந்த பாஸ்கரம்
15	ஸ்ரீ ப்ரும்மேந்திராள் திவ்ய சரித்திரம்
15	நந்தன் சரித்திரக் கீர்த்தனைகள்
15	ஸ்ரீ ப்ரும்மேந்திராள் கீர்த்தனைகள்
15	ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் திவ்ய சரித்திரம்
15	திருமாலை
15	**Divine History**
	(Hindi, English, Malayalam, Telugu, Tamil)
	Sri Bodendral
	Sri Sridhara Ayyaval
	Sri Sadguru Swamigal
10	கீத கோவிந்தம்
10	ஹரி பாட்
10	ஸ்ரீ ஸமர்த்த ராமதாஸர் திவ்ய சரித்திரம்
7	திருவரங்கன் திருவந்தாதி- பாசுரங்கள்
7	பரமார்த்த ஸ்துதி- பாசுரங்கள்
7	நாமாயணம்
6	ஸ்ரீ போதேந்திராள் கீர்த்தனைகள்
6	ஸ்ரீ போதேந்திராள் நாம வந்தனம்
6	நாமப்ரபாவம்
5	ஸ்ரீபோதேந்திராள் அஷ்டோத்திரம்
5	ஸ்ரீ ராம நாம மஹிமை
5	அபங்கப்ரவாஹம்
4	ஸ்ருதிகளிலிருந்து ராமநாமத்தின் பெருமை
3	புருஷ ஸூக்தம்
3	ஸ்ரீ ஸூக்தம்

Released by Maran's Dog, Toronto , Canada

100 Nos விநியோகவெளியீடு

75	ஸ்ரீ ராம நாமாவளி
75	ஸ்ரீ நவீன ராமாயணம்
75	ஸாதுக்கள் மஹிமை
75	ப்ராத ஸ்மரண ஸ்தோத்திரம்
100	நெய்க்குடத்தை
100	பாசுரப்படி ராமாயணம்
100	ஸ்ரீ ஸப்த ரிஷி ராமாயணம்
100	ஸ்ரீ சந்திர ஸேகராஷ்டகம்
100	ஸ்ரீபோதேந்திராள்சரித்திரசுருக்கம்

Sanskrit Prasadhams

தேவீ நாமஸ்தோத்திர மஞ்ஜரீ
ஸ்ரீ வாஞ்சிய க்ஷேத்ர மாஹாத்ம்யம்
ஸ்ரீ நடராஜ நாம மஞ்ஜரீ
ஸ்ரீ நடராஜ ஸ்தவ மஞ்ஜரீ
ஸ்ரீ பாலா ஸபர்யா
ஸ்ரீசிவ நாம மஞ்ஜரீ
ஸ்துதி த்ரயீ
ஸ்ரீ மீனாக்ஷீ ஸ்தோத்ரமஞ்ஜரீ
ஸ்ரீஸ்கந்த ஸ்தவ மஞ்ஜரீ
ஸ்ரீதத்தாத்ரேய ஸ்துதிமஞ்ஜரீ
ஸ்ரீமத்த்யார்ஜுனக்ஷேத்ர மாஹாத்ம்யம்
ஸ்ரீவிஷ்ணுஸ்துதிமஞ்ஜரீ
ஆத்ட நாதஸ்துதிமஞ்ஜரீ
ஸ்ரீபகவத்ஸ்துதிமஞ்ஜரீ
அனுமன் நாற்பது
கோபால விம்ஸதி
ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்
ஸ்ரீமத் ராமாயணரஹஸ்யம்
கலியுக தர்ம சாஸ்திரம்
பூஜா கல்பம்

Released by Maran's Dog, Toronto , Canada

கோஸம்ரக்ஷணம்
தினசரிராமாயணம்
தினசரிபாகவதம்
ஆசாரமும் ஆஹாரமும்
பூஜா ராமாயணம்
ஸ்ரீ வாசுதேவ ப்ரம்மம் திவ்ய சரித்திரம்
மன அமைதி வேண்டுமா?
ஜய கல்யாண ஸ்ரீக்தி லஹரீ
நாமவைபவம்
நாமச் சிறப்பு
நாமவிசேஷம்
ஸ்ரீபகவன் நாம மகிமை
ஆயிரம் நாமக் குறிப்புகள்
போதேந்த்ர அமுதம்
ஸ்ரீ ஆலங்குடி சுவாமிகள் திவ்ய சரித்திரம்
ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு ஸஹஸ்ர நாமம்
ஸ்ரீ த்யாகப்ரும்ம அஷ்டோத்திரம்
100 / 100
ஸ்ரீ கீதா ஸாரம் -பாசுரங்கள்
நாரத பக்திசூத்ரம்
நித்ய ஸ்லோக பத்ததி

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவத ரகசியம்

1000 பக்கங்கள்

இந்த நூல் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ ராம நாம வங்கியின்
நாம உதவிகளுக்கு
நாமத்தை ஆஸ்ரயிப்பவர்களுக்கு
ப்ரஸாதமாக வழங்கப்படுகிறது.

ஸ்ரீமத் பாகவதம்

மூலம் தமிழில்

904
பக்கங்கள்
விலை
ரூ.250/-

ஸ்ரீமத் பாகவத விஷயம்

கர்க ஸம்ஹிதை
நந்த நந்தன்
பார்த்தஸாரதி
பகவான் வாசுதேவன்
த்வாரிகாதீசன்
ஸ்துதி மணிகள்
ஸ்ரீமத் பாகவத ஸங்க்ரஹம்
தினசரி பாகவதம்
ஸ்ரீமத் பாகவத கதாம்ருதம்

ஸ்ரீமத் பாகவதம்

பெரிய எழுத்தில்
மூலம் தமிழில்

1064 பக்கங்கள்
விலை ரூ. 550/-

ஸ்ரீமத் பாகவதம்
ப்ரதி பத அர்த்தம்

மூல ஸ்லோகங்கள் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும், பதப்பிரிப்பும்
அர்த்தமும் தமிழில்,
7 பாகங்கள் - 6224பக்கங்கள்
விலை ரூ. 1500/

ஸ்ரீ பகவன் நாம்மா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

ஸ்ரீமத் ராமாயண விஷயம்

ராமாயண ஸங்க்ரஹம்
(SANSKRIT)
தினசரி ராமாயணம்
சுந்தரகாண்டம்

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

மூலம் தமிழில்

899 பக்கங்கள்
விலை ரூ. 450/-

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

தமிழ் வசனம்

7 பாகங்கள்
1322 பக்கங்கள்
விலை ரூ. 300/

ஸ்ரீமத் ராமாயண ரஹஸ்யம்

616 பக்கங்கள்

இந்த நூல் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ ராம நாம வங்கியின்
நாம உதவிகளுக்கு
நாமத்தை
ஆஸ்ரயிப்பவர்களுக்கு
ப்ரஸாதமாக வழங்கப்படுகிறது.

ஸ்ரீ துளஸீ ராமாயணம்

தமிழில் மூலமும் உரையும்

விலை ரூ. 350/-

764 பக்கங்கள்
8 வண்ணப்படங்கள் அடங்கியது

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

நந்தலாவின் எழுத்துக்களில்

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமஹாபாரதம்

ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்

இராமாயண ரஹஸ்யம்

பகவான் வாசுதேவன்

நந்த நந்தன்

பார்த்தஸாரதி

த்வாரிகாதீசன்

கர்கஸம்ஹிதை

உஜ்வல நீலமணி

ஸ்ரீ ஞானேஸ்வர்

பக்த துகாராம்

ஏகநாதர்

ராதே!பருந்தாவன ராதே!!

வ்ரஜ ரஸம்

ப்ரேம சாம்ராஜ்யம்

பக்தி

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

முன்னுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் கலிகாலத்தில் பிறக்கப் போகும் ஜனங்களின் துக்கம், மனக்கவலை, அறியாமை இவற்றைப் போக்கி, அவர்களுக்கு பரம அனுக்ரஹம் செய்யவே, தன் திவ்ய லீலை களை விவரிக்கும் ஸ்ரீ பாகவதத்தின் மூலம், ஸாதுக் களின் காதுக்கு அம்ருதமாயுள்ள தன் புகழை உலகில் பரவச் செய்தார். இந்த அம்ருதத்தை காதுகள் ஆகிய பாத்திரத்தில் வாங்கி அனுபவிக்கும் மனிதன், பக்திக்கும் முக்திக்கும் இடையூறாக இருக்கும் கர்மவாஸனையாகின்ற பந்தம் நீங்கப்பெற்று அவற்றை அடைகிறான் என்று ஸ்ரீபாகவதம் 9வது ஸ்கந்தம் 24வது அத்யாயம் 61,62 ஸ்லோகங்களில் கூறப்பட்டிருக்கிறது. மேலும், ஸ்ரீபாகவதத்தில் கலியில் கலுஷிதமான ஜீவன்களுக்கு ஏற்ற பகவன் நாம கீர்த்தனம், பகவானிடம் உறவு கொண்டுள்ள ஸாதுக்களின் ஸங்கம், க்ருஷ்ண பக்தியை வளர்க்கும் கதாச்ரவணம் இவற்றின் மஹிமையே கூறப்பட்டு இருக்கிறது.

வியாசர் ஸகல ஸாஸ்திரங்களையும் வெளியிட்டும், மன நிம்மதியின்றி எல்லா ஸாஸ்த்ரங்களின் ஸாரமாக பகவத் குண கீர்த்தன பிரதானமான ஸ்ரீபாகவதத்தை வெளியிட்டார். அதன் பின்னரே அவர் நிம்மதியடைந்தார். இதில் வேதோபனிஷத் ஸாரமே நிரம்பியுள்ளது.

Released by Maran's Dog, Toronto , Canada

பாகவதமே பகவான். பகவானே பாகவதம். ஸ்ரீக்ருஷ்ணன் தன் அவதார கார்யம் முடிந்தவுடன் பாகவதத்திலே நுழைந்து விட்டான். பாகவதத்தில் நுழைந்த பகவானை அதை படிப்பதாலேயே பார்க்க முடியும்.

இந்த பாகவதாம்ருதம் யாவருக்கும் எளிதில் கிடைக்கும்படி ஸ்ரீ பாகவத்தின் பாவ அர்த்ததுடன் கூடிய இந்த தமிழாக்கத்தை வெளியிட்டிருக் கிறோம். யாவரும் படித்து அனுபவித்து ஸ்ரீகிருஷ்ண க்ருபைக்கு பாத்திரர்கள் ஆகும்படி பிரார்த்திக் கிறோம்.

நாவுண்டு நீயுண்டு நாமம் தரித்து ஒத
பாவுண்டு தெஞ்சே பயமுண்டோ
பூவுண்டு வண்டு உறங்கும் சோலை மதில் அரங்கத்தே
உலகையுண்டு உறங்குவான் ஒருவனுண்டு.

இங்ஙணம்

"ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்"

ஸ்ரீமத் பாகவதம்-தமிழ் வசனம்

பாகம்–1

பொருளடக்கம்

		பக்கம்
முன்னுரை		1
	ஸ்கந்தம் –1	
1.	சௌனக ப்ரச்னம்	67
2.	ஸூதர் ப்ரத்யுத்தரம்	84
3.	பகவதவதாரங்கள்	94
4.	வியாசர் கவலை அடைந்தது	105
5.	வியாசருக்கு நாரதர் உபதேசம்	111
6.	நாரதருடைய முன் ஜன்மம்	123
7.	அர்ஜுனன் அச்வஸ்த்தாமாவை சிக்ஷித்தது	131
8.	பகவானை குந்தி ஸ்தோத்திரம் செய்தது	144
9.	பீஷ்மர் தர்மம் உரைத்தது	154
10.	ஸ்ரீகிருஷ்ணன் துவாரகை சென்றது	165
11.	துவாரகா வாசிகள் பகவானை உபசரித்தது	172
12.	பரீக்ஷித்தின் உற்பத்தி	181
13.	த்ருதராஷ்ட்ரர் வெளியில் சென்றது	188
14.	தர்மபுத்திரருக்கு நேர்ந்த அபசகுனங்கள்	199
15.	தர்மபுத்திரர் பரலோகம் சென்றது	206
16.	பரீக்ஷித் தர்மத்தைத் கண்டது	216
17.	பரீக்ஷித் மஹாராஜன் கலியை நிக்ரஹித்தது	223
18.	பரீக்ஷித்துக்கு நேர்ந்த ப்ராஹ்மண சாபம்	230
19.	கங்கை கரைக்கு சுகர் வந்தது	238

ஸ்கந்தம் –2

		பக்கம்
1.	விராட்புருஷனுடைய அவயவங்கள்	245
2.	பகவானிடத்தில் மனத்தை செலுத்தும் வகை	256
3.	பகவத் குணங்களின் மேன்மை	269
4.	பரீக்ஷித் ஜகத் சிருஷ்டியைப் பற்றி கேட்டது	274
5.	ஜகத்சிருஷ்டி	279
6.	விராட் புருஷனுடைய விபூதிகள்	288
7.	பகவானுடைய லீலாவதாரம்	297
8.	பரீக்ஷித்தின் கேள்வி	313
9.	சுகருடைய மறுமொழி	318
10.	தத்துவங்களின் உற்பத்தி உரைத்தது	328

ஸ்கந்தம்–3

1.	விதுரருக்கும் உத்தவருக்கும் சம்வாதம்	338
2.	உத்தவர் ஸ்ரீ கிருஷ்ண சரிதத்தை வர்ணித்தது	348
3.	ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதங்கள்.	355
4.	விதுரர் மைத்ரேயரைச் சந்தித்தது	360
5.	மைத்ரேயருக்கும் விதுரருக்கும் ஸம்வாதம்	366
6.	விராட் ஸிருஷ்டி	375
7.	விதுரருடைய பிரச்னங்கள்	381
8.	ப்ரஹ்மதேவருடைய உற்பத்தி	388
9.	ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ப்ரஹ்மதேவர் ஸ்தோத்திரஞ்	395
10.	பத்து வகையான சர்க்கங்கள்	405
11.	காலத்தின் ஸ்வரூபம்	410
12.	ஸனகர் முதலியவர்களுடைய ஸிருஷ்டி	417
13.	வராஹாவதாரம்	424
14.	திதி தேவி கர்ப்பத்தை அடைந்தது	433
15.	ஜய விஜயர்களுடைய சாபம்	442
16.	ஜய விஜயர்களுக்கு அனுக்கிரகம்	455
17.	திதிக்குப் புத்திரர்கள் பிறந்தது	462
18.	யக்ஞவராஹருக்கும் ஹிரண்யாக்ஷனுக்கும் யுத்தம்	467
19.	ஹிரண்யாக்ஷவதம்	472

ஸ்ரீமத் பாகவதம்

முன்னுரை

இது ஸ்ரீ பகவானுடைய அற்புத லீலைகளையும் அனந்த கல்யாண குணங்களையும் முக்கியமாய் வர்ணிக்கும் சுகருக்கு இது வ்யாச மஹர்ஷியால் சுகருக் கு உபதேசிக்கப் பட்டது, ஸ்ரீ சுகர் பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சொன்னார், அப்பொழுது சூதர் அவ்விட மிருந்து இக்கதையை ஸ்ரீ சுகபகவானின் அனுமதியின் பேரில் தெரிந்து கொண்டார். பிறகு அவர் நைமி சாரண்யத்தில் வசிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்குச் சொன்னார்.

ஸ்ரீமத் பாகவதம் என்பது யாது?

ஸ்ரீமத் பாகவதம் என்ற புராணம் எல்லா வற்றிலும் மேலானது (1) ஸகல உபநிஷத்துக் களால் நிரூபிக்கப்படும் பரமாத்மா இதனால் வர்ணிக்கப்பட்டிருக்கிறார். (2) வ்யாஸ மஹர்ஷியானவர் விஸ்தாரமான வேதங்களை பிரித்தும் பாரதம் முதலிய இதிஹாசங்களைச் செய்தும் தனது மனது ப்ரஸன்னமாகாததால் பகவானுடைய குணங்களையே முக்கியமாக வர்ணிக்க வேண்டும் என்று இதைச் செய்தார். (3) கீதா, ஸஹஸ்ரநாம, ராமாயண, இந்த சப்தங்கள் தனியே உச்சரிக்கப்பட்டாலும், அவை

முறையே பகவத்கீதை, விஷ்ணு சகஸ்ரநாமம், ஸ்ரீவால்மீகி ராமாயணம் என்பவற்றையே குறிப்பிடுதல் போல பாகவதம் என்ற சப்தமும் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் குணத்தைச் சொல்லும் விஷ்ணு பாகவதத்தையே காட்டுகிறது.(4) மேலும் இது ஸகல லோகங்களாலும் நமஸ்கரிக்கப்பட்ட பாதங்கள் உள்ள ஸ்ரீசுகமஹர்ஷியாலும் அத்யயனம் செய்யப்பட்டது. (5) இது மோக்ஷத்தை விரும்பிய பரீக்ஷித்து மஹாராஜனுக்கு சுகமஹர்ஷியால் மோக்ஷசாஸ்திரம் என்று உபதேசிக்கப் பட்டுள்ளது.

ஆட்சேபம்: "ஹேமாத்ரி என்னும் பெயருள்ள ஒரு ப்ரபுவினுடைய அரண்மனை வித்வான்களின் முக்கியரான போப தேவர் என்ற பண்டிதர் இருந்தார். அவர் கோபால பக்தனாக இருந்த அந்தப் ப்ரபுவை ஸந்தோஷப்படுத்துவதற்காக அவருடைய நியமனப்படி இந்தப் புராணத்தை எழுதி அரசனிடம் கொடுத்தார். அரசன் அதை முழுதும் மற்ற பண்டிதர்களுடன் பரிசோதித்து அதில் உள்ள பதச்சேர்க்கை முதலியவைகளால் ஆச்சர்யப்பட்டு அதனை உலகில் பரவச்செய்ய விரும்பி அதனை அனேகம் பிரதிகள் எழுதுவித்து பண்டிதர்களைக் கொண்டு வ்யாக்யானமும் செய்து பரவச்செய்தார்" என்ற ஒரு கதையை பெரியோர்களால் சொல்லக்கேட்டு இருக்கிறோம்; அப்படியிருக்க வ்யாஸர் செய்தார் என்பது பொருந்துமா ? என்றால்':–

ஸமாதானம்: இந்த விஷ்ணுபாகவதம் போப தேவர் செய்ததன்று. ஹேமாத்ரி என்ற ப்ரபு ஒரு

நாள் சபையில் வித்வான்களை நோக்கி," இரண்டு முகூர்த்தங்களில் பாகவதத்தின் அத்யாயச் சுருக்கங்களை ச்லோகமாகச் சொல்ல உங்களில் யார் சக்தியுள்ளவர்" என்று கேட்டார். அப் பொழுது போபதேவர் என்ற பண்டிதர் நாளைய தினம் சொல்கிறேன் என்றார். மறுநாள் பாகவதாத்யாயஸாரம் என்ற கதானு க்ரமணிகையை செய்து அந்த ப்ரபுவிடம் கொடுத்தார்.

அதன் முதல் ச்லோகம் பின்வருமாறு:" வித்வானாகிற போபதேவரால் மந்திரியாகிய ஹேமாத்ரியின் திருப்திக்காக இதில் ஸ்ரீமத் பாகவதத்தின் அத்யாய ஸாரம் நிரூபிக்கப் படுகின்றது." இதனால் ப்ரபு திருப்தி அடையா மலிருந்து அவருடைய நியமனப்படி பக்தி முக்தாபலம், பக்திலஹரி என்ற இரண்டு பக்தி நிரந்தங்களைச் செய்தார். அதனால் ப்ரபு பண்டிதரை மிகவும் கௌரவப்படுத்தினார்.

தவிர போபதேவர் செய்த க்ரந்தங்களின் விவரமானது பக்திமுத்தாபலம் என்னும் க்ரந்த த்தின் வியாக்யானத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதாவது ஸாஸ்திரங்களை படித்த வர்களுக்குள் சிறந்தவரான போப தேவரால் வ்யாகரணவிஷயமாக 10 க்ரந்தங்களும் மனிதர் களின் வைத்ய விஷயமாக 15 க்ரந்தங்களும் 16 வ்யாக்யானங்களும் ஸாஹித்ய விஷயமாக 3 க்ரந் தங்களும் செய்யப்பட்டன. அவைகள் யாவும் ஸல்லோராலும் கொண்டாடத்தக்கவைகளே. தவிரவும் இந்த போபதேவர் ஸ்ரீமத் பாகவத

க்ரந்தத்தை 22 தடவை படித்தார் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அவரால் வேத வ்யாஸ ஸ்தோத்திரமும் ஸ்லோகமாக செய்யப் பட்டு இருக்கிறது. மேற்காட்டிய காரணங் களால் முன்னே சொன்ன ஆக்ஷேபத்துக்கு இடமே இல்லை. தவிரவும் ஸ்ரீமத் பாகவதத்தின் முதல் ச்லோகத்தின் வ்யாக்யானத்தில் ஸ்ரீதரா சார்யாள் அவர்கள் "பாகவதம் என்பது வேறு என்று சந்தேகப்படக்கூடாது" என்பதாகச் சொல்லி இருக்கிறார்.

ஆட்சேபம்: ஸ்ரீமத் பாகவதம் வ்யாசரால் செய்யப்பட்டது என்பது முற்றிலும் பொருந்தாது. அந்த மஹர்ஷியினால் செய்யப்பட்ட மஹா பாரதம், ஸ்காந்தம், விஷ்ணு புராணம் முதலிய கிரந்தங்கள் எளிதில் படிக்கக்கூடியவை களாகவும் எளிதில் அர்த்தம் செய்து கொள்ள க்கூடியவைகளாகவும் இருக்கின்றன. இந்த பாகவதத்திலோ மேற்காட்டியவைகள் முற்றிலும் மாறிஇருக்கின்றன. ஒருவரால் செய்யப்பட்ட க்ரந்தங்களில் இவ்வளவு மாறுதல்கள் இருக்க நியாயமில்லை. ஆகையால் இதன் கர்த்தா வ்யாஸர் அல்லர் என்பதேயாம்.

சமாதானம்: சொல்லிய ஆக்ஷேபம் சரியானதே. ஆனாலும், ஸ்ரீவ்யாஸ பகவான் ஸ்ரீ நாராயணனுடைய அவதாரம். அவர் வேத–ராசியை ஜனங்கள் அத்யயனம் செய்ய முடியாமல் புத்திக் குறைவுள்ளவர்களாக இருக்கும் காலத்தில் அக்குறையை நீக்கு வதற்காக வேதங்களை நான்கு சாகைகளாகப்

பிரித்தார். அவற்றைப் படிப்பதற்கும் கேட்பதற்கும் அதிகாரம் இல்லாத ஸ்திரீகள், சூத்ரர்கள் இவர்களுக்காக மஹாபாரதம், இதிஹாஸம் முதலியவைகளை எளிதில் அர்த்தமாகும்படி எளிய நடையில் எழுதி வெளியிட்டார். அப்படியே வேதார்த்தத்தை பகவத்கீதை, ப்ரம்ஹஸூத்திரம் இவை களால் வெளியிட்டார். இப்படி மந்தாதிகாரிகளை உத்தேசித்து எளியவைகளைச் செய்தார். உத்தமாதி காரியான வித்வான்களுக்கு உபயோகப்படும்படி ஸகல வேதங்களால் நிரூபிக்கப்படும் பரமாத்மா வை கடினமான சந்தர்ப்பத்தால் வர்ணித்தார். ஆகையால் அதிகாரி பேதத்தால் நடையின் பேதம் ஏற்பட்டதே ஒழிய கர்த்தாவின் பேதத்தால் ஏற்பட்டதல்ல.

ரகுவம்சம், மேகசந்தேசம், நளோதயம், ஹரிச்சந்திரோபாக்யானம், நளோபாக்யானம் இவைகள் மஹா கவியான காளிதாஸரால் செய்ய ப்பட்ட கிரந்தங்கள். இவைகளின் பதங்கள், அவைகளின் சேர்க்கை, விருத்தி, பாகம் முதலியவைகள் வெவ்வேறாக காணப்படுகின்றன, அதனால் இவைகளை காளிதாஸர் எழுதவில்லை எனச் சொல்லக்கூடுமா?

மேலும், ஆத்மபோதம், ஸௌந்தர்யலஹரி இவைகள் ஸ்ரீமத் பகவத்பாதர்களால் செய்யப் பட்டவைகளானாலும், ஒன்றுக்கொன்று மேற்காட்டிய விஷயங்களில் மாறுபட்டுள்ளவைகளாக இருக்கின்றன. ஆகையால் ஸர்வக்ஞர்களாயும் பகவானுடைய அவதார பூதராயுமான வ்யாஸ மஹர்ஷியினுடைய வாக்கானது கங்காப் பிரவாஹம்

போலத் தடையற்றது.

ஆட்சேபம்: பாகவதம் என்பது தேவீபாகவதமே ஒழிய வ்யாஸ மஹர்ஷியால் செய்யப்பட்டது அல்ல. ஏனென்றால் "ஸ்ரீமத் பாகவதத்தை எழுதி ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்தில் வைத்துத் தானஞ்செய்பவருக்கு மோக்ஷம் கிடைக்கும்" மத்ஸ்ய புராணம். இதே விஷயத்தை ஸ்ரீ தரா சார்யாள் முதலியவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பற்றி கொஞ்சம் யோசிப்போம். ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்துக்கும் ஸ்ரீமத் பாகவதத் திற்கும் என்ன சம்பந்தம். ஸ்ரீமகாவிஷ்ணுவுக்கு கருடன் வாகனம் என்று பிரசித்தமே தவிர, சிங்கம் வாகனம் என்பது ஓர் இடத்திலும் சொல்லப்படவில்லை. வேறு வாகனமிருப்பதாகவும் தெரியவில்லை; பகவானே நரஸிம்ஹாவதாரஞ் செய்தவராகையால் ஸிம்மம் என்று சொல்லி இருக்கிறதென்று யோசிப்போமானால் பரமாத் மாவின் ஸ்வரூபமாகிய ஸிம்மத்தின் மீது அவரை நினைப்பிக்கும் க்ரந்தத்தை வைத்து தானஞ்செய்வது நியாயமாகுமா? ஆகையால் தேவீபாகவதம் என்று சொல்வதே உக்தமம். ஸிம்மம் ஸ்ரீதேவியின் வாகனமாகையால், அதில் வைத்துத் தானஞ் செய்வது மோக்ஷத்தைக் கொடுக்கும் என்பது பொருந்தும்.

ஸமாதானம்: முன்னே காட்டியுள்ள ஆக்ஷேபம் முற்றிலும் பொருந்தாது. ஸகல ஸ்வரூபியான ஸ்ரீ பகவானுக்கு, ஆஞ்சநேயர், குதிரை, யானை இவைகள் வாகனமாக இருக்கின்றன. இப்பொழுது தேவாலயங்களில் உத்ஸவ காலத்தில்

மேற்காட்டிய வாகனங்களில் பகவானை அலங்கரிப்பது வழக்கமாக இருந்துவருகிறது. "விஷ்ணுவின் வாகனங்களைச் சொல்கிறோம்: முதல்நாள் ஹம்ஸம், இரண்டாம் நாள் ஸிம்மம், முன்றாம் நாள் ஆஞ்சநேயர், நான்காம் நாள் ஆதிசேஷன், ஐந்தாம் நாள் கருடன், ஆறாம் நாள் யானை, ஏழாம் நாள் ரதம், எட்டாம் நாள் குதிரை, ஒன்பதாம் நாள் பல்லக்கு, பத்தாம் நாள் புஷ்பகம்" வைகானஸ தந்திரம், – தெய்வீக யக்ஞாதிகாரம், உத்ஸவ படலம்."பகவான் உத்ஸவ தினங்களில் ஹம்ஸம், ஸிம்மம், ஹனுமான், ஆதிசேஷன், கருடன், யானை, ரதம், குதிரை, பல்லக்கு, புஷ்ப மண்டபம் ஆகிய வாஹனங்களில் முறையே வீற்றிருந்து அர்ச்சாவதாரத்தின் மஹிமையை காண்பிக்கிறார்; அதிகாரிகை இதே விஷயம் வைசம்பாயன காரிகையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் பகவானுடைய அனந்த கல்யாண குணங்களை வர்ணித்து இருக்கும் ஸ்ரீமத் பாகவதம் ஸ்ரீமந் நாராயண ஸ்வரூபமே தவிர வேறில்லை. அதை ஸிம்ஹாஸனத்தில் வைத்து தானம் செய்வதில் கொஞ்சமேனும் ந்யாய விரோதமில்லை; 'ரிஷியின் அம்சம் இல்லாதவன் காவியம் எழுதமாட்டான்; விஷ்ணுவின் அம்சம் இல்லாதவன் அரசனாகிறதில்லை' என்றபடி அரசன், விஷ்ணுவின் அம்சம் உள்ள வனாகையால் ஸிம்ஹாஸனத்துக்குரியவனாகிறான். அப்படி இருக்க பகவானுக்கு ஸிம்ஹாஸனம் உண்டென்று ஏன் சொல்லக்கூடாது? ஹேமாத்ரி முதலிய க்ரந்தங்களில் தானப் பிரகரணத்தில் ரோகிகளின் வ்யாதி நிவர்த்திக்காக, அந்தந்த வ்யாதிக்குத்

தக்கபடி ஒரே தேவதையை அநேக வாகனங்களில் பூஜித்து தானம்செய்யும்படி சொல்லப் பட்டிருக்கிறது. அப்படிப்போல் ஸம்ஸார வ்யாதியால் உபத்திரவம் அடைந்தவனுக்கு அதன் நிவர்த்திக்காக இம்மாதிரியான தானம் பிராய சித்தமாகச் சொல்லப்பட்டது. தேவீ பாகவதம் முதலிய சக்தியை நிரூபிக்கும் க்ரந்தங்களில் தேவிக்கு ஸிம்மவாஹனம் என்று சொல்லப்பட்டு இருந்தாலும் ஸிம்மம் ஸ்ரீதேவியின் வாகனமே ஒழிய பகவானுடையதல்ல, என்று சொல்ல முடியாது. ஏனென்றால் ஸ்ரீதேவி மஹாவிஷ்ணுக்கு பத்னியாகையால் தான் பர்த்தாவினுடைய வாகனங்களில் தனதிஷ்டப்படி ஒருவேளை கருடன்மீதும், ஒருகால் ஸிம்மத்தின்மீதும் பின்னர் யானைமீதும் ஏறி ஸஞ்சரிக்கலாமே ஒழிய அவருக்குச் சொந்தமான வாகனம் இன்னதென்று கல்பிப்பது பொருந்தாது. வீடு, தோட்டம், வயல், பணம், வேலைக்காரர்கள், வேலைக்காரிகள், வாகனம், பசு, ஆபரணம், கடன் இவைகளில் பர்த்தாவுக்கு அதிகாரமே ஒழிய பத்னிக்கு அதிகாரம் இல்லையென்று மனுஸ்மிருதி முதலிய வைகள் சொல்லுகின்றன. ஸ்திரீ ஒருபொழுதும் ஸ்வாதந்திரயத்தையடையத்தக்கவளல்ல. புருஷன் உடைய வாகனங்களில் அவர்களுடைய பத்னி ஏறினதால் அவைகள் அவர்களுடையதாகி விடுமா? அப்படி உலகத்தில் வழக்கமும் இல்லை.

ஆட்சேபம்: ஸ்ரீ வ்யாஸ மஹர்ஷியானவர் இந்தப் பாகவத சாஸ்திரம் எல்லா உபநிஷத்துக்களுக்கு ஸமமானது என்று காட்டுவதற்காகவே ஸகல

வேதார்த்தங்களைச் ஸ்லோக ரூபமாகச் செய்தார். சில இடங்களில் வேதத்தில் உள்ளபதச் சேர்க்கையே காட்டி இருக்கிறார். வேதத்தின் அர்த்தம் அறியாமலேயே சம்பிரதாயப்படி படிப்பதால் மேலான பலன் கிடைப்பது போல் வேதத்திற்குச் சமமான ஸ்ரீமத்பாகவத கிரந்தத்தை தானஞ் செய்வதாலும் மோக்ஷம் கிடைக்கும் என்று சொல்லப்பட்டது. இதனால் புத்தகதானத்திற்கே இவ்வளவு பலன் கிடைக்குமாகில், குருமுகமாக சாஸ்த்ரமுறைப்படி இதைத் தெரிந்துகொண்டவனுக்கு முக்தி கிடைப்பது நிச்சயம் என்று பொருள். மோக்ஷத்தை விரும்பியவர்களும் இடையூராகிய பாபத்தை நிவர்த்தித்துக் கொள்ள முடியும். அதனால் பாகவத தானத்தால் மோக்ஷம் கிடைக்குமென்று வியாசமஹர்ஷி சொன்னார். "புத்தியள்ளவன் கலியுகத்தில் தானத்தாலேயே பாபத்தை நிவர்த்தித்துக் கொள்ளவேண்டும்"–விஷ்ணு ஸ்மிருதி. "மூவுலகத்திலும் தானத்தைவிட மேலானது ஒன்றுமில்லை. தானத்தால் ஸ்வர்க்கம், லக்ஷ்மி, சத்ருஜயம், வித்யை, ஸ்திரீகள், வ்யாதிநிவர்த்தி ஆகியவைகள் கிடைக்கும். —ஸௌர புராணம். இவ்வுலகத்திலும், பரலோகத்திலும் தானமே முக்கியமான க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது. இதுவே மோக்ஷத்துக்கு ஸாதனம் என்று வேதம் சொல்லுகிறது. ப்ரஹ்ம கைவர்த்த புராணம். க்ருதயுகத்தில் தபஸும், த்ரேதா யுகத்தில் ஞானமும், துவாபர யுகத்தில் யக்ஞமும், கலியுகத்தில் தானமும் க்ஷேமத்தைக் கொடுக்கும் —மனுஸ்மிருதி. ஆகையால் தானமே மேலானது —ச்ருதி. "ஸ்ரீகிருஷ்ண பகவான்,

அர்ஜுனனுடைய வார்த்தையை கேட்டு தர்ம புத்திரரை தமது கையால் தடவிச் சொன்னதாவது, ஓ அரசனே ப்ருஹ்ம ஹத்தியை, கள் குடிப்பது, திருடுவது, ஆசார்ய பத்னியைப் புணர்வது முதலிய பாபங்கள் தானத்தாலேயே நிவர்த்தி யாகின்றன. புத்திரன், பணம், புண்ணியம் முதலியவைகள் தானத்தாலேயே கிடைக்கின்றன —ஸ்காந்தம்.

ஆட்சேபம்: பாகவதத்திற்கு வ்யாக்யானம் செய்த ஸ்ரீதராசார்யார் முதலானவர்கள் முதல் ஸ்லோகத்துக்கு வ்யாக்யானம் செய்யும்பொழுது பாகவதலக்ஷணமாகக் காட்டிய வசனங்கள் பின் வருமாறு கண்டுகொள்க.

எந்தக் க்ரந்தத்தில் காயத்ரி மூலமாக தர்ம விஸ்தாரம் வர்ணிக்கப்பட்டிருக்கிறதோ விருத்ரா ஸுரனின் கதை எதில் இருக்கிறதோ அந்த 18000 க்ரந்தங்களுள்ளதே பாகவத புராணம் என்று சொல்லப்பட்டது. —மத்ஸ்ய புராணம். எதில் ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யை விருத்ராஸுர வதம் 18000 க்ரந்தங்கள் 12 ஸ்கந்தங்கள் ஆகிய இவைகள் இருக்கின்றனவோ எது காயத்ரியால் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறதோ அதை பாகவதம் என்று சொல்லுகிறார்கள் —ஸ்காந்தம். ஓ அம்பரீஷா! ஸம்ஸார பந்தம் நிவர்த்தியாக வேண்டுமானால் சுகரால் சொல்லப்பட்ட பாகவதத்தை பிறர் சொல்லக்கேட்கவேண்டும். தானாகவாவது படிக்க வேண்டும்—பத்மபுராணம். இது ப்ருஹ்ம ஸூத்ரங்களுடைய அர்த்தம்; மஹாபாரதத்தின் உண்மையான அர்த்தம் காயத்ரீ மந்திரத்துக்கு

பாஷ்யம். புராணங்களுடைய ஸாரம் வேதத்தின் அர்த்தங்களால் நிறைந்தது. 12 ஸ்கந்தங்கள் உள்ளது; 100 விச்சேதமுள்ளது, 18000 க்ரந்தங்கள் உள்ளது; பாகவதம் என்ற பெயருள்ளது— கருட புராணம்.

இதில் சொல்லியுள்ள லட்சணங்கள் யாவும் தேவீ பாகவதத்தில் பொருந்தி இருக்கின்றனவே ஒழிய விஷ்ணு பாகவதத்தில் பொருந்தியவைகளாக இல்லை. மேலும் மஹா மாயா ரூபியான சக்தியின் மஹிமையால் மஹாவிஷ்ணு ஹயக்ரீவர். ஆனார். தேவீ பாகவதம் ஸ்கந்தம் 1. அத்யாயம் 5, ஹயக்ரீவபரமாத்மா அகஸ்தியமஹர்ஷிக்கு உபதேசித்த தேவீ விஷயமான க்ரந்தங்களுக்கு ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யையென்று பெயர். அந்த வித்யை விஷ்ணுபாகவதத்திலாவது, மற்ற புராணங்களிலாவது சொல்லப்படாததானாலும், தேவீபாகவதமே பாகவதமென்பதற்கு அர்த்தம்.

ஸமாதானம்: பாகவதம் என்றால் விஷ்ணு பாகவதமென்றே அர்த்தம் கொள்ளவேண்டும். ஹயக்கிரீவ ப்ருஹ்மவித்யை என்றால் ஹயக்ரீவ பரப்ருஹ்மத்துக்கு மற்றவர் சொன்ன வித்தை என்றாவது ஹயக்ரீவர் பிறருக்குச் சொன்ன வித்தை என்றாவது அர்த்தம் செய்யக்கூடாது. ஹயக்ரீவர் பிறரிடம் உபதேசம் பெற்றார் என்றாவது பிறர்க்கு உபதேசித்தார் என்றாவது ஒரு க்ரந்தத்திலும் சொல்லவில்லை. பிரளய காலத்தில் எல்லா வித்தையும் காணாமல் கொண்டு

வந்தார், ஆதலால் ஹயக்கிரீவரால் கொண்டு வரப்பட்ட வித்யை என்றே அர்த்தம் செய்ய வேண்டும். மேலும் ப்ரஹ்ம சப்தத்துக்கு வேதம் என்று அர்த்தம் வைத்துக்கொண்டால் வேத வித்யை என்றும், உண்மை என்று அர்த்தம் கொண்டால் தத்வ ஞானம் என்றும், தபஸ் என்று அர்த்தம் கொண்டால் தபோ வித்யை என்றும், நான்கு முகங்கள் உள்ள ப்ருஹ்மதேவர் என்று அர்த்தங்கொண்டால் ப்ருஹ்மதேவருக்கு உபதேசம் செய்யப்பட்ட ப்ருஹ்ம வித்யை என்றும், ப்ராஹ்மணர்கள் அர்த்தம் செய்யக்கூடிய வித்யை யென்று அர்த்தம் ஏற்படுகிறதே ஒழிய தேவீ விஷயமான வித்யை என்ற அர்த்தம் ஏற்படவில்லை. ஆகையால் ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யை விஷ்ணு பாகவதத்திலேயே நிரூபிக்கப்பட்டு இருக்கிறது.

ஆட்சேபம்: தேவீ விஷயமான க்ரந்தங்களில் அகஸ்திய மஹர்ஷிக்கு ஹயக்ரீவர் மகாவித்யை உபதேசித்தார் என்று சொல்லி இருப்பது பொருந்துமா ?

ஸமாதானம்: பொருந்தும். ஹயக்ரீவரால் எடுத்து வரப்பட்டவைகளில் அகஸ்திய மஹர்ஷிக்கு உபதேசிக்கப்பட்ட மந்திரங்களும் சேர்ந்தவையாம். பூர்ணிமா திதியில் தானம் செய்யவேண்டும் என்று சொல்லி இருக்கிறது. சிவாலயங்களிலும், விஷ்ணு ஆலயங்களிலும் பஞ்ச பர்வங்களில் பூர்ணிமா திதியில் விசேஷமான ஆராதனம் செய்கிறார்கள். தேவீ ஆலயங்களில் பூர்ணிமா திதியில் யாதொரு விசேஷ ஆராதனமும்

நடப்பதாகத் தெரியவில்லை. மேலும் ஏகாதசி, பூர்ணிமா இந்தத் தினங்களில் ஹயக்ரீவரை ஜபித்தவன் மகானுபாவனாக ஆகிறான். ஹயக்ரீவோபநிஷத் ப்ருஹ்ம ஸூத்திரங்களுடைய அர்த்தமே "பாகவதம்" என்ற கருட புராணத்தில் சொல்லிய லக்ஷணம், தேவீ பாகவதத்தில் கொஞ்சமேனும் இல்லை விஷ்ணு பாகவதத்திலேயே பொருந்தி இருக்கிறது.

ஸ்ரீமத் பாகவத மஹிமை

முன்னொரு காலத்தில் நைமிசாரண்யத்தில் வசிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகள் ஸூதரை நோக்கி கோரமாகிய இக்கலியுகத்தில் பிராணிகள் அதர்மத்தில் ஆசையுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு பக்தி, ஞானம் வைராக்யம் விவேகம் ஆகிய இவைகள் எதனால் உண்டாகும்? எது பலவிதமான ச்ரேயஸ்ஸான தனங்களில் மேலானது? எது சுத்தமானவைகளுக்கும் பரிசுத்தியை உண்டு பண்ணுகிறது? எது ஸ்ரீ கிருஷ்ணனுக்கு மிகவும் பிரியத்தை உண்டு பண்ணக்கூடியது? சிந்தாமணியானது இவ் வுலகத்திய சுகத்தை மட்டும் கொடுக்கும். மகேந்திரன் ஸ்வர்க்க ஸுகத்தை மாத்திரம் கொடுப்பான். ஆச்சார்யர்களுக்கு சந்தோஷ முண்டானால் யோகிகளுக்கும் கிடைக்க அரிய தான வைகுண்ட பதத்தையும் கொடுப் பார்கள். ஆனதால் அதைச் சொல்லவேண்டும் என்று கேட்டார்கள்.

இதைக் கேட்ட ஸூதர் சௌனகரை நோக்கி, உமக்கு இவ்விஷயத்தில் பிரியம் உண்டானதால் எது ஸம்சார தாபத்தை நிவர்த்தி செய்யுமோ, எது ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு சந்தோஷத்தை உண்டு பண்ணுமோ, எது பக்தியை விசேஷமாக வ்ருத்தி செய்கிறதோ, அதனை யோசித்துச் சொல்லுகிறேன். ஜாக்கிரதையாக கேளுங்கள். பரீக்ஷித்து மஹாராஜனுக்கு சுகரால் உபதேசிக் கப்பட்ட ஸ்ரீமத் பாகவத சாஸ்திரமே சித்த சுத்தியை உண்டுபண்ணக்கூடியது; ஜன்மாந்திரத்தில்

புண்ணியம் செய்தவன்தான் பாகவதத்தைக் கேட்பான், படிப்பான். சபையில் பரீக்ஷித்துக்கு சுகர் பாகவத கதையைச் சொல்லும் பொழுது தேவர்கள் அனைவரும் அமிர்த குடத்தை எடுத்துக்கொண்டு வந்து சுகரை நமஸ்கரித்து இந்த அமிர்தத்தை அரசன் புஜிக்கட்டும். நாங்கள் பாகவதமாகிய அமிருதத்தை பானஞ் செய்கிறோம். நீர் அமிர்த குடத்தை அரசனுக்கு கொடுத்துவிட்டு கதாமிருதத்தை எங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். அதனைக் கேட்டு சமீபத்தில் இருக்கும் சக்ரவர்த்தியானவர், ரத்னத்துக்கும், காசமணிக்கும் எவ்வளவு பேதமோ அவ்வளவு தாரதம்யம் பகவத் கதைக்கும் அமிருதத்துக் குமுள்ளது என்று யோசித்து தேவர்களை நோக்கி சிரித்தார். சுகரும், தேவர்கள் பகவத் பக்தி இல்லாதவர்கள் என்று நினைத்து கதாம்ருதத்தை தேவர்களுக்குக் கொடுக்க சம்மதிக்கவில்லை. ஆகையால் பாகவதக் கதையானது தேவர்களுக்கும் அரிதாயிற்று. பின்பு பரீக்ஷித்து மகாராஜனுக்கு ஸ்ரீமத் பாகவதக் கதையால் மோக்ஷம் கிடைத்ததைப் பார்த்து ப்ருஹ்மதேவர் ஆச்சரியம் அடைந்து ஸத்ய லோகத்தில் தராசைக் கட்டி மோக்ஷ சாதனங்கள் எல்லாவற்றையும் நிறுத்தார். ஸ்ரீமத் பாகவதமே பாரமுள்ளதாக இருந்தது. மற்றவை இலகுவாகவிருந்தன. அதனைக் கண்டு ஸகல மஹர்ஷிகளும் மிகவும் ஆச்சரியப்பட்டு ஸ்ரீமத் பாகவதத்தை பகவானுடைய ஸ்வரூபமாக நினைத்தார்கள். அதனைப் படிப்பதாலும், கேட்பதாலும் உடனே மோக்ஷம் கிடைக்கும். இந்த

க்ரந்தத்தை ஏழு தினங்களில் முழுமையும் விதிப்படி கேட்டால் ஸகல பலன்களும் ஸித்திக்கின்றன. இதனை ஸனகர் முதலான யோகிகள் நாரதருக்கு முன் காலத்தில் உபதேசித்தார். தேவர்ஷியாகிய நாரதரும் ப்ருஹ்மத்தை வர்ணிக்கும் இந்தக் க்ரந்தத்தை கேட்டார். ஏழு நாட்களில் இதைக் கேட்க வேண்டிய முறையும் நாரதருக்கு அவர்களால் உபதேசிக்கப்பட்டது, என்று சொன்னார்.

இதைக் கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்கும் முறையைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற விருப்பம் நாரதருக்கு உண்டான காரணம் என்ன? அவர் பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை நன்றாக அறிந்தவர் அல்லவா? மேலும் ஸனகர் முதலிய ப்ருஹ்ம புத்திரர்களோடு நாரதருக்கு ஸம்வாதம் எவ்விடத்தில் நேர்ந்தது? இதற்குப் ப்ரத்யுத்தரம் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

அதனைக் கேட்டு ஸூதர் பின்வருமாறு விடை சொல்லலானார். "ஹே சௌனகரே சுகர் என்னை அந்தரங்க சிஷ்யனாக நினைத்து எனக்கு எதனை உபதேசித்தாரோ அதனை உமக்கு சொல்லுகிறேன். முன் ஒரு காலத்தில் விசாலா நகரத்தில் நான்கு மஹரிஷிகள் ஸாது ஸங்கம் செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் சேர்ந்தார்கள். அப்பொழுது அவ்விடத்தில் தெய்வச்செயலால் தேவர்ஷியாகிய நாரதரும் வந்தார். அவர்கள் நாரதரைக்கண்டு,

ஓ ப்ருஹ்மபுத்திரரே! நீர் ஒரு விஷயத்திலும் ஆசை இல்லாதவர்: அப்படி இருந்தும் மிக்க வேகமாக எவ்விடம் செல்லுகிறீர்? உம்முடைய முகம் வாடினதாகக் காணப்படுகிறது, அதற்குக் காரணம் என்ன? ஜனங்கள் பொருள் செலவழித்த காலத்தில் எப்படி வருத்தப்படுவார்களோ அப்படி சூன்ய சித்தராக இருக்கிறீர். நீர் இப்படி இருப்பது உசிதமல்ல. ஆதலால், அதன் காரணத்தைச் சொல்ல வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

அதைக் கேட்டு நாரதர் விடை சொன்னதாவது:– "நான் பூமியையே எல்லாவற்றிலும் மேலானது என்று நினைத்து, புஷ்கரம், பிரயாகை, காசி, கோதாவரி, ஹரிக்ஷேத்திரம், குருக்ஷேத்திரம், ஸ்ரீரங்கம், இராமேச்வரம் முதலிய தீர்த்தங்கள் சென்று எங்கும் அலைந்தேன். அப்படியும் மனதுக்கு சந்தோஷம் ஏற்படவில்லை. இந்தப் பூமி முழுவதையும் கலி அதர்மத்துடன் வியாபித்துக் கொண்டுவிட்டான். அதனால் சத்யம், தபஸ், சௌசம், தயை, கொடுப்பது ஆகிய இவை ஓர் இடத்திலாவது இருப்பதாகக் காணப்படவில்லை. எல்லா ஜனங்களும் தங்கள் தங்கள் வயிறு நிரம்ப புஜிப்பதில் மாத்திரம் ஆசையுள்ள வர்களாகவும், கபடமாகப் பேசும் தன்மை உள்ளவர் களாகவும், பாஷண்டர் களிடத்தில் (வேதவிரோதிகள்) ப்ரீதி உள்ளவர் களாகவும் இருக்கிறார்கள். ஒவ்வொரு வீடுகளிலும் ஸ்திரீகளே பிரபுவாயிருந்து அதிகாரம் செய் கிறார்கள். மைத்துனனே புத்தி சொல்லுகிறான். எல்லோரும் பெண்களை விலைக்குவிற்கிறார்கள்.

தம்பதிகள் ஒருவருக்கொருவர் கலகஞ்செய்து கொள் கிறார்கள். ஆசிரமங்கள், புண்ய தீர்த்தங்கள், நதிகள், தேவாலயங்கள் ஆகிய இவைகள் பெரும்பாலும் துஷ்டர்களால் கெடுக்கப்பட்டன. யோகி, சித்தன், ஞானி நல்ல கர்மாவைச் செய்பவன் ஆகிய இவர்கள் ஒருவரும் காணப்படவில்லை. நல்ல காரியங்கள் யாவும் கலியாகிய அக்னியால் எரிந்து சாம்பலாக்கப்பட்டன. ஒவ்வொரு தேசத்திலும் ஜனங்கள் அன்ன விக்ரயம் செய்கிறார்கள். ப்ராஹ்மணர்கள் வேதத்தை விற்கிறார்கள். ஸ்திரீகள் பெரும்பாலும் விபசாரம் செய்கிறார்கள். இம்மாதிரியான கலியின் விளையாட்டை எங்கும் பார்த்துக் கொண்டு நான் யமுனையின் கரைக்கு வந்தேன். அதுதான் ஸ்ரீ கிருஷ்ண பகவான் விளையாடின இடம். அவ்விடத்தில் ஒரு அற்புதத்தைக் கண்டேன். அதாவது யௌவன வயதுடைய ஒரு பெண் மனவருத்தத்துடன் அவ்விடம் இருந்தார். அவளுடைய பக்கத்தில் இரண்டு வயது சென்றவர்கள் பிரக்ஞை இல்லாதவர்களாக பெருமூச்சு விட்டுக்கொண்டு படுத்திருக்கக் கண்டேன். அந்தப் பெண் அவர்களுக்குப் பணிவிடை செய்தும், அழுது கொண்டும், தன்னைக் காப்பாற்றுகிறவர் யார் என்று பத்து திக்குகளையும் பார்த்துக் கொண்டு இருந்தாள். வெகு தூரத்திலேயே அவர்களைப் பார்த்து மிகுந்த ஆச்சரியம் அடைந்து உண்மையை தெரிந்து கொள்ள விரும்பி அவர்களுடைய சமீபம் சென்றேன். அந்தப் பெண் என்னை நோக்கி, "ஓ சாதுவே க்ஷணகாலம் தாங்கள் இவ்விடம் இருக்கவேண்டும்.

என்னுடைய கவலையை தீர்க்க வேண்டும். தங்களைப்போல் உள்ள சாதுக்களை தரிசித்தால் ஸகல பாபங்களும் நிவர்த்தியாகும் என்பதில் ஸந்தேகமில்லை. தங்களுடைய தரிசனம் வரும் க்ஷேமத்தைக் காட்டுகின்றது. தங்களுடன் ஸம்வாதம் செய்தால் பலவகையிலும் கவலை தீர்ந்துவிடும்." என்று தெரிவித்துக் கொண்டாள்.

அதைக்கேட்டு அந்தப் பெண்ணை நோக்கி "நீ யார்? இவ்விருவர்களும் யார்? ஓ தேவி! நீ கவலைப்படும் காரணம் என்ன? இவைகளை விஸ்தாரமாகச் சொல்" என்று கேட்டேன்.

அதனைக் கேட்டு அந்தப்பெண் சொன்னதாவது: எனக்கு பக்தி என்று பெயர். இவ்விருவரும் என்னுடைய புத்திரர்கள். ஒருவனுக்கு ஞானம் என்று பெயர். மற்றவனுக்கு வைராக்யம் எனப் பெயர். இவ்விருவர்களும் காலமஹிமையால் கிழத்தனத்தை யடைந்தார்கள். இந்தப் பெண்கள் கங்கை முதலிய நதிகள். என்னை சேவிப் பதற்காக வந்தவர்கள், மேலும் நான் தங்களிட த்தில் என் விஷயத்தை விஸ்தாரமாக தெரிவிக்க வேண்டியவளாக இருக்கிறேன். அதாவது நான் திராவிட (தமிழ்) தேசத்தில் பிறந்தவள். கர்நாடக தேசத்திலும், மஹாராஷ்ட்ர தேசத்தின் சில பாகங்களிலேயும் வளர்ந்தவள். கூர்ஜர தேசத்தில் கிழத்தனத்தை அடைந்தேன். மிக்க பாவியான கலியின் சாபத்தால் பாஷண்டர்கள் என்னுடைய அவயங்களை துண்டித்துவிட்டார்கள். ஆகையால் தேகபலம் குறைந்து புத்திரர்களுடன் மிகுந்த சிரமத்தை

அடைந்து இந்த பிருந்தாவனம் சேர்ந்தேன். இவ்விடம் வந்தவுடன் அழகான சரீரம் உள்ள யௌவனமுடையவளாக ஆனேன். இதோ படுத்துக்கொண்டு இருக்கும் இவ்விரு குழந்தைகளும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கிழத்தனமுள்ளவர்களாக இருப்பதால் அவர்களைப் பார்த்து நானும் துக்கிக்கிறேன். உலகத்தில் தாய் வயது சென்றவளாகவும் புத்திரர்கள் யௌவனமுள்ளவர்களாகவும் இருப்பது பழக்கம். இப்பொழுது புத்திரர்கள் வயது சென்றவர்களாகவும், புத்திரர்களுடைய தாயாகிய நான் யுவதியாகவும் இருக்கக் காரணம் யாது? நாங்கள் நால்வரும் எப்பொழுதும் சேர்ந்தே சஞ்சரித்துக் கொண்டிருக்கிறோம். தாங்கள் யோகிகளுக்குள் சிறந்தவர்களாகையால் இவ்விஷயத்தை அறிந்து சொல்ல வல்லமை உள்ளவராவீர். ஆதலால் என்னிடம் கிருபை வைத்து என்னுடைய சந்தேகத்தைத் தீர்க்கவேண்டும்'' என்று கேட்டாள்.

அதைக் கேட்ட நான் அந்தப் பெண்ணை நோக்கி "ஓ பால்யப்பெண்ணே நான் எல்லா விஷயத்தையும் ஞானக் கண்ணால் அறிந்து சொல்கிறேன். நீ கவலைப்பட வேண்டாம் ஸ்ரீ நாராயணன் உனக்கு க்ஷேமத்தைச் செய்வார் என்று சமாதானம் செய்து ஒரு க்ஷணநேரத்தில் அவ்விஷயங்களைத் தெரிந்துகொண்டு, பின்னும் அந்தப் பெண்ணைப் பார்த்து பின்வருமாறு சொன்னேன். பெண்ணே இந்தக்கலியுகம் மிகவும் மோசமானது. அதனால் நல்லொழுக்கம், யோகமார்க்கம், தவம் ஆகிய இவைகள்

கெடுக்கப்பட்டன. எல்லா ஜனங்களும் அசுரர்கள் போல் கெட்ட காரியத்தையே செய்கிறார்கள். ஸாதுக்கள் துக்கப்படுகிறார்கள். அஸாதுக்கள் சந்தோஷிக்கிறார்கள். இந்தக்காலத்தில் எவன் நல்ல காரியத்தை அனுஷ்டிக்கிறானோ அவனே தீரன் என்று சொல்லப் படுகின்றான். இந்தப் பூமி ஒவ்வொரு வருஷங்களிலும் முறையே ஸ்பர்சிக்க தகாதவர்களும் பார்க்கத்தகாதவர்களும் ஆதிசேஷனுக்குச் சுமையாகிவிட்டாள். நல்ல கர்மங்கள் ஒரிடத்திலும் காணப்படவில்லை. உன்னையும் உன்னுடைய புத்திரர்களையும் இக்காலத்தில் ஒருவரும் பார்க்கிறதில்லை. ஜனங்கள் விஷயங்களில் ஆசைக்கொண்டு காரியம் அகாரியம் என்ற பகுத்தறிவு இல்லாதவர்களாகி உன்னை ஆதரிக்காமல் உபேக்ஷித்தபடியால் நீ இளைத்திருக்கிறாய். இந்த பிருந்தாவனத்தின் மஹிமையால் நீ யுவதி ஆனாய். பக்தியானது இவ்விடத்தில் இல்லாததினால் இவர்களுக்கு கிழத்தனம் போகவில்லை என்று மறுமொழி சொன்னேன். அப்போது அந்தப்பெண் மிக்க பாபியான கலியை பரீக்ஷித்து மகாராஜன் ஏன் உலகத்தில் வைத்திருந்தார்? கலியுகம் வந்தவுடன் முன்னிருந்த ஸகல வஸ்துக்களின் ஸாரங்களும் எங்கே போயின? மிகுந்த தயையுள்ள ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் ஏன் பார்த்திருந்தார்? என்று கேட்டாள். அதைக்கேட்டு நான் பின்வருமாறு சொன்னேன்: ஸ்ரீ கிருஷ்ணபகவான் பூமியில் இருந்து வைகுண்டம் சென்ற தினத்திலேயே உலகத்தில் கலி வந்துவிட்டான். அப்பொழுது அரசனாக இருந்த பரீக்ஷித்து திக்விஜயம்

செய்துவரும் காலத்தில் வழியில் கலியைக் கண்டார் அவனும் அவரை சரணம் அடைந்தான்.

அவர் தவம், யோகம், சமாதி ஆகிய இவைகளால் அடையக்கூடாத உத்தமமான பிரயோசனம் பகவானுடைய நாமங்களை பஜனை பண்ணுவதனால் இக்கலியில் எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது என்று நினைத்து கலியுகத்தில் பிறக்கும் மனிதர்களுடைய ஸௌக்கியத்தின் பொருட்டே கலியைக் கொல்லவில்லை. கெட்ட காரியங்களைச் செய்வதனால் வஸ்துக்களுடைய ஸாரம் போய்விட்டது. ப்ராஹ்மணர்கள் ஒவ்வொரு வீட்டிலும் அரிசிக்கு ஆசைப்பட்டு பாகவத கதையைச் சொல்ல ஆரம்பித்ததால் கதையின் ஸாரம் போய்விட்டது. மேலும் ப்ராஹ்மணர்கள் மிக்க கோரமான பல காரியங்களையும் செய்து நாஸ்திகர்களாக (பரலோகத்தில் சிரத்தை இல்லாதவர்களாக) ஒவ்வொரு தீர்த்தக் கரைகளில் வஸிப்பதால் தீர்த்தத்தின் ஸாரம் போய்விட்டது. காமம், கோபம், லோப விஷயங்களில் ஆசை ஆகிய இவைகளால் கலங்கிய மனம் உள்ளவர்கள் தவம் செய்வதால் தவத்தின் ஸாரம் போய்விட்டது. மனிதர்கள் மனதை அடக்காமல் உலோபம் உம்பம் இவைகளை அடைந்து பாஷண்ட மதத்தை ஆசிரயித்தும் தியான யோகத்தின் ஸாரம் போய்விட்டது. வித்வான்களும் மோக்ஷத்தையடைய முயற்சியாமல் எருமைகள் போல் ஸ்திரீகளுடன் ரமித்து புத்திரர்களை உண்டு பண்ணுவதிலேயே சாமர்த்தியத்தை அடைந்திருக்கிறார்கள். பெரியோர் களுடைய சம்பிரதாயப்படியுள்ள விஷ்ணுபக்தி

ஒரிடத்திலும் இல்லை. இம்மாதிரி ஒவ்வோரிட ங்களிலும் வஸ்துக்களின் ஸாரம் போய் விட்டது. ஆனால் இது யுகத்தின் தர்மம். எவர் மீது குற்றஞ் சொல்லக்கூடும்? அதனால் தானே சமீபத்தில் இருக்கும் புண்டரீ காக்ஷன் (தாமரைக்கண்ணன்) இதை சகித்துக் கொண்டி ருக்கிறார் என்று சொன்னேன். இதனைக்கேட்டு அந்த பெண்ணானவள் "ஓ தேவ ரிஷியே! நீர் மிகவும் மேலானவர் என்னுடைய அதிர்ஷ்ட வசத்தால் நீர் இவ்விடம் வந்தீர். ஸாதுக் களுடைய தரிசனம் ஸகல சித்திகளையும் கொடுக்கும். தங்கள் உபதேசத்தால் ப்ரஹ்லாதர் என்பவர் மாயையைக் கடந்து ஆத்ம ஸ்வரூபத்தை அடைந்தவராக விளங்குகிறார். மேலும் தங்களுடைய கிருபையால் துருவர் என்பவர் சாஸ்வதமாகிய (துருவ) பதத்தை அடைந்தார். ஆகையால் ஸகல க்ஷேமத்தைக் கொடுப்பவரும் ப்ருஹ்மதேவரின் புத்திரருமாகிய தங்களை நமஸ்கரிக்கிறேன். என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள். அதனைக்கேட்டு நான் பின்வருமாறு சொன்னேன். "ஓ சிறு பெண்ணே! ஏன் கவலைப்படுகிறாய்? ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரை மலர்போன்ற பாதங்களை இடைவிடாது தியானஞ்செய்: துக்கம் ஒருபோதும் நேரிடாது. துச்சாதனன் முதலியவர்களால் செய்யப்பட்ட உபத்திரவித்திலிருந்து திரௌபதியைக் காப்பாற்றினார். கோப ஸ்திரீகளை ஸம்ரக்ஷித்தார். அவர் இப்பொழுது தேசாந்திரம் போகவில்லை. உன்னிடத்தில் தமது ப்ராணனைக்காட்டிலும்

விசேஷமான ப்ரியம் வைத்திருக்கிறார். பக்தியாகிய உன்னால் அழைக்கப்பட்டு அவர் நீசர்களுடைய வீட்டுக்கும் வருகிறார். கிருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம் இம்மூன்று யுகங்களிலும் முறையே ஸத்யம், ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகள் மோக்ஷத்துக்கு ஸாதனங்களாக இருந்தன. இக்கலியுகத்தில் பக்தி மாத்திரத்தாலேயே மோக்ஷம் கிடைக்கிறது; ஆனது பற்றியே ஞான ஸ்வரூபியாகிய பகவான் உனக்கு சரீரத்தை உண்டு பண்ணினார். பின்பு நீ ஒருக்கால் இரு கைகளையும் கூப்பிக்கொண்டு நான் என்ன செய்யவேண்டும் என்று பகவானைக் கேட்டாய். அப்பொழுது அவர் என் பக்தர்களை போஷிக்க வேண்டும் என்று ஆக்ஞாபித்தார். நீயும் அதனை ஒப்புக் கொண்டாய். அதனால் பகவான் சந்தோஷித்து முக்தியை உனக்கு ஊழியப் பெண்ணாக இருக்கும்படி செய்தார். பின்னும் ஞானம், வைராக்கியம் என்ற இவர்களை உன்னிடம் ஒப்படைத்தார். பின்பு நீ வைகுண்டத்தில் உன்னுடைய நிஜ ரூபத்துடன் இவர்களை போஷித்து வந்தாய். பூமியில் பக்தி விருத்தியாக் வேண்டியதற்காக சாயா ஸ்வரூபமயமான ரூபத்துடன் முக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய இவர்களுடன் பூமிக்கு வந்தாய். கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் ஆகிய இம் மூன்று யுகங்களிலும் மிகுந்த ஆனந்தத்துடன் இருந்தாய். கலியில் முக்தி என்னும் பெண் பாஷண்டர்களாகிய வியாதியால் மிகவும் குறைந்துவிட்டாள். அவள் உன்னுடைய அனுமதியினால் வைகுண்டத்துக்கு மறுபடியுஞ் சென்றாள்..

உன்னால் நினைக்கப்படும் போதெல்லாம் வைகுண்டத்திலிருந்து வருவதும் போவதுமாக இருக்கிறாள். ஞானம், வைராக்கியம் இவ்விருவர் களும் புத்திர சிநேகம் கொண்டு உன்னால் காப்பாற்றப்பட்டும், இக்கலியில் ஜனங்கள் அவர்களை உபேஷித்து விட்டபடியால் வயது சென்றவர்களாகி விட்டார்கள். ஆனாலும் உன்னுடைய கவலையை நான் போக்கடிக்கிறேன். இக்கலியுகத்துக்குச் ஸமமான யுகம் வேறில்லை. இந்த யுகத்திலும் ஒவ்வொரு ஜனங்கள் இடத்திலும் உன்னை ஸ்திரமாக இருக்கும்படி செய்கிறேன். அப்படிச் செய்யாவிடில் நான் விஷ்ணு பக்தன் அல்ல. கலியில் முக்கிய பாவிகளான ஜனங்களும் பகவத் பக்தியை பெற்று வைகுண்டத்தை அடைகிறார்கள். யமன், பிசாசங்கள், ராக்ஷதர்கள், அசுரர்கள் ஆகிய இவர்கள் பக்தி உள்ளவர்களை உபத்திரவிக்க மாட்டார்கள். பக்தியால் பகவான் வசப்படுவது போல தவம், வேதம், ஞானம், நல்லகர்மா இவைகளால் ஸ்வாதீனப் படுவதில்லை. அந்த விஷயத்தில் புண்ணியம் செய்தால் தான் பக்தி பண்ணவேண்டுமென்ற விருப்பமுண்டாகும்.கலியில் பக்தியே மேலானது. பக்தியை நிந்தித்ததால் துர்வாஸர் துக்கத்தை அடைந்தார். அனேக விரதங்களாலும், புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் பண்ணுவதாலும், போகங்களாலும், யாகங்களாலும், முக்தியைக் கொடுக்கக்கூடியது, என்று சொன்னேன். "இதனைக் கேட்டு பக்தியாகிய அந்தப்பெண் என்னை நோக்கி "ஓ நாரதரே நீர் மிகவும் மேலானவர். உம்மிடத்தில் எனக்கு மிகுந்த பிரீதி

உண்டாகி யிருக்கிறது. உம்மை ஒருபொழுதும் விடமாட்டேன். உம்முடைய மனதில் எப்பொழுதும் வசிப்பேன். தங்களுடைய அனுக்கிரஹத்தால் என் கவலை தீர்ந்துவிட்டது. ஆனாலும் என்னுடைய இந்த புத்திரர்களுக்கு மூர்ச்சை தெளிய வில்லை. இவர்களை எழுப்பிவிடும்'' என்று வேண்டிக் கொண்டாள்.

அப்பொழுது எனக்கு அவளிடத்தில் தயை உண்டாயிற்று. பின்பு நான் அவ்விருவர்களுடைய காதில் உபநிஷத் வாக்கியங்களையும் கீதா வாக்கியங் களையும் சொல்லி ''ஓ ஞானமே விழித்துக்கொள். ஓ வைராக்கியமே எழுந்திரு'' என்று இரைந்து சொன்னேன். அப்பொழுது அவர்கள் கொட்டாவி விட்டுக்கொண்டு எழுந்து இருந்தார்கள். ஆனாலும் பசி, தாகம் முதலிய வற்றால் வருத்தப்பட்டு மறுபடியும் படுத்துத் தூங்க யத்தனித்தார்கள். அது கண்டு நான் என்ன செய்கிறது என்று பகவானை த்யானஞ் செய்தேன். அப்பொழுது ''ஓ மஹர்ஷியே! ஏன் விசனப்படுகிறீர். புண்ணிய கர்மாக்களை அனுஷ்டிப்பீர் ஆனால், இவர்களுடைய தூக்கமும் கிழத்தனமும் நீங்கும். அந்தக் கர்மங்களை சில ஸாதுக்கள் உபதேசிப்பார்கள். அதனால் பக்தியானது உலகம் முழுவதும் பரவிவிடும் என்று ஆகாசத்தில் இருந்து ஒரு தொனி உண்டாயிற்று. அதனை நானும் மற்றவர்களும் கேட்டு ஆச்சரியம் அடைந்தோம். பின்பு ஆகாச வாணியால் சொல்லப்பட்டபடி எப்பொழுது, எந்தவிடத்தில் எவர்கள் எந்த கர்மங்களை நமக்கு உபதேசிப்பார்களோ என்று நான்

யோசித்து ஞானம், வைராக்யம் இவ்விருவர் களையும் அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு ஒவ்வொரு புண்ய தீர்த்தங்களுக்கும் சென்று இவ்விஷயத்தைப் பற்றி ஒவ்வொரு மஹர்ஷி களையும் கேட்டுக் கொண்டே சஞ்சரித்தேன். ஒருவரும் எந்தக் கர்மாவை அனுஷ்டிக்க வேண்டும் என்று நிச்சயமாகச் சொல்லவில்லை. சிலர் இதைச் செய்ய முடியாத காரியம் என்றும், பின்னும் சிலர் இதனைத் தெரிந்து கொள்வதே சிரமம் என்றும் சொன்னார்கள். சிலர் பேசாமலே இருந்துவிட்டார்கள். சிலர் இதனைக் கேட்டு இருந்த இடத்தைவிட்டே ஓடிப் போனார்கள். மேலும் எல்லா வேதங் களாலும், கீதா வாக்கியங்களாலும் விழித்துக் கொள்ளாத ஞான வைராக்கியங்கள் வேறு எந்த உபாயத்தால் எழுந்திருக்கப் போகிறார்கள்.? நாரத மஹர்ஷியாலும் அறியப்படாத விஷயம் மற்ற மஹர்ஷிகளால் சொல்லமுடியுமா? என்று ஜனங்கள் ரகசியமாக பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். அப்பொழுது எனக்கு யாதொரு நிச்சயமும் உண்டாக வில்லை. ஆனாலும் பதரிகா வனம் சென்று தவம் செய்யத் தொடங்கினேன். அவ்விடத்தில் மிக்க தேஜஸ் விகளான ஸனகர் முதலிய யோகிகளைக் கண்டேன். கண்டவுடன் விசேஷ ஆனந்தம் அடைந்து அவர்களை நோக்கி ஓ யோகி சிரேஷ்டர்களே! நான் செய்த பாக்ய விசேஷத்தால் தங்களைக் கண்டேன்.

நீங்கள் ஐந்து வயதுள்ளவர்களானாலும் முன்னோர்களுக்கும் முந்தியவர்கள். எப்பொழுதும்

வைகுண்டத்திலேயே இருப்பவர்கள். ஸ்ரீ மஹா விஷ்ணுவின் லீலைகளை கானஞ் செய்பவர்கள். எப்பொழுதும் பகவானையே சரணமடைந்தவர்கள். ஆகையால் ஜரை (கிழத்தனம்) உங்களை உபத்திரவிப் பதில்லை. ஆகையால் என்னை அனுக்கிரஹிக்க வேண்டும். ஆகாச வாணியால் சொல்லப்பட்ட கர்மங்கள் எவை? பக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகள் எல்லா வர்ணாச்சரமங்களிலும் ஸ்திரமாய் வசிக்கும்படி என்ன உபாயம் செய்யலாம் அதனைச் சொல்லவேண்டும் என்று கேட்டேன். அப்பொழுது அவர்கள் என்னைப் பார்த்து ஓ தேவரிஷியே இவ்விஷயத்தில் லகுவான உபாயமொன்றிருக்கிறது. நீர் வைராக்கியத்தை அடைந்தவர்களுள் மேலானவர். பகவத் பக்தர்களுட் சிறந்தவர். ஆகையால் பக்தியை உலகத்தில் ஸ்தாபிப்பதற்கு நீர் தகுதியானவரே அனேக மகரிஷிகள் அனேக மார்க்கங்களை காட்டியிருக்கிறார்கள். ஆனாலும் அவைகள் பெரும்பாலும் ஸ்வர்க்கத்தையே கொடுக்கக் கூடியவைகளாகவிருக்கின்றன. மேலும் ச்ரமப்பட்டு செய்யக் கூடியவைகளாயுமிருக்கின்றன; மோக்ஷத்தை கொடுக்கும் மார்க்கம் மிகவும் ரஹஸ்யமானது. அதனை உபதேசிப்பவர்கள் கிடைப்பதரிது. ஆகாச வாணியால் சொல்லப்பட்ட கர்மம் யாதெனில் ஜ்ஞான யக்ஞமேயாம். சிலர் திரவ்ய யஜ்ஞத்தை (யாகம்) அனுஷ்டிக்கிறார்கள். பின்னும் சிலர் தபோ யஜ்ஞத்தையும் மற்றும் சிலர் யோக யஜ்ஞத்தையும், இன்னும் சிலர் ஸ்வாத்யாய யக்ஞத்தையும் (வேதங்களை அத்யயனம் செய்வது) அனுஷ்டிக்கிறார்கள். இவைகளில் ஜ்ஞான யஜ்ஞமே

மேலானது. அது சுகரால் பரீக்ஷித் மஹாராஜனுக்கு உபதேசிக்கப்பட்ட பாகவதத்தைக் கேட்பதேயாகும். அந்தப் பாகவத சாஸ்த்ரத்தைக் கேட்பதால் பக்தி ஜ்ஞான வைராக்கியங்களுக்கு நேர்ந்த கஷ்டமும் விலகும். மேலும், சிங்கத்தின் சப்தத்தைக் கேட்ட செந்நாய்கள் போலப் பாகவதக் கதையைக் கேட்ட மாத்திரத்தில் கலியின் தோஷங்கள் யாவும் ஓடுகின்றன. பக்தியானது, ஜ்ஞானம் வைராக்யம் ஆகிய இவைகளுடன் ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு ஜனங்களிடத்திலும் நன்றாய் ப்ரகாசிக்கும் என்று உபதேசித்தார்கள்.

அப்பொழுது நான் அவர்களைப் பார்த்து "ஓ ப்ரம்ஹ தேவரின் குமாரர்களே! வேதாந்த வாக்யங்களாலும், கீதா பாடத்தாலும் விழித்துக் கொள்ளாத அவர்கள் பாகவத பாடத்தால் எழுந்திருப்பார்களா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் பின்வருமாறு விடை சொன்னார்கள். ஸ்ரீமத் பாகவத கதையானது உபநிஷத்துக்களின் ஸாரத்தால் செய்யப்பட்டதாகையால் இது மிகவும் மேலானது. பாலில் நெய் இருந்தாலும் அது எப்படி தனியாகத் தெரியவில்லையோ அதுபோல வேதத்தில் ஸாரமானது எங்கு இருந்தாலும் நன்றாய்ப் பிரகாசிக்கவில்லை. ஆனாலும், அந்தப் பாலைக் காய்ச்சிக் கடைந்து அதிலிருந்து தனியாக நெய் எடுக்கப்பட்டால் அது தேவர்களுக்கு மிகவும் திருப்தியை உண்டு பண்ணுகிறது. தவிரவும் கரும்பில் அடி முதல் நுனி வரையில் சர்க்கரை இருந்தாலும் அதனைப் பிரித்தெடுத்த பிறகுதான் புஜிக்கக்

கூடியதாகிறது. அது போலவே வேதத்திலுள்ள ஸாரங்கள் எல்லாவற்றையும் எடுத்து ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்டது. இது பக்தி, ஞானம், வைராக்யம் இவைகளை உலகத்தில் ஸ்தாபிப்பதற்காகவே வெளியிடப்பட்டது. முன் னொருகால் ஸ்ரீவேதவ்யாஸ மஹர்ஷி ஸ்ரீமத் மஹாபாரதத்தைச் செய்தும், வேதங்களை அத்யயனஞ் செய்தும் உபநிஷத்துக்களின் உண்மையான அர்த்தத்தைத் தெரிந்து கொண்டும், பகவத் கீதையைச் செய்தும், அக்ஞானம் விலகாமல் தாபமடைந்து ஸரஸ்வதி நதிக்கரையில் கவலைப் பட்டுக் கொண்டிருக்கும்பொழுது உம்மால் நான்கு ச்லோகங்கள் உபதேசிக்கப்பட்டன; அவைகளைக் கேட்டு அவர் உடனே கவலை தீர்ந்தவராக, அவைகளைக் கொண்டு பாகவதத்தைச் செய்தாரல்லவா ?அப்படி இருக்க பாகவதத்தை கேட்பதால் துக்கம் விலகுமாவென்று நீரே கேட்பது மிகவும் ஆச்சர்யமாக விருக்கிறது' என்று சொன்னார்கள். பின்பு நான் அவர்களைக் கொண்டாடி, அவர்களை நோக்கி இந்த ஞான யஜ்ஞத்தை எவ்விடத்தில் செய்யலாம் ? எவ்வளவு நாட்களில் பாகவதம் கேட்கப்படவேண்டும் ? அதன்முறை எப்படி ? பாகவத சாஸ்த்ரத்தின் மஹிமையை ஸகல வேதங்களுமறிந்த தாங்களே சொல்லவேண்டும்' என்று கேட்டுக் கொண்டேன்.

அப்பொழுது அவர்கள், "ஓ நாரதரே! கங்கையின் ஸமீபத்தில் ஆனந்த வனமென்பது ஒன்று உண்டு. அது மிகவும் ஏ்காந்தமான இடம். ஜலஸௌக்யமுள்ளது; அனேக மஹர்ஷிகள்

அவ்விடத்தில் வஸிக்கிறார்கள்' அவ்விடத்தில் வஸிக்கும் பறவை முதலியவைகளுக்கும் இயற்கையான விரோதம் இல்லை. அவ்விடத்தில் பாகவத கதையைச சொல்லுவதாகிய ஜ்ஞான யஜ்ஞத்தை நீர் நடத்த வேண்டும், அவ்விடத்திற்கு பக்தியானவள் தன் புத்ரர்களுடன் வருவாள். அந்தக் கதையைக் கேட்ட மாத்திரத்தில் அவர்கள் யௌவன வயஸை அடைவார்கள்' என்று சொல்லி என்னை அழைத்துக் கொண்டு பாகவத கதையைக் கேட்பதற்காக ஆனந்தவனம் சென்றார்கள். அப்பொழுது இதனைக் கேட்டுப் பூலோகம், தேவலோகம், ப்ரஹ்மலோகம் ஆகிய இவ்விடங்களிலிருந்து பகவத் பக்தர்கள் எல்லோரும் ஆனந்தவனம் சென்றார்கள். அன்றியும் ப்ரகு, வஸிஷ்டர், ச்யவனர், கௌதமர், மேதாதிதி, தேவலர், தேவராதர், பராசுராமர், விச்வாமித்ரர், சகலர், மார்க்கண்டேயர், பிப்பலாதர் முதலிய மஹர்ஷிகளும், வ்யாஸர், பராசரர் முதலிய யோகிகளும், சாயாசுகர், ஜாஜலி, ஜஹ்னு முதலியவர்களும் தங்கள் தங்களுடைய ஸ்திரீகள், புத்ரர்கள், சிஷ்யர்கள் முதலியவர்களுடன் கங்காதீரஞ் சென்றார்கள். மேலும் ஆறு சாஸ்த்ரங்களும், பதினேழு புராணங்களும், நான்கு வேதங்களும், கங்கை முதலிய நதிகளும், புஷ்கரம் முதலிய குளங்களும், க்ஷேத்ரங்களும் பத்து திக்குக்களும், தண்டகை முதலிய வனங்களும், மேரு முதலிய மலைகளும் திவ்ய சரீரமுள்ளவைகளாய்க் கதையை கேட்பதற்காக அவ்விடம் வந்து கூடின. மேலும் தேவர்கள், கந்தர்வர்கள், கின்னரர்கள் ஆகிய இவர்களும்

வந்தார்கள். எல்லோருக்கும் ஆசார்யர்களான ஸனகர் முதலியவர்களை ப்ரகுமஹர்ஷி தாம் நேரில் அழைத்து வந்தார். அப்பொழுது அந்த ஜ்ஞான யஜ்ஞத்தில் நான் தீக்ஷை செய்து கொண்டு அந்தக் குமாரர்களுக்கு ஆஸனங் கொடுத்து நமஸ்காரஞ்செய்து அவர்களைப் பூஜித்தேன். அங்கே ஒருபக்கத்தில் மஹர்ஷிகளும் மற்றொரு பக்கத்தில் தேவகணங்களும், இன்னொரு பக்கத்தில் வேதம் உபநிஷத் முதலியவைகளும், மற்றொரு பக்கத்தில் தீர்த்தங்களும், இன்னொரு பக்கத்தில் ஸ்திரீகளும், தங்களுக்குத் தகுந்த ஆஸனங்களில் உட்கார்ந்தார்கள். 'ஜய்' என்றும், 'நமஸ்காரம்' என்றும் சப்தங்கள் மிகுதியா யுண்டாயின, சங்க வாத்தியங்கள் முழங்கின. ஆகாசத்தில் தேவர்கள் விமானங்களிலிருந்து கல்பக விருக்ஷத்தின் புஷ்பங்களின் மழையைப் பெய்தார்கள். இப்படி எல்லோரும் ஒரே மனமாய் பாகவத மாஹாத்மியத்தைக் கேட்க விரும்பியிருக்கும் பொழுது என்னை உத்தேசித்து ப்ரஹ்ம குமாரர்கள் பின்வருமாறு சொன்னார்கள்: 'ஸ்ரீமத் பாகவத கதையை ஜனங்கள் எப்பொழுதும் கேட்வேண்டும். அதனைக் கேட்டமாத்திரத்தால் பகவான் மனதில் ஆவிர்ப்பவிக்கிறார். இது பதிமிண்ணாயிரம் க்ரந்தங்களடங்கியது. பன்னிரண்டு ஸ்கந்தங்கள் உள்ளது. பரிக்ஷித்து மஹா ராஜனுக்கு சுகரால் உபதேசிக்கப்பட்டது. இதுவே மோக்ஷத்தை கொடுக்கக்கூடியது. மற்றப் பலவையான சாஸ்த்ரங்கள் புத்திக்கு மயக்கத்தை யுண்டுபண்ணுகின்றன. எந்த வீட்டில் பாகவத கதை படிக்கப்படுகிறதோ

அதுவே புண்ய க்ஷேத்ரமாகும், அச்வமேதயாகங்கள், நூறு வாஜபேயங்கள் இவைகளை ஆயிரம் செய்தாலும், அதனாலுண்டாகும் புண்யமானது பாகவத கதையைப் படிப்பதனா லுண்டான ஸுகிருதத்தின் 16ல் ஒரு பாகத்திற்கும் ஸமமாகாது. ஒவ்வொரு நாளும் பாகவதத்தில் ஒரு ச்லோகத் தையாவது அதன் பாதியையாவது அவசியம் படிக்க வேண்டும். ஒவ்வொரு வேதங்களின் முதல் மந்த்ரங்கள் வேத மாதாவாகிய காயத்ரீ மஹாமந்தரம், புருஷ ஸூக்தம், வேதங்கள், பாகவதம், த்வாதசாக்ஷரம், ஸூர்யன், ப்ரயோகம், ஸம்வத்ஸரமாகிய காலம், ப்ராஹ்மணர்கள், அக்னிஹோத்ரம், காமதேனு, த்வாதசி திதி, துளஸி, வஸந்தருது, புருஷோத்தமராகிய நாராயணர், ஆகிய இவர்களுக்குள் தாரதம்யமில்லை. எவன் ஒவ்வொரு நாளும், பாகவதத்தை படித்து அதன் அர்த்தத்தை தெரிந்துகொள்ளுகிறானோ, அவனுக்கு கோடி ஜன்மங்களில் செய்யப்பட்ட பாபங்களும் நிவர்த்தியாகின்றன. தவிரவும், மரண காலத்தில் இந்தச் சுக சாஸ்த்ரத்தைக் கேட்பதால் வைகுண்டத்தையடைவார்கள். இந்தப் பாகவத புஸ்தகத்தை ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்தில் வைத்து விஷ்ணுபக்தர்களுக்குத் தானம் செய்கிறவன் ஸ்ரீகிருஷ்ணனுடைய ஸாயுஜ்ய பதத்தையடைகிறான். பிறந்தது முதல் ஒரு பொழுதாவது பாகவத கதையைக் கேட்காதவன் சண்டாளனுக்கும், கழுதைக்கும் ஸமானனென்று சொல்லப்படுகிறான். தவிரவும், அவனை பக்தர்கள் உயிருள்ள பிணமென்றும், பூமிக்குச்சுமையாயிருப்பவனென்றும் சொல்லுகிறார்கள். இந்த கதையை இந்திரியங்களை

ஜயித்து, மனத்தை அடக்கி வெகுநியமத்துடன் கேட்கவேண்டுமாதலால் அவ்வளவு நியமத்தை அனுஷ்டிப்பது இக்கலி காலத்து ஜனங்களால் முடியாததாகுமென்றும், இவர்களுக்கு ஆயுஸ் மிகக் குறைந்ததென்றும் யோசித்து சுகர் ஏழு நாளில் இதைக் கேட்கவேண்டுமென்று ஒரு விதி நியமித்திருக்கிறார்.

அந்த விதிப்படி ஏழு நாளில் பாகவதத்தை கேட்பதனால் ஸகல யாகங்கள் செய்த பலன்களும், ஸகல வ்ரதங்களை அனுஷ்டித்த பலன்களும், ஸகல தீர்த்தங்களில் ஸ்நானம் செய்த பலன்களும் உண்டாகும் என்று எனக்கு உபதேசித்தார்கள் என்று ஸூதர் சௌனகர் முதலிய மஹர்ஷி களுக்குச் சொன்னார். இதைக் கேட்டுச் சௌனகர், பாகவத புராணம் மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியதென்றும், மற்றவைகளைக் காட்டிலும் மேலானதென்றும், தாங்கள் சொல்லக் கேட்டு மிகவும் ஆச்சர்யமடைந்தோம். அவ்வளவு மேன்மை அந்தச் சாஸ்த்ரத்திற்குக் கிடைத்த காரணமென்ன? சொல்ல வேண்டும் என்றார். அதனைக் கேட்டு ஸூதர் அவரை நோக்கிச் சொன்னார். "ஓ சௌனகரே! ஸ்ரீ கிருஷ்ண பகவான் பூமியை விட்டுத் தம் உலகம் போகும் முன்னிலையில் உத்தவர், பகவானை நோக்கித் தாங்கள் வைகுண்டம் சென்றால் பக்தர்களை யார் ஸம்ரக்ஷிப்பார்? கலியுகத்தில் ஜனங்கள் துஷ்டர்களாகிவிடுவார்கள்; நிர்குணமாகிய உம்முடைய ஸ்வரூபத்தை ஜனங்கள் உபாஸிப்பது மிகவும் கஷ்டம். அதற்காகவே தாங்கள் பூமியில் அவதாரஞ் செய்திருக்கிறீர்கள். ஆகையால்

இவ்வுலகத்திலேயே வஸிக்க வேண்டுமேயொழிய மேலுலகம் செல்லக் கூடாது என்று வேண்டிக் கொண்டார். இதனைக் கேட்டு பகவான், 'பக்தர்களுக்காக நாம் செய்யவேண்டியதென்ன? என்று யோசித்து? தேஜோ ரூபியாக ஸ்ரீமத் பாகவதத்தில் ப்ரவேசித்தார். அதனாலேதான் அது எல்லாவற்றிலும் மேலானது. அதனைக் கேட்பதாலும், படிப்பதாலும் துக்கம், தாரித்ரியம், பாபம் முதலாகிய இவைகள் நிவர்த்தி யாகின்றன. ஏழு நாளில் இந்த க்ரந்தம் முழுவதையும் விதிப்படிக் கேட்டால் தேவர்களாலும் தாண்ட முடியாத விஷ்ணுவின் மாயையைக் கடந்து ஸ்வரூபஜ்ஞானத்தை அடையலாம். 'ஓ சௌனகர் முதலியவர்களே! இப்படி பாகவதத்தின் மஹிமையை வர்ணித்தவுடன் ஆனந்தவனத்தில் பக்தியின் புத்ரர்களான ஜ்ஞான வைராக்கியர்கள் மிக்க பலத்துடனும் அழகான சரீரத்துடனும் எழுந் திருந்தார்கள். பக்தியும், ஹே கிருஷ்ண!, ஹே கோவிந்த! ஹே முராரே! என்று சொல்லிக் கொண்டு விசேஷ சந்தோஷமடைந்தாள். பின்னும் அவர்களுடைய ஆஜ்ஞையால் பகவத்பக்தருடைய மனதில் வஸித்து வந்தாள். மேலும் அவ் விடத்தில் ஸ்ரீமந்நாராயண மூர்த்தி நீருண்ட மேகம் போலக் கறுத்த திருமேனியோடு நான்கு கைகளிலேயும் சக்ரம் முதலிய ஆயுதங்களை ஏந்திப் பீதாம்பரத்தையுடுத்திக் கொண்டு துளஸி மாலையால் அலங்கரிக்கப் பட்டுக் கோடி மன்மதனைப் போல அழகு உள்ளவராகி பக்தர்களுக்கு தர்சனங் கொடுத்தார். அப்பொழுது எல்லோரும் பரமானத்தத்தை யடைந்து பகவானை ஸ்தோத்ரம் செய்தார்கள். மேலும் ஸ்ரீமத் பாகவதமே மேலானதென்றும்

தெரிந்து கொண்டார்கள்.

ப்ராஹ்மணர்களுடைய பொருள்களை அபஹரிப் பதாகிய மஹாபாபங்களைச் செய்தவர்களும் ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்பதனால் பரிசுத்தராகி விடுகிறார்கள் என்பதில் ஸந்தேக மில்லை. துங்கபத்ரா நதிக்கரையில் ஒரு பட்டணத்தில் ஆத்மதேவரென்ற ஒரு ப்ராஹ்மண ச்ரேஷ்டரிருந்தார். அவர் ஸகல வேதங்களையும் அத்யயனஞ் செய்தவர். ஸூர்யன் போன்ற தேஜஸ் உள்ளவர். தன்னுடைய வர்ணாச்ரம தர்மங்களைக் குறைவின்றி நடத்தி வருபவர். ஆனால் அவர் மிகுந்த ஏழை. அவருக்குத் துந்துலீ என்ற பத்னியொருத்தியுண்டு. அவள் மிகவும் அழகுள்ளவள், மேலான குலத்தில் பிறந்தவள், ஆனாலும் வெகுவாகப் பேசுகிறவள், வீட்டு வேலைகளில் மிகவும் ஸாமார்த்திய முள்ளவள். சண்டையில் மிகுந்த ப்ரியமுள்ளவள். தான் சொன்னதே சரியென்று ஸ்தாபிக்கும் ஸ்வபாவமுள்ளவள். அந்தத் தம்பதிகளிருவர்களும் பல வகையான தர்மங்களை அனுஷ்டித் தார்கள். அப்படியும் அவர்களுக்குப் பெண்ணாவது பிள்ளையாவது பிறக்கவில்லை. அதனால் கவலையடைந்து அந்த ப்ராஹ்மணன் வீட்டை விட்டுக் காட்டுக்குச் சென்றார். அவ்விடத்தில் மத்யானகாலத்தில் ஒரு குளத்தில் ஸ்நானம் பண்ணித் தாஹத்தைத் தீர்த்துக் கொண்டு தெய்வச் செயலால் அவ்விடம் வந்த ஒரு ஸன்யாசியின் அருகிற் சென்று அவரை நமஸ்கரித்துப் பெருமூச்சு விட்டு அவருடைய பக்கத்தில் நின்றார். அவரைப் பார்த்து

ஸன்யாஸியானவர், ஓ ப்ராஹ்மண! நீர் ஏன் துக்கப்படுகிறீர் என்று கேட்டார். அதனைக் கேட்டுப் ப்ராஹ்மணன் அந்த ஸன்யாஸியை நோக்கி, எனக்குப் புத்திரனில்லை என் வீட்டில் இருக்கும் பசுவும் மலட்டாயிருக்கிறது, என்னால் வைத்து வளர்க்கப்பட்ட மரமும் புஷ்பிக்கிறது மில்லை காய்க்கிறதுமில்லை, என் வீட்டிற்கு கொண்டு வந்த பழங்களும் காய்ந்து போகின்றன. குழந்தைகளிலில்லாமலும், பாக்யமில்லாமலும் இருக்கும் நான் பிழைத்திருந்து என்ன ப்ரயோஜனம் என்று சொல்லி மிகவும் கதறினார்.

அதனைக் கேட்டு அந்த ஸன்யாஸியானவர் அவருடைய நெற்றியில் எழுதப்பட்டிருக்கும் அக்ஷரங்களை வாசித்துப் பார்த்து ப்ராஹ்மணனை நோக்கி, ஓ ப்ராஹ்மண! உமக்கு ஏழு ஜன்மம் வரையில் பிள்ளை பிறக்காது, ஸகரர் என்னும் ராஜன் புத்ர சோகத்தை அடைந்தாரல்லவா? ஆகையால் பிள்ளை பிறக்கவில்லை யென்று நீர் வருத்தப்படுவது நியாயமில்லை. ஆகையால் குடும்பத்தின் ஆசையை யொழித்து ஸன்யாஸஞ் செய்துகொள்ளும் என்றார். அதனைக் கேட்டும் ப்ராஹ்மணன் கொஞ்சமேனும் அதற்கு ஸம்மதிக் காமல் விஷய ஸுகத்திலேயே ஆசைப்பட்டு பிள்ளை பிறக்கும்படி அனுக்ரஹிக்க வேண்டுமென்று பலவாறாக வேண்டிக் கொண்டார். ஸன்யாஸி யானவர்; "ஓ ப்ராஹ்மண! தெய்வச் செயலை மாற்றுவதற்கு யாரால் முடியும்? அதனை மாற்ற முயன்றால் துக்கத்தையே அடையும்படி நேரிடும். ஆகையால் உமக்கு புத்ரஸுகம்

கிடைக்காது. ஆயினும் உமக்கு ஒரு பழத்தைக் கொடுக்கிறேன். இதனை உம்முடைய பத்னியிடம் கொடுத்து புஜிக்கும்படி செய்யும். உத்தமமான புத்ரன் பிறப்பான் என்று சொல்லிப் பழத்தைக் கொடுத்தார். ப்ராஹ்மணன் அதைப் பெற்றுக் கொண்டு தம்முடைய வீட்டிற்கு வந்து தமது பத்னியிடம் கொடுத்து அவளை நோக்கி, இது முதல் ஒரு வருஷம் வரையில் ஒருவேளை போஜனம் செய்துகொண்டு, ஸத்யம், சௌசம், தயை, இவைகளில் தவறாமல் நியமத்துடன் நீ இருக்கவேண்டும். இப்பழத்தை புஜி. நல்ல பிள்ளை பிறக்கும், என்று சொல்லிவிட்டு, கிராமாந்தரம் போய்விட்டார். அந்தத் துந்துலீ என்பவள் தன்னுடைய தோழிகளின் முன்பாக இவ்விஷயங்கள் எல்லாவற்றையும் சொல்லி வருத்தப்பட்டாள். எப்படியென்றால் இந்தப் பழத்தை நான் புஜித்த மாத்திரத்தில் வயிற்றில் கர்ப்பம் உண்டாய்விடும். வயிறு பெருத்துவிடும். ஆசாரம் குறைந்துவிடும். தேஹத்தில் வலிமை குறையும். வீட்டு வேலைகளை எப்படிச் செய்ய முடியும்? வயிற்றுக்குள்ளிருக்கும் கர்ப்பமானது வெளி வருவது மிகவும் கஷ்டம், ஒருக்கால் சிசு வயிற்றில் குறுக்காக விழுந்துவிட்டால் நான் உயிரையிழக்கும்படி நேரிடுமே! ப்ரஸவ காலத்தில் உண்டாகும் உபத்ரவத்தை நான் எப்படி ஸஹிப்பேன்? இந்த ஒருவருஷம் நியமமா யிருப்பது மிகவும் கஷ்டம். நான் ப்ரஸவித் திருக்கும்பொழுது வீட்டிலிருக்கும் எல்லா தனங்களையும், பர்த்தாவின் ஸஹோதரியானவள்

அபஹரித்துவிடுவாள். ப்ரஸவித்தபிறகு குழந்தையைக் காப்பாற்றுவது மிகவும் கஷ்டம். ஆகையால், மலடியாகவாவது விதவையாகவாவது இருப்பதே மேலானதென்று நினைக்கிறேன். என்று சொல்லி அப்பழத்தை அவள் புஜிக்கவில்லை. பின்பு ப்ராஹ்மணன் தமது பத்னியை நோக்கிப் பழத்தை புஜித்தாயா என்று கேட்க அவள் புஜித்தேன் என்றும் அவருக்குச் சொன்னாள். இந்தச் சமயத்தில் அந்த துந்துலியின் ஸஹோதரி ஒருத்தி தெய்வச் செயலாய் அவள் வீட்டுக்கு வந்தாள். அப்பொழுது துந்துலீ அவளிடத்தில் இவ்விஷயம் முழுவதையும் சொன்னாள். அதைக் கேட்டு அவள் துந்துலியை நோக்கி நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். நான் இப்பொழுது கர்ப்பமாயிருக்கிறேன், நான் ப்ரஸவிக்கிற வரையில் நீ வீட்டிற்குள்ளேயே இருந்து கர்ப்பிணியாகயிருப்பதுபோலப் பிறருக்குச் சொல்லிக்கொண்டு இரு. உன் வீட்டிலிருக்கும் பணம் முழுவதையும், நீ என் புருஷனுக்கு கொடுத்துவிடுவாயானால், எனக்குப் பிறக்கும் குழந்தையை உனக்குக் கொடுத்து விடுகிறேன். உன் வீட்டில் வந்திருந்து, குழந்தையையும் வளர்க்கிறேன். இந்தப் பழத்தைப் பசுவுக்குக் கொடுத்து விடு, என்று சொன்னாள். அவளும் அப்படியே செய்தாள். பின்பு அவள் ப்ரஸவித்ததும் அந்தக் குழந்தையை அதன் தகப்பன் ரஹஸ்யமாகத் துந்துலியினிடம் கொடுத்தான். துந்துலியும் 'ஸுகமாய் ப்ரஸவித்தேன்' என்று தன்னுடைய பர்த்தாவிடம் தெரிவித்தாள். அந்த ஆத்மதேவர் மிகுந்த ஸந்தோஷமடைந்து

ஜாதகர்மம் முதலியவைகளைச் செய்தார். அப் பொழுது துந்துலியானவள் தனது பர்த்தாவை நோக்கி, 'ஸ்தனத்தில் பாலில்லை, எத்தனை நாள் அன்யர்களுடைய பாலைக் கொண்டு குழந்தையை வளர்க்க முடியும். என்னுடைய தங்கையின் குழந்தை இறந்து போய் விட்டதால் அவளுக்குப் பால் மிகுதியா யிருக்கிறது. அவளை வரவழைத்து வீட்டில் வைத்துக் கொண்டு குழந்தையை வளர்க்கும்படி செய்ய வேண்டும்' என்று சொன்னாள், அவரும் அதற்கு சம்மதித்து அப்படியே செய்தார். அந்தக் குழந்தைக்கு துந்துகாரி என்று பெயர் வைக்கப்பட்டது. அதற்குப்பின் மூன்று மாதம் கழித்து வீட்டிலிருந்த பசுவானது ப்ரஸவித்தது. நல்ல தேஜஸ்வியும், அழகுள்ளவனுமான புத்ரன் பிறந்தான். ஆனால் அக்குழந்தைக்கு காது மட்டும் பசுவின் காது போலிருந்தது, அதனால் அவனுக்கு கோகர்ணனென்னு பெயரிடப்பட்டது. அவன், வித்வானாயும், சுத்தனாயும், ஆசாரமுள்ளவனாயு மிருந்தான். துந்துகாரியோ மிகவும் துஷ்டனாகியும், திருடனாகியும், அசுத்தனாகியும், மஹா பாபியாகியுமிருந்தான். இப்படிச் சில காலம் சென்ற பிறகு துந்துகாரியானவன் தாஸிகள் இடத்தில் ஆசைப்பட்டுப் பணம் முழுவதையும் செலவழித்துத் தாய் தகப்பன் இருவர்களையும் அடித்து வீட்டிலிருக்கும் பாத்திரங்களையும் பிடுங்கிக் கொண்டு போனான். அப்பொழுது அவனுடைய தகப்பனாராகிய ஆத்மதேவர், அபுத்ரனாயிருப்பதே மேலானது; இந்தத்

துஷ்டப்பிள்ளையையடைந்து நான் மிகவும் கஷ்டப்படுகிறேன். என்னை இப்பொழுது யார் காப்பாற்றுவார்கள்? என்று கத்தினார். அப் பொழுது கோகர்ணன் ஸம்ஸாரத்தின் துக்கங்களை அவருக்குச் செவ்வையாக எடுத்துரைத்து வைராக்யத்தை உண்டுபண்ணினான். பின்பு அவர் புத்ரனுடைய உபதேசத்தால் வீட்டை விட்டுக் காட்டுக்குச் சென்று ஒவ்வொரு நாளும் பாகவதத்தில் பத்தாவது ஸ்கந்தத்தைப் படித்து அதனால் ஸ்ரீகிருஷ்ண ஸாயுஜ்யத்தையடைந்தார். பிறகு அந்தத் துந்துகாரியென்பவன், தாயாரை நோக்கி வீட்டில் பணம் எங்கேயிருக்கிறது? சொல்லு, இல்லாவிடில் உன்னை கொல்வேன், என்று அதட்டினான். அதனால் அவள் ஒருநாள் இரவில் ஒரு கிணற்றில் விழுந்து மரண மடைந்தாள். கோகர்ணனென்பவன் விஷயங்களில் ஆசையில்லாதவனாகித் தீர்த்தயாத்ரை செய்து கொண்டிருந்தான். துந்துகாரியென்பவன் வீட்டிலேயே ஐந்து தாஸிகளை வைத்துக் கொண்டு அவர்களைப் போஷிப்பதற்காக கெட்ட காரியங்களையே செய்து வந்தான். அந்தத் தாஸிகள் நகை வேண்டுமென்ற விருப்பத்தால் அவனை நிர்ப்பந்தித்தார்கள். அதற்காக அவன் தேசாந்தரம் சென்று நல்லவஸ்தரங்கள் நகைகள் முதலியவைகளைத் திருடிக் கொண்டு வந்து கொடுத்தான். இப்படி மிகுதியான பணத்தையும் நகைகளையும் இவன் திருடிக்கொண்டு வந்திருக் கிறான் என்று தெரிந்து அந்தத் தாஸிகள் ஒரு நாள் ராத்ரி இவன் இவ்வளவு வஸ்துக்களையும்

திருடிக்கொண்டு வந்திருப்பதனால் அரசனுடைய சேவகர்கள் இவ்விடம் வந்து நம்மை பிடித்துக் கொள்வார்களே என்று யோஜித்து ஒருவருக்கும் தெரியாமல் கயிறுகளால் இவனைக் கட்டி கழுத்தில் சுருக்கிட்டார்கள். அப்படியும் அவன் சீக்கிரத்தில் மரிக்கவில்லை. அப்பொழுது அவர்கள் அக்னியை அவன் முகத்திற்போட்டு உபத்ரவிக்க அவன் இறந்தான். பின்பு அவன் சரீரத்தை ஒருவருக்கும் தெரியாமல் ஓரிடத்தில் அடக்கம் செய்தார்கள். மறுநாள் துந்துகாரி எங்கேயென்று கேட்பவர்களுக்குப் பணம் ஸம்பாதிப்பதற்காக தேசாந்தரம் போயிருக்கிறானென்றும், ஒரு வருஷத்தில் திரும்பி வருவானென்றும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இறந்துபோன துந்துகாரி அவனுடைய பாபத்தால் ப்ரேத ஜன்மத்தையடைந்து வாயு சரீரத்துடன் அங்குமிங்கும் அலைந்து கொண்டு வெயில், குளிர், பனி, மழை இவைகளை ஸஹித்தும்; பசி, தாஹத்தால் துன்பத்தை யடைந்தும் மிகவும் துக்கித்துக் கொண்டிருந்தான். சில காலத்தில் கோகர்ணன் துந்துகாரி இறந்து போனானென்பதைக் கேள்விப்பட்டு அவனை உத்தேசித்து கயாக்ஷேத்திரத்தில் ச்ராத்தம் செய்ததுமின்றி ஒவ்வொரு தீர்த்தங்களிலும் அவனை உத்தேசித்துப் பிண்டதானம் முதலிய வைகளையும் செய்தான்.

பிறகு சில காலத்தில் தன்னுடைய பட்டணம் வந்து தன்னுடைய வீட்டின் திண்ணையில் அன்று ராத்ரிப் படுத்திருந்தான். அப்பொழுது

ப்ரேத ரூபியாயிருக்கும் துந்துகாரி, அவ் விடத்தில் படுத்திருக்கும் தன் பந்துவைப் பார்த்து, ஒருக்கால் ஆடுபோலவும், பின்னு மொருக்கால் யானை போலவும், எருமை போலவும், இந்திரன் போலவும், அக்னி போலவும், புருஷன் போலவும், பலவகையான ரூபத்தை எடுத்துக் கொண்டான். கோகர்ணன் அவனைப் பார்த்து, 'நீ, யார்? ப்ரேதமா அல்லது பிசாசமா அல்லது ராக்ஷஸனா? என்று கேட்டான். இதைக்கேட்டு விடை சொல்லமுடியாமல் அழுது கொண்டு அது ஜாடை காட்டினது. அப்பொழுது கோகர்ணன் இருகையிலும் ஜலத்தையெடுத்து ப்ரோக்ஷித்தான். அதனால் அது தன்னுடைய பாபங்கள் விலகி விடை சொல்ல ஆரம்பித்தது. 'நான் உன்னுடைய ஸஹோதரன், எனக்கு துந்துகாரியென்று பெயர். நான் செய்த பாப கர்மங்களால் ப்ராஹ்மண ஜன்மம் போய்விட்டது; அனேக ப்ராணிகளை ஹிம்ஸித்துத் தாஸிகளைப் போஷித்து வந்தேன்; கடைசியில் அவர்களாலேயே கொல்லப்பட்டேன்; அதனால் ப்ரேத ஜன்மத்தை அடைந்து கஷ்டப்படுகிறேன்; நீ எனக்குப் பந்துவாகையால் என்னிடத்தில் தயைசெய்து என்னைக் காப்பாற்று' என்றது.

அதனைக் கேட்ட கோகர்ணன், 'ஓ' துந்துகாரியே உனக்காக கயா க்ஷேத்திரத்தில் விதிப்படி பிண்டதானஞ் செய்தேன். அப்படியிருக்க உனக்கு ப்ரேதமாயிருக்கும் தன்மை ஏன் போகவில்லை? இனி நான் செய்யவேண்டிய

தென்ன ? என்று கேட்டான். அதைக் கேட்டு அந்த ப்ரேதமானது நூறு கயா ச்ரார்த்தம் செய்தாலும் என்னுடைய பாபம் நிவர்த்தி யாகாது. ஆகையால் வேறு ஓர் உபாயத்தை யோஜிக்கவேண்டும் என்றது. அதைக்கேட்டு கோகர்ணன், உன்னுடைய பாபங்கள் விலக்கத் தகுந்த உபாயத்தை ஆலோசித்து அதை அனுஷ்டிக்கிறேன். அதுவரையில் நீ கவலை யற்றவனாகியிரு என்று சொல்லிவிட்டு, ராத்ரி முழுவதும் அது விஷயமாக யோசித்தும் யாதொரு நிச்சயமும் தோன்றாதவனாயிருந்தான்.' காலையில் அந்தப் பட்டணத்திலிருக்கும் ஜனங்கள் எல்லோரும் தேசாந்தரத்திலிருந்து வந்த கோகர்ணனைப் பார்த்து, க்ஷேமம் விசாரித்தார்கள். கோகர்ணன் ராத்ரியில் நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் அவர்களிடம் தெரிவித்தான். அவர்கள் யோசித்து ஒன்றும் தோன்றாமல் ஸூர்ய பகவானைக் கேட்க வேண்டுமென்று சொன்னார்கள். உடனே கோகர்ணன் ஸூர்யனை ஸ்தோத்திரம் செய்து அவர் வேகத்தைத் தடுத்துவிட்டான். அப் பொழுது ஸூர்யபகவான், ஏழுநாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்டால் ப்ரேதத்வம் நிவர்த்தியாகும் என்று அனுக்ரஹித்தார். அதனைக் கேட்டு கோகர்ணன் பாகவத கதையைப் படிப்பதற்கு முயற்சித்தான். அதனைக் கேட்பதற்காகப் பல தேசங்களிலிருந்தும், பல கிராமங்களிலிருந்தும் நொண்டிகள், கண்ணில் லாதவர்கள், ரோகிகள் ஆகிய இவர்கள் வந்தார்கள். இன்னும் அநேகம் பெரியோர்களும்

கூடினார்கள். அவ்விடத்துக் கருகிலிருந்த ஏழு கணுக்களுள்ள ஒரு மூங்கிலில் வாயு சரீரத்தை யுடைய அந்த ப்ரேதம் ஸ்ரீமத் பாகவதத்தை கேட்பதற்காக வந்து சேர்ந்தது. அப்பொழுது கோகர்ணன் விஷ்ணுபக்தனாகிய ஒரு ப்ராஹ்மணனைக் கேட்பவராக வைத்துக் கொண்டு பாகவத கதையை வர்ணித்தார். முதல்நாள் கதை முடிந்தவுடன், அருகிலிருந்த மூங்கிலில் ஒரு கணு வெடித்ததுமின்றி ஏழாவது நாளில் ப்ரேதமானது தனது பூர்வ சரீரத்தைவிட்டு மேகம்போலக் கருத்த திருமேனியுடன், பீதாம்பரம், கிரீடம், குண்டலம், துளஸீமாலை இவைகளால் அலங்கரிக்கப்பட்டு திவ்ய ரூபத்தையடைந்து கோகர்ணனை நோக்கி "ஓ ஸாதுவே நான் உன்னால் க்ஷேமத்தை யடைந்தேன் என்று ச்லாகித்தது. இந்த சமயத்தில் விஷ்ணு தூதர்கள் வைகுண்டத்திலிருந்து விமானத்துடன் வந்தார்கள். எல்லோரும் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே, துந்துகாரி அவ்விமானத்தில் ஏறினான். அப்பொழுது கோகர்ணன் விஷ்ணு தூதர்களைநோக்கி 'ஓ விஷ்ணு தாஸர்களே இவ்விடத்திலிருக்கும் எல்லா ஜனங்களும் ஸ்ரீமத் பாகவதக் கதையைக் கேட்டார்களே; ஆதலால் பலத்தில் பேதமுண்டாகக் காரணமென்ன என்று வினவினான். அதனைக்கேட்ட ஹரி தாஸர்கள், ஓ ஸாதுவே எல்லோரும் ச்ரவணம் பண்ணினவர்களானாலும் இந்த ப்ரேதமானது, செய்தது போல மற்றவர்கள் செய்யவில்லை; ஆகையால் தான் பலன் வேறாயிற்று. 'இது பலத்தைக் கொடுக்குமோ கொடாதோ என்று

சந்தேகப்பட்டு ஜபித்த மந்தரமும் பலவிடங்களில் மனத்தைச் செலுத்திக்கொண்டு செய்த ஜபமும்; விஷ்ணு பக்தர்களில்லாத தேசமும், பாத்ரமான ப்ராஹ்மணர்களில்லாத ச்ராத்தமும், வேதாத்யயனஞ் செய்யாதவனுக்குக் கொடுத்த தானமும், அனாசாரமுள்ள குலமும் ஆகிய இவைகள் ப்ரயோசன மற்றவைகள். குருவின் வார்த்தையில் நம்பிக்கையும், தன்னைத் தீனனாக நினைத்துக் கொள்வதும், மனஸை அட்க்கிக் கொள்வதும், கதையைக் கேட்பதில் ஸ்திரமான புத்தியும் ஆகிய இவைகளுடன் கதையைக் கேட்பது மேலானது. இன்னொரு தடவை இந்தக் கதையைக் கேட்டால் எல்லோருக்கும் வைகுண்டம் கிடைக்கும். ஓ கோகர்ணா! உனக்குப் பகவானாகிய கோவிந்தர் கோலோகத்தைக் கொடுப்பார் என்று சொல்லி வைகுண்டம் சென்றார்கள்.

பின்பு கோகர்ணன் ஆவணி மாதத்தில் மறுபடியும் படனத்தை நடத்தினான். அவர்களும் கேட்டார்கள். கதை முடிந்தவுடன் அநேக விமானங்களுடன் நாராயணமூர்த்தியே நேரில் வந்து சங்கத்தை ஊதினார். பின் அவர் கோகர்ணனைக் கட்டிக் கொண்டு தமக்குச் சமமாக அவனைச் செய்து மற்ற எல்லோர்களையும் விமானத்தில் வைத்துக் கொண்டு கோலோகம் சென்றார். ஸப்தாஹ யஞ்ஞத்தின் மஹிமை இப்பேர்ப்பட்டது. ஸப்தாஹ யஜ்ஞத்தால் கிடைக்கும் பலம் காற்று, ஜலம், இலை இவைகளைப் புஜித்து கடும் தபஸ் செய்வதாலும், யோகத்தாலும் அடையமுடியாது. இந்த இதிகாஸத்தை சித்ரகூட பர்வதத் திலிருக்கும் சாண்டில்ய மஹர்ஷியும் படித்து

பரமானந்தத்தையடைகிறார். இது மிகவும் பரிசுத்தமானது. ஒரு தடவை கேட்ட மாத்திரத்தில் ஸகல பாபத்தையும் நிவர்த்திக்கக் கூடியது. ச்ராத்த காலத்தில் படித்தால் பித்ருக்களுக்கு த்ருப்தி உண்டாகும். இதனை நித்யம் படித்தால் மோக்ஷமும் கிடைக்கும்.

'ஓ சௌனகரே ஸ்ரீமத் பாகவதத்தை ஏழுநாளில் படிப்பதற்குச் சில விதிகள் உண்டு. எப்படி யென்றால் முதல் ஜ்யோதிஷ சாஸ்திரம அறிந்தவர்களை கொண்டு நல்லமுஹூர்த்தம் பார்த்து அதில் ஆரம்பிக்க வேண்டும். ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி இந்த மாதத்தில் ஆரம்பிப்பது மேலானது. 'இன்னகாலத்தில் பாகவதம் படிக்க ஆரம்பிக்கப் போகிறோம், அதனைக் கேட்க தாங்கள் எல்லோரும் வரவேண்டும். ஏழு நாளுமிருக்க முடியாமல் போனால் ஒரு நாளாவது கேட்க வேண்டும். இந்த ஜ்ஞான யஜ்ஞத்தில் ஒரு க்ஷணம் கிடைப்பது மிகவும் அரிது. ஆகையால் குடும்பத்துடன் எல்லோரும் வர வேண்டும் என்று ஒவ்வொரு தேசங்களிலும் கிராமங்களிலும் பத்திரிகை மூலமாக ப்ரஸித்தப் படுத்தவேண்டும். வந்தவர்களுக்கு இடம் முதலியவைகளைக் கொடுத்து உபசரிக்கவேண்டும். வாழை, மாந்தளிர் முதலிய மங்கள த்ரவ்யங்களால் மண்டபத்தை அலங்கரித்து நான்கு திக்குகளிலேயும் த்வஜங்கள் கட்டி வந்தவர்களுக்கு உட்காரத் தகுந்த இடங்களைச் செய்விக்கவேண்டும். மேலும் கதை சொல்பவருக்கு, திவ்யமான ஆஸனம் அமைத்து வைக்கவேண்டும். கதை சொல்லு

கிறவர் வைராக்ய முள்ளவராகவும், வேத சாஸ்திரங்களை யறிந்தவராகவும், விஷ்ணு பக்தராகவும், அதிக ஆசையில்லாதவராகவும், உதாரணம் சொல்வதில் ஸமர்த்தராயும், ப்ராஹ்மணராகியும் இருக்க வேண்டும். சொல்லுகிறவர்க்கு உதவி செய்வதற்காக அவர் போன்ற மற்றொருவர் அவருடைய பக்கத்திலிருக்கவேண்டும். சொல்லுகிறவர் வ்ரதம் — ஆரம்பிப்பதற்கு முன்பு க்ஷௌரம் செய்து கொள்ளவேண்டும். அருணோதயத்திற்குள் தம்முடைய நித்யகர்மங்களைச் சுருக்கமாகவாவது முடித்துக் கொண்டு கதையை ஆரம்பிக்க வேண்டும். மண்டபத்தில் ஸ்ரீமத் பாகவத புஸ்தகத்தையும் பகவானுடைய விக்ரஹத்தையும் நன்றாகப் பூஜித்து ப்ரதக்ஷிண நமஸ்காரஞ் செய்து கடைசியில், 'ஹே கிருஷ்ண! ஸம்ஸாரமாகிய ஸமுத்திரத்தில் முழுகியிருக்கும் தீனனாகிய என்னைக் காப்பாற்றும்' என்று ஸ்தோத்திரம் செய்யவேண்டும். பிறகு கதை சொல்லு பவருக்கு வஸ்த்ரம், ஆபரணம் முதலியவைகள் கொடுத்து, 'சுகரால் சொல்லப்பட்ட ஸ்ரீமத் பாகவதத்தை அறிந்த ப்ராஹ்மணோத்தம! இந்தக் கதையை உபதேசித்து என்னுடைய அஜ்ஞானத்தைப் போக்கும், என்று கேட்டுக் கொள்ள வேண்டும். பணம், வீடு, புத்ரன் இவைகளில் அபிமானத்தை யொழித்து சுத்தசித் தனாயிருந்து கதையை கேட்கவேண்டும். கதையைச் சொல்லுகிறவர் ஸூர்யோதயம் முதல் முன்றரை யாமம் கதை சொல்ல வேண்டும். மத்யா ன்னத்தில் மாத்யான்ஹிக கர்மத்திற்காக இரண்டு நாழிகை நிறுத்திவிட வேண்டும். மல மூத்ர

உபத்ரவமில்லாம விருப்பதற்காக மிதமாய் புஜிக்க வேண்டும். கதை கேட்கிறவன் ஒரு தடவை ஹவிஸை புஜிக்கலாம். சக்தியிருந்தால் ஏழு நாள் உபவாஸமிருப்பது மேலானது. அல்லது நெய், பால், இவைகளை புஜிக்கலாம். பழங்களையாவது புஜிக்கலாம். எப்படியிருந்தால் கதை கேட்க விக்னமில்லாமலிருக்குமோ அப்படி சக்திக்கனுகுணமாக நடத்த வேண்டும். ஆனால் ஸ்திரீஸங்கம், பாயில் படுப்பது இவைகள் கூடாதெனவாம். ஒவ்வொரு நாளும் கதை முடிந்த பிறகே போஜனம் பண்ண வேண்டும். வேதங்களையும், பக்தர்களையும், ப்ராஹ்மணர்களையும் நிந்திக்க கூடாது.

இப்படி ஏழு நாளான பிறகு புஸ்தகத்தையும், அதன் கதையைச் சொல்லுகிறவர்களையும் பூஜித்து, கதை கேட்டவர்களுக்கு ப்ரஸாதம் (துளசி) கொடுக்கப்படவேண்டும். பின்பு மிருதங்கம், தாளம், வீணை முதலியவைகளோடு பகவானுடைய குணத்தைக் கானம் பண்ணவேண்டும். அதன் பிறகு கதை சொன்னவருக்கும், மற்ற ப்ராஹ் மணர்களுக்கும், யாசகர்களுக்கும் தனம் அன்னம் முதலியவைகளைக் கொடுக்கவேண்டும். கேட்கிறவர்கள் ஸன்யாஸியாயிருந்தால் மறுநாள் பகவத் கீதையைப் படிக்கவேண்டும். கிரஹஸ் தராயிருந்தால் தசமஸ்கந்தத்தில் எவ்வளவு சுலோகங்களிருக்கின்றனவோ, அவ்வளவு ஹோமம் பண்ண வேண்டும். ஹோமம் பண்ணச் சக்தியில்லாவிட்டால், யஜ்ஞத்தின் மத்தியில் நேர்ந்த ஸகல தோஷங்களையும் நிவர்த்திப்பதற்காக விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தைப் படிக்கவேண்டும்.

அதன் பிறகு பன்னிரண்டு ப்ராஹ்மணர்களுக்கு போஜனம் செய்துவைத்து அவர்களுக்கு ஸுவர்ணம், பசு, இவைகளைக் கொடுக்க வேண்டும். சக்தியிருக்குமானால் மூன்று பலம் தங்கத்தால் சிங்கத்தின் உருவத்தைச் செய்து அதில் பாகவத புஸ்தகத்தை வைத்து அதைப் பூஜித்து அதை ஆசார்யனுக்கு கொடுக்க வேண்டும். இது ஜ்ஞான யஜ்ஞமாம்.

ஓ சௌனரே! ஆனந்த வனத்தில் ஸனகாதிகள் ஜ்ஞான யஜ்ஞத்தை விதிப்படி முடித்தபிறகு தெய்வச் செயலால் அவ்விடம் சுகர் வந்தார். அவர் வ்யாஸருக்குப் புத்ரர் ஞானமாகிய ஸமுத்திரத்திற்குச் சந்திரன் போன்றவர். ஆத்ம லாபத்தால் பூர்த்தியடைந்தவர். எப்பொழுதும் ஸ்ரீமத் பாகவதத்தைப் படிப்பவர். பதினாறு வயதுள்ளவர். அவரைக் கண்டு அங்கிருந்த ஸதஸ்யர்கள் எல்லோரும் விதிப்படி பூஜிக்க அவர் ஸ்ரீமத் பாகவதத்தின் முதலாவது ஸ்கந்தத்தின் இரண்டு மூன்று ச்லோகங்களில் குறிக்கப்பட்ட விஷயத்தை விஸ்தாரமாகச் சொன்னார். அப்பொழுது பகவான் தம்முடைய பக்தர்களான ப்ரஹ்லாதர், மஹாபலி, உத்தவர் ஆகிய இவர்களுடன் அவ்விடம் வந்து அவர்களை அனுக்ரஹித்ததுமல்லாமல் ஜ்ஞான யஜ்ஞும் நடக்கும் இடத்தில் நாம் இப்படியே ஸான்னித்யம் செய்கிறோம்' என்று அனுக்ரஹித்தார். ஆனதால் ஸ்ரீமத் பாகவதமானது, ஸம்ஸாரமாகிய ஸமுத்ர்த்தில் முழுகிய ஜனங்களைக் காப்பாற்றுகிறேன் என்று கர்ஜித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்.

இதனைக் கேட்டு சௌனகர் ஸூதரை நோக்கி "ஸூதரே சுகர் பரீக்ஷித்துக்கு எந்தக் காலத்தில் உபதேசித்தார்? கோகர்ணர் படித்த காலம் எது? ஆனந்தவனத்தில் குமாரர்கள் சொன்ன ஸமயம் எது? என்று கேட்டார். அவற்றைக் கேட்ட ஸூதர், சௌனகரை நோக்கி" சௌனகரே! ஸ்ரீகிருஷ்ணபகவான் வைகுண்டம் சென்ற நாள் முதல் நூற்று முப்பது வருஷங்களுக்குப் பிறகு கலியுகத்தில் புரட்டாசி மாதம் நவமியில் சுகர் பரீக்ஷித்துக்கு ஸ்ரீமத் பாகவதத்தைச் சொல்ல ஆரம்பித்தார். அது முதல் இருநூறு வருஷங்களுக்குப் பிறகு ஸ்ரீமத் பாகவத கதையைச் சொன்னார். அதில் இருந்து நூற்றுமுப்பது வருஷத்துக்குப் பிறகு (மூவாயிரம் வருஷமென்று சிலர் சொல்லுகிறார்கள்) சுக்லபக்ஷ நவமியில் ப்ரஹ்மபுத்திரர்களான ஸனகாதிகள் சொன்னார்கள். நான்குவித புருஷார்த்தங்களை கொடுக்கிறதற்கு இக்கலியில் ஸ்ரீமத் பாகவத சாஸ்திரத்தைத் தவிர மேலானது ஒன்றுமில்லை. மிகவும் ரஹஸ்யமானது, ஸகல சாஸ்த்திரங்களுடைய ஸாரமானது. ஆகையால் இதனை பக்தியுடன் படியுங்கள் என்று ஸூதர் சொல்லி முடித்தார். (பத்ம புராணம், உத்ர காண்டம் அத்யாயம் ஒன்று முதல் ஆறுவரையில்)

பாகவத பேதங்கள்

அடியில் கண்டபடி ஒரு தமிழ் புஸ்தகத்தால் தெரியவருகிறது. எப்படி யெனில்: பாகவதமானது ஏழு வகையுள்ளது.

1. இதிஹாஸ பாகவதம்: இது வ்யாஸ மஹர்ஷியால் செய்யப்பட்டது. 18,000 ஸ்லோகம் அடங்கியது. இதில் அத்யாயங்கள் 200 இருக்கின்றன. மேலும் இது 12 ஸ்கந்தங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. பரீக்ஷித் மஹாராஜனுக்குச் சுகரால் உபதேசிக்கப்பட்டது.

2. புராண பாகவதம்: இது நாரதரால் ருக்மிணீதேவிக்குச் சொல்லப்பட்டது. இதைச் செய்தவர் வ்யாஸ மஹர்ஷியே. மேலும் இது 600 அத்யாயங்களுள்ளது.

3. ஸம்ஹிதா பாகவதம்: வைசம்பாயனரால் ஜனமேஜயருக்கு உபதேசிக்கப்பட்டது. 50,000 க்ரந்தங்கள் அடங்கியது. 1100 அத்யாயங்கள் அடங்கிய 12 கண்டங்களாகப் பிரிக்கப் பட்டது.

4. உபஸம்ஹிதா பாகவதம்: இது ஸூதர் ஸனகருக்கு அகஸ்திய மஹர்ஷியால் உபதேசிக்கப் பட்டது. இதிலுள்ள 70,000 ஸ்லோகங்கள், 2,000 அத்யாயங்களாகவும் 100 பரிச்சேதங் களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

5. விஷ்ணு ரஹஸ்ய பாகவதம்: இது காச்யபருக்கு ஹாரீதரரால் சொல்லப்பட்டது. இடையிலே தண்டகங்கள் கலந்த 1,00,000 (லக்ஷம்) ஸ்லோகங்களுள்ளது. ஆயிரம் அங்கங்களுள்ளது. 10,000 அத்யாயங்களுள்ளது.

6. விஷ்ணு யாமள பாகவதம்: இது

பராசரால் மைத்ரேயருக்கு உபதேசிக்கப்பட்டது. இதில் 80,000 ச்லோகங்களிருக்கின்றன. மேலும் 800 அத்யாயங்களுள்ளது. 8 ஸ்தானங்களுள்ளது.

7. கௌதம ஸம்ஹிதா பாகவதம்: கௌதமர் கௌசிகருக்குச் சொன்னது. 100 அத்யாயங்கள் உள்ளது. 10,000 ஸ்லோகங்களுள்ளது. 4,00,000 ஸ்லோகங்களுள்ள கௌதம ஸம்ஹி தையில் க்ரந்தலக்ஷண கண்டத்தில் பாகவத லக்ஷணமென்ற முதல் அத்யாயத்தில் மேல் காட்டிய விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸப்தாஹவிதி

முன்னொரு காலத்தில் பரமசிவன் பார்வதியை நோக்கி ஏ! பார்வதீ! ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைப் படிப்பவன், முதலில் வ்யாஸரையும், சுகரையும் நமஸ்கரித்து மஹா விஷ்ணுவை த்யானம் செய்து கொண்டு, முதல் நாளில் முதலாவது ஸ்கந்தம் முதல் ஹிரண்யா க்ஷவதம் வரையில் படிக்க வேண்டும். இரண்டாம் நாளில் பரதனுடைய சரிதம் வரையிலும், மூன்றாம் நாளில் பகவான் ப்ரஹ்லாதரை அனுக்ரஹித்த கதை வரையிலும், நான்காம் நாளில் பத்தாவது ஸ்கந்தத்தில் ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் வரையிலும், ஐந்தாம் நாளில் ருக்மிணி கல்யாணம் வரையிலும், ஆறாம் நாளில் உத்தவருடைய ஸம்வாதம் வரையிலும், ஏழாம் நாளில் முடிவு வரையிலும் படிக்க வேண்டும். படிக்கும்போது அத்யாயத்தின் நடுவில் நிறுத்தக் கூடாது. அப்படி நிறுத்தினால் மறுபடியும் அந்த

அத்யாயத்தை அடிமுதல் படிக்க வேண்டும். படிக்கும்போது அர்த்தத்தைத் தெரிந்துகொண்டே படிக்கவேண்டும். சொல்லுகிறவன் வடக்கு முகமாகவும் கேட்கிறவன் கிழக்கு முகமாவும் அல்லது மாறுதலாகவும் இருக்கலாம். ஒவ்வொரு அத்யாயம் படித்தவுடனும் ஐந்து குந்துமணி நிறையுள்ள தங்கத்தைத் தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டும். முழுவதும் முடிந்தபிறகு பசுவை தக்ஷிணையாகக் கொடுக்கலாம். அந்தப் பசுவின் கொம்புகள் ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப் படவேண்டும். ஏ தேவீ! இம்மாதிரியான விதிப் பிரகாரம் ஸ்ரீமத் பாகவதத்தை யார் படிக்கிறார்களோ, கேட்கிறார்களோ அவர்களுக்கு ஸர்வாபீஷ்டமும் நிறைவேறும். இதனைப் படிக்குங்காலத்தில் ஸகல தேவர்களும், ஸகல மஹரிஷிகளும் ஸ்ரீ விஷ்ணுவின் பார்ஷதர்களும் மஹாவிஷ்ணுவும் அவ்விடத்தில் எப்பொழுதும் மிகுந்த ஆனந்தத்துடன் வஸிக் கிறார்கள், என்று சொன்னார். பத்ம புராணம், பாதாள காண்டம், அத்யாயம் 71.

ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்ட காலம்

கலியுகத்தில் முதல் ஆயிரம் வருஷங்களில் ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்டது.

த்வாபர யுகத்தில் பகவான், வ்யாஸரூபியாய் அவதரித்து வேதங்களைப் பிரித்து, அவைகளை பைலர் முதலானவர்களிடம் ஒப்புவித்தார். பின்பு அவற்றைப் படித்தல், முதலியவைகளில் அதிகாரம் இல்லாத ஸ்த்ரீகள், சூத்ரர்கள் முதலியவர்

களுக்காக, அவைகளின் அர்த்தத்தையே, மஹா பாரதமாகச் செய்து வெளியிட்டார். மேலும் அவரால் மஹா புராணங்களும், உப புராணங்களும் வெளியிடப்பட்டன. கடைசியில் ஸ்ரீமத் பாகவதமும் செய்யப்பட்டது.

ஆக்ஷேபம் — பெரியோர்கள் ஆத்மச்லாகை (தன்னைத் தானே புகழ்வது) செய்து கொள்ள மாட்டார்களாகையாலும், இதிஹாஸ புராணங்களில் வ்யாஸ மஹர்ஷியை ச்லாகித்திருப்பதாலும் சொல்வது பொருந்துமா?

ஸமாதானம்:- அப்படியில்லை. வ்யாஸமஹர்ஷி வேதங்களைப் பிரித்துத் தாம் செய்த மஹா பாரதத்தைச் சுருக்கமாய்ச் செய்யும்படி தமது சிஷ்யர்களான வைசம்பாயனர், ஜைமினி யென்னும் இவர்களுக்கு ஆக்ஞாபனஞ் செய்தார். அவர்களும் தனியே பாரதச் சுருக்கம் செய்தார்கள். இப்பொழுது வழங்கிவரும் பாரதம் வைசம்பாயனர் செய்ததேயாம். மேலும் புராணங்கள், வெகு காலத்திற்கு முந்தியே மார்க் கண்டேயர் முதலிய மஹர்ஷிகளால் செய்யப் பட்டிருந்தன. ஆனாலும் கால மஹிமையால் அவைகளில் சிலவற்றில் சில பாகங்களும் பின்னும் சிலவற்றில் சில ஸர்க்கங்களும் சிலவற்றில் ஸந்தர்ப்பம், விஷயம் இவைகளைச் சொல்லும் — ஸ்லோகங்களும் காணாமல் போயின. சில புராணங்கள் பூர்த்தியாகச் செய்யப்படாமலிருந்தன. இப்படி பற்பல வகையாக குறையுள்ள புராணங்களை வ்யாஸ மஹர்ஷி அந்தந்த புராண நடைக்குச்

சமமான நடையிலேதான் சீர்த்திருத்தினார். பின்னும் அவருடைய சிஷ்யர்கள் அவைகளுக்கு உபோத்காதம் (முகவுரை) அவைகளிலுள்ள ச்லோகம் முதலியவைகளின் ஸங்க்யை, அனுக்ர மணிகை, அந்தந்த புராணத்தைச் சொன்னவர்கள், கேட்டவர்கள் அவர்களுக்குள் நேர்ந்த ஸம்வாதம் முதலியவைகளை எழுதிச் சேர்த்தார்கள்.

பின்பு அவைகளை விட மேலானதாக வ்யாஸ மஹர்ஷி ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்து தம்முடைய புத்ரராகிய சுகருக்கு உபதேசித்தார். பின்பு ஸூதர் அந்த பாகவதத்தைச் சுகரிடமிருந்து தெரிந்து கொண்டு சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்குச் சொன்னார். ஆகையால் இந்த விஷ்ணு பாகவதம் வ்யாஸரால் செய்யப்பட்டதேயாம். மற்ற புராணங்கள் அவரால் சீர்திருத்தப்பட்டதேயாம்.

பரீக்ஷித்து மஹாராஜனுக்குக் கலியும் வந்த பிறகு தர்ம புத்ரர் ராஜ்யாபிஷேகம் செய்வித்ததாக பாகவதம், விஷ்ணு புராணம், பாரதம் முதலிய வைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னமேயே பாகவதம் செய்யப்பட்டிருக்குமாகில் பரீக்ஷித்தின் சரித்திரம் அதில் சொல்ல நியாய மில்லை, ஆகையால் இது கலியுகத்தின் ஆரம் பத்தில் செய்யப்பட்டதேயாம்.

ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தவர்

பாகவதத்தைச் செய்தவர் ஸ்ரீ வேதவ்யாஸ மஹரிஷி. வேதங்களைப் பிரித்த காரணத்தால் இவருக்கு இப்பெயருண்டாயிற்று. இவர் மஹா

விஷ்ணுவின் அவதாரம். இவருடைய பிதா பராசர மஹர்ஷி. இவருடைய தாய் ஸத்யவதி. இவள் வஸுவின் வீர்யத்தைப் புஜித்த மத்ஸயத் தினிடம் உண்டானவள். ஆனது பற்றி இவளுக்கு மத்ஸயகந்தி என்னும் பெயர் சிலகாலம் வழங்கின துண்டு. பராசர மஹர்ஷி ஒருக்கால் தீர்த்த யாத்திரை செய்துவரும் பொழுது வழியில் ஆற்றில் ஓடம் தள்ளிக் கொண்டிருக்கும் வலையன் கன்னியான மத்ஸயகந்தியைக் கண்டார். மேலுமவர் அவளுடைய லாவண்யத்தைக் கண்டு மோஹித்து அவளிடம் ஆசை கொண்டார். அப்பொழுது நல்வாசனையுண்டாகும்படி அனுக்ரஹித்தார். அதுமுதல் அவளுக்கு யோஜனகந்தியென்று பெயர் வழங்கினது. அவ்விருவர்களுக்கும் பிறந்தவர் வ்யாஸமஹர்ஷி.

அவர் வேதங்களைப் பிரித்தும் ஸ்த்ரீ, சூத்ரர் களுக்காக ஐந்தாவது வேதமாகிய பாரதத்தையும் செய்தார். அப்படியும் அவர் மனத்திற்கு சந்தோஷ முண்டாகாததனால் கவலையுள்ளவராக ஸரஸ்வதீ நதிக்கரையில் சம்யப்ராஸமென்ற ஆச்ரமத்தில் வசித்தார். அப்பொழுது தெய்வச் செயலாய் அவ்விடம் வந்த நாரதரிடம் உபதேசம் பெற்று ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தார்.

கதை நடந்த க்ஷேத்ரம்

கலியுகத்தில், ஸூதர் நைமிசாரண்யத்தில் வஸிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்கு இந்த பாகவத கதையைச் சொன்னார். மேலும்

நைமிசமென்பது ஒரு புண்யக்ஷேத்ரம் ஆனது பற்றி அவ்விடத்தில் அநேக மஹர்ஷிகள் வஸிப்பார்கள். அனேக பெரியோர்கள் அவ்விடத்திற்கு வருவது முண்டு. ப்ரஹ்மதேவர் ப்ராஹ்மணர்களை நோக்கி இந்த மனோமயாகிய சக்ரத்தை ப்ரயோகிக்கிறேன்; இதனுடைய நேமி (முனை) எவ்விடத்தில் மழுங்குமோ அதுவே தபஸ் செய்ய தகுதியான க்ஷேத்ரம் என்று சொல்லி ஸூர்யனுக் கொப்பான சக்ரத்தை மனத்தால் ஸிருஷ்டித்து, பரமசிவனைக் குறித்து நமஸ்காரம் செய்து அதை ப்ரயோகித்தார். அதைப் பார்த்திருந்த ப்ராஹ்மணர்களும் மிகுந்த ஸந்தோஷத்துடன் அதன்பின் சென்றார்கள். அது கீழே விழுந்து அதன் நேமி மழுங்கின இடத்திற்கு நைமிசமென்று பெயருண்டாயிற்று. அவ்விடத்தில் மஹர்ஷிகள் வஸித்தார்கள். வாயு புராணம். அந்த க்ஷேத்ரத்தை நைமிஷமென்று சொல்வதுண்டு. ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் கௌரமுகரென்ற மஹர்ஷியை நோக்கி ஒரு நிமிஷத்திற்குள் அஸுர ஸைன்யங்கள் இவ்விடத்தில் கொல்லப்பட்டபடியால் இவ்விடத்திற்கு நைமிஷமென்று பெயருண்டாகட்டும். இது ப்ராஹ்மணர்கள் முக்யமாய் வஸிக்கும் இடம் என்று சொன்னார் வராஹபுராணம்.

மஹர்ஷிகளுக்கு உபயோகமாகிய மரங்கள் நிமிஷங்களென்று சொல்லப்படுகின்றன. அவைகள் ஏராளமாக இருக்குமிடமே நைமிஷமெனப் படுகிறது. அல்லது நிமிஷரென்னும் மஹர்ஷி தபஸ் செய்த இடமாகையால் நைமிஷமென்று அதற்குப் பெயருண்டாயிற்று. விஜயத்.

ஸூதருடைய வரலாறு

"இந்த விராட்ரூபியான மஹாபுருஷனுடைய முகத்திலிருந்து ப்ராஹ்மண ஜாதியும், கைகளிலிருந்து க்ஷத்திரிய ஜாதியும், துடைகளிலிருந்து வைச்ய ஜாதியும், பாதங்களிலிருந்து சூத்ரர்களும் உண்டானார்கள். என்று ஸ்ருதியில் சொல்லப்பட்டிருப்பது போல அவருடைய ரோமாஞ்சத்திலிருந்து (மயிர்க்கூச்சிலிருந்து) ஸூத ஜாதியி உண்டாயிற்று. அவரே ரோமஹர்ஷணர். மஹாபாரத தாத்பர்ய நிர்ணயம் – அத்யாயம் 90, பகவானுடைய கதையைக் கேட்டுக் கொண்டு இருக்கும்போது பக்தி விசேஷத்தால் மயிர்க்கூச்சிலுண்டானபடியால் அவருக்கு ரோமஹர்ஷணர் என்று பெயருண்டாயிற்று. இவர் ஸூத ஜாதியிற் பிறந்தவர் –அபியுக்தர்கள். அவருக்கு ஸ்ரீ வேத வ்யாஸ மஹர்ஷியானவர் ஸகல புராணங்களையும், இதிஹாஸங்களையும் உபதேசித்தார்.

பிறகு ரோமஹர்ஷணர் நைமிசாரண்யத்தில் வஸிக்கும் மஹர்ஷிகளுக்குப் புராணங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்படியிருக்கையில் ஒருநாள் பலராமன் அவ்விடம் வந்தார். அவரைக் கண்டவுடன் ஸகல மஹர்ஷிகளும் எழுந்திருந்து விதிப்படி மரியாதை செய்தார்கள். அப்பொழுது ரோமஹர்ஷணர் மாத்திரம் ஆஸனத்திலிருந்து எழுந்திருக்கவில்லை. அதைக் கண்ட பலராமன் மிகவும் கோபங்கொண்டார். பிறகு அவர் 'தாழ்ந்த குலத்தில் பிறந்தவராகிய இந்த ரோமஹர்ஷணர் நம்மைக்கண்டு எழுந்திருக்காமலும், இந்த மஹர்ஷிகளின் முன்பாக உயரமான ஆஸனத்திலுட்கார்ந்து

மிருக்கிறார், இவரை நிக்ரஹிக்கவேண்டும்' என்று எண்ணிக் கையிலிருந்த தர்ப்பத்தால் அவரையடித்தார். அதனால் ரோமஹர்ஷணரும் உடனே இறந்தார். அப்பொழுது மஹர்ஷிகளனைவரும் பலராமனை நோக்கி பிரபுவே! நீர் செய்தது தர்மத்திற்கொத்ததல்ல. இவருக்கு நாங்கள் ப்ரஹ்மாஸனத்தைக் கொடுத்து அவருடைய தேஹத்தில் ச்ரமம் உண்டாகாமலிருக்கும்படியும், அவர் வெகுகாலம் ஜீவித்திருக்கும்படியும் அனுக்ரஹித்திருந்தோம். நீர் லோகத்தை அனுக்ரஹிப்பதற்காக அவதரித்தவராகையால், எங்களுடைய வார்த்தை பொய்யாகமலிருக்கும்படிச் செய்ய வேண்டும். இந்த தோஷத்தை நிவர்த்தித்துக் கொள்வதற்காக நீர் ப்ராயச்சித்தத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்றார்கள். அதைக் கேட்ட பலராமன் அவர்களை நோக்கி பிதாவிற்கும் புத்திரனுக்கும் பேதமில்லையென்று ஸ்ருதியில் சொல்லப்பட்டிருப்பதனால், ரோமஹர்ஷணருடைய குமாரராகிய உக்ரச்ரவஸ் என்பவர் அந்த ஆஸனத்தில் உட்கார்ந்து உங்களுக்குப் புராண கதைகளைச் சொல்லட்டும். அவருக்கு எவ்வளவு நாள் கதை சொன்னாலும் தேஹத்தில் ச்ரமமில்லாமலிருக்கட்டும். மேலும் வெகுநாள் ஜீவித்திருப்பார் என்று சொல்லி தீர்த்த யாத்திரைக்குச் சென்றார். (பாகவதம் ஸ்கந்தம் 10, அத்தியாயம் 78)

மேல் காட்டியபடி ரோமஹர்ஷணருக்குப் பிறகு அந்த உக்ரச்ரவஸ், அந்த ஆஸனத்திலிருந்து மஹர்ஷிகளுக்குப் புராணங்களைச் சொல்லிக்

கொண்டிருந்தார். அந்த ரோமஹர்ஷணர் ஸூத ஜாதியில் பிறந்தவராகையால் அவருக்கு ஸூத ரென்று பெயருண்டு. அவருடைய பிள்ளைக்கும் ஸூதரென்று பெயர் வழங்கி வருகிறது. பல ராமன் பாரதயுத்தம் நடக்கும்போது நைமிசாரண்யஞ் சென்றார். ஆகையால் அதுவரையில் அவ்விடத்தில் கதை சொல்லிக் கொண்டிருந்தவர் ரோமஹர்ஷணரேயாம். பிறகு அவருடைய புத்ரராகிய உக்ரச்ரவஸே புராணஞ்சொன்னார். ஆகையால் ஸ்ரீமத் பாகவதத்தைச் சொன்னவர் உக்ரச்ரவஸ் என்ற ஸூதரேயாம். இவர் ஸகல புராணங்களையும் இதிஹாஸங்களையும் அறிந்தவர். த்ரையாருணி, கச்யபர், ஸாவர்ணி, அகிருதவ்ருணர், சிம்சுபாயனர், ஹாரீதர் ஆகிய ஆறு பேர்களும் வ்யாசமஹர்ஷியின் சிஷ்யராகிய என் தகப்பனார் இடமிருந்து ஒவ்வொரு ஸம்ஹிதையை அத்யயனஞ் செய்தார்கள். நான் இவர்கள் எல்லோருக்கும் சிஷ்யனாக இருந்து எல்லா புராண ஸம்ஹிதைகளையும் தெரிந்து கொண்டேன் என்று ஸூதர் சொன்னார். (பாகவதம் ஸ்கந்தம் 12 அத்யாயம் 6, ச்லோகம் 5 , 6)

சுகருடைய சரிதம்

முன்னொரு காலத்தில் மஹாமேரு பர்வதத்தில் ஸ்ரீவேத வ்யாஸ மஹர்ஷி உத்தமனாகிய புத்ரனையடைய வேண்டித் தபஸ் செய்தார். அதனால் பரமசிவன் ஸந்தோஷப்பட்டு அவரை நோக்கி 'ஓ மஹர்ஷியே உம்முடைய இஷ்டப்படி மிகுந்த தேஜஸுள்ளவனும், கீர்த்தியுள்ள

வனுமாகிய புத்ரன் உண்டாவான்' என்று அனுக்ரஹித்தார். பிறகு ஒருக்கால் ஒப்பற்ற ரூபமுள்ள கிருதாசி என்ற அப்ஸரஸ்த்ரீ அவ்விடம் வந்தாள். அவளைக் கண்டவுடன் இவருக்கு மன்மத தாபமுண்டாகியது. அப்பொழுது மஹர்ஷியானவர் கிளி வேஷத்தையெடுத்துக் கொண்டார். பிறகு மிகவும் தைர்யத்தால் மன்மத தாபத்தை மஹர்ஷியடக்க முயன்றும் அது குறையாமல் விருத்தியாயிற்று. மேலும் அவருடைய வீர்யம் நழுவினது. அதிலிருந்து உண்டான புத்ரர்தான் சுகரென்ற பெயரையடைந்தார். இவர் பிறந்தவுடனே கங்கா நதியானவள் திவ்ய சரீரத்துடன் அவ்விடம் வந்து அவருக்கு ஸ்னானஞ் செய்துவைத்தாள். ஆகாயத்திலிருந்து தண்டம், கிருஷ்ணாஜினம் ஆகிய இவைகள் விழுந்தன. விச்வாஸு முதலிய கந்தர்வர்கள் கானஞ்செய்தார்கள், தேவதுந்துபிகள் முழங்கின. இந்திரன் முதலிய லோக பாலர்களும் அவ்விடம் வந்ததுமின்றி புஷ்பங்களை வர்ஷித்தார்கள். பரமசிவன் பார்வதியுடன் அக்குழந்தைக்கு விதிப்படி உபனயனம் செய்தார். மஹேந்திரன் அற்புதமான கமண்டலுவை கொடுத்தார் இவருடைய பிதாவாகிய வ்யாஸ மஹர்ஷி பிறந்தவுடன் ஸகல வேதங்களும் தோன்றியது போலச் சுகருக்கும் வேதங்களும், ஸகல புராணங்களும், இதிஹாஸங்களும் தோன்றின. மேலும் அவர் ப்ரஹஸ்பதி பகவானை ஆசார்யராகவரித்தார். ஆனதால் அந்தச் சுகர் எல்லாவித்தைகளையும் அப்யஸித்தவர். அவர் பால்யவயதுள்ளவரானாலும் தேவர்களாலும் மஹர்ஷிகளாலும் மற்றவர்களாலும்

கொண்டாடக் கூடியவராக இருந்தார். மேலும் அவருடைய மனஸானது மோக்ஷ தர்மத்திலேயே விருப்பமுள்ளதாக விருந்ததேயொழிய விஷயத்தில் செல்லவில்லை. பிறகு அவர் தம்முடைய பிதாவாகிய வ்யாஸ மஹர்ஷியை நோக்கி மோக்ஷ தர்மங்களைச் சொல்லவேண்டும் என்று கேட்டார். அதைக்கேட்ட வ்யாஸ மஹர்ஷியானவர் தன் புத்ரரை நோக்கி மோக்ஷ தர்மம் தெரிந்து கொள்ள வேண்டுமானால் மிதிலா நகரத் தரசராகிய ஜனகரிடம் போய் தெரிந்து கொள்ளும் என்றார். அதைக் கேட்ட சுகர் அப்படியே மிதிலா நகரம் சென்று ஜனகருடைய அரண்மனைக்கு போகும் போது அவ்விடமிருந்த காவலாட்களால் தடுக்கப்பட்டார். ஆனாலும் கோபங்கொள்ளவில்லை. வெகுதூரம் நடந்து வந்த தால் சரீரத்திற்கு நேர்ந்த ச்ரமத்தையும், பசி தாஹம் இவைகளால் நேர்ந்த துக்கத்தையும் ஸஹித்தார். பிறகு அவ்விடமிருந்த ஒரு காவலாள் அவரை வணங்கி உள்ளே அழைத்து நிழலில் உட்காரச் செய்தான். அதனாலும் அவர் ஸந்தோஷிக்கவில்லை. பிறகு மந்திரியானவர் மிக வணக்கத்துடன் வந்து சுகரை வணங்கி அந்தப் புரத்திற் கழைத்துபோய் திவ்யமான ஆஸனத்தில் உட்காரவைத்தார். பிறகு மிகவும் ரூபவதிகளான சிறு பெண்கள் அனேகர்கள் அவ்விடம் வந்து உத்தமமாகிய அன்னத்தால், வாத்ய கோஷங்களாலும் நர்த்தனங்களாலும் பிரியமான வார்தைகளாலும் உபசரித்தார்கள். மேலும், அவரைத் தோட்டத்திற்கழைத்துப்போய் அழகான மரங்களையும், பக்ஷிகளையும், தாமரஸ ஓடை

களையும் காண்பித்தார்கள். இப்படி அவர்களால் உபசரிக்கப்பட்டும் அவைகளில் பிரியப்படாமலேயே மோக்ஷ மார்க்கத்தையே த்யானித்துக் கொண்டு அன்றைய ராத்திரியைக் கழித்தார். மறுநாள் காலையில் ஜனகமஹாராஜன் இவரை சபைக்கு வரவழைத்து உபசரித்து மோக்ஷ தர்மத்தை உபதேசித்தார். (மஹாபாரதம், சாந்திபர்வம், அத்யாயம் 323 - 325)

ஸ்ரீ கிருஷ்ணாவதார காலம்

ஸ்ருஷ்டி முதல் 28வது மஹாயுகத்திற்குட் பட்ட த்வாபர யுகத்தின் முடிவில், தேவகியின் இடம் பகவான் அவதரித்தார். 28 வது மஹா யுகத்தில் த்வாபரயுகத்தின் கடைசியில் யது வம்சத்தில் பகவான் அவதரிக்கப் போகிறாரென்று கர்க்காசார்யர் முன்னமே சொல்லியிருக்கிறார் விஷ்ணு புராணம் 5வது பாகம், அத்யாயம் 23.

மேற்காட்டிய த்வாபர யுகமானது நிகழும் கலியுகத்திற்கு முந்தியேயாம். பகவான் பூலோகத்தில் கிருஷ்ணனாக அவதரித்து 125-வருஷங்கள் பூமியில் வஸித்து, பிறகு வைகுண்டம் சென்றார். ஓ ப்ரபுவே! யதுவம்சத்தில் அவதரித்து 125 வருஷங்களாயின. ஸ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம் 11 அத்யாயம் 6.

"வஸுக்கள், அச்வினீ தேவர்கள், மருத்துக்கள், ஆதித்யர்கள், ருத்ரர்கள், ஸாத்யர்கள் ஆகிய இவர்களுடன் மஹேந்திரனனான். என் முகமாகப்

பின்வருமாறு விக்ஞாபனம் செய்கிறான். கெட்ட நடத்தையுள்ள அஸுரர்களைக் கொன்று பூமியின் பாரத்தை நிவர்த்தி செய்தீர். ஸ்வர்க்கத்தில் இருக்கும் எல்லாத் தேவர்களும் உங்களால் யஜமானனுள்ளவர்களாக ஆகட்டும். நீங்கள் பூமியில் அவதரித்து 125 வருஷங்கள் ஆயின. உங்களுக்கு இஷ்டமிருந்தால் வைகுண்டம் வரலாம் விஷ்ணு புராணம் பாகம் 5, அத்யாயம் 37.

இப்படித் தேவர்கள் ப்ரார்த்தித்தவுடன் ஸ்ரீ பகவான் உத்தவரை நோக்கி, இன்றைய முதல் 7வது நாளில் ஸமுத்ரம் இந்தப் பட்டணத்தைக் கவர்ந்து கொள்ளும். அவ்வுலகத்தை நான் விட்டவுடன் இவ்வுலகம், மங்களகார்யமற்றதும், கலியினால் அவமதிக்கப்பட்டதுமாய் விடும் ஸ்ரீ மத் பாகவதம் ஸ்கந்தம் 11, அத்யாயம் 7.

"என்றைய தினத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஸ்வர்க்கம் சென்றாரோ அன்றைய தினமே கலியுகம் வந்தது. விஷ்ணு புராணம் பாகம் 4, அத்யாயம் 24.

இதனால் தேவர்கள் ப்ரார்த்தித்தவுடன் தாமதம் இன்றிப்பகவான் வைகுண்டஞ் சென்றாரென்று தெரிய வருகிறது.

ஆகையால் 28 வது மஹாயுகத்தில் த்வா பாயுகத்தின் கடைசி பாகத்தில் பகவான் அவதரித்து 125 வருஷங்கள் பூலோகத்தில் வஸித்தார். பின்பு வைகுண்டம் செல்லும்போது கலி வந்து விட்டது (த்வாபரயுகம் முடிந்தது.)

Released by Maran's Dog, Toronto , Canada

"என்றைய தினம் ரோஹிணி நக்ஷத்திரமோ அன்றைய தினம் ராத்திரி இருட்டில் தேவகியினிடம் பகவான் அவதரித்தார். பாகவதம் ஸ்கந்தம் 10, அத்யாயம் 3.

"நான் வருஷா காலத்தில் ச்ராவண மாஸத்தில் க்ருஷ்ண பக்ஷத்திய அஷ்டமி திதியில் தேவகியினிடம் அவதரிக்கப் போகிறேன் விஷ்ணு புராணம், பாகம் 5, அத்யாயம் 1.

"ச்ராவண மாஸத்தில் க்ருஷ்ணபக்ஷத்திய அஷ்டமி திதியில் ரோகிணி நக்ஷத்திரத்தில், அர்த்தராத்திரி காலத்தில், சந்த்ரோதயமாகும் ஸமயத்தில், அபிஜித் முஹூர்த்தத்தில், தேவகியிடம் மஹாவிஷ்ணு வானவர் அவதரித்தார். அதே காலத்தில் அவருடைய மாயையும் யசோதையினிடம் கோகுலத்தில் புத்ரியாகப் பிறந்தாள். ஹரிவம்சம் பாகம் 1, அத்யாயம், 25.

மேற்காட்டிய ப்ரமாணங்களால் 28 வது மஹாயுகத்தில் த்வாபர யுகத்தில் 8, 63, 875வது வருஷத்தில் ச்ராவண மாஸத்தில் கிருஷ்ண பக்ஷம் அஷ்டமீ திதியில், ரோகிணி நக்ஷத்திரத்தில், அர்த்தராத்ரியில், பகவான் அவதரித்தாரென்று நிச்சயிக்கப்படுகிறது. ஆகையால் பகவான் அவதரித்த காலம் முதல் நிகழும் 24 வது பரிவிருத்தியில் ஸௌம்யவருஷம் வரையில் **5230** வருஷங்கள் ஆயினவென்று பெரியோர்களால் சொல்லப் படுகிறது.

♣ ♣ ♣ ♣

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்ரீ கிருஷ்ணாய பரமாத்மனே நம:

அத்யாயம்-1

சௌனக ப்ரச்னம்.

Released by Maran's Dog, Toronto , Canada

"எதனிடமிருந்து ஸகல ப்ரபஞ்சங்களும் உண்டாகின்றனவோ, எதனால் காப்பாற்றப்படுகின்றனவோ, எதனிடத்தில் லயிக்கின்றனவோ, அது ப்ரஹ்மம்" என்ற ச்ருதியில் சொல்லியபடியுள்ள தடஸ்த லக்ஷணமுள்ளவரும், அன்வய வ்யதிரேகங்களால் ஸகல ஜகத்காரணரும், எல்லாவற்றையும் அறிந்தவரும், ஸ்வயமாய் ப்ரகாசிப்பவருமான எந்தப்பரமேச்வரர், நான்கு முகங்களுள்ள ப்ரஹ்மதேவருக்கு வேதங்களை மனத்தால் உபதேசித்தாரோ, (அந்த வேதங்களைத் தெரிந்து கொள்வதில், வித்வான்களும் மோஹிக்கிறார்கள்.) தேஜஸ், ஜலம், பூமி ஆகிய இவைகள் ஒன்றில் ஒன்று மாறுதலாகத் தோன்றுகிறது போல எந்தப் பரமாத்மாவிடம் (அவர் ஸத்யராகையால் முக்குணங்களுடைய கார்யமும், ஸத்யமாகத் தோற்றுகிறதோ, அந்த ஸத்ய ஸ்வரூபியாகிய பரமாத்மாவைத் த்யானிக்கிறோம். அவர் தம்முடைய தேஜஸினால் மாயாகார்யமாகிய ப்ரபஞ்சத்தைத் தாண்டினவர்.

2. வேதவ்யாஸ மஹாமுனியால் செய்யப்பட்டதும், அழகு பொருந்தியதுமான, ஸ்ரீமத் பாகவத க்ரந்தத்தில் மோக்ஷத்தைக் கூட விரும்பாமல் செய்யும், ஈச்வரருடைய ஆராதனரூபமாகிய உத்தம தர்மமானது காட்டப் பட்டிருக்கிறது. பிறருடைய மேன்மையை ஸஹிக்காம

Released by Maran's Dog, Toronto , Canada

விருப்பதாகிய மாத்ஸர்யமில்லாத ஸாதுக்களால், அறியக்கூடியதும் (ஜீவன், மாயை, ஜகத் என்னுமிவை கள் பரமாத்மாவைவிட வேறானவையல்ல) மேலான ஸுகத்தைக் கொடுக்கக்கூடியதும், மூன்று வகையான தாபங்களைப் போக்கக்கூடியதும், உண்மையுமான வஸ்துவானது இதில் நன்றாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. மற்ற சாஸ்த்ரங்களாலும் இதர ஸாதனங்களாலும் ஈச்வரனை ஹிருதயத்தில் நிலைக்கச் செய்யமுடியுமா? ஆகையால் அவைகளால் என்ன பிரயோஜனம். இந்த ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்க விரும்பிய புண்யவான் களுடைய மனத்தில் கேட்ட க்ஷணத்திலேயே பகவான் ஸ்திரமாக வஸிக்கிறார்.

3. வேதமாகிய கல்பக விருக்ஷம் அதனுடைய பழம் ஸ்ரீமத் பாகவதமேயாம். இது வைகுண்டத்திலி ருந்து நாரதரால் எனக்கும், என்னால் சுகருக்கும், அவர் முகமாகப் பூமியிலும் நழுவியது. (பரவிற்று) இது அமிருத த்ரவமுள்ளது (ருசியுள்ளது) ரஸரூபமா யுள்ளது. ஓ! ரஸத்தையறிந்தவர்களே! அதன் விசேஷ பாவனையில் ஸமார்த்தியமுள்ளவர்களே! மேற்காட்டிய பழத்தை முக்தர்களாக இருக்கும் பொழுதும், அடிக்கடி புஜியுங்கள்.

4–231/2. ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் க்ஷேத்ரமாகிய நைமிசமென்னும் வனத்தில், சௌனகர் முதலிய மஹர்ஷிகள், ஸ்வர்க்கலோகத்தை யடைவதற்காக, ஆயிரம் வருஷங்கள் ஸத்ரமென்னும் யாகத்தை யனுஷ்டித்து வந்தார்கள். அப்பொழுது ஒருநாள் அவர்கள் காலையில் அக்னிகார்யங்களை முடித்துக் கொண்டு, எல்லோராலும் பூஜிக்கப்பட்டு, ஸுகமாய்

உட்கார்ந்திருக்கும் ஸூதரை நோக்கி மிக்க ப்ரீதியுடன் "ஓ பாபமற்றவரே! புராணங்கள், இதிஹாஸங்கள், தர்மசாஸ்த்ரங்கள் இவைகளை நீர் படித்திருப்பதுடன் அவ்வவற்றின் அர்த்தத்தைப் பிறருக்கும் தெரியும்படி சொல்லியுமிருக்கிறீர். ஓ ஸாதுவே! வேதங்களை யறிந்தவர்களுக்குட் சிறந்தவராகிய வ்யாஸபகவானுக்கு தெரிந்தவைகளும், பரம்(ஸகுணப்ரஹ்மம்) அபரம் (நிர்குணப்ரஹமம்) இவைகளை நன்றாய் அறிந்த மற்ற மஹர்ஷிகளுக்குத் தெரிந்தவைகளும், அவர்களுடைய அனுக்ரஹத்தால் தங்களால் உண்மையாக அறியப்பட்டவைகளே! ஆசார்யர்கள், ரஹஸ்யமான விஷயத்தையும், ப்ரியனாகிய சிஷ்யனுக்குச் சொல்வது வழக்கம். ஆகையால் [எப்பொழுதும் க்ஷேமத்தையே கொடுப்பது இன்னதென்று ஸகல க்ரந்தங்களைப் படித்து தாங்கள் நிச்சயமாகத் தெரிந்து கொண்டதை எங்களுக்கு உபதேசிக்கவேண்டும்.] ஓ ஸூதைக்குரியவரே! இந்தக் கலியுகத்தில் ஜனங்கள் பெரும்பாலும் அதிக காலம் ஜீவித்திருப்பதில்லை; சோம்பலுள்ளவர்கள்; அதிலும் மிகவும் மந்தபுத்தியுள்ளவர்கள்; தவிரவும் பாக்யக் குறைவுள்ளவர்கள்; (விக்னங்களால் வருத்தப் பட்டவர்கள்)வியாதி முதலியவைகளால் துன்பமடைந்த வர்கள்; ஆகையால் வெகுகாலம் அநேக சாஸ்த்ரங்களைக் குருமுகமாய்க் கேட்கவும், அவைகளில் சாரத்தை தாமாகத் தெரிந்துகொள்ளவும் சக்தியற்றவர்கள்; பலவகை கர்மங்களைச் சொல்லும் அநேக சாஸ்த்ரங்களோ, தனித்தனியே தெரிந்துகொள்ள வேண்டியவைகளாக இருக்கின்றன. ஆனதால் எதனால் பரமாத்மாவின் ப்ரஸாதம் ஸித்திக்குமோ அந்த ஸாரமான விஷயத்தை தங்களுடைய புத்திக்குத் தோன்றியபடி எடுத்து உபதேசிக்க வேண்டும்.

அதனால் ஸகல ப்ராணிகளும் க்ஷேமத்தையடைவார்கள். ஓ! ஸூதரே! தங்களுக்கு இவ்விஷயம் யாவும், தெரிந்த வையே. நமக்கு க்ஷேமமுண்டாகட்டும். அளவில்லாத, ஐச்வர்யம் முதலியவைகளுள்ள, ஸாத்வதர்களுக்கு நாதனாகிய புருஷோத்தமன், தேவகியினிடம் வஸுதேவருக்குப் புத்ரனாக எதனைச் செய்வதற்காக அவதரித்தாரோ அந்தச் சரிதத்தைக் கேட்க விரும்பும் எங்களுக்கு தாம் உபதேசிக்கவேண்டும். எந்த பகவான் பூமியில் அவதரித்ததால் ப்ராணிகளுக்கு க்ஷேமம், ஐச்வர்யம், இவைகள் கிடைத்தனவோ, கோரமாகிய ஸம்ஸாரத்தை (இறப்புப்பிறப்பை) அழிந்தவன் எவருடைய திவ்யநாமங்களை உச்சரித்த மாத்ரத்தில் அதிலிருந்து விடுபடுகிறானோ, எவருடைய நாமத்தை கண்டு பயமும் பயப்படுகிறதோ, மேலும் இந்திரியங்களை ஜயித்தவர்களான முனிகள் எவருடைய பாதங்களையே ஆச்ரயித்திருக்கிறார்களோ, எவருடைய பாதத்திலிருந்து உண்டான கங்கையின ஜலமானது, தர்சிப்பவர்களையும், தொடுகிறவர்களையும், ஆசமனம் செய்பவர்களையும், பரிசுத்தர்களாகச் செய்கிறதோ; புண்ய ச்லோகர்களால் கொண்டாடக்கூடிய அந்தப் பகவானுடைய சரிதம் ஸம்ஸாரதுக்கத்தைப் போக்குமாகையால் சுத்தனாக வேண்டுமென்ற எண்ணமுள்ள எவன்தான் அதைக் கேட்கமாட்டான். ஆகையால் நாரதர் முதலிய ஞானிகளால், எப்பொழுதும், கானஞ் செய்யப்பட்டதும், ஸம்ஸார துக்கத்தை நிவர்த்திப்பதுமான, மேலான அந்த சரிதத்தை கேட்க நாங்கள் மிக ச்ரத்தையுள்ளவர் களாக இருக்கிறோம். ப்ரஹ்மா,ருத்ரன், முதலிய மூர்த்தி பேதத்தைத் தரிப்பவரும், தம்முடைய மாய மஹிமையால் லீலைகளைச் செய்பவருமாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அவதார கதைகளைச் சொல்ல

வேண்டும். அவைகளைப் போதிக்க தாங்கள் வல்லமை யுள்ளவர்களே. உத்தமச்லோகராகிய பகவானுடைய சரிதத்தைக்கேட்கக் கேட்க எங்களுக்கு போதுமென்ற திருப்தியுண்டாகிறதில்லை, பகவானுடைய சரிதமானது, கேட்பவர்களான ரஸிகர்களுக்கு அடிக்கடி இன்பத்தை கொடுக்கும். ஸ்ரீமஹா விஷ்ணுவானவர் மாயையால் மனிதனாக அவதரித்து, பலராமனுடன் சேர்ந்து மனிதர்களால் செய்யமுடியாத கோவர்த்தன பர்வதத்தை தூக்கியது முதலிய லீலைகளைச் செய்தாரல்லவா? இப்பொழுது கலியுகம் வந்துவிட்ட படியால், நாங்கள் விஷ்ணுவின் பதத்தையடைய விரும்பி மேல் சொல்லிய பகவானுடைய சரிதத்தைக் கேட்பதற்காகவே தீர்க்க ஸத்ரஞ் செய்வதான காரணத்தைக் கொண்டு இந்த நைமிசாரண்யத்தில் வஸிக்கிறோம். ஸமுத்ரத்தைத் தாண்ட விரும்பியவர் களுக்கு ஓடக்காரன் கிடைத்தாற்போல அதர்மத்திற்கு பந்துவாகிய இந்தக்கலியைக்கடக்க விரும்பிய எங்களுக்கு, உம்முடைய தர்சனம் தெய்வச்செயலால் நேர்ந்தது. தர்மத்தைக் காப்பாற்றி வந்தவரும், யோகிகளுக்கு அதிபதியுமான ஸ்ரீகிருஷ்ணபகவான் மனித சரீரத்தைவிட்டு தன்னுடைய ஸ்வரூபத்தை யடைந்தபின்பு தர்மம் யாரைச் சரணமடைந்தது சொல்லவேண்டும் என்று கேட்டார்கள்.

நோட்டு.

ஸ்ரீ வேதவ்யாஸபகவான் பாகவத சாஸ்த்ரத்தைச் செய்யவிரும்பி இடையூறின்றி முடியவேண்டியதற்காக பெரியோர்களுடைய ஸம்ப்ரதாயப்படி பரமாத்மாவை ஸ்மரிப்பதாகிய மங்களத்தைக் காட்டுகிறார். – ஸ்ரீ தரியம்.

1–1. எவரிடமிருந்து–ஸ்ரீ பாதராயணர் என்னும் வ்யாஸ பகவான், ஸகல ஜனங்களையும், ஸம்ஸார பந்தத்திலிருந்து நிவர்த்தித்து, அனுக்ரஹிப்பதற்காக வேதாந்தத்தாலே அறியக்கூடியதும், மற்றப்ரமாணங் களுக்குப புலப்படாததுமான பரப்ரஹ்மத்தை எல்லா வர்ணத்தார்களும் அறியச்செய்ய நினைத்து, ஸ்ரீமத் பாகவதமென்னும் க்ரந்தத்தை நாரதருடைய உபதேசத் தால் செய்யவிரும்பினார். அது, விக்னமில்லாமல் முடியவேண்டியதற்காக பரமாத்மாவை த்யானஞ் செய்தார். "எதனிடமிருந்து இந்த ப்ரபஞ்சம் உண்டாகின்றதோ"–"இந்த ஆகாசரூபமாகிய ஆனந்த மில்லாமற்போனால் எவன் ஜீவிப்பான்" என்ற அன்வயவ்யதிரேகச்ருதிகளால் ப்ரஹ்மம், ஜகத்காரண மென்றும், அர்த்தேஷு அபிக்ஞ: என்று அன்வயஞ் செய்து, ஸகல பதார்த்தத்தையறிந்தவர் என்று அர்த்தஞ்செய்வதால், ப்ரஹ்மத்தினிடத்தில் எல்லா வற்றையும் அறிந்திருப்பது முதலிய ஸகலகல்யாண குணங்களிருப்பதாயும், காட்டப்பட்டது. பரமாத்மா வானவர், ப்ரஹ்மதேவருக்கு தேஜஸ், ஜலம், பூமி இவைகளை ஒன்றோடொன்று கலந்து ஸிருஷ்டிக்கும் வகையை உபதேசித்தது போல ப்ரீதியுடன் வேதத்தையும் உபதேசித்தார். "வேதங்கள் முடிவில்லாத துகள்" என்றபடி வேதங்களை பூராவாகத் தெரிந்து கொள்ள முடியாததாகையால், தடையற்ற ஞானமுள்ள யோகிகளும் மோஹிக்கிறார்கள். "அந்த விஷ்ணுவின் மேலான பதத்தை எப்பொழுதும் ஸூரிகள் பார்க்கிறார்கள்." என்றபடி நித்திய ஸூரிகள், நாராயணனுடைய திவ்ய மங்களதேஹத்தின் ஒப்பற்ற காந்தியை தர்சித்து மோஹிக்கிறார்கள். மேல்காட்டிய மூன்று பூதங்களுடைய த்ரிவிருத்கரண ஸ்ருஷ்டியானது,

எவரிடத்தில் பொய்யாக இருக்கிறதோ (அது பகவானிடத்தில் ஸம்பந்திக்கிற தில்லையென்று கருத்து) மேலும் எவர் தன்னுடைய தேஜஸினால் ஸகல தோஷங்களையும் நாசம் செய்கிறாரோ முக்காலத்திலும் இருப்பவராகையால் எவர் நித்யரோ, ருத்ரன் முதலியவர்களைவிட சிறந்தவராகையால பரனோ, அந்த பர ப்ரஹ்மத்தை த்யானிக்கிறோம்– பாகவத சந்த்ரிகா.

ஒருகால் அஸுரர்கள் பூமியில் அரசர்களாகப் பிறந்து அந்த பாரத்தால் பூமி மிக வருத்தமடைந்தாள். அப்போது ப்ரஹ்மா, ருத்ரன் முதலிய தேவர்கள், பூமிக்கு நேர்ந்த ச்ரமத்தை நிவர்த்திக்குபடி ஸ்ரீ மஹா விஷ்ணுவை வேண்டிக்கொண்டார்கள். பகவான், அவர்களுடைய ப்ரார்த்தனைக்கிசைந்து, வெகுகாலமாய் தபஸ் செய்துகொண்டிருக்கும் ஸத்யவதியினிடம் பராசரருக்கு புத்ரனாக அவதரித்தார். இவர்தான் வ்யாஸரென்று சொல்லப்படுகிறார். இவர் மந்தபுத்தி யுள்ள ஜனங்களிடத்தில் மிகுந்த கருணையுள்ளவராய் வேதங்களை பிரித்து அதன் அர்த்தத்தை நன்றாய் காட்டுவதற்காக ப்ரஹ்ம ஸூத்ரங்களைச்செய்தார். பின்பு அதைப் படிக்கத்தகாத ஸ்த்ரீகள் சூத்ரர்களுக்காக புராணங்களையும் வெளியிட்டார். பின்னும் அவர் வேதத்தின் அர்த்தத்தை நன்றாய் காட்டுகிறதும் 12 ஸ்கந்தமுள்ளதும், 18,000 க்ரந்தங்களடங்கியதுமான பாகவத புராணத்தைச் செய்ய ஆரம்பித்து, தான் எப்பொழுதும் ப்ரஹ்ம ஸாக்ஷாத் காரமுள்ளவரான்லும் இயற்கையில் விக்ன ஸம்பந்தமில்லாதவரானாலும், க்ரந்தாரம்பத்தில் செய்யவேண்டிய ஸம்ப்ரதாயத்தை வித்வான்களுக்குத் தெரிவிப்பதற்காக, நாராயண

ஸ்மரணமாகிய மங்களத்தைச் செய்தார். அதாவது பரனைத் த்யானஞ்செய்கிறோம். க்ரந்தத்தின் ஆரம்பத்தில் நமஸ்கரிக்கக்கூடிய தேவதைகள் இருவகையானவைகள். 1. ஆதிகாரிகதேவதை—ஸூரியன் முதலிய க்ரஹங்கள். 2. அபிஷ்டதேவதை.— பகவான். இருவகையான தேவதைகளின் ஸ்வரூபியும் ஸகல கல்யாண குணங்கள் நிறைந்தவருமான பரமாத்மாவே இந்த பாகவத ஸாஸ்த்ரத்தால் வர்ணிக்கப்படுகிறார். நாராயணனைவிட பரன் வேறொருவருமில்லை "அந்த புண்டரீகாக்ஷனே தேவன், அந்த நாராயணனே பரன்" - ஹரிவம்சம்.

"ப்ரஹ்மத்தை யறிந்தவன் பரனை யடைகிறான்"
—ச்ருதி.

இவர் ஜகத்திற்கு காரணமாயிருப்பவர், "எவரிடமிருந்து இந்த பூதங்கள் உண்டாகின்றவோ, எவரால் உண்டானவைகள் ஜீவிக்கின்றனவோ, எவரிடம் லயிக்கின்றனவோ ? அதுவே ப்ரஹ்மம்" —ச்ருதி.

நான் எல்லாவற்றிற்கும் உற்பத்தி ஸ்தானம், என்னிடமிருந்தே எல்லாம் உண்டாகின்றன. எல்லா பிராணிகளையும் ஸ்ருஷ்டிக்கிறவனும், காப்பாற்றுகிறவனும், நாசஞ்செய்கிறவனும், நானொருவனே" —ஸ்மிருதி.

மேல்காட்டிய அன்வயத்தால் விஷ்ணுவே ஜகத் காரணரென்று ஏற்படுகிறது.

ஆக்ஷேபம்: ருத்ரன் முதலியவர்களும், ஜகத்திற்குக்

காரணமென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே அப்படிக்கிருக்க மேற்காட்டியது எப்படி பொருந்தும்.

ஸமாதானம்: வேதத்தில் சிலபாகத்தில் அப்படி சொல்லப்பட்டிருந்தாலும், பெரும்பாலும் விஷ்ணுவே ஜகத்காரணம் என்றே சொல்லப்பட்டிருக்கிறது 'எல்லா வேதங்களும் எந்தபதத்தைச் சொல்லுகின்றனவோ' —ச்ருதி.

"ஸகல வேதங்களாலும் அறியக்கூடியவன் நானே"
—ஸ்மிருதி.

ஆக்ஷேபம்:— பரமாணுவே ஜகத்காரணம், என்று ஏன் சொல்லக்கூடாது ?

ஸமாதானம்:— அப்படியல்ல, ப்ரத்யக்ஷத்திற்கும் ஆகமத்திற்கும் விரோதமில்லாத யுக்தியால், ப்ரஹ்மமே ஜகத்காரணமென்று சொல்லக்கூடும். புத்ரனுக்கு பிதாவே காரணமென்று தெரியவருகிறதல்லவா ? அது போல் ப்ரஹ்மதேவர் முதலியவர்களுக்கு சேதனனே காரணமாயிருக்க வேண்டும், மாயை முதலியவைகள் அசேதனமாகையால் அவைகளைக் காரணமென்று சொல்லக்கூடாது. இந்தவிஷயம் ச்ருதியில் பலவிடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பரமாணுவே ஜகத்திற்கு காரணமென்று சொல்பவர்கள் ச்ருதி விருத்தமான யுக்தியைக் காட்டுவதனால் அது ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல. அந்த பரமாத்மா எல்லாவற்றையும் பொதுவாகவும் விசேஷமாகவும் அறிந்தவர். அதனால் ப்ரஹ்மதேவருக்கு வேதங்களை யுபதேசித்தவர். அவருடைய அனுக்ரஹமில்லாதவரையில் ப்ரஹ்ம தேவர் முதலியவர்களும் மோஹிக்கிறார்கள். தேஜஸ்,

ஜலம், பூமி, இவைகளின் கார்யம் எப்படி ஸத், அஸத் இவைகளைவிட வேறாக ஆகிறதில்லையோ? பகவானால் செய்யப்படுகிறபடியால் ஈச்வர ஸிருஷ்டி, ஜீவஸ்ருஷ்டி, ஜடஸிருஷ்டி, ஆகிய இவைகள் மூன்றும் பொய்யானதல்ல. மாயைக்கடந்த ஆனந்தானுபவ ரூபராயுமிருக்கும் பரமபுருஷனைத் த்யானிக்கிறோம். தேஜஸ் ஒன்றானாலும்,தான் தன் கார்யமான பூமி முதலியவைகளில் பிரவேசித்து சிலகாலத்தில் வெளிப் படுவது போல, பகவான் ஜகத்தை ஸிருஷ்டித்து, அவைகளில் பிரவேசிக்கிறார். பின்பு பக்தர்களை அனுக்ரஹிப்பதற்காக கிருஷ்ணன் முதலிய அவதாரஞ் செய்கிறார். இதுவே ஈச்வர ஸிருஷ்டியெனப்படும், ஸூர்யன் முதலிய தேஜஸினால் ஜலத்தில் அனேக ப்ரதிபிம்பங்கள் ஸ்தூலசரீரம் முதலிய உபாதிகளால் ஈச்வரனுடைய ப்ரதிபிம்பங்களாகிய ஜீவர்கள் உண்டாகிறார்கள். இதுவே ஜீவஸர்க்கம் எனப்படும். மண்ணினால் குடம் முதலியவைகளை யுண்டு பண்ணுவதுபோல ஈச்வரன் அஹங்காரம் முதலியவை களை ஸிருஷ்டிக்கிறார். இதுவே ஜடஸர்க்கம்,– விஜயத் வஜீயம்:

1–4: லக்ஷணம்– இருவகை (1) தடஸ்தலக்ஷணம்– மேற்காட்டியது 2. ஸ்வரூப லக்ஷணம்–ஸத்யஸ்வரூபி. ஸகலத்தையுமறிந்தவர் ஸகல சக்தியுள்ளவரென்பது அன்வயம்– ஆகாசம் முதலிய கார்யங்களின் ஸத்தை யானது, ஆத்மாவின் ஸத்தையால் என்பது. வ்யதிரேகம்–எதிலில்லாததால் அது இல்லையோ அது (உதா) ஆகமஸத்தையில்லாததனால் ஆகாசபுஷ்பங் களில்லை– ஸ்ரீத.

பரமாத்மா, ஸத்ரூபியாய் ஏல்லாவற்றிலும் அனுவ்ருத்தித்திருப்பதால் எல்லாவற்றிற்கும் காரண மாகிறார் (உதா) மண்ணானது அதன் கார்யமாகிய குடம், மடக்கு, தோண்டி முதலியவைகளிலும், தங்கமானது அதன் கார்யமாகிய குண்டலம் முதலிய நகைகளிலும், படர்ந்திருக்கிறது– ஸ்ரீத.

5. அறிந்தவரும் – ப்ரதானம் (மாயை) ஜகத்காரண மானாலும் அதல்லவென்று காட்டப்பட்டது. "மாயை ஜடமாகையாலும், வேதத்தில் ஸிருஷ்டிக்க ஸங்கல் பித்தாரென்று சொல்லியிருப்பதாலும், அம்மாதிரியான ஸங்கல்பம் மாயையினிடம் ஏற்பட நியாயமில்லாததனா லும், மாயை ஜகத்காரணமல்ல– வ்யாஸஸூத்ரம்.

2–1 ப்ரகாசிப்பவர்.– இதனால் சேதனனாகிய ஜீவனைவிட மேலானவரென்று காட்டப்பட்டது.

2–2 உபதேசித்தாரோ.–"எல்லாவற்றிற்கும் முந்தி ஹிரண்யகர்ப்பர் உண்டானார். அவர் ஸகல பூதங்களுக்கும் ஒரே யஜமானனாக விருந்தார். அவர் பூமியையும் அந்தரிக்ஷத்தையும், காப்பாற்றிவந்தார் என்ற ச்ருதிப்படி ப்ரஹ்மதேவருக்கும் மேலானவரென்று காட்டப்பட்டது. எவர் முதலில் ப்ரஹ்மாவை யுண்டு பண்ணுகிறாரோ, எவர் அவருக்கு வேதங்களை உபதேசிக்கிறாரோ, அந்த ஸ்வப்ரகாசரான தேவனை மோக்ஷமடைய விரும்பிய நான் சரணமடைகிறேன்." –ச்ருதி.

மனதால்– ப்ரஹ்மதேவர் பிறரிடத்தில் வேதாத்ய யனஞ் செய்தாரென்று ஓரிடத்திலும் சொல்லப்

படாமலிருந்தாலும் பரமாத்மாவின் ஸங்கல்ப மாத்ரத்தால் ப்ரஹ்மதேவருக்கு வேதங்கள் தோன்றினவென்று தாத்பர்யம்.

வேதங்கள்.— ப்ரஹ்மா தானாக வேதங்களைத் தெரிந்துகொண்டவரல்லவென்பது கருத்து.— ஸ்ரீத.

ப்ரஹ்மதேவருக்கும் ஞானத்தையுபதேசித்தவரும், இயற்கையில் அளவற்ற நித்ய ஞானமுள்ளவரும், எல்லாவற்றையும் ப்ரகாசிக்கச் செய்பவரும் மற்ற தேஜஸை அபேக்ஷியாமலேயே ப்ரகாசிப்பவரும். ஸத்ய ஸ்வரூபியாயுமுள்ள பரமாத்மாவே ஜகத்காரணம், அவரே திவ்ய மங்களஸ்வருபி, அவரை த்யானிப்பதால் ஸகல க்ஷேமங்களும் கிடைக்கும்.

இந்த புராணத்தில் காயத்ரியின் அர்த்தமாகிய பரப்ரஹ்மவித்யை நன்றாய் காட்டப்பட்டிருக்கிறது.— அந்த காயத்ரீ, வேதமாதா, இது வேதத்தையே ப்ரமாணமாய் கொண்டது. "எதில் காயத்ரியை அனுஸரித்து தர்மங்கள் விஸ்தாரமாக வர்ணிக்கப்படுகின்றனவோ, எதில் வ்ருத்ராஸுரவதத்தின் கதை சொல்லப்பட்டிருக்கிறதோ அது பாகவதமென்று சொல்லப்படுகிறது. அதை எழுதி ஸுவர்ணத்தால் செய்யப்பட்ட ஸிம்ஹ ப்ரதிமையுடன் புரட்டாசி மாஸத்திய பௌர்ணமியில் எவன் தானஞ்செய்கிறானோ அவன் உத்தமகதியையடைகிறான். இது 18,000 க்ரந்தங்களுள்ளது"— மத்ஸ்யபுராணம், "ஓ அம்பரீஷ! உனக்கு ஸம்ஸார பந்தம் நிவர்த்தியாக வேண்டுமானால் சுகஸ்வாமியால் உபதேசிக்கப்பட்ட ஸ்ரீமத் பாகவதத்தை பிறர் சொல்லக் கேளும் தானாகவாவது படியும்," — பத்மபுராணம்,

ஸகலஜகத்தையும், படைத்து அவைகளைக் காப்பாற்றுகிறவர் என்றாலும் ஸ்வயம் ப்ரகாசர் என்றாலும் காயத்ரியின் அர்த்தமானது காட்டப்பட்டிருக்கிறது. 6. மாறுத— கோடைகாலத்தில் மாத்யாஹ்னவேளையில் வனம் முதலிய சூன்யமாகிய விடங்களில், வெயிலை ஜலமென்று நினைத்து தாஹமுள்ள ஜனங்கள் அதனால் தாஹத்தைப் போக்கிக்கொள்ளலாமென்று அதையனுஸரிக்கிறார்களல்லவா ? அவ்விடத்தில் தோற்றுகிற ஜலமானது வாஸ்தவமல்ல. ஆச்ரயமாகிய தேஜஸ் உண்மையானதால் (வ்யவஹாரகாலத்தில்) ஜலமிருப்பதுபோல தோன்றுகிறதுபோல ஸத்வம், ரஜஸ், தமஸ், ஆகிய முக்குணங்களால் உண்டாகியிருக்கும் ஸிருஷ்டிகள் யாவும், ஸத்யமன்று. ஆச்ரயமாகிய ஆத்மாவின் ஸத்தையால் ஸத்தாகத் தோற்றுகிறது. ஸ்ரீத, 11.— வ்யாச மஹா— வ்யாச மஹாமுனியால் செய்யப்பட்ட இந்தப் பாகவதமென்ற க்ரந்தத்தில் பக்தியாகிய தர்மம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆபிசார ப்ரயோகமாகிய ச்யேனயாகம் போல் இது பாபமுள்ளதல்ல. மோக்ஷஸாதனமாகையால், மிகவும் மேலானது. மாத்ஸர்யம் முதலிய துர்க்குணமில்லாத ஸாதுக்களால் அனுஷ்டிக்கக்கூடியது. இதனால் நித்ய வஸ்துவாகிய பரமாத்மாவே அறியக்கூடியவர். அவரே அக்னிமுதலிய ரூபமாகவிருந்து ஸ்வர்க்கம் முதலியவைகளைக் கொடுக்கிறார். முவ்வகையான தாபத்தைப் போக்குகிறார், புண்யசாலிகள் இந்த கிரந்தத்தைக் கேட்க வேண்டுமென்று விரும்பிய க்ஷணத்திலே அவர்களுடைய ஹிருதயத்திலே பகவான் ஸ்திரமாக வஸிக்கிறார். மற்ற க்ரந்தங்கள் இதுபோல பக்தியையுண்டுபண்ணி அதனால் ஈச்வரனை மனத்திலிருக்கச் செய்கிறதில்லை. ஆகையால் இதுவே உத்தமமானது.—சந்திரிகா. அழகு—

"தோஷமற்ற ஸகல புராணங்கள் பாகவதமில்லாத காலத்தில் ஸாதுக்களுடைய ஸபையில் ப்ரகாசிக்கும்" என்றபடி பந்தகமாகாத "ஓ அர்ஜுன! நீ செய்கிறதை யும், புஜிக்கிறதையும், ஹோமஞ்செய்கிறதையும் தானஞ் செய்கிறதையும், தபஸ்செய்வதையும் எனக்கு அர்ப்பணம் செய்துவிடு"– பகவத்கீதை. என்றபடி பலனையுத்தேசியாமல் செய்யும் கர்மங்களே மேலான வைகள். அவைகளே கபடமற்ற தர்மங்கள். "பகவானுடைய நாமங்களைச் சொல்லுவது முதலிய பக்தியே மனிதர்களுக்கு மேலான தர்மம். அதனாலேயே பகவான் ஸந்தோஷப்படுகிறார்" என்றபடி பக்தியே மேலானதர்மம்.– விஜயத்வஜீயம். மோக்ஷத்தை விரும்பியவர்களுக்கு மிகரமணீயமானது– ஸ்ரீத. 28– அமிருதத்ரவ– மோக்ஷத்திற்கு ஸாதனமாகிய பக்திரஸமுள்ளது. இதை சரீரம் போகும்வரையில் பானஞ்செய்யுங்கள். சந்த் செய்யப்பட்ட–கர்த்தா வினுடைய மேன்மையால் க்ரந்தத்திற்கு மேன்மை காட்டப்பட்டது. அறியக்கூடியதும்.– ஞானகாண்டத் தை உயர்ந்ததென்று காட்டப்பட்டது.– புண்ய 23– புண்யம் செய்யாதவர்களுக்கு ஸ்ரீமத் பாகவதத்தை கேட்கவேண்டுமென்ற ஆசையுண்டாகாது. 24– ஸ்திர மாக.– தேவதாகாண்டத்தைவிட மேலானதென்று கருத்து. மேற்காட்டியபடி கர்ம காண்டம் தேவதா காண்டம். ஞானகாண்டம் மூன்று பாகங்களடங்கிய வேதார்த்தம் முழுவதும் தெரிந்துகொள்ளக் கூடியதா யிருப்பதால் ஸகல சாஸ்த்ரத்தை விட இது மேலானது. ஆகையால் ஸாதுக்கள் முகமாய் கேட்டுத் கொள்ள வேண்டும்– ஸ்ரீத. பரவிற்று– சிஷ்ய பரம்பரையாய். நசுக்கிவிடாமல் ஜாக்ரதையாய் கொண்டுவரப்பட்ட தென்று காட்டப்பட்டிருக்கிறது. சுகருக்கு உபதேசஞ்

செய்தது முதலியவைகள் பாகவதஞ்செய்த காலத்திற்கு பிந்திய காலத்தில் நடந்ததானாலும் வருங்கார்யமும் நடந்தது போலவே சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீத. அமிருதம் சுகமென்றால் கிளியால் கொத்தப்பட்ட பழம் மிகரஸமுள்ளதென்று பிரஸித்தம் அமிருதம்– மேலான ஆனந்தம் அதேரஸம், அதையுடையது," அவரே ரஸம், ரஸத்தை யடைந்தே இவன் ஆனந்தமுடையவனாக ஆகிறான்" ச்ருதி. ரஸரூப:– மற்ற பழங்களில் எப்படி மேற்புறத் தில் தோலும் அதற்குள்ளே ரஸமுமிருக்கிறதோ? அடபடி இதில் தோல் முதலிய ரஸமற்ற பாகங்களில்லை;

ஆக்ஷேபம்– பழமென்றும் அதையே ரஸமென்றும் சொல்வது பொருந்துமா? ரஸமுள்ள பழமென்று சொல்ல வேண்டாமா?

ஸமாதானம்:– மற்ற பழங்கள் போல தோல் முதலியவைகளில்லாமல் ரஸமாகவே இருக்கிறதென் பதை காண்பிப்பதற்காக ரஸமென்று சொல்லப்பட்டது. பூமியில் விழுந்த ரஸமென்றால் அது த்ரவரூபமாய் போய்விடாமல் புஜிக்கதக்க பழமென்பதால் காட்டப் பட்டது முக்தர்– ஆத்மாவிடத்திலேயே ரமித்து கொண்டிருப் பவர்களும், மற்ற க்ரந்தங்களில் ஆசையில்லாத வர்களுமான மஹர்ஷிகளும் பகவானிடம் யாதொரு காரணமுமில்லா மல் பக்தி செய்கிறார்கள். இம்மாதிரியான குண முள்ளவர் ஸ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம்,1–"அத்யாயம்" 7. ஸ்வர்க்க லோகத்தை– ஸ்வர்காய– பகவான். அவரே லோகம் (பக்தர்களுக்குருட்டிடம்) அவரை யடைவதற்காக–ஸ்ரீத ஸ்வர்க்க– மேலான ஆனந்தம், அப்பேர்பட்டலோகம் பரமபதம், அதையடைவதற்காக– ஸத்ரம்– எந்த யாகத்தில் ரித்விக்குகளே யஜமானர்களாக விருக்கிறார்களோ

அது முனி.. ஸத்ரம்—ஸாதுக்களைக் காப்பாற்றுகிறது. —விஜ. அக்னி—நித்ய நைமித்திக ஹோமங்களை— முனி. புராணங்கள் 1.ப்ரஹ்ம புராணம் 2. பாத்மம். 3. விஷ்ணுபுராணம். 4. சிவபுராணம் 5. நாரதபுராணம் 6. மார்கண்டேயம், 7. ஆக்னேயம். 8. பவிஷ்யபுராணம். 9. ப்ரஹ்மகைவர்த்தம். 10 லிங்க புராணம் 11. வராஹபுராணம் 12. ஸ்காந்தம். 13. வாமனம். 14 கூர்மபுராணம். 15. மத்ஸ்யபுராணம். 16.கருடபுராணம். 17. ப்ரஹ்மாண்டம். 18வது ஸ்ரீமத் பாகவதபுராணம். 24—பல— அனேகசாஸ்த்ரங்களை அப்யஸித்தாலும் அவ்வளவு பலன் கிடைக்கிறதில்லை யென்று கருத்து ஸ்ரீத. 3—31 க்ஷேம.—ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் கதையைக் காலதாமதமின்றிக் கேட்க வேண்டுமென்று விரும்பி சுருக்கமாய் ஆசிர்வாதஞ் செய்தார்கள். "ஒரு முஹூர்த்தமாவது ஒரு க்ஷணமாகிலும் ஸ்ரீ வாஸுதேவரை ஸ்மரிக்காமலி ருப்பதே கெடுதிக்கு காரணம்.— ஸ்ரீத. 32—ஸாத்—பகவத் பக்தர்கள். ஸ்ரீத. 4—14 நாரதர்— இவர் ப்ரஹ்மதேவருடைய மனத்திலிருந்து உண்டா னவர். இவர் தேவர்ஷி இவருடைய குணங்கள் மஹாபாரதம் ஸபாபர்வத்திலும், சாந்திபர் வத்திலும் நன்றாக வர்ணிக்கப் பட்டிருக்கின்றன. இவர் கானவித்தையை அப்யளித்த கதை அத்புத ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர் ஞானத்தை பிறகுக்குபதேசிப்பதாலும், அக்ஞானத்தைப் போக்குவதாலும் நாரதரென்ற பெயரை யடைந்தார். 21— உத்தம—எவருடைய பெயரை உச்சரித்த மாத்ரத்தில் புண்யம் கிடைக்குமோ, அவர் சொல்லவேண்டும்— மஹர்ஷியின் கேள்விகள் ஆறு.

அவைகளில் 1. சாஸ்த்ரங்களுடைய ஸாரமானது எது, 2. ஸ்ரீ கிருஷ்ணபகவான் செய்த கார்யங்கள் எவை, 3 ஸிருஷ்டி முதலிய லீலைகள், 4 அவதார கதைகள். 5. பகவானுடைய சரிதம், 6. தர்மத்தை ஸம்ரக்ஷித்தது. ஸ்ரீத.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–2.

ஸூதர் ப்ரத்யுத்தரஞ் சொன்னது.

ரோமஹர்ஷணருடைய புத்ரரான ஸூதர் அந்த ப்ராஹ்மணர்களுடைய நல்வார்த்தைகளைக் கேட்டு ஸந்தோஷித்து அவர்களுடைய கேள்வியை ச்லாகித்துப் ப்ரத்யுத்தரஞ் சொல்ல ஆரம்பித்துப் பின்வருமாறு தன் குருவை வணங்கினார்.

2–31/2. சுகர் அதி பால்யவயதிலே (உபநயனஞ் செய்யப்படாமலிருக்கும் வயதிலே) கர்மமார்க்கத்தில் விருப்பமில்லாதவராய், துறவியாகப் போகும்பொழுது, பிதாவாகிய வ்யாஸர் பிள்ளையை விட்டுப் பிரியமன மில்லாதவராய் ஓ! புத்ரா! என்று உரக்க அழைத்தார். அப்பொழுது மரங்கள் விடைகூறின. (மரங்களின் ரூபமாயிருந்து பிதாவின் ப்ரீதியைக் குறைப்பதற்காகச் சுகரே அப்படிக்கூறினார் என்பதாம்) அவர் ஸகல ப்ராணிகளுடைய ஹ்ருதயத்தில் வசிப்பவர், அந்த சுக மஹாயோகியை நமஸ்கரிக்கிறேன். எவர் ஸம்ஸாரமா கிய இருட்டைக்கடக்க விரும்பிய ஜனங்களிடத்தில், கருணை வைத்து ஒப்பற்ற, மஹிமையுள்ளதும், ஸகல வேதங்களின் ஸாரமாயும், நிகரில்லாததாயும், ஆத்ம தத்துவத்தைக் காட்டுவதில் தீபமாயுள்ளதுமான, ரஹஸ்யமாகிய புராணத்தை வெளியிட்டாரோ, வ்யாஸருடைய புத்ரரும், முனிகளுக்குக் குருவுமாகிய அந்தச்சுகருக்கு நமஸ்காரம் செய்கிறேன். நாராயண ரையும், மனிதர்களுக்குட் சிறந்தவரான நரனையும், ஸரஸ்வதி தேவியையும், வ்யாஸரையும் நமஸ்காரஞ் செய்து பின்பு (ஜயத்தை) க்ரந்தத்தைச் சொல்லுகிறேன்.

4–35. 'ஓ மஹர்ஷிகளே! நன்றாய்க் கேட்டீர்கள், தாங்கள் கேட்டவிஷயம் உலகத்திற்கே மங்களத்தைக் கொடுக்கக்கூடியது. எதனால் பரமாத்மா ஸந்தோஷி ப்பாரோ அம்மாதிரி ஸ்ரீ கிருஷ்ணன் விஷயமாகக் கேட்டீர்கள். பலனை உத்தேசியாமல் இடையூறின்றி ஸ்ரீ மஹா விஷ்ணுவிடத்தில் செய்யும் பக்தியே மேலான தர்மம். அதனால் பரமாத்மா மிகவும் ஸந்தோஷமடை கிறார். பகவானாகிய வாஸுதேவரிடத்தில் பக்தி செய்தால், வைராக்யமும் காரணமற்ற உண்மையான ஞானமுமுண்டாகும். புருஷர்கள் குறைவின்றி தங்களுக்குரிய தர்மங்களை யனுஷ்டித்தும் அதனால் பகவானுடைய கதையைக்கேட்க வேண்டுமென்ற ஆசையுண்டாகாவிட்டால் அது பயன்படாததேயாகும். மஹாவிஷ்ணுவின் கதையாகிய அமிர்தத்தைப் பானஞ் செய்தும் (கதையைக் கேட்டும்) சித்தமுருகுதல், ஆனந்தத்தால் கண்ணீர் பெருகுதல், மயிர்க் கூச்சலிடல், என்னும் இவைகள் எவனுக்கு உண்டாகவில்லையோ, அவன் ஆத்மதத்துவத்தை பலதடவை குருமுகமாகக் கேட்டாலும் அதன் உண்மையை அறியமாட்டான். (பகவத்பக்தி, வைராக்யம், ஆத்மஞானம், என்னும் இவைகளே மேலான தர்மமென்று கருத்து). மோக்ஷத் திற்கு உபயோகமாகிய தர்மத்திற்கு இரண்டாவது புருஷார்த்தமாகிய அர்த்தம் பலனென்றும் தர்மத்தை விட்டுபிரியாத அந்த அர்த்தத்திற்குக் காமம் ப்ரயோஜன மென்றும் சிலர் சொல்வது மஹரிஷிகளால் ஒப்புக் கொள்ளபடவில்லை. இது பிரசித்தமான விஷயம். இந்திரியங்களை திருப்தி செய்வதே (விஷயானுபவம்) காமத்திற்கு பலனென்று சொல்வதும் சரியல்ல. ஆனால் ஜீவிப்பதற்குப் போதுமான அளவு விஷயத்தை அனுபவிப்பதே பலனாம். தத்துவத்தைத் தெரிந்து

கொள்ள விரும்பியவனுக்கு கர்மங்களால் கிடைக்கும் பலன் பயன்படாது. உண்மையை அறியவேண்டுமென்ற விருப்பமே அவனுக்குப் பலன். மேலும், நாசமற்றதான ஞானஸ்வரூபத்தையே தத்வமென்று, உண்மையை யறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். அதனையே உப நிஷத்தை அத்யயனஞ் செய்தவர்கள் ப்ரஹ்மம் என்றும், ஹிரண்யகர்ப்பனை உபாஸிப்பவர்கள், பரமாத்மாவென் றும், ஸாத்வதர்கள் பகவான் என்றும் சொல்லுகிறார்கள் "ஆகையால் ச்ரத்தையுள்ள முனிகள் வேதாந்தம் முதலிய சாஸ்த்ரங்களைக் குருமுகமாகக் கேட்டு, ஸ்திரமான ஞானம்,வைராக்யம், பக்தி இவைகளை அடைந்து ஜீவனுக்கும், பரமாத்மாவுக்கும் பேதமில்லை என்று தெரிந்துகொள்கிறார்கள். ஓ! ப்ராஹ்மண ச்ரேஷ்டர்களே! அவரவர்களுடைய ஜாதிக்கும், ஆச்ரமத்திற்கும் தகுதியான தர்மத்தை ஸாங்கமாய் (குறைவின்றி) அனுஷ்டித்தால், அவர்களிடத்தில் ஸ்ரீ நாராயணன் ப்ரியப்படுகிறார். இதுவே அதற்குப் பலமாகும். ஆகையால் பகவானுடைய கதையைக் கேட்கும்போதும் அவருடைய நாமபஜனம் செய்யும் போதும், அவரைத்யானஞ் செய்யுங்காலத்திலும், அவரைப் பூஜிக்கும் போதும், வேறு விஷயத்தில் மனத்தைச் செலுத்தாமலிருக்க வேண்டும்.விவேகிகள் பகவத்யானமாகிற கத்தியால் அஹங்கார ஸம்பந்தத்தை யுண்டுபண்ணும் கர்மபந்தத்தை வெட்டுகிறார்கள். ஆகையால் பகவானுடைய கதையைக் கேட்பதில் விருப்பமில்லாதவர் யார்? (எல்லோரும் விரும்புவார்கள்) ஓ! ப்ராஹ்மணர்களே! புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வதால் பாபங்கள் நீங்குகின்றன, பின்பு பெரியோர்களுடைய சேர்க்கையுண்டாகின்றது. பிறகு தர்மத்தில் ச்ரத்தையும் அதன்பின் வாஸுதேவருடைய

கதையைக்கேட்க விருப்பமும், பின்பு அதில் ப்ரீதியு மாகிய இவைகள் முறையே உண்டாகின்றன. தம் கதையைக் கேட்பவர்களுக்கும், நாமபஜனஞ் செய்பவர் களுக்கும், புண்யத்தைக்கொடுப்பவரும், ஸாதுக்களுக்கு அனுகூலத்தை செய்பவருமான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா தம்முடைய கதையை கேட்பவர்களுடைய ஹ்ருதயத்தில் வசித்துக்கொண்டு காமம், கோபம் முதலியவைகளை நாசஞ்செய்கிறார். எப்பொழுதும் பகவத் பக்தர்களை ஸேவிப்பதாலும், பாகவத சாஸ்த்ரத் தைப் படிப்பதாலும் பெரும்பாலும் அக்ஞானம் விலகும். அதனால் உத்தமச்லோகராகிய (புண்யகரமான பெயருள்ள) பகவானிடம் ஸ்திரமான பக்தியுண்டாகும். அப்பொழுது ரஜோகுணம், தமோகுணம் ஆகிய இவைகளாலுண்டாகும் காமம், க்ரோதம் முதலிய வற்றால் அவர்களுடைய மனஸ் விகாரமடையாமல் ஸத்வகுணமுள்ளதாய் சாந்தமாயிருக்கும். இப்படி பகவானிடம் பக்தி செய்கிறவனுடைய மனஸானது அதன் மஹிமையால் சாந்தமாய் விடும். ஆசைகளும் ஒழிந்துவிடும்; பின்பு பரமாத்மாவின் உண்மையான ஸ்வரூபஞானமுண்டாகும். ஆத்மரூபியான ஈச்வரனு டைய ஸாக்ஷாத்காரமுண்டானவுடன் அஹங்காரம் அடியோடே நாசமடைகிறது. ஸம்சயங்கள் யாவும் நிவர்த்தியாகின்றன. ப்ராரப்தகர்மம் தவிற மற்றவைகள் நசிக்கின்றன. ஆகையால் வித்வான்கள் பகவானாகிய வாஸுதேவரிடத்தில் எப்பொழுதும் மிகுந்த ஸந்தோஷத் துடன் பக்திசெய்கிறார்கள். அதனால் அவர்களுடைய சித்தம் சுத்தமாகிறது. பரமபுருஷன் ஒருவரானாலும் உலகத்தைக் காப்பாற்றுவதற்கு ஸத்வ குணத்தாலும், ஸ்ருஷ்டிப்பதற்கு ரஜோ குணத்தாலும், ஸம்ஹரிப்ப தற்கு தமோ குணத்தாலும், முறையே ஹரி, (விஷ்ணு)

பிரஹ்மா, ருத்ரன் என்னும் பெயரடைகிறார். ஆனால் ஸ்த்வமூர்த்தியான வாஸுதேவரிடமிருந்து மனிதர் களுக்கு க்ஷேமங்கள் யாவும் கிடைக்கின்றன. அக்னியானது கட்டையைப்பிடித்து எரிக்கும்போது அந்தக் கட்டையாகிற உபாதி ஸம்பந்தத்தால் புகை உண்டாகிறது. அதிலிருந்து வேதங்களில் சொல்லிய கர்மங்களுக்கு யோக்யமான அக்னி விருத்தியடைகிறது அதுபோல லயஸ்வரூபமாகி தமஸ்ஸினிடமிருந்து ரஜோகுணமும், அதனிடமிருந்து ஸத்வகுணமும், அதன்னால் ப்ரஹ்மப்ராப்தியும் உண்டாகிறது. முன் காலத்தில் பெரியோர்களான முனிவர்கள் சுத்த ஸத்வ மூர்த்தியும், பகவானுமாகிய, மஹாவிஷ்ணுவை (இந்த்ரியங்களுக்குப் புலப்படாதவரை) பஜித்தார்கள். ஆகையால் அந்த மார்க்கத்தை அனுஸரிப்பவர்கள், ஸம்ஸாரத்திலிருந்து க்ஷேமத்தை அடைவார்கள். மோக்ஷத்தை விரும்பியவர்கள், கோரஸ்வரூபமுள்ள பரமசிவன், பித்ரு கணங்கள், முதலியவைகளை உபாஸியாமல் அவர்களை நிந்திக்காமலும், சாந்தங் களான, நாராயணனுடைய கலைகளை, (அம்சங்கள்) உபாஸிக்கிறார்கள். ரஜோகுணம், தமோகுணம், இந்த ஸ்வபாவமுள்ள ஜனங்கள், ஐஸ்வர்யம், புத்ரன், அழகு, இவைகளை அடையவிரும்பி தங்களுக்கு ஸமமான ஸ்வபாவமுள்ள, பித்ருக்களையும், ருத்ரன், ஹிரண்ய கர்பன், முதலியவர்களையும், ஸேவிக்கிறார்கள். வேதங்கள், யாகத்தின் ஸ்வரூபத்தைச் சொல்லுகின்ற வைகளானாலும் யாகத்தால் ஆராதிக்கப்படும் தேவதை விஷ்ணுவாகையால், அவைகள் யாவும், வஸுதேவரு டைய புத்ரனாகிய பகவானையே சொல்லுகின்றன.

யோக சாஸ்த்ரங்கள் எல்லாம் ப்ராணாயாமம்

முதலியவைகளை, நிரூபிப்பவைகளானாலும், அவைகள் பகவானை அடைவதற்கு உபாயமாகையால் அந்தப் பரமாத்மாவையே சொல்லுகிறவைகளாகின்றன. மற்ற கர்மங்களும், அந்தப் பரம புருஷனுடைய ஆராதனத் திலேயே உபயோகிக்கப்படுகின்றன. ஞானசாஸ்த்ரம், தபஸ். தர்மசாஸ்த்ரம், கர்மத்தின் பலனாகிய ஸ்வர்க்கம், முதலியவைகள் யாவும், பரமாத்ம பரங்களேயாகின்றன. நிர்குணராயும், எங்கும் நிறைந்தவருமான அந்த பகவானே காரணரூபமாயும், கார்யரூபமாயுமிருந்து, முக்குண ஸ்வரூபமாயுள்ள தம்முடைய மாயையால் முதலில் உலகத்தை ஸ்ருஷ்டித்தார். மேலும் அவர் அந்த மாயையால் உண்டாகி ப்ரகாசிக்கும் ஆகாயம் முதலியவைகளில் உட்பிரவேசித்து இயற்கையில் தாம் குணமற்றவரானாலும், குணமுள்ளவர்போலத் தோன்று கிறார். அவர் விஞ்ஞானத்தால் (சித்சக்தி) நிறைந்தவர் கட்டைகளில் ஜ்வலிக்கும் அக்னி உண்மையில் ஒன்றானாலும், ஆச்ரய பேதத்தால் வெவ்வேறாகத் தோன்றுகிறது போல ஜகத்ரூபியான பரமபுருஷன் ஒருவரானாலும், ஒவ்வொரு ப்ராணிகளிடத்திலும், வெவ்வேறாகக் காணப்படுகிறார். அந்தப் புருஷோத்த மனே பூதஸூக்ஷ்மங்கள், இந்த்ரியங்கள், மனம் ஆகிய இவைகளால் உண்டுபண்ணப்பட்ட ப்ராணிகளிடத்தில் ப்ரவேசித்து விஷயங்களை அனுபவிக்கச்செய்கிறார். லோககர்த்தாவாகிய ஈச்வரன் திர்யக் (புறவை பசு முதலிவைகள்) தேவர்கள், மனிதர்கள் இவைகளில் ஸத்வ மூர்த்தியாய் அவதரித்து உலகங்களைக் காப்பாற்று கிறார். இவைகளே லீலாவதாரமெனப்படுகின்றது.

நோட்டு.

11–22. பால்ய– எனக்கு உபநயனம் செய்ய

வேண்டும் என்று ஆசார்யரிடம் வராதவர், அல்லது, தான் ஒருவராகப்போனார்.– ஸ்ரீத– தேஹம் முதலிய வைகளில் அபிமானமற்றவர்.– இவர் ருத்ரனுடைய அவதாரம்– விஜய. 12–4– ஸரஸ்வதி தேவியென்றால் ஸ்ரீதேவி,நரனென்றால் வாயுபகவான் – விஜ, ஜயம்– ஸம்ஸாரத்தை ஜயிப்பதால் இப்பெயர் கிடைத்தது, 14–நாரண தாரண– "ஓ அர்ஜுன! நான் வேதங்களாலும், தபஸினாலும், யாகத்தாலும் அறியமுடியாதவன்" என்ற ஸ்மிருதியின்படி பக்தியைவிட வேறு காரண மற்ற–ஸ்ரீத.– வீர. விஷ்ணுவின் பிரஸாதத்தால் உண்டான ஞானம். விஜ.

12–24 தர்ம–மோக்ஷத்திற்கு ஸாதனமாகிய தர்மத்திற்கு பணம் பலனல்ல. தர்மத்திற்காகவென்று, ஸம்பாதிக்கப்பட்ட பணத்திற்கு காமம் ப்ரயோஜன மாகாது. விஜ 11–12 ஹரி–

ஆக்ஷேபம்:– விஷ்ணு ஒருவரே ப்ரஹ்மா, பரமசிவன், என்ற பெயரை அடைகிறார் என்று சொன்னதால், மூன்று தேவர்களும் ஒருவரென்றும், ஒருவருக்கொருவர் பேதமில்லாதவர்களென்றும் ஏற்படுகிறது. "ப்ரஹ்மாவும், சிவனும் நாராயணனே" ச்ருதி. நாராயணர் என்ற பெய்ருடைய ப்ரஹ்மதேவர் கல்பத்தின் முதலில் ஜனங்களை ஸிருஷ்டித்தார். பிறகு அந்த பகவானாகிய விஷ்ணுவானவர் காலாக்னி ருத்ரரூபியாயிருந்து ஸகல லோகத்தையும் ஸம்ஹரித் தார். பகவான் ஒருவரே உலகத்தை ஸ்ருஷ்டிப்பது, பரிபாலிப்பது, நாசம் பண்ணுவது, ஆகிய கார்யங்களை முறையே ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் ஆகிய பெயருடன்

நடத்திவருகிறார்."– ஸ்மிருதி, ஆகையால் மஹாவிஷ்ணு மும்மூர்த்திகளுக்குள் ஒருவரென்றே ஏற்படுகிறது. மேலும், இம்மூவர்களைக் காட்டிலும் மேலான பரதத்வம் ஒன்றிருப்பதாகவும் ஏற்படுகிறது. அந்தப் புருஷனால் ஜகத்முழுவதும் பூர்ணமாயிருக்கிறது." "அதைக்காட்டிலும் எது மேற்பட்டதோ, அது ரூபமற்றது எவர்கள் இதையறிகிறார்களோ அவர்கள் மரண தர்மமில்லாதவர்களாக ஆகிறார்கள்."– ச்ருதிகள் "இவர் அமிர்தத்துக்கு ஹேதுவாயிருப்பவர்"– ச்ருதி இதனால் மும்மூர்த்திகளுக்கும் மேலான பகவத் ஸ்வரூபமே ஸகல ஜகத்திற்குக் காரணம். அதை பஜிப்பவர்களே மோக்ஷத்தையடைவார்கள். நாராயணனை பஜிப்பவர்கள் மோக்ஷத்தையடையமாட்டார்கள். அவர் பரமாத்மாவுமல்ல.

ஸமாதானம்:– மும்மூர்த்திகளும் ஒருவரேயென்று சொல்வது ந்யாயமல்ல "நாராயணனிடமிருந்து ப்ரஹ்மா உண்டாகிறார், நாராயணனிடமிருந்து ருத்ரன் உண்டாகிறார், நாராயணனிடமிருந்து பன்னிரண்டு ஆதித்யர்களும், பதினோரு ருத்ரர்களும், எட்டு வஸுக்களும், எல்லாவேதங்களும் உண்டானார்கள்" "நாராயணன் ஒருவரேயிருந்தார். ப்ரஹ்மாவும், ருத்ரனும் அப்பொழுது இல்லை. நாராயணர் ஒருவரேயிருந்தார். சங்கரராவது, ப்ரஹ்மாவாவது அப்பொழுது இல்லை. "அவர் முனியாகவிருந்து ஸங்கல்பித்தார். அவரிடமி ருந்து இவையாவும் உண்டாயின." "எவருடைய தொப்பிளில் தோன்றிய தாமரஸ புஷ்பத்திலிருந்து மஹாத்மாவான ப்ரஜாபதி உண்டானாரோ." "அதில் ப்ரஹ்மா உண்டானார்." "அவர் முந்தி மூன்று கண்களுள்ளவரும், மூன்று தலைகளுள்ளவரும்,

மூன்று கால்களுள்ளவருமான ஸம்ஹாரமூர்த்தியை யுண்டுபண்ணினார்" ப்ரஹ்மதேவர், தக்ஷர் முதலியவர் கள், காலம், மற்ற ஸகல ப்ராணிகள் இவைகள் யாவும் மஹாவிஷ்ணுவின் விபூதிகளேயாம். மேலும், ருத்ரன், காலன், அந்தகன் நான்குவிதமான ப்ராணிகள், இவைகள் ஜனார்த்தனனுடைய வீபூதியே. மேற்காட்டிய ச்ருதிகளாலும், ஸ்மிருதிகளாலும், ப்ரஹ்மா, ருத்ரன் இருவர்களும், மஹாவிஷ்ணுவால் ஸிருஷ்டிக்கப்பட்ட வர்கள் என்று தெரியவருகிறது. நாராயணனைக் காட்டிலும் மேற்பட்ட வேறு தத்வமிருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஸகல ஜகத்தும் புருஷனேயாம். ஜகத்தானது அவனை உபஜீவிக்கிறது." "அவருக்கு ஸமானனும் மேற்பட்டவனும் காணப்படவில்லை" ச்ருதிகள் ஓ! அர்ஜுனா! என்னைக்காட்டிலும் மேலானதொன்று மில்லை." ஸ்மிருதி. ப்ரளய காலத்தில் எல்லாம் ப்ரகிருதியில் லயித்திருக்கும் பொழுது ஸகல ஜகத் ரூபியான நாராயணன் ஒருவரேயிருக்கிறார். புண்டரீ காக்ஷனைவிட வேறு மேலான தெய்வமில்லை. மேல்காட்டிய ப்ரமாணங்களால் மஹாவிஷ்ணுவே மேலானவைரென்று ஏற்படுகிறது.

ஆக்ஷேபம்– மும்மூர்த்திகளும் ஒருவரென்றும், விஷ்ணுவைக்காட்டிலும் மேலான தத்வமிருக்கிற தென்றும் ப்ரமாணங்களை காட்டியிருக்கிறோமே.

ஸமாதானம்– அதிற்சொல்லிய சிவ, சம்பூ ஈச, முதலிய சப்தங்களுக்கு நாராயணனென்றே அர்த்தங் கொள்ளவேண்டும். ருத்ரன் முதலியவர்கள் கர்மத்துக்கு வசப்பட்டவர்களென்று சொல்லியிருக்கிறது. வாஸு

தேவன் கர்மவச்யரென்று ஓரிடத்திலும் சொல்லப் படவில்லை. ஆகையால் நாராயணனே எல்லா தெய்வங்களிலும் மேலானவர். அவரை அடைவதற்கு அவரே காரணம். வீர.15–6 ஞானசா –கபிலரால் சொல்லப்பட்ட ப்ரகிருதி புருஷ விஷயமான க்ரந்தம், தபஸ், சாந்த்ராயணம் முதலியவை. வீர. லீலாவதார– ஈச்வரனுடையவை கர்மாதீனமல்ல வென்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–3

பகவதவதாரங்கள்

உலகங்களை ஸிருஷ்டிப்பதற்காக, பகவான் ஆதியில் மஹத்தத்வம், அஹங்காரம் முதலியவைகளுடன் கூடியதும், 16 கலைகளுள்ளதுமான புருஷதேஹத்தை எடுத்துக்கொண்டார். பின்பு ஜலத்தால் உலகமுழுவதும் மூடப்பட்டிருக்க, அவர் அந்த ஜலத்தில் படுத்து யோகநித்ரை செய்தார். அப்பொழுது அவருடைய மடுப்போலிருக்கும் தொப்புளிற் தோன்றிய தாமரை புஷ்பத்திலிருந்து ஒருவர் உண்டானார்;அவரே மரீசி முதலிய ப்ரஜாபதிகளுக்கு அதிபதியாகிய ப்ரஹ்மதேவர். மேற்சொல்லிய புருஷரூபத்தில் ஏற்பட்டிருக்கும் அவயவங்களின் அமைப்புகளால் தேவர்கள், மனிதர்கள் முதலியவர்கள் ஸிருஷ்டிக்கப்பட்டு உலகமானது விஸ்தாரமாகிற்று. மேற்காட்டிய பகவத் ரூபமே சுத்தமானது மேலான ஸத்வகுணமுள்ளது ஞானக் கண்ணுள்ள யோகிகள் இந்த பகவத் ஸ்வரூபத்தை அனேகங்கால்கள், கைகள், முகங்கள், தலைகள், கண்கள், மூக்குகள், காதுகள் என்னும் இவைகளால் அற்புதமான தாகவும், அனேக கிரீடங்கள், குண்டலங்கள் முதலிய வைகளால் ப்ரகாசிப்பதுமாக பார்க்கிறார்கள்:அந்த தேஹத்திலிருந்தே அனேக அவதாரங்கள் வெளிப் படுகின்றன.காரியம் முடிந்தவுடன் அதனிடத்திலேயே அடங்குகின்றன. மேலும் அந்த ரூபம் நாசமற்றது. அதனுடைய அம்சம், ப்ரஹ்மதேவர். அவருடைய அம்சமுள்ளவர்கள், மரீசி முதலிய ப்ரஜாபதிகள். அவர்களாலே தேவர்களும், மனிதர்களும், பசு, பக்ஷி முதலியவைகளும், ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன.

6–28. புருஷ தேஹத்தை அங்கீகரித்த அந்த தேவனே கௌமாரமென்ற ஸிருஷ்டியில் ப்ராஹ்ம மணராயிருந்து, ப்ரஹ்மசர்ய வ்ரதத்தை அனுஷ்டித்து வந்தார். இது ஒரு அவதாரம். மேலுமவர் பன்றி சரீரமெடுத்து பாதாளலோகஞ் சென்று, அவ்விடமிருந்த பூமியை இவ்வுலகத்திற்கு கொண்டு வந்தார். இது மற்றொரு அவதாரம். தவிர ரிஷி ஜன்மாவில் தேவ ரிஷியான நாரதராய் அவதரித்து ஸாத்வத தந்த்ர மென்ற பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தைச் செய்து வெளியிட்டார். அதில் சொல்லிய கர்மங்கள் துக்கத்தைக் கொடுக்கிறதில்லை, (பகவானுடைய ஆராதன ரூபங்களாகையால்) அந்த மஹாபுருஷனே தர்மகலையின் ஸிருஷ்டியில் நரன், நாராயணன் என்ற திவ்யநாமங்களுடன் ரிஷிகளாக அவதரித்தார். அந்த நான்காவது அவதாரத்தில் இந்த்ரியங்களையும் மனத்தையும் அடக்கி கடுமையான தபஸ் செய்தார். அவரே கபிலரென்ற மேலான பெயருடன் ஸித்த புருஷனாக 5–வது அவதாரஞ்செய்து காலமஹிமையில் ஒளிந்து போன தத்வங்களின் உண்மையைத் தெரிவிக்கும் ஸாங்க்ய சாஸ்த்ரத்தை ஆஸுரி என்ற ப்ராஹ்மணருக்கு உபதேசித்தார். பின்னுமொரு சமயத்தில் அத்ரி மஹர்ஷியானவர் மஹாவிஷ்ணுவை நோக்கி "உமக்கு சமமான புத்ரன் எனக்கு உண்டாகும் படி அனுக்ரஹிக்க வேண்டும்" என்று பிரார்த்திக்க பகவான் அப்போர்ப்பட்ட புத்ரன் தம்மைத்தவிர வேறொருவரும் இல்லாமையால் தம்மை அத்ரி ஏமாற்றி விட்டாரென்று வெறுப்பில்லாமல், தானே தத்தாத்ரே யராக அவதரித்தார். மேலும் அவர் அலர்க்கன் என்ற அரசனுக்கும், ப்ரஹ்லாதன் முதலியவர்களுக்கும், ஆன்வீக்ஷகியை (ஆத்மவித்தையை) உபதேசித்தார்.

பின்னுமவர் ஆகூதி என்பவளிடம் ருசி என்பவருக்கு 'யக்ஞர்' என்ற பெயருடன் அவதரித்து ஸ்வாயம்புவ மன்வந்த்ரத்தில் தாம் இந்த்ரனாகவிருந்து தம்முடைய புத்ரர்களான யாமன் முதலிய தேவர்களுடன், உலகத் தைக் காப்பாற்றினார். இன்னும் அந்த பகவான் ஆக்னீதரருடைய புத்ரராகிய நாபி என்பவருக்கு மேருதேவியினிடத்தில் ரிஷபரென்ற பெயருடன் அவதரித்து எல்லா ஆச்ரமங்களிலும் மேலான பரமஹம் ஸாச்ரமத்தை யோகிகளுக்கு உபதேசித்தார். பின்னு மொருக்கால் மஹர்ஷிகளால் ப்ரார்த்திக்கபட்டு ப்ருது வென்ற ராஜர்ஷியாக அவதரித்து, பசுவின்ரூபத்தை தரித்து பூமியினிடமிருந்து ஸகல வஸ்துக்களையும் கறந்து உலகத்தைக்காப்பாற்றியதால், இந்த அவதாரம் மிகவும் விரும்பத் தக்கதாயிருந்தது. தவிரவும் சாக்ஷுஷமன்வந்தரத்தில் ஸத்யவ்ரதருக்காக மாயையால் காண்பிக்கப்பட்ட ப்ரளயத்தில், மத்ஸ்யரூபத்தை தரித்து பூமியாகிய ஓடத்தில் வைவஸ்வத மனுவாக ஆகப்போகிற ஸத்யவ்ரதரை வைத்து காப்பாற்றினார். அந்தப்ரபுவே, தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து ஸமுத்ரத்தை அமிருதத்திற்காகக் கடையும்போது, ஆமை உருவம் கொண்டு மத்தாகிய மந்தரமலையை, முதுகில் தாங்கினார். அவரே தன்வந்தரியாக அவதரித்தும், பிந்தி மோஹினி வேஷங்கொண்டு, அஸுரர்களை மோஹிக்கச் செய்து, தேவர்களுக்கு அமிருதத்தைக்கொடுத்து புஜிக்கவும் செய்தார். மிக்க பலிஷ்டனாகிய, ஹிரண்யகசிபுவை நரஸிம்ம சரீர மெடுத்து பாயைப் பின்னுகிறவன் கோரையைப் பிளப்பது போல் நகங்களால் துடையில் கிழித்து அவனைக்கொன்றார். இது பதினான்காவது அவதாரம். பின்னுமொரு ஸமயத்தில், மஹாபலியென்ற அஸுரன்

யாகஞ்செய்யும்பொழுது, பகவான் வாமனரூபியாக அவனுடைய யாகசாலை சென்று மூன்றடி பூமியை யாசித்தார். மேலும் அதனால் அவனிடமிருந்து ஸ்வர்க்க ராஜ்யத்தை பிடுங்கிக்கொண்டு அவனை நிக்ரஹித்தார். இது பதினைந்தாவது அவதாரம். பின்னுமொருக்கால் பூமியில் பரசுராமனாக அவதரித்து தர்ம விரோதஞ் செய்யும் அரசர்களை கோபத்துடன் இருபத்தொருதரம் கொன்று பூமியில் க்ஷத்ரிய வம்சமில்லாமலொழியச் செய்தார். இது பதினாறாவது. அந்த பரமபுருஷனே ஸத்யவதியிடத்தில் பராசரருக்கு வ்யாஸராய் அவதரித் தார். இவருடைய காலத்தில் மந்தபுத்தியுள்ளவர்களாக யிருந்த படியால் வேதங்கள் சாகை சாகையாக பிரிக்கப்பட்டன. மேலும், ராவணன் முதலிய ராக்ஷஸர் களை கொல்வதற்காக ஸ்ரீ ராமாவதாரஞ்செய்து, ஸமுத்ரத்தில் அணைகட்டியது முதலிய ஆச்சர்யங் களைக் காட்டினார். இது பதினெட்டாவது அவதாரம். பின்பு விருஷ்ணி குலத்தில் பலராமன், ஸ்ரீ கிருஷ்ணன் என்ற திவ்ய நாமதேயங்களுடன் அவதரித்துப் பூமியின் பாரத்தை நிவர்த்தித்தார். இது பத்தொன்பதாவது அவதாரம். பின்பு கலியுகத்தில் கீகடம் (மத்ய கயை) என்ற தேசத்தில் புத்தனென்ற பெயருடன் ஜினருக்கு (சுத்தோதனனென்று சிலர்) புத்ரனாக அவதரிப்பார். கலியின் முடிவில் யுகஸந்தியில் அரசர்களெல்லோரும் பெரும்பாலும் திருடர்களாக ஆய்விடுவார்கள். அப்பொழுது ஜகத்திற்கு குருவாகிய பகவான் கல்கியென்ற பெயருடன் விஷ்ணுயசஸ் என்பவருக்குப் புத்ரனாக அவதரிப்பார். இது இருபத்தொன்றாவது அவதாரம்.

ஓ! "ப்ராஹ்மணர்களே! குறையாத, ஜலமுள்ள

பெரிதாகிய ஏரியிலிருந்து அனேக வாய்க்கால்கள் ஒடுவது போல, ஸத்வ மூர்த்தியாகிய விஷ்ணுவின் அவதாரங்கள் கணக்கிட முடியாதவைகள். ரிஷிகள், முனிகள், தேவர்கள், மனுவின் புத்ரர்கள், ப்ரஜாபதிகள் எல்லோரும் மஹாவிஷ்ணுவின் அம்சாவதாரமே தவிர வேறில்லை. மேலும், முன்காட்டிய படியுள்ள பகவானுடைய அம்சங்கள், கலைகள், விபூதிகள், ஸாக்ஷாத் விஷ்ணுவாகிய கிருஷ்ணன் இவர்கள், அஸுரர்களால் உலகத்திற்கு உபத்ரவம் நேரும்போது அவர்களை நிக்ரஹித்து உலகத்தைச் ஸுகிக்கச் செய்கிறார்கள்.

29. இந்தப் பகவானுடைய அதிரஹஸ்யமான அவதாரங்களைக் காட்டும் ச்லோகங்களைக் காலையிலும், மாலையிலும், சுத்தனாய் பக்தியுடன் படித்தவன் ஸம்ஸார துக்கத்திலிருந்து நிவர்த்தியடைகிறான்.

30–39. ரூபமில்லாதவனும், சித்ரூபியாயுமிருக்கும் ஜீவனுக்குப் பகவானுடைய மாயையின் குணங்களாகிய மஹத்தத்வம் முதலியவைகளால் இந்த ஸ்தூலசரீர மேற்படுத்தப்பட்டது. வாயுவை (காற்றை) ஆச்ரயித்த மேகங்கள் ஆகாயத்திலிருப்பதாயும், பூமியின் தூளிக்காற்றிலிருப்பதாகவும், அக்ஞர்கள் நினைப்பது (ஆரோபிப்பது) போல எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாயிருக்கும் ஆத்மாவினிடம் சரீரம் ஆரோபிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஸ்தூல சரீரத்திற்கு மேற்பட்டதும் கை, கால் முதலிய அவயவ பரிமாணங்களற்றதும், பார்க்கப்படாததும், கேட்கப்படாததாயும், ஸூக்ஷ்மமாயும், ஜீவனுடைய உத்கிறந்தி (வெளியில் போவது) முதலியவைகளுக்கு ஸாதனமாயுமுள்ள லிங்க சரீரமும் முன்காட்டியதுபோல ஆரோபிக்கப்படுகிறது. ஸ்தூல

சரீரம் லிங்கசரீரமாகிய இவைகள் பரமாத்மாவினிடம் ஆரோபிக்கப்படுவதற்குக்காரணம் அவித்யையே, உண்மையில் ஆத்மாவிற்கு இவ்விரண்டின் ஸம்பந்தமுமில்லை. இம்மாதிரியான உண்மையான ஸ்வரூபஜ்ஞானம் எந்தக்காலத்தில் உண்டாகிறதோ அப்பொழுது ஜீவன், ஞான ஸ்வரூபியான ப்ரஹ்மாத்ம பாவத்தையடைவான். ஈச்வரனுடைய மாயையானது ஓய்வடையுமானால் அப்பொழுது ஜீவன் ப்ரஹ்மமாக ஆகிறான். பரமானந்த ரூபியாய் விளங்குகிறான். அந்தர்யாமியான பகவான் ஒன்றையுஞ் செய்யாமலிருப்பவரானாலும் கர்மங்களை செய்கிறவரென்றும், உத்பத்தியில்லாதவரானாலும் பிறந்தாரென்றும், கவிகள் வேதத்தின் ரஹஸ்யமான விஷயத்தை வர்ணிப்பது ஜீவனுக்கு பிறப்பு முதலியவைகளுண்டென்று சொல்வதுபோல மாயையேதவிற வேறில்லை. வீண்போகாத லீலைகளுள்ளவரும், ஸகல ப்ராணிகளிடம் மறைந்திருப்பவருமான ஈச்வரனே இந்த லோகத்தைப் படைக்கிறார்;காப்பாற்றுகிறார்; ஸம்ஹரிக்கிறார். ஆனாலும் ஸ்வதந்தரராகையால் ஆறு இந்த்ரியங்களுக்கு யஜமானராயிருப்பதால் அதுகளின் விஷயங்களை வெகு தூரத்திலிருந்தே க்ரஹிக்கிறார். அவைகளில் ஸம்பந்தப்படுகிறதில்லை. மூடன் எப்படி நடனம் (நர்த்தனம் செய்கிறவனால்) செய்யப்படும் அபினயத்தை அறியமாட்டானோ அப்படி அற்பபுத்தி யுள்ளவன் ஸகல ஜகத்தைப் படைப்பவரும், ஸங்கல்பத்தால் ரூபங்களையும் வாக்கினால் பெயர்களையும், விஸ்தரிப்பவருமான பகவானுடைய லீலாவிபூதிகளை யுக்தி(தர்க்கம்) முதலியவைகளின் ஸாமர்த்யத்தால் அறியமாட்டான். ஆனால், நல்மார்க்கத்தை ஸ்தாபிப்பவரும், சத்ருக்களை ஜயிக்கும் வீர்யமுள்ளவரும் சக்ராயுதம் தரித்தவருமான பரமாத்மாவின் ஸ்வரூபத்தை,

இடைவிடாமல் கபடமற்று பகவானுடைய பாதங்களாகிய தாமரஸ புஷ்பத்தின் வாஸனையை ஸேவிக்கும் பக்தனே ச்ரமபட்டு தெரிந்துகொள்ளுகிறான். ஓ ப்ராஹ்மணர்களே! இதைத் தெரிந்து கொண்டு ஸகல லோகத்திற்கும் நாதராகிய ஸ்ரீ வாஸுதேவரிடம், எவர்கள் இடைவிடாமல் மனத்தைச் செலுத்துகிறார்களோ, அவர்களுக்குக் கர்ப்பவாஸம் முதலிய துக்கத்தை உண்டுபண்ணும் பிறப்பு இறப்பு நேரிடமாட்டாது. ஆதையால் எல்லாவற்றையும் அறிந்த அந்த பக்தர்களே தன்யர்கள் (மேலானவர்கள்)

40–44. ஸர்வஜ்ஞரான வேதவ்யாஸ மஹர்ஷி உத்தமச்லோக (நல்வினையை கொடுப்பதால் மேலான பெயருள்ள) ராகிய பகவானுடைய சரித்தத்தைக் காட்டுகிறதும். வேதங்களுக்கு ஸமமாயுள்ளதுமான ஸ்ரீமத் பாகவத புராணத்தைச் செய்து முடித்தார். பிறகு உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டி ஸகல மங்களங்களுக்கும் இருப்பிடமாயும், அர்த்தத்தாலும், சப்தத்தாலும் மிகவும் மேலானதுமான அந்தப் புராணத்தை, யோகிகளுக்குட் சிறந்தவரும், தம்முடைய புத்ரரத்னமுமாகிய சுகருக்கு உபதேசித்தார். அந்தச்சுகர் எல்லாவேதங்களிலும், இதிஹாஸங்களிலுமிருந்து அவற்றின் ஸாரத்தை எடுத்து செய்யப்பட்ட இந்தச் சாஸ்த்ரத்தை, கங்கைக்கரையில் மிகுந்த வைராக்கியத்துடன், ப்ராயோபவேசஞ் செய்திருக்கும் பரீக்ஷித்து மஹாராஜனுக்கு, அனேக மஹர்ஷிகள் கேட்டிருக்கும் போது சொன்னார். இவ்விதமாக அது பூமியில் பரவியது. ஓ! ப்ராஹ்மணர்களே! அந்த ஸமயத்தில் நான் அவ்விடம் போனேன். மேலும் அவ்விடத்தில் உட்கார்ந்திருந்த மிகுந்த தேஜஸுள்ள அந்த ப்ரஹ்ம

ரிஷியான சுகருடைய அனுக்ரஹம் பெற்றேன்; நீங்களனைவரும் 'அதன் விஷயத்தை தெரிந்துகொள்ள வேண்டும்' என்று மிகுந்த ஆவலுள்ளவர்களாய் இருப்பதால் நான் சுகரிடம் கேட்டபடி, என்புத்திக் கெட்டியவரையில் சொல்லுகிறேன். (கிருஷ்ணபகவான் தர்மம், ஞானம் இவைகளுடன் தமது லோகஞ்சேர்ந்த பிறகு கலியில் ஞானக்கண்ணில்லாமல் கஷ்டப்படும் ஜனங்களுக்கு இந்த புராணமாகிய ஸூர்யன் உதயமாகி இருக்கிறது.)

நோட்டு.

17–22. 16 கலைகள்– இந்த்ரியங்கள் 11, ஐந்து பூதங்கள், இந்த பதினாறு கலைகள், பகவானுடைய சரீரம் உண்மையில் இப்போர்ப்பட்டதல்ல. ஆனாலும், விராட்தேஹத்தின் அந்தர்யாமியாயிருக்கும் பகவானை விராட்ரூபமாக உபாஸிப்பதற்குபயோகமாகச் சொல்லப் பட்டது. ஸ்ரீத. 18–12. [illegible]ளமார– இவருக்கு ஸனத்குமாரரென்று பெயர். ஆனால் இவர் ஸனகர் முதலியவர்களில் சேர்ந்தவரல்ல. விஜயத் ஆதிபுருஷன் ப்ரஹ்மதேவருடைய ஸ்வரூபமாகவிருந்து ஸனத்குமாரர் முதலியவர்களாக அவதரித்தார். பிறகு ஈச்வரனை யுபாஸித்தார். அவர்கள் அனுப்ரவேசாவதார ரூபிகளெனப்படுவார்கள். மேலுமவர்கள் அவித்யையுள்ளவர்களேயாம். ஆனாலும் பகவானையுபாஸித்துக் காலாந்தரத்தில் ஞானத்தை யடைவார்கள். வீர இது இந்த ஒரு அத்யாயத்தில் 21 அவதாரங்கள் நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. ஆனாலும் அவைகள் வரிசையாகச் சொல்லப்படவில்லை. ஆனாலும் இவ்விடத்தில் சொல்லிவருவதில் முதலாவது என்பதேயாம். ஸ்ரீத.

16 தேவர்ஷி–மஹிதாஸரென்ற மஹர்ஷி. விஜ20. தர்ம– யமனுடைய அம்சம். ஸ்ரீத. கபிலர்– இவர் ப்ரஸித்தராகிய கபிலரல்லவென்று சிலர். விஜ. 31 வெறுப்–மூலத்தில் அனஸூயயா என்றிருப்பதால், அத்ரியின் பத்னியாகிய அனஸூயை யென்பவளால் அடையப்பட்டார்.– வீர. விஜ. 19–4. யாம– ஒவ்வொரு மன்வந்தரத்திலும் தேவர்களுடைய பெயர் மாறுகிறதுண்டு– விஜ. நாபி–ஸ்வாயம்புவ மனுவின் புத்ரர்– வீர. இந்த்ரனுடைய புத்ரன்.– முனிமஹர்ஷி– வேனனைக்கொன்ற பிறகு.– வீர மாயையால்– மன்வந்தரத்தின் முடிவில் ப்ரளயமில்லாமற் போனாலும், அக்காலத்தில் மார்க்கண்டேயருக்குக் காண்பித்தது போல காண்பிக்கப்பட்டது– ஸ்ரீத. துடையில்– மடியில் வைத்துக்கொண்டு. விஜ வாமன– துஷ்டர்களுடைய கர்வத்தைக் குறைப்பதால் இப்பெயர் கிடைத்தது– ஸ்ரீத. கோபத்துடன்.– சக்தியில்லாதவனுக்குக் கோபமுண்டாகுமேயல்லாமல், ஸாமர்த்யமுள்ளவர்களுக்கு கோபமுண்டாக ந்யாய மில்லையாகையால் கோபங்கொண்டவர்போல வென்பது கருத்து– விஜ. ரிஷிகள்– மனுவின் புத்ரர்களாகிய ப்ரியவ்ரதர் முதலியவர்கள்.– விஜ. கலைகள்– குமாரர்கள், நாரதர் முதலியவர்கள். கலாவதாரபூதர்கள், அதிலும் குமாரர் முதலியவர்கள் ஞானமுள்ளவர்கள் ப்ருது முதலியவர்கள் பகவானு டைய சக்தி விசேஷமுள்ளவர்கள்– ஸ்ரீத. விபூதிகள்– "எந்தப்ராணிகள் விபூதியுள்ளனவைகளோ, எது அழகு பொருந்தியதோ, எது பலமுள்ளதோ, அவைகள் யாவும் என்னுடைய தேஜஸ்ஸின் அம்சத்திலிருந்து உண்டானவர்கள்" பகவத்கீதை. ரூபமில்லாத–ஜீவனுக்கு தேஹஸம்பந்தம் விஷ்ணுவின் மாயையால் ஏற்பட்ட

தாகையால் ஞானத்தால் அந்த அவித்யை நிவர்த்தி யாகிறதென்பது இதுமுதல் ஐந்து ச்லோகங்களால் காட்டப்பட்டிருக்கிறது. ஸ்ரீத. ஆரோபி- நான் தேவன், இந்த சரீரம் என்னுடையது, என்ற அபிமானத்திற்கு விஷயமாகச் செய்யப்பட்டிருக்கிறது. உண்மையில் தேவர்கள் முதலிய சரீரம் ஜீவனுடைய ஸ்வரூபமல்ல.

ஆக்ஷேபம்– தேவசரீரம் முதலியவைகள் அவை களுக்கு அபிமானியாகிய ஜீவனால் தரிக்கப்படுகிற தாகையால் அவனுடையதென்று ஏன் சொல்லக்கூடாது?

ஸமாதானம்– "எவனுக்கு ஆத்மா சரீரமோ எவன் ஆத்மாவினிடத்திலிருக்கிறானோ" என்ற ச்ருதிப்படியும். ஜீவனும் பரமபுருஷனால் தரிக்கப்படுகிறபடியால் எல்லாவற்றிற்கும் பரமாத்மாவே முக்யமான ஆதாரம்– வீர. ஆகாயம் வாயு இவைகள் கண்ணிற்குப் புலப்படாதவைகளானாலும், மேகக்கூட்டத்தை ஆகாசமென்றும், பூமியிலிருந்து கிளம்பும் தூளிகளை வாயுவென்றும் சொல்வதுபோல, அக்ஞஜனங்கள் ப்ரதிமையைப் பார்த்து அதையே ஈச்வரனென்று சொல்லுகிறார்கள். அதனால் ஸர்வ ஸாக்ஷியான பகவான், இந்த்ரியங்களால் பார்க்கக்கூடியவர் (த்ருச்யர்) என்றும் சித்ரூபியான அவர் ஜடரென்றும் ஏற்படுகிறது. ஆகையால் இது ப்ராந்தியேயாம்.– விஜ. ஸூக்ஷ்மம்– "இவன் அவ்யக்தன், நினைக்கமுடியாதவன் விகாரமற்ற வன்"– பகவத்கீதை. ஒன்றையும்– புண்யபாபங்களற்ற வர், கர்மாதீனமான சரீரமில்லாதவர்–வீர. ரஹஸ்யம்.– உத்பத்தியை அடையாமலே பலவகையாக உண்டா கிறார்" என்ற ச்ருதியில் உத்பத்தியடையாதவரென்றால்

ஜீவன்போல் கர்மாதீனமாக ஜன்மமில்லாதவரென்றும் தனதிஷ்டப்படி பகவானுக்கு உத்பத்தியுண்டென்றும் அர்த்தம். அதைக் கவிகளே அறிவார்கள். "தீரர்கள் அந்தப் பகவானுடைய சரீரத்தை அறிகிறார்கள்" ச்ருதி: ஆகையால் பகவானுடைய ஜன்மகர்மங்கள், ஜீவனுடையது போன்றவைகள் என்று நினைக்கக் கூடாது என்பது வேதவாக்யத்தாலேயே காட்டப் பட்டிருக்கிறது– வீர லீலைகள் ஜீவன் அனாதியாகிய கர்மத்தால் புண்ய பாபங்களைச் செய்து அதனால் ஸகல துக்கங்களை அடைவதுபோல் பகவானுடைய செய்கைகள் அவரைக்கட்டுப்படுத்துகிறதில்லை. மேலும் அவைகள் அவருக்கு லீலைகளாகும். அவைகள் வீண் போகாதவைகள் என்றதால் ஜீவனுடைய கர்மங்கள் அனேக விக்னமுள்ளவைகள் என்று காட்டப்பட்டன. இப்படி பலவகையிலும் ஜீவனைக்காட்டிலும் மேலானவரென்பது தாத்பர்யம். ஆறு– ஞானம், சக்தி, தேஹபலம், ஐச்வர்யம், வீர்யம் தேஜஸ் இவைகளுக்கு அதிபதி. அல்பபுத்தி– நான், என்னுடையது என்ற அபிமானமுள்ளவன். நடன– வேஷதாரியானவன், பலவகையான வேஷங்களைத் தரித்தாலும் எப்படி இவன் வேறாக ஆகிறதில்லையோ, அப்படி பகவான் மத்ஸ்யம், ஆமை முதலியவைகளின் உருவங்கொண்டாலும் அவருடைய உண்மையான ரூபம் மாறுகிறதில்லை மேலும் வேஷம் தரிப்பது முதலிய சேஷ்டைகள் அவனுக்கு விளையாட்டாயிருப்பது போல் பகவானுக்கும் அவைகள் லீலைகளேயாகும். அறிந்த– பகவந்த: என்ற பதத்திற்கு நீங்கள் என்று அர்த்தங்கொண்டு ஏ சௌனகர் முதலியவர்களே! நீங்கள் மேலானவர்கள். ப்ராயோபவேசம்– ஜீவித்திருப்பதில் ஆசையில்லாமல் ஆஹாரமில்லாமலிருக்கிறதாகிய வ்ரதம் வீர.–விஜய.

அத்யாயம்–4.

வியாஸர் கவலை யடைந்தது.

அதனைக் கேட்டுத் தீர்க்கஸத்ரம் செய்துகொண்டிருக்கும் மஹர்ஷிகளுக்குள் வயது சென்றவரும், கூட்டத்தில் முக்யரும், ரிக்வேதியுமாகிய சௌனகரென்பவர் ஸூதரைக் கொண்டாடிப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினார்.

2–13. "ஓ மிகுந்த பாக்யமுள்ள ஸூதரே! பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சுகஸ்வாமியால் சொல்லப்பட்ட புண்யகரமான ஸ்ரீமத் பாகவதகதையை எங்களுக்குச் சொல்லவேண்டும். கதை சொல்வதில் தாங்கள் மிக்க ஸாமர்த்யமுள்ளவர்கள். இந்தக்கதை எந்தயுகத்தில் எந்தவிடத்தில் நடந்தது எதற்காக யாரால் தூண்டப்பட்டு, இந்த கிரந்தத்தை வ்யாஸமஹாமுனிவர் செய்தார். மேலும் அவருடைய புத்ரரான சுகரென்பவர் மஹாயோகி; தாம், பிறர் என்ற பேதபுத்தியில்லாமல் எல்லாவற்றையும் ப்ரஹ்ம ஸ்வரூபமாகப் பார்ப்பவர். பரமாத்மாவினிடத்திலேயே புத்தியைச் செலுத்தியவர், மாயையாகிய தூக்கத்தைவிட்டு விழித்தவர். இவருடைய ஸ்வபாவம் வெளியில் தெரியாது. பார்வைக்கு மூடன்போல் தோன்றுகிறவர். இவர் குரு ஜாங்கலமென்னும் தேசத்தில் ஹஸ்தினாபுரத்தில் பயித்தியம் பிடித்தவன் போலவும், ஊமையன் போலவும், மூடன் போலவும் ஸஞ்சரிக்கும்போது, இவருடைய உண்மையைப் பட்டணத்து ஜனங்கள், எப்படித்தெரிந்து கொண்டார்கள்? இவர் எல்லா ஆசைகளையும் ஒழித்துத் துறவியாய்ப் போகும்போது பிதாவாகிய

வ்யாஸமஹர்ஷி புத்ரஸ்நேஹத்தால் அவர் பின்செல்ல வ்ழியில் ஜலக்ரீடை செய்துகொண்டிருந்த அப்ஸர ஸ்த்ரீகள், வஸ்த்ரமில்லாதவரும், யுவாவுமாகிய சுகரைக் கண்டு வெட்கப்படவில்லை. இவருக்குப்பின்னே வருகின்றவரும், மரவுரியை யுடுத்திக்கொண்டவரும் வயது சென்றவருமான வ்யாஸ மஹர்ஷியைப் பார்த்த வுடன் வெட்கமடைந்து தம்தம் ஆடைகளையுடுத்திக் கொண்டார்கள். இந்த ஆச்சர்யத்தைக் கண்ணுற்ற மஹர்ஷியானவர், அவர்களை இது விஷயமாகக் கேட்க அவர்கள் மஹர்ஷியை நோக்கி "புருஷன், ஸ்திரீ, என்ற பேதபுத்தி உமக்கிருக்கிறது. சுத்த திருஷ்டியுள்ள உம்முடைய புத்ரருக்கு அம்மாதிரியான எண்ணமில்லை" என்று பிரத்யுத்தரஞ் சொன்னார்கள். அப்போர்ப் பட்ட சுகருக்கும், பாண்டுவின் வம்சத்தில் பிறந்த பரீக்ஷித்து மஹாராஜனுக்கும் எப்படி ஸம்வாதம் (பேச்சு) நேர்ந்தது? அதனாலல்லவா இந்த பாகவத கதை வெளிப்பட்டது. இவர் கிருஹஸ்தர்களுடைய வீட்டிற்குப் பிக்ஷைக்காகச் சென்றால் அந்த கிருஹத்தை சுத்தப்படுத்துவதற்காக ஸ்வல்பகாலம் (மாடு கறப்பதற்கு எவ்வளவுகாலம் பிடிக்குமோ அவ்வள காலம்) காத்திருப்பார். இவர் ஒரே இடத்திலிருந்து பாகவத கதையைச் சொன்னது மிக ஆச்சர்யம். ஏ! ஸூதரே! ஜனங்கள் அபிமன்யுவின் புத்ரராகிய பரீக்ஷித்து மஹா ராஜனைப் பாகவதர் (பகவானுடைய பக்தர்கள்)களுக் குட் சிறந்தவராகச் சொல்லுகிறார்கள். அவருடைய பிறப்பு, மிகவும் அத்புதமானது. ஆகையால் அவருடைய சரிதத்தைச் சொல்லவேண்டும். பாண்டவர்களுக்குக் கீர்த்தியை விருத்தி செய்தவரான அந்தச்சக்ரவர்த்தி தமது அளவற்ற ராஜ்யத்தையும், லக்ஷ்யஞ்செய்யாமல், என்ன காரணத்தால் கங்கையின் கரையில் ப்ராயோப

வேசஞ் செய்தார். ஓ! ஸூதரே! சத்ருக்கள் உத்தம வஸ்துக்களை காணிக்கையாக எடுத்துவந்து தங்களுடைய க்ஷேமத்திற்காக அவருடைய பாதபீடத்தை (கால் வைத்துக்கொள்ளும் ஆஸனம்) நமஸ்கரிக்கிறார்களோ அவ்வளவு பராக்ரமமுள்ள மஹாராஜன் யௌவனமுள்ளவராயினும், ஒழிக்கமுடியாத பணத்தின் ஆசையையும், ப்ராணனிடத்திலுள்ள அபிமானத்தையும், விடவேண்டுமென்று எப்படி விரும்பினார்? உத்தமச்லோகராகிய பகவானிடத்திலேயே ,மனத்தைச் செலுத்தியவர்கள், லோகத்திற்கு க்ஷேமம், ஐச்வர்யம் இவைகளை உண்டுபண்ணுவதற்காக ஜீவிக்கிறார்களே தவிர சொந்தமான கார்யத்திற்காகவல்ல. ஆகையால் இந்த அரசன், சரீரத்தைவிட விரும்பிய காரணம் யாது? (பிறருக்கு உபயோகமான சரீரத்தை தான் கெடுப்பது ந்யாயமல்லவென்பது கருத்து) வேதத்தின் அர்த்தம் தவிர இதிஹாஸ புராணங்களின் அர்த்தங்களைச் சொல்வதில் மிக்க ஸாமர்த்யமுள்ள வரென்று உங்களை நினைக்கிறேன். ஆகையால் என்னால் கேட்கப்பட்ட எல்லா விஷயங்களையும் சொல்லவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

14–18 இவற்றைக்கேட்ட ஸூதர் சொல்லத் தொடங்கினார் மூன்றாவது த்வாபரயுகத்தின் கடைசியில் வஸுவின் வீர்யத்திற்குண்டான ஸத்யவதியினிடம், பராசரருக்கு புத்ரனாக அவதரித்த ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அம்சம் இந்த வ்யாஸ மஹாமுனியே. இவர் மஹாயோகி. நடந்தது, நடக்கப்போகிறது இவைகளை அறிந்தவர். அவர் ஒருக்கால் ஸரஸ்வதீ நதிக்கரையில் ஆசமனஞ் செய்து சுத்தராய் ஸூர்யோதய காலத்தில், தாம் தனியாய் உட்கார்ந்து "அறியக்கூடாத

வேகமுள்ள காலமஹிமையால் யுகதர்மங்கள் கலந்து போய்விட்டன. ஜந்து பூதங்களுக்கும் சக்தி குறைந்து விட்டது, ஜனங்களுக்கு ச்ரத்தை, தேஹபலம், ஸத்வகுணம், ஆயுஸ் இவைகளும் குறைந்துபோயின. புத்தியோ கெட்டமார்க்கத்தில் செல்லுகிறது" என்று ஞானக்கண்ணால் பார்த்து எல்லா ஜாதியார்களுக்கும் எல்லா ஆச்ரமிகளுக்கும் என்னசெய்தால் அனுகூலம் உண்டாகுமென்று எல்லோருக்குமுபகாரமான விஷயத்தைச் செய்ய விரும்பி யோசித்தார்.

19–23. வேதத்தில் சொல்லப்பட்டதும், நான்கு ரித்விக்குகளால் முடிக்கக்கூடியதும், சுத்தமானதுமான யாகமே ஜனங்களுக்கு அனுகூலத்தைச் செய்யக்கூடிய தென்று நிச்சயித்து அந்தக் கர்மம் எப்பொழுதும் தொடர்சியாய் நடந்தேறி வருவதற்காக ஒன்றாயிருந்த வேதராசியை நான்காகப் பிரித்தார். மேலும் அந்த நான்கு பாகங்களும் ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வம், என்று பெயர்களுண்டாயின. (பாரதம் முதலிய) இதிகாசங்களும்,(பாகவதம் முதலிய) புராணங்களும், ஐந்தாவது வேதமென்று சொல்லப்படுகின்றன. மேற் காட்டிய 'ரிக்,யஜுஸ், ஸாமம், அதர்வ'என்ற நான்கு வேத சாகைகள் பைலர், வைசம்பாயனர், கவியாகிய ஜைமினி, ஸுமந்து என்கிற மஹர்ஷிகளிடம் முறையே ஒப்புவிக்கப்பட்டன. என்னுடைய பிதாவாகிய ரோம ஹர்ஷணரிடம் இதிஹாஸங்களும், புராணங்களும், கொடுக்கப்பட்டன. மேற்சொல்லிய மஹர்ஷிகளே தங்கள் தங்களுடைய வேதசாகைகளை பல வகையாகப் பிரித்தார்கள். அவைகள் அல்ப புத்தியுள்ள இக்காலத்து ஜனங்களால் அத்யயனஞ் செய்யப்படுகின்றன. அவர்கள் தங்கள் தங்கள் சிஷ்யர்களுக்கும் அத்யயனஞ்

செய்வித்து, அவைகளை உலகத்திற் பரவச் செய்தார்கள். யார் யார் எந்த எந்த சாகைகளை அத்யயனஞ் செய்தார் களோ, அவர்வர்களுக்கு அந்த அந்த சாகைகள் சொந்தமாயின.

24–32. தீனர்களிடத்தில் ப்ரீதியுள்ள பகவானாகிய வ்யாஸ மஹர்ஷியால் இப்படி வேதங்கள் பிரிக்கப் பட்டன. ப்ராஹ்மணர், க்ஷத்ரியர், வைச்யர் ஆகிய இவர்களுக்குள், அதமர்களாகிய த்விஜபந்துக்களுக்கும், ஸ்திரீகளுக்கும், சூத்ரர்களுக்கும், வேதத்தைக் கேட்க அதிகாரமில்லாததனால், அவர்கள் இதிஹாஸத்தால் க்ஷேமத்தை யடையட்டுமென்னுங் கருணையால், வ்யாஸமஹர்ஷி மஹா பாரதம் என்ற க்ரந்தத்தைச் செய்தார். ஓ! ப்ராஹ்மணர்களே, இப்படி எப்பொழுதும் எல்லாப் பிராணிகளுக்கும் க்ஷேமத்தை செய்வதிலேயே நோக்கமுள்ள அந்த மஹர்ஷியானவர் எல்லாவற்றையு மறிந்தவராயிருந்தும் அவருடைய மனத்திற்கு சாந்தி உண்டாகவில்லை; அதனால் அவர் ஸந்தோஷமில்லா மல் ஸரஸ்வதி நதியின் சுத்தமான கரையில் தாம் ஒருவராயிருந்து யோஜித்து பின்வருமாறு சொல்லலா னார். "நான் வ்ரதமுள்ளவனாய் வேதங்களை அத்யயனஞ் செய்தேன். குருக்களையும், அக்னியையும் பூஜித்தேன். ஆசார்யனுடைய கட்டளையின்படி கபடமற்று நடந்தேன். பாரதமென்ற வ்யாஜத்தால், வேதத்தின் அர்த்தத்தை எல்லோருக்கும் தெரியும்படி வெளியிட்டேன். அதில் ஸ்திரீகளாலும், சூத்ரர்களாலும், அறியக்கூடியவைகளான தர்மங்கள் காட்டப்பட்டன. அப்படியிருந்தும் என்னுடைய ஆத்மா(ஜீவன்) இயற்கையில் பூர்ணனானாலும், ப்ரஹ்மவர்சஸ் உள்ளவர்களுக்குட் சிறந்தவனானாலும், ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை யடையாதவன் போலத் தோற்றுகிறான்.

இதற்கென்ன காரணம்? இது ஆச்சர்யமாயிருக்கிறது ஆனால் பாகவத தர்மங்கள் விஸ்தாரமாக வெளியிடப் படவில்லை. அவைகளில் பரம ஹம்ஸர்களுக்கு மிகவும் ப்ரியமிருக்குமே. அவைகளே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிற்கு ப்ரியமானவைகள், அதனால்தான் நம்முடைய மனத்திற்கு ஆனந்தமுண்டாகவில்லையோ" என்று யோஜித்து ஆத்மாவை சூன்யனாக நினைத்து வருத்தமடைந்தார்.

33. இந்த ஸமயத்தில் ஸரஸ்வதி நதிக்கரையில் இருக்கும் அந்த வ்யாஸமஹர்ஷியின் ஆச்ரமத்திற்கு நாரதர் வந்தார். அப்பொழுது அந்த மஹர்ஷியானவர் தேவர்களால் பூஜிக்கப்பட்ட நாரதரைக் கண்டு எதிர் கொண்டழைத்து சாஸ்த்ரமுறை தவறாமல் அவரைப் பூஜித்தார்.

நோட்டு.

25–3. தீர்க்க– அநேக வர்ஷங்களால் முடிக்கக்கூடிய யாகம்– சந்த் 14– பேத– மூலத்தில் நிர்விகல்பக என்றிருப்பதால் நிச்சய ஞானமுள்ளவர். ஸமதிருக்– மித்ரன். சத்ரு,. மற்றவர் ஆகிய இவர்களிடத்தில் ஸமபுத்தியுள்ளவர். ஏகாந்தமதி– ஜனஸஞ்சாரமற்ற விடத்தில் வஸிப்பதில் ப்ரியமுள்ளவர். மூட–– எல்லாவற்றையும் அறிந்தவராயிருந்தும் தன்னுடைய ஸாமர்த்யத்தை வெளியிடாதவர்– சந்த். 16–விழித்த–– "ஸகல ப்ராணிகளுக்கும் எது ராத்ரியோ, அதில் யோகியானவன் விழித்துக் கொண்டிருக்கிறான்.பகவத் 26–33. மூன்றாவது– மஹாயுகத்தில். 26–28. வேதத்தின்– இவர் ஸூதஜாதி யாகையால் வேதத்தில் இவருக்கு அதிகாரமில்லையென்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–5.

வ்யாஸருக்கு நாரதர் உபதேசித்தது.

பின்பு மிகுந்த கீர்த்தியுள்ளவரும், எப்பொழுதும் வீணையைத் தரித்தவரும், தேவர்ஷியுமான நாரதர் ஸமீபத்தில் ஸுகமாய் உட்கார்ந்திருக்கும் ப்ரஹ்மர்ஷி யாகிய, வ்யாஸமஹர்ஷியை நோக்கி ப்ரஸன்னமுக முள்ளவராய்ப் பின்வருமாறு சொல்லத்துடங்கினார்; "ஓ! மஹா பாக்யமுள்ள பராசர புத்ரரே! உம்முடைய சரீராபிமானியான ஆத்மாவானது (ஜீவன்) அந்தச் சரீரத்தாலும், மனத்திற்கு அபிமானியான ஆத்மா வானது, அந்த மனத்தாலும் ஸந்தோஷப்படுகிறதா? அறியவேண்டிய ஸகல தர்மங்களையும் பூர்ணமாகக் காட்டுவதும், ஆச்சர்யத்தை யுண்டுபண்ணுகிறதுமான மஹா பாரதத்தை விஸ்தாரமாகச் செய்தவர் நீரன்றோ? ஆகையால் விஷயம் யாவும் உமக்குத் தெரிந்திருக்க லாமே. மேலும் நீர் நித்யவஸ்துவாகிய, பரமாத்ம ஸ்வரூபத்தை நன்றாக விசாரித்து அறிந்தவரல்லவா? அப்படியிருந்தும், ஒன்றையும் அறியாதவர் போல ஏன் துக்கிக்கிறீர்?" என்று கேட்டார்.

4–11. இதனைக் கேட்ட வ்யாஸ மஹா முனியானவர், பின்வருமாறு சொல்லத் தொடங்கினார். "தாங்கள் சொன்னவைகள் யாவும் என்னிடம இருக்கின்றன. ஆனாலும் என்மனத்திற்கு ஸந்தோஷம் உண்டாகவில்லை. அதன் காரண மின்னதென்றும் விளங்கவில்லை பரம் (கார்யம்) அபரம் (காரணம்) இவைகளுக்கு அதிபதியும், ஸங்கல்பமாத்ரத்தால் முக்குணங்களைக் கொண்டு ஜகத்தை ஸிருஷ்டிப்பவரும்

அவைகளைக் காப்பாற்றுபவரும் பின்னும் அவைகளை நாசஞ்செய்பவரும், அவைகளில் ஸம்பந்தப் படாதவருமான புராண புருஷனை, நீர் உபாஸித்தவர், ரஹஸ்யங்களான விஷயங்கள் யாவும் தங்களுக்குத் தெரியும். மேலும் நீர் ஸூர்யன்போல மூவுலகத்திலும் ஸஞ்சரிப்பதால் எல்லாவற்றையும் அறிந்தவர். ஸகல ப்ராணிகளினுள்ளில் ஸஞ்சரிக்கிற ப்ராணவாயுபோல எல்லாருடைய புத்தியின் ப்ரவர்த்தியையும் அறிந்தவர். ஆனதுபற்றி ப்ரஹ்ம புத்ரராகிய உம்மைக் கேட்கிறேன் வேதங்களை முறைப்படி அத்யயனஞ்செய்து, அதன் உண்மையான அர்த்தத்தைபறிந்து, வ்ரதங்களை யனுஷ்டித்து, யோகத்தால் ப்ரஹ்மஸ்வரூபத்தையும் அறிந்தேன். அப்படியிருந்தும் எந்தப் பாகம் எனக்கு மிகவும் குறைவாயிருக்கிறதோ அந்த பாகத்தை யுபதேசிக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்தார். அதனைக்கேட்ட நாரதர், வ்யாஸமஹாமுனியை நோக்கி, "இயற்கையில் பரிசுத்தமான பகவானுடைய யசஸ்ஸை, (குணங்களை) வர்ணிப்பதால் பரமாத்மா ஸந்தோஷிப்பார். மற்ற ஞானத்தால் பகவான் திருப்தி அடையமாட்டார்; ஆகையால் தர்மாதி ஞானத்தைக் குறைந்ததாக நினைக்கிறேன். உம்மால் அந்த பகவானுடைய குணங்கள் பெரும்பாலும் முக்யமாக வர்ணிக்கப்படவில்லை. மஹாபாரதம் முதலியவைகளில் ஈச்வரனுடைய குணங்கள் வர்ணிக்க பட்டிருந்தாலும் தர்மங்களையும் அதன் ஸாதனங்களையும், முக்யமாக, மஹர்ஷிகள் ஸ்மிருதிகளில் சொல்லியிருப்பதுபோல, பரமாத்மாவின் மஹிமையையே ப்ரதானமாக நீர் வர்ணிக்கவில்லை. எச்சிற்குழியில் கிடக்கும் சித்ரான்னம் முதலியவைகளைக் காக்கைகள் தின்று திருப்தி அடையுமேயொழிய, மானஸ ஸரஸில் ஸஞ்சரிக்கும்

ஹம்ஸங்கள். அவைகளில் ஆசைப்படுகிறதில்லை. அப்படிப்போல லோகத்தைப் பரிசுத்த படுத்தும் பகவானுடைய மஹிமையை வர்ணிக்காத க்ரந்தங்கள், அற்புதமான பதச்சேர்க்கையுள்ளவைகளானாலும், அவற்றால் காமிகள் ஸந்தோஷப்படுவார்களே யொழிய ப்ரஹ்மிஷ்டர்களான பரமஹம்ஸர்கள் திருப்தியடைகிற தில்லை. ஒவ்வொரு ச்லோகத்திலும் அபசப்தங்கள் இருந்தாலும், நாசமற்றவராகிய பகவானுடைய திவ்ய நாமங்களும், மஹிமையும் வர்ணிக்கபட்டிருந்தால் அந்த க்ரந்தம் ஜனங்களுடைய பாபங்களை போக்கும். அதைச் சொல்பவர்களிருந்தால் பெரியோர்கள் கேட்பார்கள். கேட்பவர்களிருந்தாலும் அவர்கள் சொல்லுவார்கள். இரு வகையாருமில்லாத போது தாமே கானஞ்செய்வார்கள்.

12–22. உபாதிகளின் ஸம்பந்ததத்தை நிவர்த்திக்கும், ப்ரஹ்மஞானமும், பகவத்பக்தியில்லாதவனுக்குப் பலனை (அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தைக்) கொடுக்கிறதில்லை. மேலும் கர்மங்கள் எப்பொழுதும் துக்கரூபங்கங்களே. ஆதலால் பலனையுத்தேசித்துச் செய்யப்பட்டனைகள் ஆனாலும், பலனை யுத்தேசியாமல் செய்யப்பட்டவை களானாலும், பகவானிடம் அர்ப்பிக்கபடாதவரையில் அவைகள் ப்ரகாசிக்கிறதில்லை. ஓ! மஹாபாக்யமுள்ள வ்யாஸமஹர்ஷியே! நீர் உண்மையான ஞானமுள்ளவர்; சுத்தமான கீர்த்தியுள்ளவர்; ஸத்யத்திலேயே ஆசை உள்ளவர்; வ்ரதங்களை யனுஷ்டித்தவர்; ஆகையால் ஸகலபந்தங்களும் நிவர்த்தியாக வேண்டியதற்காகப் பகவானுடைய பலவகையான லீலாவிபூதிகளை ஒரே மனதாகச் சிந்தியும். பகவானுடைய சரித்தில் ஆசையில்லாமல், மற்ற சரிதங்களைச் சொல்ல

விரும்பியவர்களுடைய புத்தியானது தேவதா ரூபங்களையும், அநேக நாமங்களையும், சிந்தித்து நிலைபெறாமல் பெருங்காற்றிலகப்பட்ட கப்பல் போல, ஒரு நிலையாய் இருக்கிறதில்லை. ஜனங்கள் இயற்கையாகவே காம்ய கர்மங்களில் ஆசையுள்ளவர்கள். அந்தக்கர்மங்கள் ஞானிகளால் நிந்திக்கக்கூடியவைகளானாலும் அவைகளை தர்மங்களென்றே சொல்லியிருக்கிறீர். ஆகையால் அவைகளை ப்ராகிருத ஜனங்களும் அப்படியே நினைத்திருக்கிறார்கள். "கர்மங்களாலும், ப்ரஜையாலும், தனத்தாலும், மோக்ஷத்தையடைய முடியாது" என்ற ச்ருதியின்படி காம்ய கர்மங்கள் சிறந்தவைகளல்ல என்று ஞானிகளுடைய வார்த்தையை அக்ஞர்கள் நம்புவதற்கு ந்யாயமில்லாமல் இருக்கிறது. இப்படி நீர் செய்தது, ஒரு பெரிய சாஸ்த்ர விருத்தமான கார்யம். ஆனது பற்றி, காலத்தாலும், தேசத்தாலும், அளவிடக் கூடாத ப்ரபுவின் ஸகலஸ்வரூபத்தை நிவிர்த்தி மார்க்கததைக்கொண்டு வித்வான்தான் தெரிந்து கொள்வான். அது அக்ஞனால் அறிய முடியாது. ஆகையால தேஹம் முதலியவைகளில் அபிமானம் உள்ளவர்களும், ஸத்வம் முதலிய குணங்களால் விஷயத்தில் செல்லுகிறவர்களுமான ப்ராகிருதஜனங் களுக்காகப் பகவானுடைய லீலைகளை வர்ணியும். பின்னும் உலகத்தில் தன் ஜாதிக்கும், ஆச்ரமத்திற்கும் உரியதான தர்மத்தைவிட்டு பகவானுடைய தாமரை மலர் போன்ற பாதங்களை ஸேவித்துக் கொண்டு இருந்தவன் பக்தியின் பயனை அடைவதற்கு முன்னமே பலன் பாதியில் மரணம் அடைந்தாலும், பக்தியின் தொடர்ச்சியற்றுப் போனாலும் அவனுக்கு அந்த

வாஸனையிருக்குமாகையால் ஒரு போதும் அந்த க்ஷேமக்குறைவு நேரிடாது. மேலும் ஈச்வரனிடம் பக்தி செய்யாமல் தன்னுடைய தர்மத்தை நன்றாய் அனுஷ்டித்தாலும் அதனால் என்ன கிடைக்கப்போகிறது? (ஒன்றும் இல்லையென்பது தாத்பர்யம்) ப்ரஹ்மதேவர் முதல் ஸ்தம்பமென்ற புழு வரையில் ஸம்ஸாரத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் எல்லா ப்ராணிகளாலும், எந்தவஸ்து அடையப்படவில்லையோ அதையடைய முயற்சிக்கவேண்டும். எப்படி நாம் விரும்பாமல் இருக்குங்காலத்திலும், துக்கம் நேரிடுகிறதோ அப்படியே விஷயஸுகமும் எந்தவிடத்திலும் அந்த அந்தக்காலத்தில் கர்மத்தின் மஹிமையைக்கொண்டு ஜனங்களால் அடையப்படுகிறது. கர்மத்தை மாத்ர மனுஷ்டித்தவன் ஸம்ஸாரதுக் கத்தையடைவது போல, ஒருவன் பகவத் பக்தி செய்து அந்த ஜன்மாவில் அது பூர்த்தியடையாமல் தாழ்மையான வேறு ஜன்மமடைந்திருந்தாலும் அதில் அவனுக்கு துக்கம் நேரிடுகிறதில்லை பகவானுடைய பாதங்களில் பக்தி செய்தவன் மறுஜன்மத்திலும் அவைகளை மறக்கமாட்டான்; அவைகளுக்கு வசப்படுவான். ஈச்வரனை விட்டு ஜீவன் எப்படி வேறில்லையோ அப்படி ப்ரபஞ்சம் பகவானைவிட வேறில்லை அவரிடமிருந்தே இந்த ஜகத் உண்டானது அவராலேயே காப்பாற்றப்படுகிறது. அந்த பரமாத்மாவை நீரே தெரிந்து கொள்வீர்; ஆனாலும் ஸ்வல்ப பாகத்தைத் தெரிவித்தேன்; வீணாகாத ஞானமுள்ள நீர் பிறப்பில்லாத பரம புருஷனுடைய அம்சமேயாம். மேலும் நீர் இயற்கையில் ஜனனமரணமில் லாதவரானாலும், உலகத்தின் க்ஷேமத்திற்காக சரீரமெடுத்துக் கொண்டீர். ஆகையால்

இவ்விஷயத்தைத் தெரிந்துகொள்ளும். அந்தமஹா மஹிமை பொருந்திய பரம புருஷனுடைய சரிதத்தை வர்ணியும். சாஸ்த்ரங்களைக் கேட்பது (ச்ரவணம்) யாகஞ் செய்தல், குளம், கிணறு, வெட்டுவித்தல், ப்ரியமான வார்த்தை சொல்லுதல், மஹாதானஞ் செய்தல் ஆகிய இவைகளின் பலன் என்னவென்றால் உத்தமச்லோகராகிய பகவானுடைய குணங்களை வர்ணிப்பதேயாம். இதுவே சாச்வதமாகிய பலன். இதற்கு உதாரணமாக என்னுடைய முன்ஜன்ம விருத்தாந்தத்தைச சொல்லுகிறேன்.

23–38. நான் முன்ஜன்மத்தில் ப்ராஹ்மணர் களுடைய வீடுகளில் வேலைசெய்து கொண்டிருந்த சூத்ரஸ்த்ரீயின் புத்ரனாகவிருந்தேன். அப்பொழுது மழைகாலத்தில் ஒரே இடத்தில் வஸிப்பதாகிய சாதுர் மாஸ்யவ்ரதத்தை யனுஷ்டித்த சில ஸன்யாஸிகளுக்கு பால்யத்திலேயே நான் சுச்ரூஷை செய்துவந்தேன். பால்யமுள்ளவனானாலும், விளையாட்டு ஸாமான்களை வைத்துக்கொள்ளாமலும், பால் சாபல்யமில்லாமலும், இந்த்ரியங்களை ஜயித்து அவர்கள் ஏவினதைச் செய்வதிலேயே நோக்கமுள்ளவனாயிருந்தேன். அப்பொழுது ஸமபுத்தியுள்ள அவர்களுக்கு ஸ்வல்ப மாய்ப்பேசும் என்னிடத்தில் கருணையுண்டாயிற்று. ஒருநாள் அவர்கள் புஜித்த பிறகு, பாத்ரத்தில் எஞ்சி இருந்த, அன்னத்தை அவர்களுடைய அனுமதியின் பேரில் நான் புஜித்தேன். அதனால் ஸகல பாபங்களும் நிவர்த்தியாகிச் சுத்தனானேன். இப்படிச் சித்தம் சுத்தமான போது, அவர்கள் அனுஷ்டிக்கும் பகவத் பக்தியாகிய தர்மத்திலேயே எனக்கு ப்ரியம் நேர்ந்தது அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய லீலைகளைக்

கானஞ் செய்துகொண்டிருந்தார்கள். இனியவைகளான அவைகளை நான் எப்பொழுதும் அந்தரங்க ப்ரியத்துடன் கேட்டேன். அதனால் எனக்கு பக்தி அதிகரித்தது. அதிலேயே விசேஷ நோக்கமுள்ள எனக்குப் பகவானிடம் ஸ்திரமான பக்தியுண்டானதால், அப்பொழுதே பரப்ரஹ்மமானது ப்ரபஞ்ச ஸம்பந்த மற்றதென்றும், அதுவே நானென்றும், என்னிடத்தில் ஸ்தூல ஸூக்ஷ்மசரீரங்கள் அவித்யையால் (பொய்யாக ஆரோ பிக்கப்பட்டனவேயொழிய, உண்மையிலில்லை என்றும் நான் தெரிந்து கொண்டேன். இப்படி மழைகாலம், சரத்காலம் ஆகிய இரண்டு ருதுக்களிலும் மஹாத்மாக்களாகிய, அந்த ஸன்யாஸிகளால் சொல்லப்பட்ட மஹாவிஷ்ணுவின் மஹிமையை மூன்று காலங்களிலும் ச்ரவணஞ்செய்தேன். அதனால் சிறந்த பக்தியுண்டானது மன்றி, ரஜோகுணமும், தமோ குணமும், என்னைவிட்டு விலகின. அவர்களுக்குச் சுச்ரூஷை செய்வதிலேயே ஆசையுள்ளவனும், வணக்கமுள்ளவனும், பாப மில்லாதவனும், ச்ரத்தை யுள்ளவனும், இந்த்ரியங்கள் ஜயித்தவனும், பால்ய வயதுள்ளவனும், எப்பொழுதும் கூடவே ஸஞ்சரிப்பவனுமாகிய எனக்கு அந்த முனிவர்கள் தீனர்களிடத்தில் ப்ரீதியுள்ளவர்களாகையால் விச்வரூபயாத்ரைக்கு முன்னிலையில், ப்ரஹ்ம வித்தையை யுபதேசித்தார்கள். அது மிகவும் ரஹஸ்ய மானது. ஈச்வரனால் நேரில் சொல்லப்பட்டது. அதனால் நான் ஸகல ப்ரபஞ்சங்களையும் ஸிருஷ்டிக்கும் வாஸு தேவராகிய பகவானுடைய மாயாமஹிமையைத் தெரிந்துகொண்டதுமன்றி அவருடைய பதத்தை அடையும் ஸாதனத்தையும் தெரிந்து கொண்டேன். ஓ! நன்றாய் வ்ரதங்களையனுஷ்டித்த ப்ராஹ்மணோத்தம!

வ்யாதியையுண்டுபண்ணும் த்ரவ்யங்கள், வேறு பதார்த்தத்தின் சேர்க்கையால் ரோகத்தை நிவர்த்திப்பது போல, கர்மமானது ஸம்ஸாரமாகிய வ்யாதியைக் கொடுக்கக்கூடியதானாலும், பரமாத்மாவிடம் ஸமர்ப்பிக்கப் பட்டால், அது முவ்வகையான தாபங் களையும் போக்குகிறது என்ற தர்மரஹஸ்யத்தையும், அவர்கள் எனக்கு உபதேசித்தார்கள். கர்மயோகங்கள் எல்லாம், ஸம்ஸாரத்தைக் கொடுக்கின்றவைகள் ஆனாலும், மேற்காட்டிய ஈச்வரனுடைய ஸந்தோஷத்திற்காகச் செய்கிறோம் என்ற எண்ணத்துடன் செய்து அவரிடத்தில் ஸமர்ப்பிக்கப்படுமானால் அவை பந்தகங்களாகிறதில்லை. பகவானுடைய ஸந்தோஷ மாகிய பலனை விரும்பிச் செய்யப்படும் கர்மமானது, பக்தியோகத்துடன் கூடிய ஞானத்தை உண்டு பண்ணுகிறது. "எதனைச் செய்கிறாயோ, எதனைப் புஜிக்கிறாயோ, எதனை ஹோமஞ்செய்கிறாயோ, எதனைக்கொடுக்கிறாயோ அதனை என்னிடம் கொடுத்துவிடு" என்ற பகவான் உடைய ஆக்ஞையின்படி பெரியோர்கள் கர்மங்களைச் செய்கிறார்கள். கிருஷ்ணனுடைய கல்யாண குணங்களையும், திவ்ய நாமங்களையும், வாக்கினால் உச்சரிக்கிறார்கள் அவரை த்யானஞ்செய்கிறார்கள். பக்தியோகத்தால் நல்ல ஞானமுள்ள புருஷனானவன்" வஸுதேவருடைய புத்ரராயும், ப்ரத்யும்னராயும், அனிருத்தராயும், ஸங்கர்ஷண மூர்த்தியாயுமிருக்கும் பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறோம்" என்று த்யானஞ்செய்து, யக்ஞபுருஷனாகிய பகவானை உபாஸிக்கிறான். அந்த ஈச்வரனுக்கு மேற்காட்டிய மந்த்ரத்தால் குறிக்கப்பட்ட சரீரத்தை விட வேறு சரீரமில்லை.

39–40 பகவானுடைய கட்டளைப்படி நடந்த

எனக்கு, அந்தப் பகவான், தம்முடைய ஞானம் முதலிய வைகளுக்குச் சமமான ஞானத்தையும் ஐச்வர்யத்தையும், தம்மிடத்தில் பக்தியையும் கொடுத்தார். அனேக சாஸ்த்ரங்களைக் குருமுகமாக கேட்ட வ்யாஸரே! ப்ரபுவாகிய பகவானுடைய மஹிமையை நீரும் வர்ணியும். அதனால் வித்வான் களால் அறியவேண்டிய விஷயங்கள் யாவும் உம்மால் அறியப்படும். துக்கத் தினால் வருத்தமடைந்தவர்களுக்கு அதனை நிவர்த்தி செய்யும் உபாயம் இதுவேயொழிய வேறில்லை.

நோட்டு.

28–17. ஆத்மா–சரீரவ்யாதி, மனோவ்யாதி முதலிய துக்கங்களில்லாமல், பகவத் பஜனத்தால் ஸந்தோஷ மடைந்திருக்கிறானா. சந்த். வீர. 21– பாரதம்தேசத்தாலும், காலத்தாலும், அளவிடக்கூடாத பரப்ரஹ்மத்தை விசாரித்தும் அர்த்தத்தாலும், சப்தத்தாலும், மஹத்தான சப்த ப்ரஹ்மமாகிய வேதத்தையும் நன்றாய் விசாரித்திருக்கிறீர். ஆனதால் தாங்கள் பூமியில் அவதரித்ததின் கார்யம் முடிந்து விட்டது. அப்படியி ருந்தும், அவதரித்த கார்யத்தைச் செய்யாதவர்போல் கவலைப்படுகிறீர்.– பரம் –ப்ரஹ்மா, ருத்ரன் இவர்கள். 30–அபரம்– இந்த்ரன் முதலியவர்கள். ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் மேலானவர். வீர. யோகத் தால்– "யாகம், நல்ல ஆசாரம் இந்த்ரிய நிக்ரஹம், பிறருக்கு ஹிம்ஸை செய்யாமலிருப்பது தானம் வேதாத்யயனம் முதலிய கர்மங்களுக்குள் யோகத்தால் ஆத்மாவின் உண்மையை அறிவதே மேலானது"– யாக்ஞ்யவல்க்யஸ்மிருதி அத்புதமான– யமகம் முதலிய சப்தாலங்காரங்களும்,

உத்ப்ரேக்ஷை முதலிய அர்த்தாலங்காரங்களும் பொருந்தியிருந்தாலும். ஸ்ரீத. கானம்– விசேஷ ஆனந்தத்தை உண்டுபண்ணுவதால் கானஞ்செய்கிறார் கள். ஸ்தோத்ரஞ்செய்து பாபங்களைப் போக்கடித்துக் கொள்ளுகிறார்கள். ஸ்ரீத. "பரம ஹம்ஸர்களுக்கு அவை ப்ரியமானவைகள். அவைகளே பகவானுக்கு ப்ரியமானவைகள்." என்றபடி பாகவத தர்மங்களை வர்ணிக்காமலிருக்கும் க்ரந்தங்கள் பரமஹம்ஸர்களால் ஆதரிக்கக்கூடியவையல்லவென்று காட்டப்பட்டது– வீர. நிலைபெறாமல் "ஓ அர்ஜுன! பரமாத்மாவைவிட வேறு ஒன்றுமில்லை என்னும் புத்தியானது ஒருவகையேயாம். அந்த நிச்சயமில்லாதவர்கள் இந்த்ரன, அக்னி முதலிய தேவதைகளைச் சிந்தித்து புத்தியைப் பலவகையாகச் செலுத்துகிறார்கள்." பகவத் கீதை– என்னபலன்? பகவத் பக்தியின்றி தர்மத்தை மாத்ரம் அனுஷ்டிப்பவனிடம் பகவான் ப்ரீதி செய்கிறதில்லை. அதனால் பாபம் நீங்குகிறது மில்லை. அதனால் ஆரம்பித்த கார்யம் பூர்த்தியாகிறது மில்லை ஸ்ரீத. சுற்றி– ஸ்வர்க்கம் முதலிய மேலுலகங் களிலும், பூமி முதலிய கீழ் உலகங்களிலும் ஸஞ்சரிக்கும் ஜனங்கள், அவர்களால் முந்திச் செய்யப்பட்ட பாபபுண்யங்களால் துக்கத்தையும் ஸுகத்தையும் அடைவதுபோல புண்ய பாபங்களைக் கொண்டு மோக்ஷத்தையடைய முடியாதாகையால், அதனை அடைவதற்கு முயற்ச்சிக்கவேண்டும். சந்த்– ப்ரபஞ்சம்– அசையும் பொருள் அசையாப்பொருள் இவைகளடங்கியது. "இந்த ப்ரபஞ்ச முழுவதும் பரப்ரஹ்மம்."–ச்ருதி. ஸ்வல்ப– "நல்ல ஆசார்யர்களை யடைந்த புருஷன் பரமாத்மாவைத் தெரிந்துகொள்ளு கிறான்" ச்ருதி– வ்யாஸரென்ற திவ்யநாமத்துடன் பகவான்

ப்ரகாசிப்பதுபோல ப்ரபஞ்சமென்ற பெயருடனும் அவரே விளங்குகிறார்– சந்த். நான்–பெரியோர் களுடைய சேர்க்கையால் க்ஷேமம் கிடைக்கு மென்பது காட்டப்பட்டது. சாதுர்மாஸ்யம்–ஒவ்வொரு வர்ஷத்தி லும் நான்கு மாஸங்கள் ஸஞ்சாரத்தை நிறுத்தி ஒரே இடத்தில் வஸிக்கவேண்டும் என்று ச்ருதியில் சொல்லியிருக்கிறபடி ஸன்யாசிகள், "வர்ஷக் காலமானது ப்ராணிகள் உண்டாகும் ஸமயமானதால் பெரும்பாலும் மார்க்கங்கள் ஜந்துக்களால் நிறைந்து இருக்கும் ஆகையால் அவர்களுக்கு ஹிம்ஸை நேரிடாமலிருப்பதற்காக நான்கு பக்ஷங்கள் இந்தக் கிராமத்திலேயே வஸிப்பதாக உத்தேத்திருக்கிறோம். உங்களுடைய ஸௌகர்யத்தைத் தெரிவிக்கவேண்டும்." அவர்கள் அப்படிக் கேட்ட ஸன்யாஸியை நோக்கி, தாங்கள் இவ்விடத்திலேயே ஸுகமாய் வஸியுங்கள், எங்களால் கூடிய சுச்ரூஷைச்செய்து நாங்கள் க்ருதார்த்தர்களாக ஆகிவிடுகிறோம்" என்று பதில் சொல்லுவார்கள். பின்பு ஆஷாடமாஸத்திய பூர்ணமி முதல் நான்கு பக்ஷங்கள் ஒரே இடத்தில் போக்குவார்கள். இதுவே சாதுர்மாஸ்ய விரதமெனப்படும். பிறகு ஐந்தாவது பக்ஷத்தின் பிரதமையில் ஸஞ்சாரத்திற்கு ஆரம்பிப்பார்கள். அதுவே விச்வரூப யாத்ரையாகும். புஜித்தேன்–எச்சிலான ஸ்தலத்தை சுத்திசெய்வது முதலியவற்றையுஞ் செய்தேன்.– விஜ. ஆக்ஞை– ச்ருதிகளும் ஸ்மிருதிகளும் பகவானுடைய கட்டளை. ப்ரத்யும்ன– இதுமுதல் இரண்டு ச்லோகங்களால் பகவானுடைய குணங்களையும் நாமங்களையும் ஸ்மரிப்பதும், பலத்தையுத்தேசியாமல் கர்மானுஷ்டா னம் செய்யும் ப்ரகாரங்களும். அப்படிச் செய்பவனே

மேலானவனென்றும் காட்டப்பட்டிருக்கிறது."ஓம் தத்ஸத் என்பது பரப்ரஹ்மத்தை முவ்வகையாக சொல்வதாக ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது" என்று பகவான் சொல்லிருப்பதனால் வாஸுதேவ, ப்ரத்யும்ன, அனிருத்த, ஸங்கர்ஷண இந்த நான்கு ரூபமாய் இருக்கும் பகவானுக்கு நமஸ்காரம் பண்ணுகிறோம் என்பதால் பகவானுடைய திவ்ய நாமத்தை உச்சரிக்கவேண்டிய வகை காட்டப்பட்டது. மூலத்தில் தீமஹி–த்யானம் செய்கிறோம்' என்று இருப்பதால் ப்ரணவ சப்தத்தால் காட்டப்பட்ட அனந்த கல்யாணகுணங்கள் நிறைந்த பகவானைத் த்யானம் பண்ணுகிற ப்ரகாசமும், ரக்ஷிப்பது என்ற அர்த்தமுள்ள ' அவ' என்ற தாதுவிலிருந்து ப்ரணவம் ஏற்பட்டதாகையால் எல்லாரையும் ரக்ஷிப்பதாகிய பரமாத்மாவின் குணமும், மேலும் அந்த ப்ரணவம் அகாரம், உகாரம், மகாரம் இம்மூன்று அக்ஷரங்களால் அமைந்திருப்பதால் எல்லாவற்றிற்கும் பரமாத்மா காரணமென்றும், எல்லாவற்றிற்கும் அதிபதியென்றும் காட்டப்பட்டிருக்கிறது. தவிரவும், வாஸுதேவ என்பதால் பரமாத்மாவானவர் எல்லாவற்றிற்கும் ஆதாரமென்றும், எல்லோருக்கும் அந்தராத்மாவென்றும், ப்ரத்யும்ன என்பதால்,"அவ்விடத்தில ஸூர்யன் ப்ரகாசிக்கிற தில்லை, சந்த்ரனும் நக்ஷத்ரங்களும், மின்னல்களும் அக்னியும் விளங்குகிறதில்லை" என்ற ச்ருதிப்படி நிகரில்லாத ப்ரகாசமுள்ளவர் என்பதும்; அனிருத்த என்பதால் ஸர்வவ்யாபகரென்றும். ஸங்கர்ஷண என்பதால் இந்த்ரியங்களுக்குப் புலப்படாத விஷயங்களைத் தெரிவிப்பவரென்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. வீர ஐச்வர்யம்– அணிமா முதலியவைகள். பக்தி–இடை விடாமல் பகவானை ஸ்மரிப்பது– ஸ்ரீத.

அத்யாயம்–6.

நாரதருடைய முன்ஜன்மம்.

ஸத்யவதியின் புத்ரராகிய வ்யாஸமஹர்ஷியானவர், தேவர்ஷியாகிய நாரதருடைய பிறப்பு, சரிதம், ஆகிய இவைகளைக் கேட்டுப் பின்னும் அவரை நோக்கி ஓ! நாரதரே! உமக்கு ஞானோபதேசஞ் செய்த ஸன்யாஸிகள் சென்றபிறகு, பால்யவயதுள்ளவரான நீர் என்ன செய்தீர்? ப்ரஹ்மதேவருடைய புத்ரரே! அபரவயதில் என்ன செய்துகொண்டிருந்தீர்? தேஹவியோக காலம் நேர்ந்த போது சரீரத்தை எப்படிவிட்டீர்? ஜீவன் ஒரு சரீரத்தைவிட்டு மற்றொரு சரீரமடைந்தபின் முன் ஜன்மத்தின் விஷயங்கள் காலமஹிமையால் மறந்து போகின்றனவே அப்படிக்கிருக்க முன்காலத்தில் நடந்த விஷயம் எப்படித் தங்கள் ஞாபகத்திலிருக்கிறது? என்றார். அதனைக்கேட்ட நாரதர் வ்யாஸமஹர்ஷியை நோக்கி "எனக்கு ஞானோபதேசஞ்செய்த ஸன்யாஸிகள் தேசாந்தரம் போனபிறகு சிறுவயதுள்ள நான் என்ன செய்தேனென்றால், என் தாயாருக்குக் குழந்தை நானொருவனே; ஆனதுபற்றியும் எனக்கு வேறு கதியில்லாததனாலும் என்னுடைய தாயார் என்னிடம் மிகவும் ப்ரியம் வைத்திருந்தாள். அவள் ஒன்றையும் அறியாதவள்; வேலைசெய்து ஜீவிப்பவள்; மரத்தால் செய்யப்பட்ட ப்ரதிமை மனிதர்களால் ஆட்டி வைக்கப் படுவதுபோல, இந்த ஜனங்கள்யாவும் ஈச்வரனுக்கு ஸ்வாதீனப் பட்டிருக்கிறார்கள். என்தாயார் என்னுடைய யோகக்ஷேமத்தை வஹிக்க விரும்பினவளானாலும் அதை நடத்த ஸாமர்த்யமற்றவளாக விருந்தாள். திக்கு, தேசம், காலம் ஆகிய இவைகளின் பிரிவையறியாத ஐந்து வயதுள்ள சிறுவனாகிய நான்மாத்ரு ஸ்நேஹத்தா

அந்த ப்ராஹ்மண கிருஹத்திலேயே வஸித்தேன். ஒருநாள் ராத்ரி என் தாயார் மாடு கறப்பதற்காக வீட்டிற்கு வெளியே வரும்போது ஒருபாம்பைக் காலால் மிதித்தாள். அப்பொழுது அனாதையான அவளை அந்தஸர்ப்பம் காலனால் தூண்டப்பட்டு கடித்தது. உடனே அவள் மரணமடைந்தாள். அப்பொழுது நான் "ஈச்வரன் பக்தர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுப்பதி லேயே நோக்கமுள்ளவராகையால் நமக்கு நேர்ந்த மாத்ருதுக்கம் அனுக்ரஹமேயொழிய வேறில்லை என்று நினைத்து வடக்குத்திக்கை நோக்கிப் புறப்பட்டேன். ஸம்பத்துள்ள அனேக தேசங்களையும், கிராமங்களையும், கோகுலங்களையும், ரத்னம் விளையும் பூமிகளையும், பயிரிடுபவர்கள் வஸிக்கும் இடங்களையும், மலையடிவாரங்களையும், பாக்குமரம் முதலியவைகளின் தோட்டங்களையும், தானாக முளைத்த மரங்களிருக்குங் காடுகளையும், மரங்கள் வைத்து விருத்திசெய்யப்பட்ட இடங்களையும், பல வகையான தாதுக்களால் அழகான மலைகளையும், யானைகளால் முறிக்கப்பட்ட கிளைகளுள்ள மரங்களை யும், நல்ல ஜலமுள்ள குளங்களையும், தேவர்கள் ஜலக்ரீடை செய்யும் தாமரஸ ஓடைகளையும், அவைகளிலிருக்கும் அழகான குரலுள்ள பக்ஷிகளையும், தேனீக்களையும், அவைகளால் அலங்கிருதமான தாமரைத்தடாகங்களையும், பார்த்துகொண்டு நான் ஒருவனாக அவைகளைக் கடந்துசென்று, பயங்கரமாகிய ஒரு வனத்தைக் கண்டேன். அது கோரைகளும், மூங்கில்களும், வண்டுகளால் துளைக்கப்பட்ட மூங்கில்களும், நாணல்களும், தர்ப்பங்களும், அடர்ந்து இருப்பதாலும், ஸர்ப்பங்களும், கோட்டான்களும், நரிகளும் வஸிக்குமிடமாயிருந்தாலும் மிகவும் பயங்கர

மாயிருந்தது. அப்பொழுது நான் வெகுதூரம் நடந்த தால், பசி, தாஹமுண்டாகி, அவற்றால் இந்த்ரியங்கள், சரீரம் இவைகளின் வலிமை குறைந்து களைப்படைந் தேன். பின்பு ஒரு நதியின் மடுவில் ஸ்நானஞ்செய்து, ஆசமனம் பண்ணிச்ரமத்தை நிவர்த்தித்துக் கொண்டேன். பின்பு மனிதர்களுடைய ஸஞ்சாரமில்லாத அந்தக் காட்டில் ஒரு அரசமரத்தின்கீழ் உட்கார்ந்து ஸன்யாஸிகளிடம் உபதேசம் பெற்றப்படி ஹிருதயத்தி லிருக்கும் பரமாத்மாவை த்யானஞ் செய்தேன். பகவானுடைய பக்தியால் மனத்தை ஒருவகைப்படுத்தி அவருடைய தாமரை போன்ற பாதத்தை த்யானஞ் செய்யும்போது என்னுடைய இருகண்களிலிருந்து ஆனந்தபாஷ்யம் பெருகியது. அப்பொழுது ஸ்வல்ப காலத்தில் என்னுடைய ஹிருதயத்தில் பகவத் ஸ்வரூபம் ப்ரகாசித்தது ஓ! வ்யாஸ மஹர்ஷியே! விசேஷ ப்ரேமையால் மயிர்க்கூச்சலுண்டாயிற்று. அதனால் மிக்க ஸுகமுள்ளவனாய் ஆனந்த ப்ரவாஹத்தில் மூழ்கி என்னையும் பகவத் ஸ்வரூபத்தையும் மறந்திருந்தேன். இப்படியிருக்க மிக்க அழகுள்ளதும், ஸகல துக்கங்களை யும் போக்கடிக்கக்கூடியதுமான அந்தப்பகவானுடைய ரூபம் மறைந்தது. உடனே அதனைக்காணாமல் மிகவும் மனவருத்தமடைந்து சீக்ரமாக எழுந்திருந்தேன். மறுபடியும் அந்த பகவத் ஸ்வரூபத்தைப் பார்க்கவிரும்பி மனத்தையடக்கி அதே ரூபத்தை ஹிருதயத்தில் த்யானஞ்செய்தேன். அப்படியும் அந்த ரூபம் நேரில் தோன்றவில்லை. ஒரு தடவை பார்த்ததால் த்ருப்தி யுண்டாகாததனால் மனக்கவலையடைந்தேன்.

21–26. இப்படிக் காட்டில் கவலையுடனிருக்கும் என்னை நோக்கி வேதவாக்யங்களுக்கு விஷயமாகாத

பகவான் "ஓ! குழந்தாய்! கர்மம் முதலிய தோஷங்கள் அற்றுப்போகாத யோகிகளால் என்னைப் பார்க்க முடியாது. ஆனதால் இந்த சூத்ர ஜன்மத்தில் நீ என்னைப் பார்க்கத் தகுந்தவனல்ல. ஆனால் ஒரு தரம் என் ரூபத்தைக் காண்பித்த காரணமென்னவெனில்.. ஒரு தரம் என் ரூபத்தைப் பார்த்தவனுக்குப் பின்னும் பார்க்கவேணுமென்ற எண்ணம் உண்டாகும். அதனால் என்னிடமே மனத்தைச் செலுத்தியவர்களுக்கு ஸகல மனோதோஷங்களும் நிவர்த்தியாய் விடுகின்றன. வெகுகாலம் ஸாதுக்களுக்குச் சுச்ரூஷை செய்ததால் உனக்கு என்னிடத்தில் ஸ்திரமான பக்தியுண்டாயிற்று. ஆனதால் தோஷத்தை யுண்டுபண்ணும் இவ்வுலகத்தை விட்டு என்னுடைய பார்ஷதனாக ஆய்விடுவாய் என்னிடத்தில் உனக்கு உண்டான பக்தியொருபொழு தும் குறையாமலிருக்கும். மேலும் ப்ரளய காலத்திலும் என்னுடைய அனுக்ரஹத்தால் முந்திய ஞாபகம் தவறாமலிருக்கும்" என்று அனுக்ரஹித்தார். இப்படி அனுக்ரஹிக்கப்பட்ட நான் மஹாபூதமாயும், ஆகாச சரீரமுள்ளவரும், எல்லாருக்கும் அதிபதியாயும், எல்லாருக்கும் ஸமீபத்திதலிருப்பவரானாலும், ஒருவராலும் அறியப்படாதவருமான அந்தப் புருஷனுக்கு நமஸ்காரஞ்செய்தேன்.

27–32. பின்பு அனந்த (நாசமற்ற)னுடைய திவ்ய நாமங்களை வெட்கப்படாமல் உச்சரித்துக்கொண்டும் அவரால் செய்யப்பட்ட ரஹஸ்யமான லீலாவிபூதிகளை நினைத்தும் மற்ற ஆசைகளை யொழித்தும், கர்வம், மாத்ஸர்யம் இவைகளை விலக்கிக் காலத்தை எதிர்பார்த்து ஸந்தோஷமாகப் பூமியில் ஸஞ்சரித்தேன். இப்படி ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலேயே மனத்தைச் செலுத்தி,

ஒன்றிலும் பற்றுதலில்லாமல் சுத்த சித்தனாகவிருந்தேன். இப்படிக்கிருக்கையில் சுத்தமான ஆகாசத்தில் மின்ன லுடன் மேகவரிசை தோன்றினாற்போல திடீரென்று மரணகாலம் நேர்ந்தது. அப்பொழுது சுத்தமான அந்தப்பார்ஷத சரீரத்திற்குப் பகவதிச்சைப்படி நான் போகும்போது ப்ராரப்தகர்மம் நசித்து ஐந்து பூதங்களா லேற்பட்டிருந்த பழய சரீரம் கீழேவிழுந்தது. பிறகு நான் இந்த மூவுலகத்தையும் காரணரூபமாய் அடக்கிக் கொண்டு ப்ரளயகாலத்தில் ஸமுத்ர ஜலத்தில் ஸ்ரீ நாராயணன் சயனஞ் செய்துகொண்டிருக்கும்போது, பின்பு அவரிடம் சயனஞ்செய்ய விரும்பிய ப்ரஹ்ம தேவரின் ச்வாஸத்தின் வழியாக அவருடைய ஹிருத யத்தில் ப்ரவேசித்தேன். பிறகு 1000 சதுர்யுகங்கள் கொண்ட ப்ரஹ்மதேவருடைய ராத்ரி முடிந்தவுடன் மறுநாள் காலையில் ப்ரஹ்மதேவர் ஜகத்தை ஸிருஷ்டிக்க யத்தனித்தார். அப்பொழுது அவருடைய இந்த்ரியங்களிலிருந்து மரீசி முதலிய ப்ரஜாபதிகளும் நானும் உண்டானோம். நான் குறைவின்றி ப்ரஹ்மசர்ய விருதங்களையனுஷ்டித்து, மூவுலகத்தில், உள்ளிலும் வெளியிலும் மஹாவிஷ்ணுவின் அனுக்ரஹத்தால் ஒரிடத்திலும் தடையற்ற நடையுள்ளவனாகிச் சஞ்சரிக்கிறேன்.

33–37. தவிரவும், இந்த வீணை ஈச்வரனால் கொடுக்கப்பட்டது. இது ஷட்ஜம் முதலிய ஸ்வரங்களா கிய நாதப்ரஹ்மத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. ஆனதால் மூர்ச்சனை முதலியவைகளுடன் ஸ்ரீ நாராயணனுடைய கதையைக் கானஞ்செய்து கொண்டே ஸஞ்சரிக்கிறேன். பகவானுடைய மஹிமையை நான் கானஞ் செய்யும்போது, ஜகத்தை பரிசுத்தப்

படுத்தும் பாதங்களுள்ளவரும், எல்லோராலும் ப்ரியப் படக்கூடிய லீலைகளுள்ளவருமான பகவான் என்னால் அழைக்கப்பட்டவர் போல என் மனத்தில் வந்திருந்து தர்சனங் கொடுக்கிறார். விஷயத்தில் ஆசையால் அடிக்கடி அவைகளையே கவர்ந்து கொண்டிருக்கும் சித்தமுள்ளவர்களுக்கு பகவானுடைய லீலைகளை வர்ணிப்பதே ஸம்ஸாரஸாகரத்தை தாண்டச்செய்யும் ஓடமென்று நிச்சயிக்கப்படுகிறது. காமம் முதலிய ஆறுவகை சத்துருக்களால் பீடிக்கப்படும் மனது பகவானை ஸேவிப்பதால் சுத்தமாவதுபோல யமம் முதலிய யோக ஸாதனங்களால் சுத்தப்படுகிறதில்லை. தோஷமற்றவரே என்னுடைய பிறப்பு, என்னுடைய சரிதம் முதலிய ரஹஸ்யங்களைப்பற்றி உம்மால் கேட்கப்பட்டவைகளெல்லாவற்றையும் உம்முடைய மனம் ஸந்தோஷப்படும்படி விஸ்தாரமாகச் சொன்னேன் என்று சொன்னார்.

38–39. ஓ! சௌனகர் முதலிய மஹர்ஷிகளே! இப்படி தெய்ச்செயலாய் வந்த நாரதர் ஸத்யவதியின் புத்ரராகிய வ்யாஸருடன் ஸம்பாஷணை செய்து 'நான் போய்வருகிறேன்' என்று சொல்லி வீணையை மீட்டிக்கொண்டே சென்றார். நாரதர் உலகமெங்குஞ் சென்று சார்ங்கமென்ற வில்லைத்தரித்த ஈச்வரனுடைய சரிதத்தை வாக்கினாலும், வீணையைக் கொண்டும் கானஞ்செய்து, ஸகல லோகத்தையும் ஸம்ஸாரதுக்கத் திலிருந்து காப்பாற்றுகிறார்; ஆகையால் இவரே பாக்யசாலி. இது இப்படி இருப்பது ஆச்சரியம்.

நோட்டு.

ஸன்யாஸிகள் மூலத்தில் பிக்ஷுவென்றிருப்பதால்

ஞானபிக்ஷை கொடுப்பவர்களென்று அர்த்தம்– விஜ. யோகம்–இல்லாதவைகளை ஸம்பாதிப்பது. க்ஷேமம்– ஸம்பாதித்தவைகளைக் காப்பாற்றுவது– வீர. தாயார் என்னிடத்தில் மிக்கப்ரியம் வைத்திருந்தபடியால் பெரியோர்கள் பின் நான் போகவில்லை– விஜ. ஸ்நேஹத்தால்– எப்பொழுது இதன் நேஹம் குறையு மென்று எதிர்பார்த்திருந்தேன் ஸ்ரீத. நினைத்து– "எவனையனுக்ரஹிக்க வேண்டுமென்று விரும்புகிறேனோ அவனுடைய பணத்தையும் பந்துக்களையும் நாசஞ் செய்கிறேன்"– ஸ்ருதி. புறப்பட்டேன்– மாதாவிற்கு அபரக்ரியை செய்தபிறகு– விஜ க்ராமங்கள்–"ப்ராஹ்மணர்களும் அவர்களுடைய வேலைக்காரர்களும் வஸிக்குமிடம், அல்லது சூத்ரர்கள் அவர்களுடைய வேலைக்காரர்களும் வஸிக்குமிடம்"– ப்ரகு வேத– எதையடையாமல் வாக்குகள் மனத்துடன் திரும்புகின்றனவோ– ச்ருதி திருப்தி– விஷயத்தில் ஆசையுள்ளவனுக்கு ஒருதடவை விஷயத்தையனுபவித் தால் திருப்தியுண்டாகாததுபோல– வீர. மஹாபூதம்– ரிக்வேதம் முதலியவைகள் இந்த மஹாபூதத்தின் நிச்வாஸமே"– ச்ருதி. காலத்தை– ப்ராரப்த கர்மத்தின் முடிவை– ஸ்ரீத. ப்ரவேசித்தேன்– "ப்ரஹ்மதேவர் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் தேஹத்தில் ப்ரவேசித்து அவருடன் ஒன்றாய் கலந்து யோகநித்ரையை யடைந்தார்"– கூர்மப்புராணம்.1000 சதுர்யுக– மனுஷ்யமானத்தால் 1000 சதுர்யுகமானால் ப்ரஹ்மதேவருக்கு ஒரு பகல் முடியும், அவ்வளவு காலங்களடங்கியது ஒரு ராத்ரியாகும். இம்மாதிரியான பகலும் ராத்ரியும் சேர்ந்தால் ஒருதினம், அப்படி 30 தினங்கள் ஒருமாதமாகும், அப்போர்பட்ட மாஸங்களில் 12 கொண்டது ஒரு வர்ஷம், அப்படி நூறு வர்ஷங்கள்

ப்ரஹ்மதேவருக்கு பரமாயுஸ். இதுவே ப்ராஹ்மமான மெனப்படும். மரீசி– வஸிஷ்டர் முதலிய மஹர்ஷிகளும்– வீர.– வெளியிலும்– கர்மிகள் முவ்வுலகத்திலும் வெளியில் வரமாட்டார்கள், தபஸ், முதலியவைகளால் ப்ரஹ்மலோகத்தை யடைந்தவர்கள். இதற்குள் வருகிறதில்லை. ஸ்ரீத ஈச்வரனால்– ப்ரஹ்மதேவரால் கொடுக்கப்பட்டது– சந்த். மூர்ச்சனை.– ஸ்வரத்தின் ஆரோஹாவரோஹம்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–7.

அர்ஜுனன் அச்வத்தாமாவைச் சிக்ஷித்தது.

சௌனக் மஹர்ஷியானவர், ஸூதரை நோக்கிப் "பிறகு பகவானாகிய வ்யாஸமஹர்ஷி, நாரதருடைய அபிப்பிராயத்தை யறிந்து எதனைச்செய்தார்" என்று கேட்டார்.

2–8. இதனைக்கேட்ட ஸூதர், சௌனகரை நோக்கி ப்ரஹ்ம பத்னியாகிய ஸரஸ்வதி நதியின் மேல் கரையில் 'சமயாப்ராஸம்' என்னும் ஒரு ஆச்ரமமுண்டு. அது மஹர்ஷிகள் யாகஞ் செய்யுமிடம். மேலும் அது இலந்தை மரங்களால் அலங்கரிக்கப்பட்டது. அந்த முக்யமான ஆச்ரமத்தில் வ்யாஸ மஹர்ஷியானவர், ஆசமனஞ்செய்து, சுத்தராய் உட்கார்ந்து, மனத்தை ஒரு வகைப்படுத்தி த்யானஞ்செய்தார். பக்தி யோகத்தால் சுத்தமாயும், ஸ்திரமாயுமுள்ள மனத்தில் புருஷோத்தமனையும், அவரை ஆச்ரயித்த மாயையும் தர்சித்தார். "மேலும் ஜீவன் உண்மையில் மாயையைக் கடந்த ஸ்வரூபமுள்ளவனானாலும், அந்த மாயைக்கு வசப்பட்டு பிரமித்து, தான் முக்குண ஸம்பந்த முள்ளவனென்றும், மாயாகுணங்களால் செய்யப்படும் கார்யங்களைத் தான் செய்வதாக நினைத்துமிருக்கிறான்" என்றும் தெரிந்துகொண்டார். பின்னும் அந்த அனர்த் தத்தை போக்கக்கூடிய பக்தியோகத்தையும் அறிந்தார். பின்னும் அவர் உலகத்திற்கு ஏற்பட்டிற்கும், இவ்வித மான அக்ஞானத்தை நிவர்த்திப்பதற்காக, ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தார். அதனைக் கேட்ட மாத்ரத்தில் பரமபுருஷனாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில்,

ஸ்திரமான பக்தியுண்டாகிறது. அதனால் சோகம் மோஹம், பயம், ஆகிய இவைகள் நிவர்த்தியாகின்றன. மேலும் அவர் தம்மால் செய்யப்பட்ட அந்த ஸம்ஹிதையைப் பரிசோதித்து நிவிர்த்திமார்க்கத்தில் ஆசையுள்ள தம்முடைய குமாரராகிய சுகருக்கு அதை உபதேசித்தார்" என்று சொல்லி முடித்தார்.

9–20. இதனைக்கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஓ ஸூதரே! அந்தச்சுகர் ஒருவிஷயத்திலும் ஆசையில்லாதவர்; நிவிர்த்திமார்க்கத்திலேயே நோக்க முள்ளவர்; ஆத்மாவிடமே ரமிப்பவர்; அப்படியிருக்க அந்தப் பெரிதாகிய க்ரந்தத்தை எதற்காக அவர் அப்யஸித்தார் என்று கேட்டார். அதனைக்கேட்டு ஸூதர் சௌனகரை நோக்கி, "ஓ சௌனகரே! மஹர்ஷிகள், ஆத்மாராமர்களானாலும், பகவத் ஸ்வரூபத்தை நன்றாய் அறிந்தவர்களாகையால் ஸம்சய மற்றவர்களானாலும், க்ரந்தங்களைப் படிப்பதில் ஆசையில்லாதவர்களானாலும், பகவானிடத்தில் பலனை உத்தேசியாமலே பக்திசெய்கிறார்கள், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சரிதங்கள், வைராக்யமடைந்த மனத்தையும் வசப்படுத்திக்கொள்ள ஸாமர்த்யமுள்ள வைகள், ஆனதால் சுகமஹர்ஷி, பகவத் குணங்களில் விசேஷ ஆசையுள்ளவராகி அந்தப் பெரியதாகிய உபாக்யானத்தை அப்யஸித்தார். அவர் வ்யாஸ மஹர்ஷியின் புத்ரர். அவரிடத்தில் விஷ்ணு பக்தர்கள் ப்ரியப்படுவார்கள். ஓ! மஹர்ஷிகளே! பரீக்ஷித் என்ற ராஜரிஷியின் பிறப்பு, அவர்செய்த கார்யங்கள், அவருடைய மரணம், பாண்டவர்களுடைய மஹா ப்ரஸ்தானம், இவைகளை கிருஷ்ணகதையைச் சொல்லு வதற்கு உபயோகமாகச் சொல்லுகிறேன். எப்படியெனில்,

கௌரவர்களும், ஸிருஞ்ஜயர்களும், யுத்தத்தில் அடிக்கப்பட்டு ஸ்வர்க்கமடைந்தார்கள். பீமஸேனன் தன்னுடைய கதாயுதத்தால் துர்யோதனனுடைய துடையை அடித்து முறித்தான். பின்பு "த்ரோணருடைய புத்ரராகிய அச்வஸ்தாமாவென்பவர் த்ரௌபதியின் புத்ரர்களை நாசஞ்செய்வதே தம்முடைய யஜமானாகிய துர்யோதனனுக்கு ப்ரியமான கார்யம்" என்று நினைத்து உபபாண்டவர்கள் தூங்கும் ஸமயத்தில் அவர்களுடைய தலையை வெட்டினார். இது துர்யோதனனுக்கு ப்ரியமன்று. மேலும் அதை எல்லோரும் வெறுக்கக் கூடிய கார்யம் என்று நிந்தித்தார்கள். அப்பொழுது அக்குழந்தைகளுடைய தாயாகிய த்ரௌபதிதேவி புத்ரசோகத்தால் பரிதபித்துக் கண்ணீரைப் பெருக்கி அழுதாள். அந்தஸமயத்தில் அவளை நோக்கி அர்ஜுனன், "ஓ! நல்ல ஸ்வபாவமுள்ளவளே! என்னுடைய காண்டீவத்தில் பாணங்களைத்தொடுத்து அவைகளை ப்ரயோகித்து ப்ராஹ்மணர்களுக்குள், அதமனும், ஆயுத பாணியும் ஆததாயியுமான அச்வஸ்தாமாவினுடைய தலையை உன்னிடம் கொடுத்து உன்னுடைய துக்கத்தை நிவர்த்திக்கிறேன். அந்தத் தலையை ஆஸனமாகச் செய்து புத்ரசோகத்தை போக்கிக்கொள் வாய்" என்று ஸமாதானஞ்செய்தான். இப்படி அழகான வார்த்தைகளைச் சொல்லி ஸமாதானஞ்செய்து தகுந்த முயற்சியுடன் குரு புத்ரராகிய அச்வஸ்தாமாவை அர்ஜுனன் துரத்தினார். அவருக்கு மித்ரரும், ஸாரதியு மாயிருப்பவர் ஸ்ரீ கிருஷ்ணனே. அவருடைய வில் பயங்கரமானது. ரதமோ, ஹனுமத்வஜமுள்ளது. சிசுக்களைக் கொன்றவரான அந்த அச்வஸ்தாமா பின் தொடர்ந்துவரும் அர்ஜுனரை வெகுதூரத்தில் கண்டு பயந்து ப்ராணனைக் காப்பாற்றிக்கொள்ள

வேண்டி, பூமியில் எதுவரையில் போகக்கூடுமோ அதுவரையில் "சிவபெருமானிடத்தில் பயந்து ப்ரஹ்ம தேவர் ஓடியதுபோலத் திரும்பிப்பாராமலே ஓடினார். அப்படியும் தம்மைக் காப்பாற்றக்கூடியவர் கிடைக்காத தனாலும், குதிரைகள் களைத்துப்போனபடியாலும் அவர் ப்ரஹ்மாஸ்த்ரமே தன்னைக் காப்பாற்றுமென்று நினைத்தார். பின்பு ஆசமனஞ்செய்து சுத்தராய், ப்ரயோகித்த அஸ்த்ரத்தைத் திருப்பும் வகையறியாத வராயிருந்தும் ப்ராணனுக்குக் கெடுதி நேரிடும் ஸமயமாகையால் அந்த அஸ்த்ரத்தை ப்ரயோகித்தார்.

21–26. பின்பு எல்லா திக்குகளிலும் அந்த அஸ்த்ரத்தின் தேஜஸ் பரவியது. அதனைக்கண்டு அர்ஜுனன் தம்முயிர்க்குச் சேதம் வந்ததென்று நினைத்து ஸாரதியாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானை நோக்கி "ஓ! கிருஷ்ண! கிருஷ்ண! மிகுந்த பராக்ரம முள்ளவரே! பக்தர்களுக்கு நேரும் பயத்தை நிவர்த்திப் பவரே! ஸம்ஸாரத்தால் கஷ்டப்படும் ஜனங்களுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பவர் தாமொருவரே. நீரே முந்திய புருஷன். நீரே எல்லாவற்றிற்கும் பிரபு. ப்ரகிருதியைக்காட்டிலும் வேறானவர். ஆனந்த ஸ்வரூபத்திலிருப்பவர். நீர் மாயையைக்கடந்தவரானாலும், மாயைக்கு வசப்பட்டு ஸம்ஸாரத்தில் மூழ்கியிருக்கும் ஜனங்களுக்கு தர்மம் முதலிய புருஷார்த்தங்களைக் கொடுக்கிறீர். வேறிடத்தில் மனஸைச் செலுத்தாமல் தம்மையே பஜிப்பவர்கள் இந்த திவ்யமங்கள சரீரத்தை த்யானஞ் செய்கிறார்கள். ஓ! தேவர்களுக்குத்தேவனே! இதோ மிகவும் பயங்கரமான தேஜஸ் எங்கும் பரவிவருகிறதே, இது இன்னதென்று தெரியவில்லை. இதனைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

27–28. அதனைக்கேட்டுக் கிருஷ்ணபகவான் அர்ஜுனனை நோக்கி த்ரோணருடைய புத்ரராகிய அச்வஸ்தாமாவினால் ப்ரஹ்மாஸ்த்ரம் ப்ரயோகிக்கப் பட்டிருக்கிறது. இது அதன் தேஜஸ்ஸை தவிர வேறில்லை அவருக்கு அதனைத் திருப்பி பெற்றுக்கொள்ளும் வழி தெரியாமையால் இதுவரையில் உபயோகிக்காம லிருந்து இப்பொழுது தம் உயிருக்குச் சேதம் வருஞ் சமயமாகையால் தம்மைக்காப்பாற்றிக் கொள்ளவேண்டி அதனை உபயோகித்திருக்கிறார். அதனைத் தடுக்க முடியாது. உனக்கு அந்த ப்ரஹ்மாஸ்த்ரம் நன்றாகத் தெரியுமாகையால் அதனை ப்ரயோகித்து எதிரியின் அஸ்த்ரத்தை நாசஞ்செய் என்றார்.

29–39. இப்படிப் பகவான் சொல்லிய வார்த்தையைக் கேட்டுச் சத்ருக்களைக் கொல்லும் வல்லமையுள்ள அர்ஜுனன் ஆசமனஞ்செய்து, ஸ்ரீ கிருஷ்ணபகவானை ப்ரதக்ஷிணஞ் செய்து எதிரியின் அஸ்த்ரத்தை யடக்குவதற்காக ப்ரஹ்மாஸ்த்ரத்தை ப்ரயோகித்தார். அவ்விரண்டு அஸ்த்ரங்களுடைய தேஜஸ்ஸுகளும், ப்ரளய காலத்தில், அக்னியும், ஸூர்யனும் விருத்தியடைவது போல பூமி, அந்தரிக்ஷம் ஆகிய இவைகளை ஆக்ரமித்து ப்ரகாசித்தன. அவ்விருவர்களுடைய அஸ்த்ரங்களின் தேஜஸானது மூவ்வுலகங்களையும் தஹித்தது, அந்தத் தாபத்தை ஸஹியாமல் ஜனங்கள் இது ப்ரளயகாலத்திய அக்னி என்றே நினைத்தார்கள். அப்பொழுது ப்ரஜைகள் உபத்ரவப்படுகிறதையும், லோகங்களுக்கு நாசம் நேர்ந்ததையும் பார்த்து அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணனுடைய அனுமதிப்படி அந்த இரண்டு அஸ்த்ரங்களையும் உபஸம்ஹரித்தார். பிறகு அச்வஸ்தாமாவின் ஸமீபம் சென்று பசுவை

ரசனையால் கட்டுவது போல் கோபத்தால் சிவந்த கண்களுள்ளவனாகிய கிருபியின் புத்ரரைக்கட்டினார். பின்னுமவரைத் தம்முடைய கூடாரத்திற்குக் கொண்டு போக முயன்றார். அப்பொழுது தாமரைமலர் போன்ற கண்களுள்ள கிருஷ்ணபகவான் மிகுந்தகோபத்துடன் அர்ஜுனனை நோக்கி "ஏ பார்த்த! இவன் ராத்ரியில் தூங்கிக்கொண்டிருந்த யாதொரு அபராதமும் செய்யாத குழந்தைகளைக் கொன்றவன், ப்ராஹ்மணர்களுக்குள் அதமன், ஆனதால் இவனைக் கொல்லவேண்டுமே தவிர காப்பாற்றுவது உசிதமல்ல. மத்யம் முதலியவை களைக் குடித்து மதித்திருப்பவன், அஜாக்ரதையா யிருப்பவன், பயித்யங்கொண்டவன், தூங்குகிறவன், பாலியவயதுள்ளவன், முயற்சிக்காதவன், சரணமென்று வந்தவன், ரதமில்லாதவன் பயந்து ஓடுகிறவன், ஆகிய இம்மாதிரியான சத்ருக்களை தர்மத்தையறிந்தவர்கள் கொல்லமாட்டார்கள். எவன் ப்ராணிகளிடத்தில் தயையில்லாமல் பிறரைக்கொன்று தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ளுகிறானோ அந்த துஷ்டனை சிக்ஷிப்பதே அவனுக்கு க்ஷேமமெனப்படும். தண்டிக்கப் படாதவரையில் பாபம் விலகாது; அதனால் நரகத்தையடைவான். மேலும் த்ரௌபதியின் முன்பாக உன் குழந்தைகளைக் கொன்றவருடைய தலையை உன்னிடம் சேர்ப்பிக்கிறேன்" என்று நான் கேட்டிருக்கும் போது உறுதி செய்திருக்கிறாய். இவன் தன்னுடைய யஜமானனாகிய துர்யோதனனுக்கு இஷ்டமில்லாத கார்யத்தைச் செய்தவன். குலத்திற்கு அபகீர்த்தியை யுண்டு பண்ணினவன்; மிகுந்த பாபீ, ஆததாயீ. உன்னுடைய புத்ரர்களை நரிசஞ்செய்தவன். ஆனதால் இவனைக் கொல்லவேண்டும் என்று (அர்ஜுனனுடைய புத்தியைப் பரிசோதிப்பதற்காகச்) சொன்னார்.

40–41. இம்மாதிரி கிருஷ்ணபகவானால் தூண்டப்பட்டும் மஹாத்மாவாகிய அர்ஜுனன் அச்வஸ்தாமா தமது பின்னைகளைக் கொன்றவரானாலும், குருபுத்ரராகையால் வதஞ் செய்ய இஷ்டப்படவில்லை. பின்பு மித்ரராகிய ஸ்ரீ கிருஷ்ணன் ஸாரத்யஞ் செய்ய அர்ஜுனன் தம்முடைய கூடாரஞ் சேர்ந்து புத்ரநாசத்தால் துக்கிக்கும் த்ரௌபதியை நோக்கி ஓ! த்ரௌபதி! உன்னுடைய புத்ரர்களைக் கொன்றவர் இதோ இருக்கிறார். உன்னிஷ்டப்படி இவருக்குச் சிக்ஷை செய்கிறேன் என்றான்.

42–48. யாகத்தில் கொல்லுவதற்காக யூபத்தில் கட்டப்பட்ட பசுபோல கயிற்றினால் கட்டப்பட்டவரும் கெட்டகார்யம் செய்ததால் தலைகுனிந்தவருமான குரு புத்ரரைக்கண்டு த்ரௌபதியானவள்; நல்ல ஸ்வாபமுள்ளவளாகையால் ஆசார்யருடைய புத்ரரென்று கௌரவத்தாலும், தைன்யமடைந்தவரென்ற தயையாலும் அவருக்கு நமஸ்காரஞ்செய்தாள். பின்னும் பதிவ்ரதையான த்ரௌபதியானவள், அவரைக்கட்டிக் கொண்டு வந்ததை ஸஹியாதவளாகி தன்னுடைய பர்த்தாவை நோக்கி "இவரை விட்டுவிடவேண்டும். இவர் ப்ராஹ்மணர்;தவிரவும் குருபுத்ரராகையால் ஆசார்யர். ரஹஸ்யமந்த்ரங்கள், உபஸம்ஹாரம், ப்ரயோகம் ஆகிய இவைகளுடன் எல்லா அஸ்த்ரங்களையும் இவருடைய பிதாவான த்ரோணரிடமிருந்து தாங்கள் அப்யஸித்தீர்கள். அவரே புத்ரரூபியாக இருக்கிறார். அதனால்தான் சூரனாகிய புத்ரனை அடைந்த கிருபியானவள் த்ரோணருடைய பாதிசரீரமாயிருந்தும் அவருடன் உடன்கட்டையேறவில்லை. தாங்கள் ஸகலதர்மங்களையும் அறிந்தவர்கள்; மிகுந்த பாக்யமுள்ளவர்கள்; ஆதலால் ஆசார்யருடைய

வம்சமானது, துக்கப்படும்படி தாங்கள் செய்வது உசிதமல்ல அது எப்பொழுதும் பூஜிக்கத்தக்கது; நமஸ்கரிக்கக்கூடியது; மேலும் இவரைக்கொன்று விட்டால் இவருடைய மாதாவும், பர்த்தாவையே தைவ மாகக் கொண்டவளுமான கிருபி என்பவள் புத்ர நாசத்தால் நான் வருத்தமடைகிறது போல துக்கப் படுவாளல்லவா? ப்ராஹ்மணவம்சத்திற்குக் கோப முண்டாகும். க்ஷத்ரியர்கள் செய்தார்களேயாகில், அந்த க்ஷத்ரிய வம்சம் பரிவாரங்களுடன் துக்கிக்கும்படி நேரும். ஆதலால் ப்ராஹ்மணகுலத்தால் நம்முடைய க்ஷத்ரிய குலம் எரிக்கப்படவேண்டாம்" என்று சொன்னாள்.

49–50. ஓ! ப்ராஹ்மணர்களே! தர்மத்திற்கொத்ததும், ந்யாய விரோதமில்லாததும், தயையுள்ளதும், கபட மற்றதும், ஸமபுத்தியுடன் சொல்லப்பட்டதும், மேன்மையுள்ளதுமான (பூஜிக்கக்கூடியது)த்ரௌபதியின் வார்த்தையைக் கேட்டு அருகிலிருந்த அரசனாகிய தர்மபுத்ரர், நகுலர், ஸஹதேவர், ஸாத்யகி, அர்ஜுனன், தேவகியின் புத்ரரான கிருஷ்ணபகவான், மற்றவர்கள், ஸ்த்ரீகள் ஆகிய எல்லோரும் அது உசிதமென்று ஒப்புக்கொண்டார்கள்.

51. அப்பொழுது பீமஸேனன் "இவரைக் கொல்வதே அவருக்கு க்ஷேமகரமான கார்யம், இவர் நித்ரை செய்து கொண்டிருக்கும் சிசுக்களை வீணாக வதஞ் செய்தார்; அதனால் இவருக்காவது, இவருடைய யஜமானனாகிய துர்யோதனனுக்காவது, யாதொரு ப்ரயோஜனமுமில்லை." என்று மிகுந்த கோபத்துடன் சொன்னான்.

52–58. மேல்காட்டிய இவர்களுடைய வார்த் தையைக் கேட்டு நான்கு கைகளுள்ள ஸ்ரீகிருஷ்ண பகவான், தம்முடைய மித்ரரத்னமாகிய அர்ஜுனனை நோக்கி "ஓ! அர்ஜுன! ப்ராஹ்மணனைக் கொல்லக் கூடாதென்ற சாஸ்த்ரத்தாலும், ஆததாயியை வதஞ் செய்யலாமென்றும் சாஸ்த்ரமிருப்பதால் அந்த சாஸ்த்ரம் என்னுடைய ஆக்ஞாரூபமாகையாலும் அப்படியே நீ செய்யவேண்டும். தவிரவும் த்ரௌபதியினிடம் உன்னால் செய்யப்பட்ட ப்ரதிக்ஞையையும், நிறை வேற்றவேண்டும்; பீமஸேனனுக்கும், த்ரௌபதிக்கும் எனக்கும் இஷ்டமானதைச் செய் என்று சிரித்துக் கொண்டு ஆக்ஞாபித்தார். இதனைக் கேட்டவுடனே பகவானுடைய அபிப்ராயமின்னதென்று, அர்ஜுனன் தெரிந்துகொண்டு, கத்தியினால் அந்த ப்ராஹ்மண ருடைய தலையிலிருக்கும் ரத்னத்தை மயிர்களுடன் எடுத்துப்பின்பு, கட்டை அவிழ்த்து அவ்விடமிருந்து துரத்தினான். அப்பொழுது அவருக்கு பாலஹத்யாதி தோஷத்தாலும் ஸஹஜமான ரத்னமில்லாததனாலும், தேஜஸ் குறைந்து விட்டது. க்ஷௌரஞ்செய்துவிடுதல், பணத்தை யபஹரித்துக்கொள்ளுதல், இருக்குமிடத்தை விட்டுத் துரத்திவிடுதல், ஆகிய இவைகள் வதத்திற்குச் சமமானவைகள். ப்ராஹ்மணதமர்கள் கொல்லக்கூடிய குற்றஞ்செய்தாலும், அவர்களுக்கு மேற்காட்டிய வதமே யொழிய, தேஹநாசஞ் செய்வது உசிதமல்ல. பின்பு பாண்டுபுத்ரர்கள், த்ரௌபதியுடன் புத்ரசோகமுள்ள வர்களாகி இறந்து போன தம்முடைய பந்துக்களுக்குச் செய்யவேண்டிய தஹனம் முதலிய உத்தர ஸம்ஸாரங்களைச் செய்து முடித்தார்கள்.

நோட்டு.

ப்ரஹ்மபத்னி"– ப்ரஹ்மாவையே தெய்வமாயுடையவள். அல்லது ப்ராஹ்மணர்களால் ஸேவிக்கப்பட்டது– ஸ்ரீத. சம்யா– யாகத்திற்கு உபயோகமான சம்யா என்னும் மரத்தின்கிளை விழுந்தவிடத்தில் ஏற்பட்ட ஆச்ரமம். மஹர்ஷிகளின் ஆஹாரத்திற்கு உபயோகமாகிய இலந்தைப் பழங்களுள்ளதென்பது தாத்பர்யம்.– விஜ. சோகம்–ஈச்வரன் எல்லாவற்றையும் அறிந்தவர். ஸர்வசக்தியுள்ளவர். அவருடைய மாயையால் நிஜரூபத்தை மறந்தவன் ஜீவன். அவனுக்கு பகவத்பக்தியால் ஞானமுண்டாகிறது. அதனால் மோஷத்தையடைகிறான். "ஆனந்தரூபமாகிய சித்சக்தியால் நிறைந்தவர் ஈச்வரன், அவித்யையால் தன்னுடைய உண்மையான ரூபத்தையறியாதவனும், ஸகல துக்கங்களுக்கு இருப்பிடமுமாயிருப்பவனே ஜீவன்," ஸ்வாமி மாயையானது எவருடைய வசத்திலிருக்கிறதோ. அவர் ஈச்வரனெனப்படுகிறார். எவன் அந்த மாயைக்கு வசப்பட்டு கஷ்டப்படுகிறானோ அவன் ஜீவன் என்று சொல்லப்படுகிறான்' ஸம்ஸாரத்திலுண்டான முவ்வகை தாபத்தாலுண்டானது சோகம், சரீரத்தை ஆத்மாவென்று நினைப்படதே மோஹம். நரகம் முதலியவைகளில் உண்டாவது பயம். அவைகளைப் போக்குவது பக்தியெனப்படுகிறது– சந்த். ஆசையில்லாத– நல்ல சிஷ்யனை ஸம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையில்லாதவர்– விஜ. க்ரந்தங்களை– "மோஹத்தால் கலங்கியிருக்கும் உன்னுடைய புத்தியானது எப்பொழுது தெளியுமோ? அப்பொழுது கேட்டது, கேட்கவேண்டியது இவைகளிலிருந்து நிர்வேதத்தையடைவாய்," பகவத்கீதை, பலனை– அனேக

ஜன்மங்களில் பரமாத்மாவை நேரில் பார்த்தவர்களும், முக்தியில் விசேஷ ஆனந்தமுள்ளவர்களுமான சுகர் முதலியவர்களுக்கு பாகவதத்தில் ஆசையுண்டாயிற்று என்பதில் என்ன ஆச்சர்யம்.– விஜ. ஆசையுள்ளவராகி– பகவானுடைய கல்யாணகுணங்கள் யாவும் அனுபவத்தாலேயே அறியக்கூடியவைகள் என்று வேதாந்த சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், ஸ்வாத்யாயத்தால் யோகத்தை அடையவேண்டும், யோகத்தால் ஸ்வாத்யாயமுள்ளவனாக ஆகிறான்' என்றபடி பகவானுடைய குணங்களை வர்ணிக்கும் க்ரந்தத்தை அப்யஸிப்பது அவச்யமேயாம். மேலும் பகவானுடைய அவதாரங்களும், அவைகளின் குணங்களும், பக்தர்களும், அவர்களுடைய குணங்களும், வேதாந்தத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. அவைகள் யாவும் இந்த பாகவதத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறதுமன்றி வேதாந்தத்தில் சொல்லியிருக்கும் குணங்களைவிட அதிகமாக பகவத்குணங்கள் நன்றாகக் காட்டப்பட்டிருக்கின்றன. வீர. அப்யஸித்தார்– பிறருக்குமுபதேசித்தார். விஜ. சிவபெருமானிடம்– பரமசிவன் ப்ரஹ்மதேவருடைய ஐந்தாவது தலையை வெட்டுகிறதற்காக வரும்போது அவர் ஓடினார். ஆர்கியென்று ஒருபாடமுண்டு. அதற்கு பரமசிவனுடைய மூன்றாவது கண்ணின் தேஜஸினால் எரிக்கப்பட்டு பயந்து சனீஸ்வரன் ஓடினார் என்று அர்த்தங்கொள்ளவேண்டும்.–விஜ.

முன்னொருக்கால் ப்ரஹ்மதேவர் தன்னால் ஸிருஷ்டிக்கப்பட்ட ஒரு அப்ஸர ஸ்த்ரீயினிடம் ஆசைப்பட்டு மான்வேஷங்கொண்டு ரமிக்க முயற்சித்தார். அப்பொழுது பரமசிவன் அவரைத்துரத்தினார். அர்க

யென்னும் ஒரு பாடமுண்டு. அதற்கு ஸூர்யன் ஓடியது போலவென்று அர்த்தம். அதாவது வித்யுன்மாலி யென்று ஒரு ராக்ஷஸனிருந்தான். அவனுடைய தபஸினால் பரமசிவன் ஸந்தோஷமடைந்து அவனுக்குத் தங்க விமானமொன்றைக் கொடுத்தார். அவன் அந்த விமானத்திலேறிக் கொண்டு ஸூர்யன் பின்னே போய்க்கொண்டிருந்தான். அப்பொழுது ராக்ஷஸனுடைய விமானத்தின் காந்தியானது, ஸூர்யதேஜஸை விட மேலானதாக விருந்தபடியால் அந்த விமானத்தை உருகிப்போகச்செய்தார். அதனால் பரமசிவன் கோபங் கொண்டு ஸூர்யனை துரத்த ஸூர்யன் பயந்து ஓடினார். அப்பொழுது பரமசிவனுடைய கடும் பார்வையால் ஸூர்யன் எரிக்கப்பட்டு காசியில் விழுந்தார். அவருக்கு இப்பொழுதும் லோலார்கனென்று (அலைந்த ஸூர்யன்) பெயர் வழங்கிவருகிறது. இது வாமனபுராணத்தில் விஸ்தாரமாய் சொல்லப்பட்டிருக் கிறது.– ஸ்ரீத. தக்ஷப்ரஜாபதியானவர் பரமசிவனுக்கு ஹவிர்பாகங்கொடாமல் யாகஞ்செய்ய அப்பொழுது பரமேச்வரன் வீரபத்ரராக அவதரிக்க அவரிடமிருந்து ஓடினார்– வீர. ஆர்கியென்றபாடத்தில்– ஸூர்யனு டைய பிள்ளையாகிய மிருத்யுவானவர் பரமசிவனைக் கண்டு ஓடினார்– சந்த். கிருஷ்ண–பூமியிலுள்ள ஸகல ஜனங்களுக்கும் ஸுகத்தை யுண்டுபண்ணுகிறவர்– ஸ்ரீத. மிகுந்த– மூலத்தில் மஹாபாஹு வென்றிருப்ப தால் க்ஷத்ரியர்களை யுண்டுபண்ணிய கைகளுள்ளவர் என்று காட்டப்பட்டது– வீர. நரகபாபத்தைச்செய்த மனிதர்கள் அதற்குத் தக்கபடி அதனால் சிக்ஷிக்கப் படுவார்களானால் அவர்கள் சுத்தர்களாகி புண்யசாலிகள் போல ஸ்வர்க்கத்தை யடைகிறார்கள்”–ஸ்மிருதி

ஆததாயி– அக்னிவைப்பவன், விஷங்கொடுப்பவன், ஆயுதம்பிடித்தவன், பணம், பூமி, பார்யை இவைகளை யபஹரிப்பவன் ஆகிய ஆறு பெயர்கள். மேல்காட்டிய ஆததாயியை ஆலோசிக்காமலேயே கொன்றுவிடலாம்– ஸ்ரீத. பாதிசரீரம்– “பத்னியென்பவள் பர்த்தாவினுடைய சரீரத்தின் பாதிபாகம்” –ச்ருதி.

♣♣♣♣

அத்யாயம்–8

பகவானைக் குந்தி ஸ்தோத்ரஞ் செய்தது.

பின்பு அந்த பாண்டவர்கள் யுத்தத்தில் இறந்து போன பந்துக்களுக்குத் தர்ப்பணம் (எள்ளுஞ்ஜலமும்) செய்வதற்காக ஸ்ரீ க்ருஷ்ண பகவானுடன் ஸ்த்ரீகளை முன்னிட்டுக்கொண்டு கங்கையின் கரை சேர்ந்தார்கள். மேலும் அவர்கள், அந்தக் கங்கா ஜலத்தில், ஸ்நானஞ் செய்து தர்ப்பணம் பண்ணி, பகவானுடைய பாதத்தி லிருந்து உண்டானதால் பரிசுத்தமாயிருக்கும் அந்தத் தீர்த்தத்தில் பின்னும் ஸ்நானஞ் செய்தார்கள்.

3–11. பிறகு அவ்விடத்தில் தம்முடைய தம்பி களுடன் உட்கார்ந்திருக்கும் தர்மபுத்ரரையும், த்ருதராஷ்டரரையும், புத்ரசோகமுள்ள காந்தாரியையும், குந்தியையும், த்ரௌபதியையும் நோக்கி ஸ்ரீ க்ருஷ்ண பகவானானவர், மஹர்ஷிகளுடன் "பந்துக்கள் மரண மடைந்தார்களென்று நீங்கள் துக்கப்படுவது நியாயமல்ல காலமஹிமையால் ப்ராணிகளுக்கு நேரிடும் நரகம் தடுக்கமுடியாதது என்று ஸமாதான வார்த்தைகளைச் சொல்லி, துர்யோதனனால் அபஹரிக்கப்பட்டிருந்த அஜாதசத்ருவின் (எவ்விடத்திலும் விரோத புத்தி யில்லாதவர்) ராஜ்யத்தை அவருக்கு வசப்படுத்தினார். மேலும் த்ரௌபதிதேவியின் தலைமயிரைப் பிடித்து இழுத்ததால் ஆயுஸ் குறைந்தவர்களான துச்சாஸனன் முதலியவர்களைக் கொல்வித்தார். மஹேந்த்ரனுடைய கீர்த்தியை உபேந்த்ரர் உலகத்தில் பரவச்செய்தது போல முக்ய கல்பங்களுள்ள மூன்று அச்வமேத யாகங்களைச் செய்வித்துப் பரிசுத்தமான அவருடைய

கீர்த்தியை விஸ்தாரப்படுத்தினார். பிறகு வ்யாஸ மஹா முனி முதலியவர்களைப் பூஜித்து அவர்களால் தாம் கொண்டாடப்பட்டு ஸாத்யகி, உத்தவர் முதலானவர் களுடன் பாண்டவர்களுக்குச் சொல்லிக்கொண்டு ரதத்தின் மீதேறி த்வாரகையை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது உத்தரையானவள் மிகவும் பயந்தவளாய் ஸ்ரீ க்ருஷ்ணனிடம் வந்து அவரை நோக்கி "மஹா யோகியே! தேவர்களுக்கும் தேவரே! ஸகல ஜகத்திற்கும் அதிபதியே! என்னைக் காப்பாற்றும். பயத்தை நிவர்த்திப்பவர் நீர் ஒருவரேயொழிய மற்றவைகளெல் லாம் ஒன்றுக்கொன்று பயத்தை யுண்டுபண்ணுகின்றன ஏ நாத! அக்னிபோல் கொதித்துக் கொண்டிருக்கும் எஃகுமுனையுள்ள பாணமானது எனக்கு எதிரில் வருகிறது. அதனால் என் சரீரம் எரிக்கப்பட்டாலும் எனக்கு ஸம்மதம், என் வயிற்றிலிருக்கும் சிசுவுக்கு மாத்ரம் கெடுதி நேரிடாமல் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக்கொண்டாள். பக்தர்களிடம் வாத்ஸல்ய முள்ள பகவான் அதனைக்கேட்டு 'இது பாண்டவர்களை நாசஞ்செய்வதற்காக அஸ்வஸ்தாமாவினால் ப்ரயோகிக்கப்பட்ட அஸ்த்ரம்' என்று நிச்சயித்தார்.

12–37. அப்பொழுது பாண்டவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு எதிரில்வரும் பாணங்களைப் பார்த்து அதனைத் தடுப்பதற்காக சிறந்த அஸ்த்ரங்களை எடுத்தார்கள். ஸ்ரீ பகவான் தம்மிடத்திலேயே மனத்தைச் செலுத்திய பக்த சிரோமணிகளான பாண்டவர்களுக்கு நேர்ந்த விஸனத்தைப் பார்த்து அந்த அஸ்த்ரம் வேறு அஸ்த்ரங்களால் தடுக்க முடியாததாகையால் தம்முடைய ஸுதர்சனமென்ற சக்ரத்தை ப்ரயோகித்து, அதனால் அவர்களை

ரக்ஷித்தார். மேலும் ஸகல ப்ராணிகளிடத்திலும் அந்தர்யாமியாயிருக்கும் யோகேசராகிய அந்த க்ருஷ்ண பரமாத்மாவானவர் விராடபுத்ரியான உத்தரையின் வயிற்றிலிருக்கும் கர்பத்தைத் தம்முடைய மாயையால் மறைத்தார். ஏ சௌனகரே! ப்ரஹ்மாஸ்த்ரமென்பது மற்றவைகளால் தடுக்க கூடியதல்ல. வீணாய்ப் போகாதது. ஆனாலும் விஷ்ணுவின் தேஜஸையடைந்து அடங்கினது. பகவான் மாயையால் ஸிருஷ்டி, பரிபாலனம், ஸம்ஹாரம் ஆகிய இவைகளைச் செய்கிறவராகையாலும், ஸகல ஆச்சர்யரூபியாயிருப்ப தாலும், அவரிடத்தில் மேற்சொல்லிய விஷயத்தை அத்புதமென்று நினைக்கவேண்டாம். இப்படிப் பாண்டவர்கள் பகவானுடைய ஒத்தாசையால் ப்ரஹ்மாஸ்த்ரத்திலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். அப்பொழுது பதிவ்ரதையான குந்திதேவியானவள் த்வாரகா நகரத்திற்கு ப்ரயாணமாயிருக்கும் க்ருஷ்ண பகவானை நோக்கி தன்னுடைய புத்ரர்களுடனும், த்ரௌபதியுடனும், பகவத் ஸ்வரூபத்தை அறியாத வளான நான் எல்லாவற்றிற்கும் முந்தியபுருஷனை நமஸ்கரிக்கிறேன். அவர் ஸகலத்திற்கும் ஈச்வரன். ப்ரகிருதி (மாயை)க்கு மேற்பட்டவர். ஸகலத்திற்கும் மேற்பட்டவர். ஸகலப்ராணிகளாலும் பார்க்கமுடியாத வர். ஆனால் ப்ராணிகளுடைய உள்ளிலும் வெளியிலும் இருப்பவர். மாயையாகிய திரையால் மறைக்கப்பட்டவர். இந்திரியங்களுக்குப் புலப்படாதவர். நாசமில்லாதவர். அந்தப் பரமபுருஷனாகிய நீர், வேஷதாரி(நடன்) போல தேஹாபிமானமுள்ளவர்களால் அறியப்படுகிறீரில்லை. சுத்தசித்தர்களும் மனனம்செய்யும் ஸ்வபாவமுள்ளவர் களுமான பரமஹம்ஸர்களும், உம்முடைய ஸ்வரூபத் தைத் தேடுகிறார்கள். அப்படியிருக்க, ஸ்திரீகளாகிய

நாங்கள் பக்தியோகத்தை யடைவதற்காக உம்மை எப்படி தர்சிப்போம்? க்ருஷ்ணன், வாஸுதேவர், தேவகீநந்தனர் (தேவகியின் புத்ரர்) கோவிந்தர் என்னும் திவ்ய நாமங்களுள்ளவரும், நந்தனென்ற கோபரு (யாதவர்)க்குப் புத்ரரும், தாமரைமலருடன் கூடிய நாபியுள்ளவரும், தாமரஸ புஷ்பமாலையுள்ளவரும், தாமரைமலர் போன்ற கண்கள், கால்கள் ஆகிய இவைகளுள்ளவருமான உமக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். ஏ! ப்ரபுவே! துஷ்டனாகிய கம்ஸனால் துன்பப்படுத்தப் பட்ட தேவகியை எப்படிக் காப்பாற்றினீரோ அப்படியே என்னையும் என்னுடைய புத்ரர்களையும் கூட்டங் கூட்டமாக ஆபத்துக்கள் வந்தாலும், அவைகளிலிருந்து ஸம்ரக்ஷிக்கிறீர் (தமக்கு மாதாவிடமிருக்கும் ப்ரீதியைக் காட்டிலும் என்னிடம் அதிக விச்வாஸமென்பது கருத்து) விஷம், அக்னி, ராக்ஷஸர்கள், அஸத்துக்களுடைய ஸபை, வனவாஸ கஷ்டம், ஒவ்வொரு யுத்தத்திலும் மஹாரதர்களாகிய பீஷ்மர் முதலியவர்களுடைய அஸ்த்ரங்கள், கடைசியாக அச்வத்ஸ்தாமாவின் ப்ரஹ்மாஸ்த்ரம் ஆகிய இவைகளிலிருந்து உம்மால் காப்பாற்றப்பட்டோம். மேலும் துர்யோதனனால் தூண்டப்பட்டு, எங்களை சபிப்பதற்காக வந்த துர்வாஸ மஹாமுனியை ஸகல ஜகத்துடன் திருப்தியடையச் செய்து அவரிடமிருந்தும் காப்பாற்றினீர். நீர் ஸகல ஜகத்திற்கும் குருவாயிருப்பவர், தங்களுடைய தர்சன மானது மோக்ஷத்தை கொடுக்கத்தக்கது, அப்போர்ப்பட்ட உம்முடைய தர்சனம் ஆபத்காலங்களில் கிடைப்பதால் அந்த விபத்து அடிக்கடி வந்தாலும் ஸம்மதம். மேலான குலத்தில் பிறந்திருப்பது, ஐச்வர்யம், சாஸ்த்ரங்களை படித்திருப்பது, அழகு ஆகிய இவைகளால் மிகுந்த கர்வமுள்ள புருஷன் உம்முடைய பெயரை உச்சரிக்க

மாட்டான். தரித்ரனாலேயே அந்த திவ்யநாமதேயம் இடைவிடாமல் சொல்லப்படும். (ஸம்பத் க்ஷேமத்திற்கு விரோதியென்று கருத்து) தங்களுக்கு பக்தர்களே பணம். முக்குணங்களின் வ்ருத்திகள் தங்களிடத்தில் ஸம்பந்தக்கிறதில்லை. நீர் ஆத்மாவிலேயே ரமிப்பவர்; சாந்தர்; மோக்ஷத்தைக்கொடுக்கும் ஸாமர்த்யமுள்ளவர்; இப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரஞ்செய்கிறேன். நீர் தேவகியின் புத்ரரானாலும், ப்ராகிருத சிசுக்கள் போன்றவரல்ல. உம்மைக் காலரென்றும், எல்லாவற்றிற் கும் ஈச்வரரென்றும்; ஆதியந்தமற்ற ப்ரபுவென்றும், எல்லாரிடத்திலும் ஸமமாக ஸஞ்சரிப்பவரென்றும் நான் நினைக்கிறேன். உமக்கு ஓரிடத்திலும் பக்ஷபாத மில்லை. ஜனங்கள் ஒருவருக்கு ஒருவர் சண்டை செய்வதற்கும் நீரே நிமித்தம்; வேறில்லை மேலும் சிலர் விரோதிகளென்றும். சிலர் மித்ரர்களென்றும் பேதபுத்தி உமக்கில்லை. நீர் மனுஷ்ய சரீரமெடுத்து அவர்கள்போல் அபினயஞ் செய்வதால் உம்மிடத்தில் பேதபுத்தி யிருப்பதாகத் தோன்றுகிறதேயொழிய உண்மையிலில்லை. (அனுக்ரஹத்தையாவது நிக்ரஹத் தையாவது செய்கிறதில்லை) தங்களுடைய அபிப்ராயம் ஒருவராலும் அறியமுடியாதது. ஜகத்ருபியாயிருக்கும் ப்ரபுவே! பிறப்பில்லாதவரும், ஒன்றையுஞ்செய்யாதவரும், பரமாத்மாவாக விருப்பவருமான நீர்,வராஹ(பன்றி) மாகியும், மத்ஸ்யமாகியும், வாமனராகியும் அவதரித்தீ ரென்பது பொருந்துமா? அது லோகத்தை அனுஸரித்ததேயொழிய உண்மையில் உமக்கு ஜன்மமில்லை. கோகுலத்தில் நந்தருடைய கிரஹத்தில், தயிர்பானையை உடைத்ததற்காக யசோதை, உம்மைக் கட்டுவதற்கு கயிற்றை எடுத்தாளல்லவா? அப்போது நீர் கண்களிலிருந்த மை கரையும்படி கண்ணீரைப்

பெருகிக் கொண்டு கலங்கிய கண்களுள்ளவராய்த் தலைகுனிந்து மிகவும் பயந்தவர் போல் அபினயஞ் செய்தீரல்லவா? அது எனக்கு மோஹத்தை யுண்டு பண்ணுகிறது. உண்மையில் ஜனனம், மரணம் முதலியவைகளும் உம்மிடமிருந்து பயப்படுகிறது. உம்முடைய சரிதம் ஜகத்திற்கு மோஹகரமாகையால் உம்முடைய ஜன்மங்களைப் பலவகையாய்ப் பெரியோர் கள் சொல்லுகிறார்கள். அதாவது "புண்ய ச்லோகராகிய யதுவின் கீர்த்தியை விருத்தி செய்வதற்காக அவருடைய வம்சத்தில், மலயபர்வதத்தை கௌரவப் படுத்துவதற்கு, அதில் சந்தனவிருக்ஷம் முளைத்தது போல் அவதரித்தீர்" என்று சிலர் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் "வஸுதேவர், தேவகி இவர்களால் ப்ரார்த்திக்கப்பட்டு உண்மையில் பிறப்பில்லாதவரானா லும், தேவ விரோதிகளை நாசஞ்செய்து இவ்வுலகத் திற்கு க்ஷேமத்தை யுண்டுபண்ணுவதற்காக தேவகியின் புத்ரராக அவதரித்தீர்" என்று கூறுகிறார்கள். மற்றுஞ் சிலர் "பூமியில் துஷ்டர்கள் அதிகமாயிருந்த படியால் மிகுந்த பாரத்தால் ஸமுத்ரத்தின் நடுவில் தத்தளிக்குங் கப்பல்போல் கஷ்டப்படும் பூமியின் பாரத்தை நிவர்த்திப்பதற்காக ப்ரஹ்மதேவருடைய வேண்டு கோளின்படி அவதரித்தீர்" என்று சொல்லுகிறார்கள் இன்னுஞ்சிலர் "ஆத்மாவின் ஆனந்த ஸ்வரூபத்தை யறியாமல் தேஹம் முதலியவைகளில் அபிமானம் வைத்துக் கர்மங்களைச் செய்துகொண்டு கஷ்டப்படும் ஜனங்களுக்கு மேற்காட்டிய துக்கத்தை நிவர்த்திக்க வேண்டி கேட்பதற்கும் ஸ்மரிப்பதற்கும் தகுதியான லீலைகளைச் செய்வதற்காக ஜன்மாவை அங்கீகரித்தீர்" என்கிறார்கள். எந்த ஜனங்கள் உம்முடைய சரிதத்தை பிறர்சொல்லக் கேட்கிறார்களோ, தம் வாக்கினால்

உச்சரித்து கானஞ்செய்கிறார்களோ, அடிக்கடி நினைக்கிறார்களோ, நினைத்து ஆனந்தப்படுகிறார்களோ, அவர்கள் பிறப்பு, இறப்பு ஆகிய இவைகளைப் போக்குகிற உம்முடைய பாதங்களை வெகு சீக்ரமாக அடைவார்கள்.

38–44. பக்தர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும் ப்ரபுவே! தங்களிடம் விசேஷ ப்ரியமுள்ளவர் களும், தங்களுக்கு வேலைக்காரர்களுமான எங்களை விட்டுப்போவது உசிதமல்ல துர்யோதனன் முதலிய அரசர்கள் நிமித்தமாக விசேஷ பாபங்கள் செய்த எங்களுக்கு உம்முடைய பாதாரவிந்தத்தைத் தவிர வேறு கதியில்லை. மேலும் இந்த்ரியங்களுக்கு அதிபதி யான ஜீவனில்லாத வரையில் எப்படி நாமரூபங்கள் பயன்படுகிறதில்லையோ அப்படி உம்முடைய ஸான்னித்யமில்லாத வரையில் யாதவர்களுடன் கூடிய பாண்டவர்களாகிய எங்களுடைய கீர்த்தியும், ஸம்பத்தும் பயன்படாதவைகளேயாம். மேலும், எங்களுடைய ராஜ்யத்திற்குட்பட்ட இந்த பூமியானது உம்முடைய பாதங்களிலுள்ள த்வஜரேகை, வஜ்ரரேகை, அங்குசரேகை முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு விளங்குகிறது. நீர் அப்புறம் போனால் இந்தப்பூமி பிரகாசிக்காது. உம்முடைய கடாக்ஷ வீக்ஷண்யத்தால் இந்த தேசத்தில் ஐச்வர்யம் விருத்தியடைகின்றன.செடி கொடி முதலியவைகள் நன்றாய் விருத்தியடைகின்றன. ஓ! ஜகத்பதியே! ஜகத்ரூபியாயிருப்பவரே! ஜகத்தில் அந்தர்யாமியாயிருப்பவரே! பந்துக்களான பாண்டவர் களிடத்திலும், விருஷ்ணிகளிடத்திலும் எனக்கிருக்கும் ஸ்நேஹ(அபிமான)மாகிய பந்தத்தை நிவர்த்தியும். ஓ! மதுரா நகரத்தரசனாகிய க்ருஷ்ணா! கங்கையின்

ப்ரவாஹமானது இடையில் நேரும் விக்னங்களை லக்ஷ்யஞ்செய்யாமல் ஸமுத்ரத்தையே யடைவதுபோல என்னுடைய மனஸும் வேறிடஞ்செல்லாது இடை விடாமல் உம்மையே பஜிக்கும்படி அனுக்ரஹிக்க வேண்டும். ஓ! க்ருஷ்ண! அர்ஜுனனுக்கு மித்ரரே! விருஷ்ணிகளுக்குட் சிறந்தவரே! பூமிக்குக் கெடுதி செய்யும் அரசர்களை நாசஞ் செய்பவரே! குறைவற்ற வீர்யமுள்ளவரே! ஏ கோவிந்த! (காமதேனுவின் ஐச்வர்யத்தை யடைந்தவர்) பசுக்கள், ப்ராஹ்மணர்கள், தேவர்கள் ஆகிய இவர்களின் உபத்ரவத்தை போக்கடிப் பவரே! யோகிகளுக்கு அதிபதியும், ஜகத்திற்கு குருவாயு மிருப்பவரே! பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன் என்று ஸ்தோத்ரம் பண்ணினாள்.

45–46. இந்தப்படி குந்திதேவியால் இனிமையான வாக்யங்களைக் கொண்டு ஸ்தோத்ரஞ் செய்யப்பட்ட பகவான் தம்முடைய ஸகல மஹிமைகளையும் வெளியிட்டு கொஞ்சம் சிரித்து, தமது மாயையால் அவளை ப்ரமிக்கச்செய்தார். பின்பு குந்தியின் ப்ரார்த் தனைப்படி "எப்பொழுதும் என்னிடத்திலுனக்கு ஸ்திரமாக பக்தி இருக்கட்டும்" என்று அனுக்ரஹித்து ஹஸ்தினாபுரஞ் சேர்ந்து அவ்விடத்தில் ஸுபத்ரை முதலிய ஸ்த்ரீகளுக்கு சொல்லிக்கொண்டு தமது பட்டணத்திற்குப் போக முயற்சித்தார். அப்பொழுது இவ்விடத்தில் தாங்கள் சிலகாலம் வஸிக்கவேண்டும் என்று தர்மபுத்ரர் அன்புடன் கேட்டுக்கொள்ள, பகவானும் அதை அங்கீகரித்து அவ்விடத்தில் வஸித்தார்.

47–53. பிறகு பகவானுடைய அபிப்ராயத்தை

அறியாத வ்யாஸமஹர்ஷி முதலியவர்களாலும், அத்புதகார்யங்களைச் செய்யும் க்ருஷ்ண பகவானாலும், பலவகையான இதிஹாஸங்களை கொண்டு தர்மபுத்ரர் ஸமாதானஞ் செய்யப்பட்டும் அதனால் அவருக்கு துக்கம் நீங்கவில்லை. ஓ ப்ராஹ்மணர்களே! தர்ம புத்ரர் யுத்தத்தில் இறந்துபோன பந்துக்களையே நினைத்து, அவிவேகமுள்ளவராய் அபிமானம், மோஹம் என்னும் இவைகளுக்கு வசப்பட்டு பின்வருமாறு சொல்லலானார். 'துராத்மாவாகிய என்னுடைய மனத்தில் ஸ்திரமாயிருக்கும் அறியாத்தன்மை மிகவும் ஆச்சர்யப்படத்தக்கது. நாய், நரி முதலியவைகளுக்குச் சொந்தமான இந்த சரீரத்திற்காக அனேக அக்ஷௌஹிணி ஸைன்யங்களைக் கொன்றேன். பாலர்கள், ப்ராஹ்மணர்கள், மித்ரர்கள், பிதிருவ்யர்கள், ஸஹோதரர்கள், குரு ஆகிய இவர்களுக்கு த்ரோஹஞ்செய்த நான், அனேகவர்ஷங்கள் பாபத்தின் பலனாகிய நரகத்தை அனுபவித்தாலும் ஒருபொழுதும் மோக்ஷத்தையடையப் போகிறதில்லை.யுத்தத்தில் சத்ருக்களைக் கொல்வது அரசர்களுக்கு தர்மமேயொழியப் பாபமில்லை' என்று சாஸ்த்ரத்தில் சொல்லியிருப்பது என் விஷயத்தில் பொருந்தாது. ஏனென்றால் 'அரசன் தன்னுடைய ப்ரஜைகளுக்கு, சத்ருக்களால் உபத்ரவம் நேரிடும்போது, அவர்களைக்கொல்வது ந்யாயம்' என்பது சாஸ்த்ரத்தி னுடைய தாத்பர்யம். துர்யோதனனால், ப்ரஜைகள் காப்பாற்றப்பட்டு ஸுகமாய் வஸிக்கும்போது ராஜ்யமடையவேண்டுமென்ற ஆசையால் மாத்ரம் நான் சண்டைசெய்து பந்துக்களைக் கொன்றேனாகையால், என் புத்திக்கு ஸமாதானமாகவில்லை இப்படிப் புருஷர்களைக்கொன்றதால் அவர்களுடைய பந்துக்களான ஸ்த்ரீகளுக்கும் நான் த்ரோஹஞ் செய்தவனாகிறேன்.

இந்தப் பாபம் க்ரஹஸ்தாச்ரமத்தில் செய்யக்கூடிய ஸத்கர்மங்களால் நிவர்த்தித்துக் கொள்ளமுடியாது. அநேக ப்ராணிகளை (அறியாத்தன்மையால்) கொன்ற தால் நேர்ந்த இந்த பாபத்தை புத்தி பூர்வமாகச் செய்யும் ஹிம்ஸையுள்ள யாகத்தால் நிவர்த்திசெய்து கொள்ளவும் முடியாது. 'கலங்கிய ஜலத்தால் கலங்கிய ஜலத்தை சுத்தப்படுத்த முடியுமா? மத்யத்தால் உண்டான அசுத்தியானது, மத்யத்தால் நிவர்த்தி யாகுமா?' என்று பலவாறாகத் துக்கித்தார்.

நோட்டு

பயத்தை–மிருத்யுவிற்கு வசப்பட்டிருக்கும் மனிதனால் மற்றொருவனை மிருத்யுவினிடமிருந்து காப்பாற்ற முடியாதென்று கருத்து– வீர. அறியாத– பீஷ்மர் மரணமடையப் போகிறார், அதற்காக எல்லோரும் கங்கையின் கரைக்குச் செல்லவேண்டும், அவ்விடத்தில் அவரிடமாக தர்மங்களைக் கேட்கச்செய்து அதனால் தர்மபுத்ரருடைய துக்கத்தைப் போக்கவேண்டுமென்பது பகவானுடைய அபிப்பிராயம்.– ஸ்ரீ த. அக்ஷௌஹிணி– ரதங்கள் 21870, யானைகள் 21801, குதிரைகள் 65610, காலாட்கள் 109350 யாகத்தால்– "எவன் அச்வமேதஞ் செய்து பகவானை பூஜிக்கிறானோ அவன் ப்ரஹ்மஹத் யை முதலிய பாபங்களிலிருந்து விடுபடுகிறான்" என்று ச்ருதியில் சொல்லப்பட்டிருந்தாலும் என்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–9

பீஷ்மர் தர்மம் உரைத்தது.

இப்படி தர்மபுத்ரர் "பந்துக்களுக்கு த்ரோஹஞ் செய்தோமே" என்று பயந்து ஸகல தர்மங்களையும் தெரிந்துகொள்ள விரும்பி பீஷ்மர் வஸிக்கும் குருக்ஷேத்ரம் சென்றார்.

ப்ராஹ்மணர்களே! அப்பொழுது அவருடைய தம்பிகளும், பகவானும், வ்யாஸரும், தௌம்யர் முதலானவர்களும், உத்தமமான குதிரைகள் பூட்டிய ரதங்களிலேறிக்கொண்டு அவர்பின் சென்றார்கள். மேலும் ஸ்ரீ க்ருஷ்ணபகவானும் அர்ஜுனருக்கு ஸாரத்யம் செய்துகொண்டு சென்றார். அவர்களுடைய நடுவில் அந்தத் தர்மபுத்ரர் குஹ்யகர்களால் சூழப்பட்ட குபேரன்போல ப்ரகாசித்தார்.

4–8. அவ்விடத்தில் ஸ்வர்க்கத்திலிருந்து விழுந்திருக்கும் தேவரைப்போல், பூமியில் கிடக்கும் பீஷ்மரைக்கண்டு, பாண்டவர்களும், அவர்களுடைய பரிவாரங்களும், ஸ்ரீ க்ருஷ்ணபகவானும், அவருக்கு நமஸ்காரஞ் செய்தார்கள். அந்த ஸமயத்தில் ஸகல ப்ரஹ்மர்ஷிகளும், சிறந்த தேவர்ஷிகளும், ராஜர்ஷிகளும், அந்தப்பீஷ்மரைப் பார்ப்பதற்காக வந்து கூடினார்கள். மேலும், பர்வதர், நாரதர், தௌம்யர், வ்யாஸபகவான், ப்ரஹதச்வர், பரத்வாஜர், அவருடைய சிஷ்யர்கள், ரேணுகையின் புத்ரராகிய பரசுராமர், வஸிஷ்டர், இந்த்ரப்ரமதர், ச்ருதர், கிருதஸ்மதர், அஸிதர், நக்ஷீவான், கௌதமர், அத்ரி, விச்வாமித்ரர்,

ஸுதர்சனர், காச்யபர், ப்ரஹஸ்பதி, சுகர் முதலிய நிர்மல ஸ்வபாவமுள்ள மற்றவர்களும் தங்கள் தங்கள் சிஷ்யர்களுடன் அவ்விடமே வந்துசேர்ந்தார்கள்.

9–24. தேசத்தையும் காலத்தையும், நன்றாக அறிந்த பீஷ்மர் வந்தவர்களைத் தனியே தெரிந்துகொண்டு மிக்க பாக்யசாலிகளான மஹர்ஷிகளைப் பூஜித்தார். மேலும் ஸமீபத்தில் உட்கார்ந்திருப்பவரும், ஜகதீசரும், மாயையால் சரீரமெடுத்தவருமான ஸ்ரீ க்ருஷ்ண பகவானைப் பார்த்து, அவருடைய மஹிமையை அறிந்தவராகையால், அவரை ஹிருதயத்தில் வைத்து அர்ச்சித்தார். பின்னும் அவர் மிகுந்த வணக்கத்தோடும் ப்ரேமையோடும், பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் பாண்டவர்களைப் பார்த்து அபிமானத்தால் கண்ணீரைப் பெருக்கி அதனால் கண் தெரியாதவராய்ப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினார். "ஏ தர்மபுத்ர! நீங்கள் ப்ராஹ்மணர்களையும் தர்மத்தையும், ஸ்ரீ க்ருஷ்ண பகவானையும் ஆச்ரயித்தவர்களாகவிருந்தும் கஷ்டப்பட்டு ஜீவிப்பது ந்யாயமல்ல இது வெறுக்கக் கூடிய கார்யம். உங்களுடைய பிதாவும் அதிரதருமாகிய பாண்டு மரணமடைந்த பிறகு உங்களுடைய மாதாவாகிய குந்திதேவி பால்யவயதுள்ள குழந்தைகளுடன் அடிக்கடி மிகுந்த கஷ்டத்தை அனுபவித்தாள். மேகங்கள் வாயுவுக்கு வசப்பட்டிருப்பதுபோல, ஜனங்கள் காலத்திற்கு வசப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் உங்களுக்கு நேர்ந்த கஷ்டங்கள் யாவும் அந்தக் காலத்தால் செய்யப்பட்டவைகளேயாம். எந்த பக்ஷத்தில் அரசனாகிய தர்மபுத்ரரும், கதாயுதத்தைக் கையில் பிடித்த பீமஸேனனும் காண்டீவமென்னும் வில்லையுடைய அர்ஜுனனும் இருக்கிறார்களோ, மேலும்

அவர்களுக்கு க்ருஷ்ணபகவான் மித்ரரோ அவ்விடத்திலும் ஆபத்துநேரிட்டதென்பது காலத்தின் மஹிமையேயாம்:

இதோ இருக்கும் க்ருஷ்ண பகவானுடைய எண்ணத்தைத் தெரிந்துகொள்ள ஒருவராலும் முடியாது. கவிகளும், யோகிகளும், இவருடைய ஸ்வரூபத்தை அறிய விரும்பியும், அதை அறியாமல் மோஹிக்கிறார்கள். ஏ! தர்மபுத்ரரே! மேற்சொல்லிய காரணத்தால் 'இவையாவும் ஈச்வரனுக்கு வசப்பட்டவை என்று நிச்சயித்து அந்த ஈச்வரனை அனுஸரித்து அனாதர்களான ப்ரஜைகளைக் காப்பாற்றும்; ஸிருஷ்டிக்கு முந்தியிருந்த புராண புருஷராகிய பகவான் இவர்தான். இவரே நாராயணன் ஆனாலும் தம்முடைய மாயையால் லோகத்தை ப்ரமிக்கச் செய்து கொண்டு (தன் ஸ்வரூபத்தைக் காட்டாமல்) விருஷ்ணிவம்சத்தில் ப்ரகாசிக்கிறார். இவருடைய மஹிமை மிகவும் ரஹஸ்யமானது; அதனைப் பகவானாகிய பரமசிவனும், தேவர்ஷியாகிய நாரதரும், கபிலருமே அறிவார்கள். நீங்கள் இவரை அம்மானுடைய பிள்ளை (அம்மான் சேய்) என்றும் உங்களுடைய இஷ்டப்படி நடப்பவரென்றும், பிரதி உபகாரத்தை எதிர்பாராமல் உபகாரஞ்செய்பவர் என்றும், நினைத்து அவரை மந்த்ரியாகவும், தூதராகவும், ஸாரதியாகவும், ஸ்நேஹவிசேஷத்தால் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அப்படி நினைப்பது அறியாத்தன்மையே. ஸகல ஜகத்ருபியும், ஸமமாயிருப்பவரும், ஒருவராய் விளங்குபவரும், அஹங்காரமில்லாதவரும், ஆசை முதலியவைகளில்லாதவருமான, இந்தப் பகவானுக்கு மேலான கார்யமென்றும், கீழான கார்யமென்றும், தகுதியுடையது

என்றும், வேறுபாடு தோன்றுகிற பேதபுத்தி ஒரிடத்திலும் உண்டாகிறதில்லை. ஆனாலும் இடைவிடாமல் பக்தி செய்பவர்களிடத்தில் இவருக்கு க்ருபை உண்டாகிறது. இப்போது நான் உயிரைவிடஸித்தனாயிருக்கையில், ஸ்ரீ க்ருஷ்ணபகவான் எனக்கு தர்சனங் கொடுப்பதற்காக நேரில் இவ்விடம் வந்திருக்கிறார். ஆகையால் இடைவிடாமல் பக்திசெய்பவர்களிடத்தில் பகவானுக்கு உண்டாகும் க்ருபையை பாருங்கள். மனிதனானவன் தன்னுடைய மனதை பகவானிடத்தில் பக்தியுடன் செலுத்தியும் அவருடைய பெயரையே வாக்கினால் உச்சரித்துக்கொண்டும் சரீரத்தைவிடுவானாகில் அவன் காமங்களாலும் கர்மங்களாலும் பாதிக்கப்படமாட்டான் ஆகையால் தேவர்களுக்கும் தேவரும், சிரிப்பினாலும், சிவந்தகண்களாலும், அழகான முகமுள்ளவரும், த்யானத்திற்கு விஷயமானவரும், நான்கு கைகளுள்ளவருமான பகவான் நானிந்த சரீரத்தை விடுகிறவரையில் என் முன்பு இருக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

25. இதனைக்கேட்டு தர்மபுத்ரர் சரதல்ப (ப்ராணப் படுக்கை)த்தில் படுந்துக் கொண்டிருக்கும் பீஷ்மரை நோக்கி மற்ற மஹர்ஷிகள் கேட்டுக்கொண்டிருக்கும் போது பலவகையான தர்மங்களைச் சொல்லவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

26–28. ஸகல தர்மங்களையு மறிந்தவராகிய பீஷ்மர் மனுஷ்ய ஜாதிக்குப் பொதுவானவைகளும், வர்ணாச்ரமங்களுக்கு உரியவைகளும், வைராக்ய ஸம்பந்தத்தால் ஏற்படும் நிவிருத்தி ரூபமாயும் ஆசையின் ஸம்பந்தத்தால் ஏற்படும் ப்ரவிருத்தி ரூபமாயுமுள்ள

தர்மங்களையும், ராஜதர்மங்கள், தானதர்மங்கள், மோக்ஷதர்மங்கள், ஸ்த்ரீதர்மங்கள், பகவத்தர்மங்கள், ஆகிய இவைகளையும், தனித்தனியாகப் பிரித்துச் சுருக்கமாகவும், விஸ்தாரமாகவும் சொன்னார். மேலும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்களையும், அவைகளை அடைவதற்கு தகுந்த உபாயங்களையும், அனேக இதிஹாஸங்களிலும், உபாக்யானங்களிலும் சொல்லியபடி வர்ணித்தார்.

29–31. இப்படி தர்மங்களை யுபதேசித்துக் கொண்டிருக்கும்போது உத்தராயணம் வந்தது. இஷ்டப்படி மரணமடையச் சக்தியுள்ள யோகியாகிய பீஷ்மரால் தமது மரணத்திற்காக எதிர்பார்க்கப்பட்டிருந்த காலம் இதுவேயாம். அப்பொழுது ஆயிரம் ரதிகர்களைக் காப்பாற்றும் வல்லமையுள்ள பீஷ்மர் மௌனமாக (வார்த்தைகளை அடக்கிக்கொண்டு) ஆதிபுருஷரும், பீதாம்பரத்தை ,தரித்தவரும், நான்கு கைகளுள்ளவரும் எதிரில் உட்கார்ந்திருப்பவருமாகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் ஸகல ஆசைகளையும் ஒழித்து சுத்தமாக விருக்கும் மனத்தை கண்களை மூடிக் கொள்ளாமலேயே செலுத்தினார். மேலும் அவருக்கு இம்மாதிரி பரிசுத்தமாகிய த்யானவிசேஷத்தால் அசுபங்கள் விலகின. பகவானுடைய கருணைநிறைந்த பார்வையால் ஆயுதங்களாலுண்டாகிய காயங்களும் அவற்றின் உபத்திரவமும் நீங்கின. சகல இந்திரியங்களும் பலவிடங்களில் செல்லாமல் ஒருவழிப்பட்டன. பின்னும் ஸாத்வதர்களுக்குட் சிறந்தவரும், ஒப்பற்ற மஹிமையுள்ளவரும் தம்முடைய ஸ்வரூபமான பரமானந்தத்தை யடைந்தவரும், ஸிருஷ்டிக்குக் காரணமாகிய ப்ரகிருதியின் ஸம்பந்தத்தை சிலகாலம் லீலையாக அங்கீகரிப்பவருமான பகவானிடத்தில்

ஒருவித ஆசையுமில்லாத தமது புத்தியைச் செலுத்தினார். இப்படி எல்லாவகையிலும் பகவத் பரராயிருந்து சரீரத்தை விடுகிறவரையில் ஸ்ரீ கிருஷ்ணனை பின்வருமாறு ஸ்தோத்ரஞ் செய்யலானார்.

32–35. "மூவ்வுலகத்திலும் மிகுந்த அழகுள்ளதும், பச்சிலை போல் நீலவர்ணமுள்ளதுமான திவ்யசரீரத்தை யடைந்தவரும், ஸூர்ய கிரணம்போல் பொன்னிறமான வஸ்த்ரத்தை தரித்தவரும், நான்குபுறத்திலும் தொங்கும் சிறந்த தலைமயிர்களால் அழகான முகமுள்ளவரும். அர்ஜுனனுக்கு தோழருமான பகவானிடத்தில் பலனையுத்தேசியாமல் எனக்கு ஸ்திரமான பக்தியுண்டாகட்டும். மேலும் யுத்தத்தில் அர்ஜுனனுக்கு ஸாரத்யஞ் செய்யும்போது குதிரைகள் ஓடியதால் பூமியிலிருந்து கிளம்பிய தூளிகள் எவருடைய தலைமயிரில் படிந்தனவோ, எவருடைய முகம் அப்படிப்பட்ட மயிர்களோடு கூடிய வேர்வை ஜலத்துளிகளால் அலங்கரிக்கப்பட்டதோ, எவருடைய கவசம் என்னுடைய பாணங்களால் மூடப்பட்டு ப்ரகாசித்ததோ, அந்த கிருஷ்ண பகவானிடத்தில் என்னுடைய மனஸானது ரமிக்கட்டும்; பின்னும் எந்த பகவான் தம்முடைய ஸ்நேஹிதனாகிய அர்ஜுனனுடைய வார்த்தையின்படி இரண்டு பக்கத்து ஸைன்யங்களுடைய நடுவில் ரதத்தைச்செலுத்தி சத்ரு ஸைன்னியத்திலிருப்பவர்களனைவரையும் 'இவர் த்ரோணர், இவர் பீஷ்மர், இவர் க்ருபர்' என்று சுட்டிக்காட்டிப் பார்வையாலேயே அவர்களுடைய ஆயுஸைக்குறைத்து, அதனால் அர்ஜுனனுக்கு ஜயத்தை யுண்டுபண்ணினாரோ. அந்த கிருஷ்ணனிடத்திலேயே என் மனம் ஸந்தோஷமடையட்டும்.

36–42. அர்ஜுனன் சத்ரு ஸைன்யத்தில் யுத்தத் திற்கு ஸன்னத்தனாயிருந்த, நான் முதலிய் பந்துக்களைப் பார்த்து இவர்களைக் கொல்வதால் பாபம் நேரிடுமென்ற எண்ணத்துடன் யுத்தஞ்செய்வதில் ஆசையில்லாதவனாக விருக்கும்போது, அவனுக்கு ஆத்மவித்யை யுபதேசித்து, அந்த எண்ணத்தை எவர் மாற்றினாரோ, அந்த பரமபுருஷனுடைய பாகங் களையே என் மனஸ்த்யானிக்கட்டும்; மேலும் ஸ்ரீ கிருஷ்ணன் ஆயுதமெடுக்காமல் யுத்தத்தில் ஒத்தாசை செய்வதாகப் பாண்டவர்களுக்கு ப்ரதிஜ்ஞை செய்தவரானாலும், ஸ்ரீ கிருஷ்ணனை ஆயுதமெடுக்கச் செய்கிறேன் என்று என்னால் செய்யப்பட்ட ப்ரதிஜ் ஞையை நிறைவேற்றுவதற்காக, அர்ஜுனனுடைய ரதத்தைவிட்டுக் கீழே இறங்கி சக்ராயுதத்தை எடுத்துக் கொண்டு யானையைக்கொல்வதற்கு சிங்கம்வந்தாற் போல பூமி அசையும்படியாகவும். மேல்வஸ்த்ரந்தவறி விழும்படியாகவும் வெகு வேகமாயோடி வந்தார். அப்பொழுது நான் சிரித்துக்கொண்டு அவரை பாணங்களாலடித்தேன். அதனால் அவருடைய கவசம் உடைந்தது; சரீரமுழுவதும் ரக்தத்தால் நனைந்தது. அப்பொழுது அர்ஜுனனால் தடுக்கப்பட்டும் அவனை மீறிக்கொண்டு என்னைக் கொல்வதற்காக ஓடிவந்தார். அந்தப் பகவானாகிய முகுந்தரே எனக்குக் கதி. பின்னும் அவர் ஒரு வகையில் குதிரையோட்டுங் கோலையும். மற்றொருகையில் குதிரைகளின் கடிவாளங்களையும் பிடித்து ஸாரதி வேஷம்பூண்டு, அனேக அகார்யங்களைச் செய்தாவது அர்ஜுனனுடைய ரதத்தைக் காப்பாற்றிக்கொண்டிருந்தார். இந்த பகவானைத் தர்சித்ததால் சண்டையில் அடிபட்டு

மரணமடைந்தவர்களனைவரும் பகவத் ஸாரூப்யத்தை அடைந்தார்கள். ஆகையால் மரணமடையும் தசை யிலிருக்கும் என்னுடைய சித்தம் இந்தப் பரம புருஷனிடத்தில் கலந்திருக்கட்டும். மேலும் அழகான நடை, லீலை, சிரிப்பு, ஸ்நேஹமான பார்வை இவை களால் கௌரவப்படுத்தப்பட்டவர்களும், பகவானிடத் திலேயே ஸதா மனதைச் செலுத்தி அவரால் செய்யப்பட்ட லீலைகளை அனுஸரிப்பவர்களுமான கோபஸ்த்ரீகள் வேறு விஷயத்தில் சித்தமில்லாதவர்களாக பகவத் ஸ்வரூபமாகிய பரமானந்த ரூபத்தை யடைந்தார்கள். ஆனதுபற்றி அவரிடமே என்னுடைய சித்தம் வஸிக்கவேண்டும். தவிரவும் தர்மபுத்ரர் ராஜஸூய யாகஞ் செய்தபோது, அநேக முனிவர்களாலும், அரசர்களாலும் நிறைந்த யாகசஸையின்நடுவில் இந்த கிருஷ்ணபகவான் எல்லாராலும் பார்க்கக்கூடிய அத்புத சரீரமுள்ளவராய்ப் ப்ரகாசித்ததுமல்லாமல் எல்லாருக்கும் முந்தி பூஜிக்கப்பட்டார். அந்த புருஷோத்தமனாகிய இவர் என்னுடைய கண்களுக் கெதிரில் ப்ராகாசிக்கிறார். எனக்கு மிகுந்த பாக்யம் கிடைத்தது. இது மிகுந்த ஆச்சர்யம். காற்றானது மூங்கிலை எரிப்பதற்கு அக்னியை யுண்டு பண்ணுவது போல எந்தப்பகவான் பூமியின் பாரத்தைத் துலைப் பதற்காக கௌரவர்களுக்கு இந்த்ரிய சாபல்யத்தை யுண்டுபண்ணினாரோ, பக்தர்களுடைய உபத்ரவத்தை நிவர்த்திக்கும் பாதங்களை யுடையவரும், எதிரிலிருப் பவருமான பகவானை ஹிருதயத்தில் வைத்துக் கொண்டு இந்த மனித சரீரத்தை விட்டுவிடுகிறேன்.

43. ஸூர்யன் ஒருவனானாலும் பார்ப்பவர்களுடைய கண்களின் தோஷத்தால் பலவகையாகத் தோன்றுகிறது

போல பகவான் ஒருவரானாலும், தன்னால் ஸிருஷ்டிக்கப் பட்ட ஒவ்வொரு ப்ராணிகளின் ஹிருதயத்திலும் வெவ்வேறாகத் தோற்றுகிறார். இதற்கு அவித்யையே காரணம் (அதிஷ்டான பேதத்தால் பேதமேயொழிய உண்மையில் பேதமில்லை என்பது கருத்து) என்று தெரிந்துகொண்டேன். பேதபுத்தியும், மோஹமும் நாசமாயின. ஆதியந்தமில்லாத ஆத்ம ஸ்வரூபத்தை அவருடைய கிருபையால் நன்றாய் தெரிந்து கொண்டேன். தன்யனாகிவிட்டேன் என்றார்

44–48. இப்படிச்சொல்லிவிட்டு மனோவ்யாபாரம், வாக்வாயாபாரம், கண்களின் வ்யாபாரம் ஆகிய இவைகளை கிருஷ்ணனிடத்தில் செலுத்தி ச்வாஸத்தை அடக்கி பரமாத்மாவிடம் லயித்தார். அப்பொழுது அவ்விடமிருந்து எல்லோரும் பீஷ்மரானவர் உபாதி ஸம்பந்தமில்லாத பரப்ரஹ்மமாக ஆனதைக்கண்டு ஸாயங்காலத்துப் பறவைகள்போல் மௌனமாய் இருந்தார்கள். அப்பொழுது தேவர்களும், மனிதர்களும் துந்துபி வாத்யங்களை முழக்கினார்கள். அங்கிருந்த அரசர்களுக்குள் ப்ரஹ்மிஷ்டர்கள் ச்லாகித்தார்கள். ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி பெய்தது. பரமாத்ம ஸ்வரூபத்தையடைந்த அந்த பீஷ்மருக்கு உத்ரக்ரியை களை தர்மபுத்ரர்செய்து ஸ்வல்பகாலம் துக்கித்தார் அப்பொழுது மஹர்ஷிகள் மிகுந்த ஸந்தோஷத்துடன் பகவானுடைய ரஹஸ்யமாகிய பெயர்களைச்சொல்லி கிருஷ்ணனை ஸ்தோத்ரம்பண்ணி அவரையே த்யானஞ் செய்துகொண்டு தங்களுடைய ஆச்ரமஞ் சென்றார்கள்.

49–50. பிறகு தர்மபுத்ரர் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடன் ஹஸ்தினா பட்டணம் போய் புத்ரசோகத்தால் துக்கிக்கும் காந்தாரியையும்

த்ருதராஷ்ட்ரராலும், ஸ்ரீ வாஸு தேவராகிய பகவானாலும் அனுமோதிக்கப்பட்டு வம்சபரம் பரையாய் கிடைத்த ராஜ்யத்தை தர்மமாகப் பரிபாலித்தார்.

நோட்டு

தேசத்தை– தான் பாணங்களின் மீது படுத்திருப்பதனால் எதிர்கொண்டழைப்பதற்கும், நமஸ்கரிப்பதற்கும் இது ஸமயமல்லவென்று மனத்தால் பகவானை பூஜித்தார். மித்ரரோ– ஸ்ரீ கிருஷ்ணன் பாண்டவர்களுக்கு மித்ரராயிருந்து காலத்தையே அனுஸரித்திருந்தார் என்று காட்டப்பட்டிருக்கிறது. "த்ரவ்யம், கர்மம், காலம், ஸ்வபாவம், ஜீவனம் ஆகிய இவைகள் பகவானுடைய அனுக்ரஹத்தால் கிடைக்கின்றன. அவருடைய அனுக்ரஹமில்லாதவரையில் மேற்சொல்லியவைகள் மனிதனுக்குக் கிடைக்கலாம்"– வீர. முந்தியிருந்த– ஜகத் ஸிருஷ்டிக்குமுன் ஸத்தாகவே இருந்தது. நாராயணன் ஒருவரே இருந்தார்"– ச்ருதி. பகவான்– பகவான் புருஷன் என்ற சப்தங்கள் சாச்வதராகிய வாஸுதேவரையே குறிக்கின்றன" "ஓ! மைத்ரேய! பகவான் என்ற சப்தமானது பரப்ரஹ்ம மாகிய வாஸுதேவரைச் சொல்லுகிறதேயொழிய மற்றவைகளைச் சொல்லுகிறதில்லை" ஸ்ரீத– ஒருருவாய்– இந்த ஜகத்தில் பரமாத்மாவைக் காட்டிலும் வெவ்வேறான வஸ்துக்களில்லை. அனேக வஸ்துக்களி ருப்பதாகப் பார்ப்பவன் ஸம்ஸாரத்தை யடைகிறான்" எப்பொழுது இவனுக்கு எல்லாம் ஆத்மஸ்வரூபமாகத் தோற்றுகிறதோ அப்பொழுது எதைக் கொண்டு எதைப் பார்க்கப்போகிறான்– நான்கு கை– பீஷ்மருக்கு

நான்கு கைகளுள்ளதாக பகவத் ஸ்வரூபம் ப்ரகாசித்தது. வீர– ஒப்பற்ற மஹிமை– எந்த நிலமையில் வேறுவிஷயத்தைப் பார்க்கமாட்டானோ வேறு விஷயத்தைக் கேட்கிறதில்லையோ அதுவே பூமா எனப்படும்" "மேலும் கீழும் முன்னும் பின்னும் இருபக்கங்களிலும் அவரே இருக்கிறார். காணப்படும் ஜகத் முழுமையும் அவரே" என்ற ச்ருதிகளில் சொல்லிய அனுப்ரவேசஞ் செய்தார். ஒருவராகவிருக்கும் பரமாத்மாவை பலவகையாக நினைக்கிறார்கள்"– ச்ருதி. லயித்தார்– பீஷ்மர் ப்ரஹ்மத்தினிடம் பேதமில்லாமல் கலந்து விட்டாரென்று அர்த்தங் கொள்ளக்கூடாது. "அப்பொழுது ஸத்துடன் சேருகிறான்" என்று ச்ருதியில் சொல்லியபடி ஸம்பந்தித்தார் என்றே அர்த்தம். மேற்காட்டிய ச்ருதியிலும் அபேதமாகக் கலக்கிறான் என்றே சொல்லப்பட்டிருப்பதாய் அர்த்தங்கொள்வோமானால் ஸுஷுப்தியில் பரமாத்மாவிடம் கலந்து ஒன்றாக ஆன ஜீவன் மறுபடி பிரிய ந்யாயமில்லை. மேலும்– அந்தக்கரணரூபமாகிய உபாதி நாசத்தால் அபேதத்தை யடைந்த ஜீவன் விழித்துக்கொள்ளும்போது மேற் காட்டிய உபாதி ஸம்பந்தத்தையடைந்து பரமாத்மா வினிடமிருந்து பிரிகிறான் என்று சொல்லுவதும் பொருந்தாது. மனது ப்ராணனாகிய ப்ரஹ்மத்தினிடம் பறவைபோலக் கட்டுப்பட்டிருப்பதாகச் சுருதியில் சொல்லியிருப்பதால் லயிக்கிறதில்லை– சந்த்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–10

ஸ்ரீ க்ருஷ்ணன் த்வாரகை சென்றது.

இதனைக்கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஓ! ஸூதரே! தர்மசிந்தனையுள்ளவர்களுக்குள் சிறந்த வராகிய தர்மபுத்ரர் ராஜ்யத்தில் ஆசைப்பட்டு யுத்தத்திற்கு வந்தவர்களான துர்யோதனன் முதலிய வர்களைக் கொன்று, தம்முடைய தம்பிகளுடன் ராஜ்யத்தை அடைந்து, மிகுந்த போகங்களை யனுபவித்து ராஜ்யத்தை எப்படி பரிபாலித்தார்? பிறகு எதனைச் செய்தார்? அதைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

2–3. அதைக்கேட்ட ஸூதர் சொல்லத் தொடங்கினார். குரு வம்சமாகிய வனமானது அதிலிருந்து உண்டான கோபமாகிய அக்னியால் எரிக்கப்பட்டபோது, ஸம்ஸார்த்தை விருத்தி செய்பவ ராகிய பகவான் அதை மறுபடியும் முளைக்கச்செய்து (பரீக்ஷித்தைக் காப்பாற்றி) தர்மபுத்ரருக்கு ராஜ்யத்தைக் கொடுத்து மிகுந்த ஆனந்தத்தை யடைந்தார். பின்பு, பீஷ்மருடைய வார்த்தைகளைக் கேட்டதாலும், ஸ்ரீ க்ருஷ்ணனுடைய உபதேசத்தாலும், தர்மபுத்ரருக்கு 'நான் செய்கிறவன்' 'பலனை யனுபவிக்கிறவன்' என்ற மோஹம் நீங்கியது 'ஜகத்தானது பரமேச்வராதீனமே யொழிய ஸ்வதந்த்ரமுள்ளதன்று என்று ஞானமுண்டா யிற்று. அப்படிப்பட்ட தர்மபுத்ரர் நாசமற்றவரான பகவானை மஹேந்த்ரன்போல ஆச்ரயித்து, ஸமுத்ரத் திற்குட்பட்ட பூமியைத் தம்முடைய தம்பிகளுடன் பரிபாலித்தார்.

4–6. ஒருவரிடத்திலும் விரோத புத்தியில்லாத வராகிய தர்மராஜன் அரசு புரிந்து வரும் நாளில் காலத்தில் மழைபெய்தது; பூமியானது ஜனங்களுக்கு வேண்டிய வஸ்துக்களை யுண்டுபண்ணிற்று; பெரிய மடியுள்ள பசுக்கள் பாலால் கொட்டில் முழுவதையும் நனைத்தன. ஆறுகள் பூரணப்ரவாஹ முள்ளவைகளாகி, வயல்களுக்கு ஜலத்தைக்கொடுத்துப் பயிர்களை விருத்திசெய்து வந்தன. ஸமுத்ரம் முத்து முதலிய ரத்னங்களை விசேஷமாக உண்டுபண்ணிற்று. மலைகள் மனோசிலை முதலிய தாதுக்களை விருத்திசெய்தன. எல்லா ருதுக்களிலும் கொடிகள், மரங்கள் ஆகிய இவைகள் பழங்களாலும், புஷ்பங்களாலும் நிறைந் திருந்தன. நெல், பயறு, கடலை, கோதுமை முதலிய தான்யங்களை அவ்வவற்றின் பயிர்கள் விருத்திசெய்தன. மேலும் மனோவ்யாதி, சரீரவ்யாதி, குளிர்ச்சி, உஷ்ணம் இவைகளால் நேரிடும் உபத்ரவம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம், ஆத்யாத்மிகம் ஆகிய முவ்வகை தாபங் களும் ஜனங்களுக்கு ஒருபோதும் நேரிடவேயில்லை.

7–18. அப்பொழுது ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தியானவர், ஹஸ்தினா பட்டணத்தில் சில மாஸங்கள் வஸித்துத் தம்முடைய மித்ரர்களின் துக்கத்தை நிவர்த்தித்து, ஸஹோதரியான ஸுபத்ராதேவிக்கு அதிக ப்ரியத்தை யுண்டுபண்ணி, பின்பு தர்மபுத்ரரைத் தழுவி நமஸ்கரித்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு ரதத்திலேறினார். அப்பொழுது சிலர் பகவானை ஆலிங்கனம் செய்ய நமஸ்கரித்தார்கள். இப்படி பகவான் த்வாரகைக்குப் போக, முயற்சித்ததைப் பார்த்து, ஸுபத்ரை, த்ரௌபதி, குந்தி, உத்தரை, விதுரர், தர்மபுத்ரர், த்ருதராஷ்ட்ரர், யுயுதஸு

(த்ருதராஷ்டருக்கு வைச்யஸ்த்ரியினிடம் பிறந்தவர்) கிருபர், நகுல, ஸஹதேவர்கள், பீமஸேனர், தௌம்யர் முதலாகிய எல்லோரும் பகவானைவிட்டுப் பிரிந்திருப் பதை ஸஹியாமல், வருத்தப்பட்டார்கள். மனோஹர மாகிய பகவானுடைய கதையை ஒருதடவை கேட்டதினாலேயே, நல்ல ஞானமுண்டாகிறது; சரீரம் முதலியவைகளில் அபிமானம் விலகுகிறது; ஆகையால் வித்வான்கள், அதனையொருபொழுதும் விட மாட்டார்கள். அப்படியிருக்க அவரை எப்பொழுதும் பார்ப்பது, ஆலிங்கனம் செய்துகொள்வது, பேசுவது, சேர்ந்துபடுத்துக்கொள்வது, ஒரே இடத்தில் உட்காருவது, சேர்ந்து புஜிப்பது, ஆகிய இவைகளால் அந்த பகவானிடத்திலேயே புத்தியைச் செலுத்திய பாண்டவர்களால் அவரைவிட்டுப் பிரிந்திருக்க முடியுமா? ஆகையால் அவர்களெல்லாரும் கண் கொட்டாமலேயே அவரைப் பார்த்துக்கொண்டு, விசேஷ ஸ்நேஹமுள்ளவர்களாய் அந்த அந்த இடங்களில் நின்றார்கள். அவர்களுடைய மனஸானது, அவர்பின் சென்றது. அப்பொழுது ஸ்ரீ க்ருஷ்ணபகவான் அரண்மனையிலிருந்து வெளியில் வரும்போது, அவர்மீதிருந்த ப்ரியத்தால், ஸுபத்ரை முதலிய ஸ்த்ரீகள், 'கண்ணீரைப்பெருக்குவது அமங்கலம்' என்று நினைத்து, அடக்கிக் கொண்டார்கள். மேலும் அப்பொழுது, மிருதங்கம், சங்கம், பேரி, வீணை, பணவம், கோமுகம், சர்சரீ, ஆனகம், கண்டா, துந்துபி ஆகிய பத்துவகை வாத்யங்களும் முழங்கின. கௌரவ ஸ்த்ரீகள் அனைவரும் ப்ரேமை, வெட்கம், சிரிப்பு இவைகளுடன், மேல்மாடியிலிருந்து பகவானைத் தர்சித்து, அவர்மீது புஷ்பங்களை வர்ஷித்தார்கள். ஸ்ரீ பகவானிடத்தில் மிகுந்த ப்ரீதியுள்ளவரும், சுருட்டை

மயிருள்ளவருமாகிய அர்ஜுனர், தம்மிடத்தில் மிக்க விச்வாஸமுள்ளவராகிய ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவிற்கு, ரத்னகாம்புள்ளதும், முத்துமாலைகளால் அலங்கரிக்கப் பட்டதுமான வெள்ளைக்குடையைப் பிடித்தார். உத்தவரும், ஸாத்யகியும் மிக அத்புதங்களான சாமரங்களையெடுத்து விசிறினார்கள். இப்படி பகவான், புஷ்பம் முதலியவைகளால் வீதியில் பூஜிக்கப்பட்டு ப்ரகாசித்தார்.

19—30. அப்பொழுது ப்ராஹ்மணர்கள் மனுஷ்யாவதாரமெடுத்த பகவானுக்குத் தகுதியானவைகளும், சுத்த ஸ்வரூபத்திற்குத் தகாதவைகளுமான ஆசீர்வாதங்களைச் செய்தார்கள். உத்தமச்லோகராகிய ஸ்ரீ க்ருஷ்ணனிடத்திலேயே மனத்தைச் செலுத்தினவர்களான பட்டணத்திலிருக்கும் ஸ்த்ரீகள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளும் வார்த்தைகள் எல்லோருக்கும் த்ருப்திகரமானவைகளாகவும், ஸகல உபநிஷத்துகளுக்கு ஸம்மதமானவைகளுமாயிருந்தன. எப்படியென்றால் க்ருஷ்ணனுடைய தேஜஸ்ஸைப் பார்த்து ஆச்சர்யமடைந்த சில ஸ்த்ரீகளை நோக்கி சிலர் சொல்லுகிறார்கள். ப்ரளயகாலத்தில் ஜீவோபாதிகளான ஸத்வம் முதலியவைகள் ஈச்வரனிடத்தில் அடங்கியிருக்கும்போது குணங்களுடைய சேர்க்கைக்குமுன் எவர் ப்ரபஞ்ச ஸம்பந்தமில்லாத ரூபத்துடன் ஒருவராகவிருந்தாரோ, அவரே இந்த க்ருஷ்ண பகவானாக அவதரித்திருக்கிறார். (ஸிருஷ்டிக்குமுன்னும், ப்ரளயத்திலும், ப்ரபஞ்ச ஸம்பந்தமில்லாமலிருப்பவர் இவரே என்று கருத்து) அந்த பரமாத்மாவே ஸகல வேதங்களையும் வெளியிட்டு மறுபடியும் தன்னுடைய காலசக்தியால் தூண்டப்பட்டதும், ஜீவர்களை

மோஹிக்கச்செய்வதும், ஸிருஷ்டிக்க விரும்பியதுமான ப்ரகிருதியை அனுஸரித்தார். அந்தப்ரகிருதியே பெயர் ரூபம் இவைகளில்லாத ஜீவனிடத்தில அவைகளை யுண்டுபண்ணிற்று. யோகிகள் இந்த்ரியங்களை ஜயித்து, ச்வாஸத்தையடக்கி விசேஷ பக்தியால் சுத்தமான மனமுள்ளவர்களாய் எவருடைய பதத்தையடைகிறார் களோ; அந்தப்புருஷன் இவரே. நம்முடைய புத்தியைப் பரிசுத்தப்படுத்துவதற்கு தகுந்தவர், இவரேயொழிய யோகம் முதலியவைகளால் முடியாது. அடி தோழி! ஆத்மாவின் ரஹஸ்யத்தையறிந்த வித்வான்கள், எவரை ஸ்தோத்ரஞ்செய்கிறார்களோ, வேதங்களிலும், ரஹஸ்யமான ஆகமங்களிலும், எவர் வர்ணிக்கப்படுகிறாரோ, எந்த ஈச்வரன் ஜகத்தை உண்டுபண்ணுவது பரிபாலிப்பது, நாசஞ்செய்வது ஆகிய பற்றுதலில்லையோ, அவரே க்ருஷ்ணனுடைய சரீரமெடுத்துக் கொண்டிருக்கிறார். எந்த காலத்தில் அரசர்கள் தமோ குணங்களுள்ளவர்களாகி தங்கள் ப்ராணனை மாத்திரம் போஷிக்கிறார்களோ அந்தக்காலத்தில், ஐச்வர்யம், செய்த பிரதிஜ்ஞையைக் காப்பாற்றுவது, உண்மையை யுபதேசிப்பது, தயை, கீர்த்தி ஆகிய இவைகளை வெளிப்படுத்துவதற்காக ஒவ்வொரு யுகத்திலும் இவரே ஸத்வகுணரூபியாய் அவதரிக்கிறார். யதுவினுடைய குலம் மிகவும் மேலானது, மதுராநகரம் மிகவும் புண்ய பூமியுள்ளது. புருஷோத்தமரும், ப்ரியமான கீர்த்தியுள்ளவருமான பகவான் தம்முடைய அவதாரத்தாலும் நடையினாலும், அவைகளை அலங்கரிக்கிறார். ஆச்சர்யம்! த்வாரகாநகரத்தின் பாக்யம் அத்புதமானது; எல்லா நகரங்களிலும் ஸ்வர்க்கம் மேலானது என்ற ஸ்வர்க்கத்தின் கீர்த்தியைப் போக்கக்கூடியது; அதில் வஸிக்கும் ஜனங்கள், தங்களை அனுக்ரஹிப்பதற்காகவே

அவ்விடத்தில் வஸிப்பவரும், புன்சிரிப்புள்ள பார்வை யுள்ளவருமான ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவை எப்பொழுதும் தர்சிக்கிறார்கள். அந்தப் பகவானுடைய பத்னிகள் முன் ஜன்மத்தில் வ்ரதங்கள், ஸ்நாநம், ஹோமம் முதலியவைகளால் ஈச்வரனையுபாஸித்தவர் களென்பதில் ஸந்தேஹமில்லை. தவிரவும் கோபஸ்த்ரீகள் எல்லோரும், அவருடைய அதரத்தைப் பானஞ்செய்கிறார்கள் தவிரவும் அதையே மனததில் நினைத்து மோஹிக்கிறார்கள். பலிஷ்டர்களான சிசுபாலன் முதலியவர்களை ஸ்வயம்வரத்தில் ஜயித்து பகவானால் விவாஹஞ்செய்து கொள்ளப்பட்டவர் களும், ப்ரத்யும்னன், ஸாம்பன் முதலியவர்களுக்குத் தாயார்களுமான ருக்மிணி, ஸத்யபாமா முதலியவர் களுடைய வீடுகளிலும், நரகாஸுரனைக் கொன்று ஸ்ரீ க்ருஷ்ணனால் அபஹரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மற்ற ஸ்த்ரீகளுடைய கிருஹங்களிலும், பகவான் எப்பொழுதும் அவர்களுக்கு வேண்டியதை ஸம்பாதித்துக் கொடுத்து அவர்களை ஸந்தோஷப்படுத்திக்கொண்டு வஸிக்கிறார். ஆனதால் ஸ்த்ரீகளுக்கு ஸ்வாதந்த்ரயம், சௌசம் இவைகளில்லாமலிருந்தும், ஸ்த்ரீயாக விருப்பதே மேலானதென்று விளங்குகிறது" என்று பேசிக்கொண்டார்கள்.

31. இம்மாதிரியான பட்டணத்து ஸ்த்ரீகளுடைய வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ க்ருஷ்ணன், பார்வையா லேயே, அவர்களை ச்லாகித்துச் சிரித்துக்கொண்டு சென்றார். அப்பொழுது தர்மபுத்ரர் சத்ருக்களிடத்தில் ஸந்தேஹப்பட்டு, பகவானைக்காப்பாற்றுவதற்காக அவரிடம் ப்ரியத்தால் சதுரங்க ஸைன்யத்தையனுப் பினார். பின்பு ஸ்ரீ க்ருஷ்ணபகவான் வெகுதூரம் தம்மை

பின்தொடர்ந்து வந்தவர்களும், தம்மைவிட்டுப் பிரிய மனமில்லாதவர்களும், ஸ்திரமான பக்தியுள்ளவர்களு மான கௌரவர்களைத் திருப்பிவிட்டுத் தமது நகரம் நோக்கி புறப்பட்டார். அவர் குருஜாங்கலம், பாஞ்சால்ம், சூரசேனம், யமுனையின் கரையிலிருக்கும் தேசம், ப்ரஹ்மாவர்தம், மத்ஸ்யம், ஸரஸ்வதி நதிக்கரையிலுள்ள தேசம், ஜலமில்லாத தேசம், அல்ப ஜலமுள்ள தேசம், ஸௌவீரம், ஆபீரம், ஸைந்தவம் ஆகிய இவைகளைத் தாண்டி ஆனர்த்த தேசம் போனார். குதிரைகள் கொஞ்சம் களைப்படைந்தன. அந்தந்த இடத்தில் வஸிப்பவர்கள் பகவானை எதிர்கொண்டழைத்துப் பூஜித்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணபகவான் ரதத்தைவிட்டு இறங்கி ஜலமிருக்குமிடஞ் சென்று ஸந்தியோபாஸ்தி செய்தார்.

நோட்டு.

பிரகிருதி– மாயை "மாயையை ப்ரகிருதியென்றும், மாயையை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டிருப்பவனை மஹேச்வரனென்றும் தெரிந்து கொள்ள வேண்டும்." ச்ருதி– சுத்தமான மேலான ஸூக்ஷ்மபுத்தியினால் பார்க்கப்படுகிறார்"– ச்ருதி.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்—11

துவாரகாவாஸிகள் பகவானை உபசரித்தது

இப்படி ஸ்ரீ கிருஷ்ணபகவான் மிகுந்த ஐசுவரியம் உள்ள தன்னுடையதான ஆனர்த்த தேசத்தையடைந்து திவ்யமாகிய சங்கத்தை ஊதினார். அப்பொழுது மிகவும் வெண்மையான மத்ய பாகமுள்ளதும், பகவான் உடைய உதடுகளின் காந்தியால் சிவந்ததுமான அந்தச் சங்கமானது செந்தாமரை புஷ்பத்தில் உரக்கச் சப்தித்துக் கொண்டிருக்கும் ஹம்ஸம் போல விளங்கிற்று. அதனைக் கேட்டு அந்தத் தேசத்தில் வஸிப்பவர்கள் கிருஷ்ணன் வருகிறார் என்பதை தெரிந்துகொண்டு அவரை விட்டுப் பிரிந்திருந்ததாலுண்டான தாபத்தை விட்டுச் சந்தோஷமடைந்தார்கள். மேலும் அவர்கள் எல்லோரும் ஸம்ஸார பயத்தைப் போக்கக்கூடிய அந்தச் சப்தத்தைக் கேட்டவுடன் தங்கள் யஜமானனாகிய ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையுள்ள வர்களாக அவருக்கு எதிரில் சென்றார்கள். அந்த பகவான் தன்னுடைய ஆத்மாவிலேயே ரமிப்பவர். ஆனந்தானு பவத்தால் எப்பொழுதும் பூர்ணகாமர்; எல்லோருக்கும் அனுகூலத்தைச் செய்பவர். அப்போர்ப்பட்ட பகவான் இடத்தில் சூரியனிடத்தில் தீபத்தைக் கொடுப்பது போல ஜனங்கள் காணிக்கைகளைச் சமர்ப்பித்து, பிதாவைக் கண்ட குழந்தைகள் போல மலர்ந்த முகமுள்ள வர்களாய், கத்கத ஸ்வரத்துடன் தங்களைக் காப்பாற்றும் அந்தப்பகவானை நோக்கி, வேறாத ப்ரஹ்மதேவராலும், ஸனகர் முதலியவர்களாலும், இந்திரன் முதலியவர் களாலும் நமஸ்கரிக்கப்பட்ட தாமரை மலர் போன்ற உம்முடைய பாதங்களுக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்.

அவைகள் இவ்வுலகத்தில் ஸுகத்தை விரும்பியவர் களுக்கு முக்கிய கதியானவைகள். ஸகல வஸ்துக் களையும் பக்குவஞ்செய்யும் ஸ்வபாவமுள்ள காலமானது எல்லாவற்றிற்கும் மேலானதனாலும் உம்முடைய பாதங் களுக்கு சுவாதீனப்பட்டதேயாம். (உம்முடைய பாதார விந்தங்களை ஆசிரயித்தவர்களுக்குப் பிறப்பு , கிழத்தனம், மரணம் முதலியவைகள் இல்லையென்பது கருத்து:)

'ஓ ஜகத்திற்கு அந்தர்யாமியாயிருப்பவரே தாம் எங்களுக்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டும். நீரே ஸகலத்திற்கும் மாதா, மித்திரர், பிதா, பதி, நீரே நல்ல ஆசாரியர். முக்கியமாகிய தெய்வம், உம்மை யனுசரித் ததாலேயே நாங்கள் தன்யர்களானோம். ஸ்வர்க்கவாஸி களான தேவர்களாலும் பார்க்க முடியாததும் பிரியமான சிரிப்பு, மனோகரமான பார்வை ஆகிய இவை களுடன் கூடிய முகமுள்ளவரும், ஸகல விதத்திலும் அழகு பொருந்திய தம்முடைய சரீரத்தை எப் பொழுதும் நாங்கள் தரிசிக்கும்படி நேர்ந்ததால் நாங்களே நாதனுள்ளவர்கள். தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரே! நீர் பந்துக்களைப் பார்க்கவேண்டி குரு நகரத்திற்காவது மதுரா நகரத்திற்காகவது சென்றால், அப்பொழுது நாங்கள் சூரியனில்லாத ஸமயத்தில் கண்கள் போல ஒவ்வொரு நிமிஷத்தையும் கோடி வருஷங்களுக்குச் சமமாகக் கழிக்கிறோம்' என்று ஸ்தோத்ரஞ் செய்தார்கள்.

10–34 இப்படி ஜனங்கள் செய்த ஸ்தோத்திரத்தைக் கேட்டுப் பக்தர்களைக் காப்பாற்றும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவர்களைக் கடாக்ஷித்தால் அனுக்ரஹித்துக் கொண்டு பட்டணத்திற்குள் சென்றார். அந்த நகரம்

ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் சமமாயுள்ள பலசாலிகளான போஜர்கள், மனுக்கள், தாசார்ஹர்கள், குகுரர்கள், அந்தகர்கள், விருஷ்ணிகள் ஆகிய இவர்களால் போகவதி என்னும் பட்டணம் நாகங்களால் ரட்சிக்கப்படுவது போல, காப்பாற்றப்பட்டிருந்தது. மேலும் அந்தப் பட்டணமானது எல்லா ருதுக்களிலும் புஷ்பிப்பவைகளும் பலிப்பவைகளுமான புண்ய விருஷங்களாலும் கொடிகளாலும், கொடி வீடுகளாலும், உத்யான வனங்களாலும் (பழங்களையே பிரதானமாயுள்ள மரங்கள் உள்ளது), புஷ்பத்தோட்டங்களாலும், விளையாடும் தோட்டங்களாலும், தாமரையோடைகளாலும் அழகாய் இருந்தது. கோபுர வாசல்களிலும் வீட்டு வாசல்களிலும் மங்கள தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. வீதிகளில் பலவகையான த்வஜங்கள் கட்டப்பட்டு வெயிலினாது தாபமில்லாமலிருந்தது. ராஜவீதி, கடைவீதி, நாற் சந்திகள், மற்ற வீதிகள் ஆகிய இவைகள் குப்பையில்லாமல் சுத்தஞ் செய்யப்பட்டிருந்தன. பழங்கள், புஷ்பங்கள், அட்சதைகள் முதலிய மங்கள திரவியங்கள், இறைக்கப்பட்டிருந்தன; வாசனை ஜலம் தெளிக்கப் பட்டிருந்தது. ஒவ்வொரு வாசலும் தயிர், அட்சதை, பழங்கள், கரும்பு இவைகளாலும், பூர்ண கும்பங்களாலும், தூபங்களாலும், தீபங்களாலும், பலிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பின்னும் வஸுதேவர், அக்ரூரர், உக்ரஸேனர், அற்புதமான பராக்கிரமுள்ள பலராமர், பிரத்யும்னன், சாருதேஷ்ணன், ஸாம்பன், கதன் முதலியவர்கள் மிகவும் பிரியராகிய பகவான் வருகிறார் என்று கேள்விப்பட்டு யானையை முன் நடத்தி, ப்ராஹ்மணர்களை முன்னிட்டுக் கொண்டு அதிக ஸந்தோஷத்தால் படுக்கை, போஜனம் இவைகளிலும் மனமில்லாதவர்களாக ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு எதிரே

சென்றார்கள். மேலும் அப்பொழுதும் சங்கம் முதலிய வாத்தியங்கள் முழங்கின. வேதங்கள் கோஷிக்கப்பட்டன. இப்படி எல்லோரும் விஸ்வாசத்தால் உண்டான பரப்பரப்புள்ளவர்களாக ரதங்கள் மீதேறிக்கொண்டு எதிர்க்கொண்டு சென்றார்கள். சிறந்த தாஸிகளும் கூட்டம் கூட்டமாக வாகனங்களின் மீதேறிக்கொண்டு அவரைப் பார்க்க வேண்டுமென்ற மிகுந்த ஆசையுடன் சென்றார்கள். அவர்கள் காதில் அணிந்திருந்த குண்டலங்களுடைய காந்தியால் அவர்களுடைய முகம் பிரகாசித்தது. ரஸாபினயஞ் செய்யக்கூடிய நடர்களும், தாளம் முதலியவைகளை யனுசரித்து நர்த்தனஞ் செய்பவர்களும், பாடுகிறவர்களும், ஸூதர்களும், மாகதர்களும், வந்திகளும் உத்தமச்லோகராகிய பகவானுடைய அற்புதமான சரிதத்தைக் கானஞ் செய்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் தம்மைப் பார்ப்பதற்காக வந்த பந்துக்களுக்குத் தக்கபடி வணங்குவதாலும், நமஸ்கரிப்பதாலும், தழுவுவதாலும், கையைப் பிடிப்பதாலும், புன்சிரிப்புக் கொண்ட பார்வையாலும், சண்டாளன் வரையிலுள்ள எல்லாருக்கும் அபயங் கொடுத்து, அவரவர்களுக்கு இஷ்டமான வரங்களை அளித்து மரியாதை செய்தார்.

மேலும் ஆசாரியர்களும், ப்ராஹ்மணர்களும், பெரியோர்களும், மற்றவர்களும் அவரவர் ஸ்திரீகளுடன் பகவானுக்கு ஆசீர்வாதஞ் செய்தார்கள்; வந்திகள் ஸ்தோத்திரம் செய்தார்கள்; துவாரகா பட்டணத்தில் கிருஷ்ணன் இராஜவீதியில் வரும்பொழுது குல ஸ்திரீகள் அவரைத் தரிசிப்பதற்காக மாடிகளின் மீதேறினார்கள். லக்ஷ்மிதேவிக்கு இருப்பிடமாகிய

பகவானுடைய சரீரத்தைத் துவாரகா வாஸிகளான ஜனங்கள் எப்பொழுதும் பார்த்தவர்களானாலும் அவர் களுக்குப் போதுமென்ற திருப்தி உண்டாகவில்லை. அவருடைய மார்பு, கைகள், பாதங்கள் ஆகிய இவைகள் லக்ஷ்மிதேவிக்கும், லோகபாலர்களுக்கும், பக்தர் களுக்கும் முறையே வஸிக்குமிடமாக இருக்கின்றன. அப்போர்ப்பட்ட ஸ்ரீ கிருஷ்ண பகவான் வழியில் வெள்ளைக் குடை, சாமரங்கள் ஆகிய இவைகளால் பூஜிக்கப்பட்டும். பூக்களால் வர்ஷிக்கப் பெற்றும் பீதாம்பரத்தாலும், துளசி மாலையாலும் பிரகா சித்தார். அது சூரியன், சந்திரன், இந்திரன், வில், மின்னல், இவைகளுடன் மேகம் சேர்ந்து பிரகாசித்தது போலிருந்தது. பின்னுமவர் வஸுதேவர், தேவகி இவர் களுடைய அரண்மனை சென்று, வஸுதேவருக்கும் தேவகி முதலிய ஏழு தாயார்களுக்கும் சந்தோஷமாக நமஸ்காரஞ் செய்தார். அவர்களும் இவரைத் தழுவி னார்கள். தேவகி முதலிய ஸ்திரீகள் கிருஷ்ணனை மடியில் உட்கார வைத்துக்கொண்டு ஆனந்தக்கண்ணீ ரால் அவருக்கு அபிஷேகம் செய்தார்கள். பிறகு அந்தப் பரமாத்மா 16,000 பத்தினிகளுடைய அரண் மனைகள் அடங்கிய தமது அரண்மனைக்குச் சென்றார். அது ஸகல வஸ்துக்களாலும் நிறைந்ததும் சிறந்த துமாக விருந்தது. அப்பொழுது அங்கிருந்த ருக்மணி முதலிய ஸ்திரீகள் தேசாந்தரத்திலிருந்து வந்த தங்கள் உடைய பர்த்தாவைச் சமீபத்தில் கண்டு அளவற்ற ஆனந்தமடைந்து ஆசனத்திலிருந்து சரீரத்தாலும் அந்தக்கரணத்தாலும் சீக்கிரமாக எழுந்திருந்தார்கள். அவர்கள், பர்த்தா தேசாந்திரம் போயிருக்கும் காலத்தில் செய்யவேண்டிய விரதங்களை யனுஷ்டித்துக் கொண்டு இருந்தவர்கள். கடைக்கண்ணால் பார்ப்பவர்களாலும்

வெட்கத்தால் தலை குனிந்தவர்களாகவுமிருந்தார்கள். ஓ சௌனகரே கம்பீர மனமுள்ள பகவானைக் காணாத போது மனத்தாலும், நேரில் பார்த்த போது பார்வைகளாலும் (புத்ரர்களைக் கொண்டு தழுவ செய்பவர்கள் போல) ஸ்ரீ கிருஷ்ணனை ஆலிங்கனம் செய்து கொண்டார்கள். (ப்ரீதியாகப் பார்த்தார்கள் என்பது கருத்து) அப்பொழுது தங்களுடைய கண்களி லுண்டான ஆனந்த ஜலத்தை வெட்கத்தால் அந்த ஸ்திரீகள் அடக்கிக்கொண்டிருந்தும் அது அடங்காமல் பெருகியது; ஸ்ரீ கிருஷ்ணன் எப்பொழுதும் அவர் களுடைய பக்கத்திலேயே வஸிக்கிறார். ஆனாலும் அவர்களுக்கு அவருடைய பாதங்கள் புதியவைகளாக தோன்றுகின்றன. சஞ்சல ஸ்வபாவமுள்ள ஸ்ரீதேவியும் அவரிடத்திலேயே ஸ்திரமாக வசிப்பதால் எவளுக்குத் தான் அவரிடம் பிரேமை யிராது?

35–40 காற்றானது மூங்கில் காட்டில் அவைகளைக் கொண்டே அக்னியை உண்டுபண்ணி அதனால் அவை களை எரிப்பதுபோல ஸ்ரீ கிருஷ்ணன், தாம் ஆயுதம் எடுக்காமலே பூமிக்குப் பாரமாயிருந்த அனேக அக்ஷௌஹிணி சைன்யங்களால் விருத்தியடைந்த தேஜஸுள்ள அரசர்களுக்குள் ஒருவருக்கொருவர் விரோ தத்தை உண்டு பண்ணி, அதனால் அவர்களை நாசஞ் செய்து சாந்தியடைந்தார். இப்படி பகவான் பிராகிருத புருஷன்போல பூமியில் மாயாவதாரஞ் செய்து அநேக உத்தமஸ்திரீகளின் நடுவிலிருந்து விளையாடினார். ஸ்திரீகள் கம்பீரமாகிய அபிப்பிராயத்தைக் காண் பிக்கும் கடாக்ஷமுள்ளவர்கள், மனோகரமான மந்தகாச முள்ளவர்கள். வெட்கமுள்ளவர்கள். அவர்களால் பரம சிவனும் மோகித்து வெட்கமடைந்துவில்லை எறிந்தார்.

ஸ்திரீகள் அப்போர்ப்பட்ட சக்தியுள்ளவர்களானாலும் தங்களுடைய விலாசங்களால் கிருஷ்ணனை ஆசைப்படச் செய்ய முடியாதவர்களாகவிருந்தார்கள். (சம்சாரத்தில் பற்றுதல் இல்லாதவரென்பது கருத்து.) இப்படி ஸ்ரீ கிருஷ்ணன் வைராக்யமுள்ளவராக விருந்து ஜனங்கள் தங்களைப்போல அவரையும் ஸம்சாரியென்றே நினைக்கிறார்கள். அதனால் தான் அஜ்ஞர்களென்று சொல்லப்படுகிறார்கள். ஆத்மாவினிடமிருக்கும் ஆனந்தம் முதலிய குணங்களில் ஆத்மாவை ஆசிரயித்திருக்கும் புத்தியானது சம்பந்திக்காமல் இருப்பது போல், பகவான் பிரகிருதி காரிய மாகிய சம்சாரத்திலிருந்தும் அதன் குணங்களாகிய சுகம், துக்கம் இவைகளுடன் சம்பந்தப்படாமல் இருக்கிறார். அதுவே அவருடைய ஐசுவரியமென்று சொல்லப்படுகிறது. அகங்காரமானது ஆத்மாவைத் தனது வசப்பட்டவனாக நினைப்பதுபோல் ஸ்ரீ கிருஷ்ணனுடைய உண்மையை அறியாதவர்களான அந்த ஸ்திரீகளெல்லோரும் கிருஷ்ணன் தங்கள் இடத்தில் ஆசை கொண்டவர், தங்களையே அனுஸரித்திருப்பவர் என்று அஜ்ஞானத்தால் நினைத் திருந்தார்கள்.

நோட்டு

ஸூர்ய-ஜகத்தைத் தம்முடைய தேஜஸால் பிரகா சிக்கச் செய்பவரும், வேறு பிரகாசத்தை அபேட் சியாமல் விளங்குகிறவருமான சூரியனுக்குத் தீபத்தால் எப்படி பிரயோசனமில்லையோ அப்படி ஸகல வித காமங்களால் பூர்ணராகிய பகவானுக்கு ஜனங்களால்

கொடுக்கப்படும் காணிக்கைகளால் ஒருவித பயனுமில்லை என்று காட்டப்பட்டது, கத்கதஸ்வர-ஆனந்தம், துக்கம் இவைகள் நேரும்போது கண்ணீர் பெருகி அதனால் கண்டம் அடைத்துப்போகும். அப்பொழுது தாராள மாகப் பேசமுடியாமல் சிரமப்பட்டுப் பேசும் ஸ்வர மேயாம். ஸனகர்-மூலத்தில் வைரிஞ்ச என்றிருப்பதால் அதற்குச் சங்கரனென்று அர்த்தம் விஜ, பசுவின் கன்றுகளைப் ப்ரஹ்மதேவர் அபகரித்த பிறகு அவரால் நமஸ்கரிக்கப்பட்டது. பகவான் பாணாசுரனிடத்தில் யுத்தஞ் செய்யும்போது, சங்கரனால் ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டது. சந்த். க்ஷேமம்-மோக்ஷம் விஜயமாதா - பிறந்தது முதல் போஷிப்பதால். மித்ரர்- எல்லா வற்றிற்கும் அந்தராத்மாவாக விருப்பத்துடன் ஸத்காரி யத்தைச் செய்யும்படி தூண்டுவதால். பிதா-இது ஹிதமென்றும், இது அஹிதமென்றும் உபதேசித்து, சாஸ்திரத்தைக் கொண்டு சிட்சிப்பதால், பதி-பர்த்தா, ஜீவனம் முதலியவைகளைக் கொடுத்துக் காப்பாற்று வதால், ஆசாரியர்-அர்ஜுனனை நிமித்தமாய் வைத்துக் கொண்டு உலகத்தில் கீதா சாஸ்திரத்தைப் பரவச் செய்ததாலே. தெய்வம்- மோட்சத்தைக் கொடுப்பதால் சந்த், ஸுதர்கள்- புராணத்தை யறிந்தவர்கள் ஸுதர்களென்று சொல்லப்படுகிறார்கள். வம்சாவளியைச் சொல்புவர்கள் மாகதர்களெனப்படு வார்கள். ஸமயத்திற்குத் தக்கபடி பேசக்கூடிய புத்தி சாலிகள் வந்திகளெனப்படுவார்கள். மேகம்-இது அபூதோபமை யென்று சொல்லப்படுகிறது, மேகம் போன்றவர் பகவான், சூரியன் போன்றது வெண்குடை, புஷ்பவர்ஷம் போன்றது நட்சத்திரங்கள் என்பர் சிலர்.

சூரியன் போன்றது கீரிடம், சந்திரன் போன்றது வெண்குடை, இந்திரனுடைய வில் போன்றது வனமாலை மின்னல் போன்றது பீதாம்பரம். ஏழு தாயார்–வசு தேவருக்குப் பதினெட்டு ஸ்திரீகள். அவர்களெல் லோரையும் நமஸ்கரித்தார். அவர்களுக்குள் முக்கிய மானவர்கள் ஏழு ஸ்திரீகள், 1. தேவகீ, 2. ச்ருததேவா, 3. சாந்திதேவா, 4. உபதேவா, 5. ஸ்ரீதேவா, 6. தேவரக்ஷிதா, 7. ஸஹதேவா, தழுவ –தேசாந்திரத் திலிருந்து வந்த பகவானைப் ப்ரத்யும்னன் முதலிய வர்களைக் கொண்டு கட்டிக் கொள்ளச்செய்வது போல மனத்தால் தியானம் செய்தார்கள், பின்னும் மிகுந்த ஆசையுடன் பார்த்தார்கள். பரமசிவனும்– மூலத்தில் அமதன: என்று பதம் பிரித்து இப்படி ஸ்ரீ தரஸ்வாமி அர்த்தஞ்செய்தார். மதன: என்று பதம் பிரிப்பதால் மன்மதன் என்று அர்த்தம் –வீர, விஜ.

அத்தியாயம் 12

பரீக்ஷித்தின் உற்பத்தி

சௌனக மகரீஷியானவர் ஸூதரைப் பார்த்து 'ஓ ஸூதரே! அசுவத்தாமாவினால் பிரயோகிக்கப்பட்ட ப்ரஹ்மாஸ்த்ரத்தின் தேஜஸால் எரிக்கப்படும் உத் தரையின் கர்ப்பத்தை ஸ்ரீ கிருஷ்ணபகவான் மறுபடி பிழைக்கச் செய்தாரென்று சொன்னீர்களே, மிக்க புத்திசாலியும் மகாத்மாவுமான அக்குழந்தையின் பிறப் பையும், அதன் சரித்திரத்தையும், அவருக்கு சுகர் ஞானோபதேசம் செய்ததையும், அவருடைய முடி வையும், மரணமடைந்த பிறகு அவருக்கு நேர்ந்த கதியையும் சிரத்தையுடன் கேட்க விரும்புகிறேன். சொல்லக்கூடியதானால் சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

4–6 இதனைக் கேட்டு ஸூதர் சொல்லுவதாவது தர்மபுத்திரர் கிருஷ்ணனுடைய பாதங்களைச்சேவித்து ஸகல ஆசைகளையும் ஒழித்துத் தகப்பன் குழந்தை களைக் காப்பாற்றுவதுபோல பிரஜைகளைச் சந்தோ ஷப்படுத்திக் காப்பாற்றி வந்தார். அவருக்குப் பகவானுடைய அனுக்கிரஹத்தால் ஸகல சம்பத்துகளும், ராஜசூயம் முதலிய யாகங்களின் பலனாகிய உத்தம லோகங்களும், திரௌபதி முதலிய ஸ்திரீகளும், பீமசேனன் முதலிய தம்பிகளும், ஸகல பூமியும். ஜம்பூத்வீபத்திற்கு ஆதிபத்யமும், ஸ்வர்க்கம் வரையில் பரவிய கீர்த்தியும் கிடைத்தன. பசியுள்ளவனுக்கு அன்னத்தின் மேலே விருப்பமிருக்குமே யொழி வேறு

விஷயத்தில் ஆசையுண்டாகிறதில்லை. அதுபோல் ஸ்ரீ பகவானிடத்திலேயே சித்தத்தைச் செலுத்தி, அதனால் ரமித்துக் கொண்டிருக்கும் தர்மபுத்ரருக்கு தேவர்களாலும் விரும்பத்தக்க சுகங்கள் கிடைத்திருந்தும் அவைகளால் அவர் சந்தோஷமடையவில்லை.

7–14 1/2, ஓ சௌனகரே! உத்தராதேவியின் கர்ப்பத்திலிருந்த சிசுவானது அச்வஸ்த்தாமாவினுடைய ப்ரஹ்மாஸ்திரத்தின் தேஜஸ்ஸால் எரிக்கப்படும்பொழுது ஒரு புருஷன் அந்தச் சிசுவிற்கு நேரில் தோன்றினார். அவர் கட்டைவிரல் அளவுள்ளவர், சுத்தர், சுவர்ண கீரிடமுள்ளவர், மிக்க அழகான பார்வையுள்ளவர், பீதாம்பரம் தரித்தவர், ஜன்மம் முதலிய விகாரங்கள் அற்றவர், அழகு பொருந்தியவைகளும், நீண்டவை களுமான கைகளுள்ளவர், சுத்த ஸ்வர்ண குண்டலங் களுள்ளவர், 'என் பக்தனுக்கும் உபத்திரவம் நேரிடு கிறதா?' என்ற கோபத்தால் சிவந்த கண்கள் உள்ளவர், கதாயுதத்தைத் தரித்தவர். மேலும் அவர் குறைக்கொள்ளி போன்ற தம் கதையைச் சுழற்றிக் கொண்டு. அக்குழந்தைக்கு நான்கு புறத்திலும் சஞ்சரித்து, சூரியன் பனியைப் போக்குவதுபோல அஸ்திர தேஜஸ்ஸை அக்குழந்தையின் சமீபம் வர வொட்டாமல் தடுத்துக்கொண்டுமிருந்தார். அவரைப் பார்த்து அந்தக் குழந்தையானது இவர் யாரென்று ஆச்சரியத்துடன் ஆலோசித்துக் கொண்டிருந்தது. இப்படி ஒன்பது மாத காலஞ் சென்றது. பத்தாவது மாதத்தில் அளவிடக் கூடாத ரூபமுள்ளவரும், தர்மத்தைப் பரிபாலிப்பவரும், எங்கும் நிறைந்தவரு மான அந்தப் பிரபுவானவர் அக்குழந்தை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே அவ்விடத்தில் மறைந்தார்.

அதன் பிறகு வரும் மேலான சிரேயஸை காண்பிக்கத் தக்க சுப லக்னம் நேர்ந்தது. அதிலிருந்த சுபகிரகங்கள் ஒருவருக்கொருவர் மித்ரர்களாக இருந்தார்கள். அப் போர்ப்பட்ட சமயத்தில் பாண்டுவின் வம்சத்தை விருத்திசெய்யும் புத்திரனானவன் பாண்டுவே மறு படியும் பிறந்ததுபோல அவதரித்தான். அப்பொழுது தர்மபுத்ரர் மிகுந்த சந்தோஷத்துடன் தௌம்யர், கிருபர் முதலிய ப்ராஹ்மணர்களைக் கொண்டு ஜாதகர்மம் ஸ்வஸ்திவாசனம் ஆகிய இவைகளைச் செய்வித்தார். மேலும், அவர் தானத்திற்குரிய பாத்திரம் தேசம் காலம் என்னும் இவைகளை அறிந்தவரா கையால், உத்தமமாகிய அந்தப் புண்ணிய காலத்தில் ஸ்வர்ணம், பசு, பூமி, கிராமங்கள் சிறந்த குதிரைகள் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்தது மல்லாமல் போஜனமும் செய்வித்தார்.

15–17 1/2. அப்பொழுது ஜ்யோதிஷ சாஸ்திரத்தை நன்றாய்க் கற்றுணர்ந்த எல்லாப் ப்ராம்ஹ்மணர்களும் மிகுந்த சந்தோஷமுள்ளவர்களாய் வணக்கமுள்ள அவ் வரசனை நோக்கி, 'ஓ புருஷவம்சத்திய அரசர்களில் சிறந்தவரே தடுக்க முடியா தெய்வ வசத்தால் புரு வம்சத்தின் தொடர்ச்சியற்றுப் போகும் சமயத்தில் அந்த வம்சத்தில் பிறந்தவர்களான உங்களுடைய க்ஷேமத்திற்காக) ஸ்ரீ மகா விஷ்ணுவே இப்புத்ர ரத்னத்தை அனுக்ரகித்திருக்கிறார். விஷ்ணுவினால் கொடுக்கப்பட்டவனாகையால் இவன் விஷ்ணுராத னென்று பிரசத்தியடைவான். இவன் மிகுந்த கீர்த்தி யுள்ளவனும், பாகவதர்களுள் சிறந்தவனுமாவான். இவ் விஷயத்தில் ஸம்சயப்பட வேண்டாம் என்றார்கள்.

18–29 1/2, இதனைக் கேட்ட தர்மராஜன் ப்ராஹ்ம

விஷயத்தில் ஆசையுண்டாகிறதில்லை. அதுபோல் ஸ்ரீ பகவானிடத்திலேயே சித்தத்தைச் செலுத்தி, அதனால் ரமித்துக் கொண்டிருக்கும் தர்மபுத்ரருக்கு தேவர்களாலும் விரும்பத்தக்க சுகங்கள் கிடைத்திருந்தும் அவைகளால் அவர் சந்தோஷமடையவில்லை.

7–14 1/2, ஓ சௌனகரே! உத்தராதேவியின் கர்ப்பத்திலிருந்த சிசுவானது அச்வஸ்த்தாமாவினுடைய ப்ரஹ்மாஸ்திரத்தின் தேஜஸ்ஸால் எரிக்கப்படும்பொழுது ஒரு புருஷன் அந்தச் சிசுவிற்கு நேரில் தோன்றினார். அவர் கட்டைவிரல் அளவுள்ளவர், சுத்தர், சுவர்ண கீரிடமுள்ளவர், மிக்க அழகான பார்வையுள்ளவர், பீதாம்பரம் தரித்தவர், ஜன்மம் முதலிய விகாரங்கள் அற்றவர், அழகு பொருந்தியவைகளும், நீண்டவை களுமான கைகளுள்ளவர், சுத்த ஸ்வர்ண குண்டலங் களுள்ளவர், 'என் பக்தனுக்கும் உபத்திரவம் நேரிடு கிறதா?' என்ற கோபத்தால் சிவந்த கண்கள் உள்ளவர், கதாயுதத்தைத் தரித்தவர். மேலும் அவர் குறைக்கொள்ளி போன்ற தம் கதையைச் சுழற்றிக் கொண்டு. அக்குழந்தைக்கு நான்கு புறத்திலும் சஞ்சரித்து, சூரியன் பனியைப் போக்குவதுபோல அஸ்திர தேஜஸ்ஸை அக்குழந்தையின் சமீபம் வர வொட்டாமல் தடுத்துக்கொண்டுமிருந்தார். அவரைப் பார்த்து அந்தக் குழந்தையானது இவர் யாரென்று ஆச்சரியத்துடன் ஆலோசித்துக் கொண்டிருந்தது. இப்படி ஒன்பது மாத காலஞ் சென்றது. பத்தாவது மாதத்தில் அளவிடக் கூடாத ரூபமுள்ளவரும், தர்மத்தைப் பரிபாலிப்பவரும், எங்கும் நிறைந்தவரு மான அந்தப் பிரபுவானவர் அக்குழந்தை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே அவ்விடத்தில் மறைந்தார்.

அதன் பிறகு வரும் மேலான சிரேயஸை காண்பிக்கத் தக்க சுப லக்னம் நேர்ந்தது. அதிலிருந்த சுபகிரகங்கள் ஒருவருக்கொருவர் மித்ரர்களாக இருந்தார்கள். அப் போர்ப்பட்ட சமயத்தில் பாண்டுவின் வம்சத்தை விருத்திசெய்யும் புத்திரனானவன் பாண்டுவே மறு படியும் பிறந்ததுபோல அவதரித்தான். அப்பொழுது தர்மபுத்ரர் மிகுந்த சந்தோஷத்துடன் தௌம்யர், கிருபர் முதலிய ப்ராஹ்மணர்களைக் கொண்டு ஜாதகர்மம் ஸ்வஸ்திவாசனம் ஆகிய இவைகளைச் செய்வித்தார். மேலும், அவர் தானத்திற்குரிய பாத்திரம் தேசம் காலம் என்னும் இவைகளை அறிந்தவரா கையால், உத்தமமாகிய அந்தப் புண்ணிய காலத்தில் ஸ்வர்ணம், பசு, பூமி, கிராமங்கள் சிறந்த குதிரைகள் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்தது மல்லாமல் போஜனமும் செய்வித்தார்.

15–17 1/2. அப்பொழுது ஜ்யோதிஷ சாஸ்திரத்தை நன்றாய்க் கற்றுணர்ந்த எல்லாப் ப்ராம்ஹ்மணர்களும் மிகுந்த சந்தோஷமுள்ளவர்களாய் வணக்கமுள்ள அவ் வரசனை நோக்கி, 'ஓ புருஷவம்சத்திய அரசர்களில் சிறந்தவரே தடுக்க முடியா தெய்வ வசத்தால் புரு வம்சத்தின் தொடர்ச்சியற்றுப் போகும் சமயத்தில் அந்த வம்சத்தில் பிறந்தவர்களான உங்களுடைய க்ஷேமத்திற்காக) ஸ்ரீ மகா விஷ்ணுவே இப்புத்ர ரத்னத்தை அனுக்ரகித்திருக்கிறார். விஷ்ணுவினால் கொடுக்கப்பட்டவனாகையால் இவன் விஷ்ணுராத னென்று பிரசத்தியடைவான். இவன் மிகுந்த கீர்த்தி யுள்ளவனும், பாகவதர்களுள் சிறந்தவனுமாவான். இவ் விஷயத்தில் ஸம்சயப்பட வேண்டாம் என்றார்கள்.

18–29 1/2, இதனைக் கேட்ட தர்மராஜன் ப்ராஹ்

Released by Maran's Dog, Toronto , Canada

மணர்களை நோக்கி, புண்ய ச்லோகர்களும் ராஜர்ஷி களுமான நம்முடைய முன்னோர்கள் போல இக் குழந்தையும் நல்ல கீர்த்தியுள்ளவனாய் இருப்பானா? என்று மிக்க ஆதரவுடன் கேட்டார். அப்பொழுது ப்ராஹ்மணர்கள் தர்ம புத்ரரை நோக்கி, 'ஓ குந்தியின் புத்ரரே! இவன் மனுவின் புத்ரராகிய இக்ஷ்வாகுபோல, பிரஜைகளைக் காப்பாற்றுவான், தசரத புத்ரராகிய ஸ்ரீ ராமன் போல ப்ராஹ்மணர்களிடம் பிரியமுள்ள வனாவான். வீணாகாத பிரதிக்ஞையுள்ளவனாயி ருப்பான். ஔசீனர தேசத்திற் கதிபதியான சிபிச் சக்ரவர்த்தி போலச் சரணமென்று வந்தவர்களைக் காப்பாற்றுவான், மிகுந்த தாதா, துஷ்யந்தருடைய புத்ரனான பரதன் போலத் தன் பந்துக்களுக்கும், யாகம் செய்பவர்களுக்கும் விசேஷ கீர்த்தியை உண்டு பண்ணுவான். மேலும் இவன் உம்முடைய தம்பியாகிய அர்ஜுனன், கார்த்தவீர்யன் ஆகிய இவர்கள் போல வில்லைப் பிடித்தவர்களுக்குள் சிறந்தவனாவான், அக்னி போல ஸமீபத்தில் நெருங்க முடியாதவனாவான், சிங்கம் போலப் பராக்கிரமமுள்ளவனாவான்' ஹிம்வத் பர்வதம்போல ஸாதுக்களால் ஸேவிக்கத்தக்கவனா வான், பூமிபோலப் பொறுமையுள்ளவனாவான், மாதா பிதிருக்கள், புத்ரர்களின் விஷயமாய் நேரும் சிரமங் களைச் சகிப்பதுபோல ப்ரஜைகள் விஷயமாக உண்டாகும் சிரமத்தைப் பொறுத்துக் கொள்ளும் ஸ்பாவமுள்ளவனாவான். எல்லோரையும் சமமாய்ப் பார்ப்பதில் ப்ரஹ்மதேவரையொத்தவனாவான், அண்டின வர்களிடத்தில் தயவு செய்யும் விஷயத்தில் பரமசிவன் போன்றவனாவான். லக்ஷ்மீபதியாகிய மஹாவிஷ்ணு போல ஸகல பிராணிகளுக்கும் இருப்பிடமாவான், ஸ்ரீ கிருஷ்ணன்போல ஸகல நற்குணங்களால் ஏற்படும்

மஹிமையுள்ளவனாவான், கொடுப்பதில் ரந்திதேவன் போன்றவனாவான். யயாதிபோலத் தர்மசிந்தையுள்ள வனாயிருப்பான், பலிசக்கரவர்த்தி போலத் தைரிய முள்ளவனாவான், பிரஹ்லாதர் போல ஸ்ரீ கிருஷ்ண னிடம் பக்தியுள்ளவனாவான். மேலும் இவன் அநேக அசுவமேத யாகங்களைச் செய்வான். பெரியோர் களை ஸேவிப்பான். இவனுடைய புத்ரர்கள் ராஜ ரிஷிகளாக விருப்பார்கள். கெட்ட மார்க்கத்தை அனுஷ்டிப்பவர்களைச் சிக்ஷிப்பான், தர்மத்தை ஸம்ர க்ஷிப்பதற்காகக் கலியை நிக்ரஹிப்பான். பின்னுமிவன் (சிருங்கி என்ற) ப்ராஹ்மண புத்திரனால் தூண்டப் பட்ட தக்ஷகனால் தனக்கு மரணம் நேரிடப் போவதாய்க் கேள்விப்பட்டு, ஸகல ஆசைகளையும் ஒழித்து வைராக்கியத்தை யடைவான். பிறகு வியாஸ புத்ரராகிய சுகரிடம் ஆத்ம தத்வத்தை உபதேசம் பெற்று, கங்கைக் கரையில் இந்தச் சரீரத்தை விட்டு நிர்ப்பயமான விஷ்ணுபதத்தை யடைவான் என்று வருங் காரியத்தைச் சொல்லி தர்ம புத்திரரால் ஸம்மானிக்கப்பட்டுத் தங்களிருப்பிடம் சென்றார்கள்.

30–31 1/2 பிறகு அந்தக் குழந்தை மாதாவின் கர்ப்பத்தில் தன்னால் பார்க்கப்பட்டவரை மனத்தில் தியானஞ் செய்து கொண்டே 'அந்தப் புருஷன் இவர் தானோ, இவர்தானோ என்று ஒவ்வொருவரிடமும் பரீக்ஷித்தான். ஆனதுபற்றி அவனுக்கு, 'பரீக்ஷித்' என்ற பெயருண்டாயிற்று. அந்த ராஜகுமாரன் சுக்ல பக்ஷத்தில் பதினைந்து கலைகளால் சந்திரன் நாளுக்கு நாள் விருத்தியடைவதுபோல, தர்மபுத்ரர் முதலிய வர்களால் போஷிக்கப்பட்டு வளர்ந்தான். ஸகலவித்தை களும் அவனையடைந்தன. அப்பொழுது தர்மராஜன்

பந்துக்களின் வதத்தால் நேர்ந்த பாவங்களை நிவர்த் தித்துக் கொள்வதற்காக அசுவமேதஞ் செய்யவேண்டு மென்று விரும்பினார். ஆனாலும் 'நியாயமான வரி வாங்குவதாலும், குற்றவாளிகளுக்கு அவர்களுடைய குற்றத்திற்குத் தக்கபடி அபராதம் விதிப்பதாலும் ஸம்பாதித்த பொருள் பிரஜைகளை ரக்ஷிப்பதற்கே போதுமானதாயிருந்ததாகையால் அந்தப் பொருளைக் கொண்டு யாகத்தை முடிக்க முடியாதே என்ன செய்கிறது என்று கவலைப்பட்டிருந்தார்.

33–361/2 அப்பொழுது அவருடைய அபிப்ராயத் தையறிந்து ஸ்ரீ கிருஷ்ணனால் தூண்டப்பட்ட பீமசேனன் முதலியவர்கள் வடக்குத் திக்கில் சென்று மருத்தருடைய யாகத்திற்கு உபயோகப்பட்டு மிகுந்து கிடக்கும் தனத்தைக் கொண்டு வந்தார்கள். அவை களைக் கொண்டு யாக சாமகிரிகளைச் சம்பாதித்துத் தர்மபுத்ரர் ஸ்ரீ கிருஷ்ணனை வைத்துக் கொண்டு குறைவில்லாமல் நிறைவேற்ற வேண்டும் என்ற பயம் உள்ளவராய், பாப நிவர்த்திக்காக மூன்று தரம் அசுவ மேதத்தை யனுஷ்டித்து, யக்ஞ புருஷராகிய பகவானை ஆராதித்தார். ஸ்ரீ கிருஷ்ணனும் ப்ராஹ்மணர்களைக் கொண்டு தர்மராஜனுக்கு யாகஞ் செய்வித்து மித்ரர்களான பாண்டவர்களுடைய இஷ்டப்படி சில காலம் அவ்விடத்தில் வசித்தார். பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் அரசனிடத்திலும் திரௌபதியினிடத்திலும் விடை பெற்றுத் தம்முடைய பந்துக்களுடனும், அர்ஜுனன் உடனும் துவாரகா நகரஞ் சென்றார்.

நோட்டு

இந்த அத்தியாயத்தில் வைராக்கியத்தின் பிரகாரமும், பகவான் பக்தர்களிடத்தில் தயையுள்ளவரென்பதும், காட்டப்பட்டிருக்கிறது விஜ. சகல ஸம்பத்துக்களும் –காமாதுரனுக்கு ஐசுவரியத்தில் பிரியமிருக்குமே யல்லாமல் வைராக்கிய முள்ளவனுக்கு அவைகளில் பிரீதி உண்டாகிறதில்லை என்று காட்டப்பட்டது விஜ, புண்ணிய காலத்தில்-"கொப்பூழ்க் கொடி அறுப்பதற்கு முன் சூதகமில்லை" "புத்திரன் பிறந்த காலத்திலும் வியதபாத புண்ணிய காலத்திலும் செய்யப்பட்ட தானங்கள் குறையாத பலனைக் கொடுக்கின்றன," – ஸ்மிருதி "ப்ராஹ்மணர்களுடைய வீட்டில் புத்திரன் பிறந்த காலத்தில் ஸகல தேவர்களும் பிதிரு தேவர்களும் அந்த வீட்டிற்கு வருகிறார்கள். ஆதலால் அந்தக் காலம் 'நூறு சூர்ய கிரகணங்களைக் காட்டிலும் மேலான புண்ணிய காலம்" -ஸ்மிருதி. சிபி- இவர் தம்மைச் சரணமடைந்த புறாவைக் காப்பாற்றவேண்டிப் பருந்துக்கு தம்முடைய மாமிசத்தைக் கொடுத்தார் ஸ்ரீத. இவர் உசினருடைய புத்ரர் - வீர. விஜ.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–13

திருதராஷ்டிரர் வெளியில் சென்றது

விதுரர் தீர்த்த யாத்திரை செய்வதற்காக ஹஸ்தினா புரத்திலிருந்து புறப்பட்டுச் ஸகல தீர்த்தங்களுக்கும் சென்று, அவைகளில் ஸ்நானம் முதலியவைகளைச் செய்து, வழியில் மைத்ரேயரைக் கண்டு, அவரிடமாக ஸ்ரீமத் நாராயணனே தமக்குக் கதியென்று தெரிந்துக் கொண்டு, அதனால் அறிய விரும்பியதை அறிந்தும் ஹஸ்தினாபுரஞ் சென்றார். மேலும், கர்மயோகம், ஞானயோகம் ஆகிய இவைகளைப்பற்றி விதுரர் கேட்ட கேள்விகளுக்கு மைத்திரேயர் சிலவற்றிற்குப் பதில் சொல்லி வரும்பொழுதே விதுரருக்கு ஸம்சயங்கள் யாவும் நீங்கின. ஸ்ரீ கோவிந்தரிடத்தில் ஸ்திரமான பக்தி உண்டாயிற்று. அதனால் அதற்குமேல் அவர் கேட்கவில்லை.

3–6 தர்மபுத்திரர், அவருடைய தம்பிகள், திருதராஷ்டிரர் யுயுத்ஸு, ஸஞ்சயர், கிருபர், குந்தீதேவி, காந்தாரி, திரௌபதி, ஸுபத்ரை உத்தரை, த்ரோணருடைய பத்தினியாகிய க்ருபி, இன்னும் மற்ற பந்துக்களின் ஸ்திரீகள், பாண்டுவின் பந்துக்கள் ஆகிய எல்லோரும் தங்களுடைய பிள்ளைகளுடனும், ஸ்திரீகளுடனும் எதிர்சென்று வெகுநாள் தீர்த்தயாத்திரை செய்து திரும்பிவந்த பந்துவாகிய விதுரரைக் கண்டு மிகுந்த சந்தோஷத்துடன் அழைத்தார்கள். அப்படி அழைத்ததானது கை, கால் முதலிய அவயவங்கள் ப்ராணனைக் கண்டு சந்தோஷமடைந்தது போலிருந்தது. மேலும் அவர்கள் விதுரரிடம் வந்து முறைப்படி ஆலிங்கனம்

நமஸ்காரம் முதலியவைகளைச் செய்து வெகுநாள் பிரிந்திருந்ததனால் மிகுந்த ஆசையுள்ளவர்களாய் ஆனந்தக்கண்ணீரைப் பெருக்கினார்கள். அரசனாகிய தர்மராஜனும் ஆசனத்தில் உட்கார்ந்திருக்கும் அந்த விதுரரைப் பூஜித்தார்.

7–11, பிறகு ஆகாரத்தை யுண்டு களைதீர்ந்து ஸுகமாய் உட்கார்ந்திருக்கும் அவரை நோக்கி, தர்ம புத்திரர் பின்வருமாறு கேட்கலானார். பறவைகளால் தங்கள் தங்கள் குஞ்சுகள் சிறகுகளால் மறைத்துக் காப்பாற்றப்படுவது போல நாங்களனைவரும், எங்களுடைய மாதாவுடன் விஷம், அக்னி முதலிய ஆபத்துக்களிலிருந்து உம்மால் காப்பாற்றப்பட்டோம். ஆதலால் எங்களுடைய ஞாபகம் உமக்கிருக்கிறதா? பூமி முழுவதும் சுற்றிய தங்களுக்குத் தேச யாத்ரை எப்படி நடந்தது? எந்தெந்த தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தீர்கள்? எந்தெந்த க்ஷேத்திரம் சென்றீர்கள்? உங்களைப் போன்ற பகவத் பக்தர்களே மிக்க பரிசுத்தமானவர்கள். ஆதலால் அவர்கள் தங்களுடைய மனதில் எப்பொழுதும் பகவான் வஸிப்பதால் தீர்த்தங்களைப் பரிசுத்தப்படுகிறார்கள். மேலும் ஸ்ரீ பகவானையே தெய்வமாகக் கொண்ட நமது சிநேகிதர்களும் பந்துக்களும் யாதவர்களும் உம்மால் பார்க்கப் பட்டார்களா? அவர்களைப் பற்றிக் கேள்விபட்டதுண்டா? அவர்களுடைய பட்டணங்களில் சுகமாக இருக்கிறார்களா?! என்றார்.

12–15 அதனைக் கேட்டு விதுரர் தீர்த்தயாத்திரையின் நிமித்தமாகச் சென்ற விடங்களில் நடந்த சமாசாரங்களைப் பூர்ணமாகத் தர்மராஜனுக்கு சொன்னார்.

ஆனால் யதுகுலத்திற்கு நேர்ந்த கெடுதியை மாத்திரம் சொல்லவில்லை. மனிதர்களால் துக்கம் சகிக்க முடியாதது. ஆகையால் அதை அவர்கள் விரும்புகிற தில்லை யல்லவா ? தவிரவும் விதுரர் மிகுந்த கருணை யுள்ளவர். துக்கமுள்ளவர்களைப் பார்த்துச் சகிக்க மாட்டார். 'ஆனதால் யதுக்களுக்குக் கெடுதி யுண்டாயிற்று என்று சொன்னவுடன் பாண்டவர்கள் வருத்தப்படுவார்கள். அவர்களைப் பார்ப்பது மிகவும் கஷ்டமான கார்யம்' என்று நினைத்தே அதைச் சொல்லவில்லை. பின்பு அந்த விதுரர் பெரிய தமையனராகிய திருதராஷ்டிரருக்கு ஆத்ம தத்துவத்தை உபதேசித்தும், மற்றுமுள்ளவர்களுக்குப் பிரியத்தை விருத்திசெய்து கொண்டும் சில காலம் அவ்விடத்தில் வசித்தார். அவர்கள் விதுரரைத் தெய்வமாக நினைத்துப் பூஜித்தார்கள். மாண்டவ்ய மஹர்ஷியின் சாபத்தால் யமனே இப்படி ஜன்மத்தை அடைந்து விதுரராக பிறந்தவர்; யமன் இப்படி அநேக வர்ஷங்கள் பூலோகத்திலிருக்கும் காலத்தில் அவருடைய உலகத்தில் அர்யமா வென்பவர் பாபிகளுக்கு தக்க சிக்ஷை விதித்துக்கொண்டு அந்த வேலையை நடத்தி வந்தார்.

16. பகவானுடைய சகாயத்தால் தர்மபுத்திரர் ராஜ்யத்தை அடைந்து, தம்முடைய குலவிருத்திக்குக் காரணரும், பௌத்ரருமாகிய பரீக்ஷித், லோகபாலர்கள் போன்ற தம்பிகள் ஆகிய இவர்களுடன் விசேஷ ஐசுவர்யங்களைப் பெற்று ஆனந்தமடைந்தார்.

17–18. பிறகு கிருஷ்ண பகவான் தர்மபுத்திரர் முதலியவர்களிடம் விடைபெற்று, பின் தொடர்ந்துவரும்

பந்துக்களைத் தடுத்துத் திருப்பிவிட்டு அர்ஜுனன், உத்தவர், ஸாத்யகி என்பவர்களுடன் துவாரகா நகரம் சென்றார். இப்படி கிருஹ கிருத்யங்களிலேயே ஆசை யுள்ளவர்களாகவும், அவற்றால் மதித்தவர் களாகவும் அவர்கள் வெகு காலம் கழித்தார்கள். காலத்தை மீறுவதற்குப் ப்ரஹ்மதேவராலும் முடியாதன்றோ ?

19–29. அப்பொழுது விதுரர் அஜ்ஞர்களாகவே இவர்கள் வெகுகாலத்தைப் போக்கிவிட்டார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு திருதராஷ்டிரரை நோக்கி, 'ஓ அரசனே! சமீபத்தில் பயம் நேரிடுகிறதைப் பாரும். சீக்கிரம் பட்டணத்தை விட்டு வெளியில் போகவேண்டும். கால மஹிமையால் நேரும் பயம் ஓரிடத்திலும் ஒரு வகையாலும் தடுக்கமுடியாத தாகையால் அது நம்மெல்லோருக்கும் சமீபித்துவிட்டது. அந்தக் காலம் நேரிடு மானால் ப்ராணனுக்கே அபாயம் உண்டா கிறது. அப்படி யிருக்கையில் பணம் முதலியவைகள் போய் விடுகிறதே என்பதில் என்ன ஆச்சர்யம் ? பிதா, சகோதரர்கள், சிநேகிதர்கள், புத்திரர்கள் ஆகிய இவர்கள் எல்லோரும் சண்டையில் கொல்லப் பட்டார்கள். வயது சென்று விட்டது. சரீரத்தில் ஜரை வந்துவிட்டது; இயற்கையிலேயே நீர் கண் இல்லாதவர். இப்போது கிழத்தனத்தால் உமக்குக் காதுகளும் கேட்கும் சக்தியுள்ளவைகளாயிருக்கவில்லை. புத்தியும் குறைந்திருக்கிறது. பற்கள் உதிர்ந்துபோயின. வயிற்றில் அக்கினி குறைந்து போயிற்று. வியாதி அதிகரித்திருக்கிறது. கபத்தின் வேகம் அதிகமா யிருக்கிறது. இவ்வளவு கஷ்டமான நிலைமையிலும் இன்னும் பிழைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் உமக்கிருப்பது ஆச்சரியப்படத்தக்கதே. மேலும் நீர்

வீட்டில் நெருப்பு வைத்தும், விஷம் கலந்த அன்னத்தைக் கொடுத்தும், இராஜ்யம் முதலிய ஐசுவர்யங்களை அபகரித்தும், இன்னும் பலவகையான கெடுதிகளைப் பாண்டவர்களுக்குச் செய்ததுமல்லாமல் அவர்களுடைய பத்னியை ஸபையில் அவமானப் படுத்தியும் இருக்கிறீர். அவைகளை நினைத்து நினைத்து மிகுந்த கோபத்துடன் பீமஸேனன் வீட்டைக் காத்திருக்கும் நாய்க்குச் சோறு போடுவது போல உமக்கு அன்னம் போடுகிறான். அதனைப் புஜிக்கிறீர், இது மேலான ஜீவனமா? இவ்வளவு தைன்ய மடைந்தும் இனியும் வெகுகாலம் ஜீவிக்க வேண்டு மென்று விரும்புகிறீர். ஆனாலும் கால மகிமையால் வஸ்திரங்கள் கிழிந்துபோவதுபோல உம்முடைய சரீரம் கிழத்தனத்தால் குறைகிறது. கீர்த்தி முதலிய வையிலும், பிரயோஜனமற்ற சரீரத்திலும் அபிமானம் முதலியவைகளை விட்டு எவன் சரீரத்தை விடு கிறானோ அவனே தீரனென்று சொல்லப்படுகிறான். அவன் இன்ன கதியை அடைந்தான் என்று பிறரால் அறிய முடியவில்லை. தவிரவும் குருவின் உபதேசத் தாலாவது, தானாகவாவது, ஸம்ஸாரத்தில் வைராக்யத் தையடைந்து ஸ்திர சித்தமுள்ளவனாகி, ஸ்ரீ மஹா விஷ்ணுவை மனதில் தியானஞ் செய்துகொண்டு வீட்டை விட்டுப் போகிறவனே உத்தமன். இனி வருங்காலம் பெரும்பாலும் நற்குணங்களைக் குறைக்கக் கூடியதாகையால் நீர் பந்துக்களுக்குத் தெரியாமல் வடக்குத் திக்கை நோக்கிச் செல்லும் என்றார்.

30–31. அஜமீட வம்சத்தில் பிறந்த கண்களில்லாதவ (குருட)ரான திருதராஷ்டிரர் தம்பியான விதுரருடைய வார்த்தைக் கேட்டு, பந்துக்களிடம் தமக்கிருக்கும்

ஸ்திரமான அபிமானத்தை விட்டு, தம்பியால் உப தேசிக்கப்பட்ட வழியே வடக்கு திக்கை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது அவருடைய பத்னியும் நல்ல நடத்தையுள்ளவளும், மிக்க பதிவிரதையுமான காந்தாரி என்பவள் தன் புருஷன் பின் சென்றாள். அவ்விருவர்களும் ஹிமய மலைக்குப் போனார்கள். சூரர்களுக்குச் சண்டையில் ஸந்தோஷ முண்டாவது போல் இராஜ்யத்திலிருந்து ஒழிவடைந்தவர்களுக்கு அந்தப் பர்வதமானது மிகுந்த ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியது.

32–35. அன்றைய தினம் காலையில் தர்மபுத்ரர் ஸந்தியோபாஸ்தி செய்து, அக்னி கார்யத்தை முடித்து, எள், பசு, ஸுவர்ணம் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குத் தானஞ்செய்து குருக்களை நமஸ்கரிப் பதற்காக வழக்கப்படி அவர்களுடைய அரண்மனை சேர்ந்தார். அவ்விடத்தில் விதுரர், திருதராஷ்டிரர், காந்தாரி ஆகிய அவர்களையுங் காணாமல் மிகவும் நடுக்கமுள்ளவராய் அங்கிருக்கும் ஸஞ்சயரை நோக்கி, ஓ காவல்கணருடைய புத்ரரே; நம்முடைய பிதிரு வ்யரைக் காணோமே, அவர் எங்கே போனார்? வயது சென்றவரே, தவிரவும் கண்களில்லாதவ வராயிற்றே, தாயாரான காந்தாரியும் எவ்விடம் சென்றாள்? அவள் புத்ர சோகமுள்ளவளே; இவர் களுக்குச் சிநேகிதராகிய விதுரர் போனவிடம் தெரியவில்லையே? நாம் அறியாமையால் ஏதாவது குற்றஞ் செய்தேனோ? அதனால் திருதராஷ்டிரர் என்னிடத்தில் கோபங்கொண்டு மற்ற பந்துக்கள் இறந்து போன துக்கத்தால் தமது பார்யையுடன் கங்கையின் ஜலத்தில் விழுந்து மரணமடைந்தாரா?

எங்களுடைய பிதாவாகிய பாண்டு மஹாராஜன் காலஞ் சென்றபோது சிசுக்களாகிய எங்களை விதுரரும் திருதராஷ்டிரருமே காப்பாற்றினார்கள், அப்படிப்பட்டவர்கள் எவ்விடஞ் சென்றார்கள்? சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

36–38 1/2. இதனைக் கேட்டு ஸஞ்சயர் தம் யஜமானனைக் காணாமல் கவலையுள்ளவராக மிகுந்த தைன்யத்துடன் சிநேகத்தாலுண்டான அதைரியத்தால் வருத்தப்பட்டு உடனே மறுமொழி உரைக்கவில்லை. பின்பு அவர் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே தைரியத்துடன் திருதராஷ்டிரருடைய பாதங்களை நினைத்துக்கொண்டே தர்மபுத்திரரை நோக்கி அவர்கள் போனவிடம் எனக்கும் தெரியாது: மஹாத்மாக்களான அவர்கள் என்னையும் ஏமாற்றிவிட்டார்கள்; நானும் அவர்களைக் காணாமல் கவலையுள்ளவனாயிருக்கிறேன்' என்றார்.

39–41 1/2. இப்படி அவ்விருவர்களும் பேசிக்கொண்டு இருக்கும் பொழுது நாரதர் தும்புருவுடன் அவ்விடத்திற்கு வந்தார். அவரைக் கண்டு தர்ம புத்திரர் தம்பிகளுடன் எழுந்திருந்து நமஸ்காரஞ் செய்து விதிப்படி பூஜித்து, ஓ நாரதரே! மிகுந்த மஹிமை பொருந்திய உம்முடைய தரிசனம் தெய்வச் செயலால் கிடைத்தது. எங்களுடைய பிதாவின் ஸஹோதரர்களான விதுரரும், திருதராஷ்டிரரும், புத்ர சோகமடைந்த காந்தாரியும் இன்னவிடம் போனார்களென்று தெரியவில்லை. அவர்களைக் காணாமல் துக்கமாகிய சமுத்திரத்தில் சழ்கியிருக்கிறோம். அது கரையற்றது, இந்த சமயத்தில்

கப்பல்காரர்போல நீங்கள் வந்திருக்கிறீர்கள், எங்களைக் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

42–63. இதைக் கேட்டு நாரதர் தர்மபுத்திரரை நோக்கி, 'ஓ தர்மபுத்திரரே! ஜகத் யாவும் ஈசுவரனுக்கு வசப்பட்டவை. (பிராணிகளைச் சேர்த்துவைப்பவர் அவரே. அவைகளைப் பிரிப்பவரும் அவரே) ஆகையால் ஒருவரைப் பற்றியும் துக்கிக்காதீர். மூக்குக் கயிறுள்ள எருதுகள் போலும் தந்திரியில் (பிணையல்) சிறு கயிறுகளால் கட்டப்பட்ட பசுக்கள் போலவும் எல்லா லோகங்களும், லோக பாலர்களும் வேதங்களாகிய நீண்ட கயிற்றில் வர்ணாசிரமம் முதலிய சிறுகயிறுகளால் கட்டப்பட்டு, பரமேசுவரனுடைய கட்டளையை நிறைவேற்றுகிறார்கள். உலகத்தில் விளையாட்டுக் கருவிகளை விளையாடுகிறவன் தனதிஷ்டப்படி சிலவேளை சேர்த்தும், பிரித்தும் வைப்பதுபோல மனிதர்கள் சேர்ந்திருப்பதற்கும் பிரிந்து போவதற்கும் பகவான் உடைய விருப்பமே காரணம். இவ்வுலகத்தை ஜீவரூபமாக நித்யமென்று நினைத்தாலும் எவ்விதத்திலும் பந்துக்களைப் பற்றித் துக்கிக்க நியாயமில்லை. மோகத்தால் அபிமானம் வைத்ததாலேயே துக்கம் நேரிடுகிறது. மேலும் ஜகத்தை நித்யா நித்யமென்று சொல்வது பொருந்தாது. ஆகையால் அஞ்ஞானத்தால் ஏற்பட்ட அதைரியத்தை விட்டு விடும். ஆனால் என்னை விட வேறு கதியில்லாத திருதராஷ்டிரர் முதலியவர்கள் நானில்லாமல் எப்படி ஜீவிப்பார்கள், என்று கேட்கலாம், அப்படி நினைப்பது சரியன்று. பத்துப் பூதங்களாலுண்டான இந்தச்சரீரம் காலத்திற்கும், கர்மத்திற்கும் வசப்பட்டது. ஆகையால் நம்முடைய சரீரமே அழியும் சுபாவமுள்ளது. மலைப்

பாம்பின் வாயில் அகப்பட்டவனால் எப்படி மற்றவனை இரட்சிக்க முடியாதோ அதுபோல், நாம் பிறரைக் காப்பாற்றுவது சாத்தியமன்று. கைகளுள்ள ஜந்துக்களான மனிதர்கள் முதலியவர்களுக்குக் கைகளில்லாத பசு முதலியவைகளும், நாற்கால் பிராணிகளுக்குப் புல் முதலியவைகளும், புலி முதலிய பெரிய ஜந்துக்களுக்கு அல்படலமுள்ளவைகளும் எப்படி ஆகாரமாகின்றனவோ அப்படி எல்லா ஜீவனும் வேறு ஜீவனுக்கு ஆகாரமா யிருக்கிறது. ஆதலால் எல்லாம் மரணடயமுள்ளதாகவே காணப்படுகின்றன. ஏ தர்மபுத்திரரே! இந்த ஜகத் யாவும் பகவானுடைய ஸ்வரூபமேயொழிய வேறில்லை. அவர் ஒருவரே, போக்தர் (அனுபவிப்பவர்) போக்தா வின். ஸ்வரூபமாய் இருப்பவர் அவரே. போக்கிய ருபமாயுமிருப்பவர் அவரே. ஆனாலும், மாயையால் பலவகையாகத் தோன்றுகிறார். ஏ மகராஜ! ஸகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாக வசிக்கும் பகவான் தேவவிரோதிகளான அசுரர்களைக் (அசுரர் களுடைய அம்சமுள்ள இராஜாக்களைக்) கொல் வதற்காகக் காலங்காலமாய் துவாரகையில் வசிக்கிறார். தேவகாரியம் அநேகமாக முடிந்துவிட்டது. மிச்சமான பாகத்தை முடிக்கக் காலத்தை எதிர்ப் பார்த்திருக்கிறார். பகவான் இவ்வுலகத்திலிருக்கும் வரையில் நீங்களும் இவ்வுலகத்தில் வசிக்கலாம். திருதராஷ்டிரர் தம்பியாகிய விதுரருடனும், காந்தாரி யுடனும் இமயமலையின் தென்பாகத்தில் மகர்ஷி களுடைய ஆசிரமம் போயிருக்கிறார், அவ்விடத்தில் கங்கா நதியானது ஸப்தரிக்ஷிகளுடைய பிரீதியின் நிமித்தம் ஏழு வகையாக ஓடிற்று. அதனால் ஸப்த ஸ்ரோதஸ் என்று பெயருண்டாயிற்று. அந்தத் தீர்த்தத்தில் ஒவ்வொரு காலத்திலும் திருதராஷ்டிரர் ஸ்நானஞ்

செய்து அக்னிகாரியஞ்செய்து ஜலத்தைப் புசித்து, சாந்தமனமுள்ளவராய் ஆசைகளையும் ஒழித்து, சாஸ் திரத்தில் சொல்லியபடியுள்ள ஆசனத்தையடைந்து சுவாசத்தை யடக்கி, இந்திரியங்களை விஷயங்களில் செல்ல வொட்டாமல் அடக்கிப் பகவானையே மனத்தில் தியானஞ் செய்து அதனால் ராஜஸ, தாமஸ தோஷங்களை நிவர்த்தித்துக்கொண்டு, மனத்தை ஸ்தூல தேஹத்திலிருந்து புத்தியுடன் ஒன்றாகச் சேர்த்து, அந்தப் புத்தியைப் பார்க்கப்படும் விஷயங்களிலிருந்து க்ஷேத்ரக்ஞனுடன் சேர்த்து, அந்த க்ஷேத்ரக்ஞனைப் பார்க்கிறவரிடமிருந்து பிரித்து, கடாகாசத்தைக் கடத்திலிருந்து பிரித்து மகாகாசத்தில் சேர்ப்பது போல ஸகலத்திற்கும் ஆதாரமாகிய ப்ரஹ்மத் தினிடம் சேர்த்து, மாயையின் வாஸனையை யழித்து, இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கி, ஆகாரங் களை நிவர்த்தித்துக் கட்டைபோல அசையாமல் இருக்கிறார். ஸகல கர்மங்களையும் விட்டவரான அவருக்கு நீர் இடையூறாக வேண்டாம். மேலும் இன்று முதல் ஐந்தாவது நாளில் அவர் சரீரத்தை விடப் போகிறார். அந்தச் சரீரம் உடனே எரிந்து போகும் திருதராஷ்டிரருடைய சரீரம் பர்ணசாலை யுடன் கார்ஹபத்யம் முதலிய அக்னிகளால் எரிக்கப் படும்போது ஆசிரமத்திற்கு வெளியிலிருக்கும் அவருடைய பத்னியும் பதிவ்ரதை யுமான காந்தாரி யானவள் உடன் கட்டையேறிச் சரீரத்தை விட்டு விடுவாள், விதுரர் இந்த ஆச்சரியத்தைக் கண்டு திருதராஷ் டிரருக்கு நல்ல கதி கிடைத்ததால் சந்தோஷித்து அவரை விட்டுப் பிரிந்ததால் கொஞ்சம் துக்கத்தை அடைந்தும் தீர்த்த யாத்திரைக்குப் போவார். ஆகையால் அவர்களை அழைத்து

வருவதற்காகவது, அவருடைய சரீரத்தைத் தகிப்பதற்காகவது நீர் போக வேண்டியதில்லை என்று சொல்லி, நாரதர் தும்புருவுடன் ஸ்வர்க்கம் சென்றார். தர்மபுத்திரரும் நாரதருடைய வார்த்தையைக் கேட்டு அதை மனத்தில் வைத்துச் ஸகல துக்கங்களையும் நிவர்த்தித்துக் கொண்டார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம் 14

தர்மபுத்திரருக்கு நேர்ந்த அபசகுனங்கள்

பந்துக்களைப் பார்ப்பதற்கும், புண்ணிய ச்லோக ராகிய கிருஷ்ணனுடைய அபிப்ராயத்தைத் தெரிந்து கொள்ளுவதற்கும் துவாரகா நகரஞ் சென்றிருந்த அர்ஜுனன், சென்று சில மாஸங்களாகியும் திரும்பி வரவில்லை, அப்பொழுது அஸ்தினாபுரத்தில் மிக்க கோரங்களான அபசகுனங்கள் ஏற்பட்டன. மனிதர்கள் உடைய மனதில் கோபம், ஆசை, பொய், ஆகிய இவைகளுண்டாயின. மனிதர்கள் பாபமான காரியத்தைச் செய்து ஜீவித்தார்கள். பெரும்பாலும் ஜனங்கள் கபடமாகப் பேசினார்கள். தோழர்களும் வஞ்சனையாக பேசிக் கொண்டார்கள். பிதா, மாதா, மித்ரன், சகோதரர்கள், தம்பதிகள் ஆகிய இவர்கள் யாவரும் ஒருவருக்கொருவர் கலகம் செய்து கொண் டார்கள். தகப்பன்மார்கள் பணம் வாங்கிக் கொண்டு பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொடுத்தார்கள். புத்திரர்கள் பிதாவைக் காப்பாற்றுவதில்லை. ப்ராஹ்மணர்கள் வேதத்தில் சிரத்தை இல்லாதவர்கள் ஆனார்கள். மேலும் சூத்திரர்கள் வேதத்தைப் படிக்க ஆரம்பித்தார்கள். இப்படிக் காலகதி கோரமா யிருந்தது. இப்படி காலமானது மாறிப் போனதால், மனிதர்களுக்கு ஏற்பட்டிருக்கும் லோபம் முதலிய மனத்தின் துர்க்குணங்களையும், அதர்மத்தை அனுஷ் டிப்பதாகிய சரீர துர்க்குணத்தையும், மிகுந்த அபச குனங்கள் நேரிடுவதையும் கண்டு தர்மபுத்திரர் பீமசேனனை நோக்கி, 'ஓ பீம! பந்துக்களைப் பார்ப் பதற்காகவும், புண்ணிய ச்லோகராசிய கிருஷ்ணன்

னுடைய எண்ணத்தைத் தெரிந்து கொள்ளு வதற்காகவும் துவாரகா நகரம் சென்ற அர்ஜுனன், ஏழு மாதங்களாகியும் இன்னும் வரவில்லை, அதன் காரணமும் இன்னதென்று தெரியவில்லை, எவருடைய அனுக்கிரகத்தால் இராஜ்யம், ஸ்திரீ, ப்ராஹ்மணன், குலவிருத்தி, சத்ருக்களை ஜயிப்பது, ஐசுவரியம், உத்தம லோகங்கள் ஆகிய இவைகள் நமக்குக் கிடைத்தனவோ, அந்தப் பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய சரீரத்தை விடப் போகிறாரென்று தேவர்ஷியாகிய நாரதர் சொன்ன காலம் வந்து விட்டது போலிருக்கிறது. அந்தப் பகவானை விட்டுப் பிரிவதைக் காட்டிலும் வேறு நமக்கு கெடுதி நேரிட நியாயமில்லை. ஓ புருஷசிரேஷ்டா! ஆகாயத்தில் உண்டானவைகளும், பூமியில் உண்டாகின்றவைகளும், சரீரத்தில் காணப்படுகின்றவைகளுமான அபசகுனங் களைப்பார். புத்திக்கு மோகமும் மிக்க கடுமையுமான பயம் வரப்போகிறதென்பதை இவைகள் காட்டு கின்றன. இடக்கண்ணும், இடத்தொடையும் அடிக்கடி துடிக்கின்றன. இருதயத்தில் நடுக்க முண்டாகிறது. அந்த தைஹிகமான அபசகுனத்தால் வெகு சீக்கிரத்தில் கெடுதி நேரிடுமென்று காட்டப்படுகிறது.

13-23. இந்தப்பெட்டை நரியானது குறைக் கொள்ளியை வாயில் கௌவிக்கொண்டு உதயமாகும் சூரிய மண்டலத்தைப் பார்த்து ஊளையிடுகிறது. நாயானது என்னைப் பார்த்துப் பயமில்லாமல் அழுகிறது. என்னைப் பசு முதலிய மேலானவைகள் இடமாகவும், கழுதை முதலியவைகள் வலமாகவும் சுற்றுகின்றன, குதிரைகள் அழுகின்றன. வரும் மரணத்தைக் குறிக்கும் மாடப்புறாவும், கோட்டானும்

அதற்கு விரோதியான காக்கையும் விகாரமாகக் கத்துகின்றன. இவைகளைக் கேட்க மனம்நடுங்கு கிறது; ஜகத்தானது சூனியமாய் விடுமென்று நினைக் கிறேன். திக்குகள் அழுக்கடைந்து நன்றாய் விளங்க வில்லை, பரிவேஷம் (சூரியன், சந்திரன் இவர்களைச் சுற்றிக் கோட்டைக் கட்டுவது) உண்டாயிருக்கிறது; பூமியானது மலைகளுடன் அசைகிறது. மேகங்களின் மறைவில்லாமல் ஆகாயம் சுத்தமாயிருக்கும்போதும் இடியுண்டாகிறது; அகாலத்தில் மேக கர்ஜிதம் கேட்கிறது. மண்காற்று கடுமையாக வீசுகிறது. இருட்டுப் பரவுகிறது. மேகங்கள் வெறுக்கக் கூடிய வையாக எல்லா விடங்களிலும் இரத்த மழையைப் பொழிகின்றன; சூரியனுடைய தேஜஸ் மங்கிவிட்டது ஆகாயத்தில் கிரகங்கள் யுத்தஞ் செய்கின்றன, ருத்ரருடைய பரிவாரங்களாகிய பூதகணங்கள் மற்ற ப்ராணிகளுடன் சேர்ந்து எங்கும் பரவியிருப்பதால் ஆகாயம், பூமி இவைகள் தீப்பட்டவைபோலிருக் கின்றன. ஆறுகளும், நதிகளும் (மேற்கு முகமாய்ச் செல்லுகிறவைகள்), குளங்களும் ஏரிகளும், பிரஜை களுடைய மனமும் கலங்கிவிட்டன. ஆஜ்யம் (நெய்) முதலியவைகளை ஹோமஞ் செய்வதால் அக்னி ஜ்வலிக்கிறதில்லை, இந்தக் காலம் எதனைச் செய்யப் போகிறதோ தெரியவில்லை. மேலும் குழந்தைகள் ஸ்தன்ய பானஞ் செய்யவில்லை. தாயார்களுடைய ஸ்தனங்களில் பாலும் பெருகவில்லை. பூக்கள் கண்ணீரைப் பெருக்கி அழுகின்றன. கொட்டிலி லிருக்கும் ஹ்ருஷபங்கள் சந்தோஷமாக இருக்கவில்லை. தேவதாப் பிரதிமைகள் அழுகின்றவை போலிருக் கின்றன, அவை அசைகின்றன. இந்தச் தேசமும், கிராமங்களும், பட்டணங்களும், உத்தியானங்களும்,

இரத்தினம் விளையும் பூமிகளும், ஆசிரமங்களும் பிரகாசியாமல் இருப்பதுடன் அவைகளில் வசிப்பவர்களும் சந்தோஷமற்றவர்களாய் இருக்கிறார்கள், இவைகள் நமக்கு எவ்விதமான துக்கத்தைக் காண்பிக்கப் போகின்றனவோ, இப்படிப்பட்ட பெரிய உற்பாதங்களைப் பார்க்கும் போது மற்ற புருஷர்களுடைய பாதங்களில்லாத வஜ்ரரேகை முதலியவைகளால் அலங்கிருதமான ஸ்ரீ பகவானுடைய பாதங்களின் ஸ்பரிசம் பூமிக்கு இல்லாமல் பூமிதேவி பாக்கியக்குறை உள்ளவளாய் ஆகிவிடுவாள்போலத் தோன்றுகிறது என்றார்.

24–45. இப்படி தர்மராஜரும் பீமஸேனரும் பேசிக் கொண்டிருக்கும்போது அர்ஜுனன் துவாரகா நகரத்திலிருந்து திரும்பிவந்து தர்மபுத்திரரை நமஸ்கரித்தான். அப்பொழுது அர்ஜுனன் முன்போலிராமல் மிக்க மனவருத்தமுள்ளவனாகவும், தலையைக் குனிந்து இரு கண்களிலும், நீரைப் பெருக்கித் துக்கித்தவனாயுமிருந்தான்; இப்படிச் சோபையில்லாமலிருக்கும் அர்ஜுனனைப் பார்த்து தர்மபுத்திரர் பயந்து, பந்துக்களின் நடுவில் தம்பியை நோக்கி, ஓ அர்ஜுன துவாரகா நகரத்தில் நம்முடைய பந்துக்களாகிய யாதவர்கள், போஜர்கள், தாசார்ஹர்கள், ஸாத்வதர்கள், வ்ருஷ்ணிகள், தூயரும் பூஜ்யருமாகிய, மாதாமகர், அம்மானாகிய வசுதேவர், அவருடைய தம்பிகள் உக்ரசேனருடைய சகோதரிகளும், வசுதேவருடைய பத்தினிகளுமான தேவகி முதலிய ஏழு ஸ்திரீகள், அவர்களுடைய புத்திரர்கள், மருமகள் ஆகிய இவர்கள் க்ஷேமமாயிருக்கிறார்களா? கெட்ட பிள்ளையுள்ள அரசனாகிய உக்ரசேனர், அவருடைய

தம்பியாகிய தேவகர் ஆகிய இவர்கள் பிழைத்திருக்கிறார்களா? மேலும் ஹிருதிக (ச்வல்பர்)ருடைய பிள்ளையான அக்ரூரர், ஜயந்தன், கதன், சாரணன், ஸத்யஜித் அல்லது சத்ருஜித் முதலியவர்கள் க்ஷேமமாய் இருக்கிறார்களா? மேலும் சாத்வதர்களுக்கு அதிபதியான பலராமன் ஸகல விருஷ்ணிகளுக்குள் மகாரதரும் யுத்தத்தில் கம்பீர வேகமுள்ளவருமான பிரத்யும்னர், ஸுஷேணர், சாருதேஷ்ணர் ஜாம்பவதியின் புத்திரராகிய சாம்பர், மற்ற ரிஷப குமாரர்கள், பகவானுடன் சஞ்சரிக்கும் சுருததேவர், உத்தவர் முதலியவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனையும் பல ராமனையும் ஆசிரயித்த யாதவ சிரேஷ்டர்களாகிய சுநந்தர், தந்தர் முதலியவர்கள் ஆகிய பந்துக்கள் எல்லாரும் க்ஷேமமாயிருக்கிறார்களா? மேலும் அவர்கள் நம்மிடத்தில் பிரியத்துடன் நம்மை நினைத்துக் கொண்டிருக்கிறார்களா? ப்ராஹ்மணர்களிடம் விசேஷ பக்தியுள்ளவரும், பக்தர்களிடத்தில் பிரீதியுள்ளவருமான ஸ்ரீ கிருஷ்ண பகவான், உலகங்களுடைய மங்களத்திற்காகவும் க்ஷேமத்திற்காகவும் (கிடைத்ததைக் காப்பாற்றுவதற்காகவும்) துவாரகா நகரத்தில் மித்திரர்களுடன் ஸுதர்மையில் ஸுகமாக வசிக்கிறாரா? எந்த ஸ்ரீ பகவானுடைய இருகைகளால் காப்பாற்றப்பட்ட துவாரகையில் பந்துக்கள் நன்றாகப் பூஜிக்கப்பட்டு மிகுந்த ஆனந்தத்துடன் பார்ஷதகணங்கள் போல ஸஞ்சரிக்கிறார்களோ, அந்த ஸ்ரீ பகவான் பலராமனுடன் யதுகுலத்தில் பிரகாசிக்கிறாரா? ஸத்யபாமா முதலிய பதினாயிரம் ஸ்திரீகளும் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய பாதஸேவையே தபஸ் முதலியவைகளைக் காட்டிலும் மேலானது என்று நினைத்து அவருக்குச் சிசுருஷை செய்து வருகிறார்களா?

அவர்களுக்குப் பகவான் தம்முடைய பலத்தால் தேவர்களை ஜயித்து, அவர்களால் அனுபவிக்கக் கூடியவைகளும் இந்திராணிக்குத் தகுதியானவை களுமான பாரிஜாதம் முதலியவைகளைக் கொடுத் தாரல்லவா? எந்தப் பகவான் தேவர்களை ஜயித்து, தேவ சிரேஷ்டர்கள் வசிக்கக்கூடிய சுதர்மா என்ற சபையை பலாத்காரமாகப் பூமியில் கொண்டுவந்து, அதில் தம்முடைய கைகளின் பலத்தை அவலம்பித்து, ஜீவிக்கும் யாதவர்கள் வஸிக்கும்படியாகச் செய்தாரோ, அந்தப் பரமபுருஷன் ஸுகமாக வாசஞ் செய்கிறாரா? (அவர் பூமியில் வஸித்தால்தான் நமக்கும் ஜனங்கள் ளுக்கும் க்ஷேமமுண்டாகுமென்பது கருத்து) மேலும் குழந்தாய் அர்ஜுன! உனக்குத் தேஜஸ் குறைந்திருப் பதாகத் தோற்றுகிறதே, சரீரத்தில் வியாதி இல்லாம லிருக்கிறதா? வெகுநாளாகத் துவாரகா நகரத்தில் வசித்ததால் பந்துக்கள் உன்னைக் கௌரவப்படுத்த வில்லையா? அல்லது அவமதித்தார்களா? அல்லது பிரியமற்ற நிஷ்டூர வார்த்தைகளைச் சொன்னார்களா? அதனால் மனவருத்த மடைந்தாயா? அல்லது யாசகர்களுக்குச் சிலவற்றைக் கொடுப்பதாகப் ப்ரதிக்ஞை செய்து, பின்பு ஆசையால் அவற்றை அவர்களுக்குக் கொடுக்கத் தவறிப் போனாயா? எல்லாரையும் நீ காப்பாற்றும் ஸ்பாவமுள்ள வனன்றோ? அப்படிப்பட்டவன், ப்ராஹ்மணன், குழந்தை, பசு, வயது சென்றவர், வியாதியுள்ளவர், ஸ்திரீ, மற்றைப் ப்ராணிகள் இவர்களில் சரண மடைந்தவரைக் காப்பாற்றாமல் விட்டுவிட்டாயோ? ஆசைப்படக்கூடாத ஸ்திரீயினிடம் ஆசைபடாமலிருக் கிறாயா? விரும்பக்கூடிய ஸ்திரீ அழுக்கு வஸ்திரம் முதலியவைகளுள்ளவளானாலும் அவளிடம் அனுராகம்

வைக்காமலிருக்கிறாயோ? அல்லது வழியில் மேலான வர்களாலாவது, ஸமமானவர்களாலாவது? ஜயிக்கப் படாமலிருக்கிறாயோ? அல்லது குழந்தைகளுக்கு அன்னமிடாமல் புசித்தாயோ? (அதிதிகள் வேலைக் காரர்கள் கர்ப்பிணி, ரோகிகள், கன்னிகைகள் இவர்களுக்கு ஆகாரங் கொடாமல் புசித்தாயோ?) இன்னும் மற்ற கெட்ட காரியங்கள் எவையேனும் உன்னால் அனுஷ்டிக்கப்பட்டனவோ? மிகவும் பிரியரும், அந்தரங்க பந்துவுமான ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப் பிரிந்தோமேயென்று வருத்தப்படுகிறாயோ? உனக்கு இதை விட வேறு வியாதி ஒன்று மிருக்க நியாயமில்லை என்று கேட்டார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்15

தர்மபுத்திரர் பரலோகஞ்சென்றது.

1–7, இம்மாதிரி தர்மபுத்திரர் பலவகையாகச் சந்தேகம்படும்படி அர்ஜுனனுடைய சரீரத்தில் காந்தியின் குறைவு முதலியவைகள் உண்டாயிருந்தன. அவர் ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப் பிரிந்ததால் விசேஷ வருத்தமடைந்தார். அந்தத் துக்கத்தாலேயே தாமரை மலர்போன்ற அவருடைய முகமும் ஹிருதயமும் வாடி இருந்தன. தேஜஸ் குறைந்திருந்தது. பிரபுவாகிய அந்த ஸ்ரீ கிருஷ்ணபகவானையே மனத்தில் தியானித்துக் கொண்டிருந்ததனால் சீக்கிரமாக விடைசொல்ல முடியாதவராயிருந்தார்.

பிறகு மிகச் சிரமப்பட்டுத் துக்கத்தை மனத்தில் அடக்கிக் கைகளால் கண்களைத் துடைத்து, பகவான் தம்மிடம் வைத்திருந்த சக்யம். மைத்ரி, ஸமஹ்ருத் துவம் முதலியவைகளை நினைத்துக் கொண்டும் துக்கத்தினால் கண்டமடைத்து அரைகுறையான வார்த் தையுள்ளவராகத் தமையனை நோக்கி. ஓ மகாராஜ! ஸ்ரீ கிருஷ்ண பகவான் பந்துவாக விருந்து என்னை ஏமாற்றினார். தேவர்களாலும் ஆச்சரியப்படக்கூடிய என்னுடைய மிகுந்த தேஜஸ்ஸை அபஹரித்தார். எந்தப் பகவான் பூமியை விட்டுப்போனதால் இவ்வுலகம் முழுவதும் ப்ராணனில்லாத சரீரம் போலப் பார்க்க அழகாக இருக்கவில்லையோ, (துரித்திரன் போலவென்றும் சொல்வதுண்டு) தவிரவும், துருபத மகாராஜனுடைய சபையில் திரௌபதியின் சுயம்வரத்திற்காக வந்தவர்களும், மன்மதனால் மதித்த

வர்களுமான அரசர்களுடைய தேஜஸை எவர் தமது பார்வையாலேயே அபகரித்தாரோ, எவருடைய அனுக்கிரகத்தால் நான் மத்ஸ்ய யந்திரத்தைப் பிளந்து திரௌபதியைக் கல்யாணஞ் செய்து கொண்டேனோ, எவருடைய ஸான்னித்தியத்தால் காண்டவ வனத்தை அக்கினி பகவானுக்குக் கொடுத்து அதற்கு விரோதஞ்செய்யும் தேவேந்திரனை ஜயித் தேனோ, எவருடைய ஒத்தாசையால் மயனால் உண்டு பண்ணப்பட்டதும், மிகவும் ஆச்சரியகரமானதும், மாயா மயமாயுள்ள சபையானது நம்மால் அடையப் பட்டதோ, மேலும் எவருக்காக வந்த அரசர்கள் மிக்க உத்தம வஸ்துக்களைக் காணிக்கையாகக் கொடுத்தார்களோ, எந்த பரம புருஷன் சமீபத்தில் இருந்தால் உங்களுடைய தம்பியும் அநேக யாஜனை பலமுள்ளவருமான பீமஸேனர் ராஜஸூயயாகத் திற்காக ஜராசந்தன் என்பவனைக் கொன்றாரோ, ஜராசந்தனால் காராகிருகத்தில் அடைக்கப்பட்டிருந்த அரசர்கள் எவரால் விடுவிக்கப்பட்டு உங்களுடைய யாகத்திற்குக் காணிக்கைகளுடன் வந்தார்களோ, ராஜஸூயயாகத்தில் மஹாபிஷேகத்தையடைந்ததும், மேலானதுமான திரௌபதியின் தலைமயிரை துச்சாதனன் பிடித்து இழுக்கும்பொழுது உம்முடைய பத்னியாகிய அவள் எந்தப் பகவானை ஸ்மரித்தாளோ, எவர் உடனே அவ்விடம் வந்து சேர்ந்தாரோ, எவரை நமஸ்கரிக்கும் பொழுது திரௌபதியின் கண்ணீர் எவருடைய காலில் விழுந்ததோ, எவர் துச்சாசனன் முதலியவர்களுடைய ஸ்திரீகள் தலைமயிரை விரித்துக்கொண்டு அழும்படி செய்தாரோ, மேலும் பதினாயிரம் ஸிஷ்யர்களுடன் போஜனம் செய்பவரான துர்வாசஸஸ் என்னும் மஹர்ஷி

நமது சத்துவாகிய துர்யோதனனால் தூண்டப்பட்டு, நம்முடைய ஆசிரமம் வந்தபொழுது எந்தப் பகவான் (கீரையை) தாம் புசித்து அதனால் மூவுலகத்தில் இருக்கும் துர்வாசஸ் முதலிய மகரிஷிகளையும் திருப்தியடையச் செய்து நம்மைக் காப்பாற்றினாரோ, யாருடைய தேஜஸ்ஸினால் பரமசிவன் பார்வதியுடன் கூட ஆச்சரியமடைந்து பாசுபதமென்ற தமது அஸ்திரத்தை எனக்குக் கொடுத்தாரோ, மற்றுமுள்ள தேவர்களும் அவரவர்களுடைய அஸ்திரங்களையும் கொடுத்தார்களோ, இச்சரீரத்துடனேயே நான் ஸ்வர்க்க லோகத்தில் இந்திரனுடைய ஆசனத்தையும் அடைந்தேனோ, மேலும் ஸ்வர்க்கத்திலேயே வெகு காலம் வசித்துத் தேவர்களுக்கு விரோதியான அசுரர்களைக் கொன்றேனோ, அந்தப் பரமபுருஷன் என்னை இப்பொழுது ஏமாற்றிவிட்டார். கரையற்ற கௌரவ ஸைன்யமாகிய சமுத்திரத்தை எவருடைய ஒத்தாசையால் நான் ஒருவனாகத் தாண்டினேனோ, பின்னும் சத்துருக்களால் அபகரிக்கப்பட்ட பசுக்களையும் அவர்களுடைய தேஜஸ்ஸிற்கு இருப்பிடமான இரத்தினக் கிரீடங்களையும் பிடுங்கிக் கொண்டேனோ, பீஷ்மர், கர்ணர், துரோணர், சல்யர் இவர்களுடைய ஸைனியங்கள் மிகுந்த பலமுள்ள க்ஷத்திரியர்களால் அலங்கரிக்கப்பட்டவையானாலும், அவைகளின் நடுவில் எந்தக் கிருஷ்ண பகவான் என்னுடைய ரதத்தில் சாரதியாகவிருந்து ஒவ்வொரு சேனாதிபதிகளுடைய ஆயுஸ்ஸையும், மனோபலத்தையும், தேகபலத்தையும் பார்வையாலேயே குறைத்து விட்டாரோ, விஷ்ணுபக்தனாகிய ப்ரஹ்லாதன் இடத்தில் ஹிரண்யகசிபுவினால் தூண்டப்பட்ட அரசர்களுடைய கொடுமைபோல் எந்தக் கிருஷ்ணனால்

காப்பாற்றப்பட்ட என்னிடத்தில் அளவற்ற மஹிமையுள்ளவர்களான துரோணர், பீஷ்மர், கர்ணன், அசுவத்தாமா, ஸுசர்மா, சல்யர், ஜயத்ரதர், பாஹ்லீகர் இவர்களால் ப்ரயோகிக்கப்பட்ட அஸ்திரங்கள் வீணாகப்போயினவோ, மேலும்; ஜயத்ரதனைக் கொல்லும்பொழுது தண்ணீர் குடிக்காததனால், குதிரைகள் களைத்துப்போக, இரதத்திலிருந்து எந்தப் பகவான் கீழே இறங்கி, பாணத்தால் பூமியைப் பிளந்து. அதிலிருந்து ஜலத்தையுண்டுபண்ணினாரோ, அப்பொழுது எவருடைய மஹிமையால் சத்ருக்கள் மெய்மறந்து என்னை அடிக்காமலிருந்தார்களோ, அந்த மகாபுருஷரும், மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியவருமாகிய பகவானை சாரதியாய் வைத்துக் கொண்டேனோ, நான் மிகவும் அற்ப புத்தியுள்ளவன். அந்த அபராதத்தால்தான் என்னை அவர் ஏமாற்றிவிட்டாரோ, தெரியவில்லை!

18–27. லக்ஷ்மீபதியாகிய பகவான், "ஓ பார்த்த! (குந்தியின் புத்ரன்) ஓ அர்ஜுன! ஓ குரு நந்தனா! (கௌரவர்களைச் சந்தோஷப்படுத்திகிறவன்) ஏ தோழா! என்று சிரித்துக்கொண்டு பலவகையாக வேடிக்கை வார்த்தைகளைப் பேசினார் அல்லவா? அவைகள் யாவும் இப்பொழுது என் மனத்திலிருக்கின்றன.ஒரே படுக்கையில் படுத்துக்கொள்வது, ஒரே ஆசனத்தில் உட்காருவது, சேர்ந்தே ஸஞ்சரிப்பது புசிப்பது, தம்முடைய குணங்களை தோத்திரம் செய்து கொள்வது, ஆகிய இவைகளால் எங்களிருவர்களுக்கும் மனமும் ஒன்றுபட்டிருந்ததால் சில சமயம் நீர் சொன்ன படி செய்தார் அல்லவா என்று நான் கிருஷ்ணனைப்

பரிகாசஞ் செய்தாலும் தகப்பன் பிள்ளை செய்த பிழையைப் போலவும், அற்ப புத்தியுள்ள என்னுடைய குற்றத்தை விசேஷ மஹிமை பொருந்திய வராகையால் ஸகித்திருந்தார், என்னிடத்தில் மிகவும் மித்ரரும், அளவற்ற பிரீதியுள்ளவரும், அனுகூலத்தைச் செய்ய விரும்பியவருமான புருஷோத்தமனை விட்டுப்பிரிந்து, வழியில் அந்தப் பகவானுடைய களத்திரங்களைக் காப்பாற்ற முயன்றும் சக்தியற்றவனாக அஸத்துக்களால் ஸ்திரீயானவள் போல கோபர்களால் ஜயிக்கப் பட்டேன். இந்த காண்டீபம், பாணங்கள், ரதம், குதிரைகள், ரதியாகிய நான் ஆகிய எல்லாம் முன்னிருந்தவைகளானாலும் பகவானிருந்த. வரையில் அவையெல்லாம் காரியத்திற்கு உபயோகப்பட்டன; பகவான் ஸ்வர்க்கம் போன பிறகு ஒருக்ஷணத்திற்குள் சாம்பலில் செய்த ஆஹுதிபோலவும், வஞ்சகனுக்குத் தானம் செய்தது போலவும், களர் பூமியில் பயிரிடுதல் போலவும் பிரயோசனமற்றவைகளாயின. ஓ மகாராஜ! துவாரகா நகரத்தில் வசிக்கும் பந்துக்களுடைய க்ஷேமத்தை விசாரித்தீரல்லவா? அவர்கள் எல்லாரும் ப்ராஹ்மண சாபத்தால் மூடர்களாய், மத்யத்தைக் குடித்து மதங்கொண்ட..வர்களாய் ஒருவருக்கொருவர் பந்துக்களல்லாதவர்கள் போல் முஷ்டியால் அடித்துக் கொண்டு, நான்கு ஐந்து பெயர்கள் தவிர மற்றவர்கள் எல்லாரும் இறந்தார்கள், பிராணிகள் ஒருவரை யொருவர் காப்பாற்றுவதும், ஒருவரை யொருவர் கொல்வதுமாகி எல்லாம் பகவானுடைய இச்சையே தவிர வேறில்லை, ஜலத்தில் மத்ஸ்யம் முதலிய ஜந்துக்களில் பெரியவைகள் சிறிய ப்ராணிகளைக் கொல்வதுபோல் ஸகல ப்ராணிகளிலும் பலசாலிகள் அற்ப பலமுள்ளவர்களை ஜயிக்கிறார்கள், இப்படியே

யாதவர்களும் ஒருவருக்கொருவர் அடித்துக்கொள் ளும்படி பகவான் செய்து பூமியின் பாரத்தைப் போக்கினார், தேசத்திற்கும் காலத்திற்கும் தகுந்த வைகளும், மனத்தின் தாபங்களைப் போக்கக் கூடிய வைகளுமான கோவிந்தனுடைய வார்த்தைகளை நினைக்க நினைக்க அவைகள் மனதை அபஹரிக் கின்றன என்று பிரலாபித்தார்.

28–31. இப்படி அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரைமலர் போன்ற பாதங்களை நினைத்து அவரிடம் விசேஷ பக்தியை அடைந்தார். அதனால் சித்த சுத்தி உண்டாயிற்று. சண்டையில் பகவானால் உபதேசிக்கப்பட்ட ஞானமானது, கால மகிமையாலும், கர்ம வசத்தாலும் தமோ குணத்தாலும் மறைக்கப்பட்டிருந்தது, அதனால் அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய திவ்ய சரணங்களைத் தியானித்து பூர்ணமான பக்தியை அடைந்துமனத்தில் இருந்து எல்லா அழுக்கும் நீங்கினவராய் முந்திய ஞானத்தை நினைத்துக்கொண்டார்.

முக்குணங்கள் புண்யபாபங்கள், ஸ்தூல சரீரம் ஆகிய இவைகளின் பற்றுதல் (சம்பந்தம்) அற்றுப் போயிற்று. உத்பத்தி முதலியவைகள் விலகின. ஸ்வரூப ஞானம் உண்டானது. ஸகல ஸம்ஸயங்களும் நாசமாயின. ஆனதால் அர்ஜுனன் எந்த வகையிலும் துக்கமற்றவனானான்.

32–33. இம்மாதிரி பகவான் வைகுண்டம் சென்ற தையும், யதுகுலத்தின் நாசத்தையும் அர்ஜுனன் இடமாகத் தர்மபுத்திரர் தெரிந்து கொண்டு அந்தக்

அந்தக்கரணத்தையடக்கித் தானும் ஸ்வர்க்கம் போக விரும்பினார். குந்திதேவியும் அர்ஜுனன் வார்த்தையைக்கேட்டு பகவானிடத்தில் இடைவிடாமல் பக்தி செய்து அவரிடத்திலேயே மனத்தைச் செலுத்தி ஸம்சாரத்திலிருந்து வைராக்யத்தை யடைந்தாள். (ஜீவன் முக்தியை அடைந்தாளென்பது கருத்து)

34–35. காலில் தைத்த ஒரு முள்ளைப் பின்னும் ஒரு முள்ளினால் எடுப்பதுபோல, பகவான் யது குலத்தில் கிருஷ்ணனாக அவதரித்து, பூமியின் பாரத்தை நிவர்த்தித்து, அந்தச் சரீரத்தையும் விட்டுவிட்டார். பூமிக்குப்பாரமாயிருந்த, சரீரமும், அதைப் போக்கடித்த கிருஷ்ண சரீரமும் பகவானுடையதாகையால் அவைகளில் அவருக்கு சமான ப்ரீதியே தவிர பேதமில்லை. மேலும் வேஷதாரியான நடன் மறுபடி வேஷத்தைக் கலைத்து விடுவதுபோல ஈசுவரன் மத்ஸ்யம், கூர்மம் (ஆமை) முதலிய உருவங்களையெடுத்து, அவைகளை விட்டு விடுகிறார். அப்படியே கிருஷ்ணனாகவிருந்து பூமிக்குப் பாரமாயுள்ள அரசர்களை நாசஞ் செய்து அந்தச் சரீரத்தையும் விட்டுவிட்டார்.

36–38 1/2. எல்லோராலும் கேட்கக் கூடிய திவ்ய சரிதமுள்ள பகவான் என்றைய தினம் இவ்வுலகத்தை விட்டு வைகுண்டஞ் சென்றாரோ, அன்றையதினமே அஞ்ஞர்களைக் கலி சூழ்ந்து கொண்டது. அப்பொழுது பட்டணத்திலும், தேசத்திலும், வீடுகளிலும். மனத்திலும் கலி நெருங்குவதால் பணக்காரர்களுக்கு நல்ல பாத்திரத்தில் தானஞ் செய்ய வேண்டுமென்ற எண்ண மில்லாமலிருப்பது, பொய் சொல்வது, கபடமாகப் பேசுவது, பிறரை ஹிம்சிப்பது ஆகிய

அதர்மங்கள் யாவும் பரவின, அதனைப் பார்த்து வித்வானாகிய தர்மபுத்திரர் இவ்வுலகத்தைவிட்டுப் போக முயற்சித்தார். பின்பு, அவர் தமக்குச் ஸமான குணங்கள் பொருந்தியவருமான பரீக்ஷித்திற்கு ஹஸ்தினாபட்டணத்தில் ராஜ்யாபிஷேகஞ் செய்வித்து, சூரஸேனருடைய புத்திரராகிய வஜ்ரரையும் மதுரா நகரத்திற்கு அரசனாகச் செய்தார்.

39–50. பின்பு மிக்க ஸாமார்த்தியமுள்ள தர்மபுத்ரர் பிராஜாபத்யம் என்ற இஷ்டியைச் செய்து அக்னிகளை ஆத்மாவில் ஆரோபித்துக்கொண்டார். அப்பொழுது சரீரத்தில் அணிந்து கொண்டிருந்த வளை முதலிய ஆபரணங்களையும், பட்டு முதலியவைகளையும் விட்டு மோஹம், அஹங்காரம் முதலியவைகளை விட்டவராய், ஸகல பந்தங்களையும் நிவர்த்தித்துக் கொண்டார், ஸகல இந்திரியங்களை மனத்திலும், அதனைப் ப்ராணனிடத்திலும், அதனை அபானனிடத்திலும், அதனை வ்யாபாரத்துடனும், மிருத்யுவினிடத்திலும், அதனை ஐந்து பூதங்களால் ஏற்பட்ட சரீரத்திலும், அதனைக் குணத்திலும, அதனை அவித்தையிலும், அதனை ஜீவனிடத்திலும் அந்த ஜீவனை நாச மற்றவரும் கூடஸ்தருமாகிய பரப்ரஹ்மத்திலும் லயப் படுத்தினார். மேலுமவர் மரவுரியை உடுத்திக்கொண்டு ஆஹாரமில்லாமலும் மௌனியாகவும், தலையை அவிழ்த்துக்கொண்டு மூடன் போலவும், பைத்தியம் பிடித்தவன்போலவும், பிசாசு போலவும், ஒன்றையும் பாராதவராய்ச் செவிடன் போலப் பிறர் சொல்வதைக் கேளாமல் பெரியோர்களான முன்னோர்கள் போன வழியாக வடக்குத் திக்கை நோக்கிச் சென்றார். அப்பொழுது எதை அடைந்தவர்கள் மறுபடியும்

ஸம்ஸாரத்தை அடையமமாட்டார்களோ, அந்தப்பர மாத்வையே தியானித்துக் கொண்டிருந்தார். அவருடைய தம்பிகள் அனைவரும் நிச்சயமுள்ளவர்களாய்த் தர்ம புத்திரர் பின் சென்றார்கள். அதர்மத்தின் ஒத்தாசை யுள்ள கலியானது பிரஜைகளைப் பார்த்து அவருடைய சமீபத்திலும் சென்றது. அப்பொழுது ஸகல தர்மங் களையும் நன்றாக அனுஷ்டித்தவர்களான தர்ம புத்திரர் முதலியவர்கள் ஸ்ரீ நாராயணருடைய சரணங்களே நமக்குச் சரணமென்று நினைத்து, அதனால் பக்தி அதிகரித்தவர்களாகி, சித்தசுத்தியை யடைந்து, பரம புருஷனாகிய ஸ்ரீ நாராயணனிடத்தில் ஸ்திர புத்தியுள்ளவர்களாய், யோகிகளால் அடையக் கூடியதும் ஸம்ஸாரிகளுக்குக் கிடைக்காததுமான மேலான கதியை அடைந்தார்கள். மேலும் ஞானியாகிய விதுரரும் ப்ரபாஸ தீர்த்தக்கரையில் ஸ்ரீ கிருஷ்ணன் இடத்தில் சித்தத்தைச் செலுத்தி. இந்தச் சரீரத்தை விட்டுப் பித்ரு தேவதைகளால் அழைக்கப்பட்டுத் தமது உலகஞ் சென்றார். அப்பொழுது திரௌபதியும் தன்னுடைய பதிகளுக்குத் தன்னிடத்தில் ப்ரீதியில் லாமையைப் பார்த்து வாஸுதேவரிடம் இடை விடாமல் பக்தி செய்து உத்தமகதியையடைந்தாள்.

51. பகவான் வைகுண்டம் சென்றதும், பாண்டவர்கள் பகவானை யடைந்ததுமாகிய இக்கதைகள் மிகவும் பரிசுத்தமானவைகள். இவைகளைச் ச்ரத்தையுடன் கேட்பவர்களுக்கு ஸ்ரீ மஹாவிஷ்ணுவிடத்தில் பக்தியும், அதனால் மோக்ஷமும் கிடைக்கும்.

நோட்டு

ஸக்யம்:அனுகூலத்தைச் செய்ய விரும்பியிருப்பது. மைத்ரி: உபகாரியாகவிருப்பது, ஸஹிருத்வம் பந்துவாகவிருப்பது. ஸ்ரீத. ஸக்யம்-சமான வயது உள்ளவராக இருப்பதால் ஏற்படக்கூடியது. மைத்ரி உபகாரத்தால் ஏற்படக்கூடியது; அதிகப் ப்ரேமை யால் உண்டாகக் கூடியது, சந்த்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்-16

பரீக்ஷித்து தர்மத்தைக் கண்டது

1-4 'பரீக்ஷித்து பிறந்தபோது அவருடைய ஜாதகத்தைப் பார்த்து ஜ்யோதிஷ சாஸ்திரமறிந்த ப்ராஹ்மணோத்தமர்கள் சொன்னபடியே பின், ஹஸ்தினாபுரத்தில் உத்தரையின் புத்திரர் அரசனாக இருந்து ப்ராஹ்மணர்களுடைய கட்டளையின்படி பாகவதர்களுக்குள் சிறந்தவராகி இராஜ்யத்தைக் காப்பாற்றிவந்தார். அவர் உத்தரனுடைய பெண்ணாகிய இராவதீ என்பவளை விவாஹஞ் செய்துகொண்டார். பின்னும் அவர் கிருபரைக் குருவாக வைத்துக் கொண்டு கங்கையின் கரையில் மூன்று அச்வமேத யாகங்களைச் செய்தார். அவைகளில் தேவர்கள் நேரில் வந்து ஹவிர்ப்பாகங்களைப் பெற்றுக் கொண்டார்கள். மேலும் அவர் திக் விஜயஞ் செய்து வரும்பொழுது வழியில் ஒரு எருதையும் பசுவையும் ஒரு சூத்திரன் காலால் உதைக்கக் கண்டார். அவன் ராஜவேஷம் பூண்டிருந்தான். அவனே கலிபுருஷன், அவனைத் தமது பலத்தால் நிக்ரஹித்தார் என்று ஸூதர் சௌனகருக்குச் சொன்னார்.

5–10 'இதனைக் கேட்டு சௌனகர் "ஓ ஸூதரே! பரீக்ஷித் மஹாராஜா கலியை நிக்ரஹிக்க காரணமென்ன? அவன் அரசனாகவும் சூத்ரனாகவுமிருந்து பசுவைக் காலால் ஏன் உதைத்தான்? அந்த விஷயம் பகவத் கதையிலடங்கினதாலும், ஈசுவரனுடைய பாதங்களாகிய தாமரைப் புஷ்பங்களிலிருந்து பெருகி

வரும் மதுவைப் பானஞ் செய்து திருப்தியடைந் திருக்கும் மஹான்களுடைய கதையில் சேர்ந்ததாலும் அதைச் சொல்ல வேண்டும். அற்ப ஆயுள் உள்ள வர்களும் மரிக்கும் ஸ்பாவ முள்ளவர்களுமான மனிதர் களுக்கு மோட்சத்தில் விருப்பமிருக்குமாகில் பகவான் உடைய கதையைக் கேட்பது முதலியவைகளால் அவர்கள் ஆயுஸ்ஸைக் கழிக்க வேண்டுமே அல்லாமல் கெட்ட விஷயங்களால் வீணாக அதைச் செலவிடக் கூடாது. இந்த யாகத்திற்காக மஹர்ஷிகள் அந்தகனை (யமனை) வரவழைத்திருக்கிறார்கள். பகவானுடைய லீலைகளையே கேட்கவேண்டும். சோம்பல், புத்திக் குறைவு, அற்பமான ஆயுள் ஆகிய இவைகளுள்ள புருஷனுடைய ஆயுஸ்ஸானது இராத்திரியில் தூக்கத் தாலும்' பகலில் ஸம்ஸாரத்திற்கு உபயோகமான காரியங்களிலும் செல்லுகிறது. ஆகையால் பகவான் உடைய கதையைக் கேட்பதில் காலத்தை உபயோகியா தவர்களுடைய ஜீவனம் வீணானது என்றார்கள்.

11–17 இதனைக் கேட்டு ஸூதர் சௌனகரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார். பரீக்ஷித்து மகாராஜன் திக்விஜயம் செய்து வருங்காலத்தில் தம் உடைய ஆளுகைக்குட்பட்ட குருஜாங்கலம் இவை களில் கலி வந்து பிரவேசித்தாரென்ற அப்ரியமான வார்த்தையைக் கேட்டவுடன் யுத்தத்தில் மிகவும் சாமார்த்தியம் உள்ளவராகையால் ஆயுதத்தை எடுத்துக் கொண்டு கறுத்த குதிரைகள் கட்டிய இரதத்திலேறிப் புறப்பட்டார். அந்த இரதமானது சிம்மத்வஜமுள்ளது. ஸகல அலங்காரமுள்ளது. யானைகள், குதிரைகள் ரதங்கள், காலாட்படைகள் ஆகிய இவைகளுள்ள சேனைகள் அவரைச் சூழ்ந்து

கொண்டன. அவர் பத்ராச்வம், கேதுமாலம், கிம் புருஷம், பாரதம், உத்தரகுரு ஆகிய வர்ஷங்களில் சென்று அங்கிருக்கும் அரசர்களை ஜயித்து அவர் களிடம் கப்பம் பெற்றுக்கொண்டார். ஒவ்வொரு வர்ஷங்களிலும் வஸிக்கும் ஜனங்கள் பரீக்ஷித்தின் முன்னோர்களாகிய பாண்டவர்களுடைய சரித்தத்தைச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அதில் கிருஷ்ண பகவானுடைய மஹிமையும் இடையில் வர்ணிக்கப் படுகிறது. அச்வஸ்த்தாமாவினுடையை அஸ்திரத்தினிட மிருந்து பரீக்ஷித்தைக் காப்பாற்றின கதையையும், விருஷ்ணிகளுக்கும் குந்தி புத்திரர்களுக்கும் ஏற்பட் டிருந்த விசேஷ சிநேகத்தைப் பற்றியும், அவர்களுக்குப் பகவானிடமிருந்த அதிக பக்தியைப் பற்றியுஞ் சொல்லிக் கொண்டார்கள். அவற்றைக் கேட்டு, 'பரீக்ஷித்து மகாராஜன் கண்கள் மலர்ந்தவராக விசேஷ சந்தோஷத்துடன் அவர்களுக்கு விலையுயர்ந்த வஸ்திரங்கள், ஹாரங்கள் ஆகிய இவைகளை வெகுமதி செய்தார். பின்னுமவர் மிகுந்த பக்தியுள்ள பாண்டவர்களிடத்தில் விசேஷ பிரீதியால் பகவான் சாரத்தியஞ் செய்தது, சபாநாயராகவிருப்பது, பாண்டவர் களுடைய மனம்போல் நடப்பது, தோழனாயிருப்பது, தூதனாயிருப்பது, ராத்திரியில் கத்தியைக் கையில் வைத்துக்கொண்டு தூங்காமல் காப்பாற்றுவது, அவர்கள் ஏவினதைச் செய்வது, அவர்கள் மஹிமையைப் பற்றி தோத்திரஞ் செய்வது, ஆகிய கதைகளையும் சொல்லி ஸகல ஜகத்தும் பகவானை நமஸ்கரிப்பதையும் பார்த்து ஈசுவரனுடைய சரணங்களில் பக்தி செய்தார்.

18–25 இப்படி அந்தப் பரீக்ஷித்து மகாராஜன் முன்னோர்கள் செய்தபடி ஒவ்வொரு நாளும் தாமும்

நடத்தி வந்தார். அப்பொழுது சமீபத்தில் ஒரு ஆச்சரியத்தைக் கண்டார். அதென்னவெனில் தர்ம மானது விருஷப ரூபமெடுத்து ஒரு காலைப் பூமியில் ஊன்றிக்கொண்டு குழந்தைகள் இறந்து போனதால் துக்கப்படும் தாய் போலக் காந்தி குறைந்து கண்ணீரைப் பெருக்கி அழுது கொண்டிருக்கும் ஒரு பசுவை நோக்கி பின்வருமாறு கேட்டது. மங்களமாகிய ஸ்பாவமுள்ளவளே! சௌக்யமாயிருக்கிறாயா? உன் னுடைய முகம் வாடியிருக்கிறது. தேகத்தில் காந்தி குறைந்திருக்கிறது. ஓ அம்மா! மனத்தில் கவலையுள்ள வளாகத் தோன்றுகிறாய். தேசாந்திரம் போயிருக்கும் பந்துக்களைப் பற்றி வருத்தப்படுகிறாயா? அல்லது ஒரு காலால் நிற்கும் என்னைப் பற்றி துக்கிக்கிறாயா? அல்லது கெட்ட அரசர்களால் அனுபவிக்கப்படும் உமது சரீரத்தைப் பற்றி கவலைப்படுகிறாயா? அல்லது யாகங்கள் விதிப்படி செய்யப்படாததால் அசுரர்கள் அவைகளை அபகரிக்கிறார்களேயென்று வருத்தப்படுகிறாயா? காலத்தில் மழை பெய்யாமல் இருப்பதால் கஷ்டப்படும் ப்ரஜைகளைப் பார்த்துச் ச்ரமப்படுகிறாயா? அல்லது பர்த்தாவினால் காப்பாற்றப் படாத ஸ்திரீகளையும, தாயார், தகப்பன் முதலியவர் களால் ரட்சிக்கப்படாத பாலர்களையும், ராக்ஷஸர்கள் போலக் குரூரஸ்பாவமுள்ளவர்களால் உபத்திரவிக்கப் பட்ட சிசுக்களையும், துராசாரமுள்ள ப்ராஹ்மணர் களிடத்திலிருக்கும் வாக்தேவியையும், ப்ராஹ்மணர் களைச் சம்ரட்சிக்காத க்ஷத்திரியர்களை சேவித்துக் கொண்டிருக்கும் மேலான குலத்தில் பிறந்தவர்களைப் பற்றிக் கவலையடைகிறாயா? அல்லது கலியினால் வியாபிக்கப்பட்ட க்ஷத்திரியர் தங்களைப் பற்றியும் இஷ்டமானவிடங்களிலும் இஷ்டப்பட்ட காலங்களிலும்

படுத்துக் கொள்வது, உட்காருவது, புசிப்பது, குடிப்பது, மைதுனம் ஆகிய இவைகளில் ஆசையுள்ள ப்ராணிகளைப் பற்றியும் துக்கிக்கிறாயா அம்மா?! அல்லது துஷ்டர்களைக் கொன்று உன்னுடைய பாரத்தை நிவர்த்திப்பதற்காக அவதாரஞ் செய்த ஸ்ரீ கிருஷ்ணபகவான் வைகுண்டஞ் சென்றதால் மோக்ஷத்தைக் கொடுக்கும் அவருடைய சரிதங்களை நினைத்து அவருடைய விரகத்தைச் ஸகிக்காமல் துன்பமடைகிறாயா? மிக்க பலசாலியான காலத்தின் மஹிமையால் உன்னுடைய அழகு போய்விட்டதா? நீ வருத்தப்படுங் காரணமென்ன? சொல்ல வேண்டும் என்று கேட்டது.

26–35 இதைக் கேட்டுப் பூமிதேவி தர்மதேவதையை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானாள் "ஓ தர்மமே! நான் வருத்தப்படும் விஷயமின்னதென்று உனக்கே தெரிந்திருக்கலாம், உலகத்திற்குச் சௌக்கியத்தைக் கொடுக்கும் நான்கு கால்களோடு நீ இருந்ததற்கு எவர் காரணமோ, எவரிடத்தில் சத்தியம், சுத்தனாக விருப்பது, தயை, பொறுமை, கொடுப்பது, சந்தோஷம், கபடமில்லாமலிருப்பது. மனது ஸ்திரமாயிருப்பது, வெளியிலிருக்கும் இந்திரியங்களை ஜயிப்பது, தனது தர்மத்தை யனுஷ்டிப்பது, சத்ரு மித்ரர் என்ற பேத புத்தியில்லாமலிருப்பது, பிறர் செய்த அபாரதத்தைப் இருப்பது, இலாபங் கிடைத்தாலும் அதில் உதாசீனனாக பொறுப்பது, சாஸ்திரங்களை விசாரிப்பது ஆத்மஞானம், வைராக்கியம் எல்லா வற்றிற்கும் எஜமானனாக விருப்பது; காரியங்களில் சாமர்த்தியம், அழகு, தைர்யம், மிருது ஸ்பாவமுள்ள வனாகவிருப்பது, பக்தி, விசேஷ வணக்கம், சுபாவம்;

மனோபலம், ஞானபலம், இந்திரியபலம், மேலான ஞானம் முதலியவைகளில் கம்பீர மனமுள்ளவராக இருப்பது, அசையாத சித்த முள்ளவராக விருப்பது சிரத்தை, கீர்த்தி, மானம், அகங்காரமில்லாமலிருப்பது ஆகிய இவைகளும் மற்ற எல்லாராலும் ஆசைப்படக் கூடியவைகளுமான மகாகுணங்கள் எப்பொழுதும் வஸித்துக் கொண்டிருந்தனவோ, அந்தக் குண நிதியாகிய ஸ்ரீநிவாஸன் இவ்வுலகத்திலில்லாததனால் பாப ஸ்பாவமுள்ள கலி இவ்வுலகத்தில் வியாபித்தான். அதனால் எனது ஸ்வரூபத்தையும், உன்னையும் தேவர்களையும், மஹர்ஷிகளையும், பிதிருக்களையும், மற்ற சாதுக்களையும், எல்லா ஜாதியார்களையும், ஆச்ரமிகளையும் பற்றிக் கவலைப்படுகிறேன், ப்ரஹ்ம தேவர் முதலியவர்கள் எந்த லக்ஷ்மீதேவியின் கடாக்ஷத்திற்காக வெகுகாலம் தபஸ் செய்தார்களோ, அந்த லக்ஷ்மீதேவியானவள் மேலானவர்களால் ஆசிரயிக்கப்பட்டவளானாலும், தான் வஸிக்குமிடமான தாமரைமலர்களின் வனத்தை விட்டுப் பகவானுடைய பாதங்களாகிய தாமரைப் புஷ்பங்களை மிகுந்த ப்ரீதியுடன் ஸேவிக்கிறாள்; வஜ்ரம், அங்குசம், துவஜம் ஆகிய இந்த ரேகைகளுள்ள அந்தப் பகவானுடைய திவ்ய விபூதிகளையறிந்து மூவுலகிலும் மேலானவளாக இருந்தேன். இப்படி கர்வமுள்ள என்னை ஈசுவரன் கடைசியில் விட்டுப்பிரிந்தார், அவர் எனக்குப் பாரமா யிருந்த அஸுராம்சமுள்ள அரசர்களுடைய அனேக அக்ஷௌஹிணியை நாசஞ் செய்வதற்காகவும், நான்கு பாதங்களுடன் உலகத்தில் உன்னை ஸஞ்சரிக்கும்படி செய்வதற்காகவும் யதுகுலத்தில் அவதரித்தார்.

36 எந்தப் புருஷோத்தமர் பிரியமான பார்வை,

அழகான சிரிப்பு, மனோஹரமான பேச்சு ஆகிய இவைகளால் ஸத்யபாமை முதலியவர்களுடைய மானத்தையும் தைர்யத்தையும் போக்கடித்தாரோ, எவருடைய பாதத்தின் அடி வைப்பினால் அலங்கரிக்கப் பட்ட எனக்கு மயிர்க்கூச்சலுண்டானதோ, அந்தப் பரமபுருஷனை விட்டுப் பிரிந்திருக்க யாரால் முடியும்" என்றாள்.

37. இப்படி இருவரும் பேசிக் கொண்டிருக்கும் பொழுது பரீக்ஷித்து என்ற ராஜரிஷியானவர் குருக்ஷேத்திரத்தில் கிழக்கு முகமாய் ப்ரவஹிக்கும் ஸரஸ்வதி நதிக்கரை வந்தார்.



அத்தியாயம்- 17

பரீக்ஷித் மகாராஜன் கலியை நிக்ரஹித்தது

1–15. அவ்விடத்தில் பரீக்ஷித் மஹாராஜர் ஒரு எருதையும், ஒரு பசுவையும், ஒரு சூத்திரன் ராஜ வேஷந்தரித்துக் கையில் தடியை எடுத்து அடித்துக் கொண்டிருக்கக் கண்டார். அவைகளில் தாமரைத் தண்டு போல் வெளுப்பான விருஷபமானது (எருது) மிகவும் பயந்து மூத்திரம் பெய்வதுபோல் நடுக்கம் அடைந்து, அந்தச் சூத்திரனால் அடிக்கப்பட்டு ஒரு காலால் நின்று மிகவும் துன்பமடைந்திருந்தது. பால் முதலியவைகளைக் கொடுக்கும் அந்தப் பசுவானது கன்றில்லாமல் அழுதுகொண்டிருந்தது. அல்லாமல் இளைத்துமிருந்தது. புல் முதலிய ஆஹாரத்தில் விருப்பமுள்ளதாகவுமிருந்தது. அதனைச் சூத்திரன் காலால் உதைத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஸுவர்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட இரதத்தின் மீதேறியிருக்கும் அந்தப் பரீக்ஷித் மஹாராஜன் வில்லில் நாணை பூட்டிக்கொண்டு பின்வருமாறு மேகம் கர்ஜிப்பது போலக் கம்பீரமாகக் கேட்கத் தொடங்கி 'அட மூட நீ யார்? என்னால் காப்பாற்றப்படுகிற தேசத்தில் பலிஷ்டனான நீ, பலமில்லாதவர்களை உபத்திரவிக்கின்றனை. உனது வேஷத்தால் அரசனாகத் தோன்றுகின்றனை. சூத்திரனுடைய காரியத்தை செய்கின்றனை யாதலால் வேஷதாரி போலிருக்கின்றாய் ஸ்ரீ கிருஷ்ண பகவானும், அர்ஜுனனும் இத்தேசத்தை விட்டு வெகு தூரஞ் சென்றுவிட்டபடியால் இரஹஸ் யத்தில் பலமில்லாதவர்களை ஹிம்ஸிக்கின்றனை. ஆகையால் நீ என்னால் கொல்லத்தகுந்தவன். ஓ

தாமரைத் தண்டு போல வெளுத்த சரீரத்துடன் விருஷப ரூபமெடுத்து ஒரு காலால் ஸஞ்சரிப்பவரே! நீர், தேவதைகளுக்குள் யார்? உம்மைப் பார்க்க எங்களுக்கு வெகு துக்கமாயிருக்கிறது. கௌரவர்களுடைய வைகளால் காப்பாற்றப்படும் பூமியில் துக்கத்தால் உண்டாகும் கண்ணீர் விழுகிற வழக்கமில்லை. ஆதலால் நீர் துக்கிக்கவேண்டாம். சூத்திரனிடமிருந்து பயம் உமக்கு நிவர்த்தியாகிவிட்டது. ஓ அம்மா! பசுவே! துஷ்டர்களை நான் சிக்ஷித்து வரும்பொழுது நீ ஏன் அழவேண்டும்? எந்த அரசனுடைய இராஜ்யத்தில் துஷ்டர்களால் ஸாதுக்களுக்கு உபத்திரவம் நேரிடு கிறதோ அவனுடைய கீர்த்தி, ஆயுள், பாக்யம் ஆகிய இவைகள் குறைவு படுவதல்லாமல் அவனுக்குக் நல்ல லோகமும் கிடைக்கிறதில்லை. உபத்திரவப் பட்டவர் களுடைய துன்பத்தை நிவர்த்திப்பதே அரசர்களுக்கு முக்கியமாகிய தர்மம். ஆனதால் பிராணிகளுக்கும் கெடுதியைச் செய்கின்ற மிக்க அஸத்தாகிய இவனைச் சிக்ஷிக்கிறேன். ஓ விருஷபமே! உன்னுடைய மூன்று கால்களை எவன் வெட்டினான்? ஸ்ரீ கிருஷ்ணன் அனுஸரித்த அரசர்களுடைய இராஜ்யத்தில் ஜனங்கள் உன்னைப் போலிருப்பது உசிதமல்ல. நிரபராதியும் ஸாதுவுமாகிய உனக்குக் கெடுதியைக் குறைக்கும் அஸத் யார்? அவனைச் சொல் உனக்கு க்ஷேமம் உண்டாகும். குற்றஞ் செய்யாதவர்களை எவன் உபத்திரவிக்கிறானோ அவனுக்கு என்னிடமிருந்து பலவகையிலும் பயமுண்டாகும். கொஞ்சமாவது பயமில்லாமல் குற்றமற்றவர்களுக்குக் கெடுதி செய்பவன் தேவனானாலும் தோள் வளைகளுள்ள அவனுடைய கையை, வெட்டி விடுவேன். கெட்ட நடையுள்ளவர்களை,

சாஸ்திர முறைப்படி சிக்ஷிக்கும் அரசர்களுக்குத் தமது தர்மத்தை யனுஷ்டிப்பவர்களைக் காப்பாற்றுவதே ஸ்வதர்மம் என்று சொன்னார்.

16–19½. இதனைக் கேட்டு தர்மமானது அரசனை நோக்கி, ஓ மஹாராஜ! எவர்களுடைய குணங்களால் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவர்களுக்கு, தூதனாக விருப்பது முதலியவைகளைச் செய்தாரோ, அந்தப் பாண்டவர்களின் குலத்தில் பிறந்தவர்களான நீங்கள் பயந்தவர்களுக்கு அடய வார்த்தை சொல்வதே உசிதம். ப்ராணிகளுக்குத் துக்கமுண்டாகுங் காரணத்தைப் பற்றிப் பல வகையான மதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சிலர் ஆத்மாவே துக்கத்திற்குக் காரணமென்றும், லோகாயதகர்கள் நவகிரஹங்களின் அதிதேவதையே துக்கத்திற்குக் காரணமென்றும், மீமாம்ஸகர்கள் கர்மமே காரணமென்றும், சிலர் ஸ்வாபவமே காரணமென்றும், சிலர் ஈசுவரனே காரணமென்றும், சொல்லுவதால் ஊகிக்க முடியாததும், குறிப்பிடக் கூடாததுமான ஏதோ ஒரு காரணத்திலிருந்து துக்கம் உண்டாகிறது. ஒன்றையும் நிச்சயமாகச சொல்லக் கூடவில்லை. இப்படி மதபேதத்தால் மோஹித்து இருப்பதால் எந்தப் புருஷனிடமிருந்து துக்கங்கள் நேரிடுகின்றனவோ அந்தப் புருஷன் இன்னாரென்று நாம் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனது பற்றி அதன் காரணத்தை நீரே உம்முடைய புத்தியால், யோசித்துத் தெரிந்து கொள்ளும் என்று சொல்லிற்று.

20–27. இதனைக் கேட்டு அரசன் யோசித்து மோஹமும் இல்லாதவராகத் தர்மத்தை நோக்கிப் பின்வருமாறு சொன்னார். தர்மமமாகிய வார்த்தையைச் சொல்வதால்

நீ தர்மமேயாம். விருஷபத்தின் சரீரத்தை தரித்து இருக்கின்றனை. அதர்மத்தை யனுஷ்டித்தவனுக்கு எவ்வித ஸந்தோஷமேற்படுமோ அது கோட் சொன்னவனுக்கு (அவனைக் காட்டிக் கொடுத்தவனுக்கு) உண்டாகிறது. அல்லது ஈசுவரனுடைய ஸங்கல்பமானது ப்ராணிகளுடைய மனத்திற்கும், வாக்குக்கும் எட்டாத தாகையால் அதை அறியமுடியாததென்பது நிச்சயம். தபஸ், சௌசம், தயை, ஸத்யம் ஆகிய நான்கு தர்மத்திற்குப் பாதங்களாகக் கிருதயுகத்தில் ஏற்படுத்துப் பட்டன. அதர்மத்தின் பாதங்களாகிய கர்வம், ஆசை, மதம் இவைகளால் தர்மத்தின் மூன்று பாதங்கள் முறிக்கப்பட்டன. இப்பொழுது நான்காவது பாதமாகிய ஸத்யத்தை அஸத்யத்துடன் கூடி கலி பிடிக்க முயற்சிக்கின்றன. இவள் பூமி தேவியே. இவளுடைய பாரத்தைப் பகவான் நிவர்த்தித்தார் அவருடைய திவ்யமாகிய அடிவைப்பினால் ஸந்தோஷமடைந்து இருந்தாள். இப்பொழுது அந்தப் பகவானை விட்டுப் பிரிந்து பூமிதேவியானவள், ப்ராஹ்மணர்களைக் காப்பாற்றாதவர்களும் ராஜவேஷத்தை மாத்திரம் தரித்த வர்களுமான சூத்திரர்கள் தமக்கு அதிபதியாக ஆகிவிடுவார்களே என்று கண்ணீரைப் பெருக்கிப் பாக்கியமற்றவள் போல் துக்கிக்கிறாள் என்று சொல்லித் தர்ம தேவதையையும், பூமியையும் ஸமாதானஞ் செய்தார்.

28-33. பின்னும் மஹாரதராகிய அவ்வரசன் அதர்மத்திற்குக் காரணமாகிய கலியைச் சிக்ஷிப்பதற்காகக் கூர்மையான கத்தியை எடுத்தார். அப்பொழுது கலியானவன் அரசன் தன்னைக் கொல்ல விரும்பியதைத் தெரிந்துகொண்டு இராஜவேஷத்தை விட்டு மிகவும்

பயந்தவனாக அவருடைய சரணங்களில் நமஸ்கரித் தான். அப்பொழுது தம்முடைய காலில் விழுந்த கலியைப் பார்த்து, தீனர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ள வரும், தைர்யமுள்ளவரும், கொண்டாடக்கூடியவரும், சரண்யருமான அரசன் கருணையுடன் அவனைக் கொல்லாமலிருந்ததுமன்றி அவனை நோக்கிச் சிரித்துக் கொண்டு அர்ஜுனனுடைய கீர்த்தியை காப்பாற்றி வரும் நாங்கள், கைகூப்பிச் சரணமடைந்தவர்களைக் கொல்லுகிறதில்லை. ஆனாலும் நீ, அதர்மத்திற்குப் பந்துவானதால் நமக்குச் சொந்தமான இவ்விடத்தில் வசிக்கக்கூடாது. இராஜ சரீரத்தில் நீ வசிக்கும்போது ஆசை, பொய்சொல்லுதல், திருடுவது, துஷ்டனாயிருப்பது, தன்னுடைய தர்மத்தை விட்டுவிடுவது, அலக்ஷ்மீ கபடம், கலஹம், டம்பம் ஆகிய அதர்மத்தின் கூட்டமும் உன்னை யனுஸரிக்கிறது. ஆதலால் அதர்ம பந்துவாகிய ஏ கலியே! ஸத்யம், தர்மம் ஆகிய இவைகள் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும், ப்ரஹ்மாவர்த்தத்தில் நீ வசிக்கக் கூடாது. இவ்விடத்தில் யாகத்தின் விதியை நன்றாக அறிந்தவர்கள் யக்ஞேசரராகிய பகவானை யாகத்தால் பூஜிக்கிறார்கள். மேலும் யாக ஸ்வரூபியான பகவான் யாகஞ் செய்பவர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கிறார். தவிரவும், ,ஸ்தாவர ஜங்கமங்களாகிய எல்லாப் ப்ராணிகளிடத்திலும் வாயுவைப் போல் அந்தர்யாமியாயிருந்து அவரவர்கள் இஷ்டத்தை நிறைவேற்றுகிறார் என்று சொன்னார்.

34–36. அதனைக் கேட்டு அந்தக் கலி மிகவும் நடுக்கமுள்ளவனாகி முயற்சியுள்ள யமனைப்போலக் கத்தியைக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் பரீக்ஷித்தை நோக்கி, ஓ ஸார்வபௌமரே! தங்களுடைய

உத்தரவுப்படி எவ்விடத்திலாவது வசிக்கிறேன். எவ்விடத்திலிருந்தாலும், வில்லையும் பாணத்தையும் கையில் வைத்துக் கொண்டிருக்கும் உம்மை பார்ப்பேன். தர்ம சிந்தையுள்ளவர்களுக்குள் சிறந்தவரே! எவ்விடத்தில் வசிக்கும்படி நீர் ஆஞ்ஞாபிக்கிறீரோ அவ்விடத்திலேயே வசிப்பேன். அப்போர்ப்பட்ட ஸ்தானத்தை எனக்குக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.

37–39. அப்பொழுது இம்மாதிரி கலியால் பிரார்த்திக்கப்பட்ட பரீக்ஷித்து மஹாராஜா. சொக்கட்டான் ஆட்டம், மத்யபானம், ஸ்திரீ ஸங்கமம், ப்ராணி ஹிம்ஸை ஆகிய நான்கு அதர்ம ஸ்தானங்களிலும் வசிக்கும்படி ஆஞ்ஞாபித்தார். அதிலும் திருப்தியடையாமல் பின்னும் சிலவிடங்கள் கொடுக்க வேண்டுமென்று கலி கேட்டுக்கொள்ள, அப்பொழுது அரசன் ஸுவர்ணத்திலிருக்கும்படி சொன்னார். அதனாலும் கலி திருப்தி யடையாமலிருக்க, பின்னும் அரசன் பொய், மதம், காமம், ரஜோ குணம், விரோதம் ஆகிய ஐந்து இடங்களையும், கலிக்குக் கொடுத்தர். இப்படி உத்தரையின் புத்திரரால் கொடுக்கப்பட்ட இந்த விடங்களில் அவருடைய உத்தரவின்படி கலி வசித்துக்கொண்டிருந்தான்.

40-44. ஆனதால் க்ஷேமத்தை விரும்பியவர்கள் இவைகளை ஸேவிக்கக் கூடாது. அவைகளில் ஆசைப்படவே கூடாது. பிறகு அவர் தபஸ், சௌசம், தயை இவைகளை உலகத்தில் பரவச் செய்து முறிந்துபோன தர்மத்தின் மூன்று பாதங்களையும் விருத்தி செய்தார். பூமியையும் விருத்தி செய்தார். அந்தப் பரீக்ஷித்து என்பவர், தர்ம புத்திரர்

காட்டிற்குப் போகும் முன்னிலையில் அவரால் தமக்குக் கொடுக்கப்பட்ட இராஜ்யத்தை அடைந்து விசேஷ கீர்த்தியுள்ளவராய் பிரகாசித்தார். அபிமன்யுவின் புத்திரராகிய அந்த அரசன் இவ்வளவு மஹிமையுள்ளவர். அவர் ராஜ்ய பாலனஞ் செய்யும் காலமாகிய இப்பொழுது நீங்கள் ஸத்ரஞ் செய்ய ஆரம்பித்திருக்கிறீர்கள்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்-18

பரீக்ஷித்திற்கு நேர்ந்த ப்ராஹ்மண சாபம்

1-10 எந்தச் சக்கரவர்த்தியானவர் தாயாருடைய கர்ப்பத்திலிருக்கும்போது அச்வஸ்த்தாமாவினுடைய அஸ்திரத்தால் எரிக்கப்பட்டும் அதியற்புதமாகிய செய்கைகளுள்ள ஸ்ரீ கிருஷ்ணனுடைய அனுக்ரஹத்தால் மரணமடையவில்லையோ எவர் ப்ராஹ்மணருடைய சாபத்தால் தக்ஷனால் தமக்கு உயிர்ச் சேதம் நேர்ந்ததும் அதனால் கொஞ்சமேனும் கவலைப்படாமல் இருந்தாரோ, சுகருடைய சிஷ்யராகிய அந்த மஹா ராஜன் ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலேயே தமது மனதைச் செலுத்தி, ஸகல ஆசைகளையும் ஒழித்து, பகவான் உடைய ஸ்வரூபத்தையறிந்து கங்கா நதிக்கரையில் சரீரத்தைவிட்டார். எந்தப் புருஷர்கள் உத்தமச் லோகருடைய கதைகளைச் சொல்வதால் காலத்தைக் கழிக்கிறார்களோ, எவர்கள் மரணகாலத்திலும் பகவான் உடைய சரணாரவிந்தங்களைத் தியானஞ் செய்கிறார் களோ அவர்களுக்கு மோஹம் உண்டாவதில்லை. மேற்சொல்லிய அபிமன்யுவின் புத்திரராகிய சக்ரவர்த்தி அரசனாயிருக்கும்போது லோகத்தில் கலி வந்திருந்தாலும் அதர்மம் பரவாமலிருந்தது. என்றைய தினம் எந்த க்ஷணத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் பூமியை விட்டு மேலுலகஞ் சென்றாரோ, அன்றைய தினமே லோகத்தில் அதர்மத்தை விருத்தி செய்யும் கலி பிரவேசித்தான். தேனீ போல் ஸாரத்தைக் க்ரஹிப்பவராகிய பரீக்ஷித்து மஹாராஜன் கலியைக்கொன்று விடவில்லை. அவன் உடைய சக்தி பரவாமலிருக்கச் செய்தார். ஏனென்றால், அந்தக் கலியின் காலத்தில் ஸங்கல்ப மாத்திரத்தில்

புண்யங்களும், செய்கையால் பாபங்களும் சித்திக் கின்றன. தைர்யமற்றவர்களிடம் சூரனாகியும், தைர்யம் உள்ளவர்களிடம் பயப்படும் ஸ்வாவமுள்ளவனாயு மிருக்கிற கலியானவன் அஜாக்ரதை உள்ளவர்களைப் பிடித்துக்கொள்ள செந்நாய்போல மிக்க ஜாக்கிரதை யுள்ளவனாக இருக்கிறான் (அவன் என்ன கெடுதியைச் செய்யப் போகிறான் என்பது கருத்து) ஓ மஹர்ஷிகளே! உங்களால் கேட்கப்பட்டதும் மிக்க புண்யகரமுமான பரீக்ஷித்தின் சரிதத்தை ஸ்ரீ வாஸுதேவருடைய திவ்ய கதைகளுடன் சொன்னேன். ஆதலால் க்ஷேமத்தை விரும்பிய மனிதர்கள் பகவானுடைய குணங்கள், சரித்திரங்கள் ஆகிய இவைகளடங்கிய கதைகளையே சொல்ல வேண்டும். அவைகளையே கேட்க வேண்டும். மற்ற கதைகளை ஸேவிக்கக் கூடாதென்பது கருத்து, என்று ஸூதர் சொன்னார்.

11–18 இதனைக் கேட்டு மஹர்ஷிகள் அவரை நோக்கி, 'ஓ ஸூதரே! நீர் மரண தர்மமுள்ள எங்களுக்கு அமிருதமான ஸ்ரீ கிருஷ்ண கதையைச் சொன்னதால் வெகுகாலம் ஜீவித்திருக்கும் எங்களால் இப்பொழுது அனுஷ்டிக்கப்படும் ஸத்ரத்தை யாதொரு குறைவுமின்றி முடிப்பது அரிதாகையால் அதன் பூர்ண பலத்தை அடைவோமென்பது நிச்சயமில்லை, ஆகிலும், அதனைச் செய்து கொண்டு புகையினால் கறுத்த சரீரமுள்ள வர்களாகிக் கஷ்டப்படும் எங்களுக்கு ஸ்ரீ கோவிந் தருடைய பாதங்களாகிய தாமரை மலரின் தேனைக் கொடுத்தீரல்லவா? பகவத் பக்தர் களுடைய சேர்க் கையின் சிறிது பாகத்திற்குச் ஸ்வர்க்கமாவது, மோக்ஷமாவது, மற்ற ராஜ்யம் முதலியவைகளாவது ஸமமானவையல்ல. மஹான்களுக்கு முக்கியமான

கதி பரம புருஷனே. அவரிடத்தில் ப்ராகிருத குணங்களில்லை. அவரிடத்தில் பொருந்தியிருக்கும் கல்யாண குணங்கள் இவ்வளவென்று பரமசிவன், ப்ரஹ்மா முதலிய தேவர்களாலும் அறிய முடியவில்லை. அப்பேர்ப்பட்ட பகவானுடைய கதையைக் கேட்டு ரஸிகனான எவன்தான் போதுமென்று திருப்தி அடைவான்? ஆதலால் பகவத் பக்தர்களுக்குள் முக்கியரும் எல்லாவற்றையு மறிந்தவருமான நீர் மிக்க கம்பீரமாயும், பரிசுத்தமாயுமுள்ள மஹா விஷ்ணுவின் சரிதத்தைக் கேட்க விரும்பும் எங்களுக்கு விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும். மஹா பாகவத சிரோமணியான அந்தப் பரீக்ஷித்து மஹாராஜன் சுகரால் உபதேசிக்கப்பட்ட ஞானத்தால் மோக்ஷமென்ற பெயருள்ள ஸ்ரீ நாராயணனுடைய சரணத்தையடைந் தாரல்லவா? மிகுந்த புண்யத்தைக் கொடுப்பதும், மிகவும் அற்புதமுமாகிய யோகத்தைக் காட்டுவதும், நாசமற்றவராகிய பகவானுடைய சரீரத்தால் அலங்கரிக் கப்பட்டதும், பக்த பக்தர்களுக்கு மனோஹரமாய், பரீக்ஷித்துக்குச் சுகரால் உபதேசிக்கப்பட்டதுமான ஸ்ரீமத் பாகவதமென்ற ஆக்யானத்தை நன்றாகத் தெரியும்படி சொல்ல வேண்டும் என்று ப்ரார்த்தித் தார்கள்.

18–23 இதனைக் கேட்டு ஸூதர் சொல்லுகிறார். ஆச்சரியம், யான் விலோம ஜாதியுள்ளவனானாலும் என்னுடைய பிறப்பும் இப்பொழுது பெரியோர்களைச் ஸேவித்ததால் சபலமாயிற்று. மிக்க மகான்களாகிய புருஷர்களுடன் பேசக் கூடிய பாக்யம் கிடைத்த தாலேயே தாழ்ந்த குலத்தில் பிறந்ததால் உண்டான மனக்கவலை நீங்கியது. எந்தப் புருஷன் அளவற்ற

சக்தி, அளவற்ற குணங்கள் ஆகிய இவைகளுள்ளவரோ, நாசமற்றவரோ; அதனால் அனந்தரென்று சொல்லப் படுகிறாரோ, மகான்களுக்கு முக்கிய கதியாயிருக்கும் அந்தப் புருஷோத்தமருடைய குணங்களைச் சொல்லுகிற எனக்குத் துக்கமே நேரிடாது. லக்ஷ்மீ தேவியானவள் தன்னைப் ப்ரார்த்திக்கும் ப்ரஹ்மா முதலிய தேவர்களை லக்ஷியம் செய்யாமல் தன்னை விரும்பாதவரான ஸ்ரீ நாராயணனுடைய பாததூளியை சேவிக்கிறாள். அவருக்குச் சமமானவராவது, மேற்பட்ட வராவது ஒருவருமில்லை. இதனாலேயே அவருடைய மஹிமை நன்றாக விளங்கும். தவிரவும், எவருடைய சரண நகத்திலிருந்து பெருகியதும், ப்ரஹ்மதேவரால் சேவிக்கப்பட்டதுமான கங்காஜலம் பரமசிவன் முதலிய எல்லோரையும் பரிசுத்தப்படுத்துகிறதோ, அந்த முகுந்தனைத் தவிர வேறு யாரைப் பகவான் என்று சொல்லக்கூடும்? அந்த ஸர்வேசனிடம் அந்தரங்கத்தைச் செலுத்தியவர்கள் தைர்யமுள்ள வர்களாகத் தேகம் முதலியவைகளில் வெகுநாளாக உண்டாகியிருக்கும் விசேஷ அபிமானத்தை யொழித்து, அஹிம்சை, சமம் இவைகளுடன் கூடி பரமஹம் சர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆனதால் ஸூர்யனுக்குச் சமமான தேஜஸுள்ள ஓ மஹர்ஷிகளே! பகவான் உடைய சரிதத்தைச் சொல்லுகிறேன். பறவைகள் தம்முடைய சக்திக்குத் தக்கபடி ஆகாயத்தில் பறக்குமே அல்லாமல் வெகு உயரத்தில் சக்தியை மீறிப் பறக்க அவைகளால் முடியுமா? வித்வான்கள் தமது புத்திக்கு எட்டியவரையில் மஹாவிஷ்ணுவின் லீலைகளை வர்ணிக் கிறார்கள். அப்படிப்போல எனக்குத் தெரிந்தவரையில் பகவானுடைய சரிதத்தைச் சொல்லுகிறேன் என்று பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்.

24–31 பரீட்சித்து மஹாராஜன் ஒரு நாள் காட்டில் வேட்டையாடி வரும்போது மிருகங்களை நாடிச் சென்றதால் மிகுந்த பசி தாகமுள்ளவராய், ஏரி குளங்களைத் தேடிப் போகும்போது ஒரு ஆசிரமத்தைக் கண்டார். பின்பு அதனுள் சென்று அவ்விடத்தில் கண்களை மூடிக்கொண்டு நிஷ்டையிலிருக்கும் ஒரு மஹர்ஷியைக் கண்டார். அந்த மஹர்ஷி இந்திரியங் களையும் ஸ்வாசத்தையும் அடக்கிக் கொண்டிருந்தார். அவருடைய புத்தியானது விஷயங்களிற் செல்ல வில்லை. ஜாக்ரத், சுவப்னம், சுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளையும் தாண்டி விகாரமற்ற ப்ருஹ்ம ஸ்வரூபியாயிருந்தார். அவருடைய ஜடைகள் நாலு பக்கங்களிலும் அவரை மறைத்துக் கொண்டிருந்தன. தவிரவும் மானின் தோலைப் போர்த்துக் கொண்டு இருந்தார், அவரை நோக்கி அரசன் மிகுந்த தாகத்தால் அதிக வருத்தப்பட்டுத் தண்ணீர் கொடுக்கும்படி பல தரம் வேண்டிக்கொண்டார். இப்படி மகாராஜன் கேட்டு அவருக்கு குடிக்க நீர் கொடாமலிருந்தது இன்றி ஆசனங் கொடுப்பது உட்காருவதற்கு இடம் காட்டுவது. அர்க்கியம், ப்ரியமான வார்த்தை முதலியவைகளாலும் அவரை உபசரிக்கவுமில்லை. அப்பொழுது அரசன், 'மஹர்ஷி தம்மை அவமதித்தார்' என்று நினைத்துப் பசி, தாகம் இவைகளால் துன்பப்பட்டவராகையாலும் அவருக்கு மஹர்ஷியினிடம் கோபமும் விரோதமும் உண்டாயின. இம்மாதிரியான கெட்டகுணம் இதற்கு முன் நேர்ந்தது இல்லை, பின்பு அரசன் ஆசிரமத்திலிருந்து வெளியில் வரும்போது, 'இந்த மஹர்ஷி உண்மையில் நாம், வந்தது தெரியாமல் நிஷ்டையிலிருக்கிறாரா, அல்லது க்ஷத்திரியன் வந்தாலென்ன, போனாலென்னவென்று

கபடமாகக் கண்களை மூடிக்கொண்டிருக்கிறாரா? என்று பரீட்சிப்பதற்காக உயிரிழந்த ஒரு பாம்பை வில் கழியின் நுனியால் தூக்கி அவருடைய கழுத்தில் போட்டுத் தமது பட்டணம் சென்றார்.

32–38 அப்பொழுது மிகுந்த தேஜஸ்வியான சிருங்கி யென்னும் அந்த மஹர்ஷியின் புத்திரன் தோழர் களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அந்த இடத்தில் அரசன் செய்த காரியத்தைக் கேள்விப் பட்டு, தன் தோழர்களை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானான்." ஆச்சரியம் அதர்மம் மேலிட்டது. நாய்களைக் காவலுக்காக வைப்பதுபோல க்ஷத்திரியர்களைப் ப்ராஹ்மணர்கள் காவலாளர்களாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். வாசலில் காத்துக்கொண்டு இருக்கும் அவன் எப்படி பூஜிக்கத் தக்கவனாவான்? பலியைப் புஜிக்கும் காக்கைகள் போலும் (ஜனங் களால் கொடுக்கப்படும் வரியைக் கொண்டு ஜீவிப்பவ னென்பது கருத்து). வாசலைக்காத்திருக்கும் நாய்கள் போன்ற கொழுத்த க்ஷத்திரியர்கள் யஜமானனுக்குக் குற்றஞ்செய்யும்படி நேர்ந்ததே. கெட்ட மார்க்கத்தில் சஞ்சரிப்பவர்களைச் சிக்ஷிப்பவரான ஸ்ரீ கிருஷ்ண பகவான் வைகுண்டஞ் சென்றாலும் மரியாதை தவறினவர்களை நான் நிக்ரஹிக்கிறேன் என்னுடைய பலத்தைப் பாருங்கள் என்று சொல்லி கோபத்தால் கண்கள் சிவக்க, கௌசிகீ நதியின் ஜலத்தால் ஆசமனஞ் செய்து, என்னுடைய பிதாவிற்கு அபராதஞ் செய்தவனும், மரியாதை தவறினவனும், குலத்திற்கு நெருப்புத் தணல் (குலத்தைக் கெடுப்பவனென்று கருத்து) போன்றவனுமாகிய அரசனை இது முதல் ஏழாவது நாளில் தக்ஷகன் கடித்து எரிந்து விடுவானாக

என்று சபித்தான். பின்பு ஆசிரமம் வந்து அந்த இடத்தில் பிதாவின் கழுத்தில் சர்ப்பத்தைக் கண்டு மிகவும் துக்கப்பட்டுக் கதறினான்.

38–39 1/2 இதைக் கேட்டு சமீகரென்னும் அந்த மஹர்ஷியானவர் மெள்ள கண்களைத் திறந்து தம்முடைய தோளில் உயிரில்லாத பாம்பிருக்கக்கண்டு அதனை எடுத்து எறிந்துவிட்டுத் தமது புத்திரனை நோக்கி, 'ஓ குழந்தாய் ஏன் அழுகிறாய்? எவர்கள் உனக்கு எவ்விதக் குற்றத்தைச் செய்தார்கள்?' என்று கேட்டார்.

40–50 1/2 அதனைக் கேட்டு, சிருங்கியென்பவர் நடந்த விஷயம் எல்லாவற்றையும் உண்மையாகத் தெரிவித்தார். அதனைக் கேட்டும் மஹர்ஷியானவர் தம்முடைய புத்திரன் மகாராஜனைச் சபித்தது உசிதமல்லவென்று நினைத்து, அவனை நோக்கிப் பின்வருமாறு தர்மத்தின் இரகசியத்தை உபதேசித்தார். ஓ ஒன்றையு மறியாதவனே! அரசன் செய்த சிறு குற்றத்திற்காகப் பெரிதாகிய சிக்ஷையைச் செய்தது உசிதமன்று. பெரியதாகிய பாபத்தைச் செய்தாய். ஓ விவேகமற்றவனே! அரசன் மகாவிஷ்ணுவின் அம்சம் உள்ளவனாகையால் அவனைச் ஸாமானிய மனிதனாக நினைக்கக் கூடாது. அவனுடை தேஜஸ் ஸகிக்க முடியாதது. அவனால் காப்பாற்றப்பட்டு ஜனங்கள் ஒருவரிடத்திலும் பயமில்லாதவர்களாக வசிக்கிறார்கள். மகாவிஷ்ணுவின் அம்சமுள்ள அவ்வரசனில்லாவிடில் ஜனங்கள் ஆடுகளின் கூட்டம்போல் க்ஷணகாலத் திற்குள் நாசமடைவார்கள். தேசத்தில் அரசனில்லாத வரையில் ஜனங்களுடைய தனங்களை அபகரிக்கும்

திருடர்கள் மிகுதியாய் விடுவார்கள். ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்வார்கள். கடுமையாகப் பேசுவார்கள். பசுக்கள், ஸ்திரீகள், பணங்கள் ஆகிய இவைகளை அபகரிப்பார்கள். ஆகையால் அதனாலுண்டாகும் பாபம் நம்மைச் சேர்ந்ததாகும். (அரசனைச் சபித்தாலென்பது கருத்து) மேலும், வர்ணாசிரம தர்மங்கள் குறைந்து விடும். நல்லொழுக்கம் மறைந்துவிடும். நாய்கள் போலவும், குரங்குகள் போலவும் அர்த்தம், காமம் இவைகளிலேயே ஜனங்கள் மிகவும் ஆசை கொள்வார்கள். அதனால் வர்ண ஸங்கரம் உண்டாகும், தவிரவும் பரீக்ஷித் மகாராஜனோ தர்மத்தைக்காப்பாற்றி கிறவர். சக்ரவர்த்தி, மிகுந்த கீர்த்தியுள்ளவர், பகவத் பக்தர். அச்வமேத யாகஞ் செய்தவர். மேலும் என்னிடம் வந்த சமயத்தில் பசி தாகத்தால் ச்ரமம் அடைந்து தீனராயிருந்தவர். ஆனது பற்றி அவரைச் சபிப்பது நியாயமல்ல. குற்றஞ்செய்யாத வேலைக்காரர் களிடம் செய்த அபராதத்தைச் ஸகல ஜகத்ரூபியான பகவான் பொறுத்துக் கொள்ளட்டும். விஷ்ணு பக்தர்களை ஒருவன் நிந்தித்தாலும், ஏமாற்றினாலும், அவமதித்தாலும், அடித்தாலும் அவர்கள் ப்ரதி செய்ய சாமர்த்தியமுள்ளவர்களானாலும் ஒன்றுஞ் செய்கிறதில்லை என்று சொல்லித் தமது புத்திரன் செய்த குற்றத்தைப் பற்றி மஹர்ஷி பச்சாதாப மடைந்து, அரசன் செய்த குற்றத்தை மனத்தில் நினைக்காமலேயே இருந்தார். பெரும்பாலும் சாதுக்கள் பிறர் செய்த கெடுதியால் அவர்களிடத்தில் கோபித்து வருத்தமடைகிறதில்லை. உபகாரத்தால் சந்தோஷம் அடைகிறதுமில்லை. ஏனென்றால் ஆத்மாவானது உண்மையில் சுகத்திலாவது துக்கத்திலாவது ஸம்பந்திக்கிறதில்லை.

அத்தியாயம்-19

கங்கைக்கரைக்குச் சுகர் வந்தது

பரீக்ஷித்து மகாராஜன் தம்முடைய பட்டணஞ் சென்ற பிறகு மஹர்ஷியின் ஆசிரமத்தில் தாம் செய்து வந்த குற்றத்தை நினைத்து வருத்தப்பட்டுத் தமக்குள் தாம் பின்வருமாறு யோசிக்கலானார்: 'யாதொரு அபராதமுஞ் செய்யாதவரும், தேஜஸ்ஸை அடக்கிக் கொண்டவருமான தபஸ்வியினுடைய கழுத்தில் ஸர்ப்பத்தைப் போட்டேன். அது மிகக் கெட்ட கார்யம். 'பாபத்தைச் செய்யக்கூடாது' என்ற தெய்வத்தின் கட்டளையை மீறினதாக ஆயிற்று, ஆனதால் தடுக்க முடியாத துக்கம் சீக்கிரத்தில் நேரிடும். இனி நான் இப்படிப்பட்ட கெட்ட காரியத்தைச் செய்யாமல் இருப்பதற்காகவும், செய்த பாபத்திற்குப் ப்ராயச்சித்த மாகவும் அந்தத் துக்கம் எனக்கே நேரில் வரவேண்டும் (புத்திரன் முதலியவர்களுக்கும் நேரிட வேண்டாம் என்பது கருத்து) நான் ப்ராஹ்மணர்களுக்குக் கோபத்தை யுண்டுபண்ணினதால் ப்ராஹ்மண குலமாகிய அக்னி யானது மிக்க பாபியான என்னுடைய இராஜ்யம், சைன்யம், பூர்ணமான செல்வம் ஆகிய இவைகளை இப்பொழுதே எரிக்கட்டும். ப்ராஹ்மணர்கள், தேவர்கள் பசுக்கள் ஆகிய இவர்கள் விஷயத்தில் மறுபடியும் எனக்கு இப்படிப்பட்ட கெட்ட புத்தி யுண்டாக வேண்டாம் என்று சிந்தித்தார்.

4-17. இந்தச் சமயத்தில் சமீக மஹர்ஷியின் சிஷ்யன் ஒருவன் குருவின் அனுமதிப்படி வந்து, சிருங்கியின்

சாபத்தை அரசனிடம் தெரிவித்தான். அதனைக்கேட்டு மகாராஜன் 'விஷயங்களில் மிகுந்த ஆசையுள்ள நான் வைராக்யமடைவதற்குத் தட்சகனுடைய விஷாக்னியே காரணமென்றும், அது சீக்கிரமாக நேரிடவேண்டும்' என்றும் நினைத்தார். பின்னுமவர் இவ்வுலகம், பரலோகம் ஆகிய இவ்விரண்டையும் துச்சமென்று தள்ளிவிட்டு, ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதஸேவையையே பெரிதாக நினைத்துக் கங்கைக் கரையில் பிராயோபவேசஞ் செய்ய முயற்சித்தார். எந்த நதியானது துளஸியுடன் சேர்ந்த மகாவிஷ்ணுவின் பாததூளியை விட மிக்க புண்யகரமான ஜலப்பிரவாகமுள்ளதோ, லோகபாலர்களுட்பட எல்லாரையும் வெளியிலும் அந்தரங்கத்திலும் பரிசுத்தப் படுத்துகிறதோ, அந்தக், கங்காநதியைச் சாகுந் தருணத்திலிருக்கும் எவன்தான் ஸேவிக்க மாட்டான்? இப்படி அந்த நதிக்கரையில் பிராயோபவேசஞ் செய்வதாகத் தீர்மானித்து வேறு விஷயத்தில் மனதைச் செலுத்தாமல் ஸ்ரீ கிருஷ்ணன் உடைய சரணங்களையே தியானித்து, ஸகல ஆசை களையும் விட்டுவிட்டு முனியாக விருந்தார். அப்பொழுது அத்ரி, வசிஷ்டர், ச்யவனர், சரத்வான், அரிஷ்டநேமி, ப்ருகு, ஆங்கிரஸ், பராசரர், விசுவாமித்ரர், பரசுராமர், உதத்யர், இந்திரப்பரதமர், இத்மவாஹர், மேதாதிதி, தேவலர், ஆர்ஷ்டிஷேணர், பரத்வாஜர், கௌதமர், பிப்பலாதர், மைத்ரேயர், ஔர்வர், கவஷர், அகஸ்தியர், த்வைபாயனர், பகவானான நாரதர் மற்ற தேவரிஷிகள் ப்ரஹ்மரிஷிகள், ராஜரிஷிகள், அருணர் முதலியவர்கள் ஆகிய இவர்களெல்லோரும் தங்கள் தங்கள் சிஷ்யர் களுடன் அவ்விடம் வந்தார்கள். அவர்களெல்லோரும் தீர்த்தயாத்திரை செய்கிறோம் என்று வ்யாஜமாக லோகத்தைப் பரிசுத்தி செய்துகொண்டு சஞ்சரிப்பவர்கள்.

அப்பொழுது அவ்வரசன் பலவகையான ரிஷி கோத்தரத்தில் சிறந்தவர்களான அவர்களை முறை தவறாமல் பூஜித்து நமஸ்காரஞ் செய்தார். அவர்கள் சுகமாக உட்கார்ந்தபொழுது பின்னுமவர்களுக்கு நமஸ்காரஞ் செய்து அவர்கள் முன்பாக இரு கை களையும் கூப்பிக்கொண்டு சுத்த சித்தமுள்ளவராய்த் தமது இஷ்டத்தைப் பின்வருமாறு வெளியிட்டார். பெரியோர்களால் அனுக்ரஹிக்கக்கூடிய ஸ்பாவமுள்ள நான் மிகவும் தன்யனாகவிருக்கிறேன். ப்ராஹ்மணர் களுடைய சுத்தமான பாததீர்த்தத்தைபடையாத க்ஷத்திரிய குலம் நிந்திக்கக் கூடியதே. மிக்க பாப ஸ்பாவமுள்ள வனும், ஸம்சார ஸுகத்திலேயே எப்பொழுதும் ஆசையை வைத்தவனுமான எனக்கு வைராக்யத்தை யுண்டுபண்ணுவதற்காகவே ப்ராஹ்மண சாபம் நேரிடும்படி செய்து பரமபுருஷன் என்னையனு க்ரஹிக்கிறார். பகவானையே மனத்தில் த்யானிக்கிறேன். மேலும் பெரியோர்களான உங்களையும், கங்காதேவி யையும் சரணமடைகிறேன். ப்ராஹ்மண சாபத்தால் தூண்டப்பட்ட தக்ஷகன் என்னை வஞ்சித்து இஷ்டப் படி கடிக்கட்டும். நீங்கள் மகாவிஷ்ணுவின் சரிதத்தைக் கானம் செய்யுங்கள். நான் பின்பு எந்தச் சரீரத்தை யடைந்தாலும் அந்தந்த ஜன்மாவில் ஈசுவரனிடத்திலும் அவருடைய பக்தர்களிடத்திலும் எனக்கு விசேஷ சிநேக முண்டாகட்டும் என்று சொல்லித் தம்முடைய பிள்ளையான ஜன்மேஜயரிடம் இராஜ்யத்தைஒப்பித்து. கங்கையின் தென் கரையில் தர்ப்பங்களைக் கிழக்கு நுனியாகப் பரப்பி, அவைகளின் மீது வடக்கு முகமாய் வீற்றிருந்தார்.

18–21. இப்படி அரசன் ப்ராயோபவேசஞ் செய்த

பொழுது தேவர்கள் அனைவரும், அவரைக் கொண்டாடிப் புஷ்பங்களை வர்ஷித்தார்கள், துந்துபி வாத்தியங்களை முழங்கினார்கள். தவிர, பிரஜைகளையனுக்கிரஹிக்கும் ஸ்வபாவமுள்ள அவ்விடம் வந்திருந்த மஹர்ஷிகள் அவரைச் சிலாகித்து ஸாதுவாதஞ் செய்து அவரை நோக்கி, 'ராஜ ச்ரேஷ்டரே கிருஷ்ண பகவான் இடத்தில் விசேஷ பக்தியுள்ளவரும், இராஜ்யம் முதலியவைகளில் ஆசையில்லாதவருமான பாண்டவ குலத்தில் பிறந்த உமக்கு இம்மாதிரி எண்ணம் நேர்ந்தது இயல்பேயாம்' என்று சொல்லி அவர்கள் ஒருவருக்கொருவர் இந்தப் பாகவத சிரோமணியான சக்ரவர்த்தி இந்தச் சரீரத்தை விட்டு மாயா ஸம்பந்தமில்லாததும், துக்கமற்றதுமான பரமபதத்தை அடையப்போகிறபடியால் அது வரையில் நாம் எல்லோரும் இவ்விடத்திலேயே வசிப்போம் என்று நிச்சயித்துக்கொண்டார்கள்.

22–24. அப்பொழுது பக்ஷபாதமில்லாததும், தேன் போல ரஸமுள்ளதும், கம்பீரமாகிய அர்த்தமுள்ளதும் உண்மையானதுமான மஹர்ஷிகளின் வார்த்தையைக் கேட்டு பரீக்ஷித்தானவன் மகாவிஷ்ணுவின் சரிதத்தைக் கேட்க விரும்பியவராய் அவர்களை நோக்கி, ஸத்ய லோகத்தில் சரீரத்துடன் இருக்கும் வேதங்கள் போல நீங்கள் அனைவரும் இவ்விடம் வந்தீர்கள். பிறரை அனுக்ரஹிப்பதை விட வேறு பிரயோஜனம் இவ் வுலகத்திலும், மேலுலகத்திலும் உங்களுக்கில்லை. ஆகையால் உங்களைக் கேட்கிறேன். சாகுந்தருணத்தில் இருப்பவர்கள் செய்யவேண்டிய சுத்தமாகிய தர்மம் யாது? யோசித்து சொல்லுங்கள் என்று கேட்டார்.

25–39. அந்தச் சமயத்தில் வ்யாஸருடைய புத்திரர்

ஆகிய சுகர் அவதூத வேஷமுள்ளவராய், பாலர் களுடன் தெய்வச்செயலாய் அவ்விடம் வந்தார். அவரிடத்தில் ஆசிரமத்துக்குரிய அடையாளமாவது ஜாதியைக் காட்டும் குறியாவது யாதொன்றுமில்லை. அவர் ஆத்ம லாபத்தாலேயே சந்தோஷமடைந்தவர். அப்பொழுது பதினாறு வயதுள்ளவராயிருந்தார், அழகான கைகளும், கால்களும், தொடைகளும், தோள்களும். கன்னங்களும், கண்களும், உயர்ந்த மூக்குகளும், சமமான காதுகளுமுடையவராய்ப் பிரகாசித்தார். சதைகளில் மறைந்த நரம்புகளுள்ளவர், விசாலமும் உயர்ந்ததுமான மார்புள்ளவர், சுழல்போன்ற நாபி யுள்ளவர். மூன்று மடிப்புகளால் அழகான வயிறு உள்ளவர், திக்குகளையே வஸ்திரமாகக் கொண்டவர். சுருண்டும் பரந்து மிருக்கும் தலைமயிருள்ளவர். மிகவும் மேலான யௌவன முள்ள வயதுள்ளவராகையால் ஸ்திரீகளுடைய மனதை அபஹரிப்பவர். அழகான சிரிப்புள்ளவர். இப்படிப்பட்ட அவரைப்பார்த்து அவருடைய லக்ஷணத்தையறிந்தவர்களான மஹர்ஷிகள் எதிர்கொண்டழைத்தார்கள். அப்பொழுது சக்ரவர்த்தி ஆனவர் வந்த அதிதியாகிய சுகருக்கு நமஸ்காரம் செய்தார். பின்பு அவருடன் வந்த அக்ஞர்களான ஸ்திரீகளும் பாலர்களும் திரும்பி போனார்கள். சுகர் பெரிதான ஆஸனத்தில் உட்கார்ந்தார். அப்பொழுது ப்ரஹ்மரிஷிகள், தேவரிஷிகள், ராஜரிஷிகள் இவர் களுடன் மத்தியிலிருக்கும் சுகர் சுக்ரன் முதலிய கிரகங்களுடையவும் அசுவினி முதலிய நட்சத்திரங்களு டையவும், மற்ற தாரைகளுடையவும் நடுவிலிருக்கும் சந்திரன் போலவும் பிரகாசித்தார். இப்படி சாந்தமனம் உள்ளவரும் தடையற்ற மேதையுள்ளவருமான சுகரை மகா பாகவதரான பரீட்சித்து மகாராஜன் பின்னும்

நமஸ்கரித்து அஞ்சலிபந்தம் செய்து, தலைவணங்கி, ஸாவதானமாய் நின்று, பின்வருமாறு மிருதுவாகச் சொல்லலானார்; ஓ பிராஹ்மண! க்ஷத்திரியனாகிய நான் ஸாதுக்களால் ஸேவிக்கக்கூடியவனாகிறேன், என்னுடைய பாக்கியம் வியக்கத்தக்கது, நீங்கள் அதிதியாக வந்து கிருபையால் என்னைப் பரிசுத்தப் படுத்தினீர்கள்; பாதத்தை வைத்தமாத்திரத்தில் வீடு முதலிய யாவும் பரிசுத்தமாய் விடக்கூடிய உங்களைத் தரிசித்தலாலும் ஸ்பர்சித்தலாலும், உங்களுடைய பாதங்களை அலம்புதலாலும்' ஆஸனங்கொடுத்த தனாலும் யான் பரிசுத்தமடைவதில் யாது சந்தேகம்? விஷ்ணுவைக் கண்ட அசுரர்கள் போலத் தங்களைத் தரிசித்த மாத்திரத்தில் மகா பாபங்களும் உடனே நீங்குகின்றன, பாண்டவர்களிடத்தில் மிகுந்த ப்ரியம் உள்ள ஸ்ரீ கிருஷ்ண பகவான் என்னிடத்தில் சந்தோஷமடைந்தார், அத்தையின் குமாரர்களிடம் மிகுந்த பிரியத்தால் அந்த வம்சத்தில் பிறந்த எனக்கும் தங்களுடைய தரிசனத்தைச் செய்வித்தார். அவருடைய அனுக்ரஹமில்லாமற் போனால் உங்களுடைய தரிசனம் மரணமடைய சித்தனாயிருக்கும் எனக்குக் கிடைக்குமா? தாங்கள் ஸித்தர்கள். உங்களுடைய பக்தியோ கண்டுபிடிக்க முடியாதது; நீங்கள் மிகவும் தாதாவாகையால் எல்லோரையும் யாசிக்க செய்பவர், ஆகையால் ஸித்திப் பெற்றவரும், யோகிகளுக்குப் பரம குருவுமாகிய உங்களை ஒரு விஷயம் கேட்கிறேன், அஃதாவது, 'மரணமடையும் ஸமயத்தையுடைய வன் என்ன செய்யவேண்டும்? எதனைக் கேட்கவேண்டும் எதனை நினைக்கவேண்டும்? எதனை உபாஸிக்க வேண்டும்? எவற்றைச் செய்யக்கூடாது? இவைகளைச் சொல்லவேண்டும்? நீங்கள் கிருகஸ்தர்களுடைய

வீட்டில் மாடு கறப்பதற்கு எவ்வளவு காலம் செல்லுமோ அவ்வளவு காலம் கூட நிற்கிற வழக்கம் இல்லையே: ஆனதால் சீக்கிரம் சொல்லவேண்டும் என்று பிரார்த்திதார்.

40. இந்தப்படி பரீக்ஷித்து மகராஜனால் கேட்கப் பட்டவுடன் ஸகல தர்மங்களையுமறிந்த சுகர் ப்ரத்யுத்தரம் சொல்லவாரம்பித்தார்.

♣ ♣ ♣ ♣

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்கந்தம் 2

அத்தியாயம் 1

விராட் புருஷனுடைய அவயவங்கள்

சுகமஹர்ஷியானவர் பரீக்ஷித்து மஹாராஜனைப் பார்த்து ' ஓ அரசனே! உம்மால் கேட்கப்பட்ட கேள்வி மிகவும் மேலானது. உலகத்திற்கு அனுகூலத்தைச் செய்யக்கூடியது; ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்தவர்கட்குப் பிரியமானது; கேட்கத்தகுந்தவைகள், சொல்லத் தகுந்தவைகள், நினைக்கத்தகுந்தவைகள் ஆகிய இவை களில் இது மிகவும் சிறந்தது. ஓ ராஜசிரேஷ்டரே! ஆத்ம ஸ்வரூபத்தையறியாதவர்களும், ஐந்து வகையான, இம்சைகளைச் செய்பவர்களுமான கிருஹஸ்தர்களுக்குக் குருமுகமாகத் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் அனேகமிருக்கின்றன. (மோக்ஷத்தை விரும்பியவர்கள் தெரிந்து கொள்ளக்கூடியது, ப்ரஹ்மம் ஒன்றுதான் என்று தாத்பரியம்.) மேலும் ஜனங்களுடைய ஆயுளானது இரவில் தூக்கத்தாலும் பகலில் பணத்து ஆசையாலும், கிடைத்த பணத்தால் குடும்பத்தைப் போஷிப்பது முதலியவைகளாலும், யௌவனமானது மைதுனத்தாலும் வீணாகக் கழிக்கப்படுகிறது. பின்னும் ஜனங்கள் அநித்யங்களான தேகம், குழந்தைகள், பார்யை ஆகிய ஸாமக்ரியைகளில் மிகுந்த அபிமானம் வைத்திருக்கிறார்கள். மேலும் அவர்கள் சரீரம் முதலியவைகள்நாசமடைவதை நேரில் பார்த்திருந்தும்

அவைகளை நித்யங்களென்றே நினைக்கிறார்கள். ஓ பரத வம்சத்தில் பிறந்தவரே! ஸகல ஜகத் ஸ்வரூபியும் அவை களுக்கு அதிபதியும், ஸம்ஸாரத்தைப் போக்கடிப்ப வராயுள்ள புருஷோத்தமருடைய சரிதத்தையே கேட்க வேண்டும். அதுவே மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியது. அதுவே உச்சரிக்கக்கூடியது. மனனஞ் செய்யக்கூடியது. எவன் மரணமடையும் சமயத்தில் நாராயணனை ஸ்மரிக்கிறானோ அதுவே அவனுக்கு உத்தமமான லாபம். ஆத்ம ஸ்வரூப விசாரமாகிய ஸாங்கியம், அஷ்டாங்க யோகம், தன் ஜாதிக்கும் ஆசிரமத்திற்கும் உரிய தர்மங்கள் ஆகிய இவைகளை அனுஷ்டிப்பதால் மரண காலத்தில் ஸ்ரீமந் நாராயணனை ஸ்மரிக்கும்படி நேரும். அதுவே இந்த ஜன்மத்தின் ப்ரயோஜன மெனப்படுகிறது. ஓ மஹாராஜ! விதி நிஷேதங்களைக் கடந்தவர்களும், நிர்க்குண ப்ரம்ஹ ஸ்வரூபத்தை யறிந்தவர்களுமான முனிகளும் பெரும்பாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் குணங்களைத் தியானஞ் செய்து கொண்டே காலத்தைக் கழிக்கிறார்கள். ஆகையால் நான் த்வாபர யுகத்தின் கடைசியில் என்னுடைய பிதாவாகிய வ்யாஸ மஹர்ஷியினிடமிருந்து ப்ரஹ்ம ஸ்வரூபத்தை தெரிவிக்கும் இந்த ஸ்ரீமத் பாகவத புராணத்தை அத்யயனஞ் செய்தேன். ஓ ராஜரிஷியே! நான் இயற்கையில் ப்ரஹ்ம ஸ்வரூபத்தையறிந்த வனானாலும் உத்தமமான புண்யத்தைக் கொடுக்கும் பகவானுடைய சரிதத்தில் விசேஷ ப்ரேமையால் அந்த உபாக்கியானத்தை அப்யஸித்தேன். நீர் மஹாபுருஷனாகிய விஷ்ணுவின் பக்தராகையால் உமக்கு அதைச் சொல்லுகிறேன். அதில் சிரத்தை யுள்ளவர்களுக்கு முகுந்தரிடத்தில் (மோக்ஷத்தைக்

கொடுப்பவர்) பக்தியுண்டாகும். விஷயங்களில் நிர் வேதத்தையடைந்தவர்களும் மோக்ஷத்தை விரும்பியவர் களுமான யோகிகளுக்கு மஹாவிஷ்ணுவின் திவ்ய நாமங்களைக் கானம் பண்ணுவதே அபயத்தைக் கொடுக்கக்கூடியது: ஆதலால் ஸித்தர்களுக்கும், ஸித்தியடைய வேண்டியவர்களுக்கும் இதை விட அனுகூலமான மார்க்கம் வேறில்லை. புத்திரன் முதலிய வர்களிடத்தில் அபிமானம் வைத்து அறியாமலே வீணாகக் கழிக்கப்பட்ட அனேக வர்ஷங்களால் என்ன பிரயோசனம்? எந்தக் காலத்தில் ஆயுளானது வீணாகக் கழிக்கப்படுகிறதென்று தெரிந்துகொள்ளு கிறானோ அந்தக் காலமே மேலானது.

அதனால் நல்ல காரியத்தைச் செய்ய முயற்சி யுடையவனாவான். முன்னொரு காலத்தில், கட்வாங்கன் என்ற ஒரு ராஜரிஷியானவர் (தேவாஸுர யுத்தத்தில் தேவர்களுடைய பக்ஷத்திலிருந்து அஸுரர்களை ஜயித்தார். அப்பொழுது அவரிடத்தில் தேவர்கள் ஸந்தோஷப்பட்டு 'வேண்டியதைக் கேளும், என்றார்கள். கட்வாங்கன் 'நான் எத்தனை காலம் ஜீவித்திருப்பேன், என்று கேட்டான். பின்பு தேவர்கள், இன்னும் ஒரு முஹூர்த்தந்தான் உன்னுடைய ஆயுளில் பாக்கி இருக்கிறது' என்று பதில் சொன்னார்கள்.) தம்முடைய ஆயுளில் மீதியிருக்கும் காலம் இவ்வளவு என்று தெரிந்து கொண்டு ஒரு முஹூர்த்தத்துக்குள் ஸகல ஆசைகளையும் ஒழித்து, ஸ்ரீ மஹாவிஷ்ணுவைச் சரணமடைந்து அவருடைய ஸாயுஜ்யத்தை அடைந்தார். ஓ மஹாராஜ! உமக்கு இது முதல் ஏழு நாள் ஆயுள் இருக்கிறது, ஆகையால் பரலோகத்தில் ஸுகத்தைக் கொடுக்கும் கார்யத்தைச் செய்யும்.

மரணகாலம் ஸமீபித்தபோது புருஷன் பயமில்லாத வனாகப் புத்திரர்களிடத்தில் தான் வைத்திருந்த அபி மானத்தை வைராக்கியமாகிய ஆயுதத்தால் நாசஞ் செய்ய வேண்டும். மேலும் ஸன்யாஸஞ் செய்து கொண்டு புத்திரன் முதலியவர்களை விட்டுப் பிரிந்தோமே என்று விசாரப்படாமல், கங்கை முதலிய புண்ய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து, ஜனங்களுடைய நெருக்கமில்லாத சுத்தமான விடத்தில் விதிப்படி ஆஸனத்தில் உட்கார்ந்து ப்ரஹ்மத்தைத் தெரிவிக்கும் மூன்று அக்ஷர ஸ்வரூபமாகிய ப்ரண வத்தைத்தியானிக்க வேண்டும். அதனால் சுவாஸத்தை ஜயித்து, ப்ரம்ஹ பீஜமாகிய ப்ரணவத்தை நினைத்துக் கொண்டே மனத்தை அடக்க வேண்டும். புத்தியாகிய (நிச்சயரூபமானது) ஸாரதியுள்ள புருஷன் மனத்தைக் கொண்டு (கடிவாளம்) (ரூபம், ரஸம், கந்தம், சப்தம், ஸ்பர்சம் ஆகிய) ஐந்து விஷயங்களில் செல்லும் இந்திரியங்களைத் தடுக்க வேண்டும். மேலும் கர்ம வாஸனைகளால் இழுக்கப்படும் மனித்தை மங்களத்தைக் கொடுக்கும் ஈசுவர ஸ்வரூபத்தில் புத்தியைக் கொண்டு செலுத்த வேண்டும். பின்னும் பகவத் ரூபத்தில் ஏதாவது ஒரு அவயவத்தை இடைவிடாமல் மனத்திற் கொண்டு த்யானிக்க வேண்டும். பிறகு அந்த மனத்தை பரப்ரஹ்மனிடத்தில் செலுத்தி, (பரமானந்த ஸ்வரூபமாகச் செய்து) வேறு ஒன்றையும் நினைக்காமல் இருக்க வேண்டும். எதனைத் தியானம் செய்ததால் மனமானது ஆசை முதலியவைகளால் கலங்காமல் தெளியுமோ அப்படிப்பட்டது ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பாதமேயாம். ஒருகால் ரஜோகுண சம்பந்ததால் கலக்கமும், தமோகுணத்தால் மோஹமும் மனத்திற்கு ஏற்படுமானால் அப்பொழுது தாரணையால் மனத்தை

அடக்க வேண்டும், அது ரஜோ குணம், தமோ குணம் ஆகிய இவைகளால் ஏற்படும் ஸகல தோஷங்களையும் போக்கக் கூடியது. த்யானஞ் செய்கிறவர்களுக்கு மேலான க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது (இவ்வளவு மஹாத்யமுள்ளது தாரணையென்று தாத்பர்யம்) என்று சொன்னார்.

22. இதைக் கேட்டு பரீக்ஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி, 'ஓ ப்ராஹ்மணோத்தம! எப்படி தாரணைச் செய்ய வேண்டும்? எதில் மனத்தைச் செலுத்த வேண்டும்? எப்படிப்பட்ட தாரணை மனத்தில் தோஷங்களைப் போக்கும்? அதனை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்' என்று கேட்டார்.

23–39 அதைக் கேட்டுச் சுகர் பின்வருமாறு பதில் சொல்லலானார். ஓ மஹாராஜ சாஸ்திரத்தில் சொல்லியபடி ஆஸனத்தை அடைந்து மூச்சை அடக்கி, அபிமானங்களை ஒழித்து, இந்திரியங்களை ஜயித்துப் பகவத் ஸ்வரூபமாகிய ஸ்தூல ப்ரபஞ்சத்தில் நிச்சய ரூபமாகிய புத்தியையும் மனதையும் செலுத்த வேண்டும். முன் கல்பத்திலிருந்ததும், இப்பொழுது இருக்கிறதும், அடுத்த கல்பத்தில் இருக்கக் கூடியது மான ப்ரபஞ்சமானது விராட் புருஷனுடைய ஸ்வரூ பத்தில் காணப்படுகிறது. அந்த பகவத் ஸ்வரூப மானது பெரியவைகளை விடப் பெரிதானது, அந்தப் புருஷனுக்கு இந்த ஜகத்தே சரீரமாயிருக்கிறது. மேலும் (மஹத்தத்வம், அஹங்காரம் ஐந்து பூதங்கள் ஆகிய) ஏழு ஆவரணங்களுள்ள அண்ட கோசமாகிய சரீரத்திலிருக்கும் புருஷனுக்கு வைராஜன் என்று பெயர். இவரே தாரணைக்கு ஆஸ்ரயமாயிருப்பவர்.

(ஸ்தூல ரூப தாரணையால் சூட்சும ரூபத்தில் பக்தி உண்டாகுமென்பது கருத்து) மேற்காட்டிய வைராஜ னென்னும் புருஷனுக்குப் பாதாளத்தைப் பாதமாகவும், ரஸாதலத்தைப் புறங்கால்களாகவும், மஹாதலத்தைப் பாதங்களின் இரு பக்கங்களாகவும், தலா தலத்தை கணைக்கால்களாகவும், ஸுதலத்தை இரு முழங்கால் களாகவும், விதலம் அதலம் ஆகிய இவைகளை இரண்டு தொடைகளாகவும், பூதலத்தை ஜகனமாகவும், ஆகாசத்தை நாபியாகவும் ஸ்வர்க்கத்தை மார்பாகவும், மஹர்லோகத்தைக் கழுத்தாகவும், ஜனலோகத்தை முகமாகவும், தபோ லோகத்தை நெற்றியாகவும், ஸத்ய லோகத்தைச் சிரஸ் ஆகவும் சொல்லுகிறார்கள். மேலும், அநேக சிரஸுள்ள அந்தப் புருஷனுக்கு இந்திரன் முதலிய தேவர்கள் கைகள். திக்குகளே அவருக்குக் காதுகள் (இந்திரிய கோளகங்கள்,) சப்தமே ச்ரோத்ரேந்திரியம்.

அந்தப் பரமபுருஷனுக்கு அச்வினீ தேவர்களே மூக்குகள், கந்தமே கிராணேந்திரியம். ஜ்வலிக்கும் அக்னியானது அவருக்கு முகமாகும். த்யுலோகமே கண்கள், ஸூர்யனே சக்ஷுரிந்திரியம், இரவும், பகலும் ஆகிய இரண்டும் இமைகள். சதுர்முக ப்ரஹ்மாவின் பதம் அவருடைய புருவ நெரித்தலாகும். ஜலத்திற்கு அபிமானியான வருணன் அவருக்கு முகவாய்க்கட்டை, ரஸங்களே அவருடைய நாக்கு, தேசத்தாலும், காலத்தாலும் அளவிடக் கூடாதவராகிய அந்தப் புருஷோத்தமனுக்கு வேதங்கள் சிரஸாக விருக்கின்றன. யமனே சிங்கப்பற்கள், ஸ்நேகத்தின் அம்சங்களே பற்கள். ஜனங்களை மோஹிக்கச் செய்யும் மாயையே அவருடைய சிரிப்பு. அவருடைய கடைக்கண்

பார்வையே அளவற்ற ஸ்ருஷ்டி. (ஸகல ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியானது பகவானுடைய கடாக்ஷ தீனமென்பது கருத்து). வெட்கமே மேலுதடு. உலோபமே கீழுதடு. தர்மமே ஸ்தனம், அதர்ம மார்க்கமே பின்பக்கம். ப்ரஜாபதிதேவரே அவருக்கு ஆண்குறி. மித்ரா வருணர்களே விருஷணங்கள், ஸமுத்ரங்கள் வயிறு. பர்வதங்களே அவருடைய எலும்புகள், கங்கை முதலிய நதிகளே அவருடைய நாடிகளாகின்றன. மரங்களே உரோமங்கள். ஓ ராஜ சிரேஷ்டரே! வாயு பகவானே அளவற்ற வீர்யமுள்ள வைராஜருக்குப் ப்ராணன். காலமே அவருடைய (நடை) கதி. முக்குணங்களாலுண்டாகும் ஸம்ஸாரமே அவருக்குக் கர்மங்கள் அந்தப் பரமேச்வரனுக்கு மேகங்களே தலைமயிர்கள். ஓ பரீக்ஷித் மஹாராஜனே! ஸந்தியா காலங்கள் அந்தப் ப்ரபுவிற்கு வஸ்திரமாக விருக்கின்றன. அவ்யக்தமே (ப்ரதானம்) அவருக்கு ஹ்ருதயமாயிருக்கிறது. ஸகல ஓஷதிகளையும் வ்ருத்தி செய்யும் சந்திரனே மனஸ், மஹத் தத்வமே அவருடைய விஞ்ஞான சக்தி, ருத்ரனே அவருக்கு அந்தக்கரணம், குதிரை அசுவதரீ, (கழுதைக்கும் பெண் குதிரைக்கும் உண்டானது,) ஒட்டகம், யானை ஆகிய இவைகள் அவருக்கு நகங்கள், ஸகல மிருகங்களும், பசுக்களும் அவருடைய ஸ்ரோணிதேசம், பறவைகள் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும் அவருடைய வேலைத் திறமை, மனுவே புத்தி, மனித வர்க்கமே இருப்பிடம், கந்தர்வர்கள், வித்யாதரர்கள், சாரணர்கள், அப்ஸரஸ்திரீகள் ஆகிய இவைகளே ஷட்ஜம் முதலிய ஸ்வர ஸ்மிருதிகள், அஸுர ஸைன்யமே அவருடைய பராக்ரமத்திற்கு இருப்பிடம். ப்ராஹ்மணர்களே அவருக்கு முகம், க்ஷத்திரியர்களே கைகள், வைசியர்களே தொடைகள், சூத்ரர்களே

பாதங்கள் (சித்தம் ஸ்திரமாக இருப்பதற்காக விராட், ஜீவன், ஈசுவரர் ஆகிய இவர்களை ஒன்றாக உபாஸிக்க வேண்டு மென்பது கருத்து) மேலும் பலவகையான பெயருள்ள வஸுருத்ரர்கள் முதலிய தேவர்களுடன் ஹவிஸினால் செய்யக்கூடிய திரவ்ய யாகமானது அந்தப் பரம புருஷனைப் பூஜிக்கும் கர்மமேயாம், வைராஜருடைய அவயவங்கள் இம்மாதிரியானவைகள் எல்லாவற்றிற்கும், பெரியவரான இந்தப் பரமபுருஷன் இடத்தில் மோக்ஷமடைய விரும்பியவர்கள் மனத்தைச் செலுத்த வேண்டும். இதைவிட மேலானது ஒன்று இல்லை. ஸகல பிராணிகளுடைய புத்தி விருத்தி களால் ஸகலத்தையும் அனுபவிக்கிறவரும், எல்லா வற்றிற்கும் அந்தராத்மாகவும், ஸத்ய ஸ்வரூபியாய் இருக்கும் அவரையே பூஜிக்கவேண்டும்; அவரைக் காட்டிலும் வேறு இடத்தில் ஆசைபடக் கூடாது. அப்படி ஆசைப்படுவதால் ஸம்ஸாரத்தை அடையும் படி நேரிடும். ஸ்வப்னத்தில் சில ஸமயத்தில் அநேக ஜீவர்களைக் கல்பித்து, ஜீவன் அந்தந்த இந்திரியங்களைக் கொண்டு எல்லாவற்றையும் பார்ப்பதுபோல ஈசுவரன் தாம் ஒருவராக இருந்து எல்லாவற்றையும் தம்முடைய வித்யா சக்தியால் அனுபவித்து, அவைகளில் ஸம்பந்தப்படாதவராகவும் ஆனந்த நிதியாகவும் பிரகாசிக்கிறார்.

நோட்டு

ஆத்மஸ்வரூ–லக்ஷ்மீ, ப்ரம்ஹா முதலிய சேத னங்கள் எப்பொழுதும் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு உள்ளவைகளாக இருக்கிறதை அறியாதவர்கள் ...விஜ, ஸாமக்ரீ... ஆத்ம தைன்ய' என்னும் பாடத்தை ஆசிரயித்து, 'தனக்குக் குறைவை உண்டு பண்ணக்

கூடியவைகள்' என்று அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. விஜ , மனனம்... ஓ மைத்ரேயி! ஆத்மாவைப் பற்றியே விசாரிக்க வேண்டும். குரு முகமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த ஒருவராகிய ஆத்மாவையே அறியுங்கள். மற்ற வார்த்தைகளை விட்டுவிடுங்கள் ... ஸ்ருதிகள், ஸாங்கியம்... ஞான யோகத்தாலே சாங்கியர் களுக்கும், கர்ம யோகத்தால் யோகிகளுக்கும் பகவத்கீதை, அஷ்டாங்க ... யமம், நியமம், தியானம், தாரணம், ஆஸனம், பிராணயாமம், பிரத்யாஹாரம், ஸமாதி என்று எட்டு அங்கமுள்ளது. விதி நிஷேதம்... இதனைச் செய் என்று சாஸ்திரத்தில் சொல்லியிருப்பது விதியாகும், இதனைச் செய்யவேண்டாம் என்று சொல்லியிருப்பது நிஷேதமாகும் ... மேற்சொல்லிய விதி நிஷேதமென்பதற்கு விதி நிஷேதங்களைச் சொல்லும் வேதத்தால் காண்பிக்கப்படுகிற காம்ய கர்மங்களென்று அர்த்தம் கொள்ள வேண்டும். அவசியம் அனுஷ்டிக்க வேண்டியதாக வேதத்திற் சொல்லப்பட்ட பஞ்ச மஹா யக்ஞங்களே விதியென்றாவது, ஸுராபானம் செய்யக் கூடா தென்பதே நிஷேதமென்றாவது இவ்விடத்தில் அர்த்தம் அல்ல... வீர, நிர்குண ...ரஜோகுணம், தமோகுணம் இவைகளுடன் சேர்ந்த ஸத்வகுணமற்றது ...வீர, கடைசியில் மூலத்தில் த்வாபாரதெள என்று இருப்பதால் அதற்கு 'கலி யுகத்தின் ஆதியில்' என்று அர்த்தம் கொள்ள வேண்டும். வ்யாஸ மஹர்ஷியும், சந்தனு சக்ர வர்த்தியும் ஒரே காலத்தில் இருந்ததாகச் சொல்லப் பட்டிருப்பதால் ... வீர வ்யாஸ மஹர்ஷியானவர் தம்முடைய அறுநூறாவது வயதில் திருதராஷ்டிரரை உண்டுபண்ணினார் என்று சொல்லியிருப்பதாலும், துவாபரயுகத்தின் கடைசியில் பாரதக்கதை நடந்ததாகச்

சொல்லியிருப்பதாலும், துவாபரயுகத்தில் கிருஷ்ண அவதாரத்திற்கு முந்தி என்று அர்த்தம் கொள்ள வேண்டும்... விஜய. ப்ரம்ஹ ஸ்வரூபத்தில் 'ப்ரம்ஹ ஸம்ஹிதம், என்று இருப்பதால் வேதத்திற்குச் சமமானது, பாகவதம் ... பகவான் நேரில் உபதேசித்த நான்கு ஸ்லோகங்களைக் கொண்டு செய்யப் பட்டதால் அல்லது பகவத் ஸ்வரூபத்தை நன்றாய் வர்ணிப்பதால்... வீர. சொல்லுகிறேன்... முக்தனாகிய என்னாலும் அப்யஸிக்கப்பட்ட இந்த பாகவத புராணமானது, மோக்ஷத்தை அடையவேண்டிய வராகிய உமக்கு உபயோகமானது என்று தாத்பரியம் ...வீர, அவயவத்தை..யுகத்தை...வீர. பெரிதானது ... இவர் பூமியைவிடப் பெரியவர், அந்தத்தைக் காட்டிலும் பெரியவர் இவ்வுலகங்களைக் காட்டிலும் பெரியவர் ஸ்ருதி. ஸ்வர்க்கத்தை, முலத்தில் ஜ்யோதிரனீகம் என்று இருப்பதால் நக்ஷத்ர லோகம் என்று அர்த்தம் கொள்ளவேண்டும், பறவைகள்...வாத ஸ்வரூபிகளான தித்திரி முதலிய பக்ஷிகள்...வீர. திறமை...எவரால் ஹம்ஸங்கள் வெண்மை நிறமுள்ளவைகளாகவும், கிளிகள் பச்சை நிறமுள்ளவைகளாகவும், மயில்கள் பலவகை நிறமுள்ளவைகளாகவும் ஸ்ருஷ்டிக்கப் பட்டனவோ அவர் நமக்கு விருத்தியை உண்டு பண்ணுவார். மூலத்தில் வ்யாகரணம் என்று இருப்பதில் அதற்கு ஆச்சரியத்தை யுண்டுபண்ணும் வார்த்தை என்று அர்த்தம். சந்த். இருப்பிடம் மனுஷ்ய ஜன்மாவானது ஞானத்திற்கும், பக்தி முதலிய ஸ்தானங்களுக்கும் உபாயமாயிருக்கிறது. யாகம் முதலிய கர்மங்கள் ஞானம் முதலியவைகளுக்குக் காரணமாய் இருப்பதால், அக்கர்மங்களில் அதிகாரமுள்ளவர் களுக்கே ப்ரஹ்மோ பாஸனத்தில் அதிகாரம ஏற்படுகிற

படியால் மனுஷ்ய சரீரமே எல்லாவற்றிற்கும் உபயோக மான்து சந்த். அஸுரஸைன்ய அஸுரானீக வீர்ய என்று ஒரு பாடமுண்டு. அதற்கு ப்ரஹ்லாதனே ஸ்மரணம் என்று அர்த்தம் கொள்ளவேண்டும், வீர.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்- 2

பகவானிடத்தில் மனத்தை செலுத்தும் வகை

1–21. பிரளயகாலத்தில் ப்ரஹ்ம தேவரானவர் மேற் காட்டியபடி விராட் புருஷனிடத்தில் மனத்தைச் செலுத்தினார். (வைராஜ தாரணையைச் செய்தார்.) அதனால் பகவான் ஸந்தோஷமடைந்து ப்ரஹ்மதேவருக்கு மறந்து போயிருந்த ஸ்ருஷ்டி சக்தியை மறுபடியும் அனுக்கிரஹித்தார். அதனால் ப்ரஹ்மதேவர் வீணாகாத ஞானமுள்ளவராகவும், நிச்சயமாகிய புத்தியுள்ள வராகவும் ப்ரளயத்திற்கு முன்பு இருந்தது போலவே உலகத்தை ஸ்ருஷ்டித்தார் (தாரணையானது, இம் மாதிரியான மஹாத்மியமுள்ளது என்று கருத்து) வேதங்கள் யாவும் கர்மங்களையும், அவற்றின் பலன்களையும் சொல்லுகின்றன. ஆனாலும் ஸ்வர்க்கம் முதலியவைகளில் புருஷார்த்தம் ஒன்று மில்லை. அதைக் கேட்ட மாத்திரத்தில் மனதிற்கு ஆசையைக் கொடுக்கிறதே யொழிய வேறில்லை. (பெயரால் அழகுள்ளது) ஸ்வப்பனத்தில் கண்ட வஸ்துக்கள் நாம் விழித்துக் கொண்டபொழுது இல்லாமற் போவதுபோல மாயா ரூபமான கர்ம மார்க்கத்தில் அலைந்தும் கொஞ்சமேனும் ஒப்பற்ற ஸுகம் கிடைக்கிறதில்லை. ஆகையால் விவேகமுள்ளவன் தேக நிர்வாகத்திற்கு வேண்டியவரையில் தோக்கிய வஸ்துக்களை அபேக்ஷிப்பான். அவைகளிலும் ஆஸக்தியில்லாமல் ஜாக்ரதையாக இருப்பான். மேலும் இவைகள் ஸுகத்தைக் கொடுக்கக் கூடியவைகளல்ல என்ற நிச்சயமுள்ளவனாகவும் இருப்பான். ஆனதுபற்றி, தேகத்திற்குவேண்டிய விஷயங்கள் ஸுலபமாக அவனுக்குக் கிடைக்குமானால் அவன்

இக்கர்மங்களில் முயற்சி செய்யமாட்டான். கர்மங்களோ மிகவும் ச்ரமத்தைக் கொடுக்கின்றன. எவ்வாத்தேசங் களிலும் எப்பொழுதும் பிறரை அபேக்ஷியாமல் ப்ரயாஸமின்றிக் கிடைக்கும் பூமியாகிய படுக்கை ஸித்தமாக இருக்க, பணச் செலவினால் கிடைக்கக் கூடியதும், இஷ்டமான காலங்களில் அகப்படாததுமான கட்டில் முதலிய படுக்கையை ஞானமுள்ளவன் அபேக்ஷிப்பானா? தன்னுடை கைகளிருக்கத் தலை யணைகளால் என்ன ப்ரயோஜனம்? தவிரவும், அன்னத்தை வைத்துக்கொண்டு புஜிக்க அஞ்சலி (சேர்ந்த இருகைகள்) ஸ்வாதீனத்திலிருக்க, பல வகையான பாத்திரங்களை அபேக்ஷிக்கவும் வேண்டுமா? மேலும் திக்குகளும், மரவுரிகளும் உடுத்திக் கொள்ளக்கூடியவைகளாக விருக்கும்போது, பட்டு, வஸ்திரம் முதலியவைகளை ஏன் ஸம்பாதிக்க வேண்டும்? வழியில் கந்தைத்துணி அகப்படாதா? பிறரையே போஷிக்கும் ஸ்வபாவமுள்ள (பழம் முதலியவை களாலென்பது கருத்து) மரங்கள் ஆகாரத்தைக் கொடாமலிருக்குமா? தீர்த்தத்தைக் கொடுக்கும் நதிகள் வரண்டு போயினவா? வஸிப்பதற்கு மலைகளில் குகைகளிருக்கின்றனவே? அவைகள் அரசர்களால் மூடப்பட்டனவா? ஆகையால் பிறரை யாசியாமலே தேக யாத்திரையை நடத்திக்கொள்ளலாம். மேற் கூறியவைகள் கிடைக்காவிடினும் சரணாகதர்களான நம்மைப் பகவான் ஸம்ரக்ஷிக்கமாட்டாரா? இப்படி இருக்க பணத்தால் கர்வங்கொண்டு கார்யம் அகார்யம் இவைகளை அறியாத மமதை கொண்டவர்களை விவேகிகள் ஏன் உபாஸிக்கிறார்கள். ஸ்ரீ மந் நாராயண ரையே (மற்றவர்களை விட்டு) ஸேவிக்கவேண்டும். அவர் எல்லோருடைய சித்தத்திலும் தாமாகவே

எப்பொழுதுமிருப்பவர். ஆத்ம ரூபியாயிருப்பவராகையால் அவர் எல்லாருக்கும் பிரியர். சரீரம் முதலியவைபோல அநித்யரல்லர். ஸத்ய ஸ்வரூபியாயிருப்பவர். ஸேவிக்கக் கூடிய குணங்களால் நிறைந்தவர். நாசமற்றவர். அவரை ஸேவிப்பதால் ஸம்சாரத்தைக் கொடுக்கும் அவித்யை முதலியவைகள் நாசமடைகின்றன. கர்ம ஜடர்களாயும் ஞான ஹீனர்களாயுமுள்ள மனுஷ்ய பசுக்கள் விஷயங்களிலேயே ஆசை கொள்கிறார்கள். தாரணையைச் செய்கிறதில்லை. மேலும், யமலோகத் திலிருக்கும் வைதரணீ நதியில் தம்முடைய கர்ம வசத்தால் துக்கத்தை யனுபவிப்பது போல ஸம் ஸாரத்தில் மூழ்கி துக்கப்படுகிறார்கள். இப்படிக் கஷ்டப்படும் ஜனங்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் விவேகியான புருஷன் பகவானைச் சிந்திப்பதாகிய தாரணையைச் செய்யாமலிருப்பானா? சிலர் தம்முடைய ஹிருதயத்திலிருக்கும் அவகாசத்தில் நான்கு கைகள் உள்ளவரும், தாமரைமலர், சக்ரம், சங்கம், கதை ஆகிய இவைகளைத் தரிப்பவரும், ப்ராதேசமாத்ர சரீரமுள்ளவருமாக வஸிக்கும் பரம புருஷனை இடை விடாமல் தியானிக்கிறார்கள். அந்தப் புருஷன் தாமரை மலர்போன்ற நீண்ட கண்களுள்ளவர். முகமலர்ச்சி யுள்ளவர். கதம்ப (கடம்பம்) புஷ்பத்தின் தாதுகள் போல் பொன்னிறமுள்ள வஸ்திரத்தைத் தரித்தவர். மிகுந்த காந்தி பொருந்திய இரத்னங்களிழைத்த ஸ்வர்ணமயமான தோள் வளைகள், கிரிடம், குண்டலம் ஆகிய ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்டவர். அவருடைய பாதங்கள் யோகிகளுடைய மலர்ந்த ஹ்ருதய கமலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட வைகள். மார்பில் லக்ஷ்மியுள்ளவர். கௌஸ்துப ஹாரம் தரித்தவர். குறையாத காந்தியுள்ள வனமாலையால்

பிரகாசிப்பவர். மேலும், விலையுயர்ந்த அரைநாண், மோதிரம். வளை முதலிய ஆபரணங்களால் விளங்கும் திவ்ய தேஹமுள்ளவர். அவருடைய முகமானது புன்சிரிப்புள்ளது, மேலும் கறுப்புநிறமுள்ளவைகளும், காந்தியுள்ளவைகளும், பளபளப்புள்ளவவைகளுமான சுருட்டை மயிர்களால் அழகானது. கம்பீரமாகிய சிரிப்பு, பார்வை. புருவ நெரித்தல் ஆகிய இவைகளால் ஜனங்களை அனுக்கிரஹிக்கும் ஸ்வாபவமுள்ளது, இம்மாதிரியான பகவத் ஸ்வரூபத்தை மனது ஸ்வாதீனப்படுகிற வரையில் தியானிக்க வேண்டும். எப்படியெனில், மேற்காட்டிய பாதம் முதல் சிரிப்பு வரையிலுமுள்ள பகவானுடைய அவயவங்களும் சேஷ்டைகளும் ஒவ்வொன்றாகத் தியானிக்கப்பட வேண்டும். மனது அவைகளிலே பதிந்து, விஷயங்களில் செல்லாமலிருந்தபோது அதைவிட்டு வேறு அவய வத்தை த்யானிக்கவேண்டும். இப்படி ஒவ்வொரு நாளும் நித்ய கர்மங்களை முடித்துக்கொண்டு சுத்தனாகப் பரமபுருஷனுடைய பெரிதாகிய ரூபத்தை தியானஞ் செய்யவேண்டும். அவரிடத்தில் பக்தியுண்டாகும் வரையில் அவருடைய ரூபத்தைத் தியானஞ் செய்யவேண்டும். அவர் ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் மேலானவர்; ஜகத்திற்கு அதிபதி. எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாயி ருப்பவர். ஓ மஹாராஜ! ஒருவன் இப்படி சித்தம் சுத்தியானபிறகு ஸகல ஆசைகளையும் ஒழித்து இந்தச் சரீரத்தை விட வேண்டுமென்று விரும்பு வானாகில், புண்ய க்ஷேத்திரத்தில் உத்தராயணம் முதலிய காலங்களில் ஸ்திரமாயும், ஸுககரமுமான ஆஸனத்தில் உட்கார்ந்து, ப்ராணாயாமஞ் செய்து ஸுவாஸத்தை அடக்கி, வேறு விஷயங்களில் பற்றுதல் இல்லாதவனாக மனத்தால் ப்ராணனையும், இந்திரியங்

களையும் அடக்கிக்கொள்ளவேண்டும். மேலும் அந்த மனத்தை நிர்மலமாகிய புத்தியாகச் (நிச்சயரூபமானது) செய்து, அந்தப் புத்தியை அதற்கு ஸாக்ஷியாக விருக்கும் ஜீவனிடத்தில் சேர்க்க வேண்டும். அந்தச் சுத்தமாகிய ஆத்மாவை பரப்ரஹ்மத்தினிடம் லயிக்கச் செய்து சாந்தியையடைந்து கார்யத்திலிருந்து ஒழிவடைய வேண்டும். தேவர்களுக்கும் மேலான காலத்தாலும், அந்தப் பரமாத்ம ஸ்வரூபம் பாதிக்கப்படுகிறதில்லை. ஜகத்திற்கு, அதிபதிகளான தேவர்களும் அந்த ஸ்வரூபத்திற்குப் பிரபுக்களல்ல. அந்த ஆத்மாவிடத்தில் ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய குணங்களும் மாறுதலும், மஹத் தத்வம், பிரதானம் ஆகிய இவைகளும் இல்லை ஆத்மாவை விட வேறானவைகளை (இவை ஆத்மாவல்ல என்று விசாரித்து, தேகம் முதலியவைகளில் ஆத்மத்வ புத்தியை விட்டு ஒவ்வொரு க்ஷணத்திலேயும் வேறிடத்தில் பிரியம் வைக்காத தங்களுடைய ஹ்ருதயத்தில் விஷ்ணுவின் பதத்தையே பக்தர்கள் தியானஞ் செய்கிறார்கள். ஆகையால் அதுவே மேலானது என்கிறார்கள். இந்தப்பதத்தையடைந்தவனே கிருதகிருத்யன். இம்மாதிரி சாஸ்த்ர விசாரத்தில் உண்டான விசேஷ ஞானத்தால் விஷய வாஸனைகளை எரித்துப் ப்ரஹ்ம பாவத்தை அடைந்த முனியானவர் கீழ் முகமான வாயுவானது வெளியில் போகாமலிருக்கும்படி, தம்முடைய பாத மூலத்தால் (குதிகால்) ஆஸனத்தை அடைத்துக்கொண்டு சிரமம் இல்லாதவராக, தொப்புள், ஹிருதயம், மார்பு, முகவாய்க்கட்டை, புருவங்களின் மத்திய பாகம், தலை ஆகிய ஆறு ஸ்தானங்களிலும் அந்தந்த வாயுவைச் செல்லும்படி செய்யவேண்டும். பின்னும் நாபியாகிய மணிபூரகத்திலிருந்து வாயுவை ஹ்ருதயமாகிய

அநாஹதத்தில் செல்லச் செய்து அதிலிருந்து மார்பாகிய விசுத்தி ஸ்தானத்திற்குந் போகச் செய்து, சித்தத்தையடக்கிக்கொண்டு, அதை விசுத்த ஸ்தானத்தின் மேற்பாகமாகிய தாது மூலத்திற்கு மெதுவாக கொண்டு போக வேண்டும். அதிருந்து ஆக்ஞா சக்கரமாகிய புருவங்களின் மத்ய பாகத்தில் அந்த வாயுவைச் செலுத்தவேண்டும். அப்போது காதுகளையும், கண்களையும், மூக்குகளையும், முகத்தையும் மூடிக் கொண்டு வாயுவை வெளியில் விடாமல் அடக்கிக் கொண்டிருக்கவேண்டும். வேறு விஷயங்களை விரும்பக் கூடாது. இப்படி ஆக்ஞா சக்கரத்தில் ப்ராணனை அரை முஹூர்த்த காலம் நிறுத்திக்கொண்டிருந்து, பிறகு தடையற்ற ஞானமுள்ளவனாக ப்ரஹ்ம ஸ்வரூபத்தையடைந்து, ப்ரஹ்மாந்தரமாகிய தலையைப் பேதித்து வாயுவை வெளிப்படுத்தி, தேகத்தை விடவேண்டும்.

22–31. ஓ மஹாராஜ! இந்தப் ப்ரஹ்மாண்டத்தில் ப்ரஹ்மலோகம் போகிறவனானாலும் அணிமா முதலிய ஐச்வர்யங்களுள்ள தேவர்கள் வஸிக்கும் ஸ்வர்க்கம் முதலிய இடங்களுக்குச் செல்லுகிறவனானாலும் மனத்தையும், இந்திரியங்களையும் தன்னுடன் கூடவே அழைத்துக்கொண்டு போகிறான். வாயுவிற்குள் அடங்கிய லிங்க சரீரமுள்ள மஹா யோகிகள், மஹர்லோகம் முதலியவைகளிலும், ப்ரஹ்மாண்டத்திற்கு வெளியிலும் போவார்கள் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். உபாஸனை, தபஸ், அஷ்டாங்க யோகம் ஞானம் ஆகிய இவைகளை அனுஷ்டிப்பவர்கள் அர்சிராதி மார்க்கமாய்ப் போவார்கள். அந்த வழியில் போனவர்கள் மறுபடியும் திரும்புகிறதில்லை.

அப்படிப்பட்ட கதியானது யாகம் முதலியகர்மங்களால் கிடைக்கிறதில்லை. ப்ரஹ்மலோக மார்க்கத்தில் சென்றவன் முதலில் அக்னிக்கு அபிமானியான தேவதையை அடைகிறான். பிறகு ஜ்யோதிஸின் ரூபமாகிய ஸுஷும்னா நாடி வழியாய் ஒன்றிலும் ஆசைப்படாதவனாக உத்தமமான, சிம்சுமாரமென்ற ஜ்யோதி சக்கரத்தை யடைகிறான். பின்பு ஸூர்யன் முதலியவர்களுக்கு ஆசிரயமான அந்த விஷ்ணுவின் சக்கரத்தைத் தாண்டி சுத்தமான லிங்க சரீரத்துடன் தானொருவனாகப் ப்ரஹ்மத்தை அறிந்தவர்கள் வஸிக்கக்கூடியதும், எல்லோராலும் நமஸ்கரிக்கப் பட்டதுமான மஹர்லோகத்தை அடைகிறான். அந்த ஸ்தானத்தில் அநேக கால ஜீவிகளான ப்ருகு முதலியவர்கள் ஆனந்தமாக வஸிக்கிறார்கள். பிறகு அவர்கள் அந்தக் கல்பத்தின் முடிவில் ஸங்கர்ஷண பகவானுடைய முகத்திலிருந்து உண்டான அக்னியால் உலகங்கள் எரிக்கப்படுவதைப் பார்த்து, அதன் உஷ்ணத்தைச் ஸகியாமல் அந்த உலகத்திலிருந்து ஸனகர் முதலியவர்கள் வஸிக்கும், இரண்டு பரார்த்தம் வரையில் அழியாமலிருக்கக் கூடிய ப்ரஹ்ம லோகத்தை அடைகிறார்கள். அவ்விடத்தில் சோகம், ஜரை, கிழத்தனம் மரணம், துக்கம், பயம் ஆகிய இவைகள் இல்லை. ஆனாலும் அந்த உலகத்தில் இருப்பவர்கள், 'ப்ரஹ்மலோகம் சோக மோகங்களற்றது ஸ்வர்க்காதிகளுக்கு மேலானது என்று நினையாமல் கர்மஜடர்களாக, ஸம்ஸாரத்தில் கஷ்டப்படும் அக்ஞர்களைப்பற்றி வருத்தப்படுகிறார்கள். அதைத் தவிர வேறு துக்கம் அவ்விடத்திலில்லை. அந்த லோகத்தையடைந்தவன் ப்ரஹ்ம ப்ரளயத்தில் லிங்க தேகத்துடன் பூமியின் ஸ்வரூபத்தையடைந்து ஜலத்தை

அடைந்து, தாமஸியாமல், பயமில்லாதவனாகி தேஜோமயனாகி வாயுவை யடைந்து அணுபவம் முடிந்தவுடன் ஆகாச சரீரத்தைக் அடைகிறான். பின்னும் அவன் க்ராணேந்திரியத்தைக் கொண்டு வாஸனையையும், ரஸனேந்திரியத்தைக் கொண்டு ரஸத்தையும், நேத்ரத்தைக் கொண்டு உருவத்தையும் த்வகிந்திரியத்தைக் கொண்டு ஸ்பர்சத்தையும், ச்ரோத் ரேந்திரியத்தைக் கொண்டு ஆகாயத்தின் குணமாகிய சப்தத்தையும், கர்மேந்திரியங்களைக் கொண்டு அவை களின் வியாபாரங்களையும் அடக்கிக்கொள்ளுகிறான். மேலும் அவன் பூதஸூக்ஷ்மங்கள், பத்து இந்திரியங்கள் ஆகிய இவைகளுக்கு லய ஸ்தானமாயும், மனோமய மாயும்,தேவதா ரூபமாயுள்ள ஆவரணமாகிய அஹங் காரத்தை அடைந்த பிறகு அதனுடன் விஞ்ஞான தத்வத்தை அடைகிறான். பின்னும் அவன் குணங்கள் லயிக்கும் இடமான பிரதானத்தை அடைகிறான். (லயிக்கிறான்). இப்படி உபாதிகள்யாவும் லயமடைந்த பிறகு ஆனந்த ஸ்வரூபியான ஜீவன் விகாரமற்றதும், ஆனந்த ஸ்வரூபியுமான ஆத்மாவை அடைகிறான். ஓ மஹாராஜ! இம்மாதிரியான பதத்தை யடைந்தவன் மறுபடியும் திரும்புகிறதில்லை.

32–37. ஸத்யோமுக்தி, க்ரமமுக்தியென்ற இரண்டு மார்க்கங்களும் வேதங்களில் சொல்லப்பட்டவைகள். இவைகளை ஸ்ரீ பகவானாகிய வாஸுதேவர் முன்னொரு காலத்தில் ப்ரஹ்மதேவருக்கு உபதேசித்தார். நீர் இப்பொழுது அவைகளை அறிய விரும்பியபடியால் உமக்குச் சொன்னேன். ஸம்ஸாரத்தில் கஷ்டப்படும் ஜனங்கள் மோக்ஷத்தையடைவதற்கும் பல மார்க்கங்கள் இருந்தாலும் பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில்

பக்தியையுண்டு பண்ணும் மேற்காட்டிய மார்க்கமே மேலானது. அதுவே ஸுகமாய் அனுஷ்டிக்கக்கூடியது இடையூறற்றது, தவிரவும் முன்னொரு ஸமயத்தில் ப்ரஹ்மதேவர் ஒரே சித்தராக இருந்து, ஸகல வேதங்களையும் மூன்று தடவை படித்துப் பார்த்து, மேற் சொல்லிய மார்க்கமே பகவத் பக்தியைக் கொடுக்கக் கூடியது என்று நிச்சயித்தார். மேலும் பரமாத்மா ஆனவர், ஸகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாய் இருப்பதைக் கொண்டும் புத்தி முதலியவைகளைக் கொண்டும், ஸித்திக்கும் அனுமானத்தைக் கொண்டும், எல்லோராலும் பார்க்கப்படுகிறார். ஆகையால் ஓ பரீக்ஷித்து மஹாராஜனே! எந்த இடத்திலும், எக்காலத்திலும் மனிதர்கள் ஸ்ரீமந் நாராயணனையே ஸ்மரிக்க வேண்டும் அவருடைய கதையைக் கேட்க வேண்டும் திவ்ய நாமங்களை உச்சரிக்க வேண்டும், ஆகையால் ஸ்ரீ பகவானுடைய கதையாகிய அமிருதத்தைச் சுரோத்ரமாகிய பாத்திரத்தால் எவர்கள் புஜிக்கிறார்களோ, விஷய ஆசையால் கலங்கிய அவர்களுடைய சித்தமானது சுத்தமாய் விடுகிறதுமன்றி அந்தப் புண்யசாலிகள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பதத்தையும் அடைவார்கள்.

நோட்டு

ஸ்ருஷ்டித்தார். தாதாவானவர் முன்னிருந்தது போல ஸ்ருஷ்டித்தார் –ஸ்ருதி பிரளய காலத்தில் முன் கல்பத்திலுள்ள ப்ரஹ்மதேவருடன் ஸ்ருஷ்டி விஷயமான ஞானம் நஷ்டமாகி விட்டது. பிறகு ஸ்ருஷ்டி காலத்தில் இந்தக் கல்பத்திய ப்ரஹ்மதேவர் முன் அத்யாயத்தில் சொன்னபடி பகவானிடம் மனதைச்

செலுத்தி, அதனால் ஸ்ருஷ்டி ஞானத்தையடைந்தார். இப்படி அர்த்தஞ் சொல்லவேண்டும். இல்லாவிடில் முன் கல்பத்திய ப்ரஹ்மதேவரே இந்தக் கல்பத்திலுமிருந்து ஸ்ருஷ்டித்தாரென்று ஏற்படும், அப்படிச் சொல்வது ஸரியல்ல, ஒவ்வொரு கல்பத்திலும் ப்ரஹ்மதேவர் வேறு என்று கொள்வதே நியாயம். அவர்களெல்லோரும் ப்ரளயம் வந்தவுடன் ப்ரஹ்மதேவருடன் முக்தியடைகிறார்கள், ப்ரளய காலத்தில் ப்ரஹ்ம லோகத்திலிருப்பவர்கள் எல்லோரும் முத்தியை அடைகிறார்கள். ஸ்ருதிகள், தவிரவும், பகவானுடைய அளவற்ற கிருபையை அடைந்தவர்கள் மறுபடியும் பிறந்தார் களென்று சொல்வதும் உசிதமல்ல. ஆதலால் மூலத்திலிருக்கும் ஸ்மிருதி என்ற பதத்திற்கு ஸ்ருஷ்டி ஞானமென்று இவ்விடத்தில் அர்த்தங்கொள்ள வேண்டும். ஆகேஷபம் வைராஜ தாரணையால் ஸ்ருஷ்டி ஞானம் உண்டாகிற தென்றால், அந்தத் தாரணையானது அந்த ஞானத்தால் தான் உண்டாக வேண்டும், ஆதலால் அந்யோந்யாசிரய தோஷம் நேரிடுகிறது. சமாதானம் பகவானுடைய கொப்பூழில் தாமரைப் புஷ்பத்திலிருந்து ப்ரஹ்மதேவர் உண்டானார். அவருடைய தபஸினால் நாராயணன் ஸந்தோஷித்தார். அப்பொழுது ஓ சதுர்முகரே! மறுபடியும் நீர் தபஸ், ஞானம் இவைகளை யனுஷ்டிக்கவேண்டும். அவைகளால் ஆவரணம் விலகும். அப்பொழுது நீர் என்னிடத்தில் லோகங்களையும் அவைகளில் என்னையும் பார்க்கலாம் என்று பகவான் சொன்னார். பிறகு ப்ரஹ்மதேவர் ஸ்ருஷ்டிக்கப்படும் ஸகல பதார்த்தங்களையும் முன்னமே பார்த்து, அவை களைப் பகவானுடைய அவயவங்களாகப் பாவித்து அந்தத் தாரணையால் ஸ்ருஷ்டி ஞானம்

ஸாமர்த்தியம் இவைகளையடைந்தார், வீர. நிச்சயமாகிய –வியவஸாய புத்தி என்று மூலத்திலிருப்பதால் ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்று முயற்சி செய்தவர், விஜயத், வேதங்கள் ஸகல வேதம் முதலிய சப்தங்களுக்கு இந்தப் பரமாத்மாவே அர்த்தமாயிருக்கிறார். பகவான் உடைய இச்சையால் உண்டான ஸம்ஸாரத்தில் அலைந்து கொண்டு ஒன்றையும் அறியாதவனாகி, கர்ம வாஸனையினால் பலவகையான ஜன்மங்களை யடைந்து கஷ்டப்படும் ஜீவன் இந்திரன் முதலிய சப்தங்களுக்கு அந்த அந்தத் தேவதைகளை அர்த்தம் என்று நினைக்கிறான் அது ஸரியல்ல. அந்தத் தேவர்களிடத்தில் குறைவற்ற ஐசுவர்யமாவது, புருஷார்த்தமாவது, இல்லை, மேலும் அவர்களை உபாஸிப்பதால் புருஷார்த்தமொன்றும் கிடைக்கிறது இல்லை, ஆகையால் ஸ்ரீமந் நாராயணனையே ஸேவிக்கவேண்டும், ஸ்மரிக்கவேண்டும், அவரே ஸகல வேதங்களுக்கும் அர்த்தம். விஜயத். விவேகமுள்ளவன் ஸகல நாமங்களும் ஸ்ரீமந் நாராயணனையே சொல்லு கின்றன என்பதை எப்பொழுதும் மறவாமலிருப்பவன், தாய் தந்தை முதலிய பந்துக்களை விட மிகவும் ஜனங்களுக்கு வேதங்கள் அனுகூலத்தையே உபதேசிப் பவைகள் ஆகையால் ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களுள்ள ஜனங்களுடைய புத்திக்கு அநுகுணமாக ஸ்வர்க்கம் முதலிய ஸ்திரமில்லாத பலத்தைக் கொடுக்கும் கர்மங்களையும், ஸாச்வதமான மோக்ஷ ஸாதனங்களையும், அவ்வேதங்கள் உபதேசிக் கின்றன. அக்ஞர்கள் ஸ்வர்க்கம் முதலியவைகளையே அடையவிரும்பி அதன் ஸ்தானங்களை அனுஷ்டிக் கிறார்கள், ஆகையால் வேதங்கள் அற்பமுள்ள கர்மங்களை உபதேசித்து ஜனங்களை ஏமாற்றிவிட்டன.

என்று சொல்வது உசிதமல்ல வீர. கிடைக்கிறது இல்லை கர்மபலம் தாழ்ந்ததென்று காட்டப்பட்டது. கர்மங்களில் நம்மால் அனுபவிக்கக்கூடியது, நம் முடைய முயற்சில்லாமலேயே அவசியம் ஸித்திக்கும் என்று அதற்காகச் சிரமப்படமாட்டான்...சந்த. மமதை நான் ஈச்வரன். நான் போகமுள்ளவன், நான் ஸித்தன், நான் பலமுள்ளவன், ஸுகமுள்ளவன், பணக்காரன், மேலான குலத்தில் பிறந்தவன், ஆனதால் எனக்குச் சமானமானவன் லோகத்திலொருவனும் இல்லை என்று கர்வங்கொண்டார்கள், ப்ரியர்; ஜனங்கள் பணம், களத்திரம், புத்ரன் ஆகிய இவை களை ஆத்மாவின்' ஸௌக்கியத்திற்காவே ஸம்பாதிக் கிறார்கள். ஆத்மாவிற்கு ஆக்மாவாக இருப்பவர் பிரியரென்பதில் என்ன ஆக்ஷேபம் வீர. ஸத்யஸ்வரூபி புருஷார்த்த ஸ்வரூபி, வீர. ப்ராதேச கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் (தர்ஜனிக்கு) இடையிலுள்ள நீளம் ஸ்ரீத. ஜகத்தின் அளவு எவ்வளவோ அந்த அளவுள்ளவர் சந்த் மூவுலகமும் பகவானுக்குச் சரீரமானாலும் கட்டைவிரல் ப்ரமாணம் உள்ள ஹ்ருதய கமலத்தில் உபாஸிப்பதற்காக அடங்கிய சரீரம் வீர. உட்கார்ந்து இது மரணம் அடையச் சித்தமாக விருப்பவன் செய்யக்கூடிய கார்யம் இன்னதென்று சொல்லப்பட்டது. இனியும் அவனால் செய்யப்படவேண்டிய கார்யம் சொல்லப்படுகிறது பூமியின் ரூபத்தை மிகுந்த புண்யத்தால் ப்ரஹ்மம லோகஞ் சென்றவர்கள் மறு கல்பத்தில் அவர்கள் உடைய புண்யத்திற்குத் தக்கபடி அதிகாரிகள் தேவதைகளாக ஆகிறார்கள், ஹிரண்யகர்ப்பர் முதலிய வர்களையும் உபாஸித்துப் ப்ரஹ்மலோகஞ் சேர்ந்த வர்கள் ப்ரஹ்மாண்டத்தைப் பேதித்து தமதிஷ்டப்படி

விஷ்ணுபதத்தை அடைகிறார்கள். ஆனதால் பகவத் பக்தர்கள் ப்ரஹ்மாண்டத்தை பேதித்துச் செல்லும் வகை காட்டப்படுகிறது. ஈஸ்வராதிஷ்டிதமான ப்ரகிருதியிலிருந்து மஹத்தத்வம் உண்டாகிறது. அதன் அம்சம் அஹங்காரமாகும். அதனுடைய அம்சம் ஆகாயமாகும். அதனுடைய அம்சம் வாயுவாகும் (ஸ்பர்சதன்மாத்திரையால்) அதனுடைய அம்சம் (ரூபதன்மாத்திரையால்) தேஜஸ்ஸாகும். அதன் அம்சம் (ரஸதன்மாத்திரையால்) ப்ருதிவியாகும். அவைகள் யாவும் சேர்ந்தது பதினான்கு லோகங்கள் ஆகிய விராட்புருஷ சரீரமாம். அது ஐம்பது கோடி விஸ்தாரமுள்ளது. அதற்குப் ப்ருதிவியே அண்டகடாஹ மெனப்படுகிறது. அதன் முதலாவது ஆவரணமானது கோடி யோசன விஸ்தாரமுள்ளது. ஜலம் முதலிய ஒவ்வொரு ஆவரணங்களும் ஒன்றைவிட மற்றொன்று பத்து மடங்கு பெரியவைகளாம். அவைகளில் எட்டாவதான ப்ரகிருதியின் ஆவரணம் மிகவும் பெரிதானது. அர்ச்சிராதி அக்னி ஜ்யோதிஸ், பகல் சுக்லபக்ஷம், ஆறு மாஸ்யங்கள், உத்தராயணம் ஆகிய இவைகளின் அபிமான தேவதைகளடங்கிய மார்க்கத்தில் சென்றவர்கள் ப்ரஹ்மத்தையடைகிறார்கள். ஸத்யோமுக்தி எப்பொழுது இவனுடைய ஹ்ருதயத்திலிருக்கும் கர்மங்கள் யாவும் நாசமடைகின்றனவோ, பிறகு மனிதன் மரண தர்மமில்லாதவனாக ஆகிவிடுகிறான் ஸ்ரீத, க்ரமமுக்தி முன்காட்டிய அர்ச்சிராதி மார்க்கத்தை அடைந்தவர் களுக்கிக் கிடைப்பது –வீர. மூலத்தில் இரண்டு மார்க்கம் என்றிருப்பதால் தூமாதி மார்க்கமும், அச்சிராதி மார்க்கமும் என்று தாத்பர்யம். சந்த.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்– 3

பகவத் குணங்களின் மேன்மை

ஓ மஹாராஜ! வித்வான்களாகிய மனிதர்கள் சாகுந்தருணத்தில் செய்யவேண்டிய கார்யம் பகவான் உடைய கதையைக் கேட்பது முதலியவைகளே என்று சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. நீர் கேட்ட விஷயம் இதுவே. ப்ரம்ஹதேஜஸை அடைய விரும்பிய அவன் வேதங்களுக்கு அதிபதியாகிய ப்ரம்ஹ தேவரையும், இந்திரியங்களின் வல்மையை விரும்பிய அவன் இந்திரனையும், புத்ர ஸம்பத்தை விரும்பிய அவன் தக்ஷர் முதலிய ப்ரஜாபதிகளையும் பக்ஷ்ய போஜ்யங்களை விரும்பியவன் அதிதி தேவியையும், ஸ்வர்க்கத்தை விரும்பியவன் விச்வேதேவர்களையும், ஜனங்களை வசப்படுத்த விரும்பியவன் ஸாத்யர் களையும், ஸம்பத்தை விரும்பியவன், அக்னி பகவா னையும், பணத்தை விரும்பியவன் வீர்யத்தைக் கொடுப்பவர்களாகிய ருத்ரர்களையும், தீர்க்கமான ஆயுஸ்ஸை விரும்பியவள் அசுவினீ தேவர்களையும், சரீர புஷ்டியை விரும்பியவன் பூதேவியையும், பிரதிஷ்டியை (ஸ்தானத்தை விட்டு நழுவாமலிருப்பது) விரும்பிய புருஷன் உலகத்திற்குத் தாயார்களான ஆகாசம், பூமி இவைகளையும்; அழகை விரும்பிய அவன் கந்தர்வர்களையும், ஸ்திரீயை விரும்பியவன் ஊர்வசி என்கிற அப்ஸரஸ்ஸையும், எல்லோருக்கும் யஜமானனாயிருக்க வேண்டுமென்று விரும்பியவன் யக்ஞ ரூபமான மஹாவிஷ்ணுவையும், மோக்ஷத்தை விரும்பியவன் வருணனையும், வித்தையை விரும்பிய அவன் பரமசிவனையும், தம்பதிகள் ஒருவருக்கொருவர்

பிரியாமலிருக்க வேண்டியதை விரும்பியவன் பதிவிரதையான உமாதேவியையும், தர்மத்தை விரும்பிய அவன் உத்தம ச்லோகராகிய மஹாவிஷ்ணுவையும், ஸந்தானத்தை (வம்சத்தின் தொடர்ச்சி) விரும்பிய அவன் பிதுருக் களையும்; உபத்திரவ நிவர்த்தியை விரும்பியவன் யக்ஷர்களையும், பலத்தை விரும்பிய அவன் மருத்துக்களையும், இராஜியத்தை விரும்பியவன் மனுக்களாகிய தேவர்களையும், சத்துருவைக் கொல்ல விரும்பியவன் நிருதியையும், போகத்தை விரும்பியவன் ஸோமனையும், வைராக்யத்தை விரும்பியவன் ப்ரகிருதிக்கு மேற்பட்ட பரமபுருஷனையும் பூஜிக்க வேண்டும். இப்படிப் பல தேவர்களைப் பூஜிப்பவர் களுக்கு பகவத் பக்தர்களுடைய ஸங்கத்தால் பகவான் இடத்தில் ஸ்திரமான பக்தி உண்டாகிறது. இதுவே மேலான புருஷார்த்தம், பகவானுடைய கதையானது ஆசை, துவேஷம் ஆகிய இவைகளின் ஸம்பந்தமற்ற ஞானத்தை உண்டு பண்ணுகிறது. சித்தத்தைச் சுத்தி செய்கிறது. இவ்வுலகத்திலும், மேலுலகத்திலும் விஷயத்தில் வைராக்கியத்தையுண்டுபண்ணுகிறது. மோக்ஷ மார்க்கமாகிய பக்தி யோகத்தையும் உண்டு பண்ணுகிறது. ஆகையால் குரு முகமாய்ச் செய்த ச்ரவணம் முதலியவைகளால் ஸுகமடைந்த புருஷன் எவன் தான் பகவானுடைய கதையில் ஆசைப்படமாட்டான்? என்று பரிக்ஷித் மகா ராஜனுக்குச் சுகர் சொன்னாரென்று ஸூதர் சொன்னார்.

13–25 அதனைக் கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி, ஓ வித்வானாகிய ஸூதரே! சுகருடைய வார்த்தையைக் கேட்டு, பரீக்ஷித் மஹாராஜன் வியாஸ

புத்திரராயும், மிக்க ஞானியுமான அவரை நோக்கி, பின்னும் எதனைக் கேட்டார்? பகவத் பக்தர்களான ஸாதுக்களுடைய ஸபையில் பகவத் கதையே நடந்து கொண்டிருக்கும். அதனால் ஈசுவரனுடைய கதையைக் கேட்பதில் மிகுந்த ஆசையுண்டாகும். ஆனதுபற்றி அதனைக் கேட்கவேண்டுமென்ற விருப்பமுள்ள எங்களுக்குச் சொல்லவேண்டும். மேலும், மஹாரதரும், பாண்டு குலத்தில் பிறந்தவரும், பாகவதோத்தருமாகிய அந்த அரசன் பால்ய வயதில் விளையாட்டு சாமான்களைக் கொண்டு கிருஷ்ணனையே பூஜித்தார். அதுவே அவருக்கு விளையாட்டாயிற்று. அவருக்கு பாகவதத்தை உபதேசஞ் செய்த வியாஸ புத்திரராகிய சுக மஹர்ஷியானவர் கிருஷ்ணனிடத்திலே விசேஷ பக்தியுள்ளவர், ஆனதால் அவ்விருவர்களும் மஹா ஸாதுக்கள். ஸாதுக்களுடைய கூட்டத்தில் திவ்ய குணங்களால் அலங்கரிக்கப்பட்ட பகவத் கதை நடக்கும், உத்தமச்லோகராகிய பகவானுடைய கதையைச் சொல்லிக் கொண்டு கழித்த காலமே மனிதனுடைய ஆயுஸ்ஸில் மேலானது. லௌகிக வியவஹாரங்களால் கழிக்கப்படும் காலமானது வீணானதே. ஒவ்வொரு நாளும் உதயமாகிறவரும், அஸ்தமனத்தை அடைகிற வருமான அந்த ஸூர்யன் வீணாய்க் காலம் கழிப்ப வருடைய ஆயுஸ்ஸை அபகரிக்கிறார். அப்போர்ப் பட்டவர்களுடைய ஆயுஸுக்குப் பிழைத்திருப்பதைத் தவிர வேறு பிரயோசனமில்லை? பசுக்கள் ஆகாரத்தைப் புஜிக்கவில்லையா? மைதுனம் செய்யவில்லையா? ஆகையால் மேற்காட்டிய வீண் காலம் கழிப்பவன் இவைகள் போன்றவனேயாம். பின்னும் எவனுடைய காதில் பகவானுடைய சரிதம் ஒருபொழுதும் ப்ரவேசிக்கவில்லையோ, அவன்

நாயிக்குச் சமமானவன், கிராமத்திலிருக்கும் பன்றிக்கு ஒப்பானவன். சுமைகளைச் சுமக்கும் ஒட்டகம் போன்றவன், (காலால் உதைக்கும் ஸ்திரீயைத் தள்ள முடியாமல் மிக்க காமியாயிருப்பதால்) கழுதை போன்றவன், எந்த மனுஷ்யனுடைய இரு காதுகளும் பகவானுடைய குணங்களைக் கேட்கவில்லையோ, அவைகள் ஸர்ப்பம் முதலியவைகள் ப்ரவேசிக்கக் கூடிய பிலங்களேயாகும். எவன் நாக்கினால் பகவத் கதையைக் கானம் பண்ணவில்லையோ, அவனுடைய சப்தம் யாவும் தவளையின் சப்தம் போன்றவைகளே, எவனுடைய தலையானது முகுந்தனை நமஸ்கரிக்க வில்லையோ, அது பட்டுக்களால் செய்யப்பட்ட தலைப்பாகை, இரத்தின கிரீடம் இவைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தாலும் பெரிய சுமையேயாம். எவனுடைய கைகள் பகவானைப் பூஜிக்கவில்லையோ, அவைகள் தங்க வளையல்களால் அலங்கரிக்கப் பட்டவைகளானாலும் பிணத்தின் கைகளேயாகும். எவனுடைய கண்களிரண்டும் பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தைத் தரிசிக்கவில்லையோ, அவைகள் மயில் தோகையிலிருக்கும் கண்களேயாம். எந்தப் புருஷனுடைய பாதங்களிரண்டும் பகவானுடைய விசேஷ ஸான்நித்யமுள்ள புண்ய க்ஷேத்திரங்களுக்குப் போகவில்லையோ, அவைகள் மரத்தின் வேர்களுக்கு ஒப்பானவைகள். எவன் பகவத் பக்தர்களுடைய பாதங்களில் ஒட்டிய தூளியைத் தரிசிக்கவில்லையோ, எவன் பகவானுடைய பாதத்திலிருக்கும் துளஸியின் வாஸனையை மோந்து அதைச் ச்வாகிக்கவில்லையோ, அவன் பிழைத்திருக்கும் பிணமேயாம். பகவானுடைய கதையைக் கேட்டு எவனுக்கு முகத்தில் ஸந்தோஷமும், கண்களில் ஆனந்தாஷ்டமும், தேகத்தில்

மயிர்க்கூச்சலும் உண்டாகவில்லையோ, அவனுடைய ஹ்ருதயம் கருங்கல்லேயாகும். இது மிகவும் ஆச்சரியம் ஓ ஸூதரே! மனஸுக்குப் பிரியமாக நீர் பேசுகிறீர். ஆகையால் பாகவதர்களுக்குள் சிறந்தவரும், ஆத்ம வித்தையை நன்றாயறிந்தவரும் வியாச மஹாமுனியின் புத்திரருமான சுக மஹரிஷி பரீக்ஷித் மஹாராஜனை நோக்கி எதனைச் சொன்னாரோ, அதனைச் சொல்லவேண்டும் என்று கேட்டார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–4

பரீக்ஷித் ஜகத் ஸ்ருஷ்டியைப் பற்றிக் கேட்டது.

1–10. இம்மாதிரியான சௌனகருடைய வார்த்தையைக் கேட்ட ஸூதர் சௌனகரை நோக்கி பின்வருமாறு சொன்னார். உத்தரையின் புத்திரன் பரீக்ஷித்து மஹாராஜன் ஆத்ம ஸ்வரூபத்தின் உண்மையைத் தெரிவிக்கும் சுகருடைய வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ கிருஷ்ண பகவானையே உபாஸிக்க வேண்டும். அவரே பரமாத்மா என்று நிச்சயித்தார். மேலும் தேகம், பார்யை, புத்திரன், வீடு, யானை முதலியவை, திரவ்யம், பந்துக்கள் பூர்ணமாகிய இராஜ்யம் ஆகிய இவைகளில் வெகு நாளாக ஏற்பட்டிருந்த அபிமானத்தை விட்டுவிட்டார். நீங்கள் என்னைக் கேட்டதுபோல அவ்வரசனும் இந்த விஷயத்தைப் பற்றி ஸ்ரீ கிருஷ்ணனுடைய மாஹாத் மியத்தைக் கேட்பதில் மிக்க சிரத்தையுள்ளவராகப் பரமாத்ம ஸ்வரூபத்தை அறியவேண்டித் தாம் சீக்கிரத்தில் மரணமடையப் போகிறோமென்ற நிச்சயம் உள்ளவராகத் தர்மம், அர்த்தம், காமம், ஆகிய இவை களில் ஆசையில்லாதவராய், பகவானாகிய வாஸு தேவரிடத்தில் மிகுந்த பக்தியுடன் சுகரை நோக்கி, ஓ பாபமற்றவரே! ப்ராஹ்மணோத்தம! எல்லாவற்றையும் அறிந்தவரான உம்மால் சொல்லப்பட்ட வார்த்தை ஆத்ம ஞானத்தை உண்டுபண்ணக்கூடியதாயிருக்கிறது. நீர் மஹாவிஷ்ணுவின் கதைகளைச் சொல்லும் பொழுது என்னுடைய அஞ்ஞானம் விலகுகிறது. ஆனாலும் பகவான் தம்முடையமாயையால் பூமியில் அவதரித்துப்ரஹ்மா, பரமசிவன் முதலிய தேவர்களாலும்

அறியக்கூடாத இந்த ஜகத்தை அந்தப் பரமபுருஷன் எந்தச் சக்தியைக் கொண்டு உண்டு பண்ணுகிறார்? பின்னும் அதை எப்படிக் காப்பாற்றுகிறார்? மேலும், அதைப் ப்ரளய காலத்தில் எப்படி ஸம்ஹரிக்கிறார்? அவருடைய சக்தியானது அளவற்றது. பின்னும் அந்தப் புருஷன் இராமகிருஷ்ணாதி அவதாரங்களைச் செய்து விளையாடுகிறதுமல்லாமல் ப்ரஹ்மா முதலிய வர்களின் ரூபியாயுமிருந்து பலவகையான காரியங் களைச் செய்கிறார். அவருடைய சரிதம் மிக்க ஆச்சரியகரமானது. கவிகளாலும் அறிய முடியாதது, ஒருவனாகிய அந்தப் புருஷன் ஒரே காலத்தில் ப்ரக்ருதியின் குணங்களைக் கிரஹிக்கிறாரா? அல்லது ப்ரஹ்மா, ருத்ரன் முதலியவர்களின் ரூபமாயிருந்து பலவகையான லீலைகளைச் செய்து, கிரமமாக மேற்கூட்டிய ப்ரக்ருதியின் குணங்களையங்கீகரிக்கிறாரா? நீர் வேதங்களின் அர்த்தத்தையும், பரப்ரஹ்ம ஸ்வரூபத்தையும் நன்றாக அறிந்தவர். ஆகையால் இந்த ஸம்சயத்தைப் போக்கவேண்டும் என்று கேட்டார்.

11–26. இம்மாதிரியான அரசனுடைய வார்த்தையைக் கேட்ட சுகர் இந்திரியங்களுக்கு அதிபதியாகிய மஹாவிஷ்ணுவை ஸ்மரித்து, பிரத்யுத் தரஞ் செல்ல ஆரம்பித்துப் பரமாத்வை நமஸ்கரித் தார். எப்படியெனில் பரமபுருஷனை நமஸ்கரிக் கிறேன். அவர் அளவற்ற சக்தியுள்ளவர், இரஜோ குணத்தைக்கொண்டு லோகத்தை ஸ்ருஷ்டிப்பவர். ஸத்வ குணத்தைக்கொண்டு ஜகத்தைக் காப்பாற்றுகிறவர். பின்னும் அதைத் தமோ குணத்தைக்கொண்டு ஸம்ஹரிப்பவர். ஸகல பிராணிகளுக்கும் அந்தர்யாமியா

யிருப்பவர். அவருடைய ஸ்வரூபம் அறியமுடியாதது. மேலும், தர்ம சிந்தையுள்ள ஸாதுக்களுக்கு நேரிடும் துக்கத்தைப் போக்கடிக்கக் கூடியவர். துஷ்டர்களைச் சிக்ஷிப்பவர். ஸகல தேவஸ்வரூபியாயிருந்து பலனை கொடுப்பவர். பரமஹம்ஸர்கள் சுத்தமான சித்தத்தால் எதனை அடிக்கடி தேடுகிறார்களோ, அந்த ஆத்ம ஸ்வரூபத்தைப் ப்ரகாசிக்கச் செய்பவர். அப்படிப்பட்ட பகவானுக்கு அடிக்கடி நமஸ்காரஞ் செய்கிறேன். மேலும் அவர் பக்தர்களை ஸம்ரக்ஷிப்பவர். பக்தி இல்லாதவர்களுக்கு வெகு தூரத்திலிருப்பவர் (அறிய முடியாதவர்) அவருடைய ஐசுவரியத்திற்கு ஸமமான அல்லது மேலான ஐசுவரியம் ஒருவருக்குமில்லை. அந்த ஐசுவரியத்தால் ஸ்வரூபமாகிய பரப்ரஹ்மத் தினிடமே ஆனந்தப்படுகிறவர். அவரை நமஸ்கரிக்கிறேன். அந்தப்பரமபுருஷனுடைய திவ்ய நாமங்களை உச்சரிப் பதாலும், பூஜிப்பதாலும், அவருடைய கதையைக் கேட்பதாலும் ஸகல பாபங்களும் நாசமடைகின்றன. ஆகையால் அந்தத் திவ்ய மங்கள கீர்த்தியுள்ள பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். விவேகிகள் பகவானுடைய பாதங்களை உபாஸித்து இவ்வுலகத் திலும் மேலுலகத்திலுமுள்ள ஆசையை ஒழித்துச் சிரமமின்றி, ப்ரஹ்மாத்ம பாவத்தை அடைகிறார்கள். அந்தப் பகவானை நமஸ்கரிக்கிறேன். தபஸ்விகளாக ஆனாலும், தானத்தால் புண்யத்தை ஸம்பாதித்தவர் களானாலும், கீர்த்தியுள்ளவர்களானாலும் அவை களைப் பகவானிடத்தில் அர்ப்பணம் செய்யாவிடில் க்ஷேமத்தை அடைகிறதில்லை. ஆனதுபற்றி, அந்தப் புருஷனுக்கு அடிக்கடி நமஸ்காரம் செய்கிறேன். தவிரவும், கிராதர்கள் (மிருகம் முதலியவைகளை ஹிம்ஸிக்கிறவர்கள்), ஹூணர்கள் (வெண்நிறமாய்

இருப்பார்கள்) தெலுங்கு தேசத்தில் வசிக்கும் தாழ்ந்த ஜாதியான ஆந்திரர்கள், புளிந்தர்கள் (மிகுந்த ஹிம்ஸையில் பிரியமுள்ளவர்களான வேடர்கள்). சண்டாளர்கள், வலையர்கள், கழுகின் மாம்ஸத்தை புஜிக்கும் ஹீன ஜாதிகள், மிலேச்சர்கள், ஆயுதம் முதலியவைகளைச் சாணை பிடிப்பவர்கள் முதலிய பாபிஷ்டர்களும் பகவத் பக்தர்களை ஆச்ரயித்து சுத்தி யடைகிறார்கள். அந்த ப்ரபுவுக்கு நமஸ்காரம். மேலும் அவர் மனோதைரியமுள்ளவர்களால் ஆத்மாவென்று உபாஸிக்கக்கூடியவர், எல்லாவற்றிற்கும் ஈசுவரன்; வேத ஸ்வரூபீ. தபஸின் ரூபமாயிருப்பவர் குற்றமற்ற வர்களான ப்ரஹ்மா, பரமசிவன் முதலிய தேவர்களால் ஊகிக்கக்கூடிய திவ்ய சரீரமுள்ளவர். எல்லோராலும் உபாஸிக்கக்கூடிய அந்தப் பரமாத்மா என்னிடத்தில் தயவு செய்யட்டும். பின்னும் அவர் லக்ஷ்மீபதி: ஸகல யாகங்களுக்கு பலத்தைக் கொடுக்கக்கூடியவர்; ஸகல பிரஜைகளையும் ஸ்ருஷ்டிப்பவர், ஸகல லோகத்துக்கும் பிரபு கர்ம பூமியிலிருக்கும் கர்மிகளுக்கு ஸகல புருஷார்த்தத்தையும் கொடுப்பவர் அந்தகர்களுக்கும், வ்ருஷ்ணிகளுக்கும் ஸாத்வதர்களுக்கும் பெரியோர் களுக்கும் ப்ரபுவாயிருப்பதோடு அவர்களால் அடையக் கூடியவராயுமிருக்கிறார். எல்லாவற்றையும் காப்பாற்றும் அந்தக் கிருஷ்ண பகவான் என்னிடத்தில் தயவு செய்யட்டும். கவிகள் அவருடைய பாதாரவிந்தத்தை தியானஞ் செய்து அதனால் சித்தசுத்தியை அடைந்து, ஆத்ம ஸ்வரூபத்தைத் தங்களுடைய புத்திக்குத் தக்கபடி தெரிந்துகொள்கிறார்கள். ஞானத்தைக் கொடுக்கும் அந்த முகுந்தன் என்னிடத்தில் ஸந்தோஷம் அடையட்டும். கல்பத்தின் ஆதியில் ப்ரஹ்மதேவருக்கு ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும் சக்தியை (பூர்வ ஞாபகத்தை)

உண்டு பண்ணுவதற்காகப் பகவானால் தூண்டப்பட்டு. அவருடைய முகத்திலிருந்து ஸரஸ்வதியுண்டானாள். மஹரிஷிகளுக்கும் சிரேஷ்டராகிய அந்தப் பரமாத்மா என்னிடத்தில் கருணை செய்யட்டும். மேலும் அவர் மஹாபூதங்களைக் கொண்டு ஸரீரங்களை ஸ்ருஷ்டித்து அவைகளில் அந்தர்யாமியாய்ப் புருஷனென்ற டெயர் அடைந்து, பதினாறு கலாரூபியாயிருந்து அவைகளின் குணங்களைப் ப்ரகாசிக்கச் செய்கிறார். அந்தப் ப்ரபு என்னுடை வார்த்தைகளை ச்ருங்காரம் முதலிய ரஸங்கள் நிறைந்தனவாகவும். கேட்பவர்களுக்கு ஸந்தோஷத்தை யுண்டு பண்ணக் கூடியவைகளாகவும் செய்யட்டும், வேத வ்யாஸ ரூபியாயும், ப்ரஹ்ம ரூபியாயும், பக்தர்களுக்கு ஞானமாகிய மதுவைக் கொடுத்தவருமான அந்தப் பகவானை நமஸ்கரிக் கிறேன். 'ஓ மஹாராஜ! ப்ரஹ்மதேவர் தமக்கு மஹாவிஷ்ணு உபதேசித்தபடி நாரதருக்கு இதே விஷயத்தை உபதேசித்தார். அதை உமக்குச் சொல்லுகிறேன்' என்றார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–5

ஜகத்ஸ்ருஷ்டி

1–8 ஓ மஹாராஜ! அது எப்படியெனில், நாரதர் ப்ரம்ஹதேவரை நோக்கி, ஓ தேவர்களுக்கும் தேவரே; ஸகல பிராணிகளையும் ஸ்ருஷ்டிப்பவரே ஸகல பிராணிகளுக்கும் முற்பட்டவரே உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். ஆத்ம ஸ்வரூபத்தின் உண்மையைக் காட்டும் ஞானமானது எதனாலுண்டாகுமோ அதனை உபதேசிக்க வேண்டும். ஓ ப்ரபுவே! இந்த ஜகத்தானது எவரால் பிரகாசிக்கிறதோ எவரை ஆசிரயித்திருக் கிறதோ, எவரால் ஸிருஷ்டிக்கப்பட்டதோ, எவரிடத்தில் லயிக்கிறதோ, எவருக்கு ஸ்வாதீனமாக இருக்கிறதோ, எவருடைய உருவமாகவுமிருக்கிறதோ, எது ஸத்யம் ஆனதோ அதை உண்மையாகச் சொல்ல வேண்டும். நீர் உண்டானவைகளுக்கும், உண்டாகின்றவை களுக்கும், உண்டாகப் போகின்றவைகளுக்கும் அதிபதி. இந்த ஜகத்தைக் கையிலிருக்கும் நெல்லிக்கனியைப் போல ஞானத்தால் அறிந்திருக்கிறீர். ஆகையால் எல்லாம் உம்மால் அறியப்பட்டவைகளே. நீர் எவரிடமிருந்து ஞானத்தை அப்யஸித்தீர்? உமக்கு ஆதாரமாயிருப்பது யாது? நீர் யாருக்கு ஸ்வாதீனப் பட்டவர்? எவருடைய ஸ்வரூபியாக இருக்கிறீர்? ஒருவராயிருந்து பஞ்ச பூதங்களைக் கொண்டு ஸங்கல்பத்தாலே ஸகல பிராணிகளையும் ஸ்ருஷ்டிக் கிறீர். மேலும் பட்டுப்பூச்சி பட்டை உண்டு பண்ணு வதுபோல ஸ்ருஷ்டிக்கப்பட்ட ப்ராணிகளுக்குப் பிறரால் உபத்திரவம் உண்டாகாமல் தம்மிடத்தில் வைத்து

ச்ரமமில்லாமல் தம்முடைய சக்தியாகிய ப்ரகிருதியைக் கொண்டு நீர் காப்பாற்றுகிறீர். ஓ பிரபுவே; இவ் வுலகத்தில் உயர்ந்தவைகளும் தாழ்ந்தவைகளும், மத்ய நிலைமையிலுள்ளவைகளும், மனிதன் முதலிய இரண்டு கால் ஜந்துக்களும் வெண்மை முதலிய குணங்களால் ஏற்படக்கூடியவைகளும், ஸ்தூலங்களும் சூக்ஷ்மங்களும் உம்மிடத்திலிருந்தே உண்டாகின்றன என்று நினைக்கிறேன். இப்படி உமக்குப் பிரபஞ்சம் சரீரமாயிருப்பதால் நீர் எல்லோரிலும் மேலானவர். உமக்குத் தாழ்ந்தவர்களான மற்றவர்கள் உம்மை உத்தேசித்துத் தபஸ் செய்கிறார்கள். அவர்களுக்கு நீர் பலத்தைக் கொடுக்கிறீர். அப்போர்பட்ட நீர் கடும் தவம் செய்ததால் எனக்கு ஸந்தேஹமும் துக்கமும் உண்டாகின்றன. ஆகையால் எல்லாவற்றையும் அறிந்தவரே எல்லாவற்றிற்கும் அதிபதியே என்னால் கேட்கப்பட்ட விஷயங்களை எனக்குத் தெரியும்படிச் சொல்லவேண்டும்' என்று வேண்டிக் கொண்டார்.

9–29 அதனைக் கேட்ட ப்ரஹ்மதேவர் நாரதரை நோக்கி ஓ குழந்தாய்! நீ ஸந்தேகப்பட்டுக் கேட்ட விஷயம் மிகவும் மேலானது. பகவானுடைய மஹிமையைச் சொல்லும்படி என்னை நீ தூண்டின படியால் என்னிடத்தில் உனக்குக் கருணையிருப்பதாக தெரியவருகிறது. ஆனால் என்னை ஸகல ஜகத்திற்கும் ஈசுவரனென்று நீ சொன்னது புத்தி பூர்வகமாய் சொல்லும் பொய்யல்ல. என்னைக் காட்டிலும் பரமாத்மா மேற்பட்டவரென்று தெரிந்துகொள்ளாததால் இவ்வளவு மஹிமை எனக்கு இருப்பதாகச் சொல்லு கிறாய். இந்த ஜகத்தானது பரமபுருஷனுடைய தேஜஸினால் ப்ரகாசிக்கிறதேயொழிய என்னால்

ப்ரகாசிக்கிறதென்பதில்லை. ஆனால் காரண ரூபமாய் அவரிடம் அவ்யக்தமாயிருந்த ஜகத்தை நான் ஸ்ருஷ்டியால் வெளிப்படுத்துகிறேன். ஸூர்யனும், அக்னியும், சந்திரனும், அசுவினி முதலிய நக்ஷத்ரங் களும், அந்தப் பரமாத்மனுடைய தேஜஸினாலேயே பிரகாசிக்கின்றன. அந்தப் பகவானாகிய வாஸு தேவருக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். அவருடைய மாயை ஜயிக்க முடியாதது. அதனால் தான் என்னையே ஜகத் காரணனென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். அந்த மாயையும் எவரை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ள முடியாமல் எவருடைய முன்பாக நிற்பதற்கும் வெட்கப்படுகிறதோ, அவரே எல்லாவற்றிற்கும் காரணம். அந்த மாயையின் மஹிமையால் புத்திமோஹத்தை யடைந்த ஜனங்கள், நான், என்னுடையது, என்னும் அபிமானத்தை அடைகிறார்கள். மேலும் மஹா பூதங்கள், புண்ய பாபங்கள், காலம், ஸ்வபாவம், ஜீவன் ஆகிய இவைகளெல்லாம் உண்மையில் ஸ்ரீ வாஸுதேவரூபமே தவிர வேறானவையல்ல. (காரியங்கள்யாவும் காரண ரூபமென்று கருத்து.) எல்லா வேதங்களும் ஸ்ரீமந் நாராயணனையே வர்ணிக்கின்றன. ஸகல தேவர்களும் அவருடைய சரீரத்திலிருந்து உண்டானவர்கள். ஸ்வர்க்கம் முதலிய லோகங்களுக்கும் அவரே அதிபதியாக இருக்கிறார். ராஜஸூயம், அச்வமேதம், வாய்பேய்ம் முதலிய ஸகல யாகங்களாலும் அந்த ஸ்ரீ நாராயணனே ஆராதிக் கப்படுகிறார். ப்ராணாயாமம் முதலிய யோகங்களும் அவற்றாலேற்படும் தபஸும் (மனஸ் ஒருவழையாயிருப்பது), அதனால் கிடைக்கும் ஞானம், அதனால் ஏற்படும் பயனும் ஸ்ரீ நாராயணன் இடமிருந்தே கிடைக்கின்றன. அவர் எல்லாவற்றிற்கும்

ஸாஷியாயிருப்பவர். கூடஸ்தர். ஸகல பிராணிகள் உடைய ஸ்வரூபமாயுமிருக்கிறார். எல்லாவற்றிற்க்கும் ஈசுவரன். நான் அவரால் உண்டுபண்ணப்பட்டவன். அவருடைய கடாக்ஷ விசேஷத்தால் அனுக்ரகிக்கப் பட்டு ஸ்ருஷ்டிக்க வேண்டியவைகளைப் படைக் கிறேன். அவர், குணங்களில் ஸம்பந்தப்படாதவர். ஆனாலும் அவர் காப்பாற்றுவது, ஸ்ருஷ்டிப்பது, ஸம்ஹரிப்பது ஆகிய மூன்று காரியங்களுக்காக ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்று குணங்களை மாயையால் அங்கீகரிக்கிறார். 'புருஷன் எப்பொழுதும் இருக்கிறான். ஆனால் ஸத்வம் முதலிய குணங்கள் மஹாபூதங்களை ஆசிரயித்துக் காரியமா (அதிபூதம்) யிருப்பதிலும், ஞானத்தை அவலம்பித்துக் காரணமாய் இருப்பதிலும் (அத்யாத்மம்.), இந்திரியங்களை ஆசிரயித்துக் கர்த்தாவாக இருப்பதிலும், அபி மானத்தைப் புருஷனுக்கு உண்டுபண்ணிப் பந்தத்தை உண்டாக்குகின்றன. ஓ ப்ராஹ்மணராகிய நாரதரே! மாயையை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டவராகிய பகவான் மேற்சொல்லிய மூன்று வித உபாதிகளாலும் நன்றாய் அறிய முடியாத ஸ்வரூபத்தையுடையவர். அவர் எனக்கும் மற்ற எல்லாவற்றிற்கும் அதிபதி. மாயைக்கு அதிபதியான அந்தப் பகவான் பலவிதமான சரீரமெடுக்க வேண்டி, தெய்வச் செயலாய்க் கிடைத்த காலத்தையும், கர்மத்தையும், ஸ்வபாவத் தையும் தமது மாயையைக் கொண்டு அங்கீகரிக் கிறார். மேலும் அவரை ஆசிரயித்த காலத்தால் ஸத்வம் முதலிய குணங்கள் ஸமமாயிராமல் தாரதம்யத்தையடைகின்றன. அந்தப் புருஷனை ஆசிரயித்த ஸ்வபாவத்தால் வேறு உருவத்தை அடைகிறதாகிய பரிணாமம் உண்டாகிறது. பின்னும்

அந்தப் பரமாத்மாவை ஆசிரயித்த கர்மத்தினிடம் இருந்து மஹத்தத்வம் உண்டாயிற்று. பின்பு ரஜோ குணம் ஸத்வ குணம் இவைகளுடன் கூடியதும், விகாரத்தையடைந்ததுமான மஹத் தத்வத்திலிருந்து தமோகுணத்தை பிரதானமாயுடையதும், ஐந்து பூதங்களின் ஸ்வரூபமாயும், ஞானேந்திரிய ரூபமாயும், கர்மேந்திரிய ஸ்வரூபமாயுமுள்ள அஹங்காரம் உண்டாயிற்று. பிறகு அந்த அஹங்காரம் வேறு ரூபத்தை அடைந்து வைகாரிகம், தைஜஸம், தாமஸம் என்று மூவகையாயிற்று. அவைகளில் வைகாரிகன், ஸத்வ குணத்தைப் பிரதானமாக உடையவன். கர்மேந்திரியங்களை உண்டுபண்ணும் சக்தியுள்ளவன். தாமஸன் தமோ குணத்தையே பிராதனமாகக் கொண்டவன். ஞானேந்திரியங்களை உண்டு பண்ணும் சக்தியுள்ளவன். பூதங்களுக்கு முந்தின வனாகிய அந்தத் தாமஸன் வேறு ரூபத்தையடையும் பொழுது ஆகாசம் உண்டாயிற்று. சப்தமானது அதனுடைய ஸூக்ஷ்ம ரூபமாயும் குணமாயுமிருக்கிறது. மேலும் அது பார்க்கிறவன், பார்க்கப்படுகிற வஸ்து இவ்விரண்டிற்கு அடையாளமுமாயுமிருக்கிறது; வேறு உருவத்தை அடைந்த அந்த ஆகாசத்திலிருந்து வாயு உண்டாயிற்று. அதன் குணம் ஸ்பர்சமேயாம். அந்த ஆகாயத்தின் ஸம்பந்தத்தால் வாயுவானது சப்தம் உள்ளதாகவும் ஆகிறது. தேக தாரண நிமித்தமாகிய பிராணன், மனோபல வேகம், தேக பலம் ஆகிய இவைகள் வாயுவினால் உண்டாகின்றன. ஆகாசம், வாயு ஆகிய இவைகளின் ஸம்பந்தத்தால் தேஜஸா னது உண்டாகிறது. அது காலம், கர்மம், ஸ்வபாவம் ஆகிய இவைகளின் மஹிமையால் ரூபம் ஸ்பர்சம், சப்தம் ஆகிய இவைகளை அடைகிறது.

அதிலிருந்து, கந்த குணமுள்ள (வாஸனையுள்ள) ப்ருதிவியை யுண்டாக்குகிறது. அந்த ஜலம் தன் காரியமாகிய பிருதிவியில் காரண ரூபமாயிருப்பதால் ரஸம் சப்தம், ரூபம், ஆகிய இவைகள் உள்ளதாயிற்று.

30–42 மேலும் வைகாரிகமான அஹங்காரத்திலிருந்து மனஸ், திக்கு வாயு, ஸூர்யன், வருணன், அசுவினீ தேவர்கள், அக்னி, இந்திரன், உபேந்திரன், மித்ரன், ப்ரஹ்மா ஆகிய பத்துத் தேவர்களும் உண்டானார்கள். தைஜஸ அஹங்காரத்திலிருந்து பத்து இந்திரியங்கள் உண்டாயின. மேலும் ஞானசக்தியான புத்தியும், கிரியாசக்தியான பிராணனும், தைஜஸனுடைய கார்யங்களாகையால் சுரோத்ரம் (காது) துவக் (தோல்), கிராணம் (மூக்கு), சக்ஷுஸ் (கண்) ஜிஹ்வா (நாக்கு) ஆகிய ஞானேந்ரியங்கள் ஐந்தும், வாக்கு, கை, உபஸ்தம் கால் பாயு ஆகிய கர்மேந்திரியங்கள் ஐந்தும் தைஜஸனிடமிருந்தே உண்டாகின்றன. இம்மாதிரி உண்டான ப்ருதிவி முதலிய பூதங்களுடைய குணங்களும் (வாஸனை முதலியவைகள்) இந்திரிய குணங்களாகிய பார்த்தல் முதலியவைகளும் மனத்தின் குணங்களும் ஒன்றோடொன்று சேராமல் தனித்து இருந்தன. ஓ பரப்ரஹ்ம! ஸ்வரூபத்தையறிந்தவர்களுக்குள் சிறந்த நாரத, அப்பொழுது அவை ப்ரஹ்மாண்டத்தை உண்டு பண்ணச் சக்தியற்றவைகளாக இருந்தன; அத்தருணத்தில் பகவானுடைய சக்தி விசேஷத்தால் தூண்டப்பட்டு அவைகள் ஒன்றோடொன்று சேர்ந்து ப்ரதான குண பாவத்தை அங்கீகரித்து ஸமஷ்டி வியஷ்டியாகிய ப்ரமராண்ட சரீரங்களை உண்டு பண்ணின. இப்படி அநேக

வர்ஷங்கள் சென்ற பிறகு பரமாத்மாவானவர் அசேதனமாக ஜலத்தில் மிதக்கும் அந்த அண்டத்திற்குக் காலம், கர்மம், ஸ்வபாவம் ஆகியவைகளை ஆச்ரயித்துச் சைதன்யத்தை உண்டு பண்ணினார். அதாவது அந்த அண்டத்தைப் பிளந்துக் கொண்டு அந்த மஹாபுருஷன் வெளியில் வந்தார். அவர் அநேக தலைகளையும் முகங்களையும் கண்களையும் கைகளையும் தொடைகளையும் கால்களையும் உடையவராக இருந்தார். மேலும் அந்த மஹா புருஷனுடைய முகத்திலிருந்து ப்ராம்ஹண ஜாதியும், கைகளிலிருந்து க்ஷத்ரிய ஜாதியும், தொடைகளில் இருந்து வைசிய ஜாதியும், பாதங்களிலிருந்து சூத்ர ஜாதியும் உண்டாயின. மேலும் அந்தப் புருஷன் உடைய கடி இடுப்பு முதலியவைகளிலிருந்து கீழ் உலகங்களும், ஜகனம் முதலியவைகளிலிருந்து மேல் உலகங்களும் உண்டாயினவென்று வித்வான்கள் சொல்லுகிறார்கள். அதெப்படியெனில், அவருடைய பாதங்களிலிருந்து பூலோகமும், நாபியிலிருந்து புவர் லோகமும், ஹ்ருதயத்திலிருந்து ஸ்வர்லோகமும், மார்பிலிருந்து மஹர்லோகமும், கழுத்திலிருந்து ஜன லோகமும், இரண்டு ஸ்தனங்களிலுமிருந்து தபோ லோகமும், தலையிலிருந்து நித்யமானது வைகுண்டம் என்று சொல்லப்படுகிறதுமான ஸத்யலோகமும் உண்டாயின. பின்னும், அவருடைய கடியிலிருந்து அதலமும், தொடைகளிலிருந்து விதலமும் முழங் கால்களிலிருந்து மிக்க பரிசுத்தமான ஸுதலமும், கணைக்கால்களிலிருந்து தலாதலமும் குல்பங்களில் இருந்து மஹாதலமும், நுனிக்கால்களிலிருந்து ரஸா தலமும், பாதங்களிலிருந்து பாதாளமும் உண்டாயின. (உலகங்கள் பதினான்கு என்று பக்ஷம் காட்டப்பட்டது.)

மேலும், அந்தப் புருஷனுடைய பாதங்களிலிருந்து பூலோகமும், நாபியிலிருந்து புவர்லோகமும், தலையில் இருந்து ஸுவர் லோகமும் உண்டாயினவென்றும் விராட் புருஷனுடைய அவயவங்களில் லோகத்தைக் கற்பிக்கிறார்கள். (லோகங்கள் மூன்று என்ற பக்ஷமானது காட்டப்பட்டிருக்கிறது.)

நோட்டு

முந்தினவனாகி—மூலத்தில் பூதாதி என்றிருப்பதால், அதற்குப் பஞ்ச பூதங்களுக்கு முதன்மையாகிய ஆகாச என்று அர்த்தம்—சந்த். தாமஸாஹங்காரதிற்கே பூதாதி யென்றும் பெயருண்டு—வீர. சப்தமானது தாமஸன் இடமிருந்து முதலில் சப்தம் உண்டாயிற்று என்று ப்ரசித்தமாக இருக்கிறது. ஆனாலும் அந்தச் சப்த மானது ஆகாசத்தினுடைய ஸூக்ஷ்ம ரூபமாயும், அதன் குணமாகவும் மிருக்கிறது. ஆகையால் அதன் வழியாகச் சப்தம் உண்டாயிற்று என்பது கருத்து —ஸ்ரீத. பார்க்கிறவன் சுவரின் மறைவில் செல்லும் யானை முதலியவை களைக் கண்ட ஜனங்கள் யானையென்று உரக்கச் சொல்ல, அதனைக் கேட்ட அவன் ஜனங்கள் யானையைப் பார்க்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளுகிறானல்லவா? அதனால் அந்தச் சப்தமானது பார்க்கப்பட்ட வஸ்து (பார்க்கிறவர்கள் ஆகிய இவர்களுக்கு அடையாளம்...சந்த்—வீர. வைகாரிக —ஸாத்வீக அஹங்காரத்திலிருந்து ஸகல இந்திரியங் களும் உண்டாயின—ஸ்ரீத, வீர, மனஸ் அதற்கு அதிஷ்டான தேவதைகயாகிய சந்திரனும் உண்டானான். திக்கு இந்த பத்துத் தேவதைகளும் முறையே சுரோத்ரம், துவக், சக்ஷுஸ், ஜிஹ்வா, கிராணம்,

வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் ஆகிய இவைகளுக்கு அதிதேவதைகள். மேற்காட்டிய இந்திரி யங்கள் அதிதேவதைகளுடன் உண்டானவையென்று தாத்பரியம் கொள்ள வேண்டும்—வீர தைஜஸனிடம் இருந்து ஞானேந்திரியங்களும் கர்மேந்திரியங்களும் தைஜஸனிடமிருந்து உண்டாயின.—ஸ்ரீத ராஜஸாஹங் காரத்துடன் கூடிய ஸாத்வீக அஹங்காரத்தினிடமிருந்து என்று அர்த்தங் கொள்ளவேண்டும். அப்படியில்லா விடில் 30—வது ஸ்லோகத்தின் அர்த்தத்திற்கு விருத்த மாகும். ஆக்ஷேபம் 30—வது ஸ்லோகத்திற்கு மூலத்தில் கண்டபடி அதிஷ்டான தேவதைகள் உண்டானார்கள் என்று மாத்திரம் அர்த்தம் வைத்துக் கொண்டோ மானால் 31 வதான இந்த ஸ்லோகத்தில் இந்திரியங்கள் உண்டாயினவென்று அர்த்தங்கொள்ளலாம், ஒன்றுக் கொன்று விரோதமில்லை. ஸமாதானம் அப்படியல்ல இந்திரியங்களில்லாமல் அதிதேவதைகளுக்குத் தேகம் உண்டாக நியாயமில்லை, மேலும், ஆதித்யன் முதலிய தேவதைகள் நான்முகக் கடவுளால் ஸ்ருஷ்டிக்கப் பட்டவர்களாகச் சொல்லப்பட போகிறபடியால் அண்டங்களை ஸ்ருஷ்டிப்பதற்கு முன் அவர்களை ஸ்ருஷ்டிக்க நியாயமில்லை,—வீர. சரீர நோபயம் ஸஸிருஜுர்ஹ்ருத என்ற பாடத்தை யங்கீகரித்து அவைகள் பஞ்சீகரணத்தால் ஸ்தூல, பாவத்தையும், ஸூக்ஷ்மமாக விருப்பதையும் மேற்காட்டிய இரண்டு வகையுமற்றதாகிய கால கர்மஸ்வபாவத்தையும் அங்கீ கரித்து இந்தப் ப்ரம்ஹாண்டத்தைப் படைத்தன அல்லது ஒரு தத்துவத்திற்கும் காரியமாக இல்லாததும், காரணமாக இல்லாததுமாகிய ப்ரம் ஹாண்டத்தை ஸ்ருஷ்டித்தன —வீர.

அத்தியாயம்–6

விராட் புருஷனுடைய விபூதிகள்

ஜனங்களுடைய வாக்கும், அதற்கு அதிஷ்டான தேவதையாகிய அக்னியும் விராட் புருஷனுடைய முகத்திலிருந்து உண்டானவை. மேலும் அவருடைய தோல் முதலிய ஏழு தாதுக்களிலிருந்து காயத்ரீ முதலிய சந்தஸ்ஸுகள் உண்டாயின. ஹவ்யம் (தேவர்களுக்குக் கொடுக்கும் அன்னம்). அமிர்தம் (மேற்காட்டிய இருவகையிலும் பாக்கியான மனுஷர் களுக்குக் கொடுக்கக்கூடிய அன்னம்) ஆகிய இவை களும், ஆறு வகையான ரசங்களும், ஜனங்களுடைய நாக்கும் அதற்கு அதிதேவதையான வருணனும் அவருடைய நாக்கிலிருந்து உண்டாயின. மேலும் ஸகல பிராணிகளுடைய ப்ராணன்களுக்கும் மற்ற வாயுவிற்கும் அவருடைய மூக்குகள் முக்கியமான இருப்பிடம், ஔஷதிகளும், அசுவினீ தேவர்களும் மோதம், ப்ரமோதம் என்ற ஸாமான்ய விசேஷ வாஸனைகளும் அவருடைய கிராணேந்திரியத்தில் இருந்து உண்டானவை. அவருடைய சக்ஷுரிந்திரியம் ஆனது ஏழுவித உருவங்களுக்கும், சந்திரன், அக்னி, முதலிய தேஜஸ்களுக்கும் முக்கியமான ஸ்தானம். இரு கண்களும் (நேத்திர கோளங்கள்) த்யுலோகத்திற்கும், ஸூர்யனுக்கும் ஸ்தானங்களாயிருக்கின்றன. மேலும் அவருடைய காதுகள் திக்குகளுக்கும், தீர்த்தங்களுக்கும் முக்கிய ஸ்தானங்களாயிருக்கின்றன. ச்ரோத்ரேந்திரியம் ஆனது ஆகாசத்திற்கும் சப்தத்திற்கும் உற்பத்தி ஸ்தானமென்று சொல்லப்படுகிறது. அந்த மஹாபுரு ஷனுடைய சரீரமானது ஸகல பதார்த்தங்களுடைய

ஸாராம்சத்திற்கும், நிகரில்லாத ஸௌந்தர்யத்திற்கும் இருப்பிடமாயிருக்கிறது. அவருடைய துவக்கிந்திரியானது (தோல்) ஸ்பர்சம், வாயு யக்ஞம் ஆகிய இவைகளுக்கு ஸ்தானமென்று சொல்லப்படுகிறது. அவருடைய உரோமங்கள் யாகத்திற்கு ஸாதனமான உத்பிஜ்ஜ ஜாதியான அரசு, அத்தி, கருங்காலி, பலாசம் முதலிய விருக்ஷங்களுக்கும், அவருடைய தலைமயிர்கள் மேகங்களுக்கும், அந்த புருஷனுடைய மீசை, தாடி இவைகள் மின்னலுக்கும், நகங்கள் கற்களுக்கும், இரும்புகளுக்கும் இருப்பிடமாய் இருக்கின்றன. அவர் உடைய கைகள் உலகத்தைக் காப்பாற்றும் திக்பாலர்களுக்கும், காலடி வைப்பதானது பூலோகம், புவர்லோகம்: ஸுவர்லோகம் ஆகிய இவைகளுக்கும், க்ஷேமத்திற்கும் (கிடைத்ததைக் காப்பாற்றுவது). சரணத்திற்கும் (பயத்திலிருந்து ரக்ஷிப்பதற்கும்) காரணமா யிருக்கின்றன. பகவானுடைய பாதாரவிந்தமானது ஸகல இஷ்டங்களையும் கொடுக்கக்கூடியது. அந்த மஹா புருஷனுடைய சிகையானது ஜலங்களுக்கும், வீர்யத் துக்கும், ஸ்ருஷ்டிக்கும் பர்ஜன்யனுக்கும் ப்ரஜா பதிக்கும் காரணமாயிருக்கிறது. ஓ நாரதரே, அவர் உடைய பாயு என்னும் இந்திரியமானது, மல விஸர்ஜனத்திற்கும், யமனுக்கும், மித்ரனென்னும் தேவதைக்கும், ஆச்ரயமாக விருக்கிறது. மேலும் அவருடைய குதமானது நிருதிக்கும். ஹிம்ஸைக்கும், மிருத்யுவுக்கும். நரகத்திற்கும் ஆச்ரயமாயிருக்கிறது. அவருடைய பின் பாகமானது அவமானம், அதர்மம், அஜ்ஞானம் ஆகிய இவற்றுக்கும், அவருடைய நாடி களானவை ஆறுகள், மேற்கு முகமாய்ச் செல்லும் நதிகள் ஆகிய இவைகளுக்கும், அந்தப் புருஷனுடைய எலும்புகளானவை மலைகளுக்கும் ஆச்ரயங்களாக

இருக்கின்றன. பின்னும் அவருடைய வயிரானது அன்னம் முதலிய ப்ரதான ரஸங்களுக்கும் ஸமுத்திரங்களுக்கும், ப்ராணிகளுடைய லயத்திற்கும், ஹ்ருதயம் ஆனது மனத்திற்கும் ஸ்தானமாயிருக்கின்றன. மேலும் அவருடைய ஆத்மாவானது (சித்தம்) தர்மத்திற்கும், எனக்கும். உனக்கும் ஸனகர் முதலியவர்களுக்கும்: பரமசிவனுக்கும் ஸகல ஞானத்திற்கும், ப்ராணிகளின் ஸமூஹத்திற்கும் முக்ய இருப்பிடமாயிருக்கிறது. ஆகையால் நானும், நீரும், பரமசிவனும் உமக்கு மூத்த ஸஹோதரர்களான ஸனகர் முதலிய யோகிகளும், தேவர்களும், அஸுரர்களும்; மனிதர்களும், நாகங்களும், (யானைகளும்) பறவைகளும், மிருகங்களும், ஸர்ப்பங்களும் கந்தர்வர்களும், அப்ஸர ஸ்திரீகளும், யக்ஷர்களும், பூதகணங்களும், பசுக்களும், பிதிருக்களும், ஸித்தர்களும், வித்யாதாரர்களும், சாரணர்களும், ஜல ஜந்துக்களும் ஸ்தலத்தில் சஞ்சரிக்கும் ஜந்துக்களும், ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் ஜந்துக்களும், நவக்கிரஹங்களும்: நக்ஷத்திரங்களும்; தூமகேது முதலியவைகளும், மேகங்களும் மின்னல்களும், மற்றும் பலவகையான பிராணிகளும், உண்டாகின்றவைகளுமான ஸமஸ்தமும் அந்த மஹா புருஷ ஸ்வரூபமே தவிர வேறில்லை. பன்னிரண்டு அங்குல ப்ரமாணமுள்ள ஸ்வரூபமடைய அந்த மஹாபுருஷனால் இந்த ஜகத்தானது முழுவதும் வ்யாபிக்கப் பட்டிருக்கிறது. ப்ராணன் ஆனவன் (ஸூர்யன்) தன்னுடைய மண்டலத்தைப் ப்ரகாசிக்கச் செய்துகொண்டு வெளியிலும் ப்ரகாசிக்கிறார். இவர் அமிருதத்திற்கும் அபயத்திற்கும் அதிபதி. மேலும் கர்மபலத்தை அதிக்ரமித்தவர். ஆசையால் நித்ய முக்தர். ஆனாலும் ஜகத்ரூபியாயிருப்பதே அவருடைய அளவற்ற மஹிமையாயிருக்கிறது. அந்த

மஹா புருஷனுடைய அம்சமாகிய உலகங்களிலேயே ஸகல பிராணிகளும் வஸிக்கிறார்களென்று சொல்லப் படுகிறது. மூன்று லோகங்களுக்கும் மேலான மஹர் லோகத்திற்கும் மேலான லோகங்களில் அமிருதம் க்ஷேமம் அபயம் ஆகிய இவைகள் வைக்கப்பட்டிருக்கின்றன, மூவுலகங்களின் வெளியில் அவருடைய மூன்று பாதங்களிருக்கின்றன. அவைகள் ப்ரம்மசர்யம், வானப்ரஸ்தம், ஸந்யாஸம் முதலிய ஆச்ரமங்களேயாகும். மேற்காட்டிய ஆச்ரமிகள் புத்திர ரூபமாக உண்டாகாதவர்கள். மூவுலகத்தின் உள்ளே மற்றொரு பாதம் இருக்கிறது. அதுவே ப்ரம்மசர்ய வ்ரதமற்ற கிருஹஸ்தாச்ரமம் எனப்படுகிறது.

21–47. க்ஷேத்ரக்ஞனாகிய ஜீவன் போகத்திற்கும் மோக்ஷத்திற்கும் ஸாதனமாகிய இரண்டு மார்க்கங்களிலும் ஸஞ்சரிக்கிறான்; அவைகளின் தூமாதி மார்க்கம் என்பது வித்தைக்கு (ஞானத்திற்கு) ஸாதனமாகிய உபாஸனைகளால் கிடைக்கக்கூடியது. ஜீவன் முன் சொன்ன இருவகையான மார்க்கங்களையும் தன் உடைய அதிகாரத்திற்குத் தக்கபடி அடைகிறான். இப்படிவிராட் புருஷனுடைய உள்ளே இருப்பவர்களுக்கு விசித்திரமான பலன் கிடைக்கிறது. ஆனால் எதனிடத்திலிருந்து ப்ரம்மாண்டம் உண்டாயிற்றோ அதனிடமிருந்து ஐந்து பூதங்கள், இந்திரியங்கள், அதன் விஷயங்கள் ஆகிய இவைகளின் ஸ்வரூபியாயிருக்கும். விராட்புருஷன் உண்டானார். (அவர் ப்ரம்மாண்டத்திற்கு அபிமானியாயிருப்பவர்) அவைகளுக்குக் காரணமாயிருக்கும் பரமேசுவரன், அநேக கிரணங்களால் ஸூர்யன் ப்ரகாசிப்பது போல ஜகத் ரூபமாகிய விராட் புருஷனுடைய தேகத்தையும்

ப்ரம்மாண்டத்தையும் அவர் அதிக்கிரமித்துப் ப்ரகாசிக் கிறார் (ஈசுவரன் விலக்ஷண ரென்பது கருத்து). ஜகத் முழுவதும் அந்த ஸர்வேசனுடைய ஸ்வரூபமாயிருக்கு மானால் யாகமும், அதற்கு ஸாதனங்களும் பகவத் ரூபங்களென்று ஏற்படுகிறதே; யாகத்தால் பரம புருஷனை ஆராதிப்பது எப்படியெனில் (பின்வருமாறு) சொல்லப்படுகிறது) ஓ நாரத! மஹாத்மாவாகிய இவருடைய கொப்பூழில் தோன்றிய தாமரைப் புஷ்பத்திலிருந்து நான் உண்டானபோது பரமாத் மாவை ஆராதிப்பதற்காகயாக ஸாமக்ரிகளைத் தேடியும் எல்லாம் அவருடைய அவயங்களாக இருந்தனவே யொழிய அவைகளைக் காட்டிலும் வேறானவைகள் ஒன்றும் கிடைக்கவில்லை, ஆகையால் யாகத்திற்கு வேண்டிய பசுக்கள், யூபத்திற்கு உபயோகமாகிய மரங்கள், தர்ப்பங்கள், பாத்திரங்கள், நெல் முதலிய தானியங்கள், நெய் முதலிய வேறாம திரவ்யங்கள், ஸோமரஸம், ஸுவர்ணம் முதலிய உலோகங்கள், மண், ஜலம், ரிக், யஜுஸ்,ஸாமம் என்ற வேதங்கள், வெளத்ரம் முதலிய கர்மங்கள் ஜ்யோதிஷ்டோமம் முதலிய பெயர்கள். ஸ்வாஹாகாரம் முதலியவைகள். தேவதா தியானங்கள் ப்ராயச் சித்தம், செய்தவை களைப் பகவதர்ப்பணஞ் செய்வது, நான் வஸிக்கும் இந்தப் பகவானுடைய நாபியாகிய யாகசாலை ஆகிய ஸாமக்ரியைகளை அந்த மஹா புருஷனுடைய அவயங்களாலேயே ஸம்பாதித்தேன். இப்படி அவருடைய அவயவங்களால் யக்ஞ புருஷனாகிய அந்தப் பகவானையே பூஜித்தேன்; பிறகு கச்யபர் முதலிய ஒன்பது ப்ரஜாபதிகளும் மிகவும் ஸாவதானர்களாய் இந்திரன் முதலிய தேவர்களின் ரூபமாய் வியக்தரும், ப்ரஹ்மரூபமாய் அவ்யக்தருமான அந்த மஹா புருஷனைக் குறித்து யாகஞ் செய்தார்கள். பிறகு

மனுக்களும்; மற்ற மஹர்ஷிகளும் பிதிருக்களும், தேவர்களும், அஸுரர்களும். மனிதர்களும் அவரவர் களுக்கு வேண்டிய ஸமயத்தில் ப்ரபுவாகிய அவரை உத்தேசித்து யாகஞ் செய்தார்கள். இந்த ஸகல ஜகத்துக்களும் பகவானாகிய நாராயணனிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகவான் ப்ருகிரு தியின் ஸகல குணங்களையும் அடக்கிக் கொண்டு ஸ்ருஷ்டிக்கு முன்னே தாம் நிர்க்குணராக இருந்தார். அவருடைய ஆக்ஞையாலே நான் உலகத்தைப் படைக்கிறேன், பரமசிவன் ஸம்ஹரிக்கிறார், அவர் தம்முடைய ஸ்வரூபத்தால் காப்பாற்றுகிறார். இப்படி மூன்று வகையான சக்தியுள்ளவராக இருக்கிறார். காரியகாரண ரூபமாகிய ஸகல பதார்த்தங்களும் பகவானை விடவேறாக இருக்க வில்லை. ஓ நாரத உம்மால் கேட்கப்பட்ட எல்லா விஷயத்திற்கும் பதில் சொன்னேன். நான் விசேஷபக்தியுடன் ஹ்ருதயத்தில் பகவானைத்தியானித்தபடியால் என்னுடைய வாக்குப் பொய் சொல்லுகிறதில்லை. மனஸும் இந்திரியங் களும் கெட்ட மார்க்கத்தில் பிரவர்த்திக்கிறதில்லை வேத ஸ்வரூபியாயும் தப ஸ்வரூபியாயுமிருக்கும் நான் பிரஜாபதிகளால் நமஸ்கரிக்கப்படுகிறேன். மேலும் நான் எனக்குக் காரணமாகிய பகவானைத் தெரிந்து கொள்ளவேண்டி யோகத்தால் முயற்சி செய்தும் அவரைத் தெரிந்து கொள்ளமுடியவில்லை. அவர் உடைய சரணங்கள், சரணாகதர்களுக்கு ஸம்ஸார பந்தத்தைப் போக்குகின்றன. க்ஷேமத்தையும், ஸகல மங்களத்தையும் கொடுக்கின்றன. அந்தச் சரணங் களுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். ஆகாசமானது தன்னுடைய முடிவை அறியாதது போலவே அவர் உடைய மாயா வைபவத்தை அவரும் அறியவில்லை.

அப்படியிருக்கப் பிறருக்குத் தெரியுமா? என்றாலும், பரமசிவனாலும், உங்களாலும் ஆத்மஸ்வரூபம் அறிய முடிகிறதில்லை. மற்ற தேவர்களால் அறியமுடியுமா? அந்தப் பகவானுடைய மாயையால் நாம் கலங்கிய புத்தியுள்ளவர்களாய் நம்முடைய ஞானத்திற்குத் தக்கபடி இந்த ப்ரபஞ்சத்தைத் தெரிந்துகொள் கிறோம். (அவருடைய ஸ்வரூபம் முழுவதையும் தெரிந்துகொள்ள முடியவில்லை) எந்தப் பகவான் உடைய அவதார சரிதங்களை நாமும் பிறரும் கானம் செய்தபோதிலும் அவருடைய உண்மையைத் தெரிந்து கொள்ள முடியவில்லையோ. அந்தப் பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். அந்தப் புருஷனே எல்லாவற்றிற்கும் முந்தியவர். அவர் பிறப்பில்லாதவர். ஒவ்வொரு கல்பத்திலும் தம் மாலேயே தம்மை ஸ்ருஷ்டிக்கிறார். காப்பாற்றுகிறார், ஸம்ஹரிக்கிறார். அந்தப் புருஷன் சுத்தன். ஞான ஸ்வரூபி. எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாயிருப்பவர். தேகம் முதலியவைகளின் ஸம்பந்தமற்றவர். ஸத்ய ஸ்வரூபி. பூர்ணர், பிறப்பு நாசம் இவைகளில்லாதவர், நித்யர், ஒப்பற்றவர் ஓ நாரத மஹரிஷியே எவர் களுடைய சரீரமும் இந்திரியங்களும் மனஸும் மிகவும் சாந்தங்களாகவிருக்குமோ. அந்த முனிவர் களே மேற்காட்டிய ஆத்ம ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்வார்கள். துஷ்டர்கள் சொல்லுகிற சாஸ்திரவிருத்தமான யுக்திகளால் அவை கலங்குமாகில் அந்த ஆத்மஸ்வரூபம் அவர்களுக்குப் புலப்படாமல் மறைந்துவிடும். ப்ரகிருதியைப் பிரவர்த்திக்கச் செய்யும் புருஷன் பரமாத்மாவின் முதன்மையான அவதாரமேயாம். மேலும் காலம், ஸ்வபாவம். காரியம் காரணம், மனம், ஐந்து மஹாபூதங்கள், அஹங்காரம், ஸத்வம் முதலிய

குணங்கள், ஸமஷ்டி சரீரம். ஸ்வராட், ஸ்தாவரங்கள் ஜங்கமங்கள் ஆகிய இவைகள் யாவும் அவருடைய அம்சங்களேயாம். மேலும் நான் பரமசிவன், யாகம், (விஷ்ணு) தக்ஷர் முதலிய இந்த எல்லாப் பிரஜாபதிகள், நீர் ஸனகர் முதலியவர்கள், இந்திரன் முதலிய லோகபாலர்கள், கருடன் முதலியவர்கள். மனு. மாந்தாதா முதலிய அரசர்கள். லோகத்தின் பாலர் களாகிய அனந்தன். வாசுகி முதலியவர்கள் ஆகிய இவர்களும் கந்தர்வர்கள், வித்யாதரர்கள், சாரணர்கள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், ஸர்ப்பங்கள். யானைகள். மஹரிஷிகளுக்குள் சிறந்தவர்களாகிய வஸிஷ்டர் முதலியவர்கள் பிதிருகணங்களில் மேலானவர்களும் ஸித்தர்களில் சிறந்தவர்களும், தைத்யர்களுக்குள் சிறந்தவர்களும், தானவர்களுக்கு மேலானவர்களும் மற்ற, ப்ரேதங்கள். பிசாசங்கள், பூதங்கள், கூஷ்மாண்ட கணங்கள், ஜலஜந்துக்கள் மிருகங்கள், பசுக்கள் ஆகிய இவைகளுக்குள் சிறந்தவைகளுமாகிய எவை பூஜிக்கத்தக்கவைகளோ, காந்தி, வேகம் தேக பலம். பொறுமை. அழகு கெட்ட காரியஞ் செய்வதில் வெட்கம், ஸமிருத்தி புத்தி; அற்புதமாகிய வர்ணம். உருவமற்றதாயிருப்பது. உருவமுள்ளதாக விருப்பது ஆகிய இவைகளுள்ளவைகளாக எவைகளிருக்கின்றனவோ; அவைகளெல்லாம் பரமாத்மாவின் விபூதிகளேயொழிய வேறில்லை, ஆனாலும், ஓ மஹரிஷியே மிகுந்த மஹிமை பொருந்திய அந்தப் பரமாத்மாவினுடைய முக்யமான லீலாவதாரங்களென்று எவை சொல்லப் படுகின்றனவோ அவை கேட்பவர்களுடைய காதுகளின் தோஷங்களைப் போக்கக்கூடியவை. மிகவும் மனோஹரமானவை அவைகளை உமக்குச் சொல்லுகிறேன்.

நோட்டு

ஸகல–விரும்பக்கூடிய ஸகல வஸ்துக்களுக்குள் மேலானவராகிய பகவானுடைய பாதம் – வீர வேறில்லை. – "இந்த ஜகத் முழுவதும் புருஷனே" – ஸ்ருதி. ப்ராண – "இந்த ஆதித்யனே ப்ராணன்" – ஸ்ருதி ப்ராண வாயு வானது சரீரத்தில் ப்ராணன், அபானண் முதலிய பெயரை அடைந்து தானிருக்கும் சரீரத்தை சேஷ்டிக்கச் செய்துகொண்டு வெளியிலும் ஸஞ்சரிப்பதுபோல்–சந்த. ஜகத்ரூபி– ஜகத்ரூபியானாலும் அதனால் அவருடைய மஹிமை குறைவுபடுகிறதில்லை யென்ற ஸ்ருதியில் தாத்பரியம் காட்டப்பட்டது ஸ்ரீத. – மஹர்லோகம் – பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் ஆகிய மூன்று லோகங்களிலும் அனித்ய ஸுகமே தவிர நித்ய சுகமில்லை. மஹர்லோகமானது கிரம முக்தி ஸ்தானமானாலும் கல்பாந்தரத்தில் அவ்விடத்திலிருப்பவர்கள் அதை விட்டு விட வேண்டியிருப்பதால் அதிலும் நித்ய ஸுகமில்லை. மூவுலகமும் ஸங்கர்ஷணருடைய முகத்தின் அக்கினியால் எரிக்கப்படும் அந்த உஷ்ணத்தைப் பொறுக்காமல் பிருகு முதலியவர்கள் ஜனலோகம் செல்லுகிறார்கள் ஸ்ரீத.– வெளியில் – பிரகிருதி, பிராகிருதர்கள் ஆகிய இவைகளுக்கு வெளியில் இருக்கின்றன அவைகள் ஜன்மமற்ற முக்தர்களால் அடையத்தக்கவை – வீர. அதுவே – ஸம்ஸாரிகளான ஜீவவர்க்கங்களால் அடையக்கூடியது –வீர. படைக்கிறேன் – அந்தப் புருஷனே எனது உருவங்கொண்டு படைத்தலையும், தம் உருவத்தாலே காப்பாற்றுவதையும், ருத்திரருடைய ஸ்வரூபத்தை அடைந்து ஸம்ஹாரத்தையுஞ் செய்கிறார்.

அத்தியாயம்–7

பகவானுடைய லீலாவதாரம்

"நாசமற்றவரான ஸ்ரீ நாராயணன் ஸகல யக்ஞஸ்வரூபமான வராஹ சரீரத்தை யெடுத்துப் பூமியைத் தூக்க முயற்சித்தபோது ஸமுத்திரத்தில் பிரவேசித்த வனும், தைத்யர்களுள் முந்தினவனுமான ஹிரண்யாக்ஷன் என்ற அஸுரனைச் சிங்கப்பல்லால் குத்திக் கிழித்தார். அது மஹேந்திரர் வஜ்ராயுதத்தால் மலையையுடைத்தாற் போலிருந்தது. மேலும் அந்தப் புருஷோத்தமன் 'ருசி' என்ற பிரஜாபதிக்கு ஆகூதி என்ற ஸ்திரியினிடத்தில் ஸுயக்ஞரென்ற பெயருடன் அவதரித்தார். பிறகு "தக்ஷிணா என்பவளைக் கல்யாணம் செய்து கொண்டு அவளிடத்தில் 'ஸுயாமா' என்ற பெயருள்ள தேவர்களைப் பெற்றார். அப்பொழுது அந்த ஸுயக்ஞர் தாம் இந்திரனாக இருந்து உலகத்தைக் காப்பாற்றி வந்தார். அப்பொழுது ஸ்வாயம்புவ மனுவென்பவர், "நீர் மூவுலகத்திற்கும் நேர்ந்திருந்த பெரிதான உபத்திரவத்தைப் போக்கடித்தபடியால் உமக்கு 'ஹரி' என்று பெயர் உண்டாகட்டும்" என்று சொன்னார். ஓ ப்ராம்ஹணோத்தமரான நாரதரே பின்னும் அந்த மஹா புருஷன் கர்த்தமபிரஜாபதியின் வீட்டில் தேவஹூதியினிடத்தில் ஒன்பது ஸ்திரீகளுடன் கபிலராக அவதரித்தார். பிறகு அவர் தம் தாயான தேவஹூதிக்கு ப்ரஹ்ம வித்யையை உபதேசித்தார். அதனால் அவள் துக்கத்தைக் கொடுக்கக்கூடிய முக்குண ஸம்பந்தத்தை விட்டு அந்த ஜன்மத்திலேயே முக்தியை அடைந்தாள். முன்னொரு காலத்தில் நல்ல புத்திரன் வேண்டுமென்று அத்திரி மஹர்ஷியானவர்

தபஸ் செய்தார். அவருடைய தபஸினால் பகவான் சந்தோஷப்பட்டு, "நானே புத்திரனாக என்னால் (தத்தம்) கொடுக்கப்பட்டேன்" என்று சொல்லி, அதனால் தத்தாத்ரேயராக தத்தரென்ற அத்திரியின் புத்திரர் அவதரித்தார். அவருடைய பாத தூளிகளால் பரிசுத்தமான சரீரமுள்ள யது (யயாதியின் பிள்ளை) கார்த்தவீர்யார்ஜுனர் முதலியவர்கள் இவ்வுலகத்து ஸுகத்தையும், மேலுலகத்து ஸுகத்தையும் அடைந் தார்கள். மேலும் நான் பலவகையான உலகங்களை ஸ்ருஷ்டிக்க விரும்பித் தபஸ் செய்தேன். பூர்ணமாகிய அந்தத் தபஸினால் பகவான் ஸந்தோஷமடைந்து ஸனத்குமார, ஸனக ஸநந்தன ஸனத் ஸுஜாதர் என்ற பெயருடன் நான்கு வகையாக அவதரித்து, முன் கல்பத்தின் ப்ரளயத்தில் மறைந்துபோன ஆத்ம வித்தையை மஹர்ஷிகளுக்கு நன்றாக உபதேசித்தார். அதனைக் கேட்டவுடன் அவர்களுக்கு அபரோக்ஷ ஸாக்ஷாத்காரம் உண்டாயிற்று. இன்னும் அந்த மஹாபுருஷன் தர்மத்தின் பத்தினியும், தக்ஷருடைய பெண்ணுமான மூர்த்தி என்பவளிடத்தில் 'நரன், நாராயணன்', என்ற திவ்ய நாம தேயங்களுடன் இரண்டு வகையாக அவதரித்தார். அந்த அவதாரத்தில் கடுமையாக தபஸ் செய்தார். அப்பொழுது மன்மதன் உடைய சைன்யங்களாகிய ஊர்வசி முதலிய அப்சர ஸ்திரீகள் அவருடைய தபஸைக் கெடுக்க முயன்றும் முடியவில்லை. வித்வான்களாகிய ருத்ரன் முதலியவர் கள் கோபத்தால் க்ரூரமாயிருக்கும் பார்வையால் மன்மதனை ஜயித்தார்கள். ஆனாலும் தம் ஆத்மாவைத் தகிக்கும் (ஸகிக்க முடியாத) கோபாக்னியை ஜயிக்க வில்லை. (கோபத்திற்கு வசப்பட்டிருக்கிறானென்று கருத்து.) இவ்விதக் கோபமும் நாராயணாவதாரஞ்

செய்த பகவானுடைய மனதில் பிரவேசிக்கப் பயப்படு கிறது. அதற்குத் தாழ்ந்தவனாகிய காமம் அவருடைய மனத்தில் ப்ரவேசிக்க முடியுமா ?

8–54 உத்தான பாதனென்ற அரசனுடைய பத்தினியாகிய ஸுநீதியின் புத்திரர் துருவரென்று ஒருவர் இருந்தார். அவர் தம்முடைய பிதாவின் ஸமீபத்தில் ஸபத்னீ மாதாவான ஸுருசியினுடைய வார்த்தை யாகிய பாணத்தால் அடிக்கப்பட்டு, பால்ய வயதிலேயே தபஸ் செய்வதற்காகக் காட்டுக்குச் சென்றார். அவர் பகவானை ஸ்தோத்திரஞ் செய்யவே, புருஷோத்தமன் ஸந்தோஷப்பட்டு அவருக்குச் சாச்வத மாகிய பதத்தைக் கொடுத்தார். அந்த மேலான ஸ்தானத்தை அதற்குக் கீழாகவிருக்கும் ஸப்த ரிஷிகளும் ஸ்தோத்திரஞ் செய்கிறார்கள். (இது ஒரு அவதாரமென்று கருத்து) தவிரவும் வேணனென்ற அரசன் அதர்மத்தை அனுஷ்டித்து வந்ததால் ப்ராம் மணர்கள் அவனைச் சபித்தார்கள். வஜ்ரம் போன்ற அவர்களுடைய வாத்தையால் அவனுடைய ஐசுவர்யம் முதலியவைகள் நாசமாயின. அந்த வேனனுக்கு பகவான் ப்ருது என்றும் புத்திரனாக அவதரித்து, அவனை நரகத்திலிருந்து காப்பாற்றி அதனால் புத்திரன் என்ற சப்தத்தை உண்மையான அர்த்தமுள்ளதாகச் செய்தார். பின்னும் பூமி தேவி இடமிருந்து ஸகல வஸ்துக்களையும் கறந்தார். மேலும், அந்தப் ப்ரபுவானவர் ப்ரிய வ்ரதருடைய பௌத்திரரும் ஆக்னீத்ரருடைய புத்திரருமாகிய நாபி என்பவருக்கு ஸுதேவி என்பவளிடத்தில் ரிஷப ரென்ற திவ்ய நாமதேயத்துடன் அவதரித்தார். அப் பொழுது விஷயங்களின் ஆசையை ஒழித்து மிகவும்

சாந்தமாகிய அந்தக் கரணமுள்ளவராகி தம்முடைய ஸ்வரூபத்திலே இருந்து யோகியாய் மூடன்போல் சஞ்சரித்தார். அந்த நிலைமையைத் தான் மஹர்ஷிகள் பரமஹம்சாசிரமம் என்கிறார்கள். பின்னும், யக்ஞ புருஷராகிய அவர் என்னால் செய்யப்பட்ட யாகத்தில் ஹயக்ரீவராக அவதரித்தார். அந்த ஹயக்ரீவர் பொன்னிறமுள்ளவர். வேத ஸ்வரூபி. ஸகல யாக ஸ்வரூபி. சகலதேவஸ்வரூபி. வேதங்கள் யாவும் மூச்சுவிடும் அவருடைய மூக்கிலிருந்து உண்டாயின. பின்னும் ப்ரளய காலத்தில் பலவகையான வேதங்கள் என்னுடைய முகத்திலிருந்து நழுவிப்போனதால் வேத மார்க்கங் களைத் திருப்பி என்னிடம் கொடுப்பதற்காக அவை களை எடுத்துக்கொண்டு மத்ஸ்ய ரூபத்துடன் பகவான் சமுத்திர ஜலத்தில் விளையாடினார். அப்பொழுது ஸகல ப்ராணிகளுக்கும் ஆதரரும், பூமியைப் ப்ரதானமாயுடையவருமான அந்தப் பரம புருஷனை வைவஸ்வத மனு தர்சித்தார். தவிரவும், அந்த ஆதி புருஷன், தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து அமிருதத்திற்காகப் பாற்கடலைக் கடையும்பொழுது ஆமை உருவங்கொண்டு மத்தாயிருந்து மந்தர மலையைத் தம்முடைய முதுகில் தாங்கினார். அப்பொழுது அந்த மலை உராய்வதால் தினவைப் போக்கிக் கொண்டு ஸுகமாய்த் தூங்கினார். மேலும் தேவர்களுக்கு நேரும் கஷ்டங்களை நிவர்த்திக்கும் அந்த மஹாபுருஷன் சிங்கப் பற்களால் பயங்கரமாயும் குரூரமான புருவங்களுள்ளதுமான நரஸிம்ஹ சரீரத்தை எடுத்துக் கொண்டு, கதாயுதத்துடன் தமக்கு எதிரில் ஓடிவரும் ஹிரண்யகசிபு என்ற அசுரனைத் தமது மடியில் தள்ளி, நகங்களால் கிழித்துக் கொன்றார். முன்னொரு காலத்தில் ஒரு சிறந்த

யானையானது பெரிதான ஒரு ஏரியில் ஜலம் குடிக்க இறங்கினபொழுது அங்கிருந்த மிகுந்த பலசாலியான ஒரு முதலை அதைப் பிடித்துக் கொண்டது. அதனால் அந்த யானை மிகவும் துன்பமடைந்து துதிக்கையில் தாமரைப் புஷ்பத்தை வைத்துக் கொண்டு, 'ஆதி புருஷ! ஸகல லோகத்துக்கும் அதிபதியே கேட்பவர் களைப் பரிசுத்தப்படுத்தும் கீர்த்தியுள்ளவரே' என்னைக் காப்பாற்ற வேண்டும். உம்முடைய நாமங்களைக் கேட்பவர்களுக்கு ஸகல மங்களமும் உண்டாகின்றன" என உரக்கக் கதறிற்று. அளவற்ற மஹிமையுள்ள ஸ்ரீ நாராயணன் அதனைக் கேட்டுச் சக்ராயுதத்தைத் தரித்து, கருடன் மீது ஏறிக்கொண்டு அவ்விடம் வந்து சக்ராயுதத்தால் முதலையின் வாயைப் பிளந்து சரணமடைந்த யானையின் துதிக்கையைப் பிடித்து மிகுந்த கருணையால் அதை அக்குளத்திலிருந்து கரை சேர்த்தார். பின்னும் யக்ஞ புருஷனாகிய மஹாவிஷ்ணுவானவர் அதிதி தேவியின் புத்திரர் களான தேவர்களுக்குத் தம்பியாய் அவதரித்தவரானா லும், குணங்களால் சிறந்தவராயும், வாமன ரூபியாயு மிருந்து பலிச் சக்ரவர்த்தியினிடம் மூன்று அடி பூமியைப் பெற்று ஸகல உலகங்களையும் ஆக்ரமித்தார். உலகத்தில் தர்மம் தவறாமல் நடப்பவர்கள் சத்துருவைக் கொல்லும் ஸாமர்த்யமுள்ளவர்களானாலும அவர்கள் உடைய ஐசுவர்யத்தை அபஹரிப்பதற்கு யாசிக்கிற வழியைத் தவிர வேறு மார்க்கமில்லை. ஓ நாரத பலிச் சக்ர வர்த்தியானவன் பகவானுடைய பாதங்களை அலம்பி, அந்தச் சுத்தமான தீர்த்தத்தைத் தன்னுடைய தலையில் புரோக்ஷித்துக் கொண்டு (தனது புரோஹிதரான சுக்ராச்சாரியரால் தடுக்கப்பட்டும்) ப்ரதிக்ஞையை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தால்

மூவுலகத்தையும், தன்னுடைய சரீரத்தையும் சத்துரு வாகிய பகவானுக்குக் கொடுத்தான். அப்படிப்பட்ட பக்தனுக்கு பகவான் தேவராஜ்யத்தைக் கொடுப்பது போதாதென்று நினைத்துத் தமது ஸாலோக்யத்தைக் கொடுத்தார். மேலும் நீர் விசேஷ பக்தியுள்ளவராய், பகவானை நோக்கி யோக சாஸ்திரத்தை உபதேசிக்க வேண்டுமென்று கேட்டீர் அல்லவா? அப்பொழுது அவர் வாஸுதேவரே நம்மைக் காப்பாற்றுகிறவர் என்று நிச்சயமாய் நம்பியிருப்பவர்களால் சீக்கிரத்தில் அறியக்கூடியதும், பாகவத சாஸ்திரத்தில் வர்ணிக்கப் படுகிறதும் ஆத்மாவின் உண்மையைக் காட்டுகிறது மான ஞானத்தையும், யோகத்தையும் உமக்கு உபதேசித்தார். மேலும், மன்வந்தரங்களில் பகவான் மனுவின் வம்சத்தைக் காப்பாற்றுகிறவராய்ப் பத்துத் திக்குகளிலும் தம்முடைய தேஜஸை ஸ்தாபித்து, அதனால் துஷ்டர்களான அரசர்களை நிக்ரஹித்து தம்முடைய கீர்த்தியை ஸத்திய லோகத்திலும் பரவச் செய்கிறார். அந்தப் பரமாத்மாவேதான் தன்வந்த்ரியாக அவதரித்து தம்முடைய கீர்த்தி யென்கிற பெயரி னாலேயே மஹாரோக முள்ளவர்களுடைய வியாதியைப் போக்குகிறார்; பின்னும் தீர்க்கமான ஆயுஸைக் கொடுக்கக் கூடிய அந்தப் பகவான் யாகங்களில் ஹவிர்பாகத்தை (முந்தி அஸுரர்களால் தடுக்கப்பட்டிருந்ததை) அடைந்தார். மேலும், ஆயுர் வேதமாகிய வைத்திய சாஸ்திரத்தையும் உலகத்தில் பரவச் செய்தார். தவிரவும் மிகுந்த பராக்கிரமமுள்ள வரும், மஹாத்மாவுமான அந்த நாராயணன் பரசு ராமனாக அவதரித்துப் ப்ராம்மணர்களைத் துவேஷித்த வர்களும் நன்மார்க்கத்தை விட்டுத்தவறினவர்களும், நரகத்தை அடைய விரும்பினவர்களும் நாசத்தை

அடைவதற்கு என்றே தெய்வத்தால் விருத்தி பண்ணப் பட்டவர்களும் பூமிக்கு மிகுந்த உபத்திரவத்தைச் செய்பவர்களுமான க்ஷத்திரியர்களை இருபத்தோருதரம் கோடரியைக் கொண்டு கொன்றார். அந்த மஹா புருஷனே, என்னிடத்தில் தபவு செய்து, முகமலர்ச்சி யுள்ளவராய் இக்ஷ்வாகு வம்சத்தில் தம்முடைய அம்சங்களாகிய பரதன் முதலியவர்களுடன் தசரதருக்குப் பிள்ளையாக ஸ்ரீராமனென்ற பெயருடன் அவதரிப் பார். பிறகு பிதாவாகிய தசரதருடைய அனுமதியின் மேல் தம்பியாகிய லக்ஷ்மணருடனும், பார்யையான ஸீதாதேவியுடனும் தண்டகாரண்யஞ் செல்வார். அப்பொழுது இராவணன் அவரிடம் விரோதம் செய்து கொண்டதனால் பந்துக்களை யிழப்பான். பின்பு திரிபுர ஸம்ஹாரம் செய்வதற்கு முயற்சித்த பரமசிவன் போல ராவணனைக் கொல்வதற்காக இலங்கா நகரம் போக விரும்பிய ராமனைக் கண்டு ஸமுத்திரம் பயந்து நடுங்கும். மேலும் ஸீதையானவள் இலங்கா நகரத்திலிருப்பதால் அவளைப் பாராமல் கலங்கியதும், கோபத்தால்ப் சிவந்ததுமான ஸ்ரீ ராமன் உடைய பார்வையால் அந்த ஸமுத்திரத்திலிருக்கும் மகரங்களும், ஸர்ப்பங்களும், முதலைகளும் மிகவும் தாபத்தையடையும். பின்பு ஸமுத்திரம் வழிகாட்டும்; அதன் வழியாக ஸ்ரீராமன் இலங்கா நகரம் போவார்; அவ்விடத்தில் வஸிக்கும் ராவணன் மிகவும் பலமுள்ள வன்; அவன் ஐராவதத்துடன் யுத்தம் செய்யும் போது, அது தன்னுடைய தந்தங்களால் இராவணனுடைய மார்பில் குத்திற்று; பிறகு அவைகளை பிடுங்க முடியாமல் தலையை அசைக்கத் தந்தங்கள் முறிந்து போயின. அப்படி இராவணனுடைய மார்பில் பதிந்த யானையின் தந்தங்களுடைய காந்தியால் பத்துத்

திக்குகளும் ப்ரகாசிக்கின்றன. தவிரவும், அவன், எனக்கு ஸமமானவர்கள் உலகத்தில் யார் இருக்கிறார் கள் ? என்று கர்வத்தால் சிரிப்பதுமுண்டு. அப்படிப் பட்ட சத்ருவாகிய அந்த ராக்ஷஸனுடைய கர்வத்தை ஸைன்யத்தின் மத்தியில் வில்வினுடைய சப்தத்தாலேயே போக்கடித்து, அவனை நாசஞ் செய்யப் போகிறார். பிறகு அஸுராம்சமான அரசர்கள் வெகுவாய்ப் பூமியில் பிறந்ததனால் பூமிக்கு விசேஷ பாரம் ஏற்படுமாதலால் அதனை நிவர்த்திப்பதற்காக ஸாமான்ய ஜனங்களால் அறியக்கூடாத மார்க்கமுள்ள வரும், வெண்மை நிறமுள்ளது, கருமை நிறமுள்ளது மான தலைமயிர்களுள்ளவருமான ஸ்ரீ மஹாவிஷ்ணு வானவர் பலராமனாகவும் கிருஷ்ணனாகவும் அவதரித்து, தம்முடைய மஹிமையைக் காட்டும் லீலைகளைச் செய்வார். எப்படியெனில் அவர் குழந்தையாயிருக்கும்போது பூதனை யென்ற ராக்ஷஸியைக் கொல்வார். மூன்றுமாதங்கள் சென்ற பிறகு சகட ரூபியான அஸுரனை ஸம்ஹரிப்பார். முழங்கால்களைக் கொண்டு தவழும் போதே ஆகாசம் வரையில் உயர்ந்தவைகளான அர்ஜுன மரங்களின் நடுவில் புகுந்து அவைகளைப் பூமியில் தள்ளுவார். அவர் பகவதவதாரமாயில்லா விடில் இப்படிச் செய்யமுடியாது. தவிரவும், விஷ ஜலத்தைக் குடித்து மூர்ச்சையடைந்த இடையர்களையும்; பசுக்களையும் தம்முடைய அனுக்கிரஹமுள்ள பார்வையால் பிழைக்கச் செய்து யமுனையிலிருந்து அந்த மடுவைச் சுத்தப்படுத்துவதற்காக அதிலிருந்து மிகுந்த விஷ வேகமுள்ள காளியனென்ற ஸர்ப்பத்தை அதைவிட்டு ஓடும்படி செய்வார் பிறகு, அந்த அமானுஷ காரியத்தைப் பார்த்து கோபர்கள் ஆச்சரியமடைந்து

அன்று இரவு யமுனையின் கரையில் படுத்துத் தூங்கு வார்கள். கோடைக் காலமாகையால் அப்பொழுது நான்கு புறத்திலும் காட்டில் அக்கினி பற்றிக்கொள்ளும். அப்பொழுது ஒருவராலும் அறியக் கூடாத வீர்யமுள்ள பகவான் பலராமனுடன் கோபர்கள் அனைவரையும் கண்களை மூடிக் கொள்ளச் செய்து, அவர்களை அந்த ஆபத்திலிருந்தும் காப்பாற்றுவார். மேலும் அவருடைய தாயான யசோதையானவள் தன் வீட்டிலிருக்கும் கயிறுகளால் பிள்ளையான ஸ்ரீ கிருஷ்ணனைக் கட்டியும், அவைகள் முடிவதற்குப் போதாமலிருக்கும். அப்பொழுது, அந்தப் பகவான் கொட்டாவி விட்டு வாயைத் திறப்பார். யசோதை அவருடைய வயிற்றில் பதினான்கு லோகங்களையும் பார்த்துப் புத்திரனுடைய மஹிமையைத் தெரிந்து கொள்வாள். தவிரவும், வருணருடைய பாசத்தால் கட்டப்பட்டுள்ள நந்தகோபரை ஸம்ரக்ஷிப்பார். மயனுடைய புத்திரனால் பூமிக்குள் மறைக்கப்பட்டு இருந்த கோபர்களைக் காப்பாற்றுவார். பகல்முழுவதும் வேலைசெய்து களைத்து, இராத்திரி தூங்கிக் கொண்டிருக்கும் கோகுலவாஸிகளான ஜனங்களை வைகுண்ட லோகஞ் சேர்ப்பார். . இந்திரனை உத்தேசித்துக் கோபர்களால் ஒவ்வொரு வருஷத்திலும் செய்யப்பட்டு வரும் பூஜையானது ஒரு வருஷத்தில் நிறுத்தப்படும். அதனால் மிகவும் கோபங் கொண்டு பசுக்களை நாசஞ் செய்வதற்காக மழையை பெய்யச் செய்வார். அப்போது ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஏழு வயதுள்ளவரானாலும் கோவர்த்தனமென்னும் மலையை நாய்க்குடையைப் போல் எளிதில் ஒரு கையால் தூக்கிக் குடையாக ஏழுநாள் வரையிலும் பிடித்துப் பசுக்களையும், கோபர்களையும்

காப்பாற்றுவார். ஒரு நாள் ராத்திரியில் சந்திரிகை யால் வெண்ணிறமுள்ள காட்டில் ராஸக்கிரீடையில் பகவான் கானம் பண்ணுவார். அந்தப் பாட்டிலுள்ள பதங்கள் இனியவைகளாயிருக்கும், ராகாலாபனம் மிக்கமேலானதாக இருக்கும். அதனால் கோபிகை களுக்கும் மன்மத தாபம் விருத்தியாகும். அந்த ஸமயத்தில் அவர்களைச் சங்கசூடன் என்ற குபேரன் உடைய வேலைக்காரன் அபஹரித்துப் போவான். பகவான் அவனை ஸம்ஹரிப்பார். மேலும் பகன், கேசி, அரிஷ்டன் சாணூரன் முதலிய மல்லர்கள்,

குவலயாபீடமென்ற யானை, கம்ஸன், நரகாஸுரன் மௌண்ட்ரகன், ஸால்வன், தந்தவக்திரன், சம்பரன் விடூதரன், யவனன், ஏழு விருஷபங்கள் ஆகிய இவர்கள் ஸ்ரீ கிருஷ்ண பகவானாலும், பிரலம்பன், தேனுகன், துவிதனென்ற வானரன், பல்வலவன், ருக்மி முதலியவர்கள் பலராம ரூபியான மஹாவிஷ்ணு வினாலும், யுத்தத்தில் மிகுந்த ஸாமார்த்தியமுள்ள காம்போஜர், மத்ஸயர், குருக்கள், ஸிருஞ்ஜயர், கேகயர் முதலியவர்கள் பீமார்ஜுன ரூபமாகிய பரமபுருஷனா லும் கொல்லப்பட்டு வைகுண்டஞ் சேர்க்கப்படுவார் கள். பின்னும், கால மஹிமையால் ஜனங்களுக்கும் ஆயுஸும் புத்தியும் குறையும்போது, பகவான் ஒவ்வொரு யுகத்திலும்; ஸத்ய வதியினிடம் அவதரித்து, ஸமுத்திரம் போல விஸ்தாரமாகிய வேதங்களை அவர்களுக்குத் தக்கபடி சாகை சாகைகளாகப் பிரிப்பார். பின்னும் ஒரு காலத்தில் அஸுரர்கள் வேதமார்க்கத்தை ஆச்ரயித்து மயனால் செய்யப் பட்டதும் அறியக் கூடாத வேகமுள்ளதுமான (இரும்பு, வெள்ளி, தாமிரம் இவைகளால்

செய்யப்பட்ட) பட்டணங்களால் லோகங்களை உபத்திரவிப்பார்கள். அப்பொழுது பகவான் அவர்கள் உடைய புத்திக்கு மோஹத்தையும் (யுக்தமானவை களை விட்டுவிடுவது) ப்ரலோபத்தையும் (யுக்தமல்லாத வைகளை கிரஹிப்பது) உண்டாக்கும் பாஷண்ட வேஷத்தைத் தரித்து (புத்தாவதாரஞ் செய்து) தர்மம் போலத் தோன்றும் பாஷண்ட தர்மத்தை வெகுவாகச் சொல்வார். எப்பொழுது ஸாதுக்களுடைய கிருஹங்களிலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சரிதங்கள் கானஞ் செய்யப்படாமல் இருக்குமோ, எந்தக் காலத்தில் ப்ராம்மணர்களும், க்ஷத்ரியர்களும், வைச்யர்களும் பாஷண்டர்களாகவும், சூத்ரர்கள் அரசர்களாகவு மிருப்பார்களோ, எந்த ஸமயத்தில் ஸ்வாஹா, ஸ்வதா, வஷட் என்ற சப்தங்கள் கேட்க அரிதாகவிருக்குமோ, அப்பொழுது (கலியுகத்தின் முடிவில்) கல்கியாகிப் பகவான் அவதரித்துக் கலியை நிக்ரஹிப்பார். மேலும் நான் துஸும் (ஸ்ருஷ்டிக்கு முன்னிருந்த நிலையை யோஜிப்பது) மரீசி முதலிய ஒன்பது பிரஜாதிபதிகளும் ஜகத்தை ஸ்ருஷ்டிப்பதற்காக ஏற்பட்ட பகவான் உடைய மாயா விபூதிகளேயாம். தர்மமும், யக்ஞமும் (விஷ்ணு) மனுக்களும்; தேவ சிரேஷ்டர்களும் அரசர் களும், ஜகத்தைக் காப்பாற்றுவதற்காக நியமிக்கப் பட்ட விபூதிகளாகிறார்கள். அதர்மமும், ருத்ரரும், கோப ஸ்வபாவமுள்ள ஸர்ப்பங்களும், அஸுரர்களும், ஸம்ஹாரத்திற்காக ஏற்படுத்தப்பட்டவைகள். ஆகை யால் இந்த ஈச்வரனுடைய மாயா விபூதிகளெல்லாம் அளவற்ற ஆச்சர்யகரமான சக்தியுள்ளவைகள். பூமியின் தூளிகளைப் பிரித்து எண்ணக்கூடிய சக்தியுள்ள கவியாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் லீலா விபூதிகள் எல்லாவற்றையும் அறிய முடியாது.

ஆகையால் சுருக்கமாகச் சொன்னேன். அந்தப் பகவான் மிகவும் அசைந்து கொண்டிருந்ததும், ஸத்திய லோகத்திற்குக் கீழ்ப்பட்டதுமான ஸ்வர்க்கத்தைத் தம்முடைய தடையற்ற வேகத்தால் அசையாமல் இருக்கச் செய்தார். ஆகையால் எனக்கும்; உமக்கும் மூத்தவர்களான ஸநத்குமாரர் முதலியவர்களுக்கும், அந்தப் புருஷனுடைய மாயாபலம் இவ்வளவென்று தெரியாது. மற்றவர்கள் தெரிந்துகொள்ள நியாயமே யில்லை. ஆயிரம் முகங்களுள்ள ஆதிசேஷ பகவானும் அந்தப் பரமபுருஷனுடைய மஹிமையைக் கானம் பண்ணி, அதன் கரையை அடைய அசக்தராயிருக் கிறார். (முழுவதையும் சொல்ல முடியவில்லை) கடபமற்றுப் பகவானுடைய பாதங்களைப் பூஜிப்பவர் களிடத்தில் (பக்தி செய்பவர்களிடத்தில்) அவருக்குக் கருணை உண்டாகும். புருஷோத்தமருடைய மாயா பலத்தை நன்றாய்த் தெரிந்து கொண்டு அதையும் தாண்டுவார்கள். நாய், நரிகளுக்கு ஆஹாரமாகிய இந்த சரீரத்தில் அவர்களுக்கு மானமிராது. ஓ நாரத, ப்ரஹ்மாவாகிய நான், நீர், உமக்கு முன் பிறந்தவர்களான ஸனத்குமாரர் முதலியவர்கள், பகவானாகிய பரமசிவன், ப்ரஹ்லாதன்; ஸ்வாயம்புவ மனு, அவருடைய பத்தினியாகிய சதரூபை, அவருடைய பெண்கள், பிள்ளைகள் பிராசீனபர்ஹிஸ், ரிபு, என்னும் மஹரிஷி, வேனனுடைய பிதாவாகிய அங்கன், துருவன், இக்ஷ்வாகு, நளன், முசுகுந்தன், வைதேஹர், காதி, ரகு, அம்பரீஷன், ஸகரர், கயன், நஹுஷன், மாந்தாதா, அலர்க்கன், சததன்வா, நந்திதேவர், பீஷ்மர், பலி, அதூர்த் தரயன், திலீபர், ஸௌபரி, உதங்கர், சிபி.தேவலர்,பிப்பலாதர், ஸாரஸ்வதர் உத்தவர் பூரிஷேனர், பராசரர்,

விபீஷணன், ஹனுமான், சுகர், அர்ஜுனன், ஆர்ஷ்ணி ஷேணர், விதுரர், சுருததேவர் முதலிய மற்றவர்கள் ஆகிய எல்லோரும் பகவானுடைய யோகமாயையை அறிவோம். ஸ்திரீகளும், சூத்ரர்களும், ஹூணர்களும் (ஜாதி விசேஷங்கள்) வேடர்கள் பாபகர்மத்தைச் செய்து ஜீவிக்கிறவர்களும், பசு, பக்ஷி முதலிய திர்யக் ஜாதிகளும், பகவத் பக்தர்களுடைய சேர்க்கையாலேயே தேவமாயையைத் தெரிந்து கொண்டு, அதைத் தாண்டுகிறார்கள். சாஸ்திரங்களை அப்யசித்து, அவற்றை மனஸில் தரிக்கக்கூடிய சக்தியுள்ளவர்கள் மாயையை ஜயிப்பார்கள் என்பதில் சந்தேஹமே யில்லை. அந்தப் பரமாத்ம ஸ்வரூபமானது எப்பொழு தும் சாந்தமாயிருக்கிறது. தன்னை அடைந்தவர் களுக்கு ஸம்ஸார பயத்தைப் போக்கி அபயத்தைக் கொடுக்கிறது. அது சுத்தமாகிய ஞானஸ்வரூபம். தோஷமற்றது. எக்காலத்திலும் ஒரே தன்மை யுள்ளதாயிருப்பது. கார்யம், காரணம் இவைகளைவிட வேறானது. பலவகையான காரகம் கிரியை இவைகளுள்ள வேத சப்தங்களால் அந்த ஸ்வரூபம் நிரூபிக்கப்படுகிறதில்லை. மாயையானது புதிதாகக் கல்யாணஞ் செய்துகொண்ட சிறு பெண் போல வெட்கமுள்ளதாய் அந்த ஸ்வரூபத்திற்கு முன்பாக நிற்கிறதில்லை. (அதில் ஸம்பந்தப்படுகிறதில்லை.) அந்த ஸ்வரூபமே ப்ரஹ்மம். அது சோகமற்றது. எப்பொழுதும் ஸுகரூபமானது. அதனிடத்தில் மனத்தைச் செலுத்திய யோகிகள் வேறொன்றையும் அபேக்ஷிக்கிறதில்லை. மழை பெய்யச் செய்யும் மகேந்திரன் ஜலத்திற்காகக் கிணறு வெட்ட வேண்டி மண் வெட்டியை எடுத்துக் கொள்வானா? பல வகையான தாதுக்களால் உண்டான சரீரமானது

அந்தத் தாதுக்கள் பிரியும்போது நாசமடைந்தாலும் ஜீவன் ஆகாசம் போல் நாசமடைகிறதில்லை. ஏனென்றால் அவன் அதனுடன் உண்டானவனல்ல. ஜன்மம் முதலிய விகாரங்களற்றவன். அந்த ஜீவனுக்கு ஸகல வித க்ஷேமத்தையும் கொடுப்பவரும் அந்த மஹா புருஷனேயாம். மகத் தத்வம் முதலியவைகளின் பரிணாம விசேஷங்களால் ஏற்படும் சுபங்கள் அவரிடமிருந்தே உண்டாகின்றன. ஓ, குழந்தாய்! நாரத பகவானுடைய ஸ்வரூபத்தைச் சுருக்கமாகச் சொன்னேன். காரிய காரணங்களடங்கிய ஜகத்தில் அவரைக் காட்டிலும் வேறொன்றுமில்லை. (எல்லாம் பரமாத்ம ஸ்வரூப மென்று கருத்து.) ஸ்ரீமந் நாராயணனால் எனக்கு உபதேசிக்கப்பட்டபடி பகவானுடைய விபூதிகளை உனக்குச் சுருக்கமாகச் சொன்னேன். ஸகல ஸ்வரூபியாகவும், ஸகலத்திற்கு ஆதாரமாயிருக்கும் ஸ்ரீ நாராயணனிடத்தில் மனிதர் களுக்குப் பக்தியுண்டாகும்படி நீ இதை விஸ்தாரப் படுத்து. மோக்ஷத்திற்கு அதிபதியான ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் பூர்ணமாகிய பக்தி யிருக்குமானால், ஜீவன் மனுஷ்ய சரீரத்தில் ஆசைப்படமாட்டான். ஸ்திரமற்ற பார்யை, புத்திரன் முதலியவர்களால் என்ன பிரயோஜனம்? ஸகல பாபங்களையும் போக்கக்கூடிய உத்தம ச்லோகராகிய பகவானிடம் பக்தியுண்டாகாவிடில் அவன் செய்யும் தானங்களா லும் தபஸினாலும் ப்ரயோஜனமில்லை. மேலும் ஜாதிக்கும் ஆசிரமத்திற்கும் தகுந்த தர்மங்களை யனுஷ்டிப்பதாலும், சாஸ்திரங்களை படிப்பதாலும் பலனில்லை.

55. ஆகையால், ஸ்ரீ கிருஷ்ணனாகிய பரமாத்மா வினுடைய லீலைகளை வர்ணிப்பவர்களுக்கும், அதை

அனுமோதிப்பவர்களுக்கும், ச்ரத்தையுடன் நித்தியம் கேட்பவர்களுக்கும் அவித்யை விலகும் என்று ப்ரஹ்மதேவர் சொன்னார்" என்று நாரதருக்கும் ப்ரஹ்மதேவருக்கும் நடந்த ஸம்வாதத்தைப் பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சுகர் உபதேசித்தார்.

நோட்டு

நான்கு –மூலத்தில் சதுஸ்ஸன என்றிருப்பதால் அதற்கு நான்கு புருஷார்த்தங்களைக் கொடுப்பவர் ஆகையால் தத்தாத்ரேயருக்கே சதுஸ்ஸனா என்றும் மற்றொரு பெயர் – சந்த். ப்ரஹ்மதேவருடைய தபோமகிமையால் ஸனத். ஸநாதந, ஸகந்தன, ஸனக என்று நால்வகையாக அவதரித்தார் – வீர. ஸனகர், ஸனாதனர், ஸனந்தனர், ஸனத்குமாரர் என்ற திவ்ய நாமதேயங்களை அடைந்தார் – விஜ. முடியவில்லை இந்தக் கதை பதினோராவது ஸ்கந்தத்தில் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது. வெண்மை நிற பகவானுடைய தலைமயிர்களில் வெண்மை நிறமுள்ளவை சில. கருமை நிறமுள்ளவை சில. அப்படி யிருப்பது அழகேயாம். ஜரை (கிழத்தனம்) யால் ஏற்பட்டதல்ல ஓ மஹாமுனியே! வெண்மை நிறமுள்ளவையும் கருமை நிறமுள்ளவையுமான தம்முடைய கேசங்களை எடுத்தார். –விஷ்ணு புராணம் அந்த ஹரியும் வெண்மை நிறமுள்ள ஒரு மயிரையும், கருமை நிறமுள்ள ஒரு மயிரையும் எறிந்தார். அவை யதுகுலத்திலிருக்கும் ரோகிணி, தேவகி இருவர்களை யும் அடைந்தன. அவ்விரு கேசங்களில் வெண்மை நிறமுள்ளது பலராமனாக ஆயிற்று. கருமை

நிறமுள்ளது ஸ்ரீ கிருஷ்ணனாக அவதரித்தது. மஹா பாரதம். கேசம் அவதரித்தது என்பதால் பகவான் உடைய கேசமே துஷ்டர்களைக் கொல்ல ஸாமார்த்திய முள்ளது என்று காட்டப்பட்டது. பலராமன், ஸ்ரீ கிருஷ்ணன் ஆகிய இவர்களுடைய நிறமும் காட்டப் பட்டது. கேசமே அவதரித்தது என்று தாத்பரியமல்ல. ஸ்ரீ கிருஷ்ணன் ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவே என்று அர்த்தமுள்ள வசனத்தின் விரோதமேற்படுமாகையால் மேற்காட்டியபடியே அர்த்தங்கொள்ள வேண்டும். ஸ்ரீத, ஸ்திரீகளும் ஸ்திரீகளும் சூத்ரர்களும் வேதத்தை அத்யனஞ் செய்யக் கூடாது என்ற சுருதியின்படி வேதாத்யனத்திற்கு அனர்ஹர்களும் தாண்டுகிறார்கள்– முக்தியடைகிறார்கள். வேத சப்தங்களால் பத்தாவது ஸ்கந்தத்தில் ஸ்ருதி கீதையில் இந்த விஷயம் நன்றாய்க் காட்டப்பட்டிருக்கிறது.

அத்தியாயம்- 8

பரீஷித்தின் கேள்வி

அதனைக்கேட்ட பரீஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி ஓ தத்துவத்தைபறிந்தவர்களுக்குள் சிறந்தவரே! மிக்க அதிர்ஷ்டமுள்ளவரே, குணங்களை அதிக்கிரமித் வரராகிய பகவானுடைய குணங்களை, வர்ணிக்கும் படி திவ்ய திருஷ்டியுள்ள நாரதரைப் ப்ரஹ்மதேவர் தூண்டினாரல்லவா? பின்பு அந்த நாரதர் யார் யாருக்கு அந்தப் பகவத் குணங்களை எப்படி உபதேசித் தார்? அதனுடைய உண்மையை அறியவிரும்புகிறேன். அற்புதமான மகிமையுள்ள பகவானுடைய மங்களகர மாகிய கதைகளைச் சொல்ல வேண்டும். அவைகளைக் கேட்டு ச்ரத்தையாய் அவருடைய சரிதங்களை உச்சரிப் பவர்களுடைய மனத்தில் பகவான் வெகு சீக்கிரமாய்ப் ப்ரவேசிக்கிறார். விஷயங்களில் ஆசையொழிந்து மனஸைப் பகவானிடத்தில் செலுத்தி, சரீரத்தைவிட வேண்டும. சரத்காலமானது ஜலத்திலுள்ள தோஷத் தைப்போக்கி, அதை தெளியச் செய்வது போல் ஸ்ரீ கிருஷ்ண பகவான் காதின் வழியாகப் பக்தர்களுடைய ஹ்ருதய கமலத்தில் ப்ரவேசித்து மனோதோஷங்களை நாசஞ் செய்கிறார். சுத்தமான மனமுள்ள புருஷன் ஆசை, துவேஷம் முதலியவைகளை ஒழித்து கிருஷ் ணனுடைய பாதங்களை ஒருபொழுதும் விடமாட் டான். தேசாந்தரத்திலிருந்து வந்தவர்கள் தமக்குச் சொந்தமாகிய வீட்டை விடுவார்களா? தேஹத்தை யுண்டுபண்ணும் மகாபூதங்களுடைய ஸம்பந்தமற்ற வராகிய பகவானுக்கு தேஹம் எப்படி உண்டா கிறது? அல்லது காரணமில்லாமல் உண்டாகிறதா?

அதன் உண்மை உமக்குத் தெரியும். அதனைச் சொல்லவேண்டும். ஸகல லோகங்களின் அமைப்புள்ள புவன கோசமாகிய பத்மமானது எவருடையவயிற்றில் இருந்து உண்டானதோ. அந்தப் புருஷன் உண்மையில் அவயங்களில்லாதவரானாலும், லௌகிக புருஷனுக்கு எவ்வளவு அவயவங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு அவயவங்கள் உள்ளவரென்றும் அப்படிப்பட்ட அவயவங்களின் அமைப்புள்ளவெரென்று சொல்லப் படுகிறாரே, பகவானுடைய கொப்பூழில் தோன்றிய தாமரஸ புஷ்பத்திலிருந்து உண்டானவரும், ஐந்து பூதங்களாலேற்பட்ட சரீரமுள்ளவருமான ப்ரஹ்மதேவர் எவருடைய அனுக்கிரஹத்தால் ப்ராணிகளை ஸ்ருஷ்டிக்கிறார்? விராட்ரூபத்தை எப்படி நேரில் பார்த்தார்? அதைச் சொல்லவேண்டும் மாயைக்கு அதிபதியும் ஸகல கல்யாண குணங்களுக்கு இருப்பிட மாயும் ஜகத்தை உண்டுபண்ணுகிறவரும், அதைப் பரிபாலிப்பவரும், அதை ஸம்ஹரிப்பவருமான மஹா புருஷன் தம்முடைய மாயையைவிட்டு எவ்விடத்தில் சயனித்துக் கொள்கிறார்? தவிரவும் அந்த மஹா புருஷனுடைய அவயவங்களால், உலகங்களும், அவற்றின் அதிபதிகளும் ஸ்ருஷ்டிக்கப்பட்டார்கள் என்றும், லோகபாலர்களால் அந்தப் புருஷனுடைய அவயவங்கள் ஏற்பட்டன என்றும் சொல்லியிருக் கிறீரல்லவா? அதையும் விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும் மேலும், கல்பம் என்பதும், விகல்பம் என்பதும் எவ்வளவு காலங்கொண்டது? நடந்தது. நடக்கிறது, இனி நடப்பது ஆகிய காலங்களுள் எப்படி அனுமானிக்கப்படுகின்றன? ப்ரஹ்மதேவர் முதலிய வர்களின் ஆயுள் எவ்வளவு காலங்களடங்கியது? ஓ ப்ராஹ்மணோத்தம! காஷ்டை முதலாக அணுவாகியதும்,

வர்ஷம் முதலாகப் பெரிதாகியதுமான காலத்தின் பேதங்கள் எப்போர்ப்பட்டவைகள்? கர்மங்களால் அடையக்கூடிய ஸ்தானங்கள் எவை? அவைகளின் ஸ்வரூபம் யாது? ஸத்வம் முதலிய குணங்களும், குணமுள்ளவர்களான ஜீவர்களும் பரிணாமத்தை (வேறு ரூபத்தை) அடையுமிடும் போது புண்ய பாப கர்மங்களுடைய கூட்டம் எதனால், எப்படிக் கிரஹிக்கப்படுகிறது? (எந்தக் கர்மங்களை, எப்படிச் செய்தால், எவன் தேவாதி சரீரத்தை அடைவான் என்று கருத்து) தவிரவும் பூமி, பாதாளம், திக்குகள், ஆகாசம் கிரஹங்கள், நக்ஷத்திரங்கள் மலைகள், ஆறுகள், ஸமுத்திரம், த்வீபங்கள் ஆகிய இவைகள் உற்பத்தியையும், அவைகளில் வஸிக்கும் ப்ராணிகளின் உற்பத்தியையும் சொல்லவேண்டும். அண்டகோசத்தின் வெளியிலும், உள்ளேயுமுள்ள அளவும், மஹாபுருஷர் களுடைய சரிதமும் வர்ணங்கள் ஆசிரமங்கள் ஆகிய இவைகளின் நிச்சயமும் சொல்லப்படவேண்டும். பின்னும் பகவானுடைய ஆச்சர்யகரமான அவதாரங் களுடைய சரிதத்தையும் யுகங்களுடைய மானத்தையும் ஒவ்வொரு யுகத்தின் தர்மங்களையும், மனிதர்களுக்குப் பொதுவாகிய தர்மங்களையும், யார் யார், எவ்வித ஜீவனஞ் செய்கிறார்களோ அதற்குத் தகுந்த தர்மங் களையும், ராஜ தர்மங்களையும், ஆபத்தர்மங் களையும் கேட்க விரும்புகிறேன். தத்துவங்களுடைய ஸ்வரூபம், அவைகளின் காரணம், பகவானை ஆராதிக்கும் முறை. அஷ்டாங்க யோகத்தின் முறை, யோகாப்யாசஞ் செய்து அணிமா முதலிய ஐசுவரியங் களையடைந்து, அர்ச்சிராதி மார்க்கத்தை யடைதல்; லிங்க சரீரத்தின் லயம் இவைகளையும், வேதங்கள்; ஆயுர்வேதம் முதலிய உபவேதங்கள், தர்ம சாஸ்திரம்.

இதிகாஸம், புராணம் முதலியவைகளின் ஸ்வரூபத்தையும் நிரூபிக்கவேண்டும். மேலும் ஸகல பிராணிகளுடைய உற்பத்தி, ஸ்திதி ஸம்ஹாரம், , யாகம் குளம் வெட்டுவிப்பது முதலிய பூர்த்த தர்மம், அக்னிஹோத்ரம் முதலிய காம்ய கர்மங்கள் தர்மார்த்த கர்மங்கள் ஆகிய இவைகளை அனுஷ்டிக்கும் முறைகளையும் சொல்லவேண்டும். அணுசாயிகளான ஜீவர்களுடைய உற்பத்தியையும், பாஷண்ட தர்மத்தின் உற்பத்தியையும் ஆத்மாவிற்கு ஏற்படும் பந்த மோக்ஷங்களையும். ஆத்மா சுத்த ஸ்வரூபராக இருப்பதையும், ஸ்வதந்தரராகிய பகவான் தம்முடைய மாயையுடன் விளையாடுகிறதையும்; அந்த மாயையை விட்டு ஸாக்ஷிபோல உதாசீனராக இருப்பதையும், மற்றும் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள விரும்பி, தங்களைப் பிரார்த்திக்கும் சரணாகதனாகிய எனக்கு வரிசையாகச் சொல்லவேண்டும். ப்ரஹ்மதேவரால் இவைகள் அறியப்பட்டிருப்பது போல உம்மாலும் நன்றாய் அறியப்பட்டிருக்கின்றன. முன்னோர்கள் அனுஷ்டித்த தர்மத்தையே பிந்தியவர்கள் அனுஷ்டிக்கிறார்கள். ஓ ப்ராஹ்மண நான் போஜனம் செய்யாமல் விரதமுள்ளவனானாலும் தங்களுடைய முகமாகிய தாமரை மலரிலிருந்து பெருகிவரும் பகவத் கதையாகிய அமிருதத்தைப் பானஞ் செய்வதால் ப்ராணனுக்கு யாதொரு உபத்திரவமுமில்லை. ஆகையால், நாரதருக்கு ப்ரஹ்மதேவர் உபதேசித்த படி எனக்குக் தாங்கள் உபதேசிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார்.

27–29. அவற்றைக் கேட்ட சுகர் அரசனிடம் மிகவும் சந்தோஷமடைந்து, 'பகவானுடைய சரிதத்தைச்

சொல்லுகிறேன்' என்று ஒப்புக்கொண்டு, ப்ரஹ்ம கல்பத்தில் ப்ரஹ்ம தேவருக்கு ஸ்ரீநாராயணனால் உபதேசிக்கப்பட்டதும் வேதத்திற்கு சமமானதுமாகிய பாகவதத்தையே பாண்டு குலத்தில் பிறந்தவரும், மேலானவருமான பரீக்ஷித்து மஹாராஜன் கேட்டவைகளுக்குக் கிரமமாய் மறுமொழி சொல்ல ஆரம்பித்தார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–9

சுகருடைய மறுமொழி

ஓ மஹாராஜ அனுபவ ஸ்வரூபியான பரமாத்மாவிற்குத் தேஹமும் முதலியவைகளின் ஸம்பந்தம் ஸம்பவிக்கிறதில்லை. சொப்பனத்தில் கண்ட தேஹத்தின் சம்பந்தம் உண்மையில் ஜீவனுக்கு இல்லை யல்லவா? ஆகையால் பரமாத்மாவிற்கு ஸம்ஸார சம்பந்தமானது மாயையேயொழிய உண்மையிலில்லை. மேலும், அந்த ஜீவன் பலவகையான ரூபமுள்ள மாயையால் பல விதமான ரூபமுள்ளவனாகத்தோன்றுகிறான். இந்த மாயையினுடைய குணங்களில் (விஷயங்களில்) ரமித்துக் கொண்டு 'நான், என்னுடையது' என்ற அபிமானத்தை அடைகிறான். காலம் (புருஷன்), மாயை (ப்ரக்ருதி) ஆகிய இவைகளைக் காட்டிலும் மேலான தன்னுடைய மஹிமையில் எப்பொழுது ஜீவன் ரமிக்கிறானோ அப்பொழுது 'நான், என்னுடையது' என்ற இருவகையான அபிமானத்தை விட்டு மோஹம் நீங்கி, நிஜ ரூபமாக இருக்கிறான். (பக்தி யோகத்தால் மாயா சம்பந்தம் அற்றுப்போனால் மோக்ஷமும் கிடைக்குமென்பது தாத்பர்யம்.) ஸ்ருஷ்டி காலத்தில் ப்ரஹ்மதேவர் கபடம் அற்றுத் தபஸ் செய்து பகவானை சந்தோஷப்படுத்தினார். அதனால் நாராயணன் அவரிடத்தில் பிரியப்பட்டுத் தம்முடைய சத்திய ஸ்வரூபத்தை அவருக்குக் காட்டி ஜீவனுடைய தத்துவ ஞானத்திற்காக எதனைச் சொன்னாரோ, அதை நான் உமக்குச் சொல்லுகிறேன். முற்காலத்தில் பக்தர்களுக்கு முக்கிய குருவாயும் தேவர்களுக்கு முந்தினவருமான ப்ரஹ்மதேவர் தமக்கு இருப்பிடம்

ஆகிய தாமரை புஷ்பத்திலிருந்து இந்த ஜகத்தை எப்படி ஸ்ருஷ்டிக்கிறது என்று யோசித்தார். அப்படியும் அவருக்கு அது விஷயமாய் ஒன்றும் தோன்றவில்லை. ஓ பரீக்ஷித்து மஹாராஜனே! இப்படியிருக்கையில் ஒரு சமயத்தில் ஜலத்திலிருந்து தபி என்று இரண்டு தரம் தொனியுண்டாயிற்று அவ்விரண்டு அக்ஷரங்கள் ஸ்பர்சமென்ற (ககாரம் முதல் மகாரம் வரையிலுள்ள அக்ஷரங்கள்.) அக்ஷரங்களில் பதினாறாவதும் இருபத்தொன்றாவதுமாக இருந்தன. பணத்தின் ஆசையை ஒழித்தவர்களுக்கு அவையே பணமாயிருக்கின்றன. பிறகு ப்ரஹ்மதேவர் அந்த வார்த்தையைக் கேட்டு, இதைச் சொன்னவர் யாராயிருக்கலாமென்று நான்கு புறத்திலும் திரும்பித் திரும்பிப் பார்த்ததும் அவ்விடத்தில் ஒருவரையும் காணததால் மறுபடியும் அந்தத் தாமரை புஷ்பத்திலிருந்து இதைப்பற்றி யோசித்துத் தம்மைத் தபஸ் செய்யும்படி பகவான் ஆஜ்ஞாபித்திருப்பதாக நிச்சயித்துத் தபஸிற்கு முயற்சித்தார். பின்பு வீணாகாத ஞானமுள்ளவரும் மிக்க தபஸ்வியுமான அந்த ப்ரஹ்மதேவர் ஞானேந்திரியங்களையும், கர்மேந்திரியங்களையும், மனஸையும், ப்ராணனையும் ஜயித்து, தேவமானத்தால் ஆயிரம் வர்ஷங்கள் தபஸ் செய்தார். அதனால் ஸகல லோகங்களுக்கும் தாபம் உண்டாயிற்று. இப்படித் தபஸ் செய்து ப்ரஹ்மதேவர் பரமாத்மாவைச் சந்தோஷப்படுத்தினதால் அந்தப் பகவான் தமது வைகுண்ட லோகத்தை அவருக்குக் காட்டினார். அதைக் காட்டிலும் மேலானது ஒன்றுமில்லை; அது க்ஷ்டம், மோஹம் முதலிய தோஷமற்றது. புண்யஞ் செய்தவர்களான வித்வான்களால் ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டது. மேலும் ரஜோகுணமும்

தமோகுணமும், அவைகள் கலந்த ஸத்வ குணமுமே அந்த உலகத்திலில்லை. (சுத்த ஸத்வ குணமே அவ்வுலகத்தில் ப்ரகாசிப்பதென்பது தாத்பரியம்.) தவிரவும் காலத்தின் ஸாமர்த்தியம் அவ்விடத்தில் உபயோகப் படுகிறதில்லை. மாயை, ராகம், உலோபம் ஆகிய இவைகளும் அந்த லோகத்திலில்லை. பின்னும், தேவர்களாலும், அஸுரர்களாலும் பூஜிக்கப்பட்ட பார்ஷத கணங்கள் அவ்விடத்தில் வஸிக்கிறார்கள். மேலும் அந்தப் பார்ஷதர்களெல்லோரும் நீருண்ட மேகம் போன்ற நிறமுள்ளவர்கள். தாமரை மலர் போன்ற கண்களுள்ளவர்கள். பீதாம்பரத்தைத் தரித்த வர்கள். மனோஹரமாயும், சுத்தமாயுமுள்ள தேக காந்தியுள்ளவர்கள். மிகுந்த அழகுள்ளவர்கள். நான்கு கைகளுள்ளவர்கள். மிகுந்த ப்ரகாசமுள்ள உத்தம ரத்தினகளிழைத்த திவ்ய ஆபரணங்களால் அலங் கரிக்கப்பட்டவர்கள். சிலர் பவழம், வைடூரியம் தாமரைத் தண்டு இவைகள் போன்ற நிறமுள்ளவர்கள். குண்டலம், கிரீடம், மாலை இவைகளால் பிரகாசிப் பவர்கள் மிகுந்த காந்தியுள்ள மஹாத்மாக்களுடைய விமானங்களால் அந்த லோகமானது ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறது. மின்னல்களுடன் கூடிய மேகங் களால் ஆகாசம்போல, உத்தம ஸ்திரீகளின் காந்தியால் விளங்குகிறது. மேலும் அவ்விடத்தில் லக்ஷ்மிதேவி நிஜஸ்வரூபத்துடன் பகவானுடைய பாதாரவிந்தங்களைப் பலவகையான விபூதிகளால் பூஜிக்கிறாள். மேலும், அவள் ஊஞ்சலின்மீதேறித் தன்பர்த்தாவாகிய நாராயணனுடைய ஸகல கல்யாண குணங் களையும் கானம் செய்து கொண்டு ஆனந்தமாய் வஸிக்கிறாள். அப்பொழுது வஸந்த ருதுவும், அதன் பின் செல்லுகின்ற வண்டுகளும், கூடக் கானம்

செய்கின்றன. இம்மாதிரியான அந்தக் க்ருஹத்தில் யஜ்ஞபுருஷனும், ஸகல ஜகத்திற்கு அதிபதியும், பக்தர்களுக்குப் ப்ரபுவும் ஸ்ரீயப்பதியுமான பகவானைப் ப்ரஹ்மதேவர் தரிசித்தார். ஸனனந்தர் நந்தர் முதலிய பூஜ்யர்களான பார்ஷதர்கள் அவரை ஸேவிக் கிறார்கள். அந்தப் பகவான் தம்முடைய வேலைக் காரர்களுக்கு அனுக்கிரகம் செய்வதிலேயே நோக்க முள்ளவர். புன்சிரிப்புக் கொண்டதும், சிவந்த கண்களுள்ளதுமான முகமுள்ளவர். பார்க்கப்பிரியமானவர். கிரீடமுள்ளவர். குண்டலங்களால் ப்ரகாசிப்பவர். நான்கு கைகளுள்ளவர். பீதாம்பரத்தால் அலங் கரிக்கப்பட்டவர். மார்பில் வஸிக்கும் லக்ஷ்மியுள்ளவர். உயர்ந்த சிம்மாசனத்திலிருப்பவர் ப்ரக்ருதி புருஷன், மஹத்தத்வம், அஹங்காரம் ஆகிய நான்கு சக்தி களாலும் ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் மனஸ், ஐந்து பூதங்கள், ஐந்து தன்மாத்திரைகள் ஆகிய இருபத்தைந்து தத்துவங்களாலும் சூழப்பட்டவர். தமக்கு இயற்கையானதும் மற்றவர்களுக்குத் தபஸ் முதலியவைகளால் கிடைக்கக் கூடியவைகளுமான ஐசுவர்யங்களால் தமது ஸ்வரூபத்திலேயே ரமித்துக் கொண்டிருப்பவர்.

18–24 அப்போர்ப்பட்ட பகவானுடைய ஸ்வரூ பத்தைப் ப்ரஹ்மதேவர் பார்த்து, அதனால் உண்டாகிய ஆனந்தத்தால் பூர்ணரானார். அப் பொழுது அவருக்கு மயிர்க்கூச்சலுண்டாயிற்று. பகவானிடத்திலுள்ள பக்தி விசேஷத்தால் அவருடைய இரு கண்களிலிருந்தும் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. பின்னுமவர் பரம ஹம்ஸாசிரமத்தால் அடையக்கூடிய பகவானுடைய பாதாரவிந்தத்தை

நமஸ்கரித்தார். அப்பொழுது பகவான் தம்மிடத்தில் விசேஷ பிரீதியுள்ளவரும், ப்ரஜைகளை ஸ்ருஷ்டிப் பதில் தம்மால் ஏவக்கூடியவரும், அதற்காகத் தம்மைக் குறித்து தபஸ் செய்தவரும் ஸமர்த்தருமான அந்தப் ப்ரஹ்ம தேவரை நோக்கி மிகுந்த ப்ரியத்துடன் அவருடைய கையைப் பிடித்துக் கொண்டு புன் சிரிப்புடன், ஓ வேதத்தை முகத்தில் வைத்துக் கொண்டிருக்கும் ப்ரஹ்ம தேவரே! லோகங்களை ஸ்ருஷ்டிப்பதற்காக வெகுகாலம் தபஸ் செய்து என்னைச் சந்தோஷப்படுத்தினீர். கபடமுள்ள யோகி களால் என்னை ஸந்தோஷப்படுத்த முடியாது. ஆனதால் உமக்கு இஷ்டமான வரத்தைக் கேளும். உமக்கு க்ஷேம முண்டாகும். என்னைப் பார்க்கிற வரையில் தான் ச்ரேயஸை யடைவதற்கு முயற்சிக்க வேண்டும் என்னுடைய வைகுண்ட லோகத்தை நேரில் பார்ப்பது என்னுடைய ப்ரியத்தைப் (பக்தனுக்கு வரங் கொடுக்க வேண்டுமென்றதை) காட்டுகிறது. ஆகையால், அதுவும் என்னுடைய கிருபையால் உமக்கு கிடைத்ததே தவிர வேறில்லை. மேலும் 'தப' என்ற என்னுடைய வார்த்தையைக் கேட்டுத் தபஸ் செய்தீர். தபஸ் என்பது எனக்கு ஹ்ருதயமாயிருக்கிறது. அதற்கு நான் ஆத்மா (ஸ்வரூபம்) வாக இருக்கிறேன். ஆகையால் ஸ்ருஷ்டிக்க வேண்டிய காலத்தில் அதற்கு வேண்டிய ஞானமற்றவராய் நீர் மோஹமடைந் திருக்கும் பொழுது உம்மைத் தபஸ் செய்யும்படி சொன்னவன் நானே. நான் தபஸைக் கொண்டே இந்த ஜகத்தைச் ஸ்ருஷ்டிக்கிறனே. தபஸினாலேயே அதைப் பரிபாலிக்கிறேன். தபஸி னாலேயே அதை ஸம்ஹரிக்கிறேன். தபஸே என் னுடைய சக்தியாயிருக்கிறது என்று சொன்னார்.

25–30 அதனைக் கேட்டு ப்ரஹ்மதேவர் ஸ்ரீ நாராயணனை நோக்கி, 'ஓ பகவன்! நீர் ஸகல பிராணிகளுக்கும் ப்ரபுவாக அவர்களுடைய புத்தியில் வசிப்பவராகையால் தடையற்ற திவ்ய ஞானத்தால் ஒவ்வொருவருடைய எண்ணத்தையும் நன்றாய்த் தெரிந்துகொள்ளுகிறீர். ஏ நாத உருவமில்லாதவரான உம்முடைய ஸ்தூல சூக்ஷ்ம உருவங்களை நான் நன்றாய்த் தெரிந்துகொள்ளும்படி ப்ரார்த்திக்கும் எனக்குச் சொல்ல வேண்டும். நீர் உம்முடைய மாயா சக்தியால் தானே ஸகல ஸ்வரூபியாயிருந்து ஜகத்தைச் ஸ்ருஷ்டித்தும், பரிபாலித்தும், ஸம்ஹரித்தும் பட்டுப் பூச்சி போல விளையாடுகிறீரல்லவா? வீண்போகாத ஸங்கல்பமுள்ளவரே! அந்த உம்முடைய லீலைகளை நான் நன்றாய்த் தெரிந்து கொள்ளும்படி அனுக்கிரஹிக்க வேண்டும். (ப்ரஜைகளை ஸ்ருஷ்டிப் பதில் பயந்து நான் தத்துவ ஞானத்தை விரும்ப வில்லை.) உம்முடைய உத்தரவின்படி சோம்பல் இல்லாமல் ஸ்ருஷ்டியைச் செய்வேன். ஆனாலும் அந்தக் காலத்தில் 'நான் ஜகத்தைச் ஸ்ருஷ்டிப்பவன். எல்லாவற்றிற்கும் மேலானவன் என்ற அஹங்காரம் முதலியவைகள் எனக்கு உண்டாகாமலிருப்பதற்காகத் தத்துவ ஞானத்தை உபதேசிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன். ஹே ஈசுவர! மித்திரன் தோழனைக் கௌரவப்படுத்துவது போல் நீர் என்னுடைய கையைப் பிடித்து, பூஜித்து, ஜனங் களை ஸ்ருஷ்டிக்கும் அதிகாரத்தைக் கொடுத்து இருக்கிறீர். நான் தங்களுடைய ஆக்ஞா ரூபமாகிய இக்காரியத்தைச் செய்து வரும்பொழுது மேலானவர் களையும், தாழ்ந்தவர்களையும், மத்ய நிலமை உள்ளவராகவும் பிரித்து ஸ்ருஷ்டிப் பேனல்லவா?

அப்பொழுது பகவான் நம்மை மித்திரனைப் போல் கௌரவப்படுத்தினார். நான் ஸ்வதந்திரன் என்று மிகுந்த கர்வம் எனக்கு உண்டாகக் கூடுமே. அம்மாதிரியான மதம் என்னைக் கெடுத்து விடாமல் இருக்கும்படி அனுக்கிரஹிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

31–39 அதனைக் கேட்ட பகவான் ப்ரஹ்ம தேவரை நோக்கி, ஓ ப்ரஹ்மதேவரே! உம்மால் கேட்கப் பட்டபடி சாஸ்திரத்தைப் படிப்பதால் உண்டாகிய ஞானம், அனுபவத்தால் உண்டாகிய விஞ்ஞானம், பக்தி, அவைகளின் ஸாதனம் ஆகிய இவைகள் மிகவும் ரகசியமானவைகளானாலும் அவைகளை உமக்கு உபதேசிக்கிறேன். நான் எவ்வளவு ஸ்வரூப முள்ளவனோ. எப்படி உண்டாகிறேனோ அப்பேர்ப் பட்ட உண்மையான ஸ்வரூப ஞானமானது என்னுடைய அனுக்கிரஹத்தால் உமக்கு உண்டா கட்டும். ஜகத் ஸ்ருஷ்டிக்கு முன்னே நான் ஒருவனே இருந்தேன். ஸ்தூலம், ஸூக்ஷ்மம் இவைகளுக்குக் காரணமாகிய ப்ரதானம் ஆகிய இவைகள் என்னைக் காட்டிலும் வேறாக ஒன்றுமிருந்ததில்லை. பின்பு நானே இந்த ஜகத் ரூபியாய் இருக்கிறேன். ப்ரளய காலத்தில் எந்த வஸ்து நாசமடையாமல் இருக்குமோ அதுவும் நானே. மேலும், ஆகாசத்தில் இரண்டு சந்திரன் இருப்பதாகத் தோன்றுகிறதுபோல எதன் உடைய மஹிமையால் ஆத்மாவிடம் இல்லாதவைகள் தோன்றுகின்றனவோ கிரஹ மண்டலத்திலிருக்கும் ராஹுவானவன் கண்ணுக்குப் புலப்படாததுபோல எதனுடைய மஹிமையால் ஆத்மாவிடத்தில் இருப்பவைகள் மறைக்கப்படுகின்றனவோ, அதை என்

உடைய மாயையென்று தெரிந்து கொள்ளவேண்டும். மஹா பூதங்கள், தங்களால் ஏற்பட்ட பலவகையான சரீரங்களில் பிறகு ப்ரவேசித்ததாகத் தோன்றுவது போல, ஜகத்தில் காரண ரூபியாய் நான் இருப்பவனே யொழிய அவைகளில் பின்பு ப்ரவேசித்தவனல்ல. ஆத்மாவினுடைய உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டியவன், 'எல்லா அவஸ்தையிலும் எது அன்வயத் தாலும், வ்யதிரேகத்தாலும் எக்காலத்திலும், எல்லா விடத்திலும் இருக்குமோ அதே பரமாத்மா என்று தெரிந்து கொள்ளவேண்டியது. இப்பொழுது என்னால் சொல்லப்பட்டதை ஒரே மனதாகச் சிந்தியும். கல்பங்களில் பலவகையான ஸ்ருஷ்டிகளிலும் உமக்கு அபிமானம் உண்டாகாமலிருக்கட்டும் என்று ஸகல ஜனங்களுக்கும் அதிபதியான ப்ரஹ்மாவை அனுக்ர ஹித்து அவர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்த உருவத்தைப் பகவான் மறைத்துக் கொண்டார். பிறகு அந்தப் ப்ரஹ்மதேவர் கண்ணுக்குப் புலப் படாமல் மறைந்த மஹாவிஷ்ணுவிற்கு அஞ்சலி செய்து ப்ருத்வி முதலிய பூதங்களாகிய சாதனங் களைக் கொண்டு முன் கல்பத்திலிருந்ததுபோல் இந்த ஜகத்தைப் படைத்தார்.

40–46 அந்தப் ப்ரஹ்மதேவர் ப்ரஜைகளுக்கு க்ஷேமத்தைச் செய்ய விரும்பி யமம், நியமம் முதலிய வைகளைச் செய்து வந்தார். அவருடைய புத்திரர் களுக்குள் மிகவும் பிரியராகிய நாரதர் தம்முடைய ஸ்வபாவத்தாலும், வணக்கத்தாலும், இந்திரிய நிக்ர ஹத்தாலும், பிதாவாகிய ப்ரஹ்மதேவரைச் சந்தோஷப் படுத்தி அவருக்குச் சிச்ரூஷை செய்து வந்தார். அந்தப் பாகவதோத்தமராகிய நாரதர் மாயைக்கு அதிபதியான

மஹாவிஷ்ணுவின் மாயையை நன்றாய்த் தெரிந்து கொள்ள விரும்பியவர். அவருடைய சிசுரூஷையால் ப்ரஹ்மதேவருக்கு ஸந்தோஷமுண்டாயிற்று. அப் பொழுது நாரதர் இந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டார். அவருக்குப் ப்ரஹ்மதேவர் மிகவும் பிரியத்துடன் பத்து வித புராண லக்ஷணமுள்ள பாகவத புராணத்தை உபதேசித்தார். அந்த நாரதர் ஸரஸ்வதீ நதிக்கரையில் ப்ரஹ்ம தியானஞ் செய்து கொண்டிருந்த அதிக தேஜஸுள்ள வ்யாஸ மஹர்ஷிக்கு இந்த விஷயத்தை உபதேசித்தார். விராட் புருஷனிடமிருந்து இந்த ஜகத் எப்படி உண்டாயிற்றென்று கேட்டீரல்லவா? அது முதலிய கேள்விகளுக்குப் பதில் , சொல்லுகிறேன் கேளும் என்றார்.

நோட்டு

உருவம்–ஸத்யம், ஞானம் முடிவில்லாதது என்று ஸ்ருதியில் சொல்லியுள்ளபடியுள்ளது. குணம்– திவ்ய மங்கள குணங்கள். எவர் எல்லாவற்றையும் ஸாமான்யமாகவும் விசேஷமாகவும் அறிந்தவரோ, எவருடைய மேலான சக்தியும், இயற்கையான ஞானம், பலம், கிரியை ஆகிய இவைகளும் பல வகையாகக் காணப்படுகின்றனவோ சந்த். மாயை என்று–ப்ரக்ருதியின் அனுஸந்தான காலத்தில் ஆத்ம ஸ்வரூபம் நன்றாகப் ப்ரகாசிக்கிறதில்லை. ஆத்மாவின் தோற்றம் இருக்கும்போது அசேதனமாகிய ப்ரக்ருதியானது தோன்றுவதில்லை. தேஜஸிருக்கும் போது இருட்டிக்கிறதில்லை. இருட்டிலிருக்கும் போது தேஜஸ் ப்ரகாசிக்கிறதில்லை. வீர.– எந்த வஸ்துவானது ஸகல காமத்தையும் அடைந்தவனாகிய என்னுடைய ப்ரயோசனமின்றி வேதம் முதலியதில்

தோன்றுகிறதோ, எது என்னிடத்தில் பாதகமாக ஆகிறதில்லையோ, அதே மாயை (ஜீவன், ப்ரக்ருதி ஆகிய இவர்கள் மாயை என்று கருத்து) யதார்த்தமாகத் தோன்றும் என்னுடைய பிரதிபிம்ப பூதனாகிய ஜீவனும், உண்மையாகத் தோன்றும் (மூல) ப்ரக்ருதியும் மாயையெனப்படுகின்றன. ஸ்ரீ மஹா விஷ்ணுவின் சக்தியே முக்கியமாய் மாயை யெனப்படுகிறது. ப்ரக்ருதி, ஜீவர்களை மாயையென்று செல்வது ஔபசாரிகப் ப்ரயோகம், ஆனால், ஜீவன், ப்ரக்ருதி, கர்மம், காலம் ஆகிய இவைகள் எப்பொழுதும் என்னிடத்தில் வஸிப்பவைகளானாலும் அவைகளால் பாதகமில்லாததனால், அவைகள் என் இடமிருப்பதாகச் சொல்லப்படுகிறதில்லை. அரசன் ரதத்தின் மீதேறிப் போகும்போது அவருக்குக் குடை பிடிப்பது முதலிய உபசாரங்கள் செய்து கொண்டு இருப்பவர்களுக்கு ரதிகர்கள் என்று பெயர் கிடைக்குமா? விஜ. ப்ரவேசித்தவனல்ல மஹாபூதங்கள் அவைகளாலேற்பட்ட கூடம் முதலியவைகளில் ப்ரவேசித்திருந்தாலும் அவைகளை உடைப்பது, வெட்டு வது ஆகிய இவைகளில் அந்த மஹாபூதங்கள் ஸம்பந்திக் கிறதில்லை.–வீர. அன்வயவத்தாலும் காரியங்களில் காரண ரூபமாக விருப்பது; ஜாக்ரத் முதலிய அவஸ் தைகளில் ஸாக்ஷியாக விருப்பது. வ்யதிரேகம் காரணமாக இருக்கும் போது காரியமாக இல்லாமல் இருப்பது –ஸ்ரீத. அன்வயம் இது அறியக் கூடியதே என்பது வ்யதிரேகம்– மற்றவை அறியக் கூடியவை அல்லவென்பது. பரமாத்மா ஒருவரைத் தெரிந்து கொண்டதனால் எல்லாம் அறியப் பட்டவையாகிறது. ஆனதால் அதுவே அறியக் கூடியது. –வீர.

அத்தியாயம் 10

தத்துவங்களின் உற்பத்தியுரைத்தது.

இந்தப்பாகவதத்தில் ஸர்க்கம், விஸர்க்கம், ஸ்தானம் போஷணம், ஊதி, மன்வந்தரம், ஈசானு கதை, நிரோதம் முக்தி ஆசிரயம் என்ற பத்து வகையான லக்ஷணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும் பத்தாவதாகிய ஆசிரயத்தின் உண்மையைத் தெரிவிப் பதற்காக ஒன்பதுகளுடைய ஸ்வரூபத்தை சப்தத் தாலும், அர்த்தத்தாலும் பெரியோர்கள் வர்ணிக் கிறார்கள். ஆகாசம் முதலிய பஞ்சபூதங்களும், சப்தம் முதலிய விஷயங்களும், இந்திரியங்களும் மஹத் தத்து வமும், அஹங்காரமும், ஸத்வம் முதலிய குணங்கள் உடைய பரிணாம விசேஷத்தால் பரமேச்வரனிடம் இருந்து உண்டாவதே ஸர்க்கமெனப்படும். வைராஜ னால் செய்யப்படும் சராசர சிருஷ்டியே விஸர்க்கம் எனப்படும். பகவான் அவதாரஞ் செய்து ஜகத்தைப் பரிபாலிப்பது எல்லாவற்றிற்கும் மேலானவராக இருப்பது ஸ்திதி யெனப்படும். பக்தர்களை அனுக்கிர ஹிப்பதே போஷணமெனப்படும். மன்வந்தரங்களில் அனுஷ்டிக்கப்படும் தர்மம் மன்வந்தர மென்று சொல்லப்படுகிறது. கர்மங்களின் வாஸனைகள் ஊதி எனப்படுகின்றது. பல்வகையான உபாக்யானங்கள் அடங்கிய பகவானுடைய அவதார கதைகளும், பக்தர்களுடைய சரிதங்களும் ஈசானு கதையென்று சொல்லப்படுகின்றன, பகவான் யோக நித்திரை செய்யும்போது ஜீவன் தன்னுடைய உபாதிகளுடன் அவரிடத்தில் லயிப்பதே நிரோத மெனப்படுகிறது. அவித்தையால் அத்யஸ்தமாகிய அநாத்ம ரூபத்தை

ஞானத்தால் தொலைத்து, தன்னுடைய நிஜரூபமாக இருப்பதே முக்தியாகும். ஸ்ருஷ்டியும் லயமும் எதன் இடமிருந்து உண்டாகின்றனவோ, எது பரமாத்மா என்றும் ப்ரஹ்மம் என்றும் சொல்லப்படுகிறதோ, அதே ஆசிரய மெனப்படுகிறது. ஆத்யாத் மிகனென்ற ஜீவனே ஆதிதெய்வீகம் (கண் முதலியவைகளுக்கு அதிதெய்வமான சூரியன் முதலியவை) ஆகிறான். கண்கள் முதலிய இந்திரிய கோளங்கள் அடங்கிய புருஷோபாதியாகிய தேஹமே ஆதிபௌதிகம். அறிகிற வன், அறியப்படுகிறது, ஸாதனம் ஆகிய மூன்றுக்குள் ஒன்றை விட்டு மற்றவை அறியக் கூடாத வைகளா கையால் இம்மூன்றையும் எவர் சாக்ஷியாக விருந்து தெரிந்து கொள்கிறாரோ அவரே பரமாத்மா. அவருக்கு வேறு ஆச்ரயமில்லை. எல்லாவற்றிற்கும் அவர் ஆச்ரய மாயிருப்பவர்.

10–34. விராட் புருஷன் ப்ரம்மாண்டத்தை பேதித்துக் கொண்டு எப்பொழுது வெளியில் வந் தாரோ (தனியாக இருந்தார் என்று கருத்து) அப் பொழுது தாம்சுத்தராகையால் தாம்வஸிப்பதற்குச் சுத் தமான ஸ்தானம் வேண்டுமென்ற எண்ணத்துடன் பரிசுத்தமான ஜலத்தை ஸ்ருஷ்டித்தார். அந்த ஜலத்தில் வஸித்தாலும் ஜலம் அவரிடத்திலிருந்து உண்டான தாகும். அவருக்கு நாராயணனென்று பெயருண்டா யிற்று. அவருடைய அனுக்கிரஹத்தால் தான் உபா தான காரணம், கர்மம், காலம் முதலிய நிமித்த காரணம் ஆகிய இவைகள் தங்களுடைய கார்யத்தை உண்டுபண்ணுகின்றன. அவருடைய அனுக்கிரஹமில் லாதவரையில் அவைகளுக்குக் கார்யத்தை உண்டு பண்ணக்கூடிய சக்தி ஏற்படுகிறதில்லை. அந்தப் புருஷன்

தாம் பலவகையான ஸ்வரூபத்தை அங்கீகரிக்க வேண்டுமென்ற ஸங்கல்பத்தை அடைந்து யோக நித்திரையிலிருந்து எழுந்திருந்து மிகுந்த ப்ரகாசமுள்ள திவ்ய தேஹத்தைத் தம்முடைய மாயையின் சம்பந்தத் தால் ஆத்யாத்மிகம், ஆதி தெய்வீகம், ஆதி பௌதிகம் என்று மூவகையாகப் பிரித்தார். அதெப்படி எனில் கிரியா சக்தியால், பலவகையாகச் சேஷ்டிக்கும் புருஷனுக்கு இந்திரிய சக்தி, மனத்தின் சக்தி, தேஹ சக்தி ஆகிய இவைகள் உண்டாயின. சூக்ஷ்ம ரூபியாகிய அந்த ஆத்மாவினிடமிருந்து முக்கியப் ப்ராணன் உண்டானான், அரசனை அவருடைய வேலைக்காரர்கள் அனுசரிப்பதுபோலப் ப்ராணன் அவருடையதாதலால் ஸகல இந்திரியங்களும் சேஷ் டிக்கின்றன. ப்ராணன் சேஷ்டிக்காவிடில் அவைகளும் சேஷ்டிக்கிறதில்லை, அந்தப் ப்ராணன் ப்ரபுவின் வயிற்றில் பரவும்போது, பசி, தாகம் ஆகிய இவைகள் உண்டாயின. பிறகு புஜிக்கவேண்டுமென்றும், குடிக்க வேண்டுமென்றும் விருப்பம் உண்டாயிற்று. பிறகு அந்தப் ப்ரபுவினிடமிருந்து முகமானது உண்டாயிற்று (பிரிந்தது). அதிலிருந்து ஜிஹ்வேந்திரியத்திற்கு அதிஷ் டானமாகிய தாலுவும் (நாக்கும்), அதிலிருந்து ஜிஹ்வேந்திரியமும், அதிலிருந்து அதனால் கிரஹிக்கப் படும் ஆறுவகையான ரஸங்களும் உண்டாயின. பேசவேண்டுமென்ற விருப்பம் அவருக்கு உண்டான பொழுது முகத்திலிருந்து அக்னியும், (இந்திரியாபிமானி தேவதை) வாக் என்னும் இந்திரியமும், அவ்விரண் டின் வியாபாரமாகிய பேச்சும் (இந்திரிய விஷயம்) உண்டாயின. அந்த அக்னி வெகுகாலம் ஜலத்தால் தடுக்கப்பட்டிருந்தது. ப்ராணவாயுவானது அதிகமாக அசையும் பொழுது மூக்குகள் உண்டாயின. அவை

களில் கந்தத்தை வஹிக்கும் வாயு உண்டானார். (ப்ரவேசித்தார்) கந்தத்தை கிரகிக்க விரும்பும்பொழுது அவ்விடத்தில் கிராணேந்திரியம் உண்டாயிற்று. எப்பொழுது ப்ரகாசமில்லாமலிருந்ததோ, அப்பொழுது தன்னையும் இதர வஸ்துக்களையும் பார்க்க, விரும்பிய போது கண்கள், உருவத்தைக் கிரகிக்கும் சக்தி, சக்ஷுரிந்திரியம் அதற்கு அபிமானி தேவதையாகிய ஆதித்யன் ஆகிய இவைகள் உண்டாயின. யோக நித்திரை செய்யும் ப்ரபுவைத் தேவர்கள் எழுப்புங் காலத்தில் அந்தச் சப்தத்தைக் கிரகிக்க அவர் விரும் பினார். அப்பொழுது காதுகளும், திக்குகளும் ,ச்ரோத்ரேந்திரியமும், சப்தத்தைக் கிரகிக்கும் சக்தியும் உண்டாயின. மேலும் வஸ்துக்களின் மெதுவாயிருக் கும் தன்மை, கடினமாயிருக்கும் தன்மை கனமுள்ளதாக விருப்பது, கனமில்லாமலிருப்பது, குளிர்ச்சி, உஷ்ணம் ஆகிய இவைகளைக் கிரகிக்க விரும்பும்போது துவக்கிந்திரியத்திற்கு அதிஷ்டானமாகிய தோல் உண் டாயிற்று. அதில் இந்திரியமும் தேவர்களும் உண் டானார்கள். ஸ்பரிசமாகிய குணமுள்ள வாயுவானது மேற்காட்டிய துவக் இந்திரியத்தின் உள்ளிலும் வெளி யிலும் வ்யாபித்திருக்கிறது. பின்னும் பலவகையான கார்யங்களைச் செய்ய விரும்பிய அவரிடமிருந்து கைகள் முளைத்தன. அவ்விரண்டு கைகளுக்கும் இந்திரன் தேவதையானான். எடுப்பது (ஆதானம்) அவைகளின் கார்யமாம். இன்னும், தமதிஷ்டப்படி நடக்க விரும்பிய அந்த ஆத்மாவிடமிருந்து பாதங்கள் முளைத்தன. அவைகளுக்கு யக்ஞஸ்வரூபியாகிய மஹாவிஷ்ணுவே தேவதையாக இருக்கிறார். நடப்பது அவைகளின் காரியம். யாகத்திற்கு உபயோகமான ஹவிஸ்ஸை வெகுதூரம் நடந்து ஸம்பாதிப்பதே அவை

களின் ப்ரயோஜனம். பிறகு குழந்தை, ஆனந்தம், அமிருதம் (ஸுகம் அல்லது ஸ்வர்க்கம்) ஆகிய இவை களை அடைய விரும்பிய அவரிடமிருந்து சிஸ்னம் (ஆண்குறியும் பெண்குறியும்) உண்டாயின. ஸ்திரீ களுடைய ஸம்போகத்தால் ஏற்படும் ஸுகத்திற்குக் காரணமும், இந்திரியம், தேவதை ஆகிய இவை களுக்கு ஆசிரயமுமான உபஸ்தேந்திரியம் அந்த சிஸ்னத்திலிருந்து உண்டாயிற்று. தாதுக்களின் மலத்தை (புஜித்த அன்னம் முதலியவைகளுடைய ஸாரமற்ற பாகத்தை) வெளிப்படுத்த விரும்பிய அந்தப் புருஷ னிடமிருந்து குதமானது உண்டாயிற்று. அதிலிருந்து பாயுவென்ற இந்திரியமும், அதனிடமிருந்து அதிதேவ தையான மித்திரனும் உண்டானார்கள். மலத்தை வெளிப்படுத்துவது இந்திரியம் அதன் ஸ்தானம் ஆகிய இரண்டையும் ஆசிரயித்தது. ஒரு தேஹத்தில் இருந்து மற்றொரு தேஹத்திற்குப் போகவிரும்பிய ப்ரஹத்தினுடைய ஸமஷ்டி அபானவாயுவினிடம் இருந்து நாபியாக உண்டாயிற்று. அதில் அபானனும், அதற்கு அதிஷ்டமான தேவதையாகிய மிருத்யுவும் உண்டாயின. மரணமானது பிராணன், அபானன் ஆகிய இவைகளைக் க்ரஹிக்க வேண்டுமென்று விரும்பிய அந்தப் ப்ரபுவினிடமிருந்து வயிறு, ஆந்த்ரம் (மாம்ஸ விசேஷம்), நாடிகள் ஆகிய இவைகள் உண்டாயின. அந்த நாடி, ஆந்த்ரம் ஆகிய இவை களுக்கு நதிகளும் ஸமுத்ரமும் (முறையே) தேவதைகள். அவைகளால் துஷ்டியும், புஷ்டியும் உண்டாயின. தம்முடைய ப்ரக்ருதியைச் சிந்திக்கும் அந்தப் ப்ரபு வினிடமிருந்து ஹ்ருதயம் உண்டாயிற்று. அதனிடம் இருந்து சந்திரனென்று ப்ரஸித்தியுள்ள மனஸ் உண் டாயிற்று. மேற்சொல்லிய ஹ்ருதயமே காமத்திற்கும்,

ஸங்கல்பத்திற்கும் இருப்பிடம் துவக் (மேல்தோல்) சர்மம் (உள்ளேயிருப்பது) மாம்ஸம் ரத்தம் மேதஸ் மஜ்ஜை எலும்பு ஆகிய ஏழு தாதுக்களும் பூமி, ஜலம், தேஜஸ் ஆகிய இவைகளின் ஸ்வரூபமாயுள்ளவைகள். ப்ராணன்கள் ஆகாயம் ஜலம், வாயு ஆகிய இவை களால் உண்டான இந்திரியங்களாவும் விஷயங்களில் செல்லும் ஸ்வபாவமுள்ளவை. சப்தம் முதலிய குணங் கள் அஹங்காரத்திலிருந்து உண்டானவை. ஸகல விகாரங்களுக்கும் (காமம், ஸங்கல்பம், ஸம்சயம், சிரத்தை, வெட்கம் முதலியவைகளுக்கும்) ஆதாரமா யுள்ளது மனதேயாம், விஞ்ஞான ஸ்வரூபமாயிருப்பதே (பலவகையான பிரபஞ்ச ரூபமாக ஆகவேண்டுமென்று பகவானுடைய எண்ணம்) புத்தியெனப்படுகிறது. பூமி முதலிய எட்டு ஆவரணங்களுள்ள மேற்சொல்லிய ரூபமானது பகவானுடைய ஸ்தூல ரூபம். ஸூக்ஷ்ம சரீரமானது மேற்காட்டிய ஸ்தூல ரூபத்துக்குக் காரணமாயிருப்பது. அது மிகவும் ஸூக்ஷ்மமாகையால் இந்திரியங்களுக்குப் புலப்படாதது. பேதமற்றது, ஆதி, மத்யம், அந்தம் ஆகிய இவைகளற்றது. எப்பொழுதும் ஒரே வகையுள்ளது. (இளைப்பு, விருத்தி முதலியவை களற்றது என்று கருத்து) வாக்குக்கும், மனத்திற்கும் மேலானது.

35–47. மேற்காட்டியபடி என்னால் உமக்கு உப தேசிக்கப்பட்ட பகவானுடைய ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபங் கள் மாயையால ஏற்பட்டவைகளாகையால் அவைகளை வித்வான்கள் உண்மையானவைகளாக அங்கீகரிக்கிறது இல்லை. (உபாஸனத்திற்காகப் பகவானிடம் ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபங்கள் ஆரோபிக்கபட்டனவென்று கருத்து) ஓ மஹாராஜ அந்தப் பகவான் ப்ரஹ்மதேவ ஸ்வரூபியாக

இருந்து, சப்தங்களின் பொருளாக விருக்கும் உருவங் களையும்; சப்தங்களைக் கொண்டு பெயர்களையும் ஸ்ருஷ்டிக்கிறார். மேலும் அவர் மாயையால் கர்மங்கள் அற்றவர்போல தோன்றினாலும் உண்மையில் கர்மங்கள் அற்றவர். ஒன்பது ப்ரஜாபதிகள் மனுக்கள் தேவர்கள், ரிஷிகள், பிதிரு கணங்கள் ஸித்தர்கள்; சாரணர்கள், கந்தர்வர்கள், வித்யாதாரர்கள், அஸுரர்கள், குஹ்யகர்கள் கின்னரர்கள் அப்ஸரஸுகள், நாகர்கள், ஸர்ப்பங்கள், கிம்புருஷர்கள், மாத்ரு கணங்கள், ராக்ஷஸர்கள், பிசாசங்கள் ப்ரேத கணங்கள், பூத கணங்கள், விநாயக கணங்கள் கூஷ்மாண்டங்கள், உன்மாதங்கள், வேதாலங் கள், யாதுதானர்கள் கிருஹங்கள், பறவைகள், மிருகங் கள், பசுக்கள், விருக்ஷங்கள், மலைகள், மலைப்பாம்பு கள், ஸ்தாவர ஜங்கமங்கள் என்ற இரண்டு வகை யுள்ளவையும், ஜராயுஜம், அண்டஜம், ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம் என்று நான்கு வகையுள்ளவைகளுமான ப்ராணிகள், ஜல ஜந்துக்கள், ஸ்தல ஜந்துக்கள் ஆகிய எல்லாவற்றையும் தரிக்கிறார். (ப்ரபஞ்ச ஸ்வரூபமாக இருக்கிறார் என்று கருத்து.) மேற்காட்டிய ப்ராணி களில் மேலானவை. மத்ய நிலையுள்ளவை, தாழ்ந்தவை ஆகிய இவைகள் புண்யம், பாபம், இரண்டின் கலப்பு ஆகிய கர்மங்களின் பலனேயாம். ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய இவைகளால் கர்மங்களின் கதி மூவகை யானது. ஸத்வத்தால் ஸ்வர்க்கம் முதலியவைகளும், ரஜஸ்ஸினால் பசு, புத்திரன் முதலியவைகளும் தமஸ்ஸினால் 21 நரகங்களும் உண்டாகின்றன. மேற் காட்டிய மூன்று வகையான கதிகளில் ஒன்றானது மற்ற இரண்டுகளால் அடக்கப்படும் பொழுது ஒவ் வொன்றிலும் மூன்று வகை ஏற்படுகின்றது. அந்தப் பகவானே இந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்து திர்யக் ஜாதி

ஆகவும், மனிதனாகவும். தேவனாகவும் அவதரித்து ஸ்ருஷ்டித்த ஜகத்தைப் பரிபாலனம் செய்தும், தர்ம ரூபியாக விருந்து அதனைப் போஷிக்கிறார். பின்பு ப்ரளய காலத்தில் மேகக்கூட்டத்தைக் காற்றானது கலைத்ததுபோல, அந்த மஹாபுருஷனே காலாக்னி ருத்ரரூபியாக விருந்து ஸம்ஹரிக்கிறார். மிகுந்த ஜ்ஞானமுள்ள அந்தப் பகவான் இப்போர்ப்பட்ட மஹிமை யுள்ளவர் என்று சொல்லப்படுகிறார். ஆனாலும் வித்வான்கள் அவரை இம்மாதிரியான குணமுள்ள வராக அறியமாட்டார்கள். ஏனெனில், இந்த ஜகத்தை உண்டு பண்ணுவது முதலியவைகளால் பரமாத்மாவிற்கு சம்பந்த மிருப்பதாகச் ஸ்ருதியின் தாத்பர்யமல்ல. மாயையைக் கொண்டு பகவானிடத்தில் ஆரோபிக்கப் பட்ட கர்த்ருவம் முதலியவைகள் அவரிடத்தில் உண்மையில் இல்லை என்று சொல்லுவதற்காக வேதமானது அவைகளை அனுமதித்தது. ப்ரஹ்மதேவ ருடைய கற்பமானது அவாந்தர கல்பத்துடன் சுருக்க மாகச் சொல்லப்பட்டது. இந்த மஹாகல்பத்தில் மஹத்தத்துவம் முதலியவைகளின் ஸ்ருஷ்டியும். ஸ்தாவரங்களின் ஸ்ருஷ்டியும் சொல்லப்பட்டிருக் கின்றன. இந்தப் பிரகாரமானது மற்ற மஹாகல்பம் முதலியவைகளுக்கும் பொதுவேயாம். காலத்தின் அளவையும் கல்பத்தின் லக்ஷணத்தையும் அதன் அவாந்தரவிபாகத்தையும் பாத்ம கல்பத்தையும் சொல்லுகிறேன். கேளும் என்றார்.

48–50. இம்மாதரியான ஸூதருடைய வார்த்தையை கேட்ட சௌனகர் அவரை நோக்கி, பாகவதர்களுக்குள் சிறந்தவராகிய விதுரர், மிகுந்த அபிமானமுள்ள பந்துக் களை விட்டுப் பிரிந்து பூமியிலிருக்கும் ஒவ்வொரு

தீர்த்தங்களிலும் சென்று யாத்திரை செய்தாரல்லவா? அந்த விதுரருக்கும், மைத்ரேயருக்கும் எந்த விடத்தில் பரமாத்மா விஷயமான ஸம்வாதம் நேர்ந்தது? அந்தப் பகவானாகிய மைத்ரேயரால் அவருக்கு உபதேசிக்கப் பட்ட ஆத்ம தத்துவம் யாது? விதுரர் பந்துக்களை விட்டுப் பிரிவதற்கு என்ன காரணம்? அவர் மறு படியும் ஏன் திரும்பிவந்தார்? அவருடைய சரிதம் எல்லாவற்றையும் சொல்லவேண்டும் என்று பிரார்த் தித்தார்.

51. அதனைக் கேட்டு ஸூதர், 'ஓ மஹரிஷிகளே பரீஷித்து மஹாராஜனால் கேட்கப்பட்டுச் சுக மஹா முனியானவர் எதனை அவருக்கு உபதேசித்தாரோ அதனைக்ரமமாக உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

நோட்டு

விஸர்க்கம் பகவான் தமோகுணத்தை அங்கீகரித்துச் செய்யும் லயம்சந்த். ப்ரஹ்மதேவரால் செய்யப்படும் ஸர்க்கம் வீர. ஸ்ருஷ்டி காலத்தில் பரமாத்மாவினிடம் இருந்து குணங்களுடைய வித்யாஸத்தால் உண்டாகும் மஹத்தத்துவத்தால் ஐந்து பூதங்கள், சப்தம் முதலிய வைகள், இந்திரியங்கள், புத்தி ஆகிய இவை முதல் அண்டம் வரையிலுள்ளவைகளின் உற்பத்தியே ஸர்க்கம். அண்டத்திற்குட்பட்ட புருஷனால் ஸ்ருஷ் டிக்கப்படும் பலவகையான ஸ்ருஷ்டியே விஸர்க்கம் விஜ். முக்திஜீவன் கர்மத்தால் கற்பிக்கப்பட்ட தேவாதி சரீரத்தைவிட்டுத் தன்னுடைய ஸ்வரூபமாகிய ஞானம், ஆனந்தம் முதலியவைகளுடனிருப்பது சந்த், பாபம் இல்லாமலிருப்பது முதலிய எட்டுக் குணங்களுடைய

வனாகத் தன்னைத் தெரிந்து கொண்டிருப்பது வீர, ப்ராகிருதம், வைகிருதம், ஸ்தூலம் ஸூக்ஷ்மம் ஆகிய இவைகளை விட்டு, சித்ஸ்வரூபியாயும், ஆனந்த ஸ்வரூபியாயும் இருப்பதுவிஜ. ஆதிபௌதிகம் சப்தம் முதலியவைகளுக்கும் ஆந்தரனாகவிருப்பவனே ஆதி பௌதிகன் வீர. ஸாக்ஷியாக இம்மூன்றுகளில் இந்திரியமாகிய ஸ்தானமில்லாவிடில் சப்தம் முதலிய விஷயங்கள் அறியப்படுகிறதில்லை. ஆனதால் ஜீவர்கள் மூன்று வகையான ஸன்னிகர்ஷமுள்ள பதார்த்தங் களை இந்திரியங்களால் அறிந்துகொள்ளுகிறாகள். பரமாத்மாவானவர்மூன்றையும் நேரில் பார்ப்பவர் வீர. ஆச்ரயமானஅசிதாஸ்ரயமான ஜீவனுக்கும் ஆச்ரயமாய் இருப்பவர். எப்படி ரதத்திலுடைய சக்கரத்திலுள்ள ஆரங்களில் நேமியும் (சக்கரத்தின் முனை) மத்யமாகிய குடத்தில் ஆரங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றனவோ, அப்படியே பூத மாத்திரைகள் ப்ரஞ்ஞாப மாத்திரை யிலும், அவைகள் ப்ராணனிடத்திலும் வைக்கப்பட்டு இ ருக்கின்றனஸ்ருதி. வீர.நாராயணன் 'ஜலங்களுக்கு நாரமென்று பெயர். அவைகள் ஸ்தானமாயிருந்தன. அதனால் நாராயணன்' என்று சொல்லப்பட்டார் ஸ்மிருதி.

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்கந்தம் 3

அத்தியாயம்-1

விதுரருக்கும்உத்தவருக்கும் ஸம்வாதம்

சுகர் பரீக்ஷித்து மகாராஜனை நோக்கி, "ஓ மகாராஜ! எல்லாவற்றிற்கும் அதிபதியும், ஹிருதயத்தில் வஸிப்பவருமான இந்த ஸ்ரீ கிருஷ்ண பகவான் பாண்டவர்களுக்குத் தூதராக அஸ்தினாபுரம் சென்றபொழுது அரசனாகிய துரியோதனனை லட்சியம் செய்யாமல் விதுரருடைய கிருஹத்திற்குச் சென்றாரல்லவா, அவ்வளவு மஹிமை பொருந்தியதும், ஸகல சம்பத்துக்களால் நிறைந்ததுமான தம்முடைய அந்த வீட்டை விட்டு விதுரர் முன்னொரு காலத்தில் காட்டில் சென்று அவ்விடத்தில் ஸர்வக்ஞரான மைத்ரேயரைச் சந்தித்து, இந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டார்" என்று சொன்னார். அதனைக் கேட்ட அரசன் சுகரை நோக்கி, "ஓ பிரபுவே! பகவானாகிய மைத்ரேயரும், விதுரரும் எவ்விடத்தில் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசிக் கொண்டார்கள்? மிகவும் சிறந்தவரான மைத்ரேயரை நோக்கிச் சுத்த சித்தரான அந்த விதுரரால் செய்யப்பட்டதும், பெரியோர்களால் அனுமோதித்துக் கௌரவப்படுத்தப்பட்டதுமான ப்ரச்னம் (கேள்வி) அற்ப விஷயமுள்ளதாக இராது. ஆகையால அதைச் சொல்ல வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

5-45 ஓ சௌனகர் முதலிய மஹர்ஷிகளே! இம்மாதிரி அரசனுடைய வார்த்தையைக் கேட்டு மஹர்ஷிகளுக்குள் சிறந்தவரும், பல விஷயங்களை

அறிந்தவருமான சுகர் மிகுந்த ப்ரியத்துடன் அரசனை நோக்கி, "திருதராஷ்டிர மகாராஜன் அதர்ம சிந்தையால் விவேகமில்லாதவராய் மிகவும் துஷ்டர்களான துரியோதனன்முதலிய புத்திரர்களை அதர்ம மார்க்கமாய்ப் போஷித்தும், தம்முடைய தம்பியாகிய பாண்டுவினுடைய குமாரர்களும், தகப்பனை இழந்தவர்களுமான தரும புத்திரர் முதலானவர்களை அரக்கு மாளிகையில் வஸிக்கச் செய்து அதில் அக்னியையும் வைத்தார். பிறகு துரியோதனன் சபையில் திரௌபதியின் தலைமயிரைப் பிடித்து இழுத்து வரச் செய்யும் பொழுது, அவள் தன்னுடைய ஸ்தனங்களிலிருக்கும் குங்குமம் கரையும்படி கண்ணீரைப் பெருக்கி அழுதாள். அப்பொழுது தனது மருமகளாகிய திரௌபதிக்கு நேர்ந்த துக்கத்தையும் புத்திரர்களுடைய கெட்ட நடையையும் பார்த்திருந்தும் மௌனமாக இருந்தார்.

மேலும் துரியோதனன் முதலியவர்கள் மிகுந்த சாதுவாகிய தருமபுத்திரரைச் சொக்கட்டான் ஆட்டத்தில் ஜயித்து நாட்டிலிருந்து காட்டிற்குப் போகச் செய்தார்கள். அப்பொழுது அவர் சத்தியத்திற்குட்பட்டுப் பன்னிரண்டு வருஷம் வனவாஸஞ் செய்தும், ஒரு வருஷம் அஞ்ஞாதவாஸஞ் செய்தும், பிறகு தம்முடைய பாகத்தைத் தமக்குக் கொடுக்கும்படி வேண்டிக் கொள்ள அப்பொழுதும் தமோ குணத்தால் அந்தத் திருதராஷ்டிர மகாராஜன் கொடுக்கவில்லை. பின்னும், ஜகத்திற்குக் குருவாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் தரும புத்திரரால் தூண்டப்பட்டு, அஸ்தினாபுரஞ் சென்று சபையில் சில வார்த்தைகளைச் சொன்னார். அவைகள் பீஷ்மர், முதலானவர்களுக்கு அமிருதமாக விருந்தன. துரியோதனன், திருதராஷ்டிரர்

முதலானவர்கள் க்ஷேமத்தைக் கொடுக்கும் புண்ணிய மில்லாதவர்களாகையால், அவைகளைப் பெரியவை களாக நினைக்கவில்லை. பின்னுமொரு சமயத்தில் திருதராஷ்டிரர் பாண்டவர்களுக்கு அவர்களுடைய பாகத்தைக் கொடுக்கும் விஷயமாய் ஆலோசிப்பதற்காக விதுரரைத் தம்முடைய அரண்மனைக்கு வரவழைத் தார். விதுரர் காரியம், அகாரியம் இவைகளை நன்றாக யோசித்துச் சொல்பவர்களுக்குள் சிறந்தவர், "விதுரருடைய வார்த்தை மிகவும் மேலானது" என்று ப்ரசித்தமாயிருக்கிறது. அப்பொழுது விதுரர் தமை யனை நோக்கி, "ஓ மகாராஜ! தரும புத்திரருக்கு ஓரிடத்திலும் விரோத புத்தியில்லாமையால் அவர் தம் சகோதரர்களுடன் உம்மால் செய்யப்பட்ட சகிக்க முடியாத அபகாரங்களைப் பொறுத்துக் கொண்டிருக் கிறார். தவிரவும், பீமசேனராகிய சர்ப்பமானது மிகுந்த கோபத்துடன் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக் கிறது. அந்த சர்ப்பத்தினிடம் நீர் எப்பொழுதும் மிகவும் பயந்து கொண்டிருக்கிறீரல்லவா? மேலும் ப்ராஹ்மணர்களையே தெய்வமாக கொண்டவராகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் குந்தியின் புத்திரர்களைத் தம்மைச் சேர்ந்தவர்களாக அங்கீகரித்திருக்கிறார். யாதவர்களுக்கு அதிபதியும், பூமியிலிருக்கும் ஸகல அரசர்களை ஜயித்தவருமாகிய அந்தப் பகவான் துவாரகா நகரத்தில் சுகமாக வஸிக்கிறார்.

மேலும், தோஷமே துரியோதனனென்ற பெயருடன் சரீரமெடுத்துக் கொண்டு உம்முடைய க்ருகத்தில் ப்ரவேசித்திருக்கிறது. இவனை அபத்யம் (எந்தக் குழந்தையால் பிதா நரகத்தையடையாமலிருப்பானோ அந்தக் குழந்தை) என்று நினைத்துப் போஷிக்கிறீர்.

இவன் பரம புருஷராகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் இடத்தில் விரோதபுத்தியுள்ளவன். இவனால் உமக்கு க்ஷேம்மம் கிடைக்காது, சம்பத்து உம்மை விட்டு விலகியது; கெட்ட நடையுள்ள இந்தப் புத்திரனை நாட்டை விட்டுத் துரத்தி விடவேண்டும். குலத்தின் க்ஷேமத்திற்காக ஒருவனைப் பரித்தியாகம் செய்வது நியாயமேயாகும், தரும புத்திரருக்கு அவருடைய பாகத்தைக் கொடுத்துவிடும்" என்றார். அதனைக் கேட்ட துரியோதனன் மிகுந்த கோபங்கொண்டு உதடுகள் துடிக்கக் கர்ணன், துச்சாதனன், சகுனி என்னும் இவர்களுடன் சாதுக்களால் விரும்பக்கூடிய ஸ்வபாமுள்ள விதுரரை யுத்தேசித்து, "தாசியின் புத்திரனாகிய விதுரன் கபட ஸ்வபாவமுள்ளவன். நம்முடைய அன்னத்தை புசித்தவனாயிருந்தும் நமக்கே விரோதம் செய்கிறான். சத்ருக்களுக்கு அனுகூலஞ் செய்வதில் ஜாக்ரதையாக இருக்கிறான். இவனை இந்த ஆலோசனை சபைக்கு எவன் அழைத்தான்? இவனை உயிருடன் பட்டணத்தை விட்டுத் துரத்த வேண்டும்" என்று அவமதித்துச் சொன்னான். இம்மாதிரி விதுரர் திருதராஷ்டிரருடைய முன்பாகத் துரியோதனனுடைய நிஷ்டுரவார்த்தை களாகிய பாணங்களால் அடிக்கப்பட்டும் அதனால் வருத்தப்படவில்லை. ஆனால், மாயையின் மஹிமை அளவிடமுடியாதது என்று ஆச்சரியமடைந்தார்.

பிறகு அவர் (விதுரர் அஸ்தினாபுர பட்டணத்தை விட்டு வெளியில் போய்ப் பீமசேனர் முதலியவர்களு டன் சேர்ந்த யுத்தத்திற்கு வருவாரோவென்று சந்தே கிக்க வேண்டாம் என்ற விஷயத்தை துரியோதனன் முதலியவர்களுக்குத் தெரிவிப்பதற்காக) தம்முடைய

வில்லை அவர்களுடைய அரண்மனை வாசலில் வைத்துவிட்டு, தம்மைத் துரத்த முயற்சிப்பதற்கு முன்னமேயே பட்டணத்திற்கு வெளியில் சென்றார். கௌரவர்களுடைய பாக்கிய ரூபியாகிய அந்த விதுரர் புண்ணியத்தைச் சம்பாதிக்க விரும்பி க்ஷேத்திராடனஞ் செய்ய ஆரம்பித்தார். க்ஷேத்திரங்களில் பகவான் ப்ரஹ்மா, ருத்திரன் முதலிய அநேக சரீரங்களுடன் ஸான்னியத்யஞ் செய்கிறார். வனங்கள், புண்யகரமாகிய தோட்டங்கள், மலைகள், கொடிவீடுகள், சுத்தமான ஜலமுள்ள நதிகள், ஏரிகள், பகவானுடைய மூர்த்திகளால் அலங்கரிக்கப்பட்ட க்ஷேத்திரங்கள் ஆகிய இவைகளில் சஞ்சரித்தார். மேலும், அவர் ஒவ்வாரு தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்தும் சுத்தமாகிய ஜீவனமுள்ளவராகப் பூமியில் படுத்துக் கொண்டு, மரவுரியை உடுத்திக் கொண்டு தம்முடைய பந்துக்களாலும், "இவர் விதுரர்" என்று தெரிந்து கொள்ள முடியாத ஸ்வரூபமுள்ளவராக ஸ்ரீ மகா விஷ்ணுவிற்குப் ப்ரியமாகிய வ்ரதங்களை அனுஷ்டித் தார். இப்படிப் பாரத வர்ஷம் முழுவதும் சஞ்சரித்துக் கடைசியில் ப்ரபாஸ தீர்த்தஞ் சென்றார். அந்தக் காலத்தில் தருமபுத்திரர் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய சகாயத்தால் ஸகல பூமியையும் பரிபாலித்து வந்தார். அப்பொழுது அவருடைய சைன்யம் ஒன்றுதான் பூமியிலிருந்தது. அரசர்களுக்கு அடையாளமாகிய வெள்ளைக் குடை ஒன்றே நிலைத்திருந்தது. மூங்கில்கள் ஒன்றோடொன்று சேர்ந்து அக்னி யுண்டுபண்ணி அதனால் அவைகள் எரிக்கப்படுவது போலக் கௌரவர்கள் நாசமடைந்தார்கள் என்று ஜனங்கள் சொல்லிக் கொள்வதை விதுரர் ப்ரபாஸ தீர்த்தக் கரையில் கேட்டு, வருத்தத்துடன் மௌனமாக

அவ்விடத்திலிருந்து மேற்கு முகமாய்ச் சரஸ்வதி நதியை நோக்கிச் சென்றார். அவ்விடத்தில் திரிதர், உசனஸ், மனு, பிருது, அக்கினி. அஸிதர், வாயு, ஸுதாஸர், கோ (பசு), சுப்பிரமண்யர், ச்ராத்த தேவர் என்னும் இவர்களுடைய பெயரால் ஏற்படுத்தப்பட்ட பதினொரு தீர்த்தங்கள் இருக்கின்றன. மேலும், மஹர்ஷிகளாலும், தேவர்களாலும் ஏற்படுத்தப்பட்ட விஷ்ணுவின் ஆலயங்கள் இருக்கின்றன. அவைகளின் மேற்புறத்திலிருக்கும் கும்பங்கள் பகவானுடைய சக்கரம் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு இருப்பதால் அவற்றைக் கண்டவுடன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய ஞாபக முண்டாகிறது. அவைகள் எல்லாவற்றையும் விதுரர் சேவித்தார்.

பிறகு, அவ்விடமிருந்து ஸௌராஷ்டிரம், ஸௌவீரம், மத்ஸ்யம், குருஜாங்கலம் என்னும் தேசங்களைத் தாண்டி, சிலகாலம் சென்றபின் யமுனையின் கரை சென்றார். அவ்விடத்தில் பகவத் பக்தராகிய உத்தவ ரைக் கண்டார். அவர் வசுதேவ புத்திரராகிய பகவானுடன் சஞ்சரிப்பவர். மிகவும் சாந்தர். ப்ரகஸ் பதியின் முந்திய சிஷ்யர், ப்ரசித்தர். இப்படிப்பட்ட உத்தவரை விதுரர் மிக்க பிரியத்துடன் தழுவி, பகவானால் போஷிக்கக்கூடிய தம்முடைய பந்துக்கள் க்ஷேமமாக வஸிக்கிறார்களாவென்று பின்வருமாறு விசாரிக்கத் தொடங்கினார். எப்படியெனில், தம்முடைய நாபியிலிருந்து உண்டான ப்ரஹ்மதேவர் உடைய வேண்டுகோளின்படி தாமே இரண்டு விதமாகப் பூமியில் அவதரித்துப் ப்ரஜைகளுக்கு ஆனந்தத்தை யுண்டு பண்ணிக் கொண்டிருக்கும் பலராமனும், ஸ்ரீ கிருஷ்ண பகவானும் சூரசேனருடைய

க்ருஹத்தில் க்ஷேமமாக வஸிக்கிறார்களா? பூஜ்யராகிய வசுதேவர் சுகமாக இருக்கிறாரா? அவர் சகோதரிகளுக்கு இஷ்டமான உத்தம வஸ்த்துக்களைக் கொடுத்து, பிதாபோல் அவர்களைப் பூஜிப்பவர்களல்லவா? யாதவ ஸைனியத்திற்கு அதிபதியான ப்ரத்யும்னர் க்ஷேமமாக இருக்கிறாரா? அவர் முன் ஜன்மத்தில் மன்மதனாக இருந்தவர். ப்ராஹ்மணர்களுடைய அனுக்கிரஹத்தால் ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு ருக்மணி தேவியினிடம் பிறந்தவர். தாமரை மலர் போன்ற கண்களுள்ள ஸ்ரீ கிருஷ்ண பகவான் இராஜ்யத்தை விரும்பாமல் உக்ரசேனருக்கு இராஜ் யாபிஷேகஞ் செய்வித்தாரல்லவா? சாத்வதர்களுக்கும், வ்ருஷ்ணிகளுக்கும், போஜர்களுக்கும், தாசார்ஹர்களுக்கும் அதிபதியான அந்த அரசன் சௌக்கியமாக இருக்கிறாரா? ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் சமமானவரும், ரதிகர்களுக்குள் முந்தியவரும், பகவானுடைய புத்திரருமாகிய சாம்பனென்பவர் க்ஷேமமாயிருக்கிறாரா? அவரை ஜாம்பவதி கடுமையான விரதங்களைச் செய்து புத்திரனாக அடைந்தாள். அவர் முன் ஜன்மத்தில் பார்வதிக்குப் புத்திரனாக இருந்த சுப்ரமண்யனேயாம். அர்ச்சுனனிடத்தில் அஸ்திர வித்தையை அப்பியசித்தவரும்; பகவானைச் சேவித்து யதுக்களுக்கும் அரிதாகிய பகவத் கதியை அடைந்தவருமான யுயுதானர் (ஸாத்யகி) க்ஷேமமா? பகவானிடத்தில் அதிகப் பக்தியுள்ளவரும், பாபமற்றவரும், விவேகியுமான அக்ரூரர் க்ஷேமமா? அவர் ஸ்ரீ கிருஷ்ணன் நடந்த இடத்தில் அவருடைய திவ்யமாகிய பாதம் வைத்த புண்ணிய ஸ்தலத்திலுள்ள தூளிகளின் விசேஷ பிரேமையால் தைரியம் தளர்ந்தவராகப் புரளுகிறவரல்லவா? வேதமானது யாக விதியாகிய பொருளையடக்கிக் கொண்டிருப்பது போல் தேவகி

ஆனவர் ஸ்ரீ மகாவிஷ்ணுவைத் தன்னுடைய வயிற்றில் தரித்தாளல்லவா? அவளுக்குச் சமமானவள் அதிதி தேவியே தவிர வேறில்லை, அந்தக் கிருஷ்ண பகவான் உடைய மாதா க்ஷேமமாக இருக்கிறாளா? அநிருத்தர் க்ஷேமமாக இருக்கிறாரா? அவர் பக்தர்களுக்கு அபீஷ்டத்தைக் கொடுப்பவர். அவரே சாஸ்திரத்திற்குக் காரணரென்றும், மனத்தைப் ப்ரவர்த்திக்கச் செய்பவர் என்றும், அந்தக்கரணத்தின் நான்காவது தத்துவமென்றும் தேவர்கள் சொல்லுகிறார்கள். தங்களுடைய ஆத்மாவிற்குத் தெய்வமாகிய ஸ்ரீ கிருஷ்ணனையே உபாசிப்பவர்களான ஹ்ருதிகர், சத்யபாமையின் புத்திரர் சாருதேஷ்ணர், கதர் முதலிய மற்ற பந்துக்கள் அனைவரும் க்ஷேமமாக இருக்கிறார்களா? தரும புத்திரர் தம்முடைய கைகள் போலிருக்கும் அர்ச்சுனன், ஸ்ரீ கிருஷ்ண பகவான் இவர்களுடன் தர்மமாக லோக மரியாதையைக் காப்பாற்றி வருகிறாரா? அர்ச்சுனன் உடைய ஒத்தாசையால் தர்மபுத்திரருக்குக் கிடைத்த இராஜ்யலக்ஷ்மியைக் கண்டு துரியோதனன் மிகவும் வருத்தப்பட்டானல்லவா? பீமசேனர் கதாயுத்தஞ் செய்யும்பொழுது அவருடைய பாதங்களின் சஞ்சாரத்தைச் சகியாமல் பூமி அசையுமே. அவர் வெகு நாளாகத் தமக்கு அபராதஞ் செய்தவர்களான சத்துருக்களைத் தக்கபடி சிட்சித்தாரா? அர்ச்சுனன் கிராத வேஷங் (வேட வடிவங்) கொண்ட பரமசிவனுடன் யுத்தஞ் செய்யும் சமயத்தில் அர்ச்சுனனுடைய பாணங்களால் அவர் மறைக்கப்பட்டு மிகவும் சந்தோஷமடைந்தாரல்லவா? ரதிகர்களுக்குள் மிகுந்த கீர்த்தியுள்ள இந்த அர்ச்சுனன் சத்ருக்களைக் கொன்றாரா? குந்திதேவியின் ஸ்தன்ய பானத்தால் வளர்ந்தவர்களும், இமைகளுடன் கண்கள் சேர்ந்து

இருப்பதுபோலக் குந்தி புத்திரர்களுடன் விசேஷ பிரேமையுடன் வசிப்பவர்களுமான நகுல சகாதேவர்கள் இருவர்களும் இரண்டு கருட பட்சிகள் மகேந்திரன் இடத்திலிருந்து அமிருதத்தைக் கொண்டு வந்தாற் போலத் தங்களுடைய ராஜ்யத்தை எதிரிகளிடமிருந்து வசப்படுத்திக் கொண்டு சந்தோஷிக்கிறார்களா? அதிரதரும், லோகத்தில் முக்கிய வீரராயுமுள்ள பாண்டு மகாராஜன் வில்லையே ஒத்தாசையாக வைத்துக் கொண்டு நான்கு திக்குகளையும் ஜயித்தார். அப்பேர்ப் பட்ட சூரனாகிய பர்த்தா இறந்தபிறகு குந்தியானவள் தன்னுடைய புத்திரர்களுக்காகவே உயிருடனிருந்தாள். ஓ, உத்தவரே துர்க்கதியை யடையத் தயாராக இருக்கும் திருதராஷ்டிரரைப் பற்றித் துக்கிக்கிறேன். அவர் தம்பியாகிய பாண்டு மகாராஜன் இறந்த பிறகு அவருடைய புத்திரர்களுக்குத் துரோகஞ் செய்ததால் சகோதரனுக்குத் துரோகஞ் செய்தவரானார். மேலும், அவர் தம்முடைய பிள்ளைகளான துரியோதனர்கள் உடைய இஷ்டப்படி என்னைப் பட்டணத்திலிருந்து துரத்தினாரல்லவா? ஆனாலும் மனுஷிய சரீரம் எடுத்து, அவர்களுடைய சித்தத்தைப் பலவகையில் செல்லும்படியாகத் தூண்டும் பகவானுடைய மார்க்கத்தை அவருடைய அனுக்கிரகத்தால் தெரிந்து கொண்டு நான் மற்றவர்கள் கண்களுக்குப் புலப்படாத வனாகிச் சஞ்சரிக்கிறேன். இதில் எனக்கு ஆச்சரியம் யாதுமில்லை. ஸ்ரீ கிருஷ்ண பகவான் துரியோதனன் முதலியவர்களைக் குற்றஞ் செய்த க்ஷணத்திலேயே கொல்லக்கூடிய சாமர்த்தியம் உள்ளவரானாலும் அப்பொழுதே அவர்களைக் கொல்லாமலிருந்தும், தாம் தூதராகி அவர்களிடம் சென்றும், அவர்களால் அவமதிக்கப்பட்டும், உதாசீனராய் இருப்பதற்கு யாது

காரணமென்று யோசிப்போமேயானால், வித்தை, தனம், மேலான குலத்தில் பிறப்பது ஆகிய மூன்று வகையாலும் ஏற்படும் மதத்தால் விவேகமற்றவர்களும், அளவற்ற சைனியர்களுடன் பூமியை அசைப்பவர்களு மான கெட்ட அரசர்களையும் நாசஞ் செய்து, பூமியின் பாரத்தைக் குறைப்பதற்காகவேயென்று நிச்சயிக்க வேண்டியதாயிருக்கிறது. உண்மையில் பிறப்பில்லாத மகாபுருஷன் துஷ்டர்களைச் ஸம்ஹரிப்பதற்காகவே ஜன்மத்தை அங்கீகரித்தார். மேலும் அவர் (அகர்த்தா) ஒன்றையுஞ் செய்யாதவரானாலும், மனிதர்களுக்குக் கர்மத்தில் ச்ரத்தை யுண்டாவதற்காகவே லீலைகளைச் செய்கிறார். இப்படி யில்லாவிடில் குணங்களை அதிக்கிரமித்தவராகிய பரமாத்மாவிற்குக் கர்மாதீன மாகிய சரீரம் எப்படி ஏற்படக் கூடும்? ஆதலால், தம்முடைய ஆக்ஞைக்குட் பட்டவர்களும் சரணம் அடைந்தவர்களுமான ஸகல லோக பாலகர்களுக்காக பூமியில் அவதரித்தவரும், ஜன்மமற்றவரும், சம்சாரத் தைப் போக்கக் கூடிய கீர்த்தியுள்ளவருமான ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய கதைகளைச் சொல்லும் என்றார்.

நோட்டு

பதினொரு –1. திரித தீர்த்தம். 2. உசனஸ் தீர்த்தம் 3. மனு 4. பிருது தீர்த்தம் 5. அக்கினி தீர்த்தம் 6. அஸித தீர்த்தம் 7. வாயு தீர்த்தம் 8. ஸுதாஸ தீர்த்தம் 9. கோ தீர்த்தம் 10. ஸுப்ரமண்ய தீர்த்தம் 11. சிரார்த்ததேவ தீர்த்தம்

அத்தியாயம்–2

உத்தவர் ஸ்ரீகிருஷ்ண சரிதத்தை வர்ணித்தது

விதுரருடைய பிரியமான வார்த்தையைக் கேட்டுப் பாகவத சிரோமணியான உத்தவர் அதிகப் பிரேமையால் ஸ்ரீ கிருஷ்ணனை மனத்தில் நினைத்துக்கொண்டு ப்ருதியுத்தரஞ் சொல்ல முடியாதவராயிருந்தார். அந்த உத்தவர் ஐந்து ப்ராயமுள்ள சிறுவனாயிருக்கும்போது ஒருநாள் பாலக்கிரீடையில் ப்ரதிமை ஒன்றை ஸ்ரீ கிருஷ்ணனாகப் பாவித்து, அதற்குப் பூஜை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது அவருடைய தாயான வள் காலையில் போஜனஞ் செய்யவேண்டியதற்காகப் பலவகையான நல்வார்த்தைகளை சொல்லி அவரை யழைத்தாள். அப்படியும் அவருக்கு ஆகாரத்தில் விருப்பம் உண்டாகவில்லை. பகவத் பக்தர்களுக்குள் சிறந்தவராகிய அப்போர்ப்பட்ட உத்தவர் பகவானுடைய சேவையாலேயே காலத்தைக் கழித்து ஜரையையடைந்தவராகையால் பகவானுடைய பாதங்களைத் தியானித்து, அதிலேயே ரமித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் விதுரருடைய கேள்விக்குப் ப்ரதியுத்தரஞ் சொல்ல முடியுமா? அவர் பகவானுடைய பாதாரவிந்த மதுவினால் விசேஷ ஆனந்த மடைந்து, மிகவும் திடமான பக்தி யோகத்தில் மூழ்கினவராகி ஒரு முகூர்த்தம் மௌனமாயிருந்தார். அப்போது அவர் உடைய எல்லா அவயவங்களிலும் மயிர்கூச்ச லுண்டாயிற்று கண்கள் மூடினவைகளாயிருந்தன. துக்கத்தால் கண்ணீர் பெருகியது. பகவத் விஷயமான விசேஷ ப்ரேம ரசம் நிறைந்தவரும் கிருதார்த்தருமாகி இருந்தார். பிறகு கொஞ்ச நேரம் சென்றபின்,

பகவானாகிய லோகத்திலிருந்து இவ்வுலகத்திற்கு வந்து கண்களைத் துடைத்துக்கொண்டு பகவான் செய்த லீலைகளை நினைத்து ஆச்சரயமுள்ளவராகி, விதுரரை நோக்கி பின்வருமாறு சொல்லலானார்: ஸ்ரீ கிருஷ்ணன் ஆகிய சூரியன் அஸ்தமயத்தையடைந்த போது காலமாகிய பெரிய சர்ப்பமானது நம்முடைய வீடுகளைக் கவர்ந்துகொண்டது. இந்த நிலைமையில் உம்மால் கேட்கப்பட்ட பந்துக்களுடைய க்ஷேமத்தைப் பற்றி எதனைச் சொல்வேன்? இவ்வுலகத்திற்கு அதிருஷ்டக்குறைவுண்டாயிற்று. யாதவர்கள் எல்லோரும் இங்கிதத்தை யறிந்தவர்களானாலும், மிகவும் ஸமர்த்தர்களானாலும், ஒரே இடத்தில் வசிப்பவர்கள் ஆனாலும் ஸகல பூதங்களுக்கும் இருப்பிடமாகிய ஈசுவரனை யாதவர்களுக்குள் சிறந்தவராக நினைத்தார் களே யொழிய மகாவிஷ்ணுவென்று தெரிந்து கொள்ளவில்லை. பாற்கடலில் இருக்கும் மத்ஸ்யங்கள் தங்களுடன் சகவாசஞ் செய்த சந்திரனையும் ஒரு வகையான ஜல ஜந்துவாக நினைத்தனவே யொழிய அமிருத ஸ்வருபியென்று தெரிந்துகொள்ளவில்லை. அவைகள் போன்ற யாதவர்களுக்குப் பாக்கியம் மிகவும் குறைந்துவிட்டது. சில யாதவர்கள் பகவான் உடைய மாயையால் மோகித்து, "இவர் யது குலத்தில் பிறந்தவர். நமக்குப் பந்து" என்று சொல்கிறார்கள்.

சிசுபாலன் முதலிய சிலர் விரோத புத்தியுள்ளவர் களாய் பகவானை நிந்தித்தார்கள். ஆனால் பகவான் இடத்திலேயே மனத்தைச் செலுத்தியவர்களுடைய (என்னை போன்றவர்களுடைய) புத்தியானது மேற் காட்டியவர்களுடைய வார்த்தையைக் கேட்டும் பிரமிக்கவில்லை, மேலும் பகவான் நன்றாகத் தவஞ்

செய்யாதவர்களும், பார்த்துத் திருப்தியடையாத கண்களுள்ளவர்களுமான மனிதர்களுக்குத் திவ்ய சரீரத்தைக் காண்பித்து ஜனங்களுடைய கண்களைக் க்ரஹித்துக் கொண்டு மறைந்தார். அந்தக் திவ்ய சரீரமானது மனுஷ்ய லீலைகளுக்குத் தகுதியானது அவருடைய மனத்திற்கும் ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியது. மிகுந்த சௌபாக்கியத்திற்கும் இருப்பிடம். ஆபரணங்களுக்கு அழகைக் கொடுக்கக் கூடிய அவயவங்களுள்ளது. மேலும் தரும புத்திரருடைய ராஜசூய யாகத்தில் வந்திருந்த ஸகல ஜனங்களும் ஆனந்தகரமாகிய அந்தச் சரீரத்தைப் பார்த்து ப்ரஹ்ம தேவர் ஸ்ருஷ்டி விஷயத்தில் தமக்கிருக்கும் சாமர்த்தியம் முழுவதையும் இந்தச் சரீரத்தில் காட்டியிருக்கிறார் என்று நினைத்தார்கள். அந்தக் திவ்ய மூர்த்தியினுடைய அனுராகமுள்ள சிரிப்பு விநோதம் விளையாட்டான பார்வை ஆகிய இவைகளில் அதிக ஆசை கொண்ட கோபஸ்திரீகள் அனைவரும் அவரவர்கள் செய்து கொண்டிருந்த காரியங்களை முடிக்காமலே பகவானையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். மேலும் அவர்களுடைய மனமானது பகவானிடத்திலேயே பதிந்து அவர் பின் சென்றது. அந்தப் பகவானுக்கு சாந்தம், அசாந்தம் என்று இருவகையான ஸ்வரூபம் உண்டு. அவைகளில் சாந்த ஸ்வரூபமாகிய சாதுக்கள், அசாந்த ஸ்வரூபமாகிய துஷ்டர்களால் உபத்திரவிக்கப் படும்போது காரியகாரணங்களுக்கு அதிபதியான பகவான் விசேஷ கருணையுள்ளவராக மாயையின் சம்பந்தத்தை அடைந்து (மகத் தத்துவத்தைக் காரியமாக உடையது அவ்யக்தம்) உண்மையில் பிறப்பில்லாதவரானாலும் எப்பொழுதும் சித்தமாக இருக்கும் அக்னியானது சில சமயத்தில் கட்டை

முதலியவைகளில் பிரகாசிப்பது போல் அவதரிக்கிறார் (பிரகாசிக்கிறார்). ஆனாலும் அளவற்ற வீரியம் உள்ள அந்தப் பகவான் வஸுதேவருடைய வீட்டில் காராகிருகத்தில்) பிறந்ததாக அபிநயஞ் செய்ததையும் கோகுலத்தில் வஸித்ததையும், கம்ஸனிடத்தில் பயந்தவர்போல் மதுரையை விட்டுப் போனதையும், ஒரு சமயத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான், தேவகி, வஸுதேவர் இவர்களுக்கு நமஸ்காரம் செய்து அவர் களை நோக்கி, ஓ அண்ண! ஓ அம்ம! கம்ஸனிடம் பயந்தவர்களான நாங்கள் உங்களுடன் சகவாசஞ் செய்து உங்களுக்குச் சிச்ருஷை செய்ய முடியாதவர் களானோம். அந்த விஷயத்தில் தயவுசெய்ய வேண்டும்! என்று கேட்டுக்கொண்டதையும் நினைக்கும்போது அவைகள் என் மனதிற்கு வருத்தத்தைப் உண்டு பண்ணுகின்றன. (ஆனாலும் அவரை ஈசுவரனல்ல வென்று எப்படி சொல்லக்கூடும்?) அவர் அசைகின்ற தம்முடைய புருவமாகிய யமனைக் கொண்டு பூமியின் பாரத்தைப் போக்கினார். (அவருடைய புருவத்தின் அசைப்பே துஷ்டர்களுக்கு யமனாக விருந்தது) அவர் உடைய பாதங்களின் தூளியை ஒரு தடவை சேவித்த வன் மறுபடி பிறப்பானா? மேலும் பகவானிடம் விரோத புத்தியுள்ள சிசுபாலன் தருமபுத்திரருடைய இராஜசூயத்தில் யோகிகளால் விரும்பக்கூடிய உத்தம பதத்தைப் பகவானுடைய அனுக்கிரஹத்தால் அடைந்தானென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அவரை விட்டுப் பிரிந்த துக்கத்தை யாரால் ஸகிக்க முடியும்? மேலும், யுத்தத்தில் அரசர்கள் அழகாக ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரை மலர்போன்ற முகத்தைத் தரிசித்து அர்ச்சுனனுடைய அஸ்திரத்தால் சுத்தர்களாகி விஷ்ணு பதத்தை

அடைந்தார்கள். அவருக்குச் சமமானவரும், மேலானவரும் உலகத்தில் ஒருவருமில்லை. அவர் ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் அதிபதி. பரமானந்த ஸ்வரூபியாகையால் ஸகல கர்மத்தையும் அடைந்தவர். இந்திரன் முதலிய லோகபாலர்கள், காணிக்கைகளுடன் அவர் உடைய தரிசனத்திற்காக வந்து, தங்களுடைய கிரீடம் அவருடைய பாத பீடத்தில் படும்படி நமஸ்கரிக்கிறார்கள். அதனாலுண்டாகும் சப்தமானது அவரைத் துதிப்பது போலிருக்கிறது. அந்த மகாபுருஷன் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும் உக்கிரசேனருடைய பக்கத்தில் நின்று, அரசர்களிடம் வேலைக்காரர்கள் சொல்லும் சம்பிரதாய வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டு கைங்கரியங்களைச் செய்து வந்தார். அதை நினைக்கும்போது என் மனம் நடுங்குகிறது. மேலும், பூதனையென்னும் துஷ்ட ராக்ஷஸியானவள் கொல்ல வேண்டுமென்று எண்ணத்துடன் காலகூட விஷயம் ஆகிய ஸ்தன்யத்தை அவருக்கு கொடுத்தும், அவள் இடத்தில் பகவான் கோபியாமலும் அவள் செய்த அபகாரத்தை நினைக்காமலும், யசோதைக்கு தகுதியாகிய உத்தம கதியை அவளுக்குக் கொடுத்தருளினார். பகவானுடைய கருணை வியக்கத்தக்கது. ஆகையால் அவரை விட்டு வேறு யாரைச் சரணம் அடைவோம்? அசுரர்களானாலும் பகவானிடத்தில் விரோதத்தாலாவது எப்பொழுதும் மனத்தைச் செலுத்தியவர்கள் ஆகையால் அவர்களும் பாகவதர்களேயாம். அவர்கள் யுத்தத்தில் கருடனையும்; அவர் மீது ஏறிவரும் சக்ரபாணியாகிய பகவானையும் தர்சித்தார்கள். முன்னொரு சமயத்தில் இந்தப் பூமியின் பாரத்தை நிவர்த்திப்பதற்காகத் ப்ரஹ்மதேவரால் ப்ரார்த்திக்கப்பட்டு ஸ்ரீ நாராயணன் ஸ்ரீ கிருஷ்ணன்

என்ற திவ்ய நாமதேயத்துடன் வஸுதேவருக்குத் தேவகியிடம் காராக்கிருகத்தில் புத்திரனாக அவதரித்தார். அப்பொழுது வஸுதேவர் கம்ஸனிடம் பயந்து வேண்டிக்கொள்ள, அவ்விடமிருந்து கோகுலஞ்சென்று, பலராமனுடன் பதினோரு வருஷங்கள் அவ்விடத்தில் வஸித்தார். யமுனையின் கரையில் கன்று மேய்க்கும் சிறுவர்களுடன் கன்றுகளை மேய்த்து கொண்டு விளையாடினார். அந்த நதியின் கரையிலிருக்கும் மரங்களின் கிளைகளில் பறவைகள் இனிமையாகச் சப்தித்துக் கொண்டிருந்தன. மேலும்; சிங்கக் குட்டி போல அழகாய்ப் பார்க்கும் ஸ்வபாவமுள்ள அந்தப் பகவான் சிறு வயதில் கோபர்கள் பார்த்து ஆனந்திக்கக் கூடிய கௌமார சேஷ்டைகளைக் காட்டியருளினார். சிலவேளை சிரிப்பதுபோலும், சில சமயம் அழுவது போலும் அபிநயஞ் செய்தார். அவரே சொற்ப காலத்திற்குப் பின் லக்ஷ்மிதேவிக்கு இருப்பிடமான வெண்மை நிறமுள்ள பசுக்களையும், விருஷங்களையும் வேணுகானஞ் செய்து சந்தோஷப்படுத்தினார். மேலும் அவர் கம்ஸனால் அனுப்பப்பட்டவர்களும், இஷ்டப்படி உருவமெடுக்கக் கூடியவர்களும், மாயாவிகளுமான அசுரர்களைச் சிறுவர்கள் ஆடும் ப்ரதிமைகளைப் போல நாசஞ் செய்தார். பின்னும் யமுனையிலிருந்து காளியன் என்ற சர்ப்பத்தின் விஷத்தால் கொதித்து இருந்த ஜலத்தைக் குடித்துப் பசுக்களும், கோபர்களும், மரணமடைந்தபோது அவர்களைப் பிழைக்கச்செய்து அந்தச் சர்ப்பத்தை, நிக்ரஹித்து அந்த ஜலத்தைச் சுத்தமாக செய்தார். பின்னும் அவர் இந்திரனை உத்தேசித்துச் செய்யும் பூஜையை நிறுத்தி, பசுக்களுக்குப் பூஜை செய்யும்படி நந்தரிடம் சொல்லி, அந்த மஹோத்ஸவத்தை ப்ராஹ்மணர்களைக் கொண்டு

முடித்து ஏராளமான இருந்த பணத்தை நல்ல விஷயத்தில் செலவிட்டார். பிறகு மகேந்திரன் கோபித்து அதிக மழை பெய்யச் செய்தான். அப் பொழுது பகவான் கோவர்த்தன மலையாகிய குடையைப் பிடித்துக் கோகுலத்தைக் காப்பாற்றினார். பின்னும் அவர் சரத்காலத்தில் நிர்மலமாகிய சந்திரிகையால் பிரகாசிக்கும் ராத்திரியில் அநேக ஸ்திரீகளுடைய மத்தியிலிருந்து இனிமையாக வேணுகானஞ் செய்து கொண்டு விளையாடினார்.

அத்தியாயம்–3

ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதங்கள்

1–23 பிறகு அந்தப் பகவான் தம்முடைய தாய் தந்தையர்களுக்கு க்ஷேமத்தைச் செய்ய விரும்பிப் பலராமனுடன் கோகுலத்திலிருந்து மதுரா நகரஞ் சென்று அவ்விடத்தில் உயரமான இராஜ மஞ்சத்தி லிருப்பவனும் தம்முடைய சத்துருக்களில் பிரதானனு மாகிய கம்ஸனைக் கொன்று, உயிரற்ற அவனுடைய சரீரத்தைப் பூமியில் இழுத்தார். மேலும் அவர் ஸாந்தீபனி என்பவரைக் குருவாக வரித்து, வேதங்களை அவைகளின் அங்கங்களுடன் அவரிடமிருந்து ஒரு தரம் உபதேசித்த மாத்திரத்திலேயே க்ரஹித்துக் கொண்டார். சில நாளைக்கு முன் இறந்து போன குரு புத்திரனை, பஞ்சஜனனென்ற ராக்ஷஸனுடைய வயிற்றைக் கிழித்து, அழைத்து வந்து, குருதக்ஷணை யாக ஆசார்யரிடம் சமர்ப்பித்தார். பீஷ்ம மகாராஜ னுடைய புத்திரியும், லக்ஷ்மீதேவி போன்றவளுமாகிய ருக்மிணி தேவியின் ரூபலாவண்யத்தால் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பி விதர்ப்ப தேசத்தில் வந்து கூடிய அரசர்களுடைய சிரசில் பாதங்களை வைத்து மிகுந்த இலாகவத்துடன் தம் முடைய சொத்தாகிய அந்த ருக்மிணியை அபகரித் தார். பின்பு அவளைக் காந்தர்வ விதிப்படி கல்யாணஞ் செய்துகொண்டார். பின்னும் அவர் அங்குக் குத்தப் படாதவைகளான வ்ருஷபங்களை ஜயித்து, நக்னஜித் தின் புத்திரியை விவாகஞ் செய்து கொண்டார். அப்பொழுது ஏற்கனவே அந்த வ்ருஷபங்களை அடக்கமுடியாமல் வெட்கப்பட்டு அப்புறம் சென்ற

அரசர்கள் அந்த ராஜகுமாரியிடம் ஆசைகொண்டு ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் யுத்தத்திற்கு வந்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களை ஆயுதங்களாலேயே கொன்றார். ஆனால் பகவானுக்குக் கொஞ்சமேனும் காயமில்லை. மேலும் அவர் தாம் சுதந்திரரானாலும் ஸ்திரீகளுக்கு வசப்பட்டவர் போல சத்யபாமையின் பிரீதிக்காக பாரிஜாத வ்ருக்ஷத்தைப் பூமிக்குக் கொண்டுவந்தார். அப்பொழுது ஸ்திரீகளின் கிரீடா மிருகம்போன்ற இந்திரன் மிகவும் கோபங்கொண்டு சைனியங்களுடன் பகவானுடன் யுத்தம் செய்தான். மேலும் அவர் ஆகாயம் வரையில் பரவிய சரீரமுள்ள வனும், பூமியின் புத்திரனுமாகிய நரகாசுரனைச் சக்ராயுதத்தால் கொன்றார். பின்பு பூமிதேவியால் ப்ரார்த்திக்கப்பட்டு நரகனுடைய புத்திரனாகிய பகதத் தனுக்கு இராஜ்யத்தைக் கொடுத்து நரகனுடைய அந்தப்புரத்தில் ப்ரவேசித்தார். அவ்விடத்தில் நரகாசுரனால் அநேக தேசங்களிலிருந்து கொண்டுவரப் பட்ட இராஜ கன்னிகைகள் இருந்தார்கள், அவர்கள் அனைவரும், உபத்திரவ மடைந்தவர்களுக்குப் பந்து வாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானைக் கண்டவுடன் எழுந்திருந்து, சந்தோஷம், வெட்கம், ஆசை ஆகிய இவைகளுடன் பார்த்தார்கள். பிறகு அவர்களெல்லோரு க்கும் தனியாக அந்தப்புரங்களை ஏற்படுத்தி, அவை களில் ஒரே சமயத்தில் தம்முடைய மாயையால் அநேக ரூபமெடுத்துக் கொண்டு விதிப்படி அவர்களை விவாகம் செய்துகொண்டார். பின்பு தமது மாயையை விஸ்தரிப்பதற்காக அந்த ஒவ்வொரு ஸ்திரீயினிடத்தி லும் தமக்கு சமமான பத்துப்புத்திரர்களை உண்டு பண்ணினார். மேலும் அவர் தமது பட்டணத்தை முற்றுகை செய்தவர்களான காலயவனன், மாகதன்,

ஸால்வன் ஆகிய இவர்களை முசுகுந்தர் முதலியவர் களை நிமித்தாமாக வைத்துக் கொண்டு தாமே கொன்றார். தம்மைச் சார்ந்தவர்களுக்குக் கீர்த்தியை உண்டு பண்ணினார். சம்பரனையும், துவிதனையும், பாணனையும், முரனையும், பல்வலனையும், தந்தவக்தி ரன் முதலியவர்களையும் கொன்றார். மற்றவர்களைப் ப்ரத்யும்னன் முதலியவர்களைக் கொண்டு கொல்வித் தார். மேலும் பாண்டவர்களுடைய பட்சத்திலும் துரியோதனனுடைய கட்சியிலும் யுத்தத்திற்குச் ஸித்தர்களாக இருப்பவர்களும், சகோதரர்களும், புத்திரர்களுமாகிய அரசர்களெல்லோரையும் நாசஞ் செய்தார். அந்த ஸைன்யத்தால் குருக்ஷேத்ர பூமியானது அசைந்தது. கர்ணன், துச்சாஸனன், சகுனி ஆகிய இவர்களுடைய துராலோசனையால் துரியோத னுடைய ஐசுவர்யமும், ஆயுசும் குறைந்ததுமன்றி அவனுடைய ஸைனியங்களும் நாசமடைந்தன. கடைசியில் துரியோதனுடைய தொடைகளும் முறிக்கப்பட்டன. அவன் பூமியில் விழுந்தான். அப் பொழுது அவனைப் பார்த்தும் சந்தோஷப்பட வில்லை. ஆனாலும், த்ரோணர், பீஷ்மர், அர்ஜுனர், பீமசேனர் ஆகிய இவர்களால் அக்ஷௌஹிணி ஸைன்யங்கள் கொல்லப்பட்டன. அதனால் பூமியின் பாரம் கொஞ்சம் குறைந்தாலும், அளவற்ற யாதவ ஸைன்யமானது , என்னுடைய அம்சர்களான ப்ரத்யும்னர் முதலியவர்களால் காப்பாற்றப்பட்டுச் சத்துருக்களால் ஜயிக்க முடியாததாக இருக்கிறது. அது பூமி பாரமல்லவா? அதை நாசஞ் செய்வதற்கு என்ன உபாயம்? மத்ய பானஞ்செய்து சிவந்த கண்களுடன் மதங்கொண்டு அவர்கள் ஒருவருக்கொரு வர் யுத்தஞ்செய்தாலொழிய அவர்களைக் கொல்ல

உபாயமில்லை. நான் என்னுடைய லோகஞ் சென்றால் யாதவர்களெல்லோரும் சண்டைசெய்து நாசமடைவார்கள் என்று ஆலோசித்து, தருமபுத்திரருக்கு இராஜ்யாபிஷேகஞ் செய்வித்து, வர்ணாசிரம தர்மங்களை அனுஷ்டித்துக் காண்பித்து, சந்தோஷிக்கச் செய்தார். பின்னும் புருவின் வம்சம் தொடர்சியற்று போகாமல் இருப்பதற்காக அபிமன்யுவினால் உத்தரையினிடம் கர்ப்பம் உண்டு பண்ணப்பட்டதல்லவா? அந்தக் கர்ப்பமானது அச்வஸ்த்தாமாவினுடைய அஸ்திரத்தால் எரிக்கப்படும்போது அக்குழந்தையை ஸ்ரீ கிருஷ்ணன் காப்பாற்றினார். மேலும் அவர் தருமபுத்திரருக்கு மூன்று அசுவமேத யாகங்களை நடத்தி வைத்தார். அந்த தருமபுத்திரரும் ஸ்ரீ கிருஷ்ண பகவானை ஆச்ரயித்தவராய்த் தம்முடைய தம்பிகளுடன் பூமியைப் பரிபாலித்தார். ஸகல ஜகத்ருபியாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானும் சிரௌத கர்மங்களையும், ஸ்மார்த்த கர்மங்களையும் அனுஷ்டித்து, துவாரகா நகரத்தில் காமங்களை அனுபவித்தார். ஆனால் ஆத்ம தத்துவத்தை அறிந்தவராகையால் அவைகளில் அபிமானம் வைக்கவில்லை. மேலும், அவர் தம்முடைய புன்சிரிப்பு உள்ள பார்வையாலும், அமிருதம், போன்ற வார்த்தையாலும், குற்றமற்ற சரித்திரத்தாலும், லக்ஷ்மீதேவிக்கு வாசஸ்தலமாகிய சரீரத்தாலும், பூலோகத்தையும், மேலுலகத்தையும் சந்தோஷிக்கச் செய்தார். இரவில் ஸ்திரீகளுக்குச் சந்தோஷத்தை உண்டு பண்ணி அவர்களிடத்தில் க்ஷணநேரம் பிரீதி செய்பவரான ஸ்ரீ கிருஷ்ண பகவான் யாதவர்களை விசேஷமாகச் சந்தோஷப்படுத்தினார். இப்படி ஸ்ரீ கிருஷ்ண பகவான் வெகு வருஷங்கள் க்ருஹஸ்தாச்ரமத்தை அனுஷ்டித்து கர்மங்களை அனுபவித்த பிறகு அவைகளில்

வைராக்கியம் அடைந்தார். கர்மங்கள் யாவும் தெய்வாதீனங்காளாயிருக்கின்றன. அவைகளை அனுபவிக்கும் புருஷனும் அந்தத் தெய்வத்துக்கு வசப்பட்டவனாகவே இருக்கிறான். அப்படியிருக்க, யோகாப்பியாசத்தால் ஈசுவரனை அனுசரித்த எவன்தான் அவைகளில் ஆசைப்படுவான்?

24–28 பிறகு ஒருகால் துவாரகா நகரத்தில் யதுகுமாரர்களும், போஜ குமாரர்களும் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அவ்விடத்தில் வந்த ப்ராஹ்மணர்களுக்கு அவர்கள் கோபத்தை உண்டு பண்ணினார்கள். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய அபிப்பிராயத்தை அறிந்த ப்ராஹ்மணர்கள் அந்தக் குமாரர்களைச் சபித்தார்கள். சில மாதம் சென்ற பின்பு, வ்ருஷ்ணிகளும், போஜர்களும், அந்தகர்களும் ரதங்களின் மீதேறிக் கொண்டு தெய்வத்தால் புத்தி மாறினவர்களாகி, மிகவும் சந்தோஷத்துடன் ப்ரபாஸமென்ற தீர்த்தம் சென்றார்கள். அந்தப் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, பிதிரு தர்ப்பணம், தேவதர்ப்பணம், ரிஷிதர்ப்பணம் ஆகிய இவைகளை முடித்துக் கொண்டு உத்தமமான பசுக்களையும், சுவர்ணத்தையும், வெள்ளியையும், படுக்கைகளையும், வஸ்திரங்களையும், மான் தோல் முதலியவைகளையும், கம்பளங்களையும், குதிரைகளையும், ரத்தினங்களையும், யானைகளையும், கன்னிகைகளையும், ஜீவனத்துக்குப் போதுமான தானியம் விளையக்கூடிய பூமியையும், ப்ராஹ்மணர்களுக்கு கொடுத்தார்கள். மேலும் பசுக்கள், ப்ராஹ்மணர்கள் ஆகிய இவைகளுக்காகவே ஜீவிப்பவர்களும், சூரர்களுமான அவர்கள் மேலான ரசமுள்ள அன்னத்தையும் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்து அவர்களுக்கு நமஸ்காரம் செய்தார்கள்.

அத்தியாயம் 4

விதுரர் மைத்ரேயரைச் சந்தித்தது

1–18. பின்பு அவர்கள் ப்ராஹ்மணர்களிடம் விடைபெற்று மத்யத்தைக் குடித்து, அதனால் மயக்கம் அடைந்து மர்ம ஸ்தானங்களைப் பிளக்கக்கூடிய கெட்ட வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டார்கள். மேலும், மத்யபானஞ் செய்து புத்தி மாறிப்போனதால் சூரியன் அஸ்தமனத்தை அடைந்து பிறகு மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்ந்து கொள்வது போலக் கலகம் செய்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ண பகவான் தம்முடைய மாயையின் காரியமாகிய அந்தக் கலகத்தைப் பார்த்து சரஸ்வது நதியில் ஆசமனஞ் செய்து ஒரு அரசமரத்தின் கீழ் உட்கார்ந்திருந்தார். அதற்கு முன்னமேயே என்னை நோக்கி, ஓ உத்தவ, நீ பத்ரிகாச்ரமம் போ என்று தம்முடைய குலத்தைக் கொல்லவேண்டுமென்று விரும்பியவரும், பக்தர்கள் உடைய உபத்திரவத்தைப் போக்கடிப்பவருமாகிய ஸ்ரீ பகவான் சொல்லியிருந்தார். அப்படியும் நான் அவர் உடைய அபிப்பிராயத்தை அறிந்திருந்தும் அவர் உடைய பாதங்களை விட்டுப் பிரிய மனமில்லாதவனாக ஸ்ரீ கிருஷ்ணன் பின் சென்றேன். பிறகு சரஸ்வதி நதியின் கரையில் ஒருவராய் உட்கார்ந்திருப்பவரும், ப்ரீதியுள்ளவரும்; நாதருமாகிய பகவானைக் கண்டேன், அவர் லக்ஷ்மிக்கு வஸிக்குமிடம்; ஆச்ரயம் அற்றவர்; கறுத்த திருமேனியுள்ளவர் ரஜோகுணம் இல்லாதவர், மிகவும், சாந்தர், அழகான கண்கள் உள்ளவர், நான்கு கைகளுள்ளவர். பீதாம்பரம் தரித்தவர், இடத்தொடையில் வலக்காலை வைத்துக்

கொண்டு சிறிய அஸ்வத்த மரத்தில் சாய்ந்து கொண்டு இருப்பவர், விஷய சுகத்தில் ஆசையில்லாதவர், ஆனந்தத்தால் நிறைந்தவர். அப்பொழுது வ்யாஸ மகா முனிக்கு மித்திரரும், கிருதகிருத்யருமாகிய மைத்ரேயர் தெய்வச் செயலால் அவ்விடம் வந்தார். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ண பகவான் பக்தராகிய மைத்ரேயர், முன்பாகப் ப்ரியம், சிரிப்பு ஆகிய இவைகளுள்ள பார்வையால் சிரமத்தை நிவர்த்தித்துக்கொண்டு என்னை நோக்கி, ஓ உத்தம உம்முடைய மனத்தில் இருக்கும் எண்ணமென்னதென்று எனக்குத் தெரியும், முன்ஜன்மத்தில் நீர் ப்ரஜாபதிகளான வஸுக்களுடைய யாகத்தில் என்னைப் பூஜித்தீர். ஆதலால் என்னுடைய ஸ்தானத்தை யடைய வேண்டுமென்று நீர் நினைத்தது மற்றவர்களுக்குத் துர்லபமேயாகும், ஓ சாதுவே! மனுஷ்ய லோகத்தை விட்டு நான் வைகுண்டம் செல்லும் சமயத்தில் மிகுந்த பக்தியுடன் என்னை நீர் தரிசித்து என்னுடைய அனுக்கிரகம் பெற்றபடியால் இதுவே உமக்குக் கடைசியான ஜன்மம். முந்திய பாத்மகல்பத்தில் என்னுடைய கொப்பூழில் தோன்றிய, தாமரஸ புஷ்பத்திலிருந்து ப்ரஹ்மதேவருக்கு என் மகிமையைக் காண்பிக்கும் ஞானத்தை உபதேசித்தேன். அதனை வித்வான்கள், பாகவத ஞானமென்றார்கள். அதனை உமக்கு உபதேசிக்கிறேனி என்றார். இப்படிப் பரமபுருஷன் மிகுந்த ப்ரீதியுடன் சொல்லி ஒவ்வொரு க்ஷணத்திலும் என்னை அனுக்கிரகிக்கும் போது, எனக்கு அவரிடத்தில் பக்திமேலிட்டு அதனால் மயிர்கூச்சலுண்டாயிற்று. துக்கத்தால் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு கத்கத ஸ்வரத்துடன் கை கூப்பிப் பகவானை நோக்கி ஓ ஈச உம்முடைய பாதார விந்தங்களை ஆச்ரயித்தவர்களுக்கு நான்கு

புருஷார்த்தங்களில் எதுதான் கிடைக்காது? ஆனாலும் எனக்குத் தருமம் முதலியவைகளில் ஆசை இல்லை. உம்முடைய பாதங்களைச் ஸேவிப்பதிலேயே விருப்பம் உள்ளவனாக இருக்கிறேன். கர்மங்களுடைய சம்பந்தம் அற்றவராகிய நீர் கர்மங்களை அனுஷ்டிப்பது, ஜன்மம் அற்றவரானாலும் பூமியில் அவதரிப்பது, காலரூபியாகிய நீர் சத்துருக்களிடம் பயந்து ஓடுவது, சமுத்திர மத்யத்திலுள்ள துவாரகா நகரத்தில் ஒளிந்து வஸிப்பது. ஆத்மாவினால் சந்தோஷப்படுகிறவரானாலும் அநேக ஸ்திரீகளைக் கல்யாணம் செய்துகொண்டு கிருஹஸ்தாசிரமத்தை அடைந்திருப்பது, ஆகிய இவைகளைக் கண்டு வித்வான்களுடைய புத்தியும் மோஹத்தை அடைகிறது. மேலும் ஓ தேவ! தடையற்றதும், பூர்ணமும், சம்சயமற்றதுமான ஆத்ம ஞானமுள்ளவராகிய நீர் ராஜ காரியங்களைப்பற்றி ஆலோசிக்க வேண்டிய ஸமயத்தில் வெகு ஜாக்கிரதை யுள்ளவராகிய என்னை வரவழைத்து ஒன்றுமறியாதவர்போல் ராஜ்யத்தில் என்னுடைய அபிமதத்தைக் கேட்கிற வழக்கமல்லவா? அதனை நினைக்கும்போது என் மனம் மோஹத்தை அடைகிறது. ஓ ஸ்வாமியே! ஆத்மாவின் உண்மையைத் தெரிவிக்கக்கூடியதும், மேலானதுமான எந்த ஞானத்தைப் பூர்ணமாக நீர் ப்ரஹ்மதேவருக்கு உபதேசித்தீரோ, அது என்னால் தெரிந்துகொள்ளக் கூடியதானால் அதை உபதேசியும். அதனால் சம்சார துக்கத்தைப் போக்கிக் கொள்ளுவேன் என்று ப்ரார்த்தித்தேன்.

19–22. பிறகு தாமரை மலர்போன்ற கண்களுள்ளவரும் குருவுமாகிய ஸ்ரீ பகவான் என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துக்கொண்டு தம்முடைய

உத்தமகதியை எனக்கு உபதேசித்தார். இம்மாதிரி பகவானுடைய பாதங்களாகிய தீர்த்தத்தை ஆராதித்து ஆத்மஞானத்தை அடைந்தேன். பின்பு அவருடைய பாதங்களில் நமஸ்கரித்து அவரைப் ப்ரதக்ஷிணஞ் செய்து அவருடைய விரஹத்தைச் ஸஹிக்காமல் மனவருத்ததுடன் இவ்விடம் வந்தேன். அவரைத் தரிஸித்ததால் உண்டான சந்தோஷமுள்ளவனும், அவரை விட்டுப் பிரிந்ததால் உண்டான துக்கமுள்ளவனுமாகிய நான் அவருக்கு மிகவும் இஷ்டமான பதரிகாசிரமத்தை உத்தேசித்துப் போகிறேன். அவ்விடத்தில் நர நாராயணரென்று திவ்ய நாமதேயங்களுடன் பகவான் முனி வேஷம் பூண்டு பிறருக்கு இம்சை இல்லாமலும், மற்றவர்களால் அனுஷ்டிக்க முடியாததுமான தபஸை வெகு காலமாகச் செய்து வருகிறார் என்று சொன்னார்.

23–25. அதைக் கேட்டு வித்வானாகிய விதுரர் சகிக்க முடியாத பந்துக்களின் நாசத்தை. உத்தவர் முதமாகத் தெரிந்துகொண்டு, அந்தத் துக்கத்தை விவேகத்தால் அடக்கிக் கொண்டார். அப்போது விதுரர், கிருஷ்ணை பக்தர்களுக்குள் முக்கியரும், பாகவதர்களுக்கு உத்தமரும். பதரிகாசிரமம் செல்லுபவருமான உத்தவரை நோக்கி, ஓ உத்தவ! யோகீசுவராகிய ஈசுவரன் ஆத்மாவின் உண்மையை காண்பிக்கும் எந்த மேலான ஞானத்தை உமக்கு உபதேசித்தாரோ அதனை நீர் எனக்கு உபதேசிக்கவேண்டும். ஏன் என்றால், விஷ்ணு பக்தர்கள் பக்தர்களைக் காப்பாற்றுவதற்காக உலகத்தில் சஞ்சரிக்கிறார்களே யொழிய, அவர்களுக்குச் சொந்தமான காரியம் வேறு ஒன்றும் இல்லை என்று ப்ரியமாகக் கேட்டுக்கொண்டார்.

26–27. அதனைக் கேட்டு உத்தவர் விதுரரை நோக்கி ஓ விதுரா! பகவான் பூலோகத்தை விட்டு வைகுண்டம் செல்லும் காலத்தில் உமக்கு உபதேசம் செய்வதற்காக மைத்ரேய மகாமுனிக்கு ஆக்ஞாபனம் செய்திருக்கிறார். ஆனதால் அவரை ஆத்மஞானத் திற்காக நீர் உபாசிக்கவேண்டும் என்று சொல்லி அன்று ராத்ரி யமுனா நதியின் மணல் திட்டில் ஸகல ஜகத் ஸ்வரூபியான பகவானுடைய கதைகளை விதுரருக்குச் சொல்லிக்கொண்டு அந்த அமிருதத்தில் ஸ்நானஞ் செய்து, தாபமில்லாதவராக அன்றிரவை ஒரு க்ஷணம் போல கழித்து மறுநாள் பதரிகாசிரமஞ் சென்றார் என்று சுகர் சொன்னார்.

28. அதனைக் கேட்டு பரீட்சித்து மகாராஜன் சுகரை நோக்கி, ஓ ப்ராஹ்மண! அதிரதர்களும், அவர்களுடைய சேனாபதிகளுமாகிய வ்ருஷ்ணிகள், போஜர்கள் ஆகிய இவர்கள் நாசமடைந்த பிறகு, ப்ரஹ்மா, விஷ்ணு, சிவபெருமான் ஆகிய இவர்களுக்கு மேலானவராகிய பகவான் தம்முடைய சரீரத்தை விட்டுவிட்டாரல்லவா? அப்பொழுது உத்தவர் மாத்திரம் எப்படியிருந்தார்? என்று கேட்டார்.

29–32. அதனைக் கேட்டு சுகர், அரசனை நோக்கி, ஓ மகாராஜ வீணாகாத சங்கற்பமுள்ள பகவான் மிகவும் விருத்தி யடைந்திருந்த தம்முடைய குலத்தைப் ப்ராஹ்மண சாபத்தை நிமித்தமாகவுடைய தம்முடைய சக்தியைக் கொண்டு நாசஞ்செய்து தம்முடைய தேகத்தைவிட்டுவிட விரும்பியபொழுது, நான் இவ்வுலகத்தை விட்டு மேலுலகஞ் சென்றால் எனக்கு ஸ்வாதீனமான ஞானத்தை அடைவதற்கு

இந்திரியங்களை ஜயித்தவர்களுக்குள் உத்தமராக இருக்கும் உத்தவரே தகுதியானவர், மேலும், என் இடத்திலிருக்கும் குணங்கள்யாவும் கொஞ்சமேனும் குறைவின்றி இவரிடத்தில் இருக்கின்றன. இவர் விஷயங்களால் கலக்க முடியாதவர். ஆதலால் இவர் ஆத்ம ஞானத்தை ஜனங்களுக்கு உபதேசித்துக் கொண்டு இருக்கட்டும் என்று யோசித்து மூவுலகத் திற்கும் குருவாயும் வேதங்களுக்குக் காரணராயும் இருக்கும் அந்த பகவான் இவரைப் பூமியில் வஸிக்கும் படி ஆக்ஞாபித்தார் உத்தவரும் அந்த உத்தர்வின்படி பத்ரிகாசிரமத்தில் பகவானைச் ஸமாதியில் பூஜித்து வந்தார்.

32–36. ஓ குரு சிரேஷ்ட விதுரரும், பரமாத்மா வாகிய கிருஷ்ணன் லோகானுக்ருஹார்த்தமாய்ப் பூமியில் அவதரித்து நடத்திய உத்தமமான சரிதங்களை உத்தவர் சொல்லக்கேட்டு, ஞானிகளுக்குத் தைரியத்தை விருத்தி செய்யக்கூடியதும் மற்றவர்களால் செய்ய முடியாததுமான பகவானால் செய்யப்பட்ட சரீர தியாகத்தையும் தெரிந்துகொண்டு (பகவான் விதுரருக்கு மைத்ரேயரை ஞானோபதேசம் செய்யும்படி ஆக் ஞாபனம் செய்தார் என்றதை) உத்தவருடைய வார்த்தையால், தம்முடைய ஞாபகம் அவருக்கு இருந்ததையும்; நன்றாகத் தெரிந்துகொண்டது இல்லாமல் பாகவதராகிய உத்தவர் பதரிகாசிரமம் சென்ற பிறகு ஸ்ரீ கிருஷ்ண பகவானையே தியானஞ் செய்து அழுதார். பிறகு பாகவதர்களுக்குள் சிறந்த வராகிய விதுரர் யமுனா நதியிலிருந்து மைத்ரேயர் வஸிக்கும் இடமாகிய கங்கா தீரத்திற்குச் சில தினங்களில் சென்றார்.

அத்தியாயம்–5

மைத்ரேயருக்கும் விதுரருக்கும் ஸம்வாதம்

1–16 ஓ மகாராஜ! இப்படி குருக்களில் சிறந்த வராகிய விதுரர், கங்கையின் கரையில் உட்கார்ந்து இருப்பவரும், அளவற்ற ஞானமுள்ளவரும், பகவத் தியானத்தால் சுத்தரும், நல்ல ஸ்வபாவமுள்ளவராக இருப்பதாகிய குணத்தால் திருப்தியடைந்தவருமான மைத்திரேயரைக் கண்டு, அவருடைய சமீபஞ் சென்று, ஓ மகரிஷியே! ஜனங்கள் சுகத்தை அடைய வேண்டியதற்காகக் கர்மங்களைச் செய்கிறார்கள். ஆனால் அவைகளால் சுகமாவது, துக்க, நாசமாவது ஏற்படுகிறதில்லை. அவைகளால் துக்கமே நேரிடுகிறது. ஆதலால் சம்சாரத்தில் எதனைச் செய்வது யுக்தமோ அதனைச் சொல்ல வேண்டும். பூர்வ ஜன்மத்திய கர்ம வசத்தால் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் பக்தி செய்யாதவனும், அதர்ம ஸ்வபாவமுள்ளவனும், துக்கத்தை அடைந்தவனுமாகிய ஜனத்தை அனுக்கிர கிப்பதற்காகவே திவ்ய மங்களங்களான விஷ்ணுவின் சரீரங்கள் இவ்வுலகத்தில் சஞ்சரிக்கின்றன. ஓ சாதுக்களில் சிறந்தவரே! எந்த உபாயத்தால் பகவானை ஆராதித்தால் இருதயம் சுத்தமாகும்? எதில் பகவான் வாசஞ் செய்து அனாதியாகிய அபரோக்ஷ ஞானத்தை கொடுப்பார்? அந்த சுக ரூபமான மார்க்கத்தை உபதேசிக்க வேண்டும். முக்குண சரூபமாகிய மாயைக்கு அதிபதியும்; படைப்பது முதலியவைகளுக்கு அதிபதி யும், சுதந்திரருமாகிய பகவான் பூமியில் அவதரித்து எந்தக் காரியங்களைச் செய்தார்? ஒரு விஷயத்திலும் ஆசை அற்றவரான அந்தப் ப்ரபு இந்த உலகத்தை முன் காலத்தில் எப்படி ஸ்ருஷ்டித்தார்? மறுபடியும்

தம்மால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஜகத்திற்கு ஜீவனத்தைக் கற்பித்து எப்படிக் காப்பாற்றுகிறார்? மறுபடியும் அந்தப் பரமாத்மாவே வியாபாரம் அற்றவராக இந்த ஜகத்து முழுவதையும் தம்முடைய இருதயாகாசத்தில் அடக்கிக் கொண்டு யோக மாயையிடம் எப்படிச் சயனஞ் செய்தார்? யோகிகளுக்கு அதிபதியும், ப்ரபஞ்சத்தின் உள் ப்ரவேசித்தவருமாகிய அந்தப் பகவான் தாம் ஒருவரானாலும் ப்ரஹ்மா முதலிய அநேக உருவங்களை எப்படித் தரிக்கின்றார்? மேலும் அவர் மத்ஸ்யம், கூர்மம் முதலிய அவதாரங்களைச் செய்து ப்ராஹ்மணர்களுக்கும், பசுக்களுக்கும், தேவர் களுக்கும் அனுகூலமான காரியங்களைச் செய்கிறார். புண்ய ஸ்லோகர்களுக்குள் ச்ரேஷ்டராகிய அந்தப் பகவானுடைய சரிதங்களைக் கேட்டு என்னுடைய மனம் திருப்தி யடையவில்லை. ஸகல லோகத்திற்கும் அதிபதியாகிய புருஷன் எந்த எந்தத் தத்துவங்களைக் கொண்டு லோக பாலர்களையும்,லோகங்களையும், லோகா லோக பர்வதங்களையும் கற்பித்தார்? மேலும் ஸகல ப்ராணிகள், அதன் கூட்டம் ஆகிய இவை களுடைய பேதமானது அவரவர்களுடைய கர்மத் திற்குத் தக்கபடி எற்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது? ஓ ப்ராஹ்மணச்ரேஷ்ட! தாமாக உண்டானவரும், லோகங்களைச் ஸ்ருஷ்டித்தவருமான ஸ்ரீமந் நாராயணன் ப்ரஜைகளுடைய ஸ்வபாவத்தையும், கர்மாவையும், பெயரையும் எப்படி வெவ்வேறாகச் செய்தார்? அவற்றை எனக்குச் சொல்லும். ஓ பகவன்! ப்ராஹ்மணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள் (பர) சூத்ரர்கள் (அபர) ஆகிய இவர்களால் அனுஷ்டிக்க வேண்டிய வ்ரதங்களை வ்யாஸ மகர்ஷியின் முகமாக அடிக்கடி கேட்டிருக்கின்றேன். அவைகள் அற்ப

பலத்தைக் கொடுக்கக் கூடியவைகள். ஆதலால் அவை களைக் கேட்கப் போதுமென்ற திருப்தி உண்டாயிற்று. ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய கதையைக் கேட்பதில் அப்படிப்பட்ட திருப்தி உண்டாகிறதில்லை. ஏனெனில், அந்தக் கதாமிருதமானது புருஷனுடைய காதுவழியாக உட்சென்று சம்சார துக்கத்தைக் கொடுக்கும் அபிமானத்தைப் வீடு முதலானவைகளில் என்னுடைய தென்பதை) போக்கடிக்கிறது. ஆகையால் சாதுக்களின் கூட்டத்தில் நாரதர் முதலிய விவேகிகளால் கொண்டாடப்பட்ட ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய கதையிலிருந்து எவன்தான் திருப்தியடைவான்? பகவத் குணங்களைச் சொல்ல வேண்டுமென்ற விருப்பமுள்ள வரும், உமக்கு மித்திரருமான வ்யாஸ மகர்ஷியானவர் எனக்குப் பாரதக் கதையைச் சொன்னார். அதில் கிராம்ய சுகங்கள் வருணிக்கப்பட்டிருந்தாலும் அவை களைத் துச்சமென்று சிந்தித்து பகவானுடைய கதையிலேயே மனம் பதிந்திருக்குமானால் விஷயங் களில் வைராக்கியமுண்டாகும். பகவானுடைய கதையை நினைப்பதனால் சுகமடைந்தவனுக்கு ஸகல துக்கங்களும் நீங்கிவிடுகின்றன. மேலும், எவர்கள் பாகவதத்தின் கருத்தையறியாதவர்களோ அவர்கள் துக்கிக்கத் தகுந்தவர்கள். வீணான வார்த்தை சிந்தை இவைகளுள்ள அவர்களுடைய ஆயுளைத் தேவனாகிய காலமானது குறைத்து விடுகிறது. ஆதலால் இவர்களைப் பற்றித் துக்கிக்கிறேன். ஓ மைத்திரேய! இந்த லோகத்துக்கு க்ஷேமத்தை யுண்டு பண்ணுகிற வரும், சம்சார துக்கமுள்ளவர்களுக்குப் பந்துவுமாகிய ஸ்ரீ மகா விஷ்ணுவினுடைய சாரமான கதையைப் புஷ்பங்களிலிருந்து வண்டானது தேனை எடுப்பது போல நீர் எடுத்துரைக்க வேண்டும். ஜகத்தைச்

ஸ்ருஷ்டிப்பதற்கும், அவைகளைப் பரிபாலிப்பதற்கும், நாசஞ் செய்வதற்கும் எவர் சத்வம் முதலிய குணங்களை அடைந்தாரோ, அவரே பின்பு பூமியில் அவதரித்துப் புருஷர்களால் செய்ய முடியாத எந்த எந்தக் காரியங்களைச் செய்தாரோ அவைகளைச் சொல்லும் என்று கேட்டார்.

17–50 இப்படி விதுரர் மனிதர்களுடைய க்ஷேமத் திற்காகக் கேட்க, அதனைக் கேட்டு, குஷாரவருடைய புத்திரராகிய மைத்ரேய மஹர்ஷி விதுரரை நோக்கி, அவரைக் கொண்டாடி, "ஓ சாதுவே! நீர் நன்றாகக் கேட்டீர். இதனால் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் மனதைச் செலுத்தியவரான உமக்குக் கீர்த்தி விருத்தியடையும். ஜனங்கள் உம்மால் அனுக்கிரகிக்கப் பட்டார்கள். ஓ விதுர! நீர் ஸ்ரீ மகா விஷ்ணுவிடத்தில் ஏகாந்த பக்திசெய்து, அவரை சுவாதீனப்படுத்திக் கொண்டிருக்கிறீர்; மேலும் நீர் வ்யாஸ மகர்ஷியின் புத்திரரானதால் "பகவத் கதையைச் சொல்ல வேண்டும்" என்று நீர் ப்ரச்னம் செய்வது ஆச்சரியம் அல்ல. பகவத் பக்தியில்லாதவர்களைச் சிட்சிப் பவராகிய யமன், ஆணிமாண்டவ்யருடைய சாபத்தால் வ்யாஸருடைய ப்ராதாவாகிய விசித்திரவீரியனுடைய களத்திரம் போன்ற தாசியினிடம் வ்யாஸ மகர்ஷிக்குப் புத்திரனாகப் பிறந்தார். அவர் நீர் தான். மேலும் நீர் ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கும், பாகவதர்களுக்கும் ப்ரியர். அதனால்தான் பகவான் பரலோகஞ் செல்லும் சமயத்தில் உம்முடைய ஞாபகம் வைத்துக்கொண்டு உமக்கு ஞானோபதேசஞ் செய்யும்படி எனக்கு ஆக்ஞாபனஞ் செய்தார். ஆதலால் யோக மாயையின் ஆச்சர்ய சக்தியால் கற்பிக்கப்பட்டவைகளும்,

ஜகத்தின் உற்பத்தி, பரிபாலனம் ஆகிய இவைகளையே ப்ரயோசனமாக வுடையவகைளுமான பகவானுடைய லீலைகளைக் க்ரமமாய் வருணிக்கிறேன். ஸ்ருஷ்டி காலத்தில் பலவகையாகத் தோன்றுகிறவரும், எல்லாப் ப்ராணிகளின் ஸ்வரூபமாக விருப்பவரும், எங்கும் இருப்பவருமாகிய பகவானுக்குத் தாமொருவராக இருக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாகும் சமயமான ஸ்ருஷ்டிக்கு முந்திய காலத்தில் அவர் ஒருவரே இருந்தார். அந்தப் பரமாத்மாதான் பார்க்கிற வராய் (திருஷ்டாவாக) இருந்து கொண்டு, பார்க்கப் படும் வஸ்துவை (திருச்யத்தை) பார்க்கவில்லை. ஏன் என்றால் அவர் தாம் ஒருவரேயாக அப்பொழுது ப்ரகாசித்துக் கொண்டிருந்தார். மாயை முதலிய சக்திகள் அடங்கியிருந்ததால் தம்மை இல்லாதவர் போல் நினைத்தார். (பார்க்கப்படும் வஸ்து இல்லாவிடில் பார்க்கிறவனென்ற வியவகாரம் இல்லாததனால் என்பது கருத்து). ஆனால் அவர் (திருக்) சக்தியுள்ளவர். காரிய காரண ஸ்வரூபமான அந்த ஸத்தாகிய திருஷ்டாவினு டைய சக்தியே மாயை என்று சொல்லப்படுகிறது. ஓ மகா பாக்கியமுள்ளவரே! ப்ரபுவாகிய பகவான் அந்த மாயையைக் கொண்டே உலகத்தைப் படைத்தார். சித்சக்தியுள்ள பரமாத்மாவானவர் காலத்தின் சக்தியால் கலங்கின குணங்களுள்ள மாயையினிடத்தில் தம்முடைய அம்சமாயிருக்கும் புருஷனைக் கொண்டு சிதாபாஸமாகிய வீர்யத்தை வைத்தார். காலத்தால் தூண்டப்பட்ட அந்த மாயையினிடமிருந்து அஞ் ஞானத்தைப் போக்கக் கூடிய விஞ்ஞான ரூபமாகிய மகத்தத்துவமானது தன்னுடைய தேகத்தில் அடங்கி இருக்கும் ஜகத்தை வெளிப்படுத்திக் கொண்டு உண்டாயிற்று. அம்சம், சிதாபாஸம், குணங்கள்

காலம் ஆகிய இவைகளுக்கு ஸ்வாதீனமாக அந்த விஞ்ஞானாத்மாவானவர் பகவானுடைய கடாக்ஷத் தால் இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிக்கவேண்டிய நிமித்தம் வேறு உருவத்தை அடைந்தார். அந்த மகத் தத்துவத் திலிருந்து காரியம் காரணம், கர்த்தா ஆகிய இவை களுக்கு ஆசிரயமும், பூதங்கள், இந்திரியங்கள், மனஸ் ஆகிய இவைகளின் உருவமாயுமிருக்கும் அகங்காரம் ஆனது உண்டாயிற்று. அது வைகாரிகம், தைஜஸம், தாமஸம் என்று மூன்று வகையுள்ளது. வைகாரிகம் என்ற அகங்காரம் வேறு உருவத்தை அடைய, அதனிடமிருந்து மனம் உண்டாயிற்று. இந்திரியங் களுக்கு அதிபதிகளும், சப்தம் முதலிய விஷயங்களைப் ப்ரகாசிக்கச் செய்பவர்களுமான காரிய தேவதைகளும் வைகாரிகர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். ஞானேந்திரியங்களும், கர்மேந்திரியங்களும் தைஜஸங் கள் என்று சொல்லப்படுகின்றன. சூட்சும பூதமாகிய சப்தமானது தாமஸ அகங்கார தத்துவத்திலிருந்து உண்டாயிற்று. அதனிடமிருந்து, ஆத்மாவிற்குச் சரீரம் ஆகிய ஆகாசமானது, எல்லாவற்றிற்கும் அதிபதியான பகவானால் பார்க்கப்பட்டு, காலம், ப்ரக்ருதி, சிதா பாஸம் இவைகளுடைய சேர்க்கையால் உண்டாயிற்று. ஆகாசத்திலிருந்து உண்டான ஸ்பர்சமானது வேறு உருவத்தை யடைந்து வாயுவை உண்டுபண்ணிற்று. அந்த வாயுவும் வேறு உருவத்தை அடைந்து ஆகாச சம்பந்தத்தால் விசேஷ உருவ பலத்துடன் ரூபதன்மாத்ரையை உண்டுபண்ணிற்று. அதுவே யோகத்தைப் ப்ரகாசிக்கச் செய்யும் ஜ்யோதிஸ்ஸாகும். அந்த ஜ்யோதிஸ்ஸானது வேறு உருவத்தை அடைந்து வாயுவுடன் பரமேசுவரனால் கடாக்ஷிக்கப்பட்டு, காலம், மாயை, அம்சம் ஆகிய இவைகளுடைய

சேர்க்கையால் ஜலத்தை உண்டு பண்ணிற்று. அந்த ஜலமானது தேஜசுடன் விகாரத்தை அடைந்து பகவானுடைய கடாக்ஷம் பெற்று, காலம், மாயை அம்சம் ஆகிய இவைகளுடைய சம்பந்தத்தால் கந்தத்தைக் குணமாயுடைய பூமியை உண்டு பண்ணிற்று. ஆகாசம் முதலிய பூதங்களுக்குள் எதற்கு எது காரணமோ, எதற்கு எது காரியமோ, அந்தக் காரிய பூதங்களுக்குக் காரண பூதங்களுடைய சேர்க்கையால் மேல்மேலும் அதிகமான குணங்கள் உண்டாகின்றன. காலலிங்கமாகிய விகாரம், மாயா லிங்கமாகிய விட்சேபம், அம்சலிங்கமாகிய சைதன்யம் ஆகிய இவைகளுள்ளவர்களும், மகத்தத்துவம் முதலிய வைகளுக்கு அபிமானிகளாயுமுள்ள இந்தத் தேவர்கள் விஷ்ணுவின் அம்ச பூதர்களேயாம். இந்தத் தேவர்கள் அநேகர்களாகையால் ப்ரம்மாண்டத்தை உண்டு பண்ண அசக்தர்களாக ப்ரபுவாகிய மகாவிஷ்ணுவிடம் வந்து கை கூப்பி, "ஓ தேவ! உம்முடைய பாதாரவிந்தத்தை நமஸ்கரிக்கிறோம். அது சரணம் அடைந்தவர்களுக்குத் தாபத்தை நிவர்த்திக்கும் குடையாக இருக்கிறது. அந்தப் பாதார விந்தத்தின் மூலத்தை ஆசிரயித்து யதிகள் சம்சார துக்கத்தை அடைகிறதில்லை. ஆகையால், ஓ, பகவான் எப்பொழுதும் ஞானப்ரகாசமுள்ள உம்முடைய பாதச் சாயையை ஆச்ரயிருக்கிறோம். ஓ, பகவான்! சுத்த சித்தர்கள், விஷயத்தில் ஆசை இல்லாத தம்முடைய மனத்தில் உம்முடைய முகமாகிய தாமரைப் புஷ்பத்தில் வஸிக்கக்கூடிய வேதங்களாகிய பட்சி களைக் கொண்டு எதனைத் தேடுகிறார்களோ, பாபங் களைப் போக்கடிக்கும் ஜலமுள்ள அநேக நதிகளுள் சிறந்தவளாகிய கங்கையானவள் எதனிடமிருந்து உண்டானாளோ அந்த உம்முடைய பாதாரவிந்தத்தைச் சரணமடைகிறோம்.

தைரிய முள்ளவர்கள் மிக்க ச்ரத்தையுடன் பகவத் குணங்களைக் கேட்டு, அதனால் பக்தியடைந்து, அதனால் தம்முடைய இருதயத்தைச் சுத்தமாகச் செய்து கொண்டு, அதில் எதனைத் தியானஞ் செய்து வைராக்யம், ஞானம் ஆகிய இவைகளை அடைகிறார் களோ, அந்தப் பாதங்களை ஆச்ரயிக்கிறோம். ப்ரபஞ்சத்தைச் ஸ்ருஷ்டிப்பதற்கும், பரிபாலிப்பதற்கும், நாசஞ் செய்வதற்கும் அவதரித்தவரான உம்முடைய பாதாரவிந்தத்தை நாங்களெல்லோரும் சரணமடை கிறோம். அதை நினைத்த மாத்திரத்தில் பக்தர்களுக்கு ஸகல பயமும் நீங்குகிறது. ஓ தேவ! இந்திரியம் முதலிய பலவகையான சாமக்கிரியுள்ள இந்த அற்பமான தேகத்தில் "நான், என்னுடையது" என்ற துரபிமானம் வைத்திருக்கும் புருஷர்களுக்குத் தங்களுடைய தேகத்தில் வஸிப்பவராகிய உம்முடைய பாதாரவிந்தம் வெகு தூரத்திலிருப்பதாக ஆகி விடுகிறது. அதைச் சரணமடைகிறோம். மாயைக்கு அதிபதியான பரம புருஷ! பெரியோர்களால் கானம் பண்ணக்கூடியவரே! எவர்கள் இந்திரியங்களை வெளியிலிருக்கும் விஷயங்களில் செலுத்தி உம்மிடத்தில் மனதைச் செலுத்தாமல் இருக்கிறார் களோ அவர்கள் உம்முடைய லீலைகளைக் கானம் பண்ணிக் கொண்டு ப்ரகாசிக்கும் பக்தர்களையும் பார்க்க மாட்டார்கள்.

ஓ தேவ! உம்முடைய கதாஅமிருதத்தைப் பானம் செய்து, மிகுந்த பக்தியால் சுத்த சித்தர்களாக இருப்பவர்கள் வைராக்கியத்தை அடைந்து, உடனே வைகுண்ட லோகஞ் சேருகிறார்கள். சிலர் பரமாத்மாவினிடத்தில் ஸ்திரமாக மனதைச் செலுத்து வதாகிய உபாயத்தால் மிக்க பலமுள்ள ப்ரக்ருதியை

ஜயித்து உம்மையே அடைகிறார்கள். ஆனால் அது ச்ரமமான மார்க்கம். உம்மைச் ஸேவிப்பதாகிய மார்க்கம் மிகவும் ச்ரமமற்றது. எல்லாவற்றிற்கும் ஆதியாக இருப்பவரே! உலகங்களைச் ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்ற விருப்பத்தால் முக்குணங்களைக் கொண்டு நாங்கள் அனைவரும் உம்மால் உண்டு பண்ணப்பட்டோம். அந்தக் குணங்களின் ஸ்பாவம் ஒன்றுக்கொன்று விரோதமாக இருப்பதால் நாங்கள் ஒன்றுசேராமல் இருக்கிறோம். உம்முடைய விளை யாட்டுக்குச் சாதனமான ப்ரம்மாண்டத்தைப் படைத்து உம்மிடம் சமர்ப்பிக்க எங்களால் முடியவில்லை.

பிறப்பில்லாதவரே! அனுபவிக்க வேண்டிய காலத்தில் போகத்தை எப்படி சமர்ப்பிப்போம்? நாங்கள் அன்னத்தை எப்படிப் புசிப்போம்? இந்த ஜீவர்கள் விக்கின மில்லாதவர்களாக நும்மிருவர் களுக்கும் பாகத்தைக் கொடுத்துக் கொண்டு எப்படித் தாமும் அன்னத்தைப் புசிப்பார்கள்? தேவர்களாகிய எங்களுக்கும் எங்களுடைய காரணத்திற்கும் நீரே காரணம். விகாரமற்றவர், புராண புருஷர். பிறப்பு அற்றவர். காரணமாகிய மாயையினிடத்தில் எல்லா வற்றையும் அறிந்த மகத் தத்துவ ஸ்வரூபமாகிய ரேதஸ்ஸை முதலில் வைத்தீர். ஓ பரமாத்மாவே! மகத்தத்துவம் முதலிய நாங்கள் எவருக்காக உண்டாயிருக்கிறோமோ, அந்தத் தங்களுக்கு எங்களால் செய்யக்கூடிய காரியம் என்ன? உங்களுடைய அனுக்கிரகம் இல்லாதவரையில் ப்ரம்மாண்டத்தைச் ச்ருஷ்டிக்க எங்களால் முடியாது. ஆகையால் உம்முடைய ஞானத்தையும், சக்தியையும் எங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அத்தியாயம்–6

விராட் ஸ்ருஷ்டி

1–29. இப்படி மகத்தத்துவம் முதலிய சக்திகள் ஒன்றோடொன்று சேராமல் உலகத்தைச் ஸ்ருஷ்டிக்கச் சக்தியற்றவைகளாக் இருப்பதைக் காலமென்ற சக்தியைத் தரித்தவரும் அளவற்ற லீலையுள்ள வருமான ஈசுவரன் பார்த்து, இருபத்து மூன்று தத்துவங்களின் கூட்டத்தில் தாம் ஒரே சமயத்தில் அனுப்பிரவேசஞ் செய்தார். க்ரியாசக்தியுடன் அதில் ப்ரவேசித்த பகவான் சிருஷ்டி சக்தியை அவைகளுக்கு ஞாபகப்படுத்திக் கொண்டு தனித்தனியாக இருந்த அவைகளை ஒன்றோடொன்னு சேர்த்தார். பின்பு ஸ்ருஷ்டி சக்தியை அடைந்த அந்த இருபத்து மூன்று தத்துவங்களும் பகவான் உடைய தூண்டுதலால் தங்கள் தங்கள் அம்சங்களைக் கொண்டு விராட் சரீரத்தைப் படைத்தன. இப்படிப் பரமாத்மாவினுடைய அனுப்ரவேசத்தால் அவைகள் உடைய அம்சங்கள் வேறு ரூபத்தை (பரிணாமத்தை) அடைந்தன. சுவர்ணம் போன்ற இந்தப் புருஷன் ஹிரண்மயன்) அண்ட கோசத்தின் நடுவில் ஜலத்தில் ஸகல ஜீவர்களுடன் வஸித்தார்.

தெய்வ சக்தி, க்ரியா சக்தி, ஆத்ம சக்தி இம்மூன்று சக்திகளுள்ளவரும், இருபத்துமூன்று தத்துவங்களால் உண்டுபண்ணப் பட்டவருமாகிய விராட் புருஷனானவர் தம்மை ஒருவகையாகவும், பத்து வகையாகவும், மூன்று வகையாகவும் பிரித்தார். பரமாத் மாவின் முதல் அவதாரமாகிய அவர் ஸகல பிராணிக ளுடைய ஆத்மாவின் அம்சம். அவரிடத்திலேயே

இந்தப் பூதக்கிரமங்கள்யாவும் தோன்றுகின்றன. விராட் புருஷன், ஸாத்யாத்மன் (இந்திரியங்களுடன் கூடியவன்) ஸாதிபூதன் (வியஷ்டி தேகங்களுள்ளவன்) ஸாதிதைவன் (தெய்வங்களுடன் கூடியவன்), என்று மூன்றுவகையாகவும், ப்ராணரூபத்தால் பத்து வகை யாகவும், இருதயத்தால் ஒருவகையாகவும் இருக்கிறார். பகவான் தத்துவங்களுடைய ப்ரார்த்தனையை நினைத்துக்கொண்டு அவைகளுக்குப் பலவகையான வ்ருத்தியைக் கற்பிப்பதற்காக தம் உடைய தேஜஸ்ஸால் விராட்டைப்பற்றி யோசித்தார். இப்படிப் பகவான் யோசித்தபோது, தேவர்களுக்குச் சில ஸ்தானங்கள் உண்டாயின. அவைகளைச் சொல்லுகிறேன். கேளும், அந்த விராட் புருஷனுக்கு முதலில் முகம் உண்டா யிற்று, லோக பாலராகிய அக்னியானவர் தம்முடைய சக்தியாகிய வாக்குடன் அந்த முகத்தில் ப்ரவேசித்தார். அந்த வாக்கினாலே ஜீவன் சப்தங்களை உச்சரிக் கிறான். பிற்கு தாதுவானது உண்டாயிற்று. லோக பாலராகிய வருணன் ஜிஹ்வேந்திரியத்துடன் அதில் ப்ரவேசித்தார். ஜீவன் அந்த இந்திரியத்தாலேதான் ரஸங்களைக் கிரஹிக்கிறான், பிறகு மூக்குகள் உண்டாயின.

அசுவினீ தேவர்கள் தங்களுடைய அம்சமாகிய க்ராணேந்திரயத்துடன் அதனைத் தங்களுடைய ஸ்தானமாக்கிச் கொண்டார்கள். அந்த இந்திரியத் தாலேயே ஜீவன் கந்தத்தைக் கிரஹிக்கிறான். பின்பு கண்கள் உண்டாயின. சூரியன் சட்சுரிந்த்ரியத்துடன் அவைகளில் ப்ரவேசித்தார். அதனால் உருவ ஞானம் உண்டாகிறது. பிறகு அந்த விராட்புருஷனுக்குச் சர்மங்கள் உண்டாயின. அந்த ஸ்தானத்தில் லோகபாலரான வாயுவானவர் தம்முடைய அம்சம் ஆகிய துவக்கிந்திரியத்துடன் ப்ரவேசித்தார். ஜீவன்

அந்த இந்திரியத்தைக் கொண்டே ஸ்பர்சத்தைக் கிரஹிக்கிறான். பின்பு அந்தப் புருஷனுக்குக் காதுகள் உண்டாயின. அவைகளில் திக்குகள் தங்களுடைய அம்சமாகிய சுரோத்திரேந்திரியத்துடன் ப்ரவேசித்தன. அந்த இந்திரியத்தைக் கொண்டே ஜீவன் சப்தத்தைக் கிரஹிக்கிறான். அந்தப் புருஷனுடைய சர்மாவை ஓஷதிகள் தங்களுடைய அம்சமாகிய உரோமங்களுடன் ப்ரவேசித்தன, ஜீவன் அவைகளைக் கொண்டே தினவைத் தெரிந்து கொள்ளுகிறான். பிறகு அந்தப் புருஷனுக்கு ஆண்குறி (மேட்ரம்) உண்டாயிற்று. ப்ரஹ்மதேவர் தம்முடைய அம்சமாகிய ரேதஸ்ஸுடன் அந்த ஸ்தானத்தை அடைந்தார் ஜீவன் அந்த ரேதஸ்ஸைக் கொண்டே ஆனந்தத்தை அடைகிறான். பிறகு அந்த விராட் புருஷனுக்குகுதமானது உண்டா யிற்று. மித்திரனானவர் தம்முடைய அம்சமாகிய பாயுவுடன் அந்த ஸ்தானத்தை அடைந்தார். அந்தப் பாயுவைக் கொண்டே ஜீவன் மலவிசர்ஜனம் முதலியவைகளைச் செய்கிறான். அந்த விராட் புருஷனுக்குக் கைகள் உண்டாயின.ஸ்வர்க்கத்திற்கு அதிபதியான இந்திரன் தம்முடைய அம்சமாகிய வார்த்தையுடன் (கிரய, விக்ரய சக்தி) அவைகளில் ப்ரவேசித்தார். அந்தச் சக்தியைக் கொண்டே ஜீவன் விருத்தியை (ஜீவிகையை) அடைகிறான். பின்னுமந்தப் புருஷனுக்குப் பாதங்கள் உண்டாயின. அவைகளில் மஹாவிஷ்ணுவானவர் தம்முடைய அம்சமாகிய கதி (நடை)யுடன் ப்ரவேசித்தார். அதைக் கொண்டே ஜீவன் போக வேண்டிய இடங்களுக்குச் செல்லுகிறான். அந்தப் புருஷனுக்கு இதயம் உண்டா யிற்று. சந்திரனானவர் தம்முடைய அம்சமாகிய மனசுடன் அந்த இருதயத்தில் ப்ரவேசித்தார். அந்த மனத்தாலேயே

ஜீவன் சங்கல்பம் முதலிய விகாரங்களை அடைகிறான். பின்னும் அவருக்குப் புத்தியுண்டாயிற்று, ப்ருகஸ்பதி பகவான் தம்முடைய அம்சமாகிய ஞானத்துடன் அந்த ஸ்தானத்தை அடைந்தார். அந்தப் போதத்தாலேயே அறியவேண்டிய விஷயங்களை ஜீவன் தெரிந்து கொள்ளுகிறான். இந்த விராட் புருஷனுக்கு அபிமானம் (அகங்காரம்) உண்டாயிற்று. அதனை ருத்திரன் அடைந்தார். அதனால் செய்யவேண்டியவைகளைச் செய்கிறான். அந்த விராட் புருஷனுக்கு ஸத்வம் (சித்தம்) உண்டாயிற்று. அந்த ஸ்தானத்தை ப்ரஹ்மா தம்முடைய அம்சமாகிய சேதனையுடன் அடைந்தார். அந்தச் சேதனையாலேயே இந்த ஜீவன் விஞ்ஞானத்தை அடைகிறான். மேலும் அந்தப் புருஷனுடைய தலையிலிருந்து த்யுலோகமும் பாதங்களிலிருந்து பூலோகமும், நாபியிலிருந்து ஆகாசமும் உண்டாயின. த்யுலோகம் முதலியவைகளில் குணங்களுடைய பரிணாமபூதகர்களான தேவர்கள் முதலியவர்கள் தோன்றுகிறார்கள் பலிஷ்டமான சத்வகுணத்தால் தேவர்கள் த்யுலோகத்தை அடைந்தார்கள். மனிதர்கள் பசு முதலியவைகளுடன் ரஜோகுண ஸம்பந்தத்தால் பூலோகத்தை அடைந்தார்கள், மேற்காட்டிய இரண்டு லோகங்களுக்கும் மத்தியிலுள்ளதும், பகவானுடைய நாபி ரூபமுமான ஆகாசத்தை ருத்திரருடைய பார்ஷத கணங்கள் தமோகுண ஸ்வபாவத்தால் அடைந்தார்கள்.

30–40. மேலும் அந்த விராட் புருஷனுடைய முகத்திலிருந்து வேதமோதும் ப்ராஹ்மண ஜாதியும் உண்டாயின. ஓ குருசிரேஷ்ட! அதனால் ப்ராஹ்மணன் நான்கு வர்ணத்திற்கும், அதிபதியும் குருவுமானான்.

அவருடைய இரு கைகளிலிருந்து பரிபாலன ரூபமாகிய விருத்தியும் க்ஷத்ரிய ஜாதியும் உண்டாயின. க்ஷத்ரியன் அந்த விருத்தியை அனுசரித்தான், அந்த க்ஷத்ரியன் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அம்ச பூதர்களாகிய ப்ராஹ்மணன் முதலியவர்களைத் திருடர்கள் முதலிய வர்களுடைய உபத்திரவங்களிலிருந்து காப்பாற்றுகிறான். ப்ரபுவாகிய அந்த விராட் புருஷனுடைய தொடைகளில் இருந்து பயிர்த்தொழில் முதலிய ஜீவன ஹேதுக்களும், வைசிய ஜாதியும் உண்டாயின. வைசியன் அந்த விருத்தியைக் கைக்கொண்டான். அவருடைய பாதங்களில் இருந்து சிசுரூஷையும், சூத்ர ஜாதியும் உண்டாயின. சூத்ரன் மேலான ஜாதியார்களுக்குச் சுச்ரூஷை செய்வதையே தனது விருத்தியாக வைத்துக் கொண்டான். அந்த சிசுரூஷையால் மஹாவிஷ்ணு சந்தோஷப்படுகிறார். மேற்காட்டியபடி நான்கு ஜாதிகளும் அவைகளின் விருத்திகளுடன் உண்டாகி, ஆத்ம சுத்திக்காக ச்ரத்தையுடன் தங்களுக்குரிய தர்மத்தைக் கொண்டு தங்களுக்குப் பிதாவாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவைப் பூஜித்தார்கள் ஓ விதுரரே, காலம், கர்மம், சுபாவம், ஆகிய சக்திகளுள்ள பகவானுடைய யோகமாயா பலத்தாலுண்டான அந்த விராட் ரூபத்தைப் பூர்ணமாக வருணிக்க எவன்தான் விரும்புவான்? (ஒருவராலும் வருணிக்க முடியாதென்று கருத்து) ஓ விதுரரே, ஆனாலும் பகவன் நாமங்களை தவிர வேறு வார்த்தைகளை உச்சரித்ததால், அசுத்தமாயிருக்கும் என்னுடைய வார்த்தையச் சுத்தப் படுத்துவதற்காக நான் குருவினிடம் தெரிந்துகொண்ட படி என்னுடைய புத்திக்கு எட்டியவரையில் ஸ்ரீ ஹரியின் கீர்த்தியைச் சொல்லுகிறேன். புண்யச் லோகராகிய பகவானுடைய குணங்களைக்

சொல்வதே புருஷர்களுடைய வாக்குக்கு முக்கியமாகிய லாபம் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். வித்வான்களால் சொல்லப்படும் ஸ்ரீ பகவானுடைய கதையைக் கேட்டதே காதுகளின் முக்கிய பலனாகும். பகவானுடைய மஹிமையானது யோகத்தால் பக்குவமாகிய புத்தியுள்ள ப்ரஹ்மதேவரால் பல வர்ஷங்களிலும் அறியமுடியவில்லை. பகவானுடைய மாயையானது மாயாவியாகிய பகவானையும் மோஹிக்கச் செய்யக்கூடியது. ஆச்சரியம். ஏனென்றால் ஸ்ரீமஹா விஷ்ணுவும் தம்முடைய மாயகதியை தாமும் அறிந்தவரல்ல. (அளவிடக் கூடாதென்று கருத்து) எவரைத் தெரிந்து கொள்வதற்காகப் ப்ரவர்த்தித்த வாக்குகளும். மனசும் அகங்காரத்திற்கு அதிஷ்டான தேவதையாகிய ருத்ரரும், புத்திக்கு அதிஷ்டான தேவதையாகிய ப்ரஹ்மாவும் இந்திரியங்களுக்கு அதிஷ்டான தேவதைகளாகிய இந்தத் தேவர்களும், இன்னும் மற்றவர்களும் அதனைத் தெரிந்து கொள்ள முடியாமலே திரும்பினார்களோ அந்தப் பகவானுக்கு நமஸ்காரம்.

அத்தியாயம்–7

விதுரருடைய ப்ரச்னங்கள்

1–7 வ்யாஸ மஹர்ஷியின் புத்திரரும் வித்வானுமாகிய விதுரர் மேற்காட்டியபடி சொல்லி வரும் மைத்ரேயரை நோக்கித் தம்முடைய வார்த்தை யால் அவரைச் சந்தோஷிக்கச் செய்து கொண்டு, "ஓ ப்ராஹ்மணோத்தம! சித்ரூபியும், விகார மற்றவருமாகிய பகவானுக்குக் கர்மங்கள் உண்டென்று சொல்லுவதும், நிர்க்குணராகிய (குணங்களற்றவராகிய) அவருக்குக் குணங்களிலிருக்கின்றன வென்றும், அவைகள் அவருக்கு விளையாட்டிற்காக (லீலை) ஏற்பட்டவை களென்று சொல்லுவதும் எப்படிப் பொருந்தும்? குழந்தைகளுடைய சேஷ்டைகளுக்கு எப்படி விளையாட்டே ப்ரயோசனமோ, அப்படியே பகவான் உடைய சேஷ்டைக்கும் லீலையே பலன் என்று சொல்லுவதும் பொருந்தாது. ஏனென்றால், குழந்தைகள் விளையாட்டுக் கருவிகளுடன் அவற்றில் ப்ரவ்ருத்திப் பதற்குக் காமம் காரணமாகிறது. மற்ற குழந்தைகள் இருப்பதால் அவர்களுடன் சேர்ந்து விளையாட வேண்டுமென்ற இச்சை உண்டாகிறது. பகவான் இயற்கையில் திருப்தியுள்ளவராகையால் அவருக்குக் காமம் உண்டாவதற்கு நியாயமில்லை. மேலும் அவர் ஒரு விஷயத்திலும் ஆசையில்லாதவர்; அத்விதீயர். ஆகையால் அவருக்கு இம்மாதிரியான விருப்பம் உண்டாயிற்று என்று சொல்வது பொருந்தாது. அவ்வித்தையை உபாதியாயுடைய ஜீவனுடைய போகத்திற்காகப் பகவான் ஸ்ருஷ்டி முதலியவைகளைச் செய்கிறார் என்று சொல்லுவதும் நியாய

விரோதமேயாம். எப்படியெனில் , "பகவான் முக்குண ஸ்வரூபியான தம்முடைய மாயையால் இந்த ஜகத்தைச் ஸ்ருஷ்டிக்கிறார்; பின்பு அதனைக் காப்பாற்றுகிறார்" பிறகு அதை மறைத்து விடுகிறார் என்று சொல்லப் படுகிறது. தேசத்தாலும், காலத்தாலும், அவஸ்தையா லும் (நிலைமை), இயற்கையாலும், மற்ற வஸ்துவினா லும் நாசஞ் செய்யப்படாத ஞானமுள்ள ஜீவனுக்கு சம்பந்தம் ஏற்பட்டதென்று சொல்வது யுக்தமல்ல. மேலும் பகவான் ஒருவரே ஸகல சரீரங்களிலும் அந்தர்யாமியாக வஸிக்கிறார். அப்படிக்கிருக்க ஜீவனுக்கு ஆனந்தம் முதலியவைகளின் குறைவாவது, துக்கமாவது கர்மங்களால் நேரிடுகிறது என்று எப்படி சொல்லலாம்? ஓ வித்வானாகிய மகர்ஷியே! அறியாத் தன்மையாகிய துக்கத்தில் என் மனம் சிக்கிக் கொண்டிருக்கிறது. ஓ ப்ரபுவே! என்னுடைய பெரியதாகிய மோஹத்தை நிவர்த்திக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்துக் கொண்டார்.

8–14 மேற்காட்டிய விஷயத்தைத் தெரிந்துகொள்ள விரும்பிய விதுரரால் இம்மாதிரி கேட்கப்பட்ட மைத்ரேயர்; பகவானிடத்தில் சித்தத்தைச் செலுத்திய வராக, தத்துவத்தை அறிந்தவராகையால் ஆச்சரியம் இல்லாதவராய், ஆச்சரியமடைந்தவர்போல் விதுரரை நோக்கி, "ஓ விதுரரே! நித்ய முக்தராகிய பகவானுக்குத் தன்யமும், சம்சார பந்தமும் உண்டென்று சொல்வது யுக்திக்கு விரோதம். அதுவே பகவானுடைய மாயையாகும். எப்படி சொப்பன சாட்சியாயிருக்கும் புருஷன் ...என்னுடைய தலை வெட்டப்பட்டது என்று நினைக்கிறானோ (உண்மையில் தலை வெட்டப்பட வில்லை) அப்படி நினைப்பது பொய்யல்லவா? மேலும், ஜலத்தில் பிரதி பிம்பித்த சந்திரனுக்கு

Released by Maran's Dog, Toronto , Canada

ஜலமாகிய உபாதியால் அசைவது முதலியவை ஏற்படுவதுபோல, அனாத்மாவாகிய தேஹம். முதலிய வைகளுடைய தருமமானது தேஹத்தில் அபிமானம் உள்ள ஜீவனுக்கே ஒழிய ஈசுவரனுக்கு இல்லை. அந்த அனாத்மாவின் குணமானது நிவர்த்தி தருமத்தாலும். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தயையினாலும், பக்தியோகத்தாலும், அந்தந்த ஸ்தானத்துக்குத் தக்கபடி மெள்ள மெள்ள மறைந்து போகும். தூங்கினவனுக்கு எப்படி ஸகல துக்கங்களும் நாசம் அடைகின்றனவோ, அப்படிப்போல் அந்தர்யாமியாகிய பரமாத்மாவினிடத்தில் ஜீவனுடைய இந்திரியங்கள் ஸ்திரமாக எப்பொழுது அடங்கியிருக்குமோ அப்பொழுது எல்லாத் துக்கங்களும் நிவர்த்தியாகும்; பகவானுடைய குணங்களைச் சொல்வதாலும், அவைகளைக் கேட்பதாலும் ஸகல துக்கங்களும் நிவர்த்தியாகின்றன. அவருடைய பாதாரவிந்தத்திலுள்ள துளியின் சேவை யானது மனத்தால் அடையப்படுமானால் துக்கங்கள் நிவர்த்திக்கப்படுமென்பதில் என்ன சந்தேகம்? என்று ப்ரத்யுத்தரஞ் சொன்னார்.

15–20 "ஓ ப்ரபுவே! உம்மால் சொல்லப்பட்ட தகுந்த ப்ரத்யுத்தரமாகிய கத்தியால் என்னுடைய சம்சயம் போக்கடிக்கப்பட்டது: மேலும் என்னுடைய மனமானது ஈசுவரன் ஸ்வதந்திரர் என்ற விஷயத்தை யும், ஜீவன் பரதந்திரன் என்பதையும் நன்றாகத் தெரிந்துகொண்டது. ஓ வித்வானாகிய மஹர்ஷியே! ஸ்ரீ பகவானுடைய சக்தியாகிய மாயையால் ஜீவனுக்கு ஆத்மானந்தம் முதலியவைகள் கிடைக்காமல் போகின்றன என்று உம்மால் நன்றாக நிரூபிக்கப்பட்டது. அந்த மாயை உண்மையானதல்ல. காரணமற்றது. தேஹம்

முதலிய ப்ரபஞ்சத்திற்கு காரணமாயுள்ளது, அது வெளியிலில்லை, (எந்த வஸ்து காரணமற்றதும், சூன்யமுமாயுருக்கிறதோ அதை நீர் நன்றாகச் சொன்னீர் என்பது கருத்து.) லோகத்தில் எவன் தேஹம் முதலியவைகளில் அபிமானம் வைத்து மூடனாயிருக்கிறானோ, எவன் ப்ரக்ருதிக்கு மேற்பட்ட பரமபுருஷனை அடைந்திருக்கிறானோ அவ்விருவர் களும் சுகத்தை அடைகிறார்கள். மத்தியிலிருப்பவர் கள் துக்கத்தை அடைகிறார்கள். (அக்ஞர்களுக்கும் ஞானிகளுக்கும் ஸம்சயமில்லை. அதனால் துக்கமில்லை யென்பது கருத்து.) சத்யம் போலத் தோன்றுகிறதும், அனாத்மாவுமான ப்ரபஞ்சம் உண்மையில்லை என்று நான் நிச்சயித்து, அந்த தோற்றத்தை உம்முடைய பாத ஸேவையாலே போக்கிக் கொள்வேன். பகவத் பக்தர்களான பெரியோர்களுடைய சேவையாலே, கூடஸ்தரும் மதுவைக் கொன்றவருமாகிய பகவான் உடைய பாதங்களில் விசேஷப் ப்ரேமையுண்டாகும். அதனால் சம்சார துக்கம் நீங்கும். தேவர்களுக்கும் தேவராகிய பகவானைச் ஸாதுக்கள் எப்பொழுதும் கானஞ் செய்வார்கள். அப்போர்ப்பட்ட மஹான்களுடைய ஸேவையானது விசேஷ புண்யஞ் செய்தவர்களுக்கும் கிடைக்க அரிதானாலும் எனக்குக் கிடைத்தது

21–41 ப்ரபுவாகிய பகவான் முதலில் மஹத் தத்துவம் முதலியவைகளையும், இந்திரியங்களையும், க்ரமமாக ஸ்ருஷ்டித்து அவைகளின் அம்சங்களைக் கொண்டு விராட் சரீரத்தையும் உண்டு பண்ணி அதனிடம் அனுப்பிரவேசஞ் செய்தார். அந்த விராட் புருஷனே முதலில் உண்டானவர். அவருக்கு ஆயிரம் பாதங்களும், ஆயிரம் தொடைகளும், ஆயிரம்

கைகளுமிருக்கின்றன. இவ்வுலகங்கள் யாவும் அவர் இடத்திலேயே நெருக்கமில்லாமல் வஸிக்கின்றன. பத்துவிதமான ப்ராணனும் (ஐந்து ப்ராணன்களுடன், வாக்கு முதலிய இந்திரியங்கள், ஐந்தும் சேர்ந்து பத்து என்பது கருத்து,) இந்திரியங்கள், அவைகளின் அபிமானி தேவதைகள், விஷயங்கள் ஆகிய மூவகையான ப்ராணன்களும் அந்த விராட் புருஷன் இடத்தில் வஸிக்கின்றன. அவரிடத்திலிருந்தே ப்ராஹ்மணர் முதலிய நான்கு வர்ணங்களும் உண்டா யின" என்று சொன்னீர்களல்லவா? அவரிடத்தில் பலவகையான ஸ்வரூபமுள்ள ப்ரஜைகள் தங்களுடைய பிள்ளைகளுடனும், பேரன்களுடனும், கொள் பேரன்களுடனும், மற்றும் வம்சத்திலுண்டானவர் களுடனும் வஸிக்கிறார்கள் அல்லவா? அவர்களுடைய விபூதிகளைச் சொல்லவேண்டும். மேலும் ப்ரஜாபதி களுக்கு அதிபதியாகிய அந்தப் புருஷன் எந்த எந்தப் ப்ரஜாதிபதிகளைச் ஸ்ருஷ்டித்தார்? ஸர்க்கம், அநுஸர்க்கம், மனுக்கள், மன்வந்தரத்தின் அதிபதிகள், இவர்களுடைய வம்சத்திலுண்டானவர்கள்; வம்சத்தின் சரிதம், கீழுலகங்கள், மேலுலகங்கள், பூலோகம், அவைகளுடைய நிலைமை, அளவு ஆகிய இவை களையும் சொல்ல வேண்டும். திர்யக் (பசு முதலிய வைகள்), மனிதர்கள், தேவர்கள், மலைப்பாம்புகள், பறவைகள் முதலிய கர்ப்பத்திலிருந்தும், அண்டத்தில் இருந்தும், வேர்வையிலிருந்தும், பூமியிலிருந்தும் உண்டாகும் நான்கு வகையான ப்ராணிகளுடைய ஸ்ருஷ்டியின் விவரத்தையும் சொல்லவேண்டும்.

மேலும், ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரர் ஆகிய இவர்களின் உருவத்தை எடுத்துக் கொண்டு ஸ்ருஷ்டி, பரிபாலனம்; சம்ஹாரம் ஆகிய இவைகளைச் செய்து

வரும் ஸ்ரீ பகவானுடைய கம்பீரமான சரிதத்தையும், உருவம், ஆதாரம், ஸ்வபாவம் இவைகளால் ஏற்படும் வர்ணாச்ரம விபாகங்களையும், ரிஷிகளுடைய பிறப்பு, சரிதம் ஆகிய இவைகளையும், வேதங்களின் பிரித்தலையும், யாகங்களினுடைய விஸ்தாரங்களையும், பக்தி யோகம் ஞானம், ஸாங்க்யம் ஆகிய இவைகள் உடைய மார்க்கத்தையும், பகவானால் செய்யப்பட்ட தந்திரத்தையும் பாஷாண்ட மார்க்கத்தின் பேதத்தையும்; ப்ரதிலோமஜாதிகளுடைய ஆசாரத்தையும், குணங்களாலும் கர்மங்களாலும் ஜீவர்களுக்கு ஏற்படும் எல்லா கதிகளையும், தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் இவைகளுக்கு அவிருத்தமான உபாயங்களையும், வார்த்தை (பயிர் முதலிய) தண்டநீதி, வ்ரதம் இவைகளுடைய விதியையும், ச்ராத்த விதியையும், பித்ருக்களுடைய ஸ்ருஷ்டியையும், கிருஹங்கள், அசுவினி முதலிய நக்ஷத்திரங்கள், மற்ற நக்ஷத்திரங்கள், காலசக்கரம் ஆகிய. இவைகளின் ஸ்திதியையும், தானம், தபஸ், யாகங்கள், பூர்த்த தர்மங்கள் ஆகிய இவைகளுடைய பலனையும், சக்தனாகிய புருஷனுக் கேற்பட்ட தர்மத்தையும், ஆபத் தர்மத்தையும், தர்மத்திற்குக் காரணமாகிய பகவான் எந்த மார்க்கத்தால் சந்தோஷப்படுவாரோ, எவர்களிடத்தில் தயை செய்வாரோ அவை யெல்லாவற்றையும் சொல்லவேண்டும்.

ஓ ப்ராஹ்மணோத்தம! தம்மை அனுசரித்திருக்கும் சிஷ்யர்களுக்கும், புத்திரர்களுக்கும், தீனர்களிடத்தில் ப்ரியமுள்ள ஆசார்யர்கள் அவர்களால் கேட்கப்படாத விஷயங்களையும் உபதேசிப்பார்கள். ஓ பகவன்! அந்த மகத்தத்துவம் முதலியவைகளுடைய லயமானது எவ்வளவு வகையுள்ளது? ப்ரளயகாலத்தில் இந்தப்

பரமேசுவரனுடைய சமீபத்தில் எவைகள் இருக்கின்றன? எவைகள் அவர் நித்திரை செய்யும் பொழுது தூங்குகின்றன? மேலும் ஜீவனுடைய உண்மையையும், பரமேசுவரனுடைய ஸ்வரூபத்தையும், உபநிஷத்துக்களால் உண்டாகும் ஞானத்தையும், எந்த அம்சத்தால் ஜீவனுக்கும் பரமாத்மாவிற்கும் ஐக்கியம் ஏற்படுகிறது என்பதையும் சொல்லவேண்டும். ஓ தோஷமற்றவரே! வித்வான்களால் எவைகள் ஞானத்திற்குச் சாதனங்களென்று சொல்லப்படுகின்றனவோ, அவைகளையும் உபதேசிக்கவேண்டும்.

ஞானம், பக்தி, வைராக்யம் ஆகிய இவைகள் குருவின் உபதேசமில்லாமல் எப்படி சித்திக்கும்? ஆதலால் மாயையால் மறைக்கப்பட்ட திவ்யசக்ஷுஸ்ஸுள்ளவனும், அதனால் அந்தகனும் (கண்ணில்லாதவன்), ஸ்ரீ பகவானுடைய கர்மங்களைத் தெரிந்துகொள்ள விரும்பிக் கேட்பவனுமாகிய எனக்கு மித்திரரான நீர் அவைகளைச் சொல்லும். ஓ பாபமற்றவரே, ஜீவனுக்கு அடியதானம் செய்வதால் கிடைக்கும் பலனுடைய பதினாறிலொரு பாகம் ஸகல வேதங்களாலும், யக்ஞங்களாலும், தபசுகளாலும், தானங்களாலும் கிடைக்காது. ஆதலால் என்னை அனுக்கிரகிக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்தார்.

42. ஓ மஹாராஜ! இப்படிக் குருக்களில் சிறந்தவராகிய விதுரர் முனிவர்களுள் சிறந்தவராகிய மைத்ரேயரை நோக்கி, முன்கற்பத்தைப் பற்றிக் கேட்க, பகவானுடைய கதையைச் சொல்வதில் தூண்டப்பட்டபடியால் மிக்க சந்தோஷத்துடன் சிரித்துக் கொண்டு மைத்ரேயர் ப்ரத்யுத்தரஞ் சொல்ல ஆரம்பித்தார்.

அத்தியாயம்–8

ப்ரஹ்மதேவருடைய உற்பத்தி

1–9. "விதுரரே! பகவானையே முக்கிய தெய்வமாய்க் கொண்ட நீர் எந்த வம்சத்தில் பிறந்தீரோ ஜனங்களைக் காப்பாற்றும் அந்த பூருவம்சமானது சாதுக்களால் ஸேவிக்கத் தக்கது. பகவானுடைய சரித்திர பரம்பரையை நீர் அடிக்கடி புதிதாகப் பண்ணுகிறீர். அற்ப ஸுகத்திற்காக்ப் பெரிதாகிய துக்கத்தை அடைந்தவர்களான மனிதர்களுக்கு அந்த சம்சார துக்கம் நீங்குவதற்காகப் பாகவத புராணத்தை ஆரம்பிக்கிறேன். பகவான் அதனைத் தாம் நேராக ரிஷிகளுக்கு உபதேசித்தார்.

அதெப்படியெனில்: முன்னொரு சமயத்தில் சனத் குமாரர் முதலிய மகர்ஷிகள் பாதாளத்திலிருக்கும் தடையற்ற ஞானமுள்ள சங்கர்ஷண பகவானை நோக்கி அவருக்கு மேற்பட்ட ஸ்வரூபத்தை அறிய விரும்பினவர்களாகப் ப்ரச்னம் செய்யவாரம்பித்தார் கள். அந்தப் பகவான் வாஸுதேவனென்ற பெயருள்ள தமக்கு ஆச்ரயமாகிய ஜ்யோதிஸ்ஸைத் தியானஞ் செய்து கொண்டிருப்பவர். அந்தர் முகமாகச் செய்யப் பட்ட தாமரை மலர்போன்ற நேத்திரத்தை ஸனத்குமாரர் முதலியவர்களுடைய க்ஷேமத்திற்காக பகிர்முகமாகச் செய்து அவர்களைப் பார்த்தார். மேலும் பாதாளத்தில் வஸிக்கும் நாக கன்னிகைகள் விசேஷப்ரேமையுடனும், பலவகையான காணிக்கைகள் உடன் தங்களுக்கு நல்ல புருஷன் கிடைக்கவேண்டும் என்ற எண்ணமுள்ளவர்களாய்ச் சங்கர்ஷண பகவான்

கால் வைத்துக்கொண்டிருக்கும் எந்தத் தாமரை புஷ்பத்தைப் பூஜிக்கிறார்களோ, அதனை மேற்சொல்லிய மகர்ஷிகள் ஆகாச கங்கையின் ஜலத்தால் நனைந்த தமது ஜடையின் சமூகங்களால் தொட்டுக்கொண்டும் (நமஸ்கரித்து என்று அர்த்தம்) அநேக கிரீடங்களில் இழைத்திருக்கும் உயர்ந்த இரத்தினங்களுடைய காந்திகளால் ப்ரகாசிக்கும் ஆயிரம் பணங்களுள்ள அந்த சங்கர்ஷண பகவானுடைய சரிதங்களைச் சொல்லிக்கொண்டும். அதிகப்ரேமையால் தடங்கின வாக்குள்ளவர்களாகக் கேட்டார்கள்.

அப்பொழுது அந்த சங்கர்ஷணர் நிவர்த்தி தர்மத்தில் ஆசையுள்ள ஸனத்குமாரருக்கு உபதேசித்தார். அந்த ஸனத் குமாரர் விரதங்களை அனுஷ்டித்தவரான சாங்கியாயனருக்குச் சொன்னார். பரமஹம்சர்களுடைய தர்மத்தில் முக்கியராகிய அந்த சாங்கியாயனர், பகவானுடைய விபூதிகளைச் சொல்ல விரும்பின வராய்த் தம்மிடத்தில் வணக்கத்துடன் வந்த எனது குருவாகிய பராசரருக்கும் ப்ரஹஸ்பதிக்கும் உபதேசித் தார். மிக்க தயையுள்ளவரான புலஸ்தியரால் புராணத்தைச் சொல்லும்படி அனுக்கிரஹிக்கப் பெற்ற அந்தப் பராசர மகர்ஷி எனக்கு உபதேசித்தார். ஓ விதுரரே! ச்ரத்தையுடன் கேட்க விரும்பிய உமக்கு நான் அதைச் சொல்லுகிறேன்.

18–20. இந்த ஜகத்தானது எந்தக் காலத்தில் சமுத்திர ஜலத்தால் மூடப்பட்டிருந்ததோ, அப்பொழுது மறைக்கப்படாத சித்சக்தியுள்ளவரும், ஆதிசேஷனாகிய படுக்கையில படுத்தவரும், தம்முடைய ஸ்வரூபானந்த திலேயே ரமிப்பவரும், கர்மங்களற்றவரும், தாம்

ஒருவராக இருப்பவருமான பகவான் கண்களை மூடிக் கொண்டு யோகநித்திரை செய்தார். (மாயா விலாசத் துடன் விளையாடிவிட்டு) மேலும் அவர் தம்முடைய சரீரத்திற்குள் பூத சூட்சுமங்களை அடக்கிக்கொண்டு காலரூபமாகிய சக்தியைத் தூண்டுகிறவராகக் கட்டையில் மறைந்திருக்கும் அக்கினிபோல் தமக்கு இருப்பிடமாகிய ஜலத்தில் வஸித்தார்.

இப்படி ஆயிரம் சதுர்யுகங்கள் ஜலத்தில் யோகநித்திரை செய்து, முன்னமேயே தம்மை எழுப்பு வதற்காக ஏற்படுத்தப்பட்ட காலசக்தியால் கிரியைகளை அடைந்து, தம்முடைய தேஹத்தில் லோகங்கள் லயித்திருப்பதைக் கண்டார். அப்பொழுது பூதசூட் சுமங்களைப் ப்ரவர்த்திக்கச் செய்யும் ஞானமுள்ள வராகிய அந்தப் பகவானுடைய நாபியிலிருந்து அவர் உடைய சரீரத்திற்குள்ளிருந்தும், மிகவும் சூட்சமமும் ஆகிய பூத சூட்சமமானது கால வசத்தால் வ்ருத்தியடைந்த ரஜோ குணத்தின் சம்பந்தத்தால் உண்டாகப் போகிறதாகி வெளிப்பட்டது. (பூத சூட்சுமங்கள் ரஜோகுண சம்பந்தத்தால் தாமரஸ புஷ்பமாக ஆயிற்று என்பது கருத்து.) கர்மங்களைத் தெரிவிக்கும் காலத்தால் ஸ்ரீபகவானிடமிருந்து உண்டான அந்தப் பத்மகோசமானது சூரியன் போலத் தன்னுடைய காந்தியால் விஸ்தாரமாகிய ஜலத்தைப்ரகாசிக்கச் செய்துகொண்டு வெளிப்பட்டது. ஜீவனுடைய போகத்திற்கு உடயோகமானவைகளை வெளிப்படுத்தும் ஸகல ஜகத் ரூபமுமான அந்தப் பத்மத்தில் (தாமரஸ புஷ்பத்தில்) அந்த விஷ்ணுவே அந்தர்யாமியாகிப் ப்ரவேசித்தார். அந்தத் தாமரஸ புஷ்பத்திலிருந்து வேத ஸ்வரூபியாகிய ப்ரஹ்மதேவர்

உண்டானார். அவரையே ஜனங்கள் சுவயம்பூ என்று சொல்லுகிறார்கள். (முன் கற்பத்தின் முடிவில் ஸ்ரீமந் நாரயணருடன் யோகநித்திரையில் ப்ரஹ்மதேவர் கலந்திருந்தார்;

(பிறகு நாராயணன் விழித்துக் கொண்டபோது அவரிடமிருந்தே பாத்ம கற்பத்தில் பத்மத்தின் வழியாக அந்த ப்ரஹ்மதேவர் வெளியானார் என்பது கருத்து) அவர் அந்தத் தாமரஸ புஷ்பத்தின் நடுவில் இருந்து நான்கு புறத்திலும் பார்த்துக் கொண்டிருக்க, ஒவ்வொரு திக்குகளிலும் ஒவ்வொரு முகமாக அவருக்கு நான்கு முகங்கள் உண்டாயின. ப்ரளய காலத்திய காற்றினால் அசைந்த பெரிதாகிய அலைகளுள்ள ஜலத்திலிருந்து உண்டான தாமரஸ புஷ்பத்தில் இருப்பவராகிய அந்த ஆதிதேவர் அந்தப் புஷ்பத்தையும், லோகங்களின் தத்துவத்தையும், தம்மையும் நன்றாகத் தெரிந்து கொள்ளவில்லை. அப்பொழுது அவர், 'தாமரஸ புஷ்பத்தில் இருக்கும் நான் யார்? இந்த ஒரு புஷ்பம் மாத்திரம் எங்கிருந்து ஜலத்தில் உண்டாயிற்று? இதற்கு ஆதாரம் கீழாக ஏதாவது இருக்கவேண்டும்" என்று யோசித்து, அந்தப் புஷ்பத்தின் தண்டிலுள்ள துவாரத்தின் வழியாக ஜலத்திற்குட் சென்றார் அவ்விடத்தில் அந்தத்தாமரைத் தண்டின் மூலத்தைத் தேடிப்பார்த்தும் அவருக்கு அது தெரியவில்லை. ஓ விதுரரே! தம்முடைய உற்பத்திக்குக் காரணமாயிருப்பதைத் தேடிச் செல்லும் அவர் ஜலத்திற்குள் இருக்கும் இருட்டிற்கு அப்புறம், மூன்று முனைகளுள்ளதும் (நடந்தது, நடக்கிறது, நடக்கப் போவது ஆகிய மூன்று முனைகள்) ப்ராணிகளுடைய ஆயுளைச்

செலவழித்து அவர்களுக்குப் பயத்தை உண்டுபண்ணு கிறதும், பெரியதும், ஸ்ரீ மகாவிஷ்ணுவின் சுதர்சனம் என்ற அஸ்திரமுமான கால சக்கரத்தைக் கண்டார். (வெகு நாளாகத் தேடினார் என்பது கருத்து.)

21–31. பிறகு அவர் தம்முடைய எண்ணம் நிறைவேறாமல் மறுபடியும் தமக்கிருப்பிடமாகிய புஷ்பத்தை அடைந்து, ஸ்வாசங்களை அடக்கி, மனத்தை ஒருவகைப்படுத்தித் தியானஞ் செய்து கொண்டிருந்தார். இப்படி நூறு வருஷங்கள் சென்றன. யோகத்தால் ஞானம் விசேஷமாக வ்ருத்தி யடைந்தது. முந்தித் தேடியும் எவர் காணப்படவில்லையோ, அவர் அவருடைய இருதயத்தில் தாமாகவே ப்ரகாசித்தார். அந்தப் புருஷன் தாமரைத் தண்டுபோல வெண்மை நிறமுள்ளதும். ஆதிசேஷனுடைய நீண்ட உடலாகிய மஞ்சத்தில் சயனித்துக் கொண்டிருந்தார். அந்த ஆதி சேஷன் தம்முடைய அனேக படங்களிலிருந்தும் உத்தம இரத்தினங்களுடைய காந்தியால் ப்ரளய காலத்திய இருட்டை விலக்கி ஜலத்தில் வஸித்து வந்தார்.

மேலும் அந்தப் புருஷன் மரகதமலையின் காந்தியைக் காட்டிலும் அழகுள்ளவராக இருந்தார். சந்த்யா காலத்தில் சிவந்த மேகங்கள் அந்த மலையின் மத்தியிலிருப்பது போல, பீதாம்பரத்தைத் தரித்து கொண்டிருந்தார். அந்த மலையின் ஸ்வர்ண சிகரம் போல அவருடைய கிரீடம் ப்ரகாசித்தது. அந்த மலையிலிருக்கும் மேகங்கள், ஓஷதிகள், புஷ்பங்கள் ஆகிய இவைகள் போல அவருடைய வனமாலை விளங்கிற்று. அதிலிருக்கும் மூங்கில்கள் போல அவருடைய கைகள் ப்ரகாசித்தன. அதிலிருக்கும்

மரங்கள் போல அவருடைய பாதங்கள் விளங்கின. அவர் தமக்குத் தகுதியான பருமன், உயரம் ஆகிய இவைகளுடன் கூடியதும், மூவுலகத்தையும் தனக்குள் அடக்கிக் கொண்டதுமான திவ்ய சரீரமுள்ளவர், பலவகையான திவ்யமான ஆபரணங்களாலும் வஸ்திரங்களாலும் அலங்கரிக்கப்பட்டவர்: மேலும் தங்கள் தங்கள் இஷ்டத்தை அடைவதற்கு வேதத்தில் சொல்லியபடி பூஜிப்பவர்களுக்கு அவர்களுடைய காமத்தைக் கொடுக்கக்கூடிய தம்முடைய பாதமாகிய தாமரை புஷ்பத்தை ப்ரகாசப் படுத்துகிறவர்.

அந்தப் பாதங்களிலிருக்கும் நகங்கள் சந்திரன் போலப் ப்ரகாசிக்கின்றன. அவைகளின் காந்தியானது புஷ்பத்தின் இதழ்போன்ற விரல்களில் பரவுகிறது, அவருடைய முகமானது ஜனங்களுடைய துக்கத்தை நீக்கும் சிரிப்புள்ளது. மிகுந்த காந்தியுள்ள குண்டலங் களால் அழகானது. சிவந்த உதடுகளுள்ளது, அழகான மூக்குள்ளது. மனோகரமாகிய புருவங்களுள்ளது. அப்போர்ப்பட்ட முகத்தால் தம்மைப் பூஜிப்பவர்களைக் கௌரவப்படுத்துகிறவர். கதம்ப புஷ்பத்தின் தாதுக்கள் போல பொன்னிறமுள்ள வஸ்திரத்தாலும், மேகலையா லும் ப்ரகாசிக்கும் இடுப்புள்ளவர். விலை உயர்ந்ததும், ஸ்ரீ வத்ஸத்துடன் கூடிய மார்புக்குத் தகுதியானது மான ஹாரத்தால் ப்ரகாசிப்பவர். மேலும் அவர் சந்தன மரம் போன்றவர். உத்தமமான தோள்வளை களில் இழைக்கப்பட்ட இரத்தினங்களால் ப்ரகாசிக்கும் அவருடைய கைகள் கிளைகள் போலிருந்தன. அந்த மரத்தின் வேர்கள் போல் அவருடைய மூலம் ஒருவராலும் காண முடியாதது. மரமானது சிறந்த ஸர்ப்பங்களின் உடல்களால் சுற்றப்பட்டிருப்பது போல அவர் ஆதிசேஷனால் சுற்றப்பட்டவர்.

பின்னும் அவர் பர்வதம் போல் ப்ரகாசித்தார். தாவர ஜங்கமங்களுக்கு இருப்பிடமாக இருப்பவர். பர்வதம் சிறந்த ஸர்ப்பத்தால் ஆசிரயிக்கப்படுவது போல் ஆதிசேஷனால் ஆச்ரயிக்கப்பட்டவர். பர்வதம் சமுத்திர ஜலத்தில் மறைந்திருப்பது போல ப்ரளய ஜலத்தில் மறைந்தவர், மைனாகம் முதலியவை சுவர்ண சிகரமுள்ளவையாக இருப்பது போல் ஸ்வர்ண கிரீடமுள்ளவர். பர்வதத்தில் இரத்தனங்கள் இருப்பது போலக் கௌஸ்துப ரத்னத்தைத் தரித்தவர், வேதங்களாகிய வண்டுகளால் ப்ரகாசிப்பதும், தம்முடைய கீர்த்தி ரூபமாயுள்ளதுமான வனமாலை யுள்ளவர். சூர்யன், சந்திரன், வாயு, அக்கினி ஆகிய இவர்களாலும் அடையமுடியாதவர், முக்காலத்திலும் ப்ரகாசிப்பவைகளும், நான்கு புறத்திலும் சஞ்சரிப்பவை களும் யுத்தத்திற்குச் சாதனங்களுமான ஸுதர்சனம் முதலியவைகளாலும் அடைய முடியாதவர், இம் மாதிரியான புருஷனை பார்த்து ஹரியென்று தெரிந்து கொண்டார்.)

32–33. இப்போர்ப்பட்ட பகவத் ஸ்வரூபத்தைப் பார்த்தபொழுதே ப்ரஹ்மதேவர் அந்தப் பகவானுடைய நாபியில் தோன்றிய தாமரைப் புஷ்பத்தையும், தம்மையும், ஜலத்தையும், வாயுவையும், ஆகாசத்தையும் கண்டார், இந்த ஐந்தை காட்டிலும் வேறொன்றும் அவருக்குப் புலப்படவில்லை. அவர் ரஜோகுணத்தின் சம்பந்தத்தை அடைந்து, ஜனங்களைச் ஸ்ருஷ்டிக்க விரும்பியவராக, மேற்காட்டிய ஐந்தைக் கொண்டே ஸ்ருஷ்டிகரணங்களைப் பார்த்து, பலவகையான ஜகத்ஸ்ருஷ்டியைப்பற்றி யோசித்து, ஸ்தோத்திரஞ் செய்யத் தகுந்தவரான ஸ்ரீமந் நாராயணனைப் பின்வருமாறு ஸ்தோத்திரஞ் செய்ய ஆரம்பித்தார்.

அத்தியாயம்–9

ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ப்ரஹ்மதேவர் ஸ்தோத்திரஞ் செய்தது

1–26 ஓ பகவன்! வெகுநாளாக உபாசித்ததனால் நான் உம்மை நன்றாகத் தெரிந்து கொண்டேன். உம்முடைய ஸ்வரூபத்தை ஜனங்கள் தெரிந்து கொள்ளாமலிருப்பதே குற்றமாகும். உம்மைத் தவிர வேறு ஒரு வஸ்துவுமில்லை. ஆதலால் அறியக் கூடியவர் நீர் ஒருவரே. உம்மைக் காட்டிலும் வேறு வஸ்து இருப்பதாகத் தோன்றினாலும், அது சுத்த சத்வகுணமுள்ளதன்று. மேலும் மாயையின் குண சம்பந்தத்தால் நீரே பல வகையாகத் தோன்றுகிறீர். ஓ பகவன்! சித்சக்தியின் ஆவிர்ப்பவத்தால் தமோ குணங்கள் நீங்கிய நீர் பக்தர்களை அனுக்கிரகிப் பதற்காக இந்த உருவத்தை அங்கீகரித்திருக்கிறீர். இந்த உருவமானது அனேக அவதாரங்களுக்குக் காரணமாய் உள்ளது. இந்த உருவத்தின் நாபியிற்றோன்றிய தாமரை புஷ்பத்திலிருந்து நான் உண்டானேன். ஓ! பரமாத்மன்! தடையற்ற ப்ரகாசமுள்ளதும், பேதமற்றதும் ஆனந்தத்தைக் காட்டிலும் வேறானதும், பூதங்களுக்கும் இந்திரியங்களுக்கும் காரணமாயிருப் பதுமான பகவத் ரூபமானது இந்த உம்முடைய உருவத்தைக் காட்டிலும் வேறானதென்று நான் நினைக்கவில்லை. அதனால்தான் இந்த ஸ்வரூபத்தை ஆச்ரயித்திருக்கிறேன்.

ஓ, உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்பவரே, உபாஸகர்களான நமக்கு க்ஷேமத்தைச் செய்வதற்காக, நீர், தியானம் பண்ணும்போது அந்த இந்த உருவத்தைக்

காண்பீத்தீர். அப்பேர்ப்பட்ட பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறோம். ஈசுவரன் இல்லை என்று சொல்பவர்களும், நரகத்தை அனுபவிக்கக் கூடியவர் களுமான புருஷர்களால் நீர், ஆதரிக்கப்படுகிறதில்லை. எவர்கள் உங்களுடைய பாதங்களாகிய தாமரை புஷ்பத்தின் வாசனையைக் க்ரஹிக்கிறார்களோ, எவர்கள் உம்முடைய கதைகளைக் கேட்கிறார்களோ, எவர்கள் மிகுந்த பக்தியால் உம்முடைய சரணத்தை ஆச்ரயிக்கிறார்களோ அவர்களுடைய இருதய புண்டரீகத்திலிருந்து நீர் ஒரு பொழுதும் விலகுகிறது இல்லை. (எப்பொழுதும் அவ்விடத்திலேயே வஸிக்கிறீர் என்பது தாத்பரியம்) ஜனங்கள் மோக்ஷத்தைக் கொடுக்கும் உம்முடைய பாதத்தை எதுவரையில் ஆச்ரயிக்கவில்லையோ அதுவரையில் பணம், வீடு, மித்திரர்கள் ஆகிய இவர்களுக்காக பயம், துக்கம், ஆசை, அவமானம், அதிக ஆசை ஆகிய இவைகளும், உபத்திரவத்திற்குக் காரணமாகிய "என்னுடையது" என்ற கெட்ட அபிமானமும் உண்டாகின்றன. எவர்கள் ஸகல அசுபங்களையும் போக்கடிக்கக் கூடிய உம்முடைய கதைகளைக் கேட்பது, நாமங்களை உச்சரிப்பது, முதலியவைகளில் ஆசையில்லாதவர் களாகவும், புத்தி கெட்டவர்களுமாக இருக்கிறார்களோ, அவர்கள் மிகவும் அதமர்கள். மேலும், அவர்கள் லோபத்தால் கெடுக்கப்பட்ட மனது உள்ளவர்களும் தீனர்களுமாகிப் போகத்தினுடைய சொற்ப ஸுகத்திற்காகத் துக்கத்தைக் கொடுக்கக் கூடிய கர்மங்களை அடிக்கடி செய்கிறார்கள். ஓ, பகவான்! பசி, தாகம், வாதம், பித்தம் ஸஹிக்க முடியாத சிலேஷ்மம், சீதம், உஷ்ணம் காற்று சகிக்க முடியாத மழை, மன்மதனாகிய அக்கினி மிகுந்த கோபம்

ஆகிய இவைகளால் ஒருவருக்கொருவர் துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த ஜனங்களைப் பார்த்து என்னுடைய மனம் துக்கிக்கிறது. ஓ ஈச! இந்திரியங்கள் விஷயங்கள் ஆகிய இவைகளாகிய மாயையின் பலமுள்ளதும், ஆத்மாவைக் காட்டிலும் வேறானது மாகிய தேஹம் முதலியவைகளுடைய உண்மையை ஜனங்கள் எப்பொழுது தெரிந்து கொள்ளுகிறார்களோ, அது வரையில் கர்மங்களுடைய பலனுள்ளதும், ப்ரயோசன மற்றதுமான சம்சாரமானது ஒழிவடைகிறது இல்லை. மேலும், ஜனங்களும் அதுவரையில் துக்கக் கூட்டத்தை அடைகிறார்கள்.

ஓ தேவ்! பகலில் பல விஷயங்களில் சென்று கஷ்டப்படும் இந்திரியங்களுள்ளவர்களும், ராத்திரியில் தூங்குகிறவர்களும், பலவகையான மனோரதத்தால் சொப்பனம் நேர்ந்த போது உடனே விழித்துக் கொள்வதால் சொப்பன சுகத்தையும் இழந்தவர்களும், இப்படி எல்லாக் காரியங்களிலும் தெய்வத்தால் தடுக்கப்பட்ட முயற்சியுள்ளவர்களுமான புருஷர்கள் ரிஷிகளானாலும் (விவேகிகளானாலும்) உம்முடைய கதையைக் கேட்பதிலும், நாமங்களை உச்சரிப்பதிலும் ஆசையில்லாதவர்களாக இருப்பார்களேயானால் அவர்கள் சம்சாரத்தை அடைகிறார்கள். ஓ நாத! குரு முகமாகத் தங்களுடைய மார்க்கத்தைச் ச்ரவணம் பண்ணின புருஷர்கள் உம்மிடத்தில் பக்தி செய்வார்கள்.

பக்தியோகத்தால் சுத்தமான அவர்களுடைய ஹ்ருதய கமலத்தில் நீர் வஸிக்கிறீர், ஓ பெரியோர் களால் கானம் பண்ணக்கூடியவரே! உம்முடைய

பக்தர்கள் தங்களுடைய மனத்தால் உம்முடைய உருவத்தைத் தங்களுடைய இஷ்டப்படி (குருமுகமாகத் தெரிந்து கொள்ளலாம்) தியானம் பண்ணுகிறார்கள். அவர்களை அனுக்கிரகிப்பதற்காக நீர் உண்மையான ஸ்வரூபத்தை அவர்களுக்குக் காண்பிக்கிறீர். அத்விதீயரும் பல விதமான ஜனங்களிடத்தில் அந்தர்யாமியாய் அவர்களுக்கு அனுகூலத்தைச் செய் பவருமான நீர் பக்தி செய்யாதவர்களுக்கு அரியதாகிய பூத தயையால் எப்படி சந்தோஷப்படுத்துகிறீரோ, அதுபோல மிகுந்த உபசாரங்களால் பூஜிப்பவர்கள் இடத்திலும், காமனையால் பூஜிக்கும் தேவர்களிடத்தி லும் சந்தோஷப்படுகிறதில்லை. ஆனதால் புருஷர் களால் செய்யப்படும் யாகம் முதலிய அநேக ஸத்கர்மங்களுக்கும், தானத்திற்கும், கடுந்தபஸுக்கும், விரதானுஷ்டானத்திற்கும், பகவானுடைய ப்ரியமே ச்ரேஷ்டமாகிய பலன். பகவானாகிய உம்மிடத்தில் சமர்ப்பிக்கப்படும் தருமமானது நாசமடைகிறதில்லை.

எப்பொழுதும் ஸ்வரூப சைதன்யத்தாலேயே பேத ஞானத்தைப் போக்குகிறவரும், வித்யாசக்தியுள்ள வருமான பரம புருஷனாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். மேலும் ஜகத்தைப் படைப்பது, பரிபாலிப்பது, சம்ஹரிப்பது ஆகிய இவைகளுக்குக் காரணமாகிய மாயையின் விலாசத்துடன் விளையாடு கிறவரும், எல்லாவற்றிற்கும் நியந்தாவுமான உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். எந்தப் பகவானுடைய அவதாரங்கள், குணங்கள், செய்கைகள் ஆகிய இவைகளால் ஏற்படும் திவ்ய நாமங்களை (தேவகீ, நந்தன, தாசரதி, சர்வஞ்ஞ, பக்த வத்ஸல, கம்சாரே, கோவர்த்தனாத்தரண என்பது முதலியவைகள்)

சாகுந்தருணத்தில் எவர்கள் (பகவந்நாமத்தை) உச்சரிக்கிறார்களோ, அவர்களுடைய பல ஜன்மங்களில் சம்பாதிக்கப்பட்ட பாபங்கள் யாவும் அந்த க்ஷணத்திலிலேயே நீங்குகின்றன. மேலும் அவர்கள் ஆவரணமற்றதும் உற்பத்தியற்றதும், சத்யமுமான ப்ரஹ்ம ஸ்வரூபத்தை அடைகிறார்கள். அந்தப் பகவானைச் சரணமடைகிறேன்.

எவர் தம்மையே அதிஷ்டானமாயுடைய ப்ரதானத்தை முக்குண ரூபமாகப் பிரித்து ஜகத்தின் உற்பத்தி, பரிபாலனம், சம்ஹாரம் ஆகிய இவைகளுக்கு முறையே காரணர்களாக இருக்கும் நான்,(ப்ரம்ஹா) பரமசிவன், விஷ்ணு ஆகிய மூன்று பாதங்களுள்ளதும் (வேர்களுள்ளது) மரீசி முதலிய ப்ராஜாபதிகளாகிய அநேக கிளைகளுள்ளதும், ஒன்றாயிருப்பதுமுமான லோக விருக்ஷமாக இருக்கிறாரோ, அந்த உம்மை நமஸ்கரிக் கிறேன். இவ்வுலகத்திலிருக்கும் ஜனங்கள் கெட்ட காரியத்திலேயே ப்ரவர்த்திக்கிறார்கள். மேலும், உம்மால் சொல்லப்பட்டதும் க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியதுமான உம்மைப் பூஜிப்பதாகிய காரியங்களைச் செய்கிறதில்லை. அப்பேர்ப்பட்ட ஜனங்களுடைய ஜீவித ஆசையை (பிழைத்திருக்க வேண்டுமென்ற எண்ணத்தை) எவர் கால ஸ்வரூபியாயிருந்து போக்குகிறாரோ அவருக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். மேலும், இரண்டுபராார்த்தம்வரையில் (ப்ரஹ்மதேவருடைய ஆயுளின் பாதியாகிய ஐம்பது வருஷங்களுக்குப் பராார்த்தமென்ற பெயர்,) அழியாமலிருப்பதும், ஸகல லோகங்களால் நமஸ்கரிக்கப்பட்டதுமான இந்தப் பதத்தை அடைந்த நானும் கால ஸ்வரூபியாகிய உம்மைக் கண்டு பயப்படுகிறேன்.

உம்மைத் தெரிந்து கொள்வதற்காக அநேக வருஷங்கள் தவஞ் செய்தேன். ஆதலால் யாகம் முதலிய சத்கர்மங்களுக்கு அதிபதியாகிய உம்மை நமஸ்கரிக்கிறேன். நீர் விஷய சுகத்தில் ஆசையில்லாத வரானாலும், திர்யக், மனுஷ்யர்கள், தேவர்கள் முதலிய வர்களின் சரீரத்தை உமது இஷ்டப்படி அங்கீகரித்து உம்மால் செய்யப்பட்ட தருமத்தின் மரியாதையைக் காப்பாற்றிக் கொண்டு இருக்கிறீர். அப்பேர்ப்பட்ட புருஷோத்தமராகிய உம்மை நமஸ்கரிக்கிறேன். எவர் ஐந்து பர்வங்களுள்ள அவித்தைக்கு வசப்படாத வரானாலும், ஸகல லோகங்களையும் வயிற்றில் வைத்துக் காப்பாற்றிக் கொண்டு, பயங்கரமான அலைகளுள்ள சமுத்திர ஜலத்திற்குள் ஆதிசேஷனாகிய மெதுவான படுக்கையில் படுத்து, ஜனங்களுக்கு நித்திரா சுகம் இப்பேர்ப்பட்டது என்பதைக் காண்பிக்கிறாரோ, எவருடைய நாபியில் தோன்றிய தாமரஸ புஷ்பத்திலிருந்து மூவுலகத்தையும் ஸ்ருஷ்டிக்கும் நான் எவருடைய அனுக்ரஹத்தால் உண்டானேனோ, எவருடைய வயிற்றில் ஸகல உலகங்களும் வஸிக்கின்றனவோ, எவர் யோக நித்திரையின் முடிவில் தாமரைமலர் போன்ற கண்களைத் திறக்கின்றாரோ, அந்தப் பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன்.

அப்பேர்ப்பட்ட இந்தப் பகவான் ஸகல உலகத் திற்கும் அனுகூலத்தைச் செய்பவர். அந்தர்யாமியா யிருப்பவர். நமஸ்கரித்தவர்களிடத்தில் ப்ரியமுள்ளவர். அந்தப் ப்ரமபுருஷன் எந்த ஞானத்தாலும், ஐசுவரியத் தாலும் இந்த ஜகத்தைச் சுகப்படுத்துகிறாரோ, அப்பேர்ப்பட்ட ஞானத்தை எனக்குக் கொடுக்கட்டும்.

அதனால் நான் இந்த ஜகத்தை முன் கல்பத்திலிருந்ததுபோல் ஸ்ருஷ்டிப்பேன். குணாவதார முள்ளவரும், முகமலர்ச்சியுள்ளவருமான இந்தப் பகவான் தம்முடைய சக்தியாகிய லக்ஷ்மீதேவியுடன் எந்த எந்த சரிதங்களைச் செய்யப்போகிறாரோ, அவைகளெல்லாம் எனக்குத் தோன்றட்டும். அந்தப் பகவானுடைய ஆக்ஞையால் ஜகத்தை (பகவானையே ப்ரபாவமாயுடையது) நான் ஸ்ருஷ்டிக்கும் பொழுதும் என்னுடைய மனமானது அந்தப் பகவானிடத்திலேயே ரமிக்கட்டும். ஸ்ருஷ்யின் வைஷம்யத்தால் ஏற்படும் பாபத்தைப் போக்கடித்துக் கொள்வேன்.

அளவற்ற சக்தியுள்ள அந்தப் பரம புருஷன் ப்ரளய ஜலத்தில் வஸிக்கும்பொழுது அவருடைய கொப்பூழிலிருந்து விஞ்ஞான சக்தியாகிய நான் உண்டானேன். அப்பேர்ப்பட்ட நான் விசித்திரமான இந்தப் ப்ரபஞ்சத்தை விஸ்தாரப்படுத்தும்பொழுது வேதத்தினுடைய அவயமாகிய என்னுடைய வாக்கின் உச்சாரணங்கள் கெட்டுப் போகாமலிருக்கட்டும். மேலும், மிகுந்த கருணையுள்ளவராகிய அந்தப் புராண புருஷன், விசேஷ விசுவாசமுள்ள சிரிப்புடன் மலர்ந்த கண்களுள்ளவராகிய என்னிடம் வந்து ஜகத்தை உண்டுபண்ணுவதற்காகத் தேன்போல இனிமையான வார்த்தையால் என்னுடைய மனக்கவலையைத் தீர்க்க வேண்டும். இப்படி ப்ரஹ்மதேவர் தம்முடைய உற்பத்திக்குக் காரணமாயிருக்கும் பகவானைத் தபஸினாலும் உபாசனையாலும், சித்தத்தை யொரு வன்கட்டுத்துவதாகிய ஸமாதியாலும் தரிசித்து, மனத்திற்கும் வாக்குக்கும் எட்டியவரையில் ஸ்தோத்திரஞ் செய்து ச்ரமப்பட்டவர்போல

மௌனமாக இருந்தார்.

27–44 மதுவென்னும் அசுரனைக் கொன்றவராகிய பகவான் ப்ரளய கால ஜலத்தால் வருத்தப்பட்ட மனமுள்ளவரும் லோகத்தைப் படைக்கும் விஞ்ஞானத் திற்காக முயற்சிப்பவரும், தம்முடைய அம்சமுமான ப்ரஹ்மதேவருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டு, "ஓ வேதகர்ப்பரே! சோம்பலை அடையாதீர். ஸ்ருஷ்யில் முயற்சியும். எதற்காக என்னைப் ப்ரார்த்திக்கிறீரோ, அதனை முன்னமேயே அனுக்கிர கித்திருக்கிறேன். மறுபடியும் நீர் தவம் செய்யும். என் விஷயமாகிய உபாசனையையும் அனுஷ்டியும். அவை களால் நம்முடைய ஹ்ருதயத்தில் ஸகல லோகங்களும் தோன்றும் (இதுவரையில் மறந்திருந்தவைகள்). மேலும் பக்தியுள்ளவராகிய நீர் உம்மிடத்திலும், லோகத்திலும், எங்கும் பரவியிருக்கும் பரப்ரஹ்மமாகிய என்னையும் என்னிடத்திலுள்ள ஜீவர்களையும் பார்ப்பீர். கட்டை களில் அக்கினி யிருப்பதுபோல ஸகல பிராணிகள் இடத்திலும் நானிருப்பதாக ஜனங்கள் எப்பொழுது பார்க்கிறார்களோ, அப்பொழுது அஞ்ஞானம் விலகும். மேலும் எப்பொழுது ஜீவன், தன்னைப் பூதங்கள், இந்திரியங்கள், குணங்கள் ஆகிய இவைகளின் சம்பந்தமற்றவனாகவும், ஸ்வரூபமாகிய என்னுடன் லயித்தவனாகவும் பார்க்கிறானோ, அப்பொழுது மோட்சத்தை அடைகிறான். பலவகையான கர்மங்களைக் கொண்டு அநேக ப்ரஜைகளைச் சிருஷ்டிக்க விரும்பிய உம்முடைய மனம் இவ்விஷயத்தில் ப்ரமையை அடையாது. என்னுடைய அனுகூலம் மேலானது. ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கும்போதும் உம்முடைய மனமானது என்னிட த்திலேயே அதிக ஆசக்தியுள்ளதாக இருக்குமாகையால்

பாபியான ரஜோகுணமானது முந்திய ரிஷியான உம்மிடத்தில் சம்பந்திக்கிறதில்லை. நான் ப்ராணி களால் அறிய முடியாதவனானாலும், பூதங்கள், இந்திரியங்கள், சத்வம் முதலிய குணங்கள், அகங்காரம் ஆகிய இவைகளுடைய சம்பந்தமற்றவனென்று உம்மால் அறியப்பட்டிருக்கிறேன். தாமரைப் புஷ்பத்தின் தண்டு வழியாக அதன் காரணத்தைத் தேடி நீர் சென்றபோது, உமக்கு என் விஷயமாக சந்தேகமிருந்த படியால், (இதற்குக் காரணமொன்றிருக்க வேண்டும். அதுவோ தெரிய வில்லை. ஆனதால் இருக்கிறதா இல்லையாவென்ற சம்சயம்) என்னுடைய ஸ்வரூபத்தை வெளியில் காண்பிக்கவில்லை. ஓ ப்ரஹ்மதேவரே! ஆச்சரியமான என் கதையின் அடையாளமுள்ளதாக என்னை ஸ்தோத்திரம் செய்ததும், தபஸ்செய்ததும் ஆகிய இவைகள் என்னுடைய அனுக்கிரகத்தால் உண்டான வையேயாகும். ஸ்ருஷ்டிக்க விரும்பிய நீர் குணங்களின் ஸம்பந்தமுள்ளவன் போலத் தோன்றும் என்னை அவைகளின் ஸம்பந்தமற்றவனாகவே வருணித்துக் கொண்டு ஸ்தோத்திரம் செய்தபடியால் உம்மிடத்தில் ப்ரியமுள்ளவனாக இருக்கிறேன். இந்த ஸ்தோத்திரத் தால் எந்த மனிதன் ஒவ்வொரு நாளும் என்னைச் சந்தோஷப்படுத்துகிறானோ, அவனிடத்தில் நான் மிக்க ப்ரியத்துடன் அவனுடைய இஷ்டங்களைப் பூர்த்தி செய்வேன். மேலும் குளம், கிணறு ஆகிய இவைகளை வெட்டுவிப்பது முதலிய பூர்த்த தர்மம், தபஸ், யக்ஞம், தானம், யோகம், ஸமாதி ஆகிய இவைகளால் கிடைக்கும் க்ஷேமமாகிய பலன் என்னுடைய ப்ரீதியென்றே ஞானிகள் நினைக்கிறார் கள். நான் ஜீவர்களுக்கு ஆத்மாவாக இருப்பவன். ப்ரியமானவர்களுக்குள் மிக்க ப்ரியமானவன். அதனால்

T-V-m 8.3-2

என்னிடத்தில் ஆசைப்பட வேண்டும். ஆதலால் ஸகல வேதஸ்வரூபமாயும் என்னிடத்திலிருந்து உண்டானதுமாகிய உம்முடைய ஸ்வரூபத்தாலேயே (வேறு ஸாதனத்தை அபேட்சியாமல்) ப்ரஜைகளைச் ஸ்ருஷ்டியும். என்னிடத்திலிருப்பவர்களை வெளிப் படுத்தும், என்று தாமரை மலர் போன்ற நாபியுள்ள வரும், ப்ரதானம் (மாயை) புருஷன் (ஜீவன்) இவர்களுக்கு அதிபதியுமான ஸ்ரீமந் நாராயணன் அனுக்ரஹித்து, ஸ்ருஷ்டிக்க வேண்டியதைப் ப்ரகாசப் படுத்தி அவருடைய கவலையைத் தீர்த்து மறைந்தார்.

அத்தியாயம்–10

பத்துவகையான ஸர்க்கங்கள்

1–2. அதனைக் கேட்டு விதுரர். மைத்ரேயரை நோக்கி, 'ஓ பகவன்! உலகங்களுக்குப் பிதாமகரும் ப்ரபுவுமாகிய ப்ரஹ்மதேவர் புருஷோத்தமன் மறைந்த பிறகு தேகத்திலுண்டானவைகளும் மனத்திலிருந்து உண்டானவைகளுமான ப்ரஜைகளை எவ்வளவு வகையாய்ப்படைத்தார்? தவிரவும், என்னால் கேட்கப் பட்ட மற்ற எல்லாக் கேள்விகளுக்கும் க்ரமமாக உத்தரஞ் சொல்லி என்னுடைய சம்சயங்களை நீக்க வேண்டும். நீர் ஸகலத்தையும் அறிந்தவர்களுக்குள் சிறந்தவர்' என்று கேட்டுக்கொண்டார்.

3–9. அதனைக் கேட்டு அந்த மைத்ரேய மகர்ஷி மிகவும் ப்ரியத்துடன் அவைகளை மறவாமலேயே தமது மனத்தில் வைத்துக்கொண்டு ப்ரத்யுத்தரம் சொல்ல ஆரம்பித்தார். ப்ரஹ்மதேவர் ஸ்ரீமந் நாராயண னுடைய ஆக்ஞையின்படி. அவரிடத்திலேயே தம்முடையை மனத்தைச் செலுத்தி தேவமானத்தில் நூறு வருஷகாலம் தவம் செய்தார். அப்பொழுது ப்ரஹ்மதேவர் எதிலிருந்து தவம் செய்தாரோ அந்தத் தாமரைப் புஷ்பத்தையும் ஜலத்தையும் ப்ரளய காலக் காற்றானது அசைத்தது. அதனைக் கண்ணுற்ற ப்ரஹ்மதேவர் தம்முடைய வித்தையாலும், மிகவும் விருத்தியடைந்த தபஸினாலும் மிக்க விஞ்ஞான பலமுள்ளவராக அந்த வாயுவையும் ஜலத்தையும் பானஞ் செய்தார். பிறகு அவர் தமக்கு இருப்பிடமும், ஆகாசத்தில் வியாபரித்ததுமான தாமரைப்

புஷ்பத்தைப் பார்த்து "பூர்வ கல்பத்தில் லயமடைந்த லோகங்களை இந்தப் புஷ்பத்தைக் கொண்டு ஸ்ருஷ்டிப்பேன்" என்று யோசித்தார். பின்பு அவர் ஸ்ரீமந் நாராயணனால் ஜகத் ஸ்ருஷ்டியில் தூண்டப் பட்டு. பதினான்கு வகையாக ஆகக் கூடிய அந்தத் தாமரை புஷ்பத்தை மூன்று வகையாகப் பிரித்தார் (மூவுலகமாக வென்பது கருத்து). ப்ராணிகளுடைய போக ஸ்தானமாகிய மூவுலகத்தின் ஸ்ருஷ்டியானது இம்மாதிரி சொல்லப்பட்டது. (மூவுலகமும் காம்ய கர்மத்தின் பலமாகையால், ப்ரஹ்மதேவரின் ஒவ்வொரு பகலிலும் அவை ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன என்பது கருத்து) பலனை உத்தேசியாமல் செய்த நல்ல கர்மங்களின் பலமே ப்ரஹ்ம பதம் என்றார். (மகர்லோகம் முதலிய சத்யலோகம் வரையிலுள்ள லோகங்கள் நிஷ்காம கர்மங்களின் பலன்களாகையால் இரண்டு பரார்த்தம் வரையில் அவைகளுக்கு நாசமில்லை.)

10. அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி "ப்ரபுவாகிய ஓ ப்ராஹ்மணோத்தம! அனேக உருவமுள்ளவரும், ஆச்சரியகரமாக காரியங்களுள்ள வருமாகிய ஸ்ரீமந் நாராயணருக்குக் காலமென்ற ஸ்வரூபம் உண்டென்று சொன்னீரல்லவா? அதனை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

11–31 1/2. பிறகு மைத்ரேயர் விதுரரை நோக்கி, காலமென்பது மகத் தத்துவம் முதலியவைகளுடைய பரிணாமத்தால் ஏற்படுகிறது. அதற்கு உற்பத்தியும் இல்லை. முடிவும் இல்லை. அந்தக் காலத்தை நிமித்த காரணமாக வைத்துக் கொண்டு, பரம புருஷன் தம்மை விளையாட்டாகச் ஸ்ருஷ்டித்துக் கொண்டார்.

விஷ்ணுவின் மாயையால் ப்ரஹ்மமானது இந்தப் ப்ரபஞ்ச உருவமாக ஆகி, அவ்யக்த ஸ்வரூபமுள்ளதும் எல்லாவற்றிற்கும் மேலானதுமான காலத்தால் தனியாகப் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் ப்ரபஞ்சமானது இப்பொழுது ப்ரகாசித்துக் கொண்டிருப்பதுபோலப் பூர்வ கற்பத்திலும் இருந்தது. அடுத்த கற்பத்திலும் இம்மாதிரியாகவே இருக்கும். அதனாலுண்டாகும் ப்ராகிருதம், வைகிருதம் என்ற பேதமுள்ள சர்க்கமானது ஒன்பது வகையுள்ளது. அந்த சர்க்கத்திற்குக் காலத்தாலும், திரவியத்தாலும, குணங்களாலும் மூன்று வகையான ப்ரளயம் ஏற்படுகிறது. பரமாத்மாவினிடமிருந்து குணங்களுடைய வித்தியாசத்தால் ஏற்படும் மகத் தத்துவத்தின் ஸ்ருஷ்டி. முதலாவது, திரவியம், ஞானம் இவைகளால் ஏற்படும் அகங்காரத்தின் ஸ்ருஷ்டி. இரண்டாவது, பூத ஸ்ருஷ்டி. மூன்றாவது, அது தன்மாத்திரையுள்ளது, த்ரவிய சக்தியுள்ளது. நான்காவது இந்திரிய ஸ்ருஷ்டி. அது ஞானம், கருமம் ஆகிய் இவைகளின் ஸ்வரூபம். ஐந்தாவது மன ஸ்ருஷ்டி. அதுவே வைகாரிக தேவ ஸ்ருஷ்டி எனப்படுகிறது. ஆறாவது அவித்தையின் ஸ்ருஷ்டி. அந்த அவித்தை ஜீவர்களுக்கு ஆவரணத்தை யும், விக்ஷேபத்தையும் உண்டுபண்ணுகிறது. இந்த ஆறு வகையான சர்க்கங்களும் ப்ராக்ருதமெனப்படு கின்றன. வைகிருதமான சர்க்கங்களையும் சொல்லு கிறேன், எவரைத் தியானஞ் செய்த மாத்திரத்தில் சம்சார துக்கம் நீங்குமோ, ரஜோ குணத்தை யடைந்த அந்தப் பரம புருஷனுக்கு இது லீலையேயாம். தாவரங்களுடைய ஸ்ருஷ்டியே வைகிருத ஸ்ருஷ்டியில் முக்கியமானது. அதுவே ஏழாவது ஸ்ருஷ்டியாகும். அந்தத் தாவர ஸ்ருஷ்டியானது ஆறுவகையானது. எப்படியெனில், புஷ்பிக்காமல் காய்க்கும் அரசு,

அத்தி; பலா முதலிய மரங்கள் ஒருவகையாம். புஷ்பித்துப் பழுக்கும் யவம், நெல், பயறு முதலிய வைகள் மற்றொரு வகையாம். புஷ்பங்களையே ப்ரதானமாயுள்ள மல்லிகை முதலிய கொடிகள் மற்று ஒருவகையாம். மூங்கில் முதலியவைகள் பின்னொரு வகையாம். மற்ற கொடிகள் ஒரு வகையாம். மற்ற மரங்களும் ஒருவகையாம். இவைகள் யாவும் நடை அற்றவை. ஆகாரமற்றவை. வெளியில் ப்ரகாசிக்காத சைதன்யமுள்ளவை, உள்ளே ஸ்பரிசத்தை அறியக் கூடியவை. பலவகையான பருமன், உயரம் முதலியவை களுமுள்ளவை, எட்டாவது திர்யக் திருஷ்டி. அது பசு, ஆடு, எருமை கிருஷ்ணசாரம், பன்றி, கவயம், குரு, செம்மறியாடு, ஒட்டகம் ஆகிய இரண்டு குளம்புகளுள்ள ஒன்பது வகையான ப்ராணிகள். கழுதை, குதிரை, அச்வதரம் கௌரம், சரபம், சமர் என்ற ஒற்றைக் குளம்புள்ள ஆறு வகையான பிராணிகள். நாய், நரி, செந்நாய், புலி, பூனை, முயல் சல்யுகம், சிம்மம், குரங்கு, யானை, ஆமை, உடும்பு ஆகிய ஐந்து நகங்களுள்ள பன்னிரண்டு வகையான ப்ராணிகள் மகரம் முதலிய ஜலத்தில் சஞ்சரிக்கும் பிராணிகள், கழுகு, பருந்து, கொக்கு, சேனம், பாஸம், பல்லூகம், மயில், ஹம்ஸம், சாரசம், சக்ரவாகம், காக்கை, கோட்டான் முதலிய பறவைகள் ஆகிய இருபத்தெட்டு வகையுள்ளது. இவைகள் யாவும் ஞானமில்லாதவை மிகவும் தமோ குணமுள்ளவை. கிராணேந்திரியத்தாலேயே தங்களுக்கு இஷ்டமானவை களை அறிந்துகொள்ள கூடியவை. தீர்க்கமாகிய ஆலோசனையற்றவை. (பசுக்களுக்கு, பசி தாகத்திலேயே அறிவு என்று கருத்து) ஒன்பதாவது மனிதர்களுடைய ஸ்ருஷ்டியோ ஒருவகையானது. அதற்கு ஆகாரம், சஞ்சரிப்பது ஆகிய இவைகள் பூமியிலேயே

ஏற்படுகின்றன. அம்மனிதர்களிடத்தில் ரஜோ குணமே அதிகம். கருமங்களைச் செய்வதிலேயே அவர்கள் ஆசையுள்ளவர்கள். துக்கத்தையே சுகமாக நினைத்த வர்கள் இம்மூன்று ஸ்ருஷ்டிகளுமே வைகிருத ஸ்ருஷ்டிகளென சொல்லப்படுகின்றன. வைகாரிக மென்று சொல்லப்பட்ட தேவ ஸிருஷ்டியும், வைகிருத ஸிருஷ்டியாகும். கௌமார ஸிருஷ்டியானது, ப்ராக்ருதம் வைகிருதம் இரண்டும் சேர்ந்ததாக ஆகும். (அவர்களுக்கு தேவத்வம், மனுஷ்யத்வம் இரண்டும் உண்டென்பது கருத்து) இந்த வைகிருதமான தேவ ஸ்ருஷ்டியானது தேவர்கள், பிதிருக்கள், அசுரர்கள். கந்தர்வர்கள், அப்ஸரசுகள், யக்ஷரக்ஷஸ்ஸுக்கள், சித்தசாரண வித்யாதரர்கள், கின்னரர் முதலியவர் கள், பூதம் பிரேத பிசாசங்கள் ஆகிய எட்டு வகை யுள்ளது, இப்படி ப்ரஹ்மாவினால் செய்யப்பட்ட சர்க்கங்கள் பத்துவகை யென்றும் சொல்லப்பட்டிருக் கின்றன. இதற்குமேல் மனுக்களையும், மன் வந்த்ரங்களையும் சொல்லுகிறேன், ஸ்ரீமத் நாராயணன் ரஜோ குணமுள்ளவராகப் ப்ரஹ்மதேவ ஸ்வரூபத்தை யடைந்து தம்மைத் தாமே தம்மைக்கொண்டு படைக்கிறார். அவர் வீணாகாத சங்கற்பமுள்ளவர். ஒ விதுரரே எல்லாவற்றிற்கும் ஈசுவரனாகிய பரமாத்மா மாயாவி ஆகையால் குணங்களுடைய சம்பந்தமுள்ள இவரிடத்திலிருந்து ஒன்றன்பின் மற்றொன்று உண்டாயிற்று என்று சொல்ல வேண்டியதில்லை. நதியில் அநேகம் சுழல்கள் ஒரே காலத்தில் உண்டாகவில்லையா? மேலும் தேவர்கள் அசுரர்கள் முதலியவர்களில், இந்தக் கற்பத்தில் எவர்கள் இருக்கிறார்களோ, அவர்களே வேறு பெயருடனும், வேறு உருவத்துடனும் பிந்திய கற்பங்களிலும் இருக்கிறார்கள்.

அத்தியாயம்–11

காலத்தின் ஸ்வரூபம்

1–15 "காரியரூபமாகிய ப்ரபஞ்சத்தின் எந்த அம்சமானது கடைசியானதோ (பிரிக்க முடியாததோ) எது காரியமாயிருக்கும் தன்மையை அடையாததோ, மேலும் எது சமுதாயமாயிருக்கும் தன்மையை அடையாததோ அதே பரமாணுவென்று தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு அவயவங்கள் உண்டென்று மனிதர்கள் ப்ரமிக்கிறார்கள். (இது காலத்தின் சூட்சும ரூபம்) காரியம் மாத்திரமாயும், மாறுதலை அடையாத தாயுமுள்ள அந்த வஸ்துவின் சேர்க்கையே மிகவும் பெரியது. அது பேதமற்றது. விசேஷமற்றது. ஓ சாதுக்களுக்குள் மேலானவரே! இந்தப்ரபஞ்சமானது பரமாணுவாயிருக்கும்பொழுது இதை எந்தக் காலம் வ்யாபித்திருந்ததோ, அதுவே காலப் பரமாணு. காரியமாயிருக்கும் ப்ரபஞ்சம் முழுவதையும் எந்தக் காலம் வ்யாபித்திருக்கிறதோ, அதுவே மகாகாலம். இரண்டு காலப் பரமாணுக்கள் சேர்ந்தால் அணுவாகிறது. மூன்று அணுக்களால் திருஸரேணு உண்டாகிறது. வீடுகளில் சன்னல் வழியாகப் ப்ரகாசிக்கும் வெயிலில் பறந்துகொண்டிருக்கும் தூளிகளே திருஸரேணு எனப்படும். மூன்று கால திருஸரேணுக்களால் த்ருடி யுண்டாகின்றது. நூறு த்ருடி கொண்டது வேதமெனப்படுகிறது. மூன்று வேதங்கொண்டது லவமெனப்படுகிறது. மூன்று லவங்கள் நிமிஷமாகின்றது, மூன்று நிமிஷங்களால் க்ஷணம் உண்டாகிறது. ஐந்து க்ஷணங்களால் காஷ்டை ஏற்படுகிறது. பதினைந்து காஷ்டைகளால்

லகு ஏற்படுகிறது. பதினைந்து லகுக்களால் நாடிகை (நாழிகை) உண்டாகிறது. இரண்டு நாடிகைகள் ஒரு முகூர்த்தமாகும். ஆறு அல்லது ஏழு நாழிகை கொண்டது ப்ரஹரமென்றும், யாமமென்றும் சொல்லப்படுகிறது. ஆறு பலம் தாமிரத்தால் செய்யப் பட்ட உயரமான வடிவமுள்ள பாத்திரத்தில், இருபது குன்றிமணி நிறையுள்ள தங்கத்தால் செய்யப்பட்டவை களும், நான்கு அங்குல விஸ்தாரமுள்ளவைகளுமான நான்கு ஊசிகளால் துவாரஞ் செய்து அந்தப் பாத்திரத்தை ஜலத்தில் மிதக்கச் செய்து அந்தப் பாத்திரம் ஜலத்தில் எவ்வளவு காலத்தில் மூழ்குமோ அந்தக் காலமே நாழிகையாகும். நாலு யாமம் கொண்டது மனிதர்களுக்கு ஒரு பகலாம், ராத்திரியும் அவ்வளவு காலமேயாம். இவ்விரண்டும் சேர்ந்தது ஒருநாள் என்று சொல்லப்படுகிறது. பதினைந்து நாட்கள் கொண்டது ஒரு பக்ஷமாகும். அது சுக்லமென்றும், கிருஷ்ணமென்றும் இருவகையுள்ளது. அவ்விரண்டு பக்ஷங்கள் கொண்டது ஒரு மாதமாகும். அது பித்ரு தேவதைகளுக்கு ஒருநாள் ஆகும். அதிலும் சுக்லபக்ஷம் பகலாகும. கிருஷ்ணபக்ஷம் ராத்திரியாகும். இரண்டு மாதம் கொண்டது ஒரு ருது. ஆறு மாதம் கொண்டது ஒரு அயன மெனப்படுகிறது. அதிலும் தக்ஷிணாயணம், உத்தராயணம் என்று இருவகை யுண்டு; தக்ஷிணாயணம் தேவர்களுக்கு ஒரு ராத்திரியாகும். உத்தராயணமோ அவர்களுக்கு ஒரு பகலாகும். ஆதலால் மனுஷ்ய மானத்தில் பன்னிரண்டு மாதம் கொண்டது தேவர்களுக்கு ஒரு நாளாகின்றது. மனுஷ்ய மானத்தில் நூறு வருஷங்கள் மனிதர்களுக்குப் பரமாயுஸ் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கால ஸ்வரூபியான் சூரிய பகவான், கிரகங்கள், அசுவனி

முதலிய இருபத்தேழு நக்ஷத்திரங்கள், மற்ற தாரைகள் ஆகிய இவைகளுள்ள காலச் சக்கரத்திலிருந்து கொண்டு பரமாணு முதல் வருஷம் வரையிலுள்ள காலமானத்தால் ஜகத்தில் சஞ்சரிக்கிறார். மேலும், மேற்சொல்லிய சம்வத்ஸர ஸ்வரூபமாகிய காலத்திற்கு சம்வத்ஸரம், பரிவத்ஸரம், இத்வத்ஸரம், அனுவத்ஸரம், வத்ஸரமென்று ஐந்து பேதங்கள் (ஸௌரம், பார்ஹஸ்பத்யம், ஸாவனம், சாந்திரம், நக்ஷத்ரம் என்ற மான பேதத்தால்) ஏற்படுகின்றன. எந்தப் பரமபுருஷன் இம்மாதிரியான கால ஸ்வரூபியாயிருந்து பலவகையாகக் காரியங்களை உண்டுபண்ணி (விதைகளுக்கு முளைக்கும் சக்தியை உண்டுபண்ணிக் கொண்டு) சம்சாரிகளுக்கு ஸ்வர்க்கம் முதலிய பலனை, யாகம் முதலிய சத் கர்மங்களால் கொடுத்துக் கொண்டும், புருஷர்களுடைய மோஹத்தை நீக்குவதற்காக ஆகாசத்தில் சஞ்சரிக்கிறாரோ; ஐந்து வகையான வத்ஸரங்களை எவர் உண்டு பண்ணுகிறாரோ, அப்பேர்ப்பட்ட தேஜோரூபியான சூரியனைப் பூஜிக்க வேண்டும்" என்றார்.

16–17 அதனைக் கேட்டு விதுரர், "ஓ பகவானாகிய மைத்ரேயரே! பிதிருக்கள், தேவர்கள், மனிதர்கள் ஆகிய இவர்களுடைய மானத்தைச் சொன்னீர். மேலும், நீர் கால ரூபியான பகவானுடைய ஸ்வரூபத்தை நன்றாக அறிந்தவர். யோகத்தால் கிடைத்த ஞானக் கண்ணால் வித்வான்கள் எல்லாவற்றையும் அறிகிறார்கள். ஆகையால் மூவுலகத்திற்கு வெளியில் இருக்கும் ஞானிகளுடைய கதியையும் சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

18–21 அதனைக் கேட்டு மைத்ரேயர், "தேவ மானத்தால் அளக்கப்பட்ட பன்னீராயிரம் வருஷங்களைக் கொண்டு க்ருதயுகம், த்ரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம் என்று நான்கு யுகங்கள் ஏற்படுத்தப்பட்டன; நாலாயிரத்தெண்ணூறு (4800) வருஷங்கள் கொண்டது க்ருதயுகம் மூவாயிரத்தறுநூறு வருஷங்கள் கொண்டது, (3600) த்ரேதாயுகம். இரண்டு ஆயரத்து நாநூறு வருஷங்கள் கொண்டது,(2400) த்வாபர யுகம். ஆயிரத்து இருநூறு வருஷங்கள் கொண்டது,(1200) கலியுகம். க்ருதயுகத்தில் முதல் நாநூறு வருஷங்கள் யுகத்தின் சந்தி எனப்படுகின்றன. கடைசி நானூறு வருஷங்கள் சந்தியாம்ச மெனப்படுகின்றன. த்ரேதாயுகத்தில் முதல் முந்நூறு வருஷங்கள் சந்தி என்றும், கடைசி முந்நூறு வருஷங்கள் சந்தியாம்ச மென்றும், துவாபர யுகத்தில் முதல் இருநூறு வருஷங்கள் சந்தி என்று கடைசி இருநூறு வருஷங்கள் சந்தியாம்சமென்றும், கலியுகத்தில் முதல் நூறு வருஷங்கள் சந்தியென்றும், கடைசி நூறு வருஷங்கள் சந்தியாம்சமென்றும் சொல்லப்படுகின்றன. சந்தி, சந்தியாம்சம் என்னும் இவ்விரண்டிற்கும் நடுவிலிருக்கும் பாகமே யுகமெனப் படுகிறது. அந்தக் காலத்தில்தான் யுக தர்மங்கள் நன்றாகப் ப்ரகாசிக்கும். க்ருதயுகத்தில் தருமமானது நான்கு பாதங்களுடன் மனிதர்களை அனுசரிக்கிறது. மற்ற யுகங்களில் அந்த தருமத்திற்கு ஒவ்வொரு பாதம் குறைகிறது. இந்த மூவுலகத்தைக் காட்டிலும் வெளியிலிருக்கும் மஹர் லோகம் முதல் ப்ரம்ஹ லோகம் வரையில் ஆயிரம் சதுர்யுகம் கொண்டது ஒரு பகலாகும். இரவும் அவ்வளவு காலமேயாகும். அதில் ப்ரஹ்ம தேவர் தூங்குகிறார். ராத்திரி முடிந்து.

பகல் ஆரம்பிக்கும்பொழுது ஸ்ருஷ்டி ஆரம்பிக்கப்படு கிறது. அந்தப் ப்ரஹ்மதேவருடைய பகலில் பதினான்கு மனுக்கள் உண்டு. எழுபத்தொரு யுகங்களுக்குக் கொஞ்சம் அதிகமான காலம் ஒவ்வொரு மனுக்களின் காலமாகும். ஒவ்வொரு மன்வந்தரங்களிலேயும் அந்தந்த மனுவின் வம்சத்தில் பிறந்த அரசர்களும், ரிஷிகளும், தேவர்களும் தேவர்களுக்கு அதிபதிகளும், அந்த மனுக்களை அனுசரிக்கிறார்கள். இது ப்ரஹ்ம தேவரால் ஒவ்வொரு நாளும் செய்யப்படும் ஸ்ருஷ்டி. இது இவ்வுலகத்தையும் வ்ருத்தி செய்யக்கூடியது. திர்யக்ஜாதிகளும், மனிதர்களும், பித்ருக்களும், தேவர்களும் இதில் ஸ்ருஷ்டிக்கப் படுகிறார்கள். மேலும் ஒவ்வொரு மன்வந்தரங்களிலும் பரம புருஷன் சத்வகுண முள்ளவராக மனு முதலியவர்களின் ஸ்வரூபமாக இருந்து இந்த ஜகத்தைக் காப்பாற்றுகிறார். பின்னும் அவர் பகலின் முடிவில் தமோகுணத்தின் சொற்ப பாகத்தை அங்கீகரித்துக் காலகதியால் எல்லாவற்றையும் தமக்குள் அடக்கிக் கொண்டு வியாபார மற்றவராய் இருக்கிறார். அப்பொழுது பூமி முதலிய மூன்று உலகங்களும், சந்திரன், சூரியன் ஆகிய இவர்களுடைய ப்ரகாசமில்லாமல் மறைந்து இருக்கின்றன. பிறகு பகவானுடைய சக்தியாகிய சங்கர்ஷண முகாக்கினியால் முவுலகமும் எரிக்கப்படும் பொழுது அந்தத் தாபத்தைப் பொறுக்காமல் பிருகு முதலிய மகர்ஷிகள் மகர்லோகத்திலிருந்து ஜனலோகம் செல்லுகிறார்கள். அப்பொழுது சமுத்திரங்கள் ப்ரளய காலத்திய காற்றினால் அசைக்கப்பட்டுப் பெரியதாகிய அலைகளுடன் பயங்கரமான ஆடம்பர முள்ளவை களாக உலகங்களை மூழ்கச் செய்யும். அந்தக் காலத்தில் அந்த ஜலத்திற்குள் ஆதிசேஷனாகிய

ஆசனத்தில் பகவான் யோக நித்திரை செய்து கொண்டிருக்கிறார். ஜனலோகத்தில் வஸித்தவர்கள் அவரை ஸ்தோத்திரம் செய்து கொண்டிருப்பார்கள். இம்மாதிரியான ராத்திரி, பகல்களால் ப்ராணிகளின் வயதைவிட அதிகமான ப்ரஹ்மதேவருடைய வயதும் அபகரிக்கப் பெற்றுக் குறைந்துபோகிறது. அந்தப் ப்ரஹ்மதேவருடைய ஆயுளின் பாதிப்பாகம் பரார்த்தம் என்று சொல்லப்படுகிறது. முதல் பரார்த்தம் சென்று விட்டது. இப்பொழுது இரண்டாவது பரார்த்தம் நடக்கிறது. முந்திய பரார்தத்தின் முன்பாகத்தில் ப்ராஹ்மம் என்ற பெரியதாகிய கற்பம் நடந்தது. சப்தப்ரஹ்மமென்று சொல்லப்படுகிற ப்ரஹ்மதேவர் உண்டான காலமாகையால் அதற்குப் ப்ராஹ்மம் என்று பெயர் கிடைத்தது. அதற்கு அடுத்த கற்பத்தைப் பாத்ம கல்பம் என்று சொல்லுகிறார்கள். அந்தக் கற்பத்தில் பகவானுடைய நாபியாகிய ஏரியிலிருந்து லோகமாகிய பத்மம் (தாமரைப் புஷ்பம்) உண்டாயிற்று. இதுவே முதலாவது கற்பம். இரண்டாவது வராஹ கற்பமென்று சொல்லப்படுகிறது. அதில் பகவான் வராஹமாக (பன்றி) அவதரித்தார். உபாதியற்றவரும், நாசமற்றவரும், உற்பத்தியற்றவரும், ஜகத் காரணரும் ஆகிய பகவானுக்கு இரண்டு பரார்த்தங்களடங்கிய ப்ரஹ்மதேவருடைய ஆயுளானது நிமிஷமாம்! பரமாணுமுதல் இரண்டு பரார்த்தம் வரையிலுள்ள மேற்சொல்லிய காலமானது வீடு முதலியவைகளில் அபிமானமுள்ள சம்சாரிகளுக்கு யஜமானனே யொழியப் பரிபூரணரான புருஷோத்தமருக்கு அதிபதியல்ல. மஹத்தத்துவம் முதலிய ஆவரணங்கள் உள்ளதுமான அண்டகோசமானது வெளியில் ஐம்பது கோடி விஸ்தாரமுள்ளது. அளவில் ஒன்றுக்கொன்று

பத்து மடங்கு அதிகங்களான பூமி முதலிய ஆவரணங்களுள்ள மேற்சொல்லிய அண்டகோசமும், மற்ற கோடிக் கணக்கான அண்டங்களும் எதனிடத்தில் ப்ரவேசித்து பரமாணுக்கள் போலத் தோன்று கின்றனவோ, அதுவே அக்ஷரம்; எல்லாக் காரணங் களுக்கும் காரணம்; மகாத்மாவாகிய புருஷனுடைய சரீரம்; அதுவே பரப்ரஹ்மம்.

அத்தியாயம்–12

ஸனகர் முதலியவர்களுடைய ஸ்ருஷ்டி

1–8. ஓ விதுரரே! பரமாத்மாவினுடைய காலமென்ற பெயருள்ள மஹிமையைச் சொன்னேன் வேதகர்ப்பராகிய ப்ரஹ்மதேவர் ஜகத்தை யுண்டு பண்ணியதைச் சொல்லுகிறேன் தெரிந்து கொள்ளும். முதலில் ப்ரஹ்மா அந்ததாமிஸ்ரம், தாமிஸ்ரம் மஹாமோஹம், மோஹம், தமஸ் ஆகிய ஐந்து அஜ்ஞான விருத்திகளை யுண்டுபண்ணினார். பின்பு , தம்மால் ஸிருஷ்டிக்கப் பட்டவைகள் பாபத்திற்கு ஏதுக்களாயிருப்பதைப் பார்த்து, அதில் சந்தோஷம் அடையவில்லை. பின்பு பகவானைத் தியானம் செய்து அதனால் சித்த சுத்தியுள்ளவராக ஸனகர், ஸநந்தனர், ஸனாதனர், ஸனத்குமாரர் ஆகிய நான்கு குமாரர்களை உண்டுபண்ணினார். அவர்கள் கர்மங்களற்றவர்கள். இந்திரியங்களை ஜயித்தவர்கள். ப்ரஹ்மதேவர் அவர்களை நோக்கி, "ஓ குழந்தைகளே! நீங்கள் பிரஜைகளைச் ஸிருஷ்டியுங்கள்" என்று ஆக்ஞாபித்தார். அவர்கள் வாஸுதேவரையே தியானஞ் செய்துகொண்டு மோக்ஷஸாதனமாகிய நிவிருத்தி தருமத்தையே அனுஷ்டிப்பவர்களாகையால் அதனை ஒப்புக்கொள்ளவில்லை. அப்பொழுது புத்திரர்களாகிய அவர்கள் பிதாவின் கட்டளையைக் கடந்ததால் ப்ரஹ்மதேவருக்குக் கோபம் உண்டாயிற்று. ஆனாலும் அவர் அதை அடக்கிக் கொள்ள முயன்றார். அப்படியும் கோபம் அடங்காமல் ப்ரஹ்மதேவருடைய புருவங்களின் மத்ய பாகத்திலிருந்து ஒரு புத்திரன் உண்டானான். அந்தக் குமாரரே நீல லோஹிதர்.

அவர் ப்ரஹ்மதேவருடைய கோபத்தின் அம்சம். தேவர்களுக்கு முந்தி யுண்டானவரும், பரமசிவனென்று சொல்லப்படப் போகின்றவருமான அந்தக் குமாரர் ப்ரஹ்மதேவரை நோக்கி "ஓ ஜகத்தைப் போஷிப் பவரே! எனக்கு இருப்பிடங்களையும், பெயர்களையும் ஏற்படுத்தும்" என்று அழுது வேண்டிகொண்டார்.

9–14. பத்மத்திலிருந்து உண்டான ப்ரஹ்மதேவர் அதனைக் கேட்டு. "ஓ தேவர்களுக்குள் சிறந்தவரே! நீர் அழ வேண்டாம். உமக்கு இருப்பிடங்களையும், பெயர்களையும் ஏற்படுத்துகிறேன். நீர் ப்ராகிருத சிசுவைப்போல் அழுதபடியால் உம்மை ருத்திரனென்று ஜனங்கள் சொல்லுவார்கள். இருதயம், இந்திரியங்கள், பிராணன், ஆகாசம், வெளியிலிருக்கும் வாயு, அக்கினிஜலம், பூமி, சூரியன், சந்திரன், தபஸ் ஆகிய இவைகள் உமக்கு வாசஸ்தலங்களாக முன்னமேயே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் உமக்கு மன்யு, மனு, மஹாகாலன், மஹான், சிவன், ரிதத்வஜன், உருரேதஸ், பவன், காலன், வாமதேவன், திருதவிருதன் என்ற பெயர்களுண்டாகும், தவிரவும் உமக்கு, தீ விருத்தி, ரசனா, உமா, நியுத், ஸர்ப்பி, இளா, அம்பிகா, இராவதீ, ஸுதா, தீக்ஷா, ருத்ராணீ என்ற பெயருள்ள ஸ்திரீகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

ஆதலால் மேற்சொல்லிய நாமதேயங்களுடன் மேற்காட்டிய ஸ்தானங்களில் ஸ்திரீகளுடன் வசித்து அநேக பிரஜைகளை உண்டு பண்ணும். நீர் ப்ரஜாபதிகளுக்கும் மேலானவர்" என்று பிரியமாகச் சொன்னார்.

15–20. இம்மாதிரி பிதாவினால் ஆக்ஞாபிக்கப் பட்ட அந்த நீலலோஹிதர் ஆகிருதி சுபாவம் ஆகிய இவைகளில் தமக்குச் சமானர்களாகிய ப்ரஜைகளை உண்டுபண்ணினார். அந்த ருத்திரரால் ஸிருஷ்டிக்கப் பட்ட ப்ரஜைகள் கூட்டங் கூட்டமாக ஜகத்தை விழுங்குகிறவர்கள் போல எங்கும் பரவியிருந்தார்கள். அதனை கண்ட ப்ரஹ்மதேவர் ஸந்தோஷமடைந்து, ருத்திரரை நோக்கி, "ஓ தேவசிரேஷ்டரே! உம்மால் ஸிருஷ்டிக்கப்பட்ட ப்ரஜைகள் என்னையும், திக்குகளையும் பார்வையால் எரிப்பவர்கள்போல் இருக்கிறார்கள். ஆதலால் நீர் இனி ஸிருஷ்டிக்க வேண்டாம். ஸகல ப்ராணிகளுக்கும் ஸுகத்தைக் கொடுக்கக்கூடிய தவத்தைச் செய்யும். உமக்கு க்ஷேமமுண்டாகட்டும். ஸகல பிராணிகளுடைய இருதய குகையில் வஸிப்பவரும், தேஜோரூபியும், பகவானாயுமுள்ள பரமாத்மாவைத் தபஸினாலேயே புருஷன் அடைகிறான். ஆதலால் நீரும் தபஸ் செய்தால் அதன் பலத்தால் • ஜகத்தை முன் கற்பத்திலிருந்தது போல் ஸிருஷ்டிப்பீர்" என்றார். அதனைக் கேட்ட ருத்திரரும் வாக்குகளுக்கு அதிபதியான ப்ரஹ்மதேவருடைய வார்த்தையை அங்கீகரித்து, அவரிடம் விடைபெற்றுக் கொண்டு தபஸ் செய்வதற்காக வனம் சென்றார்.

21–27. பிறகு ப்ரஹ்மதேவர் ஸிருஷ்டி விஷயமாகத் தியானம் செய்தார். அவருக்கு அப்பொழுது பகவான் உடைய சக்திவிசேஷத்துடன் கூடிய மரீசி, அத்திரி, அங்கிரஸ், புலஸ்தியர், புலஹர், க்ரது, பிருகு, வசிஷ்டர், தக்ஷர், நாரதர் ஆகிய பத்துப் புத்திரர்கள் உண்டானார்கள். அவர்கள் லோகத்தின் சந்தானத்திற்குப்

காரணமாயிருப்பவர்கள். அதெப்படியெனில் அவருடைய மடியிலிருந்து நாரதரும், கட்டை விரலிலிருந்து தக்ஷரும், ப்ராணனிடமிருந்து வசிஷ்டரும், தொக்கிந் திரியத்திலிருந்து ப்ருகுவும், கையிலிருந்து க்ரதுவும் நாபியிலிருந்து புலஹரும், காதுகளிலிருந்து புல்ஸ்தியரும், முகத்திலிருந்து அங்கிரசும், மனத்தில் இருந்து மரீசியும் உண்டானார்கள். மேலும் அவர் உடைய வலப்பக்க ஸ்தனத்திலிருந்து ஸ்ரீமந் நாராயண னுக்கு வாசஸ்தானமாகிய தருமம் உண்டாயிற்று. அவருடைய பின் பக்கத்திலிருந்து அதர்மம் உண்டா யிற்று. உலகத்திற்குப் பயங்கரனாகிய ம்ருத்யுவே அதற்கு அதிதேவதை. மேலும் அவருடைய ஹிருதயத் திலிருந்து காமமும், புருவங்களிலிருந்து கோபமும், உதட்டிலிருந்து லோபமும், முகத்திலிருந்து வாக்குக்கு அதிதேவதையும், ஆண்குறியிலிருந்து சமுத்திரங்களும், பாயுவிலிருந்து பாபத்திற்கு இருப்பிடமாகிய நிருதியும் உண்டானார்கள். பின்னும் அவருடைய நிழலிலிருந்து தேவஹூதிக்குப் பர்த்தாவாக ஆகப்போகிற கர்த்தமப் பிரஜாபதி உண்டானார். இப்படி ப்ரஹ்மதேவருடைய தேகத்திலிருந்தும் மனத்திலிருந்தும் இந்த ஜகத் உண்டாயிற்று.

28–32. ஓ விதுரரே! ப்ரஹ்மதேவர் தம்மிடமிருந்து உண்டானவளும், மனோகரமாகிய உருவமுள்ளவளு மான வாக்குக்கு அதிதேவதையை அவள் இஷ்டப் படாமலிருக்கும் போதும் தாம் ஆசைப்பட்டார், என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அப்பொழுது மரீசி முதலியவர்கள் அதர்மத்தைச் செய்ய முயன்ற தங்கள் உடைய பிதாவை நோக்கி, "மன்மதனை ஜயிக்காமல் உம்முடைய பெண்ணிடத்தில் நீர் ஆசைப்படுவது

உசிதமல்ல. இது நம்முடைய முன்னோர்களால் அனுஷ்டிக்கப்பட்டதுமில்லை. உமக்குப் பிந்தியவர் களாலும் செய்யக்கூடியதில்லை. ஓ ஜகத்குருவே! மிக்க தேஜஸுள்ளவர்களானாலும் இம்மாதிரியான காரியத்தில் முயற்சிப்பது நியாயமல்ல. மகான்களால் அனுஷ்டிக்கப்படும் காரியங்களைச் செய்து லோகங்கள் க்ஷேமத்தை அடைகின்றன. (நீர் இம்மாதிரியான கெட்ட காரியத்தைச் செய்தால் மற்றவர்களும் இதைச் செய்து நரகத்தை அடைவார்களென்று கருத்து.) நீர் காரணத்தில் சூட்சுமரூபமாக இருந்த ஜகத்தை உம்முடைய ப்ரகாசத்தால் ப்ரகாசிக்கச் செய்தவர். இப்படிப் பட்ட உமக்கு நமஸ்காரம் செய்கிறோம். தர்மத்தைக் காப்பாற்றவேண்டும்" என்று பிரார்த்தித் தார்கள்.

33–35. அதனைக் கேட்ட ப்ரஹ்மதேவர் வெட்கம் அடைந்து அவளை விட்டுவிட்டார். (அந்த ஆசையை யொழித்தாரென்பது கருத்து.) அவளை திக்குகள் கிரஹித்துக் கொண்டன. அது பனியால் ஏற்படும் தமஸ்ஸாகும். பின்பு ஒருகால் ஜனங்களை எப்படி ஸிருஷ்டிக்கிறதென்று அவர் தியானம் செய்யும்போது அவருடைய நான்கு முகங்களிலிருந்தும் வேதங்கள் வெளிப்பட்டன. சாதுர்ஹோத்ரம் (ஹோதா முதலிய நான்கு ரித்விக்குகள் செய்யவேண்டிய கர்மம்) அவைகளின் தந்திரம், உபவேதங்கள், நீதிசாஸ்திரம், தருமத்தின் நான்கு பாதங்கள், ஆசிரம தர்மங்கள் ஆகிய இவைகளும் உண்டாயின.

36. அதனைக் கேட்டு விதுரர் மைத்ரேயரை நோக்கி "ஓ தபஸ்ஸையே தனமாகக் கொண்டவரே!

ப்ரஜாபதிகளுக்கும் அதிபதியாகிய அந்தப் ப்ரஹ்மதேவர் எந்த எந்த வேதங்களை, எந்த எந்த முகத்தால் ஸிருஷ்டித்தார்? அவற்றைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

37–48. அதனைக் கேட்டு மைத்ரேயர் ப்ரத்யுத்தரம் சொல்லலானார். ப்ரஹ்மதேவர், ரிக், யஜுஸ், சாமம், அதர்வம் என்ற நான்கு வேதங்களைக் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திக்குகளை நோக்கியிருக்கும் தம்முடைய முகங்களால் உண்டுபண்ணினார். சாஸ்திரம் (ஹோதாவினால் செய்யப்பட வேண்டியது), இஜ்யை (அத்வர்யு செய்யவேண்டியது) ஸ்துதி, ஸ்தோமம் (உத்காதாவினால் செய்யப்பட வேண்டியது), ப்ராயசித்தம் (ப்ரஹ்மாவினால் செய்யப்பட வேண்டியது) ஆகிய இவைகளையும் உண்டுபண்ணினார். மேலும் அவர் ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வ வேதம், ஸ்தாபத்யம் (விசுவகர்மாவினால் செய்யக்கூடியது) ஆகிய இவைகளையும் படைத்தார். பின்னும் எல்லாவற்றையும் அறிந்த அவர் இதிகாசம், புராணம் ஆகிய ஐந்தாவது வேதத்தை எல்லா முகங்களாலும் உண்டுபண்ணினார். அவருடைய முந்திய முகத்தில் இருந்து ஷோடசி, உக்தியம், சயனம், அக்னிஷ்டோமம், அப்தோர்யாமம், அதிராத்ரம், வாஜ்பேயம், கோஸவம் ஆகிய இவைகளும் வித்யை, தானம், தபஸ் சத்தியம் என்ற தருமத்தின் நான்கு பாதங்களும் ஆசிரமங்களும், அவைகளின் தருமங்களும் உண்டாயின. மேலும் ஆசிரமங்களில் ப்ரம்மசரிய ஆச்ரமத்தில் ஸாவித்ரம், ப்ரஜாபத்யம், ப்ரஹ்மம், ப்ரஹத் என்று நான்கு வகையுண்டு. கிரஹஸ்தாசிரமத்தில் வார்த்தை, சஞ்சயம், சாலீனம் சிலோஞ்சம் என்று நான்கு

வகையுண்டு. வானப்பிரஸ்தர்களுக்குள் வைகானஸர்கள், வாலகில்யர்கள், ஔதும்பரர்கள், பேனபர்கள் என்ற நான்கு வகையுண்டு. சன்யாச ஆசிரமத்திலும் குடீசகர்கள், பஹூதர்கள், ஹம்ஸர்கள். நிஷ்கிரியர்கள் என்று நால்வகை யுண்டு. ஆத்மா அனாத்மா இவை களை தெரிவிக்கும் ஆன்வீக்ஷகி, கர்ம வித்தையாகிய த்ரயீ, க்ருஷி முதலிய வார்த்தை தண்டநீதி ஆகிய நான்கு வித்யைகளும் நான்கு வ்யாஹ்ருதிகளும். நான்கு முகங்களிலிருந்து உண்டாயின. அவருடைய ஹிருதயாகாசத்திலிருந்து ப்ரணவமும், ரோமங்களில் இருந்து உஷ்ணிக் சந்தசும், எலும்புகளிலிருந்து ஜகதீச் சந்தசும் மஜ்ஜையிலிருந்து பங்தி சந்தசும் ப்ராணனிடமிருந்து ப்ரஹதீச் சந்தசும் உண்டாயின. ஸ்பர்சமென்ற எழுத்துக்களே அவருடைய ஜீவன். ஸ்வரமென்ற அக்ஷரங்களே அவருக்கு தேஹம். ஊஷ்மாவென்ற அக்ஷரங்களே அவருக்கு இந்திரியங்கள் அந்தஸ்தமென்ற எழுத்துக்களே அவருக்குப் பலமாய் இருக்கின்றன. அவருடைய விளையாட்டினால் ஏழு ஸ்வரங்களும் உண்டாகின்றன. ஓ விதுரரே! இப்படி சப்த ப்ரஹ்மஸ்வரூபியான அவருடைய உருவமானது வ்யக்தமாகும் பொழுது பலவகை சக்தியுள்ளதாகவும், (இந்திரன் முதலியவர்களின் உருவமாக) அவ்யக்தமாய் இருக்கும் போது ப்ரஹ்மமாகவும் ப்ரகாசிக்கிறது.

அத்தியாயம்– 13

வராஹாவதாரம்

1–4 மைத்ரேயரால் சொல்லப்பட்டதும் மிகவும் புண்யகரமுமான வார்த்தையைக் கேட்ட விதுரர் ஸ்ரீ கிருஷ்ண கதையில் மிகுந்த ஆதரவுடன், "ஓ மஹா முனியே! ப்ரஹ்மதேவருக்குப் ப்ரியமுள்ள புத்திரராகிய அந்த ஸ்வாயம்புவ மனுவானர் ப்ரியமுள்ள பத்தினியை அடைந்து எதனைச் செய்தார்? அரசர்களுக்குள் முந்தியவாக்கிய அவருடையச் சரித்தத்தைக் கேட்க ச்ரத்தையுள்ளவனாக இருக்கிறேன். அவர் ஸ்ரீ மஹா விஷ்ணுவை ஆசிரயித்தவர், பகவானுடைய குணங்களைக் கேட்பது, முகுந்தருடைய பாதாரவிந்தத்தை ஹிருதயத்தில் தியானிப்பது ஆகிய இவைகளே வெகு காலமாகச் ச்ரமப்பட்டு வித்தியாப்யாஸம் செய்ததின் பலனாகும். ஆதலால் அவருடைய சரித்தத்தைச் சொல்ல வேண்டுமி என்று கேட்டார்.

5–13 அதனைக் கேட்ட மைத்ரேயர் பகவத் கதையைச் சொல்லும்படி தாம் தூண்டப்பட்டபடியால் மயிர்க் கூச்சலுள்ளவராகி வணக்கமுள்ளவரும், ஆயிரந்தலையுள்ள பகவானுடைய பாதபீடருமாகிய (பகவான் விதுரருடைய மடியில் ப்ரியத்தால் கால் நீட்டிச் சயனம் செய்கிற வழக்கம்) விதுரரை நோக்கிச் சொல்லலானார். ஸ்வாயம்புவ மனு தம்முடைய பத்தினியுடன் எப்பொழுது உண்டானாரோ அப்பொழுது அவர் இரு கைகளைக் கூப்பி வணங்கி, ப்ரஹ்மதேவரை நோக்கி, "நீர் ஒருவரே இந்த ஸகல ஜகத்தையும் உண்டுபண்ணினவர். அதற்கு விருத்தியை

ஏற்படுத்தியவர். போஷிப்பவர். நீர் பிறரை அபேட்சியாத வரானாலும் உம்முடைய ப்ரஜை களாகிய நாங்கள் எதனைச் செய்தால் உமக்குச் சிசுரூஷை செய்ததாக ஆகும்? ஓ ஸ்தோத்திரம் செய்யக் கூடியவரே! எதனைச் செய்தால் இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் எங்கும் கீர்த்தி உண்டாகும்? எங்களால் செய்யக்கூடிய அந்தத் தர்மங்கள் இவை களென்று சொல்லவேண்டும். உமக்கு நமஸ்காரம் செய்கிறேன்" என்று கேட்டார். அப்பொழுது ப்ரஹ்ம தேவர் புத்திரனை நோக்கி, "குழந்தாய், உம்மிடத்தில் மிகவும் பிரிய மடைந்தேன். உங்களிருவர்களுக்கும் க்ஷேமம் உண்டாகட்டும். என்னால் உபதேசிக்கப்படும் காரியத்தைக் கபடமற்றவராய்ச் செய்யும். புத்திரர்கள் தங்களுடைய சக்திக்குத் தக்கபடி மாத்சர்யமில்லாத வர்களாக (ஸனகர் முதலியவர்களே செய்யவில்லையே. அப்படியிருக்க நாம் பிதாவின் கட்டளைப்படி நடக்கவேண்டுமா வென்று நினைக்காமல்) ப்ரீதியுடன் பிதாவின் கட்டளையின்படி நடந்தார்களானால் பிதாவைப் பூஜித்ததாகும். இதுதான் புத்திரர்கள் செய்ய வேண்டிய காரியம். ஆனதால் நீர் இவளிடத்தில் உமக்குச் சமமான குணசாலிகளான குழந்தைகளை உண்டு பண்ணிக்கொண்டு பூமியை தருமமமாகப் பரிபாலியும். மஹாவிஷ்ணுவை யாகத்தால் பூஜியும். ப்ரஜைகளைக் காப்பாற்றினால் எனக்கு மேலான சிசுரூஷை செய்ததாகும். மேலும் யக்ஞ ஸ்வரூபியாகிய பகவான் எவர்களிடம் சந்தோஷப் படவில்லையோ அவர்கள் செய்யும் காரியம் யாவும் ப்ரயோசன மற்றவை. அவர்கள் தமது ஆத்மாவினாலேய ஆதரிக்கப் படுகிறதில்லை. அந்தப் பகவானும் ப்ரஜாபாலனம் செய்யும் உம்மிடத்தில் சந்தோஷப்படுவார்" என்றார்.

14–19 அதனைக் கேட்ட ஸ்வாயம்புவ மனுவானவர் ப்ரஹ்மதேவரை நோக்கி, "ஓ பாபங்களைப் போக்குகிறவரே உம்முடைய ஆக்ஞையின்படி நடக்கிறேன்; எனக்கும் ப்ரஜைகளுக்கும் வாசஸ்தலம் இன்னதென்று சொல்ல வேண்டும். ஸகல ப்ராணி களுக்கும் இருப்பிடமாகிய பூமியானது ஜலத்தில் மூழ்கியிருக்கிறது. ஓ தேவ! இந்தப் பூமிதேவியை உயரக் கொண்டு வருவதற்காக முயற்சிக்க வேண்டும்" என்றார். அதனைக் கேட்டு ப்ரஹ்மதேவர் ஜலத்தில் மூழ்கியிருக்கும் பூமியை உயரக் கொண்டுவருவதைப் பற்றித் தமக்குள் யோசிக்கலானார். ப்ரளய கால ஜலத்தை எல்லாவற்றையும் குடித்தேன். பூமியில் ப்ரஜைகள் வஸிக்கும்படி செய்தேன். தேவர்கள், அஸுரர்கள், பித்ருக்கள், மனிதர்கள், பசுக்கள், பறவைகள், மலைப்பாம்புகள், மலைகள், யானைகள், இன்னும் பலவகையான ப்ராணிகளைச் ஸிருஷ்டித்து வரும்போது பூமி ஜலத்தில் மூழ்கிப் பாதாளம் சென்றது. ஸிருஷ்டிப்பதில் பகவானால் தூண்டப்பட்ட நாம் இந்தச் சமயத்தில் என்ன செய்யலாம், எப்படிப் பூமியை வெளியில் கொண்டுவருவேன்? ஆனால்லும் எந்தப் பகவானுடைய ஹிருதயத்திலிருந்து நான் உண்டானேனோ அந்தப் பகவானே இவ்விஷயத்தில் தகுந்த உபாயத்தைச் செய்ய வேண்டும்" என்று பகவானைத் தியானம் செய்தார்.

20–27 அந்தச் சமயத்தில் அந்தப் ப்ரஹ்மதேவர் உடைய மூக்குத் துவாரத்திலிருந்து ஒரு பன்றிக்குட்டி வெளிப்பட்டது. அது கட்டைவிரல் அளவுள்ளதாக இருந்தது. மேலும் அது அவர் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே ஆகாசத்திலிருந்தபடி யானை போலப்

பெரிய சரீரமுள்ளதாக விருத்தி அடைந்தது அது ஆச்சரியப்படக்கூடியதாக இருந்தது. அதனைக் கண்ட மரீசி முதலியவர்களும் ஸனகர் முதலியவர் களும், ஸ்வவாயம்புவ மனுவும் "இதென்ன ஆச்சரியம்! பன்றி உருவத்துடன் பெரிய ப்ராணியொன்று திவ்ய சரீரமுள்ளதாக இருக்கிறது. இது ப்ரஹ்மதேவருடைய மூக்கிலிருந்து வெளிப்பட்டது. கட்டைவிரல் அளவு உள்ளதான இதன் தலை ஒரு க்ஷணத்தில் மலை போன்றதாகி விட்டதே. ஒருகால் பகவானே இந்தச் சரீரத்துடன் அவதரித்திருக்கிறாரோ? மனத்திற்குக் கவலையாய் இருக்கிறதே" என்று யோசித்துக் கொண்டு இருந்தார்கள். அப்பொழுது மலைபோன்ற சரீரமுள்ளவரும், வராஹ ரூபம் தரித்தவருமான பகவான் கர்ஜித்தார். அந்தச் சப்தத்தால் திக்குகளில் எதிரொலி உண்டாயிற்று. அதனைக் கேட்டு ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் சந்தோஷமடைந்தார்கள். தபோலோகம், ஸத்யலோகம் இவைகளில் வஸிப்பவர் கள் நம்முடைய துக்கத்தைப் போக்கக்கூடிய மாயா வராஹத்தின் அந்தச் கர்க்கர சப்தத்தைக் கேட்டுப் பரிசுத்தங்களான மூன்று வேதங்களால் ஸ்தோத்திரம் செய்தார்கள்.

28–35 வேதங்களால் ஸ்தோத்திரம் செய்யப்படும் சரீரமுள்ள அந்தப் பகவான் அந்தப் ப்ராஹ்மணோத் தமர்களால் உச்சரிக்கப்பட்டவைகளும், தம்முடைய குணங்களை அனுமதித்தவைகளுமாகிய வேதங்களைக் கேட்டுக் கொண்டு ஜலத்திற்குள் ப்ரவேசித்தார். பூமியை வெளியில் கொண்டுவருகிற முயற்சியுடன் வராஹமாக (பன்றி) அவதரித்த பகவான் ஆகாசத்தில் வாலை உயரத் தூக்கிக் கொண்டும் கடினமான

சரீரமுள்ளவரும் அதிகக் கடினமாகிய மயிருள்ளவரும், குளம்புகளால் மேகங்களை அடித்தவரும், தம்முடைய சிங்கப் பற்களுடைய தேஜஸினாலும், நேத்திர காந்தியாலும், மற்ற ப்ரகாசத்தை அபேட்சியாமல் ப்ரகாசித்திருந்தார். பிடரி மயிர்களை உதறிக் கொண்டு மிருந்தார். மேலும் அவர் யக்ஞ ஸ்வரூபி. வராஹமாக அவதரித்தவர், பயங்கரமாகிய பார்வை உள்ளவரானாலும் ப்ராஹ்மணர்களைச் சந்தோஷமாகப் பார்த்தார். அப்பொழுது அவர் பூமி சென்ற வழியை வாக்கினாலேயே தெரிந்துகொண்டு ஜலத்திற்குள் சென்றார். வஜ்ஜிரத்தால் செய்யப்பட்ட மலைபோலக் கெட்டியான சரீரமுள்ள அந்த வராஹம் வேகமாகக் குதித்ததால் சமுத்திரமானது மிகவும் உபத்திரவப்பட்டு அலைகளாகிய நீண்ட கைகளை நீட்டிக் கொண்டு, "ஓ யக்ஞ வராஹ ரூபியான பகவன்! என்னைக் காப்பாற்றும்" என்று உரக்கக் கதறினது போலிருந்தது. அப்பொழுது மூன்று கணுக்களுள்ள (ப்ராதஸ்ஸவநம், மத்யந்தினஸவநம், ஸாயம்ஸவநமென்ற) யக்ஞ ரூபியான பகவான் கரையற்ற சமுத்திர ஜலத்தைத் தம்முடைய நீண்ட குளம்புகளால் பிளந்து கொண்டு பாதாளம் சென்று பூமியைக் கண்டார். ப்ரளய காலத்தில் இவர் ஜலத்தில் சயனம் செய்துகொண்டு பூமியை வயிற்றில் வைத்துக் காப்பாற்றினார். அவர் ஸகல ஜீவராசி களுக்கும் ஆதாரமாயிருப்பவர். அப்பொழுது அவர் தம்முடைய சிங்கப் பல்லால் பூமியைத் தூக்கிக் கொண்டு மிகவும் ப்ரகாசித்தார். அந்த ஜலத்தில் அசுரர்களுக்குள் முந்தியவனான இரண்யாக்ஷன் என்பவன் கதாயுதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அவருக்கெதிரில் ஓடிவந்தான். அவன் விசேஷ கோபமுள்ளவன். ஸகிக்க முடியாத பராக்கிரமுள்ளவன்.

யானையைச் சிங்கம் கொன்றார் போல அவர் பிரயாசம் இன்றி அந்த அசுரனைக் கொன்றார். மேலும் அவர் மலையின் தாழ்வரையில் விளையாடி, அதன் தாதுக்களால் சிவந்த கன்னங்களுள்ள யானைபோல ஹிரண்யனுடைய ரத்தத்தால் சிவந்த கன்னமுள்ளவரும், பச்சிலைபோல நீல வர்ணமுள்ளவராகவும் வெண்மை நிறமுள்ள பல்லின் நுனியில் பூமியை வைத்துக் கொண்டவராகவும் இருந்தார். அவரை ஈசுவர னென்று தெரிந்து கொண்டு மஹர்ஷிகள் ப்ரஹ்மதேவரை முன்னிட்டு வேத மந்திரங்களால் பின்வருமாறு துதித்தார்கள்.

36–48 ஒருவராலும் ஜயிக்கப்படாதவரே! யாகத்தை விருத்தி செய்பவரே! சத்துருவை ஜயித்தீர். வேதமாகிய உம்முடைய சரீரத்தை உதறிக் கொள்ளும். உமக்கு நமஸ்காரஞ் செய்கிறோம். உம்முடைய உரோம கூபங்களில் (மயிர்க் கால்களில்) சமுத்திரங்கள் வஸிக்கின்றன. நீர் பூமியைப் பாதாளத்திலிருந்து கொண்டுவருவதற்காக வராஹமாக அவதரித்தவர். அப்போர்ப்பட்ட உமக்கு நமஸ்காரம். ஓ தேவ! யக்ஞ ஸ்வரூபியாகிய உம்முடைய தோளில் காயத்ரி முதலிய சந்தஸ்ஸுகளும், மயிர்களில் தர்ப்பங்களும், நேத்திரங்களில் ஆஜ்யமும் (நெய்), கால்களில் சாதுர்ஹோத்ரமும் (ஹோதா முதலியவர்கள் செய்ய வேண்டிய காரியம்), முகத்தின் முன்பாகத்தில் இருக்கும் மூக்குகளில் ஸ்ரவமும், வயிற்றில் இடையும் (தக்ஷிண பாத்திரம்), காதுகளில் சமஸ்ஸும்; வாயில் ப்ராசித்திரமும், க்ரஸனமென்ற முகத்திற்குள்ளிருக்கும் பாகத்தில் க்ரஹங்களும் இருக்கின்றன. பக்ஷிப்பது அக்னிஹோத்ரமாகும். நீர் அடிக்கடி அவதாரத்தால்

ப்ரகாசிப்பதே தீக்ஷை (தீக்ஷணியேஷ்டி). உம்முடைய கழுத்தே உபஸ்தங்கள். உம்முடைய இரு சிங்கப் பற்களே பிராயணீய உதயநீய இஷ்டிகள். நாக்கானது ப்ரவர்க்கியமாகிறது. யக்ஞ ரூபியாகிய உம்முடைய தலையானது ஸப்யம், ஆஸத்யம் என்ற அக்கினிகளாகும். உம்முடைய ஐந்து ப்ராணன்களும் இஷ்ட காசயனங்களாகும். உம்முடைய ரேதஸ்ஸே சோமரசமாகும். பால்யம் முதலிய அவஸ்தையானது வனங்களாகும். உம்முடைய சரீரத்திலிருக்கும் மாம்சம் முதலிய தாதுக்கள் அக்கினிஷ்டோமம் முதலிய ஸமஸ்தைகளாகும். சரீரத்தின் சந்திகள் துவாதசாஹம் முதலிய சத்திரங்களாகின்றன. நீர் யக்ஞ ஸ்வரூபி (ஸோமம் இல்லாதவை யக்ஞங்கள்) க்ரதுஸ்வரூபி (ஸோமம் உள்ளவைகள் கிரதுக்களாம்) மேலும் அனுஷ்டானமே சந்திபந்தங்கள். ஸகல மந்திர ஸ்வரூபி, ஸகல தேவதா ஸ்வரூபி, ஸகல திரவிய ஸ்வரூபி, ஸகல யாக ஸ்வரூபி, ஸகல கிரியா ஸ்வரூபி, வைராக்கியத்துடன் கூடிய பக்தியால் சித்தம் ஸ்திரப்பட்டு அதனாலுண்டாகும் அபரோக்ஷ சாக்ஷாத்காரமாகிய ஞானத்தைக் கொடுப்பவர். ஸகல வித்தைகளையும் உபதேசிக்கும் குரு. அப்படிப்பட்ட பகவானாகிய உமக்கு நமஸ்காரம். ஓ பூமியைத் தரிக்கும் பகவன்! மலைகளுடன் கூடிய பூமியானவள் சிங்கப்பல்லின் நுனியைக் கொண்டு உம்மால் தூக்கப்பட்டவளாகப் ப்ரகாசிக்கிறாள். இந்த உம்முடைய உருவமானது சேற்றுடன் தாமரைக் கொடியைத் தந்தங்களில் தரித்து ஜலத்திலிருந்து வெளியில் வரும் சிறந்த யானையின் உருவம்போல் விளங்குகிறது. மேலும் சிங்கப்பல்லில் பூமியைத் தரித்துக் கொண்டிருக்கும் வேதரூபமாகிய உம்முடைய ஸ்வரூபமானது,

சிகரத்தில் மேகத்தைத் தரிக்கும் குலபர்வதம் போலிருக்கிறது. அரணியில் அக்னியிருப்பதுபோல எந்தப் பூமியினிடத்தில் உம்முடைய தேஜஸ்ஸை (தாரணம் முதலிய சக்தியை) வைத்திருக்கிறீரோ, எந்தப் பூமியானது உமக்குப் பத்தினியாக இருக்கிறாளோ, அந்தப் பூமிதேவியைத் தாவரங்கள் அடங்கிய ஜகத்திற்கு வாசஸ்தலமாகச் செய்யும். நீர் லோகத்திற்குப் பிதாவல்லவா? உமக்கும் இந்தப் பூமிக்கும் நமஸ்காரம் செய்கிறோம். ஓ ப்ரபுவே! பாதாளஞ்சென்று பூமியைக் கொண்டு வரலாமென்று உம்மைத் தவிர வேறு யாரால் நினைக்க முடியும்? ஆனாலும் ஸகல ஆச்சரியங்களுக்கும் இருப்பிடமாகிய நீர்

மிகவும் அற்புதமான இந்தக் காரியத்தைச் செய்தது ஒரு ஆச்சரியமல்ல. மிகவும் அற்புதமான இந்த ஜகத்தானது உம்மால் ஸிருஷ்டிக்கப்பட்டதல்லவா ஓ ஈச! தேவ மயமாகிய உம்முடைய சரீரத்தை உதறிக் கொள்ளும் போது பிடரி மயிர்களால் இறைக்கப்பட்ட மங்களரமான ஜலத்துளிகளால் தபோலோகம், சத்யலோகம் இவைகளில் வஸிக்கும் நாங்கள் பரிசுத்தர்களாகச் செய்யப்பட்டுக் காப்பாற்றப்பட்டோம். ஓ பகவான்! கரையற்ற கர்மங்களுடைய உம்முடைய சரிதங்கள் எல்லாவற்றையும் எவன் அறிய விரும்புகிறானோ, அவனுடைய எண்ணம் நிறைவேறுகிறது இல்லை. (பகவானுடைய சரிதங்கள் அறிய முடியாதவையென்பது கருத்து) மேலும் உம்முடைய யோக மாயையின் குண சம்பந்தத்தால் இந்த ஜகத்யாவும் மோகித்திருக்கிறது, அப்படிப்பட்ட மஹிமை பொருந்திய ஓ ஈச; எல்லா ஜகத்திற்கும் க்ஷேமத்தை உண்டு பண்ணும்.

48–52 ப்ரஹ்மிஷ்டர்களான அந்த மகர்ஷிகளால் இம்மாதிரி துதிக்கப்பட்ட பகவான் தம்முடைய குளம்புகளால் கலக்கப்பட்ட ஜலத்தில் (முன்போல ஜலத்தில் மூழ்காமலிருக்கும் வண்ணம் ஜலத்திற்குத் தரிக்கும் சக்தியைக் கொடுத்து) பூமியை ஸ்தாபித்துச் சென்றார். கானம் பண்ணத் தகுந்த மாயா விலாசங்களுள்ள ஸ்ரீ மஹாவிஷ்ணுவினுடைய இந்தக் கதையானது மிகவும் அழகானது. விரும்பத்தக்கது. இதைப் பக்தியுடன் கேட்பவர்கள், கேட்கச் செய்பவர்கள் ஆகிய இவர்களுடைய ஹிருதயத்தில் சீக்கிரமாக ஜனார்த்தனர் ப்ரசன்னராக வஸிக்கிறார். ஸகல மங்களத்தையும் கொடுக்கக்கூடிய ப்ரபுவாகிய அவர் எவனிடத்தில் சந்தோஷமடைகிறாரோ. அவனுக்கு எதுதான் கிடைக்காது? மற்ற அற்ப பலன்களால் என்ன பிரயோசனம்? பரமபுருஷன் தம்மையே பூஜிப்பவர்களுடைய ஹிருதயத்தில் வஸிப்பதுமல்லாமல் மேலான தம்முடைய பதத்தையும் அவர்களுக்குக் கொடுக்கிறார். ஆதலால் உலகத்தில் முன்காலத்தில் நடந்த பகவானுடைய சரிதங்களாகிய அமிருதத்தைக் காதுகளாகிய அஞ்சலி (சேர்ந்த கைகள்) யால் பானஞ் செய்த எந்தப் புருஷன்தான் போதுமென்று திருப்தியடைவான்? அந்த பகவத் கதை சம்சார பந்தத்தைப் போக்கக் கூடியது. விவேகமற்ற பசுக்கள் தவிர மற்றவர்களுக்கு அந்த பகவத் கதையில் ஆசையொழியாது.

அத்தியாயம்–14

திதிதேவி கர்ப்பத்தை அடைந்தது

1–4. மைத்ரேயர் முகமாக வராஹாவதாரஞ் செய்த ஸ்ரீ ஹரியினுடையய கதையைக் கேட்ட விதுரர் திருப்தியடையாமல் கை கூப்பிக்கொண்டு பகவத் கதையைக் கேட்பதாகிய விரதமுள்ளவராய் மைத்ரேயரை நோக்கி, "ஓ முனிகளுக்குள் சிறந்தவரே! யக்ஞ ஸ்வரூபியான அந்த ஹரியினால் தைத்யர் களுக்குள் முந்தியவனாகிய, ஹிரண்யாக்ஷன் கொல்லப் பட்டான்" என்று நீர் சொல்லக்கேட்டேன். பகவான் பூமியைத் தம்முடைய ஸ்ருங்கத்தின் நுனியால் ப்ரயாசமின்றிக் கொண்டு வந்தாரல்லவா? அப்பொழுது அவருக்கும் அந்த அசுரனுக்கும் யுத்தம் நேர்ந்த காரணமென்ன? ஓ ரிஷியே! அதனைச் சுருக்கமாகக் கேட்டும் என்னுடைய மனம் திருப்தியடையவில்லை. ஆதலால் அவனுடைய பிறப்பு முதலியவைகளைச் ச்ரத்தையுடன் கேட்க விரும்புகிறேன். அவைகளை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும் என்று மறுபடியும் கேட்டார்.

5–15. "ஓ வீரராகிய விதுரரே! நன்றாகக் கேட்டீர். அந்தப் பகவானுடைய அவதார கதையானது மனிதர்களுக்கு மிருத்யு பாசத்தைப் போக்கக்கூடியது, உத்தானபாதருடைய புத்திரனாகிய துருவனென்ற குழந்தையானவன் நாதரிடமிருந்து இந்த அவதாரக் கதையைக் கேட்டு ம்ருத்யுவின் தலையில் காலை வைத்து விஷ்ணுபதத்தை அடைந்தான். (துருவன் பார்ஷதர்களால் கொண்டுவரட்டட்ட விமானத்தில்

ஏறும்போது சமீபத்தில் வந்த ம்ருத்யுவின் தலையில் காலை வைத்து விமானத்தில் ஏறினான்), முன்னொரு காலத்தில் தேவர்களுக்குப் ப்ரஹ்மதேவரால் சொல்லப்பட்ட ஒரு சிறு இதிகாசகத்தை நான் கேட்டிருக்கிறேன்" என்று மைத்ரேயர் சொல்ல ஆரம்பித்தார். "ஓ விதுரரே! தக்ஷருடைய பெண்ணாகிய திதிதேவியானவள் மன்மதனால் பீடிக்கப்பட்டு, சந்தியா காலத்தில் தன்னுடைய பர்த்தாவாகிய மாரீசரை இச்சித்தாள். எப்படியெனில், அவர் சூரியன் அஸ்தமனத்தை அடையும்போது அக்கினியை நாவாகவுடையவரும், யக்ஞங்களுக்கு, அதிபதியுமான பரமபுருஷனை ஹவிஸ்ஸினால் பூஜித்து அக்னி ஹோத்திரசாலையில் உட்கார்ந்து த்யானம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது திதியானவள் அவர் சமீபம் சென்று, "ஓ வித்வான் ஆகிய மஹரிஷியே! மன்மதன் வில்லை கையில் எடுத்து, ரஸ்தாளி வாழையை யானை உபத்திரவித்தாற் போல உம்மை உத்தேசித்து என்னை பீடிக்கிறான். நான் தீனையாகவிருக்கிறேன், ஸபத்தினிகளுடைய (சக்களத்திகள்) ஸமிருத்திகளைப் பார்த்து எரிக்கப்படும் என்னிடத்தில் அனுக்கிரஹஞ் செய்யவேண்டும். எந்த ஸ்திரீகள் உம்மைப் போன்ற பர்த்தாவை அடைந்தார்களோ, எவர்கள் பர்த்தாவின் இடத்தில் அதிக பஹுமானத்தை வைத்தவர்களோ, அவர்களுடைய கீர்த்தியானது உலகங்களிலும் பரவும். பர்த்தாவே, பார்யையிடத்தில் நல்ல புத்திரனாகப் பிறக்கிறானென்று சாஸ்திரம் சொல்லுகிறது. முன்னொரு காலத்தில் எங்களுடைய பிதாவும், பெண்களிடத்தில் பிரியமுள்ளவருமான தக்ஷர் பெண்களை நோக்கி. "ஓ குழந்தைகளே!

யாரை நீங்கள் விவாகஞ் செய்து கொள்ளப் போகிறீர்கள்" என்று தனித்தனியே கேட்டுப் பெண்களுடைய அபிப்பிராயத்தை தெரிந்துகொண்டு உம்முடைய ஸ்வபாவத்தை அனுசரித்தவர்களான பதின்மூன்று பெண்களையும் உமக்குக் கொடுத்தார். (ஆனதால் எங்களுக்குள் பேதபுத்தி வைக்கக்கூடாதென்பது,) ஓ தாமரை மலர்போன்ற கண்களுள்ளவரே! உபத்திரவப்பட்டவர்கள் பெரியோர்களைச் சரணம் அடைந்தால் வீண்போகாதல்லவா? ஆதலால் எனக்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

16–29. இப்படி தீனையாயும், வெகுவாகப் பேசுகிறவளும், மன்மதனால் பீடிக்கப்பட்டவளுமான அந்தத் திதியை நோக்கி மாரீசரானவர், "ஓ பயந்தவளே! உன்னுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்கிறேன். தருமம், அர்த்தம், காமம் ஆகிய இந்தத் திரிவர்க்கமும் ஸ்திரீயினால் சித்திப்பதால், அவளுக்குப் பிரியமானதை எவன்தான் செய்யமாட்டான்? நல்ல களத்திரமுள்ள புருஷன் மற்ற ஆசிரமிகளுக்கும் உபகாரஞ் செய்து (அன்னம் முதலியவைகளைக் கொடுப்பதால்) தன்னுடைய ஆசிரம தர்மத்தை அனுஷ்டிப்பதால், கப்பலால் சமுத்திரத்தை தாண்டுவது போலத் துக்க சமுத்திரத்தைத் தாண்டுகிறான்' க்ஷேமத்தை விரும்பிய புருஷனுக்கு எவளைப் பாதி சரீரமென்று சொல்லுகிறார்களோ, புருஷன் எவளிடத்தில் ஸகல பாரத்தையும் ஒப்பித்துக் கவலையற்றவனாகச் சஞ்சரிக்கிறானோ. தூக்கத்திற்கு அதிபதி (அரசன்) திருடர்களை ஜயிப்பது போல், எந்த ஸ்திரீயின் பலத்தால் க்ருஹஸ்தன் மற்ற ஆசிரமிகளால் ஜயிக்க

முடியாதவையான இந்திரியங்களைச் சிரமமின்றி அடக்குகிறானோ. (ஸ்திரீயுள்ளவனுடைய இந்திரியங்கள் பெரும்பாலும் பர ஸ்திரீகளிடம் செல்லுகிறது இல்லை யென்று கருத்து) ஓ வீட்டிற்கு அதிபதியாய் இருப்பவளே! அப்படிப்பட்ட பலவகையிலும் உபகாரஞ் செய்கிற உனக்கு என் ஆயுள் முழுவதும் பதிலுபகாரஞ் செய்தாலும் ஜன்மாந்திரங்களில் செய்தாலும் அது பதிலாகாது. மேலும் குணத்தைக் க்ரஹிக்கும் எவர்கள் பதில் செய்வோம் என்று நினைக்கிறார்களோ, அவர்கள் பதில் செய்ய முடியாதவர்களே யாவார்கள். ஆனாலும் உனக்குப் புத்திரன் பிறக்கும் உபாயத்தைச் செய்கிறேன். என்னை நிந்திக்காமல் ஒரு முகூர்த்தக் காலம் பொறுத்துக்கொள்: ஏனென்றால் இந்தக் காலமானது மிகவும் பயங்கரமானது. பயங்கரங்கள் ஆகிய ப்ராணிகள் சஞ்சரிக்கக்கூடியது. இந்தச் சமயத்தில் ருத்ரருடைய பூதகணங்கள் சஞ்சரிப்பார்கள். ஓ பதி விரதையே, இந்த சந்தியா காலத்தில் பரமசிவன் வ்ருஷபத்தின் மீதேறித் தம்முடைய பார்ஷத கணங்களுடன் எங்கும் சஞ்சரிக்கிறார். அந்தப் பரமசிவனுடைய ஜடைகளில், சுடலையில் வீசும் காற்றினால் கிளம்பிய தூளிகள் படிந்திருக்கின்றன, நான்கு புறத்திலும் பறந்து மிருக்கின்றன. காந்தி யுள்ளவைகளுமாகவுமிருக்கின்றன, மேலும் அவர் பொன்னிறமான தம்முடைய சரீரத்தில் விபூதியைத் தரித்துக் கொண்டிருக்கிறவர், அப்படிப்பட்ட உன்னுடைய தேவரன் (பர்த்தாவின் சகோதரன்) மூன்று கண்களால் பார்த்துக் கொண்டிருக்கிறார். லோகத்தில் அவருக்கு பந்துவாவது, மற்றவனாவது (உதரசீனன்), மித்திரனாவது, சத்ருவாவது இல்லை, (எல்லாரிடத்திலும் சமமாயிருப்பவரென்று கருத்து),

அவருடைய சரணங்களால், நிர்மால்யம் போல் தள்ளப்பட்டதும், தோஷமுள்ளதென்று நிச்சயிக்கப் பெற்றதுமான மாயையை (அவருடைய விபூதியை) சம்சாரிகளான நாங்கள் மிகுந்த ப்ரசாதமென்று விரும்புகிறோம். அவித்யையைத் தாண்ட விரும்பிய வித்வான்கள் அவருடைய தோஷமற்ற சரிதத்தைக் கானஞ் செய்கிறார்கள். அவருக்குச் சமமானவனும், மேலானவனும் உலகத்தில் ஒருவருமில்லை. அப்படிப் பட்ட சாதுக்களுக்கதிபதியான அவர் பிசாசத்தின் நடை போன்ற ஆசாரத்தை அனுஷ்டிக்கிறார். பின்னும் அவர் ஆத்ம ஸ்வரூபத்திலேயே ரமிப்பவர். அவருடைய அபிப்ராயத்தை (உலகத்திற்குப் புத்தியைச் சொல்கிறார் என்பதை) அறியாதவர்களும், நாய்க்கு ஆகாரமாக இருக்கும் சரீரத்தையே ஆத்மா என்று நினைத்து, அதை நல்ல வஸ்திரங்களாலும், மாலை களாலும், ஆபரணங்களாலும், சந்தனம் பூசுவது முதலியவைகளாலும் அலங்கரிப்பவர்களுமான அக்ஞர்கள் அவருடைய சரிதத்தைப் பரிகசிப்பார்கள். அவரால் ப்ரஹ்மா முதலியவர்கள் ஸ்ருஷ்டி முதலிய வேலைகளில் ஏற்படுத்தப்பட்டு, தங்கள் தங்கள் அதிகாரத்தைக் காப்பாற்றுகிறார்கள். இந்த ஜகத்திற்கு அவரே காரணம், மாயையானது அவருக்குச் ஸ்வாதீனப்பட்டிருக்கிறது. அப்போர்ப்பட்ட திவ்ய விபூதிகள் பொருந்திய பரமேசுவரன், பிசாசத்தின் செய்கையை அனுஷ்டிப்பது என்ன காரணத்தால் என்று ஊகிக்க முடியாததாக இருக்கிறது" என்றார்.

30–36. அதனைக்கேட்ட திதியானவள் மன்மதனால் கலங்கின இந்திரியங்களுள்ளவாய்த் தாசிபோல் வெட்கத்தை விட்டு அவருடைய

வஸ்திரத்தைப் பிடித்துக் கொண்டாள். அந்த மாரீசர் செய்யக்கூடாத அந்தக் காரியத்தில் தம்முடைய பார்யை நிர்பந்தம் செய்வதை அறிந்து அதிர்ஷ்ட ஸ்வரூபியான பரமேசுவரனுக்கு நமஸ்காரம் செய்து ரகஸ்யத்தில் அவளுடன் சேர்ந்தார். பிறகு ஸ்நானஞ் செய்து ப்ராணாயாமஞ் செய்து மௌனமாகத் தோஷ மற்றதும், சாஸ்வதமானதும், தேஜோ ரூபமாயுமுள்ள பரமாத்மாவைத் தியானஞ் செய்தார்.

ஓ பரத வம்சத்தில் பிறந்தவரே! திதி தேவியானவள் அந்தக் கர்மதோஷத்தால் வெட்கமடைந்து அந்த மஹர்ஷியிடம் வந்து தலை குனிந்தவளாக, "ஓ பிராமணோத்தம! ஸகல பூதங்களுக்கும் அதிபதியுமான பரமசிவனுக்கு நான் அபராதஞ் செய்தேனெல்லவா? அதனால் அவர் கோபங்கொண்டு என்னுடைய வயிற்றில் உண்டாகும் கர்ப்பத்தை கெடுத்து விடாமல் இருக்கும்படி அனுக்கிரகிக்க வேண்டும். மஹாதேவரும் உக்கிரரும், எல்லாவற்றையும் உண்டுபண்ணுகிறவரும், மங்களத்தைச் செய்பவரும், பக்தர்களைக் காப்பாற்று பவரும் சத்துருக்களைச் சிக்ஷிப்பவரும். அஸத்துக்கள் இடத்தில் கோபமுள்ளவரும் ஆகிய ருத்ரருக்கு நமஸ்காரம். வேடர்களாலும் (தயையில்லாதவர்கள்) தயவுசெய்யக் கூடிய ஸ்திரீகளாகிய நம்மிடத்தில் அனுக்கிரக ஸ்வபாவமுள்ளவரும், ஸதீதேவிக்குப் பர்த்தாவுமான அந்த பகவான் தயவு செய்யட்டும் (ஸ்திரீகளுடைய ஸ்வபாவத்தை அறிந்தவர்) என்று கேட்டுக்கொண்டாள்.

37–51. இப்படித் தன்னுடைய கர்ப்பத்திற்கு க்ஷேமத்தை விரும்புகிறவளும், நடுங்குகிறவளும்,

மூவுலகத்திற்கும் தகுந்தவளும். தமது பார்யையுமான திதிதேவியை அந்த மாரீசர் நோக்கி, சந்தியா கால நியமங்களை முடித்துக் கொண்டு, "ஓ கோப ஸ்வபாவம் உள்ளவளே! உன்னுடைய சித்தம் அசுத்தமாக விருந்தாலும், முஹூர்த்த தோஷத்தாலும் (ஸந்தியா காலமாயிருந்தபடியால்), என்னுடைய கட்டளையை மீறினதாலும், தேவர்களை அவமதித்ததாலும் உனக்குத் துஷ்டர்களான இரண்டு பிள்ளைகள் பிறப்பார்கள். அவர்கள் மூன்று உலகங்களையும் அந்தந்த லோக பாலகர்களையும் அடிக்கடி கதறச் செய்வார்கள். யாதொரு அபராதமும் செய்யாத ப்ராணிகள் அவர் களால் அடிக்கப்பட்டு மிகவும் தைன்யத்தை அடை வார்கள், உலகத்திலுள்ள ஸ்திரீகள் நிக்கிரகிக்கப் படுவார்கள். பெரியோர்களுக்கு அவர்கள் கோபத்தை யுண்டுபண்ணுவார்கள். அப்பொழுது லோகத்திற்கு அதிபதியும், அவைகளைப் பரிபாலிப்பவருமாகிய பகவான் கோபங்கொண்டு பூமியில் அவதரித்து வஜ்ராயுதத்தைத் தகித்த இந்திரன் பர்வதங்களை யுடைப்பதுபோல அவ்விருவர்களையும் கொல்லப் போகிறார்', என்று சொன்னார். அதைக் கேட்ட திதியானவள் பர்த்தாவை நோக்கி, "ஓ பிரபுவே! என் னுடைய புத்திரர்களைச் சக்ரபாணியாகிய பகவான் கொல்லட்டும், ப்ராஹ்மணர்களிடமிருந்து அவர் களுக்கு வதம் நேரிடவேண்டாம்" ப்ராஹ்மணர்களி டையே பயத்தை உண்டுபண்ணுகிறவர்களும் எந்தெந்த ஜன்மத்தை அடைந்தாலும், அவ்விடத்திலிருக்கும் நரகிகளும் (பாபிகளும்) அவர்களிடத்தில் தயவு செய்யமாட்டார்கள் என்றாள், அதைக் கேட்ட மாரீசர் திதியை நோக்கி, செய்த குற்றத்தைப் பற்றி உனக்குப் பச்சாதாபம் நேர்ந்தபடியாலும் உடனே

யுக்தம், அயுக்தம் இவைகளை விசாரித்ததாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவினிடத்திலும், பரமசிவனிடத்திலும் கௌரவ புத்தி உண்டானதாலும், என்னிடத்தில் பிரியமுண்டானதாலும் உன்னுடைய பிள்ளையாகிய ஹிரண்யகசிபுவின் புத்திரர்களுக்குள் ஒருவன் பெரியோர்களால் ஒப்புக்கொள்ளக் கூடியவனாக இருப்பான். பகவானுடைய குணங்களுடன் சுத்த மாகிய அவனுடைய கீர்த்தியையும் சேர்ந்து ஜனங்கள் கானம் செய்வார்கள்.

தாழ்ந்த மாற்றுள்ள தங்கத்தை அக்கினியில் புடம்போடுவது முதலிய உபாயங்களால் ஸுத்த ஸ்வர்ணமாகச் செய்வது போலப் பெரியோர்கள் அந்தக் குழந்தையின் ஸ்வபாவத்தை அனுசரிப்பதற்காக (தாங்களும் அவனைப்போல ஆகிறதற்காக) ஓரிடத்தி லும் துவேஷம் செய்யாமலிருப்பது முதலிய உபாயங் களால் தங்களுடைய ஆத்மாவைச் சுத்தப்படுத்திக் கொள்வார்கள்.எவருடைய ப்ரசாதத்தால் இந்த ஜகத் ப்ரகாசிக்கிறதோ எவருடைய ஸ்வரூபமாக இருக்கிறதோ அப்பேர்ப்பட்ட ஆத்மசாட்சியாக பகவான் அந்தக் குழந்தையினுடைய உண்மையான ஞானத்தால் சந்தோஷத்தை அடைவார். மேலும் அவன் பகவத் பக்தர்களுக்குள் சிறந்தவன்; அளவற்ற ஞானமுள்ளவன்; மிகுந்த ப்ரபாவமுள்ளவன்; பெரியோர்களுக்கும் பெரியவன்; மேலும் அவன் விசேஷ பக்தியால் சுத்தமான தன்னுடைய மனத்தில் ஸ்ரீமந் நாராயணனைத் தியானித்துக் கொண்டு, தேகம் முதலியவைகளின் அபிமானத்தை விட்டு விடுவான்.

பின்னும் அந்தப் புத்திரன் நல்ல ஸ்வபாவ

முள்ளவன். நல்ல குணங்களுக்கு உற்பத்தி ஸ்தானம்; பிறருடைய சம்பத்தைப் பார்த்துச் சந்தோஷப்படு கிறவன்; பிறருடைய துக்கத்தால் தானும் துக்கிப்பவன்; ஸத்ருவற்றவன்; வெயிலால், ஜகத்திற்கு உண்டாகும் தாபத்தைச் சந்திரன் போக்கடிப்பது போல லோகத்தின் துக்கத்தைப் போக்கடிப்பான். மேலும் உன்னுடைய பௌத்திரனாகிய அவன், தாமரை, மலர்போன்ற கண்களுள்ளவரும், பக்தர்களுடைய இஷ்டத்திற்குத் தக்கபடி உருவத்தைத் தரிப்பவரும், லக்ஷ்மிதேவியாகிய ஸ்திரீயை அலங்காரமாக உடையவரும், ப்ரகாசிக்கும் குண்டலங்களால் அழகான முகத்தை யுடைய வருமாகிய பகவானை உள்ளிலும், வெளியிலும், நேரிலும் தரிசிப்பான், என்று அனுக்கிரகித்தார். அதனைக் கேட்டு திதியானவள் தன்னுடைய புத்திரர் களுக்குப் பகவானால் வதம் நேரிடப்போகிறதாகத் தெரிந்து கொண்டு விசேஷ உற்சாகத்தை யடைந்தது மன்றி, பௌத்திரன் (பிள்ளையின் பிள்ளை) பகவத் பக்தனாக ஆகப்போகிறான் என்பதைத் தெரிந்து கொண்டதனால் மிகவும் சந்தோஷத்தையும் அடைந்தாள்.

அத்தியாயம்–15

ஜய விஜயர்களுடைய சாபம்

1–10 திதியானவள் சத்துருக்களுடைய தேஜஸ்ஸைப் போக்கடிக்கக்கூடிய அந்த காச்யபர் வீரியத்தை ஆயிர வருஷங்கள் (தேவர்களுக்கு இதனால் உபத்திரவம் நேரிடுமோவென்று சந்தேகப்பட்டுக் கொண்டு) தரித்திருந்தாள். அந்தக் கர்ப்பத்தினுடைய தேஜஸினால் சூரியன் முதலியவைகள் காந்தியற்றவை களாயின. லோகபாலர்களுக்கும் தேஜஸ் குறைந்தது; திக்குகளை இருள் சூழ்ந்து கொண்டது. அப்பொழுது தேவர்கள் ப்ரஹ்மதேவரிடம் சென்று, ஓ ப்ரபுவே, எதனால் நாங்கள் மிகவும் பயப்படுகிறோமோ, அந்த இருள் உண்டான காரணம் உமக்குத் தெரியுமா? உம்முடைய ஞானமானது காலத்தாலும் குறைவுபடு கிறதில்லை;; ஆதலால் உமக்குத் தெரியாத தொன்றும் இல்லை; ஓ தேவர்களுக்கும் தேவரே! ஜகத்திற்கு அதிபதியே! லோகபாலர்களுக்கும் அதிபதியே; எல்லாருடைய அபிப்ராயத்தையும் அறிந்தவரே! விஞானமாகிய பலமுள்ளவரும், மாயையால் ப்ரஹ்ம சரீரத்தை அடைந்தவரும், ரஜோ குணத்தை அங்கீகரித்தவரும் ப்ரபஞ்சத்திற்குக் காரணரும், ப்ரமாணங்களால் அறிய முடியாதவருமாகிய உமக்கு நமஸ்காரம்.

மேலும் நீர் ஜீவர்களைப் பரிபாலிப்பவர்; ஸகல லோகங்களும் உம்மிடத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நீர் எல்லாவற்றிற்கும் மேலானவர். காரிய காரண ஸ்வரூபியாயிருப்பவர்; அப்படிப்பட்ட உம்மை யார்

பலனை யுத்தேசியாமல் பூஜிக்கிறார்களோ அவர்கள் இந்திரியங்கள்;, மனம், ஸ்வாசம், ஆகிய இவைகளை ஜயித்து பக்குவமான யோகமுள்ளவர்களாக உம்முடைய ப்ரசாதத்தை அடைகிறார்கள்.

அவர்களுக்கு ஓரிடத்திலும் அவமானம் நேரிடுகிறது இல்லை. பசுக்கள் கயிறுகளால் கட்டப்படுவது போல் ஸகல ப்ரஜைகளும், உம்முடைய வாக்காகிய வேதங்களால் கட்டப்பட்டு, உம்மைப் பூஜிக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் நியந்தாவாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறோம். திதியினால் தரிக்கப்பட்டதும், காசியபர் உடைய வீரியத்தாலுண்டானதுமான கர்ப்பமானது அக்கினி கட்டையில் விருத்தியடைவது போல் வளர்கிறது. அதனால் திக்குகள் இருளால் மூடப்பட்டு இருக்கின்றன (நல்ல காரியங்கள் நடக்கவில்லை! ராத்திரி பகல் என்ற பிரிவு இல்லாததால்;) ஆதலால் நீர் உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்யும்; கருணை நிறைந்த பார்வையால் ஆபத்தை யடைந்த எங்களைப் பார்க்க வேண்டும் என்றார்கள்.

11–30 சிறந்த கைகளுள்ள ஓ விதுரரே! பகவான் ஆகிய ப்ரஹ்மதேவர் சிரித்து, (திதியின் கெட்ட செய்கையை நினைத்து) அழகான வார்த்தையால் தேவர்களைச் சந்தோஷிக்கச் செய்து கொண்டு பதில் சொல்ல ஆரம்பித்தார். எப்படியெனில், "ஓ தேவர்களே! என்னுடைய மானச புத்திரர்களும் உங்களுக்கு முந்தியவர்களுமான சனகர் முதலியவர்கள். விஷயங்களில் ஆசையில்லாதவர்களாய் ஆகாசத்தின் வழியாக லோகங்களில் சஞ்சரித்தார்கள். ஒருகால் அவர்கள் நிர்மல ஸ்வபாவமுள்ள பகவானாகிய மஹாவிஷ்ணுவின்

லோகமாகிய வைகுண்ட லோகம் சென்றார்கள். அந்த லோகம் எல்லோராலும் நமஸ்கரிக்கப்பட்டது! அவ்விடத்தில் வஸிப்பவர்கள் எல்லோரும் ஸ்ரீமந் நாராயணனுடைய சரீரம் போன்ற தேகமுள்ளவர்கள்! அவர்கள் ஒரு பயனையும் உத்தேசியாமலேயே பகவானை ஆராதிப்பவர்கள்; மேலும் அவ்விடத்தில் எல்லாவற்றிற்கும் முந்தியவரும், வேதங்களாலேயே அறியக் கூடியவரும், தர்ம ஸ்வரூபியுமான பகவான் சத்ய மூர்த்தியாகத் தம்முடைய பக்தர்களான நமக்கு க்ஷேமத்தைச் செய்து கொண்டு வஸிக்கிறார்.

அந்த லோகத்தில் கைவல்யமே சரீரத்துடன் வஸிக்கிறதென்று நினைக்கக் கூடியதும், நைச்ரேயஸம் என்ற பெயருள்ளதுமான ஒரு வனமிருக்கிறது; அதிலுள்ள மரங்கள் இஷ்டமான வஸ்துக்களைக் கொடுக்கக்கூடியவை; எல்லா ருதுக்களிலும் ஏற்படக் கூடிய அழகுள்ளது; அவ்விடத்தில் தேவர்கள் தங்களுடைய ஸ்திரீகளுடன் பகவானுடைய திவ்ய சரிதங்களைக் கானஞ் செய்கிறார்கள். அவைகள் ஜனங்களுடைய பாபத்தைப் போக்கக் கூடியவை; மேலும் அவர்கள் ஜலத்தின் மத்தியில் மலர்ந்திருக்கும் மாதவீ புஷ்பங்களுடைய வாசனையுள்ள காற்றையுங் கூட கவனியாமலிருக்கிறார்கள். (போகத்திற்கு சாதனங்களிருந்தாலும், அவைகளில் ஆசைப்படாமல் பகவத் குணங்களைக் கானம் செய்கிறார்கள்.)

பின்னும் அவ்விடத்திலிருக்கும் சிறந்த வண்டானது உரக்கக் கத்தும்போது, அதனைக் கேட்ட பாராவதங்கள் (புறாக்கள்), குயில்கள், சாரஸங்கள், சக்கரவாகங்கள், நச்சுக்குருவிகள், ஹம்சங்கள்,

கிளிகள், தித்திரிகள் (நெருப்புக்கோழிகள்), மயில்கள் ஆகிய பறவைகள் தங்களுடைய கோலாஹல சப்தத்தை நிறுத்தி விட்டு, 'இந்த வண்டானது பகவத் குணங்களைக் கானம் செய்கிறதோ? என்று ஒரு க்ஷண காலம் மௌனங்களாக இருக்கின்றன. மேலும், துளஸிமாலையுள்ள பகவான் துளஸியின் வாசனையில் பிரீதியுள்ளவராக இருப்பதைப் பார்த்து, மந்தாரம், குந்தம், மருதாணி, நீலோத்பலம், சம்பகம், அர்ண மென்ற புஷ்பம், புன்னை, நாகை மகிழம், தாமரசம், பாரிஜாதம் ஆகிய புஷ்பங்கள் துளஸியினால் செய்யப்பட்ட துபசைப் பற்றிப் புகழ்கின்றன. (அவ்விடத்தில் இருப்பவர்கள் மாத்சரியம் இல்லாத வர்களென்பது கருத்து.) மேலும், அவ்விடத்தில் ஸ்ரீ பகவானுடைய பாதாரவிந்தத்தில் நமஸ்காரஞ் செய்த மாத்திரத்தால் கிடைத்தவைகளும் (கர்மத்தால் கிடைத்தவர்களில்லையென்பது கருத்து).

வைடூர்யம், மரகதம், ஸ்வர்ணம் ஆதிய இவைகளால் செய்யப்பட்டவைகளுமான பக்தர்கள் உடைய விமானங்கள் வெகுவாக இருக்கின்றன. அந்த விமானத்திலிருப்பவர்களும் பகவானிடத்திலேயே மனமுள்ளவர்களுமான பக்தர்களுக்கு அவ்விடத்தில் இருக்கும் அழகான இடுப்பு, சிரிப்பு முதலியவைகளால் ப்ரகாசிக்கும் முகமுள்ள ஸ்திரீகளால் காமத்தை உண்டுபண்ண முடியவில்லை. பின்னும் அவ்விடத்தில் பகவானுடைய க்ருஹமானது தங்க வேலைகளால் அழகான ஸ்படிகச் சுவருள்ளதாக இருக்கிறது, அதில் லக்ஷ்மீ தேவியானவள்; தன்னுடைய ஸ்வரூபத்துடன், பாதங்களில் அணிந்த பாதசரங்களால் இனிமையான சப்தமுள்ளவளாகி, தோஷமற்றவளாய், (சஞ்சலையென்ற

தோஷமற்றவளாக) தன்னுடைய கையிலிருக்கும் தாமரைப் புஷ்பத்தால் அவ்விடத்திலுள்ள தங்கத் தூள்களைப் பெருக்குகிறவள் போலக் காணப்படுகிறாள். அவளுடைய அனுக்கிரகத்திற்காகவே ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் முயலுகிறார்கள்.

மேலும் ஓ தேவர்களே! அந்த லக்ஷ்மீதேவியானவள் தன்னுடைய உத்யானத்தில் பவழக்கரையுள்ளவைகளும் நிர்மலமாகிய ஜலமுள்ளவைகளுமான ஓடைகளில் தன்னுடைய தோழிகளுடன் துளஸியினால் பகவானைப் பூஜிக்கிறாள். அப்பொழுது ஜலத்தில் ப்ரதிபிம்பித்தும், அழகான தலைமயிருள்ளதும், மேலான மூக்குள்ளதுமான தன்னுடைய முகத்தைப் பார்த்து, பகவானால் சும்பனஞ் செய்யப்பட்டதென்று நினைத்தாள். (லக்ஷ்மியின் அழகும் பகவத்ததீனம்) எந்தக் கதைகளைக் கேட்ட மனிதர்களுக்குப் புண்யமும், அதிருஷ்டமும் குறைகின்றதோ, நரகத்தை அடைகிறார்களோ, அப்போர்ப்பட்டவைகளும், விவேகத்தைப் போக்கக் கூடியவைகளும். அர்த்தம், காமம் ஆகிய இவைகளைப் பற்றியவைகளுமான கெட்ட கதைகளைக் கேட்பவர்களும், பாபத்தைப் போக்கடிப்பவராகிய பகவானுடைய ஸ்ருஷ்டி முதலியவைகளைச் சொல்வதில் பிரியமற்றவர்களுமான ப்ராணிகள் அந்த வைகுண்டம் செல்கிறதில்லை.

தேவர்களான நம்மாலும் விரும்பப்பட்டதும், தர்மம், ஞானம் ஆகிய இவைகளுக்கு சாதனமுமான மனுஷ்ய ஜன்மத்தையடைந்தும் எவர்கள் பகவான் உடைய மாயையால் மோஹித்து அவரை ஆராதிக்க வில்லையோ, அவர்களும் அவ்விடம் செல்லுகிறது

இல்லை. எவர்கள் தேவர்களுக்கு தேவராகிய பகவானை அனுசரிக்கிறார்களோ, அவர்கள் நம்மாலும் ஆசைப்படக் கூடிய சுபாவமுள்ளவர்களேயாம். அவர் களுக்கு யமனுடைய உபத்திரவம் இல்லை. எவர்கள் ஒருவருக்கொருவர் தங்களுடைய யஜமானனாகிய பகவானுடைய குணங்களைக் கானம் செய்து, அதனால் தேகம் பரவசமாகி மயிர்க்கூச்சல் உண்டானவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் மேற்சொல்லிய வைகுண்டஞ் செல்வார்கள்.

ஜகத்திற்கு அதிபதியாகிய ஸ்ரீமந் நாராயணனுடைய வாசஸ்தலமும், ஸகல ஜகத்தினால் கொண்டாடக் கூடியதும்; தேவார்ஹமாயும், விசித்திரங்களான சிறந்த விமானங்களுடைய காந்தியுள்ளதுமான அந்த வைகுண்டத்திற்கு அம்முனிகள் தங்களுடைய யோகமாயா பலத்தால் சென்று, பரமானந்தத்தை அடைந்தார்கள். அவ்விடத்தில் அந்த மஹரிஷிகள் அற்புதமான விஷயங்களைப் பார்த்தும் அவைகளில் ஆசைப்படாமல் (பகவத் தரிசனத்தில் ஆசையால்) ஆறு ப்ராகாரங்களைத் தாண்டி ஏழாவது ப்ராகாரம் சென்று அவ்விடத்தில் இரண்டு துவாரபாலகர்களைக் கண்டார்கள். அவர்கள் ஒரே வயதுள்ளவர்கள்! விலையுயர்ந்த தோள் வளைகள், குண்டலங்கள், கிரீடம் ஆகிய இவைகளால் அழகாயிருப்பவர்கள். கையில் கதாயுதத்தைத் தரித்தவர்கள்; வனமாலை யினால் அலங்கரிக்கப்பட்டவைகள். கருமையான நிறமுள்ள நான்கு கைகளுள்ளவர்கள்.

மேலும், அவர்களுடைய முகத்தில் வக்கிரமான புருவங்களும், சிவந்த கண்களும்; பெரிய மூக்குகளும்

இருக்கின்றன. அப்பொழுது அந்த முனிகள் ஸ்வர்ணத்தாலும், வஜ்ரத்தாலும் செய்யப்பட்ட கதவுகளுள்ள ஆறு ப்ராகாரங்களுக்குள் ப்ரவேசித்தது போல, ஏழாவது ப்ராகாரத்திலும் த்வார பாலகர் களான அவ்விருவர்களும் பார்த்துக் கொண்டிருக்க, அவர்களைக் கேட்காமலேயே உள்ளே சென்றார்கள். அவர்கள் சமதிருஷ்டி உள்ளவர்களாகையால் எங்கும் பயமில்லாமல் சஞ்சரிப்பவர்கள். அவர்களை ஒருவரும் தடுக்கிறதில்லை. இப்படிப் பகவானைத் தரிசிப் பதற்காக உள்ளே செல்லுகிறவர்களும், வஸ்திரமில்லாத வர்களும், மிகவும் வயது சென்றவர்களானாலும், ஐந்து வயதுள்ளவர்கள் போல் தோன்றுகிறவர்களும், ஆத்மாவின் உண்மையை அறிந்தவர்களும், தடுக்கக் கூடாதவர்களுமாகிய அந்தச் ஸனகர் முதலிய முனிவர்களைப் பார்த்து, அந்தத் த்வாரபாலகர்கள் இருவர்களும் அவர்களுடைய தேஜஸை (தைரியத்தைப்) பற்றி பரிகாசஞ் செய்து பகவானுக்குப் ப்ரதிகூல ஸ்வபாவமுள்ளவர்களாகிப் பிரம்பினால் அவர்களைத் தடுத்தார்கள்.

31–34 இப்படி ஸகல தேவர்களும் பார்த்துக் கொண்டிருக்கும் போது ஸ்ரீ பகவானுடைய த்வார பாலகர்களால் தடுக்கப்பட்ட பூஜ்யர்களான அந்த மஹரிஷிகள், ஸகல லோகத்திற்கும் மிகுந்த ஸுகிருத்தாகிய பகவானுடைய தரிசனத்திற்கு விக்கினம் நேர்ந்ததால் கோபம் கொண்டு, கலங்கிய கண்களுடன் பகவானுக்கு மிகுந்த சிச்ருஷையைச் செய்து, அதனால் வைகுண்டவாசத்தை அடைந்து எல்லாவற்றையும் சமமாகப் பார்க்கும் ஸ்வபாவமுள்ள இந்த லோக ஜனங்களுக்குள் இவர்களுடைய

ஸ்வபாவம் வேறாகக் காணப்படுகிறதே, இதென்ன? ஓ த்வாரபாலகர்களே! மிகவும் சாந்தரும், துவேஷமற்ற வருமாகிய அந்த மஹாபுருஷனிருக்குமிடத்தில் யார் தான் போகக்கூடாது? (எல்லோரும் போகலாமென்று கருத்து.) நீங்களிருவர்களும் கபட ஸ்வபாவமுள்ளவர்கள் ஆகையால் உங்களைப் போல் மற்றவர்களும் கபடமாக இருப்பார்களென்று பிறரைப் பற்றிச் சந்தேகிக்கிறீர்கள். (பகவத் பக்தி இல்லாதவர்கள் இவ்விடம் வரமாட்டார்கள். பகவான் மிகவும் சாந்தராகையால் அவரிடத்தில் பயப்படவேண்டியது இல்லை. ஆகையால் நீங்கள் மிகவும் துஷ்டர்கள் என்று கருத்து) ஸகல ஜகத்தையும் தம்முடைய வயிற்றில் வைத்துக் காப்பாற்றும் பகவானுக்கு பேதபுத்தி இல்லை.

குடத்திற்குள் இருக்கும் ஆகாசமானது எப்படி மஹாகாசத்தில் அடங்கியதோ, அப்படியே பரமாத்மாவினிடத்தில் தாங்கள் அடங்கியவர்கள் என்று வித்வான்கள் பார்க்கிறார்கள். அப்பேற்பட்ட பகவானிடத்தில் மற்றவர்களிடத்தில் போல் பேத புத்தியாலுண்டாகும் பயமானது தேவர்கள் போல வேஷந் தரித்த உங்களால் உண்டு பண்ணப்பட்டது. ஆனதால் மந்தபுத்தியுள்ளவரும் ஸ்ரீ பகவானுடைய வேலைக்காரர்களுமாகிய உங்களுடைய க்ஷேமத் திற்காகவே யோசித்துச் சொல்லுகிறோம். நீங்கள் பேதபுத்தி உள்ளவர்களாகையால், காமம், குரோதம், உலோபம் ஆகிய மிக்க பாபிகளாகிய மூன்று சத்ருக்கள் வஸிக்கும் பூலோகத்திற்குச் செல்லுங்கள், என்றார்கள்.

35–36 அதனைக் கேட்ட அவ்விருவர்களும், ஸ்ரீ மஹா விஷ்ணுவின் வேலைக்காரர்களானாலும், ப்ராஹ்மண சாபம் அநேக அஸ்திரங்களாலும் நிவர்த்திக்க முடியாதது, என்ற நிச்சயமுள்ளவர்களாகி மிகவும் பயந்து அம்முனிவர்களுடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டு அவர்களை நோக்கி, ஓ மஹரிஷிகளே! குற்றஞ் செய்தவர்களான எங்களுக்குத் தக்கபடி சிக்ஷை விதித்தீர்கள். (தங்களிடத்தில் கொஞ்சமேனும் குற்றமில்லை யென்பது கருத்து.) ஆனாலும் நீங்கள் எங்களிடத்தில் கிருபை செய்து, பச்சாதாபமடைந்து, எங்களை அனுக்கிரஹிக்க வேண்டும். எங்களுடைய புத்திக் குறைவினால் நாங்கள் கீழுலகஞ் சென்றாலும், அவ்விடத்தில் எங்களுக்கு மோஹம் உண்டாகாமல் இருக்க வேண்டும். அப்படி மோஹம் உண்டானாலும் பகவானுடைய ஞாபகமிருக்க வேண்டும். அஃதிருந்தால் ஈசுவரனுடைய ஆக்ஞையை அதிக்ரமித்ததாலுண்டான தோஷமும் நீங்கிவிடும், என்று கேட்டுக் கொண்டார்கள்.

37–45 அப்பொழுது பெரியோர்களுக்கு மனோகரராகிய பகவான் தம்மைச் சார்ந்த த்வார பாலகர்கள் சாதுக்களுக்கு குற்றஞ் செய்தார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு, பரமஹம்சர்களான மஹர்ஷிகளாலும் தேடக்கூடிய தம்முடைய பாதங்களை அசைத்துக் கொண்டு (கால்நடையாக) லக்ஷ்மீதேவி யுடன் அவ்விடம் வந்தார். (என்னுடைய பாததரிசனத் திற்காக வந்தவர்களைத் தடுத்ததால் அவர்கள் கோபங் கொண்டார்கள். அந்தத் தரிசனத்தை அவர்களுக்குக் கொடுத்தோமன்னால் கோபம் தணிந்துவிடுமென்பது கருத்து) அந்த முனிவர்கள் அப்பொழுது அவ்விடம்

வந்த பகவானைத் தரிசித்தார்கள். அவர் அந்த முனிகளுடைய சமாதியால் அடையக் கூடிய பாக்கிய மேயாவார். மேலும் அவரை அந்த லோகத்துப் புருஷர்கள் குடை முதலியவைகளால் உபசரிக்கிறார்கள். அவருடைய பக்கங்களில் ஹம்சம் போன்ற சாமரங்கள் வீசப்படுகின்றன. அவைகளிலிருந்து வீசும் காற்றானது மிகவும் சுககரமாகவிருக்கிறது. அதனால் சந்திரன் போலப் ப்ரகாசிக்கும் வெண்குடையில் தொங்குகிற முத்து மாலைகள் அசைகின்றன. அவைகளிலிருந்து ஜலத்துளிகள் விழுகின்றன.

பின்னும் அந்தப் பகவான் எல்லாரிடத்திலும் தயைசெய்யும் நல்ல முகமுள்ளவர். ஆசைப்படக்கூடிய சத்குணங்களுக்கு வாசஸ்தலமாக இருப்பவர். ப்ரீதியுடன் பார்ப்பதால் மனத்திற்கு சந்தோஷத்தை உண்டு பண்ணுகிறவர். மேலும், அவர் சுவர்கத்திற்குச் சிரோரத்னமாக இருக்கும் தம்முடைய வைகுண்ட லோகத்தைத் தம்முடைய கருத்த மார்பிலிருக்கும் லக்ஷ்மீயால் ப்ரகாசிக்கச் செய்பவர். மேலும் பீதாம்பரம் தரித்த பெரியதாக பகவானுடைய நிதம்பத்தில் ப்ரகாசிக்கிற கடிசூத்ரத்தாலும், வண்டுகளால் சப்திக்கும் வனமாலையாலும் அந்த உலகம் விளங்குகிறது. மேலும், அந்தப் பகவான் அழகான கங்கணத்தைத் தரித்தவர். கருடனுடைய தோளில் ஒரு கையை வைத்தும், மற்றொரு கையால் தாமரைப் புஷ்பத்தைச் சுழற்றிக் கொண்டு மிருந்தார். அவருடைய கன்னங்கள் மின்னலை அவமதிக்கக் கூடிய மகர குண்டலங்களால் அலங்கரிக்கப்பட்டவை, முகமானது அழகான மூக்குள்ளது. பின்னும் அவர் ரத்னங்களிழைத்த கிரீடமுள்ளவர். கைகளுடைய

மத்தியில் ப்ரகாசிக்கின்ற கௌஸ்துப ஹாரமுள்ளவர். அவருடைய சரீரமானது மிகுந்த அழகுள்ளதாகையால், பக்தர்கள் அவருடைய திவ்ய தேகத்தைத் தரிசித்தவுடன், நானே மிகுந்த சௌந்திரியமுள்ளவன் என்ற லக்ஷ்மீதேவியுடைய அகங்காரம். இதனால் அடக்கப்பட்டதென்று நினைக்கிறார்கள்.

அப்போர்ப்பட்ட பகவானுடைய சரீரத்தைத் தரிசித்து அம்முனிகள் திருப்தி அடையாதவர்களாகி, மிகுந்த சந்தோஷத்துடன் அவருடைய பாதத்தில் தங்களுடைய சிரசு படும்படியாக நமஸ்கரித்தார்கள். அவர் ப்ரஹ்மாவாகிய என்னாலும், பரமசிவனாலும் உங்களாலும் (தேவர்களாலும், சேவிக்கத்தக்க திவ்ய சரீரத்தைப் ப்ரகாசப்படுத்துகிறவர்) அப்பொழுது அந்தப் புண்டரீகாக்ஷருடைய (தாமரைக் கண்ணன்) பாதங்களிலிருந்து துளஸியின் மதுவுடன் கூடிய காற்றானாது மூக்கு வழியாக அவர்களுக்குட் சென்றது. அவர்கள் ப்ரம்மானந்தத்தை அனுபவிக்கிறவர்களானாலும், அவர்களுடைய மனம் கலங்கினது. சரீரத்தில் மயிர்க் கூச்சலுண்டாயிற்று. பின்பு அவர்கள் பகவானுடைய கருத்த தாமரை மலர் போன்ற முகத்தையும்,அதில் சிவந்த அழகாய் உள்ள உதடுகளையும் குருக்கத்தி மலர் போல் வெண்மையான சிரிப்பையும் பார்த்து பூர்ண மனோரதமுள்ளவர்களாகத் திரும்பவும் இரத்தினங்கள் போன்ற நகங்களுக்கு ஆசிரயங்களான அவருடைய பாதங்களைத் தரிசித்துத் தியானஞ் செய்தார்கள். (எல்லா அவயவங்களுடைய லாவண்யத்தை ஒரே தடவையில் பார்த்து க்ரஹிக்க முடியாதவர்களாக அடிக்கடி பார்த்தார்களென்பது கருத்து.) அந்தப்

பகவான் யோக மார்க்கத்தைக் கொண்டு தேடுபவர்களால் தியானஞ் செய்யகூடியவர். அநேக ஞானிகளால் உபாசிக்கப்பட்டவர். புருஷரூபத்தைக் காண்பித்தவர். மற்றவர்களுக்குக் கிடைக்காதவைகளும், இயற்கையாகவே கிடைத்தவைகளுமான எட்டுவித ஐசுவர்யங்களுள்ளவர், அப்பேர்ப்பட்ட பகவானை அந்த ஸனகர் முதலிய மஹர்ஷிகள் பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்தார்கள்.

46 50 "ஓ பகவன்! நீர் ஸகல பிராணிகளுடைய ஹிருதயத்திலிருப்பவரானாலும், துஷ்டர்களுடைய கண்களுக்குப் புலப்படுகிறதில்லை. அப்பேர்ப்பட்ட நீர் எங்களுடைய கண்களுக்குப் புலப்பட்டீர். உம்மிடத்திலிருந்து உண்டானவரும், எங்களுக்குப் பிதாவுமான ப்ரஹ்மதேவர். உம்முடைய ரகசியத்தை உபதேசித்தபொழுதே, நீர் காதின் வழியாக எங்களுடைய ஹிருதயத்தை அடைந்திருக்கிறீர். ஓ பகவான்! உம்மைப் பரமாத்மா வென்றும், சுத்த சத்வ மூர்த்தியாகையால் பக்தர்களுக்கு ரதியை (ஆசையை) உண்டு பண்ணுகிறவராகவும், தெரிந்து கொள்ளுகிறோம். உம்முடைய கிருபையால் (அனுதாபம்) பக்தி யோகத்தை அடைந்து அதனால் மனத்திலிருக்கும் அகங்காரத்தை ஒழித்து, வைராக்யமடைந்த மஹரிஷிகள் உம்மை அறிவார்கள். மேலும், ஸ்தோத்திரம் பண்ணக்கூடியதும், பரிசுத்தியை உண்டு பண்ணக் கூடியதுமான உம்முடைய கதையின் ரசத்தை எவர்கள் அறிந்திருக்கிறார்களோ, எவர்கள் உம்முடைய பாதாரவிந்தத்தைச் சரணமடைந்து இருக்கிறார்களோ, அந்தப் பக்தர்கள் உம்முடைய அனுக்கிரகபரமான மோக்ஷத்தையும் விரும்புகிறதில்லை.

அப்படியிருக்க, பயமுள்ளதாகிய இந்திரபதம் முதலியவைகளை விரும்புவார்களா? ஓ பகவன்! உம்முடைய பக்தர்களைச் சபித்ததால் நாங்கள் தங்களுக்கு அபராதஞ் செய்தவர்களானோம். அதனால் எங்களுக்கு ஜன்மம் ஏற்படுமோ? வண்டானது முட்களால் வருத்தப்பட்டும் புஷ்பங்களில் ரமிப்பது போல அந்த ஜன்மாவிலும் எங்களுடைய மனமானது உம்முடைய பாதாரவிந்தத்தையே நினைத்திருக்கும் ஆனால் அந்த ஜன்மமும் எங்களுக்குக் கிடைப்பது சம்மதமேயாகும். ஆனால் துளசியானது உம்முடைய பாதத்தின் சம்பந்தத்தால் விளங்குவதுபோல் எங்களுடைய வாக்கும் தங்களுடைய குணங்களைச் சொல்வதாலேயே ப்ரகாசிக்க வேண்டும். எங்களுடைய காதுகளும் உம்முடைய கல்யாண குணங்களைக் கேட்பதாலேயே நிறைந்திருக்க வேண்டும்.

ஓ மிகுந்த கீர்த்தியுள்ளவரே! நீர் இந்த திவ்ய ஸ்வரூபத்தை நாங்கள் பார்க்கும்படி செய்ததால் எங்களுடைய கண்கள் சபலங்களாயின. இந்த ஸ்வரூபம் துஷ்டர்களுக்குப் புலப்படாது அந்தப் பகவானாகிய உமக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்' என்று சொன்னார்கள்.

அத்தியாயம்–16

ஜய விஜயர்களுக்கு அனுக்கிரகம்

1–2. அந்த ஸனகர் முதலிய யோகிகளுடைய வார்த்தையைச் சிலாகித்து வைகுண்டத்திலிருக்கும் சாக்ஷாத் பகவான், இந்த ஜயன் விஜயன் என்கிற இருவர்களும் என்னுடைய பார்ஷதர்களானாலும் இவர்கள் தர்மத்தை அதிக்ரமித்தவர்கள். ஆதலால் இவர்கள் விஷயத்தில் என்னுடைய பக்தர்களான உங்களால் செய்யப்பட்ட சிக்ஷையானது எனக்கும் அபிமதமேயாம், எனக்குப் ப்ராஹ்மணர்களே முக்கியமான தெய்வம். என்னுடைய வேலைக்காரர்களால் செய்யப்படும் குற்றமானது என்னால் செய்யப்பட்டதாகவே நினைக்கிறேன். நீங்கள் மன்னிக்கவேண்டும். எவனுடைய வேலைக்காரன் கெட்ட காரியத்தைச் செய்கிறானோ அவனைப்பற்றி ஜனங்கள் பேசிக் கொள்வார்கள் அல்லவா? அது குஷ்ட ரோகமானது தோலைக் கெடுப்பது போல யஜமானுடைய கீர்த்தியைக் கெடுத்துவிடுகிறது. என்னுடைய சுத்தமும் அமிருதமயமுமாகிய கீர்த்தியைக் கேட்பதால் அதில் ஸ்நானம் செய்யும் சண்டாளன் வரையிலுள்ள ஜகத்தானது பரிசுத்தமாகி விடுகிறது. உங்களிடமாக நல்ல கீர்த்தியை அடைந்து விளங்கும் நான் என்னுடைய கையானாலும் உங்களுக்கு விரோதம் செய்யுமானால் அதை வெட்டிவிடுவேன். ப்ராஹ்மணர்களைச் சேவித்ததால், பரிசுத்தமாகிய பாததூளி உள்ளவனாகவும், ஸகல பாபங்களையும் போக்கக் கூடியவனாகவும் நல்ல ஸ்வபாவத்தை அடைந்தவனுமாகவும் நான் இருக்கிறேன். அப்போர்ப்பட்ட என்னை

(வைராக்கிய முள்ளவனாலும்) லக்ஷ்மி ஒருபொழுதும் விடுகிறதில்லை. அவளுடைய கடாக்ஷத்தை ப்ரஹ்ம தேவர் முதலியவர்களும் அடைய விரும்பித் தபஸ் செய்கிறார்கள். ப்ராஹ்மணர்களுக்கு அன்னங் கொடுத்து அவர்கள் நெய் ஒழுகும்படி புசிக்க அவர்கள் முகமாய் நான் புசித்து எவ்வளவு திருப்தி அடைகிறேனோ அவ்வளவு சந்தோஷமானது யாகத்தில் யஜமானனால் கொடுக்கப்படும் ஹவிஸ்ஸை அக்கினி முகமாகப் புசிப்பதால் எனக்கு உண்டாகிறது இல்லை. ப்ராஹ்மணர்கள் குற்றஞ் செய்தாலும் அதைப் பொறுப்பதே உசிதம்.

எவர்களுடைய பாதத்தை அலம்பிய ஜலமானது பரமசிவனையும் மற்ற ஜகத்தையும் பரிசுத்தப்படுத்து கிறதோ, தடையற்றதும் பூர்ணமுமான யோக மாயையின் விபூதிகளை உடையவனாகிய நான் அந்தப் ப்ராஹ்மணர்களுடைய பாததூளியைச் சிரசால் தரிக்கிறேன். மேலும் என்னுடைய சரீரரமாகிய ப்ராஹ்மணர்களையும், பசுக்களையும் காப்பாற்று கிறவர்களில்லாமல் கஷ்டப்படும் மற்றப் ப்ராணிகளையும் பாப ஸ்வபாவமுள்ள எந்தப் புருஷர்கள் சர்ப்பம் போல் கோபமுள்ளவர்களாகி என்னை காட்டிலும் வேறென்று நினைக்கிறார்களோ, அவர்களை என்னுடைய வேலைக்காரனாகிய யமனிடத்திலிருக்கும் கழுகுபோன்ற தூதர்கள் உபத்திரவிக்கிறார்கள். எவர்கள் ப்ராஹ்மணர்களை என்னுடைய ஸ்வரூபமென்று நினைத்து சித்தத்தில் சந்தோஷத்துடனும், சிரித்த முகத்துடனும் பூஜிக்கிறார்களோ, பிரியமுள்ள வார்த்தையால் பேசிக்கொண்டு புத்திரனைப்போல் அழைக்கிறார்களோ, அவர்கள் என்னைப் பூஜித்தவர்களாக

ஆகிறார்கள். ஆதலால் இவ்விருவரும் யஜமானனாகிய என்னுடைய எண்ணத்தை (ப்ராஹ்மணர்களே தெய்வமென்பதை) அறியாமல், உங்களிடத்தில் குற்றஞ் செய்ததால், அதன் பலனை உடனே அனுபவித்து மறுபடியும் என்னுடைய சமீபம் சேரட்டும். இவர் களுக்குச் சீக்கிரமாக சாபத்தின் முடிவுக்காலத்தை ஏற்படுத்துவதே என்னைப்பற்றிச் செய்யும் அனுக்கிரமாகும்" என்று கேட்டுகொண்டார்.

13–25. அந்த யோகிகள் கோபமுள்ளவர்களானா லும் பின்பு பிரியாமானதும். மந்திர ஸ்வரூபமான அந்த வார்த்தையைக் கேட்ட அவர்களுடைய ஆத்மாவானது போதுமென்று திருப்தி அடையவில்லை. மேலும் அவர்கள் சொற்ப, அக்ஷரங்களுள்ளதும் மிகுந்த அர்த்தமுள்ளதும், சிறந்ததுமான பகவானுடைய வார்த்தையைக் காதுகொடுத்துக் கேட்டு அர்த்தத்தா லும் அபிப்பிராயத்தாலும் கம்பீரமாகிய அதனை நன்றாக யோசித்தும் பகவானுடைய எண்ணம் இன்னதென்று தெரிந்துகொள்ள முடியாதவர்களாக மிகுந்த சந்தோஷத்துடன் மயிர்க்கூச்சலை யடைந்து யோக மாயையால் தம்முடைய மேலான ஐசுவர்யத்தின் மேன்மையைக் காண்பிக்கும் பரமபுருஷனை நோக்கி, "ஓ பகவான், நீர் எல்லாவற்றிற்கும் அதிபதியாயிருந்து நான் அபராதஞ் செய்தேனென்றும் எனக்கு அனுக்கிரஹஞ் செய்யுங்களென்றும் சொல்லுகிற உங்களுடைய எண்ணம் இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை. ப்ராஹ்மணர்களிடத்தில் பக்தியுள்ள வராகிய உமக்குப் ப்ராஹ்மணர்கள் முக்கிய தெய்வம் என்பது ப்ரசித்தமே. தேவர்களுக்கும் தேவர்களான ப்ராஹ்மணர்களுக்கும் நீர் ஆத்மாவாகவும்

தெய்வமாகவும் இருக்கிறீர். உம்முடைய அவதாரங்களால் புராதனமான தர்மமானது காப்பாற்றப்படுகிறது. விகாரமற்றவராகிய நீர் தர்மத்திற்கு முக்கிய பலமாக ஆகிறீர். யோகிகள் உம்முடைய அனுக்கிரஹத்தால நிவிர்த்தி மார்க்கத்தை யடைந்து ஸம்சாரத்தைத் தாண்டுகிறார்கள். அப்பேர்ப்பட்ட உமக்குப் பிறர் அனுக்கிரஹஞ் செய்வதென்பது ஆச்சரியமாயிருக்கிறது. மேலும் பக்தர்களால் உம்முடைய பாதாரவிந்தத்தில் அர்ச்சிக்கப்பட்ட துளசி மாலையை வண்டானது விரும்புவதுபோல், லக்ஷ்மீதேவியானவள் பக்தர்களால் உம்முடைய பாதத்தில் சமர்ப்பிக்கப்படும் துளஸி மாலையில் வஸிக்கும் சிறந்த வண்டுக்கும் ஸ்தானமாகிய பாதத்தை விரும்பியவள்போல உம்மை ஒவ்வொரு சமயத்திலும் சேவிக்கிறாள். பணத்தை விரும்பியவர்கள் அவளுடைய பாததூளியைச் சிரசால் தரிக்கிறார்கள். சிறந்த பக்தர்களிடத்திலேயே தொடர்புடைய நீர், பலவித ஸுலக்ஷணங்களால் ஸேவிக்கும் மஹாலக்ஷ்மியையும் ஆதரிப்பதில்லை. உம்மிடத்தில் சேவிக்கக்கூடிய குணங்கள் யாவும் இருக்கின்றன்.

அப்படியிருக்க, ப்ராஹ்மணர்களுடைய பாத தூளியும் ஸ்ரீ வத்ஸமென்ற அடையாளமும் உம்மைப் பரிசுத்தப் படுத்துகிறதென்று எப்படிச் சொல்லக் கூடும்? பாதத்திலிருக்கும் துளஸி மாலையிலிருக்கும் வண்டைப் பார்த்து லக்ஷ்மீதேவியானவள் 'இந்த வண்டு சாரத்தைக் கிரஹிக்கும் ஸ்வபாவமுள்ளது, சபல ஸ்வபாவமுள்ளது. இதுவும் பகவானுடைய பாதத்திலிருக்கும் துளஸியில் ரமிக்கிறது, ஆகையால் பாதத்தின் வாவண்யம் அதிகம் ஆனதுபற்றி நான்

மார்பிலிருந்தாலும் ஸபத்னியாகிய துளஸியுடன் பாதத்தைச் சேவிப்பேன், என்று அனுசரிக்கிறாள். (அவளை நீர் ஆதரிக்கிறதில்லை) தர்ம மூர்த்தியாகிய உமக்கு மூன்று யுகங்களில் மூன்று பாதங்கள் இருக்கின்றன. (தபஸ், சௌசம், தயை) ப்ராஹ்மணர்களுக்காகவும். தேவர்களுக்காகவும், இந்த ஸ்தாவர ஜங்கமங்களடங்கிய ஜகத்தை சத்வ குணம் பொருந்தியதும், வரத்தைக் கொடுக்கிறதுமான உம்முடைய சரீரத்தால் அதற்கு விகாரமான ரஜஸ் தமஸ் ஆகிய இவைகளை அடக்கிக் காப்பாற்றுகிறீர். உம்மால் காப்பாற்ற வேண்டிய ப்ராமணோத்தமர்கள் உடைய கூட்டத்தைப் பிரியமான வார்த்தையாலும் பூஜையாலும் நீர் காப்பாற்றாமற்போனால், வேத மார்க்கமானது கெட்டுப் போய்விடும். லோகத்தில் சிறந்தவனால் அனுஷ்டிக்கப்படும் தர்மத்தையே மற்றவர்கள் பிரமாணமாகக் கொள்கிறார்கள். சத்வ குண நிதியும் ஜனங்களுக்கு க்ஷேமத்தைச் செய்ய விரும்பியவரும், தமது சக்தியால் தர்ம விரோதிகளை நாசஞ் செய்பவருமாகிய உமக்கு வேத மார்க்கம் கெட்டுப் போவது அபிதமல்ல. ப்ராஹ்மணர்களை வணங்குவதால் ஜகத்பதியாகிய உம்முடைய தேஜஸ் குறைகிறதில்லை. அது உமக்கு விளையாட்டேயாம். ஓ ஈச! இவர்களுக்கு நீர் எந்தச் சிக்ஷையை விதித்தாலும் ஜீவனத்தை ஏற்படுத்தினாலும் அதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம் அபராதஞ் செய்யாதவர்களான இவ்விருவர்களையும் நாங்கள் சபித்தபடியால் எங்களுக்கு தகுதியான சிக்ஷையை விதியும்" என்றார்கள்.

26. அதனைக் கேட்ட பகவான் "ஓ ப்ராஹ்மணர்களே!

இந்தப் பார்ஷதர்களிருவரும் அசுரஜன்மத்தை அடைந்து அந்த ஜன்மத்தில் கோபத்தால் மனத்தை என்னிடத்திலேயே செலுத்துவதாகிய யோகத்தைச் செய்து மறுபடியும் என்னுடைய சமீபத்தை அடைவார்கள். உங்களால் செய்யப்பட்ட சாபமானது என்னால் கொடுக்கப்பட்டதென்றே நினையுங்கள் என்றார்.

27–28. பின்பு அந்த மஹரிஷிகள் நேத்ரானந்தத் திற்கு பாத்திரமாயும், வேறு பிரகாசத்தை அபேக்ஷியா மல் சுயமாய்ப் ப்ரகாசிப்பவருமான ஸ்ரீ மஹாவிஷ்ணு வையும் அவருக்கு இருப்பிடமான வைகுண்ட த்தையும் பார்த்து, பகவானை பிரதக்ஷிணமாகச் சுற்றி நமஸ்காரஞ் செய்து அவரிடம் விடைபெற்று விசேஷ ஆனந்தத்து டன் மஹாவிஷ்ணுவின் விபூதியைப்பற்றிக் கொண்டாடிக்கொண்டு சென்றார்கள்.

29–37. பகவான் தம்முடைய பார்ஷதர்கள் இருவரையும் நோக்கி "நீங்கள் பயப்படவேண்டாம் உங்களுக்கு க்ஷேமமுண்டாகும். உங்களுடைய சாபத்தைப் போக்கடிக்க நான் ஸமர்த்தனானாலும் ப்ரஹ்ம தேஜஸ்ஸை அடக்க எனக்கு இஷ்டமில்லை. மேலும் முன்னொருகாலத்தில் நான் பிரளய கலகத்தால் தனித்திருக்கும்போது (அந்தப்புரத்திலிருந்து வெளியில் போன லக்ஷ்மீதேவியை) அந்தப்புரத்தில் பிரவேசிக்கும் லக்ஷ்மீதேவியைத் தடுத்தபடியால் உங்களுக்கு இந்த விஷயம் லக்ஷ்மீயினாலேயே சொல்லபட்டிருக்கிறது. ஆதலால் ப்ராஹ்மண அவமானத்தின் பலனை அனுபவித்து அந்த ஜன்மத்தில் விரோதத்தால் என்னை எப்பொழுதும் தியானம் செய்து சொற்ப

காலத்தில் என்னுடைய சமீபம் வருவீர்கள் என்று பகவான் த்வாரபாலகர்களுக்கு ஆக்ஞாபனம் செய்து அநேக விமானங்களுக்கு அலங்காரமாகவும், எல்லாவற்றிற்கும் மேலான காந்தி பொருந்தியதுமான தமது ஸ்தானஞ் சென்றார். பிறகு அந்தத் தேவ சிரேஷ்டர்கள் இருவரும் தடுக்க முடியாத ப்ரஹ்ம சாபத்தால் கர்வமற்றவர்களாக ஆனார்கள்.

ஓ குழந்தைகாள்! வைகுண்டத்திலிருந்து அவர்கள் விழும்போது விமானங்களிலிருப்பவர்கள் ஹா!ஹா! என்று கதறினார்கள். அந்தப் பார்ஷதர்களே காசியபருடைய வீரியத்திற்குத் திதியின் கர்ப்பத்தில் உண்டானவர்கள். இரட்டைப் பிள்ளைகளான அந்த அசுரர்களுடைய தேஜஸ்ஸால் அப்பொழுது உங்கள் உடைய தேஜஸ் குறைந்தவிட்டது. ஆனாலும் பகவான் க்ஷேமத்தைச் செய்வார். அவர் ஸகல ஜகத்தையும் படைத்தவர். காப்பாற்றுகிறவர் சம்கரிப்பவர் எல்லா வற்றிற்கும் முந்தினவர். அவருடைய யோக மாயை யோகேசர்களாலும் அறியமுடியாதது. அவரைச் சார்ந்தவர்களான நமக்கு அவரே க்ஷேமத்தைச் செய்வார். இந்த விஷயத்தில் நம்முடைய யோசனை பயன்படாதது என்று சொன்னார்.

அத்தியாயம் 17

திதிக்குப் புத்திரர்கள் பிறந்தது

1–15 இப்படி ப்ரஹ்மதேவரால் சொல்லப்பட்ட காரணத்தைக் கேட்டு தேவர்கள் எல்லோரும் சம்சயம் அற்றவர்களாக ஸ்வர்க்கம் சென்றார்கள். திதியானவள் தனது பர்த்தாவினுடைய கட்டளையினால் புத்திரன் உடைய சரிதத்தில் சந்தேகமுள்ளவளாக ஆயிரம் வருஷங்களைக் கழித்தாள். பிறகு இரண்டு குமாரர் களைப் பெற்றாள். அவ்விருகுழந்தைகள் பிறக்கும் போது பூமியிலும் அந்தரிக்ஷத்திலும், த்யுலோகத்தி லும் வரப்போகின்ற பயத்தைக் காட்டும் அநேக உத்பாதங்கள் உண்டாயின. மலைகளுடன் பூமி அசைந்தது. ஆகாசம் முழுவதும் ஜ்வலித்தது. குறைக் கொள்ளிகளும் இடிகளும் விழுந்தன. தூமகேதுக்கள் காணப்பட்டன. அடிக்கடி பூதாகார சப்தத்துடன் காற்றானது மரங்களை வேரோடு பிடுங்கிற்று. அந்தக் காற்றுக்கு தூளியே த்வஜமாகவும், காற்றின் ஸமூகம் ஸைன்யமாகவும் இருந்தன. சிரிப்பது போன்ற மின்னல்களுள்ள மேகங்களால் தேஜஸ் மறைக்கப்பட்டது, மேலும் ஆகாசமானது இருளால் சூழப்பட்டது. சமுத்திரத்தின் மத்தியிலிருக்கும் மகரம் முதலிய ஜந்துக்கள் கலங்கின. அலைகள் உயரக்கிளம்பின. கிணறு, குளம் முதலியவை கலங்கின. அவைகளிலுள்ள தாமரைகள் உலர்ந்து போயின. சந்திரன், சூரியர் இவர்களுக்கு ராஹுகக்ராஸம் நேர்ந்தது. (கிரஹணம்.)

மேலும் அவர்களைச் சுற்றிக் கோட்டை கட்டப் பட்டது, மேகமில்லாதபோது கர்ஜிதம் உண்டாயிற்று.

அதனால் குகை முதலிய இடங்களில் எதிரொலியும் உண்டாயிற்று. கிராமங்களில் பெண் நரிகள் அக்கினியைக் கக்கிக் கொண்டு பயங்கரமாக ஊளை யிட்டன. கோட்டான்களும், நரிகளும் சப்தித்தன, நாய்கள் பாடுகின்றவை போலும், அழுகின்றவை போலும் தலையைத் தூக்கிப் பலவகையாக்கக் குரைக்க ஆரம்பித்தன. ஓ விதுர! கழுதைகளும் கூட்டம் கூட்டமாகக் கூர்மையான குளம்புகளால் பூமியைப் பிளந்தும் தங்களுடைய ஜாதிக்குரியபடி சப்தித்தும், மதமுள்ளவைகளாக ஓடின. கழுதைகளின் சப்தத்தைக் கேட்டுப் பயந்து பறவைகள் தங்களுடைய கூடுகளிலிருந்து பூமியில் விழுந்தன. இடைச்சேரியி லும், காடுகளிலுள்ள பசுக்கள் (மிருகங்கள்) மேற்சொல்லிய சப்தத்தால் நடுங்கி மூத்திரத்தை விட்டதும் அன்றிச் சாணத்தையும் போட்டன. மேலும் பசுக்கள் பயந்தன; இரத்தங்களைக் கறந்தன. வருஷித்தன. தேவதா பிரதிமைகள் அழுதன. காற்றில்லாத போது மரங்கள் கீழே விழுந்தன. பாப கிரஹங்கள் சுபக் கிரஹ நக்ஷத்திரங்களையும் அதிக்ரமித்துச் சென்றன (அதிசாரம்) வக்ராதியால் உபத்திரவித்தன; ஒன்றுக் கொன்று மேற்காட்டியவை களும், மற்றவைகளுமாகிய அபசகுனங்களை கண்டு அவைகளின் உண்மையை அறியாதவர்களான எல்லாரும் பிரளயம் நேர்ந்துவிட்டதென்று நினைத்தார்கள். ப்ரஹ்மதேவருடைய புத்திரர்களான சனகர் முதலியவர்கள் மாத்திரம் பயப்படவில்லை.

19–31 அந்த ஆதிதைத்யர்கள் இருவரும் (திதியின் புத்திரர்கள் தைத்யர்கள்) தங்களுடைய பௌருஷத்தை வெளியிட்டுக் கொண்டு கருங்கல் போல்

வளர்ந்தார்கள்; இவர்களுடைய சுவர்ண கிரீடங்கள் உடைய நுனிகள் ஆகாயத்தை ஸ்பர்சித்திருந்தன. தோள்வளைகளுள்ள கைகள் திக்குகளின் எல்லை வரையிற் சென்றன. அரைநாண் முதலியவையுள்ள இடுப்பானது சூரியமண்டலத்திற்கு மேலாக இருந்தன. அவர்களுடைய அடி வைப்பினால் பூமி அசைந்தது. அப்பொழுது மாரீசர் அவ்விருவர்களுக்குள் எவனைத் திதியானவள் முதலில் பெற்றாளோ, அவனுக்கு ஹிரண்யாக்ஷனென்றும், தம்முடைய தேகத்திலிருந்து முதலில் திதியிடம் பிரவேசித்த வீரியத்தால் உண்டானவனுக்கு ஹிரண்யகசிபு என்றும் பெயர் வைத்தார். அந்த ஹிரண்யகசிபுவானவன் ப்ரஹ்ம தேவரிடம் வரம் பெற்று மிருத்யு பயமில்லாதவனாகி, கர்வமடைந்து உலகபாலர்களை ஜயித்து, ஸகல உலகங்களையும் ஸ்வாதீனமாக்கிக் கொண்டான். அவனுடைய தம்பியாகிய ஹிரண்யாக்ஷன் என்பவன் தமயனிடத்தில் விசேஷ ப்ரீதியுள்ளவன். மேலும் அவன் ஒவ்வொரு நாளும் கதாயுதத்தைக் கையில் பிடித்துக் கொண்டு யுத்தஞ் செய்ய விரும்பினவனாகத் தகுந்த எதிரியைத் தேடி ஸ்வர்க்கத்தில் அலைந்தான். அவன் ஸகிக்க முடியாத வேகமுள்ளவன்! அவன் அணிந்திருக்கும் ஆபரணமாகிய தங்கச் சலங்கைகள் இனிமையாகச் சப்திக்கின்றன. அவன் வைஜயந்தி என்னும் மாலையைத் தரித்தவன்; பெரிதாகிய கதாயுதத்தை தோளில் வைத்துக் கொண்டவன்; மனோ பலத்தாலும், தேகபலத்தாலும் கர்வமுள்ளவன்; ஒருவராலும் ஜயிக்க முடியாதவன்; எவரிடத்திலும் பயமற்றவன்; அப்படிப்பட்ட அந்த அசுரனைக் கண்டு கருடனைக் கண்ட சர்ப்பங்கள் போல் தேவர்கள் எல்லாரும் ஓளிந்து கொண்டார்கள்.

அந்த அசுர சிரேஷ்டன் தன்னுடைய தேஜஸ்ஸால் பயந்து இந்திரன் முதலிய தேவர்கள் ஒளிந்து கொண்டார்களென்று தெரிந்து கொண்டு மதத்துடன் கர்ஜித்தான். மிக்க பலமுள்ள அந்த அசுரன் அவ்விடத்திலிருந்து திரும்பி மிக்க ஆழமுள்ளதும், பயங்கரமான சப்தமுள்ளதுமான சமுத்திரத்தில் மதங்கொண்ட யானைபோல் விளையாடுவதற்காகப் பிரவேசித்தான். அவனைக் கண்ட மாத்திரத்தில் வருணனுடைய சைனியங்களாகிய ஜலஜந்துக்கள் பயத்துடன் மனங்கலங்கி அவனால் அடிக்கப்படாமல் இருந்தாலும் அவனுடைய தேஜஸ்ஸினாலேயே ஜயிக்கப்பட்டவைகளாக வெகுதூரம் ஓடிற்று.

அப்பொழுது அவன் தன்னுடைய தச்சுகளால் மிகுந்த அலைகளை உண்டுபண்ணிக் கொண்டு எஃகினால் செய்யப்பட்ட கதாயுதத்தால் அடித்துக் கொண்டு அநேக வருஷங்கள் சமுத்திரத்திலேயே சஞ்சரித்துப் பின்பு வருணனுடைய பட்டணம் சென்றான். அது விபாவரி என்ற பெயருள்ளது. அவ்விடத்தில் அவன் ஜலஜந்துக்களுக்கு அதிபதியும் பாதாள உலகத்தைக் காப்பாற்றுகிறவருமான வருணனைக் கண்டு சிரித்துக் கொண்டு பரிகாசத் திற்காக அவரை நமஸ்கரித்து, தாழ்ந்தவன் போல் அவரை நோக்கி, "ஓ மேலான அரசரே! நீர் உலக பாலர்களுக்கு அதிபதி; மிகுந்த கீர்த்தியுள்ளவர்; கர்வமுள்ளவர்களும் தங்களை வீரர்களென்று நினைத்தவர்களுமான துஷ்டர்களுடைய கர்வத்தை அடக்கக் கூடியவர், நீர் முன்காலத்தில் தைத்தியர் களையும், தானவர்களையும் ஜயித்து ராஜசூயமென்ற யாகத்தைச் செய்தீரல்லவா? ஆனது பற்றி

இப்பொழுது என்னுடன் யுத்தம் செய்யவேண்டும்" என்றான். இப்படி மிகுந்த கர்வத்துடன் பரிகாசம் செய்யும் அந்த ஹிரண்யாக்ஷனை நோக்கிச் சமுத்திர ராஜன் கோபத்தை அடக்கிக் கொண்டு, ஓ அசுர சிரேஷ்ட! நான் யுத்தஞ் செய்வது முதலியவகைளில் உற்சாகத்தை விட்டுவிட்டேன்.(சாந்தியை அடைந்து இருக்கிறேன்.) ஆனால் உன்னுடன் யுத்தம்செய்யத் தகுந்த புருஷன் பகவான் ஒருவரே, வேறு யாராலும் முடியாது. அவர் புராண புருஷர். உன்னைப் போன்ற வீரர்கள் அவரைத் துதிக்கிறார்கள், அவர் உன்னைப் போல் அசத்தாயிருப்பவர்களைக் கொல் வதற்காகவும், சாதுக்களை அனுக்ரஹிப்பதற்காகவும் பலவகையாக அவதரிக்கிறார். அவரிடஞ் சென்றால் கர்வமற்றவனாகி யுத்தகளத்தில் படுப்பாய், நாய்கள் உன்னைச் சுற்றிக் கொள்ளும், என்று சொன்னார்.

அத்தியாயம்–18

யக்ஞவராஹருக்கும் ஹிரண்யாக்ஷனுக்கும் யுத்தம்

1–5. மிகுந்த மதமுள்ளவனும் கம்பீர மனமுள்ளவனுமான அந்த ஹிரண்யாக்ஷன் சமுத்திர ராஜனுடைய வார்த்தையைக் கேட்டு நாரதரிடமாகப் பகவானிருக்குமிடத்தைத் தெரிந்து கொண்டு வெகு வேகமாகப் பாதாளலோகம் சென்றான். அவ்விடத்தில் சிங்கப் பல்லால் பூமியை உயரத்தூக்கி கொண்டு இருக்கும் வாரஹரூபியான பகவானைக் கண்டான். அவர் எல்லோரையும் ஜயிப்பவர். அவருடைய கண்கள் சிவந்தவைகளாக இருந்தன. அவைகளால் அசுரனுடைய காந்தியானது குறைந்தது, அவரைக் கண்ட அவன், "ஆச்சரியம். காட்டில் ஸஞ்சரிக்கும் மிருகமாகிய பன்றிக்கு இவ்வளவு தேஜஸ் இருக்கிறதே, என்று சிரித்தான். பின்னும் அவன் அவரை நோக்கி, "ஓ தேவர்களுக்குள் அதமனே! பன்றி யுருவங்கொண்ட வரே! ஒன்றையும் அறியாதவனே! பாதாள வாசிகளாகிய எங்களுக்கு ப்ரஹ்மதேவரால் இந்தப் பூமி கொடுக்கப்பட்டது, ஆனதால் இவளை விட்டுவிடு, நான் பார்த்திருக்கும் போது இந்தப்பூமியுடன் நீ க்ஷேமமாகத் திரும்பிப் போகமுடியாது. நமக்குச் சத்துருக்களாகிய தேவர்கள் உன்னை யுத்தத்தில் பலி கொடுப்பதற்காகவே வளர்ந்திருத்திருக்கிறார்களே ? நீ அசுரர்களை மறைத்திருந்து மாயையால் ஜயித்தவன். யோகமாயா பலமுள்ளவன் சொற்ப பராக்கிரம முள்ளவன். அப்படிப்பட்ட உன்னைக் கொன்று என் மித்திரர்களுடைய துக்கத்தைப் போக்கடிக்கிறேன். என்னுடைய கையிலிருக்கும் கதாயுதத்தால்

உன்னுடைய தலையை உடைக்கிறேன், அதனால் இப்பொழுது உன்னை பூஜிப்பவர்களும், முந்திய பக்தர்களுமாகிய தேவர்களும் மஹர்ஷிகளும் ஒத்தாசை இல்லாதவர்களாக ஆகிவிடுவார்களென்று சொன்னான்.

6–28. அப்பொழுது பகவான் சத்துருவினுடைய கெட்ட வார்த்தையாகிய தோமராயுதத்தால் அடிக்கப் பட்டும் தம்முடைய சிங்கப்பல்லின் நுனியிலிருக்கும் பூதேவி பயப்படுவதைப் பார்த்து அவனுடைய வார்த்தைகளைப் பொறுத்துக்கொண்டு ஜலத்தின் நடுவிலிருந்து வெளிவந்தார் அது யானையானது பெண் யானையுடன் முதலையால் பீடிக்கப்பட்டு ஜலத்திலிருந்து கிளம்பியது போலிருந்தது. அப்பொழுது அந்த அஸுரன் யானையின்டின் மகரம் போலதுபோல் அவர் பின் சென்றான். பின்னும் பயங்கரமான சிங்கப் பற்களுள்ள அந்த அஸுரன், "வெட்கமில்லாத அசத்துக்களுக்கு எதுதான் கெட்ட காரியம்" என்று இடிபோல் உரக்கச் சொன்னான். அப்பொழுது ப்ரஹ்ம தேவராலும். தேவர்களாலும் புஷ்பங்களைக் கொண்டு பூஜிக்கப்பட்டவரான அந்தப் பகவான் ஜலத்திற்கு வெளியில் வியவகார யோக்கியமாகிய இடத்தில் பூமியை வைத்து, அதில் தம்முடைய ஆதார சக்தியை ஸ்தாபித்தார்.

பின்பு, அவர் மிகுந்த கோபத்துடன், தம்மைப் பின் தொடர்ந்து வருகிறவனும் ஸ்வர்ண ஆபரணங்கள் உள்ளவனும் பெரிதான கதாயுதத்தைத் தரித்தவனும், ஸ்வர்ண மயமும் ஆச்சரயகரமுமான கவசமுள்ளவனும், கெட்ட வார்த்தைகளால் மர்மஸ்தானங்களைப்

பிளப்பவனுமாகிய அந்த அஸுரனை நோக்கி. "அட! நாங்கள் வனத்திலிருக்கும் மிருகங்களேயாம். இது உண்மையே. உன்னைப்போன்ற கிராம சிம்ஹத்தை (நாயை) தேடுகிறோம். தைரியமுள்ளவர்கள் யமனுடைய பாசத்தால் கட்டப்பட்ட உன்னுடைய ஆத்ம சிலாகையால் (தன்னைத்தானை புகழ்ந்து கொள்வது) லட்சியஞ் செய்யமாட்டார்கள். நாங்கள் பாதாளவாசிகளுடைய அடைக்கலமான சொத்தை அபகரிப்பவர்கள். வெட்கமில்லாதவர்கள் உன்னுடைய கதாயுதத்தால் வெட்டப்பட்டவர்கள். ஆனாலும் நிற்கிறோம். பலிஷ்டனாகிய உன்னுடன் விரோதத்தை உண்டுபண்ணிவிட்டு எவ்விடம் போவோம்? யுத்தத்திற்கு சன்னத்தர்களாக இருக்கிறோம். நீ காலாட் படைகளுக்கு அதிபதி, நம்மை ஜயிப்பதற்குச் சீக்கிரம் முயற்சி செய். நீ யோசனையில்லாதவன். பிரதிக்ஞையை நிறைவேற்றாதவன். சபைக்குரியவனல்ல, ஆதலால் நம்மைக் கொன்று பந்துக்களுடைய துக்கத்தை நிவர்த்திசெய்" என்றார்.

இப்படிப்பரம புருஷனால் பரிஹசிக்கப்பட்ட அஸுரன் மஹாசர்ப்பம் போல் மிகவும் கோபத்தால் கலங்கிய இந்திரியங்களுள்ளவனாகி பகவானுடைய சமீபம் வந்து கதாயுதத்தால் அவரை அடித்தான். சத்ருவாகிய அசுரன் மார்பில் கதாயுதத்தால் அடிக்கும்போது பகவான் அந்த அடி தம்முடைய சரீரத்தில் படாமலிருக்கும்படி குறுக்காக ஒதுக்கங் கொடுத்து ஏமாற்றினார். அது மிருத்யுவை யோகா ருடன் வஞ்சித்தது போலிருந்தது கோபமுள்ளவனும், பரபரப்பினால் உதட்டைக் கடித்துக்கொள்ளுகிறவனும், கதாயுதத்தை அடிக்கடி சுழற்றிக்கொண்டு

இருப்பவனுமான அசுரனைப் பகவான் எதிர்த்தார். அசுரன் கதாயுதத்தால் பிரபுவாகிய பகவானுடைய வலத்தோளை உத்தேசித்து அடித்தான்.

ஓ விதுர! அதன் அடி தம்மீது படுவதற்கு முன்னமேயே பகவான் யுத்தத்தை நன்றாக அறிந்த வராகையால் தம்முடைய கதாயுதத்தால் சத்துருவின் கதாயுதத்தை அடித்தார், இப்படி ஹிரண்யாக்ஷனும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் ஒருவரை யொருவர் ஜயிக்கவேண்டும் என்ற விருப்பத்துடன் மிகுந்த முயற்சியுள்ளவர்களாகப் பெரியவையான கதாயுதங்களைக் கொண்டு அடித்துக்கொண்டார்கள். இப்படி அவ்விருவர்களும் பூமிக்காக யுத்தம் செய்தார் கள். கூர்மையான கதைகளால் அவர்களுடை ய சரீரம் அடிக்கப்பட்டு இரத்தம் பெருகியது. அதனால் இருவர்களுக்கும் அதிகக் கோபமுண்டாயிற்று. பலவகையான நடையைக் காண்பித்தார்கள். அந்த யுத்தமானது மதித்த இரண்டு விர்ஷபங்கள் பசுவின் நிமித்ததம் சண்டை செய்வது போலிருந்தது. ஓ குரு வம்சத்தில் பிறந்தவரே! யக்ஞவராஹ ரூபியான பகவானுக்கும், அசுரனுக்கும் பூமியின் நிமித்தமாக நேர்ந்த யுத்தத்தைப் பார்ப்பதற்குப் ப்ரஹ்மதேவர் அவ்விடம் அனேக மஹரிஷிகளுடன் வந்தார். மேலும் ஆயிரம் மஹரிஷிகளுக்கும் அதிபதிகளாகிய அவர் பராக்கிரம கர்வமுள்ளவனும், பயமற்றவனும் செய்வதற்குப் பதில் செய்பவனும், பதில் செய்யமுடியாத பராக்கிரமமுள்ளவனுமாயிருக்கும் அஸுரனைப் பார்த்து, ஆதிவராஹ ஸ்வரூபியும். புராண புருஷனுமான ஸ்ரீமந் நாராயணனை நோக்கி, 'ஓ தேவ! உம்முடைய பாதங்களைச் சரணமடைந்த

தேவர்களுக்கும், ப்ராஹ்மணர்களுக்கும், பசுக்களுக்கும், அபராதஞ் செய்யாத பிராணிகளுக்கும் இந்த அஸுரன் கெடுதியைச் செய்தவன். பயத்தைச் செய்தவன் கெட்ட காரியத்தைச் செய்தவன், நம்மிடமிருந்தும் வரத்தை அடைந்தவன். தன்னுடன் யுத்தஞ் செய்யத் தகுந்த வீரனைத் தேடிக்கொண்டு உலகம் முழுவதும் அலைந்தவன். இவனை எதிர்த்துயுத்தம் செய்பவன் உலகத்திலொருவனுமில்லை. மிக்க உபத்திரவத்தைச் செய்தவன் மிக்க மாயாவி. கர்வமுள்ளவன். பயம் இல்லாதவன். மிக்க அசத்து, ஆதலால் ஓ தேவ! கோபங்கொண்ட ஸர்ப்பத்தினிடம் சிறுவன் விளையாடுவதுபோல் அவனுடன் விளையாடுவது உசிதமல்ல ஓ நாசமற்றவரே! பயங்கர உருவமுள்ள இந்த அஸுரன் தனக்குப் பலம் விருத்தியடையக்கூடிய காலத்தை அடைந்து விருத்தியடைவதற்கு முந்தியே பாபியாகிய இவனை நீர் உம்முடைய மாயா பலத்தால் நாசஞ் செய்யும். இந்த சந்தியா காலமானது மிகவும் கோரமானது. உலகங்களுக்கு நாசத்தைச் செய்யக்கூடியது. ஓ ஸகல ஜகத்ஸ்வரூபியாயிருப்பவரே! அபிஜித் என்னும் சுபமாகிய காலம் வந்துவிட்டது. தேவர்களுக்கு ஜயத்தை உண்டுபண்ணும். உமக்கு மித்திரர்களான எங்களுடைய க்ஷேமத்திற்காக இவனைக் கொல்லுக. தெய்வச் செயலால் இந்த அஸுரன் தனக்கு மிருத்யுவாக முன்னமே ஏற்பட்டிருந்த உம்மிடம் சேர்ந்தான். ஆதலால் இவனைக் கொன்று உலகத்திற்கு க்ஷேமத்தை உண்டு பண்ணும், என்று பிரார்த்தித்தார்.

அத்தியாயம்–19

ஹிரண்யாக்ஷ வதம்

1–29 அதனைக் கேட்ட பகவான் ப்ரஹ்மதேவர் கபடமற்றவராகச் சொல்லுகிறாரென்று நினைத்துச் சிரித்து (கால ஸ்வரூபியான என்னாலும் நல்ல முகூர்த்தம் எதிர்பார்க்கப்பட வேண்டுமாவென்று) ப்ரீதியுள்ள பார்வையால் அந்த வார்த்தையை அங்கீகரித்தார். பின்பு தமக்கெதிரில் பயமில்லாமல் சஞ்சரிக்கும் சத்ருவினுடைய கன்னத்திற்குக் கீழாகக் கதாயுதத்தால் அடித்தார். பிறகு அந்த அசுரன் தன்னுடைய கதையால் பகவானுடைய கதாயுதத்தை அடித்தான். அதனால் கதையானது அடிக்கப்பட்டுப் பகவானுடைய கையிலிருந்து சிதறிக் கீழே விழுந்தது. அது மிகவும் ஆச்சரியமாக விருந்தது. அப்பொழுது அஸுரன் ஆயுதமில்லாமலிருக்கும் பகவானைப் பார்த்து அது சத்ருவை ஜயிக்க தகுந்த சமயமானாலும் தர்மத்தை நினைத்துக் கொண்டு அடிக்க வில்லை. இப்படிப் பகவானுடைய கதை உடைந்தபின் தேவர்கள் ஹா ஹா என்று கதறும்போது பகவான் அந்தத் தர்மத்தைப் பெரிதாக நினைத்ததுமின்றிச் சக்கரத்தை நினைத்தார்.

அப்பொழுது அவருடைய மாஹாத்மியத்தை நன்றாக அறியாதவர்களான தேவர்கள் யுத்தத்தில் தைத்தியர்களுக்குள் தாழ்ந்தவனும் தம்முடைய பார்ஷதர்களுக்குள் முக்கியனுமான ஹிரண்யாக்ஷனுடன் யுத்தஞ் செய்பவரும் யுத்தத்தில் பரப்பரப்புள்ள சக்ராயுதத்தைத் தரித்தவருமாகிய பகவானைப்

பார்த்து, 'உமக்கு க்ஷேமமுண்டாகும்; இந்த அசுரனைக் கொல்லும், என்று சொன்னதுமல்லாமல் நான்கு புறத்திலும் பலவகையாகப் பேசிக்கொண்டார் கள். இம்மாதிரியான தேவர்களுடைய வார்த்தையைக் கேட்டும் தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரும், சக்ராயுதத்துடன் யுத்தத்திற்கு ஸன்னத்தராயிருப் பவருமான பகவானைப் பார்த்தும், அந்த அஸுரன் மிக்க கோபத்துடன் உதட்டைக் கடித்துக் கொண்டான். மேலும் பயங்கரங்களாகிய சிங்கப் பற்களுள்ள அவன் கண்களால் எரிப்பவன்போலப் பகவானிடம் ஓடி வந்து, 'நீ கொல்லப்பட்டாய்' என்று சொல்லிக் கதாயுதத்தால் அடித்தான். யக்ஞவராஹ ரூபியான பகவான் சத்ருவாகிய அஸுரன் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே வாயுவிற்குச் சமமான வேகமுள்ள அந்தக் கதாயுதத்தை வலக்காலால் சிரமமின்றி உதைத்தார்.

மேலும், "ஓ அஸுரனே! ஆயுதத்தை எடுத்துக் கொள். ஜயிக்க வேண்டுமென்ற விருப்பமுள்ளவனாக இருப்பதால் அதற்குத் தகுந்த முயற்சியைச் செய்" என்றும் சொன்னார். அதனைக் கேட்ட அஸுரன் அந்தக் கதையை வராஹரூபியான பகவானை உத்தேசித்துப் ப்ரயோகித்தான். தம்மைப் பார்த்து வேகமாக வரும் அந்தக் கதையைக் கண்ட பகவான் தம்மீது விழுவதற்கு முன்னமேயே அதைப் பிடித்துக் கொண்டார். அது கருடன் பெண் சர்ப்பத்தைப் பிடித்தது போலிருந்தது. பிறகு பகவான் அந்தக் கதையை அந்த அஸுரனுக்குக் கொடுக்க விரும்பியும் அவன் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவன்

தன்னுடைய பராக்கிரமம் தடைப்பட்டபடியால் மானங் குறைந்து காந்தியற்றவனாயிருந்தான்.

மேலும், ப்ராஹ்மணனை உத்தேசித்து ஆபிசார கர்மத்தைச் செய்பவர் போல் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை உத்தேசித்து ஜ்வலிக்கும் அக்கினி போன்ற மூன்று முனையுள்ள சூலத்தைப் ப்ரயோகித்தான். அந்த அஸுரனால் ப்ரயோகிக்கப்பட்டதும் ஆகாசத்தின் மத்தியில் காந்தியுடன் ப்ரகாசிப்பதுமான அந்தச் சூலத்தைப் பகவான் கூர்மையான முனையுள்ள சக்ராயுதத்தைக் கொண்டு இந்திரன் கருடனுடைய சிறகுகளை வெட்டியது போல வெட்டினார். பின்பு பகவானுடைய சக்ராயுதத்தால் தன் சூலம் வெட்டப் பட்டதைப் பார்த்த அஸுரன் மிக்க கோபத்துடன் கையை முஷ்டி பண்ணிக் கொண்டு மிகுந்த விஸ்தாரமுள்ளதும், விபூதிகளுள்ளதுமான அவருடைய மார்பில் குத்திக் கர்ஜித்துக் கொண்டு கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்தான்.

ஓ விதுரரே! அந்த ஆதிவராஹமூர்த்தியாகிய பகவான் இம்மாதிரி அவனால் அடிக்கப்பட்டும் புஷ்ப மாலையால் அடிக்கப்பட்ட யானைபோல அசையவே இல்லை. பின்பு அந்த அஸுரன் யோகமாயைக்கு அதிபதியாகிய பகவானிடத்தில் பலவகையான மாயையைச் செய்தான். அவைகளைக் கண்டு ஜனங்கள் ப்ரளய காலம் வந்துவிட்டதென்று நினைத்தார்கள். காற்று மிகவும் கடுமையாக வீசிற்று. தூளிகளாலுண்டான இருள் பரவிற்று. யந்திரங்களால் எறியப்பட்டது போல எல்லாத் திக்குகளிலும் கற்கள் விழுந்தன. ஆகாயத்திலிருக்கும் நட்சத்திரங்களின்

தேஜஸ் குறைந்தது. மேகங்கள், மின்னல், கர்ஜனம் ஆகிய இவைகளுடன் அமேத்யம், மூத்திரம் ஆகிய துர்நாற்றமுள்ளவைகளையும், மயிர்களையும், எலும்புகளையும் வர்ஷித்தன. மலைகள் பலவகையான ஆயுதங்களை விட்டன. மேலும் திக்கையே வஸ்திர மாய் உடையவர்களும், அவிழ்ந்த தலை மயிர்கள் உள்ளவரும் சூலாயுதத்தை தரித்தவர்களுமான ராக்ஷஸ ஸ்திரீகள் காணப்பட்டார்கள். யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், காலாட்படை, குதிரைபடை, இரதங்கள், யானைகள் முதலிய ஸைனியங்களால் கடுமையான வார்த்தைகள் சொல்லப்பட்டன. இம்மாதிரியான மாயையைப் பார்த்து மூன்று ஸவனங்களாகிய பாதங்களுள்ள அந்த மாயைகளை நாசம் பண்ணக் கூடிய தம்முடைய சக்ரத்தைப் பிரயோகித்தார்.

அப்பொழுது திதி தேவியானவள் தன்னுடைய பர்த்தாவாகிய மாரீசருடைய கட்டளையை நினைத்துக் கொண்டாள். அப்பொழுது அவளுடைய ஹிருதயம் ஆனது நடுங்கிற்று. அவளுடைய ஸ்தனத்திலிருந்து இரத்தம் பெருகிற்று. பின்பு அந்த அஸுரன் தான் செய்த மாயைகள் வீணாகிவிட்டதைப் பார்த்துப் பகவானுக்கு எதிரில் வந்து கோபத்துடன் இருகைகளால் அவரைக் கட்டி வஜ்ரம் போன்ற முஷ்டிகளால் அடித்தான். அப்பொழுது; பகவான் அந்த அஸுரனுடைய கன்னத்தில் தமது கையால் அடித்தார். அது மஹேந்திரன் விருத்திராசுரனை அடித்தது போலிருந்தது. ஸகல உலகங்களையும் ஜயிப்பவரான பரமபுருஷன் விளையாட்டாகச் சத்துருவை அடித்தபொழுது அவனுடைய சரீரம் நடுங்கிற்று. கண்களிரண்டும் வெளியில் வந்தன.

கைகளும், கால்களும், கழுத்தும் சிதறின. இப்படி அவனுடைய சரீரமானது பெருங்காற்றினால் பெரிய மரம் வீழ்வது போலக் கீழே விழுந்தது. இப்படிப் பகவானால் அடிக்கப்பட்டுப் பூமியில் படுத்தவனும், விசேஷ தேஜஸுள்ளவனும், பயங்கரமாகிய சிங்கப் பற்கள் உள்ளவனும், உதட்டைக் கடித்தவனுமாகிய அஸுரனைப் ப்ரஹ்மா முதலியவர்கள் பார்த்து "ஆச்சரியம், இம்மாதிரியான மரணம் யாருக்குக் கிடைக்கும்? யோகிகள் மோக்ஷத்தை அடைய விரும்பி எவரை ரஹஸ்யத்தில் சித்தத்தை ஒருவகைப் படுத்தித் தியானஞ் செய்கிறார்களோ, அந்தப் பரம புருஷனுடைய முகத்தை தரிசித்துக் கொண்டே அவரால் அடிக்கப்பட்டு அஸுரன் சரீரத்தை விட்டான். இவர்கள் பகவானுடைய பார்ஷதர்கள், பாபத்தால் இம்மாதிரியான ஜன்மத்தை அடைந்தவர் கள். இன்னும் சில ஜன்மத்திற்குப் பிறகு தங்களுடைய பதத்தை அடைவார்கள்" என்று சொல்லிக் கொண்டார்கள்.

30 அப்பொழுது தேவர்கள் பகவானை நோக்கி, "ஓ ஈச! ஸகல யாகங்களை விஸ்தரிப்பவரும், பரிபாலன சமயத்தில் சத்வார்த்தியாக அவதரிப்பவருமாகிய உமக்கு அடிக்கடி நமஸ்காரம் செய்கிறோம். ஜகத்திற்கு உபத்திரவத்தைச் செய்பவனாகிய இந்த அஸுரன் எங்களுடைய பாக்கியத்தால் கொல்லப் பட்டான். நாங்கள் கவலையற்றவர்களாக ஆனோம்" என்று ஸ்தோத்திரஞ் செய்தார்கள்.

31–38 ஸஹிக்க முடியாத பராக்கிரமமுள்ள ஹிரண்யாக்ஷனை ஆதிவராஹ ரூபியான பகவான்

கொன்று ப்ரஹ்மதேவர் முதலியவர்களால் கொண்டா டப்பட்டும் குறைவற்ற உத்ஸவமுள்ள தம்முடைய லோகம் சென்றார். "ஓ விதுர! நான் என்னுடைய குருவினிடமிருந்து தெரிந்துகொண்டபடி பகவான் வராஹாவதாரஞ் செய்து ஹிரண்யாக்ஷனைக் கொன்ற கதையைச் சொன்னேன்" என்று மைத்ரேயர் விதுரருக்கு உபதேசித்தார். ஓ பரிக்ஷித்து மஹாராஜனே! அதனைக் கேட்ட விதுரர் பாகவதோத்தமராகையால் மிகுந்த ஆனந்தமடைந்தார். உலகத்தில் புண்ய ச்லோகர்களும் (நல்வினையைக் கொடுக்கும் பெயருள்ளவர்கள்) மிகுந்த கீர்த்தியுள்ளவர்களுமாகிய அரசர்களுடைய கதையைக் கேட்பதினாலேயே சந்தோஷமுண்டாகிறது. ஸ்ரீவத்ஸமென்ற அடையாளம் உள்ள ஸ்ரீமஹாவிஷ்ணுவின் சரிதத்தைக் கேட்பதால் ஆனந்தம் உண்டாவதற்கு என்ன ஆட்சேபம்? கஜேந்திரமானது முதலையால் பிடிக்கப்பட்டு பகவான் உடைய பாதாரவிந்தத்தைத் தியானஞ் செய்யும் போது பெண் யானைகள் கதறின. அப்பொழுது அவர் யானையை அந்தக் கஷ்டத்திலிருந்து காப்பாற்றினார். கபடமற்ற மனமுள்ளவர்களும், அவரையே சரணமாக அடைபவர்களுமான மனிதர்களால் எளிதில் ஆராதிக்கக் கூடியவரும், அசத்துக்களால் ஆராதிக்க முடியாதவருமான பகவானை க்ருதக்ஞனான (செய்த உபகாரங்களை நினைப்பவன்) எவன்தான் உபாசிக்க மாட்டான்? ஆதிவராஹ மூர்த்தியின் க்ரீடாரூபமானதும், மிக்க அற்புதமானதுமான ஹிரண்யாக்ஷ வதத்தை எவன் கேட்கிறானோ, கானம் செய்கிறானோ, அனுமோதிக் கிறானோ அவன் ப்ரஹ்மஹத்யை செய்தவனானாலும், ஒரு க்ஷணத்திற்குள் சுத்தனாகி விடுகிறான். இந்த ஹிரண்யாக்ஷ வதம் என்கிற கதையானது மிகுந்த

புண்ணியத்தைக் கொடுக்கக்கூடியது; மிகவும் பரிசுத்தியை உண்டு பண்ணைக்கூடியது; தனத்தை உண்டு பண்ணைக் கூடியது; கீர்த்தியை விருத்தி செய்யக்கூடியது; தீர்க்கமான ஆயுளையும் அவரவர்கள் உடைய இஷ்டத்தையும் கொடுக்க வல்லது. யுத்தத்தில் பிராணனையும், இந்திரியங்களையும் காப்பாற்றக் கூடியது. மிகுந்த பராக்கிரமத்தைக் கொடுக்கக் கூடியது. ஓ மஹாராஜ! இக்கதையைப் பக்தியாய்க் கேட்பவர்கள் மரணமடையும் காலத்தில் ஸ்ரீமந் நாராயணனை அடைவார்கள்.

Sri Rama Nama Bank

நாம பெட்டகம்



Help Preserve Namas
from
Air, Water, Fire & Pests

Each pettagam
preserves
13 crores of
Nama

Sponsor
Steel cubboards
(Pettagam)
Rs. 3500/-

ஸ்ரீ ராம் ஜெய ராம் ஜெய் ஜெய ராம் என்ற
மஹா மந்த்ரம்

13 எழுத்துக்கள் கொண்டது.
அக்ஷரத்திற்கு 1 கோடியாக 13 கோடி கொள்ளளவு கொண்ட
பெட்டகங்களில் நாமம் ப்ரதிஷ்டை
செய்யப்படுகிறது.இப்பெட்டகங்கள் நாமத்தை ஈரம், காற்று,
மழை, தீ, பூச்சி இவைகளிலிருந்து சுமார் 60 வருடத்திற்கு
குறையாமல் நாமத்தைப் பாதுகாத்து பல கோடி நபர்கள் தர்சன
மாத்திரத்தினால் நாம ஸ்மரணம் பெற ஏதுவாகும்.

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

பாகம் –3

ஸ்கந்தம் 5 அத்தியாயம் 7 முதல்
ஸ்கந்தம் 7 அத்தியாயம் 10 வரை

Released by Maran's Dog, Toronto , Canada

இஞ்சிக்கொல்லை
R. சிவராம சாஸ்திரிகள்
அவர்களால் 1988ல் மொழி
பெயர்க்கப்பட்டது.

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ராம நாம வங்கியின் ப்ரசார் பிரசுர் பிரிவு
ராம மந்திரம் –2, விளாயகம் தெரு,
சென்னை – 600 033. ☎: 24893736

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

TITLE	:	SRIMAD BHAGAVATHAM, TAMIL VACHANAM
AUTHOR	:	INZIKOLLAI R. SIVARAMA SASTRIGAL WRITTEN IN 1908
SIZE	:	CROWN OCTAVE
EXTENT	:	2736 PAGES CONSISTING OF SEVEN VOLUMES
PRICE	:	RS.600/ SET
FIRST EDITION	:	1996
SECOND EDITION	:	2004
THIRD EDITION	:	2007

ஸ்ரீமத் பாகவதம்

ப்ரதி பத அர்த்தம்

மூல ஸ்லோகங்கள்
ஸம்ஸ்கிருதத்திலும்
தமிழிலும்

பதப்பிரிப்பும் அர்த்தமும்
தமிழில்

7 பாகங்கள்
6224 பக்கங்கள்

விலை ரூ 1500/-

தொடர்பு கொள்க:
ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகளின்

பாகவத தர்மம்
பத்திக்கையில் வெளி வந்த தொடரின்
நூல் வடிவம்

ஸ்ரீ கிருஷ்ணை சைதன்யர்
விலை ரூ. 200/-

தொடர்பு கொள்ளவும் :

ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்

ஸ்ரீ ராம நாம வங்கியின் ப்ராசாரப் பிரகரப் பிரிவு
ராம மந்திரம் – 2, வினாயகம் தெரு,
சென்னை – 600 033. ☎ : 24893736

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

மூலம் தமிழில்

899 பக்கங்கள்

விலை ரூ. 450/-

ஸ்ரீ ராம நாமம் எழுதுவதற்கு நோட்டுகளை
இலவஸமாக வழங்கி பக்தர்கள் மூலம் "ராம" நாமம்
எழுதுவிக்கின்ற வேள்வியை நடத்தி வருகின்ற
ஸ்ரீராம நாம வங்கியின் பிரசாரப் பிரசுரப் பிரிவான

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

தமிழ் வசனம்

1322 பக்கங்கள் அடங்கியது

விலை ரூ. 300/-

ஸ்ரீ ராம நாமம் எழுதுவதற்கு நோட்டுகளை
இலவஸமாக வழங்கி பக்தர்கள் மூலம் ''ராம'' நாமம்
எழுதுவிக்கின்ற வேள்வியை நடத்தி வருகின்ற
ஸ்ரீராம நாம வங்கியின் பிரசாரப் பிரசுரப் பிரிவான

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

ஸ்ரீமத் பாகவதம்-தமிழ் வசனம்

பாகம்–3

பொருளடக்கம்

		பக்கம்
	ஸ்கந்தம்–5	
7.	பரதருடைய சரிதம்	1
8.	பரதர் மான் ஜன்மத்தை அடைந்தது	4
9.	பரதர் ப்ராஹ்மண ஜன்மத்தை அடைந்தது	10
10.	ஜடபரதர் பல்லக்குத் தூக்கியது	16
11.	ரஸுகணருக்குப் பரதர் ஞானத்தை உபதேசித்தது	23
12.	பரதர் அரசனுடைய ஸந்தேஹத்தை நிவர்த்தித்தது	27
13.	ஸம்ஸார மார்க்கம்	31
14.	(முன் அத்தியாயத்தின் விளக்கம்)	37
15.	பரதருடைய வம்சம்	45
16.	த்வீபங்களின் லக்ஷணம்	48
17.	கங்கையின் வரலாறு	54
18.	பத்ராச்வம் முதலியவை	60
19.	கிம் புருஷம்	68
20.	ப்லக்ஷத்வீபம்	74
21.	த்யுமண்டலம்	83
22.	சந்திரன் முதலியவைகளின் மண்டலம்	88
23.	த்ருவ மண்டலம்	92
24.	அதலம் முதலிய லோகங்கள்	95
25.	ஆதிசேஷன் வரலாறு	103
26.	நரகங்கள்	106
	ஸ்கந்தம்–6	
1.	அஜாமிளர் உபாக்யானம்	116
2.	அஜாமிளர் விஷ்ணுலோகஞ் சென்றது	125

பக்கம்

3. யமனுக்கும் தூதர்களுக்கும் ஸம்வாதம் 131
4. தக்ஷருடைய வம்சம் 136
5. தக்ஷர் நாரதரை சபித்தது 144
6. தக்ஷ கன்னிகைகளின் வம்சம் 149
7. விச்வரூபன் புரோகிதனாக இருந்தது 155
8. நாராயண கவசம் 160
9. விசுவரூப வதம் 166
10. விருததிராசுரயுத்தம் 176
11. (முன் அத்தியாயத் தொடர்ச்சி) 180
12. விருததிரவதம் 184
13. ப்ரஹ்மஹத்யா தோஷமுள்ள இந்திரன் ... 189
14. விருத்திரனுடைய வரலாறு 192
15. சித்திரகேதுவுக்கு ஞானோபதேசம் செய்தது 199
16. சித்திரகேதுவுக்கு நாரதர் வித்தையை உபதேசித்தது 203
17. சித்திரகேது சாபத்தால் அசுர ஜன்மத்தை 212
18. மருந்துகளின் உற்பத்தி 217
19. பும்ஸவன விரதத்தின் ஸ்வரூபம் 227

ஸ்கந்தம்–7.

1. பார்ஷதர்களுடைய சாபம் 232
2. ஹிரண்யகசிபு தன் மாதாவை சமாதனஞ் 240
3. ஹிரண்யகசிபு வரம் பெற்றது 249
4. ஹிரண்யகசிபு உலகத்தை உபத்திரவித்தது 255
5. ப்ரஹ்லாதரைக் கொல்ல முயற்சித்தது 261
6. ப்ரஹ்லாதர் சிறுவர்களுக்குத் தத்துவத்தை 272
7. நாரதருடைய உபதேசம் 278
8. ஹிரண்யகசிபுவின் வதம் 287
9. ப்ரஹ்லாத ஸ்துதி 298
10. பகவான் ப்ரஹ்லாதரை அநுக்ரஹித்தது 311

அத்தியாயம்–7

பரதருடைய சரித்ரம்

மஹாபாகவதராகிய பரதர் பகவானுடைய சங்கல் பத்தின்படி பூமியை பரிபாலித்து விச்வரூபனுடைய பெண்ணாகிய பஞ்சஜனீ என்பவளை கல்யாணஞ் செய்து கொண்டார். அவளிடத்தில் அவருக்கு பிதாவுக்கு சமமான குணசாலிகளான சுமதி, ராஷ்ட்ரபிருத், சுதர்சனன், ஆசரணன், தூம்ரகேது என்ற ஐந்து புத்ரர்கள் உண்டானார்கள். அது அஹங்காரத்திலிருந்து பூதஸூக்ஷ்மங்கள் உண்டாகிறது போலிருந்தது. பரதருடைய ராஜ்யகால முதல் இந்த வர்ஷத்திற்கு பாரத வருஷமென்று பெயருண்டாயிற்று. அதற்கு முன் இந்த வர்ஷத்திற்கு அஜநாடமென்று பெயரிருந்தது. ஸர்வஜ்ஞராகிய அந்த அரசன் தன்னுடைய பிதா, பிதாமஹர் ஆகிய இவர்கள் போல் ப்ரஜைகளை தர்மந்தவறாமல் காப்பாற்றி வந்தார். ப்ரஜைகளும் அரசனிடத்தில் விசேஷ ப்ரீதியுடன் தங்கள் தங்கள் தர்மத்தை விடாமல் அனுஷ்டித்து வந்தார்கள். மேலுமவர் யஜ்ஞங்களாலும் (யூபமில்லா தவைகள்). க்ரதுக்களாலும் (யூப முள்ளவைகளாலும்) பகவானாகிய நாராயணனை பூஜித்தார். மிக்க ஸ்ரத்தையுடன் அக்னி ஹோத்ரம், தர்ச பூர்ண மாஸம் சாதுர்மாஸ்யம், ஸோமம் இவைகளுடைய ப்ரக்ருதியா லும் பகவானை பூஜித்தார். இப்படி அநேக யாகங்கள் செய்யப்பட்டிருக்கும் பொழுது அவைகளாலுண்டான அபூர்வமென்கிற தர்மத்தை யஜுபுருஷனும், ஸகல தேவதைகளுடைய அடையாளத்தைச் சொல்லும் மந்திரங்களுக்கு அர்த்தமாகிய இந்திரன் முதலிய

தேவதைகளுக்கு அதிபதியாயிருப்பதனால் சாக்ஷாத் கர்த்தாவும், பரப்ரம்ஹமும், பரதேவதையுமான வாசு தேவரிடத்தில் சமர்ப்பித்து தம்முடைய சாமர்த்யத்தால் ஆசை முதலியவைகளை யொழித்து அத்வர்யுக்களால் ஹவிஸ்ஸானது ஹோமம் பண்ணப்படும் பொழுது யஜமானராகிய பரதர் யஜ்ஞபாகமுள்ள தேவர்களை ஸ்ரீ நாராயணனுடைய அவயங்களாக த்யானம் பண்ணினார். இப்படி சுத்தமான கர்மங்களை அனுஷ்டித்ததால் அவருடைய சித்தமானது சுத்தமா யிற்று. மேலும் அவருக்கு ஹிருதயத்துக்குள்ளிருக்கும் ஆகாச சரீரியும், வாசுதேவரும், மஹா புருஷனும், ஸ்ரீவத்ஸம், கௌஸ்துபம், சங்கம், சக்ரம், கதை இவைகளாலங்கரிக்கப்பட்டும் பக்தர்களான நாரதர் முதலியவர்களுடைய ஹிருதயத்தில் ஸ்திரமாக வசிப் பவரும், புருஷரூபியாக ப்ரகாசிப்பவருமான பரப்ரஹ்மத் தினிடத்தில் ஒவ்வொருநாளும் பக்தி அதிகரித்தது. இம்மாதிரி வெகுவர்ஷகாலம் ராஜ்யபரிபாலனஞ் செய்து தம்முடைய வம்சபரம்பரையாய் அனுபவிக்கப் படும் ஸொத்தை தம்முடைய புத்ரர்களுக்கு பிரித்துக் கொடுத்து, ஸகல சம்பத்துக்களுக்கும் இருப்பிடமான தம்முடைய க்ருஹத்தை விட்டு ஹரிக்ஷேத்ரம் என்ற புலகருடைய ஆஸ்ரமம் சென்றார். அந்த க்ஷேத்ரத்தில் பகவான் இப்பொழுதும் அங்கு வசிக்கும் பக்தர்களி டத்தில் ப்ரீதியினால் அவர்களுடைய இஷ்டப்படி தர்சனங் கொடுக்கிறார். அவ்விடத்தில் மேலும் கீழும் நாபியுள்ள சிலாசக்ரங்களுள்ள கண்டகீ என்ற நதி யானது அவ்விடத்திலிருக்கும் ஆச்ரமங்களை பரிசுத்தப் படுத்துகிறது. அந்த புலஹாச்ரமத்தில் பலவகையான புஷ்பங்கள், தளிர்கள், துளசி, ஜலம், கிழங்கு, வேர், பழம் முதலியவைகளாலும் பகவானுடைய ஆராதனத்தை

செய்து கொண்டு விஷய ஆசையையொழித்து இந்திரியங்களை நிக்ரஹித்து ஏகாந்தத்தில் மிகுந்த சுகத்தை அடைந்தார். இப்படி எப்பொழுதும் பகவானை பூஜிப்பதால், பகவானிடத்தில் அநுராகம் அதிகரித்து அதனால் ஹிருதயம் உருகி ப்ரயத்னமற்றவராகி அதிக ஆனந்தத்தால் மயிர் கூச்சிலை அடைந்து, பகவானிடத் திலிருக்கும் ப்ரீதியினால் ஆனந்தத்தைப் பெருக்கி அதனால் கண்தெரியாதவராக ஸ்ரீ பகவானுடைய சிவந்த பாதாரவிந்தத்தை த்யானஞ் செய்வதால் விருத்தி அடைந்த பக்தியோகத்தால் பூர்ணராயும், மிகுந்த ஆனந்தமடுவில் மூழ்கின புத்தியுள்ளவராகவும், பகவானுடைய பரிசர்யையைக் கூட மறந்திருந்தார் இம்மாதிரி பகவத் வ்ரதத்தை அனுசரித்து மான் தோலுடுத்தி ஒவ்வொரு காலமும் ஸ்நானம் பண்ணு வதால் நனைந்தும், பொன்னிறமுள்ளதுமான ஜடையை தரித்தும், உதயமாகிய சூர்யமண்டலத்தில் சூர்ய ப்ரகாசத்தால் ஹிரண்மயபுருஷனை த்யானம் பண்ணிக் கொண்டு பின்வருமாறு சொன்னார்.

12. ப்ரகிருதியைக் காட்டிலும், மேலானதும் கர்ம பலத்தைக் கொடுக்கக் கூடியதுமான சூர்யனுடைய ஸ்வரூபமாகிய இந்த தேஜஸ்ஸானது தன் மனத்தைக் கொண்டு இந்த ஜகத்தை ஸிருஷ்டிக்கிறது. பின்னும் இந்த ஜகத்தில் அந்தர்யாமியாக ப்ரவேசித்து ஆசையுள்ள ஜீவனை சித்சக்தியைக் கொண்டு காப் பாற்றுகிறது. மேலும் புத்திக்கு ப்ரவிருத்தியை உண்டு பண்ணும் இந்த தேஜஸ்ஸை சரணமடைகிறோம்.

அத்தியாயம்–8

பரதர் மான் ஜன்மத்தை அடைந்தது

ஒருகால் பரதர் மஹாநதியில் ஸ்நாநம் பண்ணி நித்யநைமித்திக கர்மங்களை முடித்துக்கொண்டு ப்ரணவத்தை ஜபித்து, மூன்று முகூர்த்தம் ஜலக்கரையில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது ஒரு பெண்மான் தாஹத்தால் அந்த இடத்திற்கு வந்து நதியில் ஜலத்தை அதிக ஆவலுடன் குடித்தது. அந்த சமயத்தில் சமீபத்தில் ஒரு சிங்கமானது மிகவும் பயங்கரமாக சப்தித்தது. அதை கேட்ட அந்த பெண் மான் இயற்கையிலேயே பயந்ததாகையால் மிகவும் பயந்து நாலுபுறத்திலும் மிரளவிழித்து பயத்தால் ஜலத்தை குடியாமலேயே அந்த நதியைத் தாண்டி அக்கரை சென்றது. அப்பொழுது அது கர்ப்பமுள்ளதாகயிருந்தபடியால், பயத்தாலும், தாண்டும் வேகத்தாலும் கர்ப்பமானது நழுவி ஜலத்தில் விழுந்தது. (ப்ரசவித்தது) தாண்டியது, பயம், துக்கம் ஆகிய இவைகளால் பீடிக்கப்பட்டதும், தன்னுடைய கூட்டத்தைவிட்டுப் பிரிந்ததுமான அந்த மானானது ஒரு குஹையில் பிரவேசித்தது; மரணத்தையும் அடைந்தது. அதைக்கண்ட பரதர் ஜலத்தில் விழுந்த மான்குட்டியினிடத்தில் மிகுந்த கருணை வைத்து பந்துபோல அதனை எடுத்துக்கொண்டு தமது ஆச்ரமம் சேர்ந்தார். அதுமுதல் தினந்தோறும் விசேஷப்ரியத்துடன் அந்தமான் குட்டியை போஷிப்பது, ரக்ஷிப்பது, திருப்தி செய்வது ஆகிய இவைகளுக்கு வேண்டிய கார்யத்தையே தியானம் பண்ணிக்கொண்டிருந்தார். அதனால் அவருடைய நியமங்களும், இந்திரிய

நிக்ரஹங்களும், பகவானைப் பூஜிப்பதும், நாளுக்கு நாள் முறையே குறைந்து போயின. மேலும், அவர் பின்வருமாறு தனக்குள் யோஜிக்கலானார் "ஆச்சர்யம்! இந்த மான்குட்டியானது காலத்தின் மஹிமையால் தன் பந்துக்களை விட்டுப் பிரிந்து என்னைச் சரணமாக அடைந்து என்னையே தாயாகவும், பிதாவாகவும், ப்ராதாவாகவும், ஞாதியாகவும், கூட்டத்தாராகவும் நினைத்துக் கொண்டிருப்பதுமன்றி வேறு ஒன்றையும் அறியாததாகவும் இருக்கிறது. என்னிடத்தில் விசேஷ விச்வாஸமுள்ளதாகவும் இருக்கிறது. ஆகையால் சரணாகதனை உபேக்ஷிக்க கூடாதென்கிற தர்மத்தை அறிந்த நான் இந்த மான் குட்டியை போஷிப்பது, காப்பாற்றுவது முதலியவைகளை செய்யக் கடமைப்பட்டவன். ஸாதுக்களும், சாந்தர்களும் தீனர்களிடத்தில் ப்ரீதியுள்ளவர்களுமான பெரியோர்கள் இம்மாதிரியான கார்யத்திற்காக முக்கியமான சொந்த கார்யத்தைக்கூட உபேக்ஷிக்கிறார்கள் என்று யோஜித்து, உட்காருவது, படுப்பது; நடப்பது ஸ்நாநஞ் செய்வது முதலிய கார்யங்களிலும் அந்த மான்குட்டியையே நினைத்து அதனிடத்தில் விசேஷ ப்ரேமையுள்ளவராக இருந்தார். பின்னும் அவர் தர்ப்பம் புஷ்பம், ஸமித்து, இலை, பழம், கிழங்கு, ஜலம் ஆகிய இவைகளைக் கொண்டு வருவதற்காக வெளியில் போகும்பொழுது, நாய், செந்நாய் இவைகள் மான் குட்டியைக் கொன்று விடுமோவென்று ஸந்தேஹித்து அந்த மான்குட்டியைத் தூக்கிக் கொண்டே போகிறார். வழியில் அதனிடத்தில் விசேஷப்ரீதியினாலும் அது நடக்க முடியாமலிருப்பதாலும், அதைத் தோளில் தூக்கிக் கொண்டு செல்லுகிறார். இவ்விதமாக அந்தமான் குட்டியை

மாரிலும் மடியிலும் வைத்துக் கொஞ்சி மிகுந்த சந்தோஷத்தை அடைந்தார். தேவ பூஜை முதலிய கர்மாக்கள் செய்யும்பொழுது நடுவில் எழுந்திருந்து அந்த மானைப்பார்த்து 'உனக்கு க்ஷேமம் உண்டா கட்டும்', என்று ஆசீர்வாதம் செய்கிற வழக்கமுண்டு. அதனை காணாத போது க்ருபணன் பணங்கெட்டுப் போனால் வருத்தப்படுவது போல மன வருத்தமுள்ள வராக மிகவும் கருணையுடன் அதனைப் பார்க்க வேண்டுமென்ற விருப்பத்தாலும் அதனைவிட்டுப் பிரிந்த துக்கத்தாலும் மிகுந்த தாபமடைந்து அதைப் பற்றியே துக்கித்து பின்வருமாறு சொல்லுவார் "தாயில்லாத இந்த மான் குட்டியானது குரூர புத்தியுள்ளவனும், பாக்யமற்றவனுமாகிய என்னிடத்தில் ப்ரியம் வைத்தது, என்னுடைய தூர்க்குணங்களை அது நினையாமல் சாதுபோல திரும்பி வருமா? இந்த ஆச்ரமத்தின் சமீபத்தில் தேவனால் காப்பாற்றப்பட்டு க்ஷேமமாக புற்களை மேய்ந்துகொண்டிருக்கும் அந்த மான்குட்டியை நான் பார்ப்பேனா? தனியே சஞ்சரிக்கும் அதனை நாய், செந்நாய் முதலியவைகள் பக்ஷிக்காம லிருக்குமா? ஸகல ஜகத்திற்கும் க்ஷேமத்தைச் செய்ப வரும் வேதஸ்வரூபியுமாகிய சூரியன் அஸ்தமயத்தை அடைந்தும் இந்த மான் குட்டி வரவில்லையே. புண்யம் பண்ணாதவனாகிய என்னிடம் இந்தமான் திரும்பி வந்து பலவகையான அழகான மான் குட்டி களின் விளையாட்டுகளால் தன்னுடைய பந்துக்களின் துக்கத்தை போக்கடித்து எனக்கு ஸுகத்தைக் கொடுக்குமா?' விளையாட்டிற்காக கண்களை மூடிக்கொண்டு ஸமாதியிலிருப்பவன் போலிருக்கும் என்னிடம் பயந்து கிட்டவந்து ஜலத்துளிபோல் மிருதுவான கொம்புகளால் உராய்ந்து கொள்ளும்

தர்ப்பத்தில் ஹவிஸ்ஸை ஆவாஹனஞ் செய்திருக்கும் பொழுது சாபல்யத்தால் அந்த தர்ப்பத்தை தின்றுவிடும். அது என்னாலும் அறியப்படும். அப்பொழுது நான் அதனை அதட்டுவேன். அப்பொழுது, அது ரிஷி குமாரன்போல மிகவும் பயந்து கொண்டு விளை யாட்டை நிறுத்தி அசையாமல் நிற்குமா? மிகுந்த பாக்யமுள்ள இந்த பூமியால் என்ன தபஸ் செய்யப் பட்டது. இந்த மானுடைய வெகு அழகான குளம்பு களால் செய்யப்பட்ட அடி வரிசைகள் இதோ காணப்படுகின்றன. மானைவிட்டுப் பிரிந்து கஷ்டப் படும் எனக்கு அவைகள் மான் சென்ற மார்க்கத்தைக் காண்பிக்கின்றன; மேலும் ஸ்வர்க்கம், மோக்ஷம் இவைகளை விரும்பிய ப்ராஹ்மணர்கள் யாகம் முதலியனக் கர்மங்களை செய்யும் புண்ய பூமியாக இந்த க்ஷேத்ரம் ஆயிற்று. (எந்த பூமியில் கிருஷ்ண ஸாரங்கள் ஸஞ்சரிக்கின்றதனவோ அது புண்யபூமி என்று கருத்து.) சிங்கத்தின் சப்தத்தைக்கேட்டு இதனுடைய தாய் இறந்து போனதால் இதனை நான் வளர்த்தேன்; இப்பொழுது அந்த மான் குட்டி என்னுடைய ஆச்ரமத்தைவிட்டு வெளியில் சென்றபடியால் தீனர்களிடத்தில் ப்ரீதியுள்ள சந்திர பகவான் அதனிடம் கருணைவைத்து அதனைக் காப்பாற்றுவாரா? மானைவிட்டுப் பிரிந்ததாலுண்டான ஜ்வரமாகிய காட்டித்தீயினுடைய ஜ்வாலையால் தாபத்தை அடையும் ஹிருதயமாகிய ஸ்தலபத்ம முள்ள எனக்கு மானைக் காண்பித்து சந்திரபகவான் குளிர்ந்ததும், சாந்தமும், ப்ரியத்தால் அதிகமானதுமான தம்முடைய முகத்தின் அமிருதமயமான கிரணங்களால் என்னை சுகப்படுத்துவாரா?

23–28. இம்மாதிரி அந்த யோகியான பரதர்

கிடைக்காத மனோரதத்தால் வருத்தப்பட்ட ஹிருதய முள்ளவராகி மான் குட்டியாக தோன்றுகிற ப்ராரப்த கர்மத்தால் யோகத்தையும், பகவானை பூஜிப்பதையும் விட்டுவிட்டார். அதற்கு ப்ராரப்த கர்மமே காரணமாக விருக்கவேண்டும். இல்லாவிடில் மான் குட்டியினி டத்தில் மனிதனாகிய பரதருக்கு வயிற்றில் பிறந்த புத்ரனிடத்தில் போல் விசேஷப்ரீதி யுண்டாவதற்கு என்ன காரணம்? இந்த பரதர் மோக்ஷத்திற்கு விரோதமென்று நினைத்துவிட முடியாத புத்ராபிம மானத்தையு மொழித்தவர் இப்படி அந்தராஜரிஷிக்கு யோகமானது விக்னத்தால் கெடுக்கப்பட்டது. மேலுமவர் அந்த மான்குட்டியை போஷிப்பது, காப்பாற்றுவது, கொஞ்சுவது முதலியவைகளைச் செய்து கொண்டே பரமாத்மாவைச் சிந்திக்காமலேயே காலத்தைக் கழித்தார். இப்படியிருக்கையில் எலிவளைக்கு ஸர்ப்பம் வந்தாற் போல் அவருக்கு மரணஸமயம் நேர்ந்தது. அந்த சமயத்தில் புத்ரனைப்போல் சமீபத்தில் துக்கித்துக் கொண்டிருக்கும் அந்த மானைப்பார்த்து பரதரும் மனவருத்தமடைந்து அதனிடத்தில் விசேஷ அபிமானம் வைத்து அந்த மானையும், தம்முடைய சரீரத்தையும், இவ்வுலகத்தையும் விட்டு மரண மடைந்தார். பின்பும் அவருக்கு முன் ஜன்மத்தில் மான்குட்டியின் ஸ்மரண மிருந்தபடியால் மான் சரீரத்தை அடைந்தார். முன்ஜன்மத்தில் செய்த பகவத் பூஜையின் மஹிமையால் மிருகஜன்மத்தில் தாம் மிருகஜன்மத்தை அடைந்ததற்கு காரணமின்னதென்று தெரிந்துகொண்டு மிகவும் அனுதாபத்தை அடைந்து பின்வருமாஹ சொல்லலானார்; கஷ்டம், ஆத்மஜர் களுடைய மார்க்கத்திலிருந்து நழுவினேன், ஆச்சர்யம், ஸகல ஆசைகளையும் ஒழித்து, ஏகாந்தமான புண்ய

தபோபூமியை அடைந்தவனும், ஆத்மஜனும், ஸகல பிராணிகளுக்கும் ஆத்மாவாகிய ஸ்ரீ வாஸுதேவரி டத்தில் ச்ரவணம், மனனம், கீர்த்தனம், ஆராதனம், அனுஸ்மரணம் ஆகிய இவைகளைக்கொண்டு காலம் முழுவதும் மனத்தை செலுத்தியவனுமாகிய என்னு டைய மனதானது மான்குட்டியினிடம் சென்றதே; நான் மிகவும் மூடன். இம்மாதிரி தமக்குள் நிர்வேதத்தை அடைந்து மாதாவான மானைவிட்டு சாந்தர்களான முனிகள் வஸிக்குமிடமாயும், சாலவிருஷங்களுள்ளது மான பகவத் க்ஷேத்ரத்திற்கு காலாஞ்சன மென்னும் மலையிலிருந்து சென்றார், அவ்விடத்தில் நல்ல காலத்தை யெதிர்பார்த்துக்கொண்டு பிறருடைய சேர்க்கையில் மிக்க பயமுள்ளவராகில் தனியே ஸஞ்சரித்து காய்ந்த இலை, திருணம், கொடி முதலிய வைகளை புஜித்து மிருக ஜன்மத்தில் முடிவு காலத்தையே எதிர்பார்த்திருந்து ஒருநாள் ஜலமத்தியில் அந்த மிருகசரீரத்தை விட்டுவிட்டார்.

அத்தியாயம்–9

பரதர் ப்ராஹ்மண ஜன்மத்தை அடைந்தது

பின்பு சமம், தமம், தபஸ், வேதாத்யயனம், பிறருக்குச் சொல்லிக் கொடுப்பது, கிடைத்ததைக் கொண்டு சந்தோஷிப்பது, பொறுமை, வணக்கம், அதிதி களுக்கு அன்னமிடுதல், கர்ம வித்யை, அசூயையில்லாம லிருப்பது, ஆத்மஜ்ஞானம் ஆனந்தம் ஆகிய இவை களுள்ள அங்கிரஸ, கோத்திரத்திலுண்டாகிய ஒரு சிறந்த ப்ராஹ்மணனுக்கு ச்ருதம், ஸ்வபாவம், ஆசாரம், ரூபம், ஔதார்யம் ஆகிய இவைகளில் பிதாவிற்கு சமானர்களான ஒன்பது புத்ரர்கள் பிறந்தார்கள். இரண்டாவது பத்னியிடத்தில் ஒரு புத்ரனும், ஒரு புத்ரியும் உண்டானார்கள். அந்தப் புத்ரனே 'பரம பாகவதராகிய பரதன். மிருக சரீரத்தை விட்டு ப்ராஹ்மண ஜன்மத்தை அடைந்தவர் என்று சொல்லு கிறார்கள். அந்த ப்ராஹ்மண ஜன்மத்திலும் பிறருடைய சேர்க்கையில் மிக்க பயமுள்ளவராகி கர்மபந்தத்தைப் போக்கக்கூடிய ச்ரவணம். ஸ்மரணம், குணங்களைச் சொல்லுவது முதலியவைகளை செய்து பகவானுடைய பாதாரவிந்தத்தை மனத்தில் த்யானஞ் செய்துகொண்டு இடையூறு நேரிடுமோ வென்ற சந்தேகத்தை அடைந்து பகவானுடைய அனுக்ரஹத்தால் முன் ஜன்மங் களுடைய விருத்தாந்தத்தை நினைத்துக் கொண்டு பயித்யங் கொண்டவன் போலும், ஜடன் போலவும் குருடன் போலவும், செவிடன் போலவும், தாம் சஞ்சரித்தார். அவருடைய தகப்பனாராகிய ப்ராஹ்மணன் புத்ரனிடத்தில் விசேஷ ஸ்நேஹத்தால் ஸமாவர்த்தனம் வரையிலுள்ள சம்ஸ்காரங்களைச் செய்வித்து

உபநயனஞ் செய்த பிறகு சௌசம். ஆசமனம் முதலிய கர்மங்களை அவருக்கு உபதேசித்தார். ஆனால் புத்ரனுக்கு அது சம்மதமில்லாதவைகளாகவிருந்தன. ஆனால் புத்ரனுக்கு ஸகல நியமங்களையும் பிதா உபதேசிக்க வேண்டுமென்று உபதேசித்தார். ச்ராவணம், முதலிய மாதங்களில் வேதங்களை பிதா வ்யாஹ்ருதி ப்ரணவம், மூன்று பாதங்களுள்ள காயத்ரீ முதலிய வைகளை அவருக்கு வஸந்தகாலம், க்ரீஷ்மகாலம் முழுவதும் உபதேசித்தும் அவருக்கு அதில் மனமில் லாததனால் ஸ்வரங்களை சரியாக உச்சரியாமல் மாறுதலாகவே சொல்லி வந்தார். இப்படி புத்ரனுக்கு சௌசம், ஆசமனம், வேதாத்யயனம் முதலியவைகளில் மனம் பிரவர்த்திக்கவில்லை என்பதை நன்றாக பிதா தெரிந்து கொண்டும், புத்ரனிடமிருக்கும் அபிநிவேசத் தால் எல்லாவற்றையும் புத்ரன் கற்றுணர்ந்தவனாக ஆக வேண்டுமென்ற துரபிமானமுள்ளவராக முயற்சித்தும் அவருடைய எண்ணம் நிறைவேறாமல் மரணம் அடைந்தார். அவருடைய இரண்டாவது பத்தினியானவள் தன்னுடைய இரண்டு குழந்தை களையும் ஸபத்தினியிடம் ஒப்பித்து பர்த்தாவுடன் உடன்கட்டையேறி பதியின் லோகத்தை அடைந்தாள். பிதாவிற்குப் பின்பு மற்ற ஒன்பது சஹோதரர்களும் வேதத்தையே அத்யயனம் செய்து கர்மிகளாக விருந்தபடியால் இவருடைய மஹிமையை அறியாமல் தங்களுடைய வார்த்தையைக் கேட்காமலிருக்கும் இவரை மூடனென்று நினைத்து நிர்ப்பந்திக்காம லிருந்தார்கள். அவரைப் பார்த்து இரண்டு கால் பசுக்கள் (அஜ்ஞர்களான மனிதர்கள்) ஓ பயித்யங் கொண்டவனே! ஜட, செவிட! என்று அழைக்கிறார்கள். அதற்கு தக்கபடி இவரும் அஸமஞ்ஜமாகப் பேசுகிறார்.

பிறர் சொல்லும் கார்யத்தைச் செய்கிறார். பலாத் காரமாக பிறரால் செய்யும்படி தூண்டப்பட்டுச் செய்யப்படும் விஷ்டியென்ற கார்யத்தால் சம்பளத்திற்காக செய்யும் வேலையாலும், யாசிப்பதாலும், தைவச் செயலாலும் கிடைத்த அன்னம் ஸ்வல்பமானாலும், அதிகமானாலும், அதனை புஜிக்கிறார். இந்திரியத்தை திருப்தி செய்வதற்காக புஜிக்கிறதில்லை. மேலுமவர் காரணமற்றதும் தானாக ப்ரகாசிக்கக் கூடியதும், சுத்தமுமான அனுபவ ஸ்வரூபமாகிய பரமாத்மாவே நான்" என்ற எண்ணம் உள்ளவராகையால் சுக துக்கங்களில் தேஹாபிமானத்தை யொழித்திருந்தார். மேலுமவர் விருஷபம்போல் குளிர், உஷ்ணம், காற்று மழை, இவைகளை சஹித்து பருத்தவைகளும் கெட்டியான வைகளுமான அங்கங்களுள்ளவராகவுமிருந்தார். பின்னுமவருடைய சரீரம் பூமியில் படுப்பது, ஸ்நானஞ் செய்யாமலிருப்பது முதலியவைகளால் அழுக்கடைந் திருந்தபடியால், அழுக்கடைந்த ரத்தினத்தின் காந்தி போல் அவருடைய ப்ரம்ஹதேஜஸ் வெளியில் ப்ரகாசிக்கவில்லை; இன்னுமவர் கந்தைத் துணியை யுடுத்திக் கொண்டிருந்தார். யக்ஞோபவிதமானது விசேஷ அழுக்குள்ளதாகவிருந்தது. அதனால் இவரை ப்ராஹ்மணன் என்றும் மேலானவரென்றும் அடை யாளத்தால் அறியமுடியவில்லை. அதனால் அஜ்ஞ ஜனங்கள் இவரை அவமதித்தார்கள். இவர் பிறரிடத்தில் வேலை செய்து ஆஹாரத்தை பெற்றுக் கொள்ள ஆரம்பித்த போது அவருடைய சகோதரர் களும் வயலில் சேற்றை உழும்படி செய்தார்கள். அதனையுள்செய்தார். ஆனால் இந்த பக்கம் மேடு இந்தப்பக்கம் பள்ளம் இந்தவிடத்திலிருந்து மண்ணை எடுக்க வேண்டும், இந்தவிடத்தில் மண் போட

வேண்டுமென்பது அவருக்குத் தெரியாது. சகோதரர்கள் அரிசி, நொய், புண்ணாக்கு, உமி, உளுத்துப்போன உளுந்து, காந்திப்போன அன்னம் ஆகிய இவைகளில் எதனைக் கொடுத்தாலும் அதனை அமிருதமாக நினைத்துப் புஜிப்பார். (இதுவரையில் அவராக வேஷமில்லாமலும் பற்றுதலில்லாமலுமிருந்தாரென்று சொல்லப்பட்டது. இனி மரணத்திலும், பயப்பட வில்லையென்பது சொல்லப்படுகிறது)

12–18 பின்னொருகால் திருடர்களுக்கு அதிபதியான ஒரு சூத்ரன் தனக்கு பிள்ளை பிறக்கவேண்டி பத்ரகாளிக்கு ஒரு புருஷ பசுவைக் கொன்று அதன் ரத்தத்தால் திருப்தி செய்து வைக்கிறதென்று யத்தனித்தான். அவனுடைய வேலைக்காரர்கள் பாதி ராத்திரியில் தானாகவரும் பசுவைத் தேடியும் அகப் படாமல் ஒரு வயல்கரையில் வயலிலுள்ள தான்யங் களை மிருகங்கள், பன்றிகள், மஹிஷங்கள் ஆகிய இவைகள் அழிக்காமல் காற்றுக் கொண்டு வீராஸனத்தில் உட்கார்ந்திருக்கும் இந்த ப்ராஹ்மணோத்தமரைக் கண்டார்கள். அவரைக் கண்ட அந்த திருடர்கள் நல்ல லக்ஷணமுள்ள பசு கிடைத்தது, யஜமானுடைய கார்யம் முடிந்தது" என்று நினைத்து அவரை கயிற்றினால் கட்டி மிக்க சந்தோஷத்துடன் காளி கோவிலுக்குக் கொண்டுவந்தார்கள். பிறகு அவருக்கு ஸ்நானஞ் செய்வித்து புதுவஸ்த்ர முடுத்தி ஆபரணங் களாலும், மாலையாலும், சந்தனத்தாலும், திலகத்தா லும் அலங்கரித்து போஜனஞ் செய்வித்து தூப தீபங்கொடுத்து பொரிகள் தளிர்கள், பழங்கள் முதலிய உபஹாரங்களுள்ள மாலையை கழுத்தில் போட்டு மிருதங்கம் முதலிய வாத்யகோஷங்களுடன் காளிக்கு

முன் உட்காரவைத்தார்கள். பிறகு அந்த யஜமான னுக்கும் புரோஹிதனாகிய திருடன் இந்தப் புருஷ பசுவின் ரத்தத்தால் காளியை பூஜிக்க விரும்பி பத்ரகாளி மந்திரத்தால் மந்திரிக்கப்பட்ட கூர்மையான கத்தியை எடுத்துக் கொண்டான். இப்படி ரஜோ குணம், தமோகுணம் இவைகளால் பூர்ணமான மனது ள்ளவர்களும், பணக்கொழுப்புள்ளவர்களும், பகவா னுடைய கலாவதாரர்களான வீரர்களையும் லக்ஷ்யஞ் செய்யாமல் சஞ்சரிப்பவர்களும், பிறருக்கு ஹிம்சை செய்வதையே வேடிக்கையென்று நினைத்தவர்களுமான அந்த சூத்ரர்கள் பரப்ரஹ்மமாக விருப்பவரும், ப்ரஹ்மரிஷியின் புத்ரரும் விரோத புத்தியற்றவரும், ஸகல ப்ராணிகளிடத்தில் ப்ரீதியுள்ளவருமான ப்ராஹ்மணோத்தமரை பலி கொடுப்பதற்காக ஏற்படுத் தியதை அந்த பத்ரகாளி பார்த்தாள். அது அவளுக்கு இஷ்டமில்லாததாக விருந்தது. மேலும் அவருடைய ப்ரஹ்மதேஜஸ்ஸால் காளியின் சரீரம் சஹிக்க முடியாத தாபத்தை அடைந்தது. அப்பொழுது அந்த தேவியானவள் அந்த பிம்பத்திலிருந்து வெளிவந்தாள். அவளுடைய முகமானது பொறாமை, கோபம் ஆகிய இவைகளாலும் பயங்கரமான புருவங்களாலும் வக்ரமான சிங்கப்பற்களாலும், சிவந்த கண்களாலும் பயங்கரமாகவிருந்தது. பின்னுமவள், அட்டஹாசஞ் செய்துகொண்டு மிக்க கர்வங்கொண்டவர்களும், பாபிகளுமான அந்தத் திருடர்களுடைய கழுத்தை அந்தக் கத்தியாலேயே வெட்டி அதிலிருந்து பெருகி வரும் உஷ்ணமான ரத்தத்தை தன்னுடைய பரிவாரங் களுடன் பானஞ் செய்து தன்னுடைய பார்ஷதர் களுடன் கானஞ்செய்தாள்; நர்த்தனஞ் செய்தாள்; அவர்களுடைய தலைகளை பந்துகளாக வைத்துக் கொண்டு விளையாடினாள்.

19–20 இப்படியே மஹான்களுக்கு அபராதஞ் செய்தால் அது முழுவதும் தனக்கே கெடுதியையுண்டு பண்ணுகிறது. ஓ மஹாராஜ! தலையை வெட்டுவதற்கு கத்தியை கையில் வைத்துக் கொண்டிருக்கும் போதும் பயமில்லாமல் அந்த ப்ராஹ்மணன் உட்கார்ந்திருந்தது ஆச்சர்யமல்ல. ஏனெனில் அவர் தேஹம் முதலிய வைகளில் அபிமானத்தை விட்டவர்; ஸகல ப்ராணி களிடத்திலும் ப்ரீதியுள்ளவர்; விரோத புத்தியற்றவர்; காலமாகிய சக்கரத்தை ஆயுதமாயுடைய பகவானால் அந்த அந்த பாவங்களைக் கொண்டு காப்பாற்றப் பட்டவர்; நிர்பயமான பகவானுடைய பாதத்தை அடைந்தவர். பாகவதர்; பரமஹம்ஸர்.

அத்தியாயம்–10

ஜடபரதர் பல்லக்குத் தூக்கினது

பின்பு ஒருகால் ஸிந்து, சௌவீரம் ஆகிய தேசங்களுக்கு அதிபதியான ரஹூகணனென்ற அரசன் ஆத்ம தத்வத்தையறிய விரும்பி கபிலருடைய ஆசரமம் செல்ல முயற்சித்தார். அப்பொழுது இக்ஷுமதியென்னும் நதியின் கரையில் அரசனுடைய பல்லக்குத் தூக்குகிறவர்களுக்கு அதிபதியாகவிருப்பவன் பல்லக்குத் தூக்குவதற்காக ஆளைத்தேடினான். அப்பொழுது அந்தப் ப்ராஹ்மணனை தெய்வச் செயலால் கண்டான். அப்பொழுது அவன் 'இவன் பருத்த அவயங்களுள்ளவன் வலிமையுள்ளவன்; எருது போலவும், கழுதை போலவும் சுமை தூக்குவதற்குத் தகுந்தவன்' என்று யோஜித்து ஏற்கனவே பலாத் காரமாக கொண்டுவரப்பட்டவர்களுடன் அந்த ப்ராஹ்மணரையும் சேர்த்து பல்லக்குத் தூக்கும்படி செய்தான். அந்த மஹானுபாவராகிய ப்ராஹ்மணர் அந்தக் காரியத்தை செய்யத் தகாதவரானாலும் பல்லக்குத் தூக்கினார். ஆனால் அந்த ப்ராஹ்மணன் தாம் நடக்கும்போது ஒரு விற்கடை தூரம் முந்திப் பார்த்துக்கொண்டே குதித்துத் செல்லும் சுபாவ முள்ளவர். ஆகையால் அவருடைய நடை சமமாக வில்லாததால் பல்லக்கு ஒரு பக்கம் தாழ்ந்தும் ஒரு பக்கம் உயர்ந்து மிருப்பதைக் கண்டு ரஹூகணர் ஆட்களை நோக்கி "ஓ பல்லக்குத் தூக்குகிறவர்களே! சமமாக நடந்து செல்லுங்கள் ஏன் பல்லக்கை இப்படி விஷமமாக தூக்குகிறீர்கள்" என்று சொன்னார். அதனைக் கேட்ட அவர்கள் "அரசன் நம்மைத்

தண்டிப்பாரோ" யென்று பயத்துடன் "ஓ மஹாராஜ! நாங்கள் உம்முடைய ஆக்ஞையின் படி ஜாக்கிரதையாகத் தூக்குகிறோம். ஆனால் இவன் இப்பொதுதான் பல்லக்குத் தூக்க வந்திருக்கிறான், அப்படியும் சீக்ரமாக செல்லுகிறதில்லை. இவனுடன் உம்முடைய வாஹனத்தைச் சுமக்க எங்களால் முடியாது. ஒருவன் செய்யும் குற்றம் அவனைச் சார்ந்தவர்களுக்கும் ஏற்படுகிறது" என்றார்கள் அதனைக் கேட்ட ரஹூகண ணென்ற அரசன் பெரியோர்களை உபாஸித்தவரானா லும், ஸ்வபாவத்திற்கு ஸ்வாதீனப்பட்டு கொஞ்சம் கோபம்கொண்டு தூளிகளால் மறைக்கப்பட்ட அக்னிபோன்றவரும் நன்றாய் வெளியில் ப்ரகாசிக்காத ப்ரஹ்மதேஜஸ்ஸுள்ள வருமான அந்த ப்ராஹ்ம ணோத்தமரை நோக்கி "ஓ ப்ராதாவே! வெகு தூரம் நீ ஒருவனாக பல்லக்கைத் தூக்கிகொண்டு வந்துபடியால் மிகவும் களைப்படைந்தாய். உனக்கு சரீரம் பருத்திருக்கவில்லை. உனக்கு தேஹபலமுமில்லை. கிழத்தனத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறாய். ஓ தோழ! உன்னுடன் பல்லக்கைச் சுமக்குமிவர்கள் கிழத்தன மில்லாதவர்களும், பருத்த கொழுத்த சரீரமுள்ளவர் களுமாக விருக்கிறார்கள்" என்று பல வகையான வக்ரமான வாரத்தைகளைச் சொல்லி தமோகுண ஸ்பாவத்தால் நிந்தித்தார். அதனைக்கேட்டும் அந்த ப்ராஹ்மணன் அவித்யையால் செய்யப்பட்ட த்ரவ்யம், குணம், கர்மம், சித்தம் ஆகிய இவைகளுள்ளதும், அவஸ்துவும், கைகால் முதலிய அவயங்களுடைய அமைப்புள்ளதுமான சரீரத்தில் 'நான், என்னுடையது' என்ற நித்யாபிமான மற்றவராகையாலும், ப்ரஹ்ம ஸ்வரூபியாக விருப்பதால் ஒன்றும் பதில் சொல்லாமலேயே முன்போல தூக்கிக்கொண்டே சென்றார், பின்பும்

பல்லக்கு முன் போலவே செல்வதை நோக்கி ரஹூகணர் அந்த ப்ராஹ்மணனை நோக்கி 'அட! ஏன் என்னை லக்ஷ்யஞ்செய்யாமல் உனதிஷ்டப்படி நடக்கிறாய்? நீ ஜீவித்திருந்தாலும் மரணமடைந்தவனுக்குச் சமனாய் இருக்கிறாய். அரசனுடைய உத்தரவை மீறிச் செல்லு கிறாய், ஆனதால் யமன் ஜனங்களைச் சிக்ஷிப்பது போல உன்னை நான் சிக்ஷிக்கிறேன். அப்பொழுது நீ ஸ்வபாவகுணத்தை அடைவாய் என்று பலவகையாக நிந்தித்தார். ஏனென்றால் தாம் அரசனென்ற அபிமான முள்ளவர்; ரஜோகுணத்தாலும் தமோ குணத்தாலும் பகவத் பக்தர்களை திரஸ்கரிப்பவர்; தம்மை பண்டித ரென்று நினைத்தவர்; யோகேச்வர்களுடைய நடையை அறியாதவர்; அப்படிப்பட்ட அரசனை நோக்கி ப்ரஹ்மஸ்வரூபியும், ஸகலப் பிராணிகளிடத்தில் ஸமஹிருத்தும், ஸகல பிராணிகளுக்கு ஆத்மாவு மாகிய அந்த ப்ராஹ்மணர் கர்வமில்லாமல் பரஸன்ன முகத்துடன் பின்வருமாறு சொல்லலானார். "ஓ சூரனாகிய மஹாராஜ! உம்மால் சொல்லப்பட்டது யாவும் உண்மையே (நீ பருத்த சரீரமுள்ளவன் ச்ரமத்தை அடையாதவன் என்று சொன்னது) உண்மையில் சுமையென்ற ஒரு வஸ்து இல்லை. சுமக்கிறவனென்பதுமில்லை. நடக்கிறவன் என்றதும் உண்மையிலில்லை. நடந்து செல்லக்கூடிய மார்க்க மென்பதும் மித்யை. பருத்திருப்பது, முதலியவை சேதனனுக்கிருப்பதாக வித்வான்கள் சொல்லமாட் டார்கள். அது தேஹத்தின் தர்மமேயொழியசேதனனு டைய தர்மமல்ல. பருத்திருப்பது, இளைத்திருப்பது, வ்யாதிகள், மனோவிகாரங்கள், பசி, தாஹம், பயம், சண்டை, விருப்பம், கிழத்தனம், தூக்கத்தில் ஆசை, கோபம், அஹங்காரம், மதம் ஆகிய இவைகள்

தேஹத்தில் அபிமானமுள்ளவனுக்கே யொழிய அபிமானமற்றவனாகிய எனக்கில்லை. ஓ அரசனே! எவை ஆதி, அந்தம் இவையுள்ளவையோ அவையாவும் ஜீவன் மிருதங்களேயாம் (நான் மட்டில் ஜீவன் மிருதனல்லவென்பது கருத்து) ஓ ஸ்தோத்திரஞ் செய்யக் கூடியவரே! இவன் யஜமானன் இவன் வேலைக்காரன் என்பது நிச்சயமாக விருக்குமானால் ஒருவனே ஆஜ்ஞாபனஞ்செய்வதும், அதனை வேலைக்காரர்கள் அங்கீகரிப்பதும் உசிதமாகும். (அம்மாதிரியான நிச்சயமில்லை. இந்த க்ஷணத்தில் நான் அரசனாகி விட்டால் நீர்வேலைக்காரனாகி விடுவீர். நான் எஜமானனாகி விடுவேன் என்று கருத்து.) ஆனதால் அரசன் வேலைக்காரன் என்ற பேதமானது உண்மையில் கொஞ்சமேனுமில்லை வ்யவஹாரத்தாலேற்படுகிறது. யஜமானனென்பவன் யார்? அவனுக்கு வேலைக்கார னென்பவன் யார்? ஆனாலும் உமக்கு அரசனென்ற அபிமான மிருக்குமானால் என்னால் செய்யப்பட வேண்டிய கார்யத்தைச் சொல்லும், அதனைச் செய்கிறேன். மேலும் பயித்தியங்கொண்டவன் போலும், ஊமை போலும், குருடன்போலும், ஜடன் போலும் இருப்பவனும் ப்ரஹ்ம பாவத்தை அடைந்த வனுமாகிய எனக்கு உம்மால் செயயப்படும் சிக்ஷையால் என்ன பயன்? (முக்தனுக்கு அர்த்தமாவது அனர்த்த மாவது இல்லையென்று கருத்து) அல்லது நான் முக்தனில்லாமல் மதங்கொண்டவனாகவாவது. கர்வ முள்ளவனாகவாவதிருந்தாலும் உம்மால் செய்யப் படும் சிக்ஷை வீணானதேயாம், (ஜடனைச் சிக்ஷித்துக் நல்மார்க்கத்துக்குக் கொண்டுவருவது அஸாத்யமென்று கருத்து) இம்மாதிரி அந்த ப்ராஹ்மணோத்தமர் அரசன் சொன்ன வார்த்தையை அனுமதிப்பதாலேயே

பதில் சொல்லி தாம் அவித்யையின் ஸம்பந்தமற்ற வராகையால், ப்ராரப்த கர்மத்தை அனுபோகத்தால் குறைக்கவிரும்பி அரசனுடைய பல்லக்கை முன்போல் சுமந்து கொண்டிருந்தார். ஸிந்து, ஸௌவீரம் ஆகிய தேசங்களுக்கு அதிபதியாகிய அந்த அரசன் ஆத்மதத் வத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற மிகுந்த ச்ரத்தையுள்ளவராக விருந்தபடியால், அதில் அதிகார முள்ளவராகி அந்த ப்ராஹ்மணோத்தமரால் சொல்லப் பட்டவார்த்தையை கேட்டார், அது அநேக யோக சாஸ்திரங்களுக்கு சம்மதமானது; ஹிருதயத்திலிருக்கும் அவித்யையை நிவர்த்திக்கக்கூடியது; அதனைக் கேட்டவுடன் அரசன் சீக்கிரம் வாஹனத்திலிருந்து இறங்கி அந்த ப்ராஹ்மணோத்தமரை நமஸ்கரித்து செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டுமென்று பிரார்த் தித்து தாம் அரசன் என்ற கர்வத்தை விட்டு அவரை நோக்கி பின்வருமாறு சொல்லலானார்.

15–24. "நீர் யார்? ரஹஸ்யமாக ஸஞ்சரிக்கிறீர், யஜ்ஞோபவீதம் தரித்திருக்கிறீர்; தத்தாத்ரேயர் முதலிய அவதூதர்களுக்குள் நீர் யார்? யாருடைய புத்ரர்? இவ்விடம் வந்த காரணமென்ன? என்னுடைய க்ஷேமத்திற்காக வந்தவரானால், கபிலமஹர்ஷியா? மஹேந்திரனுடைய வஜ்ரத்தினிடம் எனக்கு பயமில்லை. மூன்று நேத்ரங்களுள்ள பரம சிவனுடைய சூலாயுதத் தினிடமும் பயப்படேன். யமனுடைய தண்டத்தி னிடமும் நடுக்கமில்லை. அக்னி, சூர்யன், சந்திரன், வாயு, குபேரன் ஆகிய இவர்களுடைய அஸ்திரங்களைக் கண்டு பயப்படேன். ப்ராஹ்மணர்களை அவமதித்ததால் மிகவும் பயத்தை அடைகிறேன், (உம்மை வாஹனம் சுமக்கும்படிச் செய்தேனே என்பது கருத்து) நீர்

ஆசையற்றவராகி, ஜ்ஞானமாகிய மாஹாத்மியத்தை மறைத்துக் கொண்டு ஜடன்போல் ஸஞ்சரிக்கிறீர் அளவற்ற மஹிமையுள்ளவர்; யோக சாஸ்த்ர ஸம்மதமான உம்முடைய வார்த்தை வித்வான்களாலும் மாற்றமுடியாது. ஆனதால் உம்முடைய விருத்தாந்தத்தைத் தெரிவிக்கவேண்டும். மேலும் நான் யோகேச்வரரும், ஆத்மதத்வத்தை அறிந்த மஹர்ஷிகளுக்குக் குருவும், ஜ்ஞான சக்தியால் அவதரித்தவரும், ஸாக்ஷாத் நாராயணருமான கபிலரைக் தர்சித்து ஸம்ஸாரத்தி லிருந்து காப்பாற்றக்கூடியது எது? என்பதைக் கேட்க அவருடைய ஆச்ரமம் நோக்கிச் செல்லுகிறேன் நீர் லோகத்தைக் காப்பாற்றுவதற்காக பிறருக்குத் தெரியாமல் சஞ்சரிக்கும் அந்தக் கபில மஹர்ஷியா? அஜ்ஞனும், விஷயங்களில் ஆசையுள்ளவனுமான புருஷனால் யோகேச்வரர்களுடைய நடை அறிய முடியுமா? மேலும் நீர் தமக்கு ச்ரமமில்லையென்று சொன்னீர், ஆனாலும் வாஹனத்தைச் சுமந்து கொண்டு நடந்துபடியால் உமக்கு ச்ரமமிருக்க வேண்டுமென்றே அனுமானிக்கிறேன். ஏனென்றால் நான் யுத்தம் முதலிய கார்யத்தைச் செய்யும்போது ச்ரமத்தை அடைகிறேனல்லவா? ஆனால் இவை உண்மையல்ல. வ்யவஹாரமாத்ரமென்று சொன்னீர், அதெப்படி பொருந்தும்? வ்யவஹார மார்க்கத்தை உண்மையென்றே ஒப்புக் கொள்ளவேண்டும். குடம் தன்னுருவத்தில் குறையுள்ளதானால் ஜலங்கொண்டு வருவதற்குபயோகப்படுகிறதா? மேலும் பருத்திருப்பது முதலியவை உபாதியான தேஹத்தின் தர்மங்களென்று சொன்னீர். அடுப்பில் ஒரு பாத்திரத்தை வைத்து அதில் பாலைவிட்டு அதில் அரிசியைப்போட்டு அடுப்பில் அக்னியை ஜ்வலிக்கச் செய்தால் பாத்திரம்

கொதித்து அதனால் பால் உஷ்ணமாகி அதனால் அரிசி பக்குவமாகிறது. இவைகளில் ஒன்றையும் மித்யையென்று சொல்ல முடியாது. அதுபோல் தேஹம் இந்திரியம், ப்ராணன், மனம் ஆகிய உபாதிவசத்தால் புருஷனுக்கேற்படும் ஸம்ஸாரம் உண்மையாக விருக்க வேண்டுமேயல்லாமல், உண்மையிலில்லை, யென்று எப்படிச் சொல்லக்கூடும்? மேலும் எவன் எந்தக் காலத்தில் அரசனோ அவன் அப்பொழுது ப்ரஜைகளை காப்பாற்றவும், சிக்ஷிக்கவும் கடமைப்பட்டவனல்லவா? சிக்ஷிப்பதால் ஜடத்தன்மை விலகாவிடுனும் ஸ்வதர்மத்தை அனுஷ்டித்ததால் பகவானை ஆராதித்ததாகிறது. அதனால் பாபம் விலகுகிறது. அப்படியிருக்க அது வ்யர்த்தமென்று சொன்னீரே, அதெப்படி பொருந்தும்? ஸம்ஸாரத்தில் கஷ்டப்படுபவர்களுக்கு பந்துவாகவிருப் பவரே! நான் அரசனென்ற அபிமானத்தால் பெரியோர் களை அவமதித்தவன்; அப்படிப்பட்ட என்னிடத்தில் ஸ்நேஹ திருஷ்டியை வைக்கவேண்டும். அதனால் பெரியோர்களை அவமதித்ததாலுண்டான பாபத்தை நிவர்த்தித்துக் கொள்வேன் பரமசிவன் போல ஸமர்த்தனானாலும் மஹான்களை அவமதித்தால் சீக்ரத்தில் நாசமடைவான். ஜகத்திற்கு தோழரும், எல்லாரையும் ஸமமாகப் பார்ப்பவரும் அபிமான மற்றவருமான உமக்கு பேதபுத்தி இல்லை என்றார்.

அத்தியாயம்–11

ரஹூகணருக்குப் பரதர் ஜ்ஞானத்தை யுபதேசித்தது

அதனைக் கேட்ட ப்ராஹ்மணோத்தமர் அரசனை நோக்கி 'நீர் அவித்வானாயிருந்தும், வித்வான்கள் பேசுவதுபோலப் பேசுகிறீர், ஆனதால் வித்வான் களுக்குள் சிறந்தவரல்ல. லௌகிக வ்யவஹாரத்தை ஸத்யமென்று நீர்சொல்வதால் உண்மையை அறிந்த வித்வான்கள் அதனை ஒப்புக் கொள்ளமாட்டார்கள். அப்படியே பலவகையான கிருஹஸ்த தர்மங்கள், யாகங்கள் ஆகியவைகளை நிரூபிக்கும் வேதத்திலும் (வைதிக வ்யவஹாரமும் உண்மையான அர்த்தமின்ன தென்று நிச்சயிக்கப்படவில்லை.) ஆசை முதலியவை களற்றதும் ஹிம்ஸையற்றதும், பரமாத்மாவினிடத்தில் ஸமர்பிக்கப்பட்டதுமான தர்மமே சுத்தமெனப்படுகிறது. ஆனால் வேதாந்த ச்ரவணஞ்செய்தவனும் கர்மத்தில் ப்ரவர்த்திக்கிறானேயென்றால் எவன் ஸ்வப்னத்தை திருஷ்டாந்தமாக வைத்துக் கொண்டு கிருஹஸ்தாச்ரமி களுடைய ஸௌக்யத்தை துச்சமென்று ஊஹிக்க வில்லையோ அவனுக்கு வேதவாக்யங்கள் இயற்கையில் சிறந்தவைகளானாலும் தத்வஜ்ஞானத்தை யுண்டு பண்ணுகிறதில்லை. எதுவரையில் புருஷனுடைய மனமானது ஸத்வகுணத்திற்காவது, ரஜோகுணத் திற்காவது வசப்பட்டிருக்கிறதோ அதுவரையில் அந்த மனமானது ஜ்ஞானேந்திரியங்களுடனும் கர்மேந்திரியங் களுடனும் புருஷனுக்குத் தர்மத்தையாவது அதர்மத் தையாவது உண்டுபண்ணுகிறது. ஆத்மாவிற்கு உபாதி யான அந்த மனமானது முந்திய வாஸனையுள்ளதாகிய

விஷயங்களில் சேர்ந்து குணங்களால் அசைக்கப்பட்டு காமம் முதலிய ரூபாந்திரத்தை அடைகிறது. பதினாறு கலைகளில் முக்கியமாயுமிருக்கிறது; அது தனியான பெயர்களால் தேவசரீரம் முதலியவைத் தரித்து அந்த அந்த தேஹங்களால் மேலானதாக இருப்பதையும், தாழ்ந்ததாக விருப்பதையும் செய்கிறது. மேலும் ஸம்ஸாரமாகிய சக்ரத்தை செலுத்துவதும், மாயையால் ஜீவனுக்கு உபாதியாயிருப்பதுமான அந்த மனமானது ஜீவனைத் தழுவிக் கொண்டு தடுக்க முடியாத துக்கத்தையாவது ஸுகத்தையாவது இரண்டையுமாவது அந்த காலத்திற்குத் தக்கபடி பலனையும் உண்டு பண்ணுகிறது. ஜீவனுக்கு ஸம்சாரம் மனத்தாலேயே உண்டாகிறது. ஸ்தூலமும், ஸூக்ஷ்மமும் க்ஷேத்ரஜ்ஞனாகிய ஜீவனால் பார்க்கக் கூடியதாகிறது. மேலும் அந்த மனத்தையே குணத்தில் அபிமானம் வைப்பதற்கும் அபிமானமற்றவனாயிருப்பதற்கும், பரத்திற்கும், அபரத்திற்கும் காரணமென்று சொல்லுகிறார்கள். (மோக்ஷத்திற்கும் மனதே காரணம்) தீபமானது நெய்யில் நனைக்கப்பட்டவர்த்தியை எரிக்கும் பொழுது புகையுள்ள ஜ்வாலையை அடைகிறது. மற்ற காலத்தில் தன்னுடைய நிஜரூபமான தேஜோரூபத்தை அடைகிறது போல, மனதானது 'குணங்களில் அபிமானத்தைத அடைந்த பொழுது புருஷனுக்கு சம்ஸாரத்தையும், அபிமானமற்றிருக்கும் போது மோக்ஷத்தையும் உண்டு பண்ணுகிறது. (மனது ஒரு வஸ்துவானாலும் அவஸ்தா பேதத்தால் சம்ஸாரத்திற்கும் மோக்ஷத்திற்கும் காரணமாகிறது) மற்ற காலத்தில் குணங்களாலும், கர்மங்களாலும், கட்டப்பட்ட மனதானது பதினோரு வகையான விருத்திகளை அடைகிறது. ஜ்ஞானேந்திரியங்களும், அபிமானங்களும், கர்மேந்திரியங்களும், மனத்தின்

விருத்திகளாம். சூரனாகிய அரசனே! மேற்சொல்லிய விருத்திகளுக்கு மாத்திரைகளும், கர்மங்களும் தேஹமும், விஷயங்களாகின்றன. அவை எவை என்றால் வாசனை, ரூபம், சப்தம், விஸர்க்கம் முதலியவைகள். சம்போகம், உபத்திரவம், அதிகமாகப் பேசுவது, சில்பம், தேஹம் என்று பதினோரு விஷயங்கள், சிலர் அஹங்காரத்தை பன்னிரண்டாவது விஷயமாகச் சொல்லுகிறார்கள். ஜீவன் அஹங்காரத்தை அடைந்து சரீரமாகிய படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கிறான். (மேற் சொல்லிய விஷயங்களில் அவாந்தர பேதங்கள் பல விருப்பதால் அவைகள் அனந்தங்களென்று அறிய வேண்டும்) திரவியம், ஸ்வபாவம், ஸம்ஸ்காரம், அதிர்ஷ்டம், காலம், இவைகளால் மனத்தின் விகாரங்கள் நூற்றுக்கணக்காகவும் மாறுகின்றன. ஆனால் அவைகள் ஒன்றோடொன்று ஸம்பந்தத்தாலும், தானாகவும் மாறுகிறதில்லை. மாயையால் செய்யப்பட்டதும் ஜீவனுக்கு உபாதியுமான மனத்தின் விபூதிகள் நித்யங்கள். க்ஷேத்ரஜ்ஞனை ஆச்ரயித்தவைகள். மேலு மவைகள்

ஜ்ஞானத்தை உபதேசித்தது

சில காலம் (ஜாக்ரத்ஸ்வப்னங்களில்) பிரகாசங்களாகவும், சிலகாலம் (ஸுஷுப்தியில்) மறைந்துமிருக்கின்றன. ஜீவனால் அடையக் கூடிய தத்பதார்த்தமாகிய ஆத்மா எங்கும் வ்யாபித்தவர். ஜகத்திற்கு காரணராகிய புருஷன்; அபரோக்ஷர், தேஜோரூபி உத்பத்தியற்றவர்; ப்ரஹ்மதேவர் முதலியவைகளுக்கும் மேலானவர்; ஸகல ப்ராணிகளிடத்திலும் வஸிப்பவர் வாஸுதேவர், தம்முடைய மாயையால் ஜீவனுக்கு

நியந்தாவாக விருப்பவர்; ஸ்தாவரங்களுக்கு, ஜங்கமங் களுக்கும், வாயுவானவர். எப்படி ப்ராண ரூபியாகிய நியந்தாவாகவிருக்கிறாரோ, அப்படி பகவானாகிய பரமாத்மா ஜீவனுக்கு நியந்தாவாக விருக்கிறார். ஓ மஹாராஜ! எதுவரையில் மனிதன் ஜ்ஞானத்தை அடைந்து அதனால் மாயையை கடந்து, விஷயங்களில் ஆசையையொழித்து காமம் முதலிய சத்ருக்களை ஜயித்து ஆத்மாவின் உண்மையை அறியவில்லையோ அதுவரையில் ஸம்ஸாரத்தில் சுற்றுகிறான். மேலும் எதுவரையில் மனமே ஸம்ஸாரதாபத்தைக் கொடுக்க் கூடியதென்றும், சோகம், மோஹம், வ்யாதி, விஷயங்களில் ஆசை, விரோதம் ஆகிய இவைகளுள்ள மனத்தாலேயே மமதையுண்டாகிறதென்றும் இவன் தெரிந்து கொள்ளவில்லையோ, அதுவரையில் துக்கத்தை அடைவான்; ஆனதால் மிகுந்த பலமுள்ளதும், சத்ருவும், உபேக்ஷித்த படியால் விருத்தியடைந்ததும், ஆத்மாவை மறைப்பதும், மித்யாபூதமான மனத்தை, ஸகல லோகங்களுக்கும் குருவாகிய ஸ்ரீ மஹா விஷ்ணுவினுடைய சரணங்களை உபாஸிப்பதாகிய அஸ்த்ரத்தால் நாசஞ்செய்யும்" என்றார்.

அத்தியாயம்–12

பரதர் அரசனுடைய ஸந்தேகத்தை நிவர்த்தித்தது

அதனைக்கேட்ட ரஹூகணர் அந்த ப்ராஹ்ம ணோத்தமரை நோக்கி "லோகத்தைக் காப்பாற்று வதற்காக சரீரமெடுத்துக்கொண்டு ஸஞ்சரிப்பவரும், தமது பரமானந்த ஸ்வரூப ப்ரகாசத்தால் ப்ராகிருத தேஹங்களை துச்சமாக நினைப்பவரும், அவதூத ப்ராஹ்மண வேஷத்தால் மறைக்கப்பட்ட நித்யமான அனுபவமுள்ளவருமான உமக்கு நமஸ்காரஞ்செய்கிறேன். ஜ்வரத்தால் பீடிக்கப்பட்டவனுக்கு நல்ல ஔஷதமெப் படியோ, வெயிலால் பீடிக்கப்பட்டவனுக்கு குளிர்ந்த ஜலமெப்படியோ,அப்படி அபிமானத்தால் விவேக மற்றவனாகிய எனக்கு உம்முடைய அமிருததத்திற் கொப்பான வார்த்தையானது மேலான ஔஷதமாயிற்று. எனக்கு எந்த விஷயத்தில் ஸம்சயமிருக்கிறதோ, அதைப்பற்றி பிந்தி கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொது உம்மால் சொல்லப்பட்ட வார்த்தையானது ஆத்மவிஷயமாக விருப்பதால். அதனுடைய அர்த்தம் நன்றாகத் தெரியவில்லை. அதை எளிதில் எனக்குத் தெரியும்படிச் சொல்லவேண்டும் அதனைத் தெரிந்து கொள்ள விருப்பமுள்ளவனாக விருக்கிறேன். ப்ரத்ய க்ஷமாகக் காணப்படும் கர்மங்களின் பலன் யாவும் (சுமைசுமப்பது முதலியவை) வ்யவஹாரமூலமென்று சொன்னீரல்லவா? அது உண்மையாக இருக்கக் கூடுமா? இந்த விஷயத்தில் என்மனது பிரமிக்கிறது," என்று கேட்டார்.

5–12. அதனைக் கேட்ட ப்ராஹ்மணர் அரசனை

நோக்கி, "ஓ மஹாராஜ! பூமியின் விகாரமானது எதற்காகவாவது பூமியில் ஸஞ்சரிக்கிறதோ அதனை ஜனமென்று சொல்லுகிறோம். (அசையாப் பொருள் களை கல் முதலியவைகளென்று சொல்லுகிறோ மென்பது கருத்து) பூமியின் விகாரமாகிய தேஹத்தால் கால்களும், அவைகளுக்கு மேலிருக்கும் கணைக்கால், முழங்கால், துடை, இடுப்பு, மார்பு, கழுத்து, தோள், முதலிய அவயவங்கள் ஒன்றின் மேல் ஒன்றாக இருக்கின்றன; ச்ரமம், சுமையென்பது மித்யையாம். ச்ரமத்திற்கு ஆச்ரயமேற்படுமாகில் அதை உண்மை யென்று ஒப்புக்கொள்ளலாம். அதுவே ஏற்படுகிற தில்லை, தேஹத்திற்கு ச்ரமமா? கால் முதலிய அவயவங்களுக்கு ச்ரமமா? ஒன்றுக்குமில்லை. (ஆகை யால் ச்ரமமென்பது மித்யையேயாம்) என்னுடைய தோளில் மரத்தால் செய்யப்பட்ட பல்லக்கு இருக்கிறது. அதில் ஸௌவீரராஜனென்ற பெயருள்ள தேஹமானது இருக்கிறது. அந்த சரீரத்தில் உமக்கு "நான் ஸிந்து தேசத்திற்கு அரசன்" என்ற அபிமானம் வேரூன்றியி ருக்கிறது. அதனால் கர்வங் கொண்டு விவேகமற்ற வனாக இருக்கிறீர். மேலும் நீர் 'ஜனங்களை நான் ஸம்ரக்ஷிக்கிறேன்' என்று தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளுகிறதுமல்லாமல் மிக்க கஷ்டப்பட்டு தீனர்களாகவிருக்கும் பந்து ஜனங்களை நிக்ரஹிப்பதால் தயவில்லாதவனாக விருக்கிறீர். அசையும் பொருள் அசையாப் பொருள் ஆகிய ஜகத் முழுவதும் பூமியி லிருந்தே உண்டாகிறது. பூமியிலேயே நசிக்கிறது. ஆகையால் நாமரூபங்கள் வ்யவஹார மூலமேயொழிய உண்மையானவையல்ல. ஆனால் பூமியை ஸத்யமென்று சொல்லலாமேயென்றால் 'க்ஷிதி' என்ற சப்தமும் மித்யையான அர்த்தத்தால் ஏற்பட்டதேயொழிய

வேறில்லை. அதற்கு காரணம் பரமாணுக்கள், பூமி அவைகளின் கார்யம். ஆனதால் உண்மையானதல்ல. அந்தப் பரமாணுக்கள் ஸத்யங்களோமென்றால் அவைகளும் மித்யா பூதங்களேயாம். அவித்யையுள்ள மனத்தால் பரமாணுக்கள் கல்பிதங்களேயாம், அவை களுடைய ஸமூஹத்தால் கார்யங்கள் ஏற்படுகின்றன. ஆனதால் இளைப்பு, பருத்திருப்பது அணுவாக விருப்பது, பெரியதாக விருப்பது, கார்யம், காரணம், சேதனம், ஜடம், த்ரவ்யம், ஸ்வபாவம, காலம் ஆகிய இவைகள் அவித்யையுள்ள **புத்தியால்** ஏற்பட்டிருக் கிறது ஆனால் நித்யமான வஸ்து எதுவென்றால் ஜ்ஞானஸ்வரூபமும், கத்தமானதும், ஒன்றாயும், உள்வெளியற்றதுமான ப்ரஹ்மமே உண்மையானது. அதுவே ப்ரத்யக்; சாந்தமானது; பகவானென்று சொல்லப்பட்டது; கவிகள் அதனை வாஸுதேவ ரென்று சொல்லுகிறார்கள். ஓ ரஹூகண! இந்த ப்ரஹ்மத்தைத் தபஸினால் அடையமுடியாது. அன்னம் முதலியவைகளை தேவர்களுக்குக் கொடுப்பதாலும், கிருஹஸ்தாச்ரமத்தாலும், வேதாப்யாசத்தாலும், ஜலம், அக்னி ஸூர்யன் முதலியவர்களை உபாஸிப் பதாலும் அந்த பரமாத்மாவை யறிய முடியாது. மஹான் களுடைய பாதாரவிந்த தூளியை சேவிப்பதாலேயே அந்த வஸ்துவை அடையலாம்.

13–16. கிராம்ய கதைகளைச் சொல்லாமல் உத்தம ச்லோகராகிய பகவானுடைய கதைகளை ஒவ்வொரு நாளும் சொல்லிக்கொண்டு எவன் காலத்தைக் கழிக்கிறானோ அவனுக்கு பகவானிடத்தில் ஸ்திரமான பக்தியுண்டாகும், நான் முன் ஜன்மத்தில் பரதனென்ற அரசனாகவிருந்தேன். விஷயங்களில்

ஆசையில்லாதவனாக விருந்தேன். பகவானையே ஆராதித்துக் கொண்டிருந்தேன். ஆனால் ஒருமான் குட்டியினிடத்தில் ஆசை வைத்தேன். அதனால் மானாகப் பிறந்தேன். அந்த ஜன்மத்திலும் முன் ஜன்மத்திய ஜ்ஞானம் எனக்கிருந்தது. அது நான்செய்த பகவதாராதனத்தின் பயன். அது முதல் பிறருடைய சேர்க்கையில் நான் பயந்தவனாகி பிறருக்குத் தெரியாமல் ஸஞ்சரிக்கிறேன். ஆனதால் ஒன்றிலும் ஆசைப்படாமலிருப்பதால் ஜ்ஞானமுண்டாகும், அந்த ஜ்ஞானமாகிய கத்தியால் மோஹத்தை வெட்ட வேண்டும். பிறகு மனிதன் பகவானுடைய கதைகளைச் சொல்வது கேட்பது முதலியவையால் ஜ்ஞானத்தை அடைந்து ஸம்ஸார மார்க்கத்தைக் கடந்து பகவானை அடைவான்.

அத்தியாயம்–13

ஸம்ஸாரமார்க்கம்

"வ்யாபாரிகள் பணத்தாசையால் எப்பொழுதும் காடு, தேசம் ஆகிய இவைகளில் ஸஞ்சரித்து ச்ரமப்படுவதுபோல தாண்டமுடியாத ப்ரவர்த்தி மார்க்கத்தில் ஜனங்கள் அவித்யையால் ப்ரவேசித்து ரஜோகுணம், தமோ குணம், ஸத்வ குணம், ஆகிய இவைகளால் பிரிக்கப்படும் கர்மங்களை கார்யமென்று பார்க்கிறார்கள். மேலும் ஸுகத்தில் ஆசைகொண்டவர் களாகிய ஸம்ஸாரமாகிய காட்டில் ஸஞ்சரித்து ஒரு பொழுதும் ஸுகத்தை அடைகிறதில்லை. ஸம்ஸாரமாகிய காட்டில் ஆறு திருடர்களிருக்கிறார்கள். அவர்கள் கெட்ட யஜமானனாகிய புத்தியின் தனமாகிய தர்மத்தை அனுபவத்தால் குறைக்கிறார்கள். இடையன் தூங்கும் சமயத்தில் செந்நாய்கள் ஆடுகளை அபஹரிப்பது போல் ஜீவன் மதித்திருக்கும் பொழுது புத்ரன் முதலியவர்கள் 'நீர் எனக்கு பிதா, எனக்கு பர்த்தா' என்று சொல்லி அவனை மோஹிக்கச் செய் கிறார்கள். மேலும் மிகுந்த கொடிகள், திருணங்கள், குல்மங்கள் ஆகிய இவைகளுள்ள மார்க்கத்தில் கொசு முதலியவைகளால் மனிதன் உபத்ரவிக்கப்படுவது போல, காமம் முதலியவைகளால் வ்யாப்தமான கிருஹஸ்தாச்ரமத்திலிருப்பவன் உபத்ரவத்தை அடை கிறான். கந்தர்வ நகரம்போல் மித்யையான தேஹத்தை ஸத்யமென்றும் நினைக்கிறான். பிசாசம் போன்ற தங்கம் முதலியதை கிரஹிக்கக் கூடியதென்றும் நினைக்கிறான். ஓ மஹாராஜ! காட்டு மார்க்கமாகச் செல்லும் வழிப்போக்கன் சூழல் காற்றினால் கிளம்பிய

தூள்களால் திக்குகள் தெரியாமல் கஷ்டப்படுவது போல் கிருஹம், பணம் முதலியவைகளை ஆத்மா வென்று நினைத்திருக்கும் அஜ்ஞன் ஸம்ஸாரத்தில் கஷ்டப்படுவான். பின்னுமவன் ஸ்த்ரீயினிடத்தில் ஆசைப்பட்டு அதனால் விவேகத்தை இழந்துவிடு கிறான். மேலும் வனத்தில் மனிதன் கண்ணுக்குப் புலப்படாமல் சப்திக்கும் ஜல்லியென்ற ஜந்துக்களின் சப்தத்தாலும், கண்ணுக்கு நேரில் கத்தும் கோட்டான் முதலியவைகளுடைய கடுமையான சப்தத்தாலும் மனங்கலங்கி பசியினால் வருத்தமடைந்து அபுண்ய விருக்ஷங்களை (ஏவைகளுடைய நிழல் தாஹத்தை யுண்டுபண்ணுமோ அவைகள்) ஆச்ரயிக்கிறான். சிலகாலத்தில் கானலை ஜலமென்று நினைத்து அத னையநுசரிக்கிறான். அதுபோல சம்சாரியாகவிருப்பவர் களும், நேரிலும் மறைவிலும் அப்ரியமான வார்த் தையைச் சொல்பவர்களுடைய வார்த்தைகளால் மனவருத்தமடைந்து பசியால் ச்ரமப்பட்டு பாபிகளை யும் ஆச்ரயிக்கிறார்கள். பின்னும் ஜலமற்ற நதிகளை அடைந்தவர்கள், ஜலத்தை அடையாமல் துக்கத்தை அடைவது போல் இவ்வுலகத்திலும், பரலோகத்திலும் துக்கத்தைக் கொடுக்கும் பாஷண்ட மார்க்கத்தை ஆசிரயிக்கிறார்கள். தாயாதிகள் முதலியவர்களை அன்னத்தைக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளு கிறார்கள். காட்டுத்தீக்குச் சமமான கிருஹத்திலிருந்து துக்கமாகிய அக்னியால் எரிக்கப்பட்டு வருத்தப்படு கிறார்கள். சில சமயம் ராக்ஷஸர்கள் போன்ற அரசர்கள் ப்ராணனுக்கொப்பான அவர்களுடைய பணத்தை அபகரிக்கிறார்கள். அதனால் மிகவும் துக்கிக்கிறார்கள். மேலும் சூரர்கள் சிலவேளை பிறருடைய பணத்தை அபஹரிக்கிறார்கள். அப்பொழுது பணத்தைப் பறிகொடுத்து

துக்கிக்கிறான். சிலவேளை தான் மிக்க சுகத்தை அடைந்தவன் போல் ஸ்வப்னகாலம் சந்தோக்ஷிக்கிறான். இன்னுஞ் சிலவேளை கற்களாலும், முட்களாலும் நிறைந்த வனத்தில் ஸஞ்சரித்து அதனால் மிகுந்த ச்ரமமடைந்து அதன் மத்தியில் இருக்கும் மரத்திலேற விரும்பியவன் போல ஸம்சாரியானவன் பலவித விக்னங்களால் தடுக்கப்பட்டு பெரியதான கர்மங்களை செய்யவிரும்பி வருத்தப்பட்டவன் போலிருக்கிறான். அடிக்கடி பசியால் வருத்தப்பட்டு ஜனங்களிடத்தில் கோபிக்கிறான். சிலசமயம் தூக்கமாகிய மலைப்பாம் பினால் விழுங்கப்பட்டு ஒன்றையுமறியாதவனாக விருக்கிறான். சர்ப்பம் போன்ற துஷ்டர்களால் பீடிக்கப்பட்டு விவேகமற்றவனாகி மோஹமாகிய பாழுங்கிணற்றில் விழுந்திருக்கிறான். சிலகாலம் பரஸ்த்ரீகளை ஆசிக்கிறான். அந்தஸ்த்ரீகளுடைய பர்த்தாவினால் உபத்ரவிக்கப்படுகிறான். மிக்க சிரமப் பட்டு பரஸ்த்ரீகளை அடைந்தாலும் பலிஷ்டர்களான மற்றவர்கள் அந்தஸ்த்ரீயை அபஹரிக்கிறார்கள். சிலசமயம் குளிர், வெயில், மழை, காற்று ஆகிய இவைகளுக்கு பதில் செய்ய முடியாதவனாகவிருக்கிறான். சிலவேளை ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு பணத்தின் விஷயமாக பிறரிடம் துவேஷிக்கிறான். அளவில் பணஞ்சிலவான பொழுது படுக்கை, கம்பளம் முதலியவை, வீடு வாஹனம் ஆகிய இவைகளில்லாமல் பிறரை யாசிக்கிறான். அதிலும் கிடைக்காவிடில் பிறருடைய சொத்தை அபேக்ஷிக்கிறான். அதனால் அவமானத்தை அடைகிறான். ஸம்பந்திகளும் ஒருவருக் கொருவர் பண விஷயமாக விரோதத்தையடைந்து மிகுந்த கஷ்டம் பணச்சிலவு ஆகிய இவைகளுள்ள சம்சாரமார்க்கத்தில் மரணமடைந்தவர்களுக்குச்

சமானர்களாகிவிருக்கிறார்கள். ஓ சூரனாகிய அரசனே! அந்த மார்க்கத்தில் ஜனங்கள் ஆபத்தை அடைந்தவர்களை விட்டு ஜனித்தவர்களை வைத்துக்கொண்டு விளையாடி வருகிறபடியாலதனைக் கடந்தவன் ஒருவனுமில்லை. மிக்க தைர்யமுள்ளவர்களும், திக்கஜங்களை ஜயித்தவர்களுமான அரசர்கள் "இந்த பூமி என்னுடையது, என்னுடையது" என்று விரோதத்தை விருத்திச் செய்து கொண்டு யுத்தத்தில் மரணமடைகிறார்களேயொழிய விஷ்ணுபதத்தை அடைகிறதில்லை. எவன் சந்நியாசியோ அவனே அந்த பதத்தை அடைவான். பின்னுமவன் சிலசமயம் கொடிபோன்ற ஸ்த்ரீகளுடைய கையினால் தழுவப்பட்டும், மதுரமாகப் பேசும் பறவைகள் போன்ற குழந்தைகளிடத்தில் ஆசையுள்ளவனாகியும் சம்ஸாரத்தில் ஆஸக்தியை அடைகிறான். சில சமயம் சிங்கம் போன்ற கால சக்ரத்தாலுண்டாகும் இறப்புப் பிறப்பிலிருந்து பயந்து கொக்குக்கும், கழுகுக்கும் சமமான பாஷண்டர்களுடன் ஸ்நேஹஞ்செய்து கொள்ளுகிறான். அதனால் பயனடையாமல் ப்ராஹ்மண குலத்தை அடைய விரும்புகிறான். ஆனால் புனருபனயனம் முதலிய ப்ராயசித்தங்களைச் செய்து கொள்ள இஷ்டமில்லாதவனாகி வானரங்கள் போன்ற நல்லொழுக்கமற்ற சூத்ரன் போன்றவர்களை ஆச்ரயிக்கிறான். அப்பொழுது வானரங்கள் போல ஸ்த்ரீயுடன் ரமித்துக் கொண்டு ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்ப்பதாலேயே மரணத்தை மறந்து விடுகிறான். இன்னுமவன் மரம்போன்ற கிருஹத்தில் ஸ்த்ரீ ஸம்போகத்தால் தீனனாகி தனக்கு நேர்ந்த பந்தத்தை நிவர்த்தித்துக் கொள்ள முடியாதவனாகி பார்வதகுஹை போன்ற வ்யாதி முதலியவைகளை அடைந்து யானை போன்ற

மிருத்யுவினிடம் பயந்து கொடிபோன்ற முந்திய கர்மத்தை ஆச்ரயித்திருக்கிறான். சிலசமயம் மிக்க ப்ரயாஸத்தால் , இம்மாதிரியான ஆபத்திலிருந்து நிவர்த்தியடைந்தாலும் திரும்பவும் ப்ரவர்த்தி மார்க்கத்தையே அடைகிறான். இம்மார்க்கத்தின் மாயையால் ப்ரவர்த்தித்து சுழன்று கொண்டிருக்கும் ஜனமானது இப்பொழுதும் அதன் கரையை அடைகிறதில்லை. ஓ ரஹூகணனே நீயும் இந்த மார்க்கத்தை அடைந்திருக்கிறாய். நீ தண்டாதிகாரத்தை விட்டு ஸகல ப்ராணிகளிடம் மைத்ரியுள்ளவனாகி, விஷயங்களில் அபிநிவேசத்தை விட்டு ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ஸேவித்து அதனால் கிடைத்த கூர்மையான ஜ்ஞானமாகிய கத்தியை அடைந்து இந்த மார்க்கத்தைக் கடந்து அக்கரை செல்லும்" என்றார்.

21–23 அதனைக் கேட்ட ரஹூகணர் "ஆச்சர்யம் மனுஷ்ய ஜன்மமே மிகவும் மேலானது, மற்ற ஜன்மங்களால் என்ன ப்ரயோஜனம்? மற்ற ஜன்மங்களில் பகவத் பக்தர்களான உம்மைப் போன்ற மஹான்களுடைய ஸமாகமம் கிடைக்கிறதில்லை. உம்முடைய பாதாரவிந்த தூளியால் பாபங்களற்ற வனுக்குப் பகவானிடத்தில் சுத்தமான பக்தியுண்டாகிறதென்பதில் என்ன ஆச்சர்யம்? இந்த முஹூர்த்தத்தில் கிடைத்த உங்களுடைய சேர்க்கையால் ஊஹிக்க முடியாத காரணமுள்ள அவிவேகமானது நிவர்த்தியாயிற்று. மஹான்களுக்கு நமஸ்காரம், சிசுக்களுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். ஜ்ஞானிகளுக்கு நமஸ்காரம் வடுக்களுக்கு நமஸ்காரம். ப்ரஹ்மஜ்ஞானிகளும் அவதூதர்களுமான அடையாளத்துடன் பூமியில் சஞ்சரிப்பவர்களுமான மஹான்களுக்கும், அரசர்களுக்கும் க்ஷேமமுண்டாகட்டும்" என்றார்.

24–27 "ஓ பரீக்ஷித்தே! மேலான மஹிமையுள்ள அந்த ப்ராஹ்மணோத்தமர் ஸிந்துதேசத்தரசனாகிய ரஹூகணருக்கு அவர் செய்த அபாரதத்தை நினைக்காமல் மிகுந்த தயவுடன் ஆத்மதத்துவத்தை யுபதேசித்து சமுத்ரம்போல தயைநிறைந்த சித்த முள்ளவராகி பூமியில் சஞ்சரித்தார். பிறகு ரஹூகணரும் ப்ராஹ்மணோத்தமரிடம் ஆத்மதத்வத்தை உபதேசித்துக் கொண்டு அவித்யையால் ஏற்பட்டிருந்த தேஹாத்ம புத்தியை விட்டுவிட்டார்., ஓ மஹாராஜ, பகவத்பக்தர்களை ஆச்ரயித்தவர்களுடைய மஹிமை இம்மாதிரியானது" என்று சொல்லக்கேட்ட பரீக்ஷித்து மஹாராஜன் சுகரைநோக்கி, "ஓ மஹாபாகவதரே! விசேஷங்களை அறிந்தவராகிய உம்மால் சம்சார மார்க்கம் நிரூபிக்கப்பட்டது. ஆனாலும் நேராகச் சொல்லாமல் காட்டில் சஞ்சரிப்பவன் கதையைச் சொல்லும் வ்யாஜமாகச் சொன்னீர். அது புத்திசாலி களால் அறியக் கூடியதேயொழிய அஜ்ஞர்களுக்கும் தெரியும்படி ப்ரகிருதத்திற்குத் தக்கபடி சம்ஸார மார்க்கத்தை நிரூபிக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

அத்தியாயம்–14

(முன் அத்தியாயத்தின் விளக்கம்)

அதனைக்கேட்ட சுகர் பின்வருமாறு சொல்லலானார். தேஹத்தையே ஆத்மாவென்று நினைத்தவர்களுக்கு சத்வம் முதலிய குணவிசேஷங்களால் ஏற்படும் புண்யம், பாபம், இரண்டுஞ் சேர்ந்தது ஆகிய கர்மங்களால் பலவகையான தேஹங்கள் உண்டா கின்றன. அவைகளுடன் சேர்ந்திருப்பது அவைகளை விட்டுப் பிரிவது ஆகிய சம்சாராநுபவம் அனாதியாக விருக்கிறது. அதற்குக் காரணம் ஆறு இந்திரியங் களேயாம். காட்டு மார்க்கம் போல் துக்ககரமான சம்சார மார்க்கத்தில் இந்தப் ப்ராணிகள் இந்திரியங் களால் தள்ளப்பட்டு அதிலும் பகவானாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவிற்கு ஸ்வாதீனமான மாயையால் மோஹமடைந்து பணம் சம்பாதிப்பதிலே நோக்கமுள்ள வியாபாரியானவன் தன்னுடைய சரீரத்தால் உண்டுப் பண்ணப்பட்ட கர்மங்களை பலத்தின் வழியாக அனுபவிப்பதுபோல் ஸ்மசானம் போல அமங்களமான சம்சார மார்க்கத்தை அடைந்திருக்கிறார்கள், அப்பொழுதும் பயனற்றவைகளும். பலவித விக்னங் களுள்ளவைகளுமான சேஷ்டையை அடைகிறார்கள், அப்படியும் அந்த சம்ஸார தாபத்தை நிவர்த்திக்கக் கூடியதும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவாகிய குருவின் சரணா ரவிந்தத்தை சேவித்த பக்தர்களுடைய மார்க்கமுமான பக்தி மார்க்கத்தை இப்பொழுது கூட ஒருவரும் அனுசரிக்கிறதில்லை. காட்டில் திருடர்களிருப்பது போல சம்சார மார்க்கத்தில் இந்த ஆறு இந்திரியங் களும் திருடர்களாக விருக்கின்றன. ஏனென்றால்

மிக்க ச்ரமப்பட்டு சம்பாதிக்கப்பட்டதும், தர்மத்திற்கு சாதனமுமான புருஷனுடைய பணத்தைத் திருடர்கள் அபஹரிக்கிறார்கள் இந்திரியங்கள் பார்வை, தொடுவது, ருசி பார்ப்பது, முகருவது, ஸங்கல்பம், நிச்சயம், இது முதலிய கிராம்ய போகங்களால் மனத்தை ஜயிக்காதவனும் கெட்ட புத்தியுள்ளவனு மாகிய புருஷனுடைய பரமபுருஷனை ஆராதிப்பதாகிய தர்மத்தை அபஹரிக்கின்றன. எப்படி செந்நாய்களும், நரிகளும் ஆட்டுமந்தையிலிருந்து ஆட்டை அபஹரிக் கின்றனவோ அப்படி தாரம், (களத்திரம்) அபத்யம் (குழந்தை) என்ற பெயருள்ளவைகளும் செந்நாய் முதலியவைகளின் செய்கையுள்ளவர்களுமான பந்துக்கள் சம்ஸாரியான புருஷனுடைய பணத்தை அவன் பார்த்திருக்கும் பொழுதே அபஹரிக்கிறார்கள். எப்படி வருஷந்தோறும் வயலை உழுதும் விதை விதைக்கும் போது திருணங்களும், கொடிகளும் நெருக்கமாக உண்டாகின்றனவோ, அப்படியே கிரஹஸ்தாச்ரமம் கர்மக்ஷேத்ரமாகையால் கர்மங்கள் நாசமடைகிறதில்லை. ஏனென்றால் இந்த ஆச்ரமமானது கர்மங்களுக்கு பாத்ரமாயிருக்கிறது. (கற்பூரமில்லாதபோதும் அதன் வாசனையிருப்பதுபோல கர்ம வாசனை நசிக்கிற தில்லை) மேலும் காட்டுக் கொசுக்கள், பூச்சி, பறவைகள், திருடர்கள்,எலி ஆகிய இவைகளுக்குச் சமமான அல்ப மனிதர்களால் பணங்கள் அபஹரிக்கப்பட்டு சம்ஸாரி யானபுருஷன் சம்ஸாரத்தில் சுற்றிக்கொண்டு அவித்யை, காமம், கர்மங்கள் ஆகிய இவைகளில் சம்பந்தப்பட்ட மனமுள்ளவனாகி கந்தர்வ நகரம்போல மித்யாபூதமான இந்த ப்ரபஞ்சத்தை சத்யமென்று நினைக்கிறான். சில சமயம் பானம், போஜனம், மைதுனம் ஆகிய இவைகளில் ஆசை கொண்டு கானல் போன்ற விஷயங்களில்

ஆசைப்படுகிறான். மேலும் வனத்தில் குளிரால் வருத்தப்பட்டவன் அக்னியைத் தேடியும் அகப் படாமல் அக்னியை வாயில் வைத்துக் கொண்டிருக்கும் பிசாசத்தை அனுஸரித்தும் அது கிடைக்கிறதில்லை. கிடைத்தாலும் அதனால் எப்படி பக்ஷிக்கப்படு கிறானோ அப்படி சம்சாரியானவன் ரஜோகுணத்தால் ஸுவர்ணத்தை அடைய விரும்பி ச்ரமப்படுகிறான்; அது கிடைக்கிறதில்லை. கிடைத்தாலும் மதம் முதலியவைகளை யுண்டுபண்ணி புருஷனை கெடுத்து விடுகிறது. அந்தஸுவர்ணமானது ஸகல தோஷங் களுக்கும் இருப்பிடம். அக்னியினுடைய அமேத்யம். வீடு, பணம் முதலியவைகளில் ஆத்மாவென்ற அபிநிவேசமடைந்து, சம்சாரமாகிய காட்டில் நாலு பக்கத்திலும் அலைகிறான். சில சமயம் காற்றின் சமூகம் போன்ற ஸ்திரீயினுடைய மடியில் உட்கார்ந்து அந்த காலத்திலுண்டான ரஜோகுணத்தால் மறைக்கப் பட்ட புத்தியுள்ளவனாகிய தூளிகளடைந்த கண் களுள்ளவன் போல திக்குகளிலிருக்கும் தேவதை களை தெரிந்து கொள்ளுகிறதில்லை. சிலசமயத்தில் விஷயங்கள் பயனற்றவையென்று அறிந்தும் தேகத்தில் அபிநிவேசத்தை அடைந்து அதனால் விவேகமற்ற வனாகி, கானல் போன்ற அந்த விஷயங்களையே அனுசரிக்கிறான். சிலசமயம் கோட்டான், ஜல்லியென்ற ஜந்து ஆகிய இவைகளுடைய சப்தம் போன்ற மிக்க கடுமையாக நேரிலாவது, மறைவிலாவது கடுஞ்சொற் களைச் சொல்லும் சத்ருக்கள், அரசர்கள் ஆகிய இவர் களுடை வார்த்தையைக் கேட்டு வருத்தப்படுகிறான். பின்னுஞ் சிலகாலம் முன்ஜன்மத்தில் செய்த புண்யத்தில் பலத்தை அனுபவித்து பிறகு அபுண்ய விருஷங்கள், விஷஜலத்தால் நிறைந்த கிணறு ஆகிய

இவைகள் போல பயனற்ற பணமுள்ளவர்களும், மரணமடைந்தவர்கட்கு ஸமமமானவர்களுமான பிரபுக்களை அனுசரிக்கிறான். பின்னுஞ் சிலசமயம் அஸத்துக்களுடைய சேர்க்கையால் ஏமாற்றப்பட்டு ஜலமில்லாத ஆற்றின் பள்ளத்தைப்போல பாஷண்டமதத்தை ஆச்ரயிக்கிறான், இன்னும் அவருடைய தகப்பன் முதலிய பந்துக்களைப் பார்த்து பொய்யான சுகத்தை அனுபவிக்கிறான், சிலவேளை க்ரஹஸ்தாச்ரமத்திற்குரிய கர்மங்களைச் செய்ய விரும்பி அதற்கு விக்னமான லௌகீக துக்கங்களால் தடுக்கப்பட்டு முட்களாலும் கற்களாலும் நிறைந்த பூமியில் நடப்பவன் போல துக்கிக்கிறான், சில சமயம் ஸஹிக்க முடியாத ஜாடராக்னியால் (பசியால்) சரீரத்தின் வலிமை குறைந்தவனாகி தன்னுடைய குடும்பத்தினிடம் கோபிக்கிறான். அந்தப் புருஷன் தூக்கமாகிய மலைப்பாம்பினால் பீடிக்கப்பட்டு விசேஷ மோஹத்தை அடைந்து சூன்யமாகிய வனத்தில் போய் தூங்குகிறான். அப்பொழுது பிணம் போல அவன் ஒன்றையும் அறிகிறதில்லை. சிலசமயம் துஷ்டர்களாகிய ஸர்ப்பங்களால் மானம் குறைந்தவனாகி தூங்குவதற்கும் சமயம் கிடைக்காமல் துக்கப்படுகிறான். அதனால் ஒவ்வொரு க்ஷணத்திலும் விவேகம் குறைகிறது. பிறகு கண்ணில்லாதவன் பாழுங்கிணற்றில் விழுவது போல் பாபங்களைச் செய்கிறான். சிலசமயம் காமத்தில் விசேஷ ஆசையுள்ளவனாகி பரஸ்திரீகளையும் பிறருடைய பணத்தையும் அபஹரிக்கிறான். அப்பொழுது அவைகளுக்கு யஜமானனாவது அரசனாவது அவனைக் கொல்லுகிறான். பிறகு அந்தப் பாபியான புருஷன் கரையற்ற நரகத்தை அடைகிறான். ஆகையால் ப்ரவிர்த்தி மார்க்கத்தில் இகலோகத்திலும் பரலோகத்திலும் சம்ஸாரத்தை

கொடுக்கக் கூடியது கர்மமென்று சொல்லுகிறார்கள். தெய்வச் செயலாய் சம்ஸார பந்தத்திலிருந்து நிவர்த்தி அடைந்தாலும் மற்றொருவன் அதைக் கெடுத்துவிடுகிறான். அதன் பலத்தை இவன் அடைகிறதில்லை. மேலும் குளிர், வெயில், காற்று முதலிய ஆதிதைவிகம் ஆதி பௌதிகம் ஆத்யாத்மிகம் இவைகளாலுண்டாகும் துக்கங்களை நிவர்த்தித்துக்கொள்ள ஸாமார்த்திய மற்றவனாகி முடிவில்லாத ஆலோசனை செய்துகொண்டு துக்கிக்கிறான். பின்னுமவன் பிறருடன் இருபது சோழி கொண்ட நாணயமாகிய காகணிகையின் நிமித்தம் விரோதத்தை அடைகிறான். இந்த ஸம்ஸார மார்க்கத்தில் ஸுகம், துக்கம், ஆசை, விரோதம், பயம், அபிமானம், ஸந்தோஷம், சோகம், மோகம், மாசர்யம் அசூயை, அவமானம், பசி, தாஹம், மனோவ்யாதி, சரீரவ்யாதி, ஜனனம், மரணம், இவை முதலியவைகள் புருஷனுக்கு உபத்ரவத்தை உண்டுபண்ணுகின்றன, சிலஸமயம் தேவமாயையின் மஹிமையால் ஸ்திரீயினால் தழுவப்பட்டு விவேகமற்றவனாகி அவளுடன் விளையாடுவதற்கு தகுந்தவீடு கட்டுவதில் நோக்கமுள்ளவனாக இருக்கிறான். மேலும் அவளுடைய ஆச்ரயத்தால் ஏற்பட்ட பிள்ளைகள் பெண்கள் இவர்களுடைய வார்த்தை, அவர்களைப் பார்ப்பது அவர்களுடைய நடை ஆகிய இவைகளால் மனங்கலங்கி மனத்துக்கு வசப்பட்டு ஆத்மாவை நரகத்துக்குப் பாத்ரமாகச் செய்கிறான். பரமாணு முதல் இரண்டு பரார்த்தம் வரையில் கணக்கிடப்பட்ட காலமுள்ளவயதினால் ப்ரஹ்மா முதல் ஸ்தம்பம் வரையிலுள்ள ப்ராணிகளை வேகமாக அபஹரிக்கின்ற பகவானுடைய காலசக்ரத்தினிடமிருந்து பயந்து அந்த காலரூபியும் யஜ்ஞபுருஷனுமான ஈச்வரனை லக்ஷ்யஞ்செய்யாமல் கழுகுகளுக்கும்,

கொக்குகளுக்கும் ஸமானர்களும் பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப்படாததுமான பாஷண்ட தேவதை களைக் கட்டுப்பாடாக புருஷன் ஆச்ரயிக்கிறான், பாஷண்ட மதத்தில் பிரவேசித்து அது பயனற்றதென்று தெரிந்துகொண்ட பிறகு ப்ராஹ்மண்யத்தை அடைய விரும்புகிறான். ஆனாலும் அந்த ப்ராஹ்மண்யத்தை அடைய தகுதியான புனருபநயனம் முதலிய ப்ராயச் சித்தங்களைச் செய்துகொண்டு வேதத்தில் சொல்லிய வைகளும், ஸ்ருதியில் சொல்லியவைகளுமான கர்மங் களை அனுஷ்டித்து யஜ்ஞ புருஷனாகிய பகவானை ஆராதிக்க இஷ்டமில்லாமல் சூத்ரனைபோல் குடும்பத்தைப் போஷித்துக் கொண்டும், வானரஜாதி போல் மைதுனகர்மாவைச் செய்து கொண்டும் இருக்கிறான். அக்னிஹோத்திரம் முதலியவைகளை அனுஷ்டிக்கிறதில்லை. அப்பொழுதும் தனதிஷ்டப்படி க்ரீடித்துக் கொண்டும் ஒருவருக்கொருவர் முகத்தை பார்த்து ஸந்தோஷிப்பது முதலிய க்ராம்ய கர்மங் களைச் செய்து கொண்டே மரணத்தை மறந்து விடுகிறான். மேலும் மரங்களில் வசித்துக் கொண்டி ருக்கும் குரங்குபோல புருஷன் பிள்ளை ஸ்திரீ இவர் களிடத்தில் ப்ரீதி வைத்து கிருஹத்தில் மைதுனத் திலேயே ப்ரீதி உள்ளவனாக இருக்கிறான். சிலசமயம் பணமில்லாததனால் படுக்கை முதலிய போகங்கள் கிடைக்காமல் அவைகளுக்காக முயன்றும் இஷ்டம் நிறைவேறாமல் பிறருடைய ஸொத்தில் ஆசைக் கொண்டு அதனால் அவமானத்தை அடைகிறான். இம்மாதிரி பணத்தைப்பற்றிய விரோதமுள்ளவனா யிருந்து சில சமயம் ஒருவருக்கொருவர் ஸ்நேஹிப்பதும், பிரிவதுமாக இருக்கிறது. இம்மாதிரியான பலவகை துக்கங்களுள்ள சம்ஸார மார்க்கத்தில் எவன்

ஆபத்தை அடைந்தானோ அவனை விட்டுவிட்டு மற்றவனும் அதிலிருந்து திரும்புகிறதில்லை. துக்கித்துக் கொண்டும், ஸந்தோஷித்துக் கொண்டும், பாடிக் கொண்டும் இருக்கிறான். எவர்கள் ஆத்மாவை அடக்கினவர்களோ, சாந்தர்களோ, கோபமில்லாதவர் களோ அவர்களே இந்த மார்க்கத்தைத் தாண்டுவார்கள். திக்கஜங்களை ஜயிக்கும் பராக்ரமமுள்ள அரசர் களாலும் இதனுண்மையைத் தெரிந்து கொள்ள முடியாது. ஆனால், "இந்தப் பூமி என்னுடையது, என்னுடையது" என்று யுத்தஞ்செய்து மரணமடை கிறார்கள். ஸ்வர்க்கம் முதலிய புண்யலோகத்தை அடைந்தவனும், ஆபத்திலிருந்து விடுபட்டு முந்திய கர்மவசத்தால் திரும்பவும் ஸம்ஸார மார்க்கத்தை அடைந்து பூலோகத்தை அடைகிறான்.

42–47. ரிஷபருடைய புத்ரராகிய பரதமஹா ராஜனுடைய மார்க்கத்தை மனத்தாலும் அனுசரிக்க யாரால் முடியும்? கருடனுடைய வேகத்தை தேனீக்கள் அனுஸரிக்குமா? அந்த பரதமஹாராஜன் பூமி, புத்ரன் பந்துக்கள், பணம், களத்ரம் இவைகளில் ஆசைப் படாமலிருந்தார். மேற்சொல்லியவைகளில் வைராக்ய மடைவது மிகவும் துர்லபமல்லவா? பின்னுமவர் தேவர்களால் ப்ரார்த்திக்கக்கூடியவனும், பரதமஹா ராஜனை கடாக்ஷித்தவளுமாகிய லக்ஷ்மீயையும் அவர் விரும்பவில்லை. ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சேவையில் ஆசைகொண்ட மஹான்களுக்கு மோக்ஷமும் பெரிதான தல்ல. பின்னுமவர் மான் ஜன்மத்தை விடும்பொழுது யஜ்ஞஸ்வரூபியும், தர்மத்துக்கு பலத்தை கொடுப் பவரும், தர்மத்தை அனுஷ்டிப்பவரும், யோகஸ்வரூபி யும், ஞானத்தையே முக்யமாயுடையவரும், மாயைக்கு

அதிபதியும் ஸகல பிராணிகளுக்கு இருப்பிடமும், பிரளயகாலத்தில் எல்லாவற்றையும் ஸம்ஹரிப்ப வருமான ஸ்ரீ நாராயணனை நமஸ்கரிக்கிறேன்" என்று கம்பீரமாக சொன்னார். மேலுமிந்த பரதமஹா ராஜருடைய குணங்களும் சரிதமும் பகவத் பக்தர் களால் கொண்டாடப்பட்டவைகள்; சுத்தமானவைகள்; ஆனதால் அவருடைய சரிதமானது க்ஷேமத்தையும், தீர்க்கமான ஆயுஸ்ஸையும், பணத்தையும், கீர்த்தியை யும், மோக்ஷத்தையும், கேட்பவர்களுக்கும், பிறருக்கு சொல்பவருக்கும், அனுமோதிப்பவர்களுக்கும் கொடுக் கிறது, இந்த சரிதத்தை கேட்டவன் ஸகல க்ஷேமங் களையும் ஸ்வயமாகவே அடைவான்; பிறரிடமிருந்து ஒன்றையும் அபேக்ஷிக்கமாட்டான்.

அத்தியாயம்–15

பரதருடைய வம்சம்

பரதருடைய புத்ரராகிய ஸுமதி என்பவர் ரிஷபதேவரைப் போல் ஜீவன் முக்தர்களுடைய மார்க்கத்தை அனுஷ்டித்து வந்தார். அவரைப் பார்த்து சில பாஷண்டிகள் பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப் படாததும், வேதத்தில் சொல்லப்படாததுமான ஒரு தேவதையை தங்களுடைய புத்திக்குத்தக்கபடி மிக்க பாவியான கலியில் ஏற்படுத்தப் போகிறார்கள். அந்த ஸுமதி என்பவருக்கு த்ருவஸேனையென்பவளிடத்தில் தேவதாஜித் என்று ஒரு புத்ரன் பிறந்தான். அவருக்கு ஆஸுரி என்பவளிடத்தில் தேவத்யும்னன் என்று ஒரு புத்ரன் உண்டானான். அவனுக்கு தேனுமதி என்பவளிடத்தில் ஸுவர்சலையிடத்தில் ப்ரதீஹனென்ற சிறந்த குமாரன் உண்டானான். அவன் அநேகர் களுக்கு ஆத்ம வித்தையை உபதேசித்து அதனால் தான் சுத்தனாகி மஹாபுருஷனை நேரில் அனுபவித்தான். அவருக்கு ப்ரதிஹர்தா, ப்ரஸ்தோதா, உத்காதா என்ற மூன்று புத்ரர்கள் பிறந்தார்கள்; அவர்கள் யாகஸ்ருவ பத்தை நன்றாய் அறிந்தவர்கள். ப்ரதிஹர்தாவிற்கு ஸ்துதியென்பவிளிடத்தில் வ்யோமன், பூமா என்று இரண்டு புத்ரர்கள் பிறந்தார்கள். பூமாவிற்கு ரிஷிகுல்யை என்பவளிடத்தில் உத்கீதனும், அவருக்கு தேவகுல்பை என்பவளிடத்தில் ப்ரஸ்தோதா யென்ப வரும், அவருக்கு வரருத்ஸை யென்பவளிடத்தில் விபு யென்பவரும், அவருக்கு பாரதீயினிடத்தில் ப்ரது ஷேணனும், அவருக்கு ஆகூதியினிடத்தில் நக்தனென் பவரும், அவருக்கு கயனென்ற கீர்த்திமானாகிய

புத்ரனும் உண்டானார்கள். அவர் ஜகத்தை காப்பாற்று வதற்காக மனிதனாக அவதரித்த மஹாவிஷ்ணுவின் அம்சமேயாம். அதனால்தான் மஹாபுருஷனாக இருந்தார். அவர் ஜனங்களைக் காப்பாற்றுவது. ப்ரியப்படுத்துவது, சிக்ஷிப்பது முதலிய க்ஷத்ரிய தர்மத்தையும், யாகம் முதலியவைகளையும் அநுஷ்டிப் பவர், மஹாபுருஷனும், பரனைக் காட்டிலும் பரனு மாகிய பரப்ரஹ்மத்தினிடத்தில் மூன்று கரணங்களை யும் உண்மையாக ஸமர்ப்பித்து, ப்ரஹ்மத்தை அறிந்தவர்களுடைய பாதங்களை சேவித்து அதனால் பக்தியோகத்தை அடைந்து சித்தசுத்தி உள்ளவராகி அகங்காரமற்ற மனத்தில் ப்ரகாசிக்கும் ப்ரம்ஹமானுபவ முள்ளவராக இருந்ததுமன்றி அபிமானமில்லாமலேயே பூமியைப் பரிபாவித்தார். ஓ பாண்டுவின் குலத்தில் பிறந்தவரே! அவருடைய சரிதத்தை வித்வான்கள் பின்வருமாறு கானஞ் செய்கிறார்கள். பகவானுடைய அம்சமாகிய கயனென்ற அரசன்போல் நடப்பதற்கு பகவதம்சத்தை தவிர வேறு யாரால் முடியும்? அவர் அனேக யாகங்களைச் செய்தவர்; கம்பீர மனமுள்ளவர்; பலவகையான சாஸ்த்ரங்களை அறிந்தவர். தர்மத்தைக் காப்பாற்றுகிறவர்; ஸகல சம்பத்துள்ளவர்; சாதுக் களுடைய சபைக்கு அதிபதி; சாதுக்களை சேவிப்பவர்; வீண்போகாத ஆசீர்வாதமுள்ள ச்ரத்தை முதலிய தக்ஷருடைய பெண்கள் அவருக்கு நதிகளைக் கொண்டு அபிஷேகம் செய்வித்தார்கள். அவருடைய குணங்களால் சந்தோஷம் அடைந்து பூமி தேவியானவள் அவருடைய ராஜ்யத்திலுள்ள ப்ரஜைகளுக்கு இஷ்டமான வஸ்துக் களைக் கொடுத்தாள். ஆசையற்ற வராகிய அந்த மகாராஜனுக்கு வைதிகமான கர்மங்கள் ஸகல காமங் களை உண்டு பண்ணின. யுத்தத்தில் பாணங்களைக்

கொண்டு ஜயிக்கப்பட்ட எல்லா அரசர்களும் அவருக்கு கப்பங் கட்டினார்கள். தக்ஷிணையாலும், காப்பாற்று வதாலும் பூஜிக்கப்பட்ட ப்ராஹ்மணர்கள் தாங்கள் செய்த தர்மத்தின் ஆறிலொரு பாகத்தை அவருக்கு கொடுத்தார்கள். அந்த மகாராஜனுடையை யாகத்தில் ஸோமபானம் நடக்கும் பொழுது இந்திரன் கர்வங் கொண்டிருந்தார். அப்பொழுது சுத்தமும் ஸ்திரமுமான பக்தியுடன் அரசனால் சமர்ப்பிக்கப்படும். யாக பலனை மஹாவிஷ்ணு நேரில் பெற்றுக் கொண்டார். எந்த பகவான் திருப்தி அடைந்தால் தேவதைகள், திர்யக் ஜாதிகள், மனிதர்கள், மரங்கள், கொடிகள், ப்ரஹ்ம தேவர் முதலிய எல்லோரும் திருப்தியடைவார்களோ, அந்த பகவான் கயமஹாராஜனுடைய யாகத்தில் விசேஷ திருப்தி அடைந்தார்.

15–21 கயமஹாராஜனுக்கு ஜயந்தியினிடத்தில் சித்ரரதன், ஸ்வாதி, அவரோதனன் என்ற மூன்று புத்ரர்கள் பிறந்தார்கள். சித்ரரதனுக்கு ஊர்ணையினி டத்தில் ஸம்ராட்டும், அவருக்கு உத்கலையினிடத்தில் மரீசியும் அவருக்கு பிந்துமதியினிடத்தில் பிந்துமானும் அவருக்கு சரகையினிடத்தில் மதுவும், அவருக்கு ஸுமனஸ் என்பவளிடத்தில் வீரவ்ரதனும், அவருக்கு போஜையிடத்தில் மன்யு, ப்ரமன்யு, என்பவர்களும் உண்டானார்கள். மன்யுவுக்கு சத்யையிடத்தில் பிறந்தவன் புவனன், அவனுக்கு தோஷையிடத்தில் த்வஷ்டாவும், அவருக்கு விரோசனையினிடத்தில் விரஜனும், அவருக்கு விஷூசியினிடத்தில் நூறு புத்ரர்களும், ஒரு பெண்ணும் பிறந்தார்கள். ஸ்ரீ மஹா விஷ்ணுவானவர் தேவதைகளை அலங்கரிப்பதுபோல் ப்ரியவரதருடைய வம்சத்தை விரஜரென்பவர் தமது கீர்த்தியால் அலங்கரித்தார்.

அத்தியாயம்–16

த்வீபங்களின் லக்ஷணம்

அதனைக்கேட்ட பரீக்ஷீத்து மஹாராஜன் சுகரை நோக்கி "எதுவரையில் ஸூர்யப்ரகாசமிருக்கிறதோ எந்த எந்த இடத்தில் நக்ஷத்திரங்கள் முதலிய தேஜஸ் ஸூக்களுடன் சந்திரன் ப்ரகாசிக்கிறாரோ, அவ்விடத்தில் ப்ரியவ்ரதருடைய ரதம் சென்றதாகையால் ஏழு ஸமுத்திரங்கள் உண்டுபண்ணப்பட்டன. என்றும் அதனால் பூமி ஏழு த்வீபங்களாகப் பிரிக்கப்பட்டது" என்றும் உம்மால் சொல்லப்பட்டது, ஆனாலும் அவைகளுடைய அளவு, லக்ஷணம் முதலியவைகளை தெரிந்து கொள்ள விரும்புகிறேன். முக்குணங்களால் ஏற்பட்ட பகவானுடைய ஸ்தூலமாகிய ரூபத்தில் வைக்கப்பட்ட மனத்தை குணங்களுடைய ஸம்பந்த மற்றதும், அதிஸூக்ஷ்மமும் வாஸூதேவனென்று பெயருள்ளதுமான பரமாத்ம ஜ்யோதிஸ்ஸினிடத்தில் ஸமர்ப்பித்திருக்கிறேன். ஆனதால் ஓ குருவே! நான் கேட்ட விஷயத்தைச் சொல்லவேண்டும் என்று கேட்டார்.

4–20. அதைக்கேட்டு சுகரானவர் "ஓ அரசனே! ஸகல குணங்களால் நிறைந்தவரும், பகவானுமாகிய மஹாபுருஷனுடைய மாயை எதுவோ. அதனையும், இருப்பிடங்களையும், நாமங்களையும், லக்ஷணத்தையும், மனத்தாலும், வாக்கினாலும் தெரிந்துகொள்ளுவதற்கு தேவருடைய ஆயுஸ்ஸுள்ள புருஷனாலும் முடியாது. ஆனதால் முக்யமாக பூகோளத்தைப் பெயராலும். ஸ்வரூபத்தாலும், லக்ஷணத்தாலும் நிரூபிக்கிறேன்.

இந்த பூமண்டலமாகிய தாமரை மலருடைய நடுவி லிருக்கும் ஜம்பூத்வீபமானது லக்ஷயோஜனை தூரம் அகலமுள்ளது. தாமரை இலைபோல் ஸமவட்டமாய் இருக்கிறது. இதில் ஒன்பது வர்ஷங்களிருக்கின்றன. அவைகள் ஒன்பதாயிரம் யோஜனை தூரம் அகல முள்ளவை. ஒவ்வொரு வர்ஷங்களின் எல்லைகளில் மலைகளுண்டு. இவைகளுடைய நடுவில் இளாவிருத மென்ற வர்ஷமிருக்கிறது. அதனுடைய நடுவில் குல பர்வதங்களுக்குட் சிறந்த மேருவென்ற தங்கமலை இருக்கிறது, மேலும் அது லக்ஷயோஜனை உயர முள்ளது; பூமண்டலமாகிய தாமரைப் புஷ்பத்தின் நடுவிலிருக்கும் காயாக விளங்குகிறது, அது உச்சியில் முப்பத்திரண்டாயிரம் யோஜனை அகலமுள்ளது அடியில் பதினாறாயிரம் யோஜனைதூரம் பூமிக்குள் ப்ரவேசித்திருக்கிறது, இளாவிருத வர்ஷத்திற்கு பக்கத்தில் ரம்யகம், ஹிரண்மயம், குரு என்ற வர்ஷங் களுக்கு நீலம், ச்வேதம், ச்ருங்கவரன் என்ற மூன்று மலைகள் கிழக்கு திக்கில் நீண்டு எல்லைகளாக இருக்கின்றன. அவைகள் இருபக்கத்திலும் உப்பு ஸமுத்ரத்தை எல்லையாயுடையவைகள்; இரண்டா யிரம் யோஜனைதூரம் அகலமுள்ளவைகள்; ஒன்றை விட ஒன்று நீளத்தில் மாத்திரம் பத்திலொருபாகம் குறைந்தவைகள், இளா விருதத்திற்கு தென்பக்கத்தில் நிஷதம், ஹேமகூடம் ஹிமாலயம் என்ற மூன்று மலைகள் கிழக்குதிக்கில் நீண்டவைகளாக இருக்கின்றன. அவைகள் நீலம் முதலிய பர்வதங்கள் போல் லக்ஷம் யோஜனை தூரம் உயரமுள்ளவைகள். முறையே ஹரிவர்ஷம் கிம்புருஷவர்ஷம், பாரதவர்ஷம் ஆகிய இவைகளுக்கு எல்லைகளாக இருக்கின்றன இளாவிருத வர்ஷத்திற்கு மேற்கிலும், கிழக்கிலும்,

மால்யவான், கந்தமாதனன் என்ற மலைகள் கேதுமாலம், பத்ராச்வம் என்பவைகளுக்கு எல்லைகளாக விருக்கின்றன. அந்த மலைகள் வடக்கில் நீலமலை வரையிலும், தெற்கில் நிஷதம் வரையிலும் பரவியிருக்கின்றன; மேலும் அவைகள் இரண்டாயிரம் யோஜனை தூரம் பருத்தவைகள். மந்தரம், மேரு மந்தரம், ஸுபார்சவம், குமுதம் என்ற மலைகள் மேருவிற்கு நாலு திக்கிலும் ஒத்தாசை மலைகளாக ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அவைகள் அகலத்திலும், உயரத்திலும் லக்ஷ யோஜனை தூரமுள்ளவைகள். மேற்சொல்லிய மலைகளில் முறையே மாமரம்; நாகை மரம் கதம்ப மரம் ஆலமரம் ஆகிய இவைகள் அந்த அந்த மலைக்கு த்வஜங்கள் போல் ப்ரகாசிக்கின்றன, அவைகள் லக்ஷ யோஜனை தூரத்திற்கு அதிகமான உயரமுள்ளவைகள்; அவ்வளவு கிளைகளுள்ளவைகள். மேலும் அந்த மலைகளில் நூறு யோஜனை அகலமுள்ளவைகளும் பால், தேன், கருப்பஞ்சாறு. சுத்த ஜலம் இவை களுள்ளவைகளுமான நான்கு மடுக்களிருக்கின்றன. அவைகளை சேவிக்கும் உபதேவர்களும் இயற்கையில் அணிமா முதலிய யோகைச்வர்யங்களை தரிக்கிறார்கள். பின்னும் அந்த மலைகளில் நந்தனம், சைத்ரரதம், வைப்ராதிகமம், விச்வ தோபத்ரம், என்ற நான்கு உத்யானவனங்களிருக்கின்றன. அவைகளில் சிறந்த தேவர்கள் அநேக தோழிகளுடன் கூடிய உத்தம தேவ ஸ்திரீகளுடன் விளையாடுகிறார்கள். உபதேவர்கள் அவர்களுடைய மஹிமையை கானஞ் செய்கிறார்கள், மேற்சொல்லிய மந்தரமலையின் நடுவிலிருக்கும் 101000, யோஜனை தூரம் உயரமுள்ள மாமரத்திலிருந்து மலையின்; சிகரம் போல பருத்த பழங்கள் விழுகின்றன, அவைகள் அமிருதத்திற் கொப்பானவைகள்;

மேலுமவைகள் மிக்க உயரத்திலிருந்து விழுவதனால் உடைந்து போகின்றன; அவைகளுடைய மிக்க வாசனை யுள்ள ரஸமானது அருணோதா என்ற பெயருள்ள நதியாக மந்தரமலையிலிருந்து இளாவிருத்தத்திற்குக் கிழக்கில் ப்ரவஹிக்கிறது. பார்வதியின் வேலைக்காரி களான புண்ய ஜனஸ்திரீகள் அந்த நதியை சேவிப் பதால் அவர்களுடைய சரீரத்தில் பட்டு, வீசும் நல்ல வாசனையுள்ள காற்றினால் பத்து யோஜனை தூரம் வாசனையாக இருக்கிறது. அம்மாதிரி மேருமந்தரமென்ற மலையிலிருக்கும் நாகை மரத்திலிருந்த யானையின் சரீரம் போன்றவைகளும், ரஸத்தால் நிறைந்தவை களுமான பழங்கள் கீழே விழுகின்றன; அவைகளுடைய ரஸமானது ஜம்பூ நதியென்ற பெயருடன் மேரு மந்தரத்தின் சிகரத்திலிருந்து பூமியில் விழுகிறது. பின்னுமது இளாவிருதத்திற்கு தெற்கில் ப்ரவஹிக்கிறது. அதன் இரு கரையோரங்களிலும் இருக்கும் மண்ணானது அந்த நதியில் ஜல சம்பந்தத்தாலும், காற்று, சூர்யன் இவைகளுடைய சம்பந்தத்தாலுண்டாகும் பாக (உஷ்ணத்தின் சேர்க்கை)த்தாலும் ஜாம் பூதமென்ற பெயருள்ள தங்கமாக ஆகிறது. அதனை தேவர்கள் தம்முடைய ஸ்திரீகளுடன் கிரீடம், வளை அரைஞாண் முதலிய ஆபரணங்களாகச் செய்து தரித்துக் கொள்ளு கிறார்கள். சுபார்ச்வம் என்ற மலையிலிருக்கும் கதம்ப விருக்ஷத்தினுடைய பொந்துகளிலிருந்து மது தாரைகள் (தேன் பிரவாகங்கள்) ஐந்து வகையாகப் பெருகி இளாவிருதத்திற்கு மேற்கிலோடி அங்கிருப்பவர்களை சந்தோஷப்படுத்துகின்றன. அந்த ஒவ்வொரு நதியும் ஐந்து பாகம் விஸ்தாரமுடையவைகள்; அவைகளை பூஜிப்பவர்களுடைய முகத்திலிருந்து வீசும் காற்றானது நூறு யோஜனை தூரம் வாசிக்கிறது. இது போலவே

குமுத மலையில் இருக்கும் சதவல்கமென்ற ஆலமரத்தி விருந்து பால், தயிர், நெய், தேன், வெல்லம், அன்னம், வஸ்திரம், படுக்கை, ஆஸனம், ஆபரணம் முதலிய எல்லா வஸ்துக்களையும் கொடுக்கும் நதிகள் ப்ரவஹிக் கின்றன. அவைகள் இளாவிருதத்திற்கு வடக்கிலோடி அங்கிருப்பவர்களை சந்தோஷப்படுத்துகின்றன. அவை களை உபயோகப்படுத்திக் கொள்பவர்களுக்கு கிழத் தனத்தாலுண்டாகும் நரை, ச்ரமம், வியர்வையா லுண்டான நாற்றம் கிழத்தனம், மரணம், வியாதி, அபமிருத்யு, குளிர், உஷ்ணம், வர்ணம் மாறுதல் முதலிய உபத்திரவங்கள் ஒருபொழுதும் நேரிடுகிற தில்லை. உயிருள்ளவரையில் மேலான சுகத்தையே அடைகிறார்கள். குரங்கம், குரரம், குஸும்பம் வைகங்கதம், த்ருகூடம், சசிரம், பதங்கம், ருசகம், நிஷதம், சுஷிதிவாசம், கபிலம், சங்கம், வைடூர்யம், சாரு, விஹங்கம், ரிஷபம், நாகம், காலம், அம்புஜனம், நாரதம் முதலிய மலைகள் மேருவைச் சுற்றி அடியில் சின்ன மலைகளாக தாமரை மலருடைய காய்க்கு தாதுகள் போல ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஜடரம், தேவகூடம் என்ற இரண்டு மலைகளும் மேருவிற்கு கிழக்கிலிருக்கின்றன. அவைகள் பதினெண்ணாயிரம் யோஜனை தூரம் வடக்கில் பரவியும் இரண்டாயிரம் யோஜனை தூரம் பருத்தும் உயர்ந்து மிருக்கின்றன. மேருவிற்கு மேற்கில் பவனன் பாரியாத்ரன் என்ற மலைகள் இருக்கின்றன தெற்கில் கைலாஸம் கரவீரம் என்றும் கிழக்கில் நீண்ட மலைகள் இருக்கின்றன வடக்கில் திருச்ருங்கம, மகரம் என்ற மலைகள் இருக்கின்றன. இந்த எட்டு மலையின் நடுவில் தங்க மலையான மேரு ப்ரகாசிக்கிறது. மேருவின் சிகரத்தின்

நடுவில் ப்ரஹ்மதேவருடைய பட்டணமிருக்கிறது. அது சமசதுரச்ரமானது; தங்கமயமானது; அதற்கு நாலு பக்கங்களிலும் ஒவ்வொரு திக்கிலும் அவர வருக்குத் தக்கபடி இந்திரன் முதலிய லோக பாலர் களுடைய எட்டு நகரங்கள் கட்டப்பட்டுள்ளன. அவை பிரஹ்மாவின் பட்டணத்தில் நான்கில் ஒரு பாக அளவுள்ளவைகள். இந்த அத்யாயத்தில் வர்ஷங்களென்று சொல்லப்படுவதற்கு தேசங்களென்று அர்த்தம்.

அத்தியாயம்–17

கங்கையின் வரலாறு

த்யுலோகத்தின் மேல் பாகத்தில் விஷ்ணுபதி என்ற நதி ஒன்று இருக்கிறது. யஜ்ஞஸ்வரூபியாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணு திருவிக்ரமாவதாரஞ் செய்து லோகத்தை அளக்கும்பொழுது அவருடைய வலதுகால் கட்டை விரல் நகத்தினால் மேலிருக்கும் அண்ட கடாஹம் உடைந்தது; அதன் வழியாக அண்டத்துக்குள் ப்ரவேசித்த வெளியிலிருந்த ஜலமே த்யுலோகத்தின் மேல் பாகத்தில் நதியாயிற்று. அதற்கு அந்த சமயம் விஷ்ணுபதி யென்று பெயர் (பாகீரதி முதலிய நாமங்கள் பிந்தி ஏற்பட்டவை) மேலுமந்த நதியானது பகவானுடைய பாதாரவிந்தத்தை அடைந்ததால் அதிலிருக்கும் குங்குமத்தால் அலங்கரிக்கப்பட்டது; ஸகல ஜகத்தின் பாபங்களை போக்கக்கூடிய பகவானுடைய பாதஸ்பர்சத்தை அடைந்தது; சுத்தமானது; வெகுகாலமாக ஆகாயத்தில் இருக்கின்றது. திருடமான நிச்சயமுள்ளவரும், பரம பாகவதருமான உத்தான பாதருடைய புத்ரர் தம்முடைய குலதேவதையாகிய ஸ்ரீ பகவானுடைய பாதாரவிந்த ஜலமென்று ஒவ்வொரு சந்த்யாகாலத்திலும் அந்த கங்கா ஜலத்தை மிகுந்த ஆதரவுடன் சிரஸில் தரிக்கிறார். அவர் அந்த காலத்தில் அதிக பகவத் பக்தியுள்ளவரும், அதனால் உருகின ஹிருதயமுள்ளவரும் பகவானிடத்தில் விசேஷ ப்ரீதியினால் மூடின கண்களுள்ளவரும், ஆனந்த பாஷ்பம் உள்ளவரும், மயிர்க்கூச்சலுள்ளவருமாக விருந்தார். மேலும் அந்த நதியின் மஹிமையை அறிந்த அந்த ஸப்தரிஷிகள் ஸகல ஸ்வரூபியான பகவானிடத்தில்

இடைவிடாமல் பக்தி செய்ததனால் மற்ற புருஷார்த்தங்களில் ஆசையில்லாதவர்களாகயிருந்தும் 'தபஸ்ஸின் ஸித்தி இதுதான்' என்று நினைத்து இப்பொழுதும் அந்த கங்கையை ஜடைகளில் தரிப்பதுமன்றி சரீரத்துடன் வந்த முக்தியை முழுகுஷாக்கள் போல அந்த நதியினிடத்தில் கௌரவத்தை வைத்திருக்கிறார்கள். அந்த நதியானது அங்கிருந்து கோடிக்கணக்கான விமானங்களால் நெருக்கமான ஆகாய மார்க்கமாக கீழே வந்து சந்த்ர மண்டலஞ் சென்று அதனை நனைத்து மேருவின் சிகரத்திலிருக்கும் ப்ரஹ்ம லோகத்தில் விழுகிறது. அங்கிருந்து நான்குவகையாகப் பிரிந்து ஸீதா, அளக, நந்தா, சக்ஷுஸ், பத்ரா என்ற பெயருடன் நான்கு திக்குகளிலும் ப்ரவஹித்து சமுத்ரத்தையே அடைகின்றது. ஸீதா யென்ற விரிவானது ப்ரஹ்மலோகத்திலிருந்து மேரு பர்வதத்திற்கு ஒத்தாசையான மலைகளில் விழுந்து அதிலிருந்து குமுதம், குகுரம் முதலிய மலைகளின் சிகரங்களைத் தாண்டிக் கீழ் கீழாக கந்த மாதனம் என்ற மலையில் விழுந்து பத்ராச்வ மென்ற வர்ஷத்திற்குக் கிழக்கிலிருக்கும் உப்பு சமுத்ரத்தை அடைகிறது. இம்மாதிரி சக்ஷுமஸ் என்ற பிரிவானது மால்யவானுடைய சிகரத்திலிருந்து கீழாக விழுந்து கேதுமாலத்திற்குப் பக்கத்தில் மேற்கு திக்கில் சமுத்ரத்தில் விழுகிறது, பத்ரை பிரிவானது மேரு சிகரத்தின் வடக்கிலிருந்து கீழ்கீழாக ஒவ்வொரு மலைகளிலும் விழுந்து ச்ருங்கவானுடைய சிகரத்தில் விழுந்து உத்தரகுருவின் பக்கத்தில் வடக்கில் ஓடி சமுத்ரத்தை அடைகிறது. அளகநந்தை என்பது ப்ரஹ்ம லோகத்தின் தென் பாகமாக அநேகமலைகளில் விழுந்து ஹேமகூடம், ஹிமகூடம் இவைகளில் அதிவேகமாகச் சென்று

கர்மக்ஷேத்திரமாகிய பாரதவர்ஷத்தின் வழியாக சமுத்திரத்தில் ப்ரவேசிக்கிறது. அது போலவே மேரு முதலிய பர்வதங்களிலிருந்து உண்டாகும். அநேக நதங்களும், நதிகளும் ஒவ்வொரு வர்ஷத்திலும், பலவிருக்கின்றன. இந்த ஜம்பூத்வீபத்திலும், பாரத வர்ஷமே கர்ம க்ஷேத்ரம், மற்ற எட்டு வர்ஷங்களும் புண்யம் பண்ணினவர்கள். பாக்கியான புண்யத்தின் பலத்தை அனுபவிக்கக் கூடிய ஸ்தலங்கள்; அவை களையே பூமிஸ்வர்க்கமென்று சொல்லுகிறார்கள். அந்த வர்ஷங்களில் வசிப்பவர்களுக்கு ஆயுஸ்ஸு மிகவும் அதிகம். மேலுமவர்கள் தேவர்களுக் கொப் பானவர்கள்; பதினாயிரம் யானை பலமுள்ளவர்; அதிக பலமுள்ளவர்கள்; வஜ்ரம் போன்ற சரீரமுள்ள வர்கள்; த்ரேதாயுகத்தில் ஜனங்கள் சுகமாக வஸிப்பது போல் அவர்கள் சுகமாகக் காலத்தைக் கழிக்கிறார்கள். பின்னும் அங்கிருக்கும் சிறந்த தேவர்கள் தங்கள் தங்கள் கணநாயகர்களால் பூஜிக்கப்பட்டு எல்லா ருதுக்களிலும் உண்டாகும் புஷ்பங்கள், பழங்கள், தளிர்கள் இவைகளுடன் வணங்கியிருக்கும் மரங்களால் அழகான தோட்டங்களிலும், ஆச்ரமங்களிலும், பர்வதக்குஹைகளிலும் விளையாடுகிறார்கள். மேலும் அவ்விடத்தில் தாமரை ஓடைகளிருக்கின்றன. அவை களில் மலர்ந்த தாமரச புஷ்பங்களுடைய வாசனையால் சந்தோஷமடைந்த ராஜஹம்ஸங்கள், நீர்க்கோழி, நீர்க்காக்கை, ஸாரஸங்கள், சக்ரவாகங்கள் முதலிய பக்ஷிகளும் வண்டுகளும் சப்தித்துக் கொண்டிருக் கின்றன. அது தடாகங்களில் அங்கிருக்கும் புருஷர்கள் ஸ்த்ரீகளுடன் ஜலக்ரீடை செய்து அவர்களுடைய சிரிப்பு, பார்வை இவைகளால் ஆனந்தமடைந்து தங்களிஷ்டப் படி க்ரீடிக்கிறார்கள்.

15–25 ஒன்பது வர்ஷங்களிலும் மஹாபுருஷனும், பகவானுமாகிய ஸ்ரீமந் நாராயணன் அந்தந்த வர்ஷத்தி லிருப்பவர்களை அனுக்ரஹிப்பதற்காக அநேக மூர்த்தி களுடன் இக்காலத்திலும் ஸாந்நித்யஞ் செய்துகொண் டிருக்கிறான். இளாவிருதத்தில் பகவானாகிய பரமசிவன் ஒருவரே புருஷன். மற்றவர்களெல்லோரும் ஸ்திரீ களேயாம். அவ்வருஷத்திற்கு வரும் புருஷன் ஸ்திரீயாக ஆகிவிடுவான் என்று பார்வதி சபித்திருக்கிறாள். அந்த சாபத்தை அறியாமல் அவ்விடத்தில் ப்ரவேசித்த ஒருவன் தன் பரிவாரங்களுடன் ஸ்திரீயாக ஆனான். அந்தக் கதைகளைப் பிந்திச் சொல்லுவோம். அவ்விடத் திலிருக்கும் பரமசிவன் பார்வதியினுடைய வேலைக் காரிகளான அநேக ஸ்திரீகளால் உபசரிக்கப்பட்டு நான்கு விதமான சரீரமுள்ள மஹா புருஷனான ஸ்ரீ நாராயணனுடைய தாமசமான மூர்த்தியை தம்முடைய யோகபலத்தால், ஆவிர்பவிக்கச் செய்து பின்வரும் மந்திரத்தை ஜபித்துக் கொண்டு அந்த மூர்த்தியை பூஜிக்கிறார். அந்த மூர்த்தியானது பரமசிவனுக்கு காரணமாகிய தாமசமூர்த்தி. பரமசிவன் அதனை பின்வருமாறு ஸ்தோத்திரஞ் செய்தார். பகவானும், வாசுதேவரும், ஸகல குணங்களை ப்ராகாசிக்கச் செய்பவரும், அளவிடக் கூடாத வருமான மஹா புருஷனுக்கு நமஸ்காரம். ஓ சேவிக்கத் தகுந்தவரே! பரமேச்வரனாகிய உம்மை சேவிக்கிறேன்; உம்முடைய பாதாரவிந்தமானது ஸகல ஜகத்தையும் காப்பாற்றக் கூடியது; சகலவிதமான ஐஸ்வர்யத்திற்கும் முக்கியமான ஸ்தானம்; பக்தர்களுக்கு தன்னுடைய ஸ்வரூபத்தை ப்ரகாஸிக்கச் செய்யக் கூடியது. சம்ஸாரத்தை நிவர்த்திக்கக் கூடியது; சம்ஸாரத்தை நம்முடைய மனதானது எப்படி விஷயத்தில் ப்ரவர்த்திக்கிறதோ, அப்படி லோகத்தை நியமனம் பண்ணுவதற்காக

சங்கல்பித்தவரான உம்முடைய திருஷ்டியானது விஷயங்களாலும் சித்விருத்திகளாலும் இழுக்கப்படு கிறதில்லை; ஆனதால் இந்திரியங்களை ஜயிக்க முயற்சிக்கும் எந்த புருஷன் மதங்கொண்டவன் போல அஸத்தான விஷயங்களில் அபிநிவேசத்தை வைத்து மாயையிலே மோஹித்த புருஷன் ஈச்வர ஸ்வரூபத்தைப் பார்க்கமாட்டான். பகவானுடைய பாதஸ்பர்சத்தால் கலங்கிய இந்திரியங்களுள்ள நாககன்னிகைகள் அவரை பூஜிக்க முடியாமலிருந்தார்கள். அந்தப் பகவான் இந்த ஜகத்தைப் படைத்தவர்; காப்பாற்றுகிறவர்; மேற்காட்டிய உத்பத்தி முதலியவைகள் அவருக்கு இல்லை; அவரை அனந்தரென்று லக்ஷ்மிதேவியும் மந்தரங்களும் சொல்லுகின்றன. அவருடைய அநேக சிரஸ்ஸுகளில் ஏதோ ஒரு பாகத்தில் இந்த பூமண்ட லமானது கடுகுபோல இருக்கிறது! அதனை அவர்கள் தெரிந்துகொள்ளவில்லை. அப்படிப்பட்ட பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். அவரிடமிருந்து குணநிமித் தமான மஹத்தத்வம் உண்டாயிற்று. அதனிடமிருந்து ஸத்வகுண ப்ரதானராகிய ப்ரஹ்மதேவர் உண்டானார். அவரிடமிருந்து உண்டான நான் முக்குணங்களைக் கொண்டு தேவதைகளையும், பூதவர்க்கத்தையும், இந்திரிய வர்க்கத்தையும் படைக்கிறேன். மேலும் மஹத்தத்வம் முதலிய நாம் எல்லோரும் அவருடைய அனுக்ரஹததாலேயே இந்த ப்ரஹ்மாண்டத்தை ஸிருஷ்டிக்கிறோம், மஹத்தத்வம், வைகாரிக தேவர்கள், தாமஸ பூதங்கள், இந்திரியங்கள் முதலிய எல்லாம் கயிற்றால் கட்டப்பட்ட பறவைகள்போல அவருடைய ஆக்ஞையால கட்டப்பட்டிருக்கிறோம். அந்தப் பகவா னால் உண்டு பண்ணப்பட்ட மாயையை ஜனங்கள் அறிவார்களோ யொழிய அதனைத் தாண்டும் உபாயத்தைத்

தெரிந்து கொள்கிறார்களில்லை. அந்த மாயையானது கர்மங்களைச் செய்யும்படி தூண்டுகிறது. ஜனங்களோ குணங்களால் மோஹமடைந்திருக்கிறார்கள். ஜகத்தின் உற்பத்தி, நாசம் இவைகளின் ஸ்வரூபியாகிய அந்த மஹா புருஷனுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன்.

அத்தியாயம்–18

பத்ராச்வம் முதலியவை

பத்ராச்வமென்ற வர்ஷத்தில் தர்மருடைய புத்ரராகிய பத்ரச்ரவஸ் என்பவர் பகவானாகிய வாஸுதேவருக்கு மிகவும் ப்ரியமான ஹயக்ரீவரென்ற மூர்த்தியை மிகுந்த யோகபலத்தால் அவ்விடத்தில் ஆவிர்பவிக்கச் செய்து தம்முடைய பரிவாரங்களுடன் அதனைப் பின்வருமாறு ஸ்தோத்ரம் பண்ணுகிறார். ஆத்மாவை சுத்தப்படுத்துகிறவரும், தர்மரூபியுமான பகவானுக்கு நமஸ்காரம், லோகத்தில் ஜனங்கள் மரணமடைந்த பிதா, புத்ரன் முதலிய பந்துக்களுக்கு ஸம்ஸ்காரத்தைச் செய்து அவர்களுடைய பணத்தைக் கொண்டு வெகுகாலம் ஜீவிக்க வேண்டுமென்று விரும்பி அல்பமான விஷயசுகத்திற்காக பாபத்தையே செய்ய முயற்சிக்கிறார்கள். ஜனங்களை கொல்பவர் பகவானாகவிருந்தும் அவர் ஜனங்களுடைய கண்களுக்குப் புலப்படுகிறதில்லை. இந்தப் பகவானுடைய சரீரமானது மிகவும் வியக்கத்தக்கது. ஓ உத்பத்தியில்லாதவரே! சாஸ்த்ரங்களைப் படித்த வித்வான்களும், அத்யாத்ம ஸ்வரூபத்தை அறிந்த ஞானிகளும் ஜகத்தை அநித்யமென்று சொல்லுகிறார்கள். ஆனாலும் உம்முடைய மாயையால் திரும்பவும் மோஹிக்கிறார்கள். ஆனதால் உம்முடைய சரிதமானது ஆச்சர்யகரமாயிருக்கிறது. அப்படிப்பட்ட உத்பத்தியற்றவராகிய உமக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். நீர் ஒன்றையும் செய்யாதவர், ஆனாலும் ஜகத்தைப் படைப்பது முதலியவைகளைச் செய்பவரென்று வேதத்தில் சொல்லியிருக்கிறது. ஆனாலுமது ஆச்சர்யமல்ல. நீர் கார்யகாரண ஸ்வரூபியாக

விருப்பதால் உமக்கு கர்மங்கள் உண்டென்று சொல்வது உசிதம், உண்மையில் உபாதியற்றவராய் இருப்பதால் ஒன்றையும் செய்யாதவரென்று சொல்வதும் பொருந்தும், முன்னொரு கால் கங்கனென்ற அஸுரன் வேதங்களை அபஹரித்துக் கொண்டு பாதாளம் சென்றான். அப்பொழுது ப்ரஹ்மதேவரால் ப்ரார்த்திக்கப்பட்டு எந்த பகவான் ஹயக்ரீவனாக அவதரித்து அந்தவேதங்களை திரும்பவும் கொண்டுவந்து ப்ரஹ்மதேவருக்குக் கொடுத்தாரோ ஸத்யஸங்கல்பராகிய அந்த பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன்.

7–15. ஹரிவர்ஷத்திலும் பகவான் நரஸிம்ஹரூபியாக ப்ரகாசிக்கிறார். அந்த அவதாரத்தின் காரணத்தைப் பிந்தி சொல்லுவோம், பாகவதர்களுக்குட் சிறந்தவரும், தைத்யர்கள், தானவர்கள் இவர்களுடைய குலத்தை பரிசுத்தப்படுத்தும் ஸ்வபாவமுள்ளவருமான ப்ரஹ்லாதர் இடைவிடாத பக்தியுடன் அந்த நரஸிம்ஹரூபத்தை அந்த வர்ஷத்திலிருக்கும் புருஷர்களுடன் உபாஸிக்கிறார். பின்வருமாறு ஸ்தோத்திரமும் செய்கிறார், தேஜோரூபங்களைவிட தேஜஸ்வியும், நரஸிம்ஹரூபியுமான பகவானுக்கு நமஸ்காரம். வஜ்ரம் போன்ற சிங்கப் பற்களுள்ளவரே! வக்ரமாகிய நகங்களுள்ளவரே! எங்களுடைய கர்ம வாசனைகளை நிவர்த்தியும். உக்ர ஸ்வபாவமுள்ளவரும், மகாத்மாவுமான உம்மை நமஸ்கரிக்கிறேன். அஜ்ஞானத்தை நிவர்த்தியும் அபயத்தைக் கொடும். ஸகல ஜகத்திற்கும் க்ஷேமுண்டாகட்டும். துஷ்டர்கள் துஷ்ட ஸ்வபாவத்தை விட்டு விடட்டும், எல்லா ப்ராணிகளும் ஒருவருக்கொருவர் க்ஷேமத்தையே ப்ரார்த்திக்கட்டும், அவர்களுடைய மனதும் சாந்தியை அடையட்டும், நம்முடைய புத்தியும்,

பலனை உத்தேசியாமல் பகவானிடத்தில் ப்ரவேசிக் கட்டும், 'நமக்கு ஒருவரிடத்திலும் ஸங்கம் உண்டாக வேண்டாம், அப்படி உண்டானால் பகவத் பக்தர் களுடைய சங்கமே நேரிடட்டும், வீடு, புத்ரன், பணம் இவைகளில் ஆசை உண்டாக வேண்டாம், ப்ராணனைக் காப்பாற்றிக் கொள்வதற்கு வேண்டியதை மாத்திரம் யாசிப்பவனஎவ்வளவு சந்தோஷத்தை அடைகிறானோ. அவ்வளவு சந்தோஷம் வீடு முதலியவைகளில் ஆசை யுள்ளவனுக்கு கிடைக்கிறதில்லை, பகவத் பக்தர்களி டத்தில் சேருவதனால் ஸ்ரீ பகவானுடைய சரிதமானது அறியப்படுகிறது. அதை நன்றாக ச்ரவணம் பண்ணு கிறவர்களுடைய ஹிருதயத்தில் ஸ்ரீ பகவான் எப் பொழுதும் வசிப்பதுமன்னியில் அங்கிருக்கும் மலத்தை யும் போக்குகிறார், கங்கை முதலிய நதிகளின் தீர்த்தமானது சரீரத்தின் மலத்தைப் போக்குமேயல்லாமல் மனத்திலிருக்கும் மலத்தைப் போக்குவதில்லை, அப்படிப்பட்ட பகவானுடைய சரிதத்தை எவன்தான் சேவிக்கமாட்டான். எவனுக்கு பகவானிடத்தில் பக்தி இருக்கிறதோ அவனிடத்தில் தேவர்கள் தர்மம் ஜ்ஞானங் முதலிய குணங்களுடன் வசிக்கிறார்கள், பகவானிடத்தில் பக்தியில்லாதவனும், விஷய சுகம் கிடைக்காவிடில் அதற்காக அலையும் மனதுள்ளவனு மான புருஷனுக்கு மஹான்களுடைய குணங்களாகிய வைராக்யம் முதலியவைகள் எப்படி உண்டாகும்? மத்ஸ்யங்களுக்கு ஜலமானது எப்படி ஆச்ரயமோ அப்படி பகவானாகிய மஹாவிஷ்ணு ப்ராணிகளுக்கு ஆத்மாவாக விருக்கிறார். அப்படியிருக்க மிகவும் ப்ரஸித்தியுள்ளவனானாலும் வீடு முதலியவைகளில் ஆசைவைத்தால் அவனை வயதில் பெரியவனென்று சொல்லலாமே தவிர ஜ்ஞானம் முதலியவைகளில்

பெரியவனென்று சொல்லக்கூடாது. ஆனதால் க்ருஹஸ்தாச்ரமமானது ஆசை அபிநிவேசம், துக்கம், கோபம், மானம், பயம், தைன்யம் முதலியவை களுக்குக் காரணமாயிருக்கிறது. ஆனதால் சம்ஸார மண்டலத்தைவிட்டு பயமற்றதான நரஸிம்ஹருடைய பாதாரவிந்தத்தை பஜியுங்கள்.

16–24. கேதுமாலமென்ற வர்ஷத்தில் பகவான் லக்ஷ்மீதேவிக்கும் ப்ரஜாபதியின் புத்ரர்களும், புத்ரி களுமான பகல் ராத்ரிகளுக்கும் ப்ரியத்தைச் செய்ய வேண்டி ப்ரத்யும்ன ஸ்வரூபியாக ப்ரகாசிக்கிறார். மகா புருஷனுடைய சக்ரத்தின் தேஜஸ்ஸிலிருந்து பயந்தவர்களான அந்த ஸ்திரீகளுடைய கர்ப்பமானது ஒரு ஸம்வத்ஸரத்தின் முடிவில் உயிரில்லாமல் வெளிப்படுகிறது. மேலும் பகவான் மிகவும் அழகான நடையாலும், மந்தஸ்மிதத்தாலும், பார்வையாலும் ப்ரகாசிக்கும் புருவங்களாலும், அழகான முககாந்தியால் லக்ஷ்மீதேவியை சந்தோஷிக்கச் செய்து தன்னுடைய இந்திரியங்களுக்கு திருப்தி செய்து வைக்கிறார். லக்ஷ்மீ தேவியானவள் மாயைமயமான அந்த பகவத் ரூபத்தை ராத்திரிகளில் அதற்கு அபிமானிகளான தேவதைகளுடனும், பகல்களில் அதற்கு அபிமானி களான தேவதைகளுடனும், மேலான ஸமாதியோகத்தால் உபாஸிக்கிறாள், பின்வருமாறு அவர்கள் ஸ்தோத்ரமும் செய்கிறார்கள். இந்திரியங்களுக் கதிபதியான பகவா னுக்கு நமஸ்காரம், அவர் ஸகல சிறந்த வஸ்துக்களால் குறிப்பிடக்கூடிய ஸ்வரூபமுள்ளவர். கர்மங்களுக்கும், ஞானங்களுக்கும் ஸங்கல்பம் முதலியவைகளுக்கும், விஷயங்களுக்கும் அதிபதியாயிருப்பவர்; பதினாறு கலைகளின் ஸ்வரூபியாயிருப்பவர்; வேதத்திற் சொல்லிய

கர்மங்களாலடையக்கூடியவர்; அன்னஸ்வரூபியாயிருப்பவர்; அமிர்தமயமாக விருப்பவர்; பரமானந்த ஸ்வரூபி; ஸகல ஜகத்ரூபி; தேகபலம் மனோபலம், காந்தி இவைகளைக் கொடுப்பவர்; அழகானவர்; ஸகல காம ஸ்வரூபி; அப்படிப்பட்ட பகவானுக்கு மனத்தாலும் வாக்கினாலும் நமஸ்காரஞ் செய்கிறோம். ஸ்திரீகளை அநேக வ்ரதங்களை அனுஷ்டித்து இந்திரியங்களுக்கதிபதியான உம்மை ஆராதித்தும் மற்றொருவனை புருஷனாக அடைய விரும்புகிறார்களோ. அவர்களுடைய குழந்தை தனம். ஆயுஸ் முதலியவைகளில் அந்த புருஷர்கள் ஸ்வாதந்தர்யமில்லாதவர்கள், ஆனதால் காப்பாற்ற முடியாது. பயந்த ஜனங்களைக் காப்பாற்றும் புருஷர் நீர் ஒருவரே. நீர் ஆத்ம லாபத்தைவிட ஒன்றையும் மேலானதாக நினைக்கிறதில்லை. மற்றவர்களெல்லோரும் ஒருவருக்கொருவர் பயப்படுகிறார்கள், எவர்கள் உம்முடைய பாதார விந்தத்தை வேறொன்றையும் யாசிக்காமல் பூஜிக்கிறார்களோ, அவர்கள் ஸகல கர்மங்களையும் அடைகிறார்கள். எவள் பலனை உத்தேசித்து உம்மை பூஜிக்கிறாளோ, அவள் விரும்பியதை மாத்திரம் கொடுக்கிறீர். அதனை அனுபவித்த பிறகு அவள் துக்கப்படுகிறாள் ஓ பகவன்! லக்ஷ்மீயாகிய உன்னை பூஜித்தாலல்லவோ ஸகல காமங்களும் கிடைக்கும். என்னை பூஜிப்பதனால் அவைகள் கிடைக்குமா? என்று சொல்வீராகில் ப்ரஹ்மதேவர் முதலிய தேவர்கள் இந்திரிய சுகத்தில் ஆசைப்பட்டு உம்முடைய பாதத்தை பூஜியாமல் என்னை உத்தேசித்து தபஸ் செய்கிறார்கள். ஆனாலும் என்னுடைய கடாக்ஷவீக்ஷணத்தால் உண்டாகும் ஐச்வர்யத்தை அடையவில்லை, ஏனென்றால் நான் உம்மையே த்யானஞ் செய்து கொண்டிருப்பதால்

உம்மை யார் பூஜிக்கிறானோ, அவனை கடாக்ஷிப்பதே யொழிய மற்றவனைப் பார்க்க மாட்டேன். ஓ நாசமற்றவரே! ஸகல காமங்களையும் கொடுக்கக்கூடிய தென்று ஸாதுக்களால் ஸ்தோத்ரம் பண்ணப்பட்ட எந்தக்கையை பக்தர்களுடைய சிரஸ்ஸில் வைத்தீரோ அந்த அமிருதஹஸ்தத்தை என்னுடைய சிரஸ்ஸிலும் வைக்க வேண்டும். ஓ மேலானவரே! என்னைமாரில் அடையாளமாக வைத்துக்கொண்டிருக்கிறீர், ஆனாலும் உமக்கு பக்தர்களிடத்திலேயே மிகுந்த கிருபை இருக்கிறது. ஆனதால் உம்முடைய அபிப்ராயத்தை அறிந்து கொள்வதற்கு யாரால் முடியும்?

25–28. ரம்யகமென்ற வர்ஷத்தில் பகவானுக்கு ப்ரியமான மத்ஸ்யாவதார ஸ்வரூபமானது அந்த வர்ஷத்திற்கதிபதியான மனுவுக்கு முன்காலத்தில் காண்பிக்கப்பட்டது. அந்தஸ்வரூபத்தை இப்பொழுதும் அங்கிருப்பவர்கள் மிகுந்த பக்தியுடன் ஆராதிக்கிறார்கள். ஸத்வகுண ப்ரதானரும், மிகவும் முக்யரும் ஸூத்ராத்மாவும், தேஜஸ், மனோபலம் தேஹபலம், இவைகளின் ஸ்வரூபியுமான மத்ஸ்யமூர்த்திக்கு நமஸ்காரஞ் செய்கிறோம். ஓ பகவன்! வேதமாகிய சப்தமுள்ள நீர் ஜகத்தினுள்ளிலும் வெளியிலும், லோக பாலர்களாலும் காணப்படாமல் ஸஞ்சரிக்கிறீர். மேலும் நீர்மனிதன் மரப்பொம்மையை ஆட்டிவைப்பது போல் இந்த ஜகத்தை விதியாலும் நிஷேதத்தாலும் ஸ்வாதீனப்படுத்திக் கொண்டிருக்கிறீர். லோக பாலர்கள் எல்லோரும் சேர்ந்து மாத்ஸர்யமாகிய ஜ்வரமுள்ளவர்களாகி இரண்டுகால் ப்ராணிகள், நாலுகால் ப்ராணிகள், ஜங்கமம், ஸ்தாவரம் முதலிய ஜகத்தை காப்பாற்ற முயன்றும் அவர்களால் முடியவில்லை. அப்படிப்பட்ட ஜகத்தை ப்ராணரூபியாகக் காப்பாற்றும்

ஈச்வரன் நீர் ஒருவரே. மேலும் நீர் ப்ரளய காலத்தில் ஓஷதிகளுக்கு இருப்பிடமான பூமியையும் என்னையும் தம்முடைய தேஜஸ்ஸால் காப்பாற்றுகிறீர்; பின்னும் ஜகத்திற்கு பிராணனாயுமிருக்கிறீர். அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்.

29–32. ஹிரண்மயமென்ற வர்ஷத்தில் பகவான் கூர்மரூபியாக ப்ரகாசிக்கிறார். அவ்விடத்தில் பிதிருகணங் களுக்கதிபதியான அர்யமா என்பவர் அந்த வர்ஷத்தி லுள்ள புருஷர்களுடன் கூர்மமூர்த்தியை உபாசிக்கிறார். 'ஸத்வகுணங்களால் நிறைந்தவரும் இருப்பிடமில்லாத வரும், புராணரும், காலத்தால் அளவிடக்கூடாதவரும், எங்குமிருப்பவரும், ஆதாரமற்றவரும், கூர்மரூபியுமான பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறோம் என்ற மந்தரத்தை ஜபிக்கிறார்கள். பகவானுடைய மாயையால் இந்த ஜகத்தானது ப்ரகாசிக்கிறது. அதற்கு அளவு இல்லை. அது மித்யையாகையால் அதனைக் கணக்கிட வும் முடியாது. ஆனாலும் ப்ருத்வீ முதலிய அந்த திருச்யஸ்வரூபமுழுவதும் பகவத் ஸ்வரூபமேயாம். அதைவிட வேறில்லை. அப்படிப்பட்ட ஊஹிக்க முடியாத ப்ரபஞ்சஸ்வரூபியான பகவானுக்கு நமஸ் காரம்; ஜராயுஜம், ச்வேதஜம், அண்டஜம், உத்பிஜ்ஜம் முதலிய ஸ்தாவர ஜங்கமங்களும்; தேவதைகள், ரிஷிகள், இந்திரியங்கள், த்யுலோகம், ஆகாசம். பூமி, மலை, ஆறு, சமுத்ரம், த்வீபம், நவக்ரஹங்கள். நக்ஷத்ரம் என்ற எல்லா நாமதேயங்களுக்கும் அர்த்த மாயிருப்பவர் நீர் ஒருவரே; இப்படி கணக்கில்லாத நாமங்களும் ரூபங்களும், உம்மிடத்தில் கவிகளால் கல்பிக்கப்பட்டிருந்தும் தத்வஜ்ஞானத்தால் அது நிவர்த்தியாகிறது. அப்படிப்பட்ட பரமார்த்த ஸ்வரூ பியான உமக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்.

33–37. உத்தரகுருவில் யஜ்ஞபுருஷராகிய பகவான் வராஹ ரூபியாய் ப்ரகாசிக்கிறார். பூமிதேவியானவள் அவ்விடத்தில் வஸிப்பவர்களுடன் மிகுந்த பக்தியுள்ள வளாகி அந்த மூர்த்தியை பூஜிக்கிறாள். மேலுமவள் 'மந்தரங்களால் ப்ரகாசிப்பவரும், யஜ்ஞஸ்வரூபியும், க்ரதுஸ்வரூபியும், பெரிதான யாகங்களை அவயங்களாக உடையவரும் முன்று யுக ஸ்வரூபியும் குணங்களற்ற வரும், கர்மத்தால் சுத்தரும், மஹாபுருஷனுமான பகவானுக்கு நமஸ்காரம் என்ற உபநிஷத்தை ஜபிக் கிறாள். கட்டையில் மறைந்திருக்கும் அக்கினியைக் கடைந்து எடுப்பது போல வித்வான்களும், கர்மங்களா லும், அதன் பலன்களாலும், மறைக்கப்பட்டிருக்கும் ஆத்மாவை தேஹத்திலும் இந்திரியங்களிலும் தேடுகிறார்கள், அப்படித் தேடுவதினால் ப்ரகாசிக்கும் ஸ்வரூபமுள்ள பகவானுக்கு நமஸ்காரம்; திரவ்யம் இந்திரிய வ்யாபாரம் தேவதை, தேஹம், காலம், அஹங்காரம் முதலிய மாயாகுணங்களால் நீர் தோன்று கிறீர்; விசாரத்தாலும் யமம், நியமம், முதலியவைகளா லும் நிச்சய புத்தியினாலும், உம்முடைய மாயா ஸ்வரூபம் நிவர்த்தியாகிறது; அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம்; இரும்பானது அயஸ்காந்தத்தின் மஹிமையால் அசைந்து அதற்கு எதிர்முகமாக எப்படிச் செல்லு கிறதோ, அப்படி ஜகத்தை படைக்க வேண்டுமென்ற விருப்பம் உமக்கு உண்டான போது உம்முடைய மாயை ஜடமானாலும் உம்முடைய சந்நிதான விசேஷத்தால் ஜகத்தை உண்டுபண்ணுவது, பரிபாலிப் பது, நாசஞ்செய்வது முதலியவைகளை செய்கிறது. உமக்கு நமஸ்காரம்; ஜகத்துகுக் காரணரான எந்த பகவான் வராஹாவதாரஞ் செய்து அஸுரனைக் கொன்று என்னை சிங்கப்பல்லாலெடுத்துக்கொண்டு விளையாடும் யானை போல பாதாளத்திலிருந்து வந்தாரோ அந்த ப்ரபுவிற்கு நமஸ்காரஞ் செய்கிறேன்..

அத்தியாயம்–19

கிம்புருஷம்

கிம்புருஷமென்ற வர்ஷத்தில் ஆதிபுருஷனாகிய பகவான் லக்ஷ்மணனுக்குத் தமயனாகிய ராமனாக ப்ரகாசிக்கிறார். பாகவதர்களுக்குட் சிறந்தவரும் ஸ்ரீ ராமனுடைய சமீபத்திலேயே வஸிப்பதில் ஆசையுள்ள ஹனுமான் அந்த வர்ஷத்தில் உள்ளவர்களுடன் இடைவிடாமல் பக்தி செய்து கொண்டு ஸ்ரீ ராமனை உபாஸிக்கிறார். மேலுமவர் ஆர்ஷ்ணிஷேணர்–கந்தர் வர்கள் ஆகிய இவர்களால் கானம் பண்ணப்பட்டதும் மிகவும் கூஷ்மகரமான ஸ்ரீ ராமனுடைய கதையை ப்ரியத்துடன் கேட்கிறார். தாமும் பின்வருமாறு கானஞ் செய்கிறார். பெரியோர்களுடைய சுபாவம்; வ்ரதம் இவைகளுள்ளவரும், மனத்தை ஜயித்தவரும், லோகத்தை அனுசரித்தவரும், ஸாதுவென்று ப்ரஸித் தரும், ப்ராஹ்மணர்களையே தைவமாகக் கொண்ட வரும், மஹாபுருஷரும், மஹாராஜனும், உத்தம ச்லோகருமான ஸ்ரீ ராமனுக்கு நமஸ்காரம். எது **சுத்தமான** ஸ்வரூபமோ, எது தன்னுடைய தேஜஸ்ஸால் குண சம்பந்தத்தாலுண்டாகும் அவஸ்தைகளைப் போக் கடிக்கிறதோ, எது மிகவும் சாந்தமோ, எது கண்ணுக்குப் புலப்படுவதைவிட வேறானதோ, புத்திசாலிகளால் எது அறியக் கூடியதோ, எது நாமரூபங்களற்றதோ அந்த ஸ்ரீ ராம பிரான் பரப்ரஹ்மத்தைச் சரணமடை கிறேன். அப்படிப்பட்ட பரமாத்மா மனுஷ்யனாக அவதரித்தது, ராவணனைக் கொல்வதற்காகவே; அப்படி இல்லாவிடில் தன்னுடைய ஆத்மாவினிடத் திலேயே ரமித்துக் கொண்டிருக்கும் பரமாத்மாவிற்கு

ஸீதா நிமித்தமான துக்கங்கள் ஏற்படக் கூடுமா? அந்தப் பகவான் தைர்யமுள்ளவர்களுக்கு ஆத்மாவாக இருப்பவர்! மிகவும் ஸுஹிருத்; ஆனாலும் மூவுலகத் திலும் ஒன்றிலும் அவருக்கு ஆசையில்லை. அதனால் ஸீதா விஷயமான துக்கமும் அவருக்கு இல்லை. லக்ஷ்மணனையும் பரியாத்யாகஞ் செய்தார். அந்தப் பகவான் சிறந்த குலத்தாலும், அழகினாலும், புத்தியாலும், ஸ்வரூபத்தாலும் சந்தோஷப்படுகிறதில்லை. மேற்சொல்லிய குணங்களற்றவரும், வானரங்களுமான எங்களை யுத்தத்திற்கு ஒத்தாசையாக அங்கீகரித்தார். தேவனானாலும், அஸுரனானாலும், மனிதனானா லும் குரங்கானாலும் ஸ்ரீ ராமனையே பஜிக்கவேண்டும். அவர் ஸ்வல்பமாக பஜனம் பண்ணினாலும் அதை வெகுவாக நினைக்கக்கூடியவர்; மனிதனாக அவதரித்த மகாவிஷ்ணு அயோத்தியில் வசிக்கும் எல்லா ப்ராணிகளையும் ஸ்வர்க்கம் செல்லும்படி செய்தவர்.

7–14 பாரதவர்ஷத்தில் பகவான் நாராயணனென்ற பெயருடன் தர்மம், ஜ்ஞானம் வைராக்கியம், ஐஸ்வர்யம், இந்த்ரியங்களை அடக்குவது இவைகளை விருத்தி செய்து கொண்டு தைர்யமுள்ளவர்களை அனுக்ரஹிப் பதற்காக அஹங்காரமற்றவராய் தபஸ் செய்துகொண்டி ருக்கிறார். அவருடைய கதி ஒருவராலும், அறிய முடியாதது. வர்ணங்களுக்கும் ஆச்ரமங்களுக்கும், உரிய வார்த்தைகளால் பகவானால் சொல்லப்பட்ட ஸாங்க்யம், யோகம் இவைகளாலும் பகவானுடைய மஹிமையை மனுவிற்கு உபதேசிக்கப்போகிற நாரத பகவான் மிகுந்தபக்தியுடன் அந்த நாரயணனை உபாஸிக்கிறார். சாந்தஸ்வபாவமுள்ளவரும், அகங்கார மற்றவரும் ஏழையை பணமாய் கொண்டவரும்,

ரிஷிகளுக்குட் சிறந்தவரும் பரமஹம்ஸரும், மேலான குருவும், ஆத்மா ராமர்களுக்கு அதிபதியுமான நாராயணனுக்கு நமஸ்காரம் என்ற மந்திரத்தையும் ஜபிக்கிறார். இந்த ஜகத்தை உண்டு பண்ணுகிறவரானாலும், எவர், "நான் கர்த்தா" என்ற அபிமானமற்றவரோ, தேஹத்தை அடைந்தவரானாலும் அதன் குணங்களான பசி தாகம் முதலியவை எவருக்கு இல்லையோ, எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியானாலும் எவருடைய திருஷ்டியானது குணங்களால் விகாரத்தை அடைகிறதில்லையோ, ஒன்றிலும் சம்பந்தப்படாதவரும் ஸாக்ஷியுமான அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். ஓ யோகத்திற்கு அதிபதியாயிருப்பவரே! மரணகாலத்தில் தேஹம் முதலியவைகளில் ஆசையை ஒழித்து நிர்குணராகிய உம்மிடத்தில் பக்தியுடன் மனத்தை சமர்ப்பிப்பதே யோகம். இதனையே ப்ரஹ்மதேவர் யோகமென்று சொல்லியிருக்கிறார். எவன் இவ்வுலகம், பரலோகம் இவைகளின் சுகத்திலாசைப்பட்டு புத்ரன், களத்ரம், ஐச்வர்யம் இவைகளைப் பற்றியே யோசித்துக் கொண்டு சரீரம் போய்விடுமென்று பயப்படுகிறானோ அவன் வித்வானாலும் அவனுடைய முயற்சியானது பயனற்றதேயாம். ஆனதால் ஓ ப்ரபுவே! உம்முடைய மாயையால் துச்சமான தேஹத்தில் "நான் என்னுடையது" என்ற அபிமானம் ஏற்பட்டிருக்கிறது. அதை நிவர்த்திப்பது மிகவும் ச்ரமம். ஆனாலும் அதனை எதனால் பேதிக்கமுடியுமோ, அந்த வாஸுதேவரூபமான பக்தி உம்மிடத்திலிருக்கும்படி அனுக்ரஹிக்கவேண்டும்.

15–26 இந்த பாரத வர்ஷத்திலும் அநேக நதிகளும் மலைகளுமிருக்கின்றன. மலயம், மங்களப்ரஸ்தம், மைனாகம், திருகூடம், ரிஷபம், கூடரம், கொல்லம்,

சஹ்யம், வேதகிரி, ரிச்யரகம், ஸ்ரீ சைலம், வெங்கடாத்ரி, மஹேந்திரம், வாரீதாய, நந்தி, விந்த்யம், சக்திமான், ரிஷகிரி, பாரியாத்ரம், த்ரோணம், சித்ர கூடம், கோவர்த்தனம், ரைவதகம், குகும்பம், நீலம், காகமுகம், இந்திரகீலம், ராமகிரி முதலிய லக்ஷக்கணக்கான மலைகளிருக்கின்றன. அவைகளுடைய தாழ்வரையிலிருந்து உண்டாகும் நதங்களும், நதிகளும், கணக்கில்லாமலிருக்கின்றன. இந்த நதிகளுடைய ஜலங்கள், பாரத வர்ஷத்திலிருக்கும் ப்ரஜைகளை தங்களுடைய பெயர்களாலேயே பரிசுத்தப்படுகின்றன. சரீரத்தாலும் தொடுகின்றன. சந்த்ரபடா, தாம்ரபர்ணி, அவடோதா, கிருதமால, வைஹாயஸி, காவேரி, வேணி, பிநாகினி, பயஸ்விநி, பயோதா, சர்கரவந்தா துங்கபத்ரா, கிருஷ்ணவேணி, பீமரதி, கோதாவரி, நிர்விந்த்யா, பயோஷ்ணி, தாபி ரேவா, சிலர், ஸுரசா, நர்மதா, சர்மன்வதீ, ஸிந்து, சோணம் ஆகிய இவைகள் நதங்கள், (மேற்கே போகிறவை) மஹாநதி, வேதஸ்மிருதி, ரிஷிகுல்யா, த்ருசமா, கௌசிகீ, மந்தாகினி, யமுனா, சரஸ்வதி, த்ருஷத்வதி, கோமிதி, ஸரயூ, போகவதி, சுஷ்மா, சதத், சந்ரபாகா, மருத்ரதா, விதஸ்தா, பெண்ணை, அஸிக்நீ, விச்வா ஆகிய இவைகள் மஹா நதிகள், இந்த வர்ஷத்தில் பிறந்த ஜனங்கள், ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்களாலேற்பட்ட ப்ராரப்தகர்மத்தால் திவ்ய சரீரத்தையும் மனுஷ்யசரீரத்தையும் நாரகிசரீரத்தையும் தங்கள் தங்கள் கர்மத்திற்குத் தக்கபடி அடைகிறார்கள். எல்லா கதிகளும் கர்மத்துக்குத் தக்கபடி கிடைக்கின்றன. அந்தந்த ஜாதிக்கு தக்கபடி எதனை மோக்ஷஸாதனமாக சொல்லியிருக்கிறார்களோ, அதனை யனுஷ்டிப்பதால் மோக்ஷமும் கிடைக்கிறது. ஸகல ப்ராணிகளின் ஸ்வரூபமாயும் திசை முதலிய

தோஷங்களற்றவரும், வாக்குக்கெட்டாதவரும், ஆதார மற்றவருமான பகவானிடத்தில் பலனையுத்தேசியாமல் செய்யும் பக்தியோகமானது பலவகையான கதிகளை யுண்டு பண்ணும். அது அவித்யாக்ரந்திகள் நாசமடைந்தால் விருத்தியடையும், அதனால் விஷ்ணு பக்தர்களுடன் மேலான சேர்க்கை உண்டாகும். தேவர்கள் பின்வருமாறு கானஞ்செய்கிறார்கள். பாரத வர்ஷத்தில் மனிதனாகப் பிறந்தவர்கள் என்ன புண்யஞ்செய்தார்கள்? அவர்களிடத்தில் மகாவிஷ்ணு தாமாகவே தயை செய்திருக்கிறார். அவர்களுடைய சரீரம் பகவானுடைய ஸேவைக்கு உபயோகப்படுகிறது. ஆதலால் இந்த வர்ஷத்தில் ஜனிப்பதற்கு நாங்கள் விரும்புகிறோம். அனுஷ்டிக்க முடியாத கிருதுக்களாலும் தபஸினாலும், வ்ரதத்தாலும், தானம் முதலியவைகளாலும் துச்சமான ஸ்வர்க்கப்ராப்தியாலும் என்ன ப்ரயோஜனம்? ஸ்வர்க்கத்தில் இந்திரியங்களை த்ருப்தி செய்வதால் ஸ்ரீமந் நாராயணனுடைய பாதார விந்தத்தை ஒருவரும் ஸ்மரிக்கிறதில்லை. கல்பம் வரையில் ஜீவித்திருப்பவர்களான மேலானவர்களிருக்கும் லோகத்தை அடைந்து மறுபடி ஜன்மத்தை அடைவதைக் காட்டிலும் பாரத வர்ஷத்தில் ஜனிப்பதே மேலானது, அவர்களுக்கு ஆயுஸ்ஸு கொஞ்சமானாலும் அவர்கள் சந்யாஸஞ் செய்துகொண்டு பயமற்ற மஹாவிஷ்ணுவின் பதத்தை அடைகிறார்கள். எந்த இடத்தில் ஸ்ரீ நாராயணனுடைய கதையாகிற அமிருத நதி ஓடவில்லையோ, பகவத் பக்தர்களான ஸாதுக்கள் எவ்விடத்தில் வஸிக்கவில்லையோ, எவ்விடத்தில் யஜ்ஞபதியான பகவானை யாகத்தால் ஆராதிக்கவில்லையோ, அது ப்ரஹ்மலோகமானாலும் அதனை சேவிக்கக் கூடாது. இந்த பாரத வர்ஷத்தில் பிறந்த மனிதர்களில் எவர்கள் ஞானம், கிரியை, த்ரவ்யம் இவைகளால் நிறைந்திருந்து மோக்ஷத்தை அடைவதற்கு

முயற்சிக்கவில்லையோ, அவர்கள் குரங்குகள் போல திரும்பவும் பந்தத்தை அடைகிறார்கள். மேலும் பாரத வர்ஷத்திய ஜனங்கள் மிக்க ச்ரத்தையுடன் விதிப்படி மந்த்ரங்களை உச்சரித்து ஹவிஸ்ஸை ஹோமஞ் செய்கிறார்கள். அதனை இந்திரன் முதலிய அநேக நாமங்களுள்ள பகவான் ஒருவரே க்ரஹிக்கிறார். பகவான் மனிதர்களால் யாசிக்கப்படும் வஸ்துவை கொடுக்கிறாரென்பது உண்மையே. ஆனால் அவர்களுக்கு மறுபடியும் சிலவற்றை யாசிக்க வேண்டுமென்று விருப்ப முண்டாவதால் பரமார்த்தத்தைக் கொடுக்கிறதில்லை. ஒன்றையும் விரும்பாதவர்கட்கு சகல திசையும் நிவர்த்திக்கக் கூடிய தம்முடைய பாதார விந்தத்தையும் கொடுக்கிறார். பகவான் தம்மை பூஜிப்பவர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கிறவராகையால் நாம் செய்த யாகம். அத்யயனம், மற்ற சுபகர்மங்கள் ஆகிய இவைகளின் பலன் ஸ்வர்க்கத்தை கொடுத்தது போக பாக்கியிருந்தால், அதனால் பாரதவர்ஷத்தில் நாங்கள் ஜனிக்க வேண்டும். அந்த ஜன்மத்திலும் பகவானை சேவிக்க வேண்டுமென்ற எண்ணமிருக்க வேண்டும். அந்த பாரத வர்ஷத்தில் பகவான் தம்மைப் பூஜிப்பவர்களுக்கு க்ஷேமத்தைச் செய்கிறார்.

27–38 ஜம்பூத்வீபத்திற்கு உபத்வீபங்கள் எட்டு இருக்கின்றன வென்று சிலர் சொல்லுகிறார்கள். ஸகரமஹாராஜனுடைய புத்ரர்கள் யாகக் குதிரையைத் தேடிச் செல்லும் போது இப்பூமியை வெட்டினார்கள். அதனால், மேல் சொல்லிய உபத்வீபங்களேற்பட்டன. அவைகள் ஸ்வர்ணப்ரஸ்தம், சந்திரசுக்லம், ஆவர்த்தனம், ரமணகம் மந்தேஹாருணம், பாஞ்சஜன்யம், ஸிம்ஹளம், இலங்கையென்று பெயர் பெற்றனவாம். இம்மாதிரி ஜம்பூத்வீபத்திலுள்ள வர்ஷங்களின் பிரிவைச் சொன்னோம்.

அத்தியாயம்–20

ப்லக்ஷத்வீபம்

இனி ப்லக்ஷம் முதலிய த்வீபங்களுடைய அளவு, லக்ஷணம் ஸ்வரூபம், வர்ஷவிபாகம் இவைகளை உள்ளபடி நிரூபிக்கிறோம். ஜம்பூத்வீபமானது தனக்குச் சமமான அகலமுள்ள உப்பு சமுத்ரத்தால் எப்படி சுற்றப்பட்டு வ்யாபரிக்கப்பட்டிருக்கிறதோ, மேருவானது ஜம்பூத்வீபத்தால் எப்படி வ்யாபரிக்கப்பட்டிருக்கிறதோ, அப்படி உப்பு சமுத்திரமும் **தன்னைவிட** இரண்டு பங்கு அகலமுள்ள ப்லக்ஷதவீபத்தால் சுற்றப்பட்டிருக்கிறது. அது அகழிக்கு வெளியில் தோட்டமிருப்பது போல் விளங்குகிறது. அந்த த்வீப வ்ருக்ஷமான ப்லக்ஷ மரமானது, ஜம்பூத்வீபத்திலுள்ள ஜம்பூவிருக்ஷம் போல உயரமானது. த்வீபத்திற்கு விசேஷகாந்தியை உண்டுபண்ணுகிறது தங்கமயமானது; அவ்விடத்தில் ஏழு ஜ்வாலைகளுள்ள அக்னி பகவான் ப்ரகாசிக்கிறார். அந்த த்வீபத்திற்கு அதிபதி ப்ரியவ்ரதருடைய புத்ரராகிய இத்மஜிஹ்வர். அவர் அந்த த்வீபத்தை ஏழு வர்ஷங்களாப் பிரித்துத் தம்முடைய ஏழு புத்ரர்களுக்கும் அவைகளைக் கொடுத்து தாம் உயர்கதியை அடைந்தார். அந்த வர்ஷங்கள் சிவம், யசஸ்யம், சுபத்ரம், சாந்தம், க்ஷேமம், அபயம் அமிருதம் என்ற பெயருள்ளவைகளாம். அந்த வர்ஷங்களில் ஏழு மலைகளும் ஏழு நதிகளுமுண்டு. மணிகூடம், வஜ்ரகூடம், இந்திரசேனம், ஜ்யோதிஷ்மான், தாம்ரவர்ணம், ஹிரண்யக்ரீவம். மேதமாலம் என்ற ஏழுமலைகள் எல்லைகளாக இருக்கின்றன. அருணா, ஸிருமணா, ஆங்கீரஸி, சாவித்திரி, சுப்ரபாதா, ரிதமம்பரா, சத்யம்பரா என்ற ஏழு

நதிகளுமுண்டு. அந்த நதிகளில் ஸ்நானஞ் செய்தால் ரஜோகுணம், தமோகுணம் நீங்கியவர்களான ஹம்ஸர்கள் பதங்கர்கள் ஊர்த்வாயனர்கள் ஸத்யாங்கர்கள் என்ற பேருள்ள நான்கு ஜாதி ஜனங்களிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆயுஸ்ஸு அதிகம். அவர்கள் தேவர்களுக்குச் சமமான பார்வை, அவயங்கள் இவைகளுள்ளவர்கள். மேலுமவர்கள் ஸ்வர்க்கத்திற்கு வழியான வேதஸ்வரூபியான சூர்யபகவானை வேதமந்திரங்களைக் கொண்டு "புராண புருஷராகிய மகாவிஷ்ணுவின் ஸ்வரூபம் எதுவோ ஸத்யம், வ்ரதம், வேதம், மோக்ஷம், மிருத்யு இவைகளுக்கு எவர் காரணமோ அந்த சூர்யனைச் சரணமைடைகிறோம்" என்று உபாஸிக்கிறார்கள். ப்லக்ஷம் முதலிய ஐந்து த்வீபங்களிலுள்ள புருஷர்களுக்கு ஆயுஸ்ஸு, இந்திரியம், தேஜஸ் தேகபலம், மனோபலம் புத்தி பராக்ரமம் இவைகள் இயற்கையிலேயே விருத்தியடைகிறது. ப்லக்ஷத்வீபமானது தனக்குச்சமமான அகலமுள்ள கருப்பஞ்சாறு ஸமுத்ரத்தால் சுற்றப்பட்டிருக்கிறது. அதுபோலவே சால்மலமென்ற த்வீபமும் இரண்டு பங்கு விஸ்தாரமுள்ளது. அது தனக்குச் சமமான அகலமுள்ள ஸுராசமுத்ரத்தால் சுற்றப்பட்டிருக்கிறது. அந்த த்வீபத்திலிருக்கும் சால்மலி என்ற விருக்ஷமானது ப்லக்ஷத்திற்குச் சமமான உயரமுள்ளது. அந்த மரத்தின் மூலத்தில் கருடனுடைய ஆலயமிருக்கின்றது, அந்த கருடன் தம்முடைய அவயவங்களாகிய சந்தஸ்ஸுகளால் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ஸ்தோத்ரஞ் செய்பவர். அந்த சால்மலி மரமானது த்வீபத்திற்கு அலங்காரமாக இருக்கிறது. ப்ரியவ்ரதருடைய புத்ரராகிய யஜ்ஞபாஹு என்பவர் அந்தத்வீபத்திற்கு அதிபதி, அவர் அந்த த்வீபத்தை ஏழு வர்ஷங்களாகப் பிரித்து தமது ஏழு

புத்ரர்களுக்கு கொடுத்தார்; அந்த அந்த வர்ஷங்கள் அவரவர்களுடைய பெயருள்ளதாக வழங்கி வந்தன. மேலும் அந்த வர்ஷங்கள் சுரோசனம், ஸௌமனஸ்யம், ரமணகம் தேவராஹம், பாரிபக்ஹம், ஆப்யாயனம் அபிஜ்ஞாதம் என்று பெயருள்ளவைகளாம். அவவர் ஷங்களில் ஸ்வரஸம். சதச்ருங்கம் வாம தேவம், குமுதம் முகுந்தம் புஷ்பவர்ஷம் சதச்ருதி என்ற ஏழு மலைகளும் அனுமதி ஸிநீவாலீ, ஸரஸ்வதீ, குஹூ: ரஜ்நீ, நந்தா, ராஜா என்ற ஏழு நதிகளுமிருக்கின்றன. அந்த வர்ஷத்திலிருக்கும் ச்ருததர வித்யாதர வசுந்தர. இத்மதா என்ற பெயருள்ள நான்கு ஜாதியார்கள் வேதஸ்வரூபியான ஸோமபகவானை "சுக்லபக்ஷத்தில் தேவர்களுக்கும் கிருஷ்ண பஷத்தில் பிதிருக்களுக்கும் தம்முடைய கிரணங்களால் அன்னத்தைக் கொடுக்கும் ஸோமன் நம்மெல்லோருக்கும் ராஜாவாக விருக்கட்டும்" என்று ஸ்தோத்திரஞ் செய்கிறார்கள்.

11–16. சுரா ஸமுத்திரத்திற்கு வெளியில் அதை விட இரண்டு மடங்கு விஸ்தாரமுள்ள குசத்வீபமிருக்கிறது. அதற்குச் சமமான அகலமுள்ள நெய் சமுத்ரம் அதைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. அந்த த்வீபத்தில் தேவனால் ஏற்படுத்தப்பட்ட குசஸ்தம்பமானது (தர்பம்) புஷ்பம் அழகான இலை இவைகள் அந்த த்வீபத்தில் பத்து திக்குகளையும் பிரகாசிக்க செய்கிறது. ப்ரியவ்ரதருடைய புத்திரராகிய ஹிரண்யரேதஸ்ஸென்பவர் அந்த த்வீபத்திற்கதிபதி. அவர் அந்த த்வீபத்தை ஏழாகப் பிரித்து வசுதானன், த்ருடருசி, நாபி, குப்தர், ஸத்யவ்ரதர், விப்ரர், வாமதேவர் என்ற பெயருள்ள தம்முடைய புத்ரர்களுக்குக் கொடுத்து தாம் தபஸ் செய்தார்' அந்த வர்ஷங்களில் பப்ரு, சதுஸ்ருங்கம்,

கபிலம், சித்ரகூடம், தேவாநீகம் ஊர்த்தரோமா, த்ரவிணம் என்ற ஏழு மலைகளும், ரஸகுல்யா மதுகுல்யா, ச்ருவிந்தா, தேவகர்பா, கிருதச்யுதா, மந்தரமாலா என்ற ஏழு நதிகளுமிருக்கின்றன, குசல, கோவித, அபியுக்த, குலக என்ற பெயருள்ள அவ்விடத்திலுள்ள நான்கு ஜாதியார்கள் அந்த நதிகளுடைய ஜலத்தை கொண்டு ஜாதவேதஸ்வரூபியான பகவானைப் பூஜிக்கிறார்கள். ஹே அக்னியே, நீர் பரப்ரஹ்மஸ்வரூபியான ஸ்ரீ மஹாவிஷ்ணுவிற்கு ஹவிஸ்ஸை வகிக்கிறவராயிருக் கிறீர், பரமபுருஷனுடைய அங்கங்களான தேவதைகளை உத்தேசித்துக் கொடுக்கப்படும் ஹவிஸ்ஸை அக்நியான மகாபுருஷனிடத்தில் சமர்ப்பியும்" என்றும் ஸ்துதிக் கிறார்கள்.

17–22. அதனைவிட இரண்டு பங்கு விஸ்தாரமுள்ள க்ரௌஞ்சத்வீபமானது அதற்கு வெளியிலிருக்கிறது. குசத்வீபத்தை நெய் சமுத்ரம் சுற்றிக்கொண்டிருப்பது போல அதற்கு சமமான விஸ்தாரமுள்ள தயிர் சமுத்திரம் க்ரௌஞ்சத்வீபத்தை சுற்றிக்கொண்டிருக் கிறது. அந்த த்வீபத்தில் க்ரௌஞ்சமென்ற மலை யிருப்பதால் அந்த பெயர் வந்தது. அந்த மலையானது முன்னொருகால் சுப்ரஹ்மண்யருடைய சக்தி என்ற ஆயுதத்தாலடிக்கப்பட்டது. ஆனாலும் வருணன் தபிராகிய ஜலத்தால் அதனை நனைத்துக் காப்பாற்றிய படியால் பயமற்றதாக இருக்கிறது. அந்த த்வீபத் திற்கும் ப்ரியவ்ரதருடைய புத்ரராகிய கிருதபிருஷ்டர் என்பவர் அதிபதி, அவர் அந்த த்வீபத்தை ஏழாகப் பிரித்துத் தம்முடைய ஏழு பிள்ளைகளுக்கும் கொடுத்து மிகுந்த க்ஷேமத்தைக் கொடுக்கக்கடிய பகவானுடைய பாதாரவிந்தத்தை யடைந்தார். கிருதபிருஷ்டருடைய

புத்ரர்கள் ஆமோதர் மதுவஹர், மேகப்ருஷ்டர், சுதாமர், ரிஷிஜ்யர், லோஹிதார்ணர், வநஸ்பதி என்ற பெயருள்ளவர்கள். அவரவருடைய வர்ஷங்களுக்கும் அதே பெயர்தான். சுக்லம், வர்தமானம், போஜனம், உபர்ஹனம், ஆனந்தம், நந்தனம், சர்வதோபத்ரம் என்று ஏழு மலைகளும் அபயா, அமிருதௌகா, ஆர்யகா, தீர்த்தவதீ, த்ருத்பிதிரூபா, பவித்ரவதி, சுக்லா என்ற ஏழு நதிகளும் அவ்வர்ஷங்களிலிருக்கின்றன. அவ்விடத்திலுள்ள குரு, ருஷப, த்ரவிணக, தேவக என்று பெயருள்ள நான்கு ஜாதியார்கள். "ஜலங்களே நீங்கள் மகாபுருஷனிடத்திலிருந்து சாமார்த்தியத்தை அடைந்தவர்கள்; பூமி, புவர்லோகம், சுவர்லோகம் ஆகிய இவைகளைப் பரிசுத்தப்படுத்துகின்றீர்கள்; பாபங்களைப் போக்கக்கூடிய அவைகள் ஸ்நாநம் பண்ணும் எங்களுடைய சரீரத்தைப் பரிசுத்தப்படுத்தட்டும்" என்று ஜலமயமான தேவனை ஜலத்தால் நிறைந்த அஞ்சலியால் பூஜிக்கிறார்கள்.

23–28. தயிர் சமுத்ரத்திற்கு வெளியில் சாகத்வீபம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது முப்பத்திரண்டு லக்ஷம் யோஜனை தூரம் அகலமுள்ளது. அதற்குச் சமமான அகலமுள்ள பால் சமுத்திரத்தால் சுற்றப்பட்டிருக்கிறது. அந்தத்வீபத்தில் சாகமென்ற விருக்ஷமிருப்பதால் அதற்குச் சாகமென்று பெயருண்டாயிற்று. எந்த மரத்தினுடைய இலைகள் உட்புறத்தில் கெட்டியாயும் வெளியில் மிருதுவாயுமிருக்கின்றனவோ அந்த மரமே சாகமெனப்படுகிறது. அதனுடைய நல்வாசனையானது அந்த த்வீபம் முழுவதையும் வாசிக்கச் செய்கிறது. ப்ரியவ்ரதருடைய புத்ரராகிய மேதாதிதி என்பவர் அதற்கு அதிபதி. அவர் அந்த த்வீபத்தை ஏழு வர்ஷங்களாகப் பிரித்து புரோஜவ.

மனோஜவ, வேமான, தூம்ராநீக, சித்ரரத, பஹுரூப விச்வதார என்ற பெயருள்ள தம்முடைய புத்ரர்களுக்கு அவைகளை கொடுத்துத்தாம் பகவானாகிய அனந்தனிடத்தில் சித்தத்தைச் செலுத்தித் தபோவனஞ் சென்றார். அவர்களுடைய பெயரே அவ்வர்ஷங்களுக்கும் பெயராம். ஈசாநம், உருச்ருங்கம், பலபத்ரம், சதகேஸரம், ஸஹஸ்ரஸ்ரோதஸ், தேவ பாலம் மஹாநஸமென்ற ஏழு மலைகளும், அனகா, ஆயுர்தா, உபயஸிருஷ்டி, அபராஜிதா, பஞ்சபரி, ஸஹஸ்ரஸ்ருதி, நிஜத்ருதி என்ற ஏழு நதிகளும் இருக்கின்றன. ரித்வ்ரத ஸத்யவ்ரத, தானவ்ரத, சுவ்ரத என்ற பெயருள்ள நான்கு ஜாதியார்கள் அவ்விடத்தில் வசிக்கிறார்கள். அவர்கள், ப்ராணாயாமத்தால் ரஜோகுணம், தமோகுணம் இவைகளை நிவர்த்தித்துக் கொண்டு வாயுஸ்வரூபியான பகவானை உபாசிக்கிறார்கள். "எந்த பகவான் சகல ப்ராணி களுடைய உள்ளே ப்ரவேசித்து ப்ராணன் முதலிய வாயுவின் வியாபாரங்களால் லோகத்தைப் போஷிக் கிறாரோ இந்த ஜகத்தானது எவருக்கு ஸ்வாதீனமாக இருக்கிறதோ அந்தர்யாமியாகிய அந்த பகவான் நம்மை ரக்ஷிக்கட்டும்" என்று ஸ்தோத்ரஞ் செய்கிறார்கள்.

29–33. பால் சமுத்திரத்திற்கு வெளியில் அதனை விட இரண்டு பங்கு விஸ்தாரமுள்ள புஷ்கர த்வீபமிருக்கிறது. அதற்குச் சமமான விஸ்தாரமுள்ள சுத்தோதக சமுத்ரம் அதனைச் சுற்றிக்கொண்டிருக்கிறது. அந்த த்வீபத்தில் பெரிதான புஷ்கரம் (தாமரை மலர்) இருக்கிறது, அக்னிஜ்வாலைபோல் ப்ரகாசிக்கும் அநேக இதழ்கள் அதிலிருக்கின்றன, அது ப்ரஹ்மதேவருக்கு ஆஸனமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது, அந்த த்வீபத்தின் மத்தியில் மானஸோத்தரம் என்ற ஒரு மலையிருக்கிறது. அது உள்ளிலும் வெளியிலுமிருக்கும் வர்ஷங்களுக்கு

எல்லையாக லக்ஷயோஜனை தூரம் அகல உயரமு ள்ளதாக இருக்கிறது. அந்த மலையில் நான்கு திக்கிலும் இந்திரன் முதலிய லோகபாலர்களுடைய நான்கு பட்டணங்களிருக்கின்றன. அந்த மலையின் மேல் மேருவைச் சுற்றிவரும் ஸூர்யரதத்தின் ஸம்வத்ஸர ரூபமான சக்ரமானது தேவதைகளுக்கு இரவும் பகலு மாகிய இரண்டு அயனங்களுடன் சக்ரம் போல் சுற்றுகிறது. ப்ரியவ்ரதருடைய புத்ரராகிய வீதிஹோத்ரர் என்பவர் அந்தத்வீபத்திற்கு அதிபதி. அவர் தன்னுடைய புத்ரர்களான ரமணகன், தாதகன் என்பவர்களை அவ்வர்ஷங்களுக்கு அதிபதியாய்ச் செய்து தம் முன்னோர்கள் போல் பகவதாராதனம் செய்து கொண்டி ருந்தார். அந்த வர்ஷத்திலுள்ளவர்கள் ப்ரஹ்மதேவ ஸ்வரூபியாக அவ்விடத்தில் ப்ரகாசிக்கும் பகவானை ப்ரஹ்ம ஸாலோக்யத்திற்கு ஸாதகமான கர்மத்தால் பூஜிக்கிறார்கள். எது கர்மபலத்தை கொடுக்கக் கூடியதோ எதனால் ப்ரஹ்மம் ப்ரகாசிக்கிறதோ அந்த இரண்டு ஸ்வரூபமும் ஒன்றானாலும் வெவ்வேறாக ஜனங்கள் பூஜிக்கிறார்கள். உண்மையில் ஒருவராக இருக்கும் பகவானுக்கு நமஸ்காரம்.

34–45. சுத்தோதக சமுத்ரத்திற்கு வெளியில் சூர்ய ப்ரகாசமுள்ள இடத்திற்கும் சூர்ய ப்ரகாசமற்ற இடத்திற்கும் மத்தியில் லோகாலோகமென்ற மலை யிருக்கிறது (சுத்தோதக சமுத்ரத்திற்கு வெளியில் கோடியேஐம்பத்தேழரை லக்ஷம் தூரமுள்ள பூமியி ருக்கிறது. அதில் ஜனங்களும் வஸிக்கிறார்கள். அதன் பிறகு எட்டு கோடியே முப்பதொன்பது யோஜனை தூரம் தங்கமயமான பூமியிருக்கிறது, அதற்கப்பால் லோகாலோக பர்வதமிருக்கிறது. மேருவிற்கும் லோகா

லோகத்திற்கும் இடையில் பன்னிரண்டரை கோடி யோஜனை தூரம் இருக்கிறது) அந்தத் தங்கபூமியானது கண்ணாடி போலிருக்கிறது; அந்தத் பூமியில் போடப் பட்ட பதார்த்தமானது திரும்பவும் கண்ணுக்குக்குப் புலப்படுகிறதில்லை. ஆனதால், ஒருவகையான ப்ராணியும் அவ்விடத்தில் வஸிக்கிறதில்லை; லோகா லோகமென்கிற பெயரானது தேஜஸ்ஸுள்ள தேசம்; ப்ராகாசமற்ற தேசம் இவைகளுக்கு நடுவிலிருப்பதால் ஏற்பட்டது. அந்த மலையானது முவ்வுலகத்தின் கோடியின் நாலு பக்கமும் ஈச்வரனால் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அந்த மலைக்கு உட்பட்ட முவ்வுலகத் தையும் சூர்யன் முதல் த்ருவன் வரையிலுள்ள தேஜஸ் பதார்த்தங்களுடைய கிரணங்கள் ப்ரகாசிக்கச் செய் கிறான். அதன் பின்னிருக்கும் ஸ்தலத்தை ப்ரகாசிக்கச் செய்ய அவைகளால் முடியவில்லை; அவ்வளவு உயரமு மகலமுமுள்ளது அந்த மலை. லோகத்தினுடைய அளவு, லக்ஷணம், ஸ்வரூபம் ஆகிய இவைகள் மேற்காட்டியபடி கவிகளால் சொல்லப்பட்டிருக்கிறது. ஐம்பது கோடி யோஜனை தூரம் விஸ்தாரமுள்ள பூகோளத்தில் நாலிலொரு பாகம் லோகோலோக பர்வதம் (பன்னி ரண்டரை கோடி யோஜனை தூரமுள்ளது. இதுவும் மேருவின் ஒரு பாகமாம்) அதன் மேற்புறத்தில் நான்கு திக்குகளிலும் ரிஷபம், புஷ்கரசூடம், வாமனம், அபராஜிதமென்ற நான்கு திக்கஜங்களை ஸகல ஜகத்திற்கும் குருவாகிய ப்ரஹ்மதேவர் ஏற்படுத்தியி ருக்கிறார். அவைகள் எல்லா லோகங்களுடைய ஸ்திதிக்குக் காரணங்களாக இருக்கின்றன. மேலும் அந்த மலையில் மகாபுருஷனும், மகாவிபூதிகளுக்கு அதிபதியுமான ஸ்ரீ நாராயணன் தம்முடைய விபூதிகளான மஹேந்திரன் முதலிய லோகபாலர்களுக்கு பலவகையான

சாமர்த்யத்தை வ்ருத்தி செய்வதற்காக தம்முடைய சுத்த சத்வம், தர்மம், ஞானம், மிகுந்த வைராக்யம், ஐச்வர்யம், அஷ்டமாசித்தி இவைகளுடனும், விக்ஷ்வக்ஸேனர் முதலிய பார்ஷதர்களுடனும் ஸகல லோகத்திற்கும் க்ஷேமத்தை செய்வதற்காக எங்கும் வசிக்கிறார். இந்த பகவான் தம்முடைய மாயையால் செய்யப்பட்ட பலவித லோகங்களைக் காப்பதற்காகக் கல்பம் வரையில் இப்படி இருக்கிறார். லோகாலோக பர்வதத்திற்கு முந்திய விஸ்தாரத்தைச் சொல்லியதால் அதற்கு வெளியிலிருக்கும் பூமியின் அளவும் சொல்லப்பட்டதாயிற்று. அதற்கு வெளியில் அஷ்டமகாஸித்தியைக் கொண்டு யோகிகள் செல்லக் கூடிய இடங்களென்று சொல்கிறார்கள். த்யுலோகத்திற்கும் பூமிக்கும் எது மத்தியோ, அது அண்டத்திற்கும் இடையில் இருபத்தைந்து கோடி யோஜனை தூரம் இருக்கிறது. ஹிரண்மயமான அண்டத்திலுண்டானவன் ஹிரண்யகர்ப்பனென்று பெயரடைந்தது போல இந்த சூர்யன் அசேதனமாகிய அண்டத்தில் வஸித்ததால் மார்த்தாண்டனென்று பெயர்டைந்தார். மேலும் திக்குகள், ஆகாசம், அந்தரிக்ஷம், பூமிமற்ற பேதம் ஸ்வர்க்கம், மோக்ஷம் இவைகளைக் கொடுக்கும் ஸ்தலம், அதலம் முதலிய கீழ்லோகங்கள் ஆகிய இவைகளெல்லாம் சூர்யனாலேயே பிரிக்கப்படுகின்றன. மேலும் தேவதைகள், திர்யக்ஜாதிகள் மனிதர்கள், மலைப்பாம்புகள், பறவைகள், கொடிகள் முதலிய ஸகல ப்ராணிகளுக்கும் சூர்யனே ஆத்மாவாகவும், கண்ணாகவும் அதிபதியாகவுமிருக்கிறார்.

அத்தியாயம்–21

த்யுமண்டலம்

பூமண்டலத்தின் ஸ்வரூபம் இவ்வளவே. இதனாலேயே த்யுலோகத்தின் அளவைச் சொல்லுகிறார்கள். மொச்சக் கொட்டை முதலிய விதையினுடைய இரண்டு இடிகளில் ஒன்றினுடைய அளவினால் மற்றொன்றின் அளவு சொல்லப்படுகிறது போல அந்தரிக்ஷமானது அதன் மத்தியில் சேர்ந்திருக்கிறது. அதன் மத்தியிலிருக்கும் சூர்யபகவான் வெயிலால் மூன்று லோகத்தையும் தபிக்கச் செய்து ப்ராகாசிக்கச் செய்கிறார். அந்த சூர்யன் உத்தராயணம், தக்ஷிணாயனம், வைஷுவதம் என்ற பெயர்களுள்ள மந்தகதியாலும், சீக்ரகதியாலும், சமகதியாலும், ஆரோஹணம், அவரோஹணம் இவைகளால் ஒவ்வொரு ஸ்தானங்களிலும் சஞ்சரிக்கிறார். அவர் மகரம் முதலிய ராசிகளில் சஞ்சரிக்கும் சிலவேளை பகல் குறைந்தும், சிலவேளை அதிகரித்தும், சிலசமயம் இரவு குறைந்தும்,அதிகரித்தும், இரண்டும் சமமாகவும் இருக்கும்படிச் செய்கிறார். மேஷராசியிலும், துலாராசியிலும் சூர்யன் சஞ்சரிக்கும் பொழுது இரவு பகலும் சமமாக இருக்கும். விருஷபம் முதல் ஐந்து ராசிகளில் சஞ்சரிக்கும் பொழுது பகல்களே விருத்தி அடைகின்றன. ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு நாழிகை இரவில் குறையும். விருச்சிகம் முதலிய ஐந்து ராசிகளில் சூர்யன் சஞ்சரிக்கும் போது பகல் குறைந்தும் இரவு அதிகரித்துமிருக்கும், தக்ஷிணாயனம் வரையில் பகல்களும் உத்தராயணம் வரையில் இரவுகளும் விருத்தியடைகின்றன. இம்மாதிரி ஒன்பது கோடியே ஐம்பத்தொரு லக்ஷம் யோஜனை , தூரம்

மானஸோத்தரபர்வதத்தின் ப்ரவிருத்தியென்று சொல்லு கிறார்கள். அந்த மானஸோத்திர பர்வதத்தில் மேருவிற்கு கிழக்கில் தேவதானி என்ற இந்திரனுடைய பட்டணமும், தெற்கில் ஸம்யமனி என்ற யமனுடைய பட்டணமும் மேற்கில் நிம்லோசனி என்ற வருண னுடைய பட்டணமும், வடக்கில் விபராவரி என்ற ஸோமனுடைய பட்டணமும் இருப்பதாகவும் சொல்லு கிறார்கள். அந்தப் பட்டணங்களில் ப்ராணிகளுடைய ப்ரவிர்த்தி நிவிர்த்திக்கு நிமித்தங்களான உதயம், மத்யாஹ்னம், நிசீதம் என்ற காலவிசேஷங்களை உண்டு பண்ணிக்கொண்டு சூர்யன் தாம் தக்ஷிணமாக சஞ்சரித்தாலும் மேருவை ஸவ்யமாகச் சுற்றுகிறார். பகலுடைய மத்ய காலத்தில் மாத்திரம் அவ்விடத்திலி ருப்பவர்களுக்குத் தாபம் உண்டாகிறது. எவ்விடத்தி லுதயமாகிறாரோ, அதற்கு நேரான திக்கில் அவர்களுக்கு சூர்யன் அஸ்தமனமடைகிறார். எவ்விடத்திலிருந்து வியாவையை உண்டுபண்ணுகிறாரோ, அதற்கு எதிரான திக்கில் நிசீதத்தை (பாதிராத்ரி) உண்டுபண்ணுகிறார். அப்பொழுது ஜனங்களால் அவரைப் பார்க்க முடியாது. சூர்யன் இந்திரனுடைய பட்டணத்திலிருந்து பதினைந்து நாழிகைகளில் யமனுடைய பட்டணம் வருகிறார். இடையில் இரண்டு கோடி எழுபத்தேழு லக்ஷத்து எழுபத்தையாயிரம் யோஜனை தூரமிருக்கிறது. இதுபோலவே அங்கிருந்து வருணனுடைய பட்டணத் திற்கும் அங்கிருந்து ஸோமனுடைய பட்டணத்திற்கும் அங்கிருந்து இந்திரனுடைய பட்டணத்திற்கும் செல்லுகிறார். அப்படியே சந்திரன் முதலிய கிரஹங் களும், நக்ஷத்திரங்களுடன் ஜ்யோதிக்சக்ரத்தில் சேர்ந்து அஸ்தமனத்தை அடைகின்றன. இம்மாதிரி ஒரு முகூர்த்தத்திற்கு முப்பத்தினாலு லக்ஷத்து நூற்றெட்டு

யோஜனை தூரம் சூர்யனுடைய ரதமானது செல்லுகிறது. அது வேத ஸ்வரூபமாயுள்ளது; அதற்குச் சக்கரம் ஒன்றே; அதற்கு பன்னிரண்டு மாஸங்களும் ஆதாரங்கள்! ஆறு ருதுக்களும் நேமிகள்; மூன்று சாதுர்மாஸ்யங்கள் நாபி; ஆகையால் அது சம்வத்ஸர ஸ்வரூபம்; அந்த ரதத்தின் அச்சானது மேருவின் சிகரத்திலும் மான ஸோத்தர பர்வதத்தில் சுற்றுகிறது. அந்த அச்சில் கோர்க்கப்பட்ட இரண்டாவது அச்சானது தைலயந் தரத்தின் அச்சு போல த்ருவத்தில் மாட்டப்பட்டி ருக்கிறது. ஆனால் அது பெரிய அச்சின் நாலிலொரு பாகமுள்ளது. ரதத்தில் உட்காருகிற இடம் முப்பத்தாறு லக்ஷம் யோஜனை தூரம் நீளமுள்ளது; எட்டரை யோஜனை தூரம் அகலமுள்ளது; அந்த ரதத்தின் நுகத்தடி அவ்வளவு நீளமுள்ளது. அதில் அருணனால் கட்டப்பட்ட காயத்ரி முதலிய சந்தஸ்ஸின் பெயருள்ள ஏழு குதிரைகள் ரதத்தை இழுத்து வருகின்றன. அந்த அருணன் சூர்யனுக்கு முன்பாகத்தில் மேற்கு முகமாக ஸாரத்யஞ் செய்து கொண்டிருக்கிறான். மேலும் வால்கில்யர்கள் என்று பெயருள்ளவர்களும், கட்டை விரல் அளவுள்ளவர்களுமான அறுபதினாயிரம் மஹர் ஷிகள் சூர்யனுக்கு முந்தி நல்வார்த்தையைச் சொல் வதற்காக ஏற்படுத்தப்பட்டு சூரியனை ஸ்துதிக் கிறார்கள். அப்படியே மற்ற மஹர்ஷிகளும் கந்தர்வர் களும், அப்ஸரஸுகளும், நாகங்களும், யாது தானர்களும் தேவர்களும் தனித்தனியே சூர்யனை உபாஸிக் கிறார்கள். மேலும் ஒவ்வொரு மாஸத்திலும் ஆத்மா வாகிய சூர்யனைத் தனித்தனியே பதினாலு கண்டங் களும் இரட்டையாக ஏழு கணங்களுமான ஸ்தோ மங்கள் உபாஸிக்கின்றன. பூமண்டலம் ஒன்பது கோடியே ஐம்பத்தோரு லக்ஷம் யோஜனை ப்ரவிர்த்தி

யுள்ளது. அதனை சூர்யன் ஒரு க்ஷணத்திற்கு இரண்டாயிரம் யோஜனை தூரமும் இரு நூறு கவ்யூதி தூரமுமாகக் கடந்து செல்லுகிறார்.

(சுறிப்பு)

ஸ்தானங்களில - எல்லா கிருஹங்களுக்கும் ஜரநகவலென்ற மத்யஸ்தானமென்றும், ஜராவதமென்ற வடக்கு ஸ்தானமென்றும், வைச்வாநரமென்ற தெற்கிலுள்ள ஸ்தானம் ஆகிய மூன்று ஸ்தானங்களுண்டு. ஒவ்வொரு ஆத்திரங்களும் அச்வினி முதலிய மூன்று நக்ஷத்ரங்களால் நாக வீதி, கஜவீதி யென்ற மூன்று வீதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அச்வினி, பரணி, கிருத்திகை ஆகிய மூன்றும், நாகவீதியென்று சொல்லப்பட்டது. ரோஹிணீ, மிருகசீர்ஷம், ஆர்த்ரை ஆகிய மூன்றும் கஜவீதியென்றும், புனர்வஸு, புஷ்யம், ஆயில்யம் ஆகிய மூன்றும் ஜராவத வீதியென்றும் சொல்லப்பட்டது. இந்த மூன்று வீதிகளும் உத்தர மார்க்கம், மகம், பூரம், உத்திரம் இவைகள் ஆர்ஷபீ வீதி. ஹஸ்தம், சித்திரை, ஆவாதீ இவைகள் கோவீதி. ஜ்யேஷ்டை, விசாகம் , அநுராதம் இவைகள் ஜாத்கவீ வீதி இம்மூன்று வீதிகளும் மத்யமார்க்கம். மூலம், பூராடம், உத்திராடம் இவைகள் அஜவீதி; ச்ரவணம், கனிஷ்டை, சதயம் இவைகள் மிருகவீதி, பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி இவைகள் வைச்வானரவீதி, இவைகள் தக்ஷிணமார்க்கம், உத்தராயணத்தில் துருவத்தில் சேர்க்கப்பட்ட வாயுரூபமான இரண்டு கடிவாளங்களை இழுத்துப் பிடிப்பதால் ரதத்திற்கு ஆரோஹணமும் மந்தகதியும், அதனால் பகல் நாழிகை விருத்தியும், ராத்ரியின் குறைவும் உண்டாகிறது.

வைஷுவதத்தில் பாசம் சமமாக விருப்பதால் மத்ய மண்டல ப்ரவேசமும், சாம்யகதியும் இரவும், பகலும் சமமாக விருப்பதும் உண்டாகிறது. விருஷபம் முதல் வைகாசி, ஆனி இந்த இரு மாசங்களில்தான் பகல்கள் விருத்தியடைகின்றன. ஆடி மாசம் முதல் பகல்கள் குறைகின்றன. ஆனாலும் ராத்ரியை விட பகல் விருத்தியாகின்றன என்று தாத்பர்யம். எவ்விடத்திலுதய மாகிறாரோ மேருவின் தெற்கிலிருப்பவர்களுக்கு கிழக்கு முதல் திக்குகள் காணப்படுகின்றன. மேற்கிலிருப்பவர் களுக்கு தெற்கு கிழக்காகும். வடக்கிலிருப்பவர்களுக்கு மேற்கு கிழக்காகும். கிழக்கிலிருப்பவர்களுக்கு வடக்கு கிழக்காகும். தக்ஷிணமாக நக்ஷத்திரங்களுக்கு எதிரான கதியால் மேருவை வாமமாகச் செய்தும், ப்ரதக்ஷிணா வர்த்தமான ப்ரவஹ வாயுவினால் சுற்றும் ஜ்யோதிச் சக்கரத்தால் ஒவ்வொரு நாளும் தக்ஷிணமாக ஸஞ்சரிக் கிறார். சக்கரத்தின் கதிவசத்தால் மிகுந்த தூரம் சென்ற பொழுது பூமியிலிருப்பவன் போல் தோன்றும் சூர்யனை பார்ப்பது உதயமென்றும், ஆகாசத்தில் ஏறினவன் போலத் தோன்றும் சூர்யனைப் பார்ப்பது மத்யாஹ்னம் என்றும் பூமிக்குள் பிரவேசித் தவன் போல் சூர்யன் கண்ணுக்குப் புலப்படா திருப்பதை அஸ்தமனமென்றும் சொல்லுகிறார்கள். எவன் எவ்விடத்திலிருந்து சூர்யனை உதயமாகிறவனாகப் பார்க்கிறானோ அவனுக்கு அது கிழக்கு திக்காகிறது.

அத்தியாயம்–22

சந்திரன் முதலியவைகளின் மண்டலம்

பரீக்ஷித்து மகாராஜன் சுகரை நோக்கி "ஓ பகவன் சூர்யன் மேருவையும். த்ருவனையும் ப்ரதக்ஷணமாகச் சுற்றுகிறாரென்றும், ராசிகளுக்கு எதிர் முகமாகச் செல்லுகிறாரென்றும் சொன்னீரல்லவா? அது விருத்தமாகத் தோன்றுகிறதே, அதை நான் எப்படித் தெரிந்து கொள்ளுகிறது" என்று கேட்டார் இதனைக் கேட்ட சுகர் பின்வருமாறு சொல்லலானார் "குயவனுடைய் சக்ரம் சுற்றும்போது அதிலிருக்கும் எறும்பு முதலிய ஜந்துக்கள் அதற்கு விரோதமாகச் செல்லுகிறதல்லவா? அப்படியே இன்னும் பலவிதமாகப் பலவிடங்களில் காணப்படுகின்றன. இம்மாதிரியே நக்ஷத்திரம். ராசி இவைகளுடன் கூடியதும். பருவத்தையும், மேருவையும் ப்ரதக்ஷணமாகச் சுற்றுவதுமான காலசக்கரத்தில் இருக்கும் சூர்யன் முதலிய கிருஹங்களுடைய கதியானது வேறாகவேயிருக்கிறது அப்படியே நக்ஷத்திரங்களிலும், மற்ற ராசிகளிலும் காணப்படுகிறது ஆதிபுருஷனாகிய ஸ்ரீமந் நாராயணனே லோகங்களுடைய க்ஷேமத்திற்காக வேதரூபியான தம்முடைய ஆத்மாவை கர்மங்களுடைய சுத்திக்காகப் பனிரெண்டுவகையாகப் பிரித்து வஸந்தம் முதலிய ஆறு ருதுக்களிலும் கர்ம போகத்திற்குத் தக்கபடி சீதோஷ்ணங்களை உண்டு. பண்ணுகிறார். அப்போர்ப்பட்ட மகாபுருஷ ஸ்வரூபியாகிய இந்த சூர்யனை புருஷர்கள் வேதவித்தையாலும் வர்ணாச்ரமாசாரங்களாலும் யோகம், தியானம் இவைகளாலும் பூஜித்து சீக்ரத்தில் க்ஷேமத்தை

அடைகிறார்கள், லோகங்களுக்கு ஆத்மாவாகிய இந்த சூர்யனதயுலோகத்திற்கும் பூமிக்கும் நடுவிலிருக்கும் ஆகாசத்தில் ப்ரகாசிக்கும் கால சக்ரத்தை அடைந்து ராசியென்று பெயருள்ள பன்னிரண்டு மாஸங்களை அனுபவிக்கிறார். சம்வத்ஸரத்தினுடைய ஆறிலொரு பாகத்தை எவ்வளவு காலத்தால் சூர்யன் அனுபவிக்கிறாரோ. அதை ருதுவென்றும், எவ்வளவு காலத்தால் சம்வத்ஸரத்தின் பாதியை அனுபவித்து ஆகாச மார்க்கத்தில் சஞ்சரிக்கிறாரோ. அதை அயனமென்றுஞ் சொல்லுகிறார்கள். ஆகாச மண்டலம் முழுவதையும் த்யுமண்டலத்தையும். பூமண்டலத்தையும் எவ்வளவு காலத்தால் அனுபவிக்கிறாரோ. அந்த காலத்திற்கு சம்வத்ஸரம், பரவத்ஸரம், இளாவத்ஸரம், அநுவத்ஸரம், இத்வத்ஸரம் என்று சூர்யனுடைய மந்த கதியாலும், சீக்கிரப கதியாலும், சமகதியாலும் சொல்லுகிறார்கள். இதுபோலவே சூர்ய மண்டலத்திற்கு லக்ஷயோஜனை தூரத்திற்குமேல் சந்திரனானவர் சூர்யகதியாலேற்படும் சம்வத்ஸரத்தை இரண்டு பக்ஷங்களாலும், மாஸத்தை இரண்டேகால் நக்ஷத்திரங்களாலும் பக்ஷபுத்தினத்தாலும் சூர்யனுக்கு முன்பாகச் சீக்கிரமாகச் சென்று அனுபவிக்கிறார். மேலுமவர் விருத்தியடைகின்றவைகளும்; குறைகின்றவைகளுமான கலைகளால், சுக்லபக்ஷம், கிருஷ்ணபக்ஷம் ஆகிய இவைகளாலும் பிதிருக்களுக்கு அஹோராத்ரத்தை யுண்டுபண்ணுகிறார். சகல பிராணிகளுக்கும் பிராணனாகவும் இருக்கிறார்; எல்லாரையும் ஜீவிக்கச் செய்வதால் ஜீவனாயுமிருக்கிறார். அவர் ஒவ்வொரு நக்ஷத்திரத்தையும் முப்பது முகூர்த்தங்களால் அனுபவிக்கிறார் பதினாறு கலைகளுள்ளவரும், மனோமயரும், அமிருதமயரும், அன்னமயருமாகிய சந்திரன் தேவர்கள். பிதிருக்கள்,

மனிதர்கள், பூதங்கள் பசுக்கள், பறவைகள், மலைப் பாம்புகள், கொடிகள் ஆகிய இவைகளைப் போஷிப் பதனால் சர்வஸ்வரூபியென்று சொல்லப்படுகிறார். அதற்கு மேல் லட்ச யோஜனை தூரத்தில் மேருவிற்கு தக்ஷிணமாகக் காலசக்கரத்தில் நக்ஷத்திரங்கள் சேர்க்கப் பட்டிருக்கின்றன. மேலுமவைகள் அபிஜித் என்ற நக்ஷத்திரத்துடன் இருபத்தெட்டென்று கணக்கிடப் பட்டிருக்கின்றன.

11. அதற்குமேல் இரண்டு லட்சம் யோஜனை தூரத்திற்கப்பால் சுக்ரனுடைய மண்டலமிருக்கிறது. அவர் சீக்ரகதி முதலியவைகளால் சூர்யனுக்கு முன்னும் பின்னுமாகச் செல்லுகிறார். பெரும்பாலும் லோகத்திற்கு அனுகூலத்தையே செய்பவர். அவருடைய கதி விசேஷத்தால் மழை பெய்யுமென்று ஊஹிக்கப்படு கின்றது. மேலுமவர் மழையின் ப்ரதி பந்தகத்தைப போக்கடிப்பவர். இவர் போலவே புதனும் என்று தெரிந்து கொள்ளவும்.

12. அதற்குமேல் இரண்டு லட்சம் யோஜனை தூரத்தில் புதன் இருக்கிறார். அவர் பெரும்பாலும் சௌம்யஸ்வபாவமுள்ளவர்; சுபத்தை செய்பவர்: அவர் சூர்யனுக்கு முன் எப்பொழுது செல்லுகிறாரோ அப்பொழுது பெருங்காற்று, மழையில்லாதிருப்பது முதலிய பயம் உண்டாகுமென்று சொல்லுகிறார்கள்.

13. அதற்குமேல் இரண்டு லட்சம் யோஜனை தூரத்திற்கப்பால் அங்காரகனிருக்கிறார். அவர் ஒவ்வொரு ராசியிலும் மூன்று பக்ஷங்கள் சஞ்சரிக்கிறார். வக்ரமாக சஞ்சரிக்கும்போது அசுபனாகியும் கெட்ட பலனையும் கொடுக்கிறார்.

14. அதற்குமேல் இரண்டு லட்சம் யோஜனை தூரத்தில் ப்ரஹஸ்பதி பகவான் இருக்கிறார். அவர் வக்ரகதியில்லாத போது ஒவ்வொரு ராசியிலும் ஒவ்வொரு பரிவத்ஸரகாலம் சஞ்சரிக்கிறார் மேலுமவர் ப்ராஹ்மணர்களுக்குப் பெரும்பாலும் சுகத்தையே கொடுப்பவர்.

15–16. அதற்குமேல் இரண்டு லட்சம் யோஜனை தூரத்திற்கப்பால் சனீச்வரனிருக்கிறார். அவர் ஒவ்வொரு ராசியிலும் முப்பது மாஸங்கள் தாமஸித்து அதே மாதிரி எல்லா ராசிகளிலும் அவ்வளவு அநுவத் சரங்கள் சஞ்சரிக்கிறார். பெரும்பாலுமவர் எல்லா ருக்கும் கெடுதியைச் செய்பவர், அதற்குமேல் பதினோரு லட்சம் யோஜனை தூரத்திற்கப்பால் ரிக்ஷிகள் வஸிக்கிறார்கள் லோகத்திற்கு க்ஷேமத்தை யுண்டு பண்ணுகிறவர்கள்; பகவானாகிய மகாவிஷ்ணுவினுடைய பரமபதத்தை ப்ரதக்ஷணமாகச் சுற்றுகிறவர்கள்.

குறிப்பு

ஆகாசமண்டலம் – சுக்லபக்ஷத்தின் ப்ரதமையில் ஸங்கிரமணம் நேர்ந்தால் ஸௌரமானத்திற்கும் சாந்திர மானத்திற்கும் மாஸம் ஆரம்பிக்கும், அது ஸம்வத் ஸரமெனப்படும். அந்த வர்ஷத்தில் ஸௌரமாஸத்தால் ஆறு நாட்கள் அதிகமாகின்றன (அதாவது 366 நாட்கள்) சாந்திரமானத்தால் ஆறு நாட்கள் குறைகின்றன. ஆனதால் சாந்திரமானத்தால் வர்ஷம் முந்தியும். ஸௌரமானத்தால் வர்ஷம் பிந்தியும் முடியும். இப்படி ஐந்து வர்ஷங்கள் சென்றால் நடுவில் இரண்டு மலமாஸங்கள் ஏற்படும். ஆறாவது ஸம்வத்ஸரமாகும் இரண்டு பக்ஷங்கள் – பன்னிரண்டு ராசிகளில் சூர்யன் ஒரு வர்ஷம் சஞ்சரிக்கிறார். சந்திரன் இரண்டு பக்ஷங்களில் பன்னிரண்டு ராசிகளைத் தாண்டுகிறார்.

அத்தியாயம்–23

த்ருவமண்டலம்

அதற்கப்பால் பதின்மூன்று லட்சம் யோஜனை தூரத்தில் விஷ்ணுவின் பரமபதமிருப்பதாகச் சொல்லு கிறார்கள். அவ்விடத்தில் நட்சத்திரரூபிகளாகவிருக்கும் அக்னி, இந்திரன், ப்ரஜாபதி, காச்யபர், தர்மன் ஆகிய இவர்களுக்கு தக்ஷிண பாகத்தில் மகாபாகவதரும், உத்தான பாதருடைய புத்ரருமான த்ருவர் கல்ப ஜீவிகளால் உபாஸிக்கப்பட்டிருக்கிறார். அவருடைய மஹிமை முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. அவர் அறியப்படாத வேகமுள்ள காலரூபியான ஈச்வரனுடைய ஆஜ்ஞையால் சுற்றிக் கொண்டிருக்கும் ஜ்யோதிர் கணல்களுக்கும், நட்சத்திரங்களுக்கும் பிடிப்பாகவும் ஸ்திரமாகவும், ஈச்வரனால் ஏற்படுத்தப்பட்டு ப்ரகாசிக்கிறார். அந்த நட்சத்திரம் முதலியவைகள் மேதிஸ்தம்பத்தில் தான்யங்களை யுதிர்ப்பதற்காகக் கட்டப்பட்ட பசுக்கள் போல மூன்று சவனங்களிலும் அதனுடைய ஸ்தானத்தில் சுற்றிக் கொண்டிருக்கின்றன. இம்மாதிரி பகணம், கிருஹங்கள் முதலியவைகள் இந்தக் கால சக்ரத்தில் உள்ளிலும் வெளியிலும் சம்பந்தப்படடு த்ருவனையே ஆச்ரயித்துக் காற்றினால் தூண்டப்பட்டு கல்பம் வரையில் ஸஞ்சரிக்கின்றன. ஆகாயத்தில் மேகங்கள் பருந்துகள் முதலியவை எப்படி காற்றினால் தங்கள் கர்மத்தை ஒத்தாசையாக வைத்துக் கொண்டு ஸஞ்சரிக்கின்றனவோ, அதுபோல ஜ்யோதிர்கணங்கள், ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவர்களுடைய சேர்க்கையால் அனுக்ரஹிக்கப்பட்டுக் கர்மத்தால் ஆகாய கதியை அடைந்திருக்கின்றன.

அதனால் தான் பூமியில் விழுகிறதில்லை. சிலர் இந்த ஜ்யோதிர்கணமானது சிம்சுமார சக்ரத்தில் பகவானாகிய வாசுதேவருடைய யோகத்தால் தரிக்கப்பட்டிருக்கிற தென்று சொல்லுகிறார்கள். மண்டலாகாரமான சரீர முள்ளதும், கீழ்முகமான தலையுள்ளதுமான அந்த சிம்சுமாரத்தின் வாலுக்குக் கீழாக த்ருவர் ஏற்படுத்தப் பட்டிருக்கிறார். அந்த வாலில் ப்ரஜாபதி, அக்னி, இந்திரன், தர்மன் ஆகிய இவர்கள் வஸிக்கிறார்கள். வாலின் அடியில் தாதா, விதாதா என்ற இருவர்களும் இடுப்பில் ஸப்தரிஷிகளும் வஸிக்கிறார்கள். மேலும் வலது பக்கமாக வளைந்த சரீரமுள்ள அதன் தக்ஷிண பாகத்தில் திருவோணம் முதல் புனர்வசு வரையிலுள்ள பதிமூன்று நட்சத்திரங்களும் அபிஜித் என்றது மிருக்கின்றன. வாமபாகத்தில் புஷ்யம் முதல் உத்திரா ஷாடம் வரையிலுள்ள பதினான்கு நட்சத்திரங்கள் வஸிக்கின்றன. மண்டல ஸ்வரூபமுள்ள சிம்சுமாரத்தின் இரு பக்கங்களிலுமுள்ள அவயவங்கள் சமமான ஸங்கியை உள்ளவைகள். பின் பக்கத்தில் அஜவீதியும் வயிற்றில் ஆகாச கங்கையும் ச்ரோணி தேசத்தின் தக்ஷிண பாகம், வாமபாகம் இவைகளில் முறையே புனர்வஸு, புஷ்யம் ஆகிய இவைகளும், தக்ஷிணபாதம், வாமபாதம் இவைகளில் ஆருத்ரை, ஆச்லேஷை ஆகிய இவைகளும் தக்ஷிணநாஸிகை, வாமநாஸிகை இவை களில் அபிஜித், உத்திராஷாடம் ஆகிய இவைகளும், தக்ஷிண நேத்ரம், வாம நேத்ரம் ஆகிய இவைகளில் ஸ்ரவணம் பூர்வாஷாடம் ஆகிய இவைகளும் தக்ஷிண கர்ணம், வாம கர்ணம் இவைகளில் தனிஷ்டை மூலம் ஆகிய இவைகளும் மகம் முதலிய எட்டு நட்சத்திரங்கள் முகத்தின் வாம பார்ச்வதத்திலும், மிருகசீர்ஷம் முதல் எட்டு நட்சத்திரங்கள் முகத்தின் தக்ஷிண பார்ச்வதத்திலும்

மாறுதலாக இருக்கின்றன. வலது ஸ்கந்தத்திலும், இடது ஸ்கந்தத்திலும் சதபிஷக், ஜ்யேஷ்டை ஆகிய நட்சத்திரங்களிருக்கின்றன. மேலும் மேலுதட்டில் அகஸ்தியரும், கீழுதட்டில் யமனும், முகத்தில் அங்காரகனும், மார்பில் சனைச்சரனும் கழுத்தில் (கழுத்தின் பின்பாகம்) வட்சஸ்ஸில் ஆதித்யனும், ஹிருதயத்தில் நாராயணனும், மனஸ்ஸில் சந்திரனும் நாபியில், உசநஸ்ஸும், ஸ்தனங்களில் அச்வனி தேவர்களும் ப்ராணன், அபானனிவைகளில் புதனும், கழுத்தில் ராகுவும் எல்லா அங்கங்களில் கேதுவும் ரோமங்களில் எல்லா தாரைகளும் இருக்கின்றன. (அகஸ்தியர் முதலியவர்கள் நட்சத்திர ரூபிகளாய் வஸிக்கிறார்களென்று தாத்பர்யம்) இது பகவானாகிய மகாவிஷ்ணுவின் ஸ்வரூபம். சர்வதேவதாயமானது. இதனை ஓவ்வொரு ஸந்தியாகாலத்தில் சுத்தனாக மௌனத்துடன் த்யானஞ் செய்து "ஜ்யோதிர்லோகமும், காலசக்ரரூபியும், தேவர்களும் மகாபுருஷனுமாகிய புருஷோத்தமனை த்யானஞ் செய்கிறோம்" என்று உபாஸிக்க வேண்டும். கிருகங்கள், நட்சத்திரங்கள், தாரைகள் இவைகளின் ஸ்வரூபம். ஆதிதைவமும் முன் சொல்லிய மந்திரத்தை மூன்று காலத்திலும் ஜபிப்பவர்களுக்கு பாபத்தைப் போக்கடிக்க இந்த சக்ரத்தை நமஸ்கரிப்பவனுக்கு பாசம் நிவர்த்தியாகின்றது.

அத்தியாயம்–24

அதலம் முதலிய லோகங்கள்

சூர்யமண்டலத்திற்குக் கீழாக லட்ச யோஜனை தூரத்தில் ராகுமண்டலமிருக்கிறது. அந்த ராகு நட்சத்திரம்போல சஞ்சரிக்கிறானென்று சிலர் சொல்லுகிறார்கள். அவன் தனக்குத் தகாததான தேவத் தன்மையையும், கிருகமாயிருப்பதையும் அடைந்தவன். அவனுக்கு அப்படிப்பட்ட மஹிமையானது ஸ்ரீ பகவானுடைய தயையால் கிடைத்தது; அவன் ஸிம்ஹிதையின் புத்ரனாகிய அசுரன்; அவனுடைய பிறப்பு, சரிதம் ஆகிய இவைகளைப் பிந்திச் சொல்லுவோம். சூர்யனுடைய மண்டலமானது பன்னீராயிரம் யோஜனை அகலமுள்ளது; ராகுமண்டலமானது பதின்மூன்று ஆயிரம் யோஜனை அகலமுள்ளது; அந்த ராகு மண்டலமே பர்வகாலங்களில் சூர்ய மண்டலத்தையும், சந்திர மண்டலத்தையும் மறைக்கிறது; முந்திய விரோதத்தை நினைத்துக் கொண்டு ராகுவானவன் சூர்யன், சந்திரன் ஆகிய இவர்களை எதிர்த்துச் செல்லுகிறான். அதனைத் தெரிந்து கொண்டு பகவான், சூர்யன், சந்திரன் இவர்களை ரக்ஷிப்பதற்காக சுதர்சனமென்ற தம்முடைய சக்ரத்தைப் பிரயோகித்திருக்கிறார். அதன் தேஜஸ் ஸஹிக்க முடியாதது. அது நான்குபுறத்திலும் சுற்றிக் கொண்டிருக்கிறது. அதனைக் கண்டு ராகு, சூர்யன், சந்திரன் இவர்களுடைய சமீபம் செல்லாமல் கொஞ்ச தூரத்திலேயே திரும்பி விடுகிறான். அதனையே உபராகம் (கிரஹணம்) என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். அதற்குக் கீழாக ஸித்தர்கள், சாரணர்கள், வித்யாதரர்கள் ஆகிய இவர்களுடைய

வீடுகளிருக்கின்றன. அதற்கும் கீழாக பதினாயிரம் யோஜனை தூரத்தில் யக்ஷர்கள், பிசாசங்கள், ப்ரேத கணங்கள், பூதகணங்கள் ஆகிய இவைகள் விளையாடக் கூடிய அந்தரிக்ஷமானது கடுமையாகக் காற்று வீசும் இடம் வரையிலிருக்கிறது. மேகங்கள் இருக்கிற வரையில் காற்று வீசிக் கொண்டு இருக்கிறது. அதற்குக் கீழாக நூறு யோஜனை தூரத்தில் இந்த பூமி இருக்கிறது. எதுவரையில் ஹம்ஸங்கள், பாஸங்கள், ச்யேனங்கள் கருடபக்ஷிகள் ஆகிய பறவைகள் பறக் கின்றனவோ, அதுவே பூமிக்குச் சமீபமான இடம்.

5–11 பூமியின் லட்சணம் ஏற்கனவே சொல்லப் பட்டிருக்கிறது. பூமிக்குக் கீழாக ஒன்றுக்கொன்று பதினாயிரம் யோஜனை தூரத்தில் அவ்வளவு அகலம், நீளம் உள்வைகளான ஏழு பிலங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அவைகள் அதலம், விதலம், சுதலம், ரஸாதலம், மகாதலம், பாதாலம் என்ற பெயருள் ளனவாம். அந்த பிலஸ்வர்க்கங்களில் ஸ்வர்க்கத்தைக் காட்டிலும் மேலான போகங்கள், ஐச்வர்யங்கள், ஆநந்தம், விபூதி ஆகிய இவைகளால் பூர்ணங்களான வீடுகள் உத்யானங்கள், கிரீடாகிருகங்கள் ஆகிய இவைகள் இருக்கின்றன. மேலும் அவைகளில் தைத்யர்கள், தானவர்கள், ஸர்ப்பங்கள் ஆகிய இவர்கள் எப்பொழுதும் சந்தோஷத்துடன் மிகுந்த ப்ரீதியுள்ள களத்திரம் புத்திரர்கள் முதலிய பந்துக்கள், மித்ரர்கள் ஆகிய இவர்களுடன் தங்களிஷ்டப்படி ஆனந்தமாக வஸிக்கிறார்கள். அந்த லோகங்களில் மாயாவியாகிய மயனால் செய்யப்பட்ட அனேக வீடுகளும், கோபுரங் களும், சபைகளும், நாற்சந்தி மண்டபங்களும் இருக் கின்றன. அவைகள் பலவகையான ரத்னங்களால்

இழைக்கப்பட்டவைகள்; மேலும் அவைகளில் நாகர்கள், அசுரர்கள், புறாக்கள் இவைகள் ஸ்திரீகளுடன் கிரீடித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அவ்விடத்தில் சுரங்கங்களும், ராஜகிருஹங்களும் இருக்கின்றன. மேலும் அங்கிருக்கும் உத்யானங்களும் மனத்தையும், இந்திரியங்களையும் சந்தோஷப்படுத்தக் கூடிய புஷ்பங்கள், பழங்கள், தளிர்கள் இவைகளாலழகான மரங்களிருக்கின்றன. அவைகளில் தங்கக் கொடிகள் படர்ந்திருக்கின்றன. மேலும் அந்த உத்யானங்களில் அழகான நீர்ப்பறவைகள் ஆணும் பெண்ணுமாக நிறைந்த அந்த ஓடைகளில் மீன்கள் துள்ளுகின்றன. அதனால் ஜலமும், தாமரை, ஆம்பல், குவலயம், கல்ஹாரம், நீலோத்பலம் நூறு இதழ்களுள்ள தாமரை ஆகிய இவைகள் அசைகின்றன. மேற்சொல்லிய புஷ்பங்களில் வண்டுகள் பலவகையான இனிமையாக சப்தித்துக் கொண்டு இருக்கின்றன. அதனால் அவைகள் தேவலோகத்தை விட மேலானவைகளாக இருக்கின்றன. மேலும் அவ்விடத்தில் சூர்யப்ரகாசமில்லாதிருந்தும் அஹோராத்ரம் முதலியவைகளால் பயமில்லை. அவ்விடத்திலிருக்கும் சிறந்த ஸர்ப்பங்களுடைய தலையிலிருக்கும் ரத்னங்கள் இருட்டைப் போக்கடிக் கின்றன. அந்த லோகத்தில் வசிப்பவர்கள் திவ்யமான ஓஷதிகளுடைய ரஸங்கள், ரஸாயனங்கள் இவைகளைப் புஜிப்பதாலும், ஸ்நானம், பானம் இவைகளாலும் சரீரவ்யாதி, மனோவ்யாதி இவைகளற்றவர்களாகி கிழத்தனம் முதலியவைகளில்லாமல் வஸிக்கிறார்கள். அவர்களுடைய தேகத்தில் வர்ணக்குறைவாவது, நாற்றமாவது, வியர்வையாவது, ச்ரமமாவது உண்டா கிறதில்லை. மங்களஸ்வரூபமுள்ள அவர்களுக்கு பகவா னுடைய தேஜோரூபியான சுதர்சனமென்ற சக்ரத்தைக்

காட்டிலும் வேறொருவரிடத்திலும் மரணபயமில்லை. அந்தச் சுக்கரத்தைப் பார்த்தவுடன் தேவஸ்திரீகளுடைய கர்ப்பமானது ஸ்ராவம் பாதம் இவைகளை அடைகிறது.

12–13 அதலலோகத்தில் மயனுடைய புத்ரன் பலனென்ற அசுரன் வஸிக்கிறான். அவனால் தொண்ணூற்றாறு மாயைகள் உண்டு பண்ணப்பட்டன. இக்காலத்திலிருக்கும் மாயாவிகள் அவைகளில் சிலவற்றைத் தான் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அந்த பலனென்ற அசுரன் கொட்டாவி விடும்பொழுது அவனுடைய முகத்திலிருந்து முன்று ஸ்திரீ கணங்கள் உண்டாயின. அந்த ஸ்திரீகள் தங்களிஷ்டப்படி சஞ்சரிப்பவர்கள், இதர ஜாதி புருஷர்களையும் ஆச்ரயிப்பவர்கள், மிகவும் சஞ்சலமான மனத்தையுடையவர்கள்; அவர்கள் அந்த பிலத்தில் பிரவேசித்த புருஷர்களை ஹாடகமென்ற (தங்கள்) ரஸத்தால் தங்களுடைய ஸம்போகத்திற்குத் தகுந்தவர்களாகச் செய்து தங்களுடைய வேடிக்கையான பார்வை, ஆசையுள்ள சிரிப்பு, பேச்சு, ஆலிங்கனம் முதலியவைகளால் சந்தோஷப்படுத்துகிறார்கள். அந்த ரஸத்தை உபயோகப்படுத்திய உடன் புருஷன் 'நான் ஈச்வரன், ஸித்தன்' என்று தன்னை நினைத்துக் கொண்டு ஆனந்தப்படுகிறான்.

14. அதற்குக் கீழான விதலமென்ற லோகத்தில் ஹாடகேச்வரரான பரமசிவன் தம்முடைய பார்ஷத் கணங்களுடனும், பார்வதியுடனும் பிரஜைகளின் உபத்திரவத்தை நிவர்த்திப்பதற்காக வஸிக்கிறார். அந்தப் பார்வதி பரமேச்வரன் இவர்களுடைய வீர்யமானது ஹாடகியென்ற சிறந்த நதியாக ப்ரவஹிக்கிறது.

அதனை வாயுவினால் விருத்திபண்ணப்பட்ட அக்னியானவர் குடிக்கிறார். அவரால் கக்கப்பட்ட ஹாடகமென்ற ஸ்வர்ணத்தை அங்கிருக்கும் புருஷர்களும், ஸ்திரீகளும் ஆபரணமாகச் செய்து தரிக்கிறார்கள்.

15–23 அதற்குக் கீழான ஸுதலத்தில் பலி சக்ரவர்த்தி பகவானை ஆராதித்துக் கொண்டு பயமற்றவராக வஸிக்கிறார். அவர் விரோசனனுடைய புத்ரர்; மிகுந்த கீர்த்தியுள்ளவர்; புண்ய ச்லோகர் (நல்வினையைக் கொடுக்கும் பெயருள்ளவர்) முன்னொரு காலத்தில் ஸ்ரீமந் நாராயணன் மஹேந்திரனுக்கு ப்ரியத்தைச் செய்ய வேண்டி அதிதியிடத்தில் வாமனராக அவதரித்து மூன்று லோகத்தையும் பலியினிடத்திலிருந்து அபஹரித்து பின்பு அவனிடத்தில் தயையால் பாதாலத்தில் இருக்கச் செய்தார். பலியினிடத்தில் இருக்கும் ஐச்வர்யம் இந்திரன் முதலியவர்களிடத்துலுமில்லை. இந்திரியங்களுக்கு அதிபதியும் ஸகல ப்ராணிகளுக்கு ஜீவபூதரும், மிகவும் சுத்தரும், பாத்ரரும், சமீபத்தில் வந்து யாசிப்பவருமான ஸ்ரீ பகவானிடத்தில் மிகுந்த ச்ரத்தை வைத்து மிகுந்த ஆதரவுடன் மனத்தை சமர்ப்பித்து பலி சக்ரவர்த்தி பூமியைத் தானம் செய்தார். அதனால் அவருக்குக் கிடைத்த ஐச்வர்யம் அளவற்றது. அது அவர் செய்த தானத்திற்குச் சரியான பலமல்ல. (அந்த தானத்திற்கு மோட்சம் பலமாயிருக்க வேண்டுமென்பது கருத்து) எந்த பகவானுடைய திவ்ய நாமங்களை, தும்பல், கீழே விழுவது முதலிய காலங்களில் ஒரு தடவை உச்சரித்தாலும் கர்மபந்தம் நிவர்த்தியாகிறதோ, பக்தர்களுக்கு ஆத்மாவும் ஞானத்தைக் கொடுப்பவரும் மிக்க ப்ரியருமான அந்த பகவானிடத்தில் பலியானவர் பூமியை

சமர்ப்பித்துத் தன்யாரானார். முமுட்சுக்கள் கர்மபந் தத்தை நிவர்த்திப்பதற்கு யோகம், சாங்க்யம் முதலிய கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். பகவான் இந்த பலிசக்ரவர்த்திக்குப் பகவத் ஸ்மரணத்தை போக்கக் கூடிய போகத்தையும், ஐச்வர்யத்தையும் கொடுத்த படியால் அவனை அனுக்ரஹிக்கவில்லை. பகவான் அவனிடமிருந்து பூமியை அபகரிப்பதற்கு வேறு உபாயத்தை ஆச்ரயிக்காமல் யாசிப்பது என்ற வியாஜ மாக மூன்று லோகத்தையும் அபகரித்தார். அப்பொழுது அவருடைய சரீரமும் வருணபாசத்தால் நன்றாகக் கட்டப்பட்டு மலையின் குகையில் அடைக்கப்பட்டி ருந்தாலும் பின்வருமாறு சொல்லலானார். பகவானாகிய இந்திரன் பிரகஸ்பதியை மந்திரியாக வைத்துக் கொண்டும் புருஷார்த்தங்களை சம்பாதித்துக் கொள்ள உபாயமறியாதவர். ஏனென்றால் உபேந்திரனைக் கொண்டு அல்பமான ஐச்வர்யத்தை கொடுக்கும்படி என்னை யாசித்தாரே ஒழிய மேலான பதத்தைக் கொடுக்கும்படி உபேந்திரனை யாசிக்கவில்லை. மிகுந்த வயதுள்ள காலத்தின் மஹிமையால் மன்வந்த்ரத்திற்கு ஒரு தடவைமாறும் இந்த மூவுலகமும் ஐச்வர்யமாகுமா? நம்முடைய பிதாமஹராகிய ப்ரஹ்லாதர் பகவானுக்கு தாஸனாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டாரே ஒழியத் தன் தகப்பனாருடைய ராஜ்யத்தில் ஆசைப் படவில்லை பகவானுடைய அனுக்ரகத்தை அடையாத வனும், ராகம் முதலிய த்வேஷங்களுள்ளவனுமான என்னைப் போன்ற எவன்தான் அந்த மகாநுபாவராகிய ப்ரஹ்லாதருடைய மார்க்கத்தில் ஆசைப்படுவான் என்றார். அந்தப் பலியின் சரிதத்தை விஸ்தாரமாகப் பிந்திச் சொல்லுவோம். அவருடைய வீட்டு வாசற் படியில் பக்தர்களிடத்தில் தயவுள்ள பகவான்

கதாயுதத்தைக் கையில் வைத்துக் கொண்டு வஸிக்கிறார். ராவணன் திக்விஜயம் செய்துவரும் போது பலியின் வீட்டில் ப்ரவேசித்தான். அப்பொழுது பகவான் கால் கட்டை விரலால் அவனைத் தூக்கி எறிந்தார். அவன் அநேக யோஜனை தூரத்திற்கப்பால் விழுந்தான்.

24. அதற்குக் கீழிருக்கும் தலாதலத்தில் மயனென்ற அசுரராஜன் இருக்கிறான். அவன் திருபுரர்களுக்கு அதிபதி, திருபுரர்களால் லோகத்திற்கு நேரிடும் உபத் ரவத்தை நிவர்த்திப்பதற்காக பரமசிவன் திருபுரர்களை எரித்தார். அவருடைய ப்ரஸாதத்தை அடைந்த இந்த மயன் அந்த பகவானால் காப்பாற்றப்பட்டு சக்ரத்தினி டமிருந்து பயமில்லாமல் மாயாவிகளுக்கு ஆசார்யனாக வஸிக்கிறான்.

25. அதற்குக் கீழான மகாதலத்தில் அனேகம் தலையுள்ளவைகளும், மிகுந்த கோபமுள்ளவைகளும், பருத்த உடலுள்ளவைகளும் குஹகன், தக்ஷகன், காளியன், சுவேஷணன் முதலிய ஸர்ப்ப கணங்கள் தங்களுடைய குடும்பத்துடன் மகாவிஷ்ணுவின் வாகன மாகிய கருடனிடத்திலிருந்து பயந்தவைகளானாலும் குடும்பத்தின் சம்பந்தத்தால் சிலகாலம் சந்தோஷமுள்ள வைகளாக விளையாடுகின்றன.

26. அதற்குக் கீழான ரஸாதலத்தில் தைதேயர்கள் (திதியின் புத்ரர்கள்) தானவர்கள் (தநுவின் புத்ரர்கள்) பணிகளென்ற நிவாத கவசர்கள், ஹிரண்யபுரவாஸி களான காலகேயர்கள் ஆகிய இவர்கள் வஸிக்கிறார்கள். தேவர்களுக்குச் சத்ருக்கள்; இயற்கையில் மிக்க

பலமுள்ளவர்கள். அவர்கள் இந்திரனுடைய துதியானா ஸரமையால் சொல்லப்படும் மந்திரங்களைக் கேட்டு பயப்படுகிறார்கள். அவர்கள் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் தேஜஸ்ஸால் பலம் கர்வம் இவைகளடக்கப்பட்டு ஸர்ப்பங்கள் போல அந்த பிலத்தில் வஸிக்கிறார்கள்.

27. அதற்குக் கீழே இருக்கும் பாதாளத்தில் நாகலோகத்திற்கு அதிபதிகளான வாசுகி, முதலிய ஸர்ப்பங்களும் சங்கன், குளிகன், மகாசங்கன், ச்வேதன், தனஞ்செயன், த்ருதராஷ்ட்ரன், சங்கசூடன், கம்பளாச் வதரன், தேவதத்தன் முதலிய மிக்க கோபமுள்ள மகாசர்ப்பங்கள் வஸிக்கின்றன. அவைகளில் ஐந்து தலையுள்ளவை சில. ஆறு தலையுள்ளவை பல ஏழு தலைகளுள்ளவை சில. பத்துத் தலைகளுள்ளவை சில.நூறு தலையுள்ளவை சில. ஆயிரந்தலையுள்ளவை சில. அவைகளுடைய படங்களிலிருக்கும் மேலான ரத்னங்களுடைய காந்தியால் அந்த லோகம் இருட்டில்லாமலிருக்கிறது.

குறிப்பு

மறைக்கிறது – கணித சாஸ்திரத்தில் பூமியில் சாயை சந்திரனை மறைக்கிறதென்றும் சந்திரமண்டலம் ஸூர்யனையும் மறைப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முந்திய விரோதத்தை அமிருதபானஞ் செய்யும் பொழுது சூர்யனாலும், சந்திரனாலும் அசுரனென்று காண்பிக்கப்பட்டதனால் ராகுவிற்கும் அவர்களுக்கும் விரோதமுண்டாயிற்று. ஸரமையால் – ஓ பணிகளே! இந்திரனால் அடிக்கப்படுங்களென்று.

அத்தியாயம்–25

ஆதிசேஷன் வரலாறு

அந்த பாதாளத்திற்குக் கீழ் முப்பதினாயிரம் யோஜனை தூரத்தில் பகவானுடைய தலை இருக்கிறது. அதை தாமஸி என்றும், அனந்தனென்றும் சொல்லுகிறார்கள். ஸாத்வத தந்திரக்காரர்கள் நான் என்கிற அபிமானத்திற்கு அடையாளமாக இருப்பதால் த்ருஷ்டா, த்ருச்யம் இவைகளை ஒன்றுபடுத்துவதால் ஸங்கர்ஷணனென்றும் சொல்லுகிறார்கள். ஆயிரம் தலையுள்ள அவருடைய தலைகளால் தரிக்கப்படும் இந்த பூமண்டலமானது ஒரு தலையால் சுமக்கப்படும் கடுகு போல் ப்ரகாசிக்கிறது. அதனால் அவர் அநந்த னென்று சொல்லப்படுகிறார். ப்ரளய காலத்தில் இவ்வுலகத்தை நாசஞ் செய்ய விரும்பும் அந்த பகவானுடைய புருவங்களுடைய மத்தியிலிருந்து ஸந்நிகர்ஷணரென்ற ருத்ரன் பதினோரு கணங்களுடனும், மூன்று கண்களுடனும், மூன்று முனையுள்ள சூலத்தைச் சுற்றிக் கொண்டு உண்டானார். அந்த அநந்தனுடைய பாதாரவிந்தங்களில் ஸர்ப்பச்ரேஷ்டங்கள் பகவத்பக்தர் களுடன் நமஸ்கரித்துக் குண்டலங்களுடைய சோபையால் ப்ரகாசிக்கும் சுத்தமும், அழகுமான அனந்தனுடைய கைகளில் பூசப்பட்டிருக்கும் சந்தனத்தினுடைய வாசனையால் மனங்கலங்கி மன்மதவிகாரமடைந்து, மந்தஸ்மிதஞ் செய்கிறார்கள். அப்பொழுது அவருடைய முகமானது அனுராகத்தாலுண்டாகும் மதமுள்ளதும், சந்தோஷமுள்ளதும், மதத்தால் அசையும் நேத்ரங்களுள்ளதுமாக இருக்கிறது. அந்த பகவானாகிய அனந்தன் கோபமற்றவராகி லோகங்களுடைய க்ஷேமத்திற்காக

வஸிக்கிறார். அவருடைய குணங்கள் அனந்தங்கள்; மேலும் அவர் தேவர்களாலும், அசுரர்களாலும் உரகர்களாலும், சித்தர்களாலும், கந்தர்வர்களாலும் வித்யாதரர்களாலும், த்யானிக்கப்படுகிறார். பின்னுமவர் எப்பொழுதும் சந்தோஷத்தால் மலர்ந்த கண்களுள்ளவர்; வார்த்தையாகிறஅமிருதத்தால்தம்முடையபார்ஷதகணங்களையும்தேவர்களையும் சந்தோஷிக்கச் செய்பவர். ஒருபொழுதும் வாடாத துளசியின் வாசனையாலும், மதுவினாலும் மதித்த வண்டுகளால் கானம் பண்ணப்பட்ட காந்தியுள்ள வைஜயந்தி என்னும் மாலையை தரித்தவர்; கருத்த வஸ்திரமுள்ளவர் ஒரு குண்டலம் உள்ளவர்; கலப்பையின் மேல் அழகான கையை வைத்துக் கொண்டிருப்பவர். கம்பீரமான விளையாட்டு உள்ளவர், மஹேந்திரன் சிறந்த யானையிலிருந்தாற் போல் ஸ்வர்ண மயமான மூகஷ்யை தரித்தவர்; இம்மாதிரியான பகவான் முழுட்சுக்களால் த்யானம் பண்ணப்பட்டும், ச்ரவணஞ் செய்யப்பட்டும் சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய குணங்களுள்ள அவர்களுடைய ஹிருதயத்தை அடைந்து அவித்யா ஸ்வரூபமான கர்மவாசனையை நிவர்த்திக்கிறார். அவருடைய மாகாத்மியத்தை ப்ரஹ்மதேவருடைய புத்ரராகிய நாரதர் பிரம்ஹதேவருடைய சபையில் பின்வருமாறு கானஞ் செய்தார். எந்த பகவானுடைய சங்கல்பத்தால் ப்ரகிருதியின் குணங்கள் ஜகத்தைப் படைப்பது, காப்பாற்றுவது, நாசஞ் செய்வது ஆகிய இவைகளைச் செய்தனவோ, எவருடைய ரூபம் நாசமற்றதோ, எவருக்கு ஆதியில்லையோ, எவர் தாம் ஒருவராயிருந்தும் பலவகையான கார்யப்ரபஞ்சத்தைத் தரித்தாரோ அவருடைய மார்க்கத்தை ஜனங்கள் அறிய முடியுமா? எவரிடத்தில் கார்ய காரணஸ்வரூபமான ஜகத்

ப்ரகாசிக்கிறதோ அந்த பகவான் பக்தர்களிடத்தில் கிருடையால் சுத்தமான அவதாரங்களைச் செய்கிறார்; பக்தர்களுடைய மனஸ்ஸை வசப்படுத்துவதற்காக மிகுந்த பராக்ரமமுள்ள அந்த பகவான் லீலைகளைச் செய்கிறார். எவருடைய திவ்ய நாமதேயங்களை ச்ரவணம் பண்ணினவனும், வாக்கினால் உச்சரித்தவனும், பதிதனாயிருந்தாலும், உபத்திரவப்பட்டவனானாலும், பாபத்திலிருந்து சுத்தியடைகிறானோ, அந்த பகவானாகிய ஆதிசேஷனைத் தவிர முழுட்சுவாயிருப்பவன் வேறு யாரை ஆச்ரயிப்பான்? எவருடைய சிரஸில் மலைகள், ஆறுகள், சமுத்ரம், ப்ராணிகள் ஆகிய இவைகளுள்ள பூகோளமானது. ரத்னம்போல ப்ரகாசிக்கிறதோ, எவருடைய மஹிமையானது அளவிடக் கூடாததோ அவருடைய மஹிமையை ஆயிரம் நாக்குள்ளவனானாலும் எவன் சொல்லுவான்? பகவானாகிய அனந்தர் இவ்வளவு மஹிமையுள்ளவர். அவருடைய பராக்ரமம், குணங்கள் கணக்கிட முடியாதவைகள். அவர் பூமியை லோகத்தின் க்ஷேமத்திற்காக ச்ரமமின்றி தூக்கிக் கொண்டு பாதாளத்தின் கீழ் வஸிக்கிறார். ஓ பரீக்ஷித்து மகாராஜனே! கர்மங்களால் ஏற்படுத்தப்பட்டவைகளும் மனிதர்களாலடையக் கூடியவைகளுமான கதிகள் இவ்வளவுதான். எனக்குத் தெரிந்தவரையில் உமக்குச் சொன்னேன். ப்ரவிர்த்தி தர்மத்தின் கதிகள் பலவகையானவைகள், மாறுபாடுள்ளவைகள்; அவைகளையும் உமக்குச் சொன்னேன். வேறு எதனைச் சொல்லவேண்டும் என்று அரசனைப் பார்த்துச் சுகர் கேட்டார்.

அத்தியாயம்–26

நரகங்கள்

பரீக்ஷித்து மகாராஜன் சுகரை நோக்கி ஓ மஹர்ஷியே! இந்த லோகத்திலுள்ள ஜனங்களுடைய கதிகளும் போகங்களும் பலவகையாக இருக்கின்றன என்று உம்மால் சொல்லப்பட்டது. இதன் ஆச்சர்யத்தை நான் எப்படித் தெரிந்து கொள்ளுவேன் என்று கேட்டார்.

2–3 அதனைக் கேட்ட சுகர் அரசனை நோக்கி ஓ மகாராஜ! புருஷனுடைய ச்ரத்தையானது சாத்விகம், ராஜஸம் தாமஸமென்று மூவகைப்பட்டதால் அவர்களுடைய கர்மகதிகள் பலவகையாக இருக்கின்றன. சுகம் துக்கம் முதலிய பலன்களும் அதற்குத் தக்கபடி உண்டாகின்றன. மேலும் வேதத்தால் நிஷேதிக்கப்பட்ட அதர்மத்தைச் செய்பவனுடைய ச்ரத்தையின் தர்ரதம் யத்தால் பலமும் வேறாக உண்டாகிறது. அநாதியான அவித்யை காமம் இவைகளுடைய பலன்கள், நரகங்கள் இவைகள் அளவற்றவைகளானாலும் பெரும்பாலும் அவைகளில் முக்யமானவைகளைச் சொல்லுகிறேன் என்றார்.

4–36 அதனைக் கேட்ட அரசன் ஓ பகவன்! நரகங்களென்பவைகள் ஸ்தல விசேஷங்களா? அவைகள் அவ்வுலகத்திற்கு வெளியே இருக்கின்றனவா? உள்ளே இருக்கின்றனவா? என்று கேட்டார். அதனைக் கேட்ட சுகர் அரசனை நோக்கி ஓ மகாராஜ! மூவுலகத்தின் உள்ளே தெற்கு திக்கில் பூமிக்குக் கீழாக

அண்ட ஜலத்திற்கு மேலாக நரகங்களிருக்கின்றன. அவ்விடத்தில் அக்னிஷ்வார்த்தர்கள் முதலிய பிதிரு கணங்கள் தங்களுடைய கோத்ர பந்துக்களுக்கு க்ஷேமத்தை ப்ரார்த்தித்துக் கொண்டு வஸிக்கிறார்கள். மேலும் மரணமடைந்த ஜனங்களை யமதூதர்கள் அவ்விடத்திற்கு அழைத்துச் செல்லுகிறார்கள். பிதிருக்களுக்குக் கதிபதியான யமன் கர்மத்திற்குத் தக்கபடி ஸ்ரீ பகவானுடைய ஆஜ்ஞை அனுசரித்து தம்முடைய வேலைக்காரர்களுடன் பாபிகளை சிக்ஷிக்கிறார். அவ்விடத்தில் முக்யமாக இருபத்தோரு நரகங்கள் இருப்பதாகச் சிலர் சொல்லுகிறார்கள். அவைகளின் பெயர் லக்ஷணம் முதலியவைகளைச் சொல்லுகிறேன். தாமிஸ்ரம், அந்ததாமிஸ்ரம், ரௌரவம், மகாரௌரவம், கும்பீபாகம், காலசூத்ரம், அஸிபத்ரவனம், சூகரமுகம், அந்தகூபம், க்ரமிபோஜனம், ஸந்தம்சம், தப்தோர்மி, வஜ்ரகண்டகம், சால்மலி, வைதரணி, பூயோதம், ப்ராணரோதம் விசஸனம், லாலாபக்ஷம், ஸாரமேயாதனம், அவீசிரயஸ், ரேதப்பானம் என்ற இருபத்தோரு நரகங்கள் க்ஷாரகர்தமம் ரக்ஷோகண போஜனம் சூலப் ரோதம், தந்தசூகம், அவடநிரோதனம், பரிகாவர்தனம், ஸூசீமுகம் என்ற ஏழு நரகங்களையும் சேர்த்து இருபத்தி எட்டு நரகங்களென்று சிலர் சொல்லுகிறார்கள். இந்த லோகத்தில் எவன் பிறருடைய தனத்தையாவது, குழந்தையையாவது, களத்ரத்தையாவது அபகரிக்கிறானோ, அவன்கால பாசத்தால் கட்டப்பட்டு மிகவும் பயங்கரர்களான யமபடர்களால் தாமிஸ்ர மென்ற நரகத்தில் தள்ளப்படுகிறான். மேலும் அந்த நரகத்தில் உபவாசம் மலையிலிருந்து தள்ளுவது, தடியாலடிப்பது அதட்டுவது முதலியவைகளால் உபத்ரவிக்கப்பட்டு உடனே மூர்ச்சை அடைகிறான். எவன்

பிறரை வஞ்சித்து அவர்களுடைய ஸ்திரீயை அனுபவிக் கிறானோ அவன். அந்த தாமிஸ்ரமென்ற நரகத்தில் தள்ளப்படுகிறான். அதிலும் மிகுந்த உபத்ரவத்தை யடைந்து மனங்கலங்கி கண்கள் இருட்டு தெரியாமல் வெட்டுப்பட்ட மரம்போல் விழுகிறான். அந்த இருட்டுள்ளதால் அதற்கு அந்ததாமிஸ்ரம் என்று சொல் கிறார்கள். எவன் இந்த லோகத்தில் நான் என்னு டையது என்ற அகங்காரமுள்ளவனாகி ப்ராணிகளுக்கு துரோகஞ் செய்தே ஒவ்வொரு நாளும் தன்னுடைய குடும்பத்தைப் போஷிக்கிறானோ அவன் மரணமடைந்த பிறகு ரௌரவ மென்ற மகா நரகத்தை அடைகிறான். இவ்வுலகத்தில் இந்த பாபியான புருஷனால் ஹிம்சிக் கப்பட்ட ஜனங்கள் ஸர்ப்பத்தைவிட மிகவும் க்ரமான ருருவென்ற ப்ராணிகளாக ஆகி நரகத்தில் அந்தப் புருஷனை ஹிம்ஸிக்கின்றன. அதனால்தான் அதற்கு ரௌரவமென்று பெயர். எவன் தன்னுடைய தேகத்தை மாத்திரம் போஷிக்கிறானோ, அவன் மகாரௌரவம் என்ற நரகத்தை அடைகிறான். அவனை புழுக்களும்; மாம்ச பக்ஷிணிகளான மிருகங்களும் பக்ஷிக்கின்றன. எவன் மிக்க உக்ரஸ்வபாவமுள்ளவனாகி பசுக்களையும், பறவைகளையும் ஜனங்களை உபத்ரவப்படுத்துகிறானோ, தயையில்லாதவனும் ராக்ஷஸர்களாலும் நிந்திக்கக் கூடியவனுமான அந்த புருஷனை பரலோகத்தில் யமபடர்கள் கொதிக்கும் எண்ணையுள்ள கும்பீபாகத்தில் தள்ளுகிறார்கள். எவன் மாதாபிதா, ப்ராம்ஹணர்கள் இவர்களுக்குத் துரோகஞ் செய்கிறானோ, அவன் காலஸூத்ரமென்ற நரகத்தை அடைகிறான். அந்நகரம் லக்ஷம்யோஜனை தூரம் விஸ்தாரமுள்ளது; தாம்ர மயமானது; மேல்புறத்தில் சூர்யனாலும் கீழ்புறத்தில் அக்னியாலும் தபிக்கப்பட்டது. நரகத்தை அடைந்த

பாபியானவன் பசியாலும், தாகத்தாலும், உபத்ரவப்பட்டு சரீரம் எரிக்கப்பட்டு உட்காருகிறான். சில இடத்தில் படுக்கிறான், சில இடத்தில் நிற்கிறான், சில இடத்தில் ஓடுகிறான், கெஞ்சி கேட்டுக் கொள்கிறான். இப்படிப் பசுவின் மீது எவ்வளவு மயிர்களிருக் கின்றனவோ, அவ்வளவு வர்ஷகாலம் உபத்ரவப்படு கிறான். எவன் ஆபத்தில்லாதபோதும் தனக்குரிய வேத மார்க்கத்தை விட்டு பாஷண்ட மார்க்கத்தை அனுசரிக் கிறானோ, அவனை யமபடர்கள் அஸிபத்ரவனமென்ற நரகத்தில் தள்ளி குரடாவினால் அடிக்கிறார்கள். இப்படி அந்த புருஷன் அடிபட்டு நான்குபுறத்திலும் ஓடுகிறான். அப்பொழுது இரு பக்கங்களிலும் முனை யுள்ள அஸிபத்ரங்களால் அவனுடைய அவயவங்கள் வெட்டப்படுகின்றன. அப்பொழுது அவன் ஐயோ அடிபட்டேன் என்று சொல்லிக் கொண்டு வேதனை யை சகிக்காமல் அடிக்கடி மூர்ச்சை அடைந்து கீழே விழுகிறான். தன்னுடைய தர்மத்தை விட்டு பாஷண்ட தர்மத்தை அடைந்தவன் இம்மாதிரியான பலத்தை அடைகிறான். எவன் இந்த லோகத்தில் அரசனாகவாவது, அரசனை சேர்ந்தவனாகவாவது சிக்ஷிக்கத் தகாதவனை சிக்ஷிக்கிறானோ, ப்ராஹ்ம ணனைக் கொல்லும்படி ஆஜ்ஞாபிக்கிறானோ, அந்தப் பாபியானவன் பரலோகத்தில் ஸூகரமுக மென்ற நரகத்தை அடைகிறான். அதில் மிக்க பலசாலி களான யமபடர்கள் அவனைக் கருப்பங்கழியைப் போல் வளைத்து முறிக்கிறார்கள். அப்பொழுது அதில் தன்னால் ஹிம்சிக்கப்பட்ட குற்றமற்ற ஜனங்கள் கஷ்டப்பட்டது போலத் தானும் மூர்ச்சையடைந்து கஷ்டப்படுகிறான். ஈச்வரனால் ஏற்படுத்தப்பட்ட ஜீவனோபாயத்தை உடையவைகளும், பிறருடைய

உபத்ரவத்தை அறிந்தவனாகிய எவன் துக்கத்தை உண்டுபண்ணுகிறானோ, அவன் பரலோகத்தில் அந்த கூடமென்ற நரகத்தை அடைகிறான். மேலுமந்த நரகத்தில் அந்தப் புருஷன் பூலோகத்தில் அந்த பாபியால் ஹிம்ஸிக்கப்பட்ட கொசுக்கள், பேன்கள், மூட்டுப்பூச்சிகள், ஈக்கள் முதலியவைகளும் பசுக்கள், பறவைகள், மலைப்பாம்புகள் ஆகிய இவைகளால் உபத்ரவிக்கப்படுகிறான். மேலுமவன் தூக்கமில்லாமல் ஒரே இடத்தில் ஸ்திரமாக இல்லாமலும் கெட்டதான சரீரத்தில் ஜீவன்போல அலைகிறான். எவன் அந்த லோகத்தில் தனக்குக் கிடைத்த அன்னம் முதலியவை களை அதிதி முதலியவர்களுக்கு பிரித்துக் கொடாம லும் பஞ்சயஜ்ஞங்களை அனுஷ்டிக்காமலும் புஜிக் கிறானோ, அவன் காக்கைக்குச் சமமானவனென்று சொல்லப்படுகிறான். மேலும் அவன் பரலோகத்தில் க்ரமிபோஜனமென்ற நரகத்தை அடைகிறான். அந்த நரகமானது லக்ஷம்யோஜனை தூரம் அகலமுள்ளது, புழுக்களால் நிறைந்தது; அந்தப் பாபியான புருஷனும் க்ரமிசரீரத்தை அடைந்து அங்கிருக்கும் புழுக்களால் பக்ஷிக்கப்பட்டு லட்சம் வருஷம் அந்த வாசனையை அனுபவிக்கிறான். பஞ்சமகாயஜ்ஞத்தை அனுஷ்டிக்காத புருஷனும் அதற்காக ப்ராயச்சித்தஞ் செய்து கொள் ளாமலும் இம்மாதிரியான பலனை அனுபவிக்கிறான். எவன் இந்த லோகத்தில் திருட்டுத்தனத்தாலாவது, பலாத்காரமாகவாவது ப்ராஹ்மணன் முதலியவர் களுடைய ஸுவர்ணம் ரத்னம் முதலியவைகளை அபகரிக்கிறானோ அவனை பரலோகத்தில் யமபடர்கள் நெருப்பில் காய்ச்சப்பட்டதுமான இரும்பு ஊசிகளா லும், குரடுகளாலும், அவனை உபத்ரவிக்கிறார்கள். எவன் இந்த லோகத்தில் அடையக்கூடாத ஸ்திரீயை

அடைகிறானோ, அவனை யமபடர்கள் பரலோகத்தில் இரும்பினால் செய்யப்பட்டதும் நெருப்பில் காச்சப் பட்டதுமான ஒரு ப்ரதிமையை ஆலிங்கனஞ் செய்து கொள்ளச் செய்து குரடாவினால் அடிக்கிறார்கள். எவள் இந்த லோகத்தில் சேரக் கூடாத புருஷனை அடைகிறாளோ, அவளை பரலோகத்தில் யமபடர்கள் ஸ்திரீ ரூபமான ப்ரதிமையை ஆலிங்கனம் செய்து கொள்ளச் செய்கிறார்கள். இந்த லோகத்தில் எவன் பசு முதலிய ப்ராணிகளையும் புணருகிறானோ, அவனை வஜ்ர கண்டக சால்மலியில் போட்டு இழுக்கிறார்கள்' இந்த லோகத்தில் அரசர்களாவது, அவர்களைச் சேர்ந்த வர்களாவது தர்மத்தின் மரியாதையைக் கெடுத்துவிடு கிறார்களோ, அவர்கள் மரணமடைந்த பிறகு வைதரணியில் விழுகிறார்கள். அந்த நதியில் அமேத்யம், மூத்ரம், பூயம், ரத்தம், மயிர், நகம், எலும்பு, மேதஸ், மாம்ஸம் வஸை இவைகளிருக்கின்றன. அதில் பாபி களான புருஷர்கள் கஷ்டத்தை அனுபவித்து ப்ராணன் போகாமல் தாம் செய்த பாபங்களை நினைத்துக் கொண்டு துக்கிக்கிறார்கள். எவர்கள் இந்த லோகத்தில் விருஷரம், நியமம் இவைகள் இல்லாதவர்களோ வெட்கமில்லாமல் பசுபோல் சஞ்சரிக்கிறார்களோ, அந்தப் பாபிகள், மரணமடைந்த பிறகு அமேத்யம், மூத்ரம், ச்லேஷ்மம் இவைகளால் நிறைந்த லாலாபக்ஷ மென்ற நரகத்தை அடைகிறார்கள். அதிலிருக்கும் அந்த அசுத்த வஸ்துக்களை புஜிக்கிறார்கள். இந்த லோகத்தில் எந்த ப்ராஹ்மணன் முதலியவர்கள் வேட்டையாடு வதிலேயே ப்ரியமுள்ளவர்களாக எப்பொழுதும் மிருகங் களைக் கொல்லுகிறார்களோ, அவர்களை யமதூதர்கள் பாணங்களால் அடிக்கிறார்கள். எவர்கள் பூமியில் டம்பத்துக்காக யாகங்களைச் செய்து பசுக்களைக்

கொல்லுகிறார்களோ, அவர்கள் பரலோகத்தில் வைசஸ மென்ற நரகத்தை அடைகிறார்கள். அவர்களை யமபுருஷர்கள் மிகவும் உபத்ரவிக்கிறார்கள். எவன் இந்த பூமியில் சமமான ஜாதியான பத்னியை தன்னுடைய ரேதஸ்ஸைக் குடிக்கும்படி செய்கிறானோ, அவனை பரலோகத்தில் யமதூதர்கள் ரேதகுல்யை என்ற நரகத்தில் தள்ளி ரேதஸ்ஸை குடிக்கும்படி செய்கிறார்கள். எவர்கள் இந்த லோகத்தில் திருடுகிறார்களோ, விஷத்தைக் கொடுக்கிறார்களோ, கிராமங்களையும் ஜனக்கூட்டங் களையும் நாசஞ் செய்கிறார்களோ, அவர்கள் இறந்த பிறகு வஜ்ரம் போன்ற சிங்கப் பற்களுள்ளவைகளும் யமதூதர் களுமான எழுநூறு நாய்கள் அவர்களைக் கடிக்கின்றன. எவன் இந்த லோகத்தில் சாக்ஷி சொல்லுவதிலும், பணங்கொடுத்து வாங்குவதிலும் பொய் சொல்லுகிறானோ, அவன் மரணமடைந்த பிறகு அவீசமதி என்ற நரகத்தில் தலைகீழாக விருந்து நூறு யோஜனை தூரம் உயரமுள்ள மலையின் சிகரத்திலிருந்து தள்ளப்படுகிறான். அந்த நரகத்தில் கல் தரையானது ஜலம் போல் தோன்றுகிறது. அதில் விழுந்து எள்ளளவாக பேதிக்கப்பட்டும் மரணமடைகிற தில்லை. பின்னும் யமபடர்களால் பூர்ணமாகச் செய்யப் பட்ட சரீரமுள்ளவனாகி திரும்பவும் விழுகிறான். இந்த லோகத்தில் ப்ராஹ்மணன், க்ஷத்திரியன், வைச்யன், இவர்களில் யாகம் பண்ணினவர்களுடைய களத்திரத்தை வ்ரதமுள்ள எவன் அனுபவிக்கிறானோ, ஸுரா பானஞ் செய்கிறானோ, அவன் மரணமடைந்த பிறகு நரகத்தை அடைகிறான். அவனுடைய மார்பில் யமபடர்கள் காலை வைத்து அழுத்திக் கொண்டு இரும்பை உருக்கி வாயில் விடுகிறார்கள். எவன் கர்வமுள்ளவனாகி

குலத்தாலும், வித்யையாலும், ஆசாரத்தாலும், ஜாதியாலும், ஆச்ரமத்தாலும் உத்தமர்களாயிருக்கும் மகான்களை அலக்ஷ்யம் செய்கிறானோ, அவன் ஜீவித்திருந்தும் மரணமடைந்தவனேயாம். அவன் மரண மடைந்தபின் க்ஷாரகர்த்தமென்ற நரகத்தில் தலைகீழாகக் கடினமான யாதனைகளை அடைகிறான். இகலோகத்தில் எவர்கள் புருஷனைக் கொன்று பைரவன் முதலியவர்களைப் பூஜிக்கிறார்களோ எந்த ஸ்திரீகள் மனுஷ்ய பசுக்களை புஜிக்கிறார்களோ, அவர்களால் கொல்லப்பட்ட பசுக்கள் யமலோகத்தில் அந்த பாபிகளை கத்தியினால் வெட்டி ரத்தத்தைப் பானஞ்செய்து கூத்தாடுகின்றன; சிரிக்கின்றன; கானஞ் செய்கின்றன; ராக்ஷஸர்கள் போல சந்தோஷப்படு கின்றன; இந்த லோகத்தில் எவர்கள் அபராதஞ் செய்யாதவர்களைப் பலவித உபாயங்களால் தன்னிடத்தில் விச்வஸிக்கும்படிச் செய்து கிராமத்திலாவது, காட்டி லாவது, சூலம், கயறு முதலியவைகளால் கொல்லு கிறார்களோ, அவர்கள் மரணமடைந்து சூலம், கயறு முதலியவைகளில் கோர்க்கப்பட்டு பசி, தாகங்களால் வருத்தப்பட்டு கூர்மையான மூக்குள்ள காக்கை, கழுகு, கொக்கு இவைகளால் கொத்தப்பட்டு தான் செய்த பாபத்தையே நினைத்துக் கொள்ளுகிறார்கள். எவர்கள் பூமியில் ஸர்ப்பங்கள் போல் உக்ரமான ஸ்வாவமுள்ள வர்களாக ப்ராணிகளை நடுங்கச் செய்கிறார்களோ, அவர்கள் மரணமடைந்த பிறகு தந்தசூகமென்ற நரகத்தை அடைகிறார்கள். அதில் ஐந்து தலையுள்ளதும், ஏழு தலையுள்ளதுமான ஸர்ப்பங்கள் சமீபத்தில் வந்து எலிகளைப் போல் பாபிகளை விழுங்குகின்றன. இந்த லோகத்தில் எவர்கள் சிறுவர்கள், குருடர்கள், பலமற்ற வர்கள் முதலியவர்களை பள்ளம் குதிரு, குல்மம்

முதலியவைகளில் மறைத்து வைத்து உபத்ரவிக்கிறார் களோ, அவர்களை மரணமடைந்த பிறகு பள்ளம் முதலியவைகளில் வைத்து விஷமுள்ள அக்னியாலும், புகையாலும் யமபடர்கள் உபத்ரவிக்கிறார்கள். எவன் தன் வீட்டிற்கு வந்த அதிதிகளை மிகுந்த கோபத்துடன் எரிப்பவன் போல் பார்க்கிறானோ, அவனுடைய கண்களை வஜ்ரம் போன்ற முகமுள்ள காக்கை, கழுகு, கொக்கு முதலியவைகள் கொத்திப் பிடுங்குகின்றன. எவன் தான் பணக்காரனென்ற கர்வமடைந்து குறுக்கான பார்வை உள்ளவனாகி ஆசார்யன் முதலியவர்களிடத்திலும், ஸந்தேஹமடைந்து பணம் செலவழிந்து விடுமோ, கெட்டுப் போய்விடுமோ என்ற யோஜனையால் முகம் வாடி, மனங்கலங்கி சுகமில்லாமல் பிசாசம் போல பணத்தைக் காத்துக் கொண்டிருக்கிறானோ, அவன் ஸூசிமுகமென்ற நரகத்தை அடைகிறான். அந்தப் பாபியான புருஷனை யமபடர்கள் நெசவுக்காரர்கள் போல சூத்ரங்களில் கோர்க்கிறார்கள். இம்மாதிரியான நரகங்கள் யமனுடைய லோகத்தில் பல இருக்கின்றன. அவைகளில் சில என்னால் சொல்லப்பட்டன. இம்மாதிரியே தர்மஞ் செய்தவர்கள் ஸ்வர்க்கத்திலிருக்கிறார்கள். தர்மம், அதர்மம் இவைகளுடைய பாக்கியால் திரும்பவும் பூலோகத்தில் ஜநநம் ஏற்படுகிறது.

37–40 நிவிருத்தி மார்க்கமானது இரண்டாவது ஸ்கந்தத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. புராணங்களில் பதினான்கு லோகங்களென்று சொல்லப்படும் அண்ட கோசமானது இவ்வளவுதான். இது மகாபுருஷனாகிய நாராயணனுடைய ஸ்தூலரூபம் அவருடைய மாயாகுணத்தால் ஏற்பட்டது. இதனை எவன், மிகுந்த

ஆதரவுடன் படிக்கிறானோ, கேட்கிறானோ பிறருக்குச் சொல்லுகிறானோ, ச்ரத்தை பக்தி இவைகளால் சுத்தமான புத்தியுள்ள அவனே ஸ்தோத்திரம் பண்ணக் கூடிய பகவானுடைய ஸூக்ஷ்மனுபவத்தைத் தெரிந்து கொள்ளுவான், பகவானுடைய ஸ்தூல ஸூக்ஷ்மரூபங்களைக் கேட்டு ஸ்தூலத்தை த்யானஞ் செய்து மெள்ள மெள்ள ஸூக்ஷ்ம ரூபத்தை அடைய வேண்டும். ஓ மகாராஜ! பூமி, த்வீபங்கள், வர்ஷங்கள், மலைகள், ஆகாசம், ஸமுத்ரம், பாதாளம், திக்கு, பகணம், லோகம், இவைகளுடைய அமைப்பாகிய அற்புதமான ஈச்வரனுடைய இரு ஸ்தூலரூபத்தைச் சொன்னேன். அது ஸகல ப்ராணிகளுக்கும் இருப்பிடமானது என்று சுகர் சொன்னார்.

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்கந்தம் 6

அத்தியாயம்–1

அஜாமினர் உபாக்யானம்

1–6 அதனைக் கேட்ட பரீக்ஷித்து மகாராஜன் சுகரை நோக்கி, "ஓ பகவன்; அர்ச்சிராதி மார்க்கமாகப் ப்ரஹ்ம லோகத்தை அடைந்து, அந்த ப்ரஹ்மதேவருடன் மோட்சத்தை அடைவது, அதற்குக் காரணமாகிய நிவிர்த்தி மார்க்கங்கள் ஆகிய இவைகள் உம்மால் சொல்லப்பட்டன. பிரகிருதி சம்பந்தம் அற்றுப் போகாத தனால் அடிக்கடி தேஹத்தைக் கொடுக்கக்கூடியதும், ஸ்வர்க்கம் முதலிய சுகத்தைக் கொடுப்பதுமான பிரவிர்த்தி மார்க்கத்தையும் சொன்னீர். (மூன்றாவது ஸ்கந்தத்தில்) அதர்மத்தாலுண்டாகிய பலவகை நரகங் களையும் சொன்னீர். ஸ்வாயம்புவ மனு முதல் மன்வந்தரத்தையும் நிரூபித்தீர். மேலும் பிரியவ்ருதர் உத்தானபாதர் இவர்களுடைய வம்சம், இவர்களுடைய சரிதம் ஆகியவைகளையும் த்வீபம்,வர்ஷம், சமுத்ரம் மலை நதி, மரங்கள், பூமண்டலம் இவைகளுடைய அளவு முதலியவைகளையும் ஜோதிச் சக்கரத்தையும் சொன்னீர். மிகுந்த பாக்யமுள்ளவரே! நரகத்தை அடைந்த புருஷன் எதனைச் செய்தால் அந்த வேதனை களை யடையாமல் சுகத்தை அடைவான்? அதனைச் சொல்ல வேண்டும்" என்றார்.

7–8 அதனைக் கேட்ட சுகர் "ஓ அரசனே! மனத்தாலும் வாக்கினாலும் சரீரத்தாலும் செய்த

பாபங்களுக்கு அவைகளைக் கொண்டே எவன் பிரயா சித்தம் செய்து கொள்ளவில்லையோ அவன் மரண மடைந்த பிறகு மேற்சொல்லிய நரகங்களை யடைந்து கடுமையான வேதனைகளை அனுபவிக்கிறான். ஆனதால் ரோகத்தின் காரணத்தை அறிந்த வைத்தியன் ரோகத்திற்குத் தக்கபடி வைத்தியம் செய்வதுபோல பாவத்திற்கு தக்கபடி மரணத்திற்கு முந்தியே பிராய சித்தம் செய்து கொள்ள யத்தனிக்க வேண்டும்" என்றார்.

9–10 அதனைக் கேட்ட அரசர் மகரிஷியை நோக்கி, "பாபிகள் கஷ்டப்படுவதைப் பார்ப்பதாலும் சாஸ்திரங்களில் கூறியதைப் படிப்பதாலும் பாபமானது 'கெடுதியைக் கொடுக்கும்' என்று தெரிந்து கொண்டும் புருஷன் பாபத்தைச் செய்கிறான்; அதற்குப் பிராயச் சித்தத்தை எப்படி அனுஷ்டிக்கலாம்? ஆதலால் பிரயாசித்தத்தால் பாபம் எப்படி நிவர்த்தியாகும். சில சமயம் பாபத்தில் பயந்து அதனை செய்யாமலிருக் கிறான். சில சமயம் அதனையே அதிகமாகச் செய் கிறான். ஆனதால் யானை ஸ்நானஞ் செய்வது போலப் பிராயச்சித்தம் வியர்த்தமானதென்று நினைக்கிறேன்" என்றார்.

11–20 அதனைக் கேட்ட சுகர், பிராயச்சித்த மாகிய கர்மாவினால் பாப கர்மங்கள் போக்கியில்லாமல் நாசமடைகிறதில்லை. பிராயச்சித்தம் முதலியவைகள் அவித்வானுக்காக ஏற்பட்டவைகள். கர்மங்களை அடியோடு நாசம் பண்ணக்கூடிய பிராயச்சித்தம் ஞானம் ஒன்றுதான். நித்தியம் ஆரோக்கியமான அன்னத்தையே புசிக்கும் மனிதனுக்கு வியாதிகள்

எப்படி உண்டாகிறதில்லையோ, அதுபோலவே நியமம் முதலியவைகளைச் செய்து கொண்டிருக்கும் புருஷன் தத்வஞானத்தை அடைகிறான். தர்மத்தை அறிந்த சிரத்தையுள்ள புருஷர்கள் முக்கரணங்களாலுண்டான பாபங்களை தபஸினாலும் ப்ரஹ்மசர்யத்தாலும், தமத்தாலும், தியாகத்தாலும்; ஸத்யத்தாலும், சௌசத்தாலும், யமத்தாலும், நியமத்தாலும் அக்னியானது புதரை எரிப்பது போல எரிக்கிறார்கள். ஸ்ரீ பகவத் பக்தர்களான சிலர் சூரியன் பனியைப் போக்குவதுபோல பக்தியினாலேயே ஸகல பாபங்களையும் நிவர்த்தித்துக் கொள்ளுகிறார்கள். கிருஷ்ணனிடத்திலேயே மனத்தைச் செலுத்திய பகவத் பக்தர்களை சேவிப்பதால் எப்படி சுத்தர்களாக ஆகிறார்களோ அப்படி தபஸ் முதலிய பிராயச்சித்தங்களால் பாபிகள் சுத்தர்களாக ஆகிறதில்லை. இந்தப் பக்தி மார்க்கமானது மிகவும் நல்லது. க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியது. பயமற்றது. ஏனென்றால் அந்த மார்க்கத்தை அடைந்தவர்கள் நல்ல ஸ்வபாவமுள்ளவர்களும், ஒன்றிலும் ஆசை இல்லாதவர்களும், நாராயணனையே முக்கிய கதியாய் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். நாராயணனிடத்தில் பக்தியில்லாத பாபிகள், எவ்வளவு பிராயச்சித்தங்களை அனுஷ்டித்தாலும் அவைகள் பரிசுத்தியை உண்டு பண்ணுகிறதில்லை. குளத்தை நதிகள் சுத்தப்படுத்துமா? எவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதாரவிந்தங்களில் மனத்தைச் செலுத்துகிறார்களோ, அவருடைய குணங்களைச் சொல்வதில் ஆசையுடையவர்களோ, அவர்கள் யமனையும், யமபடர்களையும் சொப்பனத்திலும் பார்க்க மாட்டார். இந்த விஷயத்தில் வெகுநாளைக்கு முன் யமதூதர்களுக்கும் விஷ்ணு தூதர்களுக்கும் நேர்ந்த ஸம்வாத பரமான ஒரு கதையைச் சொல்லுகிறேன், கேளும்."

21–31 கந்யாகுப்ஜம் என்ற தேசத்தில் அஜாமிளர் என்ற ஒரு ப்ராஹ்மணர் இருந்தார். அவர் தாஸியினிடத்திலேயே ஆசையுள்ளவர்; நல்லொழுக்கமற்றவர்; தாஸியினுடைய சேர்க்கையால் நிந்திக்கப்பட்டவர்; மேலுமவர் சொக்கட்டான் முதலிய சூதாட்டத்தாலும் வஞ்சனையாலும் கீழான விருத்தியைச் செய்துகொண்டு குடும்பத்தைப் போஷித்து, மற்றப் பிராணிகளை உபத்ரவித்து வந்தார். இம்மாதிரி தாஸியின் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகப் பாபத்தைச் செய்து கொண்டும் அவளுடைய புத்திரர்களைப் பார்த்துச் சந்தோஷித்துக் கொண்டும் எண்பது வயதைக் கழித்தார். அவருக்குப் பத்து புத்திரர்களுண்டு. அதில் இளையவனாகிய குழந்தைக்கு நாராயணன் என்று பெயர். தாய், தகப்பனார்கள் அந்தக் குழந்தையினிடத்தில் மிகவும் பிரியம் வைத்திருந்தார்கள். அஜாமிளர் இனிமையாகப் பேசும் அந்தக் குழந்தையினிடத்தில் மிகுந்த பிரியமுள்ளவராகி அதனுடைய விளையாட்டைப் பார்த்து மிகவும் சந்தோஷித்தார். மேலும் அவர் போஜனம் செய்யும் போதும் பானம் செய்யும்போதும் அக்குழந்தையினிடத்திலிருக்கும் சிநேகத்தால் அதற்கு ஆகாரம் முதலியவைகளைக் கொடுத்துச் சந்தோஷமடைவது வழக்கம். இம்மாதிரி விஷயங்களில் ஆசை கொண்டவராகிய அவர் தமக்கு மரணகாலம் நெருங்கியதைத் தெரிந்து கொள்ளாமலிருந்தார். இப்படி அஞ்ஞானராகக் காலத்தைக் கழிக்கும் அந்தப் ப்ராஹ்மணனுக்கு மரணகாலம் நெருங்கியதைத் தெரிந்து கொள்ளாமலிருந்தார். இப்படி அஞ்ஞானராகக் காலத்தைக் கழிக்கும் அந்தப் ப்ராஹ்மணனுக்கு மரணகாலம் சமீபித்தது. அப்பொழுது நாராயணனென்ற தம்முடைய குழந்தையையே நினைத்துக் கொண்டு

இருந்தார். அப்பொழுது பயங்கர ரூபமுள்ள மூன்று புருஷர்களைக் கண்டார். அவர்கள் பாசத்தைக் கையில் வைத்துக் கொண்டிருந்தார்கள்; அவர்கள் வக்ரமான மூக்குள்ளவர்கள். அவர்களுடைய மயிர்கள் மேலே தூக்கிக் கொண்டிருந்தன; அவர்கள் இந்தப் ப்ராஹ்மணரை அழைத்துக் கொண்டுபோக வந்த யமதூதர்கள்; அந்த சமயத்தில் தூரத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் நாராயணனென்ற குழந்தையைப் பார்த்து 'ஓ நாராயண! என்று உரக்க அழைத்தார். சாகுந்தருணத்தில் அஜாமிளருடைய முகத்திலிருந்து நாராயணன் என்ற திவ்ய நாமம் வெளிப்பட்டதால் அப்பொழுது விஷ்ணுவின் பார்ஷதர்கள் அவ்விடம் வந்தார்கள். பின்னுமவர்கள் யமதூதர்களைத் தடுத்து அஜாமிளரை விடுவித்தார்கள்.

32–36 விஷ்ணு தூதர்களால் தடுக்கப்பட்ட யம தூதர்கள் அவர்களை நோக்கி, "நீங்கள் யார்? தர்ம ராஜனுடைய உத்தரவிற்குத் தடை செய்கிறீர்கள், எங்கிருந்து வருகிறீர்கள். எதனால் இம்மாதிரி தடுக் கிறீர்கள்? நீங்கள் தேவர்களா அல்லது உபதேவர்களா? அல்லது சித்தர்களா? எல்லோரும் தாமரைஇதழ் போன்ற கண்களுள்ளவர்களாக இருக்கிறீர்கள். பீதாம் பரத்தைத் தரிக்கின்றீர்கள்; கிரீடம் குண்டலம் தாமரை மலர் மாலை, வில், அம்பறாத்துணி, கத்தி, கதை, சங்கம், சக்கரம், தாமரைமலர் இவைகளைத் தரிக்கின்றீர்கள்? நான்கு கைகளைத் தரிக்கிறீர்கள்? யௌவன வயது ள்ளவர்கள்; சரீர காந்தியாய் இருட்டைப் போக் கடிக்கின்றீர்கள். அப்படிப்பட்ட நீங்கள் தர்மராஜ னுடைய தூதர்களான எங்களை ஏன் தடுக்கிறீர்கள்" என்று கேட்டார்கள்.

37–68 அதனைக் கேட்ட விஷ்ணு தூதர்கள் அவர்களை நோக்கி, "நீங்கள் தர்மராஜனுடைய தூதர் களானால் தர்மத்தின் தத்துவத்தையும், அதர்மத்தின் லக்ஷணத்தையும் சொல்லுங்கள். எந்தப் பிரகாரமாகச் சிட்சை செய்கிறது? அதற்கு விஷயம் யார்? எதைச் செய்தவர்கள் தண்டிக்கக்கூடியவர்கள்? எல்லோரும் தண்டிக்கக்கூடியவர்களா? அல்லது மனிதர்களுக்குள் சிலரா?" என்று மேகம்போல் கம்பீரமாகக் கேட்டார்கள். இதனைக் கேட்ட யமதூதர்கள் அவர்களை நோக்கி, "வேதத்தால் விதிக்கப்பட்டதே தர்மம்; அதனால் விலக்கப்பட்டதே அதர்மம். வேதமென்பது ஸாக்ஷாத் நாராயணனே; தானாக உண்டானது. ஒருவராலும் செய்யப்பட்டதல்ல. எவருடைய ஸ்வரூபத்தில் முக்குண ஸ்வரூபிகளான இந்தப் பிராணிகளும், குணங்களும் ப்ராஹ்மணன் முதலிய பெயர்களும், அத்யயனம் முதலிய கிரியைகளும், வர்ணாச்ரமங்களும் இருக் கின்றனவோ அவரே நாராயணன். சூரியன், அக்னி, ஆகாசம், வாயு, ஹிருதயம், சந்திரன், ஸந்தியை, இரவு, பகல், திக்குகள், ஜலம் பூமி, காலம், தர்மம் இவைகள் ஜீவனால் செய்யப்படும் தர்மாதர்மத்திற்குச் சாட்சிகள், இவர்களால் அதர்மம் செய்தவனின்னானென்று தெரிய வருகிறது. அவனே சிட்சைக்கு ஆளாகிறான். மேலும், எல்லா மனிதர்களும் அவரவர்களுடைய கர்மத்திற்குத் தக்கபடி சிட்சிக்கத் தகுந்தவர்களாக ஆகிறார்கள். கர்மங்களைச் செய்தவர்களுக்கு குணங்களின் சேர்க்கை இருக்கிறது. தேகமுள்ளவன் கர்மத்தைச் செய்யாம விருக்க மாட்டான். அதனால் சுகம், துக்கம் இரண்டும் உண்டாகின்றன. எவனால் தர்மமாவது, அதர்மமாவது எவ்வளவு செய்யப்பட்டிருக்கிறதோ, அதன் பலனைப் பரலோகத்தில் அவனே அடைகிறான். ஓ தேவ!

சிரேஷ்டர்களே! இந்த லோகத்தில் ஜனங்கள் மூன்று வகைகளாகக் காணப்படுவது போல மறு லோகத்திலும் குண பேதத்தால் மூன்று வகையாக இருக்கிறார்கள் என்று ஊகிக்கிறோம். நடைபெறும் வசந்தம் முதலிய ருதுக்கள் எப்படிச் சென்றது, வரப்போகிறது. இவைகளின் புஷ்ப பலங்களைக் காட்டுகிறதோ, அதுபோல இந்த ஜன்மமானது முன் ஜன்மம், வரும் ஜன்மம் ஆகிய இவைகளுடைய தர்மம் அதர்மம் இவைகளைக் காட்டுகிறது. மேலும் அத்தர்யாமியாக இருக்கும் பகவான் தன் மனத்தாலேயே ஜீவனுடைய முந்திய ரூபத்தைத் தெரிந்து கொண்டு, பிந்தி அவனுக்குத் தகுதியான தேகத்தைப்பற்றி யோசிக்கிறார். அவர் உற்பத்தியற்ற பகவானல்லவா? அஞ்ஞானி எப்படி தமோகுணமுள்ளவனாகி வியக்கத்தக்கதையே உபாஸிக்கிறானோ, அப்படி ஜீவன் முன் ஜன்மத்திய ஞாபகமில்லாதவனாகி முன் ஜன்மத்தையாவது, பின் ஜன்மத்தையாவது அறிகிறதில்லை. மேலும் ஜீவன் தான் பதினாறு உபாதிகளுள்ளவனானாலும் ஞானேந்திரி யங்கள், கர்மேந்திரியங்கள் இவைகளுடைய விஷயங்கள் ஆகியவைகளைத் தான் பதினேழாவதாக இருந்து அனுபவிக்கிறான். பதினாறு கலைகளுள்ள லிங்க சரீரமானது ஜீவனிடத்தில் சந்தோஷம், துக்கம், பயம் இவைகளைக் கொடுக்கும் சம்ஸாரத்தை உண்டு பண்ணுகிறது. தேகமுடைய ஜீவன், காமம், குரோதம் இவைகளுக்கு வசப்பட்டிருப்பதுமல்லாமல் கர்மங்களைச் செய்ய வேண்டுமென்ற விருப்பமில்லாதவனாக இருந்தும் குளவியானது தன்னைச் சுற்றிக் கூட்டைக் கட்டிக் கொண்டு வெளிவரும் உபாயத்தை அறியா திருப்பதுபோலக் கர்மங்களைச் செய்து அதனால் மோகத்தை அடைகிறான். லோகத்தில் ஒருவனும்

கணநேரங்கூட கர்மத்தை செய்யாமலிருக்கிறதில்லை. ஆனால் முன் ஜன்மத்திய சம்ஸ்காரத்திற்குத் தக்கபடி இயற்கையான குணங்களால் தர்மத்தையாவது, அதர்மத்தையாவது தானாகச் செய்கிறான். மேலும், புருஷன், தாய், தகப்பனார்களுக்குத் தக்கபடி தங்களுடைய கர்மத்தால் ஸ்தூல சூட்சும சரீரத்தை அடைகிறான். புருஷனுக்கு பிரகிருதியின் சம்பத்தத்தால் இம்மாதிரியான கெடுதி உண்டாகிறது. ஈசுவரனை உபாஸிப்பதால் அந்த சம்ஸாரமானது நாசம் அடைகிறது. இந்தப் ப்ராஹ்மணர் வேதாத்தியானஞ் செய்தவன்; நல்லொழுக்கம், நற்குணங்கள் இவைகளுள்ளவன்; விரதங்களை அனுஷ்டித்தவன்; மிருதுவான ஸ்வபாவ முள்ளவன்; சாந்தன்; உண்மையே பேசுகிறவன்; மந்திரங்களை அறிந்தவன்; சுத்தன்; குரு, அக்னி, அதிதி, பெரியோர்கள் இவர்களை உபாஸிப்பவன்; அகங்காரமற்றவன்; ஸகல பிராணிகளிடத்திலும் பிரீதி யுள்ளவன்; ஸாது; சொற்பமாய்ப் பேசுகிறவன்; அசூயை இல்லாதவன்; இம்மாதிரியான இந்தப் ப்ராஹ்மணன் ஒருநாள் தகப்பனாருடைய உத்தரவின் பேரில் பழம், புஷ்பம், ஸமித், தர்ப்பங்கள் இவைகளைக் கொண்டு வருவதற்காக வனத்திற்குச் சென்றான். அவ்விடத்தில் சமித்து முதலியவைகளை எடுத்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பி வரும்பொழுது இழிகுலத்து ஒருவனைக் கண்டான். அவன் ஒரு தாஸியுடன் வெட்கமில்லாமல் கிரீடித்துக் கொண்டிருந்தான். அந்த தாஸியானவள் கள்ளைக் குடித்து அதனால் சிவந்த கண்களுடனும், மயக்க வெறியுடனும் அந்த இழிகுலத்தோனைத் தன் கையால் ஆலிங்கனஞ் செய்து கொண்டு இருந்தாள். அவனும் அவளோடு சிரித்துக்கொண்டும், பாடிக்கொண்டும் இருந்தான்.

அதனைக் கண்ட ப்ராஹ்மணன் மன்மத தாபங்கொண்டு தன் மனத்தைத் தன்னால் கூடியமட்டும் அடக்கியும் அடக்க முடியாமல் அதிகத் தாபத்தை அடைந்தான். அவள் நிமித்தமாக மன்மத பிசாசம் பிடித்து, ப்ராஹ்மணன் விவேகமில்லாதவனாகி அவளையே மனத்தில் தியானஞ் செய்துகொண்டு தன்னுடைய தர்மத்தை விட்டுவிட்டான். மேலும், தகப்பனார் சம்பாதித்த திரவியத்தால் அந்தத் தாஸியைச் சந்தோஷப்படுத்தினான். பின்னுமவன் தாஸியினுடைய கடைக்கண் பார்வைக்குச் சுவாதீனப் பட்டு நல்ல குலத்தில் பிறந்தவளும் யௌவன வயதை அடையாதவளுமான தன்னுடைய மனைவியையும் விட்டுவிட்டான். அல்ப புத்தியுள்ள இவன் தாஸியின் குடும்பத்தைப் போஷிப்பதற்காக நியாயமாகவாவது அநியாயமாகவாவது பலவிதமாகவும் பணத்தைச் சம்பாதித்தான். இவன் சாஸ்திரத்தை விட்டு தனதிஷ்டப்படி பெரியோர்களால் நிந்திக்கப்படும் நெறியை அனுஷ்டித்து வந்தபடியால் அவனுடைய ஆயுள் பாபமாகவும், அவன் புசிக்கும் அன்னம் முதலியவைகள் அசுத்தமாகவும் ஆயின. இதற்குத் தகுந்த பிராயச்சித்தத்தையும் இவன் செய்து கொள்ளவில்லை. ஆதலால் இவனை ,யமனுடைய சமீபம் கொண்டு போகிறோம். யமனால் சிட்சிக்கப்பட்டு இவன் சுத்தனாகி விடுவான்" என்றார்கள்.

அத்தியாயம்–2

அஜாமிளர் விஷ்ணுலோகஞ் சென்றது

1–21. அதனைக் கேட்ட நியாயத்தையறிந்த விஷ்ணு தூதர்கள் யமதூதர்களை நோக்கி, "தர்மத்தை அறிந்தவர்களுடைய சபையில் அதர்மம் நடக்கிறது. இது கஷ்டம். தண்டிக்கக் கூடாதவர்களான புண்யசாலிகளுக்கு வீணாகச்சிட்சை விதிக்கப்படுகிறது. எவர்கள் ஸகல பிரஜைகளையும் பிதாபோல் காப்பாற்றுகிறவர்களோ, சாதுக்களோ, சமமாக பார்ப்பவர்களோ அவர்களிடத்திலும் மாறுதல் ஏற்படுமனால் யாரைப் பிரஜைகள் சரணமடைவார்கள்? லோகத்தில் மேலானவர்கள் எதனைச் செய்கிறார்களோ, அதனையே மற்றவர்களும் செய்கிறார்கள். மேலும் அவர்கள் எதனைப் பிரமாணமென்று ஒப்புக் கொள்ளுகிறார்களோ, மற்றவர்களும் அதையே பிரமாணமென்று அனுசரிக்கிறார்கள். எவனுடைய மடியில் தலையை வைத்துக் கொண்டு தர்மம், அதர்மம் இவைகளை அறியாமல் லோகமானது, பசு போலக் கவலையற்றுத் தூங்குகிறதோ, பிராணிகளால் விரும்பக்கூடியவனும் தயவுள்ளவனுமாகிய அந்தப் புருஷன் தம்மிடம் ஆத்மாவை ஸமர்ப்பிப்பதும், விவேகமற்றதுமான லோகத்தை வஞ்சிக்கலாமா? இந்த அஜாமிளன் புத்ரனைக் கூப்பிடும் வியாஜமாகவாவது பகவானுடைய திவ்ய நாமத்தை உச்சரித்தான். இது கோடி ஜன்மத்தில் செய்த பாபங்களை நிவர்த்திக்கக் கூடிய பிராயச்சித்தம், நாராயண என்ற நான்கு அக்ஷரத்தை எவன் உச்சரிக்கிறானோ, அவன் எவ்வளவு பாபஞ் செய்தவனானாலும் அவன் பாபியல்ல. எல்லா பாபத்திற்கும்

இது பிராயச்சித்தமாக ஆகிவிடுகிறது. திருடுவது, கள் குடிப்பது, மித்ரனுக்கு துரோகஞ் செய்வது, ப்ராஹ்ம மணனைக் கொல்வது ஆசாரிய பத்னியைக் கூடுவது, ஸ்திரீ, அரசன், பிதா, ஆகிய இவர்களைக் கொல்வது முதலிய எந்த பாபஞ் செய்திருந்தாலும் அந்த பாபி களுக்கு ஸ்ரீ மகாவிஷ்ணுவின நாமத்தை உச்சரிப்பதும் அதனால் பகவானிடத்தில் புத்தியைச் செலுத்துவதுமே மேலான பிராயச்சித்தம். பாபியானவன் மனு முதலிய வர்களால் சொல்லப்பட்ட பிராயச்சித்தங்களை அனுஷ்டித்தாலும், ஸ்ரீ மகாவிஷ்ணுவின் நாமங்களை உச்சரிப்பதாகிய பிராயச்சித்தத்தால் சுத்தியடைவது போல ஆகிறதில்லை. அது உத்தம சுலோகனாகிய பகவானுடைய குணங்களை ஞாபகப்படுத்துகிறது. சாந்திராயணம் முதலிய பிராயச்சித்தத்தை அனுஷ்டித் தாலும் திரும்பவும் மனதானது கெட்ட மார்க்கத்தில் பிரவிர்த்திக்கிறது. ஆதலால் பகவானுடைய நாமங் களை உச்சரிப்பதே மேலான பிராயச்சித்தம். அதுவே சித்தத்தைச் சுத்தி செய்கிறது; அதனால் இந்த ப்ராஹ்மணன் சாகுந் தருணத்தில் பகவானுடைய நாமத்தை உச்சரித்ததால் ஸகல பாபங்களுக்கும் பிராயச் சித்தத்தை அனுஷ்டித்தவனாக ஆகிறான். ஆகையால் இவனை நீங்கள் கொண்டு போகவேண்டாம். மேலும், 'ஸங்கேதத்தாலாவாது, ப்ரகாஸமாகவாவது, பேசின வார்த்தையைப் பூர்த்தி செய்வதற்காவது பகவானுடைய நாமததை உச்சரித்தால் அது ஸகல பாபத்தையும் நிவர்த்திக்கிறது' என்று பெரியோர்கள் சொல்லு கிறார்கள். மேலும், உயரமான இடத்திலிருந்து கீழே விழும்பொழுது, வழியில் தடுக்கும்பொழுதும், சரீரத்தில் உபத்ரவத்தை அடைந்தபொழுதும், சர்ப்பம் முதலியவை கடித்த பொழுதும் ஜ்வரம் முதலிய தாபத்தை அடைந்த பொழுதும் தடி முதலியவைகளாலடிக்கப்பட்ட

பொழுதும், தெய்வச் செயலாக ஹரியென்று எவன் சொல்லுகிறானோ, அவன் வேதனையை அடையத் தகுந்தவனல்ல. புத்திசாலியான மனு முதலியவர்கள் மேலான பாபங்களுக்கு லகுவான பிராயச் சித்தங் களையும் யோசித்து விதிக்கிறார்கள். அந்தப் பாபங்கள் தபஸினாலும், தானத்தாலும், விரதம் முதலியவை களாலும் நசித்தாலும் அதன் வாஸனை நசிக்காததால் அதர்மத்திற்கு விதையாயிருக்கும் ஹிருதயம் சுத்தமாகிற தில்லை. அது பகவானுடைய பாத சேவையால்தான் சுத்தமாகிறது. மேலான வீரியமுள்ள மருந்தை தெய்வச் செயலாய் உபயோகித்த ரோகிக்கு ரோகம் எப்படி நிவர்த்தியாகிறதோ, அது போலவே தெரிந்தாவது, தெரியாமலாவது பகவானுடைய நாமத்தை எவன் உச்சரிக்கிறானோ, அவனுடைய ஸகல பாபங்களாகிய கட்டைகளை நாமமமாகிய அக்னி எரிக்கிறது. மந்திரத்தின் குணத்தை அறியாதவனானாலும் மனிதன் அதனை உச்சரிப்பதனால் அதன் பலனை அடை கிறானல்லாவா? ஓ தூதர்களே! இந்த விஷயத்தில் உங்களுக்குச் சந்தேகமிருக்குமானால் உங்களுடைய யஜமானனாகிய யமனைக் கேளுங்கள். அவருக்குத் தர்மத்தின் ரகசியம் தெரியும்" என்று என்று சொன்னார்கள்.

21–50. இம்மாதிரி அந்த விஷ்ணு தூதர்கள் பாகவத தர்மத்தை நிச்சயித்துச் சொல்லி அந்தப் ப்ராஹ்மணனை யமபாசத்திலிருந்து விடுவித்தார்கள். விஷ்ணு தூதர்களுடைய வார்த்தையைக் கேட்டு யம தூதர்கள் யமனுடைய அருகில் சென்று நடந்த செய்தியைத் தெரிவித்தார்கள். யமபாசத்திலிருந்து விடுபட்ட ப்ராஹ்மணன் பயமில்லாதவனாகி விஷ்ணு

தூதர்களை நமஸ்கரித்து எதனையோ சொல்ல ஆரம்பித்தான். அப்பொழுது அவர்கள் அவன் பார்த்து கொண்டிருக்கும் பொழுதே மறைந்தார்கள். பிறகு அஜாமிளன் இரண்டு தூதர்களுடைய பேச்சு வார்த்தை யையும், சுத்தமான பாகவத தர்மத்தையும், மூன்று குணங்களை ஆசிரயித்த யமதூதர்களால் சொல்லப் பட்ட தர்மத்தையும் கேட்டு பகவானுடைய சிறப்புக் களைச் சிரவணஞ் செய்ததால் பகவானிடத்தில் பக்தியை அடைந்தான், மேலும் தான் செய்த பாபங்களை நினைத்து மிகவும் துக்கித்தான். "நான் அறியாத்தன் மையால் தாஸியினிடத்தில் ஆசை வைத்து அவளி டத்தில் புத்ரரூபியாக அவதரித்து மிகுந்த கஷ்டத்தை அடைந்தேன். பதி விரதையான மனைவியை விட்டு கள் குடிக்கும் வேசியான இழிகுல மாதை அடைந்தேன். நான் பெரியோர்களால் நிந்திக்கப்பட்டவன்; மிகுந்த பாபத்தைச் செய்தவன்; குலத்தை கெடுத்தவன்; என்னை நிந்திக்கவேண்டும். தாய் தகப்பனார்கள் செய்த உபகாரத்தை நினையாமலும் வயது சென்றவர்களும், என்னைத் தவிர நாதனில்லாதவர்களும், பந்துக்கள ற்றவர்களும், துக்கிக்க கூடியவர்களுமான அவர்களைக் காப்பாற்றாமலிருந்தேன். ஆனதால் தர்மத்தைக் கெடுத்து, தனதிஷ்டப்படி சஞ்சரிப்பவன் எந்த நரகத்தை அடையப் போகிறான் இப்பொழுது பாசத்தால் கட்டி என்னை இழுத்தவர்கள் எங்கே சென்றார்கள்? அவர்களிடமிருந்து என்னைக் காப்பாற்றின நான்கு ஸித்தர்கள் எங்கே போனார்கள்? இது சொப்பனமா? அல்லது நேரில் பார்க்கப்பட்ட அற்புதமா? நான் இந்த ஜன்மத்தில் பாபியானாலும் சிறந்த தேவர்களைத் தரிசிக்கக்கூடிய புண்யத்தை முன் ஜன்மத்தில் செய்திருக்கிறேனென்று நினைக்கிறேன், இல்லாவிடில்

தாஸியினிடம் ஆசை கொண்ட மிக்க பாபியான என்னுடைய நாக்கு ஸ்ரீ பகவானுடைய நாமத்தை உச்சரிக்குமா? ப்ராஹ்மண்யத்தை இழந்தவனும், வெட்கமில்லாதவனும், பாபியுமாகிய எனக்கும் மங்களகரமாகிய நாராயண என்ற திவ்ய நாமத்திற்கும் எவ்வளவு தூரதம்யமிருக்கிறது, ஆனதால் திரும்பவும் சம்ஸாரத்தை அடையாமலிருக்கும்படி சித்தம், இந்திரியம், பிராணன் இவைகளை அடக்கிக்கொண்டு முயற்சிக்கிறேன். அவித்யை, காமம், கர்மம் இவைகளால் ஏற்பட்ட பந்தத்தை நிவர்த்தித்து கொள்கிறேன். ஸகல பிராணிகளிடத்திலும் பிரியம், சிநேகம் கருணை இவைகளை அடைகிறேன். எந்த மாயையினால் கிரிடா மிருகம் போல் ஸ்திரியுடன் கிரீடித்து அதமனானேனோ அதிலிருந்து நிவர்த்தி அடைகிறேன். தேகம் முதலியவைகளில் என்னுடையதென்கிற அகங்காரத்தை விட்டு, பகவானுடைய் நாமபஜனம் முதலியவற்றால் சுத்தமான மனத்தை - அவரிடம் சமர்ப்பிக்கிறேன்" என்று நிர்வேதத்தை அடைந்து கங்காத்துவாரம் சென்றார், "ஓ மகாராஜா! நொடிப் பொழுது ஸாதுக்களுடன் சேர்ந்ததால் அஜாமிளருக்கு இம்மாதிரியான புத்தியாயிற்று. பின்னுமவர் அங்கிருக்கும் தேவாலயத்தில் உட்கார்ந்து யோகத்தை அடைந்து, இந்திரியங்களிருந்து மனத்தை விலக்கி அனுபவ ரூபியான பரமாத்மாவிடத்தில் சேர்ந்தார். அப்பொழுது, முந்தி பார்க்கப்பட்ட விஷ்ணு தூதர் களைத் தரிசித்து அவர்களுக்கு நமஸ்காரஞ் செய்தார். உடனே கங்கையின் கரையை அடைந்தார். பின்னுமவர் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் தூதர்களுடன் பொன் விமானத்தின் மீதேறிக் கொண்டு ஸ்ரீ நாராயணனிருக்குமிடஞ் சென்றார். அவர் ஸகல தர்மங்களை விட்டு தாஸிக்குப்

புருஷனாயிருந்து நிந்திக்கக் கூடிய கர்மத்தை செய்து பதிதராகவிருந்தும், பகவானுடைய நாமத்தை உச்சரித் தபடியால் சுத்தரானார். பகவானுடைய நாமத்தை சொல்லுவதைவிடக் கர்மபந்தத்தை நிவர்த்திக்கக்கூடிய மார்க்கம் வேறில்லை. அவர்களுடைய மனதானது ரஜோகுணத்தாலும், தமோ குணத்தாலும் கலங்கி, திரும்பவும் கர்மத்தில் ப்ரவர்த்திக்கிறதில்லை. எவன் மிகவும் இரகசியமும், பாபத்தைப் போக்கக்கூடியதுமான இந்த இதிகாசத்தைச் சிரத்தையுடனும், பக்தியுடனும் கேட்கிறானோ, சொல்லுகிறானோ அவன் நரகத்தை அடைகிறதில்லை. யமபடர்களால் பார்க்கப்படுகிறதும் இல்லை. அவன் பாபியானாலும் விஷ்ணு லோகத்தில் வஸிக்கிறான். பிள்ளையினுடைய பெயராகிய நாராயணா வென்ற சப்தத்தைச் சாகுந்தருணத்தில் உச்சரித்த அஜாமிளரும் முக்தியடைந்தார். சிரத்தையுடன் பகவா னுடைய நாமத்தை உச்சரித்தவர்கள் முக்தியைடை வார்களென்பதில் என்ன சந்தேகம்?"

அத்தியாயம்–3

யமனுக்கும் தூதர்களுக்கும் ஸம்வாதம்

1–2 அதனைக் கேட்ட அரசர் மகரிஷியை நோக்கி, "இந்த தூதர்கள் யமனுக்கு அடங்கினவர்களாக விருப்பதால் எல்லாருக்கும் அதிபதியான தர்மராஜன், விஷ்ணு தூதர்களால் தம்முடைய கட்டளை நிறை வேறாததை அவர்கள் முகமாய்க்கேட்டு எதனைச் செய்தார்? யமனுடைய ஆஜ்ஞையானது ஓரிடத்திலும் அவமானம் அடைந்ததாகக் கேள்விப்பட்டதில்லை. இந்தச் சந்தேகத்தை நிவர்த்திக்க உம்மைத் தவிர யாராலும் முடியாது என்று நினைக்கிறேன்". என்று கூறினார்.

3–10 அதனைக் கேட்ட மகரிஷி அரசனை நோக்கி, "ஓ மகராஜ! விஷ்ணு தூதர்களால் யம படர்களுடைய முயற்சி தடைப்பட்டு அவர்கள் ஸம்யமனீ பட்டணஞ் சென்று யமனிடம் பின்வருமாறு தெரிவிக்கலானார்கள்; ஓ பிரபுவே! மூவகையான கர்மத்தைச் செய்யும் ஜனங்களுக்கு அதன் பலனைக் கொடுப்பவர்களான அதிபதிகளாக (சாஸ்தாவாகவிருப்பவர்கள்) எவ்வளவு தேவர்களிருக்கிறார்கள்? ஜனங்களைச் சிட்சிப்பவர்கள் வெகுபேர்களிருப்பார்களானால் யாருக்கு துக்கமும் சுகமும் உண்டாகும்? யாருக்கு அவைகள் கிடைக்கா? கர்மத்தைச் செய்யும் அநேக ஜனங்களைச் சிட்சிப் பவர்கள் அநேகர்களானால் சக்ரவர்த்திக்குட்பட்ட அதிகாரிகளுக்கு அந்த அதிகாரம் எப்படி உபசார மாத்திரமாகிறது. ஆனதால் ஸகல லோகங்களுக்கும் சாஸ்தாவாகவிருப்பவர் நீர் ஒருவரே. மேலும், நீர்

மனிதர்களால் செய்யப்படும் புண்ய பாபங்களைச் சொல்பவர்; அப்படி உம்முடைய ஆக்ஞைக்கு அற்புதமான சரீரமுள்ள நான்கு சித்தர்கள் அவமானஞ் செய்தார்கள். உம்முடைய உத்தரவின்படி மிக்க பாபியான ஒருவனை நாங்கள் இவ்விடம் அழைத்து வரும்பொழுது அவர்கள் எங்களுடைய பாசங்களை அறுத்து அவனைப் பலாத்காரமாக விடுவித்தார்கள். அந்தப் பாபியானவன் மரணகாலத்தில் நாராயணா என்று சொன்னான்; உடனே 'பயப்படாதே' என்று சொல்லிக் கொண்டு அவர்கள் வந்தார்கள். அவர்கள் எவர்கள்? சொல்லக்கூடுமானால் சொல்லவேண்டும்" என்று கேட்டார்கள்.

11–30 அதனைக் கேட்ட யமன் ஸ்ரீ மகாவிஷ்ணு வினுடைய பாதாரவிந்தத்தைத் தியானஞ் செய்து கொண்டு தூதர்களை நோக்கி, 'ஸ்தாவர ஜங்கம ரூபமான ஜகத்திற்கு அதிபதியாக எனக்கும் மேலானவர் ஒருவரிக்கிறார். இந்த ஜகத்தானது வஸ்திரத்தின் நூல்கள் போல் அவரிடத்தில் ஓதமாகவும், பிரோதமாக வுமிருக்கிறது; அவருடைய அம்சத்தாலேயே இந்த ஜகத் உண்டாகிறது; காப்பாற்றப்படுகிறது. நாசமடை கிறது; மூக்குக் கயிற்றினால் கட்டப்பட்ட ரிஷபம் போல் லோகமானது அவருக்குச் சுவாதீனமாக இருக்கிறது. அவர் பசுக்களைத் தும்பினால் கட்டுவதுபோல் ஜனங் களால் கட்டப்பட்ட எல்லா ஜனங்களும் அவருக்கு வசப்பட்டு கர்மங்களைச் செய்கிறார்கள். நான், மகேந்த்ரன், நிருதி, வருணன், ஸோமன், அக்னி, ஈசானன், வாயு, சூரியன், ப்ரஹ்மதேவர், ஆதித்யன், விச்வே தேவர்கள், பசுக்கள், ஸாத்தியர்கள், மருத் கணங்கள், ஸித்தர்கள், பிருகு முதலிய மற்ற

பிரஜாபதிகள் ஆகிய எல்லோரும் ரஜோ குணம் தமோ குணம் ஆகிய இவைகளையுடைய சம்பந்த மற்றவர்கள்; ஸத்வ குணத்தையே முக்கியமாயுடைய வர்கள்; அவர்களாலேயே அந்தப் பகவானுடைய அபிப்பிராயம், நடை ஆகிய இவைகள் அறிய முடியாதவை. மற்றவர்களால் அறியப்படுமா? அவர் இந்திரியங்களுக்கும், ஹிருதயத்திற்கும், பிராணனுக்கும் வாக்குக்கும், புலப்படுகிறதில்லை. மேலுமவர் ஜீவர் களைப் பார்த்துக் கொண்டிருப்பவர் போல் சக்ஷுஸைப் பார்க்க முடியுமா? (பிரமாணத்திற்குப் பரமாத்மா விஷயமாகிறதில்லையென்று கருத்து) அந்தப் பகவான் ஸ்வதந்திரர்; எல்லாவற்றிற்கும் அதிபதி; மாயைக்கு அதிபதி; மஹாத்மா; பரன்; அவருடைய தூதர்கள் அழகான ஸ்வரூபங்களுள்ளவர்களாகி அவருடைய ஸ்வரூபம், குணம், ஸ்வபாவம் ஆகிய இவைகளை அடைந்து சஞ்சரிக்கிறார்கள். அந்த விஷ்ணு தூதர்கள் தேவர்களால் பூஜிக்கப்பட்டவர்கள். அவர்களுடைய ஸ்வரூபம் பார்க்கமுடியாதது; அவர்கள் விஷ்ணு பக்தர் களைச் சத்ருக்களிடமிருந்தும், என்னிடமிருந்தும், அக்னி முதலியவைகளிடமிருந்தும் காப்பாற்றுகிறார்கள். பகவானால் ஏற்படுத்தப்பட்ட தர்மத்தை ரிஷிகளும், தேவர்களும் அறியார்கள். அசுரர்களுக்கும், மனிதர் களுக்கும் வித்யாதரர்களுக்கும், சாரணர்களுக்கும் எப்படித் தெரியும்? ப்ரஹ்மதேவர், நாரதர், பரமசிவன் ஸநத் குமாரர்கள், கபிலர், மனு, ப்ரஹ்லாதர், ஜனகர், பீஷ்மர், பலி, வியாஸர், நான் ஆகிய இவர்களுக்கு பாகவத தர்மம் தெரியும். அது ரகசியமானது; சுத்தமானது; அதனைத் தெரிந்து கொள்வது மிகவும் கஷ்டம். அதனைத் தெரிந்து கொண்டால் மோக்ஷத்தை அடைவான. ஸ்ரீ பகவானுடைய திவ்ய நாமங்களை

உச்சரிப்பது முதலியவைகளால் பகவானிடத்தில் பக்தி செய்வதே மேலான தர்மமெனப்படுகிறது. "ஓ தூதர்களே! பகவானுடைய நாமத்தின் மகிமையைப் பாருங்கள். அதனை உச்சரித்த மாத்திரத்தில் அஜாமிளனும் யமபாசத்திலிருந்து விடுபட்டான். ஆனதால் பகவானுடைய குணங்களையும், சரிதங்களையும் சொல்வது மனிதர்களுடைய பாபத்தை நிவர்த்திக்கப் போதுமானதாகிறது. மிக்க பாபியான அஜாமிளர் சாகுந் தருணத்தில் நாராயண என்று புத்திரனை அழைத்ததால் முக்தி அடைந்தார். ஜனங்கள் மாயையால் மோஹமடைந்தவர்களாகிப் பெரும்பாலும் இந்த தர்மத்தைத் தெரிந்து கொள்ளுகிறதில்லை. மதுபோலவும், புஷ்பம் போலவும் அழகான வேதத்தில் சொல்லிய யாகத்தில் சிரத்தையுள்ளவர்களாக இருக்கிறார்கள். புத்திசாலிகள் மூன்று கரணங்களையும் ஸமர்ப்பிக்கிறார்கள். அவர்கள் என்னுடைய சிட்சையை அடையமாட்டார்கள். அவர்களுக்குப் பாபமிருக்குமானாலும் பகவானுடைய நாமத்தை யுச்சரிப்பதனாலேயே அது நசித்திறது. மேலும் எவர்கள் பகவானையே சரணமடைந்தார்களோ, ஸாதுக்களோ, எல்லாவற்றையும் ஸமமாகப் பார்ப்பவர்களோ அவர்களைத் தேவர்களும், ஸித்தர்களும் தோத்திரஞ் செய்கிறார்கள். ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் கதாயுதத்தால் காப்பாற்றப்பட்ட அவர்களிடம் நீங்கள் போகவேண்டாம்; அவர்களுக்கு நாம் அதிபதியல்ல. மேலும், எவர்கள், ஆசைகளையொழித்த பரமஹம்ஸர்களால் அனுபவிக்கப்பட்ட பகவானுடைய பாதாரவிந்த மதுரஸத்தில் ஆசைப்படாமல் நரகத்திற்குக் காரணமான ஸம்ஸாரத்தில் ஆசைப்படுகிறார்களோ, அந்த அஸத்துக்களை நீங்கள் என்னிடம் அழைத்து வாருங்கள்; எவர்களுடைய நாக்கு பகவானுடைய

திவ்ய நாமங்களைச் சொல்லவில்லையோ, எவர்களுடைய மனமானது பகவானுடைய பாதாரவிந்தத்தைத் தியானிக்கவில்லையோ, எவர்களுடைய தலையானது ஒரு தடவையாவது பகவானை நமஸ்கரிக்கவில்லையோ, அந்த அஸ்த்துக்களான ஜனங்களைக் கொண்டு வாருங்கள். அந்த மகாபுருஷனுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன்; அறியாத்தன்மை உள்ளவர்களான தூதர்களால் செய்யப்பட்ட அபாரதத்தைப் புராண புருஷராகிய பகவான் சகித்துக் கொள்ளட்டும்; அஞ்சலி செய்கிறோம்" என்றார்.

31–35 ஓ பரீக்ஷித்து மகாராஜனே! மகான்களுக்கும் ஜகத்திற்கும் மங்களகரமான ஸ்ரீ மகாவிஷ்ணுவின் திவ்ய நாமங்களை உச்சரிப்பதே மேலான பிராயச்சித்தமென்று தெரிந்து கொள்ளும். மகா விஷ்ணுவின் மேலான சரிதங்களைச் சொல்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் அவரிடத்தில் பக்தியுண்டாகிறது. அதனால் புருஷன் சுத்தியை அடைவதுபோல் விரதம் முதலியவைகளால் சுத்தனாகிறதில்லை. ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதாரவிந்தத்தின் மதுவைப் பானஞ் செய்தவன் திரும்பவும் ஸம்ஸாரத்தை விரும்ப மாட்டான். அதன் ரஸத்தை அறியாதவன். பாப நிவர்த்திக்காகப் பிராயச்சித்தத்தைச் செய்கிறான். (அது யானையின் ஸ்நானம் போலாகிறது). இம்மாதிரி யமபடர்கள் தங்களுடைய யஜமானனாகிய யமனுடைய வார்த்தையைக் கேட்டு பகவானுடைய மகாத்மியத்தை நினைத்து ஆச்சரியப்பட்டு அது முதல் பகவத் பக்தர்களைப் பார்ப்பதற்கு பயமுள்ளவர்களாக இருந்தார்கள். இந்த ரகசியமான இதிஹாசத்தை அகஸ்திய பகவான் மலய பர்வதத்திலிருந்து பகவானைப் பூஜித்துக் கொண்டே சொன்னார்.

அத்தியாயம்–4

தட்சருடைய வம்சம்

1–2. அதனைக் கேட்ட மஹரிஷியை நோக்கி, "தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள், நாகங்கள், மிருகங்கள் பறவைகள் ஆகிய இவைகளுடன் (ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில் நடந்த) வரலாற்றைச் சுருக்கமாகச் சொன்னீர், பகவான் எந்த சக்தியால், எந்தப் பிரகாரமாக சிருஷ்டித்தாரோ, அதை விரிவாகச் சொல்லவேண்டும்" என்று கேட்டுக்கொண்டான்.

3–16. ஓ சௌனகாதி மகரிஷிகளே! அதனைக் கேட்ட வியாஸ புத்திரரும், மகா யோகியுமான சுகர் கேள்வியைப் பற்றிச் சிலாகித்துப் பின்வருமாறு விடை கூறினார்: "எப்பொழுது பிரசேதஸ்ஸின் புத்திரர் களான் பிராசீன பர்ஹிஸ்ஸுக்கள் சமுத்திரத்திலிருந்து கிளம்பி பூமியில் மரங்கள் நெருக்கமாக முளைத் திருப்பதைக் கண்டார்களோ. அப்பொழுது அவர்கள் மரங்களிடத்தில் கோபம் கொண்டார்கள். மேலும் அவர்கள் மரங்களை எரிப்பதற்காக முகத்திலிருந்து வாயுவையும், அக்னியையும் உண்டுபண்ணினார்கள். அவைகளால் மரங்கள் எரிக்கப்பட்டன. அதனைப் பார்த்த ஸோமராஜன் அவர்களுடைய கோபத்தைத் தனிப்பதற்காகப் பிராசீன பர்ஹிஸ்ஸுக்களை நோக்கி, "ஓ மிகுந்த பாக்யமுள்ளவர்களே! நீங்கள் லோகத்தை விருத்தி செய்யும் பிரஜாபதிகள்; தீனர்களான மரங்களை எரிக்க வேண்டாம். ப்ரஹ்மதேவருக்குப் பதியும், நாசமில்லாதவருமான ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர், மரங்களையும், ஓஷதிகளையும், பக்ஷயத்தையும்,

அன்னத்தையும் முன்பு உண்டுபண்ணினார். சஞ்சரிக்கும் பிராணிகளுக்கு அசையாப் பொருள்களும், காலால் நடப்பவைகளுக்குக் காலில்லாதவைகளும், கையில்லா தவைகள் கையுள்ளவைகளுக்கும், இரண்டு கால் பிராணி களுக்கும் நாற்கால் பிராணிகளும் ஆகாரங்களாக இருக்கின்றன. தேவதேவராகிய உங்களுடைய தகப்பனார் பிரஜைகளை சிருஷ்டிக்கும்படி உங்களுக்கு உத்தரவு செய்திருக்கிறார், அப்படியிருக்க மரங்களை எரிக்க விரும்புவது உசிதமா? உங்களுடைய முன்னோர்களால் அனுஷ்டிக்கப்பட்ட மார்க்கத்தை அனுசரியுங்கள். கோபத்தை அடக்கி கொள்ளுங்கள். குழந்தைகளுக்குத் தாய் தகப்பனார்களே பந்துக்கள். கண்களுக்கு இமைகளே பந்து. ஸ்திரீகளுக்கு பார்த்தாவே பந்து. பிரஜைகளுக்கு அரசனே பந்து. ப்ரஹ்மசாரி முதலியவர்களுக்கு கிருகஸ்தாச்ரமத்திலிருப்பவன் பந்து. அக்ஞர்களுக்கு வித்வான் பந்து. ஸகலப் பிராணிகளி டத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணு அந்தர்யாமியாக இருக்கிறார். ஆனதால் எல்லாவற்றையும் அந்தப் பகவானாகவே பார்க்க வேண்டும். அப்படிச் செய்வதால் உங்களி டத்தில் பகவான் சந்தோஷிப்பார். எவன் சரீரத்தில் உண்டான கோபத்தை ஆத்ம விசாரத்தால் அடக்கிக் கொள்கிறானோ அவன் முக்குணங்களைத் தாண்டு கிறான். மரங்களை எரித்தது போதும்; மற்றவைகளுக்கு க்ஷேமமுண்டாகட்டும். விருட்சங்களின் பெண்ணாகிய இந்தக் கன்னிகையை விவாகஞ் செய்து கொள்ளுங்கள்" என்று சொல்லி அந்தப் பெண்ணை அவர்களுக்குக் கல்யாணஞ் செய்வித்து தமதிஷ்டப்படி சென்றார். அவர்களும் அந்தப் பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொண்டார்கள்.

17–22. அந்தப் பெண்ணிடத்தில் அவர்களுக்கு

தட்சர் பிறந்தார். அவருடைய சிருஷ்டியால் லோகம் பூர்ணமாயிற்று. பெண்களிடத்தில் ப்ரீதியுள்ளவரான தட்சர் ரேதஸ்ஸாலும், மனத்தாலும் பிராணிகளைச் சிருஷ்டித்தார். அதனைச் சொல்லுகிறேன்; சுவனமாகக் கேளும். அந்த தட்சர் தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள். ஆகாயம், பூமி, ஜலம் இவைகளில் வாழும் பிராணிகள் ஆகிய இவைகளை மனத்தாலேயே சிருஷ்டித்தார்; அதனாலும் பிரஜைகள் அதிகமாக விருத்தியாகவில்லை. அப்பொழுது விந்திய பர்வதஞ் சென்று கடுமையான தவம் செய்தார். அவ்விடத்தில் அகமர்ஷணம் என்ற சிறந்த தீர்த்தமொன்றிருக்கிறது. அதில் ஒவ்வொரு காலங்களிலும் ஸ்நானஞ் செய்து, தபஸ் செய்து அதனால் ஸ்ரீ மகாவிஷ்ணுவை சந்தோஷப்படுத்தினார். மேலுமவர், ஹம்ச குஹ்யம் என்ற ஸ்தோத்திரத்தால் பகவானைத் துதித்தார். அதனால் தட்சரிடம் பகவான் சந்தோஷமடைந்தார். அந்த ஸ்தோத்திரத்தை உமக்குச் சொல்லுகிறேன்.

ஹம்ஸ குஹ்யம்

23–34. எல்லோருக்கும் மேலானவரும், அமோகமான சித்சத்தியுள்ளவரும், ஜீவனுக்கும், மாயைக்கும், பந்துவும் குணங்களையே தத்துவமாக நினைத்தவர்களால் பார்க்க முடியாத ஸ்வரூபமுள்ளவரும், அசங்கர மற்றவரும், தாமாகப் பிரகாசிப்பவருமான புருஷனுக்கு நமஸ்காரஞ் செய் கிறேன். மேலும் குணமானது குணமுள்ளதை எப்படித் தெரிந்து கொள்கிறதில்லையோ. அப்படி ஜீவன் தன் னுடைய சரீரத்திலேயே வசித்து இந்திரியங்களைப் பிரவர்த்திக்கச் செய்வது முதலிய உதவி செய்து கொண்டிருக்கும் தோழனாகிய பரமாத்மாவைத் தெரிந்து

கொள்ளுகிறதில்லை. (திருஷ்டாவானவர் திருச்யமாக ஆகிறதில்லை என்று கருத்து) அப்படிப்பட்ட மஹேச் வரனுக்கு நமஸ்காரம். குணமானது ஜடமாகையால் அது குணியைத் தெரிந்து கொள்ளாமலிருப்பது நியாயம். ஜீவன் சேதனனாகையால் அவனால் பரமாத்மா ஏன் அறியப்படவில்லை என்றால் தேகம் பிராணன்கள், இந்திரியங்கள். அந்தக்கரணம், பூதங்கள், தன்மாத்ரைகள் ஆகிய இவைகள் தங்களுடைய ஸ்வரூபத்தையும், இந்திரியங்களையும், அபிமானி தேவதைகளையும் தெரிந்துகொள்ளச் சக்தியற்றவர்கள். ஜீவன் அவைகளையும், அவைகளுக்குக் காரணங் களாகிய குணங்களையும் அறியக்கூடிய சக்தியுள்ளவன். ஆனாலும் எந்த ஸர்வஞ்ஞராகிய புருஷனை அறிய மாட்டானோ, அந்த அனந்தரைத் துதிக்கிறேன். நாமங்களையும், ரூபங்களையும் பிரகாசப்படுத்தும் மனமானது எப்பொழுது வியவகாரமற்றிருக்குமோ திருச்யத்தின் நினைவானது எப்பொழுது வியவகார மற்றிருக்குமோ, திருச்யத்தின் நினைவானது எப்பொழுது நாசமடையுமோ, அப்பொழுது சுத்தமான மனத்தில் எவர் நிஜரூபத்துடன் பிரகாசிக்கிறாரோ. அந்த ஹம்ஸருக்கு நமஸ்காரம். இருபத்தேழு தத்துவங்களால் மறைக்கப்பட்டவரும், ஹிருதயத்தில் தியானத்தால் நிலைக்கச் செய்யப்பட்டவருமான எந்தப் பகவானை, வித்வான்கள் பதினைந்து ஸாமிதேனி" மந்திரங்களால் பிரகாசிக்கக்கூடியதும், கட்டையில் மறைந்திருப்ப துமான அக்னியைக் கடைந்து எடுப்பதுப் போலத் தெரிந்துகொள்கிறார்களோ, நிரூபிக்க முடியாத மாயா சக்தியுள்ளவரும், ஜகத் ஸ்வரூபியும் ஸகல நாமங்களுள்ளவரும் ஸகல விசேஷங்களுள்ள மாயை அற்றவராகையால் கேவல சுகானுபவ ஸ்வரூபியுமான

அந்தப் பகவான் என்னிடம் தயை செய்யட்டும். எது வாக்கினால் சொல்லப்பட்டதோ, எது புத்தியால் நிரூபிக்கப்பட்டதோ, எது இந்திரியங்களாலும், மனத்தாலும் நிரூபிக்கப்பட்டதோ அது பகவானுடைய சுயம் பிரகாச ரூபமாக ஆகிறதில்லை. ஏனென்றால், அது குணங்களுடைய உற்பத்தி நாசம் ஆகிய இவைகளால் ஏற்பட்டது. மேலும் புருஷன் எதில், எதனிடமிருந்து. எதனைக்கொண்டு, எதற்கு, எதற்காக, எதனைச் செய்கிறானோ, செய்விக்கிறானோ அதற்குக் காரணமும், ப்ரஹ்மா முதலிய மேலானவர்களுக்கு காரணமும், எல்லாவற்றிற்கும் முந்தியதும் ஸஜாதீய மற்றதும், ஒன்றாயும் இருப்பதே ப்ரஹ்மம். அந்த ப்ரஹ்மத்தினுடைய சக்திகளே வாகிகளுடைய விவாதத்திற்குக் காரணங்களாக இருக்கின்றன. அவைகளே அடிக்கடி வித்வான்களுக்கும் மோகத்தை உண்டுபண்ணுகின்றன. அளவற்ற குணங்களுள்ள அந்த மகா புருஷனுக்கு நமஸ்காரம். மேலும் யோக சாஸ்திரம் பரமாத்மாவிற்கு அவயவங்களற்றவரென்றும் விருத்தமாகச் சொல்லுகின்றன. ஆனாலும் இவ்விரண்டு சாஸ்திரங்களுக்கு சமமும், மேலானதும்; அனுகூலமும், பூர்ணமுமானதே ப்ரஹ்மம். அவருக்கு நமஸ்காரம். பகவான் நாமரூபங்களற்றவரானாலும் தம்மைச் சரணமடைந்தவர்களைக் காப்பாற்றுவதற்காக அவதாரங்களைச் செய்து நாமங்களையும் அடைகிறார். அந்தப் பகவான் என்னிடம் சந்தோஷமடையட்டும். வாயுவானது பூமியின் குணமாகிய கந்தத்தை அடைந்து பலவகையாகத் தோன்றுவது போல எந்த பகவான் பிரகிருதி சம்பந்தத்தாலேற்பட்ட உபாசனா மார்க்கங்களால் அந்த அந்த வாசனைக்குத்தக்கபடி அந்தர்யாமியாக விருந்து அவரவர்கள் விரும்பிய பலனைக்

கொடுக்கிறாரோ, அப்படிப்பட்ட ஈச்வரன் என்னுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்யட்டும்.

35–41. அந்த அகமர்ஷணமென்ற தீர்த்தத்தில் மேற்சொல்லிய மந்திரங்களால் பகவான் துதிக்கப்பட்டு அவ்விடத்தில் தட்சருக்குத் தரிசனங் கொடுத்தார். அப்பொழுது பகவான் கருடன் மீது பிரகாசித்திருந்தார். அவர் எட்டுக் கைகளுடையவர்; சங்கம், சக்ரம், கத்தி கேடயம், பாணம், வில், பாசம், கதாயுதம் ஆகிய இவைகளைத் தரித்திருந்தார் மேலுமவர் பீதாம்பரத்தைத் தரித்தவர்; மேகம்போல் கருத்த திருமேனி உள்ளவர் பிரசன்ன முகமுள்ளவர் வனமாலை தரித்தவர். ஸ்ரீவத்ஸம், கௌஸ்துபம் இவைகளுள்ளவர். உத்தமமான கிரீடம், வளை, மகரகுண்டலம் ஆகிய இவைகளால் பிரகாசிப்பவர்; காஞ்சி, தோள்வளை, மோதிரம், வளை, பாதஸரம் இவைகளால் அலங்கரிக்கப்பட்டவர்; அவருடைய ரூபமானது மூவுலகத்தையும் மோஹிக்கச் செய்யக்கூடியதாக இருந்தது. மேலும் நாரதர், நந்தர் முதலிய பார்ஷதர்களும் அவருடனிருந்தார்கள்; ஸித்தர்களும், கந்தர்வர்களும், சாரணர்களும் அவரைத் துதித்தார்கள்; மிகவும் அற்புதமான அந்த ஸ்வரூபத்தைக் கண்ட தட்சர் பயப்படாமல் தண்டம் போல் நமஸ்கரித்தார். ஆனாலும் அவர் மலையாறுகளால் நிறைந்த நதிகள்போல் ஆனந்தத்தால் பூரணராகிப் பேச முடியாதவராக விருந்தார்.

42–54. ஸகல பிராணிகளுடைய அபிப்ராயத்தை அறிந்தவராகிய பகவான் பக்தராகிய பிரஜாபதியை நோக்கி "பிரசேதஸ்ஸின் குலத்தில் பிறந்த ஓ மிகுந்த பாக்யமுள்ளவரே! தபசின் சித்தியை அடைந்தீர்;

சிரத்தையுடன் என்னிடத்தில் மனத்தைச செலுத்தினீர்; பிராணிகள் விருத்தியடைய வேண்டுமென்பதே என்னுடைய அபிப்ராயம். உம்முடைய தபஸானது லோகத்தை விருத்தி செய்யக்கூடியதாகையால் உம்மிடத்தில் நான் சந்தோஷமடைந்தேன். ஜனங்களை சிருஷ்டிக்கக்கூடிய ப்ரஹ்மதேவர், பரமசிவன், நீர், மனுக்கள் தேவ சிரேஷ்டர்கள் ஆகிய எல்லாரும் என்னுடைய விபூதிகளேயாம். யமம், நியமம் முதலிய வைகளுடன் கூடிய ஸந்தியாவந்தனமாகிய தபஸே ஹிருதயம், வித்தையே தேஹம், தியானம் முதலிய கிரியைகளே ஸ்வரூபம், யாகங்களே அங்கங்கள். தர்மமே ஆத்மா, தேவர்களே பிராணங்கள். இந்த ஜகத் உண்டாகிறதற்கு முந்தி நான் மாத்திரம் இருந்தேன். கிராஹ்யமாவது கிராஹகமாவது ஒன்றுமில்லை. இந்திரிய வியாபாரங்கள் சைதன்னிய மாத்திரமாக இருந்தபடியால் தூங்கினவை போலிருந்தன. அளவற்ற குணமுள்ள என்னிடத்திலிருந்து மாயையும், அதனிடமிருந்து பிரம்மாண்டமும், அப்படியே ப்ரஹ்மதேவரும் உண்டானார்கள். அந்த ப்ரஹ்மதேவர் மேலான வீரியத்துடன் ஸகல லோகத்தையும் சிருஷ்டிக்கும் விஷயத்தில் முயற்சித்துக்கொண்டு தம்மை ஸமர்த்தனாக நினைத்தார். அப்பொழுது நான் அவரைக் கடுமையான தபஸை செய்யும்படி ஆக்ஞாபித்தேன். அவர் தபஸ் செய்து பிரஜாபதிகளான உங்களை முதலில் சிருஷ்டித்தார், பஞ்சஜனர் பிரஜாபதியினுடைய புத்ரியான அஸிகநீ என்பவளை நீர் கல்யாணம் செய்துகொள்ளும். அவளிடத்தில் நீர் பல பிரஜைகளை உண்டுபண்ணுவீர். உமக்குப் பிற்பட்ட பிரஜைகளும் என்னுடைய மாயையின் மகிமையால் மகளிருடன் சேர்ந்து கிரீடித்து,

பிரஜைகளை உண்டுபண்ணுவதுடன் என்னுடைய ஆக்ஞையைப் பரிபாலிப்பார்கள்!" என்று சொல்லி விட்டு, தட்சர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே பகவான் மறைந்தார். அது அவருக்கு கனவு போலிருந்தது.

அத்தியாயம்–5

தட்சர் நாரதரை சபித்தது

1–9 விஷ்ணுமாயையால் மோஹித்த அந்த தட்சர் அஸிக்நி என்பவளிடத்தில் ஹார்யச்வர் என்ற பெயருள்ள பதினாயிரம் புத்திரர்களை உண்டுபண்ணினார். அந்தப் புத்திரர்கள் எல்லோரும் ஒரே மாதிரியான ஸ்வபாவ முள்ளவர்கள். அவர்களைப் பார்த்துத் தட்சர் பிரஜை களை சிருஷ்டிக்கும்படி ஏவினார். அதனைக்கேட்ட அவர்கள் மேற்கு திக்கை நோக்கிச் சென்று ஸிந்து, சமுத்திரம் இவைகளுடைய சங்கமத்தில் இருக்கும் நாராயண தீர்த்தத்தை அடைந்தார்கள். அதில் ஸ்நானஞ் செய்ததால் அவர்களுடைய மனமானது சுத்தமாயிற்று; முக்தி மார்க்கத்தில் ஆசை உண்டாயிற்று; ஆனாலும் அவர்கள் பிரஜைகளை விருத்திசெய்யும்படி பிதா வினால் ஆக்ஞாபிக்கப்பட்டபடியால் மிகவும் கடுமை யாகத் தபஸ் செய்தார்கள். தேவரிஷியாகிய நாரதர் அவர்களை நோக்கி, ஓ ஹார்யச்வர்களே! நீங்கள் அஞ் ஞானிகள்; பூமியின் எல்லையைத் தெரிந்துகொள்ளாமல் ஜனங்களை எப்படி சிருஷ்டிக்கப் போகிறீர்கள். மேலும், நீங்கள் ஒரே மனிதனுள்ள ராஜ்யத்தையும் உட்பிரவேசித்தவன் வெளியில்வரமுடியாத பிலத்தை யும், பலவகையான மாதர்களையும் விபசாரியின் பர்த்தாவாகிய புருஷனையும், இரண்டு பக்கமும் பிரவஹிக்கும் நதியையும், இருபத்தைந்து பிராணி களுடைய கிரகத்தையும், பலவகையான வார்த்தை களைச் சொல்லிக் கொண்டிருக்கும் ஹம்ஸத்தையும், கத்தியினாலும், வஜ்ரத்தாலும் செய்யப்பட்டது போல கூர்மையும், கெட்டியுமான சுத்திக் கொண்டிருக்கும்

சக்கரத்தையும் தெரிந்து கொள்ளாமலும், பிதாவினுடைய ஆக்ஞையைத் தங்களுக்குத் தகுதியானதாகத் தெரிந்து கொள்ளாமலும் நீங்கள் பிரஜைகளை எப்படி சிருஷ் டிக்கப் போகிறீர்கள்" என்று வினவினார்.

10–21 அதனைச் செவியுற்ற ஹர்யச்வர்கள் நாரதருடைய மறைவான வார்த்தையை இயற்கையான தங்களுடைய புத்தியினால் யோசிக்கலானார்கள். எப்படியென்றால், "பூமியென்பது ஜீவன் என்ற லிங்க சரீரம். அதனால் ஆத்மாவுக்குப் பந்தமுண்டாகிறது. அதனுடைய நாசத்தை தெரிந்து கொள்ளாமல் மோட் சத்திற்கு உபயோகமில்லாத கர்மங்களை அனுஷ்டிப் பதாலென்ன பிரயோஜனம்? மேலும் ஈச்வரன் ஒருவரே. எல்லாவற்றுக்கும் சாக்ஷியாக இருப்பவர். அவர் தம்மையே ஆதாரமாகக் கொண்டவர். பரன் நித்யமுக்தர் அவரைத் தெரிந்து கொள்ளாமல் அவரிடத்தில் சமர்ப்பிக்கப்படாத கர்மங்களால் என்ன பிரயோஜனம்? புருஷன் எதை அடைந்தால் திரும்பி வரமாட்டானோ, அந்த ப்ரஹ்ம ஜோதிஸ்ஸை அறியாதவனுக்கு மற்ற கர்மங்களாலென்ன பிரயோஜனம்? சிருஷ்டி நாசம் இவைகளைச் செய்யக் கூடியதும், அகங்காரம் முதலிய வைகளைக் கொண்டு வெளிவர முடியாமல் தடுப்பது மான மாயையைத் தெரிந்துக் கொள்ளாமல் அதனால் மோகித்திருப்பவனுக்கு மாயையால் ஏற்படும் கர்மங் களாலென்ன பிரயோஜனம்? ஈச்வரனை நிரூபிப்பதும் பந்தம் மோட்சம் இவைகளைக் காண்பிப்பதுமான. சாஸ்திரத்தை விட்டு ஏகாந்தமான பதத்தைத் தெரிந்து கொள்ளாமல் செய்யப்படும். பகிர்முகங்களான கர்மங் களால் என்ன பிரயோஜனம்? மிகக் கடுமையான காலசக்கரமானது ஜகத்தை இழுத்துக் கொண்டு

ஸ்வதந்திரமாகச் சுற்றுகிறது. அதனைத் தெரிந்து கொள்ளாதவனுக்குக் கிராம்ய கர்மங்களாலென்ன பிரயோஜனம்? (சாஸ்திரத்தினுடைய) பிதாவினுடைய ஆக்ஞையின் உண்மையான கருத்தையறியாமல் பிரவிருத்தி மார்கத்தில் விசுவாசமுள்ள புருஷன் சிருஷ்டி முதலியவைகளை எப்படி ஆரம்பிப்பான்?" என்று ஹர்யச்வர்கள் எல்லோரும் ஒரே புத்தியுள்ள வர்களாக நாரதருடைய உபதேச வார்த்தைகளுக்கு உண்மையான அர்த்தம் இதுதானென்று தெரிந்து கொண்டு நாரதரைப் பிரதட்சணஞ் செய்து அந்த மார்கத்தை அடைந்தார்கள்.

22–33 நாரதரும் நாதப்ப்ரஹ்மத்தில் நேரில் பார்க்கப்பட்ட ஸ்ரீ பகவானுடைய பாதாரவிந்தத்தில் தம்முடைய மனத்தை வைத்து லோக சஞ்சாரஞ் செய்தார். பிறகு தட்சப் பிரஜாபதி நாரதரால் தம்முடைய புத்திரர்கள் மோட்சத்தை அடைந்தார் களென்பதைக் கேள்விப்பட்டு புத்திரர்கள் நல்ல ஸ்வபாவமுள்ளவர்களாகையால் அவர்களுடைய நாசம் மிகுந்த துக்கத்தை உண்டு பண்ணிற்று. அப்பொழுது ப்ரஹ்மதேவர் தட்சரை ஸமாதானம் செய்ய அவர் அஸிக்னி என்னும் தம்முடைய பத்னியிடத்தில் சபளாச்வர்கள் என்ற ஆயிரம் புத்திரர்களைப் பெற்றார். அவர்களும் பிதாவின் ஆக்ஞையின்படி தபசுக்காக முன்னோர்கள் ஸித்தியடைந்த நாரயண தீர்த்தம் சென்றார்கள். பின்னுமவர்கள் அந்தத் தீர்த்தத்தில் நீராடி அதனால் சுத்தசித்தர்களாகி, பிரணவத்தை ஜபித்துக் கொண்டு கடுந்தபஸ் செய் தார்கள். பின்னுமவர்கள் சில மாதங்கள் ஜலத்தை புஜித்துக் கொண்டு, சில காலம் காற்றை புஜித்துக்

கொண்டும், 'மஹாத்மாவும்' சுத்தமான ஸத்வகுணத் திற்கு ஆச்ரயரும், பரம ஹம்ஸரும், பூர்ணருமாகிய நாரயணருக்கு நமஸ்காரம்' என்ற மந்திரத்தை ஜபஞ்செய்து கொண்டு விஷ்ணுவை ஆராதித்தார்கள். அந்தத் தருணத்திலும் நாரத மகரிஷி அவ்விடம் வந்து பிரஜைகளைச் சிருஷ்டிக்க முயன்றுகொண்டி ருக்கும் சபளாச்வர்களை நோக்கி முன் போலவே கூடமான வார்த்தைகளைச் சொல்லி, 'ஓ தட்ச புத்திரர்களே! நான் சொல்லுவதைக் கேளுங்கள். உங்களுடைய மூத்த சகோதரர்கள் சென்ற மார்கத்தை நீங்களும் அடையவேண்டும். நீங்கள் சகோதரர்களி" டத்தில் பிரீதியுள்ளவர்கள்; எவன் ஜ்ஞேஷ்டனுடைய மார்கத்தை அனுஷ்டிக்கிறானோ, அந்தப் புண்ணிய பந்துவாகிய புருஷன் மருத்துக்களுடன் சந்தோஷப் படுகிறான்" என்று சொல்லி நன்மையளிக்கும் தரிசனமுள்ள நாரதர் தமது இஷ்டப்படி சென்றார். அந்த சபளாச்வர்களும் நாரதருடைய உபதேசத்தால் ஹர்யச்வர்களுடைய மார்கத்தை அடைந்தார்கள். க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடிய ஆத்ம மார்க்கத்தை அடைந்த அவர்கள், சென்ற இராத்திரிபோல இன்னமும் திரும்பி வரவில்லை.

34–43 இப்படி இருக்கும்போது தட்சருக்குச் சில அபசகுணங்கள் நேர்ந்தன. அவற்றைக் கண்ட தட்சர் புத்திரர்களை பற்றி விசாரிக்க, ஹர்யச்வர்களைப் போல் இவர்களையும் நாரதரே மரிக்கச் செய்தா ரென்பதைக் கேள்விப்பட்டு, புத்திர சோகத்தால் மோஹமடைந்து நாரதரிடங் கோபித்துக் கொண்டு உதடுகள் துடிக்க, "ஓ அஸாதுவே 'ஸாது போல்' வேஷங்கொண்டு என்னுடைய குழந்தைகளுக்கு

சந்நியாசிகளுடைய மார்க்கத்தை காண்பித்துக் கெடு தலைச் செய்தீர். அவர்கள் மூன்று வகையான கடன்களை நிவர்த்தித்துக் கொள்ளாதவர்கள்; கர்மங்களை விசாரிக் காதவர்கள்; அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு இந்த லோகத்திலும், பரலோகத்திலும் க்ஷேமத்திற்கு இடை யூறைச் செய்தீர். நீர் இம்மாதிரி குழந்தைகளுடைய புத்தியைமாற்றி வெட்கமில்லாமல் பார்ஷதர்களுக்குள் ஒருவராகச் சஞ்சரிக்கிறீர். நீர் குற்றமற்றவர்களிடத்தில் விரோதத்தைச் செய்பவர்; விசுவாஸத்தைக் கெடுப்பவர்; உம்மைத் தவிர மற்றவர் பாகவதர்களுக்கு அனுக்கிரகத் தையே செய்வார்கள். இம்மாதிரியான உபதேசத்தால் புருஷனுக்கு வைராக்கியம் உண்டாகிறதில்லை. புருஷன் விஷயங்களை அனுபவித்து அவைகளைத் துச்சங்க ளென்று வைராக்கியத்தை அடைவதுபோல இம்மாதிரி புத்தியை மாற்றிவிடுவதால் வைராக்கியம் உண்டாகிற தில்லை. ஸாதுக்களும் கிரகஸ்தர்களுமான எங்களுக்கு உம்மால் செய்யப்பட்ட அபராதமானது சகிக்க முடியாததாயினும் நான் பொறுத்துக் கொண்டேன். ஓ புத்திரர்களை நாசஞ்செய்தவரே! என்னுடைய புத்திரர்களுக்கு இரண்டு லோகத்திலும் இடமில்லாமல் நீர் செய்ததனால் உமக்கும் ஓரிடத்திலும் நிலையான இருப்பிடமில்லாமல் நீர் எப்பொழுதும் சுற்றிக் கொண்டே இருக்கக்கடவீர்" என்று சொன்னார்.

44. அதனைக் கேட்ட ஸாதுக்களில் சிறந்தவராகிய நாரதர் அந்தச் சாபத்தை அங்கீகரித்தார். பதில் சாபங் கொடுக்கத் திறமையுள்ளவரானாலும் நாரதர் அதனைப் பொறுத்துக் கொண்டாரென்பதே அவருடைய ஸாது குணத்தைக் காட்டியது.

அத்தியாயம்–6

தட்ச கன்னிகைகளின் வம்சம்

1–22. பிறகு தட்சர் ப்ரஹ்மதேவரால் ஸமாதானப் படுத்தப்பட்டு அஸிக்நியினிடத்தில் அறுபது பெண் களைப் பெற்றார்: அவர்கள் தகப்பனாரிடத்தில் பிரீதி யுள்ளவர்கள். அந்தப் பெண்களில் பத்துப் பெண்களைத் தர்மனுக்கும், பதின்மூன்று பெண்களைக் காச்யபருக்கும் இருபத்தேழு பெண்களைச் சந்திரனுக்கும். பூதம், அங்கிரஸ், கிருசாச்வர் இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே இரண்டு பெண்களையும்,.

தாட்சியரென்ற பெயருடைய காச்யபருக்கே நாலு பெண்களையும் கொடுத்தார். அந்தப் பெண்களுடைய புத்திரன், பௌத்திரன் முதலியவர்களால் மூவுலகமும் பூர்ணமாயிற்று. அந்தப் பெண்கள், அவர்களுடைய குழந்தைகள் ஆகிய இவர்களுடைய நாமதேயங்களைச் சொல்லுகிறேன், கேளும் பானு, ஸம்பா, ககுப், ஜாமி, விச்வா, ஸந்தியா, மருத்வத்தீ, வஸு, முகூர்த்தா, ஸங்கல்பா என்ற பத்துப் பெண்களும் தர்மனுடைய பத்தினிகள். பானுவினுடைய புத்திரன் வேத ரிஷபன். அவனுடைய புத்திரன் இந்திரஸேன், லம்பையினு டைய புத்திரன் வித்யோதன் அவனுடைய புத்திரர்கள் மேகங்கள். ககுப் என்பவளுடைய புத்திரன் ஸங்குடன் அவனுடைய புத்திரன் கீகடன் அவனிடத்திலிருந்து பூமியிலிருக்கும் துக்கங்களுக்கு அபிமானிகளான தேவதைகள் உண்டாயின. ஜாமியினுடைய புத்திரன்

ஸ்வர்க்கன். அவனுடைய புத்திரன் நந்தி விச்வேயினுடைய புத்திரர்கள் விச்வே தேவர்கள். அவர்கள் அபுத்திரர்கள். ஸாத்யையினுடைய புத்திரர்கள் ஸாத்யர்கள். அவர்களுடைய புத்திரன் அர்த்த ஸித்தி மருத்வான், ஜயந்தனென்ற இருவர்களும் முத்வதியின் புத்திரர்கள் ஜயந்தனென்பவன் பகவானுடைய அம்சம். அவனையே உபேந்திரனென்றும் சொல்கிறார்கள். முகூர்த்தை என்பவளின் புத்திரர்கள். அவர்கள் பிராணிகளுக்கு அந்த காலத்திற்குத் தக்கபடி பலத்தைக் கொடுக்கிறார்கள். ஸங்கல்பை என்பவளின் புத்திரன் ஸங்கல்பன். அவனுடைய புத்திரன் கான். வஸீ என்பவளின் புத்திரர்கள் துரோணன், பிராணன் துருவன், அர்க்கன், அக்னி, தோஷன் விபாவஸு என்ற எட்டு வஸீக்கள். துரோணனுக்கு அபிமதி என்ற மனைவியிடத்தில் ஹர்ஷம், சோகம், பயம் முதலிய புத்திரர்கள் பிறந்தார்கள். பிராணனுக்கு ஊர் ஜஸ்வதி என்பவளிடத்தில் ஆயுஸ், புரோஜவன் என்ற இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். துருவனுடைய பத்தினியாகிய தரணி என்பவளிடத்தில் பலவகையான பட்டணங்கள் (பட்டணத்துக்கு அபிமானியான தேவதைகள்) பிறந்தன. அர்க்கனுக்கு வாஸனை என்பவளிடத்தில் தர்ஷம் முதலிய புத்திரர்கள் பிறந்தார்கள். அக்னிக்கு வஸோத்தாரை என்பவளிடத்தில் த்ரவிணகன் முதலிய வைகளும், கிருத்திகா நடசத்திரங்களுக்கும் புத்திரரான ஸ்கந்தரும் புத்திரர்கள். தோஷனுக்கு சர்வரி என்பவளிடத்தில் சிம்சுமாரனென்று ஒரு புத்திரனுண்டானார். அவர் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் அம்சம். வஸ்து என்ப வருக்கு அங்கிரஸ் என்பவளிடத்தில் விசுவகர்மா என்ற புத்திரர் பிறந்தார். அவர் சில்பங்களுக்கு ஆசாரியர் அந்த விசுவகர்மாவுக்கு சாட்சஷ மனு புத்திரர்.

மனுவிற்கு ஸாத்யர்கள் புத்திரர்கள். விபாவஸுவிற்கு உஷை என்பவளிடத்தில் வியுஷ்டி, ரோசிஸ், ஆதபன் இவர்கள் உண்டானார்கள். ஆதபனிடத்திலிருந்து ஐந்து யாமங்களுள்ள பகல் உண்டாயிற்று. அந்தத் பகலில் பிராணிகள் தங்கள் தங்கள் காரியத்தைச் செய்கிறார்கள். பூதனுடைய பத்னியாகிய சுருபை என்பவள் கோடிக் கணக்கான ருத்ரர்களை உண்டுபண்ணினாள். ரைவதன், அஜன், பவனன், பீமன், வாமன், உக்ரன், விருஷாகபி, அஜைகபாத், அஹிர்புதயன், பகுரூபன், மஹான் என்றவர்கள் ருத்ருடைய பார்ஷதர்கள்; மற்றவர்கள் கோரஸ்வரூபமுள்ள பிரேதங்களும், விநாயகங்களுமாம் அங்கிரஸ் என்னு பிரஜாபதியின் பத்தினியான ஸ்வதா என்பவள் பிதிருக்களை உண்டுபண்ணினாள். அந்த அங்கிரஸின் இரண்டாவது பத்னியான ஸதியென்பவள் அதர்வாங்கிரஸ் என்ற வேதத்தைப் புத்திரனாக அடைந்தாள். கிருசாச்வர், அர்ச்சிஸ் என்பவளிடத்தில் வேதசிரஸ், தேவலன், வயுனன், மனு என்பவர்களையும் உண்டு பண்ணினார். தார்ட்சயன் விந்தையிடத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் வாகனமாகிய கருடனையும், சூரியனுக்கு ஸாரதியாகிய அருணனையும், கர்துரு என்பவளிடத்தில் அநேக நாகங்களையும், பதங்கி என்பவளிடத்தில் பலபங்களையும் (வெட்டுக் கிளியும் முதலியவைகள்) உண்டு பண்ணினார்.

23–24. கிருத்திகை முதலிய நட்சத்திரங்கள் சந்திரனுடைய பத்தினிகள். அந்தச் சந்திரன் தட்சருடைய சாபத்தால் க்ஷயரோகத்தை அடைந்தான். அந்த ஸ்திரீகளிடத்தில் அவனுக்குப் புத்திரனும் பிறக்கவில்லை. திரும்பவும் அந்தச் சந்திரன் தட்சரைப் பிரார்த்தித்து அவருடைய அனுக்கிரஹத்தால் கலைகளை

அடைந்தான். காச்யபருடைய பத்தினிகளுடைய பெயர்களைக் சொல்லுகிறார்கள் கேளும். அந்தப் பெயர்கள் லோகத்திற்கு க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியவைகள். அவர்களாலேயே இந்த ஜகத் உண்டு பண்ணப்பட்டது. அவர்கள் அதிதி, திதி, தநு, காஷ்டா, அரிஷ்டா, ஸுரஸா. இளா, முனி, குரோதவசா, தாம்ரா, ஸுரபி, ஸரமா, திமி என்ற பெயருள்ள வர்களாம். ஜலஜந்துக்கள் யாவும் திமியினிடத்திலிருந்து உண்டானவைகள். மிருகங்கள் தரமையின் புத்திரர்கள். எருமைகளும், பசுக்களும், இரட்டைக்குளம்புள்ள மற்றவைகளும் ஸுரபியின் புத்திரர்கள். பருந்து கழுகு முதலியவைகள் தாமரையின் புத்திரர்கள். அப்ஸரஸ் ஸுக்கள் முனியின் புத்திரர்கள் ஸர்ப்பங்கள் குரோத வகையின் புத்திரர்கள். விருட்சங்கள் யாவும் இளை யென்பவளிடத்திலிருந்து உண்டானவைகள், யாது தானர்கள் ஸுரஸையின் புத்திரர்கள் கந்தர்வர்கள் அரிஷ்டையின் புத்திரர்கள். இரட்டைக் குளம்பில்லாத பிராணிகள் காஷ்டையிடத்திலிருந்து உண்டானவைகள். தநுவிற்கு அறுபத்தோறு புத்திரர்களானாலும் அவர் களுக்குள் முக்கியமானவைகளைச் சொல்லுகிறேன் விதுமூர்த்தா, சம்பான், அரிஷ்டன், ஹயக்ரீவன், விபாவஸு, அயோமுகன், சங்குசிரஸ், ஸ்வரபானு, கபிலன், அருணஇ, பு லோமோ, விருஷபாவா, ஏகசச்ரன் அனுதாபகன், தூர்மகேசன், விரூபாக்ஷன், விப்சித்தி தூர்ஜயன் என்றவர்கள் முக்கியர்கள். ஸ்வரபானுவின் புத்திரியாகிய ஸுப்ரை என்பவளை நமுவி என்பவர் விவாகஞ்செய்துகொண்டார். விருஷபர்வாவின் புத்திரி யான சர்மிஷ்டை என்பவளை நஹுஷருடைய புத்திரர் னையாத விவாகம் பண்ணிக்கொண்டார். வைச்வானர னென்ற தனுவினுடைய புத்திரனுக்கு உபதானவி

ஹயசிரஸ், புலோமா, காலகா என்ற நான்கு புத்திரிகள். அவர்களில் உபதானவி என்பவளை ஹிரண்யாக்ஷனும், ஹயசிரஸ் என்பவளைக் கிருது என்பவனும் கல்யாணஞ் செய்து கொண்டார்கள். புலோமா, காலகை என்ற இரண்டு பெண்களையும் ப்ரஹ்மதேவருடைய தாண்டு தலால் காச்யபர் கல்யாணஞ் செய்துகொண்டார். அந்தப் புலோமையினுடைய புத்திரர்களும், காலகை யினுடைய புத்திரர்களுமான அறுபதினாயிரம் புத்திரர் களும் யாகம் முதலிய கர்மங்களைச் கெடுத்துக் கொண்டிருந்தார்கள், அவர்களை உம்முடைய பிதாவுக்குப் பிதாவும் இந்திரனுக்குப் பிரியத்தைச் செய்பவருமாகிய அர்ஜுனன் கொன்றார். ப்ரசித்தி என்பவன் ஸம்ஹிகியினிடத்தில் நூற்றொரு புத்திரர் களைப் பெற்றான். அவர்களுக்குள் மூத்தவன் ராகு மற்றவர்கள் கேது முதலியவர்கள். இவர் கிருகமா யிருக்கும் தன்மையை அடைந்தவர்கள். அதிதியின் வம்சத்தைக் கிரமமாகச் சொல்லுகிறேன். அந்த வம்சத்தில் ஸ்ரீமந் நாராயணன் தம்முடைய அம்சமாக அவதரித்தார்; அதிதிக்கு விவஸ்வான், அர்யமா, பூஷா, த்வஷ்டா; ஸவிதாபகர், தாதா, விதாதா, வருணன், மித்ரன், சக்கரன், உருக்ரமன் என்ற புத்திரர்கள் பிறந்தார்கள். விவஸ்வானுடைய பத்தினியாகிய ஸம்ஞ்ஞை யென்பவள் சிரார்த்த தேவன், மனு, யமன் என்ற புத்திரர்களையும். யமி என்ற பெண்ணையும் உண்டுபண்ணினாள். அவளே பூமியில் படப்பையாக ஆகி அஸ்வினி தேவர்களை உண்டுபண்ணினாள். சாயையென்ற மற்றொரு பத்தினியானவள் சனைச்சரன், ஸாவர்ணிமனு, தபதியென்ற பெண் ஆகிய இவர்களை உண்டுபண்ணினாள் அந்தப் பெண் ஸம்வர்ணனைர் கணவனாக அடைந்தவள். அர்யமா என்பவனுடைய

பத்தினியாகிய மாதிருகா என்பவள் சர்ஷணிகள் என்ற புத்திரர்களைப் பெற்றாள். அவர்களிடத்திலி ருந்து மனுஷ்ய ஜாதியானது ப்ரஹ்மதேவரால் ஏற்படுத்தப்பட்டது. பூஷா என்பவர் அபுத்ரர். மாலை புசிப்பவர் அவருக்குப் பற்களில்லை; தட்ச பாகத்தில் தட்சனிடத்தில். கோபித்த பரமசிவனைப் பார்த்துப் பற்கள் வெளியில் தெரியும்படி சிரித்தபடியால் அவருடைய பற்கள் உதிர்ந்து போயின துவஷ்டாவின் பத்தினியாகிய ரசனை யென்பவளுக்கு ஸந்நிவேசன் என்பவனும், பராக்ரமசாலியான விச்வரூபனும் புத்திரர்கள். ஒருக்கால் தேவர்கள் பிரகஸ்பதி பகவானை அலட்சியஞ் செய்ததால் அவர் அவர்களுக்கு புரோகிதராக இருக்கவில்லை; அந்தச் சமயத்தில் அவர்கள் சத்ருக்களின் ஸஹோதரியின் புத்திரனா னாலும் விச்வரூபனைப் புரோகிதராக இருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

அத்தியாயம்–7

விச்வரூபன் புரோகிதனாக இருந்தது.

1. அதனைக் கேட்ட அரசர் மகரிஷியை நோக்கி "தம்முடைய சிஷ்யர்களான தேவர்களைப் பிரகஸ்பதி பகவான் எதற்காகப் பரித்தியாகஞ் செய்தார். தேவர்கள் என்ன அக்கிரமஞ்செய்தார்கள்; அதனைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

2–19 அதனைக் கேட்ட சுகர், இந்திரன் இன்று லோகங்களுக்கு அதிபதியாயிருப்பதினால் கர்வங் கொண்டு நன்மார்கத்திலிருந்து தவறி மருத்துக்கள், வஸுக்கள், ருத்ரர்கள், ஆதித்யர்கள், மகர்ஷிகள், விச்வேதேவர்கள், ஸாத்யர்கள், அச்வினி தேவர்கள், ஸித்தர்கள், சாரணர்கள், கந்தர்வர்கள், ப்ரஹ்மவாதி களான முனிகள், வித்யாதர்கள், அப்ஸரஸுக்கள், கின்னரர்கள், பக்தர்கள், உரகர்கள் ஆகியஇவர்களால் சேவிக்கப்பட்டு ஸபையில் இந்திராணியுடன் ஆசனத் திலிருந்தார். அப்பொழுது தேவர்கள் சந்திர மண்டலம் போன்ற குடையாலும், சாமம் முதலியவை களாலும் அவரை உபசரித்தார்கள். அந்தச் சமயத்தில் தேவர்களுக்கும், மகேந்திரனுக்கும் ஆசாரியராகிய பிரகஸ்பதி பகவான் அந்தச் சபைக்கு வந்தார். அவர் தேவர்களாலும், அசுரர்களாலும் வணங்கக்கூடியவர். அவரைப் பார்த்ததும் மகேந்திரன் ஆசனத்திலிருந்து எழுந்திருக்காமலும் எதிர்கொண்டழைக்காமலும், ஆசனங் கொடுக்காமலும், உபசரிக்காமலும் இருந்தார். அப்பொழுது அந்தப் பிரகஸ்பதி பகவான் சிஷ்ய னுடைய அக்கிரமத்தைப் பார்த்து மௌனமாகத்

தம்முடைய கிருகஞ் சென்றார். பிறகு மகேந்திரன் ஆசார்யனை அவமதித்தோமென்பதைத் தெரிந்து கொண்டு சபையில் பின்வருமாறு தன்னை நிந்தித்துக் கொண்டார். 'அற்ப புத்தியுள்ள நான் கெட்ட காரியத்தைச் செய்து விட்டேன். ஐசுவரிய மதத்தால் ஆசாரியனை அவமதித்தேன். நான் தேவர்களுக்கு அதிபதியாக இருந்தும் அந்த ஐசுவரிய மதத்தால் அசுர ஸ்வபாவத்தை அடைந்தேன். ஆனதால் வித்வானாக இருப்பவன். ஐசுவரியத்தை விரும்புவானா? சிலர் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும் அரசன் வந்தவர்களை உபசரிப்பதற்காக எழுந்திருக்கக்கூடாது' என்று சொல்லுகிறார்கள்! அவர்கள் தர்மத்தை அறிந்த வர்களல்ல. அவர்கள் கெட்ட மார்க்கத்தை உபதேசிப் பவர்கள்; அவர்களுடைய வார்த்தையை எவர்கள் நம்புகிறார்களோ அவர்கள் கற்களால் செய்யப்பட்ட ஓடத்தின் மீதேறியவர்கள் போலக் கெடுதியை அடை வார்கள். ஆனதால் கம்பீர புத்தியுள்ள ஆசாரியனாகிய பிரகஸ்பதி பகவானை நமஸ்கரித்து நல்ல வார்த்தை சொல்லுகிறேன்' என்று யோசித்துக் கொண்டு ஆசாரியனுடைய கிருகஞ் சென்றார். அவ்விடத்தில் பிரகஸ்பதி தம்முடைய மாயையால் மறைந்துவிட்ட படியால் மகேந்திரனுடைய கண்ணுக்குப் புலப்பட வில்லை. அதனைப் பற்றிப் பலவகையாக யோசித்தும் அவருடைய மனத்திற்கு சுகம் உண்டாகவில்லை. அதனைத் தெரிந்துகொண்டு அசுரர்கள் எல்லோரும் சுக்ராச்சாரியருடைய அனுமதியின்பேரில் மிக்க கர்வத்துடன் தேவர்களுடன் யுத்தஞ் செய்ய முயன்று பாணங்களால் தேவர்களை அடித்தார்கள். அவைகளால் தேவர்களுடைய அவயவங்கள் வெட்டப்பட்டு, தேவர்கள் தலைகுனிந்து மிகுந்த துக்கத்துடன் ப்ரஹ்மதேவரைச் சரணமடைந்தார்கள்.

20–26 அப்பொழுது ப்ரஹ்மதேவர் அசுரர்களால் பீடிக்கப்பட்ட தேவர்களை நோக்கி "ஓ தேவசிரேஷ்டர்களே நீங்களே மிகவும் பாபமான காரியத்தைச் செய்தீர்கள். ப்ரஹ்மத்தை அறிந்தவரும், சாந்தருமான ப்ராஹ்மணனை ஐசுவரிய மதத்தால் லட்சியம் செய்யாமலிருந்தீர்கள். ஓ மகேந்திர! குருவை அலட்சியம் செய்ததால் நீங்கள் குறைந்து போனீர்கள். குறைந்திருந்த அசுரர்கள் சுக்ராசாரியரை ஆராதித்து விருத்தியடைந்திருக்கிறார்கள். நீங்கள் குருவை அலட்சியம் செய்ததால் சத்துருக்களால் அபஜயப்பட்டீர்கள். சுக்ராசாரியரையே தெய்வமாகக் கொண்ட அசுரர்கள் என்னுடைய இடத்தையும் அபகரிப்பார்கள். பிறருக்குத் தெரியாத ஆலோசனையுள்ள சுக்ராசாரியருடைய சிஷ்யர்கள் ஸ்வர்க்கத்தை லட்சியஞ் செய்வார்களா? ப்ராஹ்மணனையும், ஸ்ரீமந் நாராயணனையும், பசுக்களையும் தெய்வமாகக் கொண்டவர்களுக்கு ஒருபொழுதும் கெடுதி நேரிடாது. ஆனதால் நீங்கள் துவஷ்டாவின் புத்திரரும்; இந்திரியங்களை ஜயித்தவருமான விச்வரூபரென்ற ப்ராஹ்மணரைப் புரோகிதராக வைத்துக் கொள்ளுங்கள். அவரைப் பூசித்தீர்களானால் உங்களுக்கு க்ஷேமத்தைச் செய்வார். ஆனால், அவருக்கு அசுரர்களிடத்தில் விசுவாசமுண்டு; அதனை நீங்கள் சகித்துக் கொள்ள வேண்டும்" என்று சொன்னார்.

27–34 அதனைக் கேட்ட தேவர்கள் கவலையற்று துவஷ்டாவின் புத்திரராகிய விச்வரூபரிடம் வந்து அவரை நோக்கி, 'ஓ ப்ராஹ்மணோத்தமா! உம்முடைய ஆசிரமத்திற்கு நாங்கள் அதிதிகளாக வந்திருக்கிறோம். அதிதிகள் பிதிருக்களுக்குச் சமானர்களாகையால்

எங்களுடைய இஷ்டத்தை நிறைவேற்றும். புத்திரர்கள் தாங்கள் புத்திரனுள்ளவர்களாயிருந்தாலும் பிதிருக்களுக்குப் பணிவிடை செய்வதே அவர்களுக்கு மேலான தர்மம். அப்படியிருக்க ப்ரஹ்மசாரிகள் விஷயத்தில் என்ன சந்தேகம்? ஆசாரியன் ப்ராஹ்மணனுக்கு ஸமானன். தகப்பன் பிரஜாபதிக்கு ஸமானன். சகோதரன் மகேந்திரனுக்கு ஸமானன். தாய் பூமிக்கு ஸமமானவள். சகோதரியானவள் தயையின் ஸ்வரூபமானவள். அதிதியானவள் தர்மத்தின் ஸ்வரூபம். அப்யாகதன் (எதிர்பாராமல் வந்தவன்) அக்னியின் ஸ்வரூபம், ஸகல பிராணிகளும், நாராயணனுடைய ஸ்வரூபம் ஆனதால் சத்துருக்களால் அவமதிக்கப்பட்டு உபத்திரவத்தை அடைந்த பிதிருக்களாகிய எங்களுடைய துக்கத்தை தபஸினால் நிவர்த்திக்க வேண்டும். ப்ரஹ்மத்தை அறிந்தவரும் ப்ராஹ்மணருமாகிய நீர் எங்களுக்குப் புரோகிதராக இருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். உம்முடைய தேஜஸ்ஸால் சத்துருக்களை ஜயிக்க விரும்புகிறோம். ஆனால், நீர் எங்களைவிட வயதில் சிறியவரானாலும் உம்மை ஆசாரியராக வரித்து நாங்கள் நமஸ்கரிப்பது நியாய விரோதமல்ல. ஏனென்றால் நீர் வேதத்தை அறிந்த வராகையாலும் மந்திரங்களை எங்களுக்கு உபதேசிப்பவராகையாலும் இந்த விஷயத்தில் வயதில் முதிர்ந்தவர்கள் மூத்தோர்களல்ல" என்று பிரார்த்தித்தார்கள்.

35–41 இதனைக் கேட்ட விச்வரூபர் தேவர்களை நோக்கிச் சிரித்துக் கொண்டு, "தர்மஸ்வபாவமுள்ளவர்கள் புரோகிதராக இருப்பதை நிந்திக்கிறார்கள். புரோகிதராக இருப்பதால் ப்ரஹ்மதேஜஸ் குறைகிறது. ஆனாலும் லோகபாலர்களாகிய நீங்கள் யாசிக்கும்

போது நான் அதனை எப்படிச் செய்யாமலிருப்பேன். உங்களுடைய வார்த்தையை அங்கீரிப்பதே என்னுடைய வேலை. ஓ தேவர்களே! ஏழைகளுக்கு ஸிலம், உஞ்சம் (வயல் முதலியவைகளில் யஜமானன் தான்யங்களை எடுத்துப்போன பின்பு இறைந்திருப்பதைப் பொறுக்கிக் கொள்வது ஸிலம். ஹட்டம் முதலிய இடங்களில் இறைந்து கிடக்கும் தான்யங்களையெடுத்துக் கொள்வது உஞ்சம்) இவைகளே பணம் அவைகளைக் கொண்டு நற்காரியங்களை ஸாதுக்கள் செய்வார்கள். புரோகிதராக இருப்பது நிந்திக்கக் கூடியதாகையால் அதனால் அற்ப புத்தியுள்ளவன் சந்தோஷப்படுவான். அந்தக் கெட்ட காரியத்தை நான் எப்படிச் செய்வேன். ஆனாலும் பெரியோர்களான நீங்கள் கேட்டுக் கொள்வதால் அதனை எப்படித் தடுத்துச் சொல்வேன். உங்களுடைய காரியங்களைப் பிராணனைக் கொண்டும், அர்த்தத்தாலும் செய்கிறேன்" என்று சமாதானஞ் செய்து மிகுந்த தபஸ்வியான விச்வரூபர் மிக்க முயற்சியுள்ளவராகித் தேவர்களுக்குப் புரோகிதராய் இருந்தார். மேலுமவர் சுக்ராசாரியருடைய ஸாமர்த்யத்தால் அசுரர்களிடத்திலிருந்து தேவராஜ்ஜியத்தை விஷ்ணு சம்பந்தமான வித்தையைக் கொண்டு (நாராயண கவசம்) இந்திரனிடம் திருப்பிக் கொடுத்தார். அந்த வித்தையினால் முன் ஒருக்கால் இந்திரன் காப்பாற்றப்பட்டு அசுர சைன்யங்களை ஜயித்தார். அதனை இப்பொழுது மிகுந்த புத்திசாலியாகிய விஸ்வரூபர் மகேந்திரனுக்கு உபதேசித்தார்.

அத்தியாயம்–8

நாராயண கவசம்

1–2. அதனைக் கேட்ட அரசர் மகரிஷியை நோக்கி. "ஓ பகவான்! எந்த நாராயண கவசத்தால் மகேந்திரன் எதிர்த்து வரும் சத்துரு சைந்நியங்களை ஜயித்து மூவுலகத்தின் ராஜ்ஜியத்தை அனுபவித் தாரோ, அந்த நாராயண கவசத்தைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

3–42. அதனை கேட்ட சுகர் அரசரை நோக்கி தேவர்களுக்கு புரோகிதராகிய விச்வரூபர் மகேந்திரனுக்கு உபதேசித்த நாராயண கவசத்தைச், சொல்லுகிறேன்; கவனமாகச் கேளும். கால் கைகளை அலம்பி, ஆசமனஞ் செய்து, சுத்தராக வடக்கு முகமாக உட்கார்ந்து அங்கந்யாஸ கரந்யாஸங்களைச் செய்துகொண்டு ஆபத்து வந்த காலத்தில் நாராயண கவசத்தை ஆரம்பிக்கவேண்டும். கால்களிலும், முழங்கால்களிலும். தொடைகளிலும், வயிற்றிலும், ஹிருதயத்திலும், உரஸிலும், முகத்திலும், சிரஸிலும் அஷ்டாக்ஷர மந்திரத்தால் கிரமமாகவாவது, மாறுதலாகவாவது அங்கந்யாஸஞ் செய்யவேண்டும். பின்பு பிரணவம் முதல் யகாரம் வரையில் துவாதசாக்ஷரி வித்தையால் விரல்களின் கணுக்களில் கரந்யாஸஞ் செய்யவேண்டும். ஹிருதயத்தில் ஓங்காரத்தையும், வி என்பதை சிரஸிலும், ஷகாரத்தை புருவங்களின் மத்யத்திலும் நகாரத்தை சிகையிலும், வேகாரத்தை நேத்ரங்களிலும் நகாரத்தை ஸந்திகளிலும் (மணிகட்டு முதலியவை), மகாரத்தை ஆஸ்த்ரமாகவும், தியானஞ் செய்துகொண்டவன்

மந்திர சரீரமுள்ளவனாக ஆகிறான். விஸர்க்கத்துடன் பட் என்பதைக் கடைசியாக வைத்துக்கொண்டு ஸகல திக்குகளிலும் தியானிக்கவேண்டும். விஷ்ணுவிற்கு நமஸ்காரம் என்று சொல்லி ஐசுவரியம் முதலிய ஆறு சக்திகளுடன் கூடினவரும், வித்தை, தேஜஸ், தபஸ் இவைகளின் ஸ்வரூபியுமான பகவானைத் தியானஞ் செய்யவேண்டும். மேலும் பின்வரும் மந்திரத்தையும் உச்சரிக்கவேண்டும். கருடன் மீது வீற்றிருப்பவரும்; சங்கம் சக்கரம், கதாயுதம்' கத்தி பாணம், வில், பாசம் இவைகளை எட்டுக் கைகளால் தரிப்பவரும் அணிமா முதலிய அஷ்ட ஐசுவரியமுள்ளவருமான ஸ்ரீ நாராயணன் என்னை எப்பொழுதும் எவ்விடத்திலும், காப்பாற்றட்டும். மத்ஸ்ய சரீரமுள்ள பகவான் ஜல ஜந்துக்கள். வருண பாசம் ஆகிய இவைகளிருந்து என்னை ரட்சிக்கட்டும். வாமன சரீரமுள்ளபகவான் நிலத்தில் என்னை சம்ரட்சிக்கட்டும் திருவிக்கரம சரீரமுள்ள பகவான் ஆகாசத்தில் என்னை ரட்சிக் கட்டும். அசுரசிரேஷ்டர்களுக்குச் சத்ருவான நரஸிம்ம மூர்த்தியானவர் வனம், சண்டை முதலிய துர்க்கமான இடங்களில் என்னைக் காப்பாற்றட்டும். அவர் அட்டகாசம் செய்தபோது திக்குகளில் எதிரொலி உண்டாயின; கர்ப்பங்கள் கலங்கி விழுந்தன. யஞ வராகமாக அவதரித்துத் தம்முடைய சிங்கப்பற்களால் பூமியைப் பாதாளத்திலிருந்து கொண்டு வந்த பகவான், மார்க்கத்தில் சம்ரட்சிக்கட்டும். பரதனுக்குத் தமைய னாகிய ராமன் லக்ஷ்மணனுடன் மலையில் சிகரங் களிலும், தேசாந்திரத்திலும் என்னைக் காப்பாற்றட்டும். நாரயணரூபியான பகவான் ஆபிசார கர்மத்திலிருந்து என்னை ரக்ஷிக்கட்டும். தத்தாத்ரேயராக அவதரித்த பகவான் யோகப்ரம்மத்திலிருந்து (யோகாப்யா

ஸத்திலிருந்து தவறுவது) காப்பாற்றட்டும். கபிலாவதா ரஞ்செய்த பகவான் கர்மபந்தத்தை நிவர்த்திக்கட்டும் ஸனத்குமா ரூபியான பகவான் மன்மதனிடத்திலிருந்து ரட்சிக்கட்டும். ஹயக்ரீவர் மார்க்கத்தில் தேவர்களுக்குச் செய்த அபராதத்திலிருந்து (வழி நடப்பதற்கு முன் தேவர்களை நமஸ்கரிக்காமல் செல்வது தேவர்களை அவமதித்ததாகும்) காப்பாற்றப்படும் நாரத ரூபியான பகவான் மகாவிஷ்ணுவின் ஆராதனத்தில் நேரும் முப்பத்திரண்டு அபராதத்திலிருந்து காப்பாற்றட்டும் கூர்ம ரூபியான பகவான் ஸகல துக்கங்களிருந்தும் சம்ரட்சிக்கட்டும். தன் வந்திரியானவர் அபத்யத்திலி ருந்தும் மனத்தை ஜயித்தவரான ரிஷபதேவர் சுக துக்கத்தாலுண்டாகும் பயத்திலிருந்தும் காப்பாற் றட்டும். யஜ்ஞராக அவதரித்த பகவான் ஜனங் களுடைய அபராதத்திலிருந்து ரக்ஷிக்கட்டும், பலராமன் ஜனங்களால் செய்யப்படும் உபத்ரவத்திலிருந்து காப்பாற்றட்டும். ஆதிசேஷன் கோபஸ்வபாவமுள்ள ஸர்ப்பங்களிலிருந்து சம்ரட்சிக்கட்டும். வியாச பகவான் மோகத்திலிருந்து புத்தர் பாஷண்டர்களிடமிருந்தே, தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக அவதரித்த கல்கி யானவர் கலியின் மகிமையாலுண்டான பிரமாதத்திலி ருந்தும் சம்ரட்சிக்கட்டும். கேசவன் கையில் கதா யுதத்தைக் கொண்டு என்னை ரட்சிக்கட்டும். புல்லாங் குழல் கொண்டிருக்கும் கோவிந்தர் ஸங்கவகாலம் வரையிலும்' கம்பீர சக்தியுள்ள நாராயணன் பன்னிரண்டு நாழிகை வரையிலும், சக்ரபாணியாகிய பகவான் மத்யான காலத்திலும், மிக்க கடுமையான வில்லைத் தரித்தவரும், மது என்ற அசுரனை கொன்றவருமான பகவான் அபரான்ன காலத்திலும் மூன்று சரீரமுள்ள மாதவன் ஸாயங்காலத்திலும் ஸ்ரீ வத்ஸத்தைத் தரித்த

பகவான் விடியற்காலத்திலும் என்னைக்காப்பாற்றட்டும். பகவானால் பிரயோகிக்கப்பட்டதும், கூர்மையான முனையுள்ளதும், நாலு பக்கமும் சுற்றிக்கொண்டிருப்ப துமான சக்ரமானது காற்றுடன் கூடிய அக்னி புதரை எரிப்பது போல சத்துரு சைனியத்தை எரிக் கட்டும். வஜ்ராயுதம்போல கெட்டியாயும், நெருப்புப் பொறிகளில்லாததும், பகவானுக்கு மிக்க பிரியமான ஓ கதையே! கூச்மாண்டங்கள், விநாயகங்கள், யக்ஷர்கள், ரக்ஷஸ்ஸுக்கள், பூதங்கள், கிரகங்கள் ஆகிய சத்துருக் களைச் சூர்ணமாக்கும்! நாசஞ்செய்யும், பயங்கரமாகிய சப்தமுள்ள ஓ சங்கமே; நீ யாது தூதர்கள், பிரமத கணங்கள், பிரேதங்கள் மாதிரு கணங்கள், பிசாசங்கள், ப்ரஹ்மராக்ஷஸர்கள் முதலிய கோர ஸ்வபாவமுள்ள வர்கள் பயப்படச் செய்ய ஈச்வரனால் பிரயோகிக்கப் பட்ட கூர்மையான முனையுள்ள ஓ கத்தியே! என் னுடைய சத்துரு சைனியத்தை நாசஞ்செய். அநேக சந்திரன் போன்ற அடையாளமுள்ள ஓ கேடகமே! உக்கிரமான பார்வையுள்ள சத்துருக்களின் கண்களை மறைந்துவிட்ட கிரஹங்கள், கேதுக்கள், மனிதர்கள், மலைபாம்புகள், புலி முதலிய ஜந்துக்கள், பூதங்கள், பாபிகள் ஆகிய சூக்ஷம விரோதிகளான இவர்களி டத்திலிருந்து எனக்கு உண்டாகும். பயமானது, பகவானுடைய நாமமாகிய அஸ்திரத்தைச் சொல்வதால் நசிக்கட்டும். பகவானுக்கு வாகனமும், ரதந்தரம் முதலிய ஸாமங்களால் துதிக்கப்பட்டவரும் வேதமூர்த்தி யுமாகிய கருட பகவான் எல்லாக் கஷ்டத்திலிருந்து என்னை சம்ரட்சிக்கட்டும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் நாமதேயம், வாகன ஆயுதம் முதலியவைகள் எல்லா ஆபத்திலிருந்தும் காப்பாற்றட்டும். பகவானுடைய பார்ஷதர்களுக்குட் சிறந்தவர்கள் புத்தி, இந்திரியங்கள்,

மனம், ப்ராஹ்மணன் ஆகிய இவைகளை ரட்சிக் கட்டும், உண்மையில் மூர்த்தம்' அமூர்த்தாகிய இந்த ஜகத் முழுவதும் பகவத் ஸ்வரூபமாகையால் அந்த ஸத்யத்தால் எல்லா உபத்திரவகளும் நசிக்கட்டும். எல்லாவற்றையும் பகவத் ஸ்வரூபமாகப் பாவிப்பவர் களுக்கு விகற்பமற்வராகத் தோன்றும். பகவான் தம்முடைய மாயையால் ஆபரணம், ஆயுதம், அடை யாளம் முதலிய சக்திகளைத் தரிக்கிறார். ஸகல ஸ்வரூபியும், எப்பொழுதும் எங்கும் இருப்பவரும், எல்லாவற்றையும் அறிந்தவருமாகிய மகாவிஷ்ணு உண்மையான அந்தப் பிரமாணத்தைக் கொண்டு என்னை ரக்ஷிக்கட்டும் நரஸிங்க மூர்த்தியான பகவான் திக்குகளிலும் விதிக்குகளிலும்' மேலும் கீழும், உள்ளும், வெளியிலும் நாலு பக்கத்திலும் தம்முடைய கர்ஜித்தலால் பயத்தைப் போக்கடிக்கட்டும்" என்று விசுவரூபன் நாராயண கவசத்தை மகேந்திரனுக்கு உபதேசித்து "மகேந்திர! இந்த கவசத்தை ஜபித்துக் கொண்டு எவனைப் பார்க்கிறாயோ, எவனைக் காலால் தொடுகிறாயோ அவனுக்கும் பயம் நேரிடாது, இந்த வித்தையைத் தரிப்பவனுக்கு அசுரர்கள், திருடர்கள், வியாதி, கிரகங்கள் முதலிய ஓரிடத்திலும் பயமில்லை, முன்னோருகால் குசிக வம்சத்தில் பிறந்த ஒரு ப்ராஹ்மணர் ஜலமில்லாத காட்டில் இந்தக் கவசத்தை ஜபித்து யோக மகிமையால் சரீரத்தை விட்டார். பின்பு கந்தர்வர்களுக்கதிபதியான சித்ரரதன் ஸ்திரீ களுடன் விமானத்தின் மீதேறி அந்தப் ப்ராஹ்மணன் மரணமடைந்த இடத்திற்கு மேலாகச் சென்றான். அப்பொழுது விமானத்துடன் தலை கீழாகப் பூமியில் விழுந்தான். பிறகு அவன் வாலகில்யர்களுடைய உபதேசத்தால் அந்தப் ப்ராஹ்மணருடைய எலும்புகளை ஸரஸ்வதி நதியில் போட்டு ஸ்நானஞ் செய்து

தன்னுடைய லோகஞ் சென்றான். எவன் இதனைக் கேட்கிறானோ, ஆதரவுடன் தரிக்கிறானோ. அவனை ஸகல பிராணிகளும் நமஸ்கரிக்கிறார்கள். அவன் ஸகல பயத்திலிருந்தும் நிவர்த்தி அடைகிறான்" ஓ மஹாராஜ! விச்வரூபரால் உபதேசிக்கப்பட்ட இந்த வித்தயை மகேந்திரன் அடைந்து, அசுரர்களை ஜயித்து, மூன்று லோகங்களையும் அனுபவித்தார்.

குறிப்பு

முப்பத்திரண்டு – தேவாலயத்தில் பாதுகையைத் தரித்துக் கொண்டாவது, வாகனத்தின் மீதேறியாவது செல்வது பகவானுடைய ஸன்னதியில் தவறுதல் செய்வது, அசுத்தனாக இருக்கும்போதும் பகவானை நமஸ்கரிப்பது; ஒரு கையால் நமஸ்கரிப்பது, பின்பிரதக்ஷிணஞ்செய்வது, ஸன்னதியில் கால் நீட்டுவது, கட்டில் முதலியவை களைப் போட்டுக்கொள்வது, படுத்துக்கொள்ளுவது, போஜனஞ்செய்வது, பொய் சொல்வது, உரக்கப் பேசுவது, ஒருவருக்கொருவர் சண்டை செய்வது, அழுவது, நிக்ர ஹிப்பது, அனுக்ரஹிப்பது, ஸ்திரீகளையும் மனிதர் களையும், நிஷ்டூரமாகப் பேசுவது, கம்பளம் போர்த்துக் கொள்வது, பிறரை நிந்திப்பது, பிறரைத் துதிப்பது அமங்கள வார்த்தையைச் சொல்வது, அபானவாயுவை விடுவது, சக்தியிருக்கும்பொழுது சொற்ப உபகாரஞ் செய்வது, நிவேதனஞ் செய்யப்படாததைப் புஜிப்பது, அந்த அந்தக் காலத்திலுண்டான பழங்கள் முதலிய வைகளைப் பகவானுக்கு நிவேதனஞ் செய்யாமலி ருப்பது, நிவேதனம் பண்ணி பாக்கியான வியஞ் சனத்தைப் பிறருக்குக் கொடுப்பது, பின் காட்டி உட் காருவது. தகாதவர்களை நமஸ்கரிப்பது, ஆசாரியனை துதிக்காமல் தன்னை புகழ்ந்துக் கொள்ளுவது, தேவதைகளை நிந்திப்பதுமாகியவைகள். – நாரதர்.

அத்தியாய–9

விஸ்வரூப வதம்

1–10 அந்த விஸ்வரூபருக்கு ஸோமபீதம், ஸுராபீதம் அந்நாதமென்ற மூன்று தலைகளுண்டென்று கேள்விப் பட்டிருக்கிறோம். அவர் யக்ஞத்தில் 'இது இந்திரனுக்கு, இது அக்னிக்கு' என்று வணக்கத்துடன் ஹவிர்ப் பாகத்தைத் தேவர்களுக்குச் சொன்னார். ஏனென்றால், தேவர்கள் அவருக்குப் பிதிருக்கள். ஆனாலும் அவர் மாதிரு சிநேகத்தால் தேவர்களுக்குத் தெரியாமலேயே அசுரர்களுக்குப் பாகத்தைக் கொடுத்து வந்தார். தேவர் களை அவமதிப்பதாகிய அவருடைய தலையை வெட்டினார். ஸோமபீதமென்ற அவருடைய சிரஸானது கபிஞ்ஜலமாயிற்று. ஸுராபீதமென்றது கலவிங்கமாயிற்று. அந்த நாதமானது தித்திரியாயிற்று. மகேந்திரன் விஸ்வரூபரைக் கொன்றதால் நேர்ந்த ப்ரஹ்மஹத்தியை நிவர்த்தித்துக் கொள்ளும் சாமர்த்தியமுள்ள வரானா லும் அதனை அஞ்சலியால் பெற்றுக் கொண்டார். ஒரு வருஷத்திற்குப் பிறகு லோக அபவாதத்தை நிவர்த்திப்பதற்காகப் பூமி, ஜலம், மரம், ஸ்தீரிகள் ஆகிய இவர்களிடத்தில் நான்கு வகையாகப் பிரித்துக் கொடுத்தார். பூமியானவள் வெட்டின இடம் திரும்பவும் பூர்த்தியாகும்படி வரத்தைப் பெற்றுக் கொண்டாள். அந்த ப்ரஹ்மஹத்தியின் ஸ்வரூபமானது ஊஷா பூமியாக இருக்கிறது. (களர் நிலம்). மரங்களும் வெட்டின. அவயவங்கள் திரும்பவும் முளைக்க வேண்டு மென்ற வரத்தைப் பெற்றுக்கொண்டு, தோஷத்தின் நாலில் ஒரு பாகத்தைப் பெற்றுக் கொண்டன. அவைகளில் இந்த தோஷமானது பிசினாகக்

காணப்படுகிறது. ஸ்திரீகள் பிரசவிக்கிறவரையில் புருஷனுடைய ஸம்போகம் இருக்க வேண்டும் என்ற வரத்தைக் கேட்டுக் கொண்டு, அந்தத் தோஷத்தின் நான்கிலொரு பாகத்தைப் பெற்றுக்கொண்டார்கள். அந்தத் தோஷமானது ஒவ்வொரு மாதத்திலும் ரஜஸ்ஸாகக் காணப்படுகிறது. ஜலமானது தான் பால் முதலிய திரவியங்களில் சேர்ந்து மிகுதியாக ஆகவேண்டுமென்ற வரத்தைப் பெற்றுக் கொண்டு அந்தத் தோஷத்தைக் கிரகித்துக் கொண்டது. அந்த ஜலத்தில் காணப்படும் குமிழ், நுரை ஆகிய இவை களே அந்தத் தோஷத்தின் ஸ்வரூபங்களாம்.

11–19 பிறகு துவஷ்டாவானவர் புத்திரசோகம் உள்ளவராகிச் சத்துருவாகிய இந்திரனைக் கொல்ல விரும்பி, 'இந்திரனுக்குச் சத்துருவாக விருத்தியடை' என்ற அர்த்தமுள்ள வாக்கியத்தை உச்சரித்து ஹோமஞ் செய்தார். அப்பொழுது தக்ஷிணாக்னியிலிருந்து ஒருவன் உண்டானான். அவன் பயங்கரமான பார்வையுள்ளவன், பிரளய காலத்திய யமன்போன்றவன் ஒவ்வொரு நாளும் நான்கு பக்கத்திலும் ஒரு விற்கடை தூரம் விருத்தி யடையும் சரீரமுள்ளவன். நெருப்பினால் எரிக்கப்பட்ட மலை போன்றவன்; ஸந்தியாகால மேகம் போன்ற காந்தியுள்ளவன்; நெருப்பில் காய்ச்சப்பட்ட தாமிரம் போன்ற தலைமயிர், மீசை இவைகளுள்ளவன். மேலும், அவனுடைய கண்கள் மத்யான்ன சூரியன் போல உக்கிரமாயிருக்கின்றன; அவனுடைய முச்சூலமானது ஆகாசம், பூமி இவைகளை வியாபித்திருக்கிறது. மேலுமவன் நர்த்தனம் பண்ணிக்கொண்டும், கர்ஜித்துக் கொண்டுமிருக்கிறான். மேலும் அவனுடைய அடிவைப் பினால் பூமி அசைகின்றது; அவனுடைய முகமானது

மலையின் குகைபோல் இருப்பதால் ஆகாசத்தை விழுங்குகிறவன்போலும், நாக்கினால் நட்சத்திரங்களை நக்குகிறவன்போலும் மூன்று லோகத்தையும் பட்சிக் கிறவன் போலும் பிரகாசித்தான். மேலுமவன் பயங்கர மாகிய சிங்கப்பற்களுள்ளவன்; அடிக்கடி கொட்டாவி விடுகிறவன். அவனைக் கண்டு ஸகல ஜனங்களும் பயந்து பத்துத் திக்குகளிலும் ஓடினார்கள். அவனுக்கு விருத்ரன் என்று பெயர் விளங்கிற்று. அவனைக் கண்ட தேவர்கள் தங்கள் தங்களுடைய திவ்யமான அஸ்திரங்களாலும், ஆயுதங்களாலும் அவனை அடித் தார்கள். அவன் அவை யாவையும் விழுங்கினான். பிறகு அதனைக் கண்ட தேவர்கள் ஆச்சரியம்; துக்கம் இவைகளை அடைந்து, அந்தர்யாமியும் ஆதிபுருஷனு மாகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவைப் பின்வருமாறு தோத்திரஞ் செய்தார்கள்.

20–41 "வாயு, ஆகாசம், அக்னி, ஜலம், பூமி ஆகிய ஐந்து பூதங்களும்; மூன்று லோகங்களும் ப்ரஹ்மா முதலிய நாங்களும் எவருடைய ஆக்ஞையை அனுசரிக்கிறோமோ இந்த யமனும் எவரிடத்தில் பயப்படுகிறானோ அவரைச் சரணமடைகிறோம். அந்தப் பகவான் அகங்காரமற்றவர்; சாந்தர்; ஆத்ம லாபத்தாலேயே பூர்ணர்; உற்பத்தியற்றவர்; அப்படிப் பட்ட பரமேசுவரனை விட்டு மற்றவர்களை எவன் சரணமடைகிறானோ, அவன் அடன். நாயின் வாலைக் கொண்டு சமுத்திரத்தைத் தாண்ட விரும்பினவனுக்குச் சமமானவன்.எவருடைய பெரியதான சிங்கத்தில் ஓடம் போன்ற பூமியைக் கட்டி மனுவானவர் சங்கடங்களை நிவர்த்தித்துக் கொண்டாரோ, அந்த மத்ஸ்யமூர்த்தி யாகிய பகவான் அந்த விருத்ராசுரனிடத்தில் நேர்ந்த

பயத்திலிருந்து நம்மைக் காப்பாற்றட்டும். கடுமையான காற்றுகளால் பயங்கரமான பிரளய ஜலத்தில் தொப்புளி லிருக்கும் தாமரைப் புஷ்பத்திலிருந்து விழுந்த ப்ரஹ்ம தேவர் எவருடைய ஒத்தாசையால் அந்தப் பயத்திலி ருந்து க்ஷேமத்தை அடைந்தாரோ, அவர் நம்மைக் காப்பாற்றட்டும். எந்தப் பகவான் ஒருவராயிருந்தும் தம்முடைய மாயையைக் கொண்டு எங்களைச் சிருஷ் டித்தாரோ, எவரால் அனுக்ரகிக்கப்பட்ட நாங்கள் ஜகத்தைச் சிருஷ்டிக்கிறோமோ, அவர் எங்களுக்கு முந்தியே அந்தர்யாமியாக இருப்பதால் தனித்தனி ஈசுவரனென்ற அபிமானமுள்ள நாங்கள் அவருடைய ஸ்வரூபத்தைத்தெரிந்து கொள்ளவில்லை. மேலும், அவர் தேவர்கள், ரிஷிகள் திர்யக்ஜாதி, மனிதர் ஆகிய இவைகளில் தம்முடைய மாயையைக் கொண்டு அவதரித்து ஒவ்வொரு யுகத்திலும் சத்துருக்களால் பீடிக்கப்படும் எங்களைச் சம்ரட்சிக்கிறார். ஆனதால் ஆத்மாவும், தேவதையும், ஜகத்ரூபியும், ஜகத் காரணரும், மாயையின் ஸ்வரூபியும், சரணமடையக் கூடியவருமான அந்தப் புருஷனைச் சரணமடைகிறோம். அவர் பக்தர்களான நமக்கு க்ஷேமத்தைச் செய்வார்" என்று தேவர்கள் தோத்திரஞ் செய்தார்கள். அப்பொழுது தேவர்களுக்கு முன்பாக மேற்குத் திக்கில் சங்கம், சக்கரம், கதை முதலியவைகளைத் தரித்தவரும், ஸ்ரீவத்ஸம், கௌஸ்துபம் தவிர மற்ற ஆபரணங்களால் தமக்குச் சமானர்களான ஸுனந்தர் முதலியவர்களால் சேவிக்கப்பட்டவருமான ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் பிரகாசித்தார். சரத்காலத்திய தாமரை மலர் போன்ற கண்கள் உள்ள அந்தப் பகவானைத் தரிசித்து மிகவும் சந்தோஷமடைந்த தேவர்கள் பூமியில் தண்டம்போல் விழுந்து எழுந்திருந்து அந்தப் பகவானை நோக்கி,

யக்ஞத்தை வீர்யமாக உடையவரும், காலரூபியும், அசுரர்களிடத்தில் சக்கரத்தைப் பிரயோகிப்பவரும், அழகான அநேக திவ்ய நாமங்களுள்ளவருமான உமக்கு நமஸ்காரம். முக்குணங்களுக்குக் கதிபதியான உம்முடைய நிர்க்குண ஸ்வரூபத்தை உம்மால் சிருஷ்டிக்கப்பட்டவன் அறிய மாட்டான். அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம். ஓ பகவன்! நாராயண! வாஸுதேவ! எல்லாவற்றிற்கும் முந்தியவரே! மிகுந்த மஹாத்மியமுள்ளவரே! மிகுந்த மங்களகரமுள்ளவரே! மிகுந்த தபஸுள்ளவரே! பரமஹம்ஸர்களான சந்நியாசிகள் சித்தத்தை அடக்கி, பகவானை ஸேவிப்பதாகிய தர்மத்தை அனுஷ்டித்து. அதனால் தமோ குணமாகிய கதவைத் திறந்து, சுத்தமாகிய சித்தத்தில் பிரத்யக்ஷ ரூபமாய்ப் பிரகாசிக்கும் எந்தச் சுகத்தை அனுபவிக்கிறார்களோ, அந்த அனுபவம் நீரே. உம்முடைய விளையாட்டானது ஒருவராலும் அறிய முடியாதது. நீர் எல்லாவற்றிற்கும் ஆதாரமேயொழிய உமக்கு ஆதாரமொன்றுமில்லை. மேலும் நீர் சரீரமற்றவர்; குணங்களற்றவர்; அப்படியிருந்தும் எங்களுடைய ஒத்தாசையை எதிர்பாராமல் ஸகுணமான ஜகத்தைத் தாமே சிருஷ்டிக்கிறீர் காப்பாற்றுகிறீர்; நாசஞ் செய்கிறீர் ஜனங்கள் வீடு முதலானவைகளைக் கட்டி அதில் வசித்துக் கொண்டு தங்களுடைய புண்ணிய பாவத்தின் பலனை எப்படி அனுபவிக்கிறார்களோ, அப்படி நீர் ப்ரஹ்ம ரூபியானாலும், ஜீவ ரூபியாக ஸம்ஸாரத்தை அடைந்து சுக துக்கங்களை அனுபவிக்கிறீரா? அல்லது ஆத்மா ராமராக இருந்து சாட்சியாக இருக்கிறீரா என்பது எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் மேற்சொல்லிய இரண்டு வகையும் உம்மிடத்தில் பொருந்தும். நீர் அளவற்ற குணங்களுள்ளவர்;

சுதந்திரர்; விகற்பம், விதர்க்கம், விகாரம் என்ற பிரமாண ஆபாஸங்கள், அவற்றிற்கு உதவியான குதர்க்கம் இவைகளின் நிரூபிக்கும் சாஸ்திரங்களால் கலங்கிய அந்தக் கரணமுள்ளவர்களும், துர் அபிமானமுள்ளவர்களுமான வாதிகளுடைய விவாதத்திற்கு எட்டாதவரும் ஸம்ஸாரமற்றவரும், சித்ரூபியாயுமிருக்கிற ஸ்வரூபத்தில் மாயையைக் கொண்டு எது தான் பொருந்தாது? இரண்டு வகையான சபையில்லாதினால் சம்பூத்தியுள்ளவர்களும், விஷம புத்தியுள்ளவர்களுமான ஜனங்களுடைய அபிப்பராயப்படி மாயையால் அனுக்கிரகமாவது, நிக்ரகமாவது உம்மிடத்தில் தோன்றுகிறது. கயிற்றைப் பார்த்து ஸர்பமென்று நினைத்தவன் பயத்தை அடைகிறான்; அதனைக் கயிறென்றே நினைத்தவன் பயத்தை அடைகிறதில்லை. எல்லா வஸ்துக்களிலும் பலவகையாகத் தோன்றுகிறவரும், ஸத்ரூபியும், எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்கிறவருமான அவர் ஒருவரே என்று வேதத்தால் நிஷேத முகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஓ மது என்ற அசுரனைக் கொன்றவரே! புருஷார்த்தத்தை அடைவதில் ஸமர்த்தர்களும், உம்மையே பிரியமாஹிருத்தாகக் கொண்டவர்களுமான ஸாதுக்கள் உம்முடைய பாதாரவிந்த ஸேவையை விடுவார்களா? உம்முடைய பாதாரவிந்தத்தை ஸேவித்தவன் திரும்பவும் ஸம்ஸாரத்தை அடையமாட்டான். உம்முடைய மகிமையாகிற அமிருத ரஸத்தால் நிறைந்த ஸமுத்திரத்தின் ஜலத்துளியை ஒரு தடவை பானஞ்செய்து அதனால் விஷய சுகங்களை மறந்த பரமபாகவதர்கள் ஸகல பிராணிகளுக்கு ஸுஹிருத்தும், ஸகல ரூபியுமான உம்மையே தியானஞ் செய்து ஆனந்தத்தை அடைகிறார்கள். மேலும் நீர், மூன்று லோகங்களையும்

ஸ்வரூபமாகவும், வீடாகவும் வைத்துக் கொண்டிருக்கிறீர். மூன்று பாதங்களுள்ளவர்; மூன்று லோகங்களையும் காப்பாற்றுகிறவர். மூன்று உலகங்களாலும் கொண்டாடக்கூடிய மகிமையுள்ளவர்; தேவர்களும், அசுரர்களும், மனிதர்களும் உம்முடைய விபூதிகளேயாம். அவர்கள் முயற்சிக்கக்கூடிய காலம் இது அல்லவென்று நினைத்துத் தம்முடைய மாயையால் தேவனாகவும், மனிதனாகவும், நரஸிம்மமாகவும், ஜலஜந்துவாகவும் அவதரித்து அவரவர்களுடைய அபாராதத்திற்குத் தக்கபடி சிட்சையைச் செய்தீர். அப்படியே இந்த விருத்திராசுரனையும் கொல்லும். ஓ பகவன்! உமக்கு இஷ்டமிருக்குமானால் உம்மைச் சார்ந்தவர்களும், உம்முடைய பாதாரவிந்தத்தைத் தியானஞ் செய்து கொண்டிருப்பவர்களுமான எங்களுக்கு உம்முடைய ஸ்வரூபத்தைப் பிரகாசப்படுத்தி தயையுள்ளதும், அனுராகத்தால் நிறைந்ததும், அழகானதும், குளிர்ந்ததுமான பார்வையாலும், இனிமையான அமிர்தம் போன்ற வார்த்தையாலும் தாபத்தைப் போக்கடிக்க வேண்டும். ஓ பகவன் ஸகல ஜகத்தைப் படைப்பது, ஸம்ரக்ஷிப்பது, நாசஞ் செய்வது இவைகளில் உம்முடைய மாயை காரணமாயிருக்கிறது. மேலும் நீர் ஸகல பிராணிகளுடைய ஹிருதய குகையில் ப்ரஹ்ம ஸ்வரூபியாயும், அந்தர்யாமியாயும் தேகத்தின் இருப்பு இதற்குத் தக்கபடி அவைகளுக்கு உபாதான காரணமாகவும், உபலம்பகமாகவும் இருக்கிறீர். ஸகல புத்திக்கும் சாட்சியாகவும், ஆகாசம் போன்ற சரீரமுள்ளவரும், ஸாக்ஷாத் பரப்ரஹ்மமாகவும் இருக்கிறீர். அப்படிப்பட்ட பரமாத்மாவாகிய உம்மிடத்தில் எங்களால் சொல்லிக் கொள்ளக்கூடியது என்ன இருக்கிறது? எல்லாம் தங்களுக்குத் தெரிந்த விஷயமே. அக்னிக்கு அதன் பொரிகள் பிரகாசத்தை

உண்டுபண்ணுமா? ஆனதால் பகவானும், பரமகுருவுமான உம்முடைய பாதச் சாயையை நாங்கள் எதற்காக ஆசிரயித்திருக்கிறோமோ, அதனைப் பூர்த்தி செய்யும். அந்தப் பாதச் சாயையானது பலவகையான துக்கத்தைக் கொடுக்கும். சம்ஸார சிரமத்தை நிவர்த்திக்கக் கூடியது. ஈசுவரா! இந்த விருத்திரனால் எங்களுடைய தேஜசும், அஸ்திரங்களும், ஆயுதங்களும் விழுங்கப்பட்டன. அந்த விருத்திரனைக் கொல்லும் ஹம்ஸரும், ஸகல பிராணிகளுடைய ஹிருதயத்தில் வசிப்பவரும், சாட்சியும், கீர்த்தியுள்ளவரும், சுத்தரும், ஆதியற்றவரும், ஆனந்த ரூபியும், சாதுக்களால் சேவிக்கப்பட்டவரும், ஸம்சாரமாகிய மார்க்கத்தில் கஷ்டப்படுவோர்களைக் காப்பாற்றுபவருமான உமக்கு நமஸ்காரம்".

42–51 இப்படி தேவர்களால் துதிக்கப்பட்ட ஸ்ரீ மகாவிஷ்ணு அவர்களை நோக்கி, "ஓ தேவ சிரேஷ்டர்களே! உங்களுடையை ஸ்தோத்திரத்தால் நான் பிரீதி அடைந்தேன். உங்களால் செய்யப்பட்ட ஸ்தோத்திரத்தால் ஸம்ஸாரம் நிவர்த்தி, பகவானுடைய ஸ்மரணம், பக்தி இவைகள் உண்டாகின்றன. ஏ தேவர்களே! நான் சந்தோஷம் அடைந்தால் எதுதான் கிடைக்காது? ஆனால் என்னிடத்திலேயே மனதைச் செலுத்தியவன் வேறு ஒன்றையும் யாசிக்கமாட்டான். விஷயங்களை விரும்பும் அவனுக்கு அவனைப் போலிருப்பவன் அவைகளைக் கொடுப்பான். வித்துவானாக இருப்பவன் மூடனுக்குக் கர்மத்தை க்ஷேமகர மென்று சொல்லமாட்டான். ரோகமுள்ளவன் அபத்தியமான வஸ்துவை விரும்பினாலும் சிறந்த வைத்தியன் அதனைக் கொடுக்கமாட்டான். ஓ மகேந்திர! நீங்கள் தத்யக் என்ற மகரிஷி (ததீசி) யினிடம் சென்று வித்தையாலும், விரதத்தாலும்,

தவத்தினாலும் கெட்டியான அவருடைய சரீரத்தைக் கொடுக்கும்படி பிரார்த்தியுங்கள். அந்த மகரிஷி சுத்தமான ப்ரஹ்மத்தை அறிந்தவர். அசுவசிரஸ் என்ற பெயருள்ள நாராயண கவசத்தை அசுவினி தேவர் களுக்கு உபதேசஞ் செய்து அவர்களைத் தேவர்களாகச் செய்தார். பின்னும் அவர் துவஷ்டாவுக்கு அதனை உபதேசித்தார். துவஷ்டா விஸ்வரூபருக்குச் சொன்னார். விஸ்வபரிடமிருந்து நீ பெற்றுக் கொண்டாய். அந்த மகரிஷியை அசுவினி தேவர்களும் நீங்களும் யாசித்தீர் களானால் உங்களுக்குத் தமது சரீரத்தைக் கொடுப்பார். அவருடைய எலும்புகளால் விசுவகர்மா ஆயுதத்தைச் செய்வான். அந்த ஆயுதங் கொண்டு என்னுடைய தேஜஸால் நிறைந்தவனாகி விருத்திரனைக் கொல்வாய். அவன் அடிபட்ட பிறகு நீங்கள் தேஜஸ், அஸ்திரம், ஆயுதம், சம்பத்து முதலியவைகளைத் திரும்பவும் அடைவீர்கள். என்னைச் சார்ந்தவர்கள் ஒருபொழுதும் துக்கத்தை அடையமாட்டார்கள். உங்களுக்கு க்ஷேமம் உண்டாகும்" என்று அனுக்கிரகித்தார்.

குறிப்பு

ஹோமஞ் செய்தார்;— மந்திரத்தை அக்ஷரப் பிழையுடனாவது ஸ்வரப் பிழையுடனாவது உச்சரித் தால் அதன் பயனைக் கொடுக்கிறதில்லை; இந்திர சத்ரோவர்த்தச்வ என்று ஹோமஞ் செய்தார். ஆனால் ஸ்வரப்பிழை உண்டானதால் இந்திரனால் கொல்லக் கூடிய புத்திரன் பிறந்தான். அசுவினி தேவர்களுக்கு;— முன்னொருகால் அசுவினி தேவர்கள் தத்யக் என்ற மகரிஷியினிடஞ் சென்று தங்களுக்கு நாராயண கவசத்தை உபதேசிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள்.

அவர் அப்பொழுது கர்மகாலமாகையால் 'பிந்தி உபதேசிக்கிறேன்' என்றார். பின்பு மகேந்திரன் மகரிஷியினிடம் வந்து, 'ஓ மகரிஷியே' அசுவினி தேவர்களுக்கு வித்தை உபதேசிக்கக் கூடாது. என்னுடைய வார்த்தையை மீறி உபதேசித்தால் உம்முடைய தலையை வெட்டுவேன் என்றான். பின்பு அசுவினி தேவர்கள் வந்து கேட்டார்கள். அப்பொழுது மகேந்திரன் சொன்னதை மகரிஷி சொன்னார். அதனைக் கேட்டு அவர்கள், ஓ மகரிஷியே! உம்முடைய தலையை நாங்கள் வெட்டி, குதிரையின் தலையை உடலில் ஒட்டிவிடுகிறோம். அந்த முகத்தைக் கொண்டு வித்தையை எங்களுக்கு உபதேசியும். இந்திரன் அத்தலையை வெட்டின பின்பு உம்முடைய தலையை ஒட்டிவிடுகிறோம். அதனைக் கேட்ட மகரிஷி அஸ்வமுகத்தால் அவர்களுக்கு வித்தையை உபதேசித் தார். அதனால் அதற்கு அஸ்வசிரஸ் என்னும் பெயர் உண்டாயிற்று.

அத்தியாயம்–10

விருத்திராசுர யுத்தம்

1–4. ஸ்ரீ மஹாவிஷ்ணு இம்மாதிரி மகேந்திரனுக்குக் கட்டளையிட்டு தேவர்கள் பார்த்திருக்கும் போது மறைந்தார் தேவர்களும் பகவானுடைய கட்டளையின் படி தத்யக் மகரிஷியைக் கேட்டார்கள். கதைக்கேட்டு மகரிஷி சிரித்துக் கொண்டு தேவர்களை நோக்கி, "ஓ தேவர்களே! பிராணிகளுக்கு மரணத்தில் நேரிடும் துக்கமானது மிகவும் சகிக்கக் கூடாதது, அதனை நீங்கள் அறியமாட்டீர்கள், உயிரை வைத்திருக்க வேண்டுமென்ற விருப்பமுள்ளவர்களுக்கு ஆத்மாவானது மிகவும் பிரியமான வஸ்து அதனை யாசிட்டவர் விஷ்ணுவே யானாலும் யார்தான் கொடுப்பான்" என்றார்.

5–6. அதனைக்கேட்ட தேவர்கள் மகரிஷியை நோக்கி, "ஓ ப்ராஹ்மணோத்தம! பிராணிகளிடத்தில் தயவுள்ளவர்களும் புண்ணிய சுலோகர்களால் சிலாகிக்கக் கூடிய சரிதமுள்ளவரும், உம்மைப் போன்றவர்களுமான மகான்கள் எதனைதான் கொடுக்கமாட்டார்கள்? யாசகர்களும் தம் காரியத்தையே முக்கியமாகக் கொண்டவர்கள். பிறருடைய உபத்திரவத்தை அறியாதவர்கள். அப்படிப் பிறருடைய உபத்திரவத்தை அறிவார்களேயானால் சரீரத்தைக் கொடுக்கும்படி யாசிப்பார்களா? பிரபுவானவன் யாசகர்களுடைய உபத்ரவத்தை அறிவானேயானால் அவன் கொடுக்க மாட்டேனென்று சொல்லாமாட்டான்" என்றார்கள்.

7–12. அதனைக் கேட்ட மகரிஷி அவர்களை நோக்கி, "உங்கள் முகமாகத் தர்மத்தைக் கேட்க

விரும்பிக் கொடுக்க மாட்டேனென்று சொன்னேன். என்னை விட்டுப் பிரிந்து போகக்கூடிய சரீரத்தை நானே விட்டுவிடுகிறேன். எந்தப் புருஷன் நிலையற்ற சரீரத்தில் அபிமானம் வைத்துத் தர்மத்தையும் கீர்த்தியையும் கெடுத்துக் கொள்ளுகிறானோ. அவன் தாவரங்களாலும் துக்கிக்கத் தகுந்தவனாக ஆகிறான் பிராணிகள் சந்தோஷிப்பதனால் எவனுடைய ஆத்மா சந்தோஷிக்கிறதோ இதுவே பெரியோர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட சாசுவதமான தர்மம். நாய் நரி முதலியவைகளால் பட்சிக்கக்கூடியதும், தனக்கு உபயோகப் படாததுமான மனது, புத்திரன் முதலிய பந்துக்கள், சரீரம் இவைகளால் பிறருக்கு உபகாரஞ் செய்யாமலிருப்பது மிகவும் கஷ்டமான காரியம்" என்று சொல்லி, சித்தத்தைப் பரப்ரஹ்மத்தினிடம் செலுத்திச் சரீரத்தைவிட்டார். இந்திரியம், மனது புத்தி, பிராணன் இவைகளை அடக்கிகொண்டும் ஆத்ம தத்துவத்தைத் தரிசித்துக்கொண்டும் மேலான யோக்கியதை அடைந்திருந்த அந்த மகரிஷிக்குச் சரீர நாசமும் தெரியவில்லை.

13–33. பிறகு அந்த மகரிஷியின் எலும்புகளைக் கொண்டு விசுவகர்மாவானவர் வஜ்ராயுதத்தைச் செய்தார். மகேந்திரன் அதனை எடுத்துக்கொண்டு பகவானுடைய தேஜஸை அடைந்து, தேவகணங்களுடைய ஐராவதத்தின் மீதேறி மகரிஷிகளால் தோத்திரஞ் செய்யப்பட்டு மூன்று லோகத்தையும் சந்தோஷப்படுத்திக்கொண்டு விருத்திரனை அசுர சைனியங்கள் சுற்றிக்கொண்டிருக்கின்றன. மேலும் பிரளயகால ருத்ரன் போலக் கோபித்துக் கொண்டிருந்தான். திரேதா யுகத்தின் முன்பாகமாகிய அந்தக்

காலத்தில் நர்மதையின் கரையில் முதல் மகாயுகத்தில் தேவர்களும் அசுரர்களுக்கும் யுத்தம் நேர்ந்தது. அப்பொழுது ருத்திரர்களும். வசுக்களும் ஆதித்யர்களும்; அசுவினி தேவர்களும்; பிதிருக்களும், அக்னிகளும். மருத்துக்களும், ரிபுக்களும், சாத்தியர்களும். விசுவே தேவர்களும் இந்திரனைச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். அதனைக்கண்ட அசுரர்கள் போறாமை கொண்டு நமுசி, சாம்பரன், அநர்வா, துவிமூர்த்தா. விருஷபன், சம்பான், ஹயக்ரீவன், சங்குசிரஸ், விப்ரசித்தி அயோமுகன். புலோமா, விருஷபர்வா, பிரஹேதி, ஹேதி, தூம்ரகேசன், விருபாக்ஷன் கபிலன், விபாவசு, இல்வலன், பல்வலன்; தந்தசூடன். விருஷத்துவஜன், கலாநாபன், மகாநாபன்; பூதசந்தபனன், விருகன், சிமாலி, மாலி முதலியவர்கள் விருத்திரனை முன்னிட்டுக் கொண்டு மகேந்திரனை எதிர்த்தார்கள். மேலுமவர்கள் கதாயுதம்; பரிகம், பாணம்; பிராஸம், முத்கரமம், தோமரம் சூலம், பரச்வதம்; கட்கம், சதக்ரிமமுச்டி முதலிய ஆயுதங்களையும் அஸ்த்ரங் களையும் தேவர்களின் மீது பிரயோகித்தார்கள். அவைகளால் தேவ சைனியம் மறைக்கப்பட்டுப் பிரகாசிக்கவில்லை. தேவர்கள் பின்பு சஸ்திரங்களாலும் அஸ்திரங்களாலும் அசுர சைன்யங்களை அடித்தார்கள். அப்பொழுது அசுரசைன்யத்திற்கு அஸ்திரங்களும், சஸ்திரங்களும் குறைந்தன. பின்பு அவர்கள் கற்களையும் மலைகளையும் மரங்களையும் தேவர்களின் மீது வர்ஷித்தார்கள். தேவர்கள் அதனையும் நாசஞ் செய்தார்கள். இப்படி அஸ்த்ரங்களாலும் சாஸ்திரங் களாலும். மரங்களாலும், கற்களாலும் மலைகளாலும் அடிக்கப்பட்டும் தேவர்கள் க்ஷேமமாய் இருப்பதைப் பார்த்த அசுரர்கள் பயந்தார்கள். அசுரர்களால் தேவர்கள்

விஷயமாய்ச் செய்யப்பட்ட எல்லா முயற்சிகளாலும் ஸ்ரீ கிருஷ்ண பக்தர்களான மகான்களிடத்தில் அற்பற்களால் பிரயோகிக்கப்பட்ட கடுஞ் சொற்கள் போல் வியர்த்தமாயின. அப்பொழுது அவர்கள் தங்களுடைய முயற்சி பயனற்றதாக இருப்பதைப் பார்த்து யுத்தத்தை விட்டுவிடுவதற்கு யத்தனித் தார்கள். இப்படிப் பயந்து ஓடுகிற அசுரர்களைக் கண்டு விருத்திரன் சிரித்துக் கொண்டு, ஓ விப்ரசித்தியே, நமுசியே, புலோமாவே, ஓ மய, ஓ அநர்வாயே; ஹேசம்பர! நான் சொல்வதைக் கேளுங்கள். ஜனித்த வனுக்கு மரணம் நேரிடுவது நிச்சயமே. அது நிவர்த்திக்க முடியாதது. ஆனால் அந்த மரணத்தால் சுவர்க்கமும், கீர்த்தியும் கிடைக்குமானால் எவன்தான் அதனை விரும்பமாட்டான்? ப்ரஹ்மத்யானத்தால் சரீரத்தை விட்டு மரணமடைவதும், யுத்தத்தில் பயப் படாமல் யுத்தஞ் செய்து மரணத்தை அடைவதும் சாஸ்திர சம்மதமே" என்றான்.

அத்தியாயம்–11

(முன் அத்யாயத் தொடர்ச்சி)

1–27 அசுரர்கள் விருத்திரனுடைய தர்மமான வார்த்தையைக் கேட்டும், பயத்தால் விவேகமற்றவர் களாகித் திரும்பாமலே ஓடினார்கள். தேவர்களுக்கு நல்ல காலமாகையால் அவர்களிடமிருந்து பயந்து ஓடும் அசுர சைனியத்தைப் பார்த்து இந்திரனுக்குச் சத்ருவாகிய விருத்திரன் தேவர்களை அதட்டி, ஓ தேவர்களே! யுத்தத்தில் பயந்து ஓடுகிறவர்களைச் சூரர்கள் கொல்லுவார்களா? அதனால் அவர்களுக்குச் ஸ்வர்க்கம் கிடைக்குமா? ஓ அற்பர்களான தேவர்களே! உங்களுக்கு யுத்தஞ் செய்யவேண்டுமென்று விருப்பமும் மனத்தில் தைரியமும் இருக்குமானால் கிராமிய சுகத்தில் ஆசையில்லாமலுமிருந்தால் என் முன்பாகக் கணநேரம் நில்லுங்கள் என்று கர்ஜித்தான். அந்தப் பேரொலியைக் கேட்டு லோகங்கள் மூர்ச்சை அடைந்தன. தேவர்களும் வஜ்ஜிரத்தால் அடிபட்டவர்கள் போல மூர்ச்சையடைந்து விழுந்தார்கள். அப்பொழுது அசுரன் சூலாயுதத்தை உயரத் தூக்கிக் கொண்டு மதங்கொண்ட யானையானது தாமரையை நாசஞ் செய்வது போலக் கண்களை மூடிக்கொண்டு, துன்பங்களைச் சகித்துக் கொண்டிருக்கும் தேவ சைனியத்தைக் காலால் உதைத்துப் பிடித்தான். அதனைப் பார்த்த மகேந்திரன் மிகவும் பொறாமை கொண்டு பெரிதான கதாயுதத்தை அந்த அசுரன் மீது பிரயோகித்தார். சகிக்க முடியாத அந்த ஆயுதத்தை அந்த அசுரன் இடதுகையால் கிரகித்துக் கொண்டான். பின்பு அந்த அசுரன் மிகுந்த கோபத்துடன் கதாயுதத்தால் இந்திரனுடைய

வாகனமாகிய ஐராவதத்தின் தலையிலடித்தான். அதனை எல்லோரும் கொண்டாடினார்கள். வஜ்ஜிரத்தால் அடிபட்ட மலை போல விருத்திரனுடைய கதையாலடிபட்ட ஐராவதமானது ரத்தத்தைக் கக்கிக் கொண்டு ஏழுவிற்கடை தூரம் பின்சென்றது. அப்பொழுது அசுரன் ஐராவதம் அடிபட்டதால் வருத்தமடைந்திருக்கும் இந்திரனிடத்தில் ஆயுதத்தைப் பிரயோகிக்கவில்லை. மகேந்திரன் அமிருதப் பெருக்குள்ள தம்முடைய கையால் ஐராவதத்தைத் தொட்டு, அதனால் அதை சுகப்படுத்தினார். பிறகு யுத்தத்திற்காக எதிரில் நிற்பவனும் விசுவரூபரைக் கொன்றவருமான மகேந்திரனைப் பார்த்து அசுரன் அவர் செய்த காரியங்களை நினைத்து, சோகம், மோகம் இவைகளை யடைந்து சிரித்துக் கொண்டு, "சந்துருவாகிய நீ தெய்வச்செயலாய் என் முன் வந்தாய், நீ ப்ராஹ்மணனைக் கொன்றவன்; ஆசாரியனைக் கொன்றவன்; பிரகோதரனைக் கொன்றவன்; ஓ அசத்துக்களுக்குட் சிறந்தவனே! சூலத்தால் உன்னுடைய கல்போன்ற ஹிருதயத்தைப் பிளந்து கடனில்லாதவனாக ஆகிறேன். (விசுவரூபனைக் கொன்றதற்குப் பதில் செய்கிறேன் என்று தாத்பரியம்) ப்ரஹ்மத்தை அறிந்தவரும், ப்ராஹ்மணரும், உனக்கு ஆசாரியரும், பாபமற்றவருமான என் சகோதரனுடைய தலையைக் கத்தியால் நீ ஸ்வர்க்கத்தை அடைய வேண்டி வெட்டினவனல்லவா? நீ தயை வெட்கம், சம்பத்து இவைகளற்றவன்; ராட்சதர்களாலும் நிந்திக்கக் கூடிய கர்மத்தைச் செய்பவன்; அப்படிப்பட்ட உன்னுடைய சரீரத்தைச் சூலத்தால் பிளக்கிறேன். அதனைக் கழுகுகள் சீக்கிரத்தில் புசிக்கப் போகின்றன. மேலும் உன்னைச் சார்ந்த சடர்களான எவர்கள்

அஸ்திரங்களால் அடிக்கிறார்களோ, அவர்களுடைய கழுத்தைச் சூலத்தால் பிளந்து பூதகணத்தால் என்னுடைய தலையை வெட்டுவாயானால் நான் கர்ம பந்தத்தை விட்டு என்னுடைய உடலால் பூதங்களைத் திருப்தி செய்து பெரியோர்களால் அடையக்கூடிய உத்தம கதியை அடைவேன். ஓ இந்திரா! கிருபணனை யாசித்தால் அது எப்படிப் பயனைக் கொடுக்காதோ அதுபோல் உன்னுடைய வஜ்ஜிரமானது வியர்த்தமாகப் போய்விடுமென்றும் நீ சந்தேகப்படவேண்டாம். அது அமோகமான அஸ்திரம். எதிரில் நிற்கும் சத்ருவாகிய என்மீதில் ஏன் அதைப் பிரயோகிக்கவில்லை? மேலும் இந்த வஜ்ரமானது மகாவிஷ்ணுவின் தேஜசினாலும், ததீசி மகரிஷியின் தவத்தினாலும் கூர்மையாக இருக்கிறது. அதைக் கொண்டு சத்துருவை அடிக்கும் படி மகாவிஷ்ணு உனக்கு ஆக்ஞை செய்தாரல்லவா? மகாவிஷ்ணு ஜயம், சம்பத்து; குணங்கள் இவைகளைக் கொடுக்கக்கூடியவர். நான் சங்கர்ஷணர் சொன்னபடி அவருடைய பாதார விந்தத்தில் மனத்தைச் செலுத்தி உன்னுடைய வஜ்ரத்தின் வேகத்தால் கிராம்மியமான ஆசைகளை ஒழித்துச் சரீரத்தை விட்டு யோகிகளா லடையக் கூடிய பக்திசெய்த பக்தர்களுக்குச் ஸ்வர்க்கம், பூமி, பாதாளம் இவைகளிலுள்ள ஐசுவரியத்தைக் கொடுக்கிறதில்லை. ஏனென்றால் அவைகளால் விரோதம், பயம், மனோவிசாரம், மதம், யுத்தம், துக்கம், சிரமம், இவைகள் உண்டாகின்றன. ஓ மகேந்திர! என்னுடைய நாதனாகிய பகவான் தர்மம், அர்த்தம், காமம் இவைகளில் ஆசைப்படாமலிருக்கும்படி செய்வார். அதனால் பகவானுடைய பிரசாதமேற்பட்ட தென்று ஊகிக்க வேண்டும். அது மற்றவர்களால் அடைய முடியாதது. (உனக்கு பகவானுடைய

பிரசாதம் நன்றாக உண்டாகாததனால் சம்பத்துக்கள் கிடைத்திருக்கின்றன என்று தாத்பரியம்) ஓ பகவன் நாராயண! உம்முடைய பாதாரவிந்தத்தையே சரண மடைந்த தாஸர்களுக்கு நான் மிகவும் தாஸனாக இருக்கிறேன். பிராணநாதனாகிய உம்முடைய குணங்களை என்னுடைய மனமானது நினைக்கட்டும். வாக்கானது அவைகளையே உச்சரிக்கட்டும். சரீர மானது உம்மையே பூஜிக்கட்டும். ஓ பகவன் உம்மை விட்டுப் பிரிந்து துருவபதத்தையாவது, ப்ரஹ்மலோகத் தையாவது, எல்லாப் பூமிக்கும் அரசனாயிருப்பதை யாவது, யோக சித்திகளையாவது மோட்சத்தையாவது நான் விரும்பேன். தாமரை மலர் போன்ற கண்களுள் ளவரே. இறக்கை முளையாத பறவைகள் தாயை அபேட்சிப்பது போலவும், தும்பினால் கட்டப்பட்ட இளங்கன்றுகள் பாலை அபேட்சிப்பது போலவும், மன்மதனால் பிடிக்கப்பட்ட ஸ்திரீயானவள் தேசாந்திரம் போன புருஷனை எதிர்பார்ப்பது போலவும் என்னு டைய மனமானது உம்மைப் பார்க்க விரும்புகிறது. ஓ நாத! உம்முடைய மாயையால் ஸம்ஸார சக்கரத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் எனக்கு உத்தம சுலோகர் களாகிய மகான்களிடத்தில் சிநேகம் உண்டாக வேண்டும். புத்திரன், ஸ்திரீ , தனம், வீடு இவைகளிலும் இவைகளில் ஆசைகொண்டவர்களிடத்திலும் எனக்குப் பிரியம் திரும்பவும் உண்டாக வேண்டாம்" என்றான்.

அத்தியாயம்–12

விருத்திர வதம்

ஓ பரீக்ஷித் மகாராஜ! விருத்திராசுரன், சத்ரு ஜயிப்பதைக் காட்டிலும் மரணமே மேலானது என்று நினைத்து சரீரத்தை விடவிரும்பி, சூலாயுதத்தை எடுத்துக்கொண்டு மகேந்திரனை எதிர்த்தான் அது பிரளய ஜலத்தில் கைடபன் என்ற அசுரன் ஸ்ரீ மகாவிஷ்ணுவை எதிர்த்ததுபோல இருந்தது. பின்பு அசுரன் பிரளயகால அக்னிபோல் ஜ்வலித்துக் கொண்டிருக்கும் சூலத்தைச் சுழற்றி மகேந்திரன் மீது பிரயோகித்தான் "அடபாபியே! இதனால் நீ அடிக்கப் பட்டாய்" என்றும் கோபத்துடன் உரக்கச் சொன்னான். பிறகு மகேந்திரன் கிரகம் போலவும் கொள்ளிபோலவும் ஆகாசத்தில் வரும் அந்தச் சூலத்தைப் பார்த்துப் பயப்படாமல் நூறு முனைகளுள்ள வஜ்ராயுதத்தால் அந்த சூலத்தையும், வாசுகியினுடைய உடல் போன்ற அவனுடைய கையையும் வெட்டினார். பின்பு அசுரனின் ஒரு கையினால் பரிசம் என்ற ஆயுதத்தை எடுத்து, பரபரப்புடன் தேவேந்திரனுடைய கன்னத்தில் அடித்ததுமன்றி ஐராவதத்தையு ம் அடித்தான்.அதனால் மகேந்திரனின் கையிலிருந்த வஜ்ராயுதம் கீழே விழுந்தது. அந்த அற்புதமான அசுரனுடைய பராக் கிரமத்தை சித்தர்களும், சாரணர்களும் தேவர்களும் அசுரர்களும் கொண்டாடினார்கள். ஆனால் இந்திரனுக்கு நேர்ந்த சங்கடத்தைப் பார்த்து 'ஹா ஹா' என்று வருத்தத்தையும் அடைந்தார்கள். இந்திரன் வெட்கம டைந்து கீழே விழுந்த வஜ்ராயுதத்தையும் திரும்பவும் எடுத்துக்கொள்ளவில்லை. அவரை நோக்கி அசுரன்,

"ஓ மகேந்திர! வஜ்ராயுதத்தை எடுத்துக்கொள்ளும்: சத்துருவைக் கொல்லும்' துக்கப்படுவதற்கு இது காலமல்ல; சத்துருக்களைக் கொல்ல விரும்பி யுத்தம் செய்பவர்களை தேகாபிமானமுள்ள பிராகிருத ஜனங்களுக்கு எப்பொழுதும் ஜயமே வருமென்ற நிச்சயமில்லை. ஆனால் உத்பத்தி லயம், பரிபாலனம் ஆகிய இவைகளுக்கு அதிபதியும், எல்லாவற்றையும் அறிந்தவரும், எல்லாவற்றிற்கும் முந்தினவரும் புராண புருஷருமாகிய மகாவிஷ்ணு ஒருவரே எப்பொழுதும் ஜயத்தை அடைகிறார். லோகபாலர்கள் முதலிய எல்லோரும் அந்த பகவானுக்கு ஸ்வாதீனர்களாகக் கர்மங்களைச் செய்கின்றார்கள். மேலும், பறவைகள் வலையால் கட்டப்படுவதுபோல் ஜனங்கள் காலத்திற்கும் வசப்பட்டிருப்பதால் ஜயத்திற்கும் அபயத்திற்கும் அந்தக் காலரூபியான பகவானே காரணம், தேஜஸ், மனோபலம், தேகபலம், பிராணன், அமிருதம், மிருத்யு இவைகளுக்கு அந்தப் பகவானே காரணமென்பதை ஜனங்கள் தெரிந்து கொள்ளாமலே மூடர்களாகத் தங்களையே காரணமாக நினைக்கிறார்கள். கட்டையால் செய்யப்பட்ட பெண் பொம்மை போலவும்; யந்திரத்தால் சுற்றப்பட்ட மிருகம் போலவும் பிராணிகள் பரமேசு வரனுக்கு சுவாதீனப் பட்டவர்களாக இருக்கிறார்கள். புருஷன், பிருகிருதி, மகத்தத்வம், அகங்காரம் மகா பூதங்கள், இந்திரியங்கள், மனது ஆகிய இவைகள் சிருஷ்டி முதலிய காரியங்களை அந்தப் பரமேசுவரனு டைய அனுக்ரஹத்தாலேயே செய்கின்றன. இதனுடைய உண்மையை அறியாதவன் அசமர்த்தனாகிய தன்னை சுவதந்திரனாக நினைக்கிறான். உண்மையில் அந்தப் பகவானே பிராணிகளைக் கொண்டு பிராணிகளைச் சிருஷ்டிக்கிறார். மேலும் ஆயுள்; சம்பத், கீர்த்தி,

ஐசுவர்யம் இவைகள் எந்தக் காலத்தில் எவனுக்கு, எவைகள் கிடைக்க வேண்டுமோ அவன் அவைகளை விரும்பாவிடினும் அந்த அந்தக் காலத்தில் அவனுக்கு அவை கிடைக்கின்றன, அப்படியே அபகீர்த்தி முதலிய வைகளும் அந்த அந்தக் காலத்தில் அவரவர்களை அடைகின்றன. ஆனதால், அபகீர்த்தி, கீர்த்தி, ஜயம். அபஜயம் சுகம் துக்கம்; மரணம் பிழைத்திருப்பது இவைகளில் சம புத்தியுள்ளவனாக இருக்கவேண்டும். சத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்கள் பிரகிருதியைச் சார்ந்வைகள்; ஆத்மாவினுடையவைகளல்ல. ஆத்மா சாட்சியாக இருப்பவர் என்று எவன் தெரிந்து கொள்ளுகிறானோ அவனுக்குக் கர்மபந்தம் இல்லை. ஓ இந்திர! என்னுடைய ஆயுதங்களும், கையும் உன்னால் வெட்டப்பட்டன. அப்படியும் நான் சக்தியுள்ளவரையில் உன்னைக் கொல்வதற்கு முயற்சிக் கிறேனல்லவா? இந்த யுத்தமானது சொக்கட்டானாட் டத்திற்குச் சமானம். வாகனங்களே சொக்கட்டான் பலகை, பாணங்களே காய்கள். பிராணனே பந்தயத் திரவ்யம், இந்த விளையாட்டில் இன்னாருக்கு ஜயம் இன்னாருக்கு அபஜயம் என்று அறியமுடியாது" என்றான்.

18–35. அதனைக் கேட்ட மகேந்திரன் அசுரன் கபடமற்றுப் பேசினதற்காக சந்தோஷித்து வஜ்ராயுதத்தை எடுத்துக்கொண்டு கர்வமற்றவனாகிப் புன்சிரிப்புடன், "அட அசுர! நீ சித்தனாய்விட்டாய். உனக்கு இம்மாதிரி யான நல்ல எண்ணம் உண்டானது மிகவும் வியக்கத் தக்கது எல்லாவற்றிற்கும் அதிபதியாகிய ஸ்ரீ மகா விஷ்ணுவை மூன்று கரணங்களாலும் சேவித்தாய். ஜனங்களை மோஹிக்கச் செய்யும் விஷ்ணு சம்பந்தமான

மாயையை நீ தாண்டினாய். அசுரத்தன்மையை விட்டு மகாபுருஷனாய் விட்டாய். ரஜோ குண ஸ்வபாவமுள்ள உனக்கு பகவானும், ஸகல ஸ்வருபியுமான ஸ்ரீ வாசு தேவரிடத்தில் திருடமான பக்தி உண்டானது மிகவும் ஆச்சரியப்படக் கூடியது. அமிருத சமுத்திரத்தில் விளையாடுகிறவனுக்கு அற்ப ஜலங்களால் எப்படிப் பிரயோசனமில்லையோ, அப்படி மோட்சத்திற்கதிபதி யான பகவானிடத்தில் பக்தி செய்பவனுக்கு ஸ்வர்க்கம் முதலியவைகளால் என்ன பிரயோசனம் என்று சொல்லிய பின்பு இந்திரன், விருத்ரன் இருவர்களும் யுத்தஞ்செய்ய ஆரம்பித்தார்கள். அப்பொழுது அசுரன் இரும்பினால் செய்யப்பட்ட பரிசம் என்ற ஆயுதத்தை இடது கையால் எடுத்து, அதனைச் சுழற்றி இந்திரன் மீது பிரயோகித்தான். மகேந்திரன் வஜ்ராயுதத்தால் அந்தப் பரிகத்தை அடித்து ஓடித்ததுமின்றி அசுரனு டைய மற்றொரு கையையும் வெட்டினார். அப்பொழுது அசுரனுக்கு இரண்டு கையும் வெட்டப்பட்டதனால் ரத்தமானது பெருகியது. அப்படிப்பட்ட அசுரன் முன்காலத்தில் இந்திரனால் இறக்கைகள் வெட்டப் பட்டு ஆகாசத்திலிருந்து விழுந்த மலைபோல் பிரகாசித்தான். பின்பு அந்த அசுரன் கீழுதட்டைப் பூமியிலும் மேலுதட்டை ஆகாயத்திலும் வைத்துக் கொண்டு ஆகாயம் போல கம்பீரமான முகமுள்ள வனாகி, மிருத்யுவினுடையவை போன்ற சிங்கப்பற் களால் மூன்று லோகத்தையும் விழுங்குகிறவன் போலப் பருத்த சரீரத்துடன் காலால் சஞ்சரிக்கும் மலைபோலப் பூமியை அசைத்துக் கொண்டு மகேந்திரனிடம் வந்து ஐராவதத்துடன் அவரை விழுங்கினான். அது பெரிதாகிய சர்ப்பம் பறைவையை விழுங்கினது போலிருந்தது. அதனைக்கண்டு பிரஜாபதிகள், தேவர்கள். மகரிஷிகள்

முதலிய எல்லோரும் 'கஷ்டம், கஷ்டம்' என்று கதறினார்கள். அசுரனால் விழுங்கப்பட்ட மகேந்திரன் ஸ்ரீ நாராயணனாகிய கவசத்தைத் தரித்திருந்தபடியாலும் யோக பலத்தாலும் மாயா பலத்தாலும் மரணத்தை அடையவில்லை. ஆனால் அவர் வஜ்ராயுதத்தால் அவனுடைய வயிற்றைப் பிளந்து வெளியில் வந்து மலையின் சிகரம் போன்ற அவனுடைய தலையை வெட்டினார். மிகுந்த வேகமுள்ள வஜ்ரமானது. அவனுடைய தலையை, நான்கு பக்கமும் வெட்டி, முன்னூற்று அறுபது தினங்களுள்ளதும் இரண்டு அயனங்களுள்ளதுமான ஸம்வத்ஸர சக்ரத்தில் விருத்திரனைக் கொல்லக் கூடிய தினத்தில் அவனுடைய தலையை வெட்டித் தள்ளியது. அப்பொழுதும் ஆகாயத்தில் தேவதுந்துபிகள் முழங்கின. கந்தர்வர்களும், மகரிஷிகளும், விருத்திரனைக் கொன்ற மகேந்திரன் அவருடைய பராக்கிரமங்களைக் குறிப்பிடும் மந்திரங்களைக் கொண்டு தோத்திரம் செய்தது மன்றிப் புஷ்பங்களையும் வர்ஷித்தார்கள், அப்பொழுது ஸகல லோகங்களும் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது அசுரனுடைய தேகத்திலிருந்து கிளம்பிய தேஜஸ்ஸானது பகவானை அடைந்தது.

அத்தியாயம்–13

ப்ரஹ்மஹத்யா தோஷமுள்ள இந்திரன் விஷ்ணுவினால் காப்பாற்றப்பட்டது

விருத்திரன் அடிபட்டபிறகு ஸகல லோகத்தினரும் சந்தோஷித்தார்கள். தேவர்கள், மகரிஷிகள், பிதிருக்கள், பூதங்கள், தேவர்களைச் சார்ந்த தைத்யர்கள், ப்ரஹ்மா, பரமசிவன் முதலியவர்கள் இந்திரனுக்குச் சொல்லிக் கொள்ளாமலேயே தங்கள் தங்கள் லோகம் சென்றார்கள். ஆனால் இந்திரன் மாத்திரம் சந்தோஷப்படவில்லை என்று சுகர் சொல்லக் கேட்ட அரசர், 'ஓ மகரிஷியே! தேவர்கள் முதலிய எல்லோருக்கும் சந்தோஷத்தை உண்டுபண்ணிய விருத்திரவதமானது மகேந்திரனுக்கு ஏன் சந்தோஷத்தை உண்டுபண்ணவில்லை? அதனைச் சொல்லவேண்டுமென்று கேட்டார்.

4–15 அதனைக் கேட்ட சுகர் அரசரை நோக்கி, விருத்திரனுடைய பராக்கிரமத்தால் பயந்த தேவர்களும், மகரிஷிகளும் அவனைக் கொல்லவேண்டுமென்று மகேந்திரனைக் கேட்டுக் கொண்டார்கள். மகேந்திரன் ப்ராஹ்மணனைக் கொல்வதில் இஷ்டமில்லாதவராக அவர்களை நோக்கி, "விஸ்வரூபரைக் கொன்றதாலுண்டாகிய தோஷத்தை ஸ்திரீ, பூமி ஜலம், மரம் ஆகிய இவர்கள் பிரித்து எடுத்துக் கொண்டார்கள். விருத்திரனைக் கொன்றதாலுண்டாகிய தோஷத்தை எவ்விடத்தில் நிவர்த்திப்பேன்" என்று சொன்னார். அதனைக் கேட்ட மகரிஷிகள், 'ஓ மகேந்திரா நீர் பயப்பட வேண்டாம். உமக்கு அச்வமேதயாகம் செய்து வைக்கிறோம். எவன் அஸ்வமேதம் செய்து பரமாத்மாவைப் பூஜிக்கிறானோ அவன் ஜகத்தை நாசஞ் செய்தவனா

னாலும் சுத்தனாவான். மேலும் ப்ராஹ்மணனை கொன்றவன், பிதாவைக் கொன்றவன், பசுவைக் கொன்றவன், மாதாவைக் கொன்றவன், ஆசாரியனைக் கொன்றவன், நாய் மாம்சத்தைப் புசிப்பவன், சண்டாளன் ஆகிய யாரானாலும் எந்தப் பகவானுடைய நாமத்தை யுச்சரித்தால் சுத்தர்களாவார்களோ அந்தப் பகவானை நீர் சிரத்தையுடன் எங்களால் செய்யப்படும் அசுவமேதமென்னும் பெரிதான யாகத்தால் பூஜித்தீரேயாகில் ப்ராஹ்மணர்களுடன் கூடிய இந்த ஜகத்தைக் கொன்றாலும் நீர் சுத்தராகி விடுவீர். துஷ்டனைச் சிட்சிப்பதால் உமக்கு தோஷம் ஏற்படுமா' என்று சமாதானஞ் சொன்னார்கள். மகேந்திரன் விருத்திரனைக் கொன்றார். பின்பு அவருக்கு ப்ரஹ்மஹத்யா தோஷம் நேர்ந்தது. அதனால் இந்திரன் சத்துருவை ஜயித்தும் சந்தோஷத்தை அடையவில்லை. புருஷன் குணசாலியானாலும் ஐசுவரியமுள்ளவனானாலும் பிறரால் நிந்திக்கக்கூடிய தோஷம் உள்ளவனானால் அந்த ஐசுவரியங்கள் அவனுக்கு சுகத்தைக் கொடுக்கிறதில்லை. அப்பொழுது அந்தப் ப்ரஹ்மஹத்தியானது இந்திரனைப்பின் தொடர்ந்தது. அது சண்டாள ஸ்திரீபோல் இருந்தது; க்ஷயரோக முள்ளது; சிவந்த வஸ்திரமுள்ளது; நில் நில் என்று சொல்லிக் கொண்டிருக்கிறது; அது மத்ஸ்யகந்தமுள்ளதாயிருப்பதால் மார்க்கமெல்லாம் துர்நாற்றம் உண்டாகிறது. மகேந்திரன் அதனால் துரத்தப்பட்டு எல்லாத்திக்குகளிலும் அலைந்து ஈசான திக்கை நோக்கிச் சென்று மானஸ ஸரஸில் தாமரைத் தண்டின் நூலில் வசித்தார். அவர் அக்கினியைத் தூதராகக் கொண்டவராகையால் ஜலத்தில் வசிக்கும் வரையில் யக்ஞபாகம் அவருக்குக் கிடைக்கவில்லை. இப்படி ப்ரஹ்மஹத்தியா தோஷத்திலிருந்து எப்பொழுது

Released by Maran's Dog, Toronto , Canada

சுத்தனாவேன் என்று யோசித்துக் கொண்டே ஆயிர வருஷங்களைக் கழித்தார்.

16–23 அந்த காலத்தில் வித்தை, தபசு, யோகபலம் இவைகளுடைய மகிமையுள்ள நகுஷனென்ற அரசன் மகேந்திரனாக இருந்து ஸ்வர்க்கத்தைப் பரிபாலித்தார். அவர் ஐசுவரிய மதங்கொண்டு இந்திராணியிடம் ஆசை கொண்டதால் மலைப்பாம்பாக ஆனார். பிறகு இந்திரன் வேதவாக்கியத்தால் அழைக்கப்பட்டு, பகவானைத் தியானஞ் செய்ததால் பாபமற்றவராகி ஸ்வர்க்கத்திற்கு வந்தார். விஷ்ணுவின் சக்தியாலும் ஈசான திக்கிற்கு அதிபதியான ருத்திரனாலும் காப்பாற்றப்பட்ட அந்த மகேந்திரனை ஆயிரம் வருஷங்களிலும் அந்தத் தோஷமானது உபத்திரவிக்க வில்லை. பின்பு ப்ரஹ்ம ரிஷிகள் மகேந்திரனுக்குத் தீட்சை செய்வித்து அஸ்வமேதத்தை ஆரம்பித்தார்கள். அதனால் ஸகல தேவ ஸ்வரூபியாகிய பகவான் பூஜிக்கப்பட்டு, சந்தோஷமடைந்தார். உடனே விருத்திரனுடைய வதத்தால் ஏற்பட்ட பாபமானது மிகுந்த தானாலும் அந்தப் பகவதாரதனத்தால் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கியது. மரீசி முதலிய மகரிஷிகள் விதிப்படி அசுவமேதத்தைச் செய்து; புராண புருஷனைப் பூஜித்து, மகேந்திரனுடைய தோஷத்தை விலக்கினார்கள். இந்த யாகமானது ஸகல பாபங்களையும் போக்கக்கூடியது; பகவானிடத்தில் பக்தியை உண்டு பண்ணக் கூடியது; பக்த ஜனங்களுடைய மகிமையுள்ளதும், இந்திரன் சுத்தனாகியதுமான இதனை எல்லோரும், எப்பொழுதும் படிக்க வேண்டும். ஒவ்வொரு பர்வத்திலும் இந்த இதிகாசத்தைக் கேட்க வேண்டும். இதனால் தனம், கீர்த்தி, பாப நிவர்த்தி, சத்ரு ஜயம், க்ஷேமம், தீர்க்கமான ஆயுள் இவைகள் விருத்தியடையும்.

Released by Maran's Dog, Toronto , Canada

அத்தியாயம்–14

விருத்திரனுடைய வரலாறு

அதனைக்கேட்ட அரசன் மஹரிஷியை நோக்கி, "ஓ ப்ராஹ்மண! ரஜோ குணம், தமோ குணம் ஆகிய இவைகளின் சுபாவமுள்ள மிக்க பாபியான விருத்திரனுக்குப் பகவானாகிய ஸ்ரீமந் நாராயணனிடத்தில் திருடமான பக்தி உண்டாவதற்கு என்ன காரணம்? சத்துவ குண ஸ்வரூபிகளான தேவர்களுக்கும், சுத்த சித்தமுள்ள மகரிஷிகளுக்கும் ஸ்ரீ பகவானுடைய பாதத்தில் பெரும்பாலும் பக்தி உண்டாகிறதில்லையே. பூமியின் தூள்கள் எப்படிக் கணக்கிடக்கூடாதவைகளோ அப்படியே ஜனங்கள் அநேகர்; அவர்களில் க்ஷேம மார்க்கத்தை விரும்புவோர் மிகவும் சொற்பமானவர்கள்; ஓ ப்ராஹ்மணோத்தம! சில ஜனங்களே மோட்சத்தை அடைய வேண்டுமென்று விரும்புகிறார்கள்; அப்படி விரும்பிய அநேகர்களுக்குட் சிலருக்கே வைராக்கியம் உண்டாகிறது; அப்படி வைராக்கியமடைந்த அநேகர் களுக்குட் சிலரே ஆத்ம தத்துவத்தைத் தெரிந்து கொள்ளுகிறார்கள். முக்தர்களான கோடி ஜனங்களுக்குள் ஸ்ரீ நாராயணனையே தியானஞ்செய்து கொண்டு அவரிடத்திலேயே ஆசக்தியுள்ளவனாக இருப்பவன் மிகவும் அரிது. அப்படியிருக்க, ஸகல உலகங்களையும் உபத்திரவிப்பவனாகிய விருத்திரனனுக்கு யுத்த காலத்தில் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் திருடமான பக்தி உண்டான விஷயத்தில் எனக்கு மிகுந்த சந்தேகமிருக்கிறது. அதனைச் சொல்ல வேண்டும். அந்த அசுரனுடைய பராக்கிராமத்தால் மகேந்திரனும் சந்தோஷித்தாரே" என்று கேட்டார்.

8–13. அதனைக் கேட்ட வியாஸ புத்திரராகிய சுகர் கேள்வியைப் பற்றிச் சிலாகித்து, சிரத்தையுள்ள அரசரை நோக்கி, "ஓ மகாராஜ! ஒரு இதிகாசத்தைச் சொல்லுகிறேன். அதனைச் சாவதானராகக் கேளும். நான் வியாசரிடமிருந்தும் நாரதரிடமிருந்தும், தேவரிட மிருந்தும் தெரிந்து கொண்டேன். சூரசேனமென்ற தேசத்தில் சித்ரகேது என்ற ஓர் அரசனிருந்தார். அவருக்குப் பூமிதேவி ஸகல வஸ்துக்களையும் உண்டு பண்ணிக்கொண்டிருந்தாள். அவருக்குக் கோடி பாரியைகள் இருந்தார்கள். அரசன் யுவாவாக இருந்தும் அவர்களிடத்தில் அரசனுக்குப் புத்திரன் உண்டாக வில்லை. அரசன் அழகு, ஔதார்யம், வயது, சூலம், வித்தை, ஐசுவரியம், காந்தி ஆகிய இவைகளுள்ள வரானாலும் புத்திரனில்லாததனால் மிக்க கவலை அடைந்தார். அவர் ஸகல சம்பத்துக்களிலும் அநேக பாரியைகளிடத்தில், ராஜ்ஜியத்திலும் பிரியப்படவில்லை. இப்படியிருக்கையில் ஒரு நாள் அங்கீரஸ் என்ற மகரிஷி லோக சஞ்சாரம் செய்துகொண்டு தெய்வச் செயலாக அந்த அரசனுடைய அரண்மனைக்கு வந்தார். அரசன் மகரிஷியை சாஸ்திர முறைப்படி பூஜித்து ஆதித்தியஞ்செய்து மகரிஷி ஆசனத்தில் உட்கார்ந்த பிறகு வணக்கத்துடன் தலைகுனிந்து தாம் பூமியில் உட்கார்ந்தார். அப்பொழுது மகரிஷி சித்ரகேதுவை நோக்கி, "க்ஷேமமா? பிரகிருதிகள் க்ஷேமமாய் இருக் கிறார்களா? (யஜமானன், மந்தபரி, தேசம், கோட்டை, பொக்கிஷம், தண்டம், மித்திரம் ஆகிய ஏழும் பிரகிருதி எனப்படுகின்றன.) மேலும், ஜீவன் மகத்தத்துவம் முதலிய ஏழு பிரகிருதிகளால் காப்பற்றப்படுவது போல் அரசனும் மேற்காட்டிய பிரகிருதிகளால் காப்பாற்றப் படுகிறான். ஆனதால் அவைகளை அனுசரித்திருக்கும்

அரசன் அனுவர்த்தித்தால்தான் சம்பத்தை அடைவார்கள். ஓ மகாராஜ! பிரஜைகளும் மந்திரிகளும், மித்திரர்களும் பிரதானர்களும் பட்டணத்திலிருப்பவர்களும், தேசவாசிகளும், அரசர்களும், புத்திரர்களும் உம்முடைய உத்தரவின்படி நடக்கிறார்களா? எவனுக்கு மனது வசப்பட்டிருக்கிறதோ அவனுக்கு மேற்சொல்லியவர்களும் சுவாதீனப்படுவார்கள். ஸகல லோகத்தினரும் அவனைப் பூஜிப்பார்கள். நீர் இப்பொழுது மனத்தாலும் ப்ரீதியில்லாமலிருக்கிறீரா? அல்லது பிரியமில்லாமலிருக்கிறீரா? ஸ்வபாவத்தில் இப்படி இருக்கிறீரா? உம்முடைய முகத்தைப் பார்க்கும்பொழுது கவலையுள்ளவராக இருக்கிறீர் என்று நினைக்கிறேன். அதனைச் சொல்லும்" என்றார்.

24–27. அதனைக்கேட்ட சித்திரகேது, "ஓ பகவன் தவம் ஞானம், சமாதி இவைகளால் சுத்தர்களான யோகிகளுக்குப் பிராணிகளுடைய மனத்திலும் வெளியிலுமிருக்கிற விஷயங்கள் நன்றாகத் தெரியும். ஆனதால் என்னுடைய அபிப்ராயத்தை முற்றிலும் அறிந்தவரான நீர் கேட்பதால் அதனைச் சொல்லுகிறேன் லோகபாலர்களாலும் பிரார்த்திக்கக்கூடிய ராஜ்ய சம்பத்தானது எனக்கு இருந்தும் அபுத்திரனாக இருப்பதால் அவைகள் எனக்குச் சந்தோஷத்தை உண்டு பண்ணவில்லை, பசி தாகத்தால் வருத்தப்பட்டவனுக்குச் சந்தனம், புஷ்பம் இவைகளால் சந்தோஷமுண்டாகுமா? ஆனதால் பிதிருக்களுடன் நான் நரகத்தை அடையாமலிருப்பதற்காகப் புத்திரன் உண்டாகும் படி அனுக்கிரஹியும்" என்று கேட்டுக்கொண்டார்.

28–30. இதனைக் கேட்ட ப்ரஹ்ம புத்திரரான

அந்த அங்கீரஸ் மகரிஷி துவஷ்டாவைத் தேவதையாகக் கொண்டு சருவைப் பாகஞ்செய்து துவஷ்டாவைப் பூஜித்தார். மேலும் அவர் அரசனுடைய பத்தினிகளுக்குள் மூத்தவளும், சிறந்தவளுமான கிருதத்யுது என்பவளுக்கு யக்ஞ சேஷத்தைக் கொடுத்தார், பிறகு அரசனை நோக்கி,"ஓ மகாராஜ சந்தோஷத்தையும் துக்கத்தையும் கொடுக்கக்கூடிய ஒரு புத்திரன் உண்டாவான்" என்று சொல்லத் தமது இஷ்டப்படி சென்றார்.

31–62. அந்தக் கிருதத்யுதி என்பவள் அந்த யக்ஞ சேஷத்தைப் புசித்ததால் கர்ப்பிணியானாள். அது கிருத்திகாதேவி அக்னியிடமிருந்து கர்ப்பத்தைத் தரித்தது போலிருந்தது மேலும் அவளுடைய கர்ப்பமானது ஒவ்வொரு நாளும் சுக்லபக்ஷ சந்திரன் போல் விருத்தியடைந்தது. பின்பு பிரசவகாலம் நேர்ந்தபொழுது அந்த கிருதத்யுதி குமாரனைப் பெற்றாள். அப்பொழுது சூரசேன தேசத்தில் வசிக்கும் ஜனங்கள் அதனைக் கேட்டு மிகவும் சந்தோஷம் அடைந்தார்கள், அரசன் மகுந்த சந்தோஷத்துடன் ஸ்நானஞ் செய்து சுத்தனாக அலங்காரங்கள் செய்துகொண்டு ப்ராஹ்மணர்களை கொண்டு ஸ்வஸ்திவாசனம் செய்வித்து ஜாதகர்மம் செய்தார். மேலுமவர் ப்ராஹ்மணர்களுக்குத் தங்கம், வெள்ளி, வஸ்திரம், ஆபரணம், கிராமங்கள், யானைகள், குதிரைகள், ஆறு அற்புதப் பசுக்கள் ஆகிய இவைகளைக் கொடுத்ததுமின்றி அவரவர்களுக்கு இஷ்டமான வஸ்துக்களை வருணன் மழை பெய்வது போல் வருஷித்தார்கள். பின்னும் அவர் குமாரனுக்குக் கீர்த்தி, தீர்க்கமான ஆயுள், சம்பத்து இவைகளை உண்டுபண்ணக்கூடியவைகளையே செய்துவந்தார். தரித்திரனுக்கு

மிக்க சிரமப்பட்டுக் கிடைத்த பணத்தில் எப்படிப் பிரீதியிருக்குமோ அப்படி சிரமப்பட்டுப் பிறந்த அந்தப் புத்திரனிடத்தில் அந்த அரசனுக்கு ஒவ்வொரு நாளும் பிரீதி விருத்தியடைந்தது. மாதாவான கிருதத் யுதிக்கு இரண்டு மடங்கு அதிகப் பிரீதியுண்டாயிற்று, மற்ற ஸபத்னிகளுக்கு தங்களுக்குப் புத்திரனில்லாத தனால் விசேஷ வருத்தமுண்டாயிற்று. அரசரும் பிரிய முள்ளவராக இருந்தார்; மற்ற பத்தினிகளிடத்தில் பிரியப்படவில்லை. அப்பொழுது மற்ற ஸ்திரீகள் தங்களுக்குப் புத்திரனில்லாதிருப்பதாலும், அரசன் தங்களிடத்தில் பிரியப்படாதிருப்பதாலும், மிகவும் வருத்தப்பட்டுத் தங்களுக்குள் பின்வருமாறு யோசிக் கலானாள்; "புத்திரனில்லாதவளும், அதனால் மிக்க பாபியும், பர்த்தாவினுடைய மனத்திற்குப் பிடிக்காத வளும், நல்ல பிரஜைகளுள்ள ஸபத்னிகளால் வேலைக் காரியைப்போல் அவமதிக்கப்பட்டவளுமான ஸ்திரீயை நிந்திக்க வேண்டும். ஆனால் தாசிகள் யஜமானியான ஸ்திரீயைச் சேவிக்க வேண்டியதேயொழிய அவர்களுக்கு வருத்தமேது? வேலைக்காரியின் வேலைக்காரி எப்படியோ அதுபோல நாங்கள் எல்லோரும் அதிருஷ்ட மில்லாதவர்கள்" என்று விசேஷமாகத் துக்கித்து கிருதத்யுதியின் புத்திரனிடத்தில் மிக்க விரோதத்தை அடைந்தார்கள், அந்த விரோதத்தால் விவேகமில் லாதவர்களாகி அந்த குழந்தைக்கு விஷத்தைக் கொடுத் தார்கள். கிருதத்யுதியானவள் பத்னிகளால் செய்யப் பட்டதை அறியாதவளாகி அந்தக் குழந்தை தூங்குகிறான் என்றே நினைத்திருந்தாள். பிறகு சிறிது நேரம் கழித்து வேலைக்காரியை ஆக்ஞாபித்தாள். அவள் குழந்தையின் சமீபம் சென்று பார்க்கும்பொழுது அக்குழந்தையின் கண்கள் வெளியில் வந்திருந்தன. மேலும் அந்தப்

பாலன் பிராணன் இந்திரியம், ஜீவன் இவைகளால் விடப்பட்டவனாயிருந்தான். அதனைக்கண்ட அவள் பூமியில் விழுந்து புரண்டு அழுதாள் அதனைக்கேட்டு கிருதத்யுதியானவள் இருகைகளால் மார்பில் அடித்துக் கொண்டு குழந்தையின் சமீபம் சென்று பூமியில் விழுந்து மூர்ச்சை அடைந்தாள். இப்படித் தலைமயிரை விரித்துக்கொண்டு துக்கப்படும் ராஜ பத்தினியைப் பார்த்து அரசனுடைய அந்தப்புரத்தில் வசிக்கும் புருஷர்களும், ஸ்திரீகளும் சம துக்கமுள்ளவர்களாக அழுதார்கள் அந்த ஸபத்னிகளும் ஒன்றையும் அறியாத வர்கள் போலத் துக்கித்தார்கள். அரசர் தன்னுடைய புத்திரனுக்கு நேர்ந்த மரணத்தைக் கேட்டுக் கண் தெரியாதவராகி வழியில் விழுந்துகொண்டு மூர்ச்சை யடைந்து பிரகிருதிகளாலும், பிராம்மணர்களாலும் சூழப்பட்டு, வஸ்திரம் அவிழ்ந்தவராகித் தலைமயிரை விரித்துக்கொண்டு அந்தப் பாலனுக்குச் சமீபத்தில் வந்து விழுந்தார், பின்னுமவர் தீர்க்கமாயும் உஷ்ணமா யும் பெருமூச்சுவிட்டுக் கண்ணீரால் கண்டம் அடைத்துப் பேசமுடியாதவராக இருந்தார். அப்பொழுது கிருதத்யுதியானவள் தன்னுடைய புருஷன் துக்கிப் பதையும் குலத்திற்கு ஒரே சந்ததியான புத்திரன் மரணமடைந்ததையும் ஜனங்கள் துக்கிப்பதையும் பார்த்துக் கண்ணீரால் இரண்டு ஸ்தனங்களையும் நனைத்துக்கொண்டு விரித்து தலைமயிர்களுடன் குரரியென்ற பட்சிபோலப் பலவகையாக பிரலாபித்தாள். எப்படியென்றால்; "ஓ ப்ரஹ்மதேவரே! நீர் மிகவும் மூடர்! உம்முடைய சிருஷ்டிக்கு விரோதமானதைச் செய்கிறீர். வயது சென்றவர்கள் ஜீவித்திருக்கும் போது சிறுவன் மரணத்தை அடைகிறான். இம்மாதிரியான விபரீதத்தை நீர் செய்வதால் லோகத்திற்கு நீர்

சத்துருவேயாம் 'நான் ஜீவர்களுடைய கர்மத்தை அனுசரித்து அவர்களை உண்டுபண்ணுகிறேன், சுயமாக ஒன்றும் செய்கிறதில்லை. பிராணிகளுக்கு மாணம், ஜனனம் இவைகள் கிரமமாக உண்டாகிறதென்பது இல்லை' என்று சொல்வீரானால் அவரவர்களுடைய கர்மங்களாலேயே அவரவர்களுக்கு ஜனன மரணங்கள் உண்டாகின்றன உம்மால் என்ன பிரயோஜனம் உண்டுபண்ணப்பட்ட சிநேக பாசத்தை நீரே கெடுக்க லாமா. ஓ குழந்தாய்! அநாதையான என்னையும் துக்கிக்கும் பிதாவையும் விட்டுத் துபவில்லாத யமனுடன் நீ செல்லுவது நியாயமல்ல. அபுத்திரர் களுக்கு ஏற்படும் நரகத்தை உன்னால் தாண்ட வேண்டும் ஓ ராஜபுத்திர! உன்னுடைய தோழர்கள் விளையாடுவதற்கு தேடுகிறார்கள் நீ தூங்கி வெகு நாழியாகி விட்டது எழுந்திரு; என்னுடைய ஸ்தன்யத்தைப் பானஞ்செய் பந்துக்களுடைய துக்கத்தை போக்கடி.; நான் உன்னுடைய சமீபம் வந்தபொழுது புன்சிரிப்புள்ள உன் முகத்தைப் பார்க்கவில்லை. இப்பொழுது இனிமையான உன்னுடைய வார்த்தை களையும் கேட்கவில்லை திரும்பி வராமல் சென்றாயே" என்று அழுதாள். அப்பொழுது சித்தர கேதுவும் மிகுந்த துக்கத்துடன் வாய்விட்டு அழுதார் அவ்விருவர்களும் துக்கிக்கும் பொழுது அங்கிருக்கும் ஜனங்கள் எல்லோரும் அழுதார்கள். இதனைத் தெரிந்துக் கொண்ட அங்கீரஸ் என்னும் மகரிஷி நாரதருடன் அவ்விடம் வந்தார்.

அத்தியாயம்–15

சித்திரகேதுவுக்கு ஞானோபதேசம் செய்தது

அந்த இரண்டு மகரிஷிகளும் மரணமடைந்த பாலகனுடைய சமீபத்தில் விழுந்து, இறந்தவனுக்குச் சமமாயிருக்கும் அரசனை நோக்கி, 'ஓ சிறந்த அரசனே! இப்பொழுது யாரைப்பற்றி நீர் துக்கிக்கிறீரோ அவனுக்கும் உமக்கும் என்ன சம்பந்தம்? முந்திய சிருஷ்யில் இவனுக்கு நீர் யார்? இனி உமக்கும், அவனுக்கும் என்ன சம்பந்தம்? ஜலத்தின் வேகத்தால் மணல்கள் ஒன்றோடொன்று சேருவதுபோலவும் ஜனங்கள் காலத்தால் சேருவதும் பிரிவதுமாக இருக்கிறார்கள். விதைகளில் வேறு விதைகள் எப்படி சிலகாலஞ் சேர்ந்தும், சில காலஞ்சேராமலும் இருக் கின்றனவோ, அப்படி பிராணிகள் ஈசுவரனுடைய மாயையால் தூண்டப்படுகிறார்கள். ஓ மகாராஜ! நான், நீர், இங்கிருப்பவர்கள் ஆகிய எல்லோரும் ஜனனத்திற்கு முந்தியும், மரணத்திற்குப் பிறகும் எப்படி சேர்ந்திருப் பதில்லையோ அப்படியே இப்பொழுது என்று தெரிந்துக்கொள்ளும். ஈசுவரன் ஒன்றிலும் பற்றுத லில்லாதவரானாலும் குழந்தைபோல விளையாட்டாகப் பிராணிகளைக் கொண்டு பிராணிகளைச் சிருஷ்டிக் கிறார்; காப்பாற்றுகிறார்; நாசஞ் செய்கிறார். பிதா வினுடைய தேகத்தால் மாதாவினுடைய தேகத்திலிருந்து புத்திரனுடைய தேகம் உண்டாகிறது. விதை யிலிருந்து விதை உண்டாகவில்லையா? ஆனால் ஜீவன் நித்தியன், சாமானியன் விசேஷமென்று வஸ்துவின் இடத்தில் விபாகம் ஏற்படுத்தியது போல தேகமுள்ளவன், தேகம் என்பது அவிவேகத்தால் ஏற்பட்டதேயாம்.

கட்டையினுடைய விகாரங்கள் அக்னியில் தோற்றுவது போல பலவகையாக இருப்பது ஜன்மநாசம், குறைவு விருத்தி கர்மபலம், ஆகிய இவைகள் தேகத்தின் சேர்க்கையால் தேகியான ஆத்மாவினிடத்தில் தோன்றுகின்றன. தூங்குகிறவனுக்கு அந்த சமயத்தில் அகங்காரமில்லாததனால் கோரமான சம்ஸாரம் அவனுக்குத் தோன்றவில்லை. அதுபோலவே முக்தனுக்கும் அகங்காரம் இல்லாதாதனால் ஜாக்ரதவஸ்தையில் சம்ஸாரம் தோன்றுகிறதில்லை. ஆனதால் அகங்காரமாகிய தமோ குணத்தைப் போக்கடித்துக் கொள்ளும் பகவானாகிய வாசுதேவரும், ஈச்வரனும், எல்லோரும் ஆத்மாவுமான மகாபுருஷனிடத்தில் மனத்தைச் செலுத்தும்" என்று சொன்னார்கள்.

13–20 அதனைக் கேட்ட சித்திரகேது முகத்தைத் துடைத்துக் கொண்டு கவலையற்றவனாகி, "நீங்கள் யார்? பெரியோர்களுக்கும் பெரியோர்களாக இருக்கிறீர்கள். அவதூத வேஷத்துடன் இவ்விடம் வந்திருக்கிறீர்கள். பகவத்பக்தர்களான ப்ராஹ்மணர்கள் பைத்தியங் கொண்டவர்கள் போல என்னைப்போலொத்தவர்களைக் காப்பாற்றுவதற்காகப் பூமியில் சஞ்சரிப்பார்கள். ஸனத்குமாரர், நாரதர், ரிபு, அங்கிரஸ் தேவலார் அஸிதர், மார்க்கண்டேயர், கௌதமர், வசிஷ்டர், ஜாதுகர்ணி, ஆருணி, ரோமசர், சியவர், தத்தர், ஆசுரி, தேவசிரஸ், போத்தியர், பஞ்சசிகர், இரணிய நாபர், கௌசல்வியா, சிருததேவர், ரிதத்து வஜர் ஆகிய இவர்களும் இன்னும் மற்ற சித்தர்களும் அக்ஞர்களுக்கு ஞானத்தை உபதேசிப்பதற்காக சஞ்சரிக்கிறார்கள். ஆனதால் கிராம்ய விஷயத்திலும் ஆசைப்பட்டவனும் மூடனும், சம்சாரத்தில் மூழ்கியவனுமான

எனக்கு ஞானத்தை உபதேசியுங்கள்" என்று கேட்டார்.

21–30 அதனைக் கேட்டு அங்கிரஸ் என்ற மகரிஷி "ஓ மகாராஜ! நீர் அபுத்திரனாக இருந்த காலத்தில் உமக்குப் புத்திரனுண்டாகும்படி அனுக்கிரகித்த அங்கிரஸ் என்பவன் நான். இவர் ப்ரஹ்ம புத்திரராகிய நாரத மகரிஷி, இப்பொழுது புத்திர சோகத்தால் துக்கிக்கும் உமக்கு ஞானோபதேசஞ் செய்து, விஷ்ணு பக்தராகிய உம்மை அனுக்கிரகிப்பதற்காக நாங்கள் இவ்விடம் வந்தோம். ப்ராஹ்மணர்களைத் தெய்வமாகக் கொண்ட பகவத்பக்தன் துக்கிக்கத் தகுந்தவனல்ல. முந்தி உமக்குப் புத்திரனுண்டாகும்படி அனுக்கிரகித்தது போல இப்பொழுது மேலான ஞானத்தைக் கொடுக்கிறேன். இப்பொழுது புத்திரன் இல்லாதவர்கள் வருத்தப்படுவதுபோலத் துக்கப்படுகிறீர். இந்த மாதிரியே ஸ்திரீகள், வீடு, பணம் பலவகையான சம்பத்து, சபதம் முதலிய விஷயங்கள், ராஜ்யம், பூமி, சேனை, பொக்கிஷம்; வேலைக்காரர்கள்; மந்திரிகள், மித்திரர்கள் ஆகிய எல்லோரும் அநித்தியர்கள்; சோகம், மோகம், பயம் இவைகளைக் கொடுப்பவர்கள். இவைகள் சொப்பனம் போலவும் மாயை போலவும்; மனோரதம் போலவும் மித்தியா பூதமான மாயைகளேயாம். மேலும், கந்தர்வ நகரம் போன்றவைகள்; மனத்தால் சங்கற்பிக்கப்பட்டவைகள்; உண்மையான வைகளில்லை. உண்மையாக இருந்தால் எப்பொழுதும் இருக்கவேண்டும், அப்படி இல்லை. மேலும் கர்ம வாசனைகளைக் கொண்டு விஷயங்களைத் தியானிப்பதால் மனதாலேயே கர்மங்கள் ஏற்படுகின்றன. இந்தத் தேகமானது திரவியம், ஞானம் ஆகிய இவைகளின் சரூபமானது, இதனாலேயே தேகியான ஜீவனுக்குப்

பலவகையான சந்தர்ப்பம் உண்டாகிறது; ஆனதால் ஸ்திரமான மனத்தால் ஆத்மாவின் உண்மையை அறிந்து, துவைதத்தை உண்மையென்று நம்பாமல் வைராக்கியத்தை அடையும்" என்றார்.

31–32 பிறகு நாரதர் அரசனை நோக்கி, "ஒரு மந்திரத்தை உமக்கு உபதேசிக்கிறேன். அதனைப் பெற்றுக் கொள்ளும். அதனை ஏழு நாள் ஜபம் செய்தால் சங்கர்ஷண பகவானை நேரில் தரிசிக்கலாம். அந்தப் பகவானுடைய பாதத்தை உபாசித்த பரமசிவன் முதலியவர்கள் இந்தத் துவைதப் பிரம்மத்தை விட்டு மேலானதும்; நிகரற்றதுமான மகிமையை அடைந்தார்கள். அதற்கும் மேலானது ஒன்றுமில்லை. நீரும் சீக்கிரத்தில் அம்மாதிரியான மகிமையை அடைவீர்" என்றார்.

அத்தியாயம்–16

சித்திர கேதுவுக்கு நாரதர் வித்தையை உபதேசித்தது

பிறகு தேவரிஷியாகிய நாரதர் மரணமடைந்த ரஜோ புத்திரனைத் தம்முடைய யோக பலத்தால் பிழைக்கச்செய்து துக்கிக்கும் பந்துக்களுக்கு முன்பாக "ஓ ஜீவாத்மாவே! உனக்கு க்ஷேமம் உண்டாகட்டும். உன்னுடைய தாயும், தகப்பனாரும் மித்திரர்களும், பந்துக்களும் உன்னுடைய மரணத்தால் துக்கிக்கிறார்கள். ஆனதால் இந்தச் சரீரத்தில் இன்னும் சிலகாலம் இருந்து போகங்களை அனுபவி. அரசனுடைய சிம்மாசனத்தையடைந்து, ராஜ்ஜியத்தைக் காப்பாற்று" என்று சொன்னார்.

4–11. அதனைக் கேட்ட அந்த ஜீவன் அவரை நோக்கி, "ஓ ப்ராஹ்மண! எந்த ஜன்மத்தில் எனக்கு இவர்கள் தாய் தகப்பனாக இருந்தார்கள்? கர்மங்களாக தேவசரீரத்திலும், திர்யக் ஜாதிகளின் சரீரத்திலும், மனித சரீரத்திலும் சுற்றிக்கொண்டிருக்கும் ஜீவனுக்கு எல்லோரும் பந்துக்களாகவும் ஞாதிகளாகவும், சத்துருக்களாகவும், மத்தியஸ்தர்களாகவும் மித்திரர்களாகவும், உதாசீனர்களாகவும்; துவேக்ஷிகளாகவும் ஆகிறார்கள். விற்கக்கூடியதும், வாங்கக்கூடியதும் தங்கம் முதலிய வஸ்துக்கள்வியாபாரிகளிடத்தில்சுற்றிக்கொண்டிருப்பது போல ஜீவனும் அநேக யோனிகளில் சுற்றிக்கொண்டிருக்கிறான். ஸ்திரமான இருக்கும் பசு முதலிய வஸ்துக்களும் ஒருவனிடத்திலேயே நிலைத்திருக்கிறதில்லை. அதனால் வஸ்துக்களுக்கும் புருஷனுக்கும்

சம்பந்தம் நித்தியமல்ல. எதுவரையில் சம்பந்தமிருக் கிறதோ அதுவரையில் அந்த வஸ்துவினிடத்தில் என்னு டையது' என்ற அபிமானம் இருக்கிறது. இப்படியே ஜீவன் சரீரத்தை அடைந்து, பிதா முதலியவர்களுடைய சம்பந்தத்தை அடைந்தாலும் அவன் நித்தியனேயாம். உண்மையில் அபிமானமற்றவன்; எந்தச் சரீர சம்பந்தத்தை எதுவரையில் அடைகிறானோ. அது வரையில்தான் அந்தச் சரீரத்தில் அபிமானம் இல்லை இந்த ஜீவன் உண்மையில் நித்தியன்; குறைவற்றவன்; ஜனனம் முதலியவைகள் இல்லாதவன்; தானாகப் பிரகாசிப்பவன்; தன்னுடைய மாயாகுணங்களால் தன்னையே ஜகத் ரூபமாகச் சிருஷ்டிப்பவன்; இவனுக்கு மிகவும் பிரியனாவது, பிரியனில்லாதவனாவது, பந்து வாவது அன்னியனாவது ஒருவனும் இல்லை, குண தோஷங்களை உண்டுபண்ணுகின்ற ஸகல பிராணிகளு டைய புத்திக்குச் சாட்சியாக இருப்பவன், மேலும் அவன் சுகத்தையாவது துக்கதையாவது, கர்ம பலத்தையாவது அடைகிறதில்லை. காரிய காரணங் களுக்குச் சாட்சியாகவும், உதாசீனனாகவும். சுதந்திர னாகவும் இருக்கிறான். ஆனதால் எனக்கும் உங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை" என்று சொல்லி அந்த ஜீவன் சென்றான்.

12–26. அதனைக் கேட்ட அந்த பந்துக்கள் சிநேக பாசம் அற்றவர்களாகித் துக்கத்தை விட்டார்கள், பின்னும் அவர்கள் அந்த தேகத்திற்கு சம்ஸ்காரங்கள் செய்து சோகம், மோகம், பயம் ஆகிய இவைகளைக் கொடுக்கும் விடமுடியாத துக்கத்தை விட்டார்கள். அந்தக் குழந்தையை விஷங் கொடுத்துக் கொன்ற வர்களான ஸபத்தினிகள் வெட்கம் அடைந்து,

பாலஹத்தியால் ஏற்பட்ட தோஷத்தை நிவர்த்தித்துக் கொள்ளுவதற்காக அங்கிரஸ் சொன்னபடி யமுனா நதியில் விரதத்தை அனுஷ்டித்தார்கள். அந்தச் சித்திர கேது என்ற அரசனும் அந்தப் ப்ராஹ்மணருடைய வார்த்தையைக் கேட்டு , விவேகத்தை அடைந்து, சம்சாரமாகிய பாழுங்கிணற்றை விட்டு வெளியில் வந்தான். அது சேற்றில் அகப்பட்டிருந்த யானையானது அதிலிருந்து நிவர்த்தி அடைந்தது போலிருந்தது. பின்னும் அவன் யமுனையில் ஸ்நானம் செய்து பிதிரு தர்ப்பணம் முதலியவைகளை முடித்து, மௌனமாக இந்திரியங்களை அடக்கிகொண்டு, ப்ரஹ்மதேவரின் பித்திரர்களான அந்தப் பிராம்மணர்களை நமஸ்கரித் தார் பிறகு நாரதர் சித்தரும், பக்தரும், சரணமடைந்த வருமாகிய அரசனுக்கு அந்த வித்தையை உபதேசித்தார்; "பகவானாகிய உமக்கு நமஸ்காரம். வாசுதேவராகிய உம்மைத் தியானம் செய்கிறோம். பிரத்யும்ன ஸ்வரூபியும், அனிருத்தரும், சங்கர்ஷணருமாகிய உமக்கு நமஸ்காரம் ஞான ஸ்வரூபியும், ஆனந்த மூர்த்தியும் ஆத்மாவிடத் திலேயே ரமிப்பவரும் சாந்தருமான உமக்கு நமஸ்காரம், மாயையால் உண்டான ராகத்து வேஷம் முதலிய வைகளை ஆத்மானந்தானுபவத்தால் போக்கடித்தவரும், இந்திரியங்களும் அதிபதியும் அளவற்ற சக்தியுள்ள வருமான மகாபுருஷனுக்கு நமஸ்காரம். வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாதவரும், நாமரூபங்களற்றவரும். காரிய காரணங்களுக்கு மேலானவரும். சித்ரூபியுமாகிய பகவான் நம்மைக் காப்பாற்றட்டும். மண்ணால் செய்யப்பட்ட வஸ்துக்களில் அதன் ஜாதி (மண்) தொடர்ந்திருப்பது போல எந்தப் பகவானிடத்திலிருந்து இந்த ஜகத்தானது உண்டாகிறதோ, எவரிடத்தில் வசிக்கிறதோ; எவரிடத்தில் லயமடைகிறதோ அந்தப்

பிரம்மத்திற்கு நமஸ்காரம். ஆகாசம்போல் உள்ளிலும் வெளியிலும் வியாபித்திருக்கும் எவ்ரை மனம், புத்தி, இந்திரியங்கள், பிராணன் இவைகள் தொடுகிறதில் லையோ; தெரிந்துகொள்ளுகிறதுமில்லையோ அவருக்கு நமஸ்காரம் அக்கினியால் காய்ச்சப்பட்ட இரும்பானது திருணங்களை எரிப்பதுபோல தேகம், இந்திரியங்கள், பிராணன், மனது, புத்தி ஆகிய எவருடைய சைதன்ய சம்பந்தத்தால் சேஷ்டிக்கின்றனவோ. எவருடைய சைதன்ய சம்பந்தமில்லாதபொழுது (சுஷுப்தி மூர்ச்சைகளில்) சேஷ்டிக்கின்றதில்லையோ, ஜாக்ரத் முதலிய அவஸ்தைகளில் ஜீவன் திரஷ்டா என்ற பெயரை எவருடைய அனுக்கிரஹத்தால் அடைகிறானோ அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். ஓ சிறந்த பக்தர் களுடைய அஞ்சலியினால் பூஜிக்கப்பட்ட பாதார விந்தமுள்ளவரே! எல்லோருக்கும் மேலானவரே! எல்லோருக்கும் அதிபதியே! மிகுந்த மகிமை உள்ள வரும் மகா விபூதிகளுள்ளவரும், மகா புருஷரும். பகவானுமாகிய உமக்கு நமஸ்காரம்" என்று இம்மாதிரியான வித்தையை பக்தரான அரசனுக்கு நாரதர் உபதேசித்து அங்கிரஸ் என்ற மகரிஷியுடன் தம்மிருப்பிடம் சென்றார்.

27–48. சித்திரகேது நாரதரால் உபதேசிக்கப்பட்ட அந்த வித்தையை ஏழு நாள் ஜலத்தைப் புசித்து ஜபித்தார். கடைசியில் அந்த வித்தையின் மஹிமையால் வித்தியாதரர்களுக்கு அதிபதியாயிருப்பதை அடைந்தார். பிறகு சில தினங்களில் ஆதி சேஷனுடைய பாதார விந்தத்தை அடைந்தார். (அவரைத் தரிசித்தாரென்று கருத்து) அந்தச் சேஷன் தாமரைத் தண்டு போல வெளுத்த சரீரமுள்ளவர்; கருத்த வஸ்திரமுள்ளவர்

கிரீடம், தோள் வளை, அரைஞாண், வளை இவைகளால் ப்ரகாசிப்பவர்; பிரசன்னமான முகமுள்ளவர்; சிவந்த கண்களுள்ளவர் சித்தர்களால் சுற்றப்பட்டவர்; அப்படிப்பட்ட பகவானைத் தரிசித்து, அரசன் சகல பாபங்களற்றவராகி, சித்த சுத்தி அடைந்து, மிகுந்த பக்தியுடன் ஆனந்தத்தால் கண்ணீரைப் பெருக்கி மயிர்கூச்சலடைந்து புராண புருஷரான அந்தப் பகவானைத் துதிக்கலானார். அந்த அரசன் உத்தம சுலோகராகிய பகவானுடைய பாதாரவிந்தத்தை ஆனந்தஜலத்தால் நனைத்து, பகவானிடத்திலிருக்கும் பிரீதிவிசேஷத்தால் கண்டமடைந்துத் தோத்திரம் பண்ணுவதற்கு முடியாதவராக வெகுகாலம் இருந்தார் பிறகு மனத்தைச் சமாதானம் செய்து கொண்டு வெளியிலிருக்கும் விஷயங்களில் செல்லும் இந்திரியங் களை அடக்கிக்கொண்டு தத்வ சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட சரீரமுள்ளவரும், ஜகத்குருவுமாகிய பகவானைத் துதிக்கலானார். "ஓ பகவான்! நீர் ஒருவராலும் ஜயிக்கப்படாதவரானாலும். சமபுத்தியுள்ள பக்தர்களால் ஜயிக்கப்படுகிறீர். அந்தப் பக்தர்களும் உம்மால் ஜயிக்கப்படுகிறார்கள். ஒன்றையும் விரும்பாத வர்களானாலும், அவர்களுக்கு ஆத்மாவைக் கொடுக்கிறீர்" ஓ பகவன்! ஜகத்தைப் படைப்பது, காப்பாற்றுவது, நாசஞ்செய்வது முதலியவை உம்முடைய அம்சத்தின் அம்சமேயாம். ஆனால் அவர்கள் தாமே ஈசுவர னென்ற அபிமானத்தை அடைந்து, வீணாகச் சண்டை செய்கிறார்கள். பரமாணுவுக்கும், பரம மகத்தான காரியத்திற்கும் முதலிலும், கடைசியிலும் மத்தியிலும் இருப்பவர் நீரே, ஆதி, அந்தம், மத்தியம் என்ற மூன்றும் உமக்கு இல்லை. காணப்படும் காரியங்களில் ஆதியிலும் கடைசியிலும் எது இருக்கிறதோ. அதுவே

மத்தியிலும் இருக்கக்கூடியது. இந்த அண்ட கோசமானது பூமி முதலில் ஏழு ஆவரணங்களும் ஒன்றைவிட மற்றொன்று பத்துமடங்கு பெரியதானவை. அந்த அண்டகோசமானது மற்றகோடி அண்டங்களுடன் உம்முடத்தில் பரமாணுபோல இருக்கிறது. அதனால் நீர அனந்தரென்று சொல்லப்படுகிறீர். விஷயத்தில் ஆசைகொண்ட பசுக்கள் போன்ற மனிதர்கள் உம்முடைய விபூதிகளாகிய இந்திரன் முதலியவர்கள் உபயோகிக்கிறார்கள்; உம்மை உபாசிக்கிறதில்லை. அரசனுடைய அரண்மனை நாசம் அடைந்தபோது சேவகர்களுக்கும் எப்படிக் கெடுதி நேரிடுகிறதோ, அப்படி அந்த இந்திரன் முதலிய தேவர்களுடைய ஐசுவரியம் நசிக்கும்போது உபாசகனுக்கும் கெடுதி உண்டாகிறது, ஓ மேலானவரே! விஷய ஆசையி னாலாவது உம்மை உபாசித்தால், அந்தக் காமமானது வறுக்கப்பட்ட விதைபோல முளைக்கிறதில்லை. (வேறு சரீரத்தை உண்டுபண்ணுகிறதில்லை) உண்மையில் ஞானசுரூபியும் குண சம்பந்தமில்லாதவனுமான ஜீவனுக்கு குணத்தாலேயே சுக துக்கங்கள் உண்டா கின்றன. ஓ பகவான்! நீர் தோஷமற்ற பாகவத தர்மத்தை எப்பொழுது சொன்னீரோ அப்படிப்பட்ட உம்மை ஆத்மாவிடத்திலேயே ரமிப்பவர்களான சனத்குமாரர், முதலியவர்கள் மோட்சத்திற்காக உபாசிக்கிறார்கள். அதனால் நீரே எல்லோருக்கும் மேலானவர். இந்த பாகவத தர்மத்தில் 'நான், நீ உன்னுடையது என்னுடையது என்ற பேத புத்தி இல்லை, காம்ய தர்மமானது பேத புத்தியினாலேயே ஏற்பட்டது. அது சுத்தமானதல்ல; அநித்தியமானது; அதர்மமுள்ள தனக்கும் பிறருக்கும் துரோகத்தைச் செய்யும் தர்மத்தால் என்ன பிரயோசனம்?

ஆத்மாவிற்கு துரோகம் செய்வதால் உமக்குக் கோபம் உண்டாகிறது. பிறரை இம்சிப்பதால் அதர்மம் நேரிடுகிறது. பாகவத தர்மத்தில் துரோகம் முதலிய வைகள் இல்லை. தாவர ஜங்கம பிராணிகளிடத்தில் சமபுத்தி உள்ளவர்களான பெரியோர்கள் அதனை உபாசிக்கிறார்கள். உம்முடைய சங்கற்பமானது ஒருபொழுதும் உண்மையை விடுகிறதில்லை, ஓ பகவன்! உம்மைத் தரிசித்ததால் ஸகல பாபங்களும் நசிக்கின்றன. என்பது ஆச்சரியம் அல்ல. உம்முடைய நாமதேயத்தை ஒருகால் ச்ரவணஞ் செய்ததால் சண்டாளனானாலும் சம்சாரத்திலிருந்து நிவர்த்தி அடைகிறான். ஆனதால் உம்மைத் தரிசித்து சுத்த சித்தனாக ஆனேன், உம்முடைய பக்தராகிய நாரத மகரிஷியால் சொல்லப் பட்டது மாறுதலை அடையுமா? சூரியனுக்கு மினுமினுப் பூச்சிகளால் எப்படிப் பிரயோசனம் இல்லையோ அதுபோல ஸகல ஜகத்ரூபியும் எல்லா ஜனங்களுடைய அபிப்பிராயத்தை அறிந்தவருமான உமக்கு நான் சொல்லக் கூடியது ஒன்றுமில்லை, எல்லா ஜகத்தையும் படைத்துக் காப்பாற்றி நாசஞ் செய்பவரும், அற்பர்களான யோகிகளால் பேத புத்தியைக் கொண்டு அறிய முடியாதவரும், பரமஹம் ஸருமான உமக்கு நமஸ்காரம் செய்கிறேன் எந்தப் பகவான் சேஷ்டித்தால் பிரஜாபதிகளும் கர்மங்களைச் செய்கிறார்களோ, எவர் பாரத்தால் இந்திரியங்கள் அவைகளின் சாமரத்தியத்தையடைகின்றனவோ எவருடைய சிரசில் பூமண்டலமானது கடுகு போல இருக்கிறதோ அந்த ஆயிரம் தலையுள்ள பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன்.

49–65. இம்மாதிரியாக சித்திரகேதுவினால்

துதிக்கப்பட்ட பகவான் அவரை நோக்கி, "நாரதர், அங்கிரஸ் இவ்விருவர்களும் எதனை உமக்கு உபதேசித் தார்களோ. அந்த வித்தையாலும் என்னைத் தரிசித்தாலும் சித்தனாக ஆயிவிட்டாய். நானே ஸகல பிராணிகளின் சூக்ஷுமமாகவும் பிராணிகளுக்குக் காரணமாகவும் இருக்கிறேன். மேலும் எனக்கு சப்த ப்ரஹ்மம் பரப்ப்ரஹ்மம் என்ற இரண்டு சரீரங்கள் இருக்கின்றன. போக்கியமாகிய பிரபஞ்சத்தில் போக் தாவாக இருக்கும் ஆத்மாவையும் போக்கியமாயி ருக்கும் லோகத்தை ஆத்மாவிடத்தில் வியாபித்திருப்ப தாயும், அவ்விரண்டும் என்னால் வியாப்தமமாக இருப்பதையும்: என்னிடத்தில் அவ்விரண்டும் கற்பித மென்றும் நினைக்க வேண்டும் தூங்கும் புருஷன் மலை, காடு முதலியவைகளைத் தன்னிடத்தில் இருப்பதாக எப்படிப் பார்க்கிறானோ, தூங்கி எழுந்திருக்கிறானோ, அதுபோல ஜீவனுக்கு ஜாக்கிரத், அவஸ்தை முதலியவைகள் மாயையால் ஏற்பட்டவைகள் என்று தெரிந்துகொண்டு, அவைகளுக்குச் சாட்சியும் உபாதியற்றவருமான ஆத்மாவை நினைக்கவேண்டும். தூங்கும் சமயத்தில் புருஷன் இந்திரியங்களுக்குப் புலப்படாத சுகத்தையும், துக்கத்தையும் எந்த ஸ்வரூபத்தால் அறிகிறானோ, அதனையே ப்ரஹ்மம் என்று தெரிந்துகொள். (தூங்கி விழித்தவன் சுகமாகத் தூங்கினேன் என்று சொல்லுகிறான் ஆனால் அந்த சுகம் இம்மாதிரியென்று சொல்ல முடியவில்லை) தூக்கம், ஜாக்ரதவஸ்தை ஆதிய இரண்டையும் அனுபவிக்கும் புருஷனுக்கு இரண்டு காலத்திலும் எது தொடர்ந்து இருக்கிறதோ அந்த ஞானமே பரப்ரஹ்மம். அதுவே நான் இந்த என்னுடைய ஸ்வரூபத்தை எவன் மறந்து விடுகின்றானோ அவனுக்கு ஆத்மாவை விடப் ப்ரஹ்மம்

வேறாகத் தோன்றும். அதனால் ஜனனமரண ரூபமான சம்சாரம் உண்டாகும் சாஸ்திரத்தை படிப்பதால் உண்டாகும் ஞானம் அபரோட்ச ஞானம் ஆகிய இவைகளை உண்டுபண்ணக்கூடிய மனித சரீரத்தை அடைந்தும் எவன் ஆத்ம தத்துவத்தைத் தெரிந்து கொள்ளவில்லையோ, அவன் ஒருபொழுதும் க்ஷேமத்தை அடையமாட்டான் மேலும், புருஷன் ஆசையால் உண்டாகும் கஷ்டத்தையும் ஆசைப்படாமலிருப்பதால் மோட்சம் கிடைப்பதையும் நினைத்து ஒன்றையும் சங்கற்பிக்காமல் இருக்கவேண்டும். மேலும், ஸதிபதிகள் சுகத்தை அடைவதற்கும், துக்கத்தை நிவர்த்தித்துக் கொள்வதற்கும் கர்மங்களைச் செய்கிறார்கள். அதனால் துக்கமும் நிவர்த்தியாகிறதில்லை; சுகமும் கிடைக்கிற தில்லை தங்களை ஞானமுள்ளவர்களென்று நினைத் திருக்கும் மனிதர்களுக்கும் மேற்சொல்லியபடி பலத்தில் மாறுதல் உண்டாவதையும், ஆத்மாவினுடைய நான்கா வது அவஸ்தையையும் அறிந்து இகலோகம், பரலோகம் ஆகிய இவைகளில் அடையக்கூடிய விஷயங்களில் ஆசைப்படாமல் ஞானத்தாலும், விஞ்ஞானத்தாலும் சந்தோஷமடைந்து. புருஷன் என்னிடத்தில் பக்தனாய் இருக்கவேண்டும் மந்திரத்தை அறிந்தவர்களும், யோகத்திலும் சாமர்த்தியமுள்ள புத்தியுள்ளவர்களுமான புருஷர்கள் பரமாத்மாவைத் தெரிந்து கொள்வதையே புருஷார்த்தமென்று நினைக்க வேண்டும். ஓ அரசனே! நீரும் என்னுடைய வார்த்தையைச் சிரத்தையுடன் புத்தியில் தரித்து ஞானம், விஞ்ஞானம் இவைகளை அடைந்து சீக்கிரத்தில் சித்தியடைவீர்" என்று ஜகத் குருவாகிய பகவான் சித்திர கேதுவைச் சமாதானஞ் செய்து அவர், பார்த்து கொண்டிருக்கும் பொழுதே மறைந்தார்.

அத்தியாயம்–17

சித்திரகேது சாபத்தால் அசுர ஜன்மத்தை அடைந்தது

எந்த இடத்தில் பகவான் மறைந்தாரோ, அந்த திக்குக்கு நமஸ்காரஞ் செய்து சித்திர கேதுவானவர் ஆகாசத்தில் சஞ்சரித்தார்; அவர் யோகைச்வர்யத்தை அடைந்தவராகையால் சித்தர்களாலும், சாரணர்களாலும், மகரிஷிகளாலும் தோத்திரம் பண்ணப்பட்டவராகி பலம், இந்திரியம், சாமர்த்தியம் இவைகள் குறையாமல் லட்ச வருஷகாலம் குலபர்வதங்களின் குகைகளில் ஸ்திரீகளுடன் பகவானுடைய சரித்தத்தைக் கானஞ்செய்து கொண்டு ரமித்தார். ஒருநாள் அந்த சித்திரகேது விஷ்ணுவினால் கொடுக்கப்பட்ட விமானத்தின் மீதேறி சஞ்சரிக்கும்போது பரமசிவனைக் கண்டார். அந்தப் பரமசிவன் பார்வதியை ஆலிங்கனஞ் செய்து கொண்டு மகரிஷிகளுடைய கூட்டத்தில் சித்தர்களாலும், சாரணர்களாலும் தோத்திரம் செய்யப்பட்டிருந்தார். அப்பொழுது சித்திரகேது சிரித்து, பார்வதி கேட்டுக் கொண்டிருக்கும்போது, "இவர் லோகத்திற்கு குரு; ஸகல பிராணிகளுக்கும் தர்மத்தை சொல்பவர்; ஜடையைத் தரித்துக் கொண்டு கடுமையாகத் தபஸ் செய்பவர்; சாதுக்களுக்கு அதிபதி; அப்படியிருந்தும் பிராகிருத புருஷன்போல சபையில் ஸ்திரீயை ஆலிங்கனஞ் செய்துகொண்டு வெட்கமில்லாமல் உட்கார்ந்திருக்கிறார். பிராகிருத ஜனங்கள்கூட பெரும் பாலும் ஸ்திரீயை ரகசியத்தில் ஆலிங்கனஞ் செய்து கொள்கிறார்கள். மேலான விரதத்தைத் தரிக்கும் இவர் சபையில் பாரியையை வைத்துக் கொண்டிருக்கிறார்"

என்று பரிகசித்தார். அதனைக் கேட்ட கம்பீர புத்தி யுள்ள பகவான் சிரித்துக் கொண்டு மௌனமாக இருந்தார். சபையிலிருப்பவர்களும் பகவானுடைய அபிப்ராயத்தை அனுசரித்து மௌனமாக இருந்தார்கள். இம்மாதிரி பகவானுடைய மகிமையை அறியாமல் சித்திரகேது பரிகாசம் செய்ய, அதனைக் கேட்ட பார்வதி கோபங் கொண்டு பின்வருமாறு சொன்னாள்; 'இவன் வெட்கமில்லாத நம்மைப் போலொத்த துஷ்டர்களைச் சிட்சிக்கும் பிரபுவா? ப்ரஹ்மதேவரும் அவருடைய புத்திரர்களான பிறகு நாரதர் முதலியவர் களும் சனத்குமாரரும் கபில மகரிஷியும் சாஸ்திரத்தை மீறி நடக்கும் பரமசிவனைத் தடுக்க வில்லையாதலால் அவர்கள் தர்மத்தை அறியாதவர்களா? மேற்சொல்லிய வர்களால் தியானம் பண்ணக் கூடிய பாதாரவிந்த முள்ளவரும் ஜகத்துக்கு குருவும் மேலான மங்களார்த் தியுமான பரமசிவனை இந்த க்ஷத்திரியன் (வித்வான் களை அவமதித்துப்) பரிகசிப்பதால் இவன் சிட்சிக்கக் கூடியவன். சாதுக்களால் சேவிக்கப்பட்ட ஸ்ரீ நாராயண னுடைய பாதார விந்தத்தை அகங்காரமுள்ளவனும் வணக்கமில்லாதவனுமாகிய இவன் அடையத்தகுந்தவன் அல்ல. ஆனால் நீ அசுரஜன்மத்தை அடையக்கடவாய். இப்படி சிட்சிக்கப்பட்டால்தான் இனியாவது இம்மாதிரியான கெட்ட செய்கையைச் செய்யாமலி ருப்பாய்" என்று சபித்தாள்.

16–25 இந்தச் சாபத்தைக் கேட்ட சித்திரகேது விமானத்திலிருந்து இறங்கிப் பார்வதியை நமஸ்கரித்து நல்வார்த்தை சொன்னார். ஓ அம்பிகே! உம்முடைய சாபத்தை அங்கீகரிக்கிறேன். தேவர்கள் மனிதர்களுக்கு எதனைச் சொல்கிறார்களோ, அது முந்தியே ஏற்படுத்தப் பட்டதேயாம். இந்த சம்சாரத்தில் பிராணிகள்

அஞ்ஞானத்தால் மோகமடைந்து சுகத்தையும், துக்கத்தையும் எங்கும் எக்காலத்திலும் அனுபவிக்கிறார்கள். தன்னுடைய சுகதுக்கங்களுக்கும் பிறருடைய சுக துக்கங்களுக்கும் ஒருவனும் கர்த்தாவல்ல வித்வான்கள் பரமாத்மாவையே கர்த்தாவாக நினைக்கிறார்கள். மாயா குணங்களுடைய பிரவாகமுள்ள இந்த சம்சாரத்தில் சாடமேது? அனுக்கிரகம் எது? ஸ்வர்க்கம் எது? நரகம் எது? சுகதுக்கங்கள் எவை? பகவான் ஒருவரே சகல லோகத்தையும் தம்முடைய மாயையைக் கொண்டு படைக்கிறார். இந்த பிராணிகளுக்கு பந்தத்தையும், மோட்சத்தையும், சுகத்தையும், துக்கத்தையும் உண்டு பண்ணுகிறார். அவருக்கு வேண்டியவனொருவனுமில்லை. அவருக்கு விரோதியுமில்லை. ஞாதியுமில்லை, பந்துவு மில்லை. தம்மைச் சார்ந்த சமரும், உபாதியற்றவருமான அந்தப் பகவானுக்கு ஆசையும் துவேஷமும் உண்டாகுமா? ஆனாலும் அவருடைய மாயா சக்தியால் பிராணிகளுக்கு சுக துக்கங்களும், ஹிதமும், அஹிதமும்; பந்தமும், மோட்சமும், ஜனனம், மரணம் ஆகிய இவைகளும் உண்டாகின்றன. அதனால் சாபத்தை நிவர்த்திக்க வேண்டுமென்று நான் பிரார்த்திக்கவில்லை. நான் பரிகாசம் செய்ததாக நினைத்தாயல்லவா? அந்த என்னுடைய அபராதத்தை மன்னிக்க வேண்டுமாகப் பிரார்த்திக்கிறேன்" என்று சித்திரகேது பார்வதியையும் பரமசிவனையும் சமாதானஞ் செய்து, அவர்கள் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது விமானத்தின் மீது ஏறி சென்றார்.

26–35 பின்பு பரமசிவன் பார்வதியை நோக்கி தேவர்கள், ரிஷிகள், தைத்தியர்கள், சித்தர்கள், பார்ஷதர்கள் ஆகிய இவர்கள் கேட்டுக் கொண்டிருக்கும்

போது அற்புதமான காரியங்களைச் செய்யும் ஸ்ரீ மகாவிஷ்ணுவினுடைய வேலைக்காரர்களை அனுசரித்த வர்களுடைய மகிமையைப் பார்த்தாயா? அவர்கள் ஆசையற்றவர்கள். நாராயணனையே தெய்வமாகக் கொண்டவர்கள்; ஒரிடத்திலும் பயப்படாதவர்கள், ஸ்வர்க்கம், மோட்சம்; நரகம் ஆகிய இவைகளையும் சமமாகப் பார்ப்பவர்கள்; பிராணிகளுக்கு சுக துக்கம் ஜனனம், மரணம்; சாபானுக்கிரக மென்ற துவந்து வங்கள் பகவானுடைய மாயையால் ஏற்படுகின்றன. புஷ்பமாலையை சர்ப்பமென்று நினைப்பதுபோல ஆத்மாவினிடத்தில் பேத புத்தியும், குண தோஷங் களும், அவிவேகத்தால் ஏற்பட்டவைகளேயாம். பகவா னாகிய வாசுதேவரிடத்தில் பக்தி செய்பவர்களும், ஞான பலமுள்ளவர்களும், வைராக்கிய பலமுள்ளவர்களுமான பக்தர்கள் ஒன்றையும் விரும்பார்கள். நான் ப்ரஹ்ம தேவர், சனத்குமாரர், நாரதர், பிரதம புத்திரர்களான மகரிஷிகள், தேவசிரேஷ்டர்கள் ஆகிய எல்லோரும் பகவானுடைய அம்சத்தின் அம்சமுள்ளவர்களானாலும் அவருடைய லீலையை அறியச் சக்தியற்றவர்களாக இருக்கிறோம். அப்படியிருக்க தாமே ஈசுவரனென்று நினைத்திருப்பவர்களால் அறியமுடியுமா? அவருக்கு மிகுந்த மித்திரனாவது, துவேஷியாவது, பந்துவாவது, அன்னியனாவது ஒருவருமில்லை. ஸகல பிராணிகளுக்கும் ஆத்மாவாக இருப்பதால் ஸ்ரீ மகாவிஷ்ணு ஸகல பிராணிகளுக்கும் பிரியமானவர். இந்த சித்திரகேது அந்தப் பகவானுடைய பக்தர்களிடத்தில் பிரீதியுள்ள வன்; எல்லாவற்றையும் சமமாகப் பார்ப்பவன்; சாந்தன்; நானும் ஸ்ரீ மகாவிஷ்ணுவிடத்தில் பிரீதி யுள்ளவன்; ஆனதால் மகாபுருஷனிடம் பக்தியுள்ளவர்களும், சாந்தர்களும், சமமாகப் பார்ப்பவர்களுமான புருஷர்களி டத்தில் கோபிக்கக் கூடாது" என்றார்.

36–41 அதனைக் கேட்ட பார்வதிதேவி கோபமற்ற வளானாள். பகவத் பக்தனாகிய சித்திரகேது பார்வதிக்கு பதில் சாபம் கொடுக்கும் சக்தியுள்ளவனானாலும் அப்படிச் செய்யாமல் சாபத்தைப் பெற்றுக் கொண்டான்) இதுவே சாதுவின் அடையாளம். அந்தச் சித்திரகேது துவஷ்டாவினுடைய தட்சிணாக்கினியில் விருத்திர னென்ற பெயருடன் அசுரனாகப் பிறந்தான். அசுரனாகிய விருத்திரனுக்கு பகவானிடத்தில் பக்தியுண்டாக காரணம் இதுதான். இந்த சித்திரகேதுவின் இதிகாசத் தைச் சிரவணஞ் செய்வதால் ஸகல பந்தங்களும் நிவர்த்தியாகின்றன. எவன் காலையில் எழுந்திருந்து பகவானை ஸ்மரித்து சிரத்தையுடன் இந்த இதிகாசத்தைப் படிக்கிறானோ அவன் உத்தம கதியை அடைவான்.

அத்தியாயம்–18

மருத்துகளின் உற்பத்தி

(ஆறுவது அத்தியாயம் முதல் துவஷ்டாவின் வம்சம் சொல்லப்பட்டது, இனி சவிதாவின் வம்சம் நிரூபிக்கப்படும்)

1. சவிதாவின் பத்னியாகிய பிரச்னி என்பவள் சாவித்திரியையும், மூன்று வியாகிருதிகளையும், ஸோம யாகத்தையும் சாதுர்மாஸ்யத்தையும், பஞ்சமகாயஜ்ஞத் தையும் உண்டு பண்ணினாள்.

2. பகருடைய பத்தினியாகிய சித்தியென்பவள் மகிமா, விபு, பிரபுவென்ற புத்திரர்களையும், அசிஸ் என்ற பெண்ணையும் பெற்றாள்.

3. தாதாவின் பத்தினியாகிய குஹூ என்பவள் ஸாயனென்ற புத்திரனையும் (சாயங்காலம்) ஸிநீவாலீ என்பவள் பிராதகாலத்தையும் (விடியற்காலம்), அனுமதி என்பவள் பூர்ணிமையையும் பெற்றாள்.

4. விதாதா என்பவர் கிரியை என்பவளிடத்தில் புரிஷ்யர்களென்று ஐந்து அக்கினிகளை உண்டு பண்ணினார்.

5–6. வருணருடைய பத்தினியாகிய சர்ஷணியி டத்தில் ப்ரஹ்ம புத்திரராகிய பிருகு திரும்பவும் பிறந்தார் யோகியாகிய வால்மீகியும் வருணருடைய புத்திரர். வல்மீகத்திலிருந்து வெளிப்பட்டதால்

வால்மீகியானார். (ஆனதால் பிருகுவும் வால்மீகியும் சகோதரர்கள்) மித்திரன் வருணன் ஆகிய இருவர்களும் ஊர்வசியென்ற அப்ஸரஸ்திரீயைக் கண்டு மோகித்துத் தங்களுடை ரேதஸ்ஸை ஒரு குடத்தில் விட்டார்கள். அதிலிருந்து அகஸ்தியரும் வசிஷ்டரும் உண்டானார்கள். அதனால் அவ்விருவர்களும் மித்திராவருணர்களுடைய புத்திரர்களானார்கள்.

7–9. மித்திரனென்பவர் ரேவதி என்பவளிடத்தில் உத்ஸர்க்களையும்; அரிஷ்டனையும், பிப்பலனையும் உண்டு பண்ணினார். சக்கிரனென்பவர் (இந்திரன்) பௌலோமி என்பவளிடத்தில் ஜயந்தன், ரிஷபன், வித்வான் என்ற மூன்று புத்திரர்களை உண்டு பண்ணினாரென்று கேள்விப்பட்டிருக்கிறேன். மேலும், திருவிக்கிரமாவதாரஞ் செய்த மாயா வாமனருடைய பத்தினியாகிய கீர்த்தியினிடத்தில் சௌபகன் முதலிய சிறந்த புத்திரர்கள் உண்டானார்கள். அவர்களுடைய சரிதம்; குணங்கள், பராக்கிரமம் ஆகிய இவைகளையும் காசியபருடைய பத்தினியாகிய அதிதியினிடத்தில் பகவான் அவதாரஞ் செய்ததையும் பின்பு சொல்லுகிறேன்.

10–11. பின்னர் காசியபருடைய புத்திரர்களான தைத்யர்களைப் பற்றிச் சொல்லுகிறேன் அந்த வம்சத்தில் பிரகலாதர். பலி ஆகிய இரண்டு புத்திரர்களே பரமபாகவதர்கள். மேலும் ஹிரண்யகசிபு என்றும் ஹிரண்யாட்சன் என்று இரண்டு புத்திரர்கள் இருந்ததாகச் சொல்லியிருக்கிறோம். இவ்விருவர்களும் தைத்தியர்களாலும் தானவர்களாலும் நமஸ்கரிக்கப் பட்டவர்கள். ஹிரண்யகசிபுவின் பத்தினி கயாது

என்பவள். அவள் ஜம்பனுடைய பெண். அவளுக்குப் ப்ரஹ்லாதன் அனுஹ்லாதன் ஸம்ஹ்லாதன், ஹ்லதான் என்ற நான்கு புத்திரர்களுண்டானார்கள். அந்தக் கயாதுவின் ஸஹோதரியான சிஹ்மிகை என்பவள் விபரசித் என்பவரை விவாகஞ் செய்துகொண்டு ராகு வென்று புத்திரனைப் பெற்றாள். அவன் அமிருதபானம் செய்யும்பொழுது ஸ்ரீமந் நாராயணன் சக்கரத்தால் அவனுடைய தலையைவெட்டினார். ஸம்ஹ்லாதருடைய பத்தினியாகிய கதியென்பவள் பஞ்சஜனன் என்பவனைப் பெற்றாள். ஹ்லாதருடைய பத்தினியாகிய தமனீயென் பவள் வாதாபி, இல்வலன்தான் அதிதியான அகஸ்தியருக்காக வாதாபியைக் கொன்று சமைத்தான், அநுஹ்லாதனுடைய பத்தினியாகிய சூர்மமியை என்பவள் பாஷ்கலன் மஹீஷதன் என்ற புத்திரர் களை யுண்டுபண்ணினாள். பிரஹ்லாதருடைய புத்திரன் விரோசனன் என்பவர். அவருடைய புத்திரன் பலி யென்பவர். அவருக்கு அசனை என்பவளிடத்தில் நூறு புத்திரர்கள் பிறந்தார்கள் அவர்களுக்குள் மூத்தவர் பாணன் என்பவர். பலியின் மஹிமை கானஞ் செய்யக் கூடியது, அது பிந்திச் சொல்லப்படும் பாணன் பரமசிவனை ஆராதித்து அவருடைய பார்ஷதராக ஆனார். அவனுடைய பட்டணத்தைக் காப்பாற்றிக் கொண்டு பகவான் இப்பொழுதும் இருக்கிறார். நாற்பத்து ஒன்பது மருத்துக்கள் திதியின் புத்திரர்களாம், அவர்கள் இந்திரனால் தேவர்களாகச் செய்யப் பட்டார்கள்" என்றார்.

அதனைக்கேட்ட அரசன், "ஓ குருவே! அவர்கள் இயற்கையான அசுர சுபாவத்தை விட்டு தேவத் தன்மையை எப்படி அடைந்தார்கள் ? அவர்கள் செய்த

நல்ல காரியம் என்ன? இதனைக்கேட்க நானும் இந்த (மஹரிஷிகளும் சிரத்தைப் படுகிறோம்; சொல்ல வேண்டும்") என்றார்.

22–36. ஓ சௌனகரே! சுக மகரிஷியானவர் இம்மாதிரியான பரீட்சித்தினுடைய சொற்ப அட்சரங் களுள்ளதும், மிக்க அர்த்தமுள்ளதுமான வார்த்தையைக் கேட்டு அதனை சிலாகித்துப் பதில் சொல்லலானார். ஸ்ரீ மகாவிஷ்ணுவைச் சகாயமாகக் கொண்ட இந்திரனால் திதியின் புத்திரர்கள் கொல்லப்பட்டார்கள். அப்பொழுது திதிதேவி துக்கத்தையும், கோபத்தையு மடைந்து யோசித்தாள். சஹோதரர்களைக் கொன்றவனும், தயை இல்லாதவனும், பாபியுமான மஹேந்திரனைக் கொன்று கவலையில்லாமல் எப்பொழுது தூங்குவேன்? எந்தச் சரீரரத்துக்கு கடைசியில் கிருமி, விட், பஸ்மம் என்ற பெயருண்டாகிறதோ, அந்தத் தேகத்திற்காக பூதத் துரோகத்தைச் செய்பவன் தனக்கு ஹிதமானதை அறியான். பிராணிகளுக்குத் தேகத்திற்காக பூதத் துரோகஞ் செய்வதால் நரகம் நேரிடுகிறது, இந்தத் தேகத்தை நித்தியமென்று நினைத்தவனும், கெட்ட மார்க்கத்தில் பிரவர்த்தித்த மனமுள்ளவனுமான இந்திரனுடைய கர்வத்தைப் போக்கக்கூடிய புத்திரன் பிறக்கும் உபாயத்தைச் செய்யவேண்டும்" என்று யோசித்து, சிசுருஷை செய்வது, பிரியமாகப் பேசுவது வணக்கம். இந்திரியங்களை அடக்குவது! பக்தி, கடைக்கண் பார்வை முதலியவைகளால் பர்த்தாவை உபசரித்து அவரைச் சுவாதீனப்படுத்திக் கொண்டாள்; அந்தக் காச்யபர் வித்துவானானாலும் ஸ்திரீயினால் ஜயிக்கப்பட்டு அவளுடைய அபிப்பிராயத்திற்கு வசப்பட்டார். ஆனால் ஸ்திரீகள் பர்த்தாவை

வசப்படுத்துவது ஆச்சரியமல்ல. பரமசிவன் முன் காலத்தில் பிராணிகள் தனித்திருப்பதைப் பார்த்து, சிருஷ்டி விருத்திக்காக ஸ்திரீயைப் பாதி சரீரத்தில் வைத்துக்கொண்டார், ஸ்திரீகள் புருஷர்களுடைய புத்தியை அபஹரிப்பவர்கள்; இப்படி மிகவும் சிசுரூஷை செய்யும் திதியை நோக்கிக் காசியபர் சிரித்துக் கொண்டு, "ஓ அழகான தொடையுள்ளவளே! உன்னி டத்தில் சந்தோஷமடைந்தேன். இஷ்டமான வரத்தைக் கேள். பர்த்தா ஸ்திரீகளிடத்தில் பிரியமடைந்தால் எதுதான் கிடைக்காது? பர்த்தாவே ஸ்திரீகளுக்கு முக்கியமான தெய்வம் எந்தப் பகவான் ஸகல ஜனங் களுடைய மனத்திலும் வசிக்கிறாரோ ஸ்ரீ தேவியின் பதியாகிய எவர் நாமரூபங்களுடன் பலவகையான தேவதைகளாக இருக்கப்படுகிறாரோ அவரே பர்த் தாவாக இருப்பதால் க்ஷேமத்தை விரும்பிய பதிவிரதை களான ஸ்திரீகள் தங்கள் புருஷனைப் பகவானாக நினைத்துப் பூஜிக்கிறார்கள். இம்மாதிரியான எண்ணத் துடன் என்னைப் பூஜித்தபடியால் கெட்ட ஸ்திரீ களுக்கு அரிதாகிய எதனை உனக்குச் செய்யவேண்டும்?" என்று கேட்டார்.

37. அதனைக் கேட்ட திதியானவள், "ஓ ப்ராஹ்மண! எனக்கு நீர் வரங்கொடுப்பவரானால் என்னுடைய புத்திரர்களை இந்திரன் கொன்றதால் அவனைக் கொல்லக்கூடிய சக்தியுள்ள புத்திரன் பிறக்கும்படி அனுக்கிரஹிக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

38–45. அதனைக் கேட்ட காசியபர் கவலையடைந்து "மிகுந்த அனர்த்தம்; என்ன செய்கிறது" என்று துக்கித்தார், விஷயங்களிலும் இந்திரியங்களிலும்

ஆசைப்பட்டு ஸ்திரீ ரூபமான மாயையால் பீடிக்கப் பட்டு நான் நரகத்தில் விழப்போகிறேன். ஸ்திரீயாகிய திதியின்மீது என்ன குற்றம்? அவளுடைய இனிமை யான வார்த்தையால் மோகித்து நான் என்னுடைய அனுகூலத்தில் தவறுதலடைந்தேன் என்னை நிந்திக்க வேண்டும்; ஸ்திரீகளுடைய முகமானது சரத்காலத்திய தாமரை மலர்போல் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியது: வார்த்தையோ கேட்க இனிமையானது; இருதயமோ கத்தியன் முனைபோன்றது; அவர்களுடைய சரித்தத்தை யாரால் அறியமுடியும்? ஸ்திரீகள் தங்கள் காரியத்தையே முக்கியமாகக் கொண்டவர்கள்; அவர்கள் புருஷனையும் புத்திரனையும் சகோதரனையும் கொல்வார்கள், கொல்லும்படி செய்வார்கள் ஆனால் கேட்டதைக் கொடுக்கிறேன் என்று பிரதிக்ஞை செய்ததும் வீணாகக் கூடியதல்ல, இந்திரனுக்கும் கெடுதி நேரிடக்கூடாது அதற்கு ஒரு உபாயம் செய்கிறேன்" என்று யோசித்துக் காசியபர் கோபம் கொண்டு திதியை நோக்கி, "ஒரு வருஷ காலம் நான் சொல்லும் விரதத்தை நீ அனுஷ்டிப்பாயானால் இந்திரனைக் கொல்பவனான புத்திரனுண்டாவான். விரதத்தில் குறைவு நேரிடுமா னால் தேவர்களுக்குப் பந்து ஆவான்" என்றார்.

40. அதனைக் கேட்ட திதியானவள் "என்னால் செய்யக்கூடிய விரதத்தைச் சொல்லும், அதற்கு என்ன செய்ய வேண்டியது? எவைகளைத் தள்ள வேண்டியது? விரதத்தைக் கெடுக்கக்கூடியவைகள் எவை?" என்று கேட்டாள்.

47–54. அதனைக் கேட்ட காசியபர் திதியை நோக்கி "இந்தவிரத்தை அனுஷ்டிப்பவர்கள் பிராணிகளை

இம்சிக்க கூடாது; பிறரை நிந்திக்கக்கூடாது; பொய் சொல்லக்கூடாது; நகத்தைக் கிள்ளுவது, மயிர்களை வெட்டுவது அசுத்தமான வஸ்துக்களைத் தொடுவது ஆகிய இவைகளைச் செய்யக்கூடாது; ஜலத்தில் ஸ்நானம் செய்யக்கூடாது; கோபிக்கக்கூடாது; துஷ்டர் களுடன் பேசக்கூடாது சுத்தமில்லாத வஸ்திரத்தைத் தரிக்கலாகாது; நிர்மாலியமான புஷ்பமாலை முதலிய வைகளைத் திரும்பவும் தரிக்கக்கூடாது எச்சில் பத்திர காளிக்கு நிவேதனஞ் செய்யப்பட்ட அன்னம், கீழ்குலத் தார் கொண்டு வந்த மாமிசம், ரஜஸ்வலையினால் பார்க்கப்பட்ட அன்னம் ஆகிய இவைகளைப் புசிக்க லாகாது. அஞ்சலியால் ஜலத்தைக் குடிக்கக்கூடாது. சந்தியா காலங்களில் தலைமயிரை அவிழ்த்துக் கொண்டாவது அலங்காரஞ் செய்து கொள்ளாமலாவது போர்வையில்லாமலாவது வெளியில் போகக்கூடாது. கால்களை அலம்பாமலும், அசுத்தையாகவும் ஈரமான வஸ்திரத்துடனும். வடக்குத்திக்கில் தலை வைத்துக் கொண்டும் மேற்கில் தலைவைத்துக் கொண்டும்; மேலும் சந்தியா காலங்களில் படுக்கக்கூடாது பிறருடன் சேர்ந்தும் படுக்கக்கூடாது சுத்தமான வஸ்திரம் உடுத்திக்கொண்டு மங்களமான அலங்காரமுள்ள வளாகிக்காலையில் போஜனம் செய்வதற்கு முன் பசுக்களையும் பிராம்மணர்களையும் ஸ்ரீ தேவியையும்; ஸ்ரீ மஹாவிஷ்ணுவையும் பூஜிக்கவேண்டும். சுமங்கலி களான ஸ்திரீகளைச் சந்தனத்தாலும், புஷ்பத்தாலும், உபசாரத்தாலும் பூஜித்துத் தன்னுடைய பர்த்தாவையும் பூஜித்து, மனத்திலும் வெளியிலும் தியானிக்க வேண்டும் இம்மாதிரியான பும்ஸவனமென்ற விரதத்தை ஒரு வருஷகாலம் பூரணமாக யாதொரு குறையும் அன்னியில் அனுஷ்டித்தால் சத்துருவைக் கொல்லும் புத்திரன் பிறப்பான்" என்றார்.

55–63. அதனைக்கேட்ட திதியானவள் அப்படியே அனுஷ்டிப்பதாக ஒப்புக்கொண்டு விரதத்தை அனுஷ்டித்தாள். கர்ப்பத்தையும் அடைந்தாள். மகேந்திரன் திதியின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டு திதியின் ஆசிரமஞ் சென்று அவளுக்குச் சிசுருஷை செய்தார்கள். மேலுமவர் ஒவ்வொரு நாளும் புஷ்பம், பழம், கிழங்கு, சமித்து, தர்ப்பம், இலைகள், தளிர்கள், மண், ஜலம் ஆகிய இவைகளைக் கொண்டுவந்தார். மிருகத்தைக் கொல்வதற்காக வேடன் மிருக வேடத்தைத் தரிப்பது போல விரதத்திற்குக் குறைவு நேரிடும் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டு மகேந்திரன் கபடமாகச்சிசுருஷை செய்தார். அவளுடைய விரதத்தில் குறைவு நேரிடவேயில்லை. அப்பொழுது இந்திரன் தமக்கு க்ஷேமம் எப்படி உண்டாகுமென்று கவலை அடைந்தார் ஒருநாள் மிகுந்த சிரமத்தால் திதியானவள் சந்தியா காலத்தில் அசுத்தையாகக் காலை அலம்பாமல் படுத்துத் தூங்கினாள். அந்தச் சமயம் பார்த்து மகேந்திரன் யோக பலத்தால் அவளுடைய வயிற்றில் பிரவேசித்தார். பின்னும் அவர் சுவர்ணம் போலப் பிரகாசிக்கும் அந்தக் கர்ப்பத்தை ஏழு துண்டுகளாக வெட்டினார். பின்னும் ஒவ்வொரு துண்டையும் ஏழாக வெட்டினார், அப்பொழுது அந்தக் கர்ப்பம், அழுதது. அதனை 'அழாதே' என்றும் சொன்னார். அப்பொழுது அந்தத் துண்டுகள் எல்லாம் கைகூப்பி, "ஓ இந்திர! சகோதரர்களான மருத்துக்களை ஏன் கொல்லுகிறாய்?" என்றன.

64–67. அதனைக்கேட்ட இந்திரன், 'நீங்கள் எனக்குச் சகோதரர்கள்தான்; பயப்படாதீர்கள்' என்று சொல்லி அந்த மருத்துக்களைத் தம்முடைய

பார்ஷதர்களாக வைத்துக் கொண்டார். ஓ பரீட்சித்தே! அசுவத்தாமாவினுடைய அஸ்திரத்தால் அடிக்கப்பட்டும் பகவானுடைய கிருபையால் நீர் பிழைத்ததுபோல அந்தக் கர்ப்பமானது வஜ்ஜிரத்தால் வெட்டப்பட்டும் ஸ்ரீ நாராயணனுடைய அனுக்கிரஹத்தால் மரணம் அடையவில்லை. பகவானை ஒருதடவை தரிசித்தாலும் அவருடைய சாரூப்பியத்தை அடைகிறார்கள். கொஞ்சம் குறைவாக ஒரு வருஷ காலம் திதியானவள் பகவானைப் பூஜித்தபடியால் அக்குழந்தைகள் மரணமடையவில்லை. அந்த நாற்பத்தொன்பது மருத்துக்களும் இந்திரனுடைய ஐம்பது மருத்துக்களானார்கள். திதியின் குற்றத்தை நினையாமல் மகேந்திரன் அவர்களைச் சோமபான முள்ளவர்களாக செய்தார்.

68–70. திதியானவள் தூங்கி விழித்து அக்கினி போல பிரகாசிக்கும் புத்திரர்களை இந்திரனுடன் கண்டு களித்தா பிறகு இந்திரனை நோக்கி, "தேவர்களுக்கு பயத்தை உண்டுபண்ணக்கூடிய ஒரு புத்திரன் பிறக்க வேண்டி இந்த விரதத்தை அனுஷ்டித்தேன். அப்படியிருக்க நாற்பத்தொன்பது புத்திரர்கள் எப்படி உண்டானார்கள்? உனக்குத் தெரியுமானால் உண்மையைச் சொல்" என்றாள்.

71–78. அதனைக்கேட்ட மகேந்தரன் திதியை நோக்கி, "உன்னுடைய அபிப்பிராயத்தை தெரிந்து கொண்டே நான் உனக்குச் சிசுருஷை செய்வதற்கு வந்தேன். அசுத்தையாகத் தூங்கும் சமயம் பார்த்து உன்னுடை கர்ப்பத்தை வெட்டினேன். நான் தருமத்தை அறியாதவன் தன் காரியத்திலேயே நோக்கமுள்ளவன்; உன்னுடைய கர்ப்பமானது ஏழு துண்டுகளாக வெட்டப்பட்டு ஏழு

புத்திரர்களாக ஆயிற்று பின்னும் அவைகளை ஏழேழாக வெட்டியும் அவைகள் மரணமடையவில்லை. அம்மா! அந்த ஆச்சரியத்தைப் பார்த்து இது மகாபுருஷனுடைய பூஜையின் சித்தி" என்று நிச்சியித்தேன். பகவானை பலனை உத்தேசியாமல் ஆராதிப்பவர்களான எந்த மகான்கள் மோட்சத்தையும் விரும்புகிறதில்லையோ, அவர்கள்தான் தங்களுடைய அனுக்கிரஹத்தைத் தேடியவர்கள். ஜகத்திற்கு அதிபதியான தேவதேவராகிய பகவானை ஆராதித்தும் எவன் விஷய போகத்தை விரும்புவான்? (ஒருவனும் விரும்பமாட்டான், என்று கருத்து,) அந்த விஷய பாகமானது நரகத்திலும் கிடைக்கிறது, ஓ அம்ம; தெய்வச் செயலாகக் குழந்தைகள் மரணமடையவில்லை. ஆனதால் மூடனாகிய என்னால் செய்யப்பட்ட குற்றத்தை மன்னிக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார். அப்பொழுது திதியானவள் கபடமற்றுச் சந்தோஷமாக இந்திரனுக்கு விடையளித்தாள். பின்பு மகேந்திரன் அவளை நமஸ்கரித்து மருத்துக்களுடன் மங்களமாகிய ஸ்வர்க்கஞ் சென்றார். ஓ மகாராஜ! உம்மால் கேட்கப்பட்ட மங்களமாகிய மருத்துக்களின் உற்பத்தியைச் சொன்னேன். இனி எதனைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

அத்தியாயம்–19

பும்ஸவன விரதத்தின் ஸ்வரூபம்

அதனைக் கேட்ட அரசன் மகரிஷியை நோக்கி, "ஓ ப்ராஹ்மணோத்தம் பும்ஸவனம் என்ற விரதத்தைச் சொன்னீரல்லவா? ஸ்ரீ மகாவிஷ்ணுவிற்குப் பிரியமான அந்த விரதத்தின் ஸ்வரூபத்தைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

2–33 அதனைக் கேட்ட மகரிஷி அரசனை நோக்கி மார்க்கசீரிஷ மாதத்தில் சுக்லபட்சத்தில் இந்த விரதத்தைப் பர்த்தாவினுடைய அனுமதி பெற்றுக்கொண்டு ஸ்திரீகள் அனுஷ்டிக்க வேண்டும். இது சகல இஷ்டத்தையும் கொடுக்கக் கூடியது; ஸ்நானஞ் செய்து சுத்தையாக, சுத்தமான வஸ்திரத்தை உடுத்திக் கொண்டும், அலங்காரஞ் செய்து கொண்டும்; முதலில் மருத்துக்களின் உற்பத்தியைக் கேட்டு ப்ராஹ்மணர்களிடம், உத்தரவு பெற்றுப் போசனஞ் செய்வதற்கு முந்தியே லக்ஷ்மீதேவியுடன் ஸ்ரீ பகவானைப் பூஜிக்க வேண்டும். ஓ பகவன்! *நீர் பூரணர். உமக்குப் பிறரால் காரியமில்லை; ஒன்றிலும் உமக்கு அபேட்சையில்லை; நீர் மகா விபூதிகளுக்கு அதிபதி; அணிமா முதலிய ஸகல சித்திகளுள்ளவர்; மேலும் நீர் விபூதியையும், தேஜஸையும், தேக பலத்தையும்; காந்தியையும் அடைந்திருப்பது போல ஸகல குணங்களாலும், பூர்ணராக இருக்கிறீர்; அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். விஷ்ணுவின் பத்தினியாகிய ஓ மாயையே! மகா புருஷனுடைய குணங்களுள்ளவளே! ஓ பிரியையே! மகாபாக்கியமுள்ளவளே; லோகமாதாவாகிய உமக்கு

நமஸ்காரஞ் செய்கிறேன் என்று நமஸ்காரஞ் செய்ய வேண்டும். பகவானும்; மகா புருஷனும், மகானு பாவருமாகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவை மகா விபூதிகளுடன் பூஜை செய்கிறேன் என்ற மந்திரத்தால் பிரதிதினமும் ஸ்ரீ விஷ்ணுவிற்கு ஆவாகனம், ஆசனம், அர்க்கியம், பாத்தியம்; ஆசமனீயம், ஸ்நானம்; உபவீதம்; பூஷணம், சந்தனம், புஷ்பம், தூபம்; தீபம், அன்னம் முதலிய நிவேதனம் ஆகிய உபசாரங்களைச் சாவதானமாகச் செய்யவேண்டும். மீதியான ஹவிஸ்ஸைப் பகவானும், மகா புருஷனும், மகா விபூதிகளுள்ளவருமாகிய பகவானுக்கு என்ற மந்திரத்தால் அக்கினியில் பன்னி ரண்டு தடவை ஹோமஞ்செய்ய வேண்டும். ஸ்ரீ தேவியும், மகா விஷ்ணுவும் ஸகல காமங்களையும் கொடுக்கக் கூடியவர்கள். ஆனதால் சம்பத்தை விரும்பி யவர்கள். பக்தியுடன் அவர்களைப் பூஜிக்க வேண்டும். பக்தியால் வணங்கிய மனத்துடன் நமஸ்கரிக்க வேண்டும். மந்திரத்தைப் பத்துத் தடவை ஜபிக்க வேண்டும். பின்பு தோத்திரஞ் செய்ய வேண்டும். எப்படியெனில் நீங்கள் இருவர்களும் லோகத்தில் எங்கும் இருப்பவர்கள்; லோகத்திற்குக் காரணர்கள். இந்தப் பிரகிருதியானவள் சூட்சுமமான மாயா சக்தி. அதற்கு அதிபதியான ஈசுவரன் நீர் ஒருவரே. நீர் சகல யஜ்ஞ ஸ்வரூபி இவள் யாகத்தை செய்ய வேண்டும் என்று புத்தியை உண்டுபண்ணும் பாவனை என்ற சம்ஸ்காரஸ்வரூபி. கிரியாஸ்வரூபி நீர் அதன் பலனை அனுபவிப்பவர்; இவள் குணங்களின் பிரகாசமாய் இருப்பவள். நீர் அவைகளைப் பிரகாசப்படுத்துகிறவர்; நீர் அதன் பலனை அனுபவிப்பவர்; நீர் ஸகல

ஸ்வரூபியான ஆத்மாவாக இருப்பவர்; லக்ஷ்மீயானவள் தேஹ இந்திரியங்கள் ஆகிய இவைகளை ஆச்சிரயித் தவள்; நாமரூபங்களாக இருப்பவள்; லட்சுமிதேவி; நீர் அவைகளைப் பிரகாசிக்கச் செய்பவர்; அவைகளுக்கு ஆதாரமாயிருப்பவர். நீங்கள் இருவரும் எல்லா ஜனங் களுக்கும் வரத்தைக் கொடுப்பவர்களாகவும், அதிபதி களாகவும் இருப்பது போல என்னுடை ஸகாமங்கள் பலிக்கும்படி அனுக்கிரகிக்க வேண்டும்என்று லட்சுமீ தேவியுடன் பகவானைத் துதித்து உபசாரம் முதலிய வைகளைச் சமர்ப்பித்து ஆசமனியங்கொடுத்தும் பூஜிக்க வேண்டும். பின்பு சிஷ்டமான அன்னத்தை முகர்ந்து, பின்னும் பலவகையான தோத்திரஞ் செய்து ஸ்ரீ மகா விஷ்ணுவைப் பூஜிக்க வேண்டும். பர்த்தாவையும் மகா புருஷனாகப் பாவித்து, பிரியமான வார்த்தை முதலான வைகளால் அவரையும் உபாசிக்க வேண்டும். பர்த்தாவும் மிகுந்த பிரியத்துடன் அந்த விரதத்தின் காரியங்களை நிர்வகிக்க வேண்டும். தம்பதிகளுக்குள் யாரால் செய்யப் பட்டாலும் அது இருவர்களாலும் செய்யப்பட்டதேயாம். பத்தினியால் செய்ய முடியாதுபோனால் பர்த்தாவே செய்யலாம். இந்த விஷ்ணு விரதத்தை எப்படியாவது நடத்த வேண்டும். கெடுக்கக் கூடாது. இப்படி பிராமண ஸ்திரீகள் புஷ்ப மாலைகளாலும், சந்தனத்தாலும், அன்னம் முதலியவைகளாலும் அலங்காரத்தாலும் நியமத்துடன் பகவானைப் பூஜிக்கவேண்டும். பின்பு நிவேதனஞ்செய்து அன்னத்தை அவருடைய முன்பாகப் புசிக்க வேண்டும். அதனால் சித்த சுத்தியையும், ஸகல கர்மங்களையும் அடைவார்கள். இப்படி பன்னிரண்டு மாதங்கள் கொண்ட ஒரு வருஷம் விரதத்தை அனுஷ் டித்துக் கார்த்திகை மாதத்தின் கடைசியான நாளில் பகவானை உபாசிக்கவேண்டும். மறுநாள் காலையில்

சுத்தையாக முன்போல் ஸ்ரீ கிருஷ்ணனைப் பூஜித்துப் பாலில் பக்குவமான அன்னத்தை நெய்யுடன் ஹோமஞ் செய்ய வேண்டும். இப்படி பர்வத்தில் செய்யப்படும் ஸ்தாலீபாக விதிப்படி பன்னிரெண்டு ஹோமம் செய்ய வேண்டும். பின்பு பன்னிரெண்டு பிராமணர் களுக்குப் போசனம் செய்விக்க வேண்டும். மேலும் அவர்களுக்கு உபபாத்திரம், எள்ளு, வெல்லம் ஆகிய இவைகளைக் கொடுத்து, ப்ராஹ்மணர்களுடைய ஆசீர் வாதத்தைப் பெற்று, அவர்களை நமஸ்கரித்து அவர் களுடைய உத்தரவின் பேரில் ஆசாரியரை முன்னிட்டுப் பந்துக்களுடன் புசிக்கவேண்டும். ஹோமஞ்செய்து எஞ்சிய சருவைப்பத்தினிக்குக் கொடுத்துப் புசிக்கச் செய்யவும். அது நல்ல புத்திரனைக் கொடுக்கக் கூடியது. இந்த விரதத்தை முறைப்படி அனுஷ்டித்த புருஷன் ஸகல இஷ்டத்தை அடைவான். ஸ்திரீ அனுஷ்டித் தால் சம்பத்து, பிரஜை நீண்ட ஆயுள் உள்ள புருஷன் கீர்த்தி நற்குணங்கள் ஆகிய இவைகளை அடைவாள். கன்னிகையாக இருப்பவள் அனுஷ்டித்தால் அழகான புருஷனை யடைவாள். விதவை அனுஷ்டித்தால் உத்தம கதியை அடைவாள். எவளுக்குக் குழந்தைகள் சிறு வயதிலேயே மரணமடைகின்றனவோ, அவள் இந்த விரதத்தை அனுஷ்டித்தால் தீர்க்க ஆயுசுள்ள புத்திரனை அடைவாள். பணமுள்ளவளானாலும் எவள் அழகில்லாதவளோ, அவள் அழகை அடைவாள். எவள் அழகுள்ளவளோ அவள் மேலான ரூபத்தை அடைவாள். எவள் வியாதியுள்ளவளோ அவள் ரோக மற்றவளாக ஆவாள். அவளுடைய தேகமானது திருடமான இந்திரியங்கள் உள்ளதாகும். இதனைப் பிதிரு காரியங்களில் படித்தால் பிதிரு தேவர்கள் மிகவும் திருப்தி அடைவார்கள். ஹோமஞ் செய்த

பின்பு அக்கினியும் ஸ்ரீமந் நாராயணனும் சந்தோஷத்தை அடைந்து ஸகல காமங்களையும் கொடுப்பார்கள். ஓ மகாராஜா! மருத்துக்களுடைய பிறப்பையும் புண்ணிய கரமான திதியின் விரதத்தையும் சொன்னேன்" என்றார்.

சுபம்

ஸ்ரீ கிருஷ்ணாய பரமாத்மனே நம:

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்கந்தம் 7

அத்தியாயம் 1

பார்ஷதர்களுடைய சாபம்

அதனைக் கேட்ட அரசன் மகரிஷியை நோக்கி, "ஓ ப்ராஹ்மண! ஸ்ரீ பகவான் எல்லாப் பிராணிகளையும் சமமாகப் பார்ப்பவர். ஸுஹிருத்தாக இருப்பவர்; அப்படிப்பட்ட பகவான் இந்திரனுக்காகப் பிராகிருத புருஷன்போல அசுரர்களைக் கொல்வது நியாயமா? பரமானந்த சுருபியான பகவானுக்குத் தேவர்களால் ஆகவேண்டிய காரியம் ஒன்றுமில்லையே. அசுரர்களிடத்தில் அவருக்குத் துவேஷமும் இல்லை. மேலும், குணங்களற்றவராகிய அந்தப் பகவானுக்குப் பயமும் இல்லையே. ஓ மகாபாக்கியமுள்ளவரே! ஸ்ரீமந் நாராயணனுடைய குணங்களைப் பற்றி மிகுந்த சம்சயமிருக்கிறது. அதனை நிவர்த்திக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

4–22 அதைக் கேட்டுச் சுகர் அரசனை நோக்கி, 'ஓ மகா பாக்கியமுள்ளவரே! ஸ்ரீ மகாவிஷ்ணுவின் சரிதம் மிகவும் அற்புதமானது; பாகவதரான பிரகலாதருடைய மகிமை பகவானிடத்தில் பக்தியை விருத்தி செய்யக் கூடியது என்று நாரதர் முதலிய மகரிஷிகளால் கானஞ்செய்யப்படுகிறது. மேலானதும், புண்யகரமானதுமான அந்த ஹரிகதையை ஸ்ரீ கிருஷ்ண பகவானை

நமஸ்கரித்துச் சொல்லுகிறேன். பிரகிருதிக்கும் மேலானவரும், சகல ஜகத்திற்கும் காரணரும், உற்பத்தியற்றவருமாகிய பகவானுக்கு ஒருவரிடத்தில் பிரீதி, மற்றொருவரிடத்தில் துவேஷமென்ற பேதபுத்தி இல்லை. ஆனாலும், அவர் தம்முடைய மாயையின் குணத்தால் சிலருக்கு க்ஷேமத்தைச் செய்பவரும், சிலருக்கு கெடுதியைச் செய்பவருமாக ஆகிறார். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்கள் பிரகிருதியின் குணங்கள். அவைகள் ஆத்மாவின் குணங்களல்ல. அவைகள் ஒரே சமயத்தில் விருத்தியடைகிறதும் இல்லை, குறைகிறதுமில்லை. ஸத்வகுணம் விருத்தியாகும்பொழுது தேவதைகளையும் மகரிஷிகளையும் பகவான் அந்தக் காலத்திற்குத் தக்கபடி அடைகிறார். ரஜோகுணத்திற்கு ஜயகால மேற்படும்பொழுது அந்தக் குணத்தைப் பிரதானமாகக் கொண்ட அசுரர்களையும், தமோகுணத்தின் ஜயகாலத்தில் அதனைப் பிரதானமாகக் கொண்ட யக்ஷர்களையும், ராக்ஷஸர்களையும் அனுக்ரகிக்கிறார். அக்கினியானது ஒன்றானாலும் எப்படிக் கட்டை முதலியவைகளை ஆசிரயித்து அநேக விதமாகத் தோன்றுகிறதோ, எப்படி ஜலமானது ஒன்றானாலும் பாத்திர பேதத்தால் பலவகையாகத் தோன்றுகிறதோ, அப்படி ஆத்மா ஒருவரானாலும் பலவகையாகத் தோன்றுகிறார். தேகம் முதலியவைகளைக் காட்டிலும் விலட்சணரென்று தனியே தோன்றவில்லை. ஆனாலும் வித்வான்கள் காரியம், காரணம் இவைகளை நன்றாக விசாரித்து விவேகத்தால் தெரிந்து கொள்கிறார்கள். எப்பொழுது ஜீவனுடைய உபயோகத்திற்காகத் தேகத்தைச் சிருஷ்டிக்க வேண்டுமென்ற இச்சை உண்டாகிறதோ! அப்பொழுது ரஜஸைத் தனியே சிருஷ்டிக்கிறார். விசித்திரங்களான அந்தத் தேகங்களில்

கிரீடிக்க விரும்பும்பொழுது ஸத்துவத்தை ஸிருஷ்டிக் கிறார். சம்ஹரிக்க விரும்பியபொழுது தமஸ்ஸைத் தனியாகப் பிரிக்கிறார். ஓ அரசனே! பிரகிருதி, புருஷன் ஆகிய இவர்களை நிமித்தமாக வைத்துக் கொண்டு அமோகமாக காரியத்தைச் செய்யும் ஈசுவரன் அவை களுக்கு ஸகாயமாகச் சஞ்சரிக்கும் காலத்தைச் ஸிருஷ் டிக்கிறார். அந்தக் காலமும் ஸத்துவத்தை விருத்தி செய்கிறது. பகவான் தேவர்களை விருத்தி செய்கிறார். மேலும் விசேஷ கீர்த்தியுள்ள் பகவான் அவர்களுக்கு விரோதிகளும், ரஜஸ், தமஸ் இவைகளின் ஸ்வாவமுள்ள வர்களுமான அசுரர்களை நாசஞ் செய்கிறார். மேலும், தம்மால் ஸிருஷ்டிக்கப்பட்ட ஜகத்தைப் பரிபாலிப் பதற்காக விஷ்ணுவாகிய நீர், தேவகணங்களை விருத்தி செய்கிறீர். (காலத்தின் மகிமையால் கலங்கிய குணங் களால் மாறுதல் ஏற்படுகிறதேயொழிய பகவானுக்கு வைஷம்யமில்லை. ஸன்னிதி மாத்திரத்தால் தோன்றுகிற தென்று தாத்பரியம்) தர்மபுத்திரருடைய ராஜசூயத்தால் நாரதரால் சொல்லப்பட்ட ஒரு இதிகாசத்தை இந்த விஷயத்தில் உதாரணமாகச் சொல்லுகிறேன். அது மிகவும் புண்யகரமானது. தர்மபுத்திரர் தம்முடைய ராஜசூய யாகத்தில் சிசுபாலன் பகவானிடத்தில் ஸாயுஜ்யமடைந்ததான ஆச்சரியத்தைக் கண்ணுற்று மற்ற மகரிஷிகள் கேட்டிருக்கும்பொழுது அவ்விடத் திலிருக்கும் நாரத மகரிஷியை நோக்கி, பகவானாகிய வாசுதேவரிடத்தில் சிசுபாலன் ஸாயுஜ்யமடைந்தது அற்புதமாக இருக்கிறது; இது ஏகாந்த யோகிகளுக்கும் கிடைப்பதரிது. பகவானை நிந்தித்ததால் வேனனைப் ப்ராஹ்மணர்கள் சபித்தார்கள். தமகோஷனுடைய புத்திரனாகிய சிசுபாலனும், தூர்ப்புத்தியுள்ள தந்தவக்கிரனும் பாலியம் முதல் இதுவரையில் ஸ்ரீ

கிருஷ்ணனிடத்தில் விரோத புத்தியுடன் நிந்தித்துக் கொண்டிருந்தார்கள். பரப்ரஹ்மமாகிய ஸ்ரீகோவிந்தனை எப்பொழுதும் நிந்தித்த அவர்களுடைய நாக்கில் குஷ்டமுண்டாகவில்லை; மிகுந்த கஷ்டமும் நேரிட வில்லை. அறியமுடியாத தேஜஸுள்ள பகவானிடத்தில் அப்படிப்பட்ட அவர்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது எப்படி லயத்தை அடைந் தார்கள்? இந்த சம்சயத்தால் பெருங்காற்றில் அகப்பட்ட தீபஜ்வாலைபோல் என்னுடைய புத்தி அலைகிறது. இதனைச் சொல்ல வேண்டும்" என்றார்.

21–35 அதனைக் கேட்டு நாரதர் தர்மபுத்திரரை நோக்கி "நிந்திப்பது ஸ்தோத்திரஞ் செய்வது, பூஜிப்பது; அவமதிப்பது ஆகிய இவைகள் ஜீவன், தேகம் இவை களுடைய உண்மையை அறியாததனால் (அபிமானத் தால்) ஏற்பட்டவை. பிராணிகளுக்கு 'நான் என் னுடையது என்ற அபிமானத்தால் இம்சை தண்டம், நிஷ்டூரமாகப் பேசுவது ஆகிய இவைகள் உண்டாகின்றன. எந்தச் சரீர சம்பந்தத்தால் அபிமானமுண்டாகிறதோ, அந்தச் சரீரத்தின் வதத்தால் பிராணிகளுக்கு வதம் நேரிடுகிறது. ஸகல ஸ்வரூபியும் தாமொருவருமாகிய பகவானுக்கு மேற்சொல்லிய வைஷம்ய முண்டாகிற தில்லை. அனுகூலத்திற்காகவே சிட்சிப்பவரான பகவானுக்கு இம்சை யாரால் செய்ய முடியும்? ஆனதால் விரோதத்தினாலாவது விரோதமில்லாதிருப்பதி னாலாவது, பயத்தினாலாவது சிநேகத்தாலாவது காமத்தாலாவது மனத்தைப் பகவானிடத்தில் சமர்ப்பிக்க வேண்டும்! பேதபுத்தி வைக்கக்கூடாது. மேலும், பகவா னிடத்தில் விரோத புத்தியை வைத்துத் தன்மயமாக ஆவது போல் பக்தியோகத்தால் சித்தியடைகிறது

இல்லை. சுவரில் புழுவை வைத்து அதன்மீது குளவி யானது கூடு கட்டி எப்பொழுதும் சப்தித்துக் கொண்டு அதனைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. உள்ளிருக்கும் புழுவானது துவேஷத்தாலும் பயத்தாலும் அதனையே நினைத்துக் கொண்டு தானும் அதுவாக ஆகிறதுபோல மாயாமனிதனும், உண்மையில் ஈசுவரனுமாகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் விரோதத்தால் புத்தியைச் செலுத்தி, பாபமில்லாதவர்களாகச் சுத்தர்களாகி அந்தப் பகவானைச் சிலர் அடைகிறார்கள். அநேகர்கள், கர்மத்தாலும்; துவேஷத்தாலும் பயத்தாலும் சிநேகத்தாலும், பக்தி யாலும் பகவானிடத்தில் மனத்தைச் செலுத்தி சுத்தர் களாகி அவருடைய கதியை அடைந்தார்கள். காமத் தால் கோபிகைகள் நல்ல கதி அடைந்தார்கள். கம்ஸன் பயத்தால் பகவானையே நினைத்து நல்ல கதியை அடைந்தான். சிசுபாலன் முதலியவர்கள் துவேஷத் தாலும் விருஷ்ணிகள் சம்பந்தத்தாலும் நீங்கள் சிநேகத்தாலும் நாங்கள் பக்தியாலும் நல்ல லோகத்தை (பகவானை) அடைந்தோம். மேற்சொல்லிய பக்தியில், ஒருவித பக்தியும் வேனனால் செய்யப்படவில்லை. அதனால் அவனுடைய பாபம் பலித்தது. ஆனதால் எந்த உபாயஞ் செய்தாவது மனத்தை ஸ்ரீ கிருஷ்ணனி டத்தில் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் உமக்குச் சிறிய தாயாருடைய புத்திரர்களாகிய சிசுபாலன், தந்தவக்திரன் ஆகிய இவர்கள் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பார்ஷதர்களாக இருந்தவர்கள். ப்ராஹ்மண சாபத்தால் அந்தப் பதத்தை விட்டு பூமிக்கு வந்தவர்கள்" என்று சொன்னார்.

36–37 அதனைக் கேட்ட தர்மபுத்திரர் நாரதரை நோக்கி, "ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பக்தர்களுக்குச் சாபம் எப்படி ஏற்பட்டது? பகவானிடத்தில் ஏகாந்தமாக பக்தி

செய்யும் பக்தர்களுக்குத் திரும்பவும் ஜனனமேற்பட்ட தென்பது நம்பக் கூடியதாகத் தோன்றவில்லை. பிராகிருதமான தேகம் இந்திரியங்கள், பிராணன் ஆகிய இவைகளற்றவர்களான வைகுண்ட லோகத்தில் வசிப்பவர்களுக்குப் பிராகிருத தேகத்தின் சம்பந்தம் எப்படி உண்டாயிற்று? அதனைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

38–50 அதனைக் கேட்ட நாரதர் தர்மபுத்திரரை நோக்கி, "ஒருகால் ப்ரஹ்மதேவருடைய புத்திரர்களான சநந்தர் முதலியவர்கள் முவுலகமும் சஞ்சரிக்கும்போது தெய்வச்செயலாக விஷ்ணுலோகம் சென்றார்கள். அவர்கள் ஐந்தாறு வயதுள்ள சிறுவர்கள் போன்றவர்கள். முன்னோர்களுக்கும் முந்தியவர்கள்; திக்குகளையே வஸ்திரமாகக் கொண்டவர்கள். அவர்களைக் கண்ட விஷ்ணுவின் துவார பாலகர்கள். சிறுவர்களென்று நினைத்து உள்ளே போகக்கூடாதென்று தடுத்தார்கள். அப்பொழுது அந்தக் குமாரர்கள் துவாரபாலகர்களை நோக்கி, ரஜோ குணம், தமோ குணம் இவைகளில்லாத ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பாத பலத்திலிருக்கும் உங்களுக்கு இந்த ஸ்தானம் தகுதியில்லை. ஆனதால் மூர்க்கர்களான நீங்கள் சீக்கிரம் அசுர ஜன்மத்தை அடைவீர்கள்" என்று சபித்து, மூன்று ஜன்மத்திற்கு பிறகு பார்ஷதர் களாக வருவீர்களென்றும் கிருபையுடன் அனுக்கிரகித் தார்கள். அவர்கள் ஹிரண்யகசியு; ஹிரண்யாட்சன் என்ற பெயருடன் திதிக்குப் புத்திரர்களாக பிறந்தார்கள். அவர்களில் ஹிரண்யகசிபு என்பவன் நரசிம்ம ரூபியான பகவானால் கொல்லப்பட்டான். ஹிரண்யாட்சன் என்பவன் பூமியைப் பாதாளத்திலிருந்து கொண்டு வந்த வராக ரூபியான பகவானால் கொல்லப்பட்டான்.

ஹிரண்ய கசிபு என்பவன் பகவானிடத்தில் பக்தனும், தன்னுடைய புத்திரனுமாகிய ப்ரஹ்லாதனைக் கொல்ல விரும்பி, பலவகையாக உபத்திரவித்தான். அந்தப் ப்ரஹ்லாதன் சகல பிராணிகளுக்கும் ஆத்மாவாக இருந்த தாலும்; சாந்தராக இருந்தபடியாலும் எல்லாரையும் சமமாகப் பார்ப்பவரானதாலும் பகவானுடைய தேஜஸால் காப்பாற்றப்பட்டிருந்தாலும் அவரைக் கொல்ல முடியவில்லை. பிறகு அவர்கள் கேகவியினிடத்தில் விசிரவசு என்பவருக்கு ராவணன், கும்பகர்ணன் என்ற பெயருள்ள புத்திரர்களாகப் பிறந்தார்கள். அவர்கள் ஸகல லோகங்களுக்கும் உபத்திரவத்தைச் செய்தபடியால் பகவான் ஸ்ரீ ராமனாக அவதரித்து அவர்களைக் கொன்றார். அந்த ஸ்ரீ ராமனுடைய சரிதத்தை மார்க்கண்டேயர் உமக்குச் சொல்வார். அவர்களே இப்பொழுது உம்முடைய சிறிய தாயாருக்குப் புத்திரர்களாக பிறந்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணனுடைய சக்கரத்தால் அடிக்கப்பட்டுச் சுத்தர்களானார்கள். பகவானிடத்தில் இடைவிடாமல் விரோதத்தைச் செலுத்தி, அதனால் எப்பொழுதும் அவரைத் தியானஞ் செய்து ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பார்ஷதபதத்தை அடைந்தார்கள்' என்றார். அதனைக் கேட்டு தர்ம புத்திரர் நாரதரை நோக்கி, "ஓ பகவன்; புத்திரனிடத்தில் பிதாவுக்குத் துவேஷமுண்டாவதற்கு என்ன காரணம்? மேலும், அசுரனாகிய ப்ரஹ்லாதன் ஸ்ரீ கிருஷ்ண பக்தராக இருந்த காரணம் என்ன?" என்று வினவினார்.

குறிப்பு

அடைகிறார்;— அவர்களுடைய தேகத்தில் ப்ரவேசித்து விருத்தி செய்கிறார். அவரவர்களுடைய கர்மத்திற்குத் தக்கபடி சத்துவகுணம் விருத்தியாகும்.

பொழுது தேவர்களையும், மகரிஷிகளையும் பகவான் அனுக்கிரஹிக்கிறார். ஞானம் எப்பொழுது விருத்தி அடையுமோ அப்பொழுது சத்துவ குணம் விருத்தி யடைந்திருப்பதாகத் தெரிந்து கொள்ளவேண்டும். ரஜோகுணம் விருத்தியாகும் பொழுது அதிக ஆசையும் கர்மங்களை ஆரம்பிப்பதும், சாந்தி அடையாமலி ருப்பதும் இவைகள் உண்டாகின்றன. தமோ குண காலத்தில் ஒன்றும் தோன்றாமலிருப்பது. ஒரு காரியத் திலும் பிரவர்த்தியில்லாமலிருப்பது பகவத்கீதை;— எல்லாப் பிராணிகளுக்கும் அந்தர்யாமியாக இருக்கும் பகவான் ஒருகால் தேவர்களுக்கு ஜயத்தையும், மற்றொரு காலத்தில் அசுரர்களுக்கு ஜயத்தையும், கொடுக்கிறார்; என்பதில்லை. ஆனால் அவரவர்களுடைய கர்ம பரிபாகத்திற்குத் தக்கபடி சத்துவம் முதலிய குணங்கள் விருத்தியாகின்றன. அப்பொழுது அவரவர்களுக்கு ஜயமாவது அபஜயமாவது உண்டாகிறது. ஆனதால் பகவானுக்கு ராகமாவது துவேஷமாவது இல்லை. ஆட்சேபம்; சத்துவ குணம் விருத்தியாகும் பொழுது சத்துவ குண ஸ்வபாவமுள்ள தேவர்களைப் பகவான் அடைந்து அனுக்கிரக்கிறார் என்பது யுக்தம். ரஜோ குணம், தமோ குணம் ஆகிய இவைகளின் விருத்தி காலத்தில் அசுரர்களை அனுக்கிரக்கிறாரென்பது நியாயமாகுமா? அந்தக் குணங்களின் விருத்தியானது துக்கத்தையும், மோகத்தையும் உண்டுபண்ணக் கூடிய தல்லவா? சமாதானம்: தேவர்களுக்குப் பெரும்பாலும் சத்துவ குணமே இருக்குமாகையால் பெரும்பாலும் ஜயமுண்டாகிறது. அசுரர்கள் பெரும்பாலும் ரஜோ குணம் தமோ குணமுள்ளவர்களாகையால் பெரும்பாலும் அபஜயமும் ஒரு கால் ஜயமும் உண்டாகிறதென்று கண்டு கொள்க.

அத்தியாயம்–2

ஹிரண்யகசிபு தன் மாதாவைச் சமாதானஞ் செய்வது

அதனைக் கேட்ட நாரதர் தர்மபுத்திரரை நோக்கி, "ஹிரண்யாட்சனை வராகமூர்த்தியான பகவான் கொன்ற பிறகு அவனுடைய பிராதாவாகிய ஹிரண்யகசிபு வானவன் மிகுந்த கோபத்தாலும், துக்கத்தாலும் தாபமடைந்தான்; மேலுமவன் கோபத்தால் உதடுகளை கடித்து, ஜ்வலிக்கும் கண்களால் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு சிங்கப் பற்களால் பயங்கரமாகிய பார்வை உள்ளவனாகி, புருவ நெரித்தலுடன் சூலத்தை உயரத் தூக்கி, சபையில் தானவர்களை நோக்கி, "ஓ தானவர்களே! தைத்தியர்களே! திரிமூர்த்தாவே! ஓ திரயட்ச! ஓ சம்பர! ஓ சதபாகுவே; ஓ ஹயக்ரீவா, ஓ நமுசியே! ஓ பாக! ஓ இல்வல! ஓ விப்பிரசித்தியே! ஓ புலோமன்! ஓ சகுனன் முதலியவர்களே நான் சொல்வதைக் கேளுங்கள் தாமதியாமல் அப்படிச் செய்யுங்கள்; ஸ்ரீ மகாவிஷ்ணு எல்லாரிடத்திலும் சமமாக இருப்பவரானாலும் நமக்குச் சத்துருக்களும், அற்பர்களுமான தேவர்கள் அவரை உபாசித்து அவருடைய சகாயத்தால் என்னுடைய பிரியனாகிய சகோதரனைக் கொன்றார்கள். அந்த மகாவிஷ்ணு தம்முடைய ஸ்வபாவத்தை விட்டவர்; (எல்லாரையும் சமமாகப் பார்ப்பதென்ற சுபாவத்தை) தேஜோரூபியானாலும் மாயையால் வராக ரூபத்தைத் தரித்தவர்: சிறுவன் போல் தம்மை உபாசிப்பவன் இஷ்டப்படி நடக்கக்கூடியவர். இம்மாதிரி சஞ்சல ஸ்வபாவமுள்ள அந்த விஷ்ணுவினுடைய கழுத்தைச் சூலத்தால் வெட்டி, அதிலிருந்து பெருகிவரும் ரத்தத்தால் பிரியம்

உள்ள என்னுடைய பிராதாவைத் திருப்தி செய்கிறேன்; கவலையை நிவர்த்தித்துக் கொள்ளுகிறேன். அந்த மகாவிஷ்ணு தேவர்களுக்குப் பிராணன் போலிருப்பவர் அவரைக் கொன்றால் வேரற்ற மரத்தின் கிளைகள் உலர்ந்து போவது போலத் தேவர்கள் சக்தியற்றவர் களாவார்கள். ஆனதால் நீங்கள் எல்லோரும் பிராம் மணர்களாலும், க்ஷத்திரியர்களாலும் நிறைந்த பூமிக்குச் சென்று தவம், யாகம் அத்தியயனம், விரதம் தானம் ஆகிய இவைகளைச் செய்பவர்களைக் கொல்லுங்கள். ப்ராஹ்மணர்களால் செய்யப்படும் அனுஷ்டானமே ஸ்ரீ மகாவிஷ்ணுவிற்குக் காரணமாயிருக்கிறது. மேலும், அவர் யஜும் தர்மம் ஆகிய இவைகளின் ஸ்வரூபம், தேவர்களுக்கும், ரிஷிகளுக்கும்; பித்ருக்களுக்கும், பூதங் களுக்கும் தர்மத்திற்கும் முக்கியமாகச் சகாயஞ் செய்பவர். ஆனதால் எந்த எந்தத் தேசத்தில் பிராமணர் களும், பசுக்களும், நிறைந்திருக்கின்றனவோ, எந்தத் தேசத்தில் வேதாத்தியயனம் செய்கிறார்களோ மேலும் எந்தத் தேசத்தில் வர்ணாஸ்ரமத்திற்கும். ஆஸ்ரமங்களுக்கும் உரிய கர்மங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றனவோ அந்தத் தேசத்திற்குச் சென்று அக்னியை வைத்துக் கொளுத் துங்கள்; நாசஞ் செய்யுங்கள்" என்று ஆக்ஞாபித்தான். அதனைக் கேட்ட அசுரர்கள் அவனுடைய உத்தரவை சிரஸால் வகித்துப் பிரஜைகளை உபத்திரவித்தார்கள் இயற்கையிலேயே அவர்கள் பிறரை உபத்திரவிப்பதில் பிரியமுள்ளவர்கள். பட்டணங்கள் கிராமங்கள் பசுக்கள இருக்குமிடம்; ரத்தினம் விளையும் பூமி, பயிரிடு வோர்கள் வசிக்கும் பூமி: மலையின் குகை, இடைச் சேரிகள் ஆகிய இவைகளில் அக்னியை வைத்து கொளுத்தினார்கள் சிலர் மண்வெட்டியை எடுத்து அணைகளையும் பிராகாரங்களையும்; கோபுரங்

களையும் பிளந்தார்கள் சிலர் கோடாரியால் ஜீவிகைக்குச் சாதனமாகிய விருட்சங்களை வெட்டினார்கள், மற்றுஞ் சிலர் ஜ்வலிக்கும் கொள்ளிகளை கொண்டு ஜனங்களுடைய வீடுகளை எரித்தார்கள். இப்படி ஹிரண்யகசிபுவின் வேலைக்காரர்கள் லோகத்திற்கு உபத்திரவத்தைச் செய்யும்பொழுது தேவர்கள் ஸ்வர்க்கத்தை விட்டு பூமியில் மறைந்து சஞ்சரித் தார்கள்.

17–35. ஹிரண்யகசிபுவானவன் தன்னுடைய பிராதாவிற்குத் திலோதகம் (தர்ப்பணம்) முதலிய வைகளைச் செய்து அவனுடைய புத்திரர்களுக்குச் சமாதானஞ் சொன்னார். பின்னும், காலத்தை அறிந்த ஹிரண்யகசிபு சகுனி, சம்பன், தார்ஷ்டி, பூதசந்தாபனன் விருகன், காலநாபன், மகா நாபன், ஹரிமச்ருதோத்தசன் என்ற ஹிரண்யாட்சனுடைய புத்திரர்களையும் அவர் களுடைய மாதாவான விருஷ்த்பனு என்பவளையும் தன்னுடைய மாதாவாகிய ததியையும் நோக்கி, "ஓ அம்ம! ஓ நாட்டுப் பெண்களே, ஓ சூரர்களான புத்திரர்களே, நீங்கள் துக்கிப்பது உசிதமல்ல, யுத்தத்தில் சத்துருவைக் கண்டு பயப்படாமல் யுத்தஞ் செய்து மரணமடைவதே சூரர்களுக்கு மேலானது. மேலும், கர்மத்தால் ஜனங்கள் சில சமயம் ஒரேவிடத்தில் சேர்ந்திருக்கிறார்கள்; கர்மத்தாலேயே பிரிக்கப்படு கிறார்கள். இது தண்ணீர்ப் பந்தலில் ஜனங்கள் சேர்ந்து பிரிவது போலிருக்கிறது. ஆத்மா நித்தியன்! நாசமற்றவன்! சுத்தன்! எங்குமிருப்பவன்! எல்லா வற்றையும் அறிந்தவன்! மேலானவர்! ஆனாலும் தன்னுடைய மாயையால் குணங்களால் சிருஷ்டித்துச் சரீரத்தை அடைகிறான். ஜலம் அசையும்பொழுது அதில் பிரதிபிம்பித்த மரங்கள் அசைவதுபோலத்

தோன்றுகின்றன. அல்லவா? (இதனால் உபாதியின் தர்மம் உபயோகத்தில் காணப்படுகின்றது என்று காட்டப் பட்டது! கண்கள் சுற்றும்பொழுது பூமி சுற்றுகிறது போல் தோற்றுகிறது.) (இதனால் கிரஹிக்கிறவனு டைய தர்மமானது கிரஹிக்கப்படுவதினுடைய தர்மமல் லவென்று காட்டப்பட்டது.) ஆனதால் ஆத்மாவானவன் லிங்கமில்லாதவனானாலும், பூர்ணனானாலும், குணங் களால் சுற்றப்படும் மனத்தின் சாம்யத்தை அடைந்து, சரீரமுள்ளவன் போல் பிரகாசிக்கிறான், சரீரமற்ற வனாகிய ஆத்மா தேகாபிமானத்தை அடைந்திருப்பதே ஆத்மாவின் மாறுதல், இப்படியே பிரியமான வஸ்துக்களே அடையாமலிருப்பது. அப்பிரியத்தை அடைகிறது: கர்மம் சம்சாரம் இவைகளும் ஆத்மா விற்கு அபிமானத்திலேயே ஏற்படுகின்றன. மேலும் உற்பத்தி, விநாசம், பலவகையான துக்கம் அவிவேகம் சிந்தை, ஆப்தனால் போதிக்கப்பட்டும் விவேகத்தை மறந்துவிடுவது ஆகிய இவைகளே சம்சாரமாம். இந்த விஷயத்தில் யமனுக்கும் பிரேதத்தின் பந்துக்களுக்கும் நேர்ந்த சம்வாத ரூபமாகிய இதிகாசத்தைச் சொல்லு கிறேன். உசீனர தேசத்தில் சுயக்ஞரென்று ஓர் அரசனி ருந்தார்! அவர் யுத்தத்தில் சத்ருக்களால் கொல்லப் பட்டார். அவருடைய ரத்தினமயமாகிய கவசம் உடைந்தது. ஆபரணங்களும் மாலைகளும் சிதறின. பாணத்தால் அடிக்கப்பட்டு ரத்தத்தால் பூசப்பட்டு யுத்தஸ்தலத்தில் விழுந்தார். அவருடைய தலைமயிர் அலங்கோலமாயிருந்தது அவர் உதடுகளைக கத்துக் கொண்டிருந்தார் அவருடைய முகமானது தூளிகளால் வியாபிக்கப்பட்டிருந்தது. ஆயுதங்களும், கைகளும் வெட்டப்பட்டிருந்தன. இப்படி தெய்வச் செயலால் அடிக்கப்பட்டுப் பூமியிற் கிடக்கும் அந்த சுயக்ஞரைச்

சுற்றி அவருடைய பந்துக்கள் உட்கார்ந்து துக்கித் தார்கள், மேலும் அவருடைய பத்தினிகள், ஓ நாத, அடிக்கப்பட்டோம், என்று சொல்லி மார்பில் இருகை களால் அடித்துக்கொண்டு அவருடைய காலில் விழுந்தார்கள். அவர்களுடைய கண்களிருந்து பெருகி வரும் தண்ணீர் ஸ்தனத்தில் விழுந்து அங்கிருக்கும் குங்குமத்தைக் கரைத்துக் கொண்டு அரசனுடைய காலில் விழுந்தது மேலுமவர்கள் ஆபரணங்களைச் சுழற்றியும் தலைமயிரை அவிழ்த்துக் கொண்டு பின்வருமாறு பிரலாபித்தார்கள். அவர்களை பார்க்கும் ஜனங்கள் வருக்கப்படும்படி இருந்தது. "ஓ மகாராஜ எந்தப் ப்ரஹ்மதேவர் உம்மை உசீனர தேசத்திற்கு அதிபதியாகச் செய்தாரோ; அவர் தயவில்லாமல் உம்மை எங்களுடைய கண்களுக்குப் புலப்படாமலி ருக்கும்படி செய்தார் இந்தத் தேசத்திய ஜனங்கள் மிகவும் துக்கிக்கிறார்கள் செய்த உபகாரத்தை அறிந்த வரும், மிகவும் சுகிருத்துமான உம்மைவிட்டுப்பிரிந்து நாங்கள் எப்படி வசிப்போம்? ஓ சூரராகிய மகாராஜ நீர் எவ்விடத்திற்குப் போகிறீரோ அவ்விடத்திற்கு எங்களையும் அழைத்துக்கொண்டு போகவேண்டும்" இம்மாதிரி அவர்கள் பிரலாபித்து மரணமடைந்த அரசனுடைய சரீரத்தை சம்ஸ்காரம் செய்ய மனமில்லாத வர்களாக இருக்கும்போது சூரியன் அஸ்தமனத்தை அடைந்தார்.

36–62. அந்தக் சமயத்தில் யமன் ஒரு சிறுவனு டைய உருவத்தைத் தரித்து சுயக்ஞருடைய பந்துக் களை நோக்கி, வயதில் முதிர்ந்தவர்களான நீங்கள் இப்படித் துக்கிப்பது மிகவும் ஆச்சரியம். ஜனங்கள் பிறப்பதையும், மரணமடைவதையும் அடிக்கடி

பார்த்திருக்கிறீர்கள். இந்த அரசன் எதனிடமிருந்து உண்டானாரோ அதனிடத்திற்குச் சென்றார். மரண மடையக் கூடியவர்களான நீங்கள் அவரைப்பற்றி வீணாகத் துக்கிக்கிறீர்கள். நான் தாய் தகப்பனில்லாத வனானாலும் அவர்களை நினைக்கிறதில்லை. மிகவும் தன்யனாக இருக்கிறேன். நான் பலமற்றவனானாலும் செந்நாய் முதலியவைகளால் பட்சிக்கப்படாமல் க்ஷேமமாகச் சஞ்சரிக்கிறேன். எந்தப் பகவான் என்னை கர்ப்பத்தில் காப்பாற்றினாரோ அவர் இப்பொழுதும் சம்ரட்சிக்கிறார். மேலும் எந்தப் பகவான் இந்த ஜகத்தை சங்கற்பத்தால் படைக்கிறாரோ, காப்பாற்று கிறாரோ, நாசஞ் செய்கிறாரோ அவருக்குத் தாவர ஜங்கமங்களடங்கிய ஜகத்தானது கிரீடா கிருகமென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள் நிக்ரஹிப்பதிலும், சம்ரட்சிப்பதிலும் அவரே பிரபுவாக இருக்கிறார். வழியில் நழுவி விழுந்ததானாலும் தெய்வத்தால் காப்பாற்றப்பட்டிருக்கிறது வீட்டிலிருப்பதானாலும் தெய்வத்தால் உபேட்சிக்கப்பட்டால் கேட்டுப்போகிறது. காட்டில் அனாதனாக இருப்பவனும் பகவானால் அநுக்ரஹமில்லாதவன் வீட்டில் சம்ரட்சிக்கப்பட்டி ருந்தாலும் நாசமடைகிறான். (ஆத்மாவிற்கு ஜனன மரணங்களிருப்பதாக ஒப்புக்கொண்டு சமாதானஞ் சொல்லப்பட்டது. இனி, உண்மையில் ஆத்மாவிற்கு ஜனன மரணங்களில்லை யென்பது சொல்லப்படு கிறது) லிங்க சரீரத்திற்கு காரணமாகிய கர்மங்களால் தேவாதி சரீரம் உண்டாகிறது. அந்தப் பிராகிருத தேகத்தை ஆத்மா அடைந்தவனானாலும் அதன் தர்மங்களாகிய ஜனன மரணங்களை அடைகிறதில்லை ஏனென்றால், சரீரத்திற்கும் ஆத்மாவிற்கும் மிக்க பேதமிருக்கிறது. இந்தச் சரீரமானது புருஷனுக்கு

அவிவேகத்தால் ஏற்பட்டது. கிருகம் முதலியவைகளில், தான், என்ற அபிமானமுள்ளவனாகிலும் உண்மையில் பார்ப்பவனை விடப்பார்க்க கூடியவஸ்துக்களான அவைகள் எப்படி வேறானவைகளோ அப்படி திரஷ்டாவாகிய ஆத்மாவிடத்திருச்யம் வேறானதேயாம். மேலும் ஜல பரமாணுக்களால் உண்டாகும் குமிழ் முதலியவைகளும், பிருதிவியின் பரமாணுக்களாலு ண்டான குடம் முதலியவைகளும், தஜஸின் பரமாணுக் களாலுண்டான குண்டலம் (சுடுக்கன்) முதலியவை களும் எப்படி நசிக்கின்றனவோ அப்படி அந்த 3 பரமாணுக்களால் ஏற்பட்ட சரீரமானது நசிக்கிறதே யொழிய ஆத்மா நாசமடைகிறதில்லை. அக்னியானது கட்டையை அடைந்து பலவகையாக எப்படித் தோன்றுகிறதோ, தேகத்தை அடைந்த வாயுவானது மூக்கு முதலியவைகளின் தனியாக இருப்பதுபோல எப்படித் தோன்றுகிறதோ, ஆகாசமானது எங்குமிருந் தாலும் ஒன்றிலும் எப்படி சம்பந்திக்கிறதில்லையோ, அப்படி சகல குணங்களுக்கு ஆசிரயணாகிய புரஷன் அதன் குணங்களில் சம்பந்திக்கிறதில்லை. ஓ மூடை களான ஸ்திரீகளே! இந்த சுயக்ஞன் தூங்குகிறானா என்ன? அவனைப்பற்றித் துக்கிக்கிறீர்களே அதனை அவன் காதினால் கேட்கப் போகிறானா? பதில் சொல்லப் போகிறானோ? இவனுடைய ஜனனத்திற்கு முன் இவனைப் பார்த்திருப்பீர்களா? இந்த சரீரத்தில் இருக்கும் முக்கியனான பிராணன் கேட்கிறவனாகவாவது, பதில் கூறுகிறவனாகவாவது இல்லை. பிராணன், தேகம் ஆகிய இவைகளைவிட வேறானதும், இந்திரியங் களுள்ளதுமான ஆத்மாவே திரஷ்டவாக இருக் கிறார். மேலும் பூதங்கள், இந்திரியங்கள், மனது ஆகிய இவைகளால் காணப்படும் பலவகையான

சரீரங்கள் அவைகளைக்காட்டிலும் விலட்சணனாக இருக்கும் ஆத்மா அடைகிறான். பிறகு தன்னுடைய விவேகத்தால் அபிமானத்தை யொழித்து முக்தனாக ஆகிறான். மேலும், ஆத்மா லிங்க தேகத்தில் எது வரையில் அபிமானம் வைத்திருக்கிறானோ அது வரையில் அவனுக்குக் கர்மங்கள் பந்தங்களாகின்றன. அதுவரையில் மாயையின் சம்பந்தமும் கஷ்டமும் அனுசரிக்கும் ஸ்வப்னமானது எப்படி மித்யையோ அப்படி சுகம் முதலியவைகளைச் சத்தியங்களென்று நினைப்பதும், சொல்லுவதும் வீணான அபிநிவேசத்தால் ஏற்பட்டன. நித்யா நித்யத்தை அறிந்து வித்வான்கள் ஆத்மாவைப் பற்றியாவது சரீரத்தைப் பற்றியாவது துக்கிக்க மாட்டார்கள். வித்வான்களாக இருந்தும் துக்கித்தார்களே யாகில் அவர்களுக்கு ஞானம் திருட மில்லை. ஒரு காட்டில் பறவைகளுக்கு யமனாகிய ஒரு வேடன் வலையை விரித்திருந்தான். அப்பொழுது குலிங்க பட்சிகள் ஆணும் பெண்ணுமாக அவ்விடம் வந்தன. அவைகளின் பெண் பட்சியானது வேடனுடைய கானத்தால் வலையில் அகப்பட்டுக் கொண்டது. அதனைப் பார்த்த ஆண் பட்சியானது மிகவும் துக்கப்பட்டு ஒன்றையும் செய்யமுடியாமல் பின் வருமாறு அழுதது; கிருபையற்ற தெய்வமானது தீனையும் துக்கிப்பவளுமான என்னுடைய ஸ்திரீயை அபஹரித்து என்ன செய்யப்போகிறது? பாதி சரீரத்தாலென்ன பிரயோசனம்? என்னையும் தெய்வம் அழைத்துப் போகட்டும்; பார்யையில்லாமல் தீனனாக ஜீவிப்பதைவிட மரிப்பது மேலானது; இறக்கை முளைக்காத குஞ்சுகளைத் தாய் இல்லாமல் நான் எப்படி வளர்ப்பேன்? என்னுடைய குழந்தைகள் அதிருஷ்டமில்லாதவைகள்; அவைகள் கூட்டிலிருந்தது

கொண்டு மாதாவின் வரவை எதிர்பார்த்திருக்குமே' என்று அழுது கொண்டிருக்கும் அந்த ஆண்பட்சி யையும் வேடன் மறைந்திருந்து பாணத்தால் அடித்தான். அதுபோல் உங்களுக்கு வரும் அபாயத்தை கவனியாமல் பார்த்தாவைப் பற்றி துக்கிக்கிறீர்கள். நூறு வருஷங்கள் சென்றாலும் இவனை நீங்கள் அடையப் போகிறதில்லை" என்று சொன்னான். அந்த சிறுவனு டைய வார்த்தையைக் கேட்ட அவர்களெல்லோரும் அச்சரியமடைந்து, எல்லாவற்றையும் அநித்யமென்று நினைத்தார்கள். அந்தச் சிறுவனும் இம்மாதிரி சொல்லி அவ்விடத்திலேயே மறைந்தான் சுயக்ஞனுடைய பந்துக்களும் அவனுக்கு உத்தரக்ரியை செய்தார்கள். ஆனதால் நீங்கள் தன்னைப்பற்றியாவது பிறரைப்பற்றி யாவது துக்கப்படவேண்டாம். 'தான் என்பது யார்? பிறர் என்பது யார்? தன்னைச் சார்ந்தவன் யார்? பிறரைச் சார்ந்தவன் யார்? இவைகள் அவிவேகத்தால் உண்டாகும் அபிமானத்தால் ஏற்பட்டனவேயாம்" என்ற ஹிரண்ய கசிபுவின் வார்த்தையைக் கேட்டுத் திதியானவள் நாட்டுப் பெண்களுடன் புத்திர சோகத்தை விட்டதுமல்லாமல் தத்துவத்தில் சித்தத்தைச் செலுத்தினாள்.

அத்தியாயம்–3

ஹிரண்யகசிபு வரம் பெற்றது

1–13 பின்பு ஹிரண்யகசிபு, தான் பிறரால் ஜயிக்க முடியாதவனும் கிழத்தனம், மரணம் இவைகளற்றவனும்; நிகரற்றவனும், ஒரே அரசனுமாக ஆக வேண்டும் என்று விரும்பி அதற்காக மந்தர பர்வதத்தின் குகையில் இரு கைகளையும் உயரத் தூக்கி ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு, கால் கட்டைவிரலால் பூமியில் நின்று கடுந்தவம் புரிந்தான். அப்பொழுது அவன் தன்னுடைய ஜடைகளின் காந்தியால் பிரளய காலத்தில் சூரியன் போலப் பிரகாசித்தான். அந்தக் காலத்தில் தேவர்கள் அவரவர்களுடைய அதிகாரத்தை அடைந்திருந்தார்கள். அப்பொழுது அவனுடைய தலையிலிருந்து தபோக்னியானது புகையுடன் கிளம்பியது. மேலும் அது மேலுலகத்திலும், கீழும், நாற்புறங்களிலும் பரவியது. நதிகளும், சமுத்திரங்களும் கலங்கின. பூமியானது மலைகளுடனும் தீவுகளுடனும் அசைந்தது; கிருகங்களும், நட்சத்திரங்களும் ஆகாயத்திலிருந்து விழுந்தன; பத்துத் திக்குகளும் ஜ்வலித்தன; அந்தத் தாபத்தைச் சகியாமல் தேவர்கள் ஸ்வர்க்கத்தை விட்டுப் ப்ரஹ்மலோகஞ் சென்று பிரம்மதேவரை நோக்கி, "ஓ தேவர்களுக்குத் தேவரே, ஹிரண்யகசிபுவின் தவத்தினால் தஹிக்கப்பட்டு, சுவர்கத்தில் வசிக்க முடியவில்லை. உமக்கு இஷ்டம் இருக்குமானால் அதற்குச் சாந்தியைச் செய்யும். உம்மைப் பூஜிக்கும் உலகங்கள் நாசமடைவதற்கு முன்னமேயே அதனைச் செய்யவேண்டும். ஓ எல்லாவற்றிற்கும் அதிபதியாக இருப்பவரே! அந்த ஹிரண்யகசிபு எதற்காகத் தவஞ்

செய்கிறானென்றால் அவனுடைய எண்ணம் உமக்கே நன்றாகத் தெரியும். ஆனாலும் நாங்கள் தெரிவிக் கிறோம். ப்ரஹ்மதேவர் ஸ்தாவர ஜங்கம சுபமான ஜகத்தைத் தவத்தினாலும் யோக சமாதியாலும் படைத்து எல்லாவற்றிற்கும் மேலான ஸத்ய லோகத்தை அடைந்திருக்கிறார். நானும் தபஸ் செய்து யோக ஸமாதியால் அந்தப் பதத்தை அடைகிறேன். இந்த ஜன்மத்தில் அது கிடைக்காவிடினும் காலம் ஆத்மா ஆகிய இவைகள் நித்தியங்களாகையால் அநேக ஜன்மங்கள் எடுத்தாவது அந்தப் ப்ரஹ்ம பதத்தை யடையாமல் இருக்கிறதில்லை. பின்னும், இந்த ஜகத்தை முன் போலில்லாமல் மாறுதலாகச் செய்து விடுகிறேன். (புண்யஞ் செய்தவர்களுக்கு துக்கம், பாபம் செய்தவர் களுக்கு சுகம்) அநித்தியங்களான மற்ற பதங்களால் என்ன பிரயோசனம், என்ற எண்ணத்துடன் அந்த அசுரன் கடுந்தவம் செய்வதாகக் கேள்விப்படுகிறோம். ஓ மூன்று லோகங்களுக்கும் அதிபதியாக இருப்பவரே! நீர் இந்தப் பதத்தை அடைந்திருப்பது ப்ராஹ்மணர் களுக்கும், பசுக்களுக்கும், உற்பத்தி, சுகம், ஐசுவரியம் கிடைத்ததைக் காப்பாற்றுவது ஐயம் ஆகிய இவை களுக்குக் காரணமாயிருக்கிறது. ஆனதால் இந்த விஷயத்தில் எதனைச் செய்தால் யுக்தமோ அதைச் செய்யும்" என்றார்கள்.

14–40 அதனைக் கேட்ட ப்ரஹ்மதேவர் பிருகு, தக்ஷர் முதலியவர்களுடன் ஹிரண்யகசிபுவின் ஆச்சிரமஞ் சென்றார். அவ்விடத்தில் ஹிரண்யகசிபுவின் சரீரமானது புற்றினாலும், திருணங்களாலும், மூங்கில் களாலும் கட்டப்பட்டிருந்தது. எறும்புகள் அவன் மீது சஞ்சரித்து அவனுடைய மேதஸ், மாமிசம், தோல்,

இரத்தம் இவைகளைப் புசிக்கின்றன. மேலுமவன் தவத்தினால் உலகங்களுக்குத் தாபத்தை உண்டு பண்ணிக் கொண்டு மேகத்தால் மறைக்கப்பட்ட சூரியன் போல் இருந்தான். அவனைப் பார்த்து ப்ரஹ்மதேவர் மிகவும் ஆச்சரியம் அடைந்து அசுரனை நோக்கி, 'ஓ காசியபருடைய புத்திரனே! எழுந்திரு; எழுந்திரு, நீ தவத்தில் சித்தியையடைந்தாய்; உனக்கு வரங்கொடுப்பதற்காக வந்திருக்கிறேன்; வேண்டியதைக் கேட்கலாம். உன்னுடைய மனோதைரியத்தைத் தெரிந்து கொண்டேன். காட்டுக்கொசு முதலியவை களால் உன்னுடைய சரீரம் பட்சிக்கப்பட்டது. பிராணனும் எலும்புகளும் இருக்கின்றன. இம்மாதிரி யான தவம் முந்தி மகரிஷிகளாலும் செய்யப்படவில்லை. இனியும் செய்யப்படப் போகிறதில்லை. எவன் ஜலத் தையும் புசியாமல் தேவமானத்தால் நூறு வருஷங்கள் பிராணனுடன் இருப்பான்? ஓ திதியின் புத்திரனே! தைரிய முள்ளவர்களாலும் செய்ய முடியாத தவத்தை நீ அனுஷ்டித்தபடியால் உன்னால் ஜயிக்கப்பட்டேன். (உன்னிடத்தில் சந்தோஷமடைந்தேன்) மனிதனாகிய நீ தேவனாகிய என்னைத் தரிசித்தது வீணாகாது. ஆனதால் உனக்கு இஷ்டமான எல்லா வரங்களையும் கொடுக்கிறேன் என்று சொல்லிக் கமண்டலுவிலி ருக்கும் திவ்யமான ஜலத்தைப் புரோட்சித்தார். பின்பு மூங்கிற் காட்டில் புற்றுகளால் மறைக்கப்பட்டிருந்த அந்த அசுரன் மிகுந்த தேஜஸ் பலம் ஆகிய இவை களுள்ளவனாகி வெளியில் வந்தான். அவனுடைய குறைந்துபோன அவயவங்கள் பூர்ணங்களாயின. மேலும் அவன் வஜ்ஜிரம் போலக் கெட்டியான சரீரமுள்ள வனும், யௌவன வயதுள்ளவனும், புடம் போட்ட தங்கம் போன்ற காந்தியுள்ளவனுமாயிருந்தான்.

இப்படிக் கட்டையிலிருந்து அக்னி பிரகாசிப்பது போலப் புற்றிலிருந்து வெளிப்பட்ட அசுரன் ஆனாயத்தில் ஹம்சத்தின்மீது வீற்றிருக்கும் ப்ரஹ்மதேவரைப் பார்த்து மிகுந்த சந்தோஷத்தை அடைந்து; நமஸ்கரித்து எழுந்திருந்து; வணக்கத்துடன் கைகூப்பி, ஆனந்தத்தால் கண்ணீரைப் பெருக்கி; மயிர்க்கூச்சலுள்ளவனாகிக் கண்டமடைத்து பின்வருமாறு தோத்திரம் செய்ய லானான். "எவர் பிரளய காலத்தில் பிரகிருதி; குணம் இவைகளாகிய இருட்டால் சுற்றப்பட்ட இந்த உலகத்தைத் தம்முடைய தேஜஸால் பிரகாசிக்கச் செய்தாரோ, எவர் இந்த லோகத்தை முக்குண ரூபமான மாயையைக் கொண்டு படைக்கிறாரோ, காப்பாற்று கிறாரோ, நாசம் செய்கிறாரோ, அந்தப்பரமேசுவரனை நமஸ்கரிக்கிறேன். அவர் ரஜோகுணம், சத்துவ குணம், தமோ குணம் ஆகிய இவைகளுக்கு ஆச்ரயமாயிருப்பவர். மேலும் அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர்; காரண மாக இருப்பவர்; ஞான ஸ்வரூபி; பிராணன் இந்திரி யங்கள்; மனது, புத்தி, ஐந்து பூதங்கள் ஆகிய இவை களால் காரிய ரூபத்தை அடைந்தவர்; அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். நீர் ஜங்கமங்களுக்கும் ஸ்தாவரங்களுக்கும் அதிபதி; முக்கிய பிராண சுரூபியாக இருப்பதால் எல்லாப் பிரஜைகளுக்கும் அதிபதியாக இருப்பவர் பின்னும் மனதிற்கும் சைதன்னியத்திற்கும் இந்திரியங்களுக்கும் அதிபதியாக இருப்பவர். ஆனதால் ஆகாசம் முதலிய பூதங்களுக்கும் நீரே அதிபதி; நான்கு ஹோதாக்கள் செய்ய வேண்டிய கர்மங்களைச் சொல்லுகின்ற வேதமாகிய சரீரத்தால் அக்னிஷ்டோமம் முதலிய யாகங்களை வெளிப்படுத்து கிறீர். நீர் ஒருவரே ஸகல பிராணிகளுக்கும் ஆத்மாவாக இருப்பவர்; ஆதியற்றவர்; நாசமற்றவர், கரையற்றவர்;

எல்லாவற்றையும் அறிந்தவர்; அந்தர் யாமியாக இருப்பவர். மேலும் நீர் காலஸ்வரூபியாக இருந்து லவம், க்ஷணம், தினம் முதலிய அவயவங்களால் ஜனங்களுடைய ஆயுளை அபகரிக்கிறீர். ஆனதால் நீர் கூடஸ்தராகிய ஆத்மா. பரமேசுவரன் உற்பத்தியி ல்லாதவர்; அளவிடக்கூடாதவர். மேலும், நீர் ஸகல பிராணிகளுக்கும் ஆத்மாவாகவும், ஜீவனாகவுமிருக் கிறீர்; (பிழைப்பதற்குக் காரணம்) காரிய காரணம் ஸ்வரூபமும் தாவர ஜங்கம ரூபமுமான ஜகத்தில் உம்மைத் தவிர வேறு பதார்த்தம் ஒன்றுமில்லை. ஸகல வேதங்களும் கலைகளும் உம்முடைய சரீரங்களாகும். நீர் பிரதானத்தைவிட மேலான ஹிரண்ணிய கர்ப்ப ராகவும் பரமாத்மாவாகவும் இருக்கிறீர். ஓ பிரபுவே! காரிய ரூபமாகிய ஜகத்தானது உம்முடைய ஸ்தூல சரீரமாக இருக்கிறது. நீர் அளவற்ற ஐசுவரியமுள்ள ஸ்தானத்தில் இருப்பவரானாலும் காரணசுரூபியானா லும் புராணபுருஷரானாலும் மேற்காட்டிய சரீரத்தைக் கொண்டே பிராணன், இந்திரியம், மனது ஆகிய இவைகளுடைய குணங்களை அனுபவிக்கிறீர். ஓ நாசமற்றவரே! காரண ரூபத்தால் ஜகத்முழுவதையும் வியாபித்திருக்கிறீர். மேலும் வித்தை, மாயை இவைகளுக்கு ஆசிரயமாகவுமிருக்கிறீர். அப்படிப்பட்ட பகவானாகிய உமக்கு நமஸ்காரம். ஓ வரங்கொடுப்ப வர்களுக்குட் சிறந்தவரே! எனக்கு இஷ்டமான வரத்தை நீர் கொடுக்கிறதானால் உம்மால் சிருஷ்டிக்கப்பட்ட ஜனங்களாலும் மற்றவர்களாலும் எனக்கு மரணம் நேரிடாமலிருக்க வேண்டும். பகலிலும், இரவிலும் ஆயுதங்களாலும் பூமியிலும் ஆகாயத்திலும் எனக்கு மரணம் நேரிடக் கூடாது. பின்னும் மனிதர்கள்! மிருகங்கள், உயிரில்லாதவைகள், உயிருள்ளவைகள்,

தேவர்கள், அசுரர்கள், உரகர்கள், ஆகிய இவர்களாலும் கொல்ல முடியாதவனாக நான் இருக்க வேண்டும். மேலும் நான் நிகரில்லாதவனும் ஜனங்களுக்கு ஒரே அரசனாகவும் இருக்க வேண்டும். எந்த ஐசுவரிய மானது ஒருபொழுதும் குறையாததோ அப்படிப்பட்ட லோகபாலகர்களுடைய அணிமா முதலிய ஐசுவரியங் களை எனக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

அத்தியாயம்–4

இரணியகசிபு உலகத்தை உபத்திரவித்தது

1–3. அதனைக் கேட்ட ப்ரஹ்மதேவர் இரணியக சிபுவின் தவத்தினால் பிரியமடைந்து அவனை நோக்கி ஓ இரண்ய கசிபுவே! உன்னால் கேட்கப்படும் வரங்கள் மிகவும் அரிதானவை. ஆனாலும் அவைகளை உனக்குக் கொடுக்கிறேன் என்று சொல்லி அவனுடைய இஷ்ட ப்படி அனுக்ரஹித்தார். வீண் போகாத அனுக்கிரஹமுள்ள அந்தப் ப்ரஹ்மதேவரை இரண்யகசிபு பூஜித்தான்; பிரஜா பதிகள் துதித்தார்கள். அப்படிப்பட்ட ப்ரஹ்ம தேவர் தமது உலகஞ் சென்றார்.

4–20. துர்லபங்களான வரங்களைப் பெற்றுக் கொண்டவனும் தங்கம் போன்ற சரீரமுள்ளவனுமாகிய அந்த அசுரன் ஸ்ரீ மகாவிஷ்ணுவினால் தன்னுடைய சகோதரன் கொல்லப்பட்டதை நினைத்துப் பகவானி டத்தில் விரோத புத்தியைச் செய்தான். பின்னும் அவன் எல்லா திக்குகளிலும் சென்று எல்லோரையும் ஜயித்து சிறந்த தேவர்கள் அசுரர்கள் மனிதர்கள் கந்தர்வர்கள் கருடர்கள் உரகர்கள் சித்தர்கள் சாரணர்கள் வித்தியா தரர்கள் மகரிஷிகள் பிதிருபதிகள் முனிகள் சிறந்த யக்ஷர்கள் ராக்ஷதர்கள் பிசாசங்கள், பிரேதங்கள் பூதபதி களாகிய இவர்களையும் ஸகல பிராணிகளுக்குட் சிறந்த வைகளையும் சுவாதீனப்படுத்திக்கொண்டான். பின்னும் அவன் லோக பாலகர்களுடைய தேஜஸையும் ஸ்தானத் தையும் அபஹரித்தான். மேலும் அவன் மஹேந்திரனைத் துரத்தி விட்டு ஸ்வர்க்கத்தில் வசித்தான் அந்த ஸ்வர்க்கமானது தேவர்களுடைய உத்தியானங்களால்

அலங்கரிக்கப்பட்டது. அதில் விசுவகர்மாவினால் உண்டு பண்ணப்பட்ட மஹேந்திரனுடைய கிரஹமிருக்கிறது, அது மூவுலகத்திய லட்சுமிக்கு இருப்பிடமானது ஸகல ஐசுவரியமுள்ளது. அவ்விடத்தில் இஷ்டத்தை கொடுத்தது. ஆகாசமானது பலவகையான ஆச்சரியத்தையுண்டு பண்ணிற்று. ரத்தினம் விளையும் பூமியும். உப்பு சமுத்திரம் நெய் சமுத்திரம் தயிர் சமுத்திரம் பால் சமுத்திரம் கருப்பஞ்சாறு சமுத்திரம் மத்திய சமுத்திரம் சுத்தோதகம் முதலிய சமுத்திரங்களும் மிகுந்த ரத்தினங்களை யுண்டுபண்ணின. அவைகளுடைய பத்தினிகளாகிய நதிகள் அந்த ரத்தினங்களை அலைகளால் வகித்தன, பர்வத குகைகள் விளையாடுகிற ஸ்தலங்களாக இருந்தன. மரங்களெல்லாம் எல்லாருதுக்களிலும் பழங்களையும் புஷ்பங்களையும் உண்டு பண்ணிக்கொண்டிருந்தன. இப்படி அந்த அசுரன் தான் ஒருவனாகவே அநேக லோகபாலகர்களால் செய்யப்படும் காரியங்களை நடத்திவந்தான். பின்னும் அவன் ஸகல லோகங்களையும் ஜயித்து ஒரே அரசனாக இருந்து பிரியமான விஷயங்களை யனுபவித்தும் திருப்தியடையாதவனாக இருந்தான். இப்படி ஐசுவரியத்தால் மதித்தவனும், சாஸ்திர விரோதமாக நடப்பவனுமாகிய அந்த அசுரன் ப்ராஹ்மணர்களுடைய சாபத்தை அடைந்தவனாகி வெகு காலத்தை கழித்தான்.

21–30. அவனுடைய உக்கிரமான தண்டத்திற்குப் பயந்து லோகபாலர்கள் முதலிய தேவர்கள் தங்களைக் காப்பாற்றுபவர்களைத் தேடி ஸ்ரீ மகா விஷ்ணுவைச் சரணம் அடைந்தார்கள்; மேலும் பின்வருமாறு தோத்திரஞ் செய்தார்கள். எந்தத் திக்கில் சகல பிரஜைகளுக்கும் ஆத்மாவாகிய ஸ்ரீ மகாவிஷ்ணு

வசிக்கிறாரோ, எதனை அடைந்து சுத்தர்களான சன்னியாசிகள் திரும்புகிறதில்லையோ (முக்தர்களாகிறார்கள்) அந்தத் திக்குக்கு நமஸ்காரம் செய்கிறோமென்று அந்தத் தேவர்கள் இந்திரியங்களை ஜயித்தவர்களாகிய பகவான் நம்மை சம்ரட்சிப்பார் என்ற நிச்சயமுள்ளவராகி, பிராணன், சரீரம் ஆகிய இவைகளை ஜயித்துச் சாவதானர்களாக ஆறுவகையான குணங்களால் நிறைந்தவரும் மிகுந்த மகிமையுள்ளவரும் சுத்தமான ஆத்மானுபவத்தாலுண்டாகும் ஆனந்த ஸ்வரூபியுமான வாசுதேவருக்கு நமஸ்காரம்" என்று தோத்திரம் செய்தார்கள். அப்பொழுது ஓ தேவ சிரேஷ்டர்களே! பயப்படவேண்டாம் உங்களெல்லோருக்கும் க்ஷேமமுண்டாகும். என்னைப் பூஜிப்பது எல்லாருக்கும் சகல க்ஷேமத்தையும் கொடுக்கக்கூடியது அந்த அசுரனுடைய துஷ்ட சரித்தத்தை நான் ஏற்கனவே தெரிந்து கொண்டிருக்கிறேன். அதனை நான் போக்கடிக்கிறேன். சொற்ப காலம் பொறுத்துக்கொள்ளுங்கள் எவனுக்கு வேதங்களிடத்திலும் தேவர்களிடத்திலும் பசுக்களிடத்திலும் ப்ராஹ்மணர்களிடத்திலும், சாதுக்களிடத்திலும் தர்மத்திலும் என்னிடத்திலும் விரோத புத்தி உண்டாகிறதோ அவன் சீக்கிரம் நாசமடைவான். மேலும் அந்த அசுரன் விரோத புத்தியற்றவனும் சாந்தனும் மகாத்மாகிய பிரகலாதனென்ற புத்திரனுக்கு எப்பொழுது துரோகஞ் செய்வானோ அப்பொழுது ப்ரஹ்மதேவரிடம் வரம்பெற்றுப் பலிஷ்டனாயிருந்தாலும் அவனைக் கொல்வேன் என்று மேக கர்ஜிதம்போல் ஒரு ஆகாசவாணி உண்டாயிற்று. அதனால் சகல திக்குகளிலும் எதிரொலி உண்டாயிற்று, மேலும் அந்த வார்த்தையானது சாதுக்களுக்கு அபயத்தைக் கொடுக்கக் கூடியதாக இருந்தது.

அதனைக் கேட்ட தேவர்கள் லோக குருவாகிய பகவானை நமஸ்கரித்து பயமற்றவர்களாகி அசுரனைக் கொன்றதாகவே நினைத்துத் தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றார்கள்.

31–43. அந்த அசுரனுக்கு அற்புதர்களான நான்கு குமாரர்களுண்டு. அவர்களுக்கு ப்ரஹ்லாதரென்பவர் சிறந்த குணங்களுள்ளவர். பெரியோர்களை ஸேவிப்பவர் ப்ராஹ்மண பக்தியுள்ளவர். நன்னடையுள்ளவர். சத்திய பிரதிக்ஞர் இந்திரியங்களை ஜயித்தவர். ஸகல பிராணி களுக்கும் ஆத்மாபோல மிக்க சுகிருத் தாஸன்போல் பெரியோர்களை நமஸ்கரிப்பவர். தகப்பன் போல் தீனர்களிடத்தில் பிரீதியுள்ளவர் சகோதரன் போல சிநேகமுள்ளவர் ஆசாரியர்களை ஈசுவரனாக பாவிப் பவர். வித்தை அர்த்தம் பந்து அழகு முதலியவை களுள்ளவரானாலும் அகங்காரமற்றவர் அவருடைய சித்தமானது துக்க காலத்தில் வருத்தப்படுகிறதில்லை. கேட்கப்பட்டவைகளும் பார்க்கப்பட்டவைகளுமான விஷயங்களில் ஆசையற்றவர். விஷயங்களை வஸ்துவாக நினைக்காதவர். அவர் அசுரர் வம்சத்தில் பிறந்தவரா னாலும் அசுர ஸ்வபாவமற்றவர். அவருடைய இந்திரி யங்கள் பிராணன் சரீரம் புத்தி ஆகிய இவைகள் அவருக்கு வசப்பட்டு இருந்தன. அந்தப் ப்ரஹ்லாதரி டத்தில் மேலான பல குணங்களிருந்தன. அவைகள் இக்காலத்திலும் கவிகளால் வர்ணிக்கப்படுகின்றன. பகவானுடைய குணங்கள் போல் எப்பொழுதும் அவைகள் லோகத்தில் பிராகாசிக்கின்றன. அசுரர் களுக்கு விரோதிகளான தேவர்களும் ஸத்கதை நடத்தும் சபையில் அவரைத் திருஷ்டாந்தமாகச் சொல்வது வழக்கம். அளவிடக் கூடாதவைகளான அவருடைய

குணங்களால் அவருடைய மகாத்மியம் காண்பிக்கப்படு கின்றது அவர் இயற்கையில் பகவானாகிய வாசுதேவரி ட்த்தில் பக்தியுள்ளவராக இருந்தார். அவர் பால்ய வயதிலேயே விளையாட்டுச் சாமான்களை விட்டு பகவானிடத்திலேயே மனத்தைக் செலுத்தி ஸ்ரீ கிருஷ்ண னாகிய கிரஹத்தால் பிடிக்கப்பட்டு ஜடன்போல் பிரபஞ்சத்தை யறியாதவராக இருந்தார். மேலுமவர் உட்கார்ந்திருக்கும் பொழுதும் சஞ்சரிக்கும் பொழுதும் தீர்த்தம் முதலியவைகளைக் குடிக்கும் பொழுதும் பேசும் பொழுதும் ஸ்ரீ கோவிந்தரிடத்திலேயே மனத்தைச் செலுத்தியிருந்த படியால் இந்த ஜகத்தை மறந்திருந்தார். சில சமயத்தில் பகவானைத் தியானித்துக் கலங்கியி ருக்கும் மனமுள்ளவராக அழுவார். சிலவேளை பகவானையே நினைத்து அதனாலுண்டான ஆனந்தத் தால் சிரிப்பார் கானஞ் செய்வார் சில சமயத்தில் பகவானைத் தாமாகப் பாவித்து அந்த பகவத் ஸ்வரூபியாக இருந்து பகவானுடைய சேஷ்டைகளைத் தாம் செய்வார். சில சமயம் வாயை விட்டுக் கதறுவார் வெட்கமில்லாமல் நர்த்தனஞ் செய்வார். சில சமயத்தில் பகவத் ஸ்வரூபியாகத் தம்மைப் பாவித்து அதனால் மயிர்க்கூச்சலுள்ளவராகிப் பகவானிடத்தில் மிகுந்த பிரியம் வைத்ததனாலுண்டாகும் ஆனந்த பாஷ்பத்தால் கண்களை மூடிக்கொண்டு இருப்பார் இப்படி அந்தப் ப்ரஹ்லாதர் சாதுக்களுடைய சங்கத்தால் உத்தம சுலோகராகிய பகவானுடைய பாதாரவிந்தத்தைச் சேவித்து மிகுந்த சுகத்தை அடைந்த துஷ்டர் களுடைய சேர்க்கையால் தீனர்களாயிருப்பவர்களுடைய மனத்திற்கு சாந்தியையுண்டு பண்ணிக் கொண்டி ருந்தார், ஓ அரசனே! மிகுந்த பாக்கியமுள்ளவரும் மகாபாகவதரும் மகாத்மாவுமான புத்திரனுக்கு

ஹிரண்யகசிபுவானவன் துரோகஞ் செய்தான்" என்றான்.

44–47. அதனைக் கேட்ட தர்மபுத்திரர் நாரதரை நோக்கி, "ஓ தேவரிஷியே! சுத்தனும் சாதுவுமான புத்திரனுக்குத் தகப்பன் துரோகஞ் செய்வதற்கென்ன காரணம்? புத்திரர்களிடத்தில் பிதாவுக்கு இயற்கையி லேயே ப்ரீதியிருக்குமாகையால் தமக்கு விரோதமாக நடக்கும் புத்திரர்களையும் நல்வழிக்குக் கொண்டு வருவதற்காகச் சிட்சிப்பார்களே யொழியச் சத்ருக்கள் போல் துரோகஞ் செய்யமாட்டார்களே. அப்படியிருக்க ஆசார்யனைத் தேவதையாகக் கொண்டவனும், சாதுவும், சுவாதீனப்பட்டவனுமான புத்திரனைக் கொல் வதற்கு முயற்சிப்பார்களா? ஓ நல்ல விரதங்களை அனுஷ்டித்த ப்ராஹ்மணோத்தம! நான் இதனைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற விருப்பமுள்ள வனாக இருப்பதால் இந்த சந்தேகத்தை நிவர்த்திக்க வேண்டும்" என்று கேட்டார்.

அத்தியாயம்–5

பிரகலாதரைக் கொல்ல முயற்சித்தது

1–5 அசுரர்கள் தங்களுக்குப் புரோகிதராக இருக்க வேண்டுமென்று சுக்ரபகவானை வேண்டிக் கொண்டார்கள். அவரும் சம்மதித்து அவர்களுக்குப் புரோகிதராக இருந்தார். அதனால் அவருடைய புத்திரர்களான சண்டன்; அமர்க்கன் என்ற இருவர் களும் ஹிரண்ய கசிபுவின் அரண்மனையில் வசித் தார்கள். அப்பொழுது ஹிரண்ய கசிபுவானவன் தன்னுடைய புத்திரனாகிய ப்ரஹ்லாதரென்பவரை குருபுத்திரர்களிடம் ஒப்புவித்து வித்தை கற்பிக்கும்படி வேண்டிக் கொண்டான். அந்தப் ப்ரஹ்லாதர் சாஸ்திரங் களை அறிந்தவர். அப்பொழுது குரு புத்திரர்கள் ப்ரஹ்லாதருக்கும், மற்ற அசுரக் குழந்தைகளுக்கும் வித்தையைக் கற்பித்துவந்தார்கள். அப்பொழுது ஆசாரியனால் சொல்லப்பட்டதைக் கேட்டும், படித்தும் ப்ரஹ்லாதர் அதை நல்லதென்று ஒப்புக் கொள்ள வில்லை. ஏனென்றால்; அவரால் உபதேசிக்கப்பட்டன யாவும் 'தான், பிறர் பந்து சத்ரு'! என்ற அகங்கார புத்தியுள்ளதாக இருந்தது.

ஒருகால் அசுரர்களுக்கு அரசனாகிய ஹிரண்ய கசிபுவானவன் தன்னுடைய புத்திரராகிய ப்ரஹ்லாதரை மடியில் வைத்துக்கொண்டு, 'ஓ குழந்தாய்! நீ வித்யாப் பியாசஞ் செய்துவருவதில் எதனை நல்லதென்று (க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது) அறிந்திருக்கிறாய்? அதனைச் சொல்ல வேண்டும்' என்று கேட்டான். அதைக் கேட்ட ப்ரஹ்லாதர், "ஓ அசுரர்களுக்குட்

சிறந்தவரே! பிராணிகள் அகங்காரமுள்ளவர்களாகிப் புத்திரன் முதலியவற்றில் அபிநிவேசத்தை (ஆசையை) அடைந்து துக்கத்தை அனுபவிக்கிறார்கள். அப்படிப்பட்ட ஜனங்களுக்குக் கிருகம் முதலியவை பாழுங் கிணறு போலக் கெடுதியை உண்டு பண்ணக்கூடியன; ஆகையால் அகங்காரத்திலிருந்து பயந்து துக்கத்தை நிவர்த்தித்துக் கொள்ள விரும்பியவர்கள் கிருகத்தை விட்டு வனஞ் சென்று, ஸ்ரீ மகா விஷ்ணுவைச் சேவிப்பதே உசிதமென்று நினைக்கிறேன்" என்று சொன்னார்.

6–10 அதனைக் கேட்ட ஹிரண்யகசிபுவானவன் தனக்குச் சத்ருவாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவினிடத்தில் ப்ரஹ்லாதனுக்கு ஏற்பட்டிருக்கும் பக்தியைப் பார்த்து, "குழந்தைகளுடைய புத்தியானது சத்துருக்களுடைய வார்த்தையால் கலைக்கப்படுகிறது" என்று சிரித்து; 'விஷ்ணுவைச் சார்ந்தவர்கள் ஆசாரியருடைய கிரகத்தில் மறைந்திருந்து கொண்டு இவனுடைய புத்தியைக் கலைக்கிறார்கள்; அதனை நன்றாக விசாரியுங்கள் என்றும் சொன்னான். பின்பு அசுரனுடைய புரோகிதர்கள் ப்ரஹ்லாதரைத் தங்கள் வீட்டிற்கு அழைத்துவந்து; "ஓ குழந்தாய்; ப்ரஹ்லாத! உனக்கு க்ஷேமமுண்டாகட்டும்; உன்னுடைய உண்மையான அபிப்ராயத்தைச் சொல். எங்களால் உபதேசிக்கப்படுவதை விட்டு வேறான தோற்றம் உனக்கு உண்டாவதற்கென்ன காரணம்? உன்னுடன் சேர்ந்து படிக்கும் பிள்ளைகளுக்குள் ஒருவனுக்காவது இம்மாதிரியான எண்ணம் உண்டாகவில்லையே? இது உனக்குப் பிறரால் உபதேசிக்கப்பட்டதா? அல்லது இயற்கையிலுண்டானதா? அதனை கேட்க விருப்பமுள்ளவர்களும், உனக்கு ஆசாரியர்

களுமான எங்களுக்குச் சொல்ல வேண்டும்" என்று நல்ல வார்த்தையாகக் கேட்டார்கள்.

11–14 அதனைக் கேட்டுப் ப்ரஹ்லாதர் அவர்களை நோக்கி, "தன்னைச் சார்ந்தவன், சத்துரு என்ற அபிமானமானது எவருடைய மாயையால் ஏற்பட்டதோ (உண்மையிலில்லை) அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். அப்படிப்பட்ட பேதபுத்தியானது மாயையால் மோகித்த உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறதேயொழிய எனக்கில்லை. பகவானுடைய அனுக்கிரகம் எப்பொழுது உண்டாகுமோ அப்பொழுது நான்; நீ, பிறர் என்ற பேத புத்தியானது மாறிவிடும் (எல்லாம் பகவத்ரூபமென்ற எண்ணமுண்டாகும். பகவானுடைய அனுக்கிரகத்தால் அப்படிப்பட்ட புத்தி உண்டாயிற்று என்று தாத்பரியம்) ஆத்மா ஒருவராணாலும் அவருடைய ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்ள முடியாமலிருப்பதால் மூட ஜனங்கள் நான், நீ என்ற பேத புத்தியை அடைகிறார்கள். வேதங்களுடைய அர்த்தத்தை நன்றாய் அறிந்து, பிறருக்கு உபதேசிப்பவர்களான ப்ரஹ்மதேவர் முதலியவர்களும் பரமாத்மாவின் ஸ்வரூபத்தை நன்றாகத் தெரிந்து கொள்ளாமல் மோகிக்கிறார்கள். ஓ ப்ராஹ்மண! இரும்பானது அயக் காந்தத்தைக் கண்டவுடன் தான் அதற்கெதிரில் செல்லுவது போல் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் சன்னிதியில் தெய்வச் செயலால் என்னுடைய மனமானது மாறுகிறது" என்று சொன்னார்.

15–22 அதனைக் கேட்ட அரசனுடைய சேவகரான ஆசாரிய புத்திரன் கோபங்கொண்டு, தீனனாகி; "அட! பிரம்பைக் கொண்டுவா; குலத்தைக் கெடுப்பவனும், துர்ப்புத்தியுள்ளவனுமான இவனை நான்காவது

உபாயத்தால் அடக்க வேண்டும். சந்தனமரக்காட்டில் முள்மரம் முளைத்தது போல் அசுர குலத்தில் இவன் பிறந்திருக்கிறான். மேலும் இவன் அசுரர்களான வனத்திற்குக் கோடரி போன்ற மகாவிஷ்ணுவிற்கு ஒத்தாசையாகவும் இருக்கிறான்" (கோடரிக் காம்பு என்று அர்த்தம்) என்று பலவிதமாக அதட்டி தர்மம், அர்த்தம், காமம் இவைகளைச் சொல்லும் சாஸ்திரத்தைப் படிப்பித்தார். பின்பு ஆசாரியர். "இவன் நான்கு உபாயத்தையும் அறிந்தவன்" என்று தெரிந்துகொண்டு ஒரு நாள் பிரகலாதரை ஹிரண்யகசிபுவிடம் அழைத்து வந்தார். அவர் அப்பொழுது மாதாவினால் அப்யங்க ஸ்நானஞ் செய்விக்கப்பட்டும் அலங்கரிக்கப்பட்டும் இருந்தார். அப்பொழுது அந்தப் பிரகலாதர் பிதாவாகிய ஹிரண்யகசிபுவின் பாதங்களில் நமஸ்கரித்தார். ஹிரண்யகசிபுவும் குழந்தைக்கு ஆசீர்வாதஞ்செய்து தழுவி மிகுந்த பிரியத்தை யடைந்தான். பின்னம் அவன் புத்திரனை மடியின்மீது வைத்துத் தலையில் ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி, குழந்தையை நோக்கி, 'பிரகலாத! இத்தனை நாள் உபாத்தியாயரிடமாக எதனைக் கற்றுக் கொண்டாய்? நீ தெரிந்து கொண்ட மேலான விஷயத்தைச் சொல்' என்று கேட்டான்.

23–24 அதனைக் கேட்ட பிரகலாதர் பிதாவை நோக்கி, "ஸ்ரீ மகாவிஷ்ணுவின் குணங்களைக் கேட்பது, அவருடைய திவ்ய நாமங்களை உச்சரிப்பது, பகவானுடைய ரூபத்தைத் தியானிப்பது, பாதங்களைச் சேவிப்பது, விக்கிரகம் முதலியவைகளைப் பூஜிப்பது, நமஸ்கரிப்பது, வேலைக்காரனாக இருப்பது, சிநேகம் வைப்பது, ஆத்மசமர்ப்பணம் செய்வது ஆகிய ஒன்பது வகையாக ஸ்ரீ மகாவிஷ்ணுவினிடம் பக்தி செய்வதே

மேலானது" என்று நான் படித்துத் தெரிந்து கொண்டேன் என்றார்.

25–27 புத்திரனுடைய வார்த்தையைக் கேட்ட ஹிரண்யகசிபு கோபங்கொண்டு உதடு துடிக்க, குரு புத்திரரை நோக்கி, "ஓ ப்ராஹ்மணோத்தம! தூர்ப்புத்தி யுள்ள நீ என்னை லட்சியஞ்செய்யாமல் என்னுடைய சத்துரு பட்சத்திலிருந்து என் குழந்தைக்குக் கெட்ட மார்க்கத்தை உபதேசித்தாய். மித்திரர்கள் போல வெளிக்கு அபிநயஞ் செய்து கொண்டிருக்கும் கபட ஸ்வபாவமுள்ள துஷ்டர்கள் உலகத்தில் இருக்கிறார்கள். பாபிகளுக்கு அவர்கள் செய்த பாப பலனை அனுபவிக்கவேண்டிய காலத்தில் வியாதி உண்டாவது போல அந்தத் துஷ்டர்களுக்கு யஜமானனிடத்தில் விரோத புத்தி உண்டாகிறது" என்றான்.

28–29 அதனைக் கேட்ட குரு புத்திரர், "ஓ மகேந்திரனுக்குச் சத்துருவாக இருப்பவரே! உம்முடைய புத்திரன் இயற்கையான புத்தியால் இப்படிச் சொல்லுகிறானே ஒழிய இது என்னால் சொல்லப்பட்டதுமல்ல; பிறரால் உபதேசிக்கப்பட்டதுமல்ல; ஆனதால் கோபிக்க வேண்டாம். எங்களை வருத்தப்படச் செய்ய வேண்டாம்" என்றார். அதனைக் கேட்ட ஹிரண்ய கசிபுவானவர் புத்திரனை நோக்கி, "உனக்கு ஆசாரியன் இப்படி உபதேசிக்கவில்லை என்று சொல்லுகிறாரோ; அப்படியானால் இந்தத் தூர்ப்புத்தி உண்டான காரணம் யாது?" என்று வினவினான்.

30–50 அதனைக் கேட்ட ப்ரஹ்லாதர், "இந்திரியங்களை ஜயிக்காமல் சம்சாரத்தை அடைந்து; அனுபவித்த

விஷயங்களையே திரும்பவும் அனுபவித்துக் கொண்டி
ருக்கும் கிருகஸ்தர்களுக்கு ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில்
பிறருடைய உபதேசத்தாலாவது, இயற்கையிலாவது
பக்தி உண்டாகிறதில்லை. விஷயங்களில் ஆசைகொண்ட
அவர்கள் ஆத்மாவையே புருஷார்த்தமாகக் கொண்ட
வர்களால் அடையக் கூடிய பகவானை அறியார்கள்.
ஏன் என்றால், அவர்கள் அற்பமான பாக்ய விஷயங்
களையே பெரியவைகளாக நினைப்பவர்கள். மேலும்
அவர்கள் குருடர்களால் அழைத்துக் கொண்டு போகப்
படும் குருடர்கள் போல மார்க்கம் தெரியாமல்
பள்ளத்தில் விழுகிறார்கள். பின்னும், பசுக்கள்
தும்பினால் கட்டப்படுவதுபோல் பகவானுடைய
ஆக்ஞையாகிய வேதத்தால் கட்டப்பட்டிருக்கிறார்கள்.
பகவானிடத்திலே மனத்தைச் செலுத்தி வேறு
பிரயோசனத்தை அபேட்சிக்காமலிருக்கும் மகான்களு
டைய பாதசேவை செய்யாமலிருந்தால் துக்கத்தைப்
போக்கக்கூடிய ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பாதாரவிந்தம்
கிடைப்பதரிது. (தாயாருடைய கர்ப்பத்தில் வசிக்கும்
பொழுது நாரதருடைய உபதேசத்தால் எனக்கு
இம்மாதிரி புத்தியுண்டாயிற்று என்று தாத்பரியம்)
என்று சொன்னார். அதனைக் கேட்ட ஹிரண்யகசிபு
மிகுந்த கோபமுள்ளவனாகி, மடியிலிருக்கும் குழந்தையைப்
பூமியில் கிடத்தினான். பின்னுமவன், 'ஓ ராட்சதர்களே!
மிகவும் குற்றஞ் செய்தவனாகிய இவனைக் கொல்
லுங்கள்; துரத்திவிடுங்கள், இவன் சிறிய தகப்பனைக்
கொன்றவரான ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பாதங்களைத்
தானென்போல் பூஜிக்கிறான். ஆனதால் இவன்
என்னுடைய சகோதரனைக் கொன்றவனாகிறான்.
ஐந்து வயதுச் சிறுவனாகிய இவன் தாய் தகப்பனார்
களிடத்தில் கூட சிநேகத்தை ஒழித்திருக்கிறான்.

(இவனுடைய சித்தம் நிலையில்லாத தென்று கருத்து)
இவன் ஸ்ரீ மகாவிஷ்ணுவிற்கு நல்லதைச் செய்வானா?
செய்ய மாட்டான். (ஸ்ரீ மகாவிஷ்ணு இவனை
அங்கீகரிப்பதும் உசிதமில்லை) பிறரானாலும் நல்ல
ஔஷதம் போல அனுகூலத்தைச் செய்வதால்
அவனே புத்திரனாவான். தன் பிள்ளையானாலும்
வியாதி போல் கெடுதியைச் செய்வானானால் அவனைத்
தள்ளிவிட வேண்டும். தன்னுடைய அவயவமானாலும்,
ரோகம் முதலியவையால் கெடுதியை உண்டுபண்ணு
வதனால் அதனை வெட்டி விடலாம். அப்படிச்
செய்வதால் மற்ற அவயவங்கள் சுகத்தை அடையும்.
மேலும் கெட்ட வழியில் செல்லும் இந்திரியமானது
முனிக்கு எப்படி சத்ருவோ அப்படியே இவன்
நமக்குச் சத்துரு; மித்ரன் போல் இருப்பவன். ஆனது
பற்றி ஆகாரம் கொடுப்பது, படுக்கை முதலிய
வைகளில் விஷம் முதலியவைகளைப் பிரயோகித்துப்
பல உபாயங்களாலும் இவனைக் கொல்லுங்கள்" என்று
ஆக்ஞாபித்தான். அதனைக் கேட்ட ராட்சதர்கள்
வெட்டு, குத்து என்று சொல்லிக் கொண்டு சூலங்
களால் ப்ரஹ்லாதரைக் குத்தினார்கள். அவர்களுடைய
தலைமயிரும், மீசையும், செம்பு போன்றது. எல்லா
வற்றிற்கும் மேலானதும், இம்மாதிரியென்று குறிப்பிட
முடியாததும், சகல ஸ்வரூபியுமான பரமாத்மாவிடத்தில்
ப்ரஹ்லாதர் மனத்தைச் செலுத்தியிருந்தபடியால்
ராட்சதர்களால் அவரிடம் செய்யப்பட்ட உபத்திரவங்
கள் பயன்படவில்லை. அது நாஸ்திகன் செய்யும் நல்ல
முயற்சிகள் போலாயின. அதனைக் கண்டு ஹிரண்யகசிபு
மிகுந்த ஆலோசனை உள்ளவனாகி நிர்பந்தமாக
அவரைக் கொல்வதற்குப் பல உபாயங்களைச் செய்தான்.
எப்படி என்றால் திக்கஜங்களாலும்; சர்ப்ப

சிரேஷ்டங்களாலும், ஆபிசாரப் பிரயோகத்தாலும், மலை முதலியவைகளிலிருந்து கீழே தள்ளுவதாலும் மாயைகளாலும், சங்கட ஸ்தலங்களில் அடைத்து வைப்பதாலும் விஷத்தைக் கொடுப்பதாலும், ஆகார மில்லாமல் செய்வதாலும், பனி, வாயு, அக்கினி, ஜலம் ஆகிய இவைகளாலும் மலையைப் புரட்டுவதாலும் ப்ரஹ்லாதரைக் கொல்ல முயற்சித்தான். அப்படியும் பாபமற்றவனாகிய புத்திரனைக் கொல்ல முடியவில்லை. அப்பொழுது ஹிரண்ய கசிபு மிகுந்த கவலை அடைந்து, 'இவன் சிறுவனானாலும் விவேகமுள்ளவன். இவனைக் கொல்வதற்காக வெகு உபாயங்களைச் செய்தோம். கடுஞ்சொற்களையும் சொன்னோம்; அவைகள் யாவும் வீணாயின. இவன் தன்னுடைய தேஜஸால் காப்பாற்றப் பட்டிருக்கிறான். நம்மிடத்தில் கோபிக்கவில்லை. சுனச்சேபன் போல் விகாரமற்ற மனது உள்ளவனாக இந்திரியங்களை ஜயித்திருக்கிறான். ஆனதால் இவனு டைய மகிமை அளவிடக் கூடாதது; இவனுக்கு ஒருவரி டத்திலும் பயம் இல்லை; மரணமற்றவன்; இவனை விரோதித்துபடியால் எனக்கு மரணம் நேரிடுமோ என்று யோசித்துக் கொண்டு வாடின முகமுள்ள வனாகித் தலை குனிந்தான். அப்பொழுது சுக்கிரா சாரியாருடைய புத்திரர்களான சண்டன், அமர்க்கன் என்ற இருவர்களும் ஏகாந்தத்தில் அசுரனை நோக்கி; 'ஓ பிரபுவே! உம்முடைய புருவ நெரிதலைக் கண்டு லோகபாலர்கள் நடுங்குகிறார்கள். நீர் ஒருவராக மூவுலகங்களையும் ஜயித்தீர்; அப்படிப்பட்ட நீர், எதற்காக கவலைப்படுகிறீர்? புத்திரனுடைய சரிதத் தைப் பற்றித் துக்கிப்பது நியாயமல்ல. (சிறிது காலஞ் சென்றால் புத்திரனுக்கு நல்ல புத்தி உண்டாகுமென்று கருத்து) இவன் வெளியில் ஓடிப் போகாமலிருக்கும்படி

வருண பாசத்தால் கட்டி சுக்கிராசாரியார் வருகிற வரையில் காப்பாற்றி வைக்கவேண்டும். சில காலஞ் சென்றால் பெரியோர்களைச் சேவித்து நல்ல புத்தியை அடைவான்" என்றார்கள்.

51–54 அதனைக் கேட்ட ஹிரண்யகசிபு அவர்களை நோக்கி, "கிருகஸ்தர்களான ராஜாக்களுடைய தர்மத்தைப் ப்ரஹ்லாதனுக்கு உபதேசியுங்கள்" என்று சொன்னான். அவர்களும் தர்மம், அர்த்தம், காமம் ஆகிய இவைகளைப் பற்றிய சாஸ்திரத்தை வணக்கமுள்ளவரான பிரகலாத ருக்கு உபதேசித்தார்கள். அப்பொழுது குருக்களால் உபதேசிக்கப்பட்ட தர்மம், அர்த்தம், காமம் ஆகிய இவைகளை சூக்ஷமகரங்களாகப் ப்ரஹ்லாதர் நினைக்க வில்லை. ஏனென்றால், அவைகள் ஆசை துவேஷம் இவைகளை உண்டுபண்ணி விஷயங்களில் பிரவர்த் திக்கச் செய்கின்றன. மனிதர்கள் வியவகாரத்திற்காகப் பேதத்தை ஏற்படுத்தினார்கள்.

55–58 ஒரு நாள் ஆசாரியன் கிருக கிருத்யங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது ப்ரஹ்லாதருடன் சேர்ந்து படிக்கும் சிறுவர்கள் விளையாடுவதற்காகப் ப்ரஹ்லாதரை அழைத்தார்கள். அப்பொழுது விவேகியான பிரகலாதர் அவர்களை நோக்கி மிகுந்த சிருபையுடன் ஜனனம், மரணம் இவைகளைப் பற்றிச் சொன்னார். அதைக் கேட்ட சிறுவர்கள் அவரிடத்தில் மிகுந்த கௌரவ புத்தி வைத்து விளையாட்டுச் சாமான்களை எறிந்துவிட்டுச் சுத்த சித்தர்களாகப் ப்ரஹ்லாதரையே பார்த்துக் கொண்டு அவரை உபாசித்திருந்தார்கள். அவர்களை நோக்கி மகாபாகவதரும், மிகுந்த கிருபை யுள்ளவருமான ப்ரஹ்லாதர் பின்வருமாறு சொல்லலானார்.

இந்த அத்தியாயத்தில் 58 சுலோகங்களிருப்பதாக ஸ்ரீதரீய வியாக்கியானத்துடன் கிரந்தாட்சரத்தில் அச்சிடப்பட்டிருக்கும் புத்தகத்தில் காணப்படுகிறது. மற்ற புத்தகங்களிலும், ஓலைப் புத்தகங்களிலும் 54–வது சுலோகம் காணப்படவில்லை. ஆனதால் அதற்கு அர்த்தம் எழுதப்படவில்லை.

குறிப்பு

வியாதி உண்டாவது – ப்ரஹ்மஹத்யைச் செய்பவன் க்ஷயரோகத்தை அடைவார்கள். குடிப்பவன் சொத்தைப் பற்கள் உள்ளவனாவான், தங்கத்தைத் திருடினவன் சொத்தை நகமுள்ளவனாவான், ஆசாரிய பத்னியைப் புணர்ந்தவன் சரும ரோகமுள்ளவனாவான். ஸ்மிகுதி, சுனக்சேபன் – அயோத்யா நகரத் தரசனாகிய அம்பரீஷனென்பவர் யாகஞ்செய்யும்பொழுது யாகப் பசு காணாமற்போய் விட்டது. அப்பொழுது பிராம் மணர்கள் "பசு காணமற்போனதால், அதற்காக மனிதனைப் பசுவாக வைத்து யாகத்தை முடிக்கவேண்டும்; அப்படிச் செய்யாவிடில் யஜமானனுக்குக் கெடுதி நேரிடும்" என்றார்கள். அதனைக் கேட்டு அரசன் அநேக தனங்களை எடுத்துக் கொண்டு நர பசுவைத் தேடி வெகு தேசங்களில் அலைந்தார். பிறகு துந்தத்தில் ரிசீகரென்று ஒரு மகரிஷி இருந்தார். அவருக்கு மூன்று குமாரர்கள் இருந்தார்கள். அரசன் அந்த மகரிஷியின் சமீபம் சென்று தம்முடைய காரியத்தைத் தெரிவித்து, ஒரு புத்திரனைக் கொடுக்க வேண்டுமென்று பிரார்த் தித்தார். அதனைக் கேட்ட மகரிஷி அரசனை நோக்கி, "மூத்த குமாரனை விற்கமாட்டேன்" என்றார். அருகிலி ருந்த அவருடைய பத்னியானவள், இளைய குமாரனை

விற்கமாட்டேன்" என்றாள்; அவ்விருவருடைய வார்த்தையைக் கேட்ட நடுப்பிள்ளை சுனக்சேபன் தாயும், தகப்பனும் தன்னை விற்றுவிட்டார்கள் என்று தெரிந்து கொண்டு அரசனை நோக்கி, "என்னை அழைத்துப் போகலாம். என் தாய், தந்தைகளுக்கு இஷ்டமான வஸ்துக்களைக் கொடும்; போவோம்" என்றான். அதனைக் கேட்டு அநேகம் பசுக்களைக் கொடுத்து அவனை விலைக்கு வாங்கிக் கொண்டு தமது நகரஞ் செல்லும் வழியில் புஷ்கர க்ஷேத் திரத்தில் தங்கினார். அவ்விடத்தில் விசுவாமித்திரர் தவஞ் செய்துகொண்டிருந்தார். சுனச்சேபன் அவரைச் சரணமடைந்து அவரால் உபதேசிக்கப்பட்ட மந்திரங் களால் அரசனுடைய யாகத்தைப் பூர்த்தி செய்து, தன்னுடைய உயிரையும் காப்பாற்றிக் கொண்டான். தாய், தகப்பனார் செய்த அபகாரத்தை மனத்தில் வைக்கவில்லை – ஸ்ரீ வால்மீகி ராமாயணம், பால காண்டம் – 61வது அத்தியாயம்.

அத்தியாயம்–6

பிரகலாதர் சிறுவர்களுக்குத் தத்துவத்தை உபதேசித்தது

1–5. ஓ சிறுவர்களே! பலவகையிலும் சூக்ஷமகரமான வார்த்தையைச் சொல்லுகிறேன், கேளுங்கள். உங்களுடைய தோழர்களான சிறுவர்கள் மரணமடைந்ததைப் பாருங்கள் வீணாக விளையாட்டினால் காலத்தைக் கழித்து விடவேண்டாம் நாமெல்லோரும் முந்தி பாலர்களாக இருக்கவில்லை: ஆத்மாவிற்குப் பிரியத்தை விரும்பியவர்களே. ஆசாரியர் அனர்த்தத்தை அர்த்தம் போல் சொல்வதால் அதனைக் கேட்க வேண்டாம்; அஞ்ஞானமாகிய தூக்கம் பிடித்தவன் அதனைக்கேட்டு விழித்துக்கொள்ள மாட்டான். அவருடைய வார்த்தையில் நம்பிக்கை வைப்பானா? ஆத்மாவிற்குச் சத்துருவாக இருப்பவன் யார்? உதாசீனனாக இருப்பவன் யார்? மித்திரன் யார்? எது பிரயோசனம்? (1 முதல் 5 சுலோகங்கள் பழைய புத்தகங்களில் காணப்படவில்லை).

6–37. ஜன்மங்களில் மனுஷ்ய ஜன்மம் கிடைப்பதரிது; அதுவும் நிலையற்றது; ஆனாலும் சூக்ஷமத்தைக் கொடுக்கக் கூடியது. ஆனதால் பாலியவயதிலேயே இந்த மனுஷ்ய ஜன்மத்திலேயே விவேகியாயிருப்பவன் பகவானை அடைவதற்குச் சாதனங்களான தர்மங்களை அனுஷ்டிக்கவேண்டும். ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பாதத்தைச் சேவிப்பதே மனிதனுக்கு முக்கியமான தர்மம். அந்தப் பகவான் ஸகல பிராணிகளுக்கும் பிரியராகவும் ஆத்மாவாகவும் ஈசுவரனாகவும், சுஹிருத்தாகவுமிருக்கிறார். ஓ

சிறுவர்களே! இந்திரிய விஷயமான சுகம் முன் ஜன்மத்திய அதிருஷ்ட வசத்தால் பசு முதலிய திர்யக் ஜாதிகளுக்கும் பிரயத்ன மின்றி கிடைக்கிறது. அதற்காக முயலுவது வீணானதேயாம். விஷய சுகத்திற்காக முயலுவதால் ஆயுள் வீணாகச் செலவாகிறதே யொழிய சூக்ஷமத்தைக் கொடுக்கக்கூடிய முகுந்தருடைய பாதாரவிந்தம் கிடைக்கிறதில்லை. ஆனதால் சம்சாரியாக இருப்பவன் இந்தச் சரீரம் நாசமடைவதற்கு முன்னமேயே சூக்ஷமத்தை அடைவதற்கு முயலவேண்டும். புருஷனுக்கு நூறு வருஷங்கள் பரம ஆயுசு என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதில் பாதி ஆயுசைத் தூக்கத்தில் (ராத்திரியில்) கழித்துவிடுகிறான். பால்யத்திலும், கிசோரனாக இருப்பதிலும் விளையாட்டினாலும் இருபது வருஷங்களைக் கழித்துவிடுகிறான். அபரவயதில் கிழத்தனத்தை அடைந்து, ஒன்றையும் செய்ய முடியாதவனாகி இருபது வருஷங்களைப் போக்கிவிடுகிறான். பாக்கியான சொற்ப ஆயுளானது செய்யமுடியாத காமத்தாலும் மோகத்தாலு பூர்த்தி விஷயங்களில் ஆசைகொண்டு கழிக்கப்படுகிறது. மேலும், மிக்க சிரமப்பட்டு சம்சாரத்தை விரும்புகிறவர்களான நம்முடைய ஜாதிகளுக்கு ஏற்பட்டிருக்கும் புத்தி வித்யாசத்தைப பாருங்கள், பலவகையான யோனிகளில் கர்ப்பத்தையடைந்து சரீரத்தை அடைந்தவன் சக்கரவர்த்தியானாலும் என்ன சுகத்தை அடையப் போகிறான்? காலத்தின் மஹிமையால் எல்லாம் நிலையில்லாமல் இருப்பதால் எந்தக் கர்மாவை நல்லதென்று சொல்லக்கூடும் எதனைச் கெட்டதென்று சொல்லக்கூடும்? இந்திரியங்களை ஜயிக்காமல் புத்திரன், களத்திரம் முதலியவைகளில் ஆசை கொண்டவனும், திருடமான சிநேகபாசத்தால் கட்டப்பட்டவனுமான

ஆத்மாவை அதிலிருந்து நிவர்த்தித்துக் கொள்ள எவன்தான் விரும்புகிறான்? ஏனென்றால் இந்திரியங் களுக்கு வசப்பட்டிருக்கிறான்; அர்த்தத்தில் ஆசையை யொழிப்பது மிகவும் அரிது. அந்த அர்த்தமானது பிராணனைக் காட்டிலும் மிக்க பிரியமான வஸ்துவாக இருக்கிறது திருடனும், சேவகனும் வியாபாரிகளும் பிராணனைக்கூட லட்சியம் செய்யாமல் பணத்தைச் சம்பாதிக்க முயற்சிக்கிறார்கள் அல்லவா? மேலும், தன்னிடத்தில் பிரியமுள்ள களத்திரத்தையும் அவளால் செய்யப்படும் ஹிதோபதேசத்தையும் நினைத்துக் கொண்டு சுகிருத்துக்கள் புத்திரன் ஆகிய இவர்களி டத்திலுள்ள சிநேகத்தால் கட்டப்பட்டு குழந்தை களுடைய இனிமையான வார்த்தைகளைக் கேட்டும் சம்சாரத்தில் முழ்கியிருப்பவன் அதனை விடுவதற்கு விரும்புவானா; பின்னும், புத்திரர்கள் பெண்கள், சகோதரர்கள் தங்கைகள் தாய் தகப்பனார்கள், அழகான படுக்கை முதலிய சாமக்கிரிகள் நிறைந்த வீடு, வம்ச பரம்பரையான விருத்திகள் பசுக்கள் வேலைக்காரர்கள் ஆகிய இவைகளிடத்தில் மிகுந்த அபிமானத்தை அடைந்து அவைகளையே நினைத்துக் கொண்டிருக்கிறான். மேலும் புழுவானது தான் வெளியில் வருவதற்குக்கூட வழியில்லாமல் கூடு கட்டிக் கொள்வது போலக் காமத்தில் போதுமென்று திருப்தியில்லாமல் கர்மங்களைச் செய்துகொண்டு இனிமையான ஆகாரத்தையும் ஸ்திரீ சம்போகத்தையும் மேலானதென்று நினைத்திருக்கிறான். இப்படி விசேஷ மோகமுள்ளவனாக இருப்பதால் ஸம்ஸாரத்தி லிருந்து எப்படி வைராக்யத்தை அடைவான்? குடும்பத்தைக் காப்பாற்றுவதே புருஷார்த்தமென்று நினைத்து அதிலேயே ரமித்துக்கொண்டு அதனைக்

காப்பாற்றுகிற விஷயத்தில் ஆயுளைச் செலவிடுகிறான்; புருஷார்த்தத்தை அடைகிறதில்லை; மூவகையான தாபததை அனுபவிக்கிறான், ஆனால் அதனைத் துக்கமாக நினைக்கிறதில்லை பிறருடைய பணத்தைத் திருடினவர்களுக்கு இவ்வுலகத்தில் அரசனுடைய தண்டனையும், பரலோகத்தில் நரகமும் உண்டாகு மென்று தெரிந்து கொண்ட வித்வான்களும் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டி திருடுகிறார்கள். எப்பொழுதும் பணத்திலேயே ஆசை கொண்டிருக்கிறார்கள்; வித்வானா னாலும். 'தம்மைச் சார்ந்தவன்; பிறர்' என்ற பேத புத்தியுள்ளவனாகையால் குடும்பத்தைப் போஷித்துக் கொண்டு மூடன் போல் ஸம்ஸாரத்தை அடைகிறானே யொழிய ஆத்ம ஸ்வரூபத்தைப் பார்க்கிறதில்லை. மேலும், வித்வானானாலும் தன்னுடைய ஆத்மாவைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் தீனனாக இருக்கிறான். ஸ்திரீ களுக்குக் கீரீடாமிருகம் போலிருக்கிறான். புத்திரன் முதலியவர்கள் புருஷனுக்கு விலங்கு போலிருக்கிறார்கள். ஓ தைத்யர்களே! விஷயங்களிலே ஆசையுள்ளவர்களான அசுரர்களிடத்தில் ஆசையை யொழித்து, ஆதிதேவ ராகிய ஸ்ரீமந் நாராயணனைச் சேவியுங்கள் வைராக்ய முள்ளவர்கள் விரும்பிய மோட்சபதம் அவரேயாம். ஓ அசுரக்குழந்தைகளே! ஸ்ரீ பகவானைச் சேவிப்பதில் வெகு தூரம் செல்லவேண்டியது முதலிய சிரமமில்லை அந்த நாராயணன் ஸகல பிராணிகளுக்கும் ஆத்மா; சித்துமான வஸ்து; தாவரம் முதல் ப்ரஹ்மா வரையி லுள்ள மேலான பிராணிகளிடத்திலும், தாழ்ந்தவர் களிடத்திலும் குடம் முதலியவைகளிலும், ஆகாசம் முதலிய மகா பூதங்களிலும் மகத் அகங்காரம் முதலிய வைகளிலும் இருப்பவர். பகவான் ஒருவரே . அவர் எல்லாவற்றிற்கும் அதிபதி; நாசமற்றவர்; பிரத்யகாத்ம

ஸ்வரூபமாகப் பிரகாசிப்பவர் பிரபஞ்ச ஸ்வரூபமாகவுமி ருப்பவர், வியாப்யர் (சொற்ப தேசத்திலிருப்பவர்), வியாபகர் (அநேக இடங்களிலிருப்பவர்) என்று சொல்லப்பட்டவர், உண்மையில் குறிப்பிட முடியாதவர். அந்தப் பரமாத்மா அனுபவாத்மகமான ஆனந்தசுரூபி, ஆனால் அவர் தம்முடைய மாயையால் தம்முடைய ஐசுவரியங்களை மறைத்துக்கொண்டிருக்கிறார். ஆனதால் நீங்கள் அசுர ஸ்வபாவத்தை விட்டு சகல பிராணிக ளிடத்திலும் தயை, சிநேகம் ஆகிய இவைகளைச் செய்யுங்கள். இப்படிச் செய்வதால் ஸ்ரீமந் நாராயணன் சந்தோஷத்தை அடைகிறான். நாசமற்றவரும் எல்லா வற்றிற்கும் முந்தியவருமான பகவான் சந்தோஷ மடைந்தால் எது தான் கிடைக்காது? பகவானுடைய பாதாரவிந்தத்தைச் சேவித்து, அதன் அனுபவத்தை அடைந்து கானம் செய்பவர்களான நமக்குத் தர்மம் முதலியவைகளால் என்ன பிரயோஜனம்? அவைகள் சத்துவம் முதலிய குணங்களால் ஏற்பட்டவை; முயற்சியில்லாமலேயே ஸித்தித்தவை. அப்படிப்பட்ட எங்களுக்கு மோட்சத்தாலும் பிரேயோசனமில்லை. மேலும் தர்மம்; காமம் என்ற மூன்று வர்க்கங்களும், ஆத்ம வித்யையும் கர்ம வித்யையும், நீதியும், தவமும் பலவகையாக வேதத்தால் சொல்லப்பட்டவைகளா னாலும் அவையெல்லாம் "சகல லோகங்களுக்கும் சுகிருத்தாகிய பரமபுருஷனுடைய ஆத்மார்ப்பணத்தில் (ஆராதனத்தில்) உபயோகப்படுமானால் அவைகள் சத்தியங்கள்" (பிரயோஜனமுள்ளவை) என்று நினைக் கிறேன். இந்த நாராயணன் நாரதருக்கு உபதேசித்தார், ஆனால் பகவானையே பிரயோசனமாக நினைத்த வர்களும், பகவானுடைய பாதார விந்த தூளியால் ஸ்நானம் செய்தவர்களுமான (பாதங்களைச் சேவித்தவர்கள்)

எல்லா பக்தர்களுக்கும் அந்த ஞானம் உண்டாகும், (நாராயணர் நாரதருக்கு உபதேசித்து ஞானத்தில் நமக்கு அதிகாரம் ஏற்படுமோவென்று சந்தேகப்பட வேண்டாம். பக்தர்கள் எல்லாருக்கும் அதிகாரம் உண்டென்று கருத்து) ஞானம் விஞ்ஞானம் ஆகிய இவைகளுள்ள சுத்தமான இந்தப் பாகவத தர்மத்தை மிகவும் ஞானியாகிய நாரதரிடமாக உபதேசம் பெற்றேன்" என்றார்.

38–39. அதனைக் கேட்ட சிறுவர்கள் ப்ரஹ்லாதரை நோக்கி; "ஓ ப்ரஹ்லாத! நீயும் நாங்களும் இந்த இரண்டு ஆசாரியர்களைத் தவிர வேறு குருவை அறியோம். மேலும், அந்தப்புரத்திலேயே வசிக்கிறோம். எங்களை விட்டு நீயும் பிரியவில்லை. அப்படியிருக்க நாரதரை நீ எப்பொழுது சந்தித்தாய்? இந்த விஷயத்தில் எங்களுக்கு இருக்கும் சந்தேகத்தைப் போக்கடிக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்கள்.

(இந்த அத்தியாயத்தில் 39–சுலோகங்கள் மூலத்தில் காணப்படுகின்றன, ஆனால் 1 முதல் 5–சுலோகங்களும், 36–வது சுலோகமும் பழைய புத்தகங்களில் இல்லை.)

அத்தியாயம்–7

நாரதருடைய உபதேசம்

1–11 அசுரக் குழந்தைகளுடைய வார்த்தையைக் கேட்டு மகா பாகவதராகிய ப்ரஹ்லாதர் அவர்களை நோக்கி தன்னுடைய வார்த்தையை நினைத்துக் கொண்டு சிரித்துப் பின்வருமாறு சொல்லலானார். எப்படியென்றால், "ஓ குழந்தைகளே! நம்முடைய பிதாவாகிய ஹிரண்ய கசிபுவானவர் முன்னொருகால் தவம் செய்வதற்காக மந்தர பர்வதம் சென்றார். அந்தச் சமயத்தில் தேவர்கள் அசுரர்களுடன் யுத்தம் செய்ய முயற்சித்தார்கள். பின்னும் இந்திரன் முதலிய தேவர்கள் 'லோகத்திற்கு உபத்திரவத்தைச் செய்பவனான இந்த அசுரன் எறும்புகளால் சர்ப்பமானது கொல்லப்படுவது போலத் தன்னுடைய பாபத்தால் நாசஞ் செய்யப் பட்டான்' என்றும் சொல்லிக் கொண்டார்கள். அப்பொழுது அசுரர்கள் தேவர்களால் அடிக்கப்பட்டுப் பயந்து அவர்கள் களத்திரம், புத்திரன், பணம் இஷ்டர்கள், வீடு , பசுக்கள் முதலிய சாமக்கிரியைகளைக் கூட அபேட்சியாமல் உயிர் தப்பிப் பிழைத்தால் போதுமென்று பல திக்குகளை நோக்கி ஓடினார்கள். மகேந்திரன் இரண்யகசிபுவின் பத்தினியும், என்னுடைய மாதாவுமான கயாது என்பவளைப் பிடித்துக் கொண்டு சென்றார். அப்பொழுது அவள் குரரி என்ற பறவைபோல் அழுதாள். அப்பொழுது தெய்வச்செயலாக நாரதர் மகேந்திரனை வழியில் சந்தித்து, 'ஓ தேவ சிரேஷ்ட! குற்றஞ் செய்யாதவளும், பதிவிரதையும், பரஸ்திரீயுமான இவளை அபகரிப்பது உசிதமில்லை. ஓ மிகுந்த அதிருஷ்டமுள்ளவரே! இவளை விட்டு

விடும்!' என்று சொன்னார். அதனைக் கேட்ட மகேந்திரன் நாரதரை நோக்கி, "இவளுடைய வயிற்றில் இரண்யகசிபுவின் வீரியம் இருக்கிறது (கர்ப்பிணியாக இருக்கிறாள்), ஆனதால் பிரசவிக்கிற வரையில் என்னிடம் இருக்கட்டும். இவள் பிரசவித்த பிறகு குழந்தையைக் கொன்றுவிட்டு இவளை விட்டுவிடுகிறேன்" என்றார். அதனைக் கேட்ட நாரதர் மகேந்திரனை நோக்கி, இவளுடைய வயிற்றிலிருப்பவர் பாகவதர்களுக்குட் சிறந்தவர், பாபமற்றவர்; ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பக்தர்; அவரைக் கொல்வதற்கு உம்மால் முடியாது" என்றார். அதனைக் கேட்டு மகேந்திரன் நாரதருடைய வார்த்தையில் கௌரவப் புத்தியை வைத்து; என் மாதாவை விட்டு அவளைப் பிரதட்சிணம் செய்து தம்முடைய லோகம் சென்றார்.

12–57 பின்பு நாரத மகரிஷி என்னுடைய மாதாவைச் சமாதானம் செய்து தம்முடைய ஆசிரமத்திற்கு அழைத்துப் போய், உன்னுடைய பர்த்தா வருகிறவரையில் இவ்விடத்திலிரு என்றார். அவளும் அதனை ஒப்புக்கொண்டு பயமற்றதான அந்த ஆச்சிரமத்தில் வசித்ததுமன்றித் தன்னுடைய கர்ப்பம் க்ஷேமமாக இருக்கவேண்டியதற்காகவும் தன்னுடைய பர்த்தா வந்த பிறகு பிரசவம் ஆகவேண்டுமென்பதற்காகவும் மிகுந்த பக்தியுடன் அந்த மகரிஷிக்குச் சிசுரூஷை செய்துவந்தாள். அப்பொழுது தயையுள்ளவராகிய அந்த மகரிஷி கர்ப்பத்திலிருக்கும் என்னை உத்தேசித்து தர்மத்தின் ரகசியத்தையும் நிர்மலமாகிய ஞானத்தையும் அவளுக்கு உபதேசித்தார். வெகுநாளைக்கு முந்தி நடந்ததானதாலும் ஸ்திரீயானதாலும் அந்த ஞானமானது என் மாதாவிற்கு மறந்துவிட்டது

மகரிஷியின் அனுக்கிரக விசேஷத்தால் எனக்கு அது மறக்கவில்லை. என்னுடைய வார்த்தையில் உங்களுக்கு நம்பிக்கையும், கூர்மையான புத்தியும் இருக்குமானால் அந்தத் திவ்யமான ஞானம் உங்களுக்கும் உண்டாகும், அந்த மகரிஷியால் உபதேசிக்கப்பட்டது, என்ன வென்றால், மரங்கள் ஜீவித்திருக்கும்பொழுது அதன் பழங்களுக்கும் பரிணாமம் (பிஞ்சு, காய், பழம் முதலியவை) ஏற்படுவது போல வஸ்துக்களைப் பலவகையாக மாற்றும் சக்தியுள்ள காலத்தால் உற்பத்தி முதலிய ஆறு விகாரங்கள் ஜீவனிருக்கும் பொழுது சரீரத்திற்கு ஏற்பட்டிருக்கின்றன. ஆத்மாவுக்கு அவைகள் இல்லை. (ஆத்மா உண்டாகிறதுமில்லை; இளைக்கிறதுமில்லை; மரணமடைகிறதுமில்லை (ஆத்மா நித்தியர், குறைவற்றவர்! தோஷமற்றவர். ஒருவர், க்ஷேத்திரக்ஞர் எல்லாவற்றிற்கும் ஆசிரயமாக இருப்பவர் விகாரமற்றவர்; தாமாகப் பிரகாசிப்பவர். எல்லா வற்றிற்கும் காரணனாக இருப்பவர். சகல உலகங் களையும் சிருஷ்டித்தவராகையால் வியாபகர். ஒன்றிலும் சம்பந்தப்படாதவர், ஒன்றாலும் மறைக்கப்படாதவர், இம்மாதிரியான ஆத்மாவின் பன்னிரண்டு லட்சணங் களால் ஆத்மாவின் உண்மையைத் தெரிந்து கொண்டு தேகம் முதலிய அனாத்ம பதார்த்தங்களில் 'நான்; என்னுடையது என்ற அபிமானத்தை ஒழிக்க வேண்டும். தட்டான் உரைகல்லில் ஒட்டியிருக்கும் ஸுவர்ணத்தைத் தகுந்த உபாயத்தால் எடுத்து எப்படி அடைகிறானோ, அப்படி காரியம், காரணம் ஆகிய இவைகளை அறிந்தவனாகிய புருஷன் சரீரத்திலி ருக்கும் ஆத்மாவை ஆத்ம யோகத்தால் அடைந்து ப்ரஹ்மமாக ஆகிறான். மூலப் பிரகிருதி மகத் தத்துவம், அகங்காரம், ஐந்து தன்மாத்திரைகள் ஆகிய எட்டும்

பிரதிடிதிகள். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்றும் அவைகளின் குணங்களேயாம். பதினோரு இந்திரியங்கள், ஐந்து மஹாபூதங்கள் ஆகிய பதினோரு இந்த்ரி யங்கள் இவைகளில் சாட்சியாக அனுவர்த்தித்தி ருப்பதால் புருஷன் ஒருவனேயாம். எல்லா விகாரங்களின் சமூகமே தேகமெனப்படுகிறது. அது ஜங்கமம், ஸ்தாவரம் என்ற இருவகை உள்ளது. இந்தச் சரீரத்திலி ருக்கும் வஸ்துக்களின் சுபாவத்தை விசாரித்து, ஒவ்வொன்றையும் அனாத்மா என்று நிச்சயித்து, இது ஆத்மாவில்லை, இது ஆத்மா இல்லை, என்று ஆத்மாவைத் தே_வேண்டும். அனாத்ம வஸ்துக்களுடைய கூட்டத்திலிருந்து ஆத்மாவை எப்படிப் பிரித்து எடுக்கிறதென்றால் ஜாக்கிரதவஸ்தை (விழித்துக் கொண்டிருப்பது) ஸ்வப்பனம்: ஸுஷுப்தி என்ற அவஸ்தைகள் புத்தியின் விருத்திகள். அவைகள் எவனால் அனுபவிக்கப்படுகின்றனவோ, அவனே சாட்சியாகிய புருஷன், மேலானவன். மேற்சொல்லிய விருத்திகள் முக்குண ஸ்வபமாயுள்ளவை. கர்மங்களால் உண்டானவை. ஆனதால் அந்த புத்தி பேதங்கள் ஆத்மாவினுடைய தர்மங்களல்ல. அனாத்ம தர்மங்களேயாம். புஷ்பத்தின் குணமாகிய வாசனையைக் கொண்டு அதற்கு ஆசிரயமாகிய வாயுவைத் தெரிந்து கொள்வதுபோலப் புத்திக்குள் சாட்சியாக இருப்பது ஆத்மாவின் ஸ்வருபமென்று தெரிந்து கொள்ளவேண்டும் மேலும், ஜகத்தைப் படைப்பது; பரிபாலிப்பது சம்கரிப் பது ஆகிய இவைகளுக்கு பரமாத்மாவே காரணமென்று ஸ்ருதியில் சொல்லப்பட்டிருப்பதாலும் எல்லாவற்றிலும் ஆத்மாலே இருப்பதாலும் அந்த ஆத்மாவைச் சுத்தமான மனத்தால் அனாத்மக் கூட்டத்திலிருந்து அவசரப்படாமல் பிரித்தெடுக்க வேண்டும். வாயுவிற்குப்

புஷ்பத்தின் சம்பந்தம் உண்மையிலிருக்கிறது. ஆத்மாவிற்கு ஸம்ஸார பந்தம் உண்மையிலில்லை. புத்தி குணங்களாலும், கர்மங்களாலும் ஏற்படுகிறது. அதற்கு அஞ்ஞானமே காரணம். மித்தியா பூதம். (உண்மையானதல்ல) ஸ்வப்னம் போலப் புருஷனால் அடையப் படுகிறது. ஸ்வப்னத்திலும் ஜாக்கிரதவஸ்தையிலும் அனுபவிக்கப்படும் ஸகல விஷயங்களும் மனோமயங் களாகையால் சமமானவைகளே. அவைகள் பார்க்கப் பட்டாலும் மறைந்தாலும் செய்பவனுக்குச் சோகத்தை யும், மோகத்தையும், பயத்தையும் கொடுக்கின்றன. குணங்களற்றவரானாலும் பரமாத்மாவிற்குக் குணங் களின் சேர்க்கையால் சம்சாரமேயொழிய உண்மையிலில்லை மேலும் சரீர தர்மமாகிய ஜனனமும், மரணமும் சரீர சம்பந்தத்தால் ஜீவனுக்கு இருப்பதாகத் தோன்று கின்றனவேயொழிய இயற்கையிலில்லை. ஆனதால் முக்குண ஸ்வரூபமான கர்மத்தின் பீஜத்தை (விதையை) நாசஞ் செய்யவேண்டும் அதுவே யோகம். அது புத்தியின் பிரவாகமான ஜாக்ரத் முதலிய அவஸ்த் ஸதகளை ஒழிப்பதேயாம் அநேக உபாயங்களிருக் கின்றன. ஆனாலும் எவைகளை அனுஷ்டித்தால் பகவானிடத்தில் பக்தி உண்டாகுமோ; அவைகளை அனுஷ்ப்படதே மேலான உபாயம், என்று ஈசுவரனால் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகள் எவை என்றால், ஆசாரியனுக்குச் சிநேகிப்பது, செய்வது, எல்லாரிடத் திலும் சிநேகிப்பது, கிடைத்தவை எல்லாவற்றையும் ஈசுவரனிடத்தில் சமர்ப்பிப்பது; பகவத் பக்தர்களுடைய சங்கத்தாலும் ஈசுவரனை ஆராதிப்பது. பகவானு டைய கதையில் சிரத்தை வைப்பது. அவருடைய குணங்களையும் சரிதங்களையும் சொல்வது, அவருடைய பாதார விந்தத்தைத் தியானிப்பது,

பகவானுடைய விக்கிரகத்தைத் தரிசிப்பது முதலிய வைகளாம். ஸ்ரீமந் நாராயணன் எல்லாருடைய இருதயத்திலும் வசிக்கிறார். ஆனதால் எல்லாரையும் மனத்தால் பூஜிக்க வேண்டும். இப்படி காமம் முதலிய ஆறுவகைகளைச் சத்ருக்களை ஜயித்து பகவானாகிய வாசுதேவரிடத்தில் பிரீதி செய்ய வேண்டும். இதனால் பக்தி சித்திக்கும், பகவான் ராமனாகவும், ஸ்ரீ கிருஷ்ணனாகவும் அவதரித்து செய்த ஒப்பற்ற சரிதங்களைக் கேட்டும், தன் வாக்கினால் உச்சரித்தும் புருஷன் மிகுந்த சந்தோஷத்தை அடைகிறான். மயிர்க்கூச்சலடைகிறான். ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி அதனால் கண்டமடைத்துப் பேச முடியாத வனாகிறான். பகவானிடத்தில் மிகுந்த ஆசையுடன் கெட்டியாகக் கானஞ் செய்கிறான். நர்த்தனஞ் செய்கிறான்; பிசாசம் பிடித்தவன்போல் சிலவேளை சிரிக்கிறான்; கதறுகிறான்; தியானஞ் செய்கிறான். கண்டவர்களை நமஸ்கரிக்கிறான்; அடிக்கடி பெருமூச்சு விடுகிறான்; பரமாத்மாவிடத்திலேயே புத்தியைச் செலுத்தியவனாகையால் வெட்கமில்லாமல்; ஓ ஜகத்திற்கு அதிபதியே! ஹரியே! நாரயணா! என்று சொல்லுகிறான். பின்னும் அந்த நிலைமையை அடைந்த புருஷன், பகவான் செய்த சேஷ்டைகளை மனத்தாலும் சரீரத்தாலும் பாவித்து, மிகுந்த பக்தி பிரவாகத்தால் அஞ்ஞானம் வாசனை ஆகிய இவை களைப் போக்கடித்துக் கொண்டு ஸகல பந்தத்திலி ருந்து நிவர்த்தியடைந்து ஸ்ரீமந் நாராயணனை அடைகிறான். மேலும், சரீரமுள்ளவர்களுக்கு ஸ்ரீ பகவானை அடைவதே சம்சார சாகரத்தை நிவர்த் திக்கக் கூடியது" என்று சொல்லுகிறார்கள். அதனையே ப்ரஹ்மானந்த சுகம் என்று சொல்லுகிறார்கள்.

ஆனதுபற்றி நீங்கள் ஈசுவரனை இருதயத்தில் தியானம் செய்யுங்கள். சத்திய ஸ்வரூபியும், ஸகல பிராணிகளுக்கும் மித்திரருமான பகவானை இருதயா காசத்திம் தியானஞ் செய்வதில் அதிகப் பிரயாசம் ஏது? விஷயங்களைச் சம்பாதிப்பதால் என்ன பிரயோசனம்? மேலும், பணம் களத்திரம் பசுக்கள், புத்திரன் முதலிய ஐசுவரியங்கள் அர்த்தங்கள் காமங்கள் முதலியவை எல்லாம் நிலை யில்லாதவை; அவைகள் மனிதனுக்கு எவ்விதப் பிரியத்தை உண்டுபண்ணப்போகின்றன? ஸ்வர்க்கம் முதலிய லோகங்களும் யாகங்களால் கிடைக்கக் கூடியவைகள். புண்ணியத்தின் தாரதம்யம் வித்தியாசமுள்ளவை களாக இருக்கின்றன; ஆனாலும் நித்தியங்களல்ல ஆனதால் அழிவற்றவராகிய பகவானைப் பக்தியினால் அடை யுங்கள். அவர் தோஷமற்றவர்; (அவரிடத்தில் தோஷமி ருப்பதாக பார்த்ததில்லை. கேட்டதுமில்லை) மேலானவர்; அதனால் ஆத்ம லாபம் கிடைக்கும். அகங்காரமுள்ள வித்வானாகிய புருஷன் எந்த பலத்தை உத்தேசித்து அடிக்கடி கர்மங்களைச் செய்கிறானோ அதற்கு விரோதமான பலத்தை அவஸ்யம் அடைகிறான். பின்னும் புருஷன் சுகத்தை அடைவதற்கும், துக்கத்தை நிவர்த்தித்துக் கொள்வதற்கும் சங்கற்பித்தே கர்மங் களைச் செய்கிறான். ஆசையில்லாமல் இருந்தபொழுது எவன் சுகமடைந்திருந்தானோ, அந்தப் புருஷனே ஆசையை அடைந்தபோது துக்கத்தையே அடை கிறான். பின்னும் இந்தப் புருஷன் எந்தச் சரீரத்தைப் போஷிப்பதற்காக விஷயங்களில் ஆசைப்படுகிறானோ அந்தச் சரீரமானது, பிறருடையது (நாய்க்குச் சொந்த மானது) அநித்தியமானது; போகிறதும் வருகிறதுமாக இருக்கிறது) மேலும், குழந்தைகள், களத்திரம்; வீடு, பணம் முதலியவை ராஜ்யம், பொக்கிஷம், சைனியம்,

மந்திரி வேலைக்காரர்கள், ஆப்தர்கள் ஆகிய இவைகள் அகங்காரத்திற்குக் காரணங்களாக இருப்பவைகள்; சரீரத்தைவிட வேறாகக் காணப்படுகின்றவைகள். இவைகள் அற்பங்கள்; அநித்தியங்கள்; அர்த்தம் போலத் தோன்றுகிறவைகள்; உண்மையில் அனர்த் தத்தைக் கொடுக்கக்கூடியவைகள்; நித்தியமான ஆனந்த சமுத்திரமான ஆத்மாவிற்கு மேற்சொல்லிய வைகளால் என்ன பிரயோசனம்? ஓ அசுரக் குழந்தைகளே, முன் செய்த கர்மங்களால் நிஷேகம் (ஸ்திரீயினிடத்தில் புருஷனால் செய்யப்படும் கர்ப் பாதானம்) முதலிய அவஸ்தைகளில் கஷ்டப்படும் ஜீவனுக்கு என்ன புருஷார்த்தம் கிடைக்கிறது? யோசித்துப் பாருங்கள். ஜீவனுள்ள தேகத்தால் கர்மங் களைச் செய்ய முயற்சிக்கிறான். கர்மங்களால் சரீரம் ஏற்படுகிறது. தேகம், கர்மம் ஆகிய இரண்டும் சுரூபத்தை அறியாததால் ஏற்படுகின்றன. ஆனதால் தர்மங்களும், அர்த்தங்களும்; காமங்களும் எவரை ஆசிரயித்திருக்கின்றனவோ, ஆசை அற்றவரான அந்த ஈசுவரனாகிய ஸ்ரீமந் நாராயணனை ஒன்றையும் விரும்பாமல் (பலனை உத்தேசியாமல்) சேவியுங்கள். ஹரியானவர் ஸகல பிராணிகளுக்கும் ஆத்மாவாகவும், ஈசுவரராகவும், பிரியராகவும் இருக்கிறார். மேலும் அவர் தம்மால் சிருஷ்டிக்கப்பட்ட மகா பூதங்களுடன் சம்மந்தப்பட்ட படியால் ஜீவனென்று பெயரை அடைந்திருக்கிறார். நீங்கள் அசுரர்களானாலும், மனிதனானாலும், ராக்ஷஸனானாலும், கந்தர்வனானா லும் ஸ்ரீ முகுந்தருடைய பாதாரவிந்தத்தைச் சேவித் தால் மேன்மேலும் க்ஷேமத்தை அடைவீர்கள். பகவான் சுத்தமான பக்தியால் ஸந்தோஷப்படுவது போல், ப்ராம்ஹண ஜன்மத்தை அடைந்திருப்பதாலும் தேவனாக

இருப்பதாலும், மகரிஷியாக இருப்பதாலும், தானத் தாலும், தவத்தினாலும், யாகத்தாலும், சௌசத்தாலும், விரதங்களாலும் பிரியமடைகிறதில்லை. மற்றவை அபிநயங்களேயாம். ஓ அசுரர்களே! தங்களை உபமானமாக வைத்துக் கொண்டு சகல சுரூபியாக இருக்கும் பகவானாகிய ஸ்ரீமந் நாராயணனிடத்தில் பக்தி செய்யுங்கள். அவர் ஸகல பிராணிகளுடைய சுரூபியாக இருப்பவர். மேலும், சில தைத்தியர்களும், யக்ஷர்களும், ராக்ஷஸர்களும், ஸ்திரீகளும், தாழ்ந்தவர் களும், கோபர்களும், பறவைகளும், மிருகங்களும் பாபஞ் செய்த ஜீவர்களும், பகவத் பக்தியினால் ஆத்ம ஸ்வரூபத்தை அடைந்திருக்கிறார்கள். ஆனதால் ஸ்ரீ கோவிந்தரிடத்தில் ஏகாந்தமாகப் பக்தி செய்து எல்லா வற்றையும் பகவத் ஸ்வரூபமாகப் பார்ப்பதே புருஷனுக்கு மேலான புருஷார்த்தமென்று சொல்லப் பட்டிருக்கிறது.

குறிப்பு

ஜீவனுள்ள;– உயிருள்ள சரீரத்தில் தங்களை உபமானமாக – பிறர் நமக்கு அபாகரஞ் செய்தால் நமக்கு எப்படி மன வருத்தம் உண்டாகிறதோ அப்படியே பிறருக்கு நாம் கெடுதி செய்தால் அவர்கள் மனம் வருத்தப்படுமே யென்று தங்களைத் திருஷ்டாந்தமாக நினைத்து.

அத்தியாயம்–8

ஹிரண்யகசிபுவின் வதம்

1–7. அதனைக் கேட்ட அசுரக்குழந்தைகள் எல்லாரும் ப்ரஹ்லாதரால் சொல்லப்பட்ட விஷயம் தோஷமற்றதாக இருந்தபடியால் அதனைக் கிரஹித்துக் கொண்டார்கள். ஆசாரியனால் சொல்லப்பட்டதை விட்டுவிட்டார்கள். பின்பு சுக்கிரனுடைய புத்திரர்; குழந்தைகள் எல்லோருடைய புத்திகளும் ப்ரஹ்லாத ருடைய புத்தியை அனுசரித்து ஒருவகைப்பட்டிருப் பதைப் பார்த்துப் பயந்து சீக்கிரம் ஹிரண்யகசிபுவின் சமீபம் சென்று சமாசாரத்தைத் தெரிவித்தார். அப்பொழுது ஹிரண்யகசிபு, 'ப்ரஹ்லாதரால் மற்ற குழந்தைகளின் புத்தி மாற்றப்பட்டது' என்பதைக் குருமுகமாகக்கேட்டு மிகுந்த கோபத்தால் நடுங்கிய சரீரமுள்ளவனாகி, புத்திரனைக் கொல்லவேண்டும் என்று நினைத்துப் பிரகலாதரை வரவழைத்தான் பின்னும் இயற்கையில் குரூர சுபாவமுள்ள அவன் காலால் மிதிக்கப்பட்ட சர்ப்பம்போல் பெருமூச்சுவிட்டு, குறுக்கான பார்வையுடன் ப்ரஹ்லாதரைக் கடுமையாகப் பார்த்தான் அப்பொழுது ப்ரஹ்லாதர் இருகைகளையும் கூப்பி வணக்கமுள்ளவராக இருந்தார். அவரை நோக்கி ஹிரண்யகசிபு, 'மூட! குலத்தைக் கெடுப்பவனாகிய ஓ அதம! நான் கோபமடைந்தால் மூவுலகங்களும் லோகபாலகர்களும் பயப்படுகிறார்கள். நீ பயமற்ற வனாக என்னுடைய ஆக்ஞையைமீறி நடக்கிறாய். யாருடைய சகாயத்தை வைத்துக்கொண்டு இப்படிச் செய்கிறாய்? அப்படிப்பட்ட உன்னை நான் கொன்றுவிடுகிறேன்" என்றான்.

8–11. அதனைக்கேட்ட ப்ரஹ்லாதர் ஹிரண்யகசிபுவை நோக்கி, "ஓ மகாராஜ! எவருக்குப் ப்ரஹ்மதேவர் முதலிய எல்லாரும் சுவாதீனர்களாக இருக்கிறார்களோ அவரே உமக்கும், எனக்கும் மற்ற பலசாலிகளுக்கும் பலத்தை கொடுப்பவர் அந்த ஈசுவரன் மிகுந்த பராக்கிரமமுள்ளவர்; இந்திரியங்களுக்கு சாமர்த்தியத்தைக் கொடுப்பவர்; மனத்திற்குச் சக்தியைக் கொடுப்பவர்; காந்தி, புத்தி, தைரியம் ஆகிய இவைகளைக் கொடுக்கும் ஆத்மாவாக இருப்பவர்; பரம புருஷனாகிய அவரே தம்முடைய சக்திகளைக்கொண்டு சிருஷ்டிப்பது பரிபாலிப்பது; சம்கரிப்பது ஆகிய இவைகளைச் செய்கிறார். அவர் முக்குணங்களுக்கும் அதிபதியானதால் அசுரத்தன்மையை விட்டுவிடும். மனத்தைச் சமாதானம் செய்துகொள்ளும். தனக்கும் வசப்படாமல் கெட்ட மார்க்கத்தில் செல்லும் மனதே புருஷனுக்கு விரோதி; வேறு சத்துருக்களில்லை, மனத்தை வசப்படுத்திக்கொள்வதே பகவானைப் பூஜித்ததாகும். விவேகத்தை அபஹரிப்பவைகளான காமம் முதலிய ஆறு திருடர்களை ஜயிக்காமல் உம்மைப் போன்ற சிலர் ஸகல திக்குகளை ஜயித்ததாகச் சொல்விக்கொள்கிறார்கள். மனத்தை ஜயித்தவனும், சகல பிரகிருதிகளிடத்திலும் சமபுத்தியுள்ளவனும், ஞானியுமாகிய சாதுவுக்குச் சத்துருக்களேது? சத்துருவென்பது மோகத்தாலல்லவா ஏற்படக்கூடியது?" என்றார்.

12–15. அதனைக்கேட்ட ஹிரண்யகசிபு புத்திரனை நோக்கி "அட மூடா! சாகுந்தருணத்தில் ஜனங்கள் பலவகையாகப் பேசுவார்கள். இப்பொழுது நீ மிகுந்த வித்வான்போல் எனக்கு உபதேசம் செய்கிறாய். உனக்கு மரணம் சமீபித்திருக்கிறது. என்னைவிட வேறொருவன்

ஜகத்திற்கு அதிபதியிருப்பதாகச் சொன்னாயல்லவா? அவன் எவ்விடத்தில் இருக்கிறான்? எங்கும் இருப்பவன் ஆனால் இந்தத் தூணில் இருக்கிறானா? நான் இப்பொழுது உன் தலையை வெட்டுகிறேன்! நீ யாரைச் சரணமடைகிறாயோ அவன் உன்னைக் காப்பாற்றட்டும்" என்று கடுஞ்சொற்களைச் சொல்லிக் கத்தியைக் கையிலெடுத்துச் சிம்மாசனத்திலிருந்து எழுந்திருந்து கையை முஷ்டி செய்துகொண்டு ஒரு தூணை அடித்தான்.

16–25. அப்பொழுது அந்தத் தூணிலிருந்து பயங்கரமாகிய ஒரு சத்தம் உண்டாயிற்று. அந்தச் சத்தத்தால அண்டகடாஹம் வெடித்தது. ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் தங்கள் தங்கள் லோகத்தில் அந்தச் சத்தத்தைக் கேட்டுத் தங்களுடைய ஸ்தானத்திற்குக் கெடுதி நேர்ந்ததென்று நினைத்தார்கள் புத்திரனைக் கொல்ல விரும்பிய ஹிரண்யகசிபுவானவன் அற்புதமான சத்தத்தைக் கேட்டுச் சபையின் மத்தியில் அதற்குத் காரணம் என்னவென்று தேடியும் அறியவில்லை. அசுர சேனாதிபதிகள் அதனைக் கேட்டு நடுங்கினார்கள். அப்பொழுது பகவான் தம்முடைய பக்தனாகிய ப்ரஹ்லாதருடைய வார்த்தையையும் எங்கும் தாமிருப்பவர் என்பதையும் காண்பித்துக் கொண்டு நரசிங்க ஸ்வரூபியாக அந்தக் கம்பத்திலிருந்து அவதரித்தார். (அந்த ஸ்வரூபம் மனிதனாகவும் இல்லை சிங்கமாகவும் இல்லை) இப்படி கம்பத்திலிருந்து அவதரித்த ஸ்வரூபத்தைப் பார்த்து ஹிரண்யகசிபுவானவன் "இது மனிதனாகவும் இல்லை மிருகமாவுமில்லை. இதென்ன!" என்று சந்தேகித்தான் அந்த நரசிம்மருடைய ஸ்வரூபமானது உருக்கிவிட்ட தங்கம் போன்ற கண்களுள்ளது.

ஜடைகளாலும் பிடரி மயிர்களாலும் பிரகாசிக்கும் முகமுள்ளது, அசைவற்றவைகளும் உயரத் தூக்கினவை களுமமான காதுகளுள்ளது. மேலும் அவருடைய வாயானது மலையில் குஹைபோல் அற்புதமானது. கன்னங்கள் பிளந்திருப்பதால் பயங்கரமானது. சரீரமோ ஆகாயம் வரையில் உயர்ந்திருக்கிறது. அதிக நீளமில் லாததும், பருத்ததுமான கழுத்துள்ளது. அகலமான மார்புள்ளது. இளைத்த இடுப்புள்ளது; சந்திரனுடைய கிரணங்கள் போல வெண்மையான மயிர்களுள்ளது; நான்கு பக்கங்களிலும் பரவிய அநேகம் கைகளுள்ளது, நரகத்தையே ஆயுதமாகக் கொண்டது; நெருங்க முடியாதது சக்கரம் முதலிய ஆயுதங்களால் தேவ விரோதிகளான அசுரர்களை நாசஞ் செய்தது; அதனைக்கண்ட ஹரண்யகசிபுவானவன்; 'மிகுந்த மாயாவியாகிய ஸ்ரீமந் நாராயணன் என்னைக் கொல் வதற்காக இம்மாதிரியான பிராணியைச் சிருஷ்டித் திருக்கிறாரோ? இதனால் என்ன செய்யமுடியும்?' என்று தனக்குள் யோசித்துக் கொண்டே கர்ஜித்து கதாயுதத்தை யெடுத்து நரசிங்கரை எதிர்த்தான். அப்பொழுது நரசிங்கருடைய தேஜஸில் வீழ்ந்து அசுரன் தீபஜ்வாலையில் அகப்பட்ட சலபம் (விளக்கு விட்டில் பூச்சி) போல் காணப்படாதவனானான். அந்தப் பகவான் சிருஷ்டிக்கு முந்தி பிரளய காலத்திய இருட்டைப் பானஞ் செய்தார். ஆனதால் ஸத்வ குணத்திற்கு ஆசிரயமான பகவானிடத்தில் அசுரனுடைய பராக்கிரமம் வீணாகப் போனது ஆச்சரியமல்ல.

26–35. பின்பு அசுரன் மிகுந்த வேகமுள்ள கதையால் பகவானை எதிர்த்து அடித்தான், பகவான் அவனைப் பிடித்துக்கொண்டார். அது கருடன் மகா

சர்ப்பத்தைப் பிடித்தாற்போலிருந்தது. அப்பொழுது அசுரன் அவருடைய கையிலிருந்து வெளிவந்தான். மேகத்தில் மறைந்து இதனைப் பார்த்துக் கொண்டி ருக்கும் லோக பாலகர்கள் வருத்தப்பட்டார்கள். பின்பு அசுரன் தான் பகவானை ஏமாற்றிவிட்டோம் என்று நினைத்துக் கத்தி, கேடயம் இவைகளை எடுத்துக் கொண்டு சிரமில்லாதவனாகித் திரும்பவும் அவருடன் எதிர்த்தான். பின்னும் ஆகாயத்திலும் பூமியிலும் பருந்துபோல் மிகுந்த வேகத்துடன் கத்தி நுழைய இடமில்லாமல் சுற்றிவந்தான். அப்பொழுது அந்த நரசிங்கர் பயங்கரமாக அட்டகாசஞ் செய்தார். அதனைக்கேட்டு அசுரன் இரு கண்களையும் மூடிக் கொண்டான். மிகுந்த வேகமுள்ள பகவான் அசுரனைப் பிடித்துக் கொண்டார். அந்த அசுரன் வஜ்ரத்தால் அடிக்கப்பட்டும் காயப்படாமல் மகேந்திரனை ஜயித் தவன்; ஆனாலும் பிடிப்பட்டபடியால் துடித்துக் கொண்டிருந்தான். அப்படிப்பட்ட அசுரனை பகவான் பிடித்து வாசற்படியில் தன் தொடைமீது தள்ளிக் கொண்டு கருடன் மிகுந்த விஷமுள்ள சர்ப்பத்தைக் கிழிப்பதுபோல் சிரமமின்றிக் கிழித்தார். பின்னுமவர் யானையைக் கொன்ற சிங்கம் போலக் கோபத்தால் பயங்கரமாகிய கண்களுள்ளவராகி வாயைத்திறந்து கொண்டும். நாக்கினால் கடைவாயை நக்கிக்கொண்டும். ரத்தத்தால் பூசப்பட்டுச் சிவந்த பிடரி மயிர்களுள்ள முகமுள்ளவராகித் தம்முடைய நகங்களால் ஹரண்யக சிபுவின் மார்பைக் கிழித்து அவனுடைய சைனியங் களையும் கொன்றார். அந்த நரசிங்க ஸ்வரூபத்தின் ஜடைகளால் மேகங்கள் அடிக்கப்பட்டன. அவருடைய கண்களின் தேஜஸ்ஸால் கிருஹங்களுடைய காந்தி குறைந்தது. பெருமூச்சினால் சமுத்திரங்கள் கலங்கின.

Released by Maran's Dog, Toronto , Canada

அட்டகாசத்தைக் கேட்டுப்பயந்து திக்கஜங்கள் மதமற்ற வைகளாயின த்யுலோகமானது அவருடைய ஜடையால் அடிக்கப்பட்டு அசைந்தது; பூமியானது அவருடைய பாதங்களால் அடிப்பட்டுச் சிரமத்தை அடைந்தது அவருடைய வேகத்தால் மலைகள் அசைந்தன; அவருடைய தேஜஸ்ஸால் ஆகாயமும் திக்குகளும் பிரகாசிக்கவில்லை; பின்பு அந்தப் பகவான் தம்முடைய உக்ரமான தேஜஸை அடக்கிக்கொண்டு சிம்மாசனத்தில் உட்கார்ந்திருந்தார். அவரை எதிர்த்து யுத்தஞ் செய்யக் கூடியவர் ஒருவருமில்லை. அவருடைய முகமானது பயங்கரமாக இருந்தது. அதனைக்கண்டு அவரிடம் ஒருவரும் செல்லவில்லை.

36–41. மூவுலகத்திற்கும் வஜ்ரம்போலிருந்த அந்த அசுரன் பகவானால் கொல்லப்பட்டான் என்பதை கேட்டுத் தேவஸ்திரீகள் முகமலர்ச்சியுள்ளவர்களாகிப் புஷ்பமாரி பெய்தார்கள். பகவானைத் தரிசிப்பதற்காக வந்த தேவர்களுடை விமானத்தால் ஆகாயம் நிறைந் திருந்தது. ஆனகம், துந்துபி முதலிய தேவ வாத்தியங்கள் முழங்கின; சிறந்த கந்தர்வர்கள் கானஞ் செய்தார்கள்; அப்ஸரஸ் ஸ்திரீகள் நர்த்தனஞ் செய்தார்கள். மேலும் ப்ரஹ்ம தேவர், பரமசிவன், மகேந்திரன் முதலிய தேவர்கள், மகரிஷிகள் பிதிருக்கள், சித்தர்கள், வித்யாதரர்கள், உரகர்கள், மநுக்கள், பிரஜாபதிகள், கந்தர்வர்கள் அப்ஸரஸுமக்கள், சாரணர்கள், யக்ஷர்கள், கிம்புருஷர்கள், பூதங்கள், பேதாளங்கள்சுனந்தர்முதலிய விஷ்ணுபார்ஷதர்கள் ஆகிய எல்லோரும் சிரஸில் அஞ்சலி செய்துகொண்டு மிகவும் உக்ரதேஜஸுள்ள பகவானுடைய சமீபஞ்சென்று தனித்துத் தோத்திரஞ் செய்ய ஆரம்பித்தார்கள்.

42. ஆனந்தரும் அற்புதமான மஹிமையுள்ளவரும், பரிசுத்தியை உண்டுபண்ணும் சரிதங்களுள்ளவரும் தம்முடைய விளையாட்டினால்லோகத்தைப்படைப்பது பரிபாலிப்பது, சம்ஹரிப்பது முதலியவைகளைச் செய்பவரும், நாசமற்ற ஸ்வரூபமுள்ளவருமான பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன் என்று ப்ரஹ்மதேவர் தோத்திரஞ்செய்தார்.

43. பரமசிவன் பகவானை நோக்கி, "ஓ பக்தர்களிடம் பிரீதியுள்ளவரே! உமக்குக் கோபம் வருஞ் சமயம் பிரளய காலமல்லவா? இந்த அற்பனாகிய அசுரன் கொல்லப்பட்டான்; அவனுடைய புத்திரனும், உம்முடைய பக்தனுமாகிய ப்ரஹ்லாதனைக் காப் பாற்றும்" என்றார்.

44. மகேந்திரன், "ஓ நரசிங்கமூர்த்தியே! ஓ மேலானவரே எங்களைச் சம்ரட்சிட்டவரே! எங்களுக்குக் கிடைக்காமலிருந்த ஹவிர்ப்பாகங்கள் திரும்பவும் எங்களுக்குக் கிடைக்கும்படி செய்தீர், அவை எங்களு டைய பாகமென்று சொல்லப்பட்டாலும், நீர் சகல ஸ்வரூபியாக இருப்பதால் உம்முடையவைகளேயாம் உமக்கு வாசஸ்தலமான (அந்தர்யாமியாக இருப்பதால்) எங்களுடை ஹிருதய கமலமானது ஹரண்யகசிபு வினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. அது இப்பொழுது மலர்ந்தது. (அசுரனிடத்தில் பயந்து அவனையே தியானித்துக் கவலைப்பட்டிருந்தோம். அந்தக் கவலை நீங்கியதென்று தாத்பர்யம்) உம்மைச் சேவிப்பவர்கள் மோட்சத்தையும் மேலானதென்று நினைக்கமாட்டார்கள். (உமக்குச் சிசுரூஷை செய்வதே மேலானதென்று கருத்து) அப்படியிருக்க அறியுள்ளதாகிய இந்திர

பதத்தாலும், மற்ற ஐசுவரியங்களாலும் என்ன பிரயோசனம்? என்றார். (ஹவிர்பாகம், இந்திர பதம் ஆகிய இவைகள் கிடைத்தது. புருஷார்த்தமல்ல. உமக்குச் சிசுரூஷை செய்வதே புருஷார்த்தம். அசுரனைக் கொன்றுவிட்டபடியால் கோபத்தைத் தணித்துக் கொள்ளும் என்று தாத்பர்யம்.

45. மகரிஷிகள் நரசிங்கமூர்த்தியை நோக்கி, "ஓ காப்பாற்றுவதற்குரியவர்களைக் காப்பாற்றுகிறவரே! நீர் தம்மிடத்தில் லயந்திருக்கிற ஜகத்தை எதனால் சிருஷ்டித்தீரோ, எது உம்முடைய மஹிமையாக இருக்கிறதோ, அந்த மேலான தவத்தை (தியானத்தை) எங்களுக்கு உபதேசித்தீர். அதனை ஹிரண்யகசிபு கெடுத்துவிட்டான். இந்தச் சமயத்தில் நீர் அவதரித்து அந்தத் தவத்தை இடையூறின்றிச் செய்யும்படி அனுக்ரஹித்தீர். அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம் செய்கிறோம்" என்றார்.

46. பிதிருக்கள் பகவானை நோக்கி,"எங்களை உத்தேசித்துப் புத்திரர்களால் கொடுக்கப்படும் சிராத்தங்களையும் (சிரத்தையுடன் கொடுக்கப்படும் பிண்டம் முதலியவை) திலோகத்தையும் (எள்ளும் ஜலமும்) எந்த அசுரன் எங்களுக்குச் சேரவொட்டாமல் பலாத்காரமாகத் தான் புசித்தானோ; அவனுடைய வயிற்றை நகங்களால் கிழித்து ஈரலைப் பிடுங்கினீரல்லவா? அப்படிப்பட்டவரும், ஸகல தர்மங்களை காப்பாற்றுகிறவரும், நரசிங்கமூர்த்தியுமான உமக்கு நமஸ்காரம் செய்கிறோம்" என்றார்கள்.

47. சித்தர்கள். "ஓ நரசிங்கமூர்த்தியே! எங்களுடைய அணிமா முதலிய ஐசுவரியத்தை எந்த அசுரன்

யோக பலத்தாலும் தபோபலத்தாலும் அபஹரித்தானோ அந்த பலவகை அகங்காரமுள்ள அசுரனை நகங்களால் கிழித்தீர். அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம்" என்றார்கள்.

48. வித்யாதரர்கள் பகவானை நோக்கி, "எந்த அசுரன் பலத்தாலும், வீரியத்தாலும் கர்வமுள்ளவனாகி எங்களுடைய அந்தர்தான வித்தையைத் தடுத்தானோ அந்த அசுரனை யுத்தத்தில் பசுவைபோலக் கொன்றீர். அப்படிப்பட்ட மாயாநரசிம்ஹராகிய உமக்கு எப்பொழுதும் நமஸ்காரஞ் செய்கிறோம்" என்றார்கள்.

49. நாகங்கள் அவரை நோக்கி, "எந்த அசுரன் எங்களுடை படத்திலுருக்கும் ரத்னங்களையும், ஸ்திரீ ரத்னங்களையும் அபஹரித்தானோ அந்த அசுரனுடைய மார்பை பிளந்து அந்த ஸ்திரீகளுக்கு ஆனந்தத்தை உண்டுபண்ணீர் அல்லவா? அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம்" என்றார்கள்.

50. மனுக்கள் பகவானை நோக்கி, ஓ தேவ! நாங்கள் தர்மத்தைப் பரிபாலிப்பதற்காக உம்மால் ஏற்படுத்தப்பட்ட மனுக்கள். உம்முடைய உத்தரவின்படி நடப்பவர்கள். எங்களால் ஏற்படுத்தப்பட்ட வர்ணாச்சிரம தர்மங்களை எந்த அசுரன் கெடுத்தானோ, அவனை நாசஞ் செய்தீர். ஓ பிரபுவே! எங்களால் செய்யப்பட வேண்டியதென்ன? ஆக்ஞாபிக்க வேண்டும்" என்றார்கள்.

51. பிரஜாபதிகள் அவரை நோக்கி, "ஓ ஸத்வமூர்த்தியே! பிரஜாபதிகளாகிய நாங்கள் உம்முடைய

ஆக்ஞையால் பிரஜைகளைச் சிருஷ்டிக்கிறோம். அதனை எந்த அசுரன் தடுத்தானோ, அவன் உம்மால் கொல்லப்பட்டான் உம்முடைய அவதாரமானது ஜகத்திற்கு மங்களத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது" என்றார்கள்.

52.கந்தர்வர்கள் அந்தப் பிரபுவை நோக்கி, "ஓ பிரபுவே! நாங்கள் உமக்கு நடர்கள் (நர்த்தனஞ் செய்பவர்கள் நாட்டியம், கானம் ஆகிய இவைகளைச் செய்பவர்கள்) அப்படிப்பட்ட எங்களை எந்த அசுரன் பராக்கிரமத்தால் சுவாதீனப்படுத்திக் கொண்டானோ, அவன் இம்மாதிரியான அவஸ்தையை அடைவிக்கப் பட்டான் கெட்ட மார்க்கத்தை அடைந்தவன் க்ஷேமத்தை அடைவானா?" என்றார்கள்.

53. சாரணர்கள் பகவானை நோக்கி, "ஓ ஹரியே! சாதுக்களுடைய இருதயத்திற்கு உபத்திரவத்தை உண்டுபண்ணின இந்த அசுரனை நீர் கொன்ற படியால் ஸம்ஸாரத்தை நிவர்த்திக்கக் கூடியதும், மோக்ஷத்தை கொடுக்கக்கூடியதுமான உம்முடைய பாதாரவிந்தத்தை ஆசிரயிக்கிறோம்" என்றார்கள்.

54. யக்ஷர்கள் பகவானை நோக்கி, "இருபத்து நான்கு தத்துவங்களுக்கு அதிபதியான ஓ பிரபுவே! நரஹரியே! எந்த அசுரன் எங்களை வாகனமாகச் செய்துகொண்டானோ, எவன் ஜனங்களுக்கு உபத்திரவத்தை உண்டுபண்ணினானோ அவனை நீர் கொன்றீர். உம்முடைய மனோகரமான காமங்களால் உமக்கு முக்கியமான சேவகர்களாக இருக்கிறோம் என்றார்கள்.

55. கிம்புருஷர்கள் பகவானை நோக்கி, "நாங்கள் கிம்புருஷர்கள் (அற்பர்கள்) நீரோ மகாபுருஷன்! உம்மைத் தோத்திரஞ் செய்ய எங்களால் முடியுமா வென்று கருத்து) சாதுக்களால் எப்பொழுதும் நிந்திக்கப்பட்ட இந்த புருஷா தமன் (புருஷர்களுக்குள் அதமன்) நாசமடைந்தான் என்றார்கள்.

56. வைதானிகர்கள் பகவானை நோக்கி, "சபைகளிலும் யாகங்களிலும் சுத்தமான உம்முடைய சரிதத்தை நாங்கள் கானஞ் செய்வதால் எல்லோரும் எங்களைப் பூஜிக்கிறார்கள் அப்படிப்பட்ட எங்களை உபத்திரவித்து எவன் சுவாதீனஞ் செய்துகொண்டானோ. அந்த அசுரன் லோகங்களுக்கு வியாதி போல உபத்திரவத்தைச் செய்து கொண்டிருந்தான். அந்தத் துஷ்டனைக் கொன்றீர்" என்றார்கள்.

57. கின்னரர்கள் பகவானை நோக்கி, "ஓ நரசிம்ஹ! ஓ ஈச! நாங்கள் கின்னர கணங்கள். நாங்கள் அசுர னுக்குச் சம்பளம் வாங்காமல் வேலைசெய்தோம். அப்படிப்பட்ட பாபியான அசுரன் உம்மால் கொல்லப் பட்டான், எங்களுக்கு ஐசுவரியத்தைக் கொடும்" என்றார்கள்.

58. விஷ்ணுவின் பார்ஷதர்கள் அவரை நோக்கி "பக்தர்களாகிய எங்களுக்கு ஆசிரயமாக இருப்பவரே, ஓ ஈச! அற்புதமான உம்முடைய இந்த நரசிம்ஹ ரூபத்தை இப்பொழுதுதான் பார்த்தோம். இது சகல லோகங்களுக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியது ஆனால் இந்த அசுரன் உம்முடைய வேலைக்காரன் தான். ப்ராஹ்மண சாபத்தால் அசுர ஜன்மத்தை அடைந்தான். அவனைக் கொன்றது அவனுக்கு அனுக்ரஹமென்றே நினைக்கிறோம்" என்றார்கள்.

அத்தியாயம் 9

ப்ரஹ்லாத ஸ்துதி

1–7 ப்ரஹ்மதேவர், ருத்திரன் முதலிய தேவர்கள் அதிகக் கோபம், பரபரப்பு ஆகிய இவைகளுள்ள அந்த நரசிங்கமூர்த்தியின் சமீபஞ் செல்வதற்குப் பயந்து லக்ஷ்மீதேவியை அனுப்பினார்கள். அவளும் இதற்குமுன் பார்க்கப்படாததும், கேட்கப்படாததும், ஆச்சரியமுமான அந்த ஸ்வரூபத்தைப்பார்த்துப் பயந்து நெருங்கவில்லை. அதனைக் கண்ட ப்ரஹ்மதேவர், சமீபத்திலிருக்கும் ப்ரஹ்லாதரை நோக்கி, "ஓ குழந்தாய்! ப்ரஹ்லாத! உன்பிதாவினிடம் கோபமுள்ளவரான பகவானுடைய சமீபஞ் சென்று சமாதானப்படுத்து" என்று சொன்னார். அதனைக் கேட்ட மகா பாகவதராகிய ப்ரஹ்லாதர் மெள்ள மெள்ளப் பகவானிடஞ் சென்று இரு கைகளையும் கூப்பி, பூமியில் விழுந்து நமஸ்கரித்தார். அதனைக் கண்ட பகவான் பக்த சிரோமணியான ப்ரஹ்லாதரை இரு கைகளால் தூக்கித் தமது தாமரை மலர் போன்ற கைகளை ப்ரஹ்லாதருடைய சிரசில் வைத்தார். அது காலமாகிய சர்ப்பத்தைக் கண்டு பயந்த புத்தியுள்ளவர்களுக்கு அபயத்தைக் கொடுக்கக் கூடியது. பகவானுடைய கையால் தொடப்பட்ட படியால் ஸகல அசுபங்களும் அவருக்கு நிவர்த்தியாயின. சீக்கிரம் பரமாத்மாவின் பிரகாசம் உண்டாயிற்று. அப்பொழுது பகவானுடைய பாதார விந்தத்தை தியானஞ் செய்து சுகத்தை அடைந்தார். அதனால் மயிர்க்கூச்சலுண்டாயிற்று; ஆனந்த பாஷ்யம் பெருகியது; இருதயம் தெளிந்தது; மேலும் அவர் சித்தத்தை ஒருவகைப்படுத்திச் சாவதானராகித் தம்முடைய

இருதயம், பார்வை ஆகிய இவைகளைப் பகவானிடத்திலே செலுத்தி அதிகப் பிரேமையால் கத்கத வாக்குடன் பின்வருமாறு தோத்திரஞ் செய்யலானார்.

8–50 "ப்ரஹ்மா முதலிய தேவ கணங்கள் மனன சீலர்களான ஞானிகள் ஆகிய ஸத்வகுணப் பிரதானர் களும் பலவகையான குணங்களால் எவரைத் தோத்திரஞ் செய்யச் சக்தியற்றவர்களாக இருக்கிறார் களோ, அப்படிப்பட்ட பகவானை அசுரஜாதியான என்னால் தோத்திரஞ் செய்ய முடியுமா? பணம், நல்ல குலத்தில் பிறந்திருப்பது, ரூபம், தவம், படித்தி ருப்பது, இந்திரியசாமர்த்தியம், காந்தி, பிரதாபம், தேகபலம், புருஷப்பிரயத்னம், புத்தி, யோகம் ஆகிய இவைகளாலும் பரமபுருஷன் சந்தோஷப்படுகிறதில்லை. பக்தியால் மாத்திரம் சந்தோஷப்படுகிறார் என்று நினைக்கிறேன். சிறந்த யானையினிடம் அதன் பக்திக் காகவே சந்தோஷமடைந்தார். சண்டாளனானாலும் மனம், வாக்கு, ஆசை, அர்த்தம், பிராணம் ஆகிய இவைகளை ஸ்ரீ பகவானிடத்தில் செலுத்தினவனா னால் அவனே மேலானவன். அவன் குலத்தைப் பரிசுத்தப்படுத்துகிறான். ஸ்ரீ பகவானிடத்தில் பக்தி யற்றவன் ப்ராஹ்மணனானாலும் அவன்மேலான வனல்ல. அவன் தன்னைக்கூடச் சுத்திசெய்து கொள்ள முடியாதவன்; (நல்ல குலத்தில் பிறந்திருப்பது முதலிய குணங்கள் பகவத் பக்தியில்லாதவனுக்குக் கர்வத்தைக் கொடுக்கக் கூடியவைகளேயொழியச் சுத்தியைக் கொடுக்கக்கூடியவைகளல்லவென்று தாத்பரியம்.) பிரபுவாகிய ஈசுவரன் அற்பர்களான ஜனங்களிடமிருந்து தாம் பூஜையைப் பெறவேண்டுமென்று நினைக்கிறதி ல்லை. (ஆத்ம லாபத்தால் பூரணர்.) ஆனாலும்

பிரஜைகளிடத்தில் மிகுந்த கருணையால் ஜனங்களுடைய க்ஷேமத்திற்காக அவர்கள் செய்யும் பூஜையை அங்கீகரிக்கிறார். மேலும் முகத்தில் இருக்கும் திலகம் பிரதி பிம்பத்தில் காணப்படுவது போலப் பகவானிடத்தில் சமர்ப்பிக்கப்படும் பூஜை தன்னிடத்தில் காணப்படுகிறது. ஆனது பற்றி நான் பயம் இல்லாமல் தக்கபடி பகவானுடைய மஹிமையைச் சொல்லுகிறேன். பகவான் மாயையால் ஸம்ஸாரத்தை அடைந்து அற்பனாக இருக்கும் புருஷன் புருஷோத்தமனுடைய குணங்களை வர்ணிப்பதால் பரிசுத்தமாகிறான் ஓ ஈச! உம்முடைய உக்கிரமான ஸ்வரூபத்தைப் பார்த்து ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் பயப்படுகிறார்கள். ஆனால் இவர்கள் உம்முடைய பக்தர்கள். அசுரர்களான எங்களைப் போல் விரோத புத்தியுள்ளவர்களல்ல. மேலும், நீர் அழகான அவதாரங்களைச் செய்து விளையாடுவது இந்த ஜகத்திற்கு க்ஷேமத்தையும், ஐசுவர்யத்தையும் ஆத்ம சுகத்தையும் கொடுப்பதற்கே யொழியப் பயத்தை உண்டு பண்ணுவதற்கல்ல. ஆனதால் இந்த ஸ்வரூபத்தை உபஸம்ஹாரஞ் செய்து கோபத்தைத் தணித்துக் கொள்ளவேண்டும். இந்த ஸ்வரூபத்தை எதற்காகத் தரித்தீரோ அந்தக் காரியம் முடிந்துவிட்டது. (ஹிரண்யகசிபு கொல்லப்பட்டான்) ஜனங்களெல்லோரும் அதனால் விசேஷ சந்தோஷத்தை அடைந்தார்கள். மிகுந்த சாதுவானாலும் தேள், சர்ப்பம் ஆகிய இவைகளுடைய நாசத்தைப் பார்த்து சந்தோஷப்படவேண்டும். அசுரனைக் கொன்று தங்களுக்கு க்ஷேமத்தைச் செய்தபடியால் இந்த நரசிங்க ஸ்வரூபம் தங்களுக்கு அபயத்தைக் கொடுத்தது என்றே நினைக்கிறார்கள். ஒருவராலும் ஜயிக்கப்படாத வரே! இந்த உம்முடைய ஸ்வரூபமானது பயங்கரமான முகம் நாக்கு, சூரியன் போன்ற கண்கள், புருவ

நெரித்தல், பயங்கரமான சிங்கப்பற்கள் ஆகிய இவைகளுள்ளது. நரம்பை மாலையாகக் கொண்டது; ரத்தத்தால் சிவந்த பிடரிமயிர்களுள்ளது; உயரத்தூக்கிய காதுகளுள்ளது; திக்கஜங்களும் கேட்டு நடுங்கக்கூடிய கர்ஜிதமுள்ளது; சத்ருவை நாசஞ் செய்தது. இப்படிப்பட்ட தானாலும் இதைக் கண்டு நான் பயப்படவில்லை. ஸம்ஸார சக்ரத்தில் நேரிடும் துக்கத்திற்கு பயப்படுகிறேன். முந்திய கர்மத்தால் கட்டுப்பட்டு மேற்சொல்லிய சம்சாரத்தில் தள்ளப்பட்டிருக்கிறேன். ஆபத்தை அடைந்தவர்களிடத்தில் பிரீதியுள்ளவரே! நீர் என்னிடத்தில் சந்தோஷத்தை அடைந்து, எப்பொழுது மோக்ஷமாகிய கிருகத்திற்கு அழைத்துப் போவீர்? உம்முடைய பாதார விந்தத்தைச் சரணமடைந்தேன். ஓ,விசேஷ ஐசுவரிய முள்ளவரே! அநேக ஜன்மங்களை அடைந்து பிரியத்தை அடையாமலும் அப்பிரியத்தை (கெடுதியை) அடைந்தும் துக்கமாகிய அக்னியால் எரிக்கப்பட்டு மிகவும் சிரமத்தை அடைந்திருக்கிறேன். துக்கத்தை நிவர்த்தித்துக் கொள்வதற்காகச் செய்யப்படும் முயற்சியும் துக்கமாகவே இருக்கிறது. அனாத்மாவாகிய சரீரம் முதலிய அபிமானமுள்ளவனாகி யிருப்பதால் மோட்சத்தை அடைந்திருக்கிறேன். ஆனதால் அதனை நிவர்த்தித்துக் கொள்ளும் உபாயத்தை நீர் உபதேசிக்க வேண்டும். (உமக்குத் தாசனாக இருந்தால் உமக்கு என்னிடம் பிரீதியுண்டாகுமென்றால் அந்த ஞானமே எனக்கு உண்டாவதற்கு நியாயமில்லாமலிருப்பதால் நீரே அதனையும் உபதேசிக்க வேண்டுமென்று தாத்பரியம்.) அப்படிப்பட்ட நான் ஸகல லோகங்களுக்கு பிரியரும் மேலான தெய்வமுமாகிய உம்முடைய சரிதங்களை கானஞ்செய்து என்னுடைய விக்னங்களைப் போக்கடித்துக்

கொள்கிறேன். அந்த சரிதங்களை ப்ரஹ்மதேவரும் கானஞ் செய்கிறார். (சம்பிரதாயமாகக் கிடைத்த தென்று தாத்பர்யம். மேலும், நான் குணங்களுடைய சம்பந்தமுள்ளவனானாலும் உம்முடைய பாதார விந்தங்களை ஆசிரயித்து, சாதுக்களுடைய சங்கத்தால் (சேர்க்கையால்) உம்முடைய குணங்களைக் கானஞ் செய்யத் தகுந்தவனாகிறேன். (பகவானுடைய அனுக் கிரகத்தால் சாது சேர்க்கையுண்டாகும். அதன்பிறகு வைராக்கியம்.அதன் பிறகு பகவானுடைய குணங் களையே வர்ணிப்பது; அதன்பிறகு துக்கம் முதலிய வைகளின் நிவர்த்தி ஆகிய இவைகள் உண்டாகின்றன வென்று தாத்பரியம்.) ஓ பிரபுவே! பிராணிகளுக்கு இவ்வுலகத்தில் துக்கத்தைப் போக்கடிக்கும் உபாயங்கள் ஏற்பட்டிருந்தாலும் அவை அந்த க்ஷணத்தில் துக்கத்தை நிவர்த்திக்குமே யல்லாமல் பாக்கியன்னியில் நிவர்த்திக் கிறதில்லை. எப்படியென்றால் சிறுவனைத் தாய் தகப்பன் கள் சம்ரட்சிப்பவர்களென்று சொல்லக்கூடாது அவர்களே சில சமயம் அவனைக் கொல்லுகிறார்கள். காப்பாற்றினாலும் இவனுக்கு துக்கம் நிவர்த்தியாகிறதி ல்லை. ரோகமுள்ளவனை ஔஷதம் காப்பாற்றுகிறதி ல்லை. கடலில் மூழ்கிறவனுக்கு ஓடம் சகாயமாக ஆகிறதில்லை, (ஓடத்துடனும் கடலில் மூழ்குகிறதுண்டு) துக்கத்தை நிவர்த்திக்கும் சாதனங்களும் உம்முடைய கிருபை இல்லாதவர்களுக்கேயாம். ஆனதால் எல்லோ ருக்கும் துக்கத்தை அடியோடு நிவர்த்தித்துக் காப்பாற்று கிறவர் நீர் ஒருவரேயாம். மேலும், வெவ்வேறான ஸ்பாவமுள்ள தகப்பன் முதலியவர்களும், ப்ரஹ்மதேவர் முதலியவர்களும், கர்த்தாக்கள் (செய்பவர்கள்) எந்த விடத்தில், எது நிமித்தம், எந்தக் காலத்தில் எந்த சாதனத்தைக் கொண்டு, எந்தக் காரணத்தால்;

எதனிடமிருந்து எதற்காக எந்த இஷ்டத்தை, எப்படிச் செய்கிறார்களோ, வேறாக மாற்றுகிறார்களோ அவர்கள் எல்லோரும் பகவத் ஸ்வரூபமேயாம். (ரட்சிப்பவன் எவனானாலும் அந்த ரூபியாக இருந்து பகவான் காப்பாற்றுகிறாரென்று தாத்பரியம்.) உம்முடைய அனுக்கிரகத்தால் மாயையானது காலத்தால் தூண்டப் பட்ட கர்ம ஸ்வரூபமும் ஜயிக்க முடியாததுமான மனத்தை உண்டு பண்ணுகிறது. அந்த மனமானது வேதத்தில் சொல்லிய காரியங்களைப் பிரதானமாகக் கொண்டது. ஜீவனுடைய போகத்திற்காக மாயையால் ஏற்படுத்தப்பட்ட பதினாறு விகாரங்களுள்ளது; சம்சார சக்கர ஸ்வரூபமாயுள்ளது. அதனை யாரால் ஜயிக்க முடியும்? உம்மைச் சேவித்து உம்முடைய அனுகிர கத்தை அடைந்தவன் அதனை ஜயிப்பான்.

மேலும் நீர், தம்முடைய சித் சக்தியால் புத்தியின் குணங்களை ஜயித்தவர். காரியகாரண சக்தியை வசப்படுத்திக் கொண்டவர். காலரூபியாக இருப்பவர். நான் பதினாறு விகாரங்களுள்ள மனமாகிய சம்சார சக்கிரத்தில் தள்ளப்பட்டு பீடிக்கப்பட்டிருக்கிறேன்.

ஓ பிரபுவே! சரணா கதனாகிய என்னை அந்தச் சக்கரத்திலிருந்து உம்முடைய சமீபஞ் சேர்த்துக் கொள்ளும். பின்னும் எந்த ஐசுவரியங்களைத் தாங்கள் அடைய வேண்டு மென்று ஸகல ஜனங்களும் நினைக் கிறார்களோ, அந்த லோகபாலர்களுடைய ஆயுள், ஐசுவரியம் முதலிய போகங்களை பார்த்தேன். அவைகள் என்னுடைய பிதாவாகிய ஹிரண்யகசிபு கோப காலத்தில் உண்டாகும் சிரிப்பினாலும், புருவ நெரிசலாலும் நாசமாயின. அப்படிப்பட்ட ஹிரண்யகசிபு உம்மால்

கொல்லப் பட்டான். ஆனதுப்பற்றிப் பிராணிகளால் விரும்பக் கூடிய ஆயுள், ஐசுவர்யம் முதலியவைகளை யும், ப்ரஹ்மலோகம் வரையிலுள்ள லோகங்களையும் நான் விரும்பவில்லை. அவைகள் கால ஸ்வரூபியான உம்முடைய மகிமையால் நாசஞ் செய்யப்படக்கூடியவை. என்னை உம்முடைய பக்தர்களுக்குள் ஒருவனாக அங்கீகரிக்க வேண்டும். கேட்பதற்கு சுககரங்களும், ,கானல் போன்ற விஷய சுகம் எங்கே? ஸகல வியாதி களுக்கு இருப்பிடமான சரீரம் எங்கே? இவைகளை அறிந்த வித்துவானும் இதில் வைராக்கியத்தை அடைகிறதில்லை. காமாக்கினியைச் சொற்ப சுகத்தால் அணைத்துக் கொண்டிருக்கிறான். என்னுடைய சிரசில் தாமரை மலர்போன்ற உம்முடைய கையை வைத்தீரல்லவா? அதுவே புருஷார்த்தம். அது ப்ரஹ்ம தேவருக்கு கிடைக்கவில்லை,பரமசிவனால் அடையப் படவில்லை. லக்ஷ்மீதேவிக்கும் கிடைக்கவில்லை. இம்மாதிரியான உம்முடைய அனுக்கிரகமே காரணம். இல்லாவிடில் ரஜோ குணத்தால் ஜன்மத்தை அடைந்த வனும், தமோ குண ஸ்வபாவமுள்ள அசுரகுலத்தில் பிறந்தவனுமான எனக்கு உம்முடைய தயை எப்படிக் கிடைக்கும்? கற்பக விருட்சமானது எல்லாவற்றையும் கொடுக்கக் கூடியதானாலும் தன்னிடம் வந்த யாசகர்கள் நினைக்கும் வஸ்துவை மட்டில் கொடுப்பதுபோல் பகவானாகிய நீரும், பக்தர் விரும்பப்படும் பலனைக் கொடுக்கிறீர்; நீர் எல்லா ஜகத்திற்கும் ஆத்மாவிற்கும் சுகிருத்தாக இருப்பவர்; ஆனது பற்றி ப்ரஹ்மதேவர்கள் முதலிய தேவர்கள் மேலானவர்கள்; அசுரன் தாழ்ந்தவன் என்ற பேத புத்தி உமக்கு இல்லை. ஜன்ம மாகிய சர்ப்பங்களுள்ள கிணற்றில் விழுந்து காமங் களையே விரும்பியவனுமான என்னை உம்முடைய

பக்தரான நாரத மகரிஷி அனுக்கிரகத்தால் உம்முடைய கிருபைக்கு பாத்திரமானேன். அந்த மகரிஷியின் சேவையை விடமாட்டேன். என்னுடைய பிதாவாகிய ஹிரண்யகசிபு வானவன் கையில் கத்தியை எடுத்துக் கொண்டு "என்னைக் காட்டிலும் ஈசுவரன் வேறொருவன் இருப்பானானால் உன்னைக் காப்பாற்றட்டும்; உன்னுடைய தலையை வெட்டுகிறேன் என்று கெட்ட வார்த்தைகளைச் சொல்லும் பொழுது அசுரனை கொல்வதற்கும், என்னுடைய பிராணனைக் காப்பாற்று வதற்கும் நீர் அவதரித்தவரல்ல. ஆனால் உம்முடைய வேலைக் காரராகிய (பக்தர்) மகரிஷியின் வார்த்தையை உண்மையாகச் செய்யவேண்டியே அவதாரஞ் செய்தீர் என்று நினைக்கிறேன். ஓ பகவன்! உலகம் உண்டா வதற்கு முன்னும்; உலகம் நாசமடைந்த பிறகும் சக்தியாக இருப்பவர் நீர் ஒருவராகையால் மத்திய காலமாகிய உலகம் இருக்கும்பொழுதும் நீர் ஜகத் ஸ்வரூபியாகவும் இருக்கிறீர்.ஆனாலும் தம்முடைய மாயையால் முக்குண ஸ்வரூபமான லோகத்தைப் அதில் அந்தர்யாமியாகப் பிரவேசித்துச் சிருஷ்டிப்பவர் போலும், காப்பாற்றுகிறவர் போலவும், நாசஞ்செய்பவர் போலவும் தோன்றுகிறீர். (பக்தர்களிடத்தில் பட்ச பாதம் வைத்து அசுரனைக் கொல்லுவது, பக்தர்களைக் காப்பாற்றுவது ஆகிய இவைகள் மாயையால் வைகளே யொழிய உமக்கு இயற்கையானவை அல்ல என்று தாத்பரியம்;) மேலும் ஓ ஈசா! காரிய காரண ஸ்வரூபியுமான இந்த லோகமானது உம்முடைய ஸ்வரூபமே யொழிய நீர் உலகத்தை காட்டிலும் வேறா னவர். (உலகம் உண்டாவதற்கு முந்தியும், உலகத்திற்கு பின்னும் பகவான் இருப்பதால் பின்னும் தன்னைச் சார்ந்தவன், பிறர் என்ற பேதபுத்தியே மாயை.

அது பிரயோசன மற்றது. எதனுடைய உற்பத்தியானது எவருடைய சங்கற்பம், பிரகாசம் ஆகிய ஏற்பட்டதோ. எதனுடைய நாசம் ஸ்திதி ஆகிய இரண்டும் எவரிடத்தில் ஏற்பட்டிருக்கின்றனவோ அந்த ஜகத் அவரேயாகும். மரம் அதன் விதை ஆகிய இவைகளால் பிரகிருதி பீஜமாகிய பூத சூக்ஷம ஸ்வரூபமாக இருக்கிறது. (காரிய காரண ஸ்வரூபமாகிய லோகமானது பரம காரணராகிய உம்முடைய ஸ்வரூபம் என்று கருத்து.) மேலும் நீர் ப்ரளய காலத்தில் ஆத்ம சுகத்தையே அனுபவித்து இந்த உலகத்தை தன்னிடத்தில் அடக்கிக் கொண்டு பிரளய ஜலத்தில் தூங்குகிறீர். ஆனால் யோகத்தால் கண்களை மடிக் கொண்டு ஸ்வயம்பிரகாசமாக இருப்பதால் அந்த நித்திரை அக்ஞர்களுடைய நித்திரை போன்றதல்ல. நான்காவது அவஸ்தையாகிய ஸ்வரூபத்தில இருப்பவராகையால தமோகுணத்தின் சம்பந்தமில்லை. ஜாக்ரத், ஸ்வப்னம் முதலிய அவஸ்தைகளில் விஷய சம்பந்தம் ஏற்படுவது போல் விஷயங்களை நீர் சேர்கிறதில்லை. மேலும் தம்முடைய கால சக்தியால் தூண்டப்பட்ட பிரகிருதியின் தர்மங்களை உடையவரும் ஆதிசேஷனாகிய படுக்கையிலிருந்து எழுந்திருப்பவருமான உமக்கு இந்த உலகமானது சரீரமாக இருக்கிறது. ஆலம் விதையிலிருந்து மரம் உண்டானதுபோல உம்முடைய ஸ்வரூபத்தில் அடங்கியிருந்த ஜகத் ஸ்வரூபமான தாமரை மலர் முதலில் உண்டாயிற்று. அந்த தாமரை புஷ்பத்திலிருந்து ப்ரஹ்மதேவர் உண்டானார். அவர் அந்த தாமரை மலரைவிட வேறு யாதொன்றையும் காணாமல் அதன் காரணத்தை பார்க்க விரும்பி எங்கும் வியாபித்திருக்கும் உம்மை வெளியில் தேட ஆரம்பித்து, நூறு வருஷ காலம் ஜலத்தில் மூழ்கி இருந்தார்.

அப்படியும் உம்மைக் காணவில்லை. மரம் முளைத்த பின் விதையைப் பார்க்க முடியுமா ? பின்பு அந்த ப்ரஹ்மதேவர் மிகவும் ஆச்சரியமடைந்து, அந்தத் தாமரை மலரில் திரும்பவும் வந்து உட்கார்ந்தார். அப்பொழுது அவர் கடுந்தவம் செய்து சுத்த சித்தராகி பூதங்கள், இந்திரியங்கள், ஆகிய இவைகளின் ஸ்வரூபமாகி தம்மிடத்தில் காரணரூபியான உம்மை தரிசித்தார். அது அநேக முகங்கள், கால்கள், தலைகள், கைகள் , தொடைகள் வாய்கள், காதுகள், கண்கள் ஆகியவைகளுள்ளது. திவ்யமாக ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டது; மாயாமயமானது. பிரபஞ்சத்திற்கு தகுதியான கை, கால் முதலிய அவயவங்களுள்ளதுமான அந்த மகா புருஷனுடைய சரீரத்தைப் பார்த்து மிகுந்த சந்தோஷத்தையும் அடைந்தார். பின்னும் ஒருகால் தமோ குணமுள்ள மது கைடபன் என்ற அசுரர்கள் வேதங்களை அபகரித்தார்கள். அந்த சமயத்தில் நீர் ஹயக்ரீவராக அவதரித்து,அசுரனால் கொண்டு போகப்பட்ட வேதங்களைத் திருப்பிக் கொடுத்து ப்ரஹ்மதேவரை அனுக்கிரகித்தீர். சத்துவமே உமக்கு பிரியமான சரீரமென்று சொல்லுகிறார்கள். ஓ மகா புருஷ! மனிதனாகவும், திர்யக் ஜாதியாகவும், மகரிஷியாகவும், தேவனாகவும்,மத்ஸ்யமாகவும் நீர் அவதரித்து லோகங்களைக் காப்பாற்றுகிறீர். உலகத்திற்கு விரோதிகளான அசத்துக்களை நாசஞ் செய்கிறீர். யுக–தர்மத்தைச் சம்ரட்சிக்கிறீர். ஆனால் கலியுகத்தில் அம்மாதிரிய அவதாரங்கள் இல்லாததினால் மறைந்திருக்கிறீர். அதனால் திரியுகரென்று உமக்குப் பெயருண்டாயிற்று. ஓ வைகுண்டத்திற்கு அதிபதியாக இருப்பவரே! பல வகையான தோஷமுள்ளவரும், வெளியிருக்கும் விஷயங்களில் பற்றுதலுள்ளதும், போஷிக்க முடியாததும்,

சந்தோஷம், துக்கம், பயம் பவகையான ஆசை ஆகிய இவைகளால் பீடிக்கப்பட்டதுமான என் மனது உம்முடைய கதையைக் கேட்க விரும்பவில்லை. மனத்தால் உம்முடைய உண்மையை எப்படி விசாரிப்பேன்? ஓ நாசமற்றவரே! என்னுடைய நாக்கு, ஆண்குறி, தோல், வயிறு, காது, சபலமான மூக்கு, கர்மேந்திரியங்கள் ஆகிய இவைகள் தனித்தனி விஷயங்களில் என்னை இழுத்துக் கொண்டு செல்லுகின்றன. அது அநேக ஸ்திரீகளை விவாஹம் செய்து கொண்ட மனிதனை அந்த ஸ்த்ரீகள் கஷ்டப்படுத்துவதுப்போல் இருக்கிறது. இம்மாதிரியான கர்மத்திற்கு வசப்பட்டு சம்சாரமாகிய வைதரணீ நதியில் விழுந்து ஜனனம், மரணம், வியாதி ஆகிய இவைகளில் மிகவும் பயந்தவனும் தான் பிறர் என்ற பேதபுத்தியுள்ளவனும், விரோதம், சிநேகம் இவைகளுள்ளவனும், மூடனுமாகிய என்னைக் கிருபா திருஷ்டியால் அனுக்கிரகித்துக் காப்பாற்றவேண்டும். ஓ தீனபந்துவே! உம்முடைய பக்தர்களைச் சேவிப்பவர்களான எங்களைச் சம்சாரமாகிய வைதரணீ நதியைத் தாண்டும்படி செய்வதில் உமக்கென்ன பிரயாசம்? உம்முடைய பக்தர்களை ஆசிரயிப்பதாலேயே சம்சாரம் நிவர்த்தியாகின்றதென்று தாத்பரியம்) மேலும், நான் உம்முடைய சரிதத்தை கானம் செய்வதாகிய அமிருதத்தில் மூழ்கிய சித்தமுள்ளவனாக இருப்பதால் இந்தச் சம்சாரத்திலிருந்து பயப்படேன். ஆனால் உம்மிடத்தில் பக்தி செய்யாமல் இந்திரிய சுகத்திற்காகக் கஷ்டப்படும் மூடர்களைப் பற்றி துக்கிக்கிறேன். (மூடர்களுக்கும் மோட்சம் கொடுக்க வேண்டுமென்று தாத்பர்யம்). ஓ தேவ! முனிவர்கள் ஏகாந்தமான இடத்திலிருந்து கர்மத்தை விடாதவர்களாகித் தவஞ்செய்கிறார்கள்.

அப்படிப்பட்ட முனிவர்களை விட்டு நான் ஒருவன் தனியே மோட்சத்தை அடைய இஷ்டப்படவில்லை. உம்மைக் காட்டிலும் சரணம் எனக்கு வேறொருவரும் இல்லை. என்னை அனுக்ரகிப்பது மாத்திரம் போதாது. உம்மை தவிர எனக்கு வேறு கதியும் இல்லை. தினவினால் கைகளுக்கு துக்கம் ஏற்படுவதுபோல் மிகவும் அற்பமாக காம சுகமான துக்கத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. அந்தக் காம சுகத்தை தைரியமுள்ள வித்வான் ஜயிப்பான். மேலும் மௌன விரதம், சாஸ்திரம், தவம், அத்தியயனம், தனக்குரிய தர்மம், ஏகாந்தத்தில் வசிப்பது, ஜபம், சமாதி ஆகிய இவைகள் பெரும்பாலும் மோட்ச சாதனங்கள். இந்திரியங்களை ஜயித்தவர்களுக்கு மேற்காட்டியவைகள் ஜீவனோபாயங்களாகின்றன. தர்மமுள்ளவர்களுக்கு ஜீவனத்திற்கு உபயோகப்படுமோ இல்லையோ வென்று சந்தேகிக்க கூடியவைகள் (பக்தியால் தான் தத்துவ ஞானத்தை அடையவேண்டும்) விதையும் முளையும் போல் பிரவாக நித்தியங்களான காரிய காரண ரூபங்களால் சரீரங்கள் உமக்கு இருப்பதாக வேதத்தால் சொல்லப்பட்டிருக்கிறது. வேறு சரீரம் உமக்கில்லை. மறைந்திருக்கும் அக்கினியைக் கடைந்து எடுத்துக் கொள்வது போல பக்தர்கள் மேற்காட்டிய காரிய ஸ்வரூபியாக உம்மைப் பார்க்கிறார்கள். பின்னும் வாயு, அக்னி, பூமி, ஆகாசம், ஜலம் தன்மாத்திரைகள், பிராணன், இந்திரியங்கள், இருதயம் சித்தம், அகங்காரம், ஸ்தூலம், சூட்சுமம் ஆகிய இவைகள் யாவும் உம்முடைய ஸ்வரூபமேயாகும். மனத்திற்கும், வாக்குக்கும் புலப்படுவது உம்முடைய ஸ்வரூபத்தைவிட வேறில்லை. ஓ தேவ! மனம் குணாபிமானிகளான எல்லாதேவதைகளும் ஜனன மரணமுள்ளவர்கள். (ஜடோபாதிகளா

கையால்) என்பதை வித்துவான்கள் தெரிந்து கொண்டு புத்திக்கு மோககரமான வேதாத்தியயனத்தை விட்டு உம்மையே உபாசிக்கிறார்கள். ஓ மேலானவரே! நமஸ்காரம்,தோத்திரம் பூஜை, சிசுருஷை, உம்முடைய பாதங்களை ஸ்மரிப்பது, கதையைக் கேட்பது ஆகிய ஆறுவகையாக உம்மைச் சேவித்தால் பரமஹம்ஸர்கள் அடையக் கூடிய உம்மிடத்தில் பக்தி உண்டாகும். பக்தியால் மோக்ஷம் கிடைக்கும். ஆனதால் தாஸ்ய யோகம் கிடைக்கும்படி அனுகிரஹிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

51–53. அதனைக் கேட்ட நிர்க்குணராகிய பகவான் கோபமற்றவராகி, பக்தராகிய ப்ரஹ்லாதரை நோக்கி, மிகுந்த பிரியத்துடன், "ஓ அசுர சிரேஷ்ட! ப்ரஹ்லாத! உன்னிடம் மிகுந்த சந்தோஷத்தை அடைந்தேன். உனக்கு க்ஷேமமுண்டாகட்டும். நான் மனிதர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்பவன். உனக்கு இஷ்டமான வரத்தைக் கேட்கலாம். ஓ தீர்க்காயுளுள்ளவனே! என்னுடைய கிருபையை அடையாதவன் என்னைத் தரிசிக்க முடியாது. என்னைத் தரிசித்தவன் தன்னைப் பற்றித் துக்கிக்க மாட்டான். ஆனதால் வித்வான்களும் மிகுந்த அதிருஷ்டமுள்ளவர்களும் ஸ்ரேயஸ்ஸை விரும்பியவர் களுமான சாதுக்கள் ஸகல வரத்தை யளிப்பவனாகிய என்னை மூன்று கரணங்களாலும் உபாஸிக்கிறார்கள்" என்றார்.

54. இவ்வாறு பகவான் சாமானிய ஜனங்கள் விரும்பக்கூடிய வரங்களைக் கொடுப்பதாகச் சொல்லி யும் ப்ரஹ்லாதர் அவைகளை விரும்பவில்லை.

அத்தியாயம்–10

பகவான் பிரகலாதரை அனுக்ரஹித்தது

பக்தியோகத்திற்கு விஷயங்களை விக்னங்கள் என்று ப்ரஹ்லாதர் நினைத்துச் சிரித்துக் கொண்டு பகவானை நோக்கி,"இயற்கையில் காமங்களில் ஆசை கொண்டவனாகிய என்னை வரங்கொடுப்பதாகச் சொல்லி ஏமாற்ற வேண்டாம் நான் காமங்களில் பயந்து வைராக்யத்தை அடைந்து; மோட்சத்தை அடைய விரும்பி உம்மை ஆசரியித்திருக்கிறேன். காமங்கள் ஸம்ஸாரத்திற்கு விதைகள். இருதயத்திற்குப் பந்தங்கள் (உபத்திரவத்தைக் கொடுக்கக் கூடியவைகள்) என்னை நீர் அனுக்ரஹித்தது என்னுடைய மனோபாவத்தைப் பரீக்ஷிப்பதற்காகவே யொழிய வேறில்லை. மேலும் அஞ்ஞானத்தில் மூழ்கினவனைக் காப்பாற்றுபவர் நீர் ஒருவரே. அப்படிப்பட்ட கருணையுள்ள நீர் பக்தனை அனர்த்தத்தில் ஆசைப்படும்படி செய்வீரா ? நீர் ஸகல லோகங்களுக்கும் குருவல்லவா ? எந்த வேலைக்காரன் யஜமானிடமிருந்து தான் செய்த வேலைக்காகப் பலனை விரும்புகிறானோ, அவன் வேலைக்காரனல்ல. எந்தப் பிரபு, தான் யஜமானனாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தால் வேலைக்காரனுக்கு வேண்டியவைகளைக் கொடுக்கிறானோ, அவன் பிரபுவுமல்ல, விஷயத்தில் ஆசையில்லாமல் குணத்தில் ஆசைப்பட்ட வேலைக் காரனே மேலானவன்; அப்படிப்பட்ட யஜமானனே மேலானவன். உம்முடைய பக்தனாகிய நீர் பற்றுதலில் லாதவர்; அரசனுக்கும் சேவகனுக்கும் உள்ள சேவிய சேவக பாவமானது எப்படி ஆசையால் ஏற்படுகிறதோ, அப்படி நம்மிருவர்களுடைய சம்பந்தம் காமத்தால் ஏற்பட்டதல்ல. ஓ ஈச! வரத்தையளிப்பவரே! எனக்கு

இஷ்டமான வரத்தை நீர் கொடுக்கிறதானால் என் மனத்தில் சங்கற்பம் (விஷய ஆசை) உண்டாகாமல் இருக்கும்படி அனுக்ரஹிக்கவேண்டும். அதே மேலான வரம். காமம் எவனுடைய இருதயத்தில் முளைக் கிறதோ (உண்டாகிறதோ) அவனுடைய இந்திரியங்கள், மனது, பிராணன், தேஹம், தைரியம், புத்தி, வெட்கம், காந்தி, தேஜஸ், நல்ல எண்ணம், சத்தியம் ஆகிய இவைகள் நாசமடைகின்றன. ஓ புண்டரீகாக்ஷ! (தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரே) மனிதன் மனத்திலிருந்து ஸகல ஆசைகளையும் எப்பொழுது ஒழித்துவிடுகிறானோ அப்போது பகவானாக ஆகிறான். மகாத்மாவும், புருஷரும், ஹரியும், அற்புத சிம்மஸ்வரூபியும். பரப்ரஹ்மமுமான உம்மை நமஸ்கரிக் கின்றேன்!" என்றார்.

12–15. அதனைக் கேட்ட பகவான் ப்ரஹ்லாதரை நோக்கி, "என்னிடத்தில் அனன்யமாகப் பக்திசெய்யும் உன்னை போன்ற பக்தர்கள் காமங்களை விரும்பமாட் டார்கள் ஆனாலும் இந்த மன்வந்தரம் முழுவதையும் அசுரர்களுக்கு அதிபதியாக இருந்து என்னையே மனத்தில் தியானித்து, என்னுடைய கதைகளையே சொல்லி கொண்டு போகங்களை அனுபவி. ஸகல பூதங்களிடத்திலும் வசிக்கும் ஒருவராகிய என்னைக் கர்மங்களைச் செய்து சந்தோஷப்படுத்து கர்மங்களை என்னிடத்தில் சமர்ப்பிப்பதனால் அந்தக் கர்மமானது உனக்குக் கெடுதியைச் செய்கிறதில்லை. பிராரப்த கர்மத்தின் பலனை அனுபவிப்பதாலும் புண்ணியத்தைச் செய்வதால் பாபங்களையும் நிவர்த்தித்துக் கொண்டு, தேவர்களால் செய்யப்படும் கீர்த்தியை லோகத்தில் பரவச் செய்து ஸகல பந்தங்களற்றவனாகிச் சரீரத்தை

விட்டு என்னை அடையப் போகிறாய். எவன் உன்னால் செய்யப்பட்ட இந்த ஸ்தோத்திரத்தைப் படிக்கிறானோ. உன்னையும் என்னையும் ஸ்மரிக்கிறானோ அவன் கர்மத்தால் கட்டப்படமாட்டான்" என்றார்.

16–18. அதனைக்கேட்ட ப்ரஹ்லாதர் பகவானை நோக்கி, "வரத்தைக் கொடுப்பவர்களுக்குட் சிறந்தவரே! மகேசுவர! அவித்வானாகிய என்னுடைய பிதாவாகிய ஹிரண்யகசிபு ஸகல லோகங்களுக்குக்குருவும், பிரபுவும், ஈசுவரனும் தேஜோரூபியுமான உம்மிடம் பொறாமை யுள்ளவனாகி நிந்தித்தானல்லவா? தன்னுடைய ஸஹோதரனைக் கொன்றவர் என்று உம்மிடத்திலும், அப்படிப்பட்ட உம்மை நான் சேவிப்பதால் என்னி டத்திலும் துவேஷ முள்ளவனாயிருந்தான். ஆனாலும் தீனர்களிடத்தில் பிரீதியுள்ள நீர், கிருபையுள்ள பார்வையால அவனை அனுக்ரஹித்து அந்தப் பாபத் திலிருந்து சுத்தனாகும்படி செய்யவேண்டும். இந்த வரத்தை கொடுக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

19–24. அதனைக் கேட்ட பகவான் ப்ரஹ்லாதரை நோக்கி, "ஓ சாதுவே! குலத்தைப் பரிசுத்தப்படுத்து கிறவனான நீ இந்தக் குலத்தில் ஜனித்தபடியால் உன்னுடைய பிதா இருபத்தொரு தலைமுறைகளுடன் சுத்தனானான். மேலும் சாந்தர்களும், சமமாகப் பார்ப்பவர்களும், பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப் பட்ட ஆசாரமுள்ளவர்களுமான என்னுடைய பக்தர்கள் எந்தத் தேசத்தில் எந்தக் குலத்தில் ஜனிக்கிறார்களோ அது மிகவும் நீசமானாலும் சுத்தமாகிவிடும். ஓ தைத்யர்களுக்குட் சிறந்தவனே! என்னிடத்தில் மனத்தைச்

செலுத்தி, விஷயங்களில் ஆசைகளை யொழித்தவர்கள் பலவகையான பூதங்களில் ஒன்றையும் இம்சிக்கமாட்டார்கள். நீ என்னுடைய பக்தர்களுக்குட் சிறந்தவன். ஆனதால் உன்னை அனுசரித்தவர்களும் என்னுடைய பக்தர்களாவர்கள். என்னுடைய சரீர ஸ்பரிசத்தால் உன்னுடைய பிதா சுத்தனானான். அவனுக்குப் பாபமே இல்லை. அவனுக்கு உத்தரக்கிரியைகளைச் செய். தகப்பனாருடைய ராஜ்யத்தை அனுபவிக்கலாம். வைதிகர்களால் சொல்லப்பட்டபடி மனத்தை என்னிடம் செலுத்தி, ஸகல கரணங்களையும் என்னிடமாகச் சமர்பித்து கர்மங்களை யனுஷ்டித்தால் அந்தக் காரியங்கள் கெடுதியை யுண்டுபண்ணுகிறதில்லை" என்று அனுக்ரஹித்தார்.

25–31. அதனைக்கேட்ட ப்ரஹ்லாதரும் பிதாவிற்கு உத்தரக்கிரியைகளைச் செய்து முடித்தார். பின்பு ப்ராஹ்மணர்கள் அவருக்கு ராஜ்யாபிஷேகஞ் செய்தார்கள். மகா பாகவதராகிய அந்தப் ப்ரஹ்லாதர் நன்றாக ராஜ்யபரிபாலனம் செய்துவந்தார். பின்பு ப்ரஹ்மதேவர் சாந்தராகிய நரசிம்ரைப் பார்த்து தேவர்களுடன் சுத்தமான வாரத்தைகளால் பின்வருமாறு துதிக்கலானார்; ஓ தேவர்களுக்கும் தேவரே! எல்லாவற்றிற்கும் அதிபதியே! பிராணிகளுக்கும் அந்தர்யாமியாக இருப்பவரே! எல்லாவற்றிற்கும் முந்தியவரே! இந்த ஹிரண்யகசிபு என்னால் சிருஷ்டிக்கப்பட்ட பூதங்களால் கொல்ல முடியாதவன் என்ற வரத்தை என்னிடமிருந்து பெற்றுக்கொண்டு, தவத்தினாலும், யோக பலத்தாலும் மதித்து, தர்மங்களைக் கெடுத்துவந்தான் அப்படிப்பட்ட லோகத்தை உபத்திரவித்த அசுரனைக் கொன்றீர் பின்னும், அவனுடை புத்திரனும் மிக்க சாதுவும்,

மகா பாகவதனுமாகிய ப்ரஹ்லாதரை அனுக்ரஹித்தீர். இந்த உம்முடைய ஸ்வரூபமானது தியானஞ் செய்பவனை மிருத்யு முதலிய பயத்திலிருந்து காப்பாற்றுகிறது இந்தப் பிரகலாதன் ஸகல வேத ஸ்வரூபியும், ஸகல யாகஸ்வரூபியும், ஸகல தபோரூபியும், ஸகல தீர்த்த மயமான சுத்தருமாகிய உம்மை அடைந்து அக்னியை அடைந்த ஸுவர்ணம் போல் சுத்தனானான்" என்றார்.

32–36. அதனைக்கேட்ட பகவான் ப்ரஹ்மதேவரை நோக்கி, "ஓ தாமரை மலரிலிருந்து உண்டானவரே! குரூர ஸ்வபாவமுள்ளவர்களுக்கு இம்மாதிரியான வரத்தை இனி கொடுக்கவேண்டாம். அது சர்ப்பத்திற்குப் பாலைக் கொடுப்பது போலிருக்கிறது" என்று சொல்லி, பிரம்ம தேவரால் பூஜிக்கப்பட்டு அந்தர்த்தானத்தை அடைந்தார். பின்பு பகவானுடைய அம்சமாகிய ப்ரஹ்லாதர் பரம சிவன், ப்ரஹ்மதேவர், மற்ற தேவர்கள் ஆகிய இவர்களைப் பூஜித்து நமஸ்கரித்தார். அதன்பின் ப்ரஹ்மதேவர் சுக்ராசாரியார் முதலியவர்களுடைய அனுமதியால் மகரிஷிகளுடன் ப்ரஹ்லாதரைத் தைத்யர்களுக்கும். தானவர்களுக்கும் அதிபதியாகச் செய்தார். இப்படி ப்ரஹ்லாதரால் பூஜிக்கப்பட்ட ப்ரஹ்மா முதலிய தேவர்கள் அவரைச் சிலாகித்து ஆசீர்வதித்து, தங்களிருப்பிடஞ் சென்றார்கள்.

37–57. விஷ்ணுவின் பார்ஷதர்கள் ப்ராஹ்மண சாபத்தால் அசுர ஜன்மத்தை அடைந்து, விரோத புத்தியால் பகவானை மனத்தில் வைத்து அவரால் கொல்லப்பட்டார்கள். பின்னுமவர்கள் கும்பகர்ணன், ராவணன் என்ற ராக்ஷஸர்களாகப் பிறந்தார்கள். பகவான் ராமனாக அவதரித்து அவர்களை நிக்ரஹித்தார்.

அவர்கள் ராமனுடைய பாணங்களால் அடிக்கப்பட்டு அவரையே தியானித்துச் சரீரத்தை விட்டார்கள். அவர்களே சிசுபாலன், தந்தவக்திரன் என்ற பெயருடன் திரும்பவும் பிறந்தார்கள். அவர்கள் பகவானிடத்தில் விரோத புத்தி வைத்து, நீர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே மகா புருஷனை அடைந்தார்கள். அப்படியே ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் விரோத புத்தியுள்ள அரசர்கள் பகவானுடைய தாரதம்மியத்தை அடைந்திருக்கிறார்கள். புழுவானது குளவியைத் தியானித்துத் தானும் அதுவாக ஆகிறதில்லையா? பாகவதர்கள் பகவானிடத்தில் மிகுந்த பக்திசெய்து பகவானை அடைவது போலச் சிசுபாலன் முதலிய அரசர்களும் பேத புத்தியால் ஈசுவரனை அடைந்தார்கள். ஓ தர்மபுத்திரரே! சிசுபாலனை பற்றி உம்மால் கேட்கப் பட்ட விஷயத்தைச் சொன்னேன். இந்த உபாக்கியானத்தில் பிராமணர்களேயே தெய்வமாகக் கொண்டவரும் மகாத்மாவுமான ஸ்ரீ கிருஷ்ணனுடைய அவதார கதை ஹிரண்யாட்சன், ஹிரண்யகசிபு இவர்களுடைய வதம், மகா பாகவதராகிய ப்ரஹ்லாதருடைய சரிதம், பக்தி, ஞானம் வைராக்கியம், பகவானுடைய தத்துவம், ஸிருஷ்டி, ஸ்திதி, லயம் ஆகிய இவைகளுக்கும் அதிபதியான பகவானுடைய சரிதம், தேவர்கள், அசுரர்கள் ஆகிய இவர்களுடைய ஸ்தானத்தின் மாறுதல், பகவானை அடையக்கூடிய பாகவத தர்மங்கள், ஆத்ம விஷயம் ஆகிய இவைகள் வர்ணிக்கப் பட்டிருப்பதால் இது மிகவும் புண்ணியகரமானது. ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சரிதங்கள் நிறைந்த இந்தக் கதையை எவன் சிரத்தையுடன் உச்சரிக்கிறானோ, அவன் கர்ம பாசத்திலிருந்து நிவர்த்தி அடைவான். மேலும் எவன் நரசிம்ஹமமாக அவதரித்த ஆதி

புருஷனுடைய சரீரத்தையும், ஹிரண்யகசிபுவின் வதத்தையும், சாதுக்களுக்குட் சிறந்தவராகிய ப்ரஹ்லாதருடைய புண்ணியமான சரித்தத்தையும் பக்தியுடன் படிக்கிறானோ அவன் நிர்ப்பயமான லோகத்தை அடைகிறான். யோகிகளாலும் அடையமுடியாத பரப்ரஹ்மமானது மனித சரீரத்துடன் உங்களுடைய கிரஹத்தில் வசிப்பதால் நீங்கள் மிக்க பாக்கியசாலிகள் இந்த ஸ்ரீ கிருஷ்ண பகவான் ப்ரஹ்மம்; மகான்களால் தேடக் கூடிய மோட்ச சுகானுபவ ஸ்வரூபம்; அவரே உங்களுக்கு **அம்மான் சேய்** ஆகவும், சுகிருத்தாகவும் வேலை செய்பவராகவும் குருவாகவும் இருக்கிறார். அவருடைய ஸ்வரூபத்தைப் பரமசிவன், ப்ரஹ்மதேவர் முதலியவர்களாலும் இன்னதென்று குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. ஆனதால் மௌனத்தாலும் பக்தியாலும், உபசாரத்தாலும் பூஜிக்கப்பட்டு இந்த ஸ்ரீ கிருஷ்ண பகவான் நம்மிடத்தில் கிருபை செய்யட்டும் மேலும் இவர் மாயாவியாகிய மயனைக் கொண்டு பரமசிவனுடைய கீர்த்தியைப் பரவச் செய்தார்" என்று நாரதர் சொன்னார்.

54. அதனைக் கேட்ட தர்ம புத்திரர் நாரதரை நோக்கி "எந்த காரியத்தில் பரமசிவனுடைய கீர்த்தியானது மயனால் கெடுக்கப்பட்டது? எப்பொழுது அதனை ஸ்ரீ கிருஷ்ணன் விருத்தி செய்தார்? அதனைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

55–73. அதனைக் கேட்ட நாரதர் அரசனை நோக்கி ஸ்ரீ கிருஷ்ணனுடைய சகாயமுள்ளவர்களான தேவர்களால் அசுரர்கள் ஜயிக்கப்பட்டு மாயாவிகளுக்குட் சிறந்தவனாகிய மயனென்பவனைச் சரணமடைந்தார்கள்.

அவன் அசுரர்களுக்காகச் தங்கம், வெள்ளி, எஃகு ஆகிய இவைகளால் மூன்று பட்டணங்களை உண்டு பண்ணினான். அவைகளின் சேர்க்கையும், பிரிவும் பிறரால் அறியமுடியாதவை. அவைகளுடைய சாமக் கிரியைகளும் இன்னது என்று உளஹிக்க முடியாதவை. அந்தப் பட்டணங்களில் அசுரர்கள் வசித்து, கண்ணுக்குப் புலப்படாமல் முந்திய விரோதத்தை நினைத்துக் கொண்டு மூவுலகத்தையும் லோகபாலர்களையும் இம்சித்தார்கள். அப்பொழுது ஸகல லோகங்களும் லோக பாலர்களும் பரமசிவனை சரணமடைந்து, "மாயையால் உண்டுபண்ணப்பட்ட பட்டணங்களில் வசிக்கும் அசுரர்கள் எங்களை உபத்திரவிப்பதால் உம்மைச் சார்ந்தவர்களான எங்களைக்காப்பாற்றும்" என்று வேண்டிக் கொண்டார்கள். அதனைக் கேட்ட பகவான் 'பயப்படாதீர்கள்' என்று அபயப்பிரதானம் செய்து தனுஸில் பாணத்தைப் பூட்டி திரிபுரர்களை உத்தேசித்து அஸ்திரத்தைப் பிரயோகித்தார். சூரிய மண்டலத்திலிருந்து கிரணங்கள் வெளிப்பட்டாற் போல அக்னிபோன்ற பாணங்கள் அந்த அஸ்திரத் திலிருந்து கிளம்பி அந்தப் பட்டணங்களை மறைந்தன. அந்தப் பாணங்களால் அடிக்கப்பட்ட அசுரர்கள் மரணமடைந்தார்கள். பின்பு மகா யோகியான மயன் மரணமடைந்த அசுரர்களை அமிருதக்கிணற்றில் போட்டான். சித்தமான அமிருத ரசத்தின் சம்பந்தத்தால் அவர்கள் பிழைத்து. வஜ்ரம் போன்ற சரீரமுள்ள வர்களாகி மேகத்தைப் பேதிக்கும் மின்னலாகிய அக்னிகள் போல உயரக் கிளம்பினார்கள். அதனைக் கண்ட பரமசிவன் தம்முடைய எண்ணம் நிறை வேறாமல் கவலையை அடைந்திருந்தார். அதனைக் கண்ணுற்ற ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் அதற்கு ஓர்

உபாயஞ் செய்தார். அதாவது ஸ்ரீ மகாவிஷ்ணு பசுவின் ஸ்வரூபத்தைத் தரித்து ப்ரஹ்மதேவர் கன்றாக இருந்து கிணற்றிலிருந்து அமிருதத்தைப் பானஞ் செய்தார்கள். அதனை அசுரர்கள் பார்த்திருந்தாலும் ஸ்ரீ மகா விஷ்ணுவின் மாயையால் மோஹித்துத் தடைசெய்யாம லிருந்தார்கள். பின்பு யோகியாகிய மயனானவன் அமிருத ரசத்தைச் சம்ரட்சிக்கும் காவலாட்களை நோக்கி தெய்வகதியை நினைத்துத் துக்கமற்றவனாகி, "தேவனானாலும் அசுரனானாலும், தனக்காவது பிறருக்காவது இருவர்களுக்குமாவது தெய்வத்தால் ஏற்படுத்தப்பட்டதை மாற்றுவதற்கு முடியாது. ஆனதால் இந்த ஸ்ரீ கிருஷ்ணன் பரமசிவனுக்குத் தமது சக்தி களுடன் ஒத்தாசை செய்கிறார்" என்று சொன்னான். பின்பு பரமசிவன் யுத்தத்தில் தகுந்த முயற்சியுடன் ரதத்தின் மீதேறி, தனுஸில் பாணத்தைப் பூட்டி அபிஜித் என்ற முகூர்த்தத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் தேஜஸால் காப்பாற்றப்பட்டு, திருபுரங்களை எரித்தார் அப்பொழுது ஆகாயத்தில் தேவ துந்துபிகள் முழங்கின. அநேக விமானங்கள் ஆகாயத்தில் வந்தன. தேவர்கள் மஹரிஷிகள், பிதிருக்கள், சித்தர்கள் ஆகிய இவர்கள் 'ஜய' என்ற சப்தத்தைச் சொல்லிப் புஷ்பமாரி பெய்தார்கள்; கானஞ் செய்தார்கள்; அப்ஸரஸ்ஸுக்கள் நர்த்தனஞ் செய்தார்கள் இப்படிப் பரமசிவன் திருபுர சம்ஹாரஞ்செய்து ப்ரஹ்மா முதலியவர்களால் துதிக்கப் பட்டுத் தமது லோகம் சென்றார். ஸகல ஜகத்திற்கும் குருவாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணு தமது மாயையால் பூலோகத்தில் அவதரித்துக் செய்த சரிதங்கள் மஹரிஷி களால் கானஞ் செய்யப்படுகின்றன; லோகத்தைப் பரிசுத்தப்படுத்துகின்றன; வேறு எதனைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

ஸ்ரீ ராம நாம வங்கியின்

முதல் ஸஹஸ்ர கோடி ராம நாம லேகன

யக்ஞம் பூர்த்தியை ஒட்டி

வெளியிட்ட மிகச் சிறப்பான மலர்

கலியுக தர்ம சாஸ்திரம்

பெரிய அளவில் ப்ரசார நோக்கத்துடன்

மிக அதிகமான காப்பிகள்

தயாரிக்கப்பட்டது.

ப்ரஸாதமாக

வழங்கப்படுகிறது.

ஸ்ரீ ராம நாமம் எழுதுவதற்கு நோட்டுகளை இலவஸமாக

வழங்கி பக்தர்கள் மூலம் நாமா எழுதுவிக்கின்ற

வேள்வியை நடத்தி வருகின்ற

ஸ்ரீ ராம நாம வங்கியின் பிரசாரப் பிரிவான

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada



Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

பாகம் –1

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்கந்தம் 1 அத்தியாயம் 1 முதல்
ஸ்கந்தம் 3 அத்தியாயம் 19 வரை

Released by Maran's Dog, Toronto , Canada

இஞ்சிக்கொல்லை
R. சிவராம சாஸ்திரிகள்
அவர்களால் 1908ல் மொழி
பெயர்க்கப்பட்டது.

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ராம நாம வங்கியின் ப்ராசாரப் பிரதாப் பிரிவு
ராம மந்திரம் –2, விளாங்கம் தெரு,
சென்னை – 600 033. ☎: 24893736

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்
தமிழ் வசனம்

TITLE	:	SRIMAD BHAGAVATHAM, TAMIL VACHANAM
AUTHOR	:	INZIKOLLAI R. SIVARAMA SASTRIGAL WRITTEN IN 1908
SIZE	:	CROWN OCTAVE
EXTENT	:	2736 PAGES CONSISTING OF SEVEN VOLUMES
PRICE	:	RS.600/ SET
FIRST EDITION	:	1996
SECOND EDITION	:	2004
THIRD EDITION	:	2007

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பகவன் நாம போதேந்திர
ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின்
பாத கமலங்களிலும்

பரஞ்ஜர் மஹாத்மா
ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள்
அவர்களின்
பாத கமலங்களிலும்

சமர்ப்பணம்

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்

புத்தக விலைப்பட்டியல்...

அரியதும், பழையதுமான க்ரந்தங்களையும், நாமறிந்தாராத விஷயங்களையும் வெளியிடும் பணியில்...

ரூ.	
1500	ஸ்ரீமத் பாகவதம் ப்ரதி பத அர்த்தம்
700	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் மூலம் தமிழில் பெரிய எழுத்தில்
600	ஸ்ரீமத் பாகவதம் வசனம் 7 பாகம்
550	ஸ்ரீமத் பாகவதம் மூலம் தமிழில் பெரிய எழுத்தில்
450	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் மூலம் தமிழில்
350	ஸ்ரீ துளஸீ ராமாயணம் மூலமும் வசனமும்
300	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் வசனம்
300	ஞானேஸ்வரி
250	ஸ்ரீமத் பாகவதம் மூலம் தமிழில்
200	நாராயணீயம் ப்ரதிபத அர்த்தம்
200	ஸ்ரீகிருஷ்ண சைதன்யர்
200	கர்க ஸம்ஹிதை
200	நந்த நந்தன்
150	உஜ்ஜ்வல நீலமணி
140	பார்த்தஸாரதி
100	த்வாரிகாதீசன்
100	பகவான் வாசுதேவன்
100	திருப்பாவை உபன்யாஸம்
100	ஸ்ரீபகவன் நாம ரஸோதயம்
100	பக்த துகாராம் திவ்யசரித்திரம்
100	ஸ்ரீ மத் பாகவத கதாம்ருதம்
60	கீதகோவிந்தம் ப்ரதிபத அர்த்தம்
60	ஸ்ரீ ஞானேஸ்வர் திவ்ய சரித்திரம்
60	ஸ்துதி மணிகள்
60	ஸ்ரீமத் பகவத் கீதை ப்ரதி பத அர்த்தம்
60	ராதே/பருந்தாவனராதே!!
60	பாதுகா ஸஹஸ்ரம் -பாசுரங்கள்
60	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்-பாசுரங்கள்
50	நாராயணீயம் -பாசுரங்கள்
50	ஹரி ஸங்கீர்த்தன மாலா
50	தர்ம சாஸ்திரம்
50	ஸ்ரீமத் பாகவத ஸங்க்ரஹம்
40	கோவிந்தபுரம் பஜன பத்ததி
40	தக்ஷிண ஸம்ப்ரதாய பஜன மாலா
40	ஸ்ரீமத் ராமாயணம் ஸங்க்ரஹம்
40	ஏகநாதர் திவ்ய சரித்திரம்
40	ஸ்ரீ ருக்மிணி கல்யாணம்-பாசுரங்கள்
35	தக்ஷிண ஸம்ப்ரதாய கல்யாண மாலா
35	அபங்க முத்தாரம்
35	நாம ஸங்கீர்த்தனாவளி
30	வ்ரஜ ரஸம்
30	ப்ரேம சாம்ராஜ்யம்
30	பக்தி
	பஞ்சகீதை
	ஸ்ரீ க்ருஷ்ண கர்ணாம்ருத ரஸாயனம்
	ஸ்ரீ க்ருஷ்ண கீதாம்ருதம்
	சிவானந்த லஹரீ - ப்ரதிபத அர்த்தம்
	ஸௌந்தர்ய லஹரீ - ப்ரதிபத அர்த்தம்
	ஐயாவாளின் நாம அனுபவங்கள்
	ஸ்ரீ சுந்தர காண்டம்



25	ஸ்ரீ ராம மாதுரீ
25	பக்த ரத்தினங்கள்
25	பாண்டுரங்க லீலைகள் -பாசுரங்கள்
25	கிருஷ்ண கர்ணாம்ருதம் -பாசுரங்கள்
25	தியாகராஜர் அனுபவங்கள்
25	ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் கீர்த்தனைகள்
25	ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம்
25	பக்தை மீரா
25	பக்த ஸாம்ராஜ்யம்
25	நாம ஸாம்ராஜ்யம்
25	ஸ்ரீ லலிதா பஜனை கீர்த்தனைகள்
25	மனாசே ஸ்லோக
25	பகவன் நாம ரஸாயனம்
20	ஸ்ரீ பாத ஸப்ததி
20	ஸ்ரீ யாக்ஞவல்கியர் திவ்ய சரித்திரம்
20	ஸ்ரீ துளஸி தாஸர் திவ்ய சரித்திரம்
20	ஸௌந்தர்யலஹரி - தமிழ் பாடல்கள்
15	ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம்
15	குருவாயூரப்பன் அந்தாதி-பாசுரங்கள்
15	தயாசதகம்-பாசுரங்கள்
15	ஸம்க்ஷேப ராமாயணம் -பாசுரங்கள்
15	ஸ்ரீ ஆண்டாள் கல்யாணம்
15	ஸ்ரீ ராதா மாதவ - பஜனை பத்ததி
15	நவராத்திரி கீர்த்தனைகள்
15	பக்தி ஸந்தேஹ த்வாந்த பாஸ்கரம்
15	ஸ்ரீ ப்ரும்மேந்திராள் திவ்ய சரித்திரம்
15	நந்தன் சரித்திரக் கீர்த்தனைகள்
15	ஸ்ரீ ப்ரும்மேந்திராள் கீர்த்தனைகள்
15	ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் திவ்ய சரித்திரம்
15	திருமாலை
15	**Divine History**
	(Hindi, English, Malayalam, Telugu, Tamil)
	Sri Bodendral
	Sri Sridhara Ayyaval
	Sri Sadguru Swamigal
10	கீத கோவிந்தம்
10	ஹரி பாட்
10	ஸ்ரீ ஸமர்த்த ராமதாஸர் திவ்ய சரித்திரம்
7	திருவரங்கன் திருவந்தாதி- பாசுரங்கள்
7	பரமார்த்த ஸ்துதி- பாசுரங்கள்
7	நாமாயணம்
6	ஸ்ரீ போதேந்திராள் கீர்த்தனைகள்
6	ஸ்ரீ போதேந்திராள் நாம வந்தனம்
6	நாமப்ரபாவம்
5	ஸ்ரீபோதேந்திராள் அஷ்டோத்திரம்
5	ஸ்ரீ ராம நாம மஹிமை
5	அபங்கப்ரவாஹம்
4	ஸ்ருதிகளிலிருந்து ராமநாமத்தின் பெருமை
3	புருஷ ஸூக்தம்
3	ஸ்ரீ ஸூக்தம்

Released by Maran's Dog, Toronto , Canada

100 Nos விநியோகவெளியீடு

75	ஸ்ரீ ராம நாமாவளி
75	ஸ்ரீ நவீன ராமாயணம்
75	ஸாதுக்கள் மஹிமை
75	ப்ராத ஸ்மரண ஸ்தோத்திரம்
100	நெய்க்குடத்தை
100	பாசுரப்படி ராமாயணம்
100	ஸ்ரீ ஸப்த ரிஷி ராமாயணம்
100	ஸ்ரீ சந்திர ஸேகராஷ்டகம்
100	ஸ்ரீபோதேந்திராள்சரித்திரசுருக்கம்

Sanskrit Prasadhams

தேவீ நாமஸ்தோத்திர மஞ்ஜரீ
ஸ்ரீ வாஞ்சிய க்ஷேத்ர மாஹாத்ம்யம்
ஸ்ரீ நடராஜ நாம மஞ்ஜரீ
ஸ்ரீ நடராஜ ஸ்தவ மஞ்ஜரீ
ஸ்ரீ பாலா ஸபர்யா
ஸ்ரீசிவ நாம மஞ்ஜரீ
ஸ்துதி த்ரயீ
ஸ்ரீ மீனாக்ஷீ ஸ்தோத்ரமஞ்ஜரீ
ஸ்ரீஸ்கந்த ஸ்தவ மஞ்ஜரீ
ஸ்ரீதத்தாத்ரேய ஸ்துதிமஞ்ஜரீ
ஸ்ரீமத்த்யார்ஜுனக்ஷேத்ர மாஹாத்ம்யம்
ஸ்ரீவிஷ்ணுஸ்துதிமஞ்ஜரீ
ஆத்ட நாதஸ்துதிமஞ்ஜரீ
ஸ்ரீபகவத்ஸ்துதிமஞ்ஜரீ
அனுமன் நாற்பது
கோபால விம்ஸதி
ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்
ஸ்ரீமத் ராமாயணரஹஸ்யம்
கலியுக தர்ம சாஸ்திரம்
பூஜா கல்பம்

Released by Maran's Dog, Toronto , Canada

கோஸம்ரக்ஷணம்
தினசரிராமாயணம்
தினசரிபாகவதம்
ஆசாரமும் ஆஹாரமும்
பூஜா ராமாயணம்
ஸ்ரீ வாசுதேவ ப்ரம்மம் திவ்ய சரித்திரம்
மன அமைதி வேண்டுமா?
ஜய கல்யாண ஸ்ரீக்தி லஹரீ
நாமவைபவம்
நாமச் சிறப்பு
நாமவிசேஷம்
ஸ்ரீபகவன் நாம மகிமை
ஆயிரம் நாமக் குறிப்புகள்
போதேந்த்ர அமுதம்
ஸ்ரீ ஆலங்குடி சுவாமிகள் திவ்ய சரித்திரம்
ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு ஸஹஸ்ர நாமம்
ஸ்ரீ த்யாகப்ரும்ம அஷ்டோத்திரம்
100 / 100
ஸ்ரீ கீதா ஸாரம் -பாசுரங்கள்
நாரத பக்திசூத்ரம்
நித்ய ஸ்லோக பத்ததி

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவத ரகசியம்

1000 பக்கங்கள்

இந்த நூல் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ ராம நாம வங்கியின்
நாம உதவிகளுக்கு
நாமத்தை ஆஸ்ரயிப்பவர்களுக்கு
ப்ரஸாதமாக வழங்கப்படுகிறது.

ஸ்ரீமத் பாகவதம்

மூலம் தமிழில்

904
பக்கங்கள்
விலை
ரூ.250/-

ஸ்ரீமத் பாகவத விஷயம்

கர்க ஸம்ஹிதை
நந்த நந்தன்
பார்த்தஸாரதி
பகவான் வாசுதேவன்
த்வாரிகாதீசன்
ஸ்துதி மணிகள்
ஸ்ரீமத் பாகவத ஸங்க்ரஹம்
தினசரி பாகவதம்
ஸ்ரீமத் பாகவத கதாம்ருதம்

ஸ்ரீமத் பாகவதம்

பெரிய எழுத்தில்
மூலம் தமிழில்

1064 பக்கங்கள்
விலை ரூ. 550/-

ஸ்ரீமத் பாகவதம்
ப்ரதி பத அர்த்தம்

மூல ஸ்லோகங்கள் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும், பதப்பிரிப்பும்
அர்த்தமும் தமிழில்,
7 பாகங்கள் - 6224பக்கங்கள்
விலை ரூ. 1500/

ஸ்ரீ பகவன் நாம்மா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

ஸ்ரீமத் ராமாயண விஷயம்

ராமாயண ஸங்க்ரஹம்
(SANSKRIT)
தினசரி ராமாயணம்
சுந்தரகாண்டம்

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

மூலம் தமிழில்

899 பக்கங்கள்
விலை ரூ. 450/-

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

தமிழ் வசனம்

7 பாகங்கள்
1322 பக்கங்கள்
விலை ரூ. 300/

ஸ்ரீமத் ராமாயண ரஹஸ்யம்

616 பக்கங்கள்

இந்த நூல் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ ராம நாம வங்கியின்
நாம உதவிகளுக்கு
நாமத்தை
ஆஸ்ரயிப்பவர்களுக்கு
ப்ரஸாதமாக வழங்கப்படுகிறது.

ஸ்ரீ துளஸீ ராமாயணம்

தமிழில் மூலமும் உரையும்

விலை ரூ. 350/-

764 பக்கங்கள்
8 வண்ணப்படங்கள் அடங்கியது

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

நந்தலாவின் எழுத்துக்களில்

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமஹாபாரதம்

ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்

இராமாயண ரஹஸ்யம்

பகவான் வாசுதேவன்

நந்த நந்தன்

பார்த்தஸாரதி

த்வாரிகாதீசன்

கர்கஸம்ஹிதை

உஜ்வல நீலமணி

ஸ்ரீ ஞானேஸ்வர்

பக்த துகாராம்

ஏகநாதர்

ராதே!பருந்தாவன ராதே!!

வ்ரஜ ரஸம்

ப்ரேம சாம்ராஜ்யம்

பக்தி

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

முன்னுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் கலிகாலத்தில் பிறக்கப் போகும் ஜனங்களின் துக்கம், மனக்கவலை, அறியாமை இவற்றைப் போக்கி, அவர்களுக்கு பரம அனுக்ரஹம் செய்யவே, தன் திவ்ய லீலை களை விவரிக்கும் ஸ்ரீ பாகவதத்தின் மூலம், ஸாதுக் களின் காதுக்கு அம்ருதமாயுள்ள தன் புகழை உலகில் பரவச் செய்தார். இந்த அம்ருதத்தை காதுகள் ஆகிய பாத்திரத்தில் வாங்கி அனுபவிக்கும் மனிதன், பக்திக்கும் முக்திக்கும் இடையூறாக இருக்கும் கர்மவாஸனையாகின்ற பந்தம் நீங்கப்பெற்று அவற்றை அடைகிறான் என்று ஸ்ரீபாகவதம் 9வது ஸ்கந்தம் 24வது அத்யாயம் 61,62 ஸ்லோகங்களில் கூறப்பட்டிருக்கிறது. மேலும், ஸ்ரீபாகவதத்தில் கலியில் கலுஷிதமான ஜீவன்களுக்கு ஏற்ற பகவன் நாம கீர்த்தனம், பகவானிடம் உறவு கொண்டுள்ள ஸாதுக்களின் ஸங்கம், க்ருஷ்ண பக்தியை வளர்க்கும் கதாச்ரவணம் இவற்றின் மஹிமையே கூறப்பட்டு இருக்கிறது.

வியாசர் ஸகல ஸாஸ்திரங்களையும் வெளியிட்டும், மன நிம்மதியின்றி எல்லா ஸாஸ்த்ரங்களின் ஸாரமாக பகவத் குண கீர்த்தன பிரதானமான ஸ்ரீபாகவதத்தை வெளியிட்டார். அதன் பின்னரே அவர் நிம்மதியடைந்தார். இதில் வேதோபனிஷத் ஸாரமே நிரம்பியுள்ளது.

Released by Maran's Dog, Toronto , Canada

பாகவதமே பகவான். பகவானே பாகவதம். ஸ்ரீக்ருஷ்ணன் தன் அவதார கார்யம் முடிந்தவுடன் பாகவதத்திலே நுழைந்து விட்டான். பாகவதத்தில் நுழைந்த பகவானை அதை படிப்பதாலேயே பார்க்க முடியும்.

இந்த பாகவதாம்ருதம் யாவருக்கும் எளிதில் கிடைக்கும்படி ஸ்ரீ பாகவத்தின் பாவ அர்த்ததுடன் கூடிய இந்த தமிழாக்கத்தை வெளியிட்டிருக் கிறோம். யாவரும் படித்து அனுபவித்து ஸ்ரீகிருஷ்ண க்ருபைக்கு பாத்திரர்கள் ஆகும்படி பிரார்த்திக் கிறோம்.

நாவுண்டு நீயுண்டு நாமம் தரித்து ஒத
பாவுண்டு தெஞ்சே பயமுண்டோ
பூவுண்டு வண்டு உறங்கும் சோலை மதில் அரங்கத்தே
உலகையுண்டு உறங்குவான் ஒருவனுண்டு.

இங்ஙணம்

"ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்"

ஸ்ரீமத் பாகவதம்-தமிழ் வசனம்

பாகம்–1

பொருளடக்கம்

		பக்கம்
முன்னுரை		1
	ஸ்கந்தம் –1	
1.	சௌனக ப்ரச்னம்	67
2.	ஸூதர் ப்ரத்யுத்தரம்	84
3.	பகவதவதாரங்கள்	94
4.	வியாசர் கவலை அடைந்தது	105
5.	வியாசருக்கு நாரதர் உபதேசம்	111
6.	நாரதருடைய முன் ஜன்மம்	123
7.	அர்ஜுனன் அச்வஸ்த்தாமாவை சிக்ஷித்தது	131
8.	பகவானை குந்தி ஸ்தோத்திரம் செய்தது	144
9.	பீஷ்மர் தர்மம் உரைத்தது	154
10.	ஸ்ரீகிருஷ்ணன் துவாரகை சென்றது	165
11.	துவாரகா வாசிகள் பகவானை உபசரித்தது	172
12.	பரீக்ஷித்தின் உற்பத்தி	181
13.	த்ருதராஷ்ட்ரர் வெளியில் சென்றது	188
14.	தர்மபுத்திரருக்கு நேர்ந்த அபசகுனங்கள்	199
15.	தர்மபுத்திரர் பரலோகம் சென்றது	206
16.	பரீக்ஷித் தர்மத்தைத் கண்டது	216
17.	பரீக்ஷித் மஹாராஜன் கலியை நிக்ரஹித்தது	223
18.	பரீக்ஷித்துக்கு நேர்ந்த ப்ராஹ்மண சாபம்	230
19.	கங்கை கரைக்கு சுகர் வந்தது	238

ஸ்கந்தம் –2

		பக்கம்
1.	விராட்புருஷனுடைய அவயவங்கள்	245
2.	பகவானிடத்தில் மனத்தை செலுத்தும் வகை	256
3.	பகவத் குணங்களின் மேன்மை	269
4.	பரீக்ஷித் ஜகத் சிருஷ்டியைப் பற்றி கேட்டது	274
5.	ஜகத்சிருஷ்டி	279
6.	விராட் புருஷனுடைய விபூதிகள்	288
7.	பகவானுடைய லீலாவதாரம்	297
8.	பரீக்ஷித்தின் கேள்வி	313
9.	சுகருடைய மறுமொழி	318
10.	தத்துவங்களின் உற்பத்தி உரைத்தது	328

ஸ்கந்தம்–3

1.	விதுரருக்கும் உத்தவருக்கும் சம்வாதம்	338
2.	உத்தவர் ஸ்ரீ கிருஷ்ண சரிதத்தை வர்ணித்தது	348
3.	ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதங்கள்.	355
4.	விதுரர் மைத்ரேயரைச் சந்தித்தது	360
5.	மைத்ரேயருக்கும் விதுரருக்கும் ஸம்வாதம்	366
6.	விராட் ஸிருஷ்டி	375
7.	விதுரருடைய பிரச்னங்கள்	381
8.	ப்ரஹ்மதேவருடைய உற்பத்தி	388
9.	ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ப்ரஹ்மதேவர் ஸ்தோத்திரஞ்	395
10.	பத்து வகையான சர்க்கங்கள்	405
11.	காலத்தின் ஸ்வரூபம்	410
12.	ஸனகர் முதலியவர்களுடைய ஸிருஷ்டி	417
13.	வராஹாவதாரம்	424
14.	திதி தேவி கர்ப்பத்தை அடைந்தது	433
15.	ஜய விஜயர்களுடைய சாபம்	442
16.	ஜய விஜயர்களுக்கு அனுக்கிரகம்	455
17.	திதிக்குப் புத்திரர்கள் பிறந்தது	462
18.	யக்ஞவராஹருக்கும் ஹிரண்யாக்ஷனுக்கும் யுத்தம்	467
19.	ஹிரண்யாக்ஷவதம்	472

ஸ்ரீமத் பாகவதம்

முன்னுரை

இது ஸ்ரீ பகவானுடைய அற்புத லீலைகளையும் அனந்த கல்யாண குணங்களையும் முக்கியமாய் வர்ணிக்கும் சுகருக்கு இது வ்யாச மஹர்ஷியால் சுகருக் கு உபதேசிக்கப் பட்டது, ஸ்ரீ சுகர் பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சொன்னார், அப்பொழுது சூதர் அவ்விட மிருந்து இக்கதையை ஸ்ரீ சுகபகவானின் அனுமதியின் பேரில் தெரிந்து கொண்டார். பிறகு அவர் நைமி சாரண்யத்தில் வசிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்குச் சொன்னார்.

ஸ்ரீமத் பாகவதம் என்பது யாது?

ஸ்ரீமத் பாகவதம் என்ற புராணம் எல்லா வற்றிலும் மேலானது (1) ஸகல உபநிஷத்துக் களால் நிரூபிக்கப்படும் பரமாத்மா இதனால் வர்ணிக்கப்பட்டிருக்கிறார். (2) வ்யாஸ மஹர்ஷியானவர் விஸ்தாரமான வேதங்களை பிரித்தும் பாரதம் முதலிய இதிஹாசங்களைச் செய்தும் தனது மனது ப்ரஸன்னமாகாததால் பகவானுடைய குணங்களையே முக்கியமாக வர்ணிக்க வேண்டும் என்று இதைச் செய்தார். (3) கீதா, ஸஹஸ்ரநாம, ராமாயண, இந்த சப்தங்கள் தனியே உச்சரிக்கப்பட்டாலும், அவை

முறையே பகவத்கீதை, விஷ்ணு சகஸ்ரநாமம், ஸ்ரீவால்மீகி ராமாயணம் என்பவற்றையே குறிப்பிடுதல் போல பாகவதம் என்ற சப்தமும் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் குணத்தைச் சொல்லும் விஷ்ணு பாகவதத்தையே காட்டுகிறது.(4) மேலும் இது ஸகல லோகங்களாலும் நமஸ்கரிக்கப்பட்ட பாதங்கள் உள்ள ஸ்ரீசுகமஹர்ஷியாலும் அத்யயனம் செய்யப்பட்டது. (5) இது மோக்ஷத்தை விரும்பிய பரீக்ஷித்து மஹாராஜனுக்கு சுகமஹர்ஷியால் மோக்ஷசாஸ்திரம் என்று உபதேசிக்கப் பட்டுள்ளது.

ஆட்சேபம்: "ஹேமாத்ரி என்னும் பெயருள்ள ஒரு ப்ரபுவினுடைய அரண்மனை வித்வான்களின் முக்கியரான போப தேவர் என்ற பண்டிதர் இருந்தார். அவர் கோபால பக்தனாக இருந்த அந்தப் ப்ரபுவை ஸந்தோஷப்படுத்துவதற்காக அவருடைய நியமனப்படி இந்தப் புராணத்தை எழுதி அரசனிடம் கொடுத்தார். அரசன் அதை முழுதும் மற்ற பண்டிதர்களுடன் பரிசோதித்து அதில் உள்ள பதச்சேர்க்கை முதலியவைகளால் ஆச்சர்யப்பட்டு அதனை உலகில் பரவச்செய்ய விரும்பி அதனை அனேகம் பிரதிகள் எழுதுவித்து பண்டிதர்களைக் கொண்டு வ்யாக்யானமும் செய்து பரவச்செய்தார்" என்ற ஒரு கதையை பெரியோர்களால் சொல்லக்கேட்டு இருக்கிறோம்; அப்படியிருக்க வ்யாஸர் செய்தார் என்பது பொருந்துமா ? என்றால்':–

ஸமாதானம்: இந்த விஷ்ணுபாகவதம் போப தேவர் செய்ததன்று. ஹேமாத்ரி என்ற ப்ரபு ஒரு

நாள் சபையில் வித்வான்களை நோக்கி," இரண்டு முகூர்த்தங்களில் பாகவதத்தின் அத்யாயச் சுருக்கங்களை ச்லோகமாகச் சொல்ல உங்களில் யார் சக்தியுள்ளவர்" என்று கேட்டார். அப் பொழுது போபதேவர் என்ற பண்டிதர் நாளைய தினம் சொல்கிறேன் என்றார். மறுநாள் பாகவதாத்யாயஸாரம் என்ற கதானு க்ரமணிகையை செய்து அந்த ப்ரபுவிடம் கொடுத்தார்.

அதன் முதல் ச்லோகம் பின்வருமாறு:" வித்வானாகிற போபதேவரால் மந்திரியாகிய ஹேமாத்ரியின் திருப்திக்காக இதில் ஸ்ரீமத் பாகவதத்தின் அத்யாய ஸாரம் நிரூபிக்கப் படுகின்றது." இதனால் ப்ரபு திருப்தி அடையா மலிருந்து அவருடைய நியமனப்படி பக்தி முக்தாபலம், பக்திலஹரி என்ற இரண்டு பக்தி நிரந்தங்களைச் செய்தார். அதனால் ப்ரபு பண்டிதரை மிகவும் கௌரவப்படுத்தினார்.

தவிர போபதேவர் செய்த க்ரந்தங்களின் விவரமானது பக்திமுத்தாபலம் என்னும் க்ரந்த த்தின் வியாக்யானத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதாவது ஸாஸ்திரங்களை படித்த வர்களுக்குள் சிறந்தவரான போப தேவரால் வ்யாகரணவிஷயமாக 10 க்ரந்தங்களும் மனிதர் களின் வைத்ய விஷயமாக 15 க்ரந்தங்களும் 16 வ்யாக்யானங்களும் ஸாஹித்ய விஷயமாக 3 க்ரந் தங்களும் செய்யப்பட்டன. அவைகள் யாவும் ஸல்லோராலும் கொண்டாடத்தக்கவைகளே. தவிரவும் இந்த போபதேவர் ஸ்ரீமத் பாகவத

க்ரந்தத்தை 22 தடவை படித்தார் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அவரால் வேத வ்யாஸ ஸ்தோத்திரமும் ஸ்லோகமாக செய்யப் பட்டு இருக்கிறது. மேற்காட்டிய காரணங் களால் முன்னே சொன்ன ஆக்ஷேபத்துக்கு இடமே இல்லை. தவிரவும் ஸ்ரீமத் பாகவதத்தின் முதல் ச்லோகத்தின் வ்யாக்யானத்தில் ஸ்ரீதரா சார்யாள் அவர்கள் "பாகவதம் என்பது வேறு என்று சந்தேகப்படக்கூடாது" என்பதாகச் சொல்லி இருக்கிறார்.

ஆட்சேபம்: ஸ்ரீமத் பாகவதம் வ்யாசரால் செய்யப்பட்டது என்பது முற்றிலும் பொருந்தாது. அந்த மஹர்ஷியினால் செய்யப்பட்ட மஹா பாரதம், ஸ்காந்தம், விஷ்ணு புராணம் முதலிய கிரந்தங்கள் எளிதில் படிக்கக்கூடியவை களாகவும் எளிதில் அர்த்தம் செய்து கொள்ள க்கூடியவைகளாகவும் இருக்கின்றன. இந்த பாகவதத்திலோ மேற்காட்டியவைகள் முற்றிலும் மாறிஇருக்கின்றன. ஒருவரால் செய்யப்பட்ட க்ரந்தங்களில் இவ்வளவு மாறுதல்கள் இருக்க நியாயமில்லை. ஆகையால் இதன் கர்த்தா வ்யாஸர் அல்லர் என்பதேயாம்.

சமாதானம்: சொல்லிய ஆக்ஷேபம் சரியானதே. ஆனாலும், ஸ்ரீவ்யாஸ பகவான் ஸ்ரீ நாராயணனுடைய அவதாரம். அவர் வேத–ராசியை ஜனங்கள் அத்யயனம் செய்ய முடியாமல் புத்திக் குறைவுள்ளவர்களாக இருக்கும் காலத்தில் அக்குறையை நீக்கு வதற்காக வேதங்களை நான்கு சாகைகளாகப்

பிரித்தார். அவற்றைப் படிப்பதற்கும் கேட்பதற்கும் அதிகாரம் இல்லாத ஸ்திரீகள், சூத்ரர்கள் இவர்களுக்காக மஹாபாரதம், இதிஹாஸம் முதலியவைகளை எளிதில் அர்த்தமாகும்படி எளிய நடையில் எழுதி வெளியிட்டார். அப்படியே வேதார்த்தத்தை பகவத்கீதை, ப்ரம்ஹஸூத்திரம் இவை களால் வெளியிட்டார். இப்படி மந்தாதிகாரிகளை உத்தேசித்து எளியவைகளைச் செய்தார். உத்தமாதி காரியான வித்வான்களுக்கு உபயோகப்படும்படி ஸகல வேதங்களால் நிரூபிக்கப்படும் பரமாத்மா வை கடினமான சந்தர்ப்பத்தால் வர்ணித்தார். ஆகையால் அதிகாரி பேதத்தால் நடையின் பேதம் ஏற்பட்டதே ஒழிய கர்த்தாவின் பேதத்தால் ஏற்பட்டதல்ல.

ரகுவம்சம், மேகசந்தேசம், நளோதயம், ஹரிச்சந்திரோபாக்யானம், நளோபாக்யானம் இவைகள் மஹா கவியான காளிதாஸரால் செய்ய ப்பட்ட கிரந்தங்கள். இவைகளின் பதங்கள், அவைகளின் சேர்க்கை, விருத்தி, பாகம் முதலியவைகள் வெவ்வேறாக காணப்படுகின்றன, அதனால் இவைகளை காளிதாஸர் எழுதவில்லை எனச் சொல்லக்கூடுமா?

மேலும், ஆத்மபோதம், ஸௌந்தர்யலஹரி இவைகள் ஸ்ரீமத் பகவத்பாதர்களால் செய்யப் பட்டவைகளானாலும், ஒன்றுக்கொன்று மேற்காட்டிய விஷயங்களில் மாறுபட்டுள்ளவைகளாக இருக்கின்றன. ஆகையால் ஸர்வக்ஞர்களாயும் பகவானுடைய அவதார பூதராயுமான வ்யாஸ மஹர்ஷியினுடைய வாக்கானது கங்காப் பிரவாஹம்

போலத் தடையற்றது.

ஆட்சேபம்: பாகவதம் என்பது தேவீபாகவதமே ஒழிய வ்யாஸ மஹர்ஷியால் செய்யப்பட்டது அல்ல. ஏனென்றால் "ஸ்ரீமத் பாகவதத்தை எழுதி ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்தில் வைத்துத் தானஞ்செய்பவருக்கு மோக்ஷம் கிடைக்கும்" மத்ஸ்ய புராணம். இதே விஷயத்தை ஸ்ரீ தரா சார்யாள் முதலியவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பற்றி கொஞ்சம் யோசிப்போம். ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்துக்கும் ஸ்ரீமத் பாகவதத் திற்கும் என்ன சம்பந்தம். ஸ்ரீமகாவிஷ்ணுவுக்கு கருடன் வாகனம் என்று பிரசித்தமே தவிர, சிங்கம் வாகனம் என்பது ஓர் இடத்திலும் சொல்லப்படவில்லை. வேறு வாகனமிருப்பதாகவும் தெரியவில்லை; பகவானே நரஸிம்ஹாவதாரஞ் செய்தவராகையால் ஸிம்மம் என்று சொல்லி இருக்கிறதென்று யோசிப்போமானால் பரமாத் மாவின் ஸ்வரூபமாகிய ஸிம்மத்தின் மீது அவரை நினைப்பிக்கும் க்ரந்தத்தை வைத்து தானஞ்செய்வது நியாயமாகுமா? ஆகையால் தேவீபாகவதம் என்று சொல்வதே உக்தமம். ஸிம்மம் ஸ்ரீதேவியின் வாகனமாகையால், அதில் வைத்துத் தானஞ் செய்வது மோக்ஷத்தைக் கொடுக்கும் என்பது பொருந்தும்.

ஸமாதானம்: முன்னே காட்டியுள்ள ஆக்ஷேபம் முற்றிலும் பொருந்தாது. ஸகல ஸ்வரூபியான ஸ்ரீ பகவானுக்கு, ஆஞ்சநேயர், குதிரை, யானை இவைகள் வாகனமாக இருக்கின்றன. இப்பொழுது தேவாலயங்களில் உத்ஸவ காலத்தில்

மேற்காட்டிய வாகனங்களில் பகவானை அலங்கரிப்பது வழக்கமாக இருந்துவருகிறது. "விஷ்ணுவின் வாகனங்களைச் சொல்கிறோம்: முதல்நாள் ஹம்ஸம், இரண்டாம் நாள் ஸிம்மம், முன்றாம் நாள் ஆஞ்சநேயர், நான்காம் நாள் ஆதிசேஷன், ஐந்தாம் நாள் கருடன், ஆறாம் நாள் யானை, ஏழாம் நாள் ரதம், எட்டாம் நாள் குதிரை, ஒன்பதாம் நாள் பல்லக்கு, பத்தாம் நாள் புஷ்பகம்" வைகானஸ தந்திரம், – தெய்வீக யக்ஞாதிகாரம், உத்ஸவ படலம்."பகவான் உத்ஸவ தினங்களில் ஹம்ஸம், ஸிம்மம், ஹனுமான், ஆதிசேஷன், கருடன், யானை, ரதம், குதிரை, பல்லக்கு, புஷ்ப மண்டபம் ஆகிய வாஹனங்களில் முறையே வீற்றிருந்து அர்ச்சாவதாரத்தின் மஹிமையை காண்பிக்கிறார்; அதிகாரிகை இதே விஷயம் வைசம்பாயன காரிகையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் பகவானுடைய அனந்த கல்யாண குணங்களை வர்ணித்து இருக்கும் ஸ்ரீமத் பாகவதம் ஸ்ரீமந் நாராயண ஸ்வரூபமே தவிர வேறில்லை. அதை ஸிம்ஹாஸனத்தில் வைத்து தானம் செய்வதில் கொஞ்சமேனும் ந்யாய விரோதமில்லை; 'ரிஷியின் அம்சம் இல்லாதவன் காவியம் எழுதமாட்டான்; விஷ்ணுவின் அம்சம் இல்லாதவன் அரசனாகிறதில்லை' என்றபடி அரசன், விஷ்ணுவின் அம்சம் உள்ள வனாகையால் ஸிம்ஹாஸனத்துக்குரியவனாகிறான். அப்படி இருக்க பகவானுக்கு ஸிம்ஹாஸனம் உண்டென்று ஏன் சொல்லக்கூடாது? ஹேமாத்ரி முதலிய க்ரந்தங்களில் தானப் பிரகரணத்தில் ரோகிகளின் வ்யாதி நிவர்த்திக்காக, அந்தந்த வ்யாதிக்குத்

தக்கபடி ஒரே தேவதையை அநேக வாகனங்களில் பூஜித்து தானம்செய்யும்படி சொல்லப் பட்டிருக்கிறது. அப்படிப்போல் ஸம்ஸார வ்யாதியால் உபத்திரவம் அடைந்தவனுக்கு அதன் நிவர்த்திக்காக இம்மாதிரியான தானம் பிராய சித்தமாகச் சொல்லப்பட்டது. தேவீ பாகவதம் முதலிய சக்தியை நிரூபிக்கும் க்ரந்தங்களில் தேவிக்கு ஸிம்மவாஹனம் என்று சொல்லப்பட்டு இருந்தாலும் ஸிம்மம் ஸ்ரீதேவியின் வாகனமே ஒழிய பகவானுடையதல்ல, என்று சொல்ல முடியாது. ஏனென்றால் ஸ்ரீதேவி மஹாவிஷ்ணுக்கு பத்னியாகையால் தான் பர்த்தாவினுடைய வாகனங்களில் தனதிஷ்டப்படி ஒருவேளை கருடன்மீதும், ஒருகால் ஸிம்மத்தின்மீதும் பின்னர் யானைமீதும் ஏறி ஸஞ்சரிக்கலாமே ஒழிய அவருக்குச் சொந்தமான வாகனம் இன்னதென்று கல்பிப்பது பொருந்தாது. வீடு, தோட்டம், வயல், பணம், வேலைக்காரர்கள், வேலைக்காரிகள், வாகனம், பசு, ஆபரணம், கடன் இவைகளில் பர்த்தாவுக்கு அதிகாரமே ஒழிய பத்னிக்கு அதிகாரம் இல்லையென்று மனுஸ்மிருதி முதலிய வைகள் சொல்லுகின்றன. ஸ்திரீ ஒருபொழுதும் ஸ்வாதந்திரயத்தையடையத்தக்கவளல்ல. புருஷன் உடைய வாகனங்களில் அவர்களுடைய பத்னி ஏறினதால் அவைகள் அவர்களுடையதாகி விடுமா? அப்படி உலகத்தில் வழக்கமும் இல்லை.

ஆட்சேபம்: ஸ்ரீ வ்யாஸ மஹர்ஷியானவர் இந்தப் பாகவத சாஸ்திரம் எல்லா உபநிஷத்துக்களுக்கு ஸமமானது என்று காட்டுவதற்காகவே ஸகல

வேதார்த்தங்களைச் ஸ்லோக ரூபமாகச் செய்தார். சில இடங்களில் வேதத்தில் உள்ளபதச் சேர்க்கையே காட்டி இருக்கிறார். வேதத்தின் அர்த்தம் அறியாமலேயே சம்பிரதாயப்படி படிப்பதால் மேலான பலன் கிடைப்பது போல் வேதத்திற்குச் சமமான ஸ்ரீமத்பாகவத கிரந்தத்தை தானஞ் செய்வதாலும் மோக்ஷம் கிடைக்கும் என்று சொல்லப்பட்டது. இதனால் புத்தகதானத்திற்கே இவ்வளவு பலன் கிடைக்குமாகில், குருமுகமாக சாஸ்த்ரமுறைப்படி இதைத் தெரிந்துகொண்டவனுக்கு முக்தி கிடைப்பது நிச்சயம் என்று பொருள். மோக்ஷத்தை விரும்பியவர்களும் இடையூராகிய பாபத்தை நிவர்த்தித்துக் கொள்ள முடியும். அதனால் பாகவத தானத்தால் மோக்ஷம் கிடைக்குமென்று வியாசமஹர்ஷி சொன்னார். "புத்தியள்ளவன் கலியுகத்தில் தானத்தாலேயே பாபத்தை நிவர்த்தித்துக் கொள்ளவேண்டும்"–விஷ்ணு ஸ்மிருதி. "மூவுலகத்திலும் தானத்தைவிட மேலானது ஒன்றுமில்லை. தானத்தால் ஸ்வர்க்கம், லக்ஷ்மி, சத்ருஜயம், வித்யை, ஸ்திரீகள், வ்யாதிநிவர்த்தி ஆகியவைகள் கிடைக்கும். —ஸௌர புராணம். இவ்வுலகத்திலும், பரலோகத்திலும் தானமே முக்கியமான க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது. இதுவே மோக்ஷத்துக்கு ஸாதனம் என்று வேதம் சொல்லுகிறது. ப்ரஹ்ம கைவர்த்த புராணம். க்ருதயுகத்தில் தபஸும், த்ரேதா யுகத்தில் ஞானமும், துவாபர யுகத்தில் யக்ஞமும், கலியுகத்தில் தானமும் க்ஷேமத்தைக் கொடுக்கும் —மனுஸ்மிருதி. ஆகையால் தானமே மேலானது —ச்ருதி. "ஸ்ரீகிருஷ்ண பகவான்,

அர்ஜுனனுடைய வார்த்தையை கேட்டு தர்ம புத்திரரை தமது கையால் தடவிச் சொன்னதாவது, ஓ அரசனே ப்ருஹ்ம ஹத்தியை, கள் குடிப்பது, திருடுவது, ஆசார்ய பத்னியைப் புணர்வது முதலிய பாபங்கள் தானத்தாலேயே நிவர்த்தி யாகின்றன. புத்திரன், பணம், புண்ணியம் முதலியவைகள் தானத்தாலேயே கிடைக்கின்றன —ஸ்காந்தம்.

ஆட்சேபம்: பாகவதத்திற்கு வ்யாக்யானம் செய்த ஸ்ரீதராசார்யார் முதலானவர்கள் முதல் ஸ்லோகத்துக்கு வ்யாக்யானம் செய்யும்பொழுது பாகவதலக்ஷணமாகக் காட்டிய வசனங்கள் பின் வருமாறு கண்டுகொள்க.

எந்தக் க்ரந்தத்தில் காயத்ரி மூலமாக தர்ம விஸ்தாரம் வர்ணிக்கப்பட்டிருக்கிறதோ விருத்ரா ஸுரனின் கதை எதில் இருக்கிறதோ அந்த 18000 க்ரந்தங்களுள்ளதே பாகவத புராணம் என்று சொல்லப்பட்டது. —மத்ஸ்ய புராணம். எதில் ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யை விருத்ராஸுர வதம் 18000 க்ரந்தங்கள் 12 ஸ்கந்தங்கள் ஆகிய இவைகள் இருக்கின்றனவோ எது காயத்ரியால் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறதோ அதை பாகவதம் என்று சொல்லுகிறார்கள் —ஸ்காந்தம். ஓ அம்பரீஷா! ஸம்ஸார பந்தம் நிவர்த்தியாக வேண்டுமானால் சுகரால் சொல்லப்பட்ட பாகவதத்தை பிறர் சொல்லக்கேட்கவேண்டும். தானாகவாவது படிக்க வேண்டும்—பத்மபுராணம். இது ப்ருஹ்ம ஸூத்ரங்களுடைய அர்த்தம்; மஹாபாரதத்தின் உண்மையான அர்த்தம் காயத்ரீ மந்திரத்துக்கு

பாஷ்யம். புராணங்களுடைய ஸாரம் வேதத்தின் அர்த்தங்களால் நிறைந்தது. 12 ஸ்கந்தங்கள் உள்ளது; 100 விச்சேதமுள்ளது, 18000 க்ரந்தங்கள் உள்ளது; பாகவதம் என்ற பெயருள்ளது— கருட புராணம்.

இதில் சொல்லியுள்ள லட்சணங்கள் யாவும் தேவீ பாகவதத்தில் பொருந்தி இருக்கின்றனவே ஒழிய விஷ்ணு பாகவதத்தில் பொருந்தியவைகளாக இல்லை. மேலும் மஹா மாயா ரூபியான சக்தியின் மஹிமையால் மஹாவிஷ்ணு ஹயக்ரீவர். ஆனார். தேவீ பாகவதம் ஸ்கந்தம் 1. அத்யாயம் 5, ஹயக்ரீவபரமாத்மா அகஸ்தியமஹர்ஷிக்கு உபதேசித்த தேவீ விஷயமான க்ரந்தங்களுக்கு ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யையென்று பெயர். அந்த வித்யை விஷ்ணுபாகவதத்திலாவது, மற்ற புராணங்களிலாவது சொல்லப்படாததானாலும், தேவீபாகவதமே பாகவதமென்பதற்கு அர்த்தம்.

ஸமாதானம்: பாகவதம் என்றால் விஷ்ணு பாகவதமென்றே அர்த்தம் கொள்ளவேண்டும். ஹயக்கிரீவ ப்ருஹ்மவித்யை என்றால் ஹயக்ரீவ பரப்ருஹ்மத்துக்கு மற்றவர் சொன்ன வித்தை என்றாவது ஹயக்ரீவர் பிறருக்குச் சொன்ன வித்தை என்றாவது அர்த்தம் செய்யக்கூடாது. ஹயக்ரீவர் பிறரிடம் உபதேசம் பெற்றார் என்றாவது பிறர்க்கு உபதேசித்தார் என்றாவது ஒரு க்ரந்தத்திலும் சொல்லவில்லை. பிரளய காலத்தில் எல்லா வித்தையும் காணாமல் கொண்டு

வந்தார், ஆதலால் ஹயக்கிரீவரால் கொண்டு வரப்பட்ட வித்யை என்றே அர்த்தம் செய்ய வேண்டும். மேலும் ப்ரஹ்ம சப்தத்துக்கு வேதம் என்று அர்த்தம் வைத்துக்கொண்டால் வேத வித்யை என்றும், உண்மை என்று அர்த்தம் கொண்டால் தத்வ ஞானம் என்றும், தபஸ் என்று அர்த்தம் கொண்டால் தபோ வித்யை என்றும், நான்கு முகங்கள் உள்ள ப்ருஹ்மதேவர் என்று அர்த்தங்கொண்டால் ப்ருஹ்மதேவருக்கு உபதேசம் செய்யப்பட்ட ப்ருஹ்ம வித்யை என்றும், ப்ராஹ்மணர்கள் அர்த்தம் செய்யக்கூடிய வித்யை யென்று அர்த்தம் ஏற்படுகிறதே ஒழிய தேவீ விஷயமான வித்யை என்ற அர்த்தம் ஏற்படவில்லை. ஆகையால் ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யை விஷ்ணு பாகவதத்திலேயே நிரூபிக்கப்பட்டு இருக்கிறது.

ஆட்சேபம்: தேவீ விஷயமான க்ரந்தங்களில் அகஸ்திய மஹர்ஷிக்கு ஹயக்ரீவர் மகாவித்யை உபதேசித்தார் என்று சொல்லி இருப்பது பொருந்துமா ?

ஸமாதானம்: பொருந்தும். ஹயக்ரீவரால் எடுத்து வரப்பட்டவைகளில் அகஸ்திய மஹர்ஷிக்கு உபதேசிக்கப்பட்ட மந்திரங்களும் சேர்ந்தவையாம். பூர்ணிமா திதியில் தானம் செய்யவேண்டும் என்று சொல்லி இருக்கிறது. சிவாலயங்களிலும், விஷ்ணு ஆலயங்களிலும் பஞ்ச பர்வங்களில் பூர்ணிமா திதியில் விசேஷமான ஆராதனம் செய்கிறார்கள். தேவீ ஆலயங்களில் பூர்ணிமா திதியில் யாதொரு விசேஷ ஆராதனமும்

நடப்பதாகத் தெரியவில்லை. மேலும் ஏகாதசி, பூர்ணிமா இந்தத் தினங்களில் ஹயக்ரீவரை ஜபித்தவன் மகானுபாவனாக ஆகிறான். ஹயக்ரீவோபநிஷத் ப்ருஹ்ம ஸூத்திரங்களுடைய அர்த்தமே "பாகவதம்" என்ற கருட புராணத்தில் சொல்லிய லக்ஷணம், தேவீ பாகவதத்தில் கொஞ்சமேனும் இல்லை விஷ்ணு பாகவதத்திலேயே பொருந்தி இருக்கிறது.

ஸ்ரீமத் பாகவத மஹிமை

முன்னொரு காலத்தில் நைமிசாரண்யத்தில் வசிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகள் ஸூதரை நோக்கி கோரமாகிய இக்கலியுகத்தில் பிராணிகள் அதர்மத்தில் ஆசையுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு பக்தி, ஞானம் வைராக்யம் விவேகம் ஆகிய இவைகள் எதனால் உண்டாகும்? எது பலவிதமான ச்ரேயஸ்ஸான தனங்களில் மேலானது? எது சுத்தமானவைகளுக்கும் பரிசுத்தியை உண்டு பண்ணுகிறது? எது ஸ்ரீ கிருஷ்ணனுக்கு மிகவும் பிரியத்தை உண்டு பண்ணக்கூடியது? சிந்தாமணியானது இவ் வுலகத்திய சுகத்தை மட்டும் கொடுக்கும். மகேந்திரன் ஸ்வர்க்க ஸுகத்தை மாத்திரம் கொடுப்பான். ஆச்சார்யர்களுக்கு சந்தோஷ முண்டானால் யோகிகளுக்கும் கிடைக்க அரிய தான வைகுண்ட பதத்தையும் கொடுப் பார்கள். ஆனதால் அதைச் சொல்லவேண்டும் என்று கேட்டார்கள்.

இதைக் கேட்ட ஸூதர் சௌனகரை நோக்கி, உமக்கு இவ்விஷயத்தில் பிரியம் உண்டானதால் எது ஸம்சார தாபத்தை நிவர்த்தி செய்யுமோ, எது ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு சந்தோஷத்தை உண்டு பண்ணுமோ, எது பக்தியை விசேஷமாக வ்ருத்தி செய்கிறதோ, அதனை யோசித்துச் சொல்லுகிறேன். ஜாக்கிரதையாக கேளுங்கள். பரீக்ஷித்து மஹாராஜனுக்கு சுகரால் உபதேசிக் கப்பட்ட ஸ்ரீமத் பாகவத சாஸ்திரமே சித்த சுத்தியை உண்டுபண்ணக்கூடியது; ஜன்மாந்திரத்தில்

புண்ணியம் செய்தவன்தான் பாகவதத்தைக் கேட்பான், படிப்பான். சபையில் பரீக்ஷித்துக்கு சுகர் பாகவத கதையைச் சொல்லும் பொழுது தேவர்கள் அனைவரும் அமிர்த குடத்தை எடுத்துக்கொண்டு வந்து சுகரை நமஸ்கரித்து இந்த அமிர்தத்தை அரசன் புஜிக்கட்டும். நாங்கள் பாகவதமாகிய அமிருதத்தை பானஞ் செய்கிறோம். நீர் அமிர்த குடத்தை அரசனுக்கு கொடுத்துவிட்டு கதாமிருதத்தை எங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். அதனைக் கேட்டு சமீபத்தில் இருக்கும் சக்ரவர்த்தியானவர், ரத்னத்துக்கும், காசமணிக்கும் எவ்வளவு பேதமோ அவ்வளவு தாரதம்யம் பகவத் கதைக்கும் அமிருதத்துக் குமுள்ளது என்று யோசித்து தேவர்களை நோக்கி சிரித்தார். சுகரும், தேவர்கள் பகவத் பக்தி இல்லாதவர்கள் என்று நினைத்து கதாம்ருதத்தை தேவர்களுக்குக் கொடுக்க சம்மதிக்கவில்லை. ஆகையால் பாகவதக் கதையானது தேவர்களுக்கும் அரிதாயிற்று. பின்பு பரீக்ஷித்து மகாராஜனுக்கு ஸ்ரீமத் பாகவதக் கதையால் மோக்ஷம் கிடைத்ததைப் பார்த்து ப்ருஹ்மதேவர் ஆச்சரியம் அடைந்து ஸத்ய லோகத்தில் தராசைக் கட்டி மோக்ஷ சாதனங்கள் எல்லாவற்றையும் நிறுத்தார். ஸ்ரீமத் பாகவதமே பாரமுள்ளதாக இருந்தது. மற்றவை இலகுவாகவிருந்தன. அதனைக் கண்டு ஸகல மஹர்ஷிகளும் மிகவும் ஆச்சரியப்பட்டு ஸ்ரீமத் பாகவதத்தை பகவானுடைய ஸ்வரூபமாக நினைத்தார்கள். அதனைப் படிப்பதாலும், கேட்பதாலும் உடனே மோக்ஷம் கிடைக்கும். இந்த

க்ரந்தத்தை ஏழு தினங்களில் முழுமையும் விதிப்படி கேட்டால் ஸகல பலன்களும் ஸித்திக்கின்றன. இதனை ஸனகர் முதலான யோகிகள் நாரதருக்கு முன் காலத்தில் உபதேசித்தார். தேவர்ஷியாகிய நாரதரும் ப்ருஹ்மத்தை வர்ணிக்கும் இந்தக் க்ரந்தத்தை கேட்டார். ஏழு நாட்களில் இதைக் கேட்க வேண்டிய முறையும் நாரதருக்கு அவர்களால் உபதேசிக்கப்பட்டது, என்று சொன்னார்.

இதைக் கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்கும் முறையைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற விருப்பம் நாரதருக்கு உண்டான காரணம் என்ன? அவர் பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை நன்றாக அறிந்தவர் அல்லவா? மேலும் ஸனகர் முதலிய ப்ருஹ்ம புத்திரர்களோடு நாரதருக்கு ஸம்வாதம் எவ்விடத்தில் நேர்ந்தது? இதற்குப் ப்ரத்யுத்தரம் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

அதனைக் கேட்டு ஸூதர் பின்வருமாறு விடை சொல்லலானார். "ஹே சௌனகரே சுகர் என்னை அந்தரங்க சிஷ்யனாக நினைத்து எனக்கு எதனை உபதேசித்தாரோ அதனை உமக்கு சொல்லுகிறேன். முன் ஒரு காலத்தில் விசாலா நகரத்தில் நான்கு மஹரிஷிகள் ஸாது ஸங்கம் செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் சேர்ந்தார்கள். அப்பொழுது அவ்விடத்தில் தெய்வச்செயலால் தேவர்ஷியாகிய நாரதரும் வந்தார். அவர்கள் நாரதரைக்கண்டு,

ஓ ப்ருஹ்மபுத்திரரே! நீர் ஒரு விஷயத்திலும் ஆசை இல்லாதவர்: அப்படி இருந்தும் மிக்க வேகமாக எவ்விடம் செல்லுகிறீர்? உம்முடைய முகம் வாடினதாகக் காணப்படுகிறது, அதற்குக் காரணம் என்ன? ஜனங்கள் பொருள் செலவழித்த காலத்தில் எப்படி வருத்தப்படுவார்களோ அப்படி சூன்ய சித்தராக இருக்கிறீர். நீர் இப்படி இருப்பது உசிதமல்ல. ஆதலால், அதன் காரணத்தைச் சொல்ல வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

அதைக் கேட்டு நாரதர் விடை சொன்னதாவது:– "நான் பூமியையே எல்லாவற்றிலும் மேலானது என்று நினைத்து, புஷ்கரம், பிரயாகை, காசி, கோதாவரி, ஹரிக்ஷேத்திரம், குருக்ஷேத்திரம், ஸ்ரீரங்கம், இராமேச்வரம் முதலிய தீர்த்தங்கள் சென்று எங்கும் அலைந்தேன். அப்படியும் மனதுக்கு சந்தோஷம் ஏற்படவில்லை. இந்தப் பூமி முழுவதையும் கலி அதர்மத்துடன் வியாபித்துக் கொண்டுவிட்டான். அதனால் சத்யம், தபஸ், சௌசம், தயை, கொடுப்பது ஆகிய இவை ஓர் இடத்திலாவது இருப்பதாகக் காணப்படவில்லை. எல்லா ஜனங்களும் தங்கள் தங்கள் வயிறு நிரம்ப புஜிப்பதில் மாத்திரம் ஆசையுள்ள வர்களாகவும், கபடமாகப் பேசும் தன்மை உள்ளவர் களாகவும், பாஷண்டர் களிடத்தில் (வேதவிரோதிகள்) ப்ரீதி உள்ளவர் களாகவும் இருக்கிறார்கள். ஒவ்வொரு வீடுகளிலும் ஸ்திரீகளே பிரபுவாயிருந்து அதிகாரம் செய் கிறார்கள். மைத்துனனே புத்தி சொல்லுகிறான். எல்லோரும் பெண்களை விலைக்குவிற்கிறார்கள்.

தம்பதிகள் ஒருவருக்கொருவர் கலகஞ்செய்து கொள் கிறார்கள். ஆசிரமங்கள், புண்ய தீர்த்தங்கள், நதிகள், தேவாலயங்கள் ஆகிய இவைகள் பெரும்பாலும் துஷ்டர்களால் கெடுக்கப்பட்டன. யோகி, சித்தன், ஞானி நல்ல கர்மாவைச் செய்பவன் ஆகிய இவர்கள் ஒருவரும் காணப்படவில்லை. நல்ல காரியங்கள் யாவும் கலியாகிய அக்னியால் எரிந்து சாம்பலாக்கப்பட்டன. ஒவ்வொரு தேசத்திலும் ஜனங்கள் அன்ன விக்ரயம் செய்கிறார்கள். ப்ராஹ்மணர்கள் வேதத்தை விற்கிறார்கள். ஸ்திரீகள் பெரும்பாலும் விபசாரம் செய்கிறார்கள். இம்மாதிரியான கலியின் விளையாட்டை எங்கும் பார்த்துக் கொண்டு நான் யமுனையின் கரைக்கு வந்தேன். அதுதான் ஸ்ரீ கிருஷ்ண பகவான் விளையாடின இடம். அவ்விடத்தில் ஒரு அற்புதத்தைக் கண்டேன். அதாவது யௌவன வயதுடைய ஒரு பெண் மனவருத்தத்துடன் அவ்விடம் இருந்தார். அவளுடைய பக்கத்தில் இரண்டு வயது சென்றவர்கள் பிரக்ஞை இல்லாதவர்களாக பெருமூச்சு விட்டுக்கொண்டு படுத்திருக்கக் கண்டேன். அந்தப் பெண் அவர்களுக்குப் பணிவிடை செய்தும், அழுது கொண்டும், தன்னைக் காப்பாற்றுகிறவர் யார் என்று பத்து திக்குகளையும் பார்த்துக் கொண்டு இருந்தாள். வெகு தூரத்திலேயே அவர்களைப் பார்த்து மிகுந்த ஆச்சரியம் அடைந்து உண்மையை தெரிந்து கொள்ள விரும்பி அவர்களுடைய சமீபம் சென்றேன். அந்தப் பெண் என்னை நோக்கி, "ஓ சாதுவே க்ஷணகாலம் தாங்கள் இவ்விடம் இருக்கவேண்டும்.

என்னுடைய கவலையை தீர்க்க வேண்டும். தங்களைப்போல் உள்ள சாதுக்களை தரிசித்தால் ஸகல பாபங்களும் நிவர்த்தியாகும் என்பதில் ஸந்தேகமில்லை. தங்களுடைய தரிசனம் வரும் க்ஷேமத்தைக் காட்டுகின்றது. தங்களுடன் ஸம்வாதம் செய்தால் பலவகையிலும் கவலை தீர்ந்துவிடும்." என்று தெரிவித்துக் கொண்டாள்.

அதைக்கேட்டு அந்தப் பெண்ணை நோக்கி "நீ யார்? இவ்விருவர்களும் யார்? ஓ தேவி! நீ கவலைப்படும் காரணம் என்ன? இவைகளை விஸ்தாரமாகச் சொல்" என்று கேட்டேன்.

அதனைக் கேட்டு அந்தப்பெண் சொன்னதாவது: எனக்கு பக்தி என்று பெயர். இவ்விருவரும் என்னுடைய புத்திரர்கள். ஒருவனுக்கு ஞானம் என்று பெயர். மற்றவனுக்கு வைராக்யம் எனப் பெயர். இவ்விருவர்களும் காலமஹிமையால் கிழத்தனத்தை யடைந்தார்கள். இந்தப் பெண்கள் கங்கை முதலிய நதிகள். என்னை சேவிப் பதற்காக வந்தவர்கள், மேலும் நான் தங்களிட த்தில் என் விஷயத்தை விஸ்தாரமாக தெரிவிக்க வேண்டியவளாக இருக்கிறேன். அதாவது நான் திராவிட (தமிழ்) தேசத்தில் பிறந்தவள். கர்நாடக தேசத்திலும், மஹாராஷ்ட்ர தேசத்தின் சில பாகங்களிலேயும் வளர்ந்தவள். கூர்ஜர தேசத்தில் கிழத்தனத்தை அடைந்தேன். மிக்க பாவியான கலியின் சாபத்தால் பாஷண்டர்கள் என்னுடைய அவயங்களை துண்டித்துவிட்டார்கள். ஆகையால் தேகபலம் குறைந்து புத்திரர்களுடன் மிகுந்த சிரமத்தை

அடைந்து இந்த பிருந்தாவனம் சேர்ந்தேன். இவ்விடம் வந்தவுடன் அழகான சரீரம் உள்ள யௌவனமுடையவளாக ஆனேன். இதோ படுத்துக்கொண்டு இருக்கும் இவ்விரு குழந்தைகளும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கிழத்தனமுள்ளவர்களாக இருப்பதால் அவர்களைப் பார்த்து நானும் துக்கிக்கிறேன். உலகத்தில் தாய் வயது சென்றவளாகவும் புத்திரர்கள் யௌவனமுள்ளவர்களாகவும் இருப்பது பழக்கம். இப்பொழுது புத்திரர்கள் வயது சென்றவர்களாகவும், புத்திரர்களுடைய தாயாகிய நான் யுவதியாகவும் இருக்கக் காரணம் யாது? நாங்கள் நால்வரும் எப்பொழுதும் சேர்ந்தே சஞ்சரித்துக் கொண்டிருக்கிறோம். தாங்கள் யோகிகளுக்குள் சிறந்தவர்களாகையால் இவ்விஷயத்தை அறிந்து சொல்ல வல்லமை உள்ளவராவீர். ஆதலால் என்னிடம் கிருபை வைத்து என்னுடைய சந்தேகத்தைத் தீர்க்கவேண்டும்'' என்று கேட்டாள்.

அதைக் கேட்ட நான் அந்தப் பெண்ணை நோக்கி "ஓ பால்யப்பெண்ணே நான் எல்லா விஷயத்தையும் ஞானக் கண்ணால் அறிந்து சொல்கிறேன். நீ கவலைப்பட வேண்டாம் ஸ்ரீ நாராயணன் உனக்கு க்ஷேமத்தைச் செய்வார் என்று சமாதானம் செய்து ஒரு க்ஷணநேரத்தில் அவ்விஷயங்களைத் தெரிந்துகொண்டு, பின்னும் அந்தப் பெண்ணைப் பார்த்து பின்வருமாறு சொன்னேன். பெண்ணே இந்தக்கலியுகம் மிகவும் மோசமானது. அதனால் நல்லொழுக்கம், யோகமார்க்கம், தவம் ஆகிய இவைகள்

கெடுக்கப்பட்டன. எல்லா ஜனங்களும் அசுரர்கள் போல் கெட்ட காரியத்தையே செய்கிறார்கள். ஸாதுக்கள் துக்கப்படுகிறார்கள். அஸாதுக்கள் சந்தோஷிக்கிறார்கள். இந்தக்காலத்தில் எவன் நல்ல காரியத்தை அனுஷ்டிக்கிறானோ அவனே தீரன் என்று சொல்லப் படுகின்றான். இந்தப் பூமி ஒவ்வொரு வருஷங்களிலும் முறையே ஸ்பர்சிக்க தகாதவர்களும் பார்க்கத்தகாதவர்களும் ஆதிசேஷனுக்குச் சுமையாகிவிட்டாள். நல்ல கர்மங்கள் ஒரிடத்திலும் காணப்படவில்லை. உன்னையும் உன்னுடைய புத்திரர்களையும் இக்காலத்தில் ஒருவரும் பார்க்கிறதில்லை. ஜனங்கள் விஷயங்களில் ஆசைக்கொண்டு காரியம் அகாரியம் என்ற பகுத்தறிவு இல்லாதவர்களாகி உன்னை ஆதரிக்காமல் உபேக்ஷித்தபடியால் நீ இளைத்திருக்கிறாய். இந்த பிருந்தாவனத்தின் மஹிமையால் நீ யுவதி ஆனாய். பக்தியானது இவ்விடத்தில் இல்லாததினால் இவர்களுக்கு கிழத்தனம் போகவில்லை என்று மறுமொழி சொன்னேன். அப்போது அந்தப்பெண் மிக்க பாபியான கலியை பரீக்ஷித்து மகாராஜன் ஏன் உலகத்தில் வைத்திருந்தார்? கலியுகம் வந்தவுடன் முன்னிருந்த ஸகல வஸ்துக்களின் ஸாரங்களும் எங்கே போயின? மிகுந்த தயையுள்ள ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் ஏன் பார்த்திருந்தார்? என்று கேட்டாள். அதைக்கேட்டு நான் பின்வருமாறு சொன்னேன்: ஸ்ரீ கிருஷ்ணபகவான் பூமியில் இருந்து வைகுண்டம் சென்ற தினத்திலேயே உலகத்தில் கலி வந்துவிட்டான். அப்பொழுது அரசனாக இருந்த பரீக்ஷித்து திக்விஜயம்

செய்துவரும் காலத்தில் வழியில் கலியைக் கண்டார் அவனும் அவரை சரணம் அடைந்தான்.

அவர் தவம், யோகம், சமாதி ஆகிய இவைகளால் அடையக்கூடாத உத்தமமான பிரயோசனம் பகவானுடைய நாமங்களை பஜனை பண்ணுவதனால் இக்கலியில் எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது என்று நினைத்து கலியுகத்தில் பிறக்கும் மனிதர்களுடைய ஸௌக்கியத்தின் பொருட்டே கலியைக் கொல்லவில்லை. கெட்ட காரியங்களைச் செய்வதனால் வஸ்துக்களுடைய ஸாரம் போய்விட்டது. ப்ராஹ்மணர்கள் ஒவ்வொரு வீட்டிலும் அரிசிக்கு ஆசைப்பட்டு பாகவத கதையைச் சொல்ல ஆரம்பித்ததால் கதையின் ஸாரம் போய்விட்டது. மேலும் ப்ராஹ்மணர்கள் மிக்க கோரமான பல காரியங்களையும் செய்து நாஸ்திகர்களாக (பரலோகத்தில் சிரத்தை இல்லாதவர்களாக) ஒவ்வொரு தீர்த்தக் கரைகளில் வஸிப்பதால் தீர்த்தத்தின் ஸாரம் போய்விட்டது. காமம், கோபம், லோப விஷயங்களில் ஆசை ஆகிய இவைகளால் கலங்கிய மனம் உள்ளவர்கள் தவம் செய்வதால் தவத்தின் ஸாரம் போய்விட்டது. மனிதர்கள் மனதை அடக்காமல் உலோபம் உம்பம் இவைகளை அடைந்து பாஷண்ட மதத்தை ஆசிரயித்தும் தியான யோகத்தின் ஸாரம் போய்விட்டது. வித்வான்களும் மோக்ஷத்தையடைய முயற்சியாமல் எருமைகள் போல் ஸ்திரீகளுடன் ரமித்து புத்திரர்களை உண்டு பண்ணுவதிலேயே சாமர்த்தியத்தை அடைந்திருக்கிறார்கள். பெரியோர் களுடைய சம்பிரதாயப்படியுள்ள விஷ்ணுபக்தி

ஒரிடத்திலும் இல்லை. இம்மாதிரி ஒவ்வோரிட ங்களிலும் வஸ்துக்களின் ஸாரம் போய் விட்டது. ஆனால் இது யுகத்தின் தர்மம். எவர் மீது குற்றஞ் சொல்லக்கூடும்? அதனால் தானே சமீபத்தில் இருக்கும் புண்டரீ காக்ஷன் (தாமரைக்கண்ணன்) இதை சகித்துக் கொண்டி ருக்கிறார் என்று சொன்னேன். இதனைக்கேட்டு அந்த பெண்ணானவள் "ஓ தேவ ரிஷியே! நீர் மிகவும் மேலானவர் என்னுடைய அதிர்ஷ்ட வசத்தால் நீர் இவ்விடம் வந்தீர். ஸாதுக் களுடைய தரிசனம் ஸகல சித்திகளையும் கொடுக்கும். தங்கள் உபதேசத்தால் ப்ரஹ்லாதர் என்பவர் மாயையைக் கடந்து ஆத்ம ஸ்வரூபத்தை அடைந்தவராக விளங்குகிறார். மேலும் தங்களுடைய கிருபையால் துருவர் என்பவர் சாஸ்வதமாகிய (துருவ) பதத்தை அடைந்தார். ஆகையால் ஸகல க்ஷேமத்தைக் கொடுப்பவரும் ப்ருஹ்மதேவரின் புத்திரருமாகிய தங்களை நமஸ்கரிக்கிறேன். என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள். அதனைக்கேட்டு நான் பின்வருமாறு சொன்னேன். "ஓ சிறு பெண்ணே! ஏன் கவலைப்படுகிறாய்? ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரை மலர்போன்ற பாதங்களை இடைவிடாது தியானஞ்செய்: துக்கம் ஒருபோதும் நேரிடாது. துச்சாதனன் முதலியவர்களால் செய்யப்பட்ட உபத்திரவித்திலிருந்து திரௌபதியைக் காப்பாற்றினார். கோப ஸ்திரீகளை ஸம்ரக்ஷித்தார். அவர் இப்பொழுது தேசாந்திரம் போகவில்லை. உன்னிடத்தில் தமது ப்ராணனைக்காட்டிலும்

விசேஷமான ப்ரியம் வைத்திருக்கிறார். பக்தியாகிய உன்னால் அழைக்கப்பட்டு அவர் நீசர்களுடைய வீட்டுக்கும் வருகிறார். கிருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம் இம்மூன்று யுகங்களிலும் முறையே ஸத்யம், ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகள் மோக்ஷத்துக்கு ஸாதனங்களாக இருந்தன. இக்கலியுகத்தில் பக்தி மாத்திரத்தாலேயே மோக்ஷம் கிடைக்கிறது; ஆனது பற்றியே ஞான ஸ்வரூபியாகிய பகவான் உனக்கு சரீரத்தை உண்டு பண்ணினார். பின்பு நீ ஒருக்கால் இரு கைகளையும் கூப்பிக்கொண்டு நான் என்ன செய்யவேண்டும் என்று பகவானைக் கேட்டாய். அப்பொழுது அவர் என் பக்தர்களை போஷிக்க வேண்டும் என்று ஆக்ஞாபித்தார். நீயும் அதனை ஒப்புக் கொண்டாய். அதனால் பகவான் சந்தோஷித்து முக்தியை உனக்கு ஊழியப் பெண்ணாக இருக்கும்படி செய்தார். பின்னும் ஞானம், வைராக்கியம் என்ற இவர்களை உன்னிடம் ஒப்படைத்தார். பின்பு நீ வைகுண்டத்தில் உன்னுடைய நிஜ ரூபத்துடன் இவர்களை போஷித்து வந்தாய். பூமியில் பக்தி விருத்தியாக் வேண்டியதற்காக சாயா ஸ்வரூபமயமான ரூபத்துடன் முக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய இவர்களுடன் பூமிக்கு வந்தாய். கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் ஆகிய இம் மூன்று யுகங்களிலும் மிகுந்த ஆனந்தத்துடன் இருந்தாய். கலியில் முக்தி என்னும் பெண் பாஷண்டர்களாகிய வியாதியால் மிகவும் குறைந்துவிட்டாள். அவள் உன்னுடைய அனுமதியினால் வைகுண்டத்துக்கு மறுபடியுஞ் சென்றாள்..

உன்னால் நினைக்கப்படும் போதெல்லாம் வைகுண்டத்திலிருந்து வருவதும் போவதுமாக இருக்கிறாள். ஞானம், வைராக்கியம் இவ்விருவர் களும் புத்திர சிநேகம் கொண்டு உன்னால் காப்பாற்றப்பட்டும், இக்கலியில் ஜனங்கள் அவர்களை உபேஷித்து விட்டபடியால் வயது சென்றவர்களாகி விட்டார்கள். ஆனாலும் உன்னுடைய கவலையை நான் போக்கடிக்கிறேன். இக்கலியுகத்துக்குச் ஸமமான யுகம் வேறில்லை. இந்த யுகத்திலும் ஒவ்வொரு ஜனங்கள் இடத்திலும் உன்னை ஸ்திரமாக இருக்கும்படி செய்கிறேன். அப்படிச் செய்யாவிடில் நான் விஷ்ணு பக்தன் அல்ல. கலியில் முக்கிய பாவிகளான ஜனங்களும் பகவத் பக்தியை பெற்று வைகுண்டத்தை அடைகிறார்கள். யமன், பிசாசங்கள், ராக்ஷதர்கள், அசுரர்கள் ஆகிய இவர்கள் பக்தி உள்ளவர்களை உபத்திரவிக்க மாட்டார்கள். பக்தியால் பகவான் வசப்படுவது போல தவம், வேதம், ஞானம், நல்லகர்மா இவைகளால் ஸ்வாதீனப் படுவதில்லை. அந்த விஷயத்தில் புண்ணியம் செய்தால் தான் பக்தி பண்ணவேண்டுமென்ற விருப்பமுண்டாகும்.கலியில் பக்தியே மேலானது. பக்தியை நிந்தித்ததால் துர்வாஸர் துக்கத்தை அடைந்தார். அனேக விரதங்களாலும், புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் பண்ணுவதாலும், போகங்களாலும், யாகங்களாலும், முக்தியைக் கொடுக்கக்கூடியது, என்று சொன்னேன். "இதனைக் கேட்டு பக்தியாகிய அந்தப்பெண் என்னை நோக்கி "ஓ நாரதரே நீர் மிகவும் மேலானவர். உம்மிடத்தில் எனக்கு மிகுந்த பிரீதி

உண்டாகி யிருக்கிறது. உம்மை ஒருபொழுதும் விடமாட்டேன். உம்முடைய மனதில் எப்பொழுதும் வசிப்பேன். தங்களுடைய அனுக்கிரஹத்தால் என் கவலை தீர்ந்துவிட்டது. ஆனாலும் என்னுடைய இந்த புத்திரர்களுக்கு மூர்ச்சை தெளிய வில்லை. இவர்களை எழுப்பிவிடும்'' என்று வேண்டிக் கொண்டாள்.

அப்பொழுது எனக்கு அவளிடத்தில் தயை உண்டாயிற்று. பின்பு நான் அவ்விருவர்களுடைய காதில் உபநிஷத் வாக்கியங்களையும் கீதா வாக்கியங் களையும் சொல்லி ''ஓ ஞானமே விழித்துக்கொள். ஓ வைராக்கியமே எழுந்திரு'' என்று இரைந்து சொன்னேன். அப்பொழுது அவர்கள் கொட்டாவி விட்டுக்கொண்டு எழுந்து இருந்தார்கள். ஆனாலும் பசி, தாகம் முதலிய வற்றால் வருத்தப்பட்டு மறுபடியும் படுத்துத் தூங்க யத்தனித்தார்கள். அது கண்டு நான் என்ன செய்கிறது என்று பகவானை த்யானஞ் செய்தேன். அப்பொழுது ''ஓ மஹர்ஷியே! ஏன் விசனப்படுகிறீர். புண்ணிய கர்மாக்களை அனுஷ்டிப்பீர் ஆனால், இவர்களுடைய தூக்கமும் கிழத்தனமும் நீங்கும். அந்தக் கர்மங்களை சில ஸாதுக்கள் உபதேசிப்பார்கள். அதனால் பக்தியானது உலகம் முழுவதும் பரவிவிடும் என்று ஆகாசத்தில் இருந்து ஒரு தொனி உண்டாயிற்று. அதனை நானும் மற்றவர்களும் கேட்டு ஆச்சரியம் அடைந்தோம். பின்பு ஆகாச வாணியால் சொல்லப்பட்டபடி எப்பொழுது, எந்தவிடத்தில் எவர்கள் எந்த கர்மங்களை நமக்கு உபதேசிப்பார்களோ என்று நான்

யோசித்து ஞானம், வைராக்யம் இவ்விருவர் களையும் அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு ஒவ்வொரு புண்ய தீர்த்தங்களுக்கும் சென்று இவ்விஷயத்தைப் பற்றி ஒவ்வொரு மஹர்ஷி களையும் கேட்டுக் கொண்டே சஞ்சரித்தேன். ஒருவரும் எந்தக் கர்மாவை அனுஷ்டிக்க வேண்டும் என்று நிச்சயமாகச் சொல்லவில்லை. சிலர் இதைச் செய்ய முடியாத காரியம் என்றும், பின்னும் சிலர் இதனைத் தெரிந்து கொள்வதே சிரமம் என்றும் சொன்னார்கள். சிலர் பேசாமலே இருந்துவிட்டார்கள். சிலர் இதனைக் கேட்டு இருந்த இடத்தைவிட்டே ஓடிப் போனார்கள். மேலும் எல்லா வேதங் களாலும், கீதா வாக்கியங்களாலும் விழித்துக் கொள்ளாத ஞான வைராக்கியங்கள் வேறு எந்த உபாயத்தால் எழுந்திருக்கப் போகிறார்கள்.? நாரத மஹர்ஷியாலும் அறியப்படாத விஷயம் மற்ற மஹர்ஷிகளால் சொல்லமுடியுமா? என்று ஜனங்கள் ரகசியமாக பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். அப்பொழுது எனக்கு யாதொரு நிச்சயமும் உண்டாக வில்லை. ஆனாலும் பதரிகா வனம் சென்று தவம் செய்யத் தொடங்கினேன். அவ்விடத்தில் மிக்க தேஜஸ் விகளான ஸனகர் முதலிய யோகிகளைக் கண்டேன். கண்டவுடன் விசேஷ ஆனந்தம் அடைந்து அவர்களை நோக்கி ஓ யோகி சிரேஷ்டர்களே! நான் செய்த பாக்ய விசேஷத்தால் தங்களைக் கண்டேன்.

நீங்கள் ஐந்து வயதுள்ளவர்களானாலும் முன்னோர்களுக்கும் முந்தியவர்கள். எப்பொழுதும்

வைகுண்டத்திலேயே இருப்பவர்கள். ஸ்ரீ மஹா விஷ்ணுவின் லீலைகளை கானஞ் செய்பவர்கள். எப்பொழுதும் பகவானையே சரணமடைந்தவர்கள். ஆகையால் ஜரை (கிழத்தனம்) உங்களை உபத்திரவிப் பதில்லை. ஆகையால் என்னை அனுக்கிரஹிக்க வேண்டும். ஆகாச வாணியால் சொல்லப்பட்ட கர்மங்கள் எவை? பக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகள் எல்லா வர்ணாச்சரமங்களிலும் ஸ்திரமாய் வசிக்கும்படி என்ன உபாயம் செய்யலாம் அதனைச் சொல்லவேண்டும் என்று கேட்டேன். அப்பொழுது அவர்கள் என்னைப் பார்த்து ஓ தேவரிஷியே இவ்விஷயத்தில் லகுவான உபாயமொன்றிருக்கிறது. நீர் வைராக்கியத்தை அடைந்தவர்களுள் மேலானவர். பகவத் பக்தர்களுட் சிறந்தவர். ஆகையால் பக்தியை உலகத்தில் ஸ்தாபிப்பதற்கு நீர் தகுதியானவரே அனேக மகரிஷிகள் அனேக மார்க்கங்களை காட்டியிருக்கிறார்கள். ஆனாலும் அவைகள் பெரும்பாலும் ஸ்வர்க்கத்தையே கொடுக்கக் கூடியவைகளாகவிருக்கின்றன. மேலும் ச்ரமப்பட்டு செய்யக் கூடியவைகளாயுமிருக்கின்றன; மோக்ஷத்தை கொடுக்கும் மார்க்கம் மிகவும் ரஹஸ்யமானது. அதனை உபதேசிப்பவர்கள் கிடைப்பதரிது. ஆகாச வாணியால் சொல்லப்பட்ட கர்மம் யாதெனில் ஜ்ஞான யக்ஞமேயாம். சிலர் திரவ்ய யஜ்ஞத்தை (யாகம்) அனுஷ்டிக்கிறார்கள். பின்னும் சிலர் தபோ யஜ்ஞத்தையும் மற்றும் சிலர் யோக யஜ்ஞத்தையும், இன்னும் சிலர் ஸ்வாத்யாய யக்ஞத்தையும் (வேதங்களை அத்யயனம் செய்வது) அனுஷ்டிக்கிறார்கள். இவைகளில் ஜ்ஞான யஜ்ஞமே

மேலானது. அது சுகரால் பரீக்ஷித் மஹாராஜனுக்கு உபதேசிக்கப்பட்ட பாகவதத்தைக் கேட்பதேயாகும். அந்தப் பாகவத சாஸ்த்ரத்தைக் கேட்பதால் பக்தி ஜ்ஞான வைராக்கியங்களுக்கு நேர்ந்த கஷ்டமும் விலகும். மேலும், சிங்கத்தின் சப்தத்தைக் கேட்ட செந்நாய்கள் போலப் பாகவதக் கதையைக் கேட்ட மாத்திரத்தில் கலியின் தோஷங்கள் யாவும் ஓடுகின்றன. பக்தியானது, ஜ்ஞானம் வைராக்யம் ஆகிய இவைகளுடன் ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு ஜனங்களிடத்திலும் நன்றாய் ப்ரகாசிக்கும் என்று உபதேசித்தார்கள்.

அப்பொழுது நான் அவர்களைப் பார்த்து "ஓ ப்ரம்ஹ தேவரின் குமாரர்களே! வேதாந்த வாக்யங்களாலும், கீதா பாடத்தாலும் விழித்துக் கொள்ளாத அவர்கள் பாகவத பாடத்தால் எழுந்திருப்பார்களா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் பின்வருமாறு விடை சொன்னார்கள். ஸ்ரீமத் பாகவத கதையானது உபநிஷத்துக்களின் ஸாரத்தால் செய்யப்பட்டதாகையால் இது மிகவும் மேலானது. பாலில் நெய் இருந்தாலும் அது எப்படி தனியாகத் தெரியவில்லையோ அதுபோல வேதத்தில் ஸாரமானது எங்கு இருந்தாலும் நன்றாய்ப் பிரகாசிக்கவில்லை. ஆனாலும், அந்தப் பாலைக் காய்ச்சிக் கடைந்து அதிலிருந்து தனியாக நெய் எடுக்கப்பட்டால் அது தேவர்களுக்கு மிகவும் திருப்தியை உண்டு பண்ணுகிறது. தவிரவும் கரும்பில் அடி முதல் நுனி வரையில் சர்க்கரை இருந்தாலும் அதனைப் பிரித்தெடுத்த பிறகுதான் புஜிக்கக்

கூடியதாகிறது. அது போலவே வேதத்திலுள்ள ஸாரங்கள் எல்லாவற்றையும் எடுத்து ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்டது. இது பக்தி, ஞானம், வைராக்யம் இவைகளை உலகத்தில் ஸ்தாபிப்பதற்காகவே வெளியிடப்பட்டது. முன் னொருகால் ஸ்ரீவேதவ்யாஸ மஹர்ஷி ஸ்ரீமத் மஹாபாரதத்தைச் செய்தும், வேதங்களை அத்யயனஞ் செய்தும் உபநிஷத்துக்களின் உண்மையான அர்த்தத்தைத் தெரிந்து கொண்டும், பகவத் கீதையைச் செய்தும், அக்ஞானம் விலகாமல் தாபமடைந்து ஸரஸ்வதி நதிக்கரையில் கவலைப் பட்டுக் கொண்டிருக்கும்பொழுது உம்மால் நான்கு ச்லோகங்கள் உபதேசிக்கப்பட்டன; அவைகளைக் கேட்டு அவர் உடனே கவலை தீர்ந்தவராக, அவைகளைக் கொண்டு பாகவதத்தைச் செய்தாரல்லவா ?அப்படி இருக்க பாகவதத்தை கேட்பதால் துக்கம் விலகுமாவென்று நீரே கேட்பது மிகவும் ஆச்சர்யமாக விருக்கிறது' என்று சொன்னார்கள். பின்பு நான் அவர்களைக் கொண்டாடி, அவர்களை நோக்கி இந்த ஞான யஜ்ஞத்தை எவ்விடத்தில் செய்யலாம் ? எவ்வளவு நாட்களில் பாகவதம் கேட்கப்படவேண்டும் ? அதன்முறை எப்படி ? பாகவத சாஸ்த்ரத்தின் மஹிமையை ஸகல வேதங்களுமறிந்த தாங்களே சொல்லவேண்டும்' என்று கேட்டுக் கொண்டேன்.

அப்பொழுது அவர்கள், "ஓ நாரதரே! கங்கையின் ஸமீபத்தில் ஆனந்த வனமென்பது ஒன்று உண்டு. அது மிகவும் ஏ்காந்தமான இடம். ஜலஸௌக்யமுள்ளது; அனேக மஹர்ஷிகள்

அவ்விடத்தில் வஸிக்கிறார்கள்' அவ்விடத்தில் வஸிக்கும் பறவை முதலியவைகளுக்கும் இயற்கையான விரோதம் இல்லை. அவ்விடத்தில் பாகவத கதையைச சொல்லுவதாகிய ஜ்ஞான யஜ்ஞத்தை நீர் நடத்த வேண்டும், அவ்விடத்திற்கு பக்தியானவள் தன் புத்ரர்களுடன் வருவாள். அந்தக் கதையைக் கேட்ட மாத்திரத்தில் அவர்கள் யௌவன வயஸை அடைவார்கள்' என்று சொல்லி என்னை அழைத்துக் கொண்டு பாகவத கதையைக் கேட்பதற்காக ஆனந்தவனம் சென்றார்கள். அப்பொழுது இதனைக் கேட்டுப் பூலோகம், தேவலோகம், ப்ரஹ்மலோகம் ஆகிய இவ்விடங்களிலிருந்து பகவத் பக்தர்கள் எல்லோரும் ஆனந்தவனம் சென்றார்கள். அன்றியும் ப்ரகு, வஸிஷ்டர், ச்யவனர், கௌதமர், மேதாதிதி, தேவலர், தேவராதர், பராசுராமர், விச்வாமித்ரர், சகலர், மார்க்கண்டேயர், பிப்பலாதர் முதலிய மஹர்ஷிகளும், வ்யாஸர், பராசரர் முதலிய யோகிகளும், சாயாசுகர், ஜாஜலி, ஜஹ்னு முதலியவர்களும் தங்கள் தங்களுடைய ஸ்திரீகள், புத்ரர்கள், சிஷ்யர்கள் முதலியவர்களுடன் கங்காதீரஞ் சென்றார்கள். மேலும் ஆறு சாஸ்த்ரங்களும், பதினேழு புராணங்களும், நான்கு வேதங்களும், கங்கை முதலிய நதிகளும், புஷ்கரம் முதலிய குளங்களும், க்ஷேத்ரங்களும் பத்து திக்குக்களும், தண்டகை முதலிய வனங்களும், மேரு முதலிய மலைகளும் திவ்ய சரீரமுள்ளவைகளாய்க் கதையை கேட்பதற்காக அவ்விடம் வந்து கூடின. மேலும் தேவர்கள், கந்தர்வர்கள், கின்னரர்கள் ஆகிய இவர்களும்

வந்தார்கள். எல்லோருக்கும் ஆசார்யர்களான ஸனகர் முதலியவர்களை ப்ரகுமஹர்ஷி தாம் நேரில் அழைத்து வந்தார். அப்பொழுது அந்த ஜ்ஞான யஜ்ஞத்தில் நான் தீக்ஷை செய்து கொண்டு அந்தக் குமாரர்களுக்கு ஆஸனங் கொடுத்து நமஸ்காரஞ்செய்து அவர்களைப் பூஜித்தேன். அங்கே ஒருபக்கத்தில் மஹர்ஷிகளும் மற்றொரு பக்கத்தில் தேவகணங்களும், இன்னொரு பக்கத்தில் வேதம் உபநிஷத் முதலியவைகளும், மற்றொரு பக்கத்தில் தீர்த்தங்களும், இன்னொரு பக்கத்தில் ஸ்திரீகளும், தங்களுக்குத் தகுந்த ஆஸனங்களில் உட்கார்ந்தார்கள். 'ஜய்' என்றும், 'நமஸ்காரம்' என்றும் சப்தங்கள் மிகுதியா யுண்டாயின, சங்க வாத்தியங்கள் முழங்கின. ஆகாசத்தில் தேவர்கள் விமானங்களிலிருந்து கல்பக விருக்ஷத்தின் புஷ்பங்களின் மழையைப் பெய்தார்கள். இப்படி எல்லோரும் ஒரே மனமாய் பாகவத மாஹாத்மியத்தைக் கேட்க விரும்பியிருக்கும் பொழுது என்னை உத்தேசித்து ப்ரஹ்ம குமாரர்கள் பின்வருமாறு சொன்னார்கள்: 'ஸ்ரீமத் பாகவத கதையை ஜனங்கள் எப்பொழுதும் கேட்வேண்டும். அதனைக் கேட்டமாத்திரத்தால் பகவான் மனதில் ஆவிர்ப்பவிக்கிறார். இது பதிமிண்ணாயிரம் க்ரந்தங்களடங்கியது. பன்னிரண்டு ஸ்கந்தங்கள் உள்ளது. பரிக்ஷித்து மஹா ராஜனுக்கு சுகரால் உபதேசிக்கப்பட்டது. இதுவே மோக்ஷத்தை கொடுக்கக்கூடியது. மற்றப் பலவையான சாஸ்த்ரங்கள் புத்திக்கு மயக்கத்தை யுண்டுபண்ணுகின்றன. எந்த வீட்டில் பாகவத கதை படிக்கப்படுகிறதோ

அதுவே புண்ய க்ஷேத்ரமாகும், அச்வமேதயாகங்கள், நூறு வாஜபேயங்கள் இவைகளை ஆயிரம் செய்தாலும், அதனாலுண்டாகும் புண்யமானது பாகவத கதையைப் படிப்பதனா லுண்டான ஸுகிருதத்தின் 16ல் ஒரு பாகத்திற்கும் ஸமமாகாது. ஒவ்வொரு நாளும் பாகவதத்தில் ஒரு ச்லோகத் தையாவது அதன் பாதியையாவது அவசியம் படிக்க வேண்டும். ஒவ்வொரு வேதங்களின் முதல் மந்த்ரங்கள் வேத மாதாவாகிய காயத்ரீ மஹாமந்தரம், புருஷ ஸூக்தம், வேதங்கள், பாகவதம், த்வாதசாக்ஷரம், ஸூர்யன், ப்ரயோகம், ஸம்வத்ஸரமாகிய காலம், ப்ராஹ்மணர்கள், அக்னிஹோத்ரம், காமதேனு, த்வாதசி திதி, துளஸி, வஸந்தருது, புருஷோத்தமராகிய நாராயணர், ஆகிய இவர்களுக்குள் தாரதம்யமில்லை. எவன் ஒவ்வொரு நாளும், பாகவதத்தை படித்து அதன் அர்த்தத்தை தெரிந்துகொள்ளுகிறானோ, அவனுக்கு கோடி ஜன்மங்களில் செய்யப்பட்ட பாபங்களும் நிவர்த்தியாகின்றன. தவிரவும், மரண காலத்தில் இந்தச் சுக சாஸ்த்ரத்தைக் கேட்பதால் வைகுண்டத்தையடைவார்கள். இந்தப் பாகவத புஸ்தகத்தை ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்தில் வைத்து விஷ்ணுபக்தர்களுக்குத் தானம் செய்கிறவன் ஸ்ரீகிருஷ்ணனுடைய ஸாயுஜ்ய பதத்தையடைகிறான். பிறந்தது முதல் ஒரு பொழுதாவது பாகவத கதையைக் கேட்காதவன் சண்டாளனுக்கும், கழுதைக்கும் ஸமானனென்று சொல்லப்படுகிறான். தவிரவும், அவனை பக்தர்கள் உயிருள்ள பிணமென்றும், பூமிக்குச்சுமையாயிருப்பவனென்றும் சொல்லுகிறார்கள். இந்த கதையை இந்திரியங்களை

ஜயித்து, மனத்தை அடக்கி வெகுநியமத்துடன் கேட்கவேண்டுமாதலால் அவ்வளவு நியமத்தை அனுஷ்டிப்பது இக்கலி காலத்து ஜனங்களால் முடியாததாகுமென்றும், இவர்களுக்கு ஆயுஸ் மிகக் குறைந்ததென்றும் யோசித்து சுகர் ஏழு நாளில் இதைக் கேட்கவேண்டுமென்று ஒரு விதி நியமித்திருக்கிறார்.

அந்த விதிப்படி ஏழு நாளில் பாகவதத்தை கேட்பதனால் ஸகல யாகங்கள் செய்த பலன்களும், ஸகல வ்ரதங்களை அனுஷ்டித்த பலன்களும், ஸகல தீர்த்தங்களில் ஸ்நானம் செய்த பலன்களும் உண்டாகும் என்று எனக்கு உபதேசித்தார்கள் என்று ஸூதர் சௌனகர் முதலிய மஹர்ஷி களுக்குச் சொன்னார். இதைக் கேட்டுச் சௌனகர், பாகவத புராணம் மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியதென்றும், மற்றவைகளைக் காட்டிலும் மேலானதென்றும், தாங்கள் சொல்லக் கேட்டு மிகவும் ஆச்சர்யமடைந்தோம். அவ்வளவு மேன்மை அந்தச் சாஸ்த்ரத்திற்குக் கிடைத்த காரணமென்ன? சொல்ல வேண்டும் என்றார். அதனைக் கேட்டு ஸூதர் அவரை நோக்கிச் சொன்னார். "ஓ சௌனகரே! ஸ்ரீ கிருஷ்ண பகவான் பூமியை விட்டுத் தம் உலகம் போகும் முன்னிலையில் உத்தவர், பகவானை நோக்கித் தாங்கள் வைகுண்டம் சென்றால் பக்தர்களை யார் ஸம்ரக்ஷிப்பார்? கலியுகத்தில் ஜனங்கள் துஷ்டர்களாகிவிடுவார்கள்; நிர்குணமாகிய உம்முடைய ஸ்வரூபத்தை ஜனங்கள் உபாஸிப்பது மிகவும் கஷ்டம். அதற்காகவே தாங்கள் பூமியில் அவதாரஞ் செய்திருக்கிறீர்கள். ஆகையால்

இவ்வுலகத்திலேயே வஸிக்க வேண்டுமேயொழிய மேலுலகம் செல்லக் கூடாது என்று வேண்டிக் கொண்டார். இதனைக் கேட்டு பகவான், 'பக்தர்களுக்காக நாம் செய்யவேண்டியதென்ன? என்று யோசித்து? தேஜோ ரூபியாக ஸ்ரீமத் பாகவதத்தில் ப்ரவேசித்தார். அதனாலேதான் அது எல்லாவற்றிலும் மேலானது. அதனைக் கேட்பதாலும், படிப்பதாலும் துக்கம், தாரித்ரியம், பாபம் முதலாகிய இவைகள் நிவர்த்தி யாகின்றன. ஏழு நாளில் இந்த க்ரந்தம் முழுவதையும் விதிப்படிக் கேட்டால் தேவர்களாலும் தாண்ட முடியாத விஷ்ணுவின் மாயையைக் கடந்து ஸ்வரூபஜ்ஞானத்தை அடையலாம். 'ஓ சௌனகர் முதலியவர்களே! இப்படி பாகவதத்தின் மஹிமையை வர்ணித்தவுடன் ஆனந்தவனத்தில் பக்தியின் புத்ரர்களான ஜ்ஞான வைராக்கியர்கள் மிக்க பலத்துடனும் அழகான சரீரத்துடனும் எழுந் திருந்தார்கள். பக்தியும், ஹே கிருஷ்ண!, ஹே கோவிந்த! ஹே முராரே! என்று சொல்லிக் கொண்டு விசேஷ சந்தோஷமடைந்தாள். பின்னும் அவர்களுடைய ஆஜ்ஞையால் பகவத்பக்தருடைய மனதில் வஸித்து வந்தாள். மேலும் அவ் விடத்தில் ஸ்ரீமந்நாராயண மூர்த்தி நீருண்ட மேகம் போலக் கறுத்த திருமேனியோடு நான்கு கைகளிலேயும் சக்ரம் முதலிய ஆயுதங்களை ஏந்திப் பீதாம்பரத்தையுடுத்திக் கொண்டு துளஸி மாலையால் அலங்கரிக்கப் பட்டுக் கோடி மன்மதனைப் போல அழகு உள்ளவராகி பக்தர்களுக்கு தர்சனங் கொடுத்தார். அப்பொழுது எல்லோரும் பரமானத்தத்தை யடைந்து பகவானை ஸ்தோத்ரம் செய்தார்கள். மேலும் ஸ்ரீமத் பாகவதமே மேலானதென்றும்

தெரிந்து கொண்டார்கள்.

ப்ராஹ்மணர்களுடைய பொருள்களை அபஹரிப் பதாகிய மஹாபாபங்களைச் செய்தவர்களும் ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்பதனால் பரிசுத்தராகி விடுகிறார்கள் என்பதில் ஸந்தேக மில்லை. துங்கபத்ரா நதிக்கரையில் ஒரு பட்டணத்தில் ஆத்மதேவரென்ற ஒரு ப்ராஹ்மண ச்ரேஷ்டரிருந்தார். அவர் ஸகல வேதங்களையும் அத்யயனஞ் செய்தவர். ஸூர்யன் போன்ற தேஜஸ் உள்ளவர். தன்னுடைய வர்ணாச்ரம தர்மங்களைக் குறைவின்றி நடத்தி வருபவர். ஆனால் அவர் மிகுந்த ஏழை. அவருக்குத் துந்துலீ என்ற பத்னியொருத்தியுண்டு. அவள் மிகவும் அழகுள்ளவள், மேலான குலத்தில் பிறந்தவள், ஆனாலும் வெகுவாகப் பேசுகிறவள், வீட்டு வேலைகளில் மிகவும் ஸாமார்த்திய முள்ளவள். சண்டையில் மிகுந்த ப்ரியமுள்ளவள். தான் சொன்னதே சரியென்று ஸ்தாபிக்கும் ஸ்வபாவமுள்ளவள். அந்தத் தம்பதிகளிருவர்களும் பல வகையான தர்மங்களை அனுஷ்டித் தார்கள். அப்படியும் அவர்களுக்குப் பெண்ணாவது பிள்ளையாவது பிறக்கவில்லை. அதனால் கவலையடைந்து அந்த ப்ராஹ்மணன் வீட்டை விட்டுக் காட்டுக்குச் சென்றார். அவ்விடத்தில் மத்யானகாலத்தில் ஒரு குளத்தில் ஸ்நானம் பண்ணித் தாஹத்தைத் தீர்த்துக் கொண்டு தெய்வச் செயலால் அவ்விடம் வந்த ஒரு ஸன்யாசியின் அருகிற் சென்று அவரை நமஸ்கரித்துப் பெருமூச்சு விட்டு அவருடைய பக்கத்தில் நின்றார். அவரைப் பார்த்து

ஸன்யாஸியானவர், ஓ ப்ராஹ்மண! நீர் ஏன் துக்கப்படுகிறீர் என்று கேட்டார். அதனைக் கேட்டுப் ப்ராஹ்மணன் அந்த ஸன்யாஸியை நோக்கி, எனக்குப் புத்திரனில்லை என் வீட்டில் இருக்கும் பசுவும் மலட்டாயிருக்கிறது, என்னால் வைத்து வளர்க்கப்பட்ட மரமும் புஷ்பிக்கிறது மில்லை காய்க்கிறதுமில்லை, என் வீட்டிற்கு கொண்டு வந்த பழங்களும் காய்ந்து போகின்றன. குழந்தைகளிலில்லாமலும், பாக்யமில்லாமலும் இருக்கும் நான் பிழைத்திருந்து என்ன ப்ரயோஜனம் என்று சொல்லி மிகவும் கதறினார்.

அதனைக் கேட்டு அந்த ஸன்யாஸியானவர் அவருடைய நெற்றியில் எழுதப்பட்டிருக்கும் அக்ஷரங்களை வாசித்துப் பார்த்து ப்ராஹ்மணனை நோக்கி, ஓ ப்ராஹ்மண! உமக்கு ஏழு ஜன்மம் வரையில் பிள்ளை பிறக்காது, ஸகரர் என்னும் ராஜன் புத்ர சோகத்தை அடைந்தாரல்லவா? ஆகையால் பிள்ளை பிறக்கவில்லை யென்று நீர் வருத்தப்படுவது நியாயமில்லை. ஆகையால் குடும்பத்தின் ஆசையை யொழித்து ஸன்யாஸஞ் செய்துகொள்ளும் என்றார். அதனைக் கேட்டும் ப்ராஹ்மணன் கொஞ்சமேனும் அதற்கு ஸம்மதிக் காமல் விஷய ஸுகத்திலேயே ஆசைப்பட்டு பிள்ளை பிறக்கும்படி அனுக்ரஹிக்க வேண்டுமென்று பலவாறாக வேண்டிக் கொண்டார். ஸன்யாஸி யானவர்; "ஓ ப்ராஹ்மண! தெய்வச் செயலை மாற்றுவதற்கு யாரால் முடியும்? அதனை மாற்ற முயன்றால் துக்கத்தையே அடையும்படி நேரிடும். ஆகையால் உமக்கு புத்ரஸுகம்

கிடைக்காது. ஆயினும் உமக்கு ஒரு பழத்தைக் கொடுக்கிறேன். இதனை உம்முடைய பத்னியிடம் கொடுத்து புஜிக்கும்படி செய்யும். உத்தமமான புத்ரன் பிறப்பான் என்று சொல்லிப் பழத்தைக் கொடுத்தார். ப்ராஹ்மணன் அதைப் பெற்றுக் கொண்டு தம்முடைய வீட்டிற்கு வந்து தமது பத்னியிடம் கொடுத்து அவளை நோக்கி, இது முதல் ஒரு வருஷம் வரையில் ஒருவேளை போஜனம் செய்துகொண்டு, ஸத்யம், சௌசம், தயை, இவைகளில் தவறாமல் நியமத்துடன் நீ இருக்கவேண்டும். இப்பழத்தை புஜி. நல்ல பிள்ளை பிறக்கும், என்று சொல்லிவிட்டு, கிராமாந்தரம் போய்விட்டார். அந்தத் துந்துலீ என்பவள் தன்னுடைய தோழிகளின் முன்பாக இவ்விஷயங்கள் எல்லாவற்றையும் சொல்லி வருத்தப்பட்டாள். எப்படியென்றால் இந்தப் பழத்தை நான் புஜித்த மாத்திரத்தில் வயிற்றில் கர்ப்பம் உண்டாய்விடும். வயிறு பெருத்துவிடும். ஆசாரம் குறைந்துவிடும். தேஹத்தில் வலிமை குறையும். வீட்டு வேலைகளை எப்படிச் செய்ய முடியும்? வயிற்றுக்குள்ளிருக்கும் கர்ப்பமானது வெளி வருவது மிகவும் கஷ்டம், ஒருக்கால் சிசு வயிற்றில் குறுக்காக விழுந்துவிட்டால் நான் உயிரையிழக்கும்படி நேரிடுமே! ப்ரஸவ காலத்தில் உண்டாகும் உபத்ரவத்தை நான் எப்படி ஸஹிப்பேன்? இந்த ஒருவருஷம் நியமமா யிருப்பது மிகவும் கஷ்டம். நான் ப்ரஸவித் திருக்கும்பொழுது வீட்டிலிருக்கும் எல்லா தனங்களையும், பர்த்தாவின் ஸஹோதரியானவள்

அபஹரித்துவிடுவாள். ப்ரஸவித்தபிறகு குழந்தையைக் காப்பாற்றுவது மிகவும் கஷ்டம். ஆகையால், மலடியாகவாவது விதவையாகவாவது இருப்பதே மேலானதென்று நினைக்கிறேன். என்று சொல்லி அப்பழத்தை அவள் புஜிக்கவில்லை. பின்பு ப்ராஹ்மணன் தமது பத்னியை நோக்கிப் பழத்தை புஜித்தாயா என்று கேட்க அவள் புஜித்தேன் என்றும் அவருக்குச் சொன்னாள். இந்தச் சமயத்தில் அந்த துந்துலியின் ஸஹோதரி ஒருத்தி தெய்வச் செயலாய் அவள் வீட்டுக்கு வந்தாள். அப்பொழுது துந்துலீ அவளிடத்தில் இவ்விஷயம் முழுவதையும் சொன்னாள். அதைக் கேட்டு அவள் துந்துலியை நோக்கி நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். நான் இப்பொழுது கர்ப்பமாயிருக்கிறேன், நான் ப்ரஸவிக்கிற வரையில் நீ வீட்டிற்குள்ளேயே இருந்து கர்ப்பிணியாகயிருப்பதுபோலப் பிறருக்குச் சொல்லிக்கொண்டு இரு. உன் வீட்டிலிருக்கும் பணம் முழுவதையும், நீ என் புருஷனுக்கு கொடுத்துவிடுவாயானால், எனக்குப் பிறக்கும் குழந்தையை உனக்குக் கொடுத்து விடுகிறேன். உன் வீட்டில் வந்திருந்து, குழந்தையையும் வளர்க்கிறேன். இந்தப் பழத்தைப் பசுவுக்குக் கொடுத்து விடு, என்று சொன்னாள். அவளும் அப்படியே செய்தாள். பின்பு அவள் ப்ரஸவித்ததும் அந்தக் குழந்தையை அதன் தகப்பன் ரஹஸ்யமாகத் துந்துலியினிடம் கொடுத்தான். துந்துலியும் 'ஸுகமாய் ப்ரஸவித்தேன்' என்று தன்னுடைய பர்த்தாவிடம் தெரிவித்தாள். அந்த ஆத்மதேவர் மிகுந்த ஸந்தோஷமடைந்து

ஜாதகர்மம் முதலியவைகளைச் செய்தார். அப் பொழுது துந்துலியானவள் தனது பர்த்தாவை நோக்கி, 'ஸ்தனத்தில் பாலில்லை, எத்தனை நாள் அன்யர்களுடைய பாலைக் கொண்டு குழந்தையை வளர்க்க முடியும். என்னுடைய தங்கையின் குழந்தை இறந்து போய் விட்டதால் அவளுக்குப் பால் மிகுதியா யிருக்கிறது. அவளை வரவழைத்து வீட்டில் வைத்துக் கொண்டு குழந்தையை வளர்க்கும்படி செய்ய வேண்டும்' என்று சொன்னாள், அவரும் அதற்கு சம்மதித்து அப்படியே செய்தார். அந்தக் குழந்தைக்கு துந்துகாரி என்று பெயர் வைக்கப்பட்டது. அதற்குப்பின் மூன்று மாதம் கழித்து வீட்டிலிருந்த பசுவானது ப்ரஸவித்தது. நல்ல தேஜஸ்வியும், அழகுள்ளவனுமான புத்ரன் பிறந்தான். ஆனால் அக்குழந்தைக்கு காது மட்டும் பசுவின் காது போலிருந்தது, அதனால் அவனுக்கு கோகர்ணனென்னு பெயரிடப்பட்டது. அவன், வித்வானாயும், சுத்தனாயும், ஆசாரமுள்ளவனாயு மிருந்தான். துந்துகாரியோ மிகவும் துஷ்டனாகியும், திருடனாகியும், அசுத்தனாகியும், மஹா பாபியாகியுமிருந்தான். இப்படிச் சில காலம் சென்ற பிறகு துந்துகாரியானவன் தாஸிகள் இடத்தில் ஆசைப்பட்டுப் பணம் முழுவதையும் செலவழித்துத் தாய் தகப்பன் இருவர்களையும் அடித்து வீட்டிலிருக்கும் பாத்திரங்களையும் பிடுங்கிக் கொண்டு போனான். அப்பொழுது அவனுடைய தகப்பனாராகிய ஆத்மதேவர், அபுத்ரனாயிருப்பதே மேலானது; இந்தத்

துஷ்டப்பிள்ளையையடைந்து நான் மிகவும் கஷ்டப்படுகிறேன். என்னை இப்பொழுது யார் காப்பாற்றுவார்கள்? என்று கத்தினார். அப் பொழுது கோகர்ணன் ஸம்ஸாரத்தின் துக்கங்களை அவருக்குச் செவ்வையாக எடுத்துரைத்து வைராக்யத்தை உண்டுபண்ணினான். பின்பு அவர் புத்ரனுடைய உபதேசத்தால் வீட்டை விட்டுக் காட்டுக்குச் சென்று ஒவ்வொரு நாளும் பாகவதத்தில் பத்தாவது ஸ்கந்தத்தைப் படித்து அதனால் ஸ்ரீகிருஷ்ண ஸாயுஜ்யத்தையடைந்தார். பிறகு அந்தத் துந்துகாரியென்பவன், தாயாரை நோக்கி வீட்டில் பணம் எங்கேயிருக்கிறது? சொல்லு, இல்லாவிடில் உன்னை கொல்வேன், என்று அதட்டினான். அதனால் அவள் ஒருநாள் இரவில் ஒரு கிணற்றில் விழுந்து மரண மடைந்தாள். கோகர்ணனென்பவன் விஷயங்களில் ஆசையில்லாதவனாகித் தீர்த்தயாத்ரை செய்து கொண்டிருந்தான். துந்துகாரியென்பவன் வீட்டிலேயே ஐந்து தாஸிகளை வைத்துக் கொண்டு அவர்களைப் போஷிப்பதற்காக கெட்ட காரியங்களையே செய்து வந்தான். அந்தத் தாஸிகள் நகை வேண்டுமென்ற விருப்பத்தால் அவனை நிர்ப்பந்தித்தார்கள். அதற்காக அவன் தேசாந்தரம் சென்று நல்லவஸ்தரங்கள் நகைகள் முதலியவைகளைத் திருடிக் கொண்டு வந்து கொடுத்தான். இப்படி மிகுதியான பணத்தையும் நகைகளையும் இவன் திருடிக்கொண்டு வந்திருக் கிறான் என்று தெரிந்து அந்தத் தாஸிகள் ஒரு நாள் ராத்ரி இவன் இவ்வளவு வஸ்துக்களையும்

திருடிக்கொண்டு வந்திருப்பதனால் அரசனுடைய சேவகர்கள் இவ்விடம் வந்து நம்மை பிடித்துக் கொள்வார்களே என்று யோஜித்து ஒருவருக்கும் தெரியாமல் கயிறுகளால் இவனைக் கட்டி கழுத்தில் சுருக்கிட்டார்கள். அப்படியும் அவன் சீக்கிரத்தில் மரிக்கவில்லை. அப்பொழுது அவர்கள் அக்னியை அவன் முகத்திற்போட்டு உபத்ரவிக்க அவன் இறந்தான். பின்பு அவன் சரீரத்தை ஒருவருக்கும் தெரியாமல் ஓரிடத்தில் அடக்கம் செய்தார்கள். மறுநாள் துந்துகாரி எங்கேயென்று கேட்பவர்களுக்குப் பணம் ஸம்பாதிப்பதற்காக தேசாந்தரம் போயிருக்கிறானென்றும், ஒரு வருஷத்தில் திரும்பி வருவானென்றும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இறந்துபோன துந்துகாரி அவனுடைய பாபத்தால் ப்ரேத ஜன்மத்தையடைந்து வாயு சரீரத்துடன் அங்குமிங்கும் அலைந்து கொண்டு வெயில், குளிர், பனி, மழை இவைகளை ஸஹித்தும்; பசி, தாஹத்தால் துன்பத்தை யடைந்தும் மிகவும் துக்கித்துக் கொண்டிருந்தான். சில காலத்தில் கோகர்ணன் துந்துகாரி இறந்து போனானென்பதைக் கேள்விப்பட்டு அவனை உத்தேசித்து கயாக்ஷேத்திரத்தில் ச்ராத்தம் செய்ததுமின்றி ஒவ்வொரு தீர்த்தங்களிலும் அவனை உத்தேசித்துப் பிண்டதானம் முதலிய வைகளையும் செய்தான்.

பிறகு சில காலத்தில் தன்னுடைய பட்டணம் வந்து தன்னுடைய வீட்டின் திண்ணையில் அன்று ராத்ரிப் படுத்திருந்தான். அப்பொழுது

ப்ரேத ரூபியாயிருக்கும் துந்துகாரி, அவ் விடத்தில் படுத்திருக்கும் தன் பந்துவைப் பார்த்து, ஒருக்கால் ஆடுபோலவும், பின்னு மொருக்கால் யானை போலவும், எருமை போலவும், இந்திரன் போலவும், அக்னி போலவும், புருஷன் போலவும், பலவகையான ரூபத்தை எடுத்துக் கொண்டான். கோகர்ணன் அவனைப் பார்த்து, 'நீ, யார்? ப்ரேதமா அல்லது பிசாசமா அல்லது ராக்ஷஸனா? என்று கேட்டான். இதைக்கேட்டு விடை சொல்லமுடியாமல் அழுது கொண்டு அது ஜாடை காட்டினது. அப்பொழுது கோகர்ணன் இருகையிலும் ஜலத்தையெடுத்து ப்ரோக்ஷித்தான். அதனால் அது தன்னுடைய பாபங்கள் விலகி விடை சொல்ல ஆரம்பித்தது. 'நான் உன்னுடைய ஸஹோதரன், எனக்கு துந்துகாரியென்று பெயர். நான் செய்த பாப கர்மங்களால் ப்ராஹ்மண ஜன்மம் போய்விட்டது; அனேக ப்ராணிகளை ஹிம்ஸித்துத் தாஸிகளைப் போஷித்து வந்தேன்; கடைசியில் அவர்களாலேயே கொல்லப்பட்டேன்; அதனால் ப்ரேத ஜன்மத்தை அடைந்து கஷ்டப்படுகிறேன்; நீ எனக்குப் பந்துவாகையால் என்னிடத்தில் தயைசெய்து என்னைக் காப்பாற்று' என்றது.

அதனைக் கேட்ட கோகர்ணன், 'ஓ' துந்துகாரியே உனக்காக கயா க்ஷேத்திரத்தில் விதிப்படி பிண்டதானஞ் செய்தேன். அப்படியிருக்க உனக்கு ப்ரேதமாயிருக்கும் தன்மை ஏன் போகவில்லை? இனி நான் செய்யவேண்டிய

தென்ன ? என்று கேட்டான். அதைக் கேட்டு அந்த ப்ரேதமானது நூறு கயா ச்ரார்த்தம் செய்தாலும் என்னுடைய பாபம் நிவர்த்தி யாகாது. ஆகையால் வேறு ஓர் உபாயத்தை யோஜிக்கவேண்டும் என்றது. அதைக்கேட்டு கோகர்ணன், உன்னுடைய பாபங்கள் விலக்கத் தகுந்த உபாயத்தை ஆலோசித்து அதை அனுஷ்டிக்கிறேன். அதுவரையில் நீ கவலை யற்றவனாகியிரு என்று சொல்லிவிட்டு, ராத்ரி முழுவதும் அது விஷயமாக யோசித்தும் யாதொரு நிச்சயமும் தோன்றாதவனாயிருந்தான்.' காலையில் அந்தப் பட்டணத்திலிருக்கும் ஜனங்கள் எல்லோரும் தேசாந்தரத்திலிருந்து வந்த கோகர்ணனைப் பார்த்து, க்ஷேமம் விசாரித்தார்கள். கோகர்ணன் ராத்ரியில் நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் அவர்களிடம் தெரிவித்தான். அவர்கள் யோசித்து ஒன்றும் தோன்றாமல் ஸூர்ய பகவானைக் கேட்க வேண்டுமென்று சொன்னார்கள். உடனே கோகர்ணன் ஸூர்யனை ஸ்தோத்திரம் செய்து அவர் வேகத்தைத் தடுத்துவிட்டான். அப் பொழுது ஸூர்யபகவான், ஏழுநாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்டால் ப்ரேதத்வம் நிவர்த்தியாகும் என்று அனுக்ரஹித்தார். அதனைக் கேட்டு கோகர்ணன் பாகவத கதையைப் படிப்பதற்கு முயற்சித்தான். அதனைக் கேட்பதற்காகப் பல தேசங்களிலிருந்தும், பல கிராமங்களிலிருந்தும் நொண்டிகள், கண்ணில் லாதவர்கள், ரோகிகள் ஆகிய இவர்கள் வந்தார்கள். இன்னும் அநேகம் பெரியோர்களும்

கூடினார்கள். அவ்விடத்துக் கருகிலிருந்த ஏழு கணுக்களுள்ள ஒரு மூங்கிலில் வாயு சரீரத்தை யுடைய அந்த ப்ரேதம் ஸ்ரீமத் பாகவதத்தை கேட்பதற்காக வந்து சேர்ந்தது. அப்பொழுது கோகர்ணன் விஷ்ணுபக்தனாகிய ஒரு ப்ராஹ்மணனைக் கேட்பவராக வைத்துக் கொண்டு பாகவத கதையை வர்ணித்தார். முதல்நாள் கதை முடிந்தவுடன், அருகிலிருந்த மூங்கிலில் ஒரு கணு வெடித்ததுமின்றி ஏழாவது நாளில் ப்ரேதமானது தனது பூர்வ சரீரத்தைவிட்டு மேகம்போலக் கருத்த திருமேனியுடன், பீதாம்பரம், கிரீடம், குண்டலம், துளஸீமாலை இவைகளால் அலங்கரிக்கப்பட்டு திவ்ய ரூபத்தையடைந்து கோகர்ணனை நோக்கி "ஓ ஸாதுவே நான் உன்னால் க்ஷேமத்தை யடைந்தேன் என்று ச்லாகித்தது. இந்த சமயத்தில் விஷ்ணு தூதர்கள் வைகுண்டத்திலிருந்து விமானத்துடன் வந்தார்கள். எல்லோரும் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே, துந்துகாரி அவ்விமானத்தில் ஏறினான். அப்பொழுது கோகர்ணன் விஷ்ணு தூதர்களைநோக்கி 'ஓ விஷ்ணு தாஸர்களே இவ்விடத்திலிருக்கும் எல்லா ஜனங்களும் ஸ்ரீமத் பாகவதக் கதையைக் கேட்டார்களே; ஆதலால் பலத்தில் பேதமுண்டாகக் காரணமென்ன என்று வினவினான். அதனைக்கேட்ட ஹரி தாஸர்கள், ஓ ஸாதுவே எல்லோரும் ச்ரவணம் பண்ணினவர்களானாலும் இந்த ப்ரேதமானது, செய்தது போல மற்றவர்கள் செய்யவில்லை; ஆகையால் தான் பலன் வேறாயிற்று. 'இது பலத்தைக் கொடுக்குமோ கொடாதோ என்று

சந்தேகப்பட்டு ஜபித்த மந்தரமும் பலவிடங்களில் மனத்தைச் செலுத்திக்கொண்டு செய்த ஜபமும்; விஷ்ணு பக்தர்களில்லாத தேசமும், பாத்ரமான ப்ராஹ்மணர்களில்லாத ச்ராத்தமும், வேதாத்யயனஞ் செய்யாதவனுக்குக் கொடுத்த தானமும், அனாசாரமுள்ள குலமும் ஆகிய இவைகள் ப்ரயோசன மற்றவைகள். குருவின் வார்த்தையில் நம்பிக்கையும், தன்னைத் தீனனாக நினைத்துக் கொள்வதும், மனஸை அட்க்கிக் கொள்வதும், கதையைக் கேட்பதில் ஸ்திரமான புத்தியும் ஆகிய இவைகளுடன் கதையைக் கேட்பது மேலானது. இன்னொரு தடவை இந்தக் கதையைக் கேட்டால் எல்லோருக்கும் வைகுண்டம் கிடைக்கும். ஓ கோகர்ணா! உனக்குப் பகவானாகிய கோவிந்தர் கோலோகத்தைக் கொடுப்பார் என்று சொல்லி வைகுண்டம் சென்றார்கள்.

பின்பு கோகர்ணன் ஆவணி மாதத்தில் மறுபடியும் படனத்தை நடத்தினான். அவர்களும் கேட்டார்கள். கதை முடிந்தவுடன் அநேக விமானங்களுடன் நாராயணமூர்த்தியே நேரில் வந்து சங்கத்தை ஊதினார். பின் அவர் கோகர்ணனைக் கட்டிக் கொண்டு தமக்குச் சமமாக அவனைச் செய்து மற்ற எல்லோர்களையும் விமானத்தில் வைத்துக் கொண்டு கோலோகம் சென்றார். ஸப்தாஹ யஞ்ஞத்தின் மஹிமை இப்பேர்ப்பட்டது. ஸப்தாஹ யஜ்ஞத்தால் கிடைக்கும் பலம் காற்று, ஜலம், இலை இவைகளைப் புஜித்து கடும் தபஸ் செய்வதாலும், யோகத்தாலும் அடையமுடியாது. இந்த இதிகாஸத்தை சித்ரகூட பர்வதத் திலிருக்கும் சாண்டில்ய மஹர்ஷியும் படித்து

பரமானந்தத்தையடைகிறார். இது மிகவும் பரிசுத்தமானது. ஒரு தடவை கேட்ட மாத்திரத்தில் ஸகல பாபத்தையும் நிவர்த்திக்கக் கூடியது. ச்ராத்த காலத்தில் படித்தால் பித்ருக்களுக்கு த்ருப்தி உண்டாகும். இதனை நித்யம் படித்தால் மோக்ஷமும் கிடைக்கும்.

'ஓ சௌனகரே ஸ்ரீமத் பாகவதத்தை ஏழுநாளில் படிப்பதற்குச் சில விதிகள் உண்டு. எப்படி யென்றால் முதல் ஜ்யோதிஷ சாஸ்திரம அறிந்தவர்களை கொண்டு நல்லமுஹூர்த்தம் பார்த்து அதில் ஆரம்பிக்க வேண்டும். ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி இந்த மாதத்தில் ஆரம்பிப்பது மேலானது. 'இன்னகாலத்தில் பாகவதம் படிக்க ஆரம்பிக்கப் போகிறோம், அதனைக் கேட்க தாங்கள் எல்லோரும் வரவேண்டும். ஏழு நாளுமிருக்க முடியாமல் போனால் ஒரு நாளாவது கேட்க வேண்டும். இந்த ஜ்ஞான யஜ்ஞத்தில் ஒரு க்ஷணம் கிடைப்பது மிகவும் அரிது. ஆகையால் குடும்பத்துடன் எல்லோரும் வர வேண்டும் என்று ஒவ்வொரு தேசங்களிலும் கிராமங்களிலும் பத்திரிகை மூலமாக ப்ரஸித்தப் படுத்தவேண்டும். வந்தவர்களுக்கு இடம் முதலியவைகளைக் கொடுத்து உபசரிக்கவேண்டும். வாழை, மாந்தளிர் முதலிய மங்கள த்ரவ்யங்களால் மண்டபத்தை அலங்கரித்து நான்கு திக்குகளிலேயும் த்வஜங்கள் கட்டி வந்தவர்களுக்கு உட்காரத் தகுந்த இடங்களைச் செய்விக்கவேண்டும். மேலும் கதை சொல்பவருக்கு, திவ்யமான ஆஸனம் அமைத்து வைக்கவேண்டும். கதை சொல்லு

கிறவர் வைராக்ய முள்ளவராகவும், வேத சாஸ்திரங்களை யறிந்தவராகவும், விஷ்ணு பக்தராகவும், அதிக ஆசையில்லாதவராகவும், உதாரணம் சொல்வதில் ஸமர்த்தராயும், ப்ராஹ்மணராகியும் இருக்க வேண்டும். சொல்லுகிறவர்க்கு உதவி செய்வதற்காக அவர் போன்ற மற்றொருவர் அவருடைய பக்கத்திலிருக்கவேண்டும். சொல்லுகிறவர் வ்ரதம் — ஆரம்பிப்பதற்கு முன்பு க்ஷௌரம் செய்து கொள்ளவேண்டும். அருணோதயத்திற்குள் தம்முடைய நித்யகர்மங்களைச் சுருக்கமாகவாவது முடித்துக் கொண்டு கதையை ஆரம்பிக்க வேண்டும். மண்டபத்தில் ஸ்ரீமத் பாகவத புஸ்தகத்தையும் பகவானுடைய விக்ரஹத்தையும் நன்றாகப் பூஜித்து ப்ரதக்ஷிண நமஸ்காரஞ் செய்து கடைசியில், 'ஹே கிருஷ்ண! ஸம்ஸாரமாகிய ஸமுத்திரத்தில் முழுகியிருக்கும் தீனனாகிய என்னைக் காப்பாற்றும்' என்று ஸ்தோத்திரம் செய்யவேண்டும். பிறகு கதை சொல்லு பவருக்கு வஸ்த்ரம், ஆபரணம் முதலியவைகள் கொடுத்து, 'சுகரால் சொல்லப்பட்ட ஸ்ரீமத் பாகவதத்தை அறிந்த ப்ராஹ்மணோத்தம! இந்தக் கதையை உபதேசித்து என்னுடைய அஜ்ஞானத்தைப் போக்கும், என்று கேட்டுக் கொள்ள வேண்டும். பணம், வீடு, புத்ரன் இவைகளில் அபிமானத்தை யொழித்து சுத்தசித் தனாயிருந்து கதையை கேட்கவேண்டும். கதையைச் சொல்லுகிறவர் ஸூர்யோதயம் முதல் முன்றரை யாமம் கதை சொல்ல வேண்டும். மத்யா ன்னத்தில் மாத்யான்ஹிக கர்மத்திற்காக இரண்டு நாழிகை நிறுத்திவிட வேண்டும். மல மூத்ர

உபத்ரவமில்லாம விருப்பதற்காக மிதமாய் புஜிக்க வேண்டும். கதை கேட்கிறவன் ஒரு தடவை ஹவிஸை புஜிக்கலாம். சக்தியிருந்தால் ஏழு நாள் உபவாஸமிருப்பது மேலானது. அல்லது நெய், பால், இவைகளை புஜிக்கலாம். பழங்களையாவது புஜிக்கலாம். எப்படியிருந்தால் கதை கேட்க விக்னமில்லாமலிருக்குமோ அப்படி சக்திக்கனுகுணமாக நடத்த வேண்டும். ஆனால் ஸ்திரீஸங்கம், பாயில் படுப்பது இவைகள் கூடாதெனவாம். ஒவ்வொரு நாளும் கதை முடிந்த பிறகே போஜனம் பண்ண வேண்டும். வேதங்களையும், பக்தர்களையும், ப்ராஹ்மணர்களையும் நிந்திக்க கூடாது.

இப்படி ஏழு நாளான பிறகு புஸ்தகத்தையும், அதன் கதையைச் சொல்லுகிறவர்களையும் பூஜித்து, கதை கேட்டவர்களுக்கு ப்ரஸாதம் (துளசி) கொடுக்கப்படவேண்டும். பின்பு மிருதங்கம், தாளம், வீணை முதலியவைகளோடு பகவானுடைய குணத்தைக் கானம் பண்ணவேண்டும். அதன் பிறகு கதை சொன்னவருக்கும், மற்ற ப்ராஹ் மணர்களுக்கும், யாசகர்களுக்கும் தனம் அன்னம் முதலியவைகளைக் கொடுக்கவேண்டும். கேட்கிறவர்கள் ஸன்யாஸியாயிருந்தால் மறுநாள் பகவத் கீதையைப் படிக்கவேண்டும். கிரஹஸ் தராயிருந்தால் தசமஸ்கந்தத்தில் எவ்வளவு சுலோகங்களிருக்கின்றனவோ, அவ்வளவு ஹோமம் பண்ண வேண்டும். ஹோமம் பண்ணச் சக்தியில்லாவிட்டால், யஜ்ஞத்தின் மத்தியில் நேர்ந்த ஸகல தோஷங்களையும் நிவர்த்திப்பதற்காக விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தைப் படிக்கவேண்டும்.

அதன் பிறகு பன்னிரண்டு ப்ராஹ்மணர்களுக்கு போஜனம் செய்துவைத்து அவர்களுக்கு ஸுவர்ணம், பசு, இவைகளைக் கொடுக்க வேண்டும். சக்தியிருக்குமானால் மூன்று பலம் தங்கத்தால் சிங்கத்தின் உருவத்தைச் செய்து அதில் பாகவத புஸ்தகத்தை வைத்து அதைப் பூஜித்து அதை ஆசார்யனுக்கு கொடுக்க வேண்டும். இது ஜ்ஞான யஜ்ஞமாம்.

ஓ சௌனரே! ஆனந்த வனத்தில் ஸனகாதிகள் ஜ்ஞான யஜ்ஞத்தை விதிப்படி முடித்தபிறகு தெய்வச் செயலால் அவ்விடம் சுகர் வந்தார். அவர் வ்யாஸருக்குப் புத்ரர் ஞானமாகிய ஸமுத்திரத்திற்குச் சந்திரன் போன்றவர். ஆத்ம லாபத்தால் பூர்த்தியடைந்தவர். எப்பொழுதும் ஸ்ரீமத் பாகவதத்தைப் படிப்பவர். பதினாறு வயதுள்ளவர். அவரைக் கண்டு அங்கிருந்த ஸதஸ்யர்கள் எல்லோரும் விதிப்படி பூஜிக்க அவர் ஸ்ரீமத் பாகவதத்தின் முதலாவது ஸ்கந்தத்தின் இரண்டு மூன்று ச்லோகங்களில் குறிக்கப்பட்ட விஷயத்தை விஸ்தாரமாகச் சொன்னார். அப்பொழுது பகவான் தம்முடைய பக்தர்களான ப்ரஹ்லாதர், மஹாபலி, உத்தவர் ஆகிய இவர்களுடன் அவ்விடம் வந்து அவர்களை அனுக்ரஹித்ததுமல்லாமல் ஜ்ஞான யஜ்ஞும் நடக்கும் இடத்தில் நாம் இப்படியே ஸான்னித்யம் செய்கிறோம்' என்று அனுக்ரஹித்தார். ஆனதால் ஸ்ரீமத் பாகவதமானது, ஸம்ஸாரமாகிய ஸமுத்ர்த்தில் முழுகிய ஜனங்களைக் காப்பாற்றுகிறேன் என்று கர்ஜித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்.

இதனைக் கேட்டு சௌனகர் ஸூதரை நோக்கி "ஸூதரே சுகர் பரீக்ஷித்துக்கு எந்தக் காலத்தில் உபதேசித்தார்? கோகர்ணர் படித்த காலம் எது? ஆனந்தவனத்தில் குமாரர்கள் சொன்ன ஸமயம் எது? என்று கேட்டார். அவற்றைக் கேட்ட ஸூதர், சௌனகரை நோக்கி" சௌனகரே! ஸ்ரீகிருஷ்ணபகவான் வைகுண்டம் சென்ற நாள் முதல் நூற்று முப்பது வருஷங்களுக்குப் பிறகு கலியுகத்தில் புரட்டாசி மாதம் நவமியில் சுகர் பரீக்ஷித்துக்கு ஸ்ரீமத் பாகவதத்தைச் சொல்ல ஆரம்பித்தார். அது முதல் இருநூறு வருஷங்களுக்குப் பிறகு ஸ்ரீமத் பாகவத கதையைச் சொன்னார். அதில் இருந்து நூற்றுமுப்பது வருஷத்துக்குப் பிறகு (மூவாயிரம் வருஷமென்று சிலர் சொல்லுகிறார்கள்) சுக்லபக்ஷ நவமியில் ப்ரஹ்மபுத்திரர்களான ஸனகாதிகள் சொன்னார்கள். நான்குவித புருஷார்த்தங்களை கொடுக்கிறதற்கு இக்கலியில் ஸ்ரீமத் பாகவத சாஸ்திரத்தைத் தவிர மேலானது ஒன்றுமில்லை. மிகவும் ரஹஸ்யமானது, ஸகல சாஸ்த்திரங்களுடைய ஸாரமானது. ஆகையால் இதனை பக்தியுடன் படியுங்கள் என்று ஸூதர் சொல்லி முடித்தார். (பத்ம புராணம், உத்ர காண்டம் அத்யாயம் ஒன்று முதல் ஆறுவரையில்)

பாகவத பேதங்கள்

அடியில் கண்டபடி ஒரு தமிழ் புஸ்தகத்தால் தெரியவருகிறது. எப்படி யெனில்: பாகவதமானது ஏழு வகையுள்ளது.

1. இதிஹாஸ பாகவதம்: இது வ்யாஸ மஹர்ஷியால் செய்யப்பட்டது. 18,000 ஸ்லோகம் அடங்கியது. இதில் அத்யாயங்கள் 200 இருக்கின்றன. மேலும் இது 12 ஸ்கந்தங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. பரீக்ஷித் மஹாராஜனுக்குச் சுகரால் உபதேசிக்கப்பட்டது.

2. புராண பாகவதம்: இது நாரதரால் ருக்மிணீதேவிக்குச் சொல்லப்பட்டது. இதைச் செய்தவர் வ்யாஸ மஹர்ஷியே. மேலும் இது 600 அத்யாயங்களுள்ளது.

3. ஸம்ஹிதா பாகவதம்: வைசம்பாயனரால் ஜனமேஜயருக்கு உபதேசிக்கப்பட்டது. 50,000 க்ரந்தங்கள் அடங்கியது. 1100 அத்யாயங்கள் அடங்கிய 12 கண்டங்களாகப் பிரிக்கப் பட்டது.

4. உபஸம்ஹிதா பாகவதம்: இது ஸூதர் ஸனகருக்கு அகஸ்திய மஹர்ஷியால் உபதேசிக்கப் பட்டது. இதிலுள்ள 70,000 ஸ்லோகங்கள், 2,000 அத்யாயங்களாகவும் 100 பரிச்சேதங் களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

5. விஷ்ணு ரஹஸ்ய பாகவதம்: இது காச்யபருக்கு ஹாரீதரரால் சொல்லப்பட்டது. இடையிலே தண்டகங்கள் கலந்த 1,00,000 (லக்ஷம்) ஸ்லோகங்களுள்ளது. ஆயிரம் அங்கங்களுள்ளது. 10,000 அத்யாயங்களுள்ளது.

6. விஷ்ணு யாமள பாகவதம்: இது

பராசரால் மைத்ரேயருக்கு உபதேசிக்கப்பட்டது. இதில் 80,000 ச்லோகங்களிருக்கின்றன. மேலும் 800 அத்யாயங்களுள்ளது. 8 ஸ்தானங்களுள்ளது.

7. கௌதம ஸம்ஹிதா பாகவதம்: கௌதமர் கௌசிகருக்குச் சொன்னது. 100 அத்யாயங்கள் உள்ளது. 10,000 ஸ்லோகங்களுள்ளது. 4,00,000 ஸ்லோகங்களுள்ள கௌதம ஸம்ஹி தையில் க்ரந்தலக்ஷண கண்டத்தில் பாகவத லக்ஷணமென்ற முதல் அத்யாயத்தில் மேல் காட்டிய விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸப்தாஹவிதி

முன்னொரு காலத்தில் பரமசிவன் பார்வதியை நோக்கி ஏ! பார்வதீ! ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைப் படிப்பவன், முதலில் வ்யாஸரையும், சுகரையும் நமஸ்கரித்து மஹா விஷ்ணுவை த்யானம் செய்து கொண்டு, முதல் நாளில் முதலாவது ஸ்கந்தம் முதல் ஹிரண்யா க்ஷவதம் வரையில் படிக்க வேண்டும். இரண்டாம் நாளில் பரதனுடைய சரிதம் வரையிலும், மூன்றாம் நாளில் பகவான் ப்ரஹ்லாதரை அனுக்ரஹித்த கதை வரையிலும், நான்காம் நாளில் பத்தாவது ஸ்கந்தத்தில் ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் வரையிலும், ஐந்தாம் நாளில் ருக்மிணி கல்யாணம் வரையிலும், ஆறாம் நாளில் உத்தவருடைய ஸம்வாதம் வரையிலும், ஏழாம் நாளில் முடிவு வரையிலும் படிக்க வேண்டும். படிக்கும்போது அத்யாயத்தின் நடுவில் நிறுத்தக் கூடாது. அப்படி நிறுத்தினால் மறுபடியும் அந்த

அத்யாயத்தை அடிமுதல் படிக்க வேண்டும். படிக்கும்போது அர்த்தத்தைத் தெரிந்துகொண்டே படிக்கவேண்டும். சொல்லுகிறவன் வடக்கு முகமாகவும் கேட்கிறவன் கிழக்கு முகமாவும் அல்லது மாறுதலாகவும் இருக்கலாம். ஒவ்வொரு அத்யாயம் படித்தவுடனும் ஐந்து குந்துமணி நிறையுள்ள தங்கத்தைத் தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டும். முழுவதும் முடிந்தபிறகு பசுவை தக்ஷிணையாகக் கொடுக்கலாம். அந்தப் பசுவின் கொம்புகள் ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப் படவேண்டும். ஏ தேவீ! இம்மாதிரியான விதிப் பிரகாரம் ஸ்ரீமத் பாகவதத்தை யார் படிக்கிறார்களோ, கேட்கிறார்களோ அவர்களுக்கு ஸர்வாபீஷ்டமும் நிறைவேறும். இதனைப் படிக்குங்காலத்தில் ஸகல தேவர்களும், ஸகல மஹரிஷிகளும் ஸ்ரீ விஷ்ணுவின் பார்ஷதர்களும் மஹாவிஷ்ணுவும் அவ்விடத்தில் எப்பொழுதும் மிகுந்த ஆனந்தத்துடன் வஸிக் கிறார்கள், என்று சொன்னார். பத்ம புராணம், பாதாள காண்டம், அத்யாயம் 71.

ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்ட காலம்

கலியுகத்தில் முதல் ஆயிரம் வருஷங்களில் ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்டது.

த்வாபர யுகத்தில் பகவான், வ்யாஸரூபியாய் அவதரித்து வேதங்களைப் பிரித்து, அவைகளை பைலர் முதலானவர்களிடம் ஒப்புவித்தார். பின்பு அவற்றைப் படித்தல், முதலியவைகளில் அதிகாரம் இல்லாத ஸ்த்ரீகள், சூத்ரர்கள் முதலியவர்

களுக்காக, அவைகளின் அர்த்தத்தையே, மஹா பாரதமாகச் செய்து வெளியிட்டார். மேலும் அவரால் மஹா புராணங்களும், உப புராணங்களும் வெளியிடப்பட்டன. கடைசியில் ஸ்ரீமத் பாகவதமும் செய்யப்பட்டது.

ஆக்ஷேபம் — பெரியோர்கள் ஆத்மச்லாகை (தன்னைத் தானே புகழ்வது) செய்து கொள்ள மாட்டார்களாகையாலும், இதிஹாஸ புராணங்களில் வ்யாஸ மஹர்ஷியை ச்லாகித்திருப்பதாலும் சொல்வது பொருந்துமா?

ஸமாதானம்:- அப்படியில்லை. வ்யாஸமஹர்ஷி வேதங்களைப் பிரித்துத் தாம் செய்த மஹா பாரதத்தைச் சுருக்கமாய்ச் செய்யும்படி தமது சிஷ்யர்களான வைசம்பாயனர், ஜைமினி யென்னும் இவர்களுக்கு ஆக்ஞாபனஞ் செய்தார். அவர்களும் தனியே பாரதச் சுருக்கம் செய்தார்கள். இப்பொழுது வழங்கிவரும் பாரதம் வைசம்பாயனர் செய்ததேயாம். மேலும் புராணங்கள், வெகு காலத்திற்கு முந்தியே மார்க் கண்டேயர் முதலிய மஹர்ஷிகளால் செய்யப் பட்டிருந்தன. ஆனாலும் கால மஹிமையால் அவைகளில் சிலவற்றில் சில பாகங்களும் பின்னும் சிலவற்றில் சில ஸர்க்கங்களும் சிலவற்றில் ஸந்தர்ப்பம், விஷயம் இவைகளைச் சொல்லும் — ஸ்லோகங்களும் காணாமல் போயின. சில புராணங்கள் பூர்த்தியாகச் செய்யப்படாமலிருந்தன. இப்படி பற்பல வகையாக குறையுள்ள புராணங்களை வ்யாஸ மஹர்ஷி அந்தந்த புராண நடைக்குச்

சமமான நடையிலேதான் சீர்த்திருத்தினார். பின்னும் அவருடைய சிஷ்யர்கள் அவைகளுக்கு உபோத்காதம் (முகவுரை) அவைகளிலுள்ள ச்லோகம் முதலியவைகளின் ஸங்க்யை, அனுக்ர மணிகை, அந்தந்த புராணத்தைச் சொன்னவர்கள், கேட்டவர்கள் அவர்களுக்குள் நேர்ந்த ஸம்வாதம் முதலியவைகளை எழுதிச் சேர்த்தார்கள்.

பின்பு அவைகளை விட மேலானதாக வ்யாஸ மஹர்ஷி ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்து தம்முடைய புத்ரராகிய சுகருக்கு உபதேசித்தார். பின்பு ஸூதர் அந்த பாகவதத்தைச் சுகரிடமிருந்து தெரிந்து கொண்டு சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்குச் சொன்னார். ஆகையால் இந்த விஷ்ணு பாகவதம் வ்யாஸரால் செய்யப்பட்டதேயாம். மற்ற புராணங்கள் அவரால் சீர்திருத்தப்பட்டதேயாம்.

பரீக்ஷித்து மஹாராஜனுக்குக் கலியும் வந்த பிறகு தர்ம புத்ரர் ராஜ்யாபிஷேகம் செய்வித்ததாக பாகவதம், விஷ்ணு புராணம், பாரதம் முதலிய வைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னமேயே பாகவதம் செய்யப்பட்டிருக்குமாகில் பரீக்ஷித்தின் சரித்திரம் அதில் சொல்ல நியாய மில்லை, ஆகையால் இது கலியுகத்தின் ஆரம் பத்தில் செய்யப்பட்டதேயாம்.

ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தவர்

பாகவதத்தைச் செய்தவர் ஸ்ரீ வேதவ்யாஸ மஹரிஷி. வேதங்களைப் பிரித்த காரணத்தால் இவருக்கு இப்பெயருண்டாயிற்று. இவர் மஹா

விஷ்ணுவின் அவதாரம். இவருடைய பிதா பராசர மஹர்ஷி. இவருடைய தாய் ஸத்யவதி. இவள் வஸுவின் வீர்யத்தைப் புஜித்த மத்ஸயத் தினிடம் உண்டானவள். ஆனது பற்றி இவளுக்கு மத்ஸயகந்தி என்னும் பெயர் சிலகாலம் வழங்கின துண்டு. பராசர மஹர்ஷி ஒருக்கால் தீர்த்த யாத்திரை செய்துவரும் பொழுது வழியில் ஆற்றில் ஓடம் தள்ளிக் கொண்டிருக்கும் வலையன் கன்னியான மத்ஸயகந்தியைக் கண்டார். மேலுமவர் அவளுடைய லாவண்யத்தைக் கண்டு மோஹித்து அவளிடம் ஆசை கொண்டார். அப்பொழுது நல்வாசனையுண்டாகும்படி அனுக்ரஹித்தார். அதுமுதல் அவளுக்கு யோஜனகந்தியென்று பெயர் வழங்கினது. அவ்விருவர்களுக்கும் பிறந்தவர் வ்யாஸமஹர்ஷி.

அவர் வேதங்களைப் பிரித்தும் ஸ்த்ரீ, சூத்ரர் களுக்காக ஐந்தாவது வேதமாகிய பாரதத்தையும் செய்தார். அப்படியும் அவர் மனத்திற்கு சந்தோஷ முண்டாகாததனால் கவலையுள்ளவராக ஸரஸ்வதீ நதிக்கரையில் சம்யப்ராஸமென்ற ஆச்ரமத்தில் வசித்தார். அப்பொழுது தெய்வச் செயலாய் அவ்விடம் வந்த நாரதரிடம் உபதேசம் பெற்று ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தார்.

கதை நடந்த க்ஷேத்ரம்

கலியுகத்தில், ஸூதர் நைமிசாரண்யத்தில் வஸிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்கு இந்த பாகவத கதையைச் சொன்னார். மேலும்

நைமிசமென்பது ஒரு புண்யக்ஷேத்ரம் ஆனது பற்றி அவ்விடத்தில் அநேக மஹர்ஷிகள் வஸிப்பார்கள். அனேக பெரியோர்கள் அவ்விடத்திற்கு வருவது முண்டு. ப்ரஹ்மதேவர் ப்ராஹ்மணர்களை நோக்கி இந்த மனோமயாகிய சக்ரத்தை ப்ரயோகிக்கிறேன்; இதனுடைய நேமி (முனை) எவ்விடத்தில் மழுங்குமோ அதுவே தபஸ் செய்ய தகுதியான க்ஷேத்ரம் என்று சொல்லி ஸூர்யனுக் கொப்பான சக்ரத்தை மனத்தால் ஸிருஷ்டித்து, பரமசிவனைக் குறித்து நமஸ்காரம் செய்து அதை ப்ரயோகித்தார். அதைப் பார்த்திருந்த ப்ராஹ்மணர்களும் மிகுந்த ஸந்தோஷத்துடன் அதன்பின் சென்றார்கள். அது கீழே விழுந்து அதன் நேமி மழுங்கின இடத்திற்கு நைமிசமென்று பெயருண்டாயிற்று. அவ்விடத்தில் மஹர்ஷிகள் வஸித்தார்கள். வாயு புராணம். அந்த க்ஷேத்ரத்தை நைமிஷமென்று சொல்வதுண்டு. ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் கௌரமுகரென்ற மஹர்ஷியை நோக்கி ஒரு நிமிஷத்திற்குள் அஸுர ஸைன்யங்கள் இவ்விடத்தில் கொல்லப்பட்டபடியால் இவ்விடத்திற்கு நைமிஷமென்று பெயருண்டாகட்டும். இது ப்ராஹ்மணர்கள் முக்யமாய் வஸிக்கும் இடம் என்று சொன்னார் வராஹபுராணம்.

மஹர்ஷிகளுக்கு உபயோகமாகிய மரங்கள் நிமிஷங்களென்று சொல்லப்படுகின்றன. அவைகள் ஏராளமாக இருக்குமிடமே நைமிஷமெனப் படுகிறது. அல்லது நிமிஷரென்னும் மஹர்ஷி தபஸ் செய்த இடமாகையால் நைமிஷமென்று அதற்குப் பெயருண்டாயிற்று. விஜயத்.

ஸூதருடைய வரலாறு

"இந்த விராட்ரூபியான மஹாபுருஷனுடைய முகத்திலிருந்து ப்ராஹ்மண ஜாதியும், கைகளிலிருந்து க்ஷத்திரிய ஜாதியும், துடைகளிலிருந்து வைச்ய ஜாதியும், பாதங்களிலிருந்து சூத்ரர்களும் உண்டானார்கள். என்று ஸ்ருதியில் சொல்லப்பட்டிருப்பது போல அவருடைய ரோமாஞ்சத்திலிருந்து (மயிர்க்கூச்சிலிருந்து) ஸூத ஜாதியி உண்டாயிற்று. அவரே ரோமஹர்ஷணர். மஹாபாரத தாத்பர்ய நிர்ணயம் – அத்யாயம் 90, பகவானுடைய கதையைக் கேட்டுக் கொண்டு இருக்கும்போது பக்தி விசேஷத்தால் மயிர்க்கூச்சிலுண்டானபடியால் அவருக்கு ரோமஹர்ஷணர் என்று பெயருண்டாயிற்று. இவர் ஸூத ஜாதியிற் பிறந்தவர் –அபியுக்தர்கள். அவருக்கு ஸ்ரீ வேத வ்யாஸ மஹர்ஷியானவர் ஸகல புராணங்களையும், இதிஹாஸங்களையும் உபதேசித்தார்.

பிறகு ரோமஹர்ஷணர் நைமிசாரண்யத்தில் வஸிக்கும் மஹர்ஷிகளுக்குப் புராணங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்படியிருக்கையில் ஒருநாள் பலராமன் அவ்விடம் வந்தார். அவரைக் கண்டவுடன் ஸகல மஹர்ஷிகளும் எழுந்திருந்து விதிப்படி மரியாதை செய்தார்கள். அப்பொழுது ரோமஹர்ஷணர் மாத்திரம் ஆஸனத்திலிருந்து எழுந்திருக்கவில்லை. அதைக் கண்ட பலராமன் மிகவும் கோபங்கொண்டார். பிறகு அவர் 'தாழ்ந்த குலத்தில் பிறந்தவராகிய இந்த ரோமஹர்ஷணர் நம்மைக்கண்டு எழுந்திருக்காமலும், இந்த மஹர்ஷிகளின் முன்பாக உயரமான ஆஸனத்திலுட்கார்ந்து

மிருக்கிறார், இவரை நிக்ரஹிக்கவேண்டும்' என்று எண்ணிக் கையிலிருந்த தர்ப்பத்தால் அவரையடித்தார். அதனால் ரோமஹர்ஷணரும் உடனே இறந்தார். அப்பொழுது மஹர்ஷிகளனைவரும் பலராமனை நோக்கி பிரபுவே! நீர் செய்தது தர்மத்திற்கொத்ததல்ல. இவருக்கு நாங்கள் ப்ரஹ்மாஸனத்தைக் கொடுத்து அவருடைய தேஹத்தில் ச்ரமம் உண்டாகாமலிருக்கும்படியும், அவர் வெகுகாலம் ஜீவித்திருக்கும்படியும் அனுக்ரஹித்திருந்தோம். நீர் லோகத்தை அனுக்ரஹிப்பதற்காக அவதரித்தவராகையால், எங்களுடைய வார்த்தை பொய்யாகமலிருக்கும்படிச் செய்ய வேண்டும். இந்த தோஷத்தை நிவர்த்தித்துக் கொள்வதற்காக நீர் ப்ராயச்சித்தத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்றார்கள். அதைக் கேட்ட பலராமன் அவர்களை நோக்கி பிதாவிற்கும் புத்திரனுக்கும் பேதமில்லையென்று ஸ்ருதியில் சொல்லப்பட்டிருப்பதனால், ரோமஹர்ஷணருடைய குமாரராகிய உக்ரச்ரவஸ் என்பவர் அந்த ஆஸனத்தில் உட்கார்ந்து உங்களுக்குப் புராண கதைகளைச் சொல்லட்டும். அவருக்கு எவ்வளவு நாள் கதை சொன்னாலும் தேஹத்தில் ச்ரமமில்லாமலிருக்கட்டும். மேலும் வெகுநாள் ஜீவித்திருப்பார் என்று சொல்லி தீர்த்த யாத்திரைக்குச் சென்றார். (பாகவதம் ஸ்கந்தம் 10, அத்தியாயம் 78)

மேல் காட்டியபடி ரோமஹர்ஷணருக்குப் பிறகு அந்த உக்ரச்ரவஸ், அந்த ஆஸனத்திலிருந்து மஹர்ஷிகளுக்குப் புராணங்களைச் சொல்லிக்

கொண்டிருந்தார். அந்த ரோமஹர்ஷணர் ஸூத ஜாதியில் பிறந்தவராகையால் அவருக்கு ஸூத ரென்று பெயருண்டு. அவருடைய பிள்ளைக்கும் ஸூதரென்று பெயர் வழங்கி வருகிறது. பல ராமன் பாரதயுத்தம் நடக்கும்போது நைமிசாரண்யஞ் சென்றார். ஆகையால் அதுவரையில் அவ்விடத்தில் கதை சொல்லிக் கொண்டிருந்தவர் ரோமஹர்ஷணரேயாம். பிறகு அவருடைய புத்ரராகிய உக்ரச்ரவஸே புராணஞ்சொன்னார். ஆகையால் ஸ்ரீமத் பாகவதத்தைச் சொன்னவர் உக்ரச்ரவஸ் என்ற ஸூதரேயாம். இவர் ஸகல புராணங்களையும் இதிஹாஸங்களையும் அறிந்தவர். த்ரையாருணி, கச்யபர், ஸாவர்ணி, அகிருதவ்ருணர், சிம்சுபாயனர், ஹாரீதர் ஆகிய ஆறு பேர்களும் வ்யாசமஹர்ஷியின் சிஷ்யராகிய என் தகப்பனார் இடமிருந்து ஒவ்வொரு ஸம்ஹிதையை அத்யயனஞ் செய்தார்கள். நான் இவர்கள் எல்லோருக்கும் சிஷ்யனாக இருந்து எல்லா புராண ஸம்ஹிதைகளையும் தெரிந்து கொண்டேன் என்று ஸூதர் சொன்னார். (பாகவதம் ஸ்கந்தம் 12 அத்யாயம் 6, ச்லோகம் 5 , 6)

சுகருடைய சரிதம்

முன்னொரு காலத்தில் மஹாமேரு பர்வதத்தில் ஸ்ரீவேத வ்யாஸ மஹர்ஷி உத்தமனாகிய புத்ரனையடைய வேண்டித் தபஸ் செய்தார். அதனால் பரமசிவன் ஸந்தோஷப்பட்டு அவரை நோக்கி 'ஓ மஹர்ஷியே உம்முடைய இஷ்டப்படி மிகுந்த தேஜஸுள்ளவனும், கீர்த்தியுள்ள

வனுமாகிய புத்ரன் உண்டாவான்' என்று அனுக்ரஹித்தார். பிறகு ஒருக்கால் ஒப்பற்ற ரூபமுள்ள கிருதாசி என்ற அப்ஸரஸ்த்ரீ அவ்விடம் வந்தாள். அவளைக் கண்டவுடன் இவருக்கு மன்மத தாபமுண்டாகியது. அப்பொழுது மஹர்ஷியானவர் கிளி வேஷத்தையெடுத்துக் கொண்டார். பிறகு மிகவும் தைர்யத்தால் மன்மத தாபத்தை மஹர்ஷியடக்க முயன்றும் அது குறையாமல் விருத்தியாயிற்று. மேலும் அவருடைய வீர்யம் நழுவினது. அதிலிருந்து உண்டான புத்ரர்தான் சுகரென்ற பெயரையடைந்தார். இவர் பிறந்தவுடனே கங்கா நதியானவள் திவ்ய சரீரத்துடன் அவ்விடம் வந்து அவருக்கு ஸ்னானஞ் செய்துவைத்தாள். ஆகாயத்திலிருந்து தண்டம், கிருஷ்ணாஜினம் ஆகிய இவைகள் விழுந்தன. விச்வாஸு முதலிய கந்தர்வர்கள் கானஞ்செய்தார்கள், தேவதுந்துபிகள் முழங்கின. இந்திரன் முதலிய லோக பாலர்களும் அவ்விடம் வந்ததுமின்றி புஷ்பங்களை வர்ஷித்தார்கள். பரமசிவன் பார்வதியுடன் அக்குழந்தைக்கு விதிப்படி உபனயனம் செய்தார். மஹேந்திரன் அற்புதமான கமண்டலுவை கொடுத்தார் இவருடைய பிதாவாகிய வ்யாஸ மஹர்ஷி பிறந்தவுடன் ஸகல வேதங்களும் தோன்றியது போலச் சுகருக்கும் வேதங்களும், ஸகல புராணங்களும், இதிஹாஸங்களும் தோன்றின. மேலும் அவர் ப்ரஹஸ்பதி பகவானை ஆசார்யராகவரித்தார். ஆனதால் அந்தச் சுகர் எல்லாவித்தைகளையும் அப்யஸித்தவர். அவர் பால்யவயதுள்ளவரானாலும் தேவர்களாலும் மஹர்ஷிகளாலும் மற்றவர்களாலும்

கொண்டாடக் கூடியவராக இருந்தார். மேலும் அவருடைய மனஸானது மோக்ஷ தர்மத்திலேயே விருப்பமுள்ளதாக விருந்ததேயொழிய விஷயத்தில் செல்லவில்லை. பிறகு அவர் தம்முடைய பிதாவாகிய வ்யாஸ மஹர்ஷியை நோக்கி மோக்ஷ தர்மங்களைச் சொல்லவேண்டும் என்று கேட்டார். அதைக்கேட்ட வ்யாஸ மஹர்ஷியானவர் தன் புத்ரரை நோக்கி மோக்ஷ தர்மம் தெரிந்து கொள்ள வேண்டுமானால் மிதிலா நகரத் தரசராகிய ஜனகரிடம் போய் தெரிந்து கொள்ளும் என்றார். அதைக் கேட்ட சுகர் அப்படியே மிதிலா நகரம் சென்று ஜனகருடைய அரண்மனைக்கு போகும் போது அவ்விடமிருந்த காவலாட்களால் தடுக்கப்பட்டார். ஆனாலும் கோபங்கொள்ளவில்லை. வெகுதூரம் நடந்து வந்த தால் சரீரத்திற்கு நேர்ந்த ச்ரமத்தையும், பசி தாஹம் இவைகளால் நேர்ந்த துக்கத்தையும் ஸஹித்தார். பிறகு அவ்விடமிருந்த ஒரு காவலாள் அவரை வணங்கி உள்ளே அழைத்து நிழலில் உட்காரச் செய்தான். அதனாலும் அவர் ஸந்தோஷிக்கவில்லை. பிறகு மந்திரியானவர் மிக வணக்கத்துடன் வந்து சுகரை வணங்கி அந்தப் புரத்திற் கழைத்துபோய் திவ்யமான ஆஸனத்தில் உட்காரவைத்தார். பிறகு மிகவும் ரூபவதிகளான சிறு பெண்கள் அனேகர்கள் அவ்விடம் வந்து உத்தமமாகிய அன்னத்தால், வாத்ய கோஷங்களாலும் நர்த்தனங்களாலும் பிரியமான வார்தைகளாலும் உபசரித்தார்கள். மேலும், அவரைத் தோட்டத்திற்கழைத்துப்போய் அழகான மரங்களையும், பக்ஷிகளையும், தாமரஸ ஓடை

களையும் காண்பித்தார்கள். இப்படி அவர்களால் உபசரிக்கப்பட்டும் அவைகளில் பிரியப்படாமலேயே மோக்ஷ மார்க்கத்தையே த்யானித்துக் கொண்டு அன்றைய ராத்திரியைக் கழித்தார். மறுநாள் காலையில் ஜனகமஹாராஜன் இவரை சபைக்கு வரவழைத்து உபசரித்து மோக்ஷ தர்மத்தை உபதேசித்தார். (மஹாபாரதம், சாந்திபர்வம், அத்யாயம் 323 - 325)

ஸ்ரீ கிருஷ்ணாவதார காலம்

ஸ்ருஷ்டி முதல் 28வது மஹாயுகத்திற்குட் பட்ட த்வாபர யுகத்தின் முடிவில், தேவகியின் இடம் பகவான் அவதரித்தார். 28 வது மஹா யுகத்தில் த்வாபரயுகத்தின் கடைசியில் யது வம்சத்தில் பகவான் அவதரிக்கப் போகிறாரென்று கர்க்காசார்யர் முன்னமே சொல்லியிருக்கிறார் விஷ்ணு புராணம் 5வது பாகம், அத்யாயம் 23.

மேற்காட்டிய த்வாபர யுகமானது நிகழும் கலியுகத்திற்கு முந்தியேயாம். பகவான் பூலோகத்தில் கிருஷ்ணனாக அவதரித்து 125-வருஷங்கள் பூமியில் வஸித்து, பிறகு வைகுண்டம் சென்றார். ஓ ப்ரபுவே! யதுவம்சத்தில் அவதரித்து 125 வருஷங்களாயின. ஸ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம் 11 அத்யாயம் 6.

"வஸுக்கள், அச்வினீ தேவர்கள், மருத்துக்கள், ஆதித்யர்கள், ருத்ரர்கள், ஸாத்யர்கள் ஆகிய இவர்களுடன் மஹேந்திரனனான். என் முகமாகப்

பின்வருமாறு விக்ஞாபனம் செய்கிறான். கெட்ட நடத்தையுள்ள அஸுரர்களைக் கொன்று பூமியின் பாரத்தை நிவர்த்தி செய்தீர். ஸ்வர்க்கத்தில் இருக்கும் எல்லாத் தேவர்களும் உங்களால் யஜமானனுள்ளவர்களாக ஆகட்டும். நீங்கள் பூமியில் அவதரித்து 125 வருஷங்கள் ஆயின. உங்களுக்கு இஷ்டமிருந்தால் வைகுண்டம் வரலாம் விஷ்ணு புராணம் பாகம் 5, அத்யாயம் 37.

இப்படித் தேவர்கள் ப்ரார்த்தித்தவுடன் ஸ்ரீ பகவான் உத்தவரை நோக்கி, இன்றைய முதல் 7வது நாளில் ஸமுத்ரம் இந்தப் பட்டணத்தைக் கவர்ந்து கொள்ளும். அவ்வுலகத்தை நான் விட்டவுடன் இவ்வுலகம், மங்களகார்யமற்றதும், கலியினால் அவமதிக்கப்பட்டதுமாய் விடும் ஸ்ரீ மத் பாகவதம் ஸ்கந்தம் 11, அத்யாயம் 7.

"என்றைய தினத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஸ்வர்க்கம் சென்றாரோ அன்றைய தினமே கலியுகம் வந்தது. விஷ்ணு புராணம் பாகம் 4, அத்யாயம் 24.

இதனால் தேவர்கள் ப்ரார்த்தித்தவுடன் தாமதம் இன்றிப்பகவான் வைகுண்டஞ் சென்றாரென்று தெரிய வருகிறது.

ஆகையால் 28 வது மஹாயுகத்தில் த்வா பாயுகத்தின் கடைசி பாகத்தில் பகவான் அவதரித்து 125 வருஷங்கள் பூலோகத்தில் வஸித்தார். பின்பு வைகுண்டம் செல்லும்போது கலி வந்து விட்டது (த்வாபரயுகம் முடிந்தது.)

Released by Maran's Dog, Toronto , Canada

"என்றைய தினம் ரோஹிணி நக்ஷத்திரமோ அன்றைய தினம் ராத்திரி இருட்டில் தேவகியினிடம் பகவான் அவதரித்தார். பாகவதம் ஸ்கந்தம் 10, அத்யாயம் 3.

"நான் வருஷா காலத்தில் ச்ராவண மாஸத்தில் க்ருஷ்ண பக்ஷத்திய அஷ்டமி திதியில் தேவகியினிடம் அவதரிக்கப் போகிறேன் விஷ்ணு புராணம், பாகம் 5, அத்யாயம் 1.

"ச்ராவண மாஸத்தில் க்ருஷ்ணபக்ஷத்திய அஷ்டமி திதியில் ரோகிணி நக்ஷத்திரத்தில், அர்த்தராத்திரி காலத்தில், சந்த்ரோதயமாகும் ஸமயத்தில், அபிஜித் முஹூர்த்தத்தில், தேவகியிடம் மஹாவிஷ்ணு வானவர் அவதரித்தார். அதே காலத்தில் அவருடைய மாயையும் யசோதையினிடம் கோகுலத்தில் புத்ரியாகப் பிறந்தாள். ஹரிவம்சம் பாகம் 1, அத்யாயம், 25.

மேற்காட்டிய ப்ரமாணங்களால் 28 வது மஹாயுகத்தில் த்வாபர யுகத்தில் 8, 63, 875வது வருஷத்தில் ச்ராவண மாஸத்தில் கிருஷ்ண பக்ஷம் அஷ்டமீ திதியில், ரோகிணி நக்ஷத்திரத்தில், அர்த்தராத்ரியில், பகவான் அவதரித்தாரென்று நிச்சயிக்கப்படுகிறது. ஆகையால் பகவான் அவதரித்த காலம் முதல் நிகழும் 24 வது பரிவிருத்தியில் ஸௌம்யவருஷம் வரையில் **5230** வருஷங்கள் ஆயினவென்று பெரியோர்களால் சொல்லப் படுகிறது.

♣ ♣ ♣ ♣

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்ரீ கிருஷ்ணாய பரமாத்மனே நம:

அத்யாயம்-1

சௌனக ப்ரச்னம்.

Released by Maran's Dog, Toronto , Canada

"எதனிடமிருந்து ஸகல ப்ரபஞ்சங்களும் உண்டாகின்றனவோ, எதனால் காப்பாற்றப்படுகின்றனவோ, எதனிடத்தில் லயிக்கின்றனவோ, அது ப்ரஹ்மம்" என்ற ச்ருதியில் சொல்லியபடியுள்ள தடஸ்த லக்ஷணமுள்ளவரும், அன்வய வ்யதிரேகங்களால் ஸகல ஜகத்காரணரும், எல்லாவற்றையும் அறிந்தவரும், ஸ்வயமாய் ப்ரகாசிப்பவருமான எந்தப்பரமேச்வரர், நான்கு முகங்களுள்ள ப்ரஹ்மதேவருக்கு வேதங்களை மனத்தால் உபதேசித்தாரோ, (அந்த வேதங்களைத் தெரிந்து கொள்வதில், வித்வான்களும் மோஹிக்கிறார்கள்.) தேஜஸ், ஜலம், பூமி ஆகிய இவைகள் ஒன்றில் ஒன்று மாறுதலாகத் தோன்றுகிறது போல எந்தப் பரமாத்மாவிடம் (அவர் ஸத்யராகையால் முக்குணங்களுடைய கார்யமும், ஸத்யமாகத் தோற்றுகிறதோ, அந்த ஸத்ய ஸ்வரூபியாகிய பரமாத்மாவைத் த்யானிக்கிறோம். அவர் தம்முடைய தேஜஸினால் மாயாகார்யமாகிய ப்ரபஞ்சத்தைத் தாண்டினவர்.

2. வேதவ்யாஸ மஹாமுனியால் செய்யப்பட்டதும், அழகு பொருந்தியதுமான, ஸ்ரீமத் பாகவத க்ரந்தத்தில் மோக்ஷத்தைக் கூட விரும்பாமல் செய்யும், ஈச்வரருடைய ஆராதனரூபமாகிய உத்தம தர்மமானது காட்டப் பட்டிருக்கிறது. பிறருடைய மேன்மையை ஸஹிக்காம

Released by Maran's Dog, Toronto , Canada

விருப்பதாகிய மாத்ஸர்யமில்லாத ஸாதுக்களால், அறியக்கூடியதும் (ஜீவன், மாயை, ஜகத் என்னுமிவை கள் பரமாத்மாவைவிட வேறானவையல்ல) மேலான ஸுகத்தைக் கொடுக்கக்கூடியதும், மூன்று வகையான தாபங்களைப் போக்கக்கூடியதும், உண்மையுமான வஸ்துவானது இதில் நன்றாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. மற்ற சாஸ்த்ரங்களாலும் இதர ஸாதனங்களாலும் ஈச்வரனை ஹிருதயத்தில் நிலைக்கச் செய்யமுடியுமா? ஆகையால் அவைகளால் என்ன பிரயோஜனம். இந்த ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்க விரும்பிய புண்யவான் களுடைய மனத்தில் கேட்ட க்ஷணத்திலேயே பகவான் ஸ்திரமாக வஸிக்கிறார்.

3. வேதமாகிய கல்பக விருக்ஷம் அதனுடைய பழம் ஸ்ரீமத் பாகவதமேயாம். இது வைகுண்டத்திலி ருந்து நாரதரால் எனக்கும், என்னால் சுகருக்கும், அவர் முகமாகப் பூமியிலும் நழுவியது. (பரவிற்று) இது அமிருத த்ரவமுள்ளது (ருசியுள்ளது) ரஸரூபமா யுள்ளது. ஓ! ரஸத்தையறிந்தவர்களே! அதன் விசேஷ பாவனையில் ஸமார்த்தியமுள்ளவர்களே! மேற்காட்டிய பழத்தை முக்தர்களாக இருக்கும் பொழுதும், அடிக்கடி புஜியுங்கள்.

4–231/2. ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் க்ஷேத்ரமாகிய நைமிசமென்னும் வனத்தில், சௌனகர் முதலிய மஹர்ஷிகள், ஸ்வர்க்கலோகத்தை யடைவதற்காக, ஆயிரம் வருஷங்கள் ஸத்ரமென்னும் யாகத்தை யனுஷ்டித்து வந்தார்கள். அப்பொழுது ஒருநாள் அவர்கள் காலையில் அக்னிகார்யங்களை முடித்துக் கொண்டு, எல்லோராலும் பூஜிக்கப்பட்டு, ஸுகமாய்

உட்கார்ந்திருக்கும் ஸூதரை நோக்கி மிக்க ப்ரீதியுடன் "ஓ பாபமற்றவரே! புராணங்கள், இதிஹாஸங்கள், தர்மசாஸ்த்ரங்கள் இவைகளை நீர் படித்திருப்பதுடன் அவ்வவற்றின் அர்த்தத்தைப் பிறருக்கும் தெரியும்படி சொல்லியுமிருக்கிறீர். ஓ ஸாதுவே! வேதங்களை யறிந்தவர்களுக்குட் சிறந்தவராகிய வ்யாஸபகவானுக்கு தெரிந்தவைகளும், பரம்(ஸகுணப்ரஹ்மம்) அபரம் (நிர்குணப்ரஹமம்) இவைகளை நன்றாய் அறிந்த மற்ற மஹர்ஷிகளுக்குத் தெரிந்தவைகளும், அவர்களுடைய அனுக்ரஹத்தால் தங்களால் உண்மையாக அறியப்பட்டவைகளே! ஆசார்யர்கள், ரஹஸ்யமான விஷயத்தையும், ப்ரியனாகிய சிஷ்யனுக்குச் சொல்வது வழக்கம். ஆகையால் [எப்பொழுதும் க்ஷேமத்தையே கொடுப்பது இன்னதென்று ஸகல க்ரந்தங்களைப் படித்து தாங்கள் நிச்சயமாகத் தெரிந்து கொண்டதை எங்களுக்கு உபதேசிக்கவேண்டும்.] ஓ ஸூதைக்குரியவரே! இந்தக் கலியுகத்தில் ஜனங்கள் பெரும்பாலும் அதிக காலம் ஜீவித்திருப்பதில்லை; சோம்பலுள்ளவர்கள்; அதிலும் மிகவும் மந்தபுத்தியுள்ளவர்கள்; தவிரவும் பாக்யக் குறைவுள்ளவர்கள்; (விக்னங்களால் வருத்தப் பட்டவர்கள்)வியாதி முதலியவைகளால் துன்பமடைந்த வர்கள்; ஆகையால் வெகுகாலம் அநேக சாஸ்த்ரங்களைக் குருமுகமாய்க் கேட்கவும், அவைகளில் சாரத்தை தாமாகத் தெரிந்துகொள்ளவும் சக்தியற்றவர்கள்; பலவகை கர்மங்களைச் சொல்லும் அநேக சாஸ்த்ரங்களோ, தனித்தனியே தெரிந்துகொள்ள வேண்டியவைகளாக இருக்கின்றன. ஆனதால் எதனால் பரமாத்மாவின் ப்ரஸாதம் ஸித்திக்குமோ அந்த ஸாரமான விஷயத்தை தங்களுடைய புத்திக்குத் தோன்றியபடி எடுத்து உபதேசிக்க வேண்டும்.

அதனால் ஸகல ப்ராணிகளும் க்ஷேமத்தையடைவார்கள். ஓ! ஸூதரே! தங்களுக்கு இவ்விஷயம் யாவும், தெரிந்த வையே. நமக்கு க்ஷேமமுண்டாகட்டும். அளவில்லாத, ஐச்வர்யம் முதலியவைகளுள்ள, ஸாத்வதர்களுக்கு நாதனாகிய புருஷோத்தமன், தேவகியினிடம் வஸுதேவருக்குப் புத்ரனாக எதனைச் செய்வதற்காக அவதரித்தாரோ அந்தச் சரிதத்தைக் கேட்க விரும்பும் எங்களுக்கு தாம் உபதேசிக்கவேண்டும். எந்த பகவான் பூமியில் அவதரித்ததால் ப்ராணிகளுக்கு க்ஷேமம், ஐச்வர்யம், இவைகள் கிடைத்தனவோ, கோரமாகிய ஸம்ஸாரத்தை (இறப்புப்பிறப்பை) அழிந்தவன் எவருடைய திவ்யநாமங்களை உச்சரித்த மாத்ரத்தில் அதிலிருந்து விடுபடுகிறானோ, எவருடைய நாமத்தை கண்டு பயமும் பயப்படுகிறதோ, மேலும் இந்திரியங்களை ஜயித்தவர்களான முனிகள் எவருடைய பாதங்களையே ஆச்ரயித்திருக்கிறார்களோ, எவருடைய பாதத்திலிருந்து உண்டான கங்கையின ஜலமானது, தர்சிப்பவர்களையும், தொடுகிறவர்களையும், ஆசமனம் செய்பவர்களையும், பரிசுத்தர்களாகச் செய்கிறதோ; புண்ய ச்லோகர்களால் கொண்டாடக்கூடிய அந்தப் பகவானுடைய சரிதம் ஸம்ஸாரதுக்கத்தைப் போக்குமாகையால் சுத்தனாக வேண்டுமென்ற எண்ணமுள்ள எவன்தான் அதைக் கேட்கமாட்டான். ஆகையால் நாரதர் முதலிய ஞானிகளால், எப்பொழுதும், கானஞ் செய்யப்பட்டதும், ஸம்ஸார துக்கத்தை நிவர்த்திப்பதுமான, மேலான அந்த சரிதத்தை கேட்க நாங்கள் மிக ச்ரத்தையுள்ளவர் களாக இருக்கிறோம். ப்ரஹ்மா,ருத்ரன், முதலிய மூர்த்தி பேதத்தைத் தரிப்பவரும், தம்முடைய மாய மஹிமையால் லீலைகளைச் செய்பவருமாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அவதார கதைகளைச் சொல்ல

வேண்டும். அவைகளைப் போதிக்க தாங்கள் வல்லமை யுள்ளவர்களே. உத்தமச்லோகராகிய பகவானுடைய சரிதத்தைக்கேட்கக் கேட்க எங்களுக்கு போதுமென்ற திருப்தியுண்டாகிறதில்லை, பகவானுடைய சரிதமானது, கேட்பவர்களான ரஸிகர்களுக்கு அடிக்கடி இன்பத்தை கொடுக்கும். ஸ்ரீமஹா விஷ்ணுவானவர் மாயையால் மனிதனாக அவதரித்து, பலராமனுடன் சேர்ந்து மனிதர்களால் செய்யமுடியாத கோவர்த்தன பர்வதத்தை தூக்கியது முதலிய லீலைகளைச் செய்தாரல்லவா? இப்பொழுது கலியுகம் வந்துவிட்ட படியால், நாங்கள் விஷ்ணுவின் பதத்தையடைய விரும்பி மேல் சொல்லிய பகவானுடைய சரிதத்தைக் கேட்பதற்காகவே தீர்க்க ஸத்ரஞ் செய்வதான காரணத்தைக் கொண்டு இந்த நைமிசாரண்யத்தில் வஸிக்கிறோம். ஸமுத்ரத்தைத் தாண்ட விரும்பியவர் களுக்கு ஓடக்காரன் கிடைத்தாற்போல அதர்மத்திற்கு பந்துவாகிய இந்தக்கலியைக்கடக்க விரும்பிய எங்களுக்கு, உம்முடைய தர்சனம் தெய்வச்செயலால் நேர்ந்தது. தர்மத்தைக் காப்பாற்றி வந்தவரும், யோகிகளுக்கு அதிபதியுமான ஸ்ரீகிருஷ்ணபகவான் மனித சரீரத்தைவிட்டு தன்னுடைய ஸ்வரூபத்தை யடைந்தபின்பு தர்மம் யாரைச் சரணமடைந்தது சொல்லவேண்டும் என்று கேட்டார்கள்.

நோட்டு.

ஸ்ரீ வேதவ்யாஸபகவான் பாகவத சாஸ்த்ரத்தைச் செய்யவிரும்பி இடையூறின்றி முடியவேண்டியதற்காக பெரியோர்களுடைய ஸம்ப்ரதாயப்படி பரமாத்மாவை ஸ்மரிப்பதாகிய மங்களத்தைக் காட்டுகிறார். – ஸ்ரீ தரியம்.

1–1. எவரிடமிருந்து–ஸ்ரீ பாதராயணர் என்னும் வ்யாஸ பகவான், ஸகல ஜனங்களையும், ஸம்ஸார பந்தத்திலிருந்து நிவர்த்தித்து, அனுக்ரஹிப்பதற்காக வேதாந்தத்தாலே அறியக்கூடியதும், மற்றப்ரமாணங் களுக்குப புலப்படாததுமான பரப்ரஹ்மத்தை எல்லா வர்ணத்தார்களும் அறியச்செய்ய நினைத்து, ஸ்ரீமத் பாகவதமென்னும் க்ரந்தத்தை நாரதருடைய உபதேசத் தால் செய்யவிரும்பினார். அது, விக்னமில்லாமல் முடியவேண்டியதற்காக பரமாத்மாவை த்யானஞ் செய்தார். "எதனிடமிருந்து இந்த ப்ரபஞ்சம் உண்டாகின்றதோ"–"இந்த ஆகாசரூபமாகிய ஆனந்த மில்லாமற்போனால் எவன் ஜீவிப்பான்" என்ற அன்வயவ்யதிரேகச்ருதிகளால் ப்ரஹ்மம், ஜகத்காரண மென்றும், அர்த்தேஷு அபிக்ஞ: என்று அன்வயஞ் செய்து, ஸகல பதார்த்தத்தையறிந்தவர் என்று அர்த்தஞ்செய்வதால், ப்ரஹ்மத்தினிடத்தில் எல்லா வற்றையும் அறிந்திருப்பது முதலிய ஸகலகல்யாண குணங்களிருப்பதாயும், காட்டப்பட்டது. பரமாத்மா வானவர், ப்ரஹ்மதேவருக்கு தேஜஸ், ஜலம், பூமி இவைகளை ஒன்றோடொன்று கலந்து ஸிருஷ்டிக்கும் வகையை உபதேசித்தது போல ப்ரீதியுடன் வேதத்தையும் உபதேசித்தார். "வேதங்கள் முடிவில்லாத துகள்" என்றபடி வேதங்களை பூராவாகத் தெரிந்து கொள்ள முடியாததாகையால், தடையற்ற ஞானமுள்ள யோகிகளும் மோஹிக்கிறார்கள். "அந்த விஷ்ணுவின் மேலான பதத்தை எப்பொழுதும் ஸூரிகள் பார்க்கிறார்கள்." என்றபடி நித்திய ஸூரிகள், நாராயணனுடைய திவ்ய மங்களதேஹத்தின் ஒப்பற்ற காந்தியை தர்சித்து மோஹிக்கிறார்கள். மேல்காட்டிய மூன்று பூதங்களுடைய த்ரிவிருத்கரண ஸ்ருஷ்டியானது,

எவரிடத்தில் பொய்யாக இருக்கிறதோ (அது பகவானிடத்தில் ஸம்பந்திக்கிற தில்லையென்று கருத்து) மேலும் எவர் தன்னுடைய தேஜஸினால் ஸகல தோஷங்களையும் நாசம் செய்கிறாரோ முக்காலத்திலும் இருப்பவராகையால் எவர் நித்யரோ, ருத்ரன் முதலியவர்களைவிட சிறந்தவராகையால பரனோ, அந்த பர ப்ரஹ்மத்தை த்யானிக்கிறோம்– பாகவத சந்த்ரிகா.

ஒருகால் அஸுரர்கள் பூமியில் அரசர்களாகப் பிறந்து அந்த பாரத்தால் பூமி மிக வருத்தமடைந்தாள். அப்போது ப்ரஹ்மா, ருத்ரன் முதலிய தேவர்கள், பூமிக்கு நேர்ந்த ச்ரமத்தை நிவர்த்திக்குபடி ஸ்ரீ மஹா விஷ்ணுவை வேண்டிக்கொண்டார்கள். பகவான், அவர்களுடைய ப்ரார்த்தனைக்கிசைந்து, வெகுகாலமாய் தபஸ் செய்துகொண்டிருக்கும் ஸத்யவதியினிடம் பராசரருக்கு புத்ரனாக அவதரித்தார். இவர்தான் வ்யாஸரென்று சொல்லப்படுகிறார். இவர் மந்தபுத்தி யுள்ள ஜனங்களிடத்தில் மிகுந்த கருணையுள்ளவராய் வேதங்களை பிரித்து அதன் அர்த்தத்தை நன்றாய் காட்டுவதற்காக ப்ரஹ்ம ஸூத்ரங்களைச்செய்தார். பின்பு அதைப் படிக்கத்தகாத ஸ்த்ரீகள் சூத்ரர்களுக்காக புராணங்களையும் வெளியிட்டார். பின்னும் அவர் வேதத்தின் அர்த்தத்தை நன்றாய் காட்டுகிறதும் 12 ஸ்கந்தமுள்ளதும், 18,000 க்ரந்தங்களடங்கியதுமான பாகவத புராணத்தைச் செய்ய ஆரம்பித்து, தான் எப்பொழுதும் ப்ரஹ்ம ஸாக்ஷாத் காரமுள்ளவரான்லும் இயற்கையில் விக்ன ஸம்பந்தமில்லாதவரானாலும், க்ரந்தாரம்பத்தில் செய்யவேண்டிய ஸம்ப்ரதாயத்தை வித்வான்களுக்குத் தெரிவிப்பதற்காக, நாராயண

ஸ்மரணமாகிய மங்களத்தைச் செய்தார். அதாவது பரனைத் த்யானஞ்செய்கிறோம். க்ரந்தத்தின் ஆரம்பத்தில் நமஸ்கரிக்கக்கூடிய தேவதைகள் இருவகையானவைகள். 1. ஆதிகாரிகதேவதை—ஸூரியன் முதலிய க்ரஹங்கள். 2. அபிஷ்டதேவதை.— பகவான். இருவகையான தேவதைகளின் ஸ்வரூபியும் ஸகல கல்யாண குணங்கள் நிறைந்தவருமான பரமாத்மாவே இந்த பாகவத ஸாஸ்த்ரத்தால் வர்ணிக்கப்படுகிறார். நாராயணனைவிட பரன் வேறொருவருமில்லை "அந்த புண்டரீகாக்ஷனே தேவன், அந்த நாராயணனே பரன்" - ஹரிவம்சம்.

"ப்ரஹ்மத்தை யறிந்தவன் பரனை யடைகிறான்"
—ச்ருதி.

இவர் ஜகத்திற்கு காரணமாயிருப்பவர், "எவரிடமிருந்து இந்த பூதங்கள் உண்டாகின்றவோ, எவரால் உண்டானவைகள் ஜீவிக்கின்றனவோ, எவரிடம் லயிக்கின்றனவோ ? அதுவே ப்ரஹ்மம்" —ச்ருதி.

நான் எல்லாவற்றிற்கும் உற்பத்தி ஸ்தானம், என்னிடமிருந்தே எல்லாம் உண்டாகின்றன. எல்லா பிராணிகளையும் ஸ்ருஷ்டிக்கிறவனும், காப்பாற்றுகிறவனும், நாசஞ்செய்கிறவனும், நானொருவனே" —ஸ்மிருதி.

மேல்காட்டிய அன்வயத்தால் விஷ்ணுவே ஜகத் காரணரென்று ஏற்படுகிறது.

ஆக்ஷேபம்: ருத்ரன் முதலியவர்களும், ஜகத்திற்குக்

காரணமென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே அப்படிக்கிருக்க மேற்காட்டியது எப்படி பொருந்தும்.

ஸமாதானம்: வேதத்தில் சிலபாகத்தில் அப்படி சொல்லப்பட்டிருந்தாலும், பெரும்பாலும் விஷ்ணுவே ஜகத்காரணம் என்றே சொல்லப்பட்டிருக்கிறது 'எல்லா வேதங்களும் எந்தபதத்தைச் சொல்லுகின்றனவோ' —ச்ருதி.

"ஸகல வேதங்களாலும் அறியக்கூடியவன் நானே"
—ஸ்மிருதி.

ஆக்ஷேபம்:— பரமாணுவே ஜகத்காரணம், என்று ஏன் சொல்லக்கூடாது ?

ஸமாதானம்:— அப்படியல்ல, ப்ரத்யக்ஷத்திற்கும் ஆகமத்திற்கும் விரோதமில்லாத யுக்தியால், ப்ரஹ்மமே ஜகத்காரணமென்று சொல்லக்கூடும். புத்ரனுக்கு பிதாவே காரணமென்று தெரியவருகிறதல்லவா ? அது போல் ப்ரஹ்மதேவர் முதலியவர்களுக்கு சேதனனே காரணமாயிருக்க வேண்டும், மாயை முதலியவைகள் அசேதனமாகையால் அவைகளைக் காரணமென்று சொல்லக்கூடாது. இந்தவிஷயம் ச்ருதியில் பலவிடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பரமாணுவே ஜகத்திற்கு காரணமென்று சொல்பவர்கள் ச்ருதி விருத்தமான யுக்தியைக் காட்டுவதனால் அது ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல. அந்த பரமாத்மா எல்லாவற்றையும் பொதுவாகவும் விசேஷமாகவும் அறிந்தவர். அதனால் ப்ரஹ்மதேவருக்கு வேதங்களை யுபதேசித்தவர். அவருடைய அனுக்ரஹமில்லாதவரையில் ப்ரஹ்ம தேவர் முதலியவர்களும் மோஹிக்கிறார்கள். தேஜஸ்,

ஜலம், பூமி, இவைகளின் கார்யம் எப்படி ஸத், அஸத் இவைகளைவிட வேறாக ஆகிறதில்லையோ? பகவானால் செய்யப்படுகிறபடியால் ஈச்வர ஸிருஷ்டி, ஜீவஸ்ருஷ்டி, ஜடஸிருஷ்டி, ஆகிய இவைகள் மூன்றும் பொய்யானதல்ல. மாயைக்கடந்த ஆனந்தானுபவ ரூபராயுமிருக்கும் பரமபுருஷனைத் த்யானிக்கிறோம். தேஜஸ் ஒன்றானாலும்,தான் தன் கார்யமான பூமி முதலியவைகளில் பிரவேசித்து சிலகாலத்தில் வெளிப் படுவது போல, பகவான் ஜகத்தை ஸிருஷ்டித்து, அவைகளில் பிரவேசிக்கிறார். பின்பு பக்தர்களை அனுக்ரஹிப்பதற்காக கிருஷ்ணன் முதலிய அவதாரஞ் செய்கிறார். இதுவே ஈச்வர ஸிருஷ்டியெனப்படும், ஸூர்யன் முதலிய தேஜஸினால் ஜலத்தில் அனேக ப்ரதிபிம்பங்கள் ஸ்தூலசரீரம் முதலிய உபாதிகளால் ஈச்வரனுடைய ப்ரதிபிம்பங்களாகிய ஜீவர்கள் உண்டாகிறார்கள். இதுவே ஜீவஸர்க்கம் எனப்படும். மண்ணினால் குடம் முதலியவைகளை யுண்டு பண்ணுவதுபோல ஈச்வரன் அஹங்காரம் முதலியவை களை ஸிருஷ்டிக்கிறார். இதுவே ஜடஸர்க்கம்,– விஜயத் வஜீயம்:

1–4: லக்ஷணம்– இருவகை (1) தடஸ்தலக்ஷணம்– மேற்காட்டியது 2. ஸ்வரூப லக்ஷணம்–ஸத்யஸ்வரூபி. ஸகலத்தையுமறிந்தவர் ஸகல சக்தியுள்ளவரென்பது அன்வயம்– ஆகாசம் முதலிய கார்யங்களின் ஸத்தை யானது, ஆத்மாவின் ஸத்தையால் என்பது. வ்யதிரேகம்–எதிலில்லாததால் அது இல்லையோ அது (உதா) ஆகமஸத்தையில்லாததனால் ஆகாசபுஷ்பங் களில்லை– ஸ்ரீத.

பரமாத்மா, ஸத்ரூபியாய் ஏல்லாவற்றிலும் அனுவ்ருத்தித்திருப்பதால் எல்லாவற்றிற்கும் காரண மாகிறார் (உதா) மண்ணானது அதன் கார்யமாகிய குடம், மடக்கு, தோண்டி முதலியவைகளிலும், தங்கமானது அதன் கார்யமாகிய குண்டலம் முதலிய நகைகளிலும், படர்ந்திருக்கிறது– ஸ்ரீத.

5. அறிந்தவரும் – ப்ரதானம் (மாயை) ஜகத்காரண மானாலும் அதல்லவென்று காட்டப்பட்டது. "மாயை ஜடமாகையாலும், வேதத்தில் ஸிருஷ்டிக்க ஸங்கல் பித்தாரென்று சொல்லியிருப்பதாலும், அம்மாதிரியான ஸங்கல்பம் மாயையினிடம் ஏற்பட நியாயமில்லாததனா லும், மாயை ஜகத்காரணமல்ல– வ்யாஸஸூத்ரம்.

2–1 ப்ரகாசிப்பவர்.– இதனால் சேதனனாகிய ஜீவனைவிட மேலானவரென்று காட்டப்பட்டது.

2–2 உபதேசித்தாரோ.–"எல்லாவற்றிற்கும் முந்தி ஹிரண்யகர்ப்பர் உண்டானார். அவர் ஸகல பூதங்களுக்கும் ஒரே யஜமானனாக விருந்தார். அவர் பூமியையும் அந்தரிக்ஷத்தையும், காப்பாற்றிவந்தார் என்ற ச்ருதிப்படி ப்ரஹ்மதேவருக்கும் மேலானவரென்று காட்டப்பட்டது. எவர் முதலில் ப்ரஹ்மாவை யுண்டு பண்ணுகிறாரோ, எவர் அவருக்கு வேதங்களை உபதேசிக்கிறாரோ, அந்த ஸ்வப்ரகாசரான தேவனை மோக்ஷமடைய விரும்பிய நான் சரணமடைகிறேன்." –ச்ருதி.

மனதால்– ப்ரஹ்மதேவர் பிறரிடத்தில் வேதாத்ய யனஞ் செய்தாரென்று ஓரிடத்திலும் சொல்லப்

படாமலிருந்தாலும் பரமாத்மாவின் ஸங்கல்ப மாத்ரத்தால் ப்ரஹ்மதேவருக்கு வேதங்கள் தோன்றினவென்று தாத்பர்யம்.

வேதங்கள்.— ப்ரஹ்மா தானாக வேதங்களைத் தெரிந்துகொண்டவரல்லவென்பது கருத்து.— ஸ்ரீத.

ப்ரஹ்மதேவருக்கும் ஞானத்தையுபதேசித்தவரும், இயற்கையில் அளவற்ற நித்ய ஞானமுள்ளவரும், எல்லாவற்றையும் ப்ரகாசிக்கச் செய்பவரும் மற்ற தேஜஸை அபேக்ஷியாமலேயே ப்ரகாசிப்பவரும். ஸத்ய ஸ்வரூபியாயுமுள்ள பரமாத்மாவே ஜகத்காரணம், அவரே திவ்ய மங்களஸ்வருபி, அவரை த்யானிப்பதால் ஸகல க்ஷேமங்களும் கிடைக்கும்.

இந்த புராணத்தில் காயத்ரியின் அர்த்தமாகிய பரப்ரஹ்மவித்யை நன்றாய் காட்டப்பட்டிருக்கிறது.— அந்த காயத்ரீ, வேதமாதா, இது வேதத்தையே ப்ரமாணமாய் கொண்டது. "எதில் காயத்ரியை அனுஸரித்து தர்மங்கள் விஸ்தாரமாக வர்ணிக்கப்படுகின்றனவோ, எதில் வ்ருத்ராஸுரவதத்தின் கதை சொல்லப்பட்டிருக்கிறதோ அது பாகவதமென்று சொல்லப்படுகிறது. அதை எழுதி ஸுவர்ணத்தால் செய்யப்பட்ட ஸிம்ஹ ப்ரதிமையுடன் புரட்டாசி மாஸத்திய பௌர்ணமியில் எவன் தானஞ்செய்கிறானோ அவன் உத்தமகதியையடைகிறான். இது 18,000 க்ரந்தங்களுள்ளது"— மத்ஸ்யபுராணம், "ஓ அம்பரீஷ! உனக்கு ஸம்ஸார பந்தம் நிவர்த்தியாக வேண்டுமானால் சுகஸ்வாமியால் உபதேசிக்கப்பட்ட ஸ்ரீமத் பாகவதத்தை பிறர் சொல்லக் கேளும் தானாகவாவது படியும்," — பத்மபுராணம்,

ஸகலஜகத்தையும், படைத்து அவைகளைக் காப்பாற்றுகிறவர் என்றாலும் ஸ்வயம் ப்ரகாசர் என்றாலும் காயத்ரியின் அர்த்தமானது காட்டப்பட்டிருக்கிறது. 6. மாறுத— கோடைகாலத்தில் மாத்யாஹ்னவேளையில் வனம் முதலிய சூன்யமாகிய விடங்களில், வெயிலை ஜலமென்று நினைத்து தாஹமுள்ள ஜனங்கள் அதனால் தாஹத்தைப் போக்கிக்கொள்ளலாமென்று அதையனுஸரிக்கிறார்களல்லவா ? அவ்விடத்தில் தோற்றுகிற ஜலமானது வாஸ்தவமல்ல. ஆச்ரயமாகிய தேஜஸ் உண்மையானதால் (வ்யவஹாரகாலத்தில்) ஜலமிருப்பதுபோல தோன்றுகிறதுபோல ஸத்வம், ரஜஸ், தமஸ், ஆகிய முக்குணங்களால் உண்டாகியிருக்கும் ஸிருஷ்டிகள் யாவும், ஸத்யமன்று. ஆச்ரயமாகிய ஆத்மாவின் ஸத்தையால் ஸத்தாகத் தோற்றுகிறது. ஸ்ரீத, 11.— வ்யாச மஹா— வ்யாச மஹாமுனியால் செய்யப்பட்ட இந்தப் பாகவதமென்ற க்ரந்தத்தில் பக்தியாகிய தர்மம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆபிசார ப்ரயோகமாகிய ச்யேனயாகம் போல் இது பாபமுள்ளதல்ல. மோக்ஷஸாதனமாகையால், மிகவும் மேலானது. மாத்ஸர்யம் முதலிய துர்க்குணமில்லாத ஸாதுக்களால் அனுஷ்டிக்கக்கூடியது. இதனால் நித்ய வஸ்துவாகிய பரமாத்மாவே அறியக்கூடியவர். அவரே அக்னிமுதலிய ரூபமாகவிருந்து ஸ்வர்க்கம் முதலியவைகளைக் கொடுக்கிறார். முவ்வகையான தாபத்தைப் போக்குகிறார், புண்யசாலிகள் இந்த கிரந்தத்தைக் கேட்க வேண்டுமென்று விரும்பிய க்ஷணத்திலே அவர்களுடைய ஹிருதயத்திலே பகவான் ஸ்திரமாக வஸிக்கிறார். மற்ற க்ரந்தங்கள் இதுபோல பக்தியையுண்டுபண்ணி அதனால் ஈச்வரனை மனத்திலிருக்கச் செய்கிறதில்லை. ஆகையால் இதுவே உத்தமமானது.—சந்திரிகா. அழகு—

"தோஷமற்ற ஸகல புராணங்கள் பாகவதமில்லாத காலத்தில் ஸாதுக்களுடைய ஸபையில் ப்ரகாசிக்கும்" என்றபடி பந்தகமாகாத "ஓ அர்ஜுன! நீ செய்கிறதை யும், புஜிக்கிறதையும், ஹோமஞ்செய்கிறதையும் தானஞ் செய்கிறதையும், தபஸ்செய்வதையும் எனக்கு அர்ப்பணம் செய்துவிடு"– பகவத்கீதை. என்றபடி பலனையுத்தேசியாமல் செய்யும் கர்மங்களே மேலான வைகள். அவைகளே கபடமற்ற தர்மங்கள். "பகவானுடைய நாமங்களைச் சொல்லுவது முதலிய பக்தியே மனிதர்களுக்கு மேலான தர்மம். அதனாலேயே பகவான் ஸந்தோஷப்படுகிறார்" என்றபடி பக்தியே மேலானதர்மம்.– விஜயத்வஜீயம். மோக்ஷத்தை விரும்பியவர்களுக்கு மிகரமணீயமானது– ஸ்ரீத. 28– அமிருதத்ரவ– மோக்ஷத்திற்கு ஸாதனமாகிய பக்திரஸமுள்ளது. இதை சரீரம் போகும்வரையில் பானஞ்செய்யுங்கள். சந்த் செய்யப்பட்ட–கர்த்தா வினுடைய மேன்மையால் க்ரந்தத்திற்கு மேன்மை காட்டப்பட்டது. அறியக்கூடியதும்.– ஞானகாண்டத் தை உயர்ந்ததென்று காட்டப்பட்டது.– புண்ய 23– புண்யம் செய்யாதவர்களுக்கு ஸ்ரீமத் பாகவதத்தை கேட்கவேண்டுமென்ற ஆசையுண்டாகாது. 24– ஸ்திர மாக.– தேவதாகாண்டத்தைவிட மேலானதென்று கருத்து. மேற்காட்டியபடி கர்ம காண்டம் தேவதா காண்டம். ஞானகாண்டம் மூன்று பாகங்களடங்கிய வேதார்த்தம் முழுவதும் தெரிந்துகொள்ளக் கூடியதா யிருப்பதால் ஸகல சாஸ்த்ரத்தை விட இது மேலானது. ஆகையால் ஸாதுக்கள் முகமாய் கேட்டுத் கொள்ள வேண்டும்– ஸ்ரீத. பரவிற்று– சிஷ்ய பரம்பரையாய். நசுக்கிவிடாமல் ஜாக்ரதையாய் கொண்டுவரப்பட்ட தென்று காட்டப்பட்டிருக்கிறது. சுகருக்கு உபதேசஞ்

செய்தது முதலியவைகள் பாகவதஞ்செய்த காலத்திற்கு பிந்திய காலத்தில் நடந்ததானாலும் வருங்கார்யமும் நடந்தது போலவே சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீத. அமிருதம் சுகமென்றால் கிளியால் கொத்தப்பட்ட பழம் மிகரஸமுள்ளதென்று பிரஸித்தம் அமிருதம்– மேலான ஆனந்தம் அதேரஸம், அதையுடையது," அவரே ரஸம், ரஸத்தை யடைந்தே இவன் ஆனந்தமுடையவனாக ஆகிறான்" ச்ருதி. ரஸரூப:– மற்ற பழங்களில் எப்படி மேற்புறத் தில் தோலும் அதற்குள்ளே ரஸமுமிருக்கிறதோ? அடபடி இதில் தோல் முதலிய ரஸமற்ற பாகங்களில்லை;

ஆக்ஷேபம்– பழமென்றும் அதையே ரஸமென்றும் சொல்வது பொருந்துமா? ரஸமுள்ள பழமென்று சொல்ல வேண்டாமா?

ஸமாதானம்:– மற்ற பழங்கள் போல தோல் முதலியவைகளில்லாமல் ரஸமாகவே இருக்கிறதென் பதை காண்பிப்பதற்காக ரஸமென்று சொல்லப்பட்டது. பூமியில் விழுந்த ரஸமென்றால் அது த்ரவரூபமாய் போய்விடாமல் புஜிக்கதக்க பழமென்பதால் காட்டப் பட்டது முக்தர்– ஆத்மாவிடத்திலேயே ரமித்து கொண்டிருப் பவர்களும், மற்ற க்ரந்தங்களில் ஆசையில்லாத வர்களுமான மஹர்ஷிகளும் பகவானிடம் யாதொரு காரணமுமில்லா மல் பக்தி செய்கிறார்கள். இம்மாதிரியான குண முள்ளவர் ஸ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம்,1–"அத்யாயம்" 7. ஸ்வர்க்க லோகத்தை– ஸ்வர்காய– பகவான். அவரே லோகம் (பக்தர்களுக்குருட்டிடம்) அவரை யடைவதற்காக–ஸ்ரீத ஸ்வர்க்க– மேலான ஆனந்தம், அப்பேர்பட்டலோகம் பரமபதம், அதையடைவதற்காக– ஸத்ரம்– எந்த யாகத்தில் ரித்விக்குகளே யஜமானர்களாக விருக்கிறார்களோ

அது முனி.. ஸத்ரம்—ஸாதுக்களைக் காப்பாற்றுகிறது. —விஜ. அக்னி—நித்ய நைமித்திக ஹோமங்களை— முனி. புராணங்கள் 1.ப்ரஹ்ம புராணம் 2. பாத்மம். 3. விஷ்ணுபுராணம். 4. சிவபுராணம் 5. நாரதபுராணம் 6. மார்கண்டேயம், 7. ஆக்னேயம். 8. பவிஷ்யபுராணம். 9. ப்ரஹ்மகைவர்த்தம். 10 லிங்க புராணம் 11. வராஹபுராணம் 12. ஸ்காந்தம். 13. வாமனம். 14 கூர்மபுராணம். 15. மத்ஸ்யபுராணம். 16.கருடபுராணம். 17. ப்ரஹ்மாண்டம். 18வது ஸ்ரீமத் பாகவதபுராணம். 24—பல— அனேகசாஸ்த்ரங்களை அப்யஸித்தாலும் அவ்வளவு பலன் கிடைக்கிறதில்லை யென்று கருத்து ஸ்ரீத. 3—31 க்ஷேம.—ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் கதையைக் காலதாமதமின்றிக் கேட்க வேண்டுமென்று விரும்பி சுருக்கமாய் ஆசிர்வாதஞ் செய்தார்கள். "ஒரு முஹூர்த்தமாவது ஒரு க்ஷணமாகிலும் ஸ்ரீ வாஸுதேவரை ஸ்மரிக்காமலி ருப்பதே கெடுதிக்கு காரணம்.— ஸ்ரீத. 32—ஸாத்—பகவத் பக்தர்கள். ஸ்ரீத. 4—14 நாரதர்— இவர் ப்ரஹ்மதேவருடைய மனத்திலிருந்து உண்டா னவர். இவர் தேவர்ஷி இவருடைய குணங்கள் மஹாபாரதம் ஸபாபர்வத்திலும், சாந்திபர் வத்திலும் நன்றாக வர்ணிக்கப் பட்டிருக்கின்றன. இவர் கானவித்தையை அப்யளித்த கதை அத்புத ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர் ஞானத்தை பிறகுக்குபதேசிப்பதாலும், அக்ஞானத்தைப் போக்குவதாலும் நாரதரென்ற பெயரை யடைந்தார். 21— உத்தம—எவருடைய பெயரை உச்சரித்த மாத்ரத்தில் புண்யம் கிடைக்குமோ, அவர் சொல்லவேண்டும்— மஹர்ஷியின் கேள்விகள் ஆறு.

அவைகளில் 1. சாஸ்த்ரங்களுடைய ஸாரமானது எது, 2. ஸ்ரீ கிருஷ்ணபகவான் செய்த கார்யங்கள் எவை, 3 ஸிருஷ்டி முதலிய லீலைகள், 4 அவதார கதைகள். 5. பகவானுடைய சரிதம், 6. தர்மத்தை ஸம்ரக்ஷித்தது. ஸ்ரீத.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–2.

ஸூதர் ப்ரத்யுத்தரஞ் சொன்னது.

ரோமஹர்ஷணருடைய புத்ரரான ஸூதர் அந்த ப்ராஹ்மணர்களுடைய நல்வார்த்தைகளைக் கேட்டு ஸந்தோஷித்து அவர்களுடைய கேள்வியை ச்லாகித்துப் ப்ரத்யுத்தரஞ் சொல்ல ஆரம்பித்துப் பின்வருமாறு தன் குருவை வணங்கினார்.

2–31/2. சுகர் அதி பால்யவயதிலே (உபநயனஞ் செய்யப்படாமலிருக்கும் வயதிலே) கர்மமார்க்கத்தில் விருப்பமில்லாதவராய், துறவியாகப் போகும்பொழுது, பிதாவாகிய வ்யாஸர் பிள்ளையை விட்டுப் பிரியமன மில்லாதவராய் ஓ! புத்ரா! என்று உரக்க அழைத்தார். அப்பொழுது மரங்கள் விடைகூறின. (மரங்களின் ரூபமாயிருந்து பிதாவின் ப்ரீதியைக் குறைப்பதற்காகச் சுகரே அப்படிக்கூறினார் என்பதாம்) அவர் ஸகல ப்ராணிகளுடைய ஹ்ருதயத்தில் வசிப்பவர், அந்த சுக மஹாயோகியை நமஸ்கரிக்கிறேன். எவர் ஸம்ஸாரமா கிய இருட்டைக்கடக்க விரும்பிய ஜனங்களிடத்தில், கருணை வைத்து ஒப்பற்ற, மஹிமையுள்ளதும், ஸகல வேதங்களின் ஸாரமாயும், நிகரில்லாததாயும், ஆத்ம தத்துவத்தைக் காட்டுவதில் தீபமாயுள்ளதுமான, ரஹஸ்யமாகிய புராணத்தை வெளியிட்டாரோ, வ்யாஸருடைய புத்ரரும், முனிகளுக்குக் குருவுமாகிய அந்தச்சுகருக்கு நமஸ்காரம் செய்கிறேன். நாராயண ரையும், மனிதர்களுக்குட் சிறந்தவரான நரனையும், ஸரஸ்வதி தேவியையும், வ்யாஸரையும் நமஸ்காரஞ் செய்து பின்பு (ஜயத்தை) க்ரந்தத்தைச் சொல்லுகிறேன்.

4–35. 'ஓ மஹர்ஷிகளே! நன்றாய்க் கேட்டீர்கள், தாங்கள் கேட்டவிஷயம் உலகத்திற்கே மங்களத்தைக் கொடுக்கக்கூடியது. எதனால் பரமாத்மா ஸந்தோஷி ப்பாரோ அம்மாதிரி ஸ்ரீ கிருஷ்ணன் விஷயமாகக் கேட்டீர்கள். பலனை உத்தேசியாமல் இடையூறின்றி ஸ்ரீ மஹா விஷ்ணுவிடத்தில் செய்யும் பக்தியே மேலான தர்மம். அதனால் பரமாத்மா மிகவும் ஸந்தோஷமடை கிறார். பகவானாகிய வாஸுதேவரிடத்தில் பக்தி செய்தால், வைராக்யமும் காரணமற்ற உண்மையான ஞானமுமுண்டாகும். புருஷர்கள் குறைவின்றி தங்களுக்குரிய தர்மங்களை யனுஷ்டித்தும் அதனால் பகவானுடைய கதையைக்கேட்க வேண்டுமென்ற ஆசையுண்டாகாவிட்டால் அது பயன்படாததேயாகும். மஹாவிஷ்ணுவின் கதையாகிய அமிர்தத்தைப் பானஞ் செய்தும் (கதையைக் கேட்டும்) சித்தமுருகுதல், ஆனந்தத்தால் கண்ணீர் பெருகுதல், மயிர்க் கூச்சலிடல், என்னும் இவைகள் எவனுக்கு உண்டாகவில்லையோ, அவன் ஆத்மதத்துவத்தை பலதடவை குருமுகமாகக் கேட்டாலும் அதன் உண்மையை அறியமாட்டான். (பகவத்பக்தி, வைராக்யம், ஆத்மஞானம், என்னும் இவைகளே மேலான தர்மமென்று கருத்து). மோக்ஷத் திற்கு உபயோகமாகிய தர்மத்திற்கு இரண்டாவது புருஷார்த்தமாகிய அர்த்தம் பலனென்றும் தர்மத்தை விட்டுபிரியாத அந்த அர்த்தத்திற்குக் காமம் ப்ரயோஜன மென்றும் சிலர் சொல்வது மஹரிஷிகளால் ஒப்புக் கொள்ளபடவில்லை. இது பிரசித்தமான விஷயம். இந்திரியங்களை திருப்தி செய்வதே (விஷயானுபவம்) காமத்திற்கு பலனென்று சொல்வதும் சரியல்ல. ஆனால் ஜீவிப்பதற்குப் போதுமான அளவு விஷயத்தை அனுபவிப்பதே பலனாம். தத்துவத்தைத் தெரிந்து

கொள்ள விரும்பியவனுக்கு கர்மங்களால் கிடைக்கும் பலன் பயன்படாது. உண்மையை அறியவேண்டுமென்ற விருப்பமே அவனுக்குப் பலன். மேலும், நாசமற்றதான ஞானஸ்வரூபத்தையே தத்வமென்று, உண்மையை யறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். அதனையே உப நிஷத்தை அத்யயனஞ் செய்தவர்கள் ப்ரஹ்மம் என்றும், ஹிரண்யகர்ப்பனை உபாஸிப்பவர்கள், பரமாத்மாவென் றும், ஸாத்வதர்கள் பகவான் என்றும் சொல்லுகிறார்கள் "ஆகையால் ச்ரத்தையுள்ள முனிகள் வேதாந்தம் முதலிய சாஸ்த்ரங்களைக் குருமுகமாகக் கேட்டு, ஸ்திரமான ஞானம்,வைராக்யம், பக்தி இவைகளை அடைந்து ஜீவனுக்கும், பரமாத்மாவுக்கும் பேதமில்லை என்று தெரிந்துகொள்கிறார்கள். ஓ! ப்ராஹ்மண ச்ரேஷ்டர்களே! அவரவர்களுடைய ஜாதிக்கும், ஆச்ரமத்திற்கும் தகுதியான தர்மத்தை ஸாங்கமாய் (குறைவின்றி) அனுஷ்டித்தால், அவர்களிடத்தில் ஸ்ரீ நாராயணன் ப்ரியப்படுகிறார். இதுவே அதற்குப் பலமாகும். ஆகையால் பகவானுடைய கதையைக் கேட்கும்போதும் அவருடைய நாமபஜனம் செய்யும் போதும், அவரைத்யானஞ் செய்யுங்காலத்திலும், அவரைப் பூஜிக்கும் போதும், வேறு விஷயத்தில் மனத்தைச் செலுத்தாமலிருக்க வேண்டும்.விவேகிகள் பகவத்யானமாகிற கத்தியால் அஹங்கார ஸம்பந்தத்தை யுண்டுபண்ணும் கர்மபந்தத்தை வெட்டுகிறார்கள். ஆகையால் பகவானுடைய கதையைக் கேட்பதில் விருப்பமில்லாதவர் யார்? (எல்லோரும் விரும்புவார்கள்) ஓ! ப்ராஹ்மணர்களே! புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வதால் பாபங்கள் நீங்குகின்றன, பின்பு பெரியோர்களுடைய சேர்க்கையுண்டாகின்றது. பிறகு தர்மத்தில் ச்ரத்தையும் அதன்பின் வாஸுதேவருடைய

கதையைக்கேட்க விருப்பமும், பின்பு அதில் ப்ரீதியு மாகிய இவைகள் முறையே உண்டாகின்றன. தம் கதையைக் கேட்பவர்களுக்கும், நாமபஜனஞ் செய்பவர் களுக்கும், புண்யத்தைக்கொடுப்பவரும், ஸாதுக்களுக்கு அனுகூலத்தை செய்பவருமான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா தம்முடைய கதையை கேட்பவர்களுடைய ஹ்ருதயத்தில் வசித்துக்கொண்டு காமம், கோபம் முதலியவைகளை நாசஞ்செய்கிறார். எப்பொழுதும் பகவத் பக்தர்களை ஸேவிப்பதாலும், பாகவத சாஸ்த்ரத் தைப் படிப்பதாலும் பெரும்பாலும் அக்ஞானம் விலகும். அதனால் உத்தமச்லோகராகிய (புண்யகரமான பெயருள்ள) பகவானிடம் ஸ்திரமான பக்தியுண்டாகும். அப்பொழுது ரஜோகுணம், தமோகுணம் ஆகிய இவைகளாலுண்டாகும் காமம், க்ரோதம் முதலிய வற்றால் அவர்களுடைய மனஸ் விகாரமடையாமல் ஸத்வகுணமுள்ளதாய் சாந்தமாயிருக்கும். இப்படி பகவானிடம் பக்தி செய்கிறவனுடைய மனஸானது அதன் மஹிமையால் சாந்தமாய் விடும். ஆசைகளும் ஒழிந்துவிடும்; பின்பு பரமாத்மாவின் உண்மையான ஸ்வரூபஞானமுண்டாகும். ஆத்மரூபியான ஈச்வரனு டைய ஸாக்ஷாத்காரமுண்டானவுடன் அஹங்காரம் அடியோடே நாசமடைகிறது. ஸம்சயங்கள் யாவும் நிவர்த்தியாகின்றன. ப்ராரப்தகர்மம் தவிற மற்றவைகள் நசிக்கின்றன. ஆகையால் வித்வான்கள் பகவானாகிய வாஸுதேவரிடத்தில் எப்பொழுதும் மிகுந்த ஸந்தோஷத் துடன் பக்திசெய்கிறார்கள். அதனால் அவர்களுடைய சித்தம் சுத்தமாகிறது. பரமபுருஷன் ஒருவரானாலும் உலகத்தைக் காப்பாற்றுவதற்கு ஸத்வ குணத்தாலும், ஸ்ருஷ்டிப்பதற்கு ரஜோ குணத்தாலும், ஸம்ஹரிப்ப தற்கு தமோ குணத்தாலும், முறையே ஹரி, (விஷ்ணு)

பிரஹ்மா, ருத்ரன் என்னும் பெயரடைகிறார். ஆனால் ஸ்த்வமூர்த்தியான வாஸுதேவரிடமிருந்து மனிதர் களுக்கு க்ஷேமங்கள் யாவும் கிடைக்கின்றன. அக்னியானது கட்டையைப்பிடித்து எரிக்கும்போது அந்தக் கட்டையாகிற உபாதி ஸம்பந்தத்தால் புகை உண்டாகிறது. அதிலிருந்து வேதங்களில் சொல்லிய கர்மங்களுக்கு யோக்யமான அக்னி விருத்தியடைகிறது அதுபோல லயஸ்வரூபமாகி தமஸ்ஸினிடமிருந்து ரஜோகுணமும், அதனிடமிருந்து ஸத்வகுணமும், அதன்னால் ப்ரஹ்மப்ராப்தியும் உண்டாகிறது. முன் காலத்தில் பெரியோர்களான முனிவர்கள் சுத்த ஸத்வ மூர்த்தியும், பகவானுமாகிய, மஹாவிஷ்ணுவை (இந்த்ரியங்களுக்குப் புலப்படாதவரை) பஜித்தார்கள். ஆகையால் அந்த மார்க்கத்தை அனுஸரிப்பவர்கள், ஸம்ஸாரத்திலிருந்து க்ஷேமத்தை அடைவார்கள். மோக்ஷத்தை விரும்பியவர்கள், கோரஸ்வரூபமுள்ள பரமசிவன், பித்ரு கணங்கள், முதலியவைகளை உபாஸியாமல் அவர்களை நிந்திக்காமலும், சாந்தங் களான, நாராயணனுடைய கலைகளை, (அம்சங்கள்) உபாஸிக்கிறார்கள். ரஜோகுணம், தமோகுணம், இந்த ஸ்வபாவமுள்ள ஜனங்கள், ஐஸ்வர்யம், புத்ரன், அழகு, இவைகளை அடையவிரும்பி தங்களுக்கு ஸமமான ஸ்வபாவமுள்ள, பித்ருக்களையும், ருத்ரன், ஹிரண்ய கர்பன், முதலியவர்களையும், ஸேவிக்கிறார்கள். வேதங்கள், யாகத்தின் ஸ்வரூபத்தைச் சொல்லுகின்ற வைகளானாலும் யாகத்தால் ஆராதிக்கப்படும் தேவதை விஷ்ணுவாகையால், அவைகள் யாவும், வஸுதேவரு டைய புத்ரனாகிய பகவானையே சொல்லுகின்றன.

யோக சாஸ்த்ரங்கள் எல்லாம் ப்ராணாயாமம்

முதலியவைகளை, நிரூபிப்பவைகளானாலும், அவைகள் பகவானை அடைவதற்கு உபாயமாகையால் அந்தப் பரமாத்மாவையே சொல்லுகிறவைகளாகின்றன. மற்ற கர்மங்களும், அந்தப் பரம புருஷனுடைய ஆராதனத் திலேயே உபயோகிக்கப்படுகின்றன. ஞானசாஸ்த்ரம், தபஸ். தர்மசாஸ்த்ரம், கர்மத்தின் பலனாகிய ஸ்வர்க்கம், முதலியவைகள் யாவும், பரமாத்ம பரங்களேயாகின்றன. நிர்குணராயும், எங்கும் நிறைந்தவருமான அந்த பகவானே காரணரூபமாயும், கார்யரூபமாயுமிருந்து, முக்குண ஸ்வரூபமாயுள்ள தம்முடைய மாயையால் முதலில் உலகத்தை ஸ்ருஷ்டித்தார். மேலும் அவர் அந்த மாயையால் உண்டாகி ப்ரகாசிக்கும் ஆகாயம் முதலியவைகளில் உட்பிரவேசித்து இயற்கையில் தாம் குணமற்றவரானாலும், குணமுள்ளவர்போலத் தோன்று கிறார். அவர் விஞ்ஞானத்தால் (சித்சக்தி) நிறைந்தவர் கட்டைகளில் ஜ்வலிக்கும் அக்னி உண்மையில் ஒன்றானாலும், ஆச்ரய பேதத்தால் வெவ்வேறாகத் தோன்றுகிறது போல ஜகத்ரூபியான பரமபுருஷன் ஒருவரானாலும், ஒவ்வொரு ப்ராணிகளிடத்திலும், வெவ்வேறாகக் காணப்படுகிறார். அந்தப் புருஷோத்த மனே பூதஸூக்ஷ்மங்கள், இந்த்ரியங்கள், மனம் ஆகிய இவைகளால் உண்டுபண்ணப்பட்ட ப்ராணிகளிடத்தில் ப்ரவேசித்து விஷயங்களை அனுபவிக்கச்செய்கிறார். லோககர்த்தாவாகிய ஈச்வரன் திர்யக் (புறவை பசு முதலிவைகள்) தேவர்கள், மனிதர்கள் இவைகளில் ஸத்வ மூர்த்தியாய் அவதரித்து உலகங்களைக் காப்பாற்று கிறார். இவைகளே லீலாவதாரமெனப்படுகின்றது.

நோட்டு.

11–22. பால்ய– எனக்கு உபநயனம் செய்ய

வேண்டும் என்று ஆசார்யரிடம் வராதவர், அல்லது, தான் ஒருவராகப்போனார்.– ஸ்ரீத– தேஹம் முதலிய வைகளில் அபிமானமற்றவர்.– இவர் ருத்ரனுடைய அவதாரம்– விஜய. 12–4– ஸரஸ்வதி தேவியென்றால் ஸ்ரீதேவி,நரனென்றால் வாயுபகவான் – விஜ, ஜயம்– ஸம்ஸாரத்தை ஜயிப்பதால் இப்பெயர் கிடைத்தது, 14–நாரண தாரண– "ஓ அர்ஜுன! நான் வேதங்களாலும், தபஸினாலும், யாகத்தாலும் அறியமுடியாதவன்" என்ற ஸ்மிருதியின்படி பக்தியைவிட வேறு காரண மற்ற–ஸ்ரீத.– வீர. விஷ்ணுவின் பிரஸாதத்தால் உண்டான ஞானம். விஜ.

12–24 தர்ம–மோக்ஷத்திற்கு ஸாதனமாகிய தர்மத்திற்கு பணம் பலனல்ல. தர்மத்திற்காகவென்று, ஸம்பாதிக்கப்பட்ட பணத்திற்கு காமம் ப்ரயோஜன மாகாது. விஜ 11–12 ஹரி–

ஆக்ஷேபம்:– விஷ்ணு ஒருவரே ப்ரஹ்மா, பரமசிவன், என்ற பெயரை அடைகிறார் என்று சொன்னதால், மூன்று தேவர்களும் ஒருவரென்றும், ஒருவருக்கொருவர் பேதமில்லாதவர்களென்றும் ஏற்படுகிறது. "ப்ரஹ்மாவும், சிவனும் நாராயணனே" ச்ருதி. நாராயணர் என்ற பெய்ருடைய ப்ரஹ்மதேவர் கல்பத்தின் முதலில் ஜனங்களை ஸிருஷ்டித்தார். பிறகு அந்த பகவானாகிய விஷ்ணுவானவர் காலாக்னி ருத்ரரூபியாயிருந்து ஸகல லோகத்தையும் ஸம்ஹரித் தார். பகவான் ஒருவரே உலகத்தை ஸ்ருஷ்டிப்பது, பரிபாலிப்பது, நாசம் பண்ணுவது, ஆகிய கார்யங்களை முறையே ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் ஆகிய பெயருடன்

நடத்திவருகிறார்."– ஸ்மிருதி, ஆகையால் மஹாவிஷ்ணு மும்மூர்த்திகளுக்குள் ஒருவரென்றே ஏற்படுகிறது. மேலும், இம்மூவர்களைக் காட்டிலும் மேலான பரதத்வம் ஒன்றிருப்பதாகவும் ஏற்படுகிறது. அந்தப் புருஷனால் ஜகத்முழுவதும் பூர்ணமாயிருக்கிறது." "அதைக்காட்டிலும் எது மேற்பட்டதோ, அது ரூபமற்றது எவர்கள் இதையறிகிறார்களோ அவர்கள் மரண தர்மமில்லாதவர்களாக ஆகிறார்கள்."– ச்ருதிகள் "இவர் அமிர்தத்துக்கு ஹேதுவாயிருப்பவர்"– ச்ருதி இதனால் மும்மூர்த்திகளுக்கும் மேலான பகவத் ஸ்வரூபமே ஸகல ஜகத்திற்குக் காரணம். அதை பஜிப்பவர்களே மோக்ஷத்தையடைவார்கள். நாராயணனை பஜிப்பவர்கள் மோக்ஷத்தையடையமாட்டார்கள். அவர் பரமாத்மாவுமல்ல.

ஸமாதானம்:– மும்மூர்த்திகளும் ஒருவரேயென்று சொல்வது ந்யாயமல்ல "நாராயணனிடமிருந்து ப்ரஹ்மா உண்டாகிறார், நாராயணனிடமிருந்து ருத்ரன் உண்டாகிறார், நாராயணனிடமிருந்து பன்னிரண்டு ஆதித்யர்களும், பதினோரு ருத்ரர்களும், எட்டு வஸுக்களும், எல்லாவேதங்களும் உண்டானார்கள்" "நாராயணன் ஒருவரேயிருந்தார். ப்ரஹ்மாவும், ருத்ரனும் அப்பொழுது இல்லை. நாராயணர் ஒருவரேயிருந்தார். சங்கரராவது, ப்ரஹ்மாவாவது அப்பொழுது இல்லை. "அவர் முனியாகவிருந்து ஸங்கல்பித்தார். அவரிடமி ருந்து இவையாவும் உண்டாயின." "எவருடைய தொப்பிளில் தோன்றிய தாமரஸ புஷ்பத்திலிருந்து மஹாத்மாவான ப்ரஜாபதி உண்டானாரோ." "அதில் ப்ரஹ்மா உண்டானார்." "அவர் முந்தி மூன்று கண்களுள்ளவரும், மூன்று தலைகளுள்ளவரும்,

மூன்று கால்களுள்ளவருமான ஸம்ஹாரமூர்த்தியை யுண்டுபண்ணினார்" ப்ரஹ்மதேவர், தக்ஷர் முதலியவர் கள், காலம், மற்ற ஸகல ப்ராணிகள் இவைகள் யாவும் மஹாவிஷ்ணுவின் விபூதிகளேயாம். மேலும், ருத்ரன், காலன், அந்தகன் நான்குவிதமான ப்ராணிகள், இவைகள் ஜனார்த்தனனுடைய வீபூதியே. மேற்காட்டிய ச்ருதிகளாலும், ஸ்மிருதிகளாலும், ப்ரஹ்மா, ருத்ரன் இருவர்களும், மஹாவிஷ்ணுவால் ஸிருஷ்டிக்கப்பட்ட வர்கள் என்று தெரியவருகிறது. நாராயணனைக் காட்டிலும் மேற்பட்ட வேறு தத்வமிருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஸகல ஜகத்தும் புருஷனேயாம். ஜகத்தானது அவனை உபஜீவிக்கிறது." "அவருக்கு ஸமானனும் மேற்பட்டவனும் காணப்படவில்லை" ச்ருதிகள் ஓ! அர்ஜுனா! என்னைக்காட்டிலும் மேலானதொன்று மில்லை." ஸ்மிருதி. ப்ரளய காலத்தில் எல்லாம் ப்ரகிருதியில் லயித்திருக்கும் பொழுது ஸகல ஜகத் ரூபியான நாராயணன் ஒருவரேயிருக்கிறார். புண்டரீ காக்ஷனைவிட வேறு மேலான தெய்வமில்லை. மேல்காட்டிய ப்ரமாணங்களால் மஹாவிஷ்ணுவே மேலானவைரென்று ஏற்படுகிறது.

ஆக்ஷேபம்– மும்மூர்த்திகளும் ஒருவரென்றும், விஷ்ணுவைக்காட்டிலும் மேலான தத்வமிருக்கிற தென்றும் ப்ரமாணங்களை காட்டியிருக்கிறோமே.

ஸமாதானம்– அதிற்சொல்லிய சிவ, சம்பூ ஈச, முதலிய சப்தங்களுக்கு நாராயணனென்றே அர்த்தங் கொள்ளவேண்டும். ருத்ரன் முதலியவர்கள் கர்மத்துக்கு வசப்பட்டவர்களென்று சொல்லியிருக்கிறது. வாஸு

தேவன் கர்மவச்யரென்று ஓரிடத்திலும் சொல்லப் படவில்லை. ஆகையால் நாராயணனே எல்லா தெய்வங்களிலும் மேலானவர். அவரை அடைவதற்கு அவரே காரணம். வீர.15–6 ஞானசா –கபிலரால் சொல்லப்பட்ட ப்ரகிருதி புருஷ விஷயமான க்ரந்தம், தபஸ், சாந்த்ராயணம் முதலியவை. வீர. லீலாவதார– ஈச்வரனுடையவை கர்மாதீனமல்ல வென்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–3

பகவதவதாரங்கள்

உலகங்களை ஸிருஷ்டிப்பதற்காக, பகவான் ஆதியில் மஹத்தத்வம், அஹங்காரம் முதலியவைகளுடன் கூடியதும், 16 கலைகளுள்ளதுமான புருஷதேஹத்தை எடுத்துக்கொண்டார். பின்பு ஜலத்தால் உலகமுழுவதும் மூடப்பட்டிருக்க, அவர் அந்த ஜலத்தில் படுத்து யோகநித்ரை செய்தார். அப்பொழுது அவருடைய மடுப்போலிருக்கும் தொப்புளிற் தோன்றிய தாமரை புஷ்பத்திலிருந்து ஒருவர் உண்டானார்;அவரே மரீசி முதலிய ப்ரஜாபதிகளுக்கு அதிபதியாகிய ப்ரஹ்மதேவர். மேற்சொல்லிய புருஷரூபத்தில் ஏற்பட்டிருக்கும் அவயவங்களின் அமைப்புகளால் தேவர்கள், மனிதர்கள் முதலியவர்கள் ஸிருஷ்டிக்கப்பட்டு உலகமானது விஸ்தாரமாகிற்று. மேற்காட்டிய பகவத் ரூபமே சுத்தமானது மேலான ஸத்வகுணமுள்ளது ஞானக் கண்ணுள்ள யோகிகள் இந்த பகவத் ஸ்வரூபத்தை அனேகங்கால்கள், கைகள், முகங்கள், தலைகள், கண்கள், மூக்குகள், காதுகள் என்னும் இவைகளால் அற்புதமான தாகவும், அனேக கிரீடங்கள், குண்டலங்கள் முதலிய வைகளால் ப்ரகாசிப்பதுமாக பார்க்கிறார்கள்:அந்த தேஹத்திலிருந்தே அனேக அவதாரங்கள் வெளிப் படுகின்றன.காரியம் முடிந்தவுடன் அதனிடத்திலேயே அடங்குகின்றன. மேலும் அந்த ரூபம் நாசமற்றது. அதனுடைய அம்சம், ப்ரஹ்மதேவர். அவருடைய அம்சமுள்ளவர்கள், மரீசி முதலிய ப்ரஜாபதிகள். அவர்களாலே தேவர்களும், மனிதர்களும், பசு, பக்ஷி முதலியவைகளும், ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன.

6–28. புருஷ தேஹத்தை அங்கீகரித்த அந்த தேவனே கௌமாரமென்ற ஸிருஷ்டியில் ப்ராஹ்ம மணராயிருந்து, ப்ரஹ்மசர்ய வ்ரதத்தை அனுஷ்டித்து வந்தார். இது ஒரு அவதாரம். மேலுமவர் பன்றி சரீரமெடுத்து பாதாளலோகஞ் சென்று, அவ்விடமிருந்த பூமியை இவ்வுலகத்திற்கு கொண்டு வந்தார். இது மற்றொரு அவதாரம். தவிர ரிஷி ஜன்மாவில் தேவ ரிஷியான நாரதராய் அவதரித்து ஸாத்வத தந்த்ர மென்ற பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தைச் செய்து வெளியிட்டார். அதில் சொல்லிய கர்மங்கள் துக்கத்தைக் கொடுக்கிறதில்லை, (பகவானுடைய ஆராதன ரூபங்களாகையால்) அந்த மஹாபுருஷனே தர்மகலையின் ஸிருஷ்டியில் நரன், நாராயணன் என்ற திவ்யநாமங்களுடன் ரிஷிகளாக அவதரித்தார். அந்த நான்காவது அவதாரத்தில் இந்த்ரியங்களையும் மனத்தையும் அடக்கி கடுமையான தபஸ் செய்தார். அவரே கபிலரென்ற மேலான பெயருடன் ஸித்த புருஷனாக 5–வது அவதாரஞ்செய்து காலமஹிமையில் ஒளிந்து போன தத்வங்களின் உண்மையைத் தெரிவிக்கும் ஸாங்க்ய சாஸ்த்ரத்தை ஆஸுரி என்ற ப்ராஹ்மணருக்கு உபதேசித்தார். பின்னுமொரு சமயத்தில் அத்ரி மஹர்ஷியானவர் மஹாவிஷ்ணுவை நோக்கி "உமக்கு சமமான புத்ரன் எனக்கு உண்டாகும் படி அனுக்ரஹிக்க வேண்டும்" என்று பிரார்த்திக்க பகவான் அப்போர்ப்பட்ட புத்ரன் தம்மைத்தவிர வேறொருவரும் இல்லாமையால் தம்மை அத்ரி ஏமாற்றி விட்டாரென்று வெறுப்பில்லாமல், தானே தத்தாத்ரே யராக அவதரித்தார். மேலும் அவர் அலர்க்கன் என்ற அரசனுக்கும், ப்ரஹ்லாதன் முதலியவர்களுக்கும், ஆன்வீக்ஷகியை (ஆத்மவித்தையை) உபதேசித்தார்.

பின்னுமவர் ஆகூதி என்பவளிடம் ருசி என்பவருக்கு 'யக்ஞர்' என்ற பெயருடன் அவதரித்து ஸ்வாயம்புவ மன்வந்த்ரத்தில் தாம் இந்த்ரனாகவிருந்து தம்முடைய புத்ரர்களான யாமன் முதலிய தேவர்களுடன், உலகத் தைக் காப்பாற்றினார். இன்னும் அந்த பகவான் ஆக்னீதரருடைய புத்ரராகிய நாபி என்பவருக்கு மேருதேவியினிடத்தில் ரிஷபரென்ற பெயருடன் அவதரித்து எல்லா ஆச்ரமங்களிலும் மேலான பரமஹம் ஸாச்ரமத்தை யோகிகளுக்கு உபதேசித்தார். பின்னு மொருக்கால் மஹர்ஷிகளால் ப்ரார்த்திக்கபட்டு ப்ருது வென்ற ராஜர்ஷியாக அவதரித்து, பசுவின்ரூபத்தை தரித்து பூமியினிடமிருந்து ஸகல வஸ்துக்களையும் கறந்து உலகத்தைக்காப்பாற்றியதால், இந்த அவதாரம் மிகவும் விரும்பத் தக்கதாயிருந்தது. தவிரவும் சாக்ஷுஷமன்வந்தரத்தில் ஸத்யவ்ரதருக்காக மாயையால் காண்பிக்கப்பட்ட ப்ரளயத்தில், மத்ஸ்யரூபத்தை தரித்து பூமியாகிய ஓடத்தில் வைவஸ்வத மனுவாக ஆகப்போகிற ஸத்யவ்ரதரை வைத்து காப்பாற்றினார். அந்தப்ரபுவே, தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து ஸமுத்ரத்தை அமிருதத்திற்காகக் கடையும்போது, ஆமை உருவம் கொண்டு மத்தாகிய மந்தரமலையை, முதுகில் தாங்கினார். அவரே தன்வந்தரியாக அவதரித்தும், பிந்தி மோஹினி வேஷங்கொண்டு, அஸுரர்களை மோஹிக்கச் செய்து, தேவர்களுக்கு அமிருதத்தைக்கொடுத்து புஜிக்கவும் செய்தார். மிக்க பலிஷ்டனாகிய, ஹிரண்யகசிபுவை நரஸிம்ம சரீர மெடுத்து பாயைப் பின்னுகிறவன் கோரையைப் பிளப்பது போல் நகங்களால் துடையில் கிழித்து அவனைக்கொன்றார். இது பதினான்காவது அவதாரம். பின்னுமொரு ஸமயத்தில், மஹாபலியென்ற அஸுரன்

யாகஞ்செய்யும்பொழுது, பகவான் வாமனரூபியாக அவனுடைய யாகசாலை சென்று மூன்றடி பூமியை யாசித்தார். மேலும் அதனால் அவனிடமிருந்து ஸ்வர்க்க ராஜ்யத்தை பிடுங்கிக்கொண்டு அவனை நிக்ரஹித்தார். இது பதினைந்தாவது அவதாரம். பின்னுமொருக்கால் பூமியில் பரசுராமனாக அவதரித்து தர்ம விரோதஞ் செய்யும் அரசர்களை கோபத்துடன் இருபத்தொருதரம் கொன்று பூமியில் க்ஷத்ரிய வம்சமில்லாமலொழியச் செய்தார். இது பதினாறாவது. அந்த பரமபுருஷனே ஸத்யவதியிடத்தில் பராசரருக்கு வ்யாஸராய் அவதரித் தார். இவருடைய காலத்தில் மந்தபுத்தியுள்ளவர்களாக யிருந்த படியால் வேதங்கள் சாகை சாகையாக பிரிக்கப்பட்டன. மேலும், ராவணன் முதலிய ராக்ஷஸர் களை கொல்வதற்காக ஸ்ரீ ராமாவதாரஞ்செய்து, ஸமுத்ரத்தில் அணைகட்டியது முதலிய ஆச்சர்யங் களைக் காட்டினார். இது பதினெட்டாவது அவதாரம். பின்பு விருஷ்ணி குலத்தில் பலராமன், ஸ்ரீ கிருஷ்ணன் என்ற திவ்ய நாமதேயங்களுடன் அவதரித்துப் பூமியின் பாரத்தை நிவர்த்தித்தார். இது பத்தொன்பதாவது அவதாரம். பின்பு கலியுகத்தில் கீகடம் (மத்ய கயை) என்ற தேசத்தில் புத்தனென்ற பெயருடன் ஜினருக்கு (சுத்தோதனனென்று சிலர்) புத்ரனாக அவதரிப்பார். கலியின் முடிவில் யுகஸந்தியில் அரசர்களெல்லோரும் பெரும்பாலும் திருடர்களாக ஆய்விடுவார்கள். அப்பொழுது ஜகத்திற்கு குருவாகிய பகவான் கல்கியென்ற பெயருடன் விஷ்ணுயசஸ் என்பவருக்குப் புத்ரனாக அவதரிப்பார். இது இருபத்தொன்றாவது அவதாரம்.

ஓ! "ப்ராஹ்மணர்களே! குறையாத, ஜலமுள்ள

பெரிதாகிய ஏரியிலிருந்து அனேக வாய்க்கால்கள் ஒடுவது போல, ஸத்வ மூர்த்தியாகிய விஷ்ணுவின் அவதாரங்கள் கணக்கிட முடியாதவைகள். ரிஷிகள், முனிகள், தேவர்கள், மனுவின் புத்ரர்கள், ப்ரஜாபதிகள் எல்லோரும் மஹாவிஷ்ணுவின் அம்சாவதாரமே தவிர வேறில்லை. மேலும், முன்காட்டிய படியுள்ள பகவானுடைய அம்சங்கள், கலைகள், விபூதிகள், ஸாக்ஷாத் விஷ்ணுவாகிய கிருஷ்ணன் இவர்கள், அஸுரர்களால் உலகத்திற்கு உபத்ரவம் நேரும்போது அவர்களை நிக்ரஹித்து உலகத்தைச் ஸுகிக்கச் செய்கிறார்கள்.

29. இந்தப் பகவானுடைய அதிரஹஸ்யமான அவதாரங்களைக் காட்டும் ச்லோகங்களைக் காலையிலும், மாலையிலும், சுத்தனாய் பக்தியுடன் படித்தவன் ஸம்ஸார துக்கத்திலிருந்து நிவர்த்தியடைகிறான்.

30–39. ரூபமில்லாதவனும், சித்ரூபியாயுமிருக்கும் ஜீவனுக்குப் பகவானுடைய மாயையின் குணங்களாகிய மஹத்தத்வம் முதலியவைகளால் இந்த ஸ்தூலசரீர மேற்படுத்தப்பட்டது. வாயுவை (காற்றை) ஆச்ரயித்த மேகங்கள் ஆகாயத்திலிருப்பதாயும், பூமியின் தூளிக்காற்றிலிருப்பதாகவும், அக்ஞர்கள் நினைப்பது (ஆரோபிப்பது) போல எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாயிருக்கும் ஆத்மாவினிடம் சரீரம் ஆரோபிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஸ்தூல சரீரத்திற்கு மேற்பட்டதும் கை, கால் முதலிய அவயவ பரிமாணங்களற்றதும், பார்க்கப்படாததும், கேட்கப்படாததாயும், ஸூக்ஷ்மமாயும், ஜீவனுடைய உத்கிறந்தி (வெளியில் போவது) முதலியவைகளுக்கு ஸாதனமாயுமுள்ள லிங்க சரீரமும் முன்காட்டியதுபோல ஆரோபிக்கப்படுகிறது. ஸ்தூல

சரீரம் லிங்கசரீரமாகிய இவைகள் பரமாத்மாவினிடம் ஆரோபிக்கப்படுவதற்குக்காரணம் அவித்யையே, உண்மையில் ஆத்மாவிற்கு இவ்விரண்டின் ஸம்பந்தமுமில்லை. இம்மாதிரியான உண்மையான ஸ்வரூபஜ்ஞானம் எந்தக்காலத்தில் உண்டாகிறதோ அப்பொழுது ஜீவன், ஞான ஸ்வரூபியான ப்ரஹ்மாத்ம பாவத்தையடைவான். ஈச்வரனுடைய மாயையானது ஓய்வடையுமானால் அப்பொழுது ஜீவன் ப்ரஹ்மமாக ஆகிறான். பரமானந்த ரூபியாய் விளங்குகிறான். அந்தர்யாமியான பகவான் ஒன்றையுஞ் செய்யாமலிருப்பவரானாலும் கர்மங்களை செய்கிறவரென்றும், உத்பத்தியில்லாதவரானாலும் பிறந்தாரென்றும், கவிகள் வேதத்தின் ரஹஸ்யமான விஷயத்தை வர்ணிப்பது ஜீவனுக்கு பிறப்பு முதலியவைகளுண்டென்று சொல்வதுபோல மாயையேதவிற வேறில்லை. வீண்போகாத லீலைகளுள்ளவரும், ஸகல ப்ராணிகளிடம் மறைந்திருப்பவருமான ஈச்வரனே இந்த லோகத்தைப் படைக்கிறார்;காப்பாற்றுகிறார்; ஸம்ஹரிக்கிறார். ஆனாலும் ஸ்வதந்தரராகையால் ஆறு இந்த்ரியங்களுக்கு யஜமானராயிருப்பதால் அதுகளின் விஷயங்களை வெகு தூரத்திலிருந்தே க்ரஹிக்கிறார். அவைகளில் ஸம்பந்தப்படுகிறதில்லை. மூடன் எப்படி நடனம் (நர்த்தனம் செய்கிறவனால்) செய்யப்படும் அபினயத்தை அறியமாட்டானோ அப்படி அற்பபுத்தி யுள்ளவன் ஸகல ஜகத்தைப் படைப்பவரும், ஸங்கல்பத்தால் ரூபங்களையும் வாக்கினால் பெயர்களையும், விஸ்தரிப்பவருமான பகவானுடைய லீலாவிபூதிகளை யுக்தி(தர்க்கம்) முதலியவைகளின் ஸாமர்த்யத்தால் அறியமாட்டான். ஆனால், நல்மார்க்கத்தை ஸ்தாபிப்பவரும், சத்ருக்களை ஜயிக்கும் வீர்யமுள்ளவரும் சக்ராயுதம் தரித்தவருமான பரமாத்மாவின் ஸ்வரூபத்தை,

இடைவிடாமல் கபடமற்று பகவானுடைய பாதங்களாகிய தாமரஸ புஷ்பத்தின் வாஸனையை ஸேவிக்கும் பக்தனே ச்ரமபட்டு தெரிந்துகொள்ளுகிறான். ஓ ப்ராஹ்மணர்களே! இதைத் தெரிந்து கொண்டு ஸகல லோகத்திற்கும் நாதராகிய ஸ்ரீ வாஸுதேவரிடம், எவர்கள் இடைவிடாமல் மனத்தைச் செலுத்துகிறார்களோ, அவர்களுக்குக் கர்ப்பவாஸம் முதலிய துக்கத்தை உண்டுபண்ணும் பிறப்பு இறப்பு நேரிடமாட்டாது. ஆதையால் எல்லாவற்றையும் அறிந்த அந்த பக்தர்களே தன்யர்கள் (மேலானவர்கள்)

40–44. ஸர்வஜ்ஞரான வேதவ்யாஸ மஹர்ஷி உத்தமச்லோக (நல்வினையை கொடுப்பதால் மேலான பெயருள்ள) ராகிய பகவானுடைய சரித்தத்தைக் காட்டுகிறதும். வேதங்களுக்கு ஸமமாயுள்ளதுமான ஸ்ரீமத் பாகவத புராணத்தைச் செய்து முடித்தார். பிறகு உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டி ஸகல மங்களங்களுக்கும் இருப்பிடமாயும், அர்த்தத்தாலும், சப்தத்தாலும் மிகவும் மேலானதுமான அந்தப் புராணத்தை, யோகிகளுக்குட் சிறந்தவரும், தம்முடைய புத்ரரத்னமுமாகிய சுகருக்கு உபதேசித்தார். அந்தச்சுகர் எல்லாவேதங்களிலும், இதிஹாஸங்களிலுமிருந்து அவற்றின் ஸாரத்தை எடுத்து செய்யப்பட்ட இந்தச் சாஸ்த்ரத்தை, கங்கைக்கரையில் மிகுந்த வைராக்கியத்துடன், ப்ராயோபவேசஞ் செய்திருக்கும் பரீக்ஷித்து மஹாராஜனுக்கு, அனேக மஹர்ஷிகள் கேட்டிருக்கும் போது சொன்னார். இவ்விதமாக அது பூமியில் பரவியது. ஓ! ப்ராஹ்மணர்களே! அந்த ஸமயத்தில் நான் அவ்விடம் போனேன். மேலும் அவ்விடத்தில் உட்கார்ந்திருந்த மிகுந்த தேஜஸுள்ள அந்த ப்ரஹ்ம

ரிஷியான சுகருடைய அனுக்ரஹம் பெற்றேன்; நீங்களனைவரும் 'அதன் விஷயத்தை தெரிந்துகொள்ள வேண்டும்' என்று மிகுந்த ஆவலுள்ளவர்களாய் இருப்பதால் நான் சுகரிடம் கேட்டபடி, என்புத்திக் கெட்டியவரையில் சொல்லுகிறேன். (கிருஷ்ணபகவான் தர்மம், ஞானம் இவைகளுடன் தமது லோகஞ்சேர்ந்த பிறகு கலியில் ஞானக்கண்ணில்லாமல் கஷ்டப்படும் ஜனங்களுக்கு இந்த புராணமாகிய ஸூர்யன் உதயமாகி இருக்கிறது.)

நோட்டு.

17–22. 16 கலைகள்– இந்த்ரியங்கள் 11, ஐந்து பூதங்கள், இந்த பதினாறு கலைகள், பகவானுடைய சரீரம் உண்மையில் இப்போர்ப்பட்டதல்ல. ஆனாலும், விராட்தேஹத்தின் அந்தர்யாமியாயிருக்கும் பகவானை விராட்ரூபமாக உபாஸிப்பதற்குபயோகமாகச் சொல்லப் பட்டது. ஸ்ரீத. 18–12. [illegible]ளமார– இவருக்கு ஸனத்குமாரரென்று பெயர். ஆனால் இவர் ஸனகர் முதலியவர்களில் சேர்ந்தவரல்ல. விஜயத் ஆதிபுருஷன் ப்ரஹ்மதேவருடைய ஸ்வரூபமாகவிருந்து ஸனத்குமாரர் முதலியவர்களாக அவதரித்தார். பிறகு ஈச்வரனை யுபாஸித்தார். அவர்கள் அனுப்ரவேசாவதார ரூபிகளெனப்படுவார்கள். மேலுமவர்கள் அவித்யையுள்ளவர்களேயாம். ஆனாலும் பகவானையுபாஸித்துக் காலாந்தரத்தில் ஞானத்தை யடைவார்கள். வீர இது இந்த ஒரு அத்யாயத்தில் 21 அவதாரங்கள் நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. ஆனாலும் அவைகள் வரிசையாகச் சொல்லப்படவில்லை. ஆனாலும் இவ்விடத்தில் சொல்லிவருவதில் முதலாவது என்பதேயாம். ஸ்ரீத.

16 தேவர்ஷி–மஹிதாஸரென்ற மஹர்ஷி. விஜ20. தர்ம– யமனுடைய அம்சம். ஸ்ரீத. கபிலர்– இவர் ப்ரஸித்தராகிய கபிலரல்லவென்று சிலர். விஜ. 31 வெறுப்–மூலத்தில் அனஸூயயா என்றிருப்பதால், அத்ரியின் பத்னியாகிய அனஸூயை யென்பவளால் அடையப்பட்டார்.– வீர. விஜ. 19–4. யாம– ஒவ்வொரு மன்வந்தரத்திலும் தேவர்களுடைய பெயர் மாறுகிறதுண்டு– விஜ. நாபி–ஸ்வாயம்புவ மனுவின் புத்ரர்– வீர. இந்த்ரனுடைய புத்ரன்.– முனிமஹர்ஷி– வேனனைக்கொன்ற பிறகு.– வீர மாயையால்– மன்வந்தரத்தின் முடிவில் ப்ரளயமில்லாமற் போனாலும், அக்காலத்தில் மார்க்கண்டேயருக்குக் காண்பித்தது போல காண்பிக்கப்பட்டது– ஸ்ரீத. துடையில்– மடியில் வைத்துக்கொண்டு. விஜ வாமன– துஷ்டர்களுடைய கர்வத்தைக் குறைப்பதால் இப்பெயர் கிடைத்தது– ஸ்ரீத. கோபத்துடன்.– சக்தியில்லாதவனுக்குக் கோபமுண்டாகுமேயல்லாமல், ஸாமர்த்யமுள்ளவர்களுக்கு கோபமுண்டாக ந்யாய மில்லையாகையால் கோபங்கொண்டவர்போல வென்பது கருத்து– விஜ. ரிஷிகள்– மனுவின் புத்ரர்களாகிய ப்ரியவ்ரதர் முதலியவர்கள்.– விஜ. கலைகள்– குமாரர்கள், நாரதர் முதலியவர்கள். கலாவதாரபூதர்கள், அதிலும் குமாரர் முதலியவர்கள் ஞானமுள்ளவர்கள் ப்ருது முதலியவர்கள் பகவானு டைய சக்தி விசேஷமுள்ளவர்கள்– ஸ்ரீத. விபூதிகள்– "எந்தப்ராணிகள் விபூதியுள்ளனவைகளோ, எது அழகு பொருந்தியதோ, எது பலமுள்ளதோ, அவைகள் யாவும் என்னுடைய தேஜஸ்ஸின் அம்சத்திலிருந்து உண்டானவர்கள்" பகவத்கீதை. ரூபமில்லாத–ஜீவனுக்கு தேஹஸம்பந்தம் விஷ்ணுவின் மாயையால் ஏற்பட்ட

தாகையால் ஞானத்தால் அந்த அவித்யை நிவர்த்தி யாகிறதென்பது இதுமுதல் ஐந்து ச்லோகங்களால் காட்டப்பட்டிருக்கிறது. ஸ்ரீத. ஆரோபி- நான் தேவன், இந்த சரீரம் என்னுடையது, என்ற அபிமானத்திற்கு விஷயமாகச் செய்யப்பட்டிருக்கிறது. உண்மையில் தேவர்கள் முதலிய சரீரம் ஜீவனுடைய ஸ்வரூபமல்ல.

ஆக்ஷேபம்– தேவசரீரம் முதலியவைகள் அவை களுக்கு அபிமானியாகிய ஜீவனால் தரிக்கப்படுகிற தாகையால் அவனுடையதென்று ஏன் சொல்லக்கூடாது?

ஸமாதானம்– "எவனுக்கு ஆத்மா சரீரமோ எவன் ஆத்மாவினிடத்திலிருக்கிறானோ" என்ற ச்ருதிப்படியும். ஜீவனும் பரமபுருஷனால் தரிக்கப்படுகிறபடியால் எல்லாவற்றிற்கும் பரமாத்மாவே முக்யமான ஆதாரம்– வீர. ஆகாயம் வாயு இவைகள் கண்ணிற்குப் புலப்படாதவைகளானாலும், மேகக்கூட்டத்தை ஆகாசமென்றும், பூமியிலிருந்து கிளம்பும் தூளிகளை வாயுவென்றும் சொல்வதுபோல, அக்ஞஜனங்கள் ப்ரதிமையைப் பார்த்து அதையே ஈச்வரனென்று சொல்லுகிறார்கள். அதனால் ஸர்வ ஸாக்ஷியான பகவான், இந்த்ரியங்களால் பார்க்கக்கூடியவர் (த்ருச்யர்) என்றும் சித்ரூபியான அவர் ஜடரென்றும் ஏற்படுகிறது. ஆகையால் இது ப்ராந்தியேயாம்.– விஜ. ஸூக்ஷ்மம்– "இவன் அவ்யக்தன், நினைக்கமுடியாதவன் விகாரமற்ற வன்"– பகவத்கீதை. ஒன்றையும்– புண்யபாபங்களற்ற வர், கர்மாதீனமான சரீரமில்லாதவர்–வீர. ரஹஸ்யம்.– உத்பத்தியை அடையாமலே பலவகையாக உண்டா கிறார்" என்ற ச்ருதியில் உத்பத்தியடையாதவரென்றால்

ஜீவன்போல் கர்மாதீனமாக ஜன்மமில்லாதவரென்றும் தனதிஷ்டப்படி பகவானுக்கு உத்பத்தியுண்டென்றும் அர்த்தம். அதைக் கவிகளே அறிவார்கள். "தீரர்கள் அந்தப் பகவானுடைய சரீரத்தை அறிகிறார்கள்" ச்ருதி: ஆகையால் பகவானுடைய ஜன்மகர்மங்கள், ஜீவனுடையது போன்றவைகள் என்று நினைக்கக் கூடாது என்பது வேதவாக்யத்தாலேயே காட்டப் பட்டிருக்கிறது– வீர லீலைகள் ஜீவன் அனாதியாகிய கர்மத்தால் புண்ய பாபங்களைச் செய்து அதனால் ஸகல துக்கங்களை அடைவதுபோல் பகவானுடைய செய்கைகள் அவரைக்கட்டுப்படுத்துகிறதில்லை. மேலும் அவைகள் அவருக்கு லீலைகளாகும். அவைகள் வீண் போகாதவைகள் என்றதால் ஜீவனுடைய கர்மங்கள் அனேக விக்னமுள்ளவைகள் என்று காட்டப்பட்டன. இப்படி பலவகையிலும் ஜீவனைக்காட்டிலும் மேலானவரென்பது தாத்பர்யம். ஆறு– ஞானம், சக்தி, தேஹபலம், ஐச்வர்யம், வீர்யம் தேஜஸ் இவைகளுக்கு அதிபதி. அல்பபுத்தி– நான், என்னுடையது என்ற அபிமானமுள்ளவன். நடன– வேஷதாரியானவன், பலவகையான வேஷங்களைத் தரித்தாலும் எப்படி இவன் வேறாக ஆகிறதில்லையோ, அப்படி பகவான் மத்ஸ்யம், ஆமை முதலியவைகளின் உருவங்கொண்டாலும் அவருடைய உண்மையான ரூபம் மாறுகிறதில்லை மேலும் வேஷம் தரிப்பது முதலிய சேஷ்டைகள் அவனுக்கு விளையாட்டாயிருப்பது போல் பகவானுக்கும் அவைகள் லீலைகளேயாகும். அறிந்த– பகவந்த: என்ற பதத்திற்கு நீங்கள் என்று அர்த்தங்கொண்டு ஏ சௌனகர் முதலியவர்களே! நீங்கள் மேலானவர்கள். ப்ராயோபவேசம்– ஜீவித்திருப்பதில் ஆசையில்லாமல் ஆஹாரமில்லாமலிருக்கிறதாகிய வ்ரதம் வீர.–விஜய.

அத்யாயம்–4.

வியாஸர் கவலை யடைந்தது.

அதனைக் கேட்டுத் தீர்க்கஸத்ரம் செய்துகொண்டிருக்கும் மஹர்ஷிகளுக்குள் வயது சென்றவரும், கூட்டத்தில் முக்யரும், ரிக்வேதியுமாகிய சௌனகரென்பவர் ஸூதரைக் கொண்டாடிப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினார்.

2–13. "ஓ மிகுந்த பாக்யமுள்ள ஸூதரே! பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சுகஸ்வாமியால் சொல்லப்பட்ட புண்யகரமான ஸ்ரீமத் பாகவதகதையை எங்களுக்குச் சொல்லவேண்டும். கதை சொல்வதில் தாங்கள் மிக்க ஸாமர்த்யமுள்ளவர்கள். இந்தக்கதை எந்தயுகத்தில் எந்தவிடத்தில் நடந்தது எதற்காக யாரால் தூண்டப்பட்டு, இந்த கிரந்தத்தை வ்யாஸமஹாமுனிவர் செய்தார். மேலும் அவருடைய புத்ரரான சுகரென்பவர் மஹாயோகி; தாம், பிறர் என்ற பேதபுத்தியில்லாமல் எல்லாவற்றையும் ப்ரஹ்ம ஸ்வரூபமாகப் பார்ப்பவர். பரமாத்மாவினிடத்திலேயே புத்தியைச் செலுத்தியவர், மாயையாகிய தூக்கத்தைவிட்டு விழித்தவர். இவருடைய ஸ்வபாவம் வெளியில் தெரியாது. பார்வைக்கு மூடன்போல் தோன்றுகிறவர். இவர் குரு ஜாங்கலமென்னும் தேசத்தில் ஹஸ்தினாபுரத்தில் பயித்தியம் பிடித்தவன் போலவும், ஊமையன் போலவும், மூடன் போலவும் ஸஞ்சரிக்கும்போது, இவருடைய உண்மையைப் பட்டணத்து ஜனங்கள், எப்படித்தெரிந்து கொண்டார்கள்? இவர் எல்லா ஆசைகளையும் ஒழித்துத் துறவியாய்ப் போகும்போது பிதாவாகிய

வ்யாஸமஹர்ஷி புத்ரஸ்நேஹத்தால் அவர் பின்செல்ல வ்ழியில் ஜலக்ரீடை செய்துகொண்டிருந்த அப்ஸர ஸ்த்ரீகள், வஸ்த்ரமில்லாதவரும், யுவாவுமாகிய சுகரைக் கண்டு வெட்கப்படவில்லை. இவருக்குப்பின்னே வருகின்றவரும், மரவுரியை யுடுத்திக்கொண்டவரும் வயது சென்றவருமான வ்யாஸ மஹர்ஷியைப் பார்த்த வுடன் வெட்கமடைந்து தம்தம் ஆடைகளையுடுத்திக் கொண்டார்கள். இந்த ஆச்சர்யத்தைக் கண்ணுற்ற மஹர்ஷியானவர், அவர்களை இது விஷயமாகக் கேட்க அவர்கள் மஹர்ஷியை நோக்கி "புருஷன், ஸ்திரீ, என்ற பேதபுத்தி உமக்கிருக்கிறது. சுத்த திருஷ்டியுள்ள உம்முடைய புத்ரருக்கு அம்மாதிரியான எண்ணமில்லை" என்று பிரத்யுத்தரஞ் சொன்னார்கள். அப்போர்ப் பட்ட சுகருக்கும், பாண்டுவின் வம்சத்தில் பிறந்த பரீக்ஷித்து மஹாராஜனுக்கும் எப்படி ஸம்வாதம் (பேச்சு) நேர்ந்தது? அதனாலல்லவா இந்த பாகவத கதை வெளிப்பட்டது. இவர் கிருஹஸ்தர்களுடைய வீட்டிற்குப் பிக்ஷைக்காகச் சென்றால் அந்த கிருஹத்தை சுத்தப்படுத்துவதற்காக ஸ்வல்பகாலம் (மாடு கறப்பதற்கு எவ்வளவுகாலம் பிடிக்குமோ அவ்வள காலம்) காத்திருப்பார். இவர் ஒரே இடத்திலிருந்து பாகவத கதையைச் சொன்னது மிக ஆச்சர்யம். ஏ! ஸூதரே! ஜனங்கள் அபிமன்யுவின் புத்ரராகிய பரீக்ஷித்து மஹா ராஜனைப் பாகவதர் (பகவானுடைய பக்தர்கள்)களுக் குட் சிறந்தவராகச் சொல்லுகிறார்கள். அவருடைய பிறப்பு, மிகவும் அத்புதமானது. ஆகையால் அவருடைய சரிதத்தைச் சொல்லவேண்டும். பாண்டவர்களுக்குக் கீர்த்தியை விருத்தி செய்தவரான அந்தச்சக்ரவர்த்தி தமது அளவற்ற ராஜ்யத்தையும், லக்ஷ்யஞ்செய்யாமல், என்ன காரணத்தால் கங்கையின் கரையில் ப்ராயோப

வேசஞ் செய்தார். ஓ! ஸூதரே! சத்ருக்கள் உத்தம வஸ்துக்களை காணிக்கையாக எடுத்துவந்து தங்களுடைய க்ஷேமத்திற்காக அவருடைய பாதபீடத்தை (கால் வைத்துக்கொள்ளும் ஆஸனம்) நமஸ்கரிக்கிறார்களோ அவ்வளவு பராக்ரமமுள்ள மஹாராஜன் யௌவனமுள்ளவராயினும், ஒழிக்கமுடியாத பணத்தின் ஆசையையும், ப்ராணனிடத்திலுள்ள அபிமானத்தையும், விடவேண்டுமென்று எப்படி விரும்பினார்? உத்தமச்லோகராகிய பகவானிடத்திலேயே ,மனத்தைச் செலுத்தியவர்கள், லோகத்திற்கு க்ஷேமம், ஐச்வர்யம் இவைகளை உண்டுபண்ணுவதற்காக ஜீவிக்கிறார்களே தவிர சொந்தமான கார்யத்திற்காகவல்ல. ஆகையால் இந்த அரசன், சரீரத்தைவிட விரும்பிய காரணம் யாது? (பிறருக்கு உபயோகமான சரீரத்தை தான் கெடுப்பது ந்யாயமல்லவென்பது கருத்து) வேதத்தின் அர்த்தம் தவிர இதிஹாஸ புராணங்களின் அர்த்தங்களைச் சொல்வதில் மிக்க ஸாமர்த்யமுள்ள வரென்று உங்களை நினைக்கிறேன். ஆகையால் என்னால் கேட்கப்பட்ட எல்லா விஷயங்களையும் சொல்லவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

14–18 இவற்றைக்கேட்ட ஸூதர் சொல்லத் தொடங்கினார் மூன்றாவது த்வாபரயுகத்தின் கடைசியில் வஸுவின் வீர்யத்திற்குண்டான ஸத்யவதியினிடம், பராசரருக்கு புத்ரனாக அவதரித்த ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அம்சம் இந்த வ்யாஸ மஹாமுனியே. இவர் மஹாயோகி. நடந்தது, நடக்கப்போகிறது இவைகளை அறிந்தவர். அவர் ஒருக்கால் ஸரஸ்வதீ நதிக்கரையில் ஆசமனஞ் செய்து சுத்தராய் ஸூர்யோதய காலத்தில், தாம் தனியாய் உட்கார்ந்து "அறியக்கூடாத

வேகமுள்ள காலமஹிமையால் யுகதர்மங்கள் கலந்து போய்விட்டன. ஜந்து பூதங்களுக்கும் சக்தி குறைந்து விட்டது, ஜனங்களுக்கு ச்ரத்தை, தேஹபலம், ஸத்வகுணம், ஆயுஸ் இவைகளும் குறைந்துபோயின. புத்தியோ கெட்டமார்க்கத்தில் செல்லுகிறது" என்று ஞானக்கண்ணால் பார்த்து எல்லா ஜாதியார்களுக்கும் எல்லா ஆச்ரமிகளுக்கும் என்னசெய்தால் அனுகூலம் உண்டாகுமென்று எல்லோருக்குமுபகாரமான விஷயத்தைச் செய்ய விரும்பி யோசித்தார்.

19–23. வேதத்தில் சொல்லப்பட்டதும், நான்கு ரித்விக்குகளால் முடிக்கக்கூடியதும், சுத்தமானதுமான யாகமே ஜனங்களுக்கு அனுகூலத்தைச் செய்யக்கூடிய தென்று நிச்சயித்து அந்தக் கர்மம் எப்பொழுதும் தொடர்சியாய் நடந்தேறி வருவதற்காக ஒன்றாயிருந்த வேதராசியை நான்காகப் பிரித்தார். மேலும் அந்த நான்கு பாகங்களும் ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வம், என்று பெயர்களுண்டாயின. (பாரதம் முதலிய) இதிகாசங்களும்,(பாகவதம் முதலிய) புராணங்களும், ஐந்தாவது வேதமென்று சொல்லப்படுகின்றன. மேற் காட்டிய 'ரிக்,யஜுஸ், ஸாமம், அதர்வ'என்ற நான்கு வேத சாகைகள் பைலர், வைசம்பாயனர், கவியாகிய ஜைமினி, ஸுமந்து என்கிற மஹர்ஷிகளிடம் முறையே ஒப்புவிக்கப்பட்டன. என்னுடைய பிதாவாகிய ரோம ஹர்ஷணரிடம் இதிஹாஸங்களும், புராணங்களும், கொடுக்கப்பட்டன. மேற்சொல்லிய மஹர்ஷிகளே தங்கள் தங்களுடைய வேதசாகைகளை பல வகையாகப் பிரித்தார்கள். அவைகள் அல்ப புத்தியுள்ள இக்காலத்து ஜனங்களால் அத்யயனஞ் செய்யப்படுகின்றன. அவர்கள் தங்கள் தங்கள் சிஷ்யர்களுக்கும் அத்யயனஞ்

செய்வித்து, அவைகளை உலகத்திற் பரவச் செய்தார்கள். யார் யார் எந்த எந்த சாகைகளை அத்யயனஞ் செய்தார் களோ, அவர்வர்களுக்கு அந்த அந்த சாகைகள் சொந்தமாயின.

24–32. தீனர்களிடத்தில் ப்ரீதியுள்ள பகவானாகிய வ்யாஸ மஹர்ஷியால் இப்படி வேதங்கள் பிரிக்கப் பட்டன. ப்ராஹ்மணர், க்ஷத்ரியர், வைச்யர் ஆகிய இவர்களுக்குள், அதமர்களாகிய த்விஜபந்துக்களுக்கும், ஸ்திரீகளுக்கும், சூத்ரர்களுக்கும், வேதத்தைக் கேட்க அதிகாரமில்லாததனால், அவர்கள் இதிஹாஸத்தால் க்ஷேமத்தை யடையட்டுமென்னுங் கருணையால், வ்யாஸமஹர்ஷி மஹா பாரதம் என்ற க்ரந்தத்தைச் செய்தார். ஓ! ப்ராஹ்மணர்களே, இப்படி எப்பொழுதும் எல்லாப் பிராணிகளுக்கும் க்ஷேமத்தை செய்வதிலேயே நோக்கமுள்ள அந்த மஹர்ஷியானவர் எல்லாவற்றையு மறிந்தவராயிருந்தும் அவருடைய மனத்திற்கு சாந்தி உண்டாகவில்லை; அதனால் அவர் ஸந்தோஷமில்லா மல் ஸரஸ்வதி நதியின் சுத்தமான கரையில் தாம் ஒருவராயிருந்து யோஜித்து பின்வருமாறு சொல்லலா னார். "நான் வ்ரதமுள்ளவனாய் வேதங்களை அத்யயனஞ் செய்தேன். குருக்களையும், அக்னியையும் பூஜித்தேன். ஆசார்யனுடைய கட்டளையின்படி கபடமற்று நடந்தேன். பாரதமென்ற வ்யாஜத்தால், வேதத்தின் அர்த்தத்தை எல்லோருக்கும் தெரியும்படி வெளியிட்டேன். அதில் ஸ்திரீகளாலும், சூத்ரர்களாலும், அறியக்கூடியவைகளான தர்மங்கள் காட்டப்பட்டன. அப்படியிருந்தும் என்னுடைய ஆத்மா(ஜீவன்) இயற்கையில் பூர்ணனானாலும், ப்ரஹ்மவர்சஸ் உள்ளவர்களுக்குட் சிறந்தவனானாலும், ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை யடையாதவன் போலத் தோற்றுகிறான்.

இதற்கென்ன காரணம்? இது ஆச்சர்யமாயிருக்கிறது ஆனால் பாகவத தர்மங்கள் விஸ்தாரமாக வெளியிடப் படவில்லை. அவைகளில் பரம ஹம்ஸர்களுக்கு மிகவும் ப்ரியமிருக்குமே. அவைகளே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிற்கு ப்ரியமானவைகள், அதனால்தான் நம்முடைய மனத்திற்கு ஆனந்தமுண்டாகவில்லையோ" என்று யோஜித்து ஆத்மாவை சூன்யனாக நினைத்து வருத்தமடைந்தார்.

33. இந்த ஸமயத்தில் ஸரஸ்வதி நதிக்கரையில் இருக்கும் அந்த வ்யாஸமஹர்ஷியின் ஆச்ரமத்திற்கு நாரதர் வந்தார். அப்பொழுது அந்த மஹர்ஷியானவர் தேவர்களால் பூஜிக்கப்பட்ட நாரதரைக் கண்டு எதிர் கொண்டழைத்து சாஸ்த்ரமுறை தவறாமல் அவரைப் பூஜித்தார்.

நோட்டு.

25–3. தீர்க்க– அநேக வர்ஷங்களால் முடிக்கக்கூடிய யாகம்– சந்த் 14– பேத– மூலத்தில் நிர்விகல்பக என்றிருப்பதால் நிச்சய ஞானமுள்ளவர். ஸமதிருக்– மித்ரன். சத்ரு,. மற்றவர் ஆகிய இவர்களிடத்தில் ஸமபுத்தியுள்ளவர். ஏகாந்தமதி– ஜனஸஞ்சாரமற்ற விடத்தில் வஸிப்பதில் ப்ரியமுள்ளவர். மூட–– எல்லாவற்றையும் அறிந்தவராயிருந்தும் தன்னுடைய ஸாமர்த்யத்தை வெளியிடாதவர்– சந்த். 16–விழித்த–– "ஸகல ப்ராணிகளுக்கும் எது ராத்ரியோ, அதில் யோகியானவன் விழித்துக் கொண்டிருக்கிறான்.பகவத் 26–33. மூன்றாவது– மஹாயுகத்தில். 26–28. வேதத்தின்– இவர் ஸூதஜாதி யாகையால் வேதத்தில் இவருக்கு அதிகாரமில்லையென்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–5.

வ்யாஸருக்கு நாரதர் உபதேசித்தது.

பின்பு மிகுந்த கீர்த்தியுள்ளவரும், எப்பொழுதும் வீணையைத் தரித்தவரும், தேவர்ஷியுமான நாரதர் ஸமீபத்தில் ஸுகமாய் உட்கார்ந்திருக்கும் ப்ரஹ்மர்ஷி யாகிய, வ்யாஸமஹர்ஷியை நோக்கி ப்ரஸன்னமுக முள்ளவராய்ப் பின்வருமாறு சொல்லத்துடங்கினார்; "ஓ! மஹா பாக்யமுள்ள பராசர புத்ரரே! உம்முடைய சரீராபிமானியான ஆத்மாவானது (ஜீவன்) அந்தச் சரீரத்தாலும், மனத்திற்கு அபிமானியான ஆத்மா வானது, அந்த மனத்தாலும் ஸந்தோஷப்படுகிறதா? அறியவேண்டிய ஸகல தர்மங்களையும் பூர்ணமாகக் காட்டுவதும், ஆச்சர்யத்தை யுண்டுபண்ணுகிறதுமான மஹா பாரதத்தை விஸ்தாரமாகச் செய்தவர் நீரன்றோ? ஆகையால் விஷயம் யாவும் உமக்குத் தெரிந்திருக்க லாமே. மேலும் நீர் நித்யவஸ்துவாகிய, பரமாத்ம ஸ்வரூபத்தை நன்றாக விசாரித்து அறிந்தவரல்லவா? அப்படியிருந்தும், ஒன்றையும் அறியாதவர் போல ஏன் துக்கிக்கிறீர்?" என்று கேட்டார்.

4–11. இதனைக் கேட்ட வ்யாஸ மஹா முனியானவர், பின்வருமாறு சொல்லத் தொடங்கினார். "தாங்கள் சொன்னவைகள் யாவும் என்னிடம இருக்கின்றன. ஆனாலும் என்மனத்திற்கு ஸந்தோஷம் உண்டாகவில்லை. அதன் காரண மின்னதென்றும் விளங்கவில்லை பரம் (கார்யம்) அபரம் (காரணம்) இவைகளுக்கு அதிபதியும், ஸங்கல்பமாத்ரத்தால் முக்குணங்களைக் கொண்டு ஜகத்தை ஸிருஷ்டிப்பவரும்

அவைகளைக் காப்பாற்றுபவரும் பின்னும் அவைகளை நாசஞ்செய்பவரும், அவைகளில் ஸம்பந்தப் படாதவருமான புராண புருஷனை, நீர் உபாஸித்தவர், ரஹஸ்யங்களான விஷயங்கள் யாவும் தங்களுக்குத் தெரியும். மேலும் நீர் ஸூர்யன்போல மூவுலகத்திலும் ஸஞ்சரிப்பதால் எல்லாவற்றையும் அறிந்தவர். ஸகல ப்ராணிகளினுள்ளில் ஸஞ்சரிக்கிற ப்ராணவாயுபோல எல்லாருடைய புத்தியின் ப்ரவர்த்தியையும் அறிந்தவர். ஆனதுபற்றி ப்ரஹ்ம புத்ரராகிய உம்மைக் கேட்கிறேன் வேதங்களை முறைப்படி அத்யயனஞ்செய்து, அதன் உண்மையான அர்த்தத்தைபறிந்து, வ்ரதங்களை யனுஷ்டித்து, யோகத்தால் ப்ரஹ்மஸ்வரூபத்தையும் அறிந்தேன். அப்படியிருந்தும் எந்தப் பாகம் எனக்கு மிகவும் குறைவாயிருக்கிறதோ அந்த பாகத்தை யுபதேசிக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்தார். அதனைக்கேட்ட நாரதர், வ்யாஸமஹாமுனியை நோக்கி, "இயற்கையில் பரிசுத்தமான பகவானுடைய யசஸ்ஸை, (குணங்களை) வர்ணிப்பதால் பரமாத்மா ஸந்தோஷிப்பார். மற்ற ஞானத்தால் பகவான் திருப்தி அடையமாட்டார்; ஆகையால் தர்மாதி ஞானத்தைக் குறைந்ததாக நினைக்கிறேன். உம்மால் அந்த பகவானுடைய குணங்கள் பெரும்பாலும் முக்யமாக வர்ணிக்கப்படவில்லை. மஹாபாரதம் முதலியவைகளில் ஈச்வரனுடைய குணங்கள் வர்ணிக்க பட்டிருந்தாலும் தர்மங்களையும் அதன் ஸாதனங்களையும், முக்யமாக, மஹர்ஷிகள் ஸ்மிருதிகளில் சொல்லியிருப்பதுபோல, பரமாத்மாவின் மஹிமையையே ப்ரதானமாக நீர் வர்ணிக்கவில்லை. எச்சிற்குழியில் கிடக்கும் சித்ரான்னம் முதலியவைகளைக் காக்கைகள் தின்று திருப்தி அடையுமேயொழிய, மானஸ ஸரஸில் ஸஞ்சரிக்கும்

ஹம்ஸங்கள். அவைகளில் ஆசைப்படுகிறதில்லை. அப்படிப்போல லோகத்தைப் பரிசுத்த படுத்தும் பகவானுடைய மஹிமையை வர்ணிக்காத க்ரந்தங்கள், அற்புதமான பதச்சேர்க்கையுள்ளவைகளானாலும், அவற்றால் காமிகள் ஸந்தோஷப்படுவார்களே யொழிய ப்ரஹ்மிஷ்டர்களான பரமஹம்ஸர்கள் திருப்தியடைகிற தில்லை. ஒவ்வொரு ச்லோகத்திலும் அபசப்தங்கள் இருந்தாலும், நாசமற்றவராகிய பகவானுடைய திவ்ய நாமங்களும், மஹிமையும் வர்ணிக்கபட்டிருந்தால் அந்த க்ரந்தம் ஜனங்களுடைய பாபங்களை போக்கும். அதைச் சொல்பவர்களிருந்தால் பெரியோர்கள் கேட்பார்கள். கேட்பவர்களிருந்தாலும் அவர்கள் சொல்லுவார்கள். இரு வகையாருமில்லாத போது தாமே கானஞ்செய்வார்கள்.

12–22. உபாதிகளின் ஸம்பந்ததத்தை நிவர்த்திக்கும், ப்ரஹ்மஞானமும், பகவத்பக்தியில்லாதவனுக்குப் பலனை (அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தைக்) கொடுக்கிறதில்லை. மேலும் கர்மங்கள் எப்பொழுதும் துக்கரூபங்கங்களே. ஆதலால் பலனையுத்தேசித்துச் செய்யப்பட்டனைகள் ஆனாலும், பலனை யுத்தேசியாமல் செய்யப்பட்டவை களானாலும், பகவானிடம் அர்ப்பிக்கபடாதவரையில் அவைகள் ப்ரகாசிக்கிறதில்லை. ஓ! மஹாபாக்யமுள்ள வ்யாஸமஹர்ஷியே! நீர் உண்மையான ஞானமுள்ளவர்; சுத்தமான கீர்த்தியுள்ளவர்; ஸத்யத்திலேயே ஆசை உள்ளவர்; வ்ரதங்களை யனுஷ்டித்தவர்; ஆகையால் ஸகலபந்தங்களும் நிவர்த்தியாக வேண்டியதற்காகப் பகவானுடைய பலவகையான லீலாவிபூதிகளை ஒரே மனதாகச் சிந்தியும். பகவானுடைய சரித்தில் ஆசையில்லாமல், மற்ற சரிதங்களைச் சொல்ல

விரும்பியவர்களுடைய புத்தியானது தேவதா ரூபங்களையும், அநேக நாமங்களையும், சிந்தித்து நிலைபெறாமல் பெருங்காற்றிலகப்பட்ட கப்பல் போல, ஒரு நிலையாய் இருக்கிறதில்லை. ஜனங்கள் இயற்கையாகவே காம்ய கர்மங்களில் ஆசையுள்ளவர்கள். அந்தக்கர்மங்கள் ஞானிகளால் நிந்திக்கக்கூடியவைகளானாலும் அவைகளை தர்மங்களென்றே சொல்லியிருக்கிறீர். ஆகையால் அவைகளை ப்ராகிருத ஜனங்களும் அப்படியே நினைத்திருக்கிறார்கள். "கர்மங்களாலும், ப்ரஜையாலும், தனத்தாலும், மோக்ஷத்தையடைய முடியாது" என்ற ச்ருதியின்படி காம்ய கர்மங்கள் சிறந்தவைகளல்ல என்று ஞானிகளுடைய வார்த்தையை அக்ஞர்கள் நம்புவதற்கு ந்யாயமில்லாமல் இருக்கிறது. இப்படி நீர் செய்தது, ஒரு பெரிய சாஸ்த்ர விருத்தமான கார்யம். ஆனது பற்றி, காலத்தாலும், தேசத்தாலும், அளவிடக் கூடாத ப்ரபுவின் ஸகலஸ்வரூபத்தை நிவிர்த்தி மார்க்கததைக்கொண்டு வித்வான்தான் தெரிந்து கொள்வான். அது அக்ஞனால் அறிய முடியாது. ஆகையால தேஹம் முதலியவைகளில் அபிமானம் உள்ளவர்களும், ஸத்வம் முதலிய குணங்களால் விஷயத்தில் செல்லுகிறவர்களுமான ப்ராகிருதஜனங் களுக்காகப் பகவானுடைய லீலைகளை வர்ணியும். பின்னும் உலகத்தில் தன் ஜாதிக்கும், ஆச்ரமத்திற்கும் உரியதான தர்மத்தைவிட்டு பகவானுடைய தாமரை மலர் போன்ற பாதங்களை ஸேவித்துக் கொண்டு இருந்தவன் பக்தியின் பயனை அடைவதற்கு முன்னமே பலன் பாதியில் மரணம் அடைந்தாலும், பக்தியின் தொடர்ச்சியற்றுப் போனாலும் அவனுக்கு அந்த

வாஸனையிருக்குமாகையால் ஒரு போதும் அந்த க்ஷேமக்குறைவு நேரிடாது. மேலும் ஈச்வரனிடம் பக்தி செய்யாமல் தன்னுடைய தர்மத்தை நன்றாய் அனுஷ்டித்தாலும் அதனால் என்ன கிடைக்கப்போகிறது? (ஒன்றும் இல்லையென்பது தாத்பர்யம்) ப்ரஹ்மதேவர் முதல் ஸ்தம்பமென்ற புழு வரையில் ஸம்ஸாரத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் எல்லா ப்ராணிகளாலும், எந்தவஸ்து அடையப்படவில்லையோ அதையடைய முயற்சிக்கவேண்டும். எப்படி நாம் விரும்பாமல் இருக்குங்காலத்திலும், துக்கம் நேரிடுகிறதோ அப்படியே விஷயஸுகமும் எந்தவிடத்திலும் அந்த அந்தக்காலத்தில் கர்மத்தின் மஹிமையைக்கொண்டு ஜனங்களால் அடையப்படுகிறது. கர்மத்தை மாத்ர மனுஷ்டித்தவன் ஸம்ஸாரதுக் கத்தையடைவது போல, ஒருவன் பகவத் பக்தி செய்து அந்த ஜன்மாவில் அது பூர்த்தியடையாமல் தாழ்மையான வேறு ஜன்மமடைந்திருந்தாலும் அதில் அவனுக்கு துக்கம் நேரிடுகிறதில்லை பகவானுடைய பாதங்களில் பக்தி செய்தவன் மறுஜன்மத்திலும் அவைகளை மறக்கமாட்டான்; அவைகளுக்கு வசப்படுவான். ஈச்வரனை விட்டு ஜீவன் எப்படி வேறில்லையோ அப்படி ப்ரபஞ்சம் பகவானைவிட வேறில்லை அவரிடமிருந்தே இந்த ஜகத் உண்டானது அவராலேயே காப்பாற்றப்படுகிறது. அந்த பரமாத்மாவை நீரே தெரிந்து கொள்வீர்; ஆனாலும் ஸ்வல்ப பாகத்தைத் தெரிவித்தேன்; வீணாகாத ஞானமுள்ள நீர் பிறப்பில்லாத பரம புருஷனுடைய அம்சமேயாம். மேலும் நீர் இயற்கையில் ஜனனமரணமில் லாதவரானாலும், உலகத்தின் க்ஷேமத்திற்காக சரீரமெடுத்துக் கொண்டீர். ஆகையால்

இவ்விஷயத்தைத் தெரிந்துகொள்ளும். அந்தமஹா மஹிமை பொருந்திய பரம புருஷனுடைய சரிதத்தை வர்ணியும். சாஸ்த்ரங்களைக் கேட்பது (ச்ரவணம்) யாகஞ் செய்தல், குளம், கிணறு, வெட்டுவித்தல், ப்ரியமான வார்த்தை சொல்லுதல், மஹாதானஞ் செய்தல் ஆகிய இவைகளின் பலன் என்னவென்றால் உத்தமச்லோகராகிய பகவானுடைய குணங்களை வர்ணிப்பதேயாம். இதுவே சாச்வதமாகிய பலன். இதற்கு உதாரணமாக என்னுடைய முன்ஜன்ம விருத்தாந்தத்தைச சொல்லுகிறேன்.

23–38. நான் முன்ஜன்மத்தில் ப்ராஹ்மணர் களுடைய வீடுகளில் வேலைசெய்து கொண்டிருந்த சூத்ரஸ்த்ரீயின் புத்ரனாகவிருந்தேன். அப்பொழுது மழைகாலத்தில் ஒரே இடத்தில் வஸிப்பதாகிய சாதுர் மாஸ்யவ்ரதத்தை யனுஷ்டித்த சில ஸன்யாஸிகளுக்கு பால்யத்திலேயே நான் சுச்ரூஷை செய்துவந்தேன். பால்யமுள்ளவனானாலும், விளையாட்டு ஸாமான்களை வைத்துக்கொள்ளாமலும், பால் சாபல்யமில்லாமலும், இந்த்ரியங்களை ஜயித்து அவர்கள் ஏவினதைச் செய்வதிலேயே நோக்கமுள்ளவனாயிருந்தேன். அப்பொழுது ஸமபுத்தியுள்ள அவர்களுக்கு ஸ்வல்ப மாய்ப்பேசும் என்னிடத்தில் கருணையுண்டாயிற்று. ஒருநாள் அவர்கள் புஜித்த பிறகு, பாத்ரத்தில் எஞ்சி இருந்த, அன்னத்தை அவர்களுடைய அனுமதியின் பேரில் நான் புஜித்தேன். அதனால் ஸகல பாபங்களும் நிவர்த்தியாகிச் சுத்தனானேன். இப்படிச் சித்தம் சுத்தமான போது, அவர்கள் அனுஷ்டிக்கும் பகவத் பக்தியாகிய தர்மத்திலேயே எனக்கு ப்ரியம் நேர்ந்தது அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய லீலைகளைக்

கானஞ் செய்துகொண்டிருந்தார்கள். இனியவைகளான அவைகளை நான் எப்பொழுதும் அந்தரங்க ப்ரியத்துடன் கேட்டேன். அதனால் எனக்கு பக்தி அதிகரித்தது. அதிலேயே விசேஷ நோக்கமுள்ள எனக்குப் பகவானிடம் ஸ்திரமான பக்தியுண்டானதால், அப்பொழுதே பரப்ரஹ்மமானது ப்ரபஞ்ச ஸம்பந்த மற்றதென்றும், அதுவே நானென்றும், என்னிடத்தில் ஸ்தூல ஸூக்ஷ்மசரீரங்கள் அவித்யையால் (பொய்யாக ஆரோ பிக்கப்பட்டனவேயொழிய, உண்மையிலில்லை என்றும் நான் தெரிந்து கொண்டேன். இப்படி மழைகாலம், சரத்காலம் ஆகிய இரண்டு ருதுக்களிலும் மஹாத்மாக்களாகிய, அந்த ஸன்யாஸிகளால் சொல்லப்பட்ட மஹாவிஷ்ணுவின் மஹிமையை மூன்று காலங்களிலும் ச்ரவணஞ்செய்தேன். அதனால் சிறந்த பக்தியுண்டானது மன்றி, ரஜோகுணமும், தமோ குணமும், என்னைவிட்டு விலகின. அவர்களுக்குச் சுச்ரூஷை செய்வதிலேயே ஆசையுள்ளவனும், வணக்கமுள்ளவனும், பாப மில்லாதவனும், ச்ரத்தை யுள்ளவனும், இந்த்ரியங்கள் ஜயித்தவனும், பால்ய வயதுள்ளவனும், எப்பொழுதும் கூடவே ஸஞ்சரிப்பவனுமாகிய எனக்கு அந்த முனிவர்கள் தீனர்களிடத்தில் ப்ரீதியுள்ளவர்களாகையால் விச்வரூபயாத்ரைக்கு முன்னிலையில், ப்ரஹ்ம வித்தையை யுபதேசித்தார்கள். அது மிகவும் ரஹஸ்ய மானது. ஈச்வரனால் நேரில் சொல்லப்பட்டது. அதனால் நான் ஸகல ப்ரபஞ்சங்களையும் ஸிருஷ்டிக்கும் வாஸு தேவராகிய பகவானுடைய மாயாமஹிமையைத் தெரிந்துகொண்டதுமன்றி அவருடைய பதத்தை அடையும் ஸாதனத்தையும் தெரிந்து கொண்டேன். ஓ! நன்றாய் வ்ரதங்களையனுஷ்டித்த ப்ராஹ்மணோத்தம!

வ்யாதியையுண்டுபண்ணும் த்ரவ்யங்கள், வேறு பதார்த்தத்தின் சேர்க்கையால் ரோகத்தை நிவர்த்திப்பது போல, கர்மமானது ஸம்ஸாரமாகிய வ்யாதியைக் கொடுக்கக்கூடியதானாலும், பரமாத்மாவிடம் ஸமர்ப்பிக்கப் பட்டால், அது முவ்வகையான தாபங் களையும் போக்குகிறது என்ற தர்மரஹஸ்யத்தையும், அவர்கள் எனக்கு உபதேசித்தார்கள். கர்மயோகங்கள் எல்லாம், ஸம்ஸாரத்தைக் கொடுக்கின்றவைகள் ஆனாலும், மேற்காட்டிய ஈச்வரனுடைய ஸந்தோஷத்திற்காகச் செய்கிறோம் என்ற எண்ணத்துடன் செய்து அவரிடத்தில் ஸமர்ப்பிக்கப்படுமானால் அவை பந்தகங்களாகிறதில்லை. பகவானுடைய ஸந்தோஷ மாகிய பலனை விரும்பிச் செய்யப்படும் கர்மமானது, பக்தியோகத்துடன் கூடிய ஞானத்தை உண்டு பண்ணுகிறது. "எதனைச் செய்கிறாயோ, எதனைப் புஜிக்கிறாயோ, எதனை ஹோமஞ்செய்கிறாயோ, எதனைக்கொடுக்கிறாயோ அதனை என்னிடம் கொடுத்துவிடு" என்ற பகவான் உடைய ஆக்ஞையின்படி பெரியோர்கள் கர்மங்களைச் செய்கிறார்கள். கிருஷ்ணனுடைய கல்யாண குணங்களையும், திவ்ய நாமங்களையும், வாக்கினால் உச்சரிக்கிறார்கள் அவரை த்யானஞ்செய்கிறார்கள். பக்தியோகத்தால் நல்ல ஞானமுள்ள புருஷனானவன்" வஸுதேவருடைய புத்ரராயும், ப்ரத்யும்னராயும், அனிருத்தராயும், ஸங்கர்ஷண மூர்த்தியாயுமிருக்கும் பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறோம்" என்று த்யானஞ்செய்து, யக்ஞபுருஷனாகிய பகவானை உபாஸிக்கிறான். அந்த ஈச்வரனுக்கு மேற்காட்டிய மந்த்ரத்தால் குறிக்கப்பட்ட சரீரத்தை விட வேறு சரீரமில்லை.

39–40 பகவானுடைய கட்டளைப்படி நடந்த

எனக்கு, அந்தப் பகவான், தம்முடைய ஞானம் முதலிய வைகளுக்குச் சமமான ஞானத்தையும் ஐச்வர்யத்தையும், தம்மிடத்தில் பக்தியையும் கொடுத்தார். அனேக சாஸ்த்ரங்களைக் குருமுகமாக கேட்ட வ்யாஸரே! ப்ரபுவாகிய பகவானுடைய மஹிமையை நீரும் வர்ணியும். அதனால் வித்வான் களால் அறியவேண்டிய விஷயங்கள் யாவும் உம்மால் அறியப்படும். துக்கத் தினால் வருத்தமடைந்தவர்களுக்கு அதனை நிவர்த்தி செய்யும் உபாயம் இதுவேயொழிய வேறில்லை.

நோட்டு.

28–17. ஆத்மா–சரீரவ்யாதி, மனோவ்யாதி முதலிய துக்கங்களில்லாமல், பகவத் பஜனத்தால் ஸந்தோஷ மடைந்திருக்கிறானா. சந்த். வீர. 21– பாரதம்தேசத்தாலும், காலத்தாலும், அளவிடக்கூடாத பரப்ரஹ்மத்தை விசாரித்தும் அர்த்தத்தாலும், சப்தத்தாலும், மஹத்தான சப்த ப்ரஹ்மமாகிய வேதத்தையும் நன்றாய் விசாரித்திருக்கிறீர். ஆனதால் தாங்கள் பூமியில் அவதரித்ததின் கார்யம் முடிந்து விட்டது. அப்படியி ருந்தும், அவதரித்த கார்யத்தைச் செய்யாதவர்போல் கவலைப்படுகிறீர்.– பரம் –ப்ரஹ்மா, ருத்ரன் இவர்கள். 30–அபரம்– இந்த்ரன் முதலியவர்கள். ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் மேலானவர். வீர. யோகத் தால்– "யாகம், நல்ல ஆசாரம் இந்த்ரிய நிக்ரஹம், பிறருக்கு ஹிம்ஸை செய்யாமலிருப்பது தானம் வேதாத்யயனம் முதலிய கர்மங்களுக்குள் யோகத்தால் ஆத்மாவின் உண்மையை அறிவதே மேலானது"– யாக்ஞ்யவல்க்யஸ்மிருதி அத்புதமான– யமகம் முதலிய சப்தாலங்காரங்களும்,

உத்ப்ரேக்ஷை முதலிய அர்த்தாலங்காரங்களும் பொருந்தியிருந்தாலும். ஸ்ரீத. கானம்– விசேஷ ஆனந்தத்தை உண்டுபண்ணுவதால் கானஞ்செய்கிறார் கள். ஸ்தோத்ரஞ்செய்து பாபங்களைப் போக்கடித்துக் கொள்ளுகிறார்கள். ஸ்ரீத. "பரம ஹம்ஸர்களுக்கு அவை ப்ரியமானவைகள். அவைகளே பகவானுக்கு ப்ரியமானவைகள்." என்றபடி பாகவத தர்மங்களை வர்ணிக்காமலிருக்கும் க்ரந்தங்கள் பரமஹம்ஸர்களால் ஆதரிக்கக்கூடியவையல்லவென்று காட்டப்பட்டது– வீர. நிலைபெறாமல் "ஓ அர்ஜுன! பரமாத்மாவைவிட வேறு ஒன்றுமில்லை என்னும் புத்தியானது ஒருவகையேயாம். அந்த நிச்சயமில்லாதவர்கள் இந்த்ரன, அக்னி முதலிய தேவதைகளைச் சிந்தித்து புத்தியைப் பலவகையாகச் செலுத்துகிறார்கள்." பகவத் கீதை– என்னபலன்? பகவத் பக்தியின்றி தர்மத்தை மாத்ரம் அனுஷ்டிப்பவனிடம் பகவான் ப்ரீதி செய்கிறதில்லை. அதனால் பாபம் நீங்குகிறது மில்லை. அதனால் ஆரம்பித்த கார்யம் பூர்த்தியாகிறது மில்லை ஸ்ரீத. சுற்றி– ஸ்வர்க்கம் முதலிய மேலுலகங் களிலும், பூமி முதலிய கீழ் உலகங்களிலும் ஸஞ்சரிக்கும் ஜனங்கள், அவர்களால் முந்திச் செய்யப்பட்ட பாபபுண்யங்களால் துக்கத்தையும் ஸுகத்தையும் அடைவதுபோல புண்ய பாபங்களைக் கொண்டு மோக்ஷத்தையடைய முடியாதாகையால், அதனை அடைவதற்கு முயற்ச்சிக்கவேண்டும். சந்த்– ப்ரபஞ்சம்– அசையும் பொருள் அசையாப்பொருள் இவைகளடங்கியது. "இந்த ப்ரபஞ்ச முழுவதும் பரப்ரஹ்மம்."–ச்ருதி. ஸ்வல்ப– "நல்ல ஆசார்யர்களை யடைந்த புருஷன் பரமாத்மாவைத் தெரிந்துகொள்ளு கிறான்" ச்ருதி– வ்யாஸரென்ற திவ்யநாமத்துடன் பகவான்

ப்ரகாசிப்பதுபோல ப்ரபஞ்சமென்ற பெயருடனும் அவரே விளங்குகிறார்– சந்த். நான்–பெரியோர் களுடைய சேர்க்கையால் க்ஷேமம் கிடைக்கு மென்பது காட்டப்பட்டது. சாதுர்மாஸ்யம்–ஒவ்வொரு வர்ஷத்தி லும் நான்கு மாஸங்கள் ஸஞ்சாரத்தை நிறுத்தி ஒரே இடத்தில் வஸிக்கவேண்டும் என்று ச்ருதியில் சொல்லியிருக்கிறபடி ஸன்யாசிகள், "வர்ஷக் காலமானது ப்ராணிகள் உண்டாகும் ஸமயமானதால் பெரும்பாலும் மார்க்கங்கள் ஜந்துக்களால் நிறைந்து இருக்கும் ஆகையால் அவர்களுக்கு ஹிம்ஸை நேரிடாமலிருப்பதற்காக நான்கு பக்ஷங்கள் இந்தக் கிராமத்திலேயே வஸிப்பதாக உத்தேத்திருக்கிறோம். உங்களுடைய ஸௌகர்யத்தைத் தெரிவிக்கவேண்டும்." அவர்கள் அப்படிக் கேட்ட ஸன்யாஸியை நோக்கி, தாங்கள் இவ்விடத்திலேயே ஸுகமாய் வஸியுங்கள், எங்களால் கூடிய சுச்ரூஷைச்செய்து நாங்கள் க்ருதார்த்தர்களாக ஆகிவிடுகிறோம்" என்று பதில் சொல்லுவார்கள். பின்பு ஆஷாடமாஸத்திய பூர்ணமி முதல் நான்கு பக்ஷங்கள் ஒரே இடத்தில் போக்குவார்கள். இதுவே சாதுர்மாஸ்ய விரதமெனப்படும். பிறகு ஐந்தாவது பக்ஷத்தின் பிரதமையில் ஸஞ்சாரத்திற்கு ஆரம்பிப்பார்கள். அதுவே விச்வரூப யாத்ரையாகும். புஜித்தேன்–எச்சிலான ஸ்தலத்தை சுத்திசெய்வது முதலியவற்றையுஞ் செய்தேன்.– விஜ. ஆக்ஞை– ச்ருதிகளும் ஸ்மிருதிகளும் பகவானுடைய கட்டளை. ப்ரத்யும்ன– இதுமுதல் இரண்டு ச்லோகங்களால் பகவானுடைய குணங்களையும் நாமங்களையும் ஸ்மரிப்பதும், பலத்தையுத்தேசியாமல் கர்மானுஷ்டா னம் செய்யும் ப்ரகாரங்களும். அப்படிச் செய்பவனே

மேலானவனென்றும் காட்டப்பட்டிருக்கிறது."ஓம் தத்ஸத் என்பது பரப்ரஹ்மத்தை முவ்வகையாக சொல்வதாக ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது" என்று பகவான் சொல்லிருப்பதனால் வாஸுதேவ, ப்ரத்யும்ன, அனிருத்த, ஸங்கர்ஷண இந்த நான்கு ரூபமாய் இருக்கும் பகவானுக்கு நமஸ்காரம் பண்ணுகிறோம் என்பதால் பகவானுடைய திவ்ய நாமத்தை உச்சரிக்கவேண்டிய வகை காட்டப்பட்டது. மூலத்தில் தீமஹி–த்யானம் செய்கிறோம்' என்று இருப்பதால் ப்ரணவ சப்தத்தால் காட்டப்பட்ட அனந்த கல்யாணகுணங்கள் நிறைந்த பகவானைத் த்யானம் பண்ணுகிற ப்ரகாசமும், ரக்ஷிப்பது என்ற அர்த்தமுள்ள ' அவ' என்ற தாதுவிலிருந்து ப்ரணவம் ஏற்பட்டதாகையால் எல்லாரையும் ரக்ஷிப்பதாகிய பரமாத்மாவின் குணமும், மேலும் அந்த ப்ரணவம் அகாரம், உகாரம், மகாரம் இம்மூன்று அக்ஷரங்களால் அமைந்திருப்பதால் எல்லாவற்றிற்கும் பரமாத்மா காரணமென்றும், எல்லாவற்றிற்கும் அதிபதியென்றும் காட்டப்பட்டிருக்கிறது. தவிரவும், வாஸுதேவ என்பதால் பரமாத்மாவானவர் எல்லாவற்றிற்கும் ஆதாரமென்றும், எல்லோருக்கும் அந்தராத்மாவென்றும், ப்ரத்யும்ன என்பதால்,"அவ்விடத்தில ஸூர்யன் ப்ரகாசிக்கிற தில்லை, சந்த்ரனும் நக்ஷத்ரங்களும், மின்னல்களும் அக்னியும் விளங்குகிறதில்லை" என்ற ச்ருதிப்படி நிகரில்லாத ப்ரகாசமுள்ளவர் என்பதும்; அனிருத்த என்பதால் ஸர்வவ்யாபகரென்றும். ஸங்கர்ஷண என்பதால் இந்த்ரியங்களுக்குப் புலப்படாத விஷயங்களைத் தெரிவிப்பவரென்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. வீர ஐச்வர்யம்– அணிமா முதலியவைகள். பக்தி–இடை விடாமல் பகவானை ஸ்மரிப்பது– ஸ்ரீத.

அத்யாயம்–6.

நாரதருடைய முன்ஜன்மம்.

ஸத்யவதியின் புத்ரராகிய வ்யாஸமஹர்ஷியானவர், தேவர்ஷியாகிய நாரதருடைய பிறப்பு, சரிதம், ஆகிய இவைகளைக் கேட்டுப் பின்னும் அவரை நோக்கி ஓ! நாரதரே! உமக்கு ஞானோபதேசஞ் செய்த ஸன்யாஸிகள் சென்றபிறகு, பால்யவயதுள்ளவரான நீர் என்ன செய்தீர்? ப்ரஹ்மதேவருடைய புத்ரரே! அபரவயதில் என்ன செய்துகொண்டிருந்தீர்? தேஹவியோக காலம் நேர்ந்த போது சரீரத்தை எப்படிவிட்டீர்? ஜீவன் ஒரு சரீரத்தைவிட்டு மற்றொரு சரீரமடைந்தபின் முன் ஜன்மத்தின் விஷயங்கள் காலமஹிமையால் மறந்து போகின்றனவே அப்படிக்கிருக்க முன்காலத்தில் நடந்த விஷயம் எப்படித் தங்கள் ஞாபகத்திலிருக்கிறது? என்றார். அதனைக்கேட்ட நாரதர் வ்யாஸமஹர்ஷியை நோக்கி "எனக்கு ஞானோபதேசஞ்செய்த ஸன்யாஸிகள் தேசாந்தரம் போனபிறகு சிறுவயதுள்ள நான் என்ன செய்தேனென்றால், என் தாயாருக்குக் குழந்தை நானொருவனே; ஆனதுபற்றியும் எனக்கு வேறு கதியில்லாததனாலும் என்னுடைய தாயார் என்னிடம் மிகவும் ப்ரியம் வைத்திருந்தாள். அவள் ஒன்றையும் அறியாதவள்; வேலைசெய்து ஜீவிப்பவள்; மரத்தால் செய்யப்பட்ட ப்ரதிமை மனிதர்களால் ஆட்டி வைக்கப் படுவதுபோல, இந்த ஜனங்கள்யாவும் ஈச்வரனுக்கு ஸ்வாதீனப் பட்டிருக்கிறார்கள். என்தாயார் என்னுடைய யோகக்ஷேமத்தை வஹிக்க விரும்பினவளானாலும் அதை நடத்த ஸாமர்த்யமற்றவளாக விருந்தாள். திக்கு, தேசம், காலம் ஆகிய இவைகளின் பிரிவையறியாத ஐந்து வயதுள்ள சிறுவனாகிய நான்மாத்ரு ஸ்நேஹத்தா

அந்த ப்ராஹ்மண கிருஹத்திலேயே வஸித்தேன். ஒருநாள் ராத்ரி என் தாயார் மாடு கறப்பதற்காக வீட்டிற்கு வெளியே வரும்போது ஒருபாம்பைக் காலால் மிதித்தாள். அப்பொழுது அனாதையான அவளை அந்தஸர்ப்பம் காலனால் தூண்டப்பட்டு கடித்தது. உடனே அவள் மரணமடைந்தாள். அப்பொழுது நான் "ஈச்வரன் பக்தர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுப்பதி லேயே நோக்கமுள்ளவராகையால் நமக்கு நேர்ந்த மாத்ருதுக்கம் அனுக்ரஹமேயொழிய வேறில்லை என்று நினைத்து வடக்குத்திக்கை நோக்கிப் புறப்பட்டேன். ஸம்பத்துள்ள அனேக தேசங்களையும், கிராமங்களையும், கோகுலங்களையும், ரத்னம் விளையும் பூமிகளையும், பயிரிடுபவர்கள் வஸிக்கும் இடங்களையும், மலையடிவாரங்களையும், பாக்குமரம் முதலியவைகளின் தோட்டங்களையும், தானாக முளைத்த மரங்களிருக்குங் காடுகளையும், மரங்கள் வைத்து விருத்திசெய்யப்பட்ட இடங்களையும், பல வகையான தாதுக்களால் அழகான மலைகளையும், யானைகளால் முறிக்கப்பட்ட கிளைகளுள்ள மரங்களை யும், நல்ல ஜலமுள்ள குளங்களையும், தேவர்கள் ஜலக்ரீடை செய்யும் தாமரஸ ஓடைகளையும், அவைகளிலிருக்கும் அழகான குரலுள்ள பக்ஷிகளையும், தேனீக்களையும், அவைகளால் அலங்கிருதமான தாமரைத்தடாகங்களையும், பார்த்துகொண்டு நான் ஒருவனாக அவைகளைக் கடந்துசென்று, பயங்கரமாகிய ஒரு வனத்தைக் கண்டேன். அது கோரைகளும், மூங்கில்களும், வண்டுகளால் துளைக்கப்பட்ட மூங்கில்களும், நாணல்களும், தர்ப்பங்களும், அடர்ந்து இருப்பதாலும், ஸர்ப்பங்களும், கோட்டான்களும், நரிகளும் வஸிக்குமிடமாயிருந்தாலும் மிகவும் பயங்கர

மாயிருந்தது. அப்பொழுது நான் வெகுதூரம் நடந்த தால், பசி, தாஹமுண்டாகி, அவற்றால் இந்த்ரியங்கள், சரீரம் இவைகளின் வலிமை குறைந்து களைப்படைந் தேன். பின்பு ஒரு நதியின் மடுவில் ஸ்நானஞ்செய்து, ஆசமனம் பண்ணிச்ரமத்தை நிவர்த்தித்துக் கொண்டேன். பின்பு மனிதர்களுடைய ஸஞ்சாரமில்லாத அந்தக் காட்டில் ஒரு அரசமரத்தின்கீழ் உட்கார்ந்து ஸன்யாஸிகளிடம் உபதேசம் பெற்றப்படி ஹிருதயத்தி லிருக்கும் பரமாத்மாவை த்யானஞ் செய்தேன். பகவானுடைய பக்தியால் மனத்தை ஒருவகைப்படுத்தி அவருடைய தாமரை போன்ற பாதத்தை த்யானஞ் செய்யும்போது என்னுடைய இருகண்களிலிருந்து ஆனந்தபாஷ்யம் பெருகியது. அப்பொழுது ஸ்வல்ப காலத்தில் என்னுடைய ஹிருதயத்தில் பகவத் ஸ்வரூபம் ப்ரகாசித்தது ஓ! வ்யாஸ மஹர்ஷியே! விசேஷ ப்ரேமையால் மயிர்க்கூச்சலுண்டாயிற்று. அதனால் மிக்க ஸுகமுள்ளவனாய் ஆனந்த ப்ரவாஹத்தில் மூழ்கி என்னையும் பகவத் ஸ்வரூபத்தையும் மறந்திருந்தேன். இப்படியிருக்க மிக்க அழகுள்ளதும், ஸகல துக்கங்களை யும் போக்கடிக்கக்கூடியதுமான அந்தப்பகவானுடைய ரூபம் மறைந்தது. உடனே அதனைக்காணாமல் மிகவும் மனவருத்தமடைந்து சீக்ரமாக எழுந்திருந்தேன். மறுபடியும் அந்த பகவத் ஸ்வரூபத்தைப் பார்க்கவிரும்பி மனத்தையடக்கி அதே ரூபத்தை ஹிருதயத்தில் த்யானஞ்செய்தேன். அப்படியும் அந்த ரூபம் நேரில் தோன்றவில்லை. ஒரு தடவை பார்த்ததால் த்ருப்தி யுண்டாகாததனால் மனக்கவலையடைந்தேன்.

21–26. இப்படிக் காட்டில் கவலையுடனிருக்கும் என்னை நோக்கி வேதவாக்யங்களுக்கு விஷயமாகாத

பகவான் "ஓ! குழந்தாய்! கர்மம் முதலிய தோஷங்கள் அற்றுப்போகாத யோகிகளால் என்னைப் பார்க்க முடியாது. ஆனதால் இந்த சூத்ர ஜன்மத்தில் நீ என்னைப் பார்க்கத் தகுந்தவனல்ல. ஆனால் ஒரு தரம் என் ரூபத்தைக் காண்பித்த காரணமென்னவெனில்.. ஒரு தரம் என் ரூபத்தைப் பார்த்தவனுக்குப் பின்னும் பார்க்கவேணுமென்ற எண்ணம் உண்டாகும். அதனால் என்னிடமே மனத்தைச் செலுத்தியவர்களுக்கு ஸகல மனோதோஷங்களும் நிவர்த்தியாய் விடுகின்றன. வெகுகாலம் ஸாதுக்களுக்குச் சுச்ரூஷை செய்ததால் உனக்கு என்னிடத்தில் ஸ்திரமான பக்தியுண்டாயிற்று. ஆனதால் தோஷத்தை யுண்டுபண்ணும் இவ்வுலகத்தை விட்டு என்னுடைய பார்ஷதனாக ஆய்விடுவாய் என்னிடத்தில் உனக்கு உண்டான பக்தியொருபொழு தும் குறையாமலிருக்கும். மேலும் ப்ரளய காலத்திலும் என்னுடைய அனுக்ரஹத்தால் முந்திய ஞாபகம் தவறாமலிருக்கும்" என்று அனுக்ரஹித்தார். இப்படி அனுக்ரஹிக்கப்பட்ட நான் மஹாபூதமாயும், ஆகாச சரீரமுள்ளவரும், எல்லாருக்கும் அதிபதியாயும், எல்லாருக்கும் ஸமீபத்திதலிருப்பவரானாலும், ஒருவராலும் அறியப்படாதவருமான அந்தப் புருஷனுக்கு நமஸ்காரஞ்செய்தேன்.

27–32. பின்பு அனந்த (நாசமற்ற)னுடைய திவ்ய நாமங்களை வெட்கப்படாமல் உச்சரித்துக்கொண்டும் அவரால் செய்யப்பட்ட ரஹஸ்யமான லீலாவிபூதிகளை நினைத்தும் மற்ற ஆசைகளை யொழித்தும், கர்வம், மாத்ஸர்யம் இவைகளை விலக்கிக் காலத்தை எதிர்பார்த்து ஸந்தோஷமாகப் பூமியில் ஸஞ்சரித்தேன். இப்படி ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலேயே மனத்தைச் செலுத்தி,

ஒன்றிலும் பற்றுதலில்லாமல் சுத்த சித்தனாகவிருந்தேன். இப்படிக்கிருக்கையில் சுத்தமான ஆகாசத்தில் மின்ன லுடன் மேகவரிசை தோன்றினாற்போல திடீரென்று மரணகாலம் நேர்ந்தது. அப்பொழுது சுத்தமான அந்தப்பார்ஷத சரீரத்திற்குப் பகவதிச்சைப்படி நான் போகும்போது ப்ராரப்தகர்மம் நசித்து ஐந்து பூதங்களா லேற்பட்டிருந்த பழய சரீரம் கீழேவிழுந்தது. பிறகு நான் இந்த மூவுலகத்தையும் காரணரூபமாய் அடக்கிக் கொண்டு ப்ரளயகாலத்தில் ஸமுத்ர ஜலத்தில் ஸ்ரீ நாராயணன் சயனஞ் செய்துகொண்டிருக்கும்போது, பின்பு அவரிடம் சயனஞ்செய்ய விரும்பிய ப்ரஹ்ம தேவரின் ச்வாஸத்தின் வழியாக அவருடைய ஹிருத யத்தில் ப்ரவேசித்தேன். பிறகு 1000 சதுர்யுகங்கள் கொண்ட ப்ரஹ்மதேவருடைய ராத்ரி முடிந்தவுடன் மறுநாள் காலையில் ப்ரஹ்மதேவர் ஜகத்தை ஸிருஷ்டிக்க யத்தனித்தார். அப்பொழுது அவருடைய இந்த்ரியங்களிலிருந்து மரீசி முதலிய ப்ரஜாபதிகளும் நானும் உண்டானோம். நான் குறைவின்றி ப்ரஹ்மசர்ய விருதங்களையனுஷ்டித்து, மூவுலகத்தில், உள்ளிலும் வெளியிலும் மஹாவிஷ்ணுவின் அனுக்ரஹத்தால் ஒரிடத்திலும் தடையற்ற நடையுள்ளவனாகிச் சஞ்சரிக்கிறேன்.

33–37. தவிரவும், இந்த வீணை ஈச்வரனால் கொடுக்கப்பட்டது. இது ஷட்ஜம் முதலிய ஸ்வரங்களா கிய நாதப்ரஹ்மத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. ஆனதால் மூர்ச்சனை முதலியவைகளுடன் ஸ்ரீ நாராயணனுடைய கதையைக் கானஞ்செய்து கொண்டே ஸஞ்சரிக்கிறேன். பகவானுடைய மஹிமையை நான் கானஞ் செய்யும்போது, ஜகத்தை பரிசுத்தப்

படுத்தும் பாதங்களுள்ளவரும், எல்லோராலும் ப்ரியப் படக்கூடிய லீலைகளுள்ளவருமான பகவான் என்னால் அழைக்கப்பட்டவர் போல என் மனத்தில் வந்திருந்து தர்சனங் கொடுக்கிறார். விஷயத்தில் ஆசையால் அடிக்கடி அவைகளையே கவர்ந்து கொண்டிருக்கும் சித்தமுள்ளவர்களுக்கு பகவானுடைய லீலைகளை வர்ணிப்பதே ஸம்ஸாரஸாகரத்தை தாண்டச்செய்யும் ஓடமென்று நிச்சயிக்கப்படுகிறது. காமம் முதலிய ஆறுவகை சத்துருக்களால் பீடிக்கப்படும் மனது பகவானை ஸேவிப்பதால் சுத்தமாவதுபோல யமம் முதலிய யோக ஸாதனங்களால் சுத்தப்படுகிறதில்லை. தோஷமற்றவரே என்னுடைய பிறப்பு, என்னுடைய சரிதம் முதலிய ரஹஸ்யங்களைப்பற்றி உம்மால் கேட்கப்பட்டவைகளெல்லாவற்றையும் உம்முடைய மனம் ஸந்தோஷப்படும்படி விஸ்தாரமாகச் சொன்னேன் என்று சொன்னார்.

38–39. ஓ! சௌனகர் முதலிய மஹர்ஷிகளே! இப்படி தெய்ச்செயலாய் வந்த நாரதர் ஸத்யவதியின் புத்ரராகிய வ்யாஸருடன் ஸம்பாஷணை செய்து 'நான் போய்வருகிறேன்' என்று சொல்லி வீணையை மீட்டிக்கொண்டே சென்றார். நாரதர் உலகமெங்குஞ் சென்று சார்ங்கமென்ற வில்லைத்தரித்த ஈச்வரனுடைய சரிதத்தை வாக்கினாலும், வீணையைக் கொண்டும் கானஞ்செய்து, ஸகல லோகத்தையும் ஸம்ஸாரதுக்கத் திலிருந்து காப்பாற்றுகிறார்; ஆகையால் இவரே பாக்யசாலி. இது இப்படி இருப்பது ஆச்சரியம்.

நோட்டு.

ஸன்யாஸிகள் மூலத்தில் பிக்ஷுவென்றிருப்பதால்

ஞானபிக்ஷை கொடுப்பவர்களென்று அர்த்தம்– விஜ. யோகம்–இல்லாதவைகளை ஸம்பாதிப்பது. க்ஷேமம்– ஸம்பாதித்தவைகளைக் காப்பாற்றுவது– வீர. தாயார் என்னிடத்தில் மிக்கப்ரியம் வைத்திருந்தபடியால் பெரியோர்கள் பின் நான் போகவில்லை– விஜ. ஸ்நேஹத்தால்– எப்பொழுது இதன் நேஹம் குறையு மென்று எதிர்பார்த்திருந்தேன் ஸ்ரீத. நினைத்து– "எவனையனுக்ரஹிக்க வேண்டுமென்று விரும்புகிறேனோ அவனுடைய பணத்தையும் பந்துக்களையும் நாசஞ் செய்கிறேன்"– ஸ்ருதி. புறப்பட்டேன்– மாதாவிற்கு அபரக்ரியை செய்தபிறகு– விஜ க்ராமங்கள்–"ப்ராஹ்மணர்களும் அவர்களுடைய வேலைக்காரர்களும் வஸிக்குமிடம், அல்லது சூத்ரர்கள் அவர்களுடைய வேலைக்காரர்களும் வஸிக்குமிடம்"– ப்ரகு வேத– எதையடையாமல் வாக்குகள் மனத்துடன் திரும்புகின்றனவோ– ச்ருதி திருப்தி– விஷயத்தில் ஆசையுள்ளவனுக்கு ஒருதடவை விஷயத்தையனுபவித் தால் திருப்தியுண்டாகாததுபோல– வீர. மஹாபூதம்– ரிக்வேதம் முதலியவைகள் இந்த மஹாபூதத்தின் நிச்வாஸமே"– ச்ருதி. காலத்தை– ப்ராரப்த கர்மத்தின் முடிவை– ஸ்ரீத. ப்ரவேசித்தேன்– "ப்ரஹ்மதேவர் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் தேஹத்தில் ப்ரவேசித்து அவருடன் ஒன்றாய் கலந்து யோகநித்ரையை யடைந்தார்"– கூர்மப்புராணம்.1000 சதுர்யுக– மனுஷ்யமானத்தால் 1000 சதுர்யுகமானால் ப்ரஹ்மதேவருக்கு ஒரு பகல் முடியும், அவ்வளவு காலங்களடங்கியது ஒரு ராத்ரியாகும். இம்மாதிரியான பகலும் ராத்ரியும் சேர்ந்தால் ஒருதினம், அப்படி 30 தினங்கள் ஒருமாதமாகும், அப்போர்பட்ட மாஸங்களில் 12 கொண்டது ஒரு வர்ஷம், அப்படி நூறு வர்ஷங்கள்

ப்ரஹ்மதேவருக்கு பரமாயுஸ். இதுவே ப்ராஹ்மமான மெனப்படும். மரீசி– வஸிஷ்டர் முதலிய மஹர்ஷிகளும்– வீர.– வெளியிலும்– கர்மிகள் முவ்வுலகத்திலும் வெளியில் வரமாட்டார்கள், தபஸ், முதலியவைகளால் ப்ரஹ்மலோகத்தை யடைந்தவர்கள். இதற்குள் வருகிறதில்லை. ஸ்ரீத ஈச்வரனால்– ப்ரஹ்மதேவரால் கொடுக்கப்பட்டது– சந்த். மூர்ச்சனை.– ஸ்வரத்தின் ஆரோஹாவரோஹம்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–7.

அர்ஜுனன் அச்வத்தாமாவைச் சிக்ஷித்தது.

சௌனக் மஹர்ஷியானவர், ஸூதரை நோக்கிப் "பிறகு பகவானாகிய வ்யாஸமஹர்ஷி, நாரதருடைய அபிப்பிராயத்தை யறிந்து எதனைச்செய்தார்" என்று கேட்டார்.

2–8. இதனைக்கேட்ட ஸூதர், சௌனகரை நோக்கி ப்ரஹ்ம பத்னியாகிய ஸரஸ்வதி நதியின் மேல் கரையில் 'சமயாப்ராஸம்' என்னும் ஒரு ஆச்ரமமுண்டு. அது மஹர்ஷிகள் யாகஞ் செய்யுமிடம். மேலும் அது இலந்தை மரங்களால் அலங்கரிக்கப்பட்டது. அந்த முக்யமான ஆச்ரமத்தில் வ்யாஸ மஹர்ஷியானவர், ஆசமனஞ்செய்து, சுத்தராய் உட்கார்ந்து, மனத்தை ஒரு வகைப்படுத்தி த்யானஞ்செய்தார். பக்தி யோகத்தால் சுத்தமாயும், ஸ்திரமாயுமுள்ள மனத்தில் புருஷோத்தமனையும், அவரை ஆச்ரயித்த மாயையும் தர்சித்தார். "மேலும் ஜீவன் உண்மையில் மாயையைக் கடந்த ஸ்வரூபமுள்ளவனானாலும், அந்த மாயைக்கு வசப்பட்டு பிரமித்து, தான் முக்குண ஸம்பந்த முள்ளவனென்றும், மாயாகுணங்களால் செய்யப்படும் கார்யங்களைத் தான் செய்வதாக நினைத்துமிருக்கிறான்" என்றும் தெரிந்துகொண்டார். பின்னும் அந்த அனர்த் தத்தை போக்கக்கூடிய பக்தியோகத்தையும் அறிந்தார். பின்னும் அவர் உலகத்திற்கு ஏற்பட்டிற்கும், இவ்வித மான அக்ஞானத்தை நிவர்த்திப்பதற்காக, ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தார். அதனைக் கேட்ட மாத்ரத்தில் பரமபுருஷனாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில்,

ஸ்திரமான பக்தியுண்டாகிறது. அதனால் சோகம் மோஹம், பயம், ஆகிய இவைகள் நிவர்த்தியாகின்றன. மேலும் அவர் தம்மால் செய்யப்பட்ட அந்த ஸம்ஹிதையைப் பரிசோதித்து நிவிர்த்திமார்க்கத்தில் ஆசையுள்ள தம்முடைய குமாரராகிய சுகருக்கு அதை உபதேசித்தார்" என்று சொல்லி முடித்தார்.

9–20. இதனைக்கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஓ ஸூதரே! அந்தச்சுகர் ஒருவிஷயத்திலும் ஆசையில்லாதவர்; நிவிர்த்திமார்க்கத்திலேயே நோக்க முள்ளவர்; ஆத்மாவிடமே ரமிப்பவர்; அப்படியிருக்க அந்தப் பெரிதாகிய க்ரந்தத்தை எதற்காக அவர் அப்யஸித்தார் என்று கேட்டார். அதனைக்கேட்டு ஸூதர் சௌனகரை நோக்கி, "ஓ சௌனகரே! மஹர்ஷிகள், ஆத்மாராமர்களானாலும், பகவத் ஸ்வரூபத்தை நன்றாய் அறிந்தவர்களாகையால் ஸம்சய மற்றவர்களானாலும், க்ரந்தங்களைப் படிப்பதில் ஆசையில்லாதவர்களானாலும், பகவானிடத்தில் பலனை உத்தேசியாமலே பக்திசெய்கிறார்கள், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சரிதங்கள், வைராக்யமடைந்த மனத்தையும் வசப்படுத்திக்கொள்ள ஸாமர்த்யமுள்ள வைகள், ஆனதால் சுகமஹர்ஷி, பகவத் குணங்களில் விசேஷ ஆசையுள்ளவராகி அந்தப் பெரியதாகிய உபாக்யானத்தை அப்யஸித்தார். அவர் வ்யாஸ மஹர்ஷியின் புத்ரர். அவரிடத்தில் விஷ்ணு பக்தர்கள் ப்ரியப்படுவார்கள். ஓ! மஹர்ஷிகளே! பரீக்ஷித் என்ற ராஜரிஷியின் பிறப்பு, அவர்செய்த கார்யங்கள், அவருடைய மரணம், பாண்டவர்களுடைய மஹா ப்ரஸ்தானம், இவைகளை கிருஷ்ணகதையைச் சொல்லு வதற்கு உபயோகமாகச் சொல்லுகிறேன். எப்படியெனில்,

கௌரவர்களும், ஸிருஞ்ஜயர்களும், யுத்தத்தில் அடிக்கப்பட்டு ஸ்வர்க்கமடைந்தார்கள். பீமஸேனன் தன்னுடைய கதாயுதத்தால் துர்யோதனனுடைய துடையை அடித்து முறித்தான். பின்பு "த்ரோணருடைய புத்ரராகிய அச்வஸ்தாமாவென்பவர் த்ரௌபதியின் புத்ரர்களை நாசஞ்செய்வதே தம்முடைய யஜமானாகிய துர்யோதனனுக்கு ப்ரியமான கார்யம்" என்று நினைத்து உபபாண்டவர்கள் தூங்கும் ஸமயத்தில் அவர்களுடைய தலையை வெட்டினார். இது துர்யோதனனுக்கு ப்ரியமன்று. மேலும் அதை எல்லோரும் வெறுக்கக் கூடிய கார்யம் என்று நிந்தித்தார்கள். அப்பொழுது அக்குழந்தைகளுடைய தாயாகிய த்ரௌபதிதேவி புத்ரசோகத்தால் பரிதபித்துக் கண்ணீரைப் பெருக்கி அழுதாள். அந்தஸமயத்தில் அவளை நோக்கி அர்ஜுனன், "ஓ! நல்ல ஸ்வபாவமுள்ளவளே! என்னுடைய காண்டீவத்தில் பாணங்களைத்தொடுத்து அவைகளை ப்ரயோகித்து ப்ராஹ்மணர்களுக்குள், அதமனும், ஆயுத பாணியும் ஆததாயியுமான அச்வஸ்தாமாவினுடைய தலையை உன்னிடம் கொடுத்து உன்னுடைய துக்கத்தை நிவர்த்திக்கிறேன். அந்தத் தலையை ஆஸனமாகச் செய்து புத்ரசோகத்தை போக்கிக்கொள் வாய்" என்று ஸமாதானஞ்செய்தான். இப்படி அழகான வார்த்தைகளைச் சொல்லி ஸமாதானஞ்செய்து தகுந்த முயற்சியுடன் குரு புத்ரராகிய அச்வஸ்தாமாவை அர்ஜுனன் துரத்தினார். அவருக்கு மித்ரரும், ஸாரதியு மாயிருப்பவர் ஸ்ரீ கிருஷ்ணனே. அவருடைய வில் பயங்கரமானது. ரதமோ, ஹனுமத்வஜமுள்ளது. சிசுக்களைக் கொன்றவரான அந்த அச்வஸ்தாமா பின் தொடர்ந்துவரும் அர்ஜுனரை வெகுதூரத்தில் கண்டு பயந்து ப்ராணனைக் காப்பாற்றிக்கொள்ள

வேண்டி, பூமியில் எதுவரையில் போகக்கூடுமோ அதுவரையில் "சிவபெருமானிடத்தில் பயந்து ப்ரஹ்ம தேவர் ஓடியதுபோலத் திரும்பிப்பாராமலே ஓடினார். அப்படியும் தம்மைக் காப்பாற்றக்கூடியவர் கிடைக்காத தனாலும், குதிரைகள் களைத்துப்போனபடியாலும் அவர் ப்ரஹ்மாஸ்த்ரமே தன்னைக் காப்பாற்றுமென்று நினைத்தார். பின்பு ஆசமனஞ்செய்து சுத்தராய், ப்ரயோகித்த அஸ்த்ரத்தைத் திருப்பும் வகையறியாத வராயிருந்தும் ப்ராணனுக்குக் கெடுதி நேரிடும் ஸமயமாகையால் அந்த அஸ்த்ரத்தை ப்ரயோகித்தார்.

21–26. பின்பு எல்லா திக்குகளிலும் அந்த அஸ்த்ரத்தின் தேஜஸ் பரவியது. அதனைக்கண்டு அர்ஜுனன் தம்முயிர்க்குச் சேதம் வந்ததென்று நினைத்து ஸாரதியாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானை நோக்கி "ஓ! கிருஷ்ண! கிருஷ்ண! மிகுந்த பராக்ரம முள்ளவரே! பக்தர்களுக்கு நேரும் பயத்தை நிவர்த்திப் பவரே! ஸம்ஸாரத்தால் கஷ்டப்படும் ஜனங்களுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பவர் தாமொருவரே. நீரே முந்திய புருஷன். நீரே எல்லாவற்றிற்கும் பிரபு. ப்ரகிருதியைக்காட்டிலும் வேறானவர். ஆனந்த ஸ்வரூபத்திலிருப்பவர். நீர் மாயையைக்கடந்தவரானாலும், மாயைக்கு வசப்பட்டு ஸம்ஸாரத்தில் மூழ்கியிருக்கும் ஜனங்களுக்கு தர்மம் முதலிய புருஷார்த்தங்களைக் கொடுக்கிறீர். வேறிடத்தில் மனஸைச் செலுத்தாமல் தம்மையே பஜிப்பவர்கள் இந்த திவ்யமங்கள சரீரத்தை த்யானஞ் செய்கிறார்கள். ஓ! தேவர்களுக்குத்தேவனே! இதோ மிகவும் பயங்கரமான தேஜஸ் எங்கும் பரவிவருகிறதே, இது இன்னதென்று தெரியவில்லை. இதனைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

27–28. அதனைக்கேட்டுக் கிருஷ்ணபகவான் அர்ஜுனனை நோக்கி த்ரோணருடைய புத்ரராகிய அச்வஸ்தாமாவினால் ப்ரஹ்மாஸ்த்ரம் ப்ரயோகிக்கப் பட்டிருக்கிறது. இது அதன் தேஜஸ்ஸை தவிர வேறில்லை அவருக்கு அதனைத் திருப்பி பெற்றுக்கொள்ளும் வழி தெரியாமையால் இதுவரையில் உபயோகிக்காம லிருந்து இப்பொழுது தம் உயிருக்குச் சேதம் வருஞ் சமயமாகையால் தம்மைக்காப்பாற்றிக் கொள்ளவேண்டி அதனை உபயோகித்திருக்கிறார். அதனைத் தடுக்க முடியாது. உனக்கு அந்த ப்ரஹ்மாஸ்த்ரம் நன்றாகத் தெரியுமாகையால் அதனை ப்ரயோகித்து எதிரியின் அஸ்த்ரத்தை நாசஞ்செய் என்றார்.

29–39. இப்படிப் பகவான் சொல்லிய வார்த்தையைக் கேட்டுச் சத்ருக்களைக் கொல்லும் வல்லமையுள்ள அர்ஜுனன் ஆசமனஞ்செய்து, ஸ்ரீ கிருஷ்ணபகவானை ப்ரதக்ஷிணஞ் செய்து எதிரியின் அஸ்த்ரத்தை யடக்குவதற்காக ப்ரஹ்மாஸ்த்ரத்தை ப்ரயோகித்தார். அவ்விரண்டு அஸ்த்ரங்களுடைய தேஜஸ்ஸுகளும், ப்ரளய காலத்தில், அக்னியும், ஸூர்யனும் விருத்தியடைவது போல பூமி, அந்தரிக்ஷம் ஆகிய இவைகளை ஆக்ரமித்து ப்ரகாசித்தன. அவ்விருவர்களுடைய அஸ்த்ரங்களின் தேஜஸானது மூவ்வுலகங்களையும் தஹித்தது, அந்தத் தாபத்தை ஸஹியாமல் ஜனங்கள் இது ப்ரளயகாலத்திய அக்னி என்றே நினைத்தார்கள். அப்பொழுது ப்ரஜைகள் உபத்ரவப்படுகிறதையும், லோகங்களுக்கு நாசம் நேர்ந்ததையும் பார்த்து அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணனுடைய அனுமதிப்படி அந்த இரண்டு அஸ்த்ரங்களையும் உபஸம்ஹரித்தார். பிறகு அச்வஸ்தாமாவின் ஸமீபம் சென்று பசுவை

ரசனையால் கட்டுவது போல் கோபத்தால் சிவந்த கண்களுள்ளவனாகிய கிருபியின் புத்ரரைக்கட்டினார். பின்னுமவரைத் தம்முடைய கூடாரத்திற்குக் கொண்டு போக முயன்றார். அப்பொழுது தாமரைமலர் போன்ற கண்களுள்ள கிருஷ்ணபகவான் மிகுந்தகோபத்துடன் அர்ஜுனனை நோக்கி "ஏ பார்த்த! இவன் ராத்ரியில் தூங்கிக்கொண்டிருந்த யாதொரு அபராதமும் செய்யாத குழந்தைகளைக் கொன்றவன், ப்ராஹ்மணர்களுக்குள் அதமன், ஆனதால் இவனைக் கொல்லவேண்டுமே தவிர காப்பாற்றுவது உசிதமல்ல. மத்யம் முதலியவை களைக் குடித்து மதித்திருப்பவன், அஜாக்ரதையா யிருப்பவன், பயித்யங்கொண்டவன், தூங்குகிறவன், பாலியவயதுள்ளவன், முயற்சிக்காதவன், சரணமென்று வந்தவன், ரதமில்லாதவன் பயந்து ஓடுகிறவன், ஆகிய இம்மாதிரியான சத்ருக்களை தர்மத்தையறிந்தவர்கள் கொல்லமாட்டார்கள். எவன் ப்ராணிகளிடத்தில் தயையில்லாமல் பிறரைக்கொன்று தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ளுகிறானோ அந்த துஷ்டனை சிக்ஷிப்பதே அவனுக்கு க்ஷேமமெனப்படும். தண்டிக்கப் படாதவரையில் பாபம் விலகாது; அதனால் நரகத்தையடைவான். மேலும் த்ரௌபதியின் முன்பாக உன் குழந்தைகளைக் கொன்றவருடைய தலையை உன்னிடம் சேர்ப்பிக்கிறேன்" என்று நான் கேட்டிருக்கும் போது உறுதி செய்திருக்கிறாய். இவன் தன்னுடைய யஜமானனாகிய துர்யோதனனுக்கு இஷ்டமில்லாத கார்யத்தைச் செய்தவன். குலத்திற்கு அபகீர்த்தியை யுண்டு பண்ணினவன்; மிகுந்த பாபீ, ஆததாயீ. உன்னுடைய புத்ரர்களை நரிசஞ்செய்தவன். ஆனதால் இவனைக் கொல்லவேண்டும் என்று (அர்ஜுனனுடைய புத்தியைப் பரிசோதிப்பதற்காகச்) சொன்னார்.

40–41. இம்மாதிரி கிருஷ்ணபகவானால் தூண்டப்பட்டும் மஹாத்மாவாகிய அர்ஜுனன் அச்வஸ்தாமா தமது பின்னைகளைக் கொன்றவரானாலும், குருபுத்ரராகையால் வதஞ் செய்ய இஷ்டப்படவில்லை. பின்பு மித்ரராகிய ஸ்ரீ கிருஷ்ணன் ஸாரத்யஞ் செய்ய அர்ஜுனன் தம்முடைய கூடாரஞ் சேர்ந்து புத்ரநாசத்தால் துக்கிக்கும் த்ரௌபதியை நோக்கி ஓ! த்ரௌபதி! உன்னுடைய புத்ரர்களைக் கொன்றவர் இதோ இருக்கிறார். உன்னிஷ்டப்படி இவருக்குச் சிக்ஷை செய்கிறேன் என்றான்.

42–48. யாகத்தில் கொல்லுவதற்காக யூபத்தில் கட்டப்பட்ட பசுபோல கயிற்றினால் கட்டப்பட்டவரும் கெட்டகார்யம் செய்ததால் தலைகுனிந்தவருமான குரு புத்ரரைக்கண்டு த்ரௌபதியானவள்; நல்ல ஸ்வாபமுள்ளவளாகையால் ஆசார்யருடைய புத்ரரென்று கௌரவத்தாலும், தைன்யமடைந்தவரென்ற தயையாலும் அவருக்கு நமஸ்காரஞ்செய்தாள். பின்னும் பதிவ்ரதையான த்ரௌபதியானவள், அவரைக்கட்டிக் கொண்டு வந்ததை ஸஹியாதவளாகி தன்னுடைய பர்த்தாவை நோக்கி "இவரை விட்டுவிடவேண்டும். இவர் ப்ராஹ்மணர்;தவிரவும் குருபுத்ரராகையால் ஆசார்யர். ரஹஸ்யமந்த்ரங்கள், உபஸம்ஹாரம், ப்ரயோகம் ஆகிய இவைகளுடன் எல்லா அஸ்த்ரங்களையும் இவருடைய பிதாவான த்ரோணரிடமிருந்து தாங்கள் அப்யஸித்தீர்கள். அவரே புத்ரரூபியாக இருக்கிறார். அதனால்தான் சூரனாகிய புத்ரனை அடைந்த கிருபியானவள் த்ரோணருடைய பாதிசரீரமாயிருந்தும் அவருடன் உடன்கட்டையேறவில்லை. தாங்கள் ஸகலதர்மங்களையும் அறிந்தவர்கள்; மிகுந்த பாக்யமுள்ளவர்கள்; ஆதலால் ஆசார்யருடைய

வம்சமானது, துக்கப்படும்படி தாங்கள் செய்வது உசிதமல்ல அது எப்பொழுதும் பூஜிக்கத்தக்கது; நமஸ்கரிக்கக்கூடியது; மேலும் இவரைக்கொன்று விட்டால் இவருடைய மாதாவும், பர்த்தாவையே தைவ மாகக் கொண்டவளுமான கிருபி என்பவள் புத்ர நாசத்தால் நான் வருத்தமடைகிறது போல துக்கப் படுவாளல்லவா? ப்ராஹ்மணவம்சத்திற்குக் கோப முண்டாகும். க்ஷத்ரியர்கள் செய்தார்களேயாகில், அந்த க்ஷத்ரிய வம்சம் பரிவாரங்களுடன் துக்கிக்கும்படி நேரும். ஆதலால் ப்ராஹ்மணகுலத்தால் நம்முடைய க்ஷத்ரிய குலம் எரிக்கப்படவேண்டாம்" என்று சொன்னாள்.

49–50. ஓ! ப்ராஹ்மணர்களே! தர்மத்திற்கொத்ததும், ந்யாய விரோதமில்லாததும், தயையுள்ளதும், கபட மற்றதும், ஸமபுத்தியுடன் சொல்லப்பட்டதும், மேன்மையுள்ளதுமான (பூஜிக்கக்கூடியது)த்ரௌபதியின் வார்த்தையைக் கேட்டு அருகிலிருந்த அரசனாகிய தர்மபுத்ரர், நகுலர், ஸஹதேவர், ஸாத்யகி, அர்ஜுனன், தேவகியின் புத்ரரான கிருஷ்ணபகவான், மற்றவர்கள், ஸ்த்ரீகள் ஆகிய எல்லோரும் அது உசிதமென்று ஒப்புக்கொண்டார்கள்.

51. அப்பொழுது பீமஸேனன் "இவரைக் கொல்வதே அவருக்கு க்ஷேமகரமான கார்யம், இவர் நித்ரை செய்து கொண்டிருக்கும் சிசுக்களை வீணாக வதஞ் செய்தார்; அதனால் இவருக்காவது, இவருடைய யஜமானனாகிய துர்யோதனனுக்காவது, யாதொரு ப்ரயோஜனமுமில்லை." என்று மிகுந்த கோபத்துடன் சொன்னான்.

52–58. மேல்காட்டிய இவர்களுடைய வார்த் தையைக் கேட்டு நான்கு கைகளுள்ள ஸ்ரீகிருஷ்ண பகவான், தம்முடைய மித்ரரத்னமாகிய அர்ஜுனனை நோக்கி "ஓ! அர்ஜுன! ப்ராஹ்மணனைக் கொல்லக் கூடாதென்ற சாஸ்த்ரத்தாலும், ஆததாயியை வதஞ் செய்யலாமென்றும் சாஸ்த்ரமிருப்பதால் அந்த சாஸ்த்ரம் என்னுடைய ஆக்ஞாரூபமாகையாலும் அப்படியே நீ செய்யவேண்டும். தவிரவும் த்ரௌபதியினிடம் உன்னால் செய்யப்பட்ட ப்ரதிக்ஞையையும், நிறை வேற்றவேண்டும்; பீமஸேனனுக்கும், த்ரௌபதிக்கும் எனக்கும் இஷ்டமானதைச் செய் என்று சிரித்துக் கொண்டு ஆக்ஞாபித்தார். இதனைக் கேட்டவுடனே பகவானுடைய அபிப்ராயமின்னதென்று, அர்ஜுனன் தெரிந்துகொண்டு, கத்தியினால் அந்த ப்ராஹ்மண ருடைய தலையிலிருக்கும் ரத்னத்தை மயிர்களுடன் எடுத்துப்பின்பு, கட்டை அவிழ்த்து அவ்விடமிருந்து துரத்தினான். அப்பொழுது அவருக்கு பாலஹத்யாதி தோஷத்தாலும் ஸஹஜமான ரத்னமில்லாததனாலும், தேஜஸ் குறைந்து விட்டது. க்ஷௌரஞ்செய்துவிடுதல், பணத்தை யபஹரித்துக்கொள்ளுதல், இருக்குமிடத்தை விட்டுத் துரத்திவிடுதல், ஆகிய இவைகள் வதத்திற்குச் சமமானவைகள். ப்ராஹ்மணதமர்கள் கொல்லக்கூடிய குற்றஞ்செய்தாலும், அவர்களுக்கு மேற்காட்டிய வதமே யொழிய, தேஹநாசஞ் செய்வது உசிதமல்ல. பின்பு பாண்டுபுத்ரர்கள், த்ரௌபதியுடன் புத்ரசோகமுள்ள வர்களாகி இறந்து போன தம்முடைய பந்துக்களுக்குச் செய்யவேண்டிய தஹனம் முதலிய உத்தர ஸம்ஸாரங்களைச் செய்து முடித்தார்கள்.

நோட்டு.

ப்ரஹ்மபத்னி"– ப்ரஹ்மாவையே தெய்வமாயுடையவள். அல்லது ப்ராஹ்மணர்களால் ஸேவிக்கப்பட்டது– ஸ்ரீத. சம்யா– யாகத்திற்கு உபயோகமான சம்யா என்னும் மரத்தின்கிளை விழுந்தவிடத்தில் ஏற்பட்ட ஆச்ரமம். மஹர்ஷிகளின் ஆஹாரத்திற்கு உபயோகமாகிய இலந்தைப் பழங்களுள்ளதென்பது தாத்பர்யம்.– விஜ. சோகம்–ஈச்வரன் எல்லாவற்றையும் அறிந்தவர். ஸர்வசக்தியுள்ளவர். அவருடைய மாயையால் நிஜரூபத்தை மறந்தவன் ஜீவன். அவனுக்கு பகவத்பக்தியால் ஞானமுண்டாகிறது. அதனால் மோஷத்தையடைகிறான். "ஆனந்தரூபமாகிய சித்சக்தியால் நிறைந்தவர் ஈச்வரன், அவித்யையால் தன்னுடைய உண்மையான ரூபத்தையறியாதவனும், ஸகல துக்கங்களுக்கு இருப்பிடமுமாயிருப்பவனே ஜீவன்," ஸ்வாமி மாயையானது எவருடைய வசத்திலிருக்கிறதோ. அவர் ஈச்வரனெனப்படுகிறார். எவன் அந்த மாயைக்கு வசப்பட்டு கஷ்டப்படுகிறானோ அவன் ஜீவன் என்று சொல்லப்படுகிறான்' ஸம்ஸாரத்திலுண்டான முவ்வகை தாபத்தாலுண்டானது சோகம், சரீரத்தை ஆத்மாவென்று நினைப்படதே மோஹம். நரகம் முதலியவைகளில் உண்டாவது பயம். அவைகளைப் போக்குவது பக்தியெனப்படுகிறது– சந்த். ஆசையில்லாத– நல்ல சிஷ்யனை ஸம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையில்லாதவர்– விஜ. க்ரந்தங்களை– "மோஹத்தால் கலங்கியிருக்கும் உன்னுடைய புத்தியானது எப்பொழுது தெளியுமோ? அப்பொழுது கேட்டது, கேட்கவேண்டியது இவைகளிலிருந்து நிர்வேதத்தையடைவாய்," பகவத்கீதை, பலனை– அனேக

ஜன்மங்களில் பரமாத்மாவை நேரில் பார்த்தவர்களும், முக்தியில் விசேஷ ஆனந்தமுள்ளவர்களுமான சுகர் முதலியவர்களுக்கு பாகவதத்தில் ஆசையுண்டாயிற்று என்பதில் என்ன ஆச்சர்யம்.– விஜ. ஆசையுள்ளவராகி– பகவானுடைய கல்யாணகுணங்கள் யாவும் அனுபவத்தாலேயே அறியக்கூடியவைகள் என்று வேதாந்த சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், ஸ்வாத்யாயத்தால் யோகத்தை அடையவேண்டும், யோகத்தால் ஸ்வாத்யாயமுள்ளவனாக ஆகிறான்' என்றபடி பகவானுடைய குணங்களை வர்ணிக்கும் க்ரந்தத்தை அப்யஸிப்பது அவச்யமேயாம். மேலும் பகவானுடைய அவதாரங்களும், அவைகளின் குணங்களும், பக்தர்களும், அவர்களுடைய குணங்களும், வேதாந்தத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. அவைகள் யாவும் இந்த பாகவதத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறதுமன்றி வேதாந்தத்தில் சொல்லியிருக்கும் குணங்களைவிட அதிகமாக பகவத்குணங்கள் நன்றாகக் காட்டப்பட்டிருக்கின்றன. வீர. அப்யஸித்தார்– பிறருக்குமுபதேசித்தார். விஜ. சிவபெருமானிடம்– பரமசிவன் ப்ரஹ்மதேவருடைய ஐந்தாவது தலையை வெட்டுகிறதற்காக வரும்போது அவர் ஓடினார். ஆர்கியென்று ஒருபாடமுண்டு. அதற்கு பரமசிவனுடைய மூன்றாவது கண்ணின் தேஜஸினால் எரிக்கப்பட்டு பயந்து சனீஸ்வரன் ஓடினார் என்று அர்த்தங்கொள்ளவேண்டும்.–விஜ.

முன்னொருக்கால் ப்ரஹ்மதேவர் தன்னால் ஸிருஷ்டிக்கப்பட்ட ஒரு அப்ஸர ஸ்த்ரீயினிடம் ஆசைப்பட்டு மான்வேஷங்கொண்டு ரமிக்க முயற்சித்தார். அப்பொழுது பரமசிவன் அவரைத்துரத்தினார். அர்க

யென்னும் ஒரு பாடமுண்டு. அதற்கு ஸூர்யன் ஓடியது போலவென்று அர்த்தம். அதாவது வித்யுன்மாலி யென்று ஒரு ராக்ஷஸனிருந்தான். அவனுடைய தபஸினால் பரமசிவன் ஸந்தோஷமடைந்து அவனுக்குத் தங்க விமானமொன்றைக் கொடுத்தார். அவன் அந்த விமானத்திலேறிக் கொண்டு ஸூர்யன் பின்னே போய்க்கொண்டிருந்தான். அப்பொழுது ராக்ஷஸனுடைய விமானத்தின் காந்தியானது, ஸூர்யதேஜஸை விட மேலானதாக விருந்தபடியால் அந்த விமானத்தை உருகிப்போகச்செய்தார். அதனால் பரமசிவன் கோபங் கொண்டு ஸூர்யனை துரத்த ஸூர்யன் பயந்து ஓடினார். அப்பொழுது பரமசிவனுடைய கடும் பார்வையால் ஸூர்யன் எரிக்கப்பட்டு காசியில் விழுந்தார். அவருக்கு இப்பொழுதும் லோலார்கனென்று (அலைந்த ஸூர்யன்) பெயர் வழங்கிவருகிறது. இது வாமனபுராணத்தில் விஸ்தாரமாய் சொல்லப்பட்டிருக் கிறது.– ஸ்ரீத. தக்ஷப்ரஜாபதியானவர் பரமசிவனுக்கு ஹவிர்பாகங்கொடாமல் யாகஞ்செய்ய அப்பொழுது பரமேச்வரன் வீரபத்ரராக அவதரிக்க அவரிடமிருந்து ஓடினார்– வீர. ஆர்கியென்றபாடத்தில்– ஸூர்யனு டைய பிள்ளையாகிய மிருத்யுவானவர் பரமசிவனைக் கண்டு ஓடினார்– சந்த். கிருஷ்ண–பூமியிலுள்ள ஸகல ஜனங்களுக்கும் ஸுகத்தை யுண்டுபண்ணுகிறவர்– ஸ்ரீத. மிகுந்த– மூலத்தில் மஹாபாஹு வென்றிருப்ப தால் க்ஷத்ரியர்களை யுண்டுபண்ணிய கைகளுள்ளவர் என்று காட்டப்பட்டது– வீர. நரகபாபத்தைச்செய்த மனிதர்கள் அதற்குத் தக்கபடி அதனால் சிக்ஷிக்கப் படுவார்களானால் அவர்கள் சுத்தர்களாகி புண்யசாலிகள் போல ஸ்வர்க்கத்தை யடைகிறார்கள்”–ஸ்மிருதி

ஆததாயி– அக்னிவைப்பவன், விஷங்கொடுப்பவன், ஆயுதம்பிடித்தவன், பணம், பூமி, பார்யை இவைகளை யபஹரிப்பவன் ஆகிய ஆறு பெயர்கள். மேல்காட்டிய ஆததாயியை ஆலோசிக்காமலேயே கொன்றுவிடலாம்– ஸ்ரீத. பாதிசரீரம்– “பத்னியென்பவள் பர்த்தாவினுடைய சரீரத்தின் பாதிபாகம்” –ச்ருதி.

♣♣♣♣

அத்யாயம்–8

பகவானைக் குந்தி ஸ்தோத்ரஞ் செய்தது.

பின்பு அந்த பாண்டவர்கள் யுத்தத்தில் இறந்து போன பந்துக்களுக்குத் தர்ப்பணம் (எள்ளுஞ்ஜலமும்) செய்வதற்காக ஸ்ரீ க்ருஷ்ண பகவானுடன் ஸ்த்ரீகளை முன்னிட்டுக்கொண்டு கங்கையின் கரை சேர்ந்தார்கள். மேலும் அவர்கள், அந்தக் கங்கா ஜலத்தில், ஸ்நானஞ் செய்து தர்ப்பணம் பண்ணி, பகவானுடைய பாதத்தி லிருந்து உண்டானதால் பரிசுத்தமாயிருக்கும் அந்தத் தீர்த்தத்தில் பின்னும் ஸ்நானஞ் செய்தார்கள்.

3–11. பிறகு அவ்விடத்தில் தம்முடைய தம்பி களுடன் உட்கார்ந்திருக்கும் தர்மபுத்ரரையும், த்ருதராஷ்டரரையும், புத்ரசோகமுள்ள காந்தாரியையும், குந்தியையும், த்ரௌபதியையும் நோக்கி ஸ்ரீ க்ருஷ்ண பகவானானவர், மஹர்ஷிகளுடன் "பந்துக்கள் மரண மடைந்தார்களென்று நீங்கள் துக்கப்படுவது நியாயமல்ல காலமஹிமையால் ப்ராணிகளுக்கு நேரிடும் நரகம் தடுக்கமுடியாதது என்று ஸமாதான வார்த்தைகளைச் சொல்லி, துர்யோதனனால் அபஹரிக்கப்பட்டிருந்த அஜாதசத்ருவின் (எவ்விடத்திலும் விரோத புத்தி யில்லாதவர்) ராஜ்யத்தை அவருக்கு வசப்படுத்தினார். மேலும் த்ரௌபதிதேவியின் தலைமயிரைப் பிடித்து இழுத்ததால் ஆயுஸ் குறைந்தவர்களான துச்சாஸனன் முதலியவர்களைக் கொல்வித்தார். மஹேந்த்ரனுடைய கீர்த்தியை உபேந்த்ரர் உலகத்தில் பரவச்செய்தது போல முக்ய கல்பங்களுள்ள மூன்று அச்வமேத யாகங்களைச் செய்வித்துப் பரிசுத்தமான அவருடைய

கீர்த்தியை விஸ்தாரப்படுத்தினார். பிறகு வ்யாஸ மஹா முனி முதலியவர்களைப் பூஜித்து அவர்களால் தாம் கொண்டாடப்பட்டு ஸாத்யகி, உத்தவர் முதலானவர் களுடன் பாண்டவர்களுக்குச் சொல்லிக்கொண்டு ரதத்தின் மீதேறி த்வாரகையை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது உத்தரையானவள் மிகவும் பயந்தவளாய் ஸ்ரீ க்ருஷ்ணனிடம் வந்து அவரை நோக்கி "மஹா யோகியே! தேவர்களுக்கும் தேவரே! ஸகல ஜகத்திற்கும் அதிபதியே! என்னைக் காப்பாற்றும். பயத்தை நிவர்த்திப்பவர் நீர் ஒருவரேயொழிய மற்றவைகளெல் லாம் ஒன்றுக்கொன்று பயத்தை யுண்டுபண்ணுகின்றன ஏ நாத! அக்னிபோல் கொதித்துக் கொண்டிருக்கும் எஃகுமுனையுள்ள பாணமானது எனக்கு எதிரில் வருகிறது. அதனால் என் சரீரம் எரிக்கப்பட்டாலும் எனக்கு ஸம்மதம், என் வயிற்றிலிருக்கும் சிசுவுக்கு மாத்ரம் கெடுதி நேரிடாமல் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக்கொண்டாள். பக்தர்களிடம் வாத்ஸல்ய முள்ள பகவான் அதனைக்கேட்டு 'இது பாண்டவர்களை நாசஞ்செய்வதற்காக அஸ்வஸ்தாமாவினால் ப்ரயோகிக்கப்பட்ட அஸ்த்ரம்' என்று நிச்சயித்தார்.

12–37. அப்பொழுது பாண்டவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு எதிரில்வரும் பாணங்களைப் பார்த்து அதனைத் தடுப்பதற்காக சிறந்த அஸ்த்ரங்களை எடுத்தார்கள். ஸ்ரீ பகவான் தம்மிடத்திலேயே மனத்தைச் செலுத்திய பக்த சிரோமணிகளான பாண்டவர்களுக்கு நேர்ந்த விஸனத்தைப் பார்த்து அந்த அஸ்த்ரம் வேறு அஸ்த்ரங்களால் தடுக்க முடியாததாகையால் தம்முடைய ஸுதர்சனமென்ற சக்ரத்தை ப்ரயோகித்து, அதனால் அவர்களை

ரக்ஷித்தார். மேலும் ஸகல ப்ராணிகளிடத்திலும் அந்தர்யாமியாயிருக்கும் யோகேசராகிய அந்த க்ருஷ்ண பரமாத்மாவானவர் விராடபுத்ரியான உத்தரையின் வயிற்றிலிருக்கும் கர்பத்தைத் தம்முடைய மாயையால் மறைத்தார். ஏ சௌனகரே! ப்ரஹ்மாஸ்த்ரமென்பது மற்றவைகளால் தடுக்க கூடியதல்ல. வீணாய்ப் போகாதது. ஆனாலும் விஷ்ணுவின் தேஜஸையடைந்து அடங்கினது. பகவான் மாயையால் ஸிருஷ்டி, பரிபாலனம், ஸம்ஹாரம் ஆகிய இவைகளைச் செய்கிறவராகையாலும், ஸகல ஆச்சர்யரூபியாயிருப்ப தாலும், அவரிடத்தில் மேற்சொல்லிய விஷயத்தை அத்புதமென்று நினைக்கவேண்டாம். இப்படிப் பாண்டவர்கள் பகவானுடைய ஒத்தாசையால் ப்ரஹ்மாஸ்த்ரத்திலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். அப்பொழுது பதிவ்ரதையான குந்திதேவியானவள் த்வாரகா நகரத்திற்கு ப்ரயாணமாயிருக்கும் க்ருஷ்ண பகவானை நோக்கி தன்னுடைய புத்ரர்களுடனும், த்ரௌபதியுடனும், பகவத் ஸ்வரூபத்தை அறியாத வளான நான் எல்லாவற்றிற்கும் முந்தியபுருஷனை நமஸ்கரிக்கிறேன். அவர் ஸகலத்திற்கும் ஈச்வரன். ப்ரகிருதி (மாயை)க்கு மேற்பட்டவர். ஸகலத்திற்கும் மேற்பட்டவர். ஸகலப்ராணிகளாலும் பார்க்கமுடியாத வர். ஆனால் ப்ராணிகளுடைய உள்ளிலும் வெளியிலும் இருப்பவர். மாயையாகிய திரையால் மறைக்கப்பட்டவர். இந்திரியங்களுக்குப் புலப்படாதவர். நாசமில்லாதவர். அந்தப் பரமபுருஷனாகிய நீர், வேஷதாரி(நடன்) போல தேஹாபிமானமுள்ளவர்களால் அறியப்படுகிறீரில்லை. சுத்தசித்தர்களும் மனனம்செய்யும் ஸ்வபாவமுள்ளவர் களுமான பரமஹம்ஸர்களும், உம்முடைய ஸ்வரூபத் தைத் தேடுகிறார்கள். அப்படியிருக்க, ஸ்திரீகளாகிய

நாங்கள் பக்தியோகத்தை யடைவதற்காக உம்மை எப்படி தர்சிப்போம்? க்ருஷ்ணன், வாஸுதேவர், தேவகீநந்தனர் (தேவகியின் புத்ரர்) கோவிந்தர் என்னும் திவ்ய நாமங்களுள்ளவரும், நந்தனென்ற கோபரு (யாதவர்)க்குப் புத்ரரும், தாமரைமலருடன் கூடிய நாபியுள்ளவரும், தாமரஸ புஷ்பமாலையுள்ளவரும், தாமரைமலர் போன்ற கண்கள், கால்கள் ஆகிய இவைகளுள்ளவருமான உமக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். ஏ! ப்ரபுவே! துஷ்டனாகிய கம்ஸனால் துன்பப்படுத்தப் பட்ட தேவகியை எப்படிக் காப்பாற்றினீரோ அப்படியே என்னையும் என்னுடைய புத்ரர்களையும் கூட்டங் கூட்டமாக ஆபத்துக்கள் வந்தாலும், அவைகளிலிருந்து ஸம்ரக்ஷிக்கிறீர் (தமக்கு மாதாவிடமிருக்கும் ப்ரீதியைக் காட்டிலும் என்னிடம் அதிக விச்வாஸமென்பது கருத்து) விஷம், அக்னி, ராக்ஷஸர்கள், அஸத்துக்களுடைய ஸபை, வனவாஸ கஷ்டம், ஒவ்வொரு யுத்தத்திலும் மஹாரதர்களாகிய பீஷ்மர் முதலியவர்களுடைய அஸ்த்ரங்கள், கடைசியாக அச்வத்ஸ்தாமாவின் ப்ரஹ்மாஸ்த்ரம் ஆகிய இவைகளிலிருந்து உம்மால் காப்பாற்றப்பட்டோம். மேலும் துர்யோதனனால் தூண்டப்பட்டு, எங்களை சபிப்பதற்காக வந்த துர்வாஸ மஹாமுனியை ஸகல ஜகத்துடன் திருப்தியடையச் செய்து அவரிடமிருந்தும் காப்பாற்றினீர். நீர் ஸகல ஜகத்திற்கும் குருவாயிருப்பவர், தங்களுடைய தர்சன மானது மோக்ஷத்தை கொடுக்கத்தக்கது, அப்போர்ப்பட்ட உம்முடைய தர்சனம் ஆபத்காலங்களில் கிடைப்பதால் அந்த விபத்து அடிக்கடி வந்தாலும் ஸம்மதம். மேலான குலத்தில் பிறந்திருப்பது, ஐச்வர்யம், சாஸ்த்ரங்களை படித்திருப்பது, அழகு ஆகிய இவைகளால் மிகுந்த கர்வமுள்ள புருஷன் உம்முடைய பெயரை உச்சரிக்க

மாட்டான். தரித்ரனாலேயே அந்த திவ்யநாமதேயம் இடைவிடாமல் சொல்லப்படும். (ஸம்பத் க்ஷேமத்திற்கு விரோதியென்று கருத்து) தங்களுக்கு பக்தர்களே பணம். முக்குணங்களின் வ்ருத்திகள் தங்களிடத்தில் ஸம்பந்தக்கிறதில்லை. நீர் ஆத்மாவிலேயே ரமிப்பவர்; சாந்தர்; மோக்ஷத்தைக்கொடுக்கும் ஸாமர்த்யமுள்ளவர்; இப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரஞ்செய்கிறேன். நீர் தேவகியின் புத்ரரானாலும், ப்ராகிருத சிசுக்கள் போன்றவரல்ல. உம்மைக் காலரென்றும், எல்லாவற்றிற் கும் ஈச்வரரென்றும்; ஆதியந்தமற்ற ப்ரபுவென்றும், எல்லாரிடத்திலும் ஸமமாக ஸஞ்சரிப்பவரென்றும் நான் நினைக்கிறேன். உமக்கு ஓரிடத்திலும் பக்ஷபாத மில்லை. ஜனங்கள் ஒருவருக்கு ஒருவர் சண்டை செய்வதற்கும் நீரே நிமித்தம்; வேறில்லை மேலும் சிலர் விரோதிகளென்றும். சிலர் மித்ரர்களென்றும் பேதபுத்தி உமக்கில்லை. நீர் மனுஷ்ய சரீரமெடுத்து அவர்கள்போல் அபினயஞ் செய்வதால் உம்மிடத்தில் பேதபுத்தி யிருப்பதாகத் தோன்றுகிறதேயொழிய உண்மையிலில்லை. (அனுக்ரஹத்தையாவது நிக்ரஹத் தையாவது செய்கிறதில்லை) தங்களுடைய அபிப்ராயம் ஒருவராலும் அறியமுடியாதது. ஜகத்ருபியாயிருக்கும் ப்ரபுவே! பிறப்பில்லாதவரும், ஒன்றையுஞ்செய்யாதவரும், பரமாத்மாவாக விருப்பவருமான நீர்,வராஹ(பன்றி) மாகியும், மத்ஸ்யமாகியும், வாமனராகியும் அவதரித்தீ ரென்பது பொருந்துமா? அது லோகத்தை அனுஸரித்ததேயொழிய உண்மையில் உமக்கு ஜன்மமில்லை. கோகுலத்தில் நந்தருடைய கிரஹத்தில், தயிர்பானையை உடைத்ததற்காக யசோதை, உம்மைக் கட்டுவதற்கு கயிற்றை எடுத்தாளல்லவா? அப்போது நீர் கண்களிலிருந்த மை கரையும்படி கண்ணீரைப்

பெருகிக் கொண்டு கலங்கிய கண்களுள்ளவராய்த் தலைகுனிந்து மிகவும் பயந்தவர் போல் அபினயஞ் செய்தீரல்லவா? அது எனக்கு மோஹத்தை யுண்டு பண்ணுகிறது. உண்மையில் ஜனனம், மரணம் முதலியவைகளும் உம்மிடமிருந்து பயப்படுகிறது. உம்முடைய சரிதம் ஜகத்திற்கு மோஹகரமாகையால் உம்முடைய ஜன்மங்களைப் பலவகையாய்ப் பெரியோர் கள் சொல்லுகிறார்கள். அதாவது "புண்ய ச்லோகராகிய யதுவின் கீர்த்தியை விருத்தி செய்வதற்காக அவருடைய வம்சத்தில், மலயபர்வதத்தை கௌரவப் படுத்துவதற்கு, அதில் சந்தனவிருக்ஷம் முளைத்தது போல் அவதரித்தீர்" என்று சிலர் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் "வஸுதேவர், தேவகி இவர்களால் ப்ரார்த்திக்கப்பட்டு உண்மையில் பிறப்பில்லாதவரானா லும், தேவ விரோதிகளை நாசஞ்செய்து இவ்வுலகத் திற்கு க்ஷேமத்தை யுண்டுபண்ணுவதற்காக தேவகியின் புத்ரராக அவதரித்தீர்" என்று கூறுகிறார்கள். மற்றுஞ் சிலர் "பூமியில் துஷ்டர்கள் அதிகமாயிருந்த படியால் மிகுந்த பாரத்தால் ஸமுத்ரத்தின் நடுவில் தத்தளிக்குங் கப்பல்போல் கஷ்டப்படும் பூமியின் பாரத்தை நிவர்த்திப்பதற்காக ப்ரஹ்மதேவருடைய வேண்டு கோளின்படி அவதரித்தீர்" என்று சொல்லுகிறார்கள் இன்னுஞ்சிலர் "ஆத்மாவின் ஆனந்த ஸ்வரூபத்தை யறியாமல் தேஹம் முதலியவைகளில் அபிமானம் வைத்துக் கர்மங்களைச் செய்துகொண்டு கஷ்டப்படும் ஜனங்களுக்கு மேற்காட்டிய துக்கத்தை நிவர்த்திக்க வேண்டி கேட்பதற்கும் ஸ்மரிப்பதற்கும் தகுதியான லீலைகளைச் செய்வதற்காக ஜன்மாவை அங்கீகரித்தீர்" என்கிறார்கள். எந்த ஜனங்கள் உம்முடைய சரிதத்தை பிறர்சொல்லக் கேட்கிறார்களோ, தம் வாக்கினால்

உச்சரித்து கானஞ்செய்கிறார்களோ, அடிக்கடி நினைக்கிறார்களோ, நினைத்து ஆனந்தப்படுகிறார்களோ, அவர்கள் பிறப்பு, இறப்பு ஆகிய இவைகளைப் போக்குகிற உம்முடைய பாதங்களை வெகு சீக்ரமாக அடைவார்கள்.

38–44. பக்தர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும் ப்ரபுவே! தங்களிடம் விசேஷ ப்ரியமுள்ளவர் களும், தங்களுக்கு வேலைக்காரர்களுமான எங்களை விட்டுப்போவது உசிதமல்ல துர்யோதனன் முதலிய அரசர்கள் நிமித்தமாக விசேஷ பாபங்கள் செய்த எங்களுக்கு உம்முடைய பாதாரவிந்தத்தைத் தவிர வேறு கதியில்லை. மேலும் இந்த்ரியங்களுக்கு அதிபதி யான ஜீவனில்லாத வரையில் எப்படி நாமரூபங்கள் பயன்படுகிறதில்லையோ அப்படி உம்முடைய ஸான்னித்யமில்லாத வரையில் யாதவர்களுடன் கூடிய பாண்டவர்களாகிய எங்களுடைய கீர்த்தியும், ஸம்பத்தும் பயன்படாதவைகளேயாம். மேலும், எங்களுடைய ராஜ்யத்திற்குட்பட்ட இந்த பூமியானது உம்முடைய பாதங்களிலுள்ள த்வஜரேகை, வஜ்ரரேகை, அங்குசரேகை முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு விளங்குகிறது. நீர் அப்புறம் போனால் இந்தப்பூமி பிரகாசிக்காது. உம்முடைய கடாக்ஷ வீக்ஷண்யத்தால் இந்த தேசத்தில் ஐச்வர்யம் விருத்தியடைகின்றன.செடி கொடி முதலியவைகள் நன்றாய் விருத்தியடைகின்றன. ஓ! ஜகத்பதியே! ஜகத்ரூபியாயிருப்பவரே! ஜகத்தில் அந்தர்யாமியாயிருப்பவரே! பந்துக்களான பாண்டவர் களிடத்திலும், விருஷ்ணிகளிடத்திலும் எனக்கிருக்கும் ஸ்நேஹ(அபிமான)மாகிய பந்தத்தை நிவர்த்தியும். ஓ! மதுரா நகரத்தரசனாகிய க்ருஷ்ணா! கங்கையின்

ப்ரவாஹமானது இடையில் நேரும் விக்னங்களை லக்ஷ்யஞ்செய்யாமல் ஸமுத்ரத்தையே யடைவதுபோல என்னுடைய மனஸும் வேறிடஞ்செல்லாது இடை விடாமல் உம்மையே பஜிக்கும்படி அனுக்ரஹிக்க வேண்டும். ஓ! க்ருஷ்ண! அர்ஜுனனுக்கு மித்ரரே! விருஷ்ணிகளுக்குட் சிறந்தவரே! பூமிக்குக் கெடுதி செய்யும் அரசர்களை நாசஞ் செய்பவரே! குறைவற்ற வீர்யமுள்ளவரே! ஏ கோவிந்த! (காமதேனுவின் ஐச்வர்யத்தை யடைந்தவர்) பசுக்கள், ப்ராஹ்மணர்கள், தேவர்கள் ஆகிய இவர்களின் உபத்ரவத்தை போக்கடிப் பவரே! யோகிகளுக்கு அதிபதியும், ஜகத்திற்கு குருவாயு மிருப்பவரே! பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன் என்று ஸ்தோத்ரம் பண்ணினாள்.

45–46. இந்தப்படி குந்திதேவியால் இனிமையான வாக்யங்களைக் கொண்டு ஸ்தோத்ரஞ் செய்யப்பட்ட பகவான் தம்முடைய ஸகல மஹிமைகளையும் வெளியிட்டு கொஞ்சம் சிரித்து, தமது மாயையால் அவளை ப்ரமிக்கச்செய்தார். பின்பு குந்தியின் ப்ரார்த் தனைப்படி "எப்பொழுதும் என்னிடத்திலுனக்கு ஸ்திரமாக பக்தி இருக்கட்டும்" என்று அனுக்ரஹித்து ஹஸ்தினாபுரஞ் சேர்ந்து அவ்விடத்தில் ஸுபத்ரை முதலிய ஸ்த்ரீகளுக்கு சொல்லிக்கொண்டு தமது பட்டணத்திற்குப் போக முயற்சித்தார். அப்பொழுது இவ்விடத்தில் தாங்கள் சிலகாலம் வஸிக்கவேண்டும் என்று தர்மபுத்ரர் அன்புடன் கேட்டுக்கொள்ள, பகவானும் அதை அங்கீகரித்து அவ்விடத்தில் வஸித்தார்.

47–53. பிறகு பகவானுடைய அபிப்ராயத்தை

அறியாத வ்யாஸமஹர்ஷி முதலியவர்களாலும், அத்புதகார்யங்களைச் செய்யும் க்ருஷ்ண பகவானாலும், பலவகையான இதிஹாஸங்களை கொண்டு தர்மபுத்ரர் ஸமாதானஞ் செய்யப்பட்டும் அதனால் அவருக்கு துக்கம் நீங்கவில்லை. ஓ ப்ராஹ்மணர்களே! தர்ம புத்ரர் யுத்தத்தில் இறந்துபோன பந்துக்களையே நினைத்து, அவிவேகமுள்ளவராய் அபிமானம், மோஹம் என்னும் இவைகளுக்கு வசப்பட்டு பின்வருமாறு சொல்லலானார். 'துராத்மாவாகிய என்னுடைய மனத்தில் ஸ்திரமாயிருக்கும் அறியாத்தன்மை மிகவும் ஆச்சர்யப்படத்தக்கது. நாய், நரி முதலியவைகளுக்குச் சொந்தமான இந்த சரீரத்திற்காக அனேக அக்ஷௌஹிணி ஸைன்யங்களைக் கொன்றேன். பாலர்கள், ப்ராஹ்மணர்கள், மித்ரர்கள், பிதிருவ்யர்கள், ஸஹோதரர்கள், குரு ஆகிய இவர்களுக்கு த்ரோஹஞ்செய்த நான், அனேகவர்ஷங்கள் பாபத்தின் பலனாகிய நரகத்தை அனுபவித்தாலும் ஒருபொழுதும் மோக்ஷத்தையடையப் போகிறதில்லை.யுத்தத்தில் சத்ருக்களைக் கொல்வது அரசர்களுக்கு தர்மமேயொழியப் பாபமில்லை' என்று சாஸ்த்ரத்தில் சொல்லியிருப்பது என் விஷயத்தில் பொருந்தாது. ஏனென்றால் 'அரசன் தன்னுடைய ப்ரஜைகளுக்கு, சத்ருக்களால் உபத்ரவம் நேரிடும்போது, அவர்களைக்கொல்வது ந்யாயம்' என்பது சாஸ்த்ரத்தி னுடைய தாத்பர்யம். துர்யோதனனால், ப்ரஜைகள் காப்பாற்றப்பட்டு ஸுகமாய் வஸிக்கும்போது ராஜ்யமடையவேண்டுமென்ற ஆசையால் மாத்ரம் நான் சண்டைசெய்து பந்துக்களைக் கொன்றேனாகையால், என் புத்திக்கு ஸமாதானமாகவில்லை இப்படிப் புருஷர்களைக்கொன்றதால் அவர்களுடைய பந்துக்களான ஸ்த்ரீகளுக்கும் நான் த்ரோஹஞ் செய்தவனாகிறேன்.

இந்தப் பாபம் க்ரஹஸ்தாச்ரமத்தில் செய்யக்கூடிய ஸத்கர்மங்களால் நிவர்த்தித்துக் கொள்ளமுடியாது. அநேக ப்ராணிகளை (அறியாத்தன்மையால்) கொன்ற தால் நேர்ந்த இந்த பாபத்தை புத்தி பூர்வமாகச் செய்யும் ஹிம்ஸையுள்ள யாகத்தால் நிவர்த்திசெய்து கொள்ளவும் முடியாது. 'கலங்கிய ஜலத்தால் கலங்கிய ஜலத்தை சுத்தப்படுத்த முடியுமா? மத்யத்தால் உண்டான அசுத்தியானது, மத்யத்தால் நிவர்த்தி யாகுமா?' என்று பலவாறாகத் துக்கித்தார்.

நோட்டு

பயத்தை–மிருத்யுவிற்கு வசப்பட்டிருக்கும் மனிதனால் மற்றொருவனை மிருத்யுவினிடமிருந்து காப்பாற்ற முடியாதென்று கருத்து– வீர. அறியாத– பீஷ்மர் மரணமடையப் போகிறார், அதற்காக எல்லோரும் கங்கையின் கரைக்குச் செல்லவேண்டும், அவ்விடத்தில் அவரிடமாக தர்மங்களைக் கேட்கச்செய்து அதனால் தர்மபுத்ரருடைய துக்கத்தைப் போக்கவேண்டுமென்பது பகவானுடைய அபிப்பிராயம்.– ஸ்ரீ த. அக்ஷௌஹிணி– ரதங்கள் 21870, யானைகள் 21801, குதிரைகள் 65610, காலாட்கள் 109350 யாகத்தால்– "எவன் அச்வமேதஞ் செய்து பகவானை பூஜிக்கிறானோ அவன் ப்ரஹ்மஹத் யை முதலிய பாபங்களிலிருந்து விடுபடுகிறான்" என்று ச்ருதியில் சொல்லப்பட்டிருந்தாலும் என்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–9

பீஷ்மர் தர்மம் உரைத்தது.

இப்படி தர்மபுத்ரர் "பந்துக்களுக்கு த்ரோஹஞ் செய்தோமே" என்று பயந்து ஸகல தர்மங்களையும் தெரிந்துகொள்ள விரும்பி பீஷ்மர் வஸிக்கும் குருக்ஷேத்ரம் சென்றார்.

ப்ராஹ்மணர்களே! அப்பொழுது அவருடைய தம்பிகளும், பகவானும், வ்யாஸரும், தௌம்யர் முதலானவர்களும், உத்தமமான குதிரைகள் பூட்டிய ரதங்களிலேறிக்கொண்டு அவர்பின் சென்றார்கள். மேலும் ஸ்ரீ க்ருஷ்ணபகவானும் அர்ஜுனருக்கு ஸாரத்யம் செய்துகொண்டு சென்றார். அவர்களுடைய நடுவில் அந்தத் தர்மபுத்ரர் குஹ்யகர்களால் சூழப்பட்ட குபேரன்போல ப்ரகாசித்தார்.

4–8. அவ்விடத்தில் ஸ்வர்க்கத்திலிருந்து விழுந்திருக்கும் தேவரைப்போல், பூமியில் கிடக்கும் பீஷ்மரைக்கண்டு, பாண்டவர்களும், அவர்களுடைய பரிவாரங்களும், ஸ்ரீ க்ருஷ்ணபகவானும், அவருக்கு நமஸ்காரஞ் செய்தார்கள். அந்த ஸமயத்தில் ஸகல ப்ரஹ்மர்ஷிகளும், சிறந்த தேவர்ஷிகளும், ராஜர்ஷிகளும், அந்தப்பீஷ்மரைப் பார்ப்பதற்காக வந்து கூடினார்கள். மேலும், பர்வதர், நாரதர், தௌம்யர், வ்யாஸபகவான், ப்ரஹதச்வர், பரத்வாஜர், அவருடைய சிஷ்யர்கள், ரேணுகையின் புத்ரராகிய பரசுராமர், வஸிஷ்டர், இந்த்ரப்ரமதர், ச்ருதர், கிருதஸ்மதர், அஸிதர், நக்ஷீவான், கௌதமர், அத்ரி, விச்வாமித்ரர்,

ஸுதர்சனர், காச்யபர், ப்ரஹஸ்பதி, சுகர் முதலிய நிர்மல ஸ்வபாவமுள்ள மற்றவர்களும் தங்கள் தங்கள் சிஷ்யர்களுடன் அவ்விடமே வந்துசேர்ந்தார்கள்.

9–24. தேசத்தையும் காலத்தையும், நன்றாக அறிந்த பீஷ்மர் வந்தவர்களைத் தனியே தெரிந்துகொண்டு மிக்க பாக்யசாலிகளான மஹர்ஷிகளைப் பூஜித்தார். மேலும் ஸமீபத்தில் உட்கார்ந்திருப்பவரும், ஜகதீசரும், மாயையால் சரீரமெடுத்தவருமான ஸ்ரீ க்ருஷ்ண பகவானைப் பார்த்து, அவருடைய மஹிமையை அறிந்தவராகையால், அவரை ஹிருதயத்தில் வைத்து அர்ச்சித்தார். பின்னும் அவர் மிகுந்த வணக்கத்தோடும் ப்ரேமையோடும், பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் பாண்டவர்களைப் பார்த்து அபிமானத்தால் கண்ணீரைப் பெருக்கி அதனால் கண் தெரியாதவராய்ப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினார். "ஏ தர்மபுத்ர! நீங்கள் ப்ராஹ்மணர்களையும் தர்மத்தையும், ஸ்ரீ க்ருஷ்ண பகவானையும் ஆச்ரயித்தவர்களாகவிருந்தும் கஷ்டப்பட்டு ஜீவிப்பது ந்யாயமல்ல இது வெறுக்கக் கூடிய கார்யம். உங்களுடைய பிதாவும் அதிரதருமாகிய பாண்டு மரணமடைந்த பிறகு உங்களுடைய மாதாவாகிய குந்திதேவி பால்யவயதுள்ள குழந்தைகளுடன் அடிக்கடி மிகுந்த கஷ்டத்தை அனுபவித்தாள். மேகங்கள் வாயுவுக்கு வசப்பட்டிருப்பதுபோல, ஜனங்கள் காலத்திற்கு வசப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் உங்களுக்கு நேர்ந்த கஷ்டங்கள் யாவும் அந்தக் காலத்தால் செய்யப்பட்டவைகளேயாம். எந்த பக்ஷத்தில் அரசனாகிய தர்மபுத்ரரும், கதாயுதத்தைக் கையில் பிடித்த பீமஸேனனும் காண்டீவமென்னும் வில்லையுடைய அர்ஜுனனும் இருக்கிறார்களோ, மேலும்

அவர்களுக்கு க்ருஷ்ணபகவான் மித்ரரோ அவ்விடத்திலும் ஆபத்துநேரிட்டதென்பது காலத்தின் மஹிமையேயாம்:

இதோ இருக்கும் க்ருஷ்ண பகவானுடைய எண்ணத்தைத் தெரிந்துகொள்ள ஒருவராலும் முடியாது. கவிகளும், யோகிகளும், இவருடைய ஸ்வரூபத்தை அறிய விரும்பியும், அதை அறியாமல் மோஹிக்கிறார்கள். ஏ! தர்மபுத்ரரே! மேற்சொல்லிய காரணத்தால் 'இவையாவும் ஈச்வரனுக்கு வசப்பட்டவை என்று நிச்சயித்து அந்த ஈச்வரனை அனுஸரித்து அனாதர்களான ப்ரஜைகளைக் காப்பாற்றும்; ஸிருஷ்டிக்கு முந்தியிருந்த புராண புருஷராகிய பகவான் இவர்தான். இவரே நாராயணன் ஆனாலும் தம்முடைய மாயையால் லோகத்தை ப்ரமிக்கச் செய்து கொண்டு (தன் ஸ்வரூபத்தைக் காட்டாமல்) விருஷ்ணிவம்சத்தில் ப்ரகாசிக்கிறார். இவருடைய மஹிமை மிகவும் ரஹஸ்யமானது; அதனைப் பகவானாகிய பரமசிவனும், தேவர்ஷியாகிய நாரதரும், கபிலருமே அறிவார்கள். நீங்கள் இவரை அம்மானுடைய பிள்ளை (அம்மான் சேய்) என்றும் உங்களுடைய இஷ்டப்படி நடப்பவரென்றும், பிரதி உபகாரத்தை எதிர்பாராமல் உபகாரஞ்செய்பவர் என்றும், நினைத்து அவரை மந்த்ரியாகவும், தூதராகவும், ஸாரதியாகவும், ஸ்நேஹவிசேஷத்தால் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அப்படி நினைப்பது அறியாத்தன்மையே. ஸகல ஜகத்ருபியும், ஸமமாயிருப்பவரும், ஒருவராய் விளங்குபவரும், அஹங்காரமில்லாதவரும், ஆசை முதலியவைகளில்லாதவருமான, இந்தப் பகவானுக்கு மேலான கார்யமென்றும், கீழான கார்யமென்றும், தகுதியுடையது

என்றும், வேறுபாடு தோன்றுகிற பேதபுத்தி ஒரிடத்திலும் உண்டாகிறதில்லை. ஆனாலும் இடைவிடாமல் பக்தி செய்பவர்களிடத்தில் இவருக்கு க்ருபை உண்டாகிறது. இப்போது நான் உயிரைவிடஸித்தனாயிருக்கையில், ஸ்ரீ க்ருஷ்ணபகவான் எனக்கு தர்சனங் கொடுப்பதற்காக நேரில் இவ்விடம் வந்திருக்கிறார். ஆகையால் இடைவிடாமல் பக்திசெய்பவர்களிடத்தில் பகவானுக்கு உண்டாகும் க்ருபையை பாருங்கள். மனிதனானவன் தன்னுடைய மனதை பகவானிடத்தில் பக்தியுடன் செலுத்தியும் அவருடைய பெயரையே வாக்கினால் உச்சரித்துக்கொண்டும் சரீரத்தைவிடுவானாகில் அவன் காமங்களாலும் கர்மங்களாலும் பாதிக்கப்படமாட்டான் ஆகையால் தேவர்களுக்கும் தேவரும், சிரிப்பினாலும், சிவந்தகண்களாலும், அழகான முகமுள்ளவரும், த்யானத்திற்கு விஷயமானவரும், நான்கு கைகளுள்ளவருமான பகவான் நானிந்த சரீரத்தை விடுகிறவரையில் என் முன்பு இருக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

25. இதனைக்கேட்டு தர்மபுத்ரர் சரதல்ப (ப்ராணப் படுக்கை)த்தில் படுந்துக் கொண்டிருக்கும் பீஷ்மரை நோக்கி மற்ற மஹர்ஷிகள் கேட்டுக்கொண்டிருக்கும் போது பலவகையான தர்மங்களைச் சொல்லவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

26–28. ஸகல தர்மங்களையு மறிந்தவராகிய பீஷ்மர் மனுஷ்ய ஜாதிக்குப் பொதுவானவைகளும், வர்ணாச்ரமங்களுக்கு உரியவைகளும், வைராக்ய ஸம்பந்தத்தால் ஏற்படும் நிவிருத்தி ரூபமாயும் ஆசையின் ஸம்பந்தத்தால் ஏற்படும் ப்ரவிருத்தி ரூபமாயுமுள்ள

தர்மங்களையும், ராஜதர்மங்கள், தானதர்மங்கள், மோக்ஷதர்மங்கள், ஸ்த்ரீதர்மங்கள், பகவத்தர்மங்கள், ஆகிய இவைகளையும், தனித்தனியாகப் பிரித்துச் சுருக்கமாகவும், விஸ்தாரமாகவும் சொன்னார். மேலும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்களையும், அவைகளை அடைவதற்கு தகுந்த உபாயங்களையும், அனேக இதிஹாஸங்களிலும், உபாக்யானங்களிலும் சொல்லியபடி வர்ணித்தார்.

29–31. இப்படி தர்மங்களை யுபதேசித்துக் கொண்டிருக்கும்போது உத்தராயணம் வந்தது. இஷ்டப்படி மரணமடையச் சக்தியுள்ள யோகியாகிய பீஷ்மரால் தமது மரணத்திற்காக எதிர்பார்க்கப்பட்டிருந்த காலம் இதுவேயாம். அப்பொழுது ஆயிரம் ரதிகர்களைக் காப்பாற்றும் வல்லமையுள்ள பீஷ்மர் மௌனமாக (வார்த்தைகளை அடக்கிக்கொண்டு) ஆதிபுருஷரும், பீதாம்பரத்தை ,தரித்தவரும், நான்கு கைகளுள்ளவரும் எதிரில் உட்கார்ந்திருப்பவருமாகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் ஸகல ஆசைகளையும் ஒழித்து சுத்தமாக விருக்கும் மனத்தை கண்களை மூடிக் கொள்ளாமலேயே செலுத்தினார். மேலும் அவருக்கு இம்மாதிரி பரிசுத்தமாகிய த்யானவிசேஷத்தால் அசுபங்கள் விலகின. பகவானுடைய கருணைநிறைந்த பார்வையால் ஆயுதங்களாலுண்டாகிய காயங்களும் அவற்றின் உபத்திரவமும் நீங்கின. சகல இந்திரியங்களும் பலவிடங்களில் செல்லாமல் ஒருவழிப்பட்டன. பின்னும் ஸாத்வதர்களுக்குட் சிறந்தவரும், ஒப்பற்ற மஹிமையுள்ளவரும் தம்முடைய ஸ்வரூபமான பரமானந்தத்தை யடைந்தவரும், ஸிருஷ்டிக்குக் காரணமாகிய ப்ரகிருதியின் ஸம்பந்தத்தை சிலகாலம் லீலையாக அங்கீகரிப்பவருமான பகவானிடத்தில்

ஒருவித ஆசையுமில்லாத தமது புத்தியைச் செலுத்தினார். இப்படி எல்லாவகையிலும் பகவத் பரராயிருந்து சரீரத்தை விடுகிறவரையில் ஸ்ரீ கிருஷ்ணனை பின்வருமாறு ஸ்தோத்ரஞ் செய்யலானார்.

32–35. "மூவ்வுலகத்திலும் மிகுந்த அழகுள்ளதும், பச்சிலை போல் நீலவர்ணமுள்ளதுமான திவ்யசரீரத்தை யடைந்தவரும், ஸூர்ய கிரணம்போல் பொன்னிறமான வஸ்த்ரத்தை தரித்தவரும், நான்குபுறத்திலும் தொங்கும் சிறந்த தலைமயிர்களால் அழகான முகமுள்ளவரும். அர்ஜுனனுக்கு தோழருமான பகவானிடத்தில் பலனையுத்தேசியாமல் எனக்கு ஸ்திரமான பக்தியுண்டாகட்டும். மேலும் யுத்தத்தில் அர்ஜுனனுக்கு ஸாரத்யஞ் செய்யும்போது குதிரைகள் ஓடியதால் பூமியிலிருந்து கிளம்பிய தூளிகள் எவருடைய தலைமயிரில் படிந்தனவோ, எவருடைய முகம் அப்படிப்பட்ட மயிர்களோடு கூடிய வேர்வை ஜலத்துளிகளால் அலங்கரிக்கப்பட்டதோ, எவருடைய கவசம் என்னுடைய பாணங்களால் மூடப்பட்டு ப்ரகாசித்ததோ, அந்த கிருஷ்ண பகவானிடத்தில் என்னுடைய மனஸானது ரமிக்கட்டும்; பின்னும் எந்த பகவான் தம்முடைய ஸ்நேஹிதனாகிய அர்ஜுனனுடைய வார்த்தையின்படி இரண்டு பக்கத்து ஸைன்யங்களுடைய நடுவில் ரதத்தைச்செலுத்தி சத்ரு ஸைன்னியத்திலிருப்பவர்களனைவரையும் 'இவர் த்ரோணர், இவர் பீஷ்மர், இவர் க்ருபர்' என்று சுட்டிக்காட்டிப் பார்வையாலேயே அவர்களுடைய ஆயுஸைக்குறைத்து, அதனால் அர்ஜுனனுக்கு ஜயத்தை யுண்டுபண்ணினாரோ. அந்த கிருஷ்ணனிடத்திலேயே என் மனம் ஸந்தோஷமடையட்டும்.

36–42. அர்ஜுனன் சத்ரு ஸைன்யத்தில் யுத்தத் திற்கு ஸன்னத்தனாயிருந்த, நான் முதலிய் பந்துக்களைப் பார்த்து இவர்களைக் கொல்வதால் பாபம் நேரிடுமென்ற எண்ணத்துடன் யுத்தஞ்செய்வதில் ஆசையில்லாதவனாக விருக்கும்போது, அவனுக்கு ஆத்மவித்யை யுபதேசித்து, அந்த எண்ணத்தை எவர் மாற்றினாரோ, அந்த பரமபுருஷனுடைய பாகங் களையே என் மனஸ்த்யானிக்கட்டும்; மேலும் ஸ்ரீ கிருஷ்ணன் ஆயுதமெடுக்காமல் யுத்தத்தில் ஒத்தாசை செய்வதாகப் பாண்டவர்களுக்கு ப்ரதிஜ்ஞை செய்தவரானாலும், ஸ்ரீ கிருஷ்ணனை ஆயுதமெடுக்கச் செய்கிறேன் என்று என்னால் செய்யப்பட்ட ப்ரதிஜ் ஞையை நிறைவேற்றுவதற்காக, அர்ஜுனனுடைய ரதத்தைவிட்டுக் கீழே இறங்கி சக்ராயுதத்தை எடுத்துக் கொண்டு யானையைக்கொல்வதற்கு சிங்கம்வந்தாற் போல பூமி அசையும்படியாகவும். மேல்வஸ்த்ரந்தவறி விழும்படியாகவும் வெகு வேகமாயோடி வந்தார். அப்பொழுது நான் சிரித்துக்கொண்டு அவரை பாணங்களாலடித்தேன். அதனால் அவருடைய கவசம் உடைந்தது; சரீரமுழுவதும் ரக்தத்தால் நனைந்தது. அப்பொழுது அர்ஜுனனால் தடுக்கப்பட்டும் அவனை மீறிக்கொண்டு என்னைக் கொல்வதற்காக ஓடிவந்தார். அந்தப் பகவானாகிய முகுந்தரே எனக்குக் கதி. பின்னும் அவர் ஒரு வகையில் குதிரையோட்டுங் கோலையும். மற்றொருகையில் குதிரைகளின் கடிவாளங்களையும் பிடித்து ஸாரதி வேஷம்பூண்டு, அனேக அகார்யங்களைச் செய்தாவது அர்ஜுனனுடைய ரதத்தைக் காப்பாற்றிக்கொண்டிருந்தார். இந்த பகவானைத் தர்சித்ததால் சண்டையில் அடிபட்டு

மரணமடைந்தவர்களனைவரும் பகவத் ஸாரூப்யத்தை அடைந்தார்கள். ஆகையால் மரணமடையும் தசை யிலிருக்கும் என்னுடைய சித்தம் இந்தப் பரம புருஷனிடத்தில் கலந்திருக்கட்டும். மேலும் அழகான நடை, லீலை, சிரிப்பு, ஸ்நேஹமான பார்வை இவை களால் கௌரவப்படுத்தப்பட்டவர்களும், பகவானிடத் திலேயே ஸதா மனதைச் செலுத்தி அவரால் செய்யப்பட்ட லீலைகளை அனுஸரிப்பவர்களுமான கோபஸ்த்ரீகள் வேறு விஷயத்தில் சித்தமில்லாதவர்களாக பகவத் ஸ்வரூபமாகிய பரமானந்த ரூபத்தை யடைந்தார்கள். ஆனதுபற்றி அவரிடமே என்னுடைய சித்தம் வஸிக்கவேண்டும். தவிரவும் தர்மபுத்ரர் ராஜஸூய யாகஞ் செய்தபோது, அநேக முனிவர்களாலும், அரசர்களாலும் நிறைந்த யாகசஸையின்நடுவில் இந்த கிருஷ்ணபகவான் எல்லாராலும் பார்க்கக்கூடிய அத்புத சரீரமுள்ளவராய்ப் ப்ரகாசித்ததுமல்லாமல் எல்லாருக்கும் முந்தி பூஜிக்கப்பட்டார். அந்த புருஷோத்தமனாகிய இவர் என்னுடைய கண்களுக் கெதிரில் ப்ராகாசிக்கிறார். எனக்கு மிகுந்த பாக்யம் கிடைத்தது. இது மிகுந்த ஆச்சர்யம். காற்றானது மூங்கிலை எரிப்பதற்கு அக்னியை யுண்டு பண்ணுவது போல எந்தப்பகவான் பூமியின் பாரத்தைத் துலைப் பதற்காக கௌரவர்களுக்கு இந்த்ரிய சாபல்யத்தை யுண்டுபண்ணினாரோ, பக்தர்களுடைய உபத்ரவத்தை நிவர்த்திக்கும் பாதங்களை யுடையவரும், எதிரிலிருப் பவருமான பகவானை ஹிருதயத்தில் வைத்துக் கொண்டு இந்த மனித சரீரத்தை விட்டுவிடுகிறேன்.

43. ஸூர்யன் ஒருவனானாலும் பார்ப்பவர்களுடைய கண்களின் தோஷத்தால் பலவகையாகத் தோன்றுகிறது

போல பகவான் ஒருவரானாலும், தன்னால் ஸிருஷ்டிக்கப் பட்ட ஒவ்வொரு ப்ராணிகளின் ஹிருதயத்திலும் வெவ்வேறாகத் தோற்றுகிறார். இதற்கு அவித்யையே காரணம் (அதிஷ்டான பேதத்தால் பேதமேயொழிய உண்மையில் பேதமில்லை என்பது கருத்து) என்று தெரிந்துகொண்டேன். பேதபுத்தியும், மோஹமும் நாசமாயின. ஆதியந்தமில்லாத ஆத்ம ஸ்வரூபத்தை அவருடைய கிருபையால் நன்றாய் தெரிந்து கொண்டேன். தன்யனாகிவிட்டேன் என்றார்

44–48. இப்படிச்சொல்லிவிட்டு மனோவ்யாபாரம், வாக்வாயாபாரம், கண்களின் வ்யாபாரம் ஆகிய இவைகளை கிருஷ்ணனிடத்தில் செலுத்தி ச்வாஸத்தை அடக்கி பரமாத்மாவிடம் லயித்தார். அப்பொழுது அவ்விடமிருந்து எல்லோரும் பீஷ்மரானவர் உபாதி ஸம்பந்தமில்லாத பரப்ரஹ்மமாக ஆனதைக்கண்டு ஸாயங்காலத்துப் பறவைகள்போல் மௌனமாய் இருந்தார்கள். அப்பொழுது தேவர்களும், மனிதர்களும் துந்துபி வாத்யங்களை முழக்கினார்கள். அங்கிருந்த அரசர்களுக்குள் ப்ரஹ்மிஷ்டர்கள் ச்லாகித்தார்கள். ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி பெய்தது. பரமாத்ம ஸ்வரூபத்தையடைந்த அந்த பீஷ்மருக்கு உத்ரக்ரியை களை தர்மபுத்ரர்செய்து ஸ்வல்பகாலம் துக்கித்தார் அப்பொழுது மஹர்ஷிகள் மிகுந்த ஸந்தோஷத்துடன் பகவானுடைய ரஹஸ்யமாகிய பெயர்களைச்சொல்லி கிருஷ்ணனை ஸ்தோத்ரம்பண்ணி அவரையே த்யானஞ் செய்துகொண்டு தங்களுடைய ஆச்ரமஞ் சென்றார்கள்.

49–50. பிறகு தர்மபுத்ரர் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடன் ஹஸ்தினா பட்டணம் போய் புத்ரசோகத்தால் துக்கிக்கும் காந்தாரியையும்

த்ருதராஷ்ட்ரராலும், ஸ்ரீ வாஸு தேவராகிய பகவானாலும் அனுமோதிக்கப்பட்டு வம்சபரம் பரையாய் கிடைத்த ராஜ்யத்தை தர்மமாகப் பரிபாலித்தார்.

நோட்டு

தேசத்தை– தான் பாணங்களின் மீது படுத்திருப்பதனால் எதிர்கொண்டழைப்பதற்கும், நமஸ்கரிப்பதற்கும் இது ஸமயமல்லவென்று மனத்தால் பகவானை பூஜித்தார். மித்ரரோ– ஸ்ரீ கிருஷ்ணன் பாண்டவர்களுக்கு மித்ரராயிருந்து காலத்தையே அனுஸரித்திருந்தார் என்று காட்டப்பட்டிருக்கிறது. "த்ரவ்யம், கர்மம், காலம், ஸ்வபாவம், ஜீவனம் ஆகிய இவைகள் பகவானுடைய அனுக்ரஹத்தால் கிடைக்கின்றன. அவருடைய அனுக்ரஹமில்லாதவரையில் மேற்சொல்லியவைகள் மனிதனுக்குக் கிடைக்கலாம்"– வீர. முந்தியிருந்த– ஜகத் ஸிருஷ்டிக்குமுன் ஸத்தாகவே இருந்தது. நாராயணன் ஒருவரே இருந்தார்"– ச்ருதி. பகவான்– பகவான் புருஷன் என்ற சப்தங்கள் சாச்வதராகிய வாஸுதேவரையே குறிக்கின்றன" "ஓ! மைத்ரேய! பகவான் என்ற சப்தமானது பரப்ரஹ்ம மாகிய வாஸுதேவரைச் சொல்லுகிறதேயொழிய மற்றவைகளைச் சொல்லுகிறதில்லை" ஸ்ரீத– ஒருருவாய்– இந்த ஜகத்தில் பரமாத்மாவைக் காட்டிலும் வெவ்வேறான வஸ்துக்களில்லை. அனேக வஸ்துக்களி ருப்பதாகப் பார்ப்பவன் ஸம்ஸாரத்தை யடைகிறான்" எப்பொழுது இவனுக்கு எல்லாம் ஆத்மஸ்வரூபமாகத் தோற்றுகிறதோ அப்பொழுது எதைக் கொண்டு எதைப் பார்க்கப்போகிறான்– நான்கு கை– பீஷ்மருக்கு

நான்கு கைகளுள்ளதாக பகவத் ஸ்வரூபம் ப்ரகாசித்தது. வீர– ஒப்பற்ற மஹிமை– எந்த நிலமையில் வேறுவிஷயத்தைப் பார்க்கமாட்டானோ வேறு விஷயத்தைக் கேட்கிறதில்லையோ அதுவே பூமா எனப்படும்" "மேலும் கீழும் முன்னும் பின்னும் இருபக்கங்களிலும் அவரே இருக்கிறார். காணப்படும் ஜகத் முழுமையும் அவரே" என்ற ச்ருதிகளில் சொல்லிய அனுப்ரவேசஞ் செய்தார். ஒருவராகவிருக்கும் பரமாத்மாவை பலவகையாக நினைக்கிறார்கள்"– ச்ருதி. லயித்தார்– பீஷ்மர் ப்ரஹ்மத்தினிடம் பேதமில்லாமல் கலந்து விட்டாரென்று அர்த்தங் கொள்ளக்கூடாது. "அப்பொழுது ஸத்துடன் சேருகிறான்" என்று ச்ருதியில் சொல்லியபடி ஸம்பந்தித்தார் என்றே அர்த்தம். மேற்காட்டிய ச்ருதியிலும் அபேதமாகக் கலக்கிறான் என்றே சொல்லப்பட்டிருப்பதாய் அர்த்தங்கொள்வோமானால் ஸுஷுப்தியில் பரமாத்மாவிடம் கலந்து ஒன்றாக ஆன ஜீவன் மறுபடி பிரிய ந்யாயமில்லை. மேலும்– அந்தக்கரணரூபமாகிய உபாதி நாசத்தால் அபேதத்தை யடைந்த ஜீவன் விழித்துக்கொள்ளும்போது மேற் காட்டிய உபாதி ஸம்பந்தத்தையடைந்து பரமாத்மா வினிடமிருந்து பிரிகிறான் என்று சொல்லுவதும் பொருந்தாது. மனது ப்ராணனாகிய ப்ரஹ்மத்தினிடம் பறவைபோலக் கட்டுப்பட்டிருப்பதாகச் சுருதியில் சொல்லியிருப்பதால் லயிக்கிறதில்லை– சந்த்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–10

ஸ்ரீ க்ருஷ்ணன் த்வாரகை சென்றது.

இதனைக்கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஓ! ஸூதரே! தர்மசிந்தனையுள்ளவர்களுக்குள் சிறந்த வராகிய தர்மபுத்ரர் ராஜ்யத்தில் ஆசைப்பட்டு யுத்தத்திற்கு வந்தவர்களான துர்யோதனன் முதலிய வர்களைக் கொன்று, தம்முடைய தம்பிகளுடன் ராஜ்யத்தை அடைந்து, மிகுந்த போகங்களை யனுபவித்து ராஜ்யத்தை எப்படி பரிபாலித்தார்? பிறகு எதனைச் செய்தார்? அதைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

2–3. அதைக்கேட்ட ஸூதர் சொல்லத் தொடங்கினார். குரு வம்சமாகிய வனமானது அதிலிருந்து உண்டான கோபமாகிய அக்னியால் எரிக்கப்பட்டபோது, ஸம்ஸார்த்தை விருத்தி செய்பவ ராகிய பகவான் அதை மறுபடியும் முளைக்கச்செய்து (பரீக்ஷித்தைக் காப்பாற்றி) தர்மபுத்ரருக்கு ராஜ்யத்தைக் கொடுத்து மிகுந்த ஆனந்தத்தை யடைந்தார். பின்பு, பீஷ்மருடைய வார்த்தைகளைக் கேட்டதாலும், ஸ்ரீ க்ருஷ்ணனுடைய உபதேசத்தாலும், தர்மபுத்ரருக்கு 'நான் செய்கிறவன்' 'பலனை யனுபவிக்கிறவன்' என்ற மோஹம் நீங்கியது 'ஜகத்தானது பரமேச்வராதீனமே யொழிய ஸ்வதந்த்ரமுள்ளதன்று என்று ஞானமுண்டா யிற்று. அப்படிப்பட்ட தர்மபுத்ரர் நாசமற்றவரான பகவானை மஹேந்த்ரன்போல ஆச்ரயித்து, ஸமுத்ரத் திற்குட்பட்ட பூமியைத் தம்முடைய தம்பிகளுடன் பரிபாலித்தார்.

4–6. ஒருவரிடத்திலும் விரோத புத்தியில்லாத வராகிய தர்மராஜன் அரசு புரிந்து வரும் நாளில் காலத்தில் மழைபெய்தது; பூமியானது ஜனங்களுக்கு வேண்டிய வஸ்துக்களை யுண்டுபண்ணிற்று; பெரிய மடியுள்ள பசுக்கள் பாலால் கொட்டில் முழுவதையும் நனைத்தன. ஆறுகள் பூரணப்ரவாஹ முள்ளவைகளாகி, வயல்களுக்கு ஜலத்தைக்கொடுத்துப் பயிர்களை விருத்திசெய்து வந்தன. ஸமுத்ரம் முத்து முதலிய ரத்னங்களை விசேஷமாக உண்டுபண்ணிற்று. மலைகள் மனோசிலை முதலிய தாதுக்களை விருத்திசெய்தன. எல்லா ருதுக்களிலும் கொடிகள், மரங்கள் ஆகிய இவைகள் பழங்களாலும், புஷ்பங்களாலும் நிறைந் திருந்தன. நெல், பயறு, கடலை, கோதுமை முதலிய தான்யங்களை அவ்வவற்றின் பயிர்கள் விருத்திசெய்தன. மேலும் மனோவ்யாதி, சரீரவ்யாதி, குளிர்ச்சி, உஷ்ணம் இவைகளால் நேரிடும் உபத்ரவம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம், ஆத்யாத்மிகம் ஆகிய முவ்வகை தாபங் களும் ஜனங்களுக்கு ஒருபோதும் நேரிடவேயில்லை.

7–18. அப்பொழுது ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தியானவர், ஹஸ்தினா பட்டணத்தில் சில மாஸங்கள் வஸித்துத் தம்முடைய மித்ரர்களின் துக்கத்தை நிவர்த்தித்து, ஸஹோதரியான ஸுபத்ராதேவிக்கு அதிக ப்ரியத்தை யுண்டுபண்ணி, பின்பு தர்மபுத்ரரைத் தழுவி நமஸ்கரித்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு ரதத்திலேறினார். அப்பொழுது சிலர் பகவானை ஆலிங்கனம் செய்ய நமஸ்கரித்தார்கள். இப்படி பகவான் த்வாரகைக்குப் போக, முயற்சித்ததைப் பார்த்து, ஸுபத்ரை, த்ரௌபதி, குந்தி, உத்தரை, விதுரர், தர்மபுத்ரர், த்ருதராஷ்ட்ரர், யுயுதஸு

(த்ருதராஷ்டருக்கு வைச்யஸ்த்ரியினிடம் பிறந்தவர்) கிருபர், நகுல, ஸஹதேவர்கள், பீமஸேனர், தௌம்யர் முதலாகிய எல்லோரும் பகவானைவிட்டுப் பிரிந்திருப் பதை ஸஹியாமல், வருத்தப்பட்டார்கள். மனோஹர மாகிய பகவானுடைய கதையை ஒருதடவை கேட்டதினாலேயே, நல்ல ஞானமுண்டாகிறது; சரீரம் முதலியவைகளில் அபிமானம் விலகுகிறது; ஆகையால் வித்வான்கள், அதனையொருபொழுதும் விட மாட்டார்கள். அப்படியிருக்க அவரை எப்பொழுதும் பார்ப்பது, ஆலிங்கனம் செய்துகொள்வது, பேசுவது, சேர்ந்துபடுத்துக்கொள்வது, ஒரே இடத்தில் உட்காருவது, சேர்ந்து புஜிப்பது, ஆகிய இவைகளால் அந்த பகவானிடத்திலேயே புத்தியைச் செலுத்திய பாண்டவர்களால் அவரைவிட்டுப் பிரிந்திருக்க முடியுமா? ஆகையால் அவர்களெல்லாரும் கண் கொட்டாமலேயே அவரைப் பார்த்துக்கொண்டு, விசேஷ ஸ்நேஹமுள்ளவர்களாய் அந்த அந்த இடங்களில் நின்றார்கள். அவர்களுடைய மனஸானது, அவர்பின் சென்றது. அப்பொழுது ஸ்ரீ க்ருஷ்ணபகவான் அரண்மனையிலிருந்து வெளியில் வரும்போது, அவர்மீதிருந்த ப்ரியத்தால், ஸுபத்ரை முதலிய ஸ்த்ரீகள், 'கண்ணீரைப்பெருக்குவது அமங்கலம்' என்று நினைத்து, அடக்கிக் கொண்டார்கள். மேலும் அப்பொழுது, மிருதங்கம், சங்கம், பேரி, வீணை, பணவம், கோமுகம், சர்சரீ, ஆனகம், கண்டா, துந்துபி ஆகிய பத்துவகை வாத்யங்களும் முழங்கின. கௌரவ ஸ்த்ரீகள் அனைவரும் ப்ரேமை, வெட்கம், சிரிப்பு இவைகளுடன், மேல்மாடியிலிருந்து பகவானைத் தர்சித்து, அவர்மீது புஷ்பங்களை வர்ஷித்தார்கள். ஸ்ரீ பகவானிடத்தில் மிகுந்த ப்ரீதியுள்ளவரும், சுருட்டை

மயிருள்ளவருமாகிய அர்ஜுனர், தம்மிடத்தில் மிக்க விச்வாஸமுள்ளவராகிய ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவிற்கு, ரத்னகாம்புள்ளதும், முத்துமாலைகளால் அலங்கரிக்கப் பட்டதுமான வெள்ளைக்குடையைப் பிடித்தார். உத்தவரும், ஸாத்யகியும் மிக அத்புதங்களான சாமரங்களையெடுத்து விசிறினார்கள். இப்படி பகவான், புஷ்பம் முதலியவைகளால் வீதியில் பூஜிக்கப்பட்டு ப்ரகாசித்தார்.

19—30. அப்பொழுது ப்ராஹ்மணர்கள் மனுஷ்யாவதாரமெடுத்த பகவானுக்குத் தகுதியானவைகளும், சுத்த ஸ்வரூபத்திற்குத் தகாதவைகளுமான ஆசீர்வாதங்களைச் செய்தார்கள். உத்தமச்லோகராகிய ஸ்ரீ க்ருஷ்ணனிடத்திலேயே மனத்தைச் செலுத்தினவர்களான பட்டணத்திலிருக்கும் ஸ்த்ரீகள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளும் வார்த்தைகள் எல்லோருக்கும் த்ருப்திகரமானவைகளாகவும், ஸகல உபநிஷத்துகளுக்கு ஸம்மதமானவைகளுமாயிருந்தன. எப்படியென்றால் க்ருஷ்ணனுடைய தேஜஸ்ஸைப் பார்த்து ஆச்சர்யமடைந்த சில ஸ்த்ரீகளை நோக்கி சிலர் சொல்லுகிறார்கள். ப்ரளயகாலத்தில் ஜீவோபாதிகளான ஸத்வம் முதலியவைகள் ஈச்வரனிடத்தில் அடங்கியிருக்கும்போது குணங்களுடைய சேர்க்கைக்குமுன் எவர் ப்ரபஞ்ச ஸம்பந்தமில்லாத ரூபத்துடன் ஒருவராகவிருந்தாரோ, அவரே இந்த க்ருஷ்ண பகவானாக அவதரித்திருக்கிறார். (ஸிருஷ்டிக்குமுன்னும், ப்ரளயத்திலும், ப்ரபஞ்ச ஸம்பந்தமில்லாமலிருப்பவர் இவரே என்று கருத்து) அந்த பரமாத்மாவே ஸகல வேதங்களையும் வெளியிட்டு மறுபடியும் தன்னுடைய காலசக்தியால் தூண்டப்பட்டதும், ஜீவர்களை

மோஹிக்கச்செய்வதும், ஸிருஷ்டிக்க விரும்பியதுமான ப்ரகிருதியை அனுஸரித்தார். அந்தப்ரகிருதியே பெயர் ரூபம் இவைகளில்லாத ஜீவனிடத்தில அவைகளை யுண்டுபண்ணிற்று. யோகிகள் இந்த்ரியங்களை ஜயித்து, ச்வாஸத்தையடக்கி விசேஷ பக்தியால் சுத்தமான மனமுள்ளவர்களாய் எவருடைய பதத்தையடைகிறார் களோ; அந்தப்புருஷன் இவரே. நம்முடைய புத்தியைப் பரிசுத்தப்படுத்துவதற்கு தகுந்தவர், இவரேயொழிய யோகம் முதலியவைகளால் முடியாது. அடி தோழி! ஆத்மாவின் ரஹஸ்யத்தையறிந்த வித்வான்கள், எவரை ஸ்தோத்ரஞ்செய்கிறார்களோ, வேதங்களிலும், ரஹஸ்யமான ஆகமங்களிலும், எவர் வர்ணிக்கப்படுகிறாரோ, எந்த ஈச்வரன் ஜகத்தை உண்டுபண்ணுவது பரிபாலிப்பது, நாசஞ்செய்வது ஆகிய பற்றுதலில்லையோ, அவரே க்ருஷ்ணனுடைய சரீரமெடுத்துக் கொண்டிருக்கிறார். எந்த காலத்தில் அரசர்கள் தமோ குணங்களுள்ளவர்களாகி தங்கள் ப்ராணனை மாத்திரம் போஷிக்கிறார்களோ அந்தக்காலத்தில், ஐச்வர்யம், செய்த பிரதிஜ்ஞையைக் காப்பாற்றுவது, உண்மையை யுபதேசிப்பது, தயை, கீர்த்தி ஆகிய இவைகளை வெளிப்படுத்துவதற்காக ஒவ்வொரு யுகத்திலும் இவரே ஸத்வகுணரூபியாய் அவதரிக்கிறார். யதுவினுடைய குலம் மிகவும் மேலானது, மதுராநகரம் மிகவும் புண்ய பூமியுள்ளது. புருஷோத்தமரும், ப்ரியமான கீர்த்தியுள்ளவருமான பகவான் தம்முடைய அவதாரத்தாலும் நடையினாலும், அவைகளை அலங்கரிக்கிறார். ஆச்சர்யம்! த்வாரகாநகரத்தின் பாக்யம் அத்புதமானது; எல்லா நகரங்களிலும் ஸ்வர்க்கம் மேலானது என்ற ஸ்வர்க்கத்தின் கீர்த்தியைப் போக்கக்கூடியது; அதில் வஸிக்கும் ஜனங்கள், தங்களை அனுக்ரஹிப்பதற்காகவே

அவ்விடத்தில் வஸிப்பவரும், புன்சிரிப்புள்ள பார்வை யுள்ளவருமான ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவை எப்பொழுதும் தர்சிக்கிறார்கள். அந்தப் பகவானுடைய பத்னிகள் முன் ஜன்மத்தில் வ்ரதங்கள், ஸ்நாநம், ஹோமம் முதலியவைகளால் ஈச்வரனையுபாஸித்தவர் களென்பதில் ஸந்தேஹமில்லை. தவிரவும் கோபஸ்த்ரீகள் எல்லோரும், அவருடைய அதரத்தைப் பானஞ்செய்கிறார்கள் தவிரவும் அதையே மனததில் நினைத்து மோஹிக்கிறார்கள். பலிஷ்டர்களான சிசுபாலன் முதலியவர்களை ஸ்வயம்வரத்தில் ஜயித்து பகவானால் விவாஹஞ்செய்து கொள்ளப்பட்டவர் களும், ப்ரத்யும்னன், ஸாம்பன் முதலியவர்களுக்குத் தாயார்களுமான ருக்மிணி, ஸத்யபாமா முதலியவர் களுடைய வீடுகளிலும், நரகாஸுரனைக் கொன்று ஸ்ரீ க்ருஷ்ணனால் அபஹரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மற்ற ஸ்த்ரீகளுடைய கிருஹங்களிலும், பகவான் எப்பொழுதும் அவர்களுக்கு வேண்டியதை ஸம்பாதித்துக் கொடுத்து அவர்களை ஸந்தோஷப்படுத்திக்கொண்டு வஸிக்கிறார். ஆனதால் ஸ்த்ரீகளுக்கு ஸ்வாதந்த்ரயம், சௌசம் இவைகளில்லாமலிருந்தும், ஸ்த்ரீயாக விருப்பதே மேலானதென்று விளங்குகிறது" என்று பேசிக்கொண்டார்கள்.

31. இம்மாதிரியான பட்டணத்து ஸ்த்ரீகளுடைய வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ க்ருஷ்ணன், பார்வையா லேயே, அவர்களை ச்லாகித்துச் சிரித்துக்கொண்டு சென்றார். அப்பொழுது தர்மபுத்ரர் சத்ருக்களிடத்தில் ஸந்தேஹப்பட்டு, பகவானைக்காப்பாற்றுவதற்காக அவரிடம் ப்ரியத்தால் சதுரங்க ஸைன்யத்தையனுப் பினார். பின்பு ஸ்ரீ க்ருஷ்ணபகவான் வெகுதூரம் தம்மை

பின்தொடர்ந்து வந்தவர்களும், தம்மைவிட்டுப் பிரிய மனமில்லாதவர்களும், ஸ்திரமான பக்தியுள்ளவர்களு மான கௌரவர்களைத் திருப்பிவிட்டுத் தமது நகரம் நோக்கி புறப்பட்டார். அவர் குருஜாங்கலம், பாஞ்சால்ம், சூரசேனம், யமுனையின் கரையிலிருக்கும் தேசம், ப்ரஹ்மாவர்தம், மத்ஸ்யம், ஸரஸ்வதி நதிக்கரையிலுள்ள தேசம், ஜலமில்லாத தேசம், அல்ப ஜலமுள்ள தேசம், ஸௌவீரம், ஆபீரம், ஸைந்தவம் ஆகிய இவைகளைத் தாண்டி ஆனர்த்த தேசம் போனார். குதிரைகள் கொஞ்சம் களைப்படைந்தன. அந்தந்த இடத்தில் வஸிப்பவர்கள் பகவானை எதிர்கொண்டழைத்துப் பூஜித்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணபகவான் ரதத்தைவிட்டு இறங்கி ஜலமிருக்குமிடஞ் சென்று ஸந்தியோபாஸ்தி செய்தார்.

நோட்டு.

பிரகிருதி– மாயை "மாயையை ப்ரகிருதியென்றும், மாயையை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டிருப்பவனை மஹேச்வரனென்றும் தெரிந்து கொள்ள வேண்டும்." ச்ருதி– சுத்தமான மேலான ஸூக்ஷ்மபுத்தியினால் பார்க்கப்படுகிறார்"– ச்ருதி.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்—11

துவாரகாவாஸிகள் பகவானை உபசரித்தது

இப்படி ஸ்ரீ கிருஷ்ணபகவான் மிகுந்த ஐசுவரியம் உள்ள தன்னுடையதான ஆனர்த்த தேசத்தையடைந்து திவ்யமாகிய சங்கத்தை ஊதினார். அப்பொழுது மிகவும் வெண்மையான மத்ய பாகமுள்ளதும், பகவான் உடைய உதடுகளின் காந்தியால் சிவந்ததுமான அந்தச் சங்கமானது செந்தாமரை புஷ்பத்தில் உரக்கச் சப்தித்துக் கொண்டிருக்கும் ஹம்ஸம் போல விளங்கிற்று. அதனைக் கேட்டு அந்தத் தேசத்தில் வஸிப்பவர்கள் கிருஷ்ணன் வருகிறார் என்பதை தெரிந்துகொண்டு அவரை விட்டுப் பிரிந்திருந்ததாலுண்டான தாபத்தை விட்டுச் சந்தோஷமடைந்தார்கள். மேலும் அவர்கள் எல்லோரும் ஸம்ஸார பயத்தைப் போக்கக்கூடிய அந்தச் சப்தத்தைக் கேட்டவுடன் தங்கள் யஜமானனாகிய ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையுள்ள வர்களாக அவருக்கு எதிரில் சென்றார்கள். அந்த பகவான் தன்னுடைய ஆத்மாவிலேயே ரமிப்பவர். ஆனந்தானு பவத்தால் எப்பொழுதும் பூர்ணகாமர்; எல்லோருக்கும் அனுகூலத்தைச் செய்பவர். அப்போர்ப்பட்ட பகவான் இடத்தில் சூரியனிடத்தில் தீபத்தைக் கொடுப்பது போல ஜனங்கள் காணிக்கைகளைச் சமர்ப்பித்து, பிதாவைக் கண்ட குழந்தைகள் போல மலர்ந்த முகமுள்ள வர்களாய், கத்கத ஸ்வரத்துடன் தங்களைக் காப்பாற்றும் அந்தப்பகவானை நோக்கி, வேறாத ப்ரஹ்மதேவராலும், ஸனகர் முதலியவர்களாலும், இந்திரன் முதலியவர் களாலும் நமஸ்கரிக்கப்பட்ட தாமரை மலர் போன்ற உம்முடைய பாதங்களுக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்.

அவைகள் இவ்வுலகத்தில் ஸுகத்தை விரும்பியவர் களுக்கு முக்கிய கதியானவைகள். ஸகல வஸ்துக் களையும் பக்குவஞ்செய்யும் ஸ்வபாவமுள்ள காலமானது எல்லாவற்றிற்கும் மேலானதனாலும் உம்முடைய பாதங் களுக்கு சுவாதீனப்பட்டதேயாம். (உம்முடைய பாதார விந்தங்களை ஆசிரயித்தவர்களுக்குப் பிறப்பு , கிழத்தனம், மரணம் முதலியவைகள் இல்லையென்பது கருத்து:)

'ஓ ஜகத்திற்கு அந்தர்யாமியாயிருப்பவரே தாம் எங்களுக்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டும். நீரே ஸகலத்திற்கும் மாதா, மித்திரர், பிதா, பதி, நீரே நல்ல ஆசாரியர். முக்கியமாகிய தெய்வம், உம்மை யனுசரித் ததாலேயே நாங்கள் தன்யர்களானோம். ஸ்வர்க்கவாஸி களான தேவர்களாலும் பார்க்க முடியாததும் பிரியமான சிரிப்பு, மனோகரமான பார்வை ஆகிய இவை களுடன் கூடிய முகமுள்ளவரும், ஸகல விதத்திலும் அழகு பொருந்திய தம்முடைய சரீரத்தை எப் பொழுதும் நாங்கள் தரிசிக்கும்படி நேர்ந்ததால் நாங்களே நாதனுள்ளவர்கள். தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரே! நீர் பந்துக்களைப் பார்க்கவேண்டி குரு நகரத்திற்காவது மதுரா நகரத்திற்காகவது சென்றால், அப்பொழுது நாங்கள் சூரியனில்லாத ஸமயத்தில் கண்கள் போல ஒவ்வொரு நிமிஷத்தையும் கோடி வருஷங்களுக்குச் சமமாகக் கழிக்கிறோம்' என்று ஸ்தோத்ரஞ் செய்தார்கள்.

10–34 இப்படி ஜனங்கள் செய்த ஸ்தோத்திரத்தைக் கேட்டுப் பக்தர்களைக் காப்பாற்றும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவர்களைக் கடாக்ஷித்தால் அனுக்ரஹித்துக் கொண்டு பட்டணத்திற்குள் சென்றார். அந்த நகரம்

ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் சமமாயுள்ள பலசாலிகளான போஜர்கள், மனுக்கள், தாசார்ஹர்கள், குகுரர்கள், அந்தகர்கள், விருஷ்ணிகள் ஆகிய இவர்களால் போகவதி என்னும் பட்டணம் நாகங்களால் ரட்சிக்கப்படுவது போல, காப்பாற்றப்பட்டிருந்தது. மேலும் அந்தப் பட்டணமானது எல்லா ருதுக்களிலும் புஷ்பிப்பவைகளும் பலிப்பவைகளுமான புண்ய விருஷங்களாலும் கொடிகளாலும், கொடி வீடுகளாலும், உத்யான வனங்களாலும் (பழங்களையே பிரதானமாயுள்ள மரங்கள் உள்ளது), புஷ்பத்தோட்டங்களாலும், விளையாடும் தோட்டங்களாலும், தாமரையோடைகளாலும் அழகாய் இருந்தது. கோபுர வாசல்களிலும் வீட்டு வாசல்களிலும் மங்கள தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. வீதிகளில் பலவகையான த்வஜங்கள் கட்டப்பட்டு வெயிலினாது தாபமில்லாமலிருந்தது. ராஜவீதி, கடைவீதி, நாற் சந்திகள், மற்ற வீதிகள் ஆகிய இவைகள் குப்பையில்லாமல் சுத்தஞ் செய்யப்பட்டிருந்தன. பழங்கள், புஷ்பங்கள், அட்சதைகள் முதலிய மங்கள திரவியங்கள், இறைக்கப்பட்டிருந்தன; வாசனை ஜலம் தெளிக்கப் பட்டிருந்தது. ஒவ்வொரு வாசலும் தயிர், அட்சதை, பழங்கள், கரும்பு இவைகளாலும், பூர்ண கும்பங்களாலும், தூபங்களாலும், தீபங்களாலும், பலிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பின்னும் வஸுதேவர், அக்ரூரர், உக்ரஸேனர், அற்புதமான பராக்கிரமுள்ள பலராமர், பிரத்யும்னன், சாருதேஷ்ணன், ஸாம்பன், கதன் முதலியவர்கள் மிகவும் பிரியராகிய பகவான் வருகிறார் என்று கேள்விப்பட்டு யானையை முன் நடத்தி, ப்ராஹ்மணர்களை முன்னிட்டுக் கொண்டு அதிக ஸந்தோஷத்தால் படுக்கை, போஜனம் இவைகளிலும் மனமில்லாதவர்களாக ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு எதிரே

சென்றார்கள். மேலும் அப்பொழுதும் சங்கம் முதலிய வாத்தியங்கள் முழங்கின. வேதங்கள் கோஷிக்கப்பட்டன. இப்படி எல்லோரும் விஸ்வாசத்தால் உண்டான பரப்பரப்புள்ளவர்களாக ரதங்கள் மீதேறிக்கொண்டு எதிர்க்கொண்டு சென்றார்கள். சிறந்த தாஸிகளும் கூட்டம் கூட்டமாக வாகனங்களின் மீதேறிக்கொண்டு அவரைப் பார்க்க வேண்டுமென்ற மிகுந்த ஆசையுடன் சென்றார்கள். அவர்கள் காதில் அணிந்திருந்த குண்டலங்களுடைய காந்தியால் அவர்களுடைய முகம் பிரகாசித்தது. ரஸாபினயஞ் செய்யக்கூடிய நடர்களும், தாளம் முதலியவைகளை யனுசரித்து நர்த்தனஞ் செய்பவர்களும், பாடுகிறவர்களும், ஸூதர்களும், மாகதர்களும், வந்திகளும் உத்தமச்லோகராகிய பகவானுடைய அற்புதமான சரிதத்தைக் கானஞ் செய்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் தம்மைப் பார்ப்பதற்காக வந்த பந்துக்களுக்குத் தக்கபடி வணங்குவதாலும், நமஸ்கரிப்பதாலும், தழுவுவதாலும், கையைப் பிடிப்பதாலும், புன்சிரிப்புக் கொண்ட பார்வையாலும், சண்டாளன் வரையிலுள்ள எல்லாருக்கும் அபயங் கொடுத்து, அவரவர்களுக்கு இஷ்டமான வரங்களை அளித்து மரியாதை செய்தார்.

மேலும் ஆசாரியர்களும், ப்ராஹ்மணர்களும், பெரியோர்களும், மற்றவர்களும் அவரவர் ஸ்திரீகளுடன் பகவானுக்கு ஆசீர்வாதஞ் செய்தார்கள்; வந்திகள் ஸ்தோத்திரம் செய்தார்கள்; துவாரகா பட்டணத்தில் கிருஷ்ணன் இராஜவீதியில் வரும்பொழுது குல ஸ்திரீகள் அவரைத் தரிசிப்பதற்காக மாடிகளின் மீதேறினார்கள். லக்ஷ்மிதேவிக்கு இருப்பிடமாகிய

பகவானுடைய சரீரத்தைத் துவாரகா வாஸிகளான ஜனங்கள் எப்பொழுதும் பார்த்தவர்களானாலும் அவர் களுக்குப் போதுமென்ற திருப்தி உண்டாகவில்லை. அவருடைய மார்பு, கைகள், பாதங்கள் ஆகிய இவைகள் லக்ஷ்மிதேவிக்கும், லோகபாலர்களுக்கும், பக்தர் களுக்கும் முறையே வஸிக்குமிடமாக இருக்கின்றன. அப்போர்ப்பட்ட ஸ்ரீ கிருஷ்ண பகவான் வழியில் வெள்ளைக் குடை, சாமரங்கள் ஆகிய இவைகளால் பூஜிக்கப்பட்டும். பூக்களால் வர்ஷிக்கப் பெற்றும் பீதாம்பரத்தாலும், துளசி மாலையாலும் பிரகா சித்தார். அது சூரியன், சந்திரன், இந்திரன், வில், மின்னல், இவைகளுடன் மேகம் சேர்ந்து பிரகாசித்தது போலிருந்தது. பின்னுமவர் வஸுதேவர், தேவகி இவர் களுடைய அரண்மனை சென்று, வஸுதேவருக்கும் தேவகி முதலிய ஏழு தாயார்களுக்கும் சந்தோஷமாக நமஸ்காரஞ் செய்தார். அவர்களும் இவரைத் தழுவி னார்கள். தேவகி முதலிய ஸ்திரீகள் கிருஷ்ணனை மடியில் உட்கார வைத்துக்கொண்டு ஆனந்தக்கண்ணீ ரால் அவருக்கு அபிஷேகம் செய்தார்கள். பிறகு அந்தப் பரமாத்மா 16,000 பத்தினிகளுடைய அரண் மனைகள் அடங்கிய தமது அரண்மனைக்குச் சென்றார். அது ஸகல வஸ்துக்களாலும் நிறைந்ததும் சிறந்த துமாக விருந்தது. அப்பொழுது அங்கிருந்த ருக்மணி முதலிய ஸ்திரீகள் தேசாந்தரத்திலிருந்து வந்த தங்கள் உடைய பர்த்தாவைச் சமீபத்தில் கண்டு அளவற்ற ஆனந்தமடைந்து ஆசனத்திலிருந்து சரீரத்தாலும் அந்தக்கரணத்தாலும் சீக்கிரமாக எழுந்திருந்தார்கள். அவர்கள், பர்த்தா தேசாந்திரம் போயிருக்கும் காலத்தில் செய்யவேண்டிய விரதங்களை யனுஷ்டித்துக் கொண்டு இருந்தவர்கள். கடைக்கண்ணால் பார்ப்பவர்களாலும்

வெட்கத்தால் தலை குனிந்தவர்களாகவுமிருந்தார்கள். ஓ சௌனகரே கம்பீர மனமுள்ள பகவானைக் காணாத போது மனத்தாலும், நேரில் பார்த்த போது பார்வைகளாலும் (புத்ரர்களைக் கொண்டு தழுவ செய்பவர்கள் போல) ஸ்ரீ கிருஷ்ணனை ஆலிங்கனம் செய்து கொண்டார்கள். (ப்ரீதியாகப் பார்த்தார்கள் என்பது கருத்து) அப்பொழுது தங்களுடைய கண்களி லுண்டான ஆனந்த ஜலத்தை வெட்கத்தால் அந்த ஸ்திரீகள் அடக்கிக்கொண்டிருந்தும் அது அடங்காமல் பெருகியது; ஸ்ரீ கிருஷ்ணன் எப்பொழுதும் அவர் களுடைய பக்கத்திலேயே வஸிக்கிறார். ஆனாலும் அவர்களுக்கு அவருடைய பாதங்கள் புதியவைகளாக தோன்றுகின்றன. சஞ்சல ஸ்வபாவமுள்ள ஸ்ரீதேவியும் அவரிடத்திலேயே ஸ்திரமாக வசிப்பதால் எவளுக்குத் தான் அவரிடம் பிரேமை யிராது?

35–40 காற்றானது மூங்கில் காட்டில் அவைகளைக் கொண்டே அக்னியை உண்டுபண்ணி அதனால் அவை களை எரிப்பதுபோல ஸ்ரீ கிருஷ்ணன், தாம் ஆயுதம் எடுக்காமலே பூமிக்குப் பாரமாயிருந்த அனேக அக்ஷௌஹிணி சைன்யங்களால் விருத்தியடைந்த தேஜஸுள்ள அரசர்களுக்குள் ஒருவருக்கொருவர் விரோ தத்தை உண்டு பண்ணி, அதனால் அவர்களை நாசஞ் செய்து சாந்தியடைந்தார். இப்படி பகவான் பிராகிருத புருஷன்போல பூமியில் மாயாவதாரஞ் செய்து அநேக உத்தமஸ்திரீகளின் நடுவிலிருந்து விளையாடினார். ஸ்திரீகள் கம்பீரமாகிய அபிப்பிராயத்தைக் காண் பிக்கும் கடாக்ஷமுள்ளவர்கள், மனோகரமான மந்தகாச முள்ளவர்கள். வெட்கமுள்ளவர்கள். அவர்களால் பரம சிவனும் மோகித்து வெட்கமடைந்துவில்லை எறிந்தார்.

ஸ்திரீகள் அப்போர்ப்பட்ட சக்தியுள்ளவர்களானாலும் தங்களுடைய விலாசங்களால் கிருஷ்ணனை ஆசைப்படச் செய்ய முடியாதவர்களாகவிருந்தார்கள். (சம்சாரத்தில் பற்றுதல் இல்லாதவரென்பது கருத்து.) இப்படி ஸ்ரீ கிருஷ்ணன் வைராக்யமுள்ளவராக விருந்து ஜனங்கள் தங்களைப்போல அவரையும் ஸம்சாரியென்றே நினைக்கிறார்கள். அதனால் தான் அஜ்ஞர்களென்று சொல்லப்படுகிறார்கள். ஆத்மாவினிடமிருக்கும் ஆனந்தம் முதலிய குணங்களில் ஆத்மாவை ஆசிரயித்திருக்கும் புத்தியானது சம்பந்திக்காமல் இருப்பது போல், பகவான் பிரகிருதி காரிய மாகிய சம்சாரத்திலிருந்தும் அதன் குணங்களாகிய சுகம், துக்கம் இவைகளுடன் சம்பந்தப்படாமல் இருக்கிறார். அதுவே அவருடைய ஐசுவரியமென்று சொல்லப்படுகிறது. அகங்காரமானது ஆத்மாவைத் தனது வசப்பட்டவனாக நினைப்பதுபோல் ஸ்ரீ கிருஷ்ணனுடைய உண்மையை அறியாதவர்களான அந்த ஸ்திரீகளெல்லோரும் கிருஷ்ணன் தங்கள் இடத்தில் ஆசை கொண்டவர், தங்களையே அனுஸரித்திருப்பவர் என்று அஜ்ஞானத்தால் நினைத் திருந்தார்கள்.

நோட்டு

ஸூர்ய-ஜகத்தைத் தம்முடைய தேஜஸால் பிரகா சிக்கச் செய்பவரும், வேறு பிரகாசத்தை அபேட் சியாமல் விளங்குகிறவருமான சூரியனுக்குத் தீபத்தால் எப்படி பிரயோசனமில்லையோ அப்படி ஸகல வித காமங்களால் பூர்ணராகிய பகவானுக்கு ஜனங்களால்

கொடுக்கப்படும் காணிக்கைகளால் ஒருவித பயனுமில்லை என்று காட்டப்பட்டது, கத்கதஸ்வர-ஆனந்தம், துக்கம் இவைகள் நேரும்போது கண்ணீர் பெருகி அதனால் கண்டம் அடைத்துப்போகும். அப்பொழுது தாராள மாகப் பேசமுடியாமல் சிரமப்பட்டுப் பேசும் ஸ்வர மேயாம். ஸனகர்-மூலத்தில் வைரிஞ்ச என்றிருப்பதால் அதற்குச் சங்கரனென்று அர்த்தம் விஜ, பசுவின் கன்றுகளைப் ப்ரஹ்மதேவர் அபகரித்த பிறகு அவரால் நமஸ்கரிக்கப்பட்டது. பகவான் பாணாசுரனிடத்தில் யுத்தஞ் செய்யும்போது, சங்கரனால் ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டது. சந்த். க்ஷேமம்-மோக்ஷம் விஜயமாதா - பிறந்தது முதல் போஷிப்பதால். மித்ரர்- எல்லா வற்றிற்கும் அந்தராத்மாவாக விருப்பத்துடன் ஸத்காரி யத்தைச் செய்யும்படி தூண்டுவதால். பிதா-இது ஹிதமென்றும், இது அஹிதமென்றும் உபதேசித்து, சாஸ்திரத்தைக் கொண்டு சிட்சிப்பதால், பதி-பர்த்தா, ஜீவனம் முதலியவைகளைக் கொடுத்துக் காப்பாற்று வதால், ஆசாரியர்-அர்ஜுனனை நிமித்தமாய் வைத்துக் கொண்டு உலகத்தில் கீதா சாஸ்திரத்தைப் பரவச் செய்ததாலே. தெய்வம்- மோட்சத்தைக் கொடுப்பதால் சந்த், ஸுதர்கள்- புராணத்தை யறிந்தவர்கள் ஸுதர்களென்று சொல்லப்படுகிறார்கள். வம்சாவளியைச் சொல்புவர்கள் மாகதர்களெனப்படு வார்கள். ஸமயத்திற்குத் தக்கபடி பேசக்கூடிய புத்தி சாலிகள் வந்திகளெனப்படுவார்கள். மேகம்-இது அபூதோபமை யென்று சொல்லப்படுகிறது, மேகம் போன்றவர் பகவான், சூரியன் போன்றது வெண்குடை, புஷ்பவர்ஷம் போன்றது நட்சத்திரங்கள் என்பர் சிலர்.

சூரியன் போன்றது கீரிடம், சந்திரன் போன்றது வெண்குடை, இந்திரனுடைய வில் போன்றது வனமாலை மின்னல் போன்றது பீதாம்பரம். ஏழு தாயார்–வசு தேவருக்குப் பதினெட்டு ஸ்திரீகள். அவர்களெல் லோரையும் நமஸ்கரித்தார். அவர்களுக்குள் முக்கிய மானவர்கள் ஏழு ஸ்திரீகள், 1. தேவகீ, 2. ச்ருததேவா, 3. சாந்திதேவா, 4. உபதேவா, 5. ஸ்ரீதேவா, 6. தேவரக்ஷிதா, 7. ஸஹதேவா, தழுவ –தேசாந்திரத் திலிருந்து வந்த பகவானைப் ப்ரத்யும்னன் முதலிய வர்களைக் கொண்டு கட்டிக் கொள்ளச்செய்வது போல மனத்தால் தியானம் செய்தார்கள், பின்னும் மிகுந்த ஆசையுடன் பார்த்தார்கள். பரமசிவனும்– மூலத்தில் அமதன: என்று பதம் பிரித்து இப்படி ஸ்ரீ தரஸ்வாமி அர்த்தஞ்செய்தார். மதன: என்று பதம் பிரிப்பதால் மன்மதன் என்று அர்த்தம் –வீர, விஜ.

அத்தியாயம் 12

பரீக்ஷித்தின் உற்பத்தி

சௌனக மகரீஷியானவர் ஸூதரைப் பார்த்து 'ஓ ஸூதரே! அசுவத்தாமாவினால் பிரயோகிக்கப்பட்ட ப்ரஹ்மாஸ்த்ரத்தின் தேஜஸால் எரிக்கப்படும் உத் தரையின் கர்ப்பத்தை ஸ்ரீ கிருஷ்ணபகவான் மறுபடி பிழைக்கச் செய்தாரென்று சொன்னீர்களே, மிக்க புத்திசாலியும் மகாத்மாவுமான அக்குழந்தையின் பிறப் பையும், அதன் சரித்திரத்தையும், அவருக்கு சுகர் ஞானோபதேசம் செய்ததையும், அவருடைய முடி வையும், மரணமடைந்த பிறகு அவருக்கு நேர்ந்த கதியையும் சிரத்தையுடன் கேட்க விரும்புகிறேன். சொல்லக்கூடியதானால் சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

4–6 இதனைக் கேட்டு ஸூதர் சொல்லுவதாவது தர்மபுத்திரர் கிருஷ்ணனுடைய பாதங்களைச்சேவித்து ஸகல ஆசைகளையும் ஒழித்துத் தகப்பன் குழந்தை களைக் காப்பாற்றுவதுபோல பிரஜைகளைச் சந்தோ ஷப்படுத்திக் காப்பாற்றி வந்தார். அவருக்குப் பகவானுடைய அனுக்கிரஹத்தால் ஸகல சம்பத்துகளும், ராஜசூயம் முதலிய யாகங்களின் பலனாகிய உத்தம லோகங்களும், திரௌபதி முதலிய ஸ்திரீகளும், பீமசேனன் முதலிய தம்பிகளும், ஸகல பூமியும். ஜம்பூத்வீபத்திற்கு ஆதிபத்யமும், ஸ்வர்க்கம் வரையில் பரவிய கீர்த்தியும் கிடைத்தன. பசியுள்ளவனுக்கு அன்னத்தின் மேலே விருப்பமிருக்குமே யொழி வேறு

விஷயத்தில் ஆசையுண்டாகிறதில்லை. அதுபோல் ஸ்ரீ பகவானிடத்திலேயே சித்தத்தைச் செலுத்தி, அதனால் ரமித்துக் கொண்டிருக்கும் தர்மபுத்ரருக்கு தேவர்களாலும் விரும்பத்தக்க சுகங்கள் கிடைத்திருந்தும் அவைகளால் அவர் சந்தோஷமடையவில்லை.

7–14 1/2, ஓ சௌனகரே! உத்தராதேவியின் கர்ப்பத்திலிருந்த சிசுவானது அச்வஸ்த்தாமாவினுடைய ப்ரஹ்மாஸ்திரத்தின் தேஜஸ்ஸால் எரிக்கப்படும்பொழுது ஒரு புருஷன் அந்தச் சிசுவிற்கு நேரில் தோன்றினார். அவர் கட்டைவிரல் அளவுள்ளவர், சுத்தர், சுவர்ண கீரிடமுள்ளவர், மிக்க அழகான பார்வையுள்ளவர், பீதாம்பரம் தரித்தவர், ஜன்மம் முதலிய விகாரங்கள் அற்றவர், அழகு பொருந்தியவைகளும், நீண்டவை களுமான கைகளுள்ளவர், சுத்த ஸ்வர்ண குண்டலங் களுள்ளவர், 'என் பக்தனுக்கும் உபத்திரவம் நேரிடு கிறதா?' என்ற கோபத்தால் சிவந்த கண்கள் உள்ளவர், கதாயுதத்தைத் தரித்தவர். மேலும் அவர் குறைக்கொள்ளி போன்ற தம் கதையைச் சுழற்றிக் கொண்டு. அக்குழந்தைக்கு நான்கு புறத்திலும் சஞ்சரித்து, சூரியன் பனியைப் போக்குவதுபோல அஸ்திர தேஜஸ்ஸை அக்குழந்தையின் சமீபம் வர வொட்டாமல் தடுத்துக்கொண்டுமிருந்தார். அவரைப் பார்த்து அந்தக் குழந்தையானது இவர் யாரென்று ஆச்சரியத்துடன் ஆலோசித்துக் கொண்டிருந்தது. இப்படி ஒன்பது மாத காலஞ் சென்றது. பத்தாவது மாதத்தில் அளவிடக் கூடாத ரூபமுள்ளவரும், தர்மத்தைப் பரிபாலிப்பவரும், எங்கும் நிறைந்தவரு மான அந்தப் பிரபுவானவர் அக்குழந்தை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே அவ்விடத்தில் மறைந்தார்.

அதன் பிறகு வரும் மேலான சிரேயஸை காண்பிக்கத் தக்க சுப லக்னம் நேர்ந்தது. அதிலிருந்த சுபகிரகங்கள் ஒருவருக்கொருவர் மித்ரர்களாக இருந்தார்கள். அப் போர்ப்பட்ட சமயத்தில் பாண்டுவின் வம்சத்தை விருத்திசெய்யும் புத்திரனானவன் பாண்டுவே மறு படியும் பிறந்ததுபோல அவதரித்தான். அப்பொழுது தர்மபுத்ரர் மிகுந்த சந்தோஷத்துடன் தௌம்யர், கிருபர் முதலிய ப்ராஹ்மணர்களைக் கொண்டு ஜாதகர்மம் ஸ்வஸ்திவாசனம் ஆகிய இவைகளைச் செய்வித்தார். மேலும், அவர் தானத்திற்குரிய பாத்திரம் தேசம் காலம் என்னும் இவைகளை அறிந்தவரா கையால், உத்தமமாகிய அந்தப் புண்ணிய காலத்தில் ஸ்வர்ணம், பசு, பூமி, கிராமங்கள் சிறந்த குதிரைகள் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்தது மல்லாமல் போஜனமும் செய்வித்தார்.

15–17 1/2. அப்பொழுது ஜ்யோதிஷ சாஸ்திரத்தை நன்றாய்க் கற்றுணர்ந்த எல்லாப் ப்ராம்ஹ்மணர்களும் மிகுந்த சந்தோஷமுள்ளவர்களாய் வணக்கமுள்ள அவ் வரசனை நோக்கி, 'ஓ புருஷவம்சத்திய அரசர்களில் சிறந்தவரே தடுக்க முடியா தெய்வ வசத்தால் புரு வம்சத்தின் தொடர்ச்சியற்றுப் போகும் சமயத்தில் அந்த வம்சத்தில் பிறந்தவர்களான உங்களுடைய க்ஷேமத்திற்காக) ஸ்ரீ மகா விஷ்ணுவே இப்புத்ர ரத்னத்தை அனுக்ரகித்திருக்கிறார். விஷ்ணுவினால் கொடுக்கப்பட்டவனாகையால் இவன் விஷ்ணுராத னென்று பிரசத்தியடைவான். இவன் மிகுந்த கீர்த்தி யுள்ளவனும், பாகவதர்களுள் சிறந்தவனுமாவான். இவ் விஷயத்தில் ஸம்சயப்பட வேண்டாம் என்றார்கள்.

18–29 1/2, இதனைக் கேட்ட தர்மராஜன் ப்ராஹ்ம

விஷயத்தில் ஆசையுண்டாகிறதில்லை. அதுபோல் ஸ்ரீ பகவானிடத்திலேயே சித்தத்தைச் செலுத்தி, அதனால் ரமித்துக் கொண்டிருக்கும் தர்மபுத்ரருக்கு தேவர்களாலும் விரும்பத்தக்க சுகங்கள் கிடைத்திருந்தும் அவைகளால் அவர் சந்தோஷமடையவில்லை.

7–14 1/2, ஓ சௌனகரே! உத்தராதேவியின் கர்ப்பத்திலிருந்த சிசுவானது அச்வஸ்த்தாமாவினுடைய ப்ரஹ்மாஸ்திரத்தின் தேஜஸ்ஸால் எரிக்கப்படும்பொழுது ஒரு புருஷன் அந்தச் சிசுவிற்கு நேரில் தோன்றினார். அவர் கட்டைவிரல் அளவுள்ளவர், சுத்தர், சுவர்ண கீரிடமுள்ளவர், மிக்க அழகான பார்வையுள்ளவர், பீதாம்பரம் தரித்தவர், ஜன்மம் முதலிய விகாரங்கள் அற்றவர், அழகு பொருந்தியவைகளும், நீண்டவை களுமான கைகளுள்ளவர், சுத்த ஸ்வர்ண குண்டலங் களுள்ளவர், 'என் பக்தனுக்கும் உபத்திரவம் நேரிடு கிறதா?' என்ற கோபத்தால் சிவந்த கண்கள் உள்ளவர், கதாயுதத்தைத் தரித்தவர். மேலும் அவர் குறைக்கொள்ளி போன்ற தம் கதையைச் சுழற்றிக் கொண்டு. அக்குழந்தைக்கு நான்கு புறத்திலும் சஞ்சரித்து, சூரியன் பனியைப் போக்குவதுபோல அஸ்திர தேஜஸ்ஸை அக்குழந்தையின் சமீபம் வர வொட்டாமல் தடுத்துக்கொண்டுமிருந்தார். அவரைப் பார்த்து அந்தக் குழந்தையானது இவர் யாரென்று ஆச்சரியத்துடன் ஆலோசித்துக் கொண்டிருந்தது. இப்படி ஒன்பது மாத காலஞ் சென்றது. பத்தாவது மாதத்தில் அளவிடக் கூடாத ரூபமுள்ளவரும், தர்மத்தைப் பரிபாலிப்பவரும், எங்கும் நிறைந்தவரு மான அந்தப் பிரபுவானவர் அக்குழந்தை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே அவ்விடத்தில் மறைந்தார்.

அதன் பிறகு வரும் மேலான சிரேயஸை காண்பிக்கத் தக்க சுப லக்னம் நேர்ந்தது. அதிலிருந்த சுபகிரகங்கள் ஒருவருக்கொருவர் மித்ரர்களாக இருந்தார்கள். அப் போர்ப்பட்ட சமயத்தில் பாண்டுவின் வம்சத்தை விருத்திசெய்யும் புத்திரனானவன் பாண்டுவே மறு படியும் பிறந்ததுபோல அவதரித்தான். அப்பொழுது தர்மபுத்ரர் மிகுந்த சந்தோஷத்துடன் தௌம்யர், கிருபர் முதலிய ப்ராஹ்மணர்களைக் கொண்டு ஜாதகர்மம் ஸ்வஸ்திவாசனம் ஆகிய இவைகளைச் செய்வித்தார். மேலும், அவர் தானத்திற்குரிய பாத்திரம் தேசம் காலம் என்னும் இவைகளை அறிந்தவரா கையால், உத்தமமாகிய அந்தப் புண்ணிய காலத்தில் ஸ்வர்ணம், பசு, பூமி, கிராமங்கள் சிறந்த குதிரைகள் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்தது மல்லாமல் போஜனமும் செய்வித்தார்.

15–17 1/2. அப்பொழுது ஜ்யோதிஷ சாஸ்திரத்தை நன்றாய்க் கற்றுணர்ந்த எல்லாப் ப்ராம்ஹ்மணர்களும் மிகுந்த சந்தோஷமுள்ளவர்களாய் வணக்கமுள்ள அவ் வரசனை நோக்கி, 'ஓ புருஷவம்சத்திய அரசர்களில் சிறந்தவரே தடுக்க முடியா தெய்வ வசத்தால் புரு வம்சத்தின் தொடர்ச்சியற்றுப் போகும் சமயத்தில் அந்த வம்சத்தில் பிறந்தவர்களான உங்களுடைய க்ஷேமத்திற்காக) ஸ்ரீ மகா விஷ்ணுவே இப்புத்ர ரத்னத்தை அனுக்ரகித்திருக்கிறார். விஷ்ணுவினால் கொடுக்கப்பட்டவனாகையால் இவன் விஷ்ணுராத னென்று பிரசத்தியடைவான். இவன் மிகுந்த கீர்த்தி யுள்ளவனும், பாகவதர்களுள் சிறந்தவனுமாவான். இவ் விஷயத்தில் ஸம்சயப்பட வேண்டாம் என்றார்கள்.

18–29 1/2, இதனைக் கேட்ட தர்மராஜன் ப்ராஹ்

Released by Maran's Dog, Toronto , Canada

மணர்களை நோக்கி, புண்ய ச்லோகர்களும் ராஜர்ஷி களுமான நம்முடைய முன்னோர்கள் போல இக் குழந்தையும் நல்ல கீர்த்தியுள்ளவனாய் இருப்பானா? என்று மிக்க ஆதரவுடன் கேட்டார். அப்பொழுது ப்ராஹ்மணர்கள் தர்ம புத்ரரை நோக்கி, 'ஓ குந்தியின் புத்ரரே! இவன் மனுவின் புத்ரராகிய இக்ஷ்வாகுபோல, பிரஜைகளைக் காப்பாற்றுவான், தசரத புத்ரராகிய ஸ்ரீ ராமன் போல ப்ராஹ்மணர்களிடம் பிரியமுள்ள வனாவான். வீணாகாத பிரதிக்ஞையுள்ளவனாயி ருப்பான். ஔசீனர தேசத்திற் கதிபதியான சிபிச் சக்ரவர்த்தி போலச் சரணமென்று வந்தவர்களைக் காப்பாற்றுவான், மிகுந்த தாதா, துஷ்யந்தருடைய புத்ரனான பரதன் போலத் தன் பந்துக்களுக்கும், யாகம் செய்பவர்களுக்கும் விசேஷ கீர்த்தியை உண்டு பண்ணுவான். மேலும் இவன் உம்முடைய தம்பியாகிய அர்ஜுனன், கார்த்தவீர்யன் ஆகிய இவர்கள் போல வில்லைப் பிடித்தவர்களுக்குள் சிறந்தவனாவான், அக்னி போல ஸமீபத்தில் நெருங்க முடியாதவனாவான், சிங்கம் போலப் பராக்கிரமமுள்ளவனாவான்' ஹிம்வத் பர்வதம்போல ஸாதுக்களால் ஸேவிக்கத்தக்கவனா வான், பூமிபோலப் பொறுமையுள்ளவனாவான், மாதா பிதிருக்கள், புத்ரர்களின் விஷயமாய் நேரும் சிரமங் களைச் சகிப்பதுபோல ப்ரஜைகள் விஷயமாக உண்டாகும் சிரமத்தைப் பொறுத்துக் கொள்ளும் ஸ்பாவமுள்ளவனாவான். எல்லோரையும் சமமாய்ப் பார்ப்பதில் ப்ரஹ்மதேவரையொத்தவனாவான், அண்டின வர்களிடத்தில் தயவு செய்யும் விஷயத்தில் பரமசிவன் போன்றவனாவான். லக்ஷ்மீபதியாகிய மஹாவிஷ்ணு போல ஸகல பிராணிகளுக்கும் இருப்பிடமாவான், ஸ்ரீ கிருஷ்ணன்போல ஸகல நற்குணங்களால் ஏற்படும்

மஹிமையுள்ளவனாவான், கொடுப்பதில் ரந்திதேவன் போன்றவனாவான். யயாதிபோலத் தர்மசிந்தையுள்ள வனாயிருப்பான், பலிசக்கரவர்த்தி போலத் தைரிய முள்ளவனாவான், பிரஹ்லாதர் போல ஸ்ரீ கிருஷ்ண னிடம் பக்தியுள்ளவனாவான். மேலும் இவன் அநேக அசுவமேத யாகங்களைச் செய்வான். பெரியோர் களை ஸேவிப்பான். இவனுடைய புத்ரர்கள் ராஜ ரிஷிகளாக விருப்பார்கள். கெட்ட மார்க்கத்தை அனுஷ்டிப்பவர்களைச் சிக்ஷிப்பான், தர்மத்தை ஸம்ர க்ஷிப்பதற்காகக் கலியை நிக்ரஹிப்பான். பின்னுமிவன் (சிருங்கி என்ற) ப்ராஹ்மண புத்திரனால் தூண்டப் பட்ட தக்ஷகனால் தனக்கு மரணம் நேரிடப் போவதாய்க் கேள்விப்பட்டு, ஸகல ஆசைகளையும் ஒழித்து வைராக்கியத்தை யடைவான். பிறகு வியாஸ புத்ரராகிய சுகரிடம் ஆத்ம தத்வத்தை உபதேசம் பெற்று, கங்கைக் கரையில் இந்தச் சரீரத்தை விட்டு நிர்ப்பயமான விஷ்ணுபதத்தை யடைவான் என்று வருங் காரியத்தைச் சொல்லி தர்ம புத்திரரால் ஸம்மானிக்கப்பட்டுத் தங்களிருப்பிடம் சென்றார்கள்.

30–31 1/2 பிறகு அந்தக் குழந்தை மாதாவின் கர்ப்பத்தில் தன்னால் பார்க்கப்பட்டவரை மனத்தில் தியானஞ் செய்து கொண்டே 'அந்தப் புருஷன் இவர் தானோ, இவர்தானோ என்று ஒவ்வொருவரிடமும் பரீக்ஷித்தான். ஆனதுபற்றி அவனுக்கு, 'பரீக்ஷித்' என்ற பெயருண்டாயிற்று. அந்த ராஜகுமாரன் சுக்ல பக்ஷத்தில் பதினைந்து கலைகளால் சந்திரன் நாளுக்கு நாள் விருத்தியடைவதுபோல, தர்மபுத்ரர் முதலிய வர்களால் போஷிக்கப்பட்டு வளர்ந்தான். ஸகலவித்தை களும் அவனையடைந்தன. அப்பொழுது தர்மராஜன்

பந்துக்களின் வதத்தால் நேர்ந்த பாவங்களை நிவர்த் தித்துக் கொள்வதற்காக அசுவமேதஞ் செய்யவேண்டு மென்று விரும்பினார். ஆனாலும் 'நியாயமான வரி வாங்குவதாலும், குற்றவாளிகளுக்கு அவர்களுடைய குற்றத்திற்குத் தக்கபடி அபராதம் விதிப்பதாலும் ஸம்பாதித்த பொருள் பிரஜைகளை ரக்ஷிப்பதற்கே போதுமானதாயிருந்ததாகையால் அந்தப் பொருளைக் கொண்டு யாகத்தை முடிக்க முடியாதே என்ன செய்கிறது என்று கவலைப்பட்டிருந்தார்.

33–361/2 அப்பொழுது அவருடைய அபிப்ராயத் தையறிந்து ஸ்ரீ கிருஷ்ணனால் தூண்டப்பட்ட பீமசேனன் முதலியவர்கள் வடக்குத் திக்கில் சென்று மருத்தருடைய யாகத்திற்கு உபயோகப்பட்டு மிகுந்து கிடக்கும் தனத்தைக் கொண்டு வந்தார்கள். அவை களைக் கொண்டு யாக சாமகிரிகளைச் சம்பாதித்துத் தர்மபுத்ரர் ஸ்ரீ கிருஷ்ணனை வைத்துக் கொண்டு குறைவில்லாமல் நிறைவேற்ற வேண்டும் என்ற பயம் உள்ளவராய், பாப நிவர்த்திக்காக மூன்று தரம் அசுவ மேதத்தை யனுஷ்டித்து, யக்ஞ புருஷராகிய பகவானை ஆராதித்தார். ஸ்ரீ கிருஷ்ணனும் ப்ராஹ்மணர்களைக் கொண்டு தர்மராஜனுக்கு யாகஞ் செய்வித்து மித்ரர்களான பாண்டவர்களுடைய இஷ்டப்படி சில காலம் அவ்விடத்தில் வசித்தார். பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் அரசனிடத்திலும் திரௌபதியினிடத்திலும் விடை பெற்றுத் தம்முடைய பந்துக்களுடனும், அர்ஜுனன் உடனும் துவாரகா நகரஞ் சென்றார்.

நோட்டு

இந்த அத்தியாயத்தில் வைராக்கியத்தின் பிரகாரமும், பகவான் பக்தர்களிடத்தில் தயையுள்ளவரென்பதும், காட்டப்பட்டிருக்கிறது விஜ. சகல ஸம்பத்துக்களும் –காமாதுரனுக்கு ஐசுவரியத்தில் பிரியமிருக்குமே யல்லாமல் வைராக்கிய முள்ளவனுக்கு அவைகளில் பிரீதி உண்டாகிறதில்லை என்று காட்டப்பட்டது விஜ, புண்ணிய காலத்தில்-"கொப்பூழ்க் கொடி அறுப்பதற்கு முன் சூதகமில்லை" "புத்திரன் பிறந்த காலத்திலும் வியதபாத புண்ணிய காலத்திலும் செய்யப்பட்ட தானங்கள் குறையாத பலனைக் கொடுக்கின்றன," – ஸ்மிருதி "ப்ராஹ்மணர்களுடைய வீட்டில் புத்திரன் பிறந்த காலத்தில் ஸகல தேவர்களும் பிதிரு தேவர்களும் அந்த வீட்டிற்கு வருகிறார்கள். ஆதலால் அந்தக் காலம் 'நூறு சூர்ய கிரகணங்களைக் காட்டிலும் மேலான புண்ணிய காலம்" -ஸ்மிருதி. சிபி- இவர் தம்மைச் சரணமடைந்த புறாவைக் காப்பாற்றவேண்டிப் பருந்துக்கு தம்முடைய மாமிசத்தைக் கொடுத்தார் ஸ்ரீத. இவர் உசினருடைய புத்ரர் - வீர. விஜ.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–13

திருதராஷ்டிரர் வெளியில் சென்றது

விதுரர் தீர்த்த யாத்திரை செய்வதற்காக ஹஸ்தினா புரத்திலிருந்து புறப்பட்டுச் ஸகல தீர்த்தங்களுக்கும் சென்று, அவைகளில் ஸ்நானம் முதலியவைகளைச் செய்து, வழியில் மைத்ரேயரைக் கண்டு, அவரிடமாக ஸ்ரீமத் நாராயணனே தமக்குக் கதியென்று தெரிந்துக் கொண்டு, அதனால் அறிய விரும்பியதை அறிந்தும் ஹஸ்தினாபுரஞ் சென்றார். மேலும், கர்மயோகம், ஞானயோகம் ஆகிய இவைகளைப்பற்றி விதுரர் கேட்ட கேள்விகளுக்கு மைத்திரேயர் சிலவற்றிற்குப் பதில் சொல்லி வரும்பொழுதே விதுரருக்கு ஸம்சயங்கள் யாவும் நீங்கின. ஸ்ரீ கோவிந்தரிடத்தில் ஸ்திரமான பக்தி உண்டாயிற்று. அதனால் அதற்குமேல் அவர் கேட்கவில்லை.

3–6 தர்மபுத்திரர், அவருடைய தம்பிகள், திருதராஷ்டிரர் யுயுத்ஸு, ஸஞ்சயர், கிருபர், குந்தீதேவி, காந்தாரி, திரௌபதி, ஸுபத்ரை உத்தரை, த்ரோணருடைய பத்தினியாகிய க்ருபி, இன்னும் மற்ற பந்துக்களின் ஸ்திரீகள், பாண்டுவின் பந்துக்கள் ஆகிய எல்லோரும் தங்களுடைய பிள்ளைகளுடனும், ஸ்திரீகளுடனும் எதிர்சென்று வெகுநாள் தீர்த்தயாத்திரை செய்து திரும்பிவந்த பந்துவாகிய விதுரரைக் கண்டு மிகுந்த சந்தோஷத்துடன் அழைத்தார்கள். அப்படி அழைத்ததானது கை, கால் முதலிய அவயவங்கள் ப்ராணனைக் கண்டு சந்தோஷமடைந்தது போலிருந்தது. மேலும் அவர்கள் விதுரரிடம் வந்து முறைப்படி ஆலிங்கனம்

நமஸ்காரம் முதலியவைகளைச் செய்து வெகுநாள் பிரிந்திருந்ததனால் மிகுந்த ஆசையுள்ளவர்களாய் ஆனந்தக்கண்ணீரைப் பெருக்கினார்கள். அரசனாகிய தர்மராஜனும் ஆசனத்தில் உட்கார்ந்திருக்கும் அந்த விதுரரைப் பூஜித்தார்.

7–11, பிறகு ஆகாரத்தை யுண்டு களைதீர்ந்து ஸுகமாய் உட்கார்ந்திருக்கும் அவரை நோக்கி, தர்ம புத்திரர் பின்வருமாறு கேட்கலானார். பறவைகளால் தங்கள் தங்கள் குஞ்சுகள் சிறகுகளால் மறைத்துக் காப்பாற்றப்படுவது போல நாங்களனைவரும், எங்களுடைய மாதாவுடன் விஷம், அக்னி முதலிய ஆபத்துக்களிலிருந்து உம்மால் காப்பாற்றப்பட்டோம். ஆதலால் எங்களுடைய ஞாபகம் உமக்கிருக்கிறதா? பூமி முழுவதும் சுற்றிய தங்களுக்குத் தேச யாத்ரை எப்படி நடந்தது? எந்தெந்த தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தீர்கள்? எந்தெந்த க்ஷேத்திரம் சென்றீர்கள்? உங்களைப் போன்ற பகவத் பக்தர்களே மிக்க பரிசுத்தமானவர்கள். ஆதலால் அவர்கள் தங்களுடைய மனதில் எப்பொழுதும் பகவான் வஸிப்பதால் தீர்த்தங்களைப் பரிசுத்தப்படுகிறார்கள். மேலும் ஸ்ரீ பகவானையே தெய்வமாகக் கொண்ட நமது சிநேகிதர்களும் பந்துக்களும் யாதவர்களும் உம்மால் பார்க்கப் பட்டார்களா? அவர்களைப் பற்றிக் கேள்விபட்டதுண்டா? அவர்களுடைய பட்டணங்களில் சுகமாக இருக்கிறார்களா?! என்றார்.

12–15 அதனைக் கேட்டு விதுரர் தீர்த்தயாத்திரையின் நிமித்தமாகச் சென்ற விடங்களில் நடந்த சமாசாரங்களைப் பூர்ணமாகத் தர்மராஜனுக்கு சொன்னார்.

ஆனால் யதுகுலத்திற்கு நேர்ந்த கெடுதியை மாத்திரம் சொல்லவில்லை. மனிதர்களால் துக்கம் சகிக்க முடியாதது. ஆகையால் அதை அவர்கள் விரும்புகிற தில்லை யல்லவா ? தவிரவும் விதுரர் மிகுந்த கருணை யுள்ளவர். துக்கமுள்ளவர்களைப் பார்த்துச் சகிக்க மாட்டார். 'ஆனதால் யதுக்களுக்குக் கெடுதி யுண்டாயிற்று என்று சொன்னவுடன் பாண்டவர்கள் வருத்தப்படுவார்கள். அவர்களைப் பார்ப்பது மிகவும் கஷ்டமான கார்யம்' என்று நினைத்தே அதைச் சொல்லவில்லை. பின்பு அந்த விதுரர் பெரிய தமையனராகிய திருதராஷ்டிரருக்கு ஆத்ம தத்துவத்தை உபதேசித்தும், மற்றுமுள்ளவர்களுக்குப் பிரியத்தை விருத்திசெய்து கொண்டும் சில காலம் அவ்விடத்தில் வசித்தார். அவர்கள் விதுரரைத் தெய்வமாக நினைத்துப் பூஜித்தார்கள். மாண்டவ்ய மஹர்ஷியின் சாபத்தால் யமனே இப்படி ஜன்மத்தை அடைந்து விதுரராக பிறந்தவர்; யமன் இப்படி அநேக வர்ஷங்கள் பூலோகத்திலிருக்கும் காலத்தில் அவருடைய உலகத்தில் அர்யமா வென்பவர் பாபிகளுக்கு தக்க சிக்ஷை விதித்துக்கொண்டு அந்த வேலையை நடத்தி வந்தார்.

16. பகவானுடைய சகாயத்தால் தர்மபுத்திரர் ராஜ்யத்தை அடைந்து, தம்முடைய குலவிருத்திக்குக் காரணரும், பௌத்ரருமாகிய பரீக்ஷித், லோகபாலர்கள் போன்ற தம்பிகள் ஆகிய இவர்களுடன் விசேஷ ஐசுவர்யங்களைப் பெற்று ஆனந்தமடைந்தார்.

17–18. பிறகு கிருஷ்ண பகவான் தர்மபுத்திரர் முதலியவர்களிடம் விடைபெற்று, பின் தொடர்ந்துவரும்

பந்துக்களைத் தடுத்துத் திருப்பிவிட்டு அர்ஜுனன், உத்தவர், ஸாத்யகி என்பவர்களுடன் துவாரகா நகரம் சென்றார். இப்படி கிருஹ கிருத்யங்களிலேயே ஆசை யுள்ளவர்களாகவும், அவற்றால் மதித்தவர் களாகவும் அவர்கள் வெகு காலம் கழித்தார்கள். காலத்தை மீறுவதற்குப் ப்ரஹ்மதேவராலும் முடியாதன்றோ ?

19–29. அப்பொழுது விதுரர் அஜ்ஞர்களாகவே இவர்கள் வெகுகாலத்தைப் போக்கிவிட்டார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு திருதராஷ்டிரரை நோக்கி, 'ஓ அரசனே! சமீபத்தில் பயம் நேரிடுகிறதைப் பாரும். சீக்கிரம் பட்டணத்தை விட்டு வெளியில் போகவேண்டும். கால மஹிமையால் நேரும் பயம் ஓரிடத்திலும் ஒரு வகையாலும் தடுக்கமுடியாத தாகையால் அது நம்மெல்லோருக்கும் சமீபித்துவிட்டது. அந்தக் காலம் நேரிடு மானால் ப்ராணனுக்கே அபாயம் உண்டா கிறது. அப்படி யிருக்கையில் பணம் முதலியவைகள் போய் விடுகிறதே என்பதில் என்ன ஆச்சர்யம் ? பிதா, சகோதரர்கள், சிநேகிதர்கள், புத்திரர்கள் ஆகிய இவர்கள் எல்லோரும் சண்டையில் கொல்லப் பட்டார்கள். வயது சென்று விட்டது. சரீரத்தில் ஜரை வந்துவிட்டது; இயற்கையிலேயே நீர் கண் இல்லாதவர். இப்போது கிழத்தனத்தால் உமக்குக் காதுகளும் கேட்கும் சக்தியுள்ளவைகளாயிருக்கவில்லை. புத்தியும் குறைந்திருக்கிறது. பற்கள் உதிர்ந்துபோயின. வயிற்றில் அக்கினி குறைந்து போயிற்று. வியாதி அதிகரித்திருக்கிறது. கபத்தின் வேகம் அதிகமா யிருக்கிறது. இவ்வளவு கஷ்டமான நிலைமையிலும் இன்னும் பிழைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் உமக்கிருப்பது ஆச்சரியப்படத்தக்கதே. மேலும் நீர்

வீட்டில் நெருப்பு வைத்தும், விஷம் கலந்த அன்னத்தைக் கொடுத்தும், இராஜ்யம் முதலிய ஐசுவர்யங்களை அபகரித்தும், இன்னும் பலவகையான கெடுதிகளைப் பாண்டவர்களுக்குச் செய்ததுமல்லாமல் அவர்களுடைய பத்னியை ஸபையில் அவமானப் படுத்தியும் இருக்கிறீர். அவைகளை நினைத்து நினைத்து மிகுந்த கோபத்துடன் பீமஸேனன் வீட்டைக் காத்திருக்கும் நாய்க்குச் சோறு போடுவது போல உமக்கு அன்னம் போடுகிறான். அதனைப் புஜிக்கிறீர், இது மேலான ஜீவனமா? இவ்வளவு தைன்ய மடைந்தும் இனியும் வெகுகாலம் ஜீவிக்க வேண்டு மென்று விரும்புகிறீர். ஆனாலும் கால மகிமையால் வஸ்திரங்கள் கிழிந்துபோவதுபோல உம்முடைய சரீரம் கிழத்தனத்தால் குறைகிறது. கீர்த்தி முதலிய வையிலும், பிரயோஜனமற்ற சரீரத்திலும் அபிமானம் முதலியவைகளை விட்டு எவன் சரீரத்தை விடு கிறானோ அவனே தீரனென்று சொல்லப்படுகிறான். அவன் இன்ன கதியை அடைந்தான் என்று பிறரால் அறிய முடியவில்லை. தவிரவும் குருவின் உபதேசத் தாலாவது, தானாகவாவது, ஸம்ஸாரத்தில் வைராக்யத் தையடைந்து ஸ்திர சித்தமுள்ளவனாகி, ஸ்ரீ மஹா விஷ்ணுவை மனதில் தியானஞ் செய்துகொண்டு வீட்டை விட்டுப் போகிறவனே உத்தமன். இனி வருங்காலம் பெரும்பாலும் நற்குணங்களைக் குறைக்கக் கூடியதாகையால் நீர் பந்துக்களுக்குத் தெரியாமல் வடக்குத் திக்கை நோக்கிச் செல்லும் என்றார்.

30–31. அஜமீட வம்சத்தில் பிறந்த கண்களில்லாதவ (குருட)ரான திருதராஷ்டிரர் தம்பியான விதுரருடைய வார்த்தைக் கேட்டு, பந்துக்களிடம் தமக்கிருக்கும்

ஸ்திரமான அபிமானத்தை விட்டு, தம்பியால் உப தேசிக்கப்பட்ட வழியே வடக்கு திக்கை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது அவருடைய பத்னியும் நல்ல நடத்தையுள்ளவளும், மிக்க பதிவிரதையுமான காந்தாரி என்பவள் தன் புருஷன் பின் சென்றாள். அவ்விருவர்களும் ஹிமய மலைக்குப் போனார்கள். சூரர்களுக்குச் சண்டையில் ஸந்தோஷ முண்டாவது போல் இராஜ்யத்திலிருந்து ஒழிவடைந்தவர்களுக்கு அந்தப் பர்வதமானது மிகுந்த ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியது.

32–35. அன்றைய தினம் காலையில் தர்மபுத்ரர் ஸந்தியோபாஸ்தி செய்து, அக்னி கார்யத்தை முடித்து, எள், பசு, ஸுவர்ணம் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குத் தானஞ்செய்து குருக்களை நமஸ்கரிப் பதற்காக வழக்கப்படி அவர்களுடைய அரண்மனை சேர்ந்தார். அவ்விடத்தில் விதுரர், திருதராஷ்டிரர், காந்தாரி ஆகிய அவர்களையுங் காணாமல் மிகவும் நடுக்கமுள்ளவராய் அங்கிருக்கும் ஸஞ்சயரை நோக்கி, ஓ காவல்கணருடைய புத்ரரே; நம்முடைய பிதிரு வ்யரைக் காணோமே, அவர் எங்கே போனார்? வயது சென்றவரே, தவிரவும் கண்களில்லாதவ வராயிற்றே, தாயாரான காந்தாரியும் எவ்விடம் சென்றாள்? அவள் புத்ர சோகமுள்ளவளே; இவர் களுக்குச் சிநேகிதராகிய விதுரர் போனவிடம் தெரியவில்லையே? நாம் அறியாமையால் ஏதாவது குற்றஞ் செய்தேனோ? அதனால் திருதராஷ்டிரர் என்னிடத்தில் கோபங்கொண்டு மற்ற பந்துக்கள் இறந்து போன துக்கத்தால் தமது பார்யையுடன் கங்கையின் ஜலத்தில் விழுந்து மரணமடைந்தாரா?

எங்களுடைய பிதாவாகிய பாண்டு மஹாராஜன் காலஞ் சென்றபோது சிசுக்களாகிய எங்களை விதுரரும் திருதராஷ்டிரருமே காப்பாற்றினார்கள், அப்படிப்பட்டவர்கள் எவ்விடஞ் சென்றார்கள்? சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

36–38 1/2. இதனைக் கேட்டு ஸஞ்சயர் தம் யஜமானனைக் காணாமல் கவலையுள்ளவராக மிகுந்த தைன்யத்துடன் சிநேகத்தாலுண்டான அதைரியத்தால் வருத்தப்பட்டு உடனே மறுமொழி உரைக்கவில்லை. பின்பு அவர் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே தைரியத்துடன் திருதராஷ்டிரருடைய பாதங்களை நினைத்துக்கொண்டே தர்மபுத்திரரை நோக்கி அவர்கள் போனவிடம் எனக்கும் தெரியாது: மஹாத்மாக்களான அவர்கள் என்னையும் ஏமாற்றிவிட்டார்கள்; நானும் அவர்களைக் காணாமல் கவலையுள்ளவனாயிருக்கிறேன்' என்றார்.

39–41 1/2. இப்படி அவ்விருவர்களும் பேசிக்கொண்டு இருக்கும் பொழுது நாரதர் தும்புருவுடன் அவ்விடத்திற்கு வந்தார். அவரைக் கண்டு தர்ம புத்திரர் தம்பிகளுடன் எழுந்திருந்து நமஸ்காரஞ் செய்து விதிப்படி பூஜித்து, ஓ நாரதரே! மிகுந்த மஹிமை பொருந்திய உம்முடைய தரிசனம் தெய்வச் செயலால் கிடைத்தது. எங்களுடைய பிதாவின் ஸஹோதரர்களான விதுரரும், திருதராஷ்டிரரும், புத்ர சோகமடைந்த காந்தாரியும் இன்னவிடம் போனார்களென்று தெரியவில்லை. அவர்களைக் காணாமல் துக்கமாகிய சமுத்திரத்தில் சழ்கியிருக்கிறோம். அது கரையற்றது, இந்த சமயத்தில்

கப்பல்காரர்போல நீங்கள் வந்திருக்கிறீர்கள், எங்களைக் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

42–63. இதைக் கேட்டு நாரதர் தர்மபுத்திரரை நோக்கி, 'ஓ தர்மபுத்திரரே! ஜகத் யாவும் ஈசுவரனுக்கு வசப்பட்டவை. (பிராணிகளைச் சேர்த்துவைப்பவர் அவரே. அவைகளைப் பிரிப்பவரும் அவரே) ஆகையால் ஒருவரைப் பற்றியும் துக்கிக்காதீர். மூக்குக் கயிறுள்ள எருதுகள் போலும் தந்திரியில் (பிணையல்) சிறு கயிறுகளால் கட்டப்பட்ட பசுக்கள் போலவும் எல்லா லோகங்களும், லோக பாலர்களும் வேதங்களாகிய நீண்ட கயிற்றில் வர்ணாசிரமம் முதலிய சிறுகயிறுகளால் கட்டப்பட்டு, பரமேசுவரனுடைய கட்டளையை நிறைவேற்றுகிறார்கள். உலகத்தில் விளையாட்டுக் கருவிகளை விளையாடுகிறவன் தனதிஷ்டப்படி சிலவேளை சேர்த்தும், பிரித்தும் வைப்பதுபோல மனிதர்கள் சேர்ந்திருப்பதற்கும் பிரிந்து போவதற்கும் பகவான் உடைய விருப்பமே காரணம். இவ்வுலகத்தை ஜீவரூபமாக நித்யமென்று நினைத்தாலும் எவ்விதத்திலும் பந்துக்களைப் பற்றித் துக்கிக்க நியாயமில்லை. மோகத்தால் அபிமானம் வைத்ததாலேயே துக்கம் நேரிடுகிறது. மேலும் ஜகத்தை நித்யா நித்யமென்று சொல்வது பொருந்தாது. ஆகையால் அஞ்ஞானத்தால் ஏற்பட்ட அதைரியத்தை விட்டு விடும். ஆனால் என்னை விட வேறு கதியில்லாத திருதராஷ்டிரர் முதலியவர்கள் நானில்லாமல் எப்படி ஜீவிப்பார்கள், என்று கேட்கலாம், அப்படி நினைப்பது சரியன்று. பத்துப் பூதங்களாலுண்டான இந்தச்சரீரம் காலத்திற்கும், கர்மத்திற்கும் வசப்பட்டது. ஆகையால் நம்முடைய சரீரமே அழியும் சுபாவமுள்ளது. மலைப்

பாம்பின் வாயில் அகப்பட்டவனால் எப்படி மற்றவனை இரட்சிக்க முடியாதோ அதுபோல், நாம் பிறரைக் காப்பாற்றுவது சாத்தியமன்று. கைகளுள்ள ஜந்துக்களான மனிதர்கள் முதலியவர்களுக்குக் கைகளில்லாத பசு முதலியவைகளும், நாற்கால் பிராணிகளுக்குப் புல் முதலியவைகளும், புலி முதலிய பெரிய ஜந்துக்களுக்கு அல்படலமுள்ளவைகளும் எப்படி ஆகாரமாகின்றனவோ அப்படி எல்லா ஜீவனும் வேறு ஜீவனுக்கு ஆகாரமா யிருக்கிறது. ஆதலால் எல்லாம் மரணடயமுள்ளதாகவே காணப்படுகின்றன. ஏ தர்மபுத்திரரே! இந்த ஜகத் யாவும் பகவானுடைய ஸ்வரூபமேயொழிய வேறில்லை. அவர் ஒருவரே, போக்தர் (அனுபவிப்பவர்) போக்தா வின். ஸ்வரூபமாய் இருப்பவர் அவரே. போக்கிய ருபமாயுமிருப்பவர் அவரே. ஆனாலும், மாயையால் பலவகையாகத் தோன்றுகிறார். ஏ மகராஜ! ஸகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாக வசிக்கும் பகவான் தேவவிரோதிகளான அசுரர்களைக் (அசுரர் களுடைய அம்சமுள்ள இராஜாக்களைக்) கொல் வதற்காகக் காலங்காலமாய் துவாரகையில் வசிக்கிறார். தேவகாரியம் அநேகமாக முடிந்துவிட்டது. மிச்சமான பாகத்தை முடிக்கக் காலத்தை எதிர்ப் பார்த்திருக்கிறார். பகவான் இவ்வுலகத்திலிருக்கும் வரையில் நீங்களும் இவ்வுலகத்தில் வசிக்கலாம். திருதராஷ்டிரர் தம்பியாகிய விதுரருடனும், காந்தாரி யுடனும் இமயமலையின் தென்பாகத்தில் மகர்ஷி களுடைய ஆசிரமம் போயிருக்கிறார், அவ்விடத்தில் கங்கா நதியானது ஸப்தரிக்ஷிகளுடைய பிரீதியின் நிமித்தம் ஏழு வகையாக ஓடிற்று. அதனால் ஸப்த ஸ்ரோதஸ் என்று பெயருண்டாயிற்று. அந்தத் தீர்த்தத்தில் ஒவ்வொரு காலத்திலும் திருதராஷ்டிரர் ஸ்நானஞ்

செய்து அக்னிகாரியஞ்செய்து ஜலத்தைப் புசித்து, சாந்தமனமுள்ளவராய் ஆசைகளையும் ஒழித்து, சாஸ் திரத்தில் சொல்லியபடியுள்ள ஆசனத்தையடைந்து சுவாசத்தை யடக்கி, இந்திரியங்களை விஷயங்களில் செல்ல வொட்டாமல் அடக்கிப் பகவானையே மனத்தில் தியானஞ் செய்து அதனால் ராஜஸ, தாமஸ தோஷங்களை நிவர்த்தித்துக்கொண்டு, மனத்தை ஸ்தூல தேஹத்திலிருந்து புத்தியுடன் ஒன்றாகச் சேர்த்து, அந்தப் புத்தியைப் பார்க்கப்படும் விஷயங்களிலிருந்து க்ஷேத்ரக்ஞனுடன் சேர்த்து, அந்த க்ஷேத்ரக்ஞனைப் பார்க்கிறவரிடமிருந்து பிரித்து, கடாகாசத்தைக் கடத்திலிருந்து பிரித்து மகாகாசத்தில் சேர்ப்பது போல ஸகலத்திற்கும் ஆதாரமாகிய ப்ரஹ்மத் தினிடம் சேர்த்து, மாயையின் வாஸனையை யழித்து, இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கி, ஆகாரங் களை நிவர்த்தித்துக் கட்டைபோல அசையாமல் இருக்கிறார். ஸகல கர்மங்களையும் விட்டவரான அவருக்கு நீர் இடையூறாக வேண்டாம். மேலும் இன்று முதல் ஐந்தாவது நாளில் அவர் சரீரத்தை விடப் போகிறார். அந்தச் சரீரம் உடனே எரிந்து போகும் திருதராஷ்டிரருடைய சரீரம் பர்ணசாலை யுடன் கார்ஹபத்யம் முதலிய அக்னிகளால் எரிக்கப் படும்போது ஆசிரமத்திற்கு வெளியிலிருக்கும் அவருடைய பத்னியும் பதிவ்ரதை யுமான காந்தாரி யானவள் உடன் கட்டையேறிச் சரீரத்தை விட்டு விடுவாள், விதுரர் இந்த ஆச்சரியத்தைக் கண்டு திருதராஷ் டிரருக்கு நல்ல கதி கிடைத்ததால் சந்தோஷித்து அவரை விட்டுப் பிரிந்ததால் கொஞ்சம் துக்கத்தை அடைந்தும் தீர்த்த யாத்திரைக்குப் போவார். ஆகையால் அவர்களை அழைத்து

வருவதற்காகவது, அவருடைய சரீரத்தைத் தகிப்பதற்காகவது நீர் போக வேண்டியதில்லை என்று சொல்லி, நாரதர் தும்புருவுடன் ஸ்வர்க்கம் சென்றார். தர்மபுத்திரரும் நாரதருடைய வார்த்தையைக் கேட்டு அதை மனத்தில் வைத்துச் ஸகல துக்கங்களையும் நிவர்த்தித்துக் கொண்டார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம் 14

தர்மபுத்திரருக்கு நேர்ந்த அபசகுனங்கள்

பந்துக்களைப் பார்ப்பதற்கும், புண்ணிய ச்லோக ராகிய கிருஷ்ணனுடைய அபிப்ராயத்தைத் தெரிந்து கொள்ளுவதற்கும் துவாரகா நகரஞ் சென்றிருந்த அர்ஜுனன், சென்று சில மாஸங்களாகியும் திரும்பி வரவில்லை, அப்பொழுது அஸ்தினாபுரத்தில் மிக்க கோரங்களான அபசகுனங்கள் ஏற்பட்டன. மனிதர்கள் உடைய மனதில் கோபம், ஆசை, பொய், ஆகிய இவைகளுண்டாயின. மனிதர்கள் பாபமான காரியத்தைச் செய்து ஜீவித்தார்கள். பெரும்பாலும் ஜனங்கள் கபடமாகப் பேசினார்கள். தோழர்களும் வஞ்சனையாக பேசிக் கொண்டார்கள். பிதா, மாதா, மித்ரன், சகோதரர்கள், தம்பதிகள் ஆகிய இவர்கள் யாவரும் ஒருவருக்கொருவர் கலகம் செய்து கொண் டார்கள். தகப்பன்மார்கள் பணம் வாங்கிக் கொண்டு பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொடுத்தார்கள். புத்திரர்கள் பிதாவைக் காப்பாற்றுவதில்லை. ப்ராஹ்மணர்கள் வேதத்தில் சிரத்தை இல்லாதவர்கள் ஆனார்கள். மேலும் சூத்திரர்கள் வேதத்தைப் படிக்க ஆரம்பித்தார்கள். இப்படிக் காலகதி கோரமா யிருந்தது. இப்படி காலமானது மாறிப் போனதால், மனிதர்களுக்கு ஏற்பட்டிருக்கும் லோபம் முதலிய மனத்தின் துர்க்குணங்களையும், அதர்மத்தை அனுஷ் டிப்பதாகிய சரீர துர்க்குணத்தையும், மிகுந்த அபச குனங்கள் நேரிடுவதையும் கண்டு தர்மபுத்திரர் பீமசேனனை நோக்கி, 'ஓ பீம! பந்துக்களைப் பார்ப் பதற்காகவும், புண்ணிய ச்லோகராசிய கிருஷ்ணன்

னுடைய எண்ணத்தைத் தெரிந்து கொள்ளு வதற்காகவும் துவாரகா நகரம் சென்ற அர்ஜுனன், ஏழு மாதங்களாகியும் இன்னும் வரவில்லை, அதன் காரணமும் இன்னதென்று தெரியவில்லை, எவருடைய அனுக்கிரகத்தால் இராஜ்யம், ஸ்திரீ, ப்ராஹ்மணன், குலவிருத்தி, சத்ருக்களை ஜயிப்பது, ஐசுவரியம், உத்தம லோகங்கள் ஆகிய இவைகள் நமக்குக் கிடைத்தனவோ, அந்தப் பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய சரீரத்தை விடப் போகிறாரென்று தேவர்ஷியாகிய நாரதர் சொன்ன காலம் வந்து விட்டது போலிருக்கிறது. அந்தப் பகவானை விட்டுப் பிரிவதைக் காட்டிலும் வேறு நமக்கு கெடுதி நேரிட நியாயமில்லை. ஓ புருஷசிரேஷ்டா! ஆகாயத்தில் உண்டானவைகளும், பூமியில் உண்டாகின்றவைகளும், சரீரத்தில் காணப்படுகின்றவைகளுமான அபசகுனங் களைப்பார். புத்திக்கு மோகமும் மிக்க கடுமையுமான பயம் வரப்போகிறதென்பதை இவைகள் காட்டு கின்றன. இடக்கண்ணும், இடத்தொடையும் அடிக்கடி துடிக்கின்றன. இருதயத்தில் நடுக்க முண்டாகிறது. அந்த தைஹிகமான அபசகுனத்தால் வெகு சீக்கிரத்தில் கெடுதி நேரிடுமென்று காட்டப்படுகிறது.

13-23. இந்தப்பெட்டை நரியானது குறைக் கொள்ளியை வாயில் கௌவிக்கொண்டு உதயமாகும் சூரிய மண்டலத்தைப் பார்த்து ஊளையிடுகிறது. நாயானது என்னைப் பார்த்துப் பயமில்லாமல் அழுகிறது. என்னைப் பசு முதலிய மேலானவைகள் இடமாகவும், கழுதை முதலியவைகள் வலமாகவும் சுற்றுகின்றன, குதிரைகள் அழுகின்றன. வரும் மரணத்தைக் குறிக்கும் மாடப்புறாவும், கோட்டானும்

அதற்கு விரோதியான காக்கையும் விகாரமாகக் கத்துகின்றன. இவைகளைக் கேட்க மனம்நடுங்கு கிறது; ஜகத்தானது சூனியமாய் விடுமென்று நினைக் கிறேன். திக்குகள் அழுக்கடைந்து நன்றாய் விளங்க வில்லை, பரிவேஷம் (சூரியன், சந்திரன் இவர்களைச் சுற்றிக் கோட்டைக் கட்டுவது) உண்டாயிருக்கிறது; பூமியானது மலைகளுடன் அசைகிறது. மேகங்களின் மறைவில்லாமல் ஆகாயம் சுத்தமாயிருக்கும்போதும் இடியுண்டாகிறது; அகாலத்தில் மேக கர்ஜிதம் கேட்கிறது. மண்காற்று கடுமையாக வீசுகிறது. இருட்டுப் பரவுகிறது. மேகங்கள் வெறுக்கக் கூடிய வையாக எல்லா விடங்களிலும் இரத்த மழையைப் பொழிகின்றன; சூரியனுடைய தேஜஸ் மங்கிவிட்டது ஆகாயத்தில் கிரகங்கள் யுத்தஞ் செய்கின்றன, ருத்ரருடைய பரிவாரங்களாகிய பூதகணங்கள் மற்ற ப்ராணிகளுடன் சேர்ந்து எங்கும் பரவியிருப்பதால் ஆகாயம், பூமி இவைகள் தீப்பட்டவைபோலிருக் கின்றன. ஆறுகளும், நதிகளும் (மேற்கு முகமாய்ச் செல்லுகிறவைகள்), குளங்களும் ஏரிகளும், பிரஜை களுடைய மனமும் கலங்கிவிட்டன. ஆஜ்யம் (நெய்) முதலியவைகளை ஹோமஞ் செய்வதால் அக்னி ஜ்வலிக்கிறதில்லை, இந்தக் காலம் எதனைச் செய்யப் போகிறதோ தெரியவில்லை. மேலும் குழந்தைகள் ஸ்தன்ய பானஞ் செய்யவில்லை. தாயார்களுடைய ஸ்தனங்களில் பாலும் பெருகவில்லை. பூக்கள் கண்ணீரைப் பெருக்கி அழுகின்றன. கொட்டிலி லிருக்கும் ஹ்ருஷபங்கள் சந்தோஷமாக இருக்கவில்லை. தேவதாப் பிரதிமைகள் அழுகின்றவை போலிருக் கின்றன, அவை அசைகின்றன. இந்தச் தேசமும், கிராமங்களும், பட்டணங்களும், உத்தியானங்களும்,

இரத்தினம் விளையும் பூமிகளும், ஆசிரமங்களும் பிரகாசியாமல் இருப்பதுடன் அவைகளில் வசிப்பவர்களும் சந்தோஷமற்றவர்களாய் இருக்கிறார்கள், இவைகள் நமக்கு எவ்விதமான துக்கத்தைக் காண்பிக்கப் போகின்றனவோ, இப்படிப்பட்ட பெரிய உற்பாதங்களைப் பார்க்கும் போது மற்ற புருஷர்களுடைய பாதங்களில்லாத வஜ்ரரேகை முதலியவைகளால் அலங்கிருதமான ஸ்ரீ பகவானுடைய பாதங்களின் ஸ்பரிசம் பூமிக்கு இல்லாமல் பூமிதேவி பாக்கியக்குறை உள்ளவளாய் ஆகிவிடுவாள்போலத் தோன்றுகிறது என்றார்.

24–45. இப்படி தர்மராஜரும் பீமஸேனரும் பேசிக் கொண்டிருக்கும்போது அர்ஜுனன் துவாரகா நகரத்திலிருந்து திரும்பிவந்து தர்மபுத்திரரை நமஸ்கரித்தான். அப்பொழுது அர்ஜுனன் முன்போலிராமல் மிக்க மனவருத்தமுள்ளவனாகவும், தலையைக் குனிந்து இரு கண்களிலும், நீரைப் பெருக்கித் துக்கித்தவனாயுமிருந்தான்; இப்படிச் சோபையில்லாமலிருக்கும் அர்ஜுனனைப் பார்த்து தர்மபுத்திரர் பயந்து, பந்துக்களின் நடுவில் தம்பியை நோக்கி, ஓ அர்ஜுன துவாரகா நகரத்தில் நம்முடைய பந்துக்களாகிய யாதவர்கள், போஜர்கள், தாசார்ஹர்கள், ஸாத்வதர்கள், வ்ருஷ்ணிகள், தூயரும் பூஜ்யருமாகிய, மாதாமகர், அம்மானாகிய வசுதேவர், அவருடைய தம்பிகள் உக்ரசேனருடைய சகோதரிகளும், வசுதேவருடைய பத்தினிகளுமான தேவகி முதலிய ஏழு ஸ்திரீகள், அவர்களுடைய புத்திரர்கள், மருமகள் ஆகிய இவர்கள் க்ஷேமமாயிருக்கிறார்களா? கெட்ட பிள்ளையுள்ள அரசனாகிய உக்ரசேனர், அவருடைய

தம்பியாகிய தேவகர் ஆகிய இவர்கள் பிழைத்திருக்கிறார்களா? மேலும் ஹிருதிக (ச்வல்பர்)ருடைய பிள்ளையான அக்ரூரர், ஜயந்தன், கதன், சாரணன், ஸத்யஜித் அல்லது சத்ருஜித் முதலியவர்கள் க்ஷேமமாய் இருக்கிறார்களா? மேலும் சாத்வதர்களுக்கு அதிபதியான பலராமன் ஸகல விருஷ்ணிகளுக்குள் மகாரதரும் யுத்தத்தில் கம்பீர வேகமுள்ளவருமான பிரத்யும்னர், ஸுஷேணர், சாருதேஷ்ணர் ஜாம்பவதியின் புத்திரராகிய சாம்பர், மற்ற ரிஷப குமாரர்கள், பகவானுடன் சஞ்சரிக்கும் சுருததேவர், உத்தவர் முதலியவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனையும் பல ராமனையும் ஆசிரயித்த யாதவ சிரேஷ்டர்களாகிய சுநந்தர், தந்தர் முதலியவர்கள் ஆகிய பந்துக்கள் எல்லாரும் க்ஷேமமாயிருக்கிறார்களா? மேலும் அவர்கள் நம்மிடத்தில் பிரியத்துடன் நம்மை நினைத்துக் கொண்டிருக்கிறார்களா? ப்ராஹ்மணர்களிடம் விசேஷ பக்தியுள்ளவரும், பக்தர்களிடத்தில் பிரீதியுள்ளவருமான ஸ்ரீ கிருஷ்ண பகவான், உலகங்களுடைய மங்களத்திற்காகவும் க்ஷேமத்திற்காகவும் (கிடைத்ததைக் காப்பாற்றுவதற்காகவும்) துவாரகா நகரத்தில் மித்திரர்களுடன் ஸுதர்மையில் ஸுகமாக வசிக்கிறாரா? எந்த ஸ்ரீ பகவானுடைய இருகைகளால் காப்பாற்றப்பட்ட துவாரகையில் பந்துக்கள் நன்றாகப் பூஜிக்கப்பட்டு மிகுந்த ஆனந்தத்துடன் பார்ஷதகணங்கள் போல ஸஞ்சரிக்கிறார்களோ, அந்த ஸ்ரீ பகவான் பலராமனுடன் யதுகுலத்தில் பிரகாசிக்கிறாரா? ஸத்யபாமா முதலிய பதினாயிரம் ஸ்திரீகளும் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய பாதஸேவையே தபஸ் முதலியவைகளைக் காட்டிலும் மேலானது என்று நினைத்து அவருக்குச் சிசுருஷை செய்து வருகிறார்களா?

அவர்களுக்குப் பகவான் தம்முடைய பலத்தால் தேவர்களை ஜயித்து, அவர்களால் அனுபவிக்கக் கூடியவைகளும் இந்திராணிக்குத் தகுதியானவை களுமான பாரிஜாதம் முதலியவைகளைக் கொடுத் தாரல்லவா? எந்தப் பகவான் தேவர்களை ஜயித்து, தேவ சிரேஷ்டர்கள் வசிக்கக்கூடிய சுதர்மா என்ற சபையை பலாத்காரமாகப் பூமியில் கொண்டுவந்து, அதில் தம்முடைய கைகளின் பலத்தை அவலம்பித்து, ஜீவிக்கும் யாதவர்கள் வஸிக்கும்படியாகச் செய்தாரோ, அந்தப் பரமபுருஷன் ஸுகமாக வாசஞ் செய்கிறாரா? (அவர் பூமியில் வஸித்தால்தான் நமக்கும் ஜனங்கள் ளுக்கும் க்ஷேமமுண்டாகுமென்பது கருத்து) மேலும் குழந்தாய் அர்ஜுன! உனக்குத் தேஜஸ் குறைந்திருப் பதாகத் தோற்றுகிறதே, சரீரத்தில் வியாதி இல்லாம லிருக்கிறதா? வெகுநாளாகத் துவாரகா நகரத்தில் வசித்ததால் பந்துக்கள் உன்னைக் கௌரவப்படுத்த வில்லையா? அல்லது அவமதித்தார்களா? அல்லது பிரியமற்ற நிஷ்டூர வார்த்தைகளைச் சொன்னார்களா? அதனால் மனவருத்த மடைந்தாயா? அல்லது யாசகர்களுக்குச் சிலவற்றைக் கொடுப்பதாகப் ப்ரதிக்ஞை செய்து, பின்பு ஆசையால் அவற்றை அவர்களுக்குக் கொடுக்கத் தவறிப் போனாயா? எல்லாரையும் நீ காப்பாற்றும் ஸ்பாவமுள்ள வனன்றோ? அப்படிப்பட்டவன், ப்ராஹ்மணன், குழந்தை, பசு, வயது சென்றவர், வியாதியுள்ளவர், ஸ்திரீ, மற்றைப் ப்ராணிகள் இவர்களில் சரண மடைந்தவரைக் காப்பாற்றாமல் விட்டுவிட்டாயோ? ஆசைப்படக்கூடாத ஸ்திரீயினிடம் ஆசைபடாமலிருக் கிறாயா? விரும்பக்கூடிய ஸ்திரீ அழுக்கு வஸ்திரம் முதலியவைகளுள்ளவளானாலும் அவளிடம் அனுராகம்

வைக்காமலிருக்கிறாயோ? அல்லது வழியில் மேலான வர்களாலாவது, ஸமமானவர்களாலாவது? ஜயிக்கப் படாமலிருக்கிறாயோ? அல்லது குழந்தைகளுக்கு அன்னமிடாமல் புசித்தாயோ? (அதிதிகள் வேலைக் காரர்கள் கர்ப்பிணி, ரோகிகள், கன்னிகைகள் இவர்களுக்கு ஆகாரங் கொடாமல் புசித்தாயோ?) இன்னும் மற்ற கெட்ட காரியங்கள் எவையேனும் உன்னால் அனுஷ்டிக்கப்பட்டனவோ? மிகவும் பிரியரும், அந்தரங்க பந்துவுமான ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப் பிரிந்தோமேயென்று வருத்தப்படுகிறாயோ? உனக்கு இதை விட வேறு வியாதி ஒன்று மிருக்க நியாயமில்லை என்று கேட்டார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்15

தர்மபுத்திரர் பரலோகஞ்சென்றது.

1–7, இம்மாதிரி தர்மபுத்திரர் பலவகையாகச் சந்தேகம்படும்படி அர்ஜுனனுடைய சரீரத்தில் காந்தியின் குறைவு முதலியவைகள் உண்டாயிருந்தன. அவர் ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப் பிரிந்ததால் விசேஷ வருத்தமடைந்தார். அந்தத் துக்கத்தாலேயே தாமரை மலர்போன்ற அவருடைய முகமும் ஹிருதயமும் வாடி இருந்தன. தேஜஸ் குறைந்திருந்தது. பிரபுவாகிய அந்த ஸ்ரீ கிருஷ்ணபகவானையே மனத்தில் தியானித்துக் கொண்டிருந்ததனால் சீக்கிரமாக விடைசொல்ல முடியாதவராயிருந்தார்.

பிறகு மிகச் சிரமப்பட்டுத் துக்கத்தை மனத்தில் அடக்கிக் கைகளால் கண்களைத் துடைத்து, பகவான் தம்மிடம் வைத்திருந்த சக்யம். மைத்ரி, ஸமஹ்ருத் துவம் முதலியவைகளை நினைத்துக் கொண்டும் துக்கத்தினால் கண்டமடைத்து அரைகுறையான வார்த் தையுள்ளவராகத் தமையனை நோக்கி. ஓ மகாராஜ! ஸ்ரீ கிருஷ்ண பகவான் பந்துவாக விருந்து என்னை ஏமாற்றினார். தேவர்களாலும் ஆச்சரியப்படக்கூடிய என்னுடைய மிகுந்த தேஜஸ்ஸை அபஹரித்தார். எந்தப் பகவான் பூமியை விட்டுப்போனதால் இவ்வுலகம் முழுவதும் ப்ராணனில்லாத சரீரம் போலப் பார்க்க அழகாக இருக்கவில்லையோ, (துரித்திரன் போலவென்றும் சொல்வதுண்டு) தவிரவும், துருபத மகாராஜனுடைய சபையில் திரௌபதியின் சுயம்வரத்திற்காக வந்தவர்களும், மன்மதனால் மதித்த

வர்களுமான அரசர்களுடைய தேஜஸை எவர் தமது பார்வையாலேயே அபகரித்தாரோ, எவருடைய அனுக்கிரகத்தால் நான் மத்ஸ்ய யந்திரத்தைப் பிளந்து திரௌபதியைக் கல்யாணஞ் செய்து கொண்டேனோ, எவருடைய ஸான்னித்தியத்தால் காண்டவ வனத்தை அக்கினி பகவானுக்குக் கொடுத்து அதற்கு விரோதஞ்செய்யும் தேவேந்திரனை ஜயித் தேனோ, எவருடைய ஒத்தாசையால் மயனால் உண்டு பண்ணப்பட்டதும், மிகவும் ஆச்சரியகரமானதும், மாயா மயமாயுள்ள சபையானது நம்மால் அடையப் பட்டதோ, மேலும் எவருக்காக வந்த அரசர்கள் மிக்க உத்தம வஸ்துக்களைக் காணிக்கையாகக் கொடுத்தார்களோ, எந்த பரம புருஷன் சமீபத்தில் இருந்தால் உங்களுடைய தம்பியும் அநேக யாஜனை பலமுள்ளவருமான பீமஸேனர் ராஜஸூயயாகத் திற்காக ஜராசந்தன் என்பவனைக் கொன்றாரோ, ஜராசந்தனால் காராகிருகத்தில் அடைக்கப்பட்டிருந்த அரசர்கள் எவரால் விடுவிக்கப்பட்டு உங்களுடைய யாகத்திற்குக் காணிக்கைகளுடன் வந்தார்களோ, ராஜஸூயயாகத்தில் மஹாபிஷேகத்தையடைந்ததும், மேலானதுமான திரௌபதியின் தலைமயிரை துச்சாதனன் பிடித்து இழுக்கும்பொழுது உம்முடைய பத்னியாகிய அவள் எந்தப் பகவானை ஸ்மரித்தாளோ, எவர் உடனே அவ்விடம் வந்து சேர்ந்தாரோ, எவரை நமஸ்கரிக்கும் பொழுது திரௌபதியின் கண்ணீர் எவருடைய காலில் விழுந்ததோ, எவர் துச்சாசனன் முதலியவர்களுடைய ஸ்திரீகள் தலைமயிரை விரித்துக்கொண்டு அழும்படி செய்தாரோ, மேலும் பதினாயிரம் ஸிஷ்யர்களுடன் போஜனம் செய்பவரான துர்வாசஸஸ் என்னும் மஹர்ஷி

நமது சத்துவாகிய துர்யோதனனால் தூண்டப்பட்டு, நம்முடைய ஆசிரமம் வந்தபொழுது எந்தப் பகவான் (கீரையை) தாம் புசித்து அதனால் மூவுலகத்தில் இருக்கும் துர்வாசஸ் முதலிய மகரிஷிகளையும் திருப்தியடையச் செய்து நம்மைக் காப்பாற்றினாரோ, யாருடைய தேஜஸ்ஸினால் பரமசிவன் பார்வதியுடன் கூட ஆச்சரியமடைந்து பாசுபதமென்ற தமது அஸ்திரத்தை எனக்குக் கொடுத்தாரோ, மற்றுமுள்ள தேவர்களும் அவரவர்களுடைய அஸ்திரங்களையும் கொடுத்தார்களோ, இச்சரீரத்துடனேயே நான் ஸ்வர்க்க லோகத்தில் இந்திரனுடைய ஆசனத்தையும் அடைந்தேனோ, மேலும் ஸ்வர்க்கத்திலேயே வெகு காலம் வசித்துத் தேவர்களுக்கு விரோதியான அசுரர்களைக் கொன்றேனோ, அந்தப் பரமபுருஷன் என்னை இப்பொழுது ஏமாற்றிவிட்டார். கரையற்ற கௌரவ ஸைன்யமாகிய சமுத்திரத்தை எவருடைய ஒத்தாசையால் நான் ஒருவனாகத் தாண்டினேனோ, பின்னும் சத்துருக்களால் அபகரிக்கப்பட்ட பசுக்களையும் அவர்களுடைய தேஜஸ்ஸிற்கு இருப்பிடமான இரத்தினக் கிரீடங்களையும் பிடுங்கிக் கொண்டேனோ, பீஷ்மர், கர்ணர், துரோணர், சல்யர் இவர்களுடைய ஸைனியங்கள் மிகுந்த பலமுள்ள க்ஷத்திரியர்களால் அலங்கரிக்கப்பட்டவையானாலும், அவைகளின் நடுவில் எந்தக் கிருஷ்ண பகவான் என்னுடைய ரதத்தில் சாரதியாகவிருந்து ஒவ்வொரு சேனாதிபதிகளுடைய ஆயுஸ்ஸையும், மனோபலத்தையும், தேகபலத்தையும் பார்வையாலேயே குறைத்து விட்டாரோ, விஷ்ணுபக்தனாகிய ப்ரஹ்லாதன் இடத்தில் ஹிரண்யகசிபுவினால் தூண்டப்பட்ட அரசர்களுடைய கொடுமைபோல் எந்தக் கிருஷ்ணனால்

காப்பாற்றப்பட்ட என்னிடத்தில் அளவற்ற மஹிமையுள்ளவர்களான துரோணர், பீஷ்மர், கர்ணன், அசுவத்தாமா, ஸுசர்மா, சல்யர், ஜயத்ரதர், பாஹ்லீகர் இவர்களால் ப்ரயோகிக்கப்பட்ட அஸ்திரங்கள் வீணாகப்போயினவோ, மேலும்; ஜயத்ரதனைக் கொல்லும்பொழுது தண்ணீர் குடிக்காததனால், குதிரைகள் களைத்துப்போக, இரதத்திலிருந்து எந்தப் பகவான் கீழே இறங்கி, பாணத்தால் பூமியைப் பிளந்து. அதிலிருந்து ஜலத்தையுண்டுபண்ணினாரோ, அப்பொழுது எவருடைய மஹிமையால் சத்ருக்கள் மெய்மறந்து என்னை அடிக்காமலிருந்தார்களோ, அந்த மகாபுருஷரும், மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியவருமாகிய பகவானை சாரதியாய் வைத்துக் கொண்டேனோ, நான் மிகவும் அற்ப புத்தியுள்ளவன். அந்த அபராதத்தால்தான் என்னை அவர் ஏமாற்றிவிட்டாரோ, தெரியவில்லை!

18–27. லக்ஷ்மீபதியாகிய பகவான், "ஓ பார்த்த! (குந்தியின் புத்ரன்) ஓ அர்ஜுன! ஓ குரு நந்தனா! (கௌரவர்களைச் சந்தோஷப்படுத்திகிறவன்) ஏ தோழா! என்று சிரித்துக்கொண்டு பலவகையாக வேடிக்கை வார்த்தைகளைப் பேசினார் அல்லவா? அவைகள் யாவும் இப்பொழுது என் மனத்திலிருக்கின்றன.ஒரே படுக்கையில் படுத்துக்கொள்வது, ஒரே ஆசனத்தில் உட்காருவது, சேர்ந்தே ஸஞ்சரிப்பது புசிப்பது, தம்முடைய குணங்களை தோத்திரம் செய்து கொள்வது, ஆகிய இவைகளால் எங்களிருவர்களுக்கும் மனமும் ஒன்றுபட்டிருந்ததால் சில சமயம் நீர் சொன்ன படி செய்தார் அல்லவா என்று நான் கிருஷ்ணனைப்

பரிகாசஞ் செய்தாலும் தகப்பன் பிள்ளை செய்த பிழையைப் போலவும், அற்ப புத்தியுள்ள என்னுடைய குற்றத்தை விசேஷ மஹிமை பொருந்திய வராகையால் ஸகித்திருந்தார், என்னிடத்தில் மிகவும் மித்ரரும், அளவற்ற பிரீதியுள்ளவரும், அனுகூலத்தைச் செய்ய விரும்பியவருமான புருஷோத்தமனை விட்டுப்பிரிந்து, வழியில் அந்தப் பகவானுடைய களத்திரங்களைக் காப்பாற்ற முயன்றும் சக்தியற்றவனாக அஸத்துக்களால் ஸ்திரீயானவள் போல கோபர்களால் ஜயிக்கப் பட்டேன். இந்த காண்டீபம், பாணங்கள், ரதம், குதிரைகள், ரதியாகிய நான் ஆகிய எல்லாம் முன்னிருந்தவைகளானாலும் பகவானிருந்த. வரையில் அவையெல்லாம் காரியத்திற்கு உபயோகப்பட்டன; பகவான் ஸ்வர்க்கம் போன பிறகு ஒருக்ஷணத்திற்குள் சாம்பலில் செய்த ஆஹுதிபோலவும், வஞ்சகனுக்குத் தானம் செய்தது போலவும், களர் பூமியில் பயிரிடுதல் போலவும் பிரயோசனமற்றவைகளாயின. ஓ மகாராஜ! துவாரகா நகரத்தில் வசிக்கும் பந்துக்களுடைய க்ஷேமத்தை விசாரித்தீரல்லவா? அவர்கள் எல்லாரும் ப்ராஹ்மண சாபத்தால் மூடர்களாய், மத்யத்தைக் குடித்து மதங்கொண்ட..வர்களாய் ஒருவருக்கொருவர் பந்துக்களல்லாதவர்கள் போல் முஷ்டியால் அடித்துக் கொண்டு, நான்கு ஐந்து பெயர்கள் தவிர மற்றவர்கள் எல்லாரும் இறந்தார்கள், பிராணிகள் ஒருவரை யொருவர் காப்பாற்றுவதும், ஒருவரை யொருவர் கொல்வதுமாகி எல்லாம் பகவானுடைய இச்சையே தவிர வேறில்லை, ஜலத்தில் மத்ஸ்யம் முதலிய ஜந்துக்களில் பெரியவைகள் சிறிய ப்ராணிகளைக் கொல்வதுபோல் ஸகல ப்ராணிகளிலும் பலசாலிகள் அற்ப பலமுள்ளவர்களை ஜயிக்கிறார்கள், இப்படியே

யாதவர்களும் ஒருவருக்கொருவர் அடித்துக்கொள் ளும்படி பகவான் செய்து பூமியின் பாரத்தைப் போக்கினார், தேசத்திற்கும் காலத்திற்கும் தகுந்த வைகளும், மனத்தின் தாபங்களைப் போக்கக் கூடிய வைகளுமான கோவிந்தனுடைய வார்த்தைகளை நினைக்க நினைக்க அவைகள் மனதை அபஹரிக் கின்றன என்று பிரலாபித்தார்.

28–31. இப்படி அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரைமலர் போன்ற பாதங்களை நினைத்து அவரிடம் விசேஷ பக்தியை அடைந்தார். அதனால் சித்த சுத்தி உண்டாயிற்று. சண்டையில் பகவானால் உபதேசிக்கப்பட்ட ஞானமானது, கால மகிமையாலும், கர்ம வசத்தாலும் தமோ குணத்தாலும் மறைக்கப்பட்டிருந்தது, அதனால் அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய திவ்ய சரணங்களைத் தியானித்து பூர்ணமான பக்தியை அடைந்துமனத்தில் இருந்து எல்லா அழுக்கும் நீங்கினவராய் முந்திய ஞானத்தை நினைத்துக்கொண்டார்.

முக்குணங்கள் புண்யபாபங்கள், ஸ்தூல சரீரம் ஆகிய இவைகளின் பற்றுதல் (சம்பந்தம்) அற்றுப் போயிற்று. உத்பத்தி முதலியவைகள் விலகின. ஸ்வரூப ஞானம் உண்டானது. ஸகல ஸம்ஸயங்களும் நாசமாயின. ஆனதால் அர்ஜுனன் எந்த வகையிலும் துக்கமற்றவனானான்.

32–33. இம்மாதிரி பகவான் வைகுண்டம் சென்ற தையும், யதுகுலத்தின் நாசத்தையும் அர்ஜுனன் இடமாகத் தர்மபுத்திரர் தெரிந்து கொண்டு அந்தக்

அந்தக்கரணத்தையடக்கித் தானும் ஸ்வர்க்கம் போக விரும்பினார். குந்திதேவியும் அர்ஜுனன் வார்த்தையைக்கேட்டு பகவானிடத்தில் இடைவிடாமல் பக்தி செய்து அவரிடத்திலேயே மனத்தைச் செலுத்தி ஸம்சாரத்திலிருந்து வைராக்யத்தை யடைந்தாள். (ஜீவன் முக்தியை அடைந்தாளென்பது கருத்து)

34–35. காலில் தைத்த ஒரு முள்ளைப் பின்னும் ஒரு முள்ளினால் எடுப்பதுபோல, பகவான் யது குலத்தில் கிருஷ்ணனாக அவதரித்து, பூமியின் பாரத்தை நிவர்த்தித்து, அந்தச் சரீரத்தையும் விட்டுவிட்டார். பூமிக்குப்பாரமாயிருந்த, சரீரமும், அதைப் போக்கடித்த கிருஷ்ண சரீரமும் பகவானுடையதாகையால் அவைகளில் அவருக்கு சமான ப்ரீதியே தவிர பேதமில்லை. மேலும் வேஷதாரியான நடன் மறுபடி வேஷத்தைக் கலைத்து விடுவதுபோல ஈசுவரன் மத்ஸ்யம், கூர்மம் (ஆமை) முதலிய உருவங்களையெடுத்து, அவைகளை விட்டு விடுகிறார். அப்படியே கிருஷ்ணனாகவிருந்து பூமிக்குப் பாரமாயுள்ள அரசர்களை நாசஞ் செய்து அந்தச் சரீரத்தையும் விட்டுவிட்டார்.

36–38 1/2. எல்லோராலும் கேட்கக் கூடிய திவ்ய சரிதமுள்ள பகவான் என்றைய தினம் இவ்வுலகத்தை விட்டு வைகுண்டஞ் சென்றாரோ, அன்றையதினமே அஞ்ஞர்களைக் கலி சூழ்ந்து கொண்டது. அப்பொழுது பட்டணத்திலும், தேசத்திலும், வீடுகளிலும். மனத்திலும் கலி நெருங்குவதால் பணக்காரர்களுக்கு நல்ல பாத்திரத்தில் தானஞ் செய்ய வேண்டுமென்ற எண்ண மில்லாமலிருப்பது, பொய் சொல்வது, கபடமாகப் பேசுவது, பிறரை ஹிம்சிப்பது ஆகிய

அதர்மங்கள் யாவும் பரவின, அதனைப் பார்த்து வித்வானாகிய தர்மபுத்திரர் இவ்வுலகத்தைவிட்டுப் போக முயற்சித்தார். பின்பு, அவர் தமக்குச் ஸமான குணங்கள் பொருந்தியவருமான பரீக்ஷித்திற்கு ஹஸ்தினாபட்டணத்தில் ராஜ்யாபிஷேகஞ் செய்வித்து, சூரஸேனருடைய புத்திரராகிய வஜ்ரரையும் மதுரா நகரத்திற்கு அரசனாகச் செய்தார்.

39–50. பின்பு மிக்க ஸாமார்த்தியமுள்ள தர்மபுத்ரர் பிராஜாபத்யம் என்ற இஷ்டியைச் செய்து அக்னிகளை ஆத்மாவில் ஆரோபித்துக்கொண்டார். அப்பொழுது சரீரத்தில் அணிந்து கொண்டிருந்த வளை முதலிய ஆபரணங்களையும், பட்டு முதலியவைகளையும் விட்டு மோஹம், அஹங்காரம் முதலியவைகளை விட்டவராய், ஸகல பந்தங்களையும் நிவர்த்தித்துக் கொண்டார், ஸகல இந்திரியங்களை மனத்திலும், அதனைப் ப்ராணனிடத்திலும், அதனை அபானனிடத்திலும், அதனை வ்யாபாரத்துடனும், மிருத்யுவினிடத்திலும், அதனை ஐந்து பூதங்களால் ஏற்பட்ட சரீரத்திலும், அதனைக் குணத்திலும, அதனை அவித்தையிலும், அதனை ஜீவனிடத்திலும் அந்த ஜீவனை நாச மற்றவரும் கூடஸ்தருமாகிய பரப்ரஹ்மத்திலும் லயப் படுத்தினார். மேலுமவர் மரவுரியை உடுத்திக்கொண்டு ஆஹாரமில்லாமலும் மௌனியாகவும், தலையை அவிழ்த்துக்கொண்டு மூடன் போலவும், பைத்தியம் பிடித்தவன்போலவும், பிசாசு போலவும், ஒன்றையும் பாராதவராய்ச் செவிடன் போலப் பிறர் சொல்வதைக் கேளாமல் பெரியோர்களான முன்னோர்கள் போன வழியாக வடக்குத் திக்கை நோக்கிச் சென்றார். அப்பொழுது எதை அடைந்தவர்கள் மறுபடியும்

ஸம்ஸாரத்தை அடையமமாட்டார்களோ, அந்தப்பர மாத்வையே தியானித்துக் கொண்டிருந்தார். அவருடைய தம்பிகள் அனைவரும் நிச்சயமுள்ளவர்களாய்த் தர்ம புத்திரர் பின் சென்றார்கள். அதர்மத்தின் ஒத்தாசை யுள்ள கலியானது பிரஜைகளைப் பார்த்து அவருடைய சமீபத்திலும் சென்றது. அப்பொழுது ஸகல தர்மங் களையும் நன்றாக அனுஷ்டித்தவர்களான தர்ம புத்திரர் முதலியவர்கள் ஸ்ரீ நாராயணருடைய சரணங்களே நமக்குச் சரணமென்று நினைத்து, அதனால் பக்தி அதிகரித்தவர்களாகி, சித்தசுத்தியை யடைந்து, பரம புருஷனாகிய ஸ்ரீ நாராயணனிடத்தில் ஸ்திர புத்தியுள்ளவர்களாய், யோகிகளால் அடையக் கூடியதும் ஸம்ஸாரிகளுக்குக் கிடைக்காததுமான மேலான கதியை அடைந்தார்கள். மேலும் ஞானியாகிய விதுரரும் ப்ரபாஸ தீர்த்தக்கரையில் ஸ்ரீ கிருஷ்ணன் இடத்தில் சித்தத்தைச் செலுத்தி. இந்தச் சரீரத்தை விட்டுப் பித்ரு தேவதைகளால் அழைக்கப்பட்டுத் தமது உலகஞ் சென்றார். அப்பொழுது திரௌபதியும் தன்னுடைய பதிகளுக்குத் தன்னிடத்தில் ப்ரீதியில் லாமையைப் பார்த்து வாஸுதேவரிடம் இடை விடாமல் பக்தி செய்து உத்தமகதியையடைந்தாள்.

51. பகவான் வைகுண்டம் சென்றதும், பாண்டவர்கள் பகவானை யடைந்ததுமாகிய இக்கதைகள் மிகவும் பரிசுத்தமானவைகள். இவைகளைச் ச்ரத்தையுடன் கேட்பவர்களுக்கு ஸ்ரீ மஹாவிஷ்ணுவிடத்தில் பக்தியும், அதனால் மோக்ஷமும் கிடைக்கும்.

நோட்டு

ஸக்யம்:அனுகூலத்தைச் செய்ய விரும்பியிருப்பது. மைத்ரி: உபகாரியாகவிருப்பது, ஸஹிருத்வம் பந்துவாகவிருப்பது. ஸ்ரீத. ஸக்யம்-சமான வயது உள்ளவராக இருப்பதால் ஏற்படக்கூடியது. மைத்ரி உபகாரத்தால் ஏற்படக்கூடியது; அதிகப் ப்ரேமை யால் உண்டாகக் கூடியது, சந்த்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்-16

பரீக்ஷித்து தர்மத்தைக் கண்டது

1-4 'பரீக்ஷித்து பிறந்தபோது அவருடைய ஜாதகத்தைப் பார்த்து ஜ்யோதிஷ சாஸ்திரமறிந்த ப்ராஹ்மணோத்தமர்கள் சொன்னபடியே பின், ஹஸ்தினாபுரத்தில் உத்தரையின் புத்திரர் அரசனாக இருந்து ப்ராஹ்மணர்களுடைய கட்டளையின்படி பாகவதர்களுக்குள் சிறந்தவராகி இராஜ்யத்தைக் காப்பாற்றிவந்தார். அவர் உத்தரனுடைய பெண்ணாகிய இராவதீ என்பவளை விவாஹஞ் செய்துகொண்டார். பின்னும் அவர் கிருபரைக் குருவாக வைத்துக் கொண்டு கங்கையின் கரையில் மூன்று அச்வமேத யாகங்களைச் செய்தார். அவைகளில் தேவர்கள் நேரில் வந்து ஹவிர்ப்பாகங்களைப் பெற்றுக் கொண்டார்கள். மேலும் அவர் திக் விஜயஞ் செய்து வரும்பொழுது வழியில் ஒரு எருதையும் பசுவையும் ஒரு சூத்திரன் காலால் உதைக்கக் கண்டார். அவன் ராஜவேஷம் பூண்டிருந்தான். அவனே கலிபுருஷன், அவனைத் தமது பலத்தால் நிக்ரஹித்தார் என்று ஸூதர் சௌனகருக்குச் சொன்னார்.

5–10 'இதனைக் கேட்டு சௌனகர் "ஓ ஸூதரே! பரீக்ஷித் மஹாராஜா கலியை நிக்ரஹிக்க காரணமென்ன? அவன் அரசனாகவும் சூத்ரனாகவுமிருந்து பசுவைக் காலால் ஏன் உதைத்தான்? அந்த விஷயம் பகவத் கதையிலடங்கினதாலும், ஈசுவரனுடைய பாதங்களாகிய தாமரைப் புஷ்பங்களிலிருந்து பெருகி

வரும் மதுவைப் பானஞ் செய்து திருப்தியடைந் திருக்கும் மஹான்களுடைய கதையில் சேர்ந்ததாலும் அதைச் சொல்ல வேண்டும். அற்ப ஆயுள் உள்ள வர்களும் மரிக்கும் ஸ்பாவ முள்ளவர்களுமான மனிதர் களுக்கு மோட்சத்தில் விருப்பமிருக்குமாகில் பகவான் உடைய கதையைக் கேட்பது முதலியவைகளால் அவர்கள் ஆயுஸ்ஸைக் கழிக்க வேண்டுமே அல்லாமல் கெட்ட விஷயங்களால் வீணாக அதைச் செலவிடக் கூடாது. இந்த யாகத்திற்காக மஹர்ஷிகள் அந்தகனை (யமனை) வரவழைத்திருக்கிறார்கள். பகவானுடைய லீலைகளையே கேட்கவேண்டும். சோம்பல், புத்திக் குறைவு, அற்பமான ஆயுள் ஆகிய இவைகளுள்ள புருஷனுடைய ஆயுஸ்ஸானது இராத்திரியில் தூக்கத் தாலும்' பகலில் ஸம்ஸாரத்திற்கு உபயோகமான காரியங்களிலும் செல்லுகிறது. ஆகையால் பகவான் உடைய கதையைக் கேட்பதில் காலத்தை உபயோகியா தவர்களுடைய ஜீவனம் வீணானது என்றார்கள்.

11–17 இதனைக் கேட்டு ஸூதர் சௌனகரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார். பரீக்ஷித்து மகாராஜன் திக்விஜயம் செய்து வருங்காலத்தில் தம் உடைய ஆளுகைக்குட்பட்ட குருஜாங்கலம் இவை களில் கலி வந்து பிரவேசித்தாரென்ற அப்ரியமான வார்த்தையைக் கேட்டவுடன் யுத்தத்தில் மிகவும் சாமார்த்தியம் உள்ளவராகையால் ஆயுதத்தை எடுத்துக் கொண்டு கறுத்த குதிரைகள் கட்டிய இரதத்திலேறிப் புறப்பட்டார். அந்த இரதமானது சிம்மத்வஜமுள்ளது. ஸகல அலங்காரமுள்ளது. யானைகள், குதிரைகள் ரதங்கள், காலாட்படைகள் ஆகிய இவைகளுள்ள சேனைகள் அவரைச் சூழ்ந்து

கொண்டன. அவர் பத்ராச்வம், கேதுமாலம், கிம் புருஷம், பாரதம், உத்தரகுரு ஆகிய வர்ஷங்களில் சென்று அங்கிருக்கும் அரசர்களை ஜயித்து அவர் களிடம் கப்பம் பெற்றுக்கொண்டார். ஒவ்வொரு வர்ஷங்களிலும் வஸிக்கும் ஜனங்கள் பரீக்ஷித்தின் முன்னோர்களாகிய பாண்டவர்களுடைய சரித்தத்தைச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அதில் கிருஷ்ண பகவானுடைய மஹிமையும் இடையில் வர்ணிக்கப் படுகிறது. அச்வஸ்த்தாமாவினுடையை அஸ்திரத்தினிட மிருந்து பரீக்ஷித்தைக் காப்பாற்றின கதையையும், விருஷ்ணிகளுக்கும் குந்தி புத்திரர்களுக்கும் ஏற்பட் டிருந்த விசேஷ சிநேகத்தைப் பற்றியும், அவர்களுக்குப் பகவானிடமிருந்த அதிக பக்தியைப் பற்றியுஞ் சொல்லிக் கொண்டார்கள். அவற்றைக் கேட்டு, 'பரீக்ஷித்து மகாராஜன் கண்கள் மலர்ந்தவராக விசேஷ சந்தோஷத்துடன் அவர்களுக்கு விலையுயர்ந்த வஸ்திரங்கள், ஹாரங்கள் ஆகிய இவைகளை வெகுமதி செய்தார். பின்னுமவர் மிகுந்த பக்தியுள்ள பாண்டவர்களிடத்தில் விசேஷ பிரீதியால் பகவான் சாரத்தியஞ் செய்தது, சபாநாயராகவிருப்பது, பாண்டவர் களுடைய மனம்போல் நடப்பது, தோழனாயிருப்பது, தூதனாயிருப்பது, ராத்திரியில் கத்தியைக் கையில் வைத்துக்கொண்டு தூங்காமல் காப்பாற்றுவது, அவர்கள் ஏவினதைச் செய்வது, அவர்கள் மஹிமையைப் பற்றி தோத்திரஞ் செய்வது, ஆகிய கதைகளையும் சொல்லி ஸகல ஜகத்தும் பகவானை நமஸ்கரிப்பதையும் பார்த்து ஈசுவரனுடைய சரணங்களில் பக்தி செய்தார்.

18–25 இப்படி அந்தப் பரீக்ஷித்து மகாராஜன் முன்னோர்கள் செய்தபடி ஒவ்வொரு நாளும் தாமும்

நடத்தி வந்தார். அப்பொழுது சமீபத்தில் ஒரு ஆச்சரியத்தைக் கண்டார். அதென்னவெனில் தர்ம மானது விருஷப ரூபமெடுத்து ஒரு காலைப் பூமியில் ஊன்றிக்கொண்டு குழந்தைகள் இறந்து போனதால் துக்கப்படும் தாய் போலக் காந்தி குறைந்து கண்ணீரைப் பெருக்கி அழுது கொண்டிருக்கும் ஒரு பசுவை நோக்கி பின்வருமாறு கேட்டது. மங்களமாகிய ஸ்பாவமுள்ளவளே! சௌக்யமாயிருக்கிறாயா? உன் னுடைய முகம் வாடியிருக்கிறது. தேகத்தில் காந்தி குறைந்திருக்கிறது. ஓ அம்மா! மனத்தில் கவலையுள்ள வளாகத் தோன்றுகிறாய். தேசாந்திரம் போயிருக்கும் பந்துக்களைப் பற்றி வருத்தப்படுகிறாயா? அல்லது ஒரு காலால் நிற்கும் என்னைப் பற்றி துக்கிக்கிறாயா? அல்லது கெட்ட அரசர்களால் அனுபவிக்கப்படும் உமது சரீரத்தைப் பற்றி கவலைப்படுகிறாயா? அல்லது யாகங்கள் விதிப்படி செய்யப்படாததால் அசுரர்கள் அவைகளை அபகரிக்கிறார்களேயென்று வருத்தப்படுகிறாயா? காலத்தில் மழை பெய்யாமல் இருப்பதால் கஷ்டப்படும் ப்ரஜைகளைப் பார்த்துச் ச்ரமப்படுகிறாயா? அல்லது பர்த்தாவினால் காப்பாற்றப் படாத ஸ்திரீகளையும, தாயார், தகப்பன் முதலியவர் களால் ரட்சிக்கப்படாத பாலர்களையும், ராக்ஷஸர்கள் போலக் குரூரஸ்பாவமுள்ளவர்களால் உபத்திரவிக்கப் பட்ட சிசுக்களையும், துராசாரமுள்ள ப்ராஹ்மணர் களிடத்திலிருக்கும் வாக்தேவியையும், ப்ராஹ்மணர் களைச் சம்ரட்சிக்காத க்ஷத்திரியர்களை சேவித்துக் கொண்டிருக்கும் மேலான குலத்தில் பிறந்தவர்களைப் பற்றிக் கவலையடைகிறாயா? அல்லது கலியினால் வியாபிக்கப்பட்ட க்ஷத்திரியர் தங்களைப் பற்றியும் இஷ்டமானவிடங்களிலும் இஷ்டப்பட்ட காலங்களிலும்

படுத்துக் கொள்வது, உட்காருவது, புசிப்பது, குடிப்பது, மைதுனம் ஆகிய இவைகளில் ஆசையுள்ள ப்ராணிகளைப் பற்றியும் துக்கிக்கிறாயா அம்மா?! அல்லது துஷ்டர்களைக் கொன்று உன்னுடைய பாரத்தை நிவர்த்திப்பதற்காக அவதாரஞ் செய்த ஸ்ரீ கிருஷ்ணபகவான் வைகுண்டஞ் சென்றதால் மோக்ஷத்தைக் கொடுக்கும் அவருடைய சரிதங்களை நினைத்து அவருடைய விரகத்தைச் ஸகிக்காமல் துன்பமடைகிறாயா? மிக்க பலசாலியான காலத்தின் மஹிமையால் உன்னுடைய அழகு போய்விட்டதா? நீ வருத்தப்படுங் காரணமென்ன? சொல்ல வேண்டும் என்று கேட்டது.

26–35 இதைக் கேட்டுப் பூமிதேவி தர்மதேவதையை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானாள் "ஓ தர்மமே! நான் வருத்தப்படும் விஷயமின்னதென்று உனக்கே தெரிந்திருக்கலாம், உலகத்திற்குச் சௌக்கியத்தைக் கொடுக்கும் நான்கு கால்களோடு நீ இருந்ததற்கு எவர் காரணமோ, எவரிடத்தில் சத்தியம், சுத்தனாக விருப்பது, தயை, பொறுமை, கொடுப்பது, சந்தோஷம், கபடமில்லாமலிருப்பது. மனது ஸ்திரமாயிருப்பது, வெளியிலிருக்கும் இந்திரியங்களை ஜயிப்பது, தனது தர்மத்தை யனுஷ்டிப்பது, சத்ரு மித்ரர் என்ற பேத புத்தியில்லாமலிருப்பது, பிறர் செய்த அபாரதத்தைப் இருப்பது, இலாபங் கிடைத்தாலும் அதில் உதாசீனனாக பொறுப்பது, சாஸ்திரங்களை விசாரிப்பது ஆத்மஞானம், வைராக்கியம் எல்லா வற்றிற்கும் எஜமானனாக விருப்பது; காரியங்களில் சாமர்த்தியம், அழகு, தைர்யம், மிருது ஸ்பாவமுள்ள வனாகவிருப்பது, பக்தி, விசேஷ வணக்கம், சுபாவம்;

மனோபலம், ஞானபலம், இந்திரியபலம், மேலான ஞானம் முதலியவைகளில் கம்பீர மனமுள்ளவராக இருப்பது, அசையாத சித்த முள்ளவராக விருப்பது சிரத்தை, கீர்த்தி, மானம், அகங்காரமில்லாமலிருப்பது ஆகிய இவைகளும் மற்ற எல்லாராலும் ஆசைப்படக் கூடியவைகளுமான மகாகுணங்கள் எப்பொழுதும் வஸித்துக் கொண்டிருந்தனவோ, அந்தக் குண நிதியாகிய ஸ்ரீநிவாஸன் இவ்வுலகத்திலில்லாததனால் பாப ஸ்பாவமுள்ள கலி இவ்வுலகத்தில் வியாபித்தான். அதனால் எனது ஸ்வரூபத்தையும், உன்னையும் தேவர்களையும், மஹர்ஷிகளையும், பிதிருக்களையும், மற்ற சாதுக்களையும், எல்லா ஜாதியார்களையும், ஆச்ரமிகளையும் பற்றிக் கவலைப்படுகிறேன், ப்ரஹ்ம தேவர் முதலியவர்கள் எந்த லக்ஷ்மீதேவியின் கடாக்ஷத்திற்காக வெகுகாலம் தபஸ் செய்தார்களோ, அந்த லக்ஷ்மீதேவியானவள் மேலானவர்களால் ஆசிரயிக்கப்பட்டவளானாலும், தான் வஸிக்குமிடமான தாமரைமலர்களின் வனத்தை விட்டுப் பகவானுடைய பாதங்களாகிய தாமரைப் புஷ்பங்களை மிகுந்த ப்ரீதியுடன் ஸேவிக்கிறாள்; வஜ்ரம், அங்குசம், துவஜம் ஆகிய இந்த ரேகைகளுள்ள அந்தப் பகவானுடைய திவ்ய விபூதிகளையறிந்து மூவுலகிலும் மேலானவளாக இருந்தேன். இப்படி கர்வமுள்ள என்னை ஈசுவரன் கடைசியில் விட்டுப்பிரிந்தார், அவர் எனக்குப் பாரமா யிருந்த அஸுராம்சமுள்ள அரசர்களுடைய அனேக அக்ஷௌஹிணியை நாசஞ் செய்வதற்காகவும், நான்கு பாதங்களுடன் உலகத்தில் உன்னை ஸஞ்சரிக்கும்படி செய்வதற்காகவும் யதுகுலத்தில் அவதரித்தார்.

36 எந்தப் புருஷோத்தமர் பிரியமான பார்வை,

அழகான சிரிப்பு, மனோஹரமான பேச்சு ஆகிய இவைகளால் ஸத்யபாமை முதலியவர்களுடைய மானத்தையும் தைர்யத்தையும் போக்கடித்தாரோ, எவருடைய பாதத்தின் அடி வைப்பினால் அலங்கரிக்கப் பட்ட எனக்கு மயிர்க்கூச்சலுண்டானதோ, அந்தப் பரமபுருஷனை விட்டுப் பிரிந்திருக்க யாரால் முடியும்" என்றாள்.

37. இப்படி இருவரும் பேசிக் கொண்டிருக்கும் பொழுது பரீக்ஷித்து என்ற ராஜரிஷியானவர் குருக்ஷேத்திரத்தில் கிழக்கு முகமாய் ப்ரவஹிக்கும் ஸரஸ்வதி நதிக்கரை வந்தார்.



அத்தியாயம்- 17

பரீக்ஷித் மகாராஜன் கலியை நிக்ரஹித்தது

1–15. அவ்விடத்தில் பரீக்ஷித் மஹாராஜர் ஒரு எருதையும், ஒரு பசுவையும், ஒரு சூத்திரன் ராஜ வேஷந்தரித்துக் கையில் தடியை எடுத்து அடித்துக் கொண்டிருக்கக் கண்டார். அவைகளில் தாமரைத் தண்டு போல் வெளுப்பான விருஷபமானது (எருது) மிகவும் பயந்து மூத்திரம் பெய்வதுபோல் நடுக்கம் அடைந்து, அந்தச் சூத்திரனால் அடிக்கப்பட்டு ஒரு காலால் நின்று மிகவும் துன்பமடைந்திருந்தது. பால் முதலியவைகளைக் கொடுக்கும் அந்தப் பசுவானது கன்றில்லாமல் அழுதுகொண்டிருந்தது. அல்லாமல் இளைத்துமிருந்தது. புல் முதலிய ஆஹாரத்தில் விருப்பமுள்ளதாகவுமிருந்தது. அதனைச் சூத்திரன் காலால் உதைத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஸுவர்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட இரதத்தின் மீதேறியிருக்கும் அந்தப் பரீக்ஷித் மஹாராஜன் வில்லில் நாணை பூட்டிக்கொண்டு பின்வருமாறு மேகம் கர்ஜிப்பது போலக் கம்பீரமாகக் கேட்கத் தொடங்கி 'அட மூட நீ யார்? என்னால் காப்பாற்றப்படுகிற தேசத்தில் பலிஷ்டனான நீ, பலமில்லாதவர்களை உபத்திரவிக்கின்றனை. உனது வேஷத்தால் அரசனாகத் தோன்றுகின்றனை. சூத்திரனுடைய காரியத்தை செய்கின்றனை யாதலால் வேஷதாரி போலிருக்கின்றாய் ஸ்ரீ கிருஷ்ண பகவானும், அர்ஜுனனும் இத்தேசத்தை விட்டு வெகு தூரஞ் சென்றுவிட்டபடியால் இரஹஸ் யத்தில் பலமில்லாதவர்களை ஹிம்ஸிக்கின்றனை. ஆகையால் நீ என்னால் கொல்லத்தகுந்தவன். ஓ

தாமரைத் தண்டு போல வெளுத்த சரீரத்துடன் விருஷப ரூபமெடுத்து ஒரு காலால் ஸஞ்சரிப்பவரே! நீர், தேவதைகளுக்குள் யார்? உம்மைப் பார்க்க எங்களுக்கு வெகு துக்கமாயிருக்கிறது. கௌரவர்களுடைய வைகளால் காப்பாற்றப்படும் பூமியில் துக்கத்தால் உண்டாகும் கண்ணீர் விழுகிற வழக்கமில்லை. ஆதலால் நீர் துக்கிக்கவேண்டாம். சூத்திரனிடமிருந்து பயம் உமக்கு நிவர்த்தியாகிவிட்டது. ஓ அம்மா! பசுவே! துஷ்டர்களை நான் சிக்ஷித்து வரும்பொழுது நீ ஏன் அழவேண்டும்? எந்த அரசனுடைய இராஜ்யத்தில் துஷ்டர்களால் ஸாதுக்களுக்கு உபத்திரவம் நேரிடு கிறதோ அவனுடைய கீர்த்தி, ஆயுள், பாக்யம் ஆகிய இவைகள் குறைவு படுவதல்லாமல் அவனுக்குக் நல்ல லோகமும் கிடைக்கிறதில்லை. உபத்திரவப் பட்டவர் களுடைய துன்பத்தை நிவர்த்திப்பதே அரசர்களுக்கு முக்கியமாகிய தர்மம். ஆனதால் பிராணிகளுக்கும் கெடுதியைச் செய்கின்ற மிக்க அஸத்தாகிய இவனைச் சிக்ஷிக்கிறேன். ஓ விருஷபமே! உன்னுடைய மூன்று கால்களை எவன் வெட்டினான்? ஸ்ரீ கிருஷ்ணன் அனுஸரித்த அரசர்களுடைய இராஜ்யத்தில் ஜனங்கள் உன்னைப் போலிருப்பது உசிதமல்ல. நிரபராதியும் ஸாதுவுமாகிய உனக்குக் கெடுதியைக் குறைக்கும் அஸத் யார்? அவனைச் சொல் உனக்கு க்ஷேமம் உண்டாகும். குற்றஞ் செய்யாதவர்களை எவன் உபத்திரவிக்கிறானோ அவனுக்கு என்னிடமிருந்து பலவகையிலும் பயமுண்டாகும். கொஞ்சமாவது பயமில்லாமல் குற்றமற்றவர்களுக்குக் கெடுதி செய்பவன் தேவனானாலும் தோள் வளைகளுள்ள அவனுடைய கையை, வெட்டி விடுவேன். கெட்ட நடையுள்ளவர்களை,

சாஸ்திர முறைப்படி சிக்ஷிக்கும் அரசர்களுக்குத் தமது தர்மத்தை யனுஷ்டிப்பவர்களைக் காப்பாற்றுவதே ஸ்வதர்மம் என்று சொன்னார்.

16–19½. இதனைக் கேட்டு தர்மமானது அரசனை நோக்கி, ஓ மஹாராஜ! எவர்களுடைய குணங்களால் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவர்களுக்கு, தூதனாக விருப்பது முதலியவைகளைச் செய்தாரோ, அந்தப் பாண்டவர்களின் குலத்தில் பிறந்தவர்களான நீங்கள் பயந்தவர்களுக்கு அடய வார்த்தை சொல்வதே உசிதம். ப்ராணிகளுக்குத் துக்கமுண்டாகுங் காரணத்தைப் பற்றிப் பல வகையான மதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சிலர் ஆத்மாவே துக்கத்திற்குக் காரணமென்றும், லோகாயதகர்கள் நவகிரஹங்களின் அதிதேவதையே துக்கத்திற்குக் காரணமென்றும், மீமாம்ஸகர்கள் கர்மமே காரணமென்றும், சிலர் ஸ்வாபவமே காரணமென்றும், சிலர் ஈசுவரனே காரணமென்றும், சொல்லுவதால் ஊகிக்க முடியாததும், குறிப்பிடக் கூடாததுமான ஏதோ ஒரு காரணத்திலிருந்து துக்கம் உண்டாகிறது. ஒன்றையும் நிச்சயமாகச சொல்லக் கூடவில்லை. இப்படி மதபேதத்தால் மோஹித்து இருப்பதால் எந்தப் புருஷனிடமிருந்து துக்கங்கள் நேரிடுகின்றனவோ அந்தப் புருஷன் இன்னாரென்று நாம் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனது பற்றி அதன் காரணத்தை நீரே உம்முடைய புத்தியால், யோசித்துத் தெரிந்து கொள்ளும் என்று சொல்லிற்று.

20–27. இதனைக் கேட்டு அரசன் யோசித்து மோஹமும் இல்லாதவராகத் தர்மத்தை நோக்கிப் பின்வருமாறு சொன்னார். தர்மமமாகிய வார்த்தையைச் சொல்வதால்

நீ தர்மமேயாம். விருஷபத்தின் சரீரத்தை தரித்து இருக்கின்றனை. அதர்மத்தை யனுஷ்டித்தவனுக்கு எவ்வித ஸந்தோஷமேற்படுமோ அது கோட் சொன்னவனுக்கு (அவனைக் காட்டிக் கொடுத்தவனுக்கு) உண்டாகிறது. அல்லது ஈசுவரனுடைய ஸங்கல்பமானது ப்ராணிகளுடைய மனத்திற்கும், வாக்குக்கும் எட்டாத தாகையால் அதை அறியமுடியாததென்பது நிச்சயம். தபஸ், சௌசம், தயை, ஸத்யம் ஆகிய நான்கு தர்மத்திற்குப் பாதங்களாகக் கிருதயுகத்தில் ஏற்படுத்துப் பட்டன. அதர்மத்தின் பாதங்களாகிய கர்வம், ஆசை, மதம் இவைகளால் தர்மத்தின் மூன்று பாதங்கள் முறிக்கப்பட்டன. இப்பொழுது நான்காவது பாதமாகிய ஸத்யத்தை அஸத்யத்துடன் கூடி கலி பிடிக்க முயற்சிக்கின்றன. இவள் பூமி தேவியே. இவளுடைய பாரத்தைப் பகவான் நிவர்த்தித்தார் அவருடைய திவ்யமாகிய அடிவைப்பினால் ஸந்தோஷமடைந்து இருந்தாள். இப்பொழுது அந்தப் பகவானை விட்டுப் பிரிந்து பூமிதேவியானவள், ப்ராஹ்மணர்களைக் காப்பாற்றாதவர்களும் ராஜவேஷத்தை மாத்திரம் தரித்த வர்களுமான சூத்திரர்கள் தமக்கு அதிபதியாக ஆகிவிடுவார்களே என்று கண்ணீரைப் பெருக்கிப் பாக்கியமற்றவள் போல் துக்கிக்கிறாள் என்று சொல்லித் தர்ம தேவதையையும், பூமியையும் ஸமாதானஞ் செய்தார்.

28-33. பின்னும் மஹாரதராகிய அவ்வரசன் அதர்மத்திற்குக் காரணமாகிய கலியைச் சிக்ஷிப்பதற்காகக் கூர்மையான கத்தியை எடுத்தார். அப்பொழுது கலியானவன் அரசன் தன்னைக் கொல்ல விரும்பியதைத் தெரிந்துகொண்டு இராஜவேஷத்தை விட்டு மிகவும்

பயந்தவனாக அவருடைய சரணங்களில் நமஸ்கரித் தான். அப்பொழுது தம்முடைய காலில் விழுந்த கலியைப் பார்த்து, தீனர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ள வரும், தைர்யமுள்ளவரும், கொண்டாடக்கூடியவரும், சரண்யருமான அரசன் கருணையுடன் அவனைக் கொல்லாமலிருந்ததுமன்றி அவனை நோக்கிச் சிரித்துக் கொண்டு அர்ஜுனனுடைய கீர்த்தியை காப்பாற்றி வரும் நாங்கள், கைகூப்பிச் சரணமடைந்தவர்களைக் கொல்லுகிறதில்லை. ஆனாலும் நீ, அதர்மத்திற்குப் பந்துவானதால் நமக்குச் சொந்தமான இவ்விடத்தில் வசிக்கக்கூடாது. இராஜ சரீரத்தில் நீ வசிக்கும்போது ஆசை, பொய்சொல்லுதல், திருடுவது, துஷ்டனாயிருப்பது, தன்னுடைய தர்மத்தை விட்டுவிடுவது, அலக்ஷ்மீ கபடம், கலஹம், டம்பம் ஆகிய அதர்மத்தின் கூட்டமும் உன்னை யனுஸரிக்கிறது. ஆதலால் அதர்ம பந்துவாகிய ஏ கலியே! ஸத்யம், தர்மம் ஆகிய இவைகள் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும், ப்ரஹ்மாவர்த்தத்தில் நீ வசிக்கக் கூடாது. இவ்விடத்தில் யாகத்தின் விதியை நன்றாக அறிந்தவர்கள் யக்ஞேசரராகிய பகவானை யாகத்தால் பூஜிக்கிறார்கள். மேலும் யாக ஸ்வரூபியான பகவான் யாகஞ் செய்பவர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கிறார். தவிரவும், ,ஸ்தாவர ஜங்கமங்களாகிய எல்லாப் ப்ராணிகளிடத்திலும் வாயுவைப் போல் அந்தர்யாமியாயிருந்து அவரவர்கள் இஷ்டத்தை நிறைவேற்றுகிறார் என்று சொன்னார்.

34–36. அதனைக் கேட்டு அந்தக் கலி மிகவும் நடுக்கமுள்ளவனாகி முயற்சியுள்ள யமனைப்போலக் கத்தியைக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் பரீக்ஷித்தை நோக்கி, ஓ ஸார்வபௌமரே! தங்களுடைய

உத்தரவுப்படி எவ்விடத்திலாவது வசிக்கிறேன். எவ்விடத்திலிருந்தாலும், வில்லையும் பாணத்தையும் கையில் வைத்துக் கொண்டிருக்கும் உம்மை பார்ப்பேன். தர்ம சிந்தையுள்ளவர்களுக்குள் சிறந்தவரே! எவ்விடத்தில் வசிக்கும்படி நீர் ஆஞ்ஞாபிக்கிறீரோ அவ்விடத்திலேயே வசிப்பேன். அப்போர்ப்பட்ட ஸ்தானத்தை எனக்குக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.

37–39. அப்பொழுது இம்மாதிரி கலியால் பிரார்த்திக்கப்பட்ட பரீக்ஷித்து மஹாராஜா. சொக்கட்டான் ஆட்டம், மத்யபானம், ஸ்திரீ ஸங்கமம், ப்ராணி ஹிம்ஸை ஆகிய நான்கு அதர்ம ஸ்தானங்களிலும் வசிக்கும்படி ஆஞ்ஞாபித்தார். அதிலும் திருப்தியடையாமல் பின்னும் சிலவிடங்கள் கொடுக்க வேண்டுமென்று கலி கேட்டுக்கொள்ள, அப்பொழுது அரசன் ஸுவர்ணத்திலிருக்கும்படி சொன்னார். அதனாலும் கலி திருப்தி யடையாமலிருக்க, பின்னும் அரசன் பொய், மதம், காமம், ரஜோ குணம், விரோதம் ஆகிய ஐந்து இடங்களையும், கலிக்குக் கொடுத்தர். இப்படி உத்தரையின் புத்திரரால் கொடுக்கப்பட்ட இந்த விடங்களில் அவருடைய உத்தரவின்படி கலி வசித்துக்கொண்டிருந்தான்.

40-44. ஆனதால் க்ஷேமத்தை விரும்பியவர்கள் இவைகளை ஸேவிக்கக் கூடாது. அவைகளில் ஆசைப்படவே கூடாது. பிறகு அவர் தபஸ், சௌசம், தயை இவைகளை உலகத்தில் பரவச் செய்து முறிந்துபோன தர்மத்தின் மூன்று பாதங்களையும் விருத்தி செய்தார். பூமியையும் விருத்தி செய்தார். அந்தப் பரீக்ஷித்து என்பவர், தர்ம புத்திரர்

காட்டிற்குப் போகும் முன்னிலையில் அவரால் தமக்குக் கொடுக்கப்பட்ட இராஜ்யத்தை அடைந்து விசேஷ கீர்த்தியுள்ளவராய் பிரகாசித்தார். அபிமன்யுவின் புத்திரராகிய அந்த அரசன் இவ்வளவு மஹிமையுள்ளவர். அவர் ராஜ்ய பாலனஞ் செய்யும் காலமாகிய இப்பொழுது நீங்கள் ஸத்ரஞ் செய்ய ஆரம்பித்திருக்கிறீர்கள்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்-18

பரீக்ஷித்திற்கு நேர்ந்த ப்ராஹ்மண சாபம்

1-10 எந்தச் சக்கரவர்த்தியானவர் தாயாருடைய கர்ப்பத்திலிருக்கும்போது அச்வஸ்த்தாமாவினுடைய அஸ்திரத்தால் எரிக்கப்பட்டும் அதியற்புதமாகிய செய்கைகளுள்ள ஸ்ரீ கிருஷ்ணனுடைய அனுக்ரஹத்தால் மரணமடையவில்லையோ எவர் ப்ராஹ்மணருடைய சாபத்தால் தக்ஷனால் தமக்கு உயிர்ச் சேதம் நேர்ந்ததும் அதனால் கொஞ்சமேனும் கவலைப்படாமல் இருந்தாரோ, சுகருடைய சிஷ்யராகிய அந்த மஹா ராஜன் ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலேயே தமது மனதைச் செலுத்தி, ஸகல ஆசைகளையும் ஒழித்து, பகவான் உடைய ஸ்வரூபத்தையறிந்து கங்கா நதிக்கரையில் சரீரத்தைவிட்டார். எந்தப் புருஷர்கள் உத்தமச் லோகருடைய கதைகளைச் சொல்வதால் காலத்தைக் கழிக்கிறார்களோ, எவர்கள் மரணகாலத்திலும் பகவான் உடைய சரணாரவிந்தங்களைத் தியானஞ் செய்கிறார் களோ அவர்களுக்கு மோஹம் உண்டாவதில்லை. மேற்சொல்லிய அபிமன்யுவின் புத்திரராகிய சக்ரவர்த்தி அரசனாயிருக்கும்போது லோகத்தில் கலி வந்திருந்தாலும் அதர்மம் பரவாமலிருந்தது. என்றைய தினம் எந்த க்ஷணத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் பூமியை விட்டு மேலுலகஞ் சென்றாரோ, அன்றைய தினமே லோகத்தில் அதர்மத்தை விருத்தி செய்யும் கலி பிரவேசித்தான். தேனீ போல் ஸாரத்தைக் க்ரஹிப்பவராகிய பரீக்ஷித்து மஹாராஜன் கலியைக்கொன்று விடவில்லை. அவன் உடைய சக்தி பரவாமலிருக்கச் செய்தார். ஏனென்றால், அந்தக் கலியின் காலத்தில் ஸங்கல்ப மாத்திரத்தில்

புண்யங்களும், செய்கையால் பாபங்களும் சித்திக் கின்றன. தைர்யமற்றவர்களிடம் சூரனாகியும், தைர்யம் உள்ளவர்களிடம் பயப்படும் ஸ்வாவமுள்ளவனாயு மிருக்கிற கலியானவன் அஜாக்ரதை உள்ளவர்களைப் பிடித்துக்கொள்ள செந்நாய்போல மிக்க ஜாக்கிரதை யுள்ளவனாக இருக்கிறான் (அவன் என்ன கெடுதியைச் செய்யப் போகிறான் என்பது கருத்து) ஓ மஹர்ஷிகளே! உங்களால் கேட்கப்பட்டதும் மிக்க புண்யகரமுமான பரீக்ஷித்தின் சரிதத்தை ஸ்ரீ வாஸுதேவருடைய திவ்ய கதைகளுடன் சொன்னேன். ஆதலால் க்ஷேமத்தை விரும்பிய மனிதர்கள் பகவானுடைய குணங்கள், சரித்திரங்கள் ஆகிய இவைகளடங்கிய கதைகளையே சொல்ல வேண்டும். அவைகளையே கேட்க வேண்டும். மற்ற கதைகளை ஸேவிக்கக் கூடாதென்பது கருத்து, என்று ஸூதர் சொன்னார்.

11–18 இதனைக் கேட்டு மஹர்ஷிகள் அவரை நோக்கி, 'ஓ ஸூதரே! நீர் மரண தர்மமுள்ள எங்களுக்கு அமிருதமான ஸ்ரீ கிருஷ்ண கதையைச் சொன்னதால் வெகுகாலம் ஜீவித்திருக்கும் எங்களால் இப்பொழுது அனுஷ்டிக்கப்படும் ஸத்ரத்தை யாதொரு குறைவுமின்றி முடிப்பது அரிதாகையால் அதன் பூர்ண பலத்தை அடைவோமென்பது நிச்சயமில்லை, ஆகிலும், அதனைச் செய்து கொண்டு புகையினால் கறுத்த சரீரமுள்ள வர்களாகிக் கஷ்டப்படும் எங்களுக்கு ஸ்ரீ கோவிந் தருடைய பாதங்களாகிய தாமரை மலரின் தேனைக் கொடுத்தீரல்லவா? பகவத் பக்தர் களுடைய சேர்க் கையின் சிறிது பாகத்திற்குச் ஸ்வர்க்கமாவது, மோக்ஷமாவது, மற்ற ராஜ்யம் முதலியவைகளாவது ஸமமானவையல்ல. மஹான்களுக்கு முக்கியமான

கதி பரம புருஷனே. அவரிடத்தில் ப்ராகிருத குணங்களில்லை. அவரிடத்தில் பொருந்தியிருக்கும் கல்யாண குணங்கள் இவ்வளவென்று பரமசிவன், ப்ரஹ்மா முதலிய தேவர்களாலும் அறிய முடியவில்லை. அப்பேர்ப்பட்ட பகவானுடைய கதையைக் கேட்டு ரஸிகனான எவன்தான் போதுமென்று திருப்தி அடைவான்? ஆதலால் பகவத் பக்தர்களுக்குள் முக்கியரும் எல்லாவற்றையு மறிந்தவருமான நீர் மிக்க கம்பீரமாயும், பரிசுத்தமாயுமுள்ள மஹா விஷ்ணுவின் சரிதத்தைக் கேட்க விரும்பும் எங்களுக்கு விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும். மஹா பாகவத சிரோமணியான அந்தப் பரீக்ஷித்து மஹாராஜன் சுகரால் உபதேசிக்கப்பட்ட ஞானத்தால் மோக்ஷமென்ற பெயருள்ள ஸ்ரீ நாராயணனுடைய சரணத்தையடைந் தாரல்லவா? மிகுந்த புண்யத்தைக் கொடுப்பதும், மிகவும் அற்புதமுமாகிய யோகத்தைக் காட்டுவதும், நாசமற்றவராகிய பகவானுடைய சரீரத்தால் அலங்கரிக் கப்பட்டதும், பக்த பக்தர்களுக்கு மனோஹரமாய், பரீக்ஷித்துக்குச் சுகரால் உபதேசிக்கப்பட்டதுமான ஸ்ரீமத் பாகவதமென்ற ஆக்யானத்தை நன்றாகத் தெரியும்படி சொல்ல வேண்டும் என்று ப்ரார்த்தித் தார்கள்.

18–23 இதனைக் கேட்டு ஸூதர் சொல்லுகிறார். ஆச்சரியம், யான் விலோம ஜாதியுள்ளவனானாலும் என்னுடைய பிறப்பும் இப்பொழுது பெரியோர்களைச் ஸேவித்ததால் சபலமாயிற்று. மிக்க மகான்களாகிய புருஷர்களுடன் பேசக் கூடிய பாக்யம் கிடைத்த தாலேயே தாழ்ந்த குலத்தில் பிறந்ததால் உண்டான மனக்கவலை நீங்கியது. எந்தப் புருஷன் அளவற்ற

சக்தி, அளவற்ற குணங்கள் ஆகிய இவைகளுள்ளவரோ, நாசமற்றவரோ; அதனால் அனந்தரென்று சொல்லப் படுகிறாரோ, மகான்களுக்கு முக்கிய கதியாயிருக்கும் அந்தப் புருஷோத்தமருடைய குணங்களைச் சொல்லுகிற எனக்குத் துக்கமே நேரிடாது. லக்ஷ்மீ தேவியானவள் தன்னைப் ப்ரார்த்திக்கும் ப்ரஹ்மா முதலிய தேவர்களை லக்ஷியம் செய்யாமல் தன்னை விரும்பாதவரான ஸ்ரீ நாராயணனுடைய பாததூளியை சேவிக்கிறாள். அவருக்குச் சமமானவராவது, மேற்பட்ட வராவது ஒருவருமில்லை. இதனாலேயே அவருடைய மஹிமை நன்றாக விளங்கும். தவிரவும், எவருடைய சரண நகத்திலிருந்து பெருகியதும், ப்ரஹ்மதேவரால் சேவிக்கப்பட்டதுமான கங்காஜலம் பரமசிவன் முதலிய எல்லோரையும் பரிசுத்தப்படுத்துகிறதோ, அந்த முகுந்தனைத் தவிர வேறு யாரைப் பகவான் என்று சொல்லக்கூடும்? அந்த ஸர்வேசனிடம் அந்தரங்கத்தைச் செலுத்தியவர்கள் தைர்யமுள்ள வர்களாகத் தேகம் முதலியவைகளில் வெகுநாளாக உண்டாகியிருக்கும் விசேஷ அபிமானத்தை யொழித்து, அஹிம்சை, சமம் இவைகளுடன் கூடி பரமஹம் சர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆனதால் ஸூர்யனுக்குச் சமமான தேஜஸுள்ள ஓ மஹர்ஷிகளே! பகவான் உடைய சரிதத்தைச் சொல்லுகிறேன். பறவைகள் தம்முடைய சக்திக்குத் தக்கபடி ஆகாயத்தில் பறக்குமே அல்லாமல் வெகு உயரத்தில் சக்தியை மீறிப் பறக்க அவைகளால் முடியுமா? வித்வான்கள் தமது புத்திக்கு எட்டியவரையில் மஹாவிஷ்ணுவின் லீலைகளை வர்ணிக் கிறார்கள். அப்படிப்போல எனக்குத் தெரிந்தவரையில் பகவானுடைய சரிதத்தைச் சொல்லுகிறேன் என்று பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்.

24–31 பரீட்சித்து மஹாராஜன் ஒரு நாள் காட்டில் வேட்டையாடி வரும்போது மிருகங்களை நாடிச் சென்றதால் மிகுந்த பசி தாகமுள்ளவராய், ஏரி குளங்களைத் தேடிப் போகும்போது ஒரு ஆசிரமத்தைக் கண்டார். பின்பு அதனுள் சென்று அவ்விடத்தில் கண்களை மூடிக்கொண்டு நிஷ்டையிலிருக்கும் ஒரு மஹர்ஷியைக் கண்டார். அந்த மஹர்ஷி இந்திரியங் களையும் ஸ்வாசத்தையும் அடக்கிக் கொண்டிருந்தார். அவருடைய புத்தியானது விஷயங்களிற் செல்ல வில்லை. ஜாக்ரத், சுவப்னம், சுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளையும் தாண்டி விகாரமற்ற ப்ருஹ்ம ஸ்வரூபியாயிருந்தார். அவருடைய ஜடைகள் நாலு பக்கங்களிலும் அவரை மறைத்துக் கொண்டிருந்தன. தவிரவும் மானின் தோலைப் போர்த்துக் கொண்டு இருந்தார், அவரை நோக்கி அரசன் மிகுந்த தாகத்தால் அதிக வருத்தப்பட்டுத் தண்ணீர் கொடுக்கும்படி பல தரம் வேண்டிக்கொண்டார். இப்படி மகாராஜன் கேட்டு அவருக்கு குடிக்க நீர் கொடாமலிருந்தது இன்றி ஆசனங் கொடுப்பது உட்காருவதற்கு இடம் காட்டுவது. அர்க்கியம், ப்ரியமான வார்த்தை முதலியவைகளாலும் அவரை உபசரிக்கவுமில்லை. அப்பொழுது அரசன், 'மஹர்ஷி தம்மை அவமதித்தார்' என்று நினைத்துப் பசி, தாகம் இவைகளால் துன்பப்பட்டவராகையாலும் அவருக்கு மஹர்ஷியினிடம் கோபமும் விரோதமும் உண்டாயின. இம்மாதிரியான கெட்டகுணம் இதற்கு முன் நேர்ந்தது இல்லை, பின்பு அரசன் ஆசிரமத்திலிருந்து வெளியில் வரும்போது, 'இந்த மஹர்ஷி உண்மையில் நாம், வந்தது தெரியாமல் நிஷ்டையிலிருக்கிறாரா, அல்லது க்ஷத்திரியன் வந்தாலென்ன, போனாலென்னவென்று

கபடமாகக் கண்களை மூடிக்கொண்டிருக்கிறாரா? என்று பரீட்சிப்பதற்காக உயிரிழந்த ஒரு பாம்பை வில் கழியின் நுனியால் தூக்கி அவருடைய கழுத்தில் போட்டுத் தமது பட்டணம் சென்றார்.

32–38 அப்பொழுது மிகுந்த தேஜஸ்வியான சிருங்கி யென்னும் அந்த மஹர்ஷியின் புத்திரன் தோழர் களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அந்த இடத்தில் அரசன் செய்த காரியத்தைக் கேள்விப் பட்டு, தன் தோழர்களை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானான்." ஆச்சரியம் அதர்மம் மேலிட்டது. நாய்களைக் காவலுக்காக வைப்பதுபோல க்ஷத்திரியர்களைப் ப்ராஹ்மணர்கள் காவலாளர்களாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். வாசலில் காத்துக்கொண்டு இருக்கும் அவன் எப்படி பூஜிக்கத் தக்கவனாவான்? பலியைப் புஜிக்கும் காக்கைகள் போலும் (ஜனங் களால் கொடுக்கப்படும் வரியைக் கொண்டு ஜீவிப்பவ னென்பது கருத்து). வாசலைக்காத்திருக்கும் நாய்கள் போன்ற கொழுத்த க்ஷத்திரியர்கள் யஜமானனுக்குக் குற்றஞ்செய்யும்படி நேர்ந்ததே. கெட்ட மார்க்கத்தில் சஞ்சரிப்பவர்களைச் சிக்ஷிப்பவரான ஸ்ரீ கிருஷ்ண பகவான் வைகுண்டஞ் சென்றாலும் மரியாதை தவறினவர்களை நான் நிக்ரஹிக்கிறேன் என்னுடைய பலத்தைப் பாருங்கள் என்று சொல்லி கோபத்தால் கண்கள் சிவக்க, கௌசிகீ நதியின் ஜலத்தால் ஆசமனஞ் செய்து, என்னுடைய பிதாவிற்கு அபராதஞ் செய்தவனும், மரியாதை தவறினவனும், குலத்திற்கு நெருப்புத் தணல் (குலத்தைக் கெடுப்பவனென்று கருத்து) போன்றவனுமாகிய அரசனை இது முதல் ஏழாவது நாளில் தக்ஷகன் கடித்து எரிந்து விடுவானாக

என்று சபித்தான். பின்பு ஆசிரமம் வந்து அந்த இடத்தில் பிதாவின் கழுத்தில் சர்ப்பத்தைக் கண்டு மிகவும் துக்கப்பட்டுக் கதறினான்.

38–39 1/2 இதைக் கேட்டு சமீகரென்னும் அந்த மஹர்ஷியானவர் மெள்ள கண்களைத் திறந்து தம்முடைய தோளில் உயிரில்லாத பாம்பிருக்கக்கண்டு அதனை எடுத்து எறிந்துவிட்டுத் தமது புத்திரனை நோக்கி, 'ஓ குழந்தாய் ஏன் அழுகிறாய்? எவர்கள் உனக்கு எவ்விதக் குற்றத்தைச் செய்தார்கள்?' என்று கேட்டார்.

40–50 1/2 அதனைக் கேட்டு, சிருங்கியென்பவர் நடந்த விஷயம் எல்லாவற்றையும் உண்மையாகத் தெரிவித்தார். அதனைக் கேட்டும் மஹர்ஷியானவர் தம்முடைய புத்திரன் மகாராஜனைச் சபித்தது உசிதமல்லவென்று நினைத்து, அவனை நோக்கிப் பின்வருமாறு தர்மத்தின் இரகசியத்தை உபதேசித்தார். ஓ ஒன்றையு மறியாதவனே! அரசன் செய்த சிறு குற்றத்திற்காகப் பெரிதாகிய சிக்ஷையைச் செய்தது உசிதமன்று. பெரியதாகிய பாபத்தைச் செய்தாய். ஓ விவேகமற்றவனே! அரசன் மகாவிஷ்ணுவின் அம்சம் உள்ளவனாகையால் அவனைச் ஸாமானிய மனிதனாக நினைக்கக் கூடாது. அவனுடை தேஜஸ் ஸகிக்க முடியாதது. அவனால் காப்பாற்றப்பட்டு ஜனங்கள் ஒருவரிடத்திலும் பயமில்லாதவர்களாக வசிக்கிறார்கள். மகாவிஷ்ணுவின் அம்சமுள்ள அவ்வரசனில்லாவிடில் ஜனங்கள் ஆடுகளின் கூட்டம்போல் க்ஷணகாலத் திற்குள் நாசமடைவார்கள். தேசத்தில் அரசனில்லாத வரையில் ஜனங்களுடைய தனங்களை அபகரிக்கும்

திருடர்கள் மிகுதியாய் விடுவார்கள். ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்வார்கள். கடுமையாகப் பேசுவார்கள். பசுக்கள், ஸ்திரீகள், பணங்கள் ஆகிய இவைகளை அபகரிப்பார்கள். ஆகையால் அதனாலுண்டாகும் பாபம் நம்மைச் சேர்ந்ததாகும். (அரசனைச் சபித்தாலென்பது கருத்து) மேலும், வர்ணாசிரம தர்மங்கள் குறைந்து விடும். நல்லொழுக்கம் மறைந்துவிடும். நாய்கள் போலவும், குரங்குகள் போலவும் அர்த்தம், காமம் இவைகளிலேயே ஜனங்கள் மிகவும் ஆசை கொள்வார்கள். அதனால் வர்ண ஸங்கரம் உண்டாகும், தவிரவும் பரீக்ஷித் மகாராஜனோ தர்மத்தைக்காப்பாற்றி கிறவர். சக்ரவர்த்தி, மிகுந்த கீர்த்தியுள்ளவர், பகவத் பக்தர். அச்வமேத யாகஞ் செய்தவர். மேலும் என்னிடம் வந்த சமயத்தில் பசி தாகத்தால் ச்ரமம் அடைந்து தீனராயிருந்தவர். ஆனது பற்றி அவரைச் சபிப்பது நியாயமல்ல. குற்றஞ்செய்யாத வேலைக்காரர் களிடம் செய்த அபராதத்தைச் ஸகல ஜகத்ரூபியான பகவான் பொறுத்துக் கொள்ளட்டும். விஷ்ணு பக்தர்களை ஒருவன் நிந்தித்தாலும், ஏமாற்றினாலும், அவமதித்தாலும், அடித்தாலும் அவர்கள் ப்ரதி செய்ய சாமர்த்தியமுள்ளவர்களானாலும் ஒன்றுஞ் செய்கிறதில்லை என்று சொல்லித் தமது புத்திரன் செய்த குற்றத்தைப் பற்றி மஹர்ஷி பச்சாதாப மடைந்து, அரசன் செய்த குற்றத்தை மனத்தில் நினைக்காமலேயே இருந்தார். பெரும்பாலும் சாதுக்கள் பிறர் செய்த கெடுதியால் அவர்களிடத்தில் கோபித்து வருத்தமடைகிறதில்லை. உபகாரத்தால் சந்தோஷம் அடைகிறதுமில்லை. ஏனென்றால் ஆத்மாவானது உண்மையில் சுகத்திலாவது துக்கத்திலாவது ஸம்பந்திக்கிறதில்லை.

அத்தியாயம்-19

கங்கைக்கரைக்குச் சுகர் வந்தது

பரீக்ஷித்து மகாராஜன் தம்முடைய பட்டணஞ் சென்ற பிறகு மஹர்ஷியின் ஆசிரமத்தில் தாம் செய்து வந்த குற்றத்தை நினைத்து வருத்தப்பட்டுத் தமக்குள் தாம் பின்வருமாறு யோசிக்கலானார்: 'யாதொரு அபராதமுஞ் செய்யாதவரும், தேஜஸ்ஸை அடக்கிக் கொண்டவருமான தபஸ்வியினுடைய கழுத்தில் ஸர்ப்பத்தைப் போட்டேன். அது மிகக் கெட்ட கார்யம். 'பாபத்தைச் செய்யக்கூடாது' என்ற தெய்வத்தின் கட்டளையை மீறினதாக ஆயிற்று, ஆனதால் தடுக்க முடியாத துக்கம் சீக்கிரத்தில் நேரிடும். இனி நான் இப்படிப்பட்ட கெட்ட காரியத்தைச் செய்யாமல் இருப்பதற்காகவும், செய்த பாபத்திற்குப் ப்ராயச்சித்த மாகவும் அந்தத் துக்கம் எனக்கே நேரில் வரவேண்டும் (புத்திரன் முதலியவர்களுக்கும் நேரிட வேண்டாம் என்பது கருத்து) நான் ப்ராஹ்மணர்களுக்குக் கோபத்தை யுண்டுபண்ணினதால் ப்ராஹ்மண குலமாகிய அக்னி யானது மிக்க பாபியான என்னுடைய இராஜ்யம், சைன்யம், பூர்ணமான செல்வம் ஆகிய இவைகளை இப்பொழுதே எரிக்கட்டும். ப்ராஹ்மணர்கள், தேவர்கள் பசுக்கள் ஆகிய இவர்கள் விஷயத்தில் மறுபடியும் எனக்கு இப்படிப்பட்ட கெட்ட புத்தி யுண்டாக வேண்டாம் என்று சிந்தித்தார்.

4-17. இந்தச் சமயத்தில் சமீக மஹர்ஷியின் சிஷ்யன் ஒருவன் குருவின் அனுமதிப்படி வந்து, சிருங்கியின்

சாபத்தை அரசனிடம் தெரிவித்தான். அதனைக்கேட்டு மகாராஜன் 'விஷயங்களில் மிகுந்த ஆசையுள்ள நான் வைராக்யமடைவதற்குத் தட்சகனுடைய விஷாக்னியே காரணமென்றும், அது சீக்கிரமாக நேரிடவேண்டும்' என்றும் நினைத்தார். பின்னுமவர் இவ்வுலகம், பரலோகம் ஆகிய இவ்விரண்டையும் துச்சமென்று தள்ளிவிட்டு, ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதஸேவையையே பெரிதாக நினைத்துக் கங்கைக் கரையில் பிராயோபவேசஞ் செய்ய முயற்சித்தார். எந்த நதியானது துளஸியுடன் சேர்ந்த மகாவிஷ்ணுவின் பாததூளியை விட மிக்க புண்யகரமான ஜலப்பிரவாகமுள்ளதோ, லோகபாலர்களுட்பட எல்லாரையும் வெளியிலும் அந்தரங்கத்திலும் பரிசுத்தப் படுத்துகிறதோ, அந்தக், கங்காநதியைச் சாகுந் தருணத்திலிருக்கும் எவன்தான் ஸேவிக்க மாட்டான்? இப்படி அந்த நதிக்கரையில் பிராயோபவேசஞ் செய்வதாகத் தீர்மானித்து வேறு விஷயத்தில் மனதைச் செலுத்தாமல் ஸ்ரீ கிருஷ்ணன் உடைய சரணங்களையே தியானித்து, ஸகல ஆசை களையும் விட்டுவிட்டு முனியாக விருந்தார். அப்பொழுது அத்ரி, வசிஷ்டர், ச்யவனர், சரத்வான், அரிஷ்டநேமி, ப்ருகு, ஆங்கிரஸ், பராசரர், விசுவாமித்ரர், பரசுராமர், உதத்யர், இந்திரப்பரதமர், இத்மவாஹர், மேதாதிதி, தேவலர், ஆர்ஷ்டிஷேணர், பரத்வாஜர், கௌதமர், பிப்பலாதர், மைத்ரேயர், ஔர்வர், கவஷர், அகஸ்தியர், த்வைபாயனர், பகவானான நாரதர் மற்ற தேவரிஷிகள் ப்ரஹ்மரிஷிகள், ராஜரிஷிகள், அருணர் முதலியவர்கள் ஆகிய இவர்களெல்லோரும் தங்கள் தங்கள் சிஷ்யர் களுடன் அவ்விடம் வந்தார்கள். அவர்களெல்லோரும் தீர்த்தயாத்திரை செய்கிறோம் என்று வ்யாஜமாக லோகத்தைப் பரிசுத்தி செய்துகொண்டு சஞ்சரிப்பவர்கள்.

அப்பொழுது அவ்வரசன் பலவகையான ரிஷி கோத்தரத்தில் சிறந்தவர்களான அவர்களை முறை தவறாமல் பூஜித்து நமஸ்காரஞ் செய்தார். அவர்கள் சுகமாக உட்கார்ந்தபொழுது பின்னுமவர்களுக்கு நமஸ்காரஞ் செய்து அவர்கள் முன்பாக இரு கை களையும் கூப்பிக்கொண்டு சுத்த சித்தமுள்ளவராய்த் தமது இஷ்டத்தைப் பின்வருமாறு வெளியிட்டார். பெரியோர்களால் அனுக்ரஹிக்கக்கூடிய ஸ்பாவமுள்ள நான் மிகவும் தன்யனாகவிருக்கிறேன். ப்ராஹ்மணர் களுடைய சுத்தமான பாததீர்த்தத்தைபடையாத க்ஷத்திரிய குலம் நிந்திக்கக் கூடியதே. மிக்க பாப ஸ்பாவமுள்ள வனும், ஸம்சார ஸுகத்திலேயே எப்பொழுதும் ஆசையை வைத்தவனுமான எனக்கு வைராக்யத்தை யுண்டுபண்ணுவதற்காகவே ப்ராஹ்மண சாபம் நேரிடும்படி செய்து பரமபுருஷன் என்னையனு க்ரஹிக்கிறார். பகவானையே மனத்தில் த்யானிக்கிறேன். மேலும் பெரியோர்களான உங்களையும், கங்காதேவி யையும் சரணமடைகிறேன். ப்ராஹ்மண சாபத்தால் தூண்டப்பட்ட தக்ஷகன் என்னை வஞ்சித்து இஷ்டப் படி கடிக்கட்டும். நீங்கள் மகாவிஷ்ணுவின் சரிதத்தைக் கானம் செய்யுங்கள். நான் பின்பு எந்தச் சரீரத்தை யடைந்தாலும் அந்தந்த ஜன்மாவில் ஈசுவரனிடத்திலும் அவருடைய பக்தர்களிடத்திலும் எனக்கு விசேஷ சிநேக முண்டாகட்டும் என்று சொல்லித் தம்முடைய பிள்ளையான ஜன்மேஜயரிடம் இராஜ்யத்தைஒப்பித்து. கங்கையின் தென் கரையில் தர்ப்பங்களைக் கிழக்கு நுனியாகப் பரப்பி, அவைகளின் மீது வடக்கு முகமாய் வீற்றிருந்தார்.

18–21. இப்படி அரசன் ப்ராயோபவேசஞ் செய்த

பொழுது தேவர்கள் அனைவரும், அவரைக் கொண்டாடிப் புஷ்பங்களை வர்ஷித்தார்கள், துந்துபி வாத்தியங்களை முழங்கினார்கள். தவிர, பிரஜைகளையனுக்கிரஹிக்கும் ஸ்வபாவமுள்ள அவ்விடம் வந்திருந்த மஹர்ஷிகள் அவரைச் சிலாகித்து ஸாதுவாதஞ் செய்து அவரை நோக்கி, 'ராஜ ச்ரேஷ்டரே கிருஷ்ண பகவான் இடத்தில் விசேஷ பக்தியுள்ளவரும், இராஜ்யம் முதலியவைகளில் ஆசையில்லாதவருமான பாண்டவ குலத்தில் பிறந்த உமக்கு இம்மாதிரி எண்ணம் நேர்ந்தது இயல்பேயாம்' என்று சொல்லி அவர்கள் ஒருவருக்கொருவர் இந்தப் பாகவத சிரோமணியான சக்ரவர்த்தி இந்தச் சரீரத்தை விட்டு மாயா ஸம்பந்தமில்லாததும், துக்கமற்றதுமான பரமபதத்தை அடையப்போகிறபடியால் அது வரையில் நாம் எல்லோரும் இவ்விடத்திலேயே வசிப்போம் என்று நிச்சயித்துக்கொண்டார்கள்.

22–24. அப்பொழுது பக்ஷபாதமில்லாததும், தேன் போல ரஸமுள்ளதும், கம்பீரமாகிய அர்த்தமுள்ளதும் உண்மையானதுமான மஹர்ஷிகளின் வார்த்தையைக் கேட்டு பரீக்ஷித்தானவன் மகாவிஷ்ணுவின் சரிதத்தைக் கேட்க விரும்பியவராய் அவர்களை நோக்கி, ஸத்ய லோகத்தில் சரீரத்துடன் இருக்கும் வேதங்கள் போல நீங்கள் அனைவரும் இவ்விடம் வந்தீர்கள். பிறரை அனுக்ரஹிப்பதை விட வேறு பிரயோஜனம் இவ் வுலகத்திலும், மேலுலகத்திலும் உங்களுக்கில்லை. ஆகையால் உங்களைக் கேட்கிறேன். சாகுந்தருணத்தில் இருப்பவர்கள் செய்யவேண்டிய சுத்தமாகிய தர்மம் யாது? யோசித்து சொல்லுங்கள் என்று கேட்டார்.

25–39. அந்தச் சமயத்தில் வ்யாஸருடைய புத்திரர்

ஆகிய சுகர் அவதூத வேஷமுள்ளவராய், பாலர் களுடன் தெய்வச்செயலாய் அவ்விடம் வந்தார். அவரிடத்தில் ஆசிரமத்துக்குரிய அடையாளமாவது ஜாதியைக் காட்டும் குறியாவது யாதொன்றுமில்லை. அவர் ஆத்ம லாபத்தாலேயே சந்தோஷமடைந்தவர். அப்பொழுது பதினாறு வயதுள்ளவராயிருந்தார், அழகான கைகளும், கால்களும், தொடைகளும், தோள்களும். கன்னங்களும், கண்களும், உயர்ந்த மூக்குகளும், சமமான காதுகளுமுடையவராய்ப் பிரகாசித்தார். சதைகளில் மறைந்த நரம்புகளுள்ளவர், விசாலமும் உயர்ந்ததுமான மார்புள்ளவர், சுழல்போன்ற நாபி யுள்ளவர். மூன்று மடிப்புகளால் அழகான வயிறு உள்ளவர், திக்குகளையே வஸ்திரமாகக் கொண்டவர். சுருண்டும் பரந்து மிருக்கும் தலைமயிருள்ளவர். மிகவும் மேலான யௌவன முள்ள வயதுள்ளவராகையால் ஸ்திரீகளுடைய மனதை அபஹரிப்பவர். அழகான சிரிப்புள்ளவர். இப்படிப்பட்ட அவரைப்பார்த்து அவருடைய லக்ஷணத்தையறிந்தவர்களான மஹர்ஷிகள் எதிர்கொண்டழைத்தார்கள். அப்பொழுது சக்ரவர்த்தி ஆனவர் வந்த அதிதியாகிய சுகருக்கு நமஸ்காரம் செய்தார். பின்பு அவருடன் வந்த அக்ஞர்களான ஸ்திரீகளும் பாலர்களும் திரும்பி போனார்கள். சுகர் பெரிதான ஆஸனத்தில் உட்கார்ந்தார். அப்பொழுது ப்ரஹ்மரிஷிகள், தேவரிஷிகள், ராஜரிஷிகள் இவர் களுடன் மத்தியிலிருக்கும் சுகர் சுக்ரன் முதலிய கிரகங்களுடையவும் அசுவினி முதலிய நட்சத்திரங்களு டையவும், மற்ற தாரைகளுடையவும் நடுவிலிருக்கும் சந்திரன் போலவும் பிரகாசித்தார். இப்படி சாந்தமனம் உள்ளவரும் தடையற்ற மேதையுள்ளவருமான சுகரை மகா பாகவதரான பரீட்சித்து மகாராஜன் பின்னும்

நமஸ்கரித்து அஞ்சலிபந்தம் செய்து, தலைவணங்கி, ஸாவதானமாய் நின்று, பின்வருமாறு மிருதுவாகச் சொல்லலானார்; ஓ பிராஹ்மண! க்ஷத்திரியனாகிய நான் ஸாதுக்களால் ஸேவிக்கக்கூடியவனாகிறேன், என்னுடைய பாக்கியம் வியக்கத்தக்கது, நீங்கள் அதிதியாக வந்து கிருபையால் என்னைப் பரிசுத்தப் படுத்தினீர்கள்; பாதத்தை வைத்தமாத்திரத்தில் வீடு முதலிய யாவும் பரிசுத்தமாய் விடக்கூடிய உங்களைத் தரிசித்தலாலும் ஸ்பர்சித்தலாலும், உங்களுடைய பாதங்களை அலம்புதலாலும்' ஆஸனங்கொடுத்த தனாலும் யான் பரிசுத்தமடைவதில் யாது சந்தேகம்? விஷ்ணுவைக் கண்ட அசுரர்கள் போலத் தங்களைத் தரிசித்த மாத்திரத்தில் மகா பாபங்களும் உடனே நீங்குகின்றன, பாண்டவர்களிடத்தில் மிகுந்த ப்ரியம் உள்ள ஸ்ரீ கிருஷ்ண பகவான் என்னிடத்தில் சந்தோஷமடைந்தார், அத்தையின் குமாரர்களிடம் மிகுந்த பிரியத்தால் அந்த வம்சத்தில் பிறந்த எனக்கும் தங்களுடைய தரிசனத்தைச் செய்வித்தார். அவருடைய அனுக்ரஹமில்லாமற் போனால் உங்களுடைய தரிசனம் மரணமடைய சித்தனாயிருக்கும் எனக்குக் கிடைக்குமா? தாங்கள் ஸித்தர்கள். உங்களுடைய பக்தியோ கண்டுபிடிக்க முடியாதது; நீங்கள் மிகவும் தாதாவாகையால் எல்லோரையும் யாசிக்க செய்பவர், ஆகையால் ஸித்திப் பெற்றவரும், யோகிகளுக்குப் பரம குருவுமாகிய உங்களை ஒரு விஷயம் கேட்கிறேன், அஃதாவது, 'மரணமடையும் ஸமயத்தையுடைய வன் என்ன செய்யவேண்டும்? எதனைக் கேட்கவேண்டும் எதனை நினைக்கவேண்டும்? எதனை உபாஸிக்க வேண்டும்? எவற்றைச் செய்யக்கூடாது? இவைகளைச் சொல்லவேண்டும்? நீங்கள் கிருகஸ்தர்களுடைய

வீட்டில் மாடு கறப்பதற்கு எவ்வளவு காலம் செல்லுமோ அவ்வளவு காலம் கூட நிற்கிற வழக்கம் இல்லையே: ஆனதால் சீக்கிரம் சொல்லவேண்டும் என்று பிரார்த்திதார்.

40. இந்தப்படி பரீக்ஷித்து மகராஜனால் கேட்கப் பட்டவுடன் ஸகல தர்மங்களையுமறிந்த சுகர் ப்ரத்யுத்தரம் சொல்லவாரம்பித்தார்.

♣ ♣ ♣ ♣

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்கந்தம் 2

அத்தியாயம் 1

விராட் புருஷனுடைய அவயவங்கள்

சுகமஹர்ஷியானவர் பரீக்ஷித்து மஹாராஜனைப் பார்த்து ' ஓ அரசனே! உம்மால் கேட்கப்பட்ட கேள்வி மிகவும் மேலானது. உலகத்திற்கு அனுகூலத்தைச் செய்யக்கூடியது; ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்தவர்கட்குப் பிரியமானது; கேட்கத்தகுந்தவைகள், சொல்லத் தகுந்தவைகள், நினைக்கத்தகுந்தவைகள் ஆகிய இவை களில் இது மிகவும் சிறந்தது. ஓ ராஜசிரேஷ்டரே! ஆத்ம ஸ்வரூபத்தையறியாதவர்களும், ஐந்து வகையான, இம்சைகளைச் செய்பவர்களுமான கிருஹஸ்தர்களுக்குக் குருமுகமாகத் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் அனேகமிருக்கின்றன. (மோக்ஷத்தை விரும்பியவர்கள் தெரிந்து கொள்ளக்கூடியது, ப்ரஹ்மம் ஒன்றுதான் என்று தாத்பரியம்.) மேலும் ஜனங்களுடைய ஆயுளானது இரவில் தூக்கத்தாலும் பகலில் பணத்து ஆசையாலும், கிடைத்த பணத்தால் குடும்பத்தைப் போஷிப்பது முதலியவைகளாலும், யௌவனமானது மைதுனத்தாலும் வீணாகக் கழிக்கப்படுகிறது. பின்னும் ஜனங்கள் அநித்யங்களான தேகம், குழந்தைகள், பார்யை ஆகிய ஸாமக்ரியைகளில் மிகுந்த அபிமானம் வைத்திருக்கிறார்கள். மேலும் அவர்கள் சரீரம் முதலியவைகள்நாசமடைவதை நேரில் பார்த்திருந்தும்

அவைகளை நித்யங்களென்றே நினைக்கிறார்கள். ஓ பரத வம்சத்தில் பிறந்தவரே! ஸகல ஜகத் ஸ்வரூபியும் அவை களுக்கு அதிபதியும், ஸம்ஸாரத்தைப் போக்கடிப்ப வராயுள்ள புருஷோத்தமருடைய சரிதத்தையே கேட்க வேண்டும். அதுவே மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியது. அதுவே உச்சரிக்கக்கூடியது. மனனஞ் செய்யக்கூடியது. எவன் மரணமடையும் சமயத்தில் நாராயணனை ஸ்மரிக்கிறானோ அதுவே அவனுக்கு உத்தமமான லாபம். ஆத்ம ஸ்வரூப விசாரமாகிய ஸாங்கியம், அஷ்டாங்க யோகம், தன் ஜாதிக்கும் ஆசிரமத்திற்கும் உரிய தர்மங்கள் ஆகிய இவைகளை அனுஷ்டிப்பதால் மரண காலத்தில் ஸ்ரீமந் நாராயணனை ஸ்மரிக்கும்படி நேரும். அதுவே இந்த ஜன்மத்தின் ப்ரயோஜன மெனப்படுகிறது. ஓ மஹாராஜ! விதி நிஷேதங்களைக் கடந்தவர்களும், நிர்க்குண ப்ரம்ஹ ஸ்வரூபத்தை யறிந்தவர்களுமான முனிகளும் பெரும்பாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் குணங்களைத் தியானஞ் செய்து கொண்டே காலத்தைக் கழிக்கிறார்கள். ஆகையால் நான் த்வாபர யுகத்தின் கடைசியில் என்னுடைய பிதாவாகிய வ்யாஸ மஹர்ஷியினிடமிருந்து ப்ரஹ்ம ஸ்வரூபத்தை தெரிவிக்கும் இந்த ஸ்ரீமத் பாகவத புராணத்தை அத்யயனஞ் செய்தேன். ஓ ராஜரிஷியே! நான் இயற்கையில் ப்ரஹ்ம ஸ்வரூபத்தையறிந்த வனானாலும் உத்தமமான புண்யத்தைக் கொடுக்கும் பகவானுடைய சரிதத்தில் விசேஷ ப்ரேமையால் அந்த உபாக்கியானத்தை அப்யஸித்தேன். நீர் மஹாபுருஷனாகிய விஷ்ணுவின் பக்தராகையால் உமக்கு அதைச் சொல்லுகிறேன். அதில் சிரத்தை யுள்ளவர்களுக்கு முகுந்தரிடத்தில் (மோக்ஷத்தைக்

கொடுப்பவர்) பக்தியுண்டாகும். விஷயங்களில் நிர் வேதத்தையடைந்தவர்களும் மோக்ஷத்தை விரும்பியவர் களுமான யோகிகளுக்கு மஹாவிஷ்ணுவின் திவ்ய நாமங்களைக் கானம் பண்ணுவதே அபயத்தைக் கொடுக்கக்கூடியது: ஆதலால் ஸித்தர்களுக்கும், ஸித்தியடைய வேண்டியவர்களுக்கும் இதை விட அனுகூலமான மார்க்கம் வேறில்லை. புத்திரன் முதலிய வர்களிடத்தில் அபிமானம் வைத்து அறியாமலே வீணாகக் கழிக்கப்பட்ட அனேக வர்ஷங்களால் என்ன பிரயோசனம்? எந்தக் காலத்தில் ஆயுளானது வீணாகக் கழிக்கப்படுகிறதென்று தெரிந்துகொள்ளு கிறானோ அந்தக் காலமே மேலானது.

அதனால் நல்ல காரியத்தைச் செய்ய முயற்சி யுடையவனாவான். முன்னொரு காலத்தில், கட்வாங்கன் என்ற ஒரு ராஜரிஷியானவர் (தேவாஸுர யுத்தத்தில் தேவர்களுடைய பக்ஷத்திலிருந்து அஸுரர்களை ஜயித்தார். அப்பொழுது அவரிடத்தில் தேவர்கள் ஸந்தோஷப்பட்டு 'வேண்டியதைக் கேளும், என்றார்கள். கட்வாங்கன் 'நான் எத்தனை காலம் ஜீவித்திருப்பேன், என்று கேட்டான். பின்பு தேவர்கள், இன்னும் ஒரு முஹூர்த்தந்தான் உன்னுடைய ஆயுளில் பாக்கி இருக்கிறது' என்று பதில் சொன்னார்கள்.) தம்முடைய ஆயுளில் மீதியிருக்கும் காலம் இவ்வளவு என்று தெரிந்து கொண்டு ஒரு முஹூர்த்தத்துக்குள் ஸகல ஆசைகளையும் ஒழித்து, ஸ்ரீ மஹாவிஷ்ணுவைச் சரணமடைந்து அவருடைய ஸாயுஜ்யத்தை அடைந்தார். ஓ மஹாராஜ! உமக்கு இது முதல் ஏழு நாள் ஆயுள் இருக்கிறது, ஆகையால் பரலோகத்தில் ஸுகத்தைக் கொடுக்கும் கார்யத்தைச் செய்யும்.

மரணகாலம் ஸமீபித்தபோது புருஷன் பயமில்லாத வனாகப் புத்திரர்களிடத்தில் தான் வைத்திருந்த அபி மானத்தை வைராக்கியமாகிய ஆயுதத்தால் நாசஞ் செய்ய வேண்டும். மேலும் ஸன்யாஸஞ் செய்து கொண்டு புத்திரன் முதலியவர்களை விட்டுப் பிரிந்தோமே என்று விசாரப்படாமல், கங்கை முதலிய புண்ய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து, ஜனங்களுடைய நெருக்கமில்லாத சுத்தமான விடத்தில் விதிப்படி ஆஸனத்தில் உட்கார்ந்து ப்ரஹ்மத்தைத் தெரிவிக்கும் மூன்று அக்ஷர ஸ்வரூபமாகிய ப்ரண வத்தைத்தியானிக்க வேண்டும். அதனால் சுவாஸத்தை ஜயித்து, ப்ரம்ஹ பீஜமாகிய ப்ரணவத்தை நினைத்துக் கொண்டே மனத்தை அடக்க வேண்டும். புத்தியாகிய (நிச்சயரூபமானது) ஸாரதியுள்ள புருஷன் மனத்தைக் கொண்டு (கடிவாளம்) (ரூபம், ரஸம், கந்தம், சப்தம், ஸ்பர்சம் ஆகிய) ஐந்து விஷயங்களில் செல்லும் இந்திரியங்களைத் தடுக்க வேண்டும். மேலும் கர்ம வாஸனைகளால் இழுக்கப்படும் மனித்தை மங்களத்தைக் கொடுக்கும் ஈசுவர ஸ்வரூபத்தில் புத்தியைக் கொண்டு செலுத்த வேண்டும். பின்னும் பகவத் ரூபத்தில் ஏதாவது ஒரு அவயவத்தை இடைவிடாமல் மனத்திற் கொண்டு த்யானிக்க வேண்டும். பிறகு அந்த மனத்தை பரப்ரஹ்மனிடத்தில் செலுத்தி, (பரமானந்த ஸ்வரூபமாகச் செய்து) வேறு ஒன்றையும் நினைக்காமல் இருக்க வேண்டும். எதனைத் தியானம் செய்ததால் மனமானது ஆசை முதலியவைகளால் கலங்காமல் தெளியுமோ அப்படிப்பட்டது ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பாதமேயாம். ஒருகால் ரஜோகுண சம்பந்ததால் கலக்கமும், தமோகுணத்தால் மோஹமும் மனத்திற்கு ஏற்படுமானால் அப்பொழுது தாரணையால் மனத்தை

அடக்க வேண்டும், அது ரஜோ குணம், தமோ குணம் ஆகிய இவைகளால் ஏற்படும் ஸகல தோஷங்களையும் போக்கக் கூடியது. த்யானஞ் செய்கிறவர்களுக்கு மேலான க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது (இவ்வளவு மஹாத்யமுள்ளது தாரணையென்று தாத்பர்யம்) என்று சொன்னார்.

22. இதைக் கேட்டு பரீக்ஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி, 'ஓ ப்ராஹ்மணோத்தம! எப்படி தாரணைச் செய்ய வேண்டும்? எதில் மனத்தைச் செலுத்த வேண்டும்? எப்படிப்பட்ட தாரணை மனத்தில் தோஷங்களைப் போக்கும்? அதனை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்' என்று கேட்டார்.

23–39 அதைக் கேட்டுச் சுகர் பின்வருமாறு பதில் சொல்லலானார். ஓ மஹாராஜ சாஸ்திரத்தில் சொல்லியபடி ஆஸனத்தை அடைந்து மூச்சை அடக்கி, அபிமானங்களை ஒழித்து, இந்திரியங்களை ஜயித்துப் பகவத் ஸ்வரூபமாகிய ஸ்தூல ப்ரபஞ்சத்தில் நிச்சய ரூபமாகிய புத்தியையும் மனதையும் செலுத்த வேண்டும். முன் கல்பத்திலிருந்ததும், இப்பொழுது இருக்கிறதும், அடுத்த கல்பத்தில் இருக்கக் கூடியது மான ப்ரபஞ்சமானது விராட் புருஷனுடைய ஸ்வரூ பத்தில் காணப்படுகிறது. அந்த பகவத் ஸ்வரூப மானது பெரியவைகளை விடப் பெரிதானது, அந்தப் புருஷனுக்கு இந்த ஜகத்தே சரீரமாயிருக்கிறது. மேலும் (மஹத்தத்வம், அஹங்காரம் ஐந்து பூதங்கள் ஆகிய) ஏழு ஆவரணங்களுள்ள அண்ட கோசமாகிய சரீரத்திலிருக்கும் புருஷனுக்கு வைராஜன் என்று பெயர். இவரே தாரணைக்கு ஆஸ்ரயமாயிருப்பவர்.

(ஸ்தூல ரூப தாரணையால் சூட்சும ரூபத்தில் பக்தி உண்டாகுமென்பது கருத்து) மேற்காட்டிய வைராஜ னென்னும் புருஷனுக்குப் பாதாளத்தைப் பாதமாகவும், ரஸாதலத்தைப் புறங்கால்களாகவும், மஹாதலத்தைப் பாதங்களின் இரு பக்கங்களாகவும், தலா தலத்தை கணைக்கால்களாகவும், ஸுதலத்தை இரு முழங்கால் களாகவும், விதலம் அதலம் ஆகிய இவைகளை இரண்டு தொடைகளாகவும், பூதலத்தை ஜகனமாகவும், ஆகாசத்தை நாபியாகவும் ஸ்வர்க்கத்தை மார்பாகவும், மஹர்லோகத்தைக் கழுத்தாகவும், ஜனலோகத்தை முகமாகவும், தபோ லோகத்தை நெற்றியாகவும், ஸத்ய லோகத்தைச் சிரஸ் ஆகவும் சொல்லுகிறார்கள். மேலும், அநேக சிரஸுள்ள அந்தப் புருஷனுக்கு இந்திரன் முதலிய தேவர்கள் கைகள். திக்குகளே அவருக்குக் காதுகள் (இந்திரிய கோளகங்கள்,) சப்தமே ச்ரோத்ரேந்திரியம்.

அந்தப் பரமபுருஷனுக்கு அச்வினீ தேவர்களே மூக்குகள், கந்தமே கிராணேந்திரியம். ஜ்வலிக்கும் அக்னியானது அவருக்கு முகமாகும். த்யுலோகமே கண்கள், ஸூர்யனே சக்ஷுரிந்திரியம், இரவும், பகலும் ஆகிய இரண்டும் இமைகள். சதுர்முக ப்ரஹ்மாவின் பதம் அவருடைய புருவ நெரித்தலாகும். ஜலத்திற்கு அபிமானியான வருணன் அவருக்கு முகவாய்க்கட்டை, ரஸங்களே அவருடைய நாக்கு, தேசத்தாலும், காலத்தாலும் அளவிடக் கூடாதவராகிய அந்தப் புருஷோத்தமனுக்கு வேதங்கள் சிரஸாக விருக்கின்றன. யமனே சிங்கப்பற்கள், ஸ்நேகத்தின் அம்சங்களே பற்கள். ஜனங்களை மோஹிக்கச் செய்யும் மாயையே அவருடைய சிரிப்பு. அவருடைய கடைக்கண்

பார்வையே அளவற்ற ஸ்ருஷ்டி. (ஸகல ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியானது பகவானுடைய கடாக்ஷ தீனமென்பது கருத்து). வெட்கமே மேலுதடு. உலோபமே கீழுதடு. தர்மமே ஸ்தனம், அதர்ம மார்க்கமே பின்பக்கம். ப்ரஜாபதிதேவரே அவருக்கு ஆண்குறி. மித்ரா வருணர்களே விருஷணங்கள், ஸமுத்ரங்கள் வயிறு. பர்வதங்களே அவருடைய எலும்புகள், கங்கை முதலிய நதிகளே அவருடைய நாடிகளாகின்றன. மரங்களே உரோமங்கள். ஓ ராஜ சிரேஷ்டரே! வாயு பகவானே அளவற்ற வீர்யமுள்ள வைராஜருக்குப் ப்ராணன். காலமே அவருடைய (நடை) கதி. முக்குணங்களாலுண்டாகும் ஸம்ஸாரமே அவருக்குக் கர்மங்கள் அந்தப் பரமேச்வரனுக்கு மேகங்களே தலைமயிர்கள். ஓ பரீக்ஷித் மஹாராஜனே! ஸந்தியா காலங்கள் அந்தப் ப்ரபுவிற்கு வஸ்திரமாக விருக்கின்றன. அவ்யக்தமே (ப்ரதானம்) அவருக்கு ஹ்ருதயமாயிருக்கிறது. ஸகல ஓஷதிகளையும் வ்ருத்தி செய்யும் சந்திரனே மனஸ், மஹத் தத்வமே அவருடைய விஞ்ஞான சக்தி, ருத்ரனே அவருக்கு அந்தக்கரணம், குதிரை அசுவதரீ, (கழுதைக்கும் பெண் குதிரைக்கும் உண்டானது,) ஒட்டகம், யானை ஆகிய இவைகள் அவருக்கு நகங்கள், ஸகல மிருகங்களும், பசுக்களும் அவருடைய ஸ்ரோணிதேசம், பறவைகள் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும் அவருடைய வேலைத் திறமை, மனுவே புத்தி, மனித வர்க்கமே இருப்பிடம், கந்தர்வர்கள், வித்யாதரர்கள், சாரணர்கள், அப்ஸரஸ்திரீகள் ஆகிய இவைகளே ஷட்ஜம் முதலிய ஸ்வர ஸ்மிருதிகள், அஸுர ஸைன்யமே அவருடைய பராக்ரமத்திற்கு இருப்பிடம். ப்ராஹ்மணர்களே அவருக்கு முகம், க்ஷத்திரியர்களே கைகள், வைசியர்களே தொடைகள், சூத்ரர்களே

பாதங்கள் (சித்தம் ஸ்திரமாக இருப்பதற்காக விராட், ஜீவன், ஈசுவரர் ஆகிய இவர்களை ஒன்றாக உபாஸிக்க வேண்டு மென்பது கருத்து) மேலும் பலவகையான பெயருள்ள வஸுருத்ரர்கள் முதலிய தேவர்களுடன் ஹவிஸினால் செய்யக்கூடிய திரவ்ய யாகமானது அந்தப் பரம புருஷனைப் பூஜிக்கும் கர்மமேயாம், வைராஜருடைய அவயவங்கள் இம்மாதிரியானவைகள் எல்லாவற்றிற்கும், பெரியவரான இந்தப் பரமபுருஷன் இடத்தில் மோக்ஷமடைய விரும்பியவர்கள் மனத்தைச் செலுத்த வேண்டும். இதைவிட மேலானது ஒன்று இல்லை. ஸகல பிராணிகளுடைய புத்தி விருத்தி களால் ஸகலத்தையும் அனுபவிக்கிறவரும், எல்லா வற்றிற்கும் அந்தராத்மாகவும், ஸத்ய ஸ்வரூபியாய் இருக்கும் அவரையே பூஜிக்கவேண்டும்; அவரைக் காட்டிலும் வேறு இடத்தில் ஆசைபடக் கூடாது. அப்படி ஆசைப்படுவதால் ஸம்ஸாரத்தை அடையும் படி நேரிடும். ஸ்வப்னத்தில் சில ஸமயத்தில் அநேக ஜீவர்களைக் கல்பித்து, ஜீவன் அந்தந்த இந்திரியங்களைக் கொண்டு எல்லாவற்றையும் பார்ப்பதுபோல ஈசுவரன் தாம் ஒருவராக இருந்து எல்லாவற்றையும் தம்முடைய வித்யா சக்தியால் அனுபவித்து, அவைகளில் ஸம்பந்தப்படாதவராகவும் ஆனந்த நிதியாகவும் பிரகாசிக்கிறார்.

நோட்டு

ஆத்மஸ்வரூ–லக்ஷ்மீ, ப்ரம்ஹா முதலிய சேத னங்கள் எப்பொழுதும் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு உள்ளவைகளாக இருக்கிறதை அறியாதவர்கள் ...விஜ, ஸாமக்ரீ... ஆத்ம தைன்ய' என்னும் பாடத்தை ஆசிரயித்து, 'தனக்குக் குறைவை உண்டு பண்ணக்

கூடியவைகள்' என்று அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. விஜ , மனனம்... ஓ மைத்ரேயி! ஆத்மாவைப் பற்றியே விசாரிக்க வேண்டும். குரு முகமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த ஒருவராகிய ஆத்மாவையே அறியுங்கள். மற்ற வார்த்தைகளை விட்டுவிடுங்கள் ... ஸ்ருதிகள், ஸாங்கியம்... ஞான யோகத்தாலே சாங்கியர் களுக்கும், கர்ம யோகத்தால் யோகிகளுக்கும் பகவத்கீதை, அஷ்டாங்க ... யமம், நியமம், தியானம், தாரணம், ஆஸனம், பிராணயாமம், பிரத்யாஹாரம், ஸமாதி என்று எட்டு அங்கமுள்ளது. விதி நிஷேதம்... இதனைச் செய் என்று சாஸ்திரத்தில் சொல்லியிருப்பது விதியாகும், இதனைச் செய்யவேண்டாம் என்று சொல்லியிருப்பது நிஷேதமாகும் ... மேற்சொல்லிய விதி நிஷேதமென்பதற்கு விதி நிஷேதங்களைச் சொல்லும் வேதத்தால் காண்பிக்கப்படுகிற காம்ய கர்மங்களென்று அர்த்தம் கொள்ள வேண்டும். அவசியம் அனுஷ்டிக்க வேண்டியதாக வேதத்திற் சொல்லப்பட்ட பஞ்ச மஹா யக்ஞங்களே விதியென்றாவது, ஸுராபானம் செய்யக் கூடா தென்பதே நிஷேதமென்றாவது இவ்விடத்தில் அர்த்தம் அல்ல... வீர, நிர்குண ...ரஜோகுணம், தமோகுணம் இவைகளுடன் சேர்ந்த ஸத்வகுணமற்றது ...வீர, கடைசியில் மூலத்தில் த்வாபாரதெள என்று இருப்பதால் அதற்கு 'கலி யுகத்தின் ஆதியில்' என்று அர்த்தம் கொள்ள வேண்டும். வ்யாஸ மஹர்ஷியும், சந்தனு சக்ர வர்த்தியும் ஒரே காலத்தில் இருந்ததாகச் சொல்லப் பட்டிருப்பதால் ... வீர வ்யாஸ மஹர்ஷியானவர் தம்முடைய அறுநூறாவது வயதில் திருதராஷ்டிரரை உண்டுபண்ணினார் என்று சொல்லியிருப்பதாலும், துவாபரயுகத்தின் கடைசியில் பாரதக்கதை நடந்ததாகச்

சொல்லியிருப்பதாலும், துவாபரயுகத்தில் கிருஷ்ண அவதாரத்திற்கு முந்தி என்று அர்த்தம் கொள்ள வேண்டும்... விஜய. ப்ரம்ஹ ஸ்வரூபத்தில் 'ப்ரம்ஹ ஸம்ஹிதம், என்று இருப்பதால் வேதத்திற்குச் சமமானது, பாகவதம் ... பகவான் நேரில் உபதேசித்த நான்கு ஸ்லோகங்களைக் கொண்டு செய்யப் பட்டதால் அல்லது பகவத் ஸ்வரூபத்தை நன்றாய் வர்ணிப்பதால்... வீர. சொல்லுகிறேன்... முக்தனாகிய என்னாலும் அப்யஸிக்கப்பட்ட இந்த பாகவத புராணமானது, மோக்ஷத்தை அடையவேண்டிய வராகிய உமக்கு உபயோகமானது என்று தாத்பரியம் ...வீர, அவயவத்தை..யுகத்தை...வீர. பெரிதானது ... இவர் பூமியைவிடப் பெரியவர், அந்தத்தைக் காட்டிலும் பெரியவர் இவ்வுலகங்களைக் காட்டிலும் பெரியவர் ஸ்ருதி. ஸ்வர்க்கத்தை, முலத்தில் ஜ்யோதிரனீகம் என்று இருப்பதால் நக்ஷத்ர லோகம் என்று அர்த்தம் கொள்ளவேண்டும், பறவைகள்...வாத ஸ்வரூபிகளான தித்திரி முதலிய பக்ஷிகள்...வீர. திறமை...எவரால் ஹம்ஸங்கள் வெண்மை நிறமுள்ளவைகளாகவும், கிளிகள் பச்சை நிறமுள்ளவைகளாகவும், மயில்கள் பலவகை நிறமுள்ளவைகளாகவும் ஸ்ருஷ்டிக்கப் பட்டனவோ அவர் நமக்கு விருத்தியை உண்டு பண்ணுவார். மூலத்தில் வ்யாகரணம் என்று இருப்பதில் அதற்கு ஆச்சரியத்தை யுண்டுபண்ணும் வார்த்தை என்று அர்த்தம். சந்த். இருப்பிடம் மனுஷ்ய ஜன்மாவானது ஞானத்திற்கும், பக்தி முதலிய ஸ்தானங்களுக்கும் உபாயமாயிருக்கிறது. யாகம் முதலிய கர்மங்கள் ஞானம் முதலியவைகளுக்குக் காரணமாய் இருப்பதால், அக்கர்மங்களில் அதிகாரமுள்ளவர் களுக்கே ப்ரஹ்மோ பாஸனத்தில் அதிகாரம ஏற்படுகிற

படியால் மனுஷ்ய சரீரமே எல்லாவற்றிற்கும் உபயோக மான்து சந்த். அஸுரஸைன்ய அஸுரானீக வீர்ய என்று ஒரு பாடமுண்டு. அதற்கு ப்ரஹ்லாதனே ஸ்மரணம் என்று அர்த்தம் கொள்ளவேண்டும், வீர.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்- 2

பகவானிடத்தில் மனத்தை செலுத்தும் வகை

1–21. பிரளயகாலத்தில் ப்ரஹ்ம தேவரானவர் மேற் காட்டியபடி விராட் புருஷனிடத்தில் மனத்தைச் செலுத்தினார். (வைராஜ தாரணையைச் செய்தார்.) அதனால் பகவான் ஸந்தோஷமடைந்து ப்ரஹ்மதேவருக்கு மறந்து போயிருந்த ஸ்ருஷ்டி சக்தியை மறுபடியும் அனுக்கிரஹித்தார். அதனால் ப்ரஹ்மதேவர் வீணாகாத ஞானமுள்ளவராகவும், நிச்சயமாகிய புத்தியுள்ள வராகவும் ப்ரளயத்திற்கு முன்பு இருந்தது போலவே உலகத்தை ஸ்ருஷ்டித்தார் (தாரணையானது, இம் மாதிரியான மஹாத்மியமுள்ளது என்று கருத்து) வேதங்கள் யாவும் கர்மங்களையும், அவற்றின் பலன்களையும் சொல்லுகின்றன. ஆனாலும் ஸ்வர்க்கம் முதலியவைகளில் புருஷார்த்தம் ஒன்று மில்லை. அதைக் கேட்ட மாத்திரத்தில் மனதிற்கு ஆசையைக் கொடுக்கிறதே யொழிய வேறில்லை. (பெயரால் அழகுள்ளது) ஸ்வப்பனத்தில் கண்ட வஸ்துக்கள் நாம் விழித்துக் கொண்டபொழுது இல்லாமற் போவதுபோல மாயா ரூபமான கர்ம மார்க்கத்தில் அலைந்தும் கொஞ்சமேனும் ஒப்பற்ற ஸுகம் கிடைக்கிறதில்லை. ஆகையால் விவேகமுள்ளவன் தேக நிர்வாகத்திற்கு வேண்டியவரையில் தோக்கிய வஸ்துக்களை அபேக்ஷிப்பான். அவைகளிலும் ஆஸக்தியில்லாமல் ஜாக்ரதையாக இருப்பான். மேலும் இவைகள் ஸுகத்தைக் கொடுக்கக் கூடியவைகளல்ல என்ற நிச்சயமுள்ளவனாகவும் இருப்பான். ஆனதுபற்றி, தேகத்திற்குவேண்டிய விஷயங்கள் ஸுலபமாக அவனுக்குக் கிடைக்குமானால் அவன்

இக்கர்மங்களில் முயற்சி செய்யமாட்டான். கர்மங்களோ மிகவும் ச்ரமத்தைக் கொடுக்கின்றன. எவ்வாத்தேசங் களிலும் எப்பொழுதும் பிறரை அபேக்ஷியாமல் ப்ரயாஸமின்றிக் கிடைக்கும் பூமியாகிய படுக்கை ஸித்தமாக இருக்க, பணச் செலவினால் கிடைக்கக் கூடியதும், இஷ்டமான காலங்களில் அகப்படாததுமான கட்டில் முதலிய படுக்கையை ஞானமுள்ளவன் அபேக்ஷிப்பானா? தன்னுடை கைகளிருக்கத் தலை யணைகளால் என்ன ப்ரயோஜனம்? தவிரவும், அன்னத்தை வைத்துக்கொண்டு புஜிக்க அஞ்சலி (சேர்ந்த இருகைகள்) ஸ்வாதீனத்திலிருக்க, பல வகையான பாத்திரங்களை அபேக்ஷிக்கவும் வேண்டுமா? மேலும் திக்குகளும், மரவுரிகளும் உடுத்திக் கொள்ளக்கூடியவைகளாக விருக்கும்போது, பட்டு, வஸ்திரம் முதலியவைகளை ஏன் ஸம்பாதிக்க வேண்டும்? வழியில் கந்தைத்துணி அகப்படாதா? பிறரையே போஷிக்கும் ஸ்வபாவமுள்ள (பழம் முதலியவை களாலென்பது கருத்து) மரங்கள் ஆகாரத்தைக் கொடாமலிருக்குமா? தீர்த்தத்தைக் கொடுக்கும் நதிகள் வரண்டு போயினவா? வஸிப்பதற்கு மலைகளில் குகைகளிருக்கின்றனவே? அவைகள் அரசர்களால் மூடப்பட்டனவா? ஆகையால் பிறரை யாசியாமலே தேக யாத்திரையை நடத்திக்கொள்ளலாம். மேற் கூறியவைகள் கிடைக்காவிடினும் சரணாகதர்களான நம்மைப் பகவான் ஸம்ரக்ஷிக்கமாட்டாரா? இப்படி இருக்க பணத்தால் கர்வங்கொண்டு கார்யம் அகார்யம் இவைகளை அறியாத மமதை கொண்டவர்களை விவேகிகள் ஏன் உபாஸிக்கிறார்கள். ஸ்ரீ மந் நாராயண ரையே (மற்றவர்களை விட்டு) ஸேவிக்கவேண்டும். அவர் எல்லோருடைய சித்தத்திலும் தாமாகவே

எப்பொழுதுமிருப்பவர். ஆத்ம ரூபியாயிருப்பவராகையால் அவர் எல்லாருக்கும் பிரியர். சரீரம் முதலியவைபோல அநித்யரல்லர். ஸத்ய ஸ்வரூபியாயிருப்பவர். ஸேவிக்கக் கூடிய குணங்களால் நிறைந்தவர். நாசமற்றவர். அவரை ஸேவிப்பதால் ஸம்சாரத்தைக் கொடுக்கும் அவித்யை முதலியவைகள் நாசமடைகின்றன. கர்ம ஜடர்களாயும் ஞான ஹீனர்களாயுமுள்ள மனுஷ்ய பசுக்கள் விஷயங்களிலேயே ஆசை கொள்கிறார்கள். தாரணையைச் செய்கிறதில்லை. மேலும், யமலோகத் திலிருக்கும் வைதரணீ நதியில் தம்முடைய கர்ம வசத்தால் துக்கத்தை யனுபவிப்பது போல ஸம் ஸாரத்தில் மூழ்கி துக்கப்படுகிறார்கள். இப்படிக் கஷ்டப்படும் ஜனங்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் விவேகியான புருஷன் பகவானைச் சிந்திப்பதாகிய தாரணையைச் செய்யாமலிருப்பானா? சிலர் தம்முடைய ஹிருதயத்திலிருக்கும் அவகாசத்தில் நான்கு கைகள் உள்ளவரும், தாமரைமலர், சக்ரம், சங்கம், கதை ஆகிய இவைகளைத் தரிப்பவரும், ப்ராதேசமாத்ர சரீரமுள்ளவருமாக வஸிக்கும் பரம புருஷனை இடை விடாமல் தியானிக்கிறார்கள். அந்தப் புருஷன் தாமரை மலர்போன்ற நீண்ட கண்களுள்ளவர். முகமலர்ச்சி யுள்ளவர். கதம்ப (கடம்பம்) புஷ்பத்தின் தாதுகள் போல் பொன்னிறமுள்ள வஸ்திரத்தைத் தரித்தவர். மிகுந்த காந்தி பொருந்திய இரத்னங்களிழைத்த ஸ்வர்ணமயமான தோள் வளைகள், கிரிடம், குண்டலம் ஆகிய ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்டவர். அவருடைய பாதங்கள் யோகிகளுடைய மலர்ந்த ஹ்ருதய கமலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட வைகள். மார்பில் லக்ஷ்மியுள்ளவர். கௌஸ்துப ஹாரம் தரித்தவர். குறையாத காந்தியுள்ள வனமாலையால்

பிரகாசிப்பவர். மேலும், விலையுயர்ந்த அரைநாண், மோதிரம். வளை முதலிய ஆபரணங்களால் விளங்கும் திவ்ய தேஹமுள்ளவர். அவருடைய முகமானது புன்சிரிப்புள்ளது, மேலும் கறுப்புநிறமுள்ளவைகளும், காந்தியுள்ளவைகளும், பளபளப்புள்ளவவைகளுமான சுருட்டை மயிர்களால் அழகானது. கம்பீரமாகிய சிரிப்பு, பார்வை. புருவ நெரித்தல் ஆகிய இவைகளால் ஜனங்களை அனுக்கிரஹிக்கும் ஸ்வாபவமுள்ளது, இம்மாதிரியான பகவத் ஸ்வரூபத்தை மனது ஸ்வாதீனப்படுகிற வரையில் தியானிக்க வேண்டும். எப்படியெனில், மேற்காட்டிய பாதம் முதல் சிரிப்பு வரையிலுமுள்ள பகவானுடைய அவயவங்களும் சேஷ்டைகளும் ஒவ்வொன்றாகத் தியானிக்கப்பட வேண்டும். மனது அவைகளிலே பதிந்து, விஷயங்களில் செல்லாமலிருந்தபோது அதைவிட்டு வேறு அவய வத்தை த்யானிக்கவேண்டும். இப்படி ஒவ்வொரு நாளும் நித்ய கர்மங்களை முடித்துக்கொண்டு சுத்தனாகப் பரமபுருஷனுடைய பெரிதாகிய ரூபத்தை தியானஞ் செய்யவேண்டும். அவரிடத்தில் பக்தியுண்டாகும் வரையில் அவருடைய ரூபத்தைத் தியானஞ் செய்யவேண்டும். அவர் ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் மேலானவர்; ஜகத்திற்கு அதிபதி. எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாயி ருப்பவர். ஓ மஹாராஜ! ஒருவன் இப்படி சித்தம் சுத்தியானபிறகு ஸகல ஆசைகளையும் ஒழித்து இந்தச் சரீரத்தை விட வேண்டுமென்று விரும்பு வானாகில், புண்ய க்ஷேத்திரத்தில் உத்தராயணம் முதலிய காலங்களில் ஸ்திரமாயும், ஸுககரமுமான ஆஸனத்தில் உட்கார்ந்து, ப்ராணாயாமஞ் செய்து ஸுவாஸத்தை அடக்கி, வேறு விஷயங்களில் பற்றுதல் இல்லாதவனாக மனத்தால் ப்ராணனையும், இந்திரியங்

களையும் அடக்கிக்கொள்ளவேண்டும். மேலும் அந்த மனத்தை நிர்மலமாகிய புத்தியாகச் (நிச்சயரூபமானது) செய்து, அந்தப் புத்தியை அதற்கு ஸாக்ஷியாக விருக்கும் ஜீவனிடத்தில் சேர்க்க வேண்டும். அந்தச் சுத்தமாகிய ஆத்மாவை பரப்ரஹ்மத்தினிடம் லயிக்கச் செய்து சாந்தியையடைந்து கார்யத்திலிருந்து ஒழிவடைய வேண்டும். தேவர்களுக்கும் மேலான காலத்தாலும், அந்தப் பரமாத்ம ஸ்வரூபம் பாதிக்கப்படுகிறதில்லை. ஜகத்திற்கு, அதிபதிகளான தேவர்களும் அந்த ஸ்வரூபத்திற்குப் பிரபுக்களல்ல. அந்த ஆத்மாவிடத்தில் ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய குணங்களும் மாறுதலும், மஹத் தத்வம், பிரதானம் ஆகிய இவைகளும் இல்லை ஆத்மாவை விட வேறானவைகளை (இவை ஆத்மாவல்ல என்று விசாரித்து, தேகம் முதலியவைகளில் ஆத்மத்வ புத்தியை விட்டு ஒவ்வொரு க்ஷணத்திலேயும் வேறிடத்தில் பிரியம் வைக்காத தங்களுடைய ஹ்ருதயத்தில் விஷ்ணுவின் பதத்தையே பக்தர்கள் தியானஞ் செய்கிறார்கள். ஆகையால் அதுவே மேலானது என்கிறார்கள். இந்தப்பதத்தையடைந்தவனே கிருதகிருத்யன். இம்மாதிரி சாஸ்த்ர விசாரத்தில் உண்டான விசேஷ ஞானத்தால் விஷய வாஸனைகளை எரித்துப் ப்ரஹ்ம பாவத்தை அடைந்த முனியானவர் கீழ் முகமான வாயுவானது வெளியில் போகாமலிருக்கும்படி, தம்முடைய பாத மூலத்தால் (குதிகால்) ஆஸனத்தை அடைத்துக்கொண்டு சிரமம் இல்லாதவராக, தொப்புள், ஹிருதயம், மார்பு, முகவாய்க்கட்டை, புருவங்களின் மத்திய பாகம், தலை ஆகிய ஆறு ஸ்தானங்களிலும் அந்தந்த வாயுவைச் செல்லும்படி செய்யவேண்டும். பின்னும் நாபியாகிய மணிபூரகத்திலிருந்து வாயுவை ஹ்ருதயமாகிய

அநாஹதத்தில் செல்லச் செய்து அதிலிருந்து மார்பாகிய விசுத்தி ஸ்தானத்திற்குந் போகச் செய்து, சித்தத்தையடக்கிக்கொண்டு, அதை விசுத்த ஸ்தானத்தின் மேற்பாகமாகிய தாது மூலத்திற்கு மெதுவாக கொண்டு போக வேண்டும். அதிருந்து ஆக்ஞா சக்கரமாகிய புருவங்களின் மத்ய பாகத்தில் அந்த வாயுவைச் செலுத்தவேண்டும். அப்போது காதுகளையும், கண்களையும், மூக்குகளையும், முகத்தையும் மூடிக் கொண்டு வாயுவை வெளியில் விடாமல் அடக்கிக் கொண்டிருக்கவேண்டும். வேறு விஷயங்களை விரும்பக் கூடாது. இப்படி ஆக்ஞா சக்கரத்தில் ப்ராணனை அரை முஹூர்த்த காலம் நிறுத்திக்கொண்டிருந்து, பிறகு தடையற்ற ஞானமுள்ளவனாக ப்ரஹ்ம ஸ்வரூபத்தையடைந்து, ப்ரஹ்மாந்தரமாகிய தலையைப் பேதித்து வாயுவை வெளிப்படுத்தி, தேகத்தை விடவேண்டும்.

22–31. ஓ மஹாராஜ! இந்தப் ப்ரஹ்மாண்டத்தில் ப்ரஹ்மலோகம் போகிறவனானாலும் அணிமா முதலிய ஐச்வர்யங்களுள்ள தேவர்கள் வஸிக்கும் ஸ்வர்க்கம் முதலிய இடங்களுக்குச் செல்லுகிறவனானாலும் மனத்தையும், இந்திரியங்களையும் தன்னுடன் கூடவே அழைத்துக்கொண்டு போகிறான். வாயுவிற்குள் அடங்கிய லிங்க சரீரமுள்ள மஹா யோகிகள், மஹர்லோகம் முதலியவைகளிலும், ப்ரஹ்மாண்டத்திற்கு வெளியிலும் போவார்கள் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். உபாஸனை, தபஸ், அஷ்டாங்க யோகம் ஞானம் ஆகிய இவைகளை அனுஷ்டிப்பவர்கள் அர்சிராதி மார்க்கமாய்ப் போவார்கள். அந்த வழியில் போனவர்கள் மறுபடியும் திரும்புகிறதில்லை.

அப்படிப்பட்ட கதியானது யாகம் முதலியகர்மங்களால் கிடைக்கிறதில்லை. ப்ரஹ்மலோக மார்க்கத்தில் சென்றவன் முதலில் அக்னிக்கு அபிமானியான தேவதையை அடைகிறான். பிறகு ஜ்யோதிஸின் ரூபமாகிய ஸுஷும்னா நாடி வழியாய் ஒன்றிலும் ஆசைப்படாதவனாக உத்தமமான, சிம்சுமாரமென்ற ஜ்யோதி சக்கரத்தை யடைகிறான். பின்பு ஸூர்யன் முதலியவர்களுக்கு ஆசிரயமான அந்த விஷ்ணுவின் சக்கரத்தைத் தாண்டி சுத்தமான லிங்க சரீரத்துடன் தானொருவனாகப் ப்ரஹ்மத்தை அறிந்தவர்கள் வஸிக்கக்கூடியதும், எல்லோராலும் நமஸ்கரிக்கப் பட்டதுமான மஹர்லோகத்தை அடைகிறான். அந்த ஸ்தானத்தில் அநேக கால ஜீவிகளான ப்ருகு முதலியவர்கள் ஆனந்தமாக வஸிக்கிறார்கள். பிறகு அவர்கள் அந்தக் கல்பத்தின் முடிவில் ஸங்கர்ஷண பகவானுடைய முகத்திலிருந்து உண்டான அக்னியால் உலகங்கள் எரிக்கப்படுவதைப் பார்த்து, அதன் உஷ்ணத்தைச் ஸகியாமல் அந்த உலகத்திலிருந்து ஸனகர் முதலியவர்கள் வஸிக்கும், இரண்டு பரார்த்தம் வரையில் அழியாமலிருக்கக் கூடிய ப்ரஹ்ம லோகத்தை அடைகிறார்கள். அவ்விடத்தில் சோகம், ஜரை, கிழத்தனம் மரணம், துக்கம், பயம் ஆகிய இவைகள் இல்லை. ஆனாலும் அந்த உலகத்தில் இருப்பவர்கள், 'ப்ரஹ்மலோகம் சோக மோகங்களற்றது ஸ்வர்க்காதிகளுக்கு மேலானது என்று நினையாமல் கர்மஜடர்களாக, ஸம்ஸாரத்தில் கஷ்டப்படும் அக்ஞர்களைப்பற்றி வருத்தப்படுகிறார்கள். அதைத் தவிர வேறு துக்கம் அவ்விடத்திலில்லை. அந்த லோகத்தையடைந்தவன் ப்ரஹ்ம ப்ரளயத்தில் லிங்க தேகத்துடன் பூமியின் ஸ்வரூபத்தையடைந்து ஜலத்தை

அடைந்து, தாமஸியாமல், பயமில்லாதவனாகி தேஜோமயனாகி வாயுவை யடைந்து அணுபவம் முடிந்தவுடன் ஆகாச சரீரத்தைக் அடைகிறான். பின்னும் அவன் க்ராணேந்திரியத்தைக் கொண்டு வாஸனையையும், ரஸனேந்திரியத்தைக் கொண்டு ரஸத்தையும், நேத்ரத்தைக் கொண்டு உருவத்தையும் த்வகிந்திரியத்தைக் கொண்டு ஸ்பர்சத்தையும், ச்ரோத் ரேந்திரியத்தைக் கொண்டு ஆகாயத்தின் குணமாகிய சப்தத்தையும், கர்மேந்திரியங்களைக் கொண்டு அவை களின் வியாபாரங்களையும் அடக்கிக்கொள்ளுகிறான். மேலும் அவன் பூதஸூக்ஷ்மங்கள், பத்து இந்திரியங்கள் ஆகிய இவைகளுக்கு லய ஸ்தானமாயும், மனோமய மாயும்,தேவதா ரூபமாயுள்ள ஆவரணமாகிய அஹங் காரத்தை அடைந்த பிறகு அதனுடன் விஞ்ஞான தத்வத்தை அடைகிறான். பின்னும் அவன் குணங்கள் லயிக்கும் இடமான பிரதானத்தை அடைகிறான். (லயிக்கிறான்). இப்படி உபாதிகள்யாவும் லயமடைந்த பிறகு ஆனந்த ஸ்வரூபியான ஜீவன் விகாரமற்றதும், ஆனந்த ஸ்வரூபியுமான ஆத்மாவை அடைகிறான். ஓ மஹாராஜ! இம்மாதிரியான பதத்தை யடைந்தவன் மறுபடியும் திரும்புகிறதில்லை.

32–37. ஸத்யோமுக்தி, க்ரமமுக்தியென்ற இரண்டு மார்க்கங்களும் வேதங்களில் சொல்லப்பட்டவைகள். இவைகளை ஸ்ரீ பகவானாகிய வாஸுதேவர் முன்னொரு காலத்தில் ப்ரஹ்மதேவருக்கு உபதேசித்தார். நீர் இப்பொழுது அவைகளை அறிய விரும்பியபடியால் உமக்குச் சொன்னேன். ஸம்ஸாரத்தில் கஷ்டப்படும் ஜனங்கள் மோக்ஷத்தையடைவதற்கும் பல மார்க்கங்கள் இருந்தாலும் பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில்

பக்தியையுண்டு பண்ணும் மேற்காட்டிய மார்க்கமே மேலானது. அதுவே ஸுகமாய் அனுஷ்டிக்கக்கூடியது இடையூறற்றது, தவிரவும் முன்னொரு ஸமயத்தில் ப்ரஹ்மதேவர் ஒரே சித்தராக இருந்து, ஸகல வேதங்களையும் மூன்று தடவை படித்துப் பார்த்து, மேற் சொல்லிய மார்க்கமே பகவத் பக்தியைக் கொடுக்கக் கூடியது என்று நிச்சயித்தார். மேலும் பரமாத்மா ஆனவர், ஸகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாய் இருப்பதைக் கொண்டும் புத்தி முதலியவைகளைக் கொண்டும், ஸித்திக்கும் அனுமானத்தைக் கொண்டும், எல்லோராலும் பார்க்கப்படுகிறார். ஆகையால் ஓ பரீக்ஷித்து மஹாராஜனே! எந்த இடத்திலும், எக்காலத்திலும் மனிதர்கள் ஸ்ரீமந் நாராயணனையே ஸ்மரிக்க வேண்டும் அவருடைய கதையைக் கேட்க வேண்டும் திவ்ய நாமங்களை உச்சரிக்க வேண்டும், ஆகையால் ஸ்ரீ பகவானுடைய கதையாகிய அமிருதத்தைச் சுரோத்ரமாகிய பாத்திரத்தால் எவர்கள் புஜிக்கிறார்களோ, விஷய ஆசையால் கலங்கிய அவர்களுடைய சித்தமானது சுத்தமாய் விடுகிறதுமன்றி அந்தப் புண்யசாலிகள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பதத்தையும் அடைவார்கள்.

நோட்டு

ஸ்ருஷ்டித்தார். தாதாவானவர் முன்னிருந்தது போல ஸ்ருஷ்டித்தார் –ஸ்ருதி பிரளய காலத்தில் முன் கல்பத்திலுள்ள ப்ரஹ்மதேவருடன் ஸ்ருஷ்டி விஷயமான ஞானம் நஷ்டமாகி விட்டது. பிறகு ஸ்ருஷ்டி காலத்தில் இந்தக் கல்பத்திய ப்ரஹ்மதேவர் முன் அத்யாயத்தில் சொன்னபடி பகவானிடம் மனதைச்

செலுத்தி, அதனால் ஸ்ருஷ்டி ஞானத்தையடைந்தார். இப்படி அர்த்தஞ் சொல்லவேண்டும். இல்லாவிடில் முன் கல்பத்திய ப்ரஹ்மதேவரே இந்தக் கல்பத்திலுமிருந்து ஸ்ருஷ்டித்தாரென்று ஏற்படும், அப்படிச் சொல்வது ஸரியல்ல, ஒவ்வொரு கல்பத்திலும் ப்ரஹ்மதேவர் வேறு என்று கொள்வதே நியாயம். அவர்களெல்லோரும் ப்ரளயம் வந்தவுடன் ப்ரஹ்மதேவருடன் முக்தியடைகிறார்கள், ப்ரளய காலத்தில் ப்ரஹ்ம லோகத்திலிருப்பவர்கள் எல்லோரும் முத்தியை அடைகிறார்கள். ஸ்ருதிகள், தவிரவும், பகவானுடைய அளவற்ற கிருபையை அடைந்தவர்கள் மறுபடியும் பிறந்தார் களென்று சொல்வதும் உசிதமல்ல. ஆதலால் மூலத்திலிருக்கும் ஸ்மிருதி என்ற பதத்திற்கு ஸ்ருஷ்டி ஞானமென்று இவ்விடத்தில் அர்த்தங்கொள்ள வேண்டும். ஆகேஷபம் வைராஜ தாரணையால் ஸ்ருஷ்டி ஞானம் உண்டாகிற தென்றால், அந்தத் தாரணையானது அந்த ஞானத்தால் தான் உண்டாக வேண்டும், ஆதலால் அந்யோந்யாசிரய தோஷம் நேரிடுகிறது. சமாதானம் பகவானுடைய கொப்பூழில் தாமரைப் புஷ்பத்திலிருந்து ப்ரஹ்மதேவர் உண்டானார். அவருடைய தபஸினால் நாராயணன் ஸந்தோஷித்தார். அப்பொழுது ஓ சதுர்முகரே! மறுபடியும் நீர் தபஸ், ஞானம் இவைகளை யனுஷ்டிக்கவேண்டும். அவைகளால் ஆவரணம் விலகும். அப்பொழுது நீர் என்னிடத்தில் லோகங்களையும் அவைகளில் என்னையும் பார்க்கலாம் என்று பகவான் சொன்னார். பிறகு ப்ரஹ்மதேவர் ஸ்ருஷ்டிக்கப்படும் ஸகல பதார்த்தங்களையும் முன்னமே பார்த்து, அவை களைப் பகவானுடைய அவயவங்களாகப் பாவித்து அந்தத் தாரணையால் ஸ்ருஷ்டி ஞானம்

ஸாமர்த்தியம் இவைகளையடைந்தார், வீர. நிச்சயமாகிய –வியவஸாய புத்தி என்று மூலத்திலிருப்பதால் ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்று முயற்சி செய்தவர், விஜயத், வேதங்கள் ஸகல வேதம் முதலிய சப்தங்களுக்கு இந்தப் பரமாத்மாவே அர்த்தமாயிருக்கிறார். பகவான் உடைய இச்சையால் உண்டான ஸம்ஸாரத்தில் அலைந்து கொண்டு ஒன்றையும் அறியாதவனாகி, கர்ம வாஸனையினால் பலவகையான ஜன்மங்களை யடைந்து கஷ்டப்படும் ஜீவன் இந்திரன் முதலிய சப்தங்களுக்கு அந்த அந்தத் தேவதைகளை அர்த்தம் என்று நினைக்கிறான் அது ஸரியல்ல. அந்தத் தேவர்களிடத்தில் குறைவற்ற ஐசுவர்யமாவது, புருஷார்த்தமாவது, இல்லை, மேலும் அவர்களை உபாஸிப்பதால் புருஷார்த்தமொன்றும் கிடைக்கிறது இல்லை, ஆகையால் ஸ்ரீமந் நாராயணனையே ஸேவிக்கவேண்டும், ஸ்மரிக்கவேண்டும், அவரே ஸகல வேதங்களுக்கும் அர்த்தம். விஜயத். விவேகமுள்ளவன் ஸகல நாமங்களும் ஸ்ரீமந் நாராயணனையே சொல்லு கின்றன என்பதை எப்பொழுதும் மறவாமலிருப்பவன், தாய் தந்தை முதலிய பந்துக்களை விட மிகவும் ஜனங்களுக்கு வேதங்கள் அனுகூலத்தையே உபதேசிப் பவைகள் ஆகையால் ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களுள்ள ஜனங்களுடைய புத்திக்கு அநுகுணமாக ஸ்வர்க்கம் முதலிய ஸ்திரமில்லாத பலத்தைக் கொடுக்கும் கர்மங்களையும், ஸாச்வதமான மோக்ஷ ஸாதனங்களையும், அவ்வேதங்கள் உபதேசிக் கின்றன. அக்ஞர்கள் ஸ்வர்க்கம் முதலியவைகளையே அடையவிரும்பி அதன் ஸ்தானங்களை அனுஷ்டிக் கிறார்கள், ஆகையால் வேதங்கள் அற்பமுள்ள கர்மங்களை உபதேசித்து ஜனங்களை ஏமாற்றிவிட்டன.

என்று சொல்வது உசிதமல்ல வீர. கிடைக்கிறது இல்லை கர்மபலம் தாழ்ந்ததென்று காட்டப்பட்டது. கர்மங்களில் நம்மால் அனுபவிக்கக்கூடியது, நம் முடைய முயற்சில்லாமலேயே அவசியம் ஸித்திக்கும் என்று அதற்காகச் சிரமப்படமாட்டான்...சந்த. மமதை நான் ஈச்வரன். நான் போகமுள்ளவன், நான் ஸித்தன், நான் பலமுள்ளவன், ஸுகமுள்ளவன், பணக்காரன், மேலான குலத்தில் பிறந்தவன், ஆனதால் எனக்குச் சமானமானவன் லோகத்திலொருவனும் இல்லை என்று கர்வங்கொண்டார்கள், ப்ரியர்; ஜனங்கள் பணம், களத்திரம், புத்ரன் ஆகிய இவை களை ஆத்மாவின்' ஸௌக்கியத்திற்காவே ஸம்பாதிக் கிறார்கள். ஆத்மாவிற்கு ஆக்மாவாக இருப்பவர் பிரியரென்பதில் என்ன ஆக்ஷேபம் வீர. ஸத்யஸ்வரூபி புருஷார்த்த ஸ்வரூபி, வீர. ப்ராதேச கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் (தர்ஜனிக்கு) இடையிலுள்ள நீளம் ஸ்ரீத. ஜகத்தின் அளவு எவ்வளவோ அந்த அளவுள்ளவர் சந்த் மூவுலகமும் பகவானுக்குச் சரீரமானாலும் கட்டைவிரல் ப்ரமாணம் உள்ள ஹ்ருதய கமலத்தில் உபாஸிப்பதற்காக அடங்கிய சரீரம் வீர. உட்கார்ந்து இது மரணம் அடையச் சித்தமாக விருப்பவன் செய்யக்கூடிய கார்யம் இன்னதென்று சொல்லப்பட்டது. இனியும் அவனால் செய்யப்படவேண்டிய கார்யம் சொல்லப்படுகிறது பூமியின் ரூபத்தை மிகுந்த புண்யத்தால் ப்ரஹ்மம லோகஞ் சென்றவர்கள் மறு கல்பத்தில் அவர்கள் உடைய புண்யத்திற்குத் தக்கபடி அதிகாரிகள் தேவதைகளாக ஆகிறார்கள், ஹிரண்யகர்ப்பர் முதலிய வர்களையும் உபாஸித்துப் ப்ரஹ்மலோகஞ் சேர்ந்த வர்கள் ப்ரஹ்மாண்டத்தைப் பேதித்து தமதிஷ்டப்படி

விஷ்ணுபதத்தை அடைகிறார்கள். ஆனதால் பகவத் பக்தர்கள் ப்ரஹ்மாண்டத்தை பேதித்துச் செல்லும் வகை காட்டப்படுகிறது. ஈஸ்வராதிஷ்டிதமான ப்ரகிருதியிலிருந்து மஹத்தத்வம் உண்டாகிறது. அதன் அம்சம் அஹங்காரமாகும். அதனுடைய அம்சம் ஆகாயமாகும். அதனுடைய அம்சம் வாயுவாகும் (ஸ்பர்சதன்மாத்திரையால்) அதனுடைய அம்சம் (ரூபதன்மாத்திரையால்) தேஜஸ்ஸாகும். அதன் அம்சம் (ரஸதன்மாத்திரையால்) ப்ருதிவியாகும். அவைகள் யாவும் சேர்ந்தது பதினான்கு லோகங்கள் ஆகிய விராட்புருஷ சரீரமாம். அது ஐம்பது கோடி விஸ்தாரமுள்ளது. அதற்குப் ப்ருதிவியே அண்டகடாஹ மெனப்படுகிறது. அதன் முதலாவது ஆவரணமானது கோடி யோசன விஸ்தாரமுள்ளது. ஜலம் முதலிய ஒவ்வொரு ஆவரணங்களும் ஒன்றைவிட மற்றொன்று பத்து மடங்கு பெரியவைகளாம். அவைகளில் எட்டாவதான ப்ரகிருதியின் ஆவரணம் மிகவும் பெரிதானது. அர்ச்சிராதி அக்னி ஜ்யோதிஸ், பகல் சுக்லபக்ஷம், ஆறு மாஸ்யங்கள், உத்தராயணம் ஆகிய இவைகளின் அபிமான தேவதைகளடங்கிய மார்க்கத்தில் சென்றவர்கள் ப்ரஹ்மத்தையடைகிறார்கள். ஸத்யோமுக்தி எப்பொழுது இவனுடைய ஹ்ருதயத்திலிருக்கும் கர்மங்கள் யாவும் நாசமடைகின்றனவோ, பிறகு மனிதன் மரண தர்மமில்லாதவனாக ஆகிவிடுகிறான் ஸ்ரீத, க்ரமமுக்தி முன்காட்டிய அர்ச்சிராதி மார்க்கத்தை அடைந்தவர் களுக்கிக் கிடைப்பது –வீர. மூலத்தில் இரண்டு மார்க்கம் என்றிருப்பதால் தூமாதி மார்க்கமும், அச்சிராதி மார்க்கமும் என்று தாத்பர்யம். சந்த.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்– 3

பகவத் குணங்களின் மேன்மை

ஓ மஹாராஜ! வித்வான்களாகிய மனிதர்கள் சாகுந்தருணத்தில் செய்யவேண்டிய கார்யம் பகவான் உடைய கதையைக் கேட்பது முதலியவைகளே என்று சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. நீர் கேட்ட விஷயம் இதுவே. ப்ரம்ஹதேஜஸை அடைய விரும்பிய அவன் வேதங்களுக்கு அதிபதியாகிய ப்ரம்ஹ தேவரையும், இந்திரியங்களின் வல்மையை விரும்பிய அவன் இந்திரனையும், புத்ர ஸம்பத்தை விரும்பிய அவன் தக்ஷர் முதலிய ப்ரஜாபதிகளையும் பக்ஷ்ய போஜ்யங்களை விரும்பியவன் அதிதி தேவியையும், ஸ்வர்க்கத்தை விரும்பியவன் விச்வேதேவர்களையும், ஜனங்களை வசப்படுத்த விரும்பியவன் ஸாத்யர் களையும், ஸம்பத்தை விரும்பியவன், அக்னி பகவா னையும், பணத்தை விரும்பியவன் வீர்யத்தைக் கொடுப்பவர்களாகிய ருத்ரர்களையும், தீர்க்கமான ஆயுஸ்ஸை விரும்பியவள் அசுவினீ தேவர்களையும், சரீர புஷ்டியை விரும்பியவன் பூதேவியையும், பிரதிஷ்டியை (ஸ்தானத்தை விட்டு நழுவாமலிருப்பது) விரும்பிய புருஷன் உலகத்திற்குத் தாயார்களான ஆகாசம், பூமி இவைகளையும்; அழகை விரும்பிய அவன் கந்தர்வர்களையும், ஸ்திரீயை விரும்பியவன் ஊர்வசி என்கிற அப்ஸரஸ்ஸையும், எல்லோருக்கும் யஜமானனாயிருக்க வேண்டுமென்று விரும்பியவன் யக்ஞ ரூபமான மஹாவிஷ்ணுவையும், மோக்ஷத்தை விரும்பியவன் வருணனையும், வித்தையை விரும்பிய அவன் பரமசிவனையும், தம்பதிகள் ஒருவருக்கொருவர்

பிரியாமலிருக்க வேண்டியதை விரும்பியவன் பதிவிரதையான உமாதேவியையும், தர்மத்தை விரும்பிய அவன் உத்தம ச்லோகராகிய மஹாவிஷ்ணுவையும், ஸந்தானத்தை (வம்சத்தின் தொடர்ச்சி) விரும்பிய அவன் பிதுருக் களையும்; உபத்திரவ நிவர்த்தியை விரும்பியவன் யக்ஷர்களையும், பலத்தை விரும்பிய அவன் மருத்துக்களையும், இராஜியத்தை விரும்பியவன் மனுக்களாகிய தேவர்களையும், சத்துருவைக் கொல்ல விரும்பியவன் நிருதியையும், போகத்தை விரும்பியவன் ஸோமனையும், வைராக்யத்தை விரும்பியவன் ப்ரகிருதிக்கு மேற்பட்ட பரமபுருஷனையும் பூஜிக்க வேண்டும். இப்படிப் பல தேவர்களைப் பூஜிப்பவர் களுக்கு பகவத் பக்தர்களுடைய ஸங்கத்தால் பகவான் இடத்தில் ஸ்திரமான பக்தி உண்டாகிறது. இதுவே மேலான புருஷார்த்தம், பகவானுடைய கதையானது ஆசை, துவேஷம் ஆகிய இவைகளின் ஸம்பந்தமற்ற ஞானத்தை உண்டு பண்ணுகிறது. சித்தத்தைச் சுத்தி செய்கிறது. இவ்வுலகத்திலும், மேலுலகத்திலும் விஷயத்தில் வைராக்கியத்தையுண்டுபண்ணுகிறது. மோக்ஷ மார்க்கமாகிய பக்தி யோகத்தையும் உண்டு பண்ணுகிறது. ஆகையால் குரு முகமாய்ச் செய்த ச்ரவணம் முதலியவைகளால் ஸுகமடைந்த புருஷன் எவன் தான் பகவானுடைய கதையில் ஆசைப்படமாட்டான்? என்று பரிக்ஷித் மகா ராஜனுக்குச் சுகர் சொன்னாரென்று ஸூதர் சொன்னார்.

13–25 அதனைக் கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி, ஓ வித்வானாகிய ஸூதரே! சுகருடைய வார்த்தையைக் கேட்டு, பரீக்ஷித் மஹாராஜன் வியாஸ

புத்திரராயும், மிக்க ஞானியுமான அவரை நோக்கி, பின்னும் எதனைக் கேட்டார்? பகவத் பக்தர்களான ஸாதுக்களுடைய ஸபையில் பகவத் கதையே நடந்து கொண்டிருக்கும். அதனால் ஈசுவரனுடைய கதையைக் கேட்பதில் மிகுந்த ஆசையுண்டாகும். ஆனதுபற்றி அதனைக் கேட்கவேண்டுமென்ற விருப்பமுள்ள எங்களுக்குச் சொல்லவேண்டும். மேலும், மஹாரதரும், பாண்டு குலத்தில் பிறந்தவரும், பாகவதோத்தருமாகிய அந்த அரசன் பால்ய வயதில் விளையாட்டு சாமான்களைக் கொண்டு கிருஷ்ணனையே பூஜித்தார். அதுவே அவருக்கு விளையாட்டாயிற்று. அவருக்கு பாகவதத்தை உபதேசஞ் செய்த வியாஸ புத்திரராகிய சுக மஹர்ஷியானவர் கிருஷ்ணனிடத்திலே விசேஷ பக்தியுள்ளவர், ஆனதால் அவ்விருவர்களும் மஹா ஸாதுக்கள். ஸாதுக்களுடைய கூட்டத்தில் திவ்ய குணங்களால் அலங்கரிக்கப்பட்ட பகவத் கதை நடக்கும், உத்தமச்லோகராகிய பகவானுடைய கதையைச் சொல்லிக் கொண்டு கழித்த காலமே மனிதனுடைய ஆயுஸ்ஸில் மேலானது. லௌகிக வியவஹாரங்களால் கழிக்கப்படும் காலமானது வீணானதே. ஒவ்வொரு நாளும் உதயமாகிறவரும், அஸ்தமனத்தை அடைகிற வருமான அந்த ஸூர்யன் வீணாய்க் காலம் கழிப்ப வருடைய ஆயுஸ்ஸை அபகரிக்கிறார். அப்போர்ப் பட்டவர்களுடைய ஆயுஸுக்குப் பிழைத்திருப்பதைத் தவிர வேறு பிரயோசனமில்லை? பசுக்கள் ஆகாரத்தைப் புஜிக்கவில்லையா? மைதுனம் செய்யவில்லையா? ஆகையால் மேற்காட்டிய வீண் காலம் கழிப்பவன் இவைகள் போன்றவனேயாம். பின்னும் எவனுடைய காதில் பகவானுடைய சரிதம் ஒருபொழுதும் ப்ரவேசிக்கவில்லையோ, அவன்

நாயிக்குச் சமமானவன், கிராமத்திலிருக்கும் பன்றிக்கு ஒப்பானவன். சுமைகளைச் சுமக்கும் ஒட்டகம் போன்றவன், (காலால் உதைக்கும் ஸ்திரீயைத் தள்ள முடியாமல் மிக்க காமியாயிருப்பதால்) கழுதை போன்றவன், எந்த மனுஷ்யனுடைய இரு காதுகளும் பகவானுடைய குணங்களைக் கேட்கவில்லையோ, அவைகள் ஸர்ப்பம் முதலியவைகள் ப்ரவேசிக்கக் கூடிய பிலங்களேயாகும். எவன் நாக்கினால் பகவத் கதையைக் கானம் பண்ணவில்லையோ, அவனுடைய சப்தம் யாவும் தவளையின் சப்தம் போன்றவைகளே, எவனுடைய தலையானது முகுந்தனை நமஸ்கரிக்க வில்லையோ, அது பட்டுக்களால் செய்யப்பட்ட தலைப்பாகை, இரத்தின கிரீடம் இவைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தாலும் பெரிய சுமையேயாம். எவனுடைய கைகள் பகவானைப் பூஜிக்கவில்லையோ, அவைகள் தங்க வளையல்களால் அலங்கரிக்கப் பட்டவைகளானாலும் பிணத்தின் கைகளேயாகும். எவனுடைய கண்களிரண்டும் பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தைத் தரிசிக்கவில்லையோ, அவைகள் மயில் தோகையிலிருக்கும் கண்களேயாம். எந்தப் புருஷனுடைய பாதங்களிரண்டும் பகவானுடைய விசேஷ ஸான்நித்யமுள்ள புண்ய க்ஷேத்திரங்களுக்குப் போகவில்லையோ, அவைகள் மரத்தின் வேர்களுக்கு ஒப்பானவைகள். எவன் பகவத் பக்தர்களுடைய பாதங்களில் ஒட்டிய தூளியைத் தரிசிக்கவில்லையோ, எவன் பகவானுடைய பாதத்திலிருக்கும் துளஸியின் வாஸனையை மோந்து அதைச் ச்வாகிக்கவில்லையோ, அவன் பிழைத்திருக்கும் பிணமேயாம். பகவானுடைய கதையைக் கேட்டு எவனுக்கு முகத்தில் ஸந்தோஷமும், கண்களில் ஆனந்தாஷ்டமும், தேகத்தில்

மயிர்க்கூச்சலும் உண்டாகவில்லையோ, அவனுடைய ஹ்ருதயம் கருங்கல்லேயாகும். இது மிகவும் ஆச்சரியம் ஓ ஸூதரே! மனஸுக்குப் பிரியமாக நீர் பேசுகிறீர். ஆகையால் பாகவதர்களுக்குள் சிறந்தவரும், ஆத்ம வித்தையை நன்றாயறிந்தவரும் வியாச மஹாமுனியின் புத்திரருமான சுக மஹரிஷி பரீக்ஷித் மஹாராஜனை நோக்கி எதனைச் சொன்னாரோ, அதனைச் சொல்லவேண்டும் என்று கேட்டார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–4

பரீக்ஷித் ஜகத் ஸ்ருஷ்டியைப் பற்றிக் கேட்டது.

1–10. இம்மாதிரியான சௌனகருடைய வார்த்தையைக் கேட்ட ஸூதர் சௌனகரை நோக்கி பின்வருமாறு சொன்னார். உத்தரையின் புத்திரன் பரீக்ஷித்து மஹாராஜன் ஆத்ம ஸ்வரூபத்தின் உண்மையைத் தெரிவிக்கும் சுகருடைய வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ கிருஷ்ண பகவானையே உபாஸிக்க வேண்டும். அவரே பரமாத்மா என்று நிச்சயித்தார். மேலும் தேகம், பார்யை, புத்திரன், வீடு, யானை முதலியவை, திரவ்யம், பந்துக்கள் பூர்ணமாகிய இராஜ்யம் ஆகிய இவைகளில் வெகு நாளாக ஏற்பட்டிருந்த அபிமானத்தை விட்டுவிட்டார். நீங்கள் என்னைக் கேட்டதுபோல அவ்வரசனும் இந்த விஷயத்தைப் பற்றி ஸ்ரீ கிருஷ்ணனுடைய மாஹாத் மியத்தைக் கேட்பதில் மிக்க சிரத்தையுள்ளவராகப் பரமாத்ம ஸ்வரூபத்தை அறியவேண்டித் தாம் சீக்கிரத்தில் மரணமடையப் போகிறோமென்ற நிச்சயம் உள்ளவராகத் தர்மம், அர்த்தம், காமம், ஆகிய இவை களில் ஆசையில்லாதவராய், பகவானாகிய வாஸு தேவரிடத்தில் மிகுந்த பக்தியுடன் சுகரை நோக்கி, ஓ பாபமற்றவரே! ப்ராஹ்மணோத்தம! எல்லாவற்றையும் அறிந்தவரான உம்மால் சொல்லப்பட்ட வார்த்தை ஆத்ம ஞானத்தை உண்டுபண்ணக்கூடியதாயிருக்கிறது. நீர் மஹாவிஷ்ணுவின் கதைகளைச் சொல்லும் பொழுது என்னுடைய அஞ்ஞானம் விலகுகிறது. ஆனாலும் பகவான் தம்முடையமாயையால் பூமியில் அவதரித்துப்ரஹ்மா, பரமசிவன் முதலிய தேவர்களாலும்

அறியக்கூடாத இந்த ஜகத்தை அந்தப் பரமபுருஷன் எந்தச் சக்தியைக் கொண்டு உண்டு பண்ணுகிறார்? பின்னும் அதை எப்படிக் காப்பாற்றுகிறார்? மேலும், அதைப் ப்ரளய காலத்தில் எப்படி ஸம்ஹரிக்கிறார்? அவருடைய சக்தியானது அளவற்றது. பின்னும் அந்தப் புருஷன் இராமகிருஷ்ணாதி அவதாரங்களைச் செய்து விளையாடுகிறதுமல்லாமல் ப்ரஹ்மா முதலிய வர்களின் ரூபியாயுமிருந்து பலவகையான காரியங் களைச் செய்கிறார். அவருடைய சரிதம் மிக்க ஆச்சரியகரமானது. கவிகளாலும் அறிய முடியாதது, ஒருவனாகிய அந்தப் புருஷன் ஒரே காலத்தில் ப்ரக்ருதியின் குணங்களைக் கிரஹிக்கிறாரா? அல்லது ப்ரஹ்மா, ருத்ரன் முதலியவர்களின் ரூபமாயிருந்து பலவகையான லீலைகளைச் செய்து, கிரமமாக மேற்கூட்டிய ப்ரக்ருதியின் குணங்களையங்கீகரிக்கிறாரா? நீர் வேதங்களின் அர்த்தத்தையும், பரப்ரஹ்ம ஸ்வரூபத்தையும் நன்றாக அறிந்தவர். ஆகையால் இந்த ஸம்சயத்தைப் போக்கவேண்டும் என்று கேட்டார்.

11–26. இம்மாதிரியான அரசனுடைய வார்த்தையைக் கேட்ட சுகர் இந்திரியங்களுக்கு அதிபதியாகிய மஹாவிஷ்ணுவை ஸ்மரித்து, பிரத்யுத் தரஞ் செல்ல ஆரம்பித்துப் பரமாத்வை நமஸ்கரித் தார். எப்படியெனில் பரமபுருஷனை நமஸ்கரிக் கிறேன். அவர் அளவற்ற சக்தியுள்ளவர், இரஜோ குணத்தைக்கொண்டு லோகத்தை ஸ்ருஷ்டிப்பவர். ஸத்வ குணத்தைக்கொண்டு ஜகத்தைக் காப்பாற்றுகிறவர். பின்னும் அதைத் தமோ குணத்தைக்கொண்டு ஸம்ஹரிப்பவர். ஸகல பிராணிகளுக்கும் அந்தர்யாமியா

யிருப்பவர். அவருடைய ஸ்வரூபம் அறியமுடியாதது. மேலும், தர்ம சிந்தையுள்ள ஸாதுக்களுக்கு நேரிடும் துக்கத்தைப் போக்கடிக்கக் கூடியவர். துஷ்டர்களைச் சிக்ஷிப்பவர். ஸகல தேவஸ்வரூபியாயிருந்து பலனை கொடுப்பவர். பரமஹம்ஸர்கள் சுத்தமான சித்தத்தால் எதனை அடிக்கடி தேடுகிறார்களோ, அந்த ஆத்ம ஸ்வரூபத்தைப் ப்ரகாசிக்கச் செய்பவர். அப்படிப்பட்ட பகவானுக்கு அடிக்கடி நமஸ்காரஞ் செய்கிறேன். மேலும் அவர் பக்தர்களை ஸம்ரக்ஷிப்பவர். பக்தி இல்லாதவர்களுக்கு வெகு தூரத்திலிருப்பவர் (அறிய முடியாதவர்) அவருடைய ஐசுவரியத்திற்கு ஸமமான அல்லது மேலான ஐசுவரியம் ஒருவருக்குமில்லை. அந்த ஐசுவரியத்தால் ஸ்வரூபமாகிய பரப்ரஹ்மத் தினிடமே ஆனந்தப்படுகிறவர். அவரை நமஸ்கரிக்கிறேன். அந்தப்பரமபுருஷனுடைய திவ்ய நாமங்களை உச்சரிப் பதாலும், பூஜிப்பதாலும், அவருடைய கதையைக் கேட்பதாலும் ஸகல பாபங்களும் நாசமடைகின்றன. ஆகையால் அந்தத் திவ்ய மங்கள கீர்த்தியுள்ள பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். விவேகிகள் பகவானுடைய பாதங்களை உபாஸித்து இவ்வுலகத் திலும் மேலுலகத்திலுமுள்ள ஆசையை ஒழித்துச் சிரமமின்றி, ப்ரஹ்மாத்ம பாவத்தை அடைகிறார்கள். அந்தப் பகவானை நமஸ்கரிக்கிறேன். தபஸ்விகளாக ஆனாலும், தானத்தால் புண்யத்தை ஸம்பாதித்தவர் களானாலும், கீர்த்தியுள்ளவர்களானாலும் அவை களைப் பகவானிடத்தில் அர்ப்பணம் செய்யாவிடில் க்ஷேமத்தை அடைகிறதில்லை. ஆனதுபற்றி, அந்தப் புருஷனுக்கு அடிக்கடி நமஸ்காரம் செய்கிறேன். தவிரவும், கிராதர்கள் (மிருகம் முதலியவைகளை ஹிம்ஸிக்கிறவர்கள்), ஹூணர்கள் (வெண்நிறமாய்

இருப்பார்கள்) தெலுங்கு தேசத்தில் வசிக்கும் தாழ்ந்த ஜாதியான ஆந்திரர்கள், புளிந்தர்கள் (மிகுந்த ஹிம்ஸையில் பிரியமுள்ளவர்களான வேடர்கள்). சண்டாளர்கள், வலையர்கள், கழுகின் மாம்ஸத்தை புஜிக்கும் ஹீன ஜாதிகள், மிலேச்சர்கள், ஆயுதம் முதலியவைகளைச் சாணை பிடிப்பவர்கள் முதலிய பாபிஷ்டர்களும் பகவத் பக்தர்களை ஆச்ரயித்து சுத்தி யடைகிறார்கள். அந்த ப்ரபுவுக்கு நமஸ்காரம். மேலும் அவர் மனோதைரியமுள்ளவர்களால் ஆத்மாவென்று உபாஸிக்கக்கூடியவர், எல்லாவற்றிற்கும் ஈசுவரன்; வேத ஸ்வரூபீ. தபஸின் ரூபமாயிருப்பவர் குற்றமற்ற வர்களான ப்ரஹ்மா, பரமசிவன் முதலிய தேவர்களால் ஊகிக்கக்கூடிய திவ்ய சரீரமுள்ளவர். எல்லோராலும் உபாஸிக்கக்கூடிய அந்தப் பரமாத்மா என்னிடத்தில் தயவு செய்யட்டும். பின்னும் அவர் லக்ஷ்மீபதி: ஸகல யாகங்களுக்கு பலத்தைக் கொடுக்கக்கூடியவர்; ஸகல பிரஜைகளையும் ஸ்ருஷ்டிப்பவர், ஸகல லோகத்துக்கும் பிரபு கர்ம பூமியிலிருக்கும் கர்மிகளுக்கு ஸகல புருஷார்த்தத்தையும் கொடுப்பவர் அந்தகர்களுக்கும், வ்ருஷ்ணிகளுக்கும் ஸாத்வதர்களுக்கும் பெரியோர் களுக்கும் ப்ரபுவாயிருப்பதோடு அவர்களால் அடையக் கூடியவராயுமிருக்கிறார். எல்லாவற்றையும் காப்பாற்றும் அந்தக் கிருஷ்ண பகவான் என்னிடத்தில் தயவு செய்யட்டும். கவிகள் அவருடைய பாதாரவிந்தத்தை தியானஞ் செய்து அதனால் சித்தசுத்தியை அடைந்து, ஆத்ம ஸ்வரூபத்தைத் தங்களுடைய புத்திக்குத் தக்கபடி தெரிந்துகொள்கிறார்கள். ஞானத்தைக் கொடுக்கும் அந்த முகுந்தன் என்னிடத்தில் ஸந்தோஷம் அடையட்டும். கல்பத்தின் ஆதியில் ப்ரஹ்மதேவருக்கு ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும் சக்தியை (பூர்வ ஞாபகத்தை)

உண்டு பண்ணுவதற்காகப் பகவானால் தூண்டப்பட்டு. அவருடைய முகத்திலிருந்து ஸரஸ்வதியுண்டானாள். மஹரிஷிகளுக்கும் சிரேஷ்டராகிய அந்தப் பரமாத்மா என்னிடத்தில் கருணை செய்யட்டும். மேலும் அவர் மஹாபூதங்களைக் கொண்டு ஸரீரங்களை ஸ்ருஷ்டித்து அவைகளில் அந்தர்யாமியாய்ப் புருஷனென்ற டெயர் அடைந்து, பதினாறு கலாரூபியாயிருந்து அவைகளின் குணங்களைப் ப்ரகாசிக்கச் செய்கிறார். அந்தப் ப்ரபு என்னுடை வார்த்தைகளை ச்ருங்காரம் முதலிய ரஸங்கள் நிறைந்தனவாகவும். கேட்பவர்களுக்கு ஸந்தோஷத்தை யுண்டு பண்ணக் கூடியவைகளாகவும் செய்யட்டும், வேத வ்யாஸ ரூபியாயும், ப்ரஹ்ம ரூபியாயும், பக்தர்களுக்கு ஞானமாகிய மதுவைக் கொடுத்தவருமான அந்தப் பகவானை நமஸ்கரிக் கிறேன். 'ஓ மஹாராஜ! ப்ரஹ்மதேவர் தமக்கு மஹாவிஷ்ணு உபதேசித்தபடி நாரதருக்கு இதே விஷயத்தை உபதேசித்தார். அதை உமக்குச் சொல்லுகிறேன்' என்றார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–5

ஜகத்ஸ்ருஷ்டி

1–8 ஓ மஹாராஜ! அது எப்படியெனில், நாரதர் ப்ரம்ஹதேவரை நோக்கி, ஓ தேவர்களுக்கும் தேவரே; ஸகல பிராணிகளையும் ஸ்ருஷ்டிப்பவரே ஸகல பிராணிகளுக்கும் முற்பட்டவரே உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். ஆத்ம ஸ்வரூபத்தின் உண்மையைக் காட்டும் ஞானமானது எதனாலுண்டாகுமோ அதனை உபதேசிக்க வேண்டும். ஓ ப்ரபுவே! இந்த ஜகத்தானது எவரால் பிரகாசிக்கிறதோ எவரை ஆசிரயித்திருக் கிறதோ, எவரால் ஸிருஷ்டிக்கப்பட்டதோ, எவரிடத்தில் லயிக்கிறதோ, எவருக்கு ஸ்வாதீனமாக இருக்கிறதோ, எவருடைய உருவமாகவுமிருக்கிறதோ, எது ஸத்யம் ஆனதோ அதை உண்மையாகச் சொல்ல வேண்டும். நீர் உண்டானவைகளுக்கும், உண்டாகின்றவை களுக்கும், உண்டாகப் போகின்றவைகளுக்கும் அதிபதி. இந்த ஜகத்தைக் கையிலிருக்கும் நெல்லிக்கனியைப் போல ஞானத்தால் அறிந்திருக்கிறீர். ஆகையால் எல்லாம் உம்மால் அறியப்பட்டவைகளே. நீர் எவரிடமிருந்து ஞானத்தை அப்யஸித்தீர்? உமக்கு ஆதாரமாயிருப்பது யாது? நீர் யாருக்கு ஸ்வாதீனப் பட்டவர்? எவருடைய ஸ்வரூபியாக இருக்கிறீர்? ஒருவராயிருந்து பஞ்ச பூதங்களைக் கொண்டு ஸங்கல்பத்தாலே ஸகல பிராணிகளையும் ஸ்ருஷ்டிக் கிறீர். மேலும் பட்டுப்பூச்சி பட்டை உண்டு பண்ணு வதுபோல ஸ்ருஷ்டிக்கப்பட்ட ப்ராணிகளுக்குப் பிறரால் உபத்திரவம் உண்டாகாமல் தம்மிடத்தில் வைத்து

ச்ரமமில்லாமல் தம்முடைய சக்தியாகிய ப்ரகிருதியைக் கொண்டு நீர் காப்பாற்றுகிறீர். ஓ பிரபுவே; இவ் வுலகத்தில் உயர்ந்தவைகளும் தாழ்ந்தவைகளும், மத்ய நிலைமையிலுள்ளவைகளும், மனிதன் முதலிய இரண்டு கால் ஜந்துக்களும் வெண்மை முதலிய குணங்களால் ஏற்படக்கூடியவைகளும், ஸ்தூலங்களும் சூக்ஷ்மங்களும் உம்மிடத்திலிருந்தே உண்டாகின்றன என்று நினைக்கிறேன். இப்படி உமக்குப் பிரபஞ்சம் சரீரமாயிருப்பதால் நீர் எல்லோரிலும் மேலானவர். உமக்குத் தாழ்ந்தவர்களான மற்றவர்கள் உம்மை உத்தேசித்துத் தபஸ் செய்கிறார்கள். அவர்களுக்கு நீர் பலத்தைக் கொடுக்கிறீர். அப்போர்பட்ட நீர் கடும் தவம் செய்ததால் எனக்கு ஸந்தேஹமும் துக்கமும் உண்டாகின்றன. ஆகையால் எல்லாவற்றையும் அறிந்தவரே எல்லாவற்றிற்கும் அதிபதியே என்னால் கேட்கப்பட்ட விஷயங்களை எனக்குத் தெரியும்படிச் சொல்லவேண்டும்' என்று வேண்டிக் கொண்டார்.

9–29 அதனைக் கேட்ட ப்ரஹ்மதேவர் நாரதரை நோக்கி ஓ குழந்தாய்! நீ ஸந்தேகப்பட்டுக் கேட்ட விஷயம் மிகவும் மேலானது. பகவானுடைய மஹிமையைச் சொல்லும்படி என்னை நீ தூண்டின படியால் என்னிடத்தில் உனக்குக் கருணையிருப்பதாக தெரியவருகிறது. ஆனால் என்னை ஸகல ஜகத்திற்கும் ஈசுவரனென்று நீ சொன்னது புத்தி பூர்வகமாய் சொல்லும் பொய்யல்ல. என்னைக் காட்டிலும் பரமாத்மா மேற்பட்டவரென்று தெரிந்துகொள்ளாததால் இவ்வளவு மஹிமை எனக்கு இருப்பதாகச் சொல்லு கிறாய். இந்த ஜகத்தானது பரமபுருஷனுடைய தேஜஸினால் ப்ரகாசிக்கிறதேயொழிய என்னால்

ப்ரகாசிக்கிறதென்பதில்லை. ஆனால் காரண ரூபமாய் அவரிடம் அவ்யக்தமாயிருந்த ஜகத்தை நான் ஸ்ருஷ்டியால் வெளிப்படுத்துகிறேன். ஸூர்யனும், அக்னியும், சந்திரனும், அசுவினி முதலிய நக்ஷத்ரங் களும், அந்தப் பரமாத்மனுடைய தேஜஸினாலேயே பிரகாசிக்கின்றன. அந்தப் பகவானாகிய வாஸு தேவருக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். அவருடைய மாயை ஜயிக்க முடியாதது. அதனால் தான் என்னையே ஜகத் காரணனென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். அந்த மாயையும் எவரை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ள முடியாமல் எவருடைய முன்பாக நிற்பதற்கும் வெட்கப்படுகிறதோ, அவரே எல்லாவற்றிற்கும் காரணம். அந்த மாயையின் மஹிமையால் புத்திமோஹத்தை யடைந்த ஜனங்கள், நான், என்னுடையது, என்னும் அபிமானத்தை அடைகிறார்கள். மேலும் மஹா பூதங்கள், புண்ய பாபங்கள், காலம், ஸ்வபாவம், ஜீவன் ஆகிய இவைகளெல்லாம் உண்மையில் ஸ்ரீ வாஸுதேவரூபமே தவிர வேறானவையல்ல. (காரியங்கள்யாவும் காரண ரூபமென்று கருத்து.) எல்லா வேதங்களும் ஸ்ரீமந் நாராயணனையே வர்ணிக்கின்றன. ஸகல தேவர்களும் அவருடைய சரீரத்திலிருந்து உண்டானவர்கள். ஸ்வர்க்கம் முதலிய லோகங்களுக்கும் அவரே அதிபதியாக இருக்கிறார். ராஜஸூயம், அச்வமேதம், வாய்பேய்ம் முதலிய ஸகல யாகங்களாலும் அந்த ஸ்ரீ நாராயணனே ஆராதிக் கப்படுகிறார். ப்ராணாயாமம் முதலிய யோகங்களும் அவற்றாலேற்படும் தபஸும் (மனஸ் ஒருவழையாயிருப்பது), அதனால் கிடைக்கும் ஞானம், அதனால் ஏற்படும் பயனும் ஸ்ரீ நாராயணன் இடமிருந்தே கிடைக்கின்றன. அவர் எல்லாவற்றிற்கும்

ஸாஷியாயிருப்பவர். கூடஸ்தர். ஸகல பிராணிகள் உடைய ஸ்வரூபமாயுமிருக்கிறார். எல்லாவற்றிற்க்கும் ஈசுவரன். நான் அவரால் உண்டுபண்ணப்பட்டவன். அவருடைய கடாக்ஷ விசேஷத்தால் அனுக்ரகிக்கப் பட்டு ஸ்ருஷ்டிக்க வேண்டியவைகளைப் படைக் கிறேன். அவர், குணங்களில் ஸம்பந்தப்படாதவர். ஆனாலும் அவர் காப்பாற்றுவது, ஸ்ருஷ்டிப்பது, ஸம்ஹரிப்பது ஆகிய மூன்று காரியங்களுக்காக ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்று குணங்களை மாயையால் அங்கீகரிக்கிறார். 'புருஷன் எப்பொழுதும் இருக்கிறான். ஆனால் ஸத்வம் முதலிய குணங்கள் மஹாபூதங்களை ஆசிரயித்துக் காரியமா (அதிபூதம்) யிருப்பதிலும், ஞானத்தை அவலம்பித்துக் காரணமாய் இருப்பதிலும் (அத்யாத்மம்.), இந்திரியங்களை ஆசிரயித்துக் கர்த்தாவாக இருப்பதிலும், அபி மானத்தைப் புருஷனுக்கு உண்டுபண்ணிப் பந்தத்தை உண்டாக்குகின்றன. ஓ ப்ராஹ்மணராகிய நாரதரே! மாயையை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டவராகிய பகவான் மேற்சொல்லிய மூன்று வித உபாதிகளாலும் நன்றாய் அறிய முடியாத ஸ்வரூபத்தையுடையவர். அவர் எனக்கும் மற்ற எல்லாவற்றிற்கும் அதிபதி. மாயைக்கு அதிபதியான அந்தப் பகவான் பலவிதமான சரீரமெடுக்க வேண்டி, தெய்வச் செயலாய்க் கிடைத்த காலத்தையும், கர்மத்தையும், ஸ்வபாவத் தையும் தமது மாயையைக் கொண்டு அங்கீகரிக் கிறார். மேலும் அவரை ஆசிரயித்த காலத்தால் ஸத்வம் முதலிய குணங்கள் ஸமமாயிராமல் தாரதம்யத்தையடைகின்றன. அந்தப் புருஷனை ஆசிரயித்த ஸ்வபாவத்தால் வேறு உருவத்தை அடைகிறதாகிய பரிணாமம் உண்டாகிறது. பின்னும்

அந்தப் பரமாத்மாவை ஆசிரயித்த கர்மத்தினிடம் இருந்து மஹத்தத்வம் உண்டாயிற்று. பின்பு ரஜோ குணம் ஸத்வ குணம் இவைகளுடன் கூடியதும், விகாரத்தையடைந்ததுமான மஹத் தத்வத்திலிருந்து தமோகுணத்தை பிரதானமாயுடையதும், ஐந்து பூதங்களின் ஸ்வரூபமாயும், ஞானேந்திரிய ரூபமாயும், கர்மேந்திரிய ஸ்வரூபமாயுமுள்ள அஹங்காரம் உண்டாயிற்று. பிறகு அந்த அஹங்காரம் வேறு ரூபத்தை அடைந்து வைகாரிகம், தைஜஸம், தாமஸம் என்று மூவகையாயிற்று. அவைகளில் வைகாரிகன், ஸத்வ குணத்தைப் பிரதானமாக உடையவன். கர்மேந்திரியங்களை உண்டுபண்ணும் சக்தியுள்ளவன். தாமஸன் தமோ குணத்தையே பிராதனமாகக் கொண்டவன். ஞானேந்திரியங்களை உண்டு பண்ணும் சக்தியுள்ளவன். பூதங்களுக்கு முந்தின வனாகிய அந்தத் தாமஸன் வேறு ரூபத்தையடையும் பொழுது ஆகாசம் உண்டாயிற்று. சப்தமானது அதனுடைய ஸூக்ஷ்ம ரூபமாயும் குணமாயுமிருக்கிறது. மேலும் அது பார்க்கிறவன், பார்க்கப்படுகிற வஸ்து இவ்விரண்டிற்கு அடையாளமுமாயுமிருக்கிறது; வேறு உருவத்தை அடைந்த அந்த ஆகாசத்திலிருந்து வாயு உண்டாயிற்று. அதன் குணம் ஸ்பர்சமேயாம். அந்த ஆகாயத்தின் ஸம்பந்தத்தால் வாயுவானது சப்தம் உள்ளதாகவும் ஆகிறது. தேக தாரண நிமித்தமாகிய பிராணன், மனோபல வேகம், தேக பலம் ஆகிய இவைகள் வாயுவினால் உண்டாகின்றன. ஆகாசம், வாயு ஆகிய இவைகளின் ஸம்பந்தத்தால் தேஜஸா னது உண்டாகிறது. அது காலம், கர்மம், ஸ்வபாவம் ஆகிய இவைகளின் மஹிமையால் ரூபம் ஸ்பர்சம், சப்தம் ஆகிய இவைகளை அடைகிறது.

அதிலிருந்து, கந்த குணமுள்ள (வாஸனையுள்ள) ப்ருதிவியை யுண்டாக்குகிறது. அந்த ஜலம் தன் காரியமாகிய பிருதிவியில் காரண ரூபமாயிருப்பதால் ரஸம் சப்தம், ரூபம், ஆகிய இவைகள் உள்ளதாயிற்று.

30–42 மேலும் வைகாரிகமான அஹங்காரத்திலிருந்து மனஸ், திக்கு வாயு, ஸூர்யன், வருணன், அசுவினீ தேவர்கள், அக்னி, இந்திரன், உபேந்திரன், மித்ரன், ப்ரஹ்மா ஆகிய பத்துத் தேவர்களும் உண்டானார்கள். தைஜஸ அஹங்காரத்திலிருந்து பத்து இந்திரியங்கள் உண்டாயின. மேலும் ஞானசக்தியான புத்தியும், கிரியாசக்தியான பிராணனும், தைஜஸனுடைய கார்யங்களாகையால் சுரோத்ரம் (காது) துவக் (தோல்), கிராணம் (மூக்கு), சக்ஷுஸ் (கண்) ஜிஹ்வா (நாக்கு) ஆகிய ஞானேந்ரியங்கள் ஐந்தும், வாக்கு, கை, உபஸ்தம் கால் பாயு ஆகிய கர்மேந்திரியங்கள் ஐந்தும் தைஜஸனிடமிருந்தே உண்டாகின்றன. இம்மாதிரி உண்டான ப்ருதிவி முதலிய பூதங்களுடைய குணங்களும் (வாஸனை முதலியவைகள்) இந்திரிய குணங்களாகிய பார்த்தல் முதலியவைகளும் மனத்தின் குணங்களும் ஒன்றோடொன்று சேராமல் தனித்து இருந்தன. ஓ பரப்ரஹ்ம! ஸ்வரூபத்தையறிந்தவர்களுக்குள் சிறந்த நாரத, அப்பொழுது அவை ப்ரஹ்மாண்டத்தை உண்டு பண்ணச் சக்தியற்றவைகளாக இருந்தன; அத்தருணத்தில் பகவானுடைய சக்தி விசேஷத்தால் தூண்டப்பட்டு அவைகள் ஒன்றோடொன்று சேர்ந்து ப்ரதான குண பாவத்தை அங்கீகரித்து ஸமஷ்டி வியஷ்டியாகிய ப்ரமராண்ட சரீரங்களை உண்டு பண்ணின. இப்படி அநேக

வர்ஷங்கள் சென்ற பிறகு பரமாத்மாவானவர் அசேதனமாக ஜலத்தில் மிதக்கும் அந்த அண்டத்திற்குக் காலம், கர்மம், ஸ்வபாவம் ஆகியவைகளை ஆச்ரயித்துச் சைதன்யத்தை உண்டு பண்ணினார். அதாவது அந்த அண்டத்தைப் பிளந்துக் கொண்டு அந்த மஹாபுருஷன் வெளியில் வந்தார். அவர் அநேக தலைகளையும் முகங்களையும் கண்களையும் கைகளையும் தொடைகளையும் கால்களையும் உடையவராக இருந்தார். மேலும் அந்த மஹா புருஷனுடைய முகத்திலிருந்து ப்ராம்ஹண ஜாதியும், கைகளிலிருந்து க்ஷத்ரிய ஜாதியும், தொடைகளில் இருந்து வைசிய ஜாதியும், பாதங்களிலிருந்து சூத்ர ஜாதியும் உண்டாயின. மேலும் அந்தப் புருஷன் உடைய கடி இடுப்பு முதலியவைகளிலிருந்து கீழ் உலகங்களும், ஜகனம் முதலியவைகளிலிருந்து மேல் உலகங்களும் உண்டாயினவென்று வித்வான்கள் சொல்லுகிறார்கள். அதெப்படியெனில், அவருடைய பாதங்களிலிருந்து பூலோகமும், நாபியிலிருந்து புவர் லோகமும், ஹ்ருதயத்திலிருந்து ஸ்வர்லோகமும், மார்பிலிருந்து மஹர்லோகமும், கழுத்திலிருந்து ஜன லோகமும், இரண்டு ஸ்தனங்களிலுமிருந்து தபோ லோகமும், தலையிலிருந்து நித்யமானது வைகுண்டம் என்று சொல்லப்படுகிறதுமான ஸத்யலோகமும் உண்டாயின. பின்னும், அவருடைய கடியிலிருந்து அதலமும், தொடைகளிலிருந்து விதலமும் முழங் கால்களிலிருந்து மிக்க பரிசுத்தமான ஸுதலமும், கணைக்கால்களிலிருந்து தலாதலமும் குல்பங்களில் இருந்து மஹாதலமும், நுனிக்கால்களிலிருந்து ரஸா தலமும், பாதங்களிலிருந்து பாதாளமும் உண்டாயின. (உலகங்கள் பதினான்கு என்று பக்ஷம் காட்டப்பட்டது.)

மேலும், அந்தப் புருஷனுடைய பாதங்களிலிருந்து பூலோகமும், நாபியிலிருந்து புவர்லோகமும், தலையில் இருந்து ஸுவர் லோகமும் உண்டாயினவென்றும் விராட் புருஷனுடைய அவயவங்களில் லோகத்தைக் கற்பிக்கிறார்கள். (லோகங்கள் மூன்று என்ற பக்ஷமானது காட்டப்பட்டிருக்கிறது.)

நோட்டு

முந்தினவனாகி—மூலத்தில் பூதாதி என்றிருப்பதால், அதற்குப் பஞ்ச பூதங்களுக்கு முதன்மையாகிய ஆகாச என்று அர்த்தம்—சந்த். தாமஸாஹங்காரதிற்கே பூதாதி யென்றும் பெயருண்டு—வீர. சப்தமானது தாமஸன் இடமிருந்து முதலில் சப்தம் உண்டாயிற்று என்று ப்ரசித்தமாக இருக்கிறது. ஆனாலும் அந்தச் சப்த மானது ஆகாசத்தினுடைய ஸூக்ஷ்ம ரூபமாயும், அதன் குணமாகவும் மிருக்கிறது. ஆகையால் அதன் வழியாகச் சப்தம் உண்டாயிற்று என்பது கருத்து —ஸ்ரீத. பார்க்கிறவன் சுவரின் மறைவில் செல்லும் யானை முதலியவை களைக் கண்ட ஜனங்கள் யானையென்று உரக்கச் சொல்ல, அதனைக் கேட்ட அவன் ஜனங்கள் யானையைப் பார்க்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளுகிறானல்லவா? அதனால் அந்தச் சப்தமானது பார்க்கப்பட்ட வஸ்து (பார்க்கிறவர்கள் ஆகிய இவர்களுக்கு அடையாளம்...சந்த்—வீர. வைகாரிக —ஸாத்வீக அஹங்காரத்திலிருந்து ஸகல இந்திரியங் களும் உண்டாயின—ஸ்ரீத, வீர, மனஸ் அதற்கு அதிஷ்டான தேவதைகயாகிய சந்திரனும் உண்டானான். திக்கு இந்த பத்துத் தேவதைகளும் முறையே சுரோத்ரம், துவக், சக்ஷுஸ், ஜிஹ்வா, கிராணம்,

வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் ஆகிய இவைகளுக்கு அதிதேவதைகள். மேற்காட்டிய இந்திரி யங்கள் அதிதேவதைகளுடன் உண்டானவையென்று தாத்பரியம் கொள்ள வேண்டும்—வீர தைஜஸனிடம் இருந்து ஞானேந்திரியங்களும் கர்மேந்திரியங்களும் தைஜஸனிடமிருந்து உண்டாயின.—ஸ்ரீத ராஜஸாஹங் காரத்துடன் கூடிய ஸாத்வீக அஹங்காரத்தினிடமிருந்து என்று அர்த்தங் கொள்ளவேண்டும். அப்படியில்லா விடில் 30—வது ஸ்லோகத்தின் அர்த்தத்திற்கு விருத்த மாகும். ஆக்ஷேபம் 30—வது ஸ்லோகத்திற்கு மூலத்தில் கண்டபடி அதிஷ்டான தேவதைகள் உண்டானார்கள் என்று மாத்திரம் அர்த்தம் வைத்துக் கொண்டோ மானால் 31 வதான இந்த ஸ்லோகத்தில் இந்திரியங்கள் உண்டாயினவென்று அர்த்தங்கொள்ளலாம், ஒன்றுக் கொன்று விரோதமில்லை. ஸமாதானம் அப்படியல்ல இந்திரியங்களில்லாமல் அதிதேவதைகளுக்குத் தேகம் உண்டாக நியாயமில்லை, மேலும், ஆதித்யன் முதலிய தேவதைகள் நான்முகக் கடவுளால் ஸ்ருஷ்டிக்கப் பட்டவர்களாகச் சொல்லப்பட போகிறபடியால் அண்டங்களை ஸ்ருஷ்டிப்பதற்கு முன் அவர்களை ஸ்ருஷ்டிக்க நியாயமில்லை,—வீர. சரீர நோபயம் ஸஸிருஜுர்ஹ்ருத என்ற பாடத்தை யங்கீகரித்து அவைகள் பஞ்சீகரணத்தால் ஸ்தூல, பாவத்தையும், ஸூக்ஷ்மமாக விருப்பதையும் மேற்காட்டிய இரண்டு வகையுமற்றதாகிய கால கர்மஸ்வபாவத்தையும் அங்கீ கரித்து இந்தப் ப்ரம்ஹாண்டத்தைப் படைத்தன அல்லது ஒரு தத்துவத்திற்கும் காரியமாக இல்லாததும், காரணமாக இல்லாததுமாகிய ப்ரம் ஹாண்டத்தை ஸ்ருஷ்டித்தன —வீர.

அத்தியாயம்–6

விராட் புருஷனுடைய விபூதிகள்

ஜனங்களுடைய வாக்கும், அதற்கு அதிஷ்டான தேவதையாகிய அக்னியும் விராட் புருஷனுடைய முகத்திலிருந்து உண்டானவை. மேலும் அவருடைய தோல் முதலிய ஏழு தாதுக்களிலிருந்து காயத்ரீ முதலிய சந்தஸ்ஸுகள் உண்டாயின. ஹவ்யம் (தேவர்களுக்குக் கொடுக்கும் அன்னம்). அமிர்தம் (மேற்காட்டிய இருவகையிலும் பாக்கியான மனுஷர் களுக்குக் கொடுக்கக்கூடிய அன்னம்) ஆகிய இவை களும், ஆறு வகையான ரசங்களும், ஜனங்களுடைய நாக்கும் அதற்கு அதிதேவதையான வருணனும் அவருடைய நாக்கிலிருந்து உண்டாயின. மேலும் ஸகல பிராணிகளுடைய ப்ராணன்களுக்கும் மற்ற வாயுவிற்கும் அவருடைய மூக்குகள் முக்கியமான இருப்பிடம், ஔஷதிகளும், அசுவினீ தேவர்களும் மோதம், ப்ரமோதம் என்ற ஸாமான்ய விசேஷ வாஸனைகளும் அவருடைய கிராணேந்திரியத்தில் இருந்து உண்டானவை. அவருடைய சக்ஷுரிந்திரியம் ஆனது ஏழுவித உருவங்களுக்கும், சந்திரன், அக்னி, முதலிய தேஜஸ்களுக்கும் முக்கியமான ஸ்தானம். இரு கண்களும் (நேத்திர கோளங்கள்) த்யுலோகத்திற்கும், ஸூர்யனுக்கும் ஸ்தானங்களாயிருக்கின்றன. மேலும் அவருடைய காதுகள் திக்குகளுக்கும், தீர்த்தங்களுக்கும் முக்கிய ஸ்தானங்களாயிருக்கின்றன. ச்ரோத்ரேந்திரியம் ஆனது ஆகாசத்திற்கும் சப்தத்திற்கும் உற்பத்தி ஸ்தானமென்று சொல்லப்படுகிறது. அந்த மஹாபுரு ஷனுடைய சரீரமானது ஸகல பதார்த்தங்களுடைய

ஸாராம்சத்திற்கும், நிகரில்லாத ஸௌந்தர்யத்திற்கும் இருப்பிடமாயிருக்கிறது. அவருடைய துவக்கிந்திரியானது (தோல்) ஸ்பர்சம், வாயு யக்ஞம் ஆகிய இவைகளுக்கு ஸ்தானமென்று சொல்லப்படுகிறது. அவருடைய உரோமங்கள் யாகத்திற்கு ஸாதனமான உத்பிஜ்ஜ ஜாதியான அரசு, அத்தி, கருங்காலி, பலாசம் முதலிய விருக்ஷங்களுக்கும், அவருடைய தலைமயிர்கள் மேகங்களுக்கும், அந்த புருஷனுடைய மீசை, தாடி இவைகள் மின்னலுக்கும், நகங்கள் கற்களுக்கும், இரும்புகளுக்கும் இருப்பிடமாய் இருக்கின்றன. அவர் உடைய கைகள் உலகத்தைக் காப்பாற்றும் திக்பாலர்களுக்கும், காலடி வைப்பதானது பூலோகம், புவர்லோகம்: ஸுவர்லோகம் ஆகிய இவைகளுக்கும், க்ஷேமத்திற்கும் (கிடைத்ததைக் காப்பாற்றுவது). சரணத்திற்கும் (பயத்திலிருந்து ரக்ஷிப்பதற்கும்) காரணமா யிருக்கின்றன. பகவானுடைய பாதாரவிந்தமானது ஸகல இஷ்டங்களையும் கொடுக்கக்கூடியது. அந்த மஹா புருஷனுடைய சிகையானது ஜலங்களுக்கும், வீர்யத் துக்கும், ஸ்ருஷ்டிக்கும் பர்ஜன்யனுக்கும் ப்ரஜா பதிக்கும் காரணமாயிருக்கிறது. ஓ நாரதரே, அவர் உடைய பாயு என்னும் இந்திரியமானது, மல விஸர்ஜனத்திற்கும், யமனுக்கும், மித்ரனென்னும் தேவதைக்கும், ஆச்ரயமாக விருக்கிறது. மேலும் அவருடைய குதமானது நிருதிக்கும். ஹிம்ஸைக்கும், மிருத்யுவுக்கும். நரகத்திற்கும் ஆச்ரயமாயிருக்கிறது. அவருடைய பின் பாகமானது அவமானம், அதர்மம், அஜ்ஞானம் ஆகிய இவற்றுக்கும், அவருடைய நாடி களானவை ஆறுகள், மேற்கு முகமாய்ச் செல்லும் நதிகள் ஆகிய இவைகளுக்கும், அந்தப் புருஷனுடைய எலும்புகளானவை மலைகளுக்கும் ஆச்ரயங்களாக

இருக்கின்றன. பின்னும் அவருடைய வயிரானது அன்னம் முதலிய ப்ரதான ரஸங்களுக்கும் ஸமுத்திரங்களுக்கும், ப்ராணிகளுடைய லயத்திற்கும், ஹ்ருதயம் ஆனது மனத்திற்கும் ஸ்தானமாயிருக்கின்றன. மேலும் அவருடைய ஆத்மாவானது (சித்தம்) தர்மத்திற்கும், எனக்கும். உனக்கும் ஸனகர் முதலியவர்களுக்கும்: பரமசிவனுக்கும் ஸகல ஞானத்திற்கும், ப்ராணிகளின் ஸமூஹத்திற்கும் முக்ய இருப்பிடமாயிருக்கிறது. ஆகையால் நானும், நீரும், பரமசிவனும் உமக்கு மூத்த ஸஹோதரர்களான ஸனகர் முதலிய யோகிகளும், தேவர்களும், அஸுரர்களும்; மனிதர்களும், நாகங்களும், (யானைகளும்) பறவைகளும், மிருகங்களும், ஸர்ப்பங்களும் கந்தர்வர்களும், அப்ஸர ஸ்திரீகளும், யக்ஷர்களும், பூதகணங்களும், பசுக்களும், பிதிருக்களும், ஸித்தர்களும், வித்யாதாரர்களும், சாரணர்களும், ஜல ஜந்துக்களும் ஸ்தலத்தில் சஞ்சரிக்கும் ஜந்துக்களும், ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் ஜந்துக்களும், நவக்கிரஹங்களும்: நக்ஷத்திரங்களும்; தூமகேது முதலியவைகளும், மேகங்களும் மின்னல்களும், மற்றும் பலவகையான பிராணிகளும், உண்டாகின்றவைகளுமான ஸமஸ்தமும் அந்த மஹா புருஷ ஸ்வரூபமே தவிர வேறில்லை. பன்னிரண்டு அங்குல ப்ரமாணமுள்ள ஸ்வரூபமடைய அந்த மஹாபுருஷனால் இந்த ஜகத்தானது முழுவதும் வ்யாபிக்கப் பட்டிருக்கிறது. ப்ராணன் ஆனவன் (ஸூர்யன்) தன்னுடைய மண்டலத்தைப் ப்ரகாசிக்கச் செய்துகொண்டு வெளியிலும் ப்ரகாசிக்கிறார். இவர் அமிருதத்திற்கும் அபயத்திற்கும் அதிபதி. மேலும் கர்மபலத்தை அதிக்ரமித்தவர். ஆசையால் நித்ய முக்தர். ஆனாலும் ஜகத்ரூபியாயிருப்பதே அவருடைய அளவற்ற மஹிமையாயிருக்கிறது. அந்த

மஹா புருஷனுடைய அம்சமாகிய உலகங்களிலேயே ஸகல பிராணிகளும் வஸிக்கிறார்களென்று சொல்லப் படுகிறது. மூன்று லோகங்களுக்கும் மேலான மஹர் லோகத்திற்கும் மேலான லோகங்களில் அமிருதம் க்ஷேமம் அபயம் ஆகிய இவைகள் வைக்கப்பட்டிருக்கின்றன, மூவுலகங்களின் வெளியில் அவருடைய மூன்று பாதங்களிருக்கின்றன. அவைகள் ப்ரம்மசர்யம், வானப்ரஸ்தம், ஸந்யாஸம் முதலிய ஆச்ரமங்களேயாகும். மேற்காட்டிய ஆச்ரமிகள் புத்திர ரூபமாக உண்டாகாதவர்கள். மூவுலகத்தின் உள்ளே மற்றொரு பாதம் இருக்கிறது. அதுவே ப்ரம்மசர்ய வ்ரதமற்ற கிருஹஸ்தாச்ரமம் எனப்படுகிறது.

21–47. க்ஷேத்ரக்ஞனாகிய ஜீவன் போகத்திற்கும் மோக்ஷத்திற்கும் ஸாதனமாகிய இரண்டு மார்க்கங்களிலும் ஸஞ்சரிக்கிறான்; அவைகளின் தூமாதி மார்க்கம் என்பது வித்தைக்கு (ஞானத்திற்கு) ஸாதனமாகிய உபாஸனைகளால் கிடைக்கக்கூடியது. ஜீவன் முன் சொன்ன இருவகையான மார்க்கங்களையும் தன் உடைய அதிகாரத்திற்குத் தக்கபடி அடைகிறான். இப்படிவிராட் புருஷனுடைய உள்ளே இருப்பவர்களுக்கு விசித்திரமான பலன் கிடைக்கிறது. ஆனால் எதனிடத்திலிருந்து ப்ரம்மாண்டம் உண்டாயிற்றோ அதனிடமிருந்து ஐந்து பூதங்கள், இந்திரியங்கள், அதன் விஷயங்கள் ஆகிய இவைகளின் ஸ்வரூபியாயிருக்கும். விராட்புருஷன் உண்டானார். (அவர் ப்ரம்மாண்டத்திற்கு அபிமானியாயிருப்பவர்) அவைகளுக்குக் காரணமாயிருக்கும் பரமேசுவரன், அநேக கிரணங்களால் ஸூர்யன் ப்ரகாசிப்பது போல ஜகத் ரூபமாகிய விராட் புருஷனுடைய தேகத்தையும்

ப்ரம்மாண்டத்தையும் அவர் அதிக்கிரமித்துப் ப்ரகாசிக் கிறார் (ஈசுவரன் விலக்ஷண ரென்பது கருத்து). ஜகத் முழுவதும் அந்த ஸர்வேசனுடைய ஸ்வரூபமாயிருக்கு மானால் யாகமும், அதற்கு ஸாதனங்களும் பகவத் ரூபங்களென்று ஏற்படுகிறதே; யாகத்தால் பரம புருஷனை ஆராதிப்பது எப்படியெனில் (பின்வருமாறு) சொல்லப்படுகிறது) ஓ நாரத! மஹாத்மாவாகிய இவருடைய கொப்பூழில் தோன்றிய தாமரைப் புஷ்பத்திலிருந்து நான் உண்டானபோது பரமாத் மாவை ஆராதிப்பதற்காகயாக ஸாமக்ரிகளைத் தேடியும் எல்லாம் அவருடைய அவயங்களாக இருந்தனவே யொழிய அவைகளைக் காட்டிலும் வேறானவைகள் ஒன்றும் கிடைக்கவில்லை, ஆகையால் யாகத்திற்கு வேண்டிய பசுக்கள், யூபத்திற்கு உபயோகமாகிய மரங்கள், தர்ப்பங்கள், பாத்திரங்கள், நெல் முதலிய தானியங்கள், நெய் முதலிய வேறாம திரவ்யங்கள், ஸோமரஸம், ஸுவர்ணம் முதலிய உலோகங்கள், மண், ஜலம், ரிக், யஜுஸ்,ஸாமம் என்ற வேதங்கள், வெளத்ரம் முதலிய கர்மங்கள் ஜ்யோதிஷ்டோமம் முதலிய பெயர்கள். ஸ்வாஹாகாரம் முதலியவைகள். தேவதா தியானங்கள் ப்ராயச் சித்தம், செய்தவை களைப் பகவதர்ப்பணஞ் செய்வது, நான் வஸிக்கும் இந்தப் பகவானுடைய நாபியாகிய யாகசாலை ஆகிய ஸாமக்ரியைகளை அந்த மஹா புருஷனுடைய அவயங்களாலேயே ஸம்பாதித்தேன். இப்படி அவருடைய அவயவங்களால் யக்ஞ புருஷனாகிய அந்தப் பகவானையே பூஜித்தேன்; பிறகு கச்யபர் முதலிய ஒன்பது ப்ரஜாபதிகளும் மிகவும் ஸாவதானர்களாய் இந்திரன் முதலிய தேவர்களின் ரூபமாய் வியக்தரும், ப்ரஹ்மரூபமாய் அவ்யக்தருமான அந்த மஹா புருஷனைக் குறித்து யாகஞ் செய்தார்கள். பிறகு

மனுக்களும்; மற்ற மஹர்ஷிகளும் பிதிருக்களும், தேவர்களும், அஸுரர்களும். மனிதர்களும் அவரவர் களுக்கு வேண்டிய ஸமயத்தில் ப்ரபுவாகிய அவரை உத்தேசித்து யாகஞ் செய்தார்கள். இந்த ஸகல ஜகத்துக்களும் பகவானாகிய நாராயணனிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகவான் ப்ருகிரு தியின் ஸகல குணங்களையும் அடக்கிக் கொண்டு ஸ்ருஷ்டிக்கு முன்னே தாம் நிர்க்குணராக இருந்தார். அவருடைய ஆக்ஞையாலே நான் உலகத்தைப் படைக்கிறேன், பரமசிவன் ஸம்ஹரிக்கிறார், அவர் தம்முடைய ஸ்வரூபத்தால் காப்பாற்றுகிறார். இப்படி மூன்று வகையான சக்தியுள்ளவராக இருக்கிறார். காரியகாரண ரூபமாகிய ஸகல பதார்த்தங்களும் பகவானை விடவேறாக இருக்க வில்லை. ஓ நாரத உம்மால் கேட்கப்பட்ட எல்லா விஷயத்திற்கும் பதில் சொன்னேன். நான் விசேஷபக்தியுடன் ஹ்ருதயத்தில் பகவானைத்தியானித்தபடியால் என்னுடைய வாக்குப் பொய் சொல்லுகிறதில்லை. மனஸும் இந்திரியங் களும் கெட்ட மார்க்கத்தில் பிரவர்த்திக்கிறதில்லை வேத ஸ்வரூபியாயும் தப ஸ்வரூபியாயுமிருக்கும் நான் பிரஜாபதிகளால் நமஸ்கரிக்கப்படுகிறேன். மேலும் நான் எனக்குக் காரணமாகிய பகவானைத் தெரிந்து கொள்ளவேண்டி யோகத்தால் முயற்சி செய்தும் அவரைத் தெரிந்து கொள்ளமுடியவில்லை. அவர் உடைய சரணங்கள், சரணாகதர்களுக்கு ஸம்ஸார பந்தத்தைப் போக்குகின்றன. க்ஷேமத்தையும், ஸகல மங்களத்தையும் கொடுக்கின்றன. அந்தச் சரணங் களுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். ஆகாசமானது தன்னுடைய முடிவை அறியாதது போலவே அவர் உடைய மாயா வைபவத்தை அவரும் அறியவில்லை.

அப்படியிருக்கப் பிறருக்குத் தெரியுமா? என்றாலும், பரமசிவனாலும், உங்களாலும் ஆத்மஸ்வரூபம் அறிய முடிகிறதில்லை. மற்ற தேவர்களால் அறியமுடியுமா? அந்தப் பகவானுடைய மாயையால் நாம் கலங்கிய புத்தியுள்ளவர்களாய் நம்முடைய ஞானத்திற்குத் தக்கபடி இந்த ப்ரபஞ்சத்தைத் தெரிந்துகொள் கிறோம். (அவருடைய ஸ்வரூபம் முழுவதையும் தெரிந்துகொள்ள முடியவில்லை) எந்தப் பகவான் உடைய அவதார சரிதங்களை நாமும் பிறரும் கானம் செய்தபோதிலும் அவருடைய உண்மையைத் தெரிந்து கொள்ள முடியவில்லையோ. அந்தப் பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். அந்தப் புருஷனே எல்லாவற்றிற்கும் முந்தியவர். அவர் பிறப்பில்லாதவர். ஒவ்வொரு கல்பத்திலும் தம் மாலேயே தம்மை ஸ்ருஷ்டிக்கிறார். காப்பாற்றுகிறார், ஸம்ஹரிக்கிறார். அந்தப் புருஷன் சுத்தன். ஞான ஸ்வரூபி. எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாயிருப்பவர். தேகம் முதலியவைகளின் ஸம்பந்தமற்றவர். ஸத்ய ஸ்வரூபி. பூர்ணர், பிறப்பு நாசம் இவைகளில்லாதவர், நித்யர், ஒப்பற்றவர் ஓ நாரத மஹரிஷியே எவர் களுடைய சரீரமும் இந்திரியங்களும் மனஸும் மிகவும் சாந்தங்களாகவிருக்குமோ. அந்த முனிவர் களே மேற்காட்டிய ஆத்ம ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்வார்கள். துஷ்டர்கள் சொல்லுகிற சாஸ்திரவிருத்தமான யுக்திகளால் அவை கலங்குமாகில் அந்த ஆத்மஸ்வரூபம் அவர்களுக்குப் புலப்படாமல் மறைந்துவிடும். ப்ரகிருதியைப் பிரவர்த்திக்கச் செய்யும் புருஷன் பரமாத்மாவின் முதன்மையான அவதாரமேயாம். மேலும் காலம், ஸ்வபாவம். காரியம் காரணம், மனம், ஐந்து மஹாபூதங்கள், அஹங்காரம், ஸத்வம் முதலிய

குணங்கள், ஸமஷ்டி சரீரம். ஸ்வராட், ஸ்தாவரங்கள் ஜங்கமங்கள் ஆகிய இவைகள் யாவும் அவருடைய அம்சங்களேயாம். மேலும் நான் பரமசிவன், யாகம், (விஷ்ணு) தக்ஷர் முதலிய இந்த எல்லாப் பிரஜாபதிகள், நீர் ஸனகர் முதலியவர்கள், இந்திரன் முதலிய லோகபாலர்கள், கருடன் முதலியவர்கள். மனு. மாந்தாதா முதலிய அரசர்கள். லோகத்தின் பாலர் களாகிய அனந்தன். வாசுகி முதலியவர்கள் ஆகிய இவர்களும் கந்தர்வர்கள், வித்யாதரர்கள், சாரணர்கள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், ஸர்ப்பங்கள். யானைகள். மஹரிஷிகளுக்குள் சிறந்தவர்களாகிய வஸிஷ்டர் முதலியவர்கள் பிதிருகணங்களில் மேலானவர்களும் ஸித்தர்களில் சிறந்தவர்களும், தைத்யர்களுக்குள் சிறந்தவர்களும், தானவர்களுக்கு மேலானவர்களும் மற்ற, ப்ரேதங்கள். பிசாசங்கள், பூதங்கள், கூஷ்மாண்ட கணங்கள், ஜலஜந்துக்கள் மிருகங்கள், பசுக்கள் ஆகிய இவைகளுக்குள் சிறந்தவைகளுமாகிய எவை பூஜிக்கத்தக்கவைகளோ, காந்தி, வேகம் தேக பலம். பொறுமை. அழகு கெட்ட காரியஞ் செய்வதில் வெட்கம், ஸமிருத்தி புத்தி; அற்புதமாகிய வர்ணம். உருவமற்றதாயிருப்பது. உருவமுள்ளதாக விருப்பது ஆகிய இவைகளுள்ளவைகளாக எவைகளிருக்கின்றனவோ; அவைகளெல்லாம் பரமாத்மாவின் விபூதிகளேயொழிய வேறில்லை, ஆனாலும், ஓ மஹரிஷியே மிகுந்த மஹிமை பொருந்திய அந்தப் பரமாத்மாவினுடைய முக்யமான லீலாவதாரங்களென்று எவை சொல்லப் படுகின்றனவோ அவை கேட்பவர்களுடைய காதுகளின் தோஷங்களைப் போக்கக்கூடியவை. மிகவும் மனோஹரமானவை அவைகளை உமக்குச் சொல்லுகிறேன்.

நோட்டு

ஸகல–விரும்பக்கூடிய ஸகல வஸ்துக்களுக்குள் மேலானவராகிய பகவானுடைய பாதம் – வீர வேறில்லை. – "இந்த ஜகத் முழுவதும் புருஷனே" – ஸ்ருதி. ப்ராண – "இந்த ஆதித்யனே ப்ராணன்" – ஸ்ருதி ப்ராண வாயு வானது சரீரத்தில் ப்ராணன், அபானண் முதலிய பெயரை அடைந்து தானிருக்கும் சரீரத்தை சேஷ்டிக்கச் செய்துகொண்டு வெளியிலும் ஸஞ்சரிப்பதுபோல்–சந்த. ஜகத்ரூபி– ஜகத்ரூபியானாலும் அதனால் அவருடைய மஹிமை குறைவுபடுகிறதில்லை யென்ற ஸ்ருதியில் தாத்பரியம் காட்டப்பட்டது ஸ்ரீத. – மஹர்லோகம் – பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் ஆகிய மூன்று லோகங்களிலும் அனித்ய ஸுகமே தவிர நித்ய சுகமில்லை. மஹர்லோகமானது கிரம முக்தி ஸ்தானமானாலும் கல்பாந்தரத்தில் அவ்விடத்திலிருப்பவர்கள் அதை விட்டு விட வேண்டியிருப்பதால் அதிலும் நித்ய ஸுகமில்லை. மூவுலகமும் ஸங்கர்ஷணருடைய முகத்தின் அக்கினியால் எரிக்கப்படும் அந்த உஷ்ணத்தைப் பொறுக்காமல் பிருகு முதலியவர்கள் ஜனலோகம் செல்லுகிறார்கள் ஸ்ரீத.– வெளியில் – பிரகிருதி, பிராகிருதர்கள் ஆகிய இவைகளுக்கு வெளியில் இருக்கின்றன அவைகள் ஜன்மமற்ற முக்தர்களால் அடையத்தக்கவை – வீர. அதுவே – ஸம்ஸாரிகளான ஜீவவர்க்கங்களால் அடையக்கூடியது –வீர. படைக்கிறேன் – அந்தப் புருஷனே எனது உருவங்கொண்டு படைத்தலையும், தம் உருவத்தாலே காப்பாற்றுவதையும், ருத்திரருடைய ஸ்வரூபத்தை அடைந்து ஸம்ஹாரத்தையுஞ் செய்கிறார்.

அத்தியாயம்–7

பகவானுடைய லீலாவதாரம்

"நாசமற்றவரான ஸ்ரீ நாராயணன் ஸகல யக்ஞஸ்வரூபமான வராஹ சரீரத்தை யெடுத்துப் பூமியைத் தூக்க முயற்சித்தபோது ஸமுத்திரத்தில் பிரவேசித்த வனும், தைத்யர்களுள் முந்தினவனுமான ஹிரண்யாக்ஷன் என்ற அஸுரனைச் சிங்கப்பல்லால் குத்திக் கிழித்தார். அது மஹேந்திரர் வஜ்ராயுதத்தால் மலையையுடைத்தாற் போலிருந்தது. மேலும் அந்தப் புருஷோத்தமன் 'ருசி' என்ற பிரஜாபதிக்கு ஆகூதி என்ற ஸ்திரியினிடத்தில் ஸுயக்ஞரென்ற பெயருடன் அவதரித்தார். பிறகு "தக்ஷிணா என்பவளைக் கல்யாணம் செய்து கொண்டு அவளிடத்தில் 'ஸுயாமா' என்ற பெயருள்ள தேவர்களைப் பெற்றார். அப்பொழுது அந்த ஸுயக்ஞர் தாம் இந்திரனாக இருந்து உலகத்தைக் காப்பாற்றி வந்தார். அப்பொழுது ஸ்வாயம்புவ மனுவென்பவர், "நீர் மூவுலகத்திற்கும் நேர்ந்திருந்த பெரிதான உபத்திரவத்தைப் போக்கடித்தபடியால் உமக்கு 'ஹரி' என்று பெயர் உண்டாகட்டும்" என்று சொன்னார். ஓ ப்ராம்ஹணோத்தமரான நாரதரே பின்னும் அந்த மஹா புருஷன் கர்த்தமபிரஜாபதியின் வீட்டில் தேவஹூதியினிடத்தில் ஒன்பது ஸ்திரீகளுடன் கபிலராக அவதரித்தார். பிறகு அவர் தம் தாயான தேவஹூதிக்கு ப்ரஹ்ம வித்யையை உபதேசித்தார். அதனால் அவள் துக்கத்தைக் கொடுக்கக்கூடிய முக்குண ஸம்பந்தத்தை விட்டு அந்த ஜன்மத்திலேயே முக்தியை அடைந்தாள். முன்னொரு காலத்தில் நல்ல புத்திரன் வேண்டுமென்று அத்திரி மஹர்ஷியானவர்

தபஸ் செய்தார். அவருடைய தபஸினால் பகவான் சந்தோஷப்பட்டு, "நானே புத்திரனாக என்னால் (தத்தம்) கொடுக்கப்பட்டேன்" என்று சொல்லி, அதனால் தத்தாத்ரேயராக தத்தரென்ற அத்திரியின் புத்திரர் அவதரித்தார். அவருடைய பாத தூளிகளால் பரிசுத்தமான சரீரமுள்ள யது (யயாதியின் பிள்ளை) கார்த்தவீர்யார்ஜுனர் முதலியவர்கள் இவ்வுலகத்து ஸுகத்தையும், மேலுலகத்து ஸுகத்தையும் அடைந் தார்கள். மேலும் நான் பலவகையான உலகங்களை ஸ்ருஷ்டிக்க விரும்பித் தபஸ் செய்தேன். பூர்ணமாகிய அந்தத் தபஸினால் பகவான் ஸந்தோஷமடைந்து ஸனத்குமார, ஸனக ஸநந்தன ஸனத் ஸுஜாதர் என்ற பெயருடன் நான்கு வகையாக அவதரித்து, முன் கல்பத்தின் ப்ரளயத்தில் மறைந்துபோன ஆத்ம வித்தையை மஹர்ஷிகளுக்கு நன்றாக உபதேசித்தார். அதனைக் கேட்டவுடன் அவர்களுக்கு அபரோக்ஷ ஸாக்ஷாத்காரம் உண்டாயிற்று. இன்னும் அந்த மஹாபுருஷன் தர்மத்தின் பத்தினியும், தக்ஷருடைய பெண்ணுமான மூர்த்தி என்பவளிடத்தில் 'நரன், நாராயணன்', என்ற திவ்ய நாம தேயங்களுடன் இரண்டு வகையாக அவதரித்தார். அந்த அவதாரத்தில் கடுமையாக தபஸ் செய்தார். அப்பொழுது மன்மதன் உடைய சைன்யங்களாகிய ஊர்வசி முதலிய அப்சர ஸ்திரீகள் அவருடைய தபஸைக் கெடுக்க முயன்றும் முடியவில்லை. வித்வான்களாகிய ருத்ரன் முதலியவர் கள் கோபத்தால் க்ரூரமாயிருக்கும் பார்வையால் மன்மதனை ஜயித்தார்கள். ஆனாலும் தம் ஆத்மாவைத் தகிக்கும் (ஸகிக்க முடியாத) கோபாக்னியை ஜயிக்க வில்லை. (கோபத்திற்கு வசப்பட்டிருக்கிறானென்று கருத்து.) இவ்விதக் கோபமும் நாராயணாவதாரஞ்

செய்த பகவானுடைய மனதில் பிரவேசிக்கப் பயப்படு கிறது. அதற்குத் தாழ்ந்தவனாகிய காமம் அவருடைய மனத்தில் ப்ரவேசிக்க முடியுமா ?

8–54 உத்தான பாதனென்ற அரசனுடைய பத்தினியாகிய ஸுநீதியின் புத்திரர் துருவரென்று ஒருவர் இருந்தார். அவர் தம்முடைய பிதாவின் ஸமீபத்தில் ஸபத்னீ மாதாவான ஸுருசியினுடைய வார்த்தை யாகிய பாணத்தால் அடிக்கப்பட்டு, பால்ய வயதிலேயே தபஸ் செய்வதற்காகக் காட்டுக்குச் சென்றார். அவர் பகவானை ஸ்தோத்திரஞ் செய்யவே, புருஷோத்தமன் ஸந்தோஷப்பட்டு அவருக்குச் சாச்வத மாகிய பதத்தைக் கொடுத்தார். அந்த மேலான ஸ்தானத்தை அதற்குக் கீழாகவிருக்கும் ஸப்த ரிஷிகளும் ஸ்தோத்திரஞ் செய்கிறார்கள். (இது ஒரு அவதாரமென்று கருத்து) தவிரவும் வேணனென்ற அரசன் அதர்மத்தை அனுஷ்டித்து வந்ததால் ப்ராம் மணர்கள் அவனைச் சபித்தார்கள். வஜ்ரம் போன்ற அவர்களுடைய வாத்தையால் அவனுடைய ஐசுவர்யம் முதலியவைகள் நாசமாயின. அந்த வேனனுக்கு பகவான் ப்ருது என்றும் புத்திரனாக அவதரித்து, அவனை நரகத்திலிருந்து காப்பாற்றி அதனால் புத்திரன் என்ற சப்தத்தை உண்மையான அர்த்தமுள்ளதாகச் செய்தார். பின்னும் பூமி தேவி இடமிருந்து ஸகல வஸ்துக்களையும் கறந்தார். மேலும், அந்தப் ப்ரபுவானவர் ப்ரிய வ்ரதருடைய பௌத்திரரும் ஆக்னீத்ரருடைய புத்திரருமாகிய நாபி என்பவருக்கு ஸுதேவி என்பவளிடத்தில் ரிஷப ரென்ற திவ்ய நாமதேயத்துடன் அவதரித்தார். அப் பொழுது விஷயங்களின் ஆசையை ஒழித்து மிகவும்

சாந்தமாகிய அந்தக் கரணமுள்ளவராகி தம்முடைய ஸ்வரூபத்திலே இருந்து யோகியாய் மூடன்போல் சஞ்சரித்தார். அந்த நிலைமையைத் தான் மஹர்ஷிகள் பரமஹம்சாசிரமம் என்கிறார்கள். பின்னும், யக்ஞ புருஷராகிய அவர் என்னால் செய்யப்பட்ட யாகத்தில் ஹயக்ரீவராக அவதரித்தார். அந்த ஹயக்ரீவர் பொன்னிறமுள்ளவர். வேத ஸ்வரூபி. ஸகல யாக ஸ்வரூபி. சகலதேவஸ்வரூபி. வேதங்கள் யாவும் மூச்சுவிடும் அவருடைய மூக்கிலிருந்து உண்டாயின. பின்னும் ப்ரளய காலத்தில் பலவகையான வேதங்கள் என்னுடைய முகத்திலிருந்து நழுவிப்போனதால் வேத மார்க்கங் களைத் திருப்பி என்னிடம் கொடுப்பதற்காக அவை களை எடுத்துக்கொண்டு மத்ஸ்ய ரூபத்துடன் பகவான் சமுத்திர ஜலத்தில் விளையாடினார். அப்பொழுது ஸகல ப்ராணிகளுக்கும் ஆதரரும், பூமியைப் ப்ரதானமாயுடையவருமான அந்தப் பரம புருஷனை வைவஸ்வத மனு தர்சித்தார். தவிரவும், அந்த ஆதி புருஷன், தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து அமிருதத்திற்காகப் பாற்கடலைக் கடையும்பொழுது ஆமை உருவங்கொண்டு மத்தாயிருந்து மந்தர மலையைத் தம்முடைய முதுகில் தாங்கினார். அப்பொழுது அந்த மலை உராய்வதால் தினவைப் போக்கிக் கொண்டு ஸுகமாய்த் தூங்கினார். மேலும் தேவர்களுக்கு நேரும் கஷ்டங்களை நிவர்த்திக்கும் அந்த மஹாபுருஷன் சிங்கப் பற்களால் பயங்கரமாயும் குரூரமான புருவங்களுள்ளதுமான நரஸிம்ஹ சரீரத்தை எடுத்துக் கொண்டு, கதாயுதத்துடன் தமக்கு எதிரில் ஓடிவரும் ஹிரண்யகசிபு என்ற அசுரனைத் தமது மடியில் தள்ளி, நகங்களால் கிழித்துக் கொன்றார். முன்னொரு காலத்தில் ஒரு சிறந்த

யானையானது பெரிதான ஒரு ஏரியில் ஜலம் குடிக்க இறங்கினபொழுது அங்கிருந்த மிகுந்த பலசாலியான ஒரு முதலை அதைப் பிடித்துக் கொண்டது. அதனால் அந்த யானை மிகவும் துன்பமடைந்து துதிக்கையில் தாமரைப் புஷ்பத்தை வைத்துக் கொண்டு, 'ஆதி புருஷ! ஸகல லோகத்துக்கும் அதிபதியே கேட்பவர் களைப் பரிசுத்தப்படுத்தும் கீர்த்தியுள்ளவரே' என்னைக் காப்பாற்ற வேண்டும். உம்முடைய நாமங்களைக் கேட்பவர்களுக்கு ஸகல மங்களமும் உண்டாகின்றன" என உரக்கக் கதறிற்று. அளவற்ற மஹிமையுள்ள ஸ்ரீ நாராயணன் அதனைக் கேட்டுச் சக்ராயுதத்தைத் தரித்து, கருடன் மீது ஏறிக்கொண்டு அவ்விடம் வந்து சக்ராயுதத்தால் முதலையின் வாயைப் பிளந்து சரணமடைந்த யானையின் துதிக்கையைப் பிடித்து மிகுந்த கருணையால் அதை அக்குளத்திலிருந்து கரை சேர்த்தார். பின்னும் யக்ஞ புருஷனாகிய மஹாவிஷ்ணுவானவர் அதிதி தேவியின் புத்திரர் களான தேவர்களுக்குத் தம்பியாய் அவதரித்தவரானா லும், குணங்களால் சிறந்தவராயும், வாமன ரூபியாயு மிருந்து பலிச் சக்ரவர்த்தியினிடம் மூன்று அடி பூமியைப் பெற்று ஸகல உலகங்களையும் ஆக்ரமித்தார். உலகத்தில் தர்மம் தவறாமல் நடப்பவர்கள் சத்துருவைக் கொல்லும் ஸாமர்த்யமுள்ளவர்களானாலும அவர்கள் உடைய ஐசுவர்யத்தை அபஹரிப்பதற்கு யாசிக்கிற வழியைத் தவிர வேறு மார்க்கமில்லை. ஓ நாரத பலிச் சக்ர வர்த்தியானவன் பகவானுடைய பாதங்களை அலம்பி, அந்தச் சுத்தமான தீர்த்தத்தைத் தன்னுடைய தலையில் புரோக்ஷித்துக் கொண்டு (தனது புரோஹிதரான சுக்ராச்சாரியரால் தடுக்கப்பட்டும்) ப்ரதிக்ஞையை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தால்

மூவுலகத்தையும், தன்னுடைய சரீரத்தையும் சத்துரு வாகிய பகவானுக்குக் கொடுத்தான். அப்படிப்பட்ட பக்தனுக்கு பகவான் தேவராஜ்யத்தைக் கொடுப்பது போதாதென்று நினைத்துத் தமது ஸாலோக்யத்தைக் கொடுத்தார். மேலும் நீர் விசேஷ பக்தியுள்ளவராய், பகவானை நோக்கி யோக சாஸ்திரத்தை உபதேசிக்க வேண்டுமென்று கேட்டீர் அல்லவா? அப்பொழுது அவர் வாஸுதேவரே நம்மைக் காப்பாற்றுகிறவர் என்று நிச்சயமாய் நம்பியிருப்பவர்களால் சீக்கிரத்தில் அறியக்கூடியதும், பாகவத சாஸ்திரத்தில் வர்ணிக்கப் படுகிறதும் ஆத்மாவின் உண்மையைக் காட்டுகிறது மான ஞானத்தையும், யோகத்தையும் உமக்கு உபதேசித்தார். மேலும், மன்வந்தரங்களில் பகவான் மனுவின் வம்சத்தைக் காப்பாற்றுகிறவராய்ப் பத்துத் திக்குகளிலும் தம்முடைய தேஜஸை ஸ்தாபித்து, அதனால் துஷ்டர்களான அரசர்களை நிக்ரஹித்து தம்முடைய கீர்த்தியை ஸத்திய லோகத்திலும் பரவச் செய்கிறார். அந்தப் பரமாத்மாவேதான் தன்வந்த்ரியாக அவதரித்து தம்முடைய கீர்த்தி யென்கிற பெயரி னாலேயே மஹாரோக முள்ளவர்களுடைய வியாதியைப் போக்குகிறார்; பின்னும் தீர்க்கமான ஆயுஸைக் கொடுக்கக் கூடிய அந்தப் பகவான் யாகங்களில் ஹவிர்பாகத்தை (முந்தி அஸுரர்களால் தடுக்கப்பட்டிருந்ததை) அடைந்தார். மேலும், ஆயுர் வேதமாகிய வைத்திய சாஸ்திரத்தையும் உலகத்தில் பரவச் செய்தார். தவிரவும் மிகுந்த பராக்கிரமமுள்ள வரும், மஹாத்மாவுமான அந்த நாராயணன் பரசு ராமனாக அவதரித்துப் ப்ராம்மணர்களைத் துவேஷித்த வர்களும் நன்மார்க்கத்தை விட்டுத்தவறினவர்களும், நரகத்தை அடைய விரும்பினவர்களும் நாசத்தை

அடைவதற்கு என்றே தெய்வத்தால் விருத்தி பண்ணப் பட்டவர்களும் பூமிக்கு மிகுந்த உபத்திரவத்தைச் செய்பவர்களுமான க்ஷத்திரியர்களை இருபத்தோருதரம் கோடரியைக் கொண்டு கொன்றார். அந்த மஹா புருஷனே, என்னிடத்தில் தபவு செய்து, முகமலர்ச்சி யுள்ளவராய் இக்ஷ்வாகு வம்சத்தில் தம்முடைய அம்சங்களாகிய பரதன் முதலியவர்களுடன் தசரதருக்குப் பிள்ளையாக ஸ்ரீராமனென்ற பெயருடன் அவதரிப் பார். பிறகு பிதாவாகிய தசரதருடைய அனுமதியின் மேல் தம்பியாகிய லக்ஷ்மணருடனும், பார்யையான ஸீதாதேவியுடனும் தண்டகாரண்யஞ் செல்வார். அப்பொழுது இராவணன் அவரிடம் விரோதம் செய்து கொண்டதனால் பந்துக்களை யிழப்பான். பின்பு திரிபுர ஸம்ஹாரம் செய்வதற்கு முயற்சித்த பரமசிவன் போல ராவணனைக் கொல்வதற்காக இலங்கா நகரம் போக விரும்பிய ராமனைக் கண்டு ஸமுத்திரம் பயந்து நடுங்கும். மேலும் ஸீதையானவள் இலங்கா நகரத்திலிருப்பதால் அவளைப் பாராமல் கலங்கியதும், கோபத்தால்ப் சிவந்ததுமான ஸ்ரீ ராமன் உடைய பார்வையால் அந்த ஸமுத்திரத்திலிருக்கும் மகரங்களும், ஸர்ப்பங்களும், முதலைகளும் மிகவும் தாபத்தையடையும். பின்பு ஸமுத்திரம் வழிகாட்டும்; அதன் வழியாக ஸ்ரீராமன் இலங்கா நகரம் போவார்; அவ்விடத்தில் வஸிக்கும் ராவணன் மிகவும் பலமுள்ள வன்; அவன் ஐராவதத்துடன் யுத்தம் செய்யும் போது, அது தன்னுடைய தந்தங்களால் இராவணனுடைய மார்பில் குத்திற்று; பிறகு அவைகளை பிடுங்க முடியாமல் தலையை அசைக்கத் தந்தங்கள் முறிந்து போயின. அப்படி இராவணனுடைய மார்பில் பதிந்த யானையின் தந்தங்களுடைய காந்தியால் பத்துத்

திக்குகளும் ப்ரகாசிக்கின்றன. தவிரவும், அவன், எனக்கு ஸமமானவர்கள் உலகத்தில் யார் இருக்கிறார் கள் ? என்று கர்வத்தால் சிரிப்பதுமுண்டு. அப்படிப் பட்ட சத்ருவாகிய அந்த ராக்ஷஸனுடைய கர்வத்தை ஸைன்யத்தின் மத்தியில் வில்வினுடைய சப்தத்தாலேயே போக்கடித்து, அவனை நாசஞ் செய்யப் போகிறார். பிறகு அஸுராம்சமான அரசர்கள் வெகுவாய்ப் பூமியில் பிறந்ததனால் பூமிக்கு விசேஷ பாரம் ஏற்படுமாதலால் அதனை நிவர்த்திப்பதற்காக ஸாமான்ய ஜனங்களால் அறியக்கூடாத மார்க்கமுள்ள வரும், வெண்மை நிறமுள்ளது, கருமை நிறமுள்ளது மான தலைமயிர்களுள்ளவருமான ஸ்ரீ மஹாவிஷ்ணு வானவர் பலராமனாகவும் கிருஷ்ணனாகவும் அவதரித்து, தம்முடைய மஹிமையைக் காட்டும் லீலைகளைச் செய்வார். எப்படியெனில் அவர் குழந்தையாயிருக்கும்போது பூதனை யென்ற ராக்ஷஸியைக் கொல்வார். மூன்றுமாதங்கள் சென்ற பிறகு சகட ரூபியான அஸுரனை ஸம்ஹரிப்பார். முழங்கால்களைக் கொண்டு தவழும் போதே ஆகாசம் வரையில் உயர்ந்தவைகளான அர்ஜுன மரங்களின் நடுவில் புகுந்து அவைகளைப் பூமியில் தள்ளுவார். அவர் பகவதவதாரமாயில்லா விடில் இப்படிச் செய்யமுடியாது. தவிரவும், விஷ ஜலத்தைக் குடித்து மூர்ச்சையடைந்த இடையர்களையும்; பசுக்களையும் தம்முடைய அனுக்கிரஹமுள்ள பார்வையால் பிழைக்கச் செய்து யமுனையிலிருந்து அந்த மடுவைச் சுத்தப்படுத்துவதற்காக அதிலிருந்து மிகுந்த விஷ வேகமுள்ள காளியனென்ற ஸர்ப்பத்தை அதைவிட்டு ஓடும்படி செய்வார் பிறகு, அந்த அமானுஷ காரியத்தைப் பார்த்து கோபர்கள் ஆச்சரியமடைந்து

அன்று இரவு யமுனையின் கரையில் படுத்துத் தூங்கு வார்கள். கோடைக் காலமாகையால் அப்பொழுது நான்கு புறத்திலும் காட்டில் அக்கினி பற்றிக்கொள்ளும். அப்பொழுது ஒருவராலும் அறியக் கூடாத வீர்யமுள்ள பகவான் பலராமனுடன் கோபர்கள் அனைவரையும் கண்களை மூடிக் கொள்ளச் செய்து, அவர்களை அந்த ஆபத்திலிருந்தும் காப்பாற்றுவார். மேலும் அவருடைய தாயான யசோதையானவள் தன் வீட்டிலிருக்கும் கயிறுகளால் பிள்ளையான ஸ்ரீ கிருஷ்ணனைக் கட்டியும், அவைகள் முடிவதற்குப் போதாமலிருக்கும். அப்பொழுது, அந்தப் பகவான் கொட்டாவி விட்டு வாயைத் திறப்பார். யசோதை அவருடைய வயிற்றில் பதினான்கு லோகங்களையும் பார்த்துப் புத்திரனுடைய மஹிமையைத் தெரிந்து கொள்வாள். தவிரவும், வருணருடைய பாசத்தால் கட்டப்பட்டுள்ள நந்தகோபரை ஸம்ரக்ஷிப்பார். மயனுடைய புத்திரனால் பூமிக்குள் மறைக்கப்பட்டு இருந்த கோபர்களைக் காப்பாற்றுவார். பகல்முழுவதும் வேலைசெய்து களைத்து, இராத்திரி தூங்கிக் கொண்டிருக்கும் கோகுலவாஸிகளான ஜனங்களை வைகுண்ட லோகஞ் சேர்ப்பார். . இந்திரனை உத்தேசித்துக் கோபர்களால் ஒவ்வொரு வருஷத்திலும் செய்யப்பட்டு வரும் பூஜையானது ஒரு வருஷத்தில் நிறுத்தப்படும். அதனால் மிகவும் கோபங் கொண்டு பசுக்களை நாசஞ் செய்வதற்காக மழையை பெய்யச் செய்வார். அப்போது ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஏழு வயதுள்ளவரானாலும் கோவர்த்தனமென்னும் மலையை நாய்க்குடையைப் போல் எளிதில் ஒரு கையால் தூக்கிக் குடையாக ஏழுநாள் வரையிலும் பிடித்துப் பசுக்களையும், கோபர்களையும்

காப்பாற்றுவார். ஒரு நாள் ராத்திரியில் சந்திரிகை யால் வெண்ணிறமுள்ள காட்டில் ராஸக்கிரீடையில் பகவான் கானம் பண்ணுவார். அந்தப் பாட்டிலுள்ள பதங்கள் இனியவைகளாயிருக்கும், ராகாலாபனம் மிக்கமேலானதாக இருக்கும். அதனால் கோபிகை களுக்கும் மன்மத தாபம் விருத்தியாகும். அந்த ஸமயத்தில் அவர்களைச் சங்கசூடன் என்ற குபேரன் உடைய வேலைக்காரன் அபஹரித்துப் போவான். பகவான் அவனை ஸம்ஹரிப்பார். மேலும் பகன், கேசி, அரிஷ்டன் சாணூரன் முதலிய மல்லர்கள்,

குவலயாபீடமென்ற யானை, கம்ஸன், நரகாஸுரன் மௌண்ட்ரகன், ஸால்வன், தந்தவக்திரன், சம்பரன் விடூதரன், யவனன், ஏழு விருஷபங்கள் ஆகிய இவர்கள் ஸ்ரீ கிருஷ்ண பகவானாலும், பிரலம்பன், தேனுகன், துவிதனென்ற வானரன், பல்வலவன், ருக்மி முதலியவர்கள் பலராம ரூபியான மஹாவிஷ்ணு வினாலும், யுத்தத்தில் மிகுந்த ஸாமார்த்தியமுள்ள காம்போஜர், மத்ஸயர், குருக்கள், ஸிருஞ்ஜயர், கேகயர் முதலியவர்கள் பீமார்ஜுன ரூபமாகிய பரமபுருஷனா லும் கொல்லப்பட்டு வைகுண்டஞ் சேர்க்கப்படுவார் கள். பின்னும், கால மஹிமையால் ஜனங்களுக்கும் ஆயுஸும் புத்தியும் குறையும்போது, பகவான் ஒவ்வொரு யுகத்திலும்; ஸத்ய வதியினிடம் அவதரித்து, ஸமுத்திரம் போல விஸ்தாரமாகிய வேதங்களை அவர்களுக்குத் தக்கபடி சாகை சாகைகளாகப் பிரிப்பார். பின்னும் ஒரு காலத்தில் அஸுரர்கள் வேதமார்க்கத்தை ஆச்ரயித்து மயனால் செய்யப் பட்டதும் அறியக் கூடாத வேகமுள்ளதுமான (இரும்பு, வெள்ளி, தாமிரம் இவைகளால்

செய்யப்பட்ட) பட்டணங்களால் லோகங்களை உபத்திரவிப்பார்கள். அப்பொழுது பகவான் அவர்கள் உடைய புத்திக்கு மோஹத்தையும் (யுக்தமானவை களை விட்டுவிடுவது) ப்ரலோபத்தையும் (யுக்தமல்லாத வைகளை கிரஹிப்பது) உண்டாக்கும் பாஷண்ட வேஷத்தைத் தரித்து (புத்தாவதாரஞ் செய்து) தர்மம் போலத் தோன்றும் பாஷண்ட தர்மத்தை வெகுவாகச் சொல்வார். எப்பொழுது ஸாதுக்களுடைய கிருஹங்களிலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சரிதங்கள் கானஞ் செய்யப்படாமல் இருக்குமோ, எந்தக் காலத்தில் ப்ராம்மணர்களும், க்ஷத்ரியர்களும், வைச்யர்களும் பாஷண்டர்களாகவும், சூத்ரர்கள் அரசர்களாகவு மிருப்பார்களோ, எந்த ஸமயத்தில் ஸ்வாஹா, ஸ்வதா, வஷட் என்ற சப்தங்கள் கேட்க அரிதாகவிருக்குமோ, அப்பொழுது (கலியுகத்தின் முடிவில்) கல்கியாகிப் பகவான் அவதரித்துக் கலியை நிக்ரஹிப்பார். மேலும் நான் துஸும் (ஸ்ருஷ்டிக்கு முன்னிருந்த நிலையை யோஜிப்பது) மரீசி முதலிய ஒன்பது பிரஜாதிபதிகளும் ஜகத்தை ஸ்ருஷ்டிப்பதற்காக ஏற்பட்ட பகவான் உடைய மாயா விபூதிகளேயாம். தர்மமும், யக்ஞமும் (விஷ்ணு) மனுக்களும்; தேவ சிரேஷ்டர்களும் அரசர் களும், ஜகத்தைக் காப்பாற்றுவதற்காக நியமிக்கப் பட்ட விபூதிகளாகிறார்கள். அதர்மமும், ருத்ரரும், கோப ஸ்வபாவமுள்ள ஸர்ப்பங்களும், அஸுரர்களும், ஸம்ஹாரத்திற்காக ஏற்படுத்தப்பட்டவைகள். ஆகை யால் இந்த ஈச்வரனுடைய மாயா விபூதிகளெல்லாம் அளவற்ற ஆச்சர்யகரமான சக்தியுள்ளவைகள். பூமியின் தூளிகளைப் பிரித்து எண்ணக்கூடிய சக்தியுள்ள கவியாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் லீலா விபூதிகள் எல்லாவற்றையும் அறிய முடியாது.

ஆகையால் சுருக்கமாகச் சொன்னேன். அந்தப் பகவான் மிகவும் அசைந்து கொண்டிருந்ததும், ஸத்திய லோகத்திற்குக் கீழ்ப்பட்டதுமான ஸ்வர்க்கத்தைத் தம்முடைய தடையற்ற வேகத்தால் அசையாமல் இருக்கச் செய்தார். ஆகையால் எனக்கும்; உமக்கும் மூத்தவர்களான ஸநத்குமாரர் முதலியவர்களுக்கும், அந்தப் புருஷனுடைய மாயாபலம் இவ்வளவென்று தெரியாது. மற்றவர்கள் தெரிந்துகொள்ள நியாயமே யில்லை. ஆயிரம் முகங்களுள்ள ஆதிசேஷ பகவானும் அந்தப் பரமபுருஷனுடைய மஹிமையைக் கானம் பண்ணி, அதன் கரையை அடைய அசக்தராயிருக் கிறார். (முழுவதையும் சொல்ல முடியவில்லை) கடபமற்றுப் பகவானுடைய பாதங்களைப் பூஜிப்பவர் களிடத்தில் (பக்தி செய்பவர்களிடத்தில்) அவருக்குக் கருணை உண்டாகும். புருஷோத்தமருடைய மாயா பலத்தை நன்றாய்த் தெரிந்து கொண்டு அதையும் தாண்டுவார்கள். நாய், நரிகளுக்கு ஆஹாரமாகிய இந்த சரீரத்தில் அவர்களுக்கு மானமிராது. ஓ நாரத, ப்ரஹ்மாவாகிய நான், நீர், உமக்கு முன் பிறந்தவர்களான ஸனத்குமாரர் முதலியவர்கள், பகவானாகிய பரமசிவன், ப்ரஹ்லாதன்; ஸ்வாயம்புவ மனு, அவருடைய பத்தினியாகிய சதரூபை, அவருடைய பெண்கள், பிள்ளைகள் பிராசீனபர்ஹிஸ், ரிபு, என்னும் மஹரிஷி, வேனனுடைய பிதாவாகிய அங்கன், துருவன், இக்ஷ்வாகு, நளன், முசுகுந்தன், வைதேஹர், காதி, ரகு, அம்பரீஷன், ஸகரர், கயன், நஹுஷன், மாந்தாதா, அலர்க்கன், சததன்வா, நந்திதேவர், பீஷ்மர், பலி, அதூர்த் தரயன், திலீபர், ஸௌபரி, உதங்கர், சிபி.தேவலர்,பிப்பலாதர், ஸாரஸ்வதர் உத்தவர் பூரிஷேனர், பராசரர்,

விபீஷணன், ஹனுமான், சுகர், அர்ஜுனன், ஆர்ஷ்ணி ஷேணர், விதுரர், சுருததேவர் முதலிய மற்றவர்கள் ஆகிய எல்லோரும் பகவானுடைய யோகமாயையை அறிவோம். ஸ்திரீகளும், சூத்ரர்களும், ஹூணர்களும் (ஜாதி விசேஷங்கள்) வேடர்கள் பாபகர்மத்தைச் செய்து ஜீவிக்கிறவர்களும், பசு, பக்ஷி முதலிய திர்யக் ஜாதிகளும், பகவத் பக்தர்களுடைய சேர்க்கையாலேயே தேவமாயையைத் தெரிந்து கொண்டு, அதைத் தாண்டுகிறார்கள். சாஸ்திரங்களை அப்யசித்து, அவற்றை மனஸில் தரிக்கக்கூடிய சக்தியுள்ளவர்கள் மாயையை ஜயிப்பார்கள் என்பதில் சந்தேஹமே யில்லை. அந்தப் பரமாத்ம ஸ்வரூபமானது எப்பொழு தும் சாந்தமாயிருக்கிறது. தன்னை அடைந்தவர் களுக்கு ஸம்ஸார பயத்தைப் போக்கி அபயத்தைக் கொடுக்கிறது. அது சுத்தமாகிய ஞானஸ்வரூபம். தோஷமற்றது. எக்காலத்திலும் ஒரே தன்மை யுள்ளதாயிருப்பது. கார்யம், காரணம் இவைகளைவிட வேறானது. பலவகையான காரகம் கிரியை இவைகளுள்ள வேத சப்தங்களால் அந்த ஸ்வரூபம் நிரூபிக்கப்படுகிறதில்லை. மாயையானது புதிதாகக் கல்யாணஞ் செய்துகொண்ட சிறு பெண் போல வெட்கமுள்ளதாய் அந்த ஸ்வரூபத்திற்கு முன்பாக நிற்கிறதில்லை. (அதில் ஸம்பந்தப்படுகிறதில்லை.) அந்த ஸ்வரூபமே ப்ரஹ்மம். அது சோகமற்றது. எப்பொழுதும் ஸுகரூபமானது. அதனிடத்தில் மனத்தைச் செலுத்திய யோகிகள் வேறொன்றையும் அபேக்ஷிக்கிறதில்லை. மழை பெய்யச் செய்யும் மகேந்திரன் ஜலத்திற்காகக் கிணறு வெட்ட வேண்டி மண் வெட்டியை எடுத்துக் கொள்வானா? பல வகையான தாதுக்களால் உண்டான சரீரமானது

அந்தத் தாதுக்கள் பிரியும்போது நாசமடைந்தாலும் ஜீவன் ஆகாசம் போல் நாசமடைகிறதில்லை. ஏனென்றால் அவன் அதனுடன் உண்டானவனல்ல. ஜன்மம் முதலிய விகாரங்களற்றவன். அந்த ஜீவனுக்கு ஸகல வித க்ஷேமத்தையும் கொடுப்பவரும் அந்த மஹா புருஷனேயாம். மகத் தத்வம் முதலியவைகளின் பரிணாம விசேஷங்களால் ஏற்படும் சுபங்கள் அவரிடமிருந்தே உண்டாகின்றன. ஓ, குழந்தாய்! நாரத பகவானுடைய ஸ்வரூபத்தைச் சுருக்கமாகச் சொன்னேன். காரிய காரணங்களடங்கிய ஜகத்தில் அவரைக் காட்டிலும் வேறொன்றுமில்லை. (எல்லாம் பரமாத்ம ஸ்வரூப மென்று கருத்து.) ஸ்ரீமந் நாராயணனால் எனக்கு உபதேசிக்கப்பட்டபடி பகவானுடைய விபூதிகளை உனக்குச் சுருக்கமாகச் சொன்னேன். ஸகல ஸ்வரூபியாகவும், ஸகலத்திற்கு ஆதாரமாயிருக்கும் ஸ்ரீ நாராயணனிடத்தில் மனிதர் களுக்குப் பக்தியுண்டாகும்படி நீ இதை விஸ்தாரப் படுத்து. மோக்ஷத்திற்கு அதிபதியான ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் பூர்ணமாகிய பக்தி யிருக்குமானால், ஜீவன் மனுஷ்ய சரீரத்தில் ஆசைப்படமாட்டான். ஸ்திரமற்ற பார்யை, புத்திரன் முதலியவர்களால் என்ன பிரயோஜனம்? ஸகல பாபங்களையும் போக்கக்கூடிய உத்தம ச்லோகராகிய பகவானிடம் பக்தியுண்டாகாவிடில் அவன் செய்யும் தானங்களா லும் தபஸினாலும் ப்ரயோஜனமில்லை. மேலும் ஜாதிக்கும் ஆசிரமத்திற்கும் தகுந்த தர்மங்களை யனுஷ்டிப்பதாலும், சாஸ்திரங்களை படிப்பதாலும் பலனில்லை.

55. ஆகையால், ஸ்ரீ கிருஷ்ணனாகிய பரமாத்மா வினுடைய லீலைகளை வர்ணிப்பவர்களுக்கும், அதை

அனுமோதிப்பவர்களுக்கும், ச்ரத்தையுடன் நித்தியம் கேட்பவர்களுக்கும் அவித்யை விலகும் என்று ப்ரஹ்மதேவர் சொன்னார்" என்று நாரதருக்கும் ப்ரஹ்மதேவருக்கும் நடந்த ஸம்வாதத்தைப் பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சுகர் உபதேசித்தார்.

நோட்டு

நான்கு –மூலத்தில் சதுஸ்ஸன என்றிருப்பதால் அதற்கு நான்கு புருஷார்த்தங்களைக் கொடுப்பவர் ஆகையால் தத்தாத்ரேயருக்கே சதுஸ்ஸனா என்றும் மற்றொரு பெயர் – சந்த். ப்ரஹ்மதேவருடைய தபோமகிமையால் ஸனத். ஸநாதந, ஸகந்தன, ஸனக என்று நால்வகையாக அவதரித்தார் – வீர. ஸனகர், ஸனாதனர், ஸனந்தனர், ஸனத்குமாரர் என்ற திவ்ய நாமதேயங்களை அடைந்தார் – விஜ. முடியவில்லை இந்தக் கதை பதினோராவது ஸ்கந்தத்தில் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது. வெண்மை நிற பகவானுடைய தலைமயிர்களில் வெண்மை நிறமுள்ளவை சில. கருமை நிறமுள்ளவை சில. அப்படி யிருப்பது அழகேயாம். ஜரை (கிழத்தனம்) யால் ஏற்பட்டதல்ல ஓ மஹாமுனியே! வெண்மை நிறமுள்ளவையும் கருமை நிறமுள்ளவையுமான தம்முடைய கேசங்களை எடுத்தார். –விஷ்ணு புராணம் அந்த ஹரியும் வெண்மை நிறமுள்ள ஒரு மயிரையும், கருமை நிறமுள்ள ஒரு மயிரையும் எறிந்தார். அவை யதுகுலத்திலிருக்கும் ரோகிணி, தேவகி இருவர்களை யும் அடைந்தன. அவ்விரு கேசங்களில் வெண்மை நிறமுள்ளது பலராமனாக ஆயிற்று. கருமை

நிறமுள்ளது ஸ்ரீ கிருஷ்ணனாக அவதரித்தது. மஹா பாரதம். கேசம் அவதரித்தது என்பதால் பகவான் உடைய கேசமே துஷ்டர்களைக் கொல்ல ஸாமார்த்திய முள்ளது என்று காட்டப்பட்டது. பலராமன், ஸ்ரீ கிருஷ்ணன் ஆகிய இவர்களுடைய நிறமும் காட்டப் பட்டது. கேசமே அவதரித்தது என்று தாத்பரியமல்ல. ஸ்ரீ கிருஷ்ணன் ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவே என்று அர்த்தமுள்ள வசனத்தின் விரோதமேற்படுமாகையால் மேற்காட்டியபடியே அர்த்தங்கொள்ள வேண்டும். ஸ்ரீத, ஸ்திரீகளும் ஸ்திரீகளும் சூத்ரர்களும் வேதத்தை அத்யனஞ் செய்யக் கூடாது என்ற சுருதியின்படி வேதாத்யனத்திற்கு அனர்ஹர்களும் தாண்டுகிறார்கள்– முக்தியடைகிறார்கள். வேத சப்தங்களால் பத்தாவது ஸ்கந்தத்தில் ஸ்ருதி கீதையில் இந்த விஷயம் நன்றாய்க் காட்டப்பட்டிருக்கிறது.

அத்தியாயம்- 8

பரீஷித்தின் கேள்வி

அதனைக்கேட்ட பரீஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி ஓ தத்துவத்தைபறிந்தவர்களுக்குள் சிறந்தவரே! மிக்க அதிர்ஷ்டமுள்ளவரே, குணங்களை அதிக்கிரமித் வரராகிய பகவானுடைய குணங்களை, வர்ணிக்கும் படி திவ்ய திருஷ்டியுள்ள நாரதரைப் ப்ரஹ்மதேவர் தூண்டினாரல்லவா? பின்பு அந்த நாரதர் யார் யாருக்கு அந்தப் பகவத் குணங்களை எப்படி உபதேசித் தார்? அதனுடைய உண்மையை அறியவிரும்புகிறேன். அற்புதமான மகிமையுள்ள பகவானுடைய மங்களகர மாகிய கதைகளைச் சொல்ல வேண்டும். அவைகளைக் கேட்டு ச்ரத்தையாய் அவருடைய சரிதங்களை உச்சரிப் பவர்களுடைய மனத்தில் பகவான் வெகு சீக்கிரமாய்ப் ப்ரவேசிக்கிறார். விஷயங்களில் ஆசையொழிந்து மனஸைப் பகவானிடத்தில் செலுத்தி, சரீரத்தைவிட வேண்டும. சரத்காலமானது ஜலத்திலுள்ள தோஷத் தைப்போக்கி, அதை தெளியச் செய்வது போல் ஸ்ரீ கிருஷ்ண பகவான் காதின் வழியாகப் பக்தர்களுடைய ஹ்ருதய கமலத்தில் ப்ரவேசித்து மனோதோஷங்களை நாசஞ் செய்கிறார். சுத்தமான மனமுள்ள புருஷன் ஆசை, துவேஷம் முதலியவைகளை ஒழித்து கிருஷ் ணனுடைய பாதங்களை ஒருபொழுதும் விடமாட் டான். தேசாந்தரத்திலிருந்து வந்தவர்கள் தமக்குச் சொந்தமாகிய வீட்டை விடுவார்களா? தேஹத்தை யுண்டுபண்ணும் மகாபூதங்களுடைய ஸம்பந்தமற்ற வராகிய பகவானுக்கு தேஹம் எப்படி உண்டா கிறது? அல்லது காரணமில்லாமல் உண்டாகிறதா?

அதன் உண்மை உமக்குத் தெரியும். அதனைச் சொல்லவேண்டும். ஸகல லோகங்களின் அமைப்புள்ள புவன கோசமாகிய பத்மமானது எவருடையவயிற்றில் இருந்து உண்டானதோ. அந்தப் புருஷன் உண்மையில் அவயங்களில்லாதவரானாலும், லௌகிக புருஷனுக்கு எவ்வளவு அவயவங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு அவயவங்கள் உள்ளவரென்றும் அப்படிப்பட்ட அவயவங்களின் அமைப்புள்ளவெரென்று சொல்லப் படுகிறாரே, பகவானுடைய கொப்பூழில் தோன்றிய தாமரஸ புஷ்பத்திலிருந்து உண்டானவரும், ஐந்து பூதங்களாலேற்பட்ட சரீரமுள்ளவருமான ப்ரஹ்மதேவர் எவருடைய அனுக்கிரஹத்தால் ப்ராணிகளை ஸ்ருஷ்டிக்கிறார்? விராட்ரூபத்தை எப்படி நேரில் பார்த்தார்? அதைச் சொல்லவேண்டும் மாயைக்கு அதிபதியும் ஸகல கல்யாண குணங்களுக்கு இருப்பிட மாயும் ஜகத்தை உண்டுபண்ணுகிறவரும், அதைப் பரிபாலிப்பவரும், அதை ஸம்ஹரிப்பவருமான மஹா புருஷன் தம்முடைய மாயையைவிட்டு எவ்விடத்தில் சயனித்துக் கொள்கிறார்? தவிரவும் அந்த மஹா புருஷனுடைய அவயவங்களால், உலகங்களும், அவற்றின் அதிபதிகளும் ஸ்ருஷ்டிக்கப்பட்டார்கள் என்றும், லோகபாலர்களால் அந்தப் புருஷனுடைய அவயவங்கள் ஏற்பட்டன என்றும் சொல்லியிருக் கிறீரல்லவா? அதையும் விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும் மேலும், கல்பம் என்பதும், விகல்பம் என்பதும் எவ்வளவு காலங்கொண்டது? நடந்தது. நடக்கிறது, இனி நடப்பது ஆகிய காலங்களுள் எப்படி அனுமானிக்கப்படுகின்றன? ப்ரஹ்மதேவர் முதலிய வர்களின் ஆயுள் எவ்வளவு காலங்களடங்கியது? ஓ ப்ராஹ்மணோத்தம! காஷ்டை முதலாக அணுவாகியதும்,

வர்ஷம் முதலாகப் பெரிதாகியதுமான காலத்தின் பேதங்கள் எப்போர்ப்பட்டவைகள்? கர்மங்களால் அடையக்கூடிய ஸ்தானங்கள் எவை? அவைகளின் ஸ்வரூபம் யாது? ஸத்வம் முதலிய குணங்களும், குணமுள்ளவர்களான ஜீவர்களும் பரிணாமத்தை (வேறு ரூபத்தை) அடையுமிடும் போது புண்ய பாப கர்மங்களுடைய கூட்டம் எதனால், எப்படிக் கிரஹிக்கப்படுகிறது? (எந்தக் கர்மங்களை, எப்படிச் செய்தால், எவன் தேவாதி சரீரத்தை அடைவான் என்று கருத்து) தவிரவும் பூமி, பாதாளம், திக்குகள், ஆகாசம் கிரஹங்கள், நக்ஷத்திரங்கள் மலைகள், ஆறுகள், ஸமுத்திரம், த்வீபங்கள் ஆகிய இவைகள் உற்பத்தியையும், அவைகளில் வஸிக்கும் ப்ராணிகளின் உற்பத்தியையும் சொல்லவேண்டும். அண்டகோசத்தின் வெளியிலும், உள்ளேயுமுள்ள அளவும், மஹாபுருஷர் களுடைய சரிதமும் வர்ணங்கள் ஆசிரமங்கள் ஆகிய இவைகளின் நிச்சயமும் சொல்லப்படவேண்டும். பின்னும் பகவானுடைய ஆச்சர்யகரமான அவதாரங் களுடைய சரிதத்தையும் யுகங்களுடைய மானத்தையும் ஒவ்வொரு யுகத்தின் தர்மங்களையும், மனிதர்களுக்குப் பொதுவாகிய தர்மங்களையும், யார் யார், எவ்வித ஜீவனஞ் செய்கிறார்களோ அதற்குத் தகுந்த தர்மங் களையும், ராஜ தர்மங்களையும், ஆபத்தர்மங் களையும் கேட்க விரும்புகிறேன். தத்துவங்களுடைய ஸ்வரூபம், அவைகளின் காரணம், பகவானை ஆராதிக்கும் முறை. அஷ்டாங்க யோகத்தின் முறை, யோகாப்யாசஞ் செய்து அணிமா முதலிய ஐசுவரியங் களையடைந்து, அர்ச்சிராதி மார்க்கத்தை யடைதல்; லிங்க சரீரத்தின் லயம் இவைகளையும், வேதங்கள்; ஆயுர்வேதம் முதலிய உபவேதங்கள், தர்ம சாஸ்திரம்.

இதிகாஸம், புராணம் முதலியவைகளின் ஸ்வரூபத்தையும் நிரூபிக்கவேண்டும். மேலும் ஸகல பிராணிகளுடைய உற்பத்தி, ஸ்திதி ஸம்ஹாரம், , யாகம் குளம் வெட்டுவிப்பது முதலிய பூர்த்த தர்மம், அக்னிஹோத்ரம் முதலிய காம்ய கர்மங்கள் தர்மார்த்த கர்மங்கள் ஆகிய இவைகளை அனுஷ்டிக்கும் முறைகளையும் சொல்லவேண்டும். அணுசாயிகளான ஜீவர்களுடைய உற்பத்தியையும், பாஷண்ட தர்மத்தின் உற்பத்தியையும் ஆத்மாவிற்கு ஏற்படும் பந்த மோக்ஷங்களையும். ஆத்மா சுத்த ஸ்வரூபராக இருப்பதையும், ஸ்வதந்தரராகிய பகவான் தம்முடைய மாயையுடன் விளையாடுகிறதையும்; அந்த மாயையை விட்டு ஸாக்ஷிபோல உதாசீனராக இருப்பதையும், மற்றும் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள விரும்பி, தங்களைப் பிரார்த்திக்கும் சரணாகதனாகிய எனக்கு வரிசையாகச் சொல்லவேண்டும். ப்ரஹ்மதேவரால் இவைகள் அறியப்பட்டிருப்பது போல உம்மாலும் நன்றாய் அறியப்பட்டிருக்கின்றன. முன்னோர்கள் அனுஷ்டித்த தர்மத்தையே பிந்தியவர்கள் அனுஷ்டிக்கிறார்கள். ஓ ப்ராஹ்மண நான் போஜனம் செய்யாமல் விரதமுள்ளவனானாலும் தங்களுடைய முகமாகிய தாமரை மலரிலிருந்து பெருகிவரும் பகவத் கதையாகிய அமிருதத்தைப் பானஞ் செய்வதால் ப்ராணனுக்கு யாதொரு உபத்திரவமுமில்லை. ஆகையால், நாரதருக்கு ப்ரஹ்மதேவர் உபதேசித்த படி எனக்குக் தாங்கள் உபதேசிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார்.

27–29. அவற்றைக் கேட்ட சுகர் அரசனிடம் மிகவும் சந்தோஷமடைந்து, 'பகவானுடைய சரிதத்தைச்

சொல்லுகிறேன்' என்று ஒப்புக்கொண்டு, ப்ரஹ்ம கல்பத்தில் ப்ரஹ்ம தேவருக்கு ஸ்ரீநாராயணனால் உபதேசிக்கப்பட்டதும் வேதத்திற்கு சமமானதுமாகிய பாகவதத்தையே பாண்டு குலத்தில் பிறந்தவரும், மேலானவருமான பரீக்ஷித்து மஹாராஜன் கேட்டவைகளுக்குக் கிரமமாய் மறுமொழி சொல்ல ஆரம்பித்தார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–9

சுகருடைய மறுமொழி

ஓ மஹாராஜ அனுபவ ஸ்வரூபியான பரமாத்மாவிற்குத் தேஹமும் முதலியவைகளின் ஸம்பந்தம் ஸம்பவிக்கிறதில்லை. சொப்பனத்தில் கண்ட தேஹத்தின் சம்பந்தம் உண்மையில் ஜீவனுக்கு இல்லை யல்லவா? ஆகையால் பரமாத்மாவிற்கு ஸம்ஸார சம்பந்தமானது மாயையேயொழிய உண்மையிலில்லை. மேலும், அந்த ஜீவன் பலவகையான ரூபமுள்ள மாயையால் பல விதமான ரூபமுள்ளவனாகத்தோன்றுகிறான். இந்த மாயையினுடைய குணங்களில் (விஷயங்களில்) ரமித்துக் கொண்டு 'நான், என்னுடையது' என்ற அபிமானத்தை அடைகிறான். காலம் (புருஷன்), மாயை (ப்ரக்ருதி) ஆகிய இவைகளைக் காட்டிலும் மேலான தன்னுடைய மஹிமையில் எப்பொழுது ஜீவன் ரமிக்கிறானோ அப்பொழுது 'நான், என்னுடையது' என்ற இருவகையான அபிமானத்தை விட்டு மோஹம் நீங்கி, நிஜ ரூபமாக இருக்கிறான். (பக்தி யோகத்தால் மாயா சம்பந்தம் அற்றுப்போனால் மோக்ஷமும் கிடைக்குமென்பது தாத்பர்யம்.) ஸ்ருஷ்டி காலத்தில் ப்ரஹ்மதேவர் கபடம் அற்றுத் தபஸ் செய்து பகவானை சந்தோஷப்படுத்தினார். அதனால் நாராயணன் அவரிடத்தில் பிரியப்பட்டுத் தம்முடைய சத்திய ஸ்வரூபத்தை அவருக்குக் காட்டி ஜீவனுடைய தத்துவ ஞானத்திற்காக எதனைச் சொன்னாரோ, அதை நான் உமக்குச் சொல்லுகிறேன். முற்காலத்தில் பக்தர்களுக்கு முக்கிய குருவாயும் தேவர்களுக்கு முந்தினவருமான ப்ரஹ்மதேவர் தமக்கு இருப்பிடம்

ஆகிய தாமரை புஷ்பத்திலிருந்து இந்த ஜகத்தை எப்படி ஸ்ருஷ்டிக்கிறது என்று யோசித்தார். அப்படியும் அவருக்கு அது விஷயமாய் ஒன்றும் தோன்றவில்லை. ஓ பரீக்ஷித்து மஹாராஜனே! இப்படியிருக்கையில் ஒரு சமயத்தில் ஜலத்திலிருந்து தபி என்று இரண்டு தரம் தொனியுண்டாயிற்று அவ்விரண்டு அக்ஷரங்கள் ஸ்பர்சமென்ற (ககாரம் முதல் மகாரம் வரையிலுள்ள அக்ஷரங்கள்.) அக்ஷரங்களில் பதினாறாவதும் இருபத்தொன்றாவதுமாக இருந்தன. பணத்தின் ஆசையை ஒழித்தவர்களுக்கு அவையே பணமாயிருக்கின்றன. பிறகு ப்ரஹ்மதேவர் அந்த வார்த்தையைக் கேட்டு, இதைச் சொன்னவர் யாராயிருக்கலாமென்று நான்கு புறத்திலும் திரும்பித் திரும்பிப் பார்த்ததும் அவ்விடத்தில் ஒருவரையும் காணததால் மறுபடியும் அந்தத் தாமரை புஷ்பத்திலிருந்து இதைப்பற்றி யோசித்துத் தம்மைத் தபஸ் செய்யும்படி பகவான் ஆஜ்ஞாபித்திருப்பதாக நிச்சயித்துத் தபஸிற்கு முயற்சித்தார். பின்பு வீணாகாத ஞானமுள்ளவரும் மிக்க தபஸ்வியுமான அந்த ப்ரஹ்மதேவர் ஞானேந்திரியங்களையும், கர்மேந்திரியங்களையும், மனஸையும், ப்ராணனையும் ஜயித்து, தேவமானத்தால் ஆயிரம் வர்ஷங்கள் தபஸ் செய்தார். அதனால் ஸகல லோகங்களுக்கும் தாபம் உண்டாயிற்று. இப்படித் தபஸ் செய்து ப்ரஹ்மதேவர் பரமாத்மாவைச் சந்தோஷப்படுத்தினதால் அந்தப் பகவான் தமது வைகுண்ட லோகத்தை அவருக்குக் காட்டினார். அதைக் காட்டிலும் மேலானது ஒன்றுமில்லை; அது க்ஷ்டம், மோஹம் முதலிய தோஷமற்றது. புண்யஞ் செய்தவர்களான வித்வான்களால் ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டது. மேலும் ரஜோகுணமும்

தமோகுணமும், அவைகள் கலந்த ஸத்வ குணமுமே அந்த உலகத்திலில்லை. (சுத்த ஸத்வ குணமே அவ்வுலகத்தில் ப்ரகாசிப்பதென்பது தாத்பரியம்.) தவிரவும் காலத்தின் ஸாமர்த்தியம் அவ்விடத்தில் உபயோகப் படுகிறதில்லை. மாயை, ராகம், உலோபம் ஆகிய இவைகளும் அந்த லோகத்திலில்லை. பின்னும், தேவர்களாலும், அஸுரர்களாலும் பூஜிக்கப்பட்ட பார்ஷத கணங்கள் அவ்விடத்தில் வஸிக்கிறார்கள். மேலும் அந்தப் பார்ஷதர்களெல்லோரும் நீருண்ட மேகம் போன்ற நிறமுள்ளவர்கள். தாமரை மலர் போன்ற கண்களுள்ளவர்கள். பீதாம்பரத்தைத் தரித்த வர்கள். மனோஹரமாயும், சுத்தமாயுமுள்ள தேக காந்தியுள்ளவர்கள். மிகுந்த அழகுள்ளவர்கள். நான்கு கைகளுள்ளவர்கள். மிகுந்த ப்ரகாசமுள்ள உத்தம ரத்தினகளிழைத்த திவ்ய ஆபரணங்களால் அலங் கரிக்கப்பட்டவர்கள். சிலர் பவழம், வைடூரியம் தாமரைத் தண்டு இவைகள் போன்ற நிறமுள்ளவர்கள். குண்டலம், கிரீடம், மாலை இவைகளால் பிரகாசிப் பவர்கள் மிகுந்த காந்தியுள்ள மஹாத்மாக்களுடைய விமானங்களால் அந்த லோகமானது ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறது. மின்னல்களுடன் கூடிய மேகங் களால் ஆகாசம்போல, உத்தம ஸ்திரீகளின் காந்தியால் விளங்குகிறது. மேலும் அவ்விடத்தில் லக்ஷ்மிதேவி நிஜஸ்வரூபத்துடன் பகவானுடைய பாதாரவிந்தங்களைப் பலவகையான விபூதிகளால் பூஜிக்கிறாள். மேலும், அவள் ஊஞ்சலின்மீதேறித் தன்பர்த்தாவாகிய நாராயணனுடைய ஸகல கல்யாண குணங் களையும் கானம் செய்து கொண்டு ஆனந்தமாய் வஸிக்கிறாள். அப்பொழுது வஸந்த ருதுவும், அதன் பின் செல்லுகின்ற வண்டுகளும், கூடக் கானம்

செய்கின்றன. இம்மாதிரியான அந்தக் க்ருஹத்தில் யஜ்ஞபுருஷனும், ஸகல ஜகத்திற்கு அதிபதியும், பக்தர்களுக்குப் ப்ரபுவும் ஸ்ரீயப்பதியுமான பகவானைப் ப்ரஹ்மதேவர் தரிசித்தார். ஸனனந்தர் நந்தர் முதலிய பூஜ்யர்களான பார்ஷதர்கள் அவரை ஸேவிக் கிறார்கள். அந்தப் பகவான் தம்முடைய வேலைக் காரர்களுக்கு அனுக்கிரகம் செய்வதிலேயே நோக்க முள்ளவர். புன்சிரிப்புக் கொண்டதும், சிவந்த கண்களுள்ளதுமான முகமுள்ளவர். பார்க்கப்பிரியமானவர். கிரீடமுள்ளவர். குண்டலங்களால் ப்ரகாசிப்பவர். நான்கு கைகளுள்ளவர். பீதாம்பரத்தால் அலங் கரிக்கப்பட்டவர். மார்பில் வஸிக்கும் லக்ஷ்மியுள்ளவர். உயர்ந்த சிம்மாசனத்திலிருப்பவர் ப்ரக்ருதி புருஷன், மஹத்தத்வம், அஹங்காரம் ஆகிய நான்கு சக்தி களாலும் ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் மனஸ், ஐந்து பூதங்கள், ஐந்து தன்மாத்திரைகள் ஆகிய இருபத்தைந்து தத்துவங்களாலும் சூழப்பட்டவர். தமக்கு இயற்கையானதும் மற்றவர்களுக்குத் தபஸ் முதலியவைகளால் கிடைக்கக் கூடியவைகளுமான ஐசுவர்யங்களால் தமது ஸ்வரூபத்திலேயே ரமித்துக் கொண்டிருப்பவர்.

18–24 அப்போர்ப்பட்ட பகவானுடைய ஸ்வரூ பத்தைப் ப்ரஹ்மதேவர் பார்த்து, அதனால் உண்டாகிய ஆனந்தத்தால் பூர்ணரானார். அப் பொழுது அவருக்கு மயிர்க்கூச்சலுண்டாயிற்று. பகவானிடத்திலுள்ள பக்தி விசேஷத்தால் அவருடைய இரு கண்களிலிருந்தும் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. பின்னுமவர் பரம ஹம்ஸாசிரமத்தால் அடையக்கூடிய பகவானுடைய பாதாரவிந்தத்தை

நமஸ்கரித்தார். அப்பொழுது பகவான் தம்மிடத்தில் விசேஷ பிரீதியுள்ளவரும், ப்ரஜைகளை ஸ்ருஷ்டிப் பதில் தம்மால் ஏவக்கூடியவரும், அதற்காகத் தம்மைக் குறித்து தபஸ் செய்தவரும் ஸமர்த்தருமான அந்தப் ப்ரஹ்ம தேவரை நோக்கி மிகுந்த ப்ரியத்துடன் அவருடைய கையைப் பிடித்துக் கொண்டு புன் சிரிப்புடன், ஓ வேதத்தை முகத்தில் வைத்துக் கொண்டிருக்கும் ப்ரஹ்ம தேவரே! லோகங்களை ஸ்ருஷ்டிப்பதற்காக வெகுகாலம் தபஸ் செய்து என்னைச் சந்தோஷப்படுத்தினீர். கபடமுள்ள யோகி களால் என்னை ஸந்தோஷப்படுத்த முடியாது. ஆனதால் உமக்கு இஷ்டமான வரத்தைக் கேளும். உமக்கு க்ஷேம முண்டாகும். என்னைப் பார்க்கிற வரையில் தான் ச்ரேயஸை யடைவதற்கு முயற்சிக்க வேண்டும் என்னுடைய வைகுண்ட லோகத்தை நேரில் பார்ப்பது என்னுடைய ப்ரியத்தைப் (பக்தனுக்கு வரங் கொடுக்க வேண்டுமென்றதை) காட்டுகிறது. ஆகையால், அதுவும் என்னுடைய கிருபையால் உமக்கு கிடைத்ததே தவிர வேறில்லை. மேலும் 'தப' என்ற என்னுடைய வார்த்தையைக் கேட்டுத் தபஸ் செய்தீர். தபஸ் என்பது எனக்கு ஹ்ருதயமாயிருக்கிறது. அதற்கு நான் ஆத்மா (ஸ்வரூபம்) வாக இருக்கிறேன். ஆகையால் ஸ்ருஷ்டிக்க வேண்டிய காலத்தில் அதற்கு வேண்டிய ஞானமற்றவராய் நீர் மோஹமடைந் திருக்கும் பொழுது உம்மைத் தபஸ் செய்யும்படி சொன்னவன் நானே. நான் தபஸைக் கொண்டே இந்த ஜகத்தைச் ஸ்ருஷ்டிக்கிறனே. தபஸினாலேயே அதைப் பரிபாலிக்கிறேன். தபஸி னாலேயே அதை ஸம்ஹரிக்கிறேன். தபஸே என் னுடைய சக்தியாயிருக்கிறது என்று சொன்னார்.

25–30 அதனைக் கேட்டு ப்ரஹ்மதேவர் ஸ்ரீ நாராயணனை நோக்கி, 'ஓ பகவன்! நீர் ஸகல பிராணிகளுக்கும் ப்ரபுவாக அவர்களுடைய புத்தியில் வசிப்பவராகையால் தடையற்ற திவ்ய ஞானத்தால் ஒவ்வொருவருடைய எண்ணத்தையும் நன்றாய்த் தெரிந்துகொள்ளுகிறீர். ஏ நாத உருவமில்லாதவரான உம்முடைய ஸ்தூல சூக்ஷ்ம உருவங்களை நான் நன்றாய்த் தெரிந்துகொள்ளும்படி ப்ரார்த்திக்கும் எனக்குச் சொல்ல வேண்டும். நீர் உம்முடைய மாயா சக்தியால் தானே ஸகல ஸ்வரூபியாயிருந்து ஜகத்தைச் ஸ்ருஷ்டித்தும், பரிபாலித்தும், ஸம்ஹரித்தும் பட்டுப் பூச்சி போல விளையாடுகிறீரல்லவா? வீண்போகாத ஸங்கல்பமுள்ளவரே! அந்த உம்முடைய லீலைகளை நான் நன்றாய்த் தெரிந்து கொள்ளும்படி அனுக்கிரஹிக்க வேண்டும். (ப்ரஜைகளை ஸ்ருஷ்டிப் பதில் பயந்து நான் தத்துவ ஞானத்தை விரும்ப வில்லை.) உம்முடைய உத்தரவின்படி சோம்பல் இல்லாமல் ஸ்ருஷ்டியைச் செய்வேன். ஆனாலும் அந்தக் காலத்தில் 'நான் ஜகத்தைச் ஸ்ருஷ்டிப்பவன். எல்லாவற்றிற்கும் மேலானவன் என்ற அஹங்காரம் முதலியவைகள் எனக்கு உண்டாகாமலிருப்பதற்காகத் தத்துவ ஞானத்தை உபதேசிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன். ஹே ஈசுவர! மித்திரன் தோழனைக் கௌரவப்படுத்துவது போல் நீர் என்னுடைய கையைப் பிடித்து, பூஜித்து, ஜனங் களை ஸ்ருஷ்டிக்கும் அதிகாரத்தைக் கொடுத்து இருக்கிறீர். நான் தங்களுடைய ஆக்ஞா ரூபமாகிய இக்காரியத்தைச் செய்து வரும்பொழுது மேலானவர் களையும், தாழ்ந்தவர்களையும், மத்ய நிலமை உள்ளவராகவும் பிரித்து ஸ்ருஷ்டிப் பேனல்லவா?

அப்பொழுது பகவான் நம்மை மித்திரனைப் போல் கௌரவப்படுத்தினார். நான் ஸ்வதந்திரன் என்று மிகுந்த கர்வம் எனக்கு உண்டாகக் கூடுமே. அம்மாதிரியான மதம் என்னைக் கெடுத்து விடாமல் இருக்கும்படி அனுக்கிரஹிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

31–39 அதனைக் கேட்ட பகவான் ப்ரஹ்ம தேவரை நோக்கி, ஓ ப்ரஹ்மதேவரே! உம்மால் கேட்கப் பட்டபடி சாஸ்திரத்தைப் படிப்பதால் உண்டாகிய ஞானம், அனுபவத்தால் உண்டாகிய விஞ்ஞானம், பக்தி, அவைகளின் ஸாதனம் ஆகிய இவைகள் மிகவும் ரகசியமானவைகளானாலும் அவைகளை உமக்கு உபதேசிக்கிறேன். நான் எவ்வளவு ஸ்வரூப முள்ளவனோ. எப்படி உண்டாகிறேனோ அப்பேர்ப் பட்ட உண்மையான ஸ்வரூப ஞானமானது என்னுடைய அனுக்கிரஹத்தால் உமக்கு உண்டா கட்டும். ஜகத் ஸ்ருஷ்டிக்கு முன்னே நான் ஒருவனே இருந்தேன். ஸ்தூலம், ஸூக்ஷ்மம் இவைகளுக்குக் காரணமாகிய ப்ரதானம் ஆகிய இவைகள் என்னைக் காட்டிலும் வேறாக ஒன்றுமிருந்ததில்லை. பின்பு நானே இந்த ஜகத் ரூபியாய் இருக்கிறேன். ப்ரளய காலத்தில் எந்த வஸ்து நாசமடையாமல் இருக்குமோ அதுவும் நானே. மேலும், ஆகாசத்தில் இரண்டு சந்திரன் இருப்பதாகத் தோன்றுகிறதுபோல எதன் உடைய மஹிமையால் ஆத்மாவிடம் இல்லாதவைகள் தோன்றுகின்றனவோ கிரஹ மண்டலத்திலிருக்கும் ராஹுவானவன் கண்ணுக்குப் புலப்படாததுபோல எதனுடைய மஹிமையால் ஆத்மாவிடத்தில் இருப்பவைகள் மறைக்கப்படுகின்றனவோ, அதை என்

உடைய மாயையென்று தெரிந்து கொள்ளவேண்டும். மஹா பூதங்கள், தங்களால் ஏற்பட்ட பலவகையான சரீரங்களில் பிறகு ப்ரவேசித்ததாகத் தோன்றுவது போல, ஜகத்தில் காரண ரூபியாய் நான் இருப்பவனே யொழிய அவைகளில் பின்பு ப்ரவேசித்தவனல்ல. ஆத்மாவினுடைய உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டியவன், 'எல்லா அவஸ்தையிலும் எது அன்வயத் தாலும், வ்யதிரேகத்தாலும் எக்காலத்திலும், எல்லா விடத்திலும் இருக்குமோ அதே பரமாத்மா என்று தெரிந்து கொள்ளவேண்டியது. இப்பொழுது என்னால் சொல்லப்பட்டதை ஒரே மனதாகச் சிந்தியும். கல்பங்களில் பலவகையான ஸ்ருஷ்டிகளிலும் உமக்கு அபிமானம் உண்டாகாமலிருக்கட்டும் என்று ஸகல ஜனங்களுக்கும் அதிபதியான ப்ரஹ்மாவை அனுக்ர ஹித்து அவர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்த உருவத்தைப் பகவான் மறைத்துக் கொண்டார். பிறகு அந்தப் ப்ரஹ்மதேவர் கண்ணுக்குப் புலப் படாமல் மறைந்த மஹாவிஷ்ணுவிற்கு அஞ்சலி செய்து ப்ருத்வி முதலிய பூதங்களாகிய சாதனங் களைக் கொண்டு முன் கல்பத்திலிருந்ததுபோல் இந்த ஜகத்தைப் படைத்தார்.

40–46 அந்தப் ப்ரஹ்மதேவர் ப்ரஜைகளுக்கு க்ஷேமத்தைச் செய்ய விரும்பி யமம், நியமம் முதலிய வைகளைச் செய்து வந்தார். அவருடைய புத்திரர் களுக்குள் மிகவும் பிரியராகிய நாரதர் தம்முடைய ஸ்வபாவத்தாலும், வணக்கத்தாலும், இந்திரிய நிக்ர ஹத்தாலும், பிதாவாகிய ப்ரஹ்மதேவரைச் சந்தோஷப் படுத்தி அவருக்குச் சிச்ரூஷை செய்து வந்தார். அந்தப் பாகவதோத்தமராகிய நாரதர் மாயைக்கு அதிபதியான

மஹாவிஷ்ணுவின் மாயையை நன்றாய்த் தெரிந்து கொள்ள விரும்பியவர். அவருடைய சிசுரூஷையால் ப்ரஹ்மதேவருக்கு ஸந்தோஷமுண்டாயிற்று. அப் பொழுது நாரதர் இந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டார். அவருக்குப் ப்ரஹ்மதேவர் மிகவும் பிரியத்துடன் பத்து வித புராண லக்ஷணமுள்ள பாகவத புராணத்தை உபதேசித்தார். அந்த நாரதர் ஸரஸ்வதீ நதிக்கரையில் ப்ரஹ்ம தியானஞ் செய்து கொண்டிருந்த அதிக தேஜஸுள்ள வ்யாஸ மஹர்ஷிக்கு இந்த விஷயத்தை உபதேசித்தார். விராட் புருஷனிடமிருந்து இந்த ஜகத் எப்படி உண்டாயிற்றென்று கேட்டீரல்லவா? அது முதலிய கேள்விகளுக்குப் பதில் , சொல்லுகிறேன் கேளும் என்றார்.

நோட்டு

உருவம்–ஸத்யம், ஞானம் முடிவில்லாதது என்று ஸ்ருதியில் சொல்லியுள்ளபடியுள்ளது. குணம்– திவ்ய மங்கள குணங்கள். எவர் எல்லாவற்றையும் ஸாமான்யமாகவும் விசேஷமாகவும் அறிந்தவரோ, எவருடைய மேலான சக்தியும், இயற்கையான ஞானம், பலம், கிரியை ஆகிய இவைகளும் பல வகையாகக் காணப்படுகின்றனவோ சந்த். மாயை என்று–ப்ரக்ருதியின் அனுஸந்தான காலத்தில் ஆத்ம ஸ்வரூபம் நன்றாகப் ப்ரகாசிக்கிறதில்லை. ஆத்மாவின் தோற்றம் இருக்கும்போது அசேதனமாகிய ப்ரக்ருதியானது தோன்றுவதில்லை. தேஜஸிருக்கும் போது இருட்டிக்கிறதில்லை. இருட்டிலிருக்கும் போது தேஜஸ் ப்ரகாசிக்கிறதில்லை. வீர.– எந்த வஸ்துவானது ஸகல காமத்தையும் அடைந்தவனாகிய என்னுடைய ப்ரயோசனமின்றி வேதம் முதலியதில்

தோன்றுகிறதோ, எது என்னிடத்தில் பாதகமாக ஆகிறதில்லையோ, அதே மாயை (ஜீவன், ப்ரக்ருதி ஆகிய இவர்கள் மாயை என்று கருத்து) யதார்த்தமாகத் தோன்றும் என்னுடைய பிரதிபிம்ப பூதனாகிய ஜீவனும், உண்மையாகத் தோன்றும் (மூல) ப்ரக்ருதியும் மாயையெனப்படுகின்றன. ஸ்ரீ மஹா விஷ்ணுவின் சக்தியே முக்கியமாய் மாயை யெனப்படுகிறது. ப்ரக்ருதி, ஜீவர்களை மாயையென்று செல்வது ஔபசாரிகப் ப்ரயோகம், ஆனால், ஜீவன், ப்ரக்ருதி, கர்மம், காலம் ஆகிய இவைகள் எப்பொழுதும் என்னிடத்தில் வஸிப்பவைகளானாலும் அவைகளால் பாதகமில்லாததனால், அவைகள் என் இடமிருப்பதாகச் சொல்லப்படுகிறதில்லை. அரசன் ரதத்தின் மீதேறிப் போகும்போது அவருக்குக் குடை பிடிப்பது முதலிய உபசாரங்கள் செய்து கொண்டு இருப்பவர்களுக்கு ரதிகர்கள் என்று பெயர் கிடைக்குமா? விஜ. ப்ரவேசித்தவனல்ல மஹாபூதங்கள் அவைகளாலேற்பட்ட கூடம் முதலியவைகளில் ப்ரவேசித்திருந்தாலும் அவைகளை உடைப்பது, வெட்டு வது ஆகிய இவைகளில் அந்த மஹாபூதங்கள் ஸம்பந்திக் கிறதில்லை.–வீர. அன்வயவத்தாலும் காரியங்களில் காரண ரூபமாக விருப்பது; ஜாக்ரத் முதலிய அவஸ் தைகளில் ஸாக்ஷியாக விருப்பது. வ்யதிரேகம் காரணமாக இருக்கும் போது காரியமாக இல்லாமல் இருப்பது –ஸ்ரீத. அன்வயம் இது அறியக் கூடியதே என்பது வ்யதிரேகம்– மற்றவை அறியக் கூடியவை அல்லவென்பது. பரமாத்மா ஒருவரைத் தெரிந்து கொண்டதனால் எல்லாம் அறியப் பட்டவையாகிறது. ஆனதால் அதுவே அறியக் கூடியது. –வீர.

அத்தியாயம் 10

தத்துவங்களின் உற்பத்தியுரைத்தது.

இந்தப்பாகவதத்தில் ஸர்க்கம், விஸர்க்கம், ஸ்தானம் போஷணம், ஊதி, மன்வந்தரம், ஈசானு கதை, நிரோதம் முக்தி ஆசிரயம் என்ற பத்து வகையான லக்ஷணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும் பத்தாவதாகிய ஆசிரயத்தின் உண்மையைத் தெரிவிப் பதற்காக ஒன்பதுகளுடைய ஸ்வரூபத்தை சப்தத் தாலும், அர்த்தத்தாலும் பெரியோர்கள் வர்ணிக் கிறார்கள். ஆகாசம் முதலிய பஞ்சபூதங்களும், சப்தம் முதலிய விஷயங்களும், இந்திரியங்களும் மஹத் தத்து வமும், அஹங்காரமும், ஸத்வம் முதலிய குணங்கள் உடைய பரிணாம விசேஷத்தால் பரமேச்வரனிடம் இருந்து உண்டாவதே ஸர்க்கமெனப்படும். வைராஜ னால் செய்யப்படும் சராசர சிருஷ்டியே விஸர்க்கம் எனப்படும். பகவான் அவதாரஞ் செய்து ஜகத்தைப் பரிபாலிப்பது எல்லாவற்றிற்கும் மேலானவராக இருப்பது ஸ்திதி யெனப்படும். பக்தர்களை அனுக்கிர ஹிப்பதே போஷணமெனப்படும். மன்வந்தரங்களில் அனுஷ்டிக்கப்படும் தர்மம் மன்வந்தர மென்று சொல்லப்படுகிறது. கர்மங்களின் வாஸனைகள் ஊதி எனப்படுகின்றது. பல்வகையான உபாக்யானங்கள் அடங்கிய பகவானுடைய அவதார கதைகளும், பக்தர்களுடைய சரிதங்களும் ஈசானு கதையென்று சொல்லப்படுகின்றன, பகவான் யோக நித்திரை செய்யும்போது ஜீவன் தன்னுடைய உபாதிகளுடன் அவரிடத்தில் லயிப்பதே நிரோத மெனப்படுகிறது. அவித்தையால் அத்யஸ்தமாகிய அநாத்ம ரூபத்தை

ஞானத்தால் தொலைத்து, தன்னுடைய நிஜரூபமாக இருப்பதே முக்தியாகும். ஸ்ருஷ்டியும் லயமும் எதன் இடமிருந்து உண்டாகின்றனவோ, எது பரமாத்மா என்றும் ப்ரஹ்மம் என்றும் சொல்லப்படுகிறதோ, அதே ஆசிரய மெனப்படுகிறது. ஆத்யாத் மிகனென்ற ஜீவனே ஆதிதெய்வீகம் (கண் முதலியவைகளுக்கு அதிதெய்வமான சூரியன் முதலியவை) ஆகிறான். கண்கள் முதலிய இந்திரிய கோளங்கள் அடங்கிய புருஷோபாதியாகிய தேஹமே ஆதிபௌதிகம். அறிகிற வன், அறியப்படுகிறது, ஸாதனம் ஆகிய மூன்றுக்குள் ஒன்றை விட்டு மற்றவை அறியக் கூடாத வைகளா கையால் இம்மூன்றையும் எவர் சாக்ஷியாக விருந்து தெரிந்து கொள்கிறாரோ அவரே பரமாத்மா. அவருக்கு வேறு ஆச்ரயமில்லை. எல்லாவற்றிற்கும் அவர் ஆச்ரய மாயிருப்பவர்.

10–34. விராட் புருஷன் ப்ரம்மாண்டத்தை பேதித்துக் கொண்டு எப்பொழுது வெளியில் வந் தாரோ (தனியாக இருந்தார் என்று கருத்து) அப் பொழுது தாம்சுத்தராகையால் தாம்வஸிப்பதற்குச் சுத் தமான ஸ்தானம் வேண்டுமென்ற எண்ணத்துடன் பரிசுத்தமான ஜலத்தை ஸ்ருஷ்டித்தார். அந்த ஜலத்தில் வஸித்தாலும் ஜலம் அவரிடத்திலிருந்து உண்டான தாகும். அவருக்கு நாராயணனென்று பெயருண்டா யிற்று. அவருடைய அனுக்கிரஹத்தால் தான் உபா தான காரணம், கர்மம், காலம் முதலிய நிமித்த காரணம் ஆகிய இவைகள் தங்களுடைய கார்யத்தை உண்டுபண்ணுகின்றன. அவருடைய அனுக்கிரஹமில் லாதவரையில் அவைகளுக்குக் கார்யத்தை உண்டு பண்ணக்கூடிய சக்தி ஏற்படுகிறதில்லை. அந்தப் புருஷன்

தாம் பலவகையான ஸ்வரூபத்தை அங்கீகரிக்க வேண்டுமென்ற ஸங்கல்பத்தை அடைந்து யோக நித்திரையிலிருந்து எழுந்திருந்து மிகுந்த ப்ரகாசமுள்ள திவ்ய தேஹத்தைத் தம்முடைய மாயையின் சம்பந்தத் தால் ஆத்யாத்மிகம், ஆதி தெய்வீகம், ஆதி பௌதிகம் என்று மூவகையாகப் பிரித்தார். அதெப்படி எனில் கிரியா சக்தியால், பலவகையாகச் சேஷ்டிக்கும் புருஷனுக்கு இந்திரிய சக்தி, மனத்தின் சக்தி, தேஹ சக்தி ஆகிய இவைகள் உண்டாயின. சூக்ஷ்ம ரூபியாகிய அந்த ஆத்மாவினிடமிருந்து முக்கியப் ப்ராணன் உண்டானான், அரசனை அவருடைய வேலைக்காரர்கள் அனுசரிப்பதுபோலப் ப்ராணன் அவருடையதாதலால் ஸகல இந்திரியங்களும் சேஷ் டிக்கின்றன. ப்ராணன் சேஷ்டிக்காவிடில் அவைகளும் சேஷ்டிக்கிறதில்லை, அந்தப் ப்ராணன் ப்ரபுவின் வயிற்றில் பரவும்போது, பசி, தாகம் ஆகிய இவைகள் உண்டாயின. பிறகு புஜிக்கவேண்டுமென்றும், குடிக்க வேண்டுமென்றும் விருப்பம் உண்டாயிற்று. பிறகு அந்தப் ப்ரபுவினிடமிருந்து முகமானது உண்டாயிற்று (பிரிந்தது). அதிலிருந்து ஜிஹ்வேந்திரியத்திற்கு அதிஷ் டானமாகிய தாலுவும் (நாக்கும்), அதிலிருந்து ஜிஹ்வேந்திரியமும், அதிலிருந்து அதனால் கிரஹிக்கப் படும் ஆறுவகையான ரஸங்களும் உண்டாயின. பேசவேண்டுமென்ற விருப்பம் அவருக்கு உண்டான பொழுது முகத்திலிருந்து அக்னியும், (இந்திரியாபிமானி தேவதை) வாக் என்னும் இந்திரியமும், அவ்விரண் டின் வியாபாரமாகிய பேச்சும் (இந்திரிய விஷயம்) உண்டாயின. அந்த அக்னி வெகுகாலம் ஜலத்தால் தடுக்கப்பட்டிருந்தது. ப்ராணவாயுவானது அதிகமாக அசையும் பொழுது மூக்குகள் உண்டாயின. அவை

களில் கந்தத்தை வஹிக்கும் வாயு உண்டானார். (ப்ரவேசித்தார்) கந்தத்தை கிரகிக்க விரும்பும்பொழுது அவ்விடத்தில் கிராணேந்திரியம் உண்டாயிற்று. எப்பொழுது ப்ரகாசமில்லாமலிருந்ததோ, அப்பொழுது தன்னையும் இதர வஸ்துக்களையும் பார்க்க, விரும்பிய போது கண்கள், உருவத்தைக் கிரகிக்கும் சக்தி, சக்ஷுரிந்திரியம் அதற்கு அபிமானி தேவதையாகிய ஆதித்யன் ஆகிய இவைகள் உண்டாயின. யோக நித்திரை செய்யும் ப்ரபுவைத் தேவர்கள் எழுப்புங் காலத்தில் அந்தச் சப்தத்தைக் கிரகிக்க அவர் விரும் பினார். அப்பொழுது காதுகளும், திக்குகளும் ,ச்ரோத்ரேந்திரியமும், சப்தத்தைக் கிரகிக்கும் சக்தியும் உண்டாயின. மேலும் வஸ்துக்களின் மெதுவாயிருக் கும் தன்மை, கடினமாயிருக்கும் தன்மை கனமுள்ளதாக விருப்பது, கனமில்லாமலிருப்பது, குளிர்ச்சி, உஷ்ணம் ஆகிய இவைகளைக் கிரகிக்க விரும்பும்போது துவக்கிந்திரியத்திற்கு அதிஷ்டானமாகிய தோல் உண் டாயிற்று. அதில் இந்திரியமும் தேவர்களும் உண் டானார்கள். ஸ்பரிசமாகிய குணமுள்ள வாயுவானது மேற்காட்டிய துவக் இந்திரியத்தின் உள்ளிலும் வெளி யிலும் வ்யாபித்திருக்கிறது. பின்னும் பலவகையான கார்யங்களைச் செய்ய விரும்பிய அவரிடமிருந்து கைகள் முளைத்தன. அவ்விரண்டு கைகளுக்கும் இந்திரன் தேவதையானான். எடுப்பது (ஆதானம்) அவைகளின் கார்யமாம். இன்னும், தமதிஷ்டப்படி நடக்க விரும்பிய அந்த ஆத்மாவிடமிருந்து பாதங்கள் முளைத்தன. அவைகளுக்கு யக்ஞஸ்வரூபியாகிய மஹாவிஷ்ணுவே தேவதையாக இருக்கிறார். நடப்பது அவைகளின் காரியம். யாகத்திற்கு உபயோகமான ஹவிஸ்ஸை வெகுதூரம் நடந்து ஸம்பாதிப்பதே அவை

களின் ப்ரயோஜனம். பிறகு குழந்தை, ஆனந்தம், அமிருதம் (ஸுகம் அல்லது ஸ்வர்க்கம்) ஆகிய இவை களை அடைய விரும்பிய அவரிடமிருந்து சிஸ்னம் (ஆண்குறியும் பெண்குறியும்) உண்டாயின. ஸ்திரீ களுடைய ஸம்போகத்தால் ஏற்படும் ஸுகத்திற்குக் காரணமும், இந்திரியம், தேவதை ஆகிய இவை களுக்கு ஆசிரயமுமான உபஸ்தேந்திரியம் அந்த சிஸ்னத்திலிருந்து உண்டாயிற்று. தாதுக்களின் மலத்தை (புஜித்த அன்னம் முதலியவைகளுடைய ஸாரமற்ற பாகத்தை) வெளிப்படுத்த விரும்பிய அந்தப் புருஷ னிடமிருந்து குதமானது உண்டாயிற்று. அதிலிருந்து பாயுவென்ற இந்திரியமும், அதனிடமிருந்து அதிதேவ தையான மித்திரனும் உண்டானார்கள். மலத்தை வெளிப்படுத்துவது இந்திரியம் அதன் ஸ்தானம் ஆகிய இரண்டையும் ஆசிரயித்தது. ஒரு தேஹத்தில் இருந்து மற்றொரு தேஹத்திற்குப் போகவிரும்பிய ப்ரஹத்தினுடைய ஸமஷ்டி அபானவாயுவினிடம் இருந்து நாபியாக உண்டாயிற்று. அதில் அபானனும், அதற்கு அதிஷ்டமான தேவதையாகிய மிருத்யுவும் உண்டாயின. மரணமானது பிராணன், அபானன் ஆகிய இவைகளைக் க்ரஹிக்க வேண்டுமென்று விரும்பிய அந்தப் ப்ரபுவினிடமிருந்து வயிறு, ஆந்த்ரம் (மாம்ஸ விசேஷம்), நாடிகள் ஆகிய இவைகள் உண்டாயின. அந்த நாடி, ஆந்த்ரம் ஆகிய இவை களுக்கு நதிகளும் ஸமுத்ரமும் (முறையே) தேவதைகள். அவைகளால் துஷ்டியும், புஷ்டியும் உண்டாயின. தம்முடைய ப்ரக்ருதியைச் சிந்திக்கும் அந்தப் ப்ரபு வினிடமிருந்து ஹ்ருதயம் உண்டாயிற்று. அதனிடம் இருந்து சந்திரனென்று ப்ரஸித்தியுள்ள மனஸ் உண் டாயிற்று. மேற்சொல்லிய ஹ்ருதயமே காமத்திற்கும்,

ஸங்கல்பத்திற்கும் இருப்பிடம் துவக் (மேல்தோல்) சர்மம் (உள்ளேயிருப்பது) மாம்ஸம் ரத்தம் மேதஸ் மஜ்ஜை எலும்பு ஆகிய ஏழு தாதுக்களும் பூமி, ஜலம், தேஜஸ் ஆகிய இவைகளின் ஸ்வரூபமாயுள்ளவைகள். ப்ராணன்கள் ஆகாயம் ஜலம், வாயு ஆகிய இவை களால் உண்டான இந்திரியங்களாவும் விஷயங்களில் செல்லும் ஸ்வபாவமுள்ளவை. சப்தம் முதலிய குணங் கள் அஹங்காரத்திலிருந்து உண்டானவை. ஸகல விகாரங்களுக்கும் (காமம், ஸங்கல்பம், ஸம்சயம், சிரத்தை, வெட்கம் முதலியவைகளுக்கும்) ஆதாரமா யுள்ளது மனதேயாம், விஞ்ஞான ஸ்வரூபமாயிருப்பதே (பலவகையான பிரபஞ்ச ரூபமாக ஆகவேண்டுமென்று பகவானுடைய எண்ணம்) புத்தியெனப்படுகிறது. பூமி முதலிய எட்டு ஆவரணங்களுள்ள மேற்சொல்லிய ரூபமானது பகவானுடைய ஸ்தூல ரூபம். ஸூக்ஷ்ம சரீரமானது மேற்காட்டிய ஸ்தூல ரூபத்துக்குக் காரணமாயிருப்பது. அது மிகவும் ஸூக்ஷ்மமாகையால் இந்திரியங்களுக்குப் புலப்படாதது. பேதமற்றது, ஆதி, மத்யம், அந்தம் ஆகிய இவைகளற்றது. எப்பொழுதும் ஒரே வகையுள்ளது. (இளைப்பு, விருத்தி முதலியவை களற்றது என்று கருத்து) வாக்குக்கும், மனத்திற்கும் மேலானது.

35–47. மேற்காட்டியபடி என்னால் உமக்கு உப தேசிக்கப்பட்ட பகவானுடைய ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபங் கள் மாயையால ஏற்பட்டவைகளாகையால் அவைகளை வித்வான்கள் உண்மையானவைகளாக அங்கீகரிக்கிறது இல்லை. (உபாஸனத்திற்காகப் பகவானிடம் ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபங்கள் ஆரோபிக்கபட்டனவென்று கருத்து) ஓ மஹாராஜ அந்தப் பகவான் ப்ரஹ்மதேவ ஸ்வரூபியாக

இருந்து, சப்தங்களின் பொருளாக விருக்கும் உருவங் களையும்; சப்தங்களைக் கொண்டு பெயர்களையும் ஸ்ருஷ்டிக்கிறார். மேலும் அவர் மாயையால் கர்மங்கள் அற்றவர்போல தோன்றினாலும் உண்மையில் கர்மங்கள் அற்றவர். ஒன்பது ப்ரஜாபதிகள் மனுக்கள் தேவர்கள், ரிஷிகள், பிதிரு கணங்கள் ஸித்தர்கள்; சாரணர்கள், கந்தர்வர்கள், வித்யாதாரர்கள், அஸுரர்கள், குஹ்யகர்கள் கின்னரர்கள் அப்ஸரஸுகள், நாகர்கள், ஸர்ப்பங்கள், கிம்புருஷர்கள், மாத்ரு கணங்கள், ராக்ஷஸர்கள், பிசாசங்கள் ப்ரேத கணங்கள், பூத கணங்கள், விநாயக கணங்கள் கூஷ்மாண்டங்கள், உன்மாதங்கள், வேதாலங் கள், யாதுதானர்கள் கிருஹங்கள், பறவைகள், மிருகங் கள், பசுக்கள், விருக்ஷங்கள், மலைகள், மலைப்பாம்பு கள், ஸ்தாவர ஜங்கமங்கள் என்ற இரண்டு வகை யுள்ளவையும், ஜராயுஜம், அண்டஜம், ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம் என்று நான்கு வகையுள்ளவைகளுமான ப்ராணிகள், ஜல ஜந்துக்கள், ஸ்தல ஜந்துக்கள் ஆகிய எல்லாவற்றையும் தரிக்கிறார். (ப்ரபஞ்ச ஸ்வரூபமாக இருக்கிறார் என்று கருத்து.) மேற்காட்டிய ப்ராணி களில் மேலானவை. மத்ய நிலையுள்ளவை, தாழ்ந்தவை ஆகிய இவைகள் புண்யம், பாபம், இரண்டின் கலப்பு ஆகிய கர்மங்களின் பலனேயாம். ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய இவைகளால் கர்மங்களின் கதி மூவகை யானது. ஸத்வத்தால் ஸ்வர்க்கம் முதலியவைகளும், ரஜஸ்ஸினால் பசு, புத்திரன் முதலியவைகளும் தமஸ்ஸினால் 21 நரகங்களும் உண்டாகின்றன. மேற் காட்டிய மூன்று வகையான கதிகளில் ஒன்றானது மற்ற இரண்டுகளால் அடக்கப்படும் பொழுது ஒவ் வொன்றிலும் மூன்று வகை ஏற்படுகின்றது. அந்தப் பகவானே இந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்து திர்யக் ஜாதி

ஆகவும், மனிதனாகவும். தேவனாகவும் அவதரித்து ஸ்ருஷ்டித்த ஜகத்தைப் பரிபாலனம் செய்தும், தர்ம ரூபியாக விருந்து அதனைப் போஷிக்கிறார். பின்பு ப்ரளய காலத்தில் மேகக்கூட்டத்தைக் காற்றானது கலைத்ததுபோல, அந்த மஹாபுருஷனே காலாக்னி ருத்ரரூபியாக விருந்து ஸம்ஹரிக்கிறார். மிகுந்த ஜ்ஞானமுள்ள அந்தப் பகவான் இப்போர்ப்பட்ட மஹிமை யுள்ளவர் என்று சொல்லப்படுகிறார். ஆனாலும் வித்வான்கள் அவரை இம்மாதிரியான குணமுள்ள வராக அறியமாட்டார்கள். ஏனெனில், இந்த ஜகத்தை உண்டு பண்ணுவது முதலியவைகளால் பரமாத்மாவிற்கு சம்பந்த மிருப்பதாகச் ஸ்ருதியின் தாத்பர்யமல்ல. மாயையைக் கொண்டு பகவானிடத்தில் ஆரோபிக்கப் பட்ட கர்த்ருவம் முதலியவைகள் அவரிடத்தில் உண்மையில் இல்லை என்று சொல்லுவதற்காக வேதமானது அவைகளை அனுமதித்தது. ப்ரஹ்மதேவ ருடைய கற்பமானது அவாந்தர கல்பத்துடன் சுருக்க மாகச் சொல்லப்பட்டது. இந்த மஹாகல்பத்தில் மஹத்தத்துவம் முதலியவைகளின் ஸ்ருஷ்டியும். ஸ்தாவரங்களின் ஸ்ருஷ்டியும் சொல்லப்பட்டிருக் கின்றன. இந்தப் பிரகாரமானது மற்ற மஹாகல்பம் முதலியவைகளுக்கும் பொதுவேயாம். காலத்தின் அளவையும் கல்பத்தின் லக்ஷணத்தையும் அதன் அவாந்தரவிபாகத்தையும் பாத்ம கல்பத்தையும் சொல்லுகிறேன். கேளும் என்றார்.

48–50. இம்மாதரியான ஸூதருடைய வார்த்தையை கேட்ட சௌனகர் அவரை நோக்கி, பாகவதர்களுக்குள் சிறந்தவராகிய விதுரர், மிகுந்த அபிமானமுள்ள பந்துக் களை விட்டுப் பிரிந்து பூமியிலிருக்கும் ஒவ்வொரு

தீர்த்தங்களிலும் சென்று யாத்திரை செய்தாரல்லவா? அந்த விதுரருக்கும், மைத்ரேயருக்கும் எந்த விடத்தில் பரமாத்மா விஷயமான ஸம்வாதம் நேர்ந்தது? அந்தப் பகவானாகிய மைத்ரேயரால் அவருக்கு உபதேசிக்கப் பட்ட ஆத்ம தத்துவம் யாது? விதுரர் பந்துக்களை விட்டுப் பிரிவதற்கு என்ன காரணம்? அவர் மறு படியும் ஏன் திரும்பிவந்தார்? அவருடைய சரிதம் எல்லாவற்றையும் சொல்லவேண்டும் என்று பிரார்த் தித்தார்.

51. அதனைக் கேட்டு ஸூதர், 'ஓ மஹரிஷிகளே பரீஷித்து மஹாராஜனால் கேட்கப்பட்டுச் சுக மஹா முனியானவர் எதனை அவருக்கு உபதேசித்தாரோ அதனைக்ரமமாக உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

நோட்டு

விஸர்க்கம் பகவான் தமோகுணத்தை அங்கீகரித்துச் செய்யும் லயம்சந்த். ப்ரஹ்மதேவரால் செய்யப்படும் ஸர்க்கம் வீர. ஸ்ருஷ்டி காலத்தில் பரமாத்மாவினிடம் இருந்து குணங்களுடைய வித்யாஸத்தால் உண்டாகும் மஹத்தத்துவத்தால் ஐந்து பூதங்கள், சப்தம் முதலிய வைகள், இந்திரியங்கள், புத்தி ஆகிய இவை முதல் அண்டம் வரையிலுள்ளவைகளின் உற்பத்தியே ஸர்க்கம். அண்டத்திற்குட்பட்ட புருஷனால் ஸ்ருஷ் டிக்கப்படும் பலவகையான ஸ்ருஷ்டியே விஸர்க்கம் விஜ். முக்திஜீவன் கர்மத்தால் கற்பிக்கப்பட்ட தேவாதி சரீரத்தைவிட்டுத் தன்னுடைய ஸ்வரூபமாகிய ஞானம், ஆனந்தம் முதலியவைகளுடனிருப்பது சந்த், பாபம் இல்லாமலிருப்பது முதலிய எட்டுக் குணங்களுடைய

வனாகத் தன்னைத் தெரிந்து கொண்டிருப்பது வீர, ப்ராகிருதம், வைகிருதம், ஸ்தூலம் ஸூக்ஷ்மம் ஆகிய இவைகளை விட்டு, சித்ஸ்வரூபியாயும், ஆனந்த ஸ்வரூபியாயும் இருப்பதுவிஜ. ஆதிபௌதிகம் சப்தம் முதலியவைகளுக்கும் ஆந்தரனாகவிருப்பவனே ஆதி பௌதிகன் வீர. ஸாக்ஷியாக இம்மூன்றுகளில் இந்திரியமாகிய ஸ்தானமில்லாவிடில் சப்தம் முதலிய விஷயங்கள் அறியப்படுகிறதில்லை. ஆனதால் ஜீவர்கள் மூன்று வகையான ஸன்னிகர்ஷமுள்ள பதார்த்தங் களை இந்திரியங்களால் அறிந்துகொள்ளுகிறாகள். பரமாத்மாவானவர்மூன்றையும் நேரில் பார்ப்பவர் வீர. ஆச்ரயமானஅசிதாஸ்ரயமான ஜீவனுக்கும் ஆச்ரயமாய் இருப்பவர். எப்படி ரதத்திலுடைய சக்கரத்திலுள்ள ஆரங்களில் நேமியும் (சக்கரத்தின் முனை) மத்யமாகிய குடத்தில் ஆரங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றனவோ, அப்படியே பூத மாத்திரைகள் ப்ரஞ்ஞாப மாத்திரை யிலும், அவைகள் ப்ராணனிடத்திலும் வைக்கப்பட்டு இ ருக்கின்றனஸ்ருதி. வீர.நாராயணன் 'ஜலங்களுக்கு நாரமென்று பெயர். அவைகள் ஸ்தானமாயிருந்தன. அதனால் நாராயணன்' என்று சொல்லப்பட்டார் ஸ்மிருதி.

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்கந்தம் 3

அத்தியாயம்-1

விதுரருக்கும்உத்தவருக்கும் ஸம்வாதம்

சுகர் பரீக்ஷித்து மகாராஜனை நோக்கி, "ஓ மகாராஜ! எல்லாவற்றிற்கும் அதிபதியும், ஹிருதயத்தில் வஸிப்பவருமான இந்த ஸ்ரீ கிருஷ்ண பகவான் பாண்டவர்களுக்குத் தூதராக அஸ்தினாபுரம் சென்றபொழுது அரசனாகிய துரியோதனனை லட்சியம் செய்யாமல் விதுரருடைய கிருஹத்திற்குச் சென்றாரல்லவா, அவ்வளவு மஹிமை பொருந்தியதும், ஸகல சம்பத்துக்களால் நிறைந்ததுமான தம்முடைய அந்த வீட்டை விட்டு விதுரர் முன்னொரு காலத்தில் காட்டில் சென்று அவ்விடத்தில் ஸர்வக்ஞரான மைத்ரேயரைச் சந்தித்து, இந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டார்" என்று சொன்னார். அதனைக் கேட்ட அரசன் சுகரை நோக்கி, "ஓ பிரபுவே! பகவானாகிய மைத்ரேயரும், விதுரரும் எவ்விடத்தில் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசிக் கொண்டார்கள்? மிகவும் சிறந்தவரான மைத்ரேயரை நோக்கிச் சுத்த சித்தரான அந்த விதுரரால் செய்யப்பட்டதும், பெரியோர்களால் அனுமோதித்துக் கௌரவப்படுத்தப்பட்டதுமான ப்ரச்னம் (கேள்வி) அற்ப விஷயமுள்ளதாக இராது. ஆகையால அதைச் சொல்ல வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

5-45 ஓ சௌனகர் முதலிய மஹர்ஷிகளே! இம்மாதிரி அரசனுடைய வார்த்தையைக் கேட்டு மஹர்ஷிகளுக்குள் சிறந்தவரும், பல விஷயங்களை

அறிந்தவருமான சுகர் மிகுந்த ப்ரியத்துடன் அரசனை நோக்கி, "திருதராஷ்டிர மகாராஜன் அதர்ம சிந்தையால் விவேகமில்லாதவராய் மிகவும் துஷ்டர்களான துரியோதனன்முதலிய புத்திரர்களை அதர்ம மார்க்கமாய்ப் போஷித்தும், தம்முடைய தம்பியாகிய பாண்டுவினுடைய குமாரர்களும், தகப்பனை இழந்தவர்களுமான தரும புத்திரர் முதலானவர்களை அரக்கு மாளிகையில் வஸிக்கச் செய்து அதில் அக்னியையும் வைத்தார். பிறகு துரியோதனன் சபையில் திரௌபதியின் தலைமயிரைப் பிடித்து இழுத்து வரச் செய்யும் பொழுது, அவள் தன்னுடைய ஸ்தனங்களிலிருக்கும் குங்குமம் கரையும்படி கண்ணீரைப் பெருக்கி அழுதாள். அப்பொழுது தனது மருமகளாகிய திரௌபதிக்கு நேர்ந்த துக்கத்தையும் புத்திரர்களுடைய கெட்ட நடையையும் பார்த்திருந்தும் மௌனமாக இருந்தார்.

மேலும் துரியோதனன் முதலியவர்கள் மிகுந்த சாதுவாகிய தருமபுத்திரரைச் சொக்கட்டான் ஆட்டத்தில் ஜயித்து நாட்டிலிருந்து காட்டிற்குப் போகச் செய்தார்கள். அப்பொழுது அவர் சத்தியத்திற்குட்பட்டுப் பன்னிரண்டு வருஷம் வனவாஸஞ் செய்தும், ஒரு வருஷம் அஞ்ஞாதவாஸஞ் செய்தும், பிறகு தம்முடைய பாகத்தைத் தமக்குக் கொடுக்கும்படி வேண்டிக் கொள்ள அப்பொழுதும் தமோ குணத்தால் அந்தத் திருதராஷ்டிர மகாராஜன் கொடுக்கவில்லை. பின்னும், ஜகத்திற்குக் குருவாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் தரும புத்திரரால் தூண்டப்பட்டு, அஸ்தினாபுரஞ் சென்று சபையில் சில வார்த்தைகளைச் சொன்னார். அவைகள் பீஷ்மர், முதலானவர்களுக்கு அமிருதமாக விருந்தன. துரியோதனன், திருதராஷ்டிரர்

முதலானவர்கள் க்ஷேமத்தைக் கொடுக்கும் புண்ணிய மில்லாதவர்களாகையால், அவைகளைப் பெரியவை களாக நினைக்கவில்லை. பின்னுமொரு சமயத்தில் திருதராஷ்டிரர் பாண்டவர்களுக்கு அவர்களுடைய பாகத்தைக் கொடுக்கும் விஷயமாய் ஆலோசிப்பதற்காக விதுரரைத் தம்முடைய அரண்மனைக்கு வரவழைத் தார். விதுரர் காரியம், அகாரியம் இவைகளை நன்றாக யோசித்துச் சொல்பவர்களுக்குள் சிறந்தவர், "விதுரருடைய வார்த்தை மிகவும் மேலானது" என்று ப்ரசித்தமாயிருக்கிறது. அப்பொழுது விதுரர் தமை யனை நோக்கி, "ஓ மகாராஜ! தரும புத்திரருக்கு ஓரிடத்திலும் விரோத புத்தியில்லாமையால் அவர் தம் சகோதரர்களுடன் உம்மால் செய்யப்பட்ட சகிக்க முடியாத அபகாரங்களைப் பொறுத்துக் கொண்டிருக் கிறார். தவிரவும், பீமசேனராகிய சர்ப்பமானது மிகுந்த கோபத்துடன் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக் கிறது. அந்த சர்ப்பத்தினிடம் நீர் எப்பொழுதும் மிகவும் பயந்து கொண்டிருக்கிறீரல்லவா? மேலும் ப்ராஹ்மணர்களையே தெய்வமாக கொண்டவராகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் குந்தியின் புத்திரர்களைத் தம்மைச் சேர்ந்தவர்களாக அங்கீகரித்திருக்கிறார். யாதவர்களுக்கு அதிபதியும், பூமியிலிருக்கும் ஸகல அரசர்களை ஜயித்தவருமாகிய அந்தப் பகவான் துவாரகா நகரத்தில் சுகமாக வஸிக்கிறார்.

மேலும், தோஷமே துரியோதனனென்ற பெயருடன் சரீரமெடுத்துக் கொண்டு உம்முடைய க்ருகத்தில் ப்ரவேசித்திருக்கிறது. இவனை அபத்யம் (எந்தக் குழந்தையால் பிதா நரகத்தையடையாமலிருப்பானோ அந்தக் குழந்தை) என்று நினைத்துப் போஷிக்கிறீர்.

இவன் பரம புருஷராகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் இடத்தில் விரோதபுத்தியுள்ளவன். இவனால் உமக்கு க்ஷேம்மம் கிடைக்காது, சம்பத்து உம்மை விட்டு விலகியது; கெட்ட நடையுள்ள இந்தப் புத்திரனை நாட்டை விட்டுத் துரத்தி விடவேண்டும். குலத்தின் க்ஷேமத்திற்காக ஒருவனைப் பரித்தியாகம் செய்வது நியாயமேயாகும், தரும புத்திரருக்கு அவருடைய பாகத்தைக் கொடுத்துவிடும்" என்றார். அதனைக் கேட்ட துரியோதனன் மிகுந்த கோபங்கொண்டு உதடுகள் துடிக்கக் கர்ணன், துச்சாதனன், சகுனி என்னும் இவர்களுடன் சாதுக்களால் விரும்பக்கூடிய ஸ்வபாமுள்ள விதுரரை யுத்தேசித்து, "தாசியின் புத்திரனாகிய விதுரன் கபட ஸ்வபாவமுள்ளவன். நம்முடைய அன்னத்தை புசித்தவனாயிருந்தும் நமக்கே விரோதம் செய்கிறான். சத்ருக்களுக்கு அனுகூலஞ் செய்வதில் ஜாக்ரதையாக இருக்கிறான். இவனை இந்த ஆலோசனை சபைக்கு எவன் அழைத்தான்? இவனை உயிருடன் பட்டணத்தை விட்டுத் துரத்த வேண்டும்" என்று அவமதித்துச் சொன்னான். இம்மாதிரி விதுரர் திருதராஷ்டிரருடைய முன்பாகத் துரியோதனனுடைய நிஷ்டுரவார்த்தை களாகிய பாணங்களால் அடிக்கப்பட்டும் அதனால் வருத்தப்படவில்லை. ஆனால், மாயையின் மஹிமை அளவிடமுடியாதது என்று ஆச்சரியமடைந்தார்.

பிறகு அவர் (விதுரர் அஸ்தினாபுர பட்டணத்தை விட்டு வெளியில் போய்ப் பீமசேனர் முதலியவர்களு டன் சேர்ந்த யுத்தத்திற்கு வருவாரோவென்று சந்தே கிக்க வேண்டாம் என்ற விஷயத்தை துரியோதனன் முதலியவர்களுக்குத் தெரிவிப்பதற்காக) தம்முடைய

வில்லை அவர்களுடைய அரண்மனை வாசலில் வைத்துவிட்டு, தம்மைத் துரத்த முயற்சிப்பதற்கு முன்னமேயே பட்டணத்திற்கு வெளியில் சென்றார். கௌரவர்களுடைய பாக்கிய ரூபியாகிய அந்த விதுரர் புண்ணியத்தைச் சம்பாதிக்க விரும்பி க்ஷேத்திராடனஞ் செய்ய ஆரம்பித்தார். க்ஷேத்திரங்களில் பகவான் ப்ரஹ்மா, ருத்திரன் முதலிய அநேக சரீரங்களுடன் ஸான்னியத்யஞ் செய்கிறார். வனங்கள், புண்யகரமாகிய தோட்டங்கள், மலைகள், கொடிவீடுகள், சுத்தமான ஜலமுள்ள நதிகள், ஏரிகள், பகவானுடைய மூர்த்திகளால் அலங்கரிக்கப்பட்ட க்ஷேத்திரங்கள் ஆகிய இவைகளில் சஞ்சரித்தார். மேலும், அவர் ஒவ்வாரு தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்தும் சுத்தமாகிய ஜீவனமுள்ளவராகப் பூமியில் படுத்துக் கொண்டு, மரவுரியை உடுத்திக் கொண்டு தம்முடைய பந்துக்களாலும், "இவர் விதுரர்" என்று தெரிந்து கொள்ள முடியாத ஸ்வரூபமுள்ளவராக ஸ்ரீ மகா விஷ்ணுவிற்குப் ப்ரியமாகிய வ்ரதங்களை அனுஷ்டித் தார். இப்படிப் பாரத வர்ஷம் முழுவதும் சஞ்சரித்துக் கடைசியில் ப்ரபாஸ தீர்த்தஞ் சென்றார். அந்தக் காலத்தில் தருமபுத்திரர் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய சகாயத்தால் ஸகல பூமியையும் பரிபாலித்து வந்தார். அப்பொழுது அவருடைய சைன்யம் ஒன்றுதான் பூமியிலிருந்தது. அரசர்களுக்கு அடையாளமாகிய வெள்ளைக் குடை ஒன்றே நிலைத்திருந்தது. மூங்கில்கள் ஒன்றோடொன்று சேர்ந்து அக்னி யுண்டுபண்ணி அதனால் அவைகள் எரிக்கப்படுவது போலக் கௌரவர்கள் நாசமடைந்தார்கள் என்று ஜனங்கள் சொல்லிக் கொள்வதை விதுரர் ப்ரபாஸ தீர்த்தக் கரையில் கேட்டு, வருத்தத்துடன் மௌனமாக

அவ்விடத்திலிருந்து மேற்கு முகமாய்ச் சரஸ்வதி நதியை நோக்கிச் சென்றார். அவ்விடத்தில் திரிதர், உசனஸ், மனு, பிருது, அக்கினி. அஸிதர், வாயு, ஸுதாஸர், கோ (பசு), சுப்பிரமண்யர், ச்ராத்த தேவர் என்னும் இவர்களுடைய பெயரால் ஏற்படுத்தப்பட்ட பதினொரு தீர்த்தங்கள் இருக்கின்றன. மேலும், மஹர்ஷிகளாலும், தேவர்களாலும் ஏற்படுத்தப்பட்ட விஷ்ணுவின் ஆலயங்கள் இருக்கின்றன. அவைகளின் மேற்புறத்திலிருக்கும் கும்பங்கள் பகவானுடைய சக்கரம் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு இருப்பதால் அவற்றைக் கண்டவுடன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய ஞாபக முண்டாகிறது. அவைகள் எல்லாவற்றையும் விதுரர் சேவித்தார்.

பிறகு, அவ்விடமிருந்து ஸௌராஷ்டிரம், ஸௌவீரம், மத்ஸ்யம், குருஜாங்கலம் என்னும் தேசங்களைத் தாண்டி, சிலகாலம் சென்றபின் யமுனையின் கரை சென்றார். அவ்விடத்தில் பகவத் பக்தராகிய உத்தவ ரைக் கண்டார். அவர் வசுதேவ புத்திரராகிய பகவானுடன் சஞ்சரிப்பவர். மிகவும் சாந்தர். ப்ரகஸ் பதியின் முந்திய சிஷ்யர், ப்ரசித்தர். இப்படிப்பட்ட உத்தவரை விதுரர் மிக்க பிரியத்துடன் தழுவி, பகவானால் போஷிக்கக்கூடிய தம்முடைய பந்துக்கள் க்ஷேமமாக வஸிக்கிறார்களாவென்று பின்வருமாறு விசாரிக்கத் தொடங்கினார். எப்படியெனில், தம்முடைய நாபியிலிருந்து உண்டான ப்ரஹ்மதேவர் உடைய வேண்டுகோளின்படி தாமே இரண்டு விதமாகப் பூமியில் அவதரித்துப் ப்ரஜைகளுக்கு ஆனந்தத்தை யுண்டு பண்ணிக் கொண்டிருக்கும் பலராமனும், ஸ்ரீ கிருஷ்ண பகவானும் சூரசேனருடைய

க்ருஹத்தில் க்ஷேமமாக வஸிக்கிறார்களா? பூஜ்யராகிய வசுதேவர் சுகமாக இருக்கிறாரா? அவர் சகோதரிகளுக்கு இஷ்டமான உத்தம வஸ்த்துக்களைக் கொடுத்து, பிதாபோல் அவர்களைப் பூஜிப்பவர்களல்லவா? யாதவ ஸைனியத்திற்கு அதிபதியான ப்ரத்யும்னர் க்ஷேமமாக இருக்கிறாரா? அவர் முன் ஜன்மத்தில் மன்மதனாக இருந்தவர். ப்ராஹ்மணர்களுடைய அனுக்கிரஹத்தால் ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு ருக்மணி தேவியினிடம் பிறந்தவர். தாமரை மலர் போன்ற கண்களுள்ள ஸ்ரீ கிருஷ்ண பகவான் இராஜ்யத்தை விரும்பாமல் உக்ரசேனருக்கு இராஜ் யாபிஷேகஞ் செய்வித்தாரல்லவா? சாத்வதர்களுக்கும், வ்ருஷ்ணிகளுக்கும், போஜர்களுக்கும், தாசார்ஹர்களுக்கும் அதிபதியான அந்த அரசன் சௌக்கியமாக இருக்கிறாரா? ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் சமமானவரும், ரதிகர்களுக்குள் முந்தியவரும், பகவானுடைய புத்திரருமாகிய சாம்பனென்பவர் க்ஷேமமாயிருக்கிறாரா? அவரை ஜாம்பவதி கடுமையான விரதங்களைச் செய்து புத்திரனாக அடைந்தாள். அவர் முன் ஜன்மத்தில் பார்வதிக்குப் புத்திரனாக இருந்த சுப்ரமண்யனேயாம். அர்ச்சுனனிடத்தில் அஸ்திர வித்தையை அப்பியசித்தவரும்; பகவானைச் சேவித்து யதுக்களுக்கும் அரிதாகிய பகவத் கதியை அடைந்தவருமான யுயுதானர் (ஸாத்யகி) க்ஷேமமா? பகவானிடத்தில் அதிகப் பக்தியுள்ளவரும், பாபமற்றவரும், விவேகியுமான அக்ரூரர் க்ஷேமமா? அவர் ஸ்ரீ கிருஷ்ணன் நடந்த இடத்தில் அவருடைய திவ்யமாகிய பாதம் வைத்த புண்ணிய ஸ்தலத்திலுள்ள தூளிகளின் விசேஷ பிரேமையால் தைரியம் தளர்ந்தவராகப் புரளுகிறவரல்லவா? வேதமானது யாக விதியாகிய பொருளையடக்கிக் கொண்டிருப்பது போல் தேவகி

ஆனவர் ஸ்ரீ மகாவிஷ்ணுவைத் தன்னுடைய வயிற்றில் தரித்தாளல்லவா? அவளுக்குச் சமமானவள் அதிதி தேவியே தவிர வேறில்லை, அந்தக் கிருஷ்ண பகவான் உடைய மாதா க்ஷேமமாக இருக்கிறாளா? அநிருத்தர் க்ஷேமமாக இருக்கிறாரா? அவர் பக்தர்களுக்கு அபீஷ்டத்தைக் கொடுப்பவர். அவரே சாஸ்திரத்திற்குக் காரணரென்றும், மனத்தைப் ப்ரவர்த்திக்கச் செய்பவர் என்றும், அந்தக்கரணத்தின் நான்காவது தத்துவமென்றும் தேவர்கள் சொல்லுகிறார்கள். தங்களுடைய ஆத்மாவிற்குத் தெய்வமாகிய ஸ்ரீ கிருஷ்ணனையே உபாசிப்பவர்களான ஹ்ருதிகர், சத்யபாமையின் புத்திரர் சாருதேஷ்ணர், கதர் முதலிய மற்ற பந்துக்கள் அனைவரும் க்ஷேமமாக இருக்கிறார்களா? தரும புத்திரர் தம்முடைய கைகள் போலிருக்கும் அர்ச்சுனன், ஸ்ரீ கிருஷ்ண பகவான் இவர்களுடன் தர்மமாக லோக மரியாதையைக் காப்பாற்றி வருகிறாரா? அர்ச்சுனன் உடைய ஒத்தாசையால் தர்மபுத்திரருக்குக் கிடைத்த இராஜ்யலக்ஷ்மியைக் கண்டு துரியோதனன் மிகவும் வருத்தப்பட்டானல்லவா? பீமசேனர் கதாயுத்தஞ் செய்யும்பொழுது அவருடைய பாதங்களின் சஞ்சாரத்தைச் சகியாமல் பூமி அசையுமே. அவர் வெகு நாளாகத் தமக்கு அபராதஞ் செய்தவர்களான சத்துருக்களைத் தக்கபடி சிட்சித்தாரா? அர்ச்சுனன் கிராத வேஷங் (வேட வடிவங்) கொண்ட பரமசிவனுடன் யுத்தஞ் செய்யும் சமயத்தில் அர்ச்சுனனுடைய பாணங்களால் அவர் மறைக்கப்பட்டு மிகவும் சந்தோஷமடைந்தாரல்லவா? ரதிகர்களுக்குள் மிகுந்த கீர்த்தியுள்ள இந்த அர்ச்சுனன் சத்ருக்களைக் கொன்றாரா? குந்திதேவியின் ஸ்தன்ய பானத்தால் வளர்ந்தவர்களும், இமைகளுடன் கண்கள் சேர்ந்து

இருப்பதுபோலக் குந்தி புத்திரர்களுடன் விசேஷ பிரேமையுடன் வசிப்பவர்களுமான நகுல சகாதேவர்கள் இருவர்களும் இரண்டு கருட பட்சிகள் மகேந்திரன் இடத்திலிருந்து அமிருதத்தைக் கொண்டு வந்தாற் போலத் தங்களுடைய ராஜ்யத்தை எதிரிகளிடமிருந்து வசப்படுத்திக் கொண்டு சந்தோஷிக்கிறார்களா? அதிரதரும், லோகத்தில் முக்கிய வீரராயுமுள்ள பாண்டு மகாராஜன் வில்லையே ஒத்தாசையாக வைத்துக் கொண்டு நான்கு திக்குகளையும் ஜயித்தார். அப்பேர்ப் பட்ட சூரனாகிய பர்த்தா இறந்தபிறகு குந்தியானவள் தன்னுடைய புத்திரர்களுக்காகவே உயிருடனிருந்தாள். ஓ, உத்தவரே துர்க்கதியை யடையத் தயாராக இருக்கும் திருதராஷ்டிரரைப் பற்றித் துக்கிக்கிறேன். அவர் தம்பியாகிய பாண்டு மகாராஜன் இறந்த பிறகு அவருடைய புத்திரர்களுக்குத் துரோகஞ் செய்ததால் சகோதரனுக்குத் துரோகஞ் செய்தவரானார். மேலும், அவர் தம்முடைய பிள்ளைகளான துரியோதனர்கள் உடைய இஷ்டப்படி என்னைப் பட்டணத்திலிருந்து துரத்தினாரல்லவா? ஆனாலும் மனுஷிய சரீரம் எடுத்து, அவர்களுடைய சித்தத்தைப் பலவகையில் செல்லும்படியாகத் தூண்டும் பகவானுடைய மார்க்கத்தை அவருடைய அனுக்கிரகத்தால் தெரிந்து கொண்டு நான் மற்றவர்கள் கண்களுக்குப் புலப்படாத வனாகிச் சஞ்சரிக்கிறேன். இதில் எனக்கு ஆச்சரியம் யாதுமில்லை. ஸ்ரீ கிருஷ்ண பகவான் துரியோதனன் முதலியவர்களைக் குற்றஞ் செய்த க்ஷணத்திலேயே கொல்லக்கூடிய சாமர்த்தியம் உள்ளவரானாலும் அப்பொழுதே அவர்களைக் கொல்லாமலிருந்தும், தாம் தூதராகி அவர்களிடம் சென்றும், அவர்களால் அவமதிக்கப்பட்டும், உதாசீனராய் இருப்பதற்கு யாது

காரணமென்று யோசிப்போமேயானால், வித்தை, தனம், மேலான குலத்தில் பிறப்பது ஆகிய மூன்று வகையாலும் ஏற்படும் மதத்தால் விவேகமற்றவர்களும், அளவற்ற சைனியர்களுடன் பூமியை அசைப்பவர்களு மான கெட்ட அரசர்களையும் நாசஞ் செய்து, பூமியின் பாரத்தைக் குறைப்பதற்காகவேயென்று நிச்சயிக்க வேண்டியதாயிருக்கிறது. உண்மையில் பிறப்பில்லாத மகாபுருஷன் துஷ்டர்களைச் ஸம்ஹரிப்பதற்காகவே ஜன்மத்தை அங்கீகரித்தார். மேலும் அவர் (அகர்த்தா) ஒன்றையுஞ் செய்யாதவரானாலும், மனிதர்களுக்குக் கர்மத்தில் ச்ரத்தை யுண்டாவதற்காகவே லீலைகளைச் செய்கிறார். இப்படி யில்லாவிடில் குணங்களை அதிக்கிரமித்தவராகிய பரமாத்மாவிற்குக் கர்மாதீன மாகிய சரீரம் எப்படி ஏற்படக் கூடும்? ஆதலால், தம்முடைய ஆக்ஞைக்குட் பட்டவர்களும் சரணம் அடைந்தவர்களுமான ஸகல லோக பாலகர்களுக்காக பூமியில் அவதரித்தவரும், ஜன்மமற்றவரும், சம்சாரத் தைப் போக்கக் கூடிய கீர்த்தியுள்ளவருமான ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய கதைகளைச் சொல்லும் என்றார்.

நோட்டு

பதினொரு –1. திரித தீர்த்தம். 2. உசனஸ் தீர்த்தம் 3. மனு 4. பிருது தீர்த்தம் 5. அக்கினி தீர்த்தம் 6. அஸித தீர்த்தம் 7. வாயு தீர்த்தம் 8. ஸுதாஸ தீர்த்தம் 9. கோ தீர்த்தம் 10. ஸுப்ரமண்ய தீர்த்தம் 11. சிரார்த்ததேவ தீர்த்தம்

அத்தியாயம்–2

உத்தவர் ஸ்ரீகிருஷ்ண சரிதத்தை வர்ணித்தது

விதுரருடைய பிரியமான வார்த்தையைக் கேட்டுப் பாகவத சிரோமணியான உத்தவர் அதிகப் பிரேமையால் ஸ்ரீ கிருஷ்ணனை மனத்தில் நினைத்துக்கொண்டு ப்ருதியுத்தரஞ் சொல்ல முடியாதவராயிருந்தார். அந்த உத்தவர் ஐந்து ப்ராயமுள்ள சிறுவனாயிருக்கும்போது ஒருநாள் பாலக்கிரீடையில் ப்ரதிமை ஒன்றை ஸ்ரீ கிருஷ்ணனாகப் பாவித்து, அதற்குப் பூஜை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது அவருடைய தாயான வள் காலையில் போஜனஞ் செய்யவேண்டியதற்காகப் பலவகையான நல்வார்த்தைகளை சொல்லி அவரை யழைத்தாள். அப்படியும் அவருக்கு ஆகாரத்தில் விருப்பம் உண்டாகவில்லை. பகவத் பக்தர்களுக்குள் சிறந்தவராகிய அப்போர்ப்பட்ட உத்தவர் பகவானுடைய சேவையாலேயே காலத்தைக் கழித்து ஜரையையடைந்தவராகையால் பகவானுடைய பாதங்களைத் தியானித்து, அதிலேயே ரமித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் விதுரருடைய கேள்விக்குப் ப்ரதியுத்தரஞ் சொல்ல முடியுமா? அவர் பகவானுடைய பாதாரவிந்த மதுவினால் விசேஷ ஆனந்த மடைந்து, மிகவும் திடமான பக்தி யோகத்தில் மூழ்கினவராகி ஒரு முகூர்த்தம் மௌனமாயிருந்தார். அப்போது அவர் உடைய எல்லா அவயவங்களிலும் மயிர்கூச்ச லுண்டாயிற்று கண்கள் மூடினவைகளாயிருந்தன. துக்கத்தால் கண்ணீர் பெருகியது. பகவத் விஷயமான விசேஷ ப்ரேம ரசம் நிறைந்தவரும் கிருதார்த்தருமாகி இருந்தார். பிறகு கொஞ்ச நேரம் சென்றபின்,

பகவானாகிய லோகத்திலிருந்து இவ்வுலகத்திற்கு வந்து கண்களைத் துடைத்துக்கொண்டு பகவான் செய்த லீலைகளை நினைத்து ஆச்சரயமுள்ளவராகி, விதுரரை நோக்கி பின்வருமாறு சொல்லலானார்: ஸ்ரீ கிருஷ்ணன் ஆகிய சூரியன் அஸ்தமயத்தையடைந்த போது காலமாகிய பெரிய சர்ப்பமானது நம்முடைய வீடுகளைக் கவர்ந்துகொண்டது. இந்த நிலைமையில் உம்மால் கேட்கப்பட்ட பந்துக்களுடைய க்ஷேமத்தைப் பற்றி எதனைச் சொல்வேன்? இவ்வுலகத்திற்கு அதிருஷ்டக்குறைவுண்டாயிற்று. யாதவர்கள் எல்லோரும் இங்கிதத்தை யறிந்தவர்களானாலும், மிகவும் ஸமர்த்தர்களானாலும், ஒரே இடத்தில் வசிப்பவர்கள் ஆனாலும் ஸகல பூதங்களுக்கும் இருப்பிடமாகிய ஈசுவரனை யாதவர்களுக்குள் சிறந்தவராக நினைத்தார் களே யொழிய மகாவிஷ்ணுவென்று தெரிந்து கொள்ளவில்லை. பாற்கடலில் இருக்கும் மத்ஸ்யங்கள் தங்களுடன் சகவாசஞ் செய்த சந்திரனையும் ஒரு வகையான ஜல ஜந்துவாக நினைத்தனவே யொழிய அமிருத ஸ்வருபியென்று தெரிந்துகொள்ளவில்லை. அவைகள் போன்ற யாதவர்களுக்குப் பாக்கியம் மிகவும் குறைந்துவிட்டது. சில யாதவர்கள் பகவான் உடைய மாயையால் மோகித்து, "இவர் யது குலத்தில் பிறந்தவர். நமக்குப் பந்து" என்று சொல்கிறார்கள்.

சிசுபாலன் முதலிய சிலர் விரோத புத்தியுள்ளவர் களாய் பகவானை நிந்தித்தார்கள். ஆனால் பகவான் இடத்திலேயே மனத்தைச் செலுத்தியவர்களுடைய (என்னை போன்றவர்களுடைய) புத்தியானது மேற் காட்டியவர்களுடைய வார்த்தையைக் கேட்டும் பிரமிக்கவில்லை, மேலும் பகவான் நன்றாகத் தவஞ்

செய்யாதவர்களும், பார்த்துத் திருப்தியடையாத கண்களுள்ளவர்களுமான மனிதர்களுக்குத் திவ்ய சரீரத்தைக் காண்பித்து ஜனங்களுடைய கண்களைக் க்ரஹித்துக் கொண்டு மறைந்தார். அந்தக் திவ்ய சரீரமானது மனுஷ்ய லீலைகளுக்குத் தகுதியானது அவருடைய மனத்திற்கும் ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியது. மிகுந்த சௌபாக்கியத்திற்கும் இருப்பிடம். ஆபரணங்களுக்கு அழகைக் கொடுக்கக் கூடிய அவயவங்களுள்ளது. மேலும் தரும புத்திரருடைய ராஜசூய யாகத்தில் வந்திருந்த ஸகல ஜனங்களும் ஆனந்தகரமாகிய அந்தச் சரீரத்தைப் பார்த்து ப்ரஹ்ம தேவர் ஸ்ருஷ்டி விஷயத்தில் தமக்கிருக்கும் சாமர்த்தியம் முழுவதையும் இந்தச் சரீரத்தில் காட்டியிருக்கிறார் என்று நினைத்தார்கள். அந்தக் திவ்ய மூர்த்தியினுடைய அனுராகமுள்ள சிரிப்பு விநோதம் விளையாட்டான பார்வை ஆகிய இவைகளில் அதிக ஆசை கொண்ட கோபஸ்திரீகள் அனைவரும் அவரவர்கள் செய்து கொண்டிருந்த காரியங்களை முடிக்காமலே பகவானையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். மேலும் அவர்களுடைய மனமானது பகவானிடத்திலேயே பதிந்து அவர் பின் சென்றது. அந்தப் பகவானுக்கு சாந்தம், அசாந்தம் என்று இருவகையான ஸ்வரூபம் உண்டு. அவைகளில் சாந்த ஸ்வரூபமாகிய சாதுக்கள், அசாந்த ஸ்வரூபமாகிய துஷ்டர்களால் உபத்திரவிக்கப் படும்போது காரியகாரணங்களுக்கு அதிபதியான பகவான் விசேஷ கருணையுள்ளவராக மாயையின் சம்பந்தத்தை அடைந்து (மகத் தத்துவத்தைக் காரியமாக உடையது அவ்யக்தம்) உண்மையில் பிறப்பில்லாதவரானாலும் எப்பொழுதும் சித்தமாக இருக்கும் அக்னியானது சில சமயத்தில் கட்டை

முதலியவைகளில் பிரகாசிப்பது போல் அவதரிக்கிறார் (பிரகாசிக்கிறார்). ஆனாலும் அளவற்ற வீரியம் உள்ள அந்தப் பகவான் வஸுதேவருடைய வீட்டில் காராகிருகத்தில்) பிறந்ததாக அபிநயஞ் செய்ததையும் கோகுலத்தில் வஸித்ததையும், கம்ஸனிடத்தில் பயந்தவர்போல் மதுரையை விட்டுப் போனதையும், ஒரு சமயத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான், தேவகி, வஸுதேவர் இவர்களுக்கு நமஸ்காரம் செய்து அவர் களை நோக்கி, ஓ அண்ண! ஓ அம்ம! கம்ஸனிடம் பயந்தவர்களான நாங்கள் உங்களுடன் சகவாசஞ் செய்து உங்களுக்குச் சிச்ருஷை செய்ய முடியாதவர் களானோம். அந்த விஷயத்தில் தயவுசெய்ய வேண்டும்! என்று கேட்டுக்கொண்டதையும் நினைக்கும்போது அவைகள் என் மனதிற்கு வருத்தத்தைப் உண்டு பண்ணுகின்றன. (ஆனாலும் அவரை ஈசுவரனல்ல வென்று எப்படி சொல்லக்கூடும்?) அவர் அசைகின்ற தம்முடைய புருவமாகிய யமனைக் கொண்டு பூமியின் பாரத்தைப் போக்கினார். (அவருடைய புருவத்தின் அசைப்பே துஷ்டர்களுக்கு யமனாக விருந்தது) அவர் உடைய பாதங்களின் தூளியை ஒரு தடவை சேவித்த வன் மறுபடி பிறப்பானா? மேலும் பகவானிடம் விரோத புத்தியுள்ள சிசுபாலன் தருமபுத்திரருடைய இராஜசூயத்தில் யோகிகளால் விரும்பக்கூடிய உத்தம பதத்தைப் பகவானுடைய அனுக்கிரஹத்தால் அடைந்தானென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அவரை விட்டுப் பிரிந்த துக்கத்தை யாரால் ஸகிக்க முடியும்? மேலும், யுத்தத்தில் அரசர்கள் அழகாக ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரை மலர்போன்ற முகத்தைத் தரிசித்து அர்ச்சுனனுடைய அஸ்திரத்தால் சுத்தர்களாகி விஷ்ணு பதத்தை

அடைந்தார்கள். அவருக்குச் சமமானவரும், மேலானவரும் உலகத்தில் ஒருவருமில்லை. அவர் ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் அதிபதி. பரமானந்த ஸ்வரூபியாகையால் ஸகல கர்மத்தையும் அடைந்தவர். இந்திரன் முதலிய லோகபாலர்கள், காணிக்கைகளுடன் அவர் உடைய தரிசனத்திற்காக வந்து, தங்களுடைய கிரீடம் அவருடைய பாத பீடத்தில் படும்படி நமஸ்கரிக்கிறார்கள். அதனாலுண்டாகும் சப்தமானது அவரைத் துதிப்பது போலிருக்கிறது. அந்த மகாபுருஷன் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும் உக்கிரசேனருடைய பக்கத்தில் நின்று, அரசர்களிடம் வேலைக்காரர்கள் சொல்லும் சம்பிரதாய வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டு கைங்கரியங்களைச் செய்து வந்தார். அதை நினைக்கும்போது என் மனம் நடுங்குகிறது. மேலும், பூதனையென்னும் துஷ்ட ராக்ஷஸியானவள் கொல்ல வேண்டுமென்று எண்ணத்துடன் காலகூட விஷயம் ஆகிய ஸ்தன்யத்தை அவருக்கு கொடுத்தும், அவள் இடத்தில் பகவான் கோபியாமலும் அவள் செய்த அபகாரத்தை நினைக்காமலும், யசோதைக்கு தகுதியாகிய உத்தம கதியை அவளுக்குக் கொடுத்தருளினார். பகவானுடைய கருணை வியக்கத்தக்கது. ஆகையால் அவரை விட்டு வேறு யாரைச் சரணம் அடைவோம்? அசுரர்களானாலும் பகவானிடத்தில் விரோதத்தாலாவது எப்பொழுதும் மனத்தைச் செலுத்தியவர்கள் ஆகையால் அவர்களும் பாகவதர்களேயாம். அவர்கள் யுத்தத்தில் கருடனையும்; அவர் மீது ஏறிவரும் சக்ரபாணியாகிய பகவானையும் தர்சித்தார்கள். முன்னொரு சமயத்தில் இந்தப் பூமியின் பாரத்தை நிவர்த்திப்பதற்காகத் ப்ரஹ்மதேவரால் ப்ரார்த்திக்கப்பட்டு ஸ்ரீ நாராயணன் ஸ்ரீ கிருஷ்ணன்

என்ற திவ்ய நாமதேயத்துடன் வஸுதேவருக்குத் தேவகியிடம் காராக்கிருகத்தில் புத்திரனாக அவதரித்தார். அப்பொழுது வஸுதேவர் கம்ஸனிடம் பயந்து வேண்டிக்கொள்ள, அவ்விடமிருந்து கோகுலஞ்சென்று, பலராமனுடன் பதினோரு வருஷங்கள் அவ்விடத்தில் வஸித்தார். யமுனையின் கரையில் கன்று மேய்க்கும் சிறுவர்களுடன் கன்றுகளை மேய்த்து கொண்டு விளையாடினார். அந்த நதியின் கரையிலிருக்கும் மரங்களின் கிளைகளில் பறவைகள் இனிமையாகச் சப்தித்துக் கொண்டிருந்தன. மேலும்; சிங்கக் குட்டி போல அழகாய்ப் பார்க்கும் ஸ்வபாவமுள்ள அந்தப் பகவான் சிறு வயதில் கோபர்கள் பார்த்து ஆனந்திக்கக் கூடிய கௌமார சேஷ்டைகளைக் காட்டியருளினார். சிலவேளை சிரிப்பதுபோலும், சில சமயம் அழுவது போலும் அபிநயஞ் செய்தார். அவரே சொற்ப காலத்திற்குப் பின் லக்ஷ்மிதேவிக்கு இருப்பிடமான வெண்மை நிறமுள்ள பசுக்களையும், விருஷங்களையும் வேணுகானஞ் செய்து சந்தோஷப்படுத்தினார். மேலும் அவர் கம்ஸனால் அனுப்பப்பட்டவர்களும், இஷ்டப்படி உருவமெடுக்கக் கூடியவர்களும், மாயாவிகளுமான அசுரர்களைச் சிறுவர்கள் ஆடும் ப்ரதிமைகளைப் போல நாசஞ் செய்தார். பின்னும் யமுனையிலிருந்து காளியன் என்ற சர்ப்பத்தின் விஷத்தால் கொதித்து இருந்த ஜலத்தைக் குடித்துப் பசுக்களும், கோபர்களும், மரணமடைந்தபோது அவர்களைப் பிழைக்கச்செய்து அந்தச் சர்ப்பத்தை, நிக்ரஹித்து அந்த ஜலத்தைச் சுத்தமாக செய்தார். பின்னும் அவர் இந்திரனை உத்தேசித்துச் செய்யும் பூஜையை நிறுத்தி, பசுக்களுக்குப் பூஜை செய்யும்படி நந்தரிடம் சொல்லி, அந்த மஹோத்ஸவத்தை ப்ராஹ்மணர்களைக் கொண்டு

முடித்து ஏராளமான இருந்த பணத்தை நல்ல விஷயத்தில் செலவிட்டார். பிறகு மகேந்திரன் கோபித்து அதிக மழை பெய்யச் செய்தான். அப் பொழுது பகவான் கோவர்த்தன மலையாகிய குடையைப் பிடித்துக் கோகுலத்தைக் காப்பாற்றினார். பின்னும் அவர் சரத்காலத்தில் நிர்மலமாகிய சந்திரிகையால் பிரகாசிக்கும் ராத்திரியில் அநேக ஸ்திரீகளுடைய மத்தியிலிருந்து இனிமையாக வேணுகானஞ் செய்து கொண்டு விளையாடினார்.

அத்தியாயம்–3

ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதங்கள்

1–23 பிறகு அந்தப் பகவான் தம்முடைய தாய் தந்தையர்களுக்கு க்ஷேமத்தைச் செய்ய விரும்பிப் பலராமனுடன் கோகுலத்திலிருந்து மதுரா நகரஞ் சென்று அவ்விடத்தில் உயரமான இராஜ மஞ்சத்தி லிருப்பவனும் தம்முடைய சத்துருக்களில் பிரதானனு மாகிய கம்ஸனைக் கொன்று, உயிரற்ற அவனுடைய சரீரத்தைப் பூமியில் இழுத்தார். மேலும் அவர் ஸாந்தீபனி என்பவரைக் குருவாக வரித்து, வேதங்களை அவைகளின் அங்கங்களுடன் அவரிடமிருந்து ஒரு தரம் உபதேசித்த மாத்திரத்திலேயே க்ரஹித்துக் கொண்டார். சில நாளைக்கு முன் இறந்து போன குரு புத்திரனை, பஞ்சஜனனென்ற ராக்ஷஸனுடைய வயிற்றைக் கிழித்து, அழைத்து வந்து, குருதக்ஷணை யாக ஆசார்யரிடம் சமர்ப்பித்தார். பீஷ்ம மகாராஜ னுடைய புத்திரியும், லக்ஷ்மீதேவி போன்றவளுமாகிய ருக்மிணி தேவியின் ரூபலாவண்யத்தால் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பி விதர்ப்ப தேசத்தில் வந்து கூடிய அரசர்களுடைய சிரசில் பாதங்களை வைத்து மிகுந்த இலாகவத்துடன் தம் முடைய சொத்தாகிய அந்த ருக்மிணியை அபகரித் தார். பின்பு அவளைக் காந்தர்வ விதிப்படி கல்யாணஞ் செய்துகொண்டார். பின்னும் அவர் அங்குக் குத்தப் படாதவைகளான வ்ருஷபங்களை ஜயித்து, நக்னஜித் தின் புத்திரியை விவாகஞ் செய்து கொண்டார். அப்பொழுது ஏற்கனவே அந்த வ்ருஷபங்களை அடக்கமுடியாமல் வெட்கப்பட்டு அப்புறம் சென்ற

அரசர்கள் அந்த ராஜகுமாரியிடம் ஆசைகொண்டு ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் யுத்தத்திற்கு வந்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களை ஆயுதங்களாலேயே கொன்றார். ஆனால் பகவானுக்குக் கொஞ்சமேனும் காயமில்லை. மேலும் அவர் தாம் சுதந்திரரானாலும் ஸ்திரீகளுக்கு வசப்பட்டவர் போல சத்யபாமையின் பிரீதிக்காக பாரிஜாத வ்ருக்ஷத்தைப் பூமிக்குக் கொண்டுவந்தார். அப்பொழுது ஸ்திரீகளின் கிரீடா மிருகம்போன்ற இந்திரன் மிகவும் கோபங்கொண்டு சைனியங்களுடன் பகவானுடன் யுத்தம் செய்தான். மேலும் அவர் ஆகாயம் வரையில் பரவிய சரீரமுள்ள வனும், பூமியின் புத்திரனுமாகிய நரகாசுரனைச் சக்ராயுதத்தால் கொன்றார். பின்பு பூமிதேவியால் ப்ரார்த்திக்கப்பட்டு நரகனுடைய புத்திரனாகிய பகதத் தனுக்கு இராஜ்யத்தைக் கொடுத்து நரகனுடைய அந்தப்புரத்தில் ப்ரவேசித்தார். அவ்விடத்தில் நரகாசுரனால் அநேக தேசங்களிலிருந்து கொண்டுவரப் பட்ட இராஜ கன்னிகைகள் இருந்தார்கள், அவர்கள் அனைவரும், உபத்திரவ மடைந்தவர்களுக்குப் பந்து வாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானைக் கண்டவுடன் எழுந்திருந்து, சந்தோஷம், வெட்கம், ஆசை ஆகிய இவைகளுடன் பார்த்தார்கள். பிறகு அவர்களெல்லோரு க்கும் தனியாக அந்தப்புரங்களை ஏற்படுத்தி, அவை களில் ஒரே சமயத்தில் தம்முடைய மாயையால் அநேக ரூபமெடுத்துக் கொண்டு விதிப்படி அவர்களை விவாகம் செய்துகொண்டார். பின்பு தமது மாயையை விஸ்தரிப்பதற்காக அந்த ஒவ்வொரு ஸ்திரீயினிடத்தி லும் தமக்கு சமமான பத்துப்புத்திரர்களை உண்டு பண்ணினார். மேலும் அவர் தமது பட்டணத்தை முற்றுகை செய்தவர்களான காலயவனன், மாகதன்,

ஸால்வன் ஆகிய இவர்களை முசுகுந்தர் முதலியவர் களை நிமித்தாமாக வைத்துக் கொண்டு தாமே கொன்றார். தம்மைச் சார்ந்தவர்களுக்குக் கீர்த்தியை உண்டு பண்ணினார். சம்பரனையும், துவிதனையும், பாணனையும், முரனையும், பல்வலனையும், தந்தவக்தி ரன் முதலியவர்களையும் கொன்றார். மற்றவர்களைப் ப்ரத்யும்னன் முதலியவர்களைக் கொண்டு கொல்வித் தார். மேலும் பாண்டவர்களுடைய பட்சத்திலும் துரியோதனனுடைய கட்சியிலும் யுத்தத்திற்குச் ஸித்தர்களாக இருப்பவர்களும், சகோதரர்களும், புத்திரர்களுமாகிய அரசர்களெல்லோரையும் நாசஞ் செய்தார். அந்த ஸைன்யத்தால் குருக்ஷேத்ர பூமியானது அசைந்தது. கர்ணன், துச்சாஸனன், சகுனி ஆகிய இவர்களுடைய துராலோசனையால் துரியோத னுடைய ஐசுவர்யமும், ஆயுசும் குறைந்ததுமன்றி அவனுடைய ஸைனியங்களும் நாசமடைந்தன. கடைசியில் துரியோதனுடைய தொடைகளும் முறிக்கப்பட்டன. அவன் பூமியில் விழுந்தான். அப் பொழுது அவனைப் பார்த்தும் சந்தோஷப்பட வில்லை. ஆனாலும், த்ரோணர், பீஷ்மர், அர்ஜுனர், பீமசேனர் ஆகிய இவர்களால் அக்ஷௌஹிணி ஸைன்யங்கள் கொல்லப்பட்டன. அதனால் பூமியின் பாரம் கொஞ்சம் குறைந்தாலும், அளவற்ற யாதவ ஸைன்யமானது , என்னுடைய அம்சர்களான ப்ரத்யும்னர் முதலியவர்களால் காப்பாற்றப்பட்டுச் சத்துருக்களால் ஜயிக்க முடியாததாக இருக்கிறது. அது பூமி பாரமல்லவா? அதை நாசஞ் செய்வதற்கு என்ன உபாயம்? மத்ய பானஞ்செய்து சிவந்த கண்களுடன் மதங்கொண்டு அவர்கள் ஒருவருக்கொரு வர் யுத்தஞ்செய்தாலொழிய அவர்களைக் கொல்ல

உபாயமில்லை. நான் என்னுடைய லோகஞ் சென்றால் யாதவர்களெல்லோரும் சண்டைசெய்து நாசமடைவார்கள் என்று ஆலோசித்து, தருமபுத்திரருக்கு இராஜ்யாபிஷேகஞ் செய்வித்து, வர்ணாசிரம தர்மங்களை அனுஷ்டித்துக் காண்பித்து, சந்தோஷிக்கச் செய்தார். பின்னும் புருவின் வம்சம் தொடர்சியற்று போகாமல் இருப்பதற்காக அபிமன்யுவினால் உத்தரையினிடம் கர்ப்பம் உண்டு பண்ணப்பட்டதல்லவா? அந்தக் கர்ப்பமானது அச்வஸ்த்தாமாவினுடைய அஸ்திரத்தால் எரிக்கப்படும்போது அக்குழந்தையை ஸ்ரீ கிருஷ்ணன் காப்பாற்றினார். மேலும் அவர் தருமபுத்திரருக்கு மூன்று அசுவமேத யாகங்களை நடத்தி வைத்தார். அந்த தருமபுத்திரரும் ஸ்ரீ கிருஷ்ண பகவானை ஆச்ரயித்தவராய்த் தம்முடைய தம்பிகளுடன் பூமியைப் பரிபாலித்தார். ஸகல ஜகத்ருபியாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானும் சிரௌத கர்மங்களையும், ஸ்மார்த்த கர்மங்களையும் அனுஷ்டித்து, துவாரகா நகரத்தில் காமங்களை அனுபவித்தார். ஆனால் ஆத்ம தத்துவத்தை அறிந்தவராகையால் அவைகளில் அபிமானம் வைக்கவில்லை. மேலும், அவர் தம்முடைய புன்சிரிப்பு உள்ள பார்வையாலும், அமிருதம், போன்ற வார்த்தையாலும், குற்றமற்ற சரித்திரத்தாலும், லக்ஷ்மீதேவிக்கு வாசஸ்தலமாகிய சரீரத்தாலும், பூலோகத்தையும், மேலுலகத்தையும் சந்தோஷிக்கச் செய்தார். இரவில் ஸ்திரீகளுக்குச் சந்தோஷத்தை உண்டு பண்ணி அவர்களிடத்தில் க்ஷணநேரம் பிரீதி செய்பவரான ஸ்ரீ கிருஷ்ண பகவான் யாதவர்களை விசேஷமாகச் சந்தோஷப்படுத்தினார். இப்படி ஸ்ரீ கிருஷ்ண பகவான் வெகு வருஷங்கள் க்ருஹஸ்தாச்ரமத்தை அனுஷ்டித்து கர்மங்களை அனுபவித்த பிறகு அவைகளில்

வைராக்கியம் அடைந்தார். கர்மங்கள் யாவும் தெய்வாதீனங்காளாயிருக்கின்றன. அவைகளை அனுபவிக்கும் புருஷனும் அந்தத் தெய்வத்துக்கு வசப்பட்டவனாகவே இருக்கிறான். அப்படியிருக்க, யோகாப்பியாசத்தால் ஈசுவரனை அனுசரித்த எவன்தான் அவைகளில் ஆசைப்படுவான்?

24–28 பிறகு ஒருகால் துவாரகா நகரத்தில் யதுகுமாரர்களும், போஜ குமாரர்களும் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அவ்விடத்தில் வந்த ப்ராஹ்மணர்களுக்கு அவர்கள் கோபத்தை உண்டு பண்ணினார்கள். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய அபிப்பிராயத்தை அறிந்த ப்ராஹ்மணர்கள் அந்தக் குமாரர்களைச் சபித்தார்கள். சில மாதம் சென்ற பின்பு, வ்ருஷ்ணிகளும், போஜர்களும், அந்தகர்களும் ரதங்களின் மீதேறிக் கொண்டு தெய்வத்தால் புத்தி மாறினவர்களாகி, மிகவும் சந்தோஷத்துடன் ப்ரபாஸமென்ற தீர்த்தம் சென்றார்கள். அந்தப் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, பிதிரு தர்ப்பணம், தேவதர்ப்பணம், ரிஷிதர்ப்பணம் ஆகிய இவைகளை முடித்துக் கொண்டு உத்தமமான பசுக்களையும், சுவர்ணத்தையும், வெள்ளியையும், படுக்கைகளையும், வஸ்திரங்களையும், மான் தோல் முதலியவைகளையும், கம்பளங்களையும், குதிரைகளையும், ரத்தினங்களையும், யானைகளையும், கன்னிகைகளையும், ஜீவனத்துக்குப் போதுமான தானியம் விளையக்கூடிய பூமியையும், ப்ராஹ்மணர்களுக்கு கொடுத்தார்கள். மேலும் பசுக்கள், ப்ராஹ்மணர்கள் ஆகிய இவைகளுக்காகவே ஜீவிப்பவர்களும், சூரர்களுமான அவர்கள் மேலான ரசமுள்ள அன்னத்தையும் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்து அவர்களுக்கு நமஸ்காரம் செய்தார்கள்.

அத்தியாயம் 4

விதுரர் மைத்ரேயரைச் சந்தித்தது

1–18. பின்பு அவர்கள் ப்ராஹ்மணர்களிடம் விடைபெற்று மத்யத்தைக் குடித்து, அதனால் மயக்கம் அடைந்து மர்ம ஸ்தானங்களைப் பிளக்கக்கூடிய கெட்ட வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டார்கள். மேலும், மத்யபானஞ் செய்து புத்தி மாறிப்போனதால் சூரியன் அஸ்தமனத்தை அடைந்து பிறகு மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்ந்து கொள்வது போலக் கலகம் செய்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ண பகவான் தம்முடைய மாயையின் காரியமாகிய அந்தக் கலகத்தைப் பார்த்து சரஸ்வது நதியில் ஆசமனஞ் செய்து ஒரு அரசமரத்தின் கீழ் உட்கார்ந்திருந்தார். அதற்கு முன்னமேயே என்னை நோக்கி, ஓ உத்தவ, நீ பத்ரிகாச்ரமம் போ என்று தம்முடைய குலத்தைக் கொல்லவேண்டுமென்று விரும்பியவரும், பக்தர்கள் உடைய உபத்திரவத்தைப் போக்கடிப்பவருமாகிய ஸ்ரீ பகவான் சொல்லியிருந்தார். அப்படியும் நான் அவர் உடைய அபிப்பிராயத்தை அறிந்திருந்தும் அவர் உடைய பாதங்களை விட்டுப் பிரிய மனமில்லாதவனாக ஸ்ரீ கிருஷ்ணன் பின் சென்றேன். பிறகு சரஸ்வதி நதியின் கரையில் ஒருவராய் உட்கார்ந்திருப்பவரும், ப்ரீதியுள்ளவரும்; நாதருமாகிய பகவானைக் கண்டேன், அவர் லக்ஷ்மிக்கு வஸிக்குமிடம்; ஆச்ரயம் அற்றவர்; கறுத்த திருமேனியுள்ளவர் ரஜோகுணம் இல்லாதவர், மிகவும், சாந்தர், அழகான கண்கள் உள்ளவர், நான்கு கைகளுள்ளவர். பீதாம்பரம் தரித்தவர், இடத்தொடையில் வலக்காலை வைத்துக்

கொண்டு சிறிய அஸ்வத்த மரத்தில் சாய்ந்து கொண்டு இருப்பவர், விஷய சுகத்தில் ஆசையில்லாதவர், ஆனந்தத்தால் நிறைந்தவர். அப்பொழுது வ்யாஸ மகா முனிக்கு மித்திரரும், கிருதகிருத்யருமாகிய மைத்ரேயர் தெய்வச் செயலால் அவ்விடம் வந்தார். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ண பகவான் பக்தராகிய மைத்ரேயர், முன்பாகப் ப்ரியம், சிரிப்பு ஆகிய இவைகளுள்ள பார்வையால் சிரமத்தை நிவர்த்தித்துக்கொண்டு என்னை நோக்கி, ஓ உத்தம உம்முடைய மனத்தில் இருக்கும் எண்ணமென்னதென்று எனக்குத் தெரியும், முன்ஜன்மத்தில் நீர் ப்ரஜாபதிகளான வஸுக்களுடைய யாகத்தில் என்னைப் பூஜித்தீர். ஆதலால் என்னுடைய ஸ்தானத்தை யடைய வேண்டுமென்று நீர் நினைத்தது மற்றவர்களுக்குத் துர்லபமேயாகும், ஓ சாதுவே! மனுஷ்ய லோகத்தை விட்டு நான் வைகுண்டம் செல்லும் சமயத்தில் மிகுந்த பக்தியுடன் என்னை நீர் தரிசித்து என்னுடைய அனுக்கிரகம் பெற்றபடியால் இதுவே உமக்குக் கடைசியான ஜன்மம். முந்திய பாத்மகல்பத்தில் என்னுடைய கொப்பூழில் தோன்றிய, தாமரஸ புஷ்பத்திலிருந்து ப்ரஹ்மதேவருக்கு என் மகிமையைக் காண்பிக்கும் ஞானத்தை உபதேசித்தேன். அதனை வித்வான்கள், பாகவத ஞானமென்றார்கள். அதனை உமக்கு உபதேசிக்கிறேனி என்றார். இப்படிப் பரமபுருஷன் மிகுந்த ப்ரீதியுடன் சொல்லி ஒவ்வொரு க்ஷணத்திலும் என்னை அனுக்கிரகிக்கும் போது, எனக்கு அவரிடத்தில் பக்திமேலிட்டு அதனால் மயிர்கூச்சலுண்டாயிற்று. துக்கத்தால் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு கத்கத ஸ்வரத்துடன் கை கூப்பிப் பகவானை நோக்கி ஓ ஈச உம்முடைய பாதார விந்தங்களை ஆச்ரயித்தவர்களுக்கு நான்கு

புருஷார்த்தங்களில் எதுதான் கிடைக்காது? ஆனாலும் எனக்குத் தருமம் முதலியவைகளில் ஆசை இல்லை. உம்முடைய பாதங்களைச் ஸேவிப்பதிலேயே விருப்பம் உள்ளவனாக இருக்கிறேன். கர்மங்களுடைய சம்பந்தம் அற்றவராகிய நீர் கர்மங்களை அனுஷ்டிப்பது, ஜன்மம் அற்றவரானாலும் பூமியில் அவதரிப்பது, காலரூபியாகிய நீர் சத்துருக்களிடம் பயந்து ஓடுவது, சமுத்திர மத்யத்திலுள்ள துவாரகா நகரத்தில் ஒளிந்து வஸிப்பது. ஆத்மாவினால் சந்தோஷப்படுகிறவரானாலும் அநேக ஸ்திரீகளைக் கல்யாணம் செய்துகொண்டு கிருஹஸ்தாசிரமத்தை அடைந்திருப்பது, ஆகிய இவைகளைக் கண்டு வித்வான்களுடைய புத்தியும் மோஹத்தை அடைகிறது. மேலும் ஓ தேவ! தடையற்றதும், பூர்ணமும், சம்சயமற்றதுமான ஆத்ம ஞானமுள்ளவராகிய நீர் ராஜ காரியங்களைப்பற்றி ஆலோசிக்க வேண்டிய ஸமயத்தில் வெகு ஜாக்கிரதை யுள்ளவராகிய என்னை வரவழைத்து ஒன்றுமறியாதவர்போல் ராஜ்யத்தில் என்னுடைய அபிமதத்தைக் கேட்கிற வழக்கமல்லவா? அதனை நினைக்கும்போது என் மனம் மோஹத்தை அடைகிறது. ஓ ஸ்வாமியே! ஆத்மாவின் உண்மையைத் தெரிவிக்கக்கூடியதும், மேலானதுமான எந்த ஞானத்தைப் பூர்ணமாக நீர் ப்ரஹ்மதேவருக்கு உபதேசித்தீரோ, அது என்னால் தெரிந்துகொள்ளக் கூடியதானால் அதை உபதேசியும். அதனால் சம்சார துக்கத்தைப் போக்கிக் கொள்ளுவேன் என்று ப்ரார்த்தித்தேன்.

19–22. பிறகு தாமரை மலர்போன்ற கண்களுள்ளவரும் குருவுமாகிய ஸ்ரீ பகவான் என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துக்கொண்டு தம்முடைய

உத்தமகதியை எனக்கு உபதேசித்தார். இம்மாதிரி பகவானுடைய பாதங்களாகிய தீர்த்தத்தை ஆராதித்து ஆத்மஞானத்தை அடைந்தேன். பின்பு அவருடைய பாதங்களில் நமஸ்கரித்து அவரைப் ப்ரதக்ஷிணஞ் செய்து அவருடைய விரஹத்தைச் ஸஹிக்காமல் மனவருத்ததுடன் இவ்விடம் வந்தேன். அவரைத் தரிஸித்ததால் உண்டான சந்தோஷமுள்ளவனும், அவரை விட்டுப் பிரிந்ததால் உண்டான துக்கமுள்ளவனுமாகிய நான் அவருக்கு மிகவும் இஷ்டமான பதரிகாசிரமத்தை உத்தேசித்துப் போகிறேன். அவ்விடத்தில் நர நாராயணரென்று திவ்ய நாமதேயங்களுடன் பகவான் முனி வேஷம் பூண்டு பிறருக்கு இம்சை இல்லாமலும், மற்றவர்களால் அனுஷ்டிக்க முடியாததுமான தபஸை வெகு காலமாகச் செய்து வருகிறார் என்று சொன்னார்.

23–25. அதைக் கேட்டு வித்வானாகிய விதுரர் சகிக்க முடியாத பந்துக்களின் நாசத்தை. உத்தவர் முதமாகத் தெரிந்துகொண்டு, அந்தத் துக்கத்தை விவேகத்தால் அடக்கிக் கொண்டார். அப்போது விதுரர், கிருஷ்ணை பக்தர்களுக்குள் முக்கியரும், பாகவதர்களுக்கு உத்தமரும். பதரிகாசிரமம் செல்லுபவருமான உத்தவரை நோக்கி, ஓ உத்தவ! யோகீசுவராகிய ஈசுவரன் ஆத்மாவின் உண்மையை காண்பிக்கும் எந்த மேலான ஞானத்தை உமக்கு உபதேசித்தாரோ அதனை நீர் எனக்கு உபதேசிக்கவேண்டும். ஏன் என்றால், விஷ்ணு பக்தர்கள் பக்தர்களைக் காப்பாற்றுவதற்காக உலகத்தில் சஞ்சரிக்கிறார்களே யொழிய, அவர்களுக்குச் சொந்தமான காரியம் வேறு ஒன்றும் இல்லை என்று ப்ரியமாகக் கேட்டுக்கொண்டார்.

26–27. அதனைக் கேட்டு உத்தவர் விதுரரை நோக்கி ஓ விதுரா! பகவான் பூலோகத்தை விட்டு வைகுண்டம் செல்லும் காலத்தில் உமக்கு உபதேசம் செய்வதற்காக மைத்ரேய மகாமுனிக்கு ஆக்ஞாபனம் செய்திருக்கிறார். ஆனதால் அவரை ஆத்மஞானத் திற்காக நீர் உபாசிக்கவேண்டும் என்று சொல்லி அன்று ராத்ரி யமுனா நதியின் மணல் திட்டில் ஸகல ஜகத் ஸ்வரூபியான பகவானுடைய கதைகளை விதுரருக்குச் சொல்லிக்கொண்டு அந்த அமிருதத்தில் ஸ்நானஞ் செய்து, தாபமில்லாதவராக அன்றிரவை ஒரு க்ஷணம் போல கழித்து மறுநாள் பதரிகாசிரமஞ் சென்றார் என்று சுகர் சொன்னார்.

28. அதனைக் கேட்டு பரீட்சித்து மகாராஜன் சுகரை நோக்கி, ஓ ப்ராஹ்மண! அதிரதர்களும், அவர்களுடைய சேனாபதிகளுமாகிய வ்ருஷ்ணிகள், போஜர்கள் ஆகிய இவர்கள் நாசமடைந்த பிறகு, ப்ரஹ்மா, விஷ்ணு, சிவபெருமான் ஆகிய இவர்களுக்கு மேலானவராகிய பகவான் தம்முடைய சரீரத்தை விட்டுவிட்டாரல்லவா? அப்பொழுது உத்தவர் மாத்திரம் எப்படியிருந்தார்? என்று கேட்டார்.

29–32. அதனைக் கேட்டு சுகர், அரசனை நோக்கி, ஓ மகாராஜ வீணாகாத சங்கற்பமுள்ள பகவான் மிகவும் விருத்தி யடைந்திருந்த தம்முடைய குலத்தைப் ப்ராஹ்மண சாபத்தை நிமித்தமாகவுடைய தம்முடைய சக்தியைக் கொண்டு நாசஞ்செய்து தம்முடைய தேகத்தைவிட்டுவிட விரும்பியபொழுது, நான் இவ்வுலகத்தை விட்டு மேலுலகஞ் சென்றால் எனக்கு ஸ்வாதீனமான ஞானத்தை அடைவதற்கு

இந்திரியங்களை ஜயித்தவர்களுக்குள் உத்தமராக இருக்கும் உத்தவரே தகுதியானவர், மேலும், என் இடத்திலிருக்கும் குணங்கள்யாவும் கொஞ்சமேனும் குறைவின்றி இவரிடத்தில் இருக்கின்றன. இவர் விஷயங்களால் கலக்க முடியாதவர். ஆதலால் இவர் ஆத்ம ஞானத்தை ஜனங்களுக்கு உபதேசித்துக் கொண்டு இருக்கட்டும் என்று யோசித்து மூவுலகத் திற்கும் குருவாயும் வேதங்களுக்குக் காரணராயும் இருக்கும் அந்த பகவான் இவரைப் பூமியில் வஸிக்கும் படி ஆக்ஞாபித்தார் உத்தவரும் அந்த உத்தர்வின்படி பத்ரிகாசிரமத்தில் பகவானைச் ஸமாதியில் பூஜித்து வந்தார்.

32–36. ஓ குரு சிரேஷ்ட விதுரரும், பரமாத்மா வாகிய கிருஷ்ணன் லோகானுக்ருஹார்த்தமாய்ப் பூமியில் அவதரித்து நடத்திய உத்தமமான சரிதங்களை உத்தவர் சொல்லக்கேட்டு, ஞானிகளுக்குத் தைரியத்தை விருத்தி செய்யக்கூடியதும் மற்றவர்களால் செய்ய முடியாததுமான பகவானால் செய்யப்பட்ட சரீர தியாகத்தையும் தெரிந்துகொண்டு (பகவான் விதுரருக்கு மைத்ரேயரை ஞானோபதேசம் செய்யும்படி ஆக் ஞாபனம் செய்தார் என்றதை) உத்தவருடைய வார்த்தையால், தம்முடைய ஞாபகம் அவருக்கு இருந்ததையும்; நன்றாகத் தெரிந்துகொண்டது இல்லாமல் பாகவதராகிய உத்தவர் பதரிகாசிரமம் சென்ற பிறகு ஸ்ரீ கிருஷ்ண பகவானையே தியானஞ் செய்து அழுதார். பிறகு பாகவதர்களுக்குள் சிறந்த வராகிய விதுரர் யமுனா நதியிலிருந்து மைத்ரேயர் வஸிக்கும் இடமாகிய கங்கா தீரத்திற்குச் சில தினங்களில் சென்றார்.

அத்தியாயம்–5

மைத்ரேயருக்கும் விதுரருக்கும் ஸம்வாதம்

1–16 ஓ மகாராஜ! இப்படி குருக்களில் சிறந்த வராகிய விதுரர், கங்கையின் கரையில் உட்கார்ந்து இருப்பவரும், அளவற்ற ஞானமுள்ளவரும், பகவத் தியானத்தால் சுத்தரும், நல்ல ஸ்வபாவமுள்ளவராக இருப்பதாகிய குணத்தால் திருப்தியடைந்தவருமான மைத்திரேயரைக் கண்டு, அவருடைய சமீபஞ் சென்று, ஓ மகரிஷியே! ஜனங்கள் சுகத்தை அடைய வேண்டியதற்காகக் கர்மங்களைச் செய்கிறார்கள். ஆனால் அவைகளால் சுகமாவது, துக்க, நாசமாவது ஏற்படுகிறதில்லை. அவைகளால் துக்கமே நேரிடுகிறது. ஆதலால் சம்சாரத்தில் எதனைச் செய்வது யுக்தமோ அதனைச் சொல்ல வேண்டும். பூர்வ ஜன்மத்திய கர்ம வசத்தால் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் பக்தி செய்யாதவனும், அதர்ம ஸ்வபாவமுள்ளவனும், துக்கத்தை அடைந்தவனுமாகிய ஜனத்தை அனுக்கிர கிப்பதற்காகவே திவ்ய மங்களங்களான விஷ்ணுவின் சரீரங்கள் இவ்வுலகத்தில் சஞ்சரிக்கின்றன. ஓ சாதுக்களில் சிறந்தவரே! எந்த உபாயத்தால் பகவானை ஆராதித்தால் இருதயம் சுத்தமாகும்? எதில் பகவான் வாசஞ் செய்து அனாதியாகிய அபரோக்ஷ ஞானத்தை கொடுப்பார்? அந்த சுக ரூபமான மார்க்கத்தை உபதேசிக்க வேண்டும். முக்குண சரூபமாகிய மாயைக்கு அதிபதியும்; படைப்பது முதலியவைகளுக்கு அதிபதி யும், சுதந்திரருமாகிய பகவான் பூமியில் அவதரித்து எந்தக் காரியங்களைச் செய்தார்? ஒரு விஷயத்திலும் ஆசை அற்றவரான அந்தப் ப்ரபு இந்த உலகத்தை முன் காலத்தில் எப்படி ஸ்ருஷ்டித்தார்? மறுபடியும்

தம்மால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஜகத்திற்கு ஜீவனத்தைக் கற்பித்து எப்படிக் காப்பாற்றுகிறார்? மறுபடியும் அந்தப் பரமாத்மாவே வியாபாரம் அற்றவராக இந்த ஜகத்து முழுவதையும் தம்முடைய இருதயாகாசத்தில் அடக்கிக் கொண்டு யோக மாயையிடம் எப்படிச் சயனஞ் செய்தார்? யோகிகளுக்கு அதிபதியும், ப்ரபஞ்சத்தின் உள் ப்ரவேசித்தவருமாகிய அந்தப் பகவான் தாம் ஒருவரானாலும் ப்ரஹ்மா முதலிய அநேக உருவங்களை எப்படித் தரிக்கின்றார்? மேலும் அவர் மத்ஸ்யம், கூர்மம் முதலிய அவதாரங்களைச் செய்து ப்ராஹ்மணர்களுக்கும், பசுக்களுக்கும், தேவர் களுக்கும் அனுகூலமான காரியங்களைச் செய்கிறார். புண்ய ஸ்லோகர்களுக்குள் ச்ரேஷ்டராகிய அந்தப் பகவானுடைய சரிதங்களைக் கேட்டு என்னுடைய மனம் திருப்தி யடையவில்லை. ஸகல லோகத்திற்கும் அதிபதியாகிய புருஷன் எந்த எந்தத் தத்துவங்களைக் கொண்டு லோக பாலர்களையும்,லோகங்களையும், லோகா லோக பர்வதங்களையும் கற்பித்தார்? மேலும் ஸகல ப்ராணிகள், அதன் கூட்டம் ஆகிய இவை களுடைய பேதமானது அவரவர்களுடைய கர்மத் திற்குத் தக்கபடி எற்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது? ஓ ப்ராஹ்மணச்ரேஷ்ட! தாமாக உண்டானவரும், லோகங்களைச் ஸ்ருஷ்டித்தவருமான ஸ்ரீமந் நாராயணன் ப்ரஜைகளுடைய ஸ்வபாவத்தையும், கர்மாவையும், பெயரையும் எப்படி வெவ்வேறாகச் செய்தார்? அவற்றை எனக்குச் சொல்லும். ஓ பகவன்! ப்ராஹ்மணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள் (பர) சூத்ரர்கள் (அபர) ஆகிய இவர்களால் அனுஷ்டிக்க வேண்டிய வ்ரதங்களை வ்யாஸ மகர்ஷியின் முகமாக அடிக்கடி கேட்டிருக்கின்றேன். அவைகள் அற்ப

பலத்தைக் கொடுக்கக் கூடியவைகள். ஆதலால் அவை களைக் கேட்கப் போதுமென்ற திருப்தி உண்டாயிற்று. ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய கதையைக் கேட்பதில் அப்படிப்பட்ட திருப்தி உண்டாகிறதில்லை. ஏனெனில், அந்தக் கதாமிருதமானது புருஷனுடைய காதுவழியாக உட்சென்று சம்சார துக்கத்தைக் கொடுக்கும் அபிமானத்தைப் வீடு முதலானவைகளில் என்னுடைய தென்பதை) போக்கடிக்கிறது. ஆகையால் சாதுக்களின் கூட்டத்தில் நாரதர் முதலிய விவேகிகளால் கொண்டாடப்பட்ட ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய கதையிலிருந்து எவன்தான் திருப்தியடைவான்? பகவத் குணங்களைச் சொல்ல வேண்டுமென்ற விருப்பமுள்ள வரும், உமக்கு மித்திரருமான வ்யாஸ மகர்ஷியானவர் எனக்குப் பாரதக் கதையைச் சொன்னார். அதில் கிராம்ய சுகங்கள் வருணிக்கப்பட்டிருந்தாலும் அவை களைத் துச்சமென்று சிந்தித்து பகவானுடைய கதையிலேயே மனம் பதிந்திருக்குமானால் விஷயங் களில் வைராக்கியமுண்டாகும். பகவானுடைய கதையை நினைப்பதனால் சுகமடைந்தவனுக்கு ஸகல துக்கங்களும் நீங்கிவிடுகின்றன. மேலும், எவர்கள் பாகவதத்தின் கருத்தையறியாதவர்களோ அவர்கள் துக்கிக்கத் தகுந்தவர்கள். வீணான வார்த்தை சிந்தை இவைகளுள்ள அவர்களுடைய ஆயுளைத் தேவனாகிய காலமானது குறைத்து விடுகிறது. ஆதலால் இவர்களைப் பற்றித் துக்கிக்கிறேன். ஓ மைத்திரேய! இந்த லோகத்துக்கு க்ஷேமத்தை யுண்டு பண்ணுகிற வரும், சம்சார துக்கமுள்ளவர்களுக்குப் பந்துவுமாகிய ஸ்ரீ மகா விஷ்ணுவினுடைய சாரமான கதையைப் புஷ்பங்களிலிருந்து வண்டானது தேனை எடுப்பது போல நீர் எடுத்துரைக்க வேண்டும். ஜகத்தைச்

ஸ்ருஷ்டிப்பதற்கும், அவைகளைப் பரிபாலிப்பதற்கும், நாசஞ் செய்வதற்கும் எவர் சத்வம் முதலிய குணங்களை அடைந்தாரோ, அவரே பின்பு பூமியில் அவதரித்துப் புருஷர்களால் செய்ய முடியாத எந்த எந்தக் காரியங்களைச் செய்தாரோ அவைகளைச் சொல்லும் என்று கேட்டார்.

17–50 இப்படி விதுரர் மனிதர்களுடைய க்ஷேமத் திற்காகக் கேட்க, அதனைக் கேட்டு, குஷாரவருடைய புத்திரராகிய மைத்ரேய மஹர்ஷி விதுரரை நோக்கி, அவரைக் கொண்டாடி, "ஓ சாதுவே! நீர் நன்றாகக் கேட்டீர். இதனால் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் மனதைச் செலுத்தியவரான உமக்குக் கீர்த்தி விருத்தியடையும். ஜனங்கள் உம்மால் அனுக்கிரகிக்கப் பட்டார்கள். ஓ விதுர! நீர் ஸ்ரீ மகா விஷ்ணுவிடத்தில் ஏகாந்த பக்திசெய்து, அவரை சுவாதீனப்படுத்திக் கொண்டிருக்கிறீர்; மேலும் நீர் வ்யாஸ மகர்ஷியின் புத்திரரானதால் "பகவத் கதையைச் சொல்ல வேண்டும்" என்று நீர் ப்ரச்னம் செய்வது ஆச்சரியம் அல்ல. பகவத் பக்தியில்லாதவர்களைச் சிட்சிப் பவராகிய யமன், ஆணிமாண்டவ்யருடைய சாபத்தால் வ்யாஸருடைய ப்ராதாவாகிய விசித்திரவீரியனுடைய களத்திரம் போன்ற தாசியினிடம் வ்யாஸ மகர்ஷிக்குப் புத்திரனாகப் பிறந்தார். அவர் நீர் தான். மேலும் நீர் ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கும், பாகவதர்களுக்கும் ப்ரியர். அதனால்தான் பகவான் பரலோகஞ் செல்லும் சமயத்தில் உம்முடைய ஞாபகம் வைத்துக்கொண்டு உமக்கு ஞானோபதேசஞ் செய்யும்படி எனக்கு ஆக்ஞாபனஞ் செய்தார். ஆதலால் யோக மாயையின் ஆச்சர்ய சக்தியால் கற்பிக்கப்பட்டவைகளும்,

ஜகத்தின் உற்பத்தி, பரிபாலனம் ஆகிய இவைகளையே ப்ரயோசனமாக வுடையவகைளுமான பகவானுடைய லீலைகளைக் க்ரமமாய் வருணிக்கிறேன். ஸ்ருஷ்டி காலத்தில் பலவகையாகத் தோன்றுகிறவரும், எல்லாப் ப்ராணிகளின் ஸ்வரூபமாக விருப்பவரும், எங்கும் இருப்பவருமாகிய பகவானுக்குத் தாமொருவராக இருக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாகும் சமயமான ஸ்ருஷ்டிக்கு முந்திய காலத்தில் அவர் ஒருவரே இருந்தார். அந்தப் பரமாத்மாதான் பார்க்கிற வராய் (திருஷ்டாவாக) இருந்து கொண்டு, பார்க்கப் படும் வஸ்துவை (திருச்யத்தை) பார்க்கவில்லை. ஏன் என்றால் அவர் தாம் ஒருவரேயாக அப்பொழுது ப்ரகாசித்துக் கொண்டிருந்தார். மாயை முதலிய சக்திகள் அடங்கியிருந்ததால் தம்மை இல்லாதவர் போல் நினைத்தார். (பார்க்கப்படும் வஸ்து இல்லாவிடில் பார்க்கிறவனென்ற வியவகாரம் இல்லாததனால் என்பது கருத்து). ஆனால் அவர் (திருக்) சக்தியுள்ளவர். காரிய காரண ஸ்வரூபமான அந்த ஸத்தாகிய திருஷ்டாவினு டைய சக்தியே மாயை என்று சொல்லப்படுகிறது. ஓ மகா பாக்கியமுள்ளவரே! ப்ரபுவாகிய பகவான் அந்த மாயையைக் கொண்டே உலகத்தைப் படைத்தார். சித்சக்தியுள்ள பரமாத்மாவானவர் காலத்தின் சக்தியால் கலங்கின குணங்களுள்ள மாயையினிடத்தில் தம்முடைய அம்சமாயிருக்கும் புருஷனைக் கொண்டு சிதாபாஸமாகிய வீர்யத்தை வைத்தார். காலத்தால் தூண்டப்பட்ட அந்த மாயையினிடமிருந்து அஞ் ஞானத்தைப் போக்கக் கூடிய விஞ்ஞான ரூபமாகிய மகத்தத்துவமானது தன்னுடைய தேகத்தில் அடங்கி இருக்கும் ஜகத்தை வெளிப்படுத்திக் கொண்டு உண்டாயிற்று. அம்சம், சிதாபாஸம், குணங்கள்

காலம் ஆகிய இவைகளுக்கு ஸ்வாதீனமாக அந்த விஞ்ஞானாத்மாவானவர் பகவானுடைய கடாக்ஷத் தால் இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிக்கவேண்டிய நிமித்தம் வேறு உருவத்தை அடைந்தார். அந்த மகத் தத்துவத் திலிருந்து காரியம் காரணம், கர்த்தா ஆகிய இவை களுக்கு ஆசிரயமும், பூதங்கள், இந்திரியங்கள், மனஸ் ஆகிய இவைகளின் உருவமாயுமிருக்கும் அகங்காரம் ஆனது உண்டாயிற்று. அது வைகாரிகம், தைஜஸம், தாமஸம் என்று மூன்று வகையுள்ளது. வைகாரிகம் என்ற அகங்காரம் வேறு உருவத்தை அடைய, அதனிடமிருந்து மனம் உண்டாயிற்று. இந்திரியங் களுக்கு அதிபதிகளும், சப்தம் முதலிய விஷயங்களைப் ப்ரகாசிக்கச் செய்பவர்களுமான காரிய தேவதைகளும் வைகாரிகர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். ஞானேந்திரியங்களும், கர்மேந்திரியங்களும் தைஜஸங் கள் என்று சொல்லப்படுகின்றன. சூட்சும பூதமாகிய சப்தமானது தாமஸ அகங்கார தத்துவத்திலிருந்து உண்டாயிற்று. அதனிடமிருந்து, ஆத்மாவிற்குச் சரீரம் ஆகிய ஆகாசமானது, எல்லாவற்றிற்கும் அதிபதியான பகவானால் பார்க்கப்பட்டு, காலம், ப்ரக்ருதி, சிதா பாஸம் இவைகளுடைய சேர்க்கையால் உண்டாயிற்று. ஆகாசத்திலிருந்து உண்டான ஸ்பர்சமானது வேறு உருவத்தை யடைந்து வாயுவை உண்டுபண்ணிற்று. அந்த வாயுவும் வேறு உருவத்தை அடைந்து ஆகாச சம்பந்தத்தால் விசேஷ உருவ பலத்துடன் ரூபதன்மாத்ரையை உண்டுபண்ணிற்று. அதுவே யோகத்தைப் ப்ரகாசிக்கச் செய்யும் ஜ்யோதிஸ்ஸாகும். அந்த ஜ்யோதிஸ்ஸானது வேறு உருவத்தை அடைந்து வாயுவுடன் பரமேசுவரனால் கடாக்ஷிக்கப்பட்டு, காலம், மாயை, அம்சம் ஆகிய இவைகளுடைய

சேர்க்கையால் ஜலத்தை உண்டு பண்ணிற்று. அந்த ஜலமானது தேஜசுடன் விகாரத்தை அடைந்து பகவானுடைய கடாக்ஷம் பெற்று, காலம், மாயை அம்சம் ஆகிய இவைகளுடைய சம்பந்தத்தால் கந்தத்தைக் குணமாயுடைய பூமியை உண்டு பண்ணிற்று. ஆகாசம் முதலிய பூதங்களுக்குள் எதற்கு எது காரணமோ, எதற்கு எது காரியமோ, அந்தக் காரிய பூதங்களுக்குக் காரண பூதங்களுடைய சேர்க்கையால் மேல்மேலும் அதிகமான குணங்கள் உண்டாகின்றன. காலலிங்கமாகிய விகாரம், மாயா லிங்கமாகிய விட்சேபம், அம்சலிங்கமாகிய சைதன்யம் ஆகிய இவைகளுள்ளவர்களும், மகத்தத்துவம் முதலிய வைகளுக்கு அபிமானிகளாயுமுள்ள இந்தத் தேவர்கள் விஷ்ணுவின் அம்ச பூதர்களேயாம். இந்தத் தேவர்கள் அநேகர்களாகையால் ப்ரம்மாண்டத்தை உண்டு பண்ண அசக்தர்களாக ப்ரபுவாகிய மகாவிஷ்ணுவிடம் வந்து கை கூப்பி, "ஓ தேவ! உம்முடைய பாதாரவிந்தத்தை நமஸ்கரிக்கிறோம். அது சரணம் அடைந்தவர்களுக்குத் தாபத்தை நிவர்த்திக்கும் குடையாக இருக்கிறது. அந்தப் பாதார விந்தத்தின் மூலத்தை ஆசிரயித்து யதிகள் சம்சார துக்கத்தை அடைகிறதில்லை. ஆகையால், ஓ, பகவான் எப்பொழுதும் ஞானப்ரகாசமுள்ள உம்முடைய பாதச் சாயையை ஆச்ரயிருக்கிறோம். ஓ, பகவான்! சுத்த சித்தர்கள், விஷயத்தில் ஆசை இல்லாத தம்முடைய மனத்தில் உம்முடைய முகமாகிய தாமரைப் புஷ்பத்தில் வஸிக்கக்கூடிய வேதங்களாகிய பட்சி களைக் கொண்டு எதனைத் தேடுகிறார்களோ, பாபங் களைப் போக்கடிக்கும் ஜலமுள்ள அநேக நதிகளுள் சிறந்தவளாகிய கங்கையானவள் எதனிடமிருந்து உண்டானாளோ அந்த உம்முடைய பாதாரவிந்தத்தைச் சரணமடைகிறோம்.

தைரிய முள்ளவர்கள் மிக்க ச்ரத்தையுடன் பகவத் குணங்களைக் கேட்டு, அதனால் பக்தியடைந்து, அதனால் தம்முடைய இருதயத்தைச் சுத்தமாகச் செய்து கொண்டு, அதில் எதனைத் தியானஞ் செய்து வைராக்யம், ஞானம் ஆகிய இவைகளை அடைகிறார் களோ, அந்தப் பாதங்களை ஆச்ரயிக்கிறோம். ப்ரபஞ்சத்தைச் ஸ்ருஷ்டிப்பதற்கும், பரிபாலிப்பதற்கும், நாசஞ் செய்வதற்கும் அவதரித்தவரான உம்முடைய பாதாரவிந்தத்தை நாங்களெல்லோரும் சரணமடை கிறோம். அதை நினைத்த மாத்திரத்தில் பக்தர்களுக்கு ஸகல பயமும் நீங்குகிறது. ஓ தேவ! இந்திரியம் முதலிய பலவகையான சாமக்கிரியுள்ள இந்த அற்பமான தேகத்தில் "நான், என்னுடையது" என்ற துரபிமானம் வைத்திருக்கும் புருஷர்களுக்குத் தங்களுடைய தேகத்தில் வஸிப்பவராகிய உம்முடைய பாதாரவிந்தம் வெகு தூரத்திலிருப்பதாக ஆகி விடுகிறது. அதைச் சரணமடைகிறோம். மாயைக்கு அதிபதியான பரம புருஷ! பெரியோர்களால் கானம் பண்ணக்கூடியவரே! எவர்கள் இந்திரியங்களை வெளியிலிருக்கும் விஷயங்களில் செலுத்தி உம்மிடத்தில் மனதைச் செலுத்தாமல் இருக்கிறார் களோ அவர்கள் உம்முடைய லீலைகளைக் கானம் பண்ணிக் கொண்டு ப்ரகாசிக்கும் பக்தர்களையும் பார்க்க மாட்டார்கள்.

ஓ தேவ! உம்முடைய கதாஅமிருதத்தைப் பானம் செய்து, மிகுந்த பக்தியால் சுத்த சித்தர்களாக இருப்பவர்கள் வைராக்கியத்தை அடைந்து, உடனே வைகுண்ட லோகஞ் சேருகிறார்கள். சிலர் பரமாத்மாவினிடத்தில் ஸ்திரமாக மனதைச் செலுத்து வதாகிய உபாயத்தால் மிக்க பலமுள்ள ப்ரக்ருதியை

ஜயித்து உம்மையே அடைகிறார்கள். ஆனால் அது ச்ரமமான மார்க்கம். உம்மைச் ஸேவிப்பதாகிய மார்க்கம் மிகவும் ச்ரமமற்றது. எல்லாவற்றிற்கும் ஆதியாக இருப்பவரே! உலகங்களைச் ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்ற விருப்பத்தால் முக்குணங்களைக் கொண்டு நாங்கள் அனைவரும் உம்மால் உண்டு பண்ணப்பட்டோம். அந்தக் குணங்களின் ஸ்பாவம் ஒன்றுக்கொன்று விரோதமாக இருப்பதால் நாங்கள் ஒன்றுசேராமல் இருக்கிறோம். உம்முடைய விளை யாட்டுக்குச் சாதனமான ப்ரம்மாண்டத்தைப் படைத்து உம்மிடம் சமர்ப்பிக்க எங்களால் முடியவில்லை.

பிறப்பில்லாதவரே! அனுபவிக்க வேண்டிய காலத்தில் போகத்தை எப்படி சமர்ப்பிப்போம்? நாங்கள் அன்னத்தை எப்படிப் புசிப்போம்? இந்த ஜீவர்கள் விக்கின மில்லாதவர்களாக நும்மிருவர் களுக்கும் பாகத்தைக் கொடுத்துக் கொண்டு எப்படித் தாமும் அன்னத்தைப் புசிப்பார்கள்? தேவர்களாகிய எங்களுக்கும் எங்களுடைய காரணத்திற்கும் நீரே காரணம். விகாரமற்றவர், புராண புருஷர். பிறப்பு அற்றவர். காரணமாகிய மாயையினிடத்தில் எல்லா வற்றையும் அறிந்த மகத் தத்துவ ஸ்வரூபமாகிய ரேதஸ்ஸை முதலில் வைத்தீர். ஓ பரமாத்மாவே! மகத்தத்துவம் முதலிய நாங்கள் எவருக்காக உண்டாயிருக்கிறோமோ, அந்தத் தங்களுக்கு எங்களால் செய்யக்கூடிய காரியம் என்ன? உங்களுடைய அனுக்கிரகம் இல்லாதவரையில் ப்ரம்மாண்டத்தைச் ச்ருஷ்டிக்க எங்களால் முடியாது. ஆகையால் உம்முடைய ஞானத்தையும், சக்தியையும் எங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அத்தியாயம்–6

விராட் ஸ்ருஷ்டி

1–29. இப்படி மகத்தத்துவம் முதலிய சக்திகள் ஒன்றோடொன்று சேராமல் உலகத்தைச் ஸ்ருஷ்டிக்கச் சக்தியற்றவைகளாக் இருப்பதைக் காலமென்ற சக்தியைத் தரித்தவரும் அளவற்ற லீலையுள்ள வருமான ஈசுவரன் பார்த்து, இருபத்து மூன்று தத்துவங்களின் கூட்டத்தில் தாம் ஒரே சமயத்தில் அனுப்பிரவேசஞ் செய்தார். க்ரியாசக்தியுடன் அதில் ப்ரவேசித்த பகவான் சிருஷ்டி சக்தியை அவைகளுக்கு ஞாபகப்படுத்திக் கொண்டு தனித்தனியாக இருந்த அவைகளை ஒன்றோடொன்னு சேர்த்தார். பின்பு ஸ்ருஷ்டி சக்தியை அடைந்த அந்த இருபத்து மூன்று தத்துவங்களும் பகவான் உடைய தூண்டுதலால் தங்கள் தங்கள் அம்சங்களைக் கொண்டு விராட் சரீரத்தைப் படைத்தன. இப்படிப் பரமாத்மாவினுடைய அனுப்ரவேசத்தால் அவைகள் உடைய அம்சங்கள் வேறு ரூபத்தை (பரிணாமத்தை) அடைந்தன. சுவர்ணம் போன்ற இந்தப் புருஷன் ஹிரண்மயன்) அண்ட கோசத்தின் நடுவில் ஜலத்தில் ஸகல ஜீவர்களுடன் வஸித்தார்.

தெய்வ சக்தி, க்ரியா சக்தி, ஆத்ம சக்தி இம்மூன்று சக்திகளுள்ளவரும், இருபத்துமூன்று தத்துவங்களால் உண்டுபண்ணப் பட்டவருமாகிய விராட் புருஷனானவர் தம்மை ஒருவகையாகவும், பத்து வகையாகவும், மூன்று வகையாகவும் பிரித்தார். பரமாத் மாவின் முதல் அவதாரமாகிய அவர் ஸகல பிராணிக ளுடைய ஆத்மாவின் அம்சம். அவரிடத்திலேயே

இந்தப் பூதக்கிரமங்கள்யாவும் தோன்றுகின்றன. விராட் புருஷன், ஸாத்யாத்மன் (இந்திரியங்களுடன் கூடியவன்) ஸாதிபூதன் (வியஷ்டி தேகங்களுள்ளவன்) ஸாதிதைவன் (தெய்வங்களுடன் கூடியவன்), என்று மூன்றுவகையாகவும், ப்ராணரூபத்தால் பத்து வகை யாகவும், இருதயத்தால் ஒருவகையாகவும் இருக்கிறார். பகவான் தத்துவங்களுடைய ப்ரார்த்தனையை நினைத்துக்கொண்டு அவைகளுக்குப் பலவகையான வ்ருத்தியைக் கற்பிப்பதற்காக தம் உடைய தேஜஸ்ஸால் விராட்டைப்பற்றி யோசித்தார். இப்படிப் பகவான் யோசித்தபோது, தேவர்களுக்குச் சில ஸ்தானங்கள் உண்டாயின. அவைகளைச் சொல்லுகிறேன். கேளும், அந்த விராட் புருஷனுக்கு முதலில் முகம் உண்டா யிற்று, லோக பாலராகிய அக்னியானவர் தம்முடைய சக்தியாகிய வாக்குடன் அந்த முகத்தில் ப்ரவேசித்தார். அந்த வாக்கினாலே ஜீவன் சப்தங்களை உச்சரிக் கிறான். பிற்கு தாதுவானது உண்டாயிற்று. லோக பாலராகிய வருணன் ஜிஹ்வேந்திரியத்துடன் அதில் ப்ரவேசித்தார். ஜீவன் அந்த இந்திரியத்தாலேதான் ரஸங்களைக் கிரஹிக்கிறான், பிறகு மூக்குகள் உண்டாயின.

அசுவினீ தேவர்கள் தங்களுடைய அம்சமாகிய க்ராணேந்திரயத்துடன் அதனைத் தங்களுடைய ஸ்தானமாக்கிச் கொண்டார்கள். அந்த இந்திரியத் தாலேயே ஜீவன் கந்தத்தைக் கிரஹிக்கிறான். பின்பு கண்கள் உண்டாயின. சூரியன் சட்சுரிந்த்ரியத்துடன் அவைகளில் ப்ரவேசித்தார். அதனால் உருவ ஞானம் உண்டாகிறது. பிறகு அந்த விராட்புருஷனுக்குச் சர்மங்கள் உண்டாயின. அந்த ஸ்தானத்தில் லோகபாலரான வாயுவானவர் தம்முடைய அம்சம் ஆகிய துவக்கிந்திரியத்துடன் ப்ரவேசித்தார். ஜீவன்

அந்த இந்திரியத்தைக் கொண்டே ஸ்பர்சத்தைக் கிரஹிக்கிறான். பின்பு அந்தப் புருஷனுக்குக் காதுகள் உண்டாயின. அவைகளில் திக்குகள் தங்களுடைய அம்சமாகிய சுரோத்திரேந்திரியத்துடன் ப்ரவேசித்தன. அந்த இந்திரியத்தைக் கொண்டே ஜீவன் சப்தத்தைக் கிரஹிக்கிறான். அந்தப் புருஷனுடைய சர்மாவை ஓஷதிகள் தங்களுடைய அம்சமாகிய உரோமங்களுடன் ப்ரவேசித்தன, ஜீவன் அவைகளைக் கொண்டே தினவைத் தெரிந்து கொள்ளுகிறான். பிறகு அந்தப் புருஷனுக்கு ஆண்குறி (மேட்ரம்) உண்டாயிற்று. ப்ரஹ்மதேவர் தம்முடைய அம்சமாகிய ரேதஸ்ஸுடன் அந்த ஸ்தானத்தை அடைந்தார் ஜீவன் அந்த ரேதஸ்ஸைக் கொண்டே ஆனந்தத்தை அடைகிறான். பிறகு அந்த விராட் புருஷனுக்குகுதமானது உண்டா யிற்று. மித்திரனானவர் தம்முடைய அம்சமாகிய பாயுவுடன் அந்த ஸ்தானத்தை அடைந்தார். அந்தப் பாயுவைக் கொண்டே ஜீவன் மலவிசர்ஜனம் முதலியவைகளைச் செய்கிறான். அந்த விராட் புருஷனுக்குக் கைகள் உண்டாயின.ஸ்வர்க்கத்திற்கு அதிபதியான இந்திரன் தம்முடைய அம்சமாகிய வார்த்தையுடன் (கிரய, விக்ரய சக்தி) அவைகளில் ப்ரவேசித்தார். அந்தச் சக்தியைக் கொண்டே ஜீவன் விருத்தியை (ஜீவிகையை) அடைகிறான். பின்னுமந்தப் புருஷனுக்குப் பாதங்கள் உண்டாயின. அவைகளில் மஹாவிஷ்ணுவானவர் தம்முடைய அம்சமாகிய கதி (நடை)யுடன் ப்ரவேசித்தார். அதைக் கொண்டே ஜீவன் போக வேண்டிய இடங்களுக்குச் செல்லுகிறான். அந்தப் புருஷனுக்கு இதயம் உண்டா யிற்று. சந்திரனானவர் தம்முடைய அம்சமாகிய மனசுடன் அந்த இருதயத்தில் ப்ரவேசித்தார். அந்த மனத்தாலேயே

ஜீவன் சங்கல்பம் முதலிய விகாரங்களை அடைகிறான். பின்னும் அவருக்குப் புத்தியுண்டாயிற்று, ப்ருகஸ்பதி பகவான் தம்முடைய அம்சமாகிய ஞானத்துடன் அந்த ஸ்தானத்தை அடைந்தார். அந்தப் போதத்தாலேயே அறியவேண்டிய விஷயங்களை ஜீவன் தெரிந்து கொள்ளுகிறான். இந்த விராட் புருஷனுக்கு அபிமானம் (அகங்காரம்) உண்டாயிற்று. அதனை ருத்திரன் அடைந்தார். அதனால் செய்யவேண்டியவைகளைச் செய்கிறான். அந்த விராட் புருஷனுக்கு ஸத்வம் (சித்தம்) உண்டாயிற்று. அந்த ஸ்தானத்தை ப்ரஹ்மா தம்முடைய அம்சமாகிய சேதனையுடன் அடைந்தார். அந்தச் சேதனையாலேயே இந்த ஜீவன் விஞ்ஞானத்தை அடைகிறான். மேலும் அந்தப் புருஷனுடைய தலையிலிருந்து த்யுலோகமும் பாதங்களிலிருந்து பூலோகமும், நாபியிலிருந்து ஆகாசமும் உண்டாயின. த்யுலோகம் முதலியவைகளில் குணங்களுடைய பரிணாமபூதகர்களான தேவர்கள் முதலியவர்கள் தோன்றுகிறார்கள் பலிஷ்டமான சத்வகுணத்தால் தேவர்கள் த்யுலோகத்தை அடைந்தார்கள். மனிதர்கள் பசு முதலியவைகளுடன் ரஜோகுண ஸம்பந்தத்தால் பூலோகத்தை அடைந்தார்கள், மேற்காட்டிய இரண்டு லோகங்களுக்கும் மத்தியிலுள்ளதும், பகவானுடைய நாபி ரூபமுமான ஆகாசத்தை ருத்திரருடைய பார்ஷத கணங்கள் தமோகுண ஸ்வபாவத்தால் அடைந்தார்கள்.

30–40. மேலும் அந்த விராட் புருஷனுடைய முகத்திலிருந்து வேதமோதும் ப்ராஹ்மண ஜாதியும் உண்டாயின. ஓ குருசிரேஷ்ட! அதனால் ப்ராஹ்மணன் நான்கு வர்ணத்திற்கும், அதிபதியும் குருவுமானான்.

அவருடைய இரு கைகளிலிருந்து பரிபாலன ரூபமாகிய விருத்தியும் க்ஷத்ரிய ஜாதியும் உண்டாயின. க்ஷத்ரியன் அந்த விருத்தியை அனுசரித்தான், அந்த க்ஷத்ரியன் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அம்ச பூதர்களாகிய ப்ராஹ்மணன் முதலியவர்களைத் திருடர்கள் முதலிய வர்களுடைய உபத்திரவங்களிலிருந்து காப்பாற்றுகிறான். ப்ரபுவாகிய அந்த விராட் புருஷனுடைய தொடைகளில் இருந்து பயிர்த்தொழில் முதலிய ஜீவன ஹேதுக்களும், வைசிய ஜாதியும் உண்டாயின. வைசியன் அந்த விருத்தியைக் கைக்கொண்டான். அவருடைய பாதங்களில் இருந்து சிசுரூஷையும், சூத்ர ஜாதியும் உண்டாயின. சூத்ரன் மேலான ஜாதியார்களுக்குச் சுச்ரூஷை செய்வதையே தனது விருத்தியாக வைத்துக் கொண்டான். அந்த சிசுரூஷையால் மஹாவிஷ்ணு சந்தோஷப்படுகிறார். மேற்காட்டியபடி நான்கு ஜாதிகளும் அவைகளின் விருத்திகளுடன் உண்டாகி, ஆத்ம சுத்திக்காக ச்ரத்தையுடன் தங்களுக்குரிய தர்மத்தைக் கொண்டு தங்களுக்குப் பிதாவாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவைப் பூஜித்தார்கள் ஓ விதுரரே, காலம், கர்மம், சுபாவம், ஆகிய சக்திகளுள்ள பகவானுடைய யோகமாயா பலத்தாலுண்டான அந்த விராட் ரூபத்தைப் பூர்ணமாக வருணிக்க எவன்தான் விரும்புவான்? (ஒருவராலும் வருணிக்க முடியாதென்று கருத்து) ஓ விதுரரே, ஆனாலும் பகவன் நாமங்களை தவிர வேறு வார்த்தைகளை உச்சரித்ததால், அசுத்தமாயிருக்கும் என்னுடைய வார்த்தையச் சுத்தப் படுத்துவதற்காக நான் குருவினிடம் தெரிந்துகொண்ட படி என்னுடைய புத்திக்கு எட்டியவரையில் ஸ்ரீ ஹரியின் கீர்த்தியைச் சொல்லுகிறேன். புண்யச் லோகராகிய பகவானுடைய குணங்களைக்

சொல்வதே புருஷர்களுடைய வாக்குக்கு முக்கியமாகிய லாபம் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். வித்வான்களால் சொல்லப்படும் ஸ்ரீ பகவானுடைய கதையைக் கேட்டதே காதுகளின் முக்கிய பலனாகும். பகவானுடைய மஹிமையானது யோகத்தால் பக்குவமாகிய புத்தியுள்ள ப்ரஹ்மதேவரால் பல வர்ஷங்களிலும் அறியமுடியவில்லை. பகவானுடைய மாயையானது மாயாவியாகிய பகவானையும் மோஹிக்கச் செய்யக்கூடியது. ஆச்சரியம். ஏனென்றால் ஸ்ரீமஹா விஷ்ணுவும் தம்முடைய மாயகதியை தாமும் அறிந்தவரல்ல. (அளவிடக் கூடாதென்று கருத்து) எவரைத் தெரிந்து கொள்வதற்காகப் ப்ரவர்த்தித்த வாக்குகளும். மனசும் அகங்காரத்திற்கு அதிஷ்டான தேவதையாகிய ருத்ரரும், புத்திக்கு அதிஷ்டான தேவதையாகிய ப்ரஹ்மாவும் இந்திரியங்களுக்கு அதிஷ்டான தேவதைகளாகிய இந்தத் தேவர்களும், இன்னும் மற்றவர்களும் அதனைத் தெரிந்து கொள்ள முடியாமலே திரும்பினார்களோ அந்தப் பகவானுக்கு நமஸ்காரம்.

அத்தியாயம்–7

விதுரருடைய ப்ரச்னங்கள்

1–7 வ்யாஸ மஹர்ஷியின் புத்திரரும் வித்வானுமாகிய விதுரர் மேற்காட்டியபடி சொல்லி வரும் மைத்ரேயரை நோக்கித் தம்முடைய வார்த்தை யால் அவரைச் சந்தோஷிக்கச் செய்து கொண்டு, "ஓ ப்ராஹ்மணோத்தம! சித்ரூபியும், விகார மற்றவருமாகிய பகவானுக்குக் கர்மங்கள் உண்டென்று சொல்லுவதும், நிர்க்குணராகிய (குணங்களற்றவராகிய) அவருக்குக் குணங்களிலிருக்கின்றன வென்றும், அவைகள் அவருக்கு விளையாட்டிற்காக (லீலை) ஏற்பட்டவை களென்று சொல்லுவதும் எப்படிப் பொருந்தும்? குழந்தைகளுடைய சேஷ்டைகளுக்கு எப்படி விளையாட்டே ப்ரயோசனமோ, அப்படியே பகவான் உடைய சேஷ்டைக்கும் லீலையே பலன் என்று சொல்லுவதும் பொருந்தாது. ஏனென்றால், குழந்தைகள் விளையாட்டுக் கருவிகளுடன் அவற்றில் ப்ரவ்ருத்திப் பதற்குக் காமம் காரணமாகிறது. மற்ற குழந்தைகள் இருப்பதால் அவர்களுடன் சேர்ந்து விளையாட வேண்டுமென்ற இச்சை உண்டாகிறது. பகவான் இயற்கையில் திருப்தியுள்ளவராகையால் அவருக்குக் காமம் உண்டாவதற்கு நியாயமில்லை. மேலும் அவர் ஒரு விஷயத்திலும் ஆசையில்லாதவர்; அத்விதீயர். ஆகையால் அவருக்கு இம்மாதிரியான விருப்பம் உண்டாயிற்று என்று சொல்வது பொருந்தாது. அவ்வித்தையை உபாதியாயுடைய ஜீவனுடைய போகத்திற்காகப் பகவான் ஸ்ருஷ்டி முதலியவைகளைச் செய்கிறார் என்று சொல்லுவதும் நியாய

விரோதமேயாம். எப்படியெனில் , "பகவான் முக்குண ஸ்வரூபியான தம்முடைய மாயையால் இந்த ஜகத்தைச் ஸ்ருஷ்டிக்கிறார்; பின்பு அதனைக் காப்பாற்றுகிறார்" பிறகு அதை மறைத்து விடுகிறார் என்று சொல்லப் படுகிறது. தேசத்தாலும், காலத்தாலும், அவஸ்தையா லும் (நிலைமை), இயற்கையாலும், மற்ற வஸ்துவினா லும் நாசஞ் செய்யப்படாத ஞானமுள்ள ஜீவனுக்கு சம்பந்தம் ஏற்பட்டதென்று சொல்வது யுக்தமல்ல. மேலும் பகவான் ஒருவரே ஸகல சரீரங்களிலும் அந்தர்யாமியாக வஸிக்கிறார். அப்படிக்கிருக்க ஜீவனுக்கு ஆனந்தம் முதலியவைகளின் குறைவாவது, துக்கமாவது கர்மங்களால் நேரிடுகிறது என்று எப்படி சொல்லலாம்? ஓ வித்வானாகிய மகர்ஷியே! அறியாத் தன்மையாகிய துக்கத்தில் என் மனம் சிக்கிக் கொண்டிருக்கிறது. ஓ ப்ரபுவே! என்னுடைய பெரியதாகிய மோஹத்தை நிவர்த்திக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்துக் கொண்டார்.

8–14 மேற்காட்டிய விஷயத்தைத் தெரிந்துகொள்ள விரும்பிய விதுரரால் இம்மாதிரி கேட்கப்பட்ட மைத்ரேயர்; பகவானிடத்தில் சித்தத்தைச் செலுத்திய வராக, தத்துவத்தை அறிந்தவராகையால் ஆச்சரியம் இல்லாதவராய், ஆச்சரியமடைந்தவர்போல் விதுரரை நோக்கி, "ஓ விதுரரே! நித்ய முக்தராகிய பகவானுக்குத் தன்யமும், சம்சார பந்தமும் உண்டென்று சொல்வது யுக்திக்கு விரோதம். அதுவே பகவானுடைய மாயையாகும். எப்படி சொப்பன சாட்சியாயிருக்கும் புருஷன் ...என்னுடைய தலை வெட்டப்பட்டது என்று நினைக்கிறானோ (உண்மையில் தலை வெட்டப்பட வில்லை) அப்படி நினைப்பது பொய்யல்லவா? மேலும், ஜலத்தில் பிரதி பிம்பித்த சந்திரனுக்கு

Released by Maran's Dog, Toronto , Canada

ஜலமாகிய உபாதியால் அசைவது முதலியவை ஏற்படுவதுபோல, அனாத்மாவாகிய தேஹம். முதலிய வைகளுடைய தருமமானது தேஹத்தில் அபிமானம் உள்ள ஜீவனுக்கே ஒழிய ஈசுவரனுக்கு இல்லை. அந்த அனாத்மாவின் குணமானது நிவர்த்தி தருமத்தாலும். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தயையினாலும், பக்தியோகத்தாலும், அந்தந்த ஸ்தானத்துக்குத் தக்கபடி மெள்ள மெள்ள மறைந்து போகும். தூங்கினவனுக்கு எப்படி ஸகல துக்கங்களும் நாசம் அடைகின்றனவோ, அப்படிப்போல் அந்தர்யாமியாகிய பரமாத்மாவினிடத்தில் ஜீவனுடைய இந்திரியங்கள் ஸ்திரமாக எப்பொழுது அடங்கியிருக்குமோ அப்பொழுது எல்லாத் துக்கங்களும் நிவர்த்தியாகும்; பகவானுடைய குணங்களைச் சொல்வதாலும், அவைகளைக் கேட்பதாலும் ஸகல துக்கங்களும் நிவர்த்தியாகின்றன. அவருடைய பாதாரவிந்தத்திலுள்ள துளியின் சேவை யானது மனத்தால் அடையப்படுமானால் துக்கங்கள் நிவர்த்திக்கப்படுமென்பதில் என்ன சந்தேகம்? என்று ப்ரத்யுத்தரஞ் சொன்னார்.

15–20 "ஓ ப்ரபுவே! உம்மால் சொல்லப்பட்ட தகுந்த ப்ரத்யுத்தரமாகிய கத்தியால் என்னுடைய சம்சயம் போக்கடிக்கப்பட்டது: மேலும் என்னுடைய மனமானது ஈசுவரன் ஸ்வதந்திரர் என்ற விஷயத்தை யும், ஜீவன் பரதந்திரன் என்பதையும் நன்றாகத் தெரிந்துகொண்டது. ஓ வித்வானாகிய மஹர்ஷியே! ஸ்ரீ பகவானுடைய சக்தியாகிய மாயையால் ஜீவனுக்கு ஆத்மானந்தம் முதலியவைகள் கிடைக்காமல் போகின்றன என்று உம்மால் நன்றாக நிரூபிக்கப்பட்டது. அந்த மாயை உண்மையானதல்ல. காரணமற்றது. தேஹம்

முதலிய ப்ரபஞ்சத்திற்கு காரணமாயுள்ளது, அது வெளியிலில்லை, (எந்த வஸ்து காரணமற்றதும், சூன்யமுமாயுருக்கிறதோ அதை நீர் நன்றாகச் சொன்னீர் என்பது கருத்து.) லோகத்தில் எவன் தேஹம் முதலியவைகளில் அபிமானம் வைத்து மூடனாயிருக்கிறானோ, எவன் ப்ரக்ருதிக்கு மேற்பட்ட பரமபுருஷனை அடைந்திருக்கிறானோ அவ்விருவர் களும் சுகத்தை அடைகிறார்கள். மத்தியிலிருப்பவர் கள் துக்கத்தை அடைகிறார்கள். (அக்ஞர்களுக்கும் ஞானிகளுக்கும் ஸம்சயமில்லை. அதனால் துக்கமில்லை யென்பது கருத்து.) சத்யம் போலத் தோன்றுகிறதும், அனாத்மாவுமான ப்ரபஞ்சம் உண்மையில்லை என்று நான் நிச்சயித்து, அந்த தோற்றத்தை உம்முடைய பாத ஸேவையாலே போக்கிக் கொள்வேன். பகவத் பக்தர்களான பெரியோர்களுடைய சேவையாலே, கூடஸ்தரும் மதுவைக் கொன்றவருமாகிய பகவான் உடைய பாதங்களில் விசேஷப் ப்ரேமையுண்டாகும். அதனால் சம்சார துக்கம் நீங்கும். தேவர்களுக்கும் தேவராகிய பகவானைச் ஸாதுக்கள் எப்பொழுதும் கானஞ் செய்வார்கள். அப்போர்ப்பட்ட மஹான்களுடைய ஸேவையானது விசேஷ புண்யஞ் செய்தவர்களுக்கும் கிடைக்க அரிதானாலும் எனக்குக் கிடைத்தது

21–41 ப்ரபுவாகிய பகவான் முதலில் மஹத் தத்துவம் முதலியவைகளையும், இந்திரியங்களையும், க்ரமமாக ஸ்ருஷ்டித்து அவைகளின் அம்சங்களைக் கொண்டு விராட் சரீரத்தையும் உண்டு பண்ணி அதனிடம் அனுப்பிரவேசஞ் செய்தார். அந்த விராட் புருஷனே முதலில் உண்டானவர். அவருக்கு ஆயிரம் பாதங்களும், ஆயிரம் தொடைகளும், ஆயிரம்

கைகளுமிருக்கின்றன. இவ்வுலகங்கள் யாவும் அவர் இடத்திலேயே நெருக்கமில்லாமல் வஸிக்கின்றன. பத்துவிதமான ப்ராணனும் (ஐந்து ப்ராணன்களுடன், வாக்கு முதலிய இந்திரியங்கள், ஐந்தும் சேர்ந்து பத்து என்பது கருத்து,) இந்திரியங்கள், அவைகளின் அபிமானி தேவதைகள், விஷயங்கள் ஆகிய மூவகையான ப்ராணன்களும் அந்த விராட் புருஷன் இடத்தில் வஸிக்கின்றன. அவரிடத்திலிருந்தே ப்ராஹ்மணர் முதலிய நான்கு வர்ணங்களும் உண்டா யின" என்று சொன்னீர்களல்லவா? அவரிடத்தில் பலவகையான ஸ்வரூபமுள்ள ப்ரஜைகள் தங்களுடைய பிள்ளைகளுடனும், பேரன்களுடனும், கொள் பேரன்களுடனும், மற்றும் வம்சத்திலுண்டானவர் களுடனும் வஸிக்கிறார்கள் அல்லவா? அவர்களுடைய விபூதிகளைச் சொல்லவேண்டும். மேலும் ப்ரஜாபதி களுக்கு அதிபதியாகிய அந்தப் புருஷன் எந்த எந்தப் ப்ரஜாதிபதிகளைச் ஸ்ருஷ்டித்தார்? ஸர்க்கம், அநுஸர்க்கம், மனுக்கள், மன்வந்தரத்தின் அதிபதிகள், இவர்களுடைய வம்சத்திலுண்டானவர்கள்; வம்சத்தின் சரிதம், கீழுலகங்கள், மேலுலகங்கள், பூலோகம், அவைகளுடைய நிலைமை, அளவு ஆகிய இவை களையும் சொல்ல வேண்டும். திர்யக் (பசு முதலிய வைகள்), மனிதர்கள், தேவர்கள், மலைப்பாம்புகள், பறவைகள் முதலிய கர்ப்பத்திலிருந்தும், அண்டத்தில் இருந்தும், வேர்வையிலிருந்தும், பூமியிலிருந்தும் உண்டாகும் நான்கு வகையான ப்ராணிகளுடைய ஸ்ருஷ்டியின் விவரத்தையும் சொல்லவேண்டும்.

மேலும், ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரர் ஆகிய இவர்களின் உருவத்தை எடுத்துக் கொண்டு ஸ்ருஷ்டி, பரிபாலனம்; சம்ஹாரம் ஆகிய இவைகளைச் செய்து

வரும் ஸ்ரீ பகவானுடைய கம்பீரமான சரிதத்தையும், உருவம், ஆதாரம், ஸ்வபாவம் இவைகளால் ஏற்படும் வர்ணாச்ரம விபாகங்களையும், ரிஷிகளுடைய பிறப்பு, சரிதம் ஆகிய இவைகளையும், வேதங்களின் பிரித்தலையும், யாகங்களினுடைய விஸ்தாரங்களையும், பக்தி யோகம் ஞானம், ஸாங்க்யம் ஆகிய இவைகள் உடைய மார்க்கத்தையும், பகவானால் செய்யப்பட்ட தந்திரத்தையும் பாஷாண்ட மார்க்கத்தின் பேதத்தையும்; ப்ரதிலோமஜாதிகளுடைய ஆசாரத்தையும், குணங்களாலும் கர்மங்களாலும் ஜீவர்களுக்கு ஏற்படும் எல்லா கதிகளையும், தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் இவைகளுக்கு அவிருத்தமான உபாயங்களையும், வார்த்தை (பயிர் முதலிய) தண்டநீதி, வ்ரதம் இவைகளுடைய விதியையும், ச்ராத்த விதியையும், பித்ருக்களுடைய ஸ்ருஷ்டியையும், கிருஹங்கள், அசுவினி முதலிய நக்ஷத்திரங்கள், மற்ற நக்ஷத்திரங்கள், காலசக்கரம் ஆகிய. இவைகளின் ஸ்திதியையும், தானம், தபஸ், யாகங்கள், பூர்த்த தர்மங்கள் ஆகிய இவைகளுடைய பலனையும், சக்தனாகிய புருஷனுக் கேற்பட்ட தர்மத்தையும், ஆபத் தர்மத்தையும், தர்மத்திற்குக் காரணமாகிய பகவான் எந்த மார்க்கத்தால் சந்தோஷப்படுவாரோ, எவர்களிடத்தில் தயை செய்வாரோ அவை யெல்லாவற்றையும் சொல்லவேண்டும்.

ஓ ப்ராஹ்மணோத்தம! தம்மை அனுசரித்திருக்கும் சிஷ்யர்களுக்கும், புத்திரர்களுக்கும், தீனர்களிடத்தில் ப்ரியமுள்ள ஆசார்யர்கள் அவர்களால் கேட்கப்படாத விஷயங்களையும் உபதேசிப்பார்கள். ஓ பகவன்! அந்த மகத்தத்துவம் முதலியவைகளுடைய லயமானது எவ்வளவு வகையுள்ளது? ப்ரளயகாலத்தில் இந்தப்

பரமேசுவரனுடைய சமீபத்தில் எவைகள் இருக்கின்றன? எவைகள் அவர் நித்திரை செய்யும் பொழுது தூங்குகின்றன? மேலும் ஜீவனுடைய உண்மையையும், பரமேசுவரனுடைய ஸ்வரூபத்தையும், உபநிஷத்துக்களால் உண்டாகும் ஞானத்தையும், எந்த அம்சத்தால் ஜீவனுக்கும் பரமாத்மாவிற்கும் ஐக்கியம் ஏற்படுகிறது என்பதையும் சொல்லவேண்டும். ஓ தோஷமற்றவரே! வித்வான்களால் எவைகள் ஞானத்திற்குச் சாதனங்களென்று சொல்லப்படுகின்றனவோ, அவைகளையும் உபதேசிக்கவேண்டும்.

ஞானம், பக்தி, வைராக்யம் ஆகிய இவைகள் குருவின் உபதேசமில்லாமல் எப்படி சித்திக்கும்? ஆதலால் மாயையால் மறைக்கப்பட்ட திவ்யசக்ஷுஸ்ஸுள்ளவனும், அதனால் அந்தகனும் (கண்ணில்லாதவன்), ஸ்ரீ பகவானுடைய கர்மங்களைத் தெரிந்துகொள்ள விரும்பிக் கேட்பவனுமாகிய எனக்கு மித்திரரான நீர் அவைகளைச் சொல்லும். ஓ பாபமற்றவரே, ஜீவனுக்கு அடியதானம் செய்வதால் கிடைக்கும் பலனுடைய பதினாறிலொரு பாகம் ஸகல வேதங்களாலும், யக்ஞங்களாலும், தபசுகளாலும், தானங்களாலும் கிடைக்காது. ஆதலால் என்னை அனுக்கிரகிக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்தார்.

42. ஓ மஹாராஜ! இப்படிக் குருக்களில் சிறந்தவராகிய விதுரர் முனிவர்களுள் சிறந்தவராகிய மைத்ரேயரை நோக்கி, முன்கற்பத்தைப் பற்றிக் கேட்க, பகவானுடைய கதையைச் சொல்வதில் தூண்டப்பட்டபடியால் மிக்க சந்தோஷத்துடன் சிரித்துக் கொண்டு மைத்ரேயர் ப்ரத்யுத்தரஞ் சொல்ல ஆரம்பித்தார்.

அத்தியாயம்–8

ப்ரஹ்மதேவருடைய உற்பத்தி

1–9. "விதுரரே! பகவானையே முக்கிய தெய்வமாய்க் கொண்ட நீர் எந்த வம்சத்தில் பிறந்தீரோ ஜனங்களைக் காப்பாற்றும் அந்த பூருவம்சமானது சாதுக்களால் ஸேவிக்கத் தக்கது. பகவானுடைய சரித்திர பரம்பரையை நீர் அடிக்கடி புதிதாகப் பண்ணுகிறீர். அற்ப ஸுகத்திற்காக்ப் பெரிதாகிய துக்கத்தை அடைந்தவர்களான மனிதர்களுக்கு அந்த சம்சார துக்கம் நீங்குவதற்காகப் பாகவத புராணத்தை ஆரம்பிக்கிறேன். பகவான் அதனைத் தாம் நேராக ரிஷிகளுக்கு உபதேசித்தார்.

அதெப்படியெனில்: முன்னொரு சமயத்தில் சனத் குமாரர் முதலிய மகர்ஷிகள் பாதாளத்திலிருக்கும் தடையற்ற ஞானமுள்ள சங்கர்ஷண பகவானை நோக்கி அவருக்கு மேற்பட்ட ஸ்வரூபத்தை அறிய விரும்பினவர்களாகப் ப்ரச்னம் செய்யவாரம்பித்தார் கள். அந்தப் பகவான் வாஸுதேவனென்ற பெயருள்ள தமக்கு ஆச்ரயமாகிய ஜ்யோதிஸ்ஸைத் தியானஞ் செய்து கொண்டிருப்பவர். அந்தர் முகமாகச் செய்யப் பட்ட தாமரை மலர்போன்ற நேத்திரத்தை ஸனத்குமாரர் முதலியவர்களுடைய க்ஷேமத்திற்காக பகிர்முகமாகச் செய்து அவர்களைப் பார்த்தார். மேலும் பாதாளத்தில் வஸிக்கும் நாக கன்னிகைகள் விசேஷப்ரேமையுடனும், பலவகையான காணிக்கைகள் உடன் தங்களுக்கு நல்ல புருஷன் கிடைக்கவேண்டும் என்ற எண்ணமுள்ளவர்களாய்ச் சங்கர்ஷண பகவான்

கால் வைத்துக்கொண்டிருக்கும் எந்தத் தாமரை புஷ்பத்தைப் பூஜிக்கிறார்களோ, அதனை மேற்சொல்லிய மகர்ஷிகள் ஆகாச கங்கையின் ஜலத்தால் நனைந்த தமது ஜடையின் சமூகங்களால் தொட்டுக்கொண்டும் (நமஸ்கரித்து என்று அர்த்தம்) அநேக கிரீடங்களில் இழைத்திருக்கும் உயர்ந்த இரத்தினங்களுடைய காந்திகளால் ப்ரகாசிக்கும் ஆயிரம் பணங்களுள்ள அந்த சங்கர்ஷண பகவானுடைய சரிதங்களைச் சொல்லிக்கொண்டும். அதிகப்ரேமையால் தடங்கின வாக்குள்ளவர்களாகக் கேட்டார்கள்.

அப்பொழுது அந்த சங்கர்ஷணர் நிவர்த்தி தர்மத்தில் ஆசையுள்ள ஸனத்குமாரருக்கு உபதேசித்தார். அந்த ஸனத் குமாரர் விரதங்களை அனுஷ்டித்தவரான சாங்கியாயனருக்குச் சொன்னார். பரமஹம்சர்களுடைய தர்மத்தில் முக்கியராகிய அந்த சாங்கியாயனர், பகவானுடைய விபூதிகளைச் சொல்ல விரும்பின வராய்த் தம்மிடத்தில் வணக்கத்துடன் வந்த எனது குருவாகிய பராசரருக்கும் ப்ரஹஸ்பதிக்கும் உபதேசித் தார். மிக்க தயையுள்ளவரான புலஸ்தியரால் புராணத்தைச் சொல்லும்படி அனுக்கிரஹிக்கப் பெற்ற அந்தப் பராசர மகர்ஷி எனக்கு உபதேசித்தார். ஓ விதுரரே! ச்ரத்தையுடன் கேட்க விரும்பிய உமக்கு நான் அதைச் சொல்லுகிறேன்.

18–20. இந்த ஜகத்தானது எந்தக் காலத்தில் சமுத்திர ஜலத்தால் மூடப்பட்டிருந்ததோ, அப்பொழுது மறைக்கப்படாத சித்சக்தியுள்ளவரும், ஆதிசேஷனாகிய படுக்கையில படுத்தவரும், தம்முடைய ஸ்வரூபானந்த திலேயே ரமிப்பவரும், கர்மங்களற்றவரும், தாம்

ஒருவராக இருப்பவருமான பகவான் கண்களை மூடிக் கொண்டு யோகநித்திரை செய்தார். (மாயா விலாசத் துடன் விளையாடிவிட்டு) மேலும் அவர் தம்முடைய சரீரத்திற்குள் பூத சூட்சுமங்களை அடக்கிக்கொண்டு காலரூபமாகிய சக்தியைத் தூண்டுகிறவராகக் கட்டையில் மறைந்திருக்கும் அக்கினிபோல் தமக்கு இருப்பிடமாகிய ஜலத்தில் வஸித்தார்.

இப்படி ஆயிரம் சதுர்யுகங்கள் ஜலத்தில் யோகநித்திரை செய்து, முன்னமேயே தம்மை எழுப்பு வதற்காக ஏற்படுத்தப்பட்ட காலசக்தியால் கிரியைகளை அடைந்து, தம்முடைய தேஹத்தில் லோகங்கள் லயித்திருப்பதைக் கண்டார். அப்பொழுது பூதசூட் சுமங்களைப் ப்ரவர்த்திக்கச் செய்யும் ஞானமுள்ள வராகிய அந்தப் பகவானுடைய நாபியிலிருந்து அவர் உடைய சரீரத்திற்குள்ளிருந்தும், மிகவும் சூட்சமமும் ஆகிய பூத சூட்சமமானது கால வசத்தால் வ்ருத்தியடைந்த ரஜோ குணத்தின் சம்பந்தத்தால் உண்டாகப் போகிறதாகி வெளிப்பட்டது. (பூத சூட்சுமங்கள் ரஜோகுண சம்பந்தத்தால் தாமரஸ புஷ்பமாக ஆயிற்று என்பது கருத்து.) கர்மங்களைத் தெரிவிக்கும் காலத்தால் ஸ்ரீபகவானிடமிருந்து உண்டான அந்தப் பத்மகோசமானது சூரியன் போலத் தன்னுடைய காந்தியால் விஸ்தாரமாகிய ஜலத்தைப்ரகாசிக்கச் செய்துகொண்டு வெளிப்பட்டது. ஜீவனுடைய போகத்திற்கு உடயோகமானவைகளை வெளிப்படுத்தும் ஸகல ஜகத் ரூபமுமான அந்தப் பத்மத்தில் (தாமரஸ புஷ்பத்தில்) அந்த விஷ்ணுவே அந்தர்யாமியாகிப் ப்ரவேசித்தார். அந்தத் தாமரஸ புஷ்பத்திலிருந்து வேத ஸ்வரூபியாகிய ப்ரஹ்மதேவர்

உண்டானார். அவரையே ஜனங்கள் சுவயம்பூ என்று சொல்லுகிறார்கள். (முன் கற்பத்தின் முடிவில் ஸ்ரீமந் நாரயணருடன் யோகநித்திரையில் ப்ரஹ்மதேவர் கலந்திருந்தார்;

(பிறகு நாராயணன் விழித்துக் கொண்டபோது அவரிடமிருந்தே பாத்ம கற்பத்தில் பத்மத்தின் வழியாக அந்த ப்ரஹ்மதேவர் வெளியானார் என்பது கருத்து) அவர் அந்தத் தாமரஸ புஷ்பத்தின் நடுவில் இருந்து நான்கு புறத்திலும் பார்த்துக் கொண்டிருக்க, ஒவ்வொரு திக்குகளிலும் ஒவ்வொரு முகமாக அவருக்கு நான்கு முகங்கள் உண்டாயின. ப்ரளய காலத்திய காற்றினால் அசைந்த பெரிதாகிய அலைகளுள்ள ஜலத்திலிருந்து உண்டான தாமரஸ புஷ்பத்தில் இருப்பவராகிய அந்த ஆதிதேவர் அந்தப் புஷ்பத்தையும், லோகங்களின் தத்துவத்தையும், தம்மையும் நன்றாகத் தெரிந்து கொள்ளவில்லை. அப்பொழுது அவர், 'தாமரஸ புஷ்பத்தில் இருக்கும் நான் யார்? இந்த ஒரு புஷ்பம் மாத்திரம் எங்கிருந்து ஜலத்தில் உண்டாயிற்று? இதற்கு ஆதாரம் கீழாக ஏதாவது இருக்கவேண்டும்" என்று யோசித்து, அந்தப் புஷ்பத்தின் தண்டிலுள்ள துவாரத்தின் வழியாக ஜலத்திற்குட் சென்றார் அவ்விடத்தில் அந்தத்தாமரைத் தண்டின் மூலத்தைத் தேடிப்பார்த்தும் அவருக்கு அது தெரியவில்லை. ஓ விதுரரே! தம்முடைய உற்பத்திக்குக் காரணமாயிருப்பதைத் தேடிச் செல்லும் அவர் ஜலத்திற்குள் இருக்கும் இருட்டிற்கு அப்புறம், மூன்று முனைகளுள்ளதும் (நடந்தது, நடக்கிறது, நடக்கப் போவது ஆகிய மூன்று முனைகள்) ப்ராணிகளுடைய ஆயுளைச்

செலவழித்து அவர்களுக்குப் பயத்தை உண்டுபண்ணு கிறதும், பெரியதும், ஸ்ரீ மகாவிஷ்ணுவின் சுதர்சனம் என்ற அஸ்திரமுமான கால சக்கரத்தைக் கண்டார். (வெகு நாளாகத் தேடினார் என்பது கருத்து.)

21–31. பிறகு அவர் தம்முடைய எண்ணம் நிறைவேறாமல் மறுபடியும் தமக்கிருப்பிடமாகிய புஷ்பத்தை அடைந்து, ஸ்வாசங்களை அடக்கி, மனத்தை ஒருவகைப்படுத்தித் தியானஞ் செய்து கொண்டிருந்தார். இப்படி நூறு வருஷங்கள் சென்றன. யோகத்தால் ஞானம் விசேஷமாக வ்ருத்தி யடைந்தது. முந்தித் தேடியும் எவர் காணப்படவில்லையோ, அவர் அவருடைய இருதயத்தில் தாமாகவே ப்ரகாசித்தார். அந்தப் புருஷன் தாமரைத் தண்டுபோல வெண்மை நிறமுள்ளதும். ஆதிசேஷனுடைய நீண்ட உடலாகிய மஞ்சத்தில் சயனித்துக் கொண்டிருந்தார். அந்த ஆதி சேஷன் தம்முடைய அனேக படங்களிலிருந்தும் உத்தம இரத்தினங்களுடைய காந்தியால் ப்ரளய காலத்திய இருட்டை விலக்கி ஜலத்தில் வஸித்து வந்தார்.

மேலும் அந்தப் புருஷன் மரகதமலையின் காந்தியைக் காட்டிலும் அழகுள்ளவராக இருந்தார். சந்த்யா காலத்தில் சிவந்த மேகங்கள் அந்த மலையின் மத்தியிலிருப்பது போல, பீதாம்பரத்தைத் தரித்து கொண்டிருந்தார். அந்த மலையின் ஸ்வர்ண சிகரம் போல அவருடைய கிரீடம் ப்ரகாசித்தது. அந்த மலையிலிருக்கும் மேகங்கள், ஓஷதிகள், புஷ்பங்கள் ஆகிய இவைகள் போல அவருடைய வனமாலை விளங்கிற்று. அதிலிருக்கும் மூங்கில்கள் போல அவருடைய கைகள் ப்ரகாசித்தன. அதிலிருக்கும்

மரங்கள் போல அவருடைய பாதங்கள் விளங்கின. அவர் தமக்குத் தகுதியான பருமன், உயரம் ஆகிய இவைகளுடன் கூடியதும், மூவுலகத்தையும் தனக்குள் அடக்கிக் கொண்டதுமான திவ்ய சரீரமுள்ளவர், பலவகையான திவ்யமான ஆபரணங்களாலும் வஸ்திரங்களாலும் அலங்கரிக்கப்பட்டவர்: மேலும் தங்கள் தங்கள் இஷ்டத்தை அடைவதற்கு வேதத்தில் சொல்லியபடி பூஜிப்பவர்களுக்கு அவர்களுடைய காமத்தைக் கொடுக்கக்கூடிய தம்முடைய பாதமாகிய தாமரை புஷ்பத்தை ப்ரகாசப் படுத்துகிறவர்.

அந்தப் பாதங்களிலிருக்கும் நகங்கள் சந்திரன் போலப் ப்ரகாசிக்கின்றன. அவைகளின் காந்தியானது புஷ்பத்தின் இதழ்போன்ற விரல்களில் பரவுகிறது, அவருடைய முகமானது ஜனங்களுடைய துக்கத்தை நீக்கும் சிரிப்புள்ளது. மிகுந்த காந்தியுள்ள குண்டலங் களால் அழகானது. சிவந்த உதடுகளுள்ளது, அழகான மூக்குள்ளது. மனோகரமாகிய புருவங்களுள்ளது. அப்போர்ப்பட்ட முகத்தால் தம்மைப் பூஜிப்பவர்களைக் கௌரவப்படுத்துகிறவர். கதம்ப புஷ்பத்தின் தாதுக்கள் போல பொன்னிறமுள்ள வஸ்திரத்தாலும், மேகலையா லும் ப்ரகாசிக்கும் இடுப்புள்ளவர். விலை உயர்ந்ததும், ஸ்ரீ வத்ஸத்துடன் கூடிய மார்புக்குத் தகுதியானது மான ஹாரத்தால் ப்ரகாசிப்பவர். மேலும் அவர் சந்தன மரம் போன்றவர். உத்தமமான தோள்வளை களில் இழைக்கப்பட்ட இரத்தினங்களால் ப்ரகாசிக்கும் அவருடைய கைகள் கிளைகள் போலிருந்தன. அந்த மரத்தின் வேர்கள் போல் அவருடைய மூலம் ஒருவராலும் காண முடியாதது. மரமானது சிறந்த ஸர்ப்பங்களின் உடல்களால் சுற்றப்பட்டிருப்பது போல அவர் ஆதிசேஷனால் சுற்றப்பட்டவர்.

பின்னும் அவர் பர்வதம் போல் ப்ரகாசித்தார். தாவர ஜங்கமங்களுக்கு இருப்பிடமாக இருப்பவர். பர்வதம் சிறந்த ஸர்ப்பத்தால் ஆசிரயிக்கப்படுவது போல் ஆதிசேஷனால் ஆச்ரயிக்கப்பட்டவர். பர்வதம் சமுத்திர ஜலத்தில் மறைந்திருப்பது போல ப்ரளய ஜலத்தில் மறைந்தவர், மைனாகம் முதலியவை சுவர்ண சிகரமுள்ளவையாக இருப்பது போல் ஸ்வர்ண கிரீடமுள்ளவர். பர்வதத்தில் இரத்தனங்கள் இருப்பது போலக் கௌஸ்துப ரத்னத்தைத் தரித்தவர், வேதங்களாகிய வண்டுகளால் ப்ரகாசிப்பதும், தம்முடைய கீர்த்தி ரூபமாயுள்ளதுமான வனமாலை யுள்ளவர். சூர்யன், சந்திரன், வாயு, அக்கினி ஆகிய இவர்களாலும் அடையமுடியாதவர், முக்காலத்திலும் ப்ரகாசிப்பவைகளும், நான்கு புறத்திலும் சஞ்சரிப்பவை களும் யுத்தத்திற்குச் சாதனங்களுமான ஸுதர்சனம் முதலியவைகளாலும் அடைய முடியாதவர், இம் மாதிரியான புருஷனை பார்த்து ஹரியென்று தெரிந்து கொண்டார்.)

32–33. இப்போர்ப்பட்ட பகவத் ஸ்வரூபத்தைப் பார்த்தபொழுதே ப்ரஹ்மதேவர் அந்தப் பகவானுடைய நாபியில் தோன்றிய தாமரைப் புஷ்பத்தையும், தம்மையும், ஜலத்தையும், வாயுவையும், ஆகாசத்தையும் கண்டார், இந்த ஐந்தை காட்டிலும் வேறொன்றும் அவருக்குப் புலப்படவில்லை. அவர் ரஜோகுணத்தின் சம்பந்தத்தை அடைந்து, ஜனங்களைச் ஸ்ருஷ்டிக்க விரும்பியவராக, மேற்காட்டிய ஐந்தைக் கொண்டே ஸ்ருஷ்டிகரணங்களைப் பார்த்து, பலவகையான ஜகத்ஸ்ருஷ்டியைப்பற்றி யோசித்து, ஸ்தோத்திரஞ் செய்யத் தகுந்தவரான ஸ்ரீமந் நாராயணனைப் பின்வருமாறு ஸ்தோத்திரஞ் செய்ய ஆரம்பித்தார்.

அத்தியாயம்–9

ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ப்ரஹ்மதேவர் ஸ்தோத்திரஞ் செய்தது

1–26 ஓ பகவன்! வெகுநாளாக உபாசித்ததனால் நான் உம்மை நன்றாகத் தெரிந்து கொண்டேன். உம்முடைய ஸ்வரூபத்தை ஜனங்கள் தெரிந்து கொள்ளாமலிருப்பதே குற்றமாகும். உம்மைத் தவிர வேறு ஒரு வஸ்துவுமில்லை. ஆதலால் அறியக் கூடியவர் நீர் ஒருவரே. உம்மைக் காட்டிலும் வேறு வஸ்து இருப்பதாகத் தோன்றினாலும், அது சுத்த சத்வகுணமுள்ளதன்று. மேலும் மாயையின் குண சம்பந்தத்தால் நீரே பல வகையாகத் தோன்றுகிறீர். ஓ பகவன்! சித்சக்தியின் ஆவிர்ப்பவத்தால் தமோ குணங்கள் நீங்கிய நீர் பக்தர்களை அனுக்கிரகிப் பதற்காக இந்த உருவத்தை அங்கீகரித்திருக்கிறீர். இந்த உருவமானது அனேக அவதாரங்களுக்குக் காரணமாய் உள்ளது. இந்த உருவத்தின் நாபியிற்றோன்றிய தாமரை புஷ்பத்திலிருந்து நான் உண்டானேன். ஓ! பரமாத்மன்! தடையற்ற ப்ரகாசமுள்ளதும், பேதமற்றதும் ஆனந்தத்தைக் காட்டிலும் வேறானதும், பூதங்களுக்கும் இந்திரியங்களுக்கும் காரணமாயிருப் பதுமான பகவத் ரூபமானது இந்த உம்முடைய உருவத்தைக் காட்டிலும் வேறானதென்று நான் நினைக்கவில்லை. அதனால்தான் இந்த ஸ்வரூபத்தை ஆச்ரயித்திருக்கிறேன்.

ஓ, உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்பவரே, உபாஸகர்களான நமக்கு க்ஷேமத்தைச் செய்வதற்காக, நீர், தியானம் பண்ணும்போது அந்த இந்த உருவத்தைக்

காண்பீத்தீர். அப்பேர்ப்பட்ட பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறோம். ஈசுவரன் இல்லை என்று சொல்பவர்களும், நரகத்தை அனுபவிக்கக் கூடியவர் களுமான புருஷர்களால் நீர், ஆதரிக்கப்படுகிறதில்லை. எவர்கள் உங்களுடைய பாதங்களாகிய தாமரை புஷ்பத்தின் வாசனையைக் க்ரஹிக்கிறார்களோ, எவர்கள் உம்முடைய கதைகளைக் கேட்கிறார்களோ, எவர்கள் மிகுந்த பக்தியால் உம்முடைய சரணத்தை ஆச்ரயிக்கிறார்களோ அவர்களுடைய இருதய புண்டரீகத்திலிருந்து நீர் ஒரு பொழுதும் விலகுகிறது இல்லை. (எப்பொழுதும் அவ்விடத்திலேயே வஸிக்கிறீர் என்பது தாத்பரியம்) ஜனங்கள் மோக்ஷத்தைக் கொடுக்கும் உம்முடைய பாதத்தை எதுவரையில் ஆச்ரயிக்கவில்லையோ அதுவரையில் பணம், வீடு, மித்திரர்கள் ஆகிய இவர்களுக்காக பயம், துக்கம், ஆசை, அவமானம், அதிக ஆசை ஆகிய இவைகளும், உபத்திரவத்திற்குக் காரணமாகிய "என்னுடையது" என்ற கெட்ட அபிமானமும் உண்டாகின்றன. எவர்கள் ஸகல அசுபங்களையும் போக்கடிக்கக் கூடிய உம்முடைய கதைகளைக் கேட்பது, நாமங்களை உச்சரிப்பது, முதலியவைகளில் ஆசையில்லாதவர் களாகவும், புத்தி கெட்டவர்களுமாக இருக்கிறார்களோ, அவர்கள் மிகவும் அதமர்கள். மேலும், அவர்கள் லோபத்தால் கெடுக்கப்பட்ட மனது உள்ளவர்களும் தீனர்களுமாகிப் போகத்தினுடைய சொற்ப ஸுகத்திற்காகத் துக்கத்தைக் கொடுக்கக் கூடிய கர்மங்களை அடிக்கடி செய்கிறார்கள். ஓ, பகவான்! பசி, தாகம், வாதம், பித்தம் ஸஹிக்க முடியாத சிலேஷ்மம், சீதம், உஷ்ணம் காற்று சகிக்க முடியாத மழை, மன்மதனாகிய அக்கினி மிகுந்த கோபம்

ஆகிய இவைகளால் ஒருவருக்கொருவர் துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த ஜனங்களைப் பார்த்து என்னுடைய மனம் துக்கிக்கிறது. ஓ ஈச! இந்திரியங்கள் விஷயங்கள் ஆகிய இவைகளாகிய மாயையின் பலமுள்ளதும், ஆத்மாவைக் காட்டிலும் வேறானது மாகிய தேஹம் முதலியவைகளுடைய உண்மையை ஜனங்கள் எப்பொழுது தெரிந்து கொள்ளுகிறார்களோ, அது வரையில் கர்மங்களுடைய பலனுள்ளதும், ப்ரயோசன மற்றதுமான சம்சாரமானது ஒழிவடைகிறது இல்லை. மேலும், ஜனங்களும் அதுவரையில் துக்கக் கூட்டத்தை அடைகிறார்கள்.

ஓ தேவ்! பகலில் பல விஷயங்களில் சென்று கஷ்டப்படும் இந்திரியங்களுள்ளவர்களும், ராத்திரியில் தூங்குகிறவர்களும், பலவகையான மனோரதத்தால் சொப்பனம் நேர்ந்த போது உடனே விழித்துக் கொள்வதால் சொப்பன சுகத்தையும் இழந்தவர்களும், இப்படி எல்லாக் காரியங்களிலும் தெய்வத்தால் தடுக்கப்பட்ட முயற்சியுள்ளவர்களுமான புருஷர்கள் ரிஷிகளானாலும் (விவேகிகளானாலும்) உம்முடைய கதையைக் கேட்பதிலும், நாமங்களை உச்சரிப்பதிலும் ஆசையில்லாதவர்களாக இருப்பார்களேயானால் அவர்கள் சம்சாரத்தை அடைகிறார்கள். ஓ நாத! குரு முகமாகத் தங்களுடைய மார்க்கத்தைச் ச்ரவணம் பண்ணின புருஷர்கள் உம்மிடத்தில் பக்தி செய்வார்கள்.

பக்தியோகத்தால் சுத்தமான அவர்களுடைய ஹ்ருதய கமலத்தில் நீர் வஸிக்கிறீர், ஓ பெரியோர் களால் கானம் பண்ணக்கூடியவரே! உம்முடைய

பக்தர்கள் தங்களுடைய மனத்தால் உம்முடைய உருவத்தைத் தங்களுடைய இஷ்டப்படி (குருமுகமாகத் தெரிந்து கொள்ளலாம்) தியானம் பண்ணுகிறார்கள். அவர்களை அனுக்கிரகிப்பதற்காக நீர் உண்மையான ஸ்வரூபத்தை அவர்களுக்குக் காண்பிக்கிறீர். அத்விதீயரும் பல விதமான ஜனங்களிடத்தில் அந்தர்யாமியாய் அவர்களுக்கு அனுகூலத்தைச் செய் பவருமான நீர் பக்தி செய்யாதவர்களுக்கு அரியதாகிய பூத தயையால் எப்படி சந்தோஷப்படுத்துகிறீரோ, அதுபோல மிகுந்த உபசாரங்களால் பூஜிப்பவர்கள் இடத்திலும், காமனையால் பூஜிக்கும் தேவர்களிடத்தி லும் சந்தோஷப்படுகிறதில்லை. ஆனதால் புருஷர் களால் செய்யப்படும் யாகம் முதலிய அநேக ஸத்கர்மங்களுக்கும், தானத்திற்கும், கடுந்தபஸுக்கும், விரதானுஷ்டானத்திற்கும், பகவானுடைய ப்ரியமே ச்ரேஷ்டமாகிய பலன். பகவானாகிய உம்மிடத்தில் சமர்ப்பிக்கப்படும் தருமமானது நாசமடைகிறதில்லை.

எப்பொழுதும் ஸ்வரூப சைதன்யத்தாலேயே பேத ஞானத்தைப் போக்குகிறவரும், வித்யாசக்தியுள்ள வருமான பரம புருஷனாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். மேலும் ஜகத்தைப் படைப்பது, பரிபாலிப்பது, சம்ஹரிப்பது ஆகிய இவைகளுக்குக் காரணமாகிய மாயையின் விலாசத்துடன் விளையாடு கிறவரும், எல்லாவற்றிற்கும் நியந்தாவுமான உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். எந்தப் பகவானுடைய அவதாரங்கள், குணங்கள், செய்கைகள் ஆகிய இவைகளால் ஏற்படும் திவ்ய நாமங்களை (தேவகீ, நந்தன, தாசரதி, சர்வஞ்ஞ, பக்த வத்ஸல, கம்சாரே, கோவர்த்தனாத்தரண என்பது முதலியவைகள்)

சாகுந்தருணத்தில் எவர்கள் (பகவந்நாமத்தை) உச்சரிக்கிறார்களோ, அவர்களுடைய பல ஜன்மங்களில் சம்பாதிக்கப்பட்ட பாபங்கள் யாவும் அந்த க்ஷணத்திலிலேயே நீங்குகின்றன. மேலும் அவர்கள் ஆவரணமற்றதும் உற்பத்தியற்றதும், சத்யமுமான ப்ரஹ்ம ஸ்வரூபத்தை அடைகிறார்கள். அந்தப் பகவானைச் சரணமடைகிறேன்.

எவர் தம்மையே அதிஷ்டானமாயுடைய ப்ரதானத்தை முக்குண ரூபமாகப் பிரித்து ஜகத்தின் உற்பத்தி, பரிபாலனம், சம்ஹாரம் ஆகிய இவைகளுக்கு முறையே காரணர்களாக இருக்கும் நான்,(ப்ரம்ஹா) பரமசிவன், விஷ்ணு ஆகிய மூன்று பாதங்களுள்ளதும் (வேர்களுள்ளது) மரீசி முதலிய ப்ராஜாபதிகளாகிய அநேக கிளைகளுள்ளதும், ஒன்றாயிருப்பதுமுமான லோக விருக்ஷமாக இருக்கிறாரோ, அந்த உம்மை நமஸ்கரிக் கிறேன். இவ்வுலகத்திலிருக்கும் ஜனங்கள் கெட்ட காரியத்திலேயே ப்ரவர்த்திக்கிறார்கள். மேலும், உம்மால் சொல்லப்பட்டதும் க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியதுமான உம்மைப் பூஜிப்பதாகிய காரியங்களைச் செய்கிறதில்லை. அப்பேர்ப்பட்ட ஜனங்களுடைய ஜீவித ஆசையை (பிழைத்திருக்க வேண்டுமென்ற எண்ணத்தை) எவர் கால ஸ்வரூபியாயிருந்து போக்குகிறாரோ அவருக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். மேலும், இரண்டுபராார்த்தம்வரையில் (ப்ரஹ்மதேவருடைய ஆயுளின் பாதியாகிய ஐம்பது வருஷங்களுக்குப் பராார்த்தமென்ற பெயர்,) அழியாமலிருப்பதும், ஸகல லோகங்களால் நமஸ்கரிக்கப்பட்டதுமான இந்தப் பதத்தை அடைந்த நானும் கால ஸ்வரூபியாகிய உம்மைக் கண்டு பயப்படுகிறேன்.

உம்மைத் தெரிந்து கொள்வதற்காக அநேக வருஷங்கள் தவஞ் செய்தேன். ஆதலால் யாகம் முதலிய சத்கர்மங்களுக்கு அதிபதியாகிய உம்மை நமஸ்கரிக்கிறேன். நீர் விஷய சுகத்தில் ஆசையில்லாத வரானாலும், திர்யக், மனுஷ்யர்கள், தேவர்கள் முதலிய வர்களின் சரீரத்தை உமது இஷ்டப்படி அங்கீகரித்து உம்மால் செய்யப்பட்ட தருமத்தின் மரியாதையைக் காப்பாற்றிக் கொண்டு இருக்கிறீர். அப்பேர்ப்பட்ட புருஷோத்தமராகிய உம்மை நமஸ்கரிக்கிறேன். எவர் ஐந்து பர்வங்களுள்ள அவித்தைக்கு வசப்படாத வரானாலும், ஸகல லோகங்களையும் வயிற்றில் வைத்துக் காப்பாற்றிக் கொண்டு, பயங்கரமான அலைகளுள்ள சமுத்திர ஜலத்திற்குள் ஆதிசேஷனாகிய மெதுவான படுக்கையில் படுத்து, ஜனங்களுக்கு நித்திரா சுகம் இப்பேர்ப்பட்டது என்பதைக் காண்பிக்கிறாரோ, எவருடைய நாபியில் தோன்றிய தாமரஸ புஷ்பத்திலிருந்து மூவுலகத்தையும் ஸ்ருஷ்டிக்கும் நான் எவருடைய அனுக்ரஹத்தால் உண்டானேனோ, எவருடைய வயிற்றில் ஸகல உலகங்களும் வஸிக்கின்றனவோ, எவர் யோக நித்திரையின் முடிவில் தாமரைமலர் போன்ற கண்களைத் திறக்கின்றாரோ, அந்தப் பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன்.

அப்பேர்ப்பட்ட இந்தப் பகவான் ஸகல உலகத் திற்கும் அனுகூலத்தைச் செய்பவர். அந்தர்யாமியா யிருப்பவர். நமஸ்கரித்தவர்களிடத்தில் ப்ரியமுள்ளவர். அந்தப் ப்ரமபுருஷன் எந்த ஞானத்தாலும், ஐசுவரியத் தாலும் இந்த ஜகத்தைச் சுகப்படுத்துகிறாரோ, அப்பேர்ப்பட்ட ஞானத்தை எனக்குக் கொடுக்கட்டும்.

அதனால் நான் இந்த ஜகத்தை முன் கல்பத்திலிருந்ததுபோல் ஸ்ருஷ்டிப்பேன். குணாவதார முள்ளவரும், முகமலர்ச்சியுள்ளவருமான இந்தப் பகவான் தம்முடைய சக்தியாகிய லக்ஷ்மீதேவியுடன் எந்த எந்த சரிதங்களைச் செய்யப்போகிறாரோ, அவைகளெல்லாம் எனக்குத் தோன்றட்டும். அந்தப் பகவானுடைய ஆக்ஞையால் ஜகத்தை (பகவானையே ப்ரபாவமாயுடையது) நான் ஸ்ருஷ்டிக்கும் பொழுதும் என்னுடைய மனமானது அந்தப் பகவானிடத்திலேயே ரமிக்கட்டும். ஸ்ருஷ்யின் வைஷம்யத்தால் ஏற்படும் பாபத்தைப் போக்கடித்துக் கொள்வேன்.

அளவற்ற சக்தியுள்ள அந்தப் பரம புருஷன் ப்ரளய ஜலத்தில் வஸிக்கும்பொழுது அவருடைய கொப்பூழிலிருந்து விஞ்ஞான சக்தியாகிய நான் உண்டானேன். அப்பேர்ப்பட்ட நான் விசித்திரமான இந்தப் ப்ரபஞ்சத்தை விஸ்தாரப்படுத்தும்பொழுது வேதத்தினுடைய அவயமாகிய என்னுடைய வாக்கின் உச்சாரணங்கள் கெட்டுப் போகாமலிருக்கட்டும். மேலும், மிகுந்த கருணையுள்ளவராகிய அந்தப் புராண புருஷன், விசேஷ விசுவாசமுள்ள சிரிப்புடன் மலர்ந்த கண்களுள்ளவராகிய என்னிடம் வந்து ஜகத்தை உண்டுபண்ணுவதற்காகத் தேன்போல இனிமையான வார்த்தையால் என்னுடைய மனக்கவலையைத் தீர்க்க வேண்டும். இப்படி ப்ரஹ்மதேவர் தம்முடைய உற்பத்திக்குக் காரணமாயிருக்கும் பகவானைத் தபஸினாலும் உபாசனையாலும், சித்தத்தை யொரு வன்கட்டுத்துவதாகிய ஸமாதியாலும் தரிசித்து, மனத்திற்கும் வாக்குக்கும் எட்டியவரையில் ஸ்தோத்திரஞ் செய்து ச்ரமப்பட்டவர்போல

மௌனமாக இருந்தார்.

27–44 மதுவென்னும் அசுரனைக் கொன்றவராகிய பகவான் ப்ரளய கால ஜலத்தால் வருத்தப்பட்ட மனமுள்ளவரும் லோகத்தைப் படைக்கும் விஞ்ஞானத் திற்காக முயற்சிப்பவரும், தம்முடைய அம்சமுமான ப்ரஹ்மதேவருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டு, "ஓ வேதகர்ப்பரே! சோம்பலை அடையாதீர். ஸ்ருஷ்யில் முயற்சியும். எதற்காக என்னைப் ப்ரார்த்திக்கிறீரோ, அதனை முன்னமேயே அனுக்கிர கித்திருக்கிறேன். மறுபடியும் நீர் தவம் செய்யும். என் விஷயமாகிய உபாசனையையும் அனுஷ்டியும். அவை களால் நம்முடைய ஹ்ருதயத்தில் ஸகல லோகங்களும் தோன்றும் (இதுவரையில் மறந்திருந்தவைகள்). மேலும் பக்தியுள்ளவராகிய நீர் உம்மிடத்திலும், லோகத்திலும், எங்கும் பரவியிருக்கும் பரப்ரஹ்மமாகிய என்னையும் என்னிடத்திலுள்ள ஜீவர்களையும் பார்ப்பீர். கட்டை களில் அக்கினி யிருப்பதுபோல ஸகல பிராணிகள் இடத்திலும் நானிருப்பதாக ஜனங்கள் எப்பொழுது பார்க்கிறார்களோ, அப்பொழுது அஞ்ஞானம் விலகும். மேலும் எப்பொழுது ஜீவன், தன்னைப் பூதங்கள், இந்திரியங்கள், குணங்கள் ஆகிய இவைகளின் சம்பந்தமற்றவனாகவும், ஸ்வரூபமாகிய என்னுடன் லயித்தவனாகவும் பார்க்கிறானோ, அப்பொழுது மோட்சத்தை அடைகிறான். பலவகையான கர்மங்களைக் கொண்டு அநேக ப்ரஜைகளைச் சிருஷ்டிக்க விரும்பிய உம்முடைய மனம் இவ்விஷயத்தில் ப்ரமையை அடையாது. என்னுடைய அனுகூலம் மேலானது. ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கும்போதும் உம்முடைய மனமானது என்னிட த்திலேயே அதிக ஆசக்தியுள்ளதாக இருக்குமாகையால்

பாபியான ரஜோகுணமானது முந்திய ரிஷியான உம்மிடத்தில் சம்பந்திக்கிறதில்லை. நான் ப்ராணி களால் அறிய முடியாதவனானாலும், பூதங்கள், இந்திரியங்கள், சத்வம் முதலிய குணங்கள், அகங்காரம் ஆகிய இவைகளுடைய சம்பந்தமற்றவனென்று உம்மால் அறியப்பட்டிருக்கிறேன். தாமரைப் புஷ்பத்தின் தண்டு வழியாக அதன் காரணத்தைத் தேடி நீர் சென்றபோது, உமக்கு என் விஷயமாக சந்தேகமிருந்த படியால், (இதற்குக் காரணமொன்றிருக்க வேண்டும். அதுவோ தெரிய வில்லை. ஆனதால் இருக்கிறதா இல்லையாவென்ற சம்சயம்) என்னுடைய ஸ்வரூபத்தை வெளியில் காண்பிக்கவில்லை. ஓ ப்ரஹ்மதேவரே! ஆச்சரியமான என் கதையின் அடையாளமுள்ளதாக என்னை ஸ்தோத்திரம் செய்ததும், தபஸ்செய்ததும் ஆகிய இவைகள் என்னுடைய அனுக்கிரகத்தால் உண்டான வையேயாகும். ஸ்ருஷ்டிக்க விரும்பிய நீர் குணங்களின் ஸம்பந்தமுள்ளவன் போலத் தோன்றும் என்னை அவைகளின் ஸம்பந்தமற்றவனாகவே வருணித்துக் கொண்டு ஸ்தோத்திரம் செய்தபடியால் உம்மிடத்தில் ப்ரியமுள்ளவனாக இருக்கிறேன். இந்த ஸ்தோத்திரத் தால் எந்த மனிதன் ஒவ்வொரு நாளும் என்னைச் சந்தோஷப்படுத்துகிறானோ, அவனிடத்தில் நான் மிக்க ப்ரியத்துடன் அவனுடைய இஷ்டங்களைப் பூர்த்தி செய்வேன். மேலும் குளம், கிணறு ஆகிய இவைகளை வெட்டுவிப்பது முதலிய பூர்த்த தர்மம், தபஸ், யக்ஞம், தானம், யோகம், ஸமாதி ஆகிய இவைகளால் கிடைக்கும் க்ஷேமமாகிய பலன் என்னுடைய ப்ரீதியென்றே ஞானிகள் நினைக்கிறார் கள். நான் ஜீவர்களுக்கு ஆத்மாவாக இருப்பவன். ப்ரியமானவர்களுக்குள் மிக்க ப்ரியமானவன். அதனால்

T-V-m 8.3-2

என்னிடத்தில் ஆசைப்பட வேண்டும். ஆதலால் ஸகல வேதஸ்வரூபமாயும் என்னிடத்திலிருந்து உண்டானதுமாகிய உம்முடைய ஸ்வரூபத்தாலேயே (வேறு ஸாதனத்தை அபேட்சியாமல்) ப்ரஜைகளைச் ஸ்ருஷ்டியும். என்னிடத்திலிருப்பவர்களை வெளிப் படுத்தும், என்று தாமரை மலர் போன்ற நாபியுள்ள வரும், ப்ரதானம் (மாயை) புருஷன் (ஜீவன்) இவர்களுக்கு அதிபதியுமான ஸ்ரீமந் நாராயணன் அனுக்ரஹித்து, ஸ்ருஷ்டிக்க வேண்டியதைப் ப்ரகாசப் படுத்தி அவருடைய கவலையைத் தீர்த்து மறைந்தார்.

அத்தியாயம்–10

பத்துவகையான ஸர்க்கங்கள்

1–2. அதனைக் கேட்டு விதுரர். மைத்ரேயரை நோக்கி, 'ஓ பகவன்! உலகங்களுக்குப் பிதாமகரும் ப்ரபுவுமாகிய ப்ரஹ்மதேவர் புருஷோத்தமன் மறைந்த பிறகு தேகத்திலுண்டானவைகளும் மனத்திலிருந்து உண்டானவைகளுமான ப்ரஜைகளை எவ்வளவு வகையாய்ப்படைத்தார்? தவிரவும், என்னால் கேட்கப் பட்ட மற்ற எல்லாக் கேள்விகளுக்கும் க்ரமமாக உத்தரஞ் சொல்லி என்னுடைய சம்சயங்களை நீக்க வேண்டும். நீர் ஸகலத்தையும் அறிந்தவர்களுக்குள் சிறந்தவர்' என்று கேட்டுக்கொண்டார்.

3–9. அதனைக் கேட்டு அந்த மைத்ரேய மகர்ஷி மிகவும் ப்ரியத்துடன் அவைகளை மறவாமலேயே தமது மனத்தில் வைத்துக்கொண்டு ப்ரத்யுத்தரம் சொல்ல ஆரம்பித்தார். ப்ரஹ்மதேவர் ஸ்ரீமந் நாராயண னுடைய ஆக்ஞையின்படி. அவரிடத்திலேயே தம்முடையை மனத்தைச் செலுத்தி தேவமானத்தில் நூறு வருஷகாலம் தவம் செய்தார். அப்பொழுது ப்ரஹ்மதேவர் எதிலிருந்து தவம் செய்தாரோ அந்தத் தாமரைப் புஷ்பத்தையும் ஜலத்தையும் ப்ரளய காலக் காற்றானது அசைத்தது. அதனைக் கண்ணுற்ற ப்ரஹ்மதேவர் தம்முடைய வித்தையாலும், மிகவும் விருத்தியடைந்த தபஸினாலும் மிக்க விஞ்ஞான பலமுள்ளவராக அந்த வாயுவையும் ஜலத்தையும் பானஞ் செய்தார். பிறகு அவர் தமக்கு இருப்பிடமும், ஆகாசத்தில் வியாபரித்ததுமான தாமரைப்

புஷ்பத்தைப் பார்த்து "பூர்வ கல்பத்தில் லயமடைந்த லோகங்களை இந்தப் புஷ்பத்தைக் கொண்டு ஸ்ருஷ்டிப்பேன்" என்று யோசித்தார். பின்பு அவர் ஸ்ரீமந் நாராயணனால் ஜகத் ஸ்ருஷ்டியில் தூண்டப் பட்டு. பதினான்கு வகையாக ஆகக் கூடிய அந்தத் தாமரை புஷ்பத்தை மூன்று வகையாகப் பிரித்தார் (மூவுலகமாக வென்பது கருத்து). ப்ராணிகளுடைய போக ஸ்தானமாகிய மூவுலகத்தின் ஸ்ருஷ்டியானது இம்மாதிரி சொல்லப்பட்டது. (மூவுலகமும் காம்ய கர்மத்தின் பலமாகையால், ப்ரஹ்மதேவரின் ஒவ்வொரு பகலிலும் அவை ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன என்பது கருத்து) பலனை உத்தேசியாமல் செய்த நல்ல கர்மங்களின் பலமே ப்ரஹ்ம பதம் என்றார். (மகர்லோகம் முதலிய சத்யலோகம் வரையிலுள்ள லோகங்கள் நிஷ்காம கர்மங்களின் பலன்களாகையால் இரண்டு பரார்த்தம் வரையில் அவைகளுக்கு நாசமில்லை.)

10. அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி "ப்ரபுவாகிய ஓ ப்ராஹ்மணோத்தம! அனேக உருவமுள்ளவரும், ஆச்சரியகரமாக காரியங்களுள்ள வருமாகிய ஸ்ரீமந் நாராயணருக்குக் காலமென்ற ஸ்வரூபம் உண்டென்று சொன்னீரல்லவா? அதனை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

11–31 1/2. பிறகு மைத்ரேயர் விதுரரை நோக்கி, காலமென்பது மகத் தத்துவம் முதலியவைகளுடைய பரிணாமத்தால் ஏற்படுகிறது. அதற்கு உற்பத்தியும் இல்லை. முடிவும் இல்லை. அந்தக் காலத்தை நிமித்த காரணமாக வைத்துக் கொண்டு, பரம புருஷன் தம்மை விளையாட்டாகச் ஸ்ருஷ்டித்துக் கொண்டார்.

விஷ்ணுவின் மாயையால் ப்ரஹ்மமானது இந்தப் ப்ரபஞ்ச உருவமாக ஆகி, அவ்யக்த ஸ்வரூபமுள்ளதும் எல்லாவற்றிற்கும் மேலானதுமான காலத்தால் தனியாகப் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் ப்ரபஞ்சமானது இப்பொழுது ப்ரகாசித்துக் கொண்டிருப்பதுபோலப் பூர்வ கற்பத்திலும் இருந்தது. அடுத்த கற்பத்திலும் இம்மாதிரியாகவே இருக்கும். அதனாலுண்டாகும் ப்ராகிருதம், வைகிருதம் என்ற பேதமுள்ள சர்க்கமானது ஒன்பது வகையுள்ளது. அந்த சர்க்கத்திற்குக் காலத்தாலும், திரவியத்தாலும, குணங்களாலும் மூன்று வகையான ப்ரளயம் ஏற்படுகிறது. பரமாத்மாவினிடமிருந்து குணங்களுடைய வித்தியாசத்தால் ஏற்படும் மகத் தத்துவத்தின் ஸ்ருஷ்டி. முதலாவது, திரவியம், ஞானம் இவைகளால் ஏற்படும் அகங்காரத்தின் ஸ்ருஷ்டி. இரண்டாவது, பூத ஸ்ருஷ்டி. மூன்றாவது, அது தன்மாத்திரையுள்ளது, த்ரவிய சக்தியுள்ளது. நான்காவது இந்திரிய ஸ்ருஷ்டி. அது ஞானம், கருமம் ஆகிய் இவைகளின் ஸ்வரூபம். ஐந்தாவது மன ஸ்ருஷ்டி. அதுவே வைகாரிக தேவ ஸ்ருஷ்டி எனப்படுகிறது. ஆறாவது அவித்தையின் ஸ்ருஷ்டி. அந்த அவித்தை ஜீவர்களுக்கு ஆவரணத்தை யும், விக்ஷேபத்தையும் உண்டுபண்ணுகிறது. இந்த ஆறு வகையான சர்க்கங்களும் ப்ராக்ருதமெனப்படு கின்றன. வைகிருதமான சர்க்கங்களையும் சொல்லு கிறேன், எவரைத் தியானஞ் செய்த மாத்திரத்தில் சம்சார துக்கம் நீங்குமோ, ரஜோ குணத்தை யடைந்த அந்தப் பரம புருஷனுக்கு இது லீலையேயாம். தாவரங்களுடைய ஸ்ருஷ்டியே வைகிருத ஸ்ருஷ்டியில் முக்கியமானது. அதுவே ஏழாவது ஸ்ருஷ்டியாகும். அந்தத் தாவர ஸ்ருஷ்டியானது ஆறுவகையானது. எப்படியெனில், புஷ்பிக்காமல் காய்க்கும் அரசு,

அத்தி; பலா முதலிய மரங்கள் ஒருவகையாம். புஷ்பித்துப் பழுக்கும் யவம், நெல், பயறு முதலிய வைகள் மற்றொரு வகையாம். புஷ்பங்களையே ப்ரதானமாயுள்ள மல்லிகை முதலிய கொடிகள் மற்று ஒருவகையாம். மூங்கில் முதலியவைகள் பின்னொரு வகையாம். மற்ற கொடிகள் ஒரு வகையாம். மற்ற மரங்களும் ஒருவகையாம். இவைகள் யாவும் நடை அற்றவை. ஆகாரமற்றவை. வெளியில் ப்ரகாசிக்காத சைதன்யமுள்ளவை, உள்ளே ஸ்பரிசத்தை அறியக் கூடியவை. பலவகையான பருமன், உயரம் முதலியவை களுமுள்ளவை, எட்டாவது திர்யக் திருஷ்டி. அது பசு, ஆடு, எருமை கிருஷ்ணசாரம், பன்றி, கவயம், குரு, செம்மறியாடு, ஒட்டகம் ஆகிய இரண்டு குளம்புகளுள்ள ஒன்பது வகையான ப்ராணிகள். கழுதை, குதிரை, அச்வதரம் கௌரம், சரபம், சமர் என்ற ஒற்றைக் குளம்புள்ள ஆறு வகையான பிராணிகள். நாய், நரி, செந்நாய், புலி, பூனை, முயல் சல்யுகம், சிம்மம், குரங்கு, யானை, ஆமை, உடும்பு ஆகிய ஐந்து நகங்களுள்ள பன்னிரண்டு வகையான ப்ராணிகள் மகரம் முதலிய ஜலத்தில் சஞ்சரிக்கும் பிராணிகள், கழுகு, பருந்து, கொக்கு, சேனம், பாஸம், பல்லூகம், மயில், ஹம்ஸம், சாரசம், சக்ரவாகம், காக்கை, கோட்டான் முதலிய பறவைகள் ஆகிய இருபத்தெட்டு வகையுள்ளது. இவைகள் யாவும் ஞானமில்லாதவை மிகவும் தமோ குணமுள்ளவை. கிராணேந்திரியத்தாலேயே தங்களுக்கு இஷ்டமானவை களை அறிந்துகொள்ள கூடியவை. தீர்க்கமாகிய ஆலோசனையற்றவை. (பசுக்களுக்கு, பசி தாகத்திலேயே அறிவு என்று கருத்து) ஒன்பதாவது மனிதர்களுடைய ஸ்ருஷ்டியோ ஒருவகையானது. அதற்கு ஆகாரம், சஞ்சரிப்பது ஆகிய இவைகள் பூமியிலேயே

ஏற்படுகின்றன. அம்மனிதர்களிடத்தில் ரஜோ குணமே அதிகம். கருமங்களைச் செய்வதிலேயே அவர்கள் ஆசையுள்ளவர்கள். துக்கத்தையே சுகமாக நினைத்த வர்கள் இம்மூன்று ஸ்ருஷ்டிகளுமே வைகிருத ஸ்ருஷ்டிகளென சொல்லப்படுகின்றன. வைகாரிக மென்று சொல்லப்பட்ட தேவ ஸிருஷ்டியும், வைகிருத ஸிருஷ்டியாகும். கௌமார ஸிருஷ்டியானது, ப்ராக்ருதம் வைகிருதம் இரண்டும் சேர்ந்ததாக ஆகும். (அவர்களுக்கு தேவத்வம், மனுஷ்யத்வம் இரண்டும் உண்டென்பது கருத்து) இந்த வைகிருதமான தேவ ஸ்ருஷ்டியானது தேவர்கள், பிதிருக்கள், அசுரர்கள். கந்தர்வர்கள், அப்ஸரசுகள், யக்ஷரக்ஷஸ்ஸுக்கள், சித்தசாரண வித்யாதரர்கள், கின்னரர் முதலியவர் கள், பூதம் பிரேத பிசாசங்கள் ஆகிய எட்டு வகை யுள்ளது, இப்படி ப்ரஹ்மாவினால் செய்யப்பட்ட சர்க்கங்கள் பத்துவகை யென்றும் சொல்லப்பட்டிருக் கின்றன. இதற்குமேல் மனுக்களையும், மன் வந்த்ரங்களையும் சொல்லுகிறேன், ஸ்ரீமத் நாராயணன் ரஜோ குணமுள்ளவராகப் ப்ரஹ்மதேவ ஸ்வரூபத்தை யடைந்து தம்மைத் தாமே தம்மைக்கொண்டு படைக்கிறார். அவர் வீணாகாத சங்கற்பமுள்ளவர். ஒ விதுரரே எல்லாவற்றிற்கும் ஈசுவரனாகிய பரமாத்மா மாயாவி ஆகையால் குணங்களுடைய சம்பந்தமுள்ள இவரிடத்திலிருந்து ஒன்றன்பின் மற்றொன்று உண்டாயிற்று என்று சொல்ல வேண்டியதில்லை. நதியில் அநேகம் சுழல்கள் ஒரே காலத்தில் உண்டாகவில்லையா? மேலும் தேவர்கள் அசுரர்கள் முதலியவர்களில், இந்தக் கற்பத்தில் எவர்கள் இருக்கிறார்களோ, அவர்களே வேறு பெயருடனும், வேறு உருவத்துடனும் பிந்திய கற்பங்களிலும் இருக்கிறார்கள்.

அத்தியாயம்–11

காலத்தின் ஸ்வரூபம்

1–15 "காரியரூபமாகிய ப்ரபஞ்சத்தின் எந்த அம்சமானது கடைசியானதோ (பிரிக்க முடியாததோ) எது காரியமாயிருக்கும் தன்மையை அடையாததோ, மேலும் எது சமுதாயமாயிருக்கும் தன்மையை அடையாததோ அதே பரமாணுவென்று தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு அவயவங்கள் உண்டென்று மனிதர்கள் ப்ரமிக்கிறார்கள். (இது காலத்தின் சூட்சும ரூபம்) காரியம் மாத்திரமாயும், மாறுதலை அடையாத தாயுமுள்ள அந்த வஸ்துவின் சேர்க்கையே மிகவும் பெரியது. அது பேதமற்றது. விசேஷமற்றது. ஓ சாதுக்களுக்குள் மேலானவரே! இந்தப்ரபஞ்சமானது பரமாணுவாயிருக்கும்பொழுது இதை எந்தக் காலம் வ்யாபித்திருந்ததோ, அதுவே காலப் பரமாணு. காரியமாயிருக்கும் ப்ரபஞ்சம் முழுவதையும் எந்தக் காலம் வ்யாபித்திருக்கிறதோ, அதுவே மகாகாலம். இரண்டு காலப் பரமாணுக்கள் சேர்ந்தால் அணுவாகிறது. மூன்று அணுக்களால் திருஸரேணு உண்டாகிறது. வீடுகளில் சன்னல் வழியாகப் ப்ரகாசிக்கும் வெயிலில் பறந்துகொண்டிருக்கும் தூளிகளே திருஸரேணு எனப்படும். மூன்று கால திருஸரேணுக்களால் த்ருடி யுண்டாகின்றது. நூறு த்ருடி கொண்டது வேதமெனப்படுகிறது. மூன்று வேதங்கொண்டது லவமெனப்படுகிறது. மூன்று லவங்கள் நிமிஷமாகின்றது, மூன்று நிமிஷங்களால் க்ஷணம் உண்டாகிறது. ஐந்து க்ஷணங்களால் காஷ்டை ஏற்படுகிறது. பதினைந்து காஷ்டைகளால்

லகு ஏற்படுகிறது. பதினைந்து லகுக்களால் நாடிகை (நாழிகை) உண்டாகிறது. இரண்டு நாடிகைகள் ஒரு முகூர்த்தமாகும். ஆறு அல்லது ஏழு நாழிகை கொண்டது ப்ரஹரமென்றும், யாமமென்றும் சொல்லப்படுகிறது. ஆறு பலம் தாமிரத்தால் செய்யப் பட்ட உயரமான வடிவமுள்ள பாத்திரத்தில், இருபது குன்றிமணி நிறையுள்ள தங்கத்தால் செய்யப்பட்டவை களும், நான்கு அங்குல விஸ்தாரமுள்ளவைகளுமான நான்கு ஊசிகளால் துவாரஞ் செய்து அந்தப் பாத்திரத்தை ஜலத்தில் மிதக்கச் செய்து அந்தப் பாத்திரம் ஜலத்தில் எவ்வளவு காலத்தில் மூழ்குமோ அந்தக் காலமே நாழிகையாகும். நாலு யாமம் கொண்டது மனிதர்களுக்கு ஒரு பகலாம், ராத்திரியும் அவ்வளவு காலமேயாம். இவ்விரண்டும் சேர்ந்தது ஒருநாள் என்று சொல்லப்படுகிறது. பதினைந்து நாட்கள் கொண்டது ஒரு பக்ஷமாகும். அது சுக்லமென்றும், கிருஷ்ணமென்றும் இருவகையுள்ளது. அவ்விரண்டு பக்ஷங்கள் கொண்டது ஒரு மாதமாகும். அது பித்ரு தேவதைகளுக்கு ஒருநாள் ஆகும். அதிலும் சுக்லபக்ஷம் பகலாகும. கிருஷ்ணபக்ஷம் ராத்திரியாகும். இரண்டு மாதம் கொண்டது ஒரு ருது. ஆறு மாதம் கொண்டது ஒரு அயன மெனப்படுகிறது. அதிலும் தக்ஷிணாயணம், உத்தராயணம் என்று இருவகை யுண்டு; தக்ஷிணாயணம் தேவர்களுக்கு ஒரு ராத்திரியாகும். உத்தராயணமோ அவர்களுக்கு ஒரு பகலாகும். ஆதலால் மனுஷ்ய மானத்தில் பன்னிரண்டு மாதம் கொண்டது தேவர்களுக்கு ஒரு நாளாகின்றது. மனுஷ்ய மானத்தில் நூறு வருஷங்கள் மனிதர்களுக்குப் பரமாயுஸ் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கால ஸ்வரூபியான் சூரிய பகவான், கிரகங்கள், அசுவனி

முதலிய இருபத்தேழு நக்ஷத்திரங்கள், மற்ற தாரைகள் ஆகிய இவைகளுள்ள காலச் சக்கரத்திலிருந்து கொண்டு பரமாணு முதல் வருஷம் வரையிலுள்ள காலமானத்தால் ஜகத்தில் சஞ்சரிக்கிறார். மேலும், மேற்சொல்லிய சம்வத்ஸர ஸ்வரூபமாகிய காலத்திற்கு சம்வத்ஸரம், பரிவத்ஸரம், இத்வத்ஸரம், அனுவத்ஸரம், வத்ஸரமென்று ஐந்து பேதங்கள் (ஸௌரம், பார்ஹஸ்பத்யம், ஸாவனம், சாந்திரம், நக்ஷத்ரம் என்ற மான பேதத்தால்) ஏற்படுகின்றன. எந்தப் பரமபுருஷன் இம்மாதிரியான கால ஸ்வரூபியாயிருந்து பலவகையாகக் காரியங்களை உண்டுபண்ணி (விதைகளுக்கு முளைக்கும் சக்தியை உண்டுபண்ணிக் கொண்டு) சம்சாரிகளுக்கு ஸ்வர்க்கம் முதலிய பலனை, யாகம் முதலிய சத் கர்மங்களால் கொடுத்துக் கொண்டும், புருஷர்களுடைய மோஹத்தை நீக்குவதற்காக ஆகாசத்தில் சஞ்சரிக்கிறாரோ; ஐந்து வகையான வத்ஸரங்களை எவர் உண்டு பண்ணுகிறாரோ, அப்பேர்ப்பட்ட தேஜோரூபியான சூரியனைப் பூஜிக்க வேண்டும்" என்றார்.

16–17 அதனைக் கேட்டு விதுரர், "ஓ பகவானாகிய மைத்ரேயரே! பிதிருக்கள், தேவர்கள், மனிதர்கள் ஆகிய இவர்களுடைய மானத்தைச் சொன்னீர். மேலும், நீர் கால ரூபியான பகவானுடைய ஸ்வரூபத்தை நன்றாக அறிந்தவர். யோகத்தால் கிடைத்த ஞானக் கண்ணால் வித்வான்கள் எல்லாவற்றையும் அறிகிறார்கள். ஆகையால் மூவுலகத்திற்கு வெளியில் இருக்கும் ஞானிகளுடைய கதியையும் சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

18–21 அதனைக் கேட்டு மைத்ரேயர், "தேவ மானத்தால் அளக்கப்பட்ட பன்னீராயிரம் வருஷங்களைக் கொண்டு க்ருதயுகம், த்ரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம் என்று நான்கு யுகங்கள் ஏற்படுத்தப்பட்டன; நாலாயிரத்தெண்ணூறு (4800) வருஷங்கள் கொண்டது க்ருதயுகம் மூவாயிரத்தறுநூறு வருஷங்கள் கொண்டது, (3600) த்ரேதாயுகம். இரண்டு ஆயரத்து நாநூறு வருஷங்கள் கொண்டது,(2400) த்வாபர யுகம். ஆயிரத்து இருநூறு வருஷங்கள் கொண்டது,(1200) கலியுகம். க்ருதயுகத்தில் முதல் நாநூறு வருஷங்கள் யுகத்தின் சந்தி எனப்படுகின்றன. கடைசி நானூறு வருஷங்கள் சந்தியாம்ச மெனப்படுகின்றன. த்ரேதாயுகத்தில் முதல் முந்நூறு வருஷங்கள் சந்தி என்றும், கடைசி முந்நூறு வருஷங்கள் சந்தியாம்ச மென்றும், துவாபர யுகத்தில் முதல் இருநூறு வருஷங்கள் சந்தி என்று கடைசி இருநூறு வருஷங்கள் சந்தியாம்சமென்றும், கலியுகத்தில் முதல் நூறு வருஷங்கள் சந்தியென்றும், கடைசி நூறு வருஷங்கள் சந்தியாம்சமென்றும் சொல்லப்படுகின்றன. சந்தி, சந்தியாம்சம் என்னும் இவ்விரண்டிற்கும் நடுவிலிருக்கும் பாகமே யுகமெனப் படுகிறது. அந்தக் காலத்தில்தான் யுக தர்மங்கள் நன்றாகப் ப்ரகாசிக்கும். க்ருதயுகத்தில் தருமமானது நான்கு பாதங்களுடன் மனிதர்களை அனுசரிக்கிறது. மற்ற யுகங்களில் அந்த தருமத்திற்கு ஒவ்வொரு பாதம் குறைகிறது. இந்த மூவுலகத்தைக் காட்டிலும் வெளியிலிருக்கும் மஹர் லோகம் முதல் ப்ரம்ஹ லோகம் வரையில் ஆயிரம் சதுர்யுகம் கொண்டது ஒரு பகலாகும். இரவும் அவ்வளவு காலமேயாகும். அதில் ப்ரஹ்ம தேவர் தூங்குகிறார். ராத்திரி முடிந்து.

பகல் ஆரம்பிக்கும்பொழுது ஸ்ருஷ்டி ஆரம்பிக்கப்படு கிறது. அந்தப் ப்ரஹ்மதேவருடைய பகலில் பதினான்கு மனுக்கள் உண்டு. எழுபத்தொரு யுகங்களுக்குக் கொஞ்சம் அதிகமான காலம் ஒவ்வொரு மனுக்களின் காலமாகும். ஒவ்வொரு மன்வந்தரங்களிலேயும் அந்தந்த மனுவின் வம்சத்தில் பிறந்த அரசர்களும், ரிஷிகளும், தேவர்களும் தேவர்களுக்கு அதிபதிகளும், அந்த மனுக்களை அனுசரிக்கிறார்கள். இது ப்ரஹ்ம தேவரால் ஒவ்வொரு நாளும் செய்யப்படும் ஸ்ருஷ்டி. இது இவ்வுலகத்தையும் வ்ருத்தி செய்யக்கூடியது. திர்யக்ஜாதிகளும், மனிதர்களும், பித்ருக்களும், தேவர்களும் இதில் ஸ்ருஷ்டிக்கப் படுகிறார்கள். மேலும் ஒவ்வொரு மன்வந்தரங்களிலும் பரம புருஷன் சத்வகுண முள்ளவராக மனு முதலியவர்களின் ஸ்வரூபமாக இருந்து இந்த ஜகத்தைக் காப்பாற்றுகிறார். பின்னும் அவர் பகலின் முடிவில் தமோகுணத்தின் சொற்ப பாகத்தை அங்கீகரித்துக் காலகதியால் எல்லாவற்றையும் தமக்குள் அடக்கிக் கொண்டு வியாபார மற்றவராய் இருக்கிறார். அப்பொழுது பூமி முதலிய மூன்று உலகங்களும், சந்திரன், சூரியன் ஆகிய இவர்களுடைய ப்ரகாசமில்லாமல் மறைந்து இருக்கின்றன. பிறகு பகவானுடைய சக்தியாகிய சங்கர்ஷண முகாக்கினியால் முவுலகமும் எரிக்கப்படும் பொழுது அந்தத் தாபத்தைப் பொறுக்காமல் பிருகு முதலிய மகர்ஷிகள் மகர்லோகத்திலிருந்து ஜனலோகம் செல்லுகிறார்கள். அப்பொழுது சமுத்திரங்கள் ப்ரளய காலத்திய காற்றினால் அசைக்கப்பட்டுப் பெரியதாகிய அலைகளுடன் பயங்கரமான ஆடம்பர முள்ளவை களாக உலகங்களை மூழ்கச் செய்யும். அந்தக் காலத்தில் அந்த ஜலத்திற்குள் ஆதிசேஷனாகிய

ஆசனத்தில் பகவான் யோக நித்திரை செய்து கொண்டிருக்கிறார். ஜனலோகத்தில் வஸித்தவர்கள் அவரை ஸ்தோத்திரம் செய்து கொண்டிருப்பார்கள். இம்மாதிரியான ராத்திரி, பகல்களால் ப்ராணிகளின் வயதைவிட அதிகமான ப்ரஹ்மதேவருடைய வயதும் அபகரிக்கப் பெற்றுக் குறைந்துபோகிறது. அந்தப் ப்ரஹ்மதேவருடைய ஆயுளின் பாதிப்பாகம் பரார்த்தம் என்று சொல்லப்படுகிறது. முதல் பரார்த்தம் சென்று விட்டது. இப்பொழுது இரண்டாவது பரார்த்தம் நடக்கிறது. முந்திய பரார்தத்தின் முன்பாகத்தில் ப்ராஹ்மம் என்ற பெரியதாகிய கற்பம் நடந்தது. சப்தப்ரஹ்மமென்று சொல்லப்படுகிற ப்ரஹ்மதேவர் உண்டான காலமாகையால் அதற்குப் ப்ராஹ்மம் என்று பெயர் கிடைத்தது. அதற்கு அடுத்த கற்பத்தைப் பாத்ம கல்பம் என்று சொல்லுகிறார்கள். அந்தக் கற்பத்தில் பகவானுடைய நாபியாகிய ஏரியிலிருந்து லோகமாகிய பத்மம் (தாமரைப் புஷ்பம்) உண்டாயிற்று. இதுவே முதலாவது கற்பம். இரண்டாவது வராஹ கற்பமென்று சொல்லப்படுகிறது. அதில் பகவான் வராஹமாக (பன்றி) அவதரித்தார். உபாதியற்றவரும், நாசமற்றவரும், உற்பத்தியற்றவரும், ஜகத் காரணரும் ஆகிய பகவானுக்கு இரண்டு பரார்த்தங்களடங்கிய ப்ரஹ்மதேவருடைய ஆயுளானது நிமிஷமாம்! பரமாணுமுதல் இரண்டு பரார்த்தம் வரையிலுள்ள மேற்சொல்லிய காலமானது வீடு முதலியவைகளில் அபிமானமுள்ள சம்சாரிகளுக்கு யஜமானனே யொழியப் பரிபூரணரான புருஷோத்தமருக்கு அதிபதியல்ல. மஹத்தத்துவம் முதலிய ஆவரணங்கள் உள்ளதுமான அண்டகோசமானது வெளியில் ஐம்பது கோடி விஸ்தாரமுள்ளது. அளவில் ஒன்றுக்கொன்று

பத்து மடங்கு அதிகங்களான பூமி முதலிய ஆவரணங்களுள்ள மேற்சொல்லிய அண்டகோசமும், மற்ற கோடிக் கணக்கான அண்டங்களும் எதனிடத்தில் ப்ரவேசித்து பரமாணுக்கள் போலத் தோன்று கின்றனவோ, அதுவே அக்ஷரம்; எல்லாக் காரணங் களுக்கும் காரணம்; மகாத்மாவாகிய புருஷனுடைய சரீரம்; அதுவே பரப்ரஹ்மம்.

அத்தியாயம்–12

ஸனகர் முதலியவர்களுடைய ஸ்ருஷ்டி

1–8. ஓ விதுரரே! பரமாத்மாவினுடைய காலமென்ற பெயருள்ள மஹிமையைச் சொன்னேன் வேதகர்ப்பராகிய ப்ரஹ்மதேவர் ஜகத்தை யுண்டு பண்ணியதைச் சொல்லுகிறேன் தெரிந்து கொள்ளும். முதலில் ப்ரஹ்மா அந்ததாமிஸ்ரம், தாமிஸ்ரம் மஹாமோஹம், மோஹம், தமஸ் ஆகிய ஐந்து அஜ்ஞான விருத்திகளை யுண்டுபண்ணினார். பின்பு , தம்மால் ஸிருஷ்டிக்கப் பட்டவைகள் பாபத்திற்கு ஏதுக்களாயிருப்பதைப் பார்த்து, அதில் சந்தோஷம் அடையவில்லை. பின்பு பகவானைத் தியானம் செய்து அதனால் சித்த சுத்தியுள்ளவராக ஸனகர், ஸநந்தனர், ஸனாதனர், ஸனத்குமாரர் ஆகிய நான்கு குமாரர்களை உண்டுபண்ணினார். அவர்கள் கர்மங்களற்றவர்கள். இந்திரியங்களை ஜயித்தவர்கள். ப்ரஹ்மதேவர் அவர்களை நோக்கி, "ஓ குழந்தைகளே! நீங்கள் பிரஜைகளைச் ஸிருஷ்டியுங்கள்" என்று ஆக்ஞாபித்தார். அவர்கள் வாஸுதேவரையே தியானஞ் செய்துகொண்டு மோக்ஷஸாதனமாகிய நிவிருத்தி தருமத்தையே அனுஷ்டிப்பவர்களாகையால் அதனை ஒப்புக்கொள்ளவில்லை. அப்பொழுது புத்திரர்களாகிய அவர்கள் பிதாவின் கட்டளையைக் கடந்ததால் ப்ரஹ்மதேவருக்குக் கோபம் உண்டாயிற்று. ஆனாலும் அவர் அதை அடக்கிக் கொள்ள முயன்றார். அப்படியும் கோபம் அடங்காமல் ப்ரஹ்மதேவருடைய புருவங்களின் மத்ய பாகத்திலிருந்து ஒரு புத்திரன் உண்டானான். அந்தக் குமாரரே நீல லோஹிதர்.

அவர் ப்ரஹ்மதேவருடைய கோபத்தின் அம்சம். தேவர்களுக்கு முந்தி யுண்டானவரும், பரமசிவனென்று சொல்லப்படப் போகின்றவருமான அந்தக் குமாரர் ப்ரஹ்மதேவரை நோக்கி "ஓ ஜகத்தைப் போஷிப் பவரே! எனக்கு இருப்பிடங்களையும், பெயர்களையும் ஏற்படுத்தும்" என்று அழுது வேண்டிகொண்டார்.

9–14. பத்மத்திலிருந்து உண்டான ப்ரஹ்மதேவர் அதனைக் கேட்டு. "ஓ தேவர்களுக்குள் சிறந்தவரே! நீர் அழ வேண்டாம். உமக்கு இருப்பிடங்களையும், பெயர்களையும் ஏற்படுத்துகிறேன். நீர் ப்ராகிருத சிசுவைப்போல் அழுதபடியால் உம்மை ருத்திரனென்று ஜனங்கள் சொல்லுவார்கள். இருதயம், இந்திரியங்கள், பிராணன், ஆகாசம், வெளியிலிருக்கும் வாயு, அக்கினிஜலம், பூமி, சூரியன், சந்திரன், தபஸ் ஆகிய இவைகள் உமக்கு வாசஸ்தலங்களாக முன்னமேயே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் உமக்கு மன்யு, மனு, மஹாகாலன், மஹான், சிவன், ரிதத்வஜன், உருரேதஸ், பவன், காலன், வாமதேவன், திருதவிருதன் என்ற பெயர்களுண்டாகும், தவிரவும் உமக்கு, தீ விருத்தி, ரசனா, உமா, நியுத், ஸர்ப்பி, இளா, அம்பிகா, இராவதீ, ஸுதா, தீக்ஷா, ருத்ராணீ என்ற பெயருள்ள ஸ்திரீகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

ஆதலால் மேற்சொல்லிய நாமதேயங்களுடன் மேற்காட்டிய ஸ்தானங்களில் ஸ்திரீகளுடன் வசித்து அநேக பிரஜைகளை உண்டு பண்ணும். நீர் ப்ரஜாபதிகளுக்கும் மேலானவர்" என்று பிரியமாகச் சொன்னார்.

15–20. இம்மாதிரி பிதாவினால் ஆக்ஞாபிக்கப் பட்ட அந்த நீலலோஹிதர் ஆகிருதி சுபாவம் ஆகிய இவைகளில் தமக்குச் சமானர்களாகிய ப்ரஜைகளை உண்டுபண்ணினார். அந்த ருத்திரரால் ஸிருஷ்டிக்கப் பட்ட ப்ரஜைகள் கூட்டங் கூட்டமாக ஜகத்தை விழுங்குகிறவர்கள் போல எங்கும் பரவியிருந்தார்கள். அதனை கண்ட ப்ரஹ்மதேவர் ஸந்தோஷமடைந்து, ருத்திரரை நோக்கி, "ஓ தேவசிரேஷ்டரே! உம்மால் ஸிருஷ்டிக்கப்பட்ட ப்ரஜைகள் என்னையும், திக்குகளையும் பார்வையால் எரிப்பவர்கள்போல் இருக்கிறார்கள். ஆதலால் நீர் இனி ஸிருஷ்டிக்க வேண்டாம். ஸகல ப்ராணிகளுக்கும் ஸுகத்தைக் கொடுக்கக்கூடிய தவத்தைச் செய்யும். உமக்கு க்ஷேமமுண்டாகட்டும். ஸகல பிராணிகளுடைய இருதய குகையில் வஸிப்பவரும், தேஜோரூபியும், பகவானாயுமுள்ள பரமாத்மாவைத் தபஸினாலேயே புருஷன் அடைகிறான். ஆதலால் நீரும் தபஸ் செய்தால் அதன் பலத்தால் • ஜகத்தை முன் கற்பத்திலிருந்தது போல் ஸிருஷ்டிப்பீர்" என்றார். அதனைக் கேட்ட ருத்திரரும் வாக்குகளுக்கு அதிபதியான ப்ரஹ்மதேவருடைய வார்த்தையை அங்கீகரித்து, அவரிடம் விடைபெற்றுக் கொண்டு தபஸ் செய்வதற்காக வனம் சென்றார்.

21–27. பிறகு ப்ரஹ்மதேவர் ஸிருஷ்டி விஷயமாகத் தியானம் செய்தார். அவருக்கு அப்பொழுது பகவான் உடைய சக்திவிசேஷத்துடன் கூடிய மரீசி, அத்திரி, அங்கிரஸ், புலஸ்தியர், புலஹர், க்ரது, பிருகு, வசிஷ்டர், தக்ஷர், நாரதர் ஆகிய பத்துப் புத்திரர்கள் உண்டானார்கள். அவர்கள் லோகத்தின் சந்தானத்திற்குப்

காரணமாயிருப்பவர்கள். அதெப்படியெனில் அவருடைய மடியிலிருந்து நாரதரும், கட்டை விரலிலிருந்து தக்ஷரும், ப்ராணனிடமிருந்து வசிஷ்டரும், தொக்கிந் திரியத்திலிருந்து ப்ருகுவும், கையிலிருந்து க்ரதுவும் நாபியிலிருந்து புலஹரும், காதுகளிலிருந்து புல்ஸ்தியரும், முகத்திலிருந்து அங்கிரசும், மனத்தில் இருந்து மரீசியும் உண்டானார்கள். மேலும் அவர் உடைய வலப்பக்க ஸ்தனத்திலிருந்து ஸ்ரீமந் நாராயண னுக்கு வாசஸ்தானமாகிய தருமம் உண்டாயிற்று. அவருடைய பின் பக்கத்திலிருந்து அதர்மம் உண்டா யிற்று. உலகத்திற்குப் பயங்கரனாகிய ம்ருத்யுவே அதற்கு அதிதேவதை. மேலும் அவருடைய ஹிருதயத் திலிருந்து காமமும், புருவங்களிலிருந்து கோபமும், உதட்டிலிருந்து லோபமும், முகத்திலிருந்து வாக்குக்கு அதிதேவதையும், ஆண்குறியிலிருந்து சமுத்திரங்களும், பாயுவிலிருந்து பாபத்திற்கு இருப்பிடமாகிய நிருதியும் உண்டானார்கள். பின்னும் அவருடைய நிழலிலிருந்து தேவஹூதிக்குப் பர்த்தாவாக ஆகப்போகிற கர்த்தமப் பிரஜாபதி உண்டானார். இப்படி ப்ரஹ்மதேவருடைய தேகத்திலிருந்தும் மனத்திலிருந்தும் இந்த ஜகத் உண்டாயிற்று.

28–32. ஓ விதுரரே! ப்ரஹ்மதேவர் தம்மிடமிருந்து உண்டானவளும், மனோகரமாகிய உருவமுள்ளவளு மான வாக்குக்கு அதிதேவதையை அவள் இஷ்டப் படாமலிருக்கும் போதும் தாம் ஆசைப்பட்டார், என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அப்பொழுது மரீசி முதலியவர்கள் அதர்மத்தைச் செய்ய முயன்ற தங்கள் உடைய பிதாவை நோக்கி, "மன்மதனை ஜயிக்காமல் உம்முடைய பெண்ணிடத்தில் நீர் ஆசைப்படுவது

உசிதமல்ல. இது நம்முடைய முன்னோர்களால் அனுஷ்டிக்கப்பட்டதுமில்லை. உமக்குப் பிந்தியவர் களாலும் செய்யக்கூடியதில்லை. ஓ ஜகத்குருவே! மிக்க தேஜஸுள்ளவர்களானாலும் இம்மாதிரியான காரியத்தில் முயற்சிப்பது நியாயமல்ல. மகான்களால் அனுஷ்டிக்கப்படும் காரியங்களைச் செய்து லோகங்கள் க்ஷேமத்தை அடைகின்றன. (நீர் இம்மாதிரியான கெட்ட காரியத்தைச் செய்தால் மற்றவர்களும் இதைச் செய்து நரகத்தை அடைவார்களென்று கருத்து.) நீர் காரணத்தில் சூட்சுமரூபமாக இருந்த ஜகத்தை உம்முடைய ப்ரகாசத்தால் ப்ரகாசிக்கச் செய்தவர். இப்படிப் பட்ட உமக்கு நமஸ்காரம் செய்கிறோம். தர்மத்தைக் காப்பாற்றவேண்டும்" என்று பிரார்த்தித் தார்கள்.

33–35. அதனைக் கேட்ட ப்ரஹ்மதேவர் வெட்கம் அடைந்து அவளை விட்டுவிட்டார். (அந்த ஆசையை யொழித்தாரென்பது கருத்து.) அவளை திக்குகள் கிரஹித்துக் கொண்டன. அது பனியால் ஏற்படும் தமஸ்ஸாகும். பின்பு ஒருகால் ஜனங்களை எப்படி ஸிருஷ்டிக்கிறதென்று அவர் தியானம் செய்யும்போது அவருடைய நான்கு முகங்களிலிருந்தும் வேதங்கள் வெளிப்பட்டன. சாதுர்ஹோத்ரம் (ஹோதா முதலிய நான்கு ரித்விக்குகள் செய்யவேண்டிய கர்மம்) அவைகளின் தந்திரம், உபவேதங்கள், நீதிசாஸ்திரம், தருமத்தின் நான்கு பாதங்கள், ஆசிரம தர்மங்கள் ஆகிய இவைகளும் உண்டாயின.

36. அதனைக் கேட்டு விதுரர் மைத்ரேயரை நோக்கி "ஓ தபஸ்ஸையே தனமாகக் கொண்டவரே!

ப்ரஜாபதிகளுக்கும் அதிபதியாகிய அந்தப் ப்ரஹ்மதேவர் எந்த எந்த வேதங்களை, எந்த எந்த முகத்தால் ஸிருஷ்டித்தார்? அவற்றைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

37–48. அதனைக் கேட்டு மைத்ரேயர் ப்ரத்யுத்தரம் சொல்லலானார். ப்ரஹ்மதேவர், ரிக், யஜுஸ், சாமம், அதர்வம் என்ற நான்கு வேதங்களைக் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திக்குகளை நோக்கியிருக்கும் தம்முடைய முகங்களால் உண்டுபண்ணினார். சாஸ்திரம் (ஹோதாவினால் செய்யப்பட வேண்டியது), இஜ்யை (அத்வர்யு செய்யவேண்டியது) ஸ்துதி, ஸ்தோமம் (உத்காதாவினால் செய்யப்பட வேண்டியது), ப்ராயசித்தம் (ப்ரஹ்மாவினால் செய்யப்பட வேண்டியது) ஆகிய இவைகளையும் உண்டுபண்ணினார். மேலும் அவர் ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வ வேதம், ஸ்தாபத்யம் (விசுவகர்மாவினால் செய்யக்கூடியது) ஆகிய இவைகளையும் படைத்தார். பின்னும் எல்லாவற்றையும் அறிந்த அவர் இதிகாசம், புராணம் ஆகிய ஐந்தாவது வேதத்தை எல்லா முகங்களாலும் உண்டுபண்ணினார். அவருடைய முந்திய முகத்தில் இருந்து ஷோடசி, உக்தியம், சயனம், அக்னிஷ்டோமம், அப்தோர்யாமம், அதிராத்ரம், வாஜ்பேயம், கோஸவம் ஆகிய இவைகளும் வித்யை, தானம், தபஸ் சத்தியம் என்ற தருமத்தின் நான்கு பாதங்களும் ஆசிரமங்களும், அவைகளின் தருமங்களும் உண்டாயின. மேலும் ஆசிரமங்களில் ப்ரம்மசரிய ஆச்ரமத்தில் ஸாவித்ரம், ப்ரஜாபத்யம், ப்ரஹ்மம், ப்ரஹத் என்று நான்கு வகையுண்டு. கிரஹஸ்தாசிரமத்தில் வார்த்தை, சஞ்சயம், சாலீனம் சிலோஞ்சம் என்று நான்கு

வகையுண்டு. வானப்பிரஸ்தர்களுக்குள் வைகானஸர்கள், வாலகில்யர்கள், ஔதும்பரர்கள், பேனபர்கள் என்ற நான்கு வகையுண்டு. சன்யாச ஆசிரமத்திலும் குடீசகர்கள், பஹூதர்கள், ஹம்ஸர்கள். நிஷ்கிரியர்கள் என்று நால்வகை யுண்டு. ஆத்மா அனாத்மா இவை களை தெரிவிக்கும் ஆன்வீக்ஷகி, கர்ம வித்தையாகிய த்ரயீ, க்ருஷி முதலிய வார்த்தை தண்டநீதி ஆகிய நான்கு வித்யைகளும் நான்கு வ்யாஹ்ருதிகளும். நான்கு முகங்களிலிருந்து உண்டாயின. அவருடைய ஹிருதயாகாசத்திலிருந்து ப்ரணவமும், ரோமங்களில் இருந்து உஷ்ணிக் சந்தசும், எலும்புகளிலிருந்து ஜகதீச் சந்தசும் மஜ்ஜையிலிருந்து பங்தி சந்தசும் ப்ராணனிடமிருந்து ப்ரஹதீச் சந்தசும் உண்டாயின. ஸ்பர்சமென்ற எழுத்துக்களே அவருடைய ஜீவன். ஸ்வரமென்ற அக்ஷரங்களே அவருக்கு தேஹம். ஊஷ்மாவென்ற அக்ஷரங்களே அவருக்கு இந்திரியங்கள் அந்தஸ்தமென்ற எழுத்துக்களே அவருக்குப் பலமாய் இருக்கின்றன. அவருடைய விளையாட்டினால் ஏழு ஸ்வரங்களும் உண்டாகின்றன. ஓ விதுரரே! இப்படி சப்த ப்ரஹ்மஸ்வரூபியான அவருடைய உருவமானது வ்யக்தமாகும் பொழுது பலவகை சக்தியுள்ளதாகவும், (இந்திரன் முதலியவர்களின் உருவமாக) அவ்யக்தமாய் இருக்கும் போது ப்ரஹ்மமாகவும் ப்ரகாசிக்கிறது.

அத்தியாயம்– 13

வராஹாவதாரம்

1–4 மைத்ரேயரால் சொல்லப்பட்டதும் மிகவும் புண்யகரமுமான வார்த்தையைக் கேட்ட விதுரர் ஸ்ரீ கிருஷ்ண கதையில் மிகுந்த ஆதரவுடன், "ஓ மஹா முனியே! ப்ரஹ்மதேவருக்குப் ப்ரியமுள்ள புத்திரராகிய அந்த ஸ்வாயம்புவ மனுவானர் ப்ரியமுள்ள பத்தினியை அடைந்து எதனைச் செய்தார்? அரசர்களுக்குள் முந்தியவாக்கிய அவருடையச் சரித்தத்தைக் கேட்க ச்ரத்தையுள்ளவனாக இருக்கிறேன். அவர் ஸ்ரீ மஹா விஷ்ணுவை ஆசிரயித்தவர், பகவானுடைய குணங்களைக் கேட்பது, முகுந்தருடைய பாதாரவிந்தத்தை ஹிருதயத்தில் தியானிப்பது ஆகிய இவைகளே வெகு காலமாகச் ச்ரமப்பட்டு வித்தியாப்யாஸம் செய்ததின் பலனாகும். ஆதலால் அவருடைய சரித்தத்தைச் சொல்ல வேண்டுமி என்று கேட்டார்.

5–13 அதனைக் கேட்ட மைத்ரேயர் பகவத் கதையைச் சொல்லும்படி தாம் தூண்டப்பட்டபடியால் மயிர்க் கூச்சலுள்ளவராகி வணக்கமுள்ளவரும், ஆயிரந்தலையுள்ள பகவானுடைய பாதபீடருமாகிய (பகவான் விதுரருடைய மடியில் ப்ரியத்தால் கால் நீட்டிச் சயனம் செய்கிற வழக்கம்) விதுரரை நோக்கிச் சொல்லலானார். ஸ்வாயம்புவ மனு தம்முடைய பத்தினியுடன் எப்பொழுது உண்டானாரோ அப்பொழுது அவர் இரு கைகளைக் கூப்பி வணங்கி, ப்ரஹ்மதேவரை நோக்கி, "நீர் ஒருவரே இந்த ஸகல ஜகத்தையும் உண்டுபண்ணினவர். அதற்கு விருத்தியை

ஏற்படுத்தியவர். போஷிப்பவர். நீர் பிறரை அபேட்சியாத வரானாலும் உம்முடைய ப்ரஜை களாகிய நாங்கள் எதனைச் செய்தால் உமக்குச் சிசுரூஷை செய்ததாக ஆகும்? ஓ ஸ்தோத்திரம் செய்யக் கூடியவரே! எதனைச் செய்தால் இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் எங்கும் கீர்த்தி உண்டாகும்? எங்களால் செய்யக்கூடிய அந்தத் தர்மங்கள் இவை களென்று சொல்லவேண்டும். உமக்கு நமஸ்காரம் செய்கிறேன்" என்று கேட்டார். அப்பொழுது ப்ரஹ்ம தேவர் புத்திரனை நோக்கி, "குழந்தாய், உம்மிடத்தில் மிகவும் பிரிய மடைந்தேன். உங்களிருவர்களுக்கும் க்ஷேமம் உண்டாகட்டும். என்னால் உபதேசிக்கப்படும் காரியத்தைக் கபடமற்றவராய்ச் செய்யும். புத்திரர்கள் தங்களுடைய சக்திக்குத் தக்கபடி மாத்சர்யமில்லாத வர்களாக (ஸனகர் முதலியவர்களே செய்யவில்லையே. அப்படியிருக்க நாம் பிதாவின் கட்டளைப்படி நடக்கவேண்டுமா வென்று நினைக்காமல்) ப்ரீதியுடன் பிதாவின் கட்டளையின்படி நடந்தார்களானால் பிதாவைப் பூஜித்ததாகும். இதுதான் புத்திரர்கள் செய்ய வேண்டிய காரியம். ஆனதால் நீர் இவளிடத்தில் உமக்குச் சமமான குணசாலிகளான குழந்தைகளை உண்டு பண்ணிக்கொண்டு பூமியை தருமமமாகப் பரிபாலியும். மஹாவிஷ்ணுவை யாகத்தால் பூஜியும். ப்ரஜைகளைக் காப்பாற்றினால் எனக்கு மேலான சிசுரூஷை செய்ததாகும். மேலும் யக்ஞ ஸ்வரூபியாகிய பகவான் எவர்களிடம் சந்தோஷப் படவில்லையோ அவர்கள் செய்யும் காரியம் யாவும் ப்ரயோசன மற்றவை. அவர்கள் தமது ஆத்மாவினாலேய ஆதரிக்கப் படுகிறதில்லை. அந்தப் பகவானும் ப்ரஜாபாலனம் செய்யும் உம்மிடத்தில் சந்தோஷப்படுவார்" என்றார்.

14–19 அதனைக் கேட்ட ஸ்வாயம்புவ மனுவானவர் ப்ரஹ்மதேவரை நோக்கி, "ஓ பாபங்களைப் போக்குகிறவரே உம்முடைய ஆக்ஞையின்படி நடக்கிறேன்; எனக்கும் ப்ரஜைகளுக்கும் வாசஸ்தலம் இன்னதென்று சொல்ல வேண்டும். ஸகல ப்ராணி களுக்கும் இருப்பிடமாகிய பூமியானது ஜலத்தில் மூழ்கியிருக்கிறது. ஓ தேவ! இந்தப் பூமிதேவியை உயரக் கொண்டு வருவதற்காக முயற்சிக்க வேண்டும்" என்றார். அதனைக் கேட்டு ப்ரஹ்மதேவர் ஜலத்தில் மூழ்கியிருக்கும் பூமியை உயரக் கொண்டுவருவதைப் பற்றித் தமக்குள் யோசிக்கலானார். ப்ரளய கால ஜலத்தை எல்லாவற்றையும் குடித்தேன். பூமியில் ப்ரஜைகள் வஸிக்கும்படி செய்தேன். தேவர்கள், அஸுரர்கள், பித்ருக்கள், மனிதர்கள், பசுக்கள், பறவைகள், மலைப்பாம்புகள், மலைகள், யானைகள், இன்னும் பலவகையான ப்ராணிகளைச் ஸிருஷ்டித்து வரும்போது பூமி ஜலத்தில் மூழ்கிப் பாதாளம் சென்றது. ஸிருஷ்டிப்பதில் பகவானால் தூண்டப்பட்ட நாம் இந்தச் சமயத்தில் என்ன செய்யலாம், எப்படிப் பூமியை வெளியில் கொண்டுவருவேன்? ஆனால்லும் எந்தப் பகவானுடைய ஹிருதயத்திலிருந்து நான் உண்டானேனோ அந்தப் பகவானே இவ்விஷயத்தில் தகுந்த உபாயத்தைச் செய்ய வேண்டும்" என்று பகவானைத் தியானம் செய்தார்.

20–27 அந்தச் சமயத்தில் அந்தப் ப்ரஹ்மதேவர் உடைய மூக்குத் துவாரத்திலிருந்து ஒரு பன்றிக்குட்டி வெளிப்பட்டது. அது கட்டைவிரல் அளவுள்ளதாக இருந்தது. மேலும் அது அவர் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே ஆகாசத்திலிருந்தபடி யானை போலப்

பெரிய சரீரமுள்ளதாக விருத்தி அடைந்தது அது ஆச்சரியப்படக்கூடியதாக இருந்தது. அதனைக் கண்ட மரீசி முதலியவர்களும் ஸனகர் முதலியவர் களும், ஸ்வவாயம்புவ மனுவும் "இதென்ன ஆச்சரியம்! பன்றி உருவத்துடன் பெரிய ப்ராணியொன்று திவ்ய சரீரமுள்ளதாக இருக்கிறது. இது ப்ரஹ்மதேவருடைய மூக்கிலிருந்து வெளிப்பட்டது. கட்டைவிரல் அளவு உள்ளதான இதன் தலை ஒரு க்ஷணத்தில் மலை போன்றதாகி விட்டதே. ஒருகால் பகவானே இந்தச் சரீரத்துடன் அவதரித்திருக்கிறாரோ? மனத்திற்குக் கவலையாய் இருக்கிறதே" என்று யோசித்துக் கொண்டு இருந்தார்கள். அப்பொழுது மலைபோன்ற சரீரமுள்ளவரும், வராஹ ரூபம் தரித்தவருமான பகவான் கர்ஜித்தார். அந்தச் சப்தத்தால் திக்குகளில் எதிரொலி உண்டாயிற்று. அதனைக் கேட்டு ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் சந்தோஷமடைந்தார்கள். தபோலோகம், ஸத்யலோகம் இவைகளில் வஸிப்பவர் கள் நம்முடைய துக்கத்தைப் போக்கக்கூடிய மாயா வராஹத்தின் அந்தச் கர்க்கர சப்தத்தைக் கேட்டுப் பரிசுத்தங்களான மூன்று வேதங்களால் ஸ்தோத்திரம் செய்தார்கள்.

28–35 வேதங்களால் ஸ்தோத்திரம் செய்யப்படும் சரீரமுள்ள அந்தப் பகவான் அந்தப் ப்ராஹ்மணோத் தமர்களால் உச்சரிக்கப்பட்டவைகளும், தம்முடைய குணங்களை அனுமதித்தவைகளுமாகிய வேதங்களைக் கேட்டுக் கொண்டு ஜலத்திற்குள் ப்ரவேசித்தார். பூமியை வெளியில் கொண்டுவருகிற முயற்சியுடன் வராஹமாக (பன்றி) அவதரித்த பகவான் ஆகாசத்தில் வாலை உயரத் தூக்கிக் கொண்டும் கடினமான

சரீரமுள்ளவரும் அதிகக் கடினமாகிய மயிருள்ளவரும், குளம்புகளால் மேகங்களை அடித்தவரும், தம்முடைய சிங்கப் பற்களுடைய தேஜஸினாலும், நேத்திர காந்தியாலும், மற்ற ப்ரகாசத்தை அபேட்சியாமல் ப்ரகாசித்திருந்தார். பிடரி மயிர்களை உதறிக் கொண்டு மிருந்தார். மேலும் அவர் யக்ஞ ஸ்வரூபி. வராஹமாக அவதரித்தவர், பயங்கரமாகிய பார்வை உள்ளவரானாலும் ப்ராஹ்மணர்களைச் சந்தோஷமாகப் பார்த்தார். அப்பொழுது அவர் பூமி சென்ற வழியை வாக்கினாலேயே தெரிந்துகொண்டு ஜலத்திற்குள் சென்றார். வஜ்ஜிரத்தால் செய்யப்பட்ட மலைபோலக் கெட்டியான சரீரமுள்ள அந்த வராஹம் வேகமாகக் குதித்ததால் சமுத்திரமானது மிகவும் உபத்திரவப்பட்டு அலைகளாகிய நீண்ட கைகளை நீட்டிக் கொண்டு, "ஓ யக்ஞ வராஹ ரூபியான பகவன்! என்னைக் காப்பாற்றும்" என்று உரக்கக் கதறினது போலிருந்தது. அப்பொழுது மூன்று கணுக்களுள்ள (ப்ராதஸ்ஸவநம், மத்யந்தினஸவநம், ஸாயம்ஸவநமென்ற) யக்ஞ ரூபியான பகவான் கரையற்ற சமுத்திர ஜலத்தைத் தம்முடைய நீண்ட குளம்புகளால் பிளந்து கொண்டு பாதாளம் சென்று பூமியைக் கண்டார். ப்ரளய காலத்தில் இவர் ஜலத்தில் சயனம் செய்துகொண்டு பூமியை வயிற்றில் வைத்துக் காப்பாற்றினார். அவர் ஸகல ஜீவராசி களுக்கும் ஆதாரமாயிருப்பவர். அப்பொழுது அவர் தம்முடைய சிங்கப் பல்லால் பூமியைத் தூக்கிக் கொண்டு மிகவும் ப்ரகாசித்தார். அந்த ஜலத்தில் அசுரர்களுக்குள் முந்தியவனான இரண்யாக்ஷன் என்பவன் கதாயுதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அவருக்கெதிரில் ஓடிவந்தான். அவன் விசேஷ கோபமுள்ளவன். ஸகிக்க முடியாத பராக்கிரமுள்ளவன்.

யானையைச் சிங்கம் கொன்றார் போல அவர் பிரயாசம் இன்றி அந்த அசுரனைக் கொன்றார். மேலும் அவர் மலையின் தாழ்வரையில் விளையாடி, அதன் தாதுக்களால் சிவந்த கன்னங்களுள்ள யானைபோல ஹிரண்யனுடைய ரத்தத்தால் சிவந்த கன்னமுள்ளவரும், பச்சிலைபோல நீல வர்ணமுள்ளவராகவும் வெண்மை நிறமுள்ள பல்லின் நுனியில் பூமியை வைத்துக் கொண்டவராகவும் இருந்தார். அவரை ஈசுவர னென்று தெரிந்து கொண்டு மஹர்ஷிகள் ப்ரஹ்மதேவரை முன்னிட்டு வேத மந்திரங்களால் பின்வருமாறு துதித்தார்கள்.

36–48 ஒருவராலும் ஜயிக்கப்படாதவரே! யாகத்தை விருத்தி செய்பவரே! சத்துருவை ஜயித்தீர். வேதமாகிய உம்முடைய சரீரத்தை உதறிக் கொள்ளும். உமக்கு நமஸ்காரஞ் செய்கிறோம். உம்முடைய உரோம கூபங்களில் (மயிர்க் கால்களில்) சமுத்திரங்கள் வஸிக்கின்றன. நீர் பூமியைப் பாதாளத்திலிருந்து கொண்டுவருவதற்காக வராஹமாக அவதரித்தவர். அப்போர்ப்பட்ட உமக்கு நமஸ்காரம். ஓ தேவ! யக்ஞ ஸ்வரூபியாகிய உம்முடைய தோளில் காயத்ரி முதலிய சந்தஸ்ஸுகளும், மயிர்களில் தர்ப்பங்களும், நேத்திரங்களில் ஆஜ்யமும் (நெய்), கால்களில் சாதுர்ஹோத்ரமும் (ஹோதா முதலியவர்கள் செய்ய வேண்டிய காரியம்), முகத்தின் முன்பாகத்தில் இருக்கும் மூக்குகளில் ஸ்ரவமும், வயிற்றில் இடையும் (தக்ஷிண பாத்திரம்), காதுகளில் சமஸ்ஸும்; வாயில் ப்ராசித்திரமும், க்ரஸனமென்ற முகத்திற்குள்ளிருக்கும் பாகத்தில் க்ரஹங்களும் இருக்கின்றன. பக்ஷிப்பது அக்னிஹோத்ரமாகும். நீர் அடிக்கடி அவதாரத்தால்

ப்ரகாசிப்பதே தீக்ஷை (தீக்ஷணியேஷ்டி). உம்முடைய கழுத்தே உபஸ்தங்கள். உம்முடைய இரு சிங்கப் பற்களே பிராயணீய உதயநீய இஷ்டிகள். நாக்கானது ப்ரவர்க்கியமாகிறது. யக்ஞ ரூபியாகிய உம்முடைய தலையானது ஸப்யம், ஆஸத்யம் என்ற அக்கினிகளாகும். உம்முடைய ஐந்து ப்ராணன்களும் இஷ்ட காசயனங்களாகும். உம்முடைய ரேதஸ்ஸே சோமரசமாகும். பால்யம் முதலிய அவஸ்தையானது வனங்களாகும். உம்முடைய சரீரத்திலிருக்கும் மாம்சம் முதலிய தாதுக்கள் அக்கினிஷ்டோமம் முதலிய ஸமஸ்தைகளாகும். சரீரத்தின் சந்திகள் துவாதசாஹம் முதலிய சத்திரங்களாகின்றன. நீர் யக்ஞ ஸ்வரூபி (ஸோமம் இல்லாதவை யக்ஞங்கள்) க்ரதுஸ்வரூபி (ஸோமம் உள்ளவைகள் கிரதுக்களாம்) மேலும் அனுஷ்டானமே சந்திபந்தங்கள். ஸகல மந்திர ஸ்வரூபி, ஸகல தேவதா ஸ்வரூபி, ஸகல திரவிய ஸ்வரூபி, ஸகல யாக ஸ்வரூபி, ஸகல கிரியா ஸ்வரூபி, வைராக்கியத்துடன் கூடிய பக்தியால் சித்தம் ஸ்திரப்பட்டு அதனாலுண்டாகும் அபரோக்ஷ சாக்ஷாத்காரமாகிய ஞானத்தைக் கொடுப்பவர். ஸகல வித்தைகளையும் உபதேசிக்கும் குரு. அப்படிப்பட்ட பகவானாகிய உமக்கு நமஸ்காரம். ஓ பூமியைத் தரிக்கும் பகவன்! மலைகளுடன் கூடிய பூமியானவள் சிங்கப்பல்லின் நுனியைக் கொண்டு உம்மால் தூக்கப்பட்டவளாகப் ப்ரகாசிக்கிறாள். இந்த உம்முடைய உருவமானது சேற்றுடன் தாமரைக் கொடியைத் தந்தங்களில் தரித்து ஜலத்திலிருந்து வெளியில் வரும் சிறந்த யானையின் உருவம்போல் விளங்குகிறது. மேலும் சிங்கப்பல்லில் பூமியைத் தரித்துக் கொண்டிருக்கும் வேதரூபமாகிய உம்முடைய ஸ்வரூபமானது,

சிகரத்தில் மேகத்தைத் தரிக்கும் குலபர்வதம் போலிருக்கிறது. அரணியில் அக்னியிருப்பதுபோல எந்தப் பூமியினிடத்தில் உம்முடைய தேஜஸ்ஸை (தாரணம் முதலிய சக்தியை) வைத்திருக்கிறீரோ, எந்தப் பூமியானது உமக்குப் பத்தினியாக இருக்கிறாளோ, அந்தப் பூமிதேவியைத் தாவரங்கள் அடங்கிய ஜகத்திற்கு வாசஸ்தலமாகச் செய்யும். நீர் லோகத்திற்குப் பிதாவல்லவா? உமக்கும் இந்தப் பூமிக்கும் நமஸ்காரம் செய்கிறோம். ஓ ப்ரபுவே! பாதாளஞ்சென்று பூமியைக் கொண்டு வரலாமென்று உம்மைத் தவிர வேறு யாரால் நினைக்க முடியும்? ஆனாலும் ஸகல ஆச்சரியங்களுக்கும் இருப்பிடமாகிய நீர்

மிகவும் அற்புதமான இந்தக் காரியத்தைச் செய்தது ஒரு ஆச்சரியமல்ல. மிகவும் அற்புதமான இந்த ஜகத்தானது உம்மால் ஸிருஷ்டிக்கப்பட்டதல்லவா ஓ ஈச! தேவ மயமாகிய உம்முடைய சரீரத்தை உதறிக் கொள்ளும் போது பிடரி மயிர்களால் இறைக்கப்பட்ட மங்களரமான ஜலத்துளிகளால் தபோலோகம், சத்யலோகம் இவைகளில் வஸிக்கும் நாங்கள் பரிசுத்தர்களாகச் செய்யப்பட்டுக் காப்பாற்றப்பட்டோம். ஓ பகவான்! கரையற்ற கர்மங்களுடைய உம்முடைய சரிதங்கள் எல்லாவற்றையும் எவன் அறிய விரும்புகிறானோ, அவனுடைய எண்ணம் நிறைவேறுகிறது இல்லை. (பகவானுடைய சரிதங்கள் அறிய முடியாதவையென்பது கருத்து) மேலும் உம்முடைய யோக மாயையின் குண சம்பந்தத்தால் இந்த ஜகத்யாவும் மோகித்திருக்கிறது, அப்படிப்பட்ட மஹிமை பொருந்திய ஓ ஈச; எல்லா ஜகத்திற்கும் க்ஷேமத்தை உண்டு பண்ணும்.

48–52 ப்ரஹ்மிஷ்டர்களான அந்த மகர்ஷிகளால் இம்மாதிரி துதிக்கப்பட்ட பகவான் தம்முடைய குளம்புகளால் கலக்கப்பட்ட ஜலத்தில் (முன்போல ஜலத்தில் மூழ்காமலிருக்கும் வண்ணம் ஜலத்திற்குத் தரிக்கும் சக்தியைக் கொடுத்து) பூமியை ஸ்தாபித்துச் சென்றார். கானம் பண்ணத் தகுந்த மாயா விலாசங்களுள்ள ஸ்ரீ மஹாவிஷ்ணுவினுடைய இந்தக் கதையானது மிகவும் அழகானது. விரும்பத்தக்கது. இதைப் பக்தியுடன் கேட்பவர்கள், கேட்கச் செய்பவர்கள் ஆகிய இவர்களுடைய ஹிருதயத்தில் சீக்கிரமாக ஜனார்த்தனர் ப்ரசன்னராக வஸிக்கிறார். ஸகல மங்களத்தையும் கொடுக்கக்கூடிய ப்ரபுவாகிய அவர் எவனிடத்தில் சந்தோஷமடைகிறாரோ. அவனுக்கு எதுதான் கிடைக்காது? மற்ற அற்ப பலன்களால் என்ன பிரயோசனம்? பரமபுருஷன் தம்மையே பூஜிப்பவர்களுடைய ஹிருதயத்தில் வஸிப்பதுமல்லாமல் மேலான தம்முடைய பதத்தையும் அவர்களுக்குக் கொடுக்கிறார். ஆதலால் உலகத்தில் முன்காலத்தில் நடந்த பகவானுடைய சரிதங்களாகிய அமிருதத்தைக் காதுகளாகிய அஞ்சலி (சேர்ந்த கைகள்) யால் பானஞ் செய்த எந்தப் புருஷன்தான் போதுமென்று திருப்தியடைவான்? அந்த பகவத் கதை சம்சார பந்தத்தைப் போக்கக் கூடியது. விவேகமற்ற பசுக்கள் தவிர மற்றவர்களுக்கு அந்த பகவத் கதையில் ஆசையொழியாது.

அத்தியாயம்–14

திதிதேவி கர்ப்பத்தை அடைந்தது

1–4. மைத்ரேயர் முகமாக வராஹாவதாரஞ் செய்த ஸ்ரீ ஹரியினுடையய கதையைக் கேட்ட விதுரர் திருப்தியடையாமல் கை கூப்பிக்கொண்டு பகவத் கதையைக் கேட்பதாகிய விரதமுள்ளவராய் மைத்ரேயரை நோக்கி, "ஓ முனிகளுக்குள் சிறந்தவரே! யக்ஞ ஸ்வரூபியான அந்த ஹரியினால் தைத்யர் களுக்குள் முந்தியவனாகிய, ஹிரண்யாக்ஷன் கொல்லப் பட்டான்" என்று நீர் சொல்லக்கேட்டேன். பகவான் பூமியைத் தம்முடைய ஸ்ருங்கத்தின் நுனியால் ப்ரயாசமின்றிக் கொண்டு வந்தாரல்லவா? அப்பொழுது அவருக்கும் அந்த அசுரனுக்கும் யுத்தம் நேர்ந்த காரணமென்ன? ஓ ரிஷியே! அதனைச் சுருக்கமாகக் கேட்டும் என்னுடைய மனம் திருப்தியடையவில்லை. ஆதலால் அவனுடைய பிறப்பு முதலியவைகளைச் ச்ரத்தையுடன் கேட்க விரும்புகிறேன். அவைகளை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும் என்று மறுபடியும் கேட்டார்.

5–15. "ஓ வீரராகிய விதுரரே! நன்றாகக் கேட்டீர். அந்தப் பகவானுடைய அவதார கதையானது மனிதர்களுக்கு மிருத்யு பாசத்தைப் போக்கக்கூடியது, உத்தானபாதருடைய புத்திரனாகிய துருவனென்ற குழந்தையானவன் நாதரிடமிருந்து இந்த அவதாரக் கதையைக் கேட்டு ம்ருத்யுவின் தலையில் காலை வைத்து விஷ்ணுபதத்தை அடைந்தான். (துருவன் பார்ஷதர்களால் கொண்டுவரட்டட்ட விமானத்தில்

ஏறும்போது சமீபத்தில் வந்த ம்ருத்யுவின் தலையில் காலை வைத்து விமானத்தில் ஏறினான்), முன்னொரு காலத்தில் தேவர்களுக்குப் ப்ரஹ்மதேவரால் சொல்லப்பட்ட ஒரு சிறு இதிகாசகத்தை நான் கேட்டிருக்கிறேன்" என்று மைத்ரேயர் சொல்ல ஆரம்பித்தார். "ஓ விதுரரே! தக்ஷருடைய பெண்ணாகிய திதிதேவியானவள் மன்மதனால் பீடிக்கப்பட்டு, சந்தியா காலத்தில் தன்னுடைய பர்த்தாவாகிய மாரீசரை இச்சித்தாள். எப்படியெனில், அவர் சூரியன் அஸ்தமனத்தை அடையும்போது அக்கினியை நாவாகவுடையவரும், யக்ஞங்களுக்கு, அதிபதியுமான பரமபுருஷனை ஹவிஸ்ஸினால் பூஜித்து அக்னி ஹோத்திரசாலையில் உட்கார்ந்து த்யானம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது திதியானவள் அவர் சமீபம் சென்று, "ஓ வித்வான் ஆகிய மஹரிஷியே! மன்மதன் வில்லை கையில் எடுத்து, ரஸ்தாளி வாழையை யானை உபத்திரவித்தாற் போல உம்மை உத்தேசித்து என்னை பீடிக்கிறான். நான் தீனையாகவிருக்கிறேன், ஸபத்தினிகளுடைய (சக்களத்திகள்) ஸமிருத்திகளைப் பார்த்து எரிக்கப்படும் என்னிடத்தில் அனுக்கிரஹஞ் செய்யவேண்டும். எந்த ஸ்திரீகள் உம்மைப் போன்ற பர்த்தாவை அடைந்தார்களோ, எவர்கள் பர்த்தாவின் இடத்தில் அதிக பஹுமானத்தை வைத்தவர்களோ, அவர்களுடைய கீர்த்தியானது உலகங்களிலும் பரவும். பர்த்தாவே, பார்யையிடத்தில் நல்ல புத்திரனாகப் பிறக்கிறானென்று சாஸ்திரம் சொல்லுகிறது. முன்னொரு காலத்தில் எங்களுடைய பிதாவும், பெண்களிடத்தில் பிரியமுள்ளவருமான தக்ஷர் பெண்களை நோக்கி. "ஓ குழந்தைகளே!

யாரை நீங்கள் விவாகஞ் செய்து கொள்ளப் போகிறீர்கள்" என்று தனித்தனியே கேட்டுப் பெண்களுடைய அபிப்பிராயத்தை தெரிந்துகொண்டு உம்முடைய ஸ்வபாவத்தை அனுசரித்தவர்களான பதின்மூன்று பெண்களையும் உமக்குக் கொடுத்தார். (ஆனதால் எங்களுக்குள் பேதபுத்தி வைக்கக்கூடாதென்பது,) ஓ தாமரை மலர்போன்ற கண்களுள்ளவரே! உபத்திரவப்பட்டவர்கள் பெரியோர்களைச் சரணம் அடைந்தால் வீண்போகாதல்லவா? ஆதலால் எனக்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

16–29. இப்படி தீனையாயும், வெகுவாகப் பேசுகிறவளும், மன்மதனால் பீடிக்கப்பட்டவளுமான அந்தத் திதியை நோக்கி மாரீசரானவர், "ஓ பயந்தவளே! உன்னுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்கிறேன். தருமம், அர்த்தம், காமம் ஆகிய இந்தத் திரிவர்க்கமும் ஸ்திரீயினால் சித்திப்பதால், அவளுக்குப் பிரியமானதை எவன்தான் செய்யமாட்டான்? நல்ல களத்திரமுள்ள புருஷன் மற்ற ஆசிரமிகளுக்கும் உபகாரஞ் செய்து (அன்னம் முதலியவைகளைக் கொடுப்பதால்) தன்னுடைய ஆசிரம தர்மத்தை அனுஷ்டிப்பதால், கப்பலால் சமுத்திரத்தை தாண்டுவது போலத் துக்க சமுத்திரத்தைத் தாண்டுகிறான்' க்ஷேமத்தை விரும்பிய புருஷனுக்கு எவளைப் பாதி சரீரமென்று சொல்லுகிறார்களோ, புருஷன் எவளிடத்தில் ஸகல பாரத்தையும் ஒப்பித்துக் கவலையற்றவனாகச் சஞ்சரிக்கிறானோ. தூக்கத்திற்கு அதிபதி (அரசன்) திருடர்களை ஜயிப்பது போல், எந்த ஸ்திரீயின் பலத்தால் க்ருஹஸ்தன் மற்ற ஆசிரமிகளால் ஜயிக்க

முடியாதவையான இந்திரியங்களைச் சிரமமின்றி அடக்குகிறானோ. (ஸ்திரீயுள்ளவனுடைய இந்திரியங்கள் பெரும்பாலும் பர ஸ்திரீகளிடம் செல்லுகிறது இல்லை யென்று கருத்து) ஓ வீட்டிற்கு அதிபதியாய் இருப்பவளே! அப்படிப்பட்ட பலவகையிலும் உபகாரஞ் செய்கிற உனக்கு என் ஆயுள் முழுவதும் பதிலுபகாரஞ் செய்தாலும் ஜன்மாந்திரங்களில் செய்தாலும் அது பதிலாகாது. மேலும் குணத்தைக் க்ரஹிக்கும் எவர்கள் பதில் செய்வோம் என்று நினைக்கிறார்களோ, அவர்கள் பதில் செய்ய முடியாதவர்களே யாவார்கள். ஆனாலும் உனக்குப் புத்திரன் பிறக்கும் உபாயத்தைச் செய்கிறேன். என்னை நிந்திக்காமல் ஒரு முகூர்த்தக் காலம் பொறுத்துக்கொள்: ஏனென்றால் இந்தக் காலமானது மிகவும் பயங்கரமானது. பயங்கரங்கள் ஆகிய ப்ராணிகள் சஞ்சரிக்கக்கூடியது. இந்தச் சமயத்தில் ருத்ரருடைய பூதகணங்கள் சஞ்சரிப்பார்கள். ஓ பதி விரதையே, இந்த சந்தியா காலத்தில் பரமசிவன் வ்ருஷபத்தின் மீதேறித் தம்முடைய பார்ஷத கணங்களுடன் எங்கும் சஞ்சரிக்கிறார். அந்தப் பரமசிவனுடைய ஜடைகளில், சுடலையில் வீசும் காற்றினால் கிளம்பிய தூளிகள் படிந்திருக்கின்றன, நான்கு புறத்திலும் பறந்து மிருக்கின்றன. காந்தி யுள்ளவைகளுமாகவுமிருக்கின்றன, மேலும் அவர் பொன்னிறமான தம்முடைய சரீரத்தில் விபூதியைத் தரித்துக் கொண்டிருக்கிறவர், அப்படிப்பட்ட உன்னுடைய தேவரன் (பர்த்தாவின் சகோதரன்) மூன்று கண்களால் பார்த்துக் கொண்டிருக்கிறார். லோகத்தில் அவருக்கு பந்துவாவது, மற்றவனாவது (உதரசீனன்), மித்திரனாவது, சத்ருவாவது இல்லை, (எல்லாரிடத்திலும் சமமாயிருப்பவரென்று கருத்து),

அவருடைய சரணங்களால், நிர்மால்யம் போல் தள்ளப்பட்டதும், தோஷமுள்ளதென்று நிச்சயிக்கப் பெற்றதுமான மாயையை (அவருடைய விபூதியை) சம்சாரிகளான நாங்கள் மிகுந்த ப்ரசாதமென்று விரும்புகிறோம். அவித்யையைத் தாண்ட விரும்பிய வித்வான்கள் அவருடைய தோஷமற்ற சரிதத்தைக் கானஞ் செய்கிறார்கள். அவருக்குச் சமமானவனும், மேலானவனும் உலகத்தில் ஒருவருமில்லை. அப்படிப் பட்ட சாதுக்களுக்கதிபதியான அவர் பிசாசத்தின் நடை போன்ற ஆசாரத்தை அனுஷ்டிக்கிறார். பின்னும் அவர் ஆத்ம ஸ்வரூபத்திலேயே ரமிப்பவர். அவருடைய அபிப்ராயத்தை (உலகத்திற்குப் புத்தியைச் சொல்கிறார் என்பதை) அறியாதவர்களும், நாய்க்கு ஆகாரமாக இருக்கும் சரீரத்தையே ஆத்மா என்று நினைத்து, அதை நல்ல வஸ்திரங்களாலும், மாலை களாலும், ஆபரணங்களாலும், சந்தனம் பூசுவது முதலியவைகளாலும் அலங்கரிப்பவர்களுமான அக்ஞர்கள் அவருடைய சரிதத்தைப் பரிகசிப்பார்கள். அவரால் ப்ரஹ்மா முதலியவர்கள் ஸ்ருஷ்டி முதலிய வேலைகளில் ஏற்படுத்தப்பட்டு, தங்கள் தங்கள் அதிகாரத்தைக் காப்பாற்றுகிறார்கள். இந்த ஜகத்திற்கு அவரே காரணம், மாயையானது அவருக்குச் ஸ்வாதீனப்பட்டிருக்கிறது. அப்போர்ப்பட்ட திவ்ய விபூதிகள் பொருந்திய பரமேசுவரன், பிசாசத்தின் செய்கையை அனுஷ்டிப்பது என்ன காரணத்தால் என்று ஊகிக்க முடியாததாக இருக்கிறது" என்றார்.

30–36. அதனைக்கேட்ட திதியானவள் மன்மதனால் கலங்கின இந்திரியங்களுள்ளவாய்த் தாசிபோல் வெட்கத்தை விட்டு அவருடைய

வஸ்திரத்தைப் பிடித்துக் கொண்டாள். அந்த மாரீசர் செய்யக்கூடாத அந்தக் காரியத்தில் தம்முடைய பார்யை நிர்பந்தம் செய்வதை அறிந்து அதிர்ஷ்ட ஸ்வரூபியான பரமேசுவரனுக்கு நமஸ்காரம் செய்து ரகஸ்யத்தில் அவளுடன் சேர்ந்தார். பிறகு ஸ்நானஞ் செய்து ப்ராணாயாமஞ் செய்து மௌனமாகத் தோஷ மற்றதும், சாஸ்வதமானதும், தேஜோ ரூபமாயுமுள்ள பரமாத்மாவைத் தியானஞ் செய்தார்.

ஓ பரத வம்சத்தில் பிறந்தவரே! திதி தேவியானவள் அந்தக் கர்மதோஷத்தால் வெட்கமடைந்து அந்த மஹர்ஷியிடம் வந்து தலை குனிந்தவளாக, "ஓ பிராமணோத்தம! ஸகல பூதங்களுக்கும் அதிபதியுமான பரமசிவனுக்கு நான் அபராதஞ் செய்தேனெல்லவா? அதனால் அவர் கோபங்கொண்டு என்னுடைய வயிற்றில் உண்டாகும் கர்ப்பத்தை கெடுத்து விடாமல் இருக்கும்படி அனுக்கிரகிக்க வேண்டும். மஹாதேவரும் உக்கிரரும், எல்லாவற்றையும் உண்டுபண்ணுகிறவரும், மங்களத்தைச் செய்பவரும், பக்தர்களைக் காப்பாற்று பவரும் சத்துருக்களைச் சிக்ஷிப்பவரும். அஸத்துக்கள் இடத்தில் கோபமுள்ளவரும் ஆகிய ருத்ரருக்கு நமஸ்காரம். வேடர்களாலும் (தயையில்லாதவர்கள்) தயவுசெய்யக் கூடிய ஸ்திரீகளாகிய நம்மிடத்தில் அனுக்கிரக ஸ்வபாவமுள்ளவரும், ஸதீதேவிக்குப் பர்த்தாவுமான அந்த பகவான் தயவு செய்யட்டும் (ஸ்திரீகளுடைய ஸ்வபாவத்தை அறிந்தவர்) என்று கேட்டுக்கொண்டாள்.

37–51. இப்படித் தன்னுடைய கர்ப்பத்திற்கு க்ஷேமத்தை விரும்புகிறவளும், நடுங்குகிறவளும்,

மூவுலகத்திற்கும் தகுந்தவளும். தமது பார்யையுமான திதிதேவியை அந்த மாரீசர் நோக்கி, சந்தியா கால நியமங்களை முடித்துக் கொண்டு, "ஓ கோப ஸ்வபாவம் உள்ளவளே! உன்னுடைய சித்தம் அசுத்தமாக விருந்தாலும், முஹூர்த்த தோஷத்தாலும் (ஸந்தியா காலமாயிருந்தபடியால்), என்னுடைய கட்டளையை மீறினதாலும், தேவர்களை அவமதித்ததாலும் உனக்குத் துஷ்டர்களான இரண்டு பிள்ளைகள் பிறப்பார்கள். அவர்கள் மூன்று உலகங்களையும் அந்தந்த லோக பாலகர்களையும் அடிக்கடி கதறச் செய்வார்கள். யாதொரு அபராதமும் செய்யாத ப்ராணிகள் அவர் களால் அடிக்கப்பட்டு மிகவும் தைன்யத்தை அடை வார்கள், உலகத்திலுள்ள ஸ்திரீகள் நிக்கிரகிக்கப் படுவார்கள். பெரியோர்களுக்கு அவர்கள் கோபத்தை யுண்டுபண்ணுவார்கள். அப்பொழுது லோகத்திற்கு அதிபதியும், அவைகளைப் பரிபாலிப்பவருமாகிய பகவான் கோபங்கொண்டு பூமியில் அவதரித்து வஜ்ராயுதத்தைத் தகித்த இந்திரன் பர்வதங்களை யுடைப்பதுபோல அவ்விருவர்களையும் கொல்லப் போகிறார்', என்று சொன்னார். அதைக் கேட்ட திதியானவள் பர்த்தாவை நோக்கி, "ஓ பிரபுவே! என் னுடைய புத்திரர்களைச் சக்ரபாணியாகிய பகவான் கொல்லட்டும், ப்ராஹ்மணர்களிடமிருந்து அவர் களுக்கு வதம் நேரிடவேண்டாம்" ப்ராஹ்மணர்களி டையே பயத்தை உண்டுபண்ணுகிறவர்களும் எந்தெந்த ஜன்மத்தை அடைந்தாலும், அவ்விடத்திலிருக்கும் நரகிகளும் (பாபிகளும்) அவர்களிடத்தில் தயவு செய்யமாட்டார்கள் என்றாள், அதைக் கேட்ட மாரீசர் திதியை நோக்கி, செய்த குற்றத்தைப் பற்றி உனக்குப் பச்சாதாபம் நேர்ந்தபடியாலும் உடனே

யுக்தம், அயுக்தம் இவைகளை விசாரித்ததாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவினிடத்திலும், பரமசிவனிடத்திலும் கௌரவ புத்தி உண்டானதாலும், என்னிடத்தில் பிரியமுண்டானதாலும் உன்னுடைய பிள்ளையாகிய ஹிரண்யகசிபுவின் புத்திரர்களுக்குள் ஒருவன் பெரியோர்களால் ஒப்புக்கொள்ளக் கூடியவனாக இருப்பான். பகவானுடைய குணங்களுடன் சுத்த மாகிய அவனுடைய கீர்த்தியையும் சேர்ந்து ஜனங்கள் கானம் செய்வார்கள்.

தாழ்ந்த மாற்றுள்ள தங்கத்தை அக்கினியில் புடம்போடுவது முதலிய உபாயங்களால் ஸுத்த ஸ்வர்ணமாகச் செய்வது போலப் பெரியோர்கள் அந்தக் குழந்தையின் ஸ்வபாவத்தை அனுசரிப்பதற்காக (தாங்களும் அவனைப்போல ஆகிறதற்காக) ஓரிடத்தி லும் துவேஷம் செய்யாமலிருப்பது முதலிய உபாயங் களால் தங்களுடைய ஆத்மாவைச் சுத்தப்படுத்திக் கொள்வார்கள்.எவருடைய ப்ரசாதத்தால் இந்த ஜகத் ப்ரகாசிக்கிறதோ எவருடைய ஸ்வரூபமாக இருக்கிறதோ அப்பேர்ப்பட்ட ஆத்மசாட்சியாக பகவான் அந்தக் குழந்தையினுடைய உண்மையான ஞானத்தால் சந்தோஷத்தை அடைவார். மேலும் அவன் பகவத் பக்தர்களுக்குள் சிறந்தவன்; அளவற்ற ஞானமுள்ளவன்; மிகுந்த ப்ரபாவமுள்ளவன்; பெரியோர்களுக்கும் பெரியவன்; மேலும் அவன் விசேஷ பக்தியால் சுத்தமான தன்னுடைய மனத்தில் ஸ்ரீமந் நாராயணனைத் தியானித்துக் கொண்டு, தேகம் முதலியவைகளின் அபிமானத்தை விட்டு விடுவான்.

பின்னும் அந்தப் புத்திரன் நல்ல ஸ்வபாவ

முள்ளவன். நல்ல குணங்களுக்கு உற்பத்தி ஸ்தானம்; பிறருடைய சம்பத்தைப் பார்த்துச் சந்தோஷப்படு கிறவன்; பிறருடைய துக்கத்தால் தானும் துக்கிப்பவன்; ஸத்ருவற்றவன்; வெயிலால், ஜகத்திற்கு உண்டாகும் தாபத்தைச் சந்திரன் போக்கடிப்பது போல லோகத்தின் துக்கத்தைப் போக்கடிப்பான். மேலும் உன்னுடைய பௌத்திரனாகிய அவன், தாமரை, மலர்போன்ற கண்களுள்ளவரும், பக்தர்களுடைய இஷ்டத்திற்குத் தக்கபடி உருவத்தைத் தரிப்பவரும், லக்ஷ்மிதேவியாகிய ஸ்திரீயை அலங்காரமாக உடையவரும், ப்ரகாசிக்கும் குண்டலங்களால் அழகான முகத்தை யுடைய வருமாகிய பகவானை உள்ளிலும், வெளியிலும், நேரிலும் தரிசிப்பான், என்று அனுக்கிரகித்தார். அதனைக் கேட்டு திதியானவள் தன்னுடைய புத்திரர் களுக்குப் பகவானால் வதம் நேரிடப்போகிறதாகத் தெரிந்து கொண்டு விசேஷ உற்சாகத்தை யடைந்தது மன்றி, பௌத்திரன் (பிள்ளையின் பிள்ளை) பகவத் பக்தனாக ஆகப்போகிறான் என்பதைத் தெரிந்து கொண்டதனால் மிகவும் சந்தோஷத்தையும் அடைந்தாள்.

அத்தியாயம்–15

ஜய விஜயர்களுடைய சாபம்

1–10 திதியானவள் சத்துருக்களுடைய தேஜஸ்ஸைப் போக்கடிக்கக்கூடிய அந்த காச்யபர் வீரியத்தை ஆயிர வருஷங்கள் (தேவர்களுக்கு இதனால் உபத்திரவம் நேரிடுமோவென்று சந்தேகப்பட்டுக் கொண்டு) தரித்திருந்தாள். அந்தக் கர்ப்பத்தினுடைய தேஜஸினால் சூரியன் முதலியவைகள் காந்தியற்றவை களாயின. லோகபாலர்களுக்கும் தேஜஸ் குறைந்தது; திக்குகளை இருள் சூழ்ந்து கொண்டது. அப்பொழுது தேவர்கள் ப்ரஹ்மதேவரிடம் சென்று, ஓ ப்ரபுவே, எதனால் நாங்கள் மிகவும் பயப்படுகிறோமோ, அந்த இருள் உண்டான காரணம் உமக்குத் தெரியுமா? உம்முடைய ஞானமானது காலத்தாலும் குறைவுபடு கிறதில்லை;; ஆதலால் உமக்குத் தெரியாத தொன்றும் இல்லை; ஓ தேவர்களுக்கும் தேவரே! ஜகத்திற்கு அதிபதியே! லோகபாலர்களுக்கும் அதிபதியே; எல்லாருடைய அபிப்ராயத்தையும் அறிந்தவரே! விஞானமாகிய பலமுள்ளவரும், மாயையால் ப்ரஹ்ம சரீரத்தை அடைந்தவரும், ரஜோ குணத்தை அங்கீகரித்தவரும் ப்ரபஞ்சத்திற்குக் காரணரும், ப்ரமாணங்களால் அறிய முடியாதவருமாகிய உமக்கு நமஸ்காரம்.

மேலும் நீர் ஜீவர்களைப் பரிபாலிப்பவர்; ஸகல லோகங்களும் உம்மிடத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நீர் எல்லாவற்றிற்கும் மேலானவர். காரிய காரண ஸ்வரூபியாயிருப்பவர்; அப்படிப்பட்ட உம்மை யார்

பலனை யுத்தேசியாமல் பூஜிக்கிறார்களோ அவர்கள் இந்திரியங்கள்;, மனம், ஸ்வாசம், ஆகிய இவைகளை ஜயித்து பக்குவமான யோகமுள்ளவர்களாக உம்முடைய ப்ரசாதத்தை அடைகிறார்கள்.

அவர்களுக்கு ஓரிடத்திலும் அவமானம் நேரிடுகிறது இல்லை. பசுக்கள் கயிறுகளால் கட்டப்படுவது போல் ஸகல ப்ரஜைகளும், உம்முடைய வாக்காகிய வேதங்களால் கட்டப்பட்டு, உம்மைப் பூஜிக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் நியந்தாவாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறோம். திதியினால் தரிக்கப்பட்டதும், காசியபர் உடைய வீரியத்தாலுண்டானதுமான கர்ப்பமானது அக்கினி கட்டையில் விருத்தியடைவது போல் வளர்கிறது. அதனால் திக்குகள் இருளால் மூடப்பட்டு இருக்கின்றன (நல்ல காரியங்கள் நடக்கவில்லை! ராத்திரி பகல் என்ற பிரிவு இல்லாததால்;) ஆதலால் நீர் உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்யும்; கருணை நிறைந்த பார்வையால் ஆபத்தை யடைந்த எங்களைப் பார்க்க வேண்டும் என்றார்கள்.

11–30 சிறந்த கைகளுள்ள ஓ விதுரரே! பகவான் ஆகிய ப்ரஹ்மதேவர் சிரித்து, (திதியின் கெட்ட செய்கையை நினைத்து) அழகான வார்த்தையால் தேவர்களைச் சந்தோஷிக்கச் செய்து கொண்டு பதில் சொல்ல ஆரம்பித்தார். எப்படியெனில், "ஓ தேவர்களே! என்னுடைய மானச புத்திரர்களும் உங்களுக்கு முந்தியவர்களுமான சனகர் முதலியவர்கள். விஷயங்களில் ஆசையில்லாதவர்களாய் ஆகாசத்தின் வழியாக லோகங்களில் சஞ்சரித்தார்கள். ஒருகால் அவர்கள் நிர்மல ஸ்வபாவமுள்ள பகவானாகிய மஹாவிஷ்ணுவின்

லோகமாகிய வைகுண்ட லோகம் சென்றார்கள். அந்த லோகம் எல்லோராலும் நமஸ்கரிக்கப்பட்டது! அவ்விடத்தில் வஸிப்பவர்கள் எல்லோரும் ஸ்ரீமந் நாராயணனுடைய சரீரம் போன்ற தேகமுள்ளவர்கள்! அவர்கள் ஒரு பயனையும் உத்தேசியாமலேயே பகவானை ஆராதிப்பவர்கள்; மேலும் அவ்விடத்தில் எல்லாவற்றிற்கும் முந்தியவரும், வேதங்களாலேயே அறியக் கூடியவரும், தர்ம ஸ்வரூபியுமான பகவான் சத்ய மூர்த்தியாகத் தம்முடைய பக்தர்களான நமக்கு க்ஷேமத்தைச் செய்து கொண்டு வஸிக்கிறார்.

அந்த லோகத்தில் கைவல்யமே சரீரத்துடன் வஸிக்கிறதென்று நினைக்கக் கூடியதும், நைச்ரேயஸம் என்ற பெயருள்ளதுமான ஒரு வனமிருக்கிறது; அதிலுள்ள மரங்கள் இஷ்டமான வஸ்துக்களைக் கொடுக்கக்கூடியவை; எல்லா ருதுக்களிலும் ஏற்படக் கூடிய அழகுள்ளது; அவ்விடத்தில் தேவர்கள் தங்களுடைய ஸ்திரீகளுடன் பகவானுடைய திவ்ய சரிதங்களைக் கானஞ் செய்கிறார்கள். அவைகள் ஜனங்களுடைய பாபத்தைப் போக்கக் கூடியவை; மேலும் அவர்கள் ஜலத்தின் மத்தியில் மலர்ந்திருக்கும் மாதவீ புஷ்பங்களுடைய வாசனையுள்ள காற்றையுங் கூட கவனியாமலிருக்கிறார்கள். (போகத்திற்கு சாதனங்களிருந்தாலும், அவைகளில் ஆசைப்படாமல் பகவத் குணங்களைக் கானம் செய்கிறார்கள்.)

பின்னும் அவ்விடத்திலிருக்கும் சிறந்த வண்டானது உரக்கக் கத்தும்போது, அதனைக் கேட்ட பாராவதங்கள் (புறாக்கள்), குயில்கள், சாரஸங்கள், சக்கரவாகங்கள், நச்சுக்குருவிகள், ஹம்சங்கள்,

கிளிகள், தித்திரிகள் (நெருப்புக்கோழிகள்), மயில்கள் ஆகிய பறவைகள் தங்களுடைய கோலாஹல சப்தத்தை நிறுத்தி விட்டு, 'இந்த வண்டானது பகவத் குணங்களைக் கானம் செய்கிறதோ? என்று ஒரு க்ஷண காலம் மௌனங்களாக இருக்கின்றன. மேலும், துளஸிமாலையுள்ள பகவான் துளஸியின் வாசனையில் பிரீதியுள்ளவராக இருப்பதைப் பார்த்து, மந்தாரம், குந்தம், மருதாணி, நீலோத்பலம், சம்பகம், அர்ண மென்ற புஷ்பம், புன்னை, நாகை மகிழம், தாமரசம், பாரிஜாதம் ஆகிய புஷ்பங்கள் துளஸியினால் செய்யப்பட்ட துபசைப் பற்றிப் புகழ்கின்றன. (அவ்விடத்தில் இருப்பவர்கள் மாத்சரியம் இல்லாத வர்களென்பது கருத்து.) மேலும், அவ்விடத்தில் ஸ்ரீ பகவானுடைய பாதாரவிந்தத்தில் நமஸ்காரஞ் செய்த மாத்திரத்தால் கிடைத்தவைகளும் (கர்மத்தால் கிடைத்தவர்களில்லையென்பது கருத்து).

வைடூர்யம், மரகதம், ஸ்வர்ணம் ஆதிய இவைகளால் செய்யப்பட்டவைகளுமான பக்தர்கள் உடைய விமானங்கள் வெகுவாக இருக்கின்றன. அந்த விமானத்திலிருப்பவர்களும் பகவானிடத்திலேயே மனமுள்ளவர்களுமான பக்தர்களுக்கு அவ்விடத்தில் இருக்கும் அழகான இடுப்பு, சிரிப்பு முதலியவைகளால் ப்ரகாசிக்கும் முகமுள்ள ஸ்திரீகளால் காமத்தை உண்டுபண்ண முடியவில்லை. பின்னும் அவ்விடத்தில் பகவானுடைய க்ருஹமானது தங்க வேலைகளால் அழகான ஸ்படிகச் சுவருள்ளதாக இருக்கிறது, அதில் லக்ஷ்மீ தேவியானவள்; தன்னுடைய ஸ்வரூபத்துடன், பாதங்களில் அணிந்த பாதசரங்களால் இனிமையான சப்தமுள்ளவளாகி, தோஷமற்றவளாய், (சஞ்சலையென்ற

தோஷமற்றவளாக) தன்னுடைய கையிலிருக்கும் தாமரைப் புஷ்பத்தால் அவ்விடத்திலுள்ள தங்கத் தூள்களைப் பெருக்குகிறவள் போலக் காணப்படுகிறாள். அவளுடைய அனுக்கிரகத்திற்காகவே ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் முயலுகிறார்கள்.

மேலும் ஓ தேவர்களே! அந்த லக்ஷ்மீதேவியானவள் தன்னுடைய உத்யானத்தில் பவழக்கரையுள்ளவைகளும் நிர்மலமாகிய ஜலமுள்ளவைகளுமான ஓடைகளில் தன்னுடைய தோழிகளுடன் துளஸியினால் பகவானைப் பூஜிக்கிறாள். அப்பொழுது ஜலத்தில் ப்ரதிபிம்பித்தும், அழகான தலைமயிருள்ளதும், மேலான மூக்குள்ளதுமான தன்னுடைய முகத்தைப் பார்த்து, பகவானால் சும்பனஞ் செய்யப்பட்டதென்று நினைத்தாள். (லக்ஷ்மியின் அழகும் பகவத்ததீனம்) எந்தக் கதைகளைக் கேட்ட மனிதர்களுக்குப் புண்யமும், அதிருஷ்டமும் குறைகின்றதோ, நரகத்தை அடைகிறார்களோ, அப்போர்ப்பட்டவைகளும், விவேகத்தைப் போக்கக் கூடியவைகளும். அர்த்தம், காமம் ஆகிய இவைகளைப் பற்றியவைகளுமான கெட்ட கதைகளைக் கேட்பவர்களும், பாபத்தைப் போக்கடிப்பவராகிய பகவானுடைய ஸ்ருஷ்டி முதலியவைகளைச் சொல்வதில் பிரியமற்றவர்களுமான ப்ராணிகள் அந்த வைகுண்டம் செல்கிறதில்லை.

தேவர்களான நம்மாலும் விரும்பப்பட்டதும், தர்மம், ஞானம் ஆகிய இவைகளுக்கு சாதனமுமான மனுஷ்ய ஜன்மத்தையடைந்தும் எவர்கள் பகவான் உடைய மாயையால் மோஹித்து அவரை ஆராதிக்க வில்லையோ, அவர்களும் அவ்விடம் செல்லுகிறது

இல்லை. எவர்கள் தேவர்களுக்கு தேவராகிய பகவானை அனுசரிக்கிறார்களோ, அவர்கள் நம்மாலும் ஆசைப்படக் கூடிய சுபாவமுள்ளவர்களேயாம். அவர் களுக்கு யமனுடைய உபத்திரவம் இல்லை. எவர்கள் ஒருவருக்கொருவர் தங்களுடைய யஜமானனாகிய பகவானுடைய குணங்களைக் கானம் செய்து, அதனால் தேகம் பரவசமாகி மயிர்க்கூச்சல் உண்டானவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் மேற்சொல்லிய வைகுண்டஞ் செல்வார்கள்.

ஜகத்திற்கு அதிபதியாகிய ஸ்ரீமந் நாராயணனுடைய வாசஸ்தலமும், ஸகல ஜகத்தினால் கொண்டாடக் கூடியதும்; தேவார்ஹமாயும், விசித்திரங்களான சிறந்த விமானங்களுடைய காந்தியுள்ளதுமான அந்த வைகுண்டத்திற்கு அம்முனிகள் தங்களுடைய யோகமாயா பலத்தால் சென்று, பரமானந்தத்தை அடைந்தார்கள். அவ்விடத்தில் அந்த மஹரிஷிகள் அற்புதமான விஷயங்களைப் பார்த்தும் அவைகளில் ஆசைப்படாமல் (பகவத் தரிசனத்தில் ஆசையால்) ஆறு ப்ராகாரங்களைத் தாண்டி ஏழாவது ப்ராகாரம் சென்று அவ்விடத்தில் இரண்டு துவாரபாலகர்களைக் கண்டார்கள். அவர்கள் ஒரே வயதுள்ளவர்கள்! விலையுயர்ந்த தோள் வளைகள், குண்டலங்கள், கிரீடம் ஆகிய இவைகளால் அழகாயிருப்பவர்கள். கையில் கதாயுதத்தைத் தரித்தவர்கள்; வனமாலை யினால் அலங்கரிக்கப்பட்டவைகள். கருமையான நிறமுள்ள நான்கு கைகளுள்ளவர்கள்.

மேலும், அவர்களுடைய முகத்தில் வக்கிரமான புருவங்களும், சிவந்த கண்களும்; பெரிய மூக்குகளும்

இருக்கின்றன. அப்பொழுது அந்த முனிகள் ஸ்வர்ணத்தாலும், வஜ்ரத்தாலும் செய்யப்பட்ட கதவுகளுள்ள ஆறு ப்ராகாரங்களுக்குள் ப்ரவேசித்தது போல, ஏழாவது ப்ராகாரத்திலும் த்வார பாலகர் களான அவ்விருவர்களும் பார்த்துக் கொண்டிருக்க, அவர்களைக் கேட்காமலேயே உள்ளே சென்றார்கள். அவர்கள் சமதிருஷ்டி உள்ளவர்களாகையால் எங்கும் பயமில்லாமல் சஞ்சரிப்பவர்கள். அவர்களை ஒருவரும் தடுக்கிறதில்லை. இப்படிப் பகவானைத் தரிசிப் பதற்காக உள்ளே செல்லுகிறவர்களும், வஸ்திரமில்லாத வர்களும், மிகவும் வயது சென்றவர்களானாலும், ஐந்து வயதுள்ளவர்கள் போல் தோன்றுகிறவர்களும், ஆத்மாவின் உண்மையை அறிந்தவர்களும், தடுக்கக் கூடாதவர்களுமாகிய அந்தச் ஸனகர் முதலிய முனிவர்களைப் பார்த்து, அந்தத் த்வாரபாலகர்கள் இருவர்களும் அவர்களுடைய தேஜஸை (தைரியத்தைப்) பற்றி பரிகாசஞ் செய்து பகவானுக்குப் ப்ரதிகூல ஸ்வபாவமுள்ளவர்களாகிப் பிரம்பினால் அவர்களைத் தடுத்தார்கள்.

31–34 இப்படி ஸகல தேவர்களும் பார்த்துக் கொண்டிருக்கும் போது ஸ்ரீ பகவானுடைய த்வார பாலகர்களால் தடுக்கப்பட்ட பூஜ்யர்களான அந்த மஹரிஷிகள், ஸகல லோகத்திற்கும் மிகுந்த ஸுகிருத்தாகிய பகவானுடைய தரிசனத்திற்கு விக்கினம் நேர்ந்ததால் கோபம் கொண்டு, கலங்கிய கண்களுடன் பகவானுக்கு மிகுந்த சிச்ருஷையைச் செய்து, அதனால் வைகுண்டவாசத்தை அடைந்து எல்லாவற்றையும் சமமாகப் பார்க்கும் ஸ்வபாவமுள்ள இந்த லோக ஜனங்களுக்குள் இவர்களுடைய

ஸ்வபாவம் வேறாகக் காணப்படுகிறதே, இதென்ன? ஓ த்வாரபாலகர்களே! மிகவும் சாந்தரும், துவேஷமற்ற வருமாகிய அந்த மஹாபுருஷனிருக்குமிடத்தில் யார் தான் போகக்கூடாது? (எல்லோரும் போகலாமென்று கருத்து.) நீங்களிருவர்களும் கபட ஸ்வபாவமுள்ளவர்கள் ஆகையால் உங்களைப் போல் மற்றவர்களும் கபடமாக இருப்பார்களென்று பிறரைப் பற்றிச் சந்தேகிக்கிறீர்கள். (பகவத் பக்தி இல்லாதவர்கள் இவ்விடம் வரமாட்டார்கள். பகவான் மிகவும் சாந்தராகையால் அவரிடத்தில் பயப்படவேண்டியது இல்லை. ஆகையால் நீங்கள் மிகவும் துஷ்டர்கள் என்று கருத்து) ஸகல ஜகத்தையும் தம்முடைய வயிற்றில் வைத்துக் காப்பாற்றும் பகவானுக்கு பேதபுத்தி இல்லை.

குடத்திற்குள் இருக்கும் ஆகாசமானது எப்படி மஹாகாசத்தில் அடங்கியதோ, அப்படியே பரமாத்மாவினிடத்தில் தாங்கள் அடங்கியவர்கள் என்று வித்வான்கள் பார்க்கிறார்கள். அப்பேற்பட்ட பகவானிடத்தில் மற்றவர்களிடத்தில் போல் பேத புத்தியாலுண்டாகும் பயமானது தேவர்கள் போல வேஷந் தரித்த உங்களால் உண்டு பண்ணப்பட்டது. ஆனதால் மந்தபுத்தியுள்ளவரும் ஸ்ரீ பகவானுடைய வேலைக்காரர்களுமாகிய உங்களுடைய க்ஷேமத் திற்காகவே யோசித்துச் சொல்லுகிறோம். நீங்கள் பேதபுத்தி உள்ளவர்களாகையால், காமம், குரோதம், உலோபம் ஆகிய மிக்க பாபிகளாகிய மூன்று சத்ருக்கள் வஸிக்கும் பூலோகத்திற்குச் செல்லுங்கள், என்றார்கள்.

35–36 அதனைக் கேட்ட அவ்விருவர்களும், ஸ்ரீ மஹா விஷ்ணுவின் வேலைக்காரர்களானாலும், ப்ராஹ்மண சாபம் அநேக அஸ்திரங்களாலும் நிவர்த்திக்க முடியாதது, என்ற நிச்சயமுள்ளவர்களாகி மிகவும் பயந்து அம்முனிவர்களுடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டு அவர்களை நோக்கி, ஓ மஹரிஷிகளே! குற்றஞ் செய்தவர்களான எங்களுக்குத் தக்கபடி சிக்ஷை விதித்தீர்கள். (தங்களிடத்தில் கொஞ்சமேனும் குற்றமில்லை யென்பது கருத்து.) ஆனாலும் நீங்கள் எங்களிடத்தில் கிருபை செய்து, பச்சாதாபமடைந்து, எங்களை அனுக்கிரஹிக்க வேண்டும். எங்களுடைய புத்திக் குறைவினால் நாங்கள் கீழுலகஞ் சென்றாலும், அவ்விடத்தில் எங்களுக்கு மோஹம் உண்டாகாமல் இருக்க வேண்டும். அப்படி மோஹம் உண்டானாலும் பகவானுடைய ஞாபகமிருக்க வேண்டும். அஃதிருந்தால் ஈசுவரனுடைய ஆக்ஞையை அதிக்ரமித்ததாலுண்டான தோஷமும் நீங்கிவிடும், என்று கேட்டுக் கொண்டார்கள்.

37–45 அப்பொழுது பெரியோர்களுக்கு மனோகரராகிய பகவான் தம்மைச் சார்ந்த த்வார பாலகர்கள் சாதுக்களுக்கு குற்றஞ் செய்தார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு, பரமஹம்சர்களான மஹர்ஷிகளாலும் தேடக்கூடிய தம்முடைய பாதங்களை அசைத்துக் கொண்டு (கால்நடையாக) லக்ஷ்மீதேவி யுடன் அவ்விடம் வந்தார். (என்னுடைய பாததரிசனத் திற்காக வந்தவர்களைத் தடுத்ததால் அவர்கள் கோபங் கொண்டார்கள். அந்தத் தரிசனத்தை அவர்களுக்குக் கொடுத்தோமன்னால் கோபம் தணிந்துவிடுமென்பது கருத்து) அந்த முனிவர்கள் அப்பொழுது அவ்விடம்

வந்த பகவானைத் தரிசித்தார்கள். அவர் அந்த முனிகளுடைய சமாதியால் அடையக் கூடிய பாக்கிய மேயாவார். மேலும் அவரை அந்த லோகத்துப் புருஷர்கள் குடை முதலியவைகளால் உபசரிக்கிறார்கள். அவருடைய பக்கங்களில் ஹம்சம் போன்ற சாமரங்கள் வீசப்படுகின்றன. அவைகளிலிருந்து வீசும் காற்றானது மிகவும் சுககரமாகவிருக்கிறது. அதனால் சந்திரன் போலப் ப்ரகாசிக்கும் வெண்குடையில் தொங்குகிற முத்து மாலைகள் அசைகின்றன. அவைகளிலிருந்து ஜலத்துளிகள் விழுகின்றன.

பின்னும் அந்தப் பகவான் எல்லாரிடத்திலும் தயைசெய்யும் நல்ல முகமுள்ளவர். ஆசைப்படக்கூடிய சத்குணங்களுக்கு வாசஸ்தலமாக இருப்பவர். ப்ரீதியுடன் பார்ப்பதால் மனத்திற்கு சந்தோஷத்தை உண்டு பண்ணுகிறவர். மேலும், அவர் சுவர்கத்திற்குச் சிரோரத்னமாக இருக்கும் தம்முடைய வைகுண்ட லோகத்தைத் தம்முடைய கருத்த மார்பிலிருக்கும் லக்ஷ்மீயால் ப்ரகாசிக்கச் செய்பவர். மேலும் பீதாம்பரம் தரித்த பெரியதாக பகவானுடைய நிதம்பத்தில் ப்ரகாசிக்கிற கடிசூத்ரத்தாலும், வண்டுகளால் சப்திக்கும் வனமாலையாலும் அந்த உலகம் விளங்குகிறது. மேலும், அந்தப் பகவான் அழகான கங்கணத்தைத் தரித்தவர். கருடனுடைய தோளில் ஒரு கையை வைத்தும், மற்றொரு கையால் தாமரைப் புஷ்பத்தைச் சுழற்றிக் கொண்டு மிருந்தார். அவருடைய கன்னங்கள் மின்னலை அவமதிக்கக் கூடிய மகர குண்டலங்களால் அலங்கரிக்கப்பட்டவை, முகமானது அழகான மூக்குள்ளது. பின்னும் அவர் ரத்னங்களிழைத்த கிரீடமுள்ளவர். கைகளுடைய

மத்தியில் ப்ரகாசிக்கின்ற கௌஸ்துப ஹாரமுள்ளவர். அவருடைய சரீரமானது மிகுந்த அழகுள்ளதாகையால், பக்தர்கள் அவருடைய திவ்ய தேகத்தைத் தரிசித்தவுடன், நானே மிகுந்த சௌந்திரியமுள்ளவன் என்ற லக்ஷ்மீதேவியுடைய அகங்காரம். இதனால் அடக்கப்பட்டதென்று நினைக்கிறார்கள்.

அப்போர்ப்பட்ட பகவானுடைய சரீரத்தைத் தரிசித்து அம்முனிகள் திருப்தி அடையாதவர்களாகி, மிகுந்த சந்தோஷத்துடன் அவருடைய பாதத்தில் தங்களுடைய சிரசு படும்படியாக நமஸ்கரித்தார்கள். அவர் ப்ரஹ்மாவாகிய என்னாலும், பரமசிவனாலும் உங்களாலும் (தேவர்களாலும், சேவிக்கத்தக்க திவ்ய சரீரத்தைப் ப்ரகாசப்படுத்துகிறவர்) அப்பொழுது அந்தப் புண்டரீகாக்ஷருடைய (தாமரைக் கண்ணன்) பாதங்களிலிருந்து துளஸியின் மதுவுடன் கூடிய காற்றானாது மூக்கு வழியாக அவர்களுக்குட் சென்றது. அவர்கள் ப்ரம்மானந்தத்தை அனுபவிக்கிறவர்களானாலும், அவர்களுடைய மனம் கலங்கினது. சரீரத்தில் மயிர்க் கூச்சலுண்டாயிற்று. பின்பு அவர்கள் பகவானுடைய கருத்த தாமரை மலர் போன்ற முகத்தையும்,அதில் சிவந்த அழகாய் உள்ள உதடுகளையும் குருக்கத்தி மலர் போல் வெண்மையான சிரிப்பையும் பார்த்து பூர்ண மனோரதமுள்ளவர்களாகத் திரும்பவும் இரத்தினங்கள் போன்ற நகங்களுக்கு ஆசிரயங்களான அவருடைய பாதங்களைத் தரிசித்துத் தியானஞ் செய்தார்கள். (எல்லா அவயவங்களுடைய லாவண்யத்தை ஒரே தடவையில் பார்த்து க்ரஹிக்க முடியாதவர்களாக அடிக்கடி பார்த்தார்களென்பது கருத்து.) அந்தப்

பகவான் யோக மார்க்கத்தைக் கொண்டு தேடுபவர்களால் தியானஞ் செய்யகூடியவர். அநேக ஞானிகளால் உபாசிக்கப்பட்டவர். புருஷரூபத்தைக் காண்பித்தவர். மற்றவர்களுக்குக் கிடைக்காதவைகளும், இயற்கையாகவே கிடைத்தவைகளுமான எட்டுவித ஐசுவர்யங்களுள்ளவர், அப்பேர்ப்பட்ட பகவானை அந்த ஸனகர் முதலிய மஹர்ஷிகள் பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்தார்கள்.

46 50 "ஓ பகவன்! நீர் ஸகல பிராணிகளுடைய ஹிருதயத்திலிருப்பவரானாலும், துஷ்டர்களுடைய கண்களுக்குப் புலப்படுகிறதில்லை. அப்பேர்ப்பட்ட நீர் எங்களுடைய கண்களுக்குப் புலப்பட்டீர். உம்மிடத்திலிருந்து உண்டானவரும், எங்களுக்குப் பிதாவுமான ப்ரஹ்மதேவர். உம்முடைய ரகசியத்தை உபதேசித்தபொழுதே, நீர் காதின் வழியாக எங்களுடைய ஹிருதயத்தை அடைந்திருக்கிறீர். ஓ பகவான்! உம்மைப் பரமாத்மா வென்றும், சுத்த சத்வ மூர்த்தியாகையால் பக்தர்களுக்கு ரதியை (ஆசையை) உண்டு பண்ணுகிறவராகவும், தெரிந்து கொள்ளுகிறோம். உம்முடைய கிருபையால் (அனுதாபம்) பக்தி யோகத்தை அடைந்து அதனால் மனத்திலிருக்கும் அகங்காரத்தை ஒழித்து, வைராக்யமடைந்த மஹரிஷிகள் உம்மை அறிவார்கள். மேலும், ஸ்தோத்திரம் பண்ணக்கூடியதும், பரிசுத்தியை உண்டு பண்ணக் கூடியதுமான உம்முடைய கதையின் ரசத்தை எவர்கள் அறிந்திருக்கிறார்களோ, எவர்கள் உம்முடைய பாதாரவிந்தத்தைச் சரணமடைந்து இருக்கிறார்களோ, அந்தப் பக்தர்கள் உம்முடைய அனுக்கிரகபரமான மோக்ஷத்தையும் விரும்புகிறதில்லை.

அப்படியிருக்க, பயமுள்ளதாகிய இந்திரபதம் முதலியவைகளை விரும்புவார்களா? ஓ பகவன்! உம்முடைய பக்தர்களைச் சபித்ததால் நாங்கள் தங்களுக்கு அபராதஞ் செய்தவர்களானோம். அதனால் எங்களுக்கு ஜன்மம் ஏற்படுமோ? வண்டானது முட்களால் வருத்தப்பட்டும் புஷ்பங்களில் ரமிப்பது போல அந்த ஜன்மாவிலும் எங்களுடைய மனமானது உம்முடைய பாதாரவிந்தத்தையே நினைத்திருக்கும் ஆனால் அந்த ஜன்மமும் எங்களுக்குக் கிடைப்பது சம்மதமேயாகும். ஆனால் துளசியானது உம்முடைய பாதத்தின் சம்பந்தத்தால் விளங்குவதுபோல் எங்களுடைய வாக்கும் தங்களுடைய குணங்களைச் சொல்வதாலேயே ப்ரகாசிக்க வேண்டும். எங்களுடைய காதுகளும் உம்முடைய கல்யாண குணங்களைக் கேட்பதாலேயே நிறைந்திருக்க வேண்டும்.

ஓ மிகுந்த கீர்த்தியுள்ளவரே! நீர் இந்த திவ்ய ஸ்வரூபத்தை நாங்கள் பார்க்கும்படி செய்ததால் எங்களுடைய கண்கள் சபலங்களாயின. இந்த ஸ்வரூபம் துஷ்டர்களுக்குப் புலப்படாது அந்தப் பகவானாகிய உமக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்' என்று சொன்னார்கள்.

அத்தியாயம்–16

ஜய விஜயர்களுக்கு அனுக்கிரகம்

1–2. அந்த ஸனகர் முதலிய யோகிகளுடைய வார்த்தையைச் சிலாகித்து வைகுண்டத்திலிருக்கும் சாக்ஷாத் பகவான், இந்த ஜயன் விஜயன் என்கிற இருவர்களும் என்னுடைய பார்ஷதர்களானாலும் இவர்கள் தர்மத்தை அதிக்ரமித்தவர்கள். ஆதலால் இவர்கள் விஷயத்தில் என்னுடைய பக்தர்களான உங்களால் செய்யப்பட்ட சிக்ஷையானது எனக்கும் அபிமதமேயாம், எனக்குப் ப்ராஹ்மணர்களே முக்கியமான தெய்வம். என்னுடைய வேலைக்காரர்களால் செய்யப்படும் குற்றமானது என்னால் செய்யப்பட்டதாகவே நினைக்கிறேன். நீங்கள் மன்னிக்கவேண்டும். எவனுடைய வேலைக்காரன் கெட்ட காரியத்தைச் செய்கிறானோ அவனைப்பற்றி ஜனங்கள் பேசிக் கொள்வார்கள் அல்லவா? அது குஷ்ட ரோகமானது தோலைக் கெடுப்பது போல யஜமானுடைய கீர்த்தியைக் கெடுத்துவிடுகிறது. என்னுடைய சுத்தமும் அமிருதமயமுமாகிய கீர்த்தியைக் கேட்பதால் அதில் ஸ்நானம் செய்யும் சண்டாளன் வரையிலுள்ள ஜகத்தானது பரிசுத்தமாகி விடுகிறது. உங்களிடமாக நல்ல கீர்த்தியை அடைந்து விளங்கும் நான் என்னுடைய கையானாலும் உங்களுக்கு விரோதம் செய்யுமானால் அதை வெட்டிவிடுவேன். ப்ராஹ்மணர்களைச் சேவித்ததால், பரிசுத்தமாகிய பாததூளி உள்ளவனாகவும், ஸகல பாபங்களையும் போக்கக் கூடியவனாகவும் நல்ல ஸ்வபாவத்தை அடைந்தவனுமாகவும் நான் இருக்கிறேன். அப்போர்ப்பட்ட என்னை

(வைராக்கிய முள்ளவனாலும்) லக்ஷ்மி ஒருபொழுதும் விடுகிறதில்லை. அவளுடைய கடாக்ஷத்தை ப்ரஹ்ம தேவர் முதலியவர்களும் அடைய விரும்பித் தபஸ் செய்கிறார்கள். ப்ராஹ்மணர்களுக்கு அன்னங் கொடுத்து அவர்கள் நெய் ஒழுகும்படி புசிக்க அவர்கள் முகமாய் நான் புசித்து எவ்வளவு திருப்தி அடைகிறேனோ அவ்வளவு சந்தோஷமானது யாகத்தில் யஜமானனால் கொடுக்கப்படும் ஹவிஸ்ஸை அக்கினி முகமாகப் புசிப்பதால் எனக்கு உண்டாகிறது இல்லை. ப்ராஹ்மணர்கள் குற்றஞ் செய்தாலும் அதைப் பொறுப்பதே உசிதம்.

எவர்களுடைய பாதத்தை அலம்பிய ஜலமானது பரமசிவனையும் மற்ற ஜகத்தையும் பரிசுத்தப்படுத்து கிறதோ, தடையற்றதும் பூர்ணமுமான யோக மாயையின் விபூதிகளை உடையவனாகிய நான் அந்தப் ப்ராஹ்மணர்களுடைய பாததூளியைச் சிரசால் தரிக்கிறேன். மேலும் என்னுடைய சரீரரமாகிய ப்ராஹ்மணர்களையும், பசுக்களையும் காப்பாற்று கிறவர்களில்லாமல் கஷ்டப்படும் மற்றப் ப்ராணிகளையும் பாப ஸ்வபாவமுள்ள எந்தப் புருஷர்கள் சர்ப்பம் போல் கோபமுள்ளவர்களாகி என்னை காட்டிலும் வேறென்று நினைக்கிறார்களோ, அவர்களை என்னுடைய வேலைக்காரனாகிய யமனிடத்திலிருக்கும் கழுகுபோன்ற தூதர்கள் உபத்திரவிக்கிறார்கள். எவர்கள் ப்ராஹ்மணர்களை என்னுடைய ஸ்வரூபமென்று நினைத்து சித்தத்தில் சந்தோஷத்துடனும், சிரித்த முகத்துடனும் பூஜிக்கிறார்களோ, பிரியமுள்ள வார்த்தையால் பேசிக்கொண்டு புத்திரனைப்போல் அழைக்கிறார்களோ, அவர்கள் என்னைப் பூஜித்தவர்களாக

ஆகிறார்கள். ஆதலால் இவ்விருவரும் யஜமானனாகிய என்னுடைய எண்ணத்தை (ப்ராஹ்மணர்களே தெய்வமென்பதை) அறியாமல், உங்களிடத்தில் குற்றஞ் செய்ததால், அதன் பலனை உடனே அனுபவித்து மறுபடியும் என்னுடைய சமீபம் சேரட்டும். இவர் களுக்குச் சீக்கிரமாக சாபத்தின் முடிவுக்காலத்தை ஏற்படுத்துவதே என்னைப்பற்றிச் செய்யும் அனுக்கிரமாகும்" என்று கேட்டுகொண்டார்.

13–25. அந்த யோகிகள் கோபமுள்ளவர்களானா லும் பின்பு பிரியாமானதும். மந்திர ஸ்வரூபமான அந்த வார்த்தையைக் கேட்ட அவர்களுடைய ஆத்மாவானது போதுமென்று திருப்தி அடையவில்லை. மேலும் அவர்கள் சொற்ப, அக்ஷரங்களுள்ளதும் மிகுந்த அர்த்தமுள்ளதும், சிறந்ததுமான பகவானுடைய வார்த்தையைக் காதுகொடுத்துக் கேட்டு அர்த்தத்தா லும் அபிப்பிராயத்தாலும் கம்பீரமாகிய அதனை நன்றாக யோசித்தும் பகவானுடைய எண்ணம் இன்னதென்று தெரிந்துகொள்ள முடியாதவர்களாக மிகுந்த சந்தோஷத்துடன் மயிர்க்கூச்சலை யடைந்து யோக மாயையால் தம்முடைய மேலான ஐசுவர்யத்தின் மேன்மையைக் காண்பிக்கும் பரமபுருஷனை நோக்கி, "ஓ பகவான், நீர் எல்லாவற்றிற்கும் அதிபதியாயிருந்து நான் அபராதஞ் செய்தேனென்றும் எனக்கு அனுக்கிரஹஞ் செய்யுங்களென்றும் சொல்லுகிற உங்களுடைய எண்ணம் இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை. ப்ராஹ்மணர்களிடத்தில் பக்தியுள்ள வராகிய உமக்குப் ப்ராஹ்மணர்கள் முக்கிய தெய்வம் என்பது ப்ரசித்தமே. தேவர்களுக்கும் தேவர்களான ப்ராஹ்மணர்களுக்கும் நீர் ஆத்மாவாகவும்

தெய்வமாகவும் இருக்கிறீர். உம்முடைய அவதாரங்களால் புராதனமான தர்மமானது காப்பாற்றப்படுகிறது. விகாரமற்றவராகிய நீர் தர்மத்திற்கு முக்கிய பலமாக ஆகிறீர். யோகிகள் உம்முடைய அனுக்கிரஹத்தால நிவிர்த்தி மார்க்கத்தை யடைந்து ஸம்சாரத்தைத் தாண்டுகிறார்கள். அப்பேர்ப்பட்ட உமக்குப் பிறர் அனுக்கிரஹஞ் செய்வதென்பது ஆச்சரியமாயிருக்கிறது. மேலும் பக்தர்களால் உம்முடைய பாதாரவிந்தத்தில் அர்ச்சிக்கப்பட்ட துளசி மாலையை வண்டானது விரும்புவதுபோல், லக்ஷ்மீதேவியானவள் பக்தர்களால் உம்முடைய பாதத்தில் சமர்ப்பிக்கப்படும் துளஸி மாலையில் வஸிக்கும் சிறந்த வண்டுக்கும் ஸ்தானமாகிய பாதத்தை விரும்பியவள்போல உம்மை ஒவ்வொரு சமயத்திலும் சேவிக்கிறாள். பணத்தை விரும்பியவர்கள் அவளுடைய பாததூளியைச் சிரசால் தரிக்கிறார்கள். சிறந்த பக்தர்களிடத்திலேயே தொடர்புடைய நீர், பலவித ஸுலக்ஷணங்களால் ஸேவிக்கும் மஹாலக்ஷ்மியையும் ஆதரிப்பதில்லை. உம்மிடத்தில் சேவிக்கக்கூடிய குணங்கள் யாவும் இருக்கின்றன்.

அப்படியிருக்க, ப்ராஹ்மணர்களுடைய பாத தூளியும் ஸ்ரீ வத்ஸமென்ற அடையாளமும் உம்மைப் பரிசுத்தப் படுத்துகிறதென்று எப்படிச் சொல்லக் கூடும்? பாதத்திலிருக்கும் துளஸி மாலையிலிருக்கும் வண்டைப் பார்த்து லக்ஷ்மீதேவியானவள் 'இந்த வண்டு சாரத்தைக் கிரஹிக்கும் ஸ்வபாவமுள்ளது, சபல ஸ்வபாவமுள்ளது. இதுவும் பகவானுடைய பாதத்திலிருக்கும் துளஸியில் ரமிக்கிறது, ஆகையால் பாதத்தின் வாவண்யம் அதிகம் ஆனதுபற்றி நான்

மார்பிலிருந்தாலும் ஸபத்னியாகிய துளஸியுடன் பாதத்தைச் சேவிப்பேன், என்று அனுசரிக்கிறாள். (அவளை நீர் ஆதரிக்கிறதில்லை) தர்ம மூர்த்தியாகிய உமக்கு மூன்று யுகங்களில் மூன்று பாதங்கள் இருக்கின்றன. (தபஸ், சௌசம், தயை) ப்ராஹ்மணர்களுக்காகவும். தேவர்களுக்காகவும், இந்த ஸ்தாவர ஜங்கமங்களடங்கிய ஜகத்தை சத்வ குணம் பொருந்தியதும், வரத்தைக் கொடுக்கிறதுமான உம்முடைய சரீரத்தால் அதற்கு விகாரமான ரஜஸ் தமஸ் ஆகிய இவைகளை அடக்கிக் காப்பாற்றுகிறீர். உம்மால் காப்பாற்ற வேண்டிய ப்ராமணோத்தமர்கள் உடைய கூட்டத்தைப் பிரியமான வார்த்தையாலும் பூஜையாலும் நீர் காப்பாற்றாமற்போனால், வேத மார்க்கமானது கெட்டுப் போய்விடும். லோகத்தில் சிறந்தவனால் அனுஷ்டிக்கப்படும் தர்மத்தையே மற்றவர்கள் பிரமாணமாகக் கொள்கிறார்கள். சத்வ குண நிதியும் ஜனங்களுக்கு க்ஷேமத்தைச் செய்ய விரும்பியவரும், தமது சக்தியால் தர்ம விரோதிகளை நாசஞ் செய்பவருமாகிய உமக்கு வேத மார்க்கம் கெட்டுப் போவது அபிதமல்ல. ப்ராஹ்மணர்களை வணங்குவதால் ஜகத்பதியாகிய உம்முடைய தேஜஸ் குறைகிறதில்லை. அது உமக்கு விளையாட்டேயாம். ஓ ஈச! இவர்களுக்கு நீர் எந்தச் சிக்ஷையை விதித்தாலும் ஜீவனத்தை ஏற்படுத்தினாலும் அதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம் அபராதஞ் செய்யாதவர்களான இவ்விருவர்களையும் நாங்கள் சபித்தபடியால் எங்களுக்கு தகுதியான சிக்ஷையை விதியும்" என்றார்கள்.

26. அதனைக் கேட்ட பகவான் "ஓ ப்ராஹ்மணர்களே!

இந்தப் பார்ஷதர்களிருவரும் அசுரஜன்மத்தை அடைந்து அந்த ஜன்மத்தில் கோபத்தால் மனத்தை என்னிடத்திலேயே செலுத்துவதாகிய யோகத்தைச் செய்து மறுபடியும் என்னுடைய சமீபத்தை அடைவார்கள். உங்களால் செய்யப்பட்ட சாபமானது என்னால் கொடுக்கப்பட்டதென்றே நினையுங்கள் என்றார்.

27–28. பின்பு அந்த மஹரிஷிகள் நேத்ரானந்தத் திற்கு பாத்திரமாயும், வேறு பிரகாசத்தை அபேக்ஷியா மல் சுயமாய்ப் ப்ரகாசிப்பவருமான ஸ்ரீ மஹாவிஷ்ணு வையும் அவருக்கு இருப்பிடமான வைகுண்ட த்தையும் பார்த்து, பகவானை பிரதக்ஷிணமாகச் சுற்றி நமஸ்காரஞ் செய்து அவரிடம் விடைபெற்று விசேஷ ஆனந்தத்து டன் மஹாவிஷ்ணுவின் விபூதியைப்பற்றிக் கொண்டாடிக்கொண்டு சென்றார்கள்.

29–37. பகவான் தம்முடைய பார்ஷதர்கள் இருவரையும் நோக்கி "நீங்கள் பயப்படவேண்டாம் உங்களுக்கு க்ஷேமமுண்டாகும். உங்களுடைய சாபத்தைப் போக்கடிக்க நான் ஸமர்த்தனானாலும் ப்ரஹ்ம தேஜஸ்ஸை அடக்க எனக்கு இஷ்டமில்லை. மேலும் முன்னொருகாலத்தில் நான் பிரளய கலகத்தால் தனித்திருக்கும்போது (அந்தப்புரத்திலிருந்து வெளியில் போன லக்ஷ்மீதேவியை) அந்தப்புரத்தில் பிரவேசிக்கும் லக்ஷ்மீதேவியைத் தடுத்தபடியால் உங்களுக்கு இந்த விஷயம் லக்ஷ்மீயினாலேயே சொல்லபட்டிருக்கிறது. ஆதலால் ப்ராஹ்மண அவமானத்தின் பலனை அனுபவித்து அந்த ஜன்மத்தில் விரோதத்தால் என்னை எப்பொழுதும் தியானம் செய்து சொற்ப

காலத்தில் என்னுடைய சமீபம் வருவீர்கள் என்று பகவான் த்வாரபாலகர்களுக்கு ஆக்ஞாபனம் செய்து அநேக விமானங்களுக்கு அலங்காரமாகவும், எல்லாவற்றிற்கும் மேலான காந்தி பொருந்தியதுமான தமது ஸ்தானஞ் சென்றார். பிறகு அந்தத் தேவ சிரேஷ்டர்கள் இருவரும் தடுக்க முடியாத ப்ரஹ்ம சாபத்தால் கர்வமற்றவர்களாக ஆனார்கள்.

ஓ குழந்தைகாள்! வைகுண்டத்திலிருந்து அவர்கள் விழும்போது விமானங்களிலிருப்பவர்கள் ஹா!ஹா! என்று கதறினார்கள். அந்தப் பார்ஷதர்களே காசியபருடைய வீரியத்திற்குத் திதியின் கர்ப்பத்தில் உண்டானவர்கள். இரட்டைப் பிள்ளைகளான அந்த அசுரர்களுடைய தேஜஸ்ஸால் அப்பொழுது உங்கள் உடைய தேஜஸ் குறைந்தவிட்டது. ஆனாலும் பகவான் க்ஷேமத்தைச் செய்வார். அவர் ஸகல ஜகத்தையும் படைத்தவர். காப்பாற்றுகிறவர் சம்கரிப்பவர் எல்லா வற்றிற்கும் முந்தினவர். அவருடைய யோக மாயை யோகேசர்களாலும் அறியமுடியாதது. அவரைச் சார்ந்தவர்களான நமக்கு அவரே க்ஷேமத்தைச் செய்வார். இந்த விஷயத்தில் நம்முடைய யோசனை பயன்படாதது என்று சொன்னார்.

அத்தியாயம் 17

திதிக்குப் புத்திரர்கள் பிறந்தது

1–15 இப்படி ப்ரஹ்மதேவரால் சொல்லப்பட்ட காரணத்தைக் கேட்டு தேவர்கள் எல்லோரும் சம்சயம் அற்றவர்களாக ஸ்வர்க்கம் சென்றார்கள். திதியானவள் தனது பர்த்தாவினுடைய கட்டளையினால் புத்திரன் உடைய சரிதத்தில் சந்தேகமுள்ளவளாக ஆயிரம் வருஷங்களைக் கழித்தாள். பிறகு இரண்டு குமாரர் களைப் பெற்றாள். அவ்விருகுழந்தைகள் பிறக்கும் போது பூமியிலும் அந்தரிக்ஷத்திலும், த்யுலோகத்தி லும் வரப்போகின்ற பயத்தைக் காட்டும் அநேக உத்பாதங்கள் உண்டாயின. மலைகளுடன் பூமி அசைந்தது. ஆகாசம் முழுவதும் ஜ்வலித்தது. குறைக் கொள்ளிகளும் இடிகளும் விழுந்தன. தூமகேதுக்கள் காணப்பட்டன. அடிக்கடி பூதாகார சப்தத்துடன் காற்றானது மரங்களை வேரோடு பிடுங்கிற்று. அந்தக் காற்றுக்கு தூளியே த்வஜமாகவும், காற்றின் ஸமூகம் ஸைன்யமாகவும் இருந்தன. சிரிப்பது போன்ற மின்னல்களுள்ள மேகங்களால் தேஜஸ் மறைக்கப்பட்டது, மேலும் ஆகாசமானது இருளால் சூழப்பட்டது. சமுத்திரத்தின் மத்தியிலிருக்கும் மகரம் முதலிய ஜந்துக்கள் கலங்கின. அலைகள் உயரக்கிளம்பின. கிணறு, குளம் முதலியவை கலங்கின. அவைகளிலுள்ள தாமரைகள் உலர்ந்து போயின. சந்திரன், சூரியர் இவர்களுக்கு ராஹுகக்ராஸம் நேர்ந்தது. (கிரஹணம்.)

மேலும் அவர்களைச் சுற்றிக் கோட்டை கட்டப் பட்டது, மேகமில்லாதபோது கர்ஜிதம் உண்டாயிற்று.

அதனால் குகை முதலிய இடங்களில் எதிரொலியும் உண்டாயிற்று. கிராமங்களில் பெண் நரிகள் அக்கினியைக் கக்கிக் கொண்டு பயங்கரமாக ஊளை யிட்டன. கோட்டான்களும், நரிகளும் சப்தித்தன, நாய்கள் பாடுகின்றவை போலும், அழுகின்றவை போலும் தலையைத் தூக்கிப் பலவகையாக்கக் குரைக்க ஆரம்பித்தன. ஓ விதுர! கழுதைகளும் கூட்டம் கூட்டமாகக் கூர்மையான குளம்புகளால் பூமியைப் பிளந்தும் தங்களுடைய ஜாதிக்குரியபடி சப்தித்தும், மதமுள்ளவைகளாக ஓடின. கழுதைகளின் சப்தத்தைக் கேட்டுப் பயந்து பறவைகள் தங்களுடைய கூடுகளிலிருந்து பூமியில் விழுந்தன. இடைச்சேரியி லும், காடுகளிலுள்ள பசுக்கள் (மிருகங்கள்) மேற்சொல்லிய சப்தத்தால் நடுங்கி மூத்திரத்தை விட்டதும் அன்றிச் சாணத்தையும் போட்டன. மேலும் பசுக்கள் பயந்தன; இரத்தங்களைக் கறந்தன. வருஷித்தன. தேவதா பிரதிமைகள் அழுதன. காற்றில்லாத போது மரங்கள் கீழே விழுந்தன. பாப கிரஹங்கள் சுபக் கிரஹ நக்ஷத்திரங்களையும் அதிக்ரமித்துச் சென்றன (அதிசாரம்) வக்ராதியால் உபத்திரவித்தன; ஒன்றுக் கொன்று மேற்காட்டியவை களும், மற்றவைகளுமாகிய அபசகுனங்களை கண்டு அவைகளின் உண்மையை அறியாதவர்களான எல்லாரும் பிரளயம் நேர்ந்துவிட்டதென்று நினைத்தார்கள். ப்ரஹ்மதேவருடைய புத்திரர்களான சனகர் முதலியவர்கள் மாத்திரம் பயப்படவில்லை.

19–31 அந்த ஆதிதைத்யர்கள் இருவரும் (திதியின் புத்திரர்கள் தைத்யர்கள்) தங்களுடைய பௌருஷத்தை வெளியிட்டுக் கொண்டு கருங்கல் போல்

வளர்ந்தார்கள்; இவர்களுடைய சுவர்ண கிரீடங்கள் உடைய நுனிகள் ஆகாயத்தை ஸ்பர்சித்திருந்தன. தோள்வளைகளுள்ள கைகள் திக்குகளின் எல்லை வரையிற் சென்றன. அரைநாண் முதலியவையுள்ள இடுப்பானது சூரியமண்டலத்திற்கு மேலாக இருந்தன. அவர்களுடைய அடி வைப்பினால் பூமி அசைந்தது. அப்பொழுது மாரீசர் அவ்விருவர்களுக்குள் எவனைத் திதியானவள் முதலில் பெற்றாளோ, அவனுக்கு ஹிரண்யாக்ஷனென்றும், தம்முடைய தேகத்திலிருந்து முதலில் திதியிடம் பிரவேசித்த வீரியத்தால் உண்டானவனுக்கு ஹிரண்யகசிபு என்றும் பெயர் வைத்தார். அந்த ஹிரண்யகசிபுவானவன் ப்ரஹ்ம தேவரிடம் வரம் பெற்று மிருத்யு பயமில்லாதவனாகி, கர்வமடைந்து உலகபாலர்களை ஜயித்து, ஸகல உலகங்களையும் ஸ்வாதீனமாக்கிக் கொண்டான். அவனுடைய தம்பியாகிய ஹிரண்யாக்ஷன் என்பவன் தமயனிடத்தில் விசேஷ ப்ரீதியுள்ளவன். மேலும் அவன் ஒவ்வொரு நாளும் கதாயுதத்தைக் கையில் பிடித்துக் கொண்டு யுத்தஞ் செய்ய விரும்பினவனாகத் தகுந்த எதிரியைத் தேடி ஸ்வர்க்கத்தில் அலைந்தான். அவன் ஸகிக்க முடியாத வேகமுள்ளவன்! அவன் அணிந்திருக்கும் ஆபரணமாகிய தங்கச் சலங்கைகள் இனிமையாகச் சப்திக்கின்றன. அவன் வைஜயந்தி என்னும் மாலையைத் தரித்தவன்; பெரிதாகிய கதாயுதத்தை தோளில் வைத்துக் கொண்டவன்; மனோ பலத்தாலும், தேகபலத்தாலும் கர்வமுள்ளவன்; ஒருவராலும் ஜயிக்க முடியாதவன்; எவரிடத்திலும் பயமற்றவன்; அப்படிப்பட்ட அந்த அசுரனைக் கண்டு கருடனைக் கண்ட சர்ப்பங்கள் போல் தேவர்கள் எல்லாரும் ஓளிந்து கொண்டார்கள்.

அந்த அசுர சிரேஷ்டன் தன்னுடைய தேஜஸ்ஸால் பயந்து இந்திரன் முதலிய தேவர்கள் ஒளிந்து கொண்டார்களென்று தெரிந்து கொண்டு மதத்துடன் கர்ஜித்தான். மிக்க பலமுள்ள அந்த அசுரன் அவ்விடத்திலிருந்து திரும்பி மிக்க ஆழமுள்ளதும், பயங்கரமான சப்தமுள்ளதுமான சமுத்திரத்தில் மதங்கொண்ட யானைபோல் விளையாடுவதற்காகப் பிரவேசித்தான். அவனைக் கண்ட மாத்திரத்தில் வருணனுடைய சைனியங்களாகிய ஜலஜந்துக்கள் பயத்துடன் மனங்கலங்கி அவனால் அடிக்கப்படாமல் இருந்தாலும் அவனுடைய தேஜஸ்ஸினாலேயே ஜயிக்கப்பட்டவைகளாக வெகுதூரம் ஓடிற்று.

அப்பொழுது அவன் தன்னுடைய தச்சுகளால் மிகுந்த அலைகளை உண்டுபண்ணிக் கொண்டு எஃகினால் செய்யப்பட்ட கதாயுதத்தால் அடித்துக் கொண்டு அநேக வருஷங்கள் சமுத்திரத்திலேயே சஞ்சரித்துப் பின்பு வருணனுடைய பட்டணம் சென்றான். அது விபாவரி என்ற பெயருள்ளது. அவ்விடத்தில் அவன் ஜலஜந்துக்களுக்கு அதிபதியும் பாதாள உலகத்தைக் காப்பாற்றுகிறவருமான வருணனைக் கண்டு சிரித்துக் கொண்டு பரிகாசத் திற்காக அவரை நமஸ்கரித்து, தாழ்ந்தவன் போல் அவரை நோக்கி, "ஓ மேலான அரசரே! நீர் உலக பாலர்களுக்கு அதிபதி; மிகுந்த கீர்த்தியுள்ளவர்; கர்வமுள்ளவர்களும் தங்களை வீரர்களென்று நினைத்தவர்களுமான துஷ்டர்களுடைய கர்வத்தை அடக்கக் கூடியவர், நீர் முன்காலத்தில் தைத்தியர் களையும், தானவர்களையும் ஜயித்து ராஜசூயமென்ற யாகத்தைச் செய்தீரல்லவா? ஆனது பற்றி

இப்பொழுது என்னுடன் யுத்தம் செய்யவேண்டும்" என்றான். இப்படி மிகுந்த கர்வத்துடன் பரிகாசம் செய்யும் அந்த ஹிரண்யாக்ஷனை நோக்கிச் சமுத்திர ராஜன் கோபத்தை அடக்கிக் கொண்டு, ஓ அசுர சிரேஷ்ட! நான் யுத்தஞ் செய்வது முதலியவகைளில் உற்சாகத்தை விட்டுவிட்டேன்.(சாந்தியை அடைந்து இருக்கிறேன்.) ஆனால் உன்னுடன் யுத்தம்செய்யத் தகுந்த புருஷன் பகவான் ஒருவரே, வேறு யாராலும் முடியாது. அவர் புராண புருஷர். உன்னைப் போன்ற வீரர்கள் அவரைத் துதிக்கிறார்கள், அவர் உன்னைப் போல் அசத்தாயிருப்பவர்களைக் கொல் வதற்காகவும், சாதுக்களை அனுக்ரஹிப்பதற்காகவும் பலவகையாக அவதரிக்கிறார். அவரிடஞ் சென்றால் கர்வமற்றவனாகி யுத்தகளத்தில் படுப்பாய், நாய்கள் உன்னைச் சுற்றிக் கொள்ளும், என்று சொன்னார்.

அத்தியாயம்–18

யக்ஞவராஹருக்கும் ஹிரண்யாக்ஷனுக்கும் யுத்தம்

1–5. மிகுந்த மதமுள்ளவனும் கம்பீர மனமுள்ளவனுமான அந்த ஹிரண்யாக்ஷன் சமுத்திர ராஜனுடைய வார்த்தையைக் கேட்டு நாரதரிடமாகப் பகவானிருக்குமிடத்தைத் தெரிந்து கொண்டு வெகு வேகமாகப் பாதாளலோகம் சென்றான். அவ்விடத்தில் சிங்கப் பல்லால் பூமியை உயரத்தூக்கி கொண்டு இருக்கும் வாரஹரூபியான பகவானைக் கண்டான். அவர் எல்லோரையும் ஜயிப்பவர். அவருடைய கண்கள் சிவந்தவைகளாக இருந்தன. அவைகளால் அசுரனுடைய காந்தியானது குறைந்தது, அவரைக் கண்ட அவன், "ஆச்சரியம். காட்டில் ஸஞ்சரிக்கும் மிருகமாகிய பன்றிக்கு இவ்வளவு தேஜஸ் இருக்கிறதே, என்று சிரித்தான். பின்னும் அவன் அவரை நோக்கி, "ஓ தேவர்களுக்குள் அதமனே! பன்றி யுருவங்கொண்ட வரே! ஒன்றையும் அறியாதவனே! பாதாள வாசிகளாகிய எங்களுக்கு ப்ரஹ்மதேவரால் இந்தப் பூமி கொடுக்கப்பட்டது, ஆனதால் இவளை விட்டுவிடு, நான் பார்த்திருக்கும் போது இந்தப்பூமியுடன் நீ க்ஷேமமாகத் திரும்பிப் போகமுடியாது. நமக்குச் சத்துருக்களாகிய தேவர்கள் உன்னை யுத்தத்தில் பலி கொடுப்பதற்காகவே வளர்ந்திருத்திருக்கிறார்களே ? நீ அசுரர்களை மறைத்திருந்து மாயையால் ஜயித்தவன். யோகமாயா பலமுள்ளவன் சொற்ப பராக்கிரம முள்ளவன். அப்படிப்பட்ட உன்னைக் கொன்று என் மித்திரர்களுடைய துக்கத்தைப் போக்கடிக்கிறேன். என்னுடைய கையிலிருக்கும் கதாயுதத்தால்

உன்னுடைய தலையை உடைக்கிறேன், அதனால் இப்பொழுது உன்னை பூஜிப்பவர்களும், முந்திய பக்தர்களுமாகிய தேவர்களும் மஹர்ஷிகளும் ஒத்தாசை இல்லாதவர்களாக ஆகிவிடுவார்களென்று சொன்னான்.

6–28. அப்பொழுது பகவான் சத்துருவினுடைய கெட்ட வார்த்தையாகிய தோமராயுதத்தால் அடிக்கப் பட்டும் தம்முடைய சிங்கப்பல்லின் நுனியிலிருக்கும் பூதேவி பயப்படுவதைப் பார்த்து அவனுடைய வார்த்தைகளைப் பொறுத்துக்கொண்டு ஜலத்தின் நடுவிலிருந்து வெளிவந்தார் அது யானையானது பெண் யானையுடன் முதலையால் பீடிக்கப்பட்டு ஜலத்திலிருந்து கிளம்பியது போலிருந்தது. அப்பொழுது அந்த அஸுரன் யானையின்டின் மகரம் போலதுபோல் அவர் பின் சென்றான். பின்னும் பயங்கரமான சிங்கப் பற்களுள்ள அந்த அஸுரன், "வெட்கமில்லாத அசத்துக்களுக்கு எதுதான் கெட்ட காரியம்" என்று இடிபோல் உரக்கச் சொன்னான். அப்பொழுது ப்ரஹ்ம தேவராலும். தேவர்களாலும் புஷ்பங்களைக் கொண்டு பூஜிக்கப்பட்டவரான அந்தப் பகவான் ஜலத்திற்கு வெளியில் வியவகார யோக்கியமாகிய இடத்தில் பூமியை வைத்து, அதில் தம்முடைய ஆதார சக்தியை ஸ்தாபித்தார்.

பின்பு, அவர் மிகுந்த கோபத்துடன், தம்மைப் பின் தொடர்ந்து வருகிறவனும் ஸ்வர்ண ஆபரணங்கள் உள்ளவனும் பெரிதான கதாயுதத்தைத் தரித்தவனும், ஸ்வர்ண மயமும் ஆச்சரயகரமுமான கவசமுள்ளவனும், கெட்ட வார்த்தைகளால் மர்மஸ்தானங்களைப்

பிளப்பவனுமாகிய அந்த அஸுரனை நோக்கி. "அட! நாங்கள் வனத்திலிருக்கும் மிருகங்களேயாம். இது உண்மையே. உன்னைப்போன்ற கிராம சிம்ஹத்தை (நாயை) தேடுகிறோம். தைரியமுள்ளவர்கள் யமனுடைய பாசத்தால் கட்டப்பட்ட உன்னுடைய ஆத்ம சிலாகையால் (தன்னைத்தானை புகழ்ந்து கொள்வது) லட்சியஞ் செய்யமாட்டார்கள். நாங்கள் பாதாளவாசிகளுடைய அடைக்கலமான சொத்தை அபகரிப்பவர்கள். வெட்கமில்லாதவர்கள் உன்னுடைய கதாயுதத்தால் வெட்டப்பட்டவர்கள். ஆனாலும் நிற்கிறோம். பலிஷ்டனாகிய உன்னுடன் விரோதத்தை உண்டுபண்ணிவிட்டு எவ்விடம் போவோம்? யுத்தத்திற்கு சன்னத்தர்களாக இருக்கிறோம். நீ காலாட் படைகளுக்கு அதிபதி, நம்மை ஜயிப்பதற்குச் சீக்கிரம் முயற்சி செய். நீ யோசனையில்லாதவன். பிரதிக்ஞையை நிறைவேற்றாதவன். சபைக்குரியவனல்ல, ஆதலால் நம்மைக் கொன்று பந்துக்களுடைய துக்கத்தை நிவர்த்திசெய்" என்றார்.

இப்படிப்பரம புருஷனால் பரிஹசிக்கப்பட்ட அஸுரன் மஹாசர்ப்பம் போல் மிகவும் கோபத்தால் கலங்கிய இந்திரியங்களுள்ளவனாகி பகவானுடைய சமீபம் வந்து கதாயுதத்தால் அவரை அடித்தான். சத்ருவாகிய அசுரன் மார்பில் கதாயுதத்தால் அடிக்கும்போது பகவான் அந்த அடி தம்முடைய சரீரத்தில் படாமலிருக்கும்படி குறுக்காக ஒதுக்கங் கொடுத்து ஏமாற்றினார். அது மிருத்யுவை யோகா ருடன் வஞ்சித்தது போலிருந்தது கோபமுள்ளவனும், பரபரப்பினால் உதட்டைக் கடித்துக்கொள்ளுகிறவனும், கதாயுதத்தை அடிக்கடி சுழற்றிக்கொண்டு

இருப்பவனுமான அசுரனைப் பகவான் எதிர்த்தார். அசுரன் கதாயுதத்தால் பிரபுவாகிய பகவானுடைய வலத்தோளை உத்தேசித்து அடித்தான்.

ஓ விதுர! அதன் அடி தம்மீது படுவதற்கு முன்னமேயே பகவான் யுத்தத்தை நன்றாக அறிந்த வராகையால் தம்முடைய கதாயுதத்தால் சத்துருவின் கதாயுதத்தை அடித்தார், இப்படி ஹிரண்யாக்ஷனும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் ஒருவரை யொருவர் ஜயிக்கவேண்டும் என்ற விருப்பத்துடன் மிகுந்த முயற்சியுள்ளவர்களாகப் பெரியவையான கதாயுதங்களைக் கொண்டு அடித்துக்கொண்டார்கள். இப்படி அவ்விருவர்களும் பூமிக்காக யுத்தம் செய்தார் கள். கூர்மையான கதைகளால் அவர்களுடை ய சரீரம் அடிக்கப்பட்டு இரத்தம் பெருகியது. அதனால் இருவர்களுக்கும் அதிகக் கோபமுண்டாயிற்று. பலவகையான நடையைக் காண்பித்தார்கள். அந்த யுத்தமானது மதித்த இரண்டு விர்ஷபங்கள் பசுவின் நிமித்ததம் சண்டை செய்வது போலிருந்தது. ஓ குரு வம்சத்தில் பிறந்தவரே! யக்ஞவராஹ ரூபியான பகவானுக்கும், அசுரனுக்கும் பூமியின் நிமித்தமாக நேர்ந்த யுத்தத்தைப் பார்ப்பதற்குப் ப்ரஹ்மதேவர் அவ்விடம் அனேக மஹரிஷிகளுடன் வந்தார். மேலும் ஆயிரம் மஹரிஷிகளுக்கும் அதிபதிகளாகிய அவர் பராக்கிரம கர்வமுள்ளவனும், பயமற்றவனும் செய்வதற்குப் பதில் செய்பவனும், பதில் செய்யமுடியாத பராக்கிரமமுள்ளவனுமாயிருக்கும் அஸுரனைப் பார்த்து, ஆதிவராஹ ஸ்வரூபியும். புராண புருஷனுமான ஸ்ரீமந் நாராயணனை நோக்கி, 'ஓ தேவ! உம்முடைய பாதங்களைச் சரணமடைந்த

தேவர்களுக்கும், ப்ராஹ்மணர்களுக்கும், பசுக்களுக்கும், அபராதஞ் செய்யாத பிராணிகளுக்கும் இந்த அஸுரன் கெடுதியைச் செய்தவன். பயத்தைச் செய்தவன் கெட்ட காரியத்தைச் செய்தவன், நம்மிடமிருந்தும் வரத்தை அடைந்தவன். தன்னுடன் யுத்தஞ் செய்யத் தகுந்த வீரனைத் தேடிக்கொண்டு உலகம் முழுவதும் அலைந்தவன். இவனை எதிர்த்துயுத்தம் செய்பவன் உலகத்திலொருவனுமில்லை. மிக்க உபத்திரவத்தைச் செய்தவன் மிக்க மாயாவி. கர்வமுள்ளவன். பயம் இல்லாதவன். மிக்க அசத்து, ஆதலால் ஓ தேவ! கோபங்கொண்ட ஸர்ப்பத்தினிடம் சிறுவன் விளையாடுவதுபோல் அவனுடன் விளையாடுவது உசிதமல்ல ஓ நாசமற்றவரே! பயங்கர உருவமுள்ள இந்த அஸுரன் தனக்குப் பலம் விருத்தியடையக்கூடிய காலத்தை அடைந்து விருத்தியடைவதற்கு முந்தியே பாபியாகிய இவனை நீர் உம்முடைய மாயா பலத்தால் நாசஞ் செய்யும். இந்த சந்தியா காலமானது மிகவும் கோரமானது. உலகங்களுக்கு நாசத்தைச் செய்யக்கூடியது. ஓ ஸகல ஜகத்ஸ்வரூபியாயிருப்பவரே! அபிஜித் என்னும் சுபமாகிய காலம் வந்துவிட்டது. தேவர்களுக்கு ஜயத்தை உண்டுபண்ணும். உமக்கு மித்திரர்களான எங்களுடைய க்ஷேமத்திற்காக இவனைக் கொல்லுக. தெய்வச் செயலால் இந்த அஸுரன் தனக்கு மிருத்யுவாக முன்னமே ஏற்பட்டிருந்த உம்மிடம் சேர்ந்தான். ஆதலால் இவனைக் கொன்று உலகத்திற்கு க்ஷேமத்தை உண்டு பண்ணும், என்று பிரார்த்தித்தார்.

அத்தியாயம்–19

ஹிரண்யாக்ஷ வதம்

1–29 அதனைக் கேட்ட பகவான் ப்ரஹ்மதேவர் கபடமற்றவராகச் சொல்லுகிறாரென்று நினைத்துச் சிரித்து (கால ஸ்வரூபியான என்னாலும் நல்ல முகூர்த்தம் எதிர்பார்க்கப்பட வேண்டுமாவென்று) ப்ரீதியுள்ள பார்வையால் அந்த வார்த்தையை அங்கீகரித்தார். பின்பு தமக்கெதிரில் பயமில்லாமல் சஞ்சரிக்கும் சத்ருவினுடைய கன்னத்திற்குக் கீழாகக் கதாயுதத்தால் அடித்தார். பிறகு அந்த அசுரன் தன்னுடைய கதையால் பகவானுடைய கதாயுதத்தை அடித்தான். அதனால் கதையானது அடிக்கப்பட்டுப் பகவானுடைய கையிலிருந்து சிதறிக் கீழே விழுந்தது. அது மிகவும் ஆச்சரியமாக விருந்தது. அப்பொழுது அஸுரன் ஆயுதமில்லாமலிருக்கும் பகவானைப் பார்த்து அது சத்ருவை ஜயிக்க தகுந்த சமயமானாலும் தர்மத்தை நினைத்துக் கொண்டு அடிக்க வில்லை. இப்படிப் பகவானுடைய கதை உடைந்தபின் தேவர்கள் ஹா ஹா என்று கதறும்போது பகவான் அந்தத் தர்மத்தைப் பெரிதாக நினைத்ததுமின்றிச் சக்கரத்தை நினைத்தார்.

அப்பொழுது அவருடைய மாஹாத்மியத்தை நன்றாக அறியாதவர்களான தேவர்கள் யுத்தத்தில் தைத்தியர்களுக்குள் தாழ்ந்தவனும் தம்முடைய பார்ஷதர்களுக்குள் முக்கியனுமான ஹிரண்யாக்ஷனுடன் யுத்தஞ் செய்பவரும் யுத்தத்தில் பரப்பரப்புள்ள சக்ராயுதத்தைத் தரித்தவருமாகிய பகவானைப்

பார்த்து, 'உமக்கு க்ஷேமமுண்டாகும்; இந்த அசுரனைக் கொல்லும், என்று சொன்னதுமல்லாமல் நான்கு புறத்திலும் பலவகையாகப் பேசிக்கொண்டார் கள். இம்மாதிரியான தேவர்களுடைய வார்த்தையைக் கேட்டும் தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரும், சக்ராயுதத்துடன் யுத்தத்திற்கு ஸன்னத்தராயிருப் பவருமான பகவானைப் பார்த்தும், அந்த அஸுரன் மிக்க கோபத்துடன் உதட்டைக் கடித்துக் கொண்டான். மேலும் பயங்கரங்களாகிய சிங்கப் பற்களுள்ள அவன் கண்களால் எரிப்பவன்போலப் பகவானிடம் ஓடி வந்து, 'நீ கொல்லப்பட்டாய்' என்று சொல்லிக் கதாயுதத்தால் அடித்தான். யக்ஞவராஹ ரூபியான பகவான் சத்ருவாகிய அஸுரன் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே வாயுவிற்குச் சமமான வேகமுள்ள அந்தக் கதாயுதத்தை வலக்காலால் சிரமமின்றி உதைத்தார்.

மேலும், "ஓ அஸுரனே! ஆயுதத்தை எடுத்துக் கொள். ஜயிக்க வேண்டுமென்ற விருப்பமுள்ளவனாக இருப்பதால் அதற்குத் தகுந்த முயற்சியைச் செய்" என்றும் சொன்னார். அதனைக் கேட்ட அஸுரன் அந்தக் கதையை வராஹரூபியான பகவானை உத்தேசித்துப் ப்ரயோகித்தான். தம்மைப் பார்த்து வேகமாக வரும் அந்தக் கதையைக் கண்ட பகவான் தம்மீது விழுவதற்கு முன்னமேயே அதைப் பிடித்துக் கொண்டார். அது கருடன் பெண் சர்ப்பத்தைப் பிடித்தது போலிருந்தது. பிறகு பகவான் அந்தக் கதையை அந்த அஸுரனுக்குக் கொடுக்க விரும்பியும் அவன் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவன்

தன்னுடைய பராக்கிரமம் தடைப்பட்டபடியால் மானங் குறைந்து காந்தியற்றவனாயிருந்தான்.

மேலும், ப்ராஹ்மணனை உத்தேசித்து ஆபிசார கர்மத்தைச் செய்பவர் போல் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை உத்தேசித்து ஜ்வலிக்கும் அக்கினி போன்ற மூன்று முனையுள்ள சூலத்தைப் ப்ரயோகித்தான். அந்த அஸுரனால் ப்ரயோகிக்கப்பட்டதும் ஆகாசத்தின் மத்தியில் காந்தியுடன் ப்ரகாசிப்பதுமான அந்தச் சூலத்தைப் பகவான் கூர்மையான முனையுள்ள சக்ராயுதத்தைக் கொண்டு இந்திரன் கருடனுடைய சிறகுகளை வெட்டியது போல வெட்டினார். பின்பு பகவானுடைய சக்ராயுதத்தால் தன் சூலம் வெட்டப் பட்டதைப் பார்த்த அஸுரன் மிக்க கோபத்துடன் கையை முஷ்டி பண்ணிக் கொண்டு மிகுந்த விஸ்தாரமுள்ளதும், விபூதிகளுள்ளதுமான அவருடைய மார்பில் குத்திக் கர்ஜித்துக் கொண்டு கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்தான்.

ஓ விதுரரே! அந்த ஆதிவராஹமூர்த்தியாகிய பகவான் இம்மாதிரி அவனால் அடிக்கப்பட்டும் புஷ்ப மாலையால் அடிக்கப்பட்ட யானைபோல அசையவே இல்லை. பின்பு அந்த அஸுரன் யோகமாயைக்கு அதிபதியாகிய பகவானிடத்தில் பலவகையான மாயையைச் செய்தான். அவைகளைக் கண்டு ஜனங்கள் ப்ரளய காலம் வந்துவிட்டதென்று நினைத்தார்கள். காற்று மிகவும் கடுமையாக வீசிற்று. தூளிகளாலுண்டான இருள் பரவிற்று. யந்திரங்களால் எறியப்பட்டது போல எல்லாத் திக்குகளிலும் கற்கள் விழுந்தன. ஆகாயத்திலிருக்கும் நட்சத்திரங்களின்

தேஜஸ் குறைந்தது. மேகங்கள், மின்னல், கர்ஜனம் ஆகிய இவைகளுடன் அமேத்யம், மூத்திரம் ஆகிய துர்நாற்றமுள்ளவைகளையும், மயிர்களையும், எலும்புகளையும் வர்ஷித்தன. மலைகள் பலவகையான ஆயுதங்களை விட்டன. மேலும் திக்கையே வஸ்திர மாய் உடையவர்களும், அவிழ்ந்த தலை மயிர்கள் உள்ளவரும் சூலாயுதத்தை தரித்தவர்களுமான ராக்ஷஸ ஸ்திரீகள் காணப்பட்டார்கள். யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், காலாட்படை, குதிரைபடை, இரதங்கள், யானைகள் முதலிய ஸைனியங்களால் கடுமையான வார்த்தைகள் சொல்லப்பட்டன. இம்மாதிரியான மாயையைப் பார்த்து மூன்று ஸவனங்களாகிய பாதங்களுள்ள அந்த மாயைகளை நாசம் பண்ணக் கூடிய தம்முடைய சக்ரத்தைப் பிரயோகித்தார்.

அப்பொழுது திதி தேவியானவள் தன்னுடைய பர்த்தாவாகிய மாரீசருடைய கட்டளையை நினைத்துக் கொண்டாள். அப்பொழுது அவளுடைய ஹிருதயம் ஆனது நடுங்கிற்று. அவளுடைய ஸ்தனத்திலிருந்து இரத்தம் பெருகிற்று. பின்பு அந்த அஸுரன் தான் செய்த மாயைகள் வீணாகிவிட்டதைப் பார்த்துப் பகவானுக்கு எதிரில் வந்து கோபத்துடன் இருகைகளால் அவரைக் கட்டி வஜ்ரம் போன்ற முஷ்டிகளால் அடித்தான். அப்பொழுது; பகவான் அந்த அஸுரனுடைய கன்னத்தில் தமது கையால் அடித்தார். அது மஹேந்திரன் விருத்திராசுரனை அடித்தது போலிருந்தது. ஸகல உலகங்களையும் ஜயிப்பவரான பரமபுருஷன் விளையாட்டாகச் சத்துருவை அடித்தபொழுது அவனுடைய சரீரம் நடுங்கிற்று. கண்களிரண்டும் வெளியில் வந்தன.

கைகளும், கால்களும், கழுத்தும் சிதறின. இப்படி அவனுடைய சரீரமானது பெருங்காற்றினால் பெரிய மரம் வீழ்வது போலக் கீழே விழுந்தது. இப்படிப் பகவானால் அடிக்கப்பட்டுப் பூமியில் படுத்தவனும், விசேஷ தேஜஸுள்ளவனும், பயங்கரமாகிய சிங்கப் பற்கள் உள்ளவனும், உதட்டைக் கடித்தவனுமாகிய அஸுரனைப் ப்ரஹ்மா முதலியவர்கள் பார்த்து "ஆச்சரியம், இம்மாதிரியான மரணம் யாருக்குக் கிடைக்கும்? யோகிகள் மோக்ஷத்தை அடைய விரும்பி எவரை ரஹஸ்யத்தில் சித்தத்தை ஒருவகைப் படுத்தித் தியானஞ் செய்கிறார்களோ, அந்தப் பரம புருஷனுடைய முகத்தை தரிசித்துக் கொண்டே அவரால் அடிக்கப்பட்டு அஸுரன் சரீரத்தை விட்டான். இவர்கள் பகவானுடைய பார்ஷதர்கள், பாபத்தால் இம்மாதிரியான ஜன்மத்தை அடைந்தவர் கள். இன்னும் சில ஜன்மத்திற்குப் பிறகு தங்களுடைய பதத்தை அடைவார்கள்" என்று சொல்லிக் கொண்டார்கள்.

30 அப்பொழுது தேவர்கள் பகவானை நோக்கி, "ஓ ஈச! ஸகல யாகங்களை விஸ்தரிப்பவரும், பரிபாலன சமயத்தில் சத்வார்த்தியாக அவதரிப்பவருமாகிய உமக்கு அடிக்கடி நமஸ்காரம் செய்கிறோம். ஜகத்திற்கு உபத்திரவத்தைச் செய்பவனாகிய இந்த அஸுரன் எங்களுடைய பாக்கியத்தால் கொல்லப் பட்டான். நாங்கள் கவலையற்றவர்களாக ஆனோம்" என்று ஸ்தோத்திரஞ் செய்தார்கள்.

31–38 ஸஹிக்க முடியாத பராக்கிரமமுள்ள ஹிரண்யாக்ஷனை ஆதிவராஹ ரூபியான பகவான்

கொன்று ப்ரஹ்மதேவர் முதலியவர்களால் கொண்டா டப்பட்டும் குறைவற்ற உத்ஸவமுள்ள தம்முடைய லோகம் சென்றார். "ஓ விதுர! நான் என்னுடைய குருவினிடமிருந்து தெரிந்துகொண்டபடி பகவான் வராஹாவதாரஞ் செய்து ஹிரண்யாக்ஷனைக் கொன்ற கதையைச் சொன்னேன்" என்று மைத்ரேயர் விதுரருக்கு உபதேசித்தார். ஓ பரிக்ஷித்து மஹாராஜனே! அதனைக் கேட்ட விதுரர் பாகவதோத்தமராகையால் மிகுந்த ஆனந்தமடைந்தார். உலகத்தில் புண்ய ச்லோகர்களும் (நல்வினையைக் கொடுக்கும் பெயருள்ளவர்கள்) மிகுந்த கீர்த்தியுள்ளவர்களுமாகிய அரசர்களுடைய கதையைக் கேட்பதினாலேயே சந்தோஷமுண்டாகிறது. ஸ்ரீவத்ஸமென்ற அடையாளம் உள்ள ஸ்ரீமஹாவிஷ்ணுவின் சரிதத்தைக் கேட்பதால் ஆனந்தம் உண்டாவதற்கு என்ன ஆட்சேபம்? கஜேந்திரமானது முதலையால் பிடிக்கப்பட்டு பகவான் உடைய பாதாரவிந்தத்தைத் தியானஞ் செய்யும் போது பெண் யானைகள் கதறின. அப்பொழுது அவர் யானையை அந்தக் கஷ்டத்திலிருந்து காப்பாற்றினார். கபடமற்ற மனமுள்ளவர்களும், அவரையே சரணமாக அடைபவர்களுமான மனிதர்களால் எளிதில் ஆராதிக்கக் கூடியவரும், அசத்துக்களால் ஆராதிக்க முடியாதவருமான பகவானை க்ருதக்ஞனான (செய்த உபகாரங்களை நினைப்பவன்) எவன்தான் உபாசிக்க மாட்டான்? ஆதிவராஹ மூர்த்தியின் க்ரீடாரூபமானதும், மிக்க அற்புதமானதுமான ஹிரண்யாக்ஷ வதத்தை எவன் கேட்கிறானோ, கானம் செய்கிறானோ, அனுமோதிக் கிறானோ அவன் ப்ரஹ்மஹத்யை செய்தவனானாலும், ஒரு க்ஷணத்திற்குள் சுத்தனாகி விடுகிறான். இந்த ஹிரண்யாக்ஷ வதம் என்கிற கதையானது மிகுந்த

புண்ணியத்தைக் கொடுக்கக்கூடியது; மிகவும் பரிசுத்தியை உண்டு பண்ணைக்கூடியது; தனத்தை உண்டு பண்ணைக் கூடியது; கீர்த்தியை விருத்தி செய்யக்கூடியது; தீர்க்கமான ஆயுளையும் அவரவர்கள் உடைய இஷ்டத்தையும் கொடுக்க வல்லது. யுத்தத்தில் பிராணனையும், இந்திரியங்களையும் காப்பாற்றக் கூடியது. மிகுந்த பராக்கிரமத்தைக் கொடுக்கக் கூடியது. ஓ மஹாராஜ! இக்கதையைப் பக்தியாய்க் கேட்பவர்கள் மரணமடையும் காலத்தில் ஸ்ரீமந் நாராயணனை அடைவார்கள்.

Sri Rama Nama Bank

நாம பெட்டகம்



Help Preserve Namas
from
Air, Water, Fire & Pests

Each pettagam
preserves
13 crores of
Nama

Sponsor
Steel cubboards
(Pettagam)
Rs. 3500/-

ஸ்ரீ ராம் ஜெய ராம் ஜெய் ஜெய ராம் என்ற
மஹா மந்த்ரம்

13 எழுத்துக்கள் கொண்டது.
அக்ஷரத்திற்கு 1 கோடியாக 13 கோடி கொள்ளளவு கொண்ட
பெட்டகங்களில் நாமம் ப்ரதிஷ்டை
செய்யப்படுகிறது.இப்பெட்டகங்கள் நாமத்தை ஈரம், காற்று,
மழை, தீ, பூச்சி இவைகளிலிருந்து சுமார் 60 வருடத்திற்கு
குறையாமல் நாமத்தைப் பாதுகாத்து பல கோடி நபர்கள் தர்சன
மாத்திரத்தினால் நாம ஸ்மரணம் பெற ஏதுவாகும்.

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

பாகம் –2

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்கந்தம் 3 அத்தியாயம் 20 முதல்
ஸ்கந்தம் 5 அத்தியாயம் 6 வரை

Released by Maran's Dog, Toronto , Canada

இஞ்சிக்கொல்லை
R. சிவராம சாஸ்திரிகள்
அவர்களால் 1908ல் மொழி
பெயர்க்கப்பட்டது.

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ராம நாம வங்கியின் ப்ரசாரப் பிரசுரப் பிரிவு
ராம மந்திரம் –2, விளாயகம் தெரு,
சென்னை – 600 033. ☎: 24893736

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

TITLE	:	SRIMAD BHAGAVATHAM, TAMIL VACHANAM
AUTHOR	:	INZIKOLLAI R. SIVARAMA SASTRIGAL WRITTEN IN 1908
SIZE	:	CROWN OCTAVE
EXTENT	:	2736 PAGES CONSISTING OF SEVEN VOLUMES
PRICE	:	RS.600/ SET
FIRST EDITION	:	1996
SECOND EDITION	:	2004
THIRD EDITION	:	2007

இதுவரை செய்துள்ள புத்த ஸேவை

சிலபுத்தகங்களைப்பற்றிசிலவிசேஷகுறிப்புகள்

1. **ஸ்ரீமத் பாகவதம் ப்ரதி பத அர்த்தம்**
   மூலஸ்லோகங்கள் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும், பதப்பிரிப்பும் அர்த்தமும் தமிழில், 7 பாகங்கள் - 6224 பக்கங்கள் **1500**
2. **ஸ்ரீமத் பாகவதம் - வசனம்**
   ஸ்ரீ இஞ்சிக்கொல்லை சிவராம சாஸ்திரிகள் - 7 பாகங்கள் - 2800 பக்கம் 1908-ல் வெளியிடப்பட்டகுமிக ப்ராசீனமான மொழிபெயர்ப்பு. ஸ்ரீதரீயம், வீரராகவீயம், விஜயத் விஜியம் இவைகளின் குறிப்பை உள்ளடக்கியது. ஸப்தாஹ க்ரமமாகபிரிக்கப்பட்டுள்ளது. **600**
3. **ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் - மூலம் - தமிழில்- பெரிய எழுத்தில்**
   24,000 ஸ்லோகங்கள் கொண்டது. பல்வேறு பாராயண க்ரமங்கள், செய்முறை, நைவேத்யம்இவைகளின்பட்டியல்கள்அடங்கியது. **700**
4. **ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் - மூலம் - தமிழில்** **450**
5. **ஸ்ரீ துளஸீ ராமாயணம் - மூலமும் வசனமும்**
   ஸ்ரீமான் ஸாஹிதி வல்லப ஆத்ரேய ஸ்வாமிகள் அவர்களின் 9 ஆண்டு கால உழைப்பின் வடிவம். துளஸிதாஸரின் சரித்திரம் விஸ்தாரமாக முன்னுரையில் கொடுக்கப்பட்டுள்ளது. மூலம் அதனுடைய அர்த்தம் இரண்டும் கொடுக்கப்பட்டுள்ளது. **350**
6. **ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் - வசனம்**
   7 காண்டங்கள் - 7 பாகம் ஸ்ரீ ஸாம்பமூர்த்தி சாஸ்திரிகள் இயற்றியது. எதையும் விஸ்தரிக்காமல் எதையும்விட்டுவிடாமல் அமைந்த சிறப்பான உரைநடை **300**
7. **ஸ்ரீமத் பாகவதம் - மூலம் - தமிழில் - பெரிய எழுத்தில்**
   18,000 ஸ்லோகங்கள் கொண்டது. பாத்ம புராணம், ஸ்காந்தபுராணம்இவைகளில்கூறப்பட்டுள்ளஸ்ரீமத்பாகவதமாஹாத்மியம் அடங்கியது. பல்வேறு அட்டவணைகள்கொண்டது. **550**
8. **ஸ்ரீமத் பாகவதம் - மூலம் - தமிழில்** **250**
9. **ஸ்ரீகிருஷ்ண சைதன்யர்**
   ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் நியமனத்துடன் - ச்யாமளா. பாகவத தர்மம் பத்திரிக்கையில் தொடராக வெளிவந்ததின் நூல்வடிவம் **200**
10. **சுதர்சிங்சக்ர அவர்களின் க்ருஷ்ணலீலைகள்**
    ஸ்ரீசக்ர அவர்ஸ்ரீமத்பாகவதத்துடன்பலபுராணவிஷயங்களைஆய்ந்து க்ருஷ்ணலீலைகளை நான்கு புத்தகங்களாகதொகுத்துள்ளார்.

நந்தலாவின் மொழிபெயர்ப்பு அவ்வளவு சரளமாக உள்ளது.படித்துஇன்புறுங்கள்.

முதல்புத்தகம்- **பகவான் வாஸுதேவன்**

இதில் மதுரா லீலைகள் கொடுக்கப் பட்டுள்ளது **100**

2-ம்புத்தகம்- **நந்தநந்தன்-**

இதில் ப்ருந்தாவன லீலைகள் விஸ்தரிக்கப் பட்டுள்ளது. **200**

3-ம்புத்தகம்- **பார்த்தஸாரதி.**

இதில் ஹஸ்தினாபுர லீலைகள் விவரிக்கப் பட்டுள்ளது. **100**

4-ம்புத்தகம்- **த்வாரகாதீசன் -**

ஸ்ரீமத் பாகவதம் உத்தரார்தம் கதா பாகம். ருக்மிணி கல்யாணம்முதல் அஷ்டமஹிஷிகளின் திருமணம் மற்றும் ஏராளமான ஸம்பவங்கள் கோர்வையாக சொல்லப்பட்டுள்ளது. **100**

11. திருப்பாவை - உபன்யாஸம்

திருப்பாவை-உபன்யாஸம் - ஸ்ரீக்ருஷ்ணப்ரேமிஸ்வாமிகள்அருளியது.

ஒலி நாடாவிலிருந்து எழுதியவர் - ஸ்ரீமதி லதாசப்ரமண்யம் **100**

12. ஸ்ரீ பகவன் நாம ரஸோதயம்

ஸ்ரீ பகவன் நாம போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்.தமிழில்அனுவாதம் ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் கலியுகத்தில் அனுஷ்டிக்க வேண்டிய ஸாதனை பகவன் நாம உச்சாடனமே. அதுவே அடைய வேண்டிய குறிக்கோளும். பாரத தேசத்தில் அவதரித்த மஹான்கள் அனைவரும் மக்களுக்கு இதையே காட்டினர்.பகவன் நாமம் மட்டிலும் போதுமானது என்ற நாம மஹிமையை வேதம், உபநிஷதம், ஸஹஸ்ரநாமம், இதிஹாஸம், புராணம் இவைகளிலிருந்து பகவன் நாம நிரூபணம் செய்தவர் ஸ்ரீபகவன் நாம போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஆவர். ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் இந்த நாம சித்தாந்தத்திற்கு தமிழ் உரைவழங்கியுள்ளார். நமக்காகவும் இனிவரும் தலைமுறையினர்களுக்காகவும் ஜாதி மத பேதமின்றி ஒவ்வொருவர் வீட்டிலும் பாதுகாக்கப்பட வேண்டிய புத்தகம் **100**

13.ஸ்ரீ லக்ஷ்மண் ராமச்சந்த்ர பாங்கர்கரின் நூல்கள்

மொழியாக்கம் நந்தலா

1 பக்த துகாராம் **100**

2 ஞானேஸ்வர் **60**

3 ஏகநாதர் **40**

14. ஸ்துதி மணிகள்

தொகுப்பு - ஸ்ரீ எஸ். த்வாரகா நாதன். ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ள அனைத்து ஸ்துதிகளும் தொகுக்கப்பட்டுள்ளது. விரிவான அட்டவணை அடங்கியது.

15. ஸ்ரீமத் பகவத் கீதை - ப்ரதிபத அர்த்தம்

ஆசிரியர் - சோமசுந்தர தீக்ஷிதர்.

ப்ரதிபத அர்த்தம் வரிசையில் எங்கள் முதல் நூல்.பதப்பிரிப்பும் அர்த்தமும் தமிழில். மூல ஸ்லோகங்கள் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும். அர்த்தம்அன்வயப் படுத்தப்பட்டுள்ளது. அதாவது கோர்வைப் படுத்தப்பட்டுள்ளது. **60**

16. தர்ம சாஸ்திரம்

வைத்யநாத திக்ஷிதியத்தின் சுருக்கம் **50**

17. கோவிந்தபுரம் பஜன பத்ததி

ஸ்ரீகிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் பஜனை ஸம்ப்ரதாய -ப்ராசீன பத்ததியின் ஸ்வரூபம் அறிந்துகொள்ள உதவும் தொகுப்பு .ஸ்ரீஸ்வாமிகள் அருளிச் செய்த ப்ரவரம் கொண்டது. **40**

18. தக்ஷிண ஸம்ப்ரதாய கல்யாண மாலா

காமலாபுரம் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பாகவதர். ஸ்ரீராதா கல்யாணம் - ஸ்ரீ சீதா கல்யாணம் - ஸ்ரீ ஆண்டாள் கல்யாணம் - ஸ்ரீ பத்மாவதி கல்யாணம் ஆகிய நான்கு கல்யாணங்கள் அடங்கியது. **35**

19. ஸ்ரீ ராம மாதுரீ

ஸ்ரீவாமிநாத ஆத்ரேயன்.100ஸ்லோகங்கள் வ்யாக்யானத்துடன் உள்ளது. **25**

20. பக்த ரத்தினங்கள்

பல பாகவதர்களின் குறிப்புகள் **25**

21. ஸ்ரீ பாத ஸப்ததி

P.R. கண்ணன் - தேவி பாத மகிமை. நாராயணீயம் இயற்றிய நாராயண பட்டத்திரி இயற்றியது. தமிழ் அர்த்தத்துடன் **20**

22. ஸ்ரீ யாக்ஞவல்க்யர் திவ்ய சரித்திரம்

ஸ்ரீமத் பாகவதம் - வசனம் எழுதிய ஸ்ரீ ஆர். இஞ்சிக் கொல்லை சிவராம சாஸ்திரிகள் இயற்றியது. **20**

23. ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் கீர்த்தனைகள் - 100

100 கீர்த்தனைகள் அர்த்தத்துடன் கொடுக்கப்பட்டுள்ளது.

தொகுப்பு வலங்கைமான் வெங்கடராம பாகவதர் **25**

24. ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம்

ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் - ஸத்குரு த்யாகப்ரும்மத்தின் பாகவத ரூபம் முழுமையாகவெளிப்படுகிறது.ஒருவித்தியாசமான சரித்திரம். அவருடைய பாடல்களை வைத்தே எழுதப்பட்டது. **25**

25. பகவன் நாம ரஸயானம்

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட நாம சித்தாந்தம். ஸ்ரீ போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் எட்டு நாம சித்தாந்த க்ரந்தங்களில் ஒன்று. ஆங்கரை

ரங்கஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு மேற்படியார் குமாரர் விசுவநாத சாஸ்திரிகள் அவர்களால் 1942ல் வெளியிடப்பட்டதின் மறுபதிப்பு 20

26. பக்தை மீரா (ஸ்ரீ மீராபாய் திவ்ய சரித்திரம்)

ஸ்ரீகிருஷ்ணப்ரேமிஸ்வாமிகள்-இப்புத்தகத்தைப் படித்துவிட்டு யாரும் கண்ணீர் சிந்தாமல் இருக்க முடியாது. நெஞ்சை உருக்கும் சரித்திரம் 20

27. பக்த ஸாம்ராஜ்யம்

ஸ்ரீ ஸ்வாமிநாத ஆத்ரேயன். பாகவத தர்மத்தின் விஷயங்கள் என்றோ எப்பொழுதோ நடந்தவை அல்ல. இன்றைக்கும் அதனை அனுஷ்டிப்பவர் விஷயத்தில் பகவான் எப்படி அருள் புரிகிறான் என்பதை விளக்கும் பல்வேறு சரித்திரங்களின் தொகுப்பு 25

28. நாம ஸாம்ராஜ்யம்

ஸ்ரீஸ்வாமிநாத ஆத்ரேயன்-இது மேலேகண்ட தொகுப்பின் தொடர்ச்சி 25

29. பக்தி ஸந்தேஹத்வாந்த பாஸ்கரம்

ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமிகள் இயற்றியகிரந்தம், பாகவததர்மத்தில் ஏற்பட்டக்கூடிய சந்தேகங்களை விளக்கும் நூல் 15

30. ஸ்ரீ ப்ரும்மேந்திராள் கீர்த்தனைகள்

ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் - அர்த்தம் தமிழில் கொடுக்கப்பட்டுள்ளது. தொகுப்பு ஸ்ரீ பா. நாகராஜன் 10

34. ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் சரித்திரம்

வலங்கைமான் வெங்கடராம பாகவதர்-ப்ராசின பக்த விஜயத்தை தழுவியது. மிகுந்த பாவ விஷயங்கள் பேசப்பட்டுள்ள சரித்திரம் 15

35. திருமாலை

தொண்டரடிப் பொடி ஆழ்வார் அருளிச் செய்தது. தமிழ் வசனம் ஆழ்வை ரா. கீதாசார்யன் 15

36. நாமாயணம்

நாம விஷயங்களும் நாம மஹிமைகளும் அடங்கியது ஸம்ஸ்கிருத ஸ்லோகங்கள் - ஆழ்வார் பாசுரங்கள் - பஜனை பாடங்கள் -இவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது. தொகுப்பு - வலங்கைமான் வெங்கடராம பாகவதர் மற்றும் ஆழ்வை ரா. கீதாசார்யன். பரிசாகக் கொடுக்க உகந்தது. 7

37. ஸ்ரீ ஞானேஸ்வரரின் ஹரிபாட்

தொகுப்பு - அபங்கம் வி. ஆர். ராதாக்ருஷ்ணன் - பாவஅர்த்தங்கள் உள்ளது. முதல் பதிப்பிலிருந்து வெகுவாக விரிவாக்கப்பட்டுள்ளது. 6

38. ஸ்ரீ போதேந்திராள் கீர்த்தனைகள்

ப்ராசீன கீர்த்தனைகள் - மற்றும் அபூர்வ கீர்த்தனைகள் அடங்கியது 6

39. ஸ்ரீ போதேந்திராள் நாம வந்தனம்

ஸ்ரீ போதேந்திராள் அதிஷ்டானத்தில் பின்பற்றப்படும் நாம வந்தனம் 6

ஸ்ரீமத் பாகவதம்-தமிழ் வசனம்

பாகம்-2

பொருளடக்கம்

பக்கம்

ஸ்கந்தம்-3

20. ஸிருஷ்டி 1
21. கர்த்தமருக்கு ஸ்ரீமஹாவிஷ்ணு தரிசனம் கொடுத்தது 9
22. தேவஹூதியின் விவாகம் 18
23. கர்த்தமருடைய யோக மஹிமை 24
24. கபிலாவதாரம் 34
25. கபிலருககும் தேவஹூதிக்கும் ஸம்வாதம் 41
26. தேவஹூதிக்குக் கபிலர் ஆத்ம தத்துவத்தை 49
27. பிரகிருதி புருஷ விவேகம் 61
28. யோகத்தின் ஸ்வரூபம் 68
29. பக்தி யோகம் 77
30. பாபிகளின் கதி 84
31. (தொடர்ச்சி) 90
32. உத்தம கதி 101
33. தேவஹூதி ஜீவன் முக்தியடைந்தது 108

ஸ்கந்தம் 4

1. மனுபுத்திரிகளின் வம்சம் 114
2. தக்ஷருக்கும் பரமசிவனுக்கும் விரோதம் நேர்தல் 126
3. ஸதியைப் பரமசிவன் யாகத்திற்குப் 133
4. ஸதிதேவி சரீரத்தை விட்டது 138
5. தக்ஷ வதம் 146
6. ப்ரஹ்மதேவர் பரமசிவனைப் பிரார்த்தித்தது 150
7. தக்ஷன் பிழைத்தது 158
8. துருவ சரிதம் 171

பக்கம்

9. துருவ சரிதம் (தொடர்ச்சி) 185
10. துருவர் புண்ய ஜனர்களுடன் யுத்தம் செய்தது 197
11. மனு துருவருக்குத் தத்துவத்தை உபதேசித்தது 202
12. துருவர் துருவபதத்தை அடைந்தது 208
13. அங்கராஜன் காணாமற் போனது 216
14. வேனனை மஹரிஷிகள் சிஷித்தது 223
15. பிருதுவின் உற்பத்தி 229
16. ஸூதர்கள் பிருதுவை துதித்தது 233
17. பிருது பூமியைக் கொல்ல முயன்றது 237
18. பூமிதேவி ஸகல பொருள்களையும் உண்டு 243
19. பிருதுவின் அசுவமேதக் குதிரை காணமற் போனது 248
20. பகவான் பிருதுவை அனுக்கிரஹித்தது 254
21. பிருது ராஜ்ய பரிபாலனஞ் செய்தது 261
22. பிருதுவிற்கு ஸனத்குமாரர் ஞானத்தை 271
23. பிருது சக்கரவர்த்தி வைகுண்டம் சென்றது 282
24. ருத்ர கீதம் 288
25. புரஞ்சனோபாக்யானம் 300
26. (முன் அத்தியாயத் தொடர்ச்சி) 311
27. (முன் அத்தியாயத் தொடர்ச்சி) 316
28. புரஞ்சனன் ஸ்திரீயாக மாறினது 321
29. நாரதர் தத்துவத்தை உபதேசித்தது 329
30. பிரசேதஸ்ஸூகளின் சரிதம் 343
31. (முன் அத்தியாயத் தொடர்ச்சி) 351

ஸ்கந்தம் –5

1. ப்ரியவிரதருடைய சரிதம் 357
2. ஆக்னீதருடைய சரிகம் 367
3. நாபியின் சரிதம் 373
4. ரிஷப சரிதம் 377
5. மோக்ஷதர்ம நிரூபணம் 381
6. தேஹத்தை விடுவதின் முறை 389

அத்தியாயம்–20

ஸிருஷ்டி

1–6. இம்மாதிரியான சூதருடைய வார்த்தையைக் கேட்ட சௌனகர் அவரை நோக்கி, சுவாயம்புவ மனுவானவர் பூமியாகிய இருப்பிடத்தை அடைந்த பகவானிடத்தில் லயித்திருக்கும் ஜீவர்களை வெளிப் படுத்த எதனைச்செய்தார் (எந்த உபாயத்தைக் கொண்டு ப்ராணிகளை ஸிருஷ்டித்தார்) விதுரர் மஹா பாகவதர் (பகவத் பக்தர்களுக்குள் சிறந்தவர்) கிருஷ்ண பகவானுக்கு முக்கிய மித்திரர், வியாசருடைய புத்திரர். மஹிமையில் அவருக்குக் குறையாதவர். ஸ்ரீ கிருஷ்ணனையும், அவருடைய பக்தர்களையும் மூன்று கரணங்களாலும் (ஸரீரம், வாக்கு, மனம்) ஆசிரயித்தவர். மேலும், திருதராஷ்டிரர் ஸ்ரீ கிருஷ்ணன் உடைய இஷ்டப்படி நடக்காமலிருந்தபடியால் அவரைப் பகவானிடத்தில் அபராதஞ் செய்தவரென்று நினைத்து அவரை விட்டவர். தீர்த்த யாத்திரையைச் செய்ததால் பரிசுத்தர். அவர் குசாவர்த்தத்தில் (கங்கா துவாரத்தில்) உட்கார்ந்திருப்பவரும் தத்துவத்தை அறிந்தவர்களுக்குள் சிறந்தவருமான மைத்ரேயரிடம் சென்று எதனைக் கேட்டார்? அவர்களிருவர்களும் பேசிக்கொள்ளும்போது நடந்த விஷயமான கதைகள் கங்கையின் ஜலங்கள் போல் பாபத்தைப் போக்கும் சக்தியுள்ளவைகள். ரஸத்தை அறிந்த எவன்தான் பகவானது லீலாமிருதத்தைப் பானஞ் செய்தது போதுமென்று திருப்தியடைவான்? ஆதலால் கானம் செய்யக்கூடிய கம்பீர சரிதமுள்ள பகவான் லீலைகளைச் சொல்லும். உமக்கு க்ஷேமமுண்டாகும்

என்று கேட்டார்.

7–11. அதனைக் கேட்ட சூதர் பகவானைத் தியானம் செய்து நைமிசாரண்யத்தில் வஸிக்கும் மகர்ஷிகளை நோக்கி பகவான் வராஹாவதாரஞ் செய்து பாதாளத்திலிருந்து பூமியைக் கொண்டு வந்த கதையையும், ஹிரண்யாக்ஷ வதத்தையும் கேட்டு விதுரர் மிகுந்த சந்தோஷமடைந்து மைத்ரேயரை நொக்கி; ஓ ப்ராஹ்மண! அவ்யக்தத்தின் மார்க்கத்தை அறிந்தவராகிய ப்ரஹ்மதேவர் ப்ரஜைகளைச் ஸிருஷ்டிப்பதற்காக ப்ரஜாபதிகளும் ஸ்வாயம்புவ மனுவும் ப்ரஹ்மதேவருடைய கட்டளையினால் இந்த ஜகத்தை எப்படிப் படைத்தார்கள்? அவர்கள் தங்கள் பார்யையுடன் சேர்ந்து ஸிருஷ்டித்தார்களா அல்லது தாங்களே உண்டுபண்ணினார்களா? அல்லது எல்லாருமாகச் சேர்ந்து ஸிருஷ்டித்தார்களா? என்று கேட்டார்.

12–54. அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி, "ஊகிக்க முடியாத ஜீவர்களுடைய அதிர்ஷ்டத்தாலும் ப்ரகிருதிக்கு அதிஷ்டாதாவாகிய பரமபுருஷனாலும் காலத்தாலும், பகவானிடத்திலிருந்து கலங்கிய முக்குணங்களிலிருந்து மஹத் தத்துவம் உண்டாயிற்று. ரஜோகுண பிரதானமாகிய அந்த மஹத்தத்துவத்திலிருந்து மூன்று குணங்களுள்ள அஹங்காரம் உண்டாயிற்று, பூதங்களுக்கு, ஆதியாய் இருக்கும் அந்த அஹங்காரமானது ஆகாசம் முதலிய மஹா பூதங்களையும் தன்மாத்திரைகளையும், ஞானேந்திரியம், கர்மேந்திரியம், அதன் தேவதைகள் இவைகளையும் ஐந்து ஐந்தாக உண்டுபண்ணிற்று.

அவைகள் தனியாக அண்டத்தைச் ஸிருஷ்டிக்கச் சக்தியற்றவைகளாகிப் பகவானுடைய அனுப்ரவேசத்தால் ஒன்று கூடி ஸ்வர்ண மயமான அண்டத்தை உண்டுபண்ணின. அது அசேதனமாக ஆயிரம் வருஷங்களுக்கு அதிகம் ஜலத்திலேயே இருந்தது. ஈசுவரன் அதில் ப்ரவேசித்தார். அவருடைய தொப்புளில் ஒரு தாமரை மலர் தோன்றியது, அது ஆயிரம் சூரியர்களைப் போல் ப்ரகாசித்தது, ஸகல பிராணிகளுக்கும் ஸ்தானமாயிருப்பது; அதிலிருந்து ப்ரஹ்மதேவர் உண்டானார். அவர் ஜலத்தில் சயனம் செய்து கொண்டிருக்கும் பகவானால் தூண்டப்பட்டு (நாம)ரூபாதிகளுடன் உலகங்களை முன் கல்பத்திலிருந்தது போல் அமைத்தார். முதலில் தாமிஸ்ரம், அந்த தாமிஸ்ரம், தமஸ், மோஹம், மஹா தமஸ் என்று ஐந்து பர்வதங்களுள்ள அவித்யையைத் தம்முடைய நிழலைக்கொண்டு (அபுத்திபூர்வம்) படைத்தார்.)

பிறகு அவர் சந்தோஷமின்றி அந்தச் சரீரத்தை விட்டார். அதுவே தமோமயமான ராத்திரியாம். பசி தாகம் இவைகளுக்கு காரணமான ராத்திரியை, அதிலிருந்து, உண்டான யக்ஷர்களும் ராக்ஷதர்களும் பெற்றுக்கொண்டார்கள். மேலும் அவர்கள் பசியாலும் தாகத்தாலும் வருத்தப்பட்டு, இவரைக் காப்பாற்ற வேண்டாம், புசியுங்கள் என்று சொல்லிக் கொண்டு அவரைத் தின்று விடுவதற்காக ஓடிவந்தார்கள். அப்பொழுது ப்ரஹ்மதேவர் பயந்து அவர்களை நோக்கி, என்னைத் தின்று விடவேண்டாம், ரட்சியுங்கள்; என்னுடைய புத்திரர்களான நீங்கள் யக்ஷர்களென்றும் ராக்ஷதர்கள் என்றும் பெயரடைவீர்கள், என்றார். பின்பு காந்தியுள்ளவராக எவர்களைப்

ப்ரதானமாகப் ஸிருஷ்டித்தாரோ, அவர்கள் தேவர்கள் ஆனார்கள். அவர்கள் அவரால் விடப்பட்ட பிரபா சரீரமாகிய பகலைப் பெற்றுக் கொண்டார்கள். பிறகு அவர் ஸ்திரீகளிடத்தில் விசேஷ ஆசையுள்ளவர்களாக அசுரர்களை ஜகனத்திலிருந்து உண்டு பண்ணினார். அவர்கள் அவரைப் புணருவதற்காக ஓடிவந்தார்கள். அப்பொழுது வெட்கமில்லாமல் சிரித்துகொண்டு பின் ஓடிவரும் அஸுரர்களைப் பார்த்துப் ப்ரஹ்மதேவர் பயந்து ஓடினார். பக்தர்களுடைய உபத்திரவத்தைப் போக்கடிப்பவரும் பக்தர்களுடைய இஷ்டப்படி ஸ்வரூபத்தையெடுத்துக்கொள்ளுபவருமான பகவானிடம் சென்று, "பிரபுவாகிய பரமாத்மாவே துக்கப்பட்டவர் களுடைய துக்கத்தைப் போக்கடிப்பவர் நீர் ஒருவரே. உம்முடைய பாதாரவிந்தத்தை ஆசிரயிக்காதவர்களுக்கு நீர் கஷ்டத்தைக் கொடுக்கிறீர்.

உம்முடைய ஆஜ்ஞையின்படி ப்ரஜைகளைச் ஸிருஷ்டித்தேன். அவர்கள் என்னைப் புணருவதற்கு முயற்சித்தார்கள்; என்னைக் காப்பாற்றும், என்று பிரார்த்தித்தார்; பிறருடைய அபிப்பிராயத்தை அறிந்த வராகிய பகவான் ப்ரஹ்மதேவருடைய தைன்யத்தைத் தெரிந்துகொண்டு' "இந்தக் காமத்தால் கலங்கிய சரீரத்தை விட்டுவிடும்" என்று சொன்னார். அதனைக் கேட்ட ப்ரஹ்மதேவரும் அப்படியே செய்தார்; அதுவே சந்தியை எனப்படுகிறது. அந்த சந்தியையாகிய ஸ்திரீயானவள் சப்திக்கும் ஆபரணங்கள் அணிந்த பாதங்களுள்ளவள். மதத்தால் கலங்கிய கண்கள் உள்ளவள். ஒட்டியானத்தால் பிரகாசிக்கும் பட்டை உடுத்திக்கொண்டவள். ஒன்றோடொன்று சேர்ந்தவை களும், உயர்ந்தவையுமான ஸ்தனங்களுள்ளவள்.

அழகான மூக்குள்ளவள், நல்ல பற்களுள்ளவள். மனோகரமான சிரிப்புள்ள பார்வையுள்ளவள். கருமையான தலைமயிருள்ளவள். பின்னுமவள் வெட்கத்தால் தன்னுடைய சரீரத்தை மறைத்துக் கொண்டும் இருந்தாள் "ஓ தர்மத்தின் அவதாரமாகிய விதுரரே! அஸுரர்கள் அந்த ஸ்திரீயைப் பார்த்து மோகித்து இவளுடைய ரூபம் வியக்கத்தக்கது. இவளுடைய யௌவன வயது ஆச்சர்யப்படத்தக்கது. நாமெல்லாம் இவளிடத்தில் ஆசைப்பட்டிருந்தாலும் இவள் ஆசையில்லாதவள் போல சஞ்சரிக்கிறாள்" என்று ஸ்திரீ ரூபம் கொண்ட சந்தியைப்பற்றிப் பலவகை யாக சந்தேகித்து; பின்பு அவளை நோக்கி, "நீ யார்? யாருடைய பெண்? நீ இவ்விடம் எதற்காக வந்தாய்? உருவமாகிய உத்தம வஸ்துவை வைத்துக்கொண்டு (அதனை எங்களுக்குக் கொடுக்காததனால்) அதிருஷ்டமற்றவர்களான எங்களை உபத்திரவிக்கிறாய்.

ஓ பெண்ணே! நீ யாராயிருந்தாலும் சரி (உன்னுடைய ஜாதி முதலியவைகளைத் தெரிந்து கொள்வதால் என்ன பிரயோசனம்?) உன்னுடைய தரிசனம் பாக்கியத்தால் கிடைத்தது. பந்து விளையாடுவதால் பார்ப்பவர்களுடைய மனத்தை அபகரிக்கிறாய் ஓ சிறந்த பெண்ணே! உயரக் கிளம்பும் பந்தைக் கையால் அடிப்பவளாகிய உன்னுடைய தாமரை மலர் போன்ற பாதமானது ஒரே இடத்தில் ஸ்திரமாக நிற்கவில்லை. பெரிதாகிய ஸ்தனங்களின் சுமையைத் தாங்க முடியாமல் தலைமயிர்களின் கூட்டமானது நிர்மலமாக இருக்கிறது. (மினு மினுப்புள்ளதென்பது கருத்து) என்று மிகுந்த பிரியத் துடன் பிரச்னஞ் செய்து புத்தி மயக்கமடைந்து

சந்தியைப் பெற்றுக் கொண்டார்கள். அவள் தனது சரீரத்தை முகந்து சிரித்துக் கொண்டு மறைந்தாள். பின்பு ப்ரஹ்மதேவர் காந்தியால் கந்தர்வ கணங்களையும், அப்ஸரோ கணங்களையும் படைத்தார். அந்தக் காந்தி பொருந்திய சந்திரிகா ரூபமான சரீரத்தை விட்டார். அதனை விசுவாவசு முதலியவர்கள் பிரியமாகப் பெற்றுக்கொண்டார்கள். பிறகு அவர் தம்முடைய சோம்பலைக் கொண்டு பூதங்களையும், பிசாசங்களையும் ஸிருஷ்டித்தார். அவைகள் வஸ்திரம் இல்லாதவைகளும், தலைமயிரை அவிழ்த்துக்கொண்டு மிருப்பதைக் கண்டு கண்களை மூடிக்கொண்டார். அப்பொழுது ப்ரஹ்மதேவரால் விடப்பட்ட ஜ்ரம்பணமென்ற (கொட்டாவி விடுவது) சரீரத்தை அவைகள் பெற்றுக்கொண்டன. அதையே நித்திரை யென்கிறார்கள். கொட்டாவி விடுவது, நித்திரை, உன்மாத்த மென்றவைகள் சோம்பலால் உண்டாகக் கூடியவைகள். ஆதலால் அதன் அவாந்தர பேதங்கள் ஆகும்), அந்த நித்திரையால் இந்திரியங்களுடைய வலிமைக் குறைவு எல்லாப் பிராணிகளிடத்திலும் காணப்படுகிறது. அதனைக் கொண்டு ஆசாரம் இல்லாதவர்களைப் புத்தி மயக்கமுள்ளவர்களாகப் பூதங்கள் செய்கின்றன. அவைகள் உன்மாதங்கள் எனப்படுகின்றன, பின்பு பகவானாகிய ப்ரஹ்மதேவர் தம்மை அன்னத்தைப் புசிப்பவராக நினைத்துக் கொண்டு சாத்தியர்களையும் பிதிர்கணங்களையும், பரோக்ஷமாக ஸிருஷ்டித்தார். பிதுருக்கள் தங்களை உண்டுபண்ணிய அந்தச் சரீரத்தைப் பெற்றுக் கொண்டார்கள். சாத்தியர்களுக்கும், பிதிருக்களுக்கும் வித்வான்களால் கொடுக்கப்படும் ஹவ்யங்களும், கவ்யங்களும் அந்தச் சரீரமேயாம். பிறகு அந்தப்

ப்ரஹ்மதேவர் சித்தர்களையும் வித்தியாதரர்களையும் பரோக்ஷமாக ஸிருஷ்டித்தார். அந்த அற்புதமாகிய அந்தர்த்தான (மறைந்திருப்பது) சக்தியை அவர்களுக்குக் கொடுத்தார். பின்பு தம்முடைய பிரதி பிம்பத்தைப் பார்த்துச் சிலாகித்துக்கொண்டு கின்னரர், கிம்புருஷர்களையும் ஸிருஷ்டித்தார். அவர்கள் அந்தச் சரீரத்தைப் பெற்றார்கள். அவர்கள் ஆணும் பெண்ணும் சேர்ந்து கிரீடித்துக்கொண்டு அவரையே கானஞ் செய்து கொண்டிருந்தார்கள். பின்பு அந்தப் ப்ரஹ்ம தேவர் ஸிருஷ்டி விருத்தியடையாமலிருப்பதைப் பார்த்து, போகமுள்ள (நீண்ட) தேகத்துடன் படுத்துக் கொண்டே பலவகையான சிந்தையுடன் அந்தச் சரீரத்தை விட்டார். அந்தத் தேகத்திலிருந்து உதிர்ந்த கேசங்கள் (மயிர்கள்) அஹிகளாயின (சர்ப்பங்கள்), கை, கால்கள் முதலியவைகளை அசைக்கும் அந்தத் தேகத்திலிருந்து சர்ப்பங்கள் உண்டாயின. அவைகளே குரூரங்களான நாகங்களெனப்படுகின்றன (மிகுந்த வேகமுள்ளவை). நீண்ட தேகத்திலிருந்து உண்டான தால் அவை நீண்ட சரீரமுள்ளவைகளும், நீண்ட கழுத்துள்ளவைகளாயு மிருந்தன பின்பு அவர் தம்மைக் கிருத கிருத்தியராக நினைத்து உலகங்களை விருத்தி செய்பவர்களான மனுக்களை மனத்தால் ஸிருஷ்டித் தார். அவர்களுக்குப் புருஷாகாரமாகிய சரீரத்தைக் கொடுத்தார்.அந்த மனுக்களைப் பார்த்து அவர்களுக்கு முன் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் ப்ரஹ்மதேவரை நோக்கி, (உலகத்தைப் படைத்தவரான) நீர் நல்ல காரியத்தைச் செய்தீர். மனுக்களின் ஸிருஷ்டியில் அக்கினி ஹோத்திரம் முதலிய கிரியைகள் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதால் நாங்கள் எல்லாரும் சேர்ந்து ஹவிஸ்ஸைப் புஜிக்கிறோம்" என்று

கொண்டாடினார்கள். பின்பு இந்திரியங்களை ஜயித்தவராகிய அந்தப் ப்ரஹ்மதேவர் தபஸ், உபாஸனை, யோகம்,சமாதி ஆகிய இவைகள் உள்ளவராய்த் தமக்கு இஷ்டர்களான ரிஷிகளான ப்ரஜைகளைச் ஸிருஷ்டித்து அவர்களுக்கு சமாதி யோகம், ஐசுவர்யம், தபஸ், வித்யை, வைராக்கியம் ஆகிய இவைகளுள்ள தம்முடைய தேஹத்தின் அம்சத்தைக் கொடுத்தார்.

அத்தியாயம்–21

கர்த்தமருக்கு ஸ்ரீ மஹாவிஷ்ணு தரிசனம் கொடுத்தது

1–5 "ஓ பகவானாகிய மைத்ரேயரே! ஸ்வாயாம்புவ மனுவின் வம்சமானது பெரியோர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டது. அதனிடமிருந்தே (ஸ்திரீ புருஷர் களுடைய சேர்க்கையாலே) ஜனங்கள் விருத்தி அடைந்தார்கள். அந்த வம்சத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும். மேலும் ஸ்வாயம்புவ மனுவின் புத்திரர்களாகிய பிரிய விரதர், உத்தானபாதர் ஆகிய இருவர்களும் ஏழு தீவுகள் அடங்கிய பூமியையும், தர்மத்தையும் எப்படிக் காப்பாற்றினார்கள்? பின்னும் அந்த மனுவிற்கு தேவஹூதி என்ற ஒரு பெண் உண்டென்றும் அவள் கர்த்தமர் என்ற பிரஜாபதியின் பாரியை என்றும் தங்களால் சொல்லப்பட்டதல்லவா? மகா யோகியாகிய அந்தக் கர்த்தமப் பிரஜாபதி ஆனவர் யோகலட்சணங்கள் பொருந்திய தேவஹூ தியினிடம் எவ்வளவு குழந்தைகளை உண்டு பண்ணினார்? ஓ ப்ராஹ்மணோத்தம! மேலும் ப்ரஹ்ம தேவருடைய புத்திரராகிய தக்ஷரும், ருசி என்பவரும், மனுவின் புத்திரியாகிய ப்ரஸூதி என்பவளையும். ஆஹூதி என்பவளையும் விவாகஞ்செய்து கொண்டு பிரஜைகளை எப்படி உண்டு பண்ணினார்கள்? அதை எனக்குச் சொல்லவேண்டும்" என்று விதுரர் கேட்டார்.

6–16 அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி, "ஓ விதுரரே! பகவானாகிய கர்த்தம பிரஜாபதியை நோக்கி, "ப்ரஜைகளைச் ஸிருஷ்டியும்"

என்று ப்ரஹ்மதேவர் ஆக்ஞாபித்தவுடன் கர்த்தமர் (ஸிருஷ்டி சக்தியை அடைவதற்காக) சரஸ்வதி நதிக்கரையில் பதினாயிரம் வருஷங்கள் தவம் செய்து, மனத்தை ஒருவகைப்படுத்தி, பக்தியுடன் ஸ்ரீமந் நாராயணனைப் பூஜித்தார். அவர் சரணாகதி செய்தவர்களுக்கு இஷ்டமானவரத்தைக் கொடுப்பவர். அப்பொழுது தாமரைக் கண்ணனாகிய பகவான் அதிக சந்தோஷமடைந்து வேதத்தாலேயே அறியக் கூடிய ப்ரஹ்ம ஸ்வரூபமாகிய தமது ஸ்வரூபத்தைக் காண்பித்தார். அவர் சுத்தர், சூரியன் போல் பிரகாசிப்பவர். தாமரைப் புஷ்பம் நீலோத்பல புஷ்பம் இவைகளால் செய்யப்பட்ட மாலையைத் தரித்தவர்; பளபளப்புள்ளவைகளும் கருமை நிறம் உள்ளவைகளுமான தலைமயிர்களால் அலங்கரிக்கப் பட்டு சுத்தமாகிய வஸ்திரமுள்ளவர். கிரீடமுள்ளவர். குண்டலங்கள் அணிந்தவர். விளையாட்டிற்காக புஷ்பத்தைத் தரித்தவர். மனத்திற்கு ஆனந்தத்தை கொடுக்கக்கூடிய சிரிப்பு, பார்வை ஆகிய இவைகள் உள்ளவர். கருடனுடைய முதுகில் தாமரை மலர் போன்ற பாதங்களை வைத்துக்கொண்டிருப்பவர். கௌஸ்துப ஹாரத்தைத் தரித்தவர். அவருடைய மார்பில் லக்ஷ்மீதேவி வஸிக்கிறாள். ஆகாயத்தில் தோன்றிய அப்படிப்பட்ட பகவானுடைய அந்தத் திவ்யசரீரத்தை தரிசித்த கர்த்தமர் மிகுந்த சந்தோஷமடைந்து மனோரதமுள்ளவராகி பிரியமுள்ள மனத்துடன் (ப்ரீதியையே ஸ்வபாவமாயுடைய மனதுள்ளளவரென்று கருத்து) கைகூப்பி நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்யக்கூடிய ஓ ஸ்வாமியே ஸகல ஜகத்திற்கும் இருப்பிடமாகிய உம்மைத் தரிசித்ததால் என்னுடைய கண்கள் பலனுள்ளவைகளாயின.

உத்தம ஜன்மங்களால் யோகசித்தி அடைந்த யோகிகளும் உம்முடைய தரிசனத்தையே விரும்புகிறார்கள். உம்முடைய பாதாரவிந்தமானது ஸம்சார்ரமாகிய ஸமுத்திரத்தைக் கடக்க ஓடமாக இருக்கிறது. உம்முடைய மாயையால் ஜனங்கள் மயக்கமடைந்து ஸம்சாரத்திலுள்ள சொல்ப காமங்களை விரும்பி அவைகளுக்காக உம்முடைய பாதத்தை உபாஸிக்கிறார்கள். அவைகளையும் கொடுக்கிறீர். (பலனை விரும்பிய மேலானவர்கள் அல்லவென்று தாத்பரியம்.) அப்படியும் காமதேனு போல கிருஹஸ்தாசிரமத்தில் தர்மம், அதர்மம் இவைகளை உண்டுபண்ணக்கூடியவளும் என்னுடை ஸ்வபாவமுள்ளவளுமாகி ஸ்திரீயைக் கல்யாணம் செய்து ஸகல புருஷார்த்தங்களுக்கும் பலமாயும் கற்பக விருஷம் போல் அண்டினவர்களுடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்பவருமான உம்முடைய பாதத்தைச் சரணமடைகிறேன். அது ஸகல புருஷார்தத்திற்கும் காரணம். (பலனை விரும்பும் பக்தர்களை நான் நிந்திப்பவனானாலும் அப்போர்ப்பட்டவனே) ஆகையால் நான் தர்ப்புத்தியுள்ளவன். ஓ! எல்லாவற்றிற்கும் அதிபதியே! நீர் ஸகல பிரஜைகளுக்கு அதிபதி. கயிற்றினால் பசுக்கள் கட்டப்படுவது போல் உம்முடைய ஆக்ஞையால் பலனை விரும்பிய உலகம் முழுவதும் கட்டப்பட்டிருக்கிறது. ஓ தர்ம ஸ்வரூபியே நானும் உலகத்தை அனுசரித்துக் காலஸ்வரூபியாகிய உமக்கு பூஜையைச் செய்கிறேன். (உம்முடைய இஷ்டப்படி நடக்கிறேன். கல்யாணத்தையும் செய்து கொள்ளுகிறேன்)

17–18 எவர்கள் உலகத்தையும், அதை அனுசரிப்

பவர்களையும் விவேகமிருந்தும் கர்மஜடர்களாகப் பசுப்போல் இருப்பவர்களையும் விட்டு உம்முடைய பாதமாகிய குடையை ஆச்ரயித்திருக்கிறார்களோ பின்னும் மத்யம போன்றதும் (சம்சார துக்கத்தை மறக்கச் செய்வதால்) அமிர்தம் போன்றதுமான (கிழத்தனம், மரணம் ஆகிய இவைகளைப் போக்குவதால் உம்முடைய குணங்களை வருணித்து அதனால் பசி, தாகம் முதலிய தேக தர்மத்தை நிவர்த்தித்துக் கொள்ளுகிறார் அவர்களுடைய ஆயுளைக் காலச் சக்கரமானது எடுத்துக்கொண்டு ஓடுகிறதில்லை (குறைக்கிறதில்லை). அது ஜகத்தை இழுத்துக் கொண்டு ஓடுகிற ஸ்வபாவமுள்ளது. அது அக்ஷர ரூபமாகிய பரப்ரஹ்மத்தினிடம் சுற்றுகின்றது. அந்தச் சக்கரத்திற்குப் பதிமூன்று மாதங்களே ஆரங்களாக விருக்கின்றன. முந்நூற்று அறுபது (360) தினங்களே பர்வங்கள் (கணுக்கள்) ருதுக்களே நேமிகள் க்ஷணம், லவம், திருடி முதலியவைகளே இலை போன்ற முனைகள். மூன்று சாதுர்மாஸ்யங்களே நாபிகள். மேலும் அது கடுமையான வேகத்துடன் ஜகத்தை இழுத்துக் கொண்டு ஓடுகிறது.

19–21 "ஓ பகவன்' பட்டுப்பூச்சி பட்டை உண்டு பண்ணுவதும், அதைச் சுற்றிக் கொள்வதும்போல நீர் ஒருவரே உலகத்தைப் படைக்க விரும்பி, தம்மிடத்தில் இருக்கும் யோகமாயையைக் கொண்டு சத்வம் முதலிய சக்திகளை அவலம்பித்து இந்த ஜகத்தைச் ஸிருஷ்டிக்கிறீர். காப்பாற்றுகிறீர். சம்ஹரிக்கிறீர். ஓ ஈச! உம்மை உபாசிப்பவர்களான எங்களுக்கு மாயையால் விஷய சுகத்தைக் கொடுப்பது உமக்குச் சம்மதமன்று. ஆனாலும் அனுக்கிரகத்திற்காகவே

அது உபயோகப்படட்டும். பிரகாசிக்கும் துளசியால் அலங்கரிக்கப்பட்ட உம்மைத் தரிசித்தேன். (இப்படிப் பட்ட உம்மைத் தரிசிப்பது க்ஷேமத்தை கொடுக்கக் கூடியது) அப்படிப்பட்ட உம்மை அடிக்கடி நமஸ்கரிக்கிறேன். நீர் ஞானத்தால் கர்ம பலனைக் கடந்தவர். மோக்ஷத்தைக் கொடுப்பவரென்று கருத்து). தம்முடைய மாயையைக் கொண்டு லோகதந்திரத்தை நடத்துகிறவர் பலனை விரும்பியவர்களாலும் பலனை விரும்பாதவர்களாலும் நமஸ்கரிக்கக் கூடிய பாதார விந்தமுள்ளவர். அற்ப இஷ்டத்தைக் கொடுப்பவர் என்று தோத்திரஞ் செய்தார்

22–35 இம்மாதிரி கர்த்தம ப்ரஜாபதியினால் கபடமின்றி ஸ்துதிக்கப்பட்ட ஸ்ரீமந் நாராயணன் கருணையுடைய முதுகிலிருந்துபடி ப்ரியம், சிரிப்பு ஆகிய இவைகளுள்ள பார்வையால் அசையும் புருவங்களுள்ள வராகி கர்த்தமரை நோக்கி பின் வருமாறு சொல்லலானார். ஓ கர்த்தம! எதற்காக நீர் என்னை தம்முடைய ஹிருதயத்தில் இந்திரியங்களை அடக்கி பூஜித்தீரோ, அந்த உம்முடைய அபிப்ராயத்தை அறிந்து முன்னமேயே அதற்கு வேண்டியதை ஸித்தஞ் செய்திருக்கிறேன்.

ஓ ப்ராஹ்மண! எவ்வளவு வருஷ காலம் அவளிடத்தில் உமக்கு ஆசை இருக்கிறதோ அவ்வளவு காலம் வரையில் அந்த ராஜ குமாரி உம்மை அடைவாள். மேலும் அவள் உம்முடைய வீரியத்தைத் தரித்து ஒன்பது வகையாகப் பிரசவிப்பாள். உம்முடைய வீரியத்திற்குண்டான பெண்களிடத்தில் மஹரிஷிகள் புத்திரர்களை உண்டு பண்ணுவார்கள்.

சுத்த சத்தராகிய நீர் என்னுடைய உத்தரவின்படி நடந்து. ஸகல கர்மங்களின் பலனை என்னிடம் சமர்ப்பித்து, கிருஹஸ்தாச்ரமத்தில் பிராணிகளிடத்தில் தயையுள்ளவராக இருந்து அபயத்தை கொடுத்து (ஸன்யாசத்தில்) என்னை அடைவீர்.

மேலும் ஸகல ஜகத்துடன் என்னிடத்தில் உம்முடைய ஸ்வரூபத்தையும் உம்மிடத்தில் என்னையும் பார்ப்பீர். நானும் உம்முடைய பத்தினியாகிய தேவஹூதியினிடத்தில் என்னுடைய அம்சமாக அவதரித்து தத்துவ ஸம்ஹிதையைச் செய்வேன், என்று சொல்லிப் பகவான் அவர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே ஸரஸ்வதி நதியால் சூழப்பட்ட பிந்து ஸரஸ்ஸிலிருந்து சென்றார். அப்பொழுது அவர் செல்லும் வழியில் ஸகல சித்தர்களும் அவரை ஸ்தோத்திரம் செய்தார்கள். கருடனுடைய பக்ஷங்களால் சாம வேதத்தின் மந்திரங்கள் உச்சரிக்கப்பட்டன. (பிருகத் தந்த்ரங்கள் இயற்கைகள் என்று ஸ்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது) அவைகளைக் கேட்டுக் கொண்டே பகவான் சென்றபிறகு கர்த்தமபிராஜா பதியானவர் அந்த பிந்து ஸரஸ்ஸின் கரையில் அந்தக் காலத்தை எதிர்பார்த்திருந்தார்.

36–44 ஓ விதுரரே! மனுவென்பவர் சுவர்ணாலங்காரமுள்ள ரதத்தின் மீதேறிப் பத்தினியுடனும் புத்திரியுடனும் பூமி முழுவதும் சுற்றி ஸ்ரீமந் நாராயணனால் குறிப்பிடப்பட்ட தினத்தில் அந்த ஸ்தலம் சென்றார். ஸ்ரீமஹா விஷ்ணு தம்முடைய பக்தராகிய கர்த்தமரிடத்தில் அதிகச் சந்தோஷத்தால் கண்ணீரைப் பெருக்க அதன் பிந்து (துளி) அவ்விடத்தில் விழுந்துபடியால்

'பிந்து ஸரஸ்' என்று அந்த ஸ்தலத்திற்கு பெயருண்டாயிற்று. அது ஸரஸ்வதி நதியின் சமீபத்திலுள்ளது அந்த ஸரஸ் புண்ணியத்தைக் கொடுக்கக்கூடியது. அதன் ஜலமானது அமிருதம்போல் ருசியுள்ளது. எவ்வளவு தடவை ஸ்நானம் செய்தாலும் அதனால் ரோக முண்டாகிறதில்லை. மகரிஷிகள் கூட்டம் கூட்டமாக அதனைச் சேவிக்கிறார்கள். அதன் கரையில் புண்ய விருஷங்களும், புண்ணியத்தைக் கொடுக்கும் கொடிகளும் கூட்டமாக இருக்கின்றன.

மேலும் அவ்விடத்தில் நல்ல மிருகங்களும், பறவைகளும் இனிமையாக சப்திக்கின்றன. எல்லா ருதுக்களிலும் புஷ்பங்கள் பழங்கள் ஆகிய இவைகளால் நிறைந்த மரங்களால் அலங்கரிக்கப் பெற்றது அடர்ந்த காடுகளிருப்பதால் அழகுள்ளதாக இருக்கிறது. மதித்த பறவைகள் கூவுகின்றன. மதித்த வண்டுகள் விளையாடுகின்றன. மயில்கள் மதங்கொண்டு ஆடுகின்றன. குயில்கள் மதத்துடன் ஒன்றுக் கொன்று கூப்பிடுகின்றன. கடம்பம், வஞ்சி, அசோகம், புன்னை மகிழம் வேங்கு குந்தம் (குருந்து மந்தாரம், வெட்பாலை, மா ஆகிய மரங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. மேலும் நீர்காக்கைகள், நீர்கோழிகளின், உட்பிரிவுகள், ஹம்ஸங்கள், சாரசங்கள், சக்கரவாகங்கள், சகோரங்கள் ஆகிய பட்சிகள் இனிமையாகச் சப்திக்கின்றன, இன்னும் மான்கள், காட்டுப் பன்றிகள், முள்ளம் பன்றிகள், பசு போன்ற கவயமென்ற மிருகங்கள், யானைகள், கோவாங் கூவங்கள் (வால்நீண்ட குரங்குகள்) குரங்குகள், சிம்ஹங்கள் கீரிகள், கஸ்தூரி மிருகங்கள் ஆகிய இவைகள் அவ்விடத்தில் இருக்கின்றன.

45–56 அரசர்களுக்கு முந்தியவரான அந்த மனுவானவர் தம்முடையபரிவாரங்களுடன் அந்தப் பிந்துசரஸை அடைந்து அவ்விடத்தில் அக்கினி காரியத்தை முடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் கர்த்தமரைக் கண்டார். அவர் கடுந்தபஸ்செய்த வராகையால் மிகுந்த தேஜஸால் பிரகாசித்திருந்தார். மேலும் அவர் தவம் செய்ததால் இளைத்த சரீரமுள்ள வரானாலும், பகவானுடைய கடைக்கண் பார்வையை அடைந்தபடியாலும், அவருடைய வார்த்தையாகிய அமிருதத்தைக் கேட்டபடியாலும், அதிகமாக இளைக் காத சரீரமுள்ளவராக இருந்தார். மேலும் அவர் மரவுரியைத் தரித்தவர். சாணை பிடிக்கப் படாத உயர்ந்தவர். ரத்தினம் போல் இருப்பவர். அப்போர்ப்பட்ட கர்த்தமரைக் கண்டு அரசன் அவருடைய சமீபம் சென்றார். அப்போது கர்த்தமர் தம்முடைய சமீபம் வந்து நமஸ்காரம் செய்யும் அரசனுக்குத் தக்கப்படி மரியாதை செய்தார். ஆசனங் கொடுத்து உட்காரச் சொன்னார். புகழ்ந்து பேசினார்.

பின்பு அந்தப் பிரஜாபதியானவர் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் கட்டளையை நினைத்துக்கொண்டு அரசனை நோக்கி, "ஓ மகாராஜா ! நீர் மகாவிஷ்ணுவின் அம்சம். அவருடைய சக்தியால்தான் உலகத்தைக் காப்பாற்றுகிறீர். மேலும், அந்த அந்தச் சமயத்திற்குத் தக்கபடி சூரியன், சந்திரன், அக்கினி, இந்திரன், வாயு, யமன், தர்மன், வருணன் ஆகிய இவர்களுடைய ஸ்வரூபத்தைத் தரிக்கிறீர். மேலும், சாதுக்களைக் காப்பாற்றுவதற்கும், அசத்துக்களைக் கொல்வதற்கும் சஞ்சரிக்கிறீர். அப்போர்ப்பட்ட ஸ்ரீ மகாவிஷ்ணு ஸ்வரூபியான உமக்கு நமஸ்காரம்.

ஜயிக்கும் ஸ்வபாவமுள்ளதும், மணிகளால் அலங்கரிக்கப்பட்டதுமான இரதத்தின் மீதேறிப் பயங்கரமானவில்லையெடுத்து நாணோசை செய்து அதனால் மனிதர்களைப் பயப்படச் செய்துகொண்டும் தம்முடைய சைனியங்களுடன் சூரியன்போல் நீர் சஞ்சரிக்காமலிருந்தால் ஸ்ரீமந் நாராயணனால் ஏற்படுத்தப் பட்ட வர்ணம் ஆச்ரமம் ஆகிய இவைகளுடைய மரியாதைகள் அசத்துக்களால் கெடுக்கப்படும் விஷயத்தில் ஆசைகொண்ட மனிதர்கள் பயமற்றவர் களாக அதர்மத்தை விருத்தி செய்வார்கள். நீர் உலகத்தை கவனியாமலிருந்தால் அசத்துக்களால் ஆக்கிரமிக்கப்பட்டு உலகம் கெட்டுப் போய்விடும், ஓ சூரராகிய மகாராஜா! என்னுடைய ஆசிரமம் தேடி வந்த காரியமென்ன ? அதனைத் தெரிவித்தால் அதிகச் சந்தோஷத்துடன் அங்கீகரிப்பேன் என்றார்.

தேவஹூதியின் விவாகம்

2–14. இப்படிச் சொல்லி மௌனமாக இருப்பவரும், நிவிர்த்தி மார்க்கத்தில் ஆசை உள்ளவருமான கர்த்தமரை நோக்கி அவ்வரசன் தன்னுடைய குணங்கள், சரிதங்கள் ஆகிய இவைகளுடைய மேன்மையைக் கேட்டு வெட்கத்துடன், "ஓ ப்ராஹ்மண! ப்ரஹ்மதேவர் தம்முடைய ஸ்வரூபமாகிய வேதங்களைக் காப்பாற்று வதற்காக (உலகத்தில் பரவச் செய்வதால்) தம்முடைய முகத்திலிருந்து உங்களை உண்டுபண்ணினார். நீங்கள் வேதங்களை நன்றாய் அறிந்தவர்கள். தபஸ்விகள். வித்தையுள்ளவர்கள். யோகாப்பியாசம் செய்தவர்கள். விஷயத்தில் ஆசை இல்லாதவர்கள். அநேகப் பாதங்கள் உள்ள அந்தப் பகவான் தம்முடைய அநேக கைகளிலிருந்து உங்களைக் காப்பாற்றுவதற்காக எங்களைப் படைத்தார். அவருக்குப் ப்ராஹ்மண ஜாதியே ஹிருதயம். க்ஷத்திரிய ஜாதியே சரீரம். ஆகையால் ப்ராஹ்மண ஜாதியும், க்ஷத்திரிய ஜாதியும் ஒன்றையொன்று காப்பாற்றுகின்றன. காரண ரூபியும், காரிய ரூபியும், விவகாரமற்றவருமான அந்தத் தேவனே எல்லாவற்றையு ம் காப்பாற்றுகிறார்.(உமக்கும் எனக்கும் ஏற்கனவே சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.) உம்மைத் தர்சித்ததாலேயே ஸகல ஸம்சயங்களும் நிவர்த்தியாயின.

ஜனங்களைக்காப்பாற்ற விரும்பிய எனக்குப் பகவானாகிய நீர் பிரியத்துடன் தர்மத்தை உபதேசித் தீர். புண்ணியம் செய்யாதவர்களுக்கு உம்முடைய

தரிசனம் கிடைக்காது. அப்போர்ப்பட்ட உம்மை நான் பார்த்து மங்களகரமாகிய உம்முடைய பாததூளியை நான் சிரஸில் வஹித்தது. உம்மால அனுக்ரஹிக்கப் பட்டது, உம்முடைய வார்த்தைகளைக் காதுகளால் கேட்டது ஆகிய இவைகள் தெய்வச் செயலால் கிடைத்ததேயொழிய வேறில்லை. ஆகையால் ஓ மகர்ஷியே! பெண்ணிடத்தில் மிகுந்த பிரியத்தால் சிரமப்படும் தீனனாகிய என்னிடத்தில் கிருபைசெய்து நான் தெரிவித்துக் கொள்வதைக் கேட்க வேண்டும்.

அதாவது ப்ரியவ்ருதன், உத்தானபாதன் இவர்களுடைய சகோதரியும் எனது குமாரியுமாகிய இந்தப் பெண் யௌவன வயது, நல்ல சுபாவம்; நற்குணங்கள் ஆகிய இவைகள் உள்ள பர்த்தாவை அடைய விரும்புகிறாள். மேலும் இவள் உம்முடைய ஸ்வபாவம், வித்தை, வயது, குணம் ஆகிய இவைகளை நாரத மகரிஷியினிடமாகத் தெரிந்துகொண்டு அதுமுதல் உம்மையே விவாகம் செய்துகொள்ளுகிறது என்று நிச்சயஞ் செய்து கொண்டாள். ஓ! ப்ராஹ்மண சிரேஷ்டரே, சிரத்தையுடன் என்னால் சமர்ப்பிக்கப் படும் எனது பெண்ணைப் பெற்றுக்கொள்ளும்! இவள் கிரஹஸ்தாச்ரம காரியங்களில் பலவகையிலும் உமக்கு ஒத்தவள். விஷயங்களில் ஆசையை ஒழித்தவன் ஆனாலும், தானாக வந்த விஷயத்தை மறுக்கக்கூடாது. அப்படியிருக்க விஷயத்தை விரும்பியவன் அதை மறுக்கலாமா? எவன் ஸ்வயமாகக் கிடைத்ததை லட்சியஞ்செய்யாமல் பிறகு கிருபணனை யாசிக்கிறானோ அவன் மிகுந்த கீர்த்தியுள்ளவனானாலும் அவனுடைய கீர்த்தியானது குறைந்துவிடும். பிறரை அவமதித்ததால் அவனுடைய மானமும் போய்விடும். ஓ வித்வானாகிய

ப்ராஹ்மண! நீர் விவாகம் செய்துகொள்வதற்காக முயற்சித்திருக்கிறீர் என்று கேள்விப்பட்டேன். விவாஹம் வரையில் ப்ரஹ்மச்சர்யத்தை அனுஷ்டிக் கிறதென்ற நீர் என்னால் கொடுக்கப்படும் கன்யா ரத்தினத்தைப் பெற்றுக்கொள்ளும்' என்று சொன்னார்.

15–23. அதனைக்கேட்ட கர்த்தமப் பிரஜாபதி அரசனை நோக்கி, 'நீர் சொல்வது சரியே நான் விவாஹம் செய்து கொள்ளவேண்டுமென்ற விருப்பம் உள்ளவனாக இருக்கிறேன். உம்முடைய குமாரத் தியையும் வேறொருவருக்கு கொடுப்பதாக நீரும் ப்ரதிக்ஞை செய்யவில்லை. இந்த முதன்மையான விவாஹமானது எங்களிருவருக்கும் தகுதியானதேயாம். ஓ மகாராஜா! விவாஹ விஷயத்தில் உம்முடைய குமாரிக்கு ஏற்பட்டிருக்கும் இஷ்டமானது பூர்த்தி யடையட்டும். தன்னுடைய தேஹகாந்தியாலேயே ஆபரணங்களால் ஏற்படும் சோபையைப் பரிஹஸிக்கும் உம்முடைய பெண்ணை யார்தான் விரும்ப மாட்டான்? இந்தப் பெண் மாடிமீது, காலிலிருக்கும் பாதஸரங்கள் சப்திக்கும்படி பந்து விளையாடும் போது, விச்வாவசு என்ற கந்தர்வன் பார்த்துப் புத்தி மயங்கி விமானத்திலிருந்து கீழே விழுந்தான். லக்ஷ்மீதேவியின் சரணங்களைச் சேவியாதவர்களால் பார்க்க முடியாதவளும், ஸ்திரீகளுக்குள் சிறந்தவளும், சுயமாகப் ப்ரார்த்திக்கிறவளும், உத்தானபாதருடைய சகோதரியும், மனுவின் புத்திரியுமாகிய இந்தப் பெண்ணை வித்வானாகிய எவன்தான் அங்கீகரிக்க மாட்டான்? ஆகையால் இந்தப் பெண்ணை விவாகஞ் செய்துக்கொள்ளுகிறேன். என்னுடைய வீரியத்தை தந்து அவள் கர்ப்பத்தை அடைகிறவரையில்

கிருஹஸ்த தர்மத்தை அனுஷ்டிப்பேன். பிறகு மஹாவிஷ்ணுவினால் உபதேசிக்கப்பட்டதும், இம்சை அற்றதும், ஞானத்தையே முக்யமாயுடையதுமான தர்மத்தை ஆசிரயிப்பேன் (சன்யாசஞ் செய்து கொள்வேன்). பலவகையான இந்த ஜகத்தானது எவரிடமிருந்து உண்டானதோ, எவரால் காப்பாற்றப் படுகின்றதோ, எவரால் சம்ஹரிக்கப்படுகிறதோ, ப்ரஜாபதிகளுக்கும் அதிபதியாகிய அந்த அனந்தனாகிய பகவான் எனக்கு இப்படிச் செய்யவேண்டுமென்று உபதேசித்திருக்கிறார் என்று சொல்லி அந்த மகரிஷியானவர் மனத்தில் ஸ்ரீ வாசுதேவரை தியானஞ் செய்துகொண்டு மௌனமாக இருந்தார. அவருடைய முகத்தை பார்த்த, தேவஹூதி அவரிடம் ஆசைக் கொண்டாள். பின்பு மனுவானவர் தம்முடைய பத்தினியாகிய சதரூபை, புத்திரியாகிய தேவஹூதி இருவர்களுடைய அபிப்பிராயத்தை நன்றாய் அறிந்த நற்குணங்கள் பொருந்திய அந்தப் ப்ராஹ்மணனுக்குத் தகுந்தவளான கன்னிகையை தானம் செய்தார். மகாராஜனுடைய பாரியையாகிய சதரூபை யென்பவள் ஆபரணங்கள், வஸ்திரங்கள், விளையாட்டுச் சாமான்கள் ஆகிய விலை உயர்ந்தவைகளைக் கன்னிகாதானமாகத் தம்பதிகளுக்குக் கொடுத்தாள்.

24–39. இப்படி அரசன் தன்னுடைய குமர்ரியைத் தகுந்த வரனுக்குக் கொடுத்து கவலையற்றவராகப் பெண்ணை விட்டுப் பிரிய மனமில்லாதவராகி, ஸ்நேகத்தால் மனம் கலங்கி, "அம்மா! குழந்தாய்" என்று சொல்லி கண்ணீரை பெருக்கி, அதனால் அவளுடைய தலைமயிரை நனைத்தார். பின்பு மகர்ஷியினிடம் விடைபெற்றுப் பத்தினியுடன்

இரதத்தின் மீதேறி சைன்யங்களுடன் தமது நகரஞ் சென்றார். வழியில் சரஸ்வதி நதியின் இருகரைகளிலும் மிகவும் சாந்தர்களான மகர்ஷிகளுடைய ஆசிரமங்களைத் தரிசித்தார். இப்படித்தமது பட்டணத்திற்கு வந்த அரசனைப் ப்ரஹ்மா வர்த்தத்திலிருக்கும் ஜனங்கள் மிகவும் சந்தோஷித்து, கானத்தாலும் ஸ்தோத்திரத்தாலும், வாத்திய சப்தத்தாலும் பூஜித்து எதிரில் சென்று அழைத்தார்கள். ஸ்ரீ நாராயணன் வராஹாவதாரம் செய்த காலத்தில் அந்த யக்ஞவராஹமானது தன்னுடைய சரீரத்தை சிலிர்த்துக் கொண்டது (அசைத்தது). அதிலிருந்து மயிர்கள் எவ்விடத்தில் உதிர்ந்தனவோ, அந்த ஸ்தலம், பர்ஹிஷ்மதீ என்ற பட்டணமாயிற்று. அது ஸகல சம்பத்துக்களால் நிறைந்திருந்தது. அந்த மயிர்களே பச்சை நிறமுள்ள தர்ப்பங்களாயின. அவைகளைக் கொண்டு மகர்ஷிகள் யாகவிரோதிகளான ராக்ஷஸர்களைத் துரத்தி யாகத்தை முடிக்கிறார்கள். பகவான் ஆகிய மனுவும் யக்ஞவராஹரிடமாகப் பூமியை அடைந்து அவ்விடத்தில் அந்த குசகாசங்களை பரப்பி, யக்ஞ புருஷனாகிய பகவானை முன்காலத்தில் பூஜித்தார். அந்த நகரஞ் சென்று, மூவகையான தாபத்தைப் போக்கக்கூடிய அரண்மனையில் தர்மத்திற்கு விரோதமில்லாமல் காமசுகங்களை அனுபவித்து முன்போல் வசித்தார். ஒவ்வொரு நாளும் விடியற் காலத்தில் கந்தர்வர்கள் தமது ஸ்திரீகளுடன் இந்த அரசனுடைய மேலான கீர்த்தியை, கானம் செய்கிறார்கள். அரசன் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் கதைகளை மிகுந்த பிரேமையுடன் சிரவணஞ் செய்து காலத்தைக் கழித்துவந்தார். இப்படி மனுவானர் பகவானிடத்திலே சித்தத்தைச்

செலுத்தி வரும்போது அந்தஸ்வாயம்புவ மனுவை, விஷயங்களிலேயே ஆசைப்படும்படி செய்யப் போகங்களால் முடியவில்லை. மேலும் அவர் பகவான் உடைய கதைகளைக் கேட்பதாலும், பகவானைத் தியானஞ் செய்வதாலும் அவருடைய கதையை வாக்கியங்களாக் அமைப்பதாலும், வாயால் சொல்வதாலும் காலத்தைக் கழித்து வந்தபடியால் அவருடைய காலத்தில் நடந்த யாமங்கள் (காலத்தில் அவயவங்கள்) ஸாரமற்றவையாக ஆகவில்லை (பலமுள்ளவையாயின). இப்படி அவர் தம்முடைய காலமாகிய எழுபத்தொரு யுகங்களிலும் ஸ்ரீவாசுதேவருடைய கதையாலேயே மூவகைத் தாபமற்றவராக இருந்தார்.

ஓ வியாச புத்திரனாகிய விதுர! பகவானை ஆசிரயித்தவர்களுக்குச் சரீரத்தில் உண்டாகும் ரோகங்களாவது, மனக் கவலையாவது, ஆகாசத்தில் இருந்து வரக்கூடிய உபத்திரவங்களாவது, சத்ருக்கள் இடமிருந்து பயமாவது, உஷ்ணம், சீதம் இவைகள் உண்டாகும் துக்கமாவது நேரிடுகிறதில்லை. அவரை மகர்ஷிகள் தர்மங்களைச் சொல்லும்படி கேட்க ஸகல பிராணிகளுக்கும் அனுகூலத்தைச் செய்பவரான அந்த மனு மனிதர்களுக்கும் அந்த அந்த ஜாதிகளுக்கும் ஆசிரமங்களுக்கும் உரியதான தர்மங்களை உபதேசித்தார். அரசர்களுக்குள் முந்தியவரும் வருணிக்கத் தக்கவருமான மனுவின் அற்புதமாகிய சரிதத்தைக் சொன்னேன். இனி அவருடைய பெண்ணாகிய தேவஹூதியின் மஹிமையைச் சொல்கிறேன் கேளும்" என்றார்.

அத்தியாயம்–23

கர்த்தமருடைய யோக மகிமை

தாய்தந்தையான சதரூருபையும், ஸ்வாயம்புவ மனுவும் ப்ரம்மாவர்த்தம் சென்றபின் அவர்களுடைய புத்திரியும் பதிவிரதையும், இங்கிதத்தை அறிந்தவளும் ஆன தேவஹூதி, பிரபுவாகிய பரமசிவனுக்குப் பார்வதி தேவிபோலக் கர்த்தமருக்குச் சிசுருஷை செய்துவந்தாள். அவள் விசுவாசத்தாலும் அந்தக் கரண சுத்தியாலும் (சமத்தாலும்), எல்லாரையும் விடத் தனது பர்த்தா மேலானவரென்று நினைத்திருந்தாலும் தமத்தாலும் (வெளியிலிருக்கும் இந்திரியங்களை அடக்குவது), கால் பிடிப்பது முதலியவற்றாலும், பிரியத்தாலும், இனிமையான வார்த்தையாலும், மிகுந்த தேஜஸ்வியாகிய தன்னுடைய பர்த்தாவைச் சந்தோஷிக்கச் செய்தாள்.

மேலும் அவள், காமத்தையும், கபடத்தையும், துவேஷத்தையும், ஆசையையும், நிஷித்த காரியத்தைச் செய்வதையும், கர்வத்தையும் விட்டவள், பர்த்தாவின் உடைய உத்தரவின்படி நடப்பதில் சாவதானமாய் முயலுபவள். பர்த்தாவை அனுசரித்தவள். அவருக்கு மிகுந்த க்ஷேமத்தை விரும்பியவள், வெகுகாலமாக விரதங்களை அனுஷ்டித்து அதனால் இளைத்தவள். அப்போர்ப்பட்ட மனுவின் குமாரியாகிய தேவஹூதியின் இடத்தில் கர்த்தமப் பிரஜாபதி சந்தோஷமடைந்து மிகுந்த கிருபையுடன், பிரேமையால் பேசமுடியாமல் கத்கத ஸ்வரத்துடன் பாரியயை நோக்கி, 'ஓ கம்பீர மனமுடையவளே! எனக்கு நீ கௌவரத்தை உண்டு

பண்ணுகிறவள்; சரீரமெடுத்தவர்களுக்கு (பிராணி களுக்கு) தங்கள் தங்கள் சரீரத்தில் அதிக ப்ரியம் இருக்கும். உன்னுடைய சரீரமோ மிகவும் மேலானது. அப்படியிருந்தாலும் அதனை லட்சியஞ் செய்யாமல், என்க்கு மிகவும் சிசுருஷை செய்து வந்தபடியாலும், என்னிடத்தில் மிகுந்த பக்தி வைத்திருப்பதாலும், நான் சந்தோஷமடைந்தேன். தனக்கு உரிய தருமத்தை அனுஷ்டித்து வந்தவனாகிய எனக்குக் கிடைத்த பகவத்பிரசாதங்கள் (திவ்யபோகங்கள்) என்னை நீ சேவித்துக் கொண்டிருந்தபடியால் உன்னாலும் அடையப்பட்டவைகளே; அவைகள் தபஸ், சமாதி, உபாசனை ஆகிய இவைகளில் மனத்தை ஒருவகைப் படுத்தியதால் கிடைத்தவை, உனக்கு திவ்ய திருஷ்டியைக் (ஞானக்கண்ணை) கொடுக்கிறேன். அதனைக் கொண்டு பயமற்றவைகளும்; துக்கம் அற்றவைகளுமான அவைகளை நேரில் பார்க்கலாம்; நீ சித்தையாக விருக்கிறாய். பதிவிரதா தர்மத்தால் கிடைத்த திவ்ய போகங்கள். அவைகள், "நாம் அரசர் என்ற அஹங்காரமுள்ள மற்றவர்களால் அடைய முடியாதவை, மற்ற மானுஷ போகங்களெல்லாம் பகவானுடைய புருவங்களின் அசைத்தலால் கெடுக்கப் பட்ட மனோரதமுள்ளவைகள். (அநித்யங்கள்); அவைகளால் என்ன பிரயோசனம்?" என்று சொன்னார்.

9–11 அதனைக் கேட்ட தேவஹூதி, தன்னுடைய பர்த்தாவாகிய கர்த்தமர் யோகமாயையிலும், உபாசனையிலும் மிகவும் தேர்ச்சியடைந்தவரென்று தெரிந்து கொண்டு கவலையற்றவளானாள். மேலும் அவள் வெட்கமுள்ள பார்வையால் அழகான சிரிப்பு உள்ள முகமுள்ளவளாகி, அதிக வணக்கத்தாலும்,

விசுவாசத்தாலும் சுத்தஸ்வரமுள்ள வளாகப் பர்த்தாவை நோக்கி, "ஓ ப்ராஹ்மணோத்தம! வீணாகாத யோக மாயைக்கு அதிபதியான உம்மிடத்தில் இவையாவும் இருக்கின்றனவென்பது எனக்குத் தெரியும். என்னுடைய விவாக காலத்தில் நீர் சொன்னபடி எனக்குக் கர்ப்பம் உண்டாகட்டும். பதிவ்ரதைகளான ஸ்த்ரீகளுடைய குணங்கள் சிறந்த விஷயத்தில் பிரசித்தமாகும். (எனக்குப் புத்திரன் உண்டாகி அதனால் என்னுடைய குணங்கள் லோகத்தில் பரவியபின்,திவ்ய சக்ஷுஸ்ஸை அடைகிறேன் என்று கருத்து.)

மேலும் நான் உம்முடைய ரூபலாவண்யத்தால் மோகித்து மன்மதனால் உபத்திரவிக்கப்பட்டிருக்கிறேன். உம்மைச் சேர்ந்து ரமிக்க வேண்டுமென்ற ஆசை யுள்ளவளாக இருக்கிறேன். பின்னும் என்னுடைய சரீரம் விரதங்களால் சிரமப்பட்டிருக்கிறது. அது போகத்திற்கு தகுந்ததாக ஆகும்படி செய்ய வேண்டும். தவிரவும், காம சாஸ்திரப்படி அதற்கு வேண்டிய சாதனங்களைச் சம்பாதிக்க வேண்டும். அதற்காக எது செய்யப்பட வேண்டியதோ, அதனைச் செய்யும் தகுதியான கிருகத்தைச் சம்பாதியும்" என்றாள்.

11–21 ஓ விதுரரே! அதனைக் கேட்ட கர்த்தமப் பிரஜாபதி தம்முடைய பார்யையின் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டி தம்முடைய யோக பலத்தால் உடனே ஒரு விமானத்தை உண்டு பண்ணினார். அது இஷ்டப்படி செல்லக் கூடியது, ஸகல இஷ்டங்களையும் கொடுக்கக்கூடியது, திவ்யமானது. ஸகல ரத்தினங்களுள்ளது. ஸகல சம்பத்துக்களும்

அதில் மேன்மேலும் விருத்தி யடைந்துள்ளது. இரத்தின மயமான தூண்களால் அலங்கரிக்கப்பட்டது. அதனுடைய சாமக்கிரியைகள் யாவும் திவ்யமானவை. எந்தக் காலத்திலும் சுகத்தை உண்டு பண்ணக்கூடியது. விசித்திரங்களான பட்டுத்தோரணங்கள பலவகையான புஷ்ப மாலைகளால் அலங்கரித்த மாலைகளிலுள்ள மதுவைப் பானஞ் செய்து வண்டுகள் சப்திக்கின்றன. மேலும் வெண்பட்டுகள், அரக்குப் பட்டுகள் முதலிய பலவகை வஸ்திரங்களால் பிரகாசிக்கின்ற கட்டில் முதலிய படுக்கைகளும் அதில் கம்பளம் விரிப்புகளும் சித்தமாக இருக்கின்றன. ஓ! பலவகையான வேலைத் திறமை காட்டப்பட்டிருக்கிறது. பலவிடங்களில்மரகத ரத்தினத்தால் தளவரிசை செய்த பவழத் திண்ணை களும் பிரகாசிக்கின்றன. வாயிற்படிகள் இரேழிகளில் இழைக்கப்பட்ட பவழங்களுடைய காந்தியாலும் வஜ்ர கதவுகளாலும் விளங்குகின்றன. இந்திரநீலக் கற்களால் மாடியின் மேற்புறத்தில் தங்கக் கலசவஜ்ரச் சுவர்களில், கண்கள்போல் பிரகாசிக்கும் மேலான பத்மராகங்கள் இழைக்கபட்டிருக்கின்றன. பல வகை யான கொடுங்கைகளாலும் விலையில்லாத தங்கத் தோரணங்களாலும் பிரகாசிக்கிறது. ஹம்ஸங்களும், புறாக்களும்,கிருத்ரிமமான (வேலை செய்து வைத்த பிரதிமைகள்) வைகளை தங்கள் ஜாதியைச் உண்மை யான பறவைகளென்று எண்ணி, அவைகள் இருக்கு மிடத்தில் செல்லுகின்றவைகளும், வருகின்றவை களுமாக இருக்கின்றன விளையாடும் இடங்கள், சயனக்கிருகம், உபயோகிக்குமிடம் வீட்டிற்கு வெளிப் பிரதேசங்கள், பிரகாரத்திற்கு வெளிப்பிரதேசங்கள் ஆகிய இவை சுககரங்களாக இருக்கின்றன. இந்த விமானமானது கர்த்தமருக்கு மோகத்தை உண்டு பண்ணுகிறது.

32–35 இப்பேர்ப்பட்ட விமானத்தைப் பார்த்தும் தேவஹூதியானவள் அதிகமாகப் பிரியப்படவில்லை. அப்பொழுது சகல பிராணிகளுடைய அபிப்ராயத்தைத் தெரிந்து கொள்ளும் சக்தியுள்ள கர்த்தம பிரஜாபதி, தம்முடைய புத்தியை நோக்கி, "ஓ தேவஹூதியே! இந்தப் பிந்துசரஸில் ஸ்நானம் செய்! இந்தத் தீர்த்தமானது ஸ்ரீ மகா விஷ்ணுவினால் ஏற்படுத்தப் பட்டது. மனிதர்களுக்கு சகல இஷ்டத்தையும் கொடுக்கக் கூடியது. இந்த விமானத்தின் மீதேறிக் கொள்" என்றார். நீலோத்பலம் போன்ற கண்களுள்ள தேவஹூதியானவள் சரஸ்வதி நதியின் ஜலமுள்ள அந்த சரஸில் மூழ்கினாள். அப்பொழுது அவளுடைய வஸ்திரங்கள் அழுக்குள்ளதாக இருந்தன. தலை மயிர்கள் ஜடையாக இருந்தன. சரீரம், ஸ்தனங்கள் ஆகிய இவைகள் அழுக்கினால் (வர்ணம் மாறி) இருந்தன. அந்தத் தேவஹூதி ஜலத்தில் மூழ்கியவுடன் ஜலத்திற்குள் ஒரு வீட்டில் ஆயிரம் பெண்கள் இருக்கக் கண்டாள். அவர்கள் எல்லோரும் சிறு வயதுள்ளவர்கள். அவர்களுடைய சரீரங்கள் நீலோத் பல புஷ்பங்கள்போல் வாசிக்கின்றன. அவர்கள் தேவஹூதியைக் கண்டமாத்திரத்தில் எழுந்திருந்து கைகூப்பி, "நாங்கள் உமக்கு இஷ்டமான காரியத்தைச் செய்யும் வேலைக்காரிகள்; என்ன செய்ய வேண்டும், ஆக்ஞாபிக்க வேண்டும்" என்று கேட்டார்கள். மேலும் அவர்கள் மேலான வாசனையுள்ள தைலம் தேய்த்து, தேவஹூதிக்கு ஸ்நானம் செய்துவைத்து, சுத்தமாகிய புதிய வெண்பட்டைக் கொடுத்து உடுத்திக் கொள்ளச் செய்தார்கள். விலை உயர்ந்தவைகளும் மிகுந்த காந்தி உள்ளவைகளுமான இரத்தினாபரணங்களால் அவளை அலங்கரித்தார்கள். அமிர்தம் போன்ற ருசியுள்ள

அன்னத்தையும், பானத்தையும் (குடிக்கக் கூடியவை கள்) அவளுக்கு கொடுத்தார்கள். பின்பு தேவஹூதி கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள். திவ்யமான ஹாரங்களாலும், சுத்தமான வஸ்திரங் களாலும் தன்னுடைய தேகம் அலங்கரிக்கப்பட்டு இருந்தது.

மேலும், மங்கள ஸ்நானத்தால் அழுக்கற்றதாகவும் இருந்தது. அந்தப் பெண்கள் அவளை மங்கள திரவியங்களைக் கொண்டும், சகல ஆபரணங்கள், சலங்கைகள், தங்கத்தால் செய்யப்பட்ட பாதசரங்கள், பலவகையான இரத்தினங்கள் இழைத்த ஒட்டியாணம், கண்டாபரணம் முதலியவை ஆகிய இவைகளால் அலங்கரித்தார்கள்; மேலும், முகமானது அழகான புருவங்களாலும், ரம்யமாகிய பற்களாலும், மனோகரம் ஆகிய பார்வையுள்ளது. தாமரை மலர் போன்றதும் ஆகிய நேத்திரங்களாலும் அழகாக இருந்தது. அப்பொழுது அவள், "இந்த சமயத்தில் பர்த்தாவாகிய மகரிஷி சமீபத்தில் இல்லை என்று நினைத்தாள்.

அப்படி நினைத்தவுடன் கர்த்தமப் பிரஜாபதி வசிக்குமிடத்தில் அவருக்கு முன்பாக, தேவஹூதி தம்முடைய பரிசாரிகைகளான பெண்களுடன் தான் இருக்கக் கண்டாள். அப்பொழுது அவள் ஜலத் திற்குள் ஆயிரம் பெண்களைப் பார்த்தது. அவர்கள் தம்மை உபசரித்தது. பர்த்தாவை ஸ்மரித்த மாத்திரத்தில் அந்தப் பெண்களுடன் மகரிஷியின் சமீபத்தில் தாமிருப்பது முதலியவைகள் யோக மகிமையால் ஏற்பட்டவையென்று யோசித்து மிகவும் ஆச்சரியமடைந்தாள்.

36–57 காமம் முதலிய சத்ருக்களை ஜயித்தவராகிய ஓ விதுரரே! அந்த மகரிஷி, மங்கள ஸ்நானம் செய்தவளும், பித்ரு கிரகத்திலிருக்கும் போதிருந்த சௌந்தரியமுள்ளவளும், அழகான ஸ்தனங்களுள்ளவளும், நல்ல வஸ்திரமுள்ளவளும், ஆயிரம் வித்யாதர ஸ்திரீகளால் சூழப்பட்டவளுமான தேவஹூதியைப் பார்த்து,. அவளிடத்தில் ஆசையுள்ளவராகிய, அந்த விமானத்தில் அவளை ஏற்றிக் கொண்டார். அந்த விமானத்தில் அந்த மகரிஷியானவர். தம்முடைய பத்னியுடன் சேர்ந்து வித்தியாதர ஸ்திரீகளால் உபசரிக்கப்பட்டு ஆகாயத்தில் நட்சத்திரங்களாகையால் சூழப்பட்டவரும் அழகான சரீரமுள்ளவரும், குமுத (ஆம்பல்) புஷ்பங்களை மலரச் செய்பவருமாகிய பூர்ண சந்திரன்போல் பிரகாசித்தார்,

எட்டு லோக பாலர்களும் விளையாடக் கூடிய மேருபர்வதத்தின் குகைகளில் அநேக ஸ்திரீகளுடன் குபேரன்போல் கிரீடித்தார். சித்தர்களும் அவரை ஸ்தோத்திரஞ் செய்தார்கள். அந்தக் குகைகள், மன்மதனை விருத்தி செய்யக்கூடிய காற்று வீசுவதால் அழகுள்ளவை; ஆகாச கங்கை உயர்ந்தவிடமிருந்து விழுகிறபடியால் இனிமையான சப்தமுள்ளவை. இப்படி அந்த மகரிஷியானவர். வைச்ரம்பகம், சுவரசனம், கந்தகம், புஷ்ப பத்ரகம், மானசம், சைத்ராத்யம் ஆகிய தேவர்களுடைய உத்தியான வனங்களில் பத்தினியுடன் ரமித்தார். மேலும், அவர் இஷ்டப்படி செல்லக்கூடியதும், மிகவும் பிரகாசிக்கிறதும், மேலானதுமாகிய விமானத்தின் மீதேறி வாயு பகவான்போல் எல்லா லோகங்களிலும்

சஞ்சரித்து, தேவர்களுக்கும் (விமானத்திலேறிச் சஞ்சரிப்பவர்கள்) மேலானவராக இருந்தார்.

சம்சாரத்தை நிவிர்த்திக்கக் கூடிய பகவானுடைய பாதங்களை ஆசிரயித்தவர்களும், தைரியமுள்ளவர்களுமான யோகிகளுக்கு எதுதான் கிடைக்காது? யோகியாகிய அந்தக் கர்த்தமர் பலவகையான அமைப்புள்ள விசித்திரமாகிய பூகோளத்தைத் தம்முடைய பத்தினியாகிய தேவஹூதிக்குக் காண்பித்துத் தம்முடைய ஆசிரமஞ் சென்றார். பின்பு அவர் ரதியில் ஆசையுள்ளவளும், மனுவின் புத்திரியுமான தேவஹூதியினிடத்தில் ஒன்பது பிரஜைகளை உண்டுபண்ணுவதாகிய எண்ணத்துடன் அநேக வருஷங்கள் இரமித்தார்.

தேவஹூதியும், அந்த விமானத்தில் சந்தோஷத்தை உண்டுபண்ணக்கூடிய மேலான படுக்கையில் அழகு பொருந்தியவரான பர்த்தாவுடன் சேர்ந்து, "இவ்வளவு காலஞ் சென்றது" என்பதைத் தெரிந்து கொள்ளாமல் ஆனந்தத்தில் மூழ்கியிருந்தாள். இப்படி அந்தத் தம்பதிகள் யோக மகிமையால் ரமித்துவரும் போது நூறு வருஷங்கள் கூட்டிய காலம் போல சென்றன. அப்பொழுது தேவஹூதியின் எண்ணத்தை (அநேக பிரஜைகளுண்டாக வேண்டுமென்றது) அறிந்தவரும், அப்படிச் செய்ய சாமர்த்தியமுள்ளவருமாகிய அந்த மகரிஷி, பத்தினியைத் தம்முடைய பாதிச் சரீரமாகப் பாவித்தும், ஆத்மக்ஞர் ஆகையால் அவளிடத்தில் ஆசை வைக்காமலும் தம்முடைய வீரியத்தை ஒன்பது வகையாக அவளிடத்தில் உபயோகித்தார். உடனே

அவள் ஒன்பது பெண்களைப் பெற்றாள். அந்தப் பெண்கள் எல்லோரும் அழகான சரீரமுள்ளவர்கள்; செந்தாமரைப் புஷ்பம் போன்ற வாசனையுள்ளவர்கள்; உடனே சன்யாசம் செய்துகொள்ள யத்தனிக்கும் மகரிஷியைப் பார்த்துப் பதிவிரதையான தேவஹூதி, சிரித்துக் கொண்டு, மனவருத்தத்துடன் தலைகுனிந்து, கால் நகத்தால் பூமியைக் கீறினவளாகக் கண்ணீரை அடக்கி கொண்டு, "ஓ பகவன்! எனக்கு நீர் செய்வதாகச் சொன்னவைகள் எல்லாம் உம்மால் செய்யப்பட்டன. ஆனாலும் சரணமடைந்தவளாகிய எனக்கு அபயப் பிரதானஞ் செய்யவேண்டும்.

ஓ பிராமண! நீர் காட்டிற்குச் சென்றால் உம்முடைய பெண்களுக்குச் சமானர்களான புருஷர் களைத் தேடி விவாகஞ் செய்யவேண்டுமே, அதனை யார் வகிப்பார்? மேலும் பெண்களால் பித்ருக்களின் ருணம் (கடன்) தீராததாகையால் சம்சார துக்கத்தைப் போக்கக்கூடிய பிரம்மவித்தாகிய புத்திரன் ஒருவன் வேண்டும். மேலும், பரமாத்மாவின் ஸ்வரூபத்தை விசாரியாமல் இந்திரிய விஷயங்களிலேயே ஆசை கொண்டு இவ்வளவு காலத்தைக் கழித்து விட்டது போதும். உம்முடைய உண்மையான மகிமையை நான் இது வரையில் தெரிந்து கொள்ளவில்லை. விஷய சுகத்தில் ஆசைப்பட்டு அதனையே தங்களிடம் அடைந்தேன். ஆனாலும் எனக்கு அதுவே அபயத்தைக் கொடுக்கடும். புத்திக்குறைவினால் அசாதுக்களிடம் சேருவதால் சம்சாரபந்தம் உண்டாகிறது. சாது சங்கஞ்செய்தால் மோக்ஷத்திற்குச் சாதனமாக ஆகிறது. இவ்வுலகத்தில் எவனுடைய செய்கைகள் தர்ம மார்க்கத்திலில்லையோ, வைராக்கியத்திற்கும் சாதனமாக

ஆகவில்லையோ, பகவானுடைய பாதசேவைக்கும் உபயோகப்படுகிறதில்லையோ, அவன் உயிரோ டிருந்தும் மரணமடைந்தவனேயாம். நான் பகவானுடைய மாயையால் வஞ்சிக்க (ஏமாற்ற)ப்பட்டு மோக்ஷத்தைக் கொடுக்கும் பிரபுவாகிய உம்மை அடைந்தும் அதில் விருப்பமில்லாதவளாக இருந்தேன்; ஆகையால் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று அழகான வார்த்தைகளைச் சொன்னாள்.

அத்தியாயம்–24

கபிலாவதாரம்

1–4. பின்பு தயாளுவாகிய கர்த்தமப் பிரஜாபதி விஷயத்தில் நிர்வேதத்தை அடைந்து இம்மாதிரி சொல்லி அதைர்யத்துடனிருக்கும் மனுவின் புத்திரியார் ஆகிய தேவஹூதியை நோக்கி "ஓ ராஜ குமாரியே குற்றமற்றவளே! நீ உன்னுடைய ஆத்மாவைப்பற்றி துக்கிக்கவேண்டாம். ஸ்ரீ பகவான் ஆகிய நாராயணன் சீக்கிரத்தில் உனக்குப் புத்திரனாக அவதரிப்பார். நீ விரதமுள்ளவளாக இந்தரியங்களை அடக்கிக் கொண்டு, உன்னுடைய தர்மத்தை அனுஷ்டிப் பதாலும் தவத்தினாலும், பாத்திரத்தில் தானம் செய்வதாலும், மிக்க சிரத்தையுடன் ஈச்வரனைப் பூஜி. உனக்கு க்ஷேமம் உண்டாகும். உன்னால் பகவான் பூஜிக்கப்பட்டு உன்னுடைய வயிற்றில ப்ரஹ்மவித்தாக அவதரித்து என்னுடைய கீர்த்தியை உலகத்தில் பரவச்செய்து கொண்டு, உன்னுடைய மனத்தில் அஹங்காரத்தைப் போக்கடிப்பார்" என்று ஸ்ரீமந் நாராயணனுடைய வார்த்தையை நினைத்துக்கொண்டு சொன்னார்.

5–20. அதனைக் கேட்ட தேவஹூதி அவருடைய வார்த்தையில் மிகுந்த ச்ரத்தை வைத்து, கூடஸ்தரும் எல்லாருக்கும் குருவுமாகிய பரமபுருஷனை ஆராதித்தாள். இப்படிச் சில காலம் சென்றபின் அந்தத் தேவஹூதியினிடத்தில் கர்த்தமருடைய வீரியத்திற்கு அரணியிலிருந்து அக்கினி போல் பகவான் புத்திரனாக அவதரித்தார். அந்தச் சமயத்தில் ஆகாசத்தில்

தேவதுந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்கின; மேகங்கள் மழையைப் பெய்தன. கந்தர்வர்கள் பாடினார்கள்; அப்ரஸரஸ்கள் நர்த்தனம் செய்தார்கள்; தேவர்கள் புஷ்பமாரி பெய்தார்கள்; ஸகல திக்குகளும், ஜனங்களும், ஜனங்களுடைய மனதுகளும் தெளிந்தன. சரஸ்வதீ நதிக்கரையிலிருக்கும் அந்தக் கர்த்தமருடைய ஆசிரமத்திற்குப் ப்ரஹ்மதேவர், மரீசி முதலிய மகர்ஷிகளுடன் வந்தார். ஓ காமம் முதலிய சத்துருக்களை ஜயித்தவராகிய விதுரரே! அப்பொழுது ப்ரஹ்மதேவர், சாங்கிய யோகத்தை நன்றாகத் தெரிவிப்பதற்காக, ஸத்வாம்சமாக அவதரித்த பரமாத்மாவாகிய பகவானைப் பார்த்து, சுத்தமான மனத்தால் அவருடைய எண்ணத்தைப் புகழ்ந்து சந்தோஷமடைந்த இந்திரி யங்களுடன் கர்த்தமரை நோக்கி, "ஓ குழந்தாய் பலஹூமானத்தைக் கொடுத்த கர்த்தம, என் சொற்படி கபடமற்று நீ நடந்தபடியால் என்னைப் பூஜித்த வனாகிறாய். பிதாவினுடைய உத்தரவை மீறாமல் அதன்படி நடப்பதே பித்ருக்களுக்குப் புத்திரர்கள் செய்யும் சிசுரூஷையாகும். உன்னுடைய இந்தப் பெண்களெல்லோரும் இந்த ஜகத்தைத் தங்களுடைய மகிமைகளால் பலவகையாக விஸ்தரிக்கப் போகிறார்கள். (புத்திர பௌத்திர பரம்பரையால் என்று கருத்து) ஆனதால் இந்தச் சிறந்த மகர்ஷிகளுக்கு உனது இஷ்டப்படி அவரவர்களுடைய ஸ்வபாவத்திற்குத் தகுதியாகக் கல்யாணம் செய்து கொடு; கீர்த்தியைப் பூமியில் பரவச்செய்; உன்னுடைய கிருஹத்தில் புத்திரனாக அவதரித்திருக்கும் கபில மகரிஷியானவர் புராண புருஷர்; தம்முடைய மாயையால் சரீரத்தை எடுத்துக்கொண்டவர்; பிராணிகளுக்குச் ஸகல அபீஷ்டங்களையும் கொடுக்கக் கூடியவர்; இது எனக்குத் தெரியும்.

ஓ மனுவின் புத்திரியாகிய தேவஹூதியே! ஸ்வர்ணமயமாகிய கேசங்களுள்ளவரும் (மயிர்கள்), தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரும், பத்மரேகை யுள்ள பாதங்களுள்ளவரும், கைடபனென்ற அசுரனைக் கொன்றவருமாகிய பகவான், ஞானம் (சாஸ்திரத்தினால் உண்டாகின்றது) விஞ்ஞானம் (அபரோக்ஷ ஞானம்) ஆகிய இவைகளாகிய உபாயங்களால் கர்ம வாசனை களை ஒழித்து அவித்யையால் (ஆத்ம சுருபத்தை அறியாததால்) உண்டான ஸம்சயமாகிய ஹிருதய கிரந்தியைப் போக்குவார். மேலும் இவர் சித்தகணங் களுக்கு அதிபதியாகவும், ஞான சாஸ்திரத்தின் ஆசாரியர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவராயும். கபிலரென்று பிரஸித்தி அடையப் போகிறார். மேலும் உனக்கு விசேஷ கீர்த்தியை விருத்தி செய்வார்" என்று அவ்விருவர்களுக்கும் சொல்லி ஸனகர் முதலிய குமாரர் களுடனும், நாரதருடனும், ஹம்ஸமாகிய வாகனத்தின் மீதேறிச் சத்யலோகம் சென்றார்.

21–25. இப்படிப் ப்ரஹ்மதேவர் தம்முடைய லோகஞ்சென்ற பிறகு, கர்த்தமர் பிதாவினுடைய உத்தரவின்படி லோகத்தைப் படைப்பவர்களான பிரஜாபதிகளுக்குத் தம்முடைய புத்திரிகளைக் கொடுத்தார். எப்படியெனில் மரீசி என்பவருக்குக் கலையென்பவளையும், அத்ரி மகரிஷிக்கு அனசூயை என்பவளையும், அங்கிரசுக்குச் சிரத்தை என்பவளை யும், புலஸ்தியருக்கு ஹவிர் பூ என்பவளையும், கிரதுவிற்குப் பதிவிரதையான கிரியை யென்பவளை யும், புலஹருக்கு கதி என்பவளையும், பிருகுவிற்குக் கியாதி என்பவளையும், வசிஷ்டருக்கு அருந்ததி என் பவளையும், அதர்வா வென்பவருக்கு சாந்தியையும்

(சாந்திக்கு அதிதேவதையென்று கருத்து) விவாகம் செய்துவைத்தார். அந்தச் சாந்தியால்தான் யாகமானது லோகத்தில் பரவச் செய்யப்படுகிறது. பின்பு அந்தக் கர்த்தமர் மணப்பிள்ளைகளாக இருக்கும் அந்தப் ப்ராஹ்மணோத்தமர்களையும் அந்தப் பெண்களையும் சந்தோஷப்படுத்தினார். பின்பு அந்த மகரிஷிகள் எல்லோரும் கர்த்தமரிடம் விடைபெற்றுத் தங்கள் தங்கள் ஆசிரமஞ் சென்றார்கள்.

26–34. பிறகு அந்தக் கர்த்தமப் பிரஜாபதி யானவர் ஸ்ரீ மகாவிஷ்ணுவே தமக்குப் புத்திரனாக அவதரித்திருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டு, ரஹசியத்தில் அவருடைய சமீபம் சென்று. 'சம்சாரத்தில் அவரவர்களுடைய பாப கர்மங்களால் மிகவும் எரிக்கப்படும் (கஷ்டப்படும்) ஜனங்களிடத்தில் வெகு காலத்திற்குப் பின் ஸகல தேவர்களும் தயவு செய்வார்கள். சன்யாசிகள் அநேக ஜன்மங்களில் அப்யசித்துப் பக்குவமான (சித்தித்த) பக்தி யோகத்தால் ஏகாந்தமான இடத்திலிருந்து எவருடைய பாதத்தைத் தரிசிக்க முயற்சிக்கிறார்களோ, அந்தப் பகவானாகிய நீர் கிராம்யர்களான தம்முடைய பந்துக்களைக் காப்பாற்றுவதற்குத் தம்முடைய லாகவத்தைக் கூட லட்சியம் செய்யாமல் நம்முடைய கிருஹத்தில் அவதரித்திருக்கிறீர், மேலும், முன்பு எனக்கு உம்மால் சொல்லப்பட்ட வார்த்தை (உமக்குப் புத்திரனாக அவதரிக்கிறேனென்பது) சத்தியமாக ஆகிவிட்டது. நீர் பக்தர்களுக்கு ஞானத்தை வ்ருத்தி செய்பவர். ஞானஸாதனமாகிய சாஸ்த்ரத்தை உலகில் பரவச்செய்ய விரும்பியவர். உம்முடைய பக்தர்களுக்கு எந்த ஸ்வரூபத்தில் ஆசையிருக்கிறதோ, அந்த அந்த

ஸ்வரூபத்தைப் பிரகிருதி சம்பந்தம் அற்றவரானாலும் நீர் எடுத்துக் கொள்ளுகிறீர். உம்முடைய உண்மையை அறியவேண்டிய வித்வான்கள் எப்போதும் உம்முடைய பாதபீடத்தில் நமஸ்காரம் செய்கிறார்கள். நீர் ஐசுவரியம், வைராக்யம், கீர்த்தி, ஞானம், வீரியம் அழகு ஆகிய இவைகளால் நிறைந்தவர். அப்போர்ப் பட்ட உம்மைச் சரணமடைகிறேன், நீர் பரமேசுவரன். பிரதான புருஷன் (பிரிகிருதிக்கு அதிஷ்டாதா) மகத்தத்துவ ஸ்வரூபியாயிருப்பவர். காலரூபி (அவை களை வேறு ரூபத்தை அடையச் செய்பவர்). ஞானம் உள்ளவர், அகங்காரரூபி. இந்திரியங்களைப் பரிபாலிப் பவர். சித் சக்தியைக் கொண்டு தம்மிடத்திலேயே பிரபஞ்சத்தை லயப்படுத்திக்கொண்டவர். சக்திகளைச் சுவாதீனப்படுத்திக் கொண்டவர். அப்போர்ப்பட்ட கபில மகரிஷியைச் சரணம் அடைகிறேன். நீர் எனக்குப் புத்திரனாக அவதரித்ததால் ஸகல ரிணங்களும் தீர்ந்துவிட்டன. மேலும் நான் ஸகல காமங்களையும் அனுபவித்தேன். ஆனதால் இனி சன்யாச மார்க்கத்தை அடைந்து, இருதயத்தில் உம்மைத் தியானித்து, துக்கமற்றவனாக இருப்பேன். அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

35–40. அதனைக் கேட்ட கபிலர், "ஓ மகரிஷியே! வைதிகமான காரியங்களிலும். லௌகிகமான காரியங் களிலும் உலகத்திற்கு என்னால் சொல்லப்பட்டது பிரமாணமேயாம். நான் உமக்குப் புத்திரனாக அவதரிக்கிறேன்" என்று சொன்னதைச் சத்தியமாகச் செய்வதற்காகவே ஜன்மத்தை அங்கீகரித்தேன். மேலும் தேஹம் முதலியவைகளில் அபிமானத்தை விட்டுவிட வேண்டுமென்று விரும்பியவர்களை உத்தேசித்து

ஆத்ம ஞானத்திற்கு உபயோகமான தத்துவங்களின் உண்மையைச் சொல்வதற்காகவும் அவதரித்தேன். பரமாத்மாவின் உண்மையைக் தெரிந்து கொள்வதாகிய மார்கம் மிகவும் சூட்சமமானது. அதனை நான் உபதேசித்திருந்தாலும், வெகு காலம் சென்றபடியால் அது ஒளிந்து போயிற்று. அதை லோகத்தில் பரவச் செய்வதற்காகவே இந்தச் சரீரத்தைத் தரித்துக் கொண்டிருக்கிறேன். உம்முடைய இஷ்டப்படி போகலாம். நான் அனுமதிக்கிறேன். என்னிடம் சமர்ப்பித்து ஜயிக்கமுடியாத சம்சாரத்தை ஜயித்து மோக்ஷத்தை அடைவதற்காக என்னை உபாசியும். ஸகல பிராணிகளுடைய ஹிருதய குகையிலிருப் பவனும், தானாகப் ப்ரகாசிக்கும் ஜோதிஸ்வரூபியும், பரமாத்மாவுமாகிய என்னை உம்முடைய ஆத்மாவின் இடத்தில் ஆத்மாவாகப் பார்த்து (பாவித்து) ஸகல துக்கங்களற்றதாகிய மோக்ஷத்தை அடைவீர். மேலும் என் மாதாவான தேவஹூதிக்கும் ஸகல கர்மங்களை நிவர்த்திக்கக்கூடிய அத்யாத்ம வித்யையை உபதேசிக் கிறேன். அதனால் இவள் சம்சாரத்தை கடந்து அபயத்தை அடைவாள்" என்று அனுக்கிரஹித்தார்.

41–47. அதனைக் கேட்ட கர்த்தமப் பிரஜாபதியானவர் புத்திரனைப் ப்ரதக்ஷிணம் செய்து காட்டிற்குச் சென்றார். மேலும் அவர் பிறருக்கு இம்சை செய்யாமலிருப்பதாகிய முனிவ்ரதத்தை அடைந்தும், ஆத்மாவையே முக்கியமான வீடாக வைத்துக் கொண்டும், ஆசைகளை யொழித்தும். அக்கினியில் இல்லாதவராக, நியதமான இருப்பிடமற்றவராகிச் சஞ்சரித்தார். சத்துக்கும். அசத்துக்கும் மேலானதும் குணங்களைப் பிரகாசிக்கச் செய்கிறதும், குண

சம்பந்தமற்றதும், ஏகாந்த பக்தியால் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கப்பட்டதுமான பரப் ப்ரஹ்மத்தினிடத்தில் மனத்தைச் செலுத்தினவராயும், அகங்காரமற்றவராயும், மமதை இல்லாதவராயும், குளிர் உஷ்ணம் இவைகளைச் ஸஹித்து எல்லாவற்றிற்கும் ஸமமான புத்தியுள்ளவரும், ஆத்மாவையே பார்ப்பவரும் ப்ரத்யகாத்மாவிடத்திலேயே ரமித்து அதனால் சாந்தமாவிருக்கும் புத்தியுள்ளவரும், தைரியமுள்ளவரும், அலைகளடங்கிய சமுத்திரம் போன்றவருமான அவர் ப்ரத்யகாத்மாவும், பகவானாயுமுள்ள ஸ்ரீ வாசுதேவரிடத்தில் மிகுந்த பக்தியுடன் மனத்தைச் செலுத்தியதால் ஸகல பந்தத்திலிருந்து தம்மை நிவர்த்தித்து கொண்டார். மேலும் அவர் ஸகல பிராணிகள் இடத்திலும் ஆத்மா இருப்பதையும் பகவானிடத்தில் ஸகல ப்ராணிகள் இருப்பதையும் கண்டார். இப்படி அவர் ஆசை துவேஷம் ஆகிய இவைகளற்ற சமமாயுமுள்ள மனத்தாலும் பரமாத்மாவினிடம் ஏகாந்தமாகப் பக்தி செய்ததாலும் பக்தர்களுடைய கதியை (மோக்ஷத்தை) அடைந்தார்.

அத்தியாயம்–25

கபிலருக்கும் தேவஹூதிக்கும் ஸம்வாதம்

1 –3 சௌனகர் சூதரை நோக்கி, "பகவான் உண்மையில் பிறப்பில்லாதவரானாலும் மனிதர்களுக்கு ஆத்ம ஞானத்தை யுண்டு பண்ணுவதற்காகத் தத்துவங்களைச் சொல்ல, கபிலரென்ற பெயருடன் அவதரித்தார். புருஷோத்தமரும், ஸகல யோகிகளுக்கும் மேலானவரும் சிரவணத்தால் அறியக்கூடியவருமான பகவானுடைய கீர்த்தியைக் கேட்கும் என்னுடைய இந்திரியங்கள் திருப்தியடையவில்லை. சுதந்திரராகிய பகவான் தம்முடைய மாயா பலத்தால் எந்தந்த காரியங்களைச் செய்தாரோ, உச்சரிக்கக்கூடிய அவைகளைச் சொல்ல வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

4–11 அதனைக் கேட்டு சூதர் பின்வருமாறு சொல்லத் தொடங்கினார். வியாச மகரிஷிக்கு மித்திரரான மைத்ரேய மகரிஷியானவர் ஆத்ம வித்தையை உபதேசிக்கும்படி விதுரரால் தூண்டப் பட்டு, பிரியத்துடன் அவரை நோக்கி "ஓ விதுரரே! இப்படிக் கர்த்தமப் பிரஜாபதி காட்டிற்குச் சென்ற பிறகு, கபில மகரிஷி மாதாவைத் திருப்தி செய்வதற்காக அந்தப் பிந்து சரசின் கரையிலேயே வஸித்தார். இப்படியிருக்கையில் ஒரு நாள் தேவஹூதியானவள் கர்ம சம்பந்தமற்றவரும், தத்துவ மார்க்கத்தின் மர்மத்தைக் காண்பிப்பவருமான தம்முடைய புத்திரர் ஆகிய கபிலரிடஞ் சென்று, ப்ரஹ்மதேவருடைய வார்த்தையை மனத்தில் வைத்துக் கொண்டு

"அளவற்ற ஐசுவரியமுள்ளவரே! அசத்துக்களான இந்திரியங்களைத் திருப்தி செய்து வைத்ததனால் (விஷயத்தில் ஆசைப்பட்டதனால்) மிகவும் களைத்துப் போனேன். அதனை விருத்தி செய்ததாலேயே விவேகத்தை (அஞ்ஞானத்தை) அடைந்தேன்.

நீர் தாண்ட முடியாத அந்த அஞ்ஞானமாகிய சமுத்திரத்தின் கரையைக் கண்டவர். உம்முடைய அனுக்கிரஹத்தால் திவ்யமாகிய சக்ஷுஸ் (கண்) எனக்குக் கிடைத்தது. எவர் புருஷர்களுக்குள் முந்திய வராகிய ஈசுவரனோ, அவரே நீர். அஞ்ஞானத்தால் விவேகமில்லாதவர்களுக்கு உதித்த சூரியன் போல் நீர் கண்ணாக இருக்கிறீர். ஓ தேவ! 'நான், என் உடையது,' என்ற மோகமானது உம்முடைய சங்கற்பத்தால் ஏற்பட்டிருக்கிறது. அந்த மோகத்தை நிவர்த்தி செய்வதற்கு நீரே தகுந்தவர். காப்பாற்றக் கூடியவரும் தம்முடைய பக்தர்களுடைய சம்சாரம் ஆகிய விருட்சத்திற்குக் கோடாரியாக இருப்பவரும், ஆத்ம தர்மத்தை அறிந்தவர்களுக்குள் சிறந்தவருமாகிய உம்மைப் ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவர்களைத் தெரிந்துகொள்வதற்காகச் சரணம் அடைந்து நமஸ்கரிக்கிறேன், என்று ப்ரார்த்தித்தாள்.

12–27 இம்மாதிரியான மாதாவினுடைய குற்றமற்ற அபிப்ராயத்தைக் கேட்டு, இது ஜனங்களுக்கு மோக்ஷத்தில் ஆசையை உண்டுபண்ணக் கூடியதென்று அதனைச் சிலாகித்து, மந்தஹாசத்தால் அழகான முகமுள்ளவராகிய சாதுக்களைக் காப்பாற்றும் பகவான் தேவஹூதியை நோக்கி "ஓ பாபமற்றவளே! எதனால் துக்கமும் ஸுகமும் மிச்சமின்றி

நிவர்த்தியாகுமோ, அந்த அத்யாத்ம யோகத்தை ஜனங்களுடைய க்ஷேமத்திற்காகச் சொல்லுகிறேன்.

ஸகல அவயங்களுடைய ஜகாக்ரயமுள்ள அந்த யோகத்தை முன் காலத்தில் கேட்க விரும்பிய மகர்ஷிகளுக்கு உபதேசித்தேன். ஆத்மா சம்சாரத்தில் கட்டுப்படுத்துவதற்கும் முக்தி யடைவதற்கும் மனதே காரணமென்று பெரியோர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். எப்படியெனில், மனதானது விஷயங்களில் பற்றுதலடையுமாகில் பந்தத்திற்கு ஏதுவாக ஆகிறது. அவைகளில் அது வைராக்யத்தை (ஆசையில்லாத் தன்மையை) அடையுமாகில் மோக்ஷத்திற்குக் காரணமாகிறது. "நான், என்னுடையது" என்ற காமம், உலோபம் முதலிய மலங்களுடைய சம்பந்தம் மனத்திற்கு அற்றுப் போனால், அப்பொழுது சுக துக்கமற்று, சமமாகவும், சுத்தமாகவும் ஆகிவிடுகிறது. இப்படிச் சுத்தமாகிய மனமுள்ள புருஷன், ஞானம், வைராக்கியம், பக்தி இவைகளுள்ள மனத்தால் ஆத்மாவை சத்வம் முதலிய குணசம்பந்தமற்றவர் என்றும், பிரகிருதியை விட மேலானவரென்றும், ஞான ஸ்வரூபியாயிருப்பதால் வைஷம்யமில்லாதவர் என்றும், மிகவும் அணுவாக இருப்பவரென்றும், வெட்டுவது முதலியவைகளுக்கு அகப்படாதவர் என்றும் தாமாகப் பிரகாசிப்பவரென்றும் உதாசீனர் என்றும் தெரிந்து கொள்வதுடன், ஆத்மாவை சம்சாரியாக்கச் செய்யும் சக்தி ப்ரகிருதிக்கு இல்லையென்றும் தெரிந்துகொள்வான். யோகி களுக்குப் ப்ரஹ்மசாக்ஷாத்காரம் சித்திப்பதற்கு ஸகல ஸ்வரூபியாகிய பகவானிடத்தில் பக்தி செய்வதே உபாயமாகும். அதற்குச் சமமான வேறு

உபாயமில்லை. கவிகள் சங்கத்தையே பந்தகமென்று சொல்லுகிறார்கள். அந்த சங்கமே சாதுக்களிடம் ஏற்படுமானால் மோக்ஷத்திற்கு ஏதுவாகின்றது. பொறுமையுள்ளவர்களும் கருணையுள்ளவர்களும், ஸகல பிராணிகளிடத்தில் பிரீதியுள்ளவர்களும், ஒருவரிடத்திலும் விரோத புத்தி இல்லாதவர்களும், சமம், தமம், முதலியவைகளுள்ளவர்களும் நல் நடையை ஆபரணமாயுடையவர்களுமாக இருப்பவர்களே ஸாதுக்களாவார்கள். மேலும், மேற்சொல்லிய ஸாதுக்களாகிய எவர்கள் மற்றவர்களிடத்தில் மனத்தைச் செலுத்தாமல் என்னிடம் த்ருடமான பக்தி செய்கிறார்களோ, மேலும் கர்மங்களையும், பந்துக்களையும் பரித்தியாகம் செய்கிறார்களோ,என் விஷயமான கதையைச் சொல்வதாலும், கேட்பதாலும் சந்தோஷப்படுகிறார்களோ என்னிடத்தில் மனத்தைச் செலுத்திய அவர்களுக்குப் பலவகையான தாபங்களால் உபத்திரவம் நேரிடுகிறதில்லை. ஸகல ஆசைகளையும் ஒழித்தவர்களான அவர்களே ஸாதுக்கள்.

ஓ பதிவிரதையே! அவர்கள் ஸகல தோஷத்தையும் போக்கடிப்பவர்கள். ஆனதால் அவர்களுடைய சகவாசம், சல்லாபம் முதலிய சங்கம் எப்பொழுதும் இருக்க வேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டும். ஸாதுக்களுடன் சங்கம் செய்வதால் என்னுடைய வீரியங்களை நன்றாகக் காண்பிக்கக் கூடியவைகளும், காதுக்கு இனிமையானவைகளுமான என்னுடைய கதைகள் நன்றாய் அறியப்படும். அந்தக் கதைகளைக் கேட்பதனால் சீக்கிரமாக மோக்ஷ மார்க்கத்தில் சிரத்தையும், அதனால் அதில் விசேஷ ஆசையும் பக்தியும் கிரமமாக உண்டாகும்.

என்னால் செய்யப்பட்ட ஸிருஷ்டி முதலியவைகளை ஆலோசிப்பதால் உண்டாகிய பக்தியால் இந்திரிய விஷயங்களிலிருந்து இவ்வுலகத்திய சுகம், பரலோகத்திய சுகம் ஆகிய இவைகளில் வைராக்யம் உண்டாகும். பின்னும் சிரமமற்ற யோகமார்க்கங்களால் சித்தத்தை அடக்குவதற்கு முயற்சிப்பான். ஜீவன் ப்ரகிருதியின் குணங்களைச் லேவியாமலிருப்பதாலும், வைராக்யத்தால் விருத்தியடைந்த ஞானத்தாலும், யோகத்தாலும், என்னிடம் வைத்த பக்தியாலும் பிரத்யகாத்மாவாகிய என்னை இந்தச்சரீரத்திலேயே அடைகிறான் என்றார்.

28–30 அதனைக் கேட்ட தேவஹூதியானவர் கபிலரை நோக்கி, "உம்மிடத்தில் செய்யவேண்டிய உசிதமாகிய பக்தி எது? ஸ்திரீயாகிய என்னால் செய்யக்கூடியது எது? எதனைச் செய்தால் உம்முடைய பதத்தைச் சீக்கிரமாக அடையலாம்? ஒப்பற்ற ஆனந்த ஸ்வரூபியான ஓ பகவன்! உண்மையைத் தெரிவிக்கும் அந்த யோகமானது எப்போர்ப்பட்டது? அதற்கு அங்கங்கள் எவ்வளவு? சிரமப்பட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியதானாலும், அதனைக் சுகமாக மந்த புத்தியுள்ள நான் எப்படித் தெரிந்து கொள்வேனோ, அப்படி அனுக்கிரஹித்துச் சொல்ல வேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

31–44 இம்மாதிரியான தாயாருடைய வார்த்தையைக் கேட்ட கபில மகரிஷி அவளுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டு, எந்தச் சரீரத்திலிருந்து தாம் உண்டானாரோ அதனிடத்தில் சிநேகமுள்ளவராகி, ஆத்ம ஸ்வரூபத்தைப் ப்ரகாசிக்கச் செய்யும் தத்துவ

சாஸ்திரத்தைச் சொன்னார். அதனைப் பக்தி உண்டு பண்ணும் யோகமென்று சொல்லுகிறார்கள். எப்படியெனில், விகாரத்தை அடையாத மனதும், சப்தம் முதலியவைகளைக் கிரஹிக்கும் ஞானேந்திரியங்களும், சாஸ்திரத்தில் சொல்லிய கர்மங்களைச் செய்யும் கர்மேந்திரியங்களும், சர்வ சர்த்தியாகிய பகவான் இடத்தில் இருக்குமானால் அந்த விருத்தியே பக்தி எனப்படுகிறது. அது பலனை உத்தேசியாமல் செய்யும் முக்தியைக் காட்டிலும் மேலானதாகும். புஜித்த ஆகாரத்தை வயிற்றிலிருக்கும் அக்கினி ஜீரணம் செய்கிறது போல் பக்தியானது யத்தனமில்லாமலேயே லிங்க சரீரத்தை போக்கடிக்கிறது, எவர்கள் என்னுடைய சரிதங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு சந்தோஷப்படுகிறார்களோ, மேலும் என்னுடைய பாத ஸேவையிலேயே பக்தி உள்ளவராகி என்னிடமே ஸகல விருப்பத்தையும் வைத்திருக்கிறார்களோ, அப்படிப்பட்ட சில புருஷர்கள் மோக்ஷத்தையும் விரும்புகிறதில்லை. பின்னும், ஸாதுக்களாகிய அவர்கள் என்னுடைய பிரசன்னமாகிற முகமுள்ளவைகளும் சிவந்த கண்களுள்ளவைகளும், பக்தர்களுக்கு வரத்தைக் கொடுப்பவைகளும், அழகாயிருப்பவைகளுமான ரூபங்களைத் தரிசித்து ஆசைப்படக்கூடிய வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பார்க்கக்கூடிய அவயவங்களைப் பார்ப்பதாலும், கம்பீரமான விளையாட்டுச் சிரிப்புள்ள அழகான வார்த்தைகளாலும் அவர்களுடையமனதும், இந்திரியங்களும் அபகரிக்கப்படுகின்றன. மோக்ஷத்தையும் விரும்பாத அந்தப் பக்தர்களை அவர்கள் செய்த பக்தி சூட்சமமாகிய (ஒருவராலும் நடக்கப்படாததால்) அர்ச்சிராதி மார்க்கமாக அழைத்துப் போகிறது.

மேலும் அவித்யை விலகின பிறகு சத்யலோகம் முதலியவைகளிலிருக்கும் போகத்தையும், அஷ்டாங்க யோகத்தையும், பாகவத ஸ்ரீயையும் எவர்கள் விரும்புகிறதில்லையோ, அவர்கள் அவைகளை என்னுடைய லோகத்தில் அடைவார்கள்.

ஓ சாந்த ஸ்வரூபமுள்ளவளே! என்னிடத்தில் பக்தி செய்தவர்கள் ஒருபொழுதும் கெட்டுப் போகிறதில்லை. எவர்கள் என்னைப் பிரியனாகவும், ஆத்மாவாகவும், புத்திரனாகவும், குருவாகவும் அனுகூலத்தைச் செய்யும் சுகிருத்தாகவும், இஷ்ட தெய்வமாகவும் நினைக்கிறார்களோ அவர்களை என்னுடைய காலச்சக்கரம் உபத்திரவிக்கிறதில்லை. ஆனதால் இந்த லோகம், பரலோகம் இரண்டு லோகத்திற்கும் செல்லும் தேகத்திலுள்ள அபிமானம், அதைச் சார்ந்த பந்துக்கள், பணம், பசுக்கள், வீடு மற்றுமுள்ளவை ஆகிய இவைகள் எல்லாவற்றையும் விட்டு (அபிமானத்தை விட்டு) சர்வக்ஞனனாகிய என்னை வேறிடத்தில் மனத்தைச் செலுத்தாமல் எவர்கள் உபாசிக்கிறார்களோ, அவர்களை சம்சாரத்திலிருந்து காப்பாற்றுகிறேன்.

பிரதானம் (மாயை) புருஷன் இவர்களுக்கு அதிபதியும் பகவானுமாகிய என்னைவிட வேறொருவனாலும் கடுமையான பயத்திலிருந்து காப்பாற்ற முடியாது. இந்த வாயுவானவன் என்னிடம் பயந்து வீசுகிறான். சூரியனும் என்னிடமிருந்தும் பயத்தால் பிரகாசிக்கிறான். இந்திரனும் என்னிடம் பயந்து வர்ஷிக்கிறான். அக்னியும் என்னிடம் பயந்து எரிக்கிறது. மிருத்யுவும் என்னிடத்தில் பயந்தே

சஞ்சரிக்கிறான். (எல்லோரும் பரமாத்மாவினிடம் பயந்து, தங்கள் தங்களுடைய வேலையை சரியாக நடத்திவருகிறார்களென்பது கருத்து.) மேலும் யோகிகள் ஞானம் வைராக்யம் ஆகிய இவைகளுள்ள பக்தி யோகத்தைக் கொண்டு மோக்ஷத்தை அடைவதற்காகப் பயமற்ற இடமாகிய என்னுடைய பாதத்தை அடைகிறார்கள். தீவிரமாகிய பக்தியால் மனத்தை என்னிடத்தில் ஸ்திரமாகச் செய்யும் புருஷர்களுக்கு இவ்வுலகத்தில் க்ஷேமத்தை அடையும் உபாயமாகும்.

அத்தியாயம்–26

தேவஹூதிக்குக் கபிலர் ஆத்மதத்துவத்தை உபதேசித்தது

1–9. பிரகிருதி, புருஷன், காலம் ஆகிய இந்தத் தத்துவங்களுடைய ஸ்வரூபத்தைத் தனியாகச் சொல்லுகிறேன். அதனைத் தெரிந்து கொண்டதனால் மோக்ஷத்தை அடையவேண்டுமென்று விருப்பமுள்ள புருஷன் பிரகிருதி சம்பந்தமுள்ள குணங்களிலிருந்து விடுபடுவான். (சம்சாரத்தைக் கொடுக்கக்கூடிய புண்ய பாபங்களால் என்பது கருத்து) புருஷன் மோக்ஷத்தை அடைவதற்குச் ஸாதனமும் அகங்காரத்தைப் போக்கக்கூடியதும், ஆத்மாவைக் காண்பிப்பதுமான ஞானமென்று எதனைச் சொல்லுகிறார்களோ, அதனை உமக்கு உபதேசிக்கிறேன். (தத்துவ ஞானம் மோக்ஷத்திற்குக் காரணமென்று ஸ்மிருதியில் சொல்லப் பட்டிருந்தாலும், ஆத்மாவைத் தெரிந்து கொள்வதற்கு அனாத்ம ஞானமும் சாதனமென்று கருத்து) ஆத்மாவானவர் உற்பத்தியற்றவர். ப்ரகிருதியைவிட மேலானவர்; குணங்களற்றவர்; ப்ரத்யக்ஷ பூர்த்தி ஸ்வரூபி (க்ஷணிக விஞ்ஞானம் ஆத்மாவல்ல வென்று கர்ட்டப்பட்டது) தாமாகப் ப்ரகாசிப்பவர்; அவருடைய சம்பந்தத்தாலேயே ஜகத்து ப்ரகாசிக்கிறது; தேஹம் முதலிய உபாதிகளுடைய சம்பந்தத்தால் அவைகள் உடைய தர்மங்களாகிய ஜனன மரணங்கள் ஆத்மாவிற்கு உண்டாகின்றனவேயொழிய உண்மையில் ஆத்மாவிற்குப் பிறப்பு, மரணம் ஆகிய இவைகளில்லை. சொப்பனத்தில் காணப்படும் வஸ்துக்கள் நசித்தாலும் திருஷ்டாவிற்கு நாசமில்லையல்லவா? அப்படி

சுத்தரும், வியாபகருமாகிய புருஷன், சூக்ஷ்மமானதும் (அவ்யக்தம்) ஸ்ரீ மகாவிஷ்ணுடையதும் முக்குண ஸ்வரூபம், லீலையாக வந்ததுமான ப்ரகிருதியை யதிருச்சையாக அடைந்தார். அப்பொழுது அந்தப் புருஷன் குணங்களைக் கொண்டு பலவகையான பிரஜைகளைச் ஸிருஷ்டிக்கும் ப்ரகிருதியைப் பார்த்துத் தம்முடைய ஞானத்தை மறைத்துக் கொண்டிருந்ததால் மோகமடைந்தார். இப்படிப் புருஷன் ப்ரகிருதியையே தாமென்று நினைத்துப் ப்ரகிருதியின் குணங்களால் செய்யப்படும் காரியங்களைத் தாம் செய்வதாக நினைக்கிறான். ஆனதால் ஒன்றையுஞ் செய்யாதவரும், எல்லாவற்றிற்கும் ஈசுவரனும், சாக்ஷியும், ஸுகரூபியுமான புருஷனுக்கு ஜனன மரணமாகிய சம்சார பந்தமும், பரதந்திரனாக இருப்பதும், ப்ரகிருதியினால் ஏற்பட்டதே யொழிய உண்மையிலில்லை. சரீரம் இந்திரியம் ஆகிய இவைகளில் புருஷன் அகங்காரத்தை (நானென்பதை) அடைவது, அதனால் கர்த்தாவாக ஆகிறது ஆகிய இவைகளுக்குப் ப்ரகிருதியே காரணம் என்று சொல்லுகிறார்கள். மேலும் ப்ரகிருதியைவிட விலக்ஷணனாகிய (சிதம்சம்) புருஷனே சுகத்தையும், துக்கத்தையும் அனுபவிப்பதற்குக் காரணமென்று சொல்லுகிறார்கள்." என்று சொன்னார்.

10. அதனைக் கேட்ட தேவஹூதி (சம்சாரியான புருஷனையும் அதற்குக் காரணமாகிய ப்ரகிருதியையும் தெரிந்துகொண்டு) கபிலரைப் பார்த்து, "புருஷோத்தம! ஸ்தூலமாகிய ஜகத்திற்குக் காரணமாகிய ப்ரகிருதியின் உடையவும், சூக்ஷ்மரூபமாகிய ஜகத்திற்குச் காரணமாகிய ஈசுவரனுடையவும் லக்ஷணத்தைச் சொல்லவேண்டும். ஏனேனில் ஸ்தூல சூக்ஷ்மமாகிய

ஜகத்து அவருடைய ஸ்வரூபமன்றோ" என்று கேட்டுக் கொண்டாள்.

11–18. அதனைக் கேட்ட பகவான் தேவஹூதியை நோக்கி, "ஸ்வபாவத்தில் விசேஷமற்றதும், விசேஷங்களுக்கு ஆசிரியமுமான ப்ரதானமே ப்ரகிருதியாகும். அது முக்குணங்களுள்ளது. அது மகத் தத்துவம் முதலியவைகளுடைய காரியமாகிறதில்லை; அது உற்பத்தி, நாசம் இவைகளற்றது (நித்யமானது) மேலும் அது காரிய காரண ரூபமாகயுள்ளது; ஓ அம்ம! பூமி, ஜலம், அக்கினி, வாயு, ஆகாச மென்ற ஐந்து பூதங்களும் கந்தம் முதலிய அதன் குணங்களும், காது துவக், கண், நாக்கு, மூக்கு, நாக்கு, கைகள், பாதங்கள் மேட்ரம், (ஆண்குறி) பாயு ஆகிய பத்து இந்திரியங்களும் மனஸ், புத்தி, அகங்காரம், சுத்தம் என்ற நான்குவகையான அந்தக் கரணமும், இருபத்து நான்கு தத்துவங்களும், ப்ரகிருதியின் காரியங்களாகும் (மேற்காட்டிய அந்தக் கரணம் ஒன்றாலும் சங்கற்பம் அத்யவசாயம் அபிமானம், சிந்தை என்ற விருத்திபேதத்தால் நான்குவகை என்று கருத்து) ஸகுண ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் இப்பேர்ப்பட்ட தென்றே பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்; ஆனால் சிலர் காலத்தை இருபத்தைந்தாவது தத்துவமென்றே சொல்கிறார்கள், ப்ரகிருதி சம்பந்தத்தை அடைந்து அஹங்காரத்தால் புத்தி மயக்கமடைந்த புருஷனுடைய ப்ரபாவமே காலம். அதனிடமிருந்தே பயமுண்டாகிறது" என்று சிலர் சொல்கிறார்கள். ஓ மனுவின் புத்திரியே! சத்வம் முதலிய குணங்களின் சமமான நிலைமையாகிய ஸ்வரூபமுள்ளதும், விசேஷமற்றதுமாகிய ப்ரகிருதியின்

சேஷ்டைக்கு எது காரணமோ அதுவே கர்மமென்றும், பகவான் என்றும் சொல்லப்படுகிறது.

19–23. எந்தப் பகவான் ஸகல ஜனங்களுக்கும் உள்ளே நியந்தாவாகவும், வெளியில் காலரூபியாகவும், தம்முடைய மாயையால் தத்துவங்களைக் அனுசரிக் கிறாரோ (அவைகளின் தர்மத்தில் சம்பந்திக்கிறது இல்லையென்று கருத்து) அந்தப் பரம புருஷன் ஜீவனுடைய அதிருஷ்டத்தால் ப்ரகிருதியில் குணங்கள் கலங்கிய போது (சத்துவம் முதலிய தாரதம்யத்தை அடைந்த போது) ஜகத்தின் உற்பத்திக்கு க்ஷேத்ரமாய் இருக்கும் தம்முடைய ப்ரகிருதியினிடத்தில் வீரியத்தை (ஸ்ருஷ்டி சாமர்த்தியத்தை) வைத்தார். அந்தப் ப்ரகிருதியானது மிகவும் ப்ரகாசிக்கும் மகத்தத்துவத்தை உண்டு பண்ணிற்று. அப்பொழுது ஜகத்தை முளைக்கச் செய்பவரும், (ஜகத்காரணர்) கூடஸ்தருமாகிய (விகாரமற்றவர்) பகவான், தம்முடைய சரீரமாகிய ப்ரகிருதியில் லயித்திருக்கும் பிரபஞ்சத்தை வெளிப் படுத்துவதற்காக தம்முடைய சங்கற்ப ரூபமாகிய ஞானத்தைக் கொண்டு ஜீவர்களுடைய ஞானத்தைக் குறைத்துக் கொண்டிருந்த கடுமையான தமோ குணத்தை அடக்கினார். எது ப்ரகாசமுள்ளதும், ராக துவேஷங்களற்றதும், ஸத்வகுணமுள்ளதுமாக இருக்கிறதோ, அந்தச் சித்தமே பகவத் தரிசன ஸ்தானமாகும். ஆனதால் எதனை வாஸுதேவரென்று சொல்லுகிறார் களோ, அதே மகத்தத்துவம் அதே சித்தம் (ஒருவரே அதிபூத ரூபத்தால் மகான் என்றும், அத்யாத்ம ரூபத்தால் சித்தமென்றும், உபாஸ்ய ரூபத்தால் வாஸுதேவரென்றும் பெயரடைகிறார்) அதிஷ்டா தாவாக இருப்பவர் க்ஷேத்ரஞ்ஞர். அஹங்காரத்திற்கு

அதிஷ்டாதா ருத்ரன், ஸங்கர்ஷணர், உபாஸ்யர். மனத்திற்கு சந்திரன் அதிஷ்டாதா. அனிருத்தர் உபாஸ்யர், புத்திக்குப் ப்ரஹ்மா அதிஷ்டாதா. ப்ரத்யும்னர் உபாஸ்யர், நூரை, அலைகள் முதலிய வைகள் இல்லாமலிருக்கும் ஜலம் போல் ஸ்வச்சமாயும் (பகவானுடைய பிம்பத்தைக் கிரஹிக்கக் கூடியது) விகாரமற்றதுமான (லயம், விக்ஷேபம் முதலியவைகள் இல்லாமலிருப்பது) சாந்தமாயுமிருக்கும் (ராகத் வேஷங்களற்றிருப்பது) சித்தத்தின் விருத்தியே மனத்திற்கு லக்ஷணமென்று சொல்லப்பட்டது.

24–29. பகவானுடைய வீர்யத்தாலுண்டான மகத்தத்வம் மாறுதலடைந்தபோது அதனிடமிருந்து கிரியா சக்தியுள்ள அஹங்காரமானது உண்டாயிற்று. அது வைகாரிகம், தைஜஸம், தாமஸம், என்று மூவகையுள்ளது. அதனிடமிருந்தே மனதும், இந்திரியங்களும் ஐந்து மகா பூதங்களும் சப்தம் முதலியவைகளும் உண்டாயின. ஆயிரம் தலைகள் உள்ளவரும், அனந்தரென்று சொல்லக்கூடியவரும், பூதங்கள் இந்திரியம், மனம் இவைகளின் ஸ்வரூபமா யுள்ள ஸங்கர்ஷணரென்ற புருஷனே அதற்கு அதிஷ்டாதாவாக இருக்கிறார். அந்த அஹங்காரம் கர்த்தாவாகவும், (தேவதாரூபம்) காரணமாகவும் (இந்திரிய ரூபத்தால்) காரியமாகவும், (பூதரூபத்தால்) சாந்தமாகவும், கோரமாகவும், மூடமாகவும், (மூக்குணங்களால்) இருக்கிறது. வைகாரிகாஹங்காரம் மாறுதலையடைந்தபோது அதனிடமிருந்த மனம் என்ற தத்துவம் உண்டாயிற்று. அதனுடைய ஸங்கல்பத்தாலும் விகற்பத்தாலும் காமன் உண்டாகிறான். அவரே அநிருத்தர் என்பவர்,

இந்திரியங்களுக்கு அதிபதி. சரத்காலத்திய நீலோத்பலம் போன்ற கறுத்த திருமேனியுள்ளவர். யோகிகளால் தியானஞ் செய்யக்கூடியவர்.

30–32. ஓ பதிவிரதையே! மாறுதலடைந்த தைஜஸ அஹங்காரத்திலிருந்து புத்தி உண்டாயிற்று. ப்ருத்வி முதலிய திரவியங்களுடைய ஸ்பூர்த்தி ஞானமும், இந்திரியங்களுக்குப் ப்ரகாசத்தை யுண்டுபண்ணும் சக்தியும் அதனிடமிருந்தே உண்டாகின்றன. சம்சயம் விபர்யாசம் (மித்யா ஞானம்) நிச்சயம் ஸ்வபாவம் ஸ்மிருதி தூக்கம் என்ற விருத்திகளால் புத்திக்கு லக்ஷணம் ஏற்படுகிறது. ஞானேந்திரியங்களுக்கும் கர்மேந்திரியங்களுக்கும் தைஜஸாஹங்காரத்திலிருந்து உண்டானவையே ப்ராணன். கிரியா சக்தியுள்ளது; புத்தியானது விஞ்ஞான சக்தியுள்ளது, (ப்ராணன் தைஜஸனாகையால் கர்மேந்திரியங்களும் தைஜஸங்களாயின. புத்தியும் தைஜஸமானதால் ஞானேந்திரியங்களும் தைஜஸங்கள்)

33–35. பகவானுடைய வீரியமான காலத்தால் தூண்டப்பட்ட தாமஸ அஹங்காரமானது மாறுதல் அடைந்து, அதனிடமிருந்து சப்தம் உண்டாயிற்று. அதனிடம் ஆகாசம் உண்டாயிற்று. சுரோத்ரம் சப்தத்துடன் சேர்ந்தது. அர்த்தத்தைச் சொல்வதாய் இருப்பது (வாசகம்) சுவர் முதலியவைகளால் மறைக்கப் பட்டவனைக் காண்பிப்பது. ஆகாசத்தின் தன்மாத் திரையாக இருப்பது ஆகிய இவைகள் சப்தத்திற்கு லக்ஷணமென்று கவிகள் சொல்லுகிறார்கள். ப்ராணி களுக்கு அவகாசத்தைக் கொடுப்பது, வெளி, உள் என்ற விவகாரத்திற்குக் காரணமாயிருப்பது.

ப்ராணன் இந்திரியங்கள்: மனம் ஆகிய இவைகளுக்கு ஸ்தானமாக இருப்பது ஆகிய இவைகளே ஆகாசத்திற்கு லக்ஷணம்.

36–38. சப்ததன்மாத்திரையுள்ள ஆகாசமானது கால கதியால் விகாரமடைந்தது. அதனிடமிருந்து ஸ்பர்சதன்மாத்திரை உண்டாயிற்று. அதிலிருந்து வாயு உண்டாயிற்று. ஸ்பர்சத்தைக் கிரஹிப்பதே துவக்கிந்திரியமாம். மெதுவாக இருப்பது, கடினமாக இருப்பது, குளிர்ச்சியாகயிருப்பது, உஷ்ணமாக இருப்பது; வாயுவிற்குத் தன்மாத்திரையாக இருப்பது ஆகிய இவைகள் ஸ்பர்சத்திற்கு லக்ஷணங்களாகும். அசைப்பது பலவிடங்களிலிருக்கும் வஸ்துக்களை ஒரேவிடத்தில் சேர்ப்பது, திரவியத்தின் வாசனையை மூக்கின் சமீபம் அல்லது தடையின்றி எங்கும் செல்வது, திரவியத்திற்கும். சப்தத்திற்கும் அதிபதியாக இருப்பது, ஸகல இந்திரியங்களுக்கும் பலத்தை உண்டுபண்ணுவது ஆகிய காரியங்கள் வாயுவின் லக்ஷணமாகும்.

39–41. ஸ்பர்ஸதன் மாத்திரையுள்ளதும், தெய்வத்தால் தூண்டப்பட்டதுமான வாயுவினிடம் இருந்து ரூபதன்மாத்திரை உண்டாயிற்று. அதனிடம் இருந்து தேஜஸ் உண்டாயிற்று. உருவத்தைக் கிரஹிப்பது சக்ஷுஸ்ஸாகும். ஓ பதிவிரதையே! திரவியங்களின் ஆகிருதியாக இருப்பதும், திரவியங்களைக் காட்டிலும் ப்ரதானமில்லாததாகத் தோன்றுகிறதும். திரவியத்தின் நிலைமை போன்ற நிலைமையுள்ளதாக இருப்பதும், தேஜசுக்கு அசாதாரணமாக இருப்பதும் ரூப

தன்மாத்திரையின் விருத்திகளாம். வஸ்துக்களை ப்ரகாசிக்கச் செய்வதும்: அரிசி முதலியவைகளை பாகஞ் செய்வதும் பசி, தாகம் இவைகளை உண்டுபண்ணுவதும், அதன் வழியாகப் புஜிப்பது பானம் செய்வதும், பனியைப் போக்கடிப்பது சோஷிக்கச் செய்வதும் தேஜஸ்ஸின் விருத்திகளா (காரியமான லக்ஷணங்கள்.)

42–44. ரூப தன்மாத்திரையுடன் கூடி தேஜஸானது தெய்வத்தால் தூண்டப்பட்டு விகாரத்தை அடைந்தது. அதனிடமிருந்து ரஸ தன்மாத்திரை உண்டாயிற்று. அதிலிருந்து ஜலமுண்டாயிற்று. ரஸத்தை கிரஹிக்கும் இந்திரியம் ரஸமாகும். அந்த ரஸமானது ஒன்றானாலும் திரவியங்களுடைய பேதத்தால் துவர்ப்பு; திக்திப்பு கசப்பு, உறப்பு, புளிப்பு உப்பு என்று பலவகையாகக் காணப்படுகிறது. ஈரமாக செய்வது, உருண்டையாகச் செய்வது, திருப்தியை உண்டு பண்ணுவது, ப்ராணனைக் காப்பாற்றுவது மிருதுவாகச் செய்வது, தாபத்தைப் போக்குவது கிணறு முதலியவைகளிலிருந்து அடிக்கடி எடுத்தாலும் குறையாமலிருப்பது, ஆகிய இவைகள் ஜலத்தின் வியாபாரங்களாகும். (காரியமாகிய லக்ஷணங்கள்).

45–47. ரஸ தன்மாத்திரையுள்ள ஜலமானது தெய்வத்தால் தூண்டப்பட்டு விகாரத்தை அடைந்தது அதனிடமிருந்து கந்த தன்மாத்திரை உண்டாயிற்று அதிலிருந்து ப்ருதிவி உண்டாயிற்று. கந்தத்தை கிரஹிக்கும் இந்திரியம் கிராணமாகும். அந்த கந்தமானது, கரம்பம், (பலவகை சேர்ந்த வாசனை

கெட்ட வாசனை, நல்ல வாசனை, சாந்தமாகியது (தாமரை மலருடையது), கடுமையான வாசனை, (பூண்டு வெங்காயம் முதலியவைகளுடையது.) புளித்த நாற்றம் என்ற திரவியங்களுடைய சேர்க்கையின் பேதத்தால் பலவகையாயுள்ளது. பகவானுடைய ப்ரிதிமைகளாக விருப்பது ஜலம் முதலியவைகளைவிட வேறாக இருப்பது, ஆகாசம் முதலியவைகளுக்கு விசேஷணமாக (உபாதியாக) இருப்பது. ஸகல பிராணிகளையும், அவைகளுடைய குணங்களையும் வெளிப்படுத்தவது ஆகிய விருத்திகள் ப்ருதிவியின் காரிய லக்ஷணங்களாகின்றன.

48–50 1/2. ஆகாசத்தின் விசேஷ குணமாகிய சப்தத்தைக் கிரஹிப்பதே சுரோத்ரம் என்று சொல்லப் படுகிறது. வாயுவின் விசேஷ குணமாகிய ஸ்பர்சமானது எதற்கு விஷயமோ அதுவே ஸ்பர்சம் (துவக்) தேஜஸின் விசேஷ குணமாகிய உருவமானது எதனால் கிரஹிக்கப் படுறதோ அது சக்ஷுஸாகும். ஜலத்தின் விசேஷ குணமாகிய ரசமானது எதனால் கிரஹிக்கப்படுகிறதோ அது ரஸனமென்று சொல்லப்படுகிறது. பூமியின் விசேஷ குணமாகிய கந்தமானது எதனால் கிரஹிக்கப் படுகிறதோ அது கிராணமாகும். ஒவ்வொன்றின் விசேஷ குணம் மற்றொன்றில் காணப்படுவதால் எல்லா விசேஷ குணங்களும் பூமியில் காணப்படுகின்றன. (ஆகாசத் திற்குக் குணம் ஒன்றுதானென்பது தாத்பரியம்.)

51–63. மகத்தத்துவம் முதலிய ஏழு தத்துவங்களும் (மகான், அஹங்காரம், பஞ்ச பூதங்கள்) ஒன்றோ டொன்று சேராமல் தனியாக இருந்தன. அதனால் அவைகள் போகத்திற்கு ஸ்தானமாகிய அண்டத்தை

உண்டுபண்ணச் சக்தி அற்றவைகளாக இருந்தன. அப்பொழுது ஜகத்திற்குக் காரணமாகிய பகவான் காலம், கர்மம், குணம் இவைகளுடன் அவைகளில் அனுப்ரவேசித்தார் (ஸ்ருஷ்டி சக்தியை அனுக்கிரஹித்தார்). அதனால் அவைகள் யாவும் க்ஷோபத்தையடைந்து ஒன்றாகச் சேர்ந்து அசேதனமாகிய அண்டத்தை உண்டுபண்ணின, அதிலிருந்து விராட்புருஷன் (ஸமஷ்ட்யபிமானி) உண்டானார். இந்த அண்டமானது விசேஷ மென்று பெயருள்ளது. ஜலம் முதலிய ஆவரணங்களால் சூழப்பட்டது அந்த ஆவரணங்கள். ஒன்றைவிட ஒன்று பத்து மடங்குபெரியவை. எல்லாவற்றிற்கும் வெளியில் ப்ரதானத்தால் சூழப்பட்டுள்ளது.

அந்த அண்டத்தில் பகவானுடைய ஸ்வரூபமாகிய லோகங்களின் விஸ்தாரம் காணப்படுகிறது. மிகுந்த ப்ரகாசமுள்ளதும், ஜலத்திலிருப்பதுமாகிய அந்த அண்டகோசத்திலிருந்து தேவர்களுக்கும் தேவராகிய மகாதேவன் எழுந்திருந்து இந்திரிய ஸ்தானங்களைப் படைத்தார். முதலில் இவருக்கு முகம் உண்டாயிற்று. அதில் வாக்கும் அதன் தேவதையான அக்னியும் ப்ரவேசித்தன. பின்பு மூக்கு உண்டாயிற்று, கிராணமானது பிராணனுடன் அவைகளை அடைந்தது. பிறகு கண்கள் உண்டாயின. அவைகளை, சக்ஷுரிந்தியமும், அதற்கு அதிஷ்டான தேவதையாகிய சூரியனும் அடைந்தார்கள். பின்பு காதுகள் உண்டாயின. கூரோத்திரேந்திரியமும் திக்குகளும் அவைகளில் ப்ரவேசித்தன. பிறகு அந்த விராட் புருஷனுக்குத் துவக்(தோல்) துவகிந்திரியத்திற்கு அதிஷ்டானம் உண்டாயிற்று. அதை மயிர்களும், மீசை முதலியவையும் ஓஷதிகளும் அடைந்தன. அதன் பிறகு சிசினம்

உண்டாயிற்று. அதனை உபஸ்தேந்திரியமாகிய ரேதஸ்ஸானது அடைந்தது. அதற்கு அதிதேவதையான ஜலம் அதை அடைந்தது. பின்பு குதமுண்டாயிற்று. அதனைப் பாயுவென்னும் இந்திரியமாகிய அபானன் அடைந்தான். அதற்கு அதிதேவதை லோகத்திற்குப் பயங்கரராகிய மிருத்யுவாம். பின்பு கைகள் உண்டாயின. அதனைப் பலமென்ற பாணீந்திரியம் அடைந்தது. அதற்கு அதிதேவதை மஹேந்திரன். அதன் பிறகு பாதங்களுண்டாயின. அவைகளைக் கதியென்ற பாதேந்திரியம் அடைந்தது அதற்கு அதிதேவதை உபேந்திரன். பின்பு நாடிகளுண்டாயின. அவைகளின் இரத்தம் நிறைந்திருந்தன. அதற்குத் தேவதைகள் நதிகள். அதன்பிறகு வயிறு உண்டாயிற்று. பசி, தாகம் இவைகள் அதை அடைந்தன. இவைகளுக்கு சமுத்திரம் அதிதேவதை. பின்பு ஹிருதயம் உண்டாயிற்று. அதை மனது அடைந்தது. அதற்கு அதிதேவதை சந்த்ரன். அந்த ஹிருதயத்தில் புத்தி ப்ரவேசித்தது. அதன் தேவதை ப்ரஹ்மா. பின்பு அஹங்காரம் உண்டாயிற்று. அதற்குத் தேவதை ருத்திரன். பின்பு சித்தம் உண்டாயிற்று. அதற்கு ஜீவன் அதிஷ்டாதா.

63–71. மேற்சொல்லியபடி அஹங்காரத்திலிருந்து உண்டான தேவர்கள் ப்ரவேசித்தும் விராட் புருஷனை எழுப்ப முடியவில்லை. எப்படியெனில், – அக்கினியானவர் வாக்குடன் முகத்தை அடைந்தும், பின்பு வாயுவானவர், கிராணத்துடன் மூக்குகளில் ப்ரவேசித்தும் அவர் எழுந்திருக்கவில்லை. சூரியன் சக்ஷுஸுடன் கண்களில் ப்ரவேசித்தும், திக்குகள் சுரோத்ரேந்திரியத்துடன் காதுகளின் புகுந்தும், ஓஷதிகள்

மயிர்களுடன் துவக்கில் ப்ரவேசித்தும், ஜலமானது ரேதஸுடன் சிசினத்தில் ப்ரவேசித்தும், மிருத்யு வானவர் கதியுடன் பாதங்களில் ப்ரவேசித்தும், இந்திரன் பலத்துடன் கைகளில் ப்ரவேசித்தும், நதிகள் இரத்தத்துடன் நாடிகளில் புகுந்தும், சமுத்திரமானது பசி, தாகத்துடன் வயிற்றில் ப்ரவேசித்தும், சந்திரன், மனத்துடன் ஹிருதயத்தில் ப்ரவேசித்தும் ப்ரம்மா புத்தியுடன் ஹிருதயத்தில் புகுந்தும், ருத்ரன் அஹங்காரத்துடன் ஹிருதயத்தில் ப்ரவேசித்தும் விராட் புருஷன் எழுந்திருக்கவில்லை.

72–74. ஜீவன், சித்தத்துடன் ஹிருதயத்தில் ப்ரவேசித்த பொழுது அந்த விராட் புருஷன் ஜலத்திலிருந்து எழுந்திருந்தார். நித்திரை செய்து கொண்டிருக்கும்போது ப்ராணன், இந்திரியங்கள், மனம், புத்தி ஆகிய இவைகள் எல்லாம் சேர்ந்தும் எவனில்லாமல் சரீரத்தை எழுப்பச் செய்யச் சக்தியற்றவைகளாக இருக்கின்றனவோ, அந்த ஜீவனுடைய ப்ரவேசத்தால்தான் விராட் புருஷன் எழுந்திருந்தார் அந்தப் ப்ரத்யகாத்மாவைப் பக்தியாலும், விரக்தியாலும், யோகாப்பியாசக்தாலுண்டான நிச்சய புத்தியாலும் காரியாகாரணங்களிலிருந்து பிரித்துத் தியானிக்க வேண்டும்.

அத்தியாயம்–27

ப்ரகிருதி புருஷ விவேகம்

1–76 "புருஷன் ப்ரகிருதியால் ஏற்பட்ட சரீரத்தில் இருந்தாலும், ப்ரகிருதியின் குணங்களில் (சுகதுக்கங்களில்) சம்பந்திக்கிறதில்லை. ஏனென்றால் புருஷன் குணங்களற்றவர். அகர்தா (கர்மங்களைச் செய்யாதவர்) விவகாரமற்றவர். இதற்கு ஜலத்தில் பிரதிபிம்பித்த சூரியன் உபமானமாகும். (ஜலத்திற்கு ஏற்படும் அசைதல் முதலியவை சூரியனிடத்தில் சம்பந்திக்கிறதில்லை.) அப்படிச் சுத்தராக இருக்கும் ஆத்மா ப்ரகிருதியின் குணங்களாகிய சத்வம் முதலியவைகளில் எப்போது சம்பந்தப்படுகிறாரோ, அப்பொழுது (அதன் காரியமாகிய) அஹங்காரத்தால் தம்முடைய உண்மையான உருவத்தை மறந்து தாமே கர்மங்களைச் செய்வதாக நினைக்கிறார். (ஆத்மாவின் இடத்தில் அவித்தியாசம் அனாதியாயுள்ளது; நானென்பது பிந்தி ஏற்பட்டது; கர்மங்களைச் செய்கிறவனென்ற அத்யாசமானது உபாதியால் ஏற்பட்டது என்று கருத்து). அந்த அபிமானத்தால் புண்ணிய பாபங்களுக்கு வசப்பட்டு அவைகளால் கிடைத்த சுகாதிகளாலும், சந்தோஷமடைய தேவனாகவும், மனிதனாகவும், பசு பட்சிகளாகவும் பிறப்பதாகிய சம்சாரத்தை அடைகிறார். அந்த சம்சாரமானது காணப்படும் வஸ்துபோல் மித்யையேயாம் (உண்மை இல்லை) ஆனாலும் விஷயங்களையே தியானஞ் செய்து கொண்டிருக்கும் ஆத்மாவிற்கு ஸ்வப்பனத்தில் தன் தலை வெட்டுவிப்பது முதலியவை காணப்படுவது போல் சம்சாரமானது உண்மையாகத் தோன்றுகிறதே

யொழியத் தோன்றாமலிருக்கிறதில்லை ஆனதால், கெட்ட மார்க்கத்திலேயே பிரவர்த்திருக்கும் மனத்தைத் தீவிரமான பக்தி யோகத்தாலும் வைராக்கியத்தாலும் மெதுவாகச் ஸ்வாதீனப்படுத்தி கொள்ள வேண்டும். மேலும் யமம் முதலிய மார்க்கங்களால் மிக்க சிரத்தையுடன் அடிக்கடி சித்தத்தை ஒருவகைப் படுத்திக் கொண்டு என்னிடத்தில் சித்தத்தைச் செலுத்துவதாலும், சத்தியத்தாலும் என் கதையைக் கேட்பதாலும், ஸகல பூதங்களிடத்திலும் ஸமமாக இருப்பதாலும் விரோதமற்றவராக இருப்பதாலும், அசத்துக்களுடைய சங்கத்தை விடுவதாலும், ஸ்திரீ சங்கமில்லாதிருப்பதாலும் இன்னத்தாலும் ஈசுவரனால் ஏற்படுத்தப்பட்ட தனது வர்ணாசிரமத்திற்குறிய தர்மத்தையனுஷ்டிப்பதாலும் பக்தி யோகத்தை செய்ய வேண்டும்.

பின்னும், தெய்வச் செயலாகக் கிடைத்ததைக் கொண்டு சந்தோஷத்தை அடைந்தும், மிதமாகப் புஜித்தும், மௌனியாகவும், ஏகாந்தமான இடத்தில் வசித்துக் கொண்டும் சாந்தனாகவும், எல்லாப் பிராணிகளிடத்திலும் சிநேகமுள்ளவனாகவும் தயவு உள்ளவனாகவும், கம்பீர மனமுள்ளவனாகவும் இருக்க வேண்டும். மேலும் புத்திரர்கள், மித்திரர்கள், களத்திரம் முதலியவைகளிலும், தேகத்திலும், "என்னைச் சார்ந்தவர்கள், நான்" என்ற அபிமானத்தையொழித்துப் பிரகிருதி, புருஷன் ஆகிய இவர்களைத் தெரிந்து கொண்டு ஜாக்கிரதம் முதலிய அவஸ்தைகளற்றவனாக இருக்க வேண்டும். அன்னிய விஷய ஞானத்தை விட்டுவிட வேண்டும். அப்படிப்பட்டவன் சக்ஷுஸில் இருக்கும் சூரியனைக் கொண்டு ஆகாயத்திலிருக்கும்

சூரியனைப் பார்ப்பது போல் அஹங்காரமுள்ள ஆத்மாவினால் சுத்தராகிய ஆத்மாவைத் தரிசிப்பான். மேலும் அப்பொழுது ஜீவன் பிரதானத்திற்கு (மாயைக்கு) பந்துவும் காரியத்தைப் பிரகாசிக்கச் செய்தும், ஸகல காரணங்களிலும், காரியங்களிலும் சேர்ந்ததும், எங்கும் நிறைந்ததும் அஹங்காரத்தில் சத்தாகத் தோன்றுகிறதுமாகிய ப்ரஹ்மத்தை அடைகிறான்.

ஜலத்தில் காணப்படும் சூரிய பிரதிபிம்பமானது எப்படி ஸ்தலத்திலிருக்கும் பிம்பத்தால் பார்க்கப்படு கிறதோ ஜலத்திலிருக்கும் சூரிய பிம்பத்தால் ஆகாசத் திலிருக்கும் சூரியன் எப்படிப் பார்க்கப்படுகிறாரோ, அப்படி ஆத்மாவின் பிரதிபிம்பங்களாகிய பூதங்கள் இந்திரியங்கள், மனது ஆகிய இவைகளிலுள்ள ஆத்ம பிரதிபிம்பங்களால் மூவைகையான அஹங்காரமுள்ளது. சத்தின் பிரதிபிம்பமுள்ள உருவமாகப் பார்க்கப் படுகிறது. இந்த சிதாபாசமுள்ள அஹங்காரத்தால் பரமாத்ம ஸ்வரூபம் அடையப்படுகிறது. மேலும் பூத சூட்சுமங்களும், இந்திரியங்களும் மனதும் புத்தி முதலியவைகளும், நித்திரையால் இல்லாதவை போலிருக்கும் போது எவர் நித்திரையற்றவராகி அஹங்காரமற்றவராகி இருக்கிறாரோ அவரே மேற்சாட்டிய பரமாத்மா எனப்படுகிறார்; அந்த ஸ்ருஷ்டிகாலத்தில் அஹங்காரம் முதலியவைகள் நாசமடைந்திருக்கும் போது உண்மையில் தான் நாசமடையாதவனாக இருந்தும் பணம் கெட்டுப் போனகாலத்தில் அதற்கு யஜமானன் அதன் நாசத்தைத் தன்னுடையதாகப் பாவித்துத் துக்கிப்பது போல் அஹங்காரத்தின் நாசத்தை ஆத்மா தன்னுடையதாகப் பாவித்துத்

துக்கிக்கிறான். அஹங்காரத்துடன் கூடிய திருஷ்யத்திற்கு (காணக்கூடியது) எது அதிஷ்டானமோ எது அவை களைப் ப்ரகாசிக்க செய்கிறதோ, அந்த ஆத்ம ஸ்வரூபத்தை மேற்காட்டியபடி ஆலோசிப்பவன் அடைவான்" என்றார்.

17–20 அதனைக் கேட்ட தேவஹூதியான்வள் ஸ்ரீ பகவானை நோக்கி, "ஓ பரப்ரஹ்மமே! ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவர்களும் நித்தியர்களாகையாலும், ஒருவரையொருவர் ஆசிரயித்தவர்களாகையாலும் புருஷனை விட்டுப் ப்ரகிருதி ஒருபொழுதும் தனித்திருக்கிறதில்லை. (பக்தி வைராக்கியம் ஆகிய இவைகளால் விவேகம் உண்டானாலும் ப்ரகிருதி. புருஷன் ஆகிய இவர்கள் ஒருவரையொருவர் விட முடியாதாகையால் எப்படி முக்தியடையக் கூடும் என்பது கருத்து.) ஓ ப்ரபுவே! பூமியைவிட்டு அதன்குணமாகிய கந்தமானது எப்படித் தனித்திருக்க முடியாதோ, எப்படி ஜலத்தை விட்டு அதன் குணமாகிய ரசமானது பிரிந்திருக்க முடியாதோ அப்படியே ப்ரகிருதியும், புருஷனும் தனித்திருக்க முடியாததே. கர்மங்களைச் செய்யாதவனாகிய புருஷனுக்கு (அகர்த்தாவிற்கு) எதன் சம்பந்தத்தால் கர்மபந்தம் நேரிடுகிறதோ; அந்தப் ப்ரகிருதியின் குணங்களிலிருக்கும்போது எப்படிப் புருஷன் முக்தனாக ஆகமுடியும்? சில சமயம் தத்துவங்களின் உண்மையை அறிந்ததால் சம்சார பந்தமானது பெரும்பாலும் நிவர்த்தியடைந்திருந்தாலும் சம்சார்த் திற்குக் காரணப்ரகிருதி சம்பந்தமாகியிருப்பதால். திரும்பவும் அந்தபந்தம் உண்டாகிறது (மிச்சமின்றிக் குறைகிறதில்லையென்று கருத்து.)

21–24 அதனைக் கேட்ட பகவான் மாதாவாகிய தேவஹூதியை நோக்கி, "புருஷன், பலனை உத்தேசியாமல் செய்யும் தர்மத்தாலும் (நிஷ்காமகர்மம்) நிர்மலமான மனத்தாலும், வெகு காலமாக என்னுடைய கதையைக் கேட்டு அதனால் விருத்தி செய்யப்பட்ட தீவிரமான பக்தியாலும் ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவர்களுடைய உண்மையைத் தெரிந்து கொள்வதா லும் அதிக வைராக்கியத்தாலும் தபஸுடன் கூடிய யோகத்தாலும் சித்தத்தை ஒருவகைப்படுத்தியதாலும், இரவும், பகலும் ப்ரகிருதியானது எரிக்கப்பட்டு (சக்தி குறைந்து) மெள்ள மெள்ள மறைந்துவிடும். அரணியானது அக்னியை உண்டு பண்ணுவதானாலும் அந்த அக்னியானது எரிக்கப்படவில்லையா? (தத்துவ ஞானத்தால் ப்ரகிருதி தகிக்கப்படுகிறதென்று கருத்து.) இப்படிப்பட்ட புருஷனுக்குப் ப்ரகிருதியானது புத்தபோக்யமாயிருப்பதாலும், (அனுபவித்த போகங்கள் உள்ள) அதனிடமுள்ள தோஷத்தை புருஷன் நன்றாய்த் தெரிந்து கொண்டபடியாலும் புருஷனால் அதுவிடப்படுகிறது. (மறுபடி உண்டாகிறதில்லை யென்று கருத்து) அப்படிப்பட்ட ப்ரகிருதியானது, தம்முடைய மஹிமையில் இருக்கும் (தம்முடைய ஆனந்தத்தை அடைந்த) ஈசுவரனுக்கு அசுபத்தை (சம்சார பந்தத்தை) உண்டு பண்ணுவதற்குச் சக்தியற்றதாக ஆகிறது. (ப்ரகிருதியின் சம்பந்தம் மாத்திரம் பந்தத்திற்குக் காரணமில்லை. அதைக் குணமென்று நினைத்து அதனிடம் ஆசைப்படுவது பந்தக மென்று கருத்து.)

25–30 மேலும் தூங்குகிறவனுக்கு சொப்பனம் மித்யையானது. அனர்த்தத்தை உண்டு பண்ணுவது

போல (தன்னுடைய தலைவெட்டப்பட்டது முதலியவை) தூங்கி விழித்தவனக்கு வாசனாவசத்தால் அந்த சொப்பனம் (சொப்பனத்தில் கண்டது) தோன்றினாலும் அவனுக்குக் கெடுதியை உண்டு பண்ணுகிறதில்லை. அதுபோல்லவே ஆத்மதத்துவத்தை அறிந்தவனும், என்னிடத்திலேயே மனத்தைச் செலுத்தியவனும் ஆத்மா ராம்னுமாகிய புருஷனுக்குப் ப்ரகிருதி அபகாரம் செய்கிறதில்லை. மேலும், அநேக ஜன்மங்களில் அத்யாத்ம வித்தையில் ஆசையுள்ளவன், ப்ரஹ்மலோகம் வரையிலுள்ள விஷயங்களில் வைராக்கியத்தை அடைந்து, என்னிடத்தில் பக்தி செய்து என்னுடைய மிகுந்த தயவினால் ஞானத்தை அடைந்து சம்சயமற்றவனாகிய, கைவல்யமென்கிற பெயருள்ளதும், தேகம் முதலியவைகளை விட வேறானதும் என்னை ஆசிரயித்ததுமான ஒப்பற்ற ஆனந்தத்தை அடைகிறான். யோகியானவன் லிங்க சரீரம் போனபின் எதனை அடைந்து அதிலிருந்து திரும்ப மாட்டானோ, அது மேற்காட்டிய ஆனந்தமேயாம். ஓ அம்ம! யோகத்தால் விருத்தி செய்யப்பட்டவைகளும், யோகத்தை தவிரமற்றவையால் கிடைக்காதவைகளுமான அணிமா முதலிய சித்திகளில் எவனுடைய மனம் ஆசைபடுகிறது இல்லையோ, அவன் என்னுடைய கதியை அடைவான். அவனைப் பார்த்து மிருத்யு பரிஹஸிக்கமாட்டான் (யோகியானாலும் யோகத்தால் கிடைக்கும் அணிமா முதலிய ஐசுவரியங்களில் ஆசை அடைந்தானேயாகில் அவனைப் பார்த்து மிருத்யு "நம்முடைய வலையில் இவன் சிக்கிக் கொண்டான்" என்று சிரிக்கிறான். ஆனதால் அணிமா முதலிய ஐச்வர்யங்கள் மோக்ஷத்திற்கு விக்கினங்களாக இருக்கின்றன. அவைகளில் ஆசைப்படக் கூடாதென்று கருத்து.

நோட்டு

கர்மங்களை: "இம்மாதிரியான ஆத்மா தேவ மனுஷ்யாதி சரீரத்தை அடைவது, சுகதுக்கங்களை அனுபவிப்பது முதலியவைகள் தேகத்தில் வைத்து இருக்கும் ஆத்மா அபிமானத்தாலும் சுதந்திராபி மானத்தாலும், ஏற்பட்டவைகளே யொழிய உண்மையிலிருப்பவைகளல்ல:–வீர, பந்துவும் 'பிதாரக்ஷகன், சேஷீ, பர்த்த' என்றபடி ஸகலவித பந்து அசத்தாகிய தேஹம் முதலியவைகளுக்குப் பிரகாசகம். அந்தப் ப்ரஹ்மாவினுடைய காந்தியால் இதெல்லாம் விளங்குகிறது" ச்ருதி வீர.

அத்தியாயம்–28

யோகத்தின் ஸ்வரூபம்
(தொடர்ச்சி)

1–7. "ஓ ராஜபுத்திரியே! எதனால் மனதானது தெளிந்து (ஆசை, துவேஷம் முதலியவைகளால் கலங்காமல், நன்மார்க்கத்தை (பகவத் ரூபத்தை) அடையுமோ, அந்த யோகத்தின் லக்ஷணத்தையும், அதன் ஸாதனங்களையும் சொல்வேன். அதாவது புருஷன் தன்னுடைய சக்திக்குத் தக்கபடி வர்ணாச்ரம தருமத்தை அனுஷ்டிக்க வேண்டும். விருத்த தர்மத்தை அனுஷ்டிக்கக்கூடாது. தெய்வச் செய்லாகக் கிடைத்ததைக் கொண்டு சந்தோஷத்தை அடையவேண்டும். பகவத் பக்தர்களைப் பூஜிக்கவேண்டும். மேலும் கிராம்ய தர்மத்தில் ஆசைப் படாமல் மோக்ஷத்திற்கு சாதனமாகிய தர்மங்களிலேயே ஆசை கொள்ளவேண்டும், சுத்தமாகிய அன்னத்தை சொற்பமாகப் புஜிக்கவேண்டும், (இரண்டு பாகத்தை அன்னத்தாலும், ஒரு பாகத்தை ஜலத்தாலும் நிரம்பி, நான்காவது பாகத்தைக் காற்றின் சஞ்சாரத்திற்கு விடவேண்டும் என்ற ஸ்மிருதியின்படி). ஜனங்கள் அற்றதும், உபத்திரவங்களற்றதுமான ஸ்தலத்தில் வசிக்கவேண்டும். பின்னும், ஒருவருக்கும் இம்சை செய்யாமலிருப்பது, உண்மை பேசுவது, பிறர் பொருளை அபகரிக்காமலிப்பது. எவ்வளவு வேண்டுமோ அதற்குமேல் பணத்தைச் சம்பாதியாமல் இருப்பது, இந்திரியங்களை ஜயிப்பது; சாந்த்ராயணம் முதலியவைகளை அனுஷ்டிப்பது; வேதங்களை அத்தியயனஞ் செய்வது, பகவானைப் பூஜிப்பது,

மௌனமாக இருப்பது, ஆசனத்தை அடைவது, ஸ்திரனாக இருப்பது, ப்ராணவாயுவை வசப்படுத்திக் கொள்வது, இந்திரியங்களை அவை அவைகளுடைய விஷயங்களிற் செல்லவொட்டாமல் செய்து ஹிருதயத்தில் வைத்துக்கொள்வது, மூலாதாரம் முதலிய ஸ்தானங்களுக்குள் ஒரு இடத்தில் மனத்துடன் ப்ராணனை நிறுத்துவது, பகவானுடைய லீலைகளைத் தியானம் செய்வது; மனத்தை ஆத்மாகாரமாகச் செய்வது முதலிய மார்க்கங்களாலும், தானம் முதலிய மற்றவையாலும் இயற்கையில் கெட்ட மார்க்கத்தில் செல்லும் துஷ்டமாகிய மனத்தைப் புத்தியைக் கொண்டு பரமாத்மாவினிடத்தில் செலுத்த வேண்டும். அதில் சோம்பலடையக் கூடாது.

8–10. சுத்தமாகிய விடத்தில் ஆசனத்தைப் போட்டு ஆசன ஜயமுள்ளவனாக (எவ்வளவு காலம் உட்கார்ந்திருந்தாலும் சிரமமற்றவனாக) ஸ்வஸ்திகம் என்ற ஆஸனத்தில் உட்கார்ந்து ருஜுவான் சரீரமுள்ளவனாகப் ப்ரணவத்தை அப்பியசிக்க வேண்டும். மேலும் பூரகம், கும்பகம் ரேசகம் ஆகிய இவைகளால் ப்ராணன் சஞ்சரிக்கும் மார்க்கத்தைச் சுத்தமாகச் செய்யவேண்டும். அல்லது அவைகளை மாறுதல் ஆகவாவது செய்யவேண்டும், எப்படியாவது சித்தம் விஷயங்களில் செல்லாமல் ஸ்திரமாக இருக்கும்படி செய்யவேண்டும், ஸ்வர்ணம் முதலிய உலோகமானது வாயு அக்கினி இவைகளைக் கொண்டு உருக்கப்பட்டால் எப்படிச் சுத்தமாகி விடுகிறதோ; அப்படிச் ஸ்வாசத்தை ஜயித்தயோகியின் சித்தமானது ரஜோகுணமற்றதாகச் சுத்தமாகிவிடும்; மேலும் ப்ராணாயாமத்தால் வாத பித்தம் முதலிய

தோஷங்களையும், தாரணத்தால் (வாயுடன் மனத்தை ஸ்திரப்படுத்துவது) பாபங்களையும், ப்ரத்யாகாரத்தால் விஷய ஸுகத்தையும், தியானத்தால் ஆசை முதலியவைகளையும் நாசம் செய்யவேண்டும்.

11–19. மனமானது நிர்மலமாகிய யோகத்தால் ஸ்திரமானபின் தன்னுடைய மூக்கின் நுனியைப் பார்த்துக் கொண்டு பகவானுடைய கலையைத் தியானஞ் செய்யவேண்டும். அந்தப் பகவத் சரீரமானது தர்மரை மலர் போல் ப்ரசன்னமாகிய முகமுள்ளது. தாமரை மலரின் மத்யம்போல் சிவந்த கண்களுள்ளது. நீலோத்பல மலர் போலக் கறுத்த திருமேனி உள்ளது, சங்கம், கதை, சக்ரம் இவைகளைத் தரித்திருப்பது! தாமரை புஷ்பத்தின் தாதுகள் போலப் பொன்னிறமான பீதாம்பரத்தைத் தரித்தது. ஸ்ரீ வத்ஸத்துடன் கூடிய மார்புள்ளது. கௌஸ்துபரத்தால் ப்ரகாசிக்கும் கண்டமுள்ளது. மதித்துவண்டுகளின் இனிமையான சப்தமுள்ள வனமாலையுள்ளது. சிறந்தஹாரம் கங்கணம், கீரிடம், தோள்வளை, பாதசரம் இவைகளால் அலங்கரிக்கப்பட்டது. கடிசூத்ரத்தால் ப்ரகாசிக்கும் மத்யபாகமுள்ளது. பக்தர்களுடைய இருதயமாகிய தாமரை மலரை ஆசனமாய் உடையது. (அதில் வஸிப்பவர்) மிகவும் பார்க்கத்தக்கது. (அழகுள்ளது) சாந்தமாயுள்ளது. மனத்திற்கும் கண்களுக்கும் சந்தோஷத்தை விருத்திசெய்யக்கூடியது. அழகான தரிசனமுள்ளது. ஸகல லோகங்களாலும் நமஸ்கரிக்கப்பட்டது. யௌவன வயதுள்ளது. பக்தர் களை அனுக்கிரஹிப்பதில் நோக்கமுள்ளது. அப்போப் பட்ட திவ்ய மங்கள விக்ர்ஹமுள்ளவரானப் பகவானை மனது வேறு விஷயத்தில் செல்லாமலிருக்கும்படி

தியானஞ் செய்யவேண்டும். அவர் கானஞ் செய்யக்கூடிய பரிசுத்தமான கீர்த்தியுள்ளவர். புண்ய ஸ்லோகர்களான பலி முதலியவர்களுக்கு கீர்த்தியை உண்டுபண்ணியவர். மேலும் அந்தப் பகவானை உட்கார்ந்திருப்பவராகவாவது, நடக்கிறவராகவாவது நிற்கிறவராகவாவது படுத்துக்கொண்டவராகவாவது, ஹிருதய குகையிலிருப்பவராகவாவது; பார்க்கக்கூடிய லீலைகளுள்ளவராகவாவது சுத்தமான மனத்தால் தியானம் செய்யவேண்டும்.

20–33. இப்படி அந்தப் பகவத் ஸ்வரூபத்தின் எல்லா அவயவங்களிலும் சித்தமானது பதிந்த பின்பு ஏதாவதொரு அவயவத்தைத் தியானஞ் செய்யவேண்டும். முதலில் பகவானுடைய பாதார விந்தத்தைத் தியானிக்க வேண்டும். அது வஜ்ர ரேகை துவஜரேகை அங்குச ரேகை, தாமரைமலர் ரேகை ஆகிய இவைகளுள்ளது. மேலானவைகளும், சிவந்தவைகளுமான நகங்களுடைய காந்தியால் ஹிருதயத்திலிருக்கும் இருளைப் போக்கக் கூடியது. அந்தப் பாதத்திலிருந்து உண்டான கங்கையின் ஜலத்தைத் தம்முடைய சிரசில் வஹித்ததால் பரமசிவனும் சிவனாக ஆனார் (மிகுந்த க்ஷேமத்தை அடைந்தார்.) மேலும் அந்தப் பாதமானது தியானம் செய்பவர்களுடைய மனத்திலிருக்கும் பாபமாகிய மலைக்கு வஜ்ரமாக விருக்கிறது (பாபத்தை நாசம் செய்கிறது) பின்பு அந்தப் பகவானுடைய இரண்டு முழங்கால்களை (இவைகள் சம்சார சம்பந்தமில்லாதவருடையவை) என்று தியானிக்க வேண்டும். அவைகள் ஸகல லோகங்களைப் படைத்தவரான ப்ரஹ்மதேவருக்கு மாதாவும் தாமரை மலர் போன்ற கண்களுள்ளவளும், தேவர்களால்

நமஸ்கரிக்கப்பட்டவளுமாகிய லக்ஷ்மி தேவியால் தன்னுடைய துடைகளில் வைத்து தூளிர் போன்ற இருகைகளால் ஸேவிக்கப்பட்டவை (பிடிக்கப்பட்டவை). மேலும் கருடனுடைய தோளில் ப்ரகாசிப்பவைகளும், பலத்திற்கு இருப்பிடமானவைகளும் (பலமுள்ளவை). காயாம்பூப்போல் விளங்குகிறவைகளுமான துடைகளையும் தியானிக்கவேண்டும். மேலும் கணுக்கால் வரையில் தொங்குகின்ற பீதாம்பரங்களின் மீது விளங்கும் கடிசூத்திரமுள்ள நிதம்பத்தையும் ஹிருதயத்தில் தியானிக்க வேண்டும்.

பின்பு அந்தப் பகவானுடைய தொப்புளை சிந்திக்க வேண்டும். ஸகல உலகங்களுக்கும் இருப்பிடம் ஆகிய வயிற்றிலிருந்தும் தொப்புளை சிந்திக்கவேண்டும். அதில் ப்ரஹ்மதேவருக்கும் உற்பத்தி ஸ்தானமும் ஸகலலோக ஸ்வரூபமான தாமரைப்புஷ்பம் இருக்கிறது. அதன்மீது சுத்தமாகிய முக்தஹாரத்தின் காந்தியால் வெண்மை நிறமுள்ளவரையும் இயற்கையில் சிறந்த மரகதரத்னம் போலிருப்பவைகளுமான பகவானுடைய ஸ்தனங்களை மனத்தால், சேவிக்க வேண்டும். பிறகு மஹாலக்ஷ்மிக்கு வாசஸ்தலமும், மனத்திற்கும் நேத்திரங்களுக்கும் ஸுகத்தை உண்டு பண்ணுகிறதுமான புருஷோத்தமனுடைய மார்பையும், கௌஸ்துப ரத்னத்திற்கு அழகை உண்டுபண்ணும் ஸகல லோகங்களால், நமஸ்கரிக்கப்பட்ட பகவான் உடைய கழுத்தையும், மந்திர மலையின் அசைதலால் கடைசல் பிடிக்கப்பட்ட கங்கணங்கள் உள்ளவைகளும், லோகபாலர்களால் ஆசிரயிக்கப்பட்டவைகளுமான கைகளையும், சஹிக்க முடியாத தேஜஸ்ஸுள்ளதும், ஆயிரம் முனைகளுள்ளதுமான சக்ராயுதத்தையும்,

தாமரை மலர்போன்ற கைகளில் ராஜஹம்சம் போல் ப்ரகாசிக்கும் சங்கத்தையும் பகவானுக்கு மிக்க பிரியம் ஆனதும், சத்ருக்களுடைய இரத்தத்தால் சிவந்ததுமான கௌமோதகியென்ற பகவானுடைய கதாயுதத்தையும் ஜீவனுடைய தத்துவ ஸ்வரூபமாகிய கௌஸ்துப ரத்ன ஹாரத்தையும், சப்திக்கும் வண்டுகளால் நிறைந்த வனமாலையையும் தியானிக்க வேண்டும். மேலும் பக்தர்களிடத்தில் கருணையால் அவதரித்திருக்கும் அந்தப் பகவானுடைய தாமரை மலர் போன்ற முகத்தை சிந்திக்க வேண்டும். அது ப்ரகாசிக்கும் மகரகுண்டலங்கள் அசைவதால் விளங்கும் சுத்தமான கன்னங்களுள்ளது. உயர்ந்த மூக்குள்ளது. மேலும் அது இரண்டு மீன்களுள்ள தாமரைப் பரிகசிக்கிறது. சுருண்ட தலைமயிர்களுள்ளது. விசேஷ காந்தி யுள்ளது. லக்ஷ்மீதேவிக்கு இருப்பிடமாயுள்ளது. மனோமயமானது. ப்ரகாசிக்கும் புருவங்களுள்ளது. பின்னும் அதிகக் கருணை பொருந்தியதும், மனோகரமுமான சிரிப்புடன் கூடியதும் விசேஷப் ப்ரசாதமுள்ளதுமான அவருடைய கடாக்ஷத்தை மூவகையான தாபத்தைப் போக்குவதற்காக இடை விடாது பாவனையால் ஹிருதயத்தில் பாவிக்க வேண்டும்.

மேலும் பகவானுடைய சிரிப்பானது நமஸ்கரித்த அனேக ஜனங்களுடைய கடுமையான துக்க சமுத்திரத்தைச் சோக்ஷிக்கச் செய்யக்கூடியது. மிகவும் மேலானது. ஸகல மகரிஷிகளையும் மோஹிக்கச் செய்யக்கூடியது. இம்மாதிரியான மந்தகாசத்தைத் தியானிக்கவேண்டும் தியானத்திற்கு விஷயமானவை களும் மேலான மேலுதடு, கீழுதடு இவைகளுடைய

காந்தியால் சிவந்த பற்களாகிய குந்த புஷ்பவரிசை யுள்ளவைகளுமான பகவானுடைய விசேஷ சிரிப்பைத் தியானிக்க வேண்டும். இப்படித் தன்னுடைய ஹிருதயாகாசத்திலிருக்கும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவிடத்தில். மிகுந்த ப்ரேமை ரசமுள்ள பக்தியினால் சித்தத்தைச் செலுத்தவேண்டும். அதனைவிட வேறொன்றையும் பார்க்க விரும்பக்கூடாது.

34–44. இம்மாதிரி ஸ்ரீ பகவானிடத்தில் விசேஷமாகப் பாவத்தைச் செலுத்தியும். பக்தியால் ஹிருதயம் உருகியும் சந்தோஷத்தால் மயிர்க்கூச்சல் அடைந்தும் அதிக ப்ரேமையால் பெருகிய ஆனந்த பாஷ்பத்தில் மூழ்கியும் பகவானாகிய மத்ஸ்யத்தைப் பிடிக்கும் உபாயமாகிய சித்தத்தை மெள்ள மெள்ளப் பகவத் ஸ்வரூபத்திலிருந்து பிரிக்கவேண்டும். (ஸபீஜ யோகத்தை நிர்பீஜ யோகமாகச் செய்யவேண்டும்) மனதானது எப்பொழுது வைராக்கியமுள்ளதாகவும் ஆசிரயமற்றதாகவும். ஒன்றையும் விஷயீகரிக்காததாக வும் இருக்குமோ அப்பொழுது தேகம் முதலிய உபாதிகள் நீங்கியபடியால் தன்னை ஒருவனாகவும் பரப்ரஹ்மமாகவும் பார்க்கிறான் (தியானம் செய்கிறவன். தியானம் பண்ணப்படுகிற வஸ்து என்று பேதமற்று ப்ரஹ்மமாக இருக்கிறானென்று கருத்து). தீபமானது தனக்கு ஆசிரயமாகிய திரி முதலியவைகள் அற்றுப்போனவுடன் மஹா தேஜஸாக ஆகிவிடுகிறது அல்லவா? இதுவே அதற்குத் திருஷ்டாந்தமாகும் இப்போர்ப்பட்ட நிலைமையை அடைந்தவன் திரும்பவும் சம்சாரத்தை அடைகிறதில்லை என்பது கருத்து.) அப்போர்ப்பட்ட புருஷன் அவித்யையின் சம்பந்தமற்ற மனத்தின் வைராக்கியத்தால் ப்ரஹ்ம நிஷ்டனாகி

அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தை அடைகிறான். சம்சாரியாக இருந்த காலத்தில் எது சுக துக்கங்களுக்குக் காரணமாயிருந்ததோ; அது இந்த நிலைமையில் இல்லை.

மேலும் மத்யத்தைக் குடித்தால் மயக்கமடைந்த வனுக்கு தன்னுடைய சரீரத்தில் வஸ்திரமிருக்கிற தென்றாவது இல்லையென்றாவது எப்படித் தெரியாதோ அப்படியே ஸ்வரூபத்தை அடைந்த சித்தன் அந்நித்திய மாகிய தன்னுடைய சரீரம் ஆசனத்திலிருப்பதையாவது, எழுந்து நடக்கிறதையாவது பார்க்கமாட்டான் (சுகதுக் கங்களை அனுபவிப்பானாவென்பது கருத்து). ஆனால் தேஹமானது முந்திய ஸம்ஸ்காரத்தால் (பழக்கம்) சேஷ்டிக்கும் எந்தக் கர்மத்தால் சரீரம் உண்டாக்கப் பட்டதோ, அந்தக் கர்மம் நசிக்கிறவரையில் இந்திரியங்களுடன் தேஹம் ஜீவித்திருக்கும். ஆனாலும் ஆத்மாவின் உண்மையை அறிந்த ஆருடன் சொப் பனத்தில் பார்க்கப்படும் வஸ்து போலிருக்கும் தேஹத்தி லும்; புத்திரன் முதலிய பந்துக்களிடத்திலும் அபிமானம் வைக்கமாட்டான். ஏனெனில் புத்திரன் மித்திரன் களத்திரம் முதலியவர்களை விராட்புருஷன் வேறாகக் காணப்படுவது போல ஆத்மாவென்று நினைக்கப்பட்டிருக்கும் தேஹம், இந்திரியம் முதலிய வைகளை விடத்தான் வேறாகவே இருக்கிறான். அக்கினியானது தன்னால் உண்டுபண்ணப்பட்ட புகை குறைக்கொள்ளி நெருப்புபொறி ஆகிய இவைகளைவிட வேறாகக் காணப்படுவது போல ஜீவனென்று சொல்லப் படுகிற பூதங்கள், இந்திரியங்கள் அந்தக்கரணம், பிரதானம் ஆகிய இவைகளைவிடப் ப்ரஹ்மமென்று சொல்லப்படுகிற திருஷ்டாவாகிய பரமாத்மாவானவர்

வேறென்று அறியவேண்டும். நான்கு வகையான பிராணிகளைத்தானாகவும், தன்னைச் ஸகல பிராணி களாகவும் பூதங்களை மஹாபூதஸ்வரூபங்களாவும் பார்ப்பான் (நினைப்பான்). மேலும் அக்கினியானது ஒரேவகையானாலும் கட்டை முதலியவைகளில் அதன் உருவத்திற்குத் தக்கபடி நீண்டும் குட்டையுமாக பலவகையாகத் தோன்றுவது போல் ஆத்மா ஒருவரா னாலும் பிரகிருதியின் குணபேதத்தால் பலவகையாகக் காணப்படுகிறார் ஆனதுபற்றி இந்த ஸ்ரீ மகா விஷ்ணுவின் மாயாசக்தியானது ஜீவனுக்குப் பந்தத்தை உண்டுபண்ணுகிறது. காரிய காரண ரூபமாயுள்ளது; அறிய முடியாத ஸ்வரூபமுள்ளது. அப்பேர்ப்பட்ட ப்ரகிருதியை ஜயித்து, ப்ரஹ்ம ஸ்வரூபமாக ஆகவேண்டும் என்று பகவான் தேவஹூதிக்கு உபதேசித்தார்.

அத்தியாயம்–29

பக்தி யோகம்

1–5 அதனைக் கேட்ட தேவஹூதியானவள் கபிலரை நோக்கி, "ஓ பகவன்! மகத்தத்துவம் முதலியவைகள் ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவைகளுக்கு சாங்கிய சாஸ்திரத்தில் சொல்லியபடி அபாதிதமான லட்சணம் உம்மால் சொல்லப்பட்டது. அதுவே பக்தியோகத்திற்குச் சாதனம். அந்தப் பக்தி யோகத்தின் மார்க்கத்தை விஸ்தாரமாகச் சொல்லும். பலவகையான சம்சாரத்தையும் என்க்குச் சொல்லும். அதன் ஸ்வரூபத்தைத் தெரிந்து கொண்டதனால் அதில் வைராக்கியம் உண்டாகும். மேலானவர் களுக்கும் மேலானவரும் மிகுந்த மஹிமையுள்ள வரும், கால ஸ்வரூபியாயுமிருக்கும் உம்மிடத்தில் பயந்தே ஜனங்கள் புண்ணியத்தைச் செய்கிறார்கள். தேஹம் முதலியவைகளில் அபிமானமுள்ளவனும், அஞ்ஞானம் கரையற்ற ஸம்சாரத்தில் வெகுநாளாகத் தூங்கியவனும் கர்மங்களில் ஆசைபட்டதால் கலைத்தவனு மாகிய புருஷனை விழிக்கச் செய்வதற்காக நீர் யோகத்தைப் ப்ரகாசிக்கச்செய்யும் சூரியனாக உதயமாகியிருக்கிறீர்" என்றாள்.

6–10 இம்மாதிரியான மாதாவினுடைய அழகான வார்த்தையைக் கேட்ட ப்கவான், மிகுந்த பிரியத்துடன் கருணையுள்ளவராகி அவளை நோக்கி, 'பக்தி யோகமானது மார்க்க பேதத்தால் பலவகையுள்ளது. புருஷர்களுடைய அபிப்பிராயமானது அவரவர்கள் உடைய ஸ்வபாவமாகிய குணங்களுடைய விருத்திகளால்

பலவகையாக மாறுகிறது. எவன் இம்சை டம்பம், மாத்சர்யம் இவைகளுள்ளவனாகவும் கோபமுள்ள வனாகவும், பேத புத்தியுள்ளவனாகவும் என்னிடம் பக்தி செய்கிறானோ அவன் தாமஸ பக்தன் எனப்படுகிறான். எவன் பேதபுத்தியுடன் கீர்த்தி ஐசுவரியம் முதலிய விஷயங்களுக்குக்காக என்னைக் பூஜிக்கிறானோ, அவன் ராஜஸ பக்தன் எனப்படுகிறான். எவன் பேத புத்தியுடன் பாப நிவ்ருத்தியை உத்தேசித்துக் கர்மத்தைச் செய்து, அவைகளை பரமாத்மாவினிடம் சமர்ப்பித்து யாகம் முதலியவை செய்ய வேண்டும் என்று செய்கிறானோ, அவன் சாத்விக பக்தனாகிறான்.

11–14 ஸகல குணங்களுக்கும் இருப்பிடமாகிய, புருஷோத்தமனுமாகிய என்னிடத்தில் என்னுடைய குணங்களைக் கேட்ட மாத்திரத்தாலேயே பலத்தில் ஆசையற்று, பேதபுத்தியற்று, சமுத்திரத்தில் கங்காஜலம் போல் எவனுடைய மனமானது இடைவிடாமல் என்னிடம் செல்லுகிறதோ அதுவே நிர்க்குண பக்தியாகும். மேலும், பக்தர்களுக்கு என்னைச் சேவிப்பதிலேயே விருப்பமிருக்கும். ஆதலால் ஸாலோக்கியம் (என்னுடன் ஒரே உலகத்தில் வஸிப்பது). ஸார்ஷ்டி (எனக்குள்ள ஐசுவரியத்தை அடைந்திருப்பது), ஸாமீப்யம் (என்னுடைய சமீபத்தில் வஸிப்பது), ஸாரூப்யம் (எனக்குச் சமமான ஸ்வரூபத்தை அடைவது) ஏகத்துவம் (என்னிடம் ஒன்றாகக் கலந்து போவது) ஆகிய இவைகள் கிடைத்தாலும் அவர்கள் அவைகளை விரும்புகிறதில்லை. (அப்படியிருக்க மற்றவையை விரும்புவார்களா ? என்று கருத்து) அதுவே மேலான பக்தியோகம் எனப்படுகிறது. அதனால் முக்குணங்களைக்

கடந்து ப்ரஹ்மபதத்தை அடைகிறான். (பக்தர்களுக்கு பகவத் சேவையே முக்யமான பலன், முக்தி இடையில் கிடைக்கும் பலன்.)

15–30 மேலும், பலத்தை உத்தேசியாமல் செய்யப் படும் நித்ய நைமித்திக கர்மங்களாலும், சிரத்தையுடன் நிஷ்காமனாகப் பகவானைப் பூஜிப்பதாலும், பரஹிம்சை இல்லாமல் இருப்பதாலும் என்னுடைய ப்ரதிமை களைத் தரிசிப்பது, ஸ்மரிசிப்பது, பூஜிப்பது, துதிப்பது, நமஸ்கரிப்பது ஆகிய இவைகளாலும் ஸகல பிராணிகளிடத்திலும் என்னைப் பாவிப்பதா லும் தைரியத்தாலும் வைராக்கியத்தாலும், பெரியோர் களைப் பூஜிப்பதாலும், தீனர்களிடத்தில் தயை செய்வதாலும் தனக்குச் சமமானவர்களிடத்தில் பிரீதி செய்வதாலும், சமத்தாலும் நியமத்தாலும், ஆத்மாவின் உண்மையை குருமுகமாகச் சிரவணஞ் செய்வதாலும் பகவானுடைய நாமங்களை உச்சரிப் பதாலும், கபடமற்றிருப்பதாலும், சாதுக்களுடைய சங்கத்தாலும், அஹங்காரத்தை ஒழிப்பதாலும் புருஷனுடைய சித்தமானது சுத்தமாகிறது. வாசனை யானது புஷ்பத்திலிருந்து வாயுவாகிய ரதத்தின் மீதேறி கிராணேந் திரியத்தை அடைவதுபோல யோகமுள்ளதும், சுத்தமுமான சித்தமானது ஆத்மாவை அடைகிறது. (மேற்காட்டிய குணங்கள் பக்தி யோகத்திற்கு என்று கருத்து.)

21–26 நான் ஸகல பிராணிகளிடத்திலும் வஸிக்கிறேன். அப்படிப்பட்ட என்னை லட்சியம் செய்யாமல் பூசை செய்வது போல் மனிதன் அபிநயஞ் செய்கிறான். ஸகல பிராணிகளிடத்திலும்

வஸிக்கும் ஈசுவரனாகிய என்னை விட்டு எவன் அறியாத்தன்மையால் ப்ரதிமை முதலியவைகளில் பூஜிக்கிறானோ, அவன் சாம்பலில் ஹோமம் செய்கிறவனேயாம். பிறரைத் துவேஷிக்கிறவன், என்னைத் துவேஷிக்கிறவனாகிறான் (எங்கும் நான் இருப்பதால்) ஆனதால் விரோத புத்தியுள்ளவனும் அஹங்காரமுள்ளவனுமாகிய புருஷனுடைய மனதானது சாந்தியை அடைகிறதில்லை. ஓ பாபம் அற்றவளே! பிராணிகளை நிந்திப்பவன். பலவகையான திரவியங்களால் விதிப்படி என்னைப் பூஜித்தாலும், அதனால் நான் சந்தோஷப்படுகிறதில்லை. பகவான் ஸகல பிராணிகளிடத்திலும் வஸிக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ளுகிற வரையில் என்னுடைய ப்ரதிமைகளைத் தங்களுடைய நித்திய கர்மத்திற்கு விரோதமில்லாமல் பூஜிக்க வேண்டும். மேலும் தனக்கும் பிறருக்கும் பேதமிருப்பதாக எவன் கொஞ்சமாவது பார்க்கிறானோ அவனுக்கு மிகுந்த பயத்தை உண்டு பண்ணுகிறேன்.

27–35 ஆனதால் ஸகல பிராணிகளிடத்திலும், அந்தர்யாமியாக வஸிக்கும் என்னைப் பேதபுத்தியற்ற வனாகப் ப்ரீதியுடன் தானத்தாலும், கௌரவப் புத்தியாலும் பூஜிக்க வேண்டும். அதிலும் அசேதனம் ஆகிய பிராணிகளைக் காட்டிலும் உயிருள்ளவை, மேலானவை.அவைகளைக் காட்டிலும் பிராணி வ்ருத்தியுள்ளவை மேலானவை. அவைகளைக் காட்டிலும் சித்தமுள்ளவை சிறந்தவையாம். அவைகளைவிட இந்திரியங்களுள்ளவை உயர்ந்தவை. அவைகளிலும் ஸ்பரிசத்தைத் தெரிந்து கொள்ளுகிறவைகளைக் காட்டிலும் ரசத்தை அறியக்கூடியவைகள்

சிறந்தவைகளாகும். அவைகளைக் காட்டிலும் கந்தத்தை அறியக் கூடியவை மேலானவையாம். அவ்வகளைவிட சப்தத்தை அறியக் கூடியவை மேலானவையாம். அவைகளைவிட உருவத்தின் பேதத்தை தெரிந்து கொள்ளுகிறவைகளும் (காக்கை முதலியவை) அவைகளைக் காட்டிலும் இரண்டு பக்கத்திலும் பற்களுள்ளவையும் (குதிரை முதலியன) சிறந்தவைகள். மேலும் காலில்லாதவைகளைக் காட்டிலும் அனேக காலுள்ளதும், அவைகளைவிட நான்கு கால்களுள்ள வைகளும், அவைகளைக் காட்டிலும் இரண்டு கால்களுள்ளவைகளும் சிறந்தவைகளாகும். பின்னும் அந்த மனிதர்களுக்குள் நான்கு ஜாதிகளே சிறந்தவைகள். அவைகளிலும் ப்ராஹ்மணனே உத்தமன். ப்ராஹ்மணர்களுக்குள் வேதாத்தியயனஞ் செய்தவன் மேலானவன். அவனைவிட வேதத்தின் அர்த்தத்தை அறிந்தவன் மேலானவன். அவனைக் காட்டிலும் சம்சயத்தைப் போக்குகிறவன் (மீமாம்சை படித்தவன்) உயர்ந்தவன். அவனைக் காட்டிலும் ஸ்வதர்மத்தை அனுஷ்டிப்பவன் சிறந்தவன். அவனைக் காட்டிலும் ஸகல ஆசையையும் ஒழித்தவன், மேலானவன். தருமம் முதலியவைகளை விரும்பமாட்டான். அவனால் அனுஷ்டிக்கப்பட்ட கர்மங்களும், அவைகளுடைய பலனும், தேஹமும், என்னிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஆனதால் எனக்கும் அதிக பேதமில்லை.

இப்படி ஸகல கர்மங்களையும் ஆத்மாவையும் என்னிடம் சமர்ப்பித்தவனும், எல்லாவற்றையும் சமமாகப் பார்ப்பதால் கர்த்தாவென்ற அபிமானமற்ற வனுமாகிய, புருஷனைக் காட்டிலும் மேலான ப்ராணி ஒன்றுமில்லை. ஆனதால் 'பகவானாகிய

ஈசுவரன் ஜீவனாக ஸகல ப்ராணிகளிடத்திலும் ப்ரவேசித்திருக்கிறார்' என்று மனத்தில் நினைத்து ஸகல ப்ராணிகளிடத்தில் கௌரவ புத்தியை அடையவேண்டும். நமஸ்கரிக்கவும் வேண்டும். ஓ மனுவின் புத்திரியே! பக்தி யோகம், யோகம் ஆகிய இரண்டையுஞ்சொன்னேன். இவைகளுள் ஏதாவது ஒரு மார்க்கத்தால் பரமாத்மாவை அடைய வேண்டும்.

36–45 எல்லாவற்றிற்கும் நியந்தாவாக இருப்பதே பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபம். மேலும், கர்மங்கள் உடைய சேஷ்டையுள்ளதும் ப்ரதான புருஷ ஸ்வரூபமாயிருப்பதுமே தெய்வம் எனப்படுகிறது. (அதிருஷ்டம்) பேதத்திற்கு (வஸ்துக்கள் வேறாக மாறுவது) காரணமாயிருப்பதே காலமென்று சொல்லப்படுகிறது. இவைகள் யாவும் பரமாத்மாவின் ஸ்வரூபமேயாம். (மகத்தத்துவம் முதலியவைகளுக்கு அபிமானிகளும் பேதபுத்தி உள்ளவர்களுமான ஜீவர்களுக்குப் பயத்தை உண்டு பண்ணுகிறவர், அந்தப் பகவானேயாம். ஸகல பிராணிகளுக்கும் ஆசிரயம் இருக்கும் ஈசுவரன் ஸகல பிராணிகளுடைய ஹிருதயத்தில் ப்ரவேசித்துப் பூதங்களைக் கொண்டே அவைகளை ஸம்ஹரிக்கிறார். விஷ்ணுவென்ற திவ்ய நாமமுள்ள பகவானே யாகத்திற்கும் பலத்தைக் கொடுப்பவர். எல்லாவற்றையும் ஸ்வாதினப் படுத்திக் கொள்பவர், கால ஸ்வரூபி அவருக்கு மித்திரனாவது, துவேஷியாவது, பந்துவாவது ஒருவருமில்லை. எவரிடமிருந்து, காற்று வீசுகிறதோ சூரியன் ப்ரகாசிக்கிறாரோ, எவரிடமிருந்து பயந்து நட்சத்திரங்கள் ப்ரகாசிக்கின்றனவோ, எவரிடமிருந்து பயந்து கொடிகளும், செடிகளும் (ஓஷதி)

தங்களுக்குரிய ருதுக்களில் புஷ்பங்களையும், பழங்களையும் உண்டு பண்ணுகின்றனவோ, எவர் இடமிருந்து பயந்து நதிகள் ஓடுகின்றனவோ, எவரிடமிருந்து பயந்து சமுத்திரமானது கரை புரளவில்லையோ, எவரிடமிருந்து பயந்து அக்கினி ப்ரகாசிக்கிறதோ எவரிடமிருந்து பயந்தே மலைகளால் நிறைந்த இந்த பூமியானது ஜலத்தில் மூழ்காமல் இருக்கிறதோ, எவருடைய உத்தரவினால் பிராணி களுக்கு ஆகாசமானது அவகாசத்தைக் கொடுக்கிறதோ, எவருடைய ஆக்ஞையால் மகத்தத்துவமானது ஏழு ஆவரணங்களுள்ள தன்னுடைய தேகத்தை லோகமாக விஸ்தாரப்படுத்துகிறதோ, சரம், அசரம் ஆகிய இவைகளடங்கிய ஜகத்தானது எவருடைய வசமாக இருக்கிறதோ, குணங்களுக்கு அபிமானிகள் ஆகிய அந்தப் ப்ரஹ்மா முதலிய தேவர்கள் அடிக்கடி இந்த ஜகத்தைப் படைப்பது முதலியவைகளை எவருடைய பயத்தால் செய்கிறார்களோ, அவரே பகவான். அவர் நாசமற்றவர். நாசத்தை உண்டு பண்ணுகிற காலஸ்வரூபியாயிருப்பவர். ஆதியற்றவர். எல்லாவற்றிற்கும் ஆதியைச் செய்பவர். மாறுதல் அற்றவர். புத்திரன் முதலிய ஜனத்தைப் பிதா முதலிய ஜனத்தைக் கொண்டு யுண்டு பண்ணுகிறவர். மிருத்யுவைக் கொண்டு அந்தகனையும் கொல்பவர்.

அத்தியாயம்–30

பாபிகளின் கதி
(முன்தொடர்ச்சி)

1–24. 'வாயுவினால் அசைக்கப்படும் மேகமானது வாயுவின் பலத்தை எப்படி அறியவில்லையோ அப்படி காலத்தால் தூண்டப்பட்ட ஜனங்கள் அதன் மஹிமையைத் தெரிந்து கொள்ளுகிறதில்லை. புருஷன் சுகத்தை அடைவதற்காக எந்தெந்த வஸ்துக்களைச் சம்பாதிக்கிறானோ, அவைகளைக் காலமானது நாசம் செய்கிறது. அதனால் புருஷன் துக்கிக்கிறான். மேலும், அநித்யமாகிய சரீரத்திற்காகவும், புத்திர மித்திர களத்திரங்களுக்காகவும், வீடு பூமி பணம் முதலியவை களை நித்யங்களாகப் பாவித்துச் சம்பாதிப்பதால் புருஷன் துர்புத்தியுள்ளவனாகிறான். சம்சாரத்தில் புருஷன் எந்த ஜன்மத்தை அடைந்தாலும் அதில் சுகத்தை அடைகிறதில்லை. அதிலிருந்து வைராக்கியமும் அவனுக்கு உண்டாகிறதில்லை. நரகத்தை அடைந்து கஷ்டப்படுபவனானாலும் நரகத்திய சுகம் (ஆகாரம்) கிடைக்கும்போது அந்தச் சரீரத்தைவிட்டு விட சம்மதிக்கிறதில்லை. அந்த மோஹமானது தேவ மாயையால் ஏற்படுகிறது. மேலும், மனைவி, பிள்ளை, வீடு, பசு, பணம் பந்து ஆகிய இவைகளில் நன்றாக அபிமானமடைந்த தன்னை "நான் கிருதார்த்தன்" என்று சிலாகிக்கிறான். மேலும் அவன் மேற்கண்ட வைகளைப் போஷிப்பதற்காகக் கவலையடைந்து அதனால் எரிக்கப்பட்டவனாகி கெட்ட அபிப்பிராயத்து உடன் மூடனாகி; இடைவிடாமல் பாபங்களை செய்கிறான். பின்னும் இவன் விபசாரியான

ஸ்திரீகளுடைய சம்போகம் முதலியவைகளை ரகசியத்தில் அனுபவித்தும். இனிமையாகப் பேசும் குழந்தைகளுடைய வார்த்தைகளைக் கேட்டு மனதும், இந்திரியங்களும் மயங்கினவனாகி, கபட தர்மமுள்ள வைகளும் துக்கத்தையே முக்கியமாக உடையவை களுமான கிருகங்களிலிருந்து துக்கத்தை விலக்கு வதற்கான காரியங்களைச் செய்துகொண்டு தன்னைச் சுகமுள்ளவனென்று பாவிக்கிறான். மேலும், அதிக இம்சையுள்ளவைகளைச் செய்து பலவிதமாகப் பணத்தைச் சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்று கிறான். அவர்களைப் பாபத்தைச் செய்து போஷிப்பதனால் புருஷன் நரகத்தை அடைகிறான். தவிரவும் கிருகத்திலும். புத்திரன் முதலியவர்கள் அனுபவித்து மிகுந்ததை அனுபவிக்கிறான். (போகமும் கிடைப்பது அரிதாக இருக்கிறது). மேலும், ஜீவனத் திற்காக எவன் எந்த விருத்தியைச் செய்கிறானோ, அது நிறைவேறாமல் நாசத்தை (லோபம்) அடையும் போது பணத்தாஸையுள்ளவனாகச் சம்பாதிக்கச் சக்தியற்றவனாகி, பிறருடைய பொருளில் ஆசை வைக்கிறான். இப்படிக் குடும்பத்தைப் போஷிக்கச் சக்தியற்றவனாக அதிருஷ்டக் குறையுள்ளவனாகிறான்.

இவன் செய்யும் முயற்சியெல்லாம் வீணாகிவிடு கிறது வேலையற்றவனாகி, தீனனாக மூடனாகி அதிகச் சிந்தையுடன் பெரு மூச்சுவிடுகிறான். அப்படிப்பட்ட புருஷனை அவனுடைய களத்திரம் முதலிய பந்துக்கள் முன்போல்(உபகாரமடைந்த காலத்தில்) ஆதரிக்கிறது இல்லை. லோபிகளான குடியானவர்கள் வயது சென்ற காளைமாட்டைப் போஷிப்பார்களா? அந்த நிலைமையில் அவனுக்கு வைராக்கியம் உண்டாகிறது

இல்லை. ஜ்ரையால் (கிழத்தனம்) சரீரம் விகாரத்தை அடைகிறது. மரிக்கக்கூடியவனாகக் கிருகத்திலிருக் கிறான். வீட்டைக்காத்திருக்கும் நாய்க்குச் சோறு போடுவதுபோல் வீட்டில் இருப்பவர்களால் ஆதரவின்றிக் கொடுக்கப்படும் அன்னத்தை புஜிக் கிறான். அதிக வியாதியுள்ளவனாகிறான், வயிற்றில் இருக்கும் அக்கினி மந்தமாகிறது. அதனால் ஆகாரம் குறைவடைகிறது. சேஷ்டை குறைகிறது பிராணவாயு வெளியில் போகும் தருணத்தில் கண் விழிகள் வெளியில் வருகின்றன. கபத்தால் பிராணன் சஞ்சரிக்கும் மார்க்கம் தடுக்கப்படுதிறது காசத்தாலும், ஸ்வாஸத்தாலும் மிகுந்த சிரமத்தை அடைகிறான். கண்டத்தில் "குர் குர்" என்ற சப்தம் உண்டாகிறது. அவ்வளவு அவஸ்தையுடன் படுத்திருப்பவனைச் சுற்றிப் பந்துக்கள் உட்கார்ந்து மிகுந்த துக்கத்துடன் அழைக்கிறார்கள். ஆனாலும் அவன் பேசுகிறதில்லை. காலனுடைய பாசத்திற்குச் ஸ்வாதீனனாகிறான். இப்படி மனிதன் குடும்பத்தைப் போஷிப்பதற்காக மரணம் வரையில் இந்திரியங்களைப் பலகர்மங்களில் செலுத்தி, அந்திய காலத்தில் மிகுந்த வேதனையால் புத்தி மயங்கினவனாகி அழுதுகொண்டிருக்கும் பந்துக்களின் மத்தியில் மரணமடைகிறான் அப்பொழுது இரண்டு எம தூதர்களைப் பார்க்கிறான். அவர்கள் கோபப்பார்வையால் பயங்கரமான ஸ்வரூபம் உள்ளவர்கள் அவர்களைக் கண்டு மனம் நடுங்கி விஷ்டை போடுகிறான். மூத்திரத்தை விடுகிறான். அவர்கள் 'இவனை யாதனா சரீரத்தில் அடைத்துக் கழுத்தில் காலபாசத்தைக் கட்டி, குற்றவாளியை அரசனுடைய சேவகர்கள் கொண்டுபோவது போல் இழுத்துக்கொண்டு போகிறார்கள். பின்னும்

அதட்டுகிறார்கள், அதனால் அந்தப் புருஷனுடைய ஹிருதயம் வெடித்துச் சரீரம் நடுங்குகிறது.

மேலும், போகும் வழியில் அவனுடைய சரீரத்தை நாய்கள் கடித்துப் புஜிக்கின்றன. அப்பொழுது மிகுந்த துன்பத்தை யடைந்து தன்னால் செய்யப்பட்ட பாபத்தை நினைத்து கொள்ளுகிறான். செல்லுகிற மார்க்கத்திலுள்ள மணல்கள் மிகவும் உஷ்ணங்களாக இருக்கின்றன. பசி, தாகம் மிகுதியாக உண்டாகின்றன. வெயில் மிகவும் கடுமையாயிருக்கிறது. சஹிக்க முடியாத காற்று வீசுகிறது. காட்டுத் தீயின் உபத்திரவம் மிகுதியாயிருக்கிறது. தங்குமிடமாவது குளம் முதலிய ஜலாதாரமாவது இல்லை. அந்த மார்க்கத்தில் நடக்க முடியாமல் பாபியான புருஷன் கஷ்டப்படுகிறான். அப்பொழுது கூடச்செல்லும் எமபடர்கள் கசையால் (குரடாவினால்) முதுகில் அடிக்கிறார்கள். அடிப்பட்டுச் சிரமத்துடன் மெள்ள மெள்ள நடக்கிறான். இப்படிப் பாபியானவன் அடிக்கடி எமபடர்களால் அடிக்கப்பட்டுக் கீழே விழுந்து மூர்ச்சை அடைந்து பின்பு எழுந்திருந்து பாபிகள் செல்லும் மார்க்கமாக எமலோகஞ் செல்லுகிறான. எமலோகமானது இப்பூமியிலிருந்து 99,000 யோசனை தூரமிருக்கிறது. அவ்வளவு தூரத்தையும் கடந்து மூன்று முகூர்த்தங்களுக்குள் எமபடர்கள் பாபியை யமலோகம் கொண்டு போகிறார்கள். பாபம் அதிகமாக இருக்குமானால் இரண்டு முகூர்த்தங்களில் இழுத்துக் கொண்டு செல்லுகிறார்கள்.

25–34. அவ்விடம் சென்றபின் ஒரு நரகத்தில் குறைக்கொள்ளி முதலியவைகளைக் கொண்டு

பாபியின் சரீரமானது எரிக்கப்படுகிறது. மற்றொரு இடத்தில் அவன் தன் சரீரத்தை தானே வெட்டிப் புஜிக்கிறான் அல்லது பிறரால், வெட்டிக் கொடுக்கப் பட்டு, தன்னுடைய சரீரத்தின் மாமிசத்தையே புஜிக்கிறான். மேலும் அந்த உலகத்தில் நாய்களும் கழுகுகளும் பாபிகளை ஜீவித்திருக்கும்பொழுதே கொத்தி நரம்புகளை இழுக்கின்றன. சர்ப்பம், தேள், கொசு முதலியவை கடித்து உபத்திரவிக்கின்றன, மேலும், பாபஞ் செய்தவர்கள் புருஷர்களானாலும், ஸ்திரீகளானாலும், புணர்ச்சியாலுண்டாகும் பாபத்தின் பலங்களாகிய அவயங்களைக் துண்டிப்பது, யானை முதலியவைகளைக் கொண்டு முறிக்கச் செய்வது, மலையின் சிகரத்திலிருந்து கீழே தள்ளுவது, ஜலத்தில் மூழ்கச் செய்வது, குழியில் புதைப்பது, முதலிய நரகவேதனைகளை யனுபவிக்கிறார்கள் ஓ அம்ம! நரகமும் (கஷ்டம்) ஸ்வர்க்கமும் (ஸுகமும்) இவ்விடத் திலேயே இருக்கின்றன. நரகத்திலுள்ள யாதனைகள் இவ்விடத்திலும் இருக்கின்றன. (எமலோகத்தில் இருப்பது பொய்யென்று நினைக்கவேண்டாம் என்று கருத்து) சம்சாரத்தில் தன்னுடைய குடும்பத்தையும் தன்னுடைய சரீரத்தையும் போஷித்து மரணம் அடைந்தவன் அவைகளை விட்டுச் செய்த பாபத்தின் பலனாகிய மேற்காட்டிய உபத்திரவங்களை அடைகிறான். இந்தச் சரீரத்தை விட்டபின்பு தானொருவனாக எமலோகஞ் செல்லுகிறான். (பந்துக்களொருவருங் கூட வருகிறதில்லை யென்பது கருத்து) பிராணிகளுக்கு அவனால் செய்யப்பட்ட துரோகத்தாலுண்டாகும் பாபமே அவனுக்கு எமலோக மார்க்கத்தில் பாதேயமாக (கட்டுச்சாதம்) இருக்கிறது. (அதன் பலனை அனுபவித்துக் கொண்டு போகிறான் என்பது

கருத்து) மேலும் அவன் பாபத்தைச் செய்து குடும்பத்தைப் போஷித்ததாலுண்டானதும், தெய்வத்தால் கொடுக்கப்பட்டதுமான பலனை நரகத்தில் அனுபவிக் கிறான், பணம் நஷ்டமான பொழுது அதற்குடையவன் துக்கிப்பதுபோல மிகவும் வருத்தத்தை அடைகிறான். அதர்மத்தையே செய்து குடும்பத்தைப் போஷிப்பவன் அந்த தாமிஸ்ரம் என்னும் கஷ்டமான நரகத்தை அடைகிறான். (நியாயமாகச் சம்பாதித்துக் குடும்பத்தைப் போஷிக்கவேண்டுமென்பது கருத்து) மனித சரீரத்திற்குத் தாழ்ந்த சரீரங்கள் எவ்வளவு இருக்கின்றனவோ, அவைகளைக் கிரமமாக அடைந்து சுத்தனாகி, (பாப பலத்தை அனுபவித்து) திரும்பவும் மனுஷ்ய சரீரத்தை அடைகிறான்.

Released by Maran's Dog, Toronto , Canada

(தொடர்ச்சி)

1–11 ஈசுவரனால் தூண்டப்பட்ட கர்மவசத்தால் ஜந்துவானவன் சரீரத்தை அடையவேண்டி ரேதஸ்ஸாகப் புருஷனிடத்தில் பிரவேசிக்கிறான். அது பின்பு ஸ்திரீயினுடைய கர்பத்தை அடைகிறது. அதன் பிறகு அந்த ரேதஸ்ஸானது ஒரு நாளில் சுக்கலமும் (புருஷனுடைய ரேதஸ்) சோணிதமும் (ஸ்திரீயின் உடையது) மிச்சரமாகிவிடுகிறது. ஐந்து நாட்களில் குமிழிபோல வட்டமாகி விடுகிறது. பத்து நாட்களில் இலந்தைப் பழம் போல் கொஞ்சம் கெட்டியாகிறது. அதன் பிறகு மாமிசமாக முட்டை போலாகிறது. ஒரு மாதமானவுடன் தலை உண்டாகிறது. இரண்டு மாதங்களில், கை, கால் முதலிய அவயவங்களுடன் சரீரம் உண்டாகிறது. மூன்று மாதங்களில் நகங்களும், மயிர்களும், எலும்புகளும், தோல்களும், ஆண் குறி அல்லது பெண்குறி முதலியவைகளும், துவாரங்களும் உண்டாகின்றன. நான்கு மாதங்களில் ஏழுவகையான தாதுக்களும் (இரத்தம், மாமிசம், மஜ்ஜை முதலியவை) ஐந்து மாதங்களில் பசி, தாகங்களும் உண்டாகின்றன. ஆறாவது மாதத்தில் ஜராயுவென்ற நரம்பினால் சுற்றப்பட்டு அந்தக் கர்ப்பமானது மாதாவினுடைய வயிற்றில் வலது பக்கத்தில் அலைந்து கொண்டிருக் கிறது. ஏழாவது மாதத்தில் அந்த ஜீவன் தன்னுடைய முன் ஜன்ம விருத்தாந்தத்தையும், தனக்கு மாயையால் பந்தமேற்ப்பட்டுத் தான்சரீரத்தை அடைந்ததையும் நினைத்துக் கொள்ளுகிறான். மாதாவினால் புஜிக்கப் பட்ட அன்னத்தாலும், பானத்தாலும் அந்தக்

Released by Maran's Dog, Toronto , Canada

தாதுக்கள் விருத்தியடைகின்றன. (ஆப்யாயநீ என்ற ஒரு நாடியின் ஒரு முனை சிசுவின் நாபியில் கட்டப்பட்டு இருக்கிறது. அதனுடைய மற்றொரு முனை ஸ்தீரியினுடைய நரம்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதன் வழியாக ஸ்திரீகளால் புஜிக்கப்பட்டவைகள் சிசுவின் வயிற்றில் செல்லுகின்றன. அதனால் அந்தச் சிசுவானது விருத்தியடைகிறது. (மார்க்கண்டேய புராணம்) மேலும், அந்தச் சிசுவானது அமேத்யம், மூத்திரம் இவைகளுள்ள குழியில் வஸிக்க மனம் இல்லாததானாலும் வேறுகதி இல்லாததனாலும் அநேக புழுக்கள் நிறைந்த அந்தப் பள்ளத்தில் வஸிக்கிறது. அவ்விடத்திலிருக்கும் புழுக்கள் மிகுந்த பசியுள்ளவைகளாகி மிகவும் மெதுவாகிய இந்தச் சிசுவின் சரீரத்தைக் கடிக்கின்றன. அதனால் ஒவ்வொரு க்ஷணத்திலும் இந்தக் குழந்தை மிகுந்த மூர்ச்சையை அடைகிறது. பின்னும், மாதாவினால் புஜிக்கப்பட்ட உறைப்பு, காரல், உஷ்ணம், உப்பு புளிப்பு ஆகிய அன்ன பானம் முதலியவைகள் அந்தச் சிசுவின் சரீரத்தை ஸ்பர்சிக்கும் போது எல்லா அவயவங்களிலும் அதற்கு வேதனை உண்டாகிறது. ஜராயுவினால் கட்டப்பட்டிருப்பதால் கழுத்து, முதுகு ஆகிய இவைகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. வெளியில் நரம்புகள் சுற்றிக் கொண்டிருக்கின்றன. ஆதலால் கூட்டில் அடைக்கப்பட்ட பறவைபோல் தனதிஷ்டப்படி செல்லமுடியாமல் அந்த சிசுவானது கஷ்டப்படுகிறது.

மேலும் அந்த ஜீவன் அப்பொழுது முந்திய கர்ம வசத்தால் அநேக ஜன்மங்களில் தன்னால் செய்யப் பட்ட கர்மங்களை நினைத்துக் கொள்கிறான்.

இப்படி மூச்சு விடுவதற்கும் முடியாமலிருந்து மாத்ரு கர்பத்தில் எவ்வித சௌக்யத்தை அடைகிறான்? (கஷ்டப்படுகிறான் என்று கருத்து) ஏழாவது மாதம் முதல் முன் ஜன்மத்திய ஞாபகமுள்ளவனாகி பிரசவ வாயுவினால் அசைக்கப்பட்டுத் தனக்குச் சகோதரம் ஆகிய (ஒரே வயிற்றிலுண்டானதால்) விஷ்டையில் உண்டாகும் புழுவைப் போல் ஒரே விடத்தில் நிலையாக இருக்கிறதில்லை. தேகத்தையே ஆத்மாவென்று நினைத்தவனும் கர்ப்பவாசத்திலிருந்து பயந்தவனும், ஏழு தாதுக்களால் கட்டப்பட்டவனும் ஆகிய அந்த ஜீவன் தன்னை மாதாவின் கர்ப்பத்தில் ஜனிக்கும்படியாகச் செய்தவராகிய பகவானைப் ப்ரார்த்தித்துக் கைகூப்பி ஸ்தோத்திரம் செய்கிறான்.

13–22 "அசத்தான எனக்கு, தக்கபடி இப்போர்ப் பட்ட கர்ப்பவாசத்தை எவர் உண்டுபண்ணினாரோ, ஜகத்தைக் காப்பாற்றுவதற்காகச் சரீரத்தை யெடுத்துக் கொண்டிருக்கும் அந்தப் பகவானுடைய தாமரை மலர் போன்றவைகளும், பூமியில் ப்ரகாசிக்கின்றவைகளும், பயமற்றவைகளுமான பாதங்களைச் சரணமடைகிறேன். பூதங்கள் இந்திரியங்கள், மனது ஆகிய இவைகள் அடங்கிய தேகமாகப் பரிணமித்திருக்கும் மாயையை ஆசிரயித்து இந்த மாதாவின் வயிற்றில் கர்மத்தால் கட்டப்பட்டவன்போல வஸிக்கும் நான்; துக்கப்படும் என்னுடைய ஹிருதயத்தில் தோன்றுகிறவரும், விகாரமற்றவரும், உபாதி சம்பந்தமற்றவரும், குறைவற்ற ஞானமுள்ளவருமாக இருக்கும் பகவானை நமஸ்கரிக்கிறேன்". (இந்தப் புருஷன் புண்யபாபங்கள் அற்றவன்' என்ற ச்ருதியின்படி சுத்தனாகிய ஜீவனுக்கும் பரமாத்மாவிற்கும் ஏன் இவ்வளவு

பேதமென்றால் அடுத்த ஸ்லோகத்தில் சமாதானங் கூறப்படகிறது.)

ஐந்து பூதங்களைக் கொண்டு செய்யப்பட்டிருக்கும் சரீரத்தால் பொய்யாக மறைக்கப்பட்டவனும், அந்தச் சரீரத்தின் சம்பந்தம் அற்றவனும், இந்திரியங்கள், குணங்கள், சிதாபாசம் ஆகிய இவைகளின் ஸ்வபமாயுள்ளவனுமாகிய நான் எங்கும் தடை படாத மஹிமை உள்ளவரும், எல்லாவற்றையும் அறிந்தவரும், ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவர்களைவிட மேலானவருமான இந்தப் புருஷனை நமஸ்கரிக்கிறேன். (ஜீவன் அவித்தையுள்ளவன். பரமாத்மா அவித்தை யற்றவர். அதுவே இருவர்களுக்குமுள்ள பேதம். எவருடைய மாயையால் ஜீவன் தன்னுடைய நிஜ ரூபத்தைமறந்து, குணங்களாலேற்படும் கர்ம பந்தமுள்ள சம்சார மார்க்கத்தில் அதிலுண்டான கஷ்டங்களை அனுபவித்துச் சஞ்சரிக்கிறானோ, அந்தப் பகவான் உடைய அனுக்கிரகத்தைக் காட்டிலும் வேறு உபாயத் தால் தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்வான்? ஞானத்தால் கர்ம பந்தம் விலகுமானாலும் அந்த ஞானம் ஈசுவரனுடைய அனுக்கிரகத்தாலேயே உண்டாக வேண்டுமாகையால் ஈசுவரனை நமஸ்கரிக்க வேண்டுமென்று கருத்து).

மேலும், ஸ்தாவரங்களிலும், ஜங்கமங்களிலும் அந்தர்யாமியாக இருப்பவராகிய அந்தத் தேவனைக் காட்டிலும் வேறு யாரால் எனக்கு முக்காலத்திய அறிவு கொடுக்கப்பட்டது? (அவராலேயே கொடுக்கப் பட்டது). ஜீவரூபமாகிய கர்ம மார்க்கத்தை அனுசரிப் பவர்களான நாம் மூவகையான தாபத்தை நிவிருத்திக்

கொள்வதற்காக அவரையே ஸேவிப்போம். ஓ பகவன்! இந்த மாதாவின் வயிற்றில் அமேத்யம் மூத்திரம் இவைகளில் விழுந்து ஜாடராக்கினியால் மிகவும் கொதித்ததேகமுள்ளவனும் வெளியில்போக விரும்பி மாதங்களை எண்ணிக் கொண்டு இருப்பவனுமாகிய இவனை எப்பொழுது இவ்விடத்திலிருந்து வெளிப் படுத்துவீர்? ஓ ஈச! மிகுந்த தயையுள்ளவரும், ஒப்பற்றவருமாகிய நீர் (தனக்குத் தானே உபமானம்) இவனுக்கு இம்மாதிரியான ஞானத்தைக் கொடுத்தீர் அல்லவா? அப்போர்ப்பட்ட நீர் உம்மால் செய்யப்பட்ட உபகாரத்தாலேயே சந்தோஷத்தை அடைய வேண்டும்.

நீர் செய்த உபகாரத்திற்குப் பதில் அஞ்சலியைவிட வேறொன்றும் செய்யமுடியாது. ஏழு நரம்புகளால் கர்ப்ப வாசத்தை அடைந்த பசு முதலியவை தங்கள் உடைய தேஹத்திலுள்ள சுக துக்கங்களை மட்டும் தெரிந்து கொள்ளுகின்றன. நான் உம்மால் கொடுக்கப் பட்ட ஞானத்தால் சமம், தமம் முதலியவைகளுள்ளவன் ஆகிய போக்தாபோல் தோன்றும் புராண புருஷராகிய உம்மை வெளியிலும், ஹிருதயத்திலும், நேரிலும் தரிசிக் கிறேன். (பசு முதலியவைகளுக்கு இவ்விதத் தரிசன மில்லை) ஓ விபுவே! பூமியானது பாழும் கிணற்றிற்கு ஒப்பானது. அதனை யடைந்தவுடன் தேவராகிய தங்களுடைய மாயையானது பிடித்துக் கொள்ளுகிறது. உடனே தேஹத்தில் நானென்ற புத்தியும், புத்திரன், மித்திரன் முதலியவைகளில் என்னைச் சார்ந்தவையென்ற எண்ணமும் உண்டாகிறது. அதனால் ஜீவன் சம்சார சக்கரத்தை அடைகிறான். ஆனதால் இந்தக் கர்ப்ப வாசம் மிகவும் கஷ்டமானாலும் வெளியில் செல்ல எனக்கு இஷ்டமில்லை. ஆகையால் தைர்யமாக

நான் இவ்விடத்திலேயே வஸித்து ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பாதங்களை ஸேவித்து பலவகையான ஜன்மங்கள் திரும்பவும் நேராம லிருக்கும்படி புத்தியைக் கொண்டு ஆத்மாவைச் சம்சாரத்திலிருந்து கரைசேர்க்கிறேன் என்று ஜீவன் சொல்லுகிறான்.

23–51 இப்படி நிச்சய புத்தியுடனிருக்கும் அவனைப் பத்து மாதங்கள் சென்றவுடன் பிரசவ வாயுவானது வெளிப்படுத்துவதற்காகத் தலைகீழாகத் திருப்பிவிடுகிறது. பின்பு அவன் தலைகீழாக இருந்து மிகுந்த வருத்ததுடன் கர்ப்பத்திலிருந்து வெளியில் வருகிறான். அப்பொழுது முந்திய எண்ணங்களெல்லாம் மாறி எல்லாம் மறந்துபோகின்றன. மூர்ச்சை அடைந்து பூமியில் விழுகிறான். மேலும் ஸ்திரீயினுடைய இரத்தத்தால் பூசப்பட்டு அமேத்தியத்திலுண்டாகும் புழுப்போலத் துடிக்கிறான். விவேகமற்றவனாகப் புத்தி, மயக்கம் மடைந்து அழுகிறான். மேலும், அந்தச் சிசுவைப் போஷிப்பவர்கள் அதன் அபிப்பிராயத்தை அறியாமல் அதற்கு இஷ்டமில்லாத ஆகாரம் முதலியவைகளைக் கொடுக்கிறார்கள். அப்பொழுது அந்த ஜீவன் அதனை வேண்டாமென்று சொல்லச் சக்தியற்றவனாயிருக்கிறான். பின்னும் வியர்வை நாற்றமுள்ள அசுத்தப்படுக்கையில் படுக்க வைக்கிறார் கள். அப்பொழுது அவன் உட்காருவதற்கும், எழுந்திருப்பதற்கும், அசைவதற்கும் முடியாமல் சொரிந்து கொள்வதற்கும் முடியாமல் அழுகிறான்.

இப்படி ஞானமற்றவனாக இருக்கும் மெதுவான தோலைக் காட்டுக் கொசுக்களும், மூட்டுப் பூச்சிகளும், கொசுக்களும் கடிக்கின்றன. இப்படி

பால்ய வயதில் (ஐந்து வயது வரையில்) துக்கத்தை அனுபவித்து, பௌகண்டத்தில் (16 வயது வரையில்) மிகுந்த கஷ்டத்தை அனுபவித்து யௌவன வயதை அடைந்தும் தன்னுடைய இஷ்டம் நிறைவேறாமல் துக்கமடைந்து அறியாத் தன்மையால் விசேஷ கோபம் உள்ளவனாகிய, தேகத்துடன் விருத்தி யடைகிற அபிமானத்தாலும், கோபத்தாலும் ஆத்ம நாசத்திற்காகக் காமியாகப் பிறருடன் விரோதம் செய்துகொள்ளுகிறான்.

ஐந்து பூதங்களால் ஏற்பட்ட சரீரத்தில் அக்ஞனாகிய ஜீவன் அடிக்கடி "நான் என்னுடையது" என்ற அபிமானத்தை அடைகிறான். அதனால் அந்த சரீரத்தைப் போஷிக்கவேண்டி கர்மங்களைச் செய்கிறான். பின்பு அந்தக் கர்மங்களால் கட்டப்பட்டு சம்சாரத்தை அடைகிறான். அந்தக் கர்மங்களே இவனுக்குத் துக்கத்தை உண்டுபண்ணிக்கொண்டு இவனை அனுசரிக்கின்றன. ஜீவன் அவித்தையாலும், கர்மத்தாலும் கட்டப்படுகிறான். தவிரவும் நல்மார்க்கத் திலிருப்பவர்களானாலும், தங்கள் வயிற்றை நிறைப்பவர்களும், ஸ்திரீ சங்கமம் செய்வதிலேயே விருப்பமுள்ளவர்களுமான பிராணிகளுடன் சேர்ந்து அவைகளில் ஆசைகொள்வார்களேயாகில் முன்னே காட்டியபடி நரகத்தை அனுபவிக்கிறார்கள். அசத்துக்களுடன் சேருவதால் சத்யம், சௌசம் (சுத்தனாக இருப்பது), தயை, மௌனம், புத்தி, பரமாத்ம விஷய ஞானம், வெட்கம், தனதான்ய முதலிய சம்பத்து, கீர்த்தி, பொறுமை மனத்தை அடக்குவது, வெளியிலிருக்கும் இந்திரியங்களை அடக்குவது மேலான தன்மை ஆகிய இவைகள்

யாவும் குறைகின்றன; ஆனதால் மனத்தை அடக்காத வர்களும் மூடர்களும் தேகத்தையே ஆத்மாவென்று நினைத்தவர்களும் விளையாடுவதற்காக வளர்க்கப்படும் மிருதங்கள்போல் ஸ்திரீகளுக்கு சுவாதீனப்பட்டவர் களும், துக்கிக்கத் தக்கவர்களுமான அசாதுக்களுடன் சேரக்கூடாது.

ஸ்திரீயினுடைய சேர்க்கையாலும், ஸ்திரீகள் இடத்தில் விசேஷ ஆசை சொண்டவனுடைய சேர்க்கையாலும், மோகமும், பந்தமும், எவ்வளவு உண்டாகுமோ அவ்வளவு மற்றவர்களுடைய சேர்க் கையால் உண்டாகிறதில்லை. (ஸ்திரீகளிடம் ஆசை வைப்பது அதிகக் கெடுதியை கொடுக்கும் என்பது கருத்து).

முன்னொருகால் ப்ரஹ்மதேவர் தம்முடைய புத்திரியின் அழகைப் பார்த்து மோகித்து அவளிடம் ஆசை கொண்டார். அப்பொழுது அவள் மான் வேடங்கொண்டு ஓடினாள். ப்ரஹ்மதேவரும் மான் உருவத்தைத் தரித்து வெட்கமில்லாதவராகி அவள்பின் சென்றார். அப்படி இருக்க அந்த ப்ரஹ்மதேவரால் சிருஷ்டிக்கப்பட்ட மரீசி முதலியவர்களால் உண்டு பண்ணப்பட்ட காசியபர் முதலியவர்களால் சிருஷ்டிக்கப்பட்ட தேவர்கள், மனிதர்கள் முதலியவர் களுக்குள் ஸ்ரீ நாராயண மகரிஷியைத் தவிர வேறு யார் தான் ஸ்திரீயாகிய மாயையில் இழுக்கப் படாதவர்கள் ? ஸ்திரீமயமாகிய என்னுடைய மாயையின் பலத்தைப் பாருங்கள். திக்குகளை ஜயிப்பவர்களானாலும் ஸ்திரீயினுடைய புருவ நெரித்தலால் ஜயிக்கப்படுகிறார்கள். ஆனதால் யோக

சித்தியை அடைய விரும்பிய என்னைச் சேவித்து, அதனால் ஆத்ம லாபத்தை அடைந்தவன் ஒரு பொழுதும் ஸ்திரீகளிடத்தில் ஆசை வைக்கக்கூடாது.

மோக்ஷத்தை விரும்பியவனுக்கு ஸ்திரீகள் நரகத்தைக் கொடுக்கக்கூடியவர்கள் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். தேவனால் உண்டு பண்ணப்பட்ட மாயையாகிய ஸ்திரீ யானவள் சிசுருஷை பண்ணுவதுபோல் புருஷனுடைய சமீபம் வருகிறாள் அல்லவா ? அதனைத் தனக்கு மிருத்யுவென்று நினைக்க வேண்டும். மேலும் அவள் புற்களால் மறைக்கப் பட்ட கிணற்றுக்கொப்பானவள். ஸ்திரீயையே நினைத்துக் கொண்டு மரணமடைந்தவன் ஸ்திரீ ஜன்மத்தை அடைகிறான். வேடனுடைய கானமானது மிருகத்திற்கு எப்படிக் கெடுதியை உண்டுபண்ணு கிறதோ அப்படி தனம், புத்திரன்,வீடு முதலியவை தனக்கு அனுகூலங்கள் போலத் தோன்றினாலும் அவைகளைத் தெய்வத்தாலேற்படுத்தப்பட்ட மிருத்யுக்களென்றே நினைக்க வேண்டும்.

மேலும், இந்த ஜீவன் தனக்கு உபாதியாகிய தேஹத்துடன் (லிங்க சரீரத்துடன்) எப்பொழுதும் கர்மங்களைச் செய்து கொண்டு அவைகளின் பலனை அனுபவிக்கிறான். ஜீவனுக்கு உபாதியாயிருக்கும் லிங்க தேகமானது ஜீவனை அனுசரிக்கிறது. பூதங்கள், இந்திரியங்கள், மனது ஆகிய இவைகள் அடங்கியதே தேகம். (ஜீவனுக்குப் போகத்தை அனுபவிக்குமிடம்.) அந்தத் தேஹமானது தன்னுடைய காரியத்தைச் செய்யச் சக்தியற்றதாக விருப்பது மரணம் எனப்படுகிறது. அந்தத் தேஹத்தில் உற்பத்தியே

ஜனனமெனப்படுகிறது; சக்ஷீரிந்திரியத்திற்கும் இருப்பிடம் ஆகிய நேத்திரகோளத்தில்உருவம் முதலியவைகளைப் பார்க்க எப்படிச் சக்தியில்லையோ, அப்படியே சக்ஷீரிந்தியத்திற்கும் சக்தியில்லை. இவ்விரண்டிற்கும் எப்படி யோக்கியதை இல்லையோ அப்படியே திருஷ்டாவாகிய ஜீவனுக்குப் பார்க்கும் தன்மையில்லை. (ஸ்தூலதேகத்தின் நாசத்தால் லிங்க சரீரத்திற்குக் கெடுதியுண்டாகிறது. அதுவே ஜீவனுக்கு மரணமென்று சொல்லப்படுகிறதே ஒழியச் ஸ்வபாவத்திலில்லை.) ஆனதால் ஜனனமரணங்களில் பயப்பட வேண்டாம். புத்திரன் பிறந்தது முதலியதால் சந்தோஷத்தை அடையவேண்டாம். ஜீவனுடைய தன்மை இம்மாதிரியென்றா அறிந்து, ஒன்றிலும் ஆசை வைக்காமலிருக்கவேண்டும். நன்றாக விசாரித்து உண்மையை அறிந்ததும், யோகம், வைராக்யம் ஆகிய இவைகளுள்ளதுமான புத்தியைக் கொண்டு தேஹம் முதலியவைகளில் அபிமானம் வைக்காமல் சஞ்சரிக்க வேண்டும். இவ்வுலகம் மாயையால் செய்யப்பட்டு இருக்கிறது.

நோட்:

இந்த அத்தியாயத்தில் **விஜயத்வஜீய** வியாக் யானத்தின்படி 51 சுலோகங்களிருக்கின்றன. மற்ற வியாக்யானங்களில் 49, 50 இந்த இரண்டு சுலோகங்களும் காணப்படவில்லை. அவைகளின் அர்த்தமாவது: புருஷனுடைய இந்திரியங்கள் தங்கள் தங்களுடைய சுகதுக்கங்களை அறியுமேயன்றி மற்றவையின் சுகதுக்கங்களை எப்படி அறிகிறதில்லையோ,

(நேநித்திரமானது காதின் சுகத்தை அறியாது) அப்படி ஈசுவரனுடைய அம்சங்களான ஜீவர்கள், பிறருடைய வைகளைத் தெரிந்துக் கொள்ளுகிறதில்லை. தேஹம் முதலியவைகளில் பற்றுதலில்லாத ஜீவனுக்கு ஞானமே புருஷார்த்தமாகிறது. சுகதுக்கம் முதலியவை ஆத்மாவிற்கு சம்பந்தமில்லாதவை. அவை தேகத்திற்கும் சம்பந்தமில்லாதவை.

இந்த முப்பத்தோறாவது அத்தியாயத்தை 32 ஆவதாகவும், இந்த ஸ்கந்தம் 14 ஆவது அத்தியாயம் உள்ளதாகவும் விஜயத்வஜீய வியாக்யானத்துடன் தேவநாகரியில் அச்சிட்டிருக்கும் புத்தகத்தில் காணப்படுகிறது. அத்தியாயக் கணக்கு மாறினாலும், ஸ்லோகத்திற்கு அர்த்தம் விடாமல் எழுதப்பட்டிருக் கிறது.

அத்தியாயம்–32

உத்தம கதி

எவன் கிருஹஸ்தனாகவிருந்து அதற்குரியவைகளான தர்மங்களையும், காமம், அர்த்தம் இவைகளையும் விரும்பி அவைகளை அனுஷ்டிக்கிறானோ எவன் பகவானை ஆராதிப்பதாகிய தர்மத்தை விட்டுக் காமத்தால் மூடனாகி, பகவானை விடக்கீழான தேவர்களையும், சிரத்தையுடன் பிதிருக்களையும் பூஜிக்கிறானோ, அவர்களை உத்தேசித்து விரதங்களைச் செய்கிறானோ. அந்தப் புருஷன் சந்திரலோகம் சென்று அவ்விடத்தில் புண்ய பலனை அனுபவித்துத் திரும்பி பூலோகம் வருகிறான். அனந்தாசனராகிய ஸ்ரீமகாவிஷ்ணு ஆதிசேஷனாகிய படுக்கையில் படுத்துத் தூங்கும் போது மேற்காட்டிய கிருஹஸ்தர்கள் செல்லக்கூடிய லோகமும் நாசமடைகிறது. (காம்யமான கர்மத்தைச் செய்தவர்களின் கதி சொல்லப்பட்டது.)

5–7. எவர்கள் காமத்தை விரும்பியாவது, அர்த்தத்தை விரும்பியாவது தங்கள் தர்மத்தை அனுஷ்டிக்கிறதில்லையோ எவர்கள் ஒன்றிலும் ஆசைப்படுகிறதில்லையோ, செய்த கர்மங்களைப் பகவானிடம் சமர்ப்பிக்கிறார்களோ, மிகவும் சாந்தர் களோ, சுத்தமான மனதுள்ளவர்களோ மோட்சத்திற்கு உபயோகமான தர்மத்தையே அனுஷ்டிப்பவர்களோ, மமதை அற்றவர்களோ, அஹங்காரமற்றவர்களோ அவர்கள் சுத்தமான ஸ்வதர்மத்தை அனுஷ்டித்து அதனால் சித்த சுத்தியை அடைந்தவர்களாகி சூரியமண்டலத்தின் வழியாக பரிபூரணராகிய

புருஷனை அடைகிறார்கள். அந்தப் புருஷன் காரணத்திற்கும் காரியத்திற்கும் அதிபதி; எல்லாவற்றிற்கும் காரணமாயிருப்பவர்; இந்த ஜகத்தைப் படைத்தவர்; அதனைச் ஸம்ஹரிப்பவர்.

8–10. ஹிரண்யகர்ப்பரை உபாசிப்பவர்கள் ப்ரஹ்மதேவருடைய ஆயுளான இரண்டு பரார்த்தம் வரையிலிருக்கக் கூடிய லோகத்தை அடைகிறார்கள், முக்குண ஸ்வரூபியும், மேலானவருமான ப்ரஹ்மதேவர் பூமி, ஜலம் தேஜஸ் வாயு, ஆகாசம், மனஸ், இந்திரியங்கள், அதன் விஷயங்கள், அகங்காரம் ஆகிய இவைகளுடன் கூடிய பிரஹ்மாண்டத்தை உபஹரிக்க விரும்பி, இரண்டு பரார்த்தங்களுக்குப் பிறகு அவ்யாகிருதி (சூட்சுமமான) ஸ்வரூபத்தை எப்பொழுது அடைகிறாரோ, அப்பொழுது ஹிரண்யகர்ப்பரை உபாசிப்பவர்களும் மனத்தை அடக்கினவர்களும், பிராணனை ஜயித்தவர்களும் வைராக்கியம் அடைந்தவர்களும் அபிமானமற்றவர்களுமான யோகிகள் பரமானந்த ஸ்வரூபியும் மேலானதும் புராண ஸ்வரூபமுமான பரப்ரஹ்மத்தை அந்த ஹிரண்யகர்பருடன் அடைகிறார்கள்.

11–16. ஆனதால், ஸகல பிராணிகளுடைய ஹ்ருதய கமலத்தில் வசிக்கும் அந்தப் பகவானிடத்தில் மனத்தைச் செலுத்தி அவரை நீ உபாசிக்கவேண்டும். அவருடைய மஹிமை உன்னால் என்னிடமிருந்து அறியப்பட்டதே. தாவரங்கள், ஜங்கமங்கள் ஆகிய இவைகளுக்கு முந்தியவரும் வேதகர்ப்பருமாகிய ப்ரஹ்மதேவர் யோகத்திற்கு அதிபதிகளும் யோகத்தை வெளிப்படுத்தியவர்களுமான மஹரிஷிகளுடன்

ஸனகர் முதலியவர்களுடனும் பேதஞானத்தாலும் அபிமானத்தாலும் பலனை உத்தேசியாமல் அனுஷ்டித்த கர்மங்களாலும் கர்த்தா வென்ற எண்ணத்தாலும் தங்களுடைய கர்மத்தின் பலனாகிய ஐசுவரியத்தை அனுபவித்துப் பிரளய காலத்தில் ஸகுணப் ப்ரஹ்மத்தை அடைந்து ஈச்வரரூபியான காலத்தின் மஹிமையால் குணங்கள் ஒன்றோடொன்று சேரும்போது (ஸ்ருஷ்டி காலத்தில்) முன்போல உண்டாகிறார். (ப்ரஹ்மதேவரும் சனகர் முதலியவர்களும் இம்மாதிரி பேத ஞானத்தால் தங்கள் தங்கள் அதிகாரமாகிய ஸம்சாரத்தையடைகிறார்கள். மற்றவர்கள் ஸம்ஸாரத்தை அடைகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை என்று கருத்து.)

16–22. எவர்கள் கர்மத்திலேயே ஆசையுள்ளவர்களாகி மிகுந்த சிரத்தையுடன் காம்ய கர்மங்களையும், நித்ய கர்மங்களையும் அனுஷ்டிக்கிறார்களோ. மேலும் எவர்கள் ரஜோ குணமுள்ள மனதுள்ளவர்களாகியும். காமத்தால் நிறைந்த சித்தமுள்ளவர்களாகியும் இந்திரியங்களுக்கும் வசப்பட்டவர்களாகியும் கிருஹஸ்த தர்மத்திலேயே மிகுந்த பிரீதியுடன் பிதிருக்களைப் பூஜிக்கிறார்களோ. தர்மம் அர்த்தம் காமம் ஆகிய இவைகளையே விரும்புகிறார்களோ. கானம் பண்ணக் கூடிய மிகுந்த மாகாத்மியமுள்ள ஸ்ரீமஹா விஷ்ணு வினுடைய கதையைக் கேட்பதில் ஆசையில்லாதவர்களோ பின்னும் நாசமற்றவராகிய பகவானுடைய கதாமிருதத்தை விட்டுக் கெட்ட கதைகளைக் கேட்கிறார்களோ, அவர்கள் தெய்வத்தால் கெடுக்கப் பட்டவர்கள்; அமேத்யத்தைப் புஜிக்கும் பன்றிகளுக்கு ஒப்பானவர்கள். கர்ப்பாதானம் முதல் மரணத்திற்குப் பிறகு செய்யக்கூடிய ஸமஸ்காரம் வரையிலுள்ள

கர்மங்களை அனுஷ்டித்த அந்த ஜனங்கள் தக்ஷிண மார்க்கமாகப் பிதிருலோகம் செல்லுகிறார்கள்; அவ்விடத்தில் தங்களுடைய புண்ய கர்மத்தின் பலனை அனுபவித்து அந்தப் புண்யம் நசித்தவுடன் திரும்பவும் இவ்வுலகத்திற்கு வந்து தங்கள் புத்திராதிகளிடத்தில் ஜனிக்கிறார்கள்.

22–43. ஆனதால் மிகுந்த பிரீதியுடன் பகவான் உடைய குணங்களைக் கேட்பது முதலிய பக்தியால் பரமேசுவரைப் பஜனம் செய். அவர் சேவிக்கத் தகுந்த பாதாரவிந்தங்களுள்ளவர்! ஸ்ரீ வாசுதேவரிடத்தில் பக்தி செய்யப்படுமானால் அது சீக்கிரத்தில் வைராக்கியத்தையும் பரப்ரஹ்ம தரிசனத்திற்கு உபயோகமான ஞானத்தையும் உண்டுபண்ணுகிறது; எந்தக்காலத்தில். இந்தப் பகவத் பக்தனுடைய சித்தமானது இந்திரிய வியாபாரங்களைக் கொண்டு ஒரே மாதிரியான விஷயங்களில், இது பிரியமானது, இது பிரியம் இல்லாதது என்ற பேதத்தை அடையாமலிருக்குமோ, அப்பொழுது அவன் ஸமதிருஷ்டியுள்ளதும், ஆசையற்றதும் ஹேயம் (விடக்கூடியது) உபாதேயம் (கிரஹிக்கக்கூடியது) இவைகளற்றதுமான அகிடபதத்தைப் (ஆனந்த ஸ்வரூபியாயிருப்பது) பார்க்கிறான்; ஞானமே பரப்ரஹ்மம் முதலிய சப்தங்களால் சொல்லப்படுகிறது; ஈசுவரனும் பரமாத்மாவுமான புருஷனொருவரே பார்க்கிறவர், பார்க்கப்படுகிறது, அதற்குச் சாதனங்கள் ஆகிய பலவகையாகத் தோன்றுகிறார்; யோகிகள் யோகத்தை நன்றாக அனுஷ்டித்து. அதனால் பிரபஞ்சத்தில் ஆசையை ஒழிக்கிறார்கள்; அதுவே அவர்கள் விரும்பிய யோகத்தின் பலனாகும். அகங்காரமென்பது ஒன்றானாலும் குணங்களால்

எப்படி மூன்றாக இருக்கிறதோ, அதே பூத ஸ்வரூபத்தால் எப்படி ஐந்து வகையுள்ளதோ, இந்திரிய ஸ்வரூபத்தால் பதினோரு வகையுள்ளதாக இருக்கிறதோ அண்டத்தை சரீரமாயுடைய ஜீவ ஸ்வரூபியாயும் இருக்கிறதோ மஹத்தத்துவம் முதலியவைகளால் உண்டுபண்ணப்பட்ட அந்த அண்டத்திலிருந்து எப்படி ஜகத்து தோன்றுகிறதோ, அப்படியே ஞான ஸ்வரூபியாகிய நிர்க்குண ப்ரஹ்மம் ஒன்றானாலும் அதுவே பகிர்முகங்களான (விஷயத்தில் செல்லுகிற) இந்திரியங்களைக் கொண்டு சப்தம் முதலிய தர்மங்களுள்ள பிரபஞ்சமாகத் தோன்றுகிறது. (உண்மையில் பிரபஞ்சமில்லை, மித்யையேயாம் என்று கருத்து) எப்பொழுது சிரத்தையுடனும், பக்தியுடனும் யோகத்தை அப்யஸித்து; அதனால் மனத்தை யொருவகைப்படுத்தி, ஆசைகளை யொழித்தது எவன் வைராக்கியத்தை அடைகிறானோ அவனுக்கு மேல் காட்டிய விஷயம் புலப்படும், (ப்ரம்ஹம், ஸத்யம், ஜகத் மித்யை என்பது.)

ஓ பூஜிக்கத்தக்கவளே! எதனால் பிரகிருதி புருஷன் ஆகிய இவர்களுடைய உண்மை தெரியுமோ, அப்படிப்பட்ட ஆத்ம ஞானத்தை உனக்குச் சொன்னேன்; நிர்க்குணமான ஞானயோகத்திற்கும், என்னையே ஆராதிப்பதாகிய பக்தி யோகத்திற்கும், பகவான் என்ற சப்தத்தின் அர்த்தமே பலனாகிறது அநேக குணங்களுக்கு ஆசிரயமாகிய திரவ்யமானது இந்திரியங்களால் பலவகையாகக் கிரஹிக்கப்படுவது போல் (பால் முதலிய வஸ்துக்கள் உருவத்திற்கும், ரசத்திற்கும், ஸ்பரிசத்திற்கும் ஆசிரயமாக இருக்கிறது. அது கண்ணால் வெளுப்பென்றும், நாக்கினால்

மதுரமென்றும் துவக்கினால் குளிர்ந்ததென்றும் கிரஹிக்கப்படுகிறதென்று கருத்து). பகவான் ஒருவர் ஆனாலும் சாஸ்திர மார்க்கங்களால் பலவகையாகக் கிரஹிக்கப்படுகிறார்; யாகங்களாலும். பூர்த்தங்களாலும் (குளம் கிணறு வெட்டுவிப்பது முதலியவை), தானத்தாலும் தபஸினாலும், வேதாத்தியயானத்தாலும், மீமாம்ஸையாலும், (தியானம்) மனத்தை அடக்குவதாலும் இந்திரியங்களைக் கெட்ட காரியத்தில் செல்ல ஒட்டாமல் தடுப்பதாலும், கர்ம சன்யாசத்தாலும் பலவகையான அங்கங்களுள்ள யோகத்தாலும் பக்தி யோகத்தாலும் காம்ய கர்மங்கள் நிஷ்காம கர்மங்கள் ஆகிய பிரவிருத்தி, நிவிருத்தி தர்மங்களாலும் ஆத்மாவின் உண்மையைத் தெரிந்து கொள்வதாலும், திருடமான வைராக்கியத்தாலும், ஸகுணராயும், நிர்க்குணராயும், தாமாகப் பிரகாசிப்பவருமான பகவான் அடையப்படுகிறார். நான்கு வகையுள்ள பக்தி யோகத்தை உனக்கு உபதேசித்தேன்; எது பிராணி களுக்குள் ஒடிக்கொண்டிருக்கிறோ (ஜனன மரணத்தை உண்டு பண்ணுகின்றதோ) அந்த அறியமுடியாத கதியுள்ள காலத்தின் ஸ்வரூபத்தையும் உனக்குச் சொன்னேன். ஓ அம்மா! எதனை அடைந்து ஜீவன் தன்னுடைய ஸ்வரூபத்தை மறந்து விடுகிறானோ அவித்தையாலும் கர்மங்களாலும் உண்டு பண்ணப் பட்ட பலவகையான அந்த ஸம்ஸாரத்தையும் நிரூபித்தேன் இதனைத் துஷ்டனுக்கு உபதேசிக்கக் கூடாது.

வணக்கமில்லாதவனுக்குச் சொல்லலாகாது, கர்வம் உள்ளவனுக்கும் துராசாரமுள்ளவனுக்கும் டம்பத் திற்காகத் தர்மத்தை அனுஷ்டிப்பவனுக்கும், அதிக

ஆசையுள்ளவனுக்கும், வீடு முதலியவைகளில் பற்றுள்ள புத்தியுள்ளவனுக்கும், என்னிடத்தில் பக்தியில்லாத வனுக்கும், என்னுடைய பக்தர்களைத் துவேஷிப் பவனுக்கும் ஒருபொழுதும் உபதேசிக்கக்கூடாது. சிரத்தையுள்ளவனும் பக்தனும் வணக்கமுள்ளவனும் அசூயையற்றவனும், பிராணிகளிடத்தில் மைத்திர முள்ளவனும் பெரியோர்களுக்குச் சிசுரூஷை செய்பவனும். பாஹ்ய விஷயங்களில் வைராக்கியம் அடைந்தவனும் சாந்தமாகிய மனமுள்ளவனும் ஞானம் உள்ளவனும் மாத்ஸரியமற்றவனும். சுத்தனுமாக இருப்பவனே இதனைத் தெரிந்து கொள்ளும் அதிகாரியாவான். எவனுக்கு நான் மிகவும் மித்திரனோ, அவனும் அதிகாரியாவான், ஓ அம்மா! எவன் என்னிடத்தில் மனத்தைச் செலுத்தி. ஒருதரமாவது இதனைக் கேட்கிறானோ தன் வாக்கினால் உச்சரிக்கிறானோ அவனும் என்னுடைய பதத்தை (அடைவான்). இது நிச்சயம்.

அத்தியாயம் 33

தேவஹூதி ஜீவன் முக்தியடைந்தது

கர்த்தமருடைய பத்னியாகிய தேவஹூதியானவள் கபிலருடைய வார்த்தையைக் கேட்டு மோஹமாகிய ஆவரணம் நீங்கியவளாகி, தத்துவ விஷயங்களால் அடையாளமிடப்பட்ட ஞானத்தைக் கொடுப்பவரான அந்தப் பகவானுக்கு நமஸ்காரஞ் செய்து ஸ்தோத்திரம் செய்தாள். உம்முடைய கொப்பூழில் தோன்றிய தாமரை மலரில் உண்டான ப்ரஹ்மதேவர் ஸிருஷ்டி காலத்தில் ஜலத்தில் சயனஞ் செய்து கொண்டும் பூதங்கள், இந்திரியங்கள், அதன் விஷயங்கள் ஆகிய இவைகளடங்கியதும், குணங்களுடைய ப்ரவாகம் உள்ளதும், காரிய காரணங்களுக்குக் காரணமுமான உம்முடைய திவ்ய சரீரத்தை தியானஞ் செய்தார். (உம்முடைய பிரசாதத்தால் ஸிருஷ்டி சக்தியை அடைந்தாரென்பது கருத்து) அந்தப் பகவானாகிய நீரே குணங்களுடைய ப்ரவாஹத்தால் பிரிக்கப்பட்ட சக்தியுள்ளவராகி உலகத்தைப் படைப்பது முதலியவைகளைச் செய்கிறீர்.

அந்த நீர் கிரியையற்றவர், ஸத்ய ஸங்கல்பமுள்ளவர்; ஜீவர்களுக்கு அதிபதி; ஊஹிக்க முடியாத அளவற்ற சக்தியுள்ளவர்; ப்ரளயகாலத்தில் இந்த ஜகத்து யாவும் எவருடைய வயிற்றிலிருந்ததோ, அந்தநீர் இந்த என்னுடைய வயிற்றில் எப்படி வஸித்திருக்கிறீர். மேலும் அப்போர்ப்பட்ட நீர் ஆலிலையில் ப்ரளய காலத்தில் எப்படி ஒருவராகச் ஸயனஞ் செய்து கொண்டிருந்தீர்? பின்னும் அந்த நீர் கால் விரலை வாயில் வைத்துக் கொள்ளும் சிசுவாக இருக்கிறீர். இதெல்லாம்

மாயையேயாம். ஓ விபுவே! நீர் வராஹம் முதலியவைகளாக அவதரித்ததுபோலத் துஷ்டர்களைச் சிக்ஷிப்பதற்காகவும், பக்தர்களைக் காப்பாற்றுவதற்காகவும், ஞான மார்க்கத்தைக் காண்பிப்பதற்காகவும் இப்பொழுது சரீரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறீர்.

ஓ பகவன்! உம்முடைய திவ்ய நாமதேயங்களைப் பிறர் சொல்லக் கேட்பதாலும், தன் வாக்கினால் உச்சரிப்பதாலும் உம்மை நமஸ்கரிப்பதாலும், உம்மை ஸ்மரிப்பதாலும் நாய் மாமிசத்தைப் புஜிப்பவன் ஆனாலும் ஜ்யோதிஷ்டோமம் முதலிய் யாகங்கள் செய்யத் தகுந்தவனாக (சுத்தனாக) ஆகிறான்; அப்படியிருக்க உம்மை நேரில் தரிசித்தவன் சுத்தனாகிறான் என்பதில் என்ன சந்தேகம்? (உம்மைத் தரிசித்ததால் நான் கிருதர்த்தையாக ஆனேன் என்று கருத்து.) எவனுடைய நாக்கின் நுனியில் உம்முடைய திவ்ய நாமங்களிருக்கின்றனவோ (நாமங்களை உச்சரிக்கின்றானோ), அவன் நாய் மாமிசத்தைப் புஜிக்கும் தாழ்ந்தவனானாலும், உம்முடைய நாம பஜனத்தால் மேலானவனாகிறான். எவர்கள் உம்முடைய நாமங்களை உச்சரிக்கிறார்களோ அவர்களே தவஞ் செய்தவர்கள்; ஹோமம் செய்தவர்கள்; புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தவர்கள், பரப்ரஹ்மம், விஷயங்களில் செல்லாமல் ஸ்திரமாக விருக்கும் மனத்தில் தியானிக்கக் கூடியவர்; தம்முடைய தேஜஸால் குணங்களை அடக்கினவர்; வேதகர்ப்பர்; ஸ்ரீ மகாவிஷ்ணு, அப்படிப்பட்ட கபிலராகிய உமக்கு நமஸ்காரஞ் செய்கிறேன்.

9–11 இப்படி தேவஹூதியால் துதிக்கப்பட்ட

கபிலரென்ற பரமபுருஷன் தம் தாயாரிடத்தில் பிரீதியுள்ளவராகி அவளை நோக்கி, "ஓ அம்ம! இஃதுவாய் அனுஷ்டிக்கக்கூடியதும், என்னால் உபதேசிக்கப்பட்டதுமான மார்க்கத்தை அனுஷ்டித்துச் சீக்கிரத்தில் ஜீவன் முத்தியை யடையப் போகிறாய்; என்னால் உபதேசிக்கப்பட்டதில் மிகுந்த சிரத்தை வைக்க வேண்டும். இது ப்ரஹ்மிஷ்டர்களால் அனுஷ்டிக்கப்பட்டது; இதை அனுசரிப்பதால் அபயமாகிய என்னை அடைவாய். இந்த என்னுடைய மதத்தை யறியாதவர்கள். சம்சாரத்தை (மிருத்யுவை) அடைகிறார்கள்" என்று எல்லோராலும் விரும்பக் கூடிய தம்முடையகதியையுபதேசித்து அவளிடம் விடைபெற்று சென்றார்.

12–32 பின்பு அந்தத் தேவஹூதியும் புத்திரனால் உபதேசிக்கப்பட்டபடி அந்த ஸரஸ்வதி நதியின் கரையிலிருக்கும் ஆசிரமத்தில் வெகுநாட்கிரதையுள்ள வளாகி யோகத்தை அனுஷ்டித்து வந்தாள். அடிக்கடி ஸ்நானம் செய்வதால் அவளுடைய தலைமயிர் ஜடைகளாயும், பொன்னிறமுள்ளவைகளாயும் இருந்தன. மேலும் அவள் மரவுரியை உடுத்திக் கொண்டிருந்தாள். அவளுடைய சரீரமானது கடுந்த பஸினால் மிகவும் இளைத்திருந்தது. அவள் கர்த்தம பிரஜாபதியினுடைய மஹிமையால் கிடைத்ததும், தேவர்களாலும் விரும்பக்கூடியதும், நிகரற்றதுமான தன்னுடைய கிருகஸ்த சுகத்தை விட்டு விட்டாள். பின்னுமவள் பால்போலும், நுரைபோலும் வெண்மை நிறமுள்ள மேல் விரிப்புள்ளவைகளும், தந்தத்தால் செய்யப்பட்டதும் ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப் பட்டவைகளுமான கட்டில் முதலியவைகள்,

தங்கத்தால் செய்யப்பட்டவைகளும் மெதுவான மெத்தை தைத்த ஆசனங்கள், ஸ்படிகக் கற்களாலும் மரகத ரத்தினங்களாலும் செய்யப்பட்ட சுவர்களுள்ள கிருகங்கள் இரத்தின தீபங்கள் மேற்கண்ட சுவர்களில் பிரதிபலிக்கும் ரத்தினாபரணங்களுள்ள வேலைக் காரிகள் ஆகிய இவைகளிலும் அபிமானத்தை ஒழித்தாள். இன்னும் அவளுக்குப் புஷ்பங்களால் நிறைந்த அநேக விருக்ஷங்களால் அழகானதும் இனிமையாகச் சப்திக்கின்ற பறவைகளுள்ளதும், தேனைக் குடித்து மதித்துப் பாடுகின்ற வண்டுகளுள்ள துமான ஒரு தோட்டமுண்டு. அதில் ஒரு ஓடை உண்டு. அதில் நீலோத்பலங்கள் மலர்ந்து வாசனை யுள்ள காற்று வீசுகிறது. அதில் கர்த்தமருடன் தேவஹூதி செல்லும்பொழுது கந்தர்வர்கள் பாடுவார் கள். அந்தத் தோட்டத்தில் வஸிப்பதற்கு தேவஸ்திரீ களும் விரும்புவார்கள். அதனிடத்திலும் தேவஹூதி அபிமானத்தை யொழித்தாள். பர்த்தாவாகிய கர்த்தமர் வனம் சென்றதாலும் புத்திரனையும் விட்டுப் பிரிந்தபடியாலும் மிகுந்த வருத்தமடைந்து வாடிய முகமுள்ளவளானாள். ஆத்ம தத்துவத்தை அறிந்தவளானாலும் கன்றை விட்டுப் பிரிந்த பசுவைப் போலத் துக்கமடைந்தாள். குழந்தாய்! ஓ விதுரரே! பின்பு அந்த தேவராகிய கபிலரையே மனத்தில் தியானஞ் செய்ததால் வெகுநாள் சென்ற பிறகு அவளுக்கு எல்லா ஆசைகளும் ஒழிந்தன. தன்னுடைய புத்திரனாகிய பகவான் சொன்னபடி பகவானுடைய ஸ்வரூபத்தை சமஸ்தமாயும் வியஸ்தமாகவும் ப்ரஸன்ன முகமுள்ளதாகவும் வெகுநாள் கபிலரையே தியானஞ் செய்து திவ்யமான வீடு முதலியவைகளிலிருக்கும் ஆசைகள் எல்லாவற்றையும் ஒழித்தாள். அப்பொழுது

அவளுடைய மனம் சுத்தமாக ஆயிற்று. ஸ்வானுபவத்தால் (ஸ்வப்ரகாசத்தால்) மாயையின் குணங்கள் மறைந்தன. பக்தி யோகத்தாலும், மிகுந்த வைராக்கியத்தாலும், உசிதமானவைகளை யனுஷ்டிப்பதாலும் ("வசதியான ஆகாரம், விளையாட்டு, யுக்தமான தூக்கம் விழிப்பு ஆகிய இவைகளுள்ளவனால் செய்யப்படும் யோகம் ஆனது துக்கத்தைப் போக்கும்" பகவத் கீதை) அதனால் உண்டான ப்ரஹ்மஜ்ஞானத்தாலும் அவள் ஜீவர்களுக்கு ஆச்ரயமாகிய பகவானிடத்திலும் புத்தியைச் செலுத்தினாள். அவளுக்கு ஜீவபாவம் நீங்கியபடியால் ஸகல துக்கங்களும் நாசமடைந்தன. சுகத்தை அடைந்தாள். எப்பொழுதும் ஸமாதியை அடைந்திருந்தபடியால் குணங்களால் ஏற்படும் ப்ரமைகள் நீங்கின. ஸ்வப்னத்தில் கண்ட வஸ்துக்களை தூங்கி விழித்தவன் போல் அஜ்ஞானமாகிய தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட அவள் தன்னுடைய சரீரத்தை மறந்திருந்தாள். அவளுடை சரீரத்தை வித்தியாதர ஸ்திரீகள் போஷித்தார்கள். ஆயினும் மனோவ்யாதி இல்லாமையால் அது பருத்திருந்தது. அழுக்குள்ள தானாலும் புகையுள்ள அக்கினிப் போல ப்ரகாசித்தது. அப்பொழுது ஸ்ரீ வாஸுதேவரிடத்திலேயே புத்தியைச் செலுத்தியவளாக இருந்தபடியால் அவள் தன் தேஹத்தை மறந்திருந்தாள். தவமாகிய யோகத்தைச் செய்து கொண்டிருந்தாள். அவளுடைய தலைமயிர்கள் அவிழ்ந்திருந்தன. தேஹம் வஸ்திரமில்லாததாக இருந்தது; ஆனாலும் ப்ரார்ப்த கர்மத்தால் சரீரம் இருந்தது. இப்படி அவள் கபிலரால் உபதேசிக்கப் பட்ட மார்க்கத்தையனுஷ்டித்துச் சீக்கிரமாக நித்ய முக்தமாகிய பரப்ரஹ்மத்தையடைந்தாள். ஓ! வீரராகிய விதுரரே! தேவஹூதியானவள் சித்தியடைந்த

க்ஷேத்திரமாகையால் மிகுந்த புண்ய க்ஷேத்ரமாகவும் ஸித்தீபதம் என்ற பெயருள்ளதுமாக லோகத்தில் ப்ரசித்தியடைந்தது. மேலும், யோகத்தால் மலங்களற்ற அந்தத் தேஹமானது ஒரு நதியாக ஆயிற்று. ஓ ஸௌம்ய! ஸ்வபாவமுள்ளவரே! அது நதிகளுக்குள் சிறந்த நதி. ஸித்தர்களால் சேவிக்கப்பட்டது. ஸித்தியைக் கொடுக்கக் கூடியது.

33–35 மகாயோகியும், பகவானுமாகிய கபிலரும் மாதாவினிடம் விடைபெற்று ஈசான்ய திக்கை (வடகிழக்கு) நோக்கிச் சென்றார். சித்தர்களும், சாரணர்களும் கந்தர்வர்களும், மகரிஷிகளும், அப்ஸரக கூட்டங்களும், சமுத்திரமும் ஸ்தோத்திரம் செய்தார்கள். சமுத்திர ராஜன் மிகவும் உபசரித்து வாசத்திற்கு இடம் கொடுத்தார். அவ்விடத்தில் கபிலர் யோகத்தைச் செய்துகொண்டிருந்தார். ஞான சாஸ்திரத்தில் சிறந்தவர்கள் இவரை ஸ்தோத்திரம் செய்தார்கள். அந்தப் பகவான் மூவுலகத்திற்கும், க்ஷேமத்தைச் செய்வதில் நோக்க முள்ளவராக இருந்தார்.

36–37 ஓ குற்றமற்றவரே! எதனைப் பற்றி நீர் கேட்டீரோ அந்த தேவஹூதிக்கும் கபிலருக்கும் நேர்ந்த சம்வாதத்தைச் சொன்னேன். இது பரிசுத்த மானது. எவன் இந்தக் கபிலரால் சொல்லப்பட்ட ரகசியமான, ஆத்ம யோகத்தைக் கேட்கிறானோ, வாக்கினால் உச்சரிக்கிறானோ அவன் கருடத் துவஜனாகிய பகவானிடத்தில் சித்தத்தைச் செலுத்தி; அவருடைய தாமரை மலர்போன்ற பாதத்தை அடைகிறான்.

சுபம்

மூன்றாவது ஸ்கந்தம் முற்றிற்று.

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்கந்தம் 4

அத்தியாயம் 1

மனுபுத்திரிகளின் வம்சம்

1–9 மனுவிற்குச் சதரூபையினிடத்தில் ஆகூதி, தேவஹூதி, பிரஸூதி என்ற மூன்று பெண்களும் (இரண்டு புத்திரர்களும்) பிறந்தார்கள். மனுவானவர் சகோதரனுள்ளவர்களானலும் ஆகூதி என்பவளை புத்திரன் இல்லாதவர்கள் புத்திரன் பிறக்க வேண்டி கன்யாதானம் செய்வது வழக்கம். மனுவிற்குப் புத்திரனிருந்தும் இன்னும் புத்திரர்கள் வேண்டுமென்ற ஆசையால் கன்யாதானம் செய்தார் என்று கருத்து). சதரூபையின்ஸம்மதத்தின் பேரில் புத்திரிகா தர்மத்தின் படி ("ஸகோதரனில்லாத இந்தப் பெண்ணை அலங்காரஞ் செய்து உமக்குக் கொடுக்கிறேன். இவளிடமுண்டாகும் பிள்ளை என்னுடைய பிள்ளை" என்று சொல்லி) ருசி என்பவருக்குக் கொடுத்தார். ப்ரஹ்மதேஜஸுள்ள அந்தப் பகவானாகிய ருசி என்ற ப்ரஜாபதியானவர் மேலான ஸமாதியால் ஸ்ரீ பகவானை ஆராதித்து ஆகூதியினிடத்தில் ஒரு புத்திரனையும், ஒரு புத்திரியையும் உண்டு பண்ணினார். அந்தப் புத்திரன் ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவின் அம்சமேயாம். யஜ்ஞரென்ற பெயருள்ளவர் அந்தப் பெண்ணானவள் லக்ஷ்மிதேவியின் அம்சமாம், அவளுக்குத் தக்ஷிணா என்று பெயர். அவள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை விட்டு பிரியாதவள். அப்பொழுது ஸ்வாயம்புவமனுவானவர் சந்தோஷத்துடன் தம்முடைய புத்திரியின் புத்திரரும் மிகுந்த யக்ஞரென்பவரைத் தம்முடைய புத்திரனாகத்

தம்முடைய கிரஹத்துக்கு அழைத்து வந்தார். ருசி யென்பவர் தக்ஷிணை என்பவளைப் புத்ரிகா வைத்துக் கொண்டார் பின்பு அந்த தக்ஷிணையென்பவள் கல்யாணஞ் செய்துகொள்ள விரும்பிய காலத்தில் யக்ஞங்களுக்கு அதிபதியான பகவானாகிய யக்ஞரைப் பர்த்தாவாக அடையவேண்டுமென்று ஆசை கொண்டாள். யக்ஞரும் (பக்தபராதீனராகையால்) ஸம்மதித்து கல்யாணம் செய்து கொண்டார். (ஒரே வயிற்றில் ஜனித்தவர்களானாலும் யக்ஞர் மஹா விஷ்ணுவின் அம்ச மாகையாலும் தக்ஷிணை லக்ஷ்மிதேவியின் அம்சமாகையாலும் விவாகம் நடந்தது.) அந்த யக்ஞரென்ற பகவான் தம்மைக் கலியாணஞ் செய்து கொண்டு ஸந்தோஷப்பட்டவளான அந்தத் தக்ஷிணையிடத்தில் சந்தோஷமடைந்து தோஷன், பிரதோஷன், சந்தோஷம், பத்ரன், சாந்தி, இடஸ்பதி, இத்மன், கவி, விபு, வஹ்னி, ஸுதேவன், ரோசனன் என்ற பன்னிரண்டு புத்திரர்களை உண்டுபண்ணினார். அவர்கள் ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில் 'துஷித' என்ற தேவர்களாக இருந்தார்கள். மேலும் அந்த மன்வந்தரத்தில் மரீசி முதலிய ஸப்தரிஷிகள், யஜ்ஞரே தேவகணங்களுக்கு அதிபதியான இந்திரன். மேலும் மிகுந்த தேஜஸுள்ள பிரியவிரதர் உத்தான பாதர் என்பவர் மனுவின் பிள்ளைகள். இவர்களுடைய புத்திரர்கள் அவர்களுடைய பிள்ளைகள் முதலியவர் களால் அந்த மன்வந்தரம் காப்பாற்றப்பட்டுவந்தது.

10–15 ஓ விதுர! மனுவானவர் தேவஹூதி யென்னும் தம்முடைய பெண்ணை கர்த்தமருக்குக் கொடுத்தார். அது சம்பந்தமான கதை பெரும்பாலும் என்னால் சொல்லப்பட்டு உம்மால் கேட்கப்பட்டது.

அந்த மனுவானவர் ப்ரஹ்மதேவருடைய புத்திரராகிய தக்ஷருக்குப் பிரஸூதி யென்பவளைக் கொடுத்தார். அந்த வம்சமும் உலகிலும் பெருகியது. கர்த்தமருடைய பெண்களெல்லாரும் ப்ரஹ்மரிஷிகளையே பர்த்தாவாக அடைந்தவர்கள். அவர்களில் பிரஸூதி என்பவள் உடைய குழந்தைகளைப் பற்றிச் சொல்வதைத் தெரிந்து கொள்ளும். கர்த்தமருடைய புத்ரியும் மரீசியின் மனைவியுமான கலா என்பவள் கச்யபர், பூர்ணிமா என்ற இருவர்களையும் பெற்றாள். அவர்கள் உடைய வம்சத்தால்இந்த ஜகத் முழுவதும் நிறைந்தது. (கச்யபருடைய வம்சம் ஆறாவது ஸ்கந்தத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. பூர்ணிமாவென்பவர் விரஜனையும் விச்வகனென்பவனையும் உண்டு பண்ணினார். தேவகுல்யா என்ற பெண்ணும் உண்டானாள்; அவளே ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பாதத்திலிருந்து உண்டான தேவகங்கை எனப்படுகிறாள். அத்திரி மஹரிஷியின் பத்னியாகிய அனுஸூயையானவள் தத்தர் துர்வாஸஸ், சந்த்ரன் ஆகிய மூன்று குமாரர்களைப் பெற்றாள். அம்மூவர்களும் முறையே மஹாவிஷ்ணு, பரமசிவன், ப்ரஹ்மா இவர்களுடைய அம்சமுள்ளவர்கள் என்றார்.

16 அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி "ஓ குருவே! தேவர்களில் சிறந்தவர்களான மும்மூர்த்திகள் எதனைச் செய்ய விரும்பி, அத்ரியின் வீட்டில் அவதரித்தார்கள்? அதனைச் சொல்ல வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

17–26 அதைக் கேட்டு மைத்ரேயர் விதுரரை நோக்கி, ப்ரஹ்மத்தை அறிந்தவர்களுக்குள் சிறந்த வராகிய அத்ரி மஹரிஷியைப் ப்ரஹ்மதேவர்

பிரஜைகளை ஸிருஷ்டிக்கும்படி ஆஜ்ஞாபித்த பொழுது மஹரிஷியானவர், அகலமான கண்களுள்ள தம்முடைய பத்தினியுடன் ரிக்ஷம் என்ற குலபர்வதஞ் சென்று தபஸ் செய்தார். அவ்விடத்தில் பலாச மரங்களும், அசோக மரங்களும் புஷ்பித்திருந்தன. மேலும் நிர்விந்தியை என்ற நதியின் ஜலம் ப்ரவஹிப் பதால் அந்தக் காடுமிகுந்த சப்தமுள்ளதாக இருக்கிறது. அந்த மலையில் மஹரிஷியானவர் பிராணாயாமஞ் செய்து அதனால் மனத்தையடக்கி நூறு வருஷகாலம் ஒரு காலால் நின்று, சீதோஷ்ணங்களற்றவராகவும், ஸுக துக்கங்களற்றவராகவும், காற்றைப் புஜித்துக் கொண்டு "எவர் ஜகத்திற்கு அதிபதியோ அவர் தமக்கு ஸமமான குழந்தையை எனக்குக் கொடுக்க வேண்டும். அவரைச் சரணமடைகிறேன்" என்று மனத்தில் யோசித்துக் கொண்டு இருந்தார். இப்படித் தபஸ் செய்யும் மஹரிஷியின் சிரஸின் வழியாக வெளியில் கிளம்பியதும், பிராணாயாமத்தால் விருத்தியானதுமாகிய மூவுலகமும் எரிக்கப்படுவதைப் பார்த்துப் ப்ரஹ்மதேவர், மஹாவிஷ்ணு, பரமசிவன் ஆகிய மூர்த்திகளும் அவருடைய ஆச்ரமம் சென்றார்கள். அப்பொழுது அவர்களை அப்ஸரஸ்ஸுகள், மஹர்ஷிகள், கந்தர்வர்கள், ஸித்தர்கள், வித்யாதரர் கள், உரகர்கள் ஆகிய இவர்கள் ஸ்துதித்தார்கள். அவர்கள் அவ்விடம் வந்ததும் ஒரு காலைப் பூமியில் வைத்துத் தபஸ் செய்யும் மஹர்ஷி, ஸமாதியிலிருந்து பகிர்முகராகித் தேவசிரேஷ்டர்களைத் தரிசித்தார். தண்டம் போல் பூமியில் விழுந்து புஷ்பம் முதலிய வைகளைக் கையில் வைத்துக்கொண்டுப் பூஜித்தார். பரமசிவன், ப்ரஹ்மதேவர், ஸ்ரீ மஹாவிஷ்ணு ஆகிய இவர்களும் முறையே விருஷபம், ஹம்ஸம், கருடன்

ஆகிய வாகனத்தின் மீதேறி, தங்கள் தங்களுடைய அடையாளமுள்ளவர்களாய் மேலும் அவர்களுடைய முகங்கள் க்ருபா த்ருஷ்டி உள்ளவைகளும், புன்னகை உள்ளவைகளுமாய் இருந்தன. அப்பொழுது தேஜஸினால் மஹரிஷியினுடைய இரு கண்களும் பார்க்க சக்தியற்றவைகளாயிருந்தும் அத்திரி மஹர்ஷியானவர் மிகவும் ச்ரமப்பட்டுக் கண்களை விழித்து மனத்தை அவர்களிடத்திலேயே செலுத்திக் கைகளைக் கூப்பிக் கொண்டு ஸகல லோகங்களிலும் சிறந்தவர்களான அவர்களை இனிமையாகவும், கம்பீர அர்த்தமுள்ளதாகவும், ஸ்தோத்திரம் செய்தார் எப்படியெனில்:

27–28 ஜகத்தை படைப்பது, பரிபாலிப்பது, ஸம்ஹரிப்பது ஆகிய இவைகளைச் செய்வதற்காக ஒவ்வொரு யுகங்களிலும் மாயையின் குணங்களைக் கொண்டு தனித்தனியே சரீரத்தை எடுத்துக் கொள்ளுகிற ஓ ப்ரஹ்மா, விஷ்ணு, மஹேச்வர! உங்களை நமஸ்கரிக்கிறேன்; உங்கள் மூவர்களில் யாரை நான் அழைத்தேன். புத்திரன் பிறக்க வேண்டி தேவர்களுக்குள் பிரதானராகிய ஒருவரைத்தானே தியானஞ் செய்தேன். அப்படியிருக்க மனத்திற்கு எட்டாதவர்களாகிய நீங்கள் மூவரும் இவ்விடம் வந்ததன் காரணம் என்ன? என்னிடம் தயவு செய்ய வேண்டும். இவ்விஷயத்தில் மிகவும் ஆச்சரியத்தை அடைகிறேன்; சொல்லவேண்டும், என்று ப்ரார்த்தித்தார்.

29–33 ஓ பிரபுவாகிய விதுரரே! அதனைக் கேட்ட அந்தத் தேவ ச்ரேஷ்டர் மூவரும் அத்ரியை நோக்கி

சிரித்து "ஓ ப்ராஹ்மண! நீர் எப்படி நினைத்துத் தியானம் செய்தீரோ, அது அப்படியே ஆகட்டும். நீர் நல்ல ஸங்கல்பம் உள்ளவர். எதனை (ஜகத் காரணத்தை) தியானித்தீரோ அது நாங்களேயாம். (எங்களுக்குள் பேதமில்லை. குணபேதத்தால் சரீர பேதமுள்ளவர்கள் என்று கருத்து) மேலும் உமக்கு எங்களுடைய அம்சமுள்ள புத்திரர்கள் ஜனிப்பார்கள். உமக்கு க்ஷேமமுண்டாகட்டும். அந்தப் புத்திரர்கள் தமக்கு லோகத்தில் மிகவும் கீர்த்தி அடைந்து உம்முடைய கீர்த்தியையும் பரவச் செய்வார்கள், என்று மஹரிஷியின் இஷ்டப்படி வரத்தை அளித்து அந்த தேவ ச்ரேஷ்டர்களும், அத்ரி மஹரிஷியால் பூஜிக்கப்பட்டு அந்தத் தம்பதிகள் (அத்திரியும், அனஸூயையும்) மறைந்தார்கள். பிறகு ப்ரஹ்ம தேவருடைய அம்சமாகச் சந்திரனும், மஹாவிஷ்ணுவின் அம்சமாகத் தத்தாத்ரேயரும், பரமசிவனுடைய அம்சமாகத் துர்வாஸஸ் என்பவரும் ஆகிய மூன்று குமாரர்கள் உண்டானார்கள். இனி அங்கிரஸ்ஸின் வம்சத்தைச் கேளும்.

34–35 அங்கிரஸ்ஸின் பத்னியாகிய சிரத்தை என்பவள் ஸினீவாலீ (காணப்படும் சந்திரகலை உள்ளது) குஹூ (நாசமடைந்த சந்திரக்லையுள்ள அமா) ராகா (பூர்ணிமா) அநுமதி (சுக்கிலசதுர்தசிக்கும் அபிமானியான தேவதை) என்ற நான்கு பெண்களைப் பெற்றாள். பின்னும் பகவானாகிய உசத்யர் ப்ரஹ்மவித்தாகிய ப்ருஹஸ்பதி ஆகிய இருவரும் அந்த அங்கிரஸ்ஸின் புத்திரர்கள். இவ்விருவர்களும் ஸ்வாரோசிஷ மன்வந்தரத்தில் மிகவும் கீர்த்தி பெற்றிருந்தார்கள்.

36–37 புலஸ்த்ய மஹரிஷியானவர், ஹவிர்புக் என்னும் பத்னியிடத்தில் அகஸ்திய மஹரிஷியையும், விச்ரவஸ்ஸையும் உண்டு பண்ணினார். அந்த அகஸ்தியர் ஜன்மாந்தரத்தில் வயிற்றில் இருக்கும் அக்னியாம். அந்த விச்ரவஸ் என்பவர் இலபிலா என்பவளிடத்தில் யக்ஷர்களுக்கு அதிபதியும் தேவனும் ஆன குபேரனை யுண்டுபண்ணினார். பின்னும் அந்த மஹரிஷியானவர் கேகஸி என்பவளிடத்தில் ராவணன், கும்பகர்ணன், விபீஷ்ணர் என்று மூன்று குமாரர்களை யுண்டுபண்ணினார்.

38. மிகுந்த புத்திசாலியான விதுரரே! புலஹருடைய பத்னியான கதி என்பவள் பதிவிரதை. அவர் கர்ம ச்ரேஷ்டன், வரீயான், ஸஹிஷ்ணு என்று மூன்று புத்திரர்களைப் பெற்றாள்.

39. க்ருது என்பவருடைய பத்னியாகிய கிரியை யென்பவள் அறுபதினாயிரம் புத்திரர்களைப் பெற்றாள். அவர்களே வாலகில்யர்களென்ற மஹரிஷிகள்; ப்ரஹ்ம தேஜஸால் ஜ்வலிப்பவர்கள்.

40–41 வஸிஷ்டர் ஊர்ஜை என்பவளிடத்தில் (அருந்ததிக்கு ஊர்ஜாவென்றும் பெயருண்டு. இவள் கர்த்தமருடைய ஒன்பதாவது பெண்) சித்திரகேது, ஸுரோசிஸ், விரஜஸ், மித்ரன், உல்பணர், வஸுபிருத், தியானர், த்யுமான் என்று ஏழுபுத்திரர்களை யுண்டு பண்ணினார். அவர்கள் சுத்தர்கள். ப்ரஹ்மரிஷிகளாக ஆனார்கள். (இவர்கள் மூன்றாவது மன்வந்தரத்தில் ஸப்த ரிஷிகள்.) சக்தி முதலிய புத்திரர்கள் வேறு ஸ்திரீயினிடம் உண்டானவர்கள்.

42. அதர்வா என்பவருடைய பத்னியாகிய சித்தி என்பவள் (கர்த்தமருடைய எட்டாவது பெண் இவளுக்குச் சாந்தியென்றும் பெயருண்டு) திருதவிருதன், தத்யஞ்சன், அச்வசிரஸ் என்ற புத்திரர்களைப் பெற்றாள். இனி ப்ருகுவின் வம்சத்தைத் தெரிந்து கொள்ளும்.

46–46 1/2 ஓ மிகுந்த அதிருஷ்டமுள்ளவரே! ப்ருகுவென்பவர் கியாதி என்ற பத்னியிடத்தில் (இவள் கர்த்தமருடைய ஏழாவது பெண்) தாதா, விதாதா என்ற இரண்டு புத்திரர்களையும் பகவத் பரையாகிய ஸ்ரீ போன்ற பெண்ணையும் பெற்றார். பிறகு மேருவானவர் ஆயதி என்றவளைத் தாதாவிற்கும், நியதி என்றவளை விதாதாவிற்கும் கொடுத்தார். பின்பு தாதாவிற்கு மிருகண்டரென்ற புத்திரனும் விதாதாவிற்குப் பிராணனென்பவரும் உண்டானார்கள். மிருகண்டருடைய புத்திரருக்கு மார்க்கண்டேயரென்று பெயர். பிராணருடைய புத்திரருக்கு வேதசிரஸ் என்று பெயர். அந்த வேதசிரஸ்ஸின் புத்திரர் சுக்கிரன். இவர் ப்ருகு வம்சத்திலுண்டான வராதலால் பார்க்கவரெனப்படுகிறார். ஓ விதுரரே! மேற் சொல்லிய ஒன்பது மஹரிஷிகள் தங்களுடைய வம்சத்தால் லோகத்தை விஸ்தரித்தார்கள். கர்த்தம ருடைய பெண்களுடைய வம்சத்தைச் சொன்னேன். இதனைச் ச்ரத்தையுடன் கேட்பவனுக்கு உடனே பாபங்கள் நீங்கும். ஆதலால் இது மேலானது.

47–59 ப்ரஹ்ம தேவருடைய புத்திரராகிய தக்ஷர், மனுவின் புத்திரியாகிய பிரஸூதியை விவாஹம் செய்து கொண்டு பதினாறு பெண்களை யுண்டு

பண்ணினார். அவர்கள் அழகான கண்களுள்ளவர்கள். அவர்களில் சிரத்தை, மைத்ரீ, தயை சாந்தி, துஷ்டி புஷ்டி, கிரியா, உன்னதி, புத்தி, மேதை, திதிக்ஷா, ஹ்ரீ, மூர்த்தி, யென்ற பதின் மூன்று பெண்களைத் தர்மத்திற்கும், ஒரு பெண்ணை (ஸ்வாஹா என்பவளை) அக்கினி பகவானுக்கும் பிதிருக்களுக்கு ஒரு பெண்ணையும் (ஸ்வதாவென்பவள்) ஸம்ஸாரத்தைப் போக்குபவரான பரமசிவனுக்கு ஒரு பெண்ணையும் (ஸதீயென்பவள்), பிதாவாகிய தக்ஷர் தானஞ் செய்தார். தர்மத்தின் பத்னியாகிய சிரத்தை ச்ருதனென்ற புத்திரனையும் மைத்ரியென்பவள் ப்ரஸாதனையும், தயையானவள் அபயனையும் சாந்தியென்பவள் ஸுகத்தையும் துஷ்டியென்பவள் முகத்தையும் (ஸந்தோஷம்) புஷ்டியானவள் ஸம்பனையும், கிரியை யென்பவள் யோகத்தையும், உன்னதியானவள் தர்ப் பனையும் (கர்வம்), புருத்தியானவள் அர்த்தத்தையும், மேதையென்பவள் ஸ்மிருதியையும், திதிக்ஷையென்ப வள் க்ஷேமத்தையும், ஹ்ரீயென்பவள் ப்ரச்ரயத்தையும், மூர்த்தி யென்பவள் நரன், நாராயணன் என்ற மஹர்ஷிகளையும் யுண்டுபண்ணினார்கள். அவ் விரண்டு மஹரிஷிகளும் ஸகல குணங்களும் உண்டாகு மிடமாக இருப்பவர்கள்! அவர்கள் பிறந்த லோகங்களும் சந்தோஷமடைந்தன. எல்லோருடைய மனங்களும், திக்குகளும், நதிகளும், சமுத்திரங்களும், காற்றும் ப்ரஸன்னங்களாயின. (தெளிந்தன) தேவ வாத்யங்கள் முழக்கப்பட்டன. புஷ்பங்கள் வர்ஷிக்கப் பட்டன. மஹரிஷிகள் ஸ்துதித்தார்கள். கின்னரர்களும், கந்தர்வர்களும் பாடினார்கள். தேவலோகத்திலுள்ள அப்ஸர ஸ்திரீகள் நர்த்தனஞ் செய்தார்கள். இப்படி எல்லா லோகங்களிலும் சுபமான காரியங்கள்

நடந்தன. ப்ரஹ்மா முதலிய தேவர்கள் அவ்விருவர் களை நோக்கி, மாயையால் இந்த ஜகத்தை (உண்மை இல்லாததை) ஆகாசத்தில் பட்டணம் உண்டுபண்ணு வது போல் காண்பிக்கிறாரோ, எவர் இப்பொழுது தர்மத்தின் கிருஹத்தில் மஹரிஷி வேஷங்கொண்டு அவதரித்திருக்கிறாரோ, அந்த ஸ்வப்ரகாசராகிய பரமபுருஷனுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். அந்தப் பகவான் ஜக்த்தின் மர்யாதையை ஸம்ரக்ஷிப்பதற்காக ஸத்வ குணத்தைக் கொண்டு ஸிருஷ்டிக்கப்பட்ட தேவர்களான எங்களைக் கிருபை நிறைந்த பார்வையால் கடாக்ஷிக்கட்டும். அவர் சாஸ்திரத்தால் ஊகிக்கத்தக்க தத்வமுள்ளவர். மேலும் அவருடைய நேத்திரமானது லக்ஷ்மீதேவிக்கு வாஸஸ்தலமும் சுத்தமுமான தாமரை மலரையும் பரிஹஸிக்கிறது என்று ஸ்தோத்திரஞ்செய்தார்கள். இம்மாதிரி தேவர்களால் கொண்டாடப்பட்ட அவ்விருவர்களும் தேவர்களால் தரிசிக்கப்பட்டவர்களாகி கந்தமாதன மென்ற பர்வதஞ் சென்றார்கள். மஹாவிஷ்ணுவின் அம்சபூதர்களாகிய அவ்விருவர்களே பூமியின் பாரத்தை குறைப்பதற்காக யதுகுலத்தில் ஸ்ரீ கிருஷ்ணனாகவும், குரு வம்சத்தில் அர்ஜுனனாகவும் அவதரித்திருக்கிறார்கள்.

60–62 அக்கினியின் பத்னியாகிய ஸ்வாஹா என்பவன் பாவகன், பவமானன், சுசியென்ற மூன்று புத்திரர்களைப் பெற்றாள். அவர்கள் அக்கினிக்கு அபிமான தேவர்கள், ஹோமஞ் செய்யப்பட்ட வைகளையே புஜிப்பவர்கள். அவர்களிடமிருந்து நாற்பத்துஐந்து அக்னிகள் (புத்திரர்கள்) உண்டானார் கள். மேற்காட்டிய புத்திரர்களும், அவர்களுடைய

தகப்பனார்களாகிய மூன்று பேர்களும், அவர்களுக்கும் பிதாவாகிய அக்கினியுமாகிய நாற்பத்து ஒன்பது (49) அக்கினிகளாயின. ப்ரஹ்மவாதிகள் (வேதத்தை அத்யயனஞ் செய்தவர்கள்) வைதிகமான யாக கர்மத்தில்: இவர்களுடைய பெயர்களைக் கொண்டே அக்கினி தேவதாகமான இஷ்டிகளைச் செய்கிறார்கள். இந்த அக்கினிகள் வைதிகாக்கினிகள். (லௌகிகங் களல்ல. லௌகிங்களான அக்கினிகள் பலவென்ற கருத்து).

63–64 அக்கினிஷ்வாத்தர்கள், பர்ஹிஷதர்கள், ஸௌம்யர்கள், ஆஜ்யபர்கள் என்ற நான்கு பித்ரு கணங்களும், ஸ்வதை யென்பவளின் (தக்ஷருடைய பதினைந்தாவது பெண்) பார்த்தாக்கள். இவர்களுள் ஸாக்கினிகள்; நிரக்கினிகளென்று இருவகையுண்டு. (அக்நௌகரணம் உள்ளவர்கள் ஸாக்கினிகள். அதில்லாதவர்கள் நிரக்கினிகள்.) அந்த ஸ்வதா தேவிக்கு வயுனா, தாரிணீ என்று இரண்டு பெண்கள் (மேனா, வைத்ரணீ என்பவர் சிலர்:) அந்த இரண்டு பெண்களும் ப்ரஹ்மத்தை உபதேசிப்பவர்கள். சாஸ்திரத்தால் உண்டான ஞானம், அனுபவ ஞானம் ஆகிய இவைகளுடைய கரையைக் கண்டவர்கள். ஊர்த்துவ ரேதஸ் உள்ளவர்களாகையால் இவர்களுக்குக் குழந்தைகளில்லை. ஆதலால் அவர்களுக்கு வம்சமில்லை.)

65–66 பரமசிவனுடைய பத்னியாகிய ஸதீதேவி யானவள் குணத்திலும், ஸ்வபாவத்திலும் தனக்கு ஸமமான பர்த்தாவை அடைந்தும் அவளுக்கு புத்திரனுண்டாகவில்லை. ஏனென்றால் அவளுடைய

பிதாவாகிய தக்ஷர் குற்றமற்றவராகிய பரமசிவன் இடத்தில் கோபித்துக் கொண்டு ப்ரதி கூலராக இருந்ததால் ஸதியானவள் பிரௌடையாகாத வயதிலேயே யோகமார்க்கத்தால் தன்னுடைய சரீரத்தை விட்டுவிட்டாள்.

நோட்டு

அக்கினியில் பக்குவமான புரோடாசம் முதலியவைகளைப் புஜிப்பவர்கள் அக்கினிஷ்வாத்தர் கள், தைத்திய தானவ, யக்ஷர்களுடைய பித்ருக்கள் பர்ஹிஷதர்கள். அக்கினிஷ்டோமம் முதலிய கர்மங்களின் தேவதைகள் ஸௌம்யர்கள். ஆகார ஆஜ்யபாக தேவதைகள் ஆஜ்யபர்கள்.

அத்தியாயம்–2

தக்ஷருக்கும் பரமசிவனுக்கும் விரோதம் நேர்தல்

1–3. அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி, "பெண்ணிடத்தில் ப்ரீதியுள்ளவரான தக்ஷர் அவளையும் லக்ஷயஞ் செய்யாமல் நல்ல ஸ்வபாவம் உள்ளவர்களுக்குள் சிறந்தவராகிய பரமசிவனிடத்தில் துவேஷம் வைத்த காரணமென்ன? அந்தச் சிவன் சரம் (அசையும் பொருள்,) அசரம் (அசையாப் பொருள்) ஆகிய இவைகளுக்குக் குரு) ஒருவரிடத்திலும் விரோதமில்லாதவர்; அவருக்குச் சாந்தியே சரீரமாக விருக்கிறது; மேலும அவர் ஆத்மாவினிடத்திலேயே ரமிப்பவர்; ஜகத்திற்குப் பெரியதாகிய தெய்வம்; அப்படிப்பட்டவரை எவன் விரோதித்துக் கொள்வான்? மணப்பிள்ளையாகிய பரமசிவனுக்கும், மாமனாராகிய தக்ஷருக்கும் விரோதம் உண்டானதன் காரணத்தைச் சொல்லவேண்டும். தவிரவும் ஸதீதேவியானவள் பிராணனை விட்டாள் என்று சொன்னீரே. ஒருவரும் ப்ராணனை விட சம்மதிக்கமாட்டார்களே. அதன் விவரத்தைச் சொல்லவேண்டும், என்று கேட்டார்.

4–19. அதனைக்கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி "முன்னொரு காலத்தில் ப்ரஜாபதிகள் ஸத்ர யாகஞ் செய்தார்கள். அந்த ஸத்ரத்தில் சிறந்த மஹரிஷிகளும் இந்திரன் முதலிய தேவர்கள் தங்களுடைய வேலைக்காரர்களுடனும், அக்கினிகள் உடனும் கூடியிருந்தார்கள். அப்பொழுது அந்த ஸத்ரத்திற்காகத் தக்ஷர் வந்தார். அவர் சூரியன் போன்ற தேஜஸ் உள்ளவர்; ஆனதால் தம்முடைய

தேஜஸ்ஸால் அந்த ஸபையைப்ரகாசிக்கச் செய்தார்; அவரைக் கண்டு அவருடைய தேஜஸ்ஸினால் காந்தி குறைந்தவர்களாகி ஸபையிலிருப்பவர்களெல்லோரும் அக்கினிக்கு அபிமானிகளாகிய தேவர்களும் தங்கள் தங்கள் ஆஸனத்திலிருந்து எழுந்திருந்தார்கள். ப்ரஹ்ம தேவரும். பரமசிவனும் மாத்திரம் எழுந்திருக்கவில்லை. ஸபையிலுள்ளவர்களால் பூஜிக்கப்பட்ட தக்ஷர் லோக குருவாகிய ப்ரஹ்மதேவருக்கு நமஸ்காரஞ் செய்து அவருடைய உத்தரவின்படி உட்கார்ந்தார். ஆனால் தாம் வருகிறதற்கு முன்னமேயே வந்திருப்பவரும் தம்மைக் கண்டு உபசரிக்காத வருமாகிய பரமசிவன் இடத்தில் கோபங்கொண்டார். மேலும் அவர் இருகண்களாலும் வக்கிரமாகச் சிவனைப்பார்த்து, கோபாக்கினியால் எரிப்பவர் போல, "ஓ ப்ரஹ்ம ரிஷிகளே! தேவர்களே! அக்கினிகளே! ஸாதுக்களுடைய ஆசாரத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள். அறியாத் தன்மையாவது மாத்ஸர்யமாவது எனக்கில்லை (அதனால் சொல்வதாக நினைக்க வேண்டாம்) இவன் லோகபாலர்களுடைய கீர்த்தியைக் குறைப்பவன்; வெட்கமில்லாதவன் ஸாதுக்களால் ஆதரிக்கப்பட்ட வரும் ஸம்பிரதாயப்படி அனுஷ்டியாமல் கர்வமுள்ள வனாகி அந்த மார்க்கத்தை கெடுத்து விட்டான் இவன் நல்லவன் போல் ப்ராஹ்மணர்கள் அக்னி ஆகிய இவர்களுடைய முன்பாக ஸாவித்திரி போன்ற என்னுடைய புத்திரியைப் பாணிக்கிரஹணஞ் செய்து கொண்டான்; அதனால் எனக்குச் சிஷ்யனானான்; என்னுடைய பெண்ணாகிய ஸதியானவள் மான் குட்டியின் கண்கள் போன்ற கண்களுள்ளவள்; இவனுடைய கண்கள் குரங்கின் கண்களை ஒத்திருக்கின்றன; அப்பேர்ப்பட்ட இவன் என்னைக்

கண்டவுடன் எழுந்திருந்து நமஸ்கரிக்க வேண்டியதாக விருக்க, வாக்கினால் கூட என்னை உபசரிக்கவில்லை; இவன் ஸத்கர்மங்களைச் செய்யாதவன் (லுப்தக்ரியன்) அசுத்தன்; அஹங்காரமுள்ளவன்; லோகத்தின் மரியாதையைக் கெடுப்பவன். அப்படிப்பட்ட இவனுக்குப் பெண்ணைக் கொடுக்க இஷ்டமில்லாதவனானாலும் நான் வேதத்தைச் சூத்திரனுக்குக் கொடுத்தாற் போல் குழந்தையைக் கொடுத்தேன் (அயோக்கியனுக்குப் பெண்ணைக் கொடுத்தேனென்று பச்சாதாபமடைந்தார்.) மேலுமிவன் ப்ரேதங்கள் வஸிக்கும் மயானத்தில் பூதகணங்களுடன் வஸ்திரமில்லாமல் தலைமயிரை விரித்துக்கொண்டு சிரித்தும், அழுது கொண்டும் பைத்தியங் கொண்டவன் போல் அலைகிறான். சிதையிலிருக்கும் சாம்பலைப் பூசிக்கொள்கிறான். ப்ரேதங்களுடைய மாலையை தரிக்கிறான், மனிதர் களுடைய எலும்புகளை ஆபரணங்களாகக் கொள்கிறான் சிவனென்ற பெயருள்ளவனே யொழிய அசிவன். (மங்களமான சுபாவமற்றவன், மதித்தவன். மதித்தவர்களால் கொண்டாடக்கூடியவன். தமோ குண ஸ்வபாவமுள்ள பிரமத கணங்களுக்கு அதிபதி, உன்மாதங்களுக்கு (சில பூதங்கள்) அதிபதி, சௌசம் (சுத்தி) அற்றவன். கெட்ட புத்தியுள்ளவன்; அப்படிப் பட்ட இவனுக்குப் பதிவிரதையான ஸதியென்பவளை ப்ரஹ்மதேவருடைய தூண்டுதலினால் கல்யாணஞ் செய்து கொடுத்தேன். கஷ்டம். என்று தமக்குப் ப்ரதிகூலரன்றி இருக்கும் பரமசிவனைத் தக்ஷர் நிந்தித்துக் கோபங் கொண்டவராகி ஜலத்தைத் தொட்டு "தேவகணங்களில் தாழ்ந்தவனாகிய இந்தச் சிவன் இந்திரன் முதலியவர்களுடன் யாகத்தில் பாகத்தை அடையவேண்டாம் என்று சபித்தார்.

அப்பொழுது அந்த ஸபையிலிருந்த சிறந்தவர்கள் தடுத்தும் அவர் ஸமாதானம் அடையவில்லை. பிறகு தக்ஷர் மிகுந்த கோபமுள்ளவராகி அவ்விடமிருந்து தம்மிருப்பிடஞ் சென்றார்.

20–26. இதைக்கேட்டுப் பரமசிவனுடைய கணங்களில் சிறந்தவராகிய நந்தியென்பவர் கோபத்தால் மிகவும் சிவந்த கண்களுள்ளவராகி இந்தத் தக்ஷன் தன்னைச் சிறந்தவனாக நினைத்துப் பதில் செய்யாதவராகிய பகவானுக்குத் துரோகஞ் செய்த படியால் இவன் பேதபுத்தியுள்ளவனாகித் தத்துவத்தை அறியாதவனாக ஆகட்டும். கபட தர்மமுள்ள ஸம்ஸாரத்தில் அபிமானம் உள்ளவனாகி, காம்யமாகிய சுகத்திற்கு ஆசைப்பட்டு வேதத்தில் சொல்லிய அர்த்த வாதத்தால் (கர்மத்தில் ஜனங்களுக்கு ஆசையுண்டாவதற்காக அதன் பலனை மேலானதென்று சொல்வது முதலியவை) ப்ரமித்துக் கர்மங்களையே அனுஷ்டிக்கட்டும்; மேலும் தேஹம் முதலியவைகளேயே ஆத்மாவென்று நினைத்து புத்தியால் ஆத்மாவின் உண்மையை மறந்து பசுப்போல் ஸ்திரீகளிடத்திலேயே மிகவும் ஆசையுள்ளவனாக ஆகட்டும். அவித்யையை வித்யையென்று நினைத்து மூடனாக இருக்கும் இந்த தக்ஷன் சீக்கிரம் ஆட்டு முகமுள்ளவனாக ஆகட்டும் என்று தக்ஷனுக்குச் சாபம் கொடுத்ததுமன்றி "பரமசிவனைத் தக்ஷன் சபிக்கும்போது அதனை எவர்கள் அனுமதித்தார்களோ, அந்தப்ராஹ்மணர்கள் சம்சாரத்தை (ஜனனமரணத்தை) யடையட்டும். புஷ்பங்கள் போல் அழகானவைகளும், தேனுடைய வாசனைப்போல் மனத்தை இழுக்கக் கூடியதுமான வேதத்தின் அர்த்தவாதங்களால் மனங்கலங்கினவர்களாக மோஹத்தை யடையட்டும்.

பரமசிவனைத் துவேஷித்தபடியால் ப்ராஹ்மணர்கள் தேஹத்தைப் போஷிப்பதற்காக எல்லாவற்றையும் புஜித்துக்கொண்டும், வித்யை தபஸ், விரதங்கள் ஆகிய இவைகளை ஜீவனத்துக்கே உபயோகித்தவர்களாகிப் பணம் தேஹம், இந்திரியம் ஆகிய இவைகளிலேயே ரமித்துக் கொண்டு யாசகர்களாக சஞ்சரிக்கட்டும் என்றும் சபித்தார்.

27–33. அதனைக் கேட்ட பிருகு என்பவர் "எவர்கள் சிவனுடைய தர்மத்தை அடைந்தவர்களோ, எவர்கள் அவர்களை அனுஸரித்தவர்களோ, அவர்கள் வேத விரோதிகளான பாஷண்டர்களாக ஆகட்டும், சௌசமற்றவர்களாகி மூடர்களாகி, ஜடை, விபூதி, எலும்பு, ஆகிய இவைகளைத் தரித்து, சிவதீக்ஷையை அடையட்டும். அந்தச் சிவதீக்ஷையில் ஸுரை (வெல்லத்தால் செய்யப்பட்டது). ஆஸவம் (மாவினால் செய்யப்பட்ட மத்யம்) ஆகிய இவை தேவதை போல ஆதரிக்கப்படுகிறது. பாஷண்ட தர்மத்தை ஆச்ரயித்து நீங்கள் புருஷர்களுக்கு ஸேதுவாக விருப்பது (மரியாதையாகவும்), வேதத்தையும் ப்ராஹ்மணர் களையும் நிந்திப்பதால் இந்தச் சாபம் உங்களுக்குத் தகுந்ததேயாகும். இந்த வேதமார்க்கமே சிரேயஸைக் கொடுக்கக் கூடியது. வெகுநாளாகப் ப்ரகாசிக்கிறது. முந்திய மஹரிஷிகள் இதனையே அனுஷ்டித்தார்கள். இது ஸ்ரீ மஹாவிஷ்ணுவிடமிருந்து உண்டானது. ஆனதால் மிகவும் மேலானதும், சுத்தமானதும்; அனாதி ஸித்தமுமான வேதமார்க்கத்தை நிந்தித்துப் பூத பதியையே தெய்வமாகக் கொண்ட பாஷண்ட மார்க்கத்தை நீங்கள் அடைவீர்கள் என்று சபித்தார். அது ப்ரஹ்ம தண்டமாகையால் நிவிருத்திக்க

முடியாதது. இதனைக் கேட்டுப் பகவான் கொஞ்சம் வருத்தமடைந்தவர் போலத் தம்முடைய கணங்களுடன் அவ்விடமிருந்து புறப்பட்டார்.

34–35. அந்தப்ரஜாபதிகளும் தேவர்களுக்குள் சிறந்தவராகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் எதில் பூஜிக்கப்படுகிறாரோ அந்த ஆயிரம் பரிவத்ஸரமுள்ள அந்த ஸத்ரத்தை முடித்து, கங்கை, யமுனை இந்த நதிகள் ஸங்கமத்தில் ஸ்நானஞ் செய்து சுத்தர்களாகத் தங்கள் தங்கள் இருப்படஞ் சென்றார்கள்.

நோட்டு

இந்த அத்தியாயத்தில் 13–வது ஸ்லோகம் முதல் 16–வது வரையிலுள்ள ஸ்லோகங்களால் தக்ஷர் பரமசிவனை நிந்திப்பதான எண்ணத்துடன் சொன்ன வார்த்தைகளுக்குப் பின் காட்டியபடியும் அர்த்தமேற் படுகிறது. லுப்தக்ரிய பரப்ரஹ்மம் ஸ்வரூபியாகையால் கர்மங்களற்றவர். அவரை விடச் சுத்தன் வேறு ஒருவருமில்லை. அஹங்காரமற்றவர் லோகமரியாதையை கெடுக்காதவர். ஆத்ம நிஷ்டனுக்குக் கர்மவித்யை உபதேசிப்பது எப்படி உசிதமன்றோ அப்படி தேவதேவராகிய பகவானுக்கு மனுஷ்ய ஸ்திரீயாகிய ஸதியைக் கொடுப்பது தகுதியில்லை என்று இஷ்டப்படவில்லை, பயித்தியங் கொண்டவன் போல என்றதால் உண்மையில் பயித்தியங் கொண்டவரல்ல. மயானத்தில் வஸிப்பது முதலியவை வைராக்யத்தைக் காண்பிப்பதேயாம், அசிவன் –இவரை விட மங்கள ஸ்வபாவமுள்ளவர் வேறொருவருமில்லை. அமத்த என்றபதம் பிரிப்பதால் மதமில்லாதவனென்று,

அர்த்தம், தமோ குண –தாழ்ந்தவர்கள் இடத்திலும் மிகுந்த பிரீதியுள்ளவர் என்ற மேலான குணம் காட்டப்பட்டது. அதிபதி மூலத்தில் பதி என்றிருப்பதால் அவர்களுடைய தோஷங்களை நீக்கிக் காப்பாற்று கிறவர் என்று கருத்து சௌசகெட்டவர்களுக்கும் புத்தியை உபதேசிப்பவர். தூர்ப்புத்தி– துஷ்டர்களி டத்திலும் "இவர் நம்மால் காப்பாற்றக்கூடியவர்கள்" என்ற புத்தியுள்ளவர் தூண்டுதலால் –இவருடைய உண்மையையறியாத பிராகிருத ஜனங்கள் "அயோக்யனுக்குப் பெண்ணைத் தக்ஷன் கொடுத்தான்" என்று சொல்வார்களே என்ற பயத்தை விட்டுச் சிவனை மணப்பிள்ளையாக அடைந்தேன் ஸ்ரீத, அர்த்தவாதத்தால் புஷ்பிணீயென்று மூலத்திலி ருப்பதால் வேதமாகிய விருக்ஷத்திற்கு ஸ்வர்க்கம் முதலியவை புஷ்பங்கள். மோக்ஷமே பலன். புஷ்பங்களைக் கண்டு அவைகளில் ஆசைப்பட்டுப் பிரமித்து அதன் பலனாகிய மோக்ஷத்தை விரும்பாத வர்களென்று அர்த்தம் விஜ. எல்லாவற்றையும் வெங்காயம் முதலியவைகள்ள விஜ.

அத்தியாயம்–3

ஸதியைப் பரமசிவன் யாகத்திற்குப் போகவேண்டாமென்றது

1–14 மணப்பிள்ளையாகிய பரமசிவனும், மாமனாராகிய தக்ஷரும் ஒருவருக்கொருவர் துவேஷ புத்தியுடன் வெகுகாலத்தைக் கழித்தார்கள். எப்பொழுது ப்ரஹ்மதேவர் ஸகல பிரஜாபதிகளுக்கும் அதிபதியாகத் தக்ஷருக்கு அபிஷேகஞ் செய்தாரோ, அப்பொழுது தக்ஷருக்குக் கர்வம் உண்டாயிற்று. (அதனால்தான் பரமசிவனைத் துவேஷித்தாரென்று கருத்து) அந்தத் தக்ஷ ப்ரஜாபதி ப்ரஹ்மிஷ்டர்களான ஈச்வரன் முதலியவர்களை அவமதித்து (பரமசிவனையும் அவரை அனுஸரித்தவர்களையும் அழைக்காமலும், பரமசிவனுக்குப் பாகம் கொடாமலும்) வாஜபேயஞ் செய்து 'ப்ரஹஸ்பதி ஸவம்' என்ற ச்ரேஷ்டமாகிய யாகத்தைச் செய்யவாரம்பித்தார். அந்த யாகத்தில் ஸகல ப்ரஹ்ம ரிஷிகளும், பிதுருக்களும், தேவரிஷிகளும், தேவதைகளும், அவர்களுடைய பத்தினிகளும் பூஜிக்கப்பட்டார்கள். இப்படி தக்ஷருடைய யாகத்தில் அவரால் பூஜிக்கப்பட்டு ஆகாசத்தில் செல்லும் தேவர்கள் தக்ஷருடைய யாகத்தைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள். ஸதி தேவியானவள் அதனைக் கேட்டாள். கைலாஸத்தில் தன்னுடைய கிருஹத்தின் ஸமீபத்தில் பல திக்குகளிலிருந்து செல்லும் கந்தர்வ ஸ்திரீகளையும் பார்த்தாள். அவர்கள் தங்கள் தங்கள் பர்த்தாவுடன் விமானத்தின் மீதேறி, நல்ல வஸ்திரத்தை யுடுத்திக் கொண்டு, ரத்னமயமான பதக்கங்களால் ப்ராகாசிக்கும் கழுத்துள்ளவராகவும்,

ப்ரகாசிக்கும் குண்டலங்களுள்ளவர்களாகவும் இருந்தார்கள். அப்பொழுது ஸதியானவள் தன்னுடைய பர்த்தாவாகிய பரமசிவனை நோக்கி மிகுந்த ஆசையுடன், "ஓ பரமசிவ! உம்முடைய மாமனாராகிய தக்ஷ பிரஜாபதியானவர் இப்பொழுது யாகஞ் செய்கிறாரல்லவா? தேவதைகளெல்லோரும் போகிறார் கள். உமக்கு இஷ்டமிருந்தால் நாமும் போவோம். என்னுடைய ஸஹோதரிகள் தங்கள் தங்கள் புருஷர் களுடன் அவ்விடம் வந்திருப்பார்கள். உம்முடன் அவ்விடம் சென்று என்னுடைய தாய் தந்தைகளால் கொடுக்கப்படும் ஸன்மானத்தை யடைய விரும்புகிறேன். மேலும் என்னுடைய சகோதரிகளையும் என்னுடைய தாயாரையும் பார்த்து வெகுநாளாகி விட்டது. என்னுடைய தாயார் என்னைப் பார்க்கவேண்டும் என்ற விருப்பமுள்ளவளாக இருப்பாள். ஓ எல்லாருக்கும் ஸுகத்தைக் கொடுப்பவரே! செய்யப்படும் யாகமானது மிகவும் சிறந்தது. ஆனதால் அவர்களையும், யாகத்தையும் (நாட்டப்படும் யூபத்தையென்று சிலர்) பார்க்க விரும்புகிறேன். ஓ ஜனனமற்றவரே! முக்குண ஸ்வரூபமும்; ஆச்சரியமுமாகிய இந்தப் ப்ரபஞ்சமானது உம்முடைய மாயையால் உம்மிடத்தில் செய்யப்பட்டு ப்ரகாசிக்கிறது. (ஆனதால் யாகத்தைப் பார்க்க வேண்டுமென்ற குதூஹலம் உமக்கில்லை.) ஆனாலும் நான் ஸ்திரீயல்லவா? உம்முடைய உண்மையை நான் அறியாதவள். ஆனதால் தீனையாக இருக்கிறேன். ஓ ஸம்ஸார ஸம்பந்தமற்ற பந்துக்களல்லாத மற்ற ஸ்திரீகள் கூடத் தங்கள் தங்கள் புருஷர்களுடன் கூட்டமாகச் செல்லுகிறார்கள். பாரும். ஹம்ஸம்போல் வெண்மை நிறமுள்ள அவர்களுடைய விமானங்களால் ஆகாசம் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. ஓ தேவசிரேஷ்ட,

பிறந்த வீட்டில் நடக்கும் உத்ஸவத்தைக் கேட்டுப் பெண்ணின் சரீரமானது அவ்விடம் போகவேண்டும் என்று விரும்பாமலிருக்குமா? பர்த்தாவினுடைய வீட்டிற்கும், ஆசாரியருடைய கிருஹத்திற்கும், மித்திரர்களுடைய கிருஹத்திற்கும் அவர்களால் அழைக்கப்படாமலிருந்தாலும் போகலாம். ஓ தேவ! நீர் என்னிடத்தில் மிகுந்த கருணைவைத்து எனக்குப் பாதி சரீரத்தைக் கொடுத்தீரல்லவா? அப்பேர்ப்பட்ட நீர் என்னுடைய எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும்" என்று மிகுந்த குதூஹலத்துடன் ப்ரார்த்தித்தாள்.

15–25 அதனைக் கேட்ட பகவான் ஸதிதேவியை நோக்கி, "ஓ நல்ல ஸ்வாவமுள்ளவளே 'பந்துக்கள் உடைய கிருஹத்திற்கு அழைக்காமலேயே போகலாம்' என்பது ஸரியானதே. ஆனாலும் அந்தப் பந்துக்கள் தங்களுடைய தேஹம் முதலியவைகளில் மிகுந்த அபிமானம் வைத்து (தங்களைச் சிறந்தவர்களாக நினைத்து) அதனால் மதித்துக் கோபங்கொண்டு நம்மிடத்தில் தோஷத்தை ஆரோபிக்காமல் இருந்தால் நாம் அவர்களுடைய வீட்டில் நடக்கும் உத்ஸவங்களைப் பார்க்கப் போகலாம். மேலும் வித்யை, தபஸ், பணம், அழகான தேஹம், யௌவனம், நல்ல குலம் ஆகிய இவைகளால் ஸாதுக்களுக்கு ஸத்குணங்கள் விருத்தி யாகும். துஷ்டர்களுக்கு மேற்கண்டவைகள் தோஷங் களாகின்றன. அவைகளால் விவேகம் கெடுக்கப் படுகிறது. அதனால் கர்வத்தை (நான் வித்வான். நல்ல குலத்தில் பிறந்தவன் என்ற அபிமானத்தை) அடைந்து ஜனங்கள் துராலோசனையுள்ளவர்களாகிப் பெரியோர்களுடைய (யோக்யதையை) பார்க்கிறதில்லை. ஆனதால் நிலையில்லாத சித்தமுள்ளவர்களான

மேற்காட்டியபடியுள்ள பந்துக்களுடைய வீட்டிற்குப் போகக்கூடாது. அவர்கள் புருவ நெரித்தலுள்ள பார்வையால் தங்கள் கிருஹத்திற்கு வந்த பந்துக்களைப் பார்க்கிறார்கள். வக்கிரவ புத்தியுள்ள வார்த்தைகளைக் கேட்பதால் மிகுந்த வருத்தம் உண்டாகிறது. அவ்வளவு துக்கம் சத்துருக்களாலும், அம்புகளாலும் உண்டாகிறதில்லை, (பந்துக்கள் அவமதித்தால் அந்தத் துக்கம் ஸஹிக்க முடியாதென்று கருத்து), அழகான புருவங்களுள்ளவளே! நீ தக்ஷ ப்ரஜாபதியின் பெண். பிதாவிற்கு உன்னிடம் மிகுந்த பிரீதியுண்டு. இவையெல்லாம் எனக்குத் தெரியும். ஆனாலும் நீ என்னை ஆச்ரயித்திருப்பதாலும், என்னிடத்தில் தக்ஷன் விரோதபுத்தி யுள்ளவனானதாலும், பிதாவாகிய அவன் உன்னைக் கௌரவப்படுத்த மாட்டான், அஸுரர்கள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவைத் துவேஷிப்பது போல் அஹங்காரமற்றவர்களாகிய ஸாதுக்களுடைய ஐசுவர்யத்தைப் பார்த்து; துஷ்டர்கள் அதை அடைய விரும்பியும், அந்தப் பதம் கிடைக்காததால் மனவருத்தம் அடைந்து அவர்களைத் துவேஷிக்கிறார்கள். (என்னிடம் தக்ஷன் விரோதம் வைத்திருப்பதற்கு இதுவே காரணம்.) ஓ அழகான இடுப்புள்ளவளே! ஸாது ஒருவரையொருவர் வணங்குவது, நமஸ்கரிப்பது, எதிர்கொண்டழைப்பது முதலியவைகளைச் செய்கிறது என்பது வழக்கமானாலும், அது அக்ஞர்களால் செய்யக் கூடியது. ஞானிகள் ப்ராக்ஞனுமாகிய பரமபுருஷனை உத்தேசித்து மனத்தால் நமஸ்காரம் முதலியவைகளைச் செய்வார்கள். தேஹத்தில் அபிமானமுள்ளவர்களை உத்தேசித்துச் செய்கிறது இல்லை. (ஆனதால் தக்ஷன் வந்த காலத்தில் மனத்தால் பரமபுருஷனை உத்தேசித்து நமஸ்காரம்

செய்தேனென்று கருத்து.) வஸுதேவரென்ற சப்தத்திற்கு ஸத்வமென்று அர்த்தம் (புண்யத்தால் ப்ரகாசிப்பது) அதில் ப்ரகாசிப்பவர் வாஸுதேவர் எனப்படுகிறார். அவர் ஆவரண மற்றவர். இந்திரியங்கள் அடங்கிய போது ப்ரகாசிப்பவர். இந்திரியங்களுக்குப் புலப்படாத அப்பேர்ப்பட்ட பகவானை எப்பொழுதும் மனத்தால் நமஸ்காரம் செய்து கொண்டிருக்கிறேன். (அதிதிகள் வரும் பொழுதுதான் நமஸ்கரிக்கிறேன் என்பதில்லை யென்று கருத்து) ஓ சிறந்த தொடைகள் உள்ளவளே! தக்ஷன் உன்னுடைய சரீரத்தை யுண்டுபண்ணின பிதாவானாலும் அவனும், அவனை யனுசரித்தவர்களும் உன்னால் பார்க்கடியவர்களல்ல. ஏன் என்றால் நான் யாகத்திற்குப் போயிருக்கும்போது குற்றஞ் செய்யாதவனாகிய என்னை அதிக்ஷேப வார்த்தை சொல்லி அவமானப்படுத்தினான். எனக்கு விரோதியாக இருக்கிறான். பல பேர்களால் கௌரவப்படுத்தப் பட்டவனுக்குப் பந்துக்களிடம் அவமானம் நேர்ந்தால் அவன் மரணமடைய வேண்டியதேயாகும். என்னுடைய வார்த்தையை அதிக்ரமித்து தக்ஷனுடைய யாகத்திற்கு நீ போவாயானால் உனக்கு க்ஷேமமுண்டாக மாட்டாது" என்று சொன்னார். அவனால் உண்டுபண்ணப்பட்ட சரீரத்தை விட்டு விடுவாய். திரும்பி வரமாட்டா யென்று கருத்து.)

அத்தியாயம்–4

ஸதிதேவி சரீரத்தை விட்டது

1–5. சங்கரன் ஸதியை நோக்கி இம்மாதிரிச் சொல்லி "இவள் பிறந்த வீட்டிற்கு போனாலும், போகாமல் இருந்தாலும் உயிரை விட்டபோகிறாள்!" என்று யோசித்து மௌனமானார். அதனைக் கேட்டும், ஸதியானவள் பந்துக்களைப் பார்க்கவேண்டுமென்ற விருப்பமுள்ளவளாகி, "பரமசிவன் பலாத்காரமாகத் தடுப்பாரோ, அல்லது உத்தரவு கொடுப்பாரோ" என்று ஸந்தேஹப்பட்டு வெளியில் வருகிறதும் உள்ளே போகிறதுமாக இருந்தாள். அப்பொழுது அந்தப் பவானியானவள், [பரமசிவனுடைய பத்னி"] பந்துக்களை பார்க்கவேண்டுமென்ற எண்ணத்திற்குத் தடையுண்டானதால் மனவருத்தமடைந்து, கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு கோபத்தால் நடுக்கம் உற்ற சரீரமுள்ளவளாகி, நிகரற்ற புருஷனாகிய சிவனை எரிப்பவள் போலக் கடுமையாகப் பார்த்தாள். பின்னும் அவள் பெருமூச்சு விட்டாள்: துக்கத்தாலும் கோபத்தாலும் அவளுடைய ஹ்ருதயம் வருத்தமடைந்தது; மேலும் ஸ்திரீ ஸ்வபாவத்தால் மூடபுத்தியுள்ளவளாகி தன்னிடத்தில தம்முடைய பாதி சரீரத்தைத் தனக்குக் கொடுத்தவரும், ஸாதுக்களுக்குப் பிரியருமான பரமசிவனைவிட்டுத் தாய் தந்தைகளுடைய வீட்டிற்குச் சென்றாள். இப்படித் தனியாக வேகமாகச் செல்லும் ஸதிதேவியை நோக்கிப் பரமசிவனுடைய கணங்களாகிய மணிமான், மதன் முதலிய அநேக பார்ஷத கணங்கள் விருஷபத்தை முன்னடத்தி அவள் பின்சென்று அவளை விருஷபத்தின் மீதேற்றி

வைத்து, சாரிகைகள் (நாணத்தான்குருவி). பந்து, கண்ணாடி, தாமரை மலர், வெண்குடை, சாமரங்கள், புஷ்பமாலை, கானத்திற்கு ஸாதனங்களாகிய துந்துபி சங்கம், புல்லாங்குழல மஹாராஜ விபூதிகளால் அவளை உபசரித்துக்கொண்டு பயமற்றவர்களாகச் அவள் பின் சென்றார்கள்.

6–23. இப்படி ஸதியானவள் தக்ஷருடைய யாகசாலைக்கு வந்தாள். அந்த யாகசாலையானது வேத சப்தத்தால் ப்ரகாசித்தது, பசுக்கள் அவ்விடத்தில் கொல்லப்படுகின்றன. அநேக ப்ரஹ்மரிஷிகளும் அவ்விடத்திலிருக்கிறார்கள், மண்ணினாலும், மரத்தாலும், இரும்பினாலும், ஸ்வர்ணத்தாலும், தர்ப்பத்தாலும், தோலினாலும் செய்யப்பட்ட பாத்திரங்களிருக்கின்றன. அந்த யாகசாலைக்கு வந்த ஸதிதேவியை அங்கிருந்தவர்களில் ஒருவரும் ஆதரிக்கவில்லை. ஏனென்றால் தக்ஷரிடம் பயந்திருந்தார்கள். ஆனால் அவருடைய ஸஹோதரிகளும், தாயாரும் இவளைக் கண்டு மிகுந்த ப்ரீதியுடன் ஆலிங்கனஞ் செய்துகொண்டார்கள். ஆனந்தபாஷ்பத்தைப் பெருக்கினார்கள். அப்படியும் ஸதியானவள் தகப்பனார் தன்னை ஆதரிக்காததால் ஸஹோதரி முதலியவர்களுடைய வார்த்தையாலும் அவர்கள் செய்யும் உபசாரத்தாலும் ஸந்தோஷம் அடையவில்லை. கொடுத்த ஆஸனத்திலும் உட்கார வில்லை. மேலும் அவள் ருத்ரனுக்குப் பாகம் கொடாமல் யாகம் நடத்தப்படுவதைப் பார்த்து, தன் பிதாவாகிய தக்ஷன் பகவானை அவமதித்ததையும் நினைத்து கோபங்கொண்டாள். அப்பொழுது ஸகல லோகங்களையும் எரிக்கிறவள்போல் கோபாக்கினியால் ஜ்வலித்தாள், அவளைப் பார்த்துப் கணங்கள்

தக்ஷனைக் கொல்வதற்காக யத்தனித்தார்கள். தேவியானவள் அவர்களைத் தடுத்துப் பரமசிவனிடம் த்வேஷமுள்ளவனும், கர்மங்களைச் செய்வதால் கர்வமடைந்தவனுமாகிய தக்ஷனை நோக்கி, எல்லாரும் கேட்டுக்கொண்டிருக்கும்போது, எவரைக் காட்டிலும் மேலானவன் லோகத்திலொருவனுமில்லையோ, எவருக்கு லோகத்தில் பிரியனில்லையோ, எவருக்குத் த்வேஷமில்லையோ, எவரிடத்தில் ஸகல பிராணிகளும் பிரியப்படுவார்களோ, அந்த எல்லாவற்றிற்கும் காரணராக இருப்பவரும், விரோதமற்றவருமான பகவானிடத்தில் உன்னைத் தவிர எவன்தான் விரோத புத்தியை அடைவான்? (ஒருவனும் பகவானைத் துவேஷிக்க மாட்டானென்று கருத்து.)

ஓ ப்ராஹ்மண! ஸாதுக்கள் பிறருடைய குணங்களைக் க்ரஹிப்பார்களேயொழியத் தோஷத்தைக் க்ரஹிக்கிறதில்லை. உம்மைப் போன்றவர்கள் (அஸூயை உள்ளவர்கள்) தோஷத்தைக் க்ரஹிப்பார்களே யொழியக் குணத்தை க்ரஹிக்கிறதில்லை. தோஷத்தைக் க்ரஹிக்காமலேயே ஸ்வல்பமான குணங்களையும் அதிகமாக விஸ்தரிப்பவர்கள் மிகவும் உத்தமர்கள் எனப்படுகிறார்கள் (மஹான்களுக்குள் சிறந்தவர்கள்). நீ தோஷத்தையே ஆரோபித்தாய். ஆனால் இது ஆச்சரியமல்ல. மரிக்கும் ஸ்வபாவமுள்ளதாகிய சரீரத்தையே ஆத்மாவென்று சொல்லுகிற அஸத்துக் களுக்கு எப்பொழுதும் மஹத்துக்களை நிந்திப்பது ஸஹஜமேயாகும். அது மஹா புருஷர்களுடைய பாதத்தில் ஒட்டிய தூளிகளால் நாசஞ் செய்யப்பட்ட தேஜஸுள்ளவர்களிடத்தில் அதுவே க்ஷேமத்திற்குக் காரணமாகிறது. (மஹாபுருஷர்கள் தங்களை

நிந்திப்பவனைப் பார்த்து ஸஹித்திருந்தாலும் அவர்களுடைய பாததூளி" அதை ஸஹியாமல் அந்த அஸத்தை நிக்கிரஹிக்கிறது ஆகையால் க்ஷேமத்திற்கு ஹேதுவாகிறது) இரண்டு அக்ஷரங்களுள்ள (சிவ) எவருடைய திவ்ய நாமத்தைப் பேச்சுடன் பேச்சாக ஒரு தடவை உச்சரித்தால் ஸகல பாவங்களும் உடனே நிவர்த்தியாகின்றனவோ அப்பேர்ப்பட்ட பரமசிவனைப் பாபியான நீ த்வேஷிக்கிறாய். ஆச்சரியம்! அவர் பரிசுத்தமான கீர்த்தியுள்ளவர். அவருடைய சரிதங்கள் பரிசுத்தியை உண்டுபண்ணக்கூடியவைகள். அவருடைய உத்தரவை மீறக்கூடாது. ப்ரஹ்மானந்தமாகிய மதுவை அடைய விரும்பியவர்கள் எவருடைய பாதமாகிய தாமரை மலரை மனதாகிய வண்டுகளால் ஸேவிக்கிறார்களோ, எவர் பக்தர்கள் விரும்பியதை அவரவர்களுடைய இஷ்டப்படி கொடுக்கிறாரோ, அந்த லோக பந்துவான பகவானுக்கு நீ துரோகம் செய்கிறாய். ப்ரஹ்மா முதலிய தேவர்கள் அந்தப் பகவானுடைய பாதத்தின் நிர்மால்யத்தைத் தலையில் வஹிக்கிறார்கள். அவர்கள் பகவான் ஜடைகளை விரித்துக்கொண்டு மயானத்தில் வஸிப்பதையும், அங்கிருக்கும் மாலை, சாம்பல், கபாலம் ஆகிய இவை களை ஆபரணங்களாகத் தரிப்பதையும் அறியார் களோ? உனக்குத்தான் தெரியுமோ? மேலும் தர்மத்தைக் காப்பாற்றுகிறவராகிய பகவானைப் பயமில்லாமல் எவர்கள் நிந்திக்கிறார்களோ அவர்களை சிக்ஷிக்கச் சக்தியுள்ளவனானால், பலாத்காரமாக அவருடைய நாக்கைத் துண்டிக்கவேண்டும். சக்தியற்ற வனானால், இரு கைகளால் காதுகளை மறைத்துக் கொண்டு வெளியே போகவேண்டும். அல்லது தானாவது ப்ராணனை விட்டுவிடவேண்டும். இதுவே

இவ்விஷயத்தில் தர்மமெனப்படுகிறது. (பகவன் நிந்தையைக் கேட்டு ஸஹிக்கக்கூடாதென்று கருத்து) ஆதலால் பரமசிவனை நிந்தித்தபடியால், உன்னால் உண்டுபண்ணப்பட்டதாகிய இந்த சரீரத்தை இனி நான் வைத்துக்கொள்ளுகிறதில்லை. மோஹத்தால் அசுத்தமாகிய அன்னத்தை புஜித்தாலும் அதைக் கக்கிவிடுவதே சுத்திக்கு காரணமென்று சொல்கிறார்கள். ஆத்மாவிலேயே ரமித்துக்கொண்டிருக்கும மனமானது வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் விதி, நிஷேதங்களில் செல்லுகிறதில்லை. தேவர்கள் ஆகாயத்தில் நடக்கிறது என்றும் மனிதர்கள் பூமியில் நடக்கிறதென்று ஏற்பட்டிருப்பது போல் எப்படியோ,அப்படி போல் அவரவர்களுக்கென்று ஏற்பட்டிருக்கும் தர்மத்தில் இருக்கவேண்டுமே யல்லாமல் அந்நியனை நிந்திக்க கூடாது. அக்நிஹோத்ரம் முதலிய கர்மங்களும், நிவிருத்தி மார்க்கங்களான சமம், தமம், முதலியவை களும் வேதத்தால் சொல்லப்பட்டிருப்பதால் அனுஷ் டிக்கக் கூடியவைகளேயாம். இரண்டு மார்க்கங்களும் ஒன்றுக்கொன்று விருத்தங்களாகையால் ஒரே காலத்தில் ஒரே புருஷனால் அனுஷ்டிக்க முடியாதவைகளாக இருக்கின்றன. ஆனதுபற்றி ஆசையுள்ளவன் கர்ம மார்க்கத்தையும், வைராக்கியமுள்ளவன் நிவிருத்தி மார்க்கத்தையும் அனுஷ்டிக்க வேண்டுமென்ற வியவஸ்தை வேதத்திலேயே ஏற்பட்டிருக்கிறது. பிரஹ்மத்தினிடத்தில் இரண்டு வகையான மார்க்கானுஷ்டானமும் ஸம்பந்திக்கிறதில்லை. (கர்மிக்கு நிவிருத்தி மார்க்கத்தை அனுஷ்டிக்காததாலும், சாந்தனுக்குக் கர்மத்தை அனுஷ்டிக்காததாலும் எப்படி தோஷமில்லையோ அப்படியே பகவானுக்கு இரண்டையும் அனுஷ்டிக்காததால் குற்றம் இல்லை

என்று கருத்து) ஓ பிதாவாகிய தக்ஷ! எங்களால் அனுபவிக்கப்படும் அணிமாதிகள் காரணமற்றவைகள் (நினைத்தமாத்திரத்தில் கிடைப்பவைகள்) ப்ரஹ்ம வித்துக்களால் அடையப்பட்டவைகள். இவை உனக்கெட்டாதவை. உன்னுடைய ஸ்மிருதிகள் யாகசாலையில் கிடைக்கக்கூடியவைகள். அந்த அன்னத்தையும் புஜித்தவர்களால் ஸ்துதிக்கப்பட்ட வைகள் (பரமசிவன் தரித்திரன் நான் ஐசுவரியம் உள்ளவனென்ற கர்வங் கொள்ளவேண்டாமென்று கருத்து). பரமசிவனுக்கு அபராதஞ் செய்தவனாகிய உன்னுடைய தேஹத்தாலுண்டான இந்தக் கெட்ட சரீரத்தால் என்ன பயன்? மஹாபுருஷனை நிந்தித் தவனால் உண்டுபண்ணப்பட்டதாகையால் இது நிந்திக்கக்கூடியது. கெட்டவனாகிய உன்னுடைய ஸம்பந்தத்தால் எனக்கும் வெட்கமுண்டாகிறது. வேடிக்கையாகப் பேசிக்கொள்ளும்போது விருஷப சத்வஜாராகிய பகவான் என்னை, "ஓ தாக்ஷாயணி" (தக்ஷனுடைய பெண்) என்று அழைத்து உன்னுடைய பெயரைச் சொல்வார். அப்பொழுது அதனைக் கேட்டுப் புன்னகையற்றவளாகி மிகுந்த துக்கத்தை யடைவேன்! ஆனதால் உன்னுடைய சரீரத்திலிருந்து உண்டான இந்தப் பிணத்துக்கொப்பான தேஹத்தை விட்டு விடுவேன்" என்று சொன்னாள்

24–30. காமன் முதலிய சத்ருக்களை அடக்கிய ஓ விதுரரே! இம்மாதிரி. யாகசாலையில் பட்டு வஸ்திரமுடுத்திய ஸதியானவள் தக்ஷனை நோக்கி சொல்லி ஆசமனஞ்செய்து வடக்கு முகமாகப் பூமியில் உட்கார்ந்து மௌனமாகக் கண்களை மூடிக் கொண்டு யோகத்தைச் செய்தாள். எப்படியெனில்,

நல்ல ஆஸனத்தில் உட்கார்ந்து பிராண வாயுவையும் அபான வாயுவையும் நாபியில் அடக்கி, அங்கிருந்து உதான வாயுவைக் கிளப்பி, மெள்ள மெள்ள ஹ்ருதயத்தில் புத்தியுடன் நிறுத்தி, அடக்கியிருந்த கண்டத்தின் வழியாகப் புருவங்களுடைய மத்திய பாகத்திற்குக் கொண்டு வந்தாள். இப்படி குற்றமற்ற வளாகிய அந்த ஸதியானவள், மஹான்களைக் காட்டிலும் மிகவும் மஹானாகிய மஹாதேவனால் மடியில் ப்ரீதியுடன் வைத்துக்கொள்ளப் பட்ட சரீரத்தில் வாயுவாகிய அக்கினியைத் தரித்தாள். பின்பு அவள் ஜகத்குருவாகிய பர்த்தாவினுடைய பாதாரவிந்தத்தையே தியானஞ்செய்து அதனால் சுத்தையாகிப் பர்த்தாவையே தர்சித்தாள். வேறொரு வரையும் பார்க்கவில்லை. ஸமாதியாகிய அக்கினியால் அவளுடைய தேஹமானது எரிக்கப்பட்டு ஜ்வலித்தது, தக்ஷனிடத்தில் கோபத்தால் சரீரத்தை விட்டாள்; ஆகாசத்திலிருப்பவர்களுக்கும் பூமியிலிருப்பவர்களுக்கும் அது ஒரு ஆச்சரியமாக இருந்தது. எல்லாராலும் பூஜிக்கக்கூடியவராகிய பரமசிவனுடைய பத்தினி ஆகிய ஸதியானவள் தக்ஷனால் கோபமுண்டு பண்ணப்பட்டு பிராணனை விட்டாள். 'ஹா' 'ஹா' என்று எல்லோரும் உரக்கச் சொன்னதுமல்லாமல் 'இந்தத் தக்ஷனுடைய துஷ்டத்தனம் மிகவும் வியக்கிக் கூடியது. லோகத்திலுள்ள சரம் (அசையும் பொருள்) அசரம் [அசையாப் பொருள்) யாவும் இவனுடைய பிரஜைகளல்லவா ? (எல்லாரிடத்திலும் இவனுக்குப் பொதுவாகவே ப்ரியமிருக்கவேண்டியது) ஸதியோ இவனுக்குப் பெண். கௌரவப்படுத்தப்பட வேண்டியவள். அப்படியிருக்க அவள் உயிரிழக்கும்படி அவமதித்தாள். பின்னுமவள் மரிக்க யத்தனிக்கும்

பொழுதும் தடுக்கவில்லை. பரமசிவனைத்வேஷித்தவன். கெட்ட அபிமானமுள்ளவன். ப்ராஹ்மணர்களில் தாழ்ந்தவன். இவனுக்குமிகுந்த அபகீர்த்தியுண்டாகப் போகிறது" என்றும் சொன்னார்கள்.

31. இம்மாதிரியான ஜனங்களுடைய வார்த்தையைக் கேட்டும். ஸதிதேவி பிராணனை விட்டதைப் பார்த்து பார்ஷத கணங்கள் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு தக்ஷனைக். கொல்வதற்காக ஓடிவந்தார்கள்.

32–34. அதனைப்பார்த்து அத்வர்யுவாகிய ப்ருகுவானவர் யாக விரோதிகளை நாஸஞ்செய்யக்கூடிய மந்திரங்களை உச்சரித்து, தக்ஷிணாக்கினியில் ஹோமஞ் செய்தார். உடனே அக்கினியிலிருந்து ரிபுக்களென்ற தேவர்கள் உண்டானார்கள். அவர்கள் துரஸ்ஸினால் ஸோமத்தை அடைந்தவர்கள். அவர்கள் குறைக் கொள்ளிகளாகிய ஆயுதத்தால் பார்ஷதர்களை எரிக்க, அவர்கள் ப்ரகாசிக்கும் ப்ரஹ்ம தேஜஸ்ஸைக்குப் பயந்து குஹ்யகர்களுடன் ஓடினார்கள்.

இந்த நான்காவது அத்தியாயத்தில் 23 வது ஸுலோகத்துடன் நான்காவது அத்தியாயம் முடிந்ததாக வும், மற்ற ஸுலோகங்கள் ஐந்தாவதென்றும். விஜயத் வஜீய வ்யாக்யானத்தில் கணக்கிடப் பட்டிருக்கிறது.)

அத்தியாயம்–5

தக்ஷ வதம்

1–4 தக்ஷனால் அவமதிக்கப்பட்டு ஸதிதேவி மரணமடைந்ததையும், பார்ஷத கணங்கள் அந்த யாகத்திலுண்டான தேவர்களால் துரத்தப்பட்டதையும், பகவானாகிய பரமசிவன் நாரதர் முகமாகத் தெரிந்து கொண்டு மிகவும் கோபங் கொண்டார்.. இரண்டு உதடுகளையும் கடித்துக் கொண்டார். மின்னல் போலும், அக்கினிஜ்வாலைகள் போலும் பிரகாசிக்கிற ஜடையைத் தூக்கிக் கர்ஜித்துப் பூமியில் அடித்தார். அதிலிருந்து பரமசிவனுடைய அம்சமுள்ள வீரபத்திரர் உண்டானார். அவர் பெரியதான சரீரமுள்ளவர். ஆகாசம் வரையில் வளர்ந்தவர். ஆயிரம் கைகள் உள்ளவர். மேகம் போன்ற காந்தியுள்ளவர். மூன்று சூர்யர்கள் போன்ற மூன்று கண்கள் உள்ளவர் பயங்கரங்களான சிங்கப் பற்களுள்ளவர். ஜ்வலிக்கும் அக்கினி போன்ற தலைமயிர்களுள்ளவர். கபால மாலையைத் தரித்தவர். பலவகையான ஆயுதங்களைத் தரித்தவர். அவர் பகவானை நோக்கி 'என்னால் உமக்குச் செய்யப் படவேண்டியது என்ன' என்று கைகூப்பிக் கேட்டார். அதனைக் கேட்ட பகவான் அந்தப் பூதத்தை நோக்கி, நீ என்னுடைய அம்சம் உள்ளவன். என்னுடைய படர்களுக்கு அதிபதி. ஆனதால் தக்ஷனையும் அவனுடைய யக்ஞத்தையும் நாசஞ்செய்" என்று ஆக்ஞாபித்தார்.

5–8 இப்படி கோபங்கொண்ட பரமசிவனால் ஆக்ஞாபிக்கப் பெற்ற வீரபத்திரர், தேவதேவரும்,

விபுவுமாகிய பகவானைப் பிரதக்ஷிணஞ் செய்து தம்மை மஹாபல முள்ளவராக நினைத்துக் கொண்டார். பின்னுமந்த வீரபத்திரர் ஜகத்தை ஸம்ஹரிக்கும் அந்தகனையும் நாசஞ் செய்யக்கூடிய சூலாயுதத்தை யெடுத்து, பாதஸரம் முதலிய ஆபரணங்கள் சப்திக்கும் படி தக்ஷனுடைய யாகசாலைக்குச் சென்றார். பகவானுடைய பார்ஷத கணங்களும் பயங்கரமாகக் கர்ஜித்துக் கொண்டு அவர்பின் சென்றார்கள். அப்பொழுது யஜமானன் ஸதஸ்யர்கள் ரித்விக்குகள், பிராம்மணர்கள், அவர்களுடைய பத்தினிகள் ஆகிய எல்லாரும் வடக்குத் திக்கில் உயரக் கிளம்பும் தூளியைப் பார்த்து, 'இதென்ன இருள்' எங்கிருந்து உண்டாயிற்று? காற்று வீசவில்லை; (உத்பாதத் தாலுண்டானதல்ல) பிராசீனபர்ஹிஸ் என்ற உக்கிரதண்டனாகிய அரசனுடைய ராஜ்யகாலம் ஆகியதால் திருடர்களில்லை. பசுக்களும் ஓட்டப்பட வில்லை. எதனால் தூளி உண்டாயிருக்கிறது? இப்பொழுது உலகத்திற்குப் பிரளயம் வரப்போகிறதா? என்ன, என்று யோசித்தார்கள்.

9–11 தக்ஷனுடைய பத்தினியாகிய பிரஸூதி முதலிய ஸ்திரீகள், "இந்தப் பிரஜாபதியான தக்ஷன் மற்ற பெண்கள் பார்த்திருக்கும்போது குற்றமற்றவள் ஆகிய ஸதி உயிரையிழக்கும்படி அவளை அவமானப் படுத்தினாரே, பிரளய காலத்தில் ஜடைகளை விரித்துக் கொண்டு, தம்முடைய சூலமாகிய ஊசியில் திக் கஜங்களைக் கோத்தும், தூக்கிக் கொண்டும் அட்ட ஹாஸமாக கர்ஜித்ததால் திக்கை வெடிக்கச் செய்து கொண்டும் நர்த்தனஞ் செய்கிறாரோ, அப்போர்ப்பட்ட ஸஹிக்க முடியாத தேஜஸுள்ள பகவானைக்

கோபமுள்ளவராகவும் புருவ நெரித்துள்ளவராகவும், பயங்கரங்களாகிய சிங்கப்பற்களால் நட்சத்திரங்களை உயரத் தூக்கியவருமாகவும் செய்த பிரஜாபதியாகிய தட்சருக்கு க்ஷேமம் கிடைக்குமா?" என்று பலவகையாக நடுங்கின மனத்துடன் சொல்லிக் கொண்டார்கள்.

12–26 அதனைக் கேட்ட தக்ஷருக்குப் பயத்தைக் குறிப்பிடக்கூடிய அபசகுனங்கள் ஆகாசத்திலும், பூமியிலும் காணப்பட்டன. ஓ விதுரரே! அதற்குள் அநேக ஆயுதவகைகளுள்ளவர்களும் குட்டையான சரீரமுள்ளவர்களும், சிவந்த நிறமுள்ளவர்களும், பொன்னிறமுள்ளவர்களும், மகரத்தின் வயிறு, முகம் போன்ற முகமுள்ளவர்களுமான பார்ஷதகணங்கள் அந்த யாகசாலையை நான்கு புறத்திலும் சூழ்ந்து கொண்டார்கள். சிலர் யாகசாலையின் பிராக்வம் சத்தை (கிழக்கிலும், மேற்கிலுமிருக்கும் தூண்களின் மீது போடப்பட்டு, கீழ்மேலாகவிருக்கும் காஷ்டம்) முறித்தார்கள். பத்தினிகளிருக்குமிடமான பத்தினி சாலையை (யாகசாலைக்கு முன்னிருக்கும்) ஸதஸ்ஸை யும், அக்னி த்ரசாலையையும், யஜமானனுடைய கிரஹத்தையும், இன்னுஞ் சிலர் யாகசாலையையும், பின்னும் சிலர் யாக பாத்திரங்களையும் நாசஞ் செய்தார்கள்; சில கணங்கள் அக்கினிகளை அணைத் தார்கள்; சிலர் அக்கினிகுண்டங்களில் மூத்திரத்தை விட்டார்கள். சிலர் உத்தரவேதியின் மேகலைகளை அறுத்தார்கள். சிலர் மஹரிஷிகளை உபத்திரவித்தார் கள். சிலர் முனிபத்தினிகளை அதட்டினார்கள்; சிலர் ஓடுகிற ஸபீபத்திலுள்ள தேவர்களைப் பிடித்துக் கொண்டார்கள். மணிமாவென்பவன் பிருகுவைக் கட்டினான்; வீரபத்ரர் பிரஜாபதியைக் கட்டினார்; சண்டீச்வரர் பூஷாயை (ஸூயனை)யும்தத, நந்திகேசு வரர் பனனென்பவரையும் பிடித்துக் கொண்டார்கள்

எல்லா ரித்விக்குகளும், ஸதஸ்யர்களும், மற்ற தேவர்களும் பார்ஷத கணங்களால் எறியப்படும் கற்களால் மிகவும் துன்பமடைந்து பலவகையாக ஓடினார்கள்; பிருகுவானவர் ஸதஸ்ஸில் விசைகளைக் காட்டிக்கொண்டு சிரித்ததால் ஸோமருவத்தை வைத்துக் கொண்டு ஹோமஞ் செய்யும் அவருடைய விசைகளை வீரபத்திரர் பிடுங்கினார்; பகரென்பவர் சிவனைத் தக்ஷன் நிந்திக்கும்போது கண்களால் ஜாடை காட்டியபடியால் அவரைக் கீழே தள்ளி அவருடைய இரண்டு கண்களைப் பிடுங்கினார்; மேலும் தக்ஷன் பகவானை நிந்திக்கும்பொழுது பற்களை வெளியில் தெரியும்படியாகச் சிரித்தவராகிய பூஷா வென்பவருடைய பற்களை வீரபத்திரர் உடைத்தார்.

பின்பு அந்த வீரபத்திரர் தக்ஷனைப் பூமியில் கிடத்தி, அவனுடைய மார்பில் உட்கார்ந்து கூர்மையான கத்தியால் அவனுடைய கழுத்தை வெட்டியும் அது உட்லைவிட்டு வேறாக எடுக்க முடியவில்லை; அப்பொழுது ஆயுதங்களாலும், அஸ்திரங்களாலும் அவனுடைய தோல் வெட்ட முடியாமலிருப்பதைப் பற்றி யோசிக்கலானார். அப்பொழுது அவர் யாகத்தில் பசுக்களை ஆயுதம் இல்லாமலேயே கொல்லும் உபாயத்தை நினைத்துக் கொண்டு தக்ஷனுடைய கண்டத்தைத் திருகி உடலைவிட்டு எடுத்து மிகுந்த கோபத்துடன் தட்சிணாக்கனியில் ஹோமஞ் செய்தார்; பின்னுமவர் அந்த யாகசாலையில் அக்கினியை வைத்துக் கொளுத்திக் கைலாஸஞ் சென்றார். அதைக் கண்ட பூதங்களும், பிரேதங்களும், பிசாசுக்களும் 'நல்லது நல்லது' என்று கொண்டாடினார்கள். மற்றவர்கள் நிந்தித்தார்கள்.

அத்தியாயம்–6

ப்ரஹ்மதேவர் பரமசிவனைப்ரார்த்தித்தது

1–41. பின்பு ருத்ர கணங்களுடைய சூலம். கத்தி, கதை, பரிகம் முத்கரம் ஆகிய ஆயுதங்களால் அடிக்கப்பட்டு அபஜயமடைந்த தேவகணங்கள், வெட்டப்பட்டகைகளும், துண்டிக்கப்பட்டகைகளுமான ஸகல அவயவங்களுள்ளவர்களாகிப் பயந்து ரித்விக்குகளுடனும், ஸதஸ்யர்களுடனும் ப்ரஹ்மதேவரிடம் சென்று அவரை நமஸ்கரித்து எல்லாவற்றையும் தெரிவித்தார்கள். வரும் காரியத்தை அறிந்தே ப்ரஹ்மதேவரும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் தக்ஷனுடைய யாகத்திற்குப் போகவில்லை. ப்ரஹ்மா தேவர்கள் உடைய வார்த்தையைக் கேட்டு அவர்களை நோக்கி, தேஜஸ்வியாகிய புருஷன் குற்றஞ் செய்தாலும், அவருக்கு அபராதஞ் செய்ய விரும்பினாலும் அது பெரும்பாலும் க்ஷேமத்தைக் கொடுக்காது. பெரியோர்கள் குற்றம் செய்யமாட்டார்கள். அப்படிச் செய்தால் நாம் அதனை ஸஹிக்கவேண்டுமேயல்லாமல் வேறொன்றையும் நினைக்கக்கூடாது.) அப்படியிருக்க நீங்கள் யக்ஞ பாகத்தை அவருக்குக் கொடாமல் அலக்ஷ்யஞ் செய்து அவருக்கு அபராதஞ் செய்திருக்கிறீர்கள். ஆனாலும் அந்தப் பகவான் சீக்கிரத்தில் சந்தோஷிக்கும் ஸ்வபாவமுள்ளவர். ஆனதால் தாமரை மலர் போன்ற அவருடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டு அவரைச் சந்தோஷிக்கச் செய்யுங்கள். எவர் கோபங்கொண்டால் லோக பாலர்களுடன் லோகங்கள் நாசமடையுமோ; அந்தப் பகவான் மனைவியை விட்டு பிரிந்திருக்கிறார்.

தக்ஷனுடைய கெட்ட வார்த்தையைக் கேட்டு மனவருத்தம் அடைந்திருக்கிறார். அவரை நீங்கள் யாகத்தின் க்ஷேமத்தை விரும்பியவர்களாகி வேண்டிக்கொள்ளுங்கள். மேலும் சுதந்திரராகிய அவருடைய பல பராக்கிரமங்கள் இவ்வளவென்று எனக்கும் தெரியாது. யக்ஞனுக்கும் தெரியாது (அக்காலத்தில் இந்திரனாக இருந்தவருக்கு யக்ஞனென்று பெயர்). உங்களுக்கும், மற்ற பிராணிகளுக்கும் மஹரிஷிகளுக்கும் தெரியாததேயாம். அப்படியிருக்க அந்த விஷயத்தில் உபாயம் யாரால் சொல்லமுடியும்?' என்று சொல்லி அந்தத் தேவர்கள் உடனும், ப்ரஜாபதிகளுடனும், பித்ருக்களுடனும் கைலாஸ பர்வதம் நோக்கிச் சென்றார். அந்த மலையானது திரிபுர ஸம்ஹாரஞ் செய்து பரமசிவனுக்குப் பிரியமான வாசஸ்தலம். அந்த மலையானது ஓஷதி, தபஸ், மந்திரம், யோகம் ஆகிய இவைகளில் இயற்கையாகவே சித்தியடைந்தவர்களான தேவர்களாலும், கின்னரர்களாலும் கந்தர்வர்களாலும். அப்ஸரஸ்ஸுகளாலும் எக்காலத்திலும் ஆசிரயிக்கப்பெற்றது. பலவகையான தாதுக்களால் அழகாயிருப்பவைகளும், அநேக ரத்னமயமான சிகரங்களாலும். பலவகையான மரங்கள், கொடிகள். குல்மங்கள் ஆகிய இவைகளாலும். தூய்மையான மலையருவிகளாலும், அநேக குகைகளுள்ள தாழ்வரைகளாலும் ப்ரகாசிக்கிறது. ஆனதால் பார்த்தாவுடன் கிரீடிக்கும் ஸித்தமாதகர்களுக்குச் சந்தோஷத்தை உண்டுபண்ணுகிறது. அவ்விடத்தில் மயில்கள் 'கேக,காக என்று ஸ்தித்கின்றன. மதித்த வண்டுகளுடைய மூர்ச்சனை (இராகத்தின் கதி விசேஷம்) கேட்கப்படுகிறது. பின் அவ்விடத்தில் இஷ்டத்தைக் கொடுக்கக் கூடியவைகளான மரங்களிருப்பதாலும், பக்ஷிகள் இனிமையாகச்

சப்திப்பதாலும், மலையானது கையைத் தூக்கிக் கொண்டு ப்ராஹ்மணர்களை அழைப்பது போலிருக் கிறது. யானைகள் ஓடிக்கொண்டிருப்பதால் மலை ஓடுவதுபோலும், மலையருவிகள் சப்திப்பதால் மலை சப்திப்பது போலும் இருக்கிறது.

இன்னும் அந்தப் பர்வதமானது மந்தாரம், பாரிஜாதம் ஸரளம், பச்சிலை, மரம், பனைமரம், மலைமகத்தி, வேங்கை அரஜீனம், ஓட்டு மாமரம், அடம்பம், நீபமென்ற அதன் பேதம், கொன்றை எருக்கு, சதபத்ரம், மாவலிங்கை. சிறு சண்பகம், குடஜம், மல்லிகை மாதவி, பலாமரம், அத்திமரம், அரசமரம், இருளிமரம், ஆலமரம், ஹிங்கு, பூர்ஜம், ஓஷதி, பூகம், ராஜபூகம், நாகைமரம், பேரீச்சைமரம், ஆம்ராதகம், மாமரம், பிரியாளு, இலுப்பை, இங்குதம், வண்டடித்த மூங்கில்கள் முதலிய விருக்ஷங்களால் ப்ரகாசிக்கிறது. மேலும் ஆம்பல், நீலோத்பலம், செந்தாம்ரை, வெண்தாமரை முதலிய புஷ்பங்கள் நிறைந்த குளங்களிருக்கின்றன. அவைகளில் பறவைகள் இனிமையாகச் சப்திக்கின்றன. பன்றிகள், சிங்கங்கள், கரடிகள், சல்யகம் (முட்பன்றிகள்), கவயங்கள், சாபங்கள், புலிகள், குருக்கன் எருமைகள்; கர்ண, உர்ண ஏகபத நாய், கஸ்தூரி மிருகங்கள் முதலியவை களால் விளங்குகிறது. வாழைத் தோட்டத்தால் சூழப்பட்ட தாமரை ஓடையுள்ளது.

மேலும் அவ்விடத்தில் கங்கா நதி ஓடுகிறது. அதன் ஜலத்தில் பரமசிவனுடைய பத்தினியாகிய ஸதி ஸ்நானஞ் செய்ததால் புண்யகரமாயிருக்கிறது. இப்படிப்பட்ட கைலாஸத்தைப் பார்த்து, தேவர்கள்

ஆச்சரியமடைந்தார்கள். பின்னுமவர்கள் அவ்விடத்தில் அலகாவென்ற அழகான பட்டணத்தைக் கண்டார்கள். ஸௌகந்திகமென்ற வனத்தையும் அதிக ஸௌகந்திகம் என்ற தாமரை மலர்களையும் கண்டார்கள். அந்தப் பட்டணத்திற்கு வெளியில் நந்தா, அலக நந்தாவென்ற இரண்டு நதிகள் ஓடுகின்றன. அவைகள் பகவானுடைய பாதாரவிந்த தூளியால் மிக்க புண்யம் பெற்றிருக் கின்றன. ஓ விதுரரே! அந்த நதிகளின் ஜலத்தில் ஆகாசத்தில் செல்லும் தேவ ஸ்திரீகள் விமானத்தில் இருந்து இறங்கி, தங்கள் பர்த்தாவுடன் ஸ்நானஞ் செய்து ரதியாலுண்டான சிரமத்தை நிவர்த்தித்துக் கொள்ளுகிறார்கள். மேலும் அவர்கள் ஸ்நானஞ் செய்ததால் அவர்களுடைய சரீரத்திலிருந்து கரைந்த குங்குமங்களால் ஜலமானது பொன்னிறமாக ஓடுகிறது. அதனை யானைகள் தாகமில்லாத காலத்திலும் குடிக்கின்றன. பெண் யானைகளையும் குடிக்கச் செய்கின்றன. அந்த அலகா பட்டணத்தில் ஸ்வர்ண மயமான விமானங்கள் பல இருக்கின்றன. புண்ய ஜனங்கள் (குபேரனுடைய வேலைக்காரர்கள்), அவர்களுடைய ஸ்திரீகள் ஆகிய இவர்களால் நிறைந்திருக்கிறது. மின்னலுள்ள மேகங்களால் ப்ரகாசிக்கும் ஆகாசம் போலிருந்தது, தேவர்கள் அந்தக் குபேரனுடைய பட்டணத்தையும் ஸௌகந்திகம் என்ற வனத்தையும் கடந்து சென்றார்கள். அந்த வனத்தில் இஷ்டமான வஸ்துக்களைக் கொடுக்கக் கூடியவைகளும், அழகான புஷ்பம், பழம், இலை ஆகிய இவைகளுள்ளவைகளுமான திவ்ய விருக்ஷங்க ளிருக்கின்றன. மேலும் தாமரைக் குளங்கள் இருக்கின்றன. அவைகளில் ஹம்சம் முதலிய பறவை களும் வண்டுகளும் சப்திக்கின்றன. காட்டு யானைகள்

செஞ்சந்தன மரங்களில் உராய்ந்து அதன் கந்தமுள்ள காற்று வீசுகிறது. அதனால் புண்ய ஸ்திரீகளுடைய மனம் ஸந்தோஷத்தை அடைகிறது. வைடூரிய கற்களால் செய்யப்பட்ட படிகள் உள்ள ஓடைகளும் இருக்கின்றன. கிம்புருஷர்கள் அவ்விடத்தில் வஸிக்கிறார்கள். அதற்குச் சமீபத்தில் தேவர்கள் ஒரு ஆலமரத்தைக் கண்டார்கள். அது நூறு யோஜனை தூரம் உயரமுள்ளது. எழுபத்தைந்து யோஜனை நீளமுள்ள கிளைகளால் விஸ்தாரமானது. எங்கும் மிகுந்த நிழலுள்ளது. தாபமற்றது. பறவைகளின் கூடுகளற்றது. யோக ஸ்வரூபமாயுள்ளது, மோக்ஷத்தை அடைய விரும்பியவர்களுக்குக் கதியாயுள்ளது. அந்த மரத்தின் அடியில் கோபமற்ற அந்தகன் போல் உட்கார்ந்திருக்கும் பகவானைத் தேவர்கள் கண்டார்கள். அவர் சாந்தமாகிய சரீரமுள்ளவர், சாந்தர்களாகிய ஸனந்தர் முதலிய ஸித்தர்களால் உபாஸிக்கப்பட்டவர். மேலும் குஹ்யர்களுக்கும் ரக்ஷஸ்ஸுக்களுக்கும் அதிபதியும், பகவானுக்கு மித்திரனுமான குபேரன் பகவானை உபாசித்துக் கொண்டிருக்கிறார். பின்னும் அந்தப் பகவான் வித்யை, தபஸ், யோகம் இவைகளுடைய மார்க்கத்தை லோகத்தில் பரவச்செய்து லோகத்துக்கு மங்களத்தைச் செய்பவர். அவைகளைத்தாமும் அனுஷ்டிப்பவர். அவைகளுக்கு அதிபதி. லோகத்திற்கு பந்து. அவர் உடைய சரீரமானது ஸந்தியாகால மேகம் போன்றது. விபூதி, யோகதண்டம், அஜினம் (மான்தோல்) ஆகிய தபஸ்விகளுக்கு இஷ்டமான அடையாளத்தையும், சந்திர கலையையும் அவர் தரித்திருந்தார். தர்பாஸனத்தில் உட்கார்ந்து நாரதருக்கும் மற்ற ஸாதுக்களுக்கும் ப்ரஹ்மத்தை உபதேசித்துக் கொண்டும் இருந்தார். வலதுகாலை இடது துடையின் மீது வைத்தும்,

வலது கையை வலது முழங்காலில் வைத்துக் கொண்டும், மணிபந்தத்தில் ஜபமாலையைத் தரிக்கும் தர்க்க முத்திரையுடன் உட்கார்ந்திருந்தார். ப்ரஹ்மானந்தத்தில் மூழ்கிய மனமுள்ளவராகவும் இருந்தார். அப்படிப்பட்ட முக்கிய முனியாகிய பகவானை லோகபாலர்களும் முனிகளும் கைகூப்பி நமஸ்கரித்தார்கள் அப்பொழுது தேவ ச்ரேஷ்டர்களாலும் அசுரச்ரேஷ்டர்களாலும் நமஸ்கரிக்கப்பட்ட பாதாரவிந்தமுள்ள ப்ரஹ்மதேவரை பரமசிவன் பார்த்து எழுந்திருந்து அவரை நமஸ்கரித்தார். அது மிகவும் பூஜ்யராகிய மகாவிஷ்ணுவானவர் (வாமனாவதாரத்தில்) காச்யபரை நமஸ்கரித்தது போலிருந்தது. பின்னும் பரமசிவனை ஸேவித்துக்கொண்டிருந்த ஸித்தகணங்களும் மஹரிஷிகளும், ப்ரஹ்மதேவரை நமஸ்கரித்தார்கள்.

42–53. இப்படிப் பரமசிவனாலும், அங்குள்ள மற்றவர்களாலும், நமஸ்கரிக்கப்பட்ட ப்ரஹ்மதேவர் பகவானை நோக்கிச் சிரித்துக்கொண்டு "ஓ ஈச்வர! ஜகத்திற்கு உற்பத்தி ஸ்தானமாகிய ப்ரகிருதி, பீஜமாகிய புருஷன் ஆகிய இவ்விரண்டிற்கும் எது மேலானதோ, பேதமற்றதோ, அந்த ப்ரஹ்மமே நீர் என்று எனக்கு தெரியும். சரீரமுள்ள சிவ, சக்தி இவைகளைக் கொண்டு நீர் கிரீடித்துக்கொண்டு பட்டுப்பூச்சி போல ஜகத்தை படைக்கிறீர். காப்பாற்றுகிறீர். ஸம்ஹரிக்கிறீர். தர்மம், அர்த்தம் இவைகளைக் கொடுக்கும் வேதத்தை ஸம்ரக்ஷிப்பதற்காக நீரே தக்ஷனை நிமித்தமாக வைத்துக் கொண்டு யாகத்தை படைத்தீர். லோகத்தில் வர்ணாசிரம தர்மங்களும், மரியாதையும் உம்மாலேயே ஏற்படுத்தப்பட்டன. அவைகளை ப்ராஹ்மணர்கள்

ச்ரத்தையுடன் அனுஷ்டித்து வருகிறார்கள். ஓ மங்கள ஸ்வரூபியாயிருப்பவரே! ஸத்கார்யஞ் செய்பவர்களுக்கு ஸ்வர்க்கம் மோக்ஷம் ஆகிய இவைகளைக் கொடுப்ப வரும் நீரே, பாப கர்மாக்களை செய்பவனுக்கு நரகம் முதலியவைகளும் உம்மாலேயே கொடுக்கப்படுகின்றன. எக்காரணத்தாலும் இது மாறுகிறதில்லை, (எல்லாக் கர்மங்களுக்கும் பலனைக் கொடுப்பவரும் நீரே.) மேலும், உம்முடைய சரணங்களில் ஆத்மாவை சமர்ப்பித்து ஸகல பிராணிகளிடத்திலும் நீர் வஸிப்பதாகவும்,ஸகலப்ராணிகளை ஆத்மாவிடத்தில் வஸிப்பவர்களாகவும் பார்க்கிறார்களோ, ஸமபுத்தி யுள்ளவர்களான அந்த ஸாதுக்கள் பெரும்பாலும் கோபத்தால் ஜயிக்கப்பட மாட்டார்கள். (பெரியோர் களுக்குக் கோபம் நேரிடாது.) அக்ஞன்தான் கோபித்துக் கொள்வான். எவர்கள் பேத புததியுள்ள வர்களோ, கர்மங்களிலேயே ஆசைப்பட்டவர்களோ, கெட்ட எண்ணமுள்ளவர்களோ, பிறருடைய க்ஷேமத்தைப் பார்த்து வருத்தப்படுகிறார்களோ, கெட்ட வார்த்தைகளை உச்சரித்துப் பிறருக்கு மிகவும் துன்பத்தை உண்டுபண்ணுகிறார்களோ அவர்கள் தெய்வத்தால் கொல்லப்படுகிறார்கள். உம்மைப் போன்ற ஸாதுக்கள் அவர்களைக் கொல்லவேண்டாம். ஏனென்றால் ஜயிக்கமுடியாத ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் மாயையால் ஜனங்கள் எப்போது, மோஹித்து பேதபுத்தியை அடைந்து அபராதஞ் செய்கிறார்களோ, அப்பொழுது ஸாதுக்கள் அவனிடத்தில் தயை செய்வார்களேயொழியப் ,பராக்கிரமத்தைச் செலுத்த மாட்டார்கள். (ஸாதுக்கள் பிறர் துக்கப்படுவதைப் பார்த்து சஹிக்காதவர்களாகையால் 'இது நம்முடைய அதிர்ஷ்டத்தால் நேர்ந்த கெடுதி; இவ்விஷயத்தில் அவன் என்ன குற்றஞ் செய்தான் என்று நினைப்பார்கள்.

மாயையானது கெடுதியைக் கொடுக்கக் கூடியது; அந்த மாயையை நீர் ஜயித்தவர். எல்லாவற்றையும் அறிந்தவர். அந்த புத்தி மயக்கம் அடைந்தவர்களும், கர்மங்களிலேயே மனத்தைச் செலுத்தி உமக்கு அபராதஞ் செய்தவர்களுமான அக்ஞர்களை அனுக்ரஹிக்க வேண்டும்; உம்மால் நாசஞ்செய்யப்பட்டு ஸமாப்தியடையாமல் இருக்கும் யாகத்தை உத்தரணஞ் செய்யவேண்டும். யக்ஞத்தின் பாகத்தை அடையத்தக்க வராகிய உமக்கு கெட்ட ரித்துவிக்குகள் பாகங் கொடுக்கவில்லை. உம்மாலேயே யாகமானது நிறை வேற்றப்படுகிறது. (யாகத்திற்குப் பலனைக் கொடுப்பவர் நீர்தான்.) இந்த யஜமானனாகிய தக்ஷன் பிழைக்கவேண்டும், ப்ருகுவிற்கு மீசை முளைக்க வேண்டும். கண்கள் உண்டாக வேண்டும்; முன் போல் பூஷாவிற்கு பற்கள் முளைக்க வேண்டும். ஆயுதங்களாலும், கற்களாலும் முறிக்கப்பட்ட தேவர்க ளுடைய அவயவங்கள் ஸ்வஸ்தங்களாக ஆகட்டும். உம்முடைய அனுக்கிரஹத்தால் எல்லோருக்கும் ஆரோக்கியம் உண்டாகட்டும். இப்பொழுது யக்ஞம் செய்து எது மிகுதியாக விருக்கிறதோ, அது இருக்கட்டும். ஓ ருத்ர! அந்த பாகத்தால் யக்ஞமானது முடிக்கப்படட்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

நோட்டு

மணிபந்த –மணிக்கட்டு "ஒருகாலை மற்றொரு துடையில் வைத்துக் கொண்டும், மற்றொரு முழங்காலில் கையை வைத்துக் கொண்டுமிருப்பது. வீராஸனமெனப்படுகிறது யோகஸாஸ்த்ரம். தர்க்க முத்திரை ஆள்காட்டி விரலுடைய நுனியும், கட்டை விரலுடைய நுனியும் சேர்த்து வைத்துக் கொண்டு கையை நீட்டி உபதேசிப்பது.

அத்தியாயம்–7

தக்ஷன் பிழைத்தது

1–5 ஓ நீண்ட கைகளுள்ள விதுரரே! இப்படி ப்ரஹ்மதேவரால் சமாதானஞ் செய்யப்பட்டு சந்தோஷமடைந்த பரமசிவன் பின்வருமாறு சொன்னார். "பிரஜைகளுக்கு அதிபதியாகிய ஓ ப்ரஹ்மதேவரே! குழந்தைகள் செய்த அபாரதத்தை நான் மனத்தில் வைத்துக் கொள்கிறதுமில்லை. வாக்கினால் சொல்லுகிறதுமில்லை. ஏனென்றால் அவர்கள் தேவமாயையால் புத்திமயங்கிக் குற்றத்தைச் செய்கிறார்கள். ஆனாலும் அவர்களுக்குச் சிட்சையைச் செய்தேன். தக்ஷப்பிரஜாபதியின் தலை எரிக்கப்பட்டதால் அவனுக்கு ஆட்டு முகமுள்ள தலையானது உண்டாகட்டும். பகரென்பவர் தம்முடைய யக்ஞ பாகத்தை மித்திரரென்பவருடைய கண்ணால் பார்க்கட்டும். பூஷாவானவர் மாவைப் புஜிக்கட்டும். அதையும் எஜமானனுடைய பற்களால் புஜிக்கட்டும். எனக்கு யாக சிஷ்டத்தைக் கொடுத்த படியால் தேவர்களுக்கு அவயவங்கள் உண்டாகட்டும். மற்ற அத்வர்யுக்கள் அசுவினி தேவர்களுடைய கைகளாலும், பூஷாவினுடைய கைகளாலும் கைகளுள்ளவர்களாக ஆகட்டும். பிருகுவானவர் ஆட்டின் மீசையுள்ளவராக ஆவார்" என்று அனுக்ரகித்தார்.

6–54 அதனைக் கேட்டு ஸகல பூதங்களும் (பிராணிகளும்) ஸந்தோஷத்துடன், "நல்லது, நல்லது" என்றார்கள். பிறகு தேவர்கள் பரமசிவனையும் ப்ரஹ்மதேவரையும் அழைத்துக் கொண்டு தக்ஷனுடைய யாகசாலைக்குச் சென்றார்கள். அவ்விடத்தில்

பகவானாகிய பரமசிவன் சொன்னபடி எல்லாவற்றையும் செய்து யாக பசுவின் தலையைத் தக்ஷனுடைய உடலுடன் சேர்த்தார்கள். அப்பொழுது பரமசிவன் கிருபை நிறைந்த பார்வையால் தக்ஷனைப் பார்க்கத் தூங்கி விழித்தவன் போல் தக்ஷன் பிழைத்து எழுந்திருந்து தனக்கு முன் நிற்கும் பரமசிவனைப் பார்த்தான்.

பரமசிவனிடத்தில் விரோதத்தால் அசுத்தமான மனமுள்ளவனாக இருந்த தக்ஷன் பகவானைத் தரிசித்தவுடன் சரத்காலத்திய மடுப்போல் சுத்த சித்தனாக இருந்தான். அப்பொழுது பரமசிவனை ஸ்தோத்திரஞ் செய்யவேண்டுமென்ற விருப்பமுள்ளவனானாலும் இறந்து போன ஸதியை- நினைத்து கண்ணீரைப் பெருக்கி அதனால் கண்ட மடைத்து கொஞ்ச நேரம் மௌனமாக இருந்து பிறகு தைரியத்துடனும் கபடமற்றும் பரமசிவனை நோக்கி, "ஓ பகவன்! நான் உம்மை அவமதித்தவனானாலும் எனக்கு உம்மால் செய்யப்பட்ட சிக்ஷையானது மிகுந்த அனுக்கிரகமேயாம்.

நீரும், விஷ்ணுவும் அதமர்களான ப்ராஹ்மணர்களிடத்திலும் உபேக்ஷை செய்கிறதில்லை. அப்படிக்கிருக்க ஸத்கர்மங்களைச் செய்பவர்களை உபேக்ஷிப்பீர்களா? நீர் ப்ரஹ்மதேவராக இருந்து வித்யை, தபஸ், விரதம் ஆகிய இவைகளையே அனுஷ்டிப்பவர்களான ப்ராஹ்மணர்களை ஆத்ம தத்துவத்தை காப்பாற்ற வேண்டி முகத்தால் முதலில் உண்டு பண்ணினீர். ஓ சிறந்தவரே! பசுக்களைத் தண்டம் வைத்துக் கொண்டு பரிபாவிப்பது போல் அந்த

ப்ராஹ்மணர்களை ஒவ்வொரு ஆபத்துக்காலத்திலும் காப்பாற்றுகிறீர். உம்முடைய உண்மையை அறியாமல் ஸபையில் கெட்ட வார்த்தைகளாகிய அம்புகளால் உம்மை அடித்தேன். அப்படி மிகவும் மஹானாகிய உம்மை நிந்தித்ததால் அதோகதியை அடைந்திருக்கும் என்னிடத்தில் கிருபா திருஷ்டியைச் செய்து என் குற்றத்தை மறந்து காப்பாற்றினீர். ஆனதால் பகவானாகிய நீர் உம்மால் செய்யப்பட்ட காரியத்தாலேயே சந்தோஷமடைய வேண்டும்" என்று (பதில் செய்ய என்னால் முடியாதென்பது கருத்து) ஸ்தோத்திரஞ் செய்து சிவனை ஸமாதானப்படுத்தி ப்ரஹ்மதேவரிடமும் விடைபெற்று உபாத்தியார் ரித்விக் முதலியவர்களுடன் யாகத்தை நடத்தினார்.

யக்ஞத்திற்கு நேர்ந்த விக்கினத்தாலுண்டான தோஷத்தின் பரிகாரத்திற்காகவும், வீரர்களான பிரமத கணங்களுடைய சேர்க்கையாலுண்டான தோஷத்தின் பரிகாரத்திற்காகவும், மூன்று கபாலங்களில் ஸம்ஸரிக்கப் பட்டதும், விஷ்ணு தேவதாகமுமான புரோடாசத்தை ரித்விக்குகள் செய்தார்கள். ஹவிஸ்ஸுடன் கூடிய அத்வர்யுவுடன் யஜமானன் சுத்தசித்தனாக மகா விஷ்ணுவை தியானஞ் செய்தான். அப்பொழுது ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் ஆவிர்ப்பவித்தார். (தோன்றினார்). அவருடைய காந்தியால் பத்து திக்குகளும் ப்ரகாசித்தன. அதனால் மற்றத் தேஜஸ்ஸுகள் அடக்கப்பட்டன.

மேலும் அவர் கருடன்மீது ப்ரகாசித்திருந்தார். கருட்னுக்குப் பிரஹத் ரதந்த்ரமென்ற ஸாமங்கள் பக்ஷங்களாக (இறக்கைகள்) இருக்கின்றன. பகவான்

கறுத்த திருமேனியுள்ளவர். பீதாம்பரம் தரித்தவர், சூரியன் போன்ற கிரிடமுள்ளவர். வண்டுகள் போல் கறுத்த தலை மயிர்களால் ப்ரகாசிக்கும் குண்டலங் களால் அழகான முகமுள்ளவர். சங்கம், தாமரை மலர், சக்கரம், பாணம், சார்ங்கமென்ற வில், கௌமோத்கீ யென்ற கதை, நந்தக மென்ற கத்தி, தோல் (கேடயம்) ஆகிய இவைகளுள்ளவைகளும், பக்தர்களைக் காப்பாற்றுவதில் பரபரப்புள்ளவைகளும், ஸ்வர்ணா பரணங்களால் ஸ்வர்ணமயங்கள் போலிருப்பவை களுமான கைகளுள்ளவர். அதனால் புஷ்பித்த கர்ணிகார விருக்ஷம் போலப் ப்ரகாசித்தார். மார்பில் ஸ்ரீ தேவியுள்ளவர். வனமாலையுள்ளவர். கம்பீரமாகிய சிரிப்பின் இலேசத்தால் ஜகத்தை சந்தோஷிக்கச் செய்பவர். அவருடைய இரு பக்கங்களில் சாமரங்களாகிய ராஜ ஹம்சங்கள் அசைகின்றன. அவருக்குமேல் வெண்குடையாகிய சந்திரன் ப்ரகாசித்தான். இப்படி வந்த ஸ்ரீமந் நாராயணனைப் பார்த்து ப்ரஹ்மா, இந்திரன், ருத்ரன் முதலிய தேவர்கள் சீக்கிரமாக எழுந்திருந்து நமஸ்கரித்தார்கள்.

மேலும், அவர்கள் பகவானுடைய தேஜஸ்ஸால் அடக்கப்பட்ட தேஜஸ்ஸுள்ளவர்களாகி, கத்கத ஸ்வரமுள்ளவர்களாகி கைக்கூப்பிக் கொண்டு சமீபம் சென்றார்கள். பின்னும் அவர்கள் அந்தப் பகவான் உடைய மகிமையை முழுமையையும் துதிக்க முடியாத வாக்குள்ளவர்களானாலும், தங்கள் புத்திக்குத் தக்கபடி பக்தர்களுக்கு அனுக்கிரகம் செய்வதற்காகச் சரீரம் எடுத்துக் கொண்டிருக்கும் பகவானை ஸ்துதித்தார்கள். தக்ஷர் மேலான பூஜாவஸ்துக்களை எடுத்துக் கொண்டு இருகைகளையும் கூப்பிக் கொண்டு ப்ரஜாபதிகளுக்குக்

குருவும், சுநந்தர், நந்தர், முதலியவர்களுடன் கூடிய வருமான பகவானிடம் சென்று அவரை நோக்கி, "ஓ பகவன்! நீர் உம்முடைய சுய ரூபத்திலிருப்பவர். புத்தி விருத்திகளற்றவர். சித்ரூபியாக இருப்பவர். நிகரற்றவர். பயமற்றவர். மாயையை வசப்படுத்திக் கொண்டு இருப்பவர். இப்படி ஸ்வதந்திரரானாலும், அந்த மாயா சம்பந்தத்தால் புருஷராகிய ராகதுவேஷங்கள் உள்ள வர்போல் ராமனாகவும், கிருஷ்ணனாகவும் இருக்கிறீர்! என்று ஸ்தோத்திரம் செய்தார்கள்.

பின்பு, ரித்விக்குகளெல்லோரும் 'ஓ உபாதிகள் உள்ளவரே! நந்திகேச்வரருடைய சாபத்தால் நாங்கள் கர்மங்களில் ஆசை கொண்டிருக்கிறோம். தங்களுடைய உண்மை எங்களுக்குப் புலப்படவில்லை. எதனுடைய சித்திக்காக, இதற்கு இதுதேவதை. இந்தக் கிரியை இப்படி அனுஷ்டிக்கப்பட வேண்டும்' என்ற வியவஸ்தை ஏற்பட்டிருக்கிறதோ, எது வேதத்தால் விதிக்கப்பட்டிருக்கிறதோ, 'அந்த அத்வரமென்ற (யாகம்) உம்முடைய ஸ்வரூபத்தை மாத்திரம் தெரிந்து கொண்டிருக்கிறோம்' என்றார்கள்.

பிறகு ஸதஸ்யர்கள் பகவானை நோக்கி, ஆசிரயத்தைக் கொடுப்பவரே! ஸம்ஸார மார்க்கம் மிகவும் கஷ்டமானது. அதில் இளைப்பாறுவதற்கு நிழல் முதலியவை இல்லை. மிகுந்த துக்கங்களே நடக்கமுடியாத இடங்களாக இருக்கின்றன. அந்த வழியில் சஞ்சரிக்கும் துஷ்ட யானை அந்தகனேயாம். விஷயங்களே கானலாக (மிருகதிருஷ்ணிகா) இருக் கின்றன. அகங்காரத்திற்கு இருப்பிடமாகிய சரீரமே சுமையாக இருக்கிறது. சுகதுக்கங்கள் படுகுழிகளாக

இருக்கின்றன. துஷ்டர்களாகிய புலி முதலியவைகளின் பயம் மிகுதியாயிருக்கிறது. சோகமாகிற காட்டுத்தீயின் உபத்திரவம் அதிகமாக இருக்கிறது. அப்படிப்பட்ட மார்க்கத்தில் செல்லும் பலவித காமனையுள்ள அக்ஞர்கள் உம்முடைய பாதங்களை எப்பொழுது அடைவார்கள் ? என்றார்கள்.

அதன் பிறகு ருத்ரன் "ஓ வரத்தைக் கொடுப்பவரே, உம்முடைய பாதமானது இஷ்டத்தை அடைய விரும்பிய எல்லாராலும் பூஜிக்கக் கூடியது. நிஷ்காமர் களான முனிகளும், மிகுந்த பிரியத்துடன் அதனைப் பூஜிக்கிறார்கள். அப்படிப்பட்ட பாதத்தில் புத்தியை செலுத்தியவனாக என்னை அக்ஞஜனங்கள் நிந்தித்தால் அதனை, உம்முடைய மேலான அனுக்கிரஹத்தால் பூர்ணனாகிய நான் மனத்தில் வைக்கிறதில்லை" என்றார். அதன்பின்பு பிருகுவானவர் "எவருடைய மாயையால் ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் ஆத்மஞ்ஞான மற்றவர்களாக அவித்யையாகிய தமஸ்ஸினால் தூங்கின வர்களாகிய (விவேகமில்லாமல்) ' ஆத்மாவிடத்தில் இருக்கும் உம்முடைய உண்மையை இப்பொழுதும் அறியவில்லையோ, அப்படிப்பட்டவரும், சரணம் அடைந்தவர்களுக்குப் பந்துவுமாகிய நீர் தயை செய்யவேண்டும்" என்றார்.

பின்பு ப்ரஹ்மதேவர் 'உம்முடைய இந்த ஸ்வரூபத்தைப் பதார்த்தங்களின் பேதத்தைக் கிரகிக்கக் கூடிய இந்திரியங்களைக் கொண்டு புருஷன் பார்க்க முடியாது. ஜீவன் இந்திரியத்திற்கும் அதன் விஷயத்திற்கும் ஸத்வம் முதலிய குணங்களுக்கும் ஆசிரயமாக இருப்பவன். நீர் மாயாமயமாகிய தேகம்

முதலியவைகளைக் காட்டிலும் வேறானவர்!' என்று ஆத்ம தத்துவத்தை உரைத்தார்.

அதன்பின் இந்திரன் "அசுரர்களை நாசஞ்செய்யும் ஆயுதங்களைத் தரிக்கும் எட்டுக் கைகளுள்ளதும், மனத்திற்கும், கண்களுக்கும் ஆனந்தத்தைக் கொடுப்பதும், ஜகத்தைத் தனக்குள் அடக்கிக் கொள்வதுமான இந்த உம்முடைய தேகமானது யுக்தமானதேயாம்" என்றான். ரித்விக்குகளுடையை பத்தினிகள் "ஓ கொப்பூழில் தாமரை மலருடையவரே! யக்ஞ ஸ்வரூபியாக இருப்பவரே! இந்த யாகமானது முன் காலத்தில் உம்மைப் பூஜிப்பதற்காகப் ப்ரஹ்மதேவரால் உண்டு பண்ணப்பட்டது. பின்பு தக்ஷரிடத்திலுள்ள கோபத்தால் பரமசிவன் இதை நாசஞ் செய்தார். பசுவைக் கொல்வது முதலியவைகள் இல்லாமலிருக்கும் அதனை தாமரை மலர் போன்ற நேத்திரத்தால் கடாக்ஷித்துப் பரிசுத்தமாகச் செய்யும்" என்றார்கள்.

மஹரிஷிகள் 'ஓ பகவன்! நீர் கர்மங்களை உமது இஷ்டப்படி செய்கிறீர். ஆனாலும் அதனுடைய பலனாகிய சுகதுக்கங்களில் சம்பந்திக்கிறதில்லை. மேலும் எந்த லக்ஷ்மிதேவியை மற்றவர்கள் ஐசுவரியத் திற்காகப் ப்ரார்த்திக்கிறார்களோ, அவள் உம்மைத் தானாக அனுஸரித்தும் அவனை நீர் லக்ஷ்யம் செய்கிறதில்லை. ஆனதால் உம்முடைய நடை உலக விருத்தமாக இருக்கிறது" என்றார்கள். ஸித்தர்கள் "எங்களுடைய இந்த மனதாகிய யானையானது துக்கமாகிய காட்டுத் தீயினால் எரிக்கப்பட்டும் தாகத்தை யடைந்தும் உம்முடைய கதையாகிய சுத்தமான அமிருத நதியில் மூழ்கி ஸம்ஸார தாபத்தை

நினையாமலிருப்பதுடன் ப்ரஹ்மத்தை யடைந்தவன் போல அதிலிருந்து திரும்பவுமில்லை" என்றார்கள். தக்ஷருடைய பத்தினியானவள் (ப்ரஸூதி) 'ஓ ஈச! லக்ஷ்மிக்கு இருப்பிடமா யிருப்பவரே! நல்வரவாகுக தயை செய்ய வேண்டும், உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். உம்முடைய பத்தினியாகிய லக்ஷ்மீ தேவியுட்ன் இவ்விடத்திலிருந்து எங்களைக் காப்பற்ற வேண்டும். தலையில்லாத உடல்போல் உம்முடைய சம்பந்தமில்லாத யாகம் ப்ராசிக்கவில்லை" என்றார்கள்.

லோகபாலர்கள் "ஓ பூமன்! ஞானக்கண்ணால் பார்க்கக் கூடிய உம்முடைய ஸ்வரூபமானது, விஷயத்தைக் கிரகிக்கும் எங்களுடைய இந்திரியங் களால் கிரகிக்க முடியுமா? நீர் ஐந்து மகாபூதங் களுடன் ஆறாவது (ஜீவனாக) புருஷனாகத் தோன்று கிறது உம்முடைய மாயையேயாம்" என்றார்கள். யோகேசர்கள் "ஓ ப்ரபுவே! ஸகல ஜகத் ஸ்வரூபியா யிருக்கும் உம்மிடத்தில் எவன் பேத திருஷ்டியில்லாமல் ஒன்றாகப் பார்க்கிறானோ அவனைக் காட்டிலும் பிரியனாகிய புருஷன் உமக்கொருவனுமில்லை. ஆனாலும் ஓ ஈச! அநன்யமாகிய பக்தியுடன் சரணம் அடைகிறவர்களை அனுக்கிரகிக்கவேண்டும். எல்லோர் இடத்திலும் நீர்பிரியமுள்ளவரல்லவா? மேலும் எவர் ஜகத்தைப் படைப்பது, பரிபாலிப்பது, ஸம்ஹரிப்பது ஆகிய கர்மங்களுக்கு அதிபதியோ, எவர்பலவகையாகப் பேதிக்கும் குணமுள்ள தம்முடைய மாயையால் ஆத்மாவிடத்தில் பலவிதமான புத்தியை உண்டுபண்ணு கிறாரோ, எவர் தம்முடைய ஸ்வரூப ஞானத்தால் ப்ரஹ்மத்தை நிவிருத்திக்கிறாரோ அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம் செய்கிறோம்" என்றார்கள்.

சப்த ப்ரஹ்மா பகவானை நோக்கி "எவருடைய தத்துவமானது என்னாலும், மற்றவர்களாலும் அறிய முடியாததோ அப்படிப்பட்டவரும் ஸத்வ மூர்த்தியும், தர்மம் முதலியவைகளை உண்டுபண்ணுகிறவரும், குணங்களற்றவருமாகிய உம்மை நமஸ்கரிக்கிறேன்" என்றார்.

அக்கினியானவர் "எவருடை தேஜஸ்ஸால் எனக்குத் தேஜஸ்ஸு உண்டாகிறதோ யாகத்தில் ஆஜ்யத்தால் நனைக்கப்பட்ட ஹவிஸை எவருடைய தேஜஸ்ஸால் வகிக்கிறேனோ, யக்ஞத்தைக் காப்பாற்றுகிறவரும், ஐந்து வகையான யக்ஞஸ்வரூபியும், ஐந்து யஜுஸ்ஸுகளைக் கொண்டு பூஜிக்கப்பட்டவருமாகிய யக்ஞ ஸ்வரூபியாகிய உம்மை நமஸ்கரிக்கிறேன்" என்றார்.

தேவர்கள் "பிரளய காலத்தில் தம்மால் ஸ்ருஷ்டிக்கப் பட்ட ஜகத்தை வயிற்றில் வைத்துக் கொண்டு ஜலத்தில் ஆதிசேஷனாகிய படுக்கையில் நீர் படுத்துத் தூங்குகிறீர். நீரே ஏல்லாவற்றிற்கும் முந்திய புருஷன். உம்முடைய ஆத்ம தத்துவமார்க்கத்தை ஜனலோக வாசிகள் தியானிக்கிறார்கள். அப்போர்ப்பட்ட நீர் எங்களுக்கெதிரில் ஸஞ்சரிக்கிறீர். வேலைக்காரர்களான எம்மைக் காப்பாற்றுகிறீர்" என்றார்கள். கந்தர்வர்கள் 'ஓ தேவ! மரீசி முதலிய ப்ரஜாபதிகளும், ப்ரஹ்மா, இந்திரன், தேவர்கள், ருத்திரன், ஆகிய இவர்களும் உம்முடைய அம்ச பூதர்களேயாம். இந்த ஜகத்தானது உமக்கு விளையாட்டுக் கருவியாக இருக்கிறது. அப்படிப்பட்ட பகவானாகிய உமக்கு எப்பொழுதும் நமஸ்காரம் செய்கிறோம்" என்றார்கள்.

வித்யாதரர்கள் "புருஷன், புருஷார்த்தத்திற்கு ஸாதனமாகிய சரீரத்தை யடைந்தும் உம்முடைய மாயையால் சரீரத்தால் (என்னுடையது, நான்), என்ற அபிமானத்தை வைத்து அஸத்தான விஷயத்தில் ஆசை வைத்துக் கொண்டிருக்கிறான். அப்படிப்பட்ட ஆத்ம மோஹத்தை உம்முடைய கதாமிருதத்தை ஸேவிப்பவன் நிவர்த்தித்துக் கொள்வான் என்றார்கள். ப்ராஹ்மணர்கள் "நீரே யாகம், நீரே ஹவிஸ், நீரே அக்கினி, நீரே மந்திரம், ஸமித், தர்ப்பம், பாத்திரங்கள் ஆகிய இவைகளும் நீரே, ஸதஸ்யர்களும் நீரே, யஜமானன் அவருடைய பத்தினி ஆகிய இவர்களும் உம்முடைய ஸ்வரூபம். தேவதை, ஸ்வதா அக்கினி ஹோத்ரம், ஸ்வதை, ஸோமம், ஆஜ்யம், பசு ஆகிய இவைகளும் உம்முடைய ஸ்வரூபமா யிருக்கின்றன; முன்னொரு காலத்தில் நீர் வராஹாவதாரம் செய்து பாதாளத்திலிருந்த பூமியை யானை தாமரைக் கொடியை கொண்டு வருவதுபோல் விளையாட்டாகச் சிங்கப்பல்லால் உத்தரணஞ் செய்தீர் அப்பொழுது யோகிகள் உம்மை துதித்தார்கள்; நீர் வேத ஸ்வரூபி, யாக ஸ்வரூபி, கிருது ஸ்வரூபி யூபமுள்ளது கிருதுவெனப்படுகிறது).

ஓ யக்ஞத்திற்கு அதிபதியாக இருப்பவரே! உம்முடைய நாமத்தை யுச்சரித்த மாத்திரத்தில் யாகத்திற்கு நேரிடும் விக்கினங்கள் யாவும் நாசமடை கின்றன. உம்முடைய தரிசனத்தை விரும்பியவர்களும், ஸத்கர்மங்களை அனுஷ்டிக்காதவர்களுமான எங்களுக்குத் தரிசனங் கொடுக்க வேண்டும். உமக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்" என்றார்கள்.

இப்படி பகவானை எல்லோரும் ஸ்தோத்திரஞ் செய்யும்பொழுது தக்ஷர் ருத்ரனால் கெடுக்கப்பட்ட யாகத்தை திரும்பவும் அனுஷ்டித்தார். அப்பொழுது ஸ்ரீ பகவான் ஸகல பாகத்தையும் தான் அனுபவிக்கிற வரானாலும் தமக்குக் கிடைத்த பாகத்தால் சந்தோஷித்தவர் போல் தக்ஷனை அழைத்து "நானும், ப்ரஹ்மதேவரும், பரமசிவனும் ஜகத்திற்குக் காரணர்கள். மேலானவர்கள். ஆத்மாவாக இருப்பவர்கள். ஈசுவரர்கள், சாக்ஷியாக இருப்பவர்கள். தாமாகப் ப்ரகாசிப்பவர்கள். உபாதியற்றவர்கள். நான் என்னுடைய முக்குண ஸ்வரூபமாகிய மாயையை ஆசிரயித்து இந்த ஜகத்தைப் படைத்தும், ரக்ஷித்தும், ஸம்ஹரித்தும், அந்த அந்த வேலைக்குத் தகுதியான ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற பெயரையும் அடைகிறேன். அப்படிப் பட்டதும், இரண்டாவதற்றதும், சிதருபியுமான பரப் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் ப்ரஹ்ம ருத்ரர்களை வேறென்று நினைப்பவர்கள் அக்ஞர்களாகின்றார்கள்.

புருஷன் தன்னுடைய கை, கால் முதலிய அவயவங்களுக்குள் எதையும் பிறருடையதாக எப்படி நினைக்கிறதில்லையோ, அப்படி வித்வான் எல்லாப் பிராணிகளையும் தானாக நினைக்கிறான். ஒரே ஸ்வருபமுள்ளவர்களானவர்களுக்குள் பேதமில்லை யென்று எவன் நினைக்கிறானோ அவனே சாந்தியை அடைவான்" என்று அனுக்கிரகித்தார்.

53–61 இப்படிப் பகவானால் ஆக்ஞாபிக்கப்பட்டு தக்ஷர் திரிக்பாலேஷ்டியால் பகவானைப் பூஜித்து, தேவர்களை, அங்கத்தாலும் (பிரயாஜம் முதலியவை), பிரதான கர்மத்தாலும் (தர்சபௌர்ணமாஸம்) பூஜித்தார்.

ருத்ரருடைய பாகத்தால் ருத்ரனையும், முடிவில் செய்யப்படுகிற கர்மத்தால் ஸோமபர்களான மற்ற தேவர்களையும் பூஜித்தார். இப்படி தக்ஷர் யாகத்தை முடித்து ரித்விக்குகளுடன் அவபிருத ஸ்நானஞ் செய்தார். தம்முடைய மஹிமையால் அடைந்த ஸித்தியுள்ள அந்தத் தக்ஷருக்குத் தேவர்கள் தர்மத்திலேயே உம்முடைய புத்தி செல்லட்டும்' என்று அனுக்கிரகஞ் செய்து ஸ்வர்க்கஞ் சென்றார்கள். இப்படி தக்ஷருடைய பெண்ணாகிய ஸதியானவள் சரீரத்தை விட்டு ஹிமவானுடைய பத்தினியாகிய மேனை என்பவளிடத்தில் ஜனித்தாள் என்றும், பிரளயகாலத்தில் அடங்கியிருந்த சக்தியானது மஹாபுருஷனையே திரும்பவும் அடைவதுபோல் அந்தப் பார்வதியானவள் மறுபடியும் பரமசிவனையே அடைந்தாளென்றும் தக்ஷ யாகத்தைக் கெடுத்த வராகிய பரமசிவனுடைய சரிதத்தைப் ப்ருஹஸ் பதியின் சிஷ்யராகிய உத்தவரிடமிருந்து கேட்டிருக் கிறேன். ஓ குரு வம்சத்தில் பிறந்தவராகிய விதுரரே! இந்த உபாக்யானம் பரிசுத்தியை யுண்டுபண்ணக் கூடியது. மேலானது, கீர்த்தியை விருத்தி பண்ணக் கூடியது. ஆயுளை விருத்தி செய்யக்கூடியது. ஸகல பாவங்களையும் நாசஞ் செய்யக்கூடியது. இதனை எவன் நித்தியம் பிறர் சொல்லக் கேட்கிறானோ, தன் வாக்கினால் பக்தியுடன் சொல்லுகிறானோ, அவனுடைய பாவங்கள் நாசமாகின்றன' என்று விதுரருக்கு மைத்ரேயர் சொன்னார்.

குறிப்பு

ஸ்வரூபத்தில் "தம்முடைய மஹிமையிலிருப்பவர்" சுருதி. பயமற்றவர். "இரண்டாவதாலல்லவா பயமுண்டாகிறது" சுருதி. மாயையை ஜீவன்மாயைக்கு

வசப்பட்டவன். பரமாத்மா மாயையை ஸ்வாதீனப் படுத்திக் கொண்டவர் என்று கருத்து. சுத்தர் –பாவ புண்யங்களற்றவர் வீர. தம்முடைய மஹிமையில் இருந்து கொண்டு மாயையைப் புருஷ ரூபமாகப் பரிணமிக்கச் செய்து, அதில் ஜீவரூபியாக இருந்து ஸ்வதந்திரரானாலும் கர்மவசியர் போலிருக்கிறார், வீர. ஸதஸ்யர்கள் ஈசுவரனில்லாத தக்ஷயாகத்தில் பணத்தாசையால் ஸதஸ்யர்களாக இருந்தோம் என்று பச்சாத்தாப மடைந்து வைராக்கியத்தை ஸ்துதிக் கிறார்கள். ஸ்ரீத. ஐந்து வகை "இந்த யக்ஞமானது அக்கினி ஹோத்திரம், தர்ச பூர்ணமாஸம், சாதுர்மாஸ்யம், பசு, ஸோமம் என்ற ஐந்து பேதங்களுள்ளது" –சுருதி. ஐந்து மந்திரங்கள் ஆச்ராவய என்ற நான்கு அக்ஷரங்கள். அஸ்துச் ரௌஷட் என்ற நான்கு அக்ஷரங்கள். 'யேய ஜாமஹே, என்ற ஐந்து அக்ஷரங்கள். வஷட் என்ற இரண்டு அக்ஷரங்கள் சுருதி.

அத்தியாயம்–8

துருவ சரிதம்

1–6. பின்னும் மைத்ரேயர் விதுரரை நோக்கி, ஸனகர் முதலியவர்களும், நாரதரும், ரிபுவென்பவரும், ஸம்ஸரும், அருணியும், யதியும். ப்ருஹ்மபுத்திரர்கள் ஆனாலும் இவர்கள் ஊர்த்துவரேதஸ்களாகையால் கிருஹஸ்த தர்மத்தை அனுஷ்டிக்கவில்லை, (ஆனதால் இவர்களுக்குச் சந்ததியில்லை என்று கருத்து.) அதர்மத்திற்குப் பத்தினி மிருஷை (பொய்) என்பவள். அவள் தம்பன் (பிறரை ஏமாற்றுவது) என்ற புத்திரனையும், மாயை (பிறரை ஏமாற்றுவதற்கு அனுகூலமான செய்கை) என்ற பெண்ணையும் பெற்றாள். நிருதியானவர் சந்ததியில்லாதவராக இருந்தபடியால் அந்தக் குழந்தைகளைத் தம்முடைய குழந்தைகளாக வளர்த்தார். அந்தத் தம்பன் சஹோதரியான மாயையை மணம் செய்துகொண்டு, அவளிடத்தில் லோபமென்பவனையும் (அதிக ஆசை), நிகிருதி என்ற பெண்ணையும் (வஞ்சகனாக இருப்பது) உண்டு பண்ணினான். ஓ மிகுந்த புத்திசாலியான விதுரரே! அவ்விருவர்களும் தம்பதிகளாக இருந்த குரோதமென்ற புத்திரனையும் (கோபம்) ஹிம்சை என்ற பெண்ணையும் உண்டுபண்ணினார்கள். அவர்களுக்குக் கலியென்பவனும் (பாபம்), அவனுடைய சகோதரியான துருக்தியும் (கெட்டவார்த்தை) குழந்தைகள். அவர்கள் யாதனை யென்பவளையும் (கடுமையான உபத்ரவம்) நிரயம் என்ற புத்திரனையும் (நரகம்) உண்டுபண்ணினார்கள். இவைகள் அதர்மமமாகிய மரத்திற்குக் கிளைகள். சம்சாரத்தைக்

கொடுக்ககூடியவைகள். ஆனதால் சூக்ஷமத்தையடைய விரும்பியவன் அவைகளை யனுஷ்டிக்கக்கூடாது. மேலான ஆசிரமத்தை அடைந்தவன் (சந்நியாசி) அவை களை ஒருபொழுதும் அனுஷ்டிக்கக்கூடாது இப்படிச் சுருக்கமாகப் பிரதி ஸர்க்கத்தைச் சொன்னேன் இந்த அதர்மத்தின் வம்சமானது புண்யகரமானது. (இவை அனுஷ்டிக்கத் தக்கவை இல்லை என்று தெரிந்து கொள்வதால் என்று கருத்து.) இதனை மூன்று தரம் சிரவணஞ் செய்தால் ஸகல பாவமும் நாச்மாகிவிடும்.

7–9. இதன் பின்பு ஸ்ரீ மகாவிஷ்ணுவின் அம்சபூதராகிய ப்ரஹ்மதேவருடைய புத்திரரான சுவாயம்புவ மனுவின் வம்சத்தையும் சொல்லுகிறேன். அவருடைய கதையைச் சொல்வதால் புண்ணியம் சித்திக்கும். சதரூபை என்பவளுடைய பர்த்தாவாகிய சுவாயம்புவ மனுவிற்குப் பிரியவிரதர், உத்தானபாதர் என்று இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்கள் ஸ்ரீ வாசுதேவருடைய அம்சபூதர்கள். ஜகத்தைப் பரிபாலிப்பதில் நோக்கமுள்ளவர்களாக இருந்தார்கள். அவ்விருவர்களில் உத்தானபாத ரென்பவருக்கு சுநீதி, சுருசி என்று இரண்டு பத்தினிகள் இருந்தார்கள். சுருசி யென்பவளிடத்தில் அரசராகிய உத்தானபாதர் மிகுந்த பிரீதியுள்ளவராக இருந்தார். சுநீதியினிடத்தில் அரசருக்குப் பிரியமில்லை. அவளுக்குத் துருவன் என்ற பெயருள்ள ஒரு புத்திரனிருந்தான். ஒருநாள் அரசருடைய மடியில் உத்தமனென்ற சுருசியின் குமாரன் உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்தான். அரசரும் அவனிடத்தில் மிகுந்த பிரீதியுடன் சந்தோஷமாக விளையாடினார். அப்பொழுது சுநீதியின் புத்திரனாகிய துருவனும் அரசனுடைய மடியின்

மீதேறி விளையாட விரும்பியவனாகி அரசனுடைய ஸமீபம் சென்றான். அவனை அரசர் லட்சியம் செய்யவில்லை. (அவனிடம் பிரியப்படவில்லை.)

10–13. அப்பொழுது ஸமீபத்திலிருந்த சுருசி அரசருடைய மடியிலேற விரும்பும் தன்னுடைய ஸபத்தினியின் புத்திரனாகிய துருவனை நோக்கி மிகுந்த கர்வத்துடன், "ஓ குழந்தாய்! என்னுடைய வயிற்றில் நீ ஜனிக்காததால் அரசருடைய ஆஸனத்தில் ஏறுவதற்குத் தகுந்தவனல்ல. "நீ சிறுவனாகையால் வேறு ஸ்திரீயின் கர்ப்பத்தில் ஜனித்தவன்" என்று தெரிந்து கொள்ளவில்லை. அரிதாகிய விஷயத்தை விரும்புகிறாய். ஆனதால் தபஸினால் மஹா புருஷனை ஆராதித்து, அவருடைய அனுகிரஹம் பெற்று என்னுடைய வயிற்றில் ஜனித்தாயானால் உனக்கு ஸிம்மாஸனம் கிடைக்கும்" என்று அரசன் முன்பாகவே அரசனை லட்சியம் செய்யாமல் பொறாமையுடன் சொன்னாள்.

14–23. அப்பொழுது அந்தத் துருவன் பாணத்தால் அடிக்கப்பட்டவன் போல் ஸபத்தினீ மாதாவினுடைய துஷ்ட வாரத்தையைக் கேட்டு வருத்தமடைந்தவனாகி, தண்டத்தால் அடிக்கப்பட்ட ஸர்ப்பம்போல் கோபத்தால் பெருமூச்சு விட்டு அழுதுகொண்டு அவ்விடமிருந்து தன்மாதாவினிடம் சென்றான். பிதாவாகிய அரசர் மௌனமாக இருந்தார். அப்பொழுது சுநீதியானவள் சமீபம் வந்து நிற்கும் புத்திரனை மடியில் ஏற்றி வைத்துக்கொண்டாள். அந்தக் குமாரன் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தான். மேலும் அவனுடைய உதடுகள் துடித்தன. அதனைப் பார்த்த சுநீதியானவள்

அந்தப்புரத்தில் சஞ்சரிக்கும் ஜனங்கள் மூலமாக நடந்த ஸமாஸாரத்தை தெரிந்துகொண்டு, ஸபத்தினியின் வார்த்தையை நினைத்து மிகவும் துன்பமடைந்தாள். காட்டுத்தீயினால் எரிக்கப்படும் கொடிபோன்ற அவள் ஸபத்தினியின் வார்த்தையை நினைத்து, தைரியத்தை விட்டுப் பிரலாபித்தாள். அவளுடைய தாமரைமலர் போன்ற கண்களிலிருந்து துக்க பாஷ்பம் பெருகிற்று. மேலும் பெருமூச்சுவிட்டாள். இப்படி மிகுந்த வருத்தத்துடன் துக்கத்தை நிவர்த்தித்துக் கொள்ளும் உபாயத்தை அறியாதவளாகி, தன் குழந்தையை நோக்கி, "ஒ குழந்தாய்! பிறரிடத்தில் குற்றமிருப்பதாக நினைக்கவேண்டாம். பிறருக்குத் துக்கத்தை உண்டு பண்ணுவதால் தானும் துக்கத்தை அனுபவிக்கும்படி நேரிடுகிறது. சுருசியினால் சொல்லப்பட்டது உண்மையே. அதிருஷ்ட மில்லாதவளாகிய என்னுடைய வயிற்றில் நீ ஜனித்தாய். என்னுடைய ஸ்தன்யத்தை (பால்)க் குடித்து வளர்ந்தாய். உன்னுடைய பிதாவாகிய அரசர் என்னைத் தம்முடைய பத்தினியென்று சொல்லிக்கொள்வதற்கும் வெட்கப்படுகிறார். ஆனதால் உத்தமன் (சுருசியின் பிள்ளை) போல் நீயும் ஸிம்மாஸனத்தை அடைய விரும்புவாயானால் உன்னுடைய ஸபத்தினி மாதாவினால் சொல்லப் பட்டபடி ஸ்ரீமந் நாராயணனுடைய பாதாரவிந்தத்தை ஆராதிக்கவேண்டும். மாத்ஸர்யத்தை விட்டுவிடு. சுத்த ஸத்துவராகிய பகவானுடைய பாதாரவிந்தத்தை ஆராதித்துப் ப்ரஹ்மதேவர் ப்ரஹ்மபதத்தை அடைந்தார். அது ப்ராணாயாமத்தால் மனத்தை யடக்கினவர் களாலும் நமஸ்கரிக்கக் கூடியது. மேலும், உன் பிதாமஹராகிய (பிதாவின் பிதா) மனுவும் பூர்ணமாக தக்ஷிணை கொடுத்து அநேக யாகங்களைச் செய்தும்,

எல்லாரிடத்திலும் அந்தர் ஆக பகவான் இருப்பதாக நினைத்தும், பகவானை ஆராதித்துப் பூமியிலுண்டான சுகத்தையும், ஸ்வர்க்க சுகத்தையும், மோஷ சுகத்தையும் அடைந்தார், ஆனதால் ஒ குழந்தாய், துருவ! பரமபுருஷன் பக்தர்களிடத்தில் வாத்ஸல்யம் உள்ளவர் மோக்ஷத்தை அடைய விரும்பியவர்கள் அவருடைய பாதாரவிந்த மார்க்கத்தைத் தேடுவார்கள். ஆனதால் நீ மனத்தை வேறு இடத்தில் செலுத்தாமல் சுத்தமான மனத்தில் அந்தப் பரமபுருஷனை ஸ்தாபித்து (தியானம் செய்து), ஆராதிக்க வேண்டும். ப்ரஹ்மா முதலியவர்களால் தேடப்படும் லக்ஷ்மீ தேவியாம் கையில் தாமரை மலருடன் அந்த மஹா புருஷனை அனுசரிக்கிறாள். அப்போற்பட்ட தாமரைக் கண்ணனாகிய புருஷோத்தமனைக் காட்டிலும் உன்னை காப்பாற்றகிறவர் வேறொருவரும் இல்லை என்றாள்.

24–28. க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடிய மாதாவின் வார்த்தையைக் கேட்டுத் துருவன் மனத்தால் இந்திரி யங்களை அடக்கிக்கொண்டு பிதாவின் பட்டணத் திலிருந்து வெளியில் சென்றான். அதனை அறிந்த நாரதர் மிகவும் ஆச்சர்யப்பட்டு துருவனுடைய அபிப் பிராயத்தை நன்றாகத் தெரிந்துகொண்டு பாபத்தை நிவர்த்திக்கக்கூடியதான தம்முடைய கையால் துருவனுடைய தலையைத் தொட்டு, "க்ஷத்திரியர்கள் உடைய தேஜஸ் ஆச்சரியப்படக்கூடியது. இவன் சிறுவனானாலும் ஸபத்தினீ மாதாவினால் சொல்லப் பட்ட நிந்தா வார்த்தைகளை மனத்தில் வைத்து கொண்டிருக்கிறான்" என்று எண்ணி அச்சிறுவனை நோக்கி, சிறுவனாகிய நீ ஐசுவரியத்தால் நிறைந்த வீட்டை விட்டு வெளியில் தனியாகப் போகிற

காரணமென்ன ? பந்துக்களால் அவமானஞ் செய்யப் பட்டு அதனால் துக்கிக்கிறவன் போலத்தோன்றுகிறது, (உண்மையைச் சொல்) என்று கேட்டார்.

29. அதனைக் கேட்ட துருவன் அவரை நோக்கி, "ஓ பகவன்! என்னுடைய மனத்திலிருக்கும் அபிப் பிராயம் உமக்கு எப்படித் தெரிந்தது ? தியானத்தால் தெரிந்துகொண்டீரா ? அல்லது யோக மஹிமையால் அறிந்தீரா ? மனத்திற்கு வருத்தத்தைக் கொடுக்கும் சுருசியின் வார்த்தையைப் பொறுக்காமல் வெளியில் வந்தேன்" என்றான்.

30–34. அதனைக்கேட்ட நாரதர் அவனை நோக்கி, "ஓ சிறுவனே! உனக்கு அவமானத்தையாவது ஸம்மானத்தையாவது அறியக்கூடிய வயது இன்னும் வரவில்லையே. இப்பொழுது நீ விளையாட்டு முதலிய வைகளின் ஆசை கொண்டிருக்க வேண்டியவன் அல்லவா ? மேலும், இது ஸம்மானம், அவமானம் என்ற விவேகம் வந்தாலும், அறியாத்தன்மையாலேயே அவமானத்தை அடைந்த ஜனங்கள் துக்கிக்கிறார்கள் ஸம்மானம்; அவமானம் முதலியவைகள் அவரவர்கள் உடைய காரியங்களாலேயே ஏற்படுகின்றன, ஆனதால் தெய்வத்திடம் சேராத வரையில் புருஷப் பிரயத்தினம் பலனைக் கொடுக்கிறதில்லை என்பதைத் தெரிந்துக் கொண்டு, தெய்வச் செயலால் கிடைத்ததை வைத்துக் கொண்டு சந்தோஷிக்கவேண்டும். உன்னுடைய மாதா உபதேசித்தபடி எவருடைய பிரஸாதத்தை அடைய விரும்புகிறாயோ, அவரை ஆராதிப்பது மிகவும் ச்ரமமென்று நினைக்கிறேன். முனிகள், விஷயங்களில் ஆசையை ஒழித்து கடுமையான யோகத்தை செய்து

அநேக ஜன்மங்களில் பகவானை உபாசித்து, அவருடைய மார்க்கத்தைத் தேடியும் அதை அடைய வில்லை ஆனதால் இந்தப் பிடிவாதத்தை விட்டுவிடு. க்ஷேமத்தை அடையவேண்டிய காலம் வரும்போது நீயே யத்தனிப்பாய். மேலும், சுகமாவது துக்கமாவது தெய்வத்தால் ஏற்படுத்தபட்டப்படி அந்த அந்தக் காலத்தில் ஜனங்களால் அனுபவிக்கப்படுகிறது. ஆனால் சுகத்தை அனுபவிப்பதால் புண்ணியம் குறைகிறது என்றும், துக்கத்தை அனுபவிப்பதால் பாவம் குறைகிறதென்றும் நினைத்து ஸந்தோஷத்துடன் காலம் கழித்தால் மோக்ஷத்தை அடைவான். தன்னைக் காட்டிலும் மேலான குணசாலியைப் பார்த்துச் சந்தோஷப்படவேண்டும். (அசூயை அடையக் கூடாதென்று கருத்து.) தாழ்ந்தவனைப் பார்த்து தயைசெய்யவேண்டும் (அலட்சியம் செய்யக்கூடாது) தனக்கு ஸமமானவர் களைப் பார்த்துப் பிரீதிசெய்ய வேண்டும் (விரோத புத்தியை அடையக்கூடாது) இப்படிக் காலத்தைக் கழிப்பவனுக்குத் தாபம் உண்டாகிறதில்லை" என்றார்.

35–38. அதனைக்கேட்ட துருவன் நாரதரை நோக்கி, "ஓ ப்ராஹ்மண! சுகத்தாலும் துக்கத்தாலும் கெடுக்கப்பட்ட மனதுள்ள புருஷர்களுக்கு சுககரமான சாந்தி மார்க்கமானது தயைசெய்து உம்மால் உபதேசிக் கப்பட்டது. என்னைப் போன்றவர்கள் இதனைக் தெரிந்துகொள்ள முடியாது. ஆனாலும் நான் க்ஷத்திரிய தர்மமுள்ளவனும், வணக்கமில்லாதவனும் (மனத்தை அடக்காதவன்), சுருசியின் கெட்ட வார்த்தைகளாகிய பாணங்களால் பிளக்கப்பட்ட ஹிருதய முள்ளவனுமாக இருக்கிறேன், ஆனதால், உம்முடைய வார்த்தைகள் மனத்தில் செல்லவில்லை.

மூவுலகத்திலும் சிறந்ததும், என்னுடைய முன்னோர் களாலும் மற்றவர்களாலும் அடையப்படாததுமான பதத்தை அடைய நான் விரும்புகிறபடியால் அதன் மார்க்கத்தை உபதேசிக்கவேண்டும். ப்ரஹ்மதேவருடைய புத்திரராகிய நீர் எப்பொழுதும் வீணையை மீட்டிக் கொண்டு சூரியன்போல் ஜகத்தின் க்ஷேமத்திற்காக ஸஞ்சரிக்கிறீர்! என்று வேண்டிக்கொண்டான்.

39–60. அதனைக்கேட்ட நாரதர் சிறுவனை நோக்கி, "உன்னுடைய மாதாவினால் உபதேசிக்கப் பட்ட மார்க்கமே க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியது. ஸ்ரீவாசுதேவரே பகவான்; அவரிடத்திலேயே மனத்தைச் செலுத்தி அவரையே ஆராதிக்க வேண்டும். தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகிய புருஷார்த்தங்களை விரும்பியவனுக்கு ஸ்ரீமந் நாராயணனுடைய பாதஸேவையே சரணமெனப் படுகிறது. ஆனதால் யமுனா நதியின் கரையில் மதுவன மென்று ஒரு புண்ணிய பூமியிருக்கிறது. அவ்விடத்தில் பகவான் எப்பொழுதும் ஸான்னித்தியஞ் செய்து கொண்டிருக்கிறார்.

நீ அவ்விடம் சென்று புண்யகரமான யமுனா தீர்த்தத்தில் மூன்று காலம் ஸ்நானஞ் செய்து, தேவதா நமஸ்காரம் முதலியவைகளைச் செய்து, தர்ப்பம் முதலிய ஆஸனத்தில் உட்கார்ந்து, திருவிருத்தாகிய பிராணாயாமத்தால் மனத்திலிருக்கும் அழுக்கை நிவர்த்தித்து, தைர்யமுள்ள மனத்தால் ஸ்ரீமந் நாராயணனைத் தியானிக்க வேண்டும். அவர் பக்தர்களிடத்தில் தயைசெய்யும் நோக்கமுள்ளவர். எப்பொழுதும் —— முகமலர்ச்சியுள்ளவர். அழகான மூக்குள்ளவர் நல்ல புருவங்களுள்ளவர். ரம்யமான

கன்னங்களுள்ளவர், தேவர்களுக்குள் மிகவும் அழகு பொருந்தியவர். யௌவன வயதுள்ளவர். மனோஹரங் களான அவயவங்களுள்ளவர். அவருடைய உதடுகளும் கண்களும் சிவந்தவைகள். மேலும் அவர் நமஸ்கரித் தவர்களுக்கு ஆச்ரயமாக இருப்பவர். சுகஸ்வரூபி. தயையால் நிறைந்தவர். ஸ்ரீ வத்ஸமென்ற அடையாளம் உள்ளவர். மேகம்போல் கறுத்த திருமேனியுள்ளவர், வனமாலையைத் தரித்தவர், சங்கம், சக்கரம் கதை, தாமரை மலர் ஆகிய இவைகளைத் தரித்த நான்கு கைகளுள்ளவர். கிரீடம் குண்டலங்கள், தோள்வளை, வளையம் ஆகிய இவைகளைத் தரித்தவர். கௌஸ்து பஹாரமுள்ள கண்டமுள்ளவர். பீதாம்பரத்தைத் தரித்தவர். காஞ்சி கலாபத்தால் (சரங்கையுள்ள அரை நாண்) சூழப்பட்டவர். ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்டுள்ள பாதங்களுள்ளவர். தரிசிக்கக்கூடியவர். மிகுந்த அழகுள்ளவர். சாந்தர். மனத்திற்கும் நேத்திரங் களுக்கும் ஸந்தோஷத்தை விருத்தி செய்பவர். மேலும் அவர் தம்மை ஆராதிப்பவர்களுடைய ஹிருதய கமலத்தில் நக காந்தியால் பிரகாசிக்கும் பாதார விந்தத்துடன் நின்று மனத்தைவிட்டு பிரியாமல் இருப்பவர்.

மேற்காட்டியபடியுள்ள பகவானுடைய ஸ்வரூபத்தைப் புன்னகை உள்ளதாகவும், பிரீதியான பார்வையுள்ளதாகவும், ஸ்திரமானதும் ஏகாக்கிரமுமான மனத்தால் தியானிக்கவேண்டும். அவர் வரத்தைக் கொடுப்பவர்களில் மேலானவர். மங்களமாய் பகவான் உடைய ஸ்வரூபத்தை மேற்காட்டியபடி தியானிப் பவனுடைய மனம் மிகுந்த சுகத்தை அடைந்து அந்த ஸ்வரூபத்தைக் கவர்ந்து அதிலிருந்து திரும்புகிறதில்லை.

ஓ ராஜபுத்திர! ஜபிக்கக்கூடிய மந்திரம் ஒன்றுண்டு. அது மிகவும் ரகசியமானது. அதனை ஏழு நாட்கள் ஜபித்தால் தேவர்களை நேரில் தரிசிக்கலாம். அதனை உபதேசிக்கிறேன். அதாவது 'பகவானாகிய வாஸு தேவருக்கு நமஸ்காரம்" என்றதாம். இதை ஜபித்து ஜலத்தாலும், சுத்தங்களான காட்டிலுண்டான கிழங்குகளாலும், பழங்களாலும். மேலான அருகம் புற்களாலும், பூர்ஜப்பட்டைகளாலும் பகவானுக்குப் பிரியமான துளஸியாலும், பலவகையான திரவியங் களாலும், தேசத்திற்கும் காலத்திற்கும் தக்கபடி ஸாளக்கிராமம் முதலிய ப்ரதிமைகளிலும் பகவானைப் பாவித்து ஆராதிக்க வேண்டும். இப்படிப் பூஜிப்பவன் மனத்தையடக்கினவனாகி காட்டில் கிடைக்கக்கூடிய கிழங்கு முதலியவைகளைச் சொற்பமாகப் புஜித்துக் கொண்டு பகவான் தமதிஷ்டப்படி அவதரித்துச் செய்யப்போகிற சரிதங்களால் ஏற்படும் அனுகூலத் தையும் தியானிக்கவேண்டும். (துருவனுடைய காலத்திற்குப் பிறகே பகவானுடைய அவதாரங்கள் என்று கருத்து) திரவியத்தால் பகவானுக்கு எந்த உபசாரங்கள் முந்தி செய்யப்பட்டனவோ அவை களை (துவாதசாக்ஷர) மந்திரத்தை ஜபித்துக்கொண்டு மனத்தாலேயே மந்திர மூர்த்தியான பகவானை உத்தேசித்து செய்யவேண்டும். இப்படிச் சரீரத்தாலும், வாக்கினாலும் மனத்தாலும் பக்தியுடன், அந்தரங்கத்து டன் பகவானுக்குச் சிசுரூஷை செய்தால் அந்த ஸாத்விக பக்தர்களுக்கு பகவான் தர்மம் முதலிய புருஷார்த்தங்களில் எது பிராணிகளுக்கு இதமானதோ அதனைக் கொடுக்கிறார். ஆனதால் இந்திரிய விஷயங்களில் ஆசைப்படாமல் (வைராக்யத்துடன்) மிகுந்த பக்தியுடன் இடைவிடாமல் பகவானிடத்தில்

பாவத்தைச் செலுத்தி அவரை ஆராதித்தால் முக்தியை அடையலாம்" என்றார்.

61. அதனைக் கேட்ட ராஜகுமாரன் அவரைப் பிரதக்ஷிண நமஸ்காரங்களால் உபசரித்து பகவான் உடைய பாதங்களால் அழகானதும், புண்யகரமுமான மதுவனத்திற்குச் சென்றான்.

62–64. துருவன் தபஸ்ஸிற்காக வனஞ் சென்ற பின்பு நாரதர் உத்தானபாதருடைய அந்தப்புரஞ் சென்றார். அப்பொழுது அரசர் நாரதரைப் பூஜித்து ஆசனங் கொடுத்து உட்காரச் செய்தார். பின்பு நாரதர் அரசரை நோக்கி, "ஓ மகாராஜ! எதனை மனத்தில் நினைத்து வருத்தப்படுகிறீர்? முகமானது வாடியிருக்கிறதே. தர்மம், அர்த்தம், காமம் ஆகிய இவைகளுக்குள் எதுவும் கெடாமலிருக்கிறதோ? என்று கேட்டார்.

65–67. அதனைக்கேட்ட அரசர் நாரதரை நோக்கி "ஓ ப்ராஹ்மண! ஐந்து வயதுள்ள என்னுடைய சிறுவனாகிய புத்திரனையும், அவனுடைய மாதாவை யும் ஸ்திரீகளின் கூட்டமானது தயையில்லாமல் பட்டணத்தை விட்டு வனம் போகும்படி செய்தது. (தன்னால் செய்யப்பட்டதென்று சொல்வதற்கு வெட்கப் பட்டு ஸ்திரீகள் செய்தார்களென்றார்) ஓ ப்ராஹ்மண! என்னுடைய குழந்தை வனத்தில் தனியாகச் சென்று பசியினால் வருத்தப்பட்டுத் தாமரை மலர்போன்ற முகம் வாடிப் படுத்துக் கொண்டிருப்பானே, அப்பொழுது அவனை அங்கிருக்கும் செந்நாய்கள் புஜிக்காமலிருக்குமா? மிகுந்த அஸத்தாகிய நான்

பிரீதியுடன் மடியின் மீதேறி வரும் குழந்தையினிடம் பிரீதி வைக்காமலிருந்தேனே. நான் ஸ்திரீயால் ஜயிக்கப் பட்டவன்; என்னால் செய்யப்பட்ட துஷ்டநடை ஆச்சரியப் படக்கூடியது" என்று பச்சாத்தாபமடைந்தார்.

68–70. அதைக் கேட்ட நாரதர் அரசரை நோக்கி, "ஓ மகாராஜ! உம்முடைய புத்திரனைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். அவனைத் தேவர்கள் காப்பாற்றுகிறார்கள். அவனுடைய மஹிமை உமக்குத் தெரியாது அவனுடைய கீர்த்தியானது ஸகல லோகங்களில் வியாபிக்கப்போகிறது. லோகபாலர் களாலும் செய்ய முடியாததான காரியத்தைச் செய்து உம்முடைய கீர்த்தியை லோகத்தில் பரவச் செய்து கொண்டு சீக்கிரத்தில் திரும்பிவருவான்" என்று சமாதானம் செய்தார். அரசரும் நாரதருடைய வாரத்தையை நம்பி ராஜ்யத்தில் பிரீதியில்லாமல் புத்திரனையே நினைத்துக் கவலையடைந்தார்.

71–81. துருவன் நாரதருடைய ஆக்ஞையின்படி மதுவனம் சென்று ஸ்நானம் செய்து அன்று இரவு உபவாஸமிருந்து சுத்தனாகப் பரமபுருஷனைப் பூஜித்தான். மூன்று நாட்களுக்கொருதரம் விளாம்பழம், இலந்தைப்பழம் இவைகளைத் தன்னுடைய சரீர ஸ்திதிக்குத் தக்கபடி புஜித்துக் கொண்டு, ஸ்ரீமந் நாராயணனை ஆராதித்தான். இப்படி ஒரு மாத காலம் சென்றது; பின்பு ஆறு நாளுக்கொருதரம் உலர்ந்த இலை, புல் முதலியவைகளைப் புஜித்துப் பகவானை ஆராதித்து, இரண்டாவது மாதத்தைக் கழித்தான். அதன் பிறகு ஒன்பது நாளுக்கொருதரம் ஜலத்தைப்புஜித்து உத்தமச்லோகராகிய பகவானைத்

தியானித்து மூன்றாவது மாதத்தையும் சிறிது நேரத்தைப் போல கழித்தான். அதன்பின் பன்னிரண்டு நாளுக்கொருதரம் காற்றை புசித்துச் சுவாஸத்தை யடக்கி தேவதேவராகிய பகவானைத் தியானம் செய்து நான்காவது மாதத்தைப் போக்கினான். பின்பு ஐந்தாவது மாதத்தில் மூச்சை யடக்கி ஒரு காலைப் பூமியில் ஊன்றிக்கொண்டு ப்ரஹ்மத்தைத் தியானம் செய்துகொண்டு கட்டைபோல அசையாமலிருந்தான். பல விஷயங்களில் செல்லுகிறதும், பூதங்களுக்கும், இந்திரியங்களுக்கும் ஆசிரியமுமான மனத்தை வேறு இடத்தில் செல்லாமல் அடக்கிப் பகவானுடைய ஸ்வரூபத்தைத் தியானம் செய்ததால், அந்த ஸ்வரூபத்தைத் தவிர வேறொன்றும் அவனுக்குப் புலப்படவில்லை. மஹத்தத்துவம் முதலியவைக்கு ஆதாரமும், பிரகிருதி புருஷன் ஆகிய இவைகளுக்கும் அதிபதியுமான ப்ரஹ்மத்தைத் தியானம் செய்யும் துருவனுடைய தேஜஸ்ஸை சஹிக்க முடியாமல் மூன்று லோகங்களும் நடுங்கின. ஓரிடத்தில் யானையானது ஒரு காலால் நிற்குமானால் அதன் கால் வைத்த பக்கத்தில் ஓடம் எப்படி அழுத்தப்படுமோ, அப்படித் துருவன் வலதுகால் கட்டை விரலை ஊன்றும் போது அந்த பக்கத்திலும் பூமியானது வணங்கிற்று. (ப்ரஹ்மத் தியானம் செய்வதால் சரீரம் பாரமாக இருந்தது.) இப்படித் துருவன் தன்னுடைய ப்ராணனையும், அதன் மார்க்கத்தையும் தடுத்து ஜகத்ஸ்வரூபியான ஸ்ரீ மஹாவிஷ்ணுவைத் தானாகப் பாவித்துத் தியானிக்கும்பொழுது ஸகல லோகங்களும் மூச்சுவிட முடியாமல் சிரமத்தையடைந்தார்கள். அதனைக்கண்டு இந்திரன் முதலிய லோகபாலர்கள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவைச் சரணமடைந்து "ஓ பகவான்!

சராசரங்களடங்கிய இந்த ஜகத்திற்கு இம்மாதிரியான உபத்திரவம் (பிராணநிரோதம்) இதுவரையில் ஏற்பட்டதில்லை. இந்தக் கஷ்டத்திலிருந்து எங்களைக் காப்பாற்றும், சரணமடையக் கூடியவராகிய உம்மைச் சரணமடைகிறோம் என்றார்கள்.

82. அதனைக் கேட்ட பகவான் அவர்களை நோக்கி "ஓ தேவர்களே! பயப்படாதீர்கள். உத்தான பாதருடைய புத்திரனாகிய துருவன் என்னையே தியானம் செய்கிறபடியால் லோகத்திற்கு இவ்வளவு உபத்திரவம் உண்டாகியிருக்கிறது. நீங்கள் உங்கள் உடைய கிரஹத்திற்குப் போகலாம். தபஸை நிறுத்தும் படி செய்கிறேன்" என்று அனுக்கிரஹித்தார்.

அத்தியாயம்–9

(தொடர்ச்சி)

1–5 பகவானுடைய வார்த்தையைக் கேட்ட தேவர்கள் பயமற்றவர்களாகி ஸ்வர்க்கம் சென்றார்கள். பகவானும் கருடன் மீதேறித் தம்முடைய பக்தனைப் பார்ப்பதற்காக மதுவனம் சென்றார். அத்தருணத்தில் துருவன் யோகாப்யாஸத்தால் அசையாத புத்தியைக் கொண்டு தன்னுடைய ஹிருதயமாகிய தாமரை மலரில் மின்னல் போலப் ப்ரகாசிக்கும் பகவத் ஸ்வரூபத்தைத் தரிசித்துக் கொண்டிருந்தான். பகவான் அவ்விடஞ் சென்றவுடன் அவனுடைய ஹ்ருதயத்தில் ப்ரகாசித்திருந்த தேஜஸ் மறைந்தது. உடனே கண்களைத் திறந்து பார்க்க, வெளியில் அதே விதமாகப்ரகாசிக்கும் பகவானைத் தரிசித்தான். பகவானைப் பார்த்தமாத்திரத்தில் பரபரப்புள்ளவனாகி, கண்களால் பருகுகிறவன்போலப் பார்த்தும், முகத்தால் முத்தமிட்டுக் கொள்கிறவன் போலும், கைகளால் தழுவுகிறவன் போலும் தண்டம்போல் பூமியில் விழுந்து நமஸ்காரம் செய்தான். மேலுமவன் பகவானை ஸ்தோத்திரம் செய்ய விரும்பியவனானாலும், பகவத் குணங்களை அறியாதவனாகையால் கவலைப்பட்டு இருந்தான். எல்லாருடைய ஹிருதயத்திலும் வசிப்ப வராகிய பகவான், துருவனுடைய அபிப்பராயத்தைத் தெரிந்து கொண்டு கைகளைக் கூப்பி, தமக்கெதிரில் நிற்கும் சிறுவனிடம் மிகுந்த தயையால் வேத ஸ்வரூபமாகிய் சங்கத்தால் அவனுடைய இரு கன்னங்களிலும் தடவினார். அதனால் அவருக்கு ஜீவன் ஈசுவரன் ஆகிய இவர்களுடைய உண்மை நன்றாகத்

தெரிந்தது. சாசுவதமாகிய ஸ்தானத்தை அடையப் போகிற அந்தத் துருவன் பிரஸித்தமான மேலான கீர்த்தியுள்ளவனாகிய பகவானை நோக்கி மெதுவாகப் பக்தி, பிரேமை இவைகளுடன் ஸ்தோத்திரம் செய்தான்.

6–17 "ஸகல சக்தியுள்ளவராகிய எந்தப் பகவான் என்னுடைய சரீரத்திற்குள் பிரவேசித்து கை, கால் , காது, துவக், பிராணன், வாக்கு ஆகிய இவைகளைப் பிழைக்கச் செய்தாரோ, (தன் தன் காரியத்தைச் செய்யச் சக்தியுள்ளதாகச் செய்தார்) அந்தப் பரம புருஷராகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். ஓ பகவன்! நீர் ஒருவரே முக்குணங்களுள்ள தம்முடைய மாயாசக்தியைக் கொண்டு மஹத் தத்துவம் முதலிய இந்த ஸகல ஜகத்தையும் ஸ்ருஷ்டித்து இதில் ப்ரவேசித்து, அஸத்துக்களான இந்திரியகுணங்களை அடைந்து அந்த அந்தத் தேவதையாகப்ரகாசிக்கிறீர். அது, அக்கினி ஒருவரானாலும் கட்டைகளை ஆசிரயித்துப் பல அக்கினிகளாகத் தோற்றுவது போலிருக்கிறது. (ஞானம் முதலிய சக்தியுள்ள புருஷன் நீர் ஒருவரேயொழிய வேறு ஒருவருமில்லை யென்று கருத்து) ஓ உபத்திரமடைந்தவர்களுக்குப் பந்துவாக இருப்பவரே! ப்ரஹ்மதேவரும் உம்மால் கொடுக்கப்பட்ட திவ்ய ஞானத்தைக் கொண்டு இந்த ஜகத்தைப் பார்த்தார். ஓ நாத! உம்மை அடைந்தவன் தூங்கி விழித்தவன் போன்றவன். உம்முடைய பாதமானது முக்தர்களுக்கும் சரணமாக இருக்கிறது. அப்படிப்பட்ட உம்முடைய பாதாரவிந்தத்தைச் செய்த உபகாரத்தை நினைப்பவனாகிய எவன் மறந்துவிடுவான் ? (உம்மைப் பூஜிக்காதவர்கள் கிருதக்னர்களாவார்கள்.) மேலும் நீர் பக்தர்களை

ஜனன மரண துக்கத்திலிருந்து காப்பாற்றுகிறவர். அப்படிப்பட்ட உம்மை எவர்கள் ஸ்வல்ப பலத்தை விரும்பிப் பூஜிக்கிறார்களோ, அவர்கள் உம்முடைய மாயையால் ஏமாற்றப்பட்ட புத்தியுள்ளவர்களேயாம். பிணத்துக்கொப்பான சரீரத்தால் அனுபவிக்கக் கூடிய சுகத்திற்காக கற்பக விருக்ஷம் போன்ற உம்மைப் பூஜிக்கிறார்களல்லவா ? விஷய சம்பந்தத்தாலுண்டாகும் சுகமானது நரகத்திலும் மனிதர்களால் அடையப் படுகிறது.

மேலும் உம்முடைய பாதாரவிந்தத்தைத் தியானிப் பதாலும், பக்தர்கள் முகமாக உம்முடைய கதைகளைச் சிரவணஞ் செய்வதாலும் எந்த சுகமுண்டாகிறதோ, அது ஆனந்த ரூபமாகிய ப்ரஹ்ம ஸ்வரூபத்திலும் உண்டாகிறதில்லை. அப்படிக்கிருக்க, பயங்கரமான யமனுடைய கத்தி போன்ற காலத்தால் விமானத்தில் இருந்து பூமியில் விழுகிறவர்களுக்கு அம்மாதிரியான சுகம் கிடைக்குமா ? (புண்யம் நசிக்கிறவரையில் ஸ்வர்க்க சுகத்தை யனுபவித்துப் புண்யம் குறைந்த வுடன் பூமிக்கு வருகிறார்கள். ஆனதால் ஸ்வர்க்க சுகமும் இதற்கொப்பானதாகுமா ?) ஓ அனந்த! உம்முடைய குணங்களுடைய கதாமிருதத்தைப் பானம் செய்து அதனால் மதித்துப் பலவகையான வியஸனங் களுள்ள ஸம்ஸாரத்தை பிரயாசையின்றித் தாண்டுவேன். ஆனதால் சுத்தசித்தர்களும் எப்பொழுதும் இடைவிடாமல் உம்மிடத்தில் பக்தி செய்பவருமான சாதுக்களுடன் சகவாசம் முதலிய எனக்கு இருக்கும் படி அனுக்கிரகிக்க வேண்டும். ஓ பத்மநாப! எவர் உம்முடைய பாதமாகிய தாமரைமலரின் வாசனையில் ஆசைபட்ட சித்தமுள்ளவர்களிடத்தில் (பக்தர்கள்)

சகவாஸம் முதலியவைகளைச் செய்கிறார்களோ, அவர்கள் மிகுந்த பிரியமான தேகத்தையும், புத்திரன், மித்திரன், வீடு, பணம், ஸ்திரீ ஆகிய இவைகளையும் நினைக்கிறதில்லை. ஓ ஜனனமற்றவரே! மஹத்தத்துவம் முதலிய அனேககாரணங்களுள்ள காரியகாரண விசேஷங்களுள்ளதும், திர்யக், மனிதர்கள், ப்ராஹ்மணன், மலைப்பாம்பு, தேவன், அசுரர்கள் ஆகிய இவர்கள் உடைய சரீரங்களால் வியாப்தமுமான இந்த உம்முடைய விராட் உருவத்தை நான் அறிவேன். இதைவிட மேலானதை நான் அறியேன். அது சப்தத்தால் சொல்ல முடியாதது. (வாக்குக்கு எட்டாதது). பிரளய காலத்தில் இவ்வுலகத்தை வயிற்றில் அடக்கிக் கொண்டு ஆதிசேஷனாகிய படுக்கையில் நீர் யோக நித்திரை செய்கிறீர். உம்முடைய சமுத்திரம் போன்ற கொப்பூழில் தோன்றிய ஸ்வர்ணமயமாக லோக ஸ்வரூபமுமான தாமரை மலரில் ப்ரஹ்மதேவர் உண்டானார். அப்படிப்பட்ட பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். நீர் நித்யமுக்தர், பரிசுத்தர், எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக இருப்பவர், விகாரம் அற்றவர். எல்லாவற்றிற்கும் ஆதியாக இருக்கும் புருஷன், ஐசுவரியமுள்ளவர், முக்குணங்களுக்கு அதிபதி. புத்தியின் ஸ்திதியைச் சித்சக்தியைக் கொண்டு பார்ப்பவர். ஆனதால் ஜீவனுக்கும் உமக்கும் அநேக பேதமிருக்கிறது. அப்படிப்பட்ட நீர் ஜகத்தைக் காப்பாற்றுகிறவர். யக்ஞத்திற்கு அதிஷ்டாதாவாகிய விஷ்ணுவும் நீரே. பலவகையான சக்தியுள்ளவைகளும் ஒன்றுக்கொன்று விருத்த கதியுள்ளவைகளுமான வித்யை முதலியவைகள் எவரிடமிருந்து கிரமமாக உண்டாகின்றனவோ அப்போர்ப்பட்டதும், ஜகத்திற்கு உற்பத்தி ஸ்தானமும், அகண்டமும், ஆதியந்தமற்றதும்,

ஆனந்த ஸ்வரூபமும், விகாரங்களற்றதுமான ப்ரஹ்மத்தைச் சரணமடைகிறேன். ஓ பகவன்! ஆனந்த ஸ்வரூபியான உம்முடைய பாதத்தை ஸகல பலனை காட்டிலும் மேலானது என்று நிஷ்காமர்கள் உபாசித்தாலும் தீனர்களாகிய எங்களையும் (ஸம்ஸாரிகளை) மிகுந்த தயையுடன் இளங்கன்றுள்ள பசுவானது கன்றுக்குப் பால் கொடுத்துக் காப்பாற்றுவதுபோல் ஸம்ரக்ஷிக்கிறீர் என்று ஸ்தோத்திரஞ் செய்தான்.

18–26 இப்படி துதிக்கப்பட்டவர் பக்தர்களிடத்தில் பிரீதியுள்ளவருமான பகவான் ஸத்ஸங்கல்பம் உள்ள புத்திசாலியாகிய துருவனை சிலாகித்து அவனை நோக்கி 'ஓ சிறுவனாகிய ராஜகுமாரனே! உன்னுடைய எண்ணம் இப்படிப் பட்டதென்று எனக்குத் தெரியும், அது மற்றவர்களால் அடைய முடியாததானாலும் அதனை உனக்கு கொடுக்கிறேன். எந்தப்பதமானது அழிவற்றதோ, விசேஷ காந்தியுள்ளதோ கிரகங்கள், அச்வநீ முதலிய நக்ஷத்திரங்கள், மற்றதாரைகள் முதலியவையுள்ள தேஜஸ்ஸுக்களுடைய சக்கரம் எவ்விடத்திலிருக்கிறதோ, மேலும் ஒரே கம்பத்தில் அநேகம் காளைகளைக் கட்டுவது போல் எதனிடத்தில் ஸகல ஜ்யோதிஸ்ஸுமிருக்கிறதோ, எது வெகுகாலம் இருக்கக் கூடிய (மூவுலகமும் நாசத்தையடைந்தாலும் எது நாசமடைகிறதில்லையோ), தர்மம், அக்கினி, கச்யபர், சுக்கிரன், ஸப்தரிஷி, நக்ஷத்திரம் ஆகிய இவைகள் எதனை பிரதக்ஷிணமாக சுற்றுகின்றனவோ, அந்தத் துருவ பதத்தைக் கொடுக்கிறேன். ஆனால் தர்மிஷ்டராகிய உன்னுடைய பிதா உனக்கு ராஜ்யத்தை கொடுத்து வனத்திற்குப் போவார். அப்பொழுது இருபத்து ஆறாயிரம் (26,000 வருஷம் நீ

ராஜ்யத்தைப் பரிபாலிப்பாய் உன் சகோதரனாகிய உத்தமன் வேட்டைக்குச் சென்று காணாமல் போய் விடுவான். அப்பொழுது அவனுடைய மாதா அவனை தேடிச்சென்று காட்டுத்தீயினால் மரணமடைவாள்.

பின்பு நீ பூர்ணமாகத் தக்ஷணை கொடுத்து யாகங்களை யனுஷ்டித்து அதனால் யக்ஞத்தில் ப்ரீதியுள்ள என்னை ஆராதித்து இவ்வுலகத்திய சுகங்களை யனுபவித்துக் கடைசியில் என்னைச் சிந்திப்பாய். அதன்பின் முன்னே காட்டிய மேலான பதத்தையடைந்த சப்தரிஷிகளுக்கும் மேலானவனாக இருப்பாய். அந்தப் பதத்திற்கு அழிவில்லை" என்று அனுக்கிரகித்து அந்தச் சிறுவன் பார்த்திருக்கும்போதே தம்மிடம் சென்றார்.

27 அந்தச் சிறுவனும் ஸ்ரீ மகாவிஷ்ணுவினுடைய பாதசேவையால் தன்னுடைய சங்கல்பம் பூர்த்தியை யடைந்தும் அதிக உற்சாகமில்லாதவனாகத் தன்னுடைய பட்டணம் சென்றான்" என்று மைத்ரேயர் விதுரருக்குச் சொன்னார்.

28 அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி "ஓ பகவான்! பகவான் பாதசேவை செய்து துர்லபமான பதத்தை ஒரே ஜன்மத்தில் அடைந்தும் துருவர் ஏன் தம்மைக் கிருதார்த்தராக நினைக்கவில்லை?" என்று கேட்டார்.

29–35 அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி, 'துருவன் சபத்தினீ மாதாவினுடைய நிந்தா வார்த்தைகளால் வருத்தமடைந்தவனாகி பக்தியை

கொடுப்பவரான பகவானைத் தரிசித்தும் மோக்ஷத்தைக் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்திக்கவில்லை. ஆனதால் இம்மாதிரி புத்தி மாறிவிட்டதேயென்று தாபமடைந்தான். எப்படியெனில் "ஸனந்தர் முதலிய ஊர்த்துவரேதஸ் உள்ள மஹரிஷிகள் அநேக ஜன்மத்தில் யோகம் முதலியவைகளை யனுஷ்டித்தும் எவருடைய பாதத்தை அடையவில்லையோ, அப்படிப் பட்ட பாதத்தின் சாயையை நான் ஆறுமாதத்தில் அடைந்து பேத புத்தியுள்ளவனாக இருந்தேன். பாக்கியக் குறைவுள்ளவனாகிய என்னுடைய அறியாத் தன்மை வியக்கக் கூடியது. ஸம்ஸாரத்தை நிவர்த்திக்கும் பரம புருஷனுடைய பாதங்களை அடைந்து அநித்திய சுகத்தையே விரும்பினேன். மிகுந்த அஸத்தாகிய நான் நாரத பகவானுடைய உண்மையான வார்த்தையைக் கேட்டு அதனை யனுஷ்டிக்கவில்லை. ஆனதால் பொறாமையுள்ளவர்களான தேவர்கள் என் புத்தியை மாற்றிவிட்டார்கள். லோகத்தில் ஆத்மாவைக் காட்டிலும் இரண்டாவது பதார்த்தமில்லை என்பது உண்மை யாயிருக்க என்னுடைய சகோதரன் எனக்குச் சத்துரு வென்று நினைத்து மனவருத்தப்படுகிறேன்.

இது தேவருடைய மாயையேயாம். தூங்குகிறவனால் ஸ்வப்னத்தில் காணப்படும் வஸ்துக்கள் ஸத்தியமாக அப்பொழுது தோன்றினாலும் அவைகள் மித்யை அல்லவா? ஸ்ரீ பகவான் கருணை செய்யும்படி ஆராதிப்பது அரிதானாலும் கடும் தபஸ் செய்து அவருடைய பிரஸாதத்தை அடைந்தும் நான் அவரிடம் பெற்றுக்கொண்ட வரமானது ஆயுஸ் இல்லாதவனுக்கு செய்யும் வைத்தியம்போல் வியர்த்தமானதேயாம். ஸம்ஸார சுகத்தைக் கொடுக்க வேண்டுமென்று

ராஜ்யத்தைப் பரிபாலிப்பாய் உன் சகோதரனாகிய உத்தமன் வேட்டைக்குச் சென்று காணாமல் போய் விடுவான். அப்பொழுது அவனுடைய மாதா அவனை தேடிச்சென்று காட்டுத்தீயினால் மரணமடைவாள்.

பின்பு நீ பூர்ணமாகத் தக்ஷணை கொடுத்து யாகங்களை யனுஷ்டித்து அதனால் யக்ஞத்தில் ப்ரீதியுள்ள என்னை ஆராதித்து இவ்வுலகத்திய சுகங்களை யனுபவித்துக் கடைசியில் என்னைச் சிந்திப்பாய். அதன்பின் முன்னே காட்டிய மேலான பதத்தையடைந்த சப்தரிஷிகளுக்கும் மேலானவனாக இருப்பாய். அந்தப் பதத்திற்கு அழிவில்லை" என்று அனுக்கிரகித்து அந்தச் சிறுவன் பார்த்திருக்கும்போதே தம்மிடம் சென்றார்.

27 அந்தச் சிறுவனும் ஸ்ரீ மகாவிஷ்ணுவினுடைய பாதசேவையால் தன்னுடைய சங்கல்பம் பூர்த்தியை யடைந்தும் அதிக உற்சாகமில்லாதவனாகத் தன்னுடைய பட்டணம் சென்றான்" என்று மைத்ரேயர் விதுரருக்குச் சொன்னார்.

28 அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி "ஓ பகவான்! பகவான் பாதசேவை செய்து துர்லபமான பதத்தை ஒரே ஜன்மத்தில் அடைந்தும் துருவர் ஏன் தம்மைக் கிருதார்த்தராக நினைக்கவில்லை?" என்று கேட்டார்.

29–35 அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி, 'துருவன் சபத்தினீ மாதாவினுடைய நிந்தா வார்த்தைகளால் வருத்தமடைந்தவனாகி பக்தியை

Released by Maran's Dog, Toronto , Canada

கொடுப்பவரான பகவானைத் தரிசித்தும் மோக்ஷத்தைக் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்திக்கவில்லை. ஆனதால் இம்மாதிரி புத்தி மாறிவிட்டதேயென்று தாபமடைந்தான். எப்படியெனில் "ஸனந்தர் முதலிய ஊர்த்துவரேதஸ் உள்ள மஹரிஷிகள் அநேக ஜன்மத்தில் யோகம் முதலியவைகளை யனுஷ்டித்தும் எவருடைய பாதத்தை அடையவில்லையோ, அப்படிப்பட்ட பாதத்தின் சாயையை நான் ஆறுமாதத்தில் அடைந்து பேத புத்தியுள்ளவனாக இருந்தேன். பாக்கியக் குறைவுள்ளவனாகிய என்னுடைய அறியாத் தன்மை வியக்கக் கூடியது. ஸம்ஸாரத்தை நிவர்த்திக்கும் பரம புருஷனுடைய பாதங்களை அடைந்து அநித்திய சுகத்தையே விரும்பினேன். மிகுந்த அஸத்தாகிய நான் நாரத பகவானுடைய உண்மையான வார்த்தையைக் கேட்டு அதனை யனுஷ்டிக்கவில்லை. ஆனதால் பொறாமையுள்ளவர்களான தேவர்கள் என் புத்தியை மாற்றிவிட்டார்கள். லோகத்தில் ஆத்மாவைக் காட்டிலும் இரண்டாவது பதார்த்தமில்லை என்பது உண்மையாயிருக்க என்னுடைய சகோதரன் எனக்குச் சத்துரு வென்று நினைத்து மனவருத்தப்படுகிறேன்.

இது தேவருடைய மாயையேயாம். தூங்குகிறவனால் ஸ்வப்னத்தில் காணப்படும் வஸ்துக்கள் ஸத்தியமாக அப்பொழுது தோன்றினாலும் அவைகள் மித்யை அல்லவா? ஸ்ரீ பகவான் கருணை செய்யும்படி ஆராதிப்பது அரிதானாலும் கடும் தபஸ் செய்து அவருடைய பிரஸாதத்தை அடைந்தும் நான் அவரிடம் பெற்றுக்கொண்ட வரமானது ஆயுஸ் இல்லாதவனுக்கு செய்யும் வைத்தியம்போல் வியர்த்தமானதேயாம். ஸம்ஸார சுகத்தைக் கொடுக்க வேண்டுமென்று

Released by Maran's Dog, Toronto , Canada

அபிமானமுள்ளவனாகிப் பிரார்த்தித்தேன். நான் புண்ணியமற்றவன். பகவானிடத்தில் நான் வரம் பெற்றுக் கொண்டது கேட்டதைக் கொடுக்க சித்தனாக இருக்கும் சக்கரவர்த்தியை தரித்திரன் தன் கையில் இருக்கும் சிறிய பாத்திரம் நிறைய அரிசி கொடுக்க வேண்டுமென்று பிரார்த்தித்து அரிசியைப் பெற்றுக் கொண்டது போலிருக்கிறது என்று நினைத்துத் துருவர் பச்சாதாபமடைந்தார். ஓ விதுரரே! பகவான் உடைய பாதாரவிந்த தூளியை அடைந்து அதனால் திருப்தி அடைந்திருக்கும் உம்மைப் போன்றவர்கள், பகவானுக்குச் சிச்ரிஷை செய்வதைவிட வேறு ஒன்றையும் விரும்பார்கள். தெய்வச்செயலாக கிடைத்தால் சந்தோஷமடைவார்கள்.

36–64 பின்பு துருவர் வருகிறாரென்பதைக் கேட்டும் உத்தானபாதர், 'மரணமடைந்தவன் திரும்பி வருகிறான்' என்றால் அதை ஜனங்கள் எப்படி நம்பமாட்டார்களோ அப்படி "பாபியான எனக்கு இம்மாதிரியான க்ஷேமமும் கிடைக்குமோ என்று" நம்பவில்லை. ஆனாலும் தேவரிஷியான நாரதருடைய வார்த்தையை நினைத்து விசேஷ சந்தோஷமடைந்து இம்மாதிரியான நல்ல ஸமாசாரம் சொன்னவனுக்கு விலை உயர்ந்த ஹாரத்தைக் கொடுத்தார். பிறகு மேலான குதிரைகள் கட்டியதும், ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப்பட்டதுமான ரதத்தின் மீதேறிக் கொண்டு ப்ராஹ்மணர்கள் தம்முடைய குலத்திலுள்ள பெரியோர்கள், மந்திரி, பந்துக்கள் ஆகிய இவர்களுடன் நகரத்தை விட்டு புறப்பட்டார். அப்பொழுது சங்கம், துந்துபி, புல்லாங்குழல் முதலிய வாத்தியங்களை கோஷித்தார்கள். ப்ராஹ்மணர்கள் வேதம்

உச்சரித்தார்கள். ஸுநீதி, ஸுருசி என்ற ராஜ பத்தினிகள் உத்தமனென்ற ராஜ குமாரனுடனும் பல்லக்கில் ஏறிக் கொண்டு அரசர்பின் சென்றார்கள்.

இப்படி அரசர் தம்முடைய புத்திரனைப் பார்க்க விரும்பி பட்டணத்துக்குச் சமீபத்திலிருக்கும் தோட்டத்தின் அருகில் வருகிற துருவரைக் கண்டு சீக்கிரம் ரதத்திலிருந்து இறங்கி அதிக பிரேமையால் பரவசராகி பெருமூச்சுவிட்டு புத்திரனை ஆலிங்கனம் செய்துகொண்டார். பின்னும் அந்த அரசர் புத்திரனைக் கண்டதால் பூர்ண மனோரதமுள்ளவராகி ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பாதஸேவையால் பாவங்களற்ற வராக இருக்கும் துருவருடைய தலையை மோந்து ஆனந்த பாஷ்பத்தைப் பெருக்கினார். அப்பொழுது ஸாதுக்களில் முந்தியவராகிய துருவர் பிதாவினுடைய பாதங்களை நமஸ்கரித்து அவரால் ஆசீர்வதிக்கப்பட்டு இரண்டு மாதாக்களையும் நமஸ்கரித்தார். ஸுருசி யானவள் வணங்கிய குமாரனைத் தூக்கி ஆலிங்கனம் செய்து பாஷ்பத்தால் கத்கத ஸ்வரத்துடன் "வெகுகாலம் ஜீவித்திரு" என்று ஆசீர்வதித்தாள். புருஷன் பகவான் இடத்தில் செய்யும் மைத்திரி முதலிய குணங்களால் பகவான் எவனிடத்தில் தயைசெய்கிறாரோ, அவனை ஸகல பிராணிகளும் நமஸ்கரிக்கிறார்கள். ஜலமானது பள்ளத்தில் பிரவேசிக்கிறது. (அதனால் ஸுருசியும் துருவரிடம் விசுவாசத்தை வைத்தாள்.) மேலும் உத்தமனும், துருவனும், ஒருவருக்கொருவர் ஆலிங்கனஞ் செய்துகொண்டு மயிர்க் கூச்சலையடைந்து அடிக்கடி ஆனந்த பாஷ்பத்தைப் பெருக்கினார்கள். ஸுநீதியென்ற துருவருடைய மாதாவானவள் தன்னுடையப் பிராணனைக் காட்டிலும் பிரியனாகிய புத்திரனைத்

தழுவி அவனுடைய சரீர ஸ்பர்சத்தால் மனக்கவலையை யொழித்தாள். சூரனைப் பெற்றவளாகிய அவளுடைய கண்களிலிருந்து ஆனந்த ஜலம் பெருகி ஸ்தனங்களில் விழுந்தது. அந்த ஸ்தனங்களிலிருந்து பால் பெருகியது. அந்தராஜமஹிஷியை நோக்கி ஜனங்கள் "காணாமல் போன உன்னுடைய புத்திரன் தெய்வச் செயலால் திரும்பி வந்திருக்கிறான். உன் கவலையை நிவர்த்திப் பான். பூமண்டலத்தைப் பரிபாலிப்பான், பக்தர்கள் உடைய கவலையைத் தீர்க்கும் பகவானை நீ ஆராதித்தாய். அவனைத் தியானம் செய்யும் வித்வான் கள் ஜயிக்க முடியாத ஸம்ஸாரத்தை ஜயிப்பார்கள்" என்று கொண்டாடினார்கள்.

இப்படி ஜனங்களால் சிலாகிக்கப்படும் துருவரை, உத்தமனுடன், அரசன் யானையின் மீதேற்றி வைத்துக் கொண்டு ஜனங்களால் துதிக்கப்பட்டு, தம்முடைய நகரத்திற்குட் சென்றான். அந்த பட்டணத்தில் ஒவ்வொரு வீட்டின் வாசலிலும், கோட்டை வாசல் களிலும், வாழைகளும், பாக்குக்கன்றுகளும், மகர தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. மேலும் மாந்தளிர்கள், வஸ்திரங்கள், புஷ்ப மாலைகள், முத்து மாலைகள் ஆகிய இவைகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தன. பூர்ணகும்பம் வைக்கப்பட்டிருந்தது. தீபங்கள் பிரகாசித்தன. மேலும் அந்த நகரமானது அலங்கிருதங்களான பிராகாரங்களாலும் கோபுரங் களாலும், வீடுகளாலும், தங்க வேலை செய்த விமான சிகரங்களுடைய காந்திகளாலும் மனோஹரமாக இருந்தது. பின்னும் ராஜமார்க்கங்களும், நாற்சந்தி களும், அவாந்தர வீதிகளும், பிரகாரத்தின் மீதிருக்கும் வீதிகளும் குப்பையில்லாமல் சுத்தம் செய்யப்பட்டும்;

ஜலம் தெளிக்கப்பட்டும், சந்தனத்தாலும், பொரிகளா லும், அக்ஷதங்களாலும், புஷ்பங்களாலும், பழங்களா லும், அரிசிகளாலும், பலிகளாலும் அலங்கரிக்கப் பட்டு மிருந்தன. ராஜ மார்க்கத்தில் வரும் துருவருக்குப் பட்டணத்திலிருக்கும் பதிவிரதைகளான ஸ்திரீகள் வெண்மையான கடுகு, அக்ஷதம், தயிர், பூர்ண கும்பம், அருகம்புல், புஷ்பம், பழம் முதலிய மங்கள திரவியங்களை ஸமர்ப்பித்து மிகுந்த பிரீதியுடன் ஆசீர்வாதம் செய்தார்கள். இப்படி எல்லோராலும் பூஜிக்கப்பட்டும், மனோஹரமான கானங்களைக் கேட்டுக் கொண்டும் துருவர் பிதாவின் உடைய கிருஹம் சென்றார். அந்த அரண்மனையானது மேலான இரத்தினங்களால் கட்டப்பட்டது. அந்த பிதாவினுடைய கிருஹம் சென்றார்.

அதில் பிதாவினால் பகுமானிக்கப்பட்டு ஸ்வர்க்கத்தில் தேவன்போல் வசித்தார். அவ்விடத்தில் பால்போலும் நுரைபோலும் வெண்மையான மேல் விரிப்புகளும், தந்தவேலை செய்யப்பட்டவைகளும், சுவர்ணத்தால் அலங்கரிக்கப்பட்டவைகளுமான கட்டில் முதலிய படுக்கைகளும் ஸ்வர்ணமயங்களான ஆஸனங்களுமிருக்கின்றன. அங்கிருக்கும் ஸ்படிகச் சுவர்களிலும் மரகதச் சுவர்களிலும் தீபங்களும், ஸ்திரீகளும் பிரதிபிம்பிக்கிறார்கள். மேலும் அழகான தோட்டங்களிருக்கின்றன. அவைகளில் பலவகையான தேவ விருக்ஷங்களு மிருக்கின்றன. பறவைகள் ஆணும் பெண்ணுமாகச் சப்திக்கின்றன. வண்டுகள் மதங்கொண்டவைகளாகிப் பாடுகின்றன. மேலும் அவ்விடத்திலிருக்கும் ஓடைகளுடைய படிகள் வைடூரியக் கற்களால் கட்டப்பட்டு இருக்கின்றன.

அந்த ஓடைகளில் தாமரைகள் நீலோத்பலங்கள், ஆம்பல்கள் ஆகிய இவைகளிருக்கின்றன. ஹம்ஸம், நீர்க்காக்கை, சக்கரவாகம், ஸாரஸங்கள் ஆகிய நீர்ப்பறவைகளும் வசிக்கின்றன.

65–67 பின்பு உத்தானபாதர் என்ற அந்த ராஜ ரிஷியானவர் தம்முடைய புத்திரராகிய துருவருடைய சரிதத்தை (துபஸ் செய்து பகவானிடம் வரம் பெற்றது) கேட்டு மிகவும் ஆச்சரியமடைந்தார். இப்படி சில காலம் சென்றபின் துருவர் இராஜ்ய பரிபாலனம் செய்யும் வயதை அடைந்தார். ஜனங்களும் அவரிடம் மிகுந்த பிரியமுள்ளவர்களாக இருந்தார்கள். அப்பொழுது அரசர் தாம் வயது சென்றவராக இருந்ததாலும் துருவருக்குப் பட்டாபிஷேகம் செய்தார். ஜனங்களுக்கு அது சம்மதமாக இருந்தது. பின்னுமவர் விஷயங்களில் ஆசையை ஒழித்து ஆத்ம தத்துவத்தை யோசித்து வனம் சென்றார்.

அத்தியாயம்–10

துருவர் புண்ய ஜனர்களுடன் யுத்தம் செய்தது

1–3. பின்பு துருவர் சிம்சுமாரரென்ற பிரஜாபதியின் புத்திரியாகிய பிரமி என்பவளை விவாகம் செய்து கொண்டு அவளிடத்தில் கல்பன், வத்ஸரண் என்ற இரண்டு புத்திரர்களை உண்டுபண்ணினார். பின்னும் மிகுந்த பலசாலியான அவர் வாயுவின் புத்திரியாகிய இளை யென்பவளைக் கல்யாணம் செய்துகொண்டு அவளிடத்தில் உத்கலனென்ற புத்திரனையும், சிறந்த புத்திரியையும் உண்டுபண்ணினார். அவருடைய ஸபத்தினி மாதாவின் புத்திரனாகிய உத்தமன் கல்யாணம் செய்துகொள்வதற்கு முன்னமேயே ஒருநாள் வேட்டைக்காக இமயமலை சென்று அவ்விடத்தில் மிக்க பலசாலியான புண்யஜனனால் (அசுரனால்) கொல்லப்பட்டான். அவனுடைய மாதாவாகிய ஸுருசியும் புத்திரசோகத்தால் மரணமடைந்தாள்.

4–28. பின்பு துருவர் தம்முடைய ஸஹோதரன் மரணமடைந்ததைக் கேட்டு கோபம், பொறாமை, துக்கம் ஆகிய இவைகளை அடைந்து ஜயசீலமான ரதத்தின் மீதேறி புண்ய ஜனர்கள் வசிக்கும் அலகா நகரத்தை நோக்கிப் புறப்பட்டார். வடக்குத்திக்கில் இமயமலை சென்று அவ்விடத்தில் அலகா நகரத்தைக் கண்டார். அதில் பரமசிவனுடைய வேலைக்காரர் களான ராக்ஷஸர்களும். குஹ்யர்களும் வசிக்கிறார்கள். பெரிதான கைகளுள்ளவராகிய அந்தத் துருவர் அவ்விடம் சென்று சங்கத்தை ஊதினார். அதன் சப்தத்தால் ஆகாசம், திக்குகள் ஆகிய இவைகளில்

எதிரொலி உண்டாயிற்று. ஓ விதுரரே! அதனைக் கேட்டு யக்ஷஸ்திரீகள் பயந்தார்கள். பிறகு மிக்க பலசாலிகளான உபதேவர்களெல்லாரும். அந்தச் சப்தத்தை சகிக்காதவர்களாகி ஆயுதங்களை கையில் எடுத்துக்கொண்டு பட்டணத்திற்கு வெளியில் வந்தார்கள். மஹாரதரும், பயங்கரமாகிய தனுஸைத் தரித்தவருமான துருவர் தம்மை எதிர்த்து வருகிற அந்த உபதேவர்களைப் பார்த்து மூன்று பாணங்களால் தனியே ஒவ்வொருவரையும் ஒரேகாலத்தில் அடித்தார். அந்துப் பாணங்கள் அவர்கள் நெற்றியில் பதிந்தன அவர்களெல்லோரும் தங்களை அபஜயமடைந்தவர் களாக நினைத்துத் துருவருடைய திறமையைப் பற்றிப் புகழ்ந்தார்கள். பின்பு அவர்கள் காலால் மிதிக்கப்பட்ட ஸர்ப்பங்கள் போல் துருவருடைய பராக்கிரமத்தைச் சகிக்காதவர்களாகி ஒவ்வொருவரும் ஆறு பாணங்களால் துருவரை தனித்தனியே அடித்தார்கள். பின்னுமவர்கள் பரிகங்கள், கத்திகள், பிராஸமென்ற ஆயுதங்கள், சூலங்கள், பரச்வதங்கள், சக்திகள், யஷ்டிகள், முஸண்டிகள், பலவகையான இறக்கைகளுள்ள பாணங்கள் ஆகிய இவைகளை வர்ஷித்தார்கள். அவர்கள் ஒரு லக்ஷத்து முப்பது ஆயிரம் பேர்கள். (1,30,000) எல்லோரும் விசேஷ கோபங்கொண்டவர் களாக இருந்ததுமல்லாமல் துருவர் செய்ததற்குப் பதில் செய்யவேண்டுமென்ற விருப்பமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். அப்பொது அவர்களுடைய ஆயுத வர்ஷத்தால் உத்தானபாதருடைய புத்திரராகிய துருவரும், அவருடைய இரதமும் அதில் கட்டப்பட்டு இருக்கும் குதிரைகளும், ஸாரதியும் மூடப்பட்டார்கள். அது மழையால் மலை மூடப்பட்டது போலிருந்தது. அப்பொழுது அதனைப் பார்த்திருந்த சித்தர்கள்

"மனுவின் வம்சத்திலுண்டான சூரியன் புண்யஜனர் களாகிய பெரிதான சமுத்திரத்தில் மூழ்கினார். ஹா ஹா" என்று உரக்கக்கூவினார்கள். அசுரர்கள் "ஜயித்தோம் ஜயித்தோம்" என்று உரக்கச் சொல்லி சந்தோஷித்தார்கள்.

அந்தச் சமயத்தில் பனி மூட்டத்திலிருந்து சூரியன் வெளிப்பட்டாற்போல் துருவருடைய இரதமானது அதிலிருந்து வெளியில் வந்தது. துருவரும் பயங்கரமாகிய தம்முடைய வில்லில் நாண் கயிற்றைக் கட்டி, சப்திக்கச்செய்து அதில் பாணங்களைத் தொடுத்துச் சத்துருக்களுடைய அஸ்திரங்களை அடித்தார். அது மேகக் கூட்டத்தை வாயு நாசஞ் செய்தது போலிருந்தது. அதனால் சத்துருக்கள் மனவருத்தமடைந்தார்கள். துருவருடைய வில்லிலிருந்து விடப்பட்ட பாணங்கள் அவர்களுடைய கவசங்களைப் பிளந்து இடி விழுந்தாற் போல சரீரத்திலும் பிரவேசித்தன. பல்லமென்ற பாணங்களால் அறுக்கப் பட்ட அழகான குண்டலங்களுள்ள தலைகளும், சுவர்ண மயமான பனைமரம் போன்ற துடைகளும் வலயங்களால் அழகான கைகளும், விலையுயர்ந்த மகரங்கள் தோள் வளைகள், கிரீடங்கள், தலைப் பாகைகள் ஆகிய இவைகளும் யுத்த பூமியை மறைத்துக் கொண்டிருந்தன. உயிருடனிருந்த சிலர் முறிக்கப்பட்ட அவயவங்களுள்ளவர்களாகி, சிங்கத்தின் இடம் பயந்த யானைகள்போல் யுத்த பூமியிலிருந்து பயந்து ஓடினார்கள். அப்பொழுது மனுவின் வம்சத்தில் பிறந்த உத்தமராகிய துருவருடன் எதிர்த்து யுத்தத்திற்கு வரக் கூடியவர்களில்லை. அதனைக்கண்ட துருவர் அந்தப் பட்டணத்திற்குட் சென்று அதன் அழகைப்

பார்க்க விருப்பமுள்ளவரானாலும் சத்ருக்கள் திரும்பவும் சண்டைக்கு வருவார்களோவென்று தம்முடைய ஸாரதியை நோக்கி, "மாயாவிகளுடன் நடையை ஜனங்கள் தெரிந்துகொள்ள முடியாது" என்று சொல்விக்கொண்டு அலகா நகரத்திற்குட் போகவில்லை. உடனே சமுத்திரத்திலுண்டாகும் சப்தம்போல் காற்றினால் பயங்கரமான சப்தமுண்டா யிற்று, தூளி கிளம்பியது, ஒரு க்ஷண காலத்தில் ஆகாசம் முழுவதும் மேகங்களால் மூடப்பட்டது. பயங்கரமான இடிகளும் மின்னல்களும் உண்டாயின. இரத்தம், சீழ், அமேத்யம் மூத்திரம், மேதஸ் முதலிய அசுத்தவஸ்துக்கள் வர்ஷிக்கப்பட்டன. கபந்தங்கள் (தலையில்லாத உடல்கள்) துருவருடைய முன்பாக ஆகாயத்திலிருந்து விழுந்தன. பின்பு ஆகாயத்தில் மலைகள் காணப்பட்டன. அவைகள் நான்கு பக்கங்களிலும் விழுந்தன, கதாயுதம், பரிகம், முஸலாயுதம், கத்தி ஆகிய இவைகளும் கற்களும் வர்ஷிக்கப்பட்டன. மேலும் விஷப்பார்வைகளுள்ள வைகளும், அக்கினி போன்ற கண்கள் உள்ளவைகளும் இடிபோன்ற மூச்சு உள்ளவைகளுமான ஸர்ப்பங்கள் தோன்றின. பின்னும் மதங்கொண்ட யானைகளும் சிங்கங்களும், புலிகளும் கூட்டங்கூட்டமாக எதிர்த்து ஓடி வந்தன. பிரளய காலத்தைப் போல் சமுத்திரம் ஆனது பெரிதான அலைகளுடன் பயங்கரமாகி ஸகல பூமியையும் மறைத்துக்கொண்டு கரை புரண்டது இம்மாதிரியானவைகளை அசுரர்கள் மாயையால் உண்டுபண்ணினார்கள். அவைகள் பார்ப்பவர்களுக்குப் பயத்தைக் கொடுத்தன.

29–30. இப்படி துருவரிடத்தில் அசுரர்கள் நிவர்த்திக்க

முடியாத மாயாப்பிரயோகஞ் செய்ததைக் கேள்விப் பட்டு மஹரிஷிகளெல்லாரும் ஒன்று சேர்ந்து துருவருக்கு க்ஷேமமுண்டாகும்படி அனுக்கிரஹித் தார்கள். எப்படியெனில் ஓ உத்தானபாதருடைய புத்திரராகிய துருவ! எந்தப் பகவானுடைய திவ்ய நாமத்தை யுச்சரித்து ஸகல ஜனங்கள் ஸம்ஸாரத்தைத் தாண்டுகிறார்களோ, எவர் சார்ங்கமென்ற வில்லைத் தரித்தவரோ அப்போர்ப்பட்ட தேவர் உம்முடைய சத்துருக்களை நாசஞ் செய்யட்டும்" என்றார்கள்.

அத்தியாயம்–11

மனு துருவருக்குத் தத்துவத்தை உபதேசித்தது

1–5 இப்படி மஹரிஷிகளால் அனுக்கிரகிக்கப்பட்ட துருவர் நாராயணாஸ்திரத்தை வில்லில் ஸந்தானஞ் செய்தார். விதுரரே! அப்பொழுது ஆத்மஞ்ஞான முண்டானவுடனே ஸகல துக்கங்களும் எப்படி நாசமடைகின்றனவோ, அப்படி குஹ்யர்களால் ப்ரயோகிக்கப்பட்ட மாயைகள் யாவும் நாசமடைந்தன. இப்படி நாரயணாஸதிரத்தை அவர் ப்ரயோகித்தவுடன் அதிலிருந்து கிளம்பியவைகளும், ஸ்வர்ணமயமான புங்கங்களுள்ளவைகளும், ஹம்ஸத்தின் இறக்கையுள்ள வைகளுமான பாணங்கள் பயங்கரமாகச் சப்தித்துக் கொண்டு மயில்கள் வனத்தில் ப்ரவேசித்தாற் போல சத்துரு சைன்னியத்தில் ப்ரவேசித்தன.. கூர்மையான முனைகளுள்ள அந்தப் பாணங்களால் உபத்ரவிக்கப் பட்ட அந்த புண்ய ஜனங்கள் மிகுந்த கோபமடைந்து ஆயுதங்களை எடுததுக் கொண்டு ஸர்ப்பங்கள் படம் எடுத்துக் கருடனை எதிர்த்தாற்போல் துருவருடைய முன்பாக ஓடிவந்தார்கள். துருவரும் அவர்கள் மீது பாணங்களைப்ரயோகித்து அவர்களுடைய கைகள், துடைகள், கழுத்து, வயிறு ஆகிய இவைகளை அறுத்து நாசஞ் செய்தார். யோகிகள் எந்த சூரிய மண்டலத்தைப் பேதித்து மேலுலகஞ் செல்லுகிறார் களோ, அந்த மண்டலத்தை அந்தப் புண்ய ஜனங்கள் பேதித்துப் பரலோகமடைந்தார்கள். இப்படி நிரபராதிகளான குஹ்யர்கள் துருவரால் இம்சிக்கப் பட்டார்கள்.

6–35 அப்பொழுது மனுவானர் மஹர்ஷிகளுடன்

அவ்விடம் வந்து உத்தானபாதருடைய புத்திரராகிய துருவரை நோக்கி, ஓ குழந்தாய்! கோபத்தை அடக்கிக் கொள். கோபமானது நரகத்திற்கு மார்க்கம், பாபத்திற்குக் காரணமாகிறது. அந்தக் கோபத்தால் குற்றமற்றவர்களான புண்ய ஜனர்களை நாசஞ் செய்தாய். நிரபராதிகளான உபதேவர்களை நீ கொல்ல ஆரம்பித்தது நம்முடைய குலத்திற்குத் தகுதியான தல்ல, நிந்திக்கக் கூடியது, ஓ சகோதரனிடம் பிரீதியுள்ளவனே! உன்னுடைய சகோதரனாகிய உத்தமனைக் கொன்றவன் ஒருவன். அதற்காக நிரபராதி களான அநேகர்களைக் கொன்றாய், சரீரத்தை ஆத்மாவாக நினைத்துப் பசுக்கள் ஒன்றுக்கொன்று எப்படி அடித்துக் கொள்கின்றனவோ, அப்படி பிராணிகளைக் கொல்வதென்பது பகவத் பக்தர்களான ஸாதுக்களுக்குத் தகுதியானதல்ல. நீயோ ஸகல பிராணிகளிடத்திலும் வசிக்கும் பகவானை ஆராதித்து மேலான அந்த விஷ்ணுபதத்தை யடைந்தவன். நீ பகவானுடைய ஹ்ருதயத்திலிருப்பவன். பகவத் பக்தர்களுக்குப் பிரியன். ஸாதுக்களுடைய விரதத்தை அனுஷ்டிப்பவன். அப்பேர்ப்பட்ட நீ இம்மாதிரியான கெட்ட காரியத்தை எப்படிச் செய்தாய்? திதிக்ஷை (பொறுமை), கருணை, மைத்திரீ ஆகிய இவைகளால் ஸகல ஜந்துக்களிடத்திலும் ஸம புத்தியுள்ளவனாக விருந்தால் ஸகல ஸ்வரூபியான பகவான் சந்தோஷம டைகிறார்.

பகவத் பிரஸாத முண்டானால் புருஷன் ப்ரகிருதியின் குணஸம்பந்தமற்றவனாகி ஜீவபாவத்தை விட்டு ஸுகஸ்வரூபமான ப்ரஹ்மபதத்தை அடைகிறான். ஸ்திரீகளும், புருஷர்களும் ஐந்து பூதத்தாலேற்பட்ட

சரீரமுள்ளவர்கள். அந்த ஸ்திரீ புருஷர்களுடைய சேர்க்கையால் ஸ்திரீ புருஷர்கள் உண்டாகிறார்கள். இம்மாதிரி ஸ்ருஷ்டி, பரிபாலனம், ஸம்ஹாரம் ஆகிய இவைகள் நடைபெறுகின்றன. அதில் புருஷன் நிமித்தமேயாம். அவர் குணங்களற்றவர், கார்யகாரண ஸ்வரூபமாகிய ஜகத்தானது அவருடைய ஸந்நிதியில் இரும்பு போல் சேஷ்டிக்கிறது; அந்தப் பகவான் காலத்தின் மஹிமையால் குணங்கள் தாரதம்யத்தை யடையும் பொழுது ஸ்ருஷ்டி முதலியவைகளின் சக்தியை அங்கீகரித்து தாம் ஒன்றையுஞ் செய்யாத வராக இருந்தும், கர்த்தாவாகவும் ஸம்ஹரிக்காத வரானாலும் ஸம்ஹரிப்பவராகவும் இருக்கிறார். அவருடைய சேஷ்டையானது ஊகிக்க முடியாதது.

அந்தப் பகவான் நாசமற்றவர்.· ஜகத்தை நாசஞ் செய்யும் கால ஸ்வரூபியாயிருப்பவர், ஆதியற்றவர். ஆதியைச் செய்பவர். விகாரமற்றவர். அப்படிப்பட்ட பகவான், பிதா முதலிய ஜனத்தைக் கொண்டு புத்திரன் முதலியவர்களை உண்டு பண்ணுகிறார். திருடன் முதலியவர்களை அரசன் முதலியவர்களைக் கொண்டு நாசஞ் செய்கிறார். அவர் ஸமமாக ப்ரஜைகளை நடத்துகிறாரே யொழிய அவருக்குத் தம்மைச் சார்ந்தவனென்ற புத்தியாவது துவேஷியென்ற புத்தியாவது இல்லை. ஒடுகிற வாயுவின் பின் தூளிகள் போவது போல் கர்மாதீனர்களாக பிரஜைகள் அவரை அனுஸரிக்கிறார்கள். ஆயுளின் விருத்தியாவது குறைவாவது அந்தப் பகவானுக்கு, இல்லை. அவர் கர்மாதீனர்களான பிரஜைகளில். அவரவர்களுடைய கர்மத்திற்குத் தக்கபடி சிலருக்கு அதன் குறைவையும் கொடுக்கிறார். அவர் கர்ம சம்பந்தமற்றவர். சிலர்

கர்மமே காரணமென்றும், சிலர் ஸ்வபாவமே காரண மென்றும் மற்றும் சிலர் காலமே காரணமென்றும், இன்னும் சிலர் தெய்வமே காரணமென்றும், சிலர் புருஷனுடைய கர்மமே காரணமென்றும் சொல்லு கிறார்கள். அந்த ஈச்வர ஸ்வரூபமானது யாரால் அறியக்கூடும்? அது அவ்யக்தம். அளவிடக் கூடாதது. மஹத் தத்துவம் முதலிய பலவகையான சக்திகள் அதனிடமிருந்தே உண்டாகின்றன. அது தானாக உண்டானது. அதன் எண்ணத்தையே தெரிந்து கொள்ள முடியாதது. (அதனை யார் அறிவார்களென்று தாத்பரியம்.)

ஓ குழந்தாய்! உன்னுடைய சகோதரனைக் குபேரனுடைய வேலைக்காரர்கள் கொன்றார்களென்று நினைப்பது சரியல்ல. ஸ்ருஷ்டியிலும், ஸம்ஹாரத்திலும் தெய்வம் காரணமாகிறது. அந்தப் பகவானே லோகத்தைப் படைப்பவர். காப்பாற்றுகிறவர். ஸம்ஹரிப்பவர். ஆனாலும் அஹங்காரத்தை யடைகிற குணங்கள், கர்மங்கள் ஆகிய இவைகளிலும் சம்பந்திக்கிறதில்லை. ஸகல பூதஸ்வரூபமாயும், பூதங்களுக்கு அதிபதியும், பூதபாவனருமாகிப் பகவான் தம்முடைய மாயாச் சக்தியைக் கொண்டு ஸிருஷ்டி, ஸ்திதி ஸம்ஹாரங் களாகிய கர்மங்களைச் செய்கிறார். அவர் பக்தி செய்யாதவர்களுக்கு மிருத்யுவாக இருப்பவர். பக்தர் களுக்கு அமிருதராக இருப்பவர். ஜகத்திற்கு முக்கியமான கதியாக இருப்பவர். அவரை மூன்று கரணங்களாலும் ஆராதிக்க வேண்டும், மூக்குக் கயிறுகளால் கட்டப் பட்ட விருஷபங்கள் போல் ப்ரஜாபதிகளும் அவரைப் பூஜிக்கிறார்கள்.

மேலும், ஐந்து வயதுச் சிறுவனாக இருக்கும் போது

நீ ஸபத்தினீ மாதாவின் வார்த்தையைச் சஹியாமல் மாதாவையும் விட்டுப் பிரிந்து வனஞ்சென்று எவரைத் தபஸினால் ஆராதித்து மூவுலகத்திற்கும் மேலானதான பதத்தை அடைந்தாயோ, உண்மையில் அஸத்தான இந்த ஜகத்தானது எவரிடத்தில் தோற்றுகிறதோ, அப்பேர்ப்பட்டவரும் குணங்களற்ற வரும், அக்ஷர ஸ்வரூபியுமான ஆத்மாவை விரோதமற்ற புத்தியால் தியானிக்க வேண்டும். மேலும் நீ ப்ரத்யகாத்மாவும், பகவானும், நாசமற்றவரும் ஆனந்த ஸ்வரூபியும், ஸகல சக்தியுள்ள வருமான புருஷோத்தம ரிடத்தில் பக்திசெய்து, 'நான் என்னுடையது என்ற அவித்யை நிவர்த்தித்துக் கொள்வாய்.

ஓ மஹாராஜனே! நீ சாஸ்திரங்களை யறிந்தவன். ஆனதால் மருந்தினால் ரோகத்தை நிவர்த்திப்பது போல க்ஷேம விரோதியான கோபத்தை அடக்கிக் கொள். கோபமுள்ள புருஷனைக் கண்டு லோகமானது மிகவும் நடுங்குகிறது. ஆனதால் அபயத்தை அடைய விரும்பிய வித்வான் கோபத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது. உன்னுடைய சகோதரனைக் கொன்றதற்காகப் புண்ணிய ஜனர்களை நீ நாசஞ் செய்தபடியால் குபேரனை அவமதித்தாயிற்று. ஆனதால் ஓ குழந்தாய்! அந்தக் குபேரனை வணக்கத்தாலும், வணக்கமான வார்த்தைகளாலும் ஸமாதனப்படுத்திக் கொள். மகான் களுடைய தேஜஸ்ஸானது நம்முடைய குலத்தைக் கெடுக்க வேண்டாம்" என்று ஸ்வாயம்புவ மனுவானவர் பௌத்ரராகிய துருவருக்கு உபதேசித்து, துருவரால் நமஸ்கரிக்கப்பட்டு மஹரிஷிகளுடன் தம்முடைய பட்டணஞ் சென்றார்.

நோட்டு

திதிக்ஷை—மஹான்களிடத்தில், தாழ்ந்தவர்களிடம் கருணை. ஸாமான்யர்களிடம் மைத்தீரி—ஸ்ரீத. அபாரதஞ் செய்தவர்களிடம் பொறுமை—வீர. ஸந்தோஷம டைகிறார். பகவான் ஸகல ஸ்வரூபமாயிருப்பதால் தேவ மனுஷ்ய சரீரங்களும் பகவத் ஸ்வரூபமேயாம். ஆனது பற்றி பிராணிகளுக்குத் துரோகஞ் செய்தால் பகவானுக்குத் துரோகஞ் செய்ததாக ஆகிறது. ஆனது பற்றி ஸகல பிராணிகளிடம் விசுவாஸம் வைப்பதால் பகவான் ஸந்தோஷமடைகிறார். வீர. ஜீவபாவத்தை —பிழைத்திருக்கும் பொழுது காமம், குரோதம் முதலியவைகளை விட்டு—வீர. இருப்பானது— அய்ஸ்காந்தத்தின் சக்தியால் —வீர.

அத்தியாயம்–12

துருவர் துருவ பதத்தை அடைந்தது

1–7. யக்ஷர்கள், சாரணர்கள், கின்னரர்கள் ஆகிய இவர்களால் துதிக்கப்பட்ட குபேரன் "துருவன் கோபம் இல்லாதவராகிச் சாந்தராக இருக்கிறார்" என்பதைத் தெரிந்து கொண்டு யுத்த பூமிக்கு வந்து துருவரை நோக்கி, "ஓ ராஜபுத்ர! உம்முடைய பிதாமஹராகிய மனுவின் உத்தரவின்படி நீர் விரோதத்தை விட்ட படியால் உம்மிடத்தில் நான் சந்தோஷமடைகிறேன். விரோதத்தை விட்டு விடுவது மிகவும் சிரமமான காரியம். நீர் யக்ஷர்களைக் கொல்லவில்லை. யக்ஷர்களும் உம்முடைய சஹோதரனைக் கொன்றவர் களல்ல. பிராணிகள் உண்டாவதற்கும் மரணமடை வதற்கும் காலமே காரணமாகின்றது. "நான், நீ" என்று புருஷனுக்கு உண்டாகும் பேதபுத்தியானது வியர்த்தம் ஆனது. அது அஜ்ஞானத்தால் ஏற்பட்டது. தேஹத்தை ஆத்மாவென்று நினைப்பதால் அந்தப் பேதபுத்தி யானது ஸ்வப்பனத்தில் வஸ்துக்கள் தோன்றுவது போல் பிரகாசிக்கிறது. அதனால் பந்த மோக்ஷங்கள் உண்டாகின்றன. ஆனதால் நீர் இவ்விடமிருந்து உம்முடைய நகரத்திற்குப் போகலாம். உமக்கு க்ஷேமம் உண்டாகும். ஸகல பிராணிகளையும் ஆத்மாவாகப் பாவித்துப் பகவானை ஆராதியும். அவர் இந்திரியங் களுக்குப் புலப்படாதவர். ஸகல ரூபமான சரீரம் உள்ளவர். பூஜிக்கக்கூடிய பாதாரவிந்த முள்ளவர், ஸம்ஸாரத்தைப் போக்குகிறவர். முக்குண ஸ்வரூபமான தம்முடைய மாயா சக்தியுடன் கூடியவர். அதை விட்டுப் பிரிந்துமிருப்பவர். ஓ உத்தானபாதருடைய

புத்திர! என்னிடமிருந்து உமக்கு இஷ்டமான வரத்தைப் பெற்றுக்கொள்ளும். ஸந்தேகப்படவேண்டாம் நீர் ஸ்ரீ மஹாவிஷ்ணுவிற்கு அந்தரங்க பக்தரென்று கேட்டிருக்கிறேன்" என்றார்.

8–9. அதனைக் கேட்ட மஹாபாகவதராகிய துருவர் இராஜராஜராகிய குபேரனை நோக்கி, "ஸ்ரீ மஹாவிஷ்ணுவினிடத்தில் நிலையான பக்தியிருக்கும் படி அனுக்கிரஹிக்கவேண்டும். அதனால் தாண்ட முடியாத துக்கங்களை நிவர்த்தித்துக் கொள்ளலாம்" என்றார். அதனைக் கேட்ட குபேரன் மிகுந்த பிரியத்துடன் துருவனுடைய இஷ்டப்படி அனுக் கிரஹித்து, அவர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே மறைந்தார். அரசரும் தம்முடைய நகரஞ் சென்றார்.

10–27. பின்பு பூர்ணமாகத் தக்ஷிணை கொடுத்து அநேக யாகங்களை அனுஷ்டித்து யக்ஞங்களுக்கு அதிபதியும், திரவியம், காமம், தேவதை இவைகளால் செய்யப்படும் கர்மங்களின் பலனைக் கொடுப்பவரும் ஆகிய பகவானை ஆராதித்தார். ஸகல ஸ்வரூபியாய் இருப்பவரும், நாசமற்றவருமான பகவானிடத்தில் தீவிரமான பக்தி செய்து, அதனால் தம்மிடத்திலும்; ஸகல பிராணிகளிடத்திலும் அந்தப் பிரபுவைத் தரிசித்தார். மேலும் துருவர் நல் நடைத்தையுள்ள வராகவும், ப்ராஹ்மணரிடத்தில் பிரீதியுள்ளவராகவும், தீனர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ளவராகவும்; தர்ம ஸேதுக்களைக்காப்பாற்றுகிற வருமாக இருந்தார். அதனால் பிரஜைகள் அவரை தங்கள் பிதாவென நினைத்தார்கள், அவர் இருபத்தாறு ஆயிரம் வருஷங்கள் பூமியைப் பரிபாலித்தார். இப்படி அவர்

சுகத்தை அனுபவிப்பதால் புண்யத்தின் குறைவையும் செய்துகொண்டு, யாகம் முதலிய தர்மங்களை அனுஷ்டித்துப் பாபத்தின் குறைவையும் செய்து கொண்டு தர்மம், அர்த்தம், காமம் இவைகளுக்கு உபயோகமாக வெகு காலத்தைக் கழித்து, இந்திரியங்களை ஜயித்தவராகி புத்திரனுக்குப் பட்டாபிஷேகம் செய்தார். பின்பு அவர் இந்த ஜகத்தானது ஆத்மாவினிடத்தில் மாயையால் செய்யப்பட்டிருக்கிறதென்றும். அவித்யையால் ஏற்பட்டதென்றும், ஸ்வப்பனத்தில் தோன்றும் கந்தர்வ நகரத்திற்கு கொப்பானதென்றும் தெரிந்து கொண்டார். பின்னுமவர் தேகம், களத்திரம், புத்திரன், மித்திரன், சைன்னியம், பொக்கிஷம், அந்தப்புரம், அழகான விஹார பூமிகள், சமுத்திரத்திற்குட்பட்ட பூமண்டலம் இவைகள் அநித்தியங்களென்று நிச்சயித்து, பதரிகாசிரமம் சென்றார். அவ்விடத்தில் சுத்தமாகிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து சமம், தமம் முதலியவைகளையடைந்து விதிப்படி ஆசனத்தை அடைந்தும், வாயுவை யடக்கி இந்திரியங்களை அந்தர் முகமாகச் செய்துகொண்டு பகவானுடைய விராட் ரூபத்தைத் தியானித்தார். பின்பு "தியானம் செய்கிறவன், தியானம் செய்யப்படுகிறது என்ற பேதபுத்தியற்றவராகி, ஸமாதியிலிருந்து ஸ்தூல தியானத்தை விட்டார். இப்படி எப்பொழுதும் பகவானிடம் பக்தி செய்யும் பொழுது அவருடைய கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் பெருகியது. ஹிருதயமானது சிநேகமுள்ளதாக இருந்தது. சரீரத்தில் மயிர்க்கூச்சலுண்டாயிற்று. சரீரத்தில் அபிமானம் ஒழிந்தது. "நான் என்ற எண்ணம் மாறிற்று. அப்பொழுது அவர் ஆகாயத்தில் இருந்து பூமியை நோக்கி வருகிற ஒரு விமானத்தைக்

கண்டார். அது பத்துக் திக்குகளையும் ப்ரகாசிக்கச் செய்து கொண்டு உதயமான பூர்ணிமா சந்திரன் போலிருந்தது. அந்த விமானத்தில் இரண்டு தேவர்கள் இருந்தார்கள். அவர்கள் நான்கு கைகளுள்ளவர்கள். கறுத்த திருமேனியுள்ளவர்கள். யௌவன வயதுள்ளவர்கள். சிவந்த தாமரை மலர்போன்ற கண்களுள்ளவர்கள். கதையைத் தரித்தவர்கள். நல்ல வஸ்திரத்தை உடுத்திக் கொண்டவர்கள் கிரீடம், ஹாரம், தோள்வளை, அழகான குண்டலங்கள் ஆகிய இவைகளால் அலங்கரிக்கப் பட்டவர்கள்! அவர்களைக் கண்டவுடன் துருவர், "இவர்கள் பகவானுடைய பார்ஷதர்கள்" என்று தெரிந்துகொண்டு எழுந்திருந்து ஸ்ரீமந் நாராயணனுடைய திவ்ய நாமங்களை உச்சரித்துக் கொண்டே பரபரப்பினால் பூஜாக் கிரமத்தை மறந்தவராகி அஞ்சலி செய்துகொண்டு நமஸ்காரம் செய்தார். இப்படி ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதத்திலே மனத்தைச் செலுத்தியவரும். அஞ்சலிபதஞ் செய்து கொண்டிருப்பவரும் வணக்கத் தால் வணங்கிய கழுத்துள்ளவருமான துருவரை நோக்கி ஸுநந்தர், நந்தர் என்ற அவ்விருவர்களும் "ஓ அரசனே! உமக்கு க்ஷேமமுண்டாகும். எங்களுடைய வார்த்தையை ஸாவதானமாகக் கேளும். நீர் ஐந்து வயதுச் சிறுவனாக இருக்கும் பொழுது தபஸ் செய்து எந்தப் பகவானைத் திருப்தி செய்தீரோ, ஸகல ஜகத்தையும் படைத்தவரும், சார்ங்கமென்ற வில்லைத் தரித்தவருமான அந்தத் தேவருடைய பார்ஷதர்களாகிய நாங்கள் உம்மை அழைத்துப் போவதற்காக வந்திருக்கிறோம். அடைய முடியாத விஷ்ணு பதமானது உம்மால் அடையக் கூடியதாயிற்று. ஸப்த ரிஷிகளும் அந்தப் பதத்தை

அடையாமல் அதன்கீழ் ஸஞ்சரிக்கிறார்கள். சந்திரன், சூரியன், கிருஹங்கள், நக்ஷத்திரம் முதலியவைகள் எதனைப் பிரதக்ஷிணமாகச் சுற்றுகின்றனவோ, அந்தப் பதமானது உம்முடைய முன்னோர்களாலும் மற்றவர் களாலும் அடையப்படாதது. எல்லோராலும் நமஸ்கரிக்கக்கூடியது. அந்த விஷ்ணுவின் மேலான பதத்தை நீர் அடையலாம். உத்தமச்லோகர்களுக்குள் சிறந்தவராகிய பகவான் இந்தச் சிறந்த விமானத்தை உமக்காக அனுப்பியிருக்கிறார். அதன் மீதேற வேண்டும்" என்றார்கள்.

28–42. ஸ்ரீமந் நாராயணருடைய வேலைக்காரர்களுள் சிறந்தவர்களான அந்தப் பார்ஷதர்களுடைய தேன் போன்ற இனிமையான வார்த்தையைக் கேட்டு, பகவத் பக்தர்களுக்குப் பிரியராகிய துருவர் ஸ்நானம் செய்து அலங்காரம் செய்து கொண்டு மஹர்ஷிகளை நமஸ்கரித்து ஸ்வஸ்திவாசனஞ் செய்வித்தார். அந்த விமானத்தைப் பிரதக்ஷிணஞ் செய்து பூஜித்தார். பார்ஷதர்களை நமஸ்கரித்தார். பின்பு ஸ்வர்ணமயமான சரீரமுள்ளவராகி அந்த விமானத்திலேற விரும்பினார். அப்பொழுது துந்துபி, மிருதங்கம், பணவம் முதலிய வாத்தியங்கள் சப்தித்தன. சிறந்த கந்தர்வர்கள் பாடினார்கள். புஷ்பமாரி பெய்தது. ஸ்வர்க்கலோகம் செல்லும் சமயத்தில் துருவர், "தீனையான ஸுநீதியை விட்டுப் போகிறோம்" என்று நினைத்தார். அவருடைய இம்மாதிரியான எண்ணத்தைத் தெரிந்து கொண்டு பார்ஷதர்கள் விமானத்தில் ஏறிக்கொண்டு மேலுலகம் செல்லும் ஸுநீதியை துருவருக்குக் காண்பித்தார்கள். பின்பு துருவர் விமானத்துடன் செல்லுகின்ற தேவர்களால் துதிக்கப்பட்டு, புஷ்பங்களால்

இறைக்கப்பட்டு மேலுலகஞ் சென்று கிருஹங்களைக் கண்டார். இப்படி மூவுலகத்தையும் தாண்டி மேலிருக்கும் விஷ்ணுபதத்தை அடைந்தார். எந்தப் பதமானது தானாகப்ரகாசிக்கிறதோ, எதனுடைய தேஜஸ்ஸால் மற்ற லோகங்கள் ப்ரகாசிக்கின்றனவோ. எந்த லோகத்திற்குத் தயையில்லாதவர்களும், நற்காரியங்களைச் செய்யாதவர்களும் செல்லுகிறது இல்லையோ, மேலும் சாந்தர்களும், ஸமமாகப் பார்ப்பவர்களும் சுத்தர்களும், ஸகல பிராணிகளையும் சந்தோஷிக்கச் செய்பவர்களும், பகவானுக்குப் பிரிய பந்துக்களுமான பக்தர்கள் எந்தப் பத்தை அடைகிறார்களோ, அந்தத் துருவபதத்தை உத்தான பாதருடைய புத்திரராகிய துருவர் அடைந்து, கிருஷ்ண பக்தி செய்ததனால் மூவுலகத்திற்கும் சூடாமணி போல் ப்ரகாசித்தார். பசுக்கள் கட்டும் ஸ்தம்பத்தில் கட்டப்பட்ட பசுக்கள் போல் கம்பீரமான வேகத்துடன் எப்பொழுதும் சுற்றிக்கொண்டிருக்கும் ஜ்யோதிச் சக்கரமானது அதனிடத்தில் கோக்கப்பட்டுச் சுற்றுகிறது. அப்பொழுது இந்தத் துருவருடைய மஹிமையைப் பார்த்து நாரதர் வீணையை மீட்டிக் கொண்டு இந்தச்லோகங்களைப் பிரசேதஸ்ஸுகளுடைய யாகத்தில் கானஞ் செய்தார். எப்படியெனில், பதியையே தெய்வமாகக் கொண்ட ஸுநீதியின் புத்திரருக்குக் கிடைத்த இந்த உத்தம கதியானது பகவத் தர்மத்தை அனுஷ்டிக்கும் ப்ரஹ்ம ரிஷிகளாலும் அடைய முடியாதது. அப்படியிருக்க க்ஷத்திரியர்களுக்குக் கிடைக்குமா? எந்தத் துருவர் ஐந்து வயதுச் சிறுவராக இருக்கும் போது ஸபத்தினீ மாதாவின் கெட்ட வார்த்தைகளாகிய பாணங்களால் அடிக்கப் பட்டு, மனவருத்தமடைந்து என்னுடைய உத்தரவினால்

காட்டிற்குச் சென்று, பக்தர்களால் ஜயிக்கப் படுகிறவரான விபுவாகிய பகவானை ஆராதித்து அவரைச் சுவாதீனப் படுத்திக்கொண்டாரோ, அந்தப் பதத்தை அடைய வேண்டுமென்று மற்ற க்ஷத்திரியனால் விரும்பக் கூடுமா? அநேக வருஷங்கள் முயற்சித் தாலும் அடைய முடியுமா? துருவர் ஆறு, ஏழு வயதுள்ளச் சிறுவராக இருக்கும்போதே சொற்ப தினங்கள் பகவானை ஆராதித்து அந்தப் பதத்தை அடைந்தார்.

43–51. ஓ விதுரரே! உம்மால் கேட்கப்பட்டவைக ளெல்லாம் என்னால் சொல்லப்பட்டன, மிகுந்த கீர்த்தியுள்ள துருவருடைய சரீதமானது சொல்லப் பட்டது. இது பணத்தை கொடுக்கக் கூடியது. கீர்த்தியை விருத்தி பண்ணக்கூடியது. ஆயுஸ்ஸை விருத்தி பண்ணக்கூடியது. புண்யகரமானது. க்ஷேமகரமானது. ஸ்வர்க்கத்தைக் கொடுக்கக் கூடியது. நிலையான ஸ்தானத்தைக் கொடுக்கக் கூடியது. மனச்சுத்தியைக் கொடுக்கக் கூடியது. புகழக் கூடியது. பாவத்தைப் போக்கக் கூடியது. இந்தப் பகவத் பக்தர்களுடைய சரிதத்தைச் சிரத்தையாக அடிக்கடி கேட்பதால் பகவானிடத்தில் பக்தி உண்டாகும், ஸகல துக்கங்களும் நிவர்த்தியாகும். மஹத்வத்தை விரும்பிய வர்களுக்குத் அந்த பலன் கிடைக்கும். நல்ல ஸ்வபாவம் முதலியன உண்டாகும். தேஜஸை விரும்பியவர்களுக்கு தேஜஸும், நல்ல மனத்தை விரும்பியவர்களுக்கு நல்ல மனதும் உண்டாகும். இந்த மேலான துருவருடைய சரிதத்தைப் பக்தியுடன் ப்ராஹ்மணர்களுடைய கூட்டத்திலும், காலையிலும், மாலையிலும், பூர்ணிமையிலும், அமாவாஸ்ஸையிலும், துவாதசி

தினத்திலும் சிரவணத்திலும், இராத்ரியிலும், வியதீயபாதத்திலும். ஸங்கிர மணத்திலும், ஞாயிற்றுக் கிழமையிலும் சிரத்தையாயுள்ளவர்களுக்குச் சொல்ல வேண்டும். நிஷ்காமனாகக் கேட்டால் அவன் ஆத்மாவினால் சந்தோஷமடைந்து ஸித்தி அடைவான். ஆத்மாவின் உண்மை அறியாதவனுக்கு ஞானத்தை எவன் உபதேசிக்கிறானோ, கருணை உள்ளவனாகிய அவனிடத்தில் தேவர்கள் கிருபை செய்கிறார்கள். ஓ குருக்களில் சிறந்தவரே! எந்தத்துருவர் குழந்தையாக இருக்கும்பொழுது விளையாட்டு சாமான்களையும், மாதாவின் அரண்மனையையும் விட்டு ஸ்ரீ மஹா விஷ்ணுவைச் சரணமடைந்தாரோ, அந்த சுத்தமான நடத்தையுள்ள துருவருடைய சரிதத்தை உமக்குச் சொன்னேன்" என்றார்.

நோட்டு

"துருவர் விமானத்தில் ஏறும்பொழுது யமன் வந்ததாகவும், அவன் தலையில் காலை வைத்து விமானத்தின் மீதேறினார்" என்ற அர்த்தமுள்ள ஸ்லோகம் சில புஸ்தகங்களில் காணப்படுகிறது.

அத்தியாயம்–13

அங்கராஜன் காணாமற் போனது

1–5 குஷாரவருடைய புத்திரராகிய மைத்ரேயரால் சொல்லப்பட்ட துருவர் வைகுண்டபதத்தை அடைந்ததான திவ்ய சரிதத்தைக் கேட்டு விதுரர் பகவானிடத்தில் விசேஷ பக்தியுள்ளவராகி மைத்ரேயரை நோக்கி, 'பிரசேதஸ்ஸுக்க ளென்பவர்கள் எவர்கள்? ஓ விரதமுள்ளவரே! அவர்கள் யாருடைய குமாரர்கள்? எந்த வம்சத்தில் பிறந்தவர்கள்? அவர்கள் எவ்விடத்தில் யாகத்தை அனுஷ்டித்தார்கள்? நாரதர் மஹா பாகவதரென்று நினைக்கிறேன். அவர் ஆத்மஞான முள்ளவர். பகவானை ஸேவிக்கும் விதியானது அவரால் சொல்லப்பட்டது. அந்தப் பக்திமானாகிய நாரதர் 'ஸ்வதர்மத்தை அனுஷ்டிப்பவர்களான பிரசேதஸ்ஸுகளால் யக்ஞ புருஷராகிய பகவான் ஆராதிக்கப்பட்டார்' என்று சொன்னாரல்லவா? மேலும் அந்த யாகத்தில் எந்த பகவத் கதைகளை வர்ணித்தார்? அவைகளெல்லாவற்றையும் கேட்க விரும்பியவனாகிய எனக்குச் சொல்லவேண்டும்', என்று பிரார்த்தித்தார்.

6–20 அதனைக் கேட்ட மைத்ரேயர், விதுரரை நோக்கி, 'துருவர் காட்டிற்குச் சென்றபின் அவருடைய புத்திரராகிய உத்கலரென்பவர் ராஜ்யத்தில் விருப்பம் இல்லாமல் ராஜ்யலக்ஷ்மியை அடையவில்லை. அவர் பிறந்தது முதல் மிகவும் சாந்தமான மனதுள்ளவர். ஆசையற்றவர். ஸமமாகப் பார்ப்பவர். உலகத்தில் ஆத்மா வியாபித்திருப்பதாகவும் ஆத்மாவிடத்தில்

லோகமிருப்பதாகவும் பார்ப்பவர். அப்போர்ப்பட்ட அந்த உத்கலர் இடைவிடாமல் யோகத்தை அப்யஸித்து அதனால் கர்ம வாஸனையைப் போக்கிச் சாந்தமும், பேதமற்றதும், ஞானரஸத்தால் ஒன்றாயும், ஆனந்த ஸ்வபமும், எக்காலத்திலும் இருப்பதுமான ப்ரஹ்ம ஸ்வபத்தை அடைந்தார். அதனால் அவருக்கு ஆத்மாவைக் காட்டிலும் வேறொன்றும் புலப்பட வில்லை.

மேலும் அவர் ஜடன்போலவும், கண்களில்லாத வன் (குருடன்) போலவும், காது கேட்காதவன் (செவிடன்) போலவும், பைத்தியங் கொண்டவன் போலும்; ஊமை போலும் குழந்தைகளுடைய மார்க்கத்தில் இருந்தார். ஆனால் அவருடைய புத்தியானது வேறாக இருந்தது. ஜ்வாலையற்ற அக்கினி போலிருந்தார். அப்பொழுது குலத்திலிருக்கும் பெரியோர்களும், மந்திரிகளும் அவரை அடனென்றும், பயித்தியங் கொண்டவனென்றும், நினைத்துப் பிரமியின் புத்திரராகிய அவருடைய பின் சகோதரராகிய வத்ஸர ரென்பவருக்குப் பட்டாபிஷேகம் செய்தார்கள்.

அந்த வத்ஸரருக்குப் பார்யையான ஸ்வத்தி யிடத்தில் புஷ்பார்ணன். சந்திரகேது, இஷன், ஊர்ஜன் வஸு, ஜயன் என்று ஆறு புத்திரர்கள் பிறந்தார்கள். புஷ்பார்ணருக்குப் பிரபா என்றும் தோஷா என்றும் இரண்டு பத்தினிகள். அவர்களில் பிரபாஎன்பவளுக்குப் பிராத (விடியற்காலம்), மத்தியந்தினம் (பகலின் மத்தியம்), சாயம் என்று மூன்று புத்திரர்கள் பிறந்தார்கள். தோஷா என்பவளுக்குப் பிரதோஷம், நிசீதம், வியஷ்டி, யென்பவர் புஷ்கரிணீ என்பவளிடத்தில் ஸர்வதேஜஸ் என்று புத்திரனை யுண்டு பண்ணினார்.

அந்த ஸ்வதேஜஸர் ஆகூதியென்ற பத்தினியிடத்தில் சக்ஷுஸ்ஸென்ற பெயருள்ள மனுவை உண்டு பண்ணினார். அந்த மனுவின் பத்தினியாகிய நட்வலா என்பவள், புரு, குத்ஸர், கிரிதர், தியும்னர், ஸத்யவான், ரிதர், விரதர், அக்கினிஷ்டோமம், அதிராத்ரம், ஸுத்யும்னர், கிபி, உல்முகர் என்று பன்னிரண்டு புத்திரர்களைப் பெற்றாள். அவர்களில் உல்முகரென்பவர் புஷ்கரிணீ என்பவளிடத்தில் அங்கன், ஸுமனஸன், கியாதி, கிரது, அங்கிரஸ், கயன் என்று உத்தமர்களான ஆறு புத்திரர்களை உண்டுபண்ணினார். அங்கனுடைய பத்தினியாகிய ஸுநீதை யென்பவள் துஷ்டனாகிய வேனனைப் பெற்றாள். அந்த வேணனுடைய துஷ்ட நடையால் வருத்தப்பட்டு அவருடைய பிதாவாகிய அங்க மஹாராஜன் நகரத்தை விட்டுச் சென்றார்.

வாக்காகிய வஜ்ராயுதமுள்ளவர்களான மஹர்ஷிகள் கோபத்தை அடைந்து வேனனைச் சபித்தார்கள். அதனால் அவன் மரணமடைந்தான். பின்பு அரசன் இல்லாத தேசத்தில் ஜனங்களுக்குத் திருடர்கள் முதலியவர்களின் உபத்திரவம் நேரிடும் என்று யோசித்து மஹர்ஷிகள் அவனுடைய வலது கையைக் கடைந்தார்கள். அதிலிருந்து நாராயணனுடைய அம்சமானது புத்திரனாக அவதரித்தது அவருக்கு பிருதுவென்று பெயருண்டாயிற்று. அவரே முந்திய அரசன் என்றார்.

21–24 அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி, ஓ பகவன்! நல்லொழுக்கமுள்ளவரும், ஸாதுவும், ப்ராஹ்மண பக்தியுள்ளவரும், மஹாத்மாவுமான அந்த வேனருக்குத் துஷ்ட நடை எப்படி ஏற்பட்டது?

எதனால் பிதா நகரத்தை விட்டு வெளியில் போகும்படி நேர்ந்தது. குற்றம் செய்தவர்களைச் சிக்ஷிப்பவராகிய அரசனைத் தர்மத்தையறிந்த மஹரிஷிகள் என்ன குற்றத்தை முன்னிட்டுச் சபித்தார்கள்? (வேனன் என்ன குற்றம் செய்தான்?) அரசன் லோகபாலர்களுடைய அம்சமுள்ளவனாகையால் அவன் குற்றம் செய்தாலும் பிரஜைகள் அவனைக் கொல்வது உசிதமல்லவே! நீர் மேலானவைகளையும், தாழ்ந்தவைகளையும் அறிந்தவராகையால் ஸுநீதையின் புத்திரருடைய சரிதத்தைக் கேட்க விரும்பிய சிரத்தையுள்ளவனாகிய எனக்குச் சொல்ல வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

25–28 அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி, அங்கனென்ற ராஜரிஷியானவர் அச்வமேதம் என்ற பெரிய யாகத்தைச் செய்தார். அதில் ப்ரஹ்மிஷ்டர்களாகிய ப்ராஹ்மணர்களால் அழைக்கப் பட்டும் தேவர்கள் வரவில்லை. அப்பொழுது ரித்விக்குகள் மிகவும் ஆச்சரியமடைந்து யஜமானனை நோக்கி, 'ஹோமஞ் செய்யப்படுகின்ற ஹவிஸ்ஸைத் தேவதைகள் கிரகிக்கவில்லை. ஓ மஹாராஜ, ஹவிஸ்ஸுகள் தோஷமற்றவைகள். சிரத்தையாக ஸம்பாதிக்கப்பட்டவைகள். மேலும் விரதங்களை அனுஷ்டித்த ப்ரஹ்மணர்களால் அயாதயாமங்களான (வீர்யம் போகாதவை). வேதங்கள் உச்சரிக்கப்பட்டன. தேவர்களுக்குக் கொஞ்சமேனும் 'குற்றம் செய்ததாகத் தெரியவில்லை (கர்மஸாக்ஷிகளான தேவர்கள் பாகத்தைப் பெற்றுக் கொள்ளாத காரணமென்ன வென்று தெரியவில்லை என்றார்கள்).

29–30 அதனைக் கேட்ட அங்கராஜன் மனவருத்தம்

அடைந்து ஸதஸ்யர்களை நோக்கி அவர்களுடைய ஆக்ஞையால் மௌனத்தை விட்டு, 'ரித்விக்குகளால் அழைக்கப்பட்டும் தேவர்கள் வரவில்லை. பாகத்தையும் பெற்றுக் கொள்ளவில்லை. என்னால் என்ன குற்றம் செய்யப்பட்டது சொல்லவேண்டும்' என்று கேட்டார்.

31–49 அதனைக் கேட்ட ஸதஸ்யர்கள் அரசனை நோக்கி, ஓ மஹாராஜா! இந்த ஜன்மத்தில் உமக்கு கொஞ்ச மேனும் பாவமில்லை. ஆனாலும் முன் ஜன்மத்தில் பாவமிருக்கிறது. அதனால்தான் நீர் அபுத்திரராக இருக்கிறீர். நல்ல புத்திரனை அடையும் படி யத்தனம் செய்யும். புத்திரன் பிறக்க வேண்டிய யக்ஞபுக்காகிய யக்ஞபுருஷனை ஆராத்தித்தால் அவர் புத்திரனைக் கொடுப்பார்.

மேலும் மனிதன் எதனை விரும்பி, பகவானை ஆராதிக்கிறானோ, அதெல்லாவற்றையும் அவர் அவனுடைய இஷ்டப்படி கொடுக்கிறார். அப்பொழுது தேவர்களும் பாகத்தைப் பெற்றுக் கொள்வார்கள். எவ்வளவு பகவானை ஆராதிக்கிறானோ, அவ்வளவு க்ஷேமமுண்டாகிறது என்று சொல்லி அந்த அரசனுக்குப் புத்திரனுண்டாவதற்காகச் சிபிவிஷ்ட ராகிய மஹாவிஷ்ணுவை உத்தேசித்து புரோடாசத்தை ஹோமஞ் செய்தார்கள். பின்பு அக்கினியிலிருந்து ஸுவர்ண மாலையுள்ளவரும், சுத்த வஸ்திரத்தைத் தரித்தவருமான ஒரு புருஷன் தங்கப் பாத்திரத்தில் பாயஸத்தை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தார். அப்பொழுது கம்பீர மனமுள்ள அரசன் ப்ராஹ்மணர் களுடைய அனுமதியினால் அந்தப் பாயஸத்தை இரு

கைகளால் வாங்கி மிகுந்த ஸந்தோஷத்துடன் முகர்ந்து தமது பத்தினியிடம் கொடுத்தார். அந்த ராஜ மஹிஷி புத்திரனைக் கொடுக்கக் கூடிய அந்தப் பாயஸத்தைப் பார்த்தாவிடமிருந்து கிரகித்துக் கொண்டு அதனைப் புஜித்து கர்ப்பிணியானாள். பின்பு பிரஸவ காலத்தில் குமாரனைப் பெற்றாள்.

அந்தக் குழந்தை சிறு வயதிலேயே அதர்ம வம்சத்தில் பிறந்தவரும், தன்னுடைய மாதாவின் பிதாவுமான மிருத்யுவின் குணங்களை அனுஸரித் திருந்தது. அவனுக்குத் தர்ம சிந்தையே இல்லை. அவன் எப்பொழுதும் வனத்தில் வேட்டையாடிக் கொண்டு வில்லும் கையுமாக 'இருந்து மிருகங்களைக் கொன்று கொண்டு அஸத்தாக இருந்தான். அதனைக் கண்டு ஜனங்கள் 'வேனன் வருகிறான்' என்று கத்துவார்கள். மேலும் விளையாடுமிடத்தில் தன்னுடன் விளையாடும் குழந்தைகளைக் கருணையில்லாமல் பசுக்களைப் போல் கொன்று விடுவான். அரசர் புத்திரனுடைய கெட்ட சரித்தத்தை அறிந்து பலவகையாகச் சிக்ஷித்தும் அவனுடைய ஸ்வபாவம் மாறாம லிருந்தபடியால் அங்கன் மிகவும் வருத்தம் அடைந்து தனக்குள் யோசிக்கலானார். எப்படியெனில் எவர்கள் அபுத்திரர்களோ அவர்கள் பகவானை ஆராதித்தவர்கள். துஷ்டனாகிய புத்திரனாலுண்டாகும் துக்கத்தை அவர்கள் அனுபவிக்கிறதில்லை. துஷ்டனாகிய புத்திரனால் அபகீர்த்தியும் அதர்மமும் ஸகல ஜனங்கள் உடைய விரோதமும், முடிவில்லாத மனவருத்தமும் உண்டாகின்றன. புத்திரனென்ற பெயரே ஆத்மாவிற்கு மோஹத்தை உண்டு பண்ணும் பந்தமாக இருக்கிறது. அதனால் கிரஹஸ்தாசிரமத்தில் பலவகையான துக்கங்களுண்டாகின்றன.

ஆனதால் விவேகமுள்ளவன் புத்திரன் வேண்டு மென்று விரும்பமாட்டான் என்று யோசித்து மிகவும் நிர்வேதத்தையடைந்து தூக்கமில்லாதவராகிப் பக்கத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் ஸுநீதை யென்ற வேனனுடைய மாதாவிற்கும் சொல்லாமல் பட்டணத்து ஜனங்களுக்கும் புலப்படாமல் அதிக ஐசுவரியமுள்ள தம்முடைய அரண்மனையிலிருந்து வெளியில் சென்றார். மறுநாள் புரோஹிதர், மந்திரிகள், மித்திரர்கள் முதலியவர்கள் அரசனைக் காணாமல் மிகுந்த துக்கமடைந்தவர்களாகி, பக்குவமாகாத புத்தியுள்ள யோகிகள் ஸமீபத்திலிருக்கும் பகவானை வைகுண்டம் முதலியவிடங்களில் தேடுவதுபோல் எங்கும் தேடினார்கள். பின்பு அவர்கள் அரசனைக் காணாமல் திரும்பவும் பட்டணத்திற்கு வந்து கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு அவ்விடத்தில் கூடியிருக்கும் மஹர்ஷிகளுக்கு நமஸ்காரஞ் செய்து அரசன் வசிக்குமிடம் தெரியவில்லை என்று சொன்னார்கள்.

அத்தியாயம்–14

வேனனை மஹர்ஷிகள் சிக்ஷித்தது

1–22. "பின்பு பிருகு முதலிய மஹர்ஷிகள் லோகத்தின் க்ஷேமத்தை விரும்பினவர்களாகி, அரசன் இல்லாவிடில் மனிதர்கள் பசுவிற்கு சமமானவர்கள் என்று யோசித்து சூரனைப் பெற்றவர்களாகிய ஸுநீதையின் இஷ்டப்படி வேனனுக்குப் பட்டாபிஷேகம் செய்தார்கள், அவனிடத்தில் மந்திரி முதலானவர்களுக்குப் பிரியமில்லை. கடுமையாகசிக்ஷிப்பவனாகிய வேனன் அரசனாக விருப்பதைக் கேட்டு ஸர்ப்பத்தைக் கண்ட எலிகள் போல் திருடர்கள் பயந்து மறைந்தார்கள். வேனன் ராஜாஸனத்திலிருந்து லோகபாலர்களுடைய ஐசுவரியத்தை அடைந்து கர்வங்கொண்டான். பெரியோர்களான ஸாதுக்களை அவமதித்தான். இப்படி அதிக கர்வத்துடன் தடையற்ற மதித்த யானை போல் இரதத்தின் மீதேறி ஆகாசத்தையும், பூமியையும் அசைப்பவன் போல ஸஞ்சரித்து, "ஒருவரும் யாகஞ்செய்யக்கூடாது தானஞ் செய்யக்கூடாது, அக்னி ஹோத்ரம் முதலியவைகளைப் ப்ராஹ்மணர்கள் ஓரிடத்திலும் அனுஷ்டிக்கக்கூடாது" என்று பேரியை அடித்து, தர்மஞ் செய்யாமலிருக்கும்படி கோஷித்தான். தீக்ஷிதர்களான ப்ராஹ்மணர்கள் எல்லாரும் சேர்ந்து, வேனனுடைய கெட்ட நடையைப் பற்றி, "கட்டையில் இரண்டு நுனிகளிலும் அக்கினி பிடித்துக் கொண்டால் நடுவிலிருக்கும் எறும்பு முதலியவைகள் எப்படி துன்பத்தையடைகின்றனவோ, அப்படி திருடர்களிடத்திலும், அரசனிடத்திலுமாக லோகத்திற்கு இருவகையிலும் விசேஷ துக்கம்

நேர்ந்திருக்கிறது. தேசத்திற்கு அரசனில்லாமலிருப்பது உபத்திரவத்தை உண்டு பண்ணுமென்றெண்ணி அயோக்கியனானாலும் இவனுக்கு பட்டாபிஷேகம் செய்தோம். இவன் ஜனங்களை உபத்திரவிக்கிறான். எதனைச் செய்தால் லோகத்திற்கு க்ஷேமமுண்டாகும்? பால்கொடுத்து ஸர்ப்பத்தை வளர்த்தவனுக்கு அந்த ஸர்ப்பம் அனர்த்தத்தை உண்டுபண்ணுவது போல இந்த வேனன் நமக்குக் கெடுதியை உண்டுபண்ணுகிறான். ஸுநீதையின் புத்திரனாகிய வேனன் ஸ்வபாவத்திலேயே துஷ்டன். அவனை அரசனாக வைத்து கொண்டோம். அவன் இப்பொழுது ப்ரஜைகளைக் கொல்ல விரும்புகிறான். ஆனாலும் அவனை நல்வார்த்தைகளால் ஸமாதானஞ் செய்வோம். அவனுடைய துஷ்ட நடையை அறிந்திருந்தும் அரசனாக வைத்துக் கொண்டோம். நாம் சொல்லியும் நம்முடைய வார்த்தையை அங்கீகரிக்காவிடில், நமக்குப் பாவமில்லை. பின்பு நம்முடைய தேஜஸ்ஸால் அவனை எரித்துவிடுவோம்" என்று யோசித்துக் கொண்டு கோபத்தை அடக்கிக்கொண்டவர்களாகி வேனனுடைய சமீபஞ்சென்று அவனை நோக்கி, "ஓ சிறந்த அரசனே! நாங்கள் தெரிவிப்பதைக் கேளும் நாங்கள் சொல்வது உமக்கு ஆயுஸ், ஐசுவரியம், கீர்த்தி, தேகபலம் ஆகிய இவைகளைக் கொடுக்க கூடியது; மனிதர்கள் வாக்கினாலும், சரீரத்தாலும் தர்மத்தைச் செய்வார்களானாலும் அது ஸகல துக்கங்களையும் நிவர்த்தித்து மிகுந்த க்ஷேமத்தைக் கொடுக்கிறது. பலனை உத்தேசியாமல் அனுஷ்டித்தால் அது மோக்ஷத்தையும் கொடுக்கும். அந்த தர்மத்தால் ப்ரஜைகளுக்கு க்ஷேமம் உண்டாகிறது. அந்த தர்மம் நசித்தால் அரசனுடைய ஐசுவரியம் நசிக்கும்

ஆனதால் உமக்குத் தர்மம் நாசத்தை அடைய வேண்டாம். க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவன் நியாயமான வரியைப்பெற்று, அஸாதுக்களான மந்திரிகளிடமிருந்தும், திருடர் முதலியவர்களிடமிருந்தும் பிரஜைகளைக் காப்பவன் இவ்வுலகத்தில் மிகுந்த சௌக்கியத்தையடைந்து பரலோக சுகத்தையுமடைவான். மேலும் எவனுடைய ராஜ்யத்தில் ஜனங்கள் வர்ணாசிரம தர்மங்களைவிடாமல் அனுஷ்டித்து யக்ஞபுருஷனாகிய பகவானை யாகஞ் செய்வது முதலிய ஸ்வதர்மத்தால் பூஜிக்கிறார்களோ, அந்த அரசன் பகவானுடைய ஆக்ஞையின்படி நடப்பவனாகையால் ஸகல பிராணிகளிடத்தில் அந்தர்யாமியாக இருப்பவரும், ஜகத்ரூபியுமான பகவான் அவனிடத்தில் பிரியப்படுகிறார் லோகபாலர்களும், மற்ற உலகங்களும் ஆதரவுடன் அவரைப் பூஜிக்கின்றன. அப்போர்ப்பட்ட ஜகதீஸ்வரராகிய பகவான் ஸந்தோஷமடைந்தால் எதுதான் கிடைக்காது? (எல்லாம் இலகுவாகக் கிடைக்கும்) ஸகல லோகங்கள், அவைகளைக் காப்பாற்றும் லோகபாலகர்கள் யக்ஞங்கள் ஆகிய இவைகளுக்கு அதிபதியும், வேத ஸ்வரூபியும், திரவ்ய ஸ்வரூபியும் தபஸ்வரூபியுமான அப்போர்ப்பட்ட பகவானைப் பலவகையான யாகங்களால் உம்முடைய க்ஷேமத்திற்காக ஆராதிப்பவர்களும், உம்முடைய தேசத்தில் வசிப்பவர்களுமான எங்களை விரோதியாமல் அனுசரிக்கவேண்டும். உம்முடைய தேசத்தில் ப்ராஹ்மணர்கள் யாகத்தைச் செய்து பகவானுடைய அம்சபூதர்களான தேவர்களைத் திருப்தி செய்வார்களானால், அவர்கள் மிகவும் ஸந்தோஷித்து உமக்கிஷ்டமானதைக் கொடுப்பார்கள் அவர்களை அலக்ஷ்யஞ்செய்வது உமக்குத் தகுதியல்ல" என்றார்கள்.

23–28. அதனைக்கேட்ட வேணன் அவர்களை நோக்கி, "நீங்கள் மிகவும் மூடர்கள், அதர்மத்தைத் தர்மமென்று நினைப்பவர்கள். ஆகாரம் முதலியவை களை கொடுத்துப் போக்ஷிக்கும் பிரபுவாகிய அரசனை விட்டு மற்றொருவனை உபாஸிக்க விரும்புகிறீர்கள். இது அக்கினி ஸாக்ஷியாக மணம் செய்து கொண்ட புருஷனை விட்டு ஜார புருஷனிடம் பிரீதி செய்வது போலிருக்கிறது. எவர்கள் மூடத்தன்மையால் அரசனாகிய ஈசுவரனை அலக்ஷ்யஞ் செய்கிறார்களோ, அவர்களுக்கு இவ்வுலகத்திலும் மேலுகத்திலும் மோக்ஷம் கிடைக்கிறதில்லை. பர்த்தாவிடம் பிரீதி வைக்காமல் ஜார புருஷனிடத்தில் மிகுந்த பிரேமையுள்ள கெட்ட ஸ்திரீகள் போல் நீங்கள் என்னிடம் பிரியப்படாமல் யாரோ ஒருவனிடத்தில் இவ்வளவு பக்திவைத்திருக்கிறீர்களே, அந்த யக்ஞ புருஷன் யார்? விஷ்ணு, பிரம்மா, பரமசிவன், இந்திரன், வாயு, யமன், சூரியன், பர்ஜன்யன் குபேரன், சந்திரன், பூமி, அக்கினி, வருணன், ஆகிய சாபானுக்ரஹ ஸாமர்த்தியமுள்ள தேவர்களெல்லாரும் அரசனுடைய தேகத்தில் வஸிக்கிறார்கள். ஆனதால் அரசன் ஸகல தேவ ஸ்வரூபி யெனப்படுகிறான். ஓ ப்ராஹ்மணர்களே! மாத்ஸரியத்தை விட்டு யாகம் முதலிய கர்மங்களால் என்னை ஆராதியுங்கள். சுவாமி பாகத்தை எனக்குக் கொடுங்கள். என்னை விட மேலானவன் (பாகத்தை முந்தி அடையத்தக்கவன்) யார் இருக்கிறான்?"

29–35. இப்படி வேனனுக்குப் புத்திமாறியது. கெட்ட மார்க்கத்தை அடைந்தான். ஐசுவரியம் குறையும் காலம் நேர்ந்தபடியால் மிகப் பாவியான

அந்த வேனன் மஹர்ஷிகளால் சொல்லப்பட்ட நன் மார்க்கத்தை ஒப்புக் கொள்ளவில்லை. ஓ விதுரரே! இப்படி மஹரிஷிகள் அனுகூலமான வார்த்தையைச் சொல்லியும் அதனை வேனன் தன்னைப் பண்டி தனாக நினைத்து ஒப்புக் கொள்ளாமல் மஹரிஷிகளை அலக்ஷ்யம் செய்தான். அதனால் அவர்கள் கோபம் கொண்டார்கள். பின்னுமவர்கள் பாவியும், இயற் கையில் கடுமையான ஸ்வபாவமுள்ள வனுமாகிய இவன் கொல்லப்படட்டும், இவன் ஜீவித்திருந்தால் ஜகத்தைச் சாம்பலாகச் செய்துவிடுவான்; இந்த அஸத்துக்கு ராஜ்யாஸனம் தகுந்ததல்ல. இவனைத் தவிர வேறு யார்தான் யக்ஞத்திற்கு அதிபதியான பகவானை வெட்கமில்லாமல் நிந்திப்பான்? அந்தப் பகவான் உடைய அனுக்கிரஹத்தாலல்லவா இவனுக்கு இம்மாதிரியான ஐசுவரியம் கிடைத்தது" என்று சொல்லிக் கொண்டு மிகுந்த கோபமுள்ள மஹரிஷிகள் பகவானை நிந்தித்ததால் ஆயுள் குறைந்த வனாகிய வேனனை ஹுங்காரத்தால் கொன்று தங்கள் ஆசிரமம் சென்றார்கள். பின்பு ஸுநீதை யானவள் தன்னுடைய வித்யா பலத்தால் புத்திரனுடைய சரீரத்தைக் காப்பாற்றி வைத்திருந்தாள்.

36–46. அந்த மஹரிஷிகள் ஒரு ஸமயத்தில், ஸரஸ்வதி நதியில் ஸ்நானம் செய்து அக்கினி கார்யத்தை முடித்துக்கொண்டு ஸரஸ்வதியின் கரையில் உட்கார்ந்து புண்ணியக் கதைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது லோகத்திற்குப் பயங்கரமான உத்பாதங்கள் உண்டாயின. அவைகளைக் கண்ட மஹரிஷிகள் "இப்பொழுது அரசனில்லாமல் இருக்கும் பூமிக்குத் திருடர்களால் கெடுதி நேராமல் இருக்குமா?" என்று யோசித்தார்கள். அப்பொழுது திருடர்கள் அங்குமிங்கும் திருடுவதற்காக அலைவதால் தூளி கிளம்பியது. இப்படி

லோகத்தில் திருடர்கள் மிகுதியானதையும், அதனால் ஜனங்களுக்குண்டான உபத்திரவத்தையும், அரசனில்லாததால் ஜனங்கள் சக்தியுள்ளவர்களானாலும் தோஷதர்சிகளான மஹரிஷிகள் தடுக்கவில்லை. ஆனால் "சாந்தனும் எல்லாவற்றையும் ஸமமாகப் பார்ப்பவனுமாகிய ப்ராஹ்மணனானாலும் தீனர்களை யுபேக்ஷிக்கலாகாது. அப்படி உபேக்ஷித்தால் துவாரமுள்ள குடத்திலுருந்து ஜலம் வெளியில் போவது போல் அவனுடைய தபஸ் குறைந்து விடுகிறது" என்று சாஸ்திரமிருப்பதால் நாம் பேசாமலிருக்கக்கூடாது. பின்னும் அங்கன் அரசர்களுக்குள் சிறந்தவர். அவனுடைய தொடர்ச்சியற்றுப் போகக்கூடாது அந்த வம்சத்திய அரசர்கள் ஸ்ரீ பகவானை ஆச்ரயித்தவர்கள். அவர்களுடைய வீர்யம் வீணாகிறதில்லை என்று மஹரிஷிகள் யோசித்து, அந்த வேனனுடைய துடையைக் கடைந்தார்கள். அதிலிருந்து பாஹுமக னென்ற ஒருவன் உண்டானான். அவன் காக்கைபோல கறுத்த நிறமுள்ளவன். மிகவும் குட்டையான சரீரமுள்ளவன். குட்டையான கைகள் உள்ளவன். பருத்த கன்னங்களுள்ளவன். குட்டையான கால்களு ள்ளவன். பள்ளமாகிய மூக்குள்ளவன். சிவந்த கண் களுள்ளவன். சிவந்த தலைமயிர்கள் உள்ளவன். அவன் மிகுந்த வணக்கத்துடன் உங்களுக்கு என்னால் என்ன செய்யப்பட வேண்டும்?' என்று கேட்டான். அவனை மஹரிஷிகள் 'இவ்விடத்திலிரு' என்றார்கள். அதனால் அவன் நிஷாதனானான். அவனுடைய வம்சத்தில் பிறந்தவர்கள் மலை, காடு இவைகளில் வசிக்கும் நிஷாதர்களானார்கள். அந்த பாஹுமகன் வேனனுடைய மிகுந்த கல்மஷத்தை அபஹரித்தவன். (வேனனுடைய பாபமே பாஹுமகனாகப் பிறந்ததென்று தாத்பரியம்)

அத்தியாயம்–15

பிருதுவின் உற்பத்தி

1–19 பின்பு மஹர்ஷிகள் அபுத்திரனாகிய அந்த வேனனுடைய இரு கைகளையும் கடைந்தார்கள். அவைகளிலிருந்து ஒரு புத்திரனும், புத்திரியும் உண்டானார்கள். அதனைக் கண்ட மஹரிஷிகள் அவ்விருவர்களையும் பகவானுடைய அம்சபூதர்கள் என்று தெரிந்து கொண்டு மிகுந்த ஸந்தோஷமடைந்து "இந்தப் புத்திரன் லோகத்தைக் காப்பாற்றுகிற விஷ்ணுவினுடைய கலையேயாம். இந்தப் பெண் பரம புருஷனை விட்டுப் பிரியாதவளான லக்ஷ்மீதேவியின் அம்சம். இவன் மிகுந்த கீர்த்தியை அடைவான். அரசர்களுக்கு முந்தியவனாவான். மேலுமிவன் பிருதுவென்ற பெயருடன் மஹாராஜனாக இருப்பான். அழகான பற்களுள்ளவளும், குணங்களுக்கும் ஆபரணங்களுக்கும் காந்தியை உண்டு பண்ணுகிற வளுமான இந்தத் தேவியானவள் அர்ச்சிஸ் என்ற பெயருடன் பிருதுவையே பர்த்தாவாக வரிப்பாள். லோகத்தைக் காப்பாற்றுவதற்காகப் பூமியில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அம்சமே பிருதுவாக அவதரித் திருக்கிறது. அதற்குப்பின் உண்டான இந்தப் பெண் பகவானிடத்தில் பிரீதியுள்ளவளாகிய லக்ஷ்மீ தேவியே" என்று புகழ்ந்தார்கள். கந்தர்வர்களுக்குள் சிறந்தவர்கள் கானஞ் செய்தார்கள். ஸித்தர்கள் புஷ்பங்களை வர்ஷித்தார்கள். தேவ ஸ்திரீகள் நர்த்தனம் செய்தார்கள். ஆகாசத்தில் சங்கம், தூர்யம், மிருதங்கம் முதலிய வாத்தியங்கள் கோஷிக்கப்பட்டன. தேவ கணங்களும், ரிஷி கணங்களும், பிதிரு கணங்களும் அவ்விடம்

வந்தார்கள். அப்பொழுது ஜகத் குருவாகிய ப்ரஹ்ம தேவர் வேனனது புத்திரருடைய வலது கையில் சக்கிர ரேகையிருப்பதையும், பாதங்களில் தாமரை மலர் ரேகை இருப்பதையும் பார்த்து, 'எவனுக்கு, சக்கிர ரேகை மற்ற ரேகைகளால் மறைக்கப்படாமல் இருக்கிறதோ அவன் பகவானுடைய அம்சம்' என்று பிருதுவைப் பகவானுடைய கலையென்று நினைத்தார். இவருக்குப் பட்டாபிஷேகம் செய்வதற்குப் ப்ராஹ்மணர்கள் ஆரம்பித்தார்கள். அப்பொழுது ஜனங்கள் அதற்கு வேண்டிய ஸாமான்களைச் சேர்த்தார்கள். மேலும் நதிகள், சமுத்திரம், மலைகள், மரங்கள், பசுக்கள், பறவைகள், மிருகங்கள், ஆகாயம், பூமி முதலிய ஸகல பூதங்களும் காணிக்கைகளைக் கொண்டு வந்தன. பிருதுவானவர் நல்ல வஸ்திரத்தை உடுத்திக் கொண்டு ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்டு, அலங்கிருதையான அர்ச்சிஸ் என்ற பத்தினி யுடன் மஹர்ஷிகளால் செய்யப்படும் பட்டா பிஷேகத்தை அனுபவித்து அக்கினி போல் ப்ரகாசித்தார். அப்பொழுது குபேரன் ஸ்வர்ணமயமான சிம்மாஸனத்தையும், வருணன் ஜலப்பெருக்குள்ள தும் சந்திரன் போன்றதுமான குடை...யையும், வாயுவானவர் வெண்சாமரங்களையும், தர்மன் கீர்த்தி ரூபமான மாலையையும், இந்திரன் மேலான கிரீடத்தையும், யமன் எல்லாரையும் சிக்ஷிக்கும் தண்டத்தையும், ப்ரஹ்மதேவர் வேதமாகிய கவசத்தையும், ஸரஸ்வதி யானவள் உத்தமமான ஹாரத்தையும் ஸ்ரீ மஹாவிஷ்ணு வானவர் சுதர்சனமென்ற சக்கரத்தையும், அவருடைய பத்தினியாகிய லக்ஷ்மிதேவி குறையாத ஸம்பத்தையும், ருத்ரர் கத்தியையும் கொடுத்தார்கள். இந்தக் கத்தியின் உறைமீது சந்திரன் போன்ற பத்து பிம்பங்கள்

இருக்கின்றன. பார்வதியானவள் நூறு சந்திரபிம்பம் உள்ள கேடயத்தையும், சந்திரன் அமிருதமயங்களான எட்டுக் குதிரைகளையும் , துவஷ்டாவானவர் மிகவும் அழகான இரதத்தையும், அக்கினி பகவான் ஆட்டின் கொம்பினாலும் பசுவின் கொம்பினாலும் செய்யப்பட்ட வில்லையும், சூரியன் தம்முடைய கிரணமயங்களான பாணங்களையும், பூமியானவள் யோகமயங்களான பாதுகைகளையும்; (அவைகளைக் காலில் தரித்தவுடன் இஷ்டமான இடத்திற்குச் செல்லலாம்) ஆகாயமானது ஒவ்வொரு நாளும் புஷ்பத்தையும், ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் ஸித்த கந்தர்வர்கள் நர்த்தனம், நல்ல கானம், வாத்தியங்கள் முழங்குதல் ஆகிய இவைகளில் ஸாமர்த்தியத்தையும், மஹரிஷிகள் ஸத்தியமான ஆசீர்வாதங்களையும் ஸமுத்திரமானது தன்னிடத்தில் உண்டான சங்கத்தையும் கொடுத்தனர். மேலும் மேற்கு முகமாகச் செல்லுகிற ஆறுகளும், மலைகளும், கிழக்கு முகமாகப் பிரவஹிக்கும் நதிகளும் மஹாத்மா வாகிய அந்த பிருதுவின் ரத மார்க்கங்களைத் தரித்தன.

20–26 அப்பொழுது ஸூதர்களும் மாகதர்களும், வந்திகளும் அரசனை ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித் தார்கள். அவர்களை நோக்கி, "ஓ ஸூத! ஓ மாகத! நல்ல குணமுள்ள ஓ வந்தியே! லோகத்தில் என்னை என்ன குணங்கள் கொண்டு நீங்கள் ஸ்தோத்திரம் செய்வீர்கள்? ஆனதால் என் விஷயத்தில் உங்களுடைய வார்த்தைகள் பொய்யாக ஆக வேண்டாம். ஓ அழகான வார்த்தையுள்ளவர்களே! சில காலம் சென்ற பிறகு என்னுடைய குணங்களை அலங்கரிக்கலாம். மேலும் ஸதஸ்ஸிலிருப்பவர்கள் என்னைத் துதிக்கும்படி உங்களுக்கு அனுமதி கொடுக்கமாட்டார்கள். உத்தம

சுலோகராகிய பகவானுடைய குணங்களைச் சொல்ல வேண்டியதாக இருக்க, தாழ்ந்தவனை ஸ்தோத்திரம் செய்யும்படி ஆக்ஞாபனம் செய்வார்களா? தன்னிடத்தில் இல்லாதவைகளான மஹான்களுடைய குணங்களைத் தன்னிடமிருப்பதாக எவன் சொல்லச் செய்வான்? அவனைப் பெரியோர்கள் இவன் சாஸ்திரங்களைப் படித்தால் இந்தக் குணங்கள் இவனுக்குண்டாகும் என்று பரிஹஸிப்பார்கள். அதனை மந்த புத்தியுள்ளவன் தெரிந்து கொள்ள மாட்டான். ப்ராஹ்மண வதம் முதலிய கெட்ட கார்யத்தைச் செய்தவர்கள் தங்களுடைய பெளருஷத்தை எப்படி நிந்தித்துக் கொள்கிறார்களோ அப்படி மஹான்கள் பிறரால் செய்யப்படும் ஸ்தோத்திரத்தைக் கேட்டு வெட்கத்தை அடைவார்கள். ஓ ஸூத! நான் சிறந்த கர்மங்களுள்ளவனென்று இப்பொழுது ஜனங்களுக்குத் தெரியாது. அப்படியிருக்க அக்ஞன் போல் என்னிடத்தில் சிறந்த குணங்களிலிருப்பதாக ஒப்புக்கொள்வேனா? என்று மேகம்போல் கம்பீரமாக சிரித்துக் கொண்டு சொன்னார்.

அத்தியாயம்–16

ஸூதர்கள் பிருதுவை துதித்தது

1–2. இம்மாதிரி சொல்லும் அரசனை நோக்கி, "அந்த ஸூத மாகதர்கள் மஹர்ஷிகளால் தூண்டப்பட்டு அமிருதம் போன்ற வாக்கினால் துதிக்க ஆரம்பித்தார்கள்.

3–27. "தேவர்களுக்குள் சிறந்தவராகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவே மாயையால் உம்முடைய உருவத்தைத் தரித்திருக்கிறார். ஆனதால் உம்முடைய மஹிமையை வர்ணிக்க எங்களால் முடியாது. வேனருடைய அங்கத்திலிருந்து உண்டான உம்முடைய பெளருஷத்தை வர்ணிப்பதற்கு வாக்மிகளுடைய புத்தியும் பிரமிக்கிறது. ஆனாலும் முனிகளால் தூண்டப்பட்ட நாங்கள் கம்பீர கீர்த்தியுள்ளவரும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் கலாவதாரமுமான உம்முடைய் கதாமிருதத்தில் பிரீதியுடன் சிறந்த உம்முடைய சரித்தத்தைச் சொல்லுகிறோம். இந்தப் பிருதுவென்னும் அரசன் தர்மத்தை அனுஷ்டிப்பவர்களுக்குள் சிறந்தவர். இவர் ஜனங்களைத் தர்மத்தை அனுஷ்டிக்கும்படி செய்பவர் தர்மத்தின் எல்லையைக் காப்பாற்றுகிறவர். அதற்கு விரோதிகளைச் சிக்ஷிப்பவர். லோகபாலர்களுடைய சரீரத்தை தரித்தவர். பூலோகத்திற்கும் மேலுலகத்திற்கும் அனுகூலமானதைத் தக்கபடி (யாகங்களைச் செய்வது ஜனங்களைப் போஷிப்பது முதலியவை) செய்பவர். இவர் சூரியனுடைய அம்சத்தை தரித்திருப்பதால் எட்டு மாஸங்களில் பூமியிலுள்ள ஜலத்தைக் கிரஹித்து மழைக்காலத்தில் ஜலத்தை சூரியன் வர்ஷிப்பது

போல் ஸமயத்தில் ஜனங்களுக்கே உபயோகப் படுத்துகிறார். பூமியின் அம்சத்தைத் தரித்திருப்பதால் பூமியானது எப்படி எல்லாவற்றையும் சஹிக்கிறதோ, அப்படி தீனர்கள் தம்முடைய தலையில் பாதத்தை வைத்தாலும் அதனைப் பொறுத்துக்கொள்கிறார். மேலும் மனித சரீரமெடுத்திருக்கும் இந்தப் பகவான் மழை பெய்யாமல் ஜனங்கள் கஷ்டப்படும்போது மஹேந்திரன்போல் அவர்களைக் காப்பாற்றுவார். அன்புள்ள பார்வையுள்ளதும், நிர்மலமான சிரிப்பினால் அழகாயுமுள்ள முகமாகிய சந்திரனால் லோகத்தை திருப்தி செய்வார். இவருடைய மார்க்கம் பிறரால் அறியமுடியாது. இவருடைய கார்யம் மிகவும் ரகசியமானது. இவர் கம்பீரமான மேதை யுள்ளவர். பொக்கிஷத்தைக் காப்பாற்றுகிறவர். அளவற்ற மாஹாத்யமியங்களுக்கும், குணங்களுக்கும் இருப்பிடமாக இருப்பவர். வருணனைப் போன்றவர். மறைக்கப்பட்ட ஸ்வரூபமுள்ளவர். வேனனாகிய அரணிக் கட்டையிலிருந்து உண்டான அக்கினி போன்ற இந்த அரசன் சத்துருக்களால் அடைய முடியாதவர். சகிக்க முடியாத தேஜஸ் உள்ளவர். சமீபத்தில் இருப்பவரானாலும் வெகுதூரத்திலிருப்பவர் போல் அவமதிக்க முடியாதவர். எல்லாப் பிராணிகள் இடத்திலிருக்கும் அத்யக்ஷரான அந்தராத்மா, பூதங்களுடைய உள்ளிலும் வெளியிலுமிருந்து அவர்கள் செய்யும் கர்மங்களை பார்த்துக் கொண்டு தாம் உதாஸீனராக இருப்பது போல இந்த அரசன் சாரர்களைக் கொண்டு தம்முடைய தேசத்திய பிரஜைகள் செய்யும் காரியங்களைத் தெரிந்து கொண்டு அவர்களால் செயயப்படும் நிந்தை; ஸ்தோத் திரம் ஆகிய இவைகளில் உதாஸீனராக இருக்கிறார்.

தமக்குத் துவேஷியாக இருப்பவனுடைய புத்திரன் ஆனாலும், குற்றம் செய்பாதவனானாலும் அவனைச் சிக்ஷிக்கிறதில்லை. அபராதம் செய்தவன் தம்முடைய புத்திரனானாலும் தர்ம மார்க்கத்தை அனுசரித்து அவனைச் சிக்ஷிக்கிறார். பகவானாகிய சூரியனுடைய கிரணங்கள் எது வரையில் பிரகாசிக்கின்றனவோ, அந்த மானஸ பர்வதம் வரையில் உள்ள தேச வாசிகளான ஜனங்கள் இவருடைய உத்தரவின்படி நடக்கிறார்கள். இவர் தம்முடைய நடத்தையால் ஸகல பிரஜைகளையும் சந்தோஷப்படுத்துவார். அதனால் பிரஜைகள் இவரை ராஜாவென்று சொல்லுவார்கள்.

மேலுமவர் திடமான விருதமுள்ளவர். ஸத்யப் பிரதிக்ஞர். ப்ராஹ்மணர்களிடத்தில் பிரீதியுள்ளவர். பெரியோர்களை ஸேவிப்பவர், ஸகல பிராணிகளையும் காப்பாற்றுகிறவர், அவர்களுக்கு மானத்தைக் கொடுப் பவர், தூனர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ளவர். 'பிற ஸ்திரீகளை மாதாவாகப் பாவிப்பவர், பத்தினியை தம்முடைய பாதிசரீரமாக நினைப்பவர். தகப்பனார் குழந்தைகளிடம் பிரீதி செய்வது போல் பிரஜைகள் இடத்தில் பிரீதி செய்பவர், ப்ரஹ்மிஷ்டர்களுடைய வேலைக்காரராக இருப்பவர். பிராணிகள் தங்களுடைய ஆத்மாவிடத்தில சிநேஹிப்பதுபோல ஜனங்கள் இந்த அரசனிடத்தில் பிரியப்படுகிறார்கள், பின்னுமவர் மித்திரர்களுக்கு சுகத்தை விருத்தி செய்பவர், வைராக்கிய முள்ளவர்களிடத்தில் அதிகப் பிரியம் உள்ளவர், அஸாதுக்களைத் தண்டிப்பவர், எவர் ஆறு வகையான ஐசுவரியமுள்ளவரோ, எவர் முக்குணங்களுக்கு அதிபதியோ, எவர் கூடஸ்தரோ (விகாரமற்றவர்). எவர் பரமாத்மாவோ, (பலவகையாகத் தோன்றினாலும்

அது அவித்தையால் ஏற்பட்டதாகையால் மித்யை யென்று சொல்லுகிறார்களோ) அந்த பரமாத்மாவின் அம்சமே இவர். இவர் உதயபர்வதம் வரையிலுள்ள பூமண்டலத்தைக் காப்பாற்றுவார். மேலும் ஜயசீலமான ரதத்தின் மீதேறி வில்லை எடுத்துக் கொண்டு சூரியன் போல் பூமியைச் சுற்றுவார். லோக பாலகர்களும் மற்ற அரசர்களும் இவருக்கு காணிக்கைகளை ஸமர்ப்பிக் கிறார்கள். ஸ்திரீகள் இவருடைய கீர்த்தியை கானஞ் செய்வதுடன் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அம்சமாக அவதரித்த ஆதிராஜனென்று தெரிந்து கொள்வார்கள் மேலும் இந்த அரசன் பிரஜைகளுடைய க்ஷேமத் திற்காகப் பசு வேடந்தரித்த பூமியினிடமிருந்த ஸகல வஸ்துக்களையும் கறப்பார். பின்னுமவர் தம்முடைய வில்லின் நுனியால் இந்திரன்போல் பர்வதங்களைப் பேதித்து பூமியைச் சமமாகச் செய்வார். வாலைத் தூக்கிக்கொண்டு சிங்கம் ஸஞ்சரிப்பது போல் இவர் சகிக்கமுடியாத தம்முடைய வில்லை சப்திக்கச் செய்துகொண்டு பூமியில் ஸஞ்சரிக்கும்பொழுது அஸத்துக்கள் பயந்து நூறு அச்வமேதங்களைச் செய்வார், கடைசியான யாகத்தில் இந்திரன் யாகக் குதிரையை அபஹரிப்பான். பின்னுமவர் தம்முடைய உத்யான வனத்தில் தெய்வச் செயலாக பகவானாகிய ஸனத்குமாரரைச் சந்தித்து அவரை ஆராதித்து அவரிடம் ப்ரஹ்மஞ்ஞானத்தை அடைவார் மிகுந்த பராக்ரமமுள்ள பிருதுவென்ற இந்த மஹாராஜனைப் பற்றி லோகத்தில் எல்லோரும் புகழ்ந்து பேசிக் கொள்வார்கள். அதனை அரசர் கேட்பார். இப்படி ஸகல திக்குகளையும் தேஜஸ்ஸால் லோகத்தின் உபத்ரவத்தை நிவர்த்தித்து சிறந்த தேவர்களாலும், ஸஜ்ஜனர்களாலும் துதிக்கப்பட்ட மகிமையுள்ளவராகிப் பூமியை பரிபாலிப்பார்" என்று துதித்தார்கள்.

அத்தியாயம்–17

பிருது பூமியைக் கொல்ல முயன்றது

1–2 வேனனுடைய புத்திரரும் பகவானுடைய அவதார பூதருமாகிய பிருது சக்ரவர்த்தியானவர் தம்முடைய குணங்களாலும், கர்மங்களாலும் பிரசித்தி அடைந்து ப்ராஹ்மணர் முதலியவர்களையும், வேலைக்காரர்கள், மந்திரிகள், புரோகிதர்கள், பட்டணத்திலிருக்கும் ஜனங்கள், தேசத்திலிருப்பவர்கள், வியாபாரிகள் முதலிய எல்லாரையும் அவர் அவர் களுடைய இஷ்டத்தைக் கொடுத்துத் திருப்தி செய்தார் என்று மைத்ரேயர் சொன்னார்.

3–7 அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி "பிருது பசுவின் வேடங்கொண்ட பூமியிடம் ஸகல வஸ்துக்களைக் கறந்ததாகச் சொன்னீர்களே, பூமிதேவி எதற்காகப் பசுவின் கர்பத்தைத் தரித்தாள்? அவளிடத்தில் எதனைக் கறந்தார்? எது கன்றாக இருந்தது? இயற்கையில் மேடுபள்ள முள்ள பூமியை எப்படிச் சமமாகச் செய்தார்? மேலும் அவருடைய யாகக் குதிரையை மஹேந்த்ரன் அபகரித்த காரணம் என்ன? ஓ ப்ராஹ்மணோத்தம! மேலும் அந்த ராஜரிஷ்டர் ப்ரஹ்மவித்துக்களுக்குள் சிறந்தவரான ஸனத் குமாரரிடமிருந்து தத்துவ ஞானத்தையும் அபரோக்ஷ ஞானத்தையும் அடைந்தார். இந்தப் பிருது முதலியவர்கள் பகவதவதார பூதர்களாகையால் அவர்களுடைய சரிதமானது ஸ்ரீ கிருஷ்ண பகவான் உடைய சரிதமேயாம். அது புண்ணிய கரமானது; அதனைக் கேட்பவனே நல்ல காதுள்ளவன், ஆனதால்

ஸ்ரீ கிருஷ்ணபகவான் முந்திய அவதாரங்களில் எதனைச் செய்தாரோ, அந்துப் பகவானுடைய சரிதத்தை ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலும் உம்மிடத்திலும் அந்தரங்க பக்தியுள்ளவனாகிய எனக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

8–11 ஸ்ரீ பகவானுடைய கதையைச் சொல்லும் படி விதுரரால் தூண்டப்பட்ட மைத்ரேயர் மிகுந்த பிரியத்துடன் விதுரரைப் புகழ்ந்து அவரை நோக்கி, ஓ விதுரரே! மஹரிஷிகள் பிருதுவிற்குப் பட்டா பிஷேகஞ் செய்து நீர் ஜனங்களை காப்பாற்ற வேண்டும் என்று ஆக்ஞாபித்தார்கள். அப்பொழுது பூமியில் அன்ன மில்லாமற் போனதால் பிரஜைகள் பசியினால் வருத்தப்பட்டுச் சரீரம் இளைத்து அரசனிடம் சென்று, 'ஓ மஹாராஜ! பொந்திலிருக்கும் அக்கினியால் மரங்கள் எரிக்கப்படுவது போல நாங்கள் வயிற்றில் இருக்கும் அக்கினியால் எரிக்கப்படுகிறோம். (புஜிப்பதற்கு அன்னம் கிடைக்கவில்லை என்று கருத்து). காப்பாற்றுவதில் ஸமர்த்தராகிய உம்மைச் சரணம் அடைகிறோம்! நீர் எங்களுக்கு ஜீவனத்தைக் கொடுக்கும் அரசனல்லவா? ஆகையால் நாங்கள் அன்னமில்லாமல் நாசமடைவதற்கு முந்தியே எங்களுக்கு அன்னம் கொடுத்துப் பசியை நிவர்த்திக்க முயற்சியும்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

12–21 ஓ குருக்களில் சிறந்தவரே! ப்ரஜைகளுடைய தீனமான வார்த்தையைக் கேட்டுப் பிருது சக்கிரவர்த்தி வெகுகாலம் யோசித்துச் செய்ய வேண்டிய கார்யம் இன்னதென்று தமக்குள் தீர்மானித்துக் கொண்டு பூமிதேவியினிடம் மிகுந்த கோபமுள்ளவராகி, வில்லைக்

கையிலெடுத்து, அதில் பாணத்தை ஸந்தானம் செய்தார். அப்பொழுது அவர் திரிபுர ஸம்ஹாரம் செய்த பரமசிவனுக்கு ஸமமாக இருந்தார். அவரைக் கண்டு பூமிதேவியானவள் மிகவும் பயந்து நடுக்க முள்ளவளாகி வேடனால் துரத்தப்பட்ட பெண் மான்போல் ஓடினாள். அதனைக் கண்ட வேனபுத்திரர் ஆகிய பிருது சக்ரவர்த்தி மிகவும் கோபத்தால் சிவந்த கண்களுள்ளவராகிப் பாணத்தை வில்லில் பூட்டிக் கொண்டே பூமியின் பின் ஓடினார். அந்தப் பூதேவியும் கிழக்கு முதலிய திக்குகளிலும், மூலைகளிலும் ஆகாசத் திலும், பூமியிலும், அந்தரிக்ஷமும் முதலிய எங்கும் ஓடியும் தன் பின் ஆயுதத்துடன் துரத்திவரும் அரசனைக் கண்டு மிருத்புவைக் கண்ட ப்ரஜைகள் போல் ஒருவராலும் காப்பாற்றப்படாதவளாகி மிகுந்த வருத்தத்துடன் அந்த பிருதுவினிடமே வந்தாள். பின்பு அவள் அந்தச் சக்ரவர்த்தியை நோக்கி, "ஓ மிகுந்த அதிருஷ்டமுள்ளவரே! தர்மங்களை அறிந்தவரே! ஆபத்தை அடைந்தவர்களிடத்தில் பிரீதியுள்ளவரே! நீர் ஸகல பிராணிகளையும் காப்பாற்றும் அதிகார்த்தை அடைந்திருந்தும் குற்றமற்றவளும், தீனையுமான என்னை ஏன் கொல்ல யத்தனிக்கிறீர்? என்னைக் காப்பாற்றும். தர்மங்களை அறிந்தவனென்று பிரசித்தி பெற்றவர் ஸ்திரீவதம் செய்யலாமா? குற்றஞ் செய்தவர்களான ஸ்திரீகளையும் ப்ராகிருத ஜனங்கள் ஆனாலும் கொல்ல மாட்டார்கள். அப்படிக்கிருக்க கருணை பொருந்தியவர்களும், தீனர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ளவர்களுமான உம்மை போன்ற ஸாதுக்கள் குற்றஞ் செய்யாத ஸ்திரீயைக் கொல் வார்களா? மேலும் நான் ஜனங்கள் வசிப்பதற்கு ஒரு கெட்டியான ஓடமாக ஜலத்தில் இருக்கிறேன்.

என்னைப் பிளந்துவிட்டால் இந்த ஜனங்களை ஜலத்தில் எப்படி வசிக்கச் செய்வீர்? ஆகையால் என்னைக் காப்பாற்றும்" என்று வேண்டிக் கொண்டாள்.

22–27 அதனைக் கேட்ட பிருது சக்கிரவர்த்தி அவளை நோக்கி, 'ஓ பூமிதேவியே! நீ யாகத்தில் தேவதாரூபியாக ஹவிர்பாகத்தைப் பெற்றுக் கொண்டும் தான்யம் முதலியவைகளை உண்டு பண்ணுகிறதில்லை. ஒவ்வொரு நாளும் வயிறு நிரம்பப் புற்களைத் தின்றும் பால்கறக்காமல் இருக்கும் பசுவைப்போல் நீ ப்ரஹ்மதேவரால் முந்தி ஸிருஷ்டிக்கப்பட்ட ஓஷதி, விதை ஆகிய இவைகளை இப்பொழுது வெளிப் படுத்தவில்லை. என்னுடைய ராஜ்ய காலத்தில் நீ இப்படிச் செய்வதால் என்னை அவமானம் செய்கிறதாக ஆயிற்று; ஆனதால் என்னுடைய உத்தரவை மீறி நடக்கும் உன்னைக் கொல்வேன். உன்னுடைய தேஹத்தைப் பேதித்து அந்த மாம்ஸத்தால் பசியால் வருத்தப்படும் இந்த ஜனங்களைக் காப்பாற்றுகிறேன். புருஷனானாலும் ஸ்திரீயானாலும் கர்வத்தை அடைந்து பிராணிகளிடத்தில் கருணையற்றிருந்தால் அவர்களைக் கொல்வது அரசர்களுக்குத் தர்மமேயாகும். (அது வதமல்லவென்று தாத்பர்யம்). நீ இப்பொழுது மதங் கொண்டு நிலை தவறி, கபட ஸ்வபாவமுள்ள வளாக இருப்பதால் உன்னைப் பாணங்களைக் கொண்டு எள்ளளவாகப் பேதித்து என்னுடைய யோக பலத்தால் இந்த ஜனங்களைத் தரிக்கிறேன்" என்று சொன்னார்.

28–36 அதனைக் கேட்ட பூமிதேவியானவள்

கோபஸ்வரூபமான சரீரத்தைத் தரித்து யமனைப் போலிருக்கும் பிருது சக்கிரவர்த்தியைக் கண்டு நடுங்கி நமஸ்கரித்து, கைகளைக் கூப்பிக் கொண்டு பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தாள். பரம புருஷனுக்கு நமஸ்காரம் செய்கிறேன். நீர் மாயையால் மத்ஸ்யம் முதலிய பல சரீரத்தை எடுத்துக் கொள்பவர். குணஸ்வரூபி போலத் தோன்றுகிறவர். மேலும் சரீரம், இந்திரியங்கள், அவைகளின் அதிஷ்டான தேவதைகள், சரீரத்தில் நானென்ற அஹங்காரம், இராகம், துவேஷம் முதலியவை ஆகிய இவைகளை ஸ்வபானு ஸந்தானத்தாலே நாசஞ் செய்தவர். அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம். எந்தப் பகவான் என்னை ஸகல பிராணிகளுக்கும் இருப் பிடமாக ஸிருஷ்டித்து என்னிடத்தில் நான்கு வகையான பிராணிகள் வசிக்கும் படியும் செய்தாரோ ஸ்வதந்த்ரராகிய அந்தப் பகவானே ஆயுதத்துடன் என்னைக் கொல்லுவதற்கு யத்தனிக்கிறார். வேறு யாரை நான் சரணமடைவேன்? எந்தப் பகவான் முதலில் சரம் அசரம் அடங்கிய இந்த ஜகத்தைத் தம்முடைய மாயையைக் கொண்டு ஸிருஷ்டித்தாரோ, எவருடைய மாயையானது ஊகிக்க முடியாததோ, அந்தப் பகவானாகிய நீரே அந்த மாயா பலத்தால் ஜகத்தைக் காப்பாற்ற இப்பொழுது யத்தனித்திருக் கிறீர். தர்மிஷ்டராகிய நீர் என்னைக் கொல்வது உசிதமா? ஈசுவரனுடைய நடை ஜனங்களால் அறிய முடியாதது.

உம்முடைய மாயையானது ஒருவராலும் ஜயிக்க முடியாத தாகையால் அந்த மாயையால் புத்தி மயக்கம் அடைந்து ஜனங்கள் உம்முடைய உண்மையைத்

தெரிந்து கொள்ளுகிறதில்லை. எவர் ப்ரஹ்மாவை உண்டுபண்ணுகிறாரோ, எவரைக் கொண்டு ஸகலஜகத்தையும் ஸிருஷ்டிக்கிறாரோ; எவர் இயற்கையில் ஒருவரோ, மாயையால் அநேகராகத் தோன்றுகிறாரோ, அவரே ஈசுவரன். அவர் மஹா பூதங்கள், இந்திரியங்கள், அதிஷ்டான தேவதைகள், புத்தி அஹங்காரம் ஆகிய இவைகளைக் கொண்டு ஸிருஷ்டி, பரிபாலனம், ஸம்ஹாரம் ஆகிய இவைகளை அனுசரிக்கிறார். மேலும் இவைகள் யாவும் அவருக்கு ஸ்வாதீனங்களாக இருக்கின்றன. அப்பேர்ப் பட்ட பரம புருஷனாகிய உம்மை நமஸ்கரிக்கிறேன். ஓ உற்பத்தியற்றவரே! பூதங்கள், இந்திரியங்கள், அந்தக்கரணம் இவைகளின் ஸ்வரூபமாகிய ஜகத்தை ஸ்தாபிக்க வேண்டி நீர் ஆதிவராஹவதாரம் செய்து என்னைப் பாதாளத்தில் இருந்து கொண்டுவந்தீர். ஜலத்திற்குமேல் ஓடம் போலிருக்கும் என்னிடத்தில் உம்மால் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கும் ப்ரஜைகளைக் காப்பாற்ற வேண்டி இப்பொழுது பிருது சக்கரவர்த்தியாக அவதரித்திருக்கிறீர். அப்படிப்பட்ட நீர் 'பால் கொடாத காரணத்தைக் கொண்டு என்னைக் கொல்ல விரும்புகிறீர்' என்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. ஈசுவரனுடைய மாயையால் புத்தி மயக்கமடைந்த என்னைப் போன்றவர்களால் பகவத் பக்தர்களுடைய அபிப்பிராயமே அறிய முடியாது. (பகவானுடைய அபிப்பிராயம் எப்படி அறியமுடியும் என்று கருத்து). ஆகையால் இந்திரியங்களை ஜயித்தவர்களுக்குக் கீர்த்தியைக் கொடுக்கும் அந்த மஹான்களுக்கு நமஸ்காரம் செய்கிறேன். (எதனைச் செய்தால் ஜிதேந்திரியர்களுடைய கீர்த்தி விருத்தி அடையுமோ, அதனைச் செய்ய வேண்டுமேயல்லாமல் தனதிஷ்டப்படிச் செய்யக் கூடாதென்று கருத்து)

அத்தியாயம்–18

பூமிதேவி ஸகல பொருள்களையும் உண்டுபண்ணியது

1–11. கோபத்தால் துடிக்கும் உதடுகளுள்ள பிருது சக்கரவர்த்தியைப் பூமிதேவி இப்படித் துதித்துப் பின்னும் அவரை நோக்கி, "ஓ மகாராஜ! கோபத்தை அடக்கிக் கொள்ளும். நான் சொல்வதைக் கேளும். (அலக்ஷ்யம் செய்யவேண்டாமென்று கருத்து). தேனீயானது மதுவை எடுத்து கொள்வது போல் வித்வான் எல்லாரிடத்திலிருமிருந்து ஸாரமானதை எடுத்துக்கொள்வான். உண்மையை அறிந்த மஹர்ஷிகள் ஜனங்களுக்கு இவ்வுலகம், மேலுலகம் ஆகிய இவைகளின் சுகத்திற்காகப் பலவகையான உபாயங்களைக் கண்டு பிடித்ததுமல்லாமல் அவைகளைப் பிரயோகித்துமிருக்கிறார்கள். (பயிர்தொழில் அக்னி ஹோத்ரம் முதலியவை) அப்படிப்பட்ட உபாயங்களைச் சிரத்தையுடன் அனுஷ்டிப்பவன் பலனை அடைவான். அவைகளை லக்ஷ்யம் செய்யாமல் காரியத்தை ஆரம்பிப்பவன் வித்வானானாலும் அவனால் ஆரம்பிக்கப்பட்ட காரியங்கள் பலனைக் கொடுக்கிறதில்லை. முந்தி ப்ரஹ்மதேவரால் ஸிருஷ்டிக்கப்பட்ட ஓஷதிகளை, விரதங்களை அனுஷ்டிக்காத அஸத்துக்கள் அனுபவித்தார்கள். லோகத்தை காப்பாற்றுகிறவர்களான நீங்களும் அதைக் கவனிக்கவில்லை, ரக்ஷிக்கவுமில்லை, பிரஜைகளெல்லோரும் திருடர்களாக ஆகிவிட்டார்கள். ஆனதால் நான் யக்ஞத்திற்காக ஓஷதிகளை காப்பாற்ற வேண்டி அவைகளை வெளிப்படுத்தாமல் மறைத்துக் கொண்டேன. இப்படி வெகுகாலம் சென்றதால் அந்த

ஒஷதிகள் பூமியிலற்றுப்போயின. அது விஷயத்தில் ஒரு உபாயம் சொல்லுகிறேன். அதன்படி அவைகளை அடையலாம், ஓ வீரராகிய அரசனே! பிராணிகளுக்குப் பலத்தைக் கொடுக்கக்கூடிய அன்னம் வேண்டுமென்ற விருப்பம் உமக்கிருக்குமானால் பசுவின் ஸ்வரூபம் உள்ளவளாகிய எனக்குத் தகுதியான கன்றையும் கறக்கிறவனையும், கறக்கும் பாத்திரத்தையும் ஏற்படுத்தும். அதனால் உம்மிடத்தில் நான் பிரீதி அடைந்து உமக்கு அபேக்ஷிதங்களான பொருள்களை உண்டு பண்ணுகிறேன். மேலும் என்னுடைய சரீரமானது மலை முதலியவைகளால் மேடுபள்ளமாக இருப்பதால் மழை ஜலமானது எங்கும் பரவுகிறதில்லை. ஆனதால் மழைக்காலத்தில் பெய்த மழை ஜலமானது பிந்திய ருதுக்களிலும் பரவி ஓடும் படியாக என்னை ஸமமாக (மேடுபள்ளமில்லாமல்) செய்யும் என்றாள்.

12–27. பிரியமானதும், அனுகூலமானதுமான அதனைக் கேட்ட அரசர், ஸ்வாயம்புவ மனுவைக் கன்றாக வைத்துக்கொண்டு தம்முடைய கையாகிய பாத்திரத்தில் ஸகல ஒஷதிகளையும் தாமே கறந்தார். (பசுவினிடமிருந்து உண்டாகிறதாகையால் அவைகளே க்ஷீரமென்றும், அதை கறக்கிறதென்றும் சொல்லப்படுகிறது). மற்ற வித்வான்களும் தங்கள் தங்கள் இஷ்டப்படி மேலான வஸ்துக்களைக் கறந்து கொண்டார்கள். எப்படியெனில் மஹரிஷிகள் பிருஹஸ்பதியைக் கன்றாக வைத்துக்கொண்டு இந்திரியங்களாகிய பாத்திரங்களில் வேதமாகிய சுத்தமான பாலைக் கறந்தார்கள். தேவர்கள் இந்திரனைக் கன்றாக வைத்துக்கொண்டு ஸ்வர்ண மயமான பாத்திரத்தில் ஸோமம், மனத்தில் சக்தி, இந்திரிய சக்தி, தேகசக்தி

ஆகிய இவைகளாகிய பாலைத் திதியின் புத்ரர்கள் அஸுரர்களுக்குள் சிறந்தவரான பிரஹ்லாதரைக் கன்றாக வைத்துக்கொண்டு இரும்பு பாத்திரத்தில் ஸுதரையையும் (வெல்லத்தாலும், மாவினாலும், மதுவினாலும் செய்யப்பட்டு மூன்று வகையானது) பனைமரம் முதலியவைகளிலிருந்து உண்டாகும். மத்யத்தையும் கறந்தார்கள். கந்தர்வர்களும், அப்ஸரஸ்ஸுகளும் விசவாசு என்ற கந்தர்வனைக் கன்றாக வைத்துக்கொண்டு பத்ம பாத்திரத்தில் (தாமரை) வாக்கின் இனிமை அழகு ஆகிய பாலைக் கறந்தார்கள். ஓ மிகுந்த அதிர்ஷ்டமுள்ள விதுரரே! சிராத்த தேவதைகளான பிதுருக்கள் அரியமா வென்பவரைக் கன்றாக வைத்துக்கொண்டு அயக்மமான (சூளையில் வைக்கப்படாத) மண் பாத்திரத்தில் கவ்யமாகிய க்ஷீரத்தைக் கறந்தார்கள். ஸித்தர்கள் கபிலரைக் கன்றாக வைத்து ஆகாயமாகிய பாத்திரத்தில் ஸங்கல்ப மாத்திரத்தாலுண்டாகும் அணிமா முதலிய ஸித்திகளையும், வித்தியாதாரர் முதலியவர்கள் ஆகாசத்தில் ஸஞ்சரிப்பதாகிய வித்யைகளையும் கறந்தார்கள். கிம் புருஷர்கள் முதலிய மாயையில் ஆசையுள்ளவர்கள், மயனென்பவனைக் கன்றாக வைத்துக் கொண்டு மறைகிறது. முதலிய அற்புதமான மாயைகளைச் செய்பவர்களுடையதும். நினைத்த மாத்திரத்தில் கிடைக்கக்கூடியதுமான மாயா சக்தியைக் கறந்தார்கள். யக்ஷர்களும், ரக்ஷஸ்ஸுகளும், மாம்ஸத்தைப் பூஜிக்கும் பிசாசங்களும், பூதகணங்களும் உருத்திரனைக் கன்றாக வைத்துக்கொண்டு கபாலத்தில் இரத்தமாகிய மத்யத்தைக் கறந்து கொண்டார்கள். படமில்லாத பாம்புகளும், தேள் முதலிய விஷ ஜந்துக்களும், படமெடுக்கக் கூடிய ஸர்ப்பங்களும் நாகங்களும்,

(கர்த்ருவின் ஸந்நதியிலுண்டானவை) தக்ஷகனைக் கன்றாக வைத்துக் கொண்டு பிலமாகிய பாத்திரத்தில் விஷமாகிய பாலைக் கறந்தன. பசுக்கள் பரமசிவன் உடைய வாகனமாகிய விருஷபத்தைக் கன்றாக வைத்துக்கொண்டு வனமாகிய பாத்திரத்தில் புற்களாகிய பாலைக் கறந்தன. மாம்ஸத்தைப் புஜிக்கும் புலி முதலியவைகள் சிங்கத்தைக் கன்றாக வைத்துக் கொண்டு பூச்சி முதலிய சரங்களையும் பழங்கள் முதலிய அசரங்களையும் கறந்தன. விருக்ஷங்கள் ஆலமரத்தைக் கன்றாக வைத்துக்கொண்டு தனியாக முளைக்கும் சக்தியாகிய பாலைக் கறந்தன. மலைகள் ஹிமவானென்ற பர்வதத்தைக் கன்றாக வைத்துக் கொண்டு தங்களுடைய தாழ்வரைகளில் பலவகையான தாதுக்களாகிய பாலைக் கறந்தன. இப்படி எல்லாப் பிராணிகளும் தங்கள் தங்கள் பாத்திரங்களில் தங்களுக்கிஷ்டமான வஸ்துக்களைப் பிருது சக்கரவர்த்தி யினால் காட்டப்பட்ட பூமிதேவியினிடமிருந்த பெற்றுக் கொண்டார்கள். அந்த பூமியானவள் ஸகல வஸ்துக் களையும் கொடுக்கக்கூடியவள். இப்படி பாத்திர பேதத்தாலும் வத்ஸ (கன்று) பேதத்தாலும் பல வகையான அன்னத்தை அவரவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

28–32. அதன் பின்பு அரசன் மிகவும் பிரியம் உள்ளவராகி பிராணிகளுக்கு ஸகல இஷ்டத்தையும் கொடுத்த பூமிதேவியைத் தமக்குப் புத்தரியாக வைத்துக் கொண்டார். மேலும் வேன புத்திரராகிய அனந்தச் சக்கரவர்த்தி தம்முடைய வில்லின் நுனியால் மலைகளை உடைத்து தூளியாகச் செய்து பெரும்பாலும் பூமியை ஸமமாகச் செய்தார். பின்பு

அந்த அரசன் ஜனங்களுக்கு ஜீவனத்தைக் கொடுத்துக் காப்பாற்றுகிறவராகையால் ஜனங்கள் வசிப்பதற்கு கிராமங்களையும், பட்டணங்களையும், பலவகையான துர்க்கங்களையும், இடைச்சேரிகளையும், பசுக்கள் வசிக்கும் இடங்களையும், ஸைன்னியம் தங்கியிருக்கும் இடங்களையும், தங்கம் முதலிய தாதுக்கள் விளையும் ஸ்தானங்களையும், பயிரிடுவோர்கள் (குடியானவர்கள்) வசிக்குமிடங்களையும், மலையின் சமீபத்திலுள்ள கிராமங்களையும் தனியே ஏற்படுத்தினார்.. அந்தச் சக்ரவர்த்தியின் ராஜ்ய காலத்திற்குமுன் இம்மாதிரியான ஏற்பாடில்லை. இப்பொழுது ஜனங்கள் அவரவர்களுக்கு இஷ்டமான இடங்களில் பயமில்லாமல் வசித்துக் கொண்டிருந்தார்கள்.

அத்தியாயம்–19

பிருதுவின் அச்வமேதக் குதிரை காணாமற் போனது

1–25 எந்தவிடத்தில் ஸரஸ்வதி நதி கிழக்கு முகமாகப் ப்ரவகிக்கிறதோ, எது ப்ரஹ்மவர்த்தமெனப் படுகிறதோ, அந்த மனுவின் க்ஷேத்திரமாகிய புண்ணிய பூமியில் அந்த பிருது சக்கரவர்த்தியானவர் நூறு அச்வமேதங்களை அனுஷ்டிப்பதாக ஸங்கல்பஞ் செய்தார். மஹேந்திரன் அரசனுடைய அபிப்ராயத்தை அறிந்து, தம்மைப்போல நூறு யாகஞ் செய்வதற்குப் பிருதுவும் ஆரம்பித்தார்" என்று நினைத்துப் பொறாமையை அடைந்தார். அந்த யாகத்தில் யக்ஞபதியும், ஸகல லோகங்களுக்குக் குருவும், ஸகல ஸ்வரூபியுமான ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் ப்ரஹ்ம தேவருடனும், பரமசிவனுடனும் பிரத்யக்ஷமாக அவ்விடத்தில் ப்ரகாசித்தார். அப்பொழுது லோகபாலர்களும், அவர்களுடைய வேலைக்காரர்களும், கந்தர்வர்களும், முனிகளும், அப்ஸரஸ்ஸுகளும், ஸித்தர்களும், வித்யாதரர்களும், தைத்தியர்களும், தானவர்களும், குஹ்யர்கள் முதலியவர்களும், ஸுநந்தர், நந்தர் முதலிய பகவானுடைய பார்ஷத கணங்களும், கபிலரும், நாரதரும், தத்தரும், ஸனகர் முதலிய யோகிகளும், பாகவதர்களும், அவர்களை ஸேவிக்க விருப்பமுள்ளவர்களும் அவ்விடம் வந்து கூடியிருந்தார்கள். மேலும் அந்த யாகத்தில் ஸகல காமங்களையும் கொடுக்கக்கூடிய பூமியானவள் ஹவிஸ்ஸையுண்டு பண்ணினது மல்லாமல் யஜமான் உடைய இஷ்டப்படி ஸகல பொருள்களையுமுண்டு

பண்ணினாள். நதிகள் பால், தயிர், அன்னம், பானம், நெய், மோர் முதலிய ரஸபதார்த்தங்களை உண்டு பண்ணின. பலவகையான சரீரமுள்ள மரங்கள் தேன் போலினிமையான பழங்களை யுண்டு பண்ணின. சமுத்திரங்கள் இரத்தினங்களைக் குவியலாகக் குவித்தன. பர்வதங்கள் நான்கு வகையான அன்னத்தை உண்டுபண்ணின. லோகபாலர்களும் மற்றவர்களும் காணிக்கைகளைக் கொண்டுவந்தார்கள். ஸ்ரீ மஹா விஷ்ணுவையே தெய்வமாகக் கொண்ட அந்தப் பிருது சக்கரவர்த்தியின் யாக ஸம்ருத்தியைப் பார்த்து இந்திரன் அசூயை அடைந்து அதற்கு விக்கினஞ் செய்தார். எப்படியெனில் கடைசியான யாகம் நடக்கும் போது மஹேந்திரன் மறைந்து யாகக்குதிரையை அபகரித்தார். இப்படி மிகுந்த வேகமாக ஆகாசத்தில் குதிரையுடன் செல்லுகிறவனும் அதர்மத்தில் தர்ம புத்தியை யுண்டுபண்ணுகிறவனும், வேஷதாரியான பாஷண்டனுமான மஹேந்திரனை அத்ரிமஹரிஷி கண்டார். பிருதுவினிடமும் தெரிவித்தார். அப்பொழுது பிருதுவின் புத்திரர் மிகுந்த கோபத்துடன் நில்லு நில்லு" என்று சொல்லிக் கொண்டு பின்தொடர்ந்தார். அப்பொழுது ஜடைகளைத் தரித்தவராயும் தர்மமே சரீரமெடுத்திருப்பது போலிருந்தபடியால் அவரிடம் பாணத்தைப் ப்ரயோஹியாமல் பிருதுவின் புத்திரர் திரும்பினார். அதனைக் கண்ட அத்திரியானவர் 'யக்ஞத்தைக் கெடுப்பவனும்' தேவர்களுக்குள் அதமனுமான இந்திரனைக் கொல்லும் என்று தூண்டினார். அதனைக் கேட்ட பிருதுவின் புத்திரர் மிகுந்த கோபத்துடன் யானையைச் சிங்கம்போல் ஆகாசத்தில் வேகமாகச் செல்லும் இந்திரனைப் பின் தொடர்ந்தார். அப்பொழுது தேவேந்திரன் அந்த

உருவத்தையும் குதிரையையும் விட்டு அந்தர்த்யானம் அடைந்தார் (மறைந்திருந்தார்). அப்பொழுது வீர பிருதுவின் புத்திரர் அந்தக் குதிரையுடன் பிதாவிடம் சேர்ந்தார். அவருடைய அற்புதமான காரியத்தைக் கண்டு மகர்ஷிகள் சந்தோஷித்து அவருக்கு விஜிதாச்வர் என்று (குதிரையை ஜயித்தவர்) பெயர் கொடுத்தார்கள். மறுபடியும் மஹேந்திரன் கடுமையான இருட்டை மாயையால் ஸிருஷ்டித்து அதில் மறைந்து கொண்டு ஸ்வர்ணமயமான ரசனையால் கட்டப்பட்ட யாகக்குதிரையை யூபத்தின் நுனியிலிருந்து தூக்கிக் கொண்டு போனார். அப்பொழுதும் அத்திரி மஹர்ஷியானவர் விஜிதாச்வருக்கு மஹேந்திரனைக் காண்பித்தார். அப்பொழுது இந்திரன் கபாலம், கட்வாங்கம் ஆகிய 'இவைகளைத் தரித்திருந்தபடியால் சூரனாகிய விஜிதாச்வர் அவரை உபத்ரவிக்கவில்லை. அதனைக் கண்ட அத்ரி மஹர்ஷி மஹேந்த்ரனை கொல்லும்படி விஜிதாச்வரரை தூண்டினார். விஜிதாச்வர் கோபத்துடன் பாணத்தைப்ரயோகித்தார். அதனைக் கண்ட மஹேந்திரன் பயந்து குதிரையை விட்டு, கண்ணுக்கு புலப்படாமல் மறைந்தார். சூரராகிய விஜிதாச்வர் தம்முடைய குதிரையைக் கிரகித்துக் கொண்டு பிதாவினுடைய யாகசாலை சென்றார். இப்படி இந்திரன் யாகக் குதிரையை அபகரிப்பதற்காக எந்த ரூபங்களை எடுத்துக் கொண்டாரோ அந்தத் துஷ்டமான ரூபங்களை சொல்ப ஞானம் உள்ளவர்கள் கிரஹித்துக் கொண்டார்கள். அவைகள் பாபத்திற்கு அடையாளங்கள். அவைகளே பாஷண்ட விங்கமெனப்படுகின்ற இந்திரனால் கிரஹிக்கப்பட்ட வைக்ளும், விடப்பட்ட நல்மார்க்கங்கள் போலத் தோன்றுகிறவைகளும், யுக்தி வாதங்களுள்ளவைகளு

மாகிய உபதர்மங்களைத் தர்மமென்று சிலர் நினைத்தார்கள். அவர்கள் ஜைனர்களும், பௌத்தர்களுமேயாவர்.

26–38 விசேஷ கீர்த்திமானாகிய பிருதுவானவர் அதனையறிந்து இந்திரனிடத்தில் கோபங் கொண்டு வில்லில் பாணத்தை ஸந்தானஞ் செய்தார். அப்பொழுது ரித்விக்குகள், இந்திரனைக் கொல்ல முயற்சித்தவரும், பார்க்க முடியாதவரும், மிகுந்த பராக்கிரமமுள்ளவருமான அரசனை நோக்கி, 'மிகுந்த புத்திசாலியாகிய ஓ மஹாராஜ! யாகஞ் செய்வதாக ஸங்கல்பஞ் செய்து கொண்டிருக்கும் நீர் விஹிதமான பசுவதத்தை விட வேறு வதஞ் செய்வது உசிதமல்ல. உம்முடைய யாகத்தைக் கெடுக்க யத்தனித்தவனும், உமது கீர்த்தியால் மழுங்கிய காந்தியுள்ளவனுமான இந்திரனை நாங்கள் சுக்ல யஜுர்வேத மந்திரங்களால் அழைத்து அவரை அக்கினியில் ஹோமஞ் செய்கிறோம். நீர் ஒன்றும் செய்ய வேண்டாம், என்று தடுத்தார்கள். ஓ விதுரரே பின்னுமவர்கள் ஸ்ருக்கைக் கையில் வைத்துக் கொண்டு ஹோமஞ் செய்தார்கள். அப்பொழுது ப்ரஹ்மதேவர் அவ்விடம் வந்து ரித்விக்குகளை நோக்கி, "ஓ ப்ரஹ்மணர்களே! யக்ஞத்தால் ஆராதிக்கப்படும் தேவர்கள் இந்திரனுடைய ஸ்வபாவமாகையால் அந்த இந்திரனைக் கொல்வது உசிதமல்ல. மேலும், இந்த யாகத்தைக் கெடுக்க விரும்பிய இந்திரனால் தர்ம மார்க்கத்திற்கு விருத்தமான பாஷண்ட மார்க்கம் உண்டு பண்ணப்பட்டது. இந்திரன் பலசாலியாகையால் அவருடன் விரோதிக்கக் கூடாதென்று கருத்து.) பிருது சக்கரவர்த்தி தொண்ணூற்று ஒன்பது யாகங்களுள்ளவராக இருக்கட்டும், நூறாவது யாகம்

பூர்த்தி யாகாதிருந்தாலும் இந்திரனை விடப் பிருது கீர்த்தியுள்ளவராக இருப்பார் என்று சொல்லிப் பிருதுவை நோக்கி, 'நீர் மோக்ஷ தர்மத்தை அறிந்தவர்: இந்திரனிடம் நீர் கோபங்கொள்வது உசிதமல்ல. இதுவரையில் உம்மால் நன்றாக அனுஷ்டிக்கப்பட்ட யாகங்கள் போதும். உமக்கு க்ஷேமமுண்டாகும். நீரும், இந்திரனும் உத்தமச்லோகராகிய பகவானுடைய அம்சம்; யாகத்திற்கு விக்கினம் நேர்ந்ததைப் பற்றி யோசிக்க வேண்டாம். ஓ மஹாபாக்ய முள்ளவரே! என்னுடைய வார்த்தையைச் சிரத்தையுடன் கேளும். தெய்வவிருத்தமான கார்யம் சௌகரியத்தாற் செய்ய முடியாததே யாகும். மனதில் கோபத்திற்கு இடங் கொடுத்தால் மோஹமும் உண்டாகுமே யல்லாமல் சாந்தி உண்டாகிறதில்லை. ஆனதால் இந்த யாகத்தை நிறுத்திவிடும். இதனால் தேவர்களுக்கு ஆக்ரஹம் உண்டாகிறது. அதனால் தர்மவிரோதமான பாஷண்ட மார்க்கங்கள் உண்டாயிருக்கின்றன. உம்முடைய யாகக் குதிரையை அபகரித்தவராகிய இந்திரனால் உண்டுபண்ணப்பட்டவைகளும், மனோஹரங்களுமான பாஷண்ட மார்க்கத்தில் ஜகத் ஆசைப்படுகிறது. பாரும், மேலும், வேனனுடைய அபசாரத்தால் ஒளிந்து போன சாஸ்திர சம்மதமான தர்மத்தைக் காப்பாற்றுகிறத

ற்காகவே நீர் பூமியில் அவதரித்த விஷ்ணுவின் கலையாக இருக்கிறீர். அப்படிப்பட்ட நீர் இந்த ஜகத்தின் உற்பத்தியை யோசித்து ப்ரஜாபதிகளுடைய சங்கல்பத்தை நிறைவேற்றும். மிகவும் பயங்கரமான பாஷண்ட மார்க்கமே இந்திரனுடைய மாயை, அது உபதர்மங்களுக்கு மாதாவாக இருக்கிறது. அதனை உலகத்தில் பரவாமல் தடுக்க வேண்டும்" என்று ஆக்ஞாபித்தார்.

39–42 இப்படி லோகக் குருவாகிய ப்ரஹ்மதேவரால் ஆக்ஞாபிக்கப்பட்ட அரசன் மஹேந்திரனிடம் விரோதத்தை விட்டு அவரிடம் சிநேஹித்தார். பின்பு யாகத்தை நிறுத்தி அவபிருத ஸ்நானஞ் செய்தார். அப்பொழுது அவருடைய யாகத்தில் பூஜிக்கப்பட்ட தேவர்கள் அவருக்கு வரம் கொடுத்தார்கள். ப்ராஹ்மணர்களுடைய வாக்கானது பொய்யாகாதானதால் ப்ராஹ்மணர்கள் அரசனிடம் தக்ஷிணையைப் பெற்று சந்தோஷமடைந்து அவரை நோக்கி, "ஓ மிகுந்த பராக்ரமுள்ளவரே! உம்முடைய யாகத்திற்காக வந்த பிதிருக்கள், தேவரிஷிகள், மனிதர்கள் ஆகிய எல்லாரும் உம்மால் தானத்தாலும், மானத்தாலும் பூஜிக்கப் பட்டார்கள்" என்று சொல்லி அரசர்களுக்குள் முந்தியவராகிய அவருக்கு ஆசீர்வாதஞ் செய்தார்கள்.

பகவான் பிருதுவை அனுக்கிரஹித்தது

1–16. பின்பு ஸ்ரீ மஹாவிஷ்ணு இந்திரனுடன் பிருதுவின் யக்ஞத்தால் நன்றாக ஆராதிக்கப்பட்டு அந்த அரசனை நோக்கி, "உம்முடைய அச்வமேதத்திற்கு விக்னஞ் செய்பவர் இவர்தான். உம்மை ஸம்ஹாரம் செய்வதற்காக வந்திருக்கிறார். இவருடைய குற்றத்தை மன்னிக்க வேண்டும். ஓ மஹாராஜ! மனிதர்களுக்குள் சிறந்தவர்களும், புத்திசாலிகளுமாகிய ஸாதுக்கள் பிராணிகளுக்குத் துரோகம் செய்கிறதில்லை. உண்மையில் சரீரம் ஆத்மாவல்ல. (ஒருவருக்கொருவர் துரோகம் செய்தாலும் சரீரம் ஆத்மா வில்லாததானால் துரோகம் செய்ததாக ஆகிறதில்லையென்று கருத்து.) உம்மைப்போன்ற புருஷர்களும் தேவ மாயையால் மோஹிப்பார்களேயானால் பெரியோர்களைச் ஸேவித்தது வியர்த்தமாக ஆகிறது. ஆனதால் வித்வானாக இருப்பவன், "அவித்தையாலும், கர்மத்தாலும் சரீரம் ஏற்பட்டிருக்கிறது" என்று தெரிந்துகொண்டு அதனிடத்தில் அபிமானம் வைக்கமாட்டான். சரீரத்தில் அபிமானத்தை யொழித்தவன் சரீரத்தால் உண்டு பண்ணப்பட்ட வீடு, குழந்தைகள், பணம் ஆகிய இவைகளில் மமதையை (என்னுடையதென்பதை) அடைவானா? இந்த ஆத்மாசரீரம் முதலியவைகளை விட வேறானது. ஏனென்றால் ஆத்மா ஒருவர். (சரீரம் பால்யம் முதலிய அவஸ்தைகளால் அநேகம்.) ஆத்மா சுத்தர். (சரீரம் அசுத்தமானது) ஆத்மா தாமாகப் பிரகாசிப்பவர். (சரீரம் ஜடம்) ஆத்மா குணங்களற்றவர். (சரீரம் குணமுள்ளது.) ஆத்மா

எங்குமிருப்பவர். (சரீரம் அளவிடங்கியது.) ஆத்மா மறைக்கப்படாதவர் (சரீரம், கிருஹம் முதலியவை களால் மறைக்கப்பட்டது.) ஆத்மா ஸாக்ஷியாக இருப்பவர் (சரீரம் பார்க்கப்படும் வஸ்து.) ஆத்மாவிற்கு ஆத்மா இல்லை. (சரீரம் ஆத்மா உள்ளது.)

எந்தப் புருஷன் தன்னிடத்தில் இருக்கும் ஆத்மாவைத் தெரிந்துகொள்கிறானோ அவன் தேஹத்திலிருப்பவனானாலும் பிருதிவியின் குணங்களில் ஸம்பந்தப படுகிறதில்லை. ஏனென்றால் அவன் ப்ரஹ்மமாகிய என்னிடத்திலிருப்பவன்., எந்தப் புருஷன் காமனை இல்லாதவனாகிச் சிரத்தையுட ன் சுதர்மத்தை அனுஷ்டித்து என்னை உபாஸிக்கிறானோ, அவனுடைய மனம் காலக்கிரமத்தில் தெளியும் மனம் தெளிந்துடின் குணஸம்பந்தத்தை விட்டுச் சாந்தியை அடைகிறான்: அதுவே எனக்கு ஸமமான நிலைமை, அதுவே கைவல்யம். அதுவே ப்ரஹ்மாவஸ்தை. எந்தப் புருஷன் ஆத்மா உதாஸீனரென்று தேஹம், ஞானேந்திரியங்கள்; கர்மேந்திரியங்கள் மனது ஆகிய இவைகளுக்கு அதிபதி யென்றும். கூடஸ்தரென்றும் தெரிந்து கொள்கிறானோ, அவன் மோக்ஷத்தை அடைகிறான். திரவ்யம், கிரியை, காரகம், சிதாபாஸம் ஆகிய இவைகளின் ஸ்வரூபமும், வெவ்வேறு அடையாளமுள்ளதுமாகிய தேகத்திற்கு ஸம்ஸாரமே யொழிய ஆத்மாவிற்கில்லை. ஆனதால் என்னிடத் திலேயே மனத்தச் செலுத்திய வித்வான்கள் ஆபத்து வந்தாலும், ஸம்பத்து வந்தாலும் அவைகளில் துக்கத்தையாவது சந்தோஷத்தையாவது அடைகிற தில்லை: நீர்வித்வானாகையால் சுகத்திலும், துக்கத்தி லும், உத்தமர்களிடத்திலும், சமபுத்தியுள்ளவராகி

இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கி என்னால் ஏற்படுத்தப்பட்ட மந்திரி முதலியவர்களுடன் ஸகல லோகத்தையும் காப்பாற்றும். அரசனுக்குப் பிரஜை களை ஸம்ரக்ஷிப்பதே முக்கிய தர்மம். பிரஜைகளால் செய்யப்படும் புண்ணியத்தில் ஆறிலொருபாகம் அரசனை அடைகிறது. அதனால் அரசன் பரலோகத்தில் சுகத்தை அடைகிறான். எந்த அரசன் பிரஜைகளிடம் ஆறிலொரு பாகம் வரியைப் பெற்றுக் கொண்டு அவர்களைக் காப்பாற்றவில்லையோ, அவன் பாவத்தை அடைகிறான். இப்படி ப்ராஹ்மணர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டதும், பரம்பரையாக வந்ததுமான தர்மத்தை முக்கியமாக அனுஷ்டித்தும், அர்த்த கர்மங்களில் அதிக ஆசைப்படாமலும் லோகத்தைக் காப்பாற்றும். ஜனங்கள் உம்மிடத்தில் அனுராகத்தை அடைவார்கள். கொஞ்ச காலத்தில் உம்முடைய வீட்டிற்குச் சில ஸித்தர்கள் வருவார்கள். அவர்களை தரிசிக்கலாம். ஸம புத்தியுள்ளவர்ககளிடத்தில் வசிக்கும் என்னை யாகங்களாலும், தபஸினாலும், யோகங்களாலும் இலகுவாக அடைய முடியாது. அப்போர்ப்பட்ட நான் உம்முடைய குணங்களாலும், ஸ்வபாவத்தாலும் கட்டப்பட்டிருக்கிறேன். ஆனதால் இஷ்டமானவரத்தை என்னிடம் பெற்றுக்கொள்ளும்" என்று அனுக்ரஹித்தார்.

17–31. லோகத்தை ஜயித்தவராகிய அந்தப் பிருது சக்ரவர்த்தியானவர் பகவானுடைய இம்மாதிரியான ஆக்ஞையைச் சிரஸால் வகித்தார். அப்பொழுது மஹேந்திரன் பிரீதியுடன் பிருதுவின் பாதங்களில் வணங்கினார். தாம் செய்த கார்யத்தை நினைத்து வெட்கமடைந்திருக்கும் அவரைப் பிருது சக்கரவர்த்தி

பிரீதியுடன் தழுவி, அவரிடமிருந்து விரோதத்தை விட்டார். ஸகல ஜகத்ருடியாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணு தம்முடைய லோகஞ் செல்ல வேண்டியவரானாலும், பிருகு சக்கரவத்தியால் மிகவும் பூஜிக்கப்பட்டு, அவருடைய விசேஷ பக்தியால் சந்தோஷமடைந்து, தாமரை மலர் போன்ற கண்களால் பிருதுவை அனுக் கிரஹித்து அவ்விடம் கொஞ்சநேரம் தாமதித்தார். அரசர்களுக்குள் முந்தியவராகிய அந்த பிருதுவானவர் அப்படிப்பட்ட பகவானைக் தரிசித்துக் கைகூப்பி ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி, அதனால் கண்டமடைத்துப் பேச முடியாதவராகி மனத்தில் பகவானைத் தியானித்துக் கொண்டிருந்தார். இப்படி கொஞ்ச நேரம் சென்றபின் பிருதுவானவர் கண்களை துடைத்துக்கொண்டு கண்களுக்கு எதிரிலிருப்பவரும், பூமியின் மீது காலை ஊன்றிக் கொண்டவருமான பகவானை நோக்கி, "ஓ கைவல்யத்திற்கு அதிபதியே, பிரபுவே. வரங்களைக் கொடுப்பவரே! அஹங்கார ஸ்வபாவமுள்ள ப்ரஹ்மதேவர் முதலியவர்களுக்கும் அதிபதியான உம்மிடத்திலிருந்து நாரகிகளான பிராணிகளுக்கும் கிடைக்கக்கூடிய வரத்தை வித்வான் அபேக்ஷிப்பானா? ஆனதால் எனக்கு வரத்தில அபேக்ஷையில்லை மகான்களுடைய முகமாகப் பெருகி வரும் உம்முடைய பாதாரவிந்தத்தின் மதுவானது கைவல்யத்திலும் கிடைப்பது அரிதாகையால் அந்தக் கைவல்யமும் எனக்கு வேண்டாம். உம்முடைய கதையைக் கேட்பதற்கு அநேக காதுகளை எனக்கு கொடும் இதுவே எனக்கு வேண்டிய வரம்.

ஓ உத்தமசுலோக! நல்வினையைக் கொடுக்கும்

பெயருள்ளவரே! உம்முடைய பாதாரவிந்தத்தின் மதுவானது (உம்முடைய சரிதமானது) மஹான்களால் உபதேசிக்கப்பட்டால் தத்வ மார்க்கத்தை மறந்தவர் களான அற்ப யோகிகளுக்கும் திவ்ய ஞானத்தைக் கொடுக்கும். ஆனதால் மற்ற வரங்களால் பயனென்ன? (பக்தியினாலேயே மோக்ஷங் கிடைக்குமென்று தாத்பர்யம்.) ஓ மங்களகரமான கீர்த்தியுள்ளவரே! பெரியோர்கள் முகமாக ஒரு தடவையாவது தெய்வச் செயலாகக் புண்யகரமான உம்முடைய சரிதத்தை கேட்டவன் குணத்தையறியும் சுபாவமுள்ளவனானால் அதில் ஆசைப்படாமலிருப்பானா? அப்படி ஆஸக்தி அடையாமலிருந்தால் அவன் பசுவிற்கு ஒப்பானவனா கிறான். லக்ஷ்மீதேவியானவள் ஸகல புருஷார்த்தங்களை அடையவிரும்பி அந்தப் பக்தியே தனக்கு வேண்டுமென்று கேட்டுக் கொண்டாள். ஸ்ரீதேவிபோல் நானும் ஸகல புருஷர்களுக்குள் சிறந்தவரும், ஸகல குணங்களுக்கு இருப்பிடமுமான உம்மை மிகுந்த ஆசையுடன் பூஜிக்கிறேன். ஒரே விஷயத்திற்காக முயற்சிப்பவர்களுமான எங்களிருவர்களுக்கும் கலகம் உண்டாகாமலிருக்குமா? ஓ ஜகதீச! நாங்கள் ஒரே காரியத்திற்காக முயன்றவர்களாகையால் லோக மாதாவாகிய லக்ஷ்மீதேவியுடன் எனக்கு விரோதம் உண்டானாலும் உமக்கு என்னிடத்தில் தான் பிரியமிருக்கும். நீர் தீனர்களிடத்தில் பிரீதி செய்யும் ஸ்வபாவமுள்ளவர்; மேலும் தம்முடைய மஹிமையால் திருப்தி யடைந்தவராகிய உமக்கு ஸ்ரீ தேவியால் என்ன பிரயோஜனம்? ஸாதுக்கள் ஞானம் வந்த பிறகும் மாயாகாரியத்தில் ஸம்பந்தப்படாதவரான உம்மையே தியானிக்கிறார்கள். ஓ பகவான்! அவர்களுக்கு உம்முடைய பாதங்களை ஸ்மரிப்பதைவிட வேறு

பயனிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மேலும் "இஷ்டமானவரத்தை கேட்கலாம்" என்று உம்மால் சொல்லப்பட்ட வார்த்தை என்னை ஏமாற்றுவதற்காகச் சொல்லப்பட்டதென்று நினைக்கிறேன். உம்முடைய வார்த்தையால் மோஹித்தே ஜனங்கள் கர்மத்தை செய்கிறார்கள். ஆனதால் ஓ ஈச! உம்முடைய மாயையால் பரமாத்ம ஞான மில்லாமலிருக்கும் ஜனத்தைக் காப்பாற்ற வேண்டும். தகப்பன் புத்திரனுக்கு அனுகூலத்தைச் செய்வதுபோல நீர் எனக்கு இதமானதைக் செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

32–40. அதனைக்கேட்ட பகவான் அரசனை நோக்கி, "இம்மாதிரியான எண்ணம் உண்டானது தெய்வாதீனமேயாம். என்னிடத்தில் பக்தி செய்வதால் என்னுடைய மாயாபந்தம் நிவர்த்தியாகும்; நீர் கேட்டுக் கொண்டபடி என்னிடத்தில் உமக்கு பக்தி உண்டாகட்டும். என்னுடைய ஆக்ஞையின் படி நடப்பவனுக்கு ஸகல மங்களமும் உண்டாகும். ஆனதால் என் உத்தரவின்படி நீர் நடக்கவேண்டும் என்னிடத்தில் ஏகாந்த பக்திசெய்பவர்கள் ஸ்வர்க்கம், மோக்ஷம், நரகம் ஆகிய இவைகளை ஸமமாகப் பார்க்கிறார்கள். நல்ல நிச்சயஞ் செய்து கொண்மூர் என்னுடைய வார்த்தையில் சிரத்தை வைத்து இந்திரனிடமிருந்து கோபத்தை நீர் விட்டபடியால் உம்மிடத்தில் நான் ஸந்தோஷமடைந்தேன். கோபத்தை யடக்குவது மிகவும் கஷ்டமான காரியமானாலும், நீர் கோபத்தை ஜயித்தபடியால் என்னை பூஜித்ததாக ஆயிற்று" என்று பிருது சக்ரவர்த்தியின் வார்த்தையைப் புகழ்ந்து, அரசரால் திரும்பவும் பூஜிக்கப்பட்டு அவரை அனுக்கிரஹித்தார். சக்ரவர்த்தியினுடைய

யாகத்திற்காக வந்தவர்களான தேவர்கள், மஹர்ஷிகள், பிதிருக்கள், கந்தர்வர்கள், ஸித்தர்கள், சாரணர்கள், பன்னகர்கள், கின்னரர்கள், அப்ஸரஸுக்கள் முதலிய தேவர்கள், ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் பூதங்கள் ஆகிய இவர்களெல்லாரையும் அரசர் ஸ்ரீ மஹாவிஷ்ணுவாகப் பாவித்து வாக்கினாலும் மனத்திலும், அஞ்சலியாலும், பக்தியாலும் பூஜித்தார். அவர்களும் மிகுந்த சந்தோஷத்துடன் தங்கள் தங்கள் இருப்பிடஞ் சென்றார்கள். பின்பு அரசரும் அவருடைய உபாத்தியாயரும் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது அவர்களுடைய மனத்தை அபஹரித்துக் கொண்டு பகவானே தம்முடைய லோகஞ் சென்றார். பிருது சக்ரவர்த்தியும் தமக்குத் தரிசனங் கொடுத்து மறைந்தவரும் தேவர்களுக்குத் தேவருமான வாஸுதேவருக்கு நமஸ்காரஞ் செய்து தம்முடைய நகரஞ் சென்றான்.

நோட்டு

பூமியின் மீது: தேவர்கள் பூமியின் மீது நிற்பது வழக்கமில்லை. ஆனாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் பிருதுவினிடத்தில் மிகுந்த சந்தோஷமுள்ளவராக இருந்தபடியால் தம்முடைய ஸ்வரூபத்தை மறந்து பூமியில் நின்றார். மேலும் அவர் சந்தோஷத்தால் பரவசராக இருந்தபடியால் பூமியில் விழாமலிருப் பதற்காகக் கருடனுடைய தோளைப் பிடித்துக் கொண்டார். பகவான் பக்தர்களுக்கு சுவாதீனரென்று கருத்து — ஸ்ரீ த., வீர.

பிருது ராஜ்யபாலனஞ் செய்தது

1–7 அரசன் நகரத்திற்கு வருவதற்கு முன்னமே ஜனங்கள் பட்டணத்தை அலங்கரித்தார்கள். எப்படியெனில் முத்துக்களாலும், புஷ்பங்களாலும், மாலைகளாலும், பட்டுகளாலும், சுவர்ண தோரணங்களாலும், அந்தப் பட்டணமானது நாலு பக்கங்களிலும் அலங்கரிக்கப்பட்டது. மேலும் மிக்க வாஸனையுள்ள தூபங்களால் வாஸனை ஏற்றப்பட்டு இருந்தது. வீதிகளிலும், நாற்சந்திகளிலும் சந்தனக் குழம்பு, அகில் குழம்பு இவைகளுள்ள ஜலம் தெளிக்கப்பட்டிருந்தது. புஷ்பங்கள், அட்சதங்கள், பழங்கள், பச்சை நிறமுள்ள திரவியங்கள், நெற்பொரிகள், தீபங்கள் ஆகிய இவைகளால் பூஜிக்கப்பட்டிருந்தன. வாசற்படிகளில் வாழைகளும், பாக்குக் கன்றுகளும் கட்டப்பட்டிருந்தன. மாவிலை தோரணங்கள் எங்கும் கட்டப்பட்டிருந்தன. பின்னும் நகரவாஸிகள் தீபங்கள், காணிக்கைகள், மங்கள திரவியங்கள் ஆகிய இவைகளை எடுத்துக்கொண்டு அரசனை எதிர்கொண்டு அழைத்தார்கள். அழகான குண்டலங்களால் பிரகாசிக்கும் கன்னிகைகளும் அரசனுக்கெதிரே சென்றார்கள்.

இப்படிப் பிரஜைகளால் உபசரிக்கப்பட்டு, சங்கம் துந்துபி முதலிய வாத்திய கோஷத்துடனும், ரித்விக்குகளுடைய ஸ்வஸ்திவாசன சப்தத்துடனும் அரசன் அரண்மனைக்குச் சென்றார். எல்லாராலும் துதிக்கப்பட்டும் அரசன் கர்வமடையவில்லை.

பட்டணத்திய ஜனங்களையும், தேசத்திய ஜனங்களை யும், அவரவர்களுக்குத் தக்கபடி பிரியத்துடன் உபசரித்தார். தோஷமற்ற சரிதமுள்ளவரும் மஹான் களுக்குள் சிறந்தவருமான அந்தச் சக்கரவர்த்தி யானவர் மேலான அனேக காரியங்களைச் செய்து; தம்முடைய கீர்த்தியை உலகத்தில் பரவச் செய்து பூமியைப் பரிபாலனஞ் செய்து பரமபதம் அடைந்தார்.

8. "ஓ சௌனக! தோஷமற்ற ஸகல குணங்களால் நிறைந்ததும் பெரியோர்களால் பூஜிக்கப்பட்டதுமான ஆதிராஜனுடைய கீர்த்தியை மேற்கண்டபடி வர்ணிக்கும் மைத்திரேயரை நோக்கிப் பாகவதர்களுக்குள் சிறந்தவரான விதுரர் பின்வருமாறு கேட்கலானார்" என்று ஸூதர் சொன்னார்.

9–10 "ஓ மைத்திரேயரே! பிராம்மணர்களால் பட்டாபிஷேகஞ் செய்யப்பட்ட அந்தப் பிருது சக்கரவர்த்தி தேவர்களால் அடையக்கூடிய கௌர வத்தை அடைந்து, ஸ்ரீமகாவிஷ்ணுவின் அம்சமுள்ள வராகிப் பூமியினிடமிருந்து சகலவஸ்துக்களைக் கறந்தாரல்லவா? அந்த ஆதிராஜருடைய விக்கிர மத்தால் அனுபவிக்கப்பட்ட காமத்தையே பிந்திய ஜனங்களும் லோக பாலகர்களும் மற்ற அரசர்களும் இப்பொழுதும் உபஜீவித்திறார்கள். அவருடைய கீர்த்தியை வித்வானாகிய எவன்தான் கேட்க விரும்ப மாட்டான்? ஆனதால் சுத்தமாகிய அவருடைய சரிதத்தைச் சொல்லும்" என்று விதுரர் கேட்டார்.

11–15 அதனைக் கேட்ட மைத்திரேயர் விதுரரை

நோக்கி, "கங்கா நதிக்கும் யமுனா நதிக்கும் மத்தியிலுள்ள க்ஷேத்திரத்தில் வசித்துக் கொண்டு, புண்ணியத்தைக் குறைக்க விரும்பி பிராரப்த கர்மத்தால் கிடைத்த போகங்களை அனுபவித்தார். மேலும் அவர் ஏழு துவீபங்களுக்கும் தாமே அரசராக இருந்தார். அவருடைய ஆக்ஞையானது பிராம்மணர்கள் பகவத் பக்தர்கள் ஆகிய இவர்களைத் தவிர மற்றவர்களிடம் தடையற்றிருந்தது. ஒரு காலத்தில் அந்த அரசன் மகாசத்ரத்தில் தீக்ஷை செய்துகொண்டார். அதில் ப்ரஹ்மரிஷிகளும், தேவரிஷிகளும், தேவர்களும் கூடியிருந்தார்கள். அந்த ஸதஸ்ஸில் அரசரால் தக்கபடி மரியாதை செய்யப்பட்ட பெரியோர்களெல்லோரும் உட்கார்ந்திருக்கும்பொழுது நக்ஷத்திரங்களின் நடுவிலிருந்து சந்திரன் எழுந்திருந்தாற்போல் அரசர் எழுந்திருந்தார். அவர் உயரமான சரீரமுள்ளவர்; பருத்தவைகளும், நீண்டவைகளுமான கைகளுள்ளவர்; பொன்னிற முள்ளவர்; செந்தாமரை போன்ற கண்களுள்ளவர். அழகான மூக்குள்ளவர். பிரஸன்ன முகமுள்ளவர். பருத்த தோள்களுள்ளவர். அழகான பற்களுள்வர். ரமணீயமான சிரிப்புள்ளவர். மூன்று மடிப்புள்ளதும் அரசு இலைபோன்ற வடிவமான வயிறுள்ளவர். சுழல் போன்ற கொப்பூழுள்ளவர், தேஜசுள்ளவர், சுவர்ணம் போல் பிரகாசிக்கும் தொடைகளுள்ளவர், உயரமான முன்காலுள்ளவர் சூட்சுமங்களும், சுருட்டைகளும், கருமை நிறமுள்ளவைகளுமான தலை மயிருள்ளவர். சங்கம் போன்ற கழுத்துள்ளவர். விலையுயர்ந்ததான ஒரு பட்டையுடுத்திக் கொண்டும் மற்றொன்றை உத்தரீயமாகவும் தரித்திருப்பவர். விரதத்திற்காக ஆபரணங்களைத் தரித்துக் கொள்ளாமலும் இருந்தார். ஆனாலும் அவருடைய ஸகல அவயவங்களும் காந்தி

பொருந்தியவைகளாக இருந்தன. கிருஷ்ணாஜினத்தைத் தரித்திருந்தார். தர்ப்பத்தைக் கையில் வைத்துக் கொண்டிருந்தார். உசிதமான காரியங்களைச் செய்தவர் தாபத்தைப் போக்கக் கூடியவைகளும், அழகானவை களுமான கருவிழிகளுள்ள கண்களுள்ளவர். இப்படிப் பட்ட அந்தச் சக்கரவர்த்தி எல்லாரையும் ஒரு தடவை பார்த்து ஸதஸ்லிருப்பவர்கள் ஸந்தோஷப் படும்படி கேட்க மதுரமாயும் அழகான பதங்களுள்ளதும் பிரஸன்னமாகவும் சுத்தமாகவும் கம்பீரமான அர்த்தமுள்ளதுமான வார்த்தையைப் பின்வருமாறு அவசரமில்லாமல் சொல்ல ஆரம்பித்தார்.

சபைக்குரியவர்களும் இவ்விடம் வந்திருப்பவர் களுமான ஓ ஸாதுக்களே! கேட்க வேண்டும் தர்மத்தைத் தெரிந்து கொள்ள விரும்பியவர்கள். தங்களுடைய இஷ்டத்தை ஸாதுக்களிடம் தெரிவிக்க வேண்டும். ப்ரஹ்மதேவர் என்னை ஜனங்களுக்கு அரசனாக ஏற்படுத்தியிருக்கிறார். அதனால் நான் பிரஜைகளைக் காப்பாற்றுகிறேன். அவர்களுக்கு ஜீவனத்தை உண்டுபண்ணுகிறேன். அவரவர்களுடைய தர்மத்தை அனுஷ்டிக்கும்படி செய்கிறேன். பிரஜைகளை ரட்சிப்பதால் கர்மசாக்ஷியான பகவான் ஸந்தோஷ மடைகிறார். மேலும் ஜனங்களைத் தர்மம் தவறாமல் காப்பாற்றும் அரசனுக்கு எந்த லோகம் கிடைக்குமென்று வேதமறிந்தவர்கள் சொல்லுகிறார்களோ, காமங்களைக் கொடுக்கும் அந்த உலகங்கள் என்னால் அடையப் படும். மேலும் எந்த அரசன் பிரஜைகளை தர்மத்தை அனுஷ்டிக்கும்படி செய்யாமல் அவர்களிடம் வரியை மட்டில் பெற்றுக் கொள்கிறானோ, அவன் பிரஜைகள் செய்யும் பாபத்தை அடைகிறான், அவன் செய்த

புண்யமும் நசித்து விடுகிறது.

ஆனதால் ஓ பிரஜைகளே! அரசனாகிய நான் நல்ல உலகத்தை அடையும்பொருட்டு அசூயையில்லா தவர்களாகிப் பகவானிடத்தில் மனதைச் செலுத்தி, தங்கள் தங்கள் தர்மத்தை அனுஷ்டியுங்கள் (கர்மத்தைச் செய்து அதனைப் பகவானுக்கு அர்ப்பணம் செய்யுங்கள்). இப்படிச் செய்வீர்களானால் எனக்கு நல்லது செய்ததாக ஆகும். ஓ சுத்தர்களான பிதிருக்களே! தேவர்களே! மகரிஷிகளே! நீங்கள் நான் சொன்னதை அனுமோதிக்க வேண்டும். பரலோகத்தில் கிடைக்கும் பலனானது செய்கிறவனுக்கும் தூண்டுகிற வனுக்கும் அனுமோதிப்பவனுக்கும் சமமேயாகும் (கர்மத்தை அனுஷ்டிப்பது அவசியமானாலும் அதனைப் பகவதர்ப்பணம் செய்ய வேண்டியதில்லை என்று சொல்லும் சிலரை நோக்கிச் சொல்லுகிறார்) ஓ மிகவும் பூஜ்யர்களே! 'யக்ஞபதியென்ற பரமேசுவரர் ஒருவர் இருக்கிறார்' என்று சிலர் சொல்லுகிறார்கள். இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் காந்தியுள்ளவை களான போகபூமிகளும் சரீரங்களும் சில விடங்களில் காணப்படுகின்றன. பகவானில்லாதவரையில் மேற் காட்டிய பலவகையான ஜகத் இருக்க முடியாதென்று கருத்து.) மேலும் மனு; உத்தானபாதர், துருவர், ராஜசிரேஷ்டராகிய பிரியவிரதர், என்னுடைய பிதாவிற்குப் பிதாவாகிய அங்க மகாராஜன், ப்ரஹ்லாதர், பலி ஆகியவர்களும், இவர்கள் போன்ற மற்றவர்களும் ப்ரஹ்மதேவரும், பரமசிவனும், தங்களுடைய அனுபவத்தால் கர்மங்களைப் பலனைக் கொடுப்பவர் பகவான் ஒருவர் இருக்கிறார் என்று நிச்சயித்திருக் கிறார்கள். மிருத்யுவின் தௌஹித்ரரும், துக்கிக்கத்

தக்கவரும் தர்ம விஷயத்தில் மோகமடைந்தவருமான வேனன் முதலியவர்களைத் தவிர மற்றவர்கள் மேற் காட்டிய ஸாதுக்களின் அபிப்பிராயத்தை அனுசரித் தவர்களேயாம்.

தர்மம், அர்த்தம், காமம், ஸ்வர்க்கம், மோட்சம் இவைகள் ஒன்றோடொன்று சேர்ந்து ஏகரூபமாக இருப்பதால், மேற்காட்டியபடி வித்வான்கள் நினைக்கிறார்கள். (வித்வான்களுடைய அனுபவத்தால் பகவானிருப்பதாகத் தெரிவதால் கர்மத்தாலேயே ஜகத் உண்டாகிறதென்பது சரியல்ல) மேலும் எவருடைய பாதாரவிந்தத்திலிருந்து உண்டான கங்கா நதியானது எப்படிப் பாவங்களைப் போக்கடிக்கிறதோ, எவரைச் சேவிக்க வேண்டுமென்ற விருப்பமே ஒவ்வொரு நாளும் விருத்தியடைந்து துஷ்விகளுக்கு அனேக ஜன்மத்தின் பாபங்களையும் போக்கடிக்கிறதோ, எவருடைய பாதத்தை ஆசிரயித்த புருஷன் மனத்தில் ஸகலமலங் களையும் நிவர்த்தித்துக் கொண்டு விஷயங்களில் பற்றுதல் நீங்கினவனாகி மிகுந்த ஞானபலமுள்ள வனாகிய துக்கத்தைக் கொடுக்கும் ஸம்ஸாரத்தைத் திரும்பவும் அடையமாட்டானோ, அப்படிப்பட்ட பகவானை நீங்கள் மனத்தாலும், வாக்கினாலும், சரீரத்தாலும் தங்களுக்குரிய கர்மங்களாலும் பூஜிக்க வேண்டும். பின்னும் நீங்களெல்லோரும் கபடமில்லாத வர்களாக உங்களுடைய அதிகாரத்திற்குத் தக்கபடி அர்த்தஸித்தியை உத்தேசித்து இஷ்டத்தைக் கொடுக்கும் பகவானுடைய தாமரை மலர்போன்ற பாதங்களை உபாஸியுங்கள்.

இந்தப் பகவான் உண்மையில் சுத்தரும்,

விஞ்ஞானகனரும், நிர்க்குணமாயிருந்ததும் கர்ம மார்க்கத்தில் பலவகையான குணங்களுள்ள யக்ஞஸ்வரூபியாக இருக்கிறார். அந்தக் குணங்கள் எவையென்றால், யாகத்திற்கு வேண்டிய திரவியங்கள் (நெல் முதலியவை), வெண்மை முதலிய குணங்கள், நெல்லைக் குத்தி அரிசியாக்குவது முதலிய கிரியைகள், மந்திரங்கள், யாகத்தால் கிடைக்கும் உபகாரம், ஸங்கல்பம், பதார்த்தங்களுடைய சக்தி, ஜ்யோதிஷ்டோமம் முதலிய பெயர்கள் ஆகிய இவைகளேயாம். பிரதானம், காலம், வாஸனை, அதிருஷ்டம் ஆகிய இவைகளால் உண்டுபண்ணப்பட்ட சரீரத்தில் இந்தப் பிரபுவானவர் புத்தி ரூபமாக இருந்து ஆனந்த ரூபியாகவும் யாகத்தின் பலனாகவும் பிரகாசிக்கிறார். அக்கினியானது உண்மையில் ஒரே வகையேயானாலும் தனக்கு ஆசிரயமாகிய கட்டையின் நீளம் முதலியவை களைத் தான் அடைந்திருப்பதுபோல் தோன்றுகிற தல்லவா? (பகவானை உபாஸிக்கும்படி சொல்லி விட்டுப் பக்தி செய்து கொண்டிருப்பவர்களைப் பற்றி புகழ்கிறார்.) ஸகல தேவர்களுக்கும் அதிபதியும், அஞ்ஞானத்தைப் போக்கி ஞானத்தைக் கொடுப்ப வருமான ஸ்ரீமகாவிஷ்ணுவை என்னுடைய பிரஜை களுக்குள் எவர்கள் அவரவர்களுடைய தர்மத்தை அனுஷ்டிப்பதால் பூஜிக்கிறார்களோ, அவர்கள் என்னை அனுக்கிரகிப்பவர்களாக ஆகிறார்கள்.

மேலும் பொறுமை, தபஸ், வித்தை ஆகிய இவைகளால் மிகவும் பிரகாசிப்பவர்களும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பக்தர்களுமான ப்ராஹ்மணர்களிடத்தில் மிகுந்த ஐசுவரியத்தாலுண்டாகும் அரசர்களுடைய மதமானது ஒருபொழுதும் செல்ல வேண்டாம்.

சாசுவதராகிய புருஷோத்தமருக்கு ப்ராஹ்மணர்களே தெய்வம், பெரியோர்களுக்குள் சிறந்தவராகிய ஸ்ரீ மஹாவிஷ்ணு ப்ராஹ்மணர்களுடைய பாதாரவிந்தத்தை நமஸ்கரித்ததினாலேயே நாசமற்றவளான லக்ஷ்மீ தேவியையும் உலகத்தில் பரிசுத்தமான கீர்த்தியையும் அடைந்தார். ஸகல ஜனங்களுடைய ஹிருதய குகையில் வசிப்பவரும், தாமாகப் பிரகாசிப்பவரும், ப்ராஹ்மணர்களிடத்தில் பிரீதியுள்ளவருமான பகவான், ப்ராஹ்மணர்களைச் சேவிப்பவனிடத்திலேயே ஸந்தோஷப் படுகிறார். ஆனதுபற்றி, பகவத் தர்மத்தில் ஆசை யுள்வர்களும், வணக்க முள்ளவர்களுமான நீங்கள் ப்ராஹ்மணர்களையே சேவிக்க வேண்டும். பிராம்மணர் களை சேவிப்பதானாலேயே புருஷனுடைய சித்தமானது மிகவும் சுத்தமாகிறது. ப்ராஹ்மணர்களை விட தேவர்களுக்கு முகமாக அக்கினியானது வேறு இருக்கிறதா? அவர்களைச் சேவிப்பதினாலேயே ஆத்மஞானமும் மோக்ஷமும் கிடைக்கும். (எப்பொழுதும் ப்ராஹ்மணர்களை சேவிப்பதால் அக்னியில் யாகம் முதலியவைகள் செய்ய முடியாவிடினும் அதனால் கிடைக்கும் ஸகல பலனும் இதனாலேயே உண்டாகிறது என்பது கருத்து) ஸகல உபநிஷத்துக்களால் பிரக்ஞான ஸ்வரூபரென்று சொல்லப்படும் நித்யரான பரமாத்மா வானவர் தத்துவத்தை அறிந்தவர்களால் சிரத்தையுடன் ப்ராஹ்மணர்களுடைய முகத்தில் ஹோமம் பண்ணப் படும் ஹவிஸ்ஸை எப்படிப் புஜிக்கிறாரோ, அப்படி சைதன்யமில்லாத அக்கினியில் ஹோமம் பண்ணப் படும் ஹவிஸ்ஸைப் புசிக்கிறதில்லை. எந்தப் ப்ராஹ்ம மணர்கள் நித்யமும், சுத்தமானதும், புராதனமுமான வேதத்தைச் சிரத்தை, தபஸ், மங்களம், மௌனம், ஸம்யமம், சித்தத்தை ஒருவகையாகச் செலுத்துதல்

ஆகிய இவைகளால் தரித்து, அதன் அர்த்தத்தை விசாரிக்கிறார்களோ, எந்த (வேதத்தில் இந்த ஜகத்தானது கண்ணாடியில் பிரதிபிம்பம்போல் பிரகாசிக்கிறதோ. அப்படிப்பட்ட ப்ராஹ்மணர்களுடைய பாதாரவிந்தத்தில் ஒட்டிய தூளியை என் ஆயுளுள்ள வரையில் கிரீடத்தில் வகித்துக் கொண்டிருப்பேன்; எப்பொழுதும் அதனைத் தரிப்பதால் ஸகல பாவங்களும் நாசமடைகின்றன; ஸகல குணங்களும் பிரகாசிக்கின்றன, குணங்களுக்கு இருப்பிடமாயும், நல்ல சுபாவத்தையே தனமாக உடையவனும், நன்றியுள்ளவனும், சிரத்தையுள்ளவனுமான புருஷனை ஸகல ஸம்பத்துக்களும் அடைகின்றன. ஆனதால் ப்ராஹ்மணர்களுடைய கூட்டமும், பக்தர்களுடைய கூட்டமும், பசுக்களுடைய கூட்டமும் பகவானும், அவரைச் சேர்ந்தவர்களும் என்னிடத்தில் தயவு செய்யட்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

44–51 அதனைக் கேட்டுப் பிதிருக்களும், தேவர் களும், ப்ராஹ்மணர்களும், ஸாதுக்களும் ஸந்தோஷத் துடன் 'நல்லது நல்லது' என்று சொல்லி அரசனை கொண்டாடினார்கள். உலகத்தில் நல்ல புத்திரனால் தகப்பன் நல்ல உலகத்தை அடைகிறான்' என்று வேதத்தில் சொல்லியிருப்பதானது உண்மையானது. ப்ராஹ்மணர்களுடைய சாபத்தால் அடிக்கப்பட்ட வேனன் ஸத்புத்திரராகிய உம்மால் நரகத்திலிருந்து காப்பாற்றப்பட்டான். ஹிரண்யகசிபு என்னும் அசுரன் பகவானை நிந்தித்து, அதனால் நரகத்தை யடைய வேண்டியவனாக இருந்தும், புத்திரனாகிய பிரகலாத ருடைய மகிமையால் நல்ல கதியை அடைந்தான். 'வீரர்களுக்குள் சிறந்தவராகிய ஓ அரசனே! ஸகல

லோகங்களுக்கும் நாதனாகிய பகவானிடத்தில் உமக்கு இம்மாதிரியான பக்தி உண்டாகி இருப்பதால் வெகுகாலம் பூமியைப் பரிபாலனஞ் செய்து கொண்டு ஜீவித்திரும், மங்களகரரும், பரிசுத்தமுமான கீர்த்தி யுள்ள ஓ மகாராஜ்! நல்வினையைக் கொடுக்கும் கீர்த்தியுள்ளவரும், ப்ராஹ்மணர்களையே தெய்வமாகக் கொண்டவருமான பகவானுடைய கதையை நீர் சொல்லுவதால் அரசனாகிய உம்மை முகுந்தராகவே நாங்கள் நினைக்கிறோம். ஓ நாதா! நீர் பிரஜை களுக்குத் தர்மத்தை உபதேசிப்பதானது அதிக ஆச்சரியமில்லை. கருணையுள்ள மகான்களுக்குப் பிரஜைகளிடத்தில் கருணை வைப்பது இயல்பேயாம். கர்மமார்க்கத்தில் கஷ்டப்படுகிறவர்களும் ஆத்மஞான மற்றவர்களுமான எங்களுக்கு அஞ்ஞானத்தைக் கடக்கும் மார்க்கமானது உம்மால் இப்பொழுது உபதேசிக்கப்பட்டது. எந்தப் பகவான் ப்ராஹ்மண ஜாதியில் பிரவேசித்து க்ஷத்திரியனையும், க்ஷத்திரிய னிடத்தில் பிரவேசித்து ப்ராஹ்மணர்களையும், அவ்விரண்டிலும் பிரவேசித்து இந்த ஜகத்தையும் தம்முடைய தேஜஸ்ஸைக் கொண்டு காப்பாற்று கிறாரோ, அந்த பகவத் சுரூபமும், மிகுந்த ஸத்வகுண முள்ளவரும், மகாபுருஷருமான உமக்கு நமஸ்காரம்" என்று சொன்னார்கள்.

அத்தியாயம்–22

பிருதுவிற்கு ஸனத்குமாரர் ஞானத்தை உபதேசித்தது

1–16. மிகுந்த பராக்கிரமுள்ள பிருதுவை நோக்கி இம்மாதிரி ஜனங்கள் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது சூரியன் போன்ற காந்தியுள்ள நான்கு மஹரிஷிகள் அவ்விடம் வந்தார்கள். ஆகாயத்திலிருந்து இறங்குகிறவர்களும், சித்தேசுவர்களும், தம்முடைய தேஜஸ்ஸினால் லோகத்தைப் பரிசுத்தப்படுத்துகிறவர் களுமான ஸனத்குமாரர் முதலியவர்களை அரசரும் அவருடைய வேலைக்காரர்களும் தரிசித்தார்கள் அவர்களைக் கண்டவுடன் வெளியிற்சென்ற பிராணன் களை திரும்பவும் அடைய வேண்டுமென்ற எண்ணத் துடன், ஸுதஸ்யர்களுடனும், மந்திரி முதலியவர் களுடனும் பிருது சக்கரவர்த்தி எழுந்திருந்து எதிர்கொண்டழைத்தார். அது ஜீவன், கந்தம் முதலிய குணங்களைக்கண்டு அவைகளைக் கிரஹிக்க ஆசைப் பட்டுத் தயாரானது போல இருந்தது. அவர்களுடைய கௌரவத்தால் அரசன் அவர்களுக்கு வசப்பட்ட வராகித் தலைவணங்கி, சாஸ்திர முறைப்படி அர்க்கியம் முதலியவைகளைக் கொடுத்துப் பூசித்தார். பின்னுமவர் பெரியோர்களுடைய அனுஷ்டானத்தின் படி அந்த சித்தர்களுடைய பாதங்களை அலம்பி அந்த சுத்தமான தீர்த்ததைத் தலையில் புரோக்ஷித்து கொண்டார். இன்னுமவர் சுவர்ணமயமான ஆஸனத்தில் அவர்களை வீற்றிருக்கச் செய்தார். அப்பொழுது அவர்கள் தங்கள் தங்கள் வேதிகளில் பிரகாசிக்கும் அக்கினிபோலப் பிரகாசித்தார்கள்

அரசர் சிரத்தையுடன், இந்திரியங்களை அடக்கிக் கொண்டும், பரம சிவனுக்கும் முந்தி பிறந்தவர் களுமான அந்த சித்தர்களை நோக்கி, "ஓ ஸகல மங்களங்களுக்கும் இருப்பிடமான சித்தர்களே! உங்களுடைய தரிசனம் யோகிகளுக்கும் கிடைப்பதரிது. உலகம் முழுவதும் சஞ்சரிப்பவர்களானாலும் எவர் களை ஜனங்கள் எங்குமிருக்கும் ஆத்மாவைப் போலப் பார்க்கவில்லையோ, எவர்கள் ஆத்ம தரிசனத்திற்குக் காரணர்களாக இருக்கிறார்களோ, அப்படிப்பட்ட உங்களுடைய தரிசனம் எனக்கு கிடைத்தது ஆச்சரியம்! என்ன புண்ணியஞ் செய்தேன். எதனிடத்தில் ப்ராஹ்மணர்களும் ஸ்ரீ பரமசிவனும், மஹா விஷ்ணுவும், அவருடைய பக்தர்களும், சந்தோஷப்படுகிறார்களோ, அவனுக்கு இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் எதுதான் கிடைக்காது? எவர்களுடைய கிருஹத்திற்குப் பெரியோர்கள் சென்று தீர்த்தம், திருமணம், பூமி. யஜமானன், அவனுடைய வேலைக்காரர்கள் ஆகிய இவர்களை அங்கீகரிக்கிறார்களோ. அவர்கள் பணமில்லா தவர்களானாலும் மேலானவர்கள். எவர்களுடைய கிரகமானது பெரியோர்களுடைய பாத ஸ்பர்சத்தால் சுத்தமாகிறதில்லையோ, அந்த கிருஹங்கள் ஸம்பந்துக் களால் நிறைந்திருந்தாலும் ஸர்ப்பங்கள் வசிக்கும் மரங்களுக்கொப்பானவைகளேயாம். ஓ ப்ராஹ்மண சிரேஷ்டர்களே! நல்வரவா, மோஷத்தையடைய விரும்பி, பால்யத்திலேயே பெரியவைகளான விரதங்களைச் சிரத்தையுடன் அனுஷ்டிக்கிறீர்கள். இந்திரியங்களைத் திருப்தி செய்வதற்காகவே புருஷார்த்தங்களைத் தெரிந்து கொள்கிறவர்களும், வியஸனங்களுக்கும் இருப்பிடமான சம்சாரத்தில் தங்களுடைய கர்மங்களால் மூழ்கினவர்களுமான

எங்களுக்கு க்ஷேமம் கிடைக்குமா? (பிறரை க்ஷேமம் விசாரிக்க வேண்டுமேயன்றி தங்களுடைய க்ஷேமத்தைத் தாங்களே விசாரிப்பது உசிதமா எனறால் அடுத்த சுலோகத்தால் சமாதானஞ் சொல்லப்படுகிறது. ஆத்மாவினிடத்திலேயே ரமித்துக்கொண்டிருக்கும் உங்களுக்கு க்ஷேமம், அக்ஷேமம் என்ற பேதங்களில்லா லாமையால் நீங்கள் க்ஷேமமா என்று கேட்பது உசிதமல்ல. ஆனதால் தபஸ்விகளுக்கு மித்திரர்களான உங்களிடத்தில் மிகுந்த பிரீதியுடன் நான் கேட்கிறேன். "சம்சாரிகளான நாங்கள் எதனைச் செய்தால் க்ஷேமத்தை யடைவோம்." அதனைச் சொல்லவேண்டும் யோகிகளுக்கு ஆத்மாவும், ஆத்மாவைப் பிரகாசிக்கச் செய்பவருமான பகவான் பக்தர்களை அனுக்கிரஹிப் பதற்காகவே சித்தர் வேஷங்கொண்டு சஞ்சரிக்கிறார் என்றார்.

17–40. பிருது சக்ரவர்த்தியினுடைய கம்பீர அர்த்தமுள்ளதுமான நல்ல வார்த்தையைக் கேட்டு ஸனத் குமாரர் சிரித்துக்கொண்டு, அரசனை நோக்கி, "ஓ மஹாராஜ! நன்றாகக் கேட்டீர். நீர் ஸகல பிராணி களுக்கும் அனுகூலத்தை செய்யும் சுபாவமுள்ளவர். மிகவும் வித்வான்; சாதுக்களுடைய நடை இம்மாதிரி யானது. சாதுக்களுடைய சம்பாஷனையும் கேள்வியும் எல்லோருக்கும் சுகத்தை உண்டு பண்ணுகிறது. ஓ மஹாராஜ! மதுவென்னும் அசுரனைக் கொன்றவரான பகவானுடைய பாதாரவிந்தத்தில் நிரந்தரமான பக்தி உமக்கிருக்கிறது. அந்த பக்தியானது நிவர்த்திக்க முடியாத, அந்தகரணத்தின் மலத்தைப் போக்கடிக்கும் சாஸ்திரங்களை நன்றாக விசாரித்தார். ஆத்மாவைத் தவிர மற்ற விஷயங்களில் வைராக்கியம், நிர்குண

ப்ரஹ்மத்தினிடத்தில் பிரீதி வைப்பது ஆகிய இவ்விரண்டும் மனிதர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியதென்று நிச்சயமாக ஏற்படுகிறது. ப்ரஹ்மத்தினிடத்தில் பிரீதியுண்டாக வேண்டுமானால் சிரத்தையாலும் பகவத் தர்மத்தை அனுஷ்டிப்பதாலும். அத்யாத்ம விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற விருப்பத்தாலும் பகவானை உபாசிப்பதாலும், புண்ணியகரமான பகவத் கதையைக் கேட்பதாலும் பிரஹ்மத்தினிடம் நிரந்தரமான பிரீதி உண்டாகிறது. பணத்தாலேயே சந்தோஷப்படுகிறவர்கள் தாமஸர்கள். இந்திரியங்களையே திருப்தி செய்து அதனால் சந்தோஷப் படுகிறவர்கள் ராஜஸர்கள், அவர்களோடு சேராமலிருப்பதாலும், அவர்களுக்கிஷ்டமான அர்த்த காமங்களில் ஆசைப்படாமலிருப்பதாலும், நிர்ஜனமான இடத்தில் வசிக்க வேண்டுமென்ற விருப்பத்தாலும், பரமாத்மாவிடத்தில் பிரீதி உண்டாகிறது. அவைகளும் பகவானுடைய குணாமிருதத்தை பானம் பண்ணாத வரையில் (கதையைக் கேட்காவிடில்) உண்டாகாது. மேலும் பரமஹம்சர்களாகிய பெரியோர்களுடைய அனுஷ்டானத்தை அனுஸரிப்பதாலும். பிறரை ஹிம்ஸிக்காமலிருப்பதாலும். ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதமாகிய மேலான மதுவைப் பானம் பண்ணுவதாலும், இந்திரியங்களை அடக்குவதாலும், பலத்தை உத்தேசித்துக் கர்மாக்களைச் செய்யாமலிருப்பதாலும் சீதம், உஷ்ணம் இவைகளைச் சகித்திருப்பதாலும். ஸ்ரீ விஷ்ணுபக்தர்களுடைய செவிகளுக்கு அலங்காரமான பகவத் குணங்களை அடிக்கடி உச்சரிப்பதாலும் காரிய காரண ஸ்வரூபமும் குணங்களற்றதுமான ப்ரஹ்மத்தினிடத்தில் விருத்தியடையும் பக்தியாலும் விஷயங்களில் ஆசையை ஒழித்து பரமாத்மாவிடத்தில்

மிகுந்த பிரீதி உண்டாகிறது. எப்பொழுது பிரம்மத்தினிடத்தில் பிரீதியுண்டாகிறதோ அப்பொது தான் நல்ல ஆசாரியனை அடைவான்; அப்பொழுது ஞானம், வைராக்கியம் இவைகள் விருத்தியடைந்து அவைகளுடைய பலத்தால் புருஷன் அவித்யை, ராகம், துவேஷம் அபிநிவேசம் இவைகளுள்ளதும், ஜீவனை மறைக்கக் கூடியதுமான அஹங்கார தத்துவமான ஹிருதயத்தில் மறுபடி இவைகள் முளைக்காமலிருக்கும் படி, அக்கினியானது தனக்கு ஆசிரியமான கட்டையைப் போல், எரிக்கிறான், ஹிருதயமாகிற உபாதியானது எரிக்கப்பட்டால் புருஷனுக்குக் கர்த்துருத்வம் முதலிய குணங்கள் நிவர்த்தியாகின்றன. அப்பொழுது புருஷன் தனக்கு வெளியிலிருக்கும் வஸ்துக்களையும், உள்ளிருக்கும் சுக துக்காதிகளையும் பார்க்கிறதில்லை. ஏனென்றால் திருச்யம் (பார்க்கக்கூடிய). திருஷ்டா (பார்ப்பவன்) ஆகிய இவர்களுக்கு எது மறைவை உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறதோ அது நஷ்டமாய்ப் போய் விட்டபடியால் அவனுக்கு அதன் காரியமாகிய சுகதுக்கங்கள் தோன்றுகிறதில்லை. ஸ்வப்பனத்தில் தன்னை அரசனென்று ஆரோபித்துக்கொண்டு சைன்யம் முதலியவைகளைத் தான் பார்ப்பவனென்றும், அவைகள் தன்னால் பார்க்கக் கூடியவைகளென்றும் நினைத்த புருஷனுக்கு அந்த ஸ்வப்னாவஸ்தை நிவர்த்தியான பிறகு அந்த பேத ஞானம் நிவர்த்தியடைகிறதல்லவா? அதுவும் அந்தக் கரணமிருக்கும் காலமாகிய ஜாக்ரதவஸ்தையிலும் (விழித்துக் கொண்டிருக்கும் பொழுதும்), ஸ்வப்பனாவஸ்தையிலும் தன்னையும் (திருஷ்டாவையும் இந்திரிய விஷயத்தையும் (திருச்யத்தையும்), அவைகளின் சம்பந்தத்திற்குக்

காரணமாகிய அகங்காரத்தையும் புருஷன் பார்க்கிறான். சுஷுப்தியில் இம்மாதிரியான பேத ஞானமில்லை. லோகத்தில் பிம்பம். பிரதி பிம்பம் இவைகளின் பேதத்திற்குக் காரணமாகிய ஜலம் கண்ணாடி முதலிய உபாதி ஆகியவைபாலேயே பேத ஞான முண்டாகிறது. உபாதியாகிய ஜலம் முதலியவைகள் இல்லாவிடில் பேதஞானமுண்டாகிறதில்லை. ஆற்றில் கரையோரத்திலிருக்கும் நாணல் முதலியவை தங்களுடைய வேர்களால் மடுவில் இருக்கும் ஜலத்தை அபஹரிப்பது போல, விஷயங்களால் புருஷனுடைய இந்திரியங்கள் இழுக்கப்படுகின்றன. அவைகளால் மனது இழுக்கப்படுகிறது. அந்த மனமானது புத்தியினிடமிருந்து சோதனையே (விசாரிக்கும் ஸாமார்த்தியத்தை) போக்கடிக்கிறது. இது அவிவேகி களால் அறியப்படவில்லை. பின்பு முன் நடந்ததை நினைத்துக் கொள்வதாகிய ஸ்மிருதியானது கெட்டுப் போகிறது. பின்பு விவேகம் மாறிவிடுகிறது. அதனையே ஆத்மநாசமென கவிகள் சொல்லுகிறார்கள். எதனால் மற்ற விஷயங்கள் மிகவும் பிரியங்களாக ஆகின்றனவோ, தன்னுடைய எந்த அபசாரத் தாலேயே ஆத்ம நாசம் ஏற்படுகிறதோ இதைக்காட்டி லும் மேற்பட்ட கெடுதி உலகத்தில் ஒன்றுமில்லை. விஷயங்களையும், காமத்தையும் தியானம் பண்ணு வதாலும், ஆத்மநாசத்தைச் சம்பாதித்துக் கொண்ட தினாலும் ஞானம், விசேஷ ஞானம் இவைகளில்லாத வனாகி ஸ்தாவர ஜன்மத்தை அடைகிறான். மேலும் ஸம்ஸாரத்தைக் கடக்கவிரும்பியவன் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகிய இவைகளுக்கு எவைகளுடைய சேர்க்கை மிகவும் விக்கினமாக இருக்கிறதோ, அந்த உக்கிரமான சம்சாரத்தில் ஆசைப்படக்கூடாது.

மேற்காட்டிய நான்கு வகையான புருஷார்த்தங்களில் நான்காவதாகிய மோக்ஷமே முக்கியமானது என்று சொல்லப்படுகிறது. முந்திய மூன்று புருஷார்த்தங்களும் அநித்யமானவைகள்; காலத்தின் பயமுள்ளவைகள். ப்ரஹ்ம தேவர் முதலிய மேலானவர்களும் தாழ்ந்தவர் களான நம்மை போன்றவர்களும் குணங்களுடைய சம்பந்தத்தால் கிரமமாக உண்டானவர்கள், காலத்தால் கெடுக்கப்பட்ட இஷ்டத்தையுடைய அவர்களுக்கு முக்கியமான க்ஷேமமில்லை. ஓ மஹாராஜ! ஆனதால் தேக்ம், இந்திரியங்கள். பிராணன் புத்தி, அஹங்காரம் இவைகளால் மறைக்கப்பட்ட ஸ்தாவர ஜங்கம ஸ்வரூபிகளான பிராணிகளுடைய ஹிருதயத்தில் எவர் பிரகாசிக்கிறாரோ, க்ஷேத்ரக்ஞனாகிய ஜீவனை எவர் சிட்சிக்கிறாரோ எவர் ப்ரத்யக் ரூபியாக ப்ரகாசிக் கிறாரோ அவர் ஒருவரே இருக்கிறார், அவரைத் தவிர வேறு ஒருவர் இல்லையென்று தெரிந்துகொள்ளும். எவரிடத்தில் இந்த ஜகத்தானது காரியமாகவும் காரணமாகவும் மாயையாகப் புஷ்பமாலையில் ஸர்ப்பம் என்கிற புத்திபோல தோன்றுகிறதோ. விவேகத்தால் நிவர்த்தியாகிறதோ. அப்பேர்ப்பட்ட நித்திய முக்தரும் பரிசுத்தரும் ஏக ஸ்வரூபியும். கர்மவாஸனையற்றவரான பரமாத்மாவைச் சரணமடைகிறேன். விஷயங்களில் பற்றுதலில்லாத புத்தியுள்ளவர்களும், இந்திரியங்களை ஜயித்தவர்களும் ஸாதுக்களுமான யதிகள் எவருடைய தாமரை மலர் போன்ற பாதங்களுடைய விரல்களின் காந்தியைத் தியானஞ் செய்து அகங்காரத்தை போக் கடித்துக் கொள்ளுகிறார்களோ, எல்லாப் பிராணி களாலும் சரணமடையக் கூடிய அப்பேர்ப்பட்ட ஸ்ரீ வாஸு தேவரை உபாஸியும். ஸம்ஸாரமாகிய சமுத்திர மானது காமம் முதலிய ஆறுவகைக் குணங்களாகிய

முதலை, மகரம் இவைகளுள்ளதால். அதனைக் கடப்பது மிகவும் கஷ்டம், சிலர் அதைக் கடப்பதற்குத் தகுந்த ஸாதனங்களில்லாதவர்களாகவே யோகம் முதலிய கடினமான மார்க்கத்தாலும் அதைக் தாண்ட முயல் கிறார்கள். ஆகையால் நீர் பகவானுடைய பூஜிக்கத் தக்க பாதத்தைப் படகாக வைத்துக் கொண்டு தாண்ட முடியாத ஜலமுள்ள சமுத்திரத்தைச் சுகமாகத் தாண்டும்" என்று சொன்னார்.

41–47. அப்பொழுது அரசன் ப்ரஹ்மத்தை அறிந்தவரும் ப்ரஹ்ம தேவருடைய புத்திரருமான ஸனத் குமாரரால் ஆத்ம விஷயமாக உபதேசிக்கப்பட்டதைக் கேட்டு அவரைப் புகழ்ந்து. "ஓ ப்ராஹ்மணோத்தம பக்தர்களிடத்தில் தயவு பண்ணும். ஸ்ரீ மஹா விஷ்ணு வினால் முந்தியே எனக்கு அனுக்கிரஹம் செய்யப் பட்டிருக்கிறது. அதனை நிறைவேற்று வதற்காகவே நீங்கள் வந்து இருக்கிறீர்கள் என்னுடைய சரீரமும் இராஜ்யம் முதலியவைகளும் சாதுக்களுடையதேயாம். அவைகள் எனக்குச் சாதுக்களால் கொடுக்கப் பட்டவைகளே. அப்படியிருக்க எதனை நான் குரு தக்ஷிணையாகக் கொடுப்பேன்? ஆனாலும் என்னுடைய பிராணன், புத்திரர்கள், வீடுகள்! அதிலுள்ள சாமக்கிரிகள், இராஜ்யம், பலம், பூமி, பொக்கிஷம் இவைகள் உங்களுக்கு அதீனங்களே. மேலும் ஸேனாபத்யம், இராஜ்யம், ஸகல உலகங்களுக்கும் அதிபதியாக இருப்பது ஆகிய இவைகள் வேதம், சாஸ்திரம் இவைகளை படித்தவனுக்கே தகுதியானது உலகத்திலுள்ள சொத்து எல்லாம் ப்ராஹ்மணர்களு டையதே. ஆனதால் தனது சொத்தை ப்ராஹ்மணன் அனுபவிக்கிறான்.

பிறருக்குக் கொடுக்கிறான். க்ஷத்திரியன் முதலிய மற்றவர்கள் ப்ராஹ்மணர்களுடைய அனுக்ர ஹத்தால் அன்னத்தைப் புசிக்கிறார்கள் (இராஜ்யம் முதலியவை ப்ராஹ்மணர்களுக்கே சுவாதீனங்கள் என்று கருத்து) வேதங்களை அறிந்தவர்களான எவர்களால் ஆத்ம விஷயமாக நிச்சயமான மார்க்கம் எனக்கு உபதேசிக்கப்பட்டதோ பூரண கிருபையுள்ள அந்த சாதுக்களுக்கு அஞ்சல் செய்ததை விட வேறு எதனை நான் செய்வேன்? அவர்கள் தீனர்களை ஸம்ஸாரத் திலிருந்து உத்தாரணஞ் செய்வதாகிய காரியத்தால் ஸந்தோஷமடையட்டும் தனக்கு ஸ்வாதீனமான தனம் ஏராளமாக இருந்தாலும் அவைகளால் அவர்களுக்குப் பிரத்யுபகாரஞ் செய்யமுடியா" என்று புகழ்ந்தார்.

48–53. இப்படி பிருது சக்ரவர்த்தியால் பூஜிக்கப்பட்ட அந்த யோகேசர்கள் அரசனுடைய சுபாவத்தைப் பற்றி சந்தோஷித்து எல்லோரும் பார்த்திருக்கும் பொழுது ஆகாயத்தில் சென்றார்கள். மகான்களுக்குள் சிறந்தவரான பிருது சக்கரவர்த்தியும் மனத்தை ஒரு வகைப்படுத்தி அத்யாத்ம வித்தையை அப்யஸித்து ஆத்மாவையே தியானித்துக் கொண்டு தம்மைக் கிருதார்த்தராக நினைத்தார். காலத்திற்கும், தேசத்திற்கும், தம்முடைய பலத்திற்கும், பணத்திற்கும் தக்கபடி உசிதமான கர்மங்களை அனுஷ்டித்து அவைகளைப் ப்ரஹ்மார்ப்பணஞ் செய்தார் அவர்கள் கர்மங்களை அனுஷ்டித்தாலும் பலனில் ஆசைப்படாமல் வெகு ஜாக்ரதையுள்ளவராகித் தம்முடைய ஆத் மாவைக் கர்மசாக்ஷியாகவும், பிரகிருதி சம்பந்தமற்ற வருமாக நினைத்தார். இராஜ்யலக்ஷ்மீயுடன் கிருஹத் தில் அவர் வசித்திருந்தாலும், அகங்காரமற்றிருந்ததால்

சூரியன்போல இந்திரியவிஷயங்களில்ஆசைப்படாமலி ருந்தார். இப்படி பிருது சக்ரவர்த்தியானவர் அத்யாத்ம யோகத்தால் பலனை விரும்பாமல் கர்மங்களை அனுஷ்டித்துக் கொண்டு அர்ச்சிஷ் என்னும் தம்முடைய ஸ்திரீயினிடத்தில் விஜிதாச்வன், தூம்ர கேசன், ஹர்யச்வன், திரவிணன் விருகன் என்ற ஐந்து குமாரர்களை யுண்டு பண்ணினார். மேலும், அவர் ஸகல லோக பாலகர்களுடைய குணங்கள் யாவையும் உடையவராயிருந்தார் பின்னுமவர் பகவானையே தியானஞ் செய்துகொண்டு ஜகத்தை ஒவ்வொரு காலத்திலும் சம்ரக்ஷித்துக் கொண்டும், மனத்தாலும், வாக்கினாலும், சரீரத்தாலும், நற்குணங்களாலும் பிரஜைகளை சந்தோஷப்படுத்திக்கொண்டும், சோம ராஜன் போலராஜா வென்ற டெயரைத் தரித்தார். மேலுமவர் சூரியன் பூமியிலிருந்து எட்டு மாதம் ஜலத்தைக் கிரஹித்து மழைக் காலத்தில் விடுவது போல், ஜனங்களிடம் வரியைப்பெற்றுக் கொண்டு காலத்தில் அவர்களுக்கே அதனை உபயோகித்தார், அவருடைய ஆக்ஞை தடையற்றிருந்தது அவர் அக்னி போன்ற தேஜஸ்வியாக இருந்தபடியால் பிறரால் நெருங்குமுடியாதவராக இருந்தார். மகேந்திரன்போல் ஜயிக்கமுடியாதவராகவும் இருந்தார். பின்னுமவர் பொறுமையில் பூமிபோலவும், தியுலோகம் போல் ஜனங்களுக்கு இஷ்டத்தைக் கொடுப்பவராகவும், பர்ஜன்யன் போல் ஜனங்களுடைய இஷ்டத்தை வர்ஷிப்பவராகவும், சமுத்திரம் போல் காம்பீர்யமுள்ள வராகவும், யமன் போல் சிட்சிப்பவராகவும், மகேந்திரன்போல் ஐசுவரியமுள்ளவராகரும், குபேரன் போல் பொக்கிஷமுள்ளவராகவும், வருணன் போல் பணத்தைக் காப்பாற்றுகிறவராகவும் இருந்தார்.

மேலுமவர் மிகுந்த பலமுள்ளவராக இருப்பதால் ஸகல ஸ்வரூபியாகவும், வாயு போன்றவராகவும், மன்மதன் போல் அழகுள்ளவராகவும், ஸிம்மம்போல மனஸ் வியாகவும், மனுப்போல பிரஜைகளிடத்தில் பிரீதியுள்ள வராகவும் பிரம்மதேவர் போல் பிரபுவாகவும், வேதங் களைக் சொல்வதில் பிரகஸ்பதிபோலவும், ஸ்ரீ மஹாவிஷ்ணுபோல இந்திரியங்களை ஜயித்தவராகவும் இருந்தார். மேலும் அவர் பசுக்கள், ஆசாரியர்கள், பிராமணர்கள், பகவத் பக்தர்கள் ஆகிய இவர்களி டத்தில் பக்தி செய்வது, வெட்கம், வணக்கம், நல்ல ஸ்வபாவம், பிறருடைய காரியத்தை செய்வது, ஆகிய இவைகளிலும் தமக்கே ஒப்பானவராக இருந்தார்; அந்தச் சக்கரவர்த்தியினுடைய கீர்த்தியை மூவுலகத் திலும் சாதுக்கள் கானஞ்செய்தபடியால் ஸீதாபதியான ஸ்ரீராமன்போல் அவர் சாதுக்கள், ஸ்திரீகள் முதலியவர்களுடைய காதுகளில் பிரவேசித்தார். (ஸ்ரீ ராமன் போல விசேஷ கீர்த்தியுள்ளவரென்று கருத்து.)

நோட்டு

வெளியில் சென்ற வயது சென்றவர்கள் யுவாவினுடை வீட்டிற்கு வந்தால் அந்த யுவாவின் பிராணன்கள் வெளியில் செல்லுகின்றன. பிறகு வந்தவர்களுக்கு எதிர்கொண்டழைப்பது முதலிய உபசாரஞ் செய்து அந்தப் பிராணன்களை அடைகிறான்" – ஸ்மிருதி.

அத்தியாயம்–23

பிருது சக்கரவர்த்தி வைகுண்டம் சென்றது

1–18 வேனருடைய புத்திரரும், தைரியமுள்ளவரும், ஸ்தாவரங்களுக்கும் ஜீவனத்தைக் கொடுப்பவரும், சாதுக்களுடைய தர்மத்தை விருத்தி பண்ணுகிற வருமான பிருது சக்கரவர்த்தியானவர், ஒரு காலத்தில் தாம் எதற்காகப் பூமியில் அவதரித்தாரோ, அந்தப் பகவானுடைய ஆக்ஞையானது முடிக்கப்பட்டதென்றும் தம்மால் செய்யப்பட்ட பட்டணம், கிராமம் என்ற ஏற்பாடுகள் மிகவும் விருத்தியடைந்திருப்பதையும், தாம் வயது சென்றவராக இருப்பதையும் பார்த்து விட்டு தம்மை விட்டுப் பிரிவதில் மிகுந்த துக்கமுள்ளவள் போலிருக்கிற பூமியைப் புத்திரர்களிடம் ஒப்புவித்து பிரஜைகள் யாவரும் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது தம்முடைய பத்தினியாகிய அர்ச்சீஸ் என்பவளுடன் தபோவனம் சென்றார். அவ்விடத்தில் விக்கினங்களால் தடுக்க முடியாத நியமத்தை அங்கீகரித்து தாம் ராஜ்ய பரிபாலனம் செய்யும் பொழுதும், சத்துருக்களுடைய பட்டணத்தை ஜயிக்க முயற்சித்தது போல வானபிரஸ்தர்களுக்கு இஷ்டமான தபஸ் செய்ய ஆரம்பித்தார்; சிலகாலம் கிழங்கு களையும், வேர்களையும், பழங்களையும், புஜித்தும், பின்னும் சில காலம் திருணங்கள், இலைகளைப் புஜித்தும் சில மாதம் ஜலத்தைப் புஜித்துக் கொண்டும், பின்னும் சில மாதங்கள் காற்றைப் புஜித்துக் கொண்டும், கோடைக் காலத்தில் ஐந்து அக்கினியின் மத்தியிலிருந்தும், மழைக் காலத்தில் மழையில் நனைந்து கொண்டும், மாசி, பங்குனி மாதங்களில் கழுத்தளவு

ஜலத்தில் இருந்து கொண்டும், தரையில் படுத்துக் கொண்டும், பொறுமையுள்ளவராகவும், இந்திரியங் களை ஜயித்தும் மௌனத்தை அடைந்தும், ஊர்த்வரேதஸ் உள்ளவராகவும், பிராணனை அடக்கிக் கொண்டும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை ஆராதிக்க விரும்பி உக்கிரமான தபஸ் செய்தார். கிரமமாக தபஸ் விருத்தியாகி அதனால் காமக் குரோதாதிகளை ஒழித்து, அந்த யோகத்தாலேயே ஸனத்குமார பகவானால் உபதேசிக்கப்பட்ட பரமபுருஷனை அடைந்தார். இப்படி பகவத் தர்மத்தை அனுஷ்டிப்பவரும், ஸாதுவும் சிரத்தையுடன் முயற்சிப்பவருமாகிய அந்த அரசன் உடைய சித்தமானது வேறு விஷயத்திற் செல்லாமல் பரப்ரஹ்மத்தினிடத்திலேயே ஸ்திரமாக இருந்தது. பகவானை எப்போதும் தியானம் செய்வதால், பூர்த்தியான அந்தப் பக்தியினால் சுத்த சித்தராகிய அரசனுக்கு வைராக்யத்துடன் ஞானமுண்டாயிற்று. அதனால் பலவித சம்சயத்திற்குக் காரணமான அஹங்காரம் நசித்தது. மேலும், அந்த அரசனுக்கு தேகம் முதலியவைகளில் ஆத்மாவென்ற புத்தியானது நசித்தது, ஆத்ம ஸ்வரூபம் பிரகாசித்தது. அதனால் கிடைத்த ஸித்திகளிலும் ஆசை ஒழிந்தது. எந்த ஞானத்தால் அஹங்காரம் முதலியவை நசித்ததோ, அதனையும் விட்டுவிட்டார். (அந்தப் பிரயத்தனத்தை யும் ஒழித்தார் என்பது கருத்து.) யோகியானவன் ஸ்ரீமகா விஷ்ணுவினுடைய கதையில் எதுவரையில் ஆசைப்படவில்லையோ, அதுவரையில் யோகத்தாலே கிடைக்கும் ஸித்திகளில் ஆசைப்படுவான். வீரர்களுக்குள் சிறந்தவராகிய அந்த அரசன் மேற்காட்டியபடி தம்முடைய சித்தத்தைப் பரமாத்மாவிடத்திற் செலுத்தி, பரப்ரஹ்ம ஸ்வரூபத்தை அடைந்து, உசிதமான

காலத்தில் தமது சரீரத்தை விட்டார். எப்படியெனில், குதத்தைக் குதிகால்களால் அடைத்து வாயுவை உயரக் கிளப்பி, நாபியில் நிலை நிறுத்தி, அவ்விடமிருந்து ஹிருதயம், சிரஸ், கண்டம், புருவங்களின் மத்யம் ஆகிய கோஷ்டங்களில் நிலை நிறுத்தி, அந்த வாயுவைப் ப்ரஹ்மரான்ந்ரத்தில் செலுத்தி, வாயுவை சமஷ்டி வாயுவிலும் தேகத்திலிருக்கும் பிருதிவியின் பாகத்தை சமஷ்டிபிருதவியிலும், தேஜஸ்ஸை சமஷ்டி தேஜஸ்ஸிலும், இந்திரிய த்வாரங்களாகிய ஆகாயத்தை ஆகாயத்திலும், திரவாம்சத்தை ஜலத்திலும் லயிக்கச் செய்தார். பின்னுமவர் மஹா பூதங்களுக்குள் பிருதிவியை ஜலத்திலும், அந்த ஜலத்தைத் தேஜஸ்ஸிலும் அந்த தேஜஸ்ஸை வாயுவிலும், வாயுவை ஆகாயத்திலும் லயிக்கச் செய்தார். இந்திரியங்களில் மனத்தையும், இந்திரியங்களை விஷயங்களிலும் உற்பத்தி கிரமமாக லயிக்கச் செய்து, இந்திரியங்களைப் பூதாதியிலும், அந்த அகங்காரத்தை மகத்தத்துவத்திலும் சேர்த்தார். ஸகல காரியங்களையும் உண்டுபண்ணக் கூடிய அந்த மகத்தத்துவத்தை மாயையை உபாதியாக உடைய ஜீவனிடத்தில் சேர்த்தார். பிறகு அந்தப் புருஷன் ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகளின் பலத்தால் ப்ரஹ்ம ஸ்வரூபியாக இருந்து அந்த உபாதியையும் விட்டுவிட்டார்.

19–28 அந்த அரசனுடைய பத்தினியாகிய அர்ச்சிஸ் என்பவள் அரசனுடன் காட்டிற்கு வந்தாள் அல்லவா? அவள் மிகவும் மிருதுவான சரீரமுள்ளவள்; காலால் நடக்கத்தகாதவள், ஆனாலும் அவள் பர்த்தா வினால் அனுஷ்டிக்கப்படும் விரதங்களை அனுஷ்டிப் பதாலும், அவரால் கௌரவப்படுத்தப்பட்ட படியாலும்

வருத்தப்படாதவளாக இருந்தாள். பின்னும் அவள் பர்த்தாவினுடைய சரீரம் மரணமடைந்ததைப் பார்த்துக் கொஞ்சம் அழுது மலையடிவாரத்தில் அந்தத் தேகத்தைச் சிதையில் வைத்துத் தகனஞ் செய்தாள். பின்பு, அப்பொழுது செய்ய வேண்டிய காரியங் களைச் செய்து, நதி ஜலத்தில் ஸ்நானஞ் செய்து ஆகாயத்தில் இருக்கும் தேவர்களை நமஸ்கரித்து, அக்னியை மூன்று தடவை பிரதக்ஷிணஞ் செய்து பர்த்தாவின் பாதத்தைத் தியானஞ் செய்து கொண்டு அக்கினியில் பிரவேசித்தாள். அப்பொழுது ஆகாயத்தில் இருந்து தேவ ஸ்திரீகள், தேவர்களுடன் பிருது சக்கரவர்த்தியுடன் உடன் கட்டையேறிய அர்ச்சிஸ் என்பவளைப் பார்த்துப் பலவகையாக ஸ்தோத்திரம் பண்ணினார்கள். அவ்விடத்தில் புஷ்பங்களை வர்ஷித்தார்கள்; தேவ வாத்தியங்கள் யாவும் முழங்கின; அப்பொழுது தேவ ஸ்திரீகள் எல்லோரும், யக்ஞங் களுக்கு அதிபதியாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவை லக்ஷ்மீ தேவி போல, இந்த ஸ்திரீயானவள் பர்த்தாவை அடைந்தாள்; இந்த அர்ச்சிஸ் என்பவள், பிருது சக்கரவர்த்தியுடன் நமக்கும் மேலிருக்கிற லோகத் திற்குச் செல்லுகிறாள். இவள் செய்த கர்மம் இன்ன தென்று ஊகிக்க முடியாதது; நிலையற்ற ஆயுளுள்ள எந்த மனிதர்கள் பூமியில் பகவானை அடையக் கூடிய நிஷ்காம கர்ம மார்க்கத்தைச் சாதிக்கிறார்களோ, அவர்களுக்கு எதுதான் கிடைக்காது? மிகவும் சிரமப்பட்டு பூமியில் மனுஷ்ய ஜன்மத்தை அடைந்தும் எவன் விஷயத்திலேயே ஆசைப்பட்டு க்ஷேமத்தை அடைவதற்கு முயற்சிக்கிறதில்லையோ, அவன் ஆத்ம துரோகியாகவும், ஏமாற்றப்பட்டவனாகவும் ஆகிறான்" என்று சொல்லிக் கொண்டார்கள்.

29–36 இப்படி தேவ ஸ்திரீகள் புகழ்ந்து கொண்டிருக்கும்பொழுது அர்ச்சிஸ் என்பவள் ஆத்ம வித்துக்களுக்குள் சிறந்தவராகிய பிருது சக்கரவர்த்தி எந்த லோகஞ் சென்றாரோ, அந்த லோகஞ் சென்றாள். பிருதுவானவர் இம்மாதிரியான மஹிமையுள்ளவர்; பகவத் பக்தர்களுக்குள் சிறந்தவர்; கம்பீர சரித்திரமுள்ளவர் அந்த அரசனுடைய சரிதத்தை உமக்குச் சொன்னேன். மிகவும் புண்ணியத்தைக் கொடுக்கக்கூடிய இந்த சரிதத்தைச் சிரத்தையுடன், சாவதானமாக எவன் படிக்கிறானோ பிறருக்குச் சொல்லுகிறானோ, கேட்கிறானோ அவன் பிருதுவின் மார்க்கத்தை அடைவான். இதைக் கேட்பதால் ப்ராஹ்மணன் ப்ரஹ்மதேஜஸ்ஸையும் க்ஷத்திரியன் லோகாதிபத்தியத்தையும், வைசியன் ஜனங்களுக்கு அதிபதியாயிருப்பதையும், சூத்திரன் உத்தமனாயிருப்பதையும் அடைவான். புருஷனானாலும், ஸ்திரீயானாலும் மிகவும் பக்தியுடன் இந்தச் சரிதத்தைக் கேட்டால் புத்திரனில்லாதவர்களுக்குப் புத்திரனும், பணமில்லாதவர்களுக்குப் பணமும், கீர்த்தியை விரும்பியவர்களுக்கு மிகுந்த கீர்த்தியும், வித்தையும் கிடைக்கும். இது புருஷர்களுக்கு க்ஷேமத்தை கொடுக்கக் கூடியது; அமங்களத்தை நிவர்த்திக் கூடியது. பணம், கீர்த்தி, ஆயுள், ஸ்வர்க்கம் இவைகளைக் கொடுக்கக் கூடியது; கலியால் உண்டாகும் பாவத்தைப் போக்கக் கூடியது. தர்மம் முதலிய புருஷார்த்தங்களை விரும்பியவன் சிரத்தையுடன் இதனைக் கேட்கவேண்டும். க்ஷத்திரியன் இந்தச் சரிதத்தைச் சிரவணஞ் செய்து, சத்துருவை நோக்கி யுத்தத்திற்குச் சென்றால் பிருது சக்கரவர்த்திக்கு மற்ற அரசர்கள் கப்பங் கட்டுவது போலச் சத்ருக்கள் அவனுக்குக் கப்பங் கட்டுவார்கள். வேறு

விஷயத்தில், ஆசையை யொழித்துப் பகவானிடத்தில் சுத்தமான பக்தியைச் செய்து, பிருது சக்கரவர்த்தியின் சரிதத்தைக் கேட்டாலும், படித்தாலும் பகவான் இடத்தில் மிகுந்த பக்தியுண்டாகும். ஓ விதுரரே! மேலான மஹாத்மியத்தைக் காண்பிக்கும் இந்தச் சரிதத்தில் சித்தத்தைச் செலுத்திய மனிதன் பிருது சக்கரவர்த்தியின் கதியை அடைவான். ஆனதால் ஒவ்வொரு நாளும் பிருதுவின் சரிதத்தைப் பிரீதியுடன் பிறருக்கு உபதேசித்தும், கேட்டுக் கொண்டு மிருப்பவன் விஷயங்களில் ஆசையையொழித்து, சம்ஸாரமாகிய சமுத்திரத்திற்குப் படகு போன்ற பாதங்களுள்ள ஸ்ரீ மஹாவிஷ்ணுவினிடத்தில் நிரந்தரமான பக்தியை அடைவான்.

அத்தியாயம்–24

ருத்ர கீதம்

1–5. பிருது சக்கரவர்த்திக்குப் பின்பு அவருடைய புத்திரரும், மிகுந்த கீர்த்தியுள்ள வருமான விஜிதாச்வர் அரசராக இருந்தார். அவர் தமது தம்பிகளுக்கு இராஜ்யத்தைப் பிரித்துக் கொடுத்தார். எப்படியென்றால், ஹர்யச்வருக்குப் கிழக்குத் திக்கையும், தூம்ரகேசருக்குத் தெற்கு திக்கையும், விருகர் என்பவருக்கு மேற்குத் திக்கையும் கொடுத்தார். அந்த விஜிதாச்வர் பிருது சக்கரவர்த்தியின் யாகத்தில் மஹேந்திரனிடமிருந்து அந்தர்த்யான சக்தியை அடைந்தபடியால், அது முதல் அவருக்கு அந்தர்த்தானர் என்னும் பெயருண்டாயிற்று. அவர் சிகண்டினீ என்னும் ஸ்திரியிடத்தில் பாவகன், பவமானன், சுசி என்ற புத்திரர்களை உண்டுபண்ணினார். இவர்கள் வசிஷ்ட மஹரிஷியின் சாபத்தால் மனுஷ்ய ஜன்மத்தையடைந்து. பிறகு யோகமார்க்கத்தால் தங்கள் ஸ்வரூபத்தையடைந்தவர்கள். அந்த அன்தர்த்தானர் நபஸ்வதீ என்ற ஸ்திரீயிடத்தில் ஹவிர்த்தான ரென்ற புத்திரனைப் பெற்றார். விஜிதாசுவர் குதிரையை அபஹரித்த இந்திரனைக் கொல்லாமலிருந்ததால் அந்தர்த்தானரென்ற பெயரும், அந்தர்த்தான சக்தியும் அவருக்குக் கிடைத்தது; மேலுமவர் வரி வாங்குவது, சிட்சிப்பது ஆகிய இவைகளால் ராஜாக்களுடைய விருத்தியானது மிகவும் பயங்கரமாக இருப்பதைப் பார்த்து, தீர்க்கசத்திரம் செய்கிறதென்ற வியாஜத்தால் ராஜ்யத்தைவிட்டு விட்டார் (அந்த யாகத்திலும், திரவியம், தேசம்

முதலியவைகளைப் பரமாத்மாவாகவே பாவித்து அதிலும் பரமாத்மாவாகிய பரம புருஷனை ஆராதித்து புண்யமாகிற ஸமாதியால் அந்த லோகத்தை சுத்தரும், பூர்ணருமான பகவானை யாகத்தால் பூஜித்து, தீவிரமான ஸமாதியால் அந்த உலகத்தை (பகவானா யிருப்பதை அடைந்தார்.) ஓ விதுரரே! ஹவிர்த்தான ரென அவர் ஹவிர்த்தானி என்பவளிடத்தில் பர்ஹிஷ்மதன், கயன், சுக்லன், கிருஷ்ணன், ஸத்யன், ஜிதவிரதன் என்ற ஆறு புத்திரர்களை உண்டு பண்ணினார். ஹவிர்த்தானருடைய புத்திரராகிய பர்ஹிஷ்மதர் கர்ம காண்டங்களிலும். யோகங்களிலும் ஸாமார்த்தியமுள்ளவராக இருந்தார். அவர் யாகஞ் செய்யும்பொழுது இந்தப் பூமி முழுவதும் யாகசாலையாகவும், கிழக்கு நுனியான தர்ப்பங்களால் பரப்பப்பட்டதாகவும் இருந்தது. அதனால் அவருக்குப் பிராசீனபர்ஹிஸ் என்று பெயருண்டாயிற்று, அவர் ஸமுத்திர ராஜனுடைய புத்திரியாகிய சதத்ருதி என்பவளை ப்ரஹ்மதேவருடைய தூண்டுதலால் விவாஹம் செய்து கொண்டார். கல்யாண காலததில் நன்றாய் அலங்கரிக்கப்பட்ட அந்தப் பெண்ணின் அழகைப் பார்த்து எல்லா ஜனங்களும் ஆசைப்பட்டார்கள். அது, கிளி வேஷங்கொண்ட ஸ்வாஹையிடம் அக்கினி ஆசைப்பட்டது போலிருந்தது. புதிதாக விவாஹம் செய்துகொண்ட அந்தப் பெண்ணுடைய பாதஸ்பரத்தின் சப்தத்தாலேயே தேவர்கள் அஸுரர்கள், கந்தர்வர்கள், மஹரிஷிகள், ஸித்தர்கள், மனிதர்கள், உரகர்கள் ஆகிய இவர்கள் ஜயிக்கப்பட்டார்கள். பிராசீன பர்ஹிஸ்ஸுக்குச் சதத்ருதி என்பவளியத்தில் பத்து புத்திரர்கள் உண்டானார்கள். அவர்களெல்லோரும் ஒரே மாதிரியான விரதமுள்ளவர்கள்; எல்லோரும்

தர்மத்தின் கரைக் கண்டவர்கள்; பிரசேதஸ் என்னும் பெயருள்ளவர்கள்; அவர்களைப் பிதாவாகிய பிராசீன பர்ஹிஸ் பிரஜைகளை ஸிருஷ்டிக்கும்படி ஆக்ஞாபித்தார். அவர்களும் வனஞ்சென்று பதினாயிர வர்ஷ காலம் தபஸ்செய்து ஸ்ரீ மஹாவிஷ்ணுவைப் பூஜித்தார்கள். நடுவழியில் பரமசிவனைத் தரிசித்த அவரால் உபதேசிக்கப்பட்டபடி மந்திரத்தை ஜபித்தும், ஸ்வரூபத்தைத் தியானஞ் செய்தும், பூஜித்து கொண்டு மிருந்தார்கள்" என்று மைத்திரேயர் சொன்னார்.

16–18. அதனைக் கேட்ட விதுரர், "பிரசேதஸ்ஸுகளுக்கு பரமசிவனுடைய தரிசனம் எப்படிக் கிடைத்தது? பரமசிவன் மிகுந்த பிரியத்துடன் அவர்களுக்கு எதனை உபதேசித்தார்? ஓ ப்ராஹ்மணோத்தம! பிராணிகள் பரமசிவனைத் தரிசிப்பது மிகவும் துர்லபமல்லவா? அந்தப் பரமசிவன் வைராக்கியமுள்ள முனிகளால் தியானஞ் செய்யப்பட்டவரல்லவா? அந்தப் பகவான் ஆத்மாராமராக இருந்தாலும், இந்த லோகத்தைக் காப்பாற்றுவதற்காகப் பயங்கரமான சக்தியுடன் ஸஞ்சரிக்கிறார். ஆனதால் அதனை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

19–26. அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி, "பிரசேதஸ்ஸுகள் பிதாவினுடைய ஆக்ஞையைச் சிரஸால் தரித்துத் தபஸ் செய்ய வேண்டுமென்ற விருப்பத்துடன் மேற்குத் திக்கை நோக்கிச் சென்றார்கள். அவ்விடத்தில் ஏறக்குறைய ஸமுத்திரம் போல் விஸ்தாரமான பெரிய ஒரு குளத்தைக் கண்டார்கள். அந்தக் குளமானது பெரியோர்களுடைய மனம்போல்

Released by Maran's Dog, Toronto , Canada

தெளிந்திருந்தது. நீலோத்பலங்கள், செந்தாமரை, இராத்ரியில் மலரக்கூடிய புஷ்பங்கள், ஸந்தியா காலத்தில் மலரும் புஷ்பங்கள், பகலில் மலரும் புஷ்பங்கள் ஆகிய இவைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மேலும் அந்த ஸரஸில் ஹம்ஸங்கள் ஸாரங்கள், சக்ரவாகங்கள், நீர்க்கோழி இவைகள் சப்தித்துக்கொண்டிருந்தன. மதித்த வண்டுகள் கானஞ் செய்வதால் கொடிகள், மரங்கள் ஆகிய இவைகள் மயிர்கூச்சலடைந்தவை போல மொட்டுகளை வெளியிட்டன. வாயுவானது தாமரைப் புஷ்பத்தின் தூளியை நாலு திக்குகளிலும் இரைத்தது. பின்னும் அவ்விடத்தில் தேவதைகள் பாடும் மார்க்கப்படி மிருதங்கம் பணவம் முதலிய வாத்திய கோஷங்களுடன் கந்தர்வர்கள் கானம் செய்வதைக்கேட்டு, அந்த ராஜபுத்திரர்கள் மிகவும் ஆச்சர்யமடைந்தார்கள் அந்த ஸமயத்தில் அந்த ஸரஸ்ஸிருந்து பரமசிவன் வெளியில் வந்தார். அவருடைய பிரமதகணங்கள் அவரை உபாஸித்துக் கொண்டிருந்தன. அவருடைய தேகமானது புடம்போட்ட தங்கம் போல் பிரகாசித்தது. அப்படிப்பட்ட பகவானை ராஜபுத்திரர்கள் தரிசித்து மிகுந்த தயையுடன் பிரஸன்ன முகமுள்ளவராக இருந்தார். தர்மத்தில் பிரீதியுள்ள அந்தப் பரமசிவன் தம்மைச் சரணமடைந்தவர்களும், விசேஷ பிரியமுள்ளவர்களுமான இராஜ புத்திரர்களை நோக்கி, "ஓ பிராசீனபர்ஹிஸ்ஸின் புத்திரர்களே! உங்களுடைய அபிப்ராயம் எனக்கு நன்றாகத் தெரியும்; உங்களுக்கு க்ஷேமம் உண்டாகும். உங்களை அனுக்ரஹிப்பதற்காகவே தரிசனம் கொடுத்தேன். எந்தப் புருஷன் அவ்யக்தம், பிரதானம், ஜீவன் இவைகளுக்கு மேலானவராகி ஸ்ரீ வாஸுதேவரிடத்தில் பக்தி

Released by Maran's Dog, Toronto , Canada

செய்கிறானோ அவனிடத்தில் எனக்கு மிகுந்த பிரியம். நூறு ஜன்மங்களில் வர்ணாசிரமத்திற்குரிய தர்மங்களை நன்றாக அனுஷ்டித்து வந்த புருஷன் ப்ரஹ்ம லோகத்தை அடைவான். (ப்ரஹ்மதேவராக ஆகிறான் என்பது கருத்து) அதைவிட மேலான புண்ணியஞ் செய்தவன் என்னை அடைகிறான். நானும் மற்ற தேவர்களும் அவரவர்களுடைய அதிகாரம் முடிந்தவுடன் எப்படி வைஷ்ணவ பதத்தை அடைகிறோமோ அப்படியே அதைவிட மேலான புண்ணியஞ் செய்து பகவத் பக்தனாயிருக்கும் புருஷன் அந்த சரீரம் போன பிறகு பிரபஞ்சஸம்பந்த மற்ற விஷ்ணுபதத்தை அடைகிறான். ஆகையால் பாகவதர்களாகிய நீங்கள் பகவானைப் போல என்க்குப் பிரியமானவர்களே! பாகவதர்களுக்கு என்னைவிடப் பிரியமானவர்கள் வேறு ஒருவருமில்லை, நான் உங்களுக்கு எதனை உபதேசிக்கிறேனோ; அது விசேஷ க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியது; பரிசுத்த மானது; மிகுந்த மங்களகரமானது; அதனை ஒன்றோடொன்று சேராமல் நீங்கள் ஜபிக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டுப் பரமசிவன் ஸ்ரீமந் நாராயணனைத் தியானித்துக்கொண்டு கைகூப்பி, தமக்கெதிரில் நிற்கும் இராஜபுத்திரர்களை நோக்கிப் பின் வருமாறு சொல்லலானார்.

27–79. "ஓ பகவன்! நீர் ஆத்மவித்துக்களுக்குள் சிறந்தவர்களாகிய யோகிகளுக்கு ஆனந்தத்தைக் கொடுப்பதற்காக ஒப்பற்ற பரமானந்த ரூபியாகப் பிரகாசிக்கிறீர். ஆகையால் எனக்கும் ஆனந்தப் பிரார்த்தி உண்டாகட்டும். அப்படிப்பட்ட ஸகல ஸ்வரூபியும் எல்லாவற்றிற்கும் நியந்தாவுமான உமக்கு

நமஸ்காரம் எவருடைய கொப்பூழில் லோக ஸ்வரூபமான தாமரை மலர் தோன்றியதோ, (ஸகல பிரபஞ்சத்திற்கும் காரணரென்று சொல்லப்பட்டது) எவர் ஸ்தூல பூதங்கள், தன் மாத்திரைகள், இந்திரியங்கள் ஆகிய இவைகளுக்கு நியந்தாவோ, எவர் சித்தத்துக்கு அதிஷ்டமான தேவதையாகிய வாஸுதேவரோ, விஹாரங்கள் அற்றவரோ, தாமாக பிரகாசிப்பவரோ அஹங்காரத்திற்கு அதிஷ்டான தேவதையாகிய ஸங்கர்ஷண ஸ்வரூபரோ, அவ்யக்தோ, நாசமற்றவரோ, முகத்திலுண்டான அக்னியினால் உலகங்களை எரிப்பவரோ. ஜகத்திற்கு விசேஷ ஞானத்தைக் கொடுப்பவரும். புத்திக்கு அதிஷ்டான தேவதையுமான பிரத்யும்னஸ்வரூபியோ' அப்படிப்பட்ட பகவானுக்கு நமஸ்காரம் அநிருத்த ஸ்வரூபியும், இந்திரியங்களுக்கு அதிபதியான மனத்தின் ஸ்வரூபியும், தேஜஸ்ஸைக் கொண்டு எங்கும் வியாபித்திருக்கும் சூரிய ஸ்வரூபியும், விருத்தி, க்ஷயம் இவைகள் அற்றவருமாகிய பரமாத்மாவிற்கு நமஸ்காரம் ஸ்வர்க்கம் மோக்ஷம் இவைகளுக்கு மார்க்கராயும் பரிசுத்தமான மனஸில் வஸிப்பவரும், அக்னி ஸ்வரூபியும் யாகத்தை விஸ்தரிப்பவரும், யாகத்திற்கு ஸாதனமாயிருப்பவருமாகிய பரம புருஷனுக்கு நமஸ்காரம், பிதிருக்களுக்கு அன்னமய ஸோம ஸ்வரூபியும், தேவர்களுக்கு அன்ன ரூபியும், வேதத்திற்கு அதிபதியும், யக்ஞத்திற்கு முக்ய ஸாதனராயும், பிராணிகளுக்குத் திருப்தியை உண்டு பண்ணுகிறவரும், ரஸரூபியுமான ஸ்ரீ பகவானுக்கு நமஸ்காரம், சகல பிராணிகளுடைய தேகசுரூபியாயும், பிருதிவியின் ஸ்வரூபமாயும், விராட்ரூபியாயும், மூன்று உலகத்தையும் பிராணரூபியாயிருந்து காப்பாற்று கிறவரும், தேஜஸ், காந்தி இவைகளின் ரூபியுமான

பகவானுக்கு நமஸ்காரம், விஷயங்களைப் பிரகாசிக்கச் செய்யும் ஆகாச ஸ்வரூபியும், உள், வெளி என்கிற விவகாரத்திற்கு காரணரும், புண்யலோகரூபியும், ஸ்வர்க்க ஸ்வரூபியும், விசேஷ தேஜஸுள்ளவருமாகிய பகவானுக்கு நமஸ்காரம் பிரவர்த்திமார்க்க சுரூபியும், நிவர்த்தி மார்க்க ஸ்வரூபியும், பிதிருத்துவம் தேவத்வம் இவைகளைக் கொடுக்கும் கர்மபலஸ்வரூபியும். அதர்மத்தின் பல ஸ்வரூபியும், துக்கத்தைக் கொடுக்கக் கூடிய மிருத்யு ஸ்வரூபியுமான பகவானுக்கு நமஸ்காரம். ஸகல கர்மங்களுக்கும் பலத்தைக் கொடுப்பவரும், எல்லாவற்றையுமறிந்தவரும் மேலான தர்ம ஸ்வரூபியும், தடையற்ற ஞானமுள்ள ஸ்ரீ கிருஷ்ண ஸ்வரூபியுமான உமக்கு நமஸ்காரம், புராண புருஷரும், ஸாங்கியம், யோகம் இவைகளுக்கு அதிபதியும், ருத்ர ரூபியும், கர்த்தா, கரணம், கர்மம் ஆகிய மூன்று வகையான சக்தியுள்ளவரும், ஞான ஸ்வரூபியும் கிரியா ஸ்வரூபியும், பலவகையான சிருஷ்டி சுரூபியான பகவானுக்கு நமஸ்காரம். ஓ பகவன்! உம்மை தரிசிக்க விரும்பிய எங்களுக்கு உம்முடைய திவ்ய ஸ்வரூபத்தைக் காண்பிக்க வேண்டும். அது பாகவதர்களால் பூஜிக்கப்பட்டது. ஸகல இந்திரியங்களுடைய விஷயங்கள் விஷயிகள் இவைகளின் ரூபமாயுள்ளது; பக்தர்களுக்குப்; பிரியமானது; பளபளப்புள்ள மழைக்கால மேகம்போல் கறுத்த திருமேனியுள்ளது, ஸகல ஸௌந்தர்யத்திற்கும், இருப்பிடமானது அழகு பொருந்தியவைகளும், நீண்டதுமான நான்கு கைகளுள்ளது; அழகான புருவங்களுள்ளது; ரமணீயமான மூக்குள்ளது; நல்ல பற்களுள்ளது. அழகான கன்னங்களால் பிரகாசிக்கும் முகமுள்ளது; ஒருவகையான குண்டலங்களால் அலங்கரிக்கப்பட்ட காதுகளை உடையது; பிரீதியுடன்

சிரித்த முகமுள்ளது; கருணை நிறைந்த கடாக்ஷ முள்ளது; தாமரை மலரின் தாதுகள் போல் பொன்னிறமுள்ள வஸ்திரமுள்ளது கிரீடம், கங்கணம் ஹாரம், பாதஸரம், அரைஞாண் இவைகளால் அலங்கரிக்கப்பட்டது; மேலும் சங்கம், சக்ரம் கதை, தாமரையாலே கௌஸ்துபம் ரத்தினம் இவைகளால் விசேஷ காந்தியுள்ளது ஸிம்மத்தின் தோள் போன்ற தோள்களுள்ளது; கௌஸ்துப ரத்தினத்தால் அழ்கான கண்டமுள்ளது; லக்ஷ்மீதேவி எப்பொழுதும் வஸித்துக்கொண்டிருப்பதால் தங்கம் உரைக்கும் உரைகல்லும் பரிகசிக்கக்கூடிய மார்புள்ளது; மூச்சு விடுவதாலும் உள்ளே வாயுவை இழுப்பதாலும் அசைகின்ற மூன்று மடிப்புகளால் அழகானதும் அரசிலைக்குச் ஸமமுமான வயிறுள்ளது.

பின்னும் அந்த சுரூபமானது கம்பீரமான கொப்பூழில் ஸகல ஜகத்தையும் உள்ளே அடக்கிக் கொள்வதுபோலப் பிரகாசிக்கிறது; கறுத்த திருமேனி யுள்ள இடுப்பில் பீதாம்பரமும் அதன்மேல் தங்க மயமான அரைஞாணும் நன்றாகப் பிரகாசிக்கிறது; கணைக்கால்களும், கால்களும் சமமாயிருப்பதினாலும். முழங்கால் உயரமில்லாததினாலும் மிகவும் பார்க்கக் கூடியதோ, பிரஹ்லாதன் முதலிய பக்தர்களுக்குப் பயத்தைப் போக்கடித்ததோ, அஞ்ஞானிகளுக்கும் மார்க்கத்தைக் காண்பிக்கும் உம்முடைய அந்தப் பாதாரவிந்தத்தை எனக்கு காண்பியும், சித்த சுத்தியை விரும்பியவர்கள் இந்த உருவத்தைத் தியானம் செய்யவேண்டும். ஸ்வதர்மத்தை அனுஷ்டிப்பவர் களுக்கு இந்த உருவத்தினிடத்தில் பக்தி செய்வதே அபயத்தைக் கொடுக்கக்கூடியது நீர் பக்தர்களால்

அடையக்கூடியவர்; மற்றவர்களால் அடையமுடியாதவர்; ஸ்வர்க்க ராஜ்யத்தை அடைந்தவர்களாலும் விரும்பக்கூடியவர்; ஆத்மாவை அறிந்தவர்களுக்குக் கதியாயிருப்பவர்; ஆராதிக்க முடியாதவரான அப்படிப்பட்ட உம்மை ஸாதுக்களுக்கும் அரிதான பக்தியால் ஆராதிக்கும் எந்தப் புருஷன் உம்முடைய பாதத்தைத் தவிர விஷயத்தில் ஆசைப்படுவான்? காலமானது தம்முடைய மஹிமையாலும் உத்ஸாகத்தாலும் மிகுந்த கோபத்துடன் உலகத்தை நாசம் பண்ணுகிறதானாலும் உம்முடைய பாதாரவிந்தத்தில் சரணமடைந்தவனை உபத்திரவிக்கிறதில்லை. பகவத் பக்தர்களுடன் அரைக்ஷணமாவது ஸல்லாபம் செய்வாதாலுண்டான சுகத்திற்கு ஸ்வவர்க்கத்தையும், மோக்ஷத்தையும் சமமென்று நான் நினைக்கவில்லை. அப்படியிருக்க மற்ற சுகங்கள் அதற்கு ஸமமாக ஆகுமா? ஆனதால் பாபங்களைப் போக்கக்கூடிய பகவானுடைய கீர்த்தியால் அந்தரங்கத்தில் ஸ்நானம் செய்தும், அவருடைய பாதத்திலிருந்து உண்டான கங்கா ஜலத்தில் ஸ்நானஞ் செய்தும், அதனால் பாபமில்லாதவர்களும், பிராணிகளிடத்தில் தயையுள்ளவர்களும் நல்ல ஸ்வபாவமுள்ளவர்களுமான ஸாதுக்களுடைய ஸங்கமம் எனக்குக் கிடைக்கும்படி அனுக்கிரஹிக்க வேண்டும் சாதுக்களுடைய சேர்க்கையால் சித்தம் சுத்தமாகி விஷயங்களில் செல்லும் அஞ்ஞானத்தையும் அடைகிறதில்லை. அப்பொழுது அந்த முனியானவன் ஆத்மாவைத் தரிசிப்பான். அந்த ஆத்ம ஸ்வரூபத்தில் இந்த ஜகத் பிரகாசிக்கிறது. அதுவே உண்மையானது. அதுவே ப்ரஹ்மம், ஆகாயம்போல் எங்கும் வியாபித்திருக்கும் தேஜஸ், அந்தப் பரமாத்மாவானவர் பலவகையான ஸ்வரூபமுள்ள மாயையைக் கொண்டு

ஜகத்தை உண்மையானது போல் சிருஷ்டித்தார். பின்னும் அதைக் காப்பாற்றினார். ஸம்ஹரித்தார்; அந்த மாயையைப் பகவான் ஜயித்தவர், பேதமற்றவர்; சுதந்திரர், பூதங்கள், இந்திரியங்கள், அந்தக்கரணம் இவைகளால் ஊகிக்கப்படுகிற இந்த ஆத்மாவைத் தங்களுக்குரிய கர்மங்களால் எந்த யோகிகள் சிரத்தையுடன் பூஜிக்கிறார்களோ அவர்களே வேதம், ஆகமம் இவைகளில் ஸமர்த்தர்கள். நீர் ஒருவரே மேற்காட்டிய குணமுள்ள புருஷன். ஸிருஷ்டிக்கு முந்தியிருந்தவர்; ஸகல சக்திகளும் உம்மிடத்திலேயே இலயித்திருக்கின்றன. நீர் ஒருவரானாலும், ரஜஸ்ஸினாலும், தமஸ்ஸினாலும் மஹத்தத்துவம், அஹங்காரம், வாயு, அக்கினி, ஜலம், பூமி, தேவர்கள், ரிஷிகள், மற்ற பூதகணங்கள் என்ற பேதத்தை அடைகிறீர்; மேலும் மற்ற பூதகணங்கள் சக்தியால் சிருஷ்டிக்கப்பட்ட நான்கு விதமான ஜகத்தில் தம்முடைய அம்சமாக அனுப்பிரவேசம் செய்திருக்கிறீர்; ஆனாலும் நீர் ஸம்ஸாரியல்ல; தேனீக்கள் தங்களால் உண்டு பண்ணப்பட்ட தேனைப்போல, அற்பமான விஷய சுகத்தை இந்திரியங்களைக் கொண்டு அனுபவிப்பவனே ஜீவன் என்று சொல்லப்படுகிறான். எவர் தம்முடைய சக்தியால் இந்த ஜகத்தை ஸிருஷ்டித்தாரோ, எவர் மேக வரிசைகளை அசைத்துச் கொண்டு உலகங்களை சம்ஹரிக்கிறாரோ, எவருடைய ஸ்வரூபம் ஊகிக்கக் கூடியதோ, அவரே நீர். இதனை இப்படிச் செய்ய வேண்டும் என்ற சிந்தையால் மிகவும் பிரமாதத்தை அடைந்தவனும், விஷயத்தில் அதிக ஆசையுள்ளவனும், கிடைத்த விஷயத்தில் விசேஷ அபிநிவேசமுள்ளவனுமான புருஷனை, பசியால் கடைவாய்களை நக்கிக் கொண்டிருக்கும் ஸர்ப்பமானது எலியைப்போல

நீர் ஸாவதானராக நாசஞ்செய்கிறீர், எந்த உம்முடைய பாதாரவிந்தத்தை நம்முடைய குருவாகிய ப்ரஹ்ம தேவரும் பதினான்கு மனுக்களும் ஸம்சயமின்றிப் பூர்ண விசுவாசத்துடன் பூசித்தார்களோ, அந்தப் பாதார விந்தத்தை வித்வானாகிய எவன் பூஜிக்கமாட்டான்? மேலும், ருத்ரருடைய பயத்தாலே நாசமடைந்த ஜகத்திற்குப் பயமில்லாமல் வகிக்கும் ஸ்தானமாக இருந்தீர். ஓ பரப்ப்ரஹ்மமே! பரமாத்மாவே! எனக்குத் தரிசனம் கொடுக்க வேண்டும்" என்று பகவானை ஸ்தோத்திரஞ் செய்து. ஓ ராஜபுத்ரர்களே! மேற் காட்டிய மந்திரத்தை விசுவாஸத்துடன் தங்களுக்குரிய தர்மத்தை யனுஷ்டித்துப் பகவானிடத்தில் சித்தத்தைச் செலுத்தி ஜபியுங்கள். ஸகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாக இருப்பவரும், தம்முடைய மஹிமை யிலிருப்பவருமான அந்த ஸ்ரீமந் நாராயணனையே தியானத்தாலும், நாம ஜபத்தாலும் பூஜியுங்கள். ஓ ராஜபுத்திரர்களே! நீங்களெல்லோரும் ரிஷிகள் விரதத்தை அனுஷ்டித்து சித்தத்தை ஒருவகைபடுத்தி மேற்சொல்லிய ஸ்தோத்திரத்தை அடிக்கடி ஜபியுங்கள். முற்காலத்தில் இந்த ஸ்தோத்திரத்தை பிருகு முதலிய மஹரிஷிகளுக்கும், எனக்கும் ப்ரஹ்மதேவர் உபதேசித் தார், அதை ஜபஞ் செய்ததால் அஞ்ஞானமற்றவர்களாகி ஸிருஷ்டி சக்தியை அடைந்து, பலவகையான பிரஜை களைப் பிரஜாபதிகள் – ஸிருஷ்டித்தார்கள். இந்த ஸ்தோத்திரத்தை எவன் ஒவ்வொரு நாளும் ஸாவதானனாக ஜபிக்கிறானோ, அவன் சீக்கிரத்தில் க்ஷேமத்தை அடைவான், பலவகையான க்ஷேமத்திலும் மோக்ஷமே முக்கியமானது. ஞானமாகிய படகை அடைந்தவன் கரையற்ற ஸம்ஸார ஸமுத்திரத்தை இலகுவாகத் தாண்டுவான். எந்தப் புருஷன் என்னால்

சொல்லப்பட்ட இந்த ஸ்தோத்திரத்தை ஒவ்வொரு நாளும் ஜபித்து ஆராதிக்க முடியாத ஸ்ரீமந் நாராயணனை ஆராதிக்கிறானோ, அவன் என்னுடை கீதத்தால் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டவரும், க்ஷேமங் களுக்கு முக்கிய அதிபதியுமான ஸ்ரீ பகவானிடமிருந்து இஷ்டமான சுகத்தை அடைவான். எவன் காலையில் எழுந்திருந்து சிரத்தையுடன் கைகூப்பிக்கொண்டு இந்தக் கீதையைக் கேட்கிறானோ. பிறருக்குச் சொல்லு கிறானோ அவன் கர்மங்களிலிருந்து விடு படுவான். ஓ இராஜபுத்திரர்களே! பரமாத்வினுடைய ஸ்தோத்திர ரூபமான இந்தக் கீதத்தை நீங்கள் ஒருமனதாக ஜபஞ் செய்துகொண்டு தபஸ் செய்யுங்கள். கடைசியில் உங்களுக்கு எது இஷ்டமோ அதனை அடைவீர்கள்" என்று ராஜபுத்ரர்களைப் பரமசிவன் அனுக்கிரஹித்தார்.

நோட்டு

கிளி வேஷங்கொண்ட—ஸப்த ரிஷிகளுடைய விவாஹ காலத்தில் அக்கினி பகவான் ஸப்த ரிஷிகளின் பத்தினிகளிடம் ஆசைகொண்டார், அதையறிந்த ஸ்வாஹை ஸப்த ரிஷிகளின் பத்தினி வேஷங்கொண்டு தனது பர்த்தாவைத் திருப்திசெய்து, பின்பு கிளிவேஷங்கொண்டு அவருடைய ரேதஸ்ஸை நாணற் காட்டில் சேர்த்தாளென்று புராணக் கதை.

அத்தியாயம்–25

புரஞ்சனோபாக்கியானம்

1–2 இப்படிப் பரமசிவன் ராஜபுத்ரர்களுக்கு உபதேசித்து, அவர்களால் பூசிக்கப்பட்டு அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது மறைந்தார். பின்பு அவர்கள் எல்லோரும் ருத்ரரால் உபதேசிக்கப் பட்ட அந்த ஸ்தோத்திரத்தை ஜபித்துக் கொண்டு ஜலத்திலிருந்து தபஸ் செய்தார்கள்.

3–6 ஓ விதுரரே! அவர்களுடைய பிதாவாகிய பிராசீனபர்ஹிஸ் என்பவர் கர்மத்திலேயே ஆசை கொண்டவராக இருந்தபடியால் ஆத்ம தத்துவத்தை அறிந்தவராகிய நாரதர் அவ்வரசனை நோக்கி, ஓ மஹராஜ்! "எந்தக் கர்மத்தால் ஆத்மாவிற்கு சுகத்தை உண்டு பண்ணப் போகிறீர்? துக்கத்தை நிவர்த்திக்கக் கூடியதும் சுகத்தைக் கொடுக்கக் கூடியதுமான மோக்ஷமானது கர்மமார்க்கத்தால் கிடைக்கிறதில்லையே" என்று கிருபையுடன் கேட்டார். அதனைக் கேட்ட அரசன் நாரதரை நோக்கி, "மிகுந்த பாக்கிய முள்ளவவரே! எனக்கு அந்த மார்க்கம் தெரியாது. என்னுடைய புத்தியானது கர்மத்திலேயே செல்லுகிறது. புத்திரர்கள், ஸ்திரீ பணம் இவைகளைப் புருஷார்த் தமாக நினைத்து ஸம்ஸார மார்க்கத்தில் ரமித்துக் கொண்டிருப்பவன் மோக்ஷத்தை எப்படி, அடைவான்? எதனால் கர்மத்திலிருந்து நான் நிவர்த்தி அடைவேனோ, அந்த சுத்தமான ஆத்மஞானத்தை எனக்கு உபதேசிக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

7–25 அதனைக் கேட்ட நாரதர், "ஓ பிராஜாபதியே! நீர் அநேக யாகங்களைச் செய்து அவைகளில் தயையில்லாமல் அநேகம் பசுக்களை ஹிம்ஸித்திருக்கிறீர்; அந்த பசுக்கள் யாவும் உம்மால் செய்யப்பட்ட ஹிம்ஸையை நினைத்துக் கொண்டு உம்மை ஹிம்ஸிப்பதற்காகக் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. நீர் மரணமடைந்து பரலோகஞ் சென்றால் இரும்புமயமான தங்களுடைய கொம்பு களால், மிகுந்த கோபத்துடன் உம்மைக் குத்தி உபத்திரவிக்கப் போகின்றன. இந்த விஷயத்தில் உதாரணமாக வெகுநாளைக்கு முந்தி நடந்த புரஞ்சனனுடைய சரிதத்தைச் சொல்லுகிறேன், கேளும். ஓ அரசனே! வெகுநாளைக்கு முன் புரஞ்சன னென்னும் ஓர் அரசர் மிகுந்த கீர்த்தியுள்ளவராக இருந்தார். அவருக்கு அவிஞ்ஞாதன் என்ற ஒரு தோழன் உண்டு. அவருடைய சரிதம் பிறருக்கும் தெரியாது. அந்த அரசன் தோழனுடன் தமக்குத் தகுதியான பட்டணத்தைத் தேடி, பூமி முழுவதும் அலைந்தும் தகுதியான இடம் கிடைக்காததால் வருத்தமடைந்தான். இஷ்டமான காமங்களை அனுபவிக்க விரும்பினவராகையால் பூமியிலிருக்கும் பட்டணங்களிலொன்றும் அவர் மனதிற்குப் பிடிக்க வில்லை. இந்தப் புரஞ்சனன் ஹிமவத பர்வதத்தின் தென்பாகத்திலிருக்கும் தாழ்வரைகளில் ஒரு நகரத்தைக் கண்டான். அந்த நகரமானது ஒன்பது கோட்டைவாசல்களுள்ளது. ஸகல லட்சணங்களுள்ளது; பிரகாரங்கள், தோட்டங்கள் அட்டாலங்கள், அகழிகள், பலகணிகள், கோபுரங்கள் ஆகிய இவை களாகும். தங்கத்தாலும், வெள்ளியாலும் செய்யப்பட்ட சிகரங்களுள்ள வீடுகளாலும் பிரகாசிக்கிறது;

நீலங்கள், ஸ்படிகம், வைடூரியம், முத்து, மரகதம், மாணிக்கம் இவைகளால் தளவரிசை செய்யப்பட்ட உப்பரிகைகளுள்ளது. அதனால் போகவதீ பட்டணம் போல் பிரகாசித்தது. மேலும், அந்தப் பட்டணத்தில் ஸபைகள், நாற்சந்தி மண்டபங்கள், ராஜவீதிகள், விளையாடுகிற ஸ்தலங்கள், கடைவீதி, ஜனங்கள் சிரம பரிஹாரம் பண்ணிக் கொள்ளும் இடம், துவஜபதாகைகள், பவழ பூமிகள் ஆகிய இவைகள் இருக்கின்றன. அந்த நகரத்தின் வெளியில் ஒரு தோட்டமிருக்கிறது. அதில் திவ்யமான விருக்ஷங்களும், கொடிகளும் இருக்கின்றன. அந்தத் தோட்டத்தில் குளமொன்று இருக்கிறது. அதில் ஹம்ஸம் முதலிய பறவைகள் சப்தித்துக் கொண்டிருக்கின்றன. பனித்துளிகளுடன் கூடியதும், புஷ்பத்தின் வாஸனை யுள்ளதுமான காற்றினால் அசைகின்ற தளிர், கிளைகள் இவைகளுள்ள மரங்களிருக்கின்றன. அவ்விடத்தில் இருக்கும் பலவகையான காட்டு மிருகங்கள் பிறரை ஹிம்ஸிக்கிறதில்லை. குயில்கள் காதுக்கு இனிமையாகச் சப்திப்பதால் வழிப் போக்கர்கள் தங்களைக் கூப்பிடுவதுபோல நினைக்கிறார்கள். அப்படிப்பட்ட பட்டணத்திலிருந்து தெய்வச் செயலாக வெளியில் வந்த ஒரு உத்தம ஸ்திரீயைப் புரஞ்சனன் பார்த்தான்; அவளுக்கு பத்து வேலைக்காரர்கள் இருக்கிறார்கள்; ஒவ்வொரு வேலைக்காரர்களுக்கும் அநேகம் வேலைக் காரர்கள் இருக்கிறார்கள். ஐந்து தலைகளுள்ள ஸர்ப்பமானது அவளைக் காப்பாற்றுகிறது. அவள் விவாஹமாகாதவள்; பர்த்தாவை அடைய விரும்பியவள், இஷ்டப்படி உருவமெடுக்கத் தகுந்தவள்; அழகான மூக்குள்ளவன்; ரமணீயமான பற்களுள்ளவள்; அழகான கன்னங்கள், மேலான முகம் இவைகளுள்ளவள்;

காதுகளில் ஸமமான குண்டலங்களைத் தரிப்பவள்; பொன் வர்ணமான எக்கு முடிச்சுள்ளவள்; யௌவன வயதுள்ளவள்; தங்க ஒட்டியாணமுள்ளவள்; பாதத்தில் அணிந்திருக்கும் பாதஸரங்களுடைய சப்தத்துடன் தேவதைபோல் ஸஞ்சரிப்பவள்; அவளுடைய ஸ்தனங்கள் கொஞ்சமாக வெளியில் பிரகாசிக்கின்றன; மேலும் அவைகள் ஸமவிருத்தங்கள்; இடைவெளி யற்றவை; மேலும் அவள் அந்த ஸ்தனங்களை வஸ்திரத்தின் தலைப்பினால் மறைத்துக் கொண்டு பெண்யானைபோல் ஸஞ்சரிக்கிறாள்; வெட்கத்துடன் சிரிப்பதால் அழகாயிருப்பவள்; பின்னும் அவள் மிகுந்த ஆசையுடன் அழகான கடாக்ஷத்தால் அரசரைப் பார்த்தாள்.

26–31 அவளைக் கண்ட அரசர், தாமரை மலர் போன்ற கண்களுள்ளவளே! நீ யார்? யாருடைய பெண்? எவ்விடத்திலிருந்து வந்தவள்? இந்தப் பட்டணத்தில் வஸித்துக் கொண்டு எதனைச் செய்ய விரும்புகிறாய்? இந்தப் பதினோரு ஸேவகர்கள் யார்? இதோ இருக்கிற ஸ்திரீகள் யார்? உனக்கு முந்தி வரும் ஸர்ப்பமானது யாது? நீ, தர்மமாகிய பர்த்தாவைத் தேடும் ஹ்ரீ தேவதையா? ஸ்ரீ மஹாவிஷ்ணுவைத் தேடும் லக்ஷ்மிதேவியா? மஹர்ஷிகள்போல இந்திரியங் களை ஜயித்தவளாகிப் புருஷனைத் தேடும் நீ யார்? உன்னுடைய பர்த்தா உன்னுடைய பாதத்தை அடைந்த தாலேயே ஸகல கர்மங்களையும் அடைந்தவராக ஆகிறார். உன்னுடைய கையிலிருந்த தாமரைமலர் எவ்விடத்தில் விழுந்தது? ஓ அழகான தொடைக ளுள்ளவளே! மேற்சொல்லிய ஸ்திரீகளுக்குள் உன்னை ஒருத்தியாகவே சொல்ல நியாயமில்லை; ஏனென்றால்,

தேவதைகள் பூமியின் மீது நிற்கமாட்டார்கள். நீயோ பூமியில் நிற்கிறாய், ஆனதால் வீரர்களுக்குள் சிறந்த வனாகிய என்னைப் பர்த்தாவாக அடைந்து, நீ இந்தப் பட்டணத்தை லக்ஷ்மீ தேவியானவள் மஹா விஷ்ணுவுடன் வைகுண்டத்தைப் போல் அலங்கரிக் கலாம். ஓ அழகானவளே! உன்னுடைய கடைக் கண்ணினால் என்னுடைய இந்திரியங்கள் கலங்கின. வெட்கமுள்ளதும் அபிப்பராயத்துடன் கூடியதுமான சிரிப்பினால் மன்மதன் என்னை உபத்திரவிக்கிறான். அதனால் என்னை நீ அனுக்கிரஹிக்க வேண்டும்; ஓ அழகான புன்சிரிப்புள்ளவளே! அழகான புருவங்கள் உள்ளதும் அழகான கருவிழிகளுள்ள கண்களுள்ளதும், நாலுடக்கங்களிலும் தொங்கும் கறுத்த மயிர்களுள்ளதும், இனிமையாகப் பேசக்கூடியதுமான முகத்தை வெட்கத்தால் திருப்பிக் கொண்டிருக்கிறாயே? அதனை எனக்குக் காண்பிக்க வேண்டும்" என்று யாசித்தார்.

32–42 சூரராகிய விதுரரே, இப்படிக் கெஞ்சிக் கேட்கும் புரஞ்சனனைப் பார்த்து, அந்தப் பெண் இவரிடத்தில் ஆசைகொண்டு புரஞ்சனனை நோக்கி, 'ஓ புருஷர்களுக்குள் சிறந்தவரே! என்னை யுண்டு பண்ணினவரையும் பெயர் வைத்தவரையும் கோத்திரத் தையும் நான் அறியேன். நான் வஸிக்கும் இந்த நகரத்தை யுண்டு பண்ணினவர் இன்னாரென்றும் எனக்குத் தெரியாது. ஆனால் இவ்விடத்தில் வஸிப்பது தான் எனக்குத் தெரியும்; இந்தப் புருஷர்கள் என்னுடைய தோழர்கள்; இந்தப் பெண்கள் தோழிகள்; நான் தூங்கும் பொழுது இந்த ஸர்ப்பமானது இந்தப் பட்டணத்தை விழித்துக் கொண்டு காப்பாற்றுகிறது. தெய்வாதீனமாக நீர் இவ்விடம் வந்தீர். என்னுடைய

பந்துக்களை வைத்துக் கொண்டு உம்மைக் கல்யாணஞ் செய்து கொள்கிறேன்! என்னுடன் கிராம்யமான போகங்களெல்லா வற்றையும் அனுபவிக்கலாம்; என்னால் உண்டுபண்ணப்படும் காம போகங்களை அனுபவித்துக் கொண்டு வெகுகாலம் ஒன்பது வாசல்கள் உள்ள இந்த நகரத்தில் வசியும். மேலும், உம்மை விட்டு ரதியை அறியாதவனும் வேகத்தால் நிஷேதிக்கப் படாதஸுகத்தில் ஆசையில்லாதவனும், பரலோக சிந்தையற்றவனும், இவ்வுலகத்திய சிந்தை யில்லாதவனும், பசுவிற்கு ஸமமானனுமாகிய எவனைப் பர்த்தவாக அடையப் போகிறேன்? பிரவிருத்தி தர்மமாகிய கிருஹஸ்த தர்மத்தில் அர்த்த காமங்கள், புத்திரஸுகம், மோக்ஷம், கீர்த்தி, துக்கமற்ற லோகங்கள் ஆகிய இவைகள் கிடைக்கின்றன. இதுவே தர்மம் இதனை ஸன்யாஸிகள் அறியமாட்டார்கள். கிருஹஸ்தாசிரமம், பிதிருக்கள், தேவர்கள், மஹரிஷிகள், மனிதர்கள், மற்ற பிராணிகள் ஆகிய இவர்களுக்கும், தனக்கும் ஸுகத்தைக் கொடுக்கக்கூடியதென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஓ சூரரே! என்னைப் போன்ற எந்த ஸ்திரீ தாமாக வந்தவரும், கீர்த்தி யுள்ளவரும், தாதாவாயும், பிரியமான பார்வையுள்ள வருமான உம்மைப் போன்ற புருஷனைப் பர்த்தாவாக வரிக்க மாட்டாள்? ஸர்ப்பத்தின் உடல்போன்ற உம்முடைய கைகளைப் பார்த்து எவளுடைய மனம் தான் ஆசைப்படாது? நீர் அனாதர்களுடைய மனக் கவலையை க்ருணை நிறைந்த பார்வையால் போக் கடிப்பதற்காக ஸஞ்சரிக்கிறீர்" என்றாள்.

43–62 இப்படி அவ்விருவர்களும் பேசிக் கொண்டு அந்தப் பட்டணத்தில் பிரவேசித்து அநேக வருஷங்கள்

ஸந்தோஷமாக வஸித்தார்கள். அவ்விடத்தில் புரஞ்சனன் பாடகர்களுடைய கானத்தைக் கேட்டும், ஸ்திரீகளுடன் விளையாடிக் கொண்டும் கோடை காலத்தில் ஜலக்கிரீடை செய்தும் ஸந்தோஷமாகக் காலத்தைக் கழித்தார். அந்த பட்டணத்திற்கு ஏழு வாசல்கள் மேலே இருக்கின்றன. இரண்டு வாசல்கள் கீழாக இருக்கின்றன. அதற்கு அதிபதி இன்னாரென்று தெரியவில்லை. ஐந்துவாசல்கள் கிழக்கேயிருக்கின்றன. தெற்கில் ஒன்றும், வடக்கில் மற்றொன்று மிருக்கிறது. இரண்டு வாசல்கள் மேற்கே இருக்கின்றன. கத்யோகம், ஆவிர்முகீயென்ற இரண்டு வாசல்களும் கிழக்கில் ஓரே இடத்திலிருக்கின்றன. அவைகள் வழியாகப் புரஞ்சனன் தியுமான் என்ற தோழனுடன் விப்பிரர் ஜிதமிமன்ற தேசத்திற்குப் போகிறார். நளினீ, நாளினீ என்ற இரண்டு வாசல்கள் ஓரே இடத்திலிருக்கின்றன. அவைகளின் வழியாக புரஞ்சனன் அவதூதமினென்ற தோழனுடன் ஸௌரபமென்ற தேசத்திற்குப் போவது வழக்கம். முக்கை யென்ற கிழக்கிலிருக்கும் வாசல் வழியாக அவ்வரசர் ரஸஜ்ஞனென்ற தோழனுடன் பஹூதனமென்ற தேசத்திற்கும் விடணனென்பவனுடன் ஆபணமென்ற தேசத்திற்கும் செல்வார். மேலுமவர் பிதிருஹூவென்ற தெற்கு வாசல் வழியாகச் சுருததரனென்ற தோழனுடன் தக்ஷிணபாஞ்சாலத் திற்குப் போகிறார். தேவஹூயென்ற வடக்கு வாசல் வழியாக சுருததரனுடன் உத்தர பாஞ்சாலஞ் செல்கிறார். ஆஹூயென்ற மேற்கு வாசல் வழியாக துர்மதனுடன் கிராமதமென்ற தேசத்திற்குப் போகிறார். நிருதியென்ற மற்றொரு மேற்கு வாசல் வழியாக உல்பணனென்பவனுடன் வைசஸம் என்ற தேசம் செல்லுகிறார்; மேலும் அந்தப் பட்டணத்திய

ஜனங்களுக்குள் நிர்வாக், பேசஸ்கிருத் என்னுமிருவர்கள் கண்ணில்லாதவர்கள். அவர்களில் நிர்வாக் என்ப வனுடைய ஸஹாயத்தால் கண்ணுள்ளவர்களுக்கு அதிபதியான புரஞ்சனன் நடக்கிறார். பேசஸ்கிருத் என்பவனுடைய ஒத்தாசையால் காரியங்களைச் செய்கிறார். அவர் விஷூசீனனுடன் அந்தப்புரஞ் சென்றால் அப்பொழுது ஸ்திரீ, புத்திரன் ஆகிய இவர் களால் ஏற்படும் மோஹத்தையாவது, ஸந்தோஷத் தையாவது அடைகிறார். இம்மாதிரி அவ்வரசர் மிக்க காமியாகி, விஷயங்களில் ஆசைப்பட்டு விவேக மில்லாமல் தம்முடைய பார்யையின் இஷ்டப்படி நடந்தார். எப்படியெனில் தம்முடைய பத்தினி மத்யத்தைக் குடித்தால் தாமும் மத்யபானஞ் செய்தார். அவள் சாப்பிடும்போது இவரும் புசித்தார். அவள் பக்ஷணங்களை உட்கொள்ளும்போது இவரும் பக்ஷணங்களை புசித்தார். அவள் கானஞ் செய்யும் பொழுதும் கானஞ் செய்கிறார். அவள் அழுதால் இவரும் அழுகிறார். அவள் சிரித்தால் இவரும் சிரிக்கிறார். அவள் பேசும்பொழுது இவரும் பேசினார். அவள் ஓடினால் இவரும் ஓடுகிறார். அவள் நின்றால் இவரும் நிற்கிறார். அவள் படுத்திருந்தால் இவரும் படுத்திருக்கிறார். அவள் உட்கார்ந்திருந்தால் இவரும் உட்காருகிறார். எதையாவது அவள் கேட்டுக் கொண்டிருந்தால் இவரும் காது கொடுத்து கேட்கிறார். அவள் பார்க்கும்பொழுது இவரும் பார்க்கிறார். அவள் வாசனையை முகரும்போது இவரும் வாஸனையைக் கிரஹிக்கிறார். அவள் எதனையாவது தொடும்பொழுது இவரும் தொடுகிறார். அவள் துக்கிக்கும்போது இவரும் தீனன்போல் துக்கிக்கிறார். இப்படிப் புரஞ்சனன் தமது ஸ்திரீயினால் வஞ்சிக்கப்பட்டு

எல்லாப் பிரகிருதிகளாலும் ஏமாற்றப்பட்டும், ஒன்றையும் விரும்பாமல் விளையாட்டு மிருகம்போல் அவள் செய்த காரியத்தையே செய்து கொண்டிருந்தார்.

நோட்டு

புரஞ்சனன்–தன்னுடைய கர்மங்களால் சரீரமாகிய பட்டணத்தை யுண்டு பண்ணுவதால் ஜீவனென்று அர்த்தம். அவிஞ்ஞாதன் ஒருவராலும் அறியப்படாத பெயருள்ளவர் பரமாத்மா. இவர் ஜீவனுக்குத் தோழன். "இரண்டு கருடபக்ஷிகள் ஒன்றுக்கொன்று தோழமை. ஒரே மரத்தில் வஸிக்கின்றன. அவைகளில் ஒன்று அந்த மரத்தில் பழுத்த பழத்தைப் புசிக்கிறது. மற்றொன்று பழத்தைப் புசியாமல் ஸாக்ஷியாக இருக்கிறது" –சுருதி. ஸ்ரீத : அந்த அத்தியாயத்தில் அன்யோபதேசமாக அத்யாத்ம விஷயத்தை நாரதர் உபதேசிக்கிறார். 'ஏன் ஸாக்ஷாத்தாக உபதேசிக்கவில்லை யென்றால் தேஹம் முதலியவைகளில் ஆத்மாவென்ற அபிமானமுள்ளவனும் உண்மையில் ஹிதமான புருஷார்த்தத்தை அறியாதவனும், விஷயசுகமே பரம புருஷார்த்தமென்று நினைத்தவனுமாகிய புருஷனுக்கு தத்துவத்தை யுபதேசிப்பதாலும் அவன் புத்தியில் ஏறமாட்டானென்று நினைத்து வெகுகாலமாக அப்யஸிக்கப்பட்ட ஸ்திரீகள், புருஷர்கள், கர்ப்பம், ஜனனம் கிழத்தனம். மரணம், ஜாக்ராவஸ்தை, ஸ்வப்னம், ஸுஷுப்தி முதலிய ஸம்ஸாரத்தை நிரூபித்து பின்பு அவைகளின் தோஷத்தை காண்பித்து இவைகளை நாம் விட்டுவிட வேண்டும்' என்ற எண்ணத்தை உண்டுபண்ணி, பின்பு தத்துவத்தை

யுபதேசித்தால் நன்றாகப் புத்தியில் ஸ்திரமாக இருக்கு மென்ற எண்ணத்தால் அன்யாபதேசமாக உபதேசித் தார். ஜீவனை அரசனாகவும், சரீரத்தை அவனுடைய நகரமாகவும் பரமாத்மாவை ஜீவனுக்குத் தோழனா கவும், புத்தியை பத்தினியாகவும் சொல்லப்பட்டி ருக்கிறது. 'அரசன் இருந்தார்' என்றதால் ஜீவன் அநாதியென்று ஏற்படுகிறது. மிகுந்த கீர்த்தி உள்ளவர் என்றதால் பாவமற்றவர்; கிழத்தனமற்றவர்; மரண மற்றவர்; சோகமற்றவர்; பசி தாகங்களற்றவர்; ஸத்யகாமர், ஸத்யஸங்கல்பர் என்ற சுருதியாலும், "இவர் ஆயுதத்தால் வெட்டமுடியாதவர்; தஹிக்க முடியாதவர்; ஜலத்தால் நாசஞ் செய்ய முடியாதவர்; வாயுவினால் உலர்த்த முடியாதவர்; ஆனதால் நித்யர்; எங்குமிருப்பவர்; அசையாதவர்; புராண புருஷர்; என்ற ஸ்மிருதியாலும் உத்கோஷிக்கப்பட்ட குணங் களுள்ளவரென்று ஏற்படுகிறது. அவிஞ்ஞாத– அறியப் படாத பெயருள்ளவர் (ஒருவருக்கும் அவருடைய பெயர் தெரியாது) பரமாத்மாவின் பெயர் ஒருவராலும் அறியப்படாததாகையால் அவரே தோழரென்று சொல்லப்பட்டிருக்கிறார். ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் அவிஞ்ஞாதரென்றப் பகவானுக்கு ஒரு பெயர் காட்டப்பட்டிருப்பதால் அவிஞ்ஞாதவென்ற பெயருள்ளவரென்றும் சொல்லலாம். 'பெயர் தெரியாது' என்றதால் ஜீவனுக்கு அவருடைய பெயரே தெரியாது. ஸ்வரூபம் எப்படித் தெரியும்? அதுவும் அதனால் அறியப்படாததே என்று கருத்து –வீர. அலைந்தும் நல்ல சரீரத்தையடைய வேண்டிப் பிரம்மாண்டத் திலுள்ள தேவசரீரம் முதலியவைகளிலும், ஸ்தாவர சரீரங்களிலும் பிரவேசித்து அலைந்தான். கதையின் அழகுக்காகப் பட்டணத்தை வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

பத்து வேலைக்காரர்கள்–பத்து இந்திரியங்கள். அவைகளுடைய விருத்திகளே. அவைகளின் பரிகாரர் கள். ஐந்து தலைகளுள்ள – ஐந்து வியாபாரங் களுள்ள பிராணன்; தெய்வாதீனமாக – பெயர் முதலியவை எனக்குத் தெரியாமலிருந்தாலும் ஒன்பது துவாரங்களுள்ள மனுஷ்ய சரீரத்தைத் தெய்வச் செயலாக அடைந்தீர். இதில் விஷய ஸுகங்களை அடையலாம், வீர. ஜலக்கிரீடைத்தில் ஹ்ராதினி என்றிருப்பதால் ஸகல இந்திரியங்களுடன் ஜாக்ரா வஸ்தையில் விஷயசுகத்தை அனுபவித்த, அந்த அவஸ்தையில் நேர்ந்த களைப்பைப் நிவர்த்தித்துக் கொள்வதற்காக ஸ்வப்னாவஸ்தையை அடைந்தார்; ஏழு வாசல்கள்–இரண்டு கண்கள், இரண்டு மூக்குகள், இரண்டு காதுகள், முகம் ஆகிய ஏழு. இரண்டு வாசல்கள் குதம்குறி ஆகிய இரண்டு. கத்யோதம்– மின்மினிப் பூச்சி போல் அற்ப பிரகாசமுள்ள இடது கண் ஆவிர்முகி–பிரகாசமுள்ள வலது கண், தியுமான – சக்ஷுந்திரியம், அதனுடன் பிரகாசிக்கும் விஷயத்தை அடைகிறான். நளினி, நாளினி இரண்டு மூக்குகள், அவைகளின் வழியாக வாயு தேவதாகமான கிராணேந்திரியத்துடன் ஜீவன் வெளியில் சென்று வாஸனையைக் கிரஹிக்கிறான். முக்கை–முகம். ரஸஜ்ஞ–நாக்கு பஹூமதன சித்திரான்னம் முதலியவை விபணம் வாகிந்திரியம். ஆபணம்– பேச்சு.

இதன் விபரங்கள் யாவும் இந்த நான்காவது ஸ்கந்தத்தில் இருபத்தொன்பதாவது அத்தியாகத்தின் மூலத்திலேயே சொல்லப்பட்டு இருக்கின்றனவாதலால் அதிகமாக எழுதுவதை இங்கு நிறுத்தினோம்.

அத்தியாயம்–26

(முன் அத்தியாயத் தொடர்ச்சி)

1–16. அந்த வீரராகிய அரசர் ரதத்தின் மீதேறி வேட்டைக்காக வனஞ்சென்றார். அந்த இரதத்தில் ஐந்து குதிரைகள் கட்டியிருக்கின்றன. அது வெகு வேகமாகச் செல்லக்கூடியது: இரண்டு ஈஷா தண்டமுள்ளது; இரண்டு சக்கரங்களுள்ளது; ஒரு அச்சுள்ளது; மூன்று துவஜ மரங்களுள்ளது; ஐந்து ஸந்திபந்தங்களுள்ளது; ஒரு கடிவாளமுள்ளது; ஒரு ஸாரதியுள்ளது; ஒருவர் உட்காரக்கூடிய ஸ்தலமுள்ளது; இரண்டு ஏர்க்கால்களுள்ளது; ஐந்து பிரஹரணமுள்ளது; ஏழு வருதமுள்ளது; இரதத்திற்கு மேற்புரத்தில் போட்டிருக்கும் புலித்தோல் முதலியவை) ஐந்து கதிகளுள்ளது; தங்கமயமான ஸாமக்கிரிகளுள்ளது; பதினோரு ஸேனாபதிகளுக்கு அதிபதியான அந்த புரஞ்சனன் ஸ்வர்ண கவசத்தை தரித்து. குறையாத பாணங்களுள்ள தூணீரமுள்ளவனாகி ஐந்து தாழ்வாரைகளுள்ள வனஞ் சென்று பாணம், வில் ஆகிய இவைகளை வைத்துக்கொண்டு மிக்க கர்வத்துடன் வேட்டையாடுவதில் மிகுந்த ஆசையுடன் வேட்டையாடினான். ஆனால் பத்தினியை மட்டில் அழைத்துப் போகவில்லை. மேலுமவர் அரசர்களுடைய ஸ்வபாவத்தை அங்கீகரித்து. கருணையற்றவராகி, கூர்மையான பாணங்களால் காட்டு மிருகங்களைக் கொன்றார்: (க்ஷத்திரியர்களுக்கு வேட்டையாடுவது தோஷமல்லவே, ஏன் அதனைத் தோஷமாகக் கூறப்படுகிறதென்றால் ஸநாதனஞ் சொல்லப்படுகிறது.) அரசர்கள் வேட்டையாடி மிருகங்களைக் கொல்ல

வேண்டுமென்ற விதியில்லை; ஆகையால் மிருகங்களைக் கொல்வார்களாகில் சிராத்தம் முதலியவைகளுக்காக மிருகங்களைக் கொல்லக்கூடாது; பிரஸித்தமான சிராத்தங்களாக இருக்கவேண்டும். அதிலும் சுத்தமான மிருகங்களையே கொல்லவேண்டும்; அதிலும் வனத்தில் அடிக்கலாமேயொழிய மற்றவிடத்தில் ஹிம்ஸிக்கக் கூடாது; அதிலும் எவ்வளவு வேண்டுமோ. அதற்கு மேல் எடுத்துக் கொள்ளக்கூடாது. வித்வானாகிய எந்தப் புருஷன் இம்மாதிரி நியதமான கர்மத்தை அனுஷ்டிக்கிறானோ அவனுக்கு ஞானமுண்டாகும் ஆதலால் அந்தர்கர்மம் பந்தமாகிறதில்லை. விதியை மீறிக் கர்மங்களைச் செய்பவன் கர்த்தாவென்ற அபிமானமுள்ளவனாகி, கர்மத்துக்குக் கட்டுப்படுகிறான் பின்பு குணங்களில் மூழ்கி நரகத்தை அடைகிறான். இப்படி அரசருடைய பலவகையான இறக்கைகளுள்ள பாணங்களால் பேதிக்கப்பட்டு அநேக மிருகங்கள் நாசமாயின. கருணையுள்ள வர்களால் அது ஸஹிக்க முடியாததாக இருந்தது. சசங்கள் முயல்கள், பன்றிகள், மஹிஷிகள், கவயங்கள், குருக்கள், (சல்யங்கள் முதலிய சுத்தமானவைகளையும், அசுத்தமானவைகளையும் கொண்டு அரசன் மிகவும் களைப்படைந்தார்; பின்பு தமது பட்டணத்திற்கு வந்து அந்தப்புரம் சென்று ஸ்நானஞ் செய்து உசிதமான ஆகாரத்தைப் புசித்து, சிரம பரிஹாரமடைந்து படுத்துக் கொண்டார், அப்பொழுது நல்ல சந்தனம் பூசிக்கொண்டார். புஷ்ப மாலைகளைத் தரித்தார் தூப வாஸனையை மோந்தார். ஸகல அவயவங்களையும் அலங்கரித்துக் கொண்டார். அப்பொழுது பத்தினியை பார்க்க வேண்டுமென்ற எண்ண முண்டாயிற்று. அப்பொழுது அவ்வரசர் வெளியிலிருக்கும் விஷயங்களில்

ஆசையில்லாதவராகவும், ஸந்தோஷத்தையடைந்தவரும், தம்மையும் பிறரையும் மறந்தவரும், மன்மதனால் பீடிக்கப்பட்ட மனமுள்ளவருமாக இருந்தபடியால் தம்முடைய பத்தினியை எங்கும் தேடிப்பார்த்தார். அப்படியும் அவள் காணப்படவில்லை. பின்பு மனவருத்தமடைந்து அந்தப்புர ஸ்திரீகளை நோக்கி ஓ ஸ்திரீகளே! நீங்களும் உங்களுடைய யஜமானிகளும் முன்போல க்ஷேமமாயிருக்கிறீர்களா? கிருஹத்தில் மாதாவாவது, பதிவ்ரதையான பத்தினியாவது இல்லாவிடில் அந்த கிருஹத்திலிருக்கும் ஸம்பத்துக்கள் பிரகாசிக்கிறதில்லை. சக்கரம் முதலியவைகளற்ற ரதம்போல இப்படிப்பட்ட வீட்டில் விவேகியான எவன்தான் தினனாக வஸிப்பான்? என்னுடைய பத்னியானவள் துக்கஸமுத்திரத்தில் மூழ்கும் என்னை அடிக்கடி ஸமாதானஞ் செய்து, ஸந்தோஷப் படுத்துவாளே; அவள் எவ்விடத்தில் இருக்கிறாள்?" என்று கேட்டார்.

17. அதனைக் கேட்ட ஸ்திரீகள், "சத்துருவைக் கொல்லும் பராக்ரமமுள்ள ஓ மஹாராஜனே! உம்முடைய பத்தினியானவள் என்ன எண்ணங் கொண்டிருக்கிறாள் என்பது எங்களுக்குத் தெரியவில்லை; தரையில் படுத்துக்கொண்டிருக்கிறாள், பாரும்" என்று சொன்னார்கள்.

28–26. அதனைக் கேட்ட புரஞ்சனர் தேஹாபிமானத்தை விட்டுப் பூமியில் படுத்திருக்கும் பத்தினியைப் பார்த்து மனங்கலங்கி மிகுந்த துக்கத்தை அடைந்தார். பின்பு அவர் மிகுந்த வருத்தத்துடன் மெதுவான வார்த்தைகளைச் சொல்லி அவளை

ஸமாதானஞ் செய்து தம்மிடத்தில் அவளுக்குப் பிரணய கோப மிருக்கிறதாகத் தெரிந்து கொண்டார். நல்வார்த்தை சொல்வதில் ஸமர்த்தராகிய அந்தப் புரஞ்சனன் அவளை மெள்ள மெள்ள ஸமாதானஞ செய்தார். அவளைத் தம்முடைய மடியில் வைத்துக் கொண்டு கால்களையும் பிடித்தார். மேலுமவர் பத்தினியை நோக்கி, "ஓ அழகானவளே! யஜமானர்கள், வேலைக்காரர்கள் குற்றம் செய்தாலும், அவர்களைத் தங்களுக்கு ஸ்வாதீனர்களாகச் செய்துகொண்டு சிக்ஷிக்கவேண்டும்; அப்படி சிக்ஷிக்கப்படாத வேலைக் காரர்கள் புண்ணியம் பண்ணாதவர்கள் என்பது நிச்சயம். பிரபு வேலைக்காரனைச் சிக்ஷிப்பது அனுக்கிரஹமாக ஆகிறது. பந்துக்களால் செய்யப்பட்ட சிக்ஷையைப் பற்றி எவன் துக்கிக்கிறானோ, அவன் அக்ஞனேயாம். ஓ தைரியமுள்ளவளே! அழகான புருவங்களாலும், புன்சிரிப்பினாலும், கடைக்கண் பார்வையாலும், கறுத்த மயிர்களாலும், அழகானதும் உயர்ந்த மூக்குள்ளதும், இனிமையான வார்த்தை யுள்ளதுமான முகத்தைப் பந்துவாகிய எனக்குக் காண்பிக்க வேண்டும். சூரனுடைய பத்தினியே! உனக்கு யார் குற்றம் செய்தாரோ அவர் ப்ராஹ்மணர்கள், பகவத் பக்தர்களாகிய இவர்களைத் தவிர வேறு யாராயிருந்தாலும் அவனை சிக்ஷிக்கிறேன். ஆனால் மூன்று லோகத்திற்கு வெளியிலும் கூட உனக்கு அபராதஞ் செய்தவன் பயமில்லாமல் சந்தோஷமாக வஸிக்கமாட்டான். (என்னிடத்திலிருந்து பயந்து தானாகவே மரணமடைவான்.) உன்னுடைய முகமானது இதற்குமுன் இம்மாதிரி இருந்ததில்லை; நெற்றியில். திலகமில்லை; முகமானது அழுக்கடைந் திருக்கிறது; சந்தோஷமற்றதாயிருக்கிறது; அழகான

உன்னுடைய ஸ்தனங்கள் துக்கத்தால் வாடினவை களாக இருக்கின்றன, கோவைப்பழம் போன்ற உதடு தாம்பூலச் சிரிப்பு இல்லாமலிருக்கிறது; ஆனதால் உன்னை விட்டுத் தனியாக வேட்டைக்குப் போனதால் குற்றஞ் செய்தவனாக ஆகிறேன்; ஆனாலும் நான் உனக்கு ஸ்வஹிருத்தானபடியால் என் குற்றத்தை மன்னிக்கவேண்டும்; மன்மதனால் பீடிக்கப்பட்டுத் தைரியமில்லாமல் வருத்தப்படுகிறவரும், ஸ்வாதீனப் பட்டவருமாகிய பர்த்தாவை எந்த ஸ்திரீ தான் ஆராதிக்கமாட்டாள்" என்று சமாதான வார்த்தை களைச் சொன்னார்.

அத்தியாயம்–27

(முன் அத்தியாயத் தொடர்ச்சி)

1–12 புரஞ்சனனுடைய பத்தினீயும், புரஞ்சனி யென்னும் பெயருள்ளவளுமான அந்தப் பெண் இம்மாதிரி புரஞ்சனனை, வசப்படுத்திக் கொண்டு ரமித்தாள். பிறகு அவள் ஸ்நானஞ் செய்து, நல்ல வஸ்திரங்களை உடுத்திக் கொண்டும் அலங்காரஞ் செய்து கொண்டும் மேலான அன்னத்தைப் புஜித்து அரசருடைய சமீபம் வந்தாள். அவளைப் பார்த்து அரசர் சந்தோஷமடைந்து அவளை ஆலிங்கனஞ் செய்து கொண்டு ரஹஸ்யத்தில் அவள் வார்த்தையைக் கேட்டு அதனால் புத்தி மயக்கமடைந்து, ஸ்திரீயினால் பீடிக்கப்பட்டவராகி, இரவு, பகல் என்ற எண்ணமற்று, தம்முடைய ஆயுஸ்ஸு செலவாகிறதென்பதைத் தெரிந்து கொள்ளாதவராக இருந்தார். அதனால் அவருக்குத் தம்முடைய ஆத்மாவாவது, பிறராவது, பிறருடைய ஸ்வரூபமாவது தெரியவில்லை. இந்தப் புரஞ்சனியினுடைய ஸ்வரூபமே அவரால் அறியப் பட்டது. இப்படி அவ்வரசர் மன்மதனால் கலங்கிய மனமுள்ளவராகி அவளுடன் ரமித்துக் கொண்டிருந்தார். அவருடைய யெள்வன வயது முழுவதும் அரை க்ஷணம் போல் சென்றது. அந்தப் புரஞ்சனனுக்கு நூற்றுப் பதினொரு பிள்ளைகள் பிறந்தார்கள். அப்பொழுது அவருடைய வயதில் பாதி சென்றது. பின்பு பித்ருகுலத்திற்கும், சஹோதரர்களுக்கு கீர்த்தியை விருத்திபண்ணக கூடிய நூற்றுப்பத்து பெண்கள் பிறந்தார்கள். புரஞ்சனனுடைய புத்திரி களான அவர்களெல்லோரும் நல்ல ஸ்பாவம்

உள்ளவர்கள்; ஔதார்ய குணமுள்ளவர்கள். அப்பொழுது புரஞ்சனன் தம்முடைய புத்திரர் களுக்குத் தகுந்த ஸ்திரீகளை விவாகச் செய்து வைத்ததுமன்றி பெண்களுக்கும் தகுந்த புருஷர்களை தேடி விவாஹஞ் செய்வித்தார். அந்தப் புத்திரர் களுக்கு ஒவ்வொருவர்களுக்கும் தனித்தனியே நூறு புத்திரர்கள் உண்டானார்கள். அதனால் பாஞ்சால தேசத்தில் புரஞ்சனனுடைய வம்சமானது விருத்தி யாயிற்று. அப்பொழுது அவ்வரசர் தம்முடைய புத்திரர்களையும் அவர்களுடைய புத்திரர்களையும் பார்த்து அவர்களிடத்தில் அபிமானம் வைத்து விஷயங்களில் மூழ்கியிருந்தார். பின்னுமவர் நீர் யாகங்களை அனுஷ்டித்தது போல் பலவகையான பசுவை உத்தேசித்து யாகங்களைச் செய்து, அவைகளில் பசுக்களைக் கொன்று தேவர்களையும், பிதிருக்களையும், பூதபதிகளையும், பூஜித்தார். இப்படி குடும்ப விஷயத்தில் ஆசையுள்ளவரும், தமக்கு அனுகூலமான கர்மங்களைச் செய்வதில் ஜாக்கிரதை யுற்றவருமான புரஞ்சனருக்கு ஸ்திரீகளிடத்தில் மிகுந்த ஆசையுள்ளவர்களுக்கு எது விரோதியோ, அந்த ஜரை (கிழத்தனம்) நேர்ந்தது.

13–18 அப்பொழுது சண்டவேகனென்ற ஒரு கந்தர்வராஜன் இருந்தான். அவனுக்கு மிக்க பலிஷ்டர் களான முந்நூற்று அறுபது கந்தர்வர்கள் வேலைக்காரர் களாக இருந்தார்கள். மேலும் அவனுக்கு வெண்மை நிறமுள்ளவர்களும், கருமை நிறமுள்ளவர்களுமான முந்நூற்று அறுபது ஸ்திரீகள் வேலைக்காரிகளாக இருந்தார்கள். அந்தச் சண்ட வேகனுடைய வேலைக் காரர்கள் புரஞ்சனனுடைய பட்டணத்தைப் பிடித்துக்

கொள்ள யத்தனித்தார்கள். அப்பொழுது அந்தப் பட்டணத்துத் தலைவனாகிய பிரஜாகரன் என்பவன் அந்த எழுநூற்றிருபது கந்தர்வர்களுடன் தானொரு வனாக நூறு வருஷம் யுத்தம் செய்தான். அந்தப் பிரஜாகரன் வெகுகாலம் யுத்தம் செய்தும் எதிரிகள் அநேகர்களாக விருந்துபடியால், தான் களைப்படைந்து பிராண சம்சயத்தை அடைந்து பட்டணத்து ஜனங் களுடனும், பந்துக்களுடனும் மிகவும் கவலை யடைந்தான். அந்தப் புரஞ்சனன் பாஞ்சால தேசத்தில் தம்முடைய வேலைக்காரர்களால் கொடுக்கப்படும் வஸ்துக்களைப் புஜித்து, ஸ்திரீயால் ஜயிக்கப்பட்டு பட்டணத்துக்கு நேர்ந்த பயத்தை அறியாதவராக வேயிருந்தார்.

19–30 இப்படியிருக்கையில் காலனுடைய பெண் துர்பகா என்னும் பெயருள்ள ஒருத்தி தனக்குத் தகுந்த புருஷனைத் தேடி, மூவுலகமும் அலைந்தாள். "ஓ பிராசன பார்ஹிஸ்ஸே! அவளைக் கல்யாணஞ் செய்து கொள்ள ஒருவரும் சம்மதிக்கவில்லை; அவள் முன் காலத்தில் தன்னை அங்கீகரித்த பூருவிடம் சந்தோஷித்து அவருக்கு வரத்தை (ராஜ்யத்தை) கொடுத்தவள், நான் ப்ரஹ்மலோகத்திலிருந்து பூமியில் சஞ்சரிக்கும் பொழுது தெய்வச் செயலாக என்னைக் கண்டாள்; தன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டாள்; அதற்கு நான் சம்மதிக்காததனால் அவள் என்னை நோக்கி, "ஓ முனியே! என்னுடைய வேண்டுக்கோளின்படி நீர் நடவாததினால் நீர் எப்பொழுதும் ஒரே விடத்தில் இல்லாமல் அலைந்து கொண்டிருப்பீர்" என்று நிவர்த்திக்க முடியாத சாபத்தைக் கொடுத்தாள். பின்பு

நான் அந்தக்கால கன்னிகையை நோக்கி, யவனர்களுக்கு அதிபதியான பயன் என்பவனைக் கல்யாணம் செய்துகொள்" என்று சொன்னேன். அதனைக் கேட்டு அவள் பயனிடம் சென்று, "ஓ வீர! யவனர்களுக்கு அதிபதியான உம்மை நான் வரிக்கிறேன்; உம்முடைய விஷயமாய்ச் செய்யப்பட்ட சங்கல்பமானது ஒரு பொழுதும் நாசமடைகிறதில்லை. லோகத்திலும் வேதத்திலும் எதனைக் கொடுக்கலாமென்றும், பிரதிக்ரஹிக்கலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறதோ அதனைப் பிறர் யாசிக்க எவன் கொடுக்கவில்லையோ, கொடுப்பதை எவன் பெற்றுக் கொள்ளவில்லையோ, அவ்விருவர்களும் அக்ஞர்கள். அவர்களைப் பற்றி சாதுக்கள் துக்கிக்கிறார்கள். உபத்திரவமடைந்தவர் களிடத்தில் தயை செய்வதே புருஷனுக்கு தர்மம். ஆகையால் என்னிடம் தயைசெய்து சந்தேகமின்றி கல்யாணம் செய்துகொள்ளும்" என்று வேண்டிக் கொண்டாள். அதனைக் கேட்ட யவனேசுவரன் எல்லாருக்கும் மரணமுண்டு பண்ண வேண்டுமென்ற எண்ணமுள்ள அந்தப் பெண்ணை நோக்கி, "நீ அஸத்தான ஸ்திரீகளுக்குள் சிறந்தவள். அதனால்தான் உன்னை ஒருவரும் விரும்பவில்லை. ஆனாலும் உனக்குத் தகுந்த புருஷன் ஒருவன் இருக்கிறான். நான் ஞானதிருஷ்யால் தெரிந்து கொண்டேன. இந்த லோகம் முழுவதும் உனக்கு புருஷனே. நீ ஒருவருக்கும் தெரியாத நடையுடையவளாகக் காமத்தால் உண்டு பண்ணப்பட்ட இந்த லோகத்தை அனுபவித்துக் கொண்டிரு. என்னுடைய யவன ஸைன்யத்துடன் சேர்ந்து பிரஜைகளை நாசஞ்செய்வாய். ப்ரஜ்வார னென்கிற இவன் (வைஷ்ணவ ஜ்வரம்) எனக்கு சஹோதரன்; நீ எனக்கு சஹோதரியாக இருக்கக்

கடவாய். உங்களிருவர்களுடன் இந்த லோகத்தில் பயங்கரமான சைன்யத்துடன் ஒருவருக்கும் தெரியாமல் சஞ்சரிக்கிறேன்" என்ற சிரித்துக் கொண்டு சொன்னான்.

நோட்டு

பிள்ளைகள்–இந்திரியங்களுடைய மாறுதல்கள். பெண்கள்–புத்தியின் வியாபாரங்கள், பிள்ளைகள் 111 என்றும் பெண்கள் 110 என்றும் சொல்லியிருப்பதால் கிருஹஸ்தர்களுக்குப் பெண்கள் குறைந்தும், புத்திரர்கள் அதிகர்களாகவுமிருப்பதே அழகு என்று காட்டப் பட்டது. சண்டவேகன்–பயங்கரமாகிய வேகமுள்ள காலம். கந்தர்வர்கள்–முந்நூற்று அறுபது பகல்கள், ஸ்திரீகள்–இராத்திரிகள். சுக்லபக்ஷ ராத்ரிகள் வெண்மை நிறமுள்ளவை. கிருஷ்ணபக்ஷ இராத்ரிகள் கருமைநிறமுள்ளவை. காலிகன்னிகா–ஜரையென்று சொல்லப்படும் கிழத்தனம். பயன்–மிருத்யுவே பயனெனப்படுகிறான்.

அத்தியாயம்–28

புரஞ்சனன் ஸ்திரியாக மாறினது

1–28. "ஓ பிராசீன பர்ஹிஸ்ஸே! பயனென்ப வருடைய சைன்யங்கள் மிருத்யுவின் ஆஞ்ஞையின்படி பிரஜ்வாரன், காலகன்யை ஆகிய இவர்களுடன் பூமியில் ஸஞ்சரித்தார்கள், ஒரு கால் அவர்கள் பூமியிலுள்ள ஸகல விதமான போகத்தால் நிறைந்ததும், முதிர்ந்த வயதுள்ள ஸர்ப்பத்தால் காப்பாற்றப்பட்டது மான புரஞ்சனனுடைய பட்டணத்தை முற்றுகை செய்தார்கள். கால கன்னிகையென்பவள் புரஞ்சன னுடைய பட்டணத்தை பலாத்காரமாக அனுபவித்து வந்தாள். அவளால் அனுபவிக்கப்படும் புருஷன் உடனே பலமற்றவனாக ஆகிவிடுவான். அவளால் அனுபவிக்கப்படும் அந்தப்பட்டணத்தில் நாலு பக்கங் களிலும் யவனனுடைய சைன்யங்கள் பிரவேசித்து மிகவும் உபத்திரவப்படுத்தினார்கள். அந்தக் கால கன்னிகை பட்டணத்தில் பிரவேசித்தது முதல் அந்தப் பட்டணத்திற்கு அபிமானியும் குடும்பத்தில் மமதை (என்னுடையது என்ற புத்தி) உள்ளவனுமான புரஞ்சனன் பலவகையான தாபங்களை யடைந்தான். அப்பொழுது புரஞ்சனனுக்குச் சரீரத்தில் சோபை குறைந்தது. அவன் மிகவும் தீனனாகவும், விவேகமற்ற வனாகவுமிருந்தான். அவனுடைய ஐசுவரியம் கந்தர்வர்களாலும், யவனர்களாலும் அபஹரிக்கப்பட்டது. அந்தப் பட்டணமானது நாசமாயிற்று. புத்திரர்களும், பேரர்களும், மந்திரி முதலியவர்களும், பத்தினியும் புரஞ்சனனிடத்தில் பிரீதியில்லாதவர்களாக இருந்தது மன்றி விரோதிகளாயுமிருந்தார்கள். அந்தப்

பாஞ்சாலதேசம் முழுவதும் சத்துருக்களால் பீடிக்கப் பட்டிருந்தது. புரஞ்சனன் காலகன்னிகையால் பீடிக்கப் பட்டான். இவைகளெல்லாவற்றையும் பார்த்து அவ்வரசன் அதற்குப் பதில் செய்ய முடியாதவனாக மிகுந்த கவலையடைந்தான். ஆனாலும் முன் அனுபவிக்கப் பட்ட காமங்களைத் திரும்பவும் அனுபவிக்க வேண்டு மென்ற எண்ணமுள்ளவனாக இருந்தான். ஆனாலுமவன் புத்திரர்கள். ஸ்திரீ ஆகிய இவர்களுடைய பிரீதி இல்லாததாலும் அந்த நகரமானது கந்தர்வர்களாலும் யவனர்களாலும், காலகன்னையாலும் நாசம் பண்ணப் பட்டிருந்தாலும் அதைவிட்டு வெளியே போவதற்கு முயன்றான். ஆனாலும், அதனை விட்டுபோக உண்மையில் ஸம்மதமில்லை. இந்த சமயத்தில் பயனென்பவனுடைய தங்கையாகிய பிரஜ்வாரன் அவ்விடம் வந்து தன்னுடை சஹோதரனுக்குப் பிரியத்தைச் செய்யவேண்டுமென்ற விருப்பத்தால் அந்தப் பட்டணத்தை எரித்தான். இப்படி அந்தப் பட்டணமானது எரியும் பொழுது அதற்கு அபிமானியான புரஞ்சனன், பட்டணத்து ஜனங்கள், தன்னுடைய பத்தினி, புத்திரன் முதலியவர்கள் ஆகிய இவர்களுடன் மிக்க துயரத்தையடைந்தான். இப்படி அந்த நகரத்தில் வஸிக்கமுடியாமல் உபத்திரவம் நேர்ந்தபடியால் மரத்தின் பொந்திலிருந்து ஸர்ப்பம் கிளம்புவதுபோல அதிலிருந்து வெளியில் செல்ல விரும்பினான். கந்தர்வர்களால் கைகால்கள் முறிக்கப் பட்டவனும், பௌருஷமற்றவனுமான அந்தப் புரஞ்சன னுடைய கழுத்தை யவனர்கள் பிடித்துக் கொண்டார் கள். அப்பொழுது அவன் அழுததுமன்றிப் பெண்கள் புத்திரர்கள், வீடு, பொக்கிஷம் முதலியவைகளை 'நான் என்னுடையது' என்று அபிமானத்தால்

தன்னுடையதாக நினைத்து, பத்தினியை விட்டுப் பிரிதல் நேர்ந்த காலத்தில் தனக்குள் யோசிக்கலானான். எப்படியெனில், நான் பரலோகஞ் சென்ற பின் அநாதையான என்னுடைய பத்தினி தனியாகக் குழந்தைகளுடன் துக்கப்பட்டுக்கொண்டு எப்படி ஜீவிக்கப்போகிறாள் ? நான் புஜிப்பதற்கு முந்தி அவள் புஜிக்கமாட்டாள். நான் ஸ்நானம் பண்ணாமலிருந்தால் அவளும் ஸ்நானம் செய்யமாட்டாள், நான் கோபங் கொண்டால் அவள் பயப்படுவாள். நான் அதட்டினால் மௌனமாக இருப்பாள். ஒவ்வொரு சமயத்திலும் எனக்குத் தக்க ஆலோசனை சொல்லி, புத்தி புகட்டுவாள். நான் தேசாந்தரம் போயிருந்தால் துக்கப்படுவாள். சூரனைப்பெற்றவளானாலும், பர்த்தாவினுடைய விரஹத்தை ஸஹியாமல் மரணம் அடைகிறதென்ற கிருஹஸ்த தர்மத்தை யனுஸரிப்பாள். மேலும் சமுத்திரத்தின் மத்தியில் படகு உடைந்து விட்டால் அதிலிருந்து ஜனங்கள் கஷ்டப்படுவது போல என்னுடைய ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் நான், பரலோகம் சென்றபின், மிகவும் சிரமப் படுவார்களே என்று யோசித்தான். இப்படி தீன புத்தியினால் துக்கித்தவனுமான

அவனைப் பிடிப்பதற்காகப் பயமென்பவன் அவ்விடம் வந்தான். பிறகு அந்த யவனேசுவரன் பசுவைப்போல புரஞ்சனனைக் கட்டி, தன்னுடைய வீட்டிற்குக் கொண்டு போனான். அப்பொழுது புரஞ்சனனுடைய வேலைக்காரர்கள் அழுதுகொண்டு அவன்பின் சென்றார்கள் மேலும் அந்த பட்டணத்தைக் காப்பாற்றிக்கொண்டிருந்த ஸர்ப்பமும், யவனங்களால் பிடிக்கப்பட்டு அவர்களுடன் செல்ல, அந்தப் பட்டணம் ஸ்வரூப நாசத்தையடைந்து காரணரூபமாக

ஆயிற்று. அப்பொழுது புரஞ்சனனை யவனர்கள் பலாத்காரமாய் இழுத்துக் கொண்டுபோனதால், அவன் விசேஷ துக்கத்தை யடைந்ததுமன்றி முந்தியிருந்த தோஷர்கள் ஒருவரையும் பார்க்கவில்லை. அப்பொழுது அந்தப் புரஞ்னனால் முந்தி யாகத்தில் ஹிம்ஸிக்கப் பட்ட பசுக்கள் இவர் செய்த குற்றத்தை நினைத்துக் கொண்டு மிகுந்த கோபத்துடன் கோடாரிகளால் அந்தப் புரஞ்சனனைப் பிளந்தன. அப்பொழுது அந்தப் புரஞ்சனன் கரையற்றதான நகரத்தில் மூழ்கி விவேகமில்லாமல் அநேக வர்ஷங்கள் நரகத்தை யனுபவித்து தன் பத்தினியைமனதில் நினைததுக் கொண்டிருந்ததனால் விதர்ப்பதேசத்தரசனுக்கு பெண்ணாகப் பிறந்தான். (மரண காலத்தில் எதை நினைத்துக்கொண்டு உயிரை விடுகிறானோ அந்த ஜன்மத்தையே அடைகிறான்.)

29–42. பின்பு மிக்க சூரனாகிய மலயத்வஜ பாண்டியன் மற்ற அரசர்களை ஜயித்து விதர்ப் பனுடைய பெண்ணை விவாஹம் செய்து கொண்டார். அந்த மலயத்வஜருக்கு வைதர்பியினிடத்தில் ஒரு பெண்ணும், ஏழு பிள்ளைகளும் பிறந்தார்கள். அவ்வேழு பேர்களும் ஏழு திரர்விட தேசத்தரசர்கள். அவர்களெல்லோருக்கும் அற்புதக் கணக்கான பிள்ளைகள் பிறந்தார்கள். அந்த வம்சத்திய பல அரசர்களால் இப்பூமி பிந்திய மன்வந்தரங்களிலும் காப்பாற்றப்படுகிறது. மலயத்வஜருடைய பெண்ணாகிய த்ருதவிரதை என்பவளை அகஸ்தியர் கல்யாணம் செய்து கொண்டு அவளிடத்தில் திருடசுருதர் என்னும் ஒரு புத்திரனை உண்டுபண்ணினார். அவருடைய புத்திரன் இத்மவாகரென்பர். மலயத்வஜ

பாண்டியர் தம்முடைய புத்திரர்களுக்குப் பூமியைப் பிரித்துக்கொடுத்து ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை ஆராதிக்க விரும்பி, சூலபர்வதம் சென்றார். அவருடைய பத்தினியான வைதர்ப்பியும், புத்திரர்கள், போகங்கள், வீடு முதலியவை ஆகிய இவைகளை விட்டுச் சந்திரனை சந்திரிகை அனுஸரிப்பது போலப் பர்த்தாவினுடைய பின் சென்றாள். தாம்ரபர்ணீ. நவோதகா என்ற நதிகள் அங்கு ஓடுகின்றன. அவைகளில் அந்த அரசன் ஸ்நானம் பண்ணுவதாலும் ஆசமனம் செய்வதாலும் இரண்டு விதமான (மானஸம், காயிகம்) பாபங்களையும் நிவர்த்தித்துக்கொண்டு கிழங்குகள், பழங்கள், வேர்கள், புஷ்பங்கள், இலைகள், திருணங்கள், ஜலம் ஆகிய இவைகளைப் புஜித்துக் கொண்டும் தபஸ் செய்தார். அதனால் அவருடைய சரீரம் இளைத்தது. குளிர், உஷ்ணம், காற்று, மழை, பசி, தாஹம், பிரியம் அப்ரியம், ஸுகம், துக்கம், இவைகளை ஜயித்தார். மேலும் தபஸ்ஸினாலும் வித்தையினாலும், கர்மவாசனை களை யொத்து, இந்திரியம் பிராணன், சித்தம் இவை களை ஜயித்து ஆத்மாவைப் ப்ரஹ்மத்தினிடம் சேர்த்தார். பின்னுமவர் ஸ்ரீ வாஸுதேவரிடத்தில் சித்தத்தைச் செலுத்திக் கட்டைபோல ஆசையாமல் தேவமானத்தால் நூறு வர்ஷங்கள் தபஸ் செய்தார். அதனால் பகவானைத் தவிர வேறு ஒன்றும் அவருக்குப் புலப்படவில்லை. இன்னுமவர் ஆத்மா வியாபகராகையாலும், தேஹம் முதலியவைகளைப் பிரகாசிக்கச் செய்பவராகையாலும், அந்தக் கரணத்திற்கு. சாக்ஷியாக இருப்பதாலும், சரீரம் முதலியவைகளை விட வேறானதென்று அறிந்து மற்ற விஷயங்களில் ஒழிவடைந்தார். ஸ்வப்பனத்தில் ஆத்மா ஸாக்ஷி பூதனென்று நன்றாய்த் தெரிய வருகிறது. ஸ்ரீ

மஹாவிஷ்ணுவாகிய குருவினால் நேரில் சொல்லப் பட்டதும், எங்கும் பிரகாசிப்பதுமான தீபத்தால் ஆத்மாவைப் பரப்ரஹ்மமாகவும், பரப்ரஹ்மத்தை ஆத்மாவாகவும் பாவித்து ஸம்ஸாரத்திலிருந்து நிவிருத்தியடைந்தார்.

43–50. அந்த மலயத்வஜருடைய பத்தினியாகிய வைதர்ப்பியானவள் மிகவும் தர்மத்தை யறிந்தவளா கையால் மரவுரியை உடுத்திக்கொண்டு விரதங்களை அனுஷ்டித்து இளைத்த சரீரமுள்ளவளாக, ஒற்றைப் பின்னளுள்ளவளாக பர்த்தாவுக்குப் பணிவிடை செய்துகொண்டு, போகங்களில் ஆசையை யொழித்து ஜ்வாலையற்ற அக்னிபோலப் புருஷனுக்கு ஸமீபத்தில் இருந்தாள். ஆனால் பர்த்தா சரீரத்தை விட்டுவிட்டார் என்பதை அறியாதவளாகையால் முன்போலச் சிசுருஷை செய்தும், அவருடைய பாதங்களைப் பூஜித்தும், அவைகளில் உஷ்ணம் காணப்படாததினால், நடுக்கம் அடைந்து கூட்டத்தை விட்டுப்பிரிந்த பெண்மான்போல தன்னைப்பற்றித் துக்கித்துக் கொண்டு கண்ணீரைப் பெருக்கினாள். அதனால் அவளுடைய ஸ்தனங்கள் நனைந்தன. பின்னுமவள், "ஓ ராஜரிஷியே! எழுந்திரும்; எழுந்திரும்; ஸமுத்திரத்திற்குட்பட்ட இந்தப் பூமியானது திருடர்களான க்ஷத்ரியாதமர்களிடம் இருந்து பயப்படுகிறது. அதனைக் காப்பாற்றும்" என்று அவருடைய காலில் விழுந்து அழுது. கட்டைகளால் சிதையுண்டாக்கி அதில் அவருடைய சரீரத்தை எரித்து, தானும் உடன்கட்டை ஏறுவதற்கு யத்தனித்தாள்.

51–55. அந்த ஸமயத்தில் வெகு நாளாகத்

தோழனாகிய அந்தப் ப்ராஹ்மணன் (அவிக்ஞாதன்) அவ்விடம் வந்து இனிமையான வார்த்தைகளை சொல்லி அவளை ஸமாதானம் செய்து, "நீ யார்? யாருடைய பெண்? இதோ படுத்திருப்பவன் யார்? எதற்காகத் துக்கிக்கிறாய்? நான் தோழனென்று உனக்குத் தெரியுமா? என்னால் முன்னே பலவகையான சுகத்தை நீ அனுபவித்தாய். ஆனால் என்னை இன்னாரென்று நீ அறியாய். ஆனாலும் அவிஞ்ஞாதனென்ற ஒரு தோழன் உனக்கு இருந்ததாக ஞாபகமிருக்கிறதோ? ஓ தோழனே (புருஷன் கூப்பிடுவது போல் அழைத்தது முன் ஜன்மத்தில் புருஷனாக இருந்தாய் என்பதைக் குறிக்கிறது) நாமிருவர்களும் ஹம்ஸபக்ஷிகளாக மானஸ ஸரஸ்ஸில் அநேக வர்ஷங்கள் வஸித்தோம். ஆனால் நமக்கு வஸிக்கும் வீடு நிலையில்லை. அப்படியிருக்கும் பொழுது நீ என்னை விட்டுப்பிரிந்து தனியாகக் கிராம்யசுகத்தில் ஆசைப்பட்டுப் பூமிக்குச் சென்று, அவ்விடத்தில் ஒரு பெண்ணால் உண்டுபண்ணப் பட்டதும் ஐந்து தோட்டங்களுள்ளதும், ஒன்பது வாசல்களுள்ளதும், காவற்காரனுள்ளதும் மூன்று பிரகாரங்களுள்ளதும், ஆறு குடும்பங்களுள்ளதும் ஐந்துவிபணங்களுள் ஐந்து ஸ்வபாவங்களுள்ளதும், ஸ்திரீயை அரசனாகவுடையதுமான நகரத்தைப் பார்த்தாய்"

56–57. இந்திரிய விஷயங்கள் ஐந்தும் தோட்டங்கள் மூக்கு முதலிய ஒன்பது துவாரங்களே வாசல்கள், பிருதிவி,அப்பு, தேஜஸ் பரிகாரங்கள், இஷ்டமான விஷயங்களைக் கொடுக்கும் இந்திரியங் களே குடும்பங்கள். கிரியா சக்தியே விபணங்கள். ஐந்து பூதங்களே அழிவற்ற பிரகிருதி சக்திக்கு

ஸ்வாதீனனாகிய புருஷன் இதில் பிரவேசித்து, தன்னுடைய ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்ளவில்லை.

58–65. "அந்தப் பட்டணத்தில் நீ பெண்ணாசை பிடித்து ஆத்மஞானமற்று ஸ்திரீயுடன் ரமித்துக் கொண்டிருந்த படியால் அவளுடைய சம்பந்தத்தால் இம்மாதிரியான கஷ்ட தசையை அடைந்தாய். நீ விதர்ப்பனுடைய பெண்ணல்ல; இவன் உனக்குப் பதியுமல்ல; புரஞ்சனி என்ற பெண்ணால் ஒன்பது வாசல்களுள்ள பட்டணத்தில் நீ அடைக்கப்பட்டாயல்லவா? இதுதான் என்னால் உண்டுப்பண்ணப்பட்டமாயை. அதனால் புருஷனாகிய ஆத்மாவை ஸ்திரீயாக நினைக்கிறாய். நாமிருவர்களும் ஹம்ஸர்கள்; சுத்தர்கள்; நம்முடைய ஸ்வரூபத்தை சொல்லுகிறேன்; கேளும் நான்தான் நீர்; எனக்கும் உமக்கும் பேதமில்லை. வித்வான்கள் உமக்கும் எனக்கும் கொஞ்சமேனும் பேதமிருக்கிறதாக நினைக்கமாட்டார்கள். புருஷன் எப்படி தன்னுடைய தேஹத்தை கண்ணாடியில் பார்க்கும்பொழுது பெரிதாகவும், ஒன்றாகவும் பார்க்கிறானோ, அவனே அதே சரீரத்தைப் பிறருடைய கண்ணில் மேற்சொல்லியபடியல்லாமல் மாறுதலாகப் பார்க்கிறானோ. அப்படிப்போல நம்மிருவர்களுக்கும் பேதமிருப்பதாக தோற்றமே யொழிய உண்மையில் பேதமில்லை. (அவித்யையாலும், உபாதியாலும் பேதமேற்படுகிறது) என்று அந்த ஹம்ஸம் சொல்ல, அதனால் விவேகமுண்டாகி, துக்கமற்றவனாகி வெகு நாளாக மறைந்திருந்த ஸ்வரூபஞானத்தை ஸ்திரீயாயிருந்த ஹம்ஸமானது அடைந்தது. ஓ பிராசீனபர்ஹிஸ்ஸே! ஸகல ஜகத்ரூபியான பகவான் அதீந்த்ரியத்தில் (அப்ரத்யக்ஷம்) பிரியமுள்ளவராகையால் இந்த ஆத்ம தத்துவத்தைக் கதாவியாஜமாக உமக்குச் சொன்னேன்" என்றார்.

அத்தியாயம்–29

நாரதர் தத்துவத்தை உபதேசித்தது

1. அதனைக் கேட்ட பிராசீனபர்ஹிஸ் என்பவர் நாரதரை நோக்கி, "பகவன்! உம்முடைய வார்த்தைக்குச் செவ்வையாக எனக்குப் பொருள் விளங்கவில்லை. அது கவிகளுக்குத் தெரியுமேயல்லாமல் கர்மஜடர்களான எங்களுக்குத் தெரியுமா? ஆனதால் அதனை ஸ்பஷ்டமாகச் சொல்ல வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

2–25 அதனைக் கேட்ட நாரதர் பிராசீனபர்ஹிஸ்ஸை நோக்கி, "புரஞ்சனனென்பவன் ஜீவனேயாம். தன்னுடைய கர்மங்களால் சரீரமாகிய பட்டணத்தை உண்டுபண்ணிக் கொள்வதால் புரஞ்சனென்று பெயர் கிடைத்தது. அந்தச் சரீரங்கள் ஒரு காலுள்ளதும், இரண்டு கால்களுள்ளதும், மூன்று கால்களுள்ளதும், அநேக கால்களுள்ளதும், காலில்லாததுமாகப் பலவகையாக இருக்கின்றன. அவிஞ்ஞாதரென்று ஒரு தோழனிருப்பதாகச் சொன்னோமல்லவா? அவர் பரமாத்மா; நாமங்களாலும், கர்மங்களாலும், குணங்களாலும் அறியப்படாதவராகையால் அவிஞ்ஞாதரென்று சொல்லப்பட்டது. ஜீவன் எப்பொழுது பிரகிருதியின் குணங்களெல்லாவற்றையும் (ஞானேந்திரிய, கர்மேந்திரிய விஷயங்களை) அனுபவிக்க வேண்டுமென்று விரும்புகிறானோ, அப்பொழுது ஒன்பது துவாரங்களுள்ளதும், இரண்டு கைகளுள்ளதும், இரண்டு கால்களுள்ளதுமான சரீரத்தையே நல்லதென்று நினைத்து அடைகிறான், 'நான், என்னுடையது'

என்ற அபிமான புத்தியே ஸ்திரீயென்று சொல்லப் படுகிறது. அதனுடைய ஆசிரயத்தாலேயே ஜீவன் இந்திரியங்களைக் கொண்டு விஷயங்களை அனுபவிக் கிறான்: சப்தம் முதலிய விஷயங்களைக் கிரகிக்கும் ஞானேந்திரியங்களும், கொடுப்பது முதலிய கர்மத்தைச் செய்யும் கர்மேந்திரியங்களும் தோழர்களென்று சொல்லப்பட்டன. இந்திரிய வியாபாரங்களையே தோழிகளென்று சொன்னேன். ஐந்து வியாபாரங்களுள்ள பிராணனையே ஐந்து தலையுள்ள ஸர்ப்பம் என்று சொன்னேன். பதினோரு படர்களுக்கதிபதியென்பது மனதாகும். அதுவே இருவகையான இந்திரியங் களுக்கும் அதிபதியாயுள்ளது. சப்தம் முதலிய ஐந்து விஷயங்கள் பிரகாசிப்பதால் பாஞ்சாலமென்று சொல்லப்பட்டது. மேலும் இரண்டு கண்கள், இரண்டு மூக்குகள், காதுகள், முகம், சிச்னம், குதம் என்ற ஒன்பது துவாரங்களுள்ள சரீரத்தையே பட்டணமென்று சொன்னேன். அந்தந்த இந்திரியங் களுடன் ஜீவன் இரண்டிரண்டு வாசல்கள் வழியாக வெளியில் செல்லுகிறான். கண்கள், மூக்குகள், முகம் என்ற ஐந்தும் கிழக்குத்திக்கிலிருக்கும் வாசல்கள். வலது காது, தெற்கு வாசல், இடது காது, வடக்கு வாசல், குதமும் சிசனமும் மேற்கு வாசல். கதயோதை, ஆவிர்முகீ என்ற இரண்டு வாசல்களும் கண்கள் விப்ராஜிதமென்பது உருவமேயாகும். அவைகளால் ஜீவன் உருவத்தைக் கிரகிக்கிறான். நளினீ, நாளினீ என்ற வாசல்கள் மூக்குகளேயாம். வாஸனையையே ஸௌரபன் என்று சொல்லப்பட்டது. க்ராணேத்திரியம் ஆனது அவதூதனென்று சொல்லப்பட்டது. முக்ய னென்பவன் முகமேயாம். ரஸஞனென்பவன் ரஸத்தை அறியும் ரஸனமே, விபணனென்பவன் ரஸத்தை

அறியும் ரஸனமே, விடணனென்பவன் வாகிந்திரியமே. அடணனென்பவன் வாக்குவிகாரமே. பஹு தனமென்பது சித்திரான்னமே. பிதிருஹு என்பது வலது காது. இடது காதானது தேவஹு என்று சொல்லப்படுகிறது. சண்டகவேகனுடைய வேலைக் காரர்களான கந்தர்வர்களும், கந்தர்வ ஸ்திரீகளும் முறையே பகல்களும், ராத்திரிகளுமேயாம். முந்நூற்று அறுபது ராத்திரிகளும் பகல்களும் சுற்றுவதால் ஜனங்களுடைய ஆயுஸ்ஸை அபகரிக்கின்றன. கால கன்னிகை என்பவன் கிழத்தனமேயாம். அதனால்தான் ஜனங்கள் ஒருவரும் அவளை விரும்பவில்லை. யவனேச்வரனென்பவன் மிருத்யுவேயாம். அவன் லோகத்தை நாசம் செய்வதற்காக அவளைத் தங்கையாக அங்கீகரித்தான். அவனுடைய ஸைன்யங்களே மனோ வியாதிகளுமாம். அவைகள் பிராணிகளுக்குத் துக்கத்தை உண்டுபண்ணுவதால் சத்துருக்கள். பிரஜ்வாரனென்பது பலவகையான ஜ்வரம், பிரவிருத்தி தர்மத்தைச் சொல்லும் சாஸ்திரம். தக்ஷிண பாஞ்சாலமென்றும் நிவிருத்தி தர்மத்தைச் சொல்லும் சாஸ்திரம் உத்தரபாஞ்சாலமென்றும் சொல்லப்படுகின்றன. (தர்மம், அர்த்தம், காமம், அவைகளின் நிவிர்த்தி இவைகளை நன்றாக நிரூபிப்பதால் பாஞ்சாலமென்று பெயர் கொடுக்கப்பட்டது.) வலது காது பிதிரு யானமென்றும், இடது காது தேவயான மென்றும், அவைகளின் வழியாகச் சுருததரனென்று சொல்லப்படுகிற சிரோத்ரேந்திரியத்துடன் ஜீவன் வெளியில் செல்லு கிறான். ஆஸுரி என்கிற மேற்கு வாசல் சிசனமேயாம். மேற்கு என்றால் கீழே இருக்கிறதென்று அர்த்தம், உபஸ்தேந்திரியத்தையே துர்மதனென்று சொல்லப் பட்டது. குதத்தையே நிருதியென்று சொல்லப்பட்டது.

வைபஸமென்பது நரக துக்கமேயாம். பாயுவே லுப்தகமெனப்படுகிறது; கை, கால்களே குருடர்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளைக் கொண்டு புருஷன் நடக்கிறது, செய்கிறது முதலிய வைகளை அனுஷ்டிக்கிறான், ஹிருதயமே அந்தப் புரமெனப்படுகிறது. மனதேவிபஷமசி எனப்படுகிறது. அந்த மனத்தின் குணங்களான ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய இவைகளால் பிரஸாதம் (தெளிவு) ஸந்தோஷம், மோஹம் ஆகிய இவைகளை அடைகிறான். புத்தியானது எப்படி சொப்பனத்தில் விகாரத்தை அடைகிறதோ, ஜாக்ரதவஸ்தையில் இந்திரியங்களை நடத்துகிறதோ, அப்படி அதனுடைய குணங்களில் சம்பந்தப்பட்ட திருஷ்டாவாகிய ஆத்மா அந்தப் புத்தியின் வியாபாரங்களை அனுஸரிக்கிறான். மேலும் இந்தச் சரீரமே ஜீவனுக்கு ரதமாக இருக்கிறது. இந்திரியங்களே குதிரைகள். ஸம்வத்ஸரம், வயது இவைகளே ரதத்தின் கதி (நடை); புண்யபாபமென்ற கர்மங்களே சக்கரங்கள், ஸத்வம் முதலிய குணங்களே துவஜம், ஐந்து பிராணன்களே ஸந்திபந்தங்கள், மனஸ்ஸே கடிவாளம், புத்தியே ஸாரதி, ஹ்ருதயமே ரதிகன், உட்காருமிடம். சுகதுக்கங்களே ஏர்க்கால்கள். ஐந்து இந்திரிய விஷயங்களே பிரகேஷபம். ஏழு தாதுக்களே ரதத்துக்கு மேல் பரப்பப்படும் புலித்தோல் முதலியவைகள். வெளியிலிருக்கும் விஷயங்களில் செல்லுவதே வேட்டையாடுவது, பதினோரு இந்திரியங்களே ஸைன்யங்கள். இப்படிப் பல வகையான அதிதைவம், அதிபூதம், அத்யாத்மம் ஆகிய இவைகளாலுண்டாகும் துக்கங்களால் ஜீவன் நூறு வருஷ காலம் கஷ்டமடைந்து, தமோகுணத்தால் மூடப்பட்டு பிராணனுடைய தர்மங்களான பசி

தாகங்களையும், இந்திரிய தர்மங்களான அந்தத்வம் (குருடனாயிருக்கை) முதலியவைகளையும், மனத்தின் தர்மங்களான காமம் முதலியவைகளையும், குணங்களற்ற ஆத்மாவிடத்தில் ஆரோபித்து, 'நான், என்னுடையது' என்கிற அபிமானத்தையடைந்து, விவேகமற்றவனாக அற்ப சுகத்தை தியானித்து இந்தச் சரீரத்தில் வசிக்கிறான். பகவானாகிய பரமாத்மா பரமகுருவென்று அறியாமல் ஜீவன் தான் ஸ்வப்ரகாச ஸ்வரூபியானாலும், பிரகிருதியின் குணங்களில் எப்பொழுது ஸம்பந்தப்படுகிறானோ, அப்பொழுது அந்தக் குணங்களில் அபிமானத்தையடைந்து கர்மங்களைச் செய்கிறான். சுக்லம், கிருஷ்ணம், உலோஹிதம் என்கிற கர்மங்களுக்குத் தக்கபடி ஜன்மங்களையும் அடைகிறான். சுக்லகுணத்தால் மிகுந்த பிரகாசமுள்ள லோகங்களை அடைகிறான். உலோஹித குணத்தால் துக்கத்தை உண்டு பண்ணக் கூடிய உலகத்தை அடைகிறான். கிருஷ்ண குணத்தால் மிகுந்த அஞ்ஞானம், துக்கம் இவைகளைக் கொடுக்கக் கூடிய லோகத்தை அடைகிறான். சிலசமயம் புருஷ ஜன்மத்தையும், சிலகாலம் ஸ்திரீ ஜன்மத்தையும், சிலசமயம் நபும்ஸகஜன்மத்தையும் கர்மங்களுக்கும், குணங்களுக்கும் தக்கபடி அடைகிறான். நாயானது பசியால் வருத்தமடைந்து வீடு வீடாக அலைந்தும், தன்னுடைய அதிருஷ்டத்திற்குத் தக்கபடி சிக்ஷையையாவது, ஆகாரத்தையாவது அடைவதுபோல ஜீவன் கர்மங்களையே மனத்தில் வைத்துக்கொண்டு பலவகையான மார்க்கத்தில் மேலும்,கீழும், நடுவிலுமாக அலைந்து, பிரியத்தையாவது அப்பிரியத்தையாவது தெய்வச்செயலாய் அடைகிறான். அதிதைவம், அதிபூதம், அத்யாத்மம் ஆகிய இவைகளாலுண்டாகும்.

மூன்று விதமான துக்கங்களில் ஒன்றாவது ஜீவனை விட்டு விலகுகிறதில்லை. அதை நிவர்த்திக்கும் உபாயத்தை எப்படிச் செய்யமுடியும்? அதை நிவர்த்திப்பதற்குச் செய்யப்படும் உபாயமே துக்க ரூபமாகக் காணப்படுகிறது. எப்படியெனில், பருத்த சுமையைத் தலையில் தூக்கிக் கொண்டு மிகவும் களைப்படைந்த புருஷன் அந்த சிரமத்தை நிவர்த்தித்துக் கொள்ளுவதற்காகச் சுமையை தோளில் இறக்கி வைத்துக் கொண்டால் சிரமம் நிவர்த்தியாகி விடுகிறதா? ஆனதுபற்றி, கர்மங்களால் உண்டாகும் துக்கத்தை நிவர்த்திப்பதற்காகச் செய்யும் உபாயமும் கர்மமயமாக இருப்பதால் அது துக்கத்தைக் கொடுக்குமேயல்லாமல் துக்கத்தை நிவர்த்திக்கிறதில்லை. சொப்பனத்திலுண்டாகும் சொப்பனமானது போலத் துக்கத்தைக் கொடுக்கும். கர்மங்களும், அதன் நிவர்த்திக்காகச் செய்யப்படும் உபாயமும் அவித்தையினால் ஏற்பட்டனவேயாம். சரீரம் முதலிய விஷயங்கள் உண்மையில் மித்யையானாலும் மனமாகிற உபாதியினால் சொப்பனத்தில் போலப் புருஷனுக்கு ஸம்ஸார பந்தத்தை யுண்டுபண்ணுகின்றனவே யொழிய, நிவர்த்தியாகிறதில்லை. ஆகையால் ஆத்மாவிற்கு மேன்மேலும் அனர்த்தத்தைக் கொடுக்கும் ஸம்ஸாரமானது, பகவானிடத்தில் மிகுந்த பக்தி செய்வதால் நிவர்த்தியாகும். மேலும் அந்த பக்தியானது வைராக்யத்தையும் ஞானத்தையும் உண்டுபண்ணும். ஓ ராஜ சிரேஷ்டரே! அந்தப் பக்தியோகமானது பகவானுடைய கதையைச் சிரத்தையுடன் கேட்பதினாலும் அத்யயனம் பண்ணுவதாலும் சீக்கிரத்தில் உண்டாகும். சுத்த சித்தர்களான பகவத் பக்தர்கள் எந்த விடத்தில்

பகவானுடைய குணங்களைச் சொல்வதிலும், கேட்பதிலும் மிகுந்த ஆசையுள்ளவர்களாயிருக்கிறார்களோ, அந்த இடத்தில் பகவத் கதையானது நடக்கும், அவ்விடத்திலேயே மதுவைக் கொன்றவரான ஸ்ரீ பகவானுடைய சரிதமாகிய அமிருதத்தால் நிறைந்த நதிகள் பெரியோர்களுடைய முகமாகப் பிரவஹிக்கும். அந்த அமிருதத்தைப் போதும் என்ற புத்தியில்லாமல் ஸாவதானர்களாக எவர்கள் பானம் பண்ணுகிறார்களோ அவர்களைப் பசி, தாகம், பயம், சோகம், மோகம் ஆகிய இவைகள் பாதிக்கிறதில்லை. பிராணிகள் இயற்கையிலுண்டான மேற்சொல்லிய பசி முதலிய வைகளால் உபத்திரவிக்கப்பட்டுப் பகவத்கதாமிருதத்தில் ஆசைப்படாமலிருக்கிறார்கள். ப்ரஹ்மதேவர், பகவானாகிய பரமசிவன், மனு, தக்ஷர் முதலிய பிரஜாபதிகள், ஸனகர் முதலிய யோகிகள், மரீசி, அத்திரி, அங்கிரஸ், புலஸ்தியர், புலஹர், கிருது, பிருகு, வஸிஷ்டர், நாரதனாகிய நான் ஆகிய இவர்களில்லோரும் ப்ரஹ்மத்தை அறிந்தவர்கள். மிகுந்த விவேகிகளான வித்வான்களும், தபஸ், வித்தை, ஸமாதி முதலிய உபாயங்களால் ஸர்வ ஸாக்ஷியான பரமாத்மாவை எப்பொழுதும் தேடிக்கொண்டிருக்கிறார்களே யொழியத் தெரிந்து கொள்ளவில்லை. ஏனென்றால், மிகுந்த விஸ்தாரமுள்ளதும், கரையற்றதுமான வேதத்தை அத்யயனஞ் செய்து; அதிலிருக்கும் மந்திரங்களிற் சொல்லிய அடையாளமுள்ள இந்திரன் முதலிய தேவர்களைப் பூஜிக்கிறார்கள்; பரமாத்மாவைத் தெரிந்து கொள்கிறதில்லை. பரமாத்மாவானவர் தியானம் முதலியவைகளால் பூஜிக்கப்பட்டு எப்பொழுது பிரஜைகளிடத்தில் அனுக்கிரஹம் செய்கிறாரோ, அப்பொழுது லோக விவகாரத்திலும்,

வைதிக மார்க்கத்தில் இருக்கும் புத்தியை விட்டுப் பரமாத்மாவை உபாஸிக்க முயற்சிப்பான். ஓ பிராசீன பர்ஹிஸ்ஸே! ஆனதால் அஞ்ஞானத்தால் உண்மை போல் தோன்றுகிறவைகளும், கேட்கப் பிரியமான வைகளும், நித்ய வஸ்து ஸம்பந்தமில்லாதவைகளுமான கர்ம பலன்களை விரும்ப வேண்டாம். அற்ப புத்தியுள்ள சிலர் வேதங்கள் கர்மங்களைச் சொல்லுகிற தென்று சொல்லுகிறார்கள். அவர்கள் அக்ஞர் களேயாம். எந்த இடத்தில் ஸாக்ஷாத் பகவான் பிரகாசிக்கிறாரோ, அந்த ஆத்மாவாகிய லோகத்தை வேதம் சொல்கிறதென்பதை அவர்கள் அறியவில்லை. நீர் "நான் அநேக யாகங்களைச் செய்தவன்" என்ற அபிமானத்தை அடைந்து இந்தப் பூமி முழுவதும் கிழக்கு நுனியாகத் தர்ப்பங்களைப் பரப்பி அநேக பசுக்களைக் கொன்று யாகங்களை அனுஷ்டித்தும், ஆத்ம ஞானத்திற்கு உபாயமாகிய வித்தையின் ஸ்வரூபத்தையும், கர்மத்தின் ஸ்வரூபத்தையும் நன்றாய்த் தெரிந்து கொள்ளவில்லை. ஸ்ரீ மஹாவிஷ்ணு ஸகல பிராணிகளுக்கும் ஆத்மாவாக இருப்பவர்; எல்லாவற்றிற்கும் காரணர்; ஈசுவரர்; அவரைச் சரணமடைந்தால் க்ஷேமமுண்டாகிறது. அவர் எல்லாருக்கும் வேண்டியவர். அவரிடத்திலிருந்து கொஞ்சமேனும் பயமுண்டாகிறதில்லை என்று எவன் தெரிந்து கொள்ளுகிறானோ, அவனே வித்வான், எவன் வித்வானோ, அவனே குரு. அவனே ஸ்ரீ மஹாவிஷ்ணு. உம்மால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் சொன்னேன். ரஹஸ்யமான விஷயத்தை நிச்சயமாகச் சொல்லுகிறேன் கேளும்'.

53–55 அற்பமாக ஸஞ்சரிப்பது, புஷ்பம்

தோட்டத்தில் ஸ்திரீயுடன் ரமித்து விளையாடுவதும், வண்டுகளுடைய கானத்தில் ஆசைப்பட்டதும், மற்ற பிராணிகளைக் கொன்று தங்களுடைய வயிற்றை நிரப்பிக் கொள்ளும் செந்நாய்களை லட்சியஞ் செய்யாமல் அவைகளுக்கு முன்செல்லுகிறதும், வேடனுடைய பாணத்தால் பிளக்கப்பட்டதுமான மானைத் தேடிக் கண்டுபிடியும். (ஆத்மாவே மானென்று சொல்லப்படுகிறது) ஸ்திரீகளிருக்கும் வீட்டையே புஷ்பத்தோட்டமென்று சொல்லப்பட்டது. அப்படிமான காமசுகத்தையே அற்ப ஸஞ்சாரமென்று சொல்லப் பட்டது. ஸ்திரீகளுடைய இனிமையான வார்த்தையே வண்டுகளுடைய கானம் என்று சொல்லப்பட்டது. புருஷனுடைய ஆயுஸ்ஸை அபகரிக்கின்ற அகோராத்ரம் முதலிய காலங்களே செந்நாய்களென்று சொல்லப்பட்டன. (அவைகளை லட்சியம் செய்யாமல் ஆத்ம விஷய ஆசைகொண்டு கிருகத்தில் சஞ்சரிக் கிறான் என்று தாத்பர்யம்.) எப்பொழுதும் புருஷனுடைய ஆயுஸ்ஸை அபகரிக்கத் தயாராயிருக்கும் மிருத்யுவே வேடனென்று சொல்லப்பட்டது. ஆனதால் நீர் ஜீவனுடைய சரிதத்தை மானுடைய சரிதத்திற் கொப்பானது என்று நினைத்து ஹ்ருதயத்தில் சித்தத்தில் கர்மங்களையும் அடக்கிக்கொள்ளும். காமிகளுடைய வார்த்தையால் நிறைந்த கிருஹஸ்தா சிரமத்தை விட்டுவிடும். பரம ஹம்ஸர்களுக்குச் சரணமான ஈசுவரனிடத்தில் பக்தி செய்யும். இப்படிக் கிரமமாக வைராக்கியத்தை அடையவேண்டும்

56–59 அதனைக் கேட்ட பிராசீனபர்ஹிஸ் என்ற அரசன் நாரதரை நோக்கி, "ஓ ப்ராஹ்மண! தங்களால் சொல்லப்பட்டதைக் கேட்டு மனதில் நன்றாய்

விசாரித்தேன். தங்களால் சொல்லப்பட்ட ஆத்மதத்து வத்தை எனக்குக் கர்மோபதேசஞ் செய்த உபாத்தியார்கள் அறியார்கள்? அறிந்திருந்தால் எனக்கு உபதேசிக்காமலிருப்பார்களா? அதனால் அந்த விஷயத்திலிருந்த மிகுந்த சம்சயமானது உம்மால் நிவர்த்திக்கப்பட்டது. ஆனால் மற்றொரு சம்சயமி ருக்கிறது. "எந்தப் பரமாத்மாவினிடத்தில் இந்திரியங்கள் செல்லுகிறதில்லையோ, அந்த விஷயத்தில் ரிஷி களானாலும் மோஹிக்கிறார்கள். எந்த சரீரத்தால் புருஷன் கர்மங்களைச் செய்கிறானோ, அந்தச் சரீரத்தை இவ்வுலகத்தில் விட்டுப் பரலோகத்தில் கர்மத்தால் கிடைத்த வேறு சரீரத்தையடைந்து ஜீவன் சுகதுக்கங்களை யனுபவிக்கிறான்" என்று வேதத்தை யறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். மேலும் வேதத்தில் சொல்லிய கர்மங்களை ஜனங்கள் சிரத்தையுடன் அனுஷ்டிக்கிறார்கள். பிறகு அந்தக் கர்மம் நம்மால் காணவில்லை, அது வெகுநாளைக்குப் பிறகு எப்படிப் பலத்தைக் கொடுக்கும்? இந்த சம்சயங்களை நிவர்த்திக்க வேண்டும்' என்று கேட்டார்.

60--82 புருஷன் எந்த சரீரத்தால் கர்மத்தைச் செய்கிறானோ, அந்த ஸ்தூல சரீரம் நாசத்தை யடைந்தாலும்' மனஸாகிய லிங்க சரீரத்துடன் அதன் பலத்தை அனுபவிக்கிறான்; புருஷன் படுத்துத் தூங்கும் அந்த ஸ்தூல தேகத்தை விட்டு லிங்கதேகத்தை அடைந்து தன்னுடைய கர்மாவைப் புஜிப்பதுபோல அந்தத் தேகத்திற்கு சமமான வேறு தேகத்தையாவது, பசு முதலியவைகளின் தேகத்தையாவது அடைந்து லோகாந்தரத்தில் கர்மபலத்தை அனுபவிக்கிறான்' 'நான் ப்ராஹ்மணன்; இது என்னுடையது' என்ற

அகங்காரத்தை அடைந்த மனத்தால் எந்தச் சரீரத்தைப் புருஷன் கிரகித்துக் கொள்ளுகிறானோ, அப்பொழுது அந்தத் தேகத்தால் செய்யப்பட்ட கர்மத்தையும் கிரகித்துக் கொள்ளுகிறான். அதனால் தான் மறுஜன்மம் உண்டாகிறது. ஞானேந்திரியங்கள், கர்மேந்திரயங்கள் இவைகளுடைய பிரவர்த்திகளைக் கொண்டு எப்படிச் சித்திரமானது ஊகிக்கப் படுகிறதோ, அப்படியே சித்தத்தின் வியாபாரங்களால் முன் சரீரத்தால் செய்யப்பட்ட கர்மமானது ஊகிக்கப் படுகிறது. மேலும் இந்த ஜன்மத்தில் பார்க்கப் படாததும், கேட்கப்படாததுமான ஸ்வரூபத்தைச் சொப்பனத்தில் பார்க்கிறானல்லவா? அதனால் முன் ஜன்மத்திய கர்மா இருக்கிறதென்று ஊகிக்கப்படுகிறது. ஓ மகாராஜா! ஜீவன் வாசனையை ஆசிரயித்தவனா கையால் அவனுக்குமுன் தேகத்திய கர்மமிருக்கிறதாக நம்பவேண்டும். முந்தி அனுபவிக்கப்படாத விஷயமானது மனத்தில் தோன்ற நியாயமில்லை. மனுஷ்யனுக்கு முந்திய ஜன்மங்களையும், வரும் ஜன்மங்களையும், நீச ஜன்மத்தையும் மனதே காண்பிக்கிறது. உமக்கு க்ஷேமம் உண்டாகும். முந்திப் பார்க்கப்படாததும், கேட்கப்படாததுமான விஷயம் மனத்தில் தோன்று கிறதற்கு தேசம், காலம், கர்மம், இவைகளே காரணம் என்று நினைக்க வேண்டும். இந்திரியங்களுக்குப் புலப்படும் ஸகல விஷயங்களும் எல்லாருடைய மனத்திலுமிருக்கின்றன. எல்லா ஜனங்களும் மனதுள்ள வர்களே யொழிய மனதற்றவர்களல்ல. சத்வகுணம் நிறைந்ததும் பகவத்தியானத்தில் பரிசுத்தமானதுமான மனத்தில் ஸகல விஷயங்களும் ஒரே காலத்தில் சந்திரனிடத்தில் சேர்ந்த ராகுபோல் பிரகாசிக்கும் அனாதியாகிய புத்தி, மனஸ், இந்திரிய விஷயங்கள்,

குணங்கள் இவைகளுடைய கூட்டமானது எது வரையில் இருக்குமோ, அதுவரையில் நான், என்னுடைய தென்கிற அகங்காரம் விடுகிறதில்லை. சொப்பனம், மூர்ச்சை, உபதாபம், மிருத்யு, ஜ்வரம் இவைகளிலும் இந்திரியங்களில்லாததாலும் மாதா வினுடைய கர்ப்பத்திலிருக்கும் பொழுதும் பால்ய வயதிலும் இந்திரியங்கள் பருக்காமலிருப்பதினாலும் அகங்காரமானது அமாவாஸ்யையில் சந்திரன்போல் காணப்படுகிறதில்லை. சொப்பனத்தில் அனர்த்தங்கள் வருவதுபோல உண்மையில் சரீரம் முதலியவைகள் இல்லாமலிருந்தும், விஷயங்களைப் புருஷன் தியானம் பண்ணுவதால் சம்சாரம் நிவர்த்தியடைகிறதில்லை. இப்படி ஐந்து தன்மாத்திரைகளுள்ளதும், முக்குண ஸ்வரூபமும், பதினாறு விகாரத்தால் விஸ்தார மடைந்ததுமான லிங்க தேகம், சேதனையுடன் கூடினவனே ஜீவனென்று சொல்லப்படுகிறான். புருஷன் யுத்தியினாலேயே தேகத்தை அடைகிறான்; தேகத்தை விட்டுவிடுகிறான், சந்தோஷம், சோகம், பயம், சுகம், துக்கம் இவைகளையும் அடைகிறான். அட்டையானது ஒரு திருணத்தை விட்டு மற்றொரு திருணத்திற்குப் போகும் பொழுது முந்திய திருணத்தை விடாமலேயே பிந்தியதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டும், பிறகு அதை விடுவது போல் மரணத்தையடையும் புருஷனும் வேறு சரீரத்தை அடைந்தே முந்திய சரீரத்தை விடுகிறான். ஓ ராஜசிரேஷ்டரே! பிராணிகளுக்கு மனதே சம்சாரத்தைக் கொடுக்கக்கூடியது. இந்திரியங்களால் விஷயங்களைத் தியானஞ் செய்து கொண்டு புருஷன் கர்மங்களை அடிக்கடி செய்கிறான். கர்மாவினாலே தான் அவித்யையின் பந்தம் ஏற்படுகிறது. சரீரம் முதலியவைகளுக்குக்

கர்மபந்தம் அவித்யையாலேயே ஆனதால் அவை களை நன்றாய்த் தெரிந்து கொள்ளுவதற்காக ஸகல காரணங்களாலும் பகவானைப் பூஜியும். எவரிட மிருந்து இந்த ஜகத் உண்டாகிறதோ, எவரால் காப்பாற்றப்படுகிறதோ அந்த பரமாத்ம ஸ்வரூபமே இந்த ஜகத் என்றும் பக்தி செய்ய வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் பக்தி செய்வதைபோலவே எல்லாப் பிராணிகளிடத்திலும் தடையற்ற ஞானமுள்ள பகவான் வசிப்பதாக நினைக்க வேண்டும். அப்பொழுது சொப்பனம் போல அதிருஷ்டமும் (பார்க்கப்படாதது), (பார்க்கப்பட்டது) திருஷ்டமும், நடந்ததும், நடக்கிறது, நடக்க போவதுமாகிய எல்லாம் நாசத்தையடையும்" என்று பாகவதர்களுக்குள் முக்கியரான நாரதபகவான் ஜீவாத்மா பரமாத்மாக்களுடைய ஸ்வரூபத்தை உபதேசித்து அரசனிடம் விடைபெற்று, சித்தலோகஞ் சென்றார்.

83–86 பிராசீனபர்ஹிஸ் என்னும் அரசன் அதனைக் கேட்டு, புத்திரர்களை யுண்டுபண்ணி ஜனங்களைக் காப்பாற்றுவதை எனது புத்திரர்கள் செய்யவேண்டுமென்று மந்திரிகளிடம் சொல்லி விட்டு, தவத்திற்காகக் கபிலருடைய ஆசிரமம் சென்றார். அவ்விடத்தில் தம்முடைய மனஸ்ஸை ஒருவகையாகச் செய்து ஸ்ரீ கோவிந்தனுடைய பாதாரவிந்தத்தைத் தியானஞ் செய்து ஆசைகளை யொழித்து ஸ்ரீ பகவானுக்குச் சமானராக ஆனார். தேவரிஷியாகிய நாரதரால் கீதாவியாஜமாகச் சொல்லப்பட்ட இந்த அத்தியாத்ம விஷயத்தை யார் கேட்கிறானோ, பிறருக்குச் சொல்லுகிறானோ, அவன் மோட்சத்தை யடைகிறான். பகவானுடைய சரிதத்தால் லோகத்தை

பரிசுத்தப்படுகிறதும் தேவரிஷியாகிய நாரதருடைய முகத்திலிருந்து வந்ததால் சித்த சுத்தியை உண்டு பண்ணக்கூடியதுமான இந்தச் சரிதத்தைக் கேட்பவன் சம்சாரத்தில் மூழ்க மாட்டான். ஸகல பந்தங்களும் அவனுக்கு நிவர்த்தி யாகும். ஓ விதுரரே, ஆச்சரிய கரமான இந்த அத்தியாத்மவிஷயத்தைக் கதா வியா ஜமாக உமக்குச் சொன்னேன். இதனால் கிருஹஸ் தாசிரமத்திலுள்ள அகங்காரமும், கர்ம பலத்தை எப்படி அனுபவிக்கிறது என்கிற சம்சயமும் நிவர்த்தியாகும்.

அத்தியாயம்–30

பிரசேதஸ்ஸுகளின் சரிதம்

1–2. அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி, "ஓ ப்ராஹ்மணோத்தம! பிராசீனபர்ஹிஸ்ஸின் புத்திரர்கள் ருத்ரரால் உபதேசிக்கப்பட்ட கீதத்தாலே ஸ்ரீ மஹாவிஷ்ணுவைச் சந்தோஷப்படுத்தி என்ன கதியை அடைந்தார்கள்? ஓ பிருகஸ்பதியின் சிஷ்யரே! ஸ்ரீமகா விஷ்ணுவுக்குப் பிரியராகிய பரமசிவனால் அனுக்கிரஹிக்கப்பட்ட அந்தப் பிரசேதஸ்கள் மோட்சத்தை அடைந்தார்களென்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் அவர்கள் இவ்வுலகத்திலும், பரலோகத் திலும் எதனை அடைந்தார்கள்" என்று கேட்டார்.

3–20. அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி "பிரசேதஸ்கள் சமுத்திரமத்தியில் ஜபயக்ஞ மாகிய தபசினால் நிரஞ்சனராகிய ஸ்ரீ மஹா விஷ்ணுவை சந்தோஷப்படுத்தினார்கள். பதினாயிரம் வருஷங்கள் சென்ற பிறகு, புராதனராகிய புருஷன் அவர்களுக்குத் தரிசனம் கொடுத்தார். அந்தப் பகவானுடைய காந்தியால் அவர்களுடைய சிரமமானது நிவர்த்தியாயிற்று. அப்பொழுது பகவான் மேருவின் சிகரத்தில் மேகமிருந்தாற்போல் கருடனுடைய தோளில் \வீற்றிருந்தார். மேலும் பீதாம்பரம் தரித் திருந்தார் கௌஸ்துப மணியால் அலங்கரிக்கப் பட்டிருந்தார் அவர் மிகவும் பிரகாசிக்கும் ஸ்வர்ண மயமான ஆபரணங்களால் பிரகாசிக்கின்ற கன்னங்கள், முகம், கிரீடம் ஆகிய இவைகளுள்ளவர்; எட்டு ஆயுதங்கள், மகரிஷிகள் தேவசிரேஷ்டர்கள் ஆகிய

இவர்களால் சேவிக்கப்பட்டிருந்தார்; கருடனாகிற கின்னரனால் அவருடைய கீர்த்தியானது கானஞ் செய்யப்பட்டிருந்தது (கருடனுடைய இறக்கைகளின் சப்தத்தால்). பருத்தவைகளான எட்டுக் கைகளின் மத்யத்தில் வசிக்கும் லக்ஷ்மீ தேவியினுடைய காந்தி போன்ற சோபையுள்ள வனமாலையால் அலங்கரிக்கப் பட்டவர்; அப்போர்ப்பட்ட பகவான் தம்மைச் சரணமடைந்த பிரசேதஸ்களை நோக்கி மேகம்போல் கம்பீரமாகக் கருணைநிறைந்த பார்வையுடன், "ஓ ராஜபுத்திரர்களே! உங்களுக்கு க்ஷேமமுண்டாகும்; இஷ்டமானதைக் கேட்கலாம் உங்களுடைய பக்தியால் நான் மிகவும் சந்தோஷப் பட்டிருக்கிறேன். உங்களுக்கும் எனக்குமுள்ள பிரீதி விசேஷத்தால் என்னுடைய ஐசுவரியம் முதலியவை உங்களு டையனவேயாம். எந்த மனிதன் ஒவ்வொரு நாளும் உங்களைப் படுக்கையில் நினைத்துக் கொள்கிறானோ அந்த மனிதனுக்கு சஹோர்தரர்களிடத்தில் பிரீதியும், ஸகல பிராணிகளிடத்தில் பிரியமும் உண்டாகிறது. மேலும் எவர்கள் காலையிலும், மாலையிலும் சுத்தர்களாக ருத்ர கீதத்தால் என்னை ஸ்தோத்திரம் செய்கிறார்களோ, அவர்களுக்கு இஷ்டமான வரங்களையும், நல்ல பிரக்ஞையையும் கொடுப்பேன். நீங்கள் தகப்பனாருடைய உத்தரவை சந்தோஷமாக நிறைவேற்றினபடியால் எல்லா லோகத்திலும் உங்களுக்கு மிகுந்த கீர்த்தியுண்டாகும். பின்னும் உங்களுக்கு மிகவும் பிரசித்தியுள்ளவனும், மிக்க குணசாலியும், ப்ரஹ்மபுத்திரர்களுக்குக் குறையாத வனுமான ஒரு புத்திரன் பிறப்பான். அவன் தன்னுடைய வீரியத்தால் அநேக பிரஜைகளை யுண்டுபண்ணி மூவுலகத்தையும் பூர்த்தி செய்வான்.

கண்டு என்னும் மகரிஷி தபஸ் செய்யும்பொழுது அவருடைய தபஸ்ஸைக் கெடுப்பதற்காக இந்திரனால் அனுப்பப்பட்ட ப்ரஹ்மலோசா என்னும் அப்ஸர ஸ்திரீயைக் கண்டு மகரிஷியானவர் மோஹித்து அவளுடன் வெகுகாலம் ரமித்தார். அப்பொழுது ஒரு பெண் பிறந்தது. அந்தப் பெண்ணை அந்த ப்ரஹ்ம லோசை யென்பவள் மரத்தில் போட்டுவிட்டு ஸ்வர்க்கம் சென்றாள். அந்தப் பெண்ணை விருக்ஷங்கள் கிரஹித்துக் கொண்டான. அந்தப்பெண் பசியினால் அழும்பொழுது ஓஷதிகளுக்கு அதிபதியான சோமராஜன் பெருவிரலைக் கொடுத்தார். அதிலிருந்து அமிருதம் பெருகி, அதனால் குழந்தைக்குப் பசி நீங்கியது. உங்களுடைய தகப்பனாராகிய பிராசீன பர்ஹிஸ் பிரஜைகளைச் சிருஷ்டிக்கும்படி ஆக்ஞாபனஞ் செய்து தபஸ் செய்வதால் அவருடைய உத்தரவின்படி நீங்கள் செய்யவேண்டும். அதற்காக அந்தக் கண்டுவின் புத்திரியைக் கல்யாணஞ் செய்து கொள்ளுங்கள். நீங்கள் எல்லோரும் ஒரேவகையான தர்மம், ஸ்வபாவம் உள்ளவர்களாகையால் அவள் ஒருத்தியே உங்கள் எல்லோருக்கும் பத்தினியாக இருப்பாள். உங்கள் எல்லோரிடத்திலும் சமமான பிரீதியுள்ளவளாக இருப்பாள், தேவமானத்தால் பத்து லட்சம் வருஷங்கள் பூமியிலுள்ள போகங்களையும் திவ்யமான போகங்களையும் என்னுடைய அனுக்கிரஹத்தால் அனுபவித்துப் பிறகு என்னிடத்தில் அழிவற்ற பக்தியைச் செய்து, அதனால் சித்த சுத்தியடைந்து சம்சாரத்தில் வைராக்கியத்தையடைந்தும் என்னுடைய லோகம் வருவீர்கள். கிருகஸ்தாசிரமத்திலிருப்பவர் களும் புண்யகர்மங்களைச் செய்து கொண்டு, என்னுடைய கதையைச் சொல்லிக் காலத்தைக்

இவர்களால் சேவிக்கப்பட்டிருந்தார்; கருடனாகிற கின்னரனால் அவருடைய கீர்த்தியானது கானஞ் செய்யப்பட்டிருந்தது (கருடனுடைய் இறக்கைகளின் சப்தத்தால்). பருத்தவைகளான எட்டுக் கைகளின் மத்யத்தில் வசிக்கும் லக்ஷ்மீ தேவியினுடைய காந்தி போன்ற சோபையுள்ள வனமாலையால் அலங்கரிக்கப் பட்டவர்; அப்போர்ப்பட்ட பகவான் தம்மைச் சரணமடைந்த பிரசேதஸ்களை நோக்கி மேகம்போல் கம்பீரமாக்கக் கருணைநிறைந்த பார்வையுடன், "ஓ ராஜபுத்திரர்களே! உங்களுக்கு க்ஷேமமுண்டாகும்; இஷ்டமானதைக் கேட்கலாம் உங்களுடைய பக்தியால் நான் மிகவும் சந்தோஷப் பட்டிருக்கிறேன். உங்களுக்கும் எனக்குமுள்ள பிரீதி விசேஷத்தால் என்னுடைய ஐசுவரியம் முதலியவை உங்களு டையனவேயாம். எந்த மனிதன் ஒவ்வொரு நாளும் உங்களைப் படுக்கையில் நினைத்துக் கொள்கிறானோ அந்த மனிதனுக்கு சஹோதரர்களிடத்தில் பிரீதியும், ஸகல பிராணிகளிடத்தில் பிரியமும் உண்டாகிறது. மேலும் எவர்கள் காலையிலும், மாலையிலும் சுத்தர்களாக ருத்ர கீதத்தால் என்னை ஸ்தோத்திரம் செய்கிறார்களோ, அவர்களுக்கு இஷ்டமான வரங்களையும், நல்ல பிரக்ஞையையும் கொடுப்பேன். நீங்கள் தகப்பனாருடைய உத்தரவை சந்தோஷமாக நிறைவேற்றினபடியால் எல்லா லோகத்திலும் உங்களுக்கு மிகுந்த கீர்த்தியுண்டாகும். பின்னும் உங்களுக்கு மிகவும் பிரசித்தியுள்ளவனும், மிக்க குணசாலியும், ப்ரஹ்மபுத்திரர்களுக்குக் குறையாத வனுமான ஒரு புத்திரன் பிறப்பான். அவன் தன்னுடைய வீரியத்தால் அநேக பிரஜைகளை யுண்டுபண்ணி மூவுலகத்தையும் பூர்த்தி செய்வான்.

கண்டு என்னும் மகரிஷி தபஸ் செய்யும்பொழுது அவருடைய தபஸ்ஸைக் கெடுப்பதற்காக இந்திரனால் அனுப்பப்பட்ட ப்ரஹ்மலோசா என்னும் அப்ஸர ஸ்திரீயைக் கண்டு மகரிஷியானவர் மோஹித்து அவளுடன் வெகுகாலம் ரமித்தார். அப்பொழுது ஒரு பெண் பிறந்தது. அந்தப் பெண்ணை அந்த ப்ரஹ்ம லோசை யென்பவள் மரத்தில் போட்டுவிட்டு ஸ்வர்க்கம் சென்றாள். அந்தப் பெண்ணை விருக்ஷங்கள் கிரஹித்துக் கொண்டான. அந்தப்பெண் பசியினால் அழும்பொழுது ஓஷதிகளுக்கு அதிபதியான சோமராஜன் பெருவிரலைக் கொடுத்தார். அதிலிருந்து அமிருதம் பெருகி, அதனால் குழந்தைக்குப் பசி நீங்கியது. உங்களுடைய தகப்பனாராகிய பிராசீன பர்ஹிஸ் பிரஜைகளைச் சிருஷ்டிக்கும்படி ஆக்ஞாபனஞ் செய்து தபஸ் செய்வதால் அவருடைய உத்தரவின்படி நீங்கள் செய்யவேண்டும். அதற்காக அந்தக் கண்டுவின் புத்திரியைக் கல்யாணஞ் செய்து கொள்ளுங்கள். நீங்கள் எல்லோரும் ஒரேவகையான தர்மம், ஸ்வபாவம் உள்ளவர்களாகையால் அவள் ஒருத்தியே உங்கள் எல்லோருக்கும் பத்தினியாக இருப்பாள். உங்கள் எல்லோரிடத்திலும் சமமான பிரீதியுள்ளவளாக இருப்பாள், தேவமானத்தால் பத்து லட்சம் வருஷங்கள் பூமியிலுள்ள போகங்களையும் திவ்யமான போகங்களையும் என்னுடைய அனுக்கிரஹத்தால் அனுபவித்துப் பிறகு என்னிடத்தில் அழிவற்ற பக்தியைச் செய்து, அதனால் சித்த சுத்தியடைந்து சம்சாரத்தில் வைராக்கியத்தையடைந்தும் என்னுடைய லோகம் வருவீர்கள். கிருகஸ்தாசிரமத்திலிருப்பவர் களும் புண்யகர்மங்களைச் செய்து கொண்டு, என்னுடைய கதையைச் சொல்லிக் காலத்தைக்

கழித்துக் கொண்டு மிருப்பவர்களுக்குக் கிருகஸ்தாசிரமம் பந்தமாக ஆகிறதில்லை. என்னுடைய சரிதங்களைக் கேட்பது, சொல்வது முதலியவைகளால் என்னை அடைந்தவர்களுக்குச் சோகம், மோகம், சந்தோஷம் இவைகள் உண்டாகிறதில்லை. சர்வஞ்ஞனாகிய நான் என்னுடைய கதையைச் சொல்லுகிறவர்கள் முகமாகக் கேட்பவர்களுடைய ஹிருதயத்தை அடைகிறேன்" (அவர்களுக்கு ப்ரஹ்ம சாட்சாத்காரம் உண்டாகிறது) என்று அனுக்கிரஹித்தார்.

21–51. ஸகல புருஷார்த்தங்களையும் கொடுப்ப வரான அந்தப் பகவானுடைய வார்த்தையைக் கேட்டு, பிரசேதஸ்ஸுகள் அவருடைய தரிசனத்தால் ரஜோ குணம், தமோகுணங்களற்றவராகி மிகவும் ஸுஹிருத் தாகிய பகவானைப் பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்தார்கள்; ஸகல துக்கங்களைப் போக்கடிப்பவரும் ஸகல க்ஷேமங்களையும் கொடுக்க கூடிய கம்பீர குணங்கள், திவ்ய நாமங்கள் ஆகிய இவைகளுள்ள வரும் மனஸ் வாக்கு இவைகளுடைய வேகத்தைக் காட்டிலும் மிகுந்த வேகமுள்ளவரும், ஸகல இந்திரியங் களுக்கு புலப்படாதவருமான உமக்கு நமஸ்காரம். சுத்த ஸ்வரூபரும், சாந்தரும், மனஸ்ஸாகிற உபாதியால் இரண்டாகத் தோன்றுகிறவரும், மாயையின் குணங்களாம் ப்ரஹ்மா முதலியவர் களுடைய சரீரத்தை எடுத்துக் கொண்டவருமான உமக்கு நமஸ்காரம். சுத்த ஸத்வ ஸ்வரூபியும், ஸம்ஸாரத்தைப் போக்கடிப்பவரும், தடையற்ற ஞானமுள்ளவரும், ஸாத்வதர்களுக்குப் பிரபுவுமாகிய ஸ்ரீ கிருஷ்ணனும், வாஸுதேவருமாகிய உமக்கு நமஸ்காரம், தாமரை மலர்போன்ற கண்களுள்ளவரும்.

தாமரைமலர் போன்ற பாதங்களுள்ளவருமான உமக்கு நமஸ்காரம். தாமரைப் புஷ்பத்தின் தாதுக்கள்போல் பொன்னிறமான வஸ்திரத்தைத் தரித்தவரும் ஸகல பிராணிகளிடத்திலும் வஸிப்பவரும் எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியுமான உமக்கு நமஸ்காரம் மிகவும் தீனர்களான எங்களிடத்தில் மிகுந்த கருணை செய்து ஸகல துக்கங்களையும் போக்கக்கூடிய உம்முடைய ஸ்வரூபமானது காண்பிக்கப்பட்டது. இதைவிட வேறு அனுக்கிரஹமுண்டோ? ஓ அமங்களத்தைப் போக் கடிப்பவரே! தீனர்களான வேலைக்காரர்களை ஸமயத்தில் ஞாபகம் வைத்துக் கொள்வதே பிரபுக்களின் குணம். அந்தக் குணமானது உம்மால் பிரகாசப் படுத்தப்பட்டது. நீர் அற்ப பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாக இருப்பதால் அவர்களுடைய இஷ்டத்தை ஏன் அறியமாட்டீர்? ஏ ஜகத் பதியே! மோக்ஷ மார்க்கத்தைப் பிரவர்த்திக்கச் செய்தவரும், புருஷார்த்த ஸ்வரூபியுமாகிய நீர் எப்பொழுதும் தயையுள்ளவராக இருக்கவேண்டுமென்பதே எங்களால் கேட்கப்படும் வரம். நீர் பரமான வஸ்துவைக் காட்டிலும் மேலானவர். உம்முடைய விபூதிகளுக்கு முடிவில்லாததால் அனந்தர் என்று சொல்லப்படுகிறீர். பாரிஜாத புஷ்பமானது சுலபமாய்க் கிடைத்திருக்க வண்டானது வேறு புஷ்பத்தை விரும்புமா? அதுபோல் உம்முடைய பாதாரவிந்தத்தை அடைந்த நாங்கள் எந்த வரத்தைத்தான் கேட்கப் போகிறோம்? உம்முடைய மாயையால் பிரமித்து "கர்ம மார்க்கத்தில் நாங்கள் சுழன்று கொண்டிருப்பதால் எங்களுக்கு ஒவ்வொரு ஜன்மத்திலும் உம்முடைய பக்தர்களுடைய ஸங்கமானது இருக்கும்படி அனுக்கிரஹிக்கிகவேண்டும் பகவத் பக்தர்களுடைய ஸங்கத்தினுடைய ஸ்வல்ப

பாகத்திற்கு, ஸ்வர்க்கத்தையும், மோக்ஷத்தையும் ஸமானமாகச் சொல்லமாட்டோம். அப்படியிருக்க மற்ற காமங்கள் ஸமமாக ஆகுமா? ஸத்துக்களுடைய ஸங்கத்தால் பகவானுடைய கதாப்பிரசங்கமும், ஆசையினுடைய ஒழிவும், பிராணிகளிடத்தில் விரோதமில்லாதிருத்தலும், உண்டாகின்றன. எந்தப் பெரியோர்களுடைய ஸதஸில் ஸன்யாஸிகளுக்குக் கதியாகிய ஸ்ரீமந் நாராயணனுடைய கதைகள் ஆசையை யொழித்த பெரியோர்களால் கானஞ் செய்யப்படுகின்றனவோ. சுத்தர்களாகிய அந்தப் பெரியோர்கள் லோகத்தைப் பரிசுத்தப்படுத்துவதற்காக ஸஞ்சரிக்கிறார்கள். அப்படிப்பட்ட உம்மைப் போன்ற ஸாதுக்களுடைய சேர்க்கையானது ஸம்ஸாரத்திலிருந்து பயந்தவனாகிய எனக்குப் பிடிக்காமலிருக்குமா? ஓ பகவன்! உம்முடைய தோழராகிய பரமசிவனுடன் சொற்பகாலம் நாங்கள் ஸல்லாபஞ் செய்ததடியால் நிவர்த்திக்க முடியாத ஸம்ஸாரமாகிய மிருத்யுவிற்கு மேலான வைத்தியராகிய உம்மை அடைந்தோம். (ஸாதுக்களுடைய ஸங்கத்தால் உண்டாகும் பலனை அடைந்தோமென்று கருத்து.) மேலும் நாங்கள் வேதங்களை நன்றாய் அத்யயனஞ்செய்து, ப்ராஹ்மணர்களையும் ஸித்தர்களையும் எப்பொழுதும் அனுஸரித்து, அவர்களுடைய பிரீதியை ஸம்பாதித்து, பெரியோர்களை நமஸ்கரித்து, மித்திரர்கள் ஸஹோதரர்கள் முதலிய பிராணிகளையும் அசூயை இல்லாமல் சமமாகப் பார்ப்பது முதலிய தபஸ்ஸை ஆகாரம் இல்லாமல் வெகுகாலம் அனுஷ்டிப்பது முதலியவைகளைச் செய்தோமல்லவா? அவையெல்லாம் அளவற்ற மகிமையுள்ள பரம புருஷராகிய உமக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணட்டும். இது ஒருவரம்.

மேலும் மனு, ப்ரஹ்மதேவர், பகவானாகிய பரமசிவன், தபஸ்ஸினாலும் ஞானத்தாலும் சுத்த சித்தர்களான மற்றவர்கள் ஆகியோ இவர்களாலும் உம்முடைய மஹிமை முழுமையும் அறியப்படவில்லை. ஆனாலும் அவர்கள் தங்களுடைய புத்திக்குத் தக்கபடி உம்மைத் துதிக்கிறார்கள். ஆனதால் நாங்களும் ஸ்தோத்திரஞ் செய்கிறோம். எல்லாரிடத்திலும் ஸமரும், ஆசை முதலியவைகளற்றவரும், மேலானவரும் எங்கும் நிறைந்தவரும், ஸத்வமூர்த்தியும், வாஸுதேவரும், பகவானுமாகிய உமக்கு நமஸ்காரம்" என்றார்கள். பக்தர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ளவரும் தடையற்ற வீர்யமுள்ளவரும், பிரசேதஸ்ஸுகளால் துதிக்கப்பட்டவரும், அவர்களிடத்தில் பிரீதியுள்ள வருமான ஸ்ரீ பகவான் இப்படி அவர்களால் துதிக்கப பெற்றுத் தம்முடைய லோகஞ் சென்றார். பகவானைத் தரிசித்துப் திருப்தியடையாமல் அந்த ராஜகுமாரர்கள் பகவத் தரிசனத்தையே விரும்பினவர்களாக இருந்தார்கள். பிறகு அவர்கள் ஜலத்திலிருந்து வெளியில் வந்தார்கள். பூமி முழுவதும் மரங்கள் அடர்ந்திருந்தன. ஸ்வர்க்கம் வரையில் செல்ல விரும்பியவைகள் போல் எல்லா மரங்களும் மிக்க உயரமாக வளர்ந்திருந்திருந்தன. (பிராசீனபர்ஹிஸ் தபஸ்ஸிற்குச் சென்ற படியால் பூமிக்கு அரசனில்லாமல் உழுது பயிரிடுவது முதலியவையற்றிருந்தபடியால் காடாக விருந்தது). அதனைக் கண்டவுடன் அந்த ராஜபுத்ரர்களுக்கு மிகுந்த கோபமுண்டாயிற்று, அப்பொழுது பூமியிலுள்ள மரங்களை நாசஞ் செய்வதற்காகப் பிரளயகாலத்திய காலாக்னி ருத்ரன் போல் அவர்கள் தங்களுடைய முகத்திலிருந்து அக்கினியையும், காற்றையும் உண்டு பண்ணினார்கள். அவைகளால் மரங்கள் நாசஞ்

செய்யப்படும்போது ப்ரஹ்மதேவர் அவ்விடஞ்சென்று பிரசேதஸ்ஸுக்களை ஸமாதானப்படுத்தினார். பின்பு எஞ்சிய மரங்கள் ப்ரஹ்மதேவருடைய தூண்டுதலால் தங்களுடைய பெண்ணைப் பிரசேதஸ்ஸுக்களுக்குக் கொடுத்தன. அவர்களும் ப்ரஹ்மதேவருடைய ஆக்ஞையால் அந்தப் பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொண்டார்கள். சாக்ஷுஷ மன்வந்தரத்தில் தக்ஷப் பிரஜாபதியாகவிருந்து ப்ரஹ்மதேவருடைய தூண்டு தலால் பிரஜைகளை ஸிருஷ்டித்தார். அவர் தம்முடைய இயற்கையான தேஜஸ்ஸால் தேஜஸ்வி களை அதிக்கிரமித்திருந்தபடியாலும், கார்யங்களில் மிகவும் சமர்த்தராக விருந்தபடியாலும் தக்ஷர் என்ற பெயரடைந்தார். அவரைப் ப்ரஹ்மதேவர் பிரஜை களை ஸிருஷ்டிக்கும்படி ஆக்ஞாபித்தார்.. தக்ஷர் மரீசி முதலியவர்களைப் பிரஜாபதிகளாக நியமித்தார். ப்ரஹ்மபுத்திரராகிய அந்தத் தக்ஷர் பரமசிவனை அலக்ஷ்யஞ் செய்ததால் மறு ஜன்மத்தில் மரங்களின் புத்திரியான மாரிஷையிடத்தில் பிறந்தார்.

அத்தியாயம்–31

(முன் அத்தியாயத் தொடர்ச்சி)

1–7 பிறகு அந்தப் பிரசேதஸ்ஸுகள் பல வர்ஷ காலம் ராஜ்யபாலனஞ் செய்து விவேகம் உண்டான வர்களாகிப் பகவானுடைய ஆக்ஞையை நினைத்துக் கொண்டு பார்யையும் குழந்தைகளையும் விட்டு ஸகல பிராணிகளையும் ஆத்மாவாக நினைத்து, ப்ரஹ்ம ஸத்திரத்தில் தீக்ஷைசெய்து கொண்டு மேற்கு சமுத்திரக்கரை சென்றார்கள். அந்த இடம் ஜாபாலியென்ற மஹரிஷி ஸித்தியடைந்த க்ஷேத்திரம். அவ்விடத்தில் அவர்கள் பிராணன், வாக்கு, மனம், கண் ஆகிய இவைகளை ஜயித்திருந்தார்கள். சாந்தமும் ருஜுவுமான சரீரமுள்ளவர்களாக இருந்தார்கள். சுத்தமான பரமாத்மாவிடத்தில் மனத்தைச் செலுத்தின வர்களாகவுமிருந்தார்கள். அப்பொழுது அவர்களைத் தேவர்களாலும், அசுரர்களாலும், துதிக்கப்பட்ட நாரதர் கண்டார். அவ்விடம் வந்த நாரதரைக் கண்ட பிரசேதஸ்ஸுக்கள் எழுந்திருந்து பிரதக்ஷிணஞ் செய்து, நமஸ்கரித்து முறைப்படி பூசித்து ஆஸனத்தில் உட்கார வைத்து அவரை நோக்கி, 'ஓ தேவரிஷியே! நல்வரவா ? தெய்வச் செயலாக எங்களுக்குத் தரிசனங் கொடுத்தீர். ஓ ப்ராஹ்மண! நீர் லோகத்தின் க்ஷேமத்திற்காகவே சூரியன் போல சஞ்சரிக்கிறீர். ஸ்ரீ பரமசிவனாலும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவினாலும் உபதேசிக் கப்பட்ட ஆத்ம தத்வத்தைக் கிருஹஸ்தாஸ்ரமத்தில் ஆசை கொண்டு நாங்கள் பெரும்பாலும் மறந்து விட்டோம். கடக்க முடியாத சம்சார சமுத்ரத்தைச்

சீக்கிரமாக நாங்கள் தாண்டும்படியாக ஆத்ம ஞானத்தைத் தெரியப்படுத்தும்" என்று பிரார்த்தித்தார்கள்.

8–29 அதனைக் கேட்ட நாரத மஹாமுனிவர் உத்தம சுலோகராகிய பகவானைத் தியானஞ் செய்து ராஜபுத்ரர்களை நோக்கி, எதனால் பகவான் சேவிக்கப்படுகிறாரோ, அந்த ஜன்மமே பயனுள்ளது; அந்தக் கர்மங்களே பயனுள்ளவை; அந்த ஆயுஸ்ஸே ஸபலம்; அந்த மனமே பிரயோஜனமுள்ளது; அந்த வாக்கே சிறந்தது. ஆத்மஞானத்தைக் கொடுக்கும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை சேவியாதவனுடைய ஜன்மத்தாலும், உபநயனத்தாலும், யாகதீக்ஷையாலும், தீர்க்கமான ஆயுஸ்ஸினாலும், சாஸ்திரத்தாலும், தபஸினாலும், வாக்கினாலும், சித்தவிருத்திகளாலும், கூர்மையான புத்தியாலும், பலத்தாலும், இந்திரிய சக்தியாலும், யோகத்தாலும், ஸாங்க்யத்தாலும், சன்யாஸத்தாலும், வேதத்தாலும், மற்ற க்ஷேமகரமான காரியங்களாலும் என்ன பயன்? ஸகல சிரேயஸ்ஸுக்களுக்கும் மேலான சிரேயஸ் பகவானேயாம். ஸகல பிராணிகளுக்கும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவே ஆத்மாவாக விருக்கிறார். அவரே ஸ்வரூபஞானத்தை யுண்டுபண்ணுகிறவர்; ப்ரியர், மரத்தினடியில் (வேரில்) ஜலம் கொட்டினால் எப்படி மரத்தின் (கிளை) முதலியவைகள் புஷ்டியை அடைகின்றனவோ, பிராணனைத் திருப்தி செய்வதால் இந்திரியங்கள் எப்படித் திருப்தியடைகின்றனவோ, அப்படிப் பகவானைப் பூஜித்தால் ஸகல பிராணி களையும் பூஜித்ததாக ஆகிறது. மழைக்காலத்தில் ஸூர்யனிடமிருந்து வெளியான ஜலங்கள் கோடைக் காலத்தில் அவரிடத்திலேயே பிரவேசிப்பது போல் ஸ்தாவர ஜங்கம பிராணிகளெல்லாம் ஸ்ரீ மஹா

விஷ்ணுவிடமிருந்தே ஸிருஷ்டி காலத்தில் வெளியா கின்றன. பிரளய காலத்தில் அவரிடத்திலேயே பிரவேசிக்கின்றன. இந்த ஜகத்தானது ஸ்ரீ மஹா விஷ்ணுவிற்கு வாஸஸ்தலம். அவரைக் காட்டிலும் வேறானதல்ல. ஸகல உபாதிகளற்றது; ஸூர்யனுடைய தேஜஸ்ஸானது வேறாகத் தோன்றினாலும் எப்படி அவரைவிட வேறானது இல்லையோ, ஜாக்ரதவஸ்தையில் இந்திரியங்கள் தோன்றினாலும் ஸுஷுப்தியில் எப்படி ஒன்றாக ஆகிவிடுகின்றனவோ, ப்ரஹ்மஞானமில்லாத போது திரவியம், கிரியை, ஞானம் ஆகிய இவை களுடைய பேதம் தோன்றினாலும் ஞானம்வந்தபின் எப்படிப் பேதம் நாசமடைகிறதோ, அப்படி சகல ஜகத்தும் பகவத் ஸ்வரூபமேயாம். ஆகாயத்தில் மேகம், இருட்டு, பிரகாசம் ஆகிய இவைகள் கிரமமாக எப்படி உண்டாகின்றனவோ, மறைகின்றனவோ, அப்படிப் பரப்ரஹ்மத்தினிடத்தில் ரஜஸ், தமஸ், ஸத்வம் ஆகிய குணங்களாலுண்டாகும் சக்திகள் உண்டாகின்றன. ஜகத்தின் ஸ்வபாவமிது, ஆனதால் காலம் பிரதானம், புருஷன் ஆகிய இவைகளின் ஸ்வரூபமாக விருப்பதால் ஸகலத்திற்கும் காரணரும், தம்முடைய தேஜஸ்ஸால் குணகார்யத்தை நாசஞ்செய்ப வரும், ஒப்பற்றவருமான பரமாத்மாவை நேரில் உபாஸியுங்கள்'. மேலும், சங்கற்ப விகற்பங்களற்ற வரும், தமக்கு ஸஜாதீயமான இரண்டாவது வஸ்து வில்லாதவரும், ப்ரஹ்ம ஞானத்திற்குப் பாதகமான துவைத ஞானம் நிவர்த்தியான பின் பிரகாசிக்கும் ஸ்வரூபமுள்ளவரும், ஆதி, மத்யம், அந்தம், ஆகிய இவைகளற்றவரும், ஸுகஸ்வரூபியும், ஞானஸ்வரூபி யுமான பரமாத்மாவை மேற்காட்டியபடி (ப்ரஹ்ம ஸ்வரூபமென்று) பூஜியுங்கள். ஸகல பிராணிகள்

இடத்திலும் தயை செய்வதாலும், கிடைத்ததைக் கொண்டு சந்தோஷப்படுவதாலும் ஸகல இந்திரியங்களை ஜயிப்பதாலும் ஸ்ரீமந் நாராயணன் சீக்கிரம் சந்தோஷப்படுகிறார். ஸகல ஆசைகளுமற்ற சுத்தமான மனத்தில் சாதுக்களால் தியானம் செய்யப்பட்ட பகவான் 'தாம் பக்தர்களுக்கு வசப்பட்டவர்' என்பதை நினைத்து அந்த மனத்திலேயே வஸிக்கிறார். பின்னும் எவர்கள் படிப்பினாலும், பணத்தாலும், குலத்தாலும், தர்மத்தாலும் கர்வங்கொண்டு ஏழைகளான சாதுக்களுக்கு கெடுதியைச் செய்கிறார்களோ, அந்தத் துர்புத்தியுள்ளவர்களால் செய்யப்படும் பூஜையைப் பகவான் அங்கீகரிக்கிறதில்லை. அவருக்கு ஏழைகளிடத்திலும் பகவானையே பணமாக நினைத்த சாதுக்களிடத்திலும் பிரியம். அவர் பக்தி ரஸத்தை நன்றாக அறிந்தவர். எந்தப் பகவான் தம்மை அனுசரித்த வளான ஸ்ரீ தேவியையும் அந்த லக்ஷ்மியையும் உபாஸிக்கும் அரசர்களையும் தேவர்களையும் லக்ஷ்யஞ்செய்கிறதில்லையோ, தம்மாலேயே பூர்ணராக விருக்கிறாரோ, தம்முடைய பக்தர்களிடத்திலேயே பிரீதியுள்ளவராக விருக்கிறாரோ, அந்தப் பகவானை எவன் தான் உபாஸிக்க மாட்டான்? உங்களுடைய வம்சத்தில் பிறந்த துருவரென்பவர் ஸபத்தினி மாதாவின் வார்த்தையை சகியாமல் மாதா முதலியவர்களை விட்டுக் காட்டிற்குச் சென்றார்; அப்பொழுது அவர் ஐந்து வயதுள்ளவர்; வழியில் அவரை நான் சந்தித்தேன். அவர் என்னுடைய உத்தரவின்படி பகவானை ஆராதித்து மற்றவர்களால் அடைய முடியாத மேலான பதத்தை அடைந்தார். சப்தரிஷிகளும் இப்பொழுது அதனைப் பார்த்து தலைகுனிந்திருக்கிறார்கள். ஆனதால் நீங்களும்

ருத்ரரால் உபதேசிக்கப்பட்ட கீதத்தால் ஸகல பிராணிகளுக்கும் அந்தர்யாமியாக விருக்கும் பகவானையுபாஸியுங்கள்" என்று ஆக்ஞாபித்து மற்றுஞ் சில புண்யகதைகளை அவர்களுக்குச் சொல்லி, ப்ரஹ்மலோகஞ் சென்றார். அந்த ராஜபுத்ரர்களும் லோகத்தின் பாபத்தைப் போக்கக்கூடிய பகவானுடைய சரிதத்தை நாரதரிடமாகக் கேட்டு, பகவானுடைய பாதத்தை தியானஞ் செய்து வைகுண்டஞ் சென்றார்கள்.

30–32 ஓ விதுரரே! உம்மால் கேட்கப்பட்ட பிரசேதஸ்ஸுகளுக்கும் நாரதருக்கும் நேர்ந்த சம்வாதமாகிய பகவத் சரிதத்தை உமக்குச் சொன்னேன். மனுவின் புத்திரரான உத்தானபாதருடைய வம்சம் நிரூபிக்கப்பட்டது. பிரியவிரதருடைய வம்சத்தையும் சொல்லுகிறேன். அவர் நாரதரிடமாக ஆத்மவித்தையை அடைந்து பூமியையும் சிலகாலம் பரிபாலித்துப் பின்பு பூமியைப் புத்திரர்களுக்கு, பிரித்துக் கொடுத்துப் பகவத் பதத்தை அடைந்தார் என்றார்.

33–35 இப்படி மைத்ரேயரால் சொல்லப்பட்ட பகவானுடைய ஸத் கதையை விதுரர் கேட்டுப் பகவானிடத்தில் மிகுந்த பக்தி யடைந்து, ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி, மைத்ரேயரை நமஸ்கரித்து ஹ்ருதயத்தில் பகவானுடைய பாதார விந்தத்தை தியானஞ் செய்தார். பின்னுமவர் மைத்ரேயரை நோக்கி "ஓ மஹா யோகியே! கருணை நிறைந்த சித்தமுள்ள உம்மால் ஸம்ஸாரத்தின் கரை காட்டப்பட்டது. ஏழைகளிடம் பிரீதியுள்ள பகவான் அவ்விடத்தில் வஸிக்கிறார்" தனக்கென்று! ஒன்றும்

வைத்துக் கொள்ளாத பக்தர்களை அவர் சென்று அடைகிறார் என்று சொல்லி அவரை நமஸ்கரித்து, பூர்ண மனோரதமுள்ளவராக அவரிடம் விடை பெற்றுப் பந்துக்களை பார்ப்பதற்காக ஹஸ்தினாபுரஞ் சென்றார்.

36. ஸ்ரீ பகவானிடத்திலேயே சித்தத்தைச் செலுத்திய அரசர்களுடைய இந்தச் சரித்திரத்தைக் கேட்பவனுக்குத் தீர்க்கமான ஆயுளும், செல்வமும் கீர்த்தியும், க்ஷேமமான கதியும், ஐச்வர்யமும் கிடைக்கும்.

ஸ்கந்தம் 5

அத்தியாயம்–1

ப்ரியவ்ரதருடைய சரிதம்

பரீக்ஷித்து மஹாராஜன் சுகமஹாமுனிவரை நோக்கி "ஓ முனியே! ப்ரியவ்ரதர் பாகவதர்களுக்குட் சிறந்தவர்; ஆத்மாவிடத்தில் ரமிப்பவர்; அப்படிப் பட்ட அரசன் கர்ம பந்தத்தைக் கொடுக்கக் கூடியதும், ஆத்மஸ்வரூபத்தை மறைக்கக் கூடியதுமான விஷய சுகத்தில் ஏன் ஆசைப்பட்டார்? கிருஹஸ்தாச்ரமத்தை அடைய வேண்டுமென்ற விருப்பம் ப்ராகிருத மனிதர் களுக்கு உண்டாகலாம். ஓ ப்ராஹ்மணோத்தம! வைராக்யமுள்ள அப்படிப்பட்ட புருஷர்களுக்கு விஷயத்தில் ஆசையுண்டாவது உசிதமா? ஓ ப்ரஹ்மரிஷியே, உத்தமச்லோகராகிய பகவானுடைய பாதங்களுடைய சாயையை ஆச்ரயித்து அதனால் சுகத்தை அடைந்த சித்தமுள்ள மஹான்களுக்கு குடும்பத்தில் எப்படி ஆசையுண்டாகும்? மேலும் ஸ்திரீ, புத்ரன், தனம் முதலிய விஷயங்களில் ஆசை கொண்டிருந்த அந்த ப்ரியவ்ரதருக்கு ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் பக்தியும் ஸித்தியும் எப்படி உண்டாயிற்று? இவ்விஷயத்தில் எனக்குண்டாகி யிருக்கும் மிகுந்த ஸம்சயத்தை நிவர்த்திக்க வேண்டும்" என்று கேட்டார்.

5–10 அதனைக் கேட்டச் சுகமஹாமுனி அரசனை நோக்கி, "நீர் நினைப்பது சரியே; ஆனாலும் உத்தம ச்லோகராகிய பகவானுடைய பாதங்களாகிய

தாமரை மலரின் மதுவை பானஞ்செய்து திருப்தியடைந்த மனமுள்ள பக்தர்களுக்கு விக்னத்தால் பாகவதர்களான பரம ஹம்ஸர்களுக்கிஷ்டமான பகவத் கதையானது ஒரு கால் தடுக்கப்பட்டி ருந்தாலும், முந்திய அப்யாச பலத்தால் பக்தியானது விட்டுப் போகிறதில்லை. ஓ மஹாராஜ்! அந்த ராஜகுமாரராகிய ப்ரியவ்ரதர் பாகவதர்களுக்குட் சிறந்தவராகி நார்த ருடைய பாதத்தை சேவித்து அதனால் ஆத்மாவின் உண்மையைத் தெரிந்து கொண்டு ப்ரஹ்மஸத்ரத்தில் தீக்ஷை செய்து கொள்ள ஆசை கொண்டிருந்தார். அப்பொழுது அவருடைய பிதாவாகிய மனு தம்முடைய புத்ரராகிய ப்ரியவ்ரதர் அரசர்களுக் கிருக்க வேண்டிய குணங்களால் அலங்கரிக்கப்பட்டி ருப்பதைக் கண்டு பூமியை பரிபாலனஞ் செய்யும்படி ஆக்ஞாபித்தார்.. அப்பொழுது ப்ரியவ்ரதர் ஸ்ரீ வாஸுதேவரிடத்தில் நிரந்தரமாக சித்தத்தைச் செலுத்தி அதனால் ஸகல இந்திரியங்களுடைய வ்யாபாரங்களை பகவதர்ப்பணஞ் செய்திருந்தபடியால், மீறக்கூடாதாயினும் பிதாவின் ஆக்ஞையை அனுஷ்டிக்க ஸம்மதிக்கவில்லை. ஏனென்றால் அரசனாக விருந்தால் ப்ரபஞ்சம்மித்யாபூதமானாலும் அதனால் ஆத்ம ஞானம் மறைக்கப்படுமென்று நினைத்திருந்தார். பின்பு பகவானாகிய ப்ரஹ்மதேவர் இந்த ஜகத்தை விருத்தி பண்ணுவதைப் பற்றி யோசித்து ஸகல ப்ராணிகளுடைய அபிப்ராயத்தை அறிந்தவராகி, ஸகல வேதங்கள், மரீசி முதலியவர்கள் ஆகிய இவர்களுடன் தம்முடைய லோகத்திலிருந்து ப்ரியவ்ரதர் வசிக்குமிடம் வந்தார். நடுவழியில் ஆகாயத்தில் சந்திரன் போல் ப்ரகாசிக்கும் அந்த ப்ரஹ்மதேவரை விமானத்தில் சஞ்சரிக்கும் சிறந்த தேவர்கள் பூஜித்தார்கள். மேலும்

ஸித்தர்கள் கந்தர்வர்கள், ஸாத்யர்கள், சாரணர்கள், கின்னரர்கள், முனிவர்கள் ஆகிய இவர்கள் கூட்டங்கூட்டமாக அவருடைய சரிதத்தை கானஞ் செய்தார்கள். பின்னும் அவருடைய காந்தியால் அந்த கந்தமாதனபர்வதத்தின் குஹையானது இருளின்றி ப்ரகாசித்தது. அப்பொழுது தேவர்ஷியான நாரதர் ஹம்ஸவாஹனத்தின் மீதேறி வந்த அவரை தம்முடைய பிதாவாகிய ப்ரஹ்மதேவரென்று தெரிந்து கொண்டு மனு ப்ரியவ்ரதர் ஆகிய இவர்களுடன் சீக்கிரமாக எழுந்திருந்து சாவதானராக கை கூப்பி முறைப்படி பூஜித்தார். ஓ மஹாராஜ! அந்த நாரதரால் ப்ரஹ்மதேவர் பூஜிக்கப்பட்டு அந்த ப்ரியவ்ரதரை நோக்கி தயவுடன் கூடிய புன்சிரிப்புள்ள பார்வை யுடன் பின்வருமாறு சொல்லலானார். (நாரதமஹர்ஷி ப்ரியவ்ரதருக்கு ஆத்மதத்வத்தை உபதேசிக்க விரும்பி கந்தமாதன பர்வதத்தின் குஹைக்கு அவரை அழைத்து வந்தார். அந்த சமயத்தில் அவரை ராஜ்யபாலனம் செய்யும்படி திரும்பி அழைத்துப் போவதற்காக மனுவும் அவ்விடம் வந்திருந்தார். அந்த சமயம் ப்ரஹ்மதேவர் அவ்விடம் வந்தார் என்று கருத்து.)

11–19 "ஓ குழந்தாய்! நான் சொல்வது உண்மையென்று தெரிந்துகொள்; அளவிடக் கூடாத மஹிமையையுள்ள பகவானிடத்தில் அசூயை அடைய வேண்டாம்; நான், நீர், இந்த மஹர்ஷி முதலிய எல்லோரும் ஸ்வாதந்திரியமில்லாதவர்களாக அந்த பகவானுடைய ஆஜ்ஞையை வஹிக்கிறோம். இப்பொழுது ஸ்ரீமந் நாராயணனே என் முகமாகச் சொல்வதால் நான் சொல்வதாய் நினைக்கக் கூடாது

என்று கருத்து.) தபஸ்ஸினாலும், வித்தையாலும், யோகபலத்தாலும், புத்திபலத்தாலும், அர்த்தங்களாலும், தர்மங்களாலும் பிறருடைய ஆச்ரயத்தாலாவது, தன்னுடைய தேஹபலத்தாலாவது ஒருவனாலும் அவரால் செய்யப்பட்ட கார்யத்தை கெடுக்க முடியாது. அவ்யக்தாகிய பகவானுடைய ஆஜ்ஞையால் சரீரத்தை பிராணிகளெல்லோரும் அடைகிறார்கள். அதனால் ஜன்மத்தையும் நாசத்தையும், சோகத்தையும், மோஹத்தையும், பயத்தையும், சுகதுக்கங்களையும் அடைகிறதுமின்றி கர்மங்களையுஞ் செய்கிறார்கள். மேலும் நாம் எல்லோரும் எவருடைய ஆஜ்ஞாபமாகிய, வேதமாகிய பிணையில், குணங்கள் கர்மங்கள் ஆகிய கயறுகளால் கட்டப்பட்டு மூக்குக் கயிற்றினாலாமுக்கப்பட்ட நாற்கால் ப்ராணிகள் மனிதர்களுக்குப் போல அந்தப் பகவானுக்கு வயப்பட்டவராக இருக்கிறோம். ஓ ப்ரியவ்ரத! காளைமாடுகள் யஜமானால் கொடுக்கப்பட்ட ஆகாரத்தை எப்படி புஜிக்கின்றனவோ, தனதிஷ்டப்படி புஜிக்க சக்தியற்றவைகளோ அப்படி குணங்கள், கர்மங்கள் ஆகிய இவைகளால் நாதனாகிய பகவான் எந்தெந்த தேகத்தை கொடுக்கிறாரோ, அதனை அடைந்து துக்கத்தையாவது சுகத்தையாவது அனுபவிக்கிறோம். மேலும் நாமெல்லோரும் கண்ணில்லாத குருடர்கள், அந்த பகவான் ஒருவரே கண்ணுள்ளவர்; அவரால் நாம் நிழலிலாவது, வெய்யிலிலாவது அழைத்துப் போகப்படுகிறோம். மோக்ஷத்தை அடைந்தவனும், ப்ராரப்த கர்மம் நசிக்கிறவரையில் அபிமான மற்றவனாகி தேகத்தை தரிக்க வேண்டியதுதான்; ஆனால் அவன் திரும்பவும் ஜன்மத்தைக் கொடுக்கும் குணங்களையாவது கர்மங்களையாவது அனுசரிக்க

மாட்டான். காமம் முதலிய ஆறு சத்ருக்களுள்ளவனும், இந்திரியங்களை ஜயிக்காதவனுமாகிய புருஷனுக்கு வனத்திலும் சம்ஸார பந்தம் விடுகிறதில்லை. இந்திரியங்களை ஜயித்தவனும் ஆத்மா ராமனுமாகிய புருஷனுக்கு கிருஹஸ்தாச்ரமம் என்ன கெடுதியைச் செய்யும்? சத்ருக்களை ஜயிக்க விரும்பியவன் துர்க்கமான இடத்திலிருந்து அவர்களை ஜயிக்க முயலுவது வழக்கம்; அதுபோல் சம்ஸாரியானவன் கிருஹஸ்தாச்ரமத்திலிருந்து ஆறு சத்ருக்களை ஜயிக்க முயற்சிக்க வேண்டும். ஆனால் நீர் பத்மநாபராகிய பகவானுடைய பாதாரவிந்தமாகிய கோட்டையிலிருந்து காமம் முதலிய சத்ருக்களை ஜயித்து ஸ்ரீ பகவானால் கொடுக்கப்பட்ட போகங்களை அனுபவித்த பிறகு மிகுந்த வைராக்யமடைந்து ஸ்வரூபத்தை அடையலாம் என்று ஆஜ்ஞாபித்தார்.

20–21 அதனைக் கேட்ட மஹா பாகவதராகிய ப்ரிய வ்ரதர் முவ்வுலகத்திற்கும் குருவாகிய ப்ரஹ்ம தேவரிடமுள்ள கௌரவத்தால் தலைகுனிந்து அப்படியே செய்கிறேனென்று ஒப்புக் கொண்டார். அப்பொழுது மனு விதிப்படி ப்ரஹ்மாவை பூஜித்தார். ப்ரியவ்ரதரும் நாரதரும் ப்ரியமாகவே பார்த்து இருந்தார்கள். (ப்ரியவ்ரதருக்கு யோகாப்யாஸத்திற்கு விரோதம் நேர்ந்த படியாலும், நாரதருக்கு ப்ரியவ்ரதரை சிஷ்யராகச் செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் நிறை வேறாததினாலும் அவ்விருவர்களும் ப்ரஹ்மதேவரிடம் அசூயைப்பட வேண்டி இருந்தாலும் ப்ரியமாகவே பார்த்திருக்கிறார்கள்.) அப்பொழுது நான்கு முகக் கடவுள் வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாததும், வ்யவஹாரத்தைக் கடந்ததுமான பரப்ரஹ்மத்தை

த்யானஞ் செய்துகொண்டே தம்முடைய லோகஞ் சென்றார். மனுவும் ப்ரஹ்மதேவரால் தமதிஷ்டத்தை நிறைவேற்றிக் கொண்டு நாரதருடைய அனுமதியின் பேரில் ப்ரியவ்ரதருக்கு பட்டாபிஷேகஞ் செய்து தாண்ட முடியாத விஷயங்களாகிய விஷஜலத்தால் நிறைந்த தடாகம் போன்ற சம்ஸார வாசனையை யொழித்தார்.

22–34 இப்படி அந்த ப்ரியவ்ரதர் ராஜ்யத்தை அடைந்து ஸகல ஜகத்திற்கும் பந்தம், நாசம் ஆகிய இவைகளைச் செய்யும் பகவானுடைய பாதார விந்தத்தை எப்பொழுதும் த்யானஞ் செய்து அதனால் ராகம் த்வேஷம் முதலிய மனத்தில் மலங்களற்ற வராகி சுத்த சித்தராக ப்ரம்ஹதேவர் முதலியவர் களுக்கும் ப்ரியராக பூமியை பரிபாலித்தார். பின்பு அந்த ப்ரியவ்ரதர் விச்வகர்மாவின் பெண்ணாகிய பர்ஹிஷ்மதி யென்பவளை விவாஹம் செய்து கொண்டு அவளிடத்தில், ஆக்னீத்ரன், இதமஜிஹ்வரன், யஜ்ஞுபாஹு, மஹாவீரன், ஹிரண்யரேதஸ், க்ருத ப்ரஷ்டன், ஸவனன், மேதா திதி, விதி ஹோத்ரன், கவியென்ற பத்துபுத்ரர்களையும் ஊர்ஜஸ்வதியென்ற ஒரு புத்ரியையும் உண்டுபண்ணினார்; அந்தப் பெண் பிள்ளைகளுக்குப் பின் பிறந்தவள்; அந்தப் புத்ரர்களெல்லோரும் குணத்திலும், ஸ்வபாவத்திலும், கார்யத்திலும், ரூபத்திலும், பராக்ரமத்திலும் பிதாவை யொத்தவர்கள். அவர்களுக்குள் கவி, மஹா வீரன் ஸவனன் ஆகியவரும் ஊர்த்வரேதஸ்ஸுக்களாக லிருந்ததுமல்லாமல், பால்யம் முதலாகவே ஆத்ம வித்தையை அப்யஸித்து பரமஹம்ஸாச்ரமத்தை அடைந்தார்கள். மேலுமவர்கள் அந்த ஆச்ரமத்திலிருந்து

சாந்தியை அடைந்து ஸகல ப்ராணிகளுக்கும் வஸிக்குமிடமாயும், ஸம்ஸாரத்திலிருந்து பயந்தவர் களுக்குச் சரணமாயுமுள்ள ஸ்ரீ வாஸுதேவருடைய பாதாரவிந்தத்தை இடைவிடாமல் த்யானித்தார்கள். அதனால் மிகுந்த பக்தியுண்டாயிற்று. அதனால் சித்தம் சுத்தமாயிற்று. அப்படிப்பட்ட சித்தத்தில் ஸகல ப்ராணிகளுக்கும் ஆத்மாவும், ப்ரத்யகாத்மா வுமான ஸ்வரூபம் ப்ரகாசித்தது. அதனிடத்தில் அபேத பாவனையால் தேஹம் முதலிய உபாதிஸம்பந்தமற்று ப்ரம்ஹபாவத்தை அடைந்தார்கள். மேலும் ப்ரியவ்ரதருக்கு மற்றொரு பத்னியிடத்தில் உத்தமன், தாமஸன், ரைவதன், என்று மூன்று புத்ரர்கள் பிறந்தார்கள். அவர்கள் மன்வந்தரத்திற்கு அதிபதிகள், இப்படி புத்ரர்கள் சாந்தி மார்க்கத்தை அடைந்திருக்க ப்ரியவ்ரதராகிய அரசன் பதினோரு அற்புத வர்ஷங்கள் (1100000000 வர்ஷங்கள்) தடையற்ற புருஷ ப்ரயத்னத்துடன் கூடிய பலமுள்ள புஜ தண்டங் களால் வில்லை எடுத்து நாண் சப்தஞ் செய் வதாலேயே (யுத்தமில்லாமலேயே) தர்ம விரோதிகளை நாசஞ் செய்து கொண்டும் பர்ஹிஷ்மதியினுடைய மிகுந்த சந்தோஷம், ஸ்திரீகளுக்கு இயற்கையான வெட்கம் புன்சிரிப்புள்ள பார்வை, இனிமையான விளையாட்டு ஆகிய இவைகளால் விவேகமற்றவர் போல் விஷயங்களில் ஆசை வைத்திருந்ததால், ஆத்மஸ்வரூபத்தை அறியாதவர்போலும் விஷய சுகத்தை அனுபவித்தார். மேலுமவர் பகவானை உபாசித்து அதனால் கிடைத்த மிகுந்த மஹிமை யுள்ளவராகி சூர்யனுடைய ரதத்திற்கு சமமான வேகமுள்ள தேஜோமயமான ரதத்தின் மீதேறி ராத்திரியையும் பகலாகச் செய்கிறேன், என்று

இரண்டாவது சூர்யன்போல் ஏழு தடவை சூர்யன்பின் சென்றார். அந்த சூர்யன் மேரு மலையை ப்ரதக்ஷிணமாகச் சுற்றிப் பூமியின் பாதி பாகத்தை ப்ரகாசிக்கச் செய்தும்; மற்றொரு பாகத்தை மறைத்துக்கொண்டும் இருக்கிறார். அந்த ப்ரியவ்ரத ருடைய ரதத்தின் சக்ர மார்க்கங்களே ஏழு சமுத்ரங்களாயின. அவைகளுக்குட்பட்ட பூமிகள், ஜம்பு, ப்லக்ஷ, சால்மலி, குசம், க்ரோஞ்சம், சாகம், புஷ்கரம் என்ற த்வீபங்களாயின. அவைகள் ஒன்றைவிட ஒன்று வெளியீலும் பரப்பிலும் இரண்டு மடங்கு அதிக மானவைகள். மேற்சொல்லிய சமுத்திரங்களில் ஒன்று உப்பு ஜலமுள்ளது, மற்றொன்று கரும்பு சாருள்ளது; மூன்றாவது மத்யமாகிய ஜலமுள்ளது, நான்காவது நெய் சமுத்திரம், ஐந்தாவது பால் சமுத்திரம், ஆறாவது கடைந்த தயிர் சமுத்திரம்; ஏழாவது சமுத்திரம்; சுத்த ஜலமுள்ளது. இந்த ஏழு சமுத்ரங்களும் ஏழு த்வீபங் களுக்கும் அகழிகளாக முறையே ஏற்படுத்தப்பட்டி ருக்கின்றன. பார்ஹிஷ்மதியின் பதியர்கிய ப்ரியவ் ரதரானவர் மேற்காட்டிய ஜம்பூத்வீபம் முதலிய ஏழு த்வீபங்களாலும் தம்மை அனுசரித்திருந்த ஆக்னீதரன், இத்மஜிஹ்வன், யஜ்ஞபாஹு, ஹிரண்யரேதஸ், கிரதுபிருஷ்டன், மேதாதிதி, விதிஹோத்ரன் என்ற பிள்ளைகளை முறையே அரசனாகச் செய்தார். ஊர்ஜஸ்வதீ என்றும் தம்முடைய பெண்ணை சுக்ராசார்யருக்கும் கல்யாணம் செய்து கொடுத்தார். அந்த சுக்ராசார்யருக்கு அவளிடத்தில் தேவயானை என்ற ஒரு பெண் பிறந்தாள்.

35. பகவானுடைய பாதாரவிந்தத்தை த்யானம் செய்து அதனால் இந்திரியங்களை ஜயித்தவனுக்கு

இம்மாதிரியான புருஷபலமிருப்பது ஆச்சர்யமல்ல. சண்டாளன் முதலியவனானாலும் பகவானுடைய திவ்ய நாமத்தை ஒரு தடவையாவது உச்சரிப்பானே யாகில் அவன் சம்ஸாரபந்தமற்றவனாக ஆகிறான்.

36–38 அந்த ப்ரியவ்ரதர் இம்மாதிரியாக அளவற்ற தேகபலம், பராக்ரமம் இவைகளுக்குள்ளவராகி, நாரத மஹர்ஷியினுடைய சரணாரவிந்த சேவாகாலத்தில் கிடைத்த ராஜ்யத்தை இவ்வளவு காலம் அனுபவித்து நிர்வேதத்தை அடைந்து தம்மை சுகமற்றவராக நினைத்து நான் செய்தது யாவும் பிசகு; அவித்தையால் ஏற்பட்ட விஷயமாகிற பாழுங்கிணற்றில் இந்திரியங்கள் என்னைத் தள்ளிவிட்டன; இந்த விஷயங்களை அனுபவித்தது போதும்; இந்த ஸ்திரீயாகிய பர்ஹிஷ்மதிக்கு விளையாட்டு மிருகமாக விருக்கும் என்னை நிந்திக்க வேண்டும், என்று தம்மை நிந்தித்துக் கொண்டார். பின்னுமவர் பரமாத்மாவின் ப்ரஸாதத்தாலே விவேகத்தை அடைந்து தம்மை அனுஸரித்திருக்கும் ஏழு புத்ரர்களுக்கு இந்த பூமியை பிரித்துக் கொடுத்து போகத்தை யனுபவிப்பவளான ஸ்திரீயையும், ஸகல ராஜ்யத்தையும், உயிரில்லாத சரீரத்தைப் போல் விட்டு, நிர்வேதமுள்ளவராக பகவானுடைய லீலைகளை த்யானஞ் செய்துகொண்டு, நாரதருடைய மார்கத்தையே திரும்பவும் அனுசரித்தார்.

39–41 அவருடைய சரிதத்தைப் பற்றிய ச்லோகங்கள் பின்வருமாறு கண்டு கொள்ளுக. எந்த ப்ரியவ்ரதர் ரதத்தின் மார்க்கத்தால் இருட்டைப் போக்கடித்து ஏழு சமுத்ரங்களை உண்டு

பண்ணினாரோ, அப்படிப்பட்ட அவ்வரசனால் செய்யப்பட்ட கார்யமான ஈச்வரனைத் தவிர வேறு யாரால் செய்ய முடியும்? அவர் பூமியில் த்வீபங்களை ஏற்படுத்தினார். நதிகளாலும், மலைகளாலும், காடு களாலும் ஒவ்வொரு த்வீபத்திலும், எல்லைகளையும் ஏற்படுத்தினார். பின்னும் விஷ்ணு பக்தர்களிடத்தில் ப்ரியமுள்ள அவர் யோகத்தாலும், மேலான கர்மத் தாலும் கிடைத்த பாதாளம், ஸ்வர்க்கம், பூமி ஆகிய லோகங்களில் உண்டான வைபவத்தை நரகத்திற்குச் சமமாக நினைத்தார்.

அத்தியாயம்–2

ஆக்னீத்ரருடைய சரிதம்

இப்படி தகப்பனாராகிய ப்ரியவ்ரதர் நிவிர்த்தி மார்கத்தை அடைந்தபோது, அவருடைய ஆக்ஞையின் படி ஆக்னீத்ரரென்பவர், ஜம்பூத்வீப வாஸிகளான ப்ரஜைகளை தம்முடைய வயிற்றில் பிறந்த குழந்தை களைப் போல் தர்மமாக பரிபாலித்தார். அவர் ஒரு கால் கிருஹஸ்தாச்ரமத்தை அடையவிரும்பி தேவ ஸ்திரீகள் விளையாட்டு ஸ்தலமாகிய மந்தரமலையின் குஹையில் ப்ரஹ்மதேவரை பூஜித்து, சித்தத்தை ஒருவகைப்படுத்தி தபஸ் செய்தார். அவருடைய அபிப்ராயத்தை தெரிந்துகொண்ட ப்ரஹ்மதேவர் தம்முடைய ஸதஸ்ஸில் கானஞ் செய்து கொண்டி ருக்கும். பூர்வசித்தீ என்னும் அபஸ்ரஸ்ஸை மந்தர மலைக்கு அனுப்பினார். அவளும் ஆக்னீத்ரருடைய ஆச்ரமத்தின் ஸமீபத்திலிருக்கும் மிக்க அழகான தோட்டத்திற்கு சென்றாள். அவ்விடத்தில் நெருக்கமாக முளைத்திருக்கும் மரங்களுடைய கிளைகளில் ஸ்வர்ணக்கொடிகள் படர்ந்திருக்கின்றன. அவைகளில் மயில் முதலியவைகள் ஆணும் பெண்ணுமாக ஷட்ஜம் முதலிய ஸ்வரங்களில் கத்துகின்றன. அதைக்கேட்டு ஸமீபத்திலுள்ள தாமரை ஓடையில் வஸிக்கும் நீர்கோழி, நீர்காகம், கொக்கு, ஹம்ஸம் முதலிய அநேக நீர் பறவைகள் விழித்துக்கொண்டு சப்திக்கின்றன. அவ்விடத்தில் அவள் அழகாய் நடப்பதால் அவளுடைய ஆபரணங்கள் சப்தித்தன. அதனைக் கேட்டு கண்களைமூடி தபஸ் செய்து கொண்டிருந்த

ஆக்னீத்ரர் கண்களைத் திறந்து ஸமீபத்தில் வரும் தேவஸ்திரீயைக் கண்டார். அவள் பெண் வண்டு போல் புஷ்பத்தை முகர்ந்து கொண்டிருந்தாள், தேவர் களுடைய மனத்திற்கும், கண்களுக்கும் ஸந்தோஷத்தை உண்டுபண்ணக்கூடிய நடை, விளையாட்டு வணக்க மான பார்வை, இனிமையான பேச்சு இவைகளைக் கொண்டு மனிதர்களுடைய மனத்தில் மன்மதனை ப்ரவேசிக்க செய்கிறாள். மேலும் அவள் தன்னுடைய முகத்திலிருந்து வெளிக்கிளம்பியதும், அமிருதம் போல ருசியுள்ளதும் மத்யம்போல் மதத்தை உண்டுபண்ணக் கூடியதுமான சிரிப்பு, பேச்சு இவைகளாலுண்டாகிய மூச்சுக் காற்றுள்ளவள். அதனை முகர்ந்து, மதித்த வண்டுகளால் சூழப்பட்டு அதனால் பயந்து வேகமாக நடக்கும்போது கொஞ்சம் அசைகின்ற ஸ்தனங்கள். தாமரைமலர்கள். ஒட்டியாணம் இவைகளுள்ளவள். அவளைக் கண்டவுடன் மன்மதன் இதுதான் ஸமயமென்று ஆக்னீத்ரரிடம் ப்ரவேசித்தான். ஆக்னீத்ரரும் மன்மதனுக்கு வசப்பட்டு ஜடன் போல அவளை நோக்கிப் பின் வருமாறு சொல்லலானார் "நீ யார்? மஹர்ஷிகள் வஸிக்கும் இந்த மலையில் எதனைச்செய்ய விரும்புகிறாய்? நீ பகவானாகிய பர தேவதையினுடைய ஒப்பற்ற மஹிமையுள்ள மாயையாக இருக்கவேண்டும். அடிதோழியே! நாண்கயிரற்ற இரண்டு வில்களை எதற்காக வைத்துக்கொண்டி ருக்கிறாய்? இந்திரியங்களை ஜயிக்காதவர்களும் மிருகத்துக் கொப்பானவர்களுமான என்னைப் போன்ற வர்களை ஸ்வாதீனப்படுத்திக் கொள்வதற்காக அவை களை வைத்துக் கொண்டிருக்கிறாயா? தாமரைமலரின் இதழ்போன்றவைகளும் மிகவும் கடுமையான கோடுக ளுள்ளதும், அழகான கணுக்களுள்ளதுமான இவைகள்,

பகவானாகிய மன்மதனுடைய பாணங்களேயாம். இவைகளை யாரிடத்தில் ப்ரயோகிக்கப் போகிறாய்? எனக்கு தெரியவில்லை, புத்தி மயக்கமடைந்த எங்களுக்கு உன்னுடைய பராக்ரமம் க்ஷேமத்தை உண்டு பண்ணட்டும். உன்னுடைய சிஷ்யர்களான இந்த வண்டுகள் ரஹஸ்யத்துடன் கூடிய ஸாமத்தை படிக்கின்றன. மேலும், மஹர்ஷிகள் வேதசாகையை அடைவதுபோல உன்னுடைய தலையிலிருந்து நழுவிய புஷ்பங்களை வண்டுகள் அடைகின்றன. (பாதஸரத்தின் சப்தத்தைக்கேட்டுச் சொல்லுகிறார்) ஓ ப்ராஹ்மண! (ஸ்திரீயையே ப்ராஹ்மணனென்று அழைக்கபபட்டது) உன்னுடைய பாதார விந்தத்தி லுள்ள பாதஸரத்திலிருக்கும் ரத்னங்களுடைய சப்தத்தைக் கேட்கிறோம். சப்திக்கிறவன் காணப்பட வில்லை. சப்தமோ மிகவும் ப்ரகாசமாக விருக்கிறது. நிதம்ப பிம்பத்தில் கதம்ப புஷ்பத்தின் காந்தி எப்படி யுண்டாயிற்று? (வஸ்த்ரத்தை நிதம்பத்தின் காந்தியாக சொல்லப்பட்டிருக்கிறது.) அந்த நிதம்பத்தில் குறைக்கொள்ளி இருக்கிறது. (ஒட்டியாணம் அக்னி போல் ஜ்வலிக்கிறது.) உன்னுடைய மறையுரி எங்கே? ஓ ப்ராஹ்மண! அழகான ஸ்தனங்களில் என்ன இருக்கிறது? நீ இளைத்த இடுப்புள்ளவளானாலும் சிரமப்பட்டு அவைகளை தரிக்கிறாய். அவைகளில் என்னுடைய கண்கள் பதிந்திருக்கின்றன. அந்த ஸ்தனங்களில் இம்மாதிரியான குங்குமப்பூ சேர்ந்த சந்தனமிருக்கிறது. அதனால் என்னுடைய ஆச்ரமம் முழுவதும் வாஸனையுள்ளதாகச் செய்கிறீர் ஓ மிக்க ஸுஹிருத்தே! உம்முடைய லோகத்தை எனக்குக் காண்பியும். அந்த லோகத்திலிருப்பவர்களுடைய மார்பானது இம்மாதிரி அபூர்வமான அவயங்களை

தரிக்கிறது. முகமானது இனிமையான பேச்சு, விலாஸம், அதராமிருதம் முதலியவைகளை தரிக்கிறது. உங்களுடைய லோகத்தில் எதனை புஜிப்பது வழக்கம்? ஹவிஸ்ஸின் வாஸனையானது வீசுகிறது. நீ விஷ்ணு வின் கலையாகையால் ஆஹாரத்தை நீ புஜிக்கிற தில்லையென்றே நினைக்கிறேன். உன்னுடைய முகமானது சரத்காலத்திய குளம் போல ப்ரஸன்னமாக விருக்கிறது. அந்த முகத்தில் கண்கொட்டவில்லாத மகரங்கள் போன்ற மகர குண்டலங்களுள்ள காது களும், மீனங்கள் போன்ற கண்களும், பல்வரிசை களுடைய அழகும், வண்டுகள் போன்ற கருத்த தலைமயிருமிருக்கின்றன ஆனதால் அந்தமுகமானது மகரங்கள், மீன்கள், பறவைகள், ஆகிய இவைகளுள்ள குளம் போலிருக்கிறது. உன்னுடைய தாமரைமலர் போன்ற கையினால் அடிக்கப்பட்ட பந்தானது சஞ்சலசித்தமுள்ள என்னுடைய கண்களை அசைக்கிறது. தலைமயிர் அவிழ்ந்திருக்கிறது. தூர்த்தனாகிய காற்றானது உன்னுடைய எக்கு முடிச்சை அபஹரிக்கிறது. அதனை நீ அறியவில்லையா? ஓ தபோதன! தபஸ்ஸை கெடுக்கும் இப்படிப்பட்ட ரூபத்தை எந்தத் தபஸ் செய்து அடைந்தீர் ஓ மித்ர! என்னுடைய இவ்விடத்தில் தபஸ் செய்யத் தகுந்தவராயிருக்கிறீர். ப்ரஹ்மதேவர் என்னிடத்தில் தயைசெய்து உன்னை அனுப்பியிருக்கிறார். ஓ ப்ராஹ்மண! ப்ரஹ்மதேவரால் கொடுக்கப்பட்ட உன்னை விடமாட்டேன். என்னுடைய மனமும் கண்களும் உன்னிடமே பதிந்திருக்கின்றன. உன்னை அனுஸரித்தவனாகியஎன்னை உனக்கு ஸ்வாதீனனாகச் செய்யவேண்டும். உன்னுடைய தோழிகளும் எனக்கு அனுகூலர்களாக விருக்கவேண்டும்" என்று விஷயத்தில்

ஆசையுள்ளவராகிய ஆக்னித்ரர் ஸ்திரீகளை இனிமையான வார்த்தையால் வசப்படுத்துவதில் ஸமர்த்தராகையால் அவளை தம்மிடம் ஆசைப்படும்படி செய்து கொண்டார்.

13–23. அந்த அப்ஸரஸ்ஸும் அவருடை புத்தி, ரூபம், ஸ்வபாவம், வித்தை, வயஸ், அழகு, ஔதார்யம் ஆகிய இவைகளால் புத்தி மயங்கினவளாகி ஜம்பூத் வீபத்திற்கு அதிபதியும் சூரர்களுக்கு அதிபதியுமான ஆக்னீத்ரருடன் வெகுகாலம் பூமியிலிருக்கும் ஸ்வர்க்க மாகிய ஒன்பது கண்டத்திலுமுள்ள சுகத்தை அனுபவித்தாள். அந்தப்பூர்வ சித்தியிடத்தில் நாபி, கிம்புருஷன், ஹரிவர்ஷன், இளாவிருதன், ரம்யகன், ஹிரண்மயன், குரு, பத்ராஸ்வன், கேது, மாலன் என்ற ஒன்பது புத்ரர்கள் பிறந்தார்கள், (புத் என்ற நரகத்திலிருந்து காப்பாற்றுகிற படியால் புத்ரனென்று) பின்பு அந்த பூர்வசித்தியானவள் ஒவ்வொரு வர்ஷங்களிலும் ஒவ்வொரு குழந்தைகளைப் பெற்று அந்த ஒன்பது குழந்தைகளையும் வீட்டிலேயே வைத்துவிட்டு ப்ரஹ்மதேவரிடஞ் சென்றாள். பின்பு அந்த ராஜபுத்திரர்களுக்கு மாதாவின் அனுக்ரஹத்தால் தேகபலம் முதலியவை இயற்கையிலுண்டாயிற்று. பிதாவாகிய ஆக்னீத்ரர் அவர்களுக்கு ஜம்பூத்வீபத்தி லுள்ள ஒன்பது கண்டங்களை ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்றாகப் பிரித்துக் கொடுத்தார். அவரவர்கள் தங்கள் கண்டத்திற்கு தங்களுடைய பெயரையே வைத்தார்கள். அதனால் அந்த ஒன்பது பெயருள்ள தாக ஒன்பது கண்டங்களும் வழங்கிவருகின்றன. ஆக்னீத்ரர் ஸகல காமங்களையும் அனுபவித்து திருப்தி அடைந்தவரானாலும் அந்த அப்ஸரஸ்ஸையே

மேலானவளாக ஒவ்வொரு நாளும் நினைத்து அவளுடைய லோகஞ் சென்றார். அவ்விடத்தில் பிதிருக்கள் சந்தோஷப்படுகிறார்கள். ஆக்னீத்ரருக்குப் பிறகு அவருடைய ஒன்பது புத்ரர்களும் மேருதேவீ, பிருதிரூபா , உக்ரதம்ஷ்டரீ, லதா, ரம்யா, ச்யாமா, நாரீ, பத்ரா, தேவவீதி என்ற மேருவின் புத்ரிகளை முறையே கல்யாணஞ் செய்து கொண்டார்கள்.

அத்தியாயம்–3

நாபியின் சரிதம்

நாபியென்பவர் புத்ரனில்லாதவராக புத்ரனை அடைய விரும்பி மேருதேவியினுடன் யஜ்ஞ புருஷராகிய ஸ்ரீமந் நாரயணரை யாகத்தால் பூஜித்தார். இப்படி சுத்த சித்தராக சிரத்தையுடன் யாகஞ் செய்தார். ப்ரவர்க்யம் நடந்தது. அப்பொழுது பாகவதர்களிடத்தில் கருணையால் அழகான அவயங் களுள்ளதும், ஸ்வதந்திரமும், ஸுகத்தைக் கொடுக்கக் கூடியதும், மனத்திற்கும், கண்களுக்கும் அழகானதுமான தம்முடைய ஸ்வரூபத்தை பக்தர்களுடைய இஷ்டத்தை நிவேற்றும் எண்ணமுள்ள பகவான் நாரயணன் பிறரால் அடைய முடியாதவரானாலும் த்ரவ்யம், தேசம், காலம், மந்திரம், ரித்விக், தக்ஷிணை, விதி முதலிய ஏழுவகையான உபாயஸம்பத்தியால் ப்ரகாசப் படுத்தினார். (தர்சனங் கொடுத்தாரென்று கருத்து) அந்த பகவத் ஸ்வரூபமானது இரண்டு கைகளுள்ளது; ஸுவர்ண மயம்; புருஷ ஸ்வரூபம்; பீதாம்பரத்தைத் தரித்தது, ஸ்ரீவத்ஸத்தால் அழகான மார்புள்ளது; மேலுமது சங்கம், பத்மம், வனமாலை, சக்ரம், கௌஸ்துபம், முதலியவைகளுள்ளது; மிகவும் பிரகாசிக்கின்ற கிரீடம், குண்டலங்கள், கைவளை, அரை ஞாண், ஹாரம், தோள்வளை; பாதஸரம் முதலிய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டது; அந்ததிவ்யரூபத்தை கண்ட ரித்விக்குகளும், யஜமானனும் தரித்திரனுக்குப் பணங்கிடைத்தாற் போல் மிக்க ஸந்தோஷமடைந்து வணக்கத்தால் தலை குனிந்தவர் களாக மிகுந்த கௌரவத்துடன் பூஜித்து ஸ்துதிக் கலானார்கள்.

ஓ மிகவும் பூஜ்யரே! உம்முடைய வேலைக்காரர் களான எங்களால் செய்யப்படும் பூஜையை அங்கீகரிக்க வேண்டும், "நமஸ்காரஞ் செய்கிறேன்" என்றதை சொல்வதுதான் எங்களுக்குத் தெரியும். ஓ ஈச்வர, ப்ரபஞ்சத்தையே அறிந்தவனும் அஸ்வதந்த் ரனுமான புருஷனால் பிரகிருதிக்கும் புருஷனுக்கும் கீழ்ப்பட்ட நாமம். ரூபம்! ஆகிருதி ஆகிய இவைகளைக் கொண்டு பரராகிய உம்முடைய ஸ்வரூபத்தை எப்படி நிரூபிக்க முடியும்? ஸகல ப்ராணிகளுடைய பாபத்தை போக்கக் கூடிய மங்களகரமாகிய உம்முடைய மேலான குணங்களுடைய கூட்டத்தின் ஸ்வல்ப பாகத்தைச் சொல்லிக் கொண்டிருப்பதே ஸாதாரண ஜனங்களுக்குத் தகுதியானது. ஓ மேலானவரே! உம்முடைய பரிஜனங்களால் கத்கத ஸ்வரமுள்ள ஸ்தோத்ரத்தாலும் ஜலத்தாலும், சுத்தமான தளிர், துளஸீ, அருகம்புல் ஆகிய இவைகளைக் கொண்டு செய்யப்படும் பூஜையால் ஸந்தோஷிக்கிறீர். அநேக அங்கங்களுள்ள இந்த யாகத்தாலும் உமக்குப் ப்ரயோஜன மொன்றுமில்லை. எப்பொழுதும் இயற்கையில் ஸகல புருஷார்த்தஸ்வரூபமான பரமானந்த ஸ்வரூபியான உமக்கு இதனால் என்ன ப்ரயோஜனம்? ஆனால் காமத்தை விரும்பிய நாங்கள் உம்மைப் பூஜித்து இஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ள ஸாதனமாக ஆகிறது. மேலும் ஓ பரமபுருஷ! நீர் நிரபேக்ஷரானாலும், ஸாபேக்ஷர் போல் தங்களுடைய க்ஷேமஸாதனத்தை அறியாத பாலர்களிடத்தில் மிகுந்த கருணையுடன் அவர்களால்தான் நன்றாய் ஆராதிக்கப்படாமலிருக்கும் பொழுதும் மோக்ஷமென்ற தம்முடைய மஹிமையை அவர்களுக்குக் கொடுக்கப் போகிறவராய் காணப்படுகிறீர். இந்த ராஜர்ஷியின்

யாகத்தில் பக்தர்களான எங்களுக்கு தர்சனங் கொடுத்ததே வரமாயிற்று. வைராக்யத்தாலுண்டான திவ்ய ஜ்ஞானமாகிய காற்றில் மலங்களற்றவர்களும், உம்முடைய ஸ்வரூபத்தை யொற்றவர்களும், ஆத்மா ராமர்களுமான மஹர்ஷிகளும் உம்முடைய மேலான குணங்களைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமே யல்லாமல் உம்மை நேரில் தர்சிக்க முடியாது. ஆனாலும் நடக்கும் பொழுது, தடுக்குவது, தும்புவது, கொட்டாவி விடுவது முதலிய அவஸ்தைகளில் உம்மை ஸ்மரிக்க முடியாத வர்களான எங்களுக்கு ஜ்வரம், மரணம் ஆகிய தசைகளிலும் ஸகல பாபங் களையும் போக்கக் கூடிய உம்முடைய நாமஸ்மரணம் உண்டாகும் படி அனுக்ரஹிக்க வேண்டும். மேலும் இந்த ராஜரிஷி யானவர் உம்மைப் போன்ற புத்ரன் வேண்டுமென்ற எண்ணமுள்ளவராகி ஸ்வர்க்கம், மோக்ஷம் ஆகிய இவைகளுக்கு அதிபதியான உம்மை ஸேவிக்கிறார். புத்ரனே புருஷார்த்தமென்று நினைத்திருக்கிறார். இது தரித்திரன் கீழானவஸ்துவை அடைய விரும்பி தனத்தையடைந்தாற் போலிருக்கிறது. ஆனால் இது ஆச்சரியமல்ல. இந்த ஸம்ஸாரத்தில் ஒருவராலும் முடியாததும், பார்க்கமுடியாத மார்க்கமுள்ளதுமான உம்முடைய மாயையால் ஜயிக்கப்படாதவன் யார்? அதனால் கவர்ந்து கொள்ளப்படாத பக்தியுள்ளவர் யார்? விஷயங்களாகிய விஷய பிரகிருதி சம்மந்த மில்லாதவன் யார்? எவன் மஹான்களுடைய சரணத்தையுபாஸித்தவனோ, அவன் இவைகளுக்குட் படமாட்டான். அநேக கார்யங்களைச் செய்பவரே ஸ்வல்பமான கார்யத்தை யுத்தேசித்து உம்மை மாந்தர்களான நாங்கள் அழைத்தது தேவராகிய உம்மை அவமதித்ததாக ஆயிற்று. ஸகல ஸ்வரூபியாகையால்

அதனை க்ஷமிக்க வேண்டும்." என்று வாக்ய நடையாக ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டவரும், பாரத வர்ஷத்திற்கு அதிபதியான நாபியினால் நமஸ்கரிக்கப் பட்டவருமான பகவான் கருணையுடன் பின்வருமாறு சொல்லலானார்.

17–19 ஓ மஹர்ஷிகளே, ஸத்யமான வாக்குள்ள நீங்கள் இந்த அரசனுக்கு "என்னைப் போன்ற புத்திரன் பிறக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்ட படியால் நான் ஒப்பற்றவனாகையால் நானே எனக்குச் சமன். ப்ராஹ்மணர்களுக்குட் சிறந்தவர்கள் எனக்கு முகமாகையால் அவர்களுடைய வார்த்தை பொய்யாக ஆகக்கூடாது. ஆனதால் ஆக்னீத்ரருடைய புத்ரராகிய நாபிக்கு நான் புத்ரனாக அவதரித்திருக்கிறேன். (இது அம்சாவதாரம்) என்று மேருதேவி கேட்டுக்கொண்டி ருக்கும் போது நாபிக்கு அனுக்ரஹஞ் செய்து மறைந்தார். இப்படி மஹர்ஷிகளால் பூஜிக்கப்பட்ட பகவான்நாபியின் இஷ்டத்தை நிறைவேற்ற வேண்டி அவருடைய ஸ்திரீயாகிய மேரு தேவியிடத்தில் சுத்தஸத்வமாகிய சரீரத்துடன் அவதரித்தார். இந்த அவதாரத்தில் நைஷ்டிக ப்ரஹ்மசாரிகள், காற்றையே வஸ்த்ரமாகக் கொண்டவர்களான தபஸ்விகள், ஜ்ஞானிகள் ஆகிய இவர்களுடைய தர்மத்தை வெளியிட்டார்.

அத்தியாயம்–4

ரிஷபசரிதம்

பிறந்தது முதல் நன்றாய் ப்ரகாசிக்கின்ற பகவானுடைய லக்ஷணங்களுள்ளவரும், ஸகலப்ராணி களையும் சமமாகப்பார்ப்பது, இந்திரியங்களை அடக்குவது, விஷயங்களில் ஆசைப்படாமலிருப்பது, ஸகல ப்ராணிகளுக்கும் நியந்தாவாக விருப்பது மிகுந்த விபூதியுள்ளவராகவிருப்பது ஆகிய இவைகளால் நாளுக்கு நாள் விருத்தியடைந்த மஹிமையுள்ள வருமான அந்த புத்ர ரத்னத்தை, மந்திரிகளும், ஜனங்களும் ப்ராஹ்மணர்களும், பூமியைப் பரிபாலனம் பண்ணத் தகுந்தவர் என்று நினைத்து. இவரே அரசனாக இருக்கவேண்டுமென்று நினைத்தார்கள். மேலும் அவர்களுடைய மேலானதும், கொண்டாடக் கூடியதுமான தேஹத்தாலும், தேஜஸ்ஸாலும், பலத்தாலும், உத்ஸாஹத்தாலும், அழகினாலும் கீர்த்தியாலும் அவருடைய தகப்பனாராகிய நாபி என்பவர் ரிஷபர் என்று அந்தக் குழந்தைக்கு பெயர் வைத்தார்.

3–7. அவருடைய ராஜ்யகாலத்தில் அந்த வர்ஷத்தில் (தேசத்தில்) இந்திரன் மழை பெய்யாம லிருக்கச் செய்தான். அதனைத் தெரிந்துகொண்ட அந்த ரிஷபதேவர் சிரித்து, தம்முடைய யோகமாயையால் அஜநாபமென்ற தன்னுடைய ராஜ்யம் முழுவதும் மழை பெய்யச் செய்தார். நாபி என்பவர் தமதிஷ்டப் படி நல்ல புத்திரனை அடைந்து மனுஷ்ய ஜன்மத்தை யடைந்தவரான பகவானாகிய புராணபுருஷனை

மாயையால் தம்முடைய புத்ரனென்று நினைத்து, "வத்ஸ! தாத!" என்று ப்ரியமான வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டு மிகுந்த ஸுகத்தை அடைந்தார். பின்பு அந்த நாபியானவர் பட்டணத்திய ஜனங்கள், மந்திரி முதலியவர்கள், தேசத்திய ஜனங்கள் ஆகிய எல்லோரும் ரிஷப தேவரிடத்தில் விசேஷ அனுராக முள்ளவர்களாக இருப்பதைத் தெரிந்துகொண்டு, அவருக்கு பட்டாபிஷேகம் செய்து ப்ராஹ்மணர்களி டத்தில் ஒப்புவித்து, மேருதேவியுடன் பதரிகாச்ரமஞ் சென்று, விக்னங்களின்றி நரநாராயணர் என்ற பகவானை தபஸ்ஸினால் ஆராதித்து சிலகாலஞ் சென்ற பின் ஜீவன் முக்தராக ஆனார். ஓ பரீக்ஷித்தே! அது விஷயமாக இரண்டு ச்லோகங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. அவைகள் பின்வருமாறு. நாபி என்ற அரசன் சுத்தமாகிய கர்மத்தைச் செய்து மஹா விஷ்ணுவை புத்ரனாக அடைந்தார். அவர்செய்த கார்யம் வேறுயாரால் செய்யப்படும். மேலுமவர் ப்ராஹ்மணர்களை பூஜித்து ப்ராஹ்மண பக்தி யுள்ளவராக யிருந்தபடியால் அவருடைய யாகத்தில் மஹர்ஷிகள் யஜ்ஞபதியான மஹாவிஷ்ணுவை அரசனுக்கு காண்பித்தார்கள், அவரைக் காட்டிலும் ப்ராஹ்மண பக்தியுள்ளவர் வேறுயாரிருக்கிறார் ?

8–12. பிறகு அந்த ரிஷபதேவர் தம்முடைய வர்ஷத்தை (தேசத்தை) கர்மபூமியென்று நினைத்து குருகுல வாசம் செய்து குருக்களிடம் விடைபெற்று கிருஹஸ்தர்கள் இம்மாதிரி இருக்கவேண்டும் என்று பிறருக்குத் தெரிவித்து ச்ரௌத கர்மங்களையும், ஸ்மார்த்த கர்மங்களையும் அனுஷ்டித்து, இந்திரனால் கொடுக்கப்பட்ட ஜயந்தி என்பவளிடத்தில் தமக்கு

சமானர்களான நூறு புத்ரர்களை உண்டு பண்ணினார். அவர்களுக்குள் மூத்தவராகிய பரதன் என்பவர் யோகியும் மேலான குணமுள்ளவருமாக இருந்தார். அவருடைய ராஜ்யம் முதல் இந்த வருஷத்திற்கு பாரதவர்ஷமென்று பெயர் வந்தது, அவருடைய பின் பிறந்தவர்களுக்குள் (தும்பிகளுக்குள்) குசாவர்த்தன, இளாவர்த்தன், ப்ரஹ்மாவர்த்தன், ஆர்யாவர்த்தன் மலையகேது, பத்ரஸேனன், இந்திரஸ்ப்ருக், விதர்பன், கீகடன், என்று ஒன்பது பேர்கள் முக்யமானவர்கள், பின்னும் கவி, ஹரி, அந்தரிக்ஷன், ப்ரபுத்தன், பிப்பலாயனன், ஆவிர் ஹோத்ரன் த்ரமீடன், சமஸன், கரபாஜனன் என்ற ஒன்பது பேர்கள் பாகவதர்கள், பாகவத தர்மத்தை காண்பிப்பவர்கள். அவர்களுடைய சரிதத்தை வஸுதேவர், நாரதர் இவர்களுடைய ஸம்வாதமாக பதினோராவது ஸ்கந்தத்தில் சொல்லு வோம் பாக்கியான எண்பத்தோரு பிள்ளைகளும் மிகவும் வணக்கமுள்ளவர்கள். வேதாத்யயனஞ் செய்த வர்கள்; தகப்பனாருடைய உத்தரவின்படி நடப்ப வர்கள். யாகத்தைச் செய்பவர்கள். கர்மாவினால் சுத்தர்கள்; ஜயந்தியின் பிள்ளைகளான அவர்கள் எல்லோரும் யாகம் செய்விப்பது முதலிய ப்ராஹ்மண தர்மத்தை யனுஷ்டித்து வந்தார்கள்.

13–18. பகவான் ரிஷபதேவரென்ற பெயருடன் அவதரித்து தாம் ஸ்வதந்தமற்றவராகவும், தாம் எப்பொழுதும் துக்க ஸம்பந்த மற்றவராயும், ஆனந்த ஸ்வரூபியும், ஈச்வரனுமாக விருந்தும், சம்சாரிபோல கர்மங்களைச் செய்து கொண்டு அந்தந்த காலத்தில் செய்யவேண்டிய தர்மத்தை தாம் அனுஷ்டித்து அதனால் பிறரை அனுஷ்டிக்கச் செய்துகொண்டும்,

சாந்தரும், ப்ராணிகளிடத்தில் ப்ரியமுள்ளவரும், கருணையுள்ளவரும், தர்மம், அர்த்த், காமம், கீர்த்தி, போகம், மோக்ஷம் இவைகளை அனுசரித்து க்ருஹஸ் தாச்ரமத்தை ஜனங்களை சரியாக அனுஷ்டிக்கச் செய்தார். லோகத்தில் பெரியோர்களால் செய்யப் படும் கார்யத்தையே மற்றவர்கள் அனுஷ்டிப்பது வழக்கம். மேலும் அந்த ரிஷபதேவர் ஸகல வேத ரஹஸ்யமான தர்மங்களை தாம் அறிந்திருந்தும், ப்ராஹ்மணர்களைச் கேட்டுக்கொண்டே ஸாமம் முதலிய உபாயங்களால் ராஜ்யபாலனஞ் செய்தார். த்ரவ்யம், தேசம், காலம், வயஸ், ச்ரத்தை, ரித்விக்குகள் பலவகையான தேவதைகளை உத்தேசித்து கர்மங்கள் ஆகிய இவைகளால் விருத்திசெய்யப்பட்ட யஞ்ஞங் களை ஒவ்வொன்றையும் முறைப்படி நூறுதரம் அனுஷ்டித்தார். ரிஷப தேவர் ராஜ்ய பரிபாலனம் செய்யுங்காலத்தில் ஒருவனும் பிறருடைய சொத்தில் கொஞ்சமேனும் ஆசைப்படுகிறதில்லை. ஆகாசத்தில் முளைத்த தாமரை புஷ்பத்தை யாராவது விரும்புவானா? எல்லா ஜனங்களும் அரசனிடத்தில் விசேஷ சிநேகம் வைத்திருந்தார்கள். அந்த ரிஷபதேவர் ஒரு கால் பூமியில் சஞ்சரிக்கும்போது ப்ரஹ்மா வர்த்தமென்ற கேஷத்திரஞ் சென்று, ப்ரஹ்மர்ஷிகள் கூடியிருக்கும் ஸதஸ்ஸில் ப்ரஜைகளெல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கும்போது வணக்கம், ப்ரியம். இவைகளுள்ளவர்களும், ஸாவதானர்களுமான தம்முடைய புத்ரர்களை நோக்கி புத்திபுகட்டும் வ்யாஜமாக பின்வருமாறு சொன்னார்.

அத்தியாயம்–5

மோக்ஷதர்ம நிரூபணம்

"ஓ புத்ரர்களே அமேத்யத்தை புஜிக்கும் பன்றி முதலியவைகளுக்கும், ஸுகதுக்கங்கள் பொதுவாக யிருப்பதால் அந்த விஷயங்களை இந்த தேஹம் அனுபவிக்கத் தக்கதல்ல. சித்தமானது எதனால் சுத்தி அடையுமோ எதனால் அழிவற்ற ப்ரஹ்மஸுகம் உண்டாகிறதோ, அந்த தபஸை அனுஷ்டிக்க வேண்டும். எவர்கள் ஸுகதுக்கங்களில் ஸமபுத்தி யுள்ளவர்களோ, மிகவும் சாந்தர்களோ, கோபமற்றவர் களோ, ஸகல பிராணிகளிடத்திலும் ப்ரீதியுள்ள வர்களோ, ஸாதுக்களோ, அவர்களே மஹான்கள். அந்த மஹான்களை ஸேவிப்பதே முக்திக்கு மார்க்கமாகிறது. ஸ்திரீகளிடத்தில் ஆசையுள்ளவர் களுடைய சேர்க்கையானது ஸம்ஸாரத்திற்குக் காரணமாகிறது. எவர்கள் ஈச்வரனாகிய என்னிடத்தில் ப்ரீதிசெய்வதையே புருஷார்த்தமாக உடையவர்களோ, தேஹத்தைப் போஷிக்கிற விஷயத்தைப் பற்றிய வார்த்தை, ஸ்திரீ, புத்ரன் ஆகிய இவைகளில் ப்ரீதி வைப்பதாகிய ஸம்ஸாரத்தில் ப்ரீதியில்லாதவர்களோ, தேஹத்தை நிர்வஹிக்கும் விஷயத்திலும் ஆசை யில்லாதவர்களோ, அவர்களே மஹான்கள். எப்பொழுது புருஷன், இந்திரியங்களை திருப்தி பண்ணி வைப்பதற்காக கர்மங்களைச் செய்கிறானோ அப்பொழுது, பாபத்தைச் செய்கிறான். முந்திய பாப கர்மத்தாலேயே துக்கத்தைக் கொடுக்கக்கூடிய இந்த சரீரம் உண்டாயிருக்கிறது. அதற்குக் காரணமாகிய

கர்மாவை பின்னும் செய்வது உசிதமல்ல, ஆத்ம தத்துவத்தைத் தெரிந்து கொள்ளுகிற வரையில் அஜ்ஞானத்தால் ஸ்வரூபம் மறைக்கப்பட்டிருக்கிறது. எதுவரையில் கர்மங்களிருக்குமோ அதுவரையில் மனமானது கர்ம ஸ்வபாவமுள்ளதாகயிருக்கும். அதனால் தான் சரீர பந்தம் உண்டாகிறது. அவித்யையினாலே ஆத்மாவானது மறைக்கப்பட்டிருக்கும் பொழுது முன் ஜன்மத்திய கர்மாவானது மனத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளுகிறது. எதுவரையில் ஸ்ரீ வாசுதேவரிடத்தில் ப்ரீதி உண்டாகிறதில்லையோ, அதுவரையில் தேக சம்பந்தம் விடுகிறதில்லை. எப்பொழுது இந்திரிய சேஷ்டையை மித்யை என்று தெரிந்து கொள்ளவில்லையோ, அப்பொழுது ஸ்வரூபஜ்ஞானமற்றதாகி ஸ்தீரீ சுகத்தை ப்ரதானமாயுடைய க்ருஹத்தை அடைந்து பல வகையான தாபங்களை அடைகிறான். புருஷன் ஸ்திரீயுடன் சேர்ந்து மிதுனீபாவத்தை அடைவதால் ஹிருதய க்ரந்தி உண்டாகிறது. அதனால் க்ருஹம், க்ஷேத்ரம், புத்ரன், மித்ரன் ஆகிய இவைகளில் (நான், என்னுடையது) என்ற மோஹம் உண்டாகிறது. கர்மத்தால் த்ருடமான மனதாகிய ஹிருதயக்ரந்தியானது எப்பொழுது குறையுமோ, அப்பொழுது இந்த மிதுனீபாவத்திலிருந்து நிவர்த்தி அடைகிறான். அஹங்காரத்தை ஒழித்து முக்தனாக பரமபதத்தையும் அடைகிறான். மேலும் பரமஹம்ஸனும் குருவுமாகிய என்னை சேவிப்பதாலும் என்னையே நினைத்துக் கொண்டிருப்பதாலும், ஆசையில்லாமல் இருப்பதாலும், சுக துக்கங்களை சஹிப்பதாலும், லோகாந்தரத்திலும் துக்கமிருக்கிறதென்று நினைப்பதாலும், தபஸ்ஸினாலும், காம்ய கர்மங்களை விடுவதாலும், என்னுடைய

கர்மங்களை அனுஷ்டிப்பதாலும், என்னுடைய கதையைச் சொல்வதாலும், என்னையே தேவதையாக நினைத்திருக்கும் சாதுக்களுடைய சங்கத்தாலும், என்னுடைய குணங்களைச் சொல்வதினாலும், விரோத புத்தியில்லாமலிருப்பதாலும் எல்லாவற்றையும் சமமாகப் பார்ப்பதாலும், சமத்தாலும், அத்யாத்ம யோகத்தாலும், ஜனங்களில்லாத இடத்தில் வசிப்பதாலும், ப்ராணன், இந்திரியம், மனது இவைகளை ஜயிப்பதாலும், பரமாத்மாவினிடத்திலிருக்கும் ச்ரத்தையாலும், ப்ரஹ்மசர்யத்தாலும், தவறுதலையாம விருப்பதாலும், வாக்நியமத்தாலும் என்னை ஹிருதயத்தில் பாவனை செய்ததால் ப்ரகாசிக்கும் ஜ்ஞானத்தாலும், விஜ்ஞானத்தாலும், யோகத்தாலும், தைர்யம், ப்ரயத்னம், விவேகம் ஆகிய இவைகளுள்ளவனாகி அஹங்காரமாகிய உபாதியை நிவர்த்தித்துக் கொள்வான். அவித்யையால் ஏற்பட்ட ஹிருதயக்ரந்தியை மேற்சொல்லிய யோகத்தால் நிவர்த்தித்து, சாதனமாகிய யோகத்திலிருந்தும் ஒழிவடைய வேண்டும். என்னுடைய லோகத்தை அடைய விரும்பியவனும், என்னுடைய அனுக்ரஹத்தையே புருஷார்த்தமாய் நினைத்தவனுமாகிய புருஷன், அரசனானாலும், குருவானாலும், புத்ரர்களுக்கும், சிஷ்யர்களுக்கும் இம்மாதிரி புத்தி புகட்ட வேண்டும். கர்ம ஜடர்களான ஜனங்களைக் கர்மத்தையே செய்விக்கக் கூடாது. மனிதன் காம்ய கர்மங்களைச் செய்யும்படி பிறரைச் செய்தால் அவனை சம்ஸார மாகிய கிணற்றில் தள்ளுகிறதாக ஆகிறது. அதனால் என்ன ப்ரயோஜனத்தை அடையப் போகிறான்? எவன் விசேஷ காமனையுள்ளவனாகி விஷயங்களில் ஆசைப்படுகிறானோ, அவன் ச்ரேயஸ்ஸை அடையும்

விஷயத்தில் தவறுதலடைந்தவன், அல்பசுகத்திற்காக ஒருவருக்கொருவர் விரோதமும், முடிவற்ற துக்கமும் நேரிடுகிறது. அதனை அறியவில்லை. இம்மாதிரி கெட்ட புத்தியுள்ளவனும், அவித்யையின் மத்தியிலிருப்ப வனுமான அஜ்ஞனை அதன் விஷயத்தை நன்றாக அறிந்த வித்வானாயிருப்பவன் திரும்பவும் அதையே செய்யும்படிச் சொல்வானா? கெட்ட மார்க்கத்தில் செல்லும் குருடனை அதே மார்க்கமாகச் செல்லும் படி யார்தான் சொல்லுவான்? எவன் சம்ஸாரத்தை அடைந்து கஷ்டப்படும் புருஷனுக்கு பக்தி மார்க்கத்தை உபதேசித்து அந்த பந்தத்தை நிவர்த்திக்கவில்லையோ, அவன் குருவுமல்ல, பந்துவுமல்ல, தகப்பனுமல்ல, தாயுமல்ல, தைவமுமல்ல, பதியுமல்ல, இந்த என்னுடைய சரீரமானது உளஹிக்க முடியாதது, (என்னுடைய இஷ்டப்படி எடுத்துக் கொள்ளப்பட்டது) தர்மத்திற்கு ஆச்ரயமான சுத்த சத்வமே ஹிருதயம், அதர்மத்தை தூரத்தில் தூரத்தி விட்டேன். அதனால் என்னை பெரியோர்கள் ரிஷபனென்று சொல்லு கிறார்கள். நீங்களும் சுத்த ஸத்வ மயமாக அவதரித் தவர்கள், ஆனதால் ஸஹோதரனாகிய பரதனை பிரியத்துடன் அனுஸரியுங்கள். அப்படி செய்வதே என்னை உபாஸித்ததாகும். பிரஜைகளை பரிபாலித் ததாகும். பூதங்களுக்குள் ஸ்தாவரங்கள் மேலானவை, அவைகளைக் காட்டிலும் சேதனமுள்ள ஜங்கமங்கள் மேலானவை. அவைகளிலும் மனிதர்கள் மேலானவர் கள், அவர்களை விட பூதங்கள், பிசாசுகள் முதலிய ப்ரமதகணங்கள் உத்தமர்கள். அவர்களைவிட கந்தர் வர்களும், ஸித்தர்களும், கின்னரர்களும் உயர்ந்தவர்கள். அவர்களைவிட அசுரர்கள் மேலானவர்கள். அவர்களை விட தேவர்கள் மேலானவர்கள். அவர்களிலும்

இந்திரன் முதலியவர்கள் சிறந்தவர்கள் அவர்களைவிட தக்ஷர் முதலிய ப்ரஹ்மபுத்ரர்கள் உயர்ந்தவர்கள். அவர்களில் ருத்ரன் உயர்ந்தவர். அவரைவிட ப்ரஹ்மதேவர் மேலானவர் அந்த ப்ரஹ்மதேவர் என்னையே தைவமாகக் கொண்டவர். எனக்கு ப்ராஹ்மணர்களே தைவம். ஓ ப்ராஹ்மணர்களே! ப்ராஹ்மணர்களுக்கு ஸமமானது ஒன்றுமில்லை. சிரத்தையுடன் ப்ராஹ்மணர்களிடம் மனிதர்களால் ஹோமஞ் செய்யப்பட்டதை எப்படி நான் புஜிக் கிறேனோ, அப்படி அக்னிஹோத்ரத்தில் ஹோமஞ் செய்வதால் திருப்தியடைகிறதில்லை. என்னுடைய புராதனமாகிய வேதமாகிய சரீரமானது ப்ராஹ் மணர்களால் தரிக்கப்பட்டிருக்கிறது. ப்ராஹ்மணர் களிடத்தில் ஸத்வம், சமம், தமம், ஸத்யம், அனுக்ரஹம், பொறுமை, தபஸ், அனுபவம் ஆகிய குணங்களிருக்கின்றன. ஆனதால் அவர்களை விட மேலானது ஒன்றுமில்லை. அனந்தனும், பரனைக் காட்டிலும் பரனும் ஸ்வர்க்கம் மோக்ஷம் ஆகிய இவை களுக்கு அதிபதியுமான என்னாலும் ப்ராஹ்மணர் களுக்கு காரியமொன்றுமில்லை. மற்றவர்களால் அவர்களுக்கென்ன ப்ரயோஜனம்? அவர்கள் என் னிடத்தில் பக்தியுள்ளவர்கள் ஏழைகள். ஓ புத்ரர்களே! ஸகல ப்ராணிகளையும் எனக்கிருப்பிடமாக அடிக்கடி மாத்ஸர்யமில்லாமல் நீங்கள் நினைக்க வேண்டும். அப்படி நினைப்படதே என்னை பூஜிப்பதாகும். மனது, வாக்கு, கண் முதலிய இந்திரியங்கள் ஆகிய இவை களுடைய வ்யாபாரத்தால் என்னை பூஜிப்படதே அவைகளுக்குப் பயன். என்னை ஆராதிக்கமலிருந்தால் காவ பாசத்திலிருந்து விடுதலையடைய முடியாது என்று உபதேசித்தார்.

28–30 ஸ்வபாவத்தில் நல்ல ஆசாரமுள்ளவர் களான புத்ரர்களுக்குப் புத்தி சொல்லும் வ்யாஜமாக, லோகத்திற்கு தர்மத்தை யுபதேசித்த பரமஸுஹிருத் தாகிய ரிஷபதேவர் இந்திரியங்களை அடக்கினவர் களும் காம்ய கர்மங்களை விட்டவர்களுமான மஹரிஷிகளுக்கு பக்தி, ஜ்ஞானம், வைராக்யம் ஆகிய இவைகளுள்ள பரமஹம்ஸ தர்மத்தையுபதேசித்தும், தம்முடைய புத்ரர்களுக்குள் மூத்தவரும் பரமபாகவதரும் பக்தர்களிடத்தில் ப்ரீதியுள்ளவருமான பரதருக்குப் பட்டாபிஷேகஞ் செய்தும் சரீர ஸம்ரக்ஷணைக்கு மாத்ரமுபயோகமான வ்யாபாரங்களுள்ளவராகி, பயித்தியங் கொண்டவன்போல் ஆகாயத்தை வஸ்த்ரமாக வைத்துக் கொண்டவராகி தலையை அவிழ்த்துக் கொண்டு ஆத்மாவிடத்தில் ஆஹவனீயாக்னியை ஆரோபித்துக் கொண்டு ப்ரஹ்மாவர்த்தத்திலிருந்து வெளியில் சென்றார். மேலுமவர் பிறர் தம்மிடத்தில் பேசினாலும் ஜனங்களுடைய நடுவில் ஜடன்போலும் குருடன்போலும், செவிடன்போலும், ஊமைபோலும், பிசாசம் போலும், பயித்யங் கொண்டவன் போலும் அவதூதவேஷந் தரித்து மௌன வ்ரதமுள்ளவராக விருந்தார். பட்டணங்கள், கிராமங்கள், ரத்னம் விளையும் பூமிகள் பயிரிடுவோர்கள் வசிக்குமிடம், புஷ்பதோட்டம் ஸைன்யங்களிருக்குமிடம், பசுக்களி ருக்குமிடம், இடையர்களிருக்குமிடம், யாத்ரைக்காரர் களுடைய கூட்டம் ரிஷிகளுடைய ஆச்ரமம் முதலிய விடங்களில் இவரை துஷ்டர்கள் அதட்டினார்கள். அடித்தார்கள். மூத்திரத்தைப் பெய்தார்கள். எச்சில் துப்பினார்கள். கல்லை எறிந்தார்கள். சாணத் தூள் இவைகளை எறிந்தார்கள். அசுத்தமான கெட்டவார்த்தை களாலும் ஹிம்ஸித்தார்கள். காட்டு யானையானது

காட்டுக் கொசுக்களால் செய்யப்படும் உபத்ரவத்தை எப்படி அறியாததோ அப்படி அந்த ரிஷபதேவர் அந்த ஹிம்ஸைகளை லக்ஷ்யஞ் செய்யாமலேயே பூமியில் தனியே ஸஞ்சரித்தார். மித்யாபூதமான தேஹம்,ஸத்போல் தோன்றுகிறது. அதில் நான், என்னுடையது என்ற அபிமானமற்று ஸ்வப்னத் திலிருப்பதால் அவருடைய மனது விகாரத்தை அடைகிறதில்லை.

31–35 பின்னுமவருடைய கைகள், கால்கள், மார்பு, விஸ்தாரமான தோள்கள், கழுத்து, முகம் அவயங்களுடைய இணைப்பு ஆகிய இவைகள் மிகவும் அழகாகவிருந்தன. இயற்கையில் புன்சிரிப்புள்ள முகமுள்ளவர்; புதிதாக மலர்ந்த தாமரை மலரின் இதழ் போன்றவைகளும், தாபத்தைப் போக்கக்கூடிய கருவிழிகள் உள்ளவைகளுமான கண்களால் பிரகாசிப் பவர். சமமானவைகளும் அழகு பொருந்தியவை களுமான கன்னங்கள், காதுகள், கழுத்துகள், மூக்குகள் ஆகிய இவைகளுள்ளவர். புன்சிரிப்புள்ள முகத்தால் பட்டணத்திய ஸ்திரீகளுடைய மனத்தில் மன்மதனை யுண்டு பண்ணுகிறார்; பின்புறத்தில் பொன்னிற முள்ள ஜடைதொங்குகிறது, அவதூதராக விருப்பதால் அவருடைய சரீரம் அழுக்கடைந்திருந்தது. அதனால் அவர் பிசாசம் முதலிய கிரஹம் பிடித்தவர் போல் காணப்பட்டார். மேலும் அந்த ரிஷபதேவர் இவ்வுலகத்தை யோகத்திற்கு விரோதியென்றும், அதற்குப் பதில்செய்வது வெறுக்கக்கூடிய தென்றும் நினைத்திருந்தார். பின்னுமவர் அஜகரமென்ற வ்ரதத்தை அடைந்து படுத்துக்கொண்டே புஜிக்கிறார்; குடிக்கிறார்; கடித்து புஜிக்கிறார்; மூத்திரம்

பெய்கிறார்; அமேத்யத்தை விடுகிறார். அமேத்யத் தாலேயே அவருடைய தேஹம் முழுவதும் பூசப் பட்டிருந்தது. அவருடைய அந்த அமேத்யவாசனை யால் நல்வாஸனையுள்ள காற்றானது பத்துயோஜனை தூரம் நான்கு திக்குகளையும் வாஸிக்கச் செய்தது, ஒரே இடத்திலிருந்து ப்ராரப்த கர்மத்தை அனுபவிப்பதே ஆஜகரவ்ரதமெனப்படுகிறது. ஆஜகரமென்றால் மலைப்பாம்பு என்று அர்த்தம்) பின்னுமவர் பசுக்கள், மான், காக்கை ஆகிய இவைகளுடைய நடைபோல் நின்றுகொண்டும், உட்கார்ந்து கொண்டும், படுத்துக் கொண்டும், அவைகளுடைய நடைபோன்ற நடை யுள்ளராகி குடித்தார்; மூத்திரம் பெய்தார். இப்படி பலவகையான யோகங்களை அனுஷ்டித்து கைவல் யத்திற்கு அதிபதியான ரிஷபதேவர் எப்பொழுதும் பரமானந்தத்தை அனுபவித்து ஸகல ப்ராணிகளுக்கும் ஆத்மாவாகிய ஸ்ரீ வாஸுதேவரிடம் அபேத பாவனை செய்திருந்தார். அவருக்கு உபாதி சம்பந்தம் கொஞ்சமேனுமில்லை. அவருக்கு தைவச்செயலாக ஸகல ஐச்வர்யங்களும் கிடைத்தன. அவைகளாவன ஆகாயத்தில் சஞ்சரிப்பது, மனம்போல் வேகமாகச் செல்வது, மறைந்து கொள்ளுகிறது, பிறருடைய சரீரத்தில் பிரவேசிப்பது, வெகு தூரத்திலிருப்பதைப் பார்ப்பது, வெகு தூரத்தில் நடப்பதைக் கேட்பது முதலியவை. அவைகளில் ரிஷப தேவர் சந்தோஷப்படவில்லை.

Released by Maran's Dog, Toronto , Canada

அத்தியாயம்–6

தேஹத்தை விடுவதின் முறை

அதனைக்கேட்ட பரீக்ஷித்து சுக மஹாமுனியை நோக்கி "ஓ பகவன்! ஆத்மாராமர்கள், யோகமாகிய அக்னியில் கர்மங்களாகிய விதைகளை வறுத்து முளைக்கச் சக்தியற்றவைகளாகச் செய்து தைவச் செயலாக கிடைத்த ஐசுவர்யங்களும் துக்கத்தைக் கொடுக்கக் கூடியவைகள் என்று அவைகளை விரும்பமாட்டார்கள்" என்றார்.

2–5. அதனைக்கேட்டச் சுகர், ஓ மஹாராஜ! நீர் சொன்னது உண்மையே சிலர் சஞ்சலமாகிய மனத்தை நம்புகிறதில்லை. மிருகங்கள் வேடனை நம்புகிறதில்லையல்லவா? அப்படியே பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. வ்யபிசாரியான ஸ்திரீ தன்னிடத்தில் பார்தா ப்ரீதியுள்ளவனாக விருப்பதைப் பார்த்து ஜாரபுருஷனை வரவழைத்து அவனைக் கொண்டு பர்த்தாவைக் கொல்வது போல், மனதானது புருஷனை வசப்படுத்திக்கொண்டு காமன் அவர்களுடைய தோழர்களான மன்மதன், லோபன், சோகம், மோஹம், பயம் முதலியவைகளுக்கு இடம் கொடுத்து யோகியை யோகத்திலிருந்து நழுவச் செய்கிறது. ஆனதால் மனது சஞ்சல ஸ்வாபவமுள்ளதாகையால் ஒருவிடத்தி லும் ஆசைவைக்கக்கூடாது. ஆசை வைப்பதால் அனேக யோகிகள் வெகுகாலமாக சம்பாதித்த தபஸ்ஸை இழந்தார்கள். ஆனதால் விவேகியாயிருப்பவன் கர்ம பந்தத்தைக் கொடுக்கும் மனத்தை தனக்கு வசப்பட்ட தென்று நினைப்பானா?

Released by Maran's Dog, Toronto , Canada

6–20. பிறகு அந்த ரிஷபதேவர் ஸகலலோக பாவர்களுக்கு அலங்கார பூதராகயிருந்தும் ஜடன் போல அவதூதவேஷம், பாஷை, நடை ஆகிய இவைகளால் பகவத் ப்ரபாவத்தை வெளியிடாதவராக தேஹத்தைவிடும் முறையை யோகிகளுக்குத் தெரியப் படுத்திக் கொண்டு தன்னுடைய சரீராபிமானத்தை விட்டுவிட விரும்பி பரமாத்மாவிடத்தில் தன்னுடைய ஆத்மாவை அபேதமாக மறைவன்னியில் சேர்த்து, விஷயவாசனைகளை யொழித்து, தேஹாபிமானத்தை விட்டு விட்டார். ஆனாலும் அவருடைய தேஹமானது யோகமாயையின் வாஸனையால் அபிமானாபாஸத்தைக் கொண்டு லோகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தது. ஒருகால் கொங்கணம், வங்கம், படகுடகம், தக்ஷணகர்நாடகம் முதலிய தேசங்களுக்கு தைவச் செயலாய் வந்தார். அவ்விடத்தில் குடகமென்ற மலையின் சமீபத்தில் கற்களை வாயில் கவ்விக்கொண்டு அவிழ்ந்த தலைமயிர்களுடன் வஸ்த்ரமில்லாதவராக பயித்தியங் கொண்டவன் போல சஞ்சரித்தார். பிறகு அந்தக்காட்டில் காற்றினால் மூங்கில்கள் ஒன்றோ டொன்று உராய்ந்து அதிலிருந்து காட்டுத்தீ உண்டாயிற்று. அது க்ரமமாக விருத்தியடைந்து, அந்த ரிஷப தேவருடைய சரீரத்துடன் அந்தக் காட்டை எரித்தது. அவருடைய சரீதத்தை கேட்ட கொங்கணம் வங்கம் இவைகளுக்கு அரசனாகிய அர்கத் என்பவர் ரிஷப தேவருடைய சரிதத்தை அப்யஸித்து 'கலியில் அதர்மம் விருத்தி அடையும்பொழுது தைவத்தால் மோஹமடைந்து தர்மமார்க்கத்தை விட்டு கெட்டதான பாஷண்டமார்க்கத்தில் மனுஷ்யர்களை ப்ரவர்த்திக்கச் செய்யப்போகிறான். அதனால் கலியில் மனுஷ்யர்களுக்குள் அதர்மர்களாயிருப்பவர்கள் தேவமாயையினால்

Released by Maran's Dog, Toronto , Canada

புத்திமயக்கமடைந்து, விதி, ஸௌசம், நல் நடத்தை இவைகளைவிட்டு தேவர்களை அலக்ஷ்யம் பண்ணுகிறதாகிய கெட்டவ்ரதங்களை தன்னுடைய இஷ்டப்படி க்ரஹித்துக்கொண்டும் ஸ்நானம் பண்ணாமலிருப்பது, ஆசமனஞ் செய்யாமலிருப்பது, அசுத்தனாக இருப்பது, தலைமயிரை கத்திரித்துக் கொள்வது முதலிய கெட்ட கார்யங்களைச் செய்து கொண்டும் அதர்மத்தை விருத்தி பண்ணும் கலியினால் மாறின புத்தியுள்ளவர்களாகி வேதம் ப்ராஹ்மணர்கள், யாகம், ஸ்ரீ மஹா விஷ்ணு மற்றப் பிராணிகள் இவைகளை பெரும்பாலும் நிந்திப்பார்கள். அதே மார்க்கமானது அந்த பரம்பரையாக அவர் களுடைய இஷ்டப்படி லோகத்தில் பரவி, அதில் ஜனங்கள் நம்பிக்கை அடைந்து நரகத்தை அடை கிறார்கள். இந்த ரிஷபதேவருடைய அவதாரமானது ரஜோகுண முள்ளவர்களுக்கு மோக்ஷமார்க்கத்தை உபதேசிப்பதற்காகவே ஏற்பட்டது. அதற்கு தகுதியான ச்லோகங்களை பெரியோர்கள் கானஞ் செய்கிறார்கள் அவையாவன – ஏழு சமுத்திரங்களுக்குட்பட்ட பூமியின் த்வீபங்களிலும், வர்ஷங்களிலும் இது மிகவும் புண்யகரமானது. அவ்விடத்திலிருக்கும் ஜனங்கள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் மங்களகரமான சரிதங்களையும், அவதாரங்களையும் கானஞ் செய்கிறார்கள். இந்த வம்சமானது கீர்த்தியால் சுத்தமானது. அந்த வம்சத்தில் ப்ரியவ்ரதர் என்பவர் இருந்தார். மேலும் புராண புருஷராகிய ஸ்ரீ மஹா விஷ்ணு அந்த பட்சத்தில் அவதரித்து மோக்ஷத்திற்குக் காரணமாகிய தர்மத்தை அனுஷ்டித்து வந்தார். இந்த ரிஷபதேவரால் அவஸ்துவென்று (வஸ்துவல்லவென்று) தள்ளப்பட்ட ஸித்திகளை யோகியானவன் ஆசைப்படுகிறதுமன்றி

Released by Maran's Dog, Toronto , Canada

அதற்காக ப்ரயத்னமும் செய்கிறான். ஆகையால் உற்பத்தியற்றவரான அந்த பகவானுடைய திக்கை அனுசரிப்பதற்குக்கூட எந்த யோகியால் முடியும்? ஸகல வேதங்களுக்கும், லோகங்களுக்கும், தேவர்களுக்கும், ப்ராஹ்மணர்களுக்கும், பசுக்களும் பரமகுருவாகிய ரிஷபதேவருடைய இந்த சரிதமானது ஸகல பாபத்தையும் போக்கக்கூடியது மிகுந்த க்ஷேமத்தைக் கொடுக்க கூடியது; இதை ச்ரத்தையுடன் எவன் ஒவ்வொரு நாளும் கேட்கிறானோ, பிறருக்குச் சொல்லு கிறானோ, அவனுக்கு பகவானாகிய வாஸுதேவரிடம் நிரந்தரமான பக்தியுண்டாகிறது. கவிகள் அந்த பக்தியில் பலவகையான பாபங்களுள்ள ஸம்ஸார தாபத்தால் பீடிக்கப்படும் ஆத்மாவை ஸ்நானஞ் செய்வித்து மோக்ஷமென்ற புருஷார்த்தங் கிடைத்தும் அதனை ஆதரிக்கிறார்களில்லை. ஏனென்றால் அவர்கள் எல்லாவற்றையும் பகவானுடையதென்றே நினைத்த வர்கள். ஓ பரீக்ஷித்தே! யதுகுலத்திற்கும் உங்களுக்கும் பதியும், குருவும், தைவமும், ப்ரியரும் குலத்திற்கு பதியுமான பகவான் உங்களுக்கு வேலைக்காரருமாக விருக்கட்டும். ஆனாலும் அவர் தம்மை பூஜிப்பவர் களுக்கு முக்தியைக் கொடுக்கிறார். பக்தியோகத்தை ஒருபொழுதும் கொடுக்கிறதில்லை. (பக்தியோகம் மேலானதென்று கருத்து) எப்பொழுதும் அனுபவிக்கப் பட்ட ஆத்ம ஸ்வரூபத்தால் ஆசைகளற்றவருமான எந்தப் பகவான் ச்ரேயஸ்ஸை அடையவேண்டிய விஷயத்தில் தவறுகளடைந்த ஜனங்களுக்கு மிக்கக் கருணையால் நிர்பயமான ஆத்மாவாகிய லோகத்தை யுபதேசித்தாரோ, அந்த ரிஷப தேவருக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்.

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada



Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

பாகம் –1

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்கந்தம் 1 அத்தியாயம் 1 முதல்
ஸ்கந்தம் 3 அத்தியாயம் 19 வரை

Released by Maran's Dog, Toronto , Canada

இஞ்சிக்கொல்லை
R. சிவராம சாஸ்திரிகள்
அவர்களால் 1908ல் மொழி
பெயர்க்கப்பட்டது.

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ராம நாம வங்கியின் ப்ராசாரப் பிரதாப் பிரிவு
ராம மந்திரம் –2, விளாங்கம் தெரு,
சென்னை – 600 033. ☎: 24893736

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்
தமிழ் வசனம்

TITLE	:	SRIMAD BHAGAVATHAM, TAMIL VACHANAM
AUTHOR	:	INZIKOLLAI R. SIVARAMA SASTRIGAL WRITTEN IN 1908
SIZE	:	CROWN OCTAVE
EXTENT	:	2736 PAGES CONSISTING OF SEVEN VOLUMES
PRICE	:	RS.600/ SET
FIRST EDITION	:	1996
SECOND EDITION	:	2004
THIRD EDITION	:	2007

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பகவன் நாம போதேந்திர
ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின்
பாத கமலங்களிலும்

பரஞ்ஜர் மஹாத்மா
ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள்
அவர்களின்
பாத கமலங்களிலும்

சமர்ப்பணம்

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்

புத்தக விலைப்பட்டியல்...

அரியதும், பழையதுமான க்ரந்தங்களையும், நாமறிந்தாராத விஷயங்களையும் வெளியிடும் பணியில்...

ரூ.	
1500	ஸ்ரீமத் பாகவதம் ப்ரதி பத அர்த்தம்
700	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் மூலம் தமிழில் பெரிய எழுத்தில்
600	ஸ்ரீமத் பாகவதம் வசனம் 7 பாகம்
550	ஸ்ரீமத் பாகவதம் மூலம் தமிழில் பெரிய எழுத்தில்
450	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் மூலம் தமிழில்
350	ஸ்ரீ துளஸீ ராமாயணம் மூலமும் வசனமும்
300	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் வசனம்
300	ஞானேஸ்வரி
250	ஸ்ரீமத் பாகவதம் மூலம் தமிழில்
200	நாராயணீயம் ப்ரதிபத அர்த்தம்
200	ஸ்ரீகிருஷ்ண சைதன்யர்
200	கர்க ஸம்ஹிதை
200	நந்த நந்தன்
150	உஜ்ஜ்வல நீலமணி
140	பார்த்தஸாரதி
100	த்வாரிகாதீசன்
100	பகவான் வாசுதேவன்
100	திருப்பாவை உபன்யாஸம்
100	ஸ்ரீபகவன் நாம ரஸோதயம்
100	பக்த துகாராம் திவ்யசரித்திரம்
100	ஸ்ரீ மத் பாகவத கதாம்ருதம்
60	கீதகோவிந்தம் ப்ரதிபத அர்த்தம்
60	ஸ்ரீ ஞானேஸ்வர் திவ்ய சரித்திரம்
60	ஸ்துதி மணிகள்
60	ஸ்ரீமத் பகவத் கீதை ப்ரதி பத அர்த்தம்
60	ராதே/பருந்தாவனராதே!!
60	பாதுகா ஸஹஸ்ரம் -பாசுரங்கள்
60	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்-பாசுரங்கள்
50	நாராயணீயம் -பாசுரங்கள்
50	ஹரி ஸங்கீர்த்தன மாலா
50	தர்ம சாஸ்திரம்
50	ஸ்ரீமத் பாகவத ஸங்க்ரஹம்
40	கோவிந்தபுரம் பஜன பத்ததி
40	தக்ஷிண ஸம்ப்ரதாய பஜன மாலா
40	ஸ்ரீமத் ராமாயணம் ஸங்க்ரஹம்
40	ஏகநாதர் திவ்ய சரித்திரம்
40	ஸ்ரீ ருக்மிணி கல்யாணம்-பாசுரங்கள்
35	தக்ஷிண ஸம்ப்ரதாய கல்யாண மாலா
35	அபங்க முத்தாரம்
35	நாம ஸங்கீர்த்தனாவளி
30	வ்ரஜ ரஸம்
30	ப்ரேம சாம்ராஜ்யம்
30	பக்தி
	பஞ்சகீதை
	ஸ்ரீ க்ருஷ்ண கர்ணாம்ருத ரஸாயனம்
	ஸ்ரீ க்ருஷ்ண கீதாம்ருதம்
	சிவானந்த லஹரீ - ப்ரதிபத அர்த்தம்
	ஸௌந்தர்ய லஹரீ - ப்ரதிபத அர்த்தம்
	ஐயாவாளின் நாம அனுபவங்கள்
	ஸ்ரீ சுந்தர காண்டம்



25	ஸ்ரீ ராம மாதுரீ
25	பக்த ரத்தினங்கள்
25	பாண்டுரங்க லீலைகள் -பாசுரங்கள்
25	கிருஷ்ண கர்ணாம்ருதம் -பாசுரங்கள்
25	தியாகராஜர் அனுபவங்கள்
25	ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் கீர்த்தனைகள்
25	ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம்
25	பக்தை மீரா
25	பக்த ஸாம்ராஜ்யம்
25	நாம ஸாம்ராஜ்யம்
25	ஸ்ரீ லலிதா பஜனை கீர்த்தனைகள்
25	மனாசே ஸ்லோக
25	பகவன் நாம ரஸாயனம்
20	ஸ்ரீ பாத ஸப்ததி
20	ஸ்ரீ யாக்ஞவல்கியர் திவ்ய சரித்திரம்
20	ஸ்ரீ துளஸி தாஸர் திவ்ய சரித்திரம்
20	ஸௌந்தர்யலஹரி - தமிழ் பாடல்கள்
15	ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம்
15	குருவாயூரப்பன் அந்தாதி-பாசுரங்கள்
15	தயாசதகம்-பாசுரங்கள்
15	ஸம்க்ஷேப ராமாயணம் -பாசுரங்கள்
15	ஸ்ரீ ஆண்டாள் கல்யாணம்
15	ஸ்ரீ ராதா மாதவ - பஜனை பத்ததி
15	நவராத்திரி கீர்த்தனைகள்
15	பக்தி ஸந்தேஹ த்வாந்த பாஸ்கரம்
15	ஸ்ரீ ப்ரும்மேந்திராள் திவ்ய சரித்திரம்
15	நந்தன் சரித்திரக் கீர்த்தனைகள்
15	ஸ்ரீ ப்ரும்மேந்திராள் கீர்த்தனைகள்
15	ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் திவ்ய சரித்திரம்
15	திருமாலை
15	**Divine History**
	(Hindi, English, Malayalam, Telugu, Tamil)
	Sri Bodendral
	Sri Sridhara Ayyaval
	Sri Sadguru Swamigal
10	கீத கோவிந்தம்
10	ஹரி பாட்
10	ஸ்ரீ ஸமர்த்த ராமதாஸர் திவ்ய சரித்திரம்
7	திருவரங்கன் திருவந்தாதி- பாசுரங்கள்
7	பரமார்த்த ஸ்துதி- பாசுரங்கள்
7	நாமாயணம்
6	ஸ்ரீ போதேந்திராள் கீர்த்தனைகள்
6	ஸ்ரீ போதேந்திராள் நாம வந்தனம்
6	நாமப்ரபாவம்
5	ஸ்ரீபோதேந்திராள் அஷ்டோத்திரம்
5	ஸ்ரீ ராம நாம மஹிமை
5	அபங்கப்ரவாஹம்
4	ஸ்ருதிகளிலிருந்து ராமநாமத்தின் பெருமை
3	புருஷ ஸூக்தம்
3	ஸ்ரீ ஸூக்தம்

Released by Maran's Dog, Toronto , Canada

100 Nos விநியோகவெளியீடு

75	ஸ்ரீ ராம நாமாவளி
75	ஸ்ரீ நவீன ராமாயணம்
75	ஸாதுக்கள் மஹிமை
75	ப்ராத ஸ்மரண ஸ்தோத்திரம்
100	நெய்க்குடத்தை
100	பாசுரப்படி ராமாயணம்
100	ஸ்ரீ ஸப்த ரிஷி ராமாயணம்
100	ஸ்ரீ சந்திர ஸேகராஷ்டகம்
100	ஸ்ரீபோதேந்திராள்சரித்திரசுருக்கம்

Sanskrit Prasadhams

தேவீ நாமஸ்தோத்திர மஞ்ஜரீ
ஸ்ரீ வாஞ்சிய க்ஷேத்ர மாஹாத்ம்யம்
ஸ்ரீ நடராஜ நாம மஞ்ஜரீ
ஸ்ரீ நடராஜ ஸ்தவ மஞ்ஜரீ
ஸ்ரீ பாலா ஸபர்யா
ஸ்ரீசிவ நாம மஞ்ஜரீ
ஸ்துதி த்ரயீ
ஸ்ரீ மீனாக்ஷீ ஸ்தோத்ரமஞ்ஜரீ
ஸ்ரீஸ்கந்த ஸ்தவ மஞ்ஜரீ
ஸ்ரீதத்தாத்ரேய ஸ்துதிமஞ்ஜரீ
ஸ்ரீமத்த்யார்ஜுனக்ஷேத்ர மாஹாத்ம்யம்
ஸ்ரீவிஷ்ணுஸ்துதிமஞ்ஜரீ
ஆத்ட நாதஸ்துதிமஞ்ஜரீ
ஸ்ரீபகவத்ஸ்துதிமஞ்ஜரீ
அனுமன் நாற்பது
கோபால விம்ஸதி
ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்
ஸ்ரீமத் ராமாயணரஹஸ்யம்
கலியுக தர்ம சாஸ்திரம்
பூஜா கல்பம்

Released by Maran's Dog, Toronto , Canada

கோஸம்ரக்ஷணம்
தினசரிராமாயணம்
தினசரிபாகவதம்
ஆசாரமும் ஆஹாரமும்
பூஜா ராமாயணம்
ஸ்ரீ வாசுதேவ ப்ரம்மம் திவ்ய சரித்திரம்
மன அமைதி வேண்டுமா?
ஜய கல்யாண ஸ்ரீக்தி லஹரீ
நாமவைபவம்
நாமச் சிறப்பு
நாமவிசேஷம்
ஸ்ரீபகவன் நாம மகிமை
ஆயிரம் நாமக் குறிப்புகள்
போதேந்த்ர அமுதம்
ஸ்ரீ ஆலங்குடி சுவாமிகள் திவ்ய சரித்திரம்
ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு ஸஹஸ்ர நாமம்
ஸ்ரீ த்யாகப்ரும்ம அஷ்டோத்திரம்
100 / 100
ஸ்ரீ கீதா ஸாரம் -பாசுரங்கள்
நாரத பக்திசூத்ரம்
நித்ய ஸ்லோக பத்ததி

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவத ரகசியம்

1000 பக்கங்கள்

இந்த நூல் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ ராம நாம வங்கியின்
நாம உதவிகளுக்கு
நாமத்தை ஆஸ்ரயிப்பவர்களுக்கு
ப்ரஸாதமாக வழங்கப்படுகிறது.

ஸ்ரீமத் பாகவதம்

மூலம் தமிழில்

904
பக்கங்கள்
விலை
ரூ.250/-

ஸ்ரீமத் பாகவத விஷயம்

கர்க ஸம்ஹிதை
நந்த நந்தன்
பார்த்தஸாரதி
பகவான் வாசுதேவன்
த்வாரிகாதீசன்
ஸ்துதி மணிகள்
ஸ்ரீமத் பாகவத ஸங்க்ரஹம்
தினசரி பாகவதம்
ஸ்ரீமத் பாகவத கதாம்ருதம்

ஸ்ரீமத் பாகவதம்

பெரிய எழுத்தில்
மூலம் தமிழில்

1064 பக்கங்கள்
விலை ரூ. 550/-

ஸ்ரீமத் பாகவதம்
ப்ரதி பத அர்த்தம்

மூல ஸ்லோகங்கள் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும், பதப்பிரிப்பும்
அர்த்தமும் தமிழில்,
7 பாகங்கள் - 6224பக்கங்கள்
விலை ரூ. 1500/

ஸ்ரீ பகவன் நாம்மா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

ஸ்ரீமத் ராமாயண விஷயம்

ராமாயண ஸங்க்ரஹம்
(SANSKRIT)
தினசரி ராமாயணம்
சுந்தரகாண்டம்

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

மூலம் தமிழில்

899 பக்கங்கள்
விலை ரூ. 450/-

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

தமிழ் வசனம்

7 பாகங்கள்
1322 பக்கங்கள்
விலை ரூ. 300/

ஸ்ரீமத் ராமாயண ரஹஸ்யம்

616 பக்கங்கள்

இந்த நூல் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ ராம நாம வங்கியின்
நாம உதவிகளுக்கு
நாமத்தை
ஆஸ்ரயிப்பவர்களுக்கு
ப்ரஸாதமாக வழங்கப்படுகிறது.

ஸ்ரீ துளஸீ ராமாயணம்

தமிழில் மூலமும் உரையும்

விலை ரூ. 350/-

764 பக்கங்கள்
8 வண்ணப்படங்கள் அடங்கியது

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

நந்தலாவின் எழுத்துக்களில்

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமஹாபாரதம்

ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்

இராமாயண ரஹஸ்யம்

பகவான் வாசுதேவன்

நந்த நந்தன்

பார்த்தஸாரதி

த்வாரிகாதீசன்

கர்கஸம்ஹிதை

உஜ்வல நீலமணி

ஸ்ரீ ஞானேஸ்வர்

பக்த துகாராம்

ஏகநாதர்

ராதே!பருந்தாவன ராதே!!

வ்ரஜ ரஸம்

ப்ரேம சாம்ராஜ்யம்

பக்தி

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

முன்னுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் கலிகாலத்தில் பிறக்கப் போகும் ஜனங்களின் துக்கம், மனக்கவலை, அறியாமை இவற்றைப் போக்கி, அவர்களுக்கு பரம அனுக்ரஹம் செய்யவே, தன் திவ்ய லீலை களை விவரிக்கும் ஸ்ரீ பாகவதத்தின் மூலம், ஸாதுக் களின் காதுக்கு அம்ருதமாயுள்ள தன் புகழை உலகில் பரவச் செய்தார். இந்த அம்ருதத்தை காதுகள் ஆகிய பாத்திரத்தில் வாங்கி அனுபவிக்கும் மனிதன், பக்திக்கும் முக்திக்கும் இடையூறாக இருக்கும் கர்மவாஸனையாகின்ற பந்தம் நீங்கப்பெற்று அவற்றை அடைகிறான் என்று ஸ்ரீபாகவதம் 9வது ஸ்கந்தம் 24வது அத்யாயம் 61,62 ஸ்லோகங்களில் கூறப்பட்டிருக்கிறது. மேலும், ஸ்ரீபாகவதத்தில் கலியில் கலுஷிதமான ஜீவன்களுக்கு ஏற்ற பகவன் நாம கீர்த்தனம், பகவானிடம் உறவு கொண்டுள்ள ஸாதுக்களின் ஸங்கம், க்ருஷ்ண பக்தியை வளர்க்கும் கதாச்ரவணம் இவற்றின் மஹிமையே கூறப்பட்டு இருக்கிறது.

வியாசர் ஸகல ஸாஸ்திரங்களையும் வெளியிட்டும், மன நிம்மதியின்றி எல்லா ஸாஸ்த்ரங்களின் ஸாரமாக பகவத் குண கீர்த்தன பிரதானமான ஸ்ரீபாகவதத்தை வெளியிட்டார். அதன் பின்னரே அவர் நிம்மதியடைந்தார். இதில் வேதோபனிஷத் ஸாரமே நிரம்பியுள்ளது.

Released by Maran's Dog, Toronto , Canada

பாகவதமே பகவான். பகவானே பாகவதம். ஸ்ரீக்ருஷ்ணன் தன் அவதார கார்யம் முடிந்தவுடன் பாகவதத்திலே நுழைந்து விட்டான். பாகவதத்தில் நுழைந்த பகவானை அதை படிப்பதாலேயே பார்க்க முடியும்.

இந்த பாகவதாம்ருதம் யாவருக்கும் எளிதில் கிடைக்கும்படி ஸ்ரீ பாகவத்தின் பாவ அர்த்ததுடன் கூடிய இந்த தமிழாக்கத்தை வெளியிட்டிருக் கிறோம். யாவரும் படித்து அனுபவித்து ஸ்ரீகிருஷ்ண க்ருபைக்கு பாத்திரர்கள் ஆகும்படி பிரார்த்திக் கிறோம்.

நாவுண்டு நீயுண்டு நாமம் தரித்து ஒத
பாவுண்டு தெஞ்சே பயமுண்டோ
பூவுண்டு வண்டு உறங்கும் சோலை மதில் அரங்கத்தே
உலகையுண்டு உறங்குவான் ஒருவனுண்டு.

இங்ஙணம்

"ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்"

ஸ்ரீமத் பாகவதம்-தமிழ் வசனம்

பாகம்–1

பொருளடக்கம்

		பக்கம்
முன்னுரை		1
	ஸ்கந்தம் –1	
1.	சௌனக ப்ரச்னம்	67
2.	ஸூதர் ப்ரத்யுத்தரம்	84
3.	பகவதவதாரங்கள்	94
4.	வியாசர் கவலை அடைந்தது	105
5.	வியாசருக்கு நாரதர் உபதேசம்	111
6.	நாரதருடைய முன் ஜன்மம்	123
7.	அர்ஜுனன் அச்வஸ்த்தாமாவை சிக்ஷித்தது	131
8.	பகவானை குந்தி ஸ்தோத்திரம் செய்தது	144
9.	பீஷ்மர் தர்மம் உரைத்தது	154
10.	ஸ்ரீகிருஷ்ணன் துவாரகை சென்றது	165
11.	துவாரகா வாசிகள் பகவானை உபசரித்தது	172
12.	பரீக்ஷித்தின் உற்பத்தி	181
13.	த்ருதராஷ்ட்ரர் வெளியில் சென்றது	188
14.	தர்மபுத்திரருக்கு நேர்ந்த அபசகுனங்கள்	199
15.	தர்மபுத்திரர் பரலோகம் சென்றது	206
16.	பரீக்ஷித் தர்மத்தைத் கண்டது	216
17.	பரீக்ஷித் மஹாராஜன் கலியை நிக்ரஹித்தது	223
18.	பரீக்ஷித்துக்கு நேர்ந்த ப்ராஹ்மண சாபம்	230
19.	கங்கை கரைக்கு சுகர் வந்தது	238

ஸ்கந்தம் –2

		பக்கம்
1.	விராட்புருஷனுடைய அவயவங்கள்	245
2.	பகவானிடத்தில் மனத்தை செலுத்தும் வகை	256
3.	பகவத் குணங்களின் மேன்மை	269
4.	பரீக்ஷித் ஜகத் சிருஷ்டியைப் பற்றி கேட்டது	274
5.	ஜகத்சிருஷ்டி	279
6.	விராட் புருஷனுடைய விபூதிகள்	288
7.	பகவானுடைய லீலாவதாரம்	297
8.	பரீக்ஷித்தின் கேள்வி	313
9.	சுகருடைய மறுமொழி	318
10.	தத்துவங்களின் உற்பத்தி உரைத்தது	328

ஸ்கந்தம்–3

1.	விதுரருக்கும் உத்தவருக்கும் சம்வாதம்	338
2.	உத்தவர் ஸ்ரீ கிருஷ்ண சரிதத்தை வர்ணித்தது	348
3.	ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதங்கள்.	355
4.	விதுரர் மைத்ரேயரைச் சந்தித்தது	360
5.	மைத்ரேயருக்கும் விதுரருக்கும் ஸம்வாதம்	366
6.	விராட் ஸிருஷ்டி	375
7.	விதுரருடைய பிரச்னங்கள்	381
8.	ப்ரஹ்மதேவருடைய உற்பத்தி	388
9.	ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ப்ரஹ்மதேவர் ஸ்தோத்திரஞ்	395
10.	பத்து வகையான சர்க்கங்கள்	405
11.	காலத்தின் ஸ்வரூபம்	410
12.	ஸனகர் முதலியவர்களுடைய ஸிருஷ்டி	417
13.	வராஹாவதாரம்	424
14.	திதி தேவி கர்ப்பத்தை அடைந்தது	433
15.	ஜய விஜயர்களுடைய சாபம்	442
16.	ஜய விஜயர்களுக்கு அனுக்கிரகம்	455
17.	திதிக்குப் புத்திரர்கள் பிறந்தது	462
18.	யக்ஞவராஹருக்கும் ஹிரண்யாக்ஷனுக்கும் யுத்தம்	467
19.	ஹிரண்யாக்ஷவதம்	472

ஸ்ரீமத் பாகவதம்

முன்னுரை

இது ஸ்ரீ பகவானுடைய அற்புத லீலைகளையும் அனந்த கல்யாண குணங்களையும் முக்கியமாய் வர்ணிக்கும் சுகருக்கு இது வ்யாச மஹர்ஷியால் சுகருக் கு உபதேசிக்கப் பட்டது, ஸ்ரீ சுகர் பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சொன்னார், அப்பொழுது சூதர் அவ்விட மிருந்து இக்கதையை ஸ்ரீ சுகபகவானின் அனுமதியின் பேரில் தெரிந்து கொண்டார். பிறகு அவர் நைமி சாரண்யத்தில் வசிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்குச் சொன்னார்.

ஸ்ரீமத் பாகவதம் என்பது யாது?

ஸ்ரீமத் பாகவதம் என்ற புராணம் எல்லா வற்றிலும் மேலானது (1) ஸகல உபநிஷத்துக் களால் நிரூபிக்கப்படும் பரமாத்மா இதனால் வர்ணிக்கப்பட்டிருக்கிறார். (2) வ்யாஸ மஹர்ஷியானவர் விஸ்தாரமான வேதங்களை பிரித்தும் பாரதம் முதலிய இதிஹாசங்களைச் செய்தும் தனது மனது ப்ரஸன்னமாகாததால் பகவானுடைய குணங்களையே முக்கியமாக வர்ணிக்க வேண்டும் என்று இதைச் செய்தார். (3) கீதா, ஸஹஸ்ரநாம, ராமாயண, இந்த சப்தங்கள் தனியே உச்சரிக்கப்பட்டாலும், அவை

முறையே பகவத்கீதை, விஷ்ணு சகஸ்ரநாமம், ஸ்ரீவால்மீகி ராமாயணம் என்பவற்றையே குறிப்பிடுதல் போல பாகவதம் என்ற சப்தமும் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் குணத்தைச் சொல்லும் விஷ்ணு பாகவதத்தையே காட்டுகிறது.(4) மேலும் இது ஸகல லோகங்களாலும் நமஸ்கரிக்கப்பட்ட பாதங்கள் உள்ள ஸ்ரீசுகமஹர்ஷியாலும் அத்யயனம் செய்யப்பட்டது. (5) இது மோக்ஷத்தை விரும்பிய பரீக்ஷித்து மஹாராஜனுக்கு சுகமஹர்ஷியால் மோக்ஷசாஸ்திரம் என்று உபதேசிக்கப் பட்டுள்ளது.

ஆட்சேபம்: "ஹேமாத்ரி என்னும் பெயருள்ள ஒரு ப்ரபுவினுடைய அரண்மனை வித்வான்களின் முக்கியரான போப தேவர் என்ற பண்டிதர் இருந்தார். அவர் கோபால பக்தனாக இருந்த அந்தப் ப்ரபுவை ஸந்தோஷப்படுத்துவதற்காக அவருடைய நியமனப்படி இந்தப் புராணத்தை எழுதி அரசனிடம் கொடுத்தார். அரசன் அதை முழுதும் மற்ற பண்டிதர்களுடன் பரிசோதித்து அதில் உள்ள பதச்சேர்க்கை முதலியவைகளால் ஆச்சர்யப்பட்டு அதனை உலகில் பரவச்செய்ய விரும்பி அதனை அனேகம் பிரதிகள் எழுதுவித்து பண்டிதர்களைக் கொண்டு வ்யாக்யானமும் செய்து பரவச்செய்தார்" என்ற ஒரு கதையை பெரியோர்களால் சொல்லக்கேட்டு இருக்கிறோம்; அப்படியிருக்க வ்யாஸர் செய்தார் என்பது பொருந்துமா ? என்றால்':–

ஸமாதானம்: இந்த விஷ்ணுபாகவதம் போப தேவர் செய்ததன்று. ஹேமாத்ரி என்ற ப்ரபு ஒரு

நாள் சபையில் வித்வான்களை நோக்கி," இரண்டு முகூர்த்தங்களில் பாகவதத்தின் அத்யாயச் சுருக்கங்களை ச்லோகமாகச் சொல்ல உங்களில் யார் சக்தியுள்ளவர்" என்று கேட்டார். அப் பொழுது போபதேவர் என்ற பண்டிதர் நாளைய தினம் சொல்கிறேன் என்றார். மறுநாள் பாகவதாத்யாயஸாரம் என்ற கதானு க்ரமணிகையை செய்து அந்த ப்ரபுவிடம் கொடுத்தார்.

அதன் முதல் ச்லோகம் பின்வருமாறு:" வித்வானாகிற போபதேவரால் மந்திரியாகிய ஹேமாத்ரியின் திருப்திக்காக இதில் ஸ்ரீமத் பாகவதத்தின் அத்யாய ஸாரம் நிரூபிக்கப் படுகின்றது." இதனால் ப்ரபு திருப்தி அடையா மலிருந்து அவருடைய நியமனப்படி பக்தி முக்தாபலம், பக்திலஹரி என்ற இரண்டு பக்தி நிரந்தங்களைச் செய்தார். அதனால் ப்ரபு பண்டிதரை மிகவும் கௌரவப்படுத்தினார்.

தவிர போபதேவர் செய்த க்ரந்தங்களின் விவரமானது பக்திமுத்தாபலம் என்னும் க்ரந்த த்தின் வியாக்யானத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதாவது ஸாஸ்திரங்களை படித்த வர்களுக்குள் சிறந்தவரான போப தேவரால் வ்யாகரணவிஷயமாக 10 க்ரந்தங்களும் மனிதர் களின் வைத்ய விஷயமாக 15 க்ரந்தங்களும் 16 வ்யாக்யானங்களும் ஸாஹித்ய விஷயமாக 3 க்ரந் தங்களும் செய்யப்பட்டன. அவைகள் யாவும் ஸல்லோராலும் கொண்டாடத்தக்கவைகளே. தவிரவும் இந்த போபதேவர் ஸ்ரீமத் பாகவத

க்ரந்தத்தை 22 தடவை படித்தார் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அவரால் வேத வ்யாஸ ஸ்தோத்திரமும் ஸ்லோகமாக செய்யப் பட்டு இருக்கிறது. மேற்காட்டிய காரணங் களால் முன்னே சொன்ன ஆக்ஷேபத்துக்கு இடமே இல்லை. தவிரவும் ஸ்ரீமத் பாகவதத்தின் முதல் ச்லோகத்தின் வ்யாக்யானத்தில் ஸ்ரீதரா சார்யாள் அவர்கள் "பாகவதம் என்பது வேறு என்று சந்தேகப்படக்கூடாது" என்பதாகச் சொல்லி இருக்கிறார்.

ஆட்சேபம்: ஸ்ரீமத் பாகவதம் வ்யாசரால் செய்யப்பட்டது என்பது முற்றிலும் பொருந்தாது. அந்த மஹர்ஷியினால் செய்யப்பட்ட மஹா பாரதம், ஸ்காந்தம், விஷ்ணு புராணம் முதலிய கிரந்தங்கள் எளிதில் படிக்கக்கூடியவை களாகவும் எளிதில் அர்த்தம் செய்து கொள்ள க்கூடியவைகளாகவும் இருக்கின்றன. இந்த பாகவதத்திலோ மேற்காட்டியவைகள் முற்றிலும் மாறிஇருக்கின்றன. ஒருவரால் செய்யப்பட்ட க்ரந்தங்களில் இவ்வளவு மாறுதல்கள் இருக்க நியாயமில்லை. ஆகையால் இதன் கர்த்தா வ்யாஸர் அல்லர் என்பதேயாம்.

சமாதானம்: சொல்லிய ஆக்ஷேபம் சரியானதே. ஆனாலும், ஸ்ரீவ்யாஸ பகவான் ஸ்ரீ நாராயணனுடைய அவதாரம். அவர் வேத–ராசியை ஜனங்கள் அத்யயனம் செய்ய முடியாமல் புத்திக் குறைவுள்ளவர்களாக இருக்கும் காலத்தில் அக்குறையை நீக்கு வதற்காக வேதங்களை நான்கு சாகைகளாகப்

பிரித்தார். அவற்றைப் படிப்பதற்கும் கேட்பதற்கும் அதிகாரம் இல்லாத ஸ்திரீகள், சூத்ரர்கள் இவர்களுக்காக மஹாபாரதம், இதிஹாஸம் முதலியவைகளை எளிதில் அர்த்தமாகும்படி எளிய நடையில் எழுதி வெளியிட்டார். அப்படியே வேதார்த்தத்தை பகவத்கீதை, ப்ரம்ஹஸூத்திரம் இவை களால் வெளியிட்டார். இப்படி மந்தாதிகாரிகளை உத்தேசித்து எளியவைகளைச் செய்தார். உத்தமாதி காரியான வித்வான்களுக்கு உபயோகப்படும்படி ஸகல வேதங்களால் நிரூபிக்கப்படும் பரமாத்மா வை கடினமான சந்தர்ப்பத்தால் வர்ணித்தார். ஆகையால் அதிகாரி பேதத்தால் நடையின் பேதம் ஏற்பட்டதே ஒழிய கர்த்தாவின் பேதத்தால் ஏற்பட்டதல்ல.

ரகுவம்சம், மேகசந்தேசம், நளோதயம், ஹரிச்சந்திரோபாக்யானம், நளோபாக்யானம் இவைகள் மஹா கவியான காளிதாஸரால் செய்ய ப்பட்ட கிரந்தங்கள். இவைகளின் பதங்கள், அவைகளின் சேர்க்கை, விருத்தி, பாகம் முதலியவைகள் வெவ்வேறாக காணப்படுகின்றன, அதனால் இவைகளை காளிதாஸர் எழுதவில்லை எனச் சொல்லக்கூடுமா?

மேலும், ஆத்மபோதம், ஸௌந்தர்யலஹரி இவைகள் ஸ்ரீமத் பகவத்பாதர்களால் செய்யப் பட்டவைகளானாலும், ஒன்றுக்கொன்று மேற்காட்டிய விஷயங்களில் மாறுபட்டுள்ளவைகளாக இருக்கின்றன. ஆகையால் ஸர்வக்ஞர்களாயும் பகவானுடைய அவதார பூதராயுமான வ்யாஸ மஹர்ஷியினுடைய வாக்கானது கங்காப் பிரவாஹம்

போலத் தடையற்றது.

ஆட்சேபம்: பாகவதம் என்பது தேவீபாகவதமே ஒழிய வ்யாஸ மஹர்ஷியால் செய்யப்பட்டது அல்ல. ஏனென்றால் "ஸ்ரீமத் பாகவதத்தை எழுதி ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்தில் வைத்துத் தானஞ்செய்பவருக்கு மோக்ஷம் கிடைக்கும்" மத்ஸ்ய புராணம். இதே விஷயத்தை ஸ்ரீ தரா சார்யாள் முதலியவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பற்றி கொஞ்சம் யோசிப்போம். ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்துக்கும் ஸ்ரீமத் பாகவதத் திற்கும் என்ன சம்பந்தம். ஸ்ரீமகாவிஷ்ணுவுக்கு கருடன் வாகனம் என்று பிரசித்தமே தவிர, சிங்கம் வாகனம் என்பது ஓர் இடத்திலும் சொல்லப்படவில்லை. வேறு வாகனமிருப்பதாகவும் தெரியவில்லை; பகவானே நரஸிம்ஹாவதாரஞ் செய்தவராகையால் ஸிம்மம் என்று சொல்லி இருக்கிறதென்று யோசிப்போமானால் பரமாத் மாவின் ஸ்வரூபமாகிய ஸிம்மத்தின் மீது அவரை நினைப்பிக்கும் க்ரந்தத்தை வைத்து தானஞ்செய்வது நியாயமாகுமா? ஆகையால் தேவீபாகவதம் என்று சொல்வதே உக்தமம். ஸிம்மம் ஸ்ரீதேவியின் வாகனமாகையால், அதில் வைத்துத் தானஞ் செய்வது மோக்ஷத்தைக் கொடுக்கும் என்பது பொருந்தும்.

ஸமாதானம்: முன்னே காட்டியுள்ள ஆக்ஷேபம் முற்றிலும் பொருந்தாது. ஸகல ஸ்வரூபியான ஸ்ரீ பகவானுக்கு, ஆஞ்சநேயர், குதிரை, யானை இவைகள் வாகனமாக இருக்கின்றன. இப்பொழுது தேவாலயங்களில் உத்ஸவ காலத்தில்

மேற்காட்டிய வாகனங்களில் பகவானை அலங்கரிப்பது வழக்கமாக இருந்துவருகிறது. "விஷ்ணுவின் வாகனங்களைச் சொல்கிறோம்: முதல்நாள் ஹம்ஸம், இரண்டாம் நாள் ஸிம்மம், முன்றாம் நாள் ஆஞ்சநேயர், நான்காம் நாள் ஆதிசேஷன், ஐந்தாம் நாள் கருடன், ஆறாம் நாள் யானை, ஏழாம் நாள் ரதம், எட்டாம் நாள் குதிரை, ஒன்பதாம் நாள் பல்லக்கு, பத்தாம் நாள் புஷ்பகம்" வைகானஸ தந்திரம், – தெய்வீக யக்ஞாதிகாரம், உத்ஸவ படலம்."பகவான் உத்ஸவ தினங்களில் ஹம்ஸம், ஸிம்மம், ஹனுமான், ஆதிசேஷன், கருடன், யானை, ரதம், குதிரை, பல்லக்கு, புஷ்ப மண்டபம் ஆகிய வாஹனங்களில் முறையே வீற்றிருந்து அர்ச்சாவதாரத்தின் மஹிமையை காண்பிக்கிறார்; அதிகாரிகை இதே விஷயம் வைசம்பாயன காரிகையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் பகவானுடைய அனந்த கல்யாண குணங்களை வர்ணித்து இருக்கும் ஸ்ரீமத் பாகவதம் ஸ்ரீமந் நாராயண ஸ்வரூபமே தவிர வேறில்லை. அதை ஸிம்ஹாஸனத்தில் வைத்து தானம் செய்வதில் கொஞ்சமேனும் ந்யாய விரோதமில்லை; 'ரிஷியின் அம்சம் இல்லாதவன் காவியம் எழுதமாட்டான்; விஷ்ணுவின் அம்சம் இல்லாதவன் அரசனாகிறதில்லை' என்றபடி அரசன், விஷ்ணுவின் அம்சம் உள்ள வனாகையால் ஸிம்ஹாஸனத்துக்குரியவனாகிறான். அப்படி இருக்க பகவானுக்கு ஸிம்ஹாஸனம் உண்டென்று ஏன் சொல்லக்கூடாது? ஹேமாத்ரி முதலிய க்ரந்தங்களில் தானப் பிரகரணத்தில் ரோகிகளின் வ்யாதி நிவர்த்திக்காக, அந்தந்த வ்யாதிக்குத்

தக்கபடி ஒரே தேவதையை அநேக வாகனங்களில் பூஜித்து தானம்செய்யும்படி சொல்லப் பட்டிருக்கிறது. அப்படிப்போல் ஸம்ஸார வ்யாதியால் உபத்திரவம் அடைந்தவனுக்கு அதன் நிவர்த்திக்காக இம்மாதிரியான தானம் பிராய சித்தமாகச் சொல்லப்பட்டது. தேவீ பாகவதம் முதலிய சக்தியை நிரூபிக்கும் க்ரந்தங்களில் தேவிக்கு ஸிம்மவாஹனம் என்று சொல்லப்பட்டு இருந்தாலும் ஸிம்மம் ஸ்ரீதேவியின் வாகனமே ஒழிய பகவானுடையதல்ல, என்று சொல்ல முடியாது. ஏனென்றால் ஸ்ரீதேவி மஹாவிஷ்ணுக்கு பத்னியாகையால் தான் பர்த்தாவினுடைய வாகனங்களில் தனதிஷ்டப்படி ஒருவேளை கருடன்மீதும், ஒருகால் ஸிம்மத்தின்மீதும் பின்னர் யானைமீதும் ஏறி ஸஞ்சரிக்கலாமே ஒழிய அவருக்குச் சொந்தமான வாகனம் இன்னதென்று கல்பிப்பது பொருந்தாது. வீடு, தோட்டம், வயல், பணம், வேலைக்காரர்கள், வேலைக்காரிகள், வாகனம், பசு, ஆபரணம், கடன் இவைகளில் பர்த்தாவுக்கு அதிகாரமே ஒழிய பத்னிக்கு அதிகாரம் இல்லையென்று மனுஸ்மிருதி முதலிய வைகள் சொல்லுகின்றன. ஸ்திரீ ஒருபொழுதும் ஸ்வாதந்திரயத்தையடையத்தக்கவளல்ல. புருஷன் உடைய வாகனங்களில் அவர்களுடைய பத்னி ஏறினதால் அவைகள் அவர்களுடையதாகி விடுமா? அப்படி உலகத்தில் வழக்கமும் இல்லை.

ஆட்சேபம்: ஸ்ரீ வ்யாஸ மஹர்ஷியானவர் இந்தப் பாகவத சாஸ்திரம் எல்லா உபநிஷத்துக்களுக்கு ஸமமானது என்று காட்டுவதற்காகவே ஸகல

வேதார்த்தங்களைச் ஸ்லோக ரூபமாகச் செய்தார். சில இடங்களில் வேதத்தில் உள்ளபதச் சேர்க்கையே காட்டி இருக்கிறார். வேதத்தின் அர்த்தம் அறியாமலேயே சம்பிரதாயப்படி படிப்பதால் மேலான பலன் கிடைப்பது போல் வேதத்திற்குச் சமமான ஸ்ரீமத்பாகவத கிரந்தத்தை தானஞ் செய்வதாலும் மோக்ஷம் கிடைக்கும் என்று சொல்லப்பட்டது. இதனால் புத்தகதானத்திற்கே இவ்வளவு பலன் கிடைக்குமாகில், குருமுகமாக சாஸ்த்ரமுறைப்படி இதைத் தெரிந்துகொண்டவனுக்கு முக்தி கிடைப்பது நிச்சயம் என்று பொருள். மோக்ஷத்தை விரும்பியவர்களும் இடையூராகிய பாபத்தை நிவர்த்தித்துக் கொள்ள முடியும். அதனால் பாகவத தானத்தால் மோக்ஷம் கிடைக்குமென்று வியாசமஹர்ஷி சொன்னார். "புத்தியள்ளவன் கலியுகத்தில் தானத்தாலேயே பாபத்தை நிவர்த்தித்துக் கொள்ளவேண்டும்"–விஷ்ணு ஸ்மிருதி. "மூவுலகத்திலும் தானத்தைவிட மேலானது ஒன்றுமில்லை. தானத்தால் ஸ்வர்க்கம், லக்ஷ்மி, சத்ருஜயம், வித்யை, ஸ்திரீகள், வ்யாதிநிவர்த்தி ஆகியவைகள் கிடைக்கும். —ஸௌர புராணம். இவ்வுலகத்திலும், பரலோகத்திலும் தானமே முக்கியமான க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது. இதுவே மோக்ஷத்துக்கு ஸாதனம் என்று வேதம் சொல்லுகிறது. ப்ரஹ்ம கைவர்த்த புராணம். க்ருதயுகத்தில் தபஸும், த்ரேதா யுகத்தில் ஞானமும், துவாபர யுகத்தில் யக்ஞமும், கலியுகத்தில் தானமும் க்ஷேமத்தைக் கொடுக்கும் —மனுஸ்மிருதி. ஆகையால் தானமே மேலானது —ச்ருதி. "ஸ்ரீகிருஷ்ண பகவான்,

அர்ஜுனனுடைய வார்த்தையை கேட்டு தர்ம புத்திரரை தமது கையால் தடவிச் சொன்னதாவது, ஓ அரசனே ப்ருஹ்ம ஹத்தியை, கள் குடிப்பது, திருடுவது, ஆசார்ய பத்னியைப் புணர்வது முதலிய பாபங்கள் தானத்தாலேயே நிவர்த்தி யாகின்றன. புத்திரன், பணம், புண்ணியம் முதலியவைகள் தானத்தாலேயே கிடைக்கின்றன —ஸ்காந்தம்.

ஆட்சேபம்: பாகவதத்திற்கு வ்யாக்யானம் செய்த ஸ்ரீதராசார்யார் முதலானவர்கள் முதல் ஸ்லோகத்துக்கு வ்யாக்யானம் செய்யும்பொழுது பாகவதலக்ஷணமாகக் காட்டிய வசனங்கள் பின் வருமாறு கண்டுகொள்க.

எந்தக் க்ரந்தத்தில் காயத்ரி மூலமாக தர்ம விஸ்தாரம் வர்ணிக்கப்பட்டிருக்கிறதோ விருத்ரா ஸுரனின் கதை எதில் இருக்கிறதோ அந்த 18000 க்ரந்தங்களுள்ளதே பாகவத புராணம் என்று சொல்லப்பட்டது. —மத்ஸ்ய புராணம். எதில் ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யை விருத்ராஸுர வதம் 18000 க்ரந்தங்கள் 12 ஸ்கந்தங்கள் ஆகிய இவைகள் இருக்கின்றனவோ எது காயத்ரியால் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறதோ அதை பாகவதம் என்று சொல்லுகிறார்கள் —ஸ்காந்தம். ஓ அம்பரீஷா! ஸம்ஸார பந்தம் நிவர்த்தியாக வேண்டுமானால் சுகரால் சொல்லப்பட்ட பாகவதத்தை பிறர் சொல்லக்கேட்கவேண்டும். தானாகவாவது படிக்க வேண்டும்—பத்மபுராணம். இது ப்ருஹ்ம ஸூத்ரங்களுடைய அர்த்தம்; மஹாபாரதத்தின் உண்மையான அர்த்தம் காயத்ரீ மந்திரத்துக்கு

பாஷ்யம். புராணங்களுடைய ஸாரம் வேதத்தின் அர்த்தங்களால் நிறைந்தது. 12 ஸ்கந்தங்கள் உள்ளது; 100 விச்சேதமுள்ளது, 18000 க்ரந்தங்கள் உள்ளது; பாகவதம் என்ற பெயருள்ளது— கருட புராணம்.

இதில் சொல்லியுள்ள லட்சணங்கள் யாவும் தேவீ பாகவதத்தில் பொருந்தி இருக்கின்றனவே ஒழிய விஷ்ணு பாகவதத்தில் பொருந்தியவைகளாக இல்லை. மேலும் மஹா மாயா ரூபியான சக்தியின் மஹிமையால் மஹாவிஷ்ணு ஹயக்ரீவர். ஆனார். தேவீ பாகவதம் ஸ்கந்தம் 1. அத்யாயம் 5, ஹயக்ரீவபரமாத்மா அகஸ்தியமஹர்ஷிக்கு உபதேசித்த தேவீ விஷயமான க்ரந்தங்களுக்கு ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யையென்று பெயர். அந்த வித்யை விஷ்ணுபாகவதத்திலாவது, மற்ற புராணங்களிலாவது சொல்லப்படாததானாலும், தேவீபாகவதமே பாகவதமென்பதற்கு அர்த்தம்.

ஸமாதானம்: பாகவதம் என்றால் விஷ்ணு பாகவதமென்றே அர்த்தம் கொள்ளவேண்டும். ஹயக்கிரீவ ப்ருஹ்மவித்யை என்றால் ஹயக்ரீவ பரப்ருஹ்மத்துக்கு மற்றவர் சொன்ன வித்தை என்றாவது ஹயக்ரீவர் பிறருக்குச் சொன்ன வித்தை என்றாவது அர்த்தம் செய்யக்கூடாது. ஹயக்ரீவர் பிறரிடம் உபதேசம் பெற்றார் என்றாவது பிறர்க்கு உபதேசித்தார் என்றாவது ஒரு க்ரந்தத்திலும் சொல்லவில்லை. பிரளய காலத்தில் எல்லா வித்தையும் காணாமல் கொண்டு

வந்தார், ஆதலால் ஹயக்கிரீவரால் கொண்டு வரப்பட்ட வித்யை என்றே அர்த்தம் செய்ய வேண்டும். மேலும் ப்ரஹ்ம சப்தத்துக்கு வேதம் என்று அர்த்தம் வைத்துக்கொண்டால் வேத வித்யை என்றும், உண்மை என்று அர்த்தம் கொண்டால் தத்வ ஞானம் என்றும், தபஸ் என்று அர்த்தம் கொண்டால் தபோ வித்யை என்றும், நான்கு முகங்கள் உள்ள ப்ருஹ்மதேவர் என்று அர்த்தங்கொண்டால் ப்ருஹ்மதேவருக்கு உபதேசம் செய்யப்பட்ட ப்ருஹ்ம வித்யை என்றும், ப்ராஹ்மணர்கள் அர்த்தம் செய்யக்கூடிய வித்யை யென்று அர்த்தம் ஏற்படுகிறதே ஒழிய தேவீ விஷயமான வித்யை என்ற அர்த்தம் ஏற்படவில்லை. ஆகையால் ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யை விஷ்ணு பாகவதத்திலேயே நிரூபிக்கப்பட்டு இருக்கிறது.

ஆட்சேபம்: தேவீ விஷயமான க்ரந்தங்களில் அகஸ்திய மஹர்ஷிக்கு ஹயக்ரீவர் மகாவித்யை உபதேசித்தார் என்று சொல்லி இருப்பது பொருந்துமா ?

ஸமாதானம்: பொருந்தும். ஹயக்ரீவரால் எடுத்து வரப்பட்டவைகளில் அகஸ்திய மஹர்ஷிக்கு உபதேசிக்கப்பட்ட மந்திரங்களும் சேர்ந்தவையாம். பூர்ணிமா திதியில் தானம் செய்யவேண்டும் என்று சொல்லி இருக்கிறது. சிவாலயங்களிலும், விஷ்ணு ஆலயங்களிலும் பஞ்ச பர்வங்களில் பூர்ணிமா திதியில் விசேஷமான ஆராதனம் செய்கிறார்கள். தேவீ ஆலயங்களில் பூர்ணிமா திதியில் யாதொரு விசேஷ ஆராதனமும்

நடப்பதாகத் தெரியவில்லை. மேலும் ஏகாதசி, பூர்ணிமா இந்தத் தினங்களில் ஹயக்ரீவரை ஜபித்தவன் மகானுபாவனாக ஆகிறான். ஹயக்ரீவோபநிஷத் ப்ருஹ்ம ஸூத்திரங்களுடைய அர்த்தமே "பாகவதம்" என்ற கருட புராணத்தில் சொல்லிய லக்ஷணம், தேவீ பாகவதத்தில் கொஞ்சமேனும் இல்லை விஷ்ணு பாகவதத்திலேயே பொருந்தி இருக்கிறது.

ஸ்ரீமத் பாகவத மஹிமை

முன்னொரு காலத்தில் நைமிசாரண்யத்தில் வசிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகள் ஸூதரை நோக்கி கோரமாகிய இக்கலியுகத்தில் பிராணிகள் அதர்மத்தில் ஆசையுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு பக்தி, ஞானம் வைராக்யம் விவேகம் ஆகிய இவைகள் எதனால் உண்டாகும்? எது பலவிதமான ச்ரேயஸ்ஸான தனங்களில் மேலானது? எது சுத்தமானவைகளுக்கும் பரிசுத்தியை உண்டு பண்ணுகிறது? எது ஸ்ரீ கிருஷ்ணனுக்கு மிகவும் பிரியத்தை உண்டு பண்ணக்கூடியது? சிந்தாமணியானது இவ் வுலகத்திய சுகத்தை மட்டும் கொடுக்கும். மகேந்திரன் ஸ்வர்க்க ஸுகத்தை மாத்திரம் கொடுப்பான். ஆச்சார்யர்களுக்கு சந்தோஷ முண்டானால் யோகிகளுக்கும் கிடைக்க அரிய தான வைகுண்ட பதத்தையும் கொடுப் பார்கள். ஆனதால் அதைச் சொல்லவேண்டும் என்று கேட்டார்கள்.

இதைக் கேட்ட ஸூதர் சௌனகரை நோக்கி, உமக்கு இவ்விஷயத்தில் பிரியம் உண்டானதால் எது ஸம்சார தாபத்தை நிவர்த்தி செய்யுமோ, எது ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு சந்தோஷத்தை உண்டு பண்ணுமோ, எது பக்தியை விசேஷமாக வ்ருத்தி செய்கிறதோ, அதனை யோசித்துச் சொல்லுகிறேன். ஜாக்கிரதையாக கேளுங்கள். பரீக்ஷித்து மஹாராஜனுக்கு சுகரால் உபதேசிக் கப்பட்ட ஸ்ரீமத் பாகவத சாஸ்திரமே சித்த சுத்தியை உண்டுபண்ணக்கூடியது; ஜன்மாந்திரத்தில்

புண்ணியம் செய்தவன்தான் பாகவதத்தைக் கேட்பான், படிப்பான். சபையில் பரீக்ஷித்துக்கு சுகர் பாகவத கதையைச் சொல்லும் பொழுது தேவர்கள் அனைவரும் அமிர்த குடத்தை எடுத்துக்கொண்டு வந்து சுகரை நமஸ்கரித்து இந்த அமிர்தத்தை அரசன் புஜிக்கட்டும். நாங்கள் பாகவதமாகிய அமிருதத்தை பானஞ் செய்கிறோம். நீர் அமிர்த குடத்தை அரசனுக்கு கொடுத்துவிட்டு கதாமிருதத்தை எங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். அதனைக் கேட்டு சமீபத்தில் இருக்கும் சக்ரவர்த்தியானவர், ரத்னத்துக்கும், காசமணிக்கும் எவ்வளவு பேதமோ அவ்வளவு தாரதம்யம் பகவத் கதைக்கும் அமிருதத்துக் குமுள்ளது என்று யோசித்து தேவர்களை நோக்கி சிரித்தார். சுகரும், தேவர்கள் பகவத் பக்தி இல்லாதவர்கள் என்று நினைத்து கதாம்ருதத்தை தேவர்களுக்குக் கொடுக்க சம்மதிக்கவில்லை. ஆகையால் பாகவதக் கதையானது தேவர்களுக்கும் அரிதாயிற்று. பின்பு பரீக்ஷித்து மகாராஜனுக்கு ஸ்ரீமத் பாகவதக் கதையால் மோக்ஷம் கிடைத்ததைப் பார்த்து ப்ருஹ்மதேவர் ஆச்சரியம் அடைந்து ஸத்ய லோகத்தில் தராசைக் கட்டி மோக்ஷ சாதனங்கள் எல்லாவற்றையும் நிறுத்தார். ஸ்ரீமத் பாகவதமே பாரமுள்ளதாக இருந்தது. மற்றவை இலகுவாகவிருந்தன. அதனைக் கண்டு ஸகல மஹர்ஷிகளும் மிகவும் ஆச்சரியப்பட்டு ஸ்ரீமத் பாகவதத்தை பகவானுடைய ஸ்வரூபமாக நினைத்தார்கள். அதனைப் படிப்பதாலும், கேட்பதாலும் உடனே மோக்ஷம் கிடைக்கும். இந்த

க்ரந்தத்தை ஏழு தினங்களில் முழுமையும் விதிப்படி கேட்டால் ஸகல பலன்களும் ஸித்திக்கின்றன. இதனை ஸனகர் முதலான யோகிகள் நாரதருக்கு முன் காலத்தில் உபதேசித்தார். தேவர்ஷியாகிய நாரதரும் ப்ருஹ்மத்தை வர்ணிக்கும் இந்தக் க்ரந்தத்தை கேட்டார். ஏழு நாட்களில் இதைக் கேட்க வேண்டிய முறையும் நாரதருக்கு அவர்களால் உபதேசிக்கப்பட்டது, என்று சொன்னார்.

இதைக் கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்கும் முறையைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற விருப்பம் நாரதருக்கு உண்டான காரணம் என்ன? அவர் பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை நன்றாக அறிந்தவர் அல்லவா? மேலும் ஸனகர் முதலிய ப்ருஹ்ம புத்திரர்களோடு நாரதருக்கு ஸம்வாதம் எவ்விடத்தில் நேர்ந்தது? இதற்குப் ப்ரத்யுத்தரம் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

அதனைக் கேட்டு ஸூதர் பின்வருமாறு விடை சொல்லலானார். "ஹே சௌனகரே சுகர் என்னை அந்தரங்க சிஷ்யனாக நினைத்து எனக்கு எதனை உபதேசித்தாரோ அதனை உமக்கு சொல்லுகிறேன். முன் ஒரு காலத்தில் விசாலா நகரத்தில் நான்கு மஹரிஷிகள் ஸாது ஸங்கம் செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் சேர்ந்தார்கள். அப்பொழுது அவ்விடத்தில் தெய்வச்செயலால் தேவர்ஷியாகிய நாரதரும் வந்தார். அவர்கள் நாரதரைக்கண்டு,

ஓ ப்ருஹ்மபுத்திரரே! நீர் ஒரு விஷயத்திலும் ஆசை இல்லாதவர்: அப்படி இருந்தும் மிக்க வேகமாக எவ்விடம் செல்லுகிறீர்? உம்முடைய முகம் வாடினதாகக் காணப்படுகிறது, அதற்குக் காரணம் என்ன? ஜனங்கள் பொருள் செலவழித்த காலத்தில் எப்படி வருத்தப்படுவார்களோ அப்படி சூன்ய சித்தராக இருக்கிறீர். நீர் இப்படி இருப்பது உசிதமல்ல. ஆதலால், அதன் காரணத்தைச் சொல்ல வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

அதைக் கேட்டு நாரதர் விடை சொன்னதாவது:– "நான் பூமியையே எல்லாவற்றிலும் மேலானது என்று நினைத்து, புஷ்கரம், பிரயாகை, காசி, கோதாவரி, ஹரிக்ஷேத்திரம், குருக்ஷேத்திரம், ஸ்ரீரங்கம், இராமேச்வரம் முதலிய தீர்த்தங்கள் சென்று எங்கும் அலைந்தேன். அப்படியும் மனதுக்கு சந்தோஷம் ஏற்படவில்லை. இந்தப் பூமி முழுவதையும் கலி அதர்மத்துடன் வியாபித்துக் கொண்டுவிட்டான். அதனால் சத்யம், தபஸ், சௌசம், தயை, கொடுப்பது ஆகிய இவை ஓர் இடத்திலாவது இருப்பதாகக் காணப்படவில்லை. எல்லா ஜனங்களும் தங்கள் தங்கள் வயிறு நிரம்ப புஜிப்பதில் மாத்திரம் ஆசையுள்ள வர்களாகவும், கபடமாகப் பேசும் தன்மை உள்ளவர் களாகவும், பாஷண்டர் களிடத்தில் (வேதவிரோதிகள்) ப்ரீதி உள்ளவர் களாகவும் இருக்கிறார்கள். ஒவ்வொரு வீடுகளிலும் ஸ்திரீகளே பிரபுவாயிருந்து அதிகாரம் செய் கிறார்கள். மைத்துனனே புத்தி சொல்லுகிறான். எல்லோரும் பெண்களை விலைக்குவிற்கிறார்கள்.

தம்பதிகள் ஒருவருக்கொருவர் கலகஞ்செய்து கொள் கிறார்கள். ஆசிரமங்கள், புண்ய தீர்த்தங்கள், நதிகள், தேவாலயங்கள் ஆகிய இவைகள் பெரும்பாலும் துஷ்டர்களால் கெடுக்கப்பட்டன. யோகி, சித்தன், ஞானி நல்ல கர்மாவைச் செய்பவன் ஆகிய இவர்கள் ஒருவரும் காணப்படவில்லை. நல்ல காரியங்கள் யாவும் கலியாகிய அக்னியால் எரிந்து சாம்பலாக்கப்பட்டன. ஒவ்வொரு தேசத்திலும் ஜனங்கள் அன்ன விக்ரயம் செய்கிறார்கள். ப்ராஹ்மணர்கள் வேதத்தை விற்கிறார்கள். ஸ்திரீகள் பெரும்பாலும் விபசாரம் செய்கிறார்கள். இம்மாதிரியான கலியின் விளையாட்டை எங்கும் பார்த்துக் கொண்டு நான் யமுனையின் கரைக்கு வந்தேன். அதுதான் ஸ்ரீ கிருஷ்ண பகவான் விளையாடின இடம். அவ்விடத்தில் ஒரு அற்புதத்தைக் கண்டேன். அதாவது யௌவன வயதுடைய ஒரு பெண் மனவருத்தத்துடன் அவ்விடம் இருந்தார். அவளுடைய பக்கத்தில் இரண்டு வயது சென்றவர்கள் பிரக்ஞை இல்லாதவர்களாக பெருமூச்சு விட்டுக்கொண்டு படுத்திருக்கக் கண்டேன். அந்தப் பெண் அவர்களுக்குப் பணிவிடை செய்தும், அழுது கொண்டும், தன்னைக் காப்பாற்றுகிறவர் யார் என்று பத்து திக்குகளையும் பார்த்துக் கொண்டு இருந்தாள். வெகு தூரத்திலேயே அவர்களைப் பார்த்து மிகுந்த ஆச்சரியம் அடைந்து உண்மையை தெரிந்து கொள்ள விரும்பி அவர்களுடைய சமீபம் சென்றேன். அந்தப் பெண் என்னை நோக்கி, "ஓ சாதுவே க்ஷணகாலம் தாங்கள் இவ்விடம் இருக்கவேண்டும்.

என்னுடைய கவலையை தீர்க்க வேண்டும். தங்களைப்போல் உள்ள சாதுக்களை தரிசித்தால் ஸகல பாபங்களும் நிவர்த்தியாகும் என்பதில் ஸந்தேகமில்லை. தங்களுடைய தரிசனம் வரும் க்ஷேமத்தைக் காட்டுகின்றது. தங்களுடன் ஸம்வாதம் செய்தால் பலவகையிலும் கவலை தீர்ந்துவிடும்." என்று தெரிவித்துக் கொண்டாள்.

அதைக்கேட்டு அந்தப் பெண்ணை நோக்கி "நீ யார்? இவ்விருவர்களும் யார்? ஓ தேவி! நீ கவலைப்படும் காரணம் என்ன? இவைகளை விஸ்தாரமாகச் சொல்" என்று கேட்டேன்.

அதனைக் கேட்டு அந்தப்பெண் சொன்னதாவது: எனக்கு பக்தி என்று பெயர். இவ்விருவரும் என்னுடைய புத்திரர்கள். ஒருவனுக்கு ஞானம் என்று பெயர். மற்றவனுக்கு வைராக்யம் எனப் பெயர். இவ்விருவர்களும் காலமஹிமையால் கிழத்தனத்தை யடைந்தார்கள். இந்தப் பெண்கள் கங்கை முதலிய நதிகள். என்னை சேவிப் பதற்காக வந்தவர்கள், மேலும் நான் தங்களிட த்தில் என் விஷயத்தை விஸ்தாரமாக தெரிவிக்க வேண்டியவளாக இருக்கிறேன். அதாவது நான் திராவிட (தமிழ்) தேசத்தில் பிறந்தவள். கர்நாடக தேசத்திலும், மஹாராஷ்ட்ர தேசத்தின் சில பாகங்களிலேயும் வளர்ந்தவள். கூர்ஜர தேசத்தில் கிழத்தனத்தை அடைந்தேன். மிக்க பாவியான கலியின் சாபத்தால் பாஷண்டர்கள் என்னுடைய அவயங்களை துண்டித்துவிட்டார்கள். ஆகையால் தேகபலம் குறைந்து புத்திரர்களுடன் மிகுந்த சிரமத்தை

அடைந்து இந்த பிருந்தாவனம் சேர்ந்தேன். இவ்விடம் வந்தவுடன் அழகான சரீரம் உள்ள யௌவனமுடையவளாக ஆனேன். இதோ படுத்துக்கொண்டு இருக்கும் இவ்விரு குழந்தைகளும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கிழத்தனமுள்ளவர்களாக இருப்பதால் அவர்களைப் பார்த்து நானும் துக்கிக்கிறேன். உலகத்தில் தாய் வயது சென்றவளாகவும் புத்திரர்கள் யௌவனமுள்ளவர்களாகவும் இருப்பது பழக்கம். இப்பொழுது புத்திரர்கள் வயது சென்றவர்களாகவும், புத்திரர்களுடைய தாயாகிய நான் யுவதியாகவும் இருக்கக் காரணம் யாது? நாங்கள் நால்வரும் எப்பொழுதும் சேர்ந்தே சஞ்சரித்துக் கொண்டிருக்கிறோம். தாங்கள் யோகிகளுக்குள் சிறந்தவர்களாகையால் இவ்விஷயத்தை அறிந்து சொல்ல வல்லமை உள்ளவராவீர். ஆதலால் என்னிடம் கிருபை வைத்து என்னுடைய சந்தேகத்தைத் தீர்க்கவேண்டும்'' என்று கேட்டாள்.

அதைக் கேட்ட நான் அந்தப் பெண்ணை நோக்கி "ஓ பால்யப்பெண்ணே நான் எல்லா விஷயத்தையும் ஞானக் கண்ணால் அறிந்து சொல்கிறேன். நீ கவலைப்பட வேண்டாம் ஸ்ரீ நாராயணன் உனக்கு க்ஷேமத்தைச் செய்வார் என்று சமாதானம் செய்து ஒரு க்ஷணநேரத்தில் அவ்விஷயங்களைத் தெரிந்துகொண்டு, பின்னும் அந்தப் பெண்ணைப் பார்த்து பின்வருமாறு சொன்னேன். பெண்ணே இந்தக்கலியுகம் மிகவும் மோசமானது. அதனால் நல்லொழுக்கம், யோகமார்க்கம், தவம் ஆகிய இவைகள்

கெடுக்கப்பட்டன. எல்லா ஜனங்களும் அசுரர்கள் போல் கெட்ட காரியத்தையே செய்கிறார்கள். ஸாதுக்கள் துக்கப்படுகிறார்கள். அஸாதுக்கள் சந்தோஷிக்கிறார்கள். இந்தக்காலத்தில் எவன் நல்ல காரியத்தை அனுஷ்டிக்கிறானோ அவனே தீரன் என்று சொல்லப் படுகின்றான். இந்தப் பூமி ஒவ்வொரு வருஷங்களிலும் முறையே ஸ்பர்சிக்க தகாதவர்களும் பார்க்கத்தகாதவர்களும் ஆதிசேஷனுக்குச் சுமையாகிவிட்டாள். நல்ல கர்மங்கள் ஒரிடத்திலும் காணப்படவில்லை. உன்னையும் உன்னுடைய புத்திரர்களையும் இக்காலத்தில் ஒருவரும் பார்க்கிறதில்லை. ஜனங்கள் விஷயங்களில் ஆசைக்கொண்டு காரியம் அகாரியம் என்ற பகுத்தறிவு இல்லாதவர்களாகி உன்னை ஆதரிக்காமல் உபேக்ஷித்தபடியால் நீ இளைத்திருக்கிறாய். இந்த பிருந்தாவனத்தின் மஹிமையால் நீ யுவதி ஆனாய். பக்தியானது இவ்விடத்தில் இல்லாததினால் இவர்களுக்கு கிழத்தனம் போகவில்லை என்று மறுமொழி சொன்னேன். அப்போது அந்தப்பெண் மிக்க பாபியான கலியை பரீக்ஷித்து மகாராஜன் ஏன் உலகத்தில் வைத்திருந்தார்? கலியுகம் வந்தவுடன் முன்னிருந்த ஸகல வஸ்துக்களின் ஸாரங்களும் எங்கே போயின? மிகுந்த தயையுள்ள ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் ஏன் பார்த்திருந்தார்? என்று கேட்டாள். அதைக்கேட்டு நான் பின்வருமாறு சொன்னேன்: ஸ்ரீ கிருஷ்ணபகவான் பூமியில் இருந்து வைகுண்டம் சென்ற தினத்திலேயே உலகத்தில் கலி வந்துவிட்டான். அப்பொழுது அரசனாக இருந்த பரீக்ஷித்து திக்விஜயம்

செய்துவரும் காலத்தில் வழியில் கலியைக் கண்டார் அவனும் அவரை சரணம் அடைந்தான்.

அவர் தவம், யோகம், சமாதி ஆகிய இவைகளால் அடையக்கூடாத உத்தமமான பிரயோசனம் பகவானுடைய நாமங்களை பஜனை பண்ணுவதனால் இக்கலியில் எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது என்று நினைத்து கலியுகத்தில் பிறக்கும் மனிதர்களுடைய ஸௌக்கியத்தின் பொருட்டே கலியைக் கொல்லவில்லை. கெட்ட காரியங்களைச் செய்வதனால் வஸ்துக்களுடைய ஸாரம் போய்விட்டது. ப்ராஹ்மணர்கள் ஒவ்வொரு வீட்டிலும் அரிசிக்கு ஆசைப்பட்டு பாகவத கதையைச் சொல்ல ஆரம்பித்ததால் கதையின் ஸாரம் போய்விட்டது. மேலும் ப்ராஹ்மணர்கள் மிக்க கோரமான பல காரியங்களையும் செய்து நாஸ்திகர்களாக (பரலோகத்தில் சிரத்தை இல்லாதவர்களாக) ஒவ்வொரு தீர்த்தக் கரைகளில் வஸிப்பதால் தீர்த்தத்தின் ஸாரம் போய்விட்டது. காமம், கோபம், லோப விஷயங்களில் ஆசை ஆகிய இவைகளால் கலங்கிய மனம் உள்ளவர்கள் தவம் செய்வதால் தவத்தின் ஸாரம் போய்விட்டது. மனிதர்கள் மனதை அடக்காமல் உலோபம் உம்பம் இவைகளை அடைந்து பாஷண்ட மதத்தை ஆசிரயித்தும் தியான யோகத்தின் ஸாரம் போய்விட்டது. வித்வான்களும் மோக்ஷத்தையடைய முயற்சியாமல் எருமைகள் போல் ஸ்திரீகளுடன் ரமித்து புத்திரர்களை உண்டு பண்ணுவதிலேயே சாமர்த்தியத்தை அடைந்திருக்கிறார்கள். பெரியோர் களுடைய சம்பிரதாயப்படியுள்ள விஷ்ணுபக்தி

ஒரிடத்திலும் இல்லை. இம்மாதிரி ஒவ்வோரிட ங்களிலும் வஸ்துக்களின் ஸாரம் போய் விட்டது. ஆனால் இது யுகத்தின் தர்மம். எவர் மீது குற்றஞ் சொல்லக்கூடும்? அதனால் தானே சமீபத்தில் இருக்கும் புண்டரீ காக்ஷன் (தாமரைக்கண்ணன்) இதை சகித்துக் கொண்டி ருக்கிறார் என்று சொன்னேன். இதனைக்கேட்டு அந்த பெண்ணானவள் "ஓ தேவ ரிஷியே! நீர் மிகவும் மேலானவர் என்னுடைய அதிர்ஷ்ட வசத்தால் நீர் இவ்விடம் வந்தீர். ஸாதுக் களுடைய தரிசனம் ஸகல சித்திகளையும் கொடுக்கும். தங்கள் உபதேசத்தால் ப்ரஹ்லாதர் என்பவர் மாயையைக் கடந்து ஆத்ம ஸ்வரூபத்தை அடைந்தவராக விளங்குகிறார். மேலும் தங்களுடைய கிருபையால் துருவர் என்பவர் சாஸ்வதமாகிய (துருவ) பதத்தை அடைந்தார். ஆகையால் ஸகல க்ஷேமத்தைக் கொடுப்பவரும் ப்ருஹ்மதேவரின் புத்திரருமாகிய தங்களை நமஸ்கரிக்கிறேன். என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள். அதனைக்கேட்டு நான் பின்வருமாறு சொன்னேன். "ஓ சிறு பெண்ணே! ஏன் கவலைப்படுகிறாய்? ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரை மலர்போன்ற பாதங்களை இடைவிடாது தியானஞ்செய்: துக்கம் ஒருபோதும் நேரிடாது. துச்சாதனன் முதலியவர்களால் செய்யப்பட்ட உபத்திரவித்திலிருந்து திரௌபதியைக் காப்பாற்றினார். கோப ஸ்திரீகளை ஸம்ரக்ஷித்தார். அவர் இப்பொழுது தேசாந்திரம் போகவில்லை. உன்னிடத்தில் தமது ப்ராணனைக்காட்டிலும்

விசேஷமான ப்ரியம் வைத்திருக்கிறார். பக்தியாகிய உன்னால் அழைக்கப்பட்டு அவர் நீசர்களுடைய வீட்டுக்கும் வருகிறார். கிருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம் இம்மூன்று யுகங்களிலும் முறையே ஸத்யம், ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகள் மோக்ஷத்துக்கு ஸாதனங்களாக இருந்தன. இக்கலியுகத்தில் பக்தி மாத்திரத்தாலேயே மோக்ஷம் கிடைக்கிறது; ஆனது பற்றியே ஞான ஸ்வரூபியாகிய பகவான் உனக்கு சரீரத்தை உண்டு பண்ணினார். பின்பு நீ ஒருக்கால் இரு கைகளையும் கூப்பிக்கொண்டு நான் என்ன செய்யவேண்டும் என்று பகவானைக் கேட்டாய். அப்பொழுது அவர் என் பக்தர்களை போஷிக்க வேண்டும் என்று ஆக்ஞாபித்தார். நீயும் அதனை ஒப்புக் கொண்டாய். அதனால் பகவான் சந்தோஷித்து முக்தியை உனக்கு ஊழியப் பெண்ணாக இருக்கும்படி செய்தார். பின்னும் ஞானம், வைராக்கியம் என்ற இவர்களை உன்னிடம் ஒப்படைத்தார். பின்பு நீ வைகுண்டத்தில் உன்னுடைய நிஜ ரூபத்துடன் இவர்களை போஷித்து வந்தாய். பூமியில் பக்தி விருத்தியாக் வேண்டியதற்காக சாயா ஸ்வரூபமயமான ரூபத்துடன் முக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய இவர்களுடன் பூமிக்கு வந்தாய். கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் ஆகிய இம் மூன்று யுகங்களிலும் மிகுந்த ஆனந்தத்துடன் இருந்தாய். கலியில் முக்தி என்னும் பெண் பாஷண்டர்களாகிய வியாதியால் மிகவும் குறைந்துவிட்டாள். அவள் உன்னுடைய அனுமதியினால் வைகுண்டத்துக்கு மறுபடியுஞ் சென்றாள்..

உன்னால் நினைக்கப்படும் போதெல்லாம் வைகுண்டத்திலிருந்து வருவதும் போவதுமாக இருக்கிறாள். ஞானம், வைராக்கியம் இவ்விருவர் களும் புத்திர சிநேகம் கொண்டு உன்னால் காப்பாற்றப்பட்டும், இக்கலியில் ஜனங்கள் அவர்களை உபேஷித்து விட்டபடியால் வயது சென்றவர்களாகி விட்டார்கள். ஆனாலும் உன்னுடைய கவலையை நான் போக்கடிக்கிறேன். இக்கலியுகத்துக்குச் ஸமமான யுகம் வேறில்லை. இந்த யுகத்திலும் ஒவ்வொரு ஜனங்கள் இடத்திலும் உன்னை ஸ்திரமாக இருக்கும்படி செய்கிறேன். அப்படிச் செய்யாவிடில் நான் விஷ்ணு பக்தன் அல்ல. கலியில் முக்கிய பாவிகளான ஜனங்களும் பகவத் பக்தியை பெற்று வைகுண்டத்தை அடைகிறார்கள். யமன், பிசாசங்கள், ராக்ஷதர்கள், அசுரர்கள் ஆகிய இவர்கள் பக்தி உள்ளவர்களை உபத்திரவிக்க மாட்டார்கள். பக்தியால் பகவான் வசப்படுவது போல தவம், வேதம், ஞானம், நல்லகர்மா இவைகளால் ஸ்வாதீனப் படுவதில்லை. அந்த விஷயத்தில் புண்ணியம் செய்தால் தான் பக்தி பண்ணவேண்டுமென்ற விருப்பமுண்டாகும்.கலியில் பக்தியே மேலானது. பக்தியை நிந்தித்ததால் துர்வாஸர் துக்கத்தை அடைந்தார். அனேக விரதங்களாலும், புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் பண்ணுவதாலும், போகங்களாலும், யாகங்களாலும், முக்தியைக் கொடுக்கக்கூடியது, என்று சொன்னேன். "இதனைக் கேட்டு பக்தியாகிய அந்தப்பெண் என்னை நோக்கி "ஓ நாரதரே நீர் மிகவும் மேலானவர். உம்மிடத்தில் எனக்கு மிகுந்த பிரீதி

உண்டாகி யிருக்கிறது. உம்மை ஒருபொழுதும் விடமாட்டேன். உம்முடைய மனதில் எப்பொழுதும் வசிப்பேன். தங்களுடைய அனுக்கிரஹத்தால் என் கவலை தீர்ந்துவிட்டது. ஆனாலும் என்னுடைய இந்த புத்திரர்களுக்கு மூர்ச்சை தெளிய வில்லை. இவர்களை எழுப்பிவிடும்'' என்று வேண்டிக் கொண்டாள்.

அப்பொழுது எனக்கு அவளிடத்தில் தயை உண்டாயிற்று. பின்பு நான் அவ்விருவர்களுடைய காதில் உபநிஷத் வாக்கியங்களையும் கீதா வாக்கியங் களையும் சொல்லி ''ஓ ஞானமே விழித்துக்கொள். ஓ வைராக்கியமே எழுந்திரு'' என்று இரைந்து சொன்னேன். அப்பொழுது அவர்கள் கொட்டாவி விட்டுக்கொண்டு எழுந்து இருந்தார்கள். ஆனாலும் பசி, தாகம் முதலிய வற்றால் வருத்தப்பட்டு மறுபடியும் படுத்துத் தூங்க யத்தனித்தார்கள். அது கண்டு நான் என்ன செய்கிறது என்று பகவானை த்யானஞ் செய்தேன். அப்பொழுது ''ஓ மஹர்ஷியே! ஏன் விசனப்படுகிறீர். புண்ணிய கர்மாக்களை அனுஷ்டிப்பீர் ஆனால், இவர்களுடைய தூக்கமும் கிழத்தனமும் நீங்கும். அந்தக் கர்மங்களை சில ஸாதுக்கள் உபதேசிப்பார்கள். அதனால் பக்தியானது உலகம் முழுவதும் பரவிவிடும் என்று ஆகாசத்தில் இருந்து ஒரு தொனி உண்டாயிற்று. அதனை நானும் மற்றவர்களும் கேட்டு ஆச்சரியம் அடைந்தோம். பின்பு ஆகாச வாணியால் சொல்லப்பட்டபடி எப்பொழுது, எந்தவிடத்தில் எவர்கள் எந்த கர்மங்களை நமக்கு உபதேசிப்பார்களோ என்று நான்

யோசித்து ஞானம், வைராக்யம் இவ்விருவர் களையும் அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு ஒவ்வொரு புண்ய தீர்த்தங்களுக்கும் சென்று இவ்விஷயத்தைப் பற்றி ஒவ்வொரு மஹர்ஷி களையும் கேட்டுக் கொண்டே சஞ்சரித்தேன். ஒருவரும் எந்தக் கர்மாவை அனுஷ்டிக்க வேண்டும் என்று நிச்சயமாகச் சொல்லவில்லை. சிலர் இதைச் செய்ய முடியாத காரியம் என்றும், பின்னும் சிலர் இதனைத் தெரிந்து கொள்வதே சிரமம் என்றும் சொன்னார்கள். சிலர் பேசாமலே இருந்துவிட்டார்கள். சிலர் இதனைக் கேட்டு இருந்த இடத்தைவிட்டே ஓடிப் போனார்கள். மேலும் எல்லா வேதங் களாலும், கீதா வாக்கியங்களாலும் விழித்துக் கொள்ளாத ஞான வைராக்கியங்கள் வேறு எந்த உபாயத்தால் எழுந்திருக்கப் போகிறார்கள்.? நாரத மஹர்ஷியாலும் அறியப்படாத விஷயம் மற்ற மஹர்ஷிகளால் சொல்லமுடியுமா? என்று ஜனங்கள் ரகசியமாக பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். அப்பொழுது எனக்கு யாதொரு நிச்சயமும் உண்டாக வில்லை. ஆனாலும் பதரிகா வனம் சென்று தவம் செய்யத் தொடங்கினேன். அவ்விடத்தில் மிக்க தேஜஸ் விகளான ஸனகர் முதலிய யோகிகளைக் கண்டேன். கண்டவுடன் விசேஷ ஆனந்தம் அடைந்து அவர்களை நோக்கி ஓ யோகி சிரேஷ்டர்களே! நான் செய்த பாக்ய விசேஷத்தால் தங்களைக் கண்டேன்.

நீங்கள் ஐந்து வயதுள்ளவர்களானாலும் முன்னோர்களுக்கும் முந்தியவர்கள். எப்பொழுதும்

வைகுண்டத்திலேயே இருப்பவர்கள். ஸ்ரீ மஹா விஷ்ணுவின் லீலைகளை கானஞ் செய்பவர்கள். எப்பொழுதும் பகவானையே சரணமடைந்தவர்கள். ஆகையால் ஜரை (கிழத்தனம்) உங்களை உபத்திரவிப் பதில்லை. ஆகையால் என்னை அனுக்கிரஹிக்க வேண்டும். ஆகாச வாணியால் சொல்லப்பட்ட கர்மங்கள் எவை? பக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகள் எல்லா வர்ணாச்சரமங்களிலும் ஸ்திரமாய் வசிக்கும்படி என்ன உபாயம் செய்யலாம் அதனைச் சொல்லவேண்டும் என்று கேட்டேன். அப்பொழுது அவர்கள் என்னைப் பார்த்து ஓ தேவரிஷியே இவ்விஷயத்தில் லகுவான உபாயமொன்றிருக்கிறது. நீர் வைராக்கியத்தை அடைந்தவர்களுள் மேலானவர். பகவத் பக்தர்களுட் சிறந்தவர். ஆகையால் பக்தியை உலகத்தில் ஸ்தாபிப்பதற்கு நீர் தகுதியானவரே அனேக மகரிஷிகள் அனேக மார்க்கங்களை காட்டியிருக்கிறார்கள். ஆனாலும் அவைகள் பெரும்பாலும் ஸ்வர்க்கத்தையே கொடுக்கக் கூடியவைகளாகவிருக்கின்றன. மேலும் ச்ரமப்பட்டு செய்யக் கூடியவைகளாயுமிருக்கின்றன; மோக்ஷத்தை கொடுக்கும் மார்க்கம் மிகவும் ரஹஸ்யமானது. அதனை உபதேசிப்பவர்கள் கிடைப்பதரிது. ஆகாச வாணியால் சொல்லப்பட்ட கர்மம் யாதெனில் ஜ்ஞான யக்ஞமேயாம். சிலர் திரவ்ய யஜ்ஞத்தை (யாகம்) அனுஷ்டிக்கிறார்கள். பின்னும் சிலர் தபோ யஜ்ஞத்தையும் மற்றும் சிலர் யோக யஜ்ஞத்தையும், இன்னும் சிலர் ஸ்வாத்யாய யக்ஞத்தையும் (வேதங்களை அத்யயனம் செய்வது) அனுஷ்டிக்கிறார்கள். இவைகளில் ஜ்ஞான யஜ்ஞமே

மேலானது. அது சுகரால் பரீக்ஷித் மஹாராஜனுக்கு உபதேசிக்கப்பட்ட பாகவதத்தைக் கேட்பதேயாகும். அந்தப் பாகவத சாஸ்த்ரத்தைக் கேட்பதால் பக்தி ஜ்ஞான வைராக்கியங்களுக்கு நேர்ந்த கஷ்டமும் விலகும். மேலும், சிங்கத்தின் சப்தத்தைக் கேட்ட செந்நாய்கள் போலப் பாகவதக் கதையைக் கேட்ட மாத்திரத்தில் கலியின் தோஷங்கள் யாவும் ஓடுகின்றன. பக்தியானது, ஜ்ஞானம் வைராக்யம் ஆகிய இவைகளுடன் ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு ஜனங்களிடத்திலும் நன்றாய் ப்ரகாசிக்கும் என்று உபதேசித்தார்கள்.

அப்பொழுது நான் அவர்களைப் பார்த்து "ஓ ப்ரம்ஹ தேவரின் குமாரர்களே! வேதாந்த வாக்யங்களாலும், கீதா பாடத்தாலும் விழித்துக் கொள்ளாத அவர்கள் பாகவத பாடத்தால் எழுந்திருப்பார்களா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் பின்வருமாறு விடை சொன்னார்கள். ஸ்ரீமத் பாகவத கதையானது உபநிஷத்துக்களின் ஸாரத்தால் செய்யப்பட்டதாகையால் இது மிகவும் மேலானது. பாலில் நெய் இருந்தாலும் அது எப்படி தனியாகத் தெரியவில்லையோ அதுபோல வேதத்தில் ஸாரமானது எங்கு இருந்தாலும் நன்றாய்ப் பிரகாசிக்கவில்லை. ஆனாலும், அந்தப் பாலைக் காய்ச்சிக் கடைந்து அதிலிருந்து தனியாக நெய் எடுக்கப்பட்டால் அது தேவர்களுக்கு மிகவும் திருப்தியை உண்டு பண்ணுகிறது. தவிரவும் கரும்பில் அடி முதல் நுனி வரையில் சர்க்கரை இருந்தாலும் அதனைப் பிரித்தெடுத்த பிறகுதான் புஜிக்கக்

கூடியதாகிறது. அது போலவே வேதத்திலுள்ள ஸாரங்கள் எல்லாவற்றையும் எடுத்து ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்டது. இது பக்தி, ஞானம், வைராக்யம் இவைகளை உலகத்தில் ஸ்தாபிப்பதற்காகவே வெளியிடப்பட்டது. முன் னொருகால் ஸ்ரீவேதவ்யாஸ மஹர்ஷி ஸ்ரீமத் மஹாபாரதத்தைச் செய்தும், வேதங்களை அத்யயனஞ் செய்தும் உபநிஷத்துக்களின் உண்மையான அர்த்தத்தைத் தெரிந்து கொண்டும், பகவத் கீதையைச் செய்தும், அக்ஞானம் விலகாமல் தாபமடைந்து ஸரஸ்வதி நதிக்கரையில் கவலைப் பட்டுக் கொண்டிருக்கும்பொழுது உம்மால் நான்கு ச்லோகங்கள் உபதேசிக்கப்பட்டன; அவைகளைக் கேட்டு அவர் உடனே கவலை தீர்ந்தவராக, அவைகளைக் கொண்டு பாகவதத்தைச் செய்தாரல்லவா ?அப்படி இருக்க பாகவதத்தை கேட்பதால் துக்கம் விலகுமாவென்று நீரே கேட்பது மிகவும் ஆச்சர்யமாக விருக்கிறது' என்று சொன்னார்கள். பின்பு நான் அவர்களைக் கொண்டாடி, அவர்களை நோக்கி இந்த ஞான யஜ்ஞத்தை எவ்விடத்தில் செய்யலாம் ? எவ்வளவு நாட்களில் பாகவதம் கேட்கப்படவேண்டும் ? அதன்முறை எப்படி ? பாகவத சாஸ்த்ரத்தின் மஹிமையை ஸகல வேதங்களுமறிந்த தாங்களே சொல்லவேண்டும்' என்று கேட்டுக் கொண்டேன்.

அப்பொழுது அவர்கள், "ஓ நாரதரே! கங்கையின் ஸமீபத்தில் ஆனந்த வனமென்பது ஒன்று உண்டு. அது மிகவும் ஏ்காந்தமான இடம். ஜலஸௌக்யமுள்ளது; அனேக மஹர்ஷிகள்

அவ்விடத்தில் வஸிக்கிறார்கள்' அவ்விடத்தில் வஸிக்கும் பறவை முதலியவைகளுக்கும் இயற்கையான விரோதம் இல்லை. அவ்விடத்தில் பாகவத கதையைச சொல்லுவதாகிய ஜ்ஞான யஜ்ஞத்தை நீர் நடத்த வேண்டும், அவ்விடத்திற்கு பக்தியானவள் தன் புத்ரர்களுடன் வருவாள். அந்தக் கதையைக் கேட்ட மாத்திரத்தில் அவர்கள் யௌவன வயஸை அடைவார்கள்' என்று சொல்லி என்னை அழைத்துக் கொண்டு பாகவத கதையைக் கேட்பதற்காக ஆனந்தவனம் சென்றார்கள். அப்பொழுது இதனைக் கேட்டுப் பூலோகம், தேவலோகம், ப்ரஹ்மலோகம் ஆகிய இவ்விடங்களிலிருந்து பகவத் பக்தர்கள் எல்லோரும் ஆனந்தவனம் சென்றார்கள். அன்றியும் ப்ரகு, வஸிஷ்டர், ச்யவனர், கௌதமர், மேதாதிதி, தேவலர், தேவராதர், பராசுராமர், விச்வாமித்ரர், சகலர், மார்க்கண்டேயர், பிப்பலாதர் முதலிய மஹர்ஷிகளும், வ்யாஸர், பராசரர் முதலிய யோகிகளும், சாயாசுகர், ஜாஜலி, ஜஹ்னு முதலியவர்களும் தங்கள் தங்களுடைய ஸ்திரீகள், புத்ரர்கள், சிஷ்யர்கள் முதலியவர்களுடன் கங்காதீரஞ் சென்றார்கள். மேலும் ஆறு சாஸ்த்ரங்களும், பதினேழு புராணங்களும், நான்கு வேதங்களும், கங்கை முதலிய நதிகளும், புஷ்கரம் முதலிய குளங்களும், க்ஷேத்ரங்களும் பத்து திக்குக்களும், தண்டகை முதலிய வனங்களும், மேரு முதலிய மலைகளும் திவ்ய சரீரமுள்ளவைகளாய்க் கதையை கேட்பதற்காக அவ்விடம் வந்து கூடின. மேலும் தேவர்கள், கந்தர்வர்கள், கின்னரர்கள் ஆகிய இவர்களும்

வந்தார்கள். எல்லோருக்கும் ஆசார்யர்களான ஸனகர் முதலியவர்களை ப்ரகுமஹர்ஷி தாம் நேரில் அழைத்து வந்தார். அப்பொழுது அந்த ஜ்ஞான யஜ்ஞத்தில் நான் தீக்ஷை செய்து கொண்டு அந்தக் குமாரர்களுக்கு ஆஸனங் கொடுத்து நமஸ்காரஞ்செய்து அவர்களைப் பூஜித்தேன். அங்கே ஒருபக்கத்தில் மஹர்ஷிகளும் மற்றொரு பக்கத்தில் தேவகணங்களும், இன்னொரு பக்கத்தில் வேதம் உபநிஷத் முதலியவைகளும், மற்றொரு பக்கத்தில் தீர்த்தங்களும், இன்னொரு பக்கத்தில் ஸ்திரீகளும், தங்களுக்குத் தகுந்த ஆஸனங்களில் உட்கார்ந்தார்கள். 'ஜய்' என்றும், 'நமஸ்காரம்' என்றும் சப்தங்கள் மிகுதியா யுண்டாயின, சங்க வாத்தியங்கள் முழங்கின. ஆகாசத்தில் தேவர்கள் விமானங்களிலிருந்து கல்பக விருக்ஷத்தின் புஷ்பங்களின் மழையைப் பெய்தார்கள். இப்படி எல்லோரும் ஒரே மனமாய் பாகவத மாஹாத்மியத்தைக் கேட்க விரும்பியிருக்கும் பொழுது என்னை உத்தேசித்து ப்ரஹ்ம குமாரர்கள் பின்வருமாறு சொன்னார்கள்: 'ஸ்ரீமத் பாகவத கதையை ஜனங்கள் எப்பொழுதும் கேட்வேண்டும். அதனைக் கேட்டமாத்திரத்தால் பகவான் மனதில் ஆவிர்ப்பவிக்கிறார். இது பதிமிண்ணாயிரம் க்ரந்தங்களடங்கியது. பன்னிரண்டு ஸ்கந்தங்கள் உள்ளது. பரிக்ஷித்து மஹா ராஜனுக்கு சுகரால் உபதேசிக்கப்பட்டது. இதுவே மோக்ஷத்தை கொடுக்கக்கூடியது. மற்றப் பலவையான சாஸ்த்ரங்கள் புத்திக்கு மயக்கத்தை யுண்டுபண்ணுகின்றன. எந்த வீட்டில் பாகவத கதை படிக்கப்படுகிறதோ

அதுவே புண்ய க்ஷேத்ரமாகும், அச்வமேதயாகங்கள், நூறு வாஜபேயங்கள் இவைகளை ஆயிரம் செய்தாலும், அதனாலுண்டாகும் புண்யமானது பாகவத கதையைப் படிப்பதனா லுண்டான ஸுகிருதத்தின் 16ல் ஒரு பாகத்திற்கும் ஸமமாகாது. ஒவ்வொரு நாளும் பாகவதத்தில் ஒரு ச்லோகத் தையாவது அதன் பாதியையாவது அவசியம் படிக்க வேண்டும். ஒவ்வொரு வேதங்களின் முதல் மந்த்ரங்கள் வேத மாதாவாகிய காயத்ரீ மஹாமந்தரம், புருஷ ஸூக்தம், வேதங்கள், பாகவதம், த்வாதசாக்ஷரம், ஸூர்யன், ப்ரயோகம், ஸம்வத்ஸரமாகிய காலம், ப்ராஹ்மணர்கள், அக்னிஹோத்ரம், காமதேனு, த்வாதசி திதி, துளஸி, வஸந்தருது, புருஷோத்தமராகிய நாராயணர், ஆகிய இவர்களுக்குள் தாரதம்யமில்லை. எவன் ஒவ்வொரு நாளும், பாகவதத்தை படித்து அதன் அர்த்தத்தை தெரிந்துகொள்ளுகிறானோ, அவனுக்கு கோடி ஜன்மங்களில் செய்யப்பட்ட பாபங்களும் நிவர்த்தியாகின்றன. தவிரவும், மரண காலத்தில் இந்தச் சுக சாஸ்த்ரத்தைக் கேட்பதால் வைகுண்டத்தையடைவார்கள். இந்தப் பாகவத புஸ்தகத்தை ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்தில் வைத்து விஷ்ணுபக்தர்களுக்குத் தானம் செய்கிறவன் ஸ்ரீகிருஷ்ணனுடைய ஸாயுஜ்ய பதத்தையடைகிறான். பிறந்தது முதல் ஒரு பொழுதாவது பாகவத கதையைக் கேட்காதவன் சண்டாளனுக்கும், கழுதைக்கும் ஸமானனென்று சொல்லப்படுகிறான். தவிரவும், அவனை பக்தர்கள் உயிருள்ள பிணமென்றும், பூமிக்குச்சுமையாயிருப்பவனென்றும் சொல்லுகிறார்கள். இந்த கதையை இந்திரியங்களை

ஜயித்து, மனத்தை அடக்கி வெகுநியமத்துடன் கேட்கவேண்டுமாதலால் அவ்வளவு நியமத்தை அனுஷ்டிப்பது இக்கலி காலத்து ஜனங்களால் முடியாததாகுமென்றும், இவர்களுக்கு ஆயுஸ் மிகக் குறைந்ததென்றும் யோசித்து சுகர் ஏழு நாளில் இதைக் கேட்கவேண்டுமென்று ஒரு விதி நியமித்திருக்கிறார்.

அந்த விதிப்படி ஏழு நாளில் பாகவதத்தை கேட்பதனால் ஸகல யாகங்கள் செய்த பலன்களும், ஸகல வ்ரதங்களை அனுஷ்டித்த பலன்களும், ஸகல தீர்த்தங்களில் ஸ்நானம் செய்த பலன்களும் உண்டாகும் என்று எனக்கு உபதேசித்தார்கள் என்று ஸூதர் சௌனகர் முதலிய மஹர்ஷி களுக்குச் சொன்னார். இதைக் கேட்டுச் சௌனகர், பாகவத புராணம் மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியதென்றும், மற்றவைகளைக் காட்டிலும் மேலானதென்றும், தாங்கள் சொல்லக் கேட்டு மிகவும் ஆச்சர்யமடைந்தோம். அவ்வளவு மேன்மை அந்தச் சாஸ்த்ரத்திற்குக் கிடைத்த காரணமென்ன? சொல்ல வேண்டும் என்றார். அதனைக் கேட்டு ஸூதர் அவரை நோக்கிச் சொன்னார். "ஓ சௌனகரே! ஸ்ரீ கிருஷ்ண பகவான் பூமியை விட்டுத் தம் உலகம் போகும் முன்னிலையில் உத்தவர், பகவானை நோக்கித் தாங்கள் வைகுண்டம் சென்றால் பக்தர்களை யார் ஸம்ரக்ஷிப்பார்? கலியுகத்தில் ஜனங்கள் துஷ்டர்களாகிவிடுவார்கள்; நிர்குணமாகிய உம்முடைய ஸ்வரூபத்தை ஜனங்கள் உபாஸிப்பது மிகவும் கஷ்டம். அதற்காகவே தாங்கள் பூமியில் அவதாரஞ் செய்திருக்கிறீர்கள். ஆகையால்

இவ்வுலகத்திலேயே வஸிக்க வேண்டுமேயொழிய மேலுலகம் செல்லக் கூடாது என்று வேண்டிக் கொண்டார். இதனைக் கேட்டு பகவான், 'பக்தர்களுக்காக நாம் செய்யவேண்டியதென்ன? என்று யோசித்து? தேஜோ ரூபியாக ஸ்ரீமத் பாகவதத்தில் ப்ரவேசித்தார். அதனாலேதான் அது எல்லாவற்றிலும் மேலானது. அதனைக் கேட்பதாலும், படிப்பதாலும் துக்கம், தாரித்ரியம், பாபம் முதலாகிய இவைகள் நிவர்த்தி யாகின்றன. ஏழு நாளில் இந்த க்ரந்தம் முழுவதையும் விதிப்படிக் கேட்டால் தேவர்களாலும் தாண்ட முடியாத விஷ்ணுவின் மாயையைக் கடந்து ஸ்வரூபஜ்ஞானத்தை அடையலாம். 'ஓ சௌனகர் முதலியவர்களே! இப்படி பாகவதத்தின் மஹிமையை வர்ணித்தவுடன் ஆனந்தவனத்தில் பக்தியின் புத்ரர்களான ஜ்ஞான வைராக்கியர்கள் மிக்க பலத்துடனும் அழகான சரீரத்துடனும் எழுந் திருந்தார்கள். பக்தியும், ஹே கிருஷ்ண!, ஹே கோவிந்த! ஹே முராரே! என்று சொல்லிக் கொண்டு விசேஷ சந்தோஷமடைந்தாள். பின்னும் அவர்களுடைய ஆஜ்ஞையால் பகவத்பக்தருடைய மனதில் வஸித்து வந்தாள். மேலும் அவ் விடத்தில் ஸ்ரீமந்நாராயண மூர்த்தி நீருண்ட மேகம் போலக் கறுத்த திருமேனியோடு நான்கு கைகளிலேயும் சக்ரம் முதலிய ஆயுதங்களை ஏந்திப் பீதாம்பரத்தையுடுத்திக் கொண்டு துளஸி மாலையால் அலங்கரிக்கப் பட்டுக் கோடி மன்மதனைப் போல அழகு உள்ளவராகி பக்தர்களுக்கு தர்சனங் கொடுத்தார். அப்பொழுது எல்லோரும் பரமானத்தத்தை யடைந்து பகவானை ஸ்தோத்ரம் செய்தார்கள். மேலும் ஸ்ரீமத் பாகவதமே மேலானதென்றும்

தெரிந்து கொண்டார்கள்.

ப்ராஹ்மணர்களுடைய பொருள்களை அபஹரிப் பதாகிய மஹாபாபங்களைச் செய்தவர்களும் ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்பதனால் பரிசுத்தராகி விடுகிறார்கள் என்பதில் ஸந்தேக மில்லை. துங்கபத்ரா நதிக்கரையில் ஒரு பட்டணத்தில் ஆத்மதேவரென்ற ஒரு ப்ராஹ்மண ச்ரேஷ்டரிருந்தார். அவர் ஸகல வேதங்களையும் அத்யயனஞ் செய்தவர். ஸூர்யன் போன்ற தேஜஸ் உள்ளவர். தன்னுடைய வர்ணாச்ரம தர்மங்களைக் குறைவின்றி நடத்தி வருபவர். ஆனால் அவர் மிகுந்த ஏழை. அவருக்குத் துந்துலீ என்ற பத்னியொருத்தியுண்டு. அவள் மிகவும் அழகுள்ளவள், மேலான குலத்தில் பிறந்தவள், ஆனாலும் வெகுவாகப் பேசுகிறவள், வீட்டு வேலைகளில் மிகவும் ஸாமார்த்திய முள்ளவள். சண்டையில் மிகுந்த ப்ரியமுள்ளவள். தான் சொன்னதே சரியென்று ஸ்தாபிக்கும் ஸ்வபாவமுள்ளவள். அந்தத் தம்பதிகளிருவர்களும் பல வகையான தர்மங்களை அனுஷ்டித் தார்கள். அப்படியும் அவர்களுக்குப் பெண்ணாவது பிள்ளையாவது பிறக்கவில்லை. அதனால் கவலையடைந்து அந்த ப்ராஹ்மணன் வீட்டை விட்டுக் காட்டுக்குச் சென்றார். அவ்விடத்தில் மத்யானகாலத்தில் ஒரு குளத்தில் ஸ்நானம் பண்ணித் தாஹத்தைத் தீர்த்துக் கொண்டு தெய்வச் செயலால் அவ்விடம் வந்த ஒரு ஸன்யாசியின் அருகிற் சென்று அவரை நமஸ்கரித்துப் பெருமூச்சு விட்டு அவருடைய பக்கத்தில் நின்றார். அவரைப் பார்த்து

ஸன்யாஸியானவர், ஓ ப்ராஹ்மண! நீர் ஏன் துக்கப்படுகிறீர் என்று கேட்டார். அதனைக் கேட்டுப் ப்ராஹ்மணன் அந்த ஸன்யாஸியை நோக்கி, எனக்குப் புத்திரனில்லை என் வீட்டில் இருக்கும் பசுவும் மலட்டாயிருக்கிறது, என்னால் வைத்து வளர்க்கப்பட்ட மரமும் புஷ்பிக்கிறது மில்லை காய்க்கிறதுமில்லை, என் வீட்டிற்கு கொண்டு வந்த பழங்களும் காய்ந்து போகின்றன. குழந்தைகளிலில்லாமலும், பாக்யமில்லாமலும் இருக்கும் நான் பிழைத்திருந்து என்ன ப்ரயோஜனம் என்று சொல்லி மிகவும் கதறினார்.

அதனைக் கேட்டு அந்த ஸன்யாஸியானவர் அவருடைய நெற்றியில் எழுதப்பட்டிருக்கும் அக்ஷரங்களை வாசித்துப் பார்த்து ப்ராஹ்மணனை நோக்கி, ஓ ப்ராஹ்மண! உமக்கு ஏழு ஜன்மம் வரையில் பிள்ளை பிறக்காது, ஸகரர் என்னும் ராஜன் புத்ர சோகத்தை அடைந்தாரல்லவா? ஆகையால் பிள்ளை பிறக்கவில்லை யென்று நீர் வருத்தப்படுவது நியாயமில்லை. ஆகையால் குடும்பத்தின் ஆசையை யொழித்து ஸன்யாஸஞ் செய்துகொள்ளும் என்றார். அதனைக் கேட்டும் ப்ராஹ்மணன் கொஞ்சமேனும் அதற்கு ஸம்மதிக் காமல் விஷய ஸுகத்திலேயே ஆசைப்பட்டு பிள்ளை பிறக்கும்படி அனுக்ரஹிக்க வேண்டுமென்று பலவாறாக வேண்டிக் கொண்டார். ஸன்யாஸி யானவர்; "ஓ ப்ராஹ்மண! தெய்வச் செயலை மாற்றுவதற்கு யாரால் முடியும்? அதனை மாற்ற முயன்றால் துக்கத்தையே அடையும்படி நேரிடும். ஆகையால் உமக்கு புத்ரஸுகம்

கிடைக்காது. ஆயினும் உமக்கு ஒரு பழத்தைக் கொடுக்கிறேன். இதனை உம்முடைய பத்னியிடம் கொடுத்து புஜிக்கும்படி செய்யும். உத்தமமான புத்ரன் பிறப்பான் என்று சொல்லிப் பழத்தைக் கொடுத்தார். ப்ராஹ்மணன் அதைப் பெற்றுக் கொண்டு தம்முடைய வீட்டிற்கு வந்து தமது பத்னியிடம் கொடுத்து அவளை நோக்கி, இது முதல் ஒரு வருஷம் வரையில் ஒருவேளை போஜனம் செய்துகொண்டு, ஸத்யம், சௌசம், தயை, இவைகளில் தவறாமல் நியமத்துடன் நீ இருக்கவேண்டும். இப்பழத்தை புஜி. நல்ல பிள்ளை பிறக்கும், என்று சொல்லிவிட்டு, கிராமாந்தரம் போய்விட்டார். அந்தத் துந்துலீ என்பவள் தன்னுடைய தோழிகளின் முன்பாக இவ்விஷயங்கள் எல்லாவற்றையும் சொல்லி வருத்தப்பட்டாள். எப்படியென்றால் இந்தப் பழத்தை நான் புஜித்த மாத்திரத்தில் வயிற்றில் கர்ப்பம் உண்டாய்விடும். வயிறு பெருத்துவிடும். ஆசாரம் குறைந்துவிடும். தேஹத்தில் வலிமை குறையும். வீட்டு வேலைகளை எப்படிச் செய்ய முடியும்? வயிற்றுக்குள்ளிருக்கும் கர்ப்பமானது வெளி வருவது மிகவும் கஷ்டம், ஒருக்கால் சிசு வயிற்றில் குறுக்காக விழுந்துவிட்டால் நான் உயிரையிழக்கும்படி நேரிடுமே! ப்ரஸவ காலத்தில் உண்டாகும் உபத்ரவத்தை நான் எப்படி ஸஹிப்பேன்? இந்த ஒருவருஷம் நியமமா யிருப்பது மிகவும் கஷ்டம். நான் ப்ரஸவித் திருக்கும்பொழுது வீட்டிலிருக்கும் எல்லா தனங்களையும், பர்த்தாவின் ஸஹோதரியானவள்

அபஹரித்துவிடுவாள். ப்ரஸவித்தபிறகு குழந்தையைக் காப்பாற்றுவது மிகவும் கஷ்டம். ஆகையால், மலடியாகவாவது விதவையாகவாவது இருப்பதே மேலானதென்று நினைக்கிறேன். என்று சொல்லி அப்பழத்தை அவள் புஜிக்கவில்லை. பின்பு ப்ராஹ்மணன் தமது பத்னியை நோக்கிப் பழத்தை புஜித்தாயா என்று கேட்க அவள் புஜித்தேன் என்றும் அவருக்குச் சொன்னாள். இந்தச் சமயத்தில் அந்த துந்துலியின் ஸஹோதரி ஒருத்தி தெய்வச் செயலாய் அவள் வீட்டுக்கு வந்தாள். அப்பொழுது துந்துலீ அவளிடத்தில் இவ்விஷயம் முழுவதையும் சொன்னாள். அதைக் கேட்டு அவள் துந்துலியை நோக்கி நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். நான் இப்பொழுது கர்ப்பமாயிருக்கிறேன், நான் ப்ரஸவிக்கிற வரையில் நீ வீட்டிற்குள்ளேயே இருந்து கர்ப்பிணியாகயிருப்பதுபோலப் பிறருக்குச் சொல்லிக்கொண்டு இரு. உன் வீட்டிலிருக்கும் பணம் முழுவதையும், நீ என் புருஷனுக்கு கொடுத்துவிடுவாயானால், எனக்குப் பிறக்கும் குழந்தையை உனக்குக் கொடுத்து விடுகிறேன். உன் வீட்டில் வந்திருந்து, குழந்தையையும் வளர்க்கிறேன். இந்தப் பழத்தைப் பசுவுக்குக் கொடுத்து விடு, என்று சொன்னாள். அவளும் அப்படியே செய்தாள். பின்பு அவள் ப்ரஸவித்ததும் அந்தக் குழந்தையை அதன் தகப்பன் ரஹஸ்யமாகத் துந்துலியினிடம் கொடுத்தான். துந்துலியும் 'ஸுகமாய் ப்ரஸவித்தேன்' என்று தன்னுடைய பர்த்தாவிடம் தெரிவித்தாள். அந்த ஆத்மதேவர் மிகுந்த ஸந்தோஷமடைந்து

ஜாதகர்மம் முதலியவைகளைச் செய்தார். அப் பொழுது துந்துலியானவள் தனது பர்த்தாவை நோக்கி, 'ஸ்தனத்தில் பாலில்லை, எத்தனை நாள் அன்யர்களுடைய பாலைக் கொண்டு குழந்தையை வளர்க்க முடியும். என்னுடைய தங்கையின் குழந்தை இறந்து போய் விட்டதால் அவளுக்குப் பால் மிகுதியா யிருக்கிறது. அவளை வரவழைத்து வீட்டில் வைத்துக் கொண்டு குழந்தையை வளர்க்கும்படி செய்ய வேண்டும்' என்று சொன்னாள், அவரும் அதற்கு சம்மதித்து அப்படியே செய்தார். அந்தக் குழந்தைக்கு துந்துகாரி என்று பெயர் வைக்கப்பட்டது. அதற்குப்பின் மூன்று மாதம் கழித்து வீட்டிலிருந்த பசுவானது ப்ரஸவித்தது. நல்ல தேஜஸ்வியும், அழகுள்ளவனுமான புத்ரன் பிறந்தான். ஆனால் அக்குழந்தைக்கு காது மட்டும் பசுவின் காது போலிருந்தது, அதனால் அவனுக்கு கோகர்ணனென்னு பெயரிடப்பட்டது. அவன், வித்வானாயும், சுத்தனாயும், ஆசாரமுள்ளவனாயு மிருந்தான். துந்துகாரியோ மிகவும் துஷ்டனாகியும், திருடனாகியும், அசுத்தனாகியும், மஹா பாபியாகியுமிருந்தான். இப்படிச் சில காலம் சென்ற பிறகு துந்துகாரியானவன் தாஸிகள் இடத்தில் ஆசைப்பட்டுப் பணம் முழுவதையும் செலவழித்துத் தாய் தகப்பன் இருவர்களையும் அடித்து வீட்டிலிருக்கும் பாத்திரங்களையும் பிடுங்கிக் கொண்டு போனான். அப்பொழுது அவனுடைய தகப்பனாராகிய ஆத்மதேவர், அபுத்ரனாயிருப்பதே மேலானது; இந்தத்

துஷ்டப்பிள்ளையையடைந்து நான் மிகவும் கஷ்டப்படுகிறேன். என்னை இப்பொழுது யார் காப்பாற்றுவார்கள்? என்று கத்தினார். அப் பொழுது கோகர்ணன் ஸம்ஸாரத்தின் துக்கங்களை அவருக்குச் செவ்வையாக எடுத்துரைத்து வைராக்யத்தை உண்டுபண்ணினான். பின்பு அவர் புத்ரனுடைய உபதேசத்தால் வீட்டை விட்டுக் காட்டுக்குச் சென்று ஒவ்வொரு நாளும் பாகவதத்தில் பத்தாவது ஸ்கந்தத்தைப் படித்து அதனால் ஸ்ரீகிருஷ்ண ஸாயுஜ்யத்தையடைந்தார். பிறகு அந்தத் துந்துகாரியென்பவன், தாயாரை நோக்கி வீட்டில் பணம் எங்கேயிருக்கிறது? சொல்லு, இல்லாவிடில் உன்னை கொல்வேன், என்று அதட்டினான். அதனால் அவள் ஒருநாள் இரவில் ஒரு கிணற்றில் விழுந்து மரண மடைந்தாள். கோகர்ணனென்பவன் விஷயங்களில் ஆசையில்லாதவனாகித் தீர்த்தயாத்ரை செய்து கொண்டிருந்தான். துந்துகாரியென்பவன் வீட்டிலேயே ஐந்து தாஸிகளை வைத்துக் கொண்டு அவர்களைப் போஷிப்பதற்காக கெட்ட காரியங்களையே செய்து வந்தான். அந்தத் தாஸிகள் நகை வேண்டுமென்ற விருப்பத்தால் அவனை நிர்ப்பந்தித்தார்கள். அதற்காக அவன் தேசாந்தரம் சென்று நல்லவஸ்தரங்கள் நகைகள் முதலியவைகளைத் திருடிக் கொண்டு வந்து கொடுத்தான். இப்படி மிகுதியான பணத்தையும் நகைகளையும் இவன் திருடிக்கொண்டு வந்திருக் கிறான் என்று தெரிந்து அந்தத் தாஸிகள் ஒரு நாள் ராத்ரி இவன் இவ்வளவு வஸ்துக்களையும்

திருடிக்கொண்டு வந்திருப்பதனால் அரசனுடைய சேவகர்கள் இவ்விடம் வந்து நம்மை பிடித்துக் கொள்வார்களே என்று யோஜித்து ஒருவருக்கும் தெரியாமல் கயிறுகளால் இவனைக் கட்டி கழுத்தில் சுருக்கிட்டார்கள். அப்படியும் அவன் சீக்கிரத்தில் மரிக்கவில்லை. அப்பொழுது அவர்கள் அக்னியை அவன் முகத்திற்போட்டு உபத்ரவிக்க அவன் இறந்தான். பின்பு அவன் சரீரத்தை ஒருவருக்கும் தெரியாமல் ஓரிடத்தில் அடக்கம் செய்தார்கள். மறுநாள் துந்துகாரி எங்கேயென்று கேட்பவர்களுக்குப் பணம் ஸம்பாதிப்பதற்காக தேசாந்தரம் போயிருக்கிறானென்றும், ஒரு வருஷத்தில் திரும்பி வருவானென்றும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இறந்துபோன துந்துகாரி அவனுடைய பாபத்தால் ப்ரேத ஜன்மத்தையடைந்து வாயு சரீரத்துடன் அங்குமிங்கும் அலைந்து கொண்டு வெயில், குளிர், பனி, மழை இவைகளை ஸஹித்தும்; பசி, தாஹத்தால் துன்பத்தை யடைந்தும் மிகவும் துக்கித்துக் கொண்டிருந்தான். சில காலத்தில் கோகர்ணன் துந்துகாரி இறந்து போனானென்பதைக் கேள்விப்பட்டு அவனை உத்தேசித்து கயாக்ஷேத்திரத்தில் ச்ராத்தம் செய்ததுமின்றி ஒவ்வொரு தீர்த்தங்களிலும் அவனை உத்தேசித்துப் பிண்டதானம் முதலிய வைகளையும் செய்தான்.

பிறகு சில காலத்தில் தன்னுடைய பட்டணம் வந்து தன்னுடைய வீட்டின் திண்ணையில் அன்று ராத்ரிப் படுத்திருந்தான். அப்பொழுது

ப்ரேத ரூபியாயிருக்கும் துந்துகாரி, அவ் விடத்தில் படுத்திருக்கும் தன் பந்துவைப் பார்த்து, ஒருக்கால் ஆடுபோலவும், பின்னு மொருக்கால் யானை போலவும், எருமை போலவும், இந்திரன் போலவும், அக்னி போலவும், புருஷன் போலவும், பலவகையான ரூபத்தை எடுத்துக் கொண்டான். கோகர்ணன் அவனைப் பார்த்து, 'நீ, யார்? ப்ரேதமா அல்லது பிசாசமா அல்லது ராக்ஷஸனா? என்று கேட்டான். இதைக்கேட்டு விடை சொல்லமுடியாமல் அழுது கொண்டு அது ஜாடை காட்டினது. அப்பொழுது கோகர்ணன் இருகையிலும் ஜலத்தையெடுத்து ப்ரோக்ஷித்தான். அதனால் அது தன்னுடைய பாபங்கள் விலகி விடை சொல்ல ஆரம்பித்தது. 'நான் உன்னுடைய ஸஹோதரன், எனக்கு துந்துகாரியென்று பெயர். நான் செய்த பாப கர்மங்களால் ப்ராஹ்மண ஜன்மம் போய்விட்டது; அனேக ப்ராணிகளை ஹிம்ஸித்துத் தாஸிகளைப் போஷித்து வந்தேன்; கடைசியில் அவர்களாலேயே கொல்லப்பட்டேன்; அதனால் ப்ரேத ஜன்மத்தை அடைந்து கஷ்டப்படுகிறேன்; நீ எனக்குப் பந்துவாகையால் என்னிடத்தில் தயைசெய்து என்னைக் காப்பாற்று' என்றது.

அதனைக் கேட்ட கோகர்ணன், 'ஓ' துந்துகாரியே உனக்காக கயா க்ஷேத்திரத்தில் விதிப்படி பிண்டதானஞ் செய்தேன். அப்படியிருக்க உனக்கு ப்ரேதமாயிருக்கும் தன்மை ஏன் போகவில்லை? இனி நான் செய்யவேண்டிய

தென்ன ? என்று கேட்டான். அதைக் கேட்டு அந்த ப்ரேதமானது நூறு கயா ச்ரார்த்தம் செய்தாலும் என்னுடைய பாபம் நிவர்த்தி யாகாது. ஆகையால் வேறு ஓர் உபாயத்தை யோஜிக்கவேண்டும் என்றது. அதைக்கேட்டு கோகர்ணன், உன்னுடைய பாபங்கள் விலக்கத் தகுந்த உபாயத்தை ஆலோசித்து அதை அனுஷ்டிக்கிறேன். அதுவரையில் நீ கவலை யற்றவனாகியிரு என்று சொல்லிவிட்டு, ராத்ரி முழுவதும் அது விஷயமாக யோசித்தும் யாதொரு நிச்சயமும் தோன்றாதவனாயிருந்தான்.' காலையில் அந்தப் பட்டணத்திலிருக்கும் ஜனங்கள் எல்லோரும் தேசாந்தரத்திலிருந்து வந்த கோகர்ணனைப் பார்த்து, க்ஷேமம் விசாரித்தார்கள். கோகர்ணன் ராத்ரியில் நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் அவர்களிடம் தெரிவித்தான். அவர்கள் யோசித்து ஒன்றும் தோன்றாமல் ஸூர்ய பகவானைக் கேட்க வேண்டுமென்று சொன்னார்கள். உடனே கோகர்ணன் ஸூர்யனை ஸ்தோத்திரம் செய்து அவர் வேகத்தைத் தடுத்துவிட்டான். அப் பொழுது ஸூர்யபகவான், ஏழுநாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்டால் ப்ரேதத்வம் நிவர்த்தியாகும் என்று அனுக்ரஹித்தார். அதனைக் கேட்டு கோகர்ணன் பாகவத கதையைப் படிப்பதற்கு முயற்சித்தான். அதனைக் கேட்பதற்காகப் பல தேசங்களிலிருந்தும், பல கிராமங்களிலிருந்தும் நொண்டிகள், கண்ணில் லாதவர்கள், ரோகிகள் ஆகிய இவர்கள் வந்தார்கள். இன்னும் அநேகம் பெரியோர்களும்

கூடினார்கள். அவ்விடத்துக் கருகிலிருந்த ஏழு கணுக்களுள்ள ஒரு மூங்கிலில் வாயு சரீரத்தை யுடைய அந்த ப்ரேதம் ஸ்ரீமத் பாகவதத்தை கேட்பதற்காக வந்து சேர்ந்தது. அப்பொழுது கோகர்ணன் விஷ்ணுபக்தனாகிய ஒரு ப்ராஹ்மணனைக் கேட்பவராக வைத்துக் கொண்டு பாகவத கதையை வர்ணித்தார். முதல்நாள் கதை முடிந்தவுடன், அருகிலிருந்த மூங்கிலில் ஒரு கணு வெடித்ததுமின்றி ஏழாவது நாளில் ப்ரேதமானது தனது பூர்வ சரீரத்தைவிட்டு மேகம்போலக் கருத்த திருமேனியுடன், பீதாம்பரம், கிரீடம், குண்டலம், துளஸீமாலை இவைகளால் அலங்கரிக்கப்பட்டு திவ்ய ரூபத்தையடைந்து கோகர்ணனை நோக்கி "ஓ ஸாதுவே நான் உன்னால் க்ஷேமத்தை யடைந்தேன் என்று ச்லாகித்தது. இந்த சமயத்தில் விஷ்ணு தூதர்கள் வைகுண்டத்திலிருந்து விமானத்துடன் வந்தார்கள். எல்லோரும் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே, துந்துகாரி அவ்விமானத்தில் ஏறினான். அப்பொழுது கோகர்ணன் விஷ்ணு தூதர்களைநோக்கி 'ஓ விஷ்ணு தாஸர்களே இவ்விடத்திலிருக்கும் எல்லா ஜனங்களும் ஸ்ரீமத் பாகவதக் கதையைக் கேட்டார்களே; ஆதலால் பலத்தில் பேதமுண்டாகக் காரணமென்ன என்று வினவினான். அதனைக்கேட்ட ஹரி தாஸர்கள், ஓ ஸாதுவே எல்லோரும் ச்ரவணம் பண்ணினவர்களானாலும் இந்த ப்ரேதமானது, செய்தது போல மற்றவர்கள் செய்யவில்லை; ஆகையால் தான் பலன் வேறாயிற்று. 'இது பலத்தைக் கொடுக்குமோ கொடாதோ என்று

சந்தேகப்பட்டு ஜபித்த மந்தரமும் பலவிடங்களில் மனத்தைச் செலுத்திக்கொண்டு செய்த ஜபமும்; விஷ்ணு பக்தர்களில்லாத தேசமும், பாத்ரமான ப்ராஹ்மணர்களில்லாத ச்ராத்தமும், வேதாத்யயனஞ் செய்யாதவனுக்குக் கொடுத்த தானமும், அனாசாரமுள்ள குலமும் ஆகிய இவைகள் ப்ரயோசன மற்றவைகள். குருவின் வார்த்தையில் நம்பிக்கையும், தன்னைத் தீனனாக நினைத்துக் கொள்வதும், மனஸை அட்க்கிக் கொள்வதும், கதையைக் கேட்பதில் ஸ்திரமான புத்தியும் ஆகிய இவைகளுடன் கதையைக் கேட்பது மேலானது. இன்னொரு தடவை இந்தக் கதையைக் கேட்டால் எல்லோருக்கும் வைகுண்டம் கிடைக்கும். ஓ கோகர்ணா! உனக்குப் பகவானாகிய கோவிந்தர் கோலோகத்தைக் கொடுப்பார் என்று சொல்லி வைகுண்டம் சென்றார்கள்.

பின்பு கோகர்ணன் ஆவணி மாதத்தில் மறுபடியும் படனத்தை நடத்தினான். அவர்களும் கேட்டார்கள். கதை முடிந்தவுடன் அநேக விமானங்களுடன் நாராயணமூர்த்தியே நேரில் வந்து சங்கத்தை ஊதினார். பின் அவர் கோகர்ணனைக் கட்டிக் கொண்டு தமக்குச் சமமாக அவனைச் செய்து மற்ற எல்லோர்களையும் விமானத்தில் வைத்துக் கொண்டு கோலோகம் சென்றார். ஸப்தாஹ யஞ்ஞத்தின் மஹிமை இப்பேர்ப்பட்டது. ஸப்தாஹ யஜ்ஞத்தால் கிடைக்கும் பலம் காற்று, ஜலம், இலை இவைகளைப் புஜித்து கடும் தபஸ் செய்வதாலும், யோகத்தாலும் அடையமுடியாது. இந்த இதிகாஸத்தை சித்ரகூட பர்வதத் திலிருக்கும் சாண்டில்ய மஹர்ஷியும் படித்து

பரமானந்தத்தையடைகிறார். இது மிகவும் பரிசுத்தமானது. ஒரு தடவை கேட்ட மாத்திரத்தில் ஸகல பாபத்தையும் நிவர்த்திக்கக் கூடியது. ச்ராத்த காலத்தில் படித்தால் பித்ருக்களுக்கு த்ருப்தி உண்டாகும். இதனை நித்யம் படித்தால் மோக்ஷமும் கிடைக்கும்.

'ஓ சௌனகரே ஸ்ரீமத் பாகவதத்தை ஏழுநாளில் படிப்பதற்குச் சில விதிகள் உண்டு. எப்படி யென்றால் முதல் ஜ்யோதிஷ சாஸ்திரம அறிந்தவர்களை கொண்டு நல்லமுஹூர்த்தம் பார்த்து அதில் ஆரம்பிக்க வேண்டும். ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி இந்த மாதத்தில் ஆரம்பிப்பது மேலானது. 'இன்னகாலத்தில் பாகவதம் படிக்க ஆரம்பிக்கப் போகிறோம், அதனைக் கேட்க தாங்கள் எல்லோரும் வரவேண்டும். ஏழு நாளுமிருக்க முடியாமல் போனால் ஒரு நாளாவது கேட்க வேண்டும். இந்த ஜ்ஞான யஜ்ஞத்தில் ஒரு க்ஷணம் கிடைப்பது மிகவும் அரிது. ஆகையால் குடும்பத்துடன் எல்லோரும் வர வேண்டும் என்று ஒவ்வொரு தேசங்களிலும் கிராமங்களிலும் பத்திரிகை மூலமாக ப்ரஸித்தப் படுத்தவேண்டும். வந்தவர்களுக்கு இடம் முதலியவைகளைக் கொடுத்து உபசரிக்கவேண்டும். வாழை, மாந்தளிர் முதலிய மங்கள த்ரவ்யங்களால் மண்டபத்தை அலங்கரித்து நான்கு திக்குகளிலேயும் த்வஜங்கள் கட்டி வந்தவர்களுக்கு உட்காரத் தகுந்த இடங்களைச் செய்விக்கவேண்டும். மேலும் கதை சொல்பவருக்கு, திவ்யமான ஆஸனம் அமைத்து வைக்கவேண்டும். கதை சொல்லு

கிறவர் வைராக்ய முள்ளவராகவும், வேத சாஸ்திரங்களை யறிந்தவராகவும், விஷ்ணு பக்தராகவும், அதிக ஆசையில்லாதவராகவும், உதாரணம் சொல்வதில் ஸமர்த்தராயும், ப்ராஹ்மணராகியும் இருக்க வேண்டும். சொல்லுகிறவர்க்கு உதவி செய்வதற்காக அவர் போன்ற மற்றொருவர் அவருடைய பக்கத்திலிருக்கவேண்டும். சொல்லுகிறவர் வ்ரதம் — ஆரம்பிப்பதற்கு முன்பு க்ஷௌரம் செய்து கொள்ளவேண்டும். அருணோதயத்திற்குள் தம்முடைய நித்யகர்மங்களைச் சுருக்கமாகவாவது முடித்துக் கொண்டு கதையை ஆரம்பிக்க வேண்டும். மண்டபத்தில் ஸ்ரீமத் பாகவத புஸ்தகத்தையும் பகவானுடைய விக்ரஹத்தையும் நன்றாகப் பூஜித்து ப்ரதக்ஷிண நமஸ்காரஞ் செய்து கடைசியில், 'ஹே கிருஷ்ண! ஸம்ஸாரமாகிய ஸமுத்திரத்தில் முழுகியிருக்கும் தீனனாகிய என்னைக் காப்பாற்றும்' என்று ஸ்தோத்திரம் செய்யவேண்டும். பிறகு கதை சொல்லு பவருக்கு வஸ்த்ரம், ஆபரணம் முதலியவைகள் கொடுத்து, 'சுகரால் சொல்லப்பட்ட ஸ்ரீமத் பாகவதத்தை அறிந்த ப்ராஹ்மணோத்தம! இந்தக் கதையை உபதேசித்து என்னுடைய அஜ்ஞானத்தைப் போக்கும், என்று கேட்டுக் கொள்ள வேண்டும். பணம், வீடு, புத்ரன் இவைகளில் அபிமானத்தை யொழித்து சுத்தசித் தனாயிருந்து கதையை கேட்கவேண்டும். கதையைச் சொல்லுகிறவர் ஸூர்யோதயம் முதல் முன்றரை யாமம் கதை சொல்ல வேண்டும். மத்யா ன்னத்தில் மாத்யான்ஹிக கர்மத்திற்காக இரண்டு நாழிகை நிறுத்திவிட வேண்டும். மல மூத்ர

உபத்ரவமில்லாம விருப்பதற்காக மிதமாய் புஜிக்க வேண்டும். கதை கேட்கிறவன் ஒரு தடவை ஹவிஸை புஜிக்கலாம். சக்தியிருந்தால் ஏழு நாள் உபவாஸமிருப்பது மேலானது. அல்லது நெய், பால், இவைகளை புஜிக்கலாம். பழங்களையாவது புஜிக்கலாம். எப்படியிருந்தால் கதை கேட்க விக்னமில்லாமலிருக்குமோ அப்படி சக்திக்கனுகுணமாக நடத்த வேண்டும். ஆனால் ஸ்திரீஸங்கம், பாயில் படுப்பது இவைகள் கூடாதெனவாம். ஒவ்வொரு நாளும் கதை முடிந்த பிறகே போஜனம் பண்ண வேண்டும். வேதங்களையும், பக்தர்களையும், ப்ராஹ்மணர்களையும் நிந்திக்க கூடாது.

இப்படி ஏழு நாளான பிறகு புஸ்தகத்தையும், அதன் கதையைச் சொல்லுகிறவர்களையும் பூஜித்து, கதை கேட்டவர்களுக்கு ப்ரஸாதம் (துளசி) கொடுக்கப்படவேண்டும். பின்பு மிருதங்கம், தாளம், வீணை முதலியவைகளோடு பகவானுடைய குணத்தைக் கானம் பண்ணவேண்டும். அதன் பிறகு கதை சொன்னவருக்கும், மற்ற ப்ராஹ் மணர்களுக்கும், யாசகர்களுக்கும் தனம் அன்னம் முதலியவைகளைக் கொடுக்கவேண்டும். கேட்கிறவர்கள் ஸன்யாஸியாயிருந்தால் மறுநாள் பகவத் கீதையைப் படிக்கவேண்டும். கிரஹஸ் தராயிருந்தால் தசமஸ்கந்தத்தில் எவ்வளவு சுலோகங்களிருக்கின்றனவோ, அவ்வளவு ஹோமம் பண்ண வேண்டும். ஹோமம் பண்ணச் சக்தியில்லாவிட்டால், யஜ்ஞத்தின் மத்தியில் நேர்ந்த ஸகல தோஷங்களையும் நிவர்த்திப்பதற்காக விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தைப் படிக்கவேண்டும்.

அதன் பிறகு பன்னிரண்டு ப்ராஹ்மணர்களுக்கு போஜனம் செய்துவைத்து அவர்களுக்கு ஸுவர்ணம், பசு, இவைகளைக் கொடுக்க வேண்டும். சக்தியிருக்குமானால் மூன்று பலம் தங்கத்தால் சிங்கத்தின் உருவத்தைச் செய்து அதில் பாகவத புஸ்தகத்தை வைத்து அதைப் பூஜித்து அதை ஆசார்யனுக்கு கொடுக்க வேண்டும். இது ஜ்ஞான யஜ்ஞமாம்.

ஓ சௌனரே! ஆனந்த வனத்தில் ஸனகாதிகள் ஜ்ஞான யஜ்ஞத்தை விதிப்படி முடித்தபிறகு தெய்வச் செயலால் அவ்விடம் சுகர் வந்தார். அவர் வ்யாஸருக்குப் புத்ரர் ஞானமாகிய ஸமுத்திரத்திற்குச் சந்திரன் போன்றவர். ஆத்ம லாபத்தால் பூர்த்தியடைந்தவர். எப்பொழுதும் ஸ்ரீமத் பாகவதத்தைப் படிப்பவர். பதினாறு வயதுள்ளவர். அவரைக் கண்டு அங்கிருந்த ஸதஸ்யர்கள் எல்லோரும் விதிப்படி பூஜிக்க அவர் ஸ்ரீமத் பாகவதத்தின் முதலாவது ஸ்கந்தத்தின் இரண்டு மூன்று ச்லோகங்களில் குறிக்கப்பட்ட விஷயத்தை விஸ்தாரமாகச் சொன்னார். அப்பொழுது பகவான் தம்முடைய பக்தர்களான ப்ரஹ்லாதர், மஹாபலி, உத்தவர் ஆகிய இவர்களுடன் அவ்விடம் வந்து அவர்களை அனுக்ரஹித்ததுமல்லாமல் ஜ்ஞான யஜ்ஞும் நடக்கும் இடத்தில் நாம் இப்படியே ஸான்னித்யம் செய்கிறோம்' என்று அனுக்ரஹித்தார். ஆனதால் ஸ்ரீமத் பாகவதமானது, ஸம்ஸாரமாகிய ஸமுத்ர்த்தில் முழுகிய ஜனங்களைக் காப்பாற்றுகிறேன் என்று கர்ஜித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்.

இதனைக் கேட்டு சௌனகர் ஸூதரை நோக்கி "ஸூதரே சுகர் பரீக்ஷித்துக்கு எந்தக் காலத்தில் உபதேசித்தார்? கோகர்ணர் படித்த காலம் எது? ஆனந்தவனத்தில் குமாரர்கள் சொன்ன ஸமயம் எது? என்று கேட்டார். அவற்றைக் கேட்ட ஸூதர், சௌனகரை நோக்கி" சௌனகரே! ஸ்ரீகிருஷ்ணபகவான் வைகுண்டம் சென்ற நாள் முதல் நூற்று முப்பது வருஷங்களுக்குப் பிறகு கலியுகத்தில் புரட்டாசி மாதம் நவமியில் சுகர் பரீக்ஷித்துக்கு ஸ்ரீமத் பாகவதத்தைச் சொல்ல ஆரம்பித்தார். அது முதல் இருநூறு வருஷங்களுக்குப் பிறகு ஸ்ரீமத் பாகவத கதையைச் சொன்னார். அதில் இருந்து நூற்றுமுப்பது வருஷத்துக்குப் பிறகு (மூவாயிரம் வருஷமென்று சிலர் சொல்லுகிறார்கள்) சுக்லபக்ஷ நவமியில் ப்ரஹ்மபுத்திரர்களான ஸனகாதிகள் சொன்னார்கள். நான்குவித புருஷார்த்தங்களை கொடுக்கிறதற்கு இக்கலியில் ஸ்ரீமத் பாகவத சாஸ்திரத்தைத் தவிர மேலானது ஒன்றுமில்லை. மிகவும் ரஹஸ்யமானது, ஸகல சாஸ்த்திரங்களுடைய ஸாரமானது. ஆகையால் இதனை பக்தியுடன் படியுங்கள் என்று ஸூதர் சொல்லி முடித்தார். (பத்ம புராணம், உத்ர காண்டம் அத்யாயம் ஒன்று முதல் ஆறுவரையில்)

பாகவத பேதங்கள்

அடியில் கண்டபடி ஒரு தமிழ் புஸ்தகத்தால் தெரியவருகிறது. எப்படி யெனில்: பாகவதமானது ஏழு வகையுள்ளது.

1. இதிஹாஸ பாகவதம்: இது வ்யாஸ மஹர்ஷியால் செய்யப்பட்டது. 18,000 ஸ்லோகம் அடங்கியது. இதில் அத்யாயங்கள் 200 இருக்கின்றன. மேலும் இது 12 ஸ்கந்தங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. பரீக்ஷித் மஹாராஜனுக்குச் சுகரால் உபதேசிக்கப்பட்டது.

2. புராண பாகவதம்: இது நாரதரால் ருக்மிணீதேவிக்குச் சொல்லப்பட்டது. இதைச் செய்தவர் வ்யாஸ மஹர்ஷியே. மேலும் இது 600 அத்யாயங்களுள்ளது.

3. ஸம்ஹிதா பாகவதம்: வைசம்பாயனரால் ஜனமேஜயருக்கு உபதேசிக்கப்பட்டது. 50,000 க்ரந்தங்கள் அடங்கியது. 1100 அத்யாயங்கள் அடங்கிய 12 கண்டங்களாகப் பிரிக்கப் பட்டது.

4. உபஸம்ஹிதா பாகவதம்: இது ஸூதர் ஸனகருக்கு அகஸ்திய மஹர்ஷியால் உபதேசிக்கப் பட்டது. இதிலுள்ள 70,000 ஸ்லோகங்கள், 2,000 அத்யாயங்களாகவும் 100 பரிச்சேதங் களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

5. விஷ்ணு ரஹஸ்ய பாகவதம்: இது காச்யபருக்கு ஹாரீதரரால் சொல்லப்பட்டது. இடையிலே தண்டகங்கள் கலந்த 1,00,000 (லக்ஷம்) ஸ்லோகங்களுள்ளது. ஆயிரம் அங்கங்களுள்ளது. 10,000 அத்யாயங்களுள்ளது.

6. விஷ்ணு யாமள பாகவதம்: இது

பராசரால் மைத்ரேயருக்கு உபதேசிக்கப்பட்டது. இதில் 80,000 ச்லோகங்களிருக்கின்றன. மேலும் 800 அத்யாயங்களுள்ளது. 8 ஸ்தானங்களுள்ளது.

7. கௌதம ஸம்ஹிதா பாகவதம்: கௌதமர் கௌசிகருக்குச் சொன்னது. 100 அத்யாயங்கள் உள்ளது. 10,000 ஸ்லோகங்களுள்ளது. 4,00,000 ஸ்லோகங்களுள்ள கௌதம ஸம்ஹி தையில் க்ரந்தலக்ஷண கண்டத்தில் பாகவத லக்ஷணமென்ற முதல் அத்யாயத்தில் மேல் காட்டிய விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸப்தாஹவிதி

முன்னொரு காலத்தில் பரமசிவன் பார்வதியை நோக்கி ஏ! பார்வதீ! ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைப் படிப்பவன், முதலில் வ்யாஸரையும், சுகரையும் நமஸ்கரித்து மஹா விஷ்ணுவை த்யானம் செய்து கொண்டு, முதல் நாளில் முதலாவது ஸ்கந்தம் முதல் ஹிரண்யா க்ஷவதம் வரையில் படிக்க வேண்டும். இரண்டாம் நாளில் பரதனுடைய சரிதம் வரையிலும், மூன்றாம் நாளில் பகவான் ப்ரஹ்லாதரை அனுக்ரஹித்த கதை வரையிலும், நான்காம் நாளில் பத்தாவது ஸ்கந்தத்தில் ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் வரையிலும், ஐந்தாம் நாளில் ருக்மிணி கல்யாணம் வரையிலும், ஆறாம் நாளில் உத்தவருடைய ஸம்வாதம் வரையிலும், ஏழாம் நாளில் முடிவு வரையிலும் படிக்க வேண்டும். படிக்கும்போது அத்யாயத்தின் நடுவில் நிறுத்தக் கூடாது. அப்படி நிறுத்தினால் மறுபடியும் அந்த

அத்யாயத்தை அடிமுதல் படிக்க வேண்டும். படிக்கும்போது அர்த்தத்தைத் தெரிந்துகொண்டே படிக்கவேண்டும். சொல்லுகிறவன் வடக்கு முகமாகவும் கேட்கிறவன் கிழக்கு முகமாவும் அல்லது மாறுதலாகவும் இருக்கலாம். ஒவ்வொரு அத்யாயம் படித்தவுடனும் ஐந்து குந்துமணி நிறையுள்ள தங்கத்தைத் தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டும். முழுவதும் முடிந்தபிறகு பசுவை தக்ஷிணையாகக் கொடுக்கலாம். அந்தப் பசுவின் கொம்புகள் ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப் படவேண்டும். ஏ தேவீ! இம்மாதிரியான விதிப் பிரகாரம் ஸ்ரீமத் பாகவதத்தை யார் படிக்கிறார்களோ, கேட்கிறார்களோ அவர்களுக்கு ஸர்வாபீஷ்டமும் நிறைவேறும். இதனைப் படிக்குங்காலத்தில் ஸகல தேவர்களும், ஸகல மஹரிஷிகளும் ஸ்ரீ விஷ்ணுவின் பார்ஷதர்களும் மஹாவிஷ்ணுவும் அவ்விடத்தில் எப்பொழுதும் மிகுந்த ஆனந்தத்துடன் வஸிக் கிறார்கள், என்று சொன்னார். பத்ம புராணம், பாதாள காண்டம், அத்யாயம் 71.

ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்ட காலம்

கலியுகத்தில் முதல் ஆயிரம் வருஷங்களில் ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்டது.

த்வாபர யுகத்தில் பகவான், வ்யாஸரூபியாய் அவதரித்து வேதங்களைப் பிரித்து, அவைகளை பைலர் முதலானவர்களிடம் ஒப்புவித்தார். பின்பு அவற்றைப் படித்தல், முதலியவைகளில் அதிகாரம் இல்லாத ஸ்த்ரீகள், சூத்ரர்கள் முதலியவர்

களுக்காக, அவைகளின் அர்த்தத்தையே, மஹா பாரதமாகச் செய்து வெளியிட்டார். மேலும் அவரால் மஹா புராணங்களும், உப புராணங்களும் வெளியிடப்பட்டன. கடைசியில் ஸ்ரீமத் பாகவதமும் செய்யப்பட்டது.

ஆக்ஷேபம் — பெரியோர்கள் ஆத்மச்லாகை (தன்னைத் தானே புகழ்வது) செய்து கொள்ள மாட்டார்களாகையாலும், இதிஹாஸ புராணங்களில் வ்யாஸ மஹர்ஷியை ச்லாகித்திருப்பதாலும் சொல்வது பொருந்துமா?

ஸமாதானம்:- அப்படியில்லை. வ்யாஸமஹர்ஷி வேதங்களைப் பிரித்துத் தாம் செய்த மஹா பாரதத்தைச் சுருக்கமாய்ச் செய்யும்படி தமது சிஷ்யர்களான வைசம்பாயனர், ஜைமினி யென்னும் இவர்களுக்கு ஆக்ஞாபனஞ் செய்தார். அவர்களும் தனியே பாரதச் சுருக்கம் செய்தார்கள். இப்பொழுது வழங்கிவரும் பாரதம் வைசம்பாயனர் செய்ததேயாம். மேலும் புராணங்கள், வெகு காலத்திற்கு முந்தியே மார்க் கண்டேயர் முதலிய மஹர்ஷிகளால் செய்யப் பட்டிருந்தன. ஆனாலும் கால மஹிமையால் அவைகளில் சிலவற்றில் சில பாகங்களும் பின்னும் சிலவற்றில் சில ஸர்க்கங்களும் சிலவற்றில் ஸந்தர்ப்பம், விஷயம் இவைகளைச் சொல்லும் — ஸ்லோகங்களும் காணாமல் போயின. சில புராணங்கள் பூர்த்தியாகச் செய்யப்படாமலிருந்தன. இப்படி பற்பல வகையாக குறையுள்ள புராணங்களை வ்யாஸ மஹர்ஷி அந்தந்த புராண நடைக்குச்

சமமான நடையிலேதான் சீர்த்திருத்தினார். பின்னும் அவருடைய சிஷ்யர்கள் அவைகளுக்கு உபோத்காதம் (முகவுரை) அவைகளிலுள்ள ச்லோகம் முதலியவைகளின் ஸங்க்யை, அனுக்ர மணிகை, அந்தந்த புராணத்தைச் சொன்னவர்கள், கேட்டவர்கள் அவர்களுக்குள் நேர்ந்த ஸம்வாதம் முதலியவைகளை எழுதிச் சேர்த்தார்கள்.

பின்பு அவைகளை விட மேலானதாக வ்யாஸ மஹர்ஷி ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்து தம்முடைய புத்ரராகிய சுகருக்கு உபதேசித்தார். பின்பு ஸூதர் அந்த பாகவதத்தைச் சுகரிடமிருந்து தெரிந்து கொண்டு சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்குச் சொன்னார். ஆகையால் இந்த விஷ்ணு பாகவதம் வ்யாஸரால் செய்யப்பட்டதேயாம். மற்ற புராணங்கள் அவரால் சீர்திருத்தப்பட்டதேயாம்.

பரீக்ஷித்து மஹாராஜனுக்குக் கலியும் வந்த பிறகு தர்ம புத்ரர் ராஜ்யாபிஷேகம் செய்வித்ததாக பாகவதம், விஷ்ணு புராணம், பாரதம் முதலிய வைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னமேயே பாகவதம் செய்யப்பட்டிருக்குமாகில் பரீக்ஷித்தின் சரித்திரம் அதில் சொல்ல நியாய மில்லை, ஆகையால் இது கலியுகத்தின் ஆரம் பத்தில் செய்யப்பட்டதேயாம்.

ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தவர்

பாகவதத்தைச் செய்தவர் ஸ்ரீ வேதவ்யாஸ மஹரிஷி. வேதங்களைப் பிரித்த காரணத்தால் இவருக்கு இப்பெயருண்டாயிற்று. இவர் மஹா

விஷ்ணுவின் அவதாரம். இவருடைய பிதா பராசர மஹர்ஷி. இவருடைய தாய் ஸத்யவதி. இவள் வஸுவின் வீர்யத்தைப் புஜித்த மத்ஸயத் தினிடம் உண்டானவள். ஆனது பற்றி இவளுக்கு மத்ஸயகந்தி என்னும் பெயர் சிலகாலம் வழங்கின துண்டு. பராசர மஹர்ஷி ஒருக்கால் தீர்த்த யாத்திரை செய்துவரும் பொழுது வழியில் ஆற்றில் ஓடம் தள்ளிக் கொண்டிருக்கும் வலையன் கன்னியான மத்ஸயகந்தியைக் கண்டார். மேலுமவர் அவளுடைய லாவண்யத்தைக் கண்டு மோஹித்து அவளிடம் ஆசை கொண்டார். அப்பொழுது நல்வாசனையுண்டாகும்படி அனுக்ரஹித்தார். அதுமுதல் அவளுக்கு யோஜனகந்தியென்று பெயர் வழங்கினது. அவ்விருவர்களுக்கும் பிறந்தவர் வ்யாஸமஹர்ஷி.

அவர் வேதங்களைப் பிரித்தும் ஸ்த்ரீ, சூத்ரர் களுக்காக ஐந்தாவது வேதமாகிய பாரதத்தையும் செய்தார். அப்படியும் அவர் மனத்திற்கு சந்தோஷ முண்டாகாததனால் கவலையுள்ளவராக ஸரஸ்வதீ நதிக்கரையில் சம்யப்ராஸமென்ற ஆச்ரமத்தில் வசித்தார். அப்பொழுது தெய்வச் செயலாய் அவ்விடம் வந்த நாரதரிடம் உபதேசம் பெற்று ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தார்.

கதை நடந்த க்ஷேத்ரம்

கலியுகத்தில், ஸூதர் நைமிசாரண்யத்தில் வஸிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்கு இந்த பாகவத கதையைச் சொன்னார். மேலும்

நைமிசமென்பது ஒரு புண்யக்ஷேத்ரம் ஆனது பற்றி அவ்விடத்தில் அநேக மஹர்ஷிகள் வஸிப்பார்கள். அனேக பெரியோர்கள் அவ்விடத்திற்கு வருவது முண்டு. ப்ரஹ்மதேவர் ப்ராஹ்மணர்களை நோக்கி இந்த மனோமயாகிய சக்ரத்தை ப்ரயோகிக்கிறேன்; இதனுடைய நேமி (முனை) எவ்விடத்தில் மழுங்குமோ அதுவே தபஸ் செய்ய தகுதியான க்ஷேத்ரம் என்று சொல்லி ஸூர்யனுக் கொப்பான சக்ரத்தை மனத்தால் ஸிருஷ்டித்து, பரமசிவனைக் குறித்து நமஸ்காரம் செய்து அதை ப்ரயோகித்தார். அதைப் பார்த்திருந்த ப்ராஹ்மணர்களும் மிகுந்த ஸந்தோஷத்துடன் அதன்பின் சென்றார்கள். அது கீழே விழுந்து அதன் நேமி மழுங்கின இடத்திற்கு நைமிசமென்று பெயருண்டாயிற்று. அவ்விடத்தில் மஹர்ஷிகள் வஸித்தார்கள். வாயு புராணம். அந்த க்ஷேத்ரத்தை நைமிஷமென்று சொல்வதுண்டு. ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் கௌரமுகரென்ற மஹர்ஷியை நோக்கி ஒரு நிமிஷத்திற்குள் அஸுர ஸைன்யங்கள் இவ்விடத்தில் கொல்லப்பட்டபடியால் இவ்விடத்திற்கு நைமிஷமென்று பெயருண்டாகட்டும். இது ப்ராஹ்மணர்கள் முக்யமாய் வஸிக்கும் இடம் என்று சொன்னார் வராஹபுராணம்.

மஹர்ஷிகளுக்கு உபயோகமாகிய மரங்கள் நிமிஷங்களென்று சொல்லப்படுகின்றன. அவைகள் ஏராளமாக இருக்குமிடமே நைமிஷமெனப் படுகிறது. அல்லது நிமிஷரென்னும் மஹர்ஷி தபஸ் செய்த இடமாகையால் நைமிஷமென்று அதற்குப் பெயருண்டாயிற்று. விஜயத்.

ஸூதருடைய வரலாறு

"இந்த விராட்ரூபியான மஹாபுருஷனுடைய முகத்திலிருந்து ப்ராஹ்மண ஜாதியும், கைகளிலிருந்து க்ஷத்திரிய ஜாதியும், துடைகளிலிருந்து வைச்ய ஜாதியும், பாதங்களிலிருந்து சூத்ரர்களும் உண்டானார்கள். என்று ஸ்ருதியில் சொல்லப்பட்டிருப்பது போல அவருடைய ரோமாஞ்சத்திலிருந்து (மயிர்க்கூச்சிலிருந்து) ஸூத ஜாதியி உண்டாயிற்று. அவரே ரோமஹர்ஷணர். மஹாபாரத தாத்பர்ய நிர்ணயம் – அத்யாயம் 90, பகவானுடைய கதையைக் கேட்டுக் கொண்டு இருக்கும்போது பக்தி விசேஷத்தால் மயிர்க்கூச்சிலுண்டானபடியால் அவருக்கு ரோமஹர்ஷணர் என்று பெயருண்டாயிற்று. இவர் ஸூத ஜாதியிற் பிறந்தவர் –அபியுக்தர்கள். அவருக்கு ஸ்ரீ வேத வ்யாஸ மஹர்ஷியானவர் ஸகல புராணங்களையும், இதிஹாஸங்களையும் உபதேசித்தார்.

பிறகு ரோமஹர்ஷணர் நைமிசாரண்யத்தில் வஸிக்கும் மஹர்ஷிகளுக்குப் புராணங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்படியிருக்கையில் ஒருநாள் பலராமன் அவ்விடம் வந்தார். அவரைக் கண்டவுடன் ஸகல மஹர்ஷிகளும் எழுந்திருந்து விதிப்படி மரியாதை செய்தார்கள். அப்பொழுது ரோமஹர்ஷணர் மாத்திரம் ஆஸனத்திலிருந்து எழுந்திருக்கவில்லை. அதைக் கண்ட பலராமன் மிகவும் கோபங்கொண்டார். பிறகு அவர் 'தாழ்ந்த குலத்தில் பிறந்தவராகிய இந்த ரோமஹர்ஷணர் நம்மைக்கண்டு எழுந்திருக்காமலும், இந்த மஹர்ஷிகளின் முன்பாக உயரமான ஆஸனத்திலுட்கார்ந்து

மிருக்கிறார், இவரை நிக்ரஹிக்கவேண்டும்' என்று எண்ணிக் கையிலிருந்த தர்ப்பத்தால் அவரையடித்தார். அதனால் ரோமஹர்ஷணரும் உடனே இறந்தார். அப்பொழுது மஹர்ஷிகளனைவரும் பலராமனை நோக்கி பிரபுவே! நீர் செய்தது தர்மத்திற்கொத்ததல்ல. இவருக்கு நாங்கள் ப்ரஹ்மாஸனத்தைக் கொடுத்து அவருடைய தேஹத்தில் ச்ரமம் உண்டாகாமலிருக்கும்படியும், அவர் வெகுகாலம் ஜீவித்திருக்கும்படியும் அனுக்ரஹித்திருந்தோம். நீர் லோகத்தை அனுக்ரஹிப்பதற்காக அவதரித்தவராகையால், எங்களுடைய வார்த்தை பொய்யாகமலிருக்கும்படிச் செய்ய வேண்டும். இந்த தோஷத்தை நிவர்த்தித்துக் கொள்வதற்காக நீர் ப்ராயச்சித்தத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்றார்கள். அதைக் கேட்ட பலராமன் அவர்களை நோக்கி பிதாவிற்கும் புத்திரனுக்கும் பேதமில்லையென்று ஸ்ருதியில் சொல்லப்பட்டிருப்பதனால், ரோமஹர்ஷணருடைய குமாரராகிய உக்ரச்ரவஸ் என்பவர் அந்த ஆஸனத்தில் உட்கார்ந்து உங்களுக்குப் புராண கதைகளைச் சொல்லட்டும். அவருக்கு எவ்வளவு நாள் கதை சொன்னாலும் தேஹத்தில் ச்ரமமில்லாமலிருக்கட்டும். மேலும் வெகுநாள் ஜீவித்திருப்பார் என்று சொல்லி தீர்த்த யாத்திரைக்குச் சென்றார். (பாகவதம் ஸ்கந்தம் 10, அத்தியாயம் 78)

மேல் காட்டியபடி ரோமஹர்ஷணருக்குப் பிறகு அந்த உக்ரச்ரவஸ், அந்த ஆஸனத்திலிருந்து மஹர்ஷிகளுக்குப் புராணங்களைச் சொல்லிக்

கொண்டிருந்தார். அந்த ரோமஹர்ஷணர் ஸூத ஜாதியில் பிறந்தவராகையால் அவருக்கு ஸூத ரென்று பெயருண்டு. அவருடைய பிள்ளைக்கும் ஸூதரென்று பெயர் வழங்கி வருகிறது. பல ராமன் பாரதயுத்தம் நடக்கும்போது நைமிசாரண்யஞ் சென்றார். ஆகையால் அதுவரையில் அவ்விடத்தில் கதை சொல்லிக் கொண்டிருந்தவர் ரோமஹர்ஷணரேயாம். பிறகு அவருடைய புத்ரராகிய உக்ரச்ரவஸே புராணஞ்சொன்னார். ஆகையால் ஸ்ரீமத் பாகவதத்தைச் சொன்னவர் உக்ரச்ரவஸ் என்ற ஸூதரேயாம். இவர் ஸகல புராணங்களையும் இதிஹாஸங்களையும் அறிந்தவர். த்ரையாருணி, கச்யபர், ஸாவர்ணி, அகிருதவ்ருணர், சிம்சுபாயனர், ஹாரீதர் ஆகிய ஆறு பேர்களும் வ்யாசமஹர்ஷியின் சிஷ்யராகிய என் தகப்பனார் இடமிருந்து ஒவ்வொரு ஸம்ஹிதையை அத்யயனஞ் செய்தார்கள். நான் இவர்கள் எல்லோருக்கும் சிஷ்யனாக இருந்து எல்லா புராண ஸம்ஹிதைகளையும் தெரிந்து கொண்டேன் என்று ஸூதர் சொன்னார். (பாகவதம் ஸ்கந்தம் 12 அத்யாயம் 6, ச்லோகம் 5 , 6)

சுகருடைய சரிதம்

முன்னொரு காலத்தில் மஹாமேரு பர்வதத்தில் ஸ்ரீவேத வ்யாஸ மஹர்ஷி உத்தமனாகிய புத்ரனையடைய வேண்டித் தபஸ் செய்தார். அதனால் பரமசிவன் ஸந்தோஷப்பட்டு அவரை நோக்கி 'ஓ மஹர்ஷியே உம்முடைய இஷ்டப்படி மிகுந்த தேஜஸுள்ளவனும், கீர்த்தியுள்ள

வனுமாகிய புத்ரன் உண்டாவான்' என்று அனுக்ரஹித்தார். பிறகு ஒருக்கால் ஒப்பற்ற ரூபமுள்ள கிருதாசி என்ற அப்ஸரஸ்த்ரீ அவ்விடம் வந்தாள். அவளைக் கண்டவுடன் இவருக்கு மன்மத தாபமுண்டாகியது. அப்பொழுது மஹர்ஷியானவர் கிளி வேஷத்தையெடுத்துக் கொண்டார். பிறகு மிகவும் தைர்யத்தால் மன்மத தாபத்தை மஹர்ஷியடக்க முயன்றும் அது குறையாமல் விருத்தியாயிற்று. மேலும் அவருடைய வீர்யம் நழுவினது. அதிலிருந்து உண்டான புத்ரர்தான் சுகரென்ற பெயரையடைந்தார். இவர் பிறந்தவுடனே கங்கா நதியானவள் திவ்ய சரீரத்துடன் அவ்விடம் வந்து அவருக்கு ஸ்னானஞ் செய்துவைத்தாள். ஆகாயத்திலிருந்து தண்டம், கிருஷ்ணாஜினம் ஆகிய இவைகள் விழுந்தன. விச்வாஸு முதலிய கந்தர்வர்கள் கானஞ்செய்தார்கள், தேவதுந்துபிகள் முழங்கின. இந்திரன் முதலிய லோக பாலர்களும் அவ்விடம் வந்ததுமின்றி புஷ்பங்களை வர்ஷித்தார்கள். பரமசிவன் பார்வதியுடன் அக்குழந்தைக்கு விதிப்படி உபனயனம் செய்தார். மஹேந்திரன் அற்புதமான கமண்டலுவை கொடுத்தார் இவருடைய பிதாவாகிய வ்யாஸ மஹர்ஷி பிறந்தவுடன் ஸகல வேதங்களும் தோன்றியது போலச் சுகருக்கும் வேதங்களும், ஸகல புராணங்களும், இதிஹாஸங்களும் தோன்றின. மேலும் அவர் ப்ரஹஸ்பதி பகவானை ஆசார்யராகவரித்தார். ஆனதால் அந்தச் சுகர் எல்லாவித்தைகளையும் அப்யஸித்தவர். அவர் பால்யவயதுள்ளவரானாலும் தேவர்களாலும் மஹர்ஷிகளாலும் மற்றவர்களாலும்

கொண்டாடக் கூடியவராக இருந்தார். மேலும் அவருடைய மனஸானது மோக்ஷ தர்மத்திலேயே விருப்பமுள்ளதாக விருந்ததேயொழிய விஷயத்தில் செல்லவில்லை. பிறகு அவர் தம்முடைய பிதாவாகிய வ்யாஸ மஹர்ஷியை நோக்கி மோக்ஷ தர்மங்களைச் சொல்லவேண்டும் என்று கேட்டார். அதைக்கேட்ட வ்யாஸ மஹர்ஷியானவர் தன் புத்ரரை நோக்கி மோக்ஷ தர்மம் தெரிந்து கொள்ள வேண்டுமானால் மிதிலா நகரத் தரசராகிய ஜனகரிடம் போய் தெரிந்து கொள்ளும் என்றார். அதைக் கேட்ட சுகர் அப்படியே மிதிலா நகரம் சென்று ஜனகருடைய அரண்மனைக்கு போகும் போது அவ்விடமிருந்த காவலாட்களால் தடுக்கப்பட்டார். ஆனாலும் கோபங்கொள்ளவில்லை. வெகுதூரம் நடந்து வந்த தால் சரீரத்திற்கு நேர்ந்த ச்ரமத்தையும், பசி தாஹம் இவைகளால் நேர்ந்த துக்கத்தையும் ஸஹித்தார். பிறகு அவ்விடமிருந்த ஒரு காவலாள் அவரை வணங்கி உள்ளே அழைத்து நிழலில் உட்காரச் செய்தான். அதனாலும் அவர் ஸந்தோஷிக்கவில்லை. பிறகு மந்திரியானவர் மிக வணக்கத்துடன் வந்து சுகரை வணங்கி அந்தப் புரத்திற் கழைத்துபோய் திவ்யமான ஆஸனத்தில் உட்காரவைத்தார். பிறகு மிகவும் ரூபவதிகளான சிறு பெண்கள் அனேகர்கள் அவ்விடம் வந்து உத்தமமாகிய அன்னத்தால், வாத்ய கோஷங்களாலும் நர்த்தனங்களாலும் பிரியமான வார்தைகளாலும் உபசரித்தார்கள். மேலும், அவரைத் தோட்டத்திற்கழைத்துப்போய் அழகான மரங்களையும், பக்ஷிகளையும், தாமரஸ ஓடை

களையும் காண்பித்தார்கள். இப்படி அவர்களால் உபசரிக்கப்பட்டும் அவைகளில் பிரியப்படாமலேயே மோக்ஷ மார்க்கத்தையே த்யானித்துக் கொண்டு அன்றைய ராத்திரியைக் கழித்தார். மறுநாள் காலையில் ஜனகமஹாராஜன் இவரை சபைக்கு வரவழைத்து உபசரித்து மோக்ஷ தர்மத்தை உபதேசித்தார். (மஹாபாரதம், சாந்திபர்வம், அத்யாயம் 323 - 325)

ஸ்ரீ கிருஷ்ணாவதார காலம்

ஸ்ருஷ்டி முதல் 28வது மஹாயுகத்திற்குட் பட்ட த்வாபர யுகத்தின் முடிவில், தேவகியின் இடம் பகவான் அவதரித்தார். 28 வது மஹா யுகத்தில் த்வாபரயுகத்தின் கடைசியில் யது வம்சத்தில் பகவான் அவதரிக்கப் போகிறாரென்று கர்க்காசார்யர் முன்னமே சொல்லியிருக்கிறார் விஷ்ணு புராணம் 5வது பாகம், அத்யாயம் 23.

மேற்காட்டிய த்வாபர யுகமானது நிகழும் கலியுகத்திற்கு முந்தியேயாம். பகவான் பூலோகத்தில் கிருஷ்ணனாக அவதரித்து 125-வருஷங்கள் பூமியில் வஸித்து, பிறகு வைகுண்டம் சென்றார். ஓ ப்ரபுவே! யதுவம்சத்தில் அவதரித்து 125 வருஷங்களாயின. ஸ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம் 11 அத்யாயம் 6.

"வஸுக்கள், அச்வினீ தேவர்கள், மருத்துக்கள், ஆதித்யர்கள், ருத்ரர்கள், ஸாத்யர்கள் ஆகிய இவர்களுடன் மஹேந்திரனனான். என் முகமாகப்

பின்வருமாறு விக்ஞாபனம் செய்கிறான். கெட்ட நடத்தையுள்ள அஸுரர்களைக் கொன்று பூமியின் பாரத்தை நிவர்த்தி செய்தீர். ஸ்வர்க்கத்தில் இருக்கும் எல்லாத் தேவர்களும் உங்களால் யஜமானனுள்ளவர்களாக ஆகட்டும். நீங்கள் பூமியில் அவதரித்து 125 வருஷங்கள் ஆயின. உங்களுக்கு இஷ்டமிருந்தால் வைகுண்டம் வரலாம் விஷ்ணு புராணம் பாகம் 5, அத்யாயம் 37.

இப்படித் தேவர்கள் ப்ரார்த்தித்தவுடன் ஸ்ரீ பகவான் உத்தவரை நோக்கி, இன்றைய முதல் 7வது நாளில் ஸமுத்ரம் இந்தப் பட்டணத்தைக் கவர்ந்து கொள்ளும். அவ்வுலகத்தை நான் விட்டவுடன் இவ்வுலகம், மங்களகார்யமற்றதும், கலியினால் அவமதிக்கப்பட்டதுமாய் விடும் ஸ்ரீ மத் பாகவதம் ஸ்கந்தம் 11, அத்யாயம் 7.

"என்றைய தினத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஸ்வர்க்கம் சென்றாரோ அன்றைய தினமே கலியுகம் வந்தது. விஷ்ணு புராணம் பாகம் 4, அத்யாயம் 24.

இதனால் தேவர்கள் ப்ரார்த்தித்தவுடன் தாமதம் இன்றிப்பகவான் வைகுண்டஞ் சென்றாரென்று தெரிய வருகிறது.

ஆகையால் 28 வது மஹாயுகத்தில் த்வா பாயுகத்தின் கடைசி பாகத்தில் பகவான் அவதரித்து 125 வருஷங்கள் பூலோகத்தில் வஸித்தார். பின்பு வைகுண்டம் செல்லும்போது கலி வந்து விட்டது (த்வாபரயுகம் முடிந்தது.)

Released by Maran's Dog, Toronto , Canada

"என்றைய தினம் ரோஹிணி நக்ஷத்திரமோ அன்றைய தினம் ராத்திரி இருட்டில் தேவகியினிடம் பகவான் அவதரித்தார். பாகவதம் ஸ்கந்தம் 10, அத்யாயம் 3.

"நான் வருஷா காலத்தில் ச்ராவண மாஸத்தில் க்ருஷ்ண பக்ஷத்திய அஷ்டமி திதியில் தேவகியினிடம் அவதரிக்கப் போகிறேன் விஷ்ணு புராணம், பாகம் 5, அத்யாயம் 1.

"ச்ராவண மாஸத்தில் க்ருஷ்ணபக்ஷத்திய அஷ்டமி திதியில் ரோகிணி நக்ஷத்திரத்தில், அர்த்தராத்திரி காலத்தில், சந்த்ரோதயமாகும் ஸமயத்தில், அபிஜித் முஹூர்த்தத்தில், தேவகியிடம் மஹாவிஷ்ணு வானவர் அவதரித்தார். அதே காலத்தில் அவருடைய மாயையும் யசோதையினிடம் கோகுலத்தில் புத்ரியாகப் பிறந்தாள். ஹரிவம்சம் பாகம் 1, அத்யாயம், 25.

மேற்காட்டிய ப்ரமாணங்களால் 28 வது மஹாயுகத்தில் த்வாபர யுகத்தில் 8, 63, 875வது வருஷத்தில் ச்ராவண மாஸத்தில் கிருஷ்ண பக்ஷம் அஷ்டமீ திதியில், ரோகிணி நக்ஷத்திரத்தில், அர்த்தராத்ரியில், பகவான் அவதரித்தாரென்று நிச்சயிக்கப்படுகிறது. ஆகையால் பகவான் அவதரித்த காலம் முதல் நிகழும் 24 வது பரிவிருத்தியில் ஸௌம்யவருஷம் வரையில் **5230** வருஷங்கள் ஆயினவென்று பெரியோர்களால் சொல்லப் படுகிறது.

♣ ♣ ♣ ♣

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்ரீ கிருஷ்ணாய பரமாத்மனே நம:

அத்யாயம்-1

சௌனக ப்ரச்னம்.

Released by Maran's Dog, Toronto , Canada

"எதனிடமிருந்து ஸகல ப்ரபஞ்சங்களும் உண்டாகின்றனவோ, எதனால் காப்பாற்றப்படுகின்றனவோ, எதனிடத்தில் லயிக்கின்றனவோ, அது ப்ரஹ்மம்" என்ற ச்ருதியில் சொல்லியபடியுள்ள தடஸ்த லக்ஷணமுள்ளவரும், அன்வய வ்யதிரேகங்களால் ஸகல ஜகத்காரணரும், எல்லாவற்றையும் அறிந்தவரும், ஸ்வயமாய் ப்ரகாசிப்பவருமான எந்தப்பரமேச்வரர், நான்கு முகங்களுள்ள ப்ரஹ்மதேவருக்கு வேதங்களை மனத்தால் உபதேசித்தாரோ, (அந்த வேதங்களைத் தெரிந்து கொள்வதில், வித்வான்களும் மோஹிக்கிறார்கள்.) தேஜஸ், ஜலம், பூமி ஆகிய இவைகள் ஒன்றில் ஒன்று மாறுதலாகத் தோன்றுகிறது போல எந்தப் பரமாத்மாவிடம் (அவர் ஸத்யராகையால் முக்குணங்களுடைய கார்யமும், ஸத்யமாகத் தோற்றுகிறதோ, அந்த ஸத்ய ஸ்வரூபியாகிய பரமாத்மாவைத் த்யானிக்கிறோம். அவர் தம்முடைய தேஜஸினால் மாயாகார்யமாகிய ப்ரபஞ்சத்தைத் தாண்டினவர்.

2. வேதவ்யாஸ மஹாமுனியால் செய்யப்பட்டதும், அழகு பொருந்தியதுமான, ஸ்ரீமத் பாகவத க்ரந்தத்தில் மோக்ஷத்தைக் கூட விரும்பாமல் செய்யும், ஈச்வரருடைய ஆராதனரூபமாகிய உத்தம தர்மமானது காட்டப் பட்டிருக்கிறது. பிறருடைய மேன்மையை ஸஹிக்காம

Released by Maran's Dog, Toronto , Canada

விருப்பதாகிய மாத்ஸர்யமில்லாத ஸாதுக்களால், அறியக்கூடியதும் (ஜீவன், மாயை, ஜகத் என்னுமிவை கள் பரமாத்மாவைவிட வேறானவையல்ல) மேலான ஸுகத்தைக் கொடுக்கக்கூடியதும், மூன்று வகையான தாபங்களைப் போக்கக்கூடியதும், உண்மையுமான வஸ்துவானது இதில் நன்றாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. மற்ற சாஸ்த்ரங்களாலும் இதர ஸாதனங்களாலும் ஈச்வரனை ஹிருதயத்தில் நிலைக்கச் செய்யமுடியுமா? ஆகையால் அவைகளால் என்ன பிரயோஜனம். இந்த ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்க விரும்பிய புண்யவான் களுடைய மனத்தில் கேட்ட க்ஷணத்திலேயே பகவான் ஸ்திரமாக வஸிக்கிறார்.

3. வேதமாகிய கல்பக விருக்ஷம் அதனுடைய பழம் ஸ்ரீமத் பாகவதமேயாம். இது வைகுண்டத்திலி ருந்து நாரதரால் எனக்கும், என்னால் சுகருக்கும், அவர் முகமாகப் பூமியிலும் நழுவியது. (பரவிற்று) இது அமிருத த்ரவமுள்ளது (ருசியுள்ளது) ரஸரூபமா யுள்ளது. ஓ! ரஸத்தையறிந்தவர்களே! அதன் விசேஷ பாவனையில் ஸமார்த்தியமுள்ளவர்களே! மேற்காட்டிய பழத்தை முக்தர்களாக இருக்கும் பொழுதும், அடிக்கடி புஜியுங்கள்.

4–231/2. ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் க்ஷேத்ரமாகிய நைமிசமென்னும் வனத்தில், சௌனகர் முதலிய மஹர்ஷிகள், ஸ்வர்க்கலோகத்தை யடைவதற்காக, ஆயிரம் வருஷங்கள் ஸத்ரமென்னும் யாகத்தை யனுஷ்டித்து வந்தார்கள். அப்பொழுது ஒருநாள் அவர்கள் காலையில் அக்னிகார்யங்களை முடித்துக் கொண்டு, எல்லோராலும் பூஜிக்கப்பட்டு, ஸுகமாய்

உட்கார்ந்திருக்கும் ஸூதரை நோக்கி மிக்க ப்ரீதியுடன் "ஓ பாபமற்றவரே! புராணங்கள், இதிஹாஸங்கள், தர்மசாஸ்த்ரங்கள் இவைகளை நீர் படித்திருப்பதுடன் அவ்வவற்றின் அர்த்தத்தைப் பிறருக்கும் தெரியும்படி சொல்லியுமிருக்கிறீர். ஓ ஸாதுவே! வேதங்களை யறிந்தவர்களுக்குட் சிறந்தவராகிய வ்யாஸபகவானுக்கு தெரிந்தவைகளும், பரம்(ஸகுணப்ரஹ்மம்) அபரம் (நிர்குணப்ரஹமம்) இவைகளை நன்றாய் அறிந்த மற்ற மஹர்ஷிகளுக்குத் தெரிந்தவைகளும், அவர்களுடைய அனுக்ரஹத்தால் தங்களால் உண்மையாக அறியப்பட்டவைகளே! ஆசார்யர்கள், ரஹஸ்யமான விஷயத்தையும், ப்ரியனாகிய சிஷ்யனுக்குச் சொல்வது வழக்கம். ஆகையால் [எப்பொழுதும் க்ஷேமத்தையே கொடுப்பது இன்னதென்று ஸகல க்ரந்தங்களைப் படித்து தாங்கள் நிச்சயமாகத் தெரிந்து கொண்டதை எங்களுக்கு உபதேசிக்கவேண்டும்.] ஓ ஸூதைக்குரியவரே! இந்தக் கலியுகத்தில் ஜனங்கள் பெரும்பாலும் அதிக காலம் ஜீவித்திருப்பதில்லை; சோம்பலுள்ளவர்கள்; அதிலும் மிகவும் மந்தபுத்தியுள்ளவர்கள்; தவிரவும் பாக்யக் குறைவுள்ளவர்கள்; (விக்னங்களால் வருத்தப் பட்டவர்கள்)வியாதி முதலியவைகளால் துன்பமடைந்த வர்கள்; ஆகையால் வெகுகாலம் அநேக சாஸ்த்ரங்களைக் குருமுகமாய்க் கேட்கவும், அவைகளில் சாரத்தை தாமாகத் தெரிந்துகொள்ளவும் சக்தியற்றவர்கள்; பலவகை கர்மங்களைச் சொல்லும் அநேக சாஸ்த்ரங்களோ, தனித்தனியே தெரிந்துகொள்ள வேண்டியவைகளாக இருக்கின்றன. ஆனதால் எதனால் பரமாத்மாவின் ப்ரஸாதம் ஸித்திக்குமோ அந்த ஸாரமான விஷயத்தை தங்களுடைய புத்திக்குத் தோன்றியபடி எடுத்து உபதேசிக்க வேண்டும்.

அதனால் ஸகல ப்ராணிகளும் க்ஷேமத்தையடைவார்கள். ஓ! ஸூதரே! தங்களுக்கு இவ்விஷயம் யாவும், தெரிந்த வையே. நமக்கு க்ஷேமமுண்டாகட்டும். அளவில்லாத, ஐச்வர்யம் முதலியவைகளுள்ள, ஸாத்வதர்களுக்கு நாதனாகிய புருஷோத்தமன், தேவகியினிடம் வஸுதேவருக்குப் புத்ரனாக எதனைச் செய்வதற்காக அவதரித்தாரோ அந்தச் சரிதத்தைக் கேட்க விரும்பும் எங்களுக்கு தாம் உபதேசிக்கவேண்டும். எந்த பகவான் பூமியில் அவதரித்ததால் ப்ராணிகளுக்கு க்ஷேமம், ஐச்வர்யம், இவைகள் கிடைத்தனவோ, கோரமாகிய ஸம்ஸாரத்தை (இறப்புப்பிறப்பை) அழிந்தவன் எவருடைய திவ்யநாமங்களை உச்சரித்த மாத்ரத்தில் அதிலிருந்து விடுபடுகிறானோ, எவருடைய நாமத்தை கண்டு பயமும் பயப்படுகிறதோ, மேலும் இந்திரியங்களை ஜயித்தவர்களான முனிகள் எவருடைய பாதங்களையே ஆச்ரயித்திருக்கிறார்களோ, எவருடைய பாதத்திலிருந்து உண்டான கங்கையின ஜலமானது, தர்சிப்பவர்களையும், தொடுகிறவர்களையும், ஆசமனம் செய்பவர்களையும், பரிசுத்தர்களாகச் செய்கிறதோ; புண்ய ச்லோகர்களால் கொண்டாடக்கூடிய அந்தப் பகவானுடைய சரிதம் ஸம்ஸாரதுக்கத்தைப் போக்குமாகையால் சுத்தனாக வேண்டுமென்ற எண்ணமுள்ள எவன்தான் அதைக் கேட்கமாட்டான். ஆகையால் நாரதர் முதலிய ஞானிகளால், எப்பொழுதும், கானஞ் செய்யப்பட்டதும், ஸம்ஸார துக்கத்தை நிவர்த்திப்பதுமான, மேலான அந்த சரிதத்தை கேட்க நாங்கள் மிக ச்ரத்தையுள்ளவர் களாக இருக்கிறோம். ப்ரஹ்மா,ருத்ரன், முதலிய மூர்த்தி பேதத்தைத் தரிப்பவரும், தம்முடைய மாய மஹிமையால் லீலைகளைச் செய்பவருமாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அவதார கதைகளைச் சொல்ல

வேண்டும். அவைகளைப் போதிக்க தாங்கள் வல்லமை யுள்ளவர்களே. உத்தமச்லோகராகிய பகவானுடைய சரிதத்தைக்கேட்கக் கேட்க எங்களுக்கு போதுமென்ற திருப்தியுண்டாகிறதில்லை, பகவானுடைய சரிதமானது, கேட்பவர்களான ரஸிகர்களுக்கு அடிக்கடி இன்பத்தை கொடுக்கும். ஸ்ரீமஹா விஷ்ணுவானவர் மாயையால் மனிதனாக அவதரித்து, பலராமனுடன் சேர்ந்து மனிதர்களால் செய்யமுடியாத கோவர்த்தன பர்வதத்தை தூக்கியது முதலிய லீலைகளைச் செய்தாரல்லவா? இப்பொழுது கலியுகம் வந்துவிட்ட படியால், நாங்கள் விஷ்ணுவின் பதத்தையடைய விரும்பி மேல் சொல்லிய பகவானுடைய சரிதத்தைக் கேட்பதற்காகவே தீர்க்க ஸத்ரஞ் செய்வதான காரணத்தைக் கொண்டு இந்த நைமிசாரண்யத்தில் வஸிக்கிறோம். ஸமுத்ரத்தைத் தாண்ட விரும்பியவர் களுக்கு ஓடக்காரன் கிடைத்தாற்போல அதர்மத்திற்கு பந்துவாகிய இந்தக்கலியைக்கடக்க விரும்பிய எங்களுக்கு, உம்முடைய தர்சனம் தெய்வச்செயலால் நேர்ந்தது. தர்மத்தைக் காப்பாற்றி வந்தவரும், யோகிகளுக்கு அதிபதியுமான ஸ்ரீகிருஷ்ணபகவான் மனித சரீரத்தைவிட்டு தன்னுடைய ஸ்வரூபத்தை யடைந்தபின்பு தர்மம் யாரைச் சரணமடைந்தது சொல்லவேண்டும் என்று கேட்டார்கள்.

நோட்டு.

ஸ்ரீ வேதவ்யாஸபகவான் பாகவத சாஸ்த்ரத்தைச் செய்யவிரும்பி இடையூறின்றி முடியவேண்டியதற்காக பெரியோர்களுடைய ஸம்ப்ரதாயப்படி பரமாத்மாவை ஸ்மரிப்பதாகிய மங்களத்தைக் காட்டுகிறார். – ஸ்ரீ தரியம்.

1–1. எவரிடமிருந்து–ஸ்ரீ பாதராயணர் என்னும் வ்யாஸ பகவான், ஸகல ஜனங்களையும், ஸம்ஸார பந்தத்திலிருந்து நிவர்த்தித்து, அனுக்ரஹிப்பதற்காக வேதாந்தத்தாலே அறியக்கூடியதும், மற்றப்ரமாணங் களுக்குப புலப்படாததுமான பரப்ரஹ்மத்தை எல்லா வர்ணத்தார்களும் அறியச்செய்ய நினைத்து, ஸ்ரீமத் பாகவதமென்னும் க்ரந்தத்தை நாரதருடைய உபதேசத் தால் செய்யவிரும்பினார். அது, விக்னமில்லாமல் முடியவேண்டியதற்காக பரமாத்மாவை த்யானஞ் செய்தார். "எதனிடமிருந்து இந்த ப்ரபஞ்சம் உண்டாகின்றதோ"–"இந்த ஆகாசரூபமாகிய ஆனந்த மில்லாமற்போனால் எவன் ஜீவிப்பான்" என்ற அன்வயவ்யதிரேகச்ருதிகளால் ப்ரஹ்மம், ஜகத்காரண மென்றும், அர்த்தேஷு அபிக்ஞ: என்று அன்வயஞ் செய்து, ஸகல பதார்த்தத்தையறிந்தவர் என்று அர்த்தஞ்செய்வதால், ப்ரஹ்மத்தினிடத்தில் எல்லா வற்றையும் அறிந்திருப்பது முதலிய ஸகலகல்யாண குணங்களிருப்பதாயும், காட்டப்பட்டது. பரமாத்மா வானவர், ப்ரஹ்மதேவருக்கு தேஜஸ், ஜலம், பூமி இவைகளை ஒன்றோடொன்று கலந்து ஸிருஷ்டிக்கும் வகையை உபதேசித்தது போல ப்ரீதியுடன் வேதத்தையும் உபதேசித்தார். "வேதங்கள் முடிவில்லாத துகள்" என்றபடி வேதங்களை பூராவாகத் தெரிந்து கொள்ள முடியாததாகையால், தடையற்ற ஞானமுள்ள யோகிகளும் மோஹிக்கிறார்கள். "அந்த விஷ்ணுவின் மேலான பதத்தை எப்பொழுதும் ஸூரிகள் பார்க்கிறார்கள்." என்றபடி நித்திய ஸூரிகள், நாராயணனுடைய திவ்ய மங்களதேஹத்தின் ஒப்பற்ற காந்தியை தர்சித்து மோஹிக்கிறார்கள். மேல்காட்டிய மூன்று பூதங்களுடைய த்ரிவிருத்கரண ஸ்ருஷ்டியானது,

எவரிடத்தில் பொய்யாக இருக்கிறதோ (அது பகவானிடத்தில் ஸம்பந்திக்கிற தில்லையென்று கருத்து) மேலும் எவர் தன்னுடைய தேஜஸினால் ஸகல தோஷங்களையும் நாசம் செய்கிறாரோ முக்காலத்திலும் இருப்பவராகையால் எவர் நித்யரோ, ருத்ரன் முதலியவர்களைவிட சிறந்தவராகையால பரனோ, அந்த பர ப்ரஹ்மத்தை த்யானிக்கிறோம்– பாகவத சந்த்ரிகா.

ஒருகால் அஸுரர்கள் பூமியில் அரசர்களாகப் பிறந்து அந்த பாரத்தால் பூமி மிக வருத்தமடைந்தாள். அப்போது ப்ரஹ்மா, ருத்ரன் முதலிய தேவர்கள், பூமிக்கு நேர்ந்த ச்ரமத்தை நிவர்த்திக்குபடி ஸ்ரீ மஹா விஷ்ணுவை வேண்டிக்கொண்டார்கள். பகவான், அவர்களுடைய ப்ரார்த்தனைக்கிசைந்து, வெகுகாலமாய் தபஸ் செய்துகொண்டிருக்கும் ஸத்யவதியினிடம் பராசரருக்கு புத்ரனாக அவதரித்தார். இவர்தான் வ்யாஸரென்று சொல்லப்படுகிறார். இவர் மந்தபுத்தி யுள்ள ஜனங்களிடத்தில் மிகுந்த கருணையுள்ளவராய் வேதங்களை பிரித்து அதன் அர்த்தத்தை நன்றாய் காட்டுவதற்காக ப்ரஹ்ம ஸூத்ரங்களைச்செய்தார். பின்பு அதைப் படிக்கத்தகாத ஸ்த்ரீகள் சூத்ரர்களுக்காக புராணங்களையும் வெளியிட்டார். பின்னும் அவர் வேதத்தின் அர்த்தத்தை நன்றாய் காட்டுகிறதும் 12 ஸ்கந்தமுள்ளதும், 18,000 க்ரந்தங்களடங்கியதுமான பாகவத புராணத்தைச் செய்ய ஆரம்பித்து, தான் எப்பொழுதும் ப்ரஹ்ம ஸாக்ஷாத் காரமுள்ளவரான்லும் இயற்கையில் விக்ன ஸம்பந்தமில்லாதவரானாலும், க்ரந்தாரம்பத்தில் செய்யவேண்டிய ஸம்ப்ரதாயத்தை வித்வான்களுக்குத் தெரிவிப்பதற்காக, நாராயண

ஸ்மரணமாகிய மங்களத்தைச் செய்தார். அதாவது பரனைத் த்யானஞ்செய்கிறோம். க்ரந்தத்தின் ஆரம்பத்தில் நமஸ்கரிக்கக்கூடிய தேவதைகள் இருவகையானவைகள். 1. ஆதிகாரிகதேவதை—ஸூரியன் முதலிய க்ரஹங்கள். 2. அபிஷ்டதேவதை.— பகவான். இருவகையான தேவதைகளின் ஸ்வரூபியும் ஸகல கல்யாண குணங்கள் நிறைந்தவருமான பரமாத்மாவே இந்த பாகவத ஸாஸ்த்ரத்தால் வர்ணிக்கப்படுகிறார். நாராயணனைவிட பரன் வேறொருவருமில்லை "அந்த புண்டரீகாக்ஷனே தேவன், அந்த நாராயணனே பரன்" - ஹரிவம்சம்.

"ப்ரஹ்மத்தை யறிந்தவன் பரனை யடைகிறான்"
—ச்ருதி.

இவர் ஜகத்திற்கு காரணமாயிருப்பவர், "எவரிடமிருந்து இந்த பூதங்கள் உண்டாகின்றவோ, எவரால் உண்டானவைகள் ஜீவிக்கின்றனவோ, எவரிடம் லயிக்கின்றனவோ ? அதுவே ப்ரஹ்மம்" —ச்ருதி.

நான் எல்லாவற்றிற்கும் உற்பத்தி ஸ்தானம், என்னிடமிருந்தே எல்லாம் உண்டாகின்றன. எல்லா பிராணிகளையும் ஸ்ருஷ்டிக்கிறவனும், காப்பாற்றுகிறவனும், நாசஞ்செய்கிறவனும், நானொருவனே" —ஸ்மிருதி.

மேல்காட்டிய அன்வயத்தால் விஷ்ணுவே ஜகத் காரணரென்று ஏற்படுகிறது.

ஆக்ஷேபம்: ருத்ரன் முதலியவர்களும், ஜகத்திற்குக்

காரணமென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே அப்படிக்கிருக்க மேற்காட்டியது எப்படி பொருந்தும்.

ஸமாதானம்: வேதத்தில் சிலபாகத்தில் அப்படி சொல்லப்பட்டிருந்தாலும், பெரும்பாலும் விஷ்ணுவே ஜகத்காரணம் என்றே சொல்லப்பட்டிருக்கிறது 'எல்லா வேதங்களும் எந்தபதத்தைச் சொல்லுகின்றனவோ' —ச்ருதி.

"ஸகல வேதங்களாலும் அறியக்கூடியவன் நானே"
—ஸ்மிருதி.

ஆக்ஷேபம்:— பரமாணுவே ஜகத்காரணம், என்று ஏன் சொல்லக்கூடாது ?

ஸமாதானம்:— அப்படியல்ல, ப்ரத்யக்ஷத்திற்கும் ஆகமத்திற்கும் விரோதமில்லாத யுக்தியால், ப்ரஹ்மமே ஜகத்காரணமென்று சொல்லக்கூடும். புத்ரனுக்கு பிதாவே காரணமென்று தெரியவருகிறதல்லவா ? அது போல் ப்ரஹ்மதேவர் முதலியவர்களுக்கு சேதனனே காரணமாயிருக்க வேண்டும், மாயை முதலியவைகள் அசேதனமாகையால் அவைகளைக் காரணமென்று சொல்லக்கூடாது. இந்தவிஷயம் ச்ருதியில் பலவிடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பரமாணுவே ஜகத்திற்கு காரணமென்று சொல்பவர்கள் ச்ருதி விருத்தமான யுக்தியைக் காட்டுவதனால் அது ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல. அந்த பரமாத்மா எல்லாவற்றையும் பொதுவாகவும் விசேஷமாகவும் அறிந்தவர். அதனால் ப்ரஹ்மதேவருக்கு வேதங்களை யுபதேசித்தவர். அவருடைய அனுக்ரஹமில்லாதவரையில் ப்ரஹ்ம தேவர் முதலியவர்களும் மோஹிக்கிறார்கள். தேஜஸ்,

ஜலம், பூமி, இவைகளின் கார்யம் எப்படி ஸத், அஸத் இவைகளைவிட வேறாக ஆகிறதில்லையோ? பகவானால் செய்யப்படுகிறபடியால் ஈச்வர ஸிருஷ்டி, ஜீவஸ்ருஷ்டி, ஜடஸிருஷ்டி, ஆகிய இவைகள் மூன்றும் பொய்யானதல்ல. மாயைக்கடந்த ஆனந்தானுபவ ரூபராயுமிருக்கும் பரமபுருஷனைத் த்யானிக்கிறோம். தேஜஸ் ஒன்றானாலும்,தான் தன் கார்யமான பூமி முதலியவைகளில் பிரவேசித்து சிலகாலத்தில் வெளிப் படுவது போல, பகவான் ஜகத்தை ஸிருஷ்டித்து, அவைகளில் பிரவேசிக்கிறார். பின்பு பக்தர்களை அனுக்ரஹிப்பதற்காக கிருஷ்ணன் முதலிய அவதாரஞ் செய்கிறார். இதுவே ஈச்வர ஸிருஷ்டியெனப்படும், ஸூர்யன் முதலிய தேஜஸினால் ஜலத்தில் அனேக ப்ரதிபிம்பங்கள் ஸ்தூலசரீரம் முதலிய உபாதிகளால் ஈச்வரனுடைய ப்ரதிபிம்பங்களாகிய ஜீவர்கள் உண்டாகிறார்கள். இதுவே ஜீவஸர்க்கம் எனப்படும். மண்ணினால் குடம் முதலியவைகளை யுண்டு பண்ணுவதுபோல ஈச்வரன் அஹங்காரம் முதலியவை களை ஸிருஷ்டிக்கிறார். இதுவே ஜடஸர்க்கம்,– விஜயத் வஜீயம்:

1–4: லக்ஷணம்– இருவகை (1) தடஸ்தலக்ஷணம்– மேற்காட்டியது 2. ஸ்வரூப லக்ஷணம்–ஸத்யஸ்வரூபி. ஸகலத்தையுமறிந்தவர் ஸகல சக்தியுள்ளவரென்பது அன்வயம்– ஆகாசம் முதலிய கார்யங்களின் ஸத்தை யானது, ஆத்மாவின் ஸத்தையால் என்பது. வ்யதிரேகம்–எதிலில்லாததால் அது இல்லையோ அது (உதா) ஆகமஸத்தையில்லாததனால் ஆகாசபுஷ்பங் களில்லை– ஸ்ரீத.

பரமாத்மா, ஸத்ரூபியாய் ஏல்லாவற்றிலும் அனுவ்ருத்தித்திருப்பதால் எல்லாவற்றிற்கும் காரண மாகிறார் (உதா) மண்ணானது அதன் கார்யமாகிய குடம், மடக்கு, தோண்டி முதலியவைகளிலும், தங்கமானது அதன் கார்யமாகிய குண்டலம் முதலிய நகைகளிலும், படர்ந்திருக்கிறது– ஸ்ரீத.

5. அறிந்தவரும் – ப்ரதானம் (மாயை) ஜகத்காரண மானாலும் அதல்லவென்று காட்டப்பட்டது. "மாயை ஜடமாகையாலும், வேதத்தில் ஸிருஷ்டிக்க ஸங்கல் பித்தாரென்று சொல்லியிருப்பதாலும், அம்மாதிரியான ஸங்கல்பம் மாயையினிடம் ஏற்பட நியாயமில்லாததனா லும், மாயை ஜகத்காரணமல்ல– வ்யாஸஸூத்ரம்.

2–1 ப்ரகாசிப்பவர்.– இதனால் சேதனனாகிய ஜீவனைவிட மேலானவரென்று காட்டப்பட்டது.

2–2 உபதேசித்தாரோ.–"எல்லாவற்றிற்கும் முந்தி ஹிரண்யகர்ப்பர் உண்டானார். அவர் ஸகல பூதங்களுக்கும் ஒரே யஜமானனாக விருந்தார். அவர் பூமியையும் அந்தரிக்ஷத்தையும், காப்பாற்றிவந்தார் என்ற ச்ருதிப்படி ப்ரஹ்மதேவருக்கும் மேலானவரென்று காட்டப்பட்டது. எவர் முதலில் ப்ரஹ்மாவை யுண்டு பண்ணுகிறாரோ, எவர் அவருக்கு வேதங்களை உபதேசிக்கிறாரோ, அந்த ஸ்வப்ரகாசரான தேவனை மோக்ஷமடைய விரும்பிய நான் சரணமடைகிறேன்." –ச்ருதி.

மனதால்– ப்ரஹ்மதேவர் பிறரிடத்தில் வேதாத்ய யனஞ் செய்தாரென்று ஓரிடத்திலும் சொல்லப்

படாமலிருந்தாலும் பரமாத்மாவின் ஸங்கல்ப மாத்ரத்தால் ப்ரஹ்மதேவருக்கு வேதங்கள் தோன்றினவென்று தாத்பர்யம்.

வேதங்கள்.— ப்ரஹ்மா தானாக வேதங்களைத் தெரிந்துகொண்டவரல்லவென்பது கருத்து.— ஸ்ரீத.

ப்ரஹ்மதேவருக்கும் ஞானத்தையுபதேசித்தவரும், இயற்கையில் அளவற்ற நித்ய ஞானமுள்ளவரும், எல்லாவற்றையும் ப்ரகாசிக்கச் செய்பவரும் மற்ற தேஜஸை அபேக்ஷியாமலேயே ப்ரகாசிப்பவரும். ஸத்ய ஸ்வரூபியாயுமுள்ள பரமாத்மாவே ஜகத்காரணம், அவரே திவ்ய மங்களஸ்வருபி, அவரை த்யானிப்பதால் ஸகல க்ஷேமங்களும் கிடைக்கும்.

இந்த புராணத்தில் காயத்ரியின் அர்த்தமாகிய பரப்ரஹ்மவித்யை நன்றாய் காட்டப்பட்டிருக்கிறது.— அந்த காயத்ரீ, வேதமாதா, இது வேதத்தையே ப்ரமாணமாய் கொண்டது. "எதில் காயத்ரியை அனுஸரித்து தர்மங்கள் விஸ்தாரமாக வர்ணிக்கப்படுகின்றனவோ, எதில் வ்ருத்ராஸுரவதத்தின் கதை சொல்லப்பட்டிருக்கிறதோ அது பாகவதமென்று சொல்லப்படுகிறது. அதை எழுதி ஸுவர்ணத்தால் செய்யப்பட்ட ஸிம்ஹ ப்ரதிமையுடன் புரட்டாசி மாஸத்திய பௌர்ணமியில் எவன் தானஞ்செய்கிறானோ அவன் உத்தமகதியையடைகிறான். இது 18,000 க்ரந்தங்களுள்ளது"— மத்ஸ்யபுராணம், "ஓ அம்பரீஷ! உனக்கு ஸம்ஸார பந்தம் நிவர்த்தியாக வேண்டுமானால் சுகஸ்வாமியால் உபதேசிக்கப்பட்ட ஸ்ரீமத் பாகவதத்தை பிறர் சொல்லக் கேளும் தானாகவாவது படியும்," — பத்மபுராணம்,

ஸகலஜகத்தையும், படைத்து அவைகளைக் காப்பாற்றுகிறவர் என்றாலும் ஸ்வயம் ப்ரகாசர் என்றாலும் காயத்ரியின் அர்த்தமானது காட்டப்பட்டிருக்கிறது. 6. மாறுத— கோடைகாலத்தில் மாத்யாஹ்னவேளையில் வனம் முதலிய சூன்யமாகிய விடங்களில், வெயிலை ஜலமென்று நினைத்து தாஹமுள்ள ஜனங்கள் அதனால் தாஹத்தைப் போக்கிக்கொள்ளலாமென்று அதையனுஸரிக்கிறார்களல்லவா ? அவ்விடத்தில் தோற்றுகிற ஜலமானது வாஸ்தவமல்ல. ஆச்ரயமாகிய தேஜஸ் உண்மையானதால் (வ்யவஹாரகாலத்தில்) ஜலமிருப்பதுபோல தோன்றுகிறதுபோல ஸத்வம், ரஜஸ், தமஸ், ஆகிய முக்குணங்களால் உண்டாகியிருக்கும் ஸிருஷ்டிகள் யாவும், ஸத்யமன்று. ஆச்ரயமாகிய ஆத்மாவின் ஸத்தையால் ஸத்தாகத் தோற்றுகிறது. ஸ்ரீத, 11.— வ்யாச மஹா— வ்யாச மஹாமுனியால் செய்யப்பட்ட இந்தப் பாகவதமென்ற க்ரந்தத்தில் பக்தியாகிய தர்மம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆபிசார ப்ரயோகமாகிய ச்யேனயாகம் போல் இது பாபமுள்ளதல்ல. மோக்ஷஸாதனமாகையால், மிகவும் மேலானது. மாத்ஸர்யம் முதலிய துர்க்குணமில்லாத ஸாதுக்களால் அனுஷ்டிக்கக்கூடியது. இதனால் நித்ய வஸ்துவாகிய பரமாத்மாவே அறியக்கூடியவர். அவரே அக்னிமுதலிய ரூபமாகவிருந்து ஸ்வர்க்கம் முதலியவைகளைக் கொடுக்கிறார். முவ்வகையான தாபத்தைப் போக்குகிறார், புண்யசாலிகள் இந்த கிரந்தத்தைக் கேட்க வேண்டுமென்று விரும்பிய க்ஷணத்திலே அவர்களுடைய ஹிருதயத்திலே பகவான் ஸ்திரமாக வஸிக்கிறார். மற்ற க்ரந்தங்கள் இதுபோல பக்தியையுண்டுபண்ணி அதனால் ஈச்வரனை மனத்திலிருக்கச் செய்கிறதில்லை. ஆகையால் இதுவே உத்தமமானது.—சந்திரிகா. அழகு—

"தோஷமற்ற ஸகல புராணங்கள் பாகவதமில்லாத காலத்தில் ஸாதுக்களுடைய ஸபையில் ப்ரகாசிக்கும்" என்றபடி பந்தகமாகாத "ஓ அர்ஜுன! நீ செய்கிறதை யும், புஜிக்கிறதையும், ஹோமஞ்செய்கிறதையும் தானஞ் செய்கிறதையும், தபஸ்செய்வதையும் எனக்கு அர்ப்பணம் செய்துவிடு"– பகவத்கீதை. என்றபடி பலனையுத்தேசியாமல் செய்யும் கர்மங்களே மேலான வைகள். அவைகளே கபடமற்ற தர்மங்கள். "பகவானுடைய நாமங்களைச் சொல்லுவது முதலிய பக்தியே மனிதர்களுக்கு மேலான தர்மம். அதனாலேயே பகவான் ஸந்தோஷப்படுகிறார்" என்றபடி பக்தியே மேலானதர்மம்.– விஜயத்வஜீயம். மோக்ஷத்தை விரும்பியவர்களுக்கு மிகரமணீயமானது– ஸ்ரீத. 28– அமிருதத்ரவ– மோக்ஷத்திற்கு ஸாதனமாகிய பக்திரஸமுள்ளது. இதை சரீரம் போகும்வரையில் பானஞ்செய்யுங்கள். சந்த் செய்யப்பட்ட–கர்த்தா வினுடைய மேன்மையால் க்ரந்தத்திற்கு மேன்மை காட்டப்பட்டது. அறியக்கூடியதும்.– ஞானகாண்டத் தை உயர்ந்ததென்று காட்டப்பட்டது.– புண்ய 23– புண்யம் செய்யாதவர்களுக்கு ஸ்ரீமத் பாகவதத்தை கேட்கவேண்டுமென்ற ஆசையுண்டாகாது. 24– ஸ்திர மாக.– தேவதாகாண்டத்தைவிட மேலானதென்று கருத்து. மேற்காட்டியபடி கர்ம காண்டம் தேவதா காண்டம். ஞானகாண்டம் மூன்று பாகங்களடங்கிய வேதார்த்தம் முழுவதும் தெரிந்துகொள்ளக் கூடியதா யிருப்பதால் ஸகல சாஸ்த்ரத்தை விட இது மேலானது. ஆகையால் ஸாதுக்கள் முகமாய் கேட்டுத் கொள்ள வேண்டும்– ஸ்ரீத. பரவிற்று– சிஷ்ய பரம்பரையாய். நசுக்கிவிடாமல் ஜாக்ரதையாய் கொண்டுவரப்பட்ட தென்று காட்டப்பட்டிருக்கிறது. சுகருக்கு உபதேசஞ்

செய்தது முதலியவைகள் பாகவதஞ்செய்த காலத்திற்கு பிந்திய காலத்தில் நடந்ததானாலும் வருங்கார்யமும் நடந்தது போலவே சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீத. அமிருதம் சுகமென்றால் கிளியால் கொத்தப்பட்ட பழம் மிகரஸமுள்ளதென்று பிரஸித்தம் அமிருதம்– மேலான ஆனந்தம் அதேரஸம், அதையுடையது," அவரே ரஸம், ரஸத்தை யடைந்தே இவன் ஆனந்தமுடையவனாக ஆகிறான்" ச்ருதி. ரஸரூப:– மற்ற பழங்களில் எப்படி மேற்புறத் தில் தோலும் அதற்குள்ளே ரஸமுமிருக்கிறதோ? அடபடி இதில் தோல் முதலிய ரஸமற்ற பாகங்களில்லை;

ஆக்ஷேபம்– பழமென்றும் அதையே ரஸமென்றும் சொல்வது பொருந்துமா? ரஸமுள்ள பழமென்று சொல்ல வேண்டாமா?

ஸமாதானம்:– மற்ற பழங்கள் போல தோல் முதலியவைகளில்லாமல் ரஸமாகவே இருக்கிறதென் பதை காண்பிப்பதற்காக ரஸமென்று சொல்லப்பட்டது. பூமியில் விழுந்த ரஸமென்றால் அது த்ரவரூபமாய் போய்விடாமல் புஜிக்கதக்க பழமென்பதால் காட்டப் பட்டது முக்தர்– ஆத்மாவிடத்திலேயே ரமித்து கொண்டிருப் பவர்களும், மற்ற க்ரந்தங்களில் ஆசையில்லாத வர்களுமான மஹர்ஷிகளும் பகவானிடம் யாதொரு காரணமுமில்லா மல் பக்தி செய்கிறார்கள். இம்மாதிரியான குண முள்ளவர் ஸ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம்,1–"அத்யாயம்" 7. ஸ்வர்க்க லோகத்தை– ஸ்வர்காய– பகவான். அவரே லோகம் (பக்தர்களுக்குருட்டிடம்) அவரை யடைவதற்காக–ஸ்ரீத ஸ்வர்க்க– மேலான ஆனந்தம், அப்பேர்பட்டலோகம் பரமபதம், அதையடைவதற்காக– ஸத்ரம்– எந்த யாகத்தில் ரித்விக்குகளே யஜமானர்களாக விருக்கிறார்களோ

அது முனி.. ஸத்ரம்—ஸாதுக்களைக் காப்பாற்றுகிறது. —விஜ. அக்னி—நித்ய நைமித்திக ஹோமங்களை— முனி. புராணங்கள் 1.ப்ரஹ்ம புராணம் 2. பாத்மம். 3. விஷ்ணுபுராணம். 4. சிவபுராணம் 5. நாரதபுராணம் 6. மார்கண்டேயம், 7. ஆக்னேயம். 8. பவிஷ்யபுராணம். 9. ப்ரஹ்மகைவர்த்தம். 10 லிங்க புராணம் 11. வராஹபுராணம் 12. ஸ்காந்தம். 13. வாமனம். 14 கூர்மபுராணம். 15. மத்ஸ்யபுராணம். 16.கருடபுராணம். 17. ப்ரஹ்மாண்டம். 18வது ஸ்ரீமத் பாகவதபுராணம். 24—பல— அனேகசாஸ்த்ரங்களை அப்யஸித்தாலும் அவ்வளவு பலன் கிடைக்கிறதில்லை யென்று கருத்து ஸ்ரீத. 3—31 க்ஷேம.—ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் கதையைக் காலதாமதமின்றிக் கேட்க வேண்டுமென்று விரும்பி சுருக்கமாய் ஆசிர்வாதஞ் செய்தார்கள். "ஒரு முஹூர்த்தமாவது ஒரு க்ஷணமாகிலும் ஸ்ரீ வாஸுதேவரை ஸ்மரிக்காமலி ருப்பதே கெடுதிக்கு காரணம்.— ஸ்ரீத. 32—ஸாத்—பகவத் பக்தர்கள். ஸ்ரீத. 4—14 நாரதர்— இவர் ப்ரஹ்மதேவருடைய மனத்திலிருந்து உண்டா னவர். இவர் தேவர்ஷி இவருடைய குணங்கள் மஹாபாரதம் ஸபாபர்வத்திலும், சாந்திபர் வத்திலும் நன்றாக வர்ணிக்கப் பட்டிருக்கின்றன. இவர் கானவித்தையை அப்யளித்த கதை அத்புத ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர் ஞானத்தை பிறகுக்குபதேசிப்பதாலும், அக்ஞானத்தைப் போக்குவதாலும் நாரதரென்ற பெயரை யடைந்தார். 21— உத்தம—எவருடைய பெயரை உச்சரித்த மாத்ரத்தில் புண்யம் கிடைக்குமோ, அவர் சொல்லவேண்டும்— மஹர்ஷியின் கேள்விகள் ஆறு.

அவைகளில் 1. சாஸ்த்ரங்களுடைய ஸாரமானது எது, 2. ஸ்ரீ கிருஷ்ணபகவான் செய்த கார்யங்கள் எவை, 3 ஸிருஷ்டி முதலிய லீலைகள், 4 அவதார கதைகள். 5. பகவானுடைய சரிதம், 6. தர்மத்தை ஸம்ரக்ஷித்தது. ஸ்ரீத.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–2.

ஸூதர் ப்ரத்யுத்தரஞ் சொன்னது.

ரோமஹர்ஷணருடைய புத்ரரான ஸூதர் அந்த ப்ராஹ்மணர்களுடைய நல்வார்த்தைகளைக் கேட்டு ஸந்தோஷித்து அவர்களுடைய கேள்வியை ச்லாகித்துப் ப்ரத்யுத்தரஞ் சொல்ல ஆரம்பித்துப் பின்வருமாறு தன் குருவை வணங்கினார்.

2–31/2. சுகர் அதி பால்யவயதிலே (உபநயனஞ் செய்யப்படாமலிருக்கும் வயதிலே) கர்மமார்க்கத்தில் விருப்பமில்லாதவராய், துறவியாகப் போகும்பொழுது, பிதாவாகிய வ்யாஸர் பிள்ளையை விட்டுப் பிரியமன மில்லாதவராய் ஓ! புத்ரா! என்று உரக்க அழைத்தார். அப்பொழுது மரங்கள் விடைகூறின. (மரங்களின் ரூபமாயிருந்து பிதாவின் ப்ரீதியைக் குறைப்பதற்காகச் சுகரே அப்படிக்கூறினார் என்பதாம்) அவர் ஸகல ப்ராணிகளுடைய ஹ்ருதயத்தில் வசிப்பவர், அந்த சுக மஹாயோகியை நமஸ்கரிக்கிறேன். எவர் ஸம்ஸாரமா கிய இருட்டைக்கடக்க விரும்பிய ஜனங்களிடத்தில், கருணை வைத்து ஒப்பற்ற, மஹிமையுள்ளதும், ஸகல வேதங்களின் ஸாரமாயும், நிகரில்லாததாயும், ஆத்ம தத்துவத்தைக் காட்டுவதில் தீபமாயுள்ளதுமான, ரஹஸ்யமாகிய புராணத்தை வெளியிட்டாரோ, வ்யாஸருடைய புத்ரரும், முனிகளுக்குக் குருவுமாகிய அந்தச்சுகருக்கு நமஸ்காரம் செய்கிறேன். நாராயண ரையும், மனிதர்களுக்குட் சிறந்தவரான நரனையும், ஸரஸ்வதி தேவியையும், வ்யாஸரையும் நமஸ்காரஞ் செய்து பின்பு (ஜயத்தை) க்ரந்தத்தைச் சொல்லுகிறேன்.

4–35. 'ஓ மஹர்ஷிகளே! நன்றாய்க் கேட்டீர்கள், தாங்கள் கேட்டவிஷயம் உலகத்திற்கே மங்களத்தைக் கொடுக்கக்கூடியது. எதனால் பரமாத்மா ஸந்தோஷி ப்பாரோ அம்மாதிரி ஸ்ரீ கிருஷ்ணன் விஷயமாகக் கேட்டீர்கள். பலனை உத்தேசியாமல் இடையூறின்றி ஸ்ரீ மஹா விஷ்ணுவிடத்தில் செய்யும் பக்தியே மேலான தர்மம். அதனால் பரமாத்மா மிகவும் ஸந்தோஷமடை கிறார். பகவானாகிய வாஸுதேவரிடத்தில் பக்தி செய்தால், வைராக்யமும் காரணமற்ற உண்மையான ஞானமுமுண்டாகும். புருஷர்கள் குறைவின்றி தங்களுக்குரிய தர்மங்களை யனுஷ்டித்தும் அதனால் பகவானுடைய கதையைக்கேட்க வேண்டுமென்ற ஆசையுண்டாகாவிட்டால் அது பயன்படாததேயாகும். மஹாவிஷ்ணுவின் கதையாகிய அமிர்தத்தைப் பானஞ் செய்தும் (கதையைக் கேட்டும்) சித்தமுருகுதல், ஆனந்தத்தால் கண்ணீர் பெருகுதல், மயிர்க் கூச்சலிடல், என்னும் இவைகள் எவனுக்கு உண்டாகவில்லையோ, அவன் ஆத்மதத்துவத்தை பலதடவை குருமுகமாகக் கேட்டாலும் அதன் உண்மையை அறியமாட்டான். (பகவத்பக்தி, வைராக்யம், ஆத்மஞானம், என்னும் இவைகளே மேலான தர்மமென்று கருத்து). மோக்ஷத் திற்கு உபயோகமாகிய தர்மத்திற்கு இரண்டாவது புருஷார்த்தமாகிய அர்த்தம் பலனென்றும் தர்மத்தை விட்டுபிரியாத அந்த அர்த்தத்திற்குக் காமம் ப்ரயோஜன மென்றும் சிலர் சொல்வது மஹரிஷிகளால் ஒப்புக் கொள்ளபடவில்லை. இது பிரசித்தமான விஷயம். இந்திரியங்களை திருப்தி செய்வதே (விஷயானுபவம்) காமத்திற்கு பலனென்று சொல்வதும் சரியல்ல. ஆனால் ஜீவிப்பதற்குப் போதுமான அளவு விஷயத்தை அனுபவிப்பதே பலனாம். தத்துவத்தைத் தெரிந்து

கொள்ள விரும்பியவனுக்கு கர்மங்களால் கிடைக்கும் பலன் பயன்படாது. உண்மையை அறியவேண்டுமென்ற விருப்பமே அவனுக்குப் பலன். மேலும், நாசமற்றதான ஞானஸ்வரூபத்தையே தத்வமென்று, உண்மையை யறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். அதனையே உப நிஷத்தை அத்யயனஞ் செய்தவர்கள் ப்ரஹ்மம் என்றும், ஹிரண்யகர்ப்பனை உபாஸிப்பவர்கள், பரமாத்மாவென் றும், ஸாத்வதர்கள் பகவான் என்றும் சொல்லுகிறார்கள் "ஆகையால் ச்ரத்தையுள்ள முனிகள் வேதாந்தம் முதலிய சாஸ்த்ரங்களைக் குருமுகமாகக் கேட்டு, ஸ்திரமான ஞானம்,வைராக்யம், பக்தி இவைகளை அடைந்து ஜீவனுக்கும், பரமாத்மாவுக்கும் பேதமில்லை என்று தெரிந்துகொள்கிறார்கள். ஓ! ப்ராஹ்மண ச்ரேஷ்டர்களே! அவரவர்களுடைய ஜாதிக்கும், ஆச்ரமத்திற்கும் தகுதியான தர்மத்தை ஸாங்கமாய் (குறைவின்றி) அனுஷ்டித்தால், அவர்களிடத்தில் ஸ்ரீ நாராயணன் ப்ரியப்படுகிறார். இதுவே அதற்குப் பலமாகும். ஆகையால் பகவானுடைய கதையைக் கேட்கும்போதும் அவருடைய நாமபஜனம் செய்யும் போதும், அவரைத்யானஞ் செய்யுங்காலத்திலும், அவரைப் பூஜிக்கும் போதும், வேறு விஷயத்தில் மனத்தைச் செலுத்தாமலிருக்க வேண்டும்.விவேகிகள் பகவத்யானமாகிற கத்தியால் அஹங்கார ஸம்பந்தத்தை யுண்டுபண்ணும் கர்மபந்தத்தை வெட்டுகிறார்கள். ஆகையால் பகவானுடைய கதையைக் கேட்பதில் விருப்பமில்லாதவர் யார்? (எல்லோரும் விரும்புவார்கள்) ஓ! ப்ராஹ்மணர்களே! புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வதால் பாபங்கள் நீங்குகின்றன, பின்பு பெரியோர்களுடைய சேர்க்கையுண்டாகின்றது. பிறகு தர்மத்தில் ச்ரத்தையும் அதன்பின் வாஸுதேவருடைய

கதையைக்கேட்க விருப்பமும், பின்பு அதில் ப்ரீதியு மாகிய இவைகள் முறையே உண்டாகின்றன. தம் கதையைக் கேட்பவர்களுக்கும், நாமபஜனஞ் செய்பவர் களுக்கும், புண்யத்தைக்கொடுப்பவரும், ஸாதுக்களுக்கு அனுகூலத்தை செய்பவருமான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா தம்முடைய கதையை கேட்பவர்களுடைய ஹ்ருதயத்தில் வசித்துக்கொண்டு காமம், கோபம் முதலியவைகளை நாசஞ்செய்கிறார். எப்பொழுதும் பகவத் பக்தர்களை ஸேவிப்பதாலும், பாகவத சாஸ்த்ரத் தைப் படிப்பதாலும் பெரும்பாலும் அக்ஞானம் விலகும். அதனால் உத்தமச்லோகராகிய (புண்யகரமான பெயருள்ள) பகவானிடம் ஸ்திரமான பக்தியுண்டாகும். அப்பொழுது ரஜோகுணம், தமோகுணம் ஆகிய இவைகளாலுண்டாகும் காமம், க்ரோதம் முதலிய வற்றால் அவர்களுடைய மனஸ் விகாரமடையாமல் ஸத்வகுணமுள்ளதாய் சாந்தமாயிருக்கும். இப்படி பகவானிடம் பக்தி செய்கிறவனுடைய மனஸானது அதன் மஹிமையால் சாந்தமாய் விடும். ஆசைகளும் ஒழிந்துவிடும்; பின்பு பரமாத்மாவின் உண்மையான ஸ்வரூபஞானமுண்டாகும். ஆத்மரூபியான ஈச்வரனு டைய ஸாக்ஷாத்காரமுண்டானவுடன் அஹங்காரம் அடியோடே நாசமடைகிறது. ஸம்சயங்கள் யாவும் நிவர்த்தியாகின்றன. ப்ராரப்தகர்மம் தவிற மற்றவைகள் நசிக்கின்றன. ஆகையால் வித்வான்கள் பகவானாகிய வாஸுதேவரிடத்தில் எப்பொழுதும் மிகுந்த ஸந்தோஷத் துடன் பக்திசெய்கிறார்கள். அதனால் அவர்களுடைய சித்தம் சுத்தமாகிறது. பரமபுருஷன் ஒருவரானாலும் உலகத்தைக் காப்பாற்றுவதற்கு ஸத்வ குணத்தாலும், ஸ்ருஷ்டிப்பதற்கு ரஜோ குணத்தாலும், ஸம்ஹரிப்ப தற்கு தமோ குணத்தாலும், முறையே ஹரி, (விஷ்ணு)

பிரஹ்மா, ருத்ரன் என்னும் பெயரடைகிறார். ஆனால் ஸ்த்வமூர்த்தியான வாஸுதேவரிடமிருந்து மனிதர் களுக்கு க்ஷேமங்கள் யாவும் கிடைக்கின்றன. அக்னியானது கட்டையைப்பிடித்து எரிக்கும்போது அந்தக் கட்டையாகிற உபாதி ஸம்பந்தத்தால் புகை உண்டாகிறது. அதிலிருந்து வேதங்களில் சொல்லிய கர்மங்களுக்கு யோக்யமான அக்னி விருத்தியடைகிறது அதுபோல லயஸ்வரூபமாகி தமஸ்ஸினிடமிருந்து ரஜோகுணமும், அதனிடமிருந்து ஸத்வகுணமும், அதன்னால் ப்ரஹ்மப்ராப்தியும் உண்டாகிறது. முன் காலத்தில் பெரியோர்களான முனிவர்கள் சுத்த ஸத்வ மூர்த்தியும், பகவானுமாகிய, மஹாவிஷ்ணுவை (இந்த்ரியங்களுக்குப் புலப்படாதவரை) பஜித்தார்கள். ஆகையால் அந்த மார்க்கத்தை அனுஸரிப்பவர்கள், ஸம்ஸாரத்திலிருந்து க்ஷேமத்தை அடைவார்கள். மோக்ஷத்தை விரும்பியவர்கள், கோரஸ்வரூபமுள்ள பரமசிவன், பித்ரு கணங்கள், முதலியவைகளை உபாஸியாமல் அவர்களை நிந்திக்காமலும், சாந்தங் களான, நாராயணனுடைய கலைகளை, (அம்சங்கள்) உபாஸிக்கிறார்கள். ரஜோகுணம், தமோகுணம், இந்த ஸ்வபாவமுள்ள ஜனங்கள், ஐஸ்வர்யம், புத்ரன், அழகு, இவைகளை அடையவிரும்பி தங்களுக்கு ஸமமான ஸ்வபாவமுள்ள, பித்ருக்களையும், ருத்ரன், ஹிரண்ய கர்பன், முதலியவர்களையும், ஸேவிக்கிறார்கள். வேதங்கள், யாகத்தின் ஸ்வரூபத்தைச் சொல்லுகின்ற வைகளானாலும் யாகத்தால் ஆராதிக்கப்படும் தேவதை விஷ்ணுவாகையால், அவைகள் யாவும், வஸுதேவரு டைய புத்ரனாகிய பகவானையே சொல்லுகின்றன.

யோக சாஸ்த்ரங்கள் எல்லாம் ப்ராணாயாமம்

முதலியவைகளை, நிரூபிப்பவைகளானாலும், அவைகள் பகவானை அடைவதற்கு உபாயமாகையால் அந்தப் பரமாத்மாவையே சொல்லுகிறவைகளாகின்றன. மற்ற கர்மங்களும், அந்தப் பரம புருஷனுடைய ஆராதனத் திலேயே உபயோகிக்கப்படுகின்றன. ஞானசாஸ்த்ரம், தபஸ். தர்மசாஸ்த்ரம், கர்மத்தின் பலனாகிய ஸ்வர்க்கம், முதலியவைகள் யாவும், பரமாத்ம பரங்களேயாகின்றன. நிர்குணராயும், எங்கும் நிறைந்தவருமான அந்த பகவானே காரணரூபமாயும், கார்யரூபமாயுமிருந்து, முக்குண ஸ்வரூபமாயுள்ள தம்முடைய மாயையால் முதலில் உலகத்தை ஸ்ருஷ்டித்தார். மேலும் அவர் அந்த மாயையால் உண்டாகி ப்ரகாசிக்கும் ஆகாயம் முதலியவைகளில் உட்பிரவேசித்து இயற்கையில் தாம் குணமற்றவரானாலும், குணமுள்ளவர்போலத் தோன்று கிறார். அவர் விஞ்ஞானத்தால் (சித்சக்தி) நிறைந்தவர் கட்டைகளில் ஜ்வலிக்கும் அக்னி உண்மையில் ஒன்றானாலும், ஆச்ரய பேதத்தால் வெவ்வேறாகத் தோன்றுகிறது போல ஜகத்ரூபியான பரமபுருஷன் ஒருவரானாலும், ஒவ்வொரு ப்ராணிகளிடத்திலும், வெவ்வேறாகக் காணப்படுகிறார். அந்தப் புருஷோத்த மனே பூதஸூக்ஷ்மங்கள், இந்த்ரியங்கள், மனம் ஆகிய இவைகளால் உண்டுபண்ணப்பட்ட ப்ராணிகளிடத்தில் ப்ரவேசித்து விஷயங்களை அனுபவிக்கச்செய்கிறார். லோககர்த்தாவாகிய ஈச்வரன் திர்யக் (புறவை பசு முதலிவைகள்) தேவர்கள், மனிதர்கள் இவைகளில் ஸத்வ மூர்த்தியாய் அவதரித்து உலகங்களைக் காப்பாற்று கிறார். இவைகளே லீலாவதாரமெனப்படுகின்றது.

நோட்டு.

11–22. பால்ய– எனக்கு உபநயனம் செய்ய

வேண்டும் என்று ஆசார்யரிடம் வராதவர், அல்லது, தான் ஒருவராகப்போனார்.– ஸ்ரீத– தேஹம் முதலிய வைகளில் அபிமானமற்றவர்.– இவர் ருத்ரனுடைய அவதாரம்– விஜய. 12–4– ஸரஸ்வதி தேவியென்றால் ஸ்ரீதேவி,நரனென்றால் வாயுபகவான் – விஜ, ஜயம்– ஸம்ஸாரத்தை ஜயிப்பதால் இப்பெயர் கிடைத்தது, 14–நாரண தாரண– "ஓ அர்ஜுன! நான் வேதங்களாலும், தபஸினாலும், யாகத்தாலும் அறியமுடியாதவன்" என்ற ஸ்மிருதியின்படி பக்தியைவிட வேறு காரண மற்ற–ஸ்ரீத.– வீர. விஷ்ணுவின் பிரஸாதத்தால் உண்டான ஞானம். விஜ.

12–24 தர்ம–மோக்ஷத்திற்கு ஸாதனமாகிய தர்மத்திற்கு பணம் பலனல்ல. தர்மத்திற்காகவென்று, ஸம்பாதிக்கப்பட்ட பணத்திற்கு காமம் ப்ரயோஜன மாகாது. விஜ 11–12 ஹரி–

ஆக்ஷேபம்:– விஷ்ணு ஒருவரே ப்ரஹ்மா, பரமசிவன், என்ற பெயரை அடைகிறார் என்று சொன்னதால், மூன்று தேவர்களும் ஒருவரென்றும், ஒருவருக்கொருவர் பேதமில்லாதவர்களென்றும் ஏற்படுகிறது. "ப்ரஹ்மாவும், சிவனும் நாராயணனே" ச்ருதி. நாராயணர் என்ற பெய்ருடைய ப்ரஹ்மதேவர் கல்பத்தின் முதலில் ஜனங்களை ஸிருஷ்டித்தார். பிறகு அந்த பகவானாகிய விஷ்ணுவானவர் காலாக்னி ருத்ரரூபியாயிருந்து ஸகல லோகத்தையும் ஸம்ஹரித் தார். பகவான் ஒருவரே உலகத்தை ஸ்ருஷ்டிப்பது, பரிபாலிப்பது, நாசம் பண்ணுவது, ஆகிய கார்யங்களை முறையே ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் ஆகிய பெயருடன்

நடத்திவருகிறார்."– ஸ்மிருதி, ஆகையால் மஹாவிஷ்ணு மும்மூர்த்திகளுக்குள் ஒருவரென்றே ஏற்படுகிறது. மேலும், இம்மூவர்களைக் காட்டிலும் மேலான பரதத்வம் ஒன்றிருப்பதாகவும் ஏற்படுகிறது. அந்தப் புருஷனால் ஜகத்முழுவதும் பூர்ணமாயிருக்கிறது." "அதைக்காட்டிலும் எது மேற்பட்டதோ, அது ரூபமற்றது எவர்கள் இதையறிகிறார்களோ அவர்கள் மரண தர்மமில்லாதவர்களாக ஆகிறார்கள்."– ச்ருதிகள் "இவர் அமிர்தத்துக்கு ஹேதுவாயிருப்பவர்"– ச்ருதி இதனால் மும்மூர்த்திகளுக்கும் மேலான பகவத் ஸ்வரூபமே ஸகல ஜகத்திற்குக் காரணம். அதை பஜிப்பவர்களே மோக்ஷத்தையடைவார்கள். நாராயணனை பஜிப்பவர்கள் மோக்ஷத்தையடையமாட்டார்கள். அவர் பரமாத்மாவுமல்ல.

ஸமாதானம்:– மும்மூர்த்திகளும் ஒருவரேயென்று சொல்வது ந்யாயமல்ல "நாராயணனிடமிருந்து ப்ரஹ்மா உண்டாகிறார், நாராயணனிடமிருந்து ருத்ரன் உண்டாகிறார், நாராயணனிடமிருந்து பன்னிரண்டு ஆதித்யர்களும், பதினோரு ருத்ரர்களும், எட்டு வஸுக்களும், எல்லாவேதங்களும் உண்டானார்கள்" "நாராயணன் ஒருவரேயிருந்தார். ப்ரஹ்மாவும், ருத்ரனும் அப்பொழுது இல்லை. நாராயணர் ஒருவரேயிருந்தார். சங்கரராவது, ப்ரஹ்மாவாவது அப்பொழுது இல்லை. "அவர் முனியாகவிருந்து ஸங்கல்பித்தார். அவரிடமி ருந்து இவையாவும் உண்டாயின." "எவருடைய தொப்பிளில் தோன்றிய தாமரஸ புஷ்பத்திலிருந்து மஹாத்மாவான ப்ரஜாபதி உண்டானாரோ." "அதில் ப்ரஹ்மா உண்டானார்." "அவர் முந்தி மூன்று கண்களுள்ளவரும், மூன்று தலைகளுள்ளவரும்,

மூன்று கால்களுள்ளவருமான ஸம்ஹாரமூர்த்தியை யுண்டுபண்ணினார்" ப்ரஹ்மதேவர், தக்ஷர் முதலியவர் கள், காலம், மற்ற ஸகல ப்ராணிகள் இவைகள் யாவும் மஹாவிஷ்ணுவின் விபூதிகளேயாம். மேலும், ருத்ரன், காலன், அந்தகன் நான்குவிதமான ப்ராணிகள், இவைகள் ஜனார்த்தனனுடைய வீபூதியே. மேற்காட்டிய ச்ருதிகளாலும், ஸ்மிருதிகளாலும், ப்ரஹ்மா, ருத்ரன் இருவர்களும், மஹாவிஷ்ணுவால் ஸிருஷ்டிக்கப்பட்ட வர்கள் என்று தெரியவருகிறது. நாராயணனைக் காட்டிலும் மேற்பட்ட வேறு தத்வமிருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஸகல ஜகத்தும் புருஷனேயாம். ஜகத்தானது அவனை உபஜீவிக்கிறது." "அவருக்கு ஸமானனும் மேற்பட்டவனும் காணப்படவில்லை" ச்ருதிகள் ஓ! அர்ஜுனா! என்னைக்காட்டிலும் மேலானதொன்று மில்லை." ஸ்மிருதி. ப்ரளய காலத்தில் எல்லாம் ப்ரகிருதியில் லயித்திருக்கும் பொழுது ஸகல ஜகத் ரூபியான நாராயணன் ஒருவரேயிருக்கிறார். புண்டரீ காக்ஷனைவிட வேறு மேலான தெய்வமில்லை. மேல்காட்டிய ப்ரமாணங்களால் மஹாவிஷ்ணுவே மேலானவைரென்று ஏற்படுகிறது.

ஆக்ஷேபம்– மும்மூர்த்திகளும் ஒருவரென்றும், விஷ்ணுவைக்காட்டிலும் மேலான தத்வமிருக்கிற தென்றும் ப்ரமாணங்களை காட்டியிருக்கிறோமே.

ஸமாதானம்– அதிற்சொல்லிய சிவ, சம்பூ ஈச, முதலிய சப்தங்களுக்கு நாராயணனென்றே அர்த்தங் கொள்ளவேண்டும். ருத்ரன் முதலியவர்கள் கர்மத்துக்கு வசப்பட்டவர்களென்று சொல்லியிருக்கிறது. வாஸு

தேவன் கர்மவச்யரென்று ஓரிடத்திலும் சொல்லப் படவில்லை. ஆகையால் நாராயணனே எல்லா தெய்வங்களிலும் மேலானவர். அவரை அடைவதற்கு அவரே காரணம். வீர.15–6 ஞானசா –கபிலரால் சொல்லப்பட்ட ப்ரகிருதி புருஷ விஷயமான க்ரந்தம், தபஸ், சாந்த்ராயணம் முதலியவை. வீர. லீலாவதார– ஈச்வரனுடையவை கர்மாதீனமல்ல வென்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–3

பகவதவதாரங்கள்

உலகங்களை ஸிருஷ்டிப்பதற்காக, பகவான் ஆதியில் மஹத்தத்வம், அஹங்காரம் முதலியவைகளுடன் கூடியதும், 16 கலைகளுள்ளதுமான புருஷதேஹத்தை எடுத்துக்கொண்டார். பின்பு ஜலத்தால் உலகமுழுவதும் மூடப்பட்டிருக்க, அவர் அந்த ஜலத்தில் படுத்து யோகநித்ரை செய்தார். அப்பொழுது அவருடைய மடுப்போலிருக்கும் தொப்புளிற் தோன்றிய தாமரை புஷ்பத்திலிருந்து ஒருவர் உண்டானார்;அவரே மரீசி முதலிய ப்ரஜாபதிகளுக்கு அதிபதியாகிய ப்ரஹ்மதேவர். மேற்சொல்லிய புருஷரூபத்தில் ஏற்பட்டிருக்கும் அவயவங்களின் அமைப்புகளால் தேவர்கள், மனிதர்கள் முதலியவர்கள் ஸிருஷ்டிக்கப்பட்டு உலகமானது விஸ்தாரமாகிற்று. மேற்காட்டிய பகவத் ரூபமே சுத்தமானது மேலான ஸத்வகுணமுள்ளது ஞானக் கண்ணுள்ள யோகிகள் இந்த பகவத் ஸ்வரூபத்தை அனேகங்கால்கள், கைகள், முகங்கள், தலைகள், கண்கள், மூக்குகள், காதுகள் என்னும் இவைகளால் அற்புதமான தாகவும், அனேக கிரீடங்கள், குண்டலங்கள் முதலிய வைகளால் ப்ரகாசிப்பதுமாக பார்க்கிறார்கள்:அந்த தேஹத்திலிருந்தே அனேக அவதாரங்கள் வெளிப் படுகின்றன.காரியம் முடிந்தவுடன் அதனிடத்திலேயே அடங்குகின்றன. மேலும் அந்த ரூபம் நாசமற்றது. அதனுடைய அம்சம், ப்ரஹ்மதேவர். அவருடைய அம்சமுள்ளவர்கள், மரீசி முதலிய ப்ரஜாபதிகள். அவர்களாலே தேவர்களும், மனிதர்களும், பசு, பக்ஷி முதலியவைகளும், ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன.

6–28. புருஷ தேஹத்தை அங்கீகரித்த அந்த தேவனே கௌமாரமென்ற ஸிருஷ்டியில் ப்ராஹ்ம மணராயிருந்து, ப்ரஹ்மசர்ய வ்ரதத்தை அனுஷ்டித்து வந்தார். இது ஒரு அவதாரம். மேலுமவர் பன்றி சரீரமெடுத்து பாதாளலோகஞ் சென்று, அவ்விடமிருந்த பூமியை இவ்வுலகத்திற்கு கொண்டு வந்தார். இது மற்றொரு அவதாரம். தவிர ரிஷி ஜன்மாவில் தேவ ரிஷியான நாரதராய் அவதரித்து ஸாத்வத தந்த்ர மென்ற பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தைச் செய்து வெளியிட்டார். அதில் சொல்லிய கர்மங்கள் துக்கத்தைக் கொடுக்கிறதில்லை, (பகவானுடைய ஆராதன ரூபங்களாகையால்) அந்த மஹாபுருஷனே தர்மகலையின் ஸிருஷ்டியில் நரன், நாராயணன் என்ற திவ்யநாமங்களுடன் ரிஷிகளாக அவதரித்தார். அந்த நான்காவது அவதாரத்தில் இந்த்ரியங்களையும் மனத்தையும் அடக்கி கடுமையான தபஸ் செய்தார். அவரே கபிலரென்ற மேலான பெயருடன் ஸித்த புருஷனாக 5–வது அவதாரஞ்செய்து காலமஹிமையில் ஒளிந்து போன தத்வங்களின் உண்மையைத் தெரிவிக்கும் ஸாங்க்ய சாஸ்த்ரத்தை ஆஸுரி என்ற ப்ராஹ்மணருக்கு உபதேசித்தார். பின்னுமொரு சமயத்தில் அத்ரி மஹர்ஷியானவர் மஹாவிஷ்ணுவை நோக்கி "உமக்கு சமமான புத்ரன் எனக்கு உண்டாகும் படி அனுக்ரஹிக்க வேண்டும்" என்று பிரார்த்திக்க பகவான் அப்போர்ப்பட்ட புத்ரன் தம்மைத்தவிர வேறொருவரும் இல்லாமையால் தம்மை அத்ரி ஏமாற்றி விட்டாரென்று வெறுப்பில்லாமல், தானே தத்தாத்ரே யராக அவதரித்தார். மேலும் அவர் அலர்க்கன் என்ற அரசனுக்கும், ப்ரஹ்லாதன் முதலியவர்களுக்கும், ஆன்வீக்ஷகியை (ஆத்மவித்தையை) உபதேசித்தார்.

பின்னுமவர் ஆகூதி என்பவளிடம் ருசி என்பவருக்கு 'யக்ஞர்' என்ற பெயருடன் அவதரித்து ஸ்வாயம்புவ மன்வந்த்ரத்தில் தாம் இந்த்ரனாகவிருந்து தம்முடைய புத்ரர்களான யாமன் முதலிய தேவர்களுடன், உலகத் தைக் காப்பாற்றினார். இன்னும் அந்த பகவான் ஆக்னீதரருடைய புத்ரராகிய நாபி என்பவருக்கு மேருதேவியினிடத்தில் ரிஷபரென்ற பெயருடன் அவதரித்து எல்லா ஆச்ரமங்களிலும் மேலான பரமஹம் ஸாச்ரமத்தை யோகிகளுக்கு உபதேசித்தார். பின்னு மொருக்கால் மஹர்ஷிகளால் ப்ரார்த்திக்கபட்டு ப்ருது வென்ற ராஜர்ஷியாக அவதரித்து, பசுவின்ரூபத்தை தரித்து பூமியினிடமிருந்து ஸகல வஸ்துக்களையும் கறந்து உலகத்தைக்காப்பாற்றியதால், இந்த அவதாரம் மிகவும் விரும்பத் தக்கதாயிருந்தது. தவிரவும் சாக்ஷுஷமன்வந்தரத்தில் ஸத்யவ்ரதருக்காக மாயையால் காண்பிக்கப்பட்ட ப்ரளயத்தில், மத்ஸ்யரூபத்தை தரித்து பூமியாகிய ஓடத்தில் வைவஸ்வத மனுவாக ஆகப்போகிற ஸத்யவ்ரதரை வைத்து காப்பாற்றினார். அந்தப்ரபுவே, தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து ஸமுத்ரத்தை அமிருதத்திற்காகக் கடையும்போது, ஆமை உருவம் கொண்டு மத்தாகிய மந்தரமலையை, முதுகில் தாங்கினார். அவரே தன்வந்தரியாக அவதரித்தும், பிந்தி மோஹினி வேஷங்கொண்டு, அஸுரர்களை மோஹிக்கச் செய்து, தேவர்களுக்கு அமிருதத்தைக்கொடுத்து புஜிக்கவும் செய்தார். மிக்க பலிஷ்டனாகிய, ஹிரண்யகசிபுவை நரஸிம்ம சரீர மெடுத்து பாயைப் பின்னுகிறவன் கோரையைப் பிளப்பது போல் நகங்களால் துடையில் கிழித்து அவனைக்கொன்றார். இது பதினான்காவது அவதாரம். பின்னுமொரு ஸமயத்தில், மஹாபலியென்ற அஸுரன்

யாகஞ்செய்யும்பொழுது, பகவான் வாமனரூபியாக அவனுடைய யாகசாலை சென்று மூன்றடி பூமியை யாசித்தார். மேலும் அதனால் அவனிடமிருந்து ஸ்வர்க்க ராஜ்யத்தை பிடுங்கிக்கொண்டு அவனை நிக்ரஹித்தார். இது பதினைந்தாவது அவதாரம். பின்னுமொருக்கால் பூமியில் பரசுராமனாக அவதரித்து தர்ம விரோதஞ் செய்யும் அரசர்களை கோபத்துடன் இருபத்தொருதரம் கொன்று பூமியில் க்ஷத்ரிய வம்சமில்லாமலொழியச் செய்தார். இது பதினாறாவது. அந்த பரமபுருஷனே ஸத்யவதியிடத்தில் பராசரருக்கு வ்யாஸராய் அவதரித் தார். இவருடைய காலத்தில் மந்தபுத்தியுள்ளவர்களாக யிருந்த படியால் வேதங்கள் சாகை சாகையாக பிரிக்கப்பட்டன. மேலும், ராவணன் முதலிய ராக்ஷஸர் களை கொல்வதற்காக ஸ்ரீ ராமாவதாரஞ்செய்து, ஸமுத்ரத்தில் அணைகட்டியது முதலிய ஆச்சர்யங் களைக் காட்டினார். இது பதினெட்டாவது அவதாரம். பின்பு விருஷ்ணி குலத்தில் பலராமன், ஸ்ரீ கிருஷ்ணன் என்ற திவ்ய நாமதேயங்களுடன் அவதரித்துப் பூமியின் பாரத்தை நிவர்த்தித்தார். இது பத்தொன்பதாவது அவதாரம். பின்பு கலியுகத்தில் கீகடம் (மத்ய கயை) என்ற தேசத்தில் புத்தனென்ற பெயருடன் ஜினருக்கு (சுத்தோதனனென்று சிலர்) புத்ரனாக அவதரிப்பார். கலியின் முடிவில் யுகஸந்தியில் அரசர்களெல்லோரும் பெரும்பாலும் திருடர்களாக ஆய்விடுவார்கள். அப்பொழுது ஜகத்திற்கு குருவாகிய பகவான் கல்கியென்ற பெயருடன் விஷ்ணுயசஸ் என்பவருக்குப் புத்ரனாக அவதரிப்பார். இது இருபத்தொன்றாவது அவதாரம்.

ஓ! "ப்ராஹ்மணர்களே! குறையாத, ஜலமுள்ள

பெரிதாகிய ஏரியிலிருந்து அனேக வாய்க்கால்கள் ஒடுவது போல, ஸத்வ மூர்த்தியாகிய விஷ்ணுவின் அவதாரங்கள் கணக்கிட முடியாதவைகள். ரிஷிகள், முனிகள், தேவர்கள், மனுவின் புத்ரர்கள், ப்ரஜாபதிகள் எல்லோரும் மஹாவிஷ்ணுவின் அம்சாவதாரமே தவிர வேறில்லை. மேலும், முன்காட்டிய படியுள்ள பகவானுடைய அம்சங்கள், கலைகள், விபூதிகள், ஸாக்ஷாத் விஷ்ணுவாகிய கிருஷ்ணன் இவர்கள், அஸுரர்களால் உலகத்திற்கு உபத்ரவம் நேரும்போது அவர்களை நிக்ரஹித்து உலகத்தைச் ஸுகிக்கச் செய்கிறார்கள்.

29. இந்தப் பகவானுடைய அதிரஹஸ்யமான அவதாரங்களைக் காட்டும் ச்லோகங்களைக் காலையிலும், மாலையிலும், சுத்தனாய் பக்தியுடன் படித்தவன் ஸம்ஸார துக்கத்திலிருந்து நிவர்த்தியடைகிறான்.

30–39. ரூபமில்லாதவனும், சித்ரூபியாயுமிருக்கும் ஜீவனுக்குப் பகவானுடைய மாயையின் குணங்களாகிய மஹத்தத்வம் முதலியவைகளால் இந்த ஸ்தூலசரீர மேற்படுத்தப்பட்டது. வாயுவை (காற்றை) ஆச்ரயித்த மேகங்கள் ஆகாயத்திலிருப்பதாயும், பூமியின் தூளிக்காற்றிலிருப்பதாகவும், அக்ஞர்கள் நினைப்பது (ஆரோபிப்பது) போல எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாயிருக்கும் ஆத்மாவினிடம் சரீரம் ஆரோபிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஸ்தூல சரீரத்திற்கு மேற்பட்டதும் கை, கால் முதலிய அவயவ பரிமாணங்களற்றதும், பார்க்கப்படாததும், கேட்கப்படாததாயும், ஸூக்ஷ்மமாயும், ஜீவனுடைய உத்கிறந்தி (வெளியில் போவது) முதலியவைகளுக்கு ஸாதனமாயுமுள்ள லிங்க சரீரமும் முன்காட்டியதுபோல ஆரோபிக்கப்படுகிறது. ஸ்தூல

சரீரம் லிங்கசரீரமாகிய இவைகள் பரமாத்மாவினிடம் ஆரோபிக்கப்படுவதற்குக்காரணம் அவித்யையே, உண்மையில் ஆத்மாவிற்கு இவ்விரண்டின் ஸம்பந்தமுமில்லை. இம்மாதிரியான உண்மையான ஸ்வரூபஜ்ஞானம் எந்தக்காலத்தில் உண்டாகிறதோ அப்பொழுது ஜீவன், ஞான ஸ்வரூபியான ப்ரஹ்மாத்ம பாவத்தையடைவான். ஈச்வரனுடைய மாயையானது ஓய்வடையுமானால் அப்பொழுது ஜீவன் ப்ரஹ்மமாக ஆகிறான். பரமானந்த ரூபியாய் விளங்குகிறான். அந்தர்யாமியான பகவான் ஒன்றையுஞ் செய்யாமலிருப்பவரானாலும் கர்மங்களை செய்கிறவரென்றும், உத்பத்தியில்லாதவரானாலும் பிறந்தாரென்றும், கவிகள் வேதத்தின் ரஹஸ்யமான விஷயத்தை வர்ணிப்பது ஜீவனுக்கு பிறப்பு முதலியவைகளுண்டென்று சொல்வதுபோல மாயையேதவிற வேறில்லை. வீண்போகாத லீலைகளுள்ளவரும், ஸகல ப்ராணிகளிடம் மறைந்திருப்பவருமான ஈச்வரனே இந்த லோகத்தைப் படைக்கிறார்;காப்பாற்றுகிறார்; ஸம்ஹரிக்கிறார். ஆனாலும் ஸ்வதந்தரராகையால் ஆறு இந்த்ரியங்களுக்கு யஜமானராயிருப்பதால் அதுகளின் விஷயங்களை வெகு தூரத்திலிருந்தே க்ரஹிக்கிறார். அவைகளில் ஸம்பந்தப்படுகிறதில்லை. மூடன் எப்படி நடனம் (நர்த்தனம் செய்கிறவனால்) செய்யப்படும் அபினயத்தை அறியமாட்டானோ அப்படி அற்பபுத்தி யுள்ளவன் ஸகல ஜகத்தைப் படைப்பவரும், ஸங்கல்பத்தால் ரூபங்களையும் வாக்கினால் பெயர்களையும், விஸ்தரிப்பவருமான பகவானுடைய லீலாவிபூதிகளை யுக்தி(தர்க்கம்) முதலியவைகளின் ஸாமர்த்யத்தால் அறியமாட்டான். ஆனால், நல்மார்க்கத்தை ஸ்தாபிப்பவரும், சத்ருக்களை ஜயிக்கும் வீர்யமுள்ளவரும் சக்ராயுதம் தரித்தவருமான பரமாத்மாவின் ஸ்வரூபத்தை,

இடைவிடாமல் கபடமற்று பகவானுடைய பாதங்களாகிய தாமரஸ புஷ்பத்தின் வாஸனையை ஸேவிக்கும் பக்தனே ச்ரமபட்டு தெரிந்துகொள்ளுகிறான். ஓ ப்ராஹ்மணர்களே! இதைத் தெரிந்து கொண்டு ஸகல லோகத்திற்கும் நாதராகிய ஸ்ரீ வாஸுதேவரிடம், எவர்கள் இடைவிடாமல் மனத்தைச் செலுத்துகிறார்களோ, அவர்களுக்குக் கர்ப்பவாஸம் முதலிய துக்கத்தை உண்டுபண்ணும் பிறப்பு இறப்பு நேரிடமாட்டாது. ஆதையால் எல்லாவற்றையும் அறிந்த அந்த பக்தர்களே தன்யர்கள் (மேலானவர்கள்)

40–44. ஸர்வஜ்ஞரான வேதவ்யாஸ மஹர்ஷி உத்தமச்லோக (நல்வினையை கொடுப்பதால் மேலான பெயருள்ள) ராகிய பகவானுடைய சரித்தத்தைக் காட்டுகிறதும். வேதங்களுக்கு ஸமமாயுள்ளதுமான ஸ்ரீமத் பாகவத புராணத்தைச் செய்து முடித்தார். பிறகு உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டி ஸகல மங்களங்களுக்கும் இருப்பிடமாயும், அர்த்தத்தாலும், சப்தத்தாலும் மிகவும் மேலானதுமான அந்தப் புராணத்தை, யோகிகளுக்குட் சிறந்தவரும், தம்முடைய புத்ரரத்னமுமாகிய சுகருக்கு உபதேசித்தார். அந்தச்சுகர் எல்லாவேதங்களிலும், இதிஹாஸங்களிலுமிருந்து அவற்றின் ஸாரத்தை எடுத்து செய்யப்பட்ட இந்தச் சாஸ்த்ரத்தை, கங்கைக்கரையில் மிகுந்த வைராக்கியத்துடன், ப்ராயோபவேசஞ் செய்திருக்கும் பரீக்ஷித்து மஹாராஜனுக்கு, அனேக மஹர்ஷிகள் கேட்டிருக்கும் போது சொன்னார். இவ்விதமாக அது பூமியில் பரவியது. ஓ! ப்ராஹ்மணர்களே! அந்த ஸமயத்தில் நான் அவ்விடம் போனேன். மேலும் அவ்விடத்தில் உட்கார்ந்திருந்த மிகுந்த தேஜஸுள்ள அந்த ப்ரஹ்ம

ரிஷியான சுகருடைய அனுக்ரஹம் பெற்றேன்; நீங்களனைவரும் 'அதன் விஷயத்தை தெரிந்துகொள்ள வேண்டும்' என்று மிகுந்த ஆவலுள்ளவர்களாய் இருப்பதால் நான் சுகரிடம் கேட்டபடி, என்புத்திக் கெட்டியவரையில் சொல்லுகிறேன். (கிருஷ்ணபகவான் தர்மம், ஞானம் இவைகளுடன் தமது லோகஞ்சேர்ந்த பிறகு கலியில் ஞானக்கண்ணில்லாமல் கஷ்டப்படும் ஜனங்களுக்கு இந்த புராணமாகிய ஸூர்யன் உதயமாகி இருக்கிறது.)

நோட்டு.

17–22. 16 கலைகள்– இந்த்ரியங்கள் 11, ஐந்து பூதங்கள், இந்த பதினாறு கலைகள், பகவானுடைய சரீரம் உண்மையில் இப்போர்ப்பட்டதல்ல. ஆனாலும், விராட்தேஹத்தின் அந்தர்யாமியாயிருக்கும் பகவானை விராட்ரூபமாக உபாஸிப்பதற்குபயோகமாகச் சொல்லப் பட்டது. ஸ்ரீத. 18–12. [illegible]ளமார– இவருக்கு ஸனத்குமாரரென்று பெயர். ஆனால் இவர் ஸனகர் முதலியவர்களில் சேர்ந்தவரல்ல. விஜயத் ஆதிபுருஷன் ப்ரஹ்மதேவருடைய ஸ்வரூபமாகவிருந்து ஸனத்குமாரர் முதலியவர்களாக அவதரித்தார். பிறகு ஈச்வரனை யுபாஸித்தார். அவர்கள் அனுப்ரவேசாவதார ரூபிகளெனப்படுவார்கள். மேலுமவர்கள் அவித்யையுள்ளவர்களேயாம். ஆனாலும் பகவானையுபாஸித்துக் காலாந்தரத்தில் ஞானத்தை யடைவார்கள். வீர இது இந்த ஒரு அத்யாயத்தில் 21 அவதாரங்கள் நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. ஆனாலும் அவைகள் வரிசையாகச் சொல்லப்படவில்லை. ஆனாலும் இவ்விடத்தில் சொல்லிவருவதில் முதலாவது என்பதேயாம். ஸ்ரீத.

16 தேவர்ஷி–மஹிதாஸரென்ற மஹர்ஷி. விஜ20. தர்ம– யமனுடைய அம்சம். ஸ்ரீத. கபிலர்– இவர் ப்ரஸித்தராகிய கபிலரல்லவென்று சிலர். விஜ. 31 வெறுப்–மூலத்தில் அனஸூயயா என்றிருப்பதால், அத்ரியின் பத்னியாகிய அனஸூயை யென்பவளால் அடையப்பட்டார்.– வீர. விஜ. 19–4. யாம– ஒவ்வொரு மன்வந்தரத்திலும் தேவர்களுடைய பெயர் மாறுகிறதுண்டு– விஜ. நாபி–ஸ்வாயம்புவ மனுவின் புத்ரர்– வீர. இந்த்ரனுடைய புத்ரன்.– முனிமஹர்ஷி– வேனனைக்கொன்ற பிறகு.– வீர மாயையால்– மன்வந்தரத்தின் முடிவில் ப்ரளயமில்லாமற் போனாலும், அக்காலத்தில் மார்க்கண்டேயருக்குக் காண்பித்தது போல காண்பிக்கப்பட்டது– ஸ்ரீத. துடையில்– மடியில் வைத்துக்கொண்டு. விஜ வாமன– துஷ்டர்களுடைய கர்வத்தைக் குறைப்பதால் இப்பெயர் கிடைத்தது– ஸ்ரீத. கோபத்துடன்.– சக்தியில்லாதவனுக்குக் கோபமுண்டாகுமேயல்லாமல், ஸாமர்த்யமுள்ளவர்களுக்கு கோபமுண்டாக ந்யாய மில்லையாகையால் கோபங்கொண்டவர்போல வென்பது கருத்து– விஜ. ரிஷிகள்– மனுவின் புத்ரர்களாகிய ப்ரியவ்ரதர் முதலியவர்கள்.– விஜ. கலைகள்– குமாரர்கள், நாரதர் முதலியவர்கள். கலாவதாரபூதர்கள், அதிலும் குமாரர் முதலியவர்கள் ஞானமுள்ளவர்கள் ப்ருது முதலியவர்கள் பகவானு டைய சக்தி விசேஷமுள்ளவர்கள்– ஸ்ரீத. விபூதிகள்– "எந்தப்ராணிகள் விபூதியுள்ளனவைகளோ, எது அழகு பொருந்தியதோ, எது பலமுள்ளதோ, அவைகள் யாவும் என்னுடைய தேஜஸ்ஸின் அம்சத்திலிருந்து உண்டானவர்கள்" பகவத்கீதை. ரூபமில்லாத–ஜீவனுக்கு தேஹஸம்பந்தம் விஷ்ணுவின் மாயையால் ஏற்பட்ட

தாகையால் ஞானத்தால் அந்த அவித்யை நிவர்த்தி யாகிறதென்பது இதுமுதல் ஐந்து ச்லோகங்களால் காட்டப்பட்டிருக்கிறது. ஸ்ரீத. ஆரோபி- நான் தேவன், இந்த சரீரம் என்னுடையது, என்ற அபிமானத்திற்கு விஷயமாகச் செய்யப்பட்டிருக்கிறது. உண்மையில் தேவர்கள் முதலிய சரீரம் ஜீவனுடைய ஸ்வரூபமல்ல.

ஆக்ஷேபம்– தேவசரீரம் முதலியவைகள் அவை களுக்கு அபிமானியாகிய ஜீவனால் தரிக்கப்படுகிற தாகையால் அவனுடையதென்று ஏன் சொல்லக்கூடாது?

ஸமாதானம்– "எவனுக்கு ஆத்மா சரீரமோ எவன் ஆத்மாவினிடத்திலிருக்கிறானோ" என்ற ச்ருதிப்படியும். ஜீவனும் பரமபுருஷனால் தரிக்கப்படுகிறபடியால் எல்லாவற்றிற்கும் பரமாத்மாவே முக்யமான ஆதாரம்– வீர. ஆகாயம் வாயு இவைகள் கண்ணிற்குப் புலப்படாதவைகளானாலும், மேகக்கூட்டத்தை ஆகாசமென்றும், பூமியிலிருந்து கிளம்பும் தூளிகளை வாயுவென்றும் சொல்வதுபோல, அக்ஞஜனங்கள் ப்ரதிமையைப் பார்த்து அதையே ஈச்வரனென்று சொல்லுகிறார்கள். அதனால் ஸர்வ ஸாக்ஷியான பகவான், இந்த்ரியங்களால் பார்க்கக்கூடியவர் (த்ருச்யர்) என்றும் சித்ரூபியான அவர் ஜடரென்றும் ஏற்படுகிறது. ஆகையால் இது ப்ராந்தியேயாம்.– விஜ. ஸூக்ஷ்மம்– "இவன் அவ்யக்தன், நினைக்கமுடியாதவன் விகாரமற்ற வன்"– பகவத்கீதை. ஒன்றையும்– புண்யபாபங்களற்ற வர், கர்மாதீனமான சரீரமில்லாதவர்–வீர. ரஹஸ்யம்.– உத்பத்தியை அடையாமலே பலவகையாக உண்டா கிறார்" என்ற ச்ருதியில் உத்பத்தியடையாதவரென்றால்

ஜீவன்போல் கர்மாதீனமாக ஜன்மமில்லாதவரென்றும் தனதிஷ்டப்படி பகவானுக்கு உத்பத்தியுண்டென்றும் அர்த்தம். அதைக் கவிகளே அறிவார்கள். "தீரர்கள் அந்தப் பகவானுடைய சரீரத்தை அறிகிறார்கள்" ச்ருதி: ஆகையால் பகவானுடைய ஜன்மகர்மங்கள், ஜீவனுடையது போன்றவைகள் என்று நினைக்கக் கூடாது என்பது வேதவாக்யத்தாலேயே காட்டப் பட்டிருக்கிறது– வீர லீலைகள் ஜீவன் அனாதியாகிய கர்மத்தால் புண்ய பாபங்களைச் செய்து அதனால் ஸகல துக்கங்களை அடைவதுபோல் பகவானுடைய செய்கைகள் அவரைக்கட்டுப்படுத்துகிறதில்லை. மேலும் அவைகள் அவருக்கு லீலைகளாகும். அவைகள் வீண் போகாதவைகள் என்றதால் ஜீவனுடைய கர்மங்கள் அனேக விக்னமுள்ளவைகள் என்று காட்டப்பட்டன. இப்படி பலவகையிலும் ஜீவனைக்காட்டிலும் மேலானவரென்பது தாத்பர்யம். ஆறு– ஞானம், சக்தி, தேஹபலம், ஐச்வர்யம், வீர்யம் தேஜஸ் இவைகளுக்கு அதிபதி. அல்பபுத்தி– நான், என்னுடையது என்ற அபிமானமுள்ளவன். நடன– வேஷதாரியானவன், பலவகையான வேஷங்களைத் தரித்தாலும் எப்படி இவன் வேறாக ஆகிறதில்லையோ, அப்படி பகவான் மத்ஸ்யம், ஆமை முதலியவைகளின் உருவங்கொண்டாலும் அவருடைய உண்மையான ரூபம் மாறுகிறதில்லை மேலும் வேஷம் தரிப்பது முதலிய சேஷ்டைகள் அவனுக்கு விளையாட்டாயிருப்பது போல் பகவானுக்கும் அவைகள் லீலைகளேயாகும். அறிந்த– பகவந்த: என்ற பதத்திற்கு நீங்கள் என்று அர்த்தங்கொண்டு ஏ சௌனகர் முதலியவர்களே! நீங்கள் மேலானவர்கள். ப்ராயோபவேசம்– ஜீவித்திருப்பதில் ஆசையில்லாமல் ஆஹாரமில்லாமலிருக்கிறதாகிய வ்ரதம் வீர.–விஜய.

அத்யாயம்–4.

வியாஸர் கவலை யடைந்தது.

அதனைக் கேட்டுத் தீர்க்கஸத்ரம் செய்துகொண்டிருக்கும் மஹர்ஷிகளுக்குள் வயது சென்றவரும், கூட்டத்தில் முக்யரும், ரிக்வேதியுமாகிய சௌனகரென்பவர் ஸூதரைக் கொண்டாடிப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினார்.

2–13. "ஓ மிகுந்த பாக்யமுள்ள ஸூதரே! பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சுகஸ்வாமியால் சொல்லப்பட்ட புண்யகரமான ஸ்ரீமத் பாகவதகதையை எங்களுக்குச் சொல்லவேண்டும். கதை சொல்வதில் தாங்கள் மிக்க ஸாமர்த்யமுள்ளவர்கள். இந்தக்கதை எந்தயுகத்தில் எந்தவிடத்தில் நடந்தது எதற்காக யாரால் தூண்டப்பட்டு, இந்த கிரந்தத்தை வ்யாஸமஹாமுனிவர் செய்தார். மேலும் அவருடைய புத்ரரான சுகரென்பவர் மஹாயோகி; தாம், பிறர் என்ற பேதபுத்தியில்லாமல் எல்லாவற்றையும் ப்ரஹ்ம ஸ்வரூபமாகப் பார்ப்பவர். பரமாத்மாவினிடத்திலேயே புத்தியைச் செலுத்தியவர், மாயையாகிய தூக்கத்தைவிட்டு விழித்தவர். இவருடைய ஸ்வபாவம் வெளியில் தெரியாது. பார்வைக்கு மூடன்போல் தோன்றுகிறவர். இவர் குரு ஜாங்கலமென்னும் தேசத்தில் ஹஸ்தினாபுரத்தில் பயித்தியம் பிடித்தவன் போலவும், ஊமையன் போலவும், மூடன் போலவும் ஸஞ்சரிக்கும்போது, இவருடைய உண்மையைப் பட்டணத்து ஜனங்கள், எப்படித்தெரிந்து கொண்டார்கள்? இவர் எல்லா ஆசைகளையும் ஒழித்துத் துறவியாய்ப் போகும்போது பிதாவாகிய

வ்யாஸமஹர்ஷி புத்ரஸ்நேஹத்தால் அவர் பின்செல்ல வ்ழியில் ஜலக்ரீடை செய்துகொண்டிருந்த அப்ஸர ஸ்த்ரீகள், வஸ்த்ரமில்லாதவரும், யுவாவுமாகிய சுகரைக் கண்டு வெட்கப்படவில்லை. இவருக்குப்பின்னே வருகின்றவரும், மரவுரியை யுடுத்திக்கொண்டவரும் வயது சென்றவருமான வ்யாஸ மஹர்ஷியைப் பார்த்த வுடன் வெட்கமடைந்து தம்தம் ஆடைகளையுடுத்திக் கொண்டார்கள். இந்த ஆச்சர்யத்தைக் கண்ணுற்ற மஹர்ஷியானவர், அவர்களை இது விஷயமாகக் கேட்க அவர்கள் மஹர்ஷியை நோக்கி "புருஷன், ஸ்திரீ, என்ற பேதபுத்தி உமக்கிருக்கிறது. சுத்த திருஷ்டியுள்ள உம்முடைய புத்ரருக்கு அம்மாதிரியான எண்ணமில்லை" என்று பிரத்யுத்தரஞ் சொன்னார்கள். அப்போர்ப் பட்ட சுகருக்கும், பாண்டுவின் வம்சத்தில் பிறந்த பரீக்ஷித்து மஹாராஜனுக்கும் எப்படி ஸம்வாதம் (பேச்சு) நேர்ந்தது? அதனாலல்லவா இந்த பாகவத கதை வெளிப்பட்டது. இவர் கிருஹஸ்தர்களுடைய வீட்டிற்குப் பிக்ஷைக்காகச் சென்றால் அந்த கிருஹத்தை சுத்தப்படுத்துவதற்காக ஸ்வல்பகாலம் (மாடு கறப்பதற்கு எவ்வளவுகாலம் பிடிக்குமோ அவ்வள காலம்) காத்திருப்பார். இவர் ஒரே இடத்திலிருந்து பாகவத கதையைச் சொன்னது மிக ஆச்சர்யம். ஏ! ஸூதரே! ஜனங்கள் அபிமன்யுவின் புத்ரராகிய பரீக்ஷித்து மஹா ராஜனைப் பாகவதர் (பகவானுடைய பக்தர்கள்)களுக் குட் சிறந்தவராகச் சொல்லுகிறார்கள். அவருடைய பிறப்பு, மிகவும் அத்புதமானது. ஆகையால் அவருடைய சரிதத்தைச் சொல்லவேண்டும். பாண்டவர்களுக்குக் கீர்த்தியை விருத்தி செய்தவரான அந்தச்சக்ரவர்த்தி தமது அளவற்ற ராஜ்யத்தையும், லக்ஷ்யஞ்செய்யாமல், என்ன காரணத்தால் கங்கையின் கரையில் ப்ராயோப

வேசஞ் செய்தார். ஓ! ஸூதரே! சத்ருக்கள் உத்தம வஸ்துக்களை காணிக்கையாக எடுத்துவந்து தங்களுடைய க்ஷேமத்திற்காக அவருடைய பாதபீடத்தை (கால் வைத்துக்கொள்ளும் ஆஸனம்) நமஸ்கரிக்கிறார்களோ அவ்வளவு பராக்ரமமுள்ள மஹாராஜன் யௌவனமுள்ளவராயினும், ஒழிக்கமுடியாத பணத்தின் ஆசையையும், ப்ராணனிடத்திலுள்ள அபிமானத்தையும், விடவேண்டுமென்று எப்படி விரும்பினார்? உத்தமச்லோகராகிய பகவானிடத்திலேயே ,மனத்தைச் செலுத்தியவர்கள், லோகத்திற்கு க்ஷேமம், ஐச்வர்யம் இவைகளை உண்டுபண்ணுவதற்காக ஜீவிக்கிறார்களே தவிர சொந்தமான கார்யத்திற்காகவல்ல. ஆகையால் இந்த அரசன், சரீரத்தைவிட விரும்பிய காரணம் யாது? (பிறருக்கு உபயோகமான சரீரத்தை தான் கெடுப்பது ந்யாயமல்லவென்பது கருத்து) வேதத்தின் அர்த்தம் தவிர இதிஹாஸ புராணங்களின் அர்த்தங்களைச் சொல்வதில் மிக்க ஸாமர்த்யமுள்ள வரென்று உங்களை நினைக்கிறேன். ஆகையால் என்னால் கேட்கப்பட்ட எல்லா விஷயங்களையும் சொல்லவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

14–18 இவற்றைக்கேட்ட ஸூதர் சொல்லத் தொடங்கினார் மூன்றாவது த்வாபரயுகத்தின் கடைசியில் வஸுவின் வீர்யத்திற்குண்டான ஸத்யவதியினிடம், பராசரருக்கு புத்ரனாக அவதரித்த ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அம்சம் இந்த வ்யாஸ மஹாமுனியே. இவர் மஹாயோகி. நடந்தது, நடக்கப்போகிறது இவைகளை அறிந்தவர். அவர் ஒருக்கால் ஸரஸ்வதீ நதிக்கரையில் ஆசமனஞ் செய்து சுத்தராய் ஸூர்யோதய காலத்தில், தாம் தனியாய் உட்கார்ந்து "அறியக்கூடாத

வேகமுள்ள காலமஹிமையால் யுகதர்மங்கள் கலந்து போய்விட்டன. ஜந்து பூதங்களுக்கும் சக்தி குறைந்து விட்டது, ஜனங்களுக்கு ச்ரத்தை, தேஹபலம், ஸத்வகுணம், ஆயுஸ் இவைகளும் குறைந்துபோயின. புத்தியோ கெட்டமார்க்கத்தில் செல்லுகிறது" என்று ஞானக்கண்ணால் பார்த்து எல்லா ஜாதியார்களுக்கும் எல்லா ஆச்ரமிகளுக்கும் என்னசெய்தால் அனுகூலம் உண்டாகுமென்று எல்லோருக்குமுபகாரமான விஷயத்தைச் செய்ய விரும்பி யோசித்தார்.

19–23. வேதத்தில் சொல்லப்பட்டதும், நான்கு ரித்விக்குகளால் முடிக்கக்கூடியதும், சுத்தமானதுமான யாகமே ஜனங்களுக்கு அனுகூலத்தைச் செய்யக்கூடிய தென்று நிச்சயித்து அந்தக் கர்மம் எப்பொழுதும் தொடர்சியாய் நடந்தேறி வருவதற்காக ஒன்றாயிருந்த வேதராசியை நான்காகப் பிரித்தார். மேலும் அந்த நான்கு பாகங்களும் ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வம், என்று பெயர்களுண்டாயின. (பாரதம் முதலிய) இதிகாசங்களும்,(பாகவதம் முதலிய) புராணங்களும், ஐந்தாவது வேதமென்று சொல்லப்படுகின்றன. மேற் காட்டிய 'ரிக்,யஜுஸ், ஸாமம், அதர்வ'என்ற நான்கு வேத சாகைகள் பைலர், வைசம்பாயனர், கவியாகிய ஜைமினி, ஸுமந்து என்கிற மஹர்ஷிகளிடம் முறையே ஒப்புவிக்கப்பட்டன. என்னுடைய பிதாவாகிய ரோம ஹர்ஷணரிடம் இதிஹாஸங்களும், புராணங்களும், கொடுக்கப்பட்டன. மேற்சொல்லிய மஹர்ஷிகளே தங்கள் தங்களுடைய வேதசாகைகளை பல வகையாகப் பிரித்தார்கள். அவைகள் அல்ப புத்தியுள்ள இக்காலத்து ஜனங்களால் அத்யயனஞ் செய்யப்படுகின்றன. அவர்கள் தங்கள் தங்கள் சிஷ்யர்களுக்கும் அத்யயனஞ்

செய்வித்து, அவைகளை உலகத்திற் பரவச் செய்தார்கள். யார் யார் எந்த எந்த சாகைகளை அத்யயனஞ் செய்தார் களோ, அவர்வர்களுக்கு அந்த அந்த சாகைகள் சொந்தமாயின.

24–32. தீனர்களிடத்தில் ப்ரீதியுள்ள பகவானாகிய வ்யாஸ மஹர்ஷியால் இப்படி வேதங்கள் பிரிக்கப் பட்டன. ப்ராஹ்மணர், க்ஷத்ரியர், வைச்யர் ஆகிய இவர்களுக்குள், அதமர்களாகிய த்விஜபந்துக்களுக்கும், ஸ்திரீகளுக்கும், சூத்ரர்களுக்கும், வேதத்தைக் கேட்க அதிகாரமில்லாததனால், அவர்கள் இதிஹாஸத்தால் க்ஷேமத்தை யடையட்டுமென்னுங் கருணையால், வ்யாஸமஹர்ஷி மஹா பாரதம் என்ற க்ரந்தத்தைச் செய்தார். ஓ! ப்ராஹ்மணர்களே, இப்படி எப்பொழுதும் எல்லாப் பிராணிகளுக்கும் க்ஷேமத்தை செய்வதிலேயே நோக்கமுள்ள அந்த மஹர்ஷியானவர் எல்லாவற்றையு மறிந்தவராயிருந்தும் அவருடைய மனத்திற்கு சாந்தி உண்டாகவில்லை; அதனால் அவர் ஸந்தோஷமில்லா மல் ஸரஸ்வதி நதியின் சுத்தமான கரையில் தாம் ஒருவராயிருந்து யோஜித்து பின்வருமாறு சொல்லலா னார். "நான் வ்ரதமுள்ளவனாய் வேதங்களை அத்யயனஞ் செய்தேன். குருக்களையும், அக்னியையும் பூஜித்தேன். ஆசார்யனுடைய கட்டளையின்படி கபடமற்று நடந்தேன். பாரதமென்ற வ்யாஜத்தால், வேதத்தின் அர்த்தத்தை எல்லோருக்கும் தெரியும்படி வெளியிட்டேன். அதில் ஸ்திரீகளாலும், சூத்ரர்களாலும், அறியக்கூடியவைகளான தர்மங்கள் காட்டப்பட்டன. அப்படியிருந்தும் என்னுடைய ஆத்மா(ஜீவன்) இயற்கையில் பூர்ணனானாலும், ப்ரஹ்மவர்சஸ் உள்ளவர்களுக்குட் சிறந்தவனானாலும், ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை யடையாதவன் போலத் தோற்றுகிறான்.

இதற்கென்ன காரணம்? இது ஆச்சர்யமாயிருக்கிறது ஆனால் பாகவத தர்மங்கள் விஸ்தாரமாக வெளியிடப் படவில்லை. அவைகளில் பரம ஹம்ஸர்களுக்கு மிகவும் ப்ரியமிருக்குமே. அவைகளே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிற்கு ப்ரியமானவைகள், அதனால்தான் நம்முடைய மனத்திற்கு ஆனந்தமுண்டாகவில்லையோ" என்று யோஜித்து ஆத்மாவை சூன்யனாக நினைத்து வருத்தமடைந்தார்.

33. இந்த ஸமயத்தில் ஸரஸ்வதி நதிக்கரையில் இருக்கும் அந்த வ்யாஸமஹர்ஷியின் ஆச்ரமத்திற்கு நாரதர் வந்தார். அப்பொழுது அந்த மஹர்ஷியானவர் தேவர்களால் பூஜிக்கப்பட்ட நாரதரைக் கண்டு எதிர் கொண்டழைத்து சாஸ்த்ரமுறை தவறாமல் அவரைப் பூஜித்தார்.

நோட்டு.

25–3. தீர்க்க– அநேக வர்ஷங்களால் முடிக்கக்கூடிய யாகம்– சந்த் 14– பேத– மூலத்தில் நிர்விகல்பக என்றிருப்பதால் நிச்சய ஞானமுள்ளவர். ஸமதிருக்– மித்ரன். சத்ரு,. மற்றவர் ஆகிய இவர்களிடத்தில் ஸமபுத்தியுள்ளவர். ஏகாந்தமதி– ஜனஸஞ்சாரமற்ற விடத்தில் வஸிப்பதில் ப்ரியமுள்ளவர். மூட–– எல்லாவற்றையும் அறிந்தவராயிருந்தும் தன்னுடைய ஸாமர்த்யத்தை வெளியிடாதவர்– சந்த். 16–விழித்த–– "ஸகல ப்ராணிகளுக்கும் எது ராத்ரியோ, அதில் யோகியானவன் விழித்துக் கொண்டிருக்கிறான்.பகவத் 26–33. மூன்றாவது– மஹாயுகத்தில். 26–28. வேதத்தின்– இவர் ஸூதஜாதி யாகையால் வேதத்தில் இவருக்கு அதிகாரமில்லையென்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–5.

வ்யாஸருக்கு நாரதர் உபதேசித்தது.

பின்பு மிகுந்த கீர்த்தியுள்ளவரும், எப்பொழுதும் வீணையைத் தரித்தவரும், தேவர்ஷியுமான நாரதர் ஸமீபத்தில் ஸுகமாய் உட்கார்ந்திருக்கும் ப்ரஹ்மர்ஷி யாகிய, வ்யாஸமஹர்ஷியை நோக்கி ப்ரஸன்னமுக முள்ளவராய்ப் பின்வருமாறு சொல்லத்துடங்கினார்; "ஓ! மஹா பாக்யமுள்ள பராசர புத்ரரே! உம்முடைய சரீராபிமானியான ஆத்மாவானது (ஜீவன்) அந்தச் சரீரத்தாலும், மனத்திற்கு அபிமானியான ஆத்மா வானது, அந்த மனத்தாலும் ஸந்தோஷப்படுகிறதா? அறியவேண்டிய ஸகல தர்மங்களையும் பூர்ணமாகக் காட்டுவதும், ஆச்சர்யத்தை யுண்டுபண்ணுகிறதுமான மஹா பாரதத்தை விஸ்தாரமாகச் செய்தவர் நீரன்றோ? ஆகையால் விஷயம் யாவும் உமக்குத் தெரிந்திருக்க லாமே. மேலும் நீர் நித்யவஸ்துவாகிய, பரமாத்ம ஸ்வரூபத்தை நன்றாக விசாரித்து அறிந்தவரல்லவா? அப்படியிருந்தும், ஒன்றையும் அறியாதவர் போல ஏன் துக்கிக்கிறீர்?" என்று கேட்டார்.

4–11. இதனைக் கேட்ட வ்யாஸ மஹா முனியானவர், பின்வருமாறு சொல்லத் தொடங்கினார். "தாங்கள் சொன்னவைகள் யாவும் என்னிடம இருக்கின்றன. ஆனாலும் என்மனத்திற்கு ஸந்தோஷம் உண்டாகவில்லை. அதன் காரண மின்னதென்றும் விளங்கவில்லை பரம் (கார்யம்) அபரம் (காரணம்) இவைகளுக்கு அதிபதியும், ஸங்கல்பமாத்ரத்தால் முக்குணங்களைக் கொண்டு ஜகத்தை ஸிருஷ்டிப்பவரும்

அவைகளைக் காப்பாற்றுபவரும் பின்னும் அவைகளை நாசஞ்செய்பவரும், அவைகளில் ஸம்பந்தப் படாதவருமான புராண புருஷனை, நீர் உபாஸித்தவர், ரஹஸ்யங்களான விஷயங்கள் யாவும் தங்களுக்குத் தெரியும். மேலும் நீர் ஸூர்யன்போல மூவுலகத்திலும் ஸஞ்சரிப்பதால் எல்லாவற்றையும் அறிந்தவர். ஸகல ப்ராணிகளினுள்ளில் ஸஞ்சரிக்கிற ப்ராணவாயுபோல எல்லாருடைய புத்தியின் ப்ரவர்த்தியையும் அறிந்தவர். ஆனதுபற்றி ப்ரஹ்ம புத்ரராகிய உம்மைக் கேட்கிறேன் வேதங்களை முறைப்படி அத்யயனஞ்செய்து, அதன் உண்மையான அர்த்தத்தைபறிந்து, வ்ரதங்களை யனுஷ்டித்து, யோகத்தால் ப்ரஹ்மஸ்வரூபத்தையும் அறிந்தேன். அப்படியிருந்தும் எந்தப் பாகம் எனக்கு மிகவும் குறைவாயிருக்கிறதோ அந்த பாகத்தை யுபதேசிக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்தார். அதனைக்கேட்ட நாரதர், வ்யாஸமஹாமுனியை நோக்கி, "இயற்கையில் பரிசுத்தமான பகவானுடைய யசஸ்ஸை, (குணங்களை) வர்ணிப்பதால் பரமாத்மா ஸந்தோஷிப்பார். மற்ற ஞானத்தால் பகவான் திருப்தி அடையமாட்டார்; ஆகையால் தர்மாதி ஞானத்தைக் குறைந்ததாக நினைக்கிறேன். உம்மால் அந்த பகவானுடைய குணங்கள் பெரும்பாலும் முக்யமாக வர்ணிக்கப்படவில்லை. மஹாபாரதம் முதலியவைகளில் ஈச்வரனுடைய குணங்கள் வர்ணிக்க பட்டிருந்தாலும் தர்மங்களையும் அதன் ஸாதனங்களையும், முக்யமாக, மஹர்ஷிகள் ஸ்மிருதிகளில் சொல்லியிருப்பதுபோல, பரமாத்மாவின் மஹிமையையே ப்ரதானமாக நீர் வர்ணிக்கவில்லை. எச்சிற்குழியில் கிடக்கும் சித்ரான்னம் முதலியவைகளைக் காக்கைகள் தின்று திருப்தி அடையுமேயொழிய, மானஸ ஸரஸில் ஸஞ்சரிக்கும்

ஹம்ஸங்கள். அவைகளில் ஆசைப்படுகிறதில்லை. அப்படிப்போல லோகத்தைப் பரிசுத்த படுத்தும் பகவானுடைய மஹிமையை வர்ணிக்காத க்ரந்தங்கள், அற்புதமான பதச்சேர்க்கையுள்ளவைகளானாலும், அவற்றால் காமிகள் ஸந்தோஷப்படுவார்களே யொழிய ப்ரஹ்மிஷ்டர்களான பரமஹம்ஸர்கள் திருப்தியடைகிற தில்லை. ஒவ்வொரு ச்லோகத்திலும் அபசப்தங்கள் இருந்தாலும், நாசமற்றவராகிய பகவானுடைய திவ்ய நாமங்களும், மஹிமையும் வர்ணிக்கபட்டிருந்தால் அந்த க்ரந்தம் ஜனங்களுடைய பாபங்களை போக்கும். அதைச் சொல்பவர்களிருந்தால் பெரியோர்கள் கேட்பார்கள். கேட்பவர்களிருந்தாலும் அவர்கள் சொல்லுவார்கள். இரு வகையாருமில்லாத போது தாமே கானஞ்செய்வார்கள்.

12–22. உபாதிகளின் ஸம்பந்ததத்தை நிவர்த்திக்கும், ப்ரஹ்மஞானமும், பகவத்பக்தியில்லாதவனுக்குப் பலனை (அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தைக்) கொடுக்கிறதில்லை. மேலும் கர்மங்கள் எப்பொழுதும் துக்கரூபங்கங்களே. ஆதலால் பலனையுத்தேசித்துச் செய்யப்பட்டனைகள் ஆனாலும், பலனை யுத்தேசியாமல் செய்யப்பட்டவை களானாலும், பகவானிடம் அர்ப்பிக்கபடாதவரையில் அவைகள் ப்ரகாசிக்கிறதில்லை. ஓ! மஹாபாக்யமுள்ள வ்யாஸமஹர்ஷியே! நீர் உண்மையான ஞானமுள்ளவர்; சுத்தமான கீர்த்தியுள்ளவர்; ஸத்யத்திலேயே ஆசை உள்ளவர்; வ்ரதங்களை யனுஷ்டித்தவர்; ஆகையால் ஸகலபந்தங்களும் நிவர்த்தியாக வேண்டியதற்காகப் பகவானுடைய பலவகையான லீலாவிபூதிகளை ஒரே மனதாகச் சிந்தியும். பகவானுடைய சரித்தில் ஆசையில்லாமல், மற்ற சரிதங்களைச் சொல்ல

விரும்பியவர்களுடைய புத்தியானது தேவதா ரூபங்களையும், அநேக நாமங்களையும், சிந்தித்து நிலைபெறாமல் பெருங்காற்றிலகப்பட்ட கப்பல் போல, ஒரு நிலையாய் இருக்கிறதில்லை. ஜனங்கள் இயற்கையாகவே காம்ய கர்மங்களில் ஆசையுள்ளவர்கள். அந்தக்கர்மங்கள் ஞானிகளால் நிந்திக்கக்கூடியவைகளானாலும் அவைகளை தர்மங்களென்றே சொல்லியிருக்கிறீர். ஆகையால் அவைகளை ப்ராகிருத ஜனங்களும் அப்படியே நினைத்திருக்கிறார்கள். "கர்மங்களாலும், ப்ரஜையாலும், தனத்தாலும், மோக்ஷத்தையடைய முடியாது" என்ற ச்ருதியின்படி காம்ய கர்மங்கள் சிறந்தவைகளல்ல என்று ஞானிகளுடைய வார்த்தையை அக்ஞர்கள் நம்புவதற்கு ந்யாயமில்லாமல் இருக்கிறது. இப்படி நீர் செய்தது, ஒரு பெரிய சாஸ்த்ர விருத்தமான கார்யம். ஆனது பற்றி, காலத்தாலும், தேசத்தாலும், அளவிடக் கூடாத ப்ரபுவின் ஸகலஸ்வரூபத்தை நிவிர்த்தி மார்க்கததைக்கொண்டு வித்வான்தான் தெரிந்து கொள்வான். அது அக்ஞனால் அறிய முடியாது. ஆகையால தேஹம் முதலியவைகளில் அபிமானம் உள்ளவர்களும், ஸத்வம் முதலிய குணங்களால் விஷயத்தில் செல்லுகிறவர்களுமான ப்ராகிருதஜனங் களுக்காகப் பகவானுடைய லீலைகளை வர்ணியும். பின்னும் உலகத்தில் தன் ஜாதிக்கும், ஆச்ரமத்திற்கும் உரியதான தர்மத்தைவிட்டு பகவானுடைய தாமரை மலர் போன்ற பாதங்களை ஸேவித்துக் கொண்டு இருந்தவன் பக்தியின் பயனை அடைவதற்கு முன்னமே பலன் பாதியில் மரணம் அடைந்தாலும், பக்தியின் தொடர்ச்சியற்றுப் போனாலும் அவனுக்கு அந்த

வாஸனையிருக்குமாகையால் ஒரு போதும் அந்த க்ஷேமக்குறைவு நேரிடாது. மேலும் ஈச்வரனிடம் பக்தி செய்யாமல் தன்னுடைய தர்மத்தை நன்றாய் அனுஷ்டித்தாலும் அதனால் என்ன கிடைக்கப்போகிறது? (ஒன்றும் இல்லையென்பது தாத்பர்யம்) ப்ரஹ்மதேவர் முதல் ஸ்தம்பமென்ற புழு வரையில் ஸம்ஸாரத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் எல்லா ப்ராணிகளாலும், எந்தவஸ்து அடையப்படவில்லையோ அதையடைய முயற்சிக்கவேண்டும். எப்படி நாம் விரும்பாமல் இருக்குங்காலத்திலும், துக்கம் நேரிடுகிறதோ அப்படியே விஷயஸுகமும் எந்தவிடத்திலும் அந்த அந்தக்காலத்தில் கர்மத்தின் மஹிமையைக்கொண்டு ஜனங்களால் அடையப்படுகிறது. கர்மத்தை மாத்ர மனுஷ்டித்தவன் ஸம்ஸாரதுக் கத்தையடைவது போல, ஒருவன் பகவத் பக்தி செய்து அந்த ஜன்மாவில் அது பூர்த்தியடையாமல் தாழ்மையான வேறு ஜன்மமடைந்திருந்தாலும் அதில் அவனுக்கு துக்கம் நேரிடுகிறதில்லை பகவானுடைய பாதங்களில் பக்தி செய்தவன் மறுஜன்மத்திலும் அவைகளை மறக்கமாட்டான்; அவைகளுக்கு வசப்படுவான். ஈச்வரனை விட்டு ஜீவன் எப்படி வேறில்லையோ அப்படி ப்ரபஞ்சம் பகவானைவிட வேறில்லை அவரிடமிருந்தே இந்த ஜகத் உண்டானது அவராலேயே காப்பாற்றப்படுகிறது. அந்த பரமாத்மாவை நீரே தெரிந்து கொள்வீர்; ஆனாலும் ஸ்வல்ப பாகத்தைத் தெரிவித்தேன்; வீணாகாத ஞானமுள்ள நீர் பிறப்பில்லாத பரம புருஷனுடைய அம்சமேயாம். மேலும் நீர் இயற்கையில் ஜனனமரணமில் லாதவரானாலும், உலகத்தின் க்ஷேமத்திற்காக சரீரமெடுத்துக் கொண்டீர். ஆகையால்

இவ்விஷயத்தைத் தெரிந்துகொள்ளும். அந்தமஹா மஹிமை பொருந்திய பரம புருஷனுடைய சரிதத்தை வர்ணியும். சாஸ்த்ரங்களைக் கேட்பது (ச்ரவணம்) யாகஞ் செய்தல், குளம், கிணறு, வெட்டுவித்தல், ப்ரியமான வார்த்தை சொல்லுதல், மஹாதானஞ் செய்தல் ஆகிய இவைகளின் பலன் என்னவென்றால் உத்தமச்லோகராகிய பகவானுடைய குணங்களை வர்ணிப்பதேயாம். இதுவே சாச்வதமாகிய பலன். இதற்கு உதாரணமாக என்னுடைய முன்ஜன்ம விருத்தாந்தத்தைச சொல்லுகிறேன்.

23–38. நான் முன்ஜன்மத்தில் ப்ராஹ்மணர் களுடைய வீடுகளில் வேலைசெய்து கொண்டிருந்த சூத்ரஸ்த்ரீயின் புத்ரனாகவிருந்தேன். அப்பொழுது மழைகாலத்தில் ஒரே இடத்தில் வஸிப்பதாகிய சாதுர் மாஸ்யவ்ரதத்தை யனுஷ்டித்த சில ஸன்யாஸிகளுக்கு பால்யத்திலேயே நான் சுச்ரூஷை செய்துவந்தேன். பால்யமுள்ளவனானாலும், விளையாட்டு ஸாமான்களை வைத்துக்கொள்ளாமலும், பால் சாபல்யமில்லாமலும், இந்த்ரியங்களை ஜயித்து அவர்கள் ஏவினதைச் செய்வதிலேயே நோக்கமுள்ளவனாயிருந்தேன். அப்பொழுது ஸமபுத்தியுள்ள அவர்களுக்கு ஸ்வல்ப மாய்ப்பேசும் என்னிடத்தில் கருணையுண்டாயிற்று. ஒருநாள் அவர்கள் புஜித்த பிறகு, பாத்ரத்தில் எஞ்சி இருந்த, அன்னத்தை அவர்களுடைய அனுமதியின் பேரில் நான் புஜித்தேன். அதனால் ஸகல பாபங்களும் நிவர்த்தியாகிச் சுத்தனானேன். இப்படிச் சித்தம் சுத்தமான போது, அவர்கள் அனுஷ்டிக்கும் பகவத் பக்தியாகிய தர்மத்திலேயே எனக்கு ப்ரியம் நேர்ந்தது அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய லீலைகளைக்

கானஞ் செய்துகொண்டிருந்தார்கள். இனியவைகளான அவைகளை நான் எப்பொழுதும் அந்தரங்க ப்ரியத்துடன் கேட்டேன். அதனால் எனக்கு பக்தி அதிகரித்தது. அதிலேயே விசேஷ நோக்கமுள்ள எனக்குப் பகவானிடம் ஸ்திரமான பக்தியுண்டானதால், அப்பொழுதே பரப்ரஹ்மமானது ப்ரபஞ்ச ஸம்பந்த மற்றதென்றும், அதுவே நானென்றும், என்னிடத்தில் ஸ்தூல ஸூக்ஷ்மசரீரங்கள் அவித்யையால் (பொய்யாக ஆரோ பிக்கப்பட்டனவேயொழிய, உண்மையிலில்லை என்றும் நான் தெரிந்து கொண்டேன். இப்படி மழைகாலம், சரத்காலம் ஆகிய இரண்டு ருதுக்களிலும் மஹாத்மாக்களாகிய, அந்த ஸன்யாஸிகளால் சொல்லப்பட்ட மஹாவிஷ்ணுவின் மஹிமையை மூன்று காலங்களிலும் ச்ரவணஞ்செய்தேன். அதனால் சிறந்த பக்தியுண்டானது மன்றி, ரஜோகுணமும், தமோ குணமும், என்னைவிட்டு விலகின. அவர்களுக்குச் சுச்ரூஷை செய்வதிலேயே ஆசையுள்ளவனும், வணக்கமுள்ளவனும், பாப மில்லாதவனும், ச்ரத்தை யுள்ளவனும், இந்த்ரியங்கள் ஜயித்தவனும், பால்ய வயதுள்ளவனும், எப்பொழுதும் கூடவே ஸஞ்சரிப்பவனுமாகிய எனக்கு அந்த முனிவர்கள் தீனர்களிடத்தில் ப்ரீதியுள்ளவர்களாகையால் விச்வரூபயாத்ரைக்கு முன்னிலையில், ப்ரஹ்ம வித்தையை யுபதேசித்தார்கள். அது மிகவும் ரஹஸ்ய மானது. ஈச்வரனால் நேரில் சொல்லப்பட்டது. அதனால் நான் ஸகல ப்ரபஞ்சங்களையும் ஸிருஷ்டிக்கும் வாஸு தேவராகிய பகவானுடைய மாயாமஹிமையைத் தெரிந்துகொண்டதுமன்றி அவருடைய பதத்தை அடையும் ஸாதனத்தையும் தெரிந்து கொண்டேன். ஓ! நன்றாய் வ்ரதங்களையனுஷ்டித்த ப்ராஹ்மணோத்தம!

வ்யாதியையுண்டுபண்ணும் த்ரவ்யங்கள், வேறு பதார்த்தத்தின் சேர்க்கையால் ரோகத்தை நிவர்த்திப்பது போல, கர்மமானது ஸம்ஸாரமாகிய வ்யாதியைக் கொடுக்கக்கூடியதானாலும், பரமாத்மாவிடம் ஸமர்ப்பிக்கப் பட்டால், அது முவ்வகையான தாபங் களையும் போக்குகிறது என்ற தர்மரஹஸ்யத்தையும், அவர்கள் எனக்கு உபதேசித்தார்கள். கர்மயோகங்கள் எல்லாம், ஸம்ஸாரத்தைக் கொடுக்கின்றவைகள் ஆனாலும், மேற்காட்டிய ஈச்வரனுடைய ஸந்தோஷத்திற்காகச் செய்கிறோம் என்ற எண்ணத்துடன் செய்து அவரிடத்தில் ஸமர்ப்பிக்கப்படுமானால் அவை பந்தகங்களாகிறதில்லை. பகவானுடைய ஸந்தோஷ மாகிய பலனை விரும்பிச் செய்யப்படும் கர்மமானது, பக்தியோகத்துடன் கூடிய ஞானத்தை உண்டு பண்ணுகிறது. "எதனைச் செய்கிறாயோ, எதனைப் புஜிக்கிறாயோ, எதனை ஹோமஞ்செய்கிறாயோ, எதனைக்கொடுக்கிறாயோ அதனை என்னிடம் கொடுத்துவிடு" என்ற பகவான் உடைய ஆக்ஞையின்படி பெரியோர்கள் கர்மங்களைச் செய்கிறார்கள். கிருஷ்ணனுடைய கல்யாண குணங்களையும், திவ்ய நாமங்களையும், வாக்கினால் உச்சரிக்கிறார்கள் அவரை த்யானஞ்செய்கிறார்கள். பக்தியோகத்தால் நல்ல ஞானமுள்ள புருஷனானவன்" வஸுதேவருடைய புத்ரராயும், ப்ரத்யும்னராயும், அனிருத்தராயும், ஸங்கர்ஷண மூர்த்தியாயுமிருக்கும் பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறோம்" என்று த்யானஞ்செய்து, யக்ஞபுருஷனாகிய பகவானை உபாஸிக்கிறான். அந்த ஈச்வரனுக்கு மேற்காட்டிய மந்த்ரத்தால் குறிக்கப்பட்ட சரீரத்தை விட வேறு சரீரமில்லை.

39–40 பகவானுடைய கட்டளைப்படி நடந்த

எனக்கு, அந்தப் பகவான், தம்முடைய ஞானம் முதலிய வைகளுக்குச் சமமான ஞானத்தையும் ஐச்வர்யத்தையும், தம்மிடத்தில் பக்தியையும் கொடுத்தார். அனேக சாஸ்த்ரங்களைக் குருமுகமாக கேட்ட வ்யாஸரே! ப்ரபுவாகிய பகவானுடைய மஹிமையை நீரும் வர்ணியும். அதனால் வித்வான் களால் அறியவேண்டிய விஷயங்கள் யாவும் உம்மால் அறியப்படும். துக்கத் தினால் வருத்தமடைந்தவர்களுக்கு அதனை நிவர்த்தி செய்யும் உபாயம் இதுவேயொழிய வேறில்லை.

நோட்டு.

28–17. ஆத்மா–சரீரவ்யாதி, மனோவ்யாதி முதலிய துக்கங்களில்லாமல், பகவத் பஜனத்தால் ஸந்தோஷ மடைந்திருக்கிறானா. சந்த். வீர. 21– பாரதம்தேசத்தாலும், காலத்தாலும், அளவிடக்கூடாத பரப்ரஹ்மத்தை விசாரித்தும் அர்த்தத்தாலும், சப்தத்தாலும், மஹத்தான சப்த ப்ரஹ்மமாகிய வேதத்தையும் நன்றாய் விசாரித்திருக்கிறீர். ஆனதால் தாங்கள் பூமியில் அவதரித்ததின் கார்யம் முடிந்து விட்டது. அப்படியி ருந்தும், அவதரித்த கார்யத்தைச் செய்யாதவர்போல் கவலைப்படுகிறீர்.– பரம் –ப்ரஹ்மா, ருத்ரன் இவர்கள். 30–அபரம்– இந்த்ரன் முதலியவர்கள். ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் மேலானவர். வீர. யோகத் தால்– "யாகம், நல்ல ஆசாரம் இந்த்ரிய நிக்ரஹம், பிறருக்கு ஹிம்ஸை செய்யாமலிருப்பது தானம் வேதாத்யயனம் முதலிய கர்மங்களுக்குள் யோகத்தால் ஆத்மாவின் உண்மையை அறிவதே மேலானது"– யாக்ஞ்யவல்க்யஸ்மிருதி அத்புதமான– யமகம் முதலிய சப்தாலங்காரங்களும்,

உத்ப்ரேக்ஷை முதலிய அர்த்தாலங்காரங்களும் பொருந்தியிருந்தாலும். ஸ்ரீத. கானம்– விசேஷ ஆனந்தத்தை உண்டுபண்ணுவதால் கானஞ்செய்கிறார் கள். ஸ்தோத்ரஞ்செய்து பாபங்களைப் போக்கடித்துக் கொள்ளுகிறார்கள். ஸ்ரீத. "பரம ஹம்ஸர்களுக்கு அவை ப்ரியமானவைகள். அவைகளே பகவானுக்கு ப்ரியமானவைகள்." என்றபடி பாகவத தர்மங்களை வர்ணிக்காமலிருக்கும் க்ரந்தங்கள் பரமஹம்ஸர்களால் ஆதரிக்கக்கூடியவையல்லவென்று காட்டப்பட்டது– வீர. நிலைபெறாமல் "ஓ அர்ஜுன! பரமாத்மாவைவிட வேறு ஒன்றுமில்லை என்னும் புத்தியானது ஒருவகையேயாம். அந்த நிச்சயமில்லாதவர்கள் இந்த்ரன, அக்னி முதலிய தேவதைகளைச் சிந்தித்து புத்தியைப் பலவகையாகச் செலுத்துகிறார்கள்." பகவத் கீதை– என்னபலன்? பகவத் பக்தியின்றி தர்மத்தை மாத்ரம் அனுஷ்டிப்பவனிடம் பகவான் ப்ரீதி செய்கிறதில்லை. அதனால் பாபம் நீங்குகிறது மில்லை. அதனால் ஆரம்பித்த கார்யம் பூர்த்தியாகிறது மில்லை ஸ்ரீத. சுற்றி– ஸ்வர்க்கம் முதலிய மேலுலகங் களிலும், பூமி முதலிய கீழ் உலகங்களிலும் ஸஞ்சரிக்கும் ஜனங்கள், அவர்களால் முந்திச் செய்யப்பட்ட பாபபுண்யங்களால் துக்கத்தையும் ஸுகத்தையும் அடைவதுபோல புண்ய பாபங்களைக் கொண்டு மோக்ஷத்தையடைய முடியாதாகையால், அதனை அடைவதற்கு முயற்ச்சிக்கவேண்டும். சந்த்– ப்ரபஞ்சம்– அசையும் பொருள் அசையாப்பொருள் இவைகளடங்கியது. "இந்த ப்ரபஞ்ச முழுவதும் பரப்ரஹ்மம்."–ச்ருதி. ஸ்வல்ப– "நல்ல ஆசார்யர்களை யடைந்த புருஷன் பரமாத்மாவைத் தெரிந்துகொள்ளு கிறான்" ச்ருதி– வ்யாஸரென்ற திவ்யநாமத்துடன் பகவான்

ப்ரகாசிப்பதுபோல ப்ரபஞ்சமென்ற பெயருடனும் அவரே விளங்குகிறார்– சந்த். நான்–பெரியோர் களுடைய சேர்க்கையால் க்ஷேமம் கிடைக்கு மென்பது காட்டப்பட்டது. சாதுர்மாஸ்யம்–ஒவ்வொரு வர்ஷத்தி லும் நான்கு மாஸங்கள் ஸஞ்சாரத்தை நிறுத்தி ஒரே இடத்தில் வஸிக்கவேண்டும் என்று ச்ருதியில் சொல்லியிருக்கிறபடி ஸன்யாசிகள், "வர்ஷக் காலமானது ப்ராணிகள் உண்டாகும் ஸமயமானதால் பெரும்பாலும் மார்க்கங்கள் ஜந்துக்களால் நிறைந்து இருக்கும் ஆகையால் அவர்களுக்கு ஹிம்ஸை நேரிடாமலிருப்பதற்காக நான்கு பக்ஷங்கள் இந்தக் கிராமத்திலேயே வஸிப்பதாக உத்தேத்திருக்கிறோம். உங்களுடைய ஸௌகர்யத்தைத் தெரிவிக்கவேண்டும்." அவர்கள் அப்படிக் கேட்ட ஸன்யாஸியை நோக்கி, தாங்கள் இவ்விடத்திலேயே ஸுகமாய் வஸியுங்கள், எங்களால் கூடிய சுச்ரூஷைச்செய்து நாங்கள் க்ருதார்த்தர்களாக ஆகிவிடுகிறோம்" என்று பதில் சொல்லுவார்கள். பின்பு ஆஷாடமாஸத்திய பூர்ணமி முதல் நான்கு பக்ஷங்கள் ஒரே இடத்தில் போக்குவார்கள். இதுவே சாதுர்மாஸ்ய விரதமெனப்படும். பிறகு ஐந்தாவது பக்ஷத்தின் பிரதமையில் ஸஞ்சாரத்திற்கு ஆரம்பிப்பார்கள். அதுவே விச்வரூப யாத்ரையாகும். புஜித்தேன்–எச்சிலான ஸ்தலத்தை சுத்திசெய்வது முதலியவற்றையுஞ் செய்தேன்.– விஜ. ஆக்ஞை– ச்ருதிகளும் ஸ்மிருதிகளும் பகவானுடைய கட்டளை. ப்ரத்யும்ன– இதுமுதல் இரண்டு ச்லோகங்களால் பகவானுடைய குணங்களையும் நாமங்களையும் ஸ்மரிப்பதும், பலத்தையுத்தேசியாமல் கர்மானுஷ்டா னம் செய்யும் ப்ரகாரங்களும். அப்படிச் செய்பவனே

மேலானவனென்றும் காட்டப்பட்டிருக்கிறது."ஓம் தத்ஸத் என்பது பரப்ரஹ்மத்தை முவ்வகையாக சொல்வதாக ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது" என்று பகவான் சொல்லிருப்பதனால் வாஸுதேவ, ப்ரத்யும்ன, அனிருத்த, ஸங்கர்ஷண இந்த நான்கு ரூபமாய் இருக்கும் பகவானுக்கு நமஸ்காரம் பண்ணுகிறோம் என்பதால் பகவானுடைய திவ்ய நாமத்தை உச்சரிக்கவேண்டிய வகை காட்டப்பட்டது. மூலத்தில் தீமஹி–த்யானம் செய்கிறோம்' என்று இருப்பதால் ப்ரணவ சப்தத்தால் காட்டப்பட்ட அனந்த கல்யாணகுணங்கள் நிறைந்த பகவானைத் த்யானம் பண்ணுகிற ப்ரகாசமும், ரக்ஷிப்பது என்ற அர்த்தமுள்ள ' அவ' என்ற தாதுவிலிருந்து ப்ரணவம் ஏற்பட்டதாகையால் எல்லாரையும் ரக்ஷிப்பதாகிய பரமாத்மாவின் குணமும், மேலும் அந்த ப்ரணவம் அகாரம், உகாரம், மகாரம் இம்மூன்று அக்ஷரங்களால் அமைந்திருப்பதால் எல்லாவற்றிற்கும் பரமாத்மா காரணமென்றும், எல்லாவற்றிற்கும் அதிபதியென்றும் காட்டப்பட்டிருக்கிறது. தவிரவும், வாஸுதேவ என்பதால் பரமாத்மாவானவர் எல்லாவற்றிற்கும் ஆதாரமென்றும், எல்லோருக்கும் அந்தராத்மாவென்றும், ப்ரத்யும்ன என்பதால்,"அவ்விடத்தில ஸூர்யன் ப்ரகாசிக்கிற தில்லை, சந்த்ரனும் நக்ஷத்ரங்களும், மின்னல்களும் அக்னியும் விளங்குகிறதில்லை" என்ற ச்ருதிப்படி நிகரில்லாத ப்ரகாசமுள்ளவர் என்பதும்; அனிருத்த என்பதால் ஸர்வவ்யாபகரென்றும். ஸங்கர்ஷண என்பதால் இந்த்ரியங்களுக்குப் புலப்படாத விஷயங்களைத் தெரிவிப்பவரென்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. வீர ஐச்வர்யம்– அணிமா முதலியவைகள். பக்தி–இடை விடாமல் பகவானை ஸ்மரிப்பது– ஸ்ரீத.

அத்யாயம்–6.

நாரதருடைய முன்ஜன்மம்.

ஸத்யவதியின் புத்ரராகிய வ்யாஸமஹர்ஷியானவர், தேவர்ஷியாகிய நாரதருடைய பிறப்பு, சரிதம், ஆகிய இவைகளைக் கேட்டுப் பின்னும் அவரை நோக்கி ஓ! நாரதரே! உமக்கு ஞானோபதேசஞ் செய்த ஸன்யாஸிகள் சென்றபிறகு, பால்யவயதுள்ளவரான நீர் என்ன செய்தீர்? ப்ரஹ்மதேவருடைய புத்ரரே! அபரவயதில் என்ன செய்துகொண்டிருந்தீர்? தேஹவியோக காலம் நேர்ந்த போது சரீரத்தை எப்படிவிட்டீர்? ஜீவன் ஒரு சரீரத்தைவிட்டு மற்றொரு சரீரமடைந்தபின் முன் ஜன்மத்தின் விஷயங்கள் காலமஹிமையால் மறந்து போகின்றனவே அப்படிக்கிருக்க முன்காலத்தில் நடந்த விஷயம் எப்படித் தங்கள் ஞாபகத்திலிருக்கிறது? என்றார். அதனைக்கேட்ட நாரதர் வ்யாஸமஹர்ஷியை நோக்கி "எனக்கு ஞானோபதேசஞ்செய்த ஸன்யாஸிகள் தேசாந்தரம் போனபிறகு சிறுவயதுள்ள நான் என்ன செய்தேனென்றால், என் தாயாருக்குக் குழந்தை நானொருவனே; ஆனதுபற்றியும் எனக்கு வேறு கதியில்லாததனாலும் என்னுடைய தாயார் என்னிடம் மிகவும் ப்ரியம் வைத்திருந்தாள். அவள் ஒன்றையும் அறியாதவள்; வேலைசெய்து ஜீவிப்பவள்; மரத்தால் செய்யப்பட்ட ப்ரதிமை மனிதர்களால் ஆட்டி வைக்கப் படுவதுபோல, இந்த ஜனங்கள்யாவும் ஈச்வரனுக்கு ஸ்வாதீனப் பட்டிருக்கிறார்கள். என்தாயார் என்னுடைய யோகக்ஷேமத்தை வஹிக்க விரும்பினவளானாலும் அதை நடத்த ஸாமர்த்யமற்றவளாக விருந்தாள். திக்கு, தேசம், காலம் ஆகிய இவைகளின் பிரிவையறியாத ஐந்து வயதுள்ள சிறுவனாகிய நான்மாத்ரு ஸ்நேஹத்தா

அந்த ப்ராஹ்மண கிருஹத்திலேயே வஸித்தேன். ஒருநாள் ராத்ரி என் தாயார் மாடு கறப்பதற்காக வீட்டிற்கு வெளியே வரும்போது ஒருபாம்பைக் காலால் மிதித்தாள். அப்பொழுது அனாதையான அவளை அந்தஸர்ப்பம் காலனால் தூண்டப்பட்டு கடித்தது. உடனே அவள் மரணமடைந்தாள். அப்பொழுது நான் "ஈச்வரன் பக்தர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுப்பதி லேயே நோக்கமுள்ளவராகையால் நமக்கு நேர்ந்த மாத்ருதுக்கம் அனுக்ரஹமேயொழிய வேறில்லை என்று நினைத்து வடக்குத்திக்கை நோக்கிப் புறப்பட்டேன். ஸம்பத்துள்ள அனேக தேசங்களையும், கிராமங்களையும், கோகுலங்களையும், ரத்னம் விளையும் பூமிகளையும், பயிரிடுபவர்கள் வஸிக்கும் இடங்களையும், மலையடிவாரங்களையும், பாக்குமரம் முதலியவைகளின் தோட்டங்களையும், தானாக முளைத்த மரங்களிருக்குங் காடுகளையும், மரங்கள் வைத்து விருத்திசெய்யப்பட்ட இடங்களையும், பல வகையான தாதுக்களால் அழகான மலைகளையும், யானைகளால் முறிக்கப்பட்ட கிளைகளுள்ள மரங்களை யும், நல்ல ஜலமுள்ள குளங்களையும், தேவர்கள் ஜலக்ரீடை செய்யும் தாமரஸ ஓடைகளையும், அவைகளிலிருக்கும் அழகான குரலுள்ள பக்ஷிகளையும், தேனீக்களையும், அவைகளால் அலங்கிருதமான தாமரைத்தடாகங்களையும், பார்த்துகொண்டு நான் ஒருவனாக அவைகளைக் கடந்துசென்று, பயங்கரமாகிய ஒரு வனத்தைக் கண்டேன். அது கோரைகளும், மூங்கில்களும், வண்டுகளால் துளைக்கப்பட்ட மூங்கில்களும், நாணல்களும், தர்ப்பங்களும், அடர்ந்து இருப்பதாலும், ஸர்ப்பங்களும், கோட்டான்களும், நரிகளும் வஸிக்குமிடமாயிருந்தாலும் மிகவும் பயங்கர

மாயிருந்தது. அப்பொழுது நான் வெகுதூரம் நடந்த தால், பசி, தாஹமுண்டாகி, அவற்றால் இந்த்ரியங்கள், சரீரம் இவைகளின் வலிமை குறைந்து களைப்படைந் தேன். பின்பு ஒரு நதியின் மடுவில் ஸ்நானஞ்செய்து, ஆசமனம் பண்ணிச்ரமத்தை நிவர்த்தித்துக் கொண்டேன். பின்பு மனிதர்களுடைய ஸஞ்சாரமில்லாத அந்தக் காட்டில் ஒரு அரசமரத்தின்கீழ் உட்கார்ந்து ஸன்யாஸிகளிடம் உபதேசம் பெற்றப்படி ஹிருதயத்தி லிருக்கும் பரமாத்மாவை த்யானஞ் செய்தேன். பகவானுடைய பக்தியால் மனத்தை ஒருவகைப்படுத்தி அவருடைய தாமரை போன்ற பாதத்தை த்யானஞ் செய்யும்போது என்னுடைய இருகண்களிலிருந்து ஆனந்தபாஷ்யம் பெருகியது. அப்பொழுது ஸ்வல்ப காலத்தில் என்னுடைய ஹிருதயத்தில் பகவத் ஸ்வரூபம் ப்ரகாசித்தது ஓ! வ்யாஸ மஹர்ஷியே! விசேஷ ப்ரேமையால் மயிர்க்கூச்சலுண்டாயிற்று. அதனால் மிக்க ஸுகமுள்ளவனாய் ஆனந்த ப்ரவாஹத்தில் மூழ்கி என்னையும் பகவத் ஸ்வரூபத்தையும் மறந்திருந்தேன். இப்படியிருக்க மிக்க அழகுள்ளதும், ஸகல துக்கங்களை யும் போக்கடிக்கக்கூடியதுமான அந்தப்பகவானுடைய ரூபம் மறைந்தது. உடனே அதனைக்காணாமல் மிகவும் மனவருத்தமடைந்து சீக்ரமாக எழுந்திருந்தேன். மறுபடியும் அந்த பகவத் ஸ்வரூபத்தைப் பார்க்கவிரும்பி மனத்தையடக்கி அதே ரூபத்தை ஹிருதயத்தில் த்யானஞ்செய்தேன். அப்படியும் அந்த ரூபம் நேரில் தோன்றவில்லை. ஒரு தடவை பார்த்ததால் த்ருப்தி யுண்டாகாததனால் மனக்கவலையடைந்தேன்.

21–26. இப்படிக் காட்டில் கவலையுடனிருக்கும் என்னை நோக்கி வேதவாக்யங்களுக்கு விஷயமாகாத

பகவான் "ஓ! குழந்தாய்! கர்மம் முதலிய தோஷங்கள் அற்றுப்போகாத யோகிகளால் என்னைப் பார்க்க முடியாது. ஆனதால் இந்த சூத்ர ஜன்மத்தில் நீ என்னைப் பார்க்கத் தகுந்தவனல்ல. ஆனால் ஒரு தரம் என் ரூபத்தைக் காண்பித்த காரணமென்னவெனில்.. ஒரு தரம் என் ரூபத்தைப் பார்த்தவனுக்குப் பின்னும் பார்க்கவேணுமென்ற எண்ணம் உண்டாகும். அதனால் என்னிடமே மனத்தைச் செலுத்தியவர்களுக்கு ஸகல மனோதோஷங்களும் நிவர்த்தியாய் விடுகின்றன. வெகுகாலம் ஸாதுக்களுக்குச் சுச்ரூஷை செய்ததால் உனக்கு என்னிடத்தில் ஸ்திரமான பக்தியுண்டாயிற்று. ஆனதால் தோஷத்தை யுண்டுபண்ணும் இவ்வுலகத்தை விட்டு என்னுடைய பார்ஷதனாக ஆய்விடுவாய் என்னிடத்தில் உனக்கு உண்டான பக்தியொருபொழு தும் குறையாமலிருக்கும். மேலும் ப்ரளய காலத்திலும் என்னுடைய அனுக்ரஹத்தால் முந்திய ஞாபகம் தவறாமலிருக்கும்" என்று அனுக்ரஹித்தார். இப்படி அனுக்ரஹிக்கப்பட்ட நான் மஹாபூதமாயும், ஆகாச சரீரமுள்ளவரும், எல்லாருக்கும் அதிபதியாயும், எல்லாருக்கும் ஸமீபத்திதலிருப்பவரானாலும், ஒருவராலும் அறியப்படாதவருமான அந்தப் புருஷனுக்கு நமஸ்காரஞ்செய்தேன்.

27–32. பின்பு அனந்த (நாசமற்ற)னுடைய திவ்ய நாமங்களை வெட்கப்படாமல் உச்சரித்துக்கொண்டும் அவரால் செய்யப்பட்ட ரஹஸ்யமான லீலாவிபூதிகளை நினைத்தும் மற்ற ஆசைகளை யொழித்தும், கர்வம், மாத்ஸர்யம் இவைகளை விலக்கிக் காலத்தை எதிர்பார்த்து ஸந்தோஷமாகப் பூமியில் ஸஞ்சரித்தேன். இப்படி ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலேயே மனத்தைச் செலுத்தி,

ஒன்றிலும் பற்றுதலில்லாமல் சுத்த சித்தனாகவிருந்தேன். இப்படிக்கிருக்கையில் சுத்தமான ஆகாசத்தில் மின்ன லுடன் மேகவரிசை தோன்றினாற்போல திடீரென்று மரணகாலம் நேர்ந்தது. அப்பொழுது சுத்தமான அந்தப்பார்ஷத சரீரத்திற்குப் பகவதிச்சைப்படி நான் போகும்போது ப்ராரப்தகர்மம் நசித்து ஐந்து பூதங்களா லேற்பட்டிருந்த பழய சரீரம் கீழேவிழுந்தது. பிறகு நான் இந்த மூவுலகத்தையும் காரணரூபமாய் அடக்கிக் கொண்டு ப்ரளயகாலத்தில் ஸமுத்ர ஜலத்தில் ஸ்ரீ நாராயணன் சயனஞ் செய்துகொண்டிருக்கும்போது, பின்பு அவரிடம் சயனஞ்செய்ய விரும்பிய ப்ரஹ்ம தேவரின் ச்வாஸத்தின் வழியாக அவருடைய ஹிருத யத்தில் ப்ரவேசித்தேன். பிறகு 1000 சதுர்யுகங்கள் கொண்ட ப்ரஹ்மதேவருடைய ராத்ரி முடிந்தவுடன் மறுநாள் காலையில் ப்ரஹ்மதேவர் ஜகத்தை ஸிருஷ்டிக்க யத்தனித்தார். அப்பொழுது அவருடைய இந்த்ரியங்களிலிருந்து மரீசி முதலிய ப்ரஜாபதிகளும் நானும் உண்டானோம். நான் குறைவின்றி ப்ரஹ்மசர்ய விருதங்களையனுஷ்டித்து, மூவுலகத்தில், உள்ளிலும் வெளியிலும் மஹாவிஷ்ணுவின் அனுக்ரஹத்தால் ஒரிடத்திலும் தடையற்ற நடையுள்ளவனாகிச் சஞ்சரிக்கிறேன்.

33–37. தவிரவும், இந்த வீணை ஈச்வரனால் கொடுக்கப்பட்டது. இது ஷட்ஜம் முதலிய ஸ்வரங்களா கிய நாதப்ரஹ்மத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. ஆனதால் மூர்ச்சனை முதலியவைகளுடன் ஸ்ரீ நாராயணனுடைய கதையைக் கானஞ்செய்து கொண்டே ஸஞ்சரிக்கிறேன். பகவானுடைய மஹிமையை நான் கானஞ் செய்யும்போது, ஜகத்தை பரிசுத்தப்

படுத்தும் பாதங்களுள்ளவரும், எல்லோராலும் ப்ரியப் படக்கூடிய லீலைகளுள்ளவருமான பகவான் என்னால் அழைக்கப்பட்டவர் போல என் மனத்தில் வந்திருந்து தர்சனங் கொடுக்கிறார். விஷயத்தில் ஆசையால் அடிக்கடி அவைகளையே கவர்ந்து கொண்டிருக்கும் சித்தமுள்ளவர்களுக்கு பகவானுடைய லீலைகளை வர்ணிப்பதே ஸம்ஸாரஸாகரத்தை தாண்டச்செய்யும் ஓடமென்று நிச்சயிக்கப்படுகிறது. காமம் முதலிய ஆறுவகை சத்துருக்களால் பீடிக்கப்படும் மனது பகவானை ஸேவிப்பதால் சுத்தமாவதுபோல யமம் முதலிய யோக ஸாதனங்களால் சுத்தப்படுகிறதில்லை. தோஷமற்றவரே என்னுடைய பிறப்பு, என்னுடைய சரிதம் முதலிய ரஹஸ்யங்களைப்பற்றி உம்மால் கேட்கப்பட்டவைகளெல்லாவற்றையும் உம்முடைய மனம் ஸந்தோஷப்படும்படி விஸ்தாரமாகச் சொன்னேன் என்று சொன்னார்.

38–39. ஓ! சௌனகர் முதலிய மஹர்ஷிகளே! இப்படி தெய்ச்செயலாய் வந்த நாரதர் ஸத்யவதியின் புத்ரராகிய வ்யாஸருடன் ஸம்பாஷணை செய்து 'நான் போய்வருகிறேன்' என்று சொல்லி வீணையை மீட்டிக்கொண்டே சென்றார். நாரதர் உலகமெங்குஞ் சென்று சார்ங்கமென்ற வில்லைத்தரித்த ஈச்வரனுடைய சரிதத்தை வாக்கினாலும், வீணையைக் கொண்டும் கானஞ்செய்து, ஸகல லோகத்தையும் ஸம்ஸாரதுக்கத் திலிருந்து காப்பாற்றுகிறார்; ஆகையால் இவரே பாக்யசாலி. இது இப்படி இருப்பது ஆச்சரியம்.

நோட்டு.

ஸன்யாஸிகள் மூலத்தில் பிக்ஷுவென்றிருப்பதால்

ஞானபிக்ஷை கொடுப்பவர்களென்று அர்த்தம்– விஜ. யோகம்–இல்லாதவைகளை ஸம்பாதிப்பது. க்ஷேமம்– ஸம்பாதித்தவைகளைக் காப்பாற்றுவது– வீர. தாயார் என்னிடத்தில் மிக்கப்ரியம் வைத்திருந்தபடியால் பெரியோர்கள் பின் நான் போகவில்லை– விஜ. ஸ்நேஹத்தால்– எப்பொழுது இதன் நேஹம் குறையு மென்று எதிர்பார்த்திருந்தேன் ஸ்ரீத. நினைத்து– "எவனையனுக்ரஹிக்க வேண்டுமென்று விரும்புகிறேனோ அவனுடைய பணத்தையும் பந்துக்களையும் நாசஞ் செய்கிறேன்"– ஸ்ருதி. புறப்பட்டேன்– மாதாவிற்கு அபரக்ரியை செய்தபிறகு– விஜ க்ராமங்கள்–"ப்ராஹ்மணர்களும் அவர்களுடைய வேலைக்காரர்களும் வஸிக்குமிடம், அல்லது சூத்ரர்கள் அவர்களுடைய வேலைக்காரர்களும் வஸிக்குமிடம்"– ப்ரகு வேத– எதையடையாமல் வாக்குகள் மனத்துடன் திரும்புகின்றனவோ– ச்ருதி திருப்தி– விஷயத்தில் ஆசையுள்ளவனுக்கு ஒருதடவை விஷயத்தையனுபவித் தால் திருப்தியுண்டாகாததுபோல– வீர. மஹாபூதம்– ரிக்வேதம் முதலியவைகள் இந்த மஹாபூதத்தின் நிச்வாஸமே"– ச்ருதி. காலத்தை– ப்ராரப்த கர்மத்தின் முடிவை– ஸ்ரீத. ப்ரவேசித்தேன்– "ப்ரஹ்மதேவர் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் தேஹத்தில் ப்ரவேசித்து அவருடன் ஒன்றாய் கலந்து யோகநித்ரையை யடைந்தார்"– கூர்மப்புராணம்.1000 சதுர்யுக– மனுஷ்யமானத்தால் 1000 சதுர்யுகமானால் ப்ரஹ்மதேவருக்கு ஒரு பகல் முடியும், அவ்வளவு காலங்களடங்கியது ஒரு ராத்ரியாகும். இம்மாதிரியான பகலும் ராத்ரியும் சேர்ந்தால் ஒருதினம், அப்படி 30 தினங்கள் ஒருமாதமாகும், அப்போர்பட்ட மாஸங்களில் 12 கொண்டது ஒரு வர்ஷம், அப்படி நூறு வர்ஷங்கள்

ப்ரஹ்மதேவருக்கு பரமாயுஸ். இதுவே ப்ராஹ்மமான மெனப்படும். மரீசி– வஸிஷ்டர் முதலிய மஹர்ஷிகளும்– வீர.– வெளியிலும்– கர்மிகள் முவ்வுலகத்திலும் வெளியில் வரமாட்டார்கள், தபஸ், முதலியவைகளால் ப்ரஹ்மலோகத்தை யடைந்தவர்கள். இதற்குள் வருகிறதில்லை. ஸ்ரீத ஈச்வரனால்– ப்ரஹ்மதேவரால் கொடுக்கப்பட்டது– சந்த். மூர்ச்சனை.– ஸ்வரத்தின் ஆரோஹாவரோஹம்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–7.

அர்ஜுனன் அச்வத்தாமாவைச் சிக்ஷித்தது.

சௌனக் மஹர்ஷியானவர், ஸூதரை நோக்கிப் "பிறகு பகவானாகிய வ்யாஸமஹர்ஷி, நாரதருடைய அபிப்பிராயத்தை யறிந்து எதனைச்செய்தார்" என்று கேட்டார்.

2–8. இதனைக்கேட்ட ஸூதர், சௌனகரை நோக்கி ப்ரஹ்ம பத்னியாகிய ஸரஸ்வதி நதியின் மேல் கரையில் 'சமயாப்ராஸம்' என்னும் ஒரு ஆச்ரமமுண்டு. அது மஹர்ஷிகள் யாகஞ் செய்யுமிடம். மேலும் அது இலந்தை மரங்களால் அலங்கரிக்கப்பட்டது. அந்த முக்யமான ஆச்ரமத்தில் வ்யாஸ மஹர்ஷியானவர், ஆசமனஞ்செய்து, சுத்தராய் உட்கார்ந்து, மனத்தை ஒரு வகைப்படுத்தி த்யானஞ்செய்தார். பக்தி யோகத்தால் சுத்தமாயும், ஸ்திரமாயுமுள்ள மனத்தில் புருஷோத்தமனையும், அவரை ஆச்ரயித்த மாயையும் தர்சித்தார். "மேலும் ஜீவன் உண்மையில் மாயையைக் கடந்த ஸ்வரூபமுள்ளவனானாலும், அந்த மாயைக்கு வசப்பட்டு பிரமித்து, தான் முக்குண ஸம்பந்த முள்ளவனென்றும், மாயாகுணங்களால் செய்யப்படும் கார்யங்களைத் தான் செய்வதாக நினைத்துமிருக்கிறான்" என்றும் தெரிந்துகொண்டார். பின்னும் அந்த அனர்த் தத்தை போக்கக்கூடிய பக்தியோகத்தையும் அறிந்தார். பின்னும் அவர் உலகத்திற்கு ஏற்பட்டிற்கும், இவ்வித மான அக்ஞானத்தை நிவர்த்திப்பதற்காக, ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தார். அதனைக் கேட்ட மாத்ரத்தில் பரமபுருஷனாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில்,

ஸ்திரமான பக்தியுண்டாகிறது. அதனால் சோகம் மோஹம், பயம், ஆகிய இவைகள் நிவர்த்தியாகின்றன. மேலும் அவர் தம்மால் செய்யப்பட்ட அந்த ஸம்ஹிதையைப் பரிசோதித்து நிவிர்த்திமார்க்கத்தில் ஆசையுள்ள தம்முடைய குமாரராகிய சுகருக்கு அதை உபதேசித்தார்" என்று சொல்லி முடித்தார்.

9–20. இதனைக்கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஓ ஸூதரே! அந்தச்சுகர் ஒருவிஷயத்திலும் ஆசையில்லாதவர்; நிவிர்த்திமார்க்கத்திலேயே நோக்க முள்ளவர்; ஆத்மாவிடமே ரமிப்பவர்; அப்படியிருக்க அந்தப் பெரிதாகிய க்ரந்தத்தை எதற்காக அவர் அப்யஸித்தார் என்று கேட்டார். அதனைக்கேட்டு ஸூதர் சௌனகரை நோக்கி, "ஓ சௌனகரே! மஹர்ஷிகள், ஆத்மாராமர்களானாலும், பகவத் ஸ்வரூபத்தை நன்றாய் அறிந்தவர்களாகையால் ஸம்சய மற்றவர்களானாலும், க்ரந்தங்களைப் படிப்பதில் ஆசையில்லாதவர்களானாலும், பகவானிடத்தில் பலனை உத்தேசியாமலே பக்திசெய்கிறார்கள், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சரிதங்கள், வைராக்யமடைந்த மனத்தையும் வசப்படுத்திக்கொள்ள ஸாமர்த்யமுள்ள வைகள், ஆனதால் சுகமஹர்ஷி, பகவத் குணங்களில் விசேஷ ஆசையுள்ளவராகி அந்தப் பெரியதாகிய உபாக்யானத்தை அப்யஸித்தார். அவர் வ்யாஸ மஹர்ஷியின் புத்ரர். அவரிடத்தில் விஷ்ணு பக்தர்கள் ப்ரியப்படுவார்கள். ஓ! மஹர்ஷிகளே! பரீக்ஷித் என்ற ராஜரிஷியின் பிறப்பு, அவர்செய்த கார்யங்கள், அவருடைய மரணம், பாண்டவர்களுடைய மஹா ப்ரஸ்தானம், இவைகளை கிருஷ்ணகதையைச் சொல்லு வதற்கு உபயோகமாகச் சொல்லுகிறேன். எப்படியெனில்,

கௌரவர்களும், ஸிருஞ்ஜயர்களும், யுத்தத்தில் அடிக்கப்பட்டு ஸ்வர்க்கமடைந்தார்கள். பீமஸேனன் தன்னுடைய கதாயுதத்தால் துர்யோதனனுடைய துடையை அடித்து முறித்தான். பின்பு "த்ரோணருடைய புத்ரராகிய அச்வஸ்தாமாவென்பவர் த்ரௌபதியின் புத்ரர்களை நாசஞ்செய்வதே தம்முடைய யஜமானாகிய துர்யோதனனுக்கு ப்ரியமான கார்யம்" என்று நினைத்து உபபாண்டவர்கள் தூங்கும் ஸமயத்தில் அவர்களுடைய தலையை வெட்டினார். இது துர்யோதனனுக்கு ப்ரியமன்று. மேலும் அதை எல்லோரும் வெறுக்கக் கூடிய கார்யம் என்று நிந்தித்தார்கள். அப்பொழுது அக்குழந்தைகளுடைய தாயாகிய த்ரௌபதிதேவி புத்ரசோகத்தால் பரிதபித்துக் கண்ணீரைப் பெருக்கி அழுதாள். அந்தஸமயத்தில் அவளை நோக்கி அர்ஜுனன், "ஓ! நல்ல ஸ்வபாவமுள்ளவளே! என்னுடைய காண்டீவத்தில் பாணங்களைத்தொடுத்து அவைகளை ப்ரயோகித்து ப்ராஹ்மணர்களுக்குள், அதமனும், ஆயுத பாணியும் ஆததாயியுமான அச்வஸ்தாமாவினுடைய தலையை உன்னிடம் கொடுத்து உன்னுடைய துக்கத்தை நிவர்த்திக்கிறேன். அந்தத் தலையை ஆஸனமாகச் செய்து புத்ரசோகத்தை போக்கிக்கொள் வாய்" என்று ஸமாதானஞ்செய்தான். இப்படி அழகான வார்த்தைகளைச் சொல்லி ஸமாதானஞ்செய்து தகுந்த முயற்சியுடன் குரு புத்ரராகிய அச்வஸ்தாமாவை அர்ஜுனன் துரத்தினார். அவருக்கு மித்ரரும், ஸாரதியு மாயிருப்பவர் ஸ்ரீ கிருஷ்ணனே. அவருடைய வில் பயங்கரமானது. ரதமோ, ஹனுமத்வஜமுள்ளது. சிசுக்களைக் கொன்றவரான அந்த அச்வஸ்தாமா பின் தொடர்ந்துவரும் அர்ஜுனரை வெகுதூரத்தில் கண்டு பயந்து ப்ராணனைக் காப்பாற்றிக்கொள்ள

வேண்டி, பூமியில் எதுவரையில் போகக்கூடுமோ அதுவரையில் "சிவபெருமானிடத்தில் பயந்து ப்ரஹ்ம தேவர் ஓடியதுபோலத் திரும்பிப்பாராமலே ஓடினார். அப்படியும் தம்மைக் காப்பாற்றக்கூடியவர் கிடைக்காத தனாலும், குதிரைகள் களைத்துப்போனபடியாலும் அவர் ப்ரஹ்மாஸ்த்ரமே தன்னைக் காப்பாற்றுமென்று நினைத்தார். பின்பு ஆசமனஞ்செய்து சுத்தராய், ப்ரயோகித்த அஸ்த்ரத்தைத் திருப்பும் வகையறியாத வராயிருந்தும் ப்ராணனுக்குக் கெடுதி நேரிடும் ஸமயமாகையால் அந்த அஸ்த்ரத்தை ப்ரயோகித்தார்.

21–26. பின்பு எல்லா திக்குகளிலும் அந்த அஸ்த்ரத்தின் தேஜஸ் பரவியது. அதனைக்கண்டு அர்ஜுனன் தம்முயிர்க்குச் சேதம் வந்ததென்று நினைத்து ஸாரதியாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானை நோக்கி "ஓ! கிருஷ்ண! கிருஷ்ண! மிகுந்த பராக்ரம முள்ளவரே! பக்தர்களுக்கு நேரும் பயத்தை நிவர்த்திப் பவரே! ஸம்ஸாரத்தால் கஷ்டப்படும் ஜனங்களுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பவர் தாமொருவரே. நீரே முந்திய புருஷன். நீரே எல்லாவற்றிற்கும் பிரபு. ப்ரகிருதியைக்காட்டிலும் வேறானவர். ஆனந்த ஸ்வரூபத்திலிருப்பவர். நீர் மாயையைக்கடந்தவரானாலும், மாயைக்கு வசப்பட்டு ஸம்ஸாரத்தில் மூழ்கியிருக்கும் ஜனங்களுக்கு தர்மம் முதலிய புருஷார்த்தங்களைக் கொடுக்கிறீர். வேறிடத்தில் மனஸைச் செலுத்தாமல் தம்மையே பஜிப்பவர்கள் இந்த திவ்யமங்கள சரீரத்தை த்யானஞ் செய்கிறார்கள். ஓ! தேவர்களுக்குத்தேவனே! இதோ மிகவும் பயங்கரமான தேஜஸ் எங்கும் பரவிவருகிறதே, இது இன்னதென்று தெரியவில்லை. இதனைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

27–28. அதனைக்கேட்டுக் கிருஷ்ணபகவான் அர்ஜுனனை நோக்கி த்ரோணருடைய புத்ரராகிய அச்வஸ்தாமாவினால் ப்ரஹ்மாஸ்த்ரம் ப்ரயோகிக்கப் பட்டிருக்கிறது. இது அதன் தேஜஸ்ஸை தவிர வேறில்லை அவருக்கு அதனைத் திருப்பி பெற்றுக்கொள்ளும் வழி தெரியாமையால் இதுவரையில் உபயோகிக்காம லிருந்து இப்பொழுது தம் உயிருக்குச் சேதம் வருஞ் சமயமாகையால் தம்மைக்காப்பாற்றிக் கொள்ளவேண்டி அதனை உபயோகித்திருக்கிறார். அதனைத் தடுக்க முடியாது. உனக்கு அந்த ப்ரஹ்மாஸ்த்ரம் நன்றாகத் தெரியுமாகையால் அதனை ப்ரயோகித்து எதிரியின் அஸ்த்ரத்தை நாசஞ்செய் என்றார்.

29–39. இப்படிப் பகவான் சொல்லிய வார்த்தையைக் கேட்டுச் சத்ருக்களைக் கொல்லும் வல்லமையுள்ள அர்ஜுனன் ஆசமனஞ்செய்து, ஸ்ரீ கிருஷ்ணபகவானை ப்ரதக்ஷிணஞ் செய்து எதிரியின் அஸ்த்ரத்தை யடக்குவதற்காக ப்ரஹ்மாஸ்த்ரத்தை ப்ரயோகித்தார். அவ்விரண்டு அஸ்த்ரங்களுடைய தேஜஸ்ஸுகளும், ப்ரளய காலத்தில், அக்னியும், ஸூர்யனும் விருத்தியடைவது போல பூமி, அந்தரிக்ஷம் ஆகிய இவைகளை ஆக்ரமித்து ப்ரகாசித்தன. அவ்விருவர்களுடைய அஸ்த்ரங்களின் தேஜஸானது மூவ்வுலகங்களையும் தஹித்தது, அந்தத் தாபத்தை ஸஹியாமல் ஜனங்கள் இது ப்ரளயகாலத்திய அக்னி என்றே நினைத்தார்கள். அப்பொழுது ப்ரஜைகள் உபத்ரவப்படுகிறதையும், லோகங்களுக்கு நாசம் நேர்ந்ததையும் பார்த்து அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணனுடைய அனுமதிப்படி அந்த இரண்டு அஸ்த்ரங்களையும் உபஸம்ஹரித்தார். பிறகு அச்வஸ்தாமாவின் ஸமீபம் சென்று பசுவை

ரசனையால் கட்டுவது போல் கோபத்தால் சிவந்த கண்களுள்ளவனாகிய கிருபியின் புத்ரரைக்கட்டினார். பின்னுமவரைத் தம்முடைய கூடாரத்திற்குக் கொண்டு போக முயன்றார். அப்பொழுது தாமரைமலர் போன்ற கண்களுள்ள கிருஷ்ணபகவான் மிகுந்தகோபத்துடன் அர்ஜுனனை நோக்கி "ஏ பார்த்த! இவன் ராத்ரியில் தூங்கிக்கொண்டிருந்த யாதொரு அபராதமும் செய்யாத குழந்தைகளைக் கொன்றவன், ப்ராஹ்மணர்களுக்குள் அதமன், ஆனதால் இவனைக் கொல்லவேண்டுமே தவிர காப்பாற்றுவது உசிதமல்ல. மத்யம் முதலியவை களைக் குடித்து மதித்திருப்பவன், அஜாக்ரதையா யிருப்பவன், பயித்யங்கொண்டவன், தூங்குகிறவன், பாலியவயதுள்ளவன், முயற்சிக்காதவன், சரணமென்று வந்தவன், ரதமில்லாதவன் பயந்து ஓடுகிறவன், ஆகிய இம்மாதிரியான சத்ருக்களை தர்மத்தையறிந்தவர்கள் கொல்லமாட்டார்கள். எவன் ப்ராணிகளிடத்தில் தயையில்லாமல் பிறரைக்கொன்று தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ளுகிறானோ அந்த துஷ்டனை சிக்ஷிப்பதே அவனுக்கு க்ஷேமமெனப்படும். தண்டிக்கப் படாதவரையில் பாபம் விலகாது; அதனால் நரகத்தையடைவான். மேலும் த்ரௌபதியின் முன்பாக உன் குழந்தைகளைக் கொன்றவருடைய தலையை உன்னிடம் சேர்ப்பிக்கிறேன்" என்று நான் கேட்டிருக்கும் போது உறுதி செய்திருக்கிறாய். இவன் தன்னுடைய யஜமானனாகிய துர்யோதனனுக்கு இஷ்டமில்லாத கார்யத்தைச் செய்தவன். குலத்திற்கு அபகீர்த்தியை யுண்டு பண்ணினவன்; மிகுந்த பாபீ, ஆததாயீ. உன்னுடைய புத்ரர்களை நரிசஞ்செய்தவன். ஆனதால் இவனைக் கொல்லவேண்டும் என்று (அர்ஜுனனுடைய புத்தியைப் பரிசோதிப்பதற்காகச்) சொன்னார்.

40–41. இம்மாதிரி கிருஷ்ணபகவானால் தூண்டப்பட்டும் மஹாத்மாவாகிய அர்ஜுனன் அச்வஸ்தாமா தமது பின்னைகளைக் கொன்றவரானாலும், குருபுத்ரராகையால் வதஞ் செய்ய இஷ்டப்படவில்லை. பின்பு மித்ரராகிய ஸ்ரீ கிருஷ்ணன் ஸாரத்யஞ் செய்ய அர்ஜுனன் தம்முடைய கூடாரஞ் சேர்ந்து புத்ரநாசத்தால் துக்கிக்கும் த்ரௌபதியை நோக்கி ஓ! த்ரௌபதி! உன்னுடைய புத்ரர்களைக் கொன்றவர் இதோ இருக்கிறார். உன்னிஷ்டப்படி இவருக்குச் சிக்ஷை செய்கிறேன் என்றான்.

42–48. யாகத்தில் கொல்லுவதற்காக யூபத்தில் கட்டப்பட்ட பசுபோல கயிற்றினால் கட்டப்பட்டவரும் கெட்டகார்யம் செய்ததால் தலைகுனிந்தவருமான குரு புத்ரரைக்கண்டு த்ரௌபதியானவள்; நல்ல ஸ்வாபமுள்ளவளாகையால் ஆசார்யருடைய புத்ரரென்று கௌரவத்தாலும், தைன்யமடைந்தவரென்ற தயையாலும் அவருக்கு நமஸ்காரஞ்செய்தாள். பின்னும் பதிவ்ரதையான த்ரௌபதியானவள், அவரைக்கட்டிக் கொண்டு வந்ததை ஸஹியாதவளாகி தன்னுடைய பர்த்தாவை நோக்கி "இவரை விட்டுவிடவேண்டும். இவர் ப்ராஹ்மணர்;தவிரவும் குருபுத்ரராகையால் ஆசார்யர். ரஹஸ்யமந்த்ரங்கள், உபஸம்ஹாரம், ப்ரயோகம் ஆகிய இவைகளுடன் எல்லா அஸ்த்ரங்களையும் இவருடைய பிதாவான த்ரோணரிடமிருந்து தாங்கள் அப்யஸித்தீர்கள். அவரே புத்ரரூபியாக இருக்கிறார். அதனால்தான் சூரனாகிய புத்ரனை அடைந்த கிருபியானவள் த்ரோணருடைய பாதிசரீரமாயிருந்தும் அவருடன் உடன்கட்டையேறவில்லை. தாங்கள் ஸகலதர்மங்களையும் அறிந்தவர்கள்; மிகுந்த பாக்யமுள்ளவர்கள்; ஆதலால் ஆசார்யருடைய

வம்சமானது, துக்கப்படும்படி தாங்கள் செய்வது உசிதமல்ல அது எப்பொழுதும் பூஜிக்கத்தக்கது; நமஸ்கரிக்கக்கூடியது; மேலும் இவரைக்கொன்று விட்டால் இவருடைய மாதாவும், பர்த்தாவையே தைவ மாகக் கொண்டவளுமான கிருபி என்பவள் புத்ர நாசத்தால் நான் வருத்தமடைகிறது போல துக்கப் படுவாளல்லவா? ப்ராஹ்மணவம்சத்திற்குக் கோப முண்டாகும். க்ஷத்ரியர்கள் செய்தார்களேயாகில், அந்த க்ஷத்ரிய வம்சம் பரிவாரங்களுடன் துக்கிக்கும்படி நேரும். ஆதலால் ப்ராஹ்மணகுலத்தால் நம்முடைய க்ஷத்ரிய குலம் எரிக்கப்படவேண்டாம்" என்று சொன்னாள்.

49–50. ஓ! ப்ராஹ்மணர்களே! தர்மத்திற்கொத்ததும், ந்யாய விரோதமில்லாததும், தயையுள்ளதும், கபட மற்றதும், ஸமபுத்தியுடன் சொல்லப்பட்டதும், மேன்மையுள்ளதுமான (பூஜிக்கக்கூடியது)த்ரௌபதியின் வார்த்தையைக் கேட்டு அருகிலிருந்த அரசனாகிய தர்மபுத்ரர், நகுலர், ஸஹதேவர், ஸாத்யகி, அர்ஜுனன், தேவகியின் புத்ரரான கிருஷ்ணபகவான், மற்றவர்கள், ஸ்த்ரீகள் ஆகிய எல்லோரும் அது உசிதமென்று ஒப்புக்கொண்டார்கள்.

51. அப்பொழுது பீமஸேனன் "இவரைக் கொல்வதே அவருக்கு க்ஷேமகரமான கார்யம், இவர் நித்ரை செய்து கொண்டிருக்கும் சிசுக்களை வீணாக வதஞ் செய்தார்; அதனால் இவருக்காவது, இவருடைய யஜமானனாகிய துர்யோதனனுக்காவது, யாதொரு ப்ரயோஜனமுமில்லை." என்று மிகுந்த கோபத்துடன் சொன்னான்.

52–58. மேல்காட்டிய இவர்களுடைய வார்த் தையைக் கேட்டு நான்கு கைகளுள்ள ஸ்ரீகிருஷ்ண பகவான், தம்முடைய மித்ரரத்னமாகிய அர்ஜுனனை நோக்கி "ஓ! அர்ஜுன! ப்ராஹ்மணனைக் கொல்லக் கூடாதென்ற சாஸ்த்ரத்தாலும், ஆததாயியை வதஞ் செய்யலாமென்றும் சாஸ்த்ரமிருப்பதால் அந்த சாஸ்த்ரம் என்னுடைய ஆக்ஞாரூபமாகையாலும் அப்படியே நீ செய்யவேண்டும். தவிரவும் த்ரௌபதியினிடம் உன்னால் செய்யப்பட்ட ப்ரதிக்ஞையையும், நிறை வேற்றவேண்டும்; பீமஸேனனுக்கும், த்ரௌபதிக்கும் எனக்கும் இஷ்டமானதைச் செய் என்று சிரித்துக் கொண்டு ஆக்ஞாபித்தார். இதனைக் கேட்டவுடனே பகவானுடைய அபிப்ராயமின்னதென்று, அர்ஜுனன் தெரிந்துகொண்டு, கத்தியினால் அந்த ப்ராஹ்மண ருடைய தலையிலிருக்கும் ரத்னத்தை மயிர்களுடன் எடுத்துப்பின்பு, கட்டை அவிழ்த்து அவ்விடமிருந்து துரத்தினான். அப்பொழுது அவருக்கு பாலஹத்யாதி தோஷத்தாலும் ஸஹஜமான ரத்னமில்லாததனாலும், தேஜஸ் குறைந்து விட்டது. க்ஷௌரஞ்செய்துவிடுதல், பணத்தை யபஹரித்துக்கொள்ளுதல், இருக்குமிடத்தை விட்டுத் துரத்திவிடுதல், ஆகிய இவைகள் வதத்திற்குச் சமமானவைகள். ப்ராஹ்மணதமர்கள் கொல்லக்கூடிய குற்றஞ்செய்தாலும், அவர்களுக்கு மேற்காட்டிய வதமே யொழிய, தேஹநாசஞ் செய்வது உசிதமல்ல. பின்பு பாண்டுபுத்ரர்கள், த்ரௌபதியுடன் புத்ரசோகமுள்ள வர்களாகி இறந்து போன தம்முடைய பந்துக்களுக்குச் செய்யவேண்டிய தஹனம் முதலிய உத்தர ஸம்ஸாரங்களைச் செய்து முடித்தார்கள்.

நோட்டு.

ப்ரஹ்மபத்னி"– ப்ரஹ்மாவையே தெய்வமாயுடையவள். அல்லது ப்ராஹ்மணர்களால் ஸேவிக்கப்பட்டது– ஸ்ரீத. சம்யா– யாகத்திற்கு உபயோகமான சம்யா என்னும் மரத்தின்கிளை விழுந்தவிடத்தில் ஏற்பட்ட ஆச்ரமம். மஹர்ஷிகளின் ஆஹாரத்திற்கு உபயோகமாகிய இலந்தைப் பழங்களுள்ளதென்பது தாத்பர்யம்.– விஜ. சோகம்–ஈச்வரன் எல்லாவற்றையும் அறிந்தவர். ஸர்வசக்தியுள்ளவர். அவருடைய மாயையால் நிஜரூபத்தை மறந்தவன் ஜீவன். அவனுக்கு பகவத்பக்தியால் ஞானமுண்டாகிறது. அதனால் மோஷத்தையடைகிறான். "ஆனந்தரூபமாகிய சித்சக்தியால் நிறைந்தவர் ஈச்வரன், அவித்யையால் தன்னுடைய உண்மையான ரூபத்தையறியாதவனும், ஸகல துக்கங்களுக்கு இருப்பிடமுமாயிருப்பவனே ஜீவன்," ஸ்வாமி மாயையானது எவருடைய வசத்திலிருக்கிறதோ. அவர் ஈச்வரனெனப்படுகிறார். எவன் அந்த மாயைக்கு வசப்பட்டு கஷ்டப்படுகிறானோ அவன் ஜீவன் என்று சொல்லப்படுகிறான்' ஸம்ஸாரத்திலுண்டான முவ்வகை தாபத்தாலுண்டானது சோகம், சரீரத்தை ஆத்மாவென்று நினைப்படதே மோஹம். நரகம் முதலியவைகளில் உண்டாவது பயம். அவைகளைப் போக்குவது பக்தியெனப்படுகிறது– சந்த். ஆசையில்லாத– நல்ல சிஷ்யனை ஸம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையில்லாதவர்– விஜ. க்ரந்தங்களை– "மோஹத்தால் கலங்கியிருக்கும் உன்னுடைய புத்தியானது எப்பொழுது தெளியுமோ? அப்பொழுது கேட்டது, கேட்கவேண்டியது இவைகளிலிருந்து நிர்வேதத்தையடைவாய்," பகவத்கீதை, பலனை– அனேக

ஜன்மங்களில் பரமாத்மாவை நேரில் பார்த்தவர்களும், முக்தியில் விசேஷ ஆனந்தமுள்ளவர்களுமான சுகர் முதலியவர்களுக்கு பாகவதத்தில் ஆசையுண்டாயிற்று என்பதில் என்ன ஆச்சர்யம்.– விஜ. ஆசையுள்ளவராகி– பகவானுடைய கல்யாணகுணங்கள் யாவும் அனுபவத்தாலேயே அறியக்கூடியவைகள் என்று வேதாந்த சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், ஸ்வாத்யாயத்தால் யோகத்தை அடையவேண்டும், யோகத்தால் ஸ்வாத்யாயமுள்ளவனாக ஆகிறான்' என்றபடி பகவானுடைய குணங்களை வர்ணிக்கும் க்ரந்தத்தை அப்யஸிப்பது அவச்யமேயாம். மேலும் பகவானுடைய அவதாரங்களும், அவைகளின் குணங்களும், பக்தர்களும், அவர்களுடைய குணங்களும், வேதாந்தத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. அவைகள் யாவும் இந்த பாகவதத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறதுமன்றி வேதாந்தத்தில் சொல்லியிருக்கும் குணங்களைவிட அதிகமாக பகவத்குணங்கள் நன்றாகக் காட்டப்பட்டிருக்கின்றன. வீர. அப்யஸித்தார்– பிறருக்குமுபதேசித்தார். விஜ. சிவபெருமானிடம்– பரமசிவன் ப்ரஹ்மதேவருடைய ஐந்தாவது தலையை வெட்டுகிறதற்காக வரும்போது அவர் ஓடினார். ஆர்கியென்று ஒருபாடமுண்டு. அதற்கு பரமசிவனுடைய மூன்றாவது கண்ணின் தேஜஸினால் எரிக்கப்பட்டு பயந்து சனீஸ்வரன் ஓடினார் என்று அர்த்தங்கொள்ளவேண்டும்.–விஜ.

முன்னொருக்கால் ப்ரஹ்மதேவர் தன்னால் ஸிருஷ்டிக்கப்பட்ட ஒரு அப்ஸர ஸ்த்ரீயினிடம் ஆசைப்பட்டு மான்வேஷங்கொண்டு ரமிக்க முயற்சித்தார். அப்பொழுது பரமசிவன் அவரைத்துரத்தினார். அர்க

யென்னும் ஒரு பாடமுண்டு. அதற்கு ஸூர்யன் ஓடியது போலவென்று அர்த்தம். அதாவது வித்யுன்மாலி யென்று ஒரு ராக்ஷஸனிருந்தான். அவனுடைய தபஸினால் பரமசிவன் ஸந்தோஷமடைந்து அவனுக்குத் தங்க விமானமொன்றைக் கொடுத்தார். அவன் அந்த விமானத்திலேறிக் கொண்டு ஸூர்யன் பின்னே போய்க்கொண்டிருந்தான். அப்பொழுது ராக்ஷஸனுடைய விமானத்தின் காந்தியானது, ஸூர்யதேஜஸை விட மேலானதாக விருந்தபடியால் அந்த விமானத்தை உருகிப்போகச்செய்தார். அதனால் பரமசிவன் கோபங் கொண்டு ஸூர்யனை துரத்த ஸூர்யன் பயந்து ஓடினார். அப்பொழுது பரமசிவனுடைய கடும் பார்வையால் ஸூர்யன் எரிக்கப்பட்டு காசியில் விழுந்தார். அவருக்கு இப்பொழுதும் லோலார்கனென்று (அலைந்த ஸூர்யன்) பெயர் வழங்கிவருகிறது. இது வாமனபுராணத்தில் விஸ்தாரமாய் சொல்லப்பட்டிருக் கிறது.– ஸ்ரீத. தக்ஷப்ரஜாபதியானவர் பரமசிவனுக்கு ஹவிர்பாகங்கொடாமல் யாகஞ்செய்ய அப்பொழுது பரமேச்வரன் வீரபத்ரராக அவதரிக்க அவரிடமிருந்து ஓடினார்– வீர. ஆர்கியென்றபாடத்தில்– ஸூர்யனு டைய பிள்ளையாகிய மிருத்யுவானவர் பரமசிவனைக் கண்டு ஓடினார்– சந்த். கிருஷ்ண–பூமியிலுள்ள ஸகல ஜனங்களுக்கும் ஸுகத்தை யுண்டுபண்ணுகிறவர்– ஸ்ரீத. மிகுந்த– மூலத்தில் மஹாபாஹு வென்றிருப்ப தால் க்ஷத்ரியர்களை யுண்டுபண்ணிய கைகளுள்ளவர் என்று காட்டப்பட்டது– வீர. நரகபாபத்தைச்செய்த மனிதர்கள் அதற்குத் தக்கபடி அதனால் சிக்ஷிக்கப் படுவார்களானால் அவர்கள் சுத்தர்களாகி புண்யசாலிகள் போல ஸ்வர்க்கத்தை யடைகிறார்கள்”–ஸ்மிருதி

ஆததாயி– அக்னிவைப்பவன், விஷங்கொடுப்பவன், ஆயுதம்பிடித்தவன், பணம், பூமி, பார்யை இவைகளை யபஹரிப்பவன் ஆகிய ஆறு பெயர்கள். மேல்காட்டிய ஆததாயியை ஆலோசிக்காமலேயே கொன்றுவிடலாம்– ஸ்ரீத. பாதிசரீரம்– “பத்னியென்பவள் பர்த்தாவினுடைய சரீரத்தின் பாதிபாகம்” –ச்ருதி.

♣♣♣♣

அத்யாயம்–8

பகவானைக் குந்தி ஸ்தோத்ரஞ் செய்தது.

பின்பு அந்த பாண்டவர்கள் யுத்தத்தில் இறந்து போன பந்துக்களுக்குத் தர்ப்பணம் (எள்ளுஞ்ஜலமும்) செய்வதற்காக ஸ்ரீ க்ருஷ்ண பகவானுடன் ஸ்த்ரீகளை முன்னிட்டுக்கொண்டு கங்கையின் கரை சேர்ந்தார்கள். மேலும் அவர்கள், அந்தக் கங்கா ஜலத்தில், ஸ்நானஞ் செய்து தர்ப்பணம் பண்ணி, பகவானுடைய பாதத்தி லிருந்து உண்டானதால் பரிசுத்தமாயிருக்கும் அந்தத் தீர்த்தத்தில் பின்னும் ஸ்நானஞ் செய்தார்கள்.

3–11. பிறகு அவ்விடத்தில் தம்முடைய தம்பி களுடன் உட்கார்ந்திருக்கும் தர்மபுத்ரரையும், த்ருதராஷ்டரரையும், புத்ரசோகமுள்ள காந்தாரியையும், குந்தியையும், த்ரௌபதியையும் நோக்கி ஸ்ரீ க்ருஷ்ண பகவானானவர், மஹர்ஷிகளுடன் "பந்துக்கள் மரண மடைந்தார்களென்று நீங்கள் துக்கப்படுவது நியாயமல்ல காலமஹிமையால் ப்ராணிகளுக்கு நேரிடும் நரகம் தடுக்கமுடியாதது என்று ஸமாதான வார்த்தைகளைச் சொல்லி, துர்யோதனனால் அபஹரிக்கப்பட்டிருந்த அஜாதசத்ருவின் (எவ்விடத்திலும் விரோத புத்தி யில்லாதவர்) ராஜ்யத்தை அவருக்கு வசப்படுத்தினார். மேலும் த்ரௌபதிதேவியின் தலைமயிரைப் பிடித்து இழுத்ததால் ஆயுஸ் குறைந்தவர்களான துச்சாஸனன் முதலியவர்களைக் கொல்வித்தார். மஹேந்த்ரனுடைய கீர்த்தியை உபேந்த்ரர் உலகத்தில் பரவச்செய்தது போல முக்ய கல்பங்களுள்ள மூன்று அச்வமேத யாகங்களைச் செய்வித்துப் பரிசுத்தமான அவருடைய

கீர்த்தியை விஸ்தாரப்படுத்தினார். பிறகு வ்யாஸ மஹா முனி முதலியவர்களைப் பூஜித்து அவர்களால் தாம் கொண்டாடப்பட்டு ஸாத்யகி, உத்தவர் முதலானவர் களுடன் பாண்டவர்களுக்குச் சொல்லிக்கொண்டு ரதத்தின் மீதேறி த்வாரகையை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது உத்தரையானவள் மிகவும் பயந்தவளாய் ஸ்ரீ க்ருஷ்ணனிடம் வந்து அவரை நோக்கி "மஹா யோகியே! தேவர்களுக்கும் தேவரே! ஸகல ஜகத்திற்கும் அதிபதியே! என்னைக் காப்பாற்றும். பயத்தை நிவர்த்திப்பவர் நீர் ஒருவரேயொழிய மற்றவைகளெல் லாம் ஒன்றுக்கொன்று பயத்தை யுண்டுபண்ணுகின்றன ஏ நாத! அக்னிபோல் கொதித்துக் கொண்டிருக்கும் எஃகுமுனையுள்ள பாணமானது எனக்கு எதிரில் வருகிறது. அதனால் என் சரீரம் எரிக்கப்பட்டாலும் எனக்கு ஸம்மதம், என் வயிற்றிலிருக்கும் சிசுவுக்கு மாத்ரம் கெடுதி நேரிடாமல் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக்கொண்டாள். பக்தர்களிடம் வாத்ஸல்ய முள்ள பகவான் அதனைக்கேட்டு 'இது பாண்டவர்களை நாசஞ்செய்வதற்காக அஸ்வஸ்தாமாவினால் ப்ரயோகிக்கப்பட்ட அஸ்த்ரம்' என்று நிச்சயித்தார்.

12–37. அப்பொழுது பாண்டவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு எதிரில்வரும் பாணங்களைப் பார்த்து அதனைத் தடுப்பதற்காக சிறந்த அஸ்த்ரங்களை எடுத்தார்கள். ஸ்ரீ பகவான் தம்மிடத்திலேயே மனத்தைச் செலுத்திய பக்த சிரோமணிகளான பாண்டவர்களுக்கு நேர்ந்த விஸனத்தைப் பார்த்து அந்த அஸ்த்ரம் வேறு அஸ்த்ரங்களால் தடுக்க முடியாததாகையால் தம்முடைய ஸுதர்சனமென்ற சக்ரத்தை ப்ரயோகித்து, அதனால் அவர்களை

ரக்ஷித்தார். மேலும் ஸகல ப்ராணிகளிடத்திலும் அந்தர்யாமியாயிருக்கும் யோகேசராகிய அந்த க்ருஷ்ண பரமாத்மாவானவர் விராடபுத்ரியான உத்தரையின் வயிற்றிலிருக்கும் கர்பத்தைத் தம்முடைய மாயையால் மறைத்தார். ஏ சௌனகரே! ப்ரஹ்மாஸ்த்ரமென்பது மற்றவைகளால் தடுக்க கூடியதல்ல. வீணாய்ப் போகாதது. ஆனாலும் விஷ்ணுவின் தேஜஸையடைந்து அடங்கினது. பகவான் மாயையால் ஸிருஷ்டி, பரிபாலனம், ஸம்ஹாரம் ஆகிய இவைகளைச் செய்கிறவராகையாலும், ஸகல ஆச்சர்யரூபியாயிருப்ப தாலும், அவரிடத்தில் மேற்சொல்லிய விஷயத்தை அத்புதமென்று நினைக்கவேண்டாம். இப்படிப் பாண்டவர்கள் பகவானுடைய ஒத்தாசையால் ப்ரஹ்மாஸ்த்ரத்திலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். அப்பொழுது பதிவ்ரதையான குந்திதேவியானவள் த்வாரகா நகரத்திற்கு ப்ரயாணமாயிருக்கும் க்ருஷ்ண பகவானை நோக்கி தன்னுடைய புத்ரர்களுடனும், த்ரௌபதியுடனும், பகவத் ஸ்வரூபத்தை அறியாத வளான நான் எல்லாவற்றிற்கும் முந்தியபுருஷனை நமஸ்கரிக்கிறேன். அவர் ஸகலத்திற்கும் ஈச்வரன். ப்ரகிருதி (மாயை)க்கு மேற்பட்டவர். ஸகலத்திற்கும் மேற்பட்டவர். ஸகலப்ராணிகளாலும் பார்க்கமுடியாத வர். ஆனால் ப்ராணிகளுடைய உள்ளிலும் வெளியிலும் இருப்பவர். மாயையாகிய திரையால் மறைக்கப்பட்டவர். இந்திரியங்களுக்குப் புலப்படாதவர். நாசமில்லாதவர். அந்தப் பரமபுருஷனாகிய நீர், வேஷதாரி(நடன்) போல தேஹாபிமானமுள்ளவர்களால் அறியப்படுகிறீரில்லை. சுத்தசித்தர்களும் மனனம்செய்யும் ஸ்வபாவமுள்ளவர் களுமான பரமஹம்ஸர்களும், உம்முடைய ஸ்வரூபத் தைத் தேடுகிறார்கள். அப்படியிருக்க, ஸ்திரீகளாகிய

நாங்கள் பக்தியோகத்தை யடைவதற்காக உம்மை எப்படி தர்சிப்போம்? க்ருஷ்ணன், வாஸுதேவர், தேவகீநந்தனர் (தேவகியின் புத்ரர்) கோவிந்தர் என்னும் திவ்ய நாமங்களுள்ளவரும், நந்தனென்ற கோபரு (யாதவர்)க்குப் புத்ரரும், தாமரைமலருடன் கூடிய நாபியுள்ளவரும், தாமரஸ புஷ்பமாலையுள்ளவரும், தாமரைமலர் போன்ற கண்கள், கால்கள் ஆகிய இவைகளுள்ளவருமான உமக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். ஏ! ப்ரபுவே! துஷ்டனாகிய கம்ஸனால் துன்பப்படுத்தப் பட்ட தேவகியை எப்படிக் காப்பாற்றினீரோ அப்படியே என்னையும் என்னுடைய புத்ரர்களையும் கூட்டங் கூட்டமாக ஆபத்துக்கள் வந்தாலும், அவைகளிலிருந்து ஸம்ரக்ஷிக்கிறீர் (தமக்கு மாதாவிடமிருக்கும் ப்ரீதியைக் காட்டிலும் என்னிடம் அதிக விச்வாஸமென்பது கருத்து) விஷம், அக்னி, ராக்ஷஸர்கள், அஸத்துக்களுடைய ஸபை, வனவாஸ கஷ்டம், ஒவ்வொரு யுத்தத்திலும் மஹாரதர்களாகிய பீஷ்மர் முதலியவர்களுடைய அஸ்த்ரங்கள், கடைசியாக அச்வத்ஸ்தாமாவின் ப்ரஹ்மாஸ்த்ரம் ஆகிய இவைகளிலிருந்து உம்மால் காப்பாற்றப்பட்டோம். மேலும் துர்யோதனனால் தூண்டப்பட்டு, எங்களை சபிப்பதற்காக வந்த துர்வாஸ மஹாமுனியை ஸகல ஜகத்துடன் திருப்தியடையச் செய்து அவரிடமிருந்தும் காப்பாற்றினீர். நீர் ஸகல ஜகத்திற்கும் குருவாயிருப்பவர், தங்களுடைய தர்சன மானது மோக்ஷத்தை கொடுக்கத்தக்கது, அப்போர்ப்பட்ட உம்முடைய தர்சனம் ஆபத்காலங்களில் கிடைப்பதால் அந்த விபத்து அடிக்கடி வந்தாலும் ஸம்மதம். மேலான குலத்தில் பிறந்திருப்பது, ஐச்வர்யம், சாஸ்த்ரங்களை படித்திருப்பது, அழகு ஆகிய இவைகளால் மிகுந்த கர்வமுள்ள புருஷன் உம்முடைய பெயரை உச்சரிக்க

மாட்டான். தரித்ரனாலேயே அந்த திவ்யநாமதேயம் இடைவிடாமல் சொல்லப்படும். (ஸம்பத் க்ஷேமத்திற்கு விரோதியென்று கருத்து) தங்களுக்கு பக்தர்களே பணம். முக்குணங்களின் வ்ருத்திகள் தங்களிடத்தில் ஸம்பந்தக்கிறதில்லை. நீர் ஆத்மாவிலேயே ரமிப்பவர்; சாந்தர்; மோக்ஷத்தைக்கொடுக்கும் ஸாமர்த்யமுள்ளவர்; இப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரஞ்செய்கிறேன். நீர் தேவகியின் புத்ரரானாலும், ப்ராகிருத சிசுக்கள் போன்றவரல்ல. உம்மைக் காலரென்றும், எல்லாவற்றிற் கும் ஈச்வரரென்றும்; ஆதியந்தமற்ற ப்ரபுவென்றும், எல்லாரிடத்திலும் ஸமமாக ஸஞ்சரிப்பவரென்றும் நான் நினைக்கிறேன். உமக்கு ஓரிடத்திலும் பக்ஷபாத மில்லை. ஜனங்கள் ஒருவருக்கு ஒருவர் சண்டை செய்வதற்கும் நீரே நிமித்தம்; வேறில்லை மேலும் சிலர் விரோதிகளென்றும். சிலர் மித்ரர்களென்றும் பேதபுத்தி உமக்கில்லை. நீர் மனுஷ்ய சரீரமெடுத்து அவர்கள்போல் அபினயஞ் செய்வதால் உம்மிடத்தில் பேதபுத்தி யிருப்பதாகத் தோன்றுகிறதேயொழிய உண்மையிலில்லை. (அனுக்ரஹத்தையாவது நிக்ரஹத் தையாவது செய்கிறதில்லை) தங்களுடைய அபிப்ராயம் ஒருவராலும் அறியமுடியாதது. ஜகத்ருபியாயிருக்கும் ப்ரபுவே! பிறப்பில்லாதவரும், ஒன்றையுஞ்செய்யாதவரும், பரமாத்மாவாக விருப்பவருமான நீர்,வராஹ(பன்றி) மாகியும், மத்ஸ்யமாகியும், வாமனராகியும் அவதரித்தீ ரென்பது பொருந்துமா? அது லோகத்தை அனுஸரித்ததேயொழிய உண்மையில் உமக்கு ஜன்மமில்லை. கோகுலத்தில் நந்தருடைய கிரஹத்தில், தயிர்பானையை உடைத்ததற்காக யசோதை, உம்மைக் கட்டுவதற்கு கயிற்றை எடுத்தாளல்லவா? அப்போது நீர் கண்களிலிருந்த மை கரையும்படி கண்ணீரைப்

பெருகிக் கொண்டு கலங்கிய கண்களுள்ளவராய்த் தலைகுனிந்து மிகவும் பயந்தவர் போல் அபினயஞ் செய்தீரல்லவா? அது எனக்கு மோஹத்தை யுண்டு பண்ணுகிறது. உண்மையில் ஜனனம், மரணம் முதலியவைகளும் உம்மிடமிருந்து பயப்படுகிறது. உம்முடைய சரிதம் ஜகத்திற்கு மோஹகரமாகையால் உம்முடைய ஜன்மங்களைப் பலவகையாய்ப் பெரியோர் கள் சொல்லுகிறார்கள். அதாவது "புண்ய ச்லோகராகிய யதுவின் கீர்த்தியை விருத்தி செய்வதற்காக அவருடைய வம்சத்தில், மலயபர்வதத்தை கௌரவப் படுத்துவதற்கு, அதில் சந்தனவிருக்ஷம் முளைத்தது போல் அவதரித்தீர்" என்று சிலர் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் "வஸுதேவர், தேவகி இவர்களால் ப்ரார்த்திக்கப்பட்டு உண்மையில் பிறப்பில்லாதவரானா லும், தேவ விரோதிகளை நாசஞ்செய்து இவ்வுலகத் திற்கு க்ஷேமத்தை யுண்டுபண்ணுவதற்காக தேவகியின் புத்ரராக அவதரித்தீர்" என்று கூறுகிறார்கள். மற்றுஞ் சிலர் "பூமியில் துஷ்டர்கள் அதிகமாயிருந்த படியால் மிகுந்த பாரத்தால் ஸமுத்ரத்தின் நடுவில் தத்தளிக்குங் கப்பல்போல் கஷ்டப்படும் பூமியின் பாரத்தை நிவர்த்திப்பதற்காக ப்ரஹ்மதேவருடைய வேண்டு கோளின்படி அவதரித்தீர்" என்று சொல்லுகிறார்கள் இன்னுஞ்சிலர் "ஆத்மாவின் ஆனந்த ஸ்வரூபத்தை யறியாமல் தேஹம் முதலியவைகளில் அபிமானம் வைத்துக் கர்மங்களைச் செய்துகொண்டு கஷ்டப்படும் ஜனங்களுக்கு மேற்காட்டிய துக்கத்தை நிவர்த்திக்க வேண்டி கேட்பதற்கும் ஸ்மரிப்பதற்கும் தகுதியான லீலைகளைச் செய்வதற்காக ஜன்மாவை அங்கீகரித்தீர்" என்கிறார்கள். எந்த ஜனங்கள் உம்முடைய சரிதத்தை பிறர்சொல்லக் கேட்கிறார்களோ, தம் வாக்கினால்

உச்சரித்து கானஞ்செய்கிறார்களோ, அடிக்கடி நினைக்கிறார்களோ, நினைத்து ஆனந்தப்படுகிறார்களோ, அவர்கள் பிறப்பு, இறப்பு ஆகிய இவைகளைப் போக்குகிற உம்முடைய பாதங்களை வெகு சீக்ரமாக அடைவார்கள்.

38–44. பக்தர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும் ப்ரபுவே! தங்களிடம் விசேஷ ப்ரியமுள்ளவர் களும், தங்களுக்கு வேலைக்காரர்களுமான எங்களை விட்டுப்போவது உசிதமல்ல துர்யோதனன் முதலிய அரசர்கள் நிமித்தமாக விசேஷ பாபங்கள் செய்த எங்களுக்கு உம்முடைய பாதாரவிந்தத்தைத் தவிர வேறு கதியில்லை. மேலும் இந்த்ரியங்களுக்கு அதிபதி யான ஜீவனில்லாத வரையில் எப்படி நாமரூபங்கள் பயன்படுகிறதில்லையோ அப்படி உம்முடைய ஸான்னித்யமில்லாத வரையில் யாதவர்களுடன் கூடிய பாண்டவர்களாகிய எங்களுடைய கீர்த்தியும், ஸம்பத்தும் பயன்படாதவைகளேயாம். மேலும், எங்களுடைய ராஜ்யத்திற்குட்பட்ட இந்த பூமியானது உம்முடைய பாதங்களிலுள்ள த்வஜரேகை, வஜ்ரரேகை, அங்குசரேகை முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு விளங்குகிறது. நீர் அப்புறம் போனால் இந்தப்பூமி பிரகாசிக்காது. உம்முடைய கடாக்ஷ வீக்ஷண்யத்தால் இந்த தேசத்தில் ஐச்வர்யம் விருத்தியடைகின்றன.செடி கொடி முதலியவைகள் நன்றாய் விருத்தியடைகின்றன. ஓ! ஜகத்பதியே! ஜகத்ரூபியாயிருப்பவரே! ஜகத்தில் அந்தர்யாமியாயிருப்பவரே! பந்துக்களான பாண்டவர் களிடத்திலும், விருஷ்ணிகளிடத்திலும் எனக்கிருக்கும் ஸ்நேஹ(அபிமான)மாகிய பந்தத்தை நிவர்த்தியும். ஓ! மதுரா நகரத்தரசனாகிய க்ருஷ்ணா! கங்கையின்

ப்ரவாஹமானது இடையில் நேரும் விக்னங்களை லக்ஷ்யஞ்செய்யாமல் ஸமுத்ரத்தையே யடைவதுபோல என்னுடைய மனஸும் வேறிடஞ்செல்லாது இடை விடாமல் உம்மையே பஜிக்கும்படி அனுக்ரஹிக்க வேண்டும். ஓ! க்ருஷ்ண! அர்ஜுனனுக்கு மித்ரரே! விருஷ்ணிகளுக்குட் சிறந்தவரே! பூமிக்குக் கெடுதி செய்யும் அரசர்களை நாசஞ் செய்பவரே! குறைவற்ற வீர்யமுள்ளவரே! ஏ கோவிந்த! (காமதேனுவின் ஐச்வர்யத்தை யடைந்தவர்) பசுக்கள், ப்ராஹ்மணர்கள், தேவர்கள் ஆகிய இவர்களின் உபத்ரவத்தை போக்கடிப் பவரே! யோகிகளுக்கு அதிபதியும், ஜகத்திற்கு குருவாயு மிருப்பவரே! பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன் என்று ஸ்தோத்ரம் பண்ணினாள்.

45–46. இந்தப்படி குந்திதேவியால் இனிமையான வாக்யங்களைக் கொண்டு ஸ்தோத்ரஞ் செய்யப்பட்ட பகவான் தம்முடைய ஸகல மஹிமைகளையும் வெளியிட்டு கொஞ்சம் சிரித்து, தமது மாயையால் அவளை ப்ரமிக்கச்செய்தார். பின்பு குந்தியின் ப்ரார்த் தனைப்படி "எப்பொழுதும் என்னிடத்திலுனக்கு ஸ்திரமாக பக்தி இருக்கட்டும்" என்று அனுக்ரஹித்து ஹஸ்தினாபுரஞ் சேர்ந்து அவ்விடத்தில் ஸுபத்ரை முதலிய ஸ்த்ரீகளுக்கு சொல்லிக்கொண்டு தமது பட்டணத்திற்குப் போக முயற்சித்தார். அப்பொழுது இவ்விடத்தில் தாங்கள் சிலகாலம் வஸிக்கவேண்டும் என்று தர்மபுத்ரர் அன்புடன் கேட்டுக்கொள்ள, பகவானும் அதை அங்கீகரித்து அவ்விடத்தில் வஸித்தார்.

47–53. பிறகு பகவானுடைய அபிப்ராயத்தை

அறியாத வ்யாஸமஹர்ஷி முதலியவர்களாலும், அத்புதகார்யங்களைச் செய்யும் க்ருஷ்ண பகவானாலும், பலவகையான இதிஹாஸங்களை கொண்டு தர்மபுத்ரர் ஸமாதானஞ் செய்யப்பட்டும் அதனால் அவருக்கு துக்கம் நீங்கவில்லை. ஓ ப்ராஹ்மணர்களே! தர்ம புத்ரர் யுத்தத்தில் இறந்துபோன பந்துக்களையே நினைத்து, அவிவேகமுள்ளவராய் அபிமானம், மோஹம் என்னும் இவைகளுக்கு வசப்பட்டு பின்வருமாறு சொல்லலானார். 'துராத்மாவாகிய என்னுடைய மனத்தில் ஸ்திரமாயிருக்கும் அறியாத்தன்மை மிகவும் ஆச்சர்யப்படத்தக்கது. நாய், நரி முதலியவைகளுக்குச் சொந்தமான இந்த சரீரத்திற்காக அனேக அக்ஷௌஹிணி ஸைன்யங்களைக் கொன்றேன். பாலர்கள், ப்ராஹ்மணர்கள், மித்ரர்கள், பிதிருவ்யர்கள், ஸஹோதரர்கள், குரு ஆகிய இவர்களுக்கு த்ரோஹஞ்செய்த நான், அனேகவர்ஷங்கள் பாபத்தின் பலனாகிய நரகத்தை அனுபவித்தாலும் ஒருபொழுதும் மோக்ஷத்தையடையப் போகிறதில்லை.யுத்தத்தில் சத்ருக்களைக் கொல்வது அரசர்களுக்கு தர்மமேயொழியப் பாபமில்லை' என்று சாஸ்த்ரத்தில் சொல்லியிருப்பது என் விஷயத்தில் பொருந்தாது. ஏனென்றால் 'அரசன் தன்னுடைய ப்ரஜைகளுக்கு, சத்ருக்களால் உபத்ரவம் நேரிடும்போது, அவர்களைக்கொல்வது ந்யாயம்' என்பது சாஸ்த்ரத்தி னுடைய தாத்பர்யம். துர்யோதனனால், ப்ரஜைகள் காப்பாற்றப்பட்டு ஸுகமாய் வஸிக்கும்போது ராஜ்யமடையவேண்டுமென்ற ஆசையால் மாத்ரம் நான் சண்டைசெய்து பந்துக்களைக் கொன்றேனாகையால், என் புத்திக்கு ஸமாதானமாகவில்லை இப்படிப் புருஷர்களைக்கொன்றதால் அவர்களுடைய பந்துக்களான ஸ்த்ரீகளுக்கும் நான் த்ரோஹஞ் செய்தவனாகிறேன்.

இந்தப் பாபம் க்ரஹஸ்தாச்ரமத்தில் செய்யக்கூடிய ஸத்கர்மங்களால் நிவர்த்தித்துக் கொள்ளமுடியாது. அநேக ப்ராணிகளை (அறியாத்தன்மையால்) கொன்ற தால் நேர்ந்த இந்த பாபத்தை புத்தி பூர்வமாகச் செய்யும் ஹிம்ஸையுள்ள யாகத்தால் நிவர்த்திசெய்து கொள்ளவும் முடியாது. 'கலங்கிய ஜலத்தால் கலங்கிய ஜலத்தை சுத்தப்படுத்த முடியுமா? மத்யத்தால் உண்டான அசுத்தியானது, மத்யத்தால் நிவர்த்தி யாகுமா?' என்று பலவாறாகத் துக்கித்தார்.

நோட்டு

பயத்தை–மிருத்யுவிற்கு வசப்பட்டிருக்கும் மனிதனால் மற்றொருவனை மிருத்யுவினிடமிருந்து காப்பாற்ற முடியாதென்று கருத்து– வீர. அறியாத– பீஷ்மர் மரணமடையப் போகிறார், அதற்காக எல்லோரும் கங்கையின் கரைக்குச் செல்லவேண்டும், அவ்விடத்தில் அவரிடமாக தர்மங்களைக் கேட்கச்செய்து அதனால் தர்மபுத்ரருடைய துக்கத்தைப் போக்கவேண்டுமென்பது பகவானுடைய அபிப்பிராயம்.– ஸ்ரீ த. அக்ஷௌஹிணி– ரதங்கள் 21870, யானைகள் 21801, குதிரைகள் 65610, காலாட்கள் 109350 யாகத்தால்– "எவன் அச்வமேதஞ் செய்து பகவானை பூஜிக்கிறானோ அவன் ப்ரஹ்மஹத் யை முதலிய பாபங்களிலிருந்து விடுபடுகிறான்" என்று ச்ருதியில் சொல்லப்பட்டிருந்தாலும் என்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–9

பீஷ்மர் தர்மம் உரைத்தது.

இப்படி தர்மபுத்ரர் "பந்துக்களுக்கு த்ரோஹஞ் செய்தோமே" என்று பயந்து ஸகல தர்மங்களையும் தெரிந்துகொள்ள விரும்பி பீஷ்மர் வஸிக்கும் குருக்ஷேத்ரம் சென்றார்.

ப்ராஹ்மணர்களே! அப்பொழுது அவருடைய தம்பிகளும், பகவானும், வ்யாஸரும், தௌம்யர் முதலானவர்களும், உத்தமமான குதிரைகள் பூட்டிய ரதங்களிலேறிக்கொண்டு அவர்பின் சென்றார்கள். மேலும் ஸ்ரீ க்ருஷ்ணபகவானும் அர்ஜுனருக்கு ஸாரத்யம் செய்துகொண்டு சென்றார். அவர்களுடைய நடுவில் அந்தத் தர்மபுத்ரர் குஹ்யகர்களால் சூழப்பட்ட குபேரன்போல ப்ரகாசித்தார்.

4–8. அவ்விடத்தில் ஸ்வர்க்கத்திலிருந்து விழுந்திருக்கும் தேவரைப்போல், பூமியில் கிடக்கும் பீஷ்மரைக்கண்டு, பாண்டவர்களும், அவர்களுடைய பரிவாரங்களும், ஸ்ரீ க்ருஷ்ணபகவானும், அவருக்கு நமஸ்காரஞ் செய்தார்கள். அந்த ஸமயத்தில் ஸகல ப்ரஹ்மர்ஷிகளும், சிறந்த தேவர்ஷிகளும், ராஜர்ஷிகளும், அந்தப்பீஷ்மரைப் பார்ப்பதற்காக வந்து கூடினார்கள். மேலும், பர்வதர், நாரதர், தௌம்யர், வ்யாஸபகவான், ப்ரஹதச்வர், பரத்வாஜர், அவருடைய சிஷ்யர்கள், ரேணுகையின் புத்ரராகிய பரசுராமர், வஸிஷ்டர், இந்த்ரப்ரமதர், ச்ருதர், கிருதஸ்மதர், அஸிதர், நக்ஷீவான், கௌதமர், அத்ரி, விச்வாமித்ரர்,

ஸுதர்சனர், காச்யபர், ப்ரஹஸ்பதி, சுகர் முதலிய நிர்மல ஸ்வபாவமுள்ள மற்றவர்களும் தங்கள் தங்கள் சிஷ்யர்களுடன் அவ்விடமே வந்துசேர்ந்தார்கள்.

9–24. தேசத்தையும் காலத்தையும், நன்றாக அறிந்த பீஷ்மர் வந்தவர்களைத் தனியே தெரிந்துகொண்டு மிக்க பாக்யசாலிகளான மஹர்ஷிகளைப் பூஜித்தார். மேலும் ஸமீபத்தில் உட்கார்ந்திருப்பவரும், ஜகதீசரும், மாயையால் சரீரமெடுத்தவருமான ஸ்ரீ க்ருஷ்ண பகவானைப் பார்த்து, அவருடைய மஹிமையை அறிந்தவராகையால், அவரை ஹிருதயத்தில் வைத்து அர்ச்சித்தார். பின்னும் அவர் மிகுந்த வணக்கத்தோடும் ப்ரேமையோடும், பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் பாண்டவர்களைப் பார்த்து அபிமானத்தால் கண்ணீரைப் பெருக்கி அதனால் கண் தெரியாதவராய்ப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினார். "ஏ தர்மபுத்ர! நீங்கள் ப்ராஹ்மணர்களையும் தர்மத்தையும், ஸ்ரீ க்ருஷ்ண பகவானையும் ஆச்ரயித்தவர்களாகவிருந்தும் கஷ்டப்பட்டு ஜீவிப்பது ந்யாயமல்ல இது வெறுக்கக் கூடிய கார்யம். உங்களுடைய பிதாவும் அதிரதருமாகிய பாண்டு மரணமடைந்த பிறகு உங்களுடைய மாதாவாகிய குந்திதேவி பால்யவயதுள்ள குழந்தைகளுடன் அடிக்கடி மிகுந்த கஷ்டத்தை அனுபவித்தாள். மேகங்கள் வாயுவுக்கு வசப்பட்டிருப்பதுபோல, ஜனங்கள் காலத்திற்கு வசப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் உங்களுக்கு நேர்ந்த கஷ்டங்கள் யாவும் அந்தக் காலத்தால் செய்யப்பட்டவைகளேயாம். எந்த பக்ஷத்தில் அரசனாகிய தர்மபுத்ரரும், கதாயுதத்தைக் கையில் பிடித்த பீமஸேனனும் காண்டீவமென்னும் வில்லையுடைய அர்ஜுனனும் இருக்கிறார்களோ, மேலும்

அவர்களுக்கு க்ருஷ்ணபகவான் மித்ரரோ அவ்விடத்திலும் ஆபத்துநேரிட்டதென்பது காலத்தின் மஹிமையேயாம்:

இதோ இருக்கும் க்ருஷ்ண பகவானுடைய எண்ணத்தைத் தெரிந்துகொள்ள ஒருவராலும் முடியாது. கவிகளும், யோகிகளும், இவருடைய ஸ்வரூபத்தை அறிய விரும்பியும், அதை அறியாமல் மோஹிக்கிறார்கள். ஏ! தர்மபுத்ரரே! மேற்சொல்லிய காரணத்தால் 'இவையாவும் ஈச்வரனுக்கு வசப்பட்டவை என்று நிச்சயித்து அந்த ஈச்வரனை அனுஸரித்து அனாதர்களான ப்ரஜைகளைக் காப்பாற்றும்; ஸிருஷ்டிக்கு முந்தியிருந்த புராண புருஷராகிய பகவான் இவர்தான். இவரே நாராயணன் ஆனாலும் தம்முடைய மாயையால் லோகத்தை ப்ரமிக்கச் செய்து கொண்டு (தன் ஸ்வரூபத்தைக் காட்டாமல்) விருஷ்ணிவம்சத்தில் ப்ரகாசிக்கிறார். இவருடைய மஹிமை மிகவும் ரஹஸ்யமானது; அதனைப் பகவானாகிய பரமசிவனும், தேவர்ஷியாகிய நாரதரும், கபிலருமே அறிவார்கள். நீங்கள் இவரை அம்மானுடைய பிள்ளை (அம்மான் சேய்) என்றும் உங்களுடைய இஷ்டப்படி நடப்பவரென்றும், பிரதி உபகாரத்தை எதிர்பாராமல் உபகாரஞ்செய்பவர் என்றும், நினைத்து அவரை மந்த்ரியாகவும், தூதராகவும், ஸாரதியாகவும், ஸ்நேஹவிசேஷத்தால் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அப்படி நினைப்பது அறியாத்தன்மையே. ஸகல ஜகத்ருபியும், ஸமமாயிருப்பவரும், ஒருவராய் விளங்குபவரும், அஹங்காரமில்லாதவரும், ஆசை முதலியவைகளில்லாதவருமான, இந்தப் பகவானுக்கு மேலான கார்யமென்றும், கீழான கார்யமென்றும், தகுதியுடையது

என்றும், வேறுபாடு தோன்றுகிற பேதபுத்தி ஒரிடத்திலும் உண்டாகிறதில்லை. ஆனாலும் இடைவிடாமல் பக்தி செய்பவர்களிடத்தில் இவருக்கு க்ருபை உண்டாகிறது. இப்போது நான் உயிரைவிடஸித்தனாயிருக்கையில், ஸ்ரீ க்ருஷ்ணபகவான் எனக்கு தர்சனங் கொடுப்பதற்காக நேரில் இவ்விடம் வந்திருக்கிறார். ஆகையால் இடைவிடாமல் பக்திசெய்பவர்களிடத்தில் பகவானுக்கு உண்டாகும் க்ருபையை பாருங்கள். மனிதனானவன் தன்னுடைய மனதை பகவானிடத்தில் பக்தியுடன் செலுத்தியும் அவருடைய பெயரையே வாக்கினால் உச்சரித்துக்கொண்டும் சரீரத்தைவிடுவானாகில் அவன் காமங்களாலும் கர்மங்களாலும் பாதிக்கப்படமாட்டான் ஆகையால் தேவர்களுக்கும் தேவரும், சிரிப்பினாலும், சிவந்தகண்களாலும், அழகான முகமுள்ளவரும், த்யானத்திற்கு விஷயமானவரும், நான்கு கைகளுள்ளவருமான பகவான் நானிந்த சரீரத்தை விடுகிறவரையில் என் முன்பு இருக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

25. இதனைக்கேட்டு தர்மபுத்ரர் சரதல்ப (ப்ராணப் படுக்கை)த்தில் படுந்துக் கொண்டிருக்கும் பீஷ்மரை நோக்கி மற்ற மஹர்ஷிகள் கேட்டுக்கொண்டிருக்கும் போது பலவகையான தர்மங்களைச் சொல்லவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

26–28. ஸகல தர்மங்களையு மறிந்தவராகிய பீஷ்மர் மனுஷ்ய ஜாதிக்குப் பொதுவானவைகளும், வர்ணாச்ரமங்களுக்கு உரியவைகளும், வைராக்ய ஸம்பந்தத்தால் ஏற்படும் நிவிருத்தி ரூபமாயும் ஆசையின் ஸம்பந்தத்தால் ஏற்படும் ப்ரவிருத்தி ரூபமாயுமுள்ள

தர்மங்களையும், ராஜதர்மங்கள், தானதர்மங்கள், மோக்ஷதர்மங்கள், ஸ்த்ரீதர்மங்கள், பகவத்தர்மங்கள், ஆகிய இவைகளையும், தனித்தனியாகப் பிரித்துச் சுருக்கமாகவும், விஸ்தாரமாகவும் சொன்னார். மேலும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்களையும், அவைகளை அடைவதற்கு தகுந்த உபாயங்களையும், அனேக இதிஹாஸங்களிலும், உபாக்யானங்களிலும் சொல்லியபடி வர்ணித்தார்.

29–31. இப்படி தர்மங்களை யுபதேசித்துக் கொண்டிருக்கும்போது உத்தராயணம் வந்தது. இஷ்டப்படி மரணமடையச் சக்தியுள்ள யோகியாகிய பீஷ்மரால் தமது மரணத்திற்காக எதிர்பார்க்கப்பட்டிருந்த காலம் இதுவேயாம். அப்பொழுது ஆயிரம் ரதிகர்களைக் காப்பாற்றும் வல்லமையுள்ள பீஷ்மர் மௌனமாக (வார்த்தைகளை அடக்கிக்கொண்டு) ஆதிபுருஷரும், பீதாம்பரத்தை ,தரித்தவரும், நான்கு கைகளுள்ளவரும் எதிரில் உட்கார்ந்திருப்பவருமாகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் ஸகல ஆசைகளையும் ஒழித்து சுத்தமாக விருக்கும் மனத்தை கண்களை மூடிக் கொள்ளாமலேயே செலுத்தினார். மேலும் அவருக்கு இம்மாதிரி பரிசுத்தமாகிய த்யானவிசேஷத்தால் அசுபங்கள் விலகின. பகவானுடைய கருணைநிறைந்த பார்வையால் ஆயுதங்களாலுண்டாகிய காயங்களும் அவற்றின் உபத்திரவமும் நீங்கின. சகல இந்திரியங்களும் பலவிடங்களில் செல்லாமல் ஒருவழிப்பட்டன. பின்னும் ஸாத்வதர்களுக்குட் சிறந்தவரும், ஒப்பற்ற மஹிமையுள்ளவரும் தம்முடைய ஸ்வரூபமான பரமானந்தத்தை யடைந்தவரும், ஸிருஷ்டிக்குக் காரணமாகிய ப்ரகிருதியின் ஸம்பந்தத்தை சிலகாலம் லீலையாக அங்கீகரிப்பவருமான பகவானிடத்தில்

ஒருவித ஆசையுமில்லாத தமது புத்தியைச் செலுத்தினார். இப்படி எல்லாவகையிலும் பகவத் பரராயிருந்து சரீரத்தை விடுகிறவரையில் ஸ்ரீ கிருஷ்ணனை பின்வருமாறு ஸ்தோத்ரஞ் செய்யலானார்.

32–35. "மூவ்வுலகத்திலும் மிகுந்த அழகுள்ளதும், பச்சிலை போல் நீலவர்ணமுள்ளதுமான திவ்யசரீரத்தை யடைந்தவரும், ஸூர்ய கிரணம்போல் பொன்னிறமான வஸ்த்ரத்தை தரித்தவரும், நான்குபுறத்திலும் தொங்கும் சிறந்த தலைமயிர்களால் அழகான முகமுள்ளவரும். அர்ஜுனனுக்கு தோழருமான பகவானிடத்தில் பலனையுத்தேசியாமல் எனக்கு ஸ்திரமான பக்தியுண்டாகட்டும். மேலும் யுத்தத்தில் அர்ஜுனனுக்கு ஸாரத்யஞ் செய்யும்போது குதிரைகள் ஓடியதால் பூமியிலிருந்து கிளம்பிய தூளிகள் எவருடைய தலைமயிரில் படிந்தனவோ, எவருடைய முகம் அப்படிப்பட்ட மயிர்களோடு கூடிய வேர்வை ஜலத்துளிகளால் அலங்கரிக்கப்பட்டதோ, எவருடைய கவசம் என்னுடைய பாணங்களால் மூடப்பட்டு ப்ரகாசித்ததோ, அந்த கிருஷ்ண பகவானிடத்தில் என்னுடைய மனஸானது ரமிக்கட்டும்; பின்னும் எந்த பகவான் தம்முடைய ஸ்நேஹிதனாகிய அர்ஜுனனுடைய வார்த்தையின்படி இரண்டு பக்கத்து ஸைன்யங்களுடைய நடுவில் ரதத்தைச்செலுத்தி சத்ரு ஸைன்னியத்திலிருப்பவர்களனைவரையும் 'இவர் த்ரோணர், இவர் பீஷ்மர், இவர் க்ருபர்' என்று சுட்டிக்காட்டிப் பார்வையாலேயே அவர்களுடைய ஆயுஸைக்குறைத்து, அதனால் அர்ஜுனனுக்கு ஜயத்தை யுண்டுபண்ணினாரோ. அந்த கிருஷ்ணனிடத்திலேயே என் மனம் ஸந்தோஷமடையட்டும்.

36–42. அர்ஜுனன் சத்ரு ஸைன்யத்தில் யுத்தத் திற்கு ஸன்னத்தனாயிருந்த, நான் முதலிய் பந்துக்களைப் பார்த்து இவர்களைக் கொல்வதால் பாபம் நேரிடுமென்ற எண்ணத்துடன் யுத்தஞ்செய்வதில் ஆசையில்லாதவனாக விருக்கும்போது, அவனுக்கு ஆத்மவித்யை யுபதேசித்து, அந்த எண்ணத்தை எவர் மாற்றினாரோ, அந்த பரமபுருஷனுடைய பாகங் களையே என் மனஸ்த்யானிக்கட்டும்; மேலும் ஸ்ரீ கிருஷ்ணன் ஆயுதமெடுக்காமல் யுத்தத்தில் ஒத்தாசை செய்வதாகப் பாண்டவர்களுக்கு ப்ரதிஜ்ஞை செய்தவரானாலும், ஸ்ரீ கிருஷ்ணனை ஆயுதமெடுக்கச் செய்கிறேன் என்று என்னால் செய்யப்பட்ட ப்ரதிஜ் ஞையை நிறைவேற்றுவதற்காக, அர்ஜுனனுடைய ரதத்தைவிட்டுக் கீழே இறங்கி சக்ராயுதத்தை எடுத்துக் கொண்டு யானையைக்கொல்வதற்கு சிங்கம்வந்தாற் போல பூமி அசையும்படியாகவும். மேல்வஸ்த்ரந்தவறி விழும்படியாகவும் வெகு வேகமாயோடி வந்தார். அப்பொழுது நான் சிரித்துக்கொண்டு அவரை பாணங்களாலடித்தேன். அதனால் அவருடைய கவசம் உடைந்தது; சரீரமுழுவதும் ரக்தத்தால் நனைந்தது. அப்பொழுது அர்ஜுனனால் தடுக்கப்பட்டும் அவனை மீறிக்கொண்டு என்னைக் கொல்வதற்காக ஓடிவந்தார். அந்தப் பகவானாகிய முகுந்தரே எனக்குக் கதி. பின்னும் அவர் ஒரு வகையில் குதிரையோட்டுங் கோலையும். மற்றொருகையில் குதிரைகளின் கடிவாளங்களையும் பிடித்து ஸாரதி வேஷம்பூண்டு, அனேக அகார்யங்களைச் செய்தாவது அர்ஜுனனுடைய ரதத்தைக் காப்பாற்றிக்கொண்டிருந்தார். இந்த பகவானைத் தர்சித்ததால் சண்டையில் அடிபட்டு

மரணமடைந்தவர்களனைவரும் பகவத் ஸாரூப்யத்தை அடைந்தார்கள். ஆகையால் மரணமடையும் தசை யிலிருக்கும் என்னுடைய சித்தம் இந்தப் பரம புருஷனிடத்தில் கலந்திருக்கட்டும். மேலும் அழகான நடை, லீலை, சிரிப்பு, ஸ்நேஹமான பார்வை இவை களால் கௌரவப்படுத்தப்பட்டவர்களும், பகவானிடத் திலேயே ஸதா மனதைச் செலுத்தி அவரால் செய்யப்பட்ட லீலைகளை அனுஸரிப்பவர்களுமான கோபஸ்த்ரீகள் வேறு விஷயத்தில் சித்தமில்லாதவர்களாக பகவத் ஸ்வரூபமாகிய பரமானந்த ரூபத்தை யடைந்தார்கள். ஆனதுபற்றி அவரிடமே என்னுடைய சித்தம் வஸிக்கவேண்டும். தவிரவும் தர்மபுத்ரர் ராஜஸூய யாகஞ் செய்தபோது, அநேக முனிவர்களாலும், அரசர்களாலும் நிறைந்த யாகசஸையின்நடுவில் இந்த கிருஷ்ணபகவான் எல்லாராலும் பார்க்கக்கூடிய அத்புத சரீரமுள்ளவராய்ப் ப்ரகாசித்ததுமல்லாமல் எல்லாருக்கும் முந்தி பூஜிக்கப்பட்டார். அந்த புருஷோத்தமனாகிய இவர் என்னுடைய கண்களுக் கெதிரில் ப்ராகாசிக்கிறார். எனக்கு மிகுந்த பாக்யம் கிடைத்தது. இது மிகுந்த ஆச்சர்யம். காற்றானது மூங்கிலை எரிப்பதற்கு அக்னியை யுண்டு பண்ணுவது போல எந்தப்பகவான் பூமியின் பாரத்தைத் துலைப் பதற்காக கௌரவர்களுக்கு இந்த்ரிய சாபல்யத்தை யுண்டுபண்ணினாரோ, பக்தர்களுடைய உபத்ரவத்தை நிவர்த்திக்கும் பாதங்களை யுடையவரும், எதிரிலிருப் பவருமான பகவானை ஹிருதயத்தில் வைத்துக் கொண்டு இந்த மனித சரீரத்தை விட்டுவிடுகிறேன்.

43. ஸூர்யன் ஒருவனானாலும் பார்ப்பவர்களுடைய கண்களின் தோஷத்தால் பலவகையாகத் தோன்றுகிறது

போல பகவான் ஒருவரானாலும், தன்னால் ஸிருஷ்டிக்கப் பட்ட ஒவ்வொரு ப்ராணிகளின் ஹிருதயத்திலும் வெவ்வேறாகத் தோற்றுகிறார். இதற்கு அவித்யையே காரணம் (அதிஷ்டான பேதத்தால் பேதமேயொழிய உண்மையில் பேதமில்லை என்பது கருத்து) என்று தெரிந்துகொண்டேன். பேதபுத்தியும், மோஹமும் நாசமாயின. ஆதியந்தமில்லாத ஆத்ம ஸ்வரூபத்தை அவருடைய கிருபையால் நன்றாய் தெரிந்து கொண்டேன். தன்யனாகிவிட்டேன் என்றார்

44–48. இப்படிச்சொல்லிவிட்டு மனோவ்யாபாரம், வாக்வாயாபாரம், கண்களின் வ்யாபாரம் ஆகிய இவைகளை கிருஷ்ணனிடத்தில் செலுத்தி ச்வாஸத்தை அடக்கி பரமாத்மாவிடம் லயித்தார். அப்பொழுது அவ்விடமிருந்து எல்லோரும் பீஷ்மரானவர் உபாதி ஸம்பந்தமில்லாத பரப்ரஹ்மமாக ஆனதைக்கண்டு ஸாயங்காலத்துப் பறவைகள்போல் மௌனமாய் இருந்தார்கள். அப்பொழுது தேவர்களும், மனிதர்களும் துந்துபி வாத்யங்களை முழக்கினார்கள். அங்கிருந்த அரசர்களுக்குள் ப்ரஹ்மிஷ்டர்கள் ச்லாகித்தார்கள். ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி பெய்தது. பரமாத்ம ஸ்வரூபத்தையடைந்த அந்த பீஷ்மருக்கு உத்ரக்ரியை களை தர்மபுத்ரர்செய்து ஸ்வல்பகாலம் துக்கித்தார் அப்பொழுது மஹர்ஷிகள் மிகுந்த ஸந்தோஷத்துடன் பகவானுடைய ரஹஸ்யமாகிய பெயர்களைச்சொல்லி கிருஷ்ணனை ஸ்தோத்ரம்பண்ணி அவரையே த்யானஞ் செய்துகொண்டு தங்களுடைய ஆச்ரமஞ் சென்றார்கள்.

49–50. பிறகு தர்மபுத்ரர் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடன் ஹஸ்தினா பட்டணம் போய் புத்ரசோகத்தால் துக்கிக்கும் காந்தாரியையும்

த்ருதராஷ்ட்ரராலும், ஸ்ரீ வாஸு தேவராகிய பகவானாலும் அனுமோதிக்கப்பட்டு வம்சபரம் பரையாய் கிடைத்த ராஜ்யத்தை தர்மமாகப் பரிபாலித்தார்.

நோட்டு

தேசத்தை– தான் பாணங்களின் மீது படுத்திருப்பதனால் எதிர்கொண்டழைப்பதற்கும், நமஸ்கரிப்பதற்கும் இது ஸமயமல்லவென்று மனத்தால் பகவானை பூஜித்தார். மித்ரரோ– ஸ்ரீ கிருஷ்ணன் பாண்டவர்களுக்கு மித்ரராயிருந்து காலத்தையே அனுஸரித்திருந்தார் என்று காட்டப்பட்டிருக்கிறது. "த்ரவ்யம், கர்மம், காலம், ஸ்வபாவம், ஜீவனம் ஆகிய இவைகள் பகவானுடைய அனுக்ரஹத்தால் கிடைக்கின்றன. அவருடைய அனுக்ரஹமில்லாதவரையில் மேற்சொல்லியவைகள் மனிதனுக்குக் கிடைக்கலாம்"– வீர. முந்தியிருந்த– ஜகத் ஸிருஷ்டிக்குமுன் ஸத்தாகவே இருந்தது. நாராயணன் ஒருவரே இருந்தார்"– ச்ருதி. பகவான்– பகவான் புருஷன் என்ற சப்தங்கள் சாச்வதராகிய வாஸுதேவரையே குறிக்கின்றன" "ஓ! மைத்ரேய! பகவான் என்ற சப்தமானது பரப்ரஹ்ம மாகிய வாஸுதேவரைச் சொல்லுகிறதேயொழிய மற்றவைகளைச் சொல்லுகிறதில்லை" ஸ்ரீத– ஒருருவாய்– இந்த ஜகத்தில் பரமாத்மாவைக் காட்டிலும் வெவ்வேறான வஸ்துக்களில்லை. அனேக வஸ்துக்களி ருப்பதாகப் பார்ப்பவன் ஸம்ஸாரத்தை யடைகிறான்" எப்பொழுது இவனுக்கு எல்லாம் ஆத்மஸ்வரூபமாகத் தோற்றுகிறதோ அப்பொழுது எதைக் கொண்டு எதைப் பார்க்கப்போகிறான்– நான்கு கை– பீஷ்மருக்கு

நான்கு கைகளுள்ளதாக பகவத் ஸ்வரூபம் ப்ரகாசித்தது. வீர– ஒப்பற்ற மஹிமை– எந்த நிலமையில் வேறுவிஷயத்தைப் பார்க்கமாட்டானோ வேறு விஷயத்தைக் கேட்கிறதில்லையோ அதுவே பூமா எனப்படும்" "மேலும் கீழும் முன்னும் பின்னும் இருபக்கங்களிலும் அவரே இருக்கிறார். காணப்படும் ஜகத் முழுமையும் அவரே" என்ற ச்ருதிகளில் சொல்லிய அனுப்ரவேசஞ் செய்தார். ஒருவராகவிருக்கும் பரமாத்மாவை பலவகையாக நினைக்கிறார்கள்"– ச்ருதி. லயித்தார்– பீஷ்மர் ப்ரஹ்மத்தினிடம் பேதமில்லாமல் கலந்து விட்டாரென்று அர்த்தங் கொள்ளக்கூடாது. "அப்பொழுது ஸத்துடன் சேருகிறான்" என்று ச்ருதியில் சொல்லியபடி ஸம்பந்தித்தார் என்றே அர்த்தம். மேற்காட்டிய ச்ருதியிலும் அபேதமாகக் கலக்கிறான் என்றே சொல்லப்பட்டிருப்பதாய் அர்த்தங்கொள்வோமானால் ஸுஷுப்தியில் பரமாத்மாவிடம் கலந்து ஒன்றாக ஆன ஜீவன் மறுபடி பிரிய ந்யாயமில்லை. மேலும்– அந்தக்கரணரூபமாகிய உபாதி நாசத்தால் அபேதத்தை யடைந்த ஜீவன் விழித்துக்கொள்ளும்போது மேற் காட்டிய உபாதி ஸம்பந்தத்தையடைந்து பரமாத்மா வினிடமிருந்து பிரிகிறான் என்று சொல்லுவதும் பொருந்தாது. மனது ப்ராணனாகிய ப்ரஹ்மத்தினிடம் பறவைபோலக் கட்டுப்பட்டிருப்பதாகச் சுருதியில் சொல்லியிருப்பதால் லயிக்கிறதில்லை– சந்த்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–10

ஸ்ரீ க்ருஷ்ணன் த்வாரகை சென்றது.

இதனைக்கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஓ! ஸூதரே! தர்மசிந்தனையுள்ளவர்களுக்குள் சிறந்த வராகிய தர்மபுத்ரர் ராஜ்யத்தில் ஆசைப்பட்டு யுத்தத்திற்கு வந்தவர்களான துர்யோதனன் முதலிய வர்களைக் கொன்று, தம்முடைய தம்பிகளுடன் ராஜ்யத்தை அடைந்து, மிகுந்த போகங்களை யனுபவித்து ராஜ்யத்தை எப்படி பரிபாலித்தார்? பிறகு எதனைச் செய்தார்? அதைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

2–3. அதைக்கேட்ட ஸூதர் சொல்லத் தொடங்கினார். குரு வம்சமாகிய வனமானது அதிலிருந்து உண்டான கோபமாகிய அக்னியால் எரிக்கப்பட்டபோது, ஸம்ஸார்த்தை விருத்தி செய்பவ ராகிய பகவான் அதை மறுபடியும் முளைக்கச்செய்து (பரீக்ஷித்தைக் காப்பாற்றி) தர்மபுத்ரருக்கு ராஜ்யத்தைக் கொடுத்து மிகுந்த ஆனந்தத்தை யடைந்தார். பின்பு, பீஷ்மருடைய வார்த்தைகளைக் கேட்டதாலும், ஸ்ரீ க்ருஷ்ணனுடைய உபதேசத்தாலும், தர்மபுத்ரருக்கு 'நான் செய்கிறவன்' 'பலனை யனுபவிக்கிறவன்' என்ற மோஹம் நீங்கியது 'ஜகத்தானது பரமேச்வராதீனமே யொழிய ஸ்வதந்த்ரமுள்ளதன்று என்று ஞானமுண்டா யிற்று. அப்படிப்பட்ட தர்மபுத்ரர் நாசமற்றவரான பகவானை மஹேந்த்ரன்போல ஆச்ரயித்து, ஸமுத்ரத் திற்குட்பட்ட பூமியைத் தம்முடைய தம்பிகளுடன் பரிபாலித்தார்.

4–6. ஒருவரிடத்திலும் விரோத புத்தியில்லாத வராகிய தர்மராஜன் அரசு புரிந்து வரும் நாளில் காலத்தில் மழைபெய்தது; பூமியானது ஜனங்களுக்கு வேண்டிய வஸ்துக்களை யுண்டுபண்ணிற்று; பெரிய மடியுள்ள பசுக்கள் பாலால் கொட்டில் முழுவதையும் நனைத்தன. ஆறுகள் பூரணப்ரவாஹ முள்ளவைகளாகி, வயல்களுக்கு ஜலத்தைக்கொடுத்துப் பயிர்களை விருத்திசெய்து வந்தன. ஸமுத்ரம் முத்து முதலிய ரத்னங்களை விசேஷமாக உண்டுபண்ணிற்று. மலைகள் மனோசிலை முதலிய தாதுக்களை விருத்திசெய்தன. எல்லா ருதுக்களிலும் கொடிகள், மரங்கள் ஆகிய இவைகள் பழங்களாலும், புஷ்பங்களாலும் நிறைந் திருந்தன. நெல், பயறு, கடலை, கோதுமை முதலிய தான்யங்களை அவ்வவற்றின் பயிர்கள் விருத்திசெய்தன. மேலும் மனோவ்யாதி, சரீரவ்யாதி, குளிர்ச்சி, உஷ்ணம் இவைகளால் நேரிடும் உபத்ரவம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம், ஆத்யாத்மிகம் ஆகிய முவ்வகை தாபங் களும் ஜனங்களுக்கு ஒருபோதும் நேரிடவேயில்லை.

7–18. அப்பொழுது ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தியானவர், ஹஸ்தினா பட்டணத்தில் சில மாஸங்கள் வஸித்துத் தம்முடைய மித்ரர்களின் துக்கத்தை நிவர்த்தித்து, ஸஹோதரியான ஸுபத்ராதேவிக்கு அதிக ப்ரியத்தை யுண்டுபண்ணி, பின்பு தர்மபுத்ரரைத் தழுவி நமஸ்கரித்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு ரதத்திலேறினார். அப்பொழுது சிலர் பகவானை ஆலிங்கனம் செய்ய நமஸ்கரித்தார்கள். இப்படி பகவான் த்வாரகைக்குப் போக, முயற்சித்ததைப் பார்த்து, ஸுபத்ரை, த்ரௌபதி, குந்தி, உத்தரை, விதுரர், தர்மபுத்ரர், த்ருதராஷ்ட்ரர், யுயுதஸு

(த்ருதராஷ்டருக்கு வைச்யஸ்த்ரியினிடம் பிறந்தவர்) கிருபர், நகுல, ஸஹதேவர்கள், பீமஸேனர், தௌம்யர் முதலாகிய எல்லோரும் பகவானைவிட்டுப் பிரிந்திருப் பதை ஸஹியாமல், வருத்தப்பட்டார்கள். மனோஹர மாகிய பகவானுடைய கதையை ஒருதடவை கேட்டதினாலேயே, நல்ல ஞானமுண்டாகிறது; சரீரம் முதலியவைகளில் அபிமானம் விலகுகிறது; ஆகையால் வித்வான்கள், அதனையொருபொழுதும் விட மாட்டார்கள். அப்படியிருக்க அவரை எப்பொழுதும் பார்ப்பது, ஆலிங்கனம் செய்துகொள்வது, பேசுவது, சேர்ந்துபடுத்துக்கொள்வது, ஒரே இடத்தில் உட்காருவது, சேர்ந்து புஜிப்பது, ஆகிய இவைகளால் அந்த பகவானிடத்திலேயே புத்தியைச் செலுத்திய பாண்டவர்களால் அவரைவிட்டுப் பிரிந்திருக்க முடியுமா? ஆகையால் அவர்களெல்லாரும் கண் கொட்டாமலேயே அவரைப் பார்த்துக்கொண்டு, விசேஷ ஸ்நேஹமுள்ளவர்களாய் அந்த அந்த இடங்களில் நின்றார்கள். அவர்களுடைய மனஸானது, அவர்பின் சென்றது. அப்பொழுது ஸ்ரீ க்ருஷ்ணபகவான் அரண்மனையிலிருந்து வெளியில் வரும்போது, அவர்மீதிருந்த ப்ரியத்தால், ஸுபத்ரை முதலிய ஸ்த்ரீகள், 'கண்ணீரைப்பெருக்குவது அமங்கலம்' என்று நினைத்து, அடக்கிக் கொண்டார்கள். மேலும் அப்பொழுது, மிருதங்கம், சங்கம், பேரி, வீணை, பணவம், கோமுகம், சர்சரீ, ஆனகம், கண்டா, துந்துபி ஆகிய பத்துவகை வாத்யங்களும் முழங்கின. கௌரவ ஸ்த்ரீகள் அனைவரும் ப்ரேமை, வெட்கம், சிரிப்பு இவைகளுடன், மேல்மாடியிலிருந்து பகவானைத் தர்சித்து, அவர்மீது புஷ்பங்களை வர்ஷித்தார்கள். ஸ்ரீ பகவானிடத்தில் மிகுந்த ப்ரீதியுள்ளவரும், சுருட்டை

மயிருள்ளவருமாகிய அர்ஜுனர், தம்மிடத்தில் மிக்க விச்வாஸமுள்ளவராகிய ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவிற்கு, ரத்னகாம்புள்ளதும், முத்துமாலைகளால் அலங்கரிக்கப் பட்டதுமான வெள்ளைக்குடையைப் பிடித்தார். உத்தவரும், ஸாத்யகியும் மிக அத்புதங்களான சாமரங்களையெடுத்து விசிறினார்கள். இப்படி பகவான், புஷ்பம் முதலியவைகளால் வீதியில் பூஜிக்கப்பட்டு ப்ரகாசித்தார்.

19—30. அப்பொழுது ப்ராஹ்மணர்கள் மனுஷ்யாவதாரமெடுத்த பகவானுக்குத் தகுதியானவைகளும், சுத்த ஸ்வரூபத்திற்குத் தகாதவைகளுமான ஆசீர்வாதங்களைச் செய்தார்கள். உத்தமச்லோகராகிய ஸ்ரீ க்ருஷ்ணனிடத்திலேயே மனத்தைச் செலுத்தினவர்களான பட்டணத்திலிருக்கும் ஸ்த்ரீகள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளும் வார்த்தைகள் எல்லோருக்கும் த்ருப்திகரமானவைகளாகவும், ஸகல உபநிஷத்துகளுக்கு ஸம்மதமானவைகளுமாயிருந்தன. எப்படியென்றால் க்ருஷ்ணனுடைய தேஜஸ்ஸைப் பார்த்து ஆச்சர்யமடைந்த சில ஸ்த்ரீகளை நோக்கி சிலர் சொல்லுகிறார்கள். ப்ரளயகாலத்தில் ஜீவோபாதிகளான ஸத்வம் முதலியவைகள் ஈச்வரனிடத்தில் அடங்கியிருக்கும்போது குணங்களுடைய சேர்க்கைக்குமுன் எவர் ப்ரபஞ்ச ஸம்பந்தமில்லாத ரூபத்துடன் ஒருவராகவிருந்தாரோ, அவரே இந்த க்ருஷ்ண பகவானாக அவதரித்திருக்கிறார். (ஸிருஷ்டிக்குமுன்னும், ப்ரளயத்திலும், ப்ரபஞ்ச ஸம்பந்தமில்லாமலிருப்பவர் இவரே என்று கருத்து) அந்த பரமாத்மாவே ஸகல வேதங்களையும் வெளியிட்டு மறுபடியும் தன்னுடைய காலசக்தியால் தூண்டப்பட்டதும், ஜீவர்களை

மோஹிக்கச்செய்வதும், ஸிருஷ்டிக்க விரும்பியதுமான ப்ரகிருதியை அனுஸரித்தார். அந்தப்ரகிருதியே பெயர் ரூபம் இவைகளில்லாத ஜீவனிடத்தில அவைகளை யுண்டுபண்ணிற்று. யோகிகள் இந்த்ரியங்களை ஜயித்து, ச்வாஸத்தையடக்கி விசேஷ பக்தியால் சுத்தமான மனமுள்ளவர்களாய் எவருடைய பதத்தையடைகிறார் களோ; அந்தப்புருஷன் இவரே. நம்முடைய புத்தியைப் பரிசுத்தப்படுத்துவதற்கு தகுந்தவர், இவரேயொழிய யோகம் முதலியவைகளால் முடியாது. அடி தோழி! ஆத்மாவின் ரஹஸ்யத்தையறிந்த வித்வான்கள், எவரை ஸ்தோத்ரஞ்செய்கிறார்களோ, வேதங்களிலும், ரஹஸ்யமான ஆகமங்களிலும், எவர் வர்ணிக்கப்படுகிறாரோ, எந்த ஈச்வரன் ஜகத்தை உண்டுபண்ணுவது பரிபாலிப்பது, நாசஞ்செய்வது ஆகிய பற்றுதலில்லையோ, அவரே க்ருஷ்ணனுடைய சரீரமெடுத்துக் கொண்டிருக்கிறார். எந்த காலத்தில் அரசர்கள் தமோ குணங்களுள்ளவர்களாகி தங்கள் ப்ராணனை மாத்திரம் போஷிக்கிறார்களோ அந்தக்காலத்தில், ஐச்வர்யம், செய்த பிரதிஜ்ஞையைக் காப்பாற்றுவது, உண்மையை யுபதேசிப்பது, தயை, கீர்த்தி ஆகிய இவைகளை வெளிப்படுத்துவதற்காக ஒவ்வொரு யுகத்திலும் இவரே ஸத்வகுணரூபியாய் அவதரிக்கிறார். யதுவினுடைய குலம் மிகவும் மேலானது, மதுராநகரம் மிகவும் புண்ய பூமியுள்ளது. புருஷோத்தமரும், ப்ரியமான கீர்த்தியுள்ளவருமான பகவான் தம்முடைய அவதாரத்தாலும் நடையினாலும், அவைகளை அலங்கரிக்கிறார். ஆச்சர்யம்! த்வாரகாநகரத்தின் பாக்யம் அத்புதமானது; எல்லா நகரங்களிலும் ஸ்வர்க்கம் மேலானது என்ற ஸ்வர்க்கத்தின் கீர்த்தியைப் போக்கக்கூடியது; அதில் வஸிக்கும் ஜனங்கள், தங்களை அனுக்ரஹிப்பதற்காகவே

அவ்விடத்தில் வஸிப்பவரும், புன்சிரிப்புள்ள பார்வை யுள்ளவருமான ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவை எப்பொழுதும் தர்சிக்கிறார்கள். அந்தப் பகவானுடைய பத்னிகள் முன் ஜன்மத்தில் வ்ரதங்கள், ஸ்நாநம், ஹோமம் முதலியவைகளால் ஈச்வரனையுபாஸித்தவர் களென்பதில் ஸந்தேஹமில்லை. தவிரவும் கோபஸ்த்ரீகள் எல்லோரும், அவருடைய அதரத்தைப் பானஞ்செய்கிறார்கள் தவிரவும் அதையே மனததில் நினைத்து மோஹிக்கிறார்கள். பலிஷ்டர்களான சிசுபாலன் முதலியவர்களை ஸ்வயம்வரத்தில் ஜயித்து பகவானால் விவாஹஞ்செய்து கொள்ளப்பட்டவர் களும், ப்ரத்யும்னன், ஸாம்பன் முதலியவர்களுக்குத் தாயார்களுமான ருக்மிணி, ஸத்யபாமா முதலியவர் களுடைய வீடுகளிலும், நரகாஸுரனைக் கொன்று ஸ்ரீ க்ருஷ்ணனால் அபஹரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மற்ற ஸ்த்ரீகளுடைய கிருஹங்களிலும், பகவான் எப்பொழுதும் அவர்களுக்கு வேண்டியதை ஸம்பாதித்துக் கொடுத்து அவர்களை ஸந்தோஷப்படுத்திக்கொண்டு வஸிக்கிறார். ஆனதால் ஸ்த்ரீகளுக்கு ஸ்வாதந்த்ரயம், சௌசம் இவைகளில்லாமலிருந்தும், ஸ்த்ரீயாக விருப்பதே மேலானதென்று விளங்குகிறது" என்று பேசிக்கொண்டார்கள்.

31. இம்மாதிரியான பட்டணத்து ஸ்த்ரீகளுடைய வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ க்ருஷ்ணன், பார்வையா லேயே, அவர்களை ச்லாகித்துச் சிரித்துக்கொண்டு சென்றார். அப்பொழுது தர்மபுத்ரர் சத்ருக்களிடத்தில் ஸந்தேஹப்பட்டு, பகவானைக்காப்பாற்றுவதற்காக அவரிடம் ப்ரியத்தால் சதுரங்க ஸைன்யத்தையனுப் பினார். பின்பு ஸ்ரீ க்ருஷ்ணபகவான் வெகுதூரம் தம்மை

பின்தொடர்ந்து வந்தவர்களும், தம்மைவிட்டுப் பிரிய மனமில்லாதவர்களும், ஸ்திரமான பக்தியுள்ளவர்களு மான கௌரவர்களைத் திருப்பிவிட்டுத் தமது நகரம் நோக்கி புறப்பட்டார். அவர் குருஜாங்கலம், பாஞ்சால்ம், சூரசேனம், யமுனையின் கரையிலிருக்கும் தேசம், ப்ரஹ்மாவர்தம், மத்ஸ்யம், ஸரஸ்வதி நதிக்கரையிலுள்ள தேசம், ஜலமில்லாத தேசம், அல்ப ஜலமுள்ள தேசம், ஸௌவீரம், ஆபீரம், ஸைந்தவம் ஆகிய இவைகளைத் தாண்டி ஆனர்த்த தேசம் போனார். குதிரைகள் கொஞ்சம் களைப்படைந்தன. அந்தந்த இடத்தில் வஸிப்பவர்கள் பகவானை எதிர்கொண்டழைத்துப் பூஜித்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணபகவான் ரதத்தைவிட்டு இறங்கி ஜலமிருக்குமிடஞ் சென்று ஸந்தியோபாஸ்தி செய்தார்.

நோட்டு.

பிரகிருதி– மாயை "மாயையை ப்ரகிருதியென்றும், மாயையை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டிருப்பவனை மஹேச்வரனென்றும் தெரிந்து கொள்ள வேண்டும்." ச்ருதி– சுத்தமான மேலான ஸூக்ஷ்மபுத்தியினால் பார்க்கப்படுகிறார்"– ச்ருதி.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்—11

துவாரகாவாஸிகள் பகவானை உபசரித்தது

இப்படி ஸ்ரீ கிருஷ்ணபகவான் மிகுந்த ஐசுவரியம் உள்ள தன்னுடையதான ஆனர்த்த தேசத்தையடைந்து திவ்யமாகிய சங்கத்தை ஊதினார். அப்பொழுது மிகவும் வெண்மையான மத்ய பாகமுள்ளதும், பகவான் உடைய உதடுகளின் காந்தியால் சிவந்ததுமான அந்தச் சங்கமானது செந்தாமரை புஷ்பத்தில் உரக்கச் சப்தித்துக் கொண்டிருக்கும் ஹம்ஸம் போல விளங்கிற்று. அதனைக் கேட்டு அந்தத் தேசத்தில் வஸிப்பவர்கள் கிருஷ்ணன் வருகிறார் என்பதை தெரிந்துகொண்டு அவரை விட்டுப் பிரிந்திருந்ததாலுண்டான தாபத்தை விட்டுச் சந்தோஷமடைந்தார்கள். மேலும் அவர்கள் எல்லோரும் ஸம்ஸார பயத்தைப் போக்கக்கூடிய அந்தச் சப்தத்தைக் கேட்டவுடன் தங்கள் யஜமானனாகிய ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையுள்ள வர்களாக அவருக்கு எதிரில் சென்றார்கள். அந்த பகவான் தன்னுடைய ஆத்மாவிலேயே ரமிப்பவர். ஆனந்தானு பவத்தால் எப்பொழுதும் பூர்ணகாமர்; எல்லோருக்கும் அனுகூலத்தைச் செய்பவர். அப்போர்ப்பட்ட பகவான் இடத்தில் சூரியனிடத்தில் தீபத்தைக் கொடுப்பது போல ஜனங்கள் காணிக்கைகளைச் சமர்ப்பித்து, பிதாவைக் கண்ட குழந்தைகள் போல மலர்ந்த முகமுள்ள வர்களாய், கத்கத ஸ்வரத்துடன் தங்களைக் காப்பாற்றும் அந்தப்பகவானை நோக்கி, வேறாத ப்ரஹ்மதேவராலும், ஸனகர் முதலியவர்களாலும், இந்திரன் முதலியவர் களாலும் நமஸ்கரிக்கப்பட்ட தாமரை மலர் போன்ற உம்முடைய பாதங்களுக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்.

அவைகள் இவ்வுலகத்தில் ஸுகத்தை விரும்பியவர் களுக்கு முக்கிய கதியானவைகள். ஸகல வஸ்துக் களையும் பக்குவஞ்செய்யும் ஸ்வபாவமுள்ள காலமானது எல்லாவற்றிற்கும் மேலானதனாலும் உம்முடைய பாதங் களுக்கு சுவாதீனப்பட்டதேயாம். (உம்முடைய பாதார விந்தங்களை ஆசிரயித்தவர்களுக்குப் பிறப்பு , கிழத்தனம், மரணம் முதலியவைகள் இல்லையென்பது கருத்து:)

'ஓ ஜகத்திற்கு அந்தர்யாமியாயிருப்பவரே தாம் எங்களுக்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டும். நீரே ஸகலத்திற்கும் மாதா, மித்திரர், பிதா, பதி, நீரே நல்ல ஆசாரியர். முக்கியமாகிய தெய்வம், உம்மை யனுசரித் ததாலேயே நாங்கள் தன்யர்களானோம். ஸ்வர்க்கவாஸி களான தேவர்களாலும் பார்க்க முடியாததும் பிரியமான சிரிப்பு, மனோகரமான பார்வை ஆகிய இவை களுடன் கூடிய முகமுள்ளவரும், ஸகல விதத்திலும் அழகு பொருந்திய தம்முடைய சரீரத்தை எப் பொழுதும் நாங்கள் தரிசிக்கும்படி நேர்ந்ததால் நாங்களே நாதனுள்ளவர்கள். தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரே! நீர் பந்துக்களைப் பார்க்கவேண்டி குரு நகரத்திற்காவது மதுரா நகரத்திற்காகவது சென்றால், அப்பொழுது நாங்கள் சூரியனில்லாத ஸமயத்தில் கண்கள் போல ஒவ்வொரு நிமிஷத்தையும் கோடி வருஷங்களுக்குச் சமமாகக் கழிக்கிறோம்' என்று ஸ்தோத்ரஞ் செய்தார்கள்.

10–34 இப்படி ஜனங்கள் செய்த ஸ்தோத்திரத்தைக் கேட்டுப் பக்தர்களைக் காப்பாற்றும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவர்களைக் கடாக்ஷித்தால் அனுக்ரஹித்துக் கொண்டு பட்டணத்திற்குள் சென்றார். அந்த நகரம்

ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் சமமாயுள்ள பலசாலிகளான போஜர்கள், மனுக்கள், தாசார்ஹர்கள், குகுரர்கள், அந்தகர்கள், விருஷ்ணிகள் ஆகிய இவர்களால் போகவதி என்னும் பட்டணம் நாகங்களால் ரட்சிக்கப்படுவது போல, காப்பாற்றப்பட்டிருந்தது. மேலும் அந்தப் பட்டணமானது எல்லா ருதுக்களிலும் புஷ்பிப்பவைகளும் பலிப்பவைகளுமான புண்ய விருஷங்களாலும் கொடிகளாலும், கொடி வீடுகளாலும், உத்யான வனங்களாலும் (பழங்களையே பிரதானமாயுள்ள மரங்கள் உள்ளது), புஷ்பத்தோட்டங்களாலும், விளையாடும் தோட்டங்களாலும், தாமரையோடைகளாலும் அழகாய் இருந்தது. கோபுர வாசல்களிலும் வீட்டு வாசல்களிலும் மங்கள தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. வீதிகளில் பலவகையான த்வஜங்கள் கட்டப்பட்டு வெயிலினாது தாபமில்லாமலிருந்தது. ராஜவீதி, கடைவீதி, நாற் சந்திகள், மற்ற வீதிகள் ஆகிய இவைகள் குப்பையில்லாமல் சுத்தஞ் செய்யப்பட்டிருந்தன. பழங்கள், புஷ்பங்கள், அட்சதைகள் முதலிய மங்கள திரவியங்கள், இறைக்கப்பட்டிருந்தன; வாசனை ஜலம் தெளிக்கப் பட்டிருந்தது. ஒவ்வொரு வாசலும் தயிர், அட்சதை, பழங்கள், கரும்பு இவைகளாலும், பூர்ண கும்பங்களாலும், தூபங்களாலும், தீபங்களாலும், பலிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பின்னும் வஸுதேவர், அக்ரூரர், உக்ரஸேனர், அற்புதமான பராக்கிரமுள்ள பலராமர், பிரத்யும்னன், சாருதேஷ்ணன், ஸாம்பன், கதன் முதலியவர்கள் மிகவும் பிரியராகிய பகவான் வருகிறார் என்று கேள்விப்பட்டு யானையை முன் நடத்தி, ப்ராஹ்மணர்களை முன்னிட்டுக் கொண்டு அதிக ஸந்தோஷத்தால் படுக்கை, போஜனம் இவைகளிலும் மனமில்லாதவர்களாக ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு எதிரே

சென்றார்கள். மேலும் அப்பொழுதும் சங்கம் முதலிய வாத்தியங்கள் முழங்கின. வேதங்கள் கோஷிக்கப்பட்டன. இப்படி எல்லோரும் விஸ்வாசத்தால் உண்டான பரப்பரப்புள்ளவர்களாக ரதங்கள் மீதேறிக்கொண்டு எதிர்க்கொண்டு சென்றார்கள். சிறந்த தாஸிகளும் கூட்டம் கூட்டமாக வாகனங்களின் மீதேறிக்கொண்டு அவரைப் பார்க்க வேண்டுமென்ற மிகுந்த ஆசையுடன் சென்றார்கள். அவர்கள் காதில் அணிந்திருந்த குண்டலங்களுடைய காந்தியால் அவர்களுடைய முகம் பிரகாசித்தது. ரஸாபினயஞ் செய்யக்கூடிய நடர்களும், தாளம் முதலியவைகளை யனுசரித்து நர்த்தனஞ் செய்பவர்களும், பாடுகிறவர்களும், ஸூதர்களும், மாகதர்களும், வந்திகளும் உத்தமச்லோகராகிய பகவானுடைய அற்புதமான சரிதத்தைக் கானஞ் செய்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் தம்மைப் பார்ப்பதற்காக வந்த பந்துக்களுக்குத் தக்கபடி வணங்குவதாலும், நமஸ்கரிப்பதாலும், தழுவுவதாலும், கையைப் பிடிப்பதாலும், புன்சிரிப்புக் கொண்ட பார்வையாலும், சண்டாளன் வரையிலுள்ள எல்லாருக்கும் அபயங் கொடுத்து, அவரவர்களுக்கு இஷ்டமான வரங்களை அளித்து மரியாதை செய்தார்.

மேலும் ஆசாரியர்களும், ப்ராஹ்மணர்களும், பெரியோர்களும், மற்றவர்களும் அவரவர் ஸ்திரீகளுடன் பகவானுக்கு ஆசீர்வாதஞ் செய்தார்கள்; வந்திகள் ஸ்தோத்திரம் செய்தார்கள்; துவாரகா பட்டணத்தில் கிருஷ்ணன் இராஜவீதியில் வரும்பொழுது குல ஸ்திரீகள் அவரைத் தரிசிப்பதற்காக மாடிகளின் மீதேறினார்கள். லக்ஷ்மிதேவிக்கு இருப்பிடமாகிய

பகவானுடைய சரீரத்தைத் துவாரகா வாஸிகளான ஜனங்கள் எப்பொழுதும் பார்த்தவர்களானாலும் அவர் களுக்குப் போதுமென்ற திருப்தி உண்டாகவில்லை. அவருடைய மார்பு, கைகள், பாதங்கள் ஆகிய இவைகள் லக்ஷ்மிதேவிக்கும், லோகபாலர்களுக்கும், பக்தர் களுக்கும் முறையே வஸிக்குமிடமாக இருக்கின்றன. அப்போர்ப்பட்ட ஸ்ரீ கிருஷ்ண பகவான் வழியில் வெள்ளைக் குடை, சாமரங்கள் ஆகிய இவைகளால் பூஜிக்கப்பட்டும். பூக்களால் வர்ஷிக்கப் பெற்றும் பீதாம்பரத்தாலும், துளசி மாலையாலும் பிரகா சித்தார். அது சூரியன், சந்திரன், இந்திரன், வில், மின்னல், இவைகளுடன் மேகம் சேர்ந்து பிரகாசித்தது போலிருந்தது. பின்னுமவர் வஸுதேவர், தேவகி இவர் களுடைய அரண்மனை சென்று, வஸுதேவருக்கும் தேவகி முதலிய ஏழு தாயார்களுக்கும் சந்தோஷமாக நமஸ்காரஞ் செய்தார். அவர்களும் இவரைத் தழுவி னார்கள். தேவகி முதலிய ஸ்திரீகள் கிருஷ்ணனை மடியில் உட்கார வைத்துக்கொண்டு ஆனந்தக்கண்ணீ ரால் அவருக்கு அபிஷேகம் செய்தார்கள். பிறகு அந்தப் பரமாத்மா 16,000 பத்தினிகளுடைய அரண் மனைகள் அடங்கிய தமது அரண்மனைக்குச் சென்றார். அது ஸகல வஸ்துக்களாலும் நிறைந்ததும் சிறந்த துமாக விருந்தது. அப்பொழுது அங்கிருந்த ருக்மணி முதலிய ஸ்திரீகள் தேசாந்தரத்திலிருந்து வந்த தங்கள் உடைய பர்த்தாவைச் சமீபத்தில் கண்டு அளவற்ற ஆனந்தமடைந்து ஆசனத்திலிருந்து சரீரத்தாலும் அந்தக்கரணத்தாலும் சீக்கிரமாக எழுந்திருந்தார்கள். அவர்கள், பர்த்தா தேசாந்திரம் போயிருக்கும் காலத்தில் செய்யவேண்டிய விரதங்களை யனுஷ்டித்துக் கொண்டு இருந்தவர்கள். கடைக்கண்ணால் பார்ப்பவர்களாலும்

வெட்கத்தால் தலை குனிந்தவர்களாகவுமிருந்தார்கள். ஓ சௌனகரே கம்பீர மனமுள்ள பகவானைக் காணாத போது மனத்தாலும், நேரில் பார்த்த போது பார்வைகளாலும் (புத்ரர்களைக் கொண்டு தழுவ செய்பவர்கள் போல) ஸ்ரீ கிருஷ்ணனை ஆலிங்கனம் செய்து கொண்டார்கள். (ப்ரீதியாகப் பார்த்தார்கள் என்பது கருத்து) அப்பொழுது தங்களுடைய கண்களி லுண்டான ஆனந்த ஜலத்தை வெட்கத்தால் அந்த ஸ்திரீகள் அடக்கிக்கொண்டிருந்தும் அது அடங்காமல் பெருகியது; ஸ்ரீ கிருஷ்ணன் எப்பொழுதும் அவர் களுடைய பக்கத்திலேயே வஸிக்கிறார். ஆனாலும் அவர்களுக்கு அவருடைய பாதங்கள் புதியவைகளாக தோன்றுகின்றன. சஞ்சல ஸ்வபாவமுள்ள ஸ்ரீதேவியும் அவரிடத்திலேயே ஸ்திரமாக வசிப்பதால் எவளுக்குத் தான் அவரிடம் பிரேமை யிராது?

35–40 காற்றானது மூங்கில் காட்டில் அவைகளைக் கொண்டே அக்னியை உண்டுபண்ணி அதனால் அவை களை எரிப்பதுபோல ஸ்ரீ கிருஷ்ணன், தாம் ஆயுதம் எடுக்காமலே பூமிக்குப் பாரமாயிருந்த அனேக அக்ஷௌஹிணி சைன்யங்களால் விருத்தியடைந்த தேஜஸுள்ள அரசர்களுக்குள் ஒருவருக்கொருவர் விரோ தத்தை உண்டு பண்ணி, அதனால் அவர்களை நாசஞ் செய்து சாந்தியடைந்தார். இப்படி பகவான் பிராகிருத புருஷன்போல பூமியில் மாயாவதாரஞ் செய்து அநேக உத்தமஸ்திரீகளின் நடுவிலிருந்து விளையாடினார். ஸ்திரீகள் கம்பீரமாகிய அபிப்பிராயத்தைக் காண் பிக்கும் கடாக்ஷமுள்ளவர்கள், மனோகரமான மந்தகாச முள்ளவர்கள். வெட்கமுள்ளவர்கள். அவர்களால் பரம சிவனும் மோகித்து வெட்கமடைந்துவில்லை எறிந்தார்.

ஸ்திரீகள் அப்போர்ப்பட்ட சக்தியுள்ளவர்களானாலும் தங்களுடைய விலாசங்களால் கிருஷ்ணனை ஆசைப்படச் செய்ய முடியாதவர்களாகவிருந்தார்கள். (சம்சாரத்தில் பற்றுதல் இல்லாதவரென்பது கருத்து.) இப்படி ஸ்ரீ கிருஷ்ணன் வைராக்யமுள்ளவராக விருந்து ஜனங்கள் தங்களைப்போல அவரையும் ஸம்சாரியென்றே நினைக்கிறார்கள். அதனால் தான் அஜ்ஞர்களென்று சொல்லப்படுகிறார்கள். ஆத்மாவினிடமிருக்கும் ஆனந்தம் முதலிய குணங்களில் ஆத்மாவை ஆசிரயித்திருக்கும் புத்தியானது சம்பந்திக்காமல் இருப்பது போல், பகவான் பிரகிருதி காரிய மாகிய சம்சாரத்திலிருந்தும் அதன் குணங்களாகிய சுகம், துக்கம் இவைகளுடன் சம்பந்தப்படாமல் இருக்கிறார். அதுவே அவருடைய ஐசுவரியமென்று சொல்லப்படுகிறது. அகங்காரமானது ஆத்மாவைத் தனது வசப்பட்டவனாக நினைப்பதுபோல் ஸ்ரீ கிருஷ்ணனுடைய உண்மையை அறியாதவர்களான அந்த ஸ்திரீகளெல்லோரும் கிருஷ்ணன் தங்கள் இடத்தில் ஆசை கொண்டவர், தங்களையே அனுஸரித்திருப்பவர் என்று அஜ்ஞானத்தால் நினைத் திருந்தார்கள்.

நோட்டு

ஸூர்ய-ஜகத்தைத் தம்முடைய தேஜஸால் பிரகா சிக்கச் செய்பவரும், வேறு பிரகாசத்தை அபேட் சியாமல் விளங்குகிறவருமான சூரியனுக்குத் தீபத்தால் எப்படி பிரயோசனமில்லையோ அப்படி ஸகல வித காமங்களால் பூர்ணராகிய பகவானுக்கு ஜனங்களால்

கொடுக்கப்படும் காணிக்கைகளால் ஒருவித பயனுமில்லை என்று காட்டப்பட்டது, கத்கதஸ்வர-ஆனந்தம், துக்கம் இவைகள் நேரும்போது கண்ணீர் பெருகி அதனால் கண்டம் அடைத்துப்போகும். அப்பொழுது தாராள மாகப் பேசமுடியாமல் சிரமப்பட்டுப் பேசும் ஸ்வர மேயாம். ஸனகர்-மூலத்தில் வைரிஞ்ச என்றிருப்பதால் அதற்குச் சங்கரனென்று அர்த்தம் விஜ, பசுவின் கன்றுகளைப் ப்ரஹ்மதேவர் அபகரித்த பிறகு அவரால் நமஸ்கரிக்கப்பட்டது. பகவான் பாணாசுரனிடத்தில் யுத்தஞ் செய்யும்போது, சங்கரனால் ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டது. சந்த். க்ஷேமம்-மோக்ஷம் விஜயமாதா - பிறந்தது முதல் போஷிப்பதால். மித்ரர்- எல்லா வற்றிற்கும் அந்தராத்மாவாக விருப்பத்துடன் ஸத்காரி யத்தைச் செய்யும்படி தூண்டுவதால். பிதா-இது ஹிதமென்றும், இது அஹிதமென்றும் உபதேசித்து, சாஸ்திரத்தைக் கொண்டு சிட்சிப்பதால், பதி-பர்த்தா, ஜீவனம் முதலியவைகளைக் கொடுத்துக் காப்பாற்று வதால், ஆசாரியர்-அர்ஜுனனை நிமித்தமாய் வைத்துக் கொண்டு உலகத்தில் கீதா சாஸ்திரத்தைப் பரவச் செய்ததாலே. தெய்வம்- மோட்சத்தைக் கொடுப்பதால் சந்த், ஸுதர்கள்- புராணத்தை யறிந்தவர்கள் ஸுதர்களென்று சொல்லப்படுகிறார்கள். வம்சாவளியைச் சொல்புவர்கள் மாகதர்களெனப்படு வார்கள். ஸமயத்திற்குத் தக்கபடி பேசக்கூடிய புத்தி சாலிகள் வந்திகளெனப்படுவார்கள். மேகம்-இது அபூதோபமை யென்று சொல்லப்படுகிறது, மேகம் போன்றவர் பகவான், சூரியன் போன்றது வெண்குடை, புஷ்பவர்ஷம் போன்றது நட்சத்திரங்கள் என்பர் சிலர்.

சூரியன் போன்றது கீரிடம், சந்திரன் போன்றது வெண்குடை, இந்திரனுடைய வில் போன்றது வனமாலை மின்னல் போன்றது பீதாம்பரம். ஏழு தாயார்–வசு தேவருக்குப் பதினெட்டு ஸ்திரீகள். அவர்களெல் லோரையும் நமஸ்கரித்தார். அவர்களுக்குள் முக்கிய மானவர்கள் ஏழு ஸ்திரீகள், 1. தேவகீ, 2. ச்ருததேவா, 3. சாந்திதேவா, 4. உபதேவா, 5. ஸ்ரீதேவா, 6. தேவரக்ஷிதா, 7. ஸஹதேவா, தழுவ –தேசாந்திரத் திலிருந்து வந்த பகவானைப் ப்ரத்யும்னன் முதலிய வர்களைக் கொண்டு கட்டிக் கொள்ளச்செய்வது போல மனத்தால் தியானம் செய்தார்கள், பின்னும் மிகுந்த ஆசையுடன் பார்த்தார்கள். பரமசிவனும்– மூலத்தில் அமதன: என்று பதம் பிரித்து இப்படி ஸ்ரீ தரஸ்வாமி அர்த்தஞ்செய்தார். மதன: என்று பதம் பிரிப்பதால் மன்மதன் என்று அர்த்தம் –வீர, விஜ.

அத்தியாயம் 12

பரீக்ஷித்தின் உற்பத்தி

சௌனக மகரீஷியானவர் ஸூதரைப் பார்த்து 'ஓ ஸூதரே! அசுவத்தாமாவினால் பிரயோகிக்கப்பட்ட ப்ரஹ்மாஸ்த்ரத்தின் தேஜஸால் எரிக்கப்படும் உத் தரையின் கர்ப்பத்தை ஸ்ரீ கிருஷ்ணபகவான் மறுபடி பிழைக்கச் செய்தாரென்று சொன்னீர்களே, மிக்க புத்திசாலியும் மகாத்மாவுமான அக்குழந்தையின் பிறப் பையும், அதன் சரித்திரத்தையும், அவருக்கு சுகர் ஞானோபதேசம் செய்ததையும், அவருடைய முடி வையும், மரணமடைந்த பிறகு அவருக்கு நேர்ந்த கதியையும் சிரத்தையுடன் கேட்க விரும்புகிறேன். சொல்லக்கூடியதானால் சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

4–6 இதனைக் கேட்டு ஸூதர் சொல்லுவதாவது தர்மபுத்திரர் கிருஷ்ணனுடைய பாதங்களைச்சேவித்து ஸகல ஆசைகளையும் ஒழித்துத் தகப்பன் குழந்தை களைக் காப்பாற்றுவதுபோல பிரஜைகளைச் சந்தோ ஷப்படுத்திக் காப்பாற்றி வந்தார். அவருக்குப் பகவானுடைய அனுக்கிரஹத்தால் ஸகல சம்பத்துகளும், ராஜசூயம் முதலிய யாகங்களின் பலனாகிய உத்தம லோகங்களும், திரௌபதி முதலிய ஸ்திரீகளும், பீமசேனன் முதலிய தம்பிகளும், ஸகல பூமியும். ஜம்பூத்வீபத்திற்கு ஆதிபத்யமும், ஸ்வர்க்கம் வரையில் பரவிய கீர்த்தியும் கிடைத்தன. பசியுள்ளவனுக்கு அன்னத்தின் மேலே விருப்பமிருக்குமே யொழி வேறு

விஷயத்தில் ஆசையுண்டாகிறதில்லை. அதுபோல் ஸ்ரீ பகவானிடத்திலேயே சித்தத்தைச் செலுத்தி, அதனால் ரமித்துக் கொண்டிருக்கும் தர்மபுத்ரருக்கு தேவர்களாலும் விரும்பத்தக்க சுகங்கள் கிடைத்திருந்தும் அவைகளால் அவர் சந்தோஷமடையவில்லை.

7–14 1/2, ஓ சௌனகரே! உத்தராதேவியின் கர்ப்பத்திலிருந்த சிசுவானது அச்வஸ்த்தாமாவினுடைய ப்ரஹ்மாஸ்திரத்தின் தேஜஸ்ஸால் எரிக்கப்படும்பொழுது ஒரு புருஷன் அந்தச் சிசுவிற்கு நேரில் தோன்றினார். அவர் கட்டைவிரல் அளவுள்ளவர், சுத்தர், சுவர்ண கீரிடமுள்ளவர், மிக்க அழகான பார்வையுள்ளவர், பீதாம்பரம் தரித்தவர், ஜன்மம் முதலிய விகாரங்கள் அற்றவர், அழகு பொருந்தியவைகளும், நீண்டவை களுமான கைகளுள்ளவர், சுத்த ஸ்வர்ண குண்டலங் களுள்ளவர், 'என் பக்தனுக்கும் உபத்திரவம் நேரிடு கிறதா?' என்ற கோபத்தால் சிவந்த கண்கள் உள்ளவர், கதாயுதத்தைத் தரித்தவர். மேலும் அவர் குறைக்கொள்ளி போன்ற தம் கதையைச் சுழற்றிக் கொண்டு. அக்குழந்தைக்கு நான்கு புறத்திலும் சஞ்சரித்து, சூரியன் பனியைப் போக்குவதுபோல அஸ்திர தேஜஸ்ஸை அக்குழந்தையின் சமீபம் வர வொட்டாமல் தடுத்துக்கொண்டுமிருந்தார். அவரைப் பார்த்து அந்தக் குழந்தையானது இவர் யாரென்று ஆச்சரியத்துடன் ஆலோசித்துக் கொண்டிருந்தது. இப்படி ஒன்பது மாத காலஞ் சென்றது. பத்தாவது மாதத்தில் அளவிடக் கூடாத ரூபமுள்ளவரும், தர்மத்தைப் பரிபாலிப்பவரும், எங்கும் நிறைந்தவரு மான அந்தப் பிரபுவானவர் அக்குழந்தை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே அவ்விடத்தில் மறைந்தார்.

அதன் பிறகு வரும் மேலான சிரேயஸை காண்பிக்கத் தக்க சுப லக்னம் நேர்ந்தது. அதிலிருந்த சுபகிரகங்கள் ஒருவருக்கொருவர் மித்ரர்களாக இருந்தார்கள். அப் போர்ப்பட்ட சமயத்தில் பாண்டுவின் வம்சத்தை விருத்திசெய்யும் புத்திரனானவன் பாண்டுவே மறு படியும் பிறந்ததுபோல அவதரித்தான். அப்பொழுது தர்மபுத்ரர் மிகுந்த சந்தோஷத்துடன் தௌம்யர், கிருபர் முதலிய ப்ராஹ்மணர்களைக் கொண்டு ஜாதகர்மம் ஸ்வஸ்திவாசனம் ஆகிய இவைகளைச் செய்வித்தார். மேலும், அவர் தானத்திற்குரிய பாத்திரம் தேசம் காலம் என்னும் இவைகளை அறிந்தவரா கையால், உத்தமமாகிய அந்தப் புண்ணிய காலத்தில் ஸ்வர்ணம், பசு, பூமி, கிராமங்கள் சிறந்த குதிரைகள் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்தது மல்லாமல் போஜனமும் செய்வித்தார்.

15–17 1/2. அப்பொழுது ஜ்யோதிஷ சாஸ்திரத்தை நன்றாய்க் கற்றுணர்ந்த எல்லாப் ப்ராம்ஹ்மணர்களும் மிகுந்த சந்தோஷமுள்ளவர்களாய் வணக்கமுள்ள அவ் வரசனை நோக்கி, 'ஓ புருஷவம்சத்திய அரசர்களில் சிறந்தவரே தடுக்க முடியா தெய்வ வசத்தால் புரு வம்சத்தின் தொடர்ச்சியற்றுப் போகும் சமயத்தில் அந்த வம்சத்தில் பிறந்தவர்களான உங்களுடைய க்ஷேமத்திற்காக) ஸ்ரீ மகா விஷ்ணுவே இப்புத்ர ரத்னத்தை அனுக்ரகித்திருக்கிறார். விஷ்ணுவினால் கொடுக்கப்பட்டவனாகையால் இவன் விஷ்ணுராத னென்று பிரசத்தியடைவான். இவன் மிகுந்த கீர்த்தி யுள்ளவனும், பாகவதர்களுள் சிறந்தவனுமாவான். இவ் விஷயத்தில் ஸம்சயப்பட வேண்டாம் என்றார்கள்.

18–29 1/2, இதனைக் கேட்ட தர்மராஜன் ப்ராஹ்ம

விஷயத்தில் ஆசையுண்டாகிறதில்லை. அதுபோல் ஸ்ரீ பகவானிடத்திலேயே சித்தத்தைச் செலுத்தி, அதனால் ரமித்துக் கொண்டிருக்கும் தர்மபுத்ரருக்கு தேவர்களாலும் விரும்பத்தக்க சுகங்கள் கிடைத்திருந்தும் அவைகளால் அவர் சந்தோஷமடையவில்லை.

7–14 1/2, ஓ சௌனகரே! உத்தராதேவியின் கர்ப்பத்திலிருந்த சிசுவானது அச்வஸ்த்தாமாவினுடைய ப்ரஹ்மாஸ்திரத்தின் தேஜஸ்ஸால் எரிக்கப்படும்பொழுது ஒரு புருஷன் அந்தச் சிசுவிற்கு நேரில் தோன்றினார். அவர் கட்டைவிரல் அளவுள்ளவர், சுத்தர், சுவர்ண கீரிடமுள்ளவர், மிக்க அழகான பார்வையுள்ளவர், பீதாம்பரம் தரித்தவர், ஜன்மம் முதலிய விகாரங்கள் அற்றவர், அழகு பொருந்தியவைகளும், நீண்டவை களுமான கைகளுள்ளவர், சுத்த ஸ்வர்ண குண்டலங் களுள்ளவர், 'என் பக்தனுக்கும் உபத்திரவம் நேரிடு கிறதா?' என்ற கோபத்தால் சிவந்த கண்கள் உள்ளவர், கதாயுதத்தைத் தரித்தவர். மேலும் அவர் குறைக்கொள்ளி போன்ற தம் கதையைச் சுழற்றிக் கொண்டு. அக்குழந்தைக்கு நான்கு புறத்திலும் சஞ்சரித்து, சூரியன் பனியைப் போக்குவதுபோல அஸ்திர தேஜஸ்ஸை அக்குழந்தையின் சமீபம் வர வொட்டாமல் தடுத்துக்கொண்டுமிருந்தார். அவரைப் பார்த்து அந்தக் குழந்தையானது இவர் யாரென்று ஆச்சரியத்துடன் ஆலோசித்துக் கொண்டிருந்தது. இப்படி ஒன்பது மாத காலஞ் சென்றது. பத்தாவது மாதத்தில் அளவிடக் கூடாத ரூபமுள்ளவரும், தர்மத்தைப் பரிபாலிப்பவரும், எங்கும் நிறைந்தவரு மான அந்தப் பிரபுவானவர் அக்குழந்தை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே அவ்விடத்தில் மறைந்தார்.

அதன் பிறகு வரும் மேலான சிரேயஸை காண்பிக்கத் தக்க சுப லக்னம் நேர்ந்தது. அதிலிருந்த சுபகிரகங்கள் ஒருவருக்கொருவர் மித்ரர்களாக இருந்தார்கள். அப் போர்ப்பட்ட சமயத்தில் பாண்டுவின் வம்சத்தை விருத்திசெய்யும் புத்திரனானவன் பாண்டுவே மறு படியும் பிறந்ததுபோல அவதரித்தான். அப்பொழுது தர்மபுத்ரர் மிகுந்த சந்தோஷத்துடன் தௌம்யர், கிருபர் முதலிய ப்ராஹ்மணர்களைக் கொண்டு ஜாதகர்மம் ஸ்வஸ்திவாசனம் ஆகிய இவைகளைச் செய்வித்தார். மேலும், அவர் தானத்திற்குரிய பாத்திரம் தேசம் காலம் என்னும் இவைகளை அறிந்தவரா கையால், உத்தமமாகிய அந்தப் புண்ணிய காலத்தில் ஸ்வர்ணம், பசு, பூமி, கிராமங்கள் சிறந்த குதிரைகள் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்தது மல்லாமல் போஜனமும் செய்வித்தார்.

15–17 1/2. அப்பொழுது ஜ்யோதிஷ சாஸ்திரத்தை நன்றாய்க் கற்றுணர்ந்த எல்லாப் ப்ராம்ஹ்மணர்களும் மிகுந்த சந்தோஷமுள்ளவர்களாய் வணக்கமுள்ள அவ் வரசனை நோக்கி, 'ஓ புருஷவம்சத்திய அரசர்களில் சிறந்தவரே தடுக்க முடியா தெய்வ வசத்தால் புரு வம்சத்தின் தொடர்ச்சியற்றுப் போகும் சமயத்தில் அந்த வம்சத்தில் பிறந்தவர்களான உங்களுடைய க்ஷேமத்திற்காக) ஸ்ரீ மகா விஷ்ணுவே இப்புத்ர ரத்னத்தை அனுக்ரகித்திருக்கிறார். விஷ்ணுவினால் கொடுக்கப்பட்டவனாகையால் இவன் விஷ்ணுராத னென்று பிரசத்தியடைவான். இவன் மிகுந்த கீர்த்தி யுள்ளவனும், பாகவதர்களுள் சிறந்தவனுமாவான். இவ் விஷயத்தில் ஸம்சயப்பட வேண்டாம் என்றார்கள்.

18–29 1/2, இதனைக் கேட்ட தர்மராஜன் ப்ராஹ்

Released by Maran's Dog, Toronto , Canada

மணர்களை நோக்கி, புண்ய ச்லோகர்களும் ராஜர்ஷி களுமான நம்முடைய முன்னோர்கள் போல இக் குழந்தையும் நல்ல கீர்த்தியுள்ளவனாய் இருப்பானா? என்று மிக்க ஆதரவுடன் கேட்டார். அப்பொழுது ப்ராஹ்மணர்கள் தர்ம புத்ரரை நோக்கி, 'ஓ குந்தியின் புத்ரரே! இவன் மனுவின் புத்ரராகிய இக்ஷ்வாகுபோல, பிரஜைகளைக் காப்பாற்றுவான், தசரத புத்ரராகிய ஸ்ரீ ராமன் போல ப்ராஹ்மணர்களிடம் பிரியமுள்ள வனாவான். வீணாகாத பிரதிக்ஞையுள்ளவனாயி ருப்பான். ஔசீனர தேசத்திற் கதிபதியான சிபிச் சக்ரவர்த்தி போலச் சரணமென்று வந்தவர்களைக் காப்பாற்றுவான், மிகுந்த தாதா, துஷ்யந்தருடைய புத்ரனான பரதன் போலத் தன் பந்துக்களுக்கும், யாகம் செய்பவர்களுக்கும் விசேஷ கீர்த்தியை உண்டு பண்ணுவான். மேலும் இவன் உம்முடைய தம்பியாகிய அர்ஜுனன், கார்த்தவீர்யன் ஆகிய இவர்கள் போல வில்லைப் பிடித்தவர்களுக்குள் சிறந்தவனாவான், அக்னி போல ஸமீபத்தில் நெருங்க முடியாதவனாவான், சிங்கம் போலப் பராக்கிரமமுள்ளவனாவான்' ஹிம்வத் பர்வதம்போல ஸாதுக்களால் ஸேவிக்கத்தக்கவனா வான், பூமிபோலப் பொறுமையுள்ளவனாவான், மாதா பிதிருக்கள், புத்ரர்களின் விஷயமாய் நேரும் சிரமங் களைச் சகிப்பதுபோல ப்ரஜைகள் விஷயமாக உண்டாகும் சிரமத்தைப் பொறுத்துக் கொள்ளும் ஸ்பாவமுள்ளவனாவான். எல்லோரையும் சமமாய்ப் பார்ப்பதில் ப்ரஹ்மதேவரையொத்தவனாவான், அண்டின வர்களிடத்தில் தயவு செய்யும் விஷயத்தில் பரமசிவன் போன்றவனாவான். லக்ஷ்மீபதியாகிய மஹாவிஷ்ணு போல ஸகல பிராணிகளுக்கும் இருப்பிடமாவான், ஸ்ரீ கிருஷ்ணன்போல ஸகல நற்குணங்களால் ஏற்படும்

மஹிமையுள்ளவனாவான், கொடுப்பதில் ரந்திதேவன் போன்றவனாவான். யயாதிபோலத் தர்மசிந்தையுள்ள வனாயிருப்பான், பலிசக்கரவர்த்தி போலத் தைரிய முள்ளவனாவான், பிரஹ்லாதர் போல ஸ்ரீ கிருஷ்ண னிடம் பக்தியுள்ளவனாவான். மேலும் இவன் அநேக அசுவமேத யாகங்களைச் செய்வான். பெரியோர் களை ஸேவிப்பான். இவனுடைய புத்ரர்கள் ராஜ ரிஷிகளாக விருப்பார்கள். கெட்ட மார்க்கத்தை அனுஷ்டிப்பவர்களைச் சிக்ஷிப்பான், தர்மத்தை ஸம்ர க்ஷிப்பதற்காகக் கலியை நிக்ரஹிப்பான். பின்னுமிவன் (சிருங்கி என்ற) ப்ராஹ்மண புத்திரனால் தூண்டப் பட்ட தக்ஷகனால் தனக்கு மரணம் நேரிடப் போவதாய்க் கேள்விப்பட்டு, ஸகல ஆசைகளையும் ஒழித்து வைராக்கியத்தை யடைவான். பிறகு வியாஸ புத்ரராகிய சுகரிடம் ஆத்ம தத்வத்தை உபதேசம் பெற்று, கங்கைக் கரையில் இந்தச் சரீரத்தை விட்டு நிர்ப்பயமான விஷ்ணுபதத்தை யடைவான் என்று வருங் காரியத்தைச் சொல்லி தர்ம புத்திரரால் ஸம்மானிக்கப்பட்டுத் தங்களிருப்பிடம் சென்றார்கள்.

30–31 1/2 பிறகு அந்தக் குழந்தை மாதாவின் கர்ப்பத்தில் தன்னால் பார்க்கப்பட்டவரை மனத்தில் தியானஞ் செய்து கொண்டே 'அந்தப் புருஷன் இவர் தானோ, இவர்தானோ என்று ஒவ்வொருவரிடமும் பரீக்ஷித்தான். ஆனதுபற்றி அவனுக்கு, 'பரீக்ஷித்' என்ற பெயருண்டாயிற்று. அந்த ராஜகுமாரன் சுக்ல பக்ஷத்தில் பதினைந்து கலைகளால் சந்திரன் நாளுக்கு நாள் விருத்தியடைவதுபோல, தர்மபுத்ரர் முதலிய வர்களால் போஷிக்கப்பட்டு வளர்ந்தான். ஸகலவித்தை களும் அவனையடைந்தன. அப்பொழுது தர்மராஜன்

பந்துக்களின் வதத்தால் நேர்ந்த பாவங்களை நிவர்த் தித்துக் கொள்வதற்காக அசுவமேதஞ் செய்யவேண்டு மென்று விரும்பினார். ஆனாலும் 'நியாயமான வரி வாங்குவதாலும், குற்றவாளிகளுக்கு அவர்களுடைய குற்றத்திற்குத் தக்கபடி அபராதம் விதிப்பதாலும் ஸம்பாதித்த பொருள் பிரஜைகளை ரக்ஷிப்பதற்கே போதுமானதாயிருந்ததாகையால் அந்தப் பொருளைக் கொண்டு யாகத்தை முடிக்க முடியாதே என்ன செய்கிறது என்று கவலைப்பட்டிருந்தார்.

33–361/2 அப்பொழுது அவருடைய அபிப்ராயத் தையறிந்து ஸ்ரீ கிருஷ்ணனால் தூண்டப்பட்ட பீமசேனன் முதலியவர்கள் வடக்குத் திக்கில் சென்று மருத்தருடைய யாகத்திற்கு உபயோகப்பட்டு மிகுந்து கிடக்கும் தனத்தைக் கொண்டு வந்தார்கள். அவை களைக் கொண்டு யாக சாமகிரிகளைச் சம்பாதித்துத் தர்மபுத்ரர் ஸ்ரீ கிருஷ்ணனை வைத்துக் கொண்டு குறைவில்லாமல் நிறைவேற்ற வேண்டும் என்ற பயம் உள்ளவராய், பாப நிவர்த்திக்காக மூன்று தரம் அசுவ மேதத்தை யனுஷ்டித்து, யக்ஞ புருஷராகிய பகவானை ஆராதித்தார். ஸ்ரீ கிருஷ்ணனும் ப்ராஹ்மணர்களைக் கொண்டு தர்மராஜனுக்கு யாகஞ் செய்வித்து மித்ரர்களான பாண்டவர்களுடைய இஷ்டப்படி சில காலம் அவ்விடத்தில் வசித்தார். பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் அரசனிடத்திலும் திரௌபதியினிடத்திலும் விடை பெற்றுத் தம்முடைய பந்துக்களுடனும், அர்ஜுனன் உடனும் துவாரகா நகரஞ் சென்றார்.

நோட்டு

இந்த அத்தியாயத்தில் வைராக்கியத்தின் பிரகாரமும், பகவான் பக்தர்களிடத்தில் தயையுள்ளவரென்பதும், காட்டப்பட்டிருக்கிறது விஜ. சகல ஸம்பத்துக்களும் –காமாதுரனுக்கு ஐசுவரியத்தில் பிரியமிருக்குமே யல்லாமல் வைராக்கிய முள்ளவனுக்கு அவைகளில் பிரீதி உண்டாகிறதில்லை என்று காட்டப்பட்டது விஜ, புண்ணிய காலத்தில்-"கொப்பூழ்க் கொடி அறுப்பதற்கு முன் சூதகமில்லை" "புத்திரன் பிறந்த காலத்திலும் வியதபாத புண்ணிய காலத்திலும் செய்யப்பட்ட தானங்கள் குறையாத பலனைக் கொடுக்கின்றன," – ஸ்மிருதி "ப்ராஹ்மணர்களுடைய வீட்டில் புத்திரன் பிறந்த காலத்தில் ஸகல தேவர்களும் பிதிரு தேவர்களும் அந்த வீட்டிற்கு வருகிறார்கள். ஆதலால் அந்தக் காலம் 'நூறு சூர்ய கிரகணங்களைக் காட்டிலும் மேலான புண்ணிய காலம்" -ஸ்மிருதி. சிபி- இவர் தம்மைச் சரணமடைந்த புறாவைக் காப்பாற்றவேண்டிப் பருந்துக்கு தம்முடைய மாமிசத்தைக் கொடுத்தார் ஸ்ரீத. இவர் உசினருடைய புத்ரர் - வீர. விஜ.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–13

திருதராஷ்டிரர் வெளியில் சென்றது

விதுரர் தீர்த்த யாத்திரை செய்வதற்காக ஹஸ்தினா புரத்திலிருந்து புறப்பட்டுச் ஸகல தீர்த்தங்களுக்கும் சென்று, அவைகளில் ஸ்நானம் முதலியவைகளைச் செய்து, வழியில் மைத்ரேயரைக் கண்டு, அவரிடமாக ஸ்ரீமத் நாராயணனே தமக்குக் கதியென்று தெரிந்துக் கொண்டு, அதனால் அறிய விரும்பியதை அறிந்தும் ஹஸ்தினாபுரஞ் சென்றார். மேலும், கர்மயோகம், ஞானயோகம் ஆகிய இவைகளைப்பற்றி விதுரர் கேட்ட கேள்விகளுக்கு மைத்திரேயர் சிலவற்றிற்குப் பதில் சொல்லி வரும்பொழுதே விதுரருக்கு ஸம்சயங்கள் யாவும் நீங்கின. ஸ்ரீ கோவிந்தரிடத்தில் ஸ்திரமான பக்தி உண்டாயிற்று. அதனால் அதற்குமேல் அவர் கேட்கவில்லை.

3–6 தர்மபுத்திரர், அவருடைய தம்பிகள், திருதராஷ்டிரர் யுயுத்ஸு, ஸஞ்சயர், கிருபர், குந்தீதேவி, காந்தாரி, திரௌபதி, ஸுபத்ரை உத்தரை, த்ரோணருடைய பத்தினியாகிய க்ருபி, இன்னும் மற்ற பந்துக்களின் ஸ்திரீகள், பாண்டுவின் பந்துக்கள் ஆகிய எல்லோரும் தங்களுடைய பிள்ளைகளுடனும், ஸ்திரீகளுடனும் எதிர்சென்று வெகுநாள் தீர்த்தயாத்திரை செய்து திரும்பிவந்த பந்துவாகிய விதுரரைக் கண்டு மிகுந்த சந்தோஷத்துடன் அழைத்தார்கள். அப்படி அழைத்ததானது கை, கால் முதலிய அவயவங்கள் ப்ராணனைக் கண்டு சந்தோஷமடைந்தது போலிருந்தது. மேலும் அவர்கள் விதுரரிடம் வந்து முறைப்படி ஆலிங்கனம்

நமஸ்காரம் முதலியவைகளைச் செய்து வெகுநாள் பிரிந்திருந்ததனால் மிகுந்த ஆசையுள்ளவர்களாய் ஆனந்தக்கண்ணீரைப் பெருக்கினார்கள். அரசனாகிய தர்மராஜனும் ஆசனத்தில் உட்கார்ந்திருக்கும் அந்த விதுரரைப் பூஜித்தார்.

7–11, பிறகு ஆகாரத்தை யுண்டு களைதீர்ந்து ஸுகமாய் உட்கார்ந்திருக்கும் அவரை நோக்கி, தர்ம புத்திரர் பின்வருமாறு கேட்கலானார். பறவைகளால் தங்கள் தங்கள் குஞ்சுகள் சிறகுகளால் மறைத்துக் காப்பாற்றப்படுவது போல நாங்களனைவரும், எங்களுடைய மாதாவுடன் விஷம், அக்னி முதலிய ஆபத்துக்களிலிருந்து உம்மால் காப்பாற்றப்பட்டோம். ஆதலால் எங்களுடைய ஞாபகம் உமக்கிருக்கிறதா? பூமி முழுவதும் சுற்றிய தங்களுக்குத் தேச யாத்ரை எப்படி நடந்தது? எந்தெந்த தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தீர்கள்? எந்தெந்த க்ஷேத்திரம் சென்றீர்கள்? உங்களைப் போன்ற பகவத் பக்தர்களே மிக்க பரிசுத்தமானவர்கள். ஆதலால் அவர்கள் தங்களுடைய மனதில் எப்பொழுதும் பகவான் வஸிப்பதால் தீர்த்தங்களைப் பரிசுத்தப்படுகிறார்கள். மேலும் ஸ்ரீ பகவானையே தெய்வமாகக் கொண்ட நமது சிநேகிதர்களும் பந்துக்களும் யாதவர்களும் உம்மால் பார்க்கப் பட்டார்களா? அவர்களைப் பற்றிக் கேள்விபட்டதுண்டா? அவர்களுடைய பட்டணங்களில் சுகமாக இருக்கிறார்களா?! என்றார்.

12–15 அதனைக் கேட்டு விதுரர் தீர்த்தயாத்திரையின் நிமித்தமாகச் சென்ற விடங்களில் நடந்த சமாசாரங்களைப் பூர்ணமாகத் தர்மராஜனுக்கு சொன்னார்.

ஆனால் யதுகுலத்திற்கு நேர்ந்த கெடுதியை மாத்திரம் சொல்லவில்லை. மனிதர்களால் துக்கம் சகிக்க முடியாதது. ஆகையால் அதை அவர்கள் விரும்புகிற தில்லை யல்லவா ? தவிரவும் விதுரர் மிகுந்த கருணை யுள்ளவர். துக்கமுள்ளவர்களைப் பார்த்துச் சகிக்க மாட்டார். 'ஆனதால் யதுக்களுக்குக் கெடுதி யுண்டாயிற்று என்று சொன்னவுடன் பாண்டவர்கள் வருத்தப்படுவார்கள். அவர்களைப் பார்ப்பது மிகவும் கஷ்டமான கார்யம்' என்று நினைத்தே அதைச் சொல்லவில்லை. பின்பு அந்த விதுரர் பெரிய தமையனராகிய திருதராஷ்டிரருக்கு ஆத்ம தத்துவத்தை உபதேசித்தும், மற்றுமுள்ளவர்களுக்குப் பிரியத்தை விருத்திசெய்து கொண்டும் சில காலம் அவ்விடத்தில் வசித்தார். அவர்கள் விதுரரைத் தெய்வமாக நினைத்துப் பூஜித்தார்கள். மாண்டவ்ய மஹர்ஷியின் சாபத்தால் யமனே இப்படி ஜன்மத்தை அடைந்து விதுரராக பிறந்தவர்; யமன் இப்படி அநேக வர்ஷங்கள் பூலோகத்திலிருக்கும் காலத்தில் அவருடைய உலகத்தில் அர்யமா வென்பவர் பாபிகளுக்கு தக்க சிக்ஷை விதித்துக்கொண்டு அந்த வேலையை நடத்தி வந்தார்.

16. பகவானுடைய சகாயத்தால் தர்மபுத்திரர் ராஜ்யத்தை அடைந்து, தம்முடைய குலவிருத்திக்குக் காரணரும், பௌத்ரருமாகிய பரீக்ஷித், லோகபாலர்கள் போன்ற தம்பிகள் ஆகிய இவர்களுடன் விசேஷ ஐசுவர்யங்களைப் பெற்று ஆனந்தமடைந்தார்.

17–18. பிறகு கிருஷ்ண பகவான் தர்மபுத்திரர் முதலியவர்களிடம் விடைபெற்று, பின் தொடர்ந்துவரும்

பந்துக்களைத் தடுத்துத் திருப்பிவிட்டு அர்ஜுனன், உத்தவர், ஸாத்யகி என்பவர்களுடன் துவாரகா நகரம் சென்றார். இப்படி கிருஹ கிருத்யங்களிலேயே ஆசை யுள்ளவர்களாகவும், அவற்றால் மதித்தவர் களாகவும் அவர்கள் வெகு காலம் கழித்தார்கள். காலத்தை மீறுவதற்குப் ப்ரஹ்மதேவராலும் முடியாதன்றோ ?

19–29. அப்பொழுது விதுரர் அஜ்ஞர்களாகவே இவர்கள் வெகுகாலத்தைப் போக்கிவிட்டார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு திருதராஷ்டிரரை நோக்கி, 'ஓ அரசனே! சமீபத்தில் பயம் நேரிடுகிறதைப் பாரும். சீக்கிரம் பட்டணத்தை விட்டு வெளியில் போகவேண்டும். கால மஹிமையால் நேரும் பயம் ஓரிடத்திலும் ஒரு வகையாலும் தடுக்கமுடியாத தாகையால் அது நம்மெல்லோருக்கும் சமீபித்துவிட்டது. அந்தக் காலம் நேரிடு மானால் ப்ராணனுக்கே அபாயம் உண்டா கிறது. அப்படி யிருக்கையில் பணம் முதலியவைகள் போய் விடுகிறதே என்பதில் என்ன ஆச்சர்யம் ? பிதா, சகோதரர்கள், சிநேகிதர்கள், புத்திரர்கள் ஆகிய இவர்கள் எல்லோரும் சண்டையில் கொல்லப் பட்டார்கள். வயது சென்று விட்டது. சரீரத்தில் ஜரை வந்துவிட்டது; இயற்கையிலேயே நீர் கண் இல்லாதவர். இப்போது கிழத்தனத்தால் உமக்குக் காதுகளும் கேட்கும் சக்தியுள்ளவைகளாயிருக்கவில்லை. புத்தியும் குறைந்திருக்கிறது. பற்கள் உதிர்ந்துபோயின. வயிற்றில் அக்கினி குறைந்து போயிற்று. வியாதி அதிகரித்திருக்கிறது. கபத்தின் வேகம் அதிகமா யிருக்கிறது. இவ்வளவு கஷ்டமான நிலைமையிலும் இன்னும் பிழைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் உமக்கிருப்பது ஆச்சரியப்படத்தக்கதே. மேலும் நீர்

வீட்டில் நெருப்பு வைத்தும், விஷம் கலந்த அன்னத்தைக் கொடுத்தும், இராஜ்யம் முதலிய ஐசுவர்யங்களை அபகரித்தும், இன்னும் பலவகையான கெடுதிகளைப் பாண்டவர்களுக்குச் செய்ததுமல்லாமல் அவர்களுடைய பத்னியை ஸபையில் அவமானப் படுத்தியும் இருக்கிறீர். அவைகளை நினைத்து நினைத்து மிகுந்த கோபத்துடன் பீமஸேனன் வீட்டைக் காத்திருக்கும் நாய்க்குச் சோறு போடுவது போல உமக்கு அன்னம் போடுகிறான். அதனைப் புஜிக்கிறீர், இது மேலான ஜீவனமா? இவ்வளவு தைன்ய மடைந்தும் இனியும் வெகுகாலம் ஜீவிக்க வேண்டு மென்று விரும்புகிறீர். ஆனாலும் கால மகிமையால் வஸ்திரங்கள் கிழிந்துபோவதுபோல உம்முடைய சரீரம் கிழத்தனத்தால் குறைகிறது. கீர்த்தி முதலிய வையிலும், பிரயோஜனமற்ற சரீரத்திலும் அபிமானம் முதலியவைகளை விட்டு எவன் சரீரத்தை விடு கிறானோ அவனே தீரனென்று சொல்லப்படுகிறான். அவன் இன்ன கதியை அடைந்தான் என்று பிறரால் அறிய முடியவில்லை. தவிரவும் குருவின் உபதேசத் தாலாவது, தானாகவாவது, ஸம்ஸாரத்தில் வைராக்யத் தையடைந்து ஸ்திர சித்தமுள்ளவனாகி, ஸ்ரீ மஹா விஷ்ணுவை மனதில் தியானஞ் செய்துகொண்டு வீட்டை விட்டுப் போகிறவனே உத்தமன். இனி வருங்காலம் பெரும்பாலும் நற்குணங்களைக் குறைக்கக் கூடியதாகையால் நீர் பந்துக்களுக்குத் தெரியாமல் வடக்குத் திக்கை நோக்கிச் செல்லும் என்றார்.

30–31. அஜமீட வம்சத்தில் பிறந்த கண்களில்லாதவ (குருட)ரான திருதராஷ்டிரர் தம்பியான விதுரருடைய வார்த்தைக் கேட்டு, பந்துக்களிடம் தமக்கிருக்கும்

ஸ்திரமான அபிமானத்தை விட்டு, தம்பியால் உப தேசிக்கப்பட்ட வழியே வடக்கு திக்கை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது அவருடைய பத்னியும் நல்ல நடத்தையுள்ளவளும், மிக்க பதிவிரதையுமான காந்தாரி என்பவள் தன் புருஷன் பின் சென்றாள். அவ்விருவர்களும் ஹிமய மலைக்குப் போனார்கள். சூரர்களுக்குச் சண்டையில் ஸந்தோஷ முண்டாவது போல் இராஜ்யத்திலிருந்து ஒழிவடைந்தவர்களுக்கு அந்தப் பர்வதமானது மிகுந்த ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியது.

32–35. அன்றைய தினம் காலையில் தர்மபுத்ரர் ஸந்தியோபாஸ்தி செய்து, அக்னி கார்யத்தை முடித்து, எள், பசு, ஸுவர்ணம் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குத் தானஞ்செய்து குருக்களை நமஸ்கரிப் பதற்காக வழக்கப்படி அவர்களுடைய அரண்மனை சேர்ந்தார். அவ்விடத்தில் விதுரர், திருதராஷ்டிரர், காந்தாரி ஆகிய அவர்களையுங் காணாமல் மிகவும் நடுக்கமுள்ளவராய் அங்கிருக்கும் ஸஞ்சயரை நோக்கி, ஓ காவல்கணருடைய புத்ரரே; நம்முடைய பிதிரு வ்யரைக் காணோமே, அவர் எங்கே போனார்? வயது சென்றவரே, தவிரவும் கண்களில்லாதவ வராயிற்றே, தாயாரான காந்தாரியும் எவ்விடம் சென்றாள்? அவள் புத்ர சோகமுள்ளவளே; இவர் களுக்குச் சிநேகிதராகிய விதுரர் போனவிடம் தெரியவில்லையே? நாம் அறியாமையால் ஏதாவது குற்றஞ் செய்தேனோ? அதனால் திருதராஷ்டிரர் என்னிடத்தில் கோபங்கொண்டு மற்ற பந்துக்கள் இறந்து போன துக்கத்தால் தமது பார்யையுடன் கங்கையின் ஜலத்தில் விழுந்து மரணமடைந்தாரா?

எங்களுடைய பிதாவாகிய பாண்டு மஹாராஜன் காலஞ் சென்றபோது சிசுக்களாகிய எங்களை விதுரரும் திருதராஷ்டிரருமே காப்பாற்றினார்கள், அப்படிப்பட்டவர்கள் எவ்விடஞ் சென்றார்கள்? சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

36–38 1/2. இதனைக் கேட்டு ஸஞ்சயர் தம் யஜமானனைக் காணாமல் கவலையுள்ளவராக மிகுந்த தைன்யத்துடன் சிநேகத்தாலுண்டான அதைரியத்தால் வருத்தப்பட்டு உடனே மறுமொழி உரைக்கவில்லை. பின்பு அவர் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே தைரியத்துடன் திருதராஷ்டிரருடைய பாதங்களை நினைத்துக்கொண்டே தர்மபுத்திரரை நோக்கி அவர்கள் போனவிடம் எனக்கும் தெரியாது: மஹாத்மாக்களான அவர்கள் என்னையும் ஏமாற்றிவிட்டார்கள்; நானும் அவர்களைக் காணாமல் கவலையுள்ளவனாயிருக்கிறேன்' என்றார்.

39–41 1/2. இப்படி அவ்விருவர்களும் பேசிக்கொண்டு இருக்கும் பொழுது நாரதர் தும்புருவுடன் அவ்விடத்திற்கு வந்தார். அவரைக் கண்டு தர்ம புத்திரர் தம்பிகளுடன் எழுந்திருந்து நமஸ்காரஞ் செய்து விதிப்படி பூஜித்து, ஓ நாரதரே! மிகுந்த மஹிமை பொருந்திய உம்முடைய தரிசனம் தெய்வச் செயலால் கிடைத்தது. எங்களுடைய பிதாவின் ஸஹோதரர்களான விதுரரும், திருதராஷ்டிரரும், புத்ர சோகமடைந்த காந்தாரியும் இன்னவிடம் போனார்களென்று தெரியவில்லை. அவர்களைக் காணாமல் துக்கமாகிய சமுத்திரத்தில் சழ்கியிருக்கிறோம். அது கரையற்றது, இந்த சமயத்தில்

கப்பல்காரர்போல நீங்கள் வந்திருக்கிறீர்கள், எங்களைக் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

42–63. இதைக் கேட்டு நாரதர் தர்மபுத்திரரை நோக்கி, 'ஓ தர்மபுத்திரரே! ஜகத் யாவும் ஈசுவரனுக்கு வசப்பட்டவை. (பிராணிகளைச் சேர்த்துவைப்பவர் அவரே. அவைகளைப் பிரிப்பவரும் அவரே) ஆகையால் ஒருவரைப் பற்றியும் துக்கிக்காதீர். மூக்குக் கயிறுள்ள எருதுகள் போலும் தந்திரியில் (பிணையல்) சிறு கயிறுகளால் கட்டப்பட்ட பசுக்கள் போலவும் எல்லா லோகங்களும், லோக பாலர்களும் வேதங்களாகிய நீண்ட கயிற்றில் வர்ணாசிரமம் முதலிய சிறுகயிறுகளால் கட்டப்பட்டு, பரமேசுவரனுடைய கட்டளையை நிறைவேற்றுகிறார்கள். உலகத்தில் விளையாட்டுக் கருவிகளை விளையாடுகிறவன் தனதிஷ்டப்படி சிலவேளை சேர்த்தும், பிரித்தும் வைப்பதுபோல மனிதர்கள் சேர்ந்திருப்பதற்கும் பிரிந்து போவதற்கும் பகவான் உடைய விருப்பமே காரணம். இவ்வுலகத்தை ஜீவரூபமாக நித்யமென்று நினைத்தாலும் எவ்விதத்திலும் பந்துக்களைப் பற்றித் துக்கிக்க நியாயமில்லை. மோகத்தால் அபிமானம் வைத்ததாலேயே துக்கம் நேரிடுகிறது. மேலும் ஜகத்தை நித்யா நித்யமென்று சொல்வது பொருந்தாது. ஆகையால் அஞ்ஞானத்தால் ஏற்பட்ட அதைரியத்தை விட்டு விடும். ஆனால் என்னை விட வேறு கதியில்லாத திருதராஷ்டிரர் முதலியவர்கள் நானில்லாமல் எப்படி ஜீவிப்பார்கள், என்று கேட்கலாம், அப்படி நினைப்பது சரியன்று. பத்துப் பூதங்களாலுண்டான இந்தச்சரீரம் காலத்திற்கும், கர்மத்திற்கும் வசப்பட்டது. ஆகையால் நம்முடைய சரீரமே அழியும் சுபாவமுள்ளது. மலைப்

பாம்பின் வாயில் அகப்பட்டவனால் எப்படி மற்றவனை இரட்சிக்க முடியாதோ அதுபோல், நாம் பிறரைக் காப்பாற்றுவது சாத்தியமன்று. கைகளுள்ள ஜந்துக்களான மனிதர்கள் முதலியவர்களுக்குக் கைகளில்லாத பசு முதலியவைகளும், நாற்கால் பிராணிகளுக்குப் புல் முதலியவைகளும், புலி முதலிய பெரிய ஜந்துக்களுக்கு அல்படலமுள்ளவைகளும் எப்படி ஆகாரமாகின்றனவோ அப்படி எல்லா ஜீவனும் வேறு ஜீவனுக்கு ஆகாரமா யிருக்கிறது. ஆதலால் எல்லாம் மரணடயமுள்ளதாகவே காணப்படுகின்றன. ஏ தர்மபுத்திரரே! இந்த ஜகத் யாவும் பகவானுடைய ஸ்வரூபமேயொழிய வேறில்லை. அவர் ஒருவரே, போக்தர் (அனுபவிப்பவர்) போக்தா வின். ஸ்வரூபமாய் இருப்பவர் அவரே. போக்கிய ருபமாயுமிருப்பவர் அவரே. ஆனாலும், மாயையால் பலவகையாகத் தோன்றுகிறார். ஏ மகராஜ! ஸகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாக வசிக்கும் பகவான் தேவவிரோதிகளான அசுரர்களைக் (அசுரர் களுடைய அம்சமுள்ள இராஜாக்களைக்) கொல் வதற்காகக் காலங்காலமாய் துவாரகையில் வசிக்கிறார். தேவகாரியம் அநேகமாக முடிந்துவிட்டது. மிச்சமான பாகத்தை முடிக்கக் காலத்தை எதிர்ப் பார்த்திருக்கிறார். பகவான் இவ்வுலகத்திலிருக்கும் வரையில் நீங்களும் இவ்வுலகத்தில் வசிக்கலாம். திருதராஷ்டிரர் தம்பியாகிய விதுரருடனும், காந்தாரி யுடனும் இமயமலையின் தென்பாகத்தில் மகர்ஷி களுடைய ஆசிரமம் போயிருக்கிறார், அவ்விடத்தில் கங்கா நதியானது ஸப்தரிக்ஷிகளுடைய பிரீதியின் நிமித்தம் ஏழு வகையாக ஓடிற்று. அதனால் ஸப்த ஸ்ரோதஸ் என்று பெயருண்டாயிற்று. அந்தத் தீர்த்தத்தில் ஒவ்வொரு காலத்திலும் திருதராஷ்டிரர் ஸ்நானஞ்

செய்து அக்னிகாரியஞ்செய்து ஜலத்தைப் புசித்து, சாந்தமனமுள்ளவராய் ஆசைகளையும் ஒழித்து, சாஸ் திரத்தில் சொல்லியபடியுள்ள ஆசனத்தையடைந்து சுவாசத்தை யடக்கி, இந்திரியங்களை விஷயங்களில் செல்ல வொட்டாமல் அடக்கிப் பகவானையே மனத்தில் தியானஞ் செய்து அதனால் ராஜஸ, தாமஸ தோஷங்களை நிவர்த்தித்துக்கொண்டு, மனத்தை ஸ்தூல தேஹத்திலிருந்து புத்தியுடன் ஒன்றாகச் சேர்த்து, அந்தப் புத்தியைப் பார்க்கப்படும் விஷயங்களிலிருந்து க்ஷேத்ரக்ஞனுடன் சேர்த்து, அந்த க்ஷேத்ரக்ஞனைப் பார்க்கிறவரிடமிருந்து பிரித்து, கடாகாசத்தைக் கடத்திலிருந்து பிரித்து மகாகாசத்தில் சேர்ப்பது போல ஸகலத்திற்கும் ஆதாரமாகிய ப்ரஹ்மத் தினிடம் சேர்த்து, மாயையின் வாஸனையை யழித்து, இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கி, ஆகாரங் களை நிவர்த்தித்துக் கட்டைபோல அசையாமல் இருக்கிறார். ஸகல கர்மங்களையும் விட்டவரான அவருக்கு நீர் இடையூறாக வேண்டாம். மேலும் இன்று முதல் ஐந்தாவது நாளில் அவர் சரீரத்தை விடப் போகிறார். அந்தச் சரீரம் உடனே எரிந்து போகும் திருதராஷ்டிரருடைய சரீரம் பர்ணசாலை யுடன் கார்ஹபத்யம் முதலிய அக்னிகளால் எரிக்கப் படும்போது ஆசிரமத்திற்கு வெளியிலிருக்கும் அவருடைய பத்னியும் பதிவ்ரதை யுமான காந்தாரி யானவள் உடன் கட்டையேறிச் சரீரத்தை விட்டு விடுவாள், விதுரர் இந்த ஆச்சரியத்தைக் கண்டு திருதராஷ் டிரருக்கு நல்ல கதி கிடைத்ததால் சந்தோஷித்து அவரை விட்டுப் பிரிந்ததால் கொஞ்சம் துக்கத்தை அடைந்தும் தீர்த்த யாத்திரைக்குப் போவார். ஆகையால் அவர்களை அழைத்து

வருவதற்காகவது, அவருடைய சரீரத்தைத் தகிப்பதற்காகவது நீர் போக வேண்டியதில்லை என்று சொல்லி, நாரதர் தும்புருவுடன் ஸ்வர்க்கம் சென்றார். தர்மபுத்திரரும் நாரதருடைய வார்த்தையைக் கேட்டு அதை மனத்தில் வைத்துச் ஸகல துக்கங்களையும் நிவர்த்தித்துக் கொண்டார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம் 14

தர்மபுத்திரருக்கு நேர்ந்த அபசகுனங்கள்

பந்துக்களைப் பார்ப்பதற்கும், புண்ணிய ச்லோக ராகிய கிருஷ்ணனுடைய அபிப்ராயத்தைத் தெரிந்து கொள்ளுவதற்கும் துவாரகா நகரஞ் சென்றிருந்த அர்ஜுனன், சென்று சில மாஸங்களாகியும் திரும்பி வரவில்லை, அப்பொழுது அஸ்தினாபுரத்தில் மிக்க கோரங்களான அபசகுனங்கள் ஏற்பட்டன. மனிதர்கள் உடைய மனதில் கோபம், ஆசை, பொய், ஆகிய இவைகளுண்டாயின. மனிதர்கள் பாபமான காரியத்தைச் செய்து ஜீவித்தார்கள். பெரும்பாலும் ஜனங்கள் கபடமாகப் பேசினார்கள். தோழர்களும் வஞ்சனையாக பேசிக் கொண்டார்கள். பிதா, மாதா, மித்ரன், சகோதரர்கள், தம்பதிகள் ஆகிய இவர்கள் யாவரும் ஒருவருக்கொருவர் கலகம் செய்து கொண் டார்கள். தகப்பன்மார்கள் பணம் வாங்கிக் கொண்டு பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொடுத்தார்கள். புத்திரர்கள் பிதாவைக் காப்பாற்றுவதில்லை. ப்ராஹ்மணர்கள் வேதத்தில் சிரத்தை இல்லாதவர்கள் ஆனார்கள். மேலும் சூத்திரர்கள் வேதத்தைப் படிக்க ஆரம்பித்தார்கள். இப்படிக் காலகதி கோரமா யிருந்தது. இப்படி காலமானது மாறிப் போனதால், மனிதர்களுக்கு ஏற்பட்டிருக்கும் லோபம் முதலிய மனத்தின் துர்க்குணங்களையும், அதர்மத்தை அனுஷ் டிப்பதாகிய சரீர துர்க்குணத்தையும், மிகுந்த அபச குனங்கள் நேரிடுவதையும் கண்டு தர்மபுத்திரர் பீமசேனனை நோக்கி, 'ஓ பீம! பந்துக்களைப் பார்ப் பதற்காகவும், புண்ணிய ச்லோகராசிய கிருஷ்ணன்

னுடைய எண்ணத்தைத் தெரிந்து கொள்ளு வதற்காகவும் துவாரகா நகரம் சென்ற அர்ஜுனன், ஏழு மாதங்களாகியும் இன்னும் வரவில்லை, அதன் காரணமும் இன்னதென்று தெரியவில்லை, எவருடைய அனுக்கிரகத்தால் இராஜ்யம், ஸ்திரீ, ப்ராஹ்மணன், குலவிருத்தி, சத்ருக்களை ஜயிப்பது, ஐசுவரியம், உத்தம லோகங்கள் ஆகிய இவைகள் நமக்குக் கிடைத்தனவோ, அந்தப் பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய சரீரத்தை விடப் போகிறாரென்று தேவர்ஷியாகிய நாரதர் சொன்ன காலம் வந்து விட்டது போலிருக்கிறது. அந்தப் பகவானை விட்டுப் பிரிவதைக் காட்டிலும் வேறு நமக்கு கெடுதி நேரிட நியாயமில்லை. ஓ புருஷசிரேஷ்டா! ஆகாயத்தில் உண்டானவைகளும், பூமியில் உண்டாகின்றவைகளும், சரீரத்தில் காணப்படுகின்றவைகளுமான அபசகுனங் களைப்பார். புத்திக்கு மோகமும் மிக்க கடுமையுமான பயம் வரப்போகிறதென்பதை இவைகள் காட்டு கின்றன. இடக்கண்ணும், இடத்தொடையும் அடிக்கடி துடிக்கின்றன. இருதயத்தில் நடுக்க முண்டாகிறது. அந்த தைஹிகமான அபசகுனத்தால் வெகு சீக்கிரத்தில் கெடுதி நேரிடுமென்று காட்டப்படுகிறது.

13-23. இந்தப்பெட்டை நரியானது குறைக் கொள்ளியை வாயில் கௌவிக்கொண்டு உதயமாகும் சூரிய மண்டலத்தைப் பார்த்து ஊளையிடுகிறது. நாயானது என்னைப் பார்த்துப் பயமில்லாமல் அழுகிறது. என்னைப் பசு முதலிய மேலானவைகள் இடமாகவும், கழுதை முதலியவைகள் வலமாகவும் சுற்றுகின்றன, குதிரைகள் அழுகின்றன. வரும் மரணத்தைக் குறிக்கும் மாடப்புறாவும், கோட்டானும்

அதற்கு விரோதியான காக்கையும் விகாரமாகக் கத்துகின்றன. இவைகளைக் கேட்க மனம்நடுங்கு கிறது; ஜகத்தானது சூனியமாய் விடுமென்று நினைக் கிறேன். திக்குகள் அழுக்கடைந்து நன்றாய் விளங்க வில்லை, பரிவேஷம் (சூரியன், சந்திரன் இவர்களைச் சுற்றிக் கோட்டைக் கட்டுவது) உண்டாயிருக்கிறது; பூமியானது மலைகளுடன் அசைகிறது. மேகங்களின் மறைவில்லாமல் ஆகாயம் சுத்தமாயிருக்கும்போதும் இடியுண்டாகிறது; அகாலத்தில் மேக கர்ஜிதம் கேட்கிறது. மண்காற்று கடுமையாக வீசுகிறது. இருட்டுப் பரவுகிறது. மேகங்கள் வெறுக்கக் கூடிய வையாக எல்லா விடங்களிலும் இரத்த மழையைப் பொழிகின்றன; சூரியனுடைய தேஜஸ் மங்கிவிட்டது ஆகாயத்தில் கிரகங்கள் யுத்தஞ் செய்கின்றன, ருத்ரருடைய பரிவாரங்களாகிய பூதகணங்கள் மற்ற ப்ராணிகளுடன் சேர்ந்து எங்கும் பரவியிருப்பதால் ஆகாயம், பூமி இவைகள் தீப்பட்டவைபோலிருக் கின்றன. ஆறுகளும், நதிகளும் (மேற்கு முகமாய்ச் செல்லுகிறவைகள்), குளங்களும் ஏரிகளும், பிரஜை களுடைய மனமும் கலங்கிவிட்டன. ஆஜ்யம் (நெய்) முதலியவைகளை ஹோமஞ் செய்வதால் அக்னி ஜ்வலிக்கிறதில்லை, இந்தக் காலம் எதனைச் செய்யப் போகிறதோ தெரியவில்லை. மேலும் குழந்தைகள் ஸ்தன்ய பானஞ் செய்யவில்லை. தாயார்களுடைய ஸ்தனங்களில் பாலும் பெருகவில்லை. பூக்கள் கண்ணீரைப் பெருக்கி அழுகின்றன. கொட்டிலி லிருக்கும் ஹ்ருஷபங்கள் சந்தோஷமாக இருக்கவில்லை. தேவதாப் பிரதிமைகள் அழுகின்றவை போலிருக் கின்றன, அவை அசைகின்றன. இந்தச் தேசமும், கிராமங்களும், பட்டணங்களும், உத்தியானங்களும்,

இரத்தினம் விளையும் பூமிகளும், ஆசிரமங்களும் பிரகாசியாமல் இருப்பதுடன் அவைகளில் வசிப்பவர்களும் சந்தோஷமற்றவர்களாய் இருக்கிறார்கள், இவைகள் நமக்கு எவ்விதமான துக்கத்தைக் காண்பிக்கப் போகின்றனவோ, இப்படிப்பட்ட பெரிய உற்பாதங்களைப் பார்க்கும் போது மற்ற புருஷர்களுடைய பாதங்களில்லாத வஜ்ரரேகை முதலியவைகளால் அலங்கிருதமான ஸ்ரீ பகவானுடைய பாதங்களின் ஸ்பரிசம் பூமிக்கு இல்லாமல் பூமிதேவி பாக்கியக்குறை உள்ளவளாய் ஆகிவிடுவாள்போலத் தோன்றுகிறது என்றார்.

24–45. இப்படி தர்மராஜரும் பீமஸேனரும் பேசிக் கொண்டிருக்கும்போது அர்ஜுனன் துவாரகா நகரத்திலிருந்து திரும்பிவந்து தர்மபுத்திரரை நமஸ்கரித்தான். அப்பொழுது அர்ஜுனன் முன்போலிராமல் மிக்க மனவருத்தமுள்ளவனாகவும், தலையைக் குனிந்து இரு கண்களிலும், நீரைப் பெருக்கித் துக்கித்தவனாயுமிருந்தான்; இப்படிச் சோபையில்லாமலிருக்கும் அர்ஜுனனைப் பார்த்து தர்மபுத்திரர் பயந்து, பந்துக்களின் நடுவில் தம்பியை நோக்கி, ஓ அர்ஜுன துவாரகா நகரத்தில் நம்முடைய பந்துக்களாகிய யாதவர்கள், போஜர்கள், தாசார்ஹர்கள், ஸாத்வதர்கள், வ்ருஷ்ணிகள், தூயரும் பூஜ்யருமாகிய, மாதாமகர், அம்மானாகிய வசுதேவர், அவருடைய தம்பிகள் உக்ரசேனருடைய சகோதரிகளும், வசுதேவருடைய பத்தினிகளுமான தேவகி முதலிய ஏழு ஸ்திரீகள், அவர்களுடைய புத்திரர்கள், மருமகள் ஆகிய இவர்கள் க்ஷேமமாயிருக்கிறார்களா? கெட்ட பிள்ளையுள்ள அரசனாகிய உக்ரசேனர், அவருடைய

தம்பியாகிய தேவகர் ஆகிய இவர்கள் பிழைத்திருக்கிறார்களா? மேலும் ஹிருதிக (ச்வல்பர்)ருடைய பிள்ளையான அக்ரூரர், ஜயந்தன், கதன், சாரணன், ஸத்யஜித் அல்லது சத்ருஜித் முதலியவர்கள் க்ஷேமமாய் இருக்கிறார்களா? மேலும் சாத்வதர்களுக்கு அதிபதியான பலராமன் ஸகல விருஷ்ணிகளுக்குள் மகாரதரும் யுத்தத்தில் கம்பீர வேகமுள்ளவருமான பிரத்யும்னர், ஸுஷேணர், சாருதேஷ்ணர் ஜாம்பவதியின் புத்திரராகிய சாம்பர், மற்ற ரிஷப குமாரர்கள், பகவானுடன் சஞ்சரிக்கும் சுருததேவர், உத்தவர் முதலியவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனையும் பல ராமனையும் ஆசிரயித்த யாதவ சிரேஷ்டர்களாகிய சுநந்தர், தந்தர் முதலியவர்கள் ஆகிய பந்துக்கள் எல்லாரும் க்ஷேமமாயிருக்கிறார்களா? மேலும் அவர்கள் நம்மிடத்தில் பிரியத்துடன் நம்மை நினைத்துக் கொண்டிருக்கிறார்களா? ப்ராஹ்மணர்களிடம் விசேஷ பக்தியுள்ளவரும், பக்தர்களிடத்தில் பிரீதியுள்ளவருமான ஸ்ரீ கிருஷ்ண பகவான், உலகங்களுடைய மங்களத்திற்காகவும் க்ஷேமத்திற்காகவும் (கிடைத்ததைக் காப்பாற்றுவதற்காகவும்) துவாரகா நகரத்தில் மித்திரர்களுடன் ஸுதர்மையில் ஸுகமாக வசிக்கிறாரா? எந்த ஸ்ரீ பகவானுடைய இருகைகளால் காப்பாற்றப்பட்ட துவாரகையில் பந்துக்கள் நன்றாகப் பூஜிக்கப்பட்டு மிகுந்த ஆனந்தத்துடன் பார்ஷதகணங்கள் போல ஸஞ்சரிக்கிறார்களோ, அந்த ஸ்ரீ பகவான் பலராமனுடன் யதுகுலத்தில் பிரகாசிக்கிறாரா? ஸத்யபாமா முதலிய பதினாயிரம் ஸ்திரீகளும் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய பாதஸேவையே தபஸ் முதலியவைகளைக் காட்டிலும் மேலானது என்று நினைத்து அவருக்குச் சிசுருஷை செய்து வருகிறார்களா?

அவர்களுக்குப் பகவான் தம்முடைய பலத்தால் தேவர்களை ஜயித்து, அவர்களால் அனுபவிக்கக் கூடியவைகளும் இந்திராணிக்குத் தகுதியானவை களுமான பாரிஜாதம் முதலியவைகளைக் கொடுத் தாரல்லவா? எந்தப் பகவான் தேவர்களை ஜயித்து, தேவ சிரேஷ்டர்கள் வசிக்கக்கூடிய சுதர்மா என்ற சபையை பலாத்காரமாகப் பூமியில் கொண்டுவந்து, அதில் தம்முடைய கைகளின் பலத்தை அவலம்பித்து, ஜீவிக்கும் யாதவர்கள் வஸிக்கும்படியாகச் செய்தாரோ, அந்தப் பரமபுருஷன் ஸுகமாக வாசஞ் செய்கிறாரா? (அவர் பூமியில் வஸித்தால்தான் நமக்கும் ஜனங்கள் ளுக்கும் க்ஷேமமுண்டாகுமென்பது கருத்து) மேலும் குழந்தாய் அர்ஜுன! உனக்குத் தேஜஸ் குறைந்திருப் பதாகத் தோற்றுகிறதே, சரீரத்தில் வியாதி இல்லாம லிருக்கிறதா? வெகுநாளாகத் துவாரகா நகரத்தில் வசித்ததால் பந்துக்கள் உன்னைக் கௌரவப்படுத்த வில்லையா? அல்லது அவமதித்தார்களா? அல்லது பிரியமற்ற நிஷ்டூர வார்த்தைகளைச் சொன்னார்களா? அதனால் மனவருத்த மடைந்தாயா? அல்லது யாசகர்களுக்குச் சிலவற்றைக் கொடுப்பதாகப் ப்ரதிக்ஞை செய்து, பின்பு ஆசையால் அவற்றை அவர்களுக்குக் கொடுக்கத் தவறிப் போனாயா? எல்லாரையும் நீ காப்பாற்றும் ஸ்பாவமுள்ள வனன்றோ? அப்படிப்பட்டவன், ப்ராஹ்மணன், குழந்தை, பசு, வயது சென்றவர், வியாதியுள்ளவர், ஸ்திரீ, மற்றைப் ப்ராணிகள் இவர்களில் சரண மடைந்தவரைக் காப்பாற்றாமல் விட்டுவிட்டாயோ? ஆசைப்படக்கூடாத ஸ்திரீயினிடம் ஆசைபடாமலிருக் கிறாயா? விரும்பக்கூடிய ஸ்திரீ அழுக்கு வஸ்திரம் முதலியவைகளுள்ளவளானாலும் அவளிடம் அனுராகம்

வைக்காமலிருக்கிறாயோ? அல்லது வழியில் மேலான வர்களாலாவது, ஸமமானவர்களாலாவது? ஜயிக்கப் படாமலிருக்கிறாயோ? அல்லது குழந்தைகளுக்கு அன்னமிடாமல் புசித்தாயோ? (அதிதிகள் வேலைக் காரர்கள் கர்ப்பிணி, ரோகிகள், கன்னிகைகள் இவர்களுக்கு ஆகாரங் கொடாமல் புசித்தாயோ?) இன்னும் மற்ற கெட்ட காரியங்கள் எவையேனும் உன்னால் அனுஷ்டிக்கப்பட்டனவோ? மிகவும் பிரியரும், அந்தரங்க பந்துவுமான ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப் பிரிந்தோமேயென்று வருத்தப்படுகிறாயோ? உனக்கு இதை விட வேறு வியாதி ஒன்று மிருக்க நியாயமில்லை என்று கேட்டார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்15

தர்மபுத்திரர் பரலோகஞ்சென்றது.

1–7, இம்மாதிரி தர்மபுத்திரர் பலவகையாகச் சந்தேகம்படும்படி அர்ஜுனனுடைய சரீரத்தில் காந்தியின் குறைவு முதலியவைகள் உண்டாயிருந்தன. அவர் ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப் பிரிந்ததால் விசேஷ வருத்தமடைந்தார். அந்தத் துக்கத்தாலேயே தாமரை மலர்போன்ற அவருடைய முகமும் ஹிருதயமும் வாடி இருந்தன. தேஜஸ் குறைந்திருந்தது. பிரபுவாகிய அந்த ஸ்ரீ கிருஷ்ணபகவானையே மனத்தில் தியானித்துக் கொண்டிருந்ததனால் சீக்கிரமாக விடைசொல்ல முடியாதவராயிருந்தார்.

பிறகு மிகச் சிரமப்பட்டுத் துக்கத்தை மனத்தில் அடக்கிக் கைகளால் கண்களைத் துடைத்து, பகவான் தம்மிடம் வைத்திருந்த சக்யம். மைத்ரி, ஸமஹ்ருத் துவம் முதலியவைகளை நினைத்துக் கொண்டும் துக்கத்தினால் கண்டமடைத்து அரைகுறையான வார்த் தையுள்ளவராகத் தமையனை நோக்கி. ஓ மகாராஜ! ஸ்ரீ கிருஷ்ண பகவான் பந்துவாக விருந்து என்னை ஏமாற்றினார். தேவர்களாலும் ஆச்சரியப்படக்கூடிய என்னுடைய மிகுந்த தேஜஸ்ஸை அபஹரித்தார். எந்தப் பகவான் பூமியை விட்டுப்போனதால் இவ்வுலகம் முழுவதும் ப்ராணனில்லாத சரீரம் போலப் பார்க்க அழகாக இருக்கவில்லையோ, (துரித்திரன் போலவென்றும் சொல்வதுண்டு) தவிரவும், துருபத மகாராஜனுடைய சபையில் திரௌபதியின் சுயம்வரத்திற்காக வந்தவர்களும், மன்மதனால் மதித்த

வர்களுமான அரசர்களுடைய தேஜஸை எவர் தமது பார்வையாலேயே அபகரித்தாரோ, எவருடைய அனுக்கிரகத்தால் நான் மத்ஸ்ய யந்திரத்தைப் பிளந்து திரௌபதியைக் கல்யாணஞ் செய்து கொண்டேனோ, எவருடைய ஸான்னித்தியத்தால் காண்டவ வனத்தை அக்கினி பகவானுக்குக் கொடுத்து அதற்கு விரோதஞ்செய்யும் தேவேந்திரனை ஜயித் தேனோ, எவருடைய ஒத்தாசையால் மயனால் உண்டு பண்ணப்பட்டதும், மிகவும் ஆச்சரியகரமானதும், மாயா மயமாயுள்ள சபையானது நம்மால் அடையப் பட்டதோ, மேலும் எவருக்காக வந்த அரசர்கள் மிக்க உத்தம வஸ்துக்களைக் காணிக்கையாகக் கொடுத்தார்களோ, எந்த பரம புருஷன் சமீபத்தில் இருந்தால் உங்களுடைய தம்பியும் அநேக யாஜனை பலமுள்ளவருமான பீமஸேனர் ராஜஸூயயாகத் திற்காக ஜராசந்தன் என்பவனைக் கொன்றாரோ, ஜராசந்தனால் காராகிருகத்தில் அடைக்கப்பட்டிருந்த அரசர்கள் எவரால் விடுவிக்கப்பட்டு உங்களுடைய யாகத்திற்குக் காணிக்கைகளுடன் வந்தார்களோ, ராஜஸூயயாகத்தில் மஹாபிஷேகத்தையடைந்ததும், மேலானதுமான திரௌபதியின் தலைமயிரை துச்சாதனன் பிடித்து இழுக்கும்பொழுது உம்முடைய பத்னியாகிய அவள் எந்தப் பகவானை ஸ்மரித்தாளோ, எவர் உடனே அவ்விடம் வந்து சேர்ந்தாரோ, எவரை நமஸ்கரிக்கும் பொழுது திரௌபதியின் கண்ணீர் எவருடைய காலில் விழுந்ததோ, எவர் துச்சாசனன் முதலியவர்களுடைய ஸ்திரீகள் தலைமயிரை விரித்துக்கொண்டு அழும்படி செய்தாரோ, மேலும் பதினாயிரம் ஸிஷ்யர்களுடன் போஜனம் செய்பவரான துர்வாசஸஸ் என்னும் மஹர்ஷி

நமது சத்துவாகிய துர்யோதனனால் தூண்டப்பட்டு, நம்முடைய ஆசிரமம் வந்தபொழுது எந்தப் பகவான் (கீரையை) தாம் புசித்து அதனால் மூவுலகத்தில் இருக்கும் துர்வாசஸ் முதலிய மகரிஷிகளையும் திருப்தியடையச் செய்து நம்மைக் காப்பாற்றினாரோ, யாருடைய தேஜஸ்ஸினால் பரமசிவன் பார்வதியுடன் கூட ஆச்சரியமடைந்து பாசுபதமென்ற தமது அஸ்திரத்தை எனக்குக் கொடுத்தாரோ, மற்றுமுள்ள தேவர்களும் அவரவர்களுடைய அஸ்திரங்களையும் கொடுத்தார்களோ, இச்சரீரத்துடனேயே நான் ஸ்வர்க்க லோகத்தில் இந்திரனுடைய ஆசனத்தையும் அடைந்தேனோ, மேலும் ஸ்வர்க்கத்திலேயே வெகு காலம் வசித்துத் தேவர்களுக்கு விரோதியான அசுரர்களைக் கொன்றேனோ, அந்தப் பரமபுருஷன் என்னை இப்பொழுது ஏமாற்றிவிட்டார். கரையற்ற கௌரவ ஸைன்யமாகிய சமுத்திரத்தை எவருடைய ஒத்தாசையால் நான் ஒருவனாகத் தாண்டினேனோ, பின்னும் சத்துருக்களால் அபகரிக்கப்பட்ட பசுக்களையும் அவர்களுடைய தேஜஸ்ஸிற்கு இருப்பிடமான இரத்தினக் கிரீடங்களையும் பிடுங்கிக் கொண்டேனோ, பீஷ்மர், கர்ணர், துரோணர், சல்யர் இவர்களுடைய ஸைனியங்கள் மிகுந்த பலமுள்ள க்ஷத்திரியர்களால் அலங்கரிக்கப்பட்டவையானாலும், அவைகளின் நடுவில் எந்தக் கிருஷ்ண பகவான் என்னுடைய ரதத்தில் சாரதியாகவிருந்து ஒவ்வொரு சேனாதிபதிகளுடைய ஆயுஸ்ஸையும், மனோபலத்தையும், தேகபலத்தையும் பார்வையாலேயே குறைத்து விட்டாரோ, விஷ்ணுபக்தனாகிய ப்ரஹ்லாதன் இடத்தில் ஹிரண்யகசிபுவினால் தூண்டப்பட்ட அரசர்களுடைய கொடுமைபோல் எந்தக் கிருஷ்ணனால்

காப்பாற்றப்பட்ட என்னிடத்தில் அளவற்ற மஹிமையுள்ளவர்களான துரோணர், பீஷ்மர், கர்ணன், அசுவத்தாமா, ஸுசர்மா, சல்யர், ஜயத்ரதர், பாஹ்லீகர் இவர்களால் ப்ரயோகிக்கப்பட்ட அஸ்திரங்கள் வீணாகப்போயினவோ, மேலும்; ஜயத்ரதனைக் கொல்லும்பொழுது தண்ணீர் குடிக்காததனால், குதிரைகள் களைத்துப்போக, இரதத்திலிருந்து எந்தப் பகவான் கீழே இறங்கி, பாணத்தால் பூமியைப் பிளந்து. அதிலிருந்து ஜலத்தையுண்டுபண்ணினாரோ, அப்பொழுது எவருடைய மஹிமையால் சத்ருக்கள் மெய்மறந்து என்னை அடிக்காமலிருந்தார்களோ, அந்த மகாபுருஷரும், மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியவருமாகிய பகவானை சாரதியாய் வைத்துக் கொண்டேனோ, நான் மிகவும் அற்ப புத்தியுள்ளவன். அந்த அபராதத்தால்தான் என்னை அவர் ஏமாற்றிவிட்டாரோ, தெரியவில்லை!

18–27. லக்ஷ்மீபதியாகிய பகவான், "ஓ பார்த்த! (குந்தியின் புத்ரன்) ஓ அர்ஜுன! ஓ குரு நந்தனா! (கௌரவர்களைச் சந்தோஷப்படுத்திகிறவன்) ஏ தோழா! என்று சிரித்துக்கொண்டு பலவகையாக வேடிக்கை வார்த்தைகளைப் பேசினார் அல்லவா? அவைகள் யாவும் இப்பொழுது என் மனத்திலிருக்கின்றன.ஒரே படுக்கையில் படுத்துக்கொள்வது, ஒரே ஆசனத்தில் உட்காருவது, சேர்ந்தே ஸஞ்சரிப்பது புசிப்பது, தம்முடைய குணங்களை தோத்திரம் செய்து கொள்வது, ஆகிய இவைகளால் எங்களிருவர்களுக்கும் மனமும் ஒன்றுபட்டிருந்ததால் சில சமயம் நீர் சொன்ன படி செய்தார் அல்லவா என்று நான் கிருஷ்ணனைப்

பரிகாசஞ் செய்தாலும் தகப்பன் பிள்ளை செய்த பிழையைப் போலவும், அற்ப புத்தியுள்ள என்னுடைய குற்றத்தை விசேஷ மஹிமை பொருந்திய வராகையால் ஸகித்திருந்தார், என்னிடத்தில் மிகவும் மித்ரரும், அளவற்ற பிரீதியுள்ளவரும், அனுகூலத்தைச் செய்ய விரும்பியவருமான புருஷோத்தமனை விட்டுப்பிரிந்து, வழியில் அந்தப் பகவானுடைய களத்திரங்களைக் காப்பாற்ற முயன்றும் சக்தியற்றவனாக அஸத்துக்களால் ஸ்திரீயானவள் போல கோபர்களால் ஜயிக்கப் பட்டேன். இந்த காண்டீபம், பாணங்கள், ரதம், குதிரைகள், ரதியாகிய நான் ஆகிய எல்லாம் முன்னிருந்தவைகளானாலும் பகவானிருந்த. வரையில் அவையெல்லாம் காரியத்திற்கு உபயோகப்பட்டன; பகவான் ஸ்வர்க்கம் போன பிறகு ஒருக்ஷணத்திற்குள் சாம்பலில் செய்த ஆஹுதிபோலவும், வஞ்சகனுக்குத் தானம் செய்தது போலவும், களர் பூமியில் பயிரிடுதல் போலவும் பிரயோசனமற்றவைகளாயின. ஓ மகாராஜ! துவாரகா நகரத்தில் வசிக்கும் பந்துக்களுடைய க்ஷேமத்தை விசாரித்தீரல்லவா? அவர்கள் எல்லாரும் ப்ராஹ்மண சாபத்தால் மூடர்களாய், மத்யத்தைக் குடித்து மதங்கொண்ட..வர்களாய் ஒருவருக்கொருவர் பந்துக்களல்லாதவர்கள் போல் முஷ்டியால் அடித்துக் கொண்டு, நான்கு ஐந்து பெயர்கள் தவிர மற்றவர்கள் எல்லாரும் இறந்தார்கள், பிராணிகள் ஒருவரை யொருவர் காப்பாற்றுவதும், ஒருவரை யொருவர் கொல்வதுமாகி எல்லாம் பகவானுடைய இச்சையே தவிர வேறில்லை, ஜலத்தில் மத்ஸ்யம் முதலிய ஜந்துக்களில் பெரியவைகள் சிறிய ப்ராணிகளைக் கொல்வதுபோல் ஸகல ப்ராணிகளிலும் பலசாலிகள் அற்ப பலமுள்ளவர்களை ஜயிக்கிறார்கள், இப்படியே

யாதவர்களும் ஒருவருக்கொருவர் அடித்துக்கொள் ளும்படி பகவான் செய்து பூமியின் பாரத்தைப் போக்கினார், தேசத்திற்கும் காலத்திற்கும் தகுந்த வைகளும், மனத்தின் தாபங்களைப் போக்கக் கூடிய வைகளுமான கோவிந்தனுடைய வார்த்தைகளை நினைக்க நினைக்க அவைகள் மனதை அபஹரிக் கின்றன என்று பிரலாபித்தார்.

28–31. இப்படி அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரைமலர் போன்ற பாதங்களை நினைத்து அவரிடம் விசேஷ பக்தியை அடைந்தார். அதனால் சித்த சுத்தி உண்டாயிற்று. சண்டையில் பகவானால் உபதேசிக்கப்பட்ட ஞானமானது, கால மகிமையாலும், கர்ம வசத்தாலும் தமோ குணத்தாலும் மறைக்கப்பட்டிருந்தது, அதனால் அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய திவ்ய சரணங்களைத் தியானித்து பூர்ணமான பக்தியை அடைந்துமனத்தில் இருந்து எல்லா அழுக்கும் நீங்கினவராய் முந்திய ஞானத்தை நினைத்துக்கொண்டார்.

முக்குணங்கள் புண்யபாபங்கள், ஸ்தூல சரீரம் ஆகிய இவைகளின் பற்றுதல் (சம்பந்தம்) அற்றுப் போயிற்று. உத்பத்தி முதலியவைகள் விலகின. ஸ்வரூப ஞானம் உண்டானது. ஸகல ஸம்ஸயங்களும் நாசமாயின. ஆனதால் அர்ஜுனன் எந்த வகையிலும் துக்கமற்றவனானான்.

32–33. இம்மாதிரி பகவான் வைகுண்டம் சென்ற தையும், யதுகுலத்தின் நாசத்தையும் அர்ஜுனன் இடமாகத் தர்மபுத்திரர் தெரிந்து கொண்டு அந்தக்

அந்தக்கரணத்தையடக்கித் தானும் ஸ்வர்க்கம் போக விரும்பினார். குந்திதேவியும் அர்ஜுனன் வார்த்தையைக்கேட்டு பகவானிடத்தில் இடைவிடாமல் பக்தி செய்து அவரிடத்திலேயே மனத்தைச் செலுத்தி ஸம்சாரத்திலிருந்து வைராக்யத்தை யடைந்தாள். (ஜீவன் முக்தியை அடைந்தாளென்பது கருத்து)

34–35. காலில் தைத்த ஒரு முள்ளைப் பின்னும் ஒரு முள்ளினால் எடுப்பதுபோல, பகவான் யது குலத்தில் கிருஷ்ணனாக அவதரித்து, பூமியின் பாரத்தை நிவர்த்தித்து, அந்தச் சரீரத்தையும் விட்டுவிட்டார். பூமிக்குப்பாரமாயிருந்த, சரீரமும், அதைப் போக்கடித்த கிருஷ்ண சரீரமும் பகவானுடையதாகையால் அவைகளில் அவருக்கு சமான ப்ரீதியே தவிர பேதமில்லை. மேலும் வேஷதாரியான நடன் மறுபடி வேஷத்தைக் கலைத்து விடுவதுபோல ஈசுவரன் மத்ஸ்யம், கூர்மம் (ஆமை) முதலிய உருவங்களையெடுத்து, அவைகளை விட்டு விடுகிறார். அப்படியே கிருஷ்ணனாகவிருந்து பூமிக்குப் பாரமாயுள்ள அரசர்களை நாசஞ் செய்து அந்தச் சரீரத்தையும் விட்டுவிட்டார்.

36–38 1/2. எல்லோராலும் கேட்கக் கூடிய திவ்ய சரிதமுள்ள பகவான் என்றைய தினம் இவ்வுலகத்தை விட்டு வைகுண்டஞ் சென்றாரோ, அன்றையதினமே அஞ்ஞர்களைக் கலி சூழ்ந்து கொண்டது. அப்பொழுது பட்டணத்திலும், தேசத்திலும், வீடுகளிலும். மனத்திலும் கலி நெருங்குவதால் பணக்காரர்களுக்கு நல்ல பாத்திரத்தில் தானஞ் செய்ய வேண்டுமென்ற எண்ண மில்லாமலிருப்பது, பொய் சொல்வது, கபடமாகப் பேசுவது, பிறரை ஹிம்சிப்பது ஆகிய

அதர்மங்கள் யாவும் பரவின, அதனைப் பார்த்து வித்வானாகிய தர்மபுத்திரர் இவ்வுலகத்தைவிட்டுப் போக முயற்சித்தார். பின்பு, அவர் தமக்குச் ஸமான குணங்கள் பொருந்தியவருமான பரீக்ஷித்திற்கு ஹஸ்தினாபட்டணத்தில் ராஜ்யாபிஷேகஞ் செய்வித்து, சூரஸேனருடைய புத்திரராகிய வஜ்ரரையும் மதுரா நகரத்திற்கு அரசனாகச் செய்தார்.

39–50. பின்பு மிக்க ஸாமார்த்தியமுள்ள தர்மபுத்ரர் பிராஜாபத்யம் என்ற இஷ்டியைச் செய்து அக்னிகளை ஆத்மாவில் ஆரோபித்துக்கொண்டார். அப்பொழுது சரீரத்தில் அணிந்து கொண்டிருந்த வளை முதலிய ஆபரணங்களையும், பட்டு முதலியவைகளையும் விட்டு மோஹம், அஹங்காரம் முதலியவைகளை விட்டவராய், ஸகல பந்தங்களையும் நிவர்த்தித்துக் கொண்டார், ஸகல இந்திரியங்களை மனத்திலும், அதனைப் ப்ராணனிடத்திலும், அதனை அபானனிடத்திலும், அதனை வ்யாபாரத்துடனும், மிருத்யுவினிடத்திலும், அதனை ஐந்து பூதங்களால் ஏற்பட்ட சரீரத்திலும், அதனைக் குணத்திலும, அதனை அவித்தையிலும், அதனை ஜீவனிடத்திலும் அந்த ஜீவனை நாச மற்றவரும் கூடஸ்தருமாகிய பரப்ரஹ்மத்திலும் லயப் படுத்தினார். மேலுமவர் மரவுரியை உடுத்திக்கொண்டு ஆஹாரமில்லாமலும் மௌனியாகவும், தலையை அவிழ்த்துக்கொண்டு மூடன் போலவும், பைத்தியம் பிடித்தவன்போலவும், பிசாசு போலவும், ஒன்றையும் பாராதவராய்ச் செவிடன் போலப் பிறர் சொல்வதைக் கேளாமல் பெரியோர்களான முன்னோர்கள் போன வழியாக வடக்குத் திக்கை நோக்கிச் சென்றார். அப்பொழுது எதை அடைந்தவர்கள் மறுபடியும்

ஸம்ஸாரத்தை அடையமமாட்டார்களோ, அந்தப்பர மாத்வையே தியானித்துக் கொண்டிருந்தார். அவருடைய தம்பிகள் அனைவரும் நிச்சயமுள்ளவர்களாய்த் தர்ம புத்திரர் பின் சென்றார்கள். அதர்மத்தின் ஒத்தாசை யுள்ள கலியானது பிரஜைகளைப் பார்த்து அவருடைய சமீபத்திலும் சென்றது. அப்பொழுது ஸகல தர்மங் களையும் நன்றாக அனுஷ்டித்தவர்களான தர்ம புத்திரர் முதலியவர்கள் ஸ்ரீ நாராயணருடைய சரணங்களே நமக்குச் சரணமென்று நினைத்து, அதனால் பக்தி அதிகரித்தவர்களாகி, சித்தசுத்தியை யடைந்து, பரம புருஷனாகிய ஸ்ரீ நாராயணனிடத்தில் ஸ்திர புத்தியுள்ளவர்களாய், யோகிகளால் அடையக் கூடியதும் ஸம்ஸாரிகளுக்குக் கிடைக்காததுமான மேலான கதியை அடைந்தார்கள். மேலும் ஞானியாகிய விதுரரும் ப்ரபாஸ தீர்த்தக்கரையில் ஸ்ரீ கிருஷ்ணன் இடத்தில் சித்தத்தைச் செலுத்தி. இந்தச் சரீரத்தை விட்டுப் பித்ரு தேவதைகளால் அழைக்கப்பட்டுத் தமது உலகஞ் சென்றார். அப்பொழுது திரௌபதியும் தன்னுடைய பதிகளுக்குத் தன்னிடத்தில் ப்ரீதியில் லாமையைப் பார்த்து வாஸுதேவரிடம் இடை விடாமல் பக்தி செய்து உத்தமகதியையடைந்தாள்.

51. பகவான் வைகுண்டம் சென்றதும், பாண்டவர்கள் பகவானை யடைந்ததுமாகிய இக்கதைகள் மிகவும் பரிசுத்தமானவைகள். இவைகளைச் ச்ரத்தையுடன் கேட்பவர்களுக்கு ஸ்ரீ மஹாவிஷ்ணுவிடத்தில் பக்தியும், அதனால் மோக்ஷமும் கிடைக்கும்.

நோட்டு

ஸக்யம்:அனுகூலத்தைச் செய்ய விரும்பியிருப்பது. மைத்ரி: உபகாரியாகவிருப்பது, ஸஹிருத்வம் பந்துவாகவிருப்பது. ஸ்ரீத. ஸக்யம்-சமான வயது உள்ளவராக இருப்பதால் ஏற்படக்கூடியது. மைத்ரி உபகாரத்தால் ஏற்படக்கூடியது; அதிகப் ப்ரேமை யால் உண்டாகக் கூடியது, சந்த்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்-16

பரீக்ஷித்து தர்மத்தைக் கண்டது

1-4 'பரீக்ஷித்து பிறந்தபோது அவருடைய ஜாதகத்தைப் பார்த்து ஜ்யோதிஷ சாஸ்திரமறிந்த ப்ராஹ்மணோத்தமர்கள் சொன்னபடியே பின், ஹஸ்தினாபுரத்தில் உத்தரையின் புத்திரர் அரசனாக இருந்து ப்ராஹ்மணர்களுடைய கட்டளையின்படி பாகவதர்களுக்குள் சிறந்தவராகி இராஜ்யத்தைக் காப்பாற்றிவந்தார். அவர் உத்தரனுடைய பெண்ணாகிய இராவதீ என்பவளை விவாஹஞ் செய்துகொண்டார். பின்னும் அவர் கிருபரைக் குருவாக வைத்துக் கொண்டு கங்கையின் கரையில் மூன்று அச்வமேத யாகங்களைச் செய்தார். அவைகளில் தேவர்கள் நேரில் வந்து ஹவிர்ப்பாகங்களைப் பெற்றுக் கொண்டார்கள். மேலும் அவர் திக் விஜயஞ் செய்து வரும்பொழுது வழியில் ஒரு எருதையும் பசுவையும் ஒரு சூத்திரன் காலால் உதைக்கக் கண்டார். அவன் ராஜவேஷம் பூண்டிருந்தான். அவனே கலிபுருஷன், அவனைத் தமது பலத்தால் நிக்ரஹித்தார் என்று ஸூதர் சௌனகருக்குச் சொன்னார்.

5–10 'இதனைக் கேட்டு சௌனகர் "ஓ ஸூதரே! பரீக்ஷித் மஹாராஜா கலியை நிக்ரஹிக்க காரணமென்ன? அவன் அரசனாகவும் சூத்ரனாகவுமிருந்து பசுவைக் காலால் ஏன் உதைத்தான்? அந்த விஷயம் பகவத் கதையிலடங்கினதாலும், ஈசுவரனுடைய பாதங்களாகிய தாமரைப் புஷ்பங்களிலிருந்து பெருகி

வரும் மதுவைப் பானஞ் செய்து திருப்தியடைந் திருக்கும் மஹான்களுடைய கதையில் சேர்ந்ததாலும் அதைச் சொல்ல வேண்டும். அற்ப ஆயுள் உள்ள வர்களும் மரிக்கும் ஸ்பாவ முள்ளவர்களுமான மனிதர் களுக்கு மோட்சத்தில் விருப்பமிருக்குமாகில் பகவான் உடைய கதையைக் கேட்பது முதலியவைகளால் அவர்கள் ஆயுஸ்ஸைக் கழிக்க வேண்டுமே அல்லாமல் கெட்ட விஷயங்களால் வீணாக அதைச் செலவிடக் கூடாது. இந்த யாகத்திற்காக மஹர்ஷிகள் அந்தகனை (யமனை) வரவழைத்திருக்கிறார்கள். பகவானுடைய லீலைகளையே கேட்கவேண்டும். சோம்பல், புத்திக் குறைவு, அற்பமான ஆயுள் ஆகிய இவைகளுள்ள புருஷனுடைய ஆயுஸ்ஸானது இராத்திரியில் தூக்கத் தாலும்' பகலில் ஸம்ஸாரத்திற்கு உபயோகமான காரியங்களிலும் செல்லுகிறது. ஆகையால் பகவான் உடைய கதையைக் கேட்பதில் காலத்தை உபயோகியா தவர்களுடைய ஜீவனம் வீணானது என்றார்கள்.

11–17 இதனைக் கேட்டு ஸூதர் சௌனகரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார். பரீக்ஷித்து மகாராஜன் திக்விஜயம் செய்து வருங்காலத்தில் தம் உடைய ஆளுகைக்குட்பட்ட குருஜாங்கலம் இவை களில் கலி வந்து பிரவேசித்தாரென்ற அப்ரியமான வார்த்தையைக் கேட்டவுடன் யுத்தத்தில் மிகவும் சாமார்த்தியம் உள்ளவராகையால் ஆயுதத்தை எடுத்துக் கொண்டு கறுத்த குதிரைகள் கட்டிய இரதத்திலேறிப் புறப்பட்டார். அந்த இரதமானது சிம்மத்வஜமுள்ளது. ஸகல அலங்காரமுள்ளது. யானைகள், குதிரைகள் ரதங்கள், காலாட்படைகள் ஆகிய இவைகளுள்ள சேனைகள் அவரைச் சூழ்ந்து

கொண்டன. அவர் பத்ராச்வம், கேதுமாலம், கிம் புருஷம், பாரதம், உத்தரகுரு ஆகிய வர்ஷங்களில் சென்று அங்கிருக்கும் அரசர்களை ஜயித்து அவர் களிடம் கப்பம் பெற்றுக்கொண்டார். ஒவ்வொரு வர்ஷங்களிலும் வஸிக்கும் ஜனங்கள் பரீக்ஷித்தின் முன்னோர்களாகிய பாண்டவர்களுடைய சரித்தத்தைச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அதில் கிருஷ்ண பகவானுடைய மஹிமையும் இடையில் வர்ணிக்கப் படுகிறது. அச்வஸ்த்தாமாவினுடையை அஸ்திரத்தினிட மிருந்து பரீக்ஷித்தைக் காப்பாற்றின கதையையும், விருஷ்ணிகளுக்கும் குந்தி புத்திரர்களுக்கும் ஏற்பட் டிருந்த விசேஷ சிநேகத்தைப் பற்றியும், அவர்களுக்குப் பகவானிடமிருந்த அதிக பக்தியைப் பற்றியுஞ் சொல்லிக் கொண்டார்கள். அவற்றைக் கேட்டு, 'பரீக்ஷித்து மகாராஜன் கண்கள் மலர்ந்தவராக விசேஷ சந்தோஷத்துடன் அவர்களுக்கு விலையுயர்ந்த வஸ்திரங்கள், ஹாரங்கள் ஆகிய இவைகளை வெகுமதி செய்தார். பின்னுமவர் மிகுந்த பக்தியுள்ள பாண்டவர்களிடத்தில் விசேஷ பிரீதியால் பகவான் சாரத்தியஞ் செய்தது, சபாநாயராகவிருப்பது, பாண்டவர் களுடைய மனம்போல் நடப்பது, தோழனாயிருப்பது, தூதனாயிருப்பது, ராத்திரியில் கத்தியைக் கையில் வைத்துக்கொண்டு தூங்காமல் காப்பாற்றுவது, அவர்கள் ஏவினதைச் செய்வது, அவர்கள் மஹிமையைப் பற்றி தோத்திரஞ் செய்வது, ஆகிய கதைகளையும் சொல்லி ஸகல ஜகத்தும் பகவானை நமஸ்கரிப்பதையும் பார்த்து ஈசுவரனுடைய சரணங்களில் பக்தி செய்தார்.

18–25 இப்படி அந்தப் பரீக்ஷித்து மகாராஜன் முன்னோர்கள் செய்தபடி ஒவ்வொரு நாளும் தாமும்

நடத்தி வந்தார். அப்பொழுது சமீபத்தில் ஒரு ஆச்சரியத்தைக் கண்டார். அதென்னவெனில் தர்ம மானது விருஷப ரூபமெடுத்து ஒரு காலைப் பூமியில் ஊன்றிக்கொண்டு குழந்தைகள் இறந்து போனதால் துக்கப்படும் தாய் போலக் காந்தி குறைந்து கண்ணீரைப் பெருக்கி அழுது கொண்டிருக்கும் ஒரு பசுவை நோக்கி பின்வருமாறு கேட்டது. மங்களமாகிய ஸ்பாவமுள்ளவளே! சௌக்யமாயிருக்கிறாயா? உன் னுடைய முகம் வாடியிருக்கிறது. தேகத்தில் காந்தி குறைந்திருக்கிறது. ஓ அம்மா! மனத்தில் கவலையுள்ள வளாகத் தோன்றுகிறாய். தேசாந்திரம் போயிருக்கும் பந்துக்களைப் பற்றி வருத்தப்படுகிறாயா? அல்லது ஒரு காலால் நிற்கும் என்னைப் பற்றி துக்கிக்கிறாயா? அல்லது கெட்ட அரசர்களால் அனுபவிக்கப்படும் உமது சரீரத்தைப் பற்றி கவலைப்படுகிறாயா? அல்லது யாகங்கள் விதிப்படி செய்யப்படாததால் அசுரர்கள் அவைகளை அபகரிக்கிறார்களேயென்று வருத்தப்படுகிறாயா? காலத்தில் மழை பெய்யாமல் இருப்பதால் கஷ்டப்படும் ப்ரஜைகளைப் பார்த்துச் ச்ரமப்படுகிறாயா? அல்லது பர்த்தாவினால் காப்பாற்றப் படாத ஸ்திரீகளையும, தாயார், தகப்பன் முதலியவர் களால் ரட்சிக்கப்படாத பாலர்களையும், ராக்ஷஸர்கள் போலக் குரூரஸ்பாவமுள்ளவர்களால் உபத்திரவிக்கப் பட்ட சிசுக்களையும், துராசாரமுள்ள ப்ராஹ்மணர் களிடத்திலிருக்கும் வாக்தேவியையும், ப்ராஹ்மணர் களைச் சம்ரட்சிக்காத க்ஷத்திரியர்களை சேவித்துக் கொண்டிருக்கும் மேலான குலத்தில் பிறந்தவர்களைப் பற்றிக் கவலையடைகிறாயா? அல்லது கலியினால் வியாபிக்கப்பட்ட க்ஷத்திரியர் தங்களைப் பற்றியும் இஷ்டமானவிடங்களிலும் இஷ்டப்பட்ட காலங்களிலும்

படுத்துக் கொள்வது, உட்காருவது, புசிப்பது, குடிப்பது, மைதுனம் ஆகிய இவைகளில் ஆசையுள்ள ப்ராணிகளைப் பற்றியும் துக்கிக்கிறாயா அம்மா?! அல்லது துஷ்டர்களைக் கொன்று உன்னுடைய பாரத்தை நிவர்த்திப்பதற்காக அவதாரஞ் செய்த ஸ்ரீ கிருஷ்ணபகவான் வைகுண்டஞ் சென்றதால் மோக்ஷத்தைக் கொடுக்கும் அவருடைய சரிதங்களை நினைத்து அவருடைய விரகத்தைச் ஸகிக்காமல் துன்பமடைகிறாயா? மிக்க பலசாலியான காலத்தின் மஹிமையால் உன்னுடைய அழகு போய்விட்டதா? நீ வருத்தப்படுங் காரணமென்ன? சொல்ல வேண்டும் என்று கேட்டது.

26–35 இதைக் கேட்டுப் பூமிதேவி தர்மதேவதையை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானாள் "ஓ தர்மமே! நான் வருத்தப்படும் விஷயமின்னதென்று உனக்கே தெரிந்திருக்கலாம், உலகத்திற்குச் சௌக்கியத்தைக் கொடுக்கும் நான்கு கால்களோடு நீ இருந்ததற்கு எவர் காரணமோ, எவரிடத்தில் சத்தியம், சுத்தனாக விருப்பது, தயை, பொறுமை, கொடுப்பது, சந்தோஷம், கபடமில்லாமலிருப்பது. மனது ஸ்திரமாயிருப்பது, வெளியிலிருக்கும் இந்திரியங்களை ஜயிப்பது, தனது தர்மத்தை யனுஷ்டிப்பது, சத்ரு மித்ரர் என்ற பேத புத்தியில்லாமலிருப்பது, பிறர் செய்த அபாரதத்தைப் இருப்பது, இலாபங் கிடைத்தாலும் அதில் உதாசீனனாக பொறுப்பது, சாஸ்திரங்களை விசாரிப்பது ஆத்மஞானம், வைராக்கியம் எல்லா வற்றிற்கும் எஜமானனாக விருப்பது; காரியங்களில் சாமர்த்தியம், அழகு, தைர்யம், மிருது ஸ்பாவமுள்ள வனாகவிருப்பது, பக்தி, விசேஷ வணக்கம், சுபாவம்;

மனோபலம், ஞானபலம், இந்திரியபலம், மேலான ஞானம் முதலியவைகளில் கம்பீர மனமுள்ளவராக இருப்பது, அசையாத சித்த முள்ளவராக விருப்பது சிரத்தை, கீர்த்தி, மானம், அகங்காரமில்லாமலிருப்பது ஆகிய இவைகளும் மற்ற எல்லாராலும் ஆசைப்படக் கூடியவைகளுமான மகாகுணங்கள் எப்பொழுதும் வஸித்துக் கொண்டிருந்தனவோ, அந்தக் குண நிதியாகிய ஸ்ரீநிவாஸன் இவ்வுலகத்திலில்லாததனால் பாப ஸ்பாவமுள்ள கலி இவ்வுலகத்தில் வியாபித்தான். அதனால் எனது ஸ்வரூபத்தையும், உன்னையும் தேவர்களையும், மஹர்ஷிகளையும், பிதிருக்களையும், மற்ற சாதுக்களையும், எல்லா ஜாதியார்களையும், ஆச்ரமிகளையும் பற்றிக் கவலைப்படுகிறேன், ப்ரஹ்ம தேவர் முதலியவர்கள் எந்த லக்ஷ்மீதேவியின் கடாக்ஷத்திற்காக வெகுகாலம் தபஸ் செய்தார்களோ, அந்த லக்ஷ்மீதேவியானவள் மேலானவர்களால் ஆசிரயிக்கப்பட்டவளானாலும், தான் வஸிக்குமிடமான தாமரைமலர்களின் வனத்தை விட்டுப் பகவானுடைய பாதங்களாகிய தாமரைப் புஷ்பங்களை மிகுந்த ப்ரீதியுடன் ஸேவிக்கிறாள்; வஜ்ரம், அங்குசம், துவஜம் ஆகிய இந்த ரேகைகளுள்ள அந்தப் பகவானுடைய திவ்ய விபூதிகளையறிந்து மூவுலகிலும் மேலானவளாக இருந்தேன். இப்படி கர்வமுள்ள என்னை ஈசுவரன் கடைசியில் விட்டுப்பிரிந்தார், அவர் எனக்குப் பாரமா யிருந்த அஸுராம்சமுள்ள அரசர்களுடைய அனேக அக்ஷௌஹிணியை நாசஞ் செய்வதற்காகவும், நான்கு பாதங்களுடன் உலகத்தில் உன்னை ஸஞ்சரிக்கும்படி செய்வதற்காகவும் யதுகுலத்தில் அவதரித்தார்.

36 எந்தப் புருஷோத்தமர் பிரியமான பார்வை,

அழகான சிரிப்பு, மனோஹரமான பேச்சு ஆகிய இவைகளால் ஸத்யபாமை முதலியவர்களுடைய மானத்தையும் தைர்யத்தையும் போக்கடித்தாரோ, எவருடைய பாதத்தின் அடி வைப்பினால் அலங்கரிக்கப் பட்ட எனக்கு மயிர்க்கூச்சலுண்டானதோ, அந்தப் பரமபுருஷனை விட்டுப் பிரிந்திருக்க யாரால் முடியும்" என்றாள்.

37. இப்படி இருவரும் பேசிக் கொண்டிருக்கும் பொழுது பரீக்ஷித்து என்ற ராஜரிஷியானவர் குருக்ஷேத்திரத்தில் கிழக்கு முகமாய் ப்ரவஹிக்கும் ஸரஸ்வதி நதிக்கரை வந்தார்.



அத்தியாயம்- 17

பரீக்ஷித் மகாராஜன் கலியை நிக்ரஹித்தது

1–15. அவ்விடத்தில் பரீக்ஷித் மஹாராஜர் ஒரு எருதையும், ஒரு பசுவையும், ஒரு சூத்திரன் ராஜ வேஷந்தரித்துக் கையில் தடியை எடுத்து அடித்துக் கொண்டிருக்கக் கண்டார். அவைகளில் தாமரைத் தண்டு போல் வெளுப்பான விருஷபமானது (எருது) மிகவும் பயந்து மூத்திரம் பெய்வதுபோல் நடுக்கம் அடைந்து, அந்தச் சூத்திரனால் அடிக்கப்பட்டு ஒரு காலால் நின்று மிகவும் துன்பமடைந்திருந்தது. பால் முதலியவைகளைக் கொடுக்கும் அந்தப் பசுவானது கன்றில்லாமல் அழுதுகொண்டிருந்தது. அல்லாமல் இளைத்துமிருந்தது. புல் முதலிய ஆஹாரத்தில் விருப்பமுள்ளதாகவுமிருந்தது. அதனைச் சூத்திரன் காலால் உதைத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஸுவர்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட இரதத்தின் மீதேறியிருக்கும் அந்தப் பரீக்ஷித் மஹாராஜன் வில்லில் நாணை பூட்டிக்கொண்டு பின்வருமாறு மேகம் கர்ஜிப்பது போலக் கம்பீரமாகக் கேட்கத் தொடங்கி 'அட மூட நீ யார்? என்னால் காப்பாற்றப்படுகிற தேசத்தில் பலிஷ்டனான நீ, பலமில்லாதவர்களை உபத்திரவிக்கின்றனை. உனது வேஷத்தால் அரசனாகத் தோன்றுகின்றனை. சூத்திரனுடைய காரியத்தை செய்கின்றனை யாதலால் வேஷதாரி போலிருக்கின்றாய் ஸ்ரீ கிருஷ்ண பகவானும், அர்ஜுனனும் இத்தேசத்தை விட்டு வெகு தூரஞ் சென்றுவிட்டபடியால் இரஹஸ் யத்தில் பலமில்லாதவர்களை ஹிம்ஸிக்கின்றனை. ஆகையால் நீ என்னால் கொல்லத்தகுந்தவன். ஓ

தாமரைத் தண்டு போல வெளுத்த சரீரத்துடன் விருஷப ரூபமெடுத்து ஒரு காலால் ஸஞ்சரிப்பவரே! நீர், தேவதைகளுக்குள் யார்? உம்மைப் பார்க்க எங்களுக்கு வெகு துக்கமாயிருக்கிறது. கௌரவர்களுடைய வைகளால் காப்பாற்றப்படும் பூமியில் துக்கத்தால் உண்டாகும் கண்ணீர் விழுகிற வழக்கமில்லை. ஆதலால் நீர் துக்கிக்கவேண்டாம். சூத்திரனிடமிருந்து பயம் உமக்கு நிவர்த்தியாகிவிட்டது. ஓ அம்மா! பசுவே! துஷ்டர்களை நான் சிக்ஷித்து வரும்பொழுது நீ ஏன் அழவேண்டும்? எந்த அரசனுடைய இராஜ்யத்தில் துஷ்டர்களால் ஸாதுக்களுக்கு உபத்திரவம் நேரிடு கிறதோ அவனுடைய கீர்த்தி, ஆயுள், பாக்யம் ஆகிய இவைகள் குறைவு படுவதல்லாமல் அவனுக்குக் நல்ல லோகமும் கிடைக்கிறதில்லை. உபத்திரவப் பட்டவர் களுடைய துன்பத்தை நிவர்த்திப்பதே அரசர்களுக்கு முக்கியமாகிய தர்மம். ஆனதால் பிராணிகளுக்கும் கெடுதியைச் செய்கின்ற மிக்க அஸத்தாகிய இவனைச் சிக்ஷிக்கிறேன். ஓ விருஷபமே! உன்னுடைய மூன்று கால்களை எவன் வெட்டினான்? ஸ்ரீ கிருஷ்ணன் அனுஸரித்த அரசர்களுடைய இராஜ்யத்தில் ஜனங்கள் உன்னைப் போலிருப்பது உசிதமல்ல. நிரபராதியும் ஸாதுவுமாகிய உனக்குக் கெடுதியைக் குறைக்கும் அஸத் யார்? அவனைச் சொல் உனக்கு க்ஷேமம் உண்டாகும். குற்றஞ் செய்யாதவர்களை எவன் உபத்திரவிக்கிறானோ அவனுக்கு என்னிடமிருந்து பலவகையிலும் பயமுண்டாகும். கொஞ்சமாவது பயமில்லாமல் குற்றமற்றவர்களுக்குக் கெடுதி செய்பவன் தேவனானாலும் தோள் வளைகளுள்ள அவனுடைய கையை, வெட்டி விடுவேன். கெட்ட நடையுள்ளவர்களை,

சாஸ்திர முறைப்படி சிக்ஷிக்கும் அரசர்களுக்குத் தமது தர்மத்தை யனுஷ்டிப்பவர்களைக் காப்பாற்றுவதே ஸ்வதர்மம் என்று சொன்னார்.

16–19½. இதனைக் கேட்டு தர்மமானது அரசனை நோக்கி, ஓ மஹாராஜ! எவர்களுடைய குணங்களால் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவர்களுக்கு, தூதனாக விருப்பது முதலியவைகளைச் செய்தாரோ, அந்தப் பாண்டவர்களின் குலத்தில் பிறந்தவர்களான நீங்கள் பயந்தவர்களுக்கு அடய வார்த்தை சொல்வதே உசிதம். ப்ராணிகளுக்குத் துக்கமுண்டாகுங் காரணத்தைப் பற்றிப் பல வகையான மதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சிலர் ஆத்மாவே துக்கத்திற்குக் காரணமென்றும், லோகாயதகர்கள் நவகிரஹங்களின் அதிதேவதையே துக்கத்திற்குக் காரணமென்றும், மீமாம்ஸகர்கள் கர்மமே காரணமென்றும், சிலர் ஸ்வாபவமே காரணமென்றும், சிலர் ஈசுவரனே காரணமென்றும், சொல்லுவதால் ஊகிக்க முடியாததும், குறிப்பிடக் கூடாததுமான ஏதோ ஒரு காரணத்திலிருந்து துக்கம் உண்டாகிறது. ஒன்றையும் நிச்சயமாகச சொல்லக் கூடவில்லை. இப்படி மதபேதத்தால் மோஹித்து இருப்பதால் எந்தப் புருஷனிடமிருந்து துக்கங்கள் நேரிடுகின்றனவோ அந்தப் புருஷன் இன்னாரென்று நாம் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனது பற்றி அதன் காரணத்தை நீரே உம்முடைய புத்தியால், யோசித்துத் தெரிந்து கொள்ளும் என்று சொல்லிற்று.

20–27. இதனைக் கேட்டு அரசன் யோசித்து மோஹமும் இல்லாதவராகத் தர்மத்தை நோக்கிப் பின்வருமாறு சொன்னார். தர்மமமாகிய வார்த்தையைச் சொல்வதால்

நீ தர்மமேயாம். விருஷபத்தின் சரீரத்தை தரித்து இருக்கின்றனை. அதர்மத்தை யனுஷ்டித்தவனுக்கு எவ்வித ஸந்தோஷமேற்படுமோ அது கோட் சொன்னவனுக்கு (அவனைக் காட்டிக் கொடுத்தவனுக்கு) உண்டாகிறது. அல்லது ஈசுவரனுடைய ஸங்கல்பமானது ப்ராணிகளுடைய மனத்திற்கும், வாக்குக்கும் எட்டாத தாகையால் அதை அறியமுடியாததென்பது நிச்சயம். தபஸ், சௌசம், தயை, ஸத்யம் ஆகிய நான்கு தர்மத்திற்குப் பாதங்களாகக் கிருதயுகத்தில் ஏற்படுத்துப் பட்டன. அதர்மத்தின் பாதங்களாகிய கர்வம், ஆசை, மதம் இவைகளால் தர்மத்தின் மூன்று பாதங்கள் முறிக்கப்பட்டன. இப்பொழுது நான்காவது பாதமாகிய ஸத்யத்தை அஸத்யத்துடன் கூடி கலி பிடிக்க முயற்சிக்கின்றன. இவள் பூமி தேவியே. இவளுடைய பாரத்தைப் பகவான் நிவர்த்தித்தார் அவருடைய திவ்யமாகிய அடிவைப்பினால் ஸந்தோஷமடைந்து இருந்தாள். இப்பொழுது அந்தப் பகவானை விட்டுப் பிரிந்து பூமிதேவியானவள், ப்ராஹ்மணர்களைக் காப்பாற்றாதவர்களும் ராஜவேஷத்தை மாத்திரம் தரித்த வர்களுமான சூத்திரர்கள் தமக்கு அதிபதியாக ஆகிவிடுவார்களே என்று கண்ணீரைப் பெருக்கிப் பாக்கியமற்றவள் போல் துக்கிக்கிறாள் என்று சொல்லித் தர்ம தேவதையையும், பூமியையும் ஸமாதானஞ் செய்தார்.

28-33. பின்னும் மஹாரதராகிய அவ்வரசன் அதர்மத்திற்குக் காரணமாகிய கலியைச் சிக்ஷிப்பதற்காகக் கூர்மையான கத்தியை எடுத்தார். அப்பொழுது கலியானவன் அரசன் தன்னைக் கொல்ல விரும்பியதைத் தெரிந்துகொண்டு இராஜவேஷத்தை விட்டு மிகவும்

பயந்தவனாக அவருடைய சரணங்களில் நமஸ்கரித் தான். அப்பொழுது தம்முடைய காலில் விழுந்த கலியைப் பார்த்து, தீனர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ள வரும், தைர்யமுள்ளவரும், கொண்டாடக்கூடியவரும், சரண்யருமான அரசன் கருணையுடன் அவனைக் கொல்லாமலிருந்ததுமன்றி அவனை நோக்கிச் சிரித்துக் கொண்டு அர்ஜுனனுடைய கீர்த்தியை காப்பாற்றி வரும் நாங்கள், கைகூப்பிச் சரணமடைந்தவர்களைக் கொல்லுகிறதில்லை. ஆனாலும் நீ, அதர்மத்திற்குப் பந்துவானதால் நமக்குச் சொந்தமான இவ்விடத்தில் வசிக்கக்கூடாது. இராஜ சரீரத்தில் நீ வசிக்கும்போது ஆசை, பொய்சொல்லுதல், திருடுவது, துஷ்டனாயிருப்பது, தன்னுடைய தர்மத்தை விட்டுவிடுவது, அலக்ஷ்மீ கபடம், கலஹம், டம்பம் ஆகிய அதர்மத்தின் கூட்டமும் உன்னை யனுஸரிக்கிறது. ஆதலால் அதர்ம பந்துவாகிய ஏ கலியே! ஸத்யம், தர்மம் ஆகிய இவைகள் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும், ப்ரஹ்மாவர்த்தத்தில் நீ வசிக்கக் கூடாது. இவ்விடத்தில் யாகத்தின் விதியை நன்றாக அறிந்தவர்கள் யக்ஞேசரராகிய பகவானை யாகத்தால் பூஜிக்கிறார்கள். மேலும் யாக ஸ்வரூபியான பகவான் யாகஞ் செய்பவர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கிறார். தவிரவும், ,ஸ்தாவர ஜங்கமங்களாகிய எல்லாப் ப்ராணிகளிடத்திலும் வாயுவைப் போல் அந்தர்யாமியாயிருந்து அவரவர்கள் இஷ்டத்தை நிறைவேற்றுகிறார் என்று சொன்னார்.

34–36. அதனைக் கேட்டு அந்தக் கலி மிகவும் நடுக்கமுள்ளவனாகி முயற்சியுள்ள யமனைப்போலக் கத்தியைக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் பரீக்ஷித்தை நோக்கி, ஓ ஸார்வபௌமரே! தங்களுடைய

உத்தரவுப்படி எவ்விடத்திலாவது வசிக்கிறேன். எவ்விடத்திலிருந்தாலும், வில்லையும் பாணத்தையும் கையில் வைத்துக் கொண்டிருக்கும் உம்மை பார்ப்பேன். தர்ம சிந்தையுள்ளவர்களுக்குள் சிறந்தவரே! எவ்விடத்தில் வசிக்கும்படி நீர் ஆஞ்ஞாபிக்கிறீரோ அவ்விடத்திலேயே வசிப்பேன். அப்போர்ப்பட்ட ஸ்தானத்தை எனக்குக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.

37–39. அப்பொழுது இம்மாதிரி கலியால் பிரார்த்திக்கப்பட்ட பரீக்ஷித்து மஹாராஜா. சொக்கட்டான் ஆட்டம், மத்யபானம், ஸ்திரீ ஸங்கமம், ப்ராணி ஹிம்ஸை ஆகிய நான்கு அதர்ம ஸ்தானங்களிலும் வசிக்கும்படி ஆஞ்ஞாபித்தார். அதிலும் திருப்தியடையாமல் பின்னும் சிலவிடங்கள் கொடுக்க வேண்டுமென்று கலி கேட்டுக்கொள்ள, அப்பொழுது அரசன் ஸுவர்ணத்திலிருக்கும்படி சொன்னார். அதனாலும் கலி திருப்தி யடையாமலிருக்க, பின்னும் அரசன் பொய், மதம், காமம், ரஜோ குணம், விரோதம் ஆகிய ஐந்து இடங்களையும், கலிக்குக் கொடுத்தர். இப்படி உத்தரையின் புத்திரரால் கொடுக்கப்பட்ட இந்த விடங்களில் அவருடைய உத்தரவின்படி கலி வசித்துக்கொண்டிருந்தான்.

40-44. ஆனதால் க்ஷேமத்தை விரும்பியவர்கள் இவைகளை ஸேவிக்கக் கூடாது. அவைகளில் ஆசைப்படவே கூடாது. பிறகு அவர் தபஸ், சௌசம், தயை இவைகளை உலகத்தில் பரவச் செய்து முறிந்துபோன தர்மத்தின் மூன்று பாதங்களையும் விருத்தி செய்தார். பூமியையும் விருத்தி செய்தார். அந்தப் பரீக்ஷித்து என்பவர், தர்ம புத்திரர்

காட்டிற்குப் போகும் முன்னிலையில் அவரால் தமக்குக் கொடுக்கப்பட்ட இராஜ்யத்தை அடைந்து விசேஷ கீர்த்தியுள்ளவராய் பிரகாசித்தார். அபிமன்யுவின் புத்திரராகிய அந்த அரசன் இவ்வளவு மஹிமையுள்ளவர். அவர் ராஜ்ய பாலனஞ் செய்யும் காலமாகிய இப்பொழுது நீங்கள் ஸத்ரஞ் செய்ய ஆரம்பித்திருக்கிறீர்கள்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்-18

பரீக்ஷித்திற்கு நேர்ந்த ப்ராஹ்மண சாபம்

1-10 எந்தச் சக்கரவர்த்தியானவர் தாயாருடைய கர்ப்பத்திலிருக்கும்போது அச்வஸ்த்தாமாவினுடைய அஸ்திரத்தால் எரிக்கப்பட்டும் அதியற்புதமாகிய செய்கைகளுள்ள ஸ்ரீ கிருஷ்ணனுடைய அனுக்ரஹத்தால் மரணமடையவில்லையோ எவர் ப்ராஹ்மணருடைய சாபத்தால் தக்ஷனால் தமக்கு உயிர்ச் சேதம் நேர்ந்ததும் அதனால் கொஞ்சமேனும் கவலைப்படாமல் இருந்தாரோ, சுகருடைய சிஷ்யராகிய அந்த மஹா ராஜன் ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலேயே தமது மனதைச் செலுத்தி, ஸகல ஆசைகளையும் ஒழித்து, பகவான் உடைய ஸ்வரூபத்தையறிந்து கங்கா நதிக்கரையில் சரீரத்தைவிட்டார். எந்தப் புருஷர்கள் உத்தமச் லோகருடைய கதைகளைச் சொல்வதால் காலத்தைக் கழிக்கிறார்களோ, எவர்கள் மரணகாலத்திலும் பகவான் உடைய சரணாரவிந்தங்களைத் தியானஞ் செய்கிறார் களோ அவர்களுக்கு மோஹம் உண்டாவதில்லை. மேற்சொல்லிய அபிமன்யுவின் புத்திரராகிய சக்ரவர்த்தி அரசனாயிருக்கும்போது லோகத்தில் கலி வந்திருந்தாலும் அதர்மம் பரவாமலிருந்தது. என்றைய தினம் எந்த க்ஷணத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் பூமியை விட்டு மேலுலகஞ் சென்றாரோ, அன்றைய தினமே லோகத்தில் அதர்மத்தை விருத்தி செய்யும் கலி பிரவேசித்தான். தேனீ போல் ஸாரத்தைக் க்ரஹிப்பவராகிய பரீக்ஷித்து மஹாராஜன் கலியைக்கொன்று விடவில்லை. அவன் உடைய சக்தி பரவாமலிருக்கச் செய்தார். ஏனென்றால், அந்தக் கலியின் காலத்தில் ஸங்கல்ப மாத்திரத்தில்

புண்யங்களும், செய்கையால் பாபங்களும் சித்திக் கின்றன. தைர்யமற்றவர்களிடம் சூரனாகியும், தைர்யம் உள்ளவர்களிடம் பயப்படும் ஸ்வாவமுள்ளவனாயு மிருக்கிற கலியானவன் அஜாக்ரதை உள்ளவர்களைப் பிடித்துக்கொள்ள செந்நாய்போல மிக்க ஜாக்கிரதை யுள்ளவனாக இருக்கிறான் (அவன் என்ன கெடுதியைச் செய்யப் போகிறான் என்பது கருத்து) ஓ மஹர்ஷிகளே! உங்களால் கேட்கப்பட்டதும் மிக்க புண்யகரமுமான பரீக்ஷித்தின் சரிதத்தை ஸ்ரீ வாஸுதேவருடைய திவ்ய கதைகளுடன் சொன்னேன். ஆதலால் க்ஷேமத்தை விரும்பிய மனிதர்கள் பகவானுடைய குணங்கள், சரித்திரங்கள் ஆகிய இவைகளடங்கிய கதைகளையே சொல்ல வேண்டும். அவைகளையே கேட்க வேண்டும். மற்ற கதைகளை ஸேவிக்கக் கூடாதென்பது கருத்து, என்று ஸூதர் சொன்னார்.

11–18 இதனைக் கேட்டு மஹர்ஷிகள் அவரை நோக்கி, 'ஓ ஸூதரே! நீர் மரண தர்மமுள்ள எங்களுக்கு அமிருதமான ஸ்ரீ கிருஷ்ண கதையைச் சொன்னதால் வெகுகாலம் ஜீவித்திருக்கும் எங்களால் இப்பொழுது அனுஷ்டிக்கப்படும் ஸத்ரத்தை யாதொரு குறைவுமின்றி முடிப்பது அரிதாகையால் அதன் பூர்ண பலத்தை அடைவோமென்பது நிச்சயமில்லை, ஆகிலும், அதனைச் செய்து கொண்டு புகையினால் கறுத்த சரீரமுள்ள வர்களாகிக் கஷ்டப்படும் எங்களுக்கு ஸ்ரீ கோவிந் தருடைய பாதங்களாகிய தாமரை மலரின் தேனைக் கொடுத்தீரல்லவா? பகவத் பக்தர் களுடைய சேர்க் கையின் சிறிது பாகத்திற்குச் ஸ்வர்க்கமாவது, மோக்ஷமாவது, மற்ற ராஜ்யம் முதலியவைகளாவது ஸமமானவையல்ல. மஹான்களுக்கு முக்கியமான

கதி பரம புருஷனே. அவரிடத்தில் ப்ராகிருத குணங்களில்லை. அவரிடத்தில் பொருந்தியிருக்கும் கல்யாண குணங்கள் இவ்வளவென்று பரமசிவன், ப்ரஹ்மா முதலிய தேவர்களாலும் அறிய முடியவில்லை. அப்பேர்ப்பட்ட பகவானுடைய கதையைக் கேட்டு ரஸிகனான எவன்தான் போதுமென்று திருப்தி அடைவான்? ஆதலால் பகவத் பக்தர்களுக்குள் முக்கியரும் எல்லாவற்றையு மறிந்தவருமான நீர் மிக்க கம்பீரமாயும், பரிசுத்தமாயுமுள்ள மஹா விஷ்ணுவின் சரிதத்தைக் கேட்க விரும்பும் எங்களுக்கு விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும். மஹா பாகவத சிரோமணியான அந்தப் பரீக்ஷித்து மஹாராஜன் சுகரால் உபதேசிக்கப்பட்ட ஞானத்தால் மோக்ஷமென்ற பெயருள்ள ஸ்ரீ நாராயணனுடைய சரணத்தையடைந் தாரல்லவா? மிகுந்த புண்யத்தைக் கொடுப்பதும், மிகவும் அற்புதமுமாகிய யோகத்தைக் காட்டுவதும், நாசமற்றவராகிய பகவானுடைய சரீரத்தால் அலங்கரிக் கப்பட்டதும், பக்த பக்தர்களுக்கு மனோஹரமாய், பரீக்ஷித்துக்குச் சுகரால் உபதேசிக்கப்பட்டதுமான ஸ்ரீமத் பாகவதமென்ற ஆக்யானத்தை நன்றாகத் தெரியும்படி சொல்ல வேண்டும் என்று ப்ரார்த்தித் தார்கள்.

18–23 இதனைக் கேட்டு ஸூதர் சொல்லுகிறார். ஆச்சரியம், யான் விலோம ஜாதியுள்ளவனானாலும் என்னுடைய பிறப்பும் இப்பொழுது பெரியோர்களைச் ஸேவித்ததால் சபலமாயிற்று. மிக்க மகான்களாகிய புருஷர்களுடன் பேசக் கூடிய பாக்யம் கிடைத்த தாலேயே தாழ்ந்த குலத்தில் பிறந்ததால் உண்டான மனக்கவலை நீங்கியது. எந்தப் புருஷன் அளவற்ற

சக்தி, அளவற்ற குணங்கள் ஆகிய இவைகளுள்ளவரோ, நாசமற்றவரோ; அதனால் அனந்தரென்று சொல்லப் படுகிறாரோ, மகான்களுக்கு முக்கிய கதியாயிருக்கும் அந்தப் புருஷோத்தமருடைய குணங்களைச் சொல்லுகிற எனக்குத் துக்கமே நேரிடாது. லக்ஷ்மீ தேவியானவள் தன்னைப் ப்ரார்த்திக்கும் ப்ரஹ்மா முதலிய தேவர்களை லக்ஷியம் செய்யாமல் தன்னை விரும்பாதவரான ஸ்ரீ நாராயணனுடைய பாததூளியை சேவிக்கிறாள். அவருக்குச் சமமானவராவது, மேற்பட்ட வராவது ஒருவருமில்லை. இதனாலேயே அவருடைய மஹிமை நன்றாக விளங்கும். தவிரவும், எவருடைய சரண நகத்திலிருந்து பெருகியதும், ப்ரஹ்மதேவரால் சேவிக்கப்பட்டதுமான கங்காஜலம் பரமசிவன் முதலிய எல்லோரையும் பரிசுத்தப்படுத்துகிறதோ, அந்த முகுந்தனைத் தவிர வேறு யாரைப் பகவான் என்று சொல்லக்கூடும்? அந்த ஸர்வேசனிடம் அந்தரங்கத்தைச் செலுத்தியவர்கள் தைர்யமுள்ள வர்களாகத் தேகம் முதலியவைகளில் வெகுநாளாக உண்டாகியிருக்கும் விசேஷ அபிமானத்தை யொழித்து, அஹிம்சை, சமம் இவைகளுடன் கூடி பரமஹம் சர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆனதால் ஸூர்யனுக்குச் சமமான தேஜஸுள்ள ஓ மஹர்ஷிகளே! பகவான் உடைய சரிதத்தைச் சொல்லுகிறேன். பறவைகள் தம்முடைய சக்திக்குத் தக்கபடி ஆகாயத்தில் பறக்குமே அல்லாமல் வெகு உயரத்தில் சக்தியை மீறிப் பறக்க அவைகளால் முடியுமா? வித்வான்கள் தமது புத்திக்கு எட்டியவரையில் மஹாவிஷ்ணுவின் லீலைகளை வர்ணிக் கிறார்கள். அப்படிப்போல எனக்குத் தெரிந்தவரையில் பகவானுடைய சரிதத்தைச் சொல்லுகிறேன் என்று பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்.

24–31 பரீட்சித்து மஹாராஜன் ஒரு நாள் காட்டில் வேட்டையாடி வரும்போது மிருகங்களை நாடிச் சென்றதால் மிகுந்த பசி தாகமுள்ளவராய், ஏரி குளங்களைத் தேடிப் போகும்போது ஒரு ஆசிரமத்தைக் கண்டார். பின்பு அதனுள் சென்று அவ்விடத்தில் கண்களை மூடிக்கொண்டு நிஷ்டையிலிருக்கும் ஒரு மஹர்ஷியைக் கண்டார். அந்த மஹர்ஷி இந்திரியங் களையும் ஸ்வாசத்தையும் அடக்கிக் கொண்டிருந்தார். அவருடைய புத்தியானது விஷயங்களிற் செல்ல வில்லை. ஜாக்ரத், சுவப்னம், சுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளையும் தாண்டி விகாரமற்ற ப்ருஹ்ம ஸ்வரூபியாயிருந்தார். அவருடைய ஜடைகள் நாலு பக்கங்களிலும் அவரை மறைத்துக் கொண்டிருந்தன. தவிரவும் மானின் தோலைப் போர்த்துக் கொண்டு இருந்தார், அவரை நோக்கி அரசன் மிகுந்த தாகத்தால் அதிக வருத்தப்பட்டுத் தண்ணீர் கொடுக்கும்படி பல தரம் வேண்டிக்கொண்டார். இப்படி மகாராஜன் கேட்டு அவருக்கு குடிக்க நீர் கொடாமலிருந்தது இன்றி ஆசனங் கொடுப்பது உட்காருவதற்கு இடம் காட்டுவது. அர்க்கியம், ப்ரியமான வார்த்தை முதலியவைகளாலும் அவரை உபசரிக்கவுமில்லை. அப்பொழுது அரசன், 'மஹர்ஷி தம்மை அவமதித்தார்' என்று நினைத்துப் பசி, தாகம் இவைகளால் துன்பப்பட்டவராகையாலும் அவருக்கு மஹர்ஷியினிடம் கோபமும் விரோதமும் உண்டாயின. இம்மாதிரியான கெட்டகுணம் இதற்கு முன் நேர்ந்தது இல்லை, பின்பு அரசன் ஆசிரமத்திலிருந்து வெளியில் வரும்போது, 'இந்த மஹர்ஷி உண்மையில் நாம், வந்தது தெரியாமல் நிஷ்டையிலிருக்கிறாரா, அல்லது க்ஷத்திரியன் வந்தாலென்ன, போனாலென்னவென்று

கபடமாகக் கண்களை மூடிக்கொண்டிருக்கிறாரா? என்று பரீட்சிப்பதற்காக உயிரிழந்த ஒரு பாம்பை வில் கழியின் நுனியால் தூக்கி அவருடைய கழுத்தில் போட்டுத் தமது பட்டணம் சென்றார்.

32–38 அப்பொழுது மிகுந்த தேஜஸ்வியான சிருங்கி யென்னும் அந்த மஹர்ஷியின் புத்திரன் தோழர் களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அந்த இடத்தில் அரசன் செய்த காரியத்தைக் கேள்விப் பட்டு, தன் தோழர்களை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானான்." ஆச்சரியம் அதர்மம் மேலிட்டது. நாய்களைக் காவலுக்காக வைப்பதுபோல க்ஷத்திரியர்களைப் ப்ராஹ்மணர்கள் காவலாளர்களாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். வாசலில் காத்துக்கொண்டு இருக்கும் அவன் எப்படி பூஜிக்கத் தக்கவனாவான்? பலியைப் புஜிக்கும் காக்கைகள் போலும் (ஜனங் களால் கொடுக்கப்படும் வரியைக் கொண்டு ஜீவிப்பவ னென்பது கருத்து). வாசலைக்காத்திருக்கும் நாய்கள் போன்ற கொழுத்த க்ஷத்திரியர்கள் யஜமானனுக்குக் குற்றஞ்செய்யும்படி நேர்ந்ததே. கெட்ட மார்க்கத்தில் சஞ்சரிப்பவர்களைச் சிக்ஷிப்பவரான ஸ்ரீ கிருஷ்ண பகவான் வைகுண்டஞ் சென்றாலும் மரியாதை தவறினவர்களை நான் நிக்ரஹிக்கிறேன் என்னுடைய பலத்தைப் பாருங்கள் என்று சொல்லி கோபத்தால் கண்கள் சிவக்க, கௌசிகீ நதியின் ஜலத்தால் ஆசமனஞ் செய்து, என்னுடைய பிதாவிற்கு அபராதஞ் செய்தவனும், மரியாதை தவறினவனும், குலத்திற்கு நெருப்புத் தணல் (குலத்தைக் கெடுப்பவனென்று கருத்து) போன்றவனுமாகிய அரசனை இது முதல் ஏழாவது நாளில் தக்ஷகன் கடித்து எரிந்து விடுவானாக

என்று சபித்தான். பின்பு ஆசிரமம் வந்து அந்த இடத்தில் பிதாவின் கழுத்தில் சர்ப்பத்தைக் கண்டு மிகவும் துக்கப்பட்டுக் கதறினான்.

38–39 1/2 இதைக் கேட்டு சமீகரென்னும் அந்த மஹர்ஷியானவர் மெள்ள கண்களைத் திறந்து தம்முடைய தோளில் உயிரில்லாத பாம்பிருக்கக்கண்டு அதனை எடுத்து எறிந்துவிட்டுத் தமது புத்திரனை நோக்கி, 'ஓ குழந்தாய் ஏன் அழுகிறாய்? எவர்கள் உனக்கு எவ்விதக் குற்றத்தைச் செய்தார்கள்?' என்று கேட்டார்.

40–50 1/2 அதனைக் கேட்டு, சிருங்கியென்பவர் நடந்த விஷயம் எல்லாவற்றையும் உண்மையாகத் தெரிவித்தார். அதனைக் கேட்டும் மஹர்ஷியானவர் தம்முடைய புத்திரன் மகாராஜனைச் சபித்தது உசிதமல்லவென்று நினைத்து, அவனை நோக்கிப் பின்வருமாறு தர்மத்தின் இரகசியத்தை உபதேசித்தார். ஓ ஒன்றையு மறியாதவனே! அரசன் செய்த சிறு குற்றத்திற்காகப் பெரிதாகிய சிக்ஷையைச் செய்தது உசிதமன்று. பெரியதாகிய பாபத்தைச் செய்தாய். ஓ விவேகமற்றவனே! அரசன் மகாவிஷ்ணுவின் அம்சம் உள்ளவனாகையால் அவனைச் ஸாமானிய மனிதனாக நினைக்கக் கூடாது. அவனுடை தேஜஸ் ஸகிக்க முடியாதது. அவனால் காப்பாற்றப்பட்டு ஜனங்கள் ஒருவரிடத்திலும் பயமில்லாதவர்களாக வசிக்கிறார்கள். மகாவிஷ்ணுவின் அம்சமுள்ள அவ்வரசனில்லாவிடில் ஜனங்கள் ஆடுகளின் கூட்டம்போல் க்ஷணகாலத் திற்குள் நாசமடைவார்கள். தேசத்தில் அரசனில்லாத வரையில் ஜனங்களுடைய தனங்களை அபகரிக்கும்

திருடர்கள் மிகுதியாய் விடுவார்கள். ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்வார்கள். கடுமையாகப் பேசுவார்கள். பசுக்கள், ஸ்திரீகள், பணங்கள் ஆகிய இவைகளை அபகரிப்பார்கள். ஆகையால் அதனாலுண்டாகும் பாபம் நம்மைச் சேர்ந்ததாகும். (அரசனைச் சபித்தாலென்பது கருத்து) மேலும், வர்ணாசிரம தர்மங்கள் குறைந்து விடும். நல்லொழுக்கம் மறைந்துவிடும். நாய்கள் போலவும், குரங்குகள் போலவும் அர்த்தம், காமம் இவைகளிலேயே ஜனங்கள் மிகவும் ஆசை கொள்வார்கள். அதனால் வர்ண ஸங்கரம் உண்டாகும், தவிரவும் பரீக்ஷித் மகாராஜனோ தர்மத்தைக்காப்பாற்றி கிறவர். சக்ரவர்த்தி, மிகுந்த கீர்த்தியுள்ளவர், பகவத் பக்தர். அச்வமேத யாகஞ் செய்தவர். மேலும் என்னிடம் வந்த சமயத்தில் பசி தாகத்தால் ச்ரமம் அடைந்து தீனராயிருந்தவர். ஆனது பற்றி அவரைச் சபிப்பது நியாயமல்ல. குற்றஞ்செய்யாத வேலைக்காரர் களிடம் செய்த அபராதத்தைச் ஸகல ஜகத்ரூபியான பகவான் பொறுத்துக் கொள்ளட்டும். விஷ்ணு பக்தர்களை ஒருவன் நிந்தித்தாலும், ஏமாற்றினாலும், அவமதித்தாலும், அடித்தாலும் அவர்கள் ப்ரதி செய்ய சாமர்த்தியமுள்ளவர்களானாலும் ஒன்றுஞ் செய்கிறதில்லை என்று சொல்லித் தமது புத்திரன் செய்த குற்றத்தைப் பற்றி மஹர்ஷி பச்சாதாப மடைந்து, அரசன் செய்த குற்றத்தை மனத்தில் நினைக்காமலேயே இருந்தார். பெரும்பாலும் சாதுக்கள் பிறர் செய்த கெடுதியால் அவர்களிடத்தில் கோபித்து வருத்தமடைகிறதில்லை. உபகாரத்தால் சந்தோஷம் அடைகிறதுமில்லை. ஏனென்றால் ஆத்மாவானது உண்மையில் சுகத்திலாவது துக்கத்திலாவது ஸம்பந்திக்கிறதில்லை.

அத்தியாயம்-19

கங்கைக்கரைக்குச் சுகர் வந்தது

பரீக்ஷித்து மகாராஜன் தம்முடைய பட்டணஞ் சென்ற பிறகு மஹர்ஷியின் ஆசிரமத்தில் தாம் செய்து வந்த குற்றத்தை நினைத்து வருத்தப்பட்டுத் தமக்குள் தாம் பின்வருமாறு யோசிக்கலானார்: 'யாதொரு அபராதமுஞ் செய்யாதவரும், தேஜஸ்ஸை அடக்கிக் கொண்டவருமான தபஸ்வியினுடைய கழுத்தில் ஸர்ப்பத்தைப் போட்டேன். அது மிகக் கெட்ட கார்யம். 'பாபத்தைச் செய்யக்கூடாது' என்ற தெய்வத்தின் கட்டளையை மீறினதாக ஆயிற்று, ஆனதால் தடுக்க முடியாத துக்கம் சீக்கிரத்தில் நேரிடும். இனி நான் இப்படிப்பட்ட கெட்ட காரியத்தைச் செய்யாமல் இருப்பதற்காகவும், செய்த பாபத்திற்குப் ப்ராயச்சித்த மாகவும் அந்தத் துக்கம் எனக்கே நேரில் வரவேண்டும் (புத்திரன் முதலியவர்களுக்கும் நேரிட வேண்டாம் என்பது கருத்து) நான் ப்ராஹ்மணர்களுக்குக் கோபத்தை யுண்டுபண்ணினதால் ப்ராஹ்மண குலமாகிய அக்னி யானது மிக்க பாபியான என்னுடைய இராஜ்யம், சைன்யம், பூர்ணமான செல்வம் ஆகிய இவைகளை இப்பொழுதே எரிக்கட்டும். ப்ராஹ்மணர்கள், தேவர்கள் பசுக்கள் ஆகிய இவர்கள் விஷயத்தில் மறுபடியும் எனக்கு இப்படிப்பட்ட கெட்ட புத்தி யுண்டாக வேண்டாம் என்று சிந்தித்தார்.

4-17. இந்தச் சமயத்தில் சமீக மஹர்ஷியின் சிஷ்யன் ஒருவன் குருவின் அனுமதிப்படி வந்து, சிருங்கியின்

சாபத்தை அரசனிடம் தெரிவித்தான். அதனைக்கேட்டு மகாராஜன் 'விஷயங்களில் மிகுந்த ஆசையுள்ள நான் வைராக்யமடைவதற்குத் தட்சகனுடைய விஷாக்னியே காரணமென்றும், அது சீக்கிரமாக நேரிடவேண்டும்' என்றும் நினைத்தார். பின்னுமவர் இவ்வுலகம், பரலோகம் ஆகிய இவ்விரண்டையும் துச்சமென்று தள்ளிவிட்டு, ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதஸேவையையே பெரிதாக நினைத்துக் கங்கைக் கரையில் பிராயோபவேசஞ் செய்ய முயற்சித்தார். எந்த நதியானது துளஸியுடன் சேர்ந்த மகாவிஷ்ணுவின் பாததூளியை விட மிக்க புண்யகரமான ஜலப்பிரவாகமுள்ளதோ, லோகபாலர்களுட்பட எல்லாரையும் வெளியிலும் அந்தரங்கத்திலும் பரிசுத்தப் படுத்துகிறதோ, அந்தக், கங்காநதியைச் சாகுந் தருணத்திலிருக்கும் எவன்தான் ஸேவிக்க மாட்டான்? இப்படி அந்த நதிக்கரையில் பிராயோபவேசஞ் செய்வதாகத் தீர்மானித்து வேறு விஷயத்தில் மனதைச் செலுத்தாமல் ஸ்ரீ கிருஷ்ணன் உடைய சரணங்களையே தியானித்து, ஸகல ஆசை களையும் விட்டுவிட்டு முனியாக விருந்தார். அப்பொழுது அத்ரி, வசிஷ்டர், ச்யவனர், சரத்வான், அரிஷ்டநேமி, ப்ருகு, ஆங்கிரஸ், பராசரர், விசுவாமித்ரர், பரசுராமர், உதத்யர், இந்திரப்பரதமர், இத்மவாஹர், மேதாதிதி, தேவலர், ஆர்ஷ்டிஷேணர், பரத்வாஜர், கௌதமர், பிப்பலாதர், மைத்ரேயர், ஔர்வர், கவஷர், அகஸ்தியர், த்வைபாயனர், பகவானான நாரதர் மற்ற தேவரிஷிகள் ப்ரஹ்மரிஷிகள், ராஜரிஷிகள், அருணர் முதலியவர்கள் ஆகிய இவர்களெல்லோரும் தங்கள் தங்கள் சிஷ்யர் களுடன் அவ்விடம் வந்தார்கள். அவர்களெல்லோரும் தீர்த்தயாத்திரை செய்கிறோம் என்று வ்யாஜமாக லோகத்தைப் பரிசுத்தி செய்துகொண்டு சஞ்சரிப்பவர்கள்.

அப்பொழுது அவ்வரசன் பலவகையான ரிஷி கோத்தரத்தில் சிறந்தவர்களான அவர்களை முறை தவறாமல் பூஜித்து நமஸ்காரஞ் செய்தார். அவர்கள் சுகமாக உட்கார்ந்தபொழுது பின்னுமவர்களுக்கு நமஸ்காரஞ் செய்து அவர்கள் முன்பாக இரு கை களையும் கூப்பிக்கொண்டு சுத்த சித்தமுள்ளவராய்த் தமது இஷ்டத்தைப் பின்வருமாறு வெளியிட்டார். பெரியோர்களால் அனுக்ரஹிக்கக்கூடிய ஸ்பாவமுள்ள நான் மிகவும் தன்யனாகவிருக்கிறேன். ப்ராஹ்மணர் களுடைய சுத்தமான பாததீர்த்தத்தைபடையாத க்ஷத்திரிய குலம் நிந்திக்கக் கூடியதே. மிக்க பாப ஸ்பாவமுள்ள வனும், ஸம்சார ஸுகத்திலேயே எப்பொழுதும் ஆசையை வைத்தவனுமான எனக்கு வைராக்யத்தை யுண்டுபண்ணுவதற்காகவே ப்ராஹ்மண சாபம் நேரிடும்படி செய்து பரமபுருஷன் என்னையனு க்ரஹிக்கிறார். பகவானையே மனத்தில் த்யானிக்கிறேன். மேலும் பெரியோர்களான உங்களையும், கங்காதேவி யையும் சரணமடைகிறேன். ப்ராஹ்மண சாபத்தால் தூண்டப்பட்ட தக்ஷகன் என்னை வஞ்சித்து இஷ்டப் படி கடிக்கட்டும். நீங்கள் மகாவிஷ்ணுவின் சரிதத்தைக் கானம் செய்யுங்கள். நான் பின்பு எந்தச் சரீரத்தை யடைந்தாலும் அந்தந்த ஜன்மாவில் ஈசுவரனிடத்திலும் அவருடைய பக்தர்களிடத்திலும் எனக்கு விசேஷ சிநேக முண்டாகட்டும் என்று சொல்லித் தம்முடைய பிள்ளையான ஜன்மேஜயரிடம் இராஜ்யத்தைஒப்பித்து. கங்கையின் தென் கரையில் தர்ப்பங்களைக் கிழக்கு நுனியாகப் பரப்பி, அவைகளின் மீது வடக்கு முகமாய் வீற்றிருந்தார்.

18–21. இப்படி அரசன் ப்ராயோபவேசஞ் செய்த

பொழுது தேவர்கள் அனைவரும், அவரைக் கொண்டாடிப் புஷ்பங்களை வர்ஷித்தார்கள், துந்துபி வாத்தியங்களை முழங்கினார்கள். தவிர, பிரஜைகளையனுக்கிரஹிக்கும் ஸ்வபாவமுள்ள அவ்விடம் வந்திருந்த மஹர்ஷிகள் அவரைச் சிலாகித்து ஸாதுவாதஞ் செய்து அவரை நோக்கி, 'ராஜ ச்ரேஷ்டரே கிருஷ்ண பகவான் இடத்தில் விசேஷ பக்தியுள்ளவரும், இராஜ்யம் முதலியவைகளில் ஆசையில்லாதவருமான பாண்டவ குலத்தில் பிறந்த உமக்கு இம்மாதிரி எண்ணம் நேர்ந்தது இயல்பேயாம்' என்று சொல்லி அவர்கள் ஒருவருக்கொருவர் இந்தப் பாகவத சிரோமணியான சக்ரவர்த்தி இந்தச் சரீரத்தை விட்டு மாயா ஸம்பந்தமில்லாததும், துக்கமற்றதுமான பரமபதத்தை அடையப்போகிறபடியால் அது வரையில் நாம் எல்லோரும் இவ்விடத்திலேயே வசிப்போம் என்று நிச்சயித்துக்கொண்டார்கள்.

22–24. அப்பொழுது பக்ஷபாதமில்லாததும், தேன் போல ரஸமுள்ளதும், கம்பீரமாகிய அர்த்தமுள்ளதும் உண்மையானதுமான மஹர்ஷிகளின் வார்த்தையைக் கேட்டு பரீக்ஷித்தானவன் மகாவிஷ்ணுவின் சரிதத்தைக் கேட்க விரும்பியவராய் அவர்களை நோக்கி, ஸத்ய லோகத்தில் சரீரத்துடன் இருக்கும் வேதங்கள் போல நீங்கள் அனைவரும் இவ்விடம் வந்தீர்கள். பிறரை அனுக்ரஹிப்பதை விட வேறு பிரயோஜனம் இவ் வுலகத்திலும், மேலுலகத்திலும் உங்களுக்கில்லை. ஆகையால் உங்களைக் கேட்கிறேன். சாகுந்தருணத்தில் இருப்பவர்கள் செய்யவேண்டிய சுத்தமாகிய தர்மம் யாது? யோசித்து சொல்லுங்கள் என்று கேட்டார்.

25–39. அந்தச் சமயத்தில் வ்யாஸருடைய புத்திரர்

ஆகிய சுகர் அவதூத வேஷமுள்ளவராய், பாலர் களுடன் தெய்வச்செயலாய் அவ்விடம் வந்தார். அவரிடத்தில் ஆசிரமத்துக்குரிய அடையாளமாவது ஜாதியைக் காட்டும் குறியாவது யாதொன்றுமில்லை. அவர் ஆத்ம லாபத்தாலேயே சந்தோஷமடைந்தவர். அப்பொழுது பதினாறு வயதுள்ளவராயிருந்தார், அழகான கைகளும், கால்களும், தொடைகளும், தோள்களும். கன்னங்களும், கண்களும், உயர்ந்த மூக்குகளும், சமமான காதுகளுமுடையவராய்ப் பிரகாசித்தார். சதைகளில் மறைந்த நரம்புகளுள்ளவர், விசாலமும் உயர்ந்ததுமான மார்புள்ளவர், சுழல்போன்ற நாபி யுள்ளவர். மூன்று மடிப்புகளால் அழகான வயிறு உள்ளவர், திக்குகளையே வஸ்திரமாகக் கொண்டவர். சுருண்டும் பரந்து மிருக்கும் தலைமயிருள்ளவர். மிகவும் மேலான யௌவன முள்ள வயதுள்ளவராகையால் ஸ்திரீகளுடைய மனதை அபஹரிப்பவர். அழகான சிரிப்புள்ளவர். இப்படிப்பட்ட அவரைப்பார்த்து அவருடைய லக்ஷணத்தையறிந்தவர்களான மஹர்ஷிகள் எதிர்கொண்டழைத்தார்கள். அப்பொழுது சக்ரவர்த்தி ஆனவர் வந்த அதிதியாகிய சுகருக்கு நமஸ்காரம் செய்தார். பின்பு அவருடன் வந்த அக்ஞர்களான ஸ்திரீகளும் பாலர்களும் திரும்பி போனார்கள். சுகர் பெரிதான ஆஸனத்தில் உட்கார்ந்தார். அப்பொழுது ப்ரஹ்மரிஷிகள், தேவரிஷிகள், ராஜரிஷிகள் இவர் களுடன் மத்தியிலிருக்கும் சுகர் சுக்ரன் முதலிய கிரகங்களுடையவும் அசுவினி முதலிய நட்சத்திரங்களு டையவும், மற்ற தாரைகளுடையவும் நடுவிலிருக்கும் சந்திரன் போலவும் பிரகாசித்தார். இப்படி சாந்தமனம் உள்ளவரும் தடையற்ற மேதையுள்ளவருமான சுகரை மகா பாகவதரான பரீட்சித்து மகாராஜன் பின்னும்

நமஸ்கரித்து அஞ்சலிபந்தம் செய்து, தலைவணங்கி, ஸாவதானமாய் நின்று, பின்வருமாறு மிருதுவாகச் சொல்லலானார்; ஓ பிராஹ்மண! க்ஷத்திரியனாகிய நான் ஸாதுக்களால் ஸேவிக்கக்கூடியவனாகிறேன், என்னுடைய பாக்கியம் வியக்கத்தக்கது, நீங்கள் அதிதியாக வந்து கிருபையால் என்னைப் பரிசுத்தப் படுத்தினீர்கள்; பாதத்தை வைத்தமாத்திரத்தில் வீடு முதலிய யாவும் பரிசுத்தமாய் விடக்கூடிய உங்களைத் தரிசித்தலாலும் ஸ்பர்சித்தலாலும், உங்களுடைய பாதங்களை அலம்புதலாலும்' ஆஸனங்கொடுத்த தனாலும் யான் பரிசுத்தமடைவதில் யாது சந்தேகம்? விஷ்ணுவைக் கண்ட அசுரர்கள் போலத் தங்களைத் தரிசித்த மாத்திரத்தில் மகா பாபங்களும் உடனே நீங்குகின்றன, பாண்டவர்களிடத்தில் மிகுந்த ப்ரியம் உள்ள ஸ்ரீ கிருஷ்ண பகவான் என்னிடத்தில் சந்தோஷமடைந்தார், அத்தையின் குமாரர்களிடம் மிகுந்த பிரியத்தால் அந்த வம்சத்தில் பிறந்த எனக்கும் தங்களுடைய தரிசனத்தைச் செய்வித்தார். அவருடைய அனுக்ரஹமில்லாமற் போனால் உங்களுடைய தரிசனம் மரணமடைய சித்தனாயிருக்கும் எனக்குக் கிடைக்குமா? தாங்கள் ஸித்தர்கள். உங்களுடைய பக்தியோ கண்டுபிடிக்க முடியாதது; நீங்கள் மிகவும் தாதாவாகையால் எல்லோரையும் யாசிக்க செய்பவர், ஆகையால் ஸித்திப் பெற்றவரும், யோகிகளுக்குப் பரம குருவுமாகிய உங்களை ஒரு விஷயம் கேட்கிறேன், அஃதாவது, 'மரணமடையும் ஸமயத்தையுடைய வன் என்ன செய்யவேண்டும்? எதனைக் கேட்கவேண்டும் எதனை நினைக்கவேண்டும்? எதனை உபாஸிக்க வேண்டும்? எவற்றைச் செய்யக்கூடாது? இவைகளைச் சொல்லவேண்டும்? நீங்கள் கிருகஸ்தர்களுடைய

வீட்டில் மாடு கறப்பதற்கு எவ்வளவு காலம் செல்லுமோ அவ்வளவு காலம் கூட நிற்கிற வழக்கம் இல்லையே: ஆனதால் சீக்கிரம் சொல்லவேண்டும் என்று பிரார்த்திதார்.

40. இந்தப்படி பரீக்ஷித்து மகராஜனால் கேட்கப் பட்டவுடன் ஸகல தர்மங்களையுமறிந்த சுகர் ப்ரத்யுத்தரம் சொல்லவாரம்பித்தார்.

♣ ♣ ♣ ♣

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்கந்தம் 2

அத்தியாயம் 1

விராட் புருஷனுடைய அவயவங்கள்

சுகமஹர்ஷியானவர் பரீக்ஷித்து மஹாராஜனைப் பார்த்து ' ஓ அரசனே! உம்மால் கேட்கப்பட்ட கேள்வி மிகவும் மேலானது. உலகத்திற்கு அனுகூலத்தைச் செய்யக்கூடியது; ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்தவர்கட்குப் பிரியமானது; கேட்கத்தகுந்தவைகள், சொல்லத் தகுந்தவைகள், நினைக்கத்தகுந்தவைகள் ஆகிய இவை களில் இது மிகவும் சிறந்தது. ஓ ராஜசிரேஷ்டரே! ஆத்ம ஸ்வரூபத்தையறியாதவர்களும், ஐந்து வகையான, இம்சைகளைச் செய்பவர்களுமான கிருஹஸ்தர்களுக்குக் குருமுகமாகத் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் அனேகமிருக்கின்றன. (மோக்ஷத்தை விரும்பியவர்கள் தெரிந்து கொள்ளக்கூடியது, ப்ரஹ்மம் ஒன்றுதான் என்று தாத்பரியம்.) மேலும் ஜனங்களுடைய ஆயுளானது இரவில் தூக்கத்தாலும் பகலில் பணத்து ஆசையாலும், கிடைத்த பணத்தால் குடும்பத்தைப் போஷிப்பது முதலியவைகளாலும், யௌவனமானது மைதுனத்தாலும் வீணாகக் கழிக்கப்படுகிறது. பின்னும் ஜனங்கள் அநித்யங்களான தேகம், குழந்தைகள், பார்யை ஆகிய ஸாமக்ரியைகளில் மிகுந்த அபிமானம் வைத்திருக்கிறார்கள். மேலும் அவர்கள் சரீரம் முதலியவைகள்நாசமடைவதை நேரில் பார்த்திருந்தும்

அவைகளை நித்யங்களென்றே நினைக்கிறார்கள். ஓ பரத வம்சத்தில் பிறந்தவரே! ஸகல ஜகத் ஸ்வரூபியும் அவை களுக்கு அதிபதியும், ஸம்ஸாரத்தைப் போக்கடிப்ப வராயுள்ள புருஷோத்தமருடைய சரிதத்தையே கேட்க வேண்டும். அதுவே மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியது. அதுவே உச்சரிக்கக்கூடியது. மனனஞ் செய்யக்கூடியது. எவன் மரணமடையும் சமயத்தில் நாராயணனை ஸ்மரிக்கிறானோ அதுவே அவனுக்கு உத்தமமான லாபம். ஆத்ம ஸ்வரூப விசாரமாகிய ஸாங்கியம், அஷ்டாங்க யோகம், தன் ஜாதிக்கும் ஆசிரமத்திற்கும் உரிய தர்மங்கள் ஆகிய இவைகளை அனுஷ்டிப்பதால் மரண காலத்தில் ஸ்ரீமந் நாராயணனை ஸ்மரிக்கும்படி நேரும். அதுவே இந்த ஜன்மத்தின் ப்ரயோஜன மெனப்படுகிறது. ஓ மஹாராஜ! விதி நிஷேதங்களைக் கடந்தவர்களும், நிர்க்குண ப்ரம்ஹ ஸ்வரூபத்தை யறிந்தவர்களுமான முனிகளும் பெரும்பாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் குணங்களைத் தியானஞ் செய்து கொண்டே காலத்தைக் கழிக்கிறார்கள். ஆகையால் நான் த்வாபர யுகத்தின் கடைசியில் என்னுடைய பிதாவாகிய வ்யாஸ மஹர்ஷியினிடமிருந்து ப்ரஹ்ம ஸ்வரூபத்தை தெரிவிக்கும் இந்த ஸ்ரீமத் பாகவத புராணத்தை அத்யயனஞ் செய்தேன். ஓ ராஜரிஷியே! நான் இயற்கையில் ப்ரஹ்ம ஸ்வரூபத்தையறிந்த வனானாலும் உத்தமமான புண்யத்தைக் கொடுக்கும் பகவானுடைய சரிதத்தில் விசேஷ ப்ரேமையால் அந்த உபாக்கியானத்தை அப்யஸித்தேன். நீர் மஹாபுருஷனாகிய விஷ்ணுவின் பக்தராகையால் உமக்கு அதைச் சொல்லுகிறேன். அதில் சிரத்தை யுள்ளவர்களுக்கு முகுந்தரிடத்தில் (மோக்ஷத்தைக்

கொடுப்பவர்) பக்தியுண்டாகும். விஷயங்களில் நிர் வேதத்தையடைந்தவர்களும் மோக்ஷத்தை விரும்பியவர் களுமான யோகிகளுக்கு மஹாவிஷ்ணுவின் திவ்ய நாமங்களைக் கானம் பண்ணுவதே அபயத்தைக் கொடுக்கக்கூடியது: ஆதலால் ஸித்தர்களுக்கும், ஸித்தியடைய வேண்டியவர்களுக்கும் இதை விட அனுகூலமான மார்க்கம் வேறில்லை. புத்திரன் முதலிய வர்களிடத்தில் அபிமானம் வைத்து அறியாமலே வீணாகக் கழிக்கப்பட்ட அனேக வர்ஷங்களால் என்ன பிரயோசனம்? எந்தக் காலத்தில் ஆயுளானது வீணாகக் கழிக்கப்படுகிறதென்று தெரிந்துகொள்ளு கிறானோ அந்தக் காலமே மேலானது.

அதனால் நல்ல காரியத்தைச் செய்ய முயற்சி யுடையவனாவான். முன்னொரு காலத்தில், கட்வாங்கன் என்ற ஒரு ராஜரிஷியானவர் (தேவாஸுர யுத்தத்தில் தேவர்களுடைய பக்ஷத்திலிருந்து அஸுரர்களை ஜயித்தார். அப்பொழுது அவரிடத்தில் தேவர்கள் ஸந்தோஷப்பட்டு 'வேண்டியதைக் கேளும், என்றார்கள். கட்வாங்கன் 'நான் எத்தனை காலம் ஜீவித்திருப்பேன், என்று கேட்டான். பின்பு தேவர்கள், இன்னும் ஒரு முஹூர்த்தந்தான் உன்னுடைய ஆயுளில் பாக்கி இருக்கிறது' என்று பதில் சொன்னார்கள்.) தம்முடைய ஆயுளில் மீதியிருக்கும் காலம் இவ்வளவு என்று தெரிந்து கொண்டு ஒரு முஹூர்த்தத்துக்குள் ஸகல ஆசைகளையும் ஒழித்து, ஸ்ரீ மஹாவிஷ்ணுவைச் சரணமடைந்து அவருடைய ஸாயுஜ்யத்தை அடைந்தார். ஓ மஹாராஜ! உமக்கு இது முதல் ஏழு நாள் ஆயுள் இருக்கிறது, ஆகையால் பரலோகத்தில் ஸுகத்தைக் கொடுக்கும் கார்யத்தைச் செய்யும்.

மரணகாலம் ஸமீபித்தபோது புருஷன் பயமில்லாத வனாகப் புத்திரர்களிடத்தில் தான் வைத்திருந்த அபி மானத்தை வைராக்கியமாகிய ஆயுதத்தால் நாசஞ் செய்ய வேண்டும். மேலும் ஸன்யாஸஞ் செய்து கொண்டு புத்திரன் முதலியவர்களை விட்டுப் பிரிந்தோமே என்று விசாரப்படாமல், கங்கை முதலிய புண்ய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து, ஜனங்களுடைய நெருக்கமில்லாத சுத்தமான விடத்தில் விதிப்படி ஆஸனத்தில் உட்கார்ந்து ப்ரஹ்மத்தைத் தெரிவிக்கும் மூன்று அக்ஷர ஸ்வரூபமாகிய ப்ரண வத்தைத்தியானிக்க வேண்டும். அதனால் சுவாஸத்தை ஜயித்து, ப்ரம்ஹ பீஜமாகிய ப்ரணவத்தை நினைத்துக் கொண்டே மனத்தை அடக்க வேண்டும். புத்தியாகிய (நிச்சயரூபமானது) ஸாரதியுள்ள புருஷன் மனத்தைக் கொண்டு (கடிவாளம்) (ரூபம், ரஸம், கந்தம், சப்தம், ஸ்பர்சம் ஆகிய) ஐந்து விஷயங்களில் செல்லும் இந்திரியங்களைத் தடுக்க வேண்டும். மேலும் கர்ம வாஸனைகளால் இழுக்கப்படும் மனித்தை மங்களத்தைக் கொடுக்கும் ஈசுவர ஸ்வரூபத்தில் புத்தியைக் கொண்டு செலுத்த வேண்டும். பின்னும் பகவத் ரூபத்தில் ஏதாவது ஒரு அவயவத்தை இடைவிடாமல் மனத்திற் கொண்டு த்யானிக்க வேண்டும். பிறகு அந்த மனத்தை பரப்ரஹ்மனிடத்தில் செலுத்தி, (பரமானந்த ஸ்வரூபமாகச் செய்து) வேறு ஒன்றையும் நினைக்காமல் இருக்க வேண்டும். எதனைத் தியானம் செய்ததால் மனமானது ஆசை முதலியவைகளால் கலங்காமல் தெளியுமோ அப்படிப்பட்டது ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பாதமேயாம். ஒருகால் ரஜோகுண சம்பந்ததால் கலக்கமும், தமோகுணத்தால் மோஹமும் மனத்திற்கு ஏற்படுமானால் அப்பொழுது தாரணையால் மனத்தை

அடக்க வேண்டும், அது ரஜோ குணம், தமோ குணம் ஆகிய இவைகளால் ஏற்படும் ஸகல தோஷங்களையும் போக்கக் கூடியது. த்யானஞ் செய்கிறவர்களுக்கு மேலான க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது (இவ்வளவு மஹாத்யமுள்ளது தாரணையென்று தாத்பர்யம்) என்று சொன்னார்.

22. இதைக் கேட்டு பரீக்ஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி, 'ஓ ப்ராஹ்மணோத்தம! எப்படி தாரணைச் செய்ய வேண்டும்? எதில் மனத்தைச் செலுத்த வேண்டும்? எப்படிப்பட்ட தாரணை மனத்தில் தோஷங்களைப் போக்கும்? அதனை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்' என்று கேட்டார்.

23–39 அதைக் கேட்டுச் சுகர் பின்வருமாறு பதில் சொல்லலானார். ஓ மஹாராஜ சாஸ்திரத்தில் சொல்லியபடி ஆஸனத்தை அடைந்து மூச்சை அடக்கி, அபிமானங்களை ஒழித்து, இந்திரியங்களை ஜயித்துப் பகவத் ஸ்வரூபமாகிய ஸ்தூல ப்ரபஞ்சத்தில் நிச்சய ரூபமாகிய புத்தியையும் மனதையும் செலுத்த வேண்டும். முன் கல்பத்திலிருந்ததும், இப்பொழுது இருக்கிறதும், அடுத்த கல்பத்தில் இருக்கக் கூடியது மான ப்ரபஞ்சமானது விராட் புருஷனுடைய ஸ்வரூ பத்தில் காணப்படுகிறது. அந்த பகவத் ஸ்வரூப மானது பெரியவைகளை விடப் பெரிதானது, அந்தப் புருஷனுக்கு இந்த ஜகத்தே சரீரமாயிருக்கிறது. மேலும் (மஹத்தத்வம், அஹங்காரம் ஐந்து பூதங்கள் ஆகிய) ஏழு ஆவரணங்களுள்ள அண்ட கோசமாகிய சரீரத்திலிருக்கும் புருஷனுக்கு வைராஜன் என்று பெயர். இவரே தாரணைக்கு ஆஸ்ரயமாயிருப்பவர்.

(ஸ்தூல ரூப தாரணையால் சூட்சும ரூபத்தில் பக்தி உண்டாகுமென்பது கருத்து) மேற்காட்டிய வைராஜ னென்னும் புருஷனுக்குப் பாதாளத்தைப் பாதமாகவும், ரஸாதலத்தைப் புறங்கால்களாகவும், மஹாதலத்தைப் பாதங்களின் இரு பக்கங்களாகவும், தலா தலத்தை கணைக்கால்களாகவும், ஸுதலத்தை இரு முழங்கால் களாகவும், விதலம் அதலம் ஆகிய இவைகளை இரண்டு தொடைகளாகவும், பூதலத்தை ஜகனமாகவும், ஆகாசத்தை நாபியாகவும் ஸ்வர்க்கத்தை மார்பாகவும், மஹர்லோகத்தைக் கழுத்தாகவும், ஜனலோகத்தை முகமாகவும், தபோ லோகத்தை நெற்றியாகவும், ஸத்ய லோகத்தைச் சிரஸ் ஆகவும் சொல்லுகிறார்கள். மேலும், அநேக சிரஸுள்ள அந்தப் புருஷனுக்கு இந்திரன் முதலிய தேவர்கள் கைகள். திக்குகளே அவருக்குக் காதுகள் (இந்திரிய கோளகங்கள்,) சப்தமே ச்ரோத்ரேந்திரியம்.

அந்தப் பரமபுருஷனுக்கு அச்வினீ தேவர்களே மூக்குகள், கந்தமே கிராணேந்திரியம். ஜ்வலிக்கும் அக்னியானது அவருக்கு முகமாகும். த்யுலோகமே கண்கள், ஸூர்யனே சக்ஷுரிந்திரியம், இரவும், பகலும் ஆகிய இரண்டும் இமைகள். சதுர்முக ப்ரஹ்மாவின் பதம் அவருடைய புருவ நெரித்தலாகும். ஜலத்திற்கு அபிமானியான வருணன் அவருக்கு முகவாய்க்கட்டை, ரஸங்களே அவருடைய நாக்கு, தேசத்தாலும், காலத்தாலும் அளவிடக் கூடாதவராகிய அந்தப் புருஷோத்தமனுக்கு வேதங்கள் சிரஸாக விருக்கின்றன. யமனே சிங்கப்பற்கள், ஸ்நேகத்தின் அம்சங்களே பற்கள். ஜனங்களை மோஹிக்கச் செய்யும் மாயையே அவருடைய சிரிப்பு. அவருடைய கடைக்கண்

பார்வையே அளவற்ற ஸ்ருஷ்டி. (ஸகல ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியானது பகவானுடைய கடாக்ஷ தீனமென்பது கருத்து). வெட்கமே மேலுதடு. உலோபமே கீழுதடு. தர்மமே ஸ்தனம், அதர்ம மார்க்கமே பின்பக்கம். ப்ரஜாபதிதேவரே அவருக்கு ஆண்குறி. மித்ரா வருணர்களே விருஷணங்கள், ஸமுத்ரங்கள் வயிறு. பர்வதங்களே அவருடைய எலும்புகள், கங்கை முதலிய நதிகளே அவருடைய நாடிகளாகின்றன. மரங்களே உரோமங்கள். ஓ ராஜ சிரேஷ்டரே! வாயு பகவானே அளவற்ற வீர்யமுள்ள வைராஜருக்குப் ப்ராணன். காலமே அவருடைய (நடை) கதி. முக்குணங்களாலுண்டாகும் ஸம்ஸாரமே அவருக்குக் கர்மங்கள் அந்தப் பரமேச்வரனுக்கு மேகங்களே தலைமயிர்கள். ஓ பரீக்ஷித் மஹாராஜனே! ஸந்தியா காலங்கள் அந்தப் ப்ரபுவிற்கு வஸ்திரமாக விருக்கின்றன. அவ்யக்தமே (ப்ரதானம்) அவருக்கு ஹ்ருதயமாயிருக்கிறது. ஸகல ஓஷதிகளையும் வ்ருத்தி செய்யும் சந்திரனே மனஸ், மஹத் தத்வமே அவருடைய விஞ்ஞான சக்தி, ருத்ரனே அவருக்கு அந்தக்கரணம், குதிரை அசுவதரீ, (கழுதைக்கும் பெண் குதிரைக்கும் உண்டானது,) ஒட்டகம், யானை ஆகிய இவைகள் அவருக்கு நகங்கள், ஸகல மிருகங்களும், பசுக்களும் அவருடைய ஸ்ரோணிதேசம், பறவைகள் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும் அவருடைய வேலைத் திறமை, மனுவே புத்தி, மனித வர்க்கமே இருப்பிடம், கந்தர்வர்கள், வித்யாதரர்கள், சாரணர்கள், அப்ஸரஸ்திரீகள் ஆகிய இவைகளே ஷட்ஜம் முதலிய ஸ்வர ஸ்மிருதிகள், அஸுர ஸைன்யமே அவருடைய பராக்ரமத்திற்கு இருப்பிடம். ப்ராஹ்மணர்களே அவருக்கு முகம், க்ஷத்திரியர்களே கைகள், வைசியர்களே தொடைகள், சூத்ரர்களே

பாதங்கள் (சித்தம் ஸ்திரமாக இருப்பதற்காக விராட், ஜீவன், ஈசுவரர் ஆகிய இவர்களை ஒன்றாக உபாஸிக்க வேண்டு மென்பது கருத்து) மேலும் பலவகையான பெயருள்ள வஸுருத்ரர்கள் முதலிய தேவர்களுடன் ஹவிஸினால் செய்யக்கூடிய திரவ்ய யாகமானது அந்தப் பரம புருஷனைப் பூஜிக்கும் கர்மமேயாம், வைராஜருடைய அவயவங்கள் இம்மாதிரியானவைகள் எல்லாவற்றிற்கும், பெரியவரான இந்தப் பரமபுருஷன் இடத்தில் மோக்ஷமடைய விரும்பியவர்கள் மனத்தைச் செலுத்த வேண்டும். இதைவிட மேலானது ஒன்று இல்லை. ஸகல பிராணிகளுடைய புத்தி விருத்தி களால் ஸகலத்தையும் அனுபவிக்கிறவரும், எல்லா வற்றிற்கும் அந்தராத்மாகவும், ஸத்ய ஸ்வரூபியாய் இருக்கும் அவரையே பூஜிக்கவேண்டும்; அவரைக் காட்டிலும் வேறு இடத்தில் ஆசைபடக் கூடாது. அப்படி ஆசைப்படுவதால் ஸம்ஸாரத்தை அடையும் படி நேரிடும். ஸ்வப்னத்தில் சில ஸமயத்தில் அநேக ஜீவர்களைக் கல்பித்து, ஜீவன் அந்தந்த இந்திரியங்களைக் கொண்டு எல்லாவற்றையும் பார்ப்பதுபோல ஈசுவரன் தாம் ஒருவராக இருந்து எல்லாவற்றையும் தம்முடைய வித்யா சக்தியால் அனுபவித்து, அவைகளில் ஸம்பந்தப்படாதவராகவும் ஆனந்த நிதியாகவும் பிரகாசிக்கிறார்.

நோட்டு

ஆத்மஸ்வரூ–லக்ஷ்மீ, ப்ரம்ஹா முதலிய சேத னங்கள் எப்பொழுதும் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு உள்ளவைகளாக இருக்கிறதை அறியாதவர்கள் ...விஜ, ஸாமக்ரீ... ஆத்ம தைன்ய' என்னும் பாடத்தை ஆசிரயித்து, 'தனக்குக் குறைவை உண்டு பண்ணக்

கூடியவைகள்' என்று அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. விஜ , மனனம்... ஓ மைத்ரேயி! ஆத்மாவைப் பற்றியே விசாரிக்க வேண்டும். குரு முகமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த ஒருவராகிய ஆத்மாவையே அறியுங்கள். மற்ற வார்த்தைகளை விட்டுவிடுங்கள் ... ஸ்ருதிகள், ஸாங்கியம்... ஞான யோகத்தாலே சாங்கியர் களுக்கும், கர்ம யோகத்தால் யோகிகளுக்கும் பகவத்கீதை, அஷ்டாங்க ... யமம், நியமம், தியானம், தாரணம், ஆஸனம், பிராணயாமம், பிரத்யாஹாரம், ஸமாதி என்று எட்டு அங்கமுள்ளது. விதி நிஷேதம்... இதனைச் செய் என்று சாஸ்திரத்தில் சொல்லியிருப்பது விதியாகும், இதனைச் செய்யவேண்டாம் என்று சொல்லியிருப்பது நிஷேதமாகும் ... மேற்சொல்லிய விதி நிஷேதமென்பதற்கு விதி நிஷேதங்களைச் சொல்லும் வேதத்தால் காண்பிக்கப்படுகிற காம்ய கர்மங்களென்று அர்த்தம் கொள்ள வேண்டும். அவசியம் அனுஷ்டிக்க வேண்டியதாக வேதத்திற் சொல்லப்பட்ட பஞ்ச மஹா யக்ஞங்களே விதியென்றாவது, ஸுராபானம் செய்யக் கூடா தென்பதே நிஷேதமென்றாவது இவ்விடத்தில் அர்த்தம் அல்ல... வீர, நிர்குண ...ரஜோகுணம், தமோகுணம் இவைகளுடன் சேர்ந்த ஸத்வகுணமற்றது ...வீர, கடைசியில் மூலத்தில் த்வாபாரதெள என்று இருப்பதால் அதற்கு 'கலி யுகத்தின் ஆதியில்' என்று அர்த்தம் கொள்ள வேண்டும். வ்யாஸ மஹர்ஷியும், சந்தனு சக்ர வர்த்தியும் ஒரே காலத்தில் இருந்ததாகச் சொல்லப் பட்டிருப்பதால் ... வீர வ்யாஸ மஹர்ஷியானவர் தம்முடைய அறுநூறாவது வயதில் திருதராஷ்டிரரை உண்டுபண்ணினார் என்று சொல்லியிருப்பதாலும், துவாபரயுகத்தின் கடைசியில் பாரதக்கதை நடந்ததாகச்

சொல்லியிருப்பதாலும், துவாபரயுகத்தில் கிருஷ்ண அவதாரத்திற்கு முந்தி என்று அர்த்தம் கொள்ள வேண்டும்... விஜய. ப்ரம்ஹ ஸ்வரூபத்தில் 'ப்ரம்ஹ ஸம்ஹிதம், என்று இருப்பதால் வேதத்திற்குச் சமமானது, பாகவதம் ... பகவான் நேரில் உபதேசித்த நான்கு ஸ்லோகங்களைக் கொண்டு செய்யப் பட்டதால் அல்லது பகவத் ஸ்வரூபத்தை நன்றாய் வர்ணிப்பதால்... வீர. சொல்லுகிறேன்... முக்தனாகிய என்னாலும் அப்யஸிக்கப்பட்ட இந்த பாகவத புராணமானது, மோக்ஷத்தை அடையவேண்டிய வராகிய உமக்கு உபயோகமானது என்று தாத்பரியம் ...வீர, அவயவத்தை..யுகத்தை...வீர. பெரிதானது ... இவர் பூமியைவிடப் பெரியவர், அந்தத்தைக் காட்டிலும் பெரியவர் இவ்வுலகங்களைக் காட்டிலும் பெரியவர் ஸ்ருதி. ஸ்வர்க்கத்தை, முலத்தில் ஜ்யோதிரனீகம் என்று இருப்பதால் நக்ஷத்ர லோகம் என்று அர்த்தம் கொள்ளவேண்டும், பறவைகள்...வாத ஸ்வரூபிகளான தித்திரி முதலிய பக்ஷிகள்...வீர. திறமை...எவரால் ஹம்ஸங்கள் வெண்மை நிறமுள்ளவைகளாகவும், கிளிகள் பச்சை நிறமுள்ளவைகளாகவும், மயில்கள் பலவகை நிறமுள்ளவைகளாகவும் ஸ்ருஷ்டிக்கப் பட்டனவோ அவர் நமக்கு விருத்தியை உண்டு பண்ணுவார். மூலத்தில் வ்யாகரணம் என்று இருப்பதில் அதற்கு ஆச்சரியத்தை யுண்டுபண்ணும் வார்த்தை என்று அர்த்தம். சந்த். இருப்பிடம் மனுஷ்ய ஜன்மாவானது ஞானத்திற்கும், பக்தி முதலிய ஸ்தானங்களுக்கும் உபாயமாயிருக்கிறது. யாகம் முதலிய கர்மங்கள் ஞானம் முதலியவைகளுக்குக் காரணமாய் இருப்பதால், அக்கர்மங்களில் அதிகாரமுள்ளவர் களுக்கே ப்ரஹ்மோ பாஸனத்தில் அதிகாரம ஏற்படுகிற

படியால் மனுஷ்ய சரீரமே எல்லாவற்றிற்கும் உபயோக மான்து சந்த். அஸுரஸைன்ய அஸுரானீக வீர்ய என்று ஒரு பாடமுண்டு. அதற்கு ப்ரஹ்லாதனே ஸ்மரணம் என்று அர்த்தம் கொள்ளவேண்டும், வீர.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்- 2

பகவானிடத்தில் மனத்தை செலுத்தும் வகை

1–21. பிரளயகாலத்தில் ப்ரஹ்ம தேவரானவர் மேற் காட்டியபடி விராட் புருஷனிடத்தில் மனத்தைச் செலுத்தினார். (வைராஜ தாரணையைச் செய்தார்.) அதனால் பகவான் ஸந்தோஷமடைந்து ப்ரஹ்மதேவருக்கு மறந்து போயிருந்த ஸ்ருஷ்டி சக்தியை மறுபடியும் அனுக்கிரஹித்தார். அதனால் ப்ரஹ்மதேவர் வீணாகாத ஞானமுள்ளவராகவும், நிச்சயமாகிய புத்தியுள்ள வராகவும் ப்ரளயத்திற்கு முன்பு இருந்தது போலவே உலகத்தை ஸ்ருஷ்டித்தார் (தாரணையானது, இம் மாதிரியான மஹாத்மியமுள்ளது என்று கருத்து) வேதங்கள் யாவும் கர்மங்களையும், அவற்றின் பலன்களையும் சொல்லுகின்றன. ஆனாலும் ஸ்வர்க்கம் முதலியவைகளில் புருஷார்த்தம் ஒன்று மில்லை. அதைக் கேட்ட மாத்திரத்தில் மனதிற்கு ஆசையைக் கொடுக்கிறதே யொழிய வேறில்லை. (பெயரால் அழகுள்ளது) ஸ்வப்பனத்தில் கண்ட வஸ்துக்கள் நாம் விழித்துக் கொண்டபொழுது இல்லாமற் போவதுபோல மாயா ரூபமான கர்ம மார்க்கத்தில் அலைந்தும் கொஞ்சமேனும் ஒப்பற்ற ஸுகம் கிடைக்கிறதில்லை. ஆகையால் விவேகமுள்ளவன் தேக நிர்வாகத்திற்கு வேண்டியவரையில் தோக்கிய வஸ்துக்களை அபேக்ஷிப்பான். அவைகளிலும் ஆஸக்தியில்லாமல் ஜாக்ரதையாக இருப்பான். மேலும் இவைகள் ஸுகத்தைக் கொடுக்கக் கூடியவைகளல்ல என்ற நிச்சயமுள்ளவனாகவும் இருப்பான். ஆனதுபற்றி, தேகத்திற்குவேண்டிய விஷயங்கள் ஸுலபமாக அவனுக்குக் கிடைக்குமானால் அவன்

இக்கர்மங்களில் முயற்சி செய்யமாட்டான். கர்மங்களோ மிகவும் ச்ரமத்தைக் கொடுக்கின்றன. எவ்வாத்தேசங் களிலும் எப்பொழுதும் பிறரை அபேக்ஷியாமல் ப்ரயாஸமின்றிக் கிடைக்கும் பூமியாகிய படுக்கை ஸித்தமாக இருக்க, பணச் செலவினால் கிடைக்கக் கூடியதும், இஷ்டமான காலங்களில் அகப்படாததுமான கட்டில் முதலிய படுக்கையை ஞானமுள்ளவன் அபேக்ஷிப்பானா? தன்னுடை கைகளிருக்கத் தலை யணைகளால் என்ன ப்ரயோஜனம்? தவிரவும், அன்னத்தை வைத்துக்கொண்டு புஜிக்க அஞ்சலி (சேர்ந்த இருகைகள்) ஸ்வாதீனத்திலிருக்க, பல வகையான பாத்திரங்களை அபேக்ஷிக்கவும் வேண்டுமா? மேலும் திக்குகளும், மரவுரிகளும் உடுத்திக் கொள்ளக்கூடியவைகளாக விருக்கும்போது, பட்டு, வஸ்திரம் முதலியவைகளை ஏன் ஸம்பாதிக்க வேண்டும்? வழியில் கந்தைத்துணி அகப்படாதா? பிறரையே போஷிக்கும் ஸ்வபாவமுள்ள (பழம் முதலியவை களாலென்பது கருத்து) மரங்கள் ஆகாரத்தைக் கொடாமலிருக்குமா? தீர்த்தத்தைக் கொடுக்கும் நதிகள் வரண்டு போயினவா? வஸிப்பதற்கு மலைகளில் குகைகளிருக்கின்றனவே? அவைகள் அரசர்களால் மூடப்பட்டனவா? ஆகையால் பிறரை யாசியாமலே தேக யாத்திரையை நடத்திக்கொள்ளலாம். மேற் கூறியவைகள் கிடைக்காவிடினும் சரணாகதர்களான நம்மைப் பகவான் ஸம்ரக்ஷிக்கமாட்டாரா? இப்படி இருக்க பணத்தால் கர்வங்கொண்டு கார்யம் அகார்யம் இவைகளை அறியாத மமதை கொண்டவர்களை விவேகிகள் ஏன் உபாஸிக்கிறார்கள். ஸ்ரீ மந் நாராயண ரையே (மற்றவர்களை விட்டு) ஸேவிக்கவேண்டும். அவர் எல்லோருடைய சித்தத்திலும் தாமாகவே

எப்பொழுதுமிருப்பவர். ஆத்ம ரூபியாயிருப்பவராகையால் அவர் எல்லாருக்கும் பிரியர். சரீரம் முதலியவைபோல அநித்யரல்லர். ஸத்ய ஸ்வரூபியாயிருப்பவர். ஸேவிக்கக் கூடிய குணங்களால் நிறைந்தவர். நாசமற்றவர். அவரை ஸேவிப்பதால் ஸம்சாரத்தைக் கொடுக்கும் அவித்யை முதலியவைகள் நாசமடைகின்றன. கர்ம ஜடர்களாயும் ஞான ஹீனர்களாயுமுள்ள மனுஷ்ய பசுக்கள் விஷயங்களிலேயே ஆசை கொள்கிறார்கள். தாரணையைச் செய்கிறதில்லை. மேலும், யமலோகத் திலிருக்கும் வைதரணீ நதியில் தம்முடைய கர்ம வசத்தால் துக்கத்தை யனுபவிப்பது போல ஸம் ஸாரத்தில் மூழ்கி துக்கப்படுகிறார்கள். இப்படிக் கஷ்டப்படும் ஜனங்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் விவேகியான புருஷன் பகவானைச் சிந்திப்பதாகிய தாரணையைச் செய்யாமலிருப்பானா? சிலர் தம்முடைய ஹிருதயத்திலிருக்கும் அவகாசத்தில் நான்கு கைகள் உள்ளவரும், தாமரைமலர், சக்ரம், சங்கம், கதை ஆகிய இவைகளைத் தரிப்பவரும், ப்ராதேசமாத்ர சரீரமுள்ளவருமாக வஸிக்கும் பரம புருஷனை இடை விடாமல் தியானிக்கிறார்கள். அந்தப் புருஷன் தாமரை மலர்போன்ற நீண்ட கண்களுள்ளவர். முகமலர்ச்சி யுள்ளவர். கதம்ப (கடம்பம்) புஷ்பத்தின் தாதுகள் போல் பொன்னிறமுள்ள வஸ்திரத்தைத் தரித்தவர். மிகுந்த காந்தி பொருந்திய இரத்னங்களிழைத்த ஸ்வர்ணமயமான தோள் வளைகள், கிரிடம், குண்டலம் ஆகிய ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்டவர். அவருடைய பாதங்கள் யோகிகளுடைய மலர்ந்த ஹ்ருதய கமலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட வைகள். மார்பில் லக்ஷ்மியுள்ளவர். கௌஸ்துப ஹாரம் தரித்தவர். குறையாத காந்தியுள்ள வனமாலையால்

பிரகாசிப்பவர். மேலும், விலையுயர்ந்த அரைநாண், மோதிரம். வளை முதலிய ஆபரணங்களால் விளங்கும் திவ்ய தேஹமுள்ளவர். அவருடைய முகமானது புன்சிரிப்புள்ளது, மேலும் கறுப்புநிறமுள்ளவைகளும், காந்தியுள்ளவைகளும், பளபளப்புள்ளவவைகளுமான சுருட்டை மயிர்களால் அழகானது. கம்பீரமாகிய சிரிப்பு, பார்வை. புருவ நெரித்தல் ஆகிய இவைகளால் ஜனங்களை அனுக்கிரஹிக்கும் ஸ்வாபவமுள்ளது, இம்மாதிரியான பகவத் ஸ்வரூபத்தை மனது ஸ்வாதீனப்படுகிற வரையில் தியானிக்க வேண்டும். எப்படியெனில், மேற்காட்டிய பாதம் முதல் சிரிப்பு வரையிலுமுள்ள பகவானுடைய அவயவங்களும் சேஷ்டைகளும் ஒவ்வொன்றாகத் தியானிக்கப்பட வேண்டும். மனது அவைகளிலே பதிந்து, விஷயங்களில் செல்லாமலிருந்தபோது அதைவிட்டு வேறு அவய வத்தை த்யானிக்கவேண்டும். இப்படி ஒவ்வொரு நாளும் நித்ய கர்மங்களை முடித்துக்கொண்டு சுத்தனாகப் பரமபுருஷனுடைய பெரிதாகிய ரூபத்தை தியானஞ் செய்யவேண்டும். அவரிடத்தில் பக்தியுண்டாகும் வரையில் அவருடைய ரூபத்தைத் தியானஞ் செய்யவேண்டும். அவர் ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் மேலானவர்; ஜகத்திற்கு அதிபதி. எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாயி ருப்பவர். ஓ மஹாராஜ! ஒருவன் இப்படி சித்தம் சுத்தியானபிறகு ஸகல ஆசைகளையும் ஒழித்து இந்தச் சரீரத்தை விட வேண்டுமென்று விரும்பு வானாகில், புண்ய க்ஷேத்திரத்தில் உத்தராயணம் முதலிய காலங்களில் ஸ்திரமாயும், ஸுககரமுமான ஆஸனத்தில் உட்கார்ந்து, ப்ராணாயாமஞ் செய்து ஸுவாஸத்தை அடக்கி, வேறு விஷயங்களில் பற்றுதல் இல்லாதவனாக மனத்தால் ப்ராணனையும், இந்திரியங்

களையும் அடக்கிக்கொள்ளவேண்டும். மேலும் அந்த மனத்தை நிர்மலமாகிய புத்தியாகச் (நிச்சயரூபமானது) செய்து, அந்தப் புத்தியை அதற்கு ஸாக்ஷியாக விருக்கும் ஜீவனிடத்தில் சேர்க்க வேண்டும். அந்தச் சுத்தமாகிய ஆத்மாவை பரப்ரஹ்மத்தினிடம் லயிக்கச் செய்து சாந்தியையடைந்து கார்யத்திலிருந்து ஒழிவடைய வேண்டும். தேவர்களுக்கும் மேலான காலத்தாலும், அந்தப் பரமாத்ம ஸ்வரூபம் பாதிக்கப்படுகிறதில்லை. ஜகத்திற்கு, அதிபதிகளான தேவர்களும் அந்த ஸ்வரூபத்திற்குப் பிரபுக்களல்ல. அந்த ஆத்மாவிடத்தில் ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய குணங்களும் மாறுதலும், மஹத் தத்வம், பிரதானம் ஆகிய இவைகளும் இல்லை ஆத்மாவை விட வேறானவைகளை (இவை ஆத்மாவல்ல என்று விசாரித்து, தேகம் முதலியவைகளில் ஆத்மத்வ புத்தியை விட்டு ஒவ்வொரு க்ஷணத்திலேயும் வேறிடத்தில் பிரியம் வைக்காத தங்களுடைய ஹ்ருதயத்தில் விஷ்ணுவின் பதத்தையே பக்தர்கள் தியானஞ் செய்கிறார்கள். ஆகையால் அதுவே மேலானது என்கிறார்கள். இந்தப்பதத்தையடைந்தவனே கிருதகிருத்யன். இம்மாதிரி சாஸ்த்ர விசாரத்தில் உண்டான விசேஷ ஞானத்தால் விஷய வாஸனைகளை எரித்துப் ப்ரஹ்ம பாவத்தை அடைந்த முனியானவர் கீழ் முகமான வாயுவானது வெளியில் போகாமலிருக்கும்படி, தம்முடைய பாத மூலத்தால் (குதிகால்) ஆஸனத்தை அடைத்துக்கொண்டு சிரமம் இல்லாதவராக, தொப்புள், ஹிருதயம், மார்பு, முகவாய்க்கட்டை, புருவங்களின் மத்திய பாகம், தலை ஆகிய ஆறு ஸ்தானங்களிலும் அந்தந்த வாயுவைச் செல்லும்படி செய்யவேண்டும். பின்னும் நாபியாகிய மணிபூரகத்திலிருந்து வாயுவை ஹ்ருதயமாகிய

அநாஹதத்தில் செல்லச் செய்து அதிலிருந்து மார்பாகிய விசுத்தி ஸ்தானத்திற்குந் போகச் செய்து, சித்தத்தையடக்கிக்கொண்டு, அதை விசுத்த ஸ்தானத்தின் மேற்பாகமாகிய தாது மூலத்திற்கு மெதுவாக கொண்டு போக வேண்டும். அதிருந்து ஆக்ஞா சக்கரமாகிய புருவங்களின் மத்ய பாகத்தில் அந்த வாயுவைச் செலுத்தவேண்டும். அப்போது காதுகளையும், கண்களையும், மூக்குகளையும், முகத்தையும் மூடிக் கொண்டு வாயுவை வெளியில் விடாமல் அடக்கிக் கொண்டிருக்கவேண்டும். வேறு விஷயங்களை விரும்பக் கூடாது. இப்படி ஆக்ஞா சக்கரத்தில் ப்ராணனை அரை முஹூர்த்த காலம் நிறுத்திக்கொண்டிருந்து, பிறகு தடையற்ற ஞானமுள்ளவனாக ப்ரஹ்ம ஸ்வரூபத்தையடைந்து, ப்ரஹ்மாந்தரமாகிய தலையைப் பேதித்து வாயுவை வெளிப்படுத்தி, தேகத்தை விடவேண்டும்.

22–31. ஓ மஹாராஜ! இந்தப் ப்ரஹ்மாண்டத்தில் ப்ரஹ்மலோகம் போகிறவனானாலும் அணிமா முதலிய ஐச்வர்யங்களுள்ள தேவர்கள் வஸிக்கும் ஸ்வர்க்கம் முதலிய இடங்களுக்குச் செல்லுகிறவனானாலும் மனத்தையும், இந்திரியங்களையும் தன்னுடன் கூடவே அழைத்துக்கொண்டு போகிறான். வாயுவிற்குள் அடங்கிய லிங்க சரீரமுள்ள மஹா யோகிகள், மஹர்லோகம் முதலியவைகளிலும், ப்ரஹ்மாண்டத்திற்கு வெளியிலும் போவார்கள் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். உபாஸனை, தபஸ், அஷ்டாங்க யோகம் ஞானம் ஆகிய இவைகளை அனுஷ்டிப்பவர்கள் அர்சிராதி மார்க்கமாய்ப் போவார்கள். அந்த வழியில் போனவர்கள் மறுபடியும் திரும்புகிறதில்லை.

அப்படிப்பட்ட கதியானது யாகம் முதலியகர்மங்களால் கிடைக்கிறதில்லை. ப்ரஹ்மலோக மார்க்கத்தில் சென்றவன் முதலில் அக்னிக்கு அபிமானியான தேவதையை அடைகிறான். பிறகு ஜ்யோதிஸின் ரூபமாகிய ஸுஷும்னா நாடி வழியாய் ஒன்றிலும் ஆசைப்படாதவனாக உத்தமமான, சிம்சுமாரமென்ற ஜ்யோதி சக்கரத்தை யடைகிறான். பின்பு ஸூர்யன் முதலியவர்களுக்கு ஆசிரயமான அந்த விஷ்ணுவின் சக்கரத்தைத் தாண்டி சுத்தமான லிங்க சரீரத்துடன் தானொருவனாகப் ப்ரஹ்மத்தை அறிந்தவர்கள் வஸிக்கக்கூடியதும், எல்லோராலும் நமஸ்கரிக்கப் பட்டதுமான மஹர்லோகத்தை அடைகிறான். அந்த ஸ்தானத்தில் அநேக கால ஜீவிகளான ப்ருகு முதலியவர்கள் ஆனந்தமாக வஸிக்கிறார்கள். பிறகு அவர்கள் அந்தக் கல்பத்தின் முடிவில் ஸங்கர்ஷண பகவானுடைய முகத்திலிருந்து உண்டான அக்னியால் உலகங்கள் எரிக்கப்படுவதைப் பார்த்து, அதன் உஷ்ணத்தைச் ஸகியாமல் அந்த உலகத்திலிருந்து ஸனகர் முதலியவர்கள் வஸிக்கும், இரண்டு பரார்த்தம் வரையில் அழியாமலிருக்கக் கூடிய ப்ரஹ்ம லோகத்தை அடைகிறார்கள். அவ்விடத்தில் சோகம், ஜரை, கிழத்தனம் மரணம், துக்கம், பயம் ஆகிய இவைகள் இல்லை. ஆனாலும் அந்த உலகத்தில் இருப்பவர்கள், 'ப்ரஹ்மலோகம் சோக மோகங்களற்றது ஸ்வர்க்காதிகளுக்கு மேலானது என்று நினையாமல் கர்மஜடர்களாக, ஸம்ஸாரத்தில் கஷ்டப்படும் அக்ஞர்களைப்பற்றி வருத்தப்படுகிறார்கள். அதைத் தவிர வேறு துக்கம் அவ்விடத்திலில்லை. அந்த லோகத்தையடைந்தவன் ப்ரஹ்ம ப்ரளயத்தில் லிங்க தேகத்துடன் பூமியின் ஸ்வரூபத்தையடைந்து ஜலத்தை

அடைந்து, தாமஸியாமல், பயமில்லாதவனாகி தேஜோமயனாகி வாயுவை யடைந்து அணுபவம் முடிந்தவுடன் ஆகாச சரீரத்தைக் அடைகிறான். பின்னும் அவன் க்ராணேந்திரியத்தைக் கொண்டு வாஸனையையும், ரஸனேந்திரியத்தைக் கொண்டு ரஸத்தையும், நேத்ரத்தைக் கொண்டு உருவத்தையும் த்வகிந்திரியத்தைக் கொண்டு ஸ்பர்சத்தையும், ச்ரோத் ரேந்திரியத்தைக் கொண்டு ஆகாயத்தின் குணமாகிய சப்தத்தையும், கர்மேந்திரியங்களைக் கொண்டு அவை களின் வியாபாரங்களையும் அடக்கிக்கொள்ளுகிறான். மேலும் அவன் பூதஸூக்ஷ்மங்கள், பத்து இந்திரியங்கள் ஆகிய இவைகளுக்கு லய ஸ்தானமாயும், மனோமய மாயும்,தேவதா ரூபமாயுள்ள ஆவரணமாகிய அஹங் காரத்தை அடைந்த பிறகு அதனுடன் விஞ்ஞான தத்வத்தை அடைகிறான். பின்னும் அவன் குணங்கள் லயிக்கும் இடமான பிரதானத்தை அடைகிறான். (லயிக்கிறான்). இப்படி உபாதிகள்யாவும் லயமடைந்த பிறகு ஆனந்த ஸ்வரூபியான ஜீவன் விகாரமற்றதும், ஆனந்த ஸ்வரூபியுமான ஆத்மாவை அடைகிறான். ஓ மஹாராஜ! இம்மாதிரியான பதத்தை யடைந்தவன் மறுபடியும் திரும்புகிறதில்லை.

32–37. ஸத்யோமுக்தி, க்ரமமுக்தியென்ற இரண்டு மார்க்கங்களும் வேதங்களில் சொல்லப்பட்டவைகள். இவைகளை ஸ்ரீ பகவானாகிய வாஸுதேவர் முன்னொரு காலத்தில் ப்ரஹ்மதேவருக்கு உபதேசித்தார். நீர் இப்பொழுது அவைகளை அறிய விரும்பியபடியால் உமக்குச் சொன்னேன். ஸம்ஸாரத்தில் கஷ்டப்படும் ஜனங்கள் மோக்ஷத்தையடைவதற்கும் பல மார்க்கங்கள் இருந்தாலும் பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில்

பக்தியையுண்டு பண்ணும் மேற்காட்டிய மார்க்கமே மேலானது. அதுவே ஸுகமாய் அனுஷ்டிக்கக்கூடியது இடையூறற்றது, தவிரவும் முன்னொரு ஸமயத்தில் ப்ரஹ்மதேவர் ஒரே சித்தராக இருந்து, ஸகல வேதங்களையும் மூன்று தடவை படித்துப் பார்த்து, மேற் சொல்லிய மார்க்கமே பகவத் பக்தியைக் கொடுக்கக் கூடியது என்று நிச்சயித்தார். மேலும் பரமாத்மா ஆனவர், ஸகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாய் இருப்பதைக் கொண்டும் புத்தி முதலியவைகளைக் கொண்டும், ஸித்திக்கும் அனுமானத்தைக் கொண்டும், எல்லோராலும் பார்க்கப்படுகிறார். ஆகையால் ஓ பரீக்ஷித்து மஹாராஜனே! எந்த இடத்திலும், எக்காலத்திலும் மனிதர்கள் ஸ்ரீமந் நாராயணனையே ஸ்மரிக்க வேண்டும் அவருடைய கதையைக் கேட்க வேண்டும் திவ்ய நாமங்களை உச்சரிக்க வேண்டும், ஆகையால் ஸ்ரீ பகவானுடைய கதையாகிய அமிருதத்தைச் சுரோத்ரமாகிய பாத்திரத்தால் எவர்கள் புஜிக்கிறார்களோ, விஷய ஆசையால் கலங்கிய அவர்களுடைய சித்தமானது சுத்தமாய் விடுகிறதுமன்றி அந்தப் புண்யசாலிகள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பதத்தையும் அடைவார்கள்.

நோட்டு

ஸ்ருஷ்டித்தார். தாதாவானவர் முன்னிருந்தது போல ஸ்ருஷ்டித்தார் –ஸ்ருதி பிரளய காலத்தில் முன் கல்பத்திலுள்ள ப்ரஹ்மதேவருடன் ஸ்ருஷ்டி விஷயமான ஞானம் நஷ்டமாகி விட்டது. பிறகு ஸ்ருஷ்டி காலத்தில் இந்தக் கல்பத்திய ப்ரஹ்மதேவர் முன் அத்யாயத்தில் சொன்னபடி பகவானிடம் மனதைச்

செலுத்தி, அதனால் ஸ்ருஷ்டி ஞானத்தையடைந்தார். இப்படி அர்த்தஞ் சொல்லவேண்டும். இல்லாவிடில் முன் கல்பத்திய ப்ரஹ்மதேவரே இந்தக் கல்பத்திலுமிருந்து ஸ்ருஷ்டித்தாரென்று ஏற்படும், அப்படிச் சொல்வது ஸரியல்ல, ஒவ்வொரு கல்பத்திலும் ப்ரஹ்மதேவர் வேறு என்று கொள்வதே நியாயம். அவர்களெல்லோரும் ப்ரளயம் வந்தவுடன் ப்ரஹ்மதேவருடன் முக்தியடைகிறார்கள், ப்ரளய காலத்தில் ப்ரஹ்ம லோகத்திலிருப்பவர்கள் எல்லோரும் முத்தியை அடைகிறார்கள். ஸ்ருதிகள், தவிரவும், பகவானுடைய அளவற்ற கிருபையை அடைந்தவர்கள் மறுபடியும் பிறந்தார் களென்று சொல்வதும் உசிதமல்ல. ஆதலால் மூலத்திலிருக்கும் ஸ்மிருதி என்ற பதத்திற்கு ஸ்ருஷ்டி ஞானமென்று இவ்விடத்தில் அர்த்தங்கொள்ள வேண்டும். ஆகேஷபம் வைராஜ தாரணையால் ஸ்ருஷ்டி ஞானம் உண்டாகிற தென்றால், அந்தத் தாரணையானது அந்த ஞானத்தால் தான் உண்டாக வேண்டும், ஆதலால் அந்யோந்யாசிரய தோஷம் நேரிடுகிறது. சமாதானம் பகவானுடைய கொப்பூழில் தாமரைப் புஷ்பத்திலிருந்து ப்ரஹ்மதேவர் உண்டானார். அவருடைய தபஸினால் நாராயணன் ஸந்தோஷித்தார். அப்பொழுது ஓ சதுர்முகரே! மறுபடியும் நீர் தபஸ், ஞானம் இவைகளை யனுஷ்டிக்கவேண்டும். அவைகளால் ஆவரணம் விலகும். அப்பொழுது நீர் என்னிடத்தில் லோகங்களையும் அவைகளில் என்னையும் பார்க்கலாம் என்று பகவான் சொன்னார். பிறகு ப்ரஹ்மதேவர் ஸ்ருஷ்டிக்கப்படும் ஸகல பதார்த்தங்களையும் முன்னமே பார்த்து, அவை களைப் பகவானுடைய அவயவங்களாகப் பாவித்து அந்தத் தாரணையால் ஸ்ருஷ்டி ஞானம்

ஸாமர்த்தியம் இவைகளையடைந்தார், வீர. நிச்சயமாகிய –வியவஸாய புத்தி என்று மூலத்திலிருப்பதால் ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்று முயற்சி செய்தவர், விஜயத், வேதங்கள் ஸகல வேதம் முதலிய சப்தங்களுக்கு இந்தப் பரமாத்மாவே அர்த்தமாயிருக்கிறார். பகவான் உடைய இச்சையால் உண்டான ஸம்ஸாரத்தில் அலைந்து கொண்டு ஒன்றையும் அறியாதவனாகி, கர்ம வாஸனையினால் பலவகையான ஜன்மங்களை யடைந்து கஷ்டப்படும் ஜீவன் இந்திரன் முதலிய சப்தங்களுக்கு அந்த அந்தத் தேவதைகளை அர்த்தம் என்று நினைக்கிறான் அது ஸரியல்ல. அந்தத் தேவர்களிடத்தில் குறைவற்ற ஐசுவர்யமாவது, புருஷார்த்தமாவது, இல்லை, மேலும் அவர்களை உபாஸிப்பதால் புருஷார்த்தமொன்றும் கிடைக்கிறது இல்லை, ஆகையால் ஸ்ரீமந் நாராயணனையே ஸேவிக்கவேண்டும், ஸ்மரிக்கவேண்டும், அவரே ஸகல வேதங்களுக்கும் அர்த்தம். விஜயத். விவேகமுள்ளவன் ஸகல நாமங்களும் ஸ்ரீமந் நாராயணனையே சொல்லு கின்றன என்பதை எப்பொழுதும் மறவாமலிருப்பவன், தாய் தந்தை முதலிய பந்துக்களை விட மிகவும் ஜனங்களுக்கு வேதங்கள் அனுகூலத்தையே உபதேசிப் பவைகள் ஆகையால் ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களுள்ள ஜனங்களுடைய புத்திக்கு அநுகுணமாக ஸ்வர்க்கம் முதலிய ஸ்திரமில்லாத பலத்தைக் கொடுக்கும் கர்மங்களையும், ஸாச்வதமான மோக்ஷ ஸாதனங்களையும், அவ்வேதங்கள் உபதேசிக் கின்றன. அக்ஞர்கள் ஸ்வர்க்கம் முதலியவைகளையே அடையவிரும்பி அதன் ஸ்தானங்களை அனுஷ்டிக் கிறார்கள், ஆகையால் வேதங்கள் அற்பமுள்ள கர்மங்களை உபதேசித்து ஜனங்களை ஏமாற்றிவிட்டன.

என்று சொல்வது உசிதமல்ல வீர. கிடைக்கிறது இல்லை கர்மபலம் தாழ்ந்ததென்று காட்டப்பட்டது. கர்மங்களில் நம்மால் அனுபவிக்கக்கூடியது, நம் முடைய முயற்சில்லாமலேயே அவசியம் ஸித்திக்கும் என்று அதற்காகச் சிரமப்படமாட்டான்...சந்த. மமதை நான் ஈச்வரன். நான் போகமுள்ளவன், நான் ஸித்தன், நான் பலமுள்ளவன், ஸுகமுள்ளவன், பணக்காரன், மேலான குலத்தில் பிறந்தவன், ஆனதால் எனக்குச் சமானமானவன் லோகத்திலொருவனும் இல்லை என்று கர்வங்கொண்டார்கள், ப்ரியர்; ஜனங்கள் பணம், களத்திரம், புத்ரன் ஆகிய இவை களை ஆத்மாவின்' ஸௌக்கியத்திற்காவே ஸம்பாதிக் கிறார்கள். ஆத்மாவிற்கு ஆக்மாவாக இருப்பவர் பிரியரென்பதில் என்ன ஆக்ஷேபம் வீர. ஸத்யஸ்வரூபி புருஷார்த்த ஸ்வரூபி, வீர. ப்ராதேச கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் (தர்ஜனிக்கு) இடையிலுள்ள நீளம் ஸ்ரீத. ஜகத்தின் அளவு எவ்வளவோ அந்த அளவுள்ளவர் சந்த் மூவுலகமும் பகவானுக்குச் சரீரமானாலும் கட்டைவிரல் ப்ரமாணம் உள்ள ஹ்ருதய கமலத்தில் உபாஸிப்பதற்காக அடங்கிய சரீரம் வீர. உட்கார்ந்து இது மரணம் அடையச் சித்தமாக விருப்பவன் செய்யக்கூடிய கார்யம் இன்னதென்று சொல்லப்பட்டது. இனியும் அவனால் செய்யப்படவேண்டிய கார்யம் சொல்லப்படுகிறது பூமியின் ரூபத்தை மிகுந்த புண்யத்தால் ப்ரஹ்மம லோகஞ் சென்றவர்கள் மறு கல்பத்தில் அவர்கள் உடைய புண்யத்திற்குத் தக்கபடி அதிகாரிகள் தேவதைகளாக ஆகிறார்கள், ஹிரண்யகர்ப்பர் முதலிய வர்களையும் உபாஸித்துப் ப்ரஹ்மலோகஞ் சேர்ந்த வர்கள் ப்ரஹ்மாண்டத்தைப் பேதித்து தமதிஷ்டப்படி

விஷ்ணுபதத்தை அடைகிறார்கள். ஆனதால் பகவத் பக்தர்கள் ப்ரஹ்மாண்டத்தை பேதித்துச் செல்லும் வகை காட்டப்படுகிறது. ஈஸ்வராதிஷ்டிதமான ப்ரகிருதியிலிருந்து மஹத்தத்வம் உண்டாகிறது. அதன் அம்சம் அஹங்காரமாகும். அதனுடைய அம்சம் ஆகாயமாகும். அதனுடைய அம்சம் வாயுவாகும் (ஸ்பர்சதன்மாத்திரையால்) அதனுடைய அம்சம் (ரூபதன்மாத்திரையால்) தேஜஸ்ஸாகும். அதன் அம்சம் (ரஸதன்மாத்திரையால்) ப்ருதிவியாகும். அவைகள் யாவும் சேர்ந்தது பதினான்கு லோகங்கள் ஆகிய விராட்புருஷ சரீரமாம். அது ஐம்பது கோடி விஸ்தாரமுள்ளது. அதற்குப் ப்ருதிவியே அண்டகடாஹ மெனப்படுகிறது. அதன் முதலாவது ஆவரணமானது கோடி யோசன விஸ்தாரமுள்ளது. ஜலம் முதலிய ஒவ்வொரு ஆவரணங்களும் ஒன்றைவிட மற்றொன்று பத்து மடங்கு பெரியவைகளாம். அவைகளில் எட்டாவதான ப்ரகிருதியின் ஆவரணம் மிகவும் பெரிதானது. அர்ச்சிராதி அக்னி ஜ்யோதிஸ், பகல் சுக்லபக்ஷம், ஆறு மாஸ்யங்கள், உத்தராயணம் ஆகிய இவைகளின் அபிமான தேவதைகளடங்கிய மார்க்கத்தில் சென்றவர்கள் ப்ரஹ்மத்தையடைகிறார்கள். ஸத்யோமுக்தி எப்பொழுது இவனுடைய ஹ்ருதயத்திலிருக்கும் கர்மங்கள் யாவும் நாசமடைகின்றனவோ, பிறகு மனிதன் மரண தர்மமில்லாதவனாக ஆகிவிடுகிறான் ஸ்ரீத, க்ரமமுக்தி முன்காட்டிய அர்ச்சிராதி மார்க்கத்தை அடைந்தவர் களுக்கிக் கிடைப்பது –வீர. மூலத்தில் இரண்டு மார்க்கம் என்றிருப்பதால் தூமாதி மார்க்கமும், அச்சிராதி மார்க்கமும் என்று தாத்பர்யம். சந்த.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்– 3

பகவத் குணங்களின் மேன்மை

ஓ மஹாராஜ! வித்வான்களாகிய மனிதர்கள் சாகுந்தருணத்தில் செய்யவேண்டிய கார்யம் பகவான் உடைய கதையைக் கேட்பது முதலியவைகளே என்று சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. நீர் கேட்ட விஷயம் இதுவே. ப்ரம்ஹதேஜஸை அடைய விரும்பிய அவன் வேதங்களுக்கு அதிபதியாகிய ப்ரம்ஹ தேவரையும், இந்திரியங்களின் வல்மையை விரும்பிய அவன் இந்திரனையும், புத்ர ஸம்பத்தை விரும்பிய அவன் தக்ஷர் முதலிய ப்ரஜாபதிகளையும் பக்ஷ்ய போஜ்யங்களை விரும்பியவன் அதிதி தேவியையும், ஸ்வர்க்கத்தை விரும்பியவன் விச்வேதேவர்களையும், ஜனங்களை வசப்படுத்த விரும்பியவன் ஸாத்யர் களையும், ஸம்பத்தை விரும்பியவன், அக்னி பகவா னையும், பணத்தை விரும்பியவன் வீர்யத்தைக் கொடுப்பவர்களாகிய ருத்ரர்களையும், தீர்க்கமான ஆயுஸ்ஸை விரும்பியவள் அசுவினீ தேவர்களையும், சரீர புஷ்டியை விரும்பியவன் பூதேவியையும், பிரதிஷ்டியை (ஸ்தானத்தை விட்டு நழுவாமலிருப்பது) விரும்பிய புருஷன் உலகத்திற்குத் தாயார்களான ஆகாசம், பூமி இவைகளையும்; அழகை விரும்பிய அவன் கந்தர்வர்களையும், ஸ்திரீயை விரும்பியவன் ஊர்வசி என்கிற அப்ஸரஸ்ஸையும், எல்லோருக்கும் யஜமானனாயிருக்க வேண்டுமென்று விரும்பியவன் யக்ஞ ரூபமான மஹாவிஷ்ணுவையும், மோக்ஷத்தை விரும்பியவன் வருணனையும், வித்தையை விரும்பிய அவன் பரமசிவனையும், தம்பதிகள் ஒருவருக்கொருவர்

பிரியாமலிருக்க வேண்டியதை விரும்பியவன் பதிவிரதையான உமாதேவியையும், தர்மத்தை விரும்பிய அவன் உத்தம ச்லோகராகிய மஹாவிஷ்ணுவையும், ஸந்தானத்தை (வம்சத்தின் தொடர்ச்சி) விரும்பிய அவன் பிதுருக் களையும்; உபத்திரவ நிவர்த்தியை விரும்பியவன் யக்ஷர்களையும், பலத்தை விரும்பிய அவன் மருத்துக்களையும், இராஜியத்தை விரும்பியவன் மனுக்களாகிய தேவர்களையும், சத்துருவைக் கொல்ல விரும்பியவன் நிருதியையும், போகத்தை விரும்பியவன் ஸோமனையும், வைராக்யத்தை விரும்பியவன் ப்ரகிருதிக்கு மேற்பட்ட பரமபுருஷனையும் பூஜிக்க வேண்டும். இப்படிப் பல தேவர்களைப் பூஜிப்பவர் களுக்கு பகவத் பக்தர்களுடைய ஸங்கத்தால் பகவான் இடத்தில் ஸ்திரமான பக்தி உண்டாகிறது. இதுவே மேலான புருஷார்த்தம், பகவானுடைய கதையானது ஆசை, துவேஷம் ஆகிய இவைகளின் ஸம்பந்தமற்ற ஞானத்தை உண்டு பண்ணுகிறது. சித்தத்தைச் சுத்தி செய்கிறது. இவ்வுலகத்திலும், மேலுலகத்திலும் விஷயத்தில் வைராக்கியத்தையுண்டுபண்ணுகிறது. மோக்ஷ மார்க்கமாகிய பக்தி யோகத்தையும் உண்டு பண்ணுகிறது. ஆகையால் குரு முகமாய்ச் செய்த ச்ரவணம் முதலியவைகளால் ஸுகமடைந்த புருஷன் எவன் தான் பகவானுடைய கதையில் ஆசைப்படமாட்டான்? என்று பரிக்ஷித் மகா ராஜனுக்குச் சுகர் சொன்னாரென்று ஸூதர் சொன்னார்.

13–25 அதனைக் கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி, ஓ வித்வானாகிய ஸூதரே! சுகருடைய வார்த்தையைக் கேட்டு, பரீக்ஷித் மஹாராஜன் வியாஸ

புத்திரராயும், மிக்க ஞானியுமான அவரை நோக்கி, பின்னும் எதனைக் கேட்டார்? பகவத் பக்தர்களான ஸாதுக்களுடைய ஸபையில் பகவத் கதையே நடந்து கொண்டிருக்கும். அதனால் ஈசுவரனுடைய கதையைக் கேட்பதில் மிகுந்த ஆசையுண்டாகும். ஆனதுபற்றி அதனைக் கேட்கவேண்டுமென்ற விருப்பமுள்ள எங்களுக்குச் சொல்லவேண்டும். மேலும், மஹாரதரும், பாண்டு குலத்தில் பிறந்தவரும், பாகவதோத்தருமாகிய அந்த அரசன் பால்ய வயதில் விளையாட்டு சாமான்களைக் கொண்டு கிருஷ்ணனையே பூஜித்தார். அதுவே அவருக்கு விளையாட்டாயிற்று. அவருக்கு பாகவதத்தை உபதேசஞ் செய்த வியாஸ புத்திரராகிய சுக மஹர்ஷியானவர் கிருஷ்ணனிடத்திலே விசேஷ பக்தியுள்ளவர், ஆனதால் அவ்விருவர்களும் மஹா ஸாதுக்கள். ஸாதுக்களுடைய கூட்டத்தில் திவ்ய குணங்களால் அலங்கரிக்கப்பட்ட பகவத் கதை நடக்கும், உத்தமச்லோகராகிய பகவானுடைய கதையைச் சொல்லிக் கொண்டு கழித்த காலமே மனிதனுடைய ஆயுஸ்ஸில் மேலானது. லௌகிக வியவஹாரங்களால் கழிக்கப்படும் காலமானது வீணானதே. ஒவ்வொரு நாளும் உதயமாகிறவரும், அஸ்தமனத்தை அடைகிற வருமான அந்த ஸூர்யன் வீணாய்க் காலம் கழிப்ப வருடைய ஆயுஸ்ஸை அபகரிக்கிறார். அப்போர்ப் பட்டவர்களுடைய ஆயுஸுக்குப் பிழைத்திருப்பதைத் தவிர வேறு பிரயோசனமில்லை? பசுக்கள் ஆகாரத்தைப் புஜிக்கவில்லையா? மைதுனம் செய்யவில்லையா? ஆகையால் மேற்காட்டிய வீண் காலம் கழிப்பவன் இவைகள் போன்றவனேயாம். பின்னும் எவனுடைய காதில் பகவானுடைய சரிதம் ஒருபொழுதும் ப்ரவேசிக்கவில்லையோ, அவன்

நாயிக்குச் சமமானவன், கிராமத்திலிருக்கும் பன்றிக்கு ஒப்பானவன். சுமைகளைச் சுமக்கும் ஒட்டகம் போன்றவன், (காலால் உதைக்கும் ஸ்திரீயைத் தள்ள முடியாமல் மிக்க காமியாயிருப்பதால்) கழுதை போன்றவன், எந்த மனுஷ்யனுடைய இரு காதுகளும் பகவானுடைய குணங்களைக் கேட்கவில்லையோ, அவைகள் ஸர்ப்பம் முதலியவைகள் ப்ரவேசிக்கக் கூடிய பிலங்களேயாகும். எவன் நாக்கினால் பகவத் கதையைக் கானம் பண்ணவில்லையோ, அவனுடைய சப்தம் யாவும் தவளையின் சப்தம் போன்றவைகளே, எவனுடைய தலையானது முகுந்தனை நமஸ்கரிக்க வில்லையோ, அது பட்டுக்களால் செய்யப்பட்ட தலைப்பாகை, இரத்தின கிரீடம் இவைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தாலும் பெரிய சுமையேயாம். எவனுடைய கைகள் பகவானைப் பூஜிக்கவில்லையோ, அவைகள் தங்க வளையல்களால் அலங்கரிக்கப் பட்டவைகளானாலும் பிணத்தின் கைகளேயாகும். எவனுடைய கண்களிரண்டும் பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தைத் தரிசிக்கவில்லையோ, அவைகள் மயில் தோகையிலிருக்கும் கண்களேயாம். எந்தப் புருஷனுடைய பாதங்களிரண்டும் பகவானுடைய விசேஷ ஸான்நித்யமுள்ள புண்ய க்ஷேத்திரங்களுக்குப் போகவில்லையோ, அவைகள் மரத்தின் வேர்களுக்கு ஒப்பானவைகள். எவன் பகவத் பக்தர்களுடைய பாதங்களில் ஒட்டிய தூளியைத் தரிசிக்கவில்லையோ, எவன் பகவானுடைய பாதத்திலிருக்கும் துளஸியின் வாஸனையை மோந்து அதைச் ச்வாகிக்கவில்லையோ, அவன் பிழைத்திருக்கும் பிணமேயாம். பகவானுடைய கதையைக் கேட்டு எவனுக்கு முகத்தில் ஸந்தோஷமும், கண்களில் ஆனந்தாஷ்டமும், தேகத்தில்

மயிர்க்கூச்சலும் உண்டாகவில்லையோ, அவனுடைய ஹ்ருதயம் கருங்கல்லேயாகும். இது மிகவும் ஆச்சரியம் ஓ ஸூதரே! மனஸுக்குப் பிரியமாக நீர் பேசுகிறீர். ஆகையால் பாகவதர்களுக்குள் சிறந்தவரும், ஆத்ம வித்தையை நன்றாயறிந்தவரும் வியாச மஹாமுனியின் புத்திரருமான சுக மஹரிஷி பரீக்ஷித் மஹாராஜனை நோக்கி எதனைச் சொன்னாரோ, அதனைச் சொல்லவேண்டும் என்று கேட்டார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–4

பரீக்ஷித் ஜகத் ஸ்ருஷ்டியைப் பற்றிக் கேட்டது.

1–10. இம்மாதிரியான சௌனகருடைய வார்த்தையைக் கேட்ட ஸூதர் சௌனகரை நோக்கி பின்வருமாறு சொன்னார். உத்தரையின் புத்திரன் பரீக்ஷித்து மஹாராஜன் ஆத்ம ஸ்வரூபத்தின் உண்மையைத் தெரிவிக்கும் சுகருடைய வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ கிருஷ்ண பகவானையே உபாஸிக்க வேண்டும். அவரே பரமாத்மா என்று நிச்சயித்தார். மேலும் தேகம், பார்யை, புத்திரன், வீடு, யானை முதலியவை, திரவ்யம், பந்துக்கள் பூர்ணமாகிய இராஜ்யம் ஆகிய இவைகளில் வெகு நாளாக ஏற்பட்டிருந்த அபிமானத்தை விட்டுவிட்டார். நீங்கள் என்னைக் கேட்டதுபோல அவ்வரசனும் இந்த விஷயத்தைப் பற்றி ஸ்ரீ கிருஷ்ணனுடைய மாஹாத் மியத்தைக் கேட்பதில் மிக்க சிரத்தையுள்ளவராகப் பரமாத்ம ஸ்வரூபத்தை அறியவேண்டித் தாம் சீக்கிரத்தில் மரணமடையப் போகிறோமென்ற நிச்சயம் உள்ளவராகத் தர்மம், அர்த்தம், காமம், ஆகிய இவை களில் ஆசையில்லாதவராய், பகவானாகிய வாஸு தேவரிடத்தில் மிகுந்த பக்தியுடன் சுகரை நோக்கி, ஓ பாபமற்றவரே! ப்ராஹ்மணோத்தம! எல்லாவற்றையும் அறிந்தவரான உம்மால் சொல்லப்பட்ட வார்த்தை ஆத்ம ஞானத்தை உண்டுபண்ணக்கூடியதாயிருக்கிறது. நீர் மஹாவிஷ்ணுவின் கதைகளைச் சொல்லும் பொழுது என்னுடைய அஞ்ஞானம் விலகுகிறது. ஆனாலும் பகவான் தம்முடையமாயையால் பூமியில் அவதரித்துப்ரஹ்மா, பரமசிவன் முதலிய தேவர்களாலும்

அறியக்கூடாத இந்த ஜகத்தை அந்தப் பரமபுருஷன் எந்தச் சக்தியைக் கொண்டு உண்டு பண்ணுகிறார்? பின்னும் அதை எப்படிக் காப்பாற்றுகிறார்? மேலும், அதைப் ப்ரளய காலத்தில் எப்படி ஸம்ஹரிக்கிறார்? அவருடைய சக்தியானது அளவற்றது. பின்னும் அந்தப் புருஷன் இராமகிருஷ்ணாதி அவதாரங்களைச் செய்து விளையாடுகிறதுமல்லாமல் ப்ரஹ்மா முதலிய வர்களின் ரூபியாயுமிருந்து பலவகையான காரியங் களைச் செய்கிறார். அவருடைய சரிதம் மிக்க ஆச்சரியகரமானது. கவிகளாலும் அறிய முடியாதது, ஒருவனாகிய அந்தப் புருஷன் ஒரே காலத்தில் ப்ரக்ருதியின் குணங்களைக் கிரஹிக்கிறாரா? அல்லது ப்ரஹ்மா, ருத்ரன் முதலியவர்களின் ரூபமாயிருந்து பலவகையான லீலைகளைச் செய்து, கிரமமாக மேற்கூட்டிய ப்ரக்ருதியின் குணங்களையங்கீகரிக்கிறாரா? நீர் வேதங்களின் அர்த்தத்தையும், பரப்ரஹ்ம ஸ்வரூபத்தையும் நன்றாக அறிந்தவர். ஆகையால் இந்த ஸம்சயத்தைப் போக்கவேண்டும் என்று கேட்டார்.

11–26. இம்மாதிரியான அரசனுடைய வார்த்தையைக் கேட்ட சுகர் இந்திரியங்களுக்கு அதிபதியாகிய மஹாவிஷ்ணுவை ஸ்மரித்து, பிரத்யுத் தரஞ் செல்ல ஆரம்பித்துப் பரமாத்வை நமஸ்கரித் தார். எப்படியெனில் பரமபுருஷனை நமஸ்கரிக் கிறேன். அவர் அளவற்ற சக்தியுள்ளவர், இரஜோ குணத்தைக்கொண்டு லோகத்தை ஸ்ருஷ்டிப்பவர். ஸத்வ குணத்தைக்கொண்டு ஜகத்தைக் காப்பாற்றுகிறவர். பின்னும் அதைத் தமோ குணத்தைக்கொண்டு ஸம்ஹரிப்பவர். ஸகல பிராணிகளுக்கும் அந்தர்யாமியா

யிருப்பவர். அவருடைய ஸ்வரூபம் அறியமுடியாதது. மேலும், தர்ம சிந்தையுள்ள ஸாதுக்களுக்கு நேரிடும் துக்கத்தைப் போக்கடிக்கக் கூடியவர். துஷ்டர்களைச் சிக்ஷிப்பவர். ஸகல தேவஸ்வரூபியாயிருந்து பலனை கொடுப்பவர். பரமஹம்ஸர்கள் சுத்தமான சித்தத்தால் எதனை அடிக்கடி தேடுகிறார்களோ, அந்த ஆத்ம ஸ்வரூபத்தைப் ப்ரகாசிக்கச் செய்பவர். அப்படிப்பட்ட பகவானுக்கு அடிக்கடி நமஸ்காரஞ் செய்கிறேன். மேலும் அவர் பக்தர்களை ஸம்ரக்ஷிப்பவர். பக்தி இல்லாதவர்களுக்கு வெகு தூரத்திலிருப்பவர் (அறிய முடியாதவர்) அவருடைய ஐசுவரியத்திற்கு ஸமமான அல்லது மேலான ஐசுவரியம் ஒருவருக்குமில்லை. அந்த ஐசுவரியத்தால் ஸ்வரூபமாகிய பரப்ரஹ்மத் தினிடமே ஆனந்தப்படுகிறவர். அவரை நமஸ்கரிக்கிறேன். அந்தப்பரமபுருஷனுடைய திவ்ய நாமங்களை உச்சரிப் பதாலும், பூஜிப்பதாலும், அவருடைய கதையைக் கேட்பதாலும் ஸகல பாபங்களும் நாசமடைகின்றன. ஆகையால் அந்தத் திவ்ய மங்கள கீர்த்தியுள்ள பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். விவேகிகள் பகவானுடைய பாதங்களை உபாஸித்து இவ்வுலகத் திலும் மேலுலகத்திலுமுள்ள ஆசையை ஒழித்துச் சிரமமின்றி, ப்ரஹ்மாத்ம பாவத்தை அடைகிறார்கள். அந்தப் பகவானை நமஸ்கரிக்கிறேன். தபஸ்விகளாக ஆனாலும், தானத்தால் புண்யத்தை ஸம்பாதித்தவர் களானாலும், கீர்த்தியுள்ளவர்களானாலும் அவை களைப் பகவானிடத்தில் அர்ப்பணம் செய்யாவிடில் க்ஷேமத்தை அடைகிறதில்லை. ஆனதுபற்றி, அந்தப் புருஷனுக்கு அடிக்கடி நமஸ்காரம் செய்கிறேன். தவிரவும், கிராதர்கள் (மிருகம் முதலியவைகளை ஹிம்ஸிக்கிறவர்கள்), ஹூணர்கள் (வெண்நிறமாய்

இருப்பார்கள்) தெலுங்கு தேசத்தில் வசிக்கும் தாழ்ந்த ஜாதியான ஆந்திரர்கள், புளிந்தர்கள் (மிகுந்த ஹிம்ஸையில் பிரியமுள்ளவர்களான வேடர்கள்). சண்டாளர்கள், வலையர்கள், கழுகின் மாம்ஸத்தை புஜிக்கும் ஹீன ஜாதிகள், மிலேச்சர்கள், ஆயுதம் முதலியவைகளைச் சாணை பிடிப்பவர்கள் முதலிய பாபிஷ்டர்களும் பகவத் பக்தர்களை ஆச்ரயித்து சுத்தி யடைகிறார்கள். அந்த ப்ரபுவுக்கு நமஸ்காரம். மேலும் அவர் மனோதைரியமுள்ளவர்களால் ஆத்மாவென்று உபாஸிக்கக்கூடியவர், எல்லாவற்றிற்கும் ஈசுவரன்; வேத ஸ்வரூபீ. தபஸின் ரூபமாயிருப்பவர் குற்றமற்ற வர்களான ப்ரஹ்மா, பரமசிவன் முதலிய தேவர்களால் ஊகிக்கக்கூடிய திவ்ய சரீரமுள்ளவர். எல்லோராலும் உபாஸிக்கக்கூடிய அந்தப் பரமாத்மா என்னிடத்தில் தயவு செய்யட்டும். பின்னும் அவர் லக்ஷ்மீபதி: ஸகல யாகங்களுக்கு பலத்தைக் கொடுக்கக்கூடியவர்; ஸகல பிரஜைகளையும் ஸ்ருஷ்டிப்பவர், ஸகல லோகத்துக்கும் பிரபு கர்ம பூமியிலிருக்கும் கர்மிகளுக்கு ஸகல புருஷார்த்தத்தையும் கொடுப்பவர் அந்தகர்களுக்கும், வ்ருஷ்ணிகளுக்கும் ஸாத்வதர்களுக்கும் பெரியோர் களுக்கும் ப்ரபுவாயிருப்பதோடு அவர்களால் அடையக் கூடியவராயுமிருக்கிறார். எல்லாவற்றையும் காப்பாற்றும் அந்தக் கிருஷ்ண பகவான் என்னிடத்தில் தயவு செய்யட்டும். கவிகள் அவருடைய பாதாரவிந்தத்தை தியானஞ் செய்து அதனால் சித்தசுத்தியை அடைந்து, ஆத்ம ஸ்வரூபத்தைத் தங்களுடைய புத்திக்குத் தக்கபடி தெரிந்துகொள்கிறார்கள். ஞானத்தைக் கொடுக்கும் அந்த முகுந்தன் என்னிடத்தில் ஸந்தோஷம் அடையட்டும். கல்பத்தின் ஆதியில் ப்ரஹ்மதேவருக்கு ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும் சக்தியை (பூர்வ ஞாபகத்தை)

உண்டு பண்ணுவதற்காகப் பகவானால் தூண்டப்பட்டு. அவருடைய முகத்திலிருந்து ஸரஸ்வதியுண்டானாள். மஹரிஷிகளுக்கும் சிரேஷ்டராகிய அந்தப் பரமாத்மா என்னிடத்தில் கருணை செய்யட்டும். மேலும் அவர் மஹாபூதங்களைக் கொண்டு ஸரீரங்களை ஸ்ருஷ்டித்து அவைகளில் அந்தர்யாமியாய்ப் புருஷனென்ற டெயர் அடைந்து, பதினாறு கலாரூபியாயிருந்து அவைகளின் குணங்களைப் ப்ரகாசிக்கச் செய்கிறார். அந்தப் ப்ரபு என்னுடை வார்த்தைகளை ச்ருங்காரம் முதலிய ரஸங்கள் நிறைந்தனவாகவும். கேட்பவர்களுக்கு ஸந்தோஷத்தை யுண்டு பண்ணக் கூடியவைகளாகவும் செய்யட்டும், வேத வ்யாஸ ரூபியாயும், ப்ரஹ்ம ரூபியாயும், பக்தர்களுக்கு ஞானமாகிய மதுவைக் கொடுத்தவருமான அந்தப் பகவானை நமஸ்கரிக் கிறேன். 'ஓ மஹாராஜ! ப்ரஹ்மதேவர் தமக்கு மஹாவிஷ்ணு உபதேசித்தபடி நாரதருக்கு இதே விஷயத்தை உபதேசித்தார். அதை உமக்குச் சொல்லுகிறேன்' என்றார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–5

ஜகத்ஸ்ருஷ்டி

1–8 ஓ மஹாராஜ! அது எப்படியெனில், நாரதர் ப்ரம்ஹதேவரை நோக்கி, ஓ தேவர்களுக்கும் தேவரே; ஸகல பிராணிகளையும் ஸ்ருஷ்டிப்பவரே ஸகல பிராணிகளுக்கும் முற்பட்டவரே உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். ஆத்ம ஸ்வரூபத்தின் உண்மையைக் காட்டும் ஞானமானது எதனாலுண்டாகுமோ அதனை உபதேசிக்க வேண்டும். ஓ ப்ரபுவே! இந்த ஜகத்தானது எவரால் பிரகாசிக்கிறதோ எவரை ஆசிரயித்திருக் கிறதோ, எவரால் ஸிருஷ்டிக்கப்பட்டதோ, எவரிடத்தில் லயிக்கிறதோ, எவருக்கு ஸ்வாதீனமாக இருக்கிறதோ, எவருடைய உருவமாகவுமிருக்கிறதோ, எது ஸத்யம் ஆனதோ அதை உண்மையாகச் சொல்ல வேண்டும். நீர் உண்டானவைகளுக்கும், உண்டாகின்றவை களுக்கும், உண்டாகப் போகின்றவைகளுக்கும் அதிபதி. இந்த ஜகத்தைக் கையிலிருக்கும் நெல்லிக்கனியைப் போல ஞானத்தால் அறிந்திருக்கிறீர். ஆகையால் எல்லாம் உம்மால் அறியப்பட்டவைகளே. நீர் எவரிடமிருந்து ஞானத்தை அப்யஸித்தீர்? உமக்கு ஆதாரமாயிருப்பது யாது? நீர் யாருக்கு ஸ்வாதீனப் பட்டவர்? எவருடைய ஸ்வரூபியாக இருக்கிறீர்? ஒருவராயிருந்து பஞ்ச பூதங்களைக் கொண்டு ஸங்கல்பத்தாலே ஸகல பிராணிகளையும் ஸ்ருஷ்டிக் கிறீர். மேலும் பட்டுப்பூச்சி பட்டை உண்டு பண்ணு வதுபோல ஸ்ருஷ்டிக்கப்பட்ட ப்ராணிகளுக்குப் பிறரால் உபத்திரவம் உண்டாகாமல் தம்மிடத்தில் வைத்து

ச்ரமமில்லாமல் தம்முடைய சக்தியாகிய ப்ரகிருதியைக் கொண்டு நீர் காப்பாற்றுகிறீர். ஓ பிரபுவே; இவ் வுலகத்தில் உயர்ந்தவைகளும் தாழ்ந்தவைகளும், மத்ய நிலைமையிலுள்ளவைகளும், மனிதன் முதலிய இரண்டு கால் ஜந்துக்களும் வெண்மை முதலிய குணங்களால் ஏற்படக்கூடியவைகளும், ஸ்தூலங்களும் சூக்ஷ்மங்களும் உம்மிடத்திலிருந்தே உண்டாகின்றன என்று நினைக்கிறேன். இப்படி உமக்குப் பிரபஞ்சம் சரீரமாயிருப்பதால் நீர் எல்லோரிலும் மேலானவர். உமக்குத் தாழ்ந்தவர்களான மற்றவர்கள் உம்மை உத்தேசித்துத் தபஸ் செய்கிறார்கள். அவர்களுக்கு நீர் பலத்தைக் கொடுக்கிறீர். அப்போர்பட்ட நீர் கடும் தவம் செய்ததால் எனக்கு ஸந்தேஹமும் துக்கமும் உண்டாகின்றன. ஆகையால் எல்லாவற்றையும் அறிந்தவரே எல்லாவற்றிற்கும் அதிபதியே என்னால் கேட்கப்பட்ட விஷயங்களை எனக்குத் தெரியும்படிச் சொல்லவேண்டும்' என்று வேண்டிக் கொண்டார்.

9–29 அதனைக் கேட்ட ப்ரஹ்மதேவர் நாரதரை நோக்கி ஓ குழந்தாய்! நீ ஸந்தேகப்பட்டுக் கேட்ட விஷயம் மிகவும் மேலானது. பகவானுடைய மஹிமையைச் சொல்லும்படி என்னை நீ தூண்டின படியால் என்னிடத்தில் உனக்குக் கருணையிருப்பதாக தெரியவருகிறது. ஆனால் என்னை ஸகல ஜகத்திற்கும் ஈசுவரனென்று நீ சொன்னது புத்தி பூர்வகமாய் சொல்லும் பொய்யல்ல. என்னைக் காட்டிலும் பரமாத்மா மேற்பட்டவரென்று தெரிந்துகொள்ளாததால் இவ்வளவு மஹிமை எனக்கு இருப்பதாகச் சொல்லு கிறாய். இந்த ஜகத்தானது பரமபுருஷனுடைய தேஜஸினால் ப்ரகாசிக்கிறதேயொழிய என்னால்

ப்ரகாசிக்கிறதென்பதில்லை. ஆனால் காரண ரூபமாய் அவரிடம் அவ்யக்தமாயிருந்த ஜகத்தை நான் ஸ்ருஷ்டியால் வெளிப்படுத்துகிறேன். ஸூர்யனும், அக்னியும், சந்திரனும், அசுவினி முதலிய நக்ஷத்ரங் களும், அந்தப் பரமாத்மனுடைய தேஜஸினாலேயே பிரகாசிக்கின்றன. அந்தப் பகவானாகிய வாஸு தேவருக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். அவருடைய மாயை ஜயிக்க முடியாதது. அதனால் தான் என்னையே ஜகத் காரணனென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். அந்த மாயையும் எவரை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ள முடியாமல் எவருடைய முன்பாக நிற்பதற்கும் வெட்கப்படுகிறதோ, அவரே எல்லாவற்றிற்கும் காரணம். அந்த மாயையின் மஹிமையால் புத்திமோஹத்தை யடைந்த ஜனங்கள், நான், என்னுடையது, என்னும் அபிமானத்தை அடைகிறார்கள். மேலும் மஹா பூதங்கள், புண்ய பாபங்கள், காலம், ஸ்வபாவம், ஜீவன் ஆகிய இவைகளெல்லாம் உண்மையில் ஸ்ரீ வாஸுதேவரூபமே தவிர வேறானவையல்ல. (காரியங்கள்யாவும் காரண ரூபமென்று கருத்து.) எல்லா வேதங்களும் ஸ்ரீமந் நாராயணனையே வர்ணிக்கின்றன. ஸகல தேவர்களும் அவருடைய சரீரத்திலிருந்து உண்டானவர்கள். ஸ்வர்க்கம் முதலிய லோகங்களுக்கும் அவரே அதிபதியாக இருக்கிறார். ராஜஸூயம், அச்வமேதம், வாய்பேய்ம் முதலிய ஸகல யாகங்களாலும் அந்த ஸ்ரீ நாராயணனே ஆராதிக் கப்படுகிறார். ப்ராணாயாமம் முதலிய யோகங்களும் அவற்றாலேற்படும் தபஸும் (மனஸ் ஒருவழையாயிருப்பது), அதனால் கிடைக்கும் ஞானம், அதனால் ஏற்படும் பயனும் ஸ்ரீ நாராயணன் இடமிருந்தே கிடைக்கின்றன. அவர் எல்லாவற்றிற்கும்

ஸாஷியாயிருப்பவர். கூடஸ்தர். ஸகல பிராணிகள் உடைய ஸ்வரூபமாயுமிருக்கிறார். எல்லாவற்றிற்க்கும் ஈசுவரன். நான் அவரால் உண்டுபண்ணப்பட்டவன். அவருடைய கடாக்ஷ விசேஷத்தால் அனுக்ரகிக்கப் பட்டு ஸ்ருஷ்டிக்க வேண்டியவைகளைப் படைக் கிறேன். அவர், குணங்களில் ஸம்பந்தப்படாதவர். ஆனாலும் அவர் காப்பாற்றுவது, ஸ்ருஷ்டிப்பது, ஸம்ஹரிப்பது ஆகிய மூன்று காரியங்களுக்காக ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்று குணங்களை மாயையால் அங்கீகரிக்கிறார். 'புருஷன் எப்பொழுதும் இருக்கிறான். ஆனால் ஸத்வம் முதலிய குணங்கள் மஹாபூதங்களை ஆசிரயித்துக் காரியமா (அதிபூதம்) யிருப்பதிலும், ஞானத்தை அவலம்பித்துக் காரணமாய் இருப்பதிலும் (அத்யாத்மம்.), இந்திரியங்களை ஆசிரயித்துக் கர்த்தாவாக இருப்பதிலும், அபி மானத்தைப் புருஷனுக்கு உண்டுபண்ணிப் பந்தத்தை உண்டாக்குகின்றன. ஓ ப்ராஹ்மணராகிய நாரதரே! மாயையை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டவராகிய பகவான் மேற்சொல்லிய மூன்று வித உபாதிகளாலும் நன்றாய் அறிய முடியாத ஸ்வரூபத்தையுடையவர். அவர் எனக்கும் மற்ற எல்லாவற்றிற்கும் அதிபதி. மாயைக்கு அதிபதியான அந்தப் பகவான் பலவிதமான சரீரமெடுக்க வேண்டி, தெய்வச் செயலாய்க் கிடைத்த காலத்தையும், கர்மத்தையும், ஸ்வபாவத் தையும் தமது மாயையைக் கொண்டு அங்கீகரிக் கிறார். மேலும் அவரை ஆசிரயித்த காலத்தால் ஸத்வம் முதலிய குணங்கள் ஸமமாயிராமல் தாரதம்யத்தையடைகின்றன. அந்தப் புருஷனை ஆசிரயித்த ஸ்வபாவத்தால் வேறு உருவத்தை அடைகிறதாகிய பரிணாமம் உண்டாகிறது. பின்னும்

அந்தப் பரமாத்மாவை ஆசிரயித்த கர்மத்தினிடம் இருந்து மஹத்தத்வம் உண்டாயிற்று. பின்பு ரஜோ குணம் ஸத்வ குணம் இவைகளுடன் கூடியதும், விகாரத்தையடைந்ததுமான மஹத் தத்வத்திலிருந்து தமோகுணத்தை பிரதானமாயுடையதும், ஐந்து பூதங்களின் ஸ்வரூபமாயும், ஞானேந்திரிய ரூபமாயும், கர்மேந்திரிய ஸ்வரூபமாயுமுள்ள அஹங்காரம் உண்டாயிற்று. பிறகு அந்த அஹங்காரம் வேறு ரூபத்தை அடைந்து வைகாரிகம், தைஜஸம், தாமஸம் என்று மூவகையாயிற்று. அவைகளில் வைகாரிகன், ஸத்வ குணத்தைப் பிரதானமாக உடையவன். கர்மேந்திரியங்களை உண்டுபண்ணும் சக்தியுள்ளவன். தாமஸன் தமோ குணத்தையே பிராதனமாகக் கொண்டவன். ஞானேந்திரியங்களை உண்டு பண்ணும் சக்தியுள்ளவன். பூதங்களுக்கு முந்தின வனாகிய அந்தத் தாமஸன் வேறு ரூபத்தையடையும் பொழுது ஆகாசம் உண்டாயிற்று. சப்தமானது அதனுடைய ஸூக்ஷ்ம ரூபமாயும் குணமாயுமிருக்கிறது. மேலும் அது பார்க்கிறவன், பார்க்கப்படுகிற வஸ்து இவ்விரண்டிற்கு அடையாளமுமாயுமிருக்கிறது; வேறு உருவத்தை அடைந்த அந்த ஆகாசத்திலிருந்து வாயு உண்டாயிற்று. அதன் குணம் ஸ்பர்சமேயாம். அந்த ஆகாயத்தின் ஸம்பந்தத்தால் வாயுவானது சப்தம் உள்ளதாகவும் ஆகிறது. தேக தாரண நிமித்தமாகிய பிராணன், மனோபல வேகம், தேக பலம் ஆகிய இவைகள் வாயுவினால் உண்டாகின்றன. ஆகாசம், வாயு ஆகிய இவைகளின் ஸம்பந்தத்தால் தேஜஸா னது உண்டாகிறது. அது காலம், கர்மம், ஸ்வபாவம் ஆகிய இவைகளின் மஹிமையால் ரூபம் ஸ்பர்சம், சப்தம் ஆகிய இவைகளை அடைகிறது.

அதிலிருந்து, கந்த குணமுள்ள (வாஸனையுள்ள) ப்ருதிவியை யுண்டாக்குகிறது. அந்த ஜலம் தன் காரியமாகிய பிருதிவியில் காரண ரூபமாயிருப்பதால் ரஸம் சப்தம், ரூபம், ஆகிய இவைகள் உள்ளதாயிற்று.

30–42 மேலும் வைகாரிகமான அஹங்காரத்திலிருந்து மனஸ், திக்கு வாயு, ஸூர்யன், வருணன், அசுவினீ தேவர்கள், அக்னி, இந்திரன், உபேந்திரன், மித்ரன், ப்ரஹ்மா ஆகிய பத்துத் தேவர்களும் உண்டானார்கள். தைஜஸ அஹங்காரத்திலிருந்து பத்து இந்திரியங்கள் உண்டாயின. மேலும் ஞானசக்தியான புத்தியும், கிரியாசக்தியான பிராணனும், தைஜஸனுடைய கார்யங்களாகையால் சுரோத்ரம் (காது) துவக் (தோல்), கிராணம் (மூக்கு), சக்ஷுஸ் (கண்) ஜிஹ்வா (நாக்கு) ஆகிய ஞானேந்ரியங்கள் ஐந்தும், வாக்கு, கை, உபஸ்தம் கால் பாயு ஆகிய கர்மேந்திரியங்கள் ஐந்தும் தைஜஸனிடமிருந்தே உண்டாகின்றன. இம்மாதிரி உண்டான ப்ருதிவி முதலிய பூதங்களுடைய குணங்களும் (வாஸனை முதலியவைகள்) இந்திரிய குணங்களாகிய பார்த்தல் முதலியவைகளும் மனத்தின் குணங்களும் ஒன்றோடொன்று சேராமல் தனித்து இருந்தன. ஓ பரப்ரஹ்ம! ஸ்வரூபத்தையறிந்தவர்களுக்குள் சிறந்த நாரத, அப்பொழுது அவை ப்ரஹ்மாண்டத்தை உண்டு பண்ணச் சக்தியற்றவைகளாக இருந்தன; அத்தருணத்தில் பகவானுடைய சக்தி விசேஷத்தால் தூண்டப்பட்டு அவைகள் ஒன்றோடொன்று சேர்ந்து ப்ரதான குண பாவத்தை அங்கீகரித்து ஸமஷ்டி வியஷ்டியாகிய ப்ரமராண்ட சரீரங்களை உண்டு பண்ணின. இப்படி அநேக

வர்ஷங்கள் சென்ற பிறகு பரமாத்மாவானவர் அசேதனமாக ஜலத்தில் மிதக்கும் அந்த அண்டத்திற்குக் காலம், கர்மம், ஸ்வபாவம் ஆகியவைகளை ஆச்ரயித்துச் சைதன்யத்தை உண்டு பண்ணினார். அதாவது அந்த அண்டத்தைப் பிளந்துக் கொண்டு அந்த மஹாபுருஷன் வெளியில் வந்தார். அவர் அநேக தலைகளையும் முகங்களையும் கண்களையும் கைகளையும் தொடைகளையும் கால்களையும் உடையவராக இருந்தார். மேலும் அந்த மஹா புருஷனுடைய முகத்திலிருந்து ப்ராம்ஹண ஜாதியும், கைகளிலிருந்து க்ஷத்ரிய ஜாதியும், தொடைகளில் இருந்து வைசிய ஜாதியும், பாதங்களிலிருந்து சூத்ர ஜாதியும் உண்டாயின. மேலும் அந்தப் புருஷன் உடைய கடி இடுப்பு முதலியவைகளிலிருந்து கீழ் உலகங்களும், ஜகனம் முதலியவைகளிலிருந்து மேல் உலகங்களும் உண்டாயினவென்று வித்வான்கள் சொல்லுகிறார்கள். அதெப்படியெனில், அவருடைய பாதங்களிலிருந்து பூலோகமும், நாபியிலிருந்து புவர் லோகமும், ஹ்ருதயத்திலிருந்து ஸ்வர்லோகமும், மார்பிலிருந்து மஹர்லோகமும், கழுத்திலிருந்து ஜன லோகமும், இரண்டு ஸ்தனங்களிலுமிருந்து தபோ லோகமும், தலையிலிருந்து நித்யமானது வைகுண்டம் என்று சொல்லப்படுகிறதுமான ஸத்யலோகமும் உண்டாயின. பின்னும், அவருடைய கடியிலிருந்து அதலமும், தொடைகளிலிருந்து விதலமும் முழங் கால்களிலிருந்து மிக்க பரிசுத்தமான ஸுதலமும், கணைக்கால்களிலிருந்து தலாதலமும் குல்பங்களில் இருந்து மஹாதலமும், நுனிக்கால்களிலிருந்து ரஸா தலமும், பாதங்களிலிருந்து பாதாளமும் உண்டாயின. (உலகங்கள் பதினான்கு என்று பக்ஷம் காட்டப்பட்டது.)

மேலும், அந்தப் புருஷனுடைய பாதங்களிலிருந்து பூலோகமும், நாபியிலிருந்து புவர்லோகமும், தலையில் இருந்து ஸுவர் லோகமும் உண்டாயினவென்றும் விராட் புருஷனுடைய அவயவங்களில் லோகத்தைக் கற்பிக்கிறார்கள். (லோகங்கள் மூன்று என்ற பக்ஷமானது காட்டப்பட்டிருக்கிறது.)

நோட்டு

முந்தினவனாகி—மூலத்தில் பூதாதி என்றிருப்பதால், அதற்குப் பஞ்ச பூதங்களுக்கு முதன்மையாகிய ஆகாச என்று அர்த்தம்—சந்த். தாமஸாஹங்காரதிற்கே பூதாதி யென்றும் பெயருண்டு—வீர. சப்தமானது தாமஸன் இடமிருந்து முதலில் சப்தம் உண்டாயிற்று என்று ப்ரசித்தமாக இருக்கிறது. ஆனாலும் அந்தச் சப்த மானது ஆகாசத்தினுடைய ஸூக்ஷ்ம ரூபமாயும், அதன் குணமாகவும் மிருக்கிறது. ஆகையால் அதன் வழியாகச் சப்தம் உண்டாயிற்று என்பது கருத்து —ஸ்ரீத. பார்க்கிறவன் சுவரின் மறைவில் செல்லும் யானை முதலியவை களைக் கண்ட ஜனங்கள் யானையென்று உரக்கச் சொல்ல, அதனைக் கேட்ட அவன் ஜனங்கள் யானையைப் பார்க்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளுகிறானல்லவா? அதனால் அந்தச் சப்தமானது பார்க்கப்பட்ட வஸ்து (பார்க்கிறவர்கள் ஆகிய இவர்களுக்கு அடையாளம்...சந்த்—வீர. வைகாரிக —ஸாத்வீக அஹங்காரத்திலிருந்து ஸகல இந்திரியங் களும் உண்டாயின—ஸ்ரீத, வீர, மனஸ் அதற்கு அதிஷ்டான தேவதைகயாகிய சந்திரனும் உண்டானான். திக்கு இந்த பத்துத் தேவதைகளும் முறையே சுரோத்ரம், துவக், சக்ஷுஸ், ஜிஹ்வா, கிராணம்,

வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் ஆகிய இவைகளுக்கு அதிதேவதைகள். மேற்காட்டிய இந்திரி யங்கள் அதிதேவதைகளுடன் உண்டானவையென்று தாத்பரியம் கொள்ள வேண்டும்—வீர தைஜஸனிடம் இருந்து ஞானேந்திரியங்களும் கர்மேந்திரியங்களும் தைஜஸனிடமிருந்து உண்டாயின.—ஸ்ரீத ராஜஸாஹங் காரத்துடன் கூடிய ஸாத்வீக அஹங்காரத்தினிடமிருந்து என்று அர்த்தங் கொள்ளவேண்டும். அப்படியில்லா விடில் 30—வது ஸ்லோகத்தின் அர்த்தத்திற்கு விருத்த மாகும். ஆக்ஷேபம் 30—வது ஸ்லோகத்திற்கு மூலத்தில் கண்டபடி அதிஷ்டான தேவதைகள் உண்டானார்கள் என்று மாத்திரம் அர்த்தம் வைத்துக் கொண்டோ மானால் 31 வதான இந்த ஸ்லோகத்தில் இந்திரியங்கள் உண்டாயினவென்று அர்த்தங்கொள்ளலாம், ஒன்றுக் கொன்று விரோதமில்லை. ஸமாதானம் அப்படியல்ல இந்திரியங்களில்லாமல் அதிதேவதைகளுக்குத் தேகம் உண்டாக நியாயமில்லை, மேலும், ஆதித்யன் முதலிய தேவதைகள் நான்முகக் கடவுளால் ஸ்ருஷ்டிக்கப் பட்டவர்களாகச் சொல்லப்பட போகிறபடியால் அண்டங்களை ஸ்ருஷ்டிப்பதற்கு முன் அவர்களை ஸ்ருஷ்டிக்க நியாயமில்லை,—வீர. சரீர நோபயம் ஸஸிருஜுர்ஹ்ருத என்ற பாடத்தை யங்கீகரித்து அவைகள் பஞ்சீகரணத்தால் ஸ்தூல, பாவத்தையும், ஸூக்ஷ்மமாக விருப்பதையும் மேற்காட்டிய இரண்டு வகையுமற்றதாகிய கால கர்மஸ்வபாவத்தையும் அங்கீ கரித்து இந்தப் ப்ரம்ஹாண்டத்தைப் படைத்தன அல்லது ஒரு தத்துவத்திற்கும் காரியமாக இல்லாததும், காரணமாக இல்லாததுமாகிய ப்ரம் ஹாண்டத்தை ஸ்ருஷ்டித்தன —வீர.

அத்தியாயம்–6

விராட் புருஷனுடைய விபூதிகள்

ஜனங்களுடைய வாக்கும், அதற்கு அதிஷ்டான தேவதையாகிய அக்னியும் விராட் புருஷனுடைய முகத்திலிருந்து உண்டானவை. மேலும் அவருடைய தோல் முதலிய ஏழு தாதுக்களிலிருந்து காயத்ரீ முதலிய சந்தஸ்ஸுகள் உண்டாயின. ஹவ்யம் (தேவர்களுக்குக் கொடுக்கும் அன்னம்). அமிர்தம் (மேற்காட்டிய இருவகையிலும் பாக்கியான மனுஷர் களுக்குக் கொடுக்கக்கூடிய அன்னம்) ஆகிய இவை களும், ஆறு வகையான ரசங்களும், ஜனங்களுடைய நாக்கும் அதற்கு அதிதேவதையான வருணனும் அவருடைய நாக்கிலிருந்து உண்டாயின. மேலும் ஸகல பிராணிகளுடைய ப்ராணன்களுக்கும் மற்ற வாயுவிற்கும் அவருடைய மூக்குகள் முக்கியமான இருப்பிடம், ஔஷதிகளும், அசுவினீ தேவர்களும் மோதம், ப்ரமோதம் என்ற ஸாமான்ய விசேஷ வாஸனைகளும் அவருடைய கிராணேந்திரியத்தில் இருந்து உண்டானவை. அவருடைய சக்ஷுரிந்திரியம் ஆனது ஏழுவித உருவங்களுக்கும், சந்திரன், அக்னி, முதலிய தேஜஸ்களுக்கும் முக்கியமான ஸ்தானம். இரு கண்களும் (நேத்திர கோளங்கள்) த்யுலோகத்திற்கும், ஸூர்யனுக்கும் ஸ்தானங்களாயிருக்கின்றன. மேலும் அவருடைய காதுகள் திக்குகளுக்கும், தீர்த்தங்களுக்கும் முக்கிய ஸ்தானங்களாயிருக்கின்றன. ச்ரோத்ரேந்திரியம் ஆனது ஆகாசத்திற்கும் சப்தத்திற்கும் உற்பத்தி ஸ்தானமென்று சொல்லப்படுகிறது. அந்த மஹாபுரு ஷனுடைய சரீரமானது ஸகல பதார்த்தங்களுடைய

ஸாராம்சத்திற்கும், நிகரில்லாத ஸௌந்தர்யத்திற்கும் இருப்பிடமாயிருக்கிறது. அவருடைய துவக்கிந்திரியானது (தோல்) ஸ்பர்சம், வாயு யக்ஞம் ஆகிய இவைகளுக்கு ஸ்தானமென்று சொல்லப்படுகிறது. அவருடைய உரோமங்கள் யாகத்திற்கு ஸாதனமான உத்பிஜ்ஜ ஜாதியான அரசு, அத்தி, கருங்காலி, பலாசம் முதலிய விருக்ஷங்களுக்கும், அவருடைய தலைமயிர்கள் மேகங்களுக்கும், அந்த புருஷனுடைய மீசை, தாடி இவைகள் மின்னலுக்கும், நகங்கள் கற்களுக்கும், இரும்புகளுக்கும் இருப்பிடமாய் இருக்கின்றன. அவர் உடைய கைகள் உலகத்தைக் காப்பாற்றும் திக்பாலர்களுக்கும், காலடி வைப்பதானது பூலோகம், புவர்லோகம்: ஸுவர்லோகம் ஆகிய இவைகளுக்கும், க்ஷேமத்திற்கும் (கிடைத்ததைக் காப்பாற்றுவது). சரணத்திற்கும் (பயத்திலிருந்து ரக்ஷிப்பதற்கும்) காரணமா யிருக்கின்றன. பகவானுடைய பாதாரவிந்தமானது ஸகல இஷ்டங்களையும் கொடுக்கக்கூடியது. அந்த மஹா புருஷனுடைய சிகையானது ஜலங்களுக்கும், வீர்யத் துக்கும், ஸ்ருஷ்டிக்கும் பர்ஜன்யனுக்கும் ப்ரஜா பதிக்கும் காரணமாயிருக்கிறது. ஓ நாரதரே, அவர் உடைய பாயு என்னும் இந்திரியமானது, மல விஸர்ஜனத்திற்கும், யமனுக்கும், மித்ரனென்னும் தேவதைக்கும், ஆச்ரயமாக விருக்கிறது. மேலும் அவருடைய குதமானது நிருதிக்கும். ஹிம்ஸைக்கும், மிருத்யுவுக்கும். நரகத்திற்கும் ஆச்ரயமாயிருக்கிறது. அவருடைய பின் பாகமானது அவமானம், அதர்மம், அஜ்ஞானம் ஆகிய இவற்றுக்கும், அவருடைய நாடி களானவை ஆறுகள், மேற்கு முகமாய்ச் செல்லும் நதிகள் ஆகிய இவைகளுக்கும், அந்தப் புருஷனுடைய எலும்புகளானவை மலைகளுக்கும் ஆச்ரயங்களாக

இருக்கின்றன. பின்னும் அவருடைய வயிரானது அன்னம் முதலிய ப்ரதான ரஸங்களுக்கும் ஸமுத்திரங்களுக்கும், ப்ராணிகளுடைய லயத்திற்கும், ஹ்ருதயம் ஆனது மனத்திற்கும் ஸ்தானமாயிருக்கின்றன. மேலும் அவருடைய ஆத்மாவானது (சித்தம்) தர்மத்திற்கும், எனக்கும். உனக்கும் ஸனகர் முதலியவர்களுக்கும்: பரமசிவனுக்கும் ஸகல ஞானத்திற்கும், ப்ராணிகளின் ஸமூஹத்திற்கும் முக்ய இருப்பிடமாயிருக்கிறது. ஆகையால் நானும், நீரும், பரமசிவனும் உமக்கு மூத்த ஸஹோதரர்களான ஸனகர் முதலிய யோகிகளும், தேவர்களும், அஸுரர்களும்; மனிதர்களும், நாகங்களும், (யானைகளும்) பறவைகளும், மிருகங்களும், ஸர்ப்பங்களும் கந்தர்வர்களும், அப்ஸர ஸ்திரீகளும், யக்ஷர்களும், பூதகணங்களும், பசுக்களும், பிதிருக்களும், ஸித்தர்களும், வித்யாதாரர்களும், சாரணர்களும், ஜல ஜந்துக்களும் ஸ்தலத்தில் சஞ்சரிக்கும் ஜந்துக்களும், ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் ஜந்துக்களும், நவக்கிரஹங்களும்: நக்ஷத்திரங்களும்; தூமகேது முதலியவைகளும், மேகங்களும் மின்னல்களும், மற்றும் பலவகையான பிராணிகளும், உண்டாகின்றவைகளுமான ஸமஸ்தமும் அந்த மஹா புருஷ ஸ்வரூபமே தவிர வேறில்லை. பன்னிரண்டு அங்குல ப்ரமாணமுள்ள ஸ்வரூபமடைய அந்த மஹாபுருஷனால் இந்த ஜகத்தானது முழுவதும் வ்யாபிக்கப் பட்டிருக்கிறது. ப்ராணன் ஆனவன் (ஸூர்யன்) தன்னுடைய மண்டலத்தைப் ப்ரகாசிக்கச் செய்துகொண்டு வெளியிலும் ப்ரகாசிக்கிறார். இவர் அமிருதத்திற்கும் அபயத்திற்கும் அதிபதி. மேலும் கர்மபலத்தை அதிக்ரமித்தவர். ஆசையால் நித்ய முக்தர். ஆனாலும் ஜகத்ரூபியாயிருப்பதே அவருடைய அளவற்ற மஹிமையாயிருக்கிறது. அந்த

மஹா புருஷனுடைய அம்சமாகிய உலகங்களிலேயே ஸகல பிராணிகளும் வஸிக்கிறார்களென்று சொல்லப் படுகிறது. மூன்று லோகங்களுக்கும் மேலான மஹர் லோகத்திற்கும் மேலான லோகங்களில் அமிருதம் க்ஷேமம் அபயம் ஆகிய இவைகள் வைக்கப்பட்டிருக்கின்றன, மூவுலகங்களின் வெளியில் அவருடைய மூன்று பாதங்களிருக்கின்றன. அவைகள் ப்ரம்மசர்யம், வானப்ரஸ்தம், ஸந்யாஸம் முதலிய ஆச்ரமங்களேயாகும். மேற்காட்டிய ஆச்ரமிகள் புத்திர ரூபமாக உண்டாகாதவர்கள். மூவுலகத்தின் உள்ளே மற்றொரு பாதம் இருக்கிறது. அதுவே ப்ரம்மசர்ய வ்ரதமற்ற கிருஹஸ்தாச்ரமம் எனப்படுகிறது.

21–47. க்ஷேத்ரக்ஞனாகிய ஜீவன் போகத்திற்கும் மோக்ஷத்திற்கும் ஸாதனமாகிய இரண்டு மார்க்கங்களிலும் ஸஞ்சரிக்கிறான்; அவைகளின் தூமாதி மார்க்கம் என்பது வித்தைக்கு (ஞானத்திற்கு) ஸாதனமாகிய உபாஸனைகளால் கிடைக்கக்கூடியது. ஜீவன் முன் சொன்ன இருவகையான மார்க்கங்களையும் தன் உடைய அதிகாரத்திற்குத் தக்கபடி அடைகிறான். இப்படிவிராட் புருஷனுடைய உள்ளே இருப்பவர்களுக்கு விசித்திரமான பலன் கிடைக்கிறது. ஆனால் எதனிடத்திலிருந்து ப்ரம்மாண்டம் உண்டாயிற்றோ அதனிடமிருந்து ஐந்து பூதங்கள், இந்திரியங்கள், அதன் விஷயங்கள் ஆகிய இவைகளின் ஸ்வரூபியாயிருக்கும். விராட்புருஷன் உண்டானார். (அவர் ப்ரம்மாண்டத்திற்கு அபிமானியாயிருப்பவர்) அவைகளுக்குக் காரணமாயிருக்கும் பரமேசுவரன், அநேக கிரணங்களால் ஸூர்யன் ப்ரகாசிப்பது போல ஜகத் ரூபமாகிய விராட் புருஷனுடைய தேகத்தையும்

ப்ரம்மாண்டத்தையும் அவர் அதிக்கிரமித்துப் ப்ரகாசிக் கிறார் (ஈசுவரன் விலக்ஷண ரென்பது கருத்து). ஜகத் முழுவதும் அந்த ஸர்வேசனுடைய ஸ்வரூபமாயிருக்கு மானால் யாகமும், அதற்கு ஸாதனங்களும் பகவத் ரூபங்களென்று ஏற்படுகிறதே; யாகத்தால் பரம புருஷனை ஆராதிப்பது எப்படியெனில் (பின்வருமாறு) சொல்லப்படுகிறது) ஓ நாரத! மஹாத்மாவாகிய இவருடைய கொப்பூழில் தோன்றிய தாமரைப் புஷ்பத்திலிருந்து நான் உண்டானபோது பரமாத் மாவை ஆராதிப்பதற்காகயாக ஸாமக்ரிகளைத் தேடியும் எல்லாம் அவருடைய அவயங்களாக இருந்தனவே யொழிய அவைகளைக் காட்டிலும் வேறானவைகள் ஒன்றும் கிடைக்கவில்லை, ஆகையால் யாகத்திற்கு வேண்டிய பசுக்கள், யூபத்திற்கு உபயோகமாகிய மரங்கள், தர்ப்பங்கள், பாத்திரங்கள், நெல் முதலிய தானியங்கள், நெய் முதலிய வேறாம திரவ்யங்கள், ஸோமரஸம், ஸுவர்ணம் முதலிய உலோகங்கள், மண், ஜலம், ரிக், யஜுஸ்,ஸாமம் என்ற வேதங்கள், வெளத்ரம் முதலிய கர்மங்கள் ஜ்யோதிஷ்டோமம் முதலிய பெயர்கள். ஸ்வாஹாகாரம் முதலியவைகள். தேவதா தியானங்கள் ப்ராயச் சித்தம், செய்தவை களைப் பகவதர்ப்பணஞ் செய்வது, நான் வஸிக்கும் இந்தப் பகவானுடைய நாபியாகிய யாகசாலை ஆகிய ஸாமக்ரியைகளை அந்த மஹா புருஷனுடைய அவயங்களாலேயே ஸம்பாதித்தேன். இப்படி அவருடைய அவயவங்களால் யக்ஞ புருஷனாகிய அந்தப் பகவானையே பூஜித்தேன்; பிறகு கச்யபர் முதலிய ஒன்பது ப்ரஜாபதிகளும் மிகவும் ஸாவதானர்களாய் இந்திரன் முதலிய தேவர்களின் ரூபமாய் வியக்தரும், ப்ரஹ்மரூபமாய் அவ்யக்தருமான அந்த மஹா புருஷனைக் குறித்து யாகஞ் செய்தார்கள். பிறகு

மனுக்களும்; மற்ற மஹர்ஷிகளும் பிதிருக்களும், தேவர்களும், அஸுரர்களும். மனிதர்களும் அவரவர் களுக்கு வேண்டிய ஸமயத்தில் ப்ரபுவாகிய அவரை உத்தேசித்து யாகஞ் செய்தார்கள். இந்த ஸகல ஜகத்துக்களும் பகவானாகிய நாராயணனிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகவான் ப்ருகிரு தியின் ஸகல குணங்களையும் அடக்கிக் கொண்டு ஸ்ருஷ்டிக்கு முன்னே தாம் நிர்க்குணராக இருந்தார். அவருடைய ஆக்ஞையாலே நான் உலகத்தைப் படைக்கிறேன், பரமசிவன் ஸம்ஹரிக்கிறார், அவர் தம்முடைய ஸ்வரூபத்தால் காப்பாற்றுகிறார். இப்படி மூன்று வகையான சக்தியுள்ளவராக இருக்கிறார். காரியகாரண ரூபமாகிய ஸகல பதார்த்தங்களும் பகவானை விடவேறாக இருக்க வில்லை. ஓ நாரத உம்மால் கேட்கப்பட்ட எல்லா விஷயத்திற்கும் பதில் சொன்னேன். நான் விசேஷபக்தியுடன் ஹ்ருதயத்தில் பகவானைத்தியானித்தபடியால் என்னுடைய வாக்குப் பொய் சொல்லுகிறதில்லை. மனஸும் இந்திரியங் களும் கெட்ட மார்க்கத்தில் பிரவர்த்திக்கிறதில்லை வேத ஸ்வரூபியாயும் தப ஸ்வரூபியாயுமிருக்கும் நான் பிரஜாபதிகளால் நமஸ்கரிக்கப்படுகிறேன். மேலும் நான் எனக்குக் காரணமாகிய பகவானைத் தெரிந்து கொள்ளவேண்டி யோகத்தால் முயற்சி செய்தும் அவரைத் தெரிந்து கொள்ளமுடியவில்லை. அவர் உடைய சரணங்கள், சரணாகதர்களுக்கு ஸம்ஸார பந்தத்தைப் போக்குகின்றன. க்ஷேமத்தையும், ஸகல மங்களத்தையும் கொடுக்கின்றன. அந்தச் சரணங் களுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். ஆகாசமானது தன்னுடைய முடிவை அறியாதது போலவே அவர் உடைய மாயா வைபவத்தை அவரும் அறியவில்லை.

அப்படியிருக்கப் பிறருக்குத் தெரியுமா? என்றாலும், பரமசிவனாலும், உங்களாலும் ஆத்மஸ்வரூபம் அறிய முடிகிறதில்லை. மற்ற தேவர்களால் அறியமுடியுமா? அந்தப் பகவானுடைய மாயையால் நாம் கலங்கிய புத்தியுள்ளவர்களாய் நம்முடைய ஞானத்திற்குத் தக்கபடி இந்த ப்ரபஞ்சத்தைத் தெரிந்துகொள் கிறோம். (அவருடைய ஸ்வரூபம் முழுவதையும் தெரிந்துகொள்ள முடியவில்லை) எந்தப் பகவான் உடைய அவதார சரிதங்களை நாமும் பிறரும் கானம் செய்தபோதிலும் அவருடைய உண்மையைத் தெரிந்து கொள்ள முடியவில்லையோ. அந்தப் பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். அந்தப் புருஷனே எல்லாவற்றிற்கும் முந்தியவர். அவர் பிறப்பில்லாதவர். ஒவ்வொரு கல்பத்திலும் தம் மாலேயே தம்மை ஸ்ருஷ்டிக்கிறார். காப்பாற்றுகிறார், ஸம்ஹரிக்கிறார். அந்தப் புருஷன் சுத்தன். ஞான ஸ்வரூபி. எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாயிருப்பவர். தேகம் முதலியவைகளின் ஸம்பந்தமற்றவர். ஸத்ய ஸ்வரூபி. பூர்ணர், பிறப்பு நாசம் இவைகளில்லாதவர், நித்யர், ஒப்பற்றவர் ஓ நாரத மஹரிஷியே எவர் களுடைய சரீரமும் இந்திரியங்களும் மனஸும் மிகவும் சாந்தங்களாகவிருக்குமோ. அந்த முனிவர் களே மேற்காட்டிய ஆத்ம ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்வார்கள். துஷ்டர்கள் சொல்லுகிற சாஸ்திரவிருத்தமான யுக்திகளால் அவை கலங்குமாகில் அந்த ஆத்மஸ்வரூபம் அவர்களுக்குப் புலப்படாமல் மறைந்துவிடும். ப்ரகிருதியைப் பிரவர்த்திக்கச் செய்யும் புருஷன் பரமாத்மாவின் முதன்மையான அவதாரமேயாம். மேலும் காலம், ஸ்வபாவம். காரியம் காரணம், மனம், ஐந்து மஹாபூதங்கள், அஹங்காரம், ஸத்வம் முதலிய

குணங்கள், ஸமஷ்டி சரீரம். ஸ்வராட், ஸ்தாவரங்கள் ஜங்கமங்கள் ஆகிய இவைகள் யாவும் அவருடைய அம்சங்களேயாம். மேலும் நான் பரமசிவன், யாகம், (விஷ்ணு) தக்ஷர் முதலிய இந்த எல்லாப் பிரஜாபதிகள், நீர் ஸனகர் முதலியவர்கள், இந்திரன் முதலிய லோகபாலர்கள், கருடன் முதலியவர்கள். மனு. மாந்தாதா முதலிய அரசர்கள். லோகத்தின் பாலர் களாகிய அனந்தன். வாசுகி முதலியவர்கள் ஆகிய இவர்களும் கந்தர்வர்கள், வித்யாதரர்கள், சாரணர்கள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், ஸர்ப்பங்கள். யானைகள். மஹரிஷிகளுக்குள் சிறந்தவர்களாகிய வஸிஷ்டர் முதலியவர்கள் பிதிருகணங்களில் மேலானவர்களும் ஸித்தர்களில் சிறந்தவர்களும், தைத்யர்களுக்குள் சிறந்தவர்களும், தானவர்களுக்கு மேலானவர்களும் மற்ற, ப்ரேதங்கள். பிசாசங்கள், பூதங்கள், கூஷ்மாண்ட கணங்கள், ஜலஜந்துக்கள் மிருகங்கள், பசுக்கள் ஆகிய இவைகளுக்குள் சிறந்தவைகளுமாகிய எவை பூஜிக்கத்தக்கவைகளோ, காந்தி, வேகம் தேக பலம். பொறுமை. அழகு கெட்ட காரியஞ் செய்வதில் வெட்கம், ஸமிருத்தி புத்தி; அற்புதமாகிய வர்ணம். உருவமற்றதாயிருப்பது. உருவமுள்ளதாக விருப்பது ஆகிய இவைகளுள்ளவைகளாக எவைகளிருக்கின்றனவோ; அவைகளெல்லாம் பரமாத்மாவின் விபூதிகளேயொழிய வேறில்லை, ஆனாலும், ஓ மஹரிஷியே மிகுந்த மஹிமை பொருந்திய அந்தப் பரமாத்மாவினுடைய முக்யமான லீலாவதாரங்களென்று எவை சொல்லப் படுகின்றனவோ அவை கேட்பவர்களுடைய காதுகளின் தோஷங்களைப் போக்கக்கூடியவை. மிகவும் மனோஹரமானவை அவைகளை உமக்குச் சொல்லுகிறேன்.

நோட்டு

ஸகல–விரும்பக்கூடிய ஸகல வஸ்துக்களுக்குள் மேலானவராகிய பகவானுடைய பாதம் – வீர வேறில்லை. – "இந்த ஜகத் முழுவதும் புருஷனே" – ஸ்ருதி. ப்ராண – "இந்த ஆதித்யனே ப்ராணன்" – ஸ்ருதி ப்ராண வாயு வானது சரீரத்தில் ப்ராணன், அபானண் முதலிய பெயரை அடைந்து தானிருக்கும் சரீரத்தை சேஷ்டிக்கச் செய்துகொண்டு வெளியிலும் ஸஞ்சரிப்பதுபோல்–சந்த. ஜகத்ரூபி– ஜகத்ரூபியானாலும் அதனால் அவருடைய மஹிமை குறைவுபடுகிறதில்லை யென்ற ஸ்ருதியில் தாத்பரியம் காட்டப்பட்டது ஸ்ரீத. – மஹர்லோகம் – பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் ஆகிய மூன்று லோகங்களிலும் அனித்ய ஸுகமே தவிர நித்ய சுகமில்லை. மஹர்லோகமானது கிரம முக்தி ஸ்தானமானாலும் கல்பாந்தரத்தில் அவ்விடத்திலிருப்பவர்கள் அதை விட்டு விட வேண்டியிருப்பதால் அதிலும் நித்ய ஸுகமில்லை. மூவுலகமும் ஸங்கர்ஷணருடைய முகத்தின் அக்கினியால் எரிக்கப்படும் அந்த உஷ்ணத்தைப் பொறுக்காமல் பிருகு முதலியவர்கள் ஜனலோகம் செல்லுகிறார்கள் ஸ்ரீத.– வெளியில் – பிரகிருதி, பிராகிருதர்கள் ஆகிய இவைகளுக்கு வெளியில் இருக்கின்றன அவைகள் ஜன்மமற்ற முக்தர்களால் அடையத்தக்கவை – வீர. அதுவே – ஸம்ஸாரிகளான ஜீவவர்க்கங்களால் அடையக்கூடியது –வீர. படைக்கிறேன் – அந்தப் புருஷனே எனது உருவங்கொண்டு படைத்தலையும், தம் உருவத்தாலே காப்பாற்றுவதையும், ருத்திரருடைய ஸ்வரூபத்தை அடைந்து ஸம்ஹாரத்தையுஞ் செய்கிறார்.

அத்தியாயம்–7

பகவானுடைய லீலாவதாரம்

"நாசமற்றவரான ஸ்ரீ நாராயணன் ஸகல யக்ஞஸ்வரூபமான வராஹ சரீரத்தை யெடுத்துப் பூமியைத் தூக்க முயற்சித்தபோது ஸமுத்திரத்தில் பிரவேசித்த வனும், தைத்யர்களுள் முந்தினவனுமான ஹிரண்யாக்ஷன் என்ற அஸுரனைச் சிங்கப்பல்லால் குத்திக் கிழித்தார். அது மஹேந்திரர் வஜ்ராயுதத்தால் மலையையுடைத்தாற் போலிருந்தது. மேலும் அந்தப் புருஷோத்தமன் 'ருசி' என்ற பிரஜாபதிக்கு ஆகூதி என்ற ஸ்திரியினிடத்தில் ஸுயக்ஞரென்ற பெயருடன் அவதரித்தார். பிறகு "தக்ஷிணா என்பவளைக் கல்யாணம் செய்து கொண்டு அவளிடத்தில் 'ஸுயாமா' என்ற பெயருள்ள தேவர்களைப் பெற்றார். அப்பொழுது அந்த ஸுயக்ஞர் தாம் இந்திரனாக இருந்து உலகத்தைக் காப்பாற்றி வந்தார். அப்பொழுது ஸ்வாயம்புவ மனுவென்பவர், "நீர் மூவுலகத்திற்கும் நேர்ந்திருந்த பெரிதான உபத்திரவத்தைப் போக்கடித்தபடியால் உமக்கு 'ஹரி' என்று பெயர் உண்டாகட்டும்" என்று சொன்னார். ஓ ப்ராம்ஹணோத்தமரான நாரதரே பின்னும் அந்த மஹா புருஷன் கர்த்தமபிரஜாபதியின் வீட்டில் தேவஹூதியினிடத்தில் ஒன்பது ஸ்திரீகளுடன் கபிலராக அவதரித்தார். பிறகு அவர் தம் தாயான தேவஹூதிக்கு ப்ரஹ்ம வித்யையை உபதேசித்தார். அதனால் அவள் துக்கத்தைக் கொடுக்கக்கூடிய முக்குண ஸம்பந்தத்தை விட்டு அந்த ஜன்மத்திலேயே முக்தியை அடைந்தாள். முன்னொரு காலத்தில் நல்ல புத்திரன் வேண்டுமென்று அத்திரி மஹர்ஷியானவர்

தபஸ் செய்தார். அவருடைய தபஸினால் பகவான் சந்தோஷப்பட்டு, "நானே புத்திரனாக என்னால் (தத்தம்) கொடுக்கப்பட்டேன்" என்று சொல்லி, அதனால் தத்தாத்ரேயராக தத்தரென்ற அத்திரியின் புத்திரர் அவதரித்தார். அவருடைய பாத தூளிகளால் பரிசுத்தமான சரீரமுள்ள யது (யயாதியின் பிள்ளை) கார்த்தவீர்யார்ஜுனர் முதலியவர்கள் இவ்வுலகத்து ஸுகத்தையும், மேலுலகத்து ஸுகத்தையும் அடைந் தார்கள். மேலும் நான் பலவகையான உலகங்களை ஸ்ருஷ்டிக்க விரும்பித் தபஸ் செய்தேன். பூர்ணமாகிய அந்தத் தபஸினால் பகவான் ஸந்தோஷமடைந்து ஸனத்குமார, ஸனக ஸநந்தன ஸனத் ஸுஜாதர் என்ற பெயருடன் நான்கு வகையாக அவதரித்து, முன் கல்பத்தின் ப்ரளயத்தில் மறைந்துபோன ஆத்ம வித்தையை மஹர்ஷிகளுக்கு நன்றாக உபதேசித்தார். அதனைக் கேட்டவுடன் அவர்களுக்கு அபரோக்ஷ ஸாக்ஷாத்காரம் உண்டாயிற்று. இன்னும் அந்த மஹாபுருஷன் தர்மத்தின் பத்தினியும், தக்ஷருடைய பெண்ணுமான மூர்த்தி என்பவளிடத்தில் 'நரன், நாராயணன்', என்ற திவ்ய நாம தேயங்களுடன் இரண்டு வகையாக அவதரித்தார். அந்த அவதாரத்தில் கடுமையாக தபஸ் செய்தார். அப்பொழுது மன்மதன் உடைய சைன்யங்களாகிய ஊர்வசி முதலிய அப்சர ஸ்திரீகள் அவருடைய தபஸைக் கெடுக்க முயன்றும் முடியவில்லை. வித்வான்களாகிய ருத்ரன் முதலியவர் கள் கோபத்தால் க்ரூரமாயிருக்கும் பார்வையால் மன்மதனை ஜயித்தார்கள். ஆனாலும் தம் ஆத்மாவைத் தகிக்கும் (ஸகிக்க முடியாத) கோபாக்னியை ஜயிக்க வில்லை. (கோபத்திற்கு வசப்பட்டிருக்கிறானென்று கருத்து.) இவ்விதக் கோபமும் நாராயணாவதாரஞ்

செய்த பகவானுடைய மனதில் பிரவேசிக்கப் பயப்படு கிறது. அதற்குத் தாழ்ந்தவனாகிய காமம் அவருடைய மனத்தில் ப்ரவேசிக்க முடியுமா ?

8–54 உத்தான பாதனென்ற அரசனுடைய பத்தினியாகிய ஸுநீதியின் புத்திரர் துருவரென்று ஒருவர் இருந்தார். அவர் தம்முடைய பிதாவின் ஸமீபத்தில் ஸபத்னீ மாதாவான ஸுருசியினுடைய வார்த்தை யாகிய பாணத்தால் அடிக்கப்பட்டு, பால்ய வயதிலேயே தபஸ் செய்வதற்காகக் காட்டுக்குச் சென்றார். அவர் பகவானை ஸ்தோத்திரஞ் செய்யவே, புருஷோத்தமன் ஸந்தோஷப்பட்டு அவருக்குச் சாச்வத மாகிய பதத்தைக் கொடுத்தார். அந்த மேலான ஸ்தானத்தை அதற்குக் கீழாகவிருக்கும் ஸப்த ரிஷிகளும் ஸ்தோத்திரஞ் செய்கிறார்கள். (இது ஒரு அவதாரமென்று கருத்து) தவிரவும் வேணனென்ற அரசன் அதர்மத்தை அனுஷ்டித்து வந்ததால் ப்ராம் மணர்கள் அவனைச் சபித்தார்கள். வஜ்ரம் போன்ற அவர்களுடைய வாத்தையால் அவனுடைய ஐசுவர்யம் முதலியவைகள் நாசமாயின. அந்த வேனனுக்கு பகவான் ப்ருது என்றும் புத்திரனாக அவதரித்து, அவனை நரகத்திலிருந்து காப்பாற்றி அதனால் புத்திரன் என்ற சப்தத்தை உண்மையான அர்த்தமுள்ளதாகச் செய்தார். பின்னும் பூமி தேவி இடமிருந்து ஸகல வஸ்துக்களையும் கறந்தார். மேலும், அந்தப் ப்ரபுவானவர் ப்ரிய வ்ரதருடைய பௌத்திரரும் ஆக்னீத்ரருடைய புத்திரருமாகிய நாபி என்பவருக்கு ஸுதேவி என்பவளிடத்தில் ரிஷப ரென்ற திவ்ய நாமதேயத்துடன் அவதரித்தார். அப் பொழுது விஷயங்களின் ஆசையை ஒழித்து மிகவும்

சாந்தமாகிய அந்தக் கரணமுள்ளவராகி தம்முடைய ஸ்வரூபத்திலே இருந்து யோகியாய் மூடன்போல் சஞ்சரித்தார். அந்த நிலைமையைத் தான் மஹர்ஷிகள் பரமஹம்சாசிரமம் என்கிறார்கள். பின்னும், யக்ஞ புருஷராகிய அவர் என்னால் செய்யப்பட்ட யாகத்தில் ஹயக்ரீவராக அவதரித்தார். அந்த ஹயக்ரீவர் பொன்னிறமுள்ளவர். வேத ஸ்வரூபி. ஸகல யாக ஸ்வரூபி. சகலதேவஸ்வரூபி. வேதங்கள் யாவும் மூச்சுவிடும் அவருடைய மூக்கிலிருந்து உண்டாயின. பின்னும் ப்ரளய காலத்தில் பலவகையான வேதங்கள் என்னுடைய முகத்திலிருந்து நழுவிப்போனதால் வேத மார்க்கங் களைத் திருப்பி என்னிடம் கொடுப்பதற்காக அவை களை எடுத்துக்கொண்டு மத்ஸ்ய ரூபத்துடன் பகவான் சமுத்திர ஜலத்தில் விளையாடினார். அப்பொழுது ஸகல ப்ராணிகளுக்கும் ஆதரரும், பூமியைப் ப்ரதானமாயுடையவருமான அந்தப் பரம புருஷனை வைவஸ்வத மனு தர்சித்தார். தவிரவும், அந்த ஆதி புருஷன், தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து அமிருதத்திற்காகப் பாற்கடலைக் கடையும்பொழுது ஆமை உருவங்கொண்டு மத்தாயிருந்து மந்தர மலையைத் தம்முடைய முதுகில் தாங்கினார். அப்பொழுது அந்த மலை உராய்வதால் தினவைப் போக்கிக் கொண்டு ஸுகமாய்த் தூங்கினார். மேலும் தேவர்களுக்கு நேரும் கஷ்டங்களை நிவர்த்திக்கும் அந்த மஹாபுருஷன் சிங்கப் பற்களால் பயங்கரமாயும் குரூரமான புருவங்களுள்ளதுமான நரஸிம்ஹ சரீரத்தை எடுத்துக் கொண்டு, கதாயுதத்துடன் தமக்கு எதிரில் ஓடிவரும் ஹிரண்யகசிபு என்ற அசுரனைத் தமது மடியில் தள்ளி, நகங்களால் கிழித்துக் கொன்றார். முன்னொரு காலத்தில் ஒரு சிறந்த

யானையானது பெரிதான ஒரு ஏரியில் ஜலம் குடிக்க இறங்கினபொழுது அங்கிருந்த மிகுந்த பலசாலியான ஒரு முதலை அதைப் பிடித்துக் கொண்டது. அதனால் அந்த யானை மிகவும் துன்பமடைந்து துதிக்கையில் தாமரைப் புஷ்பத்தை வைத்துக் கொண்டு, 'ஆதி புருஷ! ஸகல லோகத்துக்கும் அதிபதியே கேட்பவர் களைப் பரிசுத்தப்படுத்தும் கீர்த்தியுள்ளவரே' என்னைக் காப்பாற்ற வேண்டும். உம்முடைய நாமங்களைக் கேட்பவர்களுக்கு ஸகல மங்களமும் உண்டாகின்றன" என உரக்கக் கதறிற்று. அளவற்ற மஹிமையுள்ள ஸ்ரீ நாராயணன் அதனைக் கேட்டுச் சக்ராயுதத்தைத் தரித்து, கருடன் மீது ஏறிக்கொண்டு அவ்விடம் வந்து சக்ராயுதத்தால் முதலையின் வாயைப் பிளந்து சரணமடைந்த யானையின் துதிக்கையைப் பிடித்து மிகுந்த கருணையால் அதை அக்குளத்திலிருந்து கரை சேர்த்தார். பின்னும் யக்ஞ புருஷனாகிய மஹாவிஷ்ணுவானவர் அதிதி தேவியின் புத்திரர் களான தேவர்களுக்குத் தம்பியாய் அவதரித்தவரானா லும், குணங்களால் சிறந்தவராயும், வாமன ரூபியாயு மிருந்து பலிச் சக்ரவர்த்தியினிடம் மூன்று அடி பூமியைப் பெற்று ஸகல உலகங்களையும் ஆக்ரமித்தார். உலகத்தில் தர்மம் தவறாமல் நடப்பவர்கள் சத்துருவைக் கொல்லும் ஸாமர்த்யமுள்ளவர்களானாலும அவர்கள் உடைய ஐசுவர்யத்தை அபஹரிப்பதற்கு யாசிக்கிற வழியைத் தவிர வேறு மார்க்கமில்லை. ஓ நாரத பலிச் சக்ர வர்த்தியானவன் பகவானுடைய பாதங்களை அலம்பி, அந்தச் சுத்தமான தீர்த்தத்தைத் தன்னுடைய தலையில் புரோக்ஷித்துக் கொண்டு (தனது புரோஹிதரான சுக்ராச்சாரியரால் தடுக்கப்பட்டும்) ப்ரதிக்ஞையை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தால்

மூவுலகத்தையும், தன்னுடைய சரீரத்தையும் சத்துரு வாகிய பகவானுக்குக் கொடுத்தான். அப்படிப்பட்ட பக்தனுக்கு பகவான் தேவராஜ்யத்தைக் கொடுப்பது போதாதென்று நினைத்துத் தமது ஸாலோக்யத்தைக் கொடுத்தார். மேலும் நீர் விசேஷ பக்தியுள்ளவராய், பகவானை நோக்கி யோக சாஸ்திரத்தை உபதேசிக்க வேண்டுமென்று கேட்டீர் அல்லவா? அப்பொழுது அவர் வாஸுதேவரே நம்மைக் காப்பாற்றுகிறவர் என்று நிச்சயமாய் நம்பியிருப்பவர்களால் சீக்கிரத்தில் அறியக்கூடியதும், பாகவத சாஸ்திரத்தில் வர்ணிக்கப் படுகிறதும் ஆத்மாவின் உண்மையைக் காட்டுகிறது மான ஞானத்தையும், யோகத்தையும் உமக்கு உபதேசித்தார். மேலும், மன்வந்தரங்களில் பகவான் மனுவின் வம்சத்தைக் காப்பாற்றுகிறவராய்ப் பத்துத் திக்குகளிலும் தம்முடைய தேஜஸை ஸ்தாபித்து, அதனால் துஷ்டர்களான அரசர்களை நிக்ரஹித்து தம்முடைய கீர்த்தியை ஸத்திய லோகத்திலும் பரவச் செய்கிறார். அந்தப் பரமாத்மாவேதான் தன்வந்த்ரியாக அவதரித்து தம்முடைய கீர்த்தி யென்கிற பெயரி னாலேயே மஹாரோக முள்ளவர்களுடைய வியாதியைப் போக்குகிறார்; பின்னும் தீர்க்கமான ஆயுஸைக் கொடுக்கக் கூடிய அந்தப் பகவான் யாகங்களில் ஹவிர்பாகத்தை (முந்தி அஸுரர்களால் தடுக்கப்பட்டிருந்ததை) அடைந்தார். மேலும், ஆயுர் வேதமாகிய வைத்திய சாஸ்திரத்தையும் உலகத்தில் பரவச் செய்தார். தவிரவும் மிகுந்த பராக்கிரமமுள்ள வரும், மஹாத்மாவுமான அந்த நாராயணன் பரசு ராமனாக அவதரித்துப் ப்ராம்மணர்களைத் துவேஷித்த வர்களும் நன்மார்க்கத்தை விட்டுத்தவறினவர்களும், நரகத்தை அடைய விரும்பினவர்களும் நாசத்தை

அடைவதற்கு என்றே தெய்வத்தால் விருத்தி பண்ணப் பட்டவர்களும் பூமிக்கு மிகுந்த உபத்திரவத்தைச் செய்பவர்களுமான க்ஷத்திரியர்களை இருபத்தோருதரம் கோடரியைக் கொண்டு கொன்றார். அந்த மஹா புருஷனே, என்னிடத்தில் தபவு செய்து, முகமலர்ச்சி யுள்ளவராய் இக்ஷ்வாகு வம்சத்தில் தம்முடைய அம்சங்களாகிய பரதன் முதலியவர்களுடன் தசரதருக்குப் பிள்ளையாக ஸ்ரீராமனென்ற பெயருடன் அவதரிப் பார். பிறகு பிதாவாகிய தசரதருடைய அனுமதியின் மேல் தம்பியாகிய லக்ஷ்மணருடனும், பார்யையான ஸீதாதேவியுடனும் தண்டகாரண்யஞ் செல்வார். அப்பொழுது இராவணன் அவரிடம் விரோதம் செய்து கொண்டதனால் பந்துக்களை யிழப்பான். பின்பு திரிபுர ஸம்ஹாரம் செய்வதற்கு முயற்சித்த பரமசிவன் போல ராவணனைக் கொல்வதற்காக இலங்கா நகரம் போக விரும்பிய ராமனைக் கண்டு ஸமுத்திரம் பயந்து நடுங்கும். மேலும் ஸீதையானவள் இலங்கா நகரத்திலிருப்பதால் அவளைப் பாராமல் கலங்கியதும், கோபத்தால்ப் சிவந்ததுமான ஸ்ரீ ராமன் உடைய பார்வையால் அந்த ஸமுத்திரத்திலிருக்கும் மகரங்களும், ஸர்ப்பங்களும், முதலைகளும் மிகவும் தாபத்தையடையும். பின்பு ஸமுத்திரம் வழிகாட்டும்; அதன் வழியாக ஸ்ரீராமன் இலங்கா நகரம் போவார்; அவ்விடத்தில் வஸிக்கும் ராவணன் மிகவும் பலமுள்ள வன்; அவன் ஐராவதத்துடன் யுத்தம் செய்யும் போது, அது தன்னுடைய தந்தங்களால் இராவணனுடைய மார்பில் குத்திற்று; பிறகு அவைகளை பிடுங்க முடியாமல் தலையை அசைக்கத் தந்தங்கள் முறிந்து போயின. அப்படி இராவணனுடைய மார்பில் பதிந்த யானையின் தந்தங்களுடைய காந்தியால் பத்துத்

திக்குகளும் ப்ரகாசிக்கின்றன. தவிரவும், அவன், எனக்கு ஸமமானவர்கள் உலகத்தில் யார் இருக்கிறார் கள் ? என்று கர்வத்தால் சிரிப்பதுமுண்டு. அப்படிப் பட்ட சத்ருவாகிய அந்த ராக்ஷஸனுடைய கர்வத்தை ஸைன்யத்தின் மத்தியில் வில்வினுடைய சப்தத்தாலேயே போக்கடித்து, அவனை நாசஞ் செய்யப் போகிறார். பிறகு அஸுராம்சமான அரசர்கள் வெகுவாய்ப் பூமியில் பிறந்ததனால் பூமிக்கு விசேஷ பாரம் ஏற்படுமாதலால் அதனை நிவர்த்திப்பதற்காக ஸாமான்ய ஜனங்களால் அறியக்கூடாத மார்க்கமுள்ள வரும், வெண்மை நிறமுள்ளது, கருமை நிறமுள்ளது மான தலைமயிர்களுள்ளவருமான ஸ்ரீ மஹாவிஷ்ணு வானவர் பலராமனாகவும் கிருஷ்ணனாகவும் அவதரித்து, தம்முடைய மஹிமையைக் காட்டும் லீலைகளைச் செய்வார். எப்படியெனில் அவர் குழந்தையாயிருக்கும்போது பூதனை யென்ற ராக்ஷஸியைக் கொல்வார். மூன்றுமாதங்கள் சென்ற பிறகு சகட ரூபியான அஸுரனை ஸம்ஹரிப்பார். முழங்கால்களைக் கொண்டு தவழும் போதே ஆகாசம் வரையில் உயர்ந்தவைகளான அர்ஜுன மரங்களின் நடுவில் புகுந்து அவைகளைப் பூமியில் தள்ளுவார். அவர் பகவதவதாரமாயில்லா விடில் இப்படிச் செய்யமுடியாது. தவிரவும், விஷ ஜலத்தைக் குடித்து மூர்ச்சையடைந்த இடையர்களையும்; பசுக்களையும் தம்முடைய அனுக்கிரஹமுள்ள பார்வையால் பிழைக்கச் செய்து யமுனையிலிருந்து அந்த மடுவைச் சுத்தப்படுத்துவதற்காக அதிலிருந்து மிகுந்த விஷ வேகமுள்ள காளியனென்ற ஸர்ப்பத்தை அதைவிட்டு ஓடும்படி செய்வார் பிறகு, அந்த அமானுஷ காரியத்தைப் பார்த்து கோபர்கள் ஆச்சரியமடைந்து

அன்று இரவு யமுனையின் கரையில் படுத்துத் தூங்கு வார்கள். கோடைக் காலமாகையால் அப்பொழுது நான்கு புறத்திலும் காட்டில் அக்கினி பற்றிக்கொள்ளும். அப்பொழுது ஒருவராலும் அறியக் கூடாத வீர்யமுள்ள பகவான் பலராமனுடன் கோபர்கள் அனைவரையும் கண்களை மூடிக் கொள்ளச் செய்து, அவர்களை அந்த ஆபத்திலிருந்தும் காப்பாற்றுவார். மேலும் அவருடைய தாயான யசோதையானவள் தன் வீட்டிலிருக்கும் கயிறுகளால் பிள்ளையான ஸ்ரீ கிருஷ்ணனைக் கட்டியும், அவைகள் முடிவதற்குப் போதாமலிருக்கும். அப்பொழுது, அந்தப் பகவான் கொட்டாவி விட்டு வாயைத் திறப்பார். யசோதை அவருடைய வயிற்றில் பதினான்கு லோகங்களையும் பார்த்துப் புத்திரனுடைய மஹிமையைத் தெரிந்து கொள்வாள். தவிரவும், வருணருடைய பாசத்தால் கட்டப்பட்டுள்ள நந்தகோபரை ஸம்ரக்ஷிப்பார். மயனுடைய புத்திரனால் பூமிக்குள் மறைக்கப்பட்டு இருந்த கோபர்களைக் காப்பாற்றுவார். பகல்முழுவதும் வேலைசெய்து களைத்து, இராத்திரி தூங்கிக் கொண்டிருக்கும் கோகுலவாஸிகளான ஜனங்களை வைகுண்ட லோகஞ் சேர்ப்பார். . இந்திரனை உத்தேசித்துக் கோபர்களால் ஒவ்வொரு வருஷத்திலும் செய்யப்பட்டு வரும் பூஜையானது ஒரு வருஷத்தில் நிறுத்தப்படும். அதனால் மிகவும் கோபங் கொண்டு பசுக்களை நாசஞ் செய்வதற்காக மழையை பெய்யச் செய்வார். அப்போது ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஏழு வயதுள்ளவரானாலும் கோவர்த்தனமென்னும் மலையை நாய்க்குடையைப் போல் எளிதில் ஒரு கையால் தூக்கிக் குடையாக ஏழுநாள் வரையிலும் பிடித்துப் பசுக்களையும், கோபர்களையும்

காப்பாற்றுவார். ஒரு நாள் ராத்திரியில் சந்திரிகை யால் வெண்ணிறமுள்ள காட்டில் ராஸக்கிரீடையில் பகவான் கானம் பண்ணுவார். அந்தப் பாட்டிலுள்ள பதங்கள் இனியவைகளாயிருக்கும், ராகாலாபனம் மிக்கமேலானதாக இருக்கும். அதனால் கோபிகை களுக்கும் மன்மத தாபம் விருத்தியாகும். அந்த ஸமயத்தில் அவர்களைச் சங்கசூடன் என்ற குபேரன் உடைய வேலைக்காரன் அபஹரித்துப் போவான். பகவான் அவனை ஸம்ஹரிப்பார். மேலும் பகன், கேசி, அரிஷ்டன் சாணூரன் முதலிய மல்லர்கள்,

குவலயாபீடமென்ற யானை, கம்ஸன், நரகாஸுரன் மௌண்ட்ரகன், ஸால்வன், தந்தவக்திரன், சம்பரன் விடூதரன், யவனன், ஏழு விருஷபங்கள் ஆகிய இவர்கள் ஸ்ரீ கிருஷ்ண பகவானாலும், பிரலம்பன், தேனுகன், துவிதனென்ற வானரன், பல்வலவன், ருக்மி முதலியவர்கள் பலராம ரூபியான மஹாவிஷ்ணு வினாலும், யுத்தத்தில் மிகுந்த ஸாமார்த்தியமுள்ள காம்போஜர், மத்ஸயர், குருக்கள், ஸிருஞ்ஜயர், கேகயர் முதலியவர்கள் பீமார்ஜுன ரூபமாகிய பரமபுருஷனா லும் கொல்லப்பட்டு வைகுண்டஞ் சேர்க்கப்படுவார் கள். பின்னும், கால மஹிமையால் ஜனங்களுக்கும் ஆயுஸும் புத்தியும் குறையும்போது, பகவான் ஒவ்வொரு யுகத்திலும்; ஸத்ய வதியினிடம் அவதரித்து, ஸமுத்திரம் போல விஸ்தாரமாகிய வேதங்களை அவர்களுக்குத் தக்கபடி சாகை சாகைகளாகப் பிரிப்பார். பின்னும் ஒரு காலத்தில் அஸுரர்கள் வேதமார்க்கத்தை ஆச்ரயித்து மயனால் செய்யப் பட்டதும் அறியக் கூடாத வேகமுள்ளதுமான (இரும்பு, வெள்ளி, தாமிரம் இவைகளால்

செய்யப்பட்ட) பட்டணங்களால் லோகங்களை உபத்திரவிப்பார்கள். அப்பொழுது பகவான் அவர்கள் உடைய புத்திக்கு மோஹத்தையும் (யுக்தமானவை களை விட்டுவிடுவது) ப்ரலோபத்தையும் (யுக்தமல்லாத வைகளை கிரஹிப்பது) உண்டாக்கும் பாஷண்ட வேஷத்தைத் தரித்து (புத்தாவதாரஞ் செய்து) தர்மம் போலத் தோன்றும் பாஷண்ட தர்மத்தை வெகுவாகச் சொல்வார். எப்பொழுது ஸாதுக்களுடைய கிருஹங்களிலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சரிதங்கள் கானஞ் செய்யப்படாமல் இருக்குமோ, எந்தக் காலத்தில் ப்ராம்மணர்களும், க்ஷத்ரியர்களும், வைச்யர்களும் பாஷண்டர்களாகவும், சூத்ரர்கள் அரசர்களாகவு மிருப்பார்களோ, எந்த ஸமயத்தில் ஸ்வாஹா, ஸ்வதா, வஷட் என்ற சப்தங்கள் கேட்க அரிதாகவிருக்குமோ, அப்பொழுது (கலியுகத்தின் முடிவில்) கல்கியாகிப் பகவான் அவதரித்துக் கலியை நிக்ரஹிப்பார். மேலும் நான் துஸும் (ஸ்ருஷ்டிக்கு முன்னிருந்த நிலையை யோஜிப்பது) மரீசி முதலிய ஒன்பது பிரஜாதிபதிகளும் ஜகத்தை ஸ்ருஷ்டிப்பதற்காக ஏற்பட்ட பகவான் உடைய மாயா விபூதிகளேயாம். தர்மமும், யக்ஞமும் (விஷ்ணு) மனுக்களும்; தேவ சிரேஷ்டர்களும் அரசர் களும், ஜகத்தைக் காப்பாற்றுவதற்காக நியமிக்கப் பட்ட விபூதிகளாகிறார்கள். அதர்மமும், ருத்ரரும், கோப ஸ்வபாவமுள்ள ஸர்ப்பங்களும், அஸுரர்களும், ஸம்ஹாரத்திற்காக ஏற்படுத்தப்பட்டவைகள். ஆகை யால் இந்த ஈச்வரனுடைய மாயா விபூதிகளெல்லாம் அளவற்ற ஆச்சர்யகரமான சக்தியுள்ளவைகள். பூமியின் தூளிகளைப் பிரித்து எண்ணக்கூடிய சக்தியுள்ள கவியாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் லீலா விபூதிகள் எல்லாவற்றையும் அறிய முடியாது.

ஆகையால் சுருக்கமாகச் சொன்னேன். அந்தப் பகவான் மிகவும் அசைந்து கொண்டிருந்ததும், ஸத்திய லோகத்திற்குக் கீழ்ப்பட்டதுமான ஸ்வர்க்கத்தைத் தம்முடைய தடையற்ற வேகத்தால் அசையாமல் இருக்கச் செய்தார். ஆகையால் எனக்கும்; உமக்கும் மூத்தவர்களான ஸநத்குமாரர் முதலியவர்களுக்கும், அந்தப் புருஷனுடைய மாயாபலம் இவ்வளவென்று தெரியாது. மற்றவர்கள் தெரிந்துகொள்ள நியாயமே யில்லை. ஆயிரம் முகங்களுள்ள ஆதிசேஷ பகவானும் அந்தப் பரமபுருஷனுடைய மஹிமையைக் கானம் பண்ணி, அதன் கரையை அடைய அசக்தராயிருக் கிறார். (முழுவதையும் சொல்ல முடியவில்லை) கடபமற்றுப் பகவானுடைய பாதங்களைப் பூஜிப்பவர் களிடத்தில் (பக்தி செய்பவர்களிடத்தில்) அவருக்குக் கருணை உண்டாகும். புருஷோத்தமருடைய மாயா பலத்தை நன்றாய்த் தெரிந்து கொண்டு அதையும் தாண்டுவார்கள். நாய், நரிகளுக்கு ஆஹாரமாகிய இந்த சரீரத்தில் அவர்களுக்கு மானமிராது. ஓ நாரத, ப்ரஹ்மாவாகிய நான், நீர், உமக்கு முன் பிறந்தவர்களான ஸனத்குமாரர் முதலியவர்கள், பகவானாகிய பரமசிவன், ப்ரஹ்லாதன்; ஸ்வாயம்புவ மனு, அவருடைய பத்தினியாகிய சதரூபை, அவருடைய பெண்கள், பிள்ளைகள் பிராசீனபர்ஹிஸ், ரிபு, என்னும் மஹரிஷி, வேனனுடைய பிதாவாகிய அங்கன், துருவன், இக்ஷ்வாகு, நளன், முசுகுந்தன், வைதேஹர், காதி, ரகு, அம்பரீஷன், ஸகரர், கயன், நஹுஷன், மாந்தாதா, அலர்க்கன், சததன்வா, நந்திதேவர், பீஷ்மர், பலி, அதூர்த் தரயன், திலீபர், ஸௌபரி, உதங்கர், சிபி.தேவலர்,பிப்பலாதர், ஸாரஸ்வதர் உத்தவர் பூரிஷேனர், பராசரர்,

விபீஷணன், ஹனுமான், சுகர், அர்ஜுனன், ஆர்ஷ்ணி ஷேணர், விதுரர், சுருததேவர் முதலிய மற்றவர்கள் ஆகிய எல்லோரும் பகவானுடைய யோகமாயையை அறிவோம். ஸ்திரீகளும், சூத்ரர்களும், ஹூணர்களும் (ஜாதி விசேஷங்கள்) வேடர்கள் பாபகர்மத்தைச் செய்து ஜீவிக்கிறவர்களும், பசு, பக்ஷி முதலிய திர்யக் ஜாதிகளும், பகவத் பக்தர்களுடைய சேர்க்கையாலேயே தேவமாயையைத் தெரிந்து கொண்டு, அதைத் தாண்டுகிறார்கள். சாஸ்திரங்களை அப்யசித்து, அவற்றை மனஸில் தரிக்கக்கூடிய சக்தியுள்ளவர்கள் மாயையை ஜயிப்பார்கள் என்பதில் சந்தேஹமே யில்லை. அந்தப் பரமாத்ம ஸ்வரூபமானது எப்பொழு தும் சாந்தமாயிருக்கிறது. தன்னை அடைந்தவர் களுக்கு ஸம்ஸார பயத்தைப் போக்கி அபயத்தைக் கொடுக்கிறது. அது சுத்தமாகிய ஞானஸ்வரூபம். தோஷமற்றது. எக்காலத்திலும் ஒரே தன்மை யுள்ளதாயிருப்பது. கார்யம், காரணம் இவைகளைவிட வேறானது. பலவகையான காரகம் கிரியை இவைகளுள்ள வேத சப்தங்களால் அந்த ஸ்வரூபம் நிரூபிக்கப்படுகிறதில்லை. மாயையானது புதிதாகக் கல்யாணஞ் செய்துகொண்ட சிறு பெண் போல வெட்கமுள்ளதாய் அந்த ஸ்வரூபத்திற்கு முன்பாக நிற்கிறதில்லை. (அதில் ஸம்பந்தப்படுகிறதில்லை.) அந்த ஸ்வரூபமே ப்ரஹ்மம். அது சோகமற்றது. எப்பொழுதும் ஸுகரூபமானது. அதனிடத்தில் மனத்தைச் செலுத்திய யோகிகள் வேறொன்றையும் அபேக்ஷிக்கிறதில்லை. மழை பெய்யச் செய்யும் மகேந்திரன் ஜலத்திற்காகக் கிணறு வெட்ட வேண்டி மண் வெட்டியை எடுத்துக் கொள்வானா? பல வகையான தாதுக்களால் உண்டான சரீரமானது

அந்தத் தாதுக்கள் பிரியும்போது நாசமடைந்தாலும் ஜீவன் ஆகாசம் போல் நாசமடைகிறதில்லை. ஏனென்றால் அவன் அதனுடன் உண்டானவனல்ல. ஜன்மம் முதலிய விகாரங்களற்றவன். அந்த ஜீவனுக்கு ஸகல வித க்ஷேமத்தையும் கொடுப்பவரும் அந்த மஹா புருஷனேயாம். மகத் தத்வம் முதலியவைகளின் பரிணாம விசேஷங்களால் ஏற்படும் சுபங்கள் அவரிடமிருந்தே உண்டாகின்றன. ஓ, குழந்தாய்! நாரத பகவானுடைய ஸ்வரூபத்தைச் சுருக்கமாகச் சொன்னேன். காரிய காரணங்களடங்கிய ஜகத்தில் அவரைக் காட்டிலும் வேறொன்றுமில்லை. (எல்லாம் பரமாத்ம ஸ்வரூப மென்று கருத்து.) ஸ்ரீமந் நாராயணனால் எனக்கு உபதேசிக்கப்பட்டபடி பகவானுடைய விபூதிகளை உனக்குச் சுருக்கமாகச் சொன்னேன். ஸகல ஸ்வரூபியாகவும், ஸகலத்திற்கு ஆதாரமாயிருக்கும் ஸ்ரீ நாராயணனிடத்தில் மனிதர் களுக்குப் பக்தியுண்டாகும்படி நீ இதை விஸ்தாரப் படுத்து. மோக்ஷத்திற்கு அதிபதியான ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் பூர்ணமாகிய பக்தி யிருக்குமானால், ஜீவன் மனுஷ்ய சரீரத்தில் ஆசைப்படமாட்டான். ஸ்திரமற்ற பார்யை, புத்திரன் முதலியவர்களால் என்ன பிரயோஜனம்? ஸகல பாபங்களையும் போக்கக்கூடிய உத்தம ச்லோகராகிய பகவானிடம் பக்தியுண்டாகாவிடில் அவன் செய்யும் தானங்களா லும் தபஸினாலும் ப்ரயோஜனமில்லை. மேலும் ஜாதிக்கும் ஆசிரமத்திற்கும் தகுந்த தர்மங்களை யனுஷ்டிப்பதாலும், சாஸ்திரங்களை படிப்பதாலும் பலனில்லை.

55. ஆகையால், ஸ்ரீ கிருஷ்ணனாகிய பரமாத்மா வினுடைய லீலைகளை வர்ணிப்பவர்களுக்கும், அதை

அனுமோதிப்பவர்களுக்கும், ச்ரத்தையுடன் நித்தியம் கேட்பவர்களுக்கும் அவித்யை விலகும் என்று ப்ரஹ்மதேவர் சொன்னார்" என்று நாரதருக்கும் ப்ரஹ்மதேவருக்கும் நடந்த ஸம்வாதத்தைப் பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சுகர் உபதேசித்தார்.

நோட்டு

நான்கு –மூலத்தில் சதுஸ்ஸன என்றிருப்பதால் அதற்கு நான்கு புருஷார்த்தங்களைக் கொடுப்பவர் ஆகையால் தத்தாத்ரேயருக்கே சதுஸ்ஸனா என்றும் மற்றொரு பெயர் – சந்த். ப்ரஹ்மதேவருடைய தபோமகிமையால் ஸனத். ஸநாதந, ஸகந்தன, ஸனக என்று நால்வகையாக அவதரித்தார் – வீர. ஸனகர், ஸனாதனர், ஸனந்தனர், ஸனத்குமாரர் என்ற திவ்ய நாமதேயங்களை அடைந்தார் – விஜ. முடியவில்லை இந்தக் கதை பதினோராவது ஸ்கந்தத்தில் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது. வெண்மை நிற பகவானுடைய தலைமயிர்களில் வெண்மை நிறமுள்ளவை சில. கருமை நிறமுள்ளவை சில. அப்படி யிருப்பது அழகேயாம். ஜரை (கிழத்தனம்) யால் ஏற்பட்டதல்ல ஓ மஹாமுனியே! வெண்மை நிறமுள்ளவையும் கருமை நிறமுள்ளவையுமான தம்முடைய கேசங்களை எடுத்தார். –விஷ்ணு புராணம் அந்த ஹரியும் வெண்மை நிறமுள்ள ஒரு மயிரையும், கருமை நிறமுள்ள ஒரு மயிரையும் எறிந்தார். அவை யதுகுலத்திலிருக்கும் ரோகிணி, தேவகி இருவர்களை யும் அடைந்தன. அவ்விரு கேசங்களில் வெண்மை நிறமுள்ளது பலராமனாக ஆயிற்று. கருமை

நிறமுள்ளது ஸ்ரீ கிருஷ்ணனாக அவதரித்தது. மஹா பாரதம். கேசம் அவதரித்தது என்பதால் பகவான் உடைய கேசமே துஷ்டர்களைக் கொல்ல ஸாமார்த்திய முள்ளது என்று காட்டப்பட்டது. பலராமன், ஸ்ரீ கிருஷ்ணன் ஆகிய இவர்களுடைய நிறமும் காட்டப் பட்டது. கேசமே அவதரித்தது என்று தாத்பரியமல்ல. ஸ்ரீ கிருஷ்ணன் ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவே என்று அர்த்தமுள்ள வசனத்தின் விரோதமேற்படுமாகையால் மேற்காட்டியபடியே அர்த்தங்கொள்ள வேண்டும். ஸ்ரீத, ஸ்திரீகளும் ஸ்திரீகளும் சூத்ரர்களும் வேதத்தை அத்யனஞ் செய்யக் கூடாது என்ற சுருதியின்படி வேதாத்யனத்திற்கு அனர்ஹர்களும் தாண்டுகிறார்கள்– முக்தியடைகிறார்கள். வேத சப்தங்களால் பத்தாவது ஸ்கந்தத்தில் ஸ்ருதி கீதையில் இந்த விஷயம் நன்றாய்க் காட்டப்பட்டிருக்கிறது.

அத்தியாயம்- 8

பரீஷித்தின் கேள்வி

அதனைக்கேட்ட பரீஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி ஓ தத்துவத்தைபறிந்தவர்களுக்குள் சிறந்தவரே! மிக்க அதிர்ஷ்டமுள்ளவரே, குணங்களை அதிக்கிரமித் வரராகிய பகவானுடைய குணங்களை, வர்ணிக்கும் படி திவ்ய திருஷ்டியுள்ள நாரதரைப் ப்ரஹ்மதேவர் தூண்டினாரல்லவா? பின்பு அந்த நாரதர் யார் யாருக்கு அந்தப் பகவத் குணங்களை எப்படி உபதேசித் தார்? அதனுடைய உண்மையை அறியவிரும்புகிறேன். அற்புதமான மகிமையுள்ள பகவானுடைய மங்களகர மாகிய கதைகளைச் சொல்ல வேண்டும். அவைகளைக் கேட்டு ச்ரத்தையாய் அவருடைய சரிதங்களை உச்சரிப் பவர்களுடைய மனத்தில் பகவான் வெகு சீக்கிரமாய்ப் ப்ரவேசிக்கிறார். விஷயங்களில் ஆசையொழிந்து மனஸைப் பகவானிடத்தில் செலுத்தி, சரீரத்தைவிட வேண்டும. சரத்காலமானது ஜலத்திலுள்ள தோஷத் தைப்போக்கி, அதை தெளியச் செய்வது போல் ஸ்ரீ கிருஷ்ண பகவான் காதின் வழியாகப் பக்தர்களுடைய ஹ்ருதய கமலத்தில் ப்ரவேசித்து மனோதோஷங்களை நாசஞ் செய்கிறார். சுத்தமான மனமுள்ள புருஷன் ஆசை, துவேஷம் முதலியவைகளை ஒழித்து கிருஷ் ணனுடைய பாதங்களை ஒருபொழுதும் விடமாட் டான். தேசாந்தரத்திலிருந்து வந்தவர்கள் தமக்குச் சொந்தமாகிய வீட்டை விடுவார்களா? தேஹத்தை யுண்டுபண்ணும் மகாபூதங்களுடைய ஸம்பந்தமற்ற வராகிய பகவானுக்கு தேஹம் எப்படி உண்டா கிறது? அல்லது காரணமில்லாமல் உண்டாகிறதா?

அதன் உண்மை உமக்குத் தெரியும். அதனைச் சொல்லவேண்டும். ஸகல லோகங்களின் அமைப்புள்ள புவன கோசமாகிய பத்மமானது எவருடையவயிற்றில் இருந்து உண்டானதோ. அந்தப் புருஷன் உண்மையில் அவயங்களில்லாதவரானாலும், லௌகிக புருஷனுக்கு எவ்வளவு அவயவங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு அவயவங்கள் உள்ளவரென்றும் அப்படிப்பட்ட அவயவங்களின் அமைப்புள்ளவெரென்று சொல்லப் படுகிறாரே, பகவானுடைய கொப்பூழில் தோன்றிய தாமரஸ புஷ்பத்திலிருந்து உண்டானவரும், ஐந்து பூதங்களாலேற்பட்ட சரீரமுள்ளவருமான ப்ரஹ்மதேவர் எவருடைய அனுக்கிரஹத்தால் ப்ராணிகளை ஸ்ருஷ்டிக்கிறார்? விராட்ரூபத்தை எப்படி நேரில் பார்த்தார்? அதைச் சொல்லவேண்டும் மாயைக்கு அதிபதியும் ஸகல கல்யாண குணங்களுக்கு இருப்பிட மாயும் ஜகத்தை உண்டுபண்ணுகிறவரும், அதைப் பரிபாலிப்பவரும், அதை ஸம்ஹரிப்பவருமான மஹா புருஷன் தம்முடைய மாயையைவிட்டு எவ்விடத்தில் சயனித்துக் கொள்கிறார்? தவிரவும் அந்த மஹா புருஷனுடைய அவயவங்களால், உலகங்களும், அவற்றின் அதிபதிகளும் ஸ்ருஷ்டிக்கப்பட்டார்கள் என்றும், லோகபாலர்களால் அந்தப் புருஷனுடைய அவயவங்கள் ஏற்பட்டன என்றும் சொல்லியிருக் கிறீரல்லவா? அதையும் விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும் மேலும், கல்பம் என்பதும், விகல்பம் என்பதும் எவ்வளவு காலங்கொண்டது? நடந்தது. நடக்கிறது, இனி நடப்பது ஆகிய காலங்களுள் எப்படி அனுமானிக்கப்படுகின்றன? ப்ரஹ்மதேவர் முதலிய வர்களின் ஆயுள் எவ்வளவு காலங்களடங்கியது? ஓ ப்ராஹ்மணோத்தம! காஷ்டை முதலாக அணுவாகியதும்,

வர்ஷம் முதலாகப் பெரிதாகியதுமான காலத்தின் பேதங்கள் எப்போர்ப்பட்டவைகள்? கர்மங்களால் அடையக்கூடிய ஸ்தானங்கள் எவை? அவைகளின் ஸ்வரூபம் யாது? ஸத்வம் முதலிய குணங்களும், குணமுள்ளவர்களான ஜீவர்களும் பரிணாமத்தை (வேறு ரூபத்தை) அடையுமிடும் போது புண்ய பாப கர்மங்களுடைய கூட்டம் எதனால், எப்படிக் கிரஹிக்கப்படுகிறது? (எந்தக் கர்மங்களை, எப்படிச் செய்தால், எவன் தேவாதி சரீரத்தை அடைவான் என்று கருத்து) தவிரவும் பூமி, பாதாளம், திக்குகள், ஆகாசம் கிரஹங்கள், நக்ஷத்திரங்கள் மலைகள், ஆறுகள், ஸமுத்திரம், த்வீபங்கள் ஆகிய இவைகள் உற்பத்தியையும், அவைகளில் வஸிக்கும் ப்ராணிகளின் உற்பத்தியையும் சொல்லவேண்டும். அண்டகோசத்தின் வெளியிலும், உள்ளேயுமுள்ள அளவும், மஹாபுருஷர் களுடைய சரிதமும் வர்ணங்கள் ஆசிரமங்கள் ஆகிய இவைகளின் நிச்சயமும் சொல்லப்படவேண்டும். பின்னும் பகவானுடைய ஆச்சர்யகரமான அவதாரங் களுடைய சரிதத்தையும் யுகங்களுடைய மானத்தையும் ஒவ்வொரு யுகத்தின் தர்மங்களையும், மனிதர்களுக்குப் பொதுவாகிய தர்மங்களையும், யார் யார், எவ்வித ஜீவனஞ் செய்கிறார்களோ அதற்குத் தகுந்த தர்மங் களையும், ராஜ தர்மங்களையும், ஆபத்தர்மங் களையும் கேட்க விரும்புகிறேன். தத்துவங்களுடைய ஸ்வரூபம், அவைகளின் காரணம், பகவானை ஆராதிக்கும் முறை. அஷ்டாங்க யோகத்தின் முறை, யோகாப்யாசஞ் செய்து அணிமா முதலிய ஐசுவரியங் களையடைந்து, அர்ச்சிராதி மார்க்கத்தை யடைதல்; லிங்க சரீரத்தின் லயம் இவைகளையும், வேதங்கள்; ஆயுர்வேதம் முதலிய உபவேதங்கள், தர்ம சாஸ்திரம்.

இதிகாஸம், புராணம் முதலியவைகளின் ஸ்வரூபத்தையும் நிரூபிக்கவேண்டும். மேலும் ஸகல பிராணிகளுடைய உற்பத்தி, ஸ்திதி ஸம்ஹாரம், , யாகம் குளம் வெட்டுவிப்பது முதலிய பூர்த்த தர்மம், அக்னிஹோத்ரம் முதலிய காம்ய கர்மங்கள் தர்மார்த்த கர்மங்கள் ஆகிய இவைகளை அனுஷ்டிக்கும் முறைகளையும் சொல்லவேண்டும். அணுசாயிகளான ஜீவர்களுடைய உற்பத்தியையும், பாஷண்ட தர்மத்தின் உற்பத்தியையும் ஆத்மாவிற்கு ஏற்படும் பந்த மோக்ஷங்களையும். ஆத்மா சுத்த ஸ்வரூபராக இருப்பதையும், ஸ்வதந்தரராகிய பகவான் தம்முடைய மாயையுடன் விளையாடுகிறதையும்; அந்த மாயையை விட்டு ஸாக்ஷிபோல உதாசீனராக இருப்பதையும், மற்றும் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள விரும்பி, தங்களைப் பிரார்த்திக்கும் சரணாகதனாகிய எனக்கு வரிசையாகச் சொல்லவேண்டும். ப்ரஹ்மதேவரால் இவைகள் அறியப்பட்டிருப்பது போல உம்மாலும் நன்றாய் அறியப்பட்டிருக்கின்றன. முன்னோர்கள் அனுஷ்டித்த தர்மத்தையே பிந்தியவர்கள் அனுஷ்டிக்கிறார்கள். ஓ ப்ராஹ்மண நான் போஜனம் செய்யாமல் விரதமுள்ளவனானாலும் தங்களுடைய முகமாகிய தாமரை மலரிலிருந்து பெருகிவரும் பகவத் கதையாகிய அமிருதத்தைப் பானஞ் செய்வதால் ப்ராணனுக்கு யாதொரு உபத்திரவமுமில்லை. ஆகையால், நாரதருக்கு ப்ரஹ்மதேவர் உபதேசித்த படி எனக்குக் தாங்கள் உபதேசிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார்.

27–29. அவற்றைக் கேட்ட சுகர் அரசனிடம் மிகவும் சந்தோஷமடைந்து, 'பகவானுடைய சரிதத்தைச்

சொல்லுகிறேன்' என்று ஒப்புக்கொண்டு, ப்ரஹ்ம கல்பத்தில் ப்ரஹ்ம தேவருக்கு ஸ்ரீநாராயணனால் உபதேசிக்கப்பட்டதும் வேதத்திற்கு சமமானதுமாகிய பாகவதத்தையே பாண்டு குலத்தில் பிறந்தவரும், மேலானவருமான பரீக்ஷித்து மஹாராஜன் கேட்டவைகளுக்குக் கிரமமாய் மறுமொழி சொல்ல ஆரம்பித்தார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–9

சுகருடைய மறுமொழி

ஓ மஹாராஜ அனுபவ ஸ்வரூபியான பரமாத்மாவிற்குத் தேஹமும் முதலியவைகளின் ஸம்பந்தம் ஸம்பவிக்கிறதில்லை. சொப்பனத்தில் கண்ட தேஹத்தின் சம்பந்தம் உண்மையில் ஜீவனுக்கு இல்லை யல்லவா? ஆகையால் பரமாத்மாவிற்கு ஸம்ஸார சம்பந்தமானது மாயையேயொழிய உண்மையிலில்லை. மேலும், அந்த ஜீவன் பலவகையான ரூபமுள்ள மாயையால் பல விதமான ரூபமுள்ளவனாகத்தோன்றுகிறான். இந்த மாயையினுடைய குணங்களில் (விஷயங்களில்) ரமித்துக் கொண்டு 'நான், என்னுடையது' என்ற அபிமானத்தை அடைகிறான். காலம் (புருஷன்), மாயை (ப்ரக்ருதி) ஆகிய இவைகளைக் காட்டிலும் மேலான தன்னுடைய மஹிமையில் எப்பொழுது ஜீவன் ரமிக்கிறானோ அப்பொழுது 'நான், என்னுடையது' என்ற இருவகையான அபிமானத்தை விட்டு மோஹம் நீங்கி, நிஜ ரூபமாக இருக்கிறான். (பக்தி யோகத்தால் மாயா சம்பந்தம் அற்றுப்போனால் மோக்ஷமும் கிடைக்குமென்பது தாத்பர்யம்.) ஸ்ருஷ்டி காலத்தில் ப்ரஹ்மதேவர் கபடம் அற்றுத் தபஸ் செய்து பகவானை சந்தோஷப்படுத்தினார். அதனால் நாராயணன் அவரிடத்தில் பிரியப்பட்டுத் தம்முடைய சத்திய ஸ்வரூபத்தை அவருக்குக் காட்டி ஜீவனுடைய தத்துவ ஞானத்திற்காக எதனைச் சொன்னாரோ, அதை நான் உமக்குச் சொல்லுகிறேன். முற்காலத்தில் பக்தர்களுக்கு முக்கிய குருவாயும் தேவர்களுக்கு முந்தினவருமான ப்ரஹ்மதேவர் தமக்கு இருப்பிடம்

ஆகிய தாமரை புஷ்பத்திலிருந்து இந்த ஜகத்தை எப்படி ஸ்ருஷ்டிக்கிறது என்று யோசித்தார். அப்படியும் அவருக்கு அது விஷயமாய் ஒன்றும் தோன்றவில்லை. ஓ பரீக்ஷித்து மஹாராஜனே! இப்படியிருக்கையில் ஒரு சமயத்தில் ஜலத்திலிருந்து தபி என்று இரண்டு தரம் தொனியுண்டாயிற்று அவ்விரண்டு அக்ஷரங்கள் ஸ்பர்சமென்ற (ககாரம் முதல் மகாரம் வரையிலுள்ள அக்ஷரங்கள்.) அக்ஷரங்களில் பதினாறாவதும் இருபத்தொன்றாவதுமாக இருந்தன. பணத்தின் ஆசையை ஒழித்தவர்களுக்கு அவையே பணமாயிருக்கின்றன. பிறகு ப்ரஹ்மதேவர் அந்த வார்த்தையைக் கேட்டு, இதைச் சொன்னவர் யாராயிருக்கலாமென்று நான்கு புறத்திலும் திரும்பித் திரும்பிப் பார்த்ததும் அவ்விடத்தில் ஒருவரையும் காணததால் மறுபடியும் அந்தத் தாமரை புஷ்பத்திலிருந்து இதைப்பற்றி யோசித்துத் தம்மைத் தபஸ் செய்யும்படி பகவான் ஆஜ்ஞாபித்திருப்பதாக நிச்சயித்துத் தபஸிற்கு முயற்சித்தார். பின்பு வீணாகாத ஞானமுள்ளவரும் மிக்க தபஸ்வியுமான அந்த ப்ரஹ்மதேவர் ஞானேந்திரியங்களையும், கர்மேந்திரியங்களையும், மனஸையும், ப்ராணனையும் ஜயித்து, தேவமானத்தால் ஆயிரம் வர்ஷங்கள் தபஸ் செய்தார். அதனால் ஸகல லோகங்களுக்கும் தாபம் உண்டாயிற்று. இப்படித் தபஸ் செய்து ப்ரஹ்மதேவர் பரமாத்மாவைச் சந்தோஷப்படுத்தினதால் அந்தப் பகவான் தமது வைகுண்ட லோகத்தை அவருக்குக் காட்டினார். அதைக் காட்டிலும் மேலானது ஒன்றுமில்லை; அது க்ஷ்டம், மோஹம் முதலிய தோஷமற்றது. புண்யஞ் செய்தவர்களான வித்வான்களால் ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டது. மேலும் ரஜோகுணமும்

தமோகுணமும், அவைகள் கலந்த ஸத்வ குணமுமே அந்த உலகத்திலில்லை. (சுத்த ஸத்வ குணமே அவ்வுலகத்தில் ப்ரகாசிப்பதென்பது தாத்பரியம்.) தவிரவும் காலத்தின் ஸாமர்த்தியம் அவ்விடத்தில் உபயோகப் படுகிறதில்லை. மாயை, ராகம், உலோபம் ஆகிய இவைகளும் அந்த லோகத்திலில்லை. பின்னும், தேவர்களாலும், அஸுரர்களாலும் பூஜிக்கப்பட்ட பார்ஷத கணங்கள் அவ்விடத்தில் வஸிக்கிறார்கள். மேலும் அந்தப் பார்ஷதர்களெல்லோரும் நீருண்ட மேகம் போன்ற நிறமுள்ளவர்கள். தாமரை மலர் போன்ற கண்களுள்ளவர்கள். பீதாம்பரத்தைத் தரித்த வர்கள். மனோஹரமாயும், சுத்தமாயுமுள்ள தேக காந்தியுள்ளவர்கள். மிகுந்த அழகுள்ளவர்கள். நான்கு கைகளுள்ளவர்கள். மிகுந்த ப்ரகாசமுள்ள உத்தம ரத்தினகளிழைத்த திவ்ய ஆபரணங்களால் அலங் கரிக்கப்பட்டவர்கள். சிலர் பவழம், வைடூரியம் தாமரைத் தண்டு இவைகள் போன்ற நிறமுள்ளவர்கள். குண்டலம், கிரீடம், மாலை இவைகளால் பிரகாசிப் பவர்கள் மிகுந்த காந்தியுள்ள மஹாத்மாக்களுடைய விமானங்களால் அந்த லோகமானது ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறது. மின்னல்களுடன் கூடிய மேகங் களால் ஆகாசம்போல, உத்தம ஸ்திரீகளின் காந்தியால் விளங்குகிறது. மேலும் அவ்விடத்தில் லக்ஷ்மிதேவி நிஜஸ்வரூபத்துடன் பகவானுடைய பாதாரவிந்தங்களைப் பலவகையான விபூதிகளால் பூஜிக்கிறாள். மேலும், அவள் ஊஞ்சலின்மீதேறித் தன்பர்த்தாவாகிய நாராயணனுடைய ஸகல கல்யாண குணங் களையும் கானம் செய்து கொண்டு ஆனந்தமாய் வஸிக்கிறாள். அப்பொழுது வஸந்த ருதுவும், அதன் பின் செல்லுகின்ற வண்டுகளும், கூடக் கானம்

செய்கின்றன. இம்மாதிரியான அந்தக் க்ருஹத்தில் யஜ்ஞபுருஷனும், ஸகல ஜகத்திற்கு அதிபதியும், பக்தர்களுக்குப் ப்ரபுவும் ஸ்ரீயப்பதியுமான பகவானைப் ப்ரஹ்மதேவர் தரிசித்தார். ஸனனந்தர் நந்தர் முதலிய பூஜ்யர்களான பார்ஷதர்கள் அவரை ஸேவிக் கிறார்கள். அந்தப் பகவான் தம்முடைய வேலைக் காரர்களுக்கு அனுக்கிரகம் செய்வதிலேயே நோக்க முள்ளவர். புன்சிரிப்புக் கொண்டதும், சிவந்த கண்களுள்ளதுமான முகமுள்ளவர். பார்க்கப்பிரியமானவர். கிரீடமுள்ளவர். குண்டலங்களால் ப்ரகாசிப்பவர். நான்கு கைகளுள்ளவர். பீதாம்பரத்தால் அலங் கரிக்கப்பட்டவர். மார்பில் வஸிக்கும் லக்ஷ்மியுள்ளவர். உயர்ந்த சிம்மாசனத்திலிருப்பவர் ப்ரக்ருதி புருஷன், மஹத்தத்வம், அஹங்காரம் ஆகிய நான்கு சக்தி களாலும் ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் மனஸ், ஐந்து பூதங்கள், ஐந்து தன்மாத்திரைகள் ஆகிய இருபத்தைந்து தத்துவங்களாலும் சூழப்பட்டவர். தமக்கு இயற்கையானதும் மற்றவர்களுக்குத் தபஸ் முதலியவைகளால் கிடைக்கக் கூடியவைகளுமான ஐசுவர்யங்களால் தமது ஸ்வரூபத்திலேயே ரமித்துக் கொண்டிருப்பவர்.

18–24 அப்போர்ப்பட்ட பகவானுடைய ஸ்வரூ பத்தைப் ப்ரஹ்மதேவர் பார்த்து, அதனால் உண்டாகிய ஆனந்தத்தால் பூர்ணரானார். அப் பொழுது அவருக்கு மயிர்க்கூச்சலுண்டாயிற்று. பகவானிடத்திலுள்ள பக்தி விசேஷத்தால் அவருடைய இரு கண்களிலிருந்தும் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. பின்னுமவர் பரம ஹம்ஸாசிரமத்தால் அடையக்கூடிய பகவானுடைய பாதாரவிந்தத்தை

நமஸ்கரித்தார். அப்பொழுது பகவான் தம்மிடத்தில் விசேஷ பிரீதியுள்ளவரும், ப்ரஜைகளை ஸ்ருஷ்டிப் பதில் தம்மால் ஏவக்கூடியவரும், அதற்காகத் தம்மைக் குறித்து தபஸ் செய்தவரும் ஸமர்த்தருமான அந்தப் ப்ரஹ்ம தேவரை நோக்கி மிகுந்த ப்ரியத்துடன் அவருடைய கையைப் பிடித்துக் கொண்டு புன் சிரிப்புடன், ஓ வேதத்தை முகத்தில் வைத்துக் கொண்டிருக்கும் ப்ரஹ்ம தேவரே! லோகங்களை ஸ்ருஷ்டிப்பதற்காக வெகுகாலம் தபஸ் செய்து என்னைச் சந்தோஷப்படுத்தினீர். கபடமுள்ள யோகி களால் என்னை ஸந்தோஷப்படுத்த முடியாது. ஆனதால் உமக்கு இஷ்டமான வரத்தைக் கேளும். உமக்கு க்ஷேம முண்டாகும். என்னைப் பார்க்கிற வரையில் தான் ச்ரேயஸை யடைவதற்கு முயற்சிக்க வேண்டும் என்னுடைய வைகுண்ட லோகத்தை நேரில் பார்ப்பது என்னுடைய ப்ரியத்தைப் (பக்தனுக்கு வரங் கொடுக்க வேண்டுமென்றதை) காட்டுகிறது. ஆகையால், அதுவும் என்னுடைய கிருபையால் உமக்கு கிடைத்ததே தவிர வேறில்லை. மேலும் 'தப' என்ற என்னுடைய வார்த்தையைக் கேட்டுத் தபஸ் செய்தீர். தபஸ் என்பது எனக்கு ஹ்ருதயமாயிருக்கிறது. அதற்கு நான் ஆத்மா (ஸ்வரூபம்) வாக இருக்கிறேன். ஆகையால் ஸ்ருஷ்டிக்க வேண்டிய காலத்தில் அதற்கு வேண்டிய ஞானமற்றவராய் நீர் மோஹமடைந் திருக்கும் பொழுது உம்மைத் தபஸ் செய்யும்படி சொன்னவன் நானே. நான் தபஸைக் கொண்டே இந்த ஜகத்தைச் ஸ்ருஷ்டிக்கிறனே. தபஸினாலேயே அதைப் பரிபாலிக்கிறேன். தபஸி னாலேயே அதை ஸம்ஹரிக்கிறேன். தபஸே என் னுடைய சக்தியாயிருக்கிறது என்று சொன்னார்.

25–30 அதனைக் கேட்டு ப்ரஹ்மதேவர் ஸ்ரீ நாராயணனை நோக்கி, 'ஓ பகவன்! நீர் ஸகல பிராணிகளுக்கும் ப்ரபுவாக அவர்களுடைய புத்தியில் வசிப்பவராகையால் தடையற்ற திவ்ய ஞானத்தால் ஒவ்வொருவருடைய எண்ணத்தையும் நன்றாய்த் தெரிந்துகொள்ளுகிறீர். ஏ நாத உருவமில்லாதவரான உம்முடைய ஸ்தூல சூக்ஷ்ம உருவங்களை நான் நன்றாய்த் தெரிந்துகொள்ளும்படி ப்ரார்த்திக்கும் எனக்குச் சொல்ல வேண்டும். நீர் உம்முடைய மாயா சக்தியால் தானே ஸகல ஸ்வரூபியாயிருந்து ஜகத்தைச் ஸ்ருஷ்டித்தும், பரிபாலித்தும், ஸம்ஹரித்தும் பட்டுப் பூச்சி போல விளையாடுகிறீரல்லவா? வீண்போகாத ஸங்கல்பமுள்ளவரே! அந்த உம்முடைய லீலைகளை நான் நன்றாய்த் தெரிந்து கொள்ளும்படி அனுக்கிரஹிக்க வேண்டும். (ப்ரஜைகளை ஸ்ருஷ்டிப் பதில் பயந்து நான் தத்துவ ஞானத்தை விரும்ப வில்லை.) உம்முடைய உத்தரவின்படி சோம்பல் இல்லாமல் ஸ்ருஷ்டியைச் செய்வேன். ஆனாலும் அந்தக் காலத்தில் 'நான் ஜகத்தைச் ஸ்ருஷ்டிப்பவன். எல்லாவற்றிற்கும் மேலானவன் என்ற அஹங்காரம் முதலியவைகள் எனக்கு உண்டாகாமலிருப்பதற்காகத் தத்துவ ஞானத்தை உபதேசிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன். ஹே ஈசுவர! மித்திரன் தோழனைக் கௌரவப்படுத்துவது போல் நீர் என்னுடைய கையைப் பிடித்து, பூஜித்து, ஜனங் களை ஸ்ருஷ்டிக்கும் அதிகாரத்தைக் கொடுத்து இருக்கிறீர். நான் தங்களுடைய ஆக்ஞா ரூபமாகிய இக்காரியத்தைச் செய்து வரும்பொழுது மேலானவர் களையும், தாழ்ந்தவர்களையும், மத்ய நிலமை உள்ளவராகவும் பிரித்து ஸ்ருஷ்டிப் பேனல்லவா?

அப்பொழுது பகவான் நம்மை மித்திரனைப் போல் கௌரவப்படுத்தினார். நான் ஸ்வதந்திரன் என்று மிகுந்த கர்வம் எனக்கு உண்டாகக் கூடுமே. அம்மாதிரியான மதம் என்னைக் கெடுத்து விடாமல் இருக்கும்படி அனுக்கிரஹிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

31–39 அதனைக் கேட்ட பகவான் ப்ரஹ்ம தேவரை நோக்கி, ஓ ப்ரஹ்மதேவரே! உம்மால் கேட்கப் பட்டபடி சாஸ்திரத்தைப் படிப்பதால் உண்டாகிய ஞானம், அனுபவத்தால் உண்டாகிய விஞ்ஞானம், பக்தி, அவைகளின் ஸாதனம் ஆகிய இவைகள் மிகவும் ரகசியமானவைகளானாலும் அவைகளை உமக்கு உபதேசிக்கிறேன். நான் எவ்வளவு ஸ்வரூப முள்ளவனோ. எப்படி உண்டாகிறேனோ அப்பேர்ப் பட்ட உண்மையான ஸ்வரூப ஞானமானது என்னுடைய அனுக்கிரஹத்தால் உமக்கு உண்டா கட்டும். ஜகத் ஸ்ருஷ்டிக்கு முன்னே நான் ஒருவனே இருந்தேன். ஸ்தூலம், ஸூக்ஷ்மம் இவைகளுக்குக் காரணமாகிய ப்ரதானம் ஆகிய இவைகள் என்னைக் காட்டிலும் வேறாக ஒன்றுமிருந்ததில்லை. பின்பு நானே இந்த ஜகத் ரூபியாய் இருக்கிறேன். ப்ரளய காலத்தில் எந்த வஸ்து நாசமடையாமல் இருக்குமோ அதுவும் நானே. மேலும், ஆகாசத்தில் இரண்டு சந்திரன் இருப்பதாகத் தோன்றுகிறதுபோல எதன் உடைய மஹிமையால் ஆத்மாவிடம் இல்லாதவைகள் தோன்றுகின்றனவோ கிரஹ மண்டலத்திலிருக்கும் ராஹுவானவன் கண்ணுக்குப் புலப்படாததுபோல எதனுடைய மஹிமையால் ஆத்மாவிடத்தில் இருப்பவைகள் மறைக்கப்படுகின்றனவோ, அதை என்

உடைய மாயையென்று தெரிந்து கொள்ளவேண்டும். மஹா பூதங்கள், தங்களால் ஏற்பட்ட பலவகையான சரீரங்களில் பிறகு ப்ரவேசித்ததாகத் தோன்றுவது போல, ஜகத்தில் காரண ரூபியாய் நான் இருப்பவனே யொழிய அவைகளில் பின்பு ப்ரவேசித்தவனல்ல. ஆத்மாவினுடைய உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டியவன், 'எல்லா அவஸ்தையிலும் எது அன்வயத் தாலும், வ்யதிரேகத்தாலும் எக்காலத்திலும், எல்லா விடத்திலும் இருக்குமோ அதே பரமாத்மா என்று தெரிந்து கொள்ளவேண்டியது. இப்பொழுது என்னால் சொல்லப்பட்டதை ஒரே மனதாகச் சிந்தியும். கல்பங்களில் பலவகையான ஸ்ருஷ்டிகளிலும் உமக்கு அபிமானம் உண்டாகாமலிருக்கட்டும் என்று ஸகல ஜனங்களுக்கும் அதிபதியான ப்ரஹ்மாவை அனுக்ர ஹித்து அவர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்த உருவத்தைப் பகவான் மறைத்துக் கொண்டார். பிறகு அந்தப் ப்ரஹ்மதேவர் கண்ணுக்குப் புலப் படாமல் மறைந்த மஹாவிஷ்ணுவிற்கு அஞ்சலி செய்து ப்ருத்வி முதலிய பூதங்களாகிய சாதனங் களைக் கொண்டு முன் கல்பத்திலிருந்ததுபோல் இந்த ஜகத்தைப் படைத்தார்.

40–46 அந்தப் ப்ரஹ்மதேவர் ப்ரஜைகளுக்கு க்ஷேமத்தைச் செய்ய விரும்பி யமம், நியமம் முதலிய வைகளைச் செய்து வந்தார். அவருடைய புத்திரர் களுக்குள் மிகவும் பிரியராகிய நாரதர் தம்முடைய ஸ்வபாவத்தாலும், வணக்கத்தாலும், இந்திரிய நிக்ர ஹத்தாலும், பிதாவாகிய ப்ரஹ்மதேவரைச் சந்தோஷப் படுத்தி அவருக்குச் சிச்ரூஷை செய்து வந்தார். அந்தப் பாகவதோத்தமராகிய நாரதர் மாயைக்கு அதிபதியான

மஹாவிஷ்ணுவின் மாயையை நன்றாய்த் தெரிந்து கொள்ள விரும்பியவர். அவருடைய சிசுரூஷையால் ப்ரஹ்மதேவருக்கு ஸந்தோஷமுண்டாயிற்று. அப் பொழுது நாரதர் இந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டார். அவருக்குப் ப்ரஹ்மதேவர் மிகவும் பிரியத்துடன் பத்து வித புராண லக்ஷணமுள்ள பாகவத புராணத்தை உபதேசித்தார். அந்த நாரதர் ஸரஸ்வதீ நதிக்கரையில் ப்ரஹ்ம தியானஞ் செய்து கொண்டிருந்த அதிக தேஜஸுள்ள வ்யாஸ மஹர்ஷிக்கு இந்த விஷயத்தை உபதேசித்தார். விராட் புருஷனிடமிருந்து இந்த ஜகத் எப்படி உண்டாயிற்றென்று கேட்டீரல்லவா? அது முதலிய கேள்விகளுக்குப் பதில் , சொல்லுகிறேன் கேளும் என்றார்.

நோட்டு

உருவம்–ஸத்யம், ஞானம் முடிவில்லாதது என்று ஸ்ருதியில் சொல்லியுள்ளபடியுள்ளது. குணம்– திவ்ய மங்கள குணங்கள். எவர் எல்லாவற்றையும் ஸாமான்யமாகவும் விசேஷமாகவும் அறிந்தவரோ, எவருடைய மேலான சக்தியும், இயற்கையான ஞானம், பலம், கிரியை ஆகிய இவைகளும் பல வகையாகக் காணப்படுகின்றனவோ சந்த். மாயை என்று–ப்ரக்ருதியின் அனுஸந்தான காலத்தில் ஆத்ம ஸ்வரூபம் நன்றாகப் ப்ரகாசிக்கிறதில்லை. ஆத்மாவின் தோற்றம் இருக்கும்போது அசேதனமாகிய ப்ரக்ருதியானது தோன்றுவதில்லை. தேஜஸிருக்கும் போது இருட்டிக்கிறதில்லை. இருட்டிலிருக்கும் போது தேஜஸ் ப்ரகாசிக்கிறதில்லை. வீர.– எந்த வஸ்துவானது ஸகல காமத்தையும் அடைந்தவனாகிய என்னுடைய ப்ரயோசனமின்றி வேதம் முதலியதில்

தோன்றுகிறதோ, எது என்னிடத்தில் பாதகமாக ஆகிறதில்லையோ, அதே மாயை (ஜீவன், ப்ரக்ருதி ஆகிய இவர்கள் மாயை என்று கருத்து) யதார்த்தமாகத் தோன்றும் என்னுடைய பிரதிபிம்ப பூதனாகிய ஜீவனும், உண்மையாகத் தோன்றும் (மூல) ப்ரக்ருதியும் மாயையெனப்படுகின்றன. ஸ்ரீ மஹா விஷ்ணுவின் சக்தியே முக்கியமாய் மாயை யெனப்படுகிறது. ப்ரக்ருதி, ஜீவர்களை மாயையென்று செல்வது ஔபசாரிகப் ப்ரயோகம், ஆனால், ஜீவன், ப்ரக்ருதி, கர்மம், காலம் ஆகிய இவைகள் எப்பொழுதும் என்னிடத்தில் வஸிப்பவைகளானாலும் அவைகளால் பாதகமில்லாததனால், அவைகள் என் இடமிருப்பதாகச் சொல்லப்படுகிறதில்லை. அரசன் ரதத்தின் மீதேறிப் போகும்போது அவருக்குக் குடை பிடிப்பது முதலிய உபசாரங்கள் செய்து கொண்டு இருப்பவர்களுக்கு ரதிகர்கள் என்று பெயர் கிடைக்குமா? விஜ. ப்ரவேசித்தவனல்ல மஹாபூதங்கள் அவைகளாலேற்பட்ட கூடம் முதலியவைகளில் ப்ரவேசித்திருந்தாலும் அவைகளை உடைப்பது, வெட்டு வது ஆகிய இவைகளில் அந்த மஹாபூதங்கள் ஸம்பந்திக் கிறதில்லை.–வீர. அன்வயவத்தாலும் காரியங்களில் காரண ரூபமாக விருப்பது; ஜாக்ரத் முதலிய அவஸ் தைகளில் ஸாக்ஷியாக விருப்பது. வ்யதிரேகம் காரணமாக இருக்கும் போது காரியமாக இல்லாமல் இருப்பது –ஸ்ரீத. அன்வயம் இது அறியக் கூடியதே என்பது வ்யதிரேகம்– மற்றவை அறியக் கூடியவை அல்லவென்பது. பரமாத்மா ஒருவரைத் தெரிந்து கொண்டதனால் எல்லாம் அறியப் பட்டவையாகிறது. ஆனதால் அதுவே அறியக் கூடியது. –வீர.

அத்தியாயம் 10

தத்துவங்களின் உற்பத்தியுரைத்தது.

இந்தப்பாகவதத்தில் ஸர்க்கம், விஸர்க்கம், ஸ்தானம் போஷணம், ஊதி, மன்வந்தரம், ஈசானு கதை, நிரோதம் முக்தி ஆசிரயம் என்ற பத்து வகையான லக்ஷணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும் பத்தாவதாகிய ஆசிரயத்தின் உண்மையைத் தெரிவிப் பதற்காக ஒன்பதுகளுடைய ஸ்வரூபத்தை சப்தத் தாலும், அர்த்தத்தாலும் பெரியோர்கள் வர்ணிக் கிறார்கள். ஆகாசம் முதலிய பஞ்சபூதங்களும், சப்தம் முதலிய விஷயங்களும், இந்திரியங்களும் மஹத் தத்து வமும், அஹங்காரமும், ஸத்வம் முதலிய குணங்கள் உடைய பரிணாம விசேஷத்தால் பரமேச்வரனிடம் இருந்து உண்டாவதே ஸர்க்கமெனப்படும். வைராஜ னால் செய்யப்படும் சராசர சிருஷ்டியே விஸர்க்கம் எனப்படும். பகவான் அவதாரஞ் செய்து ஜகத்தைப் பரிபாலிப்பது எல்லாவற்றிற்கும் மேலானவராக இருப்பது ஸ்திதி யெனப்படும். பக்தர்களை அனுக்கிர ஹிப்பதே போஷணமெனப்படும். மன்வந்தரங்களில் அனுஷ்டிக்கப்படும் தர்மம் மன்வந்தர மென்று சொல்லப்படுகிறது. கர்மங்களின் வாஸனைகள் ஊதி எனப்படுகின்றது. பல்வகையான உபாக்யானங்கள் அடங்கிய பகவானுடைய அவதார கதைகளும், பக்தர்களுடைய சரிதங்களும் ஈசானு கதையென்று சொல்லப்படுகின்றன, பகவான் யோக நித்திரை செய்யும்போது ஜீவன் தன்னுடைய உபாதிகளுடன் அவரிடத்தில் லயிப்பதே நிரோத மெனப்படுகிறது. அவித்தையால் அத்யஸ்தமாகிய அநாத்ம ரூபத்தை

ஞானத்தால் தொலைத்து, தன்னுடைய நிஜரூபமாக இருப்பதே முக்தியாகும். ஸ்ருஷ்டியும் லயமும் எதன் இடமிருந்து உண்டாகின்றனவோ, எது பரமாத்மா என்றும் ப்ரஹ்மம் என்றும் சொல்லப்படுகிறதோ, அதே ஆசிரய மெனப்படுகிறது. ஆத்யாத் மிகனென்ற ஜீவனே ஆதிதெய்வீகம் (கண் முதலியவைகளுக்கு அதிதெய்வமான சூரியன் முதலியவை) ஆகிறான். கண்கள் முதலிய இந்திரிய கோளங்கள் அடங்கிய புருஷோபாதியாகிய தேஹமே ஆதிபௌதிகம். அறிகிற வன், அறியப்படுகிறது, ஸாதனம் ஆகிய மூன்றுக்குள் ஒன்றை விட்டு மற்றவை அறியக் கூடாத வைகளா கையால் இம்மூன்றையும் எவர் சாக்ஷியாக விருந்து தெரிந்து கொள்கிறாரோ அவரே பரமாத்மா. அவருக்கு வேறு ஆச்ரயமில்லை. எல்லாவற்றிற்கும் அவர் ஆச்ரய மாயிருப்பவர்.

10–34. விராட் புருஷன் ப்ரம்மாண்டத்தை பேதித்துக் கொண்டு எப்பொழுது வெளியில் வந் தாரோ (தனியாக இருந்தார் என்று கருத்து) அப் பொழுது தாம்சுத்தராகையால் தாம்வஸிப்பதற்குச் சுத் தமான ஸ்தானம் வேண்டுமென்ற எண்ணத்துடன் பரிசுத்தமான ஜலத்தை ஸ்ருஷ்டித்தார். அந்த ஜலத்தில் வஸித்தாலும் ஜலம் அவரிடத்திலிருந்து உண்டான தாகும். அவருக்கு நாராயணனென்று பெயருண்டா யிற்று. அவருடைய அனுக்கிரஹத்தால் தான் உபா தான காரணம், கர்மம், காலம் முதலிய நிமித்த காரணம் ஆகிய இவைகள் தங்களுடைய கார்யத்தை உண்டுபண்ணுகின்றன. அவருடைய அனுக்கிரஹமில் லாதவரையில் அவைகளுக்குக் கார்யத்தை உண்டு பண்ணக்கூடிய சக்தி ஏற்படுகிறதில்லை. அந்தப் புருஷன்

தாம் பலவகையான ஸ்வரூபத்தை அங்கீகரிக்க வேண்டுமென்ற ஸங்கல்பத்தை அடைந்து யோக நித்திரையிலிருந்து எழுந்திருந்து மிகுந்த ப்ரகாசமுள்ள திவ்ய தேஹத்தைத் தம்முடைய மாயையின் சம்பந்தத் தால் ஆத்யாத்மிகம், ஆதி தெய்வீகம், ஆதி பௌதிகம் என்று மூவகையாகப் பிரித்தார். அதெப்படி எனில் கிரியா சக்தியால், பலவகையாகச் சேஷ்டிக்கும் புருஷனுக்கு இந்திரிய சக்தி, மனத்தின் சக்தி, தேஹ சக்தி ஆகிய இவைகள் உண்டாயின. சூக்ஷ்ம ரூபியாகிய அந்த ஆத்மாவினிடமிருந்து முக்கியப் ப்ராணன் உண்டானான், அரசனை அவருடைய வேலைக்காரர்கள் அனுசரிப்பதுபோலப் ப்ராணன் அவருடையதாதலால் ஸகல இந்திரியங்களும் சேஷ் டிக்கின்றன. ப்ராணன் சேஷ்டிக்காவிடில் அவைகளும் சேஷ்டிக்கிறதில்லை, அந்தப் ப்ராணன் ப்ரபுவின் வயிற்றில் பரவும்போது, பசி, தாகம் ஆகிய இவைகள் உண்டாயின. பிறகு புஜிக்கவேண்டுமென்றும், குடிக்க வேண்டுமென்றும் விருப்பம் உண்டாயிற்று. பிறகு அந்தப் ப்ரபுவினிடமிருந்து முகமானது உண்டாயிற்று (பிரிந்தது). அதிலிருந்து ஜிஹ்வேந்திரியத்திற்கு அதிஷ் டானமாகிய தாலுவும் (நாக்கும்), அதிலிருந்து ஜிஹ்வேந்திரியமும், அதிலிருந்து அதனால் கிரஹிக்கப் படும் ஆறுவகையான ரஸங்களும் உண்டாயின. பேசவேண்டுமென்ற விருப்பம் அவருக்கு உண்டான பொழுது முகத்திலிருந்து அக்னியும், (இந்திரியாபிமானி தேவதை) வாக் என்னும் இந்திரியமும், அவ்விரண் டின் வியாபாரமாகிய பேச்சும் (இந்திரிய விஷயம்) உண்டாயின. அந்த அக்னி வெகுகாலம் ஜலத்தால் தடுக்கப்பட்டிருந்தது. ப்ராணவாயுவானது அதிகமாக அசையும் பொழுது மூக்குகள் உண்டாயின. அவை

களில் கந்தத்தை வஹிக்கும் வாயு உண்டானார். (ப்ரவேசித்தார்) கந்தத்தை கிரகிக்க விரும்பும்பொழுது அவ்விடத்தில் கிராணேந்திரியம் உண்டாயிற்று. எப்பொழுது ப்ரகாசமில்லாமலிருந்ததோ, அப்பொழுது தன்னையும் இதர வஸ்துக்களையும் பார்க்க, விரும்பிய போது கண்கள், உருவத்தைக் கிரகிக்கும் சக்தி, சக்ஷுரிந்திரியம் அதற்கு அபிமானி தேவதையாகிய ஆதித்யன் ஆகிய இவைகள் உண்டாயின. யோக நித்திரை செய்யும் ப்ரபுவைத் தேவர்கள் எழுப்புங் காலத்தில் அந்தச் சப்தத்தைக் கிரகிக்க அவர் விரும் பினார். அப்பொழுது காதுகளும், திக்குகளும் ,ச்ரோத்ரேந்திரியமும், சப்தத்தைக் கிரகிக்கும் சக்தியும் உண்டாயின. மேலும் வஸ்துக்களின் மெதுவாயிருக் கும் தன்மை, கடினமாயிருக்கும் தன்மை கனமுள்ளதாக விருப்பது, கனமில்லாமலிருப்பது, குளிர்ச்சி, உஷ்ணம் ஆகிய இவைகளைக் கிரகிக்க விரும்பும்போது துவக்கிந்திரியத்திற்கு அதிஷ்டானமாகிய தோல் உண் டாயிற்று. அதில் இந்திரியமும் தேவர்களும் உண் டானார்கள். ஸ்பரிசமாகிய குணமுள்ள வாயுவானது மேற்காட்டிய துவக் இந்திரியத்தின் உள்ளிலும் வெளி யிலும் வ்யாபித்திருக்கிறது. பின்னும் பலவகையான கார்யங்களைச் செய்ய விரும்பிய அவரிடமிருந்து கைகள் முளைத்தன. அவ்விரண்டு கைகளுக்கும் இந்திரன் தேவதையானான். எடுப்பது (ஆதானம்) அவைகளின் கார்யமாம். இன்னும், தமதிஷ்டப்படி நடக்க விரும்பிய அந்த ஆத்மாவிடமிருந்து பாதங்கள் முளைத்தன. அவைகளுக்கு யக்ஞஸ்வரூபியாகிய மஹாவிஷ்ணுவே தேவதையாக இருக்கிறார். நடப்பது அவைகளின் காரியம். யாகத்திற்கு உபயோகமான ஹவிஸ்ஸை வெகுதூரம் நடந்து ஸம்பாதிப்பதே அவை

களின் ப்ரயோஜனம். பிறகு குழந்தை, ஆனந்தம், அமிருதம் (ஸுகம் அல்லது ஸ்வர்க்கம்) ஆகிய இவை களை அடைய விரும்பிய அவரிடமிருந்து சிஸ்னம் (ஆண்குறியும் பெண்குறியும்) உண்டாயின. ஸ்திரீ களுடைய ஸம்போகத்தால் ஏற்படும் ஸுகத்திற்குக் காரணமும், இந்திரியம், தேவதை ஆகிய இவை களுக்கு ஆசிரயமுமான உபஸ்தேந்திரியம் அந்த சிஸ்னத்திலிருந்து உண்டாயிற்று. தாதுக்களின் மலத்தை (புஜித்த அன்னம் முதலியவைகளுடைய ஸாரமற்ற பாகத்தை) வெளிப்படுத்த விரும்பிய அந்தப் புருஷ னிடமிருந்து குதமானது உண்டாயிற்று. அதிலிருந்து பாயுவென்ற இந்திரியமும், அதனிடமிருந்து அதிதேவ தையான மித்திரனும் உண்டானார்கள். மலத்தை வெளிப்படுத்துவது இந்திரியம் அதன் ஸ்தானம் ஆகிய இரண்டையும் ஆசிரயித்தது. ஒரு தேஹத்தில் இருந்து மற்றொரு தேஹத்திற்குப் போகவிரும்பிய ப்ரஹத்தினுடைய ஸமஷ்டி அபானவாயுவினிடம் இருந்து நாபியாக உண்டாயிற்று. அதில் அபானனும், அதற்கு அதிஷ்டமான தேவதையாகிய மிருத்யுவும் உண்டாயின. மரணமானது பிராணன், அபானன் ஆகிய இவைகளைக் க்ரஹிக்க வேண்டுமென்று விரும்பிய அந்தப் ப்ரபுவினிடமிருந்து வயிறு, ஆந்த்ரம் (மாம்ஸ விசேஷம்), நாடிகள் ஆகிய இவைகள் உண்டாயின. அந்த நாடி, ஆந்த்ரம் ஆகிய இவை களுக்கு நதிகளும் ஸமுத்ரமும் (முறையே) தேவதைகள். அவைகளால் துஷ்டியும், புஷ்டியும் உண்டாயின. தம்முடைய ப்ரக்ருதியைச் சிந்திக்கும் அந்தப் ப்ரபு வினிடமிருந்து ஹ்ருதயம் உண்டாயிற்று. அதனிடம் இருந்து சந்திரனென்று ப்ரஸித்தியுள்ள மனஸ் உண் டாயிற்று. மேற்சொல்லிய ஹ்ருதயமே காமத்திற்கும்,

ஸங்கல்பத்திற்கும் இருப்பிடம் துவக் (மேல்தோல்) சர்மம் (உள்ளேயிருப்பது) மாம்ஸம் ரத்தம் மேதஸ் மஜ்ஜை எலும்பு ஆகிய ஏழு தாதுக்களும் பூமி, ஜலம், தேஜஸ் ஆகிய இவைகளின் ஸ்வரூபமாயுள்ளவைகள். ப்ராணன்கள் ஆகாயம் ஜலம், வாயு ஆகிய இவை களால் உண்டான இந்திரியங்களாவும் விஷயங்களில் செல்லும் ஸ்வபாவமுள்ளவை. சப்தம் முதலிய குணங் கள் அஹங்காரத்திலிருந்து உண்டானவை. ஸகல விகாரங்களுக்கும் (காமம், ஸங்கல்பம், ஸம்சயம், சிரத்தை, வெட்கம் முதலியவைகளுக்கும்) ஆதாரமா யுள்ளது மனதேயாம், விஞ்ஞான ஸ்வரூபமாயிருப்பதே (பலவகையான பிரபஞ்ச ரூபமாக ஆகவேண்டுமென்று பகவானுடைய எண்ணம்) புத்தியெனப்படுகிறது. பூமி முதலிய எட்டு ஆவரணங்களுள்ள மேற்சொல்லிய ரூபமானது பகவானுடைய ஸ்தூல ரூபம். ஸூக்ஷ்ம சரீரமானது மேற்காட்டிய ஸ்தூல ரூபத்துக்குக் காரணமாயிருப்பது. அது மிகவும் ஸூக்ஷ்மமாகையால் இந்திரியங்களுக்குப் புலப்படாதது. பேதமற்றது, ஆதி, மத்யம், அந்தம் ஆகிய இவைகளற்றது. எப்பொழுதும் ஒரே வகையுள்ளது. (இளைப்பு, விருத்தி முதலியவை களற்றது என்று கருத்து) வாக்குக்கும், மனத்திற்கும் மேலானது.

35–47. மேற்காட்டியபடி என்னால் உமக்கு உப தேசிக்கப்பட்ட பகவானுடைய ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபங் கள் மாயையால ஏற்பட்டவைகளாகையால் அவைகளை வித்வான்கள் உண்மையானவைகளாக அங்கீகரிக்கிறது இல்லை. (உபாஸனத்திற்காகப் பகவானிடம் ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபங்கள் ஆரோபிக்கபட்டனவென்று கருத்து) ஓ மஹாராஜ அந்தப் பகவான் ப்ரஹ்மதேவ ஸ்வரூபியாக

இருந்து, சப்தங்களின் பொருளாக விருக்கும் உருவங் களையும்; சப்தங்களைக் கொண்டு பெயர்களையும் ஸ்ருஷ்டிக்கிறார். மேலும் அவர் மாயையால் கர்மங்கள் அற்றவர்போல தோன்றினாலும் உண்மையில் கர்மங்கள் அற்றவர். ஒன்பது ப்ரஜாபதிகள் மனுக்கள் தேவர்கள், ரிஷிகள், பிதிரு கணங்கள் ஸித்தர்கள்; சாரணர்கள், கந்தர்வர்கள், வித்யாதாரர்கள், அஸுரர்கள், குஹ்யகர்கள் கின்னரர்கள் அப்ஸரஸுகள், நாகர்கள், ஸர்ப்பங்கள், கிம்புருஷர்கள், மாத்ரு கணங்கள், ராக்ஷஸர்கள், பிசாசங்கள் ப்ரேத கணங்கள், பூத கணங்கள், விநாயக கணங்கள் கூஷ்மாண்டங்கள், உன்மாதங்கள், வேதாலங் கள், யாதுதானர்கள் கிருஹங்கள், பறவைகள், மிருகங் கள், பசுக்கள், விருக்ஷங்கள், மலைகள், மலைப்பாம்பு கள், ஸ்தாவர ஜங்கமங்கள் என்ற இரண்டு வகை யுள்ளவையும், ஜராயுஜம், அண்டஜம், ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம் என்று நான்கு வகையுள்ளவைகளுமான ப்ராணிகள், ஜல ஜந்துக்கள், ஸ்தல ஜந்துக்கள் ஆகிய எல்லாவற்றையும் தரிக்கிறார். (ப்ரபஞ்ச ஸ்வரூபமாக இருக்கிறார் என்று கருத்து.) மேற்காட்டிய ப்ராணி களில் மேலானவை. மத்ய நிலையுள்ளவை, தாழ்ந்தவை ஆகிய இவைகள் புண்யம், பாபம், இரண்டின் கலப்பு ஆகிய கர்மங்களின் பலனேயாம். ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய இவைகளால் கர்மங்களின் கதி மூவகை யானது. ஸத்வத்தால் ஸ்வர்க்கம் முதலியவைகளும், ரஜஸ்ஸினால் பசு, புத்திரன் முதலியவைகளும் தமஸ்ஸினால் 21 நரகங்களும் உண்டாகின்றன. மேற் காட்டிய மூன்று வகையான கதிகளில் ஒன்றானது மற்ற இரண்டுகளால் அடக்கப்படும் பொழுது ஒவ் வொன்றிலும் மூன்று வகை ஏற்படுகின்றது. அந்தப் பகவானே இந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்து திர்யக் ஜாதி

ஆகவும், மனிதனாகவும். தேவனாகவும் அவதரித்து ஸ்ருஷ்டித்த ஜகத்தைப் பரிபாலனம் செய்தும், தர்ம ரூபியாக விருந்து அதனைப் போஷிக்கிறார். பின்பு ப்ரளய காலத்தில் மேகக்கூட்டத்தைக் காற்றானது கலைத்ததுபோல, அந்த மஹாபுருஷனே காலாக்னி ருத்ரரூபியாக விருந்து ஸம்ஹரிக்கிறார். மிகுந்த ஜ்ஞானமுள்ள அந்தப் பகவான் இப்போர்ப்பட்ட மஹிமை யுள்ளவர் என்று சொல்லப்படுகிறார். ஆனாலும் வித்வான்கள் அவரை இம்மாதிரியான குணமுள்ள வராக அறியமாட்டார்கள். ஏனெனில், இந்த ஜகத்தை உண்டு பண்ணுவது முதலியவைகளால் பரமாத்மாவிற்கு சம்பந்த மிருப்பதாகச் ஸ்ருதியின் தாத்பர்யமல்ல. மாயையைக் கொண்டு பகவானிடத்தில் ஆரோபிக்கப் பட்ட கர்த்ருவம் முதலியவைகள் அவரிடத்தில் உண்மையில் இல்லை என்று சொல்லுவதற்காக வேதமானது அவைகளை அனுமதித்தது. ப்ரஹ்மதேவ ருடைய கற்பமானது அவாந்தர கல்பத்துடன் சுருக்க மாகச் சொல்லப்பட்டது. இந்த மஹாகல்பத்தில் மஹத்தத்துவம் முதலியவைகளின் ஸ்ருஷ்டியும். ஸ்தாவரங்களின் ஸ்ருஷ்டியும் சொல்லப்பட்டிருக் கின்றன. இந்தப் பிரகாரமானது மற்ற மஹாகல்பம் முதலியவைகளுக்கும் பொதுவேயாம். காலத்தின் அளவையும் கல்பத்தின் லக்ஷணத்தையும் அதன் அவாந்தரவிபாகத்தையும் பாத்ம கல்பத்தையும் சொல்லுகிறேன். கேளும் என்றார்.

48–50. இம்மாதரியான ஸூதருடைய வார்த்தையை கேட்ட சௌனகர் அவரை நோக்கி, பாகவதர்களுக்குள் சிறந்தவராகிய விதுரர், மிகுந்த அபிமானமுள்ள பந்துக் களை விட்டுப் பிரிந்து பூமியிலிருக்கும் ஒவ்வொரு

தீர்த்தங்களிலும் சென்று யாத்திரை செய்தாரல்லவா? அந்த விதுரருக்கும், மைத்ரேயருக்கும் எந்த விடத்தில் பரமாத்மா விஷயமான ஸம்வாதம் நேர்ந்தது? அந்தப் பகவானாகிய மைத்ரேயரால் அவருக்கு உபதேசிக்கப் பட்ட ஆத்ம தத்துவம் யாது? விதுரர் பந்துக்களை விட்டுப் பிரிவதற்கு என்ன காரணம்? அவர் மறு படியும் ஏன் திரும்பிவந்தார்? அவருடைய சரிதம் எல்லாவற்றையும் சொல்லவேண்டும் என்று பிரார்த் தித்தார்.

51. அதனைக் கேட்டு ஸூதர், 'ஓ மஹரிஷிகளே பரீஷித்து மஹாராஜனால் கேட்கப்பட்டுச் சுக மஹா முனியானவர் எதனை அவருக்கு உபதேசித்தாரோ அதனைக்ரமமாக உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

நோட்டு

விஸர்க்கம் பகவான் தமோகுணத்தை அங்கீகரித்துச் செய்யும் லயம்சந்த். ப்ரஹ்மதேவரால் செய்யப்படும் ஸர்க்கம் வீர. ஸ்ருஷ்டி காலத்தில் பரமாத்மாவினிடம் இருந்து குணங்களுடைய வித்யாஸத்தால் உண்டாகும் மஹத்தத்துவத்தால் ஐந்து பூதங்கள், சப்தம் முதலிய வைகள், இந்திரியங்கள், புத்தி ஆகிய இவை முதல் அண்டம் வரையிலுள்ளவைகளின் உற்பத்தியே ஸர்க்கம். அண்டத்திற்குட்பட்ட புருஷனால் ஸ்ருஷ் டிக்கப்படும் பலவகையான ஸ்ருஷ்டியே விஸர்க்கம் விஜ். முக்திஜீவன் கர்மத்தால் கற்பிக்கப்பட்ட தேவாதி சரீரத்தைவிட்டுத் தன்னுடைய ஸ்வரூபமாகிய ஞானம், ஆனந்தம் முதலியவைகளுடனிருப்பது சந்த், பாபம் இல்லாமலிருப்பது முதலிய எட்டுக் குணங்களுடைய

வனாகத் தன்னைத் தெரிந்து கொண்டிருப்பது வீர, ப்ராகிருதம், வைகிருதம், ஸ்தூலம் ஸூக்ஷ்மம் ஆகிய இவைகளை விட்டு, சித்ஸ்வரூபியாயும், ஆனந்த ஸ்வரூபியாயும் இருப்பதுவிஜ. ஆதிபௌதிகம் சப்தம் முதலியவைகளுக்கும் ஆந்தரனாகவிருப்பவனே ஆதி பௌதிகன் வீர. ஸாக்ஷியாக இம்மூன்றுகளில் இந்திரியமாகிய ஸ்தானமில்லாவிடில் சப்தம் முதலிய விஷயங்கள் அறியப்படுகிறதில்லை. ஆனதால் ஜீவர்கள் மூன்று வகையான ஸன்னிகர்ஷமுள்ள பதார்த்தங் களை இந்திரியங்களால் அறிந்துகொள்ளுகிறாகள். பரமாத்மாவானவர்மூன்றையும் நேரில் பார்ப்பவர் வீர. ஆச்ரயமானஅசிதாஸ்ரயமான ஜீவனுக்கும் ஆச்ரயமாய் இருப்பவர். எப்படி ரதத்திலுடைய சக்கரத்திலுள்ள ஆரங்களில் நேமியும் (சக்கரத்தின் முனை) மத்யமாகிய குடத்தில் ஆரங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றனவோ, அப்படியே பூத மாத்திரைகள் ப்ரஞ்ஞாப மாத்திரை யிலும், அவைகள் ப்ராணனிடத்திலும் வைக்கப்பட்டு இ ருக்கின்றனஸ்ருதி. வீர.நாராயணன் 'ஜலங்களுக்கு நாரமென்று பெயர். அவைகள் ஸ்தானமாயிருந்தன. அதனால் நாராயணன்' என்று சொல்லப்பட்டார் ஸ்மிருதி.

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்கந்தம் 3

அத்தியாயம்-1

விதுரருக்கும்உத்தவருக்கும் ஸம்வாதம்

சுகர் பரீக்ஷித்து மகாராஜனை நோக்கி, "ஓ மகாராஜ! எல்லாவற்றிற்கும் அதிபதியும், ஹிருதயத்தில் வஸிப்பவருமான இந்த ஸ்ரீ கிருஷ்ண பகவான் பாண்டவர்களுக்குத் தூதராக அஸ்தினாபுரம் சென்றபொழுது அரசனாகிய துரியோதனனை லட்சியம் செய்யாமல் விதுரருடைய கிருஹத்திற்குச் சென்றாரல்லவா, அவ்வளவு மஹிமை பொருந்தியதும், ஸகல சம்பத்துக்களால் நிறைந்ததுமான தம்முடைய அந்த வீட்டை விட்டு விதுரர் முன்னொரு காலத்தில் காட்டில் சென்று அவ்விடத்தில் ஸர்வக்ஞரான மைத்ரேயரைச் சந்தித்து, இந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டார்" என்று சொன்னார். அதனைக் கேட்ட அரசன் சுகரை நோக்கி, "ஓ பிரபுவே! பகவானாகிய மைத்ரேயரும், விதுரரும் எவ்விடத்தில் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசிக் கொண்டார்கள்? மிகவும் சிறந்தவரான மைத்ரேயரை நோக்கிச் சுத்த சித்தரான அந்த விதுரரால் செய்யப்பட்டதும், பெரியோர்களால் அனுமோதித்துக் கௌரவப்படுத்தப்பட்டதுமான ப்ரச்னம் (கேள்வி) அற்ப விஷயமுள்ளதாக இராது. ஆகையால அதைச் சொல்ல வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

5-45 ஓ சௌனகர் முதலிய மஹர்ஷிகளே! இம்மாதிரி அரசனுடைய வார்த்தையைக் கேட்டு மஹர்ஷிகளுக்குள் சிறந்தவரும், பல விஷயங்களை

அறிந்தவருமான சுகர் மிகுந்த ப்ரியத்துடன் அரசனை நோக்கி, "திருதராஷ்டிர மகாராஜன் அதர்ம சிந்தையால் விவேகமில்லாதவராய் மிகவும் துஷ்டர்களான துரியோதனன்முதலிய புத்திரர்களை அதர்ம மார்க்கமாய்ப் போஷித்தும், தம்முடைய தம்பியாகிய பாண்டுவினுடைய குமாரர்களும், தகப்பனை இழந்தவர்களுமான தரும புத்திரர் முதலானவர்களை அரக்கு மாளிகையில் வஸிக்கச் செய்து அதில் அக்னியையும் வைத்தார். பிறகு துரியோதனன் சபையில் திரௌபதியின் தலைமயிரைப் பிடித்து இழுத்து வரச் செய்யும் பொழுது, அவள் தன்னுடைய ஸ்தனங்களிலிருக்கும் குங்குமம் கரையும்படி கண்ணீரைப் பெருக்கி அழுதாள். அப்பொழுது தனது மருமகளாகிய திரௌபதிக்கு நேர்ந்த துக்கத்தையும் புத்திரர்களுடைய கெட்ட நடையையும் பார்த்திருந்தும் மௌனமாக இருந்தார்.

மேலும் துரியோதனன் முதலியவர்கள் மிகுந்த சாதுவாகிய தருமபுத்திரரைச் சொக்கட்டான் ஆட்டத்தில் ஜயித்து நாட்டிலிருந்து காட்டிற்குப் போகச் செய்தார்கள். அப்பொழுது அவர் சத்தியத்திற்குட்பட்டுப் பன்னிரண்டு வருஷம் வனவாஸஞ் செய்தும், ஒரு வருஷம் அஞ்ஞாதவாஸஞ் செய்தும், பிறகு தம்முடைய பாகத்தைத் தமக்குக் கொடுக்கும்படி வேண்டிக் கொள்ள அப்பொழுதும் தமோ குணத்தால் அந்தத் திருதராஷ்டிர மகாராஜன் கொடுக்கவில்லை. பின்னும், ஜகத்திற்குக் குருவாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் தரும புத்திரரால் தூண்டப்பட்டு, அஸ்தினாபுரஞ் சென்று சபையில் சில வார்த்தைகளைச் சொன்னார். அவைகள் பீஷ்மர், முதலானவர்களுக்கு அமிருதமாக விருந்தன. துரியோதனன், திருதராஷ்டிரர்

முதலானவர்கள் க்ஷேமத்தைக் கொடுக்கும் புண்ணிய மில்லாதவர்களாகையால், அவைகளைப் பெரியவை களாக நினைக்கவில்லை. பின்னுமொரு சமயத்தில் திருதராஷ்டிரர் பாண்டவர்களுக்கு அவர்களுடைய பாகத்தைக் கொடுக்கும் விஷயமாய் ஆலோசிப்பதற்காக விதுரரைத் தம்முடைய அரண்மனைக்கு வரவழைத் தார். விதுரர் காரியம், அகாரியம் இவைகளை நன்றாக யோசித்துச் சொல்பவர்களுக்குள் சிறந்தவர், "விதுரருடைய வார்த்தை மிகவும் மேலானது" என்று ப்ரசித்தமாயிருக்கிறது. அப்பொழுது விதுரர் தமை யனை நோக்கி, "ஓ மகாராஜ! தரும புத்திரருக்கு ஓரிடத்திலும் விரோத புத்தியில்லாமையால் அவர் தம் சகோதரர்களுடன் உம்மால் செய்யப்பட்ட சகிக்க முடியாத அபகாரங்களைப் பொறுத்துக் கொண்டிருக் கிறார். தவிரவும், பீமசேனராகிய சர்ப்பமானது மிகுந்த கோபத்துடன் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக் கிறது. அந்த சர்ப்பத்தினிடம் நீர் எப்பொழுதும் மிகவும் பயந்து கொண்டிருக்கிறீரல்லவா? மேலும் ப்ராஹ்மணர்களையே தெய்வமாக கொண்டவராகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் குந்தியின் புத்திரர்களைத் தம்மைச் சேர்ந்தவர்களாக அங்கீகரித்திருக்கிறார். யாதவர்களுக்கு அதிபதியும், பூமியிலிருக்கும் ஸகல அரசர்களை ஜயித்தவருமாகிய அந்தப் பகவான் துவாரகா நகரத்தில் சுகமாக வஸிக்கிறார்.

மேலும், தோஷமே துரியோதனனென்ற பெயருடன் சரீரமெடுத்துக் கொண்டு உம்முடைய க்ருகத்தில் ப்ரவேசித்திருக்கிறது. இவனை அபத்யம் (எந்தக் குழந்தையால் பிதா நரகத்தையடையாமலிருப்பானோ அந்தக் குழந்தை) என்று நினைத்துப் போஷிக்கிறீர்.

இவன் பரம புருஷராகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் இடத்தில் விரோதபுத்தியுள்ளவன். இவனால் உமக்கு க்ஷேம்மம் கிடைக்காது, சம்பத்து உம்மை விட்டு விலகியது; கெட்ட நடையுள்ள இந்தப் புத்திரனை நாட்டை விட்டுத் துரத்தி விடவேண்டும். குலத்தின் க்ஷேமத்திற்காக ஒருவனைப் பரித்தியாகம் செய்வது நியாயமேயாகும், தரும புத்திரருக்கு அவருடைய பாகத்தைக் கொடுத்துவிடும்" என்றார். அதனைக் கேட்ட துரியோதனன் மிகுந்த கோபங்கொண்டு உதடுகள் துடிக்கக் கர்ணன், துச்சாதனன், சகுனி என்னும் இவர்களுடன் சாதுக்களால் விரும்பக்கூடிய ஸ்வபாமுள்ள விதுரரை யுத்தேசித்து, "தாசியின் புத்திரனாகிய விதுரன் கபட ஸ்வபாவமுள்ளவன். நம்முடைய அன்னத்தை புசித்தவனாயிருந்தும் நமக்கே விரோதம் செய்கிறான். சத்ருக்களுக்கு அனுகூலஞ் செய்வதில் ஜாக்ரதையாக இருக்கிறான். இவனை இந்த ஆலோசனை சபைக்கு எவன் அழைத்தான்? இவனை உயிருடன் பட்டணத்தை விட்டுத் துரத்த வேண்டும்" என்று அவமதித்துச் சொன்னான். இம்மாதிரி விதுரர் திருதராஷ்டிரருடைய முன்பாகத் துரியோதனனுடைய நிஷ்டுரவார்த்தை களாகிய பாணங்களால் அடிக்கப்பட்டும் அதனால் வருத்தப்படவில்லை. ஆனால், மாயையின் மஹிமை அளவிடமுடியாதது என்று ஆச்சரியமடைந்தார்.

பிறகு அவர் (விதுரர் அஸ்தினாபுர பட்டணத்தை விட்டு வெளியில் போய்ப் பீமசேனர் முதலியவர்களு டன் சேர்ந்த யுத்தத்திற்கு வருவாரோவென்று சந்தே கிக்க வேண்டாம் என்ற விஷயத்தை துரியோதனன் முதலியவர்களுக்குத் தெரிவிப்பதற்காக) தம்முடைய

வில்லை அவர்களுடைய அரண்மனை வாசலில் வைத்துவிட்டு, தம்மைத் துரத்த முயற்சிப்பதற்கு முன்னமேயே பட்டணத்திற்கு வெளியில் சென்றார். கௌரவர்களுடைய பாக்கிய ரூபியாகிய அந்த விதுரர் புண்ணியத்தைச் சம்பாதிக்க விரும்பி க்ஷேத்திராடனஞ் செய்ய ஆரம்பித்தார். க்ஷேத்திரங்களில் பகவான் ப்ரஹ்மா, ருத்திரன் முதலிய அநேக சரீரங்களுடன் ஸான்னியத்யஞ் செய்கிறார். வனங்கள், புண்யகரமாகிய தோட்டங்கள், மலைகள், கொடிவீடுகள், சுத்தமான ஜலமுள்ள நதிகள், ஏரிகள், பகவானுடைய மூர்த்திகளால் அலங்கரிக்கப்பட்ட க்ஷேத்திரங்கள் ஆகிய இவைகளில் சஞ்சரித்தார். மேலும், அவர் ஒவ்வாரு தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்தும் சுத்தமாகிய ஜீவனமுள்ளவராகப் பூமியில் படுத்துக் கொண்டு, மரவுரியை உடுத்திக் கொண்டு தம்முடைய பந்துக்களாலும், "இவர் விதுரர்" என்று தெரிந்து கொள்ள முடியாத ஸ்வரூபமுள்ளவராக ஸ்ரீ மகா விஷ்ணுவிற்குப் ப்ரியமாகிய வ்ரதங்களை அனுஷ்டித் தார். இப்படிப் பாரத வர்ஷம் முழுவதும் சஞ்சரித்துக் கடைசியில் ப்ரபாஸ தீர்த்தஞ் சென்றார். அந்தக் காலத்தில் தருமபுத்திரர் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய சகாயத்தால் ஸகல பூமியையும் பரிபாலித்து வந்தார். அப்பொழுது அவருடைய சைன்யம் ஒன்றுதான் பூமியிலிருந்தது. அரசர்களுக்கு அடையாளமாகிய வெள்ளைக் குடை ஒன்றே நிலைத்திருந்தது. மூங்கில்கள் ஒன்றோடொன்று சேர்ந்து அக்னி யுண்டுபண்ணி அதனால் அவைகள் எரிக்கப்படுவது போலக் கௌரவர்கள் நாசமடைந்தார்கள் என்று ஜனங்கள் சொல்லிக் கொள்வதை விதுரர் ப்ரபாஸ தீர்த்தக் கரையில் கேட்டு, வருத்தத்துடன் மௌனமாக

அவ்விடத்திலிருந்து மேற்கு முகமாய்ச் சரஸ்வதி நதியை நோக்கிச் சென்றார். அவ்விடத்தில் திரிதர், உசனஸ், மனு, பிருது, அக்கினி. அஸிதர், வாயு, ஸுதாஸர், கோ (பசு), சுப்பிரமண்யர், ச்ராத்த தேவர் என்னும் இவர்களுடைய பெயரால் ஏற்படுத்தப்பட்ட பதினொரு தீர்த்தங்கள் இருக்கின்றன. மேலும், மஹர்ஷிகளாலும், தேவர்களாலும் ஏற்படுத்தப்பட்ட விஷ்ணுவின் ஆலயங்கள் இருக்கின்றன. அவைகளின் மேற்புறத்திலிருக்கும் கும்பங்கள் பகவானுடைய சக்கரம் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு இருப்பதால் அவற்றைக் கண்டவுடன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய ஞாபக முண்டாகிறது. அவைகள் எல்லாவற்றையும் விதுரர் சேவித்தார்.

பிறகு, அவ்விடமிருந்து ஸௌராஷ்டிரம், ஸௌவீரம், மத்ஸ்யம், குருஜாங்கலம் என்னும் தேசங்களைத் தாண்டி, சிலகாலம் சென்றபின் யமுனையின் கரை சென்றார். அவ்விடத்தில் பகவத் பக்தராகிய உத்தவ ரைக் கண்டார். அவர் வசுதேவ புத்திரராகிய பகவானுடன் சஞ்சரிப்பவர். மிகவும் சாந்தர். ப்ரகஸ் பதியின் முந்திய சிஷ்யர், ப்ரசித்தர். இப்படிப்பட்ட உத்தவரை விதுரர் மிக்க பிரியத்துடன் தழுவி, பகவானால் போஷிக்கக்கூடிய தம்முடைய பந்துக்கள் க்ஷேமமாக வஸிக்கிறார்களாவென்று பின்வருமாறு விசாரிக்கத் தொடங்கினார். எப்படியெனில், தம்முடைய நாபியிலிருந்து உண்டான ப்ரஹ்மதேவர் உடைய வேண்டுகோளின்படி தாமே இரண்டு விதமாகப் பூமியில் அவதரித்துப் ப்ரஜைகளுக்கு ஆனந்தத்தை யுண்டு பண்ணிக் கொண்டிருக்கும் பலராமனும், ஸ்ரீ கிருஷ்ண பகவானும் சூரசேனருடைய

க்ருஹத்தில் க்ஷேமமாக வஸிக்கிறார்களா? பூஜ்யராகிய வசுதேவர் சுகமாக இருக்கிறாரா? அவர் சகோதரிகளுக்கு இஷ்டமான உத்தம வஸ்த்துக்களைக் கொடுத்து, பிதாபோல் அவர்களைப் பூஜிப்பவர்களல்லவா? யாதவ ஸைனியத்திற்கு அதிபதியான ப்ரத்யும்னர் க்ஷேமமாக இருக்கிறாரா? அவர் முன் ஜன்மத்தில் மன்மதனாக இருந்தவர். ப்ராஹ்மணர்களுடைய அனுக்கிரஹத்தால் ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு ருக்மணி தேவியினிடம் பிறந்தவர். தாமரை மலர் போன்ற கண்களுள்ள ஸ்ரீ கிருஷ்ண பகவான் இராஜ்யத்தை விரும்பாமல் உக்ரசேனருக்கு இராஜ் யாபிஷேகஞ் செய்வித்தாரல்லவா? சாத்வதர்களுக்கும், வ்ருஷ்ணிகளுக்கும், போஜர்களுக்கும், தாசார்ஹர்களுக்கும் அதிபதியான அந்த அரசன் சௌக்கியமாக இருக்கிறாரா? ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் சமமானவரும், ரதிகர்களுக்குள் முந்தியவரும், பகவானுடைய புத்திரருமாகிய சாம்பனென்பவர் க்ஷேமமாயிருக்கிறாரா? அவரை ஜாம்பவதி கடுமையான விரதங்களைச் செய்து புத்திரனாக அடைந்தாள். அவர் முன் ஜன்மத்தில் பார்வதிக்குப் புத்திரனாக இருந்த சுப்ரமண்யனேயாம். அர்ச்சுனனிடத்தில் அஸ்திர வித்தையை அப்பியசித்தவரும்; பகவானைச் சேவித்து யதுக்களுக்கும் அரிதாகிய பகவத் கதியை அடைந்தவருமான யுயுதானர் (ஸாத்யகி) க்ஷேமமா? பகவானிடத்தில் அதிகப் பக்தியுள்ளவரும், பாபமற்றவரும், விவேகியுமான அக்ரூரர் க்ஷேமமா? அவர் ஸ்ரீ கிருஷ்ணன் நடந்த இடத்தில் அவருடைய திவ்யமாகிய பாதம் வைத்த புண்ணிய ஸ்தலத்திலுள்ள தூளிகளின் விசேஷ பிரேமையால் தைரியம் தளர்ந்தவராகப் புரளுகிறவரல்லவா? வேதமானது யாக விதியாகிய பொருளையடக்கிக் கொண்டிருப்பது போல் தேவகி

ஆனவர் ஸ்ரீ மகாவிஷ்ணுவைத் தன்னுடைய வயிற்றில் தரித்தாளல்லவா? அவளுக்குச் சமமானவள் அதிதி தேவியே தவிர வேறில்லை, அந்தக் கிருஷ்ண பகவான் உடைய மாதா க்ஷேமமாக இருக்கிறாளா? அநிருத்தர் க்ஷேமமாக இருக்கிறாரா? அவர் பக்தர்களுக்கு அபீஷ்டத்தைக் கொடுப்பவர். அவரே சாஸ்திரத்திற்குக் காரணரென்றும், மனத்தைப் ப்ரவர்த்திக்கச் செய்பவர் என்றும், அந்தக்கரணத்தின் நான்காவது தத்துவமென்றும் தேவர்கள் சொல்லுகிறார்கள். தங்களுடைய ஆத்மாவிற்குத் தெய்வமாகிய ஸ்ரீ கிருஷ்ணனையே உபாசிப்பவர்களான ஹ்ருதிகர், சத்யபாமையின் புத்திரர் சாருதேஷ்ணர், கதர் முதலிய மற்ற பந்துக்கள் அனைவரும் க்ஷேமமாக இருக்கிறார்களா? தரும புத்திரர் தம்முடைய கைகள் போலிருக்கும் அர்ச்சுனன், ஸ்ரீ கிருஷ்ண பகவான் இவர்களுடன் தர்மமாக லோக மரியாதையைக் காப்பாற்றி வருகிறாரா? அர்ச்சுனன் உடைய ஒத்தாசையால் தர்மபுத்திரருக்குக் கிடைத்த இராஜ்யலக்ஷ்மியைக் கண்டு துரியோதனன் மிகவும் வருத்தப்பட்டானல்லவா? பீமசேனர் கதாயுத்தஞ் செய்யும்பொழுது அவருடைய பாதங்களின் சஞ்சாரத்தைச் சகியாமல் பூமி அசையுமே. அவர் வெகு நாளாகத் தமக்கு அபராதஞ் செய்தவர்களான சத்துருக்களைத் தக்கபடி சிட்சித்தாரா? அர்ச்சுனன் கிராத வேஷங் (வேட வடிவங்) கொண்ட பரமசிவனுடன் யுத்தஞ் செய்யும் சமயத்தில் அர்ச்சுனனுடைய பாணங்களால் அவர் மறைக்கப்பட்டு மிகவும் சந்தோஷமடைந்தாரல்லவா? ரதிகர்களுக்குள் மிகுந்த கீர்த்தியுள்ள இந்த அர்ச்சுனன் சத்ருக்களைக் கொன்றாரா? குந்திதேவியின் ஸ்தன்ய பானத்தால் வளர்ந்தவர்களும், இமைகளுடன் கண்கள் சேர்ந்து

இருப்பதுபோலக் குந்தி புத்திரர்களுடன் விசேஷ பிரேமையுடன் வசிப்பவர்களுமான நகுல சகாதேவர்கள் இருவர்களும் இரண்டு கருட பட்சிகள் மகேந்திரன் இடத்திலிருந்து அமிருதத்தைக் கொண்டு வந்தாற் போலத் தங்களுடைய ராஜ்யத்தை எதிரிகளிடமிருந்து வசப்படுத்திக் கொண்டு சந்தோஷிக்கிறார்களா? அதிரதரும், லோகத்தில் முக்கிய வீரராயுமுள்ள பாண்டு மகாராஜன் வில்லையே ஒத்தாசையாக வைத்துக் கொண்டு நான்கு திக்குகளையும் ஜயித்தார். அப்பேர்ப் பட்ட சூரனாகிய பர்த்தா இறந்தபிறகு குந்தியானவள் தன்னுடைய புத்திரர்களுக்காகவே உயிருடனிருந்தாள். ஓ, உத்தவரே துர்க்கதியை யடையத் தயாராக இருக்கும் திருதராஷ்டிரரைப் பற்றித் துக்கிக்கிறேன். அவர் தம்பியாகிய பாண்டு மகாராஜன் இறந்த பிறகு அவருடைய புத்திரர்களுக்குத் துரோகஞ் செய்ததால் சகோதரனுக்குத் துரோகஞ் செய்தவரானார். மேலும், அவர் தம்முடைய பிள்ளைகளான துரியோதனர்கள் உடைய இஷ்டப்படி என்னைப் பட்டணத்திலிருந்து துரத்தினாரல்லவா? ஆனாலும் மனுஷிய சரீரம் எடுத்து, அவர்களுடைய சித்தத்தைப் பலவகையில் செல்லும்படியாகத் தூண்டும் பகவானுடைய மார்க்கத்தை அவருடைய அனுக்கிரகத்தால் தெரிந்து கொண்டு நான் மற்றவர்கள் கண்களுக்குப் புலப்படாத வனாகிச் சஞ்சரிக்கிறேன். இதில் எனக்கு ஆச்சரியம் யாதுமில்லை. ஸ்ரீ கிருஷ்ண பகவான் துரியோதனன் முதலியவர்களைக் குற்றஞ் செய்த க்ஷணத்திலேயே கொல்லக்கூடிய சாமர்த்தியம் உள்ளவரானாலும் அப்பொழுதே அவர்களைக் கொல்லாமலிருந்தும், தாம் தூதராகி அவர்களிடம் சென்றும், அவர்களால் அவமதிக்கப்பட்டும், உதாசீனராய் இருப்பதற்கு யாது

காரணமென்று யோசிப்போமேயானால், வித்தை, தனம், மேலான குலத்தில் பிறப்பது ஆகிய மூன்று வகையாலும் ஏற்படும் மதத்தால் விவேகமற்றவர்களும், அளவற்ற சைனியர்களுடன் பூமியை அசைப்பவர்களு மான கெட்ட அரசர்களையும் நாசஞ் செய்து, பூமியின் பாரத்தைக் குறைப்பதற்காகவேயென்று நிச்சயிக்க வேண்டியதாயிருக்கிறது. உண்மையில் பிறப்பில்லாத மகாபுருஷன் துஷ்டர்களைச் ஸம்ஹரிப்பதற்காகவே ஜன்மத்தை அங்கீகரித்தார். மேலும் அவர் (அகர்த்தா) ஒன்றையுஞ் செய்யாதவரானாலும், மனிதர்களுக்குக் கர்மத்தில் ச்ரத்தை யுண்டாவதற்காகவே லீலைகளைச் செய்கிறார். இப்படி யில்லாவிடில் குணங்களை அதிக்கிரமித்தவராகிய பரமாத்மாவிற்குக் கர்மாதீன மாகிய சரீரம் எப்படி ஏற்படக் கூடும்? ஆதலால், தம்முடைய ஆக்ஞைக்குட் பட்டவர்களும் சரணம் அடைந்தவர்களுமான ஸகல லோக பாலகர்களுக்காக பூமியில் அவதரித்தவரும், ஜன்மமற்றவரும், சம்சாரத் தைப் போக்கக் கூடிய கீர்த்தியுள்ளவருமான ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய கதைகளைச் சொல்லும் என்றார்.

நோட்டு

பதினொரு –1. திரித தீர்த்தம். 2. உசனஸ் தீர்த்தம் 3. மனு 4. பிருது தீர்த்தம் 5. அக்கினி தீர்த்தம் 6. அஸித தீர்த்தம் 7. வாயு தீர்த்தம் 8. ஸுதாஸ தீர்த்தம் 9. கோ தீர்த்தம் 10. ஸுப்ரமண்ய தீர்த்தம் 11. சிரார்த்ததேவ தீர்த்தம்

அத்தியாயம்–2

உத்தவர் ஸ்ரீகிருஷ்ண சரிதத்தை வர்ணித்தது

விதுரருடைய பிரியமான வார்த்தையைக் கேட்டுப் பாகவத சிரோமணியான உத்தவர் அதிகப் பிரேமையால் ஸ்ரீ கிருஷ்ணனை மனத்தில் நினைத்துக்கொண்டு ப்ருதியுத்தரஞ் சொல்ல முடியாதவராயிருந்தார். அந்த உத்தவர் ஐந்து ப்ராயமுள்ள சிறுவனாயிருக்கும்போது ஒருநாள் பாலக்கிரீடையில் ப்ரதிமை ஒன்றை ஸ்ரீ கிருஷ்ணனாகப் பாவித்து, அதற்குப் பூஜை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது அவருடைய தாயான வள் காலையில் போஜனஞ் செய்யவேண்டியதற்காகப் பலவகையான நல்வார்த்தைகளை சொல்லி அவரை யழைத்தாள். அப்படியும் அவருக்கு ஆகாரத்தில் விருப்பம் உண்டாகவில்லை. பகவத் பக்தர்களுக்குள் சிறந்தவராகிய அப்போர்ப்பட்ட உத்தவர் பகவானுடைய சேவையாலேயே காலத்தைக் கழித்து ஜரையையடைந்தவராகையால் பகவானுடைய பாதங்களைத் தியானித்து, அதிலேயே ரமித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் விதுரருடைய கேள்விக்குப் ப்ரதியுத்தரஞ் சொல்ல முடியுமா? அவர் பகவானுடைய பாதாரவிந்த மதுவினால் விசேஷ ஆனந்த மடைந்து, மிகவும் திடமான பக்தி யோகத்தில் மூழ்கினவராகி ஒரு முகூர்த்தம் மௌனமாயிருந்தார். அப்போது அவர் உடைய எல்லா அவயவங்களிலும் மயிர்கூச்ச லுண்டாயிற்று கண்கள் மூடினவைகளாயிருந்தன. துக்கத்தால் கண்ணீர் பெருகியது. பகவத் விஷயமான விசேஷ ப்ரேம ரசம் நிறைந்தவரும் கிருதார்த்தருமாகி இருந்தார். பிறகு கொஞ்ச நேரம் சென்றபின்,

பகவானாகிய லோகத்திலிருந்து இவ்வுலகத்திற்கு வந்து கண்களைத் துடைத்துக்கொண்டு பகவான் செய்த லீலைகளை நினைத்து ஆச்சரயமுள்ளவராகி, விதுரரை நோக்கி பின்வருமாறு சொல்லலானார்: ஸ்ரீ கிருஷ்ணன் ஆகிய சூரியன் அஸ்தமயத்தையடைந்த போது காலமாகிய பெரிய சர்ப்பமானது நம்முடைய வீடுகளைக் கவர்ந்துகொண்டது. இந்த நிலைமையில் உம்மால் கேட்கப்பட்ட பந்துக்களுடைய க்ஷேமத்தைப் பற்றி எதனைச் சொல்வேன்? இவ்வுலகத்திற்கு அதிருஷ்டக்குறைவுண்டாயிற்று. யாதவர்கள் எல்லோரும் இங்கிதத்தை யறிந்தவர்களானாலும், மிகவும் ஸமர்த்தர்களானாலும், ஒரே இடத்தில் வசிப்பவர்கள் ஆனாலும் ஸகல பூதங்களுக்கும் இருப்பிடமாகிய ஈசுவரனை யாதவர்களுக்குள் சிறந்தவராக நினைத்தார் களே யொழிய மகாவிஷ்ணுவென்று தெரிந்து கொள்ளவில்லை. பாற்கடலில் இருக்கும் மத்ஸ்யங்கள் தங்களுடன் சகவாசஞ் செய்த சந்திரனையும் ஒரு வகையான ஜல ஜந்துவாக நினைத்தனவே யொழிய அமிருத ஸ்வருபியென்று தெரிந்துகொள்ளவில்லை. அவைகள் போன்ற யாதவர்களுக்குப் பாக்கியம் மிகவும் குறைந்துவிட்டது. சில யாதவர்கள் பகவான் உடைய மாயையால் மோகித்து, "இவர் யது குலத்தில் பிறந்தவர். நமக்குப் பந்து" என்று சொல்கிறார்கள்.

சிசுபாலன் முதலிய சிலர் விரோத புத்தியுள்ளவர் களாய் பகவானை நிந்தித்தார்கள். ஆனால் பகவான் இடத்திலேயே மனத்தைச் செலுத்தியவர்களுடைய (என்னை போன்றவர்களுடைய) புத்தியானது மேற் காட்டியவர்களுடைய வார்த்தையைக் கேட்டும் பிரமிக்கவில்லை, மேலும் பகவான் நன்றாகத் தவஞ்

செய்யாதவர்களும், பார்த்துத் திருப்தியடையாத கண்களுள்ளவர்களுமான மனிதர்களுக்குத் திவ்ய சரீரத்தைக் காண்பித்து ஜனங்களுடைய கண்களைக் க்ரஹித்துக் கொண்டு மறைந்தார். அந்தக் திவ்ய சரீரமானது மனுஷ்ய லீலைகளுக்குத் தகுதியானது அவருடைய மனத்திற்கும் ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியது. மிகுந்த சௌபாக்கியத்திற்கும் இருப்பிடம். ஆபரணங்களுக்கு அழகைக் கொடுக்கக் கூடிய அவயவங்களுள்ளது. மேலும் தரும புத்திரருடைய ராஜசூய யாகத்தில் வந்திருந்த ஸகல ஜனங்களும் ஆனந்தகரமாகிய அந்தச் சரீரத்தைப் பார்த்து ப்ரஹ்ம தேவர் ஸ்ருஷ்டி விஷயத்தில் தமக்கிருக்கும் சாமர்த்தியம் முழுவதையும் இந்தச் சரீரத்தில் காட்டியிருக்கிறார் என்று நினைத்தார்கள். அந்தக் திவ்ய மூர்த்தியினுடைய அனுராகமுள்ள சிரிப்பு விநோதம் விளையாட்டான பார்வை ஆகிய இவைகளில் அதிக ஆசை கொண்ட கோபஸ்திரீகள் அனைவரும் அவரவர்கள் செய்து கொண்டிருந்த காரியங்களை முடிக்காமலே பகவானையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். மேலும் அவர்களுடைய மனமானது பகவானிடத்திலேயே பதிந்து அவர் பின் சென்றது. அந்தப் பகவானுக்கு சாந்தம், அசாந்தம் என்று இருவகையான ஸ்வரூபம் உண்டு. அவைகளில் சாந்த ஸ்வரூபமாகிய சாதுக்கள், அசாந்த ஸ்வரூபமாகிய துஷ்டர்களால் உபத்திரவிக்கப் படும்போது காரியகாரணங்களுக்கு அதிபதியான பகவான் விசேஷ கருணையுள்ளவராக மாயையின் சம்பந்தத்தை அடைந்து (மகத் தத்துவத்தைக் காரியமாக உடையது அவ்யக்தம்) உண்மையில் பிறப்பில்லாதவரானாலும் எப்பொழுதும் சித்தமாக இருக்கும் அக்னியானது சில சமயத்தில் கட்டை

முதலியவைகளில் பிரகாசிப்பது போல் அவதரிக்கிறார் (பிரகாசிக்கிறார்). ஆனாலும் அளவற்ற வீரியம் உள்ள அந்தப் பகவான் வஸுதேவருடைய வீட்டில் காராகிருகத்தில்) பிறந்ததாக அபிநயஞ் செய்ததையும் கோகுலத்தில் வஸித்ததையும், கம்ஸனிடத்தில் பயந்தவர்போல் மதுரையை விட்டுப் போனதையும், ஒரு சமயத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான், தேவகி, வஸுதேவர் இவர்களுக்கு நமஸ்காரம் செய்து அவர் களை நோக்கி, ஓ அண்ண! ஓ அம்ம! கம்ஸனிடம் பயந்தவர்களான நாங்கள் உங்களுடன் சகவாசஞ் செய்து உங்களுக்குச் சிச்ருஷை செய்ய முடியாதவர் களானோம். அந்த விஷயத்தில் தயவுசெய்ய வேண்டும்! என்று கேட்டுக்கொண்டதையும் நினைக்கும்போது அவைகள் என் மனதிற்கு வருத்தத்தைப் உண்டு பண்ணுகின்றன. (ஆனாலும் அவரை ஈசுவரனல்ல வென்று எப்படி சொல்லக்கூடும்?) அவர் அசைகின்ற தம்முடைய புருவமாகிய யமனைக் கொண்டு பூமியின் பாரத்தைப் போக்கினார். (அவருடைய புருவத்தின் அசைப்பே துஷ்டர்களுக்கு யமனாக விருந்தது) அவர் உடைய பாதங்களின் தூளியை ஒரு தடவை சேவித்த வன் மறுபடி பிறப்பானா? மேலும் பகவானிடம் விரோத புத்தியுள்ள சிசுபாலன் தருமபுத்திரருடைய இராஜசூயத்தில் யோகிகளால் விரும்பக்கூடிய உத்தம பதத்தைப் பகவானுடைய அனுக்கிரஹத்தால் அடைந்தானென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அவரை விட்டுப் பிரிந்த துக்கத்தை யாரால் ஸகிக்க முடியும்? மேலும், யுத்தத்தில் அரசர்கள் அழகாக ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரை மலர்போன்ற முகத்தைத் தரிசித்து அர்ச்சுனனுடைய அஸ்திரத்தால் சுத்தர்களாகி விஷ்ணு பதத்தை

அடைந்தார்கள். அவருக்குச் சமமானவரும், மேலானவரும் உலகத்தில் ஒருவருமில்லை. அவர் ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் அதிபதி. பரமானந்த ஸ்வரூபியாகையால் ஸகல கர்மத்தையும் அடைந்தவர். இந்திரன் முதலிய லோகபாலர்கள், காணிக்கைகளுடன் அவர் உடைய தரிசனத்திற்காக வந்து, தங்களுடைய கிரீடம் அவருடைய பாத பீடத்தில் படும்படி நமஸ்கரிக்கிறார்கள். அதனாலுண்டாகும் சப்தமானது அவரைத் துதிப்பது போலிருக்கிறது. அந்த மகாபுருஷன் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும் உக்கிரசேனருடைய பக்கத்தில் நின்று, அரசர்களிடம் வேலைக்காரர்கள் சொல்லும் சம்பிரதாய வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டு கைங்கரியங்களைச் செய்து வந்தார். அதை நினைக்கும்போது என் மனம் நடுங்குகிறது. மேலும், பூதனையென்னும் துஷ்ட ராக்ஷஸியானவள் கொல்ல வேண்டுமென்று எண்ணத்துடன் காலகூட விஷயம் ஆகிய ஸ்தன்யத்தை அவருக்கு கொடுத்தும், அவள் இடத்தில் பகவான் கோபியாமலும் அவள் செய்த அபகாரத்தை நினைக்காமலும், யசோதைக்கு தகுதியாகிய உத்தம கதியை அவளுக்குக் கொடுத்தருளினார். பகவானுடைய கருணை வியக்கத்தக்கது. ஆகையால் அவரை விட்டு வேறு யாரைச் சரணம் அடைவோம்? அசுரர்களானாலும் பகவானிடத்தில் விரோதத்தாலாவது எப்பொழுதும் மனத்தைச் செலுத்தியவர்கள் ஆகையால் அவர்களும் பாகவதர்களேயாம். அவர்கள் யுத்தத்தில் கருடனையும்; அவர் மீது ஏறிவரும் சக்ரபாணியாகிய பகவானையும் தர்சித்தார்கள். முன்னொரு சமயத்தில் இந்தப் பூமியின் பாரத்தை நிவர்த்திப்பதற்காகத் ப்ரஹ்மதேவரால் ப்ரார்த்திக்கப்பட்டு ஸ்ரீ நாராயணன் ஸ்ரீ கிருஷ்ணன்

என்ற திவ்ய நாமதேயத்துடன் வஸுதேவருக்குத் தேவகியிடம் காராக்கிருகத்தில் புத்திரனாக அவதரித்தார். அப்பொழுது வஸுதேவர் கம்ஸனிடம் பயந்து வேண்டிக்கொள்ள, அவ்விடமிருந்து கோகுலஞ்சென்று, பலராமனுடன் பதினோரு வருஷங்கள் அவ்விடத்தில் வஸித்தார். யமுனையின் கரையில் கன்று மேய்க்கும் சிறுவர்களுடன் கன்றுகளை மேய்த்து கொண்டு விளையாடினார். அந்த நதியின் கரையிலிருக்கும் மரங்களின் கிளைகளில் பறவைகள் இனிமையாகச் சப்தித்துக் கொண்டிருந்தன. மேலும்; சிங்கக் குட்டி போல அழகாய்ப் பார்க்கும் ஸ்வபாவமுள்ள அந்தப் பகவான் சிறு வயதில் கோபர்கள் பார்த்து ஆனந்திக்கக் கூடிய கௌமார சேஷ்டைகளைக் காட்டியருளினார். சிலவேளை சிரிப்பதுபோலும், சில சமயம் அழுவது போலும் அபிநயஞ் செய்தார். அவரே சொற்ப காலத்திற்குப் பின் லக்ஷ்மிதேவிக்கு இருப்பிடமான வெண்மை நிறமுள்ள பசுக்களையும், விருஷங்களையும் வேணுகானஞ் செய்து சந்தோஷப்படுத்தினார். மேலும் அவர் கம்ஸனால் அனுப்பப்பட்டவர்களும், இஷ்டப்படி உருவமெடுக்கக் கூடியவர்களும், மாயாவிகளுமான அசுரர்களைச் சிறுவர்கள் ஆடும் ப்ரதிமைகளைப் போல நாசஞ் செய்தார். பின்னும் யமுனையிலிருந்து காளியன் என்ற சர்ப்பத்தின் விஷத்தால் கொதித்து இருந்த ஜலத்தைக் குடித்துப் பசுக்களும், கோபர்களும், மரணமடைந்தபோது அவர்களைப் பிழைக்கச்செய்து அந்தச் சர்ப்பத்தை, நிக்ரஹித்து அந்த ஜலத்தைச் சுத்தமாக செய்தார். பின்னும் அவர் இந்திரனை உத்தேசித்துச் செய்யும் பூஜையை நிறுத்தி, பசுக்களுக்குப் பூஜை செய்யும்படி நந்தரிடம் சொல்லி, அந்த மஹோத்ஸவத்தை ப்ராஹ்மணர்களைக் கொண்டு

முடித்து ஏராளமான இருந்த பணத்தை நல்ல விஷயத்தில் செலவிட்டார். பிறகு மகேந்திரன் கோபித்து அதிக மழை பெய்யச் செய்தான். அப் பொழுது பகவான் கோவர்த்தன மலையாகிய குடையைப் பிடித்துக் கோகுலத்தைக் காப்பாற்றினார். பின்னும் அவர் சரத்காலத்தில் நிர்மலமாகிய சந்திரிகையால் பிரகாசிக்கும் ராத்திரியில் அநேக ஸ்திரீகளுடைய மத்தியிலிருந்து இனிமையாக வேணுகானஞ் செய்து கொண்டு விளையாடினார்.

அத்தியாயம்–3

ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதங்கள்

1–23 பிறகு அந்தப் பகவான் தம்முடைய தாய் தந்தையர்களுக்கு க்ஷேமத்தைச் செய்ய விரும்பிப் பலராமனுடன் கோகுலத்திலிருந்து மதுரா நகரஞ் சென்று அவ்விடத்தில் உயரமான இராஜ மஞ்சத்தி லிருப்பவனும் தம்முடைய சத்துருக்களில் பிரதானனு மாகிய கம்ஸனைக் கொன்று, உயிரற்ற அவனுடைய சரீரத்தைப் பூமியில் இழுத்தார். மேலும் அவர் ஸாந்தீபனி என்பவரைக் குருவாக வரித்து, வேதங்களை அவைகளின் அங்கங்களுடன் அவரிடமிருந்து ஒரு தரம் உபதேசித்த மாத்திரத்திலேயே க்ரஹித்துக் கொண்டார். சில நாளைக்கு முன் இறந்து போன குரு புத்திரனை, பஞ்சஜனனென்ற ராக்ஷஸனுடைய வயிற்றைக் கிழித்து, அழைத்து வந்து, குருதக்ஷணை யாக ஆசார்யரிடம் சமர்ப்பித்தார். பீஷ்ம மகாராஜ னுடைய புத்திரியும், லக்ஷ்மீதேவி போன்றவளுமாகிய ருக்மிணி தேவியின் ரூபலாவண்யத்தால் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பி விதர்ப்ப தேசத்தில் வந்து கூடிய அரசர்களுடைய சிரசில் பாதங்களை வைத்து மிகுந்த இலாகவத்துடன் தம் முடைய சொத்தாகிய அந்த ருக்மிணியை அபகரித் தார். பின்பு அவளைக் காந்தர்வ விதிப்படி கல்யாணஞ் செய்துகொண்டார். பின்னும் அவர் அங்குக் குத்தப் படாதவைகளான வ்ருஷபங்களை ஜயித்து, நக்னஜித் தின் புத்திரியை விவாகஞ் செய்து கொண்டார். அப்பொழுது ஏற்கனவே அந்த வ்ருஷபங்களை அடக்கமுடியாமல் வெட்கப்பட்டு அப்புறம் சென்ற

அரசர்கள் அந்த ராஜகுமாரியிடம் ஆசைகொண்டு ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் யுத்தத்திற்கு வந்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களை ஆயுதங்களாலேயே கொன்றார். ஆனால் பகவானுக்குக் கொஞ்சமேனும் காயமில்லை. மேலும் அவர் தாம் சுதந்திரரானாலும் ஸ்திரீகளுக்கு வசப்பட்டவர் போல சத்யபாமையின் பிரீதிக்காக பாரிஜாத வ்ருக்ஷத்தைப் பூமிக்குக் கொண்டுவந்தார். அப்பொழுது ஸ்திரீகளின் கிரீடா மிருகம்போன்ற இந்திரன் மிகவும் கோபங்கொண்டு சைனியங்களுடன் பகவானுடன் யுத்தம் செய்தான். மேலும் அவர் ஆகாயம் வரையில் பரவிய சரீரமுள்ள வனும், பூமியின் புத்திரனுமாகிய நரகாசுரனைச் சக்ராயுதத்தால் கொன்றார். பின்பு பூமிதேவியால் ப்ரார்த்திக்கப்பட்டு நரகனுடைய புத்திரனாகிய பகதத் தனுக்கு இராஜ்யத்தைக் கொடுத்து நரகனுடைய அந்தப்புரத்தில் ப்ரவேசித்தார். அவ்விடத்தில் நரகாசுரனால் அநேக தேசங்களிலிருந்து கொண்டுவரப் பட்ட இராஜ கன்னிகைகள் இருந்தார்கள், அவர்கள் அனைவரும், உபத்திரவ மடைந்தவர்களுக்குப் பந்து வாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானைக் கண்டவுடன் எழுந்திருந்து, சந்தோஷம், வெட்கம், ஆசை ஆகிய இவைகளுடன் பார்த்தார்கள். பிறகு அவர்களெல்லோரு க்கும் தனியாக அந்தப்புரங்களை ஏற்படுத்தி, அவை களில் ஒரே சமயத்தில் தம்முடைய மாயையால் அநேக ரூபமெடுத்துக் கொண்டு விதிப்படி அவர்களை விவாகம் செய்துகொண்டார். பின்பு தமது மாயையை விஸ்தரிப்பதற்காக அந்த ஒவ்வொரு ஸ்திரீயினிடத்தி லும் தமக்கு சமமான பத்துப்புத்திரர்களை உண்டு பண்ணினார். மேலும் அவர் தமது பட்டணத்தை முற்றுகை செய்தவர்களான காலயவனன், மாகதன்,

ஸால்வன் ஆகிய இவர்களை முசுகுந்தர் முதலியவர் களை நிமித்தாமாக வைத்துக் கொண்டு தாமே கொன்றார். தம்மைச் சார்ந்தவர்களுக்குக் கீர்த்தியை உண்டு பண்ணினார். சம்பரனையும், துவிதனையும், பாணனையும், முரனையும், பல்வலனையும், தந்தவக்தி ரன் முதலியவர்களையும் கொன்றார். மற்றவர்களைப் ப்ரத்யும்னன் முதலியவர்களைக் கொண்டு கொல்வித் தார். மேலும் பாண்டவர்களுடைய பட்சத்திலும் துரியோதனனுடைய கட்சியிலும் யுத்தத்திற்குச் ஸித்தர்களாக இருப்பவர்களும், சகோதரர்களும், புத்திரர்களுமாகிய அரசர்களெல்லோரையும் நாசஞ் செய்தார். அந்த ஸைன்யத்தால் குருக்ஷேத்ர பூமியானது அசைந்தது. கர்ணன், துச்சாஸனன், சகுனி ஆகிய இவர்களுடைய துராலோசனையால் துரியோத னுடைய ஐசுவர்யமும், ஆயுசும் குறைந்ததுமன்றி அவனுடைய ஸைனியங்களும் நாசமடைந்தன. கடைசியில் துரியோதனுடைய தொடைகளும் முறிக்கப்பட்டன. அவன் பூமியில் விழுந்தான். அப் பொழுது அவனைப் பார்த்தும் சந்தோஷப்பட வில்லை. ஆனாலும், த்ரோணர், பீஷ்மர், அர்ஜுனர், பீமசேனர் ஆகிய இவர்களால் அக்ஷௌஹிணி ஸைன்யங்கள் கொல்லப்பட்டன. அதனால் பூமியின் பாரம் கொஞ்சம் குறைந்தாலும், அளவற்ற யாதவ ஸைன்யமானது , என்னுடைய அம்சர்களான ப்ரத்யும்னர் முதலியவர்களால் காப்பாற்றப்பட்டுச் சத்துருக்களால் ஜயிக்க முடியாததாக இருக்கிறது. அது பூமி பாரமல்லவா? அதை நாசஞ் செய்வதற்கு என்ன உபாயம்? மத்ய பானஞ்செய்து சிவந்த கண்களுடன் மதங்கொண்டு அவர்கள் ஒருவருக்கொரு வர் யுத்தஞ்செய்தாலொழிய அவர்களைக் கொல்ல

உபாயமில்லை. நான் என்னுடைய லோகஞ் சென்றால் யாதவர்களெல்லோரும் சண்டைசெய்து நாசமடைவார்கள் என்று ஆலோசித்து, தருமபுத்திரருக்கு இராஜ்யாபிஷேகஞ் செய்வித்து, வர்ணாசிரம தர்மங்களை அனுஷ்டித்துக் காண்பித்து, சந்தோஷிக்கச் செய்தார். பின்னும் புருவின் வம்சம் தொடர்சியற்று போகாமல் இருப்பதற்காக அபிமன்யுவினால் உத்தரையினிடம் கர்ப்பம் உண்டு பண்ணப்பட்டதல்லவா? அந்தக் கர்ப்பமானது அச்வஸ்த்தாமாவினுடைய அஸ்திரத்தால் எரிக்கப்படும்போது அக்குழந்தையை ஸ்ரீ கிருஷ்ணன் காப்பாற்றினார். மேலும் அவர் தருமபுத்திரருக்கு மூன்று அசுவமேத யாகங்களை நடத்தி வைத்தார். அந்த தருமபுத்திரரும் ஸ்ரீ கிருஷ்ண பகவானை ஆச்ரயித்தவராய்த் தம்முடைய தம்பிகளுடன் பூமியைப் பரிபாலித்தார். ஸகல ஜகத்ருபியாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானும் சிரௌத கர்மங்களையும், ஸ்மார்த்த கர்மங்களையும் அனுஷ்டித்து, துவாரகா நகரத்தில் காமங்களை அனுபவித்தார். ஆனால் ஆத்ம தத்துவத்தை அறிந்தவராகையால் அவைகளில் அபிமானம் வைக்கவில்லை. மேலும், அவர் தம்முடைய புன்சிரிப்பு உள்ள பார்வையாலும், அமிருதம், போன்ற வார்த்தையாலும், குற்றமற்ற சரித்திரத்தாலும், லக்ஷ்மீதேவிக்கு வாசஸ்தலமாகிய சரீரத்தாலும், பூலோகத்தையும், மேலுலகத்தையும் சந்தோஷிக்கச் செய்தார். இரவில் ஸ்திரீகளுக்குச் சந்தோஷத்தை உண்டு பண்ணி அவர்களிடத்தில் க்ஷணநேரம் பிரீதி செய்பவரான ஸ்ரீ கிருஷ்ண பகவான் யாதவர்களை விசேஷமாகச் சந்தோஷப்படுத்தினார். இப்படி ஸ்ரீ கிருஷ்ண பகவான் வெகு வருஷங்கள் க்ருஹஸ்தாச்ரமத்தை அனுஷ்டித்து கர்மங்களை அனுபவித்த பிறகு அவைகளில்

வைராக்கியம் அடைந்தார். கர்மங்கள் யாவும் தெய்வாதீனங்காளாயிருக்கின்றன. அவைகளை அனுபவிக்கும் புருஷனும் அந்தத் தெய்வத்துக்கு வசப்பட்டவனாகவே இருக்கிறான். அப்படியிருக்க, யோகாப்பியாசத்தால் ஈசுவரனை அனுசரித்த எவன்தான் அவைகளில் ஆசைப்படுவான்?

24–28 பிறகு ஒருகால் துவாரகா நகரத்தில் யதுகுமாரர்களும், போஜ குமாரர்களும் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அவ்விடத்தில் வந்த ப்ராஹ்மணர்களுக்கு அவர்கள் கோபத்தை உண்டு பண்ணினார்கள். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய அபிப்பிராயத்தை அறிந்த ப்ராஹ்மணர்கள் அந்தக் குமாரர்களைச் சபித்தார்கள். சில மாதம் சென்ற பின்பு, வ்ருஷ்ணிகளும், போஜர்களும், அந்தகர்களும் ரதங்களின் மீதேறிக் கொண்டு தெய்வத்தால் புத்தி மாறினவர்களாகி, மிகவும் சந்தோஷத்துடன் ப்ரபாஸமென்ற தீர்த்தம் சென்றார்கள். அந்தப் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, பிதிரு தர்ப்பணம், தேவதர்ப்பணம், ரிஷிதர்ப்பணம் ஆகிய இவைகளை முடித்துக் கொண்டு உத்தமமான பசுக்களையும், சுவர்ணத்தையும், வெள்ளியையும், படுக்கைகளையும், வஸ்திரங்களையும், மான் தோல் முதலியவைகளையும், கம்பளங்களையும், குதிரைகளையும், ரத்தினங்களையும், யானைகளையும், கன்னிகைகளையும், ஜீவனத்துக்குப் போதுமான தானியம் விளையக்கூடிய பூமியையும், ப்ராஹ்மணர்களுக்கு கொடுத்தார்கள். மேலும் பசுக்கள், ப்ராஹ்மணர்கள் ஆகிய இவைகளுக்காகவே ஜீவிப்பவர்களும், சூரர்களுமான அவர்கள் மேலான ரசமுள்ள அன்னத்தையும் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்து அவர்களுக்கு நமஸ்காரம் செய்தார்கள்.

அத்தியாயம் 4

விதுரர் மைத்ரேயரைச் சந்தித்தது

1–18. பின்பு அவர்கள் ப்ராஹ்மணர்களிடம் விடைபெற்று மத்யத்தைக் குடித்து, அதனால் மயக்கம் அடைந்து மர்ம ஸ்தானங்களைப் பிளக்கக்கூடிய கெட்ட வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டார்கள். மேலும், மத்யபானஞ் செய்து புத்தி மாறிப்போனதால் சூரியன் அஸ்தமனத்தை அடைந்து பிறகு மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்ந்து கொள்வது போலக் கலகம் செய்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ண பகவான் தம்முடைய மாயையின் காரியமாகிய அந்தக் கலகத்தைப் பார்த்து சரஸ்வது நதியில் ஆசமனஞ் செய்து ஒரு அரசமரத்தின் கீழ் உட்கார்ந்திருந்தார். அதற்கு முன்னமேயே என்னை நோக்கி, ஓ உத்தவ, நீ பத்ரிகாச்ரமம் போ என்று தம்முடைய குலத்தைக் கொல்லவேண்டுமென்று விரும்பியவரும், பக்தர்கள் உடைய உபத்திரவத்தைப் போக்கடிப்பவருமாகிய ஸ்ரீ பகவான் சொல்லியிருந்தார். அப்படியும் நான் அவர் உடைய அபிப்பிராயத்தை அறிந்திருந்தும் அவர் உடைய பாதங்களை விட்டுப் பிரிய மனமில்லாதவனாக ஸ்ரீ கிருஷ்ணன் பின் சென்றேன். பிறகு சரஸ்வதி நதியின் கரையில் ஒருவராய் உட்கார்ந்திருப்பவரும், ப்ரீதியுள்ளவரும்; நாதருமாகிய பகவானைக் கண்டேன், அவர் லக்ஷ்மிக்கு வஸிக்குமிடம்; ஆச்ரயம் அற்றவர்; கறுத்த திருமேனியுள்ளவர் ரஜோகுணம் இல்லாதவர், மிகவும், சாந்தர், அழகான கண்கள் உள்ளவர், நான்கு கைகளுள்ளவர். பீதாம்பரம் தரித்தவர், இடத்தொடையில் வலக்காலை வைத்துக்

கொண்டு சிறிய அஸ்வத்த மரத்தில் சாய்ந்து கொண்டு இருப்பவர், விஷய சுகத்தில் ஆசையில்லாதவர், ஆனந்தத்தால் நிறைந்தவர். அப்பொழுது வ்யாஸ மகா முனிக்கு மித்திரரும், கிருதகிருத்யருமாகிய மைத்ரேயர் தெய்வச் செயலால் அவ்விடம் வந்தார். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ண பகவான் பக்தராகிய மைத்ரேயர், முன்பாகப் ப்ரியம், சிரிப்பு ஆகிய இவைகளுள்ள பார்வையால் சிரமத்தை நிவர்த்தித்துக்கொண்டு என்னை நோக்கி, ஓ உத்தம உம்முடைய மனத்தில் இருக்கும் எண்ணமென்னதென்று எனக்குத் தெரியும், முன்ஜன்மத்தில் நீர் ப்ரஜாபதிகளான வஸுக்களுடைய யாகத்தில் என்னைப் பூஜித்தீர். ஆதலால் என்னுடைய ஸ்தானத்தை யடைய வேண்டுமென்று நீர் நினைத்தது மற்றவர்களுக்குத் துர்லபமேயாகும், ஓ சாதுவே! மனுஷ்ய லோகத்தை விட்டு நான் வைகுண்டம் செல்லும் சமயத்தில் மிகுந்த பக்தியுடன் என்னை நீர் தரிசித்து என்னுடைய அனுக்கிரகம் பெற்றபடியால் இதுவே உமக்குக் கடைசியான ஜன்மம். முந்திய பாத்மகல்பத்தில் என்னுடைய கொப்பூழில் தோன்றிய, தாமரஸ புஷ்பத்திலிருந்து ப்ரஹ்மதேவருக்கு என் மகிமையைக் காண்பிக்கும் ஞானத்தை உபதேசித்தேன். அதனை வித்வான்கள், பாகவத ஞானமென்றார்கள். அதனை உமக்கு உபதேசிக்கிறேனி என்றார். இப்படிப் பரமபுருஷன் மிகுந்த ப்ரீதியுடன் சொல்லி ஒவ்வொரு க்ஷணத்திலும் என்னை அனுக்கிரகிக்கும் போது, எனக்கு அவரிடத்தில் பக்திமேலிட்டு அதனால் மயிர்கூச்சலுண்டாயிற்று. துக்கத்தால் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு கத்கத ஸ்வரத்துடன் கை கூப்பிப் பகவானை நோக்கி ஓ ஈச உம்முடைய பாதார விந்தங்களை ஆச்ரயித்தவர்களுக்கு நான்கு

புருஷார்த்தங்களில் எதுதான் கிடைக்காது? ஆனாலும் எனக்குத் தருமம் முதலியவைகளில் ஆசை இல்லை. உம்முடைய பாதங்களைச் ஸேவிப்பதிலேயே விருப்பம் உள்ளவனாக இருக்கிறேன். கர்மங்களுடைய சம்பந்தம் அற்றவராகிய நீர் கர்மங்களை அனுஷ்டிப்பது, ஜன்மம் அற்றவரானாலும் பூமியில் அவதரிப்பது, காலரூபியாகிய நீர் சத்துருக்களிடம் பயந்து ஓடுவது, சமுத்திர மத்யத்திலுள்ள துவாரகா நகரத்தில் ஒளிந்து வஸிப்பது. ஆத்மாவினால் சந்தோஷப்படுகிறவரானாலும் அநேக ஸ்திரீகளைக் கல்யாணம் செய்துகொண்டு கிருஹஸ்தாசிரமத்தை அடைந்திருப்பது, ஆகிய இவைகளைக் கண்டு வித்வான்களுடைய புத்தியும் மோஹத்தை அடைகிறது. மேலும் ஓ தேவ! தடையற்றதும், பூர்ணமும், சம்சயமற்றதுமான ஆத்ம ஞானமுள்ளவராகிய நீர் ராஜ காரியங்களைப்பற்றி ஆலோசிக்க வேண்டிய ஸமயத்தில் வெகு ஜாக்கிரதை யுள்ளவராகிய என்னை வரவழைத்து ஒன்றுமறியாதவர்போல் ராஜ்யத்தில் என்னுடைய அபிமதத்தைக் கேட்கிற வழக்கமல்லவா? அதனை நினைக்கும்போது என் மனம் மோஹத்தை அடைகிறது. ஓ ஸ்வாமியே! ஆத்மாவின் உண்மையைத் தெரிவிக்கக்கூடியதும், மேலானதுமான எந்த ஞானத்தைப் பூர்ணமாக நீர் ப்ரஹ்மதேவருக்கு உபதேசித்தீரோ, அது என்னால் தெரிந்துகொள்ளக் கூடியதானால் அதை உபதேசியும். அதனால் சம்சார துக்கத்தைப் போக்கிக் கொள்ளுவேன் என்று ப்ரார்த்தித்தேன்.

19–22. பிறகு தாமரை மலர்போன்ற கண்களுள்ளவரும் குருவுமாகிய ஸ்ரீ பகவான் என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துக்கொண்டு தம்முடைய

உத்தமகதியை எனக்கு உபதேசித்தார். இம்மாதிரி பகவானுடைய பாதங்களாகிய தீர்த்தத்தை ஆராதித்து ஆத்மஞானத்தை அடைந்தேன். பின்பு அவருடைய பாதங்களில் நமஸ்கரித்து அவரைப் ப்ரதக்ஷிணஞ் செய்து அவருடைய விரஹத்தைச் ஸஹிக்காமல் மனவருத்ததுடன் இவ்விடம் வந்தேன். அவரைத் தரிஸித்ததால் உண்டான சந்தோஷமுள்ளவனும், அவரை விட்டுப் பிரிந்ததால் உண்டான துக்கமுள்ளவனுமாகிய நான் அவருக்கு மிகவும் இஷ்டமான பதரிகாசிரமத்தை உத்தேசித்துப் போகிறேன். அவ்விடத்தில் நர நாராயணரென்று திவ்ய நாமதேயங்களுடன் பகவான் முனி வேஷம் பூண்டு பிறருக்கு இம்சை இல்லாமலும், மற்றவர்களால் அனுஷ்டிக்க முடியாததுமான தபஸை வெகு காலமாகச் செய்து வருகிறார் என்று சொன்னார்.

23–25. அதைக் கேட்டு வித்வானாகிய விதுரர் சகிக்க முடியாத பந்துக்களின் நாசத்தை. உத்தவர் முதமாகத் தெரிந்துகொண்டு, அந்தத் துக்கத்தை விவேகத்தால் அடக்கிக் கொண்டார். அப்போது விதுரர், கிருஷ்ணை பக்தர்களுக்குள் முக்கியரும், பாகவதர்களுக்கு உத்தமரும். பதரிகாசிரமம் செல்லுபவருமான உத்தவரை நோக்கி, ஓ உத்தவ! யோகீசுவராகிய ஈசுவரன் ஆத்மாவின் உண்மையை காண்பிக்கும் எந்த மேலான ஞானத்தை உமக்கு உபதேசித்தாரோ அதனை நீர் எனக்கு உபதேசிக்கவேண்டும். ஏன் என்றால், விஷ்ணு பக்தர்கள் பக்தர்களைக் காப்பாற்றுவதற்காக உலகத்தில் சஞ்சரிக்கிறார்களே யொழிய, அவர்களுக்குச் சொந்தமான காரியம் வேறு ஒன்றும் இல்லை என்று ப்ரியமாகக் கேட்டுக்கொண்டார்.

26–27. அதனைக் கேட்டு உத்தவர் விதுரரை நோக்கி ஓ விதுரா! பகவான் பூலோகத்தை விட்டு வைகுண்டம் செல்லும் காலத்தில் உமக்கு உபதேசம் செய்வதற்காக மைத்ரேய மகாமுனிக்கு ஆக்ஞாபனம் செய்திருக்கிறார். ஆனதால் அவரை ஆத்மஞானத் திற்காக நீர் உபாசிக்கவேண்டும் என்று சொல்லி அன்று ராத்ரி யமுனா நதியின் மணல் திட்டில் ஸகல ஜகத் ஸ்வரூபியான பகவானுடைய கதைகளை விதுரருக்குச் சொல்லிக்கொண்டு அந்த அமிருதத்தில் ஸ்நானஞ் செய்து, தாபமில்லாதவராக அன்றிரவை ஒரு க்ஷணம் போல கழித்து மறுநாள் பதரிகாசிரமஞ் சென்றார் என்று சுகர் சொன்னார்.

28. அதனைக் கேட்டு பரீட்சித்து மகாராஜன் சுகரை நோக்கி, ஓ ப்ராஹ்மண! அதிரதர்களும், அவர்களுடைய சேனாபதிகளுமாகிய வ்ருஷ்ணிகள், போஜர்கள் ஆகிய இவர்கள் நாசமடைந்த பிறகு, ப்ரஹ்மா, விஷ்ணு, சிவபெருமான் ஆகிய இவர்களுக்கு மேலானவராகிய பகவான் தம்முடைய சரீரத்தை விட்டுவிட்டாரல்லவா? அப்பொழுது உத்தவர் மாத்திரம் எப்படியிருந்தார்? என்று கேட்டார்.

29–32. அதனைக் கேட்டு சுகர், அரசனை நோக்கி, ஓ மகாராஜ வீணாகாத சங்கற்பமுள்ள பகவான் மிகவும் விருத்தி யடைந்திருந்த தம்முடைய குலத்தைப் ப்ராஹ்மண சாபத்தை நிமித்தமாகவுடைய தம்முடைய சக்தியைக் கொண்டு நாசஞ்செய்து தம்முடைய தேகத்தைவிட்டுவிட விரும்பியபொழுது, நான் இவ்வுலகத்தை விட்டு மேலுலகஞ் சென்றால் எனக்கு ஸ்வாதீனமான ஞானத்தை அடைவதற்கு

இந்திரியங்களை ஜயித்தவர்களுக்குள் உத்தமராக இருக்கும் உத்தவரே தகுதியானவர், மேலும், என் இடத்திலிருக்கும் குணங்கள்யாவும் கொஞ்சமேனும் குறைவின்றி இவரிடத்தில் இருக்கின்றன. இவர் விஷயங்களால் கலக்க முடியாதவர். ஆதலால் இவர் ஆத்ம ஞானத்தை ஜனங்களுக்கு உபதேசித்துக் கொண்டு இருக்கட்டும் என்று யோசித்து மூவுலகத் திற்கும் குருவாயும் வேதங்களுக்குக் காரணராயும் இருக்கும் அந்த பகவான் இவரைப் பூமியில் வஸிக்கும் படி ஆக்ஞாபித்தார் உத்தவரும் அந்த உத்தர்வின்படி பத்ரிகாசிரமத்தில் பகவானைச் ஸமாதியில் பூஜித்து வந்தார்.

32–36. ஓ குரு சிரேஷ்ட விதுரரும், பரமாத்மா வாகிய கிருஷ்ணன் லோகானுக்ருஹார்த்தமாய்ப் பூமியில் அவதரித்து நடத்திய உத்தமமான சரிதங்களை உத்தவர் சொல்லக்கேட்டு, ஞானிகளுக்குத் தைரியத்தை விருத்தி செய்யக்கூடியதும் மற்றவர்களால் செய்ய முடியாததுமான பகவானால் செய்யப்பட்ட சரீர தியாகத்தையும் தெரிந்துகொண்டு (பகவான் விதுரருக்கு மைத்ரேயரை ஞானோபதேசம் செய்யும்படி ஆக் ஞாபனம் செய்தார் என்றதை) உத்தவருடைய வார்த்தையால், தம்முடைய ஞாபகம் அவருக்கு இருந்ததையும்; நன்றாகத் தெரிந்துகொண்டது இல்லாமல் பாகவதராகிய உத்தவர் பதரிகாசிரமம் சென்ற பிறகு ஸ்ரீ கிருஷ்ண பகவானையே தியானஞ் செய்து அழுதார். பிறகு பாகவதர்களுக்குள் சிறந்த வராகிய விதுரர் யமுனா நதியிலிருந்து மைத்ரேயர் வஸிக்கும் இடமாகிய கங்கா தீரத்திற்குச் சில தினங்களில் சென்றார்.

அத்தியாயம்–5

மைத்ரேயருக்கும் விதுரருக்கும் ஸம்வாதம்

1–16 ஓ மகாராஜ! இப்படி குருக்களில் சிறந்த வராகிய விதுரர், கங்கையின் கரையில் உட்கார்ந்து இருப்பவரும், அளவற்ற ஞானமுள்ளவரும், பகவத் தியானத்தால் சுத்தரும், நல்ல ஸ்வபாவமுள்ளவராக இருப்பதாகிய குணத்தால் திருப்தியடைந்தவருமான மைத்திரேயரைக் கண்டு, அவருடைய சமீபஞ் சென்று, ஓ மகரிஷியே! ஜனங்கள் சுகத்தை அடைய வேண்டியதற்காகக் கர்மங்களைச் செய்கிறார்கள். ஆனால் அவைகளால் சுகமாவது, துக்க, நாசமாவது ஏற்படுகிறதில்லை. அவைகளால் துக்கமே நேரிடுகிறது. ஆதலால் சம்சாரத்தில் எதனைச் செய்வது யுக்தமோ அதனைச் சொல்ல வேண்டும். பூர்வ ஜன்மத்திய கர்ம வசத்தால் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் பக்தி செய்யாதவனும், அதர்ம ஸ்வபாவமுள்ளவனும், துக்கத்தை அடைந்தவனுமாகிய ஜனத்தை அனுக்கிர கிப்பதற்காகவே திவ்ய மங்களங்களான விஷ்ணுவின் சரீரங்கள் இவ்வுலகத்தில் சஞ்சரிக்கின்றன. ஓ சாதுக்களில் சிறந்தவரே! எந்த உபாயத்தால் பகவானை ஆராதித்தால் இருதயம் சுத்தமாகும்? எதில் பகவான் வாசஞ் செய்து அனாதியாகிய அபரோக்ஷ ஞானத்தை கொடுப்பார்? அந்த சுக ரூபமான மார்க்கத்தை உபதேசிக்க வேண்டும். முக்குண சரூபமாகிய மாயைக்கு அதிபதியும்; படைப்பது முதலியவைகளுக்கு அதிபதி யும், சுதந்திரருமாகிய பகவான் பூமியில் அவதரித்து எந்தக் காரியங்களைச் செய்தார்? ஒரு விஷயத்திலும் ஆசை அற்றவரான அந்தப் ப்ரபு இந்த உலகத்தை முன் காலத்தில் எப்படி ஸ்ருஷ்டித்தார்? மறுபடியும்

தம்மால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஜகத்திற்கு ஜீவனத்தைக் கற்பித்து எப்படிக் காப்பாற்றுகிறார்? மறுபடியும் அந்தப் பரமாத்மாவே வியாபாரம் அற்றவராக இந்த ஜகத்து முழுவதையும் தம்முடைய இருதயாகாசத்தில் அடக்கிக் கொண்டு யோக மாயையிடம் எப்படிச் சயனஞ் செய்தார்? யோகிகளுக்கு அதிபதியும், ப்ரபஞ்சத்தின் உள் ப்ரவேசித்தவருமாகிய அந்தப் பகவான் தாம் ஒருவரானாலும் ப்ரஹ்மா முதலிய அநேக உருவங்களை எப்படித் தரிக்கின்றார்? மேலும் அவர் மத்ஸ்யம், கூர்மம் முதலிய அவதாரங்களைச் செய்து ப்ராஹ்மணர்களுக்கும், பசுக்களுக்கும், தேவர் களுக்கும் அனுகூலமான காரியங்களைச் செய்கிறார். புண்ய ஸ்லோகர்களுக்குள் ச்ரேஷ்டராகிய அந்தப் பகவானுடைய சரிதங்களைக் கேட்டு என்னுடைய மனம் திருப்தி யடையவில்லை. ஸகல லோகத்திற்கும் அதிபதியாகிய புருஷன் எந்த எந்தத் தத்துவங்களைக் கொண்டு லோக பாலர்களையும்,லோகங்களையும், லோகா லோக பர்வதங்களையும் கற்பித்தார்? மேலும் ஸகல ப்ராணிகள், அதன் கூட்டம் ஆகிய இவை களுடைய பேதமானது அவரவர்களுடைய கர்மத் திற்குத் தக்கபடி எற்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது? ஓ ப்ராஹ்மணச்ரேஷ்ட! தாமாக உண்டானவரும், லோகங்களைச் ஸ்ருஷ்டித்தவருமான ஸ்ரீமந் நாராயணன் ப்ரஜைகளுடைய ஸ்வபாவத்தையும், கர்மாவையும், பெயரையும் எப்படி வெவ்வேறாகச் செய்தார்? அவற்றை எனக்குச் சொல்லும். ஓ பகவன்! ப்ராஹ்மணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள் (பர) சூத்ரர்கள் (அபர) ஆகிய இவர்களால் அனுஷ்டிக்க வேண்டிய வ்ரதங்களை வ்யாஸ மகர்ஷியின் முகமாக அடிக்கடி கேட்டிருக்கின்றேன். அவைகள் அற்ப

பலத்தைக் கொடுக்கக் கூடியவைகள். ஆதலால் அவை களைக் கேட்கப் போதுமென்ற திருப்தி உண்டாயிற்று. ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய கதையைக் கேட்பதில் அப்படிப்பட்ட திருப்தி உண்டாகிறதில்லை. ஏனெனில், அந்தக் கதாமிருதமானது புருஷனுடைய காதுவழியாக உட்சென்று சம்சார துக்கத்தைக் கொடுக்கும் அபிமானத்தைப் வீடு முதலானவைகளில் என்னுடைய தென்பதை) போக்கடிக்கிறது. ஆகையால் சாதுக்களின் கூட்டத்தில் நாரதர் முதலிய விவேகிகளால் கொண்டாடப்பட்ட ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய கதையிலிருந்து எவன்தான் திருப்தியடைவான்? பகவத் குணங்களைச் சொல்ல வேண்டுமென்ற விருப்பமுள்ள வரும், உமக்கு மித்திரருமான வ்யாஸ மகர்ஷியானவர் எனக்குப் பாரதக் கதையைச் சொன்னார். அதில் கிராம்ய சுகங்கள் வருணிக்கப்பட்டிருந்தாலும் அவை களைத் துச்சமென்று சிந்தித்து பகவானுடைய கதையிலேயே மனம் பதிந்திருக்குமானால் விஷயங் களில் வைராக்கியமுண்டாகும். பகவானுடைய கதையை நினைப்பதனால் சுகமடைந்தவனுக்கு ஸகல துக்கங்களும் நீங்கிவிடுகின்றன. மேலும், எவர்கள் பாகவதத்தின் கருத்தையறியாதவர்களோ அவர்கள் துக்கிக்கத் தகுந்தவர்கள். வீணான வார்த்தை சிந்தை இவைகளுள்ள அவர்களுடைய ஆயுளைத் தேவனாகிய காலமானது குறைத்து விடுகிறது. ஆதலால் இவர்களைப் பற்றித் துக்கிக்கிறேன். ஓ மைத்திரேய! இந்த லோகத்துக்கு க்ஷேமத்தை யுண்டு பண்ணுகிற வரும், சம்சார துக்கமுள்ளவர்களுக்குப் பந்துவுமாகிய ஸ்ரீ மகா விஷ்ணுவினுடைய சாரமான கதையைப் புஷ்பங்களிலிருந்து வண்டானது தேனை எடுப்பது போல நீர் எடுத்துரைக்க வேண்டும். ஜகத்தைச்

ஸ்ருஷ்டிப்பதற்கும், அவைகளைப் பரிபாலிப்பதற்கும், நாசஞ் செய்வதற்கும் எவர் சத்வம் முதலிய குணங்களை அடைந்தாரோ, அவரே பின்பு பூமியில் அவதரித்துப் புருஷர்களால் செய்ய முடியாத எந்த எந்தக் காரியங்களைச் செய்தாரோ அவைகளைச் சொல்லும் என்று கேட்டார்.

17–50 இப்படி விதுரர் மனிதர்களுடைய க்ஷேமத் திற்காகக் கேட்க, அதனைக் கேட்டு, குஷாரவருடைய புத்திரராகிய மைத்ரேய மஹர்ஷி விதுரரை நோக்கி, அவரைக் கொண்டாடி, "ஓ சாதுவே! நீர் நன்றாகக் கேட்டீர். இதனால் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் மனதைச் செலுத்தியவரான உமக்குக் கீர்த்தி விருத்தியடையும். ஜனங்கள் உம்மால் அனுக்கிரகிக்கப் பட்டார்கள். ஓ விதுர! நீர் ஸ்ரீ மகா விஷ்ணுவிடத்தில் ஏகாந்த பக்திசெய்து, அவரை சுவாதீனப்படுத்திக் கொண்டிருக்கிறீர்; மேலும் நீர் வ்யாஸ மகர்ஷியின் புத்திரரானதால் "பகவத் கதையைச் சொல்ல வேண்டும்" என்று நீர் ப்ரச்னம் செய்வது ஆச்சரியம் அல்ல. பகவத் பக்தியில்லாதவர்களைச் சிட்சிப் பவராகிய யமன், ஆணிமாண்டவ்யருடைய சாபத்தால் வ்யாஸருடைய ப்ராதாவாகிய விசித்திரவீரியனுடைய களத்திரம் போன்ற தாசியினிடம் வ்யாஸ மகர்ஷிக்குப் புத்திரனாகப் பிறந்தார். அவர் நீர் தான். மேலும் நீர் ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கும், பாகவதர்களுக்கும் ப்ரியர். அதனால்தான் பகவான் பரலோகஞ் செல்லும் சமயத்தில் உம்முடைய ஞாபகம் வைத்துக்கொண்டு உமக்கு ஞானோபதேசஞ் செய்யும்படி எனக்கு ஆக்ஞாபனஞ் செய்தார். ஆதலால் யோக மாயையின் ஆச்சர்ய சக்தியால் கற்பிக்கப்பட்டவைகளும்,

ஜகத்தின் உற்பத்தி, பரிபாலனம் ஆகிய இவைகளையே ப்ரயோசனமாக வுடையவகைளுமான பகவானுடைய லீலைகளைக் க்ரமமாய் வருணிக்கிறேன். ஸ்ருஷ்டி காலத்தில் பலவகையாகத் தோன்றுகிறவரும், எல்லாப் ப்ராணிகளின் ஸ்வரூபமாக விருப்பவரும், எங்கும் இருப்பவருமாகிய பகவானுக்குத் தாமொருவராக இருக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாகும் சமயமான ஸ்ருஷ்டிக்கு முந்திய காலத்தில் அவர் ஒருவரே இருந்தார். அந்தப் பரமாத்மாதான் பார்க்கிற வராய் (திருஷ்டாவாக) இருந்து கொண்டு, பார்க்கப் படும் வஸ்துவை (திருச்யத்தை) பார்க்கவில்லை. ஏன் என்றால் அவர் தாம் ஒருவரேயாக அப்பொழுது ப்ரகாசித்துக் கொண்டிருந்தார். மாயை முதலிய சக்திகள் அடங்கியிருந்ததால் தம்மை இல்லாதவர் போல் நினைத்தார். (பார்க்கப்படும் வஸ்து இல்லாவிடில் பார்க்கிறவனென்ற வியவகாரம் இல்லாததனால் என்பது கருத்து). ஆனால் அவர் (திருக்) சக்தியுள்ளவர். காரிய காரண ஸ்வரூபமான அந்த ஸத்தாகிய திருஷ்டாவினு டைய சக்தியே மாயை என்று சொல்லப்படுகிறது. ஓ மகா பாக்கியமுள்ளவரே! ப்ரபுவாகிய பகவான் அந்த மாயையைக் கொண்டே உலகத்தைப் படைத்தார். சித்சக்தியுள்ள பரமாத்மாவானவர் காலத்தின் சக்தியால் கலங்கின குணங்களுள்ள மாயையினிடத்தில் தம்முடைய அம்சமாயிருக்கும் புருஷனைக் கொண்டு சிதாபாஸமாகிய வீர்யத்தை வைத்தார். காலத்தால் தூண்டப்பட்ட அந்த மாயையினிடமிருந்து அஞ் ஞானத்தைப் போக்கக் கூடிய விஞ்ஞான ரூபமாகிய மகத்தத்துவமானது தன்னுடைய தேகத்தில் அடங்கி இருக்கும் ஜகத்தை வெளிப்படுத்திக் கொண்டு உண்டாயிற்று. அம்சம், சிதாபாஸம், குணங்கள்

காலம் ஆகிய இவைகளுக்கு ஸ்வாதீனமாக அந்த விஞ்ஞானாத்மாவானவர் பகவானுடைய கடாக்ஷத் தால் இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிக்கவேண்டிய நிமித்தம் வேறு உருவத்தை அடைந்தார். அந்த மகத் தத்துவத் திலிருந்து காரியம் காரணம், கர்த்தா ஆகிய இவை களுக்கு ஆசிரயமும், பூதங்கள், இந்திரியங்கள், மனஸ் ஆகிய இவைகளின் உருவமாயுமிருக்கும் அகங்காரம் ஆனது உண்டாயிற்று. அது வைகாரிகம், தைஜஸம், தாமஸம் என்று மூன்று வகையுள்ளது. வைகாரிகம் என்ற அகங்காரம் வேறு உருவத்தை அடைய, அதனிடமிருந்து மனம் உண்டாயிற்று. இந்திரியங் களுக்கு அதிபதிகளும், சப்தம் முதலிய விஷயங்களைப் ப்ரகாசிக்கச் செய்பவர்களுமான காரிய தேவதைகளும் வைகாரிகர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். ஞானேந்திரியங்களும், கர்மேந்திரியங்களும் தைஜஸங் கள் என்று சொல்லப்படுகின்றன. சூட்சும பூதமாகிய சப்தமானது தாமஸ அகங்கார தத்துவத்திலிருந்து உண்டாயிற்று. அதனிடமிருந்து, ஆத்மாவிற்குச் சரீரம் ஆகிய ஆகாசமானது, எல்லாவற்றிற்கும் அதிபதியான பகவானால் பார்க்கப்பட்டு, காலம், ப்ரக்ருதி, சிதா பாஸம் இவைகளுடைய சேர்க்கையால் உண்டாயிற்று. ஆகாசத்திலிருந்து உண்டான ஸ்பர்சமானது வேறு உருவத்தை யடைந்து வாயுவை உண்டுபண்ணிற்று. அந்த வாயுவும் வேறு உருவத்தை அடைந்து ஆகாச சம்பந்தத்தால் விசேஷ உருவ பலத்துடன் ரூபதன்மாத்ரையை உண்டுபண்ணிற்று. அதுவே யோகத்தைப் ப்ரகாசிக்கச் செய்யும் ஜ்யோதிஸ்ஸாகும். அந்த ஜ்யோதிஸ்ஸானது வேறு உருவத்தை அடைந்து வாயுவுடன் பரமேசுவரனால் கடாக்ஷிக்கப்பட்டு, காலம், மாயை, அம்சம் ஆகிய இவைகளுடைய

சேர்க்கையால் ஜலத்தை உண்டு பண்ணிற்று. அந்த ஜலமானது தேஜசுடன் விகாரத்தை அடைந்து பகவானுடைய கடாக்ஷம் பெற்று, காலம், மாயை அம்சம் ஆகிய இவைகளுடைய சம்பந்தத்தால் கந்தத்தைக் குணமாயுடைய பூமியை உண்டு பண்ணிற்று. ஆகாசம் முதலிய பூதங்களுக்குள் எதற்கு எது காரணமோ, எதற்கு எது காரியமோ, அந்தக் காரிய பூதங்களுக்குக் காரண பூதங்களுடைய சேர்க்கையால் மேல்மேலும் அதிகமான குணங்கள் உண்டாகின்றன. காலலிங்கமாகிய விகாரம், மாயா லிங்கமாகிய விட்சேபம், அம்சலிங்கமாகிய சைதன்யம் ஆகிய இவைகளுள்ளவர்களும், மகத்தத்துவம் முதலிய வைகளுக்கு அபிமானிகளாயுமுள்ள இந்தத் தேவர்கள் விஷ்ணுவின் அம்ச பூதர்களேயாம். இந்தத் தேவர்கள் அநேகர்களாகையால் ப்ரம்மாண்டத்தை உண்டு பண்ண அசக்தர்களாக ப்ரபுவாகிய மகாவிஷ்ணுவிடம் வந்து கை கூப்பி, "ஓ தேவ! உம்முடைய பாதாரவிந்தத்தை நமஸ்கரிக்கிறோம். அது சரணம் அடைந்தவர்களுக்குத் தாபத்தை நிவர்த்திக்கும் குடையாக இருக்கிறது. அந்தப் பாதார விந்தத்தின் மூலத்தை ஆசிரயித்து யதிகள் சம்சார துக்கத்தை அடைகிறதில்லை. ஆகையால், ஓ, பகவான் எப்பொழுதும் ஞானப்ரகாசமுள்ள உம்முடைய பாதச் சாயையை ஆச்ரயிருக்கிறோம். ஓ, பகவான்! சுத்த சித்தர்கள், விஷயத்தில் ஆசை இல்லாத தம்முடைய மனத்தில் உம்முடைய முகமாகிய தாமரைப் புஷ்பத்தில் வஸிக்கக்கூடிய வேதங்களாகிய பட்சி களைக் கொண்டு எதனைத் தேடுகிறார்களோ, பாபங் களைப் போக்கடிக்கும் ஜலமுள்ள அநேக நதிகளுள் சிறந்தவளாகிய கங்கையானவள் எதனிடமிருந்து உண்டானாளோ அந்த உம்முடைய பாதாரவிந்தத்தைச் சரணமடைகிறோம்.

தைரிய முள்ளவர்கள் மிக்க ச்ரத்தையுடன் பகவத் குணங்களைக் கேட்டு, அதனால் பக்தியடைந்து, அதனால் தம்முடைய இருதயத்தைச் சுத்தமாகச் செய்து கொண்டு, அதில் எதனைத் தியானஞ் செய்து வைராக்யம், ஞானம் ஆகிய இவைகளை அடைகிறார் களோ, அந்தப் பாதங்களை ஆச்ரயிக்கிறோம். ப்ரபஞ்சத்தைச் ஸ்ருஷ்டிப்பதற்கும், பரிபாலிப்பதற்கும், நாசஞ் செய்வதற்கும் அவதரித்தவரான உம்முடைய பாதாரவிந்தத்தை நாங்களெல்லோரும் சரணமடை கிறோம். அதை நினைத்த மாத்திரத்தில் பக்தர்களுக்கு ஸகல பயமும் நீங்குகிறது. ஓ தேவ! இந்திரியம் முதலிய பலவகையான சாமக்கிரியுள்ள இந்த அற்பமான தேகத்தில் "நான், என்னுடையது" என்ற துரபிமானம் வைத்திருக்கும் புருஷர்களுக்குத் தங்களுடைய தேகத்தில் வஸிப்பவராகிய உம்முடைய பாதாரவிந்தம் வெகு தூரத்திலிருப்பதாக ஆகி விடுகிறது. அதைச் சரணமடைகிறோம். மாயைக்கு அதிபதியான பரம புருஷ! பெரியோர்களால் கானம் பண்ணக்கூடியவரே! எவர்கள் இந்திரியங்களை வெளியிலிருக்கும் விஷயங்களில் செலுத்தி உம்மிடத்தில் மனதைச் செலுத்தாமல் இருக்கிறார் களோ அவர்கள் உம்முடைய லீலைகளைக் கானம் பண்ணிக் கொண்டு ப்ரகாசிக்கும் பக்தர்களையும் பார்க்க மாட்டார்கள்.

ஓ தேவ! உம்முடைய கதாஅமிருதத்தைப் பானம் செய்து, மிகுந்த பக்தியால் சுத்த சித்தர்களாக இருப்பவர்கள் வைராக்கியத்தை அடைந்து, உடனே வைகுண்ட லோகஞ் சேருகிறார்கள். சிலர் பரமாத்மாவினிடத்தில் ஸ்திரமாக மனதைச் செலுத்து வதாகிய உபாயத்தால் மிக்க பலமுள்ள ப்ரக்ருதியை

ஜயித்து உம்மையே அடைகிறார்கள். ஆனால் அது ச்ரமமான மார்க்கம். உம்மைச் ஸேவிப்பதாகிய மார்க்கம் மிகவும் ச்ரமமற்றது. எல்லாவற்றிற்கும் ஆதியாக இருப்பவரே! உலகங்களைச் ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்ற விருப்பத்தால் முக்குணங்களைக் கொண்டு நாங்கள் அனைவரும் உம்மால் உண்டு பண்ணப்பட்டோம். அந்தக் குணங்களின் ஸ்பாவம் ஒன்றுக்கொன்று விரோதமாக இருப்பதால் நாங்கள் ஒன்றுசேராமல் இருக்கிறோம். உம்முடைய விளை யாட்டுக்குச் சாதனமான ப்ரம்மாண்டத்தைப் படைத்து உம்மிடம் சமர்ப்பிக்க எங்களால் முடியவில்லை.

பிறப்பில்லாதவரே! அனுபவிக்க வேண்டிய காலத்தில் போகத்தை எப்படி சமர்ப்பிப்போம்? நாங்கள் அன்னத்தை எப்படிப் புசிப்போம்? இந்த ஜீவர்கள் விக்கின மில்லாதவர்களாக நும்மிருவர் களுக்கும் பாகத்தைக் கொடுத்துக் கொண்டு எப்படித் தாமும் அன்னத்தைப் புசிப்பார்கள்? தேவர்களாகிய எங்களுக்கும் எங்களுடைய காரணத்திற்கும் நீரே காரணம். விகாரமற்றவர், புராண புருஷர். பிறப்பு அற்றவர். காரணமாகிய மாயையினிடத்தில் எல்லா வற்றையும் அறிந்த மகத் தத்துவ ஸ்வரூபமாகிய ரேதஸ்ஸை முதலில் வைத்தீர். ஓ பரமாத்மாவே! மகத்தத்துவம் முதலிய நாங்கள் எவருக்காக உண்டாயிருக்கிறோமோ, அந்தத் தங்களுக்கு எங்களால் செய்யக்கூடிய காரியம் என்ன? உங்களுடைய அனுக்கிரகம் இல்லாதவரையில் ப்ரம்மாண்டத்தைச் ச்ருஷ்டிக்க எங்களால் முடியாது. ஆகையால் உம்முடைய ஞானத்தையும், சக்தியையும் எங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அத்தியாயம்–6

விராட் ஸ்ருஷ்டி

1–29. இப்படி மகத்தத்துவம் முதலிய சக்திகள் ஒன்றோடொன்று சேராமல் உலகத்தைச் ஸ்ருஷ்டிக்கச் சக்தியற்றவைகளாக் இருப்பதைக் காலமென்ற சக்தியைத் தரித்தவரும் அளவற்ற லீலையுள்ள வருமான ஈசுவரன் பார்த்து, இருபத்து மூன்று தத்துவங்களின் கூட்டத்தில் தாம் ஒரே சமயத்தில் அனுப்பிரவேசஞ் செய்தார். க்ரியாசக்தியுடன் அதில் ப்ரவேசித்த பகவான் சிருஷ்டி சக்தியை அவைகளுக்கு ஞாபகப்படுத்திக் கொண்டு தனித்தனியாக இருந்த அவைகளை ஒன்றோடொன்னு சேர்த்தார். பின்பு ஸ்ருஷ்டி சக்தியை அடைந்த அந்த இருபத்து மூன்று தத்துவங்களும் பகவான் உடைய தூண்டுதலால் தங்கள் தங்கள் அம்சங்களைக் கொண்டு விராட் சரீரத்தைப் படைத்தன. இப்படிப் பரமாத்மாவினுடைய அனுப்ரவேசத்தால் அவைகள் உடைய அம்சங்கள் வேறு ரூபத்தை (பரிணாமத்தை) அடைந்தன. சுவர்ணம் போன்ற இந்தப் புருஷன் ஹிரண்மயன்) அண்ட கோசத்தின் நடுவில் ஜலத்தில் ஸகல ஜீவர்களுடன் வஸித்தார்.

தெய்வ சக்தி, க்ரியா சக்தி, ஆத்ம சக்தி இம்மூன்று சக்திகளுள்ளவரும், இருபத்துமூன்று தத்துவங்களால் உண்டுபண்ணப் பட்டவருமாகிய விராட் புருஷனானவர் தம்மை ஒருவகையாகவும், பத்து வகையாகவும், மூன்று வகையாகவும் பிரித்தார். பரமாத் மாவின் முதல் அவதாரமாகிய அவர் ஸகல பிராணிக ளுடைய ஆத்மாவின் அம்சம். அவரிடத்திலேயே

இந்தப் பூதக்கிரமங்கள்யாவும் தோன்றுகின்றன. விராட் புருஷன், ஸாத்யாத்மன் (இந்திரியங்களுடன் கூடியவன்) ஸாதிபூதன் (வியஷ்டி தேகங்களுள்ளவன்) ஸாதிதைவன் (தெய்வங்களுடன் கூடியவன்), என்று மூன்றுவகையாகவும், ப்ராணரூபத்தால் பத்து வகை யாகவும், இருதயத்தால் ஒருவகையாகவும் இருக்கிறார். பகவான் தத்துவங்களுடைய ப்ரார்த்தனையை நினைத்துக்கொண்டு அவைகளுக்குப் பலவகையான வ்ருத்தியைக் கற்பிப்பதற்காக தம் உடைய தேஜஸ்ஸால் விராட்டைப்பற்றி யோசித்தார். இப்படிப் பகவான் யோசித்தபோது, தேவர்களுக்குச் சில ஸ்தானங்கள் உண்டாயின. அவைகளைச் சொல்லுகிறேன். கேளும், அந்த விராட் புருஷனுக்கு முதலில் முகம் உண்டா யிற்று, லோக பாலராகிய அக்னியானவர் தம்முடைய சக்தியாகிய வாக்குடன் அந்த முகத்தில் ப்ரவேசித்தார். அந்த வாக்கினாலே ஜீவன் சப்தங்களை உச்சரிக் கிறான். பிற்கு தாதுவானது உண்டாயிற்று. லோக பாலராகிய வருணன் ஜிஹ்வேந்திரியத்துடன் அதில் ப்ரவேசித்தார். ஜீவன் அந்த இந்திரியத்தாலேதான் ரஸங்களைக் கிரஹிக்கிறான், பிறகு மூக்குகள் உண்டாயின.

அசுவினீ தேவர்கள் தங்களுடைய அம்சமாகிய க்ராணேந்திரயத்துடன் அதனைத் தங்களுடைய ஸ்தானமாக்கிச் கொண்டார்கள். அந்த இந்திரியத் தாலேயே ஜீவன் கந்தத்தைக் கிரஹிக்கிறான். பின்பு கண்கள் உண்டாயின. சூரியன் சட்சுரிந்த்ரியத்துடன் அவைகளில் ப்ரவேசித்தார். அதனால் உருவ ஞானம் உண்டாகிறது. பிறகு அந்த விராட்புருஷனுக்குச் சர்மங்கள் உண்டாயின. அந்த ஸ்தானத்தில் லோகபாலரான வாயுவானவர் தம்முடைய அம்சம் ஆகிய துவக்கிந்திரியத்துடன் ப்ரவேசித்தார். ஜீவன்

அந்த இந்திரியத்தைக் கொண்டே ஸ்பர்சத்தைக் கிரஹிக்கிறான். பின்பு அந்தப் புருஷனுக்குக் காதுகள் உண்டாயின. அவைகளில் திக்குகள் தங்களுடைய அம்சமாகிய சுரோத்திரேந்திரியத்துடன் ப்ரவேசித்தன. அந்த இந்திரியத்தைக் கொண்டே ஜீவன் சப்தத்தைக் கிரஹிக்கிறான். அந்தப் புருஷனுடைய சர்மாவை ஓஷதிகள் தங்களுடைய அம்சமாகிய உரோமங்களுடன் ப்ரவேசித்தன, ஜீவன் அவைகளைக் கொண்டே தினவைத் தெரிந்து கொள்ளுகிறான். பிறகு அந்தப் புருஷனுக்கு ஆண்குறி (மேட்ரம்) உண்டாயிற்று. ப்ரஹ்மதேவர் தம்முடைய அம்சமாகிய ரேதஸ்ஸுடன் அந்த ஸ்தானத்தை அடைந்தார் ஜீவன் அந்த ரேதஸ்ஸைக் கொண்டே ஆனந்தத்தை அடைகிறான். பிறகு அந்த விராட் புருஷனுக்குகுதமானது உண்டா யிற்று. மித்திரனானவர் தம்முடைய அம்சமாகிய பாயுவுடன் அந்த ஸ்தானத்தை அடைந்தார். அந்தப் பாயுவைக் கொண்டே ஜீவன் மலவிசர்ஜனம் முதலியவைகளைச் செய்கிறான். அந்த விராட் புருஷனுக்குக் கைகள் உண்டாயின.ஸ்வர்க்கத்திற்கு அதிபதியான இந்திரன் தம்முடைய அம்சமாகிய வார்த்தையுடன் (கிரய, விக்ரய சக்தி) அவைகளில் ப்ரவேசித்தார். அந்தச் சக்தியைக் கொண்டே ஜீவன் விருத்தியை (ஜீவிகையை) அடைகிறான். பின்னுமந்தப் புருஷனுக்குப் பாதங்கள் உண்டாயின. அவைகளில் மஹாவிஷ்ணுவானவர் தம்முடைய அம்சமாகிய கதி (நடை)யுடன் ப்ரவேசித்தார். அதைக் கொண்டே ஜீவன் போக வேண்டிய இடங்களுக்குச் செல்லுகிறான். அந்தப் புருஷனுக்கு இதயம் உண்டா யிற்று. சந்திரனானவர் தம்முடைய அம்சமாகிய மனசுடன் அந்த இருதயத்தில் ப்ரவேசித்தார். அந்த மனத்தாலேயே

ஜீவன் சங்கல்பம் முதலிய விகாரங்களை அடைகிறான். பின்னும் அவருக்குப் புத்தியுண்டாயிற்று, ப்ருகஸ்பதி பகவான் தம்முடைய அம்சமாகிய ஞானத்துடன் அந்த ஸ்தானத்தை அடைந்தார். அந்தப் போதத்தாலேயே அறியவேண்டிய விஷயங்களை ஜீவன் தெரிந்து கொள்ளுகிறான். இந்த விராட் புருஷனுக்கு அபிமானம் (அகங்காரம்) உண்டாயிற்று. அதனை ருத்திரன் அடைந்தார். அதனால் செய்யவேண்டியவைகளைச் செய்கிறான். அந்த விராட் புருஷனுக்கு ஸத்வம் (சித்தம்) உண்டாயிற்று. அந்த ஸ்தானத்தை ப்ரஹ்மா தம்முடைய அம்சமாகிய சேதனையுடன் அடைந்தார். அந்தச் சேதனையாலேயே இந்த ஜீவன் விஞ்ஞானத்தை அடைகிறான். மேலும் அந்தப் புருஷனுடைய தலையிலிருந்து த்யுலோகமும் பாதங்களிலிருந்து பூலோகமும், நாபியிலிருந்து ஆகாசமும் உண்டாயின. த்யுலோகம் முதலியவைகளில் குணங்களுடைய பரிணாமபூதகர்களான தேவர்கள் முதலியவர்கள் தோன்றுகிறார்கள் பலிஷ்டமான சத்வகுணத்தால் தேவர்கள் த்யுலோகத்தை அடைந்தார்கள். மனிதர்கள் பசு முதலியவைகளுடன் ரஜோகுண ஸம்பந்தத்தால் பூலோகத்தை அடைந்தார்கள், மேற்காட்டிய இரண்டு லோகங்களுக்கும் மத்தியிலுள்ளதும், பகவானுடைய நாபி ரூபமுமான ஆகாசத்தை ருத்திரருடைய பார்ஷத கணங்கள் தமோகுண ஸ்வபாவத்தால் அடைந்தார்கள்.

30–40. மேலும் அந்த விராட் புருஷனுடைய முகத்திலிருந்து வேதமோதும் ப்ராஹ்மண ஜாதியும் உண்டாயின. ஓ குருசிரேஷ்ட! அதனால் ப்ராஹ்மணன் நான்கு வர்ணத்திற்கும், அதிபதியும் குருவுமானான்.

அவருடைய இரு கைகளிலிருந்து பரிபாலன ரூபமாகிய விருத்தியும் க்ஷத்ரிய ஜாதியும் உண்டாயின. க்ஷத்ரியன் அந்த விருத்தியை அனுசரித்தான், அந்த க்ஷத்ரியன் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அம்ச பூதர்களாகிய ப்ராஹ்மணன் முதலியவர்களைத் திருடர்கள் முதலிய வர்களுடைய உபத்திரவங்களிலிருந்து காப்பாற்றுகிறான். ப்ரபுவாகிய அந்த விராட் புருஷனுடைய தொடைகளில் இருந்து பயிர்த்தொழில் முதலிய ஜீவன ஹேதுக்களும், வைசிய ஜாதியும் உண்டாயின. வைசியன் அந்த விருத்தியைக் கைக்கொண்டான். அவருடைய பாதங்களில் இருந்து சிசுரூஷையும், சூத்ர ஜாதியும் உண்டாயின. சூத்ரன் மேலான ஜாதியார்களுக்குச் சுச்ரூஷை செய்வதையே தனது விருத்தியாக வைத்துக் கொண்டான். அந்த சிசுரூஷையால் மஹாவிஷ்ணு சந்தோஷப்படுகிறார். மேற்காட்டியபடி நான்கு ஜாதிகளும் அவைகளின் விருத்திகளுடன் உண்டாகி, ஆத்ம சுத்திக்காக ச்ரத்தையுடன் தங்களுக்குரிய தர்மத்தைக் கொண்டு தங்களுக்குப் பிதாவாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவைப் பூஜித்தார்கள் ஓ விதுரரே, காலம், கர்மம், சுபாவம், ஆகிய சக்திகளுள்ள பகவானுடைய யோகமாயா பலத்தாலுண்டான அந்த விராட் ரூபத்தைப் பூர்ணமாக வருணிக்க எவன்தான் விரும்புவான்? (ஒருவராலும் வருணிக்க முடியாதென்று கருத்து) ஓ விதுரரே, ஆனாலும் பகவன் நாமங்களை தவிர வேறு வார்த்தைகளை உச்சரித்ததால், அசுத்தமாயிருக்கும் என்னுடைய வார்த்தையச் சுத்தப் படுத்துவதற்காக நான் குருவினிடம் தெரிந்துகொண்ட படி என்னுடைய புத்திக்கு எட்டியவரையில் ஸ்ரீ ஹரியின் கீர்த்தியைச் சொல்லுகிறேன். புண்யச் லோகராகிய பகவானுடைய குணங்களைக்

சொல்வதே புருஷர்களுடைய வாக்குக்கு முக்கியமாகிய லாபம் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். வித்வான்களால் சொல்லப்படும் ஸ்ரீ பகவானுடைய கதையைக் கேட்டதே காதுகளின் முக்கிய பலனாகும். பகவானுடைய மஹிமையானது யோகத்தால் பக்குவமாகிய புத்தியுள்ள ப்ரஹ்மதேவரால் பல வர்ஷங்களிலும் அறியமுடியவில்லை. பகவானுடைய மாயையானது மாயாவியாகிய பகவானையும் மோஹிக்கச் செய்யக்கூடியது. ஆச்சரியம். ஏனென்றால் ஸ்ரீமஹா விஷ்ணுவும் தம்முடைய மாயகதியை தாமும் அறிந்தவரல்ல. (அளவிடக் கூடாதென்று கருத்து) எவரைத் தெரிந்து கொள்வதற்காகப் ப்ரவர்த்தித்த வாக்குகளும். மனசும் அகங்காரத்திற்கு அதிஷ்டான தேவதையாகிய ருத்ரரும், புத்திக்கு அதிஷ்டான தேவதையாகிய ப்ரஹ்மாவும் இந்திரியங்களுக்கு அதிஷ்டான தேவதைகளாகிய இந்தத் தேவர்களும், இன்னும் மற்றவர்களும் அதனைத் தெரிந்து கொள்ள முடியாமலே திரும்பினார்களோ அந்தப் பகவானுக்கு நமஸ்காரம்.

அத்தியாயம்–7

விதுரருடைய ப்ரச்னங்கள்

1–7 வ்யாஸ மஹர்ஷியின் புத்திரரும் வித்வானுமாகிய விதுரர் மேற்காட்டியபடி சொல்லி வரும் மைத்ரேயரை நோக்கித் தம்முடைய வார்த்தை யால் அவரைச் சந்தோஷிக்கச் செய்து கொண்டு, "ஓ ப்ராஹ்மணோத்தம! சித்ரூபியும், விகார மற்றவருமாகிய பகவானுக்குக் கர்மங்கள் உண்டென்று சொல்லுவதும், நிர்க்குணராகிய (குணங்களற்றவராகிய) அவருக்குக் குணங்களிலிருக்கின்றன வென்றும், அவைகள் அவருக்கு விளையாட்டிற்காக (லீலை) ஏற்பட்டவை களென்று சொல்லுவதும் எப்படிப் பொருந்தும்? குழந்தைகளுடைய சேஷ்டைகளுக்கு எப்படி விளையாட்டே ப்ரயோசனமோ, அப்படியே பகவான் உடைய சேஷ்டைக்கும் லீலையே பலன் என்று சொல்லுவதும் பொருந்தாது. ஏனென்றால், குழந்தைகள் விளையாட்டுக் கருவிகளுடன் அவற்றில் ப்ரவ்ருத்திப் பதற்குக் காமம் காரணமாகிறது. மற்ற குழந்தைகள் இருப்பதால் அவர்களுடன் சேர்ந்து விளையாட வேண்டுமென்ற இச்சை உண்டாகிறது. பகவான் இயற்கையில் திருப்தியுள்ளவராகையால் அவருக்குக் காமம் உண்டாவதற்கு நியாயமில்லை. மேலும் அவர் ஒரு விஷயத்திலும் ஆசையில்லாதவர்; அத்விதீயர். ஆகையால் அவருக்கு இம்மாதிரியான விருப்பம் உண்டாயிற்று என்று சொல்வது பொருந்தாது. அவ்வித்தையை உபாதியாயுடைய ஜீவனுடைய போகத்திற்காகப் பகவான் ஸ்ருஷ்டி முதலியவைகளைச் செய்கிறார் என்று சொல்லுவதும் நியாய

விரோதமேயாம். எப்படியெனில் , "பகவான் முக்குண ஸ்வரூபியான தம்முடைய மாயையால் இந்த ஜகத்தைச் ஸ்ருஷ்டிக்கிறார்; பின்பு அதனைக் காப்பாற்றுகிறார்" பிறகு அதை மறைத்து விடுகிறார் என்று சொல்லப் படுகிறது. தேசத்தாலும், காலத்தாலும், அவஸ்தையா லும் (நிலைமை), இயற்கையாலும், மற்ற வஸ்துவினா லும் நாசஞ் செய்யப்படாத ஞானமுள்ள ஜீவனுக்கு சம்பந்தம் ஏற்பட்டதென்று சொல்வது யுக்தமல்ல. மேலும் பகவான் ஒருவரே ஸகல சரீரங்களிலும் அந்தர்யாமியாக வஸிக்கிறார். அப்படிக்கிருக்க ஜீவனுக்கு ஆனந்தம் முதலியவைகளின் குறைவாவது, துக்கமாவது கர்மங்களால் நேரிடுகிறது என்று எப்படி சொல்லலாம்? ஓ வித்வானாகிய மகர்ஷியே! அறியாத் தன்மையாகிய துக்கத்தில் என் மனம் சிக்கிக் கொண்டிருக்கிறது. ஓ ப்ரபுவே! என்னுடைய பெரியதாகிய மோஹத்தை நிவர்த்திக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்துக் கொண்டார்.

8–14 மேற்காட்டிய விஷயத்தைத் தெரிந்துகொள்ள விரும்பிய விதுரரால் இம்மாதிரி கேட்கப்பட்ட மைத்ரேயர்; பகவானிடத்தில் சித்தத்தைச் செலுத்திய வராக, தத்துவத்தை அறிந்தவராகையால் ஆச்சரியம் இல்லாதவராய், ஆச்சரியமடைந்தவர்போல் விதுரரை நோக்கி, "ஓ விதுரரே! நித்ய முக்தராகிய பகவானுக்குத் தன்யமும், சம்சார பந்தமும் உண்டென்று சொல்வது யுக்திக்கு விரோதம். அதுவே பகவானுடைய மாயையாகும். எப்படி சொப்பன சாட்சியாயிருக்கும் புருஷன் ...என்னுடைய தலை வெட்டப்பட்டது என்று நினைக்கிறானோ (உண்மையில் தலை வெட்டப்பட வில்லை) அப்படி நினைப்பது பொய்யல்லவா? மேலும், ஜலத்தில் பிரதி பிம்பித்த சந்திரனுக்கு

Released by Maran's Dog, Toronto , Canada

ஜலமாகிய உபாதியால் அசைவது முதலியவை ஏற்படுவதுபோல, அனாத்மாவாகிய தேஹம். முதலிய வைகளுடைய தருமமானது தேஹத்தில் அபிமானம் உள்ள ஜீவனுக்கே ஒழிய ஈசுவரனுக்கு இல்லை. அந்த அனாத்மாவின் குணமானது நிவர்த்தி தருமத்தாலும். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தயையினாலும், பக்தியோகத்தாலும், அந்தந்த ஸ்தானத்துக்குத் தக்கபடி மெள்ள மெள்ள மறைந்து போகும். தூங்கினவனுக்கு எப்படி ஸகல துக்கங்களும் நாசம் அடைகின்றனவோ, அப்படிப்போல் அந்தர்யாமியாகிய பரமாத்மாவினிடத்தில் ஜீவனுடைய இந்திரியங்கள் ஸ்திரமாக எப்பொழுது அடங்கியிருக்குமோ அப்பொழுது எல்லாத் துக்கங்களும் நிவர்த்தியாகும்; பகவானுடைய குணங்களைச் சொல்வதாலும், அவைகளைக் கேட்பதாலும் ஸகல துக்கங்களும் நிவர்த்தியாகின்றன. அவருடைய பாதாரவிந்தத்திலுள்ள துளியின் சேவை யானது மனத்தால் அடையப்படுமானால் துக்கங்கள் நிவர்த்திக்கப்படுமென்பதில் என்ன சந்தேகம்? என்று ப்ரத்யுத்தரஞ் சொன்னார்.

15–20 "ஓ ப்ரபுவே! உம்மால் சொல்லப்பட்ட தகுந்த ப்ரத்யுத்தரமாகிய கத்தியால் என்னுடைய சம்சயம் போக்கடிக்கப்பட்டது: மேலும் என்னுடைய மனமானது ஈசுவரன் ஸ்வதந்திரர் என்ற விஷயத்தை யும், ஜீவன் பரதந்திரன் என்பதையும் நன்றாகத் தெரிந்துகொண்டது. ஓ வித்வானாகிய மஹர்ஷியே! ஸ்ரீ பகவானுடைய சக்தியாகிய மாயையால் ஜீவனுக்கு ஆத்மானந்தம் முதலியவைகள் கிடைக்காமல் போகின்றன என்று உம்மால் நன்றாக நிரூபிக்கப்பட்டது. அந்த மாயை உண்மையானதல்ல. காரணமற்றது. தேஹம்

முதலிய ப்ரபஞ்சத்திற்கு காரணமாயுள்ளது, அது வெளியிலில்லை, (எந்த வஸ்து காரணமற்றதும், சூன்யமுமாயுருக்கிறதோ அதை நீர் நன்றாகச் சொன்னீர் என்பது கருத்து.) லோகத்தில் எவன் தேஹம் முதலியவைகளில் அபிமானம் வைத்து மூடனாயிருக்கிறானோ, எவன் ப்ரக்ருதிக்கு மேற்பட்ட பரமபுருஷனை அடைந்திருக்கிறானோ அவ்விருவர் களும் சுகத்தை அடைகிறார்கள். மத்தியிலிருப்பவர் கள் துக்கத்தை அடைகிறார்கள். (அக்ஞர்களுக்கும் ஞானிகளுக்கும் ஸம்சயமில்லை. அதனால் துக்கமில்லை யென்பது கருத்து.) சத்யம் போலத் தோன்றுகிறதும், அனாத்மாவுமான ப்ரபஞ்சம் உண்மையில்லை என்று நான் நிச்சயித்து, அந்த தோற்றத்தை உம்முடைய பாத ஸேவையாலே போக்கிக் கொள்வேன். பகவத் பக்தர்களான பெரியோர்களுடைய சேவையாலே, கூடஸ்தரும் மதுவைக் கொன்றவருமாகிய பகவான் உடைய பாதங்களில் விசேஷப் ப்ரேமையுண்டாகும். அதனால் சம்சார துக்கம் நீங்கும். தேவர்களுக்கும் தேவராகிய பகவானைச் ஸாதுக்கள் எப்பொழுதும் கானஞ் செய்வார்கள். அப்போர்ப்பட்ட மஹான்களுடைய ஸேவையானது விசேஷ புண்யஞ் செய்தவர்களுக்கும் கிடைக்க அரிதானாலும் எனக்குக் கிடைத்தது

21–41 ப்ரபுவாகிய பகவான் முதலில் மஹத் தத்துவம் முதலியவைகளையும், இந்திரியங்களையும், க்ரமமாக ஸ்ருஷ்டித்து அவைகளின் அம்சங்களைக் கொண்டு விராட் சரீரத்தையும் உண்டு பண்ணி அதனிடம் அனுப்பிரவேசஞ் செய்தார். அந்த விராட் புருஷனே முதலில் உண்டானவர். அவருக்கு ஆயிரம் பாதங்களும், ஆயிரம் தொடைகளும், ஆயிரம்

கைகளுமிருக்கின்றன. இவ்வுலகங்கள் யாவும் அவர் இடத்திலேயே நெருக்கமில்லாமல் வஸிக்கின்றன. பத்துவிதமான ப்ராணனும் (ஐந்து ப்ராணன்களுடன், வாக்கு முதலிய இந்திரியங்கள், ஐந்தும் சேர்ந்து பத்து என்பது கருத்து,) இந்திரியங்கள், அவைகளின் அபிமானி தேவதைகள், விஷயங்கள் ஆகிய மூவகையான ப்ராணன்களும் அந்த விராட் புருஷன் இடத்தில் வஸிக்கின்றன. அவரிடத்திலிருந்தே ப்ராஹ்மணர் முதலிய நான்கு வர்ணங்களும் உண்டா யின" என்று சொன்னீர்களல்லவா? அவரிடத்தில் பலவகையான ஸ்வரூபமுள்ள ப்ரஜைகள் தங்களுடைய பிள்ளைகளுடனும், பேரன்களுடனும், கொள் பேரன்களுடனும், மற்றும் வம்சத்திலுண்டானவர் களுடனும் வஸிக்கிறார்கள் அல்லவா? அவர்களுடைய விபூதிகளைச் சொல்லவேண்டும். மேலும் ப்ரஜாபதி களுக்கு அதிபதியாகிய அந்தப் புருஷன் எந்த எந்தப் ப்ரஜாதிபதிகளைச் ஸ்ருஷ்டித்தார்? ஸர்க்கம், அநுஸர்க்கம், மனுக்கள், மன்வந்தரத்தின் அதிபதிகள், இவர்களுடைய வம்சத்திலுண்டானவர்கள்; வம்சத்தின் சரிதம், கீழுலகங்கள், மேலுலகங்கள், பூலோகம், அவைகளுடைய நிலைமை, அளவு ஆகிய இவை களையும் சொல்ல வேண்டும். திர்யக் (பசு முதலிய வைகள்), மனிதர்கள், தேவர்கள், மலைப்பாம்புகள், பறவைகள் முதலிய கர்ப்பத்திலிருந்தும், அண்டத்தில் இருந்தும், வேர்வையிலிருந்தும், பூமியிலிருந்தும் உண்டாகும் நான்கு வகையான ப்ராணிகளுடைய ஸ்ருஷ்டியின் விவரத்தையும் சொல்லவேண்டும்.

மேலும், ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரர் ஆகிய இவர்களின் உருவத்தை எடுத்துக் கொண்டு ஸ்ருஷ்டி, பரிபாலனம்; சம்ஹாரம் ஆகிய இவைகளைச் செய்து

வரும் ஸ்ரீ பகவானுடைய கம்பீரமான சரிதத்தையும், உருவம், ஆதாரம், ஸ்வபாவம் இவைகளால் ஏற்படும் வர்ணாச்ரம விபாகங்களையும், ரிஷிகளுடைய பிறப்பு, சரிதம் ஆகிய இவைகளையும், வேதங்களின் பிரித்தலையும், யாகங்களினுடைய விஸ்தாரங்களையும், பக்தி யோகம் ஞானம், ஸாங்க்யம் ஆகிய இவைகள் உடைய மார்க்கத்தையும், பகவானால் செய்யப்பட்ட தந்திரத்தையும் பாஷாண்ட மார்க்கத்தின் பேதத்தையும்; ப்ரதிலோமஜாதிகளுடைய ஆசாரத்தையும், குணங்களாலும் கர்மங்களாலும் ஜீவர்களுக்கு ஏற்படும் எல்லா கதிகளையும், தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் இவைகளுக்கு அவிருத்தமான உபாயங்களையும், வார்த்தை (பயிர் முதலிய) தண்டநீதி, வ்ரதம் இவைகளுடைய விதியையும், ச்ராத்த விதியையும், பித்ருக்களுடைய ஸ்ருஷ்டியையும், கிருஹங்கள், அசுவினி முதலிய நக்ஷத்திரங்கள், மற்ற நக்ஷத்திரங்கள், காலசக்கரம் ஆகிய. இவைகளின் ஸ்திதியையும், தானம், தபஸ், யாகங்கள், பூர்த்த தர்மங்கள் ஆகிய இவைகளுடைய பலனையும், சக்தனாகிய புருஷனுக் கேற்பட்ட தர்மத்தையும், ஆபத் தர்மத்தையும், தர்மத்திற்குக் காரணமாகிய பகவான் எந்த மார்க்கத்தால் சந்தோஷப்படுவாரோ, எவர்களிடத்தில் தயை செய்வாரோ அவை யெல்லாவற்றையும் சொல்லவேண்டும்.

ஓ ப்ராஹ்மணோத்தம! தம்மை அனுசரித்திருக்கும் சிஷ்யர்களுக்கும், புத்திரர்களுக்கும், தீனர்களிடத்தில் ப்ரியமுள்ள ஆசார்யர்கள் அவர்களால் கேட்கப்படாத விஷயங்களையும் உபதேசிப்பார்கள். ஓ பகவன்! அந்த மகத்தத்துவம் முதலியவைகளுடைய லயமானது எவ்வளவு வகையுள்ளது? ப்ரளயகாலத்தில் இந்தப்

பரமேசுவரனுடைய சமீபத்தில் எவைகள் இருக்கின்றன? எவைகள் அவர் நித்திரை செய்யும் பொழுது தூங்குகின்றன? மேலும் ஜீவனுடைய உண்மையையும், பரமேசுவரனுடைய ஸ்வரூபத்தையும், உபநிஷத்துக்களால் உண்டாகும் ஞானத்தையும், எந்த அம்சத்தால் ஜீவனுக்கும் பரமாத்மாவிற்கும் ஐக்கியம் ஏற்படுகிறது என்பதையும் சொல்லவேண்டும். ஓ தோஷமற்றவரே! வித்வான்களால் எவைகள் ஞானத்திற்குச் சாதனங்களென்று சொல்லப்படுகின்றனவோ, அவைகளையும் உபதேசிக்கவேண்டும்.

ஞானம், பக்தி, வைராக்யம் ஆகிய இவைகள் குருவின் உபதேசமில்லாமல் எப்படி சித்திக்கும்? ஆதலால் மாயையால் மறைக்கப்பட்ட திவ்யசக்ஷுஸ்ஸுள்ளவனும், அதனால் அந்தகனும் (கண்ணில்லாதவன்), ஸ்ரீ பகவானுடைய கர்மங்களைத் தெரிந்துகொள்ள விரும்பிக் கேட்பவனுமாகிய எனக்கு மித்திரரான நீர் அவைகளைச் சொல்லும். ஓ பாபமற்றவரே, ஜீவனுக்கு அடியதானம் செய்வதால் கிடைக்கும் பலனுடைய பதினாறிலொரு பாகம் ஸகல வேதங்களாலும், யக்ஞங்களாலும், தபசுகளாலும், தானங்களாலும் கிடைக்காது. ஆதலால் என்னை அனுக்கிரகிக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்தார்.

42. ஓ மஹாராஜ! இப்படிக் குருக்களில் சிறந்தவராகிய விதுரர் முனிவர்களுள் சிறந்தவராகிய மைத்ரேயரை நோக்கி, முன்கற்பத்தைப் பற்றிக் கேட்க, பகவானுடைய கதையைச் சொல்வதில் தூண்டப்பட்டபடியால் மிக்க சந்தோஷத்துடன் சிரித்துக் கொண்டு மைத்ரேயர் ப்ரத்யுத்தரஞ் சொல்ல ஆரம்பித்தார்.

அத்தியாயம்–8

ப்ரஹ்மதேவருடைய உற்பத்தி

1–9. "விதுரரே! பகவானையே முக்கிய தெய்வமாய்க் கொண்ட நீர் எந்த வம்சத்தில் பிறந்தீரோ ஜனங்களைக் காப்பாற்றும் அந்த பூருவம்சமானது சாதுக்களால் ஸேவிக்கத் தக்கது. பகவானுடைய சரித்திர பரம்பரையை நீர் அடிக்கடி புதிதாகப் பண்ணுகிறீர். அற்ப ஸுகத்திற்காக்ப் பெரிதாகிய துக்கத்தை அடைந்தவர்களான மனிதர்களுக்கு அந்த சம்சார துக்கம் நீங்குவதற்காகப் பாகவத புராணத்தை ஆரம்பிக்கிறேன். பகவான் அதனைத் தாம் நேராக ரிஷிகளுக்கு உபதேசித்தார்.

அதெப்படியெனில்: முன்னொரு சமயத்தில் சனத் குமாரர் முதலிய மகர்ஷிகள் பாதாளத்திலிருக்கும் தடையற்ற ஞானமுள்ள சங்கர்ஷண பகவானை நோக்கி அவருக்கு மேற்பட்ட ஸ்வரூபத்தை அறிய விரும்பினவர்களாகப் ப்ரச்னம் செய்யவாரம்பித்தார் கள். அந்தப் பகவான் வாஸுதேவனென்ற பெயருள்ள தமக்கு ஆச்ரயமாகிய ஜ்யோதிஸ்ஸைத் தியானஞ் செய்து கொண்டிருப்பவர். அந்தர் முகமாகச் செய்யப் பட்ட தாமரை மலர்போன்ற நேத்திரத்தை ஸனத்குமாரர் முதலியவர்களுடைய க்ஷேமத்திற்காக பகிர்முகமாகச் செய்து அவர்களைப் பார்த்தார். மேலும் பாதாளத்தில் வஸிக்கும் நாக கன்னிகைகள் விசேஷப்ரேமையுடனும், பலவகையான காணிக்கைகள் உடன் தங்களுக்கு நல்ல புருஷன் கிடைக்கவேண்டும் என்ற எண்ணமுள்ளவர்களாய்ச் சங்கர்ஷண பகவான்

கால் வைத்துக்கொண்டிருக்கும் எந்தத் தாமரை புஷ்பத்தைப் பூஜிக்கிறார்களோ, அதனை மேற்சொல்லிய மகர்ஷிகள் ஆகாச கங்கையின் ஜலத்தால் நனைந்த தமது ஜடையின் சமூகங்களால் தொட்டுக்கொண்டும் (நமஸ்கரித்து என்று அர்த்தம்) அநேக கிரீடங்களில் இழைத்திருக்கும் உயர்ந்த இரத்தினங்களுடைய காந்திகளால் ப்ரகாசிக்கும் ஆயிரம் பணங்களுள்ள அந்த சங்கர்ஷண பகவானுடைய சரிதங்களைச் சொல்லிக்கொண்டும். அதிகப்ரேமையால் தடங்கின வாக்குள்ளவர்களாகக் கேட்டார்கள்.

அப்பொழுது அந்த சங்கர்ஷணர் நிவர்த்தி தர்மத்தில் ஆசையுள்ள ஸனத்குமாரருக்கு உபதேசித்தார். அந்த ஸனத் குமாரர் விரதங்களை அனுஷ்டித்தவரான சாங்கியாயனருக்குச் சொன்னார். பரமஹம்சர்களுடைய தர்மத்தில் முக்கியராகிய அந்த சாங்கியாயனர், பகவானுடைய விபூதிகளைச் சொல்ல விரும்பின வராய்த் தம்மிடத்தில் வணக்கத்துடன் வந்த எனது குருவாகிய பராசரருக்கும் ப்ரஹஸ்பதிக்கும் உபதேசித் தார். மிக்க தயையுள்ளவரான புலஸ்தியரால் புராணத்தைச் சொல்லும்படி அனுக்கிரஹிக்கப் பெற்ற அந்தப் பராசர மகர்ஷி எனக்கு உபதேசித்தார். ஓ விதுரரே! ச்ரத்தையுடன் கேட்க விரும்பிய உமக்கு நான் அதைச் சொல்லுகிறேன்.

18–20. இந்த ஜகத்தானது எந்தக் காலத்தில் சமுத்திர ஜலத்தால் மூடப்பட்டிருந்ததோ, அப்பொழுது மறைக்கப்படாத சித்சக்தியுள்ளவரும், ஆதிசேஷனாகிய படுக்கையில படுத்தவரும், தம்முடைய ஸ்வரூபானந்த திலேயே ரமிப்பவரும், கர்மங்களற்றவரும், தாம்

ஒருவராக இருப்பவருமான பகவான் கண்களை மூடிக் கொண்டு யோகநித்திரை செய்தார். (மாயா விலாசத் துடன் விளையாடிவிட்டு) மேலும் அவர் தம்முடைய சரீரத்திற்குள் பூத சூட்சுமங்களை அடக்கிக்கொண்டு காலரூபமாகிய சக்தியைத் தூண்டுகிறவராகக் கட்டையில் மறைந்திருக்கும் அக்கினிபோல் தமக்கு இருப்பிடமாகிய ஜலத்தில் வஸித்தார்.

இப்படி ஆயிரம் சதுர்யுகங்கள் ஜலத்தில் யோகநித்திரை செய்து, முன்னமேயே தம்மை எழுப்பு வதற்காக ஏற்படுத்தப்பட்ட காலசக்தியால் கிரியைகளை அடைந்து, தம்முடைய தேஹத்தில் லோகங்கள் லயித்திருப்பதைக் கண்டார். அப்பொழுது பூதசூட் சுமங்களைப் ப்ரவர்த்திக்கச் செய்யும் ஞானமுள்ள வராகிய அந்தப் பகவானுடைய நாபியிலிருந்து அவர் உடைய சரீரத்திற்குள்ளிருந்தும், மிகவும் சூட்சமமும் ஆகிய பூத சூட்சமமானது கால வசத்தால் வ்ருத்தியடைந்த ரஜோ குணத்தின் சம்பந்தத்தால் உண்டாகப் போகிறதாகி வெளிப்பட்டது. (பூத சூட்சுமங்கள் ரஜோகுண சம்பந்தத்தால் தாமரஸ புஷ்பமாக ஆயிற்று என்பது கருத்து.) கர்மங்களைத் தெரிவிக்கும் காலத்தால் ஸ்ரீபகவானிடமிருந்து உண்டான அந்தப் பத்மகோசமானது சூரியன் போலத் தன்னுடைய காந்தியால் விஸ்தாரமாகிய ஜலத்தைப்ரகாசிக்கச் செய்துகொண்டு வெளிப்பட்டது. ஜீவனுடைய போகத்திற்கு உடயோகமானவைகளை வெளிப்படுத்தும் ஸகல ஜகத் ரூபமுமான அந்தப் பத்மத்தில் (தாமரஸ புஷ்பத்தில்) அந்த விஷ்ணுவே அந்தர்யாமியாகிப் ப்ரவேசித்தார். அந்தத் தாமரஸ புஷ்பத்திலிருந்து வேத ஸ்வரூபியாகிய ப்ரஹ்மதேவர்

உண்டானார். அவரையே ஜனங்கள் சுவயம்பூ என்று சொல்லுகிறார்கள். (முன் கற்பத்தின் முடிவில் ஸ்ரீமந் நாரயணருடன் யோகநித்திரையில் ப்ரஹ்மதேவர் கலந்திருந்தார்;

(பிறகு நாராயணன் விழித்துக் கொண்டபோது அவரிடமிருந்தே பாத்ம கற்பத்தில் பத்மத்தின் வழியாக அந்த ப்ரஹ்மதேவர் வெளியானார் என்பது கருத்து) அவர் அந்தத் தாமரஸ புஷ்பத்தின் நடுவில் இருந்து நான்கு புறத்திலும் பார்த்துக் கொண்டிருக்க, ஒவ்வொரு திக்குகளிலும் ஒவ்வொரு முகமாக அவருக்கு நான்கு முகங்கள் உண்டாயின. ப்ரளய காலத்திய காற்றினால் அசைந்த பெரிதாகிய அலைகளுள்ள ஜலத்திலிருந்து உண்டான தாமரஸ புஷ்பத்தில் இருப்பவராகிய அந்த ஆதிதேவர் அந்தப் புஷ்பத்தையும், லோகங்களின் தத்துவத்தையும், தம்மையும் நன்றாகத் தெரிந்து கொள்ளவில்லை. அப்பொழுது அவர், 'தாமரஸ புஷ்பத்தில் இருக்கும் நான் யார்? இந்த ஒரு புஷ்பம் மாத்திரம் எங்கிருந்து ஜலத்தில் உண்டாயிற்று? இதற்கு ஆதாரம் கீழாக ஏதாவது இருக்கவேண்டும்" என்று யோசித்து, அந்தப் புஷ்பத்தின் தண்டிலுள்ள துவாரத்தின் வழியாக ஜலத்திற்குட் சென்றார் அவ்விடத்தில் அந்தத்தாமரைத் தண்டின் மூலத்தைத் தேடிப்பார்த்தும் அவருக்கு அது தெரியவில்லை. ஓ விதுரரே! தம்முடைய உற்பத்திக்குக் காரணமாயிருப்பதைத் தேடிச் செல்லும் அவர் ஜலத்திற்குள் இருக்கும் இருட்டிற்கு அப்புறம், மூன்று முனைகளுள்ளதும் (நடந்தது, நடக்கிறது, நடக்கப் போவது ஆகிய மூன்று முனைகள்) ப்ராணிகளுடைய ஆயுளைச்

செலவழித்து அவர்களுக்குப் பயத்தை உண்டுபண்ணு கிறதும், பெரியதும், ஸ்ரீ மகாவிஷ்ணுவின் சுதர்சனம் என்ற அஸ்திரமுமான கால சக்கரத்தைக் கண்டார். (வெகு நாளாகத் தேடினார் என்பது கருத்து.)

21–31. பிறகு அவர் தம்முடைய எண்ணம் நிறைவேறாமல் மறுபடியும் தமக்கிருப்பிடமாகிய புஷ்பத்தை அடைந்து, ஸ்வாசங்களை அடக்கி, மனத்தை ஒருவகைப்படுத்தித் தியானஞ் செய்து கொண்டிருந்தார். இப்படி நூறு வருஷங்கள் சென்றன. யோகத்தால் ஞானம் விசேஷமாக வ்ருத்தி யடைந்தது. முந்தித் தேடியும் எவர் காணப்படவில்லையோ, அவர் அவருடைய இருதயத்தில் தாமாகவே ப்ரகாசித்தார். அந்தப் புருஷன் தாமரைத் தண்டுபோல வெண்மை நிறமுள்ளதும். ஆதிசேஷனுடைய நீண்ட உடலாகிய மஞ்சத்தில் சயனித்துக் கொண்டிருந்தார். அந்த ஆதி சேஷன் தம்முடைய அனேக படங்களிலிருந்தும் உத்தம இரத்தினங்களுடைய காந்தியால் ப்ரளய காலத்திய இருட்டை விலக்கி ஜலத்தில் வஸித்து வந்தார்.

மேலும் அந்தப் புருஷன் மரகதமலையின் காந்தியைக் காட்டிலும் அழகுள்ளவராக இருந்தார். சந்த்யா காலத்தில் சிவந்த மேகங்கள் அந்த மலையின் மத்தியிலிருப்பது போல, பீதாம்பரத்தைத் தரித்து கொண்டிருந்தார். அந்த மலையின் ஸ்வர்ண சிகரம் போல அவருடைய கிரீடம் ப்ரகாசித்தது. அந்த மலையிலிருக்கும் மேகங்கள், ஓஷதிகள், புஷ்பங்கள் ஆகிய இவைகள் போல அவருடைய வனமாலை விளங்கிற்று. அதிலிருக்கும் மூங்கில்கள் போல அவருடைய கைகள் ப்ரகாசித்தன. அதிலிருக்கும்

மரங்கள் போல அவருடைய பாதங்கள் விளங்கின. அவர் தமக்குத் தகுதியான பருமன், உயரம் ஆகிய இவைகளுடன் கூடியதும், மூவுலகத்தையும் தனக்குள் அடக்கிக் கொண்டதுமான திவ்ய சரீரமுள்ளவர், பலவகையான திவ்யமான ஆபரணங்களாலும் வஸ்திரங்களாலும் அலங்கரிக்கப்பட்டவர்: மேலும் தங்கள் தங்கள் இஷ்டத்தை அடைவதற்கு வேதத்தில் சொல்லியபடி பூஜிப்பவர்களுக்கு அவர்களுடைய காமத்தைக் கொடுக்கக்கூடிய தம்முடைய பாதமாகிய தாமரை புஷ்பத்தை ப்ரகாசப் படுத்துகிறவர்.

அந்தப் பாதங்களிலிருக்கும் நகங்கள் சந்திரன் போலப் ப்ரகாசிக்கின்றன. அவைகளின் காந்தியானது புஷ்பத்தின் இதழ்போன்ற விரல்களில் பரவுகிறது, அவருடைய முகமானது ஜனங்களுடைய துக்கத்தை நீக்கும் சிரிப்புள்ளது. மிகுந்த காந்தியுள்ள குண்டலங் களால் அழகானது. சிவந்த உதடுகளுள்ளது, அழகான மூக்குள்ளது. மனோகரமாகிய புருவங்களுள்ளது. அப்போர்ப்பட்ட முகத்தால் தம்மைப் பூஜிப்பவர்களைக் கௌரவப்படுத்துகிறவர். கதம்ப புஷ்பத்தின் தாதுக்கள் போல பொன்னிறமுள்ள வஸ்திரத்தாலும், மேகலையா லும் ப்ரகாசிக்கும் இடுப்புள்ளவர். விலை உயர்ந்ததும், ஸ்ரீ வத்ஸத்துடன் கூடிய மார்புக்குத் தகுதியானது மான ஹாரத்தால் ப்ரகாசிப்பவர். மேலும் அவர் சந்தன மரம் போன்றவர். உத்தமமான தோள்வளை களில் இழைக்கப்பட்ட இரத்தினங்களால் ப்ரகாசிக்கும் அவருடைய கைகள் கிளைகள் போலிருந்தன. அந்த மரத்தின் வேர்கள் போல் அவருடைய மூலம் ஒருவராலும் காண முடியாதது. மரமானது சிறந்த ஸர்ப்பங்களின் உடல்களால் சுற்றப்பட்டிருப்பது போல அவர் ஆதிசேஷனால் சுற்றப்பட்டவர்.

பின்னும் அவர் பர்வதம் போல் ப்ரகாசித்தார். தாவர ஜங்கமங்களுக்கு இருப்பிடமாக இருப்பவர். பர்வதம் சிறந்த ஸர்ப்பத்தால் ஆசிரயிக்கப்படுவது போல் ஆதிசேஷனால் ஆச்ரயிக்கப்பட்டவர். பர்வதம் சமுத்திர ஜலத்தில் மறைந்திருப்பது போல ப்ரளய ஜலத்தில் மறைந்தவர், மைனாகம் முதலியவை சுவர்ண சிகரமுள்ளவையாக இருப்பது போல் ஸ்வர்ண கிரீடமுள்ளவர். பர்வதத்தில் இரத்தனங்கள் இருப்பது போலக் கௌஸ்துப ரத்னத்தைத் தரித்தவர், வேதங்களாகிய வண்டுகளால் ப்ரகாசிப்பதும், தம்முடைய கீர்த்தி ரூபமாயுள்ளதுமான வனமாலை யுள்ளவர். சூர்யன், சந்திரன், வாயு, அக்கினி ஆகிய இவர்களாலும் அடையமுடியாதவர், முக்காலத்திலும் ப்ரகாசிப்பவைகளும், நான்கு புறத்திலும் சஞ்சரிப்பவை களும் யுத்தத்திற்குச் சாதனங்களுமான ஸுதர்சனம் முதலியவைகளாலும் அடைய முடியாதவர், இம் மாதிரியான புருஷனை பார்த்து ஹரியென்று தெரிந்து கொண்டார்.)

32–33. இப்போர்ப்பட்ட பகவத் ஸ்வரூபத்தைப் பார்த்தபொழுதே ப்ரஹ்மதேவர் அந்தப் பகவானுடைய நாபியில் தோன்றிய தாமரைப் புஷ்பத்தையும், தம்மையும், ஜலத்தையும், வாயுவையும், ஆகாசத்தையும் கண்டார், இந்த ஐந்தை காட்டிலும் வேறொன்றும் அவருக்குப் புலப்படவில்லை. அவர் ரஜோகுணத்தின் சம்பந்தத்தை அடைந்து, ஜனங்களைச் ஸ்ருஷ்டிக்க விரும்பியவராக, மேற்காட்டிய ஐந்தைக் கொண்டே ஸ்ருஷ்டிகரணங்களைப் பார்த்து, பலவகையான ஜகத்ஸ்ருஷ்டியைப்பற்றி யோசித்து, ஸ்தோத்திரஞ் செய்யத் தகுந்தவரான ஸ்ரீமந் நாராயணனைப் பின்வருமாறு ஸ்தோத்திரஞ் செய்ய ஆரம்பித்தார்.

அத்தியாயம்–9

ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ப்ரஹ்மதேவர் ஸ்தோத்திரஞ் செய்தது

1–26 ஓ பகவன்! வெகுநாளாக உபாசித்ததனால் நான் உம்மை நன்றாகத் தெரிந்து கொண்டேன். உம்முடைய ஸ்வரூபத்தை ஜனங்கள் தெரிந்து கொள்ளாமலிருப்பதே குற்றமாகும். உம்மைத் தவிர வேறு ஒரு வஸ்துவுமில்லை. ஆதலால் அறியக் கூடியவர் நீர் ஒருவரே. உம்மைக் காட்டிலும் வேறு வஸ்து இருப்பதாகத் தோன்றினாலும், அது சுத்த சத்வகுணமுள்ளதன்று. மேலும் மாயையின் குண சம்பந்தத்தால் நீரே பல வகையாகத் தோன்றுகிறீர். ஓ பகவன்! சித்சக்தியின் ஆவிர்ப்பவத்தால் தமோ குணங்கள் நீங்கிய நீர் பக்தர்களை அனுக்கிரகிப் பதற்காக இந்த உருவத்தை அங்கீகரித்திருக்கிறீர். இந்த உருவமானது அனேக அவதாரங்களுக்குக் காரணமாய் உள்ளது. இந்த உருவத்தின் நாபியிற்றோன்றிய தாமரை புஷ்பத்திலிருந்து நான் உண்டானேன். ஓ! பரமாத்மன்! தடையற்ற ப்ரகாசமுள்ளதும், பேதமற்றதும் ஆனந்தத்தைக் காட்டிலும் வேறானதும், பூதங்களுக்கும் இந்திரியங்களுக்கும் காரணமாயிருப் பதுமான பகவத் ரூபமானது இந்த உம்முடைய உருவத்தைக் காட்டிலும் வேறானதென்று நான் நினைக்கவில்லை. அதனால்தான் இந்த ஸ்வரூபத்தை ஆச்ரயித்திருக்கிறேன்.

ஓ, உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்பவரே, உபாஸகர்களான நமக்கு க்ஷேமத்தைச் செய்வதற்காக, நீர், தியானம் பண்ணும்போது அந்த இந்த உருவத்தைக்

காண்பீத்தீர். அப்பேர்ப்பட்ட பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறோம். ஈசுவரன் இல்லை என்று சொல்பவர்களும், நரகத்தை அனுபவிக்கக் கூடியவர் களுமான புருஷர்களால் நீர், ஆதரிக்கப்படுகிறதில்லை. எவர்கள் உங்களுடைய பாதங்களாகிய தாமரை புஷ்பத்தின் வாசனையைக் க்ரஹிக்கிறார்களோ, எவர்கள் உம்முடைய கதைகளைக் கேட்கிறார்களோ, எவர்கள் மிகுந்த பக்தியால் உம்முடைய சரணத்தை ஆச்ரயிக்கிறார்களோ அவர்களுடைய இருதய புண்டரீகத்திலிருந்து நீர் ஒரு பொழுதும் விலகுகிறது இல்லை. (எப்பொழுதும் அவ்விடத்திலேயே வஸிக்கிறீர் என்பது தாத்பரியம்) ஜனங்கள் மோக்ஷத்தைக் கொடுக்கும் உம்முடைய பாதத்தை எதுவரையில் ஆச்ரயிக்கவில்லையோ அதுவரையில் பணம், வீடு, மித்திரர்கள் ஆகிய இவர்களுக்காக பயம், துக்கம், ஆசை, அவமானம், அதிக ஆசை ஆகிய இவைகளும், உபத்திரவத்திற்குக் காரணமாகிய "என்னுடையது" என்ற கெட்ட அபிமானமும் உண்டாகின்றன. எவர்கள் ஸகல அசுபங்களையும் போக்கடிக்கக் கூடிய உம்முடைய கதைகளைக் கேட்பது, நாமங்களை உச்சரிப்பது, முதலியவைகளில் ஆசையில்லாதவர் களாகவும், புத்தி கெட்டவர்களுமாக இருக்கிறார்களோ, அவர்கள் மிகவும் அதமர்கள். மேலும், அவர்கள் லோபத்தால் கெடுக்கப்பட்ட மனது உள்ளவர்களும் தீனர்களுமாகிப் போகத்தினுடைய சொற்ப ஸுகத்திற்காகத் துக்கத்தைக் கொடுக்கக் கூடிய கர்மங்களை அடிக்கடி செய்கிறார்கள். ஓ, பகவான்! பசி, தாகம், வாதம், பித்தம் ஸஹிக்க முடியாத சிலேஷ்மம், சீதம், உஷ்ணம் காற்று சகிக்க முடியாத மழை, மன்மதனாகிய அக்கினி மிகுந்த கோபம்

ஆகிய இவைகளால் ஒருவருக்கொருவர் துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த ஜனங்களைப் பார்த்து என்னுடைய மனம் துக்கிக்கிறது. ஓ ஈச! இந்திரியங்கள் விஷயங்கள் ஆகிய இவைகளாகிய மாயையின் பலமுள்ளதும், ஆத்மாவைக் காட்டிலும் வேறானது மாகிய தேஹம் முதலியவைகளுடைய உண்மையை ஜனங்கள் எப்பொழுது தெரிந்து கொள்ளுகிறார்களோ, அது வரையில் கர்மங்களுடைய பலனுள்ளதும், ப்ரயோசன மற்றதுமான சம்சாரமானது ஒழிவடைகிறது இல்லை. மேலும், ஜனங்களும் அதுவரையில் துக்கக் கூட்டத்தை அடைகிறார்கள்.

ஓ தேவ்! பகலில் பல விஷயங்களில் சென்று கஷ்டப்படும் இந்திரியங்களுள்ளவர்களும், ராத்திரியில் தூங்குகிறவர்களும், பலவகையான மனோரதத்தால் சொப்பனம் நேர்ந்த போது உடனே விழித்துக் கொள்வதால் சொப்பன சுகத்தையும் இழந்தவர்களும், இப்படி எல்லாக் காரியங்களிலும் தெய்வத்தால் தடுக்கப்பட்ட முயற்சியுள்ளவர்களுமான புருஷர்கள் ரிஷிகளானாலும் (விவேகிகளானாலும்) உம்முடைய கதையைக் கேட்பதிலும், நாமங்களை உச்சரிப்பதிலும் ஆசையில்லாதவர்களாக இருப்பார்களேயானால் அவர்கள் சம்சாரத்தை அடைகிறார்கள். ஓ நாத! குரு முகமாகத் தங்களுடைய மார்க்கத்தைச் ச்ரவணம் பண்ணின புருஷர்கள் உம்மிடத்தில் பக்தி செய்வார்கள்.

பக்தியோகத்தால் சுத்தமான அவர்களுடைய ஹ்ருதய கமலத்தில் நீர் வஸிக்கிறீர், ஓ பெரியோர் களால் கானம் பண்ணக்கூடியவரே! உம்முடைய

பக்தர்கள் தங்களுடைய மனத்தால் உம்முடைய உருவத்தைத் தங்களுடைய இஷ்டப்படி (குருமுகமாகத் தெரிந்து கொள்ளலாம்) தியானம் பண்ணுகிறார்கள். அவர்களை அனுக்கிரகிப்பதற்காக நீர் உண்மையான ஸ்வரூபத்தை அவர்களுக்குக் காண்பிக்கிறீர். அத்விதீயரும் பல விதமான ஜனங்களிடத்தில் அந்தர்யாமியாய் அவர்களுக்கு அனுகூலத்தைச் செய் பவருமான நீர் பக்தி செய்யாதவர்களுக்கு அரியதாகிய பூத தயையால் எப்படி சந்தோஷப்படுத்துகிறீரோ, அதுபோல மிகுந்த உபசாரங்களால் பூஜிப்பவர்கள் இடத்திலும், காமனையால் பூஜிக்கும் தேவர்களிடத்தி லும் சந்தோஷப்படுகிறதில்லை. ஆனதால் புருஷர் களால் செய்யப்படும் யாகம் முதலிய அநேக ஸத்கர்மங்களுக்கும், தானத்திற்கும், கடுந்தபஸுக்கும், விரதானுஷ்டானத்திற்கும், பகவானுடைய ப்ரியமே ச்ரேஷ்டமாகிய பலன். பகவானாகிய உம்மிடத்தில் சமர்ப்பிக்கப்படும் தருமமானது நாசமடைகிறதில்லை.

எப்பொழுதும் ஸ்வரூப சைதன்யத்தாலேயே பேத ஞானத்தைப் போக்குகிறவரும், வித்யாசக்தியுள்ள வருமான பரம புருஷனாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். மேலும் ஜகத்தைப் படைப்பது, பரிபாலிப்பது, சம்ஹரிப்பது ஆகிய இவைகளுக்குக் காரணமாகிய மாயையின் விலாசத்துடன் விளையாடு கிறவரும், எல்லாவற்றிற்கும் நியந்தாவுமான உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். எந்தப் பகவானுடைய அவதாரங்கள், குணங்கள், செய்கைகள் ஆகிய இவைகளால் ஏற்படும் திவ்ய நாமங்களை (தேவகீ, நந்தன, தாசரதி, சர்வஞ்ஞ, பக்த வத்ஸல, கம்சாரே, கோவர்த்தனாத்தரண என்பது முதலியவைகள்)

சாகுந்தருணத்தில் எவர்கள் (பகவந்நாமத்தை) உச்சரிக்கிறார்களோ, அவர்களுடைய பல ஜன்மங்களில் சம்பாதிக்கப்பட்ட பாபங்கள் யாவும் அந்த க்ஷணத்திலிலேயே நீங்குகின்றன. மேலும் அவர்கள் ஆவரணமற்றதும் உற்பத்தியற்றதும், சத்யமுமான ப்ரஹ்ம ஸ்வரூபத்தை அடைகிறார்கள். அந்தப் பகவானைச் சரணமடைகிறேன்.

எவர் தம்மையே அதிஷ்டானமாயுடைய ப்ரதானத்தை முக்குண ரூபமாகப் பிரித்து ஜகத்தின் உற்பத்தி, பரிபாலனம், சம்ஹாரம் ஆகிய இவைகளுக்கு முறையே காரணர்களாக இருக்கும் நான்,(ப்ரம்ஹா) பரமசிவன், விஷ்ணு ஆகிய மூன்று பாதங்களுள்ளதும் (வேர்களுள்ளது) மரீசி முதலிய ப்ராஜாபதிகளாகிய அநேக கிளைகளுள்ளதும், ஒன்றாயிருப்பதுமுமான லோக விருக்ஷமாக இருக்கிறாரோ, அந்த உம்மை நமஸ்கரிக் கிறேன். இவ்வுலகத்திலிருக்கும் ஜனங்கள் கெட்ட காரியத்திலேயே ப்ரவர்த்திக்கிறார்கள். மேலும், உம்மால் சொல்லப்பட்டதும் க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியதுமான உம்மைப் பூஜிப்பதாகிய காரியங்களைச் செய்கிறதில்லை. அப்பேர்ப்பட்ட ஜனங்களுடைய ஜீவித ஆசையை (பிழைத்திருக்க வேண்டுமென்ற எண்ணத்தை) எவர் கால ஸ்வரூபியாயிருந்து போக்குகிறாரோ அவருக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். மேலும், இரண்டுபராார்த்தம்வரையில் (ப்ரஹ்மதேவருடைய ஆயுளின் பாதியாகிய ஐம்பது வருஷங்களுக்குப் பராார்த்தமென்ற பெயர்,) அழியாமலிருப்பதும், ஸகல லோகங்களால் நமஸ்கரிக்கப்பட்டதுமான இந்தப் பதத்தை அடைந்த நானும் கால ஸ்வரூபியாகிய உம்மைக் கண்டு பயப்படுகிறேன்.

உம்மைத் தெரிந்து கொள்வதற்காக அநேக வருஷங்கள் தவஞ் செய்தேன். ஆதலால் யாகம் முதலிய சத்கர்மங்களுக்கு அதிபதியாகிய உம்மை நமஸ்கரிக்கிறேன். நீர் விஷய சுகத்தில் ஆசையில்லாத வரானாலும், திர்யக், மனுஷ்யர்கள், தேவர்கள் முதலிய வர்களின் சரீரத்தை உமது இஷ்டப்படி அங்கீகரித்து உம்மால் செய்யப்பட்ட தருமத்தின் மரியாதையைக் காப்பாற்றிக் கொண்டு இருக்கிறீர். அப்பேர்ப்பட்ட புருஷோத்தமராகிய உம்மை நமஸ்கரிக்கிறேன். எவர் ஐந்து பர்வங்களுள்ள அவித்தைக்கு வசப்படாத வரானாலும், ஸகல லோகங்களையும் வயிற்றில் வைத்துக் காப்பாற்றிக் கொண்டு, பயங்கரமான அலைகளுள்ள சமுத்திர ஜலத்திற்குள் ஆதிசேஷனாகிய மெதுவான படுக்கையில் படுத்து, ஜனங்களுக்கு நித்திரா சுகம் இப்பேர்ப்பட்டது என்பதைக் காண்பிக்கிறாரோ, எவருடைய நாபியில் தோன்றிய தாமரஸ புஷ்பத்திலிருந்து மூவுலகத்தையும் ஸ்ருஷ்டிக்கும் நான் எவருடைய அனுக்ரஹத்தால் உண்டானேனோ, எவருடைய வயிற்றில் ஸகல உலகங்களும் வஸிக்கின்றனவோ, எவர் யோக நித்திரையின் முடிவில் தாமரைமலர் போன்ற கண்களைத் திறக்கின்றாரோ, அந்தப் பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன்.

அப்பேர்ப்பட்ட இந்தப் பகவான் ஸகல உலகத் திற்கும் அனுகூலத்தைச் செய்பவர். அந்தர்யாமியா யிருப்பவர். நமஸ்கரித்தவர்களிடத்தில் ப்ரியமுள்ளவர். அந்தப் ப்ரமபுருஷன் எந்த ஞானத்தாலும், ஐசுவரியத் தாலும் இந்த ஜகத்தைச் சுகப்படுத்துகிறாரோ, அப்பேர்ப்பட்ட ஞானத்தை எனக்குக் கொடுக்கட்டும்.

அதனால் நான் இந்த ஜகத்தை முன் கல்பத்திலிருந்ததுபோல் ஸ்ருஷ்டிப்பேன். குணாவதார முள்ளவரும், முகமலர்ச்சியுள்ளவருமான இந்தப் பகவான் தம்முடைய சக்தியாகிய லக்ஷ்மீதேவியுடன் எந்த எந்த சரிதங்களைச் செய்யப்போகிறாரோ, அவைகளெல்லாம் எனக்குத் தோன்றட்டும். அந்தப் பகவானுடைய ஆக்ஞையால் ஜகத்தை (பகவானையே ப்ரபாவமாயுடையது) நான் ஸ்ருஷ்டிக்கும் பொழுதும் என்னுடைய மனமானது அந்தப் பகவானிடத்திலேயே ரமிக்கட்டும். ஸ்ருஷ்யின் வைஷம்யத்தால் ஏற்படும் பாபத்தைப் போக்கடித்துக் கொள்வேன்.

அளவற்ற சக்தியுள்ள அந்தப் பரம புருஷன் ப்ரளய ஜலத்தில் வஸிக்கும்பொழுது அவருடைய கொப்பூழிலிருந்து விஞ்ஞான சக்தியாகிய நான் உண்டானேன். அப்பேர்ப்பட்ட நான் விசித்திரமான இந்தப் ப்ரபஞ்சத்தை விஸ்தாரப்படுத்தும்பொழுது வேதத்தினுடைய அவயமாகிய என்னுடைய வாக்கின் உச்சாரணங்கள் கெட்டுப் போகாமலிருக்கட்டும். மேலும், மிகுந்த கருணையுள்ளவராகிய அந்தப் புராண புருஷன், விசேஷ விசுவாசமுள்ள சிரிப்புடன் மலர்ந்த கண்களுள்ளவராகிய என்னிடம் வந்து ஜகத்தை உண்டுபண்ணுவதற்காகத் தேன்போல இனிமையான வார்த்தையால் என்னுடைய மனக்கவலையைத் தீர்க்க வேண்டும். இப்படி ப்ரஹ்மதேவர் தம்முடைய உற்பத்திக்குக் காரணமாயிருக்கும் பகவானைத் தபஸினாலும் உபாசனையாலும், சித்தத்தை யொரு வன்கட்டுத்துவதாகிய ஸமாதியாலும் தரிசித்து, மனத்திற்கும் வாக்குக்கும் எட்டியவரையில் ஸ்தோத்திரஞ் செய்து ச்ரமப்பட்டவர்போல

மௌனமாக இருந்தார்.

27–44 மதுவென்னும் அசுரனைக் கொன்றவராகிய பகவான் ப்ரளய கால ஜலத்தால் வருத்தப்பட்ட மனமுள்ளவரும் லோகத்தைப் படைக்கும் விஞ்ஞானத் திற்காக முயற்சிப்பவரும், தம்முடைய அம்சமுமான ப்ரஹ்மதேவருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டு, "ஓ வேதகர்ப்பரே! சோம்பலை அடையாதீர். ஸ்ருஷ்யில் முயற்சியும். எதற்காக என்னைப் ப்ரார்த்திக்கிறீரோ, அதனை முன்னமேயே அனுக்கிர கித்திருக்கிறேன். மறுபடியும் நீர் தவம் செய்யும். என் விஷயமாகிய உபாசனையையும் அனுஷ்டியும். அவை களால் நம்முடைய ஹ்ருதயத்தில் ஸகல லோகங்களும் தோன்றும் (இதுவரையில் மறந்திருந்தவைகள்). மேலும் பக்தியுள்ளவராகிய நீர் உம்மிடத்திலும், லோகத்திலும், எங்கும் பரவியிருக்கும் பரப்ரஹ்மமாகிய என்னையும் என்னிடத்திலுள்ள ஜீவர்களையும் பார்ப்பீர். கட்டை களில் அக்கினி யிருப்பதுபோல ஸகல பிராணிகள் இடத்திலும் நானிருப்பதாக ஜனங்கள் எப்பொழுது பார்க்கிறார்களோ, அப்பொழுது அஞ்ஞானம் விலகும். மேலும் எப்பொழுது ஜீவன், தன்னைப் பூதங்கள், இந்திரியங்கள், குணங்கள் ஆகிய இவைகளின் சம்பந்தமற்றவனாகவும், ஸ்வரூபமாகிய என்னுடன் லயித்தவனாகவும் பார்க்கிறானோ, அப்பொழுது மோட்சத்தை அடைகிறான். பலவகையான கர்மங்களைக் கொண்டு அநேக ப்ரஜைகளைச் சிருஷ்டிக்க விரும்பிய உம்முடைய மனம் இவ்விஷயத்தில் ப்ரமையை அடையாது. என்னுடைய அனுகூலம் மேலானது. ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கும்போதும் உம்முடைய மனமானது என்னிட த்திலேயே அதிக ஆசக்தியுள்ளதாக இருக்குமாகையால்

பாபியான ரஜோகுணமானது முந்திய ரிஷியான உம்மிடத்தில் சம்பந்திக்கிறதில்லை. நான் ப்ராணி களால் அறிய முடியாதவனானாலும், பூதங்கள், இந்திரியங்கள், சத்வம் முதலிய குணங்கள், அகங்காரம் ஆகிய இவைகளுடைய சம்பந்தமற்றவனென்று உம்மால் அறியப்பட்டிருக்கிறேன். தாமரைப் புஷ்பத்தின் தண்டு வழியாக அதன் காரணத்தைத் தேடி நீர் சென்றபோது, உமக்கு என் விஷயமாக சந்தேகமிருந்த படியால், (இதற்குக் காரணமொன்றிருக்க வேண்டும். அதுவோ தெரிய வில்லை. ஆனதால் இருக்கிறதா இல்லையாவென்ற சம்சயம்) என்னுடைய ஸ்வரூபத்தை வெளியில் காண்பிக்கவில்லை. ஓ ப்ரஹ்மதேவரே! ஆச்சரியமான என் கதையின் அடையாளமுள்ளதாக என்னை ஸ்தோத்திரம் செய்ததும், தபஸ்செய்ததும் ஆகிய இவைகள் என்னுடைய அனுக்கிரகத்தால் உண்டான வையேயாகும். ஸ்ருஷ்டிக்க விரும்பிய நீர் குணங்களின் ஸம்பந்தமுள்ளவன் போலத் தோன்றும் என்னை அவைகளின் ஸம்பந்தமற்றவனாகவே வருணித்துக் கொண்டு ஸ்தோத்திரம் செய்தபடியால் உம்மிடத்தில் ப்ரியமுள்ளவனாக இருக்கிறேன். இந்த ஸ்தோத்திரத் தால் எந்த மனிதன் ஒவ்வொரு நாளும் என்னைச் சந்தோஷப்படுத்துகிறானோ, அவனிடத்தில் நான் மிக்க ப்ரியத்துடன் அவனுடைய இஷ்டங்களைப் பூர்த்தி செய்வேன். மேலும் குளம், கிணறு ஆகிய இவைகளை வெட்டுவிப்பது முதலிய பூர்த்த தர்மம், தபஸ், யக்ஞம், தானம், யோகம், ஸமாதி ஆகிய இவைகளால் கிடைக்கும் க்ஷேமமாகிய பலன் என்னுடைய ப்ரீதியென்றே ஞானிகள் நினைக்கிறார் கள். நான் ஜீவர்களுக்கு ஆத்மாவாக இருப்பவன். ப்ரியமானவர்களுக்குள் மிக்க ப்ரியமானவன். அதனால்

T-V-m 8.3-2

என்னிடத்தில் ஆசைப்பட வேண்டும். ஆதலால் ஸகல வேதஸ்வரூபமாயும் என்னிடத்திலிருந்து உண்டானதுமாகிய உம்முடைய ஸ்வரூபத்தாலேயே (வேறு ஸாதனத்தை அபேட்சியாமல்) ப்ரஜைகளைச் ஸ்ருஷ்டியும். என்னிடத்திலிருப்பவர்களை வெளிப் படுத்தும், என்று தாமரை மலர் போன்ற நாபியுள்ள வரும், ப்ரதானம் (மாயை) புருஷன் (ஜீவன்) இவர்களுக்கு அதிபதியுமான ஸ்ரீமந் நாராயணன் அனுக்ரஹித்து, ஸ்ருஷ்டிக்க வேண்டியதைப் ப்ரகாசப் படுத்தி அவருடைய கவலையைத் தீர்த்து மறைந்தார்.

அத்தியாயம்–10

பத்துவகையான ஸர்க்கங்கள்

1–2. அதனைக் கேட்டு விதுரர். மைத்ரேயரை நோக்கி, 'ஓ பகவன்! உலகங்களுக்குப் பிதாமகரும் ப்ரபுவுமாகிய ப்ரஹ்மதேவர் புருஷோத்தமன் மறைந்த பிறகு தேகத்திலுண்டானவைகளும் மனத்திலிருந்து உண்டானவைகளுமான ப்ரஜைகளை எவ்வளவு வகையாய்ப்படைத்தார்? தவிரவும், என்னால் கேட்கப் பட்ட மற்ற எல்லாக் கேள்விகளுக்கும் க்ரமமாக உத்தரஞ் சொல்லி என்னுடைய சம்சயங்களை நீக்க வேண்டும். நீர் ஸகலத்தையும் அறிந்தவர்களுக்குள் சிறந்தவர்' என்று கேட்டுக்கொண்டார்.

3–9. அதனைக் கேட்டு அந்த மைத்ரேய மகர்ஷி மிகவும் ப்ரியத்துடன் அவைகளை மறவாமலேயே தமது மனத்தில் வைத்துக்கொண்டு ப்ரத்யுத்தரம் சொல்ல ஆரம்பித்தார். ப்ரஹ்மதேவர் ஸ்ரீமந் நாராயண னுடைய ஆக்ஞையின்படி. அவரிடத்திலேயே தம்முடையை மனத்தைச் செலுத்தி தேவமானத்தில் நூறு வருஷகாலம் தவம் செய்தார். அப்பொழுது ப்ரஹ்மதேவர் எதிலிருந்து தவம் செய்தாரோ அந்தத் தாமரைப் புஷ்பத்தையும் ஜலத்தையும் ப்ரளய காலக் காற்றானது அசைத்தது. அதனைக் கண்ணுற்ற ப்ரஹ்மதேவர் தம்முடைய வித்தையாலும், மிகவும் விருத்தியடைந்த தபஸினாலும் மிக்க விஞ்ஞான பலமுள்ளவராக அந்த வாயுவையும் ஜலத்தையும் பானஞ் செய்தார். பிறகு அவர் தமக்கு இருப்பிடமும், ஆகாசத்தில் வியாபரித்ததுமான தாமரைப்

புஷ்பத்தைப் பார்த்து "பூர்வ கல்பத்தில் லயமடைந்த லோகங்களை இந்தப் புஷ்பத்தைக் கொண்டு ஸ்ருஷ்டிப்பேன்" என்று யோசித்தார். பின்பு அவர் ஸ்ரீமந் நாராயணனால் ஜகத் ஸ்ருஷ்டியில் தூண்டப் பட்டு. பதினான்கு வகையாக ஆகக் கூடிய அந்தத் தாமரை புஷ்பத்தை மூன்று வகையாகப் பிரித்தார் (மூவுலகமாக வென்பது கருத்து). ப்ராணிகளுடைய போக ஸ்தானமாகிய மூவுலகத்தின் ஸ்ருஷ்டியானது இம்மாதிரி சொல்லப்பட்டது. (மூவுலகமும் காம்ய கர்மத்தின் பலமாகையால், ப்ரஹ்மதேவரின் ஒவ்வொரு பகலிலும் அவை ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன என்பது கருத்து) பலனை உத்தேசியாமல் செய்த நல்ல கர்மங்களின் பலமே ப்ரஹ்ம பதம் என்றார். (மகர்லோகம் முதலிய சத்யலோகம் வரையிலுள்ள லோகங்கள் நிஷ்காம கர்மங்களின் பலன்களாகையால் இரண்டு பரார்த்தம் வரையில் அவைகளுக்கு நாசமில்லை.)

10. அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி "ப்ரபுவாகிய ஓ ப்ராஹ்மணோத்தம! அனேக உருவமுள்ளவரும், ஆச்சரியகரமாக காரியங்களுள்ள வருமாகிய ஸ்ரீமந் நாராயணருக்குக் காலமென்ற ஸ்வரூபம் உண்டென்று சொன்னீரல்லவா? அதனை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

11–31 1/2. பிறகு மைத்ரேயர் விதுரரை நோக்கி, காலமென்பது மகத் தத்துவம் முதலியவைகளுடைய பரிணாமத்தால் ஏற்படுகிறது. அதற்கு உற்பத்தியும் இல்லை. முடிவும் இல்லை. அந்தக் காலத்தை நிமித்த காரணமாக வைத்துக் கொண்டு, பரம புருஷன் தம்மை விளையாட்டாகச் ஸ்ருஷ்டித்துக் கொண்டார்.

விஷ்ணுவின் மாயையால் ப்ரஹ்மமானது இந்தப் ப்ரபஞ்ச உருவமாக ஆகி, அவ்யக்த ஸ்வரூபமுள்ளதும் எல்லாவற்றிற்கும் மேலானதுமான காலத்தால் தனியாகப் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் ப்ரபஞ்சமானது இப்பொழுது ப்ரகாசித்துக் கொண்டிருப்பதுபோலப் பூர்வ கற்பத்திலும் இருந்தது. அடுத்த கற்பத்திலும் இம்மாதிரியாகவே இருக்கும். அதனாலுண்டாகும் ப்ராகிருதம், வைகிருதம் என்ற பேதமுள்ள சர்க்கமானது ஒன்பது வகையுள்ளது. அந்த சர்க்கத்திற்குக் காலத்தாலும், திரவியத்தாலும, குணங்களாலும் மூன்று வகையான ப்ரளயம் ஏற்படுகிறது. பரமாத்மாவினிடமிருந்து குணங்களுடைய வித்தியாசத்தால் ஏற்படும் மகத் தத்துவத்தின் ஸ்ருஷ்டி. முதலாவது, திரவியம், ஞானம் இவைகளால் ஏற்படும் அகங்காரத்தின் ஸ்ருஷ்டி. இரண்டாவது, பூத ஸ்ருஷ்டி. மூன்றாவது, அது தன்மாத்திரையுள்ளது, த்ரவிய சக்தியுள்ளது. நான்காவது இந்திரிய ஸ்ருஷ்டி. அது ஞானம், கருமம் ஆகிய் இவைகளின் ஸ்வரூபம். ஐந்தாவது மன ஸ்ருஷ்டி. அதுவே வைகாரிக தேவ ஸ்ருஷ்டி எனப்படுகிறது. ஆறாவது அவித்தையின் ஸ்ருஷ்டி. அந்த அவித்தை ஜீவர்களுக்கு ஆவரணத்தை யும், விக்ஷேபத்தையும் உண்டுபண்ணுகிறது. இந்த ஆறு வகையான சர்க்கங்களும் ப்ராக்ருதமெனப்படு கின்றன. வைகிருதமான சர்க்கங்களையும் சொல்லு கிறேன், எவரைத் தியானஞ் செய்த மாத்திரத்தில் சம்சார துக்கம் நீங்குமோ, ரஜோ குணத்தை யடைந்த அந்தப் பரம புருஷனுக்கு இது லீலையேயாம். தாவரங்களுடைய ஸ்ருஷ்டியே வைகிருத ஸ்ருஷ்டியில் முக்கியமானது. அதுவே ஏழாவது ஸ்ருஷ்டியாகும். அந்தத் தாவர ஸ்ருஷ்டியானது ஆறுவகையானது. எப்படியெனில், புஷ்பிக்காமல் காய்க்கும் அரசு,

அத்தி; பலா முதலிய மரங்கள் ஒருவகையாம். புஷ்பித்துப் பழுக்கும் யவம், நெல், பயறு முதலிய வைகள் மற்றொரு வகையாம். புஷ்பங்களையே ப்ரதானமாயுள்ள மல்லிகை முதலிய கொடிகள் மற்று ஒருவகையாம். மூங்கில் முதலியவைகள் பின்னொரு வகையாம். மற்ற கொடிகள் ஒரு வகையாம். மற்ற மரங்களும் ஒருவகையாம். இவைகள் யாவும் நடை அற்றவை. ஆகாரமற்றவை. வெளியில் ப்ரகாசிக்காத சைதன்யமுள்ளவை, உள்ளே ஸ்பரிசத்தை அறியக் கூடியவை. பலவகையான பருமன், உயரம் முதலியவை களுமுள்ளவை, எட்டாவது திர்யக் திருஷ்டி. அது பசு, ஆடு, எருமை கிருஷ்ணசாரம், பன்றி, கவயம், குரு, செம்மறியாடு, ஒட்டகம் ஆகிய இரண்டு குளம்புகளுள்ள ஒன்பது வகையான ப்ராணிகள். கழுதை, குதிரை, அச்வதரம் கௌரம், சரபம், சமர் என்ற ஒற்றைக் குளம்புள்ள ஆறு வகையான பிராணிகள். நாய், நரி, செந்நாய், புலி, பூனை, முயல் சல்யுகம், சிம்மம், குரங்கு, யானை, ஆமை, உடும்பு ஆகிய ஐந்து நகங்களுள்ள பன்னிரண்டு வகையான ப்ராணிகள் மகரம் முதலிய ஜலத்தில் சஞ்சரிக்கும் பிராணிகள், கழுகு, பருந்து, கொக்கு, சேனம், பாஸம், பல்லூகம், மயில், ஹம்ஸம், சாரசம், சக்ரவாகம், காக்கை, கோட்டான் முதலிய பறவைகள் ஆகிய இருபத்தெட்டு வகையுள்ளது. இவைகள் யாவும் ஞானமில்லாதவை மிகவும் தமோ குணமுள்ளவை. கிராணேந்திரியத்தாலேயே தங்களுக்கு இஷ்டமானவை களை அறிந்துகொள்ள கூடியவை. தீர்க்கமாகிய ஆலோசனையற்றவை. (பசுக்களுக்கு, பசி தாகத்திலேயே அறிவு என்று கருத்து) ஒன்பதாவது மனிதர்களுடைய ஸ்ருஷ்டியோ ஒருவகையானது. அதற்கு ஆகாரம், சஞ்சரிப்பது ஆகிய இவைகள் பூமியிலேயே

ஏற்படுகின்றன. அம்மனிதர்களிடத்தில் ரஜோ குணமே அதிகம். கருமங்களைச் செய்வதிலேயே அவர்கள் ஆசையுள்ளவர்கள். துக்கத்தையே சுகமாக நினைத்த வர்கள் இம்மூன்று ஸ்ருஷ்டிகளுமே வைகிருத ஸ்ருஷ்டிகளென சொல்லப்படுகின்றன. வைகாரிக மென்று சொல்லப்பட்ட தேவ ஸிருஷ்டியும், வைகிருத ஸிருஷ்டியாகும். கௌமார ஸிருஷ்டியானது, ப்ராக்ருதம் வைகிருதம் இரண்டும் சேர்ந்ததாக ஆகும். (அவர்களுக்கு தேவத்வம், மனுஷ்யத்வம் இரண்டும் உண்டென்பது கருத்து) இந்த வைகிருதமான தேவ ஸ்ருஷ்டியானது தேவர்கள், பிதிருக்கள், அசுரர்கள். கந்தர்வர்கள், அப்ஸரசுகள், யக்ஷரக்ஷஸ்ஸுக்கள், சித்தசாரண வித்யாதரர்கள், கின்னரர் முதலியவர் கள், பூதம் பிரேத பிசாசங்கள் ஆகிய எட்டு வகை யுள்ளது, இப்படி ப்ரஹ்மாவினால் செய்யப்பட்ட சர்க்கங்கள் பத்துவகை யென்றும் சொல்லப்பட்டிருக் கின்றன. இதற்குமேல் மனுக்களையும், மன் வந்த்ரங்களையும் சொல்லுகிறேன், ஸ்ரீமத் நாராயணன் ரஜோ குணமுள்ளவராகப் ப்ரஹ்மதேவ ஸ்வரூபத்தை யடைந்து தம்மைத் தாமே தம்மைக்கொண்டு படைக்கிறார். அவர் வீணாகாத சங்கற்பமுள்ளவர். ஒ விதுரரே எல்லாவற்றிற்கும் ஈசுவரனாகிய பரமாத்மா மாயாவி ஆகையால் குணங்களுடைய சம்பந்தமுள்ள இவரிடத்திலிருந்து ஒன்றன்பின் மற்றொன்று உண்டாயிற்று என்று சொல்ல வேண்டியதில்லை. நதியில் அநேகம் சுழல்கள் ஒரே காலத்தில் உண்டாகவில்லையா? மேலும் தேவர்கள் அசுரர்கள் முதலியவர்களில், இந்தக் கற்பத்தில் எவர்கள் இருக்கிறார்களோ, அவர்களே வேறு பெயருடனும், வேறு உருவத்துடனும் பிந்திய கற்பங்களிலும் இருக்கிறார்கள்.

அத்தியாயம்–11

காலத்தின் ஸ்வரூபம்

1–15 "காரியரூபமாகிய ப்ரபஞ்சத்தின் எந்த அம்சமானது கடைசியானதோ (பிரிக்க முடியாததோ) எது காரியமாயிருக்கும் தன்மையை அடையாததோ, மேலும் எது சமுதாயமாயிருக்கும் தன்மையை அடையாததோ அதே பரமாணுவென்று தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு அவயவங்கள் உண்டென்று மனிதர்கள் ப்ரமிக்கிறார்கள். (இது காலத்தின் சூட்சும ரூபம்) காரியம் மாத்திரமாயும், மாறுதலை அடையாத தாயுமுள்ள அந்த வஸ்துவின் சேர்க்கையே மிகவும் பெரியது. அது பேதமற்றது. விசேஷமற்றது. ஓ சாதுக்களுக்குள் மேலானவரே! இந்தப்ரபஞ்சமானது பரமாணுவாயிருக்கும்பொழுது இதை எந்தக் காலம் வ்யாபித்திருந்ததோ, அதுவே காலப் பரமாணு. காரியமாயிருக்கும் ப்ரபஞ்சம் முழுவதையும் எந்தக் காலம் வ்யாபித்திருக்கிறதோ, அதுவே மகாகாலம். இரண்டு காலப் பரமாணுக்கள் சேர்ந்தால் அணுவாகிறது. மூன்று அணுக்களால் திருஸரேணு உண்டாகிறது. வீடுகளில் சன்னல் வழியாகப் ப்ரகாசிக்கும் வெயிலில் பறந்துகொண்டிருக்கும் தூளிகளே திருஸரேணு எனப்படும். மூன்று கால திருஸரேணுக்களால் த்ருடி யுண்டாகின்றது. நூறு த்ருடி கொண்டது வேதமெனப்படுகிறது. மூன்று வேதங்கொண்டது லவமெனப்படுகிறது. மூன்று லவங்கள் நிமிஷமாகின்றது, மூன்று நிமிஷங்களால் க்ஷணம் உண்டாகிறது. ஐந்து க்ஷணங்களால் காஷ்டை ஏற்படுகிறது. பதினைந்து காஷ்டைகளால்

லகு ஏற்படுகிறது. பதினைந்து லகுக்களால் நாடிகை (நாழிகை) உண்டாகிறது. இரண்டு நாடிகைகள் ஒரு முகூர்த்தமாகும். ஆறு அல்லது ஏழு நாழிகை கொண்டது ப்ரஹரமென்றும், யாமமென்றும் சொல்லப்படுகிறது. ஆறு பலம் தாமிரத்தால் செய்யப் பட்ட உயரமான வடிவமுள்ள பாத்திரத்தில், இருபது குன்றிமணி நிறையுள்ள தங்கத்தால் செய்யப்பட்டவை களும், நான்கு அங்குல விஸ்தாரமுள்ளவைகளுமான நான்கு ஊசிகளால் துவாரஞ் செய்து அந்தப் பாத்திரத்தை ஜலத்தில் மிதக்கச் செய்து அந்தப் பாத்திரம் ஜலத்தில் எவ்வளவு காலத்தில் மூழ்குமோ அந்தக் காலமே நாழிகையாகும். நாலு யாமம் கொண்டது மனிதர்களுக்கு ஒரு பகலாம், ராத்திரியும் அவ்வளவு காலமேயாம். இவ்விரண்டும் சேர்ந்தது ஒருநாள் என்று சொல்லப்படுகிறது. பதினைந்து நாட்கள் கொண்டது ஒரு பக்ஷமாகும். அது சுக்லமென்றும், கிருஷ்ணமென்றும் இருவகையுள்ளது. அவ்விரண்டு பக்ஷங்கள் கொண்டது ஒரு மாதமாகும். அது பித்ரு தேவதைகளுக்கு ஒருநாள் ஆகும். அதிலும் சுக்லபக்ஷம் பகலாகும. கிருஷ்ணபக்ஷம் ராத்திரியாகும். இரண்டு மாதம் கொண்டது ஒரு ருது. ஆறு மாதம் கொண்டது ஒரு அயன மெனப்படுகிறது. அதிலும் தக்ஷிணாயணம், உத்தராயணம் என்று இருவகை யுண்டு; தக்ஷிணாயணம் தேவர்களுக்கு ஒரு ராத்திரியாகும். உத்தராயணமோ அவர்களுக்கு ஒரு பகலாகும். ஆதலால் மனுஷ்ய மானத்தில் பன்னிரண்டு மாதம் கொண்டது தேவர்களுக்கு ஒரு நாளாகின்றது. மனுஷ்ய மானத்தில் நூறு வருஷங்கள் மனிதர்களுக்குப் பரமாயுஸ் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கால ஸ்வரூபியான் சூரிய பகவான், கிரகங்கள், அசுவனி

முதலிய இருபத்தேழு நக்ஷத்திரங்கள், மற்ற தாரைகள் ஆகிய இவைகளுள்ள காலச் சக்கரத்திலிருந்து கொண்டு பரமாணு முதல் வருஷம் வரையிலுள்ள காலமானத்தால் ஜகத்தில் சஞ்சரிக்கிறார். மேலும், மேற்சொல்லிய சம்வத்ஸர ஸ்வரூபமாகிய காலத்திற்கு சம்வத்ஸரம், பரிவத்ஸரம், இத்வத்ஸரம், அனுவத்ஸரம், வத்ஸரமென்று ஐந்து பேதங்கள் (ஸௌரம், பார்ஹஸ்பத்யம், ஸாவனம், சாந்திரம், நக்ஷத்ரம் என்ற மான பேதத்தால்) ஏற்படுகின்றன. எந்தப் பரமபுருஷன் இம்மாதிரியான கால ஸ்வரூபியாயிருந்து பலவகையாகக் காரியங்களை உண்டுபண்ணி (விதைகளுக்கு முளைக்கும் சக்தியை உண்டுபண்ணிக் கொண்டு) சம்சாரிகளுக்கு ஸ்வர்க்கம் முதலிய பலனை, யாகம் முதலிய சத் கர்மங்களால் கொடுத்துக் கொண்டும், புருஷர்களுடைய மோஹத்தை நீக்குவதற்காக ஆகாசத்தில் சஞ்சரிக்கிறாரோ; ஐந்து வகையான வத்ஸரங்களை எவர் உண்டு பண்ணுகிறாரோ, அப்பேர்ப்பட்ட தேஜோரூபியான சூரியனைப் பூஜிக்க வேண்டும்" என்றார்.

16–17 அதனைக் கேட்டு விதுரர், "ஓ பகவானாகிய மைத்ரேயரே! பிதிருக்கள், தேவர்கள், மனிதர்கள் ஆகிய இவர்களுடைய மானத்தைச் சொன்னீர். மேலும், நீர் கால ரூபியான பகவானுடைய ஸ்வரூபத்தை நன்றாக அறிந்தவர். யோகத்தால் கிடைத்த ஞானக் கண்ணால் வித்வான்கள் எல்லாவற்றையும் அறிகிறார்கள். ஆகையால் மூவுலகத்திற்கு வெளியில் இருக்கும் ஞானிகளுடைய கதியையும் சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

18–21 அதனைக் கேட்டு மைத்ரேயர், "தேவ மானத்தால் அளக்கப்பட்ட பன்னீராயிரம் வருஷங்களைக் கொண்டு க்ருதயுகம், த்ரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம் என்று நான்கு யுகங்கள் ஏற்படுத்தப்பட்டன; நாலாயிரத்தெண்ணூறு (4800) வருஷங்கள் கொண்டது க்ருதயுகம் மூவாயிரத்தறுநூறு வருஷங்கள் கொண்டது, (3600) த்ரேதாயுகம். இரண்டு ஆயரத்து நாநூறு வருஷங்கள் கொண்டது,(2400) த்வாபர யுகம். ஆயிரத்து இருநூறு வருஷங்கள் கொண்டது,(1200) கலியுகம். க்ருதயுகத்தில் முதல் நாநூறு வருஷங்கள் யுகத்தின் சந்தி எனப்படுகின்றன. கடைசி நானூறு வருஷங்கள் சந்தியாம்ச மெனப்படுகின்றன. த்ரேதாயுகத்தில் முதல் முந்நூறு வருஷங்கள் சந்தி என்றும், கடைசி முந்நூறு வருஷங்கள் சந்தியாம்ச மென்றும், துவாபர யுகத்தில் முதல் இருநூறு வருஷங்கள் சந்தி என்று கடைசி இருநூறு வருஷங்கள் சந்தியாம்சமென்றும், கலியுகத்தில் முதல் நூறு வருஷங்கள் சந்தியென்றும், கடைசி நூறு வருஷங்கள் சந்தியாம்சமென்றும் சொல்லப்படுகின்றன. சந்தி, சந்தியாம்சம் என்னும் இவ்விரண்டிற்கும் நடுவிலிருக்கும் பாகமே யுகமெனப் படுகிறது. அந்தக் காலத்தில்தான் யுக தர்மங்கள் நன்றாகப் ப்ரகாசிக்கும். க்ருதயுகத்தில் தருமமானது நான்கு பாதங்களுடன் மனிதர்களை அனுசரிக்கிறது. மற்ற யுகங்களில் அந்த தருமத்திற்கு ஒவ்வொரு பாதம் குறைகிறது. இந்த மூவுலகத்தைக் காட்டிலும் வெளியிலிருக்கும் மஹர் லோகம் முதல் ப்ரம்ஹ லோகம் வரையில் ஆயிரம் சதுர்யுகம் கொண்டது ஒரு பகலாகும். இரவும் அவ்வளவு காலமேயாகும். அதில் ப்ரஹ்ம தேவர் தூங்குகிறார். ராத்திரி முடிந்து.

பகல் ஆரம்பிக்கும்பொழுது ஸ்ருஷ்டி ஆரம்பிக்கப்படு கிறது. அந்தப் ப்ரஹ்மதேவருடைய பகலில் பதினான்கு மனுக்கள் உண்டு. எழுபத்தொரு யுகங்களுக்குக் கொஞ்சம் அதிகமான காலம் ஒவ்வொரு மனுக்களின் காலமாகும். ஒவ்வொரு மன்வந்தரங்களிலேயும் அந்தந்த மனுவின் வம்சத்தில் பிறந்த அரசர்களும், ரிஷிகளும், தேவர்களும் தேவர்களுக்கு அதிபதிகளும், அந்த மனுக்களை அனுசரிக்கிறார்கள். இது ப்ரஹ்ம தேவரால் ஒவ்வொரு நாளும் செய்யப்படும் ஸ்ருஷ்டி. இது இவ்வுலகத்தையும் வ்ருத்தி செய்யக்கூடியது. திர்யக்ஜாதிகளும், மனிதர்களும், பித்ருக்களும், தேவர்களும் இதில் ஸ்ருஷ்டிக்கப் படுகிறார்கள். மேலும் ஒவ்வொரு மன்வந்தரங்களிலும் பரம புருஷன் சத்வகுண முள்ளவராக மனு முதலியவர்களின் ஸ்வரூபமாக இருந்து இந்த ஜகத்தைக் காப்பாற்றுகிறார். பின்னும் அவர் பகலின் முடிவில் தமோகுணத்தின் சொற்ப பாகத்தை அங்கீகரித்துக் காலகதியால் எல்லாவற்றையும் தமக்குள் அடக்கிக் கொண்டு வியாபார மற்றவராய் இருக்கிறார். அப்பொழுது பூமி முதலிய மூன்று உலகங்களும், சந்திரன், சூரியன் ஆகிய இவர்களுடைய ப்ரகாசமில்லாமல் மறைந்து இருக்கின்றன. பிறகு பகவானுடைய சக்தியாகிய சங்கர்ஷண முகாக்கினியால் முவுலகமும் எரிக்கப்படும் பொழுது அந்தத் தாபத்தைப் பொறுக்காமல் பிருகு முதலிய மகர்ஷிகள் மகர்லோகத்திலிருந்து ஜனலோகம் செல்லுகிறார்கள். அப்பொழுது சமுத்திரங்கள் ப்ரளய காலத்திய காற்றினால் அசைக்கப்பட்டுப் பெரியதாகிய அலைகளுடன் பயங்கரமான ஆடம்பர முள்ளவை களாக உலகங்களை மூழ்கச் செய்யும். அந்தக் காலத்தில் அந்த ஜலத்திற்குள் ஆதிசேஷனாகிய

ஆசனத்தில் பகவான் யோக நித்திரை செய்து கொண்டிருக்கிறார். ஜனலோகத்தில் வஸித்தவர்கள் அவரை ஸ்தோத்திரம் செய்து கொண்டிருப்பார்கள். இம்மாதிரியான ராத்திரி, பகல்களால் ப்ராணிகளின் வயதைவிட அதிகமான ப்ரஹ்மதேவருடைய வயதும் அபகரிக்கப் பெற்றுக் குறைந்துபோகிறது. அந்தப் ப்ரஹ்மதேவருடைய ஆயுளின் பாதிப்பாகம் பரார்த்தம் என்று சொல்லப்படுகிறது. முதல் பரார்த்தம் சென்று விட்டது. இப்பொழுது இரண்டாவது பரார்த்தம் நடக்கிறது. முந்திய பரார்தத்தின் முன்பாகத்தில் ப்ராஹ்மம் என்ற பெரியதாகிய கற்பம் நடந்தது. சப்தப்ரஹ்மமென்று சொல்லப்படுகிற ப்ரஹ்மதேவர் உண்டான காலமாகையால் அதற்குப் ப்ராஹ்மம் என்று பெயர் கிடைத்தது. அதற்கு அடுத்த கற்பத்தைப் பாத்ம கல்பம் என்று சொல்லுகிறார்கள். அந்தக் கற்பத்தில் பகவானுடைய நாபியாகிய ஏரியிலிருந்து லோகமாகிய பத்மம் (தாமரைப் புஷ்பம்) உண்டாயிற்று. இதுவே முதலாவது கற்பம். இரண்டாவது வராஹ கற்பமென்று சொல்லப்படுகிறது. அதில் பகவான் வராஹமாக (பன்றி) அவதரித்தார். உபாதியற்றவரும், நாசமற்றவரும், உற்பத்தியற்றவரும், ஜகத் காரணரும் ஆகிய பகவானுக்கு இரண்டு பரார்த்தங்களடங்கிய ப்ரஹ்மதேவருடைய ஆயுளானது நிமிஷமாம்! பரமாணுமுதல் இரண்டு பரார்த்தம் வரையிலுள்ள மேற்சொல்லிய காலமானது வீடு முதலியவைகளில் அபிமானமுள்ள சம்சாரிகளுக்கு யஜமானனே யொழியப் பரிபூரணரான புருஷோத்தமருக்கு அதிபதியல்ல. மஹத்தத்துவம் முதலிய ஆவரணங்கள் உள்ளதுமான அண்டகோசமானது வெளியில் ஐம்பது கோடி விஸ்தாரமுள்ளது. அளவில் ஒன்றுக்கொன்று

பத்து மடங்கு அதிகங்களான பூமி முதலிய ஆவரணங்களுள்ள மேற்சொல்லிய அண்டகோசமும், மற்ற கோடிக் கணக்கான அண்டங்களும் எதனிடத்தில் ப்ரவேசித்து பரமாணுக்கள் போலத் தோன்று கின்றனவோ, அதுவே அக்ஷரம்; எல்லாக் காரணங் களுக்கும் காரணம்; மகாத்மாவாகிய புருஷனுடைய சரீரம்; அதுவே பரப்ரஹ்மம்.

அத்தியாயம்–12

ஸனகர் முதலியவர்களுடைய ஸ்ருஷ்டி

1–8. ஓ விதுரரே! பரமாத்மாவினுடைய காலமென்ற பெயருள்ள மஹிமையைச் சொன்னேன் வேதகர்ப்பராகிய ப்ரஹ்மதேவர் ஜகத்தை யுண்டு பண்ணியதைச் சொல்லுகிறேன் தெரிந்து கொள்ளும். முதலில் ப்ரஹ்மா அந்ததாமிஸ்ரம், தாமிஸ்ரம் மஹாமோஹம், மோஹம், தமஸ் ஆகிய ஐந்து அஜ்ஞான விருத்திகளை யுண்டுபண்ணினார். பின்பு , தம்மால் ஸிருஷ்டிக்கப் பட்டவைகள் பாபத்திற்கு ஏதுக்களாயிருப்பதைப் பார்த்து, அதில் சந்தோஷம் அடையவில்லை. பின்பு பகவானைத் தியானம் செய்து அதனால் சித்த சுத்தியுள்ளவராக ஸனகர், ஸநந்தனர், ஸனாதனர், ஸனத்குமாரர் ஆகிய நான்கு குமாரர்களை உண்டுபண்ணினார். அவர்கள் கர்மங்களற்றவர்கள். இந்திரியங்களை ஜயித்தவர்கள். ப்ரஹ்மதேவர் அவர்களை நோக்கி, "ஓ குழந்தைகளே! நீங்கள் பிரஜைகளைச் ஸிருஷ்டியுங்கள்" என்று ஆக்ஞாபித்தார். அவர்கள் வாஸுதேவரையே தியானஞ் செய்துகொண்டு மோக்ஷஸாதனமாகிய நிவிருத்தி தருமத்தையே அனுஷ்டிப்பவர்களாகையால் அதனை ஒப்புக்கொள்ளவில்லை. அப்பொழுது புத்திரர்களாகிய அவர்கள் பிதாவின் கட்டளையைக் கடந்ததால் ப்ரஹ்மதேவருக்குக் கோபம் உண்டாயிற்று. ஆனாலும் அவர் அதை அடக்கிக் கொள்ள முயன்றார். அப்படியும் கோபம் அடங்காமல் ப்ரஹ்மதேவருடைய புருவங்களின் மத்ய பாகத்திலிருந்து ஒரு புத்திரன் உண்டானான். அந்தக் குமாரரே நீல லோஹிதர்.

அவர் ப்ரஹ்மதேவருடைய கோபத்தின் அம்சம். தேவர்களுக்கு முந்தி யுண்டானவரும், பரமசிவனென்று சொல்லப்படப் போகின்றவருமான அந்தக் குமாரர் ப்ரஹ்மதேவரை நோக்கி "ஓ ஜகத்தைப் போஷிப் பவரே! எனக்கு இருப்பிடங்களையும், பெயர்களையும் ஏற்படுத்தும்" என்று அழுது வேண்டிகொண்டார்.

9–14. பத்மத்திலிருந்து உண்டான ப்ரஹ்மதேவர் அதனைக் கேட்டு. "ஓ தேவர்களுக்குள் சிறந்தவரே! நீர் அழ வேண்டாம். உமக்கு இருப்பிடங்களையும், பெயர்களையும் ஏற்படுத்துகிறேன். நீர் ப்ராகிருத சிசுவைப்போல் அழுதபடியால் உம்மை ருத்திரனென்று ஜனங்கள் சொல்லுவார்கள். இருதயம், இந்திரியங்கள், பிராணன், ஆகாசம், வெளியிலிருக்கும் வாயு, அக்கினிஜலம், பூமி, சூரியன், சந்திரன், தபஸ் ஆகிய இவைகள் உமக்கு வாசஸ்தலங்களாக முன்னமேயே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் உமக்கு மன்யு, மனு, மஹாகாலன், மஹான், சிவன், ரிதத்வஜன், உருரேதஸ், பவன், காலன், வாமதேவன், திருதவிருதன் என்ற பெயர்களுண்டாகும், தவிரவும் உமக்கு, தீ விருத்தி, ரசனா, உமா, நியுத், ஸர்ப்பி, இளா, அம்பிகா, இராவதீ, ஸுதா, தீக்ஷா, ருத்ராணீ என்ற பெயருள்ள ஸ்திரீகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

ஆதலால் மேற்சொல்லிய நாமதேயங்களுடன் மேற்காட்டிய ஸ்தானங்களில் ஸ்திரீகளுடன் வசித்து அநேக பிரஜைகளை உண்டு பண்ணும். நீர் ப்ரஜாபதிகளுக்கும் மேலானவர்" என்று பிரியமாகச் சொன்னார்.

15–20. இம்மாதிரி பிதாவினால் ஆக்ஞாபிக்கப் பட்ட அந்த நீலலோஹிதர் ஆகிருதி சுபாவம் ஆகிய இவைகளில் தமக்குச் சமானர்களாகிய ப்ரஜைகளை உண்டுபண்ணினார். அந்த ருத்திரரால் ஸிருஷ்டிக்கப் பட்ட ப்ரஜைகள் கூட்டங் கூட்டமாக ஜகத்தை விழுங்குகிறவர்கள் போல எங்கும் பரவியிருந்தார்கள். அதனை கண்ட ப்ரஹ்மதேவர் ஸந்தோஷமடைந்து, ருத்திரரை நோக்கி, "ஓ தேவசிரேஷ்டரே! உம்மால் ஸிருஷ்டிக்கப்பட்ட ப்ரஜைகள் என்னையும், திக்குகளையும் பார்வையால் எரிப்பவர்கள்போல் இருக்கிறார்கள். ஆதலால் நீர் இனி ஸிருஷ்டிக்க வேண்டாம். ஸகல ப்ராணிகளுக்கும் ஸுகத்தைக் கொடுக்கக்கூடிய தவத்தைச் செய்யும். உமக்கு க்ஷேமமுண்டாகட்டும். ஸகல பிராணிகளுடைய இருதய குகையில் வஸிப்பவரும், தேஜோரூபியும், பகவானாயுமுள்ள பரமாத்மாவைத் தபஸினாலேயே புருஷன் அடைகிறான். ஆதலால் நீரும் தபஸ் செய்தால் அதன் பலத்தால் • ஜகத்தை முன் கற்பத்திலிருந்தது போல் ஸிருஷ்டிப்பீர்" என்றார். அதனைக் கேட்ட ருத்திரரும் வாக்குகளுக்கு அதிபதியான ப்ரஹ்மதேவருடைய வார்த்தையை அங்கீகரித்து, அவரிடம் விடைபெற்றுக் கொண்டு தபஸ் செய்வதற்காக வனம் சென்றார்.

21–27. பிறகு ப்ரஹ்மதேவர் ஸிருஷ்டி விஷயமாகத் தியானம் செய்தார். அவருக்கு அப்பொழுது பகவான் உடைய சக்திவிசேஷத்துடன் கூடிய மரீசி, அத்திரி, அங்கிரஸ், புலஸ்தியர், புலஹர், க்ரது, பிருகு, வசிஷ்டர், தக்ஷர், நாரதர் ஆகிய பத்துப் புத்திரர்கள் உண்டானார்கள். அவர்கள் லோகத்தின் சந்தானத்திற்குப்

காரணமாயிருப்பவர்கள். அதெப்படியெனில் அவருடைய மடியிலிருந்து நாரதரும், கட்டை விரலிலிருந்து தக்ஷரும், ப்ராணனிடமிருந்து வசிஷ்டரும், தொக்கிந் திரியத்திலிருந்து ப்ருகுவும், கையிலிருந்து க்ரதுவும் நாபியிலிருந்து புலஹரும், காதுகளிலிருந்து புல்ஸ்தியரும், முகத்திலிருந்து அங்கிரசும், மனத்தில் இருந்து மரீசியும் உண்டானார்கள். மேலும் அவர் உடைய வலப்பக்க ஸ்தனத்திலிருந்து ஸ்ரீமந் நாராயண னுக்கு வாசஸ்தானமாகிய தருமம் உண்டாயிற்று. அவருடைய பின் பக்கத்திலிருந்து அதர்மம் உண்டா யிற்று. உலகத்திற்குப் பயங்கரனாகிய ம்ருத்யுவே அதற்கு அதிதேவதை. மேலும் அவருடைய ஹிருதயத் திலிருந்து காமமும், புருவங்களிலிருந்து கோபமும், உதட்டிலிருந்து லோபமும், முகத்திலிருந்து வாக்குக்கு அதிதேவதையும், ஆண்குறியிலிருந்து சமுத்திரங்களும், பாயுவிலிருந்து பாபத்திற்கு இருப்பிடமாகிய நிருதியும் உண்டானார்கள். பின்னும் அவருடைய நிழலிலிருந்து தேவஹூதிக்குப் பர்த்தாவாக ஆகப்போகிற கர்த்தமப் பிரஜாபதி உண்டானார். இப்படி ப்ரஹ்மதேவருடைய தேகத்திலிருந்தும் மனத்திலிருந்தும் இந்த ஜகத் உண்டாயிற்று.

28–32. ஓ விதுரரே! ப்ரஹ்மதேவர் தம்மிடமிருந்து உண்டானவளும், மனோகரமாகிய உருவமுள்ளவளு மான வாக்குக்கு அதிதேவதையை அவள் இஷ்டப் படாமலிருக்கும் போதும் தாம் ஆசைப்பட்டார், என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அப்பொழுது மரீசி முதலியவர்கள் அதர்மத்தைச் செய்ய முயன்ற தங்கள் உடைய பிதாவை நோக்கி, "மன்மதனை ஜயிக்காமல் உம்முடைய பெண்ணிடத்தில் நீர் ஆசைப்படுவது

உசிதமல்ல. இது நம்முடைய முன்னோர்களால் அனுஷ்டிக்கப்பட்டதுமில்லை. உமக்குப் பிந்தியவர் களாலும் செய்யக்கூடியதில்லை. ஓ ஜகத்குருவே! மிக்க தேஜஸுள்ளவர்களானாலும் இம்மாதிரியான காரியத்தில் முயற்சிப்பது நியாயமல்ல. மகான்களால் அனுஷ்டிக்கப்படும் காரியங்களைச் செய்து லோகங்கள் க்ஷேமத்தை அடைகின்றன. (நீர் இம்மாதிரியான கெட்ட காரியத்தைச் செய்தால் மற்றவர்களும் இதைச் செய்து நரகத்தை அடைவார்களென்று கருத்து.) நீர் காரணத்தில் சூட்சுமரூபமாக இருந்த ஜகத்தை உம்முடைய ப்ரகாசத்தால் ப்ரகாசிக்கச் செய்தவர். இப்படிப் பட்ட உமக்கு நமஸ்காரம் செய்கிறோம். தர்மத்தைக் காப்பாற்றவேண்டும்" என்று பிரார்த்தித் தார்கள்.

33–35. அதனைக் கேட்ட ப்ரஹ்மதேவர் வெட்கம் அடைந்து அவளை விட்டுவிட்டார். (அந்த ஆசையை யொழித்தாரென்பது கருத்து.) அவளை திக்குகள் கிரஹித்துக் கொண்டன. அது பனியால் ஏற்படும் தமஸ்ஸாகும். பின்பு ஒருகால் ஜனங்களை எப்படி ஸிருஷ்டிக்கிறதென்று அவர் தியானம் செய்யும்போது அவருடைய நான்கு முகங்களிலிருந்தும் வேதங்கள் வெளிப்பட்டன. சாதுர்ஹோத்ரம் (ஹோதா முதலிய நான்கு ரித்விக்குகள் செய்யவேண்டிய கர்மம்) அவைகளின் தந்திரம், உபவேதங்கள், நீதிசாஸ்திரம், தருமத்தின் நான்கு பாதங்கள், ஆசிரம தர்மங்கள் ஆகிய இவைகளும் உண்டாயின.

36. அதனைக் கேட்டு விதுரர் மைத்ரேயரை நோக்கி "ஓ தபஸ்ஸையே தனமாகக் கொண்டவரே!

ப்ரஜாபதிகளுக்கும் அதிபதியாகிய அந்தப் ப்ரஹ்மதேவர் எந்த எந்த வேதங்களை, எந்த எந்த முகத்தால் ஸிருஷ்டித்தார்? அவற்றைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

37–48. அதனைக் கேட்டு மைத்ரேயர் ப்ரத்யுத்தரம் சொல்லலானார். ப்ரஹ்மதேவர், ரிக், யஜுஸ், சாமம், அதர்வம் என்ற நான்கு வேதங்களைக் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திக்குகளை நோக்கியிருக்கும் தம்முடைய முகங்களால் உண்டுபண்ணினார். சாஸ்திரம் (ஹோதாவினால் செய்யப்பட வேண்டியது), இஜ்யை (அத்வர்யு செய்யவேண்டியது) ஸ்துதி, ஸ்தோமம் (உத்காதாவினால் செய்யப்பட வேண்டியது), ப்ராயசித்தம் (ப்ரஹ்மாவினால் செய்யப்பட வேண்டியது) ஆகிய இவைகளையும் உண்டுபண்ணினார். மேலும் அவர் ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வ வேதம், ஸ்தாபத்யம் (விசுவகர்மாவினால் செய்யக்கூடியது) ஆகிய இவைகளையும் படைத்தார். பின்னும் எல்லாவற்றையும் அறிந்த அவர் இதிகாசம், புராணம் ஆகிய ஐந்தாவது வேதத்தை எல்லா முகங்களாலும் உண்டுபண்ணினார். அவருடைய முந்திய முகத்தில் இருந்து ஷோடசி, உக்தியம், சயனம், அக்னிஷ்டோமம், அப்தோர்யாமம், அதிராத்ரம், வாஜ்பேயம், கோஸவம் ஆகிய இவைகளும் வித்யை, தானம், தபஸ் சத்தியம் என்ற தருமத்தின் நான்கு பாதங்களும் ஆசிரமங்களும், அவைகளின் தருமங்களும் உண்டாயின. மேலும் ஆசிரமங்களில் ப்ரம்மசரிய ஆச்ரமத்தில் ஸாவித்ரம், ப்ரஜாபத்யம், ப்ரஹ்மம், ப்ரஹத் என்று நான்கு வகையுண்டு. கிரஹஸ்தாசிரமத்தில் வார்த்தை, சஞ்சயம், சாலீனம் சிலோஞ்சம் என்று நான்கு

வகையுண்டு. வானப்பிரஸ்தர்களுக்குள் வைகானஸர்கள், வாலகில்யர்கள், ஔதும்பரர்கள், பேனபர்கள் என்ற நான்கு வகையுண்டு. சன்யாச ஆசிரமத்திலும் குடீசகர்கள், பஹூதர்கள், ஹம்ஸர்கள். நிஷ்கிரியர்கள் என்று நால்வகை யுண்டு. ஆத்மா அனாத்மா இவை களை தெரிவிக்கும் ஆன்வீக்ஷகி, கர்ம வித்தையாகிய த்ரயீ, க்ருஷி முதலிய வார்த்தை தண்டநீதி ஆகிய நான்கு வித்யைகளும் நான்கு வ்யாஹ்ருதிகளும். நான்கு முகங்களிலிருந்து உண்டாயின. அவருடைய ஹிருதயாகாசத்திலிருந்து ப்ரணவமும், ரோமங்களில் இருந்து உஷ்ணிக் சந்தசும், எலும்புகளிலிருந்து ஜகதீச் சந்தசும் மஜ்ஜையிலிருந்து பங்தி சந்தசும் ப்ராணனிடமிருந்து ப்ரஹதீச் சந்தசும் உண்டாயின. ஸ்பர்சமென்ற எழுத்துக்களே அவருடைய ஜீவன். ஸ்வரமென்ற அக்ஷரங்களே அவருக்கு தேஹம். ஊஷ்மாவென்ற அக்ஷரங்களே அவருக்கு இந்திரியங்கள் அந்தஸ்தமென்ற எழுத்துக்களே அவருக்குப் பலமாய் இருக்கின்றன. அவருடைய விளையாட்டினால் ஏழு ஸ்வரங்களும் உண்டாகின்றன. ஓ விதுரரே! இப்படி சப்த ப்ரஹ்மஸ்வரூபியான அவருடைய உருவமானது வ்யக்தமாகும் பொழுது பலவகை சக்தியுள்ளதாகவும், (இந்திரன் முதலியவர்களின் உருவமாக) அவ்யக்தமாய் இருக்கும் போது ப்ரஹ்மமாகவும் ப்ரகாசிக்கிறது.

அத்தியாயம்– 13

வராஹாவதாரம்

1–4 மைத்ரேயரால் சொல்லப்பட்டதும் மிகவும் புண்யகரமுமான வார்த்தையைக் கேட்ட விதுரர் ஸ்ரீ கிருஷ்ண கதையில் மிகுந்த ஆதரவுடன், "ஓ மஹா முனியே! ப்ரஹ்மதேவருக்குப் ப்ரியமுள்ள புத்திரராகிய அந்த ஸ்வாயம்புவ மனுவானர் ப்ரியமுள்ள பத்தினியை அடைந்து எதனைச் செய்தார்? அரசர்களுக்குள் முந்தியவாக்கிய அவருடையச் சரித்தத்தைக் கேட்க ச்ரத்தையுள்ளவனாக இருக்கிறேன். அவர் ஸ்ரீ மஹா விஷ்ணுவை ஆசிரயித்தவர், பகவானுடைய குணங்களைக் கேட்பது, முகுந்தருடைய பாதாரவிந்தத்தை ஹிருதயத்தில் தியானிப்பது ஆகிய இவைகளே வெகு காலமாகச் ச்ரமப்பட்டு வித்தியாப்யாஸம் செய்ததின் பலனாகும். ஆதலால் அவருடைய சரித்தத்தைச் சொல்ல வேண்டுமி என்று கேட்டார்.

5–13 அதனைக் கேட்ட மைத்ரேயர் பகவத் கதையைச் சொல்லும்படி தாம் தூண்டப்பட்டபடியால் மயிர்க் கூச்சலுள்ளவராகி வணக்கமுள்ளவரும், ஆயிரந்தலையுள்ள பகவானுடைய பாதபீடருமாகிய (பகவான் விதுரருடைய மடியில் ப்ரியத்தால் கால் நீட்டிச் சயனம் செய்கிற வழக்கம்) விதுரரை நோக்கிச் சொல்லலானார். ஸ்வாயம்புவ மனு தம்முடைய பத்தினியுடன் எப்பொழுது உண்டானாரோ அப்பொழுது அவர் இரு கைகளைக் கூப்பி வணங்கி, ப்ரஹ்மதேவரை நோக்கி, "நீர் ஒருவரே இந்த ஸகல ஜகத்தையும் உண்டுபண்ணினவர். அதற்கு விருத்தியை

ஏற்படுத்தியவர். போஷிப்பவர். நீர் பிறரை அபேட்சியாத வரானாலும் உம்முடைய ப்ரஜை களாகிய நாங்கள் எதனைச் செய்தால் உமக்குச் சிசுரூஷை செய்ததாக ஆகும்? ஓ ஸ்தோத்திரம் செய்யக் கூடியவரே! எதனைச் செய்தால் இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் எங்கும் கீர்த்தி உண்டாகும்? எங்களால் செய்யக்கூடிய அந்தத் தர்மங்கள் இவை களென்று சொல்லவேண்டும். உமக்கு நமஸ்காரம் செய்கிறேன்" என்று கேட்டார். அப்பொழுது ப்ரஹ்ம தேவர் புத்திரனை நோக்கி, "குழந்தாய், உம்மிடத்தில் மிகவும் பிரிய மடைந்தேன். உங்களிருவர்களுக்கும் க்ஷேமம் உண்டாகட்டும். என்னால் உபதேசிக்கப்படும் காரியத்தைக் கபடமற்றவராய்ச் செய்யும். புத்திரர்கள் தங்களுடைய சக்திக்குத் தக்கபடி மாத்சர்யமில்லாத வர்களாக (ஸனகர் முதலியவர்களே செய்யவில்லையே. அப்படியிருக்க நாம் பிதாவின் கட்டளைப்படி நடக்கவேண்டுமா வென்று நினைக்காமல்) ப்ரீதியுடன் பிதாவின் கட்டளையின்படி நடந்தார்களானால் பிதாவைப் பூஜித்ததாகும். இதுதான் புத்திரர்கள் செய்ய வேண்டிய காரியம். ஆனதால் நீர் இவளிடத்தில் உமக்குச் சமமான குணசாலிகளான குழந்தைகளை உண்டு பண்ணிக்கொண்டு பூமியை தருமமமாகப் பரிபாலியும். மஹாவிஷ்ணுவை யாகத்தால் பூஜியும். ப்ரஜைகளைக் காப்பாற்றினால் எனக்கு மேலான சிசுரூஷை செய்ததாகும். மேலும் யக்ஞ ஸ்வரூபியாகிய பகவான் எவர்களிடம் சந்தோஷப் படவில்லையோ அவர்கள் செய்யும் காரியம் யாவும் ப்ரயோசன மற்றவை. அவர்கள் தமது ஆத்மாவினாலேய ஆதரிக்கப் படுகிறதில்லை. அந்தப் பகவானும் ப்ரஜாபாலனம் செய்யும் உம்மிடத்தில் சந்தோஷப்படுவார்" என்றார்.

14–19 அதனைக் கேட்ட ஸ்வாயம்புவ மனுவானவர் ப்ரஹ்மதேவரை நோக்கி, "ஓ பாபங்களைப் போக்குகிறவரே உம்முடைய ஆக்ஞையின்படி நடக்கிறேன்; எனக்கும் ப்ரஜைகளுக்கும் வாசஸ்தலம் இன்னதென்று சொல்ல வேண்டும். ஸகல ப்ராணி களுக்கும் இருப்பிடமாகிய பூமியானது ஜலத்தில் மூழ்கியிருக்கிறது. ஓ தேவ! இந்தப் பூமிதேவியை உயரக் கொண்டு வருவதற்காக முயற்சிக்க வேண்டும்" என்றார். அதனைக் கேட்டு ப்ரஹ்மதேவர் ஜலத்தில் மூழ்கியிருக்கும் பூமியை உயரக் கொண்டுவருவதைப் பற்றித் தமக்குள் யோசிக்கலானார். ப்ரளய கால ஜலத்தை எல்லாவற்றையும் குடித்தேன். பூமியில் ப்ரஜைகள் வஸிக்கும்படி செய்தேன். தேவர்கள், அஸுரர்கள், பித்ருக்கள், மனிதர்கள், பசுக்கள், பறவைகள், மலைப்பாம்புகள், மலைகள், யானைகள், இன்னும் பலவகையான ப்ராணிகளைச் ஸிருஷ்டித்து வரும்போது பூமி ஜலத்தில் மூழ்கிப் பாதாளம் சென்றது. ஸிருஷ்டிப்பதில் பகவானால் தூண்டப்பட்ட நாம் இந்தச் சமயத்தில் என்ன செய்யலாம், எப்படிப் பூமியை வெளியில் கொண்டுவருவேன்? ஆனால்லும் எந்தப் பகவானுடைய ஹிருதயத்திலிருந்து நான் உண்டானேனோ அந்தப் பகவானே இவ்விஷயத்தில் தகுந்த உபாயத்தைச் செய்ய வேண்டும்" என்று பகவானைத் தியானம் செய்தார்.

20–27 அந்தச் சமயத்தில் அந்தப் ப்ரஹ்மதேவர் உடைய மூக்குத் துவாரத்திலிருந்து ஒரு பன்றிக்குட்டி வெளிப்பட்டது. அது கட்டைவிரல் அளவுள்ளதாக இருந்தது. மேலும் அது அவர் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே ஆகாசத்திலிருந்தபடி யானை போலப்

பெரிய சரீரமுள்ளதாக விருத்தி அடைந்தது அது ஆச்சரியப்படக்கூடியதாக இருந்தது. அதனைக் கண்ட மரீசி முதலியவர்களும் ஸனகர் முதலியவர் களும், ஸ்வவாயம்புவ மனுவும் "இதென்ன ஆச்சரியம்! பன்றி உருவத்துடன் பெரிய ப்ராணியொன்று திவ்ய சரீரமுள்ளதாக இருக்கிறது. இது ப்ரஹ்மதேவருடைய மூக்கிலிருந்து வெளிப்பட்டது. கட்டைவிரல் அளவு உள்ளதான இதன் தலை ஒரு க்ஷணத்தில் மலை போன்றதாகி விட்டதே. ஒருகால் பகவானே இந்தச் சரீரத்துடன் அவதரித்திருக்கிறாரோ? மனத்திற்குக் கவலையாய் இருக்கிறதே" என்று யோசித்துக் கொண்டு இருந்தார்கள். அப்பொழுது மலைபோன்ற சரீரமுள்ளவரும், வராஹ ரூபம் தரித்தவருமான பகவான் கர்ஜித்தார். அந்தச் சப்தத்தால் திக்குகளில் எதிரொலி உண்டாயிற்று. அதனைக் கேட்டு ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் சந்தோஷமடைந்தார்கள். தபோலோகம், ஸத்யலோகம் இவைகளில் வஸிப்பவர் கள் நம்முடைய துக்கத்தைப் போக்கக்கூடிய மாயா வராஹத்தின் அந்தச் கர்க்கர சப்தத்தைக் கேட்டுப் பரிசுத்தங்களான மூன்று வேதங்களால் ஸ்தோத்திரம் செய்தார்கள்.

28–35 வேதங்களால் ஸ்தோத்திரம் செய்யப்படும் சரீரமுள்ள அந்தப் பகவான் அந்தப் ப்ராஹ்மணோத் தமர்களால் உச்சரிக்கப்பட்டவைகளும், தம்முடைய குணங்களை அனுமதித்தவைகளுமாகிய வேதங்களைக் கேட்டுக் கொண்டு ஜலத்திற்குள் ப்ரவேசித்தார். பூமியை வெளியில் கொண்டுவருகிற முயற்சியுடன் வராஹமாக (பன்றி) அவதரித்த பகவான் ஆகாசத்தில் வாலை உயரத் தூக்கிக் கொண்டும் கடினமான

சரீரமுள்ளவரும் அதிகக் கடினமாகிய மயிருள்ளவரும், குளம்புகளால் மேகங்களை அடித்தவரும், தம்முடைய சிங்கப் பற்களுடைய தேஜஸினாலும், நேத்திர காந்தியாலும், மற்ற ப்ரகாசத்தை அபேட்சியாமல் ப்ரகாசித்திருந்தார். பிடரி மயிர்களை உதறிக் கொண்டு மிருந்தார். மேலும் அவர் யக்ஞ ஸ்வரூபி. வராஹமாக அவதரித்தவர், பயங்கரமாகிய பார்வை உள்ளவரானாலும் ப்ராஹ்மணர்களைச் சந்தோஷமாகப் பார்த்தார். அப்பொழுது அவர் பூமி சென்ற வழியை வாக்கினாலேயே தெரிந்துகொண்டு ஜலத்திற்குள் சென்றார். வஜ்ஜிரத்தால் செய்யப்பட்ட மலைபோலக் கெட்டியான சரீரமுள்ள அந்த வராஹம் வேகமாகக் குதித்ததால் சமுத்திரமானது மிகவும் உபத்திரவப்பட்டு அலைகளாகிய நீண்ட கைகளை நீட்டிக் கொண்டு, "ஓ யக்ஞ வராஹ ரூபியான பகவன்! என்னைக் காப்பாற்றும்" என்று உரக்கக் கதறினது போலிருந்தது. அப்பொழுது மூன்று கணுக்களுள்ள (ப்ராதஸ்ஸவநம், மத்யந்தினஸவநம், ஸாயம்ஸவநமென்ற) யக்ஞ ரூபியான பகவான் கரையற்ற சமுத்திர ஜலத்தைத் தம்முடைய நீண்ட குளம்புகளால் பிளந்து கொண்டு பாதாளம் சென்று பூமியைக் கண்டார். ப்ரளய காலத்தில் இவர் ஜலத்தில் சயனம் செய்துகொண்டு பூமியை வயிற்றில் வைத்துக் காப்பாற்றினார். அவர் ஸகல ஜீவராசி களுக்கும் ஆதாரமாயிருப்பவர். அப்பொழுது அவர் தம்முடைய சிங்கப் பல்லால் பூமியைத் தூக்கிக் கொண்டு மிகவும் ப்ரகாசித்தார். அந்த ஜலத்தில் அசுரர்களுக்குள் முந்தியவனான இரண்யாக்ஷன் என்பவன் கதாயுதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அவருக்கெதிரில் ஓடிவந்தான். அவன் விசேஷ கோபமுள்ளவன். ஸகிக்க முடியாத பராக்கிரமுள்ளவன்.

யானையைச் சிங்கம் கொன்றார் போல அவர் பிரயாசம் இன்றி அந்த அசுரனைக் கொன்றார். மேலும் அவர் மலையின் தாழ்வரையில் விளையாடி, அதன் தாதுக்களால் சிவந்த கன்னங்களுள்ள யானைபோல ஹிரண்யனுடைய ரத்தத்தால் சிவந்த கன்னமுள்ளவரும், பச்சிலைபோல நீல வர்ணமுள்ளவராகவும் வெண்மை நிறமுள்ள பல்லின் நுனியில் பூமியை வைத்துக் கொண்டவராகவும் இருந்தார். அவரை ஈசுவர னென்று தெரிந்து கொண்டு மஹர்ஷிகள் ப்ரஹ்மதேவரை முன்னிட்டு வேத மந்திரங்களால் பின்வருமாறு துதித்தார்கள்.

36–48 ஒருவராலும் ஜயிக்கப்படாதவரே! யாகத்தை விருத்தி செய்பவரே! சத்துருவை ஜயித்தீர். வேதமாகிய உம்முடைய சரீரத்தை உதறிக் கொள்ளும். உமக்கு நமஸ்காரஞ் செய்கிறோம். உம்முடைய உரோம கூபங்களில் (மயிர்க் கால்களில்) சமுத்திரங்கள் வஸிக்கின்றன. நீர் பூமியைப் பாதாளத்திலிருந்து கொண்டுவருவதற்காக வராஹமாக அவதரித்தவர். அப்போர்ப்பட்ட உமக்கு நமஸ்காரம். ஓ தேவ! யக்ஞ ஸ்வரூபியாகிய உம்முடைய தோளில் காயத்ரி முதலிய சந்தஸ்ஸுகளும், மயிர்களில் தர்ப்பங்களும், நேத்திரங்களில் ஆஜ்யமும் (நெய்), கால்களில் சாதுர்ஹோத்ரமும் (ஹோதா முதலியவர்கள் செய்ய வேண்டிய காரியம்), முகத்தின் முன்பாகத்தில் இருக்கும் மூக்குகளில் ஸ்ரவமும், வயிற்றில் இடையும் (தக்ஷிண பாத்திரம்), காதுகளில் சமஸ்ஸும்; வாயில் ப்ராசித்திரமும், க்ரஸனமென்ற முகத்திற்குள்ளிருக்கும் பாகத்தில் க்ரஹங்களும் இருக்கின்றன. பக்ஷிப்பது அக்னிஹோத்ரமாகும். நீர் அடிக்கடி அவதாரத்தால்

ப்ரகாசிப்பதே தீக்ஷை (தீக்ஷணியேஷ்டி). உம்முடைய கழுத்தே உபஸ்தங்கள். உம்முடைய இரு சிங்கப் பற்களே பிராயணீய உதயநீய இஷ்டிகள். நாக்கானது ப்ரவர்க்கியமாகிறது. யக்ஞ ரூபியாகிய உம்முடைய தலையானது ஸப்யம், ஆஸத்யம் என்ற அக்கினிகளாகும். உம்முடைய ஐந்து ப்ராணன்களும் இஷ்ட காசயனங்களாகும். உம்முடைய ரேதஸ்ஸே சோமரசமாகும். பால்யம் முதலிய அவஸ்தையானது வனங்களாகும். உம்முடைய சரீரத்திலிருக்கும் மாம்சம் முதலிய தாதுக்கள் அக்கினிஷ்டோமம் முதலிய ஸமஸ்தைகளாகும். சரீரத்தின் சந்திகள் துவாதசாஹம் முதலிய சத்திரங்களாகின்றன. நீர் யக்ஞ ஸ்வரூபி (ஸோமம் இல்லாதவை யக்ஞங்கள்) க்ரதுஸ்வரூபி (ஸோமம் உள்ளவைகள் கிரதுக்களாம்) மேலும் அனுஷ்டானமே சந்திபந்தங்கள். ஸகல மந்திர ஸ்வரூபி, ஸகல தேவதா ஸ்வரூபி, ஸகல திரவிய ஸ்வரூபி, ஸகல யாக ஸ்வரூபி, ஸகல கிரியா ஸ்வரூபி, வைராக்கியத்துடன் கூடிய பக்தியால் சித்தம் ஸ்திரப்பட்டு அதனாலுண்டாகும் அபரோக்ஷ சாக்ஷாத்காரமாகிய ஞானத்தைக் கொடுப்பவர். ஸகல வித்தைகளையும் உபதேசிக்கும் குரு. அப்படிப்பட்ட பகவானாகிய உமக்கு நமஸ்காரம். ஓ பூமியைத் தரிக்கும் பகவன்! மலைகளுடன் கூடிய பூமியானவள் சிங்கப்பல்லின் நுனியைக் கொண்டு உம்மால் தூக்கப்பட்டவளாகப் ப்ரகாசிக்கிறாள். இந்த உம்முடைய உருவமானது சேற்றுடன் தாமரைக் கொடியைத் தந்தங்களில் தரித்து ஜலத்திலிருந்து வெளியில் வரும் சிறந்த யானையின் உருவம்போல் விளங்குகிறது. மேலும் சிங்கப்பல்லில் பூமியைத் தரித்துக் கொண்டிருக்கும் வேதரூபமாகிய உம்முடைய ஸ்வரூபமானது,

சிகரத்தில் மேகத்தைத் தரிக்கும் குலபர்வதம் போலிருக்கிறது. அரணியில் அக்னியிருப்பதுபோல எந்தப் பூமியினிடத்தில் உம்முடைய தேஜஸ்ஸை (தாரணம் முதலிய சக்தியை) வைத்திருக்கிறீரோ, எந்தப் பூமியானது உமக்குப் பத்தினியாக இருக்கிறாளோ, அந்தப் பூமிதேவியைத் தாவரங்கள் அடங்கிய ஜகத்திற்கு வாசஸ்தலமாகச் செய்யும். நீர் லோகத்திற்குப் பிதாவல்லவா? உமக்கும் இந்தப் பூமிக்கும் நமஸ்காரம் செய்கிறோம். ஓ ப்ரபுவே! பாதாளஞ்சென்று பூமியைக் கொண்டு வரலாமென்று உம்மைத் தவிர வேறு யாரால் நினைக்க முடியும்? ஆனாலும் ஸகல ஆச்சரியங்களுக்கும் இருப்பிடமாகிய நீர்

மிகவும் அற்புதமான இந்தக் காரியத்தைச் செய்தது ஒரு ஆச்சரியமல்ல. மிகவும் அற்புதமான இந்த ஜகத்தானது உம்மால் ஸிருஷ்டிக்கப்பட்டதல்லவா ஓ ஈச! தேவ மயமாகிய உம்முடைய சரீரத்தை உதறிக் கொள்ளும் போது பிடரி மயிர்களால் இறைக்கப்பட்ட மங்களரமான ஜலத்துளிகளால் தபோலோகம், சத்யலோகம் இவைகளில் வஸிக்கும் நாங்கள் பரிசுத்தர்களாகச் செய்யப்பட்டுக் காப்பாற்றப்பட்டோம். ஓ பகவான்! கரையற்ற கர்மங்களுடைய உம்முடைய சரிதங்கள் எல்லாவற்றையும் எவன் அறிய விரும்புகிறானோ, அவனுடைய எண்ணம் நிறைவேறுகிறது இல்லை. (பகவானுடைய சரிதங்கள் அறிய முடியாதவையென்பது கருத்து) மேலும் உம்முடைய யோக மாயையின் குண சம்பந்தத்தால் இந்த ஜகத்யாவும் மோகித்திருக்கிறது, அப்படிப்பட்ட மஹிமை பொருந்திய ஓ ஈச; எல்லா ஜகத்திற்கும் க்ஷேமத்தை உண்டு பண்ணும்.

48–52 ப்ரஹ்மிஷ்டர்களான அந்த மகர்ஷிகளால் இம்மாதிரி துதிக்கப்பட்ட பகவான் தம்முடைய குளம்புகளால் கலக்கப்பட்ட ஜலத்தில் (முன்போல ஜலத்தில் மூழ்காமலிருக்கும் வண்ணம் ஜலத்திற்குத் தரிக்கும் சக்தியைக் கொடுத்து) பூமியை ஸ்தாபித்துச் சென்றார். கானம் பண்ணத் தகுந்த மாயா விலாசங்களுள்ள ஸ்ரீ மஹாவிஷ்ணுவினுடைய இந்தக் கதையானது மிகவும் அழகானது. விரும்பத்தக்கது. இதைப் பக்தியுடன் கேட்பவர்கள், கேட்கச் செய்பவர்கள் ஆகிய இவர்களுடைய ஹிருதயத்தில் சீக்கிரமாக ஜனார்த்தனர் ப்ரசன்னராக வஸிக்கிறார். ஸகல மங்களத்தையும் கொடுக்கக்கூடிய ப்ரபுவாகிய அவர் எவனிடத்தில் சந்தோஷமடைகிறாரோ. அவனுக்கு எதுதான் கிடைக்காது? மற்ற அற்ப பலன்களால் என்ன பிரயோசனம்? பரமபுருஷன் தம்மையே பூஜிப்பவர்களுடைய ஹிருதயத்தில் வஸிப்பதுமல்லாமல் மேலான தம்முடைய பதத்தையும் அவர்களுக்குக் கொடுக்கிறார். ஆதலால் உலகத்தில் முன்காலத்தில் நடந்த பகவானுடைய சரிதங்களாகிய அமிருதத்தைக் காதுகளாகிய அஞ்சலி (சேர்ந்த கைகள்) யால் பானஞ் செய்த எந்தப் புருஷன்தான் போதுமென்று திருப்தியடைவான்? அந்த பகவத் கதை சம்சார பந்தத்தைப் போக்கக் கூடியது. விவேகமற்ற பசுக்கள் தவிர மற்றவர்களுக்கு அந்த பகவத் கதையில் ஆசையொழியாது.

அத்தியாயம்–14

திதிதேவி கர்ப்பத்தை அடைந்தது

1–4. மைத்ரேயர் முகமாக வராஹாவதாரஞ் செய்த ஸ்ரீ ஹரியினுடையய கதையைக் கேட்ட விதுரர் திருப்தியடையாமல் கை கூப்பிக்கொண்டு பகவத் கதையைக் கேட்பதாகிய விரதமுள்ளவராய் மைத்ரேயரை நோக்கி, "ஓ முனிகளுக்குள் சிறந்தவரே! யக்ஞ ஸ்வரூபியான அந்த ஹரியினால் தைத்யர் களுக்குள் முந்தியவனாகிய, ஹிரண்யாக்ஷன் கொல்லப் பட்டான்" என்று நீர் சொல்லக்கேட்டேன். பகவான் பூமியைத் தம்முடைய ஸ்ருங்கத்தின் நுனியால் ப்ரயாசமின்றிக் கொண்டு வந்தாரல்லவா? அப்பொழுது அவருக்கும் அந்த அசுரனுக்கும் யுத்தம் நேர்ந்த காரணமென்ன? ஓ ரிஷியே! அதனைச் சுருக்கமாகக் கேட்டும் என்னுடைய மனம் திருப்தியடையவில்லை. ஆதலால் அவனுடைய பிறப்பு முதலியவைகளைச் ச்ரத்தையுடன் கேட்க விரும்புகிறேன். அவைகளை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும் என்று மறுபடியும் கேட்டார்.

5–15. "ஓ வீரராகிய விதுரரே! நன்றாகக் கேட்டீர். அந்தப் பகவானுடைய அவதார கதையானது மனிதர்களுக்கு மிருத்யு பாசத்தைப் போக்கக்கூடியது, உத்தானபாதருடைய புத்திரனாகிய துருவனென்ற குழந்தையானவன் நாதரிடமிருந்து இந்த அவதாரக் கதையைக் கேட்டு ம்ருத்யுவின் தலையில் காலை வைத்து விஷ்ணுபதத்தை அடைந்தான். (துருவன் பார்ஷதர்களால் கொண்டுவரட்டட்ட விமானத்தில்

ஏறும்போது சமீபத்தில் வந்த ம்ருத்யுவின் தலையில் காலை வைத்து விமானத்தில் ஏறினான்), முன்னொரு காலத்தில் தேவர்களுக்குப் ப்ரஹ்மதேவரால் சொல்லப்பட்ட ஒரு சிறு இதிகாசகத்தை நான் கேட்டிருக்கிறேன்" என்று மைத்ரேயர் சொல்ல ஆரம்பித்தார். "ஓ விதுரரே! தக்ஷருடைய பெண்ணாகிய திதிதேவியானவள் மன்மதனால் பீடிக்கப்பட்டு, சந்தியா காலத்தில் தன்னுடைய பர்த்தாவாகிய மாரீசரை இச்சித்தாள். எப்படியெனில், அவர் சூரியன் அஸ்தமனத்தை அடையும்போது அக்கினியை நாவாகவுடையவரும், யக்ஞங்களுக்கு, அதிபதியுமான பரமபுருஷனை ஹவிஸ்ஸினால் பூஜித்து அக்னி ஹோத்திரசாலையில் உட்கார்ந்து த்யானம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது திதியானவள் அவர் சமீபம் சென்று, "ஓ வித்வான் ஆகிய மஹரிஷியே! மன்மதன் வில்லை கையில் எடுத்து, ரஸ்தாளி வாழையை யானை உபத்திரவித்தாற் போல உம்மை உத்தேசித்து என்னை பீடிக்கிறான். நான் தீனையாகவிருக்கிறேன், ஸபத்தினிகளுடைய (சக்களத்திகள்) ஸமிருத்திகளைப் பார்த்து எரிக்கப்படும் என்னிடத்தில் அனுக்கிரஹஞ் செய்யவேண்டும். எந்த ஸ்திரீகள் உம்மைப் போன்ற பர்த்தாவை அடைந்தார்களோ, எவர்கள் பர்த்தாவின் இடத்தில் அதிக பஹுமானத்தை வைத்தவர்களோ, அவர்களுடைய கீர்த்தியானது உலகங்களிலும் பரவும். பர்த்தாவே, பார்யையிடத்தில் நல்ல புத்திரனாகப் பிறக்கிறானென்று சாஸ்திரம் சொல்லுகிறது. முன்னொரு காலத்தில் எங்களுடைய பிதாவும், பெண்களிடத்தில் பிரியமுள்ளவருமான தக்ஷர் பெண்களை நோக்கி. "ஓ குழந்தைகளே!

யாரை நீங்கள் விவாகஞ் செய்து கொள்ளப் போகிறீர்கள்" என்று தனித்தனியே கேட்டுப் பெண்களுடைய அபிப்பிராயத்தை தெரிந்துகொண்டு உம்முடைய ஸ்வபாவத்தை அனுசரித்தவர்களான பதின்மூன்று பெண்களையும் உமக்குக் கொடுத்தார். (ஆனதால் எங்களுக்குள் பேதபுத்தி வைக்கக்கூடாதென்பது,) ஓ தாமரை மலர்போன்ற கண்களுள்ளவரே! உபத்திரவப்பட்டவர்கள் பெரியோர்களைச் சரணம் அடைந்தால் வீண்போகாதல்லவா? ஆதலால் எனக்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

16–29. இப்படி தீனையாயும், வெகுவாகப் பேசுகிறவளும், மன்மதனால் பீடிக்கப்பட்டவளுமான அந்தத் திதியை நோக்கி மாரீசரானவர், "ஓ பயந்தவளே! உன்னுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்கிறேன். தருமம், அர்த்தம், காமம் ஆகிய இந்தத் திரிவர்க்கமும் ஸ்திரீயினால் சித்திப்பதால், அவளுக்குப் பிரியமானதை எவன்தான் செய்யமாட்டான்? நல்ல களத்திரமுள்ள புருஷன் மற்ற ஆசிரமிகளுக்கும் உபகாரஞ் செய்து (அன்னம் முதலியவைகளைக் கொடுப்பதால்) தன்னுடைய ஆசிரம தர்மத்தை அனுஷ்டிப்பதால், கப்பலால் சமுத்திரத்தை தாண்டுவது போலத் துக்க சமுத்திரத்தைத் தாண்டுகிறான்' க்ஷேமத்தை விரும்பிய புருஷனுக்கு எவளைப் பாதி சரீரமென்று சொல்லுகிறார்களோ, புருஷன் எவளிடத்தில் ஸகல பாரத்தையும் ஒப்பித்துக் கவலையற்றவனாகச் சஞ்சரிக்கிறானோ. தூக்கத்திற்கு அதிபதி (அரசன்) திருடர்களை ஜயிப்பது போல், எந்த ஸ்திரீயின் பலத்தால் க்ருஹஸ்தன் மற்ற ஆசிரமிகளால் ஜயிக்க

முடியாதவையான இந்திரியங்களைச் சிரமமின்றி அடக்குகிறானோ. (ஸ்திரீயுள்ளவனுடைய இந்திரியங்கள் பெரும்பாலும் பர ஸ்திரீகளிடம் செல்லுகிறது இல்லை யென்று கருத்து) ஓ வீட்டிற்கு அதிபதியாய் இருப்பவளே! அப்படிப்பட்ட பலவகையிலும் உபகாரஞ் செய்கிற உனக்கு என் ஆயுள் முழுவதும் பதிலுபகாரஞ் செய்தாலும் ஜன்மாந்திரங்களில் செய்தாலும் அது பதிலாகாது. மேலும் குணத்தைக் க்ரஹிக்கும் எவர்கள் பதில் செய்வோம் என்று நினைக்கிறார்களோ, அவர்கள் பதில் செய்ய முடியாதவர்களே யாவார்கள். ஆனாலும் உனக்குப் புத்திரன் பிறக்கும் உபாயத்தைச் செய்கிறேன். என்னை நிந்திக்காமல் ஒரு முகூர்த்தக் காலம் பொறுத்துக்கொள்: ஏனென்றால் இந்தக் காலமானது மிகவும் பயங்கரமானது. பயங்கரங்கள் ஆகிய ப்ராணிகள் சஞ்சரிக்கக்கூடியது. இந்தச் சமயத்தில் ருத்ரருடைய பூதகணங்கள் சஞ்சரிப்பார்கள். ஓ பதி விரதையே, இந்த சந்தியா காலத்தில் பரமசிவன் வ்ருஷபத்தின் மீதேறித் தம்முடைய பார்ஷத கணங்களுடன் எங்கும் சஞ்சரிக்கிறார். அந்தப் பரமசிவனுடைய ஜடைகளில், சுடலையில் வீசும் காற்றினால் கிளம்பிய தூளிகள் படிந்திருக்கின்றன, நான்கு புறத்திலும் பறந்து மிருக்கின்றன. காந்தி யுள்ளவைகளுமாகவுமிருக்கின்றன, மேலும் அவர் பொன்னிறமான தம்முடைய சரீரத்தில் விபூதியைத் தரித்துக் கொண்டிருக்கிறவர், அப்படிப்பட்ட உன்னுடைய தேவரன் (பர்த்தாவின் சகோதரன்) மூன்று கண்களால் பார்த்துக் கொண்டிருக்கிறார். லோகத்தில் அவருக்கு பந்துவாவது, மற்றவனாவது (உதரசீனன்), மித்திரனாவது, சத்ருவாவது இல்லை, (எல்லாரிடத்திலும் சமமாயிருப்பவரென்று கருத்து),

அவருடைய சரணங்களால், நிர்மால்யம் போல் தள்ளப்பட்டதும், தோஷமுள்ளதென்று நிச்சயிக்கப் பெற்றதுமான மாயையை (அவருடைய விபூதியை) சம்சாரிகளான நாங்கள் மிகுந்த ப்ரசாதமென்று விரும்புகிறோம். அவித்யையைத் தாண்ட விரும்பிய வித்வான்கள் அவருடைய தோஷமற்ற சரிதத்தைக் கானஞ் செய்கிறார்கள். அவருக்குச் சமமானவனும், மேலானவனும் உலகத்தில் ஒருவருமில்லை. அப்படிப் பட்ட சாதுக்களுக்கதிபதியான அவர் பிசாசத்தின் நடை போன்ற ஆசாரத்தை அனுஷ்டிக்கிறார். பின்னும் அவர் ஆத்ம ஸ்வரூபத்திலேயே ரமிப்பவர். அவருடைய அபிப்ராயத்தை (உலகத்திற்குப் புத்தியைச் சொல்கிறார் என்பதை) அறியாதவர்களும், நாய்க்கு ஆகாரமாக இருக்கும் சரீரத்தையே ஆத்மா என்று நினைத்து, அதை நல்ல வஸ்திரங்களாலும், மாலை களாலும், ஆபரணங்களாலும், சந்தனம் பூசுவது முதலியவைகளாலும் அலங்கரிப்பவர்களுமான அக்ஞர்கள் அவருடைய சரிதத்தைப் பரிகசிப்பார்கள். அவரால் ப்ரஹ்மா முதலியவர்கள் ஸ்ருஷ்டி முதலிய வேலைகளில் ஏற்படுத்தப்பட்டு, தங்கள் தங்கள் அதிகாரத்தைக் காப்பாற்றுகிறார்கள். இந்த ஜகத்திற்கு அவரே காரணம், மாயையானது அவருக்குச் ஸ்வாதீனப்பட்டிருக்கிறது. அப்போர்ப்பட்ட திவ்ய விபூதிகள் பொருந்திய பரமேசுவரன், பிசாசத்தின் செய்கையை அனுஷ்டிப்பது என்ன காரணத்தால் என்று ஊகிக்க முடியாததாக இருக்கிறது" என்றார்.

30–36. அதனைக்கேட்ட திதியானவள் மன்மதனால் கலங்கின இந்திரியங்களுள்ளவாய்த் தாசிபோல் வெட்கத்தை விட்டு அவருடைய

வஸ்திரத்தைப் பிடித்துக் கொண்டாள். அந்த மாரீசர் செய்யக்கூடாத அந்தக் காரியத்தில் தம்முடைய பார்யை நிர்பந்தம் செய்வதை அறிந்து அதிர்ஷ்ட ஸ்வரூபியான பரமேசுவரனுக்கு நமஸ்காரம் செய்து ரகஸ்யத்தில் அவளுடன் சேர்ந்தார். பிறகு ஸ்நானஞ் செய்து ப்ராணாயாமஞ் செய்து மௌனமாகத் தோஷ மற்றதும், சாஸ்வதமானதும், தேஜோ ரூபமாயுமுள்ள பரமாத்மாவைத் தியானஞ் செய்தார்.

ஓ பரத வம்சத்தில் பிறந்தவரே! திதி தேவியானவள் அந்தக் கர்மதோஷத்தால் வெட்கமடைந்து அந்த மஹர்ஷியிடம் வந்து தலை குனிந்தவளாக, "ஓ பிராமணோத்தம! ஸகல பூதங்களுக்கும் அதிபதியுமான பரமசிவனுக்கு நான் அபராதஞ் செய்தேனெல்லவா? அதனால் அவர் கோபங்கொண்டு என்னுடைய வயிற்றில் உண்டாகும் கர்ப்பத்தை கெடுத்து விடாமல் இருக்கும்படி அனுக்கிரகிக்க வேண்டும். மஹாதேவரும் உக்கிரரும், எல்லாவற்றையும் உண்டுபண்ணுகிறவரும், மங்களத்தைச் செய்பவரும், பக்தர்களைக் காப்பாற்று பவரும் சத்துருக்களைச் சிக்ஷிப்பவரும். அஸத்துக்கள் இடத்தில் கோபமுள்ளவரும் ஆகிய ருத்ரருக்கு நமஸ்காரம். வேடர்களாலும் (தயையில்லாதவர்கள்) தயவுசெய்யக் கூடிய ஸ்திரீகளாகிய நம்மிடத்தில் அனுக்கிரக ஸ்வபாவமுள்ளவரும், ஸதீதேவிக்குப் பர்த்தாவுமான அந்த பகவான் தயவு செய்யட்டும் (ஸ்திரீகளுடைய ஸ்வபாவத்தை அறிந்தவர்) என்று கேட்டுக்கொண்டாள்.

37–51. இப்படித் தன்னுடைய கர்ப்பத்திற்கு க்ஷேமத்தை விரும்புகிறவளும், நடுங்குகிறவளும்,

மூவுலகத்திற்கும் தகுந்தவளும். தமது பார்யையுமான திதிதேவியை அந்த மாரீசர் நோக்கி, சந்தியா கால நியமங்களை முடித்துக் கொண்டு, "ஓ கோப ஸ்வபாவம் உள்ளவளே! உன்னுடைய சித்தம் அசுத்தமாக விருந்தாலும், முஹூர்த்த தோஷத்தாலும் (ஸந்தியா காலமாயிருந்தபடியால்), என்னுடைய கட்டளையை மீறினதாலும், தேவர்களை அவமதித்ததாலும் உனக்குத் துஷ்டர்களான இரண்டு பிள்ளைகள் பிறப்பார்கள். அவர்கள் மூன்று உலகங்களையும் அந்தந்த லோக பாலகர்களையும் அடிக்கடி கதறச் செய்வார்கள். யாதொரு அபராதமும் செய்யாத ப்ராணிகள் அவர் களால் அடிக்கப்பட்டு மிகவும் தைன்யத்தை அடை வார்கள், உலகத்திலுள்ள ஸ்திரீகள் நிக்கிரகிக்கப் படுவார்கள். பெரியோர்களுக்கு அவர்கள் கோபத்தை யுண்டுபண்ணுவார்கள். அப்பொழுது லோகத்திற்கு அதிபதியும், அவைகளைப் பரிபாலிப்பவருமாகிய பகவான் கோபங்கொண்டு பூமியில் அவதரித்து வஜ்ராயுதத்தைத் தகித்த இந்திரன் பர்வதங்களை யுடைப்பதுபோல அவ்விருவர்களையும் கொல்லப் போகிறார்', என்று சொன்னார். அதைக் கேட்ட திதியானவள் பர்த்தாவை நோக்கி, "ஓ பிரபுவே! என் னுடைய புத்திரர்களைச் சக்ரபாணியாகிய பகவான் கொல்லட்டும், ப்ராஹ்மணர்களிடமிருந்து அவர் களுக்கு வதம் நேரிடவேண்டாம்" ப்ராஹ்மணர்களி டையே பயத்தை உண்டுபண்ணுகிறவர்களும் எந்தெந்த ஜன்மத்தை அடைந்தாலும், அவ்விடத்திலிருக்கும் நரகிகளும் (பாபிகளும்) அவர்களிடத்தில் தயவு செய்யமாட்டார்கள் என்றாள், அதைக் கேட்ட மாரீசர் திதியை நோக்கி, செய்த குற்றத்தைப் பற்றி உனக்குப் பச்சாதாபம் நேர்ந்தபடியாலும் உடனே

யுக்தம், அயுக்தம் இவைகளை விசாரித்ததாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவினிடத்திலும், பரமசிவனிடத்திலும் கௌரவ புத்தி உண்டானதாலும், என்னிடத்தில் பிரியமுண்டானதாலும் உன்னுடைய பிள்ளையாகிய ஹிரண்யகசிபுவின் புத்திரர்களுக்குள் ஒருவன் பெரியோர்களால் ஒப்புக்கொள்ளக் கூடியவனாக இருப்பான். பகவானுடைய குணங்களுடன் சுத்த மாகிய அவனுடைய கீர்த்தியையும் சேர்ந்து ஜனங்கள் கானம் செய்வார்கள்.

தாழ்ந்த மாற்றுள்ள தங்கத்தை அக்கினியில் புடம்போடுவது முதலிய உபாயங்களால் ஸுத்த ஸ்வர்ணமாகச் செய்வது போலப் பெரியோர்கள் அந்தக் குழந்தையின் ஸ்வபாவத்தை அனுசரிப்பதற்காக (தாங்களும் அவனைப்போல ஆகிறதற்காக) ஓரிடத்தி லும் துவேஷம் செய்யாமலிருப்பது முதலிய உபாயங் களால் தங்களுடைய ஆத்மாவைச் சுத்தப்படுத்திக் கொள்வார்கள்.எவருடைய ப்ரசாதத்தால் இந்த ஜகத் ப்ரகாசிக்கிறதோ எவருடைய ஸ்வரூபமாக இருக்கிறதோ அப்பேர்ப்பட்ட ஆத்மசாட்சியாக பகவான் அந்தக் குழந்தையினுடைய உண்மையான ஞானத்தால் சந்தோஷத்தை அடைவார். மேலும் அவன் பகவத் பக்தர்களுக்குள் சிறந்தவன்; அளவற்ற ஞானமுள்ளவன்; மிகுந்த ப்ரபாவமுள்ளவன்; பெரியோர்களுக்கும் பெரியவன்; மேலும் அவன் விசேஷ பக்தியால் சுத்தமான தன்னுடைய மனத்தில் ஸ்ரீமந் நாராயணனைத் தியானித்துக் கொண்டு, தேகம் முதலியவைகளின் அபிமானத்தை விட்டு விடுவான்.

பின்னும் அந்தப் புத்திரன் நல்ல ஸ்வபாவ

முள்ளவன். நல்ல குணங்களுக்கு உற்பத்தி ஸ்தானம்; பிறருடைய சம்பத்தைப் பார்த்துச் சந்தோஷப்படு கிறவன்; பிறருடைய துக்கத்தால் தானும் துக்கிப்பவன்; ஸத்ருவற்றவன்; வெயிலால், ஜகத்திற்கு உண்டாகும் தாபத்தைச் சந்திரன் போக்கடிப்பது போல லோகத்தின் துக்கத்தைப் போக்கடிப்பான். மேலும் உன்னுடைய பௌத்திரனாகிய அவன், தாமரை, மலர்போன்ற கண்களுள்ளவரும், பக்தர்களுடைய இஷ்டத்திற்குத் தக்கபடி உருவத்தைத் தரிப்பவரும், லக்ஷ்மிதேவியாகிய ஸ்திரீயை அலங்காரமாக உடையவரும், ப்ரகாசிக்கும் குண்டலங்களால் அழகான முகத்தை யுடைய வருமாகிய பகவானை உள்ளிலும், வெளியிலும், நேரிலும் தரிசிப்பான், என்று அனுக்கிரகித்தார். அதனைக் கேட்டு திதியானவள் தன்னுடைய புத்திரர் களுக்குப் பகவானால் வதம் நேரிடப்போகிறதாகத் தெரிந்து கொண்டு விசேஷ உற்சாகத்தை யடைந்தது மன்றி, பௌத்திரன் (பிள்ளையின் பிள்ளை) பகவத் பக்தனாக ஆகப்போகிறான் என்பதைத் தெரிந்து கொண்டதனால் மிகவும் சந்தோஷத்தையும் அடைந்தாள்.

அத்தியாயம்–15

ஜய விஜயர்களுடைய சாபம்

1–10 திதியானவள் சத்துருக்களுடைய தேஜஸ்ஸைப் போக்கடிக்கக்கூடிய அந்த காச்யபர் வீரியத்தை ஆயிர வருஷங்கள் (தேவர்களுக்கு இதனால் உபத்திரவம் நேரிடுமோவென்று சந்தேகப்பட்டுக் கொண்டு) தரித்திருந்தாள். அந்தக் கர்ப்பத்தினுடைய தேஜஸினால் சூரியன் முதலியவைகள் காந்தியற்றவை களாயின. லோகபாலர்களுக்கும் தேஜஸ் குறைந்தது; திக்குகளை இருள் சூழ்ந்து கொண்டது. அப்பொழுது தேவர்கள் ப்ரஹ்மதேவரிடம் சென்று, ஓ ப்ரபுவே, எதனால் நாங்கள் மிகவும் பயப்படுகிறோமோ, அந்த இருள் உண்டான காரணம் உமக்குத் தெரியுமா? உம்முடைய ஞானமானது காலத்தாலும் குறைவுபடு கிறதில்லை;; ஆதலால் உமக்குத் தெரியாத தொன்றும் இல்லை; ஓ தேவர்களுக்கும் தேவரே! ஜகத்திற்கு அதிபதியே! லோகபாலர்களுக்கும் அதிபதியே; எல்லாருடைய அபிப்ராயத்தையும் அறிந்தவரே! விஞானமாகிய பலமுள்ளவரும், மாயையால் ப்ரஹ்ம சரீரத்தை அடைந்தவரும், ரஜோ குணத்தை அங்கீகரித்தவரும் ப்ரபஞ்சத்திற்குக் காரணரும், ப்ரமாணங்களால் அறிய முடியாதவருமாகிய உமக்கு நமஸ்காரம்.

மேலும் நீர் ஜீவர்களைப் பரிபாலிப்பவர்; ஸகல லோகங்களும் உம்மிடத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நீர் எல்லாவற்றிற்கும் மேலானவர். காரிய காரண ஸ்வரூபியாயிருப்பவர்; அப்படிப்பட்ட உம்மை யார்

பலனை யுத்தேசியாமல் பூஜிக்கிறார்களோ அவர்கள் இந்திரியங்கள்;, மனம், ஸ்வாசம், ஆகிய இவைகளை ஜயித்து பக்குவமான யோகமுள்ளவர்களாக உம்முடைய ப்ரசாதத்தை அடைகிறார்கள்.

அவர்களுக்கு ஓரிடத்திலும் அவமானம் நேரிடுகிறது இல்லை. பசுக்கள் கயிறுகளால் கட்டப்படுவது போல் ஸகல ப்ரஜைகளும், உம்முடைய வாக்காகிய வேதங்களால் கட்டப்பட்டு, உம்மைப் பூஜிக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் நியந்தாவாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறோம். திதியினால் தரிக்கப்பட்டதும், காசியபர் உடைய வீரியத்தாலுண்டானதுமான கர்ப்பமானது அக்கினி கட்டையில் விருத்தியடைவது போல் வளர்கிறது. அதனால் திக்குகள் இருளால் மூடப்பட்டு இருக்கின்றன (நல்ல காரியங்கள் நடக்கவில்லை! ராத்திரி பகல் என்ற பிரிவு இல்லாததால்;) ஆதலால் நீர் உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்யும்; கருணை நிறைந்த பார்வையால் ஆபத்தை யடைந்த எங்களைப் பார்க்க வேண்டும் என்றார்கள்.

11–30 சிறந்த கைகளுள்ள ஓ விதுரரே! பகவான் ஆகிய ப்ரஹ்மதேவர் சிரித்து, (திதியின் கெட்ட செய்கையை நினைத்து) அழகான வார்த்தையால் தேவர்களைச் சந்தோஷிக்கச் செய்து கொண்டு பதில் சொல்ல ஆரம்பித்தார். எப்படியெனில், "ஓ தேவர்களே! என்னுடைய மானச புத்திரர்களும் உங்களுக்கு முந்தியவர்களுமான சனகர் முதலியவர்கள். விஷயங்களில் ஆசையில்லாதவர்களாய் ஆகாசத்தின் வழியாக லோகங்களில் சஞ்சரித்தார்கள். ஒருகால் அவர்கள் நிர்மல ஸ்வபாவமுள்ள பகவானாகிய மஹாவிஷ்ணுவின்

லோகமாகிய வைகுண்ட லோகம் சென்றார்கள். அந்த லோகம் எல்லோராலும் நமஸ்கரிக்கப்பட்டது! அவ்விடத்தில் வஸிப்பவர்கள் எல்லோரும் ஸ்ரீமந் நாராயணனுடைய சரீரம் போன்ற தேகமுள்ளவர்கள்! அவர்கள் ஒரு பயனையும் உத்தேசியாமலேயே பகவானை ஆராதிப்பவர்கள்; மேலும் அவ்விடத்தில் எல்லாவற்றிற்கும் முந்தியவரும், வேதங்களாலேயே அறியக் கூடியவரும், தர்ம ஸ்வரூபியுமான பகவான் சத்ய மூர்த்தியாகத் தம்முடைய பக்தர்களான நமக்கு க்ஷேமத்தைச் செய்து கொண்டு வஸிக்கிறார்.

அந்த லோகத்தில் கைவல்யமே சரீரத்துடன் வஸிக்கிறதென்று நினைக்கக் கூடியதும், நைச்ரேயஸம் என்ற பெயருள்ளதுமான ஒரு வனமிருக்கிறது; அதிலுள்ள மரங்கள் இஷ்டமான வஸ்துக்களைக் கொடுக்கக்கூடியவை; எல்லா ருதுக்களிலும் ஏற்படக் கூடிய அழகுள்ளது; அவ்விடத்தில் தேவர்கள் தங்களுடைய ஸ்திரீகளுடன் பகவானுடைய திவ்ய சரிதங்களைக் கானஞ் செய்கிறார்கள். அவைகள் ஜனங்களுடைய பாபத்தைப் போக்கக் கூடியவை; மேலும் அவர்கள் ஜலத்தின் மத்தியில் மலர்ந்திருக்கும் மாதவீ புஷ்பங்களுடைய வாசனையுள்ள காற்றையுங் கூட கவனியாமலிருக்கிறார்கள். (போகத்திற்கு சாதனங்களிருந்தாலும், அவைகளில் ஆசைப்படாமல் பகவத் குணங்களைக் கானம் செய்கிறார்கள்.)

பின்னும் அவ்விடத்திலிருக்கும் சிறந்த வண்டானது உரக்கக் கத்தும்போது, அதனைக் கேட்ட பாராவதங்கள் (புறாக்கள்), குயில்கள், சாரஸங்கள், சக்கரவாகங்கள், நச்சுக்குருவிகள், ஹம்சங்கள்,

கிளிகள், தித்திரிகள் (நெருப்புக்கோழிகள்), மயில்கள் ஆகிய பறவைகள் தங்களுடைய கோலாஹல சப்தத்தை நிறுத்தி விட்டு, 'இந்த வண்டானது பகவத் குணங்களைக் கானம் செய்கிறதோ? என்று ஒரு க்ஷண காலம் மௌனங்களாக இருக்கின்றன. மேலும், துளஸிமாலையுள்ள பகவான் துளஸியின் வாசனையில் பிரீதியுள்ளவராக இருப்பதைப் பார்த்து, மந்தாரம், குந்தம், மருதாணி, நீலோத்பலம், சம்பகம், அர்ண மென்ற புஷ்பம், புன்னை, நாகை மகிழம், தாமரசம், பாரிஜாதம் ஆகிய புஷ்பங்கள் துளஸியினால் செய்யப்பட்ட துபசைப் பற்றிப் புகழ்கின்றன. (அவ்விடத்தில் இருப்பவர்கள் மாத்சரியம் இல்லாத வர்களென்பது கருத்து.) மேலும், அவ்விடத்தில் ஸ்ரீ பகவானுடைய பாதாரவிந்தத்தில் நமஸ்காரஞ் செய்த மாத்திரத்தால் கிடைத்தவைகளும் (கர்மத்தால் கிடைத்தவர்களில்லையென்பது கருத்து).

வைடூர்யம், மரகதம், ஸ்வர்ணம் ஆதிய இவைகளால் செய்யப்பட்டவைகளுமான பக்தர்கள் உடைய விமானங்கள் வெகுவாக இருக்கின்றன. அந்த விமானத்திலிருப்பவர்களும் பகவானிடத்திலேயே மனமுள்ளவர்களுமான பக்தர்களுக்கு அவ்விடத்தில் இருக்கும் அழகான இடுப்பு, சிரிப்பு முதலியவைகளால் ப்ரகாசிக்கும் முகமுள்ள ஸ்திரீகளால் காமத்தை உண்டுபண்ண முடியவில்லை. பின்னும் அவ்விடத்தில் பகவானுடைய க்ருஹமானது தங்க வேலைகளால் அழகான ஸ்படிகச் சுவருள்ளதாக இருக்கிறது, அதில் லக்ஷ்மீ தேவியானவள்; தன்னுடைய ஸ்வரூபத்துடன், பாதங்களில் அணிந்த பாதசரங்களால் இனிமையான சப்தமுள்ளவளாகி, தோஷமற்றவளாய், (சஞ்சலையென்ற

தோஷமற்றவளாக) தன்னுடைய கையிலிருக்கும் தாமரைப் புஷ்பத்தால் அவ்விடத்திலுள்ள தங்கத் தூள்களைப் பெருக்குகிறவள் போலக் காணப்படுகிறாள். அவளுடைய அனுக்கிரகத்திற்காகவே ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் முயலுகிறார்கள்.

மேலும் ஓ தேவர்களே! அந்த லக்ஷ்மீதேவியானவள் தன்னுடைய உத்யானத்தில் பவழக்கரையுள்ளவைகளும் நிர்மலமாகிய ஜலமுள்ளவைகளுமான ஓடைகளில் தன்னுடைய தோழிகளுடன் துளஸியினால் பகவானைப் பூஜிக்கிறாள். அப்பொழுது ஜலத்தில் ப்ரதிபிம்பித்தும், அழகான தலைமயிருள்ளதும், மேலான மூக்குள்ளதுமான தன்னுடைய முகத்தைப் பார்த்து, பகவானால் சும்பனஞ் செய்யப்பட்டதென்று நினைத்தாள். (லக்ஷ்மியின் அழகும் பகவத்ததீனம்) எந்தக் கதைகளைக் கேட்ட மனிதர்களுக்குப் புண்யமும், அதிருஷ்டமும் குறைகின்றதோ, நரகத்தை அடைகிறார்களோ, அப்போர்ப்பட்டவைகளும், விவேகத்தைப் போக்கக் கூடியவைகளும். அர்த்தம், காமம் ஆகிய இவைகளைப் பற்றியவைகளுமான கெட்ட கதைகளைக் கேட்பவர்களும், பாபத்தைப் போக்கடிப்பவராகிய பகவானுடைய ஸ்ருஷ்டி முதலியவைகளைச் சொல்வதில் பிரியமற்றவர்களுமான ப்ராணிகள் அந்த வைகுண்டம் செல்கிறதில்லை.

தேவர்களான நம்மாலும் விரும்பப்பட்டதும், தர்மம், ஞானம் ஆகிய இவைகளுக்கு சாதனமுமான மனுஷ்ய ஜன்மத்தையடைந்தும் எவர்கள் பகவான் உடைய மாயையால் மோஹித்து அவரை ஆராதிக்க வில்லையோ, அவர்களும் அவ்விடம் செல்லுகிறது

இல்லை. எவர்கள் தேவர்களுக்கு தேவராகிய பகவானை அனுசரிக்கிறார்களோ, அவர்கள் நம்மாலும் ஆசைப்படக் கூடிய சுபாவமுள்ளவர்களேயாம். அவர் களுக்கு யமனுடைய உபத்திரவம் இல்லை. எவர்கள் ஒருவருக்கொருவர் தங்களுடைய யஜமானனாகிய பகவானுடைய குணங்களைக் கானம் செய்து, அதனால் தேகம் பரவசமாகி மயிர்க்கூச்சல் உண்டானவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் மேற்சொல்லிய வைகுண்டஞ் செல்வார்கள்.

ஜகத்திற்கு அதிபதியாகிய ஸ்ரீமந் நாராயணனுடைய வாசஸ்தலமும், ஸகல ஜகத்தினால் கொண்டாடக் கூடியதும்; தேவார்ஹமாயும், விசித்திரங்களான சிறந்த விமானங்களுடைய காந்தியுள்ளதுமான அந்த வைகுண்டத்திற்கு அம்முனிகள் தங்களுடைய யோகமாயா பலத்தால் சென்று, பரமானந்தத்தை அடைந்தார்கள். அவ்விடத்தில் அந்த மஹரிஷிகள் அற்புதமான விஷயங்களைப் பார்த்தும் அவைகளில் ஆசைப்படாமல் (பகவத் தரிசனத்தில் ஆசையால்) ஆறு ப்ராகாரங்களைத் தாண்டி ஏழாவது ப்ராகாரம் சென்று அவ்விடத்தில் இரண்டு துவாரபாலகர்களைக் கண்டார்கள். அவர்கள் ஒரே வயதுள்ளவர்கள்! விலையுயர்ந்த தோள் வளைகள், குண்டலங்கள், கிரீடம் ஆகிய இவைகளால் அழகாயிருப்பவர்கள். கையில் கதாயுதத்தைத் தரித்தவர்கள்; வனமாலை யினால் அலங்கரிக்கப்பட்டவைகள். கருமையான நிறமுள்ள நான்கு கைகளுள்ளவர்கள்.

மேலும், அவர்களுடைய முகத்தில் வக்கிரமான புருவங்களும், சிவந்த கண்களும்; பெரிய மூக்குகளும்

இருக்கின்றன. அப்பொழுது அந்த முனிகள் ஸ்வர்ணத்தாலும், வஜ்ரத்தாலும் செய்யப்பட்ட கதவுகளுள்ள ஆறு ப்ராகாரங்களுக்குள் ப்ரவேசித்தது போல, ஏழாவது ப்ராகாரத்திலும் த்வார பாலகர் களான அவ்விருவர்களும் பார்த்துக் கொண்டிருக்க, அவர்களைக் கேட்காமலேயே உள்ளே சென்றார்கள். அவர்கள் சமதிருஷ்டி உள்ளவர்களாகையால் எங்கும் பயமில்லாமல் சஞ்சரிப்பவர்கள். அவர்களை ஒருவரும் தடுக்கிறதில்லை. இப்படிப் பகவானைத் தரிசிப் பதற்காக உள்ளே செல்லுகிறவர்களும், வஸ்திரமில்லாத வர்களும், மிகவும் வயது சென்றவர்களானாலும், ஐந்து வயதுள்ளவர்கள் போல் தோன்றுகிறவர்களும், ஆத்மாவின் உண்மையை அறிந்தவர்களும், தடுக்கக் கூடாதவர்களுமாகிய அந்தச் ஸனகர் முதலிய முனிவர்களைப் பார்த்து, அந்தத் த்வாரபாலகர்கள் இருவர்களும் அவர்களுடைய தேஜஸை (தைரியத்தைப்) பற்றி பரிகாசஞ் செய்து பகவானுக்குப் ப்ரதிகூல ஸ்வபாவமுள்ளவர்களாகிப் பிரம்பினால் அவர்களைத் தடுத்தார்கள்.

31–34 இப்படி ஸகல தேவர்களும் பார்த்துக் கொண்டிருக்கும் போது ஸ்ரீ பகவானுடைய த்வார பாலகர்களால் தடுக்கப்பட்ட பூஜ்யர்களான அந்த மஹரிஷிகள், ஸகல லோகத்திற்கும் மிகுந்த ஸுகிருத்தாகிய பகவானுடைய தரிசனத்திற்கு விக்கினம் நேர்ந்ததால் கோபம் கொண்டு, கலங்கிய கண்களுடன் பகவானுக்கு மிகுந்த சிச்ருஷையைச் செய்து, அதனால் வைகுண்டவாசத்தை அடைந்து எல்லாவற்றையும் சமமாகப் பார்க்கும் ஸ்வபாவமுள்ள இந்த லோக ஜனங்களுக்குள் இவர்களுடைய

ஸ்வபாவம் வேறாகக் காணப்படுகிறதே, இதென்ன? ஓ த்வாரபாலகர்களே! மிகவும் சாந்தரும், துவேஷமற்ற வருமாகிய அந்த மஹாபுருஷனிருக்குமிடத்தில் யார் தான் போகக்கூடாது? (எல்லோரும் போகலாமென்று கருத்து.) நீங்களிருவர்களும் கபட ஸ்வபாவமுள்ளவர்கள் ஆகையால் உங்களைப் போல் மற்றவர்களும் கபடமாக இருப்பார்களென்று பிறரைப் பற்றிச் சந்தேகிக்கிறீர்கள். (பகவத் பக்தி இல்லாதவர்கள் இவ்விடம் வரமாட்டார்கள். பகவான் மிகவும் சாந்தராகையால் அவரிடத்தில் பயப்படவேண்டியது இல்லை. ஆகையால் நீங்கள் மிகவும் துஷ்டர்கள் என்று கருத்து) ஸகல ஜகத்தையும் தம்முடைய வயிற்றில் வைத்துக் காப்பாற்றும் பகவானுக்கு பேதபுத்தி இல்லை.

குடத்திற்குள் இருக்கும் ஆகாசமானது எப்படி மஹாகாசத்தில் அடங்கியதோ, அப்படியே பரமாத்மாவினிடத்தில் தாங்கள் அடங்கியவர்கள் என்று வித்வான்கள் பார்க்கிறார்கள். அப்பேற்பட்ட பகவானிடத்தில் மற்றவர்களிடத்தில் போல் பேத புத்தியாலுண்டாகும் பயமானது தேவர்கள் போல வேஷந் தரித்த உங்களால் உண்டு பண்ணப்பட்டது. ஆனதால் மந்தபுத்தியுள்ளவரும் ஸ்ரீ பகவானுடைய வேலைக்காரர்களுமாகிய உங்களுடைய க்ஷேமத் திற்காகவே யோசித்துச் சொல்லுகிறோம். நீங்கள் பேதபுத்தி உள்ளவர்களாகையால், காமம், குரோதம், உலோபம் ஆகிய மிக்க பாபிகளாகிய மூன்று சத்ருக்கள் வஸிக்கும் பூலோகத்திற்குச் செல்லுங்கள், என்றார்கள்.

35–36 அதனைக் கேட்ட அவ்விருவர்களும், ஸ்ரீ மஹா விஷ்ணுவின் வேலைக்காரர்களானாலும், ப்ராஹ்மண சாபம் அநேக அஸ்திரங்களாலும் நிவர்த்திக்க முடியாதது, என்ற நிச்சயமுள்ளவர்களாகி மிகவும் பயந்து அம்முனிவர்களுடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டு அவர்களை நோக்கி, ஓ மஹரிஷிகளே! குற்றஞ் செய்தவர்களான எங்களுக்குத் தக்கபடி சிக்ஷை விதித்தீர்கள். (தங்களிடத்தில் கொஞ்சமேனும் குற்றமில்லை யென்பது கருத்து.) ஆனாலும் நீங்கள் எங்களிடத்தில் கிருபை செய்து, பச்சாதாபமடைந்து, எங்களை அனுக்கிரஹிக்க வேண்டும். எங்களுடைய புத்திக் குறைவினால் நாங்கள் கீழுலகஞ் சென்றாலும், அவ்விடத்தில் எங்களுக்கு மோஹம் உண்டாகாமல் இருக்க வேண்டும். அப்படி மோஹம் உண்டானாலும் பகவானுடைய ஞாபகமிருக்க வேண்டும். அஃதிருந்தால் ஈசுவரனுடைய ஆக்ஞையை அதிக்ரமித்ததாலுண்டான தோஷமும் நீங்கிவிடும், என்று கேட்டுக் கொண்டார்கள்.

37–45 அப்பொழுது பெரியோர்களுக்கு மனோகரராகிய பகவான் தம்மைச் சார்ந்த த்வார பாலகர்கள் சாதுக்களுக்கு குற்றஞ் செய்தார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு, பரமஹம்சர்களான மஹர்ஷிகளாலும் தேடக்கூடிய தம்முடைய பாதங்களை அசைத்துக் கொண்டு (கால்நடையாக) லக்ஷ்மீதேவி யுடன் அவ்விடம் வந்தார். (என்னுடைய பாததரிசனத் திற்காக வந்தவர்களைத் தடுத்ததால் அவர்கள் கோபங் கொண்டார்கள். அந்தத் தரிசனத்தை அவர்களுக்குக் கொடுத்தோமன்னால் கோபம் தணிந்துவிடுமென்பது கருத்து) அந்த முனிவர்கள் அப்பொழுது அவ்விடம்

வந்த பகவானைத் தரிசித்தார்கள். அவர் அந்த முனிகளுடைய சமாதியால் அடையக் கூடிய பாக்கிய மேயாவார். மேலும் அவரை அந்த லோகத்துப் புருஷர்கள் குடை முதலியவைகளால் உபசரிக்கிறார்கள். அவருடைய பக்கங்களில் ஹம்சம் போன்ற சாமரங்கள் வீசப்படுகின்றன. அவைகளிலிருந்து வீசும் காற்றானது மிகவும் சுககரமாகவிருக்கிறது. அதனால் சந்திரன் போலப் ப்ரகாசிக்கும் வெண்குடையில் தொங்குகிற முத்து மாலைகள் அசைகின்றன. அவைகளிலிருந்து ஜலத்துளிகள் விழுகின்றன.

பின்னும் அந்தப் பகவான் எல்லாரிடத்திலும் தயைசெய்யும் நல்ல முகமுள்ளவர். ஆசைப்படக்கூடிய சத்குணங்களுக்கு வாசஸ்தலமாக இருப்பவர். ப்ரீதியுடன் பார்ப்பதால் மனத்திற்கு சந்தோஷத்தை உண்டு பண்ணுகிறவர். மேலும், அவர் சுவர்கத்திற்குச் சிரோரத்னமாக இருக்கும் தம்முடைய வைகுண்ட லோகத்தைத் தம்முடைய கருத்த மார்பிலிருக்கும் லக்ஷ்மீயால் ப்ரகாசிக்கச் செய்பவர். மேலும் பீதாம்பரம் தரித்த பெரியதாக பகவானுடைய நிதம்பத்தில் ப்ரகாசிக்கிற கடிசூத்ரத்தாலும், வண்டுகளால் சப்திக்கும் வனமாலையாலும் அந்த உலகம் விளங்குகிறது. மேலும், அந்தப் பகவான் அழகான கங்கணத்தைத் தரித்தவர். கருடனுடைய தோளில் ஒரு கையை வைத்தும், மற்றொரு கையால் தாமரைப் புஷ்பத்தைச் சுழற்றிக் கொண்டு மிருந்தார். அவருடைய கன்னங்கள் மின்னலை அவமதிக்கக் கூடிய மகர குண்டலங்களால் அலங்கரிக்கப்பட்டவை, முகமானது அழகான மூக்குள்ளது. பின்னும் அவர் ரத்னங்களிழைத்த கிரீடமுள்ளவர். கைகளுடைய

மத்தியில் ப்ரகாசிக்கின்ற கௌஸ்துப ஹாரமுள்ளவர். அவருடைய சரீரமானது மிகுந்த அழகுள்ளதாகையால், பக்தர்கள் அவருடைய திவ்ய தேகத்தைத் தரிசித்தவுடன், நானே மிகுந்த சௌந்திரியமுள்ளவன் என்ற லக்ஷ்மீதேவியுடைய அகங்காரம். இதனால் அடக்கப்பட்டதென்று நினைக்கிறார்கள்.

அப்போர்ப்பட்ட பகவானுடைய சரீரத்தைத் தரிசித்து அம்முனிகள் திருப்தி அடையாதவர்களாகி, மிகுந்த சந்தோஷத்துடன் அவருடைய பாதத்தில் தங்களுடைய சிரசு படும்படியாக நமஸ்கரித்தார்கள். அவர் ப்ரஹ்மாவாகிய என்னாலும், பரமசிவனாலும் உங்களாலும் (தேவர்களாலும், சேவிக்கத்தக்க திவ்ய சரீரத்தைப் ப்ரகாசப்படுத்துகிறவர்) அப்பொழுது அந்தப் புண்டரீகாக்ஷருடைய (தாமரைக் கண்ணன்) பாதங்களிலிருந்து துளஸியின் மதுவுடன் கூடிய காற்றானாது மூக்கு வழியாக அவர்களுக்குட் சென்றது. அவர்கள் ப்ரம்மானந்தத்தை அனுபவிக்கிறவர்களானாலும், அவர்களுடைய மனம் கலங்கினது. சரீரத்தில் மயிர்க் கூச்சலுண்டாயிற்று. பின்பு அவர்கள் பகவானுடைய கருத்த தாமரை மலர் போன்ற முகத்தையும்,அதில் சிவந்த அழகாய் உள்ள உதடுகளையும் குருக்கத்தி மலர் போல் வெண்மையான சிரிப்பையும் பார்த்து பூர்ண மனோரதமுள்ளவர்களாகத் திரும்பவும் இரத்தினங்கள் போன்ற நகங்களுக்கு ஆசிரயங்களான அவருடைய பாதங்களைத் தரிசித்துத் தியானஞ் செய்தார்கள். (எல்லா அவயவங்களுடைய லாவண்யத்தை ஒரே தடவையில் பார்த்து க்ரஹிக்க முடியாதவர்களாக அடிக்கடி பார்த்தார்களென்பது கருத்து.) அந்தப்

பகவான் யோக மார்க்கத்தைக் கொண்டு தேடுபவர்களால் தியானஞ் செய்யகூடியவர். அநேக ஞானிகளால் உபாசிக்கப்பட்டவர். புருஷரூபத்தைக் காண்பித்தவர். மற்றவர்களுக்குக் கிடைக்காதவைகளும், இயற்கையாகவே கிடைத்தவைகளுமான எட்டுவித ஐசுவர்யங்களுள்ளவர், அப்பேர்ப்பட்ட பகவானை அந்த ஸனகர் முதலிய மஹர்ஷிகள் பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்தார்கள்.

46 50 "ஓ பகவன்! நீர் ஸகல பிராணிகளுடைய ஹிருதயத்திலிருப்பவரானாலும், துஷ்டர்களுடைய கண்களுக்குப் புலப்படுகிறதில்லை. அப்பேர்ப்பட்ட நீர் எங்களுடைய கண்களுக்குப் புலப்பட்டீர். உம்மிடத்திலிருந்து உண்டானவரும், எங்களுக்குப் பிதாவுமான ப்ரஹ்மதேவர். உம்முடைய ரகசியத்தை உபதேசித்தபொழுதே, நீர் காதின் வழியாக எங்களுடைய ஹிருதயத்தை அடைந்திருக்கிறீர். ஓ பகவான்! உம்மைப் பரமாத்மா வென்றும், சுத்த சத்வ மூர்த்தியாகையால் பக்தர்களுக்கு ரதியை (ஆசையை) உண்டு பண்ணுகிறவராகவும், தெரிந்து கொள்ளுகிறோம். உம்முடைய கிருபையால் (அனுதாபம்) பக்தி யோகத்தை அடைந்து அதனால் மனத்திலிருக்கும் அகங்காரத்தை ஒழித்து, வைராக்யமடைந்த மஹரிஷிகள் உம்மை அறிவார்கள். மேலும், ஸ்தோத்திரம் பண்ணக்கூடியதும், பரிசுத்தியை உண்டு பண்ணக் கூடியதுமான உம்முடைய கதையின் ரசத்தை எவர்கள் அறிந்திருக்கிறார்களோ, எவர்கள் உம்முடைய பாதாரவிந்தத்தைச் சரணமடைந்து இருக்கிறார்களோ, அந்தப் பக்தர்கள் உம்முடைய அனுக்கிரகபரமான மோக்ஷத்தையும் விரும்புகிறதில்லை.

அப்படியிருக்க, பயமுள்ளதாகிய இந்திரபதம் முதலியவைகளை விரும்புவார்களா? ஓ பகவன்! உம்முடைய பக்தர்களைச் சபித்ததால் நாங்கள் தங்களுக்கு அபராதஞ் செய்தவர்களானோம். அதனால் எங்களுக்கு ஜன்மம் ஏற்படுமோ? வண்டானது முட்களால் வருத்தப்பட்டும் புஷ்பங்களில் ரமிப்பது போல அந்த ஜன்மாவிலும் எங்களுடைய மனமானது உம்முடைய பாதாரவிந்தத்தையே நினைத்திருக்கும் ஆனால் அந்த ஜன்மமும் எங்களுக்குக் கிடைப்பது சம்மதமேயாகும். ஆனால் துளசியானது உம்முடைய பாதத்தின் சம்பந்தத்தால் விளங்குவதுபோல் எங்களுடைய வாக்கும் தங்களுடைய குணங்களைச் சொல்வதாலேயே ப்ரகாசிக்க வேண்டும். எங்களுடைய காதுகளும் உம்முடைய கல்யாண குணங்களைக் கேட்பதாலேயே நிறைந்திருக்க வேண்டும்.

ஓ மிகுந்த கீர்த்தியுள்ளவரே! நீர் இந்த திவ்ய ஸ்வரூபத்தை நாங்கள் பார்க்கும்படி செய்ததால் எங்களுடைய கண்கள் சபலங்களாயின. இந்த ஸ்வரூபம் துஷ்டர்களுக்குப் புலப்படாது அந்தப் பகவானாகிய உமக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்' என்று சொன்னார்கள்.

அத்தியாயம்–16

ஜய விஜயர்களுக்கு அனுக்கிரகம்

1–2. அந்த ஸனகர் முதலிய யோகிகளுடைய வார்த்தையைச் சிலாகித்து வைகுண்டத்திலிருக்கும் சாக்ஷாத் பகவான், இந்த ஜயன் விஜயன் என்கிற இருவர்களும் என்னுடைய பார்ஷதர்களானாலும் இவர்கள் தர்மத்தை அதிக்ரமித்தவர்கள். ஆதலால் இவர்கள் விஷயத்தில் என்னுடைய பக்தர்களான உங்களால் செய்யப்பட்ட சிக்ஷையானது எனக்கும் அபிமதமேயாம், எனக்குப் ப்ராஹ்மணர்களே முக்கியமான தெய்வம். என்னுடைய வேலைக்காரர்களால் செய்யப்படும் குற்றமானது என்னால் செய்யப்பட்டதாகவே நினைக்கிறேன். நீங்கள் மன்னிக்கவேண்டும். எவனுடைய வேலைக்காரன் கெட்ட காரியத்தைச் செய்கிறானோ அவனைப்பற்றி ஜனங்கள் பேசிக் கொள்வார்கள் அல்லவா? அது குஷ்ட ரோகமானது தோலைக் கெடுப்பது போல யஜமானுடைய கீர்த்தியைக் கெடுத்துவிடுகிறது. என்னுடைய சுத்தமும் அமிருதமயமுமாகிய கீர்த்தியைக் கேட்பதால் அதில் ஸ்நானம் செய்யும் சண்டாளன் வரையிலுள்ள ஜகத்தானது பரிசுத்தமாகி விடுகிறது. உங்களிடமாக நல்ல கீர்த்தியை அடைந்து விளங்கும் நான் என்னுடைய கையானாலும் உங்களுக்கு விரோதம் செய்யுமானால் அதை வெட்டிவிடுவேன். ப்ராஹ்மணர்களைச் சேவித்ததால், பரிசுத்தமாகிய பாததூளி உள்ளவனாகவும், ஸகல பாபங்களையும் போக்கக் கூடியவனாகவும் நல்ல ஸ்வபாவத்தை அடைந்தவனுமாகவும் நான் இருக்கிறேன். அப்போர்ப்பட்ட என்னை

(வைராக்கிய முள்ளவனாலும்) லக்ஷ்மி ஒருபொழுதும் விடுகிறதில்லை. அவளுடைய கடாக்ஷத்தை ப்ரஹ்ம தேவர் முதலியவர்களும் அடைய விரும்பித் தபஸ் செய்கிறார்கள். ப்ராஹ்மணர்களுக்கு அன்னங் கொடுத்து அவர்கள் நெய் ஒழுகும்படி புசிக்க அவர்கள் முகமாய் நான் புசித்து எவ்வளவு திருப்தி அடைகிறேனோ அவ்வளவு சந்தோஷமானது யாகத்தில் யஜமானனால் கொடுக்கப்படும் ஹவிஸ்ஸை அக்கினி முகமாகப் புசிப்பதால் எனக்கு உண்டாகிறது இல்லை. ப்ராஹ்மணர்கள் குற்றஞ் செய்தாலும் அதைப் பொறுப்பதே உசிதம்.

எவர்களுடைய பாதத்தை அலம்பிய ஜலமானது பரமசிவனையும் மற்ற ஜகத்தையும் பரிசுத்தப்படுத்து கிறதோ, தடையற்றதும் பூர்ணமுமான யோக மாயையின் விபூதிகளை உடையவனாகிய நான் அந்தப் ப்ராஹ்மணர்களுடைய பாததூளியைச் சிரசால் தரிக்கிறேன். மேலும் என்னுடைய சரீரரமாகிய ப்ராஹ்மணர்களையும், பசுக்களையும் காப்பாற்று கிறவர்களில்லாமல் கஷ்டப்படும் மற்றப் ப்ராணிகளையும் பாப ஸ்வபாவமுள்ள எந்தப் புருஷர்கள் சர்ப்பம் போல் கோபமுள்ளவர்களாகி என்னை காட்டிலும் வேறென்று நினைக்கிறார்களோ, அவர்களை என்னுடைய வேலைக்காரனாகிய யமனிடத்திலிருக்கும் கழுகுபோன்ற தூதர்கள் உபத்திரவிக்கிறார்கள். எவர்கள் ப்ராஹ்மணர்களை என்னுடைய ஸ்வரூபமென்று நினைத்து சித்தத்தில் சந்தோஷத்துடனும், சிரித்த முகத்துடனும் பூஜிக்கிறார்களோ, பிரியமுள்ள வார்த்தையால் பேசிக்கொண்டு புத்திரனைப்போல் அழைக்கிறார்களோ, அவர்கள் என்னைப் பூஜித்தவர்களாக

ஆகிறார்கள். ஆதலால் இவ்விருவரும் யஜமானனாகிய என்னுடைய எண்ணத்தை (ப்ராஹ்மணர்களே தெய்வமென்பதை) அறியாமல், உங்களிடத்தில் குற்றஞ் செய்ததால், அதன் பலனை உடனே அனுபவித்து மறுபடியும் என்னுடைய சமீபம் சேரட்டும். இவர் களுக்குச் சீக்கிரமாக சாபத்தின் முடிவுக்காலத்தை ஏற்படுத்துவதே என்னைப்பற்றிச் செய்யும் அனுக்கிரமாகும்" என்று கேட்டுகொண்டார்.

13–25. அந்த யோகிகள் கோபமுள்ளவர்களானா லும் பின்பு பிரியாமானதும். மந்திர ஸ்வரூபமான அந்த வார்த்தையைக் கேட்ட அவர்களுடைய ஆத்மாவானது போதுமென்று திருப்தி அடையவில்லை. மேலும் அவர்கள் சொற்ப, அக்ஷரங்களுள்ளதும் மிகுந்த அர்த்தமுள்ளதும், சிறந்ததுமான பகவானுடைய வார்த்தையைக் காதுகொடுத்துக் கேட்டு அர்த்தத்தா லும் அபிப்பிராயத்தாலும் கம்பீரமாகிய அதனை நன்றாக யோசித்தும் பகவானுடைய எண்ணம் இன்னதென்று தெரிந்துகொள்ள முடியாதவர்களாக மிகுந்த சந்தோஷத்துடன் மயிர்க்கூச்சலை யடைந்து யோக மாயையால் தம்முடைய மேலான ஐசுவர்யத்தின் மேன்மையைக் காண்பிக்கும் பரமபுருஷனை நோக்கி, "ஓ பகவான், நீர் எல்லாவற்றிற்கும் அதிபதியாயிருந்து நான் அபராதஞ் செய்தேனென்றும் எனக்கு அனுக்கிரஹஞ் செய்யுங்களென்றும் சொல்லுகிற உங்களுடைய எண்ணம் இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை. ப்ராஹ்மணர்களிடத்தில் பக்தியுள்ள வராகிய உமக்குப் ப்ராஹ்மணர்கள் முக்கிய தெய்வம் என்பது ப்ரசித்தமே. தேவர்களுக்கும் தேவர்களான ப்ராஹ்மணர்களுக்கும் நீர் ஆத்மாவாகவும்

தெய்வமாகவும் இருக்கிறீர். உம்முடைய அவதாரங்களால் புராதனமான தர்மமானது காப்பாற்றப்படுகிறது. விகாரமற்றவராகிய நீர் தர்மத்திற்கு முக்கிய பலமாக ஆகிறீர். யோகிகள் உம்முடைய அனுக்கிரஹத்தால நிவிர்த்தி மார்க்கத்தை யடைந்து ஸம்சாரத்தைத் தாண்டுகிறார்கள். அப்பேர்ப்பட்ட உமக்குப் பிறர் அனுக்கிரஹஞ் செய்வதென்பது ஆச்சரியமாயிருக்கிறது. மேலும் பக்தர்களால் உம்முடைய பாதாரவிந்தத்தில் அர்ச்சிக்கப்பட்ட துளசி மாலையை வண்டானது விரும்புவதுபோல், லக்ஷ்மீதேவியானவள் பக்தர்களால் உம்முடைய பாதத்தில் சமர்ப்பிக்கப்படும் துளஸி மாலையில் வஸிக்கும் சிறந்த வண்டுக்கும் ஸ்தானமாகிய பாதத்தை விரும்பியவள்போல உம்மை ஒவ்வொரு சமயத்திலும் சேவிக்கிறாள். பணத்தை விரும்பியவர்கள் அவளுடைய பாததூளியைச் சிரசால் தரிக்கிறார்கள். சிறந்த பக்தர்களிடத்திலேயே தொடர்புடைய நீர், பலவித ஸுலக்ஷணங்களால் ஸேவிக்கும் மஹாலக்ஷ்மியையும் ஆதரிப்பதில்லை. உம்மிடத்தில் சேவிக்கக்கூடிய குணங்கள் யாவும் இருக்கின்றன்.

அப்படியிருக்க, ப்ராஹ்மணர்களுடைய பாத தூளியும் ஸ்ரீ வத்ஸமென்ற அடையாளமும் உம்மைப் பரிசுத்தப் படுத்துகிறதென்று எப்படிச் சொல்லக் கூடும்? பாதத்திலிருக்கும் துளஸி மாலையிலிருக்கும் வண்டைப் பார்த்து லக்ஷ்மீதேவியானவள் 'இந்த வண்டு சாரத்தைக் கிரஹிக்கும் ஸ்வபாவமுள்ளது, சபல ஸ்வபாவமுள்ளது. இதுவும் பகவானுடைய பாதத்திலிருக்கும் துளஸியில் ரமிக்கிறது, ஆகையால் பாதத்தின் வாவண்யம் அதிகம் ஆனதுபற்றி நான்

மார்பிலிருந்தாலும் ஸபத்னியாகிய துளஸியுடன் பாதத்தைச் சேவிப்பேன், என்று அனுசரிக்கிறாள். (அவளை நீர் ஆதரிக்கிறதில்லை) தர்ம மூர்த்தியாகிய உமக்கு மூன்று யுகங்களில் மூன்று பாதங்கள் இருக்கின்றன. (தபஸ், சௌசம், தயை) ப்ராஹ்மணர்களுக்காகவும். தேவர்களுக்காகவும், இந்த ஸ்தாவர ஜங்கமங்களடங்கிய ஜகத்தை சத்வ குணம் பொருந்தியதும், வரத்தைக் கொடுக்கிறதுமான உம்முடைய சரீரத்தால் அதற்கு விகாரமான ரஜஸ் தமஸ் ஆகிய இவைகளை அடக்கிக் காப்பாற்றுகிறீர். உம்மால் காப்பாற்ற வேண்டிய ப்ராமணோத்தமர்கள் உடைய கூட்டத்தைப் பிரியமான வார்த்தையாலும் பூஜையாலும் நீர் காப்பாற்றாமற்போனால், வேத மார்க்கமானது கெட்டுப் போய்விடும். லோகத்தில் சிறந்தவனால் அனுஷ்டிக்கப்படும் தர்மத்தையே மற்றவர்கள் பிரமாணமாகக் கொள்கிறார்கள். சத்வ குண நிதியும் ஜனங்களுக்கு க்ஷேமத்தைச் செய்ய விரும்பியவரும், தமது சக்தியால் தர்ம விரோதிகளை நாசஞ் செய்பவருமாகிய உமக்கு வேத மார்க்கம் கெட்டுப் போவது அபிதமல்ல. ப்ராஹ்மணர்களை வணங்குவதால் ஜகத்பதியாகிய உம்முடைய தேஜஸ் குறைகிறதில்லை. அது உமக்கு விளையாட்டேயாம். ஓ ஈச! இவர்களுக்கு நீர் எந்தச் சிக்ஷையை விதித்தாலும் ஜீவனத்தை ஏற்படுத்தினாலும் அதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம் அபராதஞ் செய்யாதவர்களான இவ்விருவர்களையும் நாங்கள் சபித்தபடியால் எங்களுக்கு தகுதியான சிக்ஷையை விதியும்" என்றார்கள்.

26. அதனைக் கேட்ட பகவான் "ஓ ப்ராஹ்மணர்களே!

இந்தப் பார்ஷதர்களிருவரும் அசுரஜன்மத்தை அடைந்து அந்த ஜன்மத்தில் கோபத்தால் மனத்தை என்னிடத்திலேயே செலுத்துவதாகிய யோகத்தைச் செய்து மறுபடியும் என்னுடைய சமீபத்தை அடைவார்கள். உங்களால் செய்யப்பட்ட சாபமானது என்னால் கொடுக்கப்பட்டதென்றே நினையுங்கள் என்றார்.

27–28. பின்பு அந்த மஹரிஷிகள் நேத்ரானந்தத் திற்கு பாத்திரமாயும், வேறு பிரகாசத்தை அபேக்ஷியா மல் சுயமாய்ப் ப்ரகாசிப்பவருமான ஸ்ரீ மஹாவிஷ்ணு வையும் அவருக்கு இருப்பிடமான வைகுண்ட த்தையும் பார்த்து, பகவானை பிரதக்ஷிணமாகச் சுற்றி நமஸ்காரஞ் செய்து அவரிடம் விடைபெற்று விசேஷ ஆனந்தத்து டன் மஹாவிஷ்ணுவின் விபூதியைப்பற்றிக் கொண்டாடிக்கொண்டு சென்றார்கள்.

29–37. பகவான் தம்முடைய பார்ஷதர்கள் இருவரையும் நோக்கி "நீங்கள் பயப்படவேண்டாம் உங்களுக்கு க்ஷேமமுண்டாகும். உங்களுடைய சாபத்தைப் போக்கடிக்க நான் ஸமர்த்தனானாலும் ப்ரஹ்ம தேஜஸ்ஸை அடக்க எனக்கு இஷ்டமில்லை. மேலும் முன்னொருகாலத்தில் நான் பிரளய கலகத்தால் தனித்திருக்கும்போது (அந்தப்புரத்திலிருந்து வெளியில் போன லக்ஷ்மீதேவியை) அந்தப்புரத்தில் பிரவேசிக்கும் லக்ஷ்மீதேவியைத் தடுத்தபடியால் உங்களுக்கு இந்த விஷயம் லக்ஷ்மீயினாலேயே சொல்லபட்டிருக்கிறது. ஆதலால் ப்ராஹ்மண அவமானத்தின் பலனை அனுபவித்து அந்த ஜன்மத்தில் விரோதத்தால் என்னை எப்பொழுதும் தியானம் செய்து சொற்ப

காலத்தில் என்னுடைய சமீபம் வருவீர்கள் என்று பகவான் த்வாரபாலகர்களுக்கு ஆக்ஞாபனம் செய்து அநேக விமானங்களுக்கு அலங்காரமாகவும், எல்லாவற்றிற்கும் மேலான காந்தி பொருந்தியதுமான தமது ஸ்தானஞ் சென்றார். பிறகு அந்தத் தேவ சிரேஷ்டர்கள் இருவரும் தடுக்க முடியாத ப்ரஹ்ம சாபத்தால் கர்வமற்றவர்களாக ஆனார்கள்.

ஓ குழந்தைகாள்! வைகுண்டத்திலிருந்து அவர்கள் விழும்போது விமானங்களிலிருப்பவர்கள் ஹா!ஹா! என்று கதறினார்கள். அந்தப் பார்ஷதர்களே காசியபருடைய வீரியத்திற்குத் திதியின் கர்ப்பத்தில் உண்டானவர்கள். இரட்டைப் பிள்ளைகளான அந்த அசுரர்களுடைய தேஜஸ்ஸால் அப்பொழுது உங்கள் உடைய தேஜஸ் குறைந்தவிட்டது. ஆனாலும் பகவான் க்ஷேமத்தைச் செய்வார். அவர் ஸகல ஜகத்தையும் படைத்தவர். காப்பாற்றுகிறவர் சம்கரிப்பவர் எல்லா வற்றிற்கும் முந்தினவர். அவருடைய யோக மாயை யோகேசர்களாலும் அறியமுடியாதது. அவரைச் சார்ந்தவர்களான நமக்கு அவரே க்ஷேமத்தைச் செய்வார். இந்த விஷயத்தில் நம்முடைய யோசனை பயன்படாதது என்று சொன்னார்.

அத்தியாயம் 17

திதிக்குப் புத்திரர்கள் பிறந்தது

1–15 இப்படி ப்ரஹ்மதேவரால் சொல்லப்பட்ட காரணத்தைக் கேட்டு தேவர்கள் எல்லோரும் சம்சயம் அற்றவர்களாக ஸ்வர்க்கம் சென்றார்கள். திதியானவள் தனது பர்த்தாவினுடைய கட்டளையினால் புத்திரன் உடைய சரிதத்தில் சந்தேகமுள்ளவளாக ஆயிரம் வருஷங்களைக் கழித்தாள். பிறகு இரண்டு குமாரர் களைப் பெற்றாள். அவ்விருகுழந்தைகள் பிறக்கும் போது பூமியிலும் அந்தரிக்ஷத்திலும், த்யுலோகத்தி லும் வரப்போகின்ற பயத்தைக் காட்டும் அநேக உத்பாதங்கள் உண்டாயின. மலைகளுடன் பூமி அசைந்தது. ஆகாசம் முழுவதும் ஜ்வலித்தது. குறைக் கொள்ளிகளும் இடிகளும் விழுந்தன. தூமகேதுக்கள் காணப்பட்டன. அடிக்கடி பூதாகார சப்தத்துடன் காற்றானது மரங்களை வேரோடு பிடுங்கிற்று. அந்தக் காற்றுக்கு தூளியே த்வஜமாகவும், காற்றின் ஸமூகம் ஸைன்யமாகவும் இருந்தன. சிரிப்பது போன்ற மின்னல்களுள்ள மேகங்களால் தேஜஸ் மறைக்கப்பட்டது, மேலும் ஆகாசமானது இருளால் சூழப்பட்டது. சமுத்திரத்தின் மத்தியிலிருக்கும் மகரம் முதலிய ஜந்துக்கள் கலங்கின. அலைகள் உயரக்கிளம்பின. கிணறு, குளம் முதலியவை கலங்கின. அவைகளிலுள்ள தாமரைகள் உலர்ந்து போயின. சந்திரன், சூரியர் இவர்களுக்கு ராஹுகக்ராஸம் நேர்ந்தது. (கிரஹணம்.)

மேலும் அவர்களைச் சுற்றிக் கோட்டை கட்டப் பட்டது, மேகமில்லாதபோது கர்ஜிதம் உண்டாயிற்று.

அதனால் குகை முதலிய இடங்களில் எதிரொலியும் உண்டாயிற்று. கிராமங்களில் பெண் நரிகள் அக்கினியைக் கக்கிக் கொண்டு பயங்கரமாக ஊளை யிட்டன. கோட்டான்களும், நரிகளும் சப்தித்தன, நாய்கள் பாடுகின்றவை போலும், அழுகின்றவை போலும் தலையைத் தூக்கிப் பலவகையாக்கக் குரைக்க ஆரம்பித்தன. ஓ விதுர! கழுதைகளும் கூட்டம் கூட்டமாகக் கூர்மையான குளம்புகளால் பூமியைப் பிளந்தும் தங்களுடைய ஜாதிக்குரியபடி சப்தித்தும், மதமுள்ளவைகளாக ஓடின. கழுதைகளின் சப்தத்தைக் கேட்டுப் பயந்து பறவைகள் தங்களுடைய கூடுகளிலிருந்து பூமியில் விழுந்தன. இடைச்சேரியி லும், காடுகளிலுள்ள பசுக்கள் (மிருகங்கள்) மேற்சொல்லிய சப்தத்தால் நடுங்கி மூத்திரத்தை விட்டதும் அன்றிச் சாணத்தையும் போட்டன. மேலும் பசுக்கள் பயந்தன; இரத்தங்களைக் கறந்தன. வருஷித்தன. தேவதா பிரதிமைகள் அழுதன. காற்றில்லாத போது மரங்கள் கீழே விழுந்தன. பாப கிரஹங்கள் சுபக் கிரஹ நக்ஷத்திரங்களையும் அதிக்ரமித்துச் சென்றன (அதிசாரம்) வக்ராதியால் உபத்திரவித்தன; ஒன்றுக் கொன்று மேற்காட்டியவை களும், மற்றவைகளுமாகிய அபசகுனங்களை கண்டு அவைகளின் உண்மையை அறியாதவர்களான எல்லாரும் பிரளயம் நேர்ந்துவிட்டதென்று நினைத்தார்கள். ப்ரஹ்மதேவருடைய புத்திரர்களான சனகர் முதலியவர்கள் மாத்திரம் பயப்படவில்லை.

19–31 அந்த ஆதிதைத்யர்கள் இருவரும் (திதியின் புத்திரர்கள் தைத்யர்கள்) தங்களுடைய பௌருஷத்தை வெளியிட்டுக் கொண்டு கருங்கல் போல்

வளர்ந்தார்கள்; இவர்களுடைய சுவர்ண கிரீடங்கள் உடைய நுனிகள் ஆகாயத்தை ஸ்பர்சித்திருந்தன. தோள்வளைகளுள்ள கைகள் திக்குகளின் எல்லை வரையிற் சென்றன. அரைநாண் முதலியவையுள்ள இடுப்பானது சூரியமண்டலத்திற்கு மேலாக இருந்தன. அவர்களுடைய அடி வைப்பினால் பூமி அசைந்தது. அப்பொழுது மாரீசர் அவ்விருவர்களுக்குள் எவனைத் திதியானவள் முதலில் பெற்றாளோ, அவனுக்கு ஹிரண்யாக்ஷனென்றும், தம்முடைய தேகத்திலிருந்து முதலில் திதியிடம் பிரவேசித்த வீரியத்தால் உண்டானவனுக்கு ஹிரண்யகசிபு என்றும் பெயர் வைத்தார். அந்த ஹிரண்யகசிபுவானவன் ப்ரஹ்ம தேவரிடம் வரம் பெற்று மிருத்யு பயமில்லாதவனாகி, கர்வமடைந்து உலகபாலர்களை ஜயித்து, ஸகல உலகங்களையும் ஸ்வாதீனமாக்கிக் கொண்டான். அவனுடைய தம்பியாகிய ஹிரண்யாக்ஷன் என்பவன் தமயனிடத்தில் விசேஷ ப்ரீதியுள்ளவன். மேலும் அவன் ஒவ்வொரு நாளும் கதாயுதத்தைக் கையில் பிடித்துக் கொண்டு யுத்தஞ் செய்ய விரும்பினவனாகத் தகுந்த எதிரியைத் தேடி ஸ்வர்க்கத்தில் அலைந்தான். அவன் ஸகிக்க முடியாத வேகமுள்ளவன்! அவன் அணிந்திருக்கும் ஆபரணமாகிய தங்கச் சலங்கைகள் இனிமையாகச் சப்திக்கின்றன. அவன் வைஜயந்தி என்னும் மாலையைத் தரித்தவன்; பெரிதாகிய கதாயுதத்தை தோளில் வைத்துக் கொண்டவன்; மனோ பலத்தாலும், தேகபலத்தாலும் கர்வமுள்ளவன்; ஒருவராலும் ஜயிக்க முடியாதவன்; எவரிடத்திலும் பயமற்றவன்; அப்படிப்பட்ட அந்த அசுரனைக் கண்டு கருடனைக் கண்ட சர்ப்பங்கள் போல் தேவர்கள் எல்லாரும் ஓளிந்து கொண்டார்கள்.

அந்த அசுர சிரேஷ்டன் தன்னுடைய தேஜஸ்ஸால் பயந்து இந்திரன் முதலிய தேவர்கள் ஒளிந்து கொண்டார்களென்று தெரிந்து கொண்டு மதத்துடன் கர்ஜித்தான். மிக்க பலமுள்ள அந்த அசுரன் அவ்விடத்திலிருந்து திரும்பி மிக்க ஆழமுள்ளதும், பயங்கரமான சப்தமுள்ளதுமான சமுத்திரத்தில் மதங்கொண்ட யானைபோல் விளையாடுவதற்காகப் பிரவேசித்தான். அவனைக் கண்ட மாத்திரத்தில் வருணனுடைய சைனியங்களாகிய ஜலஜந்துக்கள் பயத்துடன் மனங்கலங்கி அவனால் அடிக்கப்படாமல் இருந்தாலும் அவனுடைய தேஜஸ்ஸினாலேயே ஜயிக்கப்பட்டவைகளாக வெகுதூரம் ஓடிற்று.

அப்பொழுது அவன் தன்னுடைய தச்சுகளால் மிகுந்த அலைகளை உண்டுபண்ணிக் கொண்டு எஃகினால் செய்யப்பட்ட கதாயுதத்தால் அடித்துக் கொண்டு அநேக வருஷங்கள் சமுத்திரத்திலேயே சஞ்சரித்துப் பின்பு வருணனுடைய பட்டணம் சென்றான். அது விபாவரி என்ற பெயருள்ளது. அவ்விடத்தில் அவன் ஜலஜந்துக்களுக்கு அதிபதியும் பாதாள உலகத்தைக் காப்பாற்றுகிறவருமான வருணனைக் கண்டு சிரித்துக் கொண்டு பரிகாசத் திற்காக அவரை நமஸ்கரித்து, தாழ்ந்தவன் போல் அவரை நோக்கி, "ஓ மேலான அரசரே! நீர் உலக பாலர்களுக்கு அதிபதி; மிகுந்த கீர்த்தியுள்ளவர்; கர்வமுள்ளவர்களும் தங்களை வீரர்களென்று நினைத்தவர்களுமான துஷ்டர்களுடைய கர்வத்தை அடக்கக் கூடியவர், நீர் முன்காலத்தில் தைத்தியர் களையும், தானவர்களையும் ஜயித்து ராஜசூயமென்ற யாகத்தைச் செய்தீரல்லவா? ஆனது பற்றி

இப்பொழுது என்னுடன் யுத்தம் செய்யவேண்டும்" என்றான். இப்படி மிகுந்த கர்வத்துடன் பரிகாசம் செய்யும் அந்த ஹிரண்யாக்ஷனை நோக்கிச் சமுத்திர ராஜன் கோபத்தை அடக்கிக் கொண்டு, ஓ அசுர சிரேஷ்ட! நான் யுத்தஞ் செய்வது முதலியவகைளில் உற்சாகத்தை விட்டுவிட்டேன்.(சாந்தியை அடைந்து இருக்கிறேன்.) ஆனால் உன்னுடன் யுத்தம்செய்யத் தகுந்த புருஷன் பகவான் ஒருவரே, வேறு யாராலும் முடியாது. அவர் புராண புருஷர். உன்னைப் போன்ற வீரர்கள் அவரைத் துதிக்கிறார்கள், அவர் உன்னைப் போல் அசத்தாயிருப்பவர்களைக் கொல் வதற்காகவும், சாதுக்களை அனுக்ரஹிப்பதற்காகவும் பலவகையாக அவதரிக்கிறார். அவரிடஞ் சென்றால் கர்வமற்றவனாகி யுத்தகளத்தில் படுப்பாய், நாய்கள் உன்னைச் சுற்றிக் கொள்ளும், என்று சொன்னார்.

அத்தியாயம்–18

யக்ஞவராஹருக்கும் ஹிரண்யாக்ஷனுக்கும் யுத்தம்

1–5. மிகுந்த மதமுள்ளவனும் கம்பீர மனமுள்ளவனுமான அந்த ஹிரண்யாக்ஷன் சமுத்திர ராஜனுடைய வார்த்தையைக் கேட்டு நாரதரிடமாகப் பகவானிருக்குமிடத்தைத் தெரிந்து கொண்டு வெகு வேகமாகப் பாதாளலோகம் சென்றான். அவ்விடத்தில் சிங்கப் பல்லால் பூமியை உயரத்தூக்கி கொண்டு இருக்கும் வாரஹரூபியான பகவானைக் கண்டான். அவர் எல்லோரையும் ஜயிப்பவர். அவருடைய கண்கள் சிவந்தவைகளாக இருந்தன. அவைகளால் அசுரனுடைய காந்தியானது குறைந்தது, அவரைக் கண்ட அவன், "ஆச்சரியம். காட்டில் ஸஞ்சரிக்கும் மிருகமாகிய பன்றிக்கு இவ்வளவு தேஜஸ் இருக்கிறதே, என்று சிரித்தான். பின்னும் அவன் அவரை நோக்கி, "ஓ தேவர்களுக்குள் அதமனே! பன்றி யுருவங்கொண்ட வரே! ஒன்றையும் அறியாதவனே! பாதாள வாசிகளாகிய எங்களுக்கு ப்ரஹ்மதேவரால் இந்தப் பூமி கொடுக்கப்பட்டது, ஆனதால் இவளை விட்டுவிடு, நான் பார்த்திருக்கும் போது இந்தப்பூமியுடன் நீ க்ஷேமமாகத் திரும்பிப் போகமுடியாது. நமக்குச் சத்துருக்களாகிய தேவர்கள் உன்னை யுத்தத்தில் பலி கொடுப்பதற்காகவே வளர்ந்திருத்திருக்கிறார்களே ? நீ அசுரர்களை மறைத்திருந்து மாயையால் ஜயித்தவன். யோகமாயா பலமுள்ளவன் சொற்ப பராக்கிரம முள்ளவன். அப்படிப்பட்ட உன்னைக் கொன்று என் மித்திரர்களுடைய துக்கத்தைப் போக்கடிக்கிறேன். என்னுடைய கையிலிருக்கும் கதாயுதத்தால்

உன்னுடைய தலையை உடைக்கிறேன், அதனால் இப்பொழுது உன்னை பூஜிப்பவர்களும், முந்திய பக்தர்களுமாகிய தேவர்களும் மஹர்ஷிகளும் ஒத்தாசை இல்லாதவர்களாக ஆகிவிடுவார்களென்று சொன்னான்.

6–28. அப்பொழுது பகவான் சத்துருவினுடைய கெட்ட வார்த்தையாகிய தோமராயுதத்தால் அடிக்கப் பட்டும் தம்முடைய சிங்கப்பல்லின் நுனியிலிருக்கும் பூதேவி பயப்படுவதைப் பார்த்து அவனுடைய வார்த்தைகளைப் பொறுத்துக்கொண்டு ஜலத்தின் நடுவிலிருந்து வெளிவந்தார் அது யானையானது பெண் யானையுடன் முதலையால் பீடிக்கப்பட்டு ஜலத்திலிருந்து கிளம்பியது போலிருந்தது. அப்பொழுது அந்த அஸுரன் யானையின்டின் மகரம் போலதுபோல் அவர் பின் சென்றான். பின்னும் பயங்கரமான சிங்கப் பற்களுள்ள அந்த அஸுரன், "வெட்கமில்லாத அசத்துக்களுக்கு எதுதான் கெட்ட காரியம்" என்று இடிபோல் உரக்கச் சொன்னான். அப்பொழுது ப்ரஹ்ம தேவராலும். தேவர்களாலும் புஷ்பங்களைக் கொண்டு பூஜிக்கப்பட்டவரான அந்தப் பகவான் ஜலத்திற்கு வெளியில் வியவகார யோக்கியமாகிய இடத்தில் பூமியை வைத்து, அதில் தம்முடைய ஆதார சக்தியை ஸ்தாபித்தார்.

பின்பு, அவர் மிகுந்த கோபத்துடன், தம்மைப் பின் தொடர்ந்து வருகிறவனும் ஸ்வர்ண ஆபரணங்கள் உள்ளவனும் பெரிதான கதாயுதத்தைத் தரித்தவனும், ஸ்வர்ண மயமும் ஆச்சரயகரமுமான கவசமுள்ளவனும், கெட்ட வார்த்தைகளால் மர்மஸ்தானங்களைப்

பிளப்பவனுமாகிய அந்த அஸுரனை நோக்கி. "அட! நாங்கள் வனத்திலிருக்கும் மிருகங்களேயாம். இது உண்மையே. உன்னைப்போன்ற கிராம சிம்ஹத்தை (நாயை) தேடுகிறோம். தைரியமுள்ளவர்கள் யமனுடைய பாசத்தால் கட்டப்பட்ட உன்னுடைய ஆத்ம சிலாகையால் (தன்னைத்தானை புகழ்ந்து கொள்வது) லட்சியஞ் செய்யமாட்டார்கள். நாங்கள் பாதாளவாசிகளுடைய அடைக்கலமான சொத்தை அபகரிப்பவர்கள். வெட்கமில்லாதவர்கள் உன்னுடைய கதாயுதத்தால் வெட்டப்பட்டவர்கள். ஆனாலும் நிற்கிறோம். பலிஷ்டனாகிய உன்னுடன் விரோதத்தை உண்டுபண்ணிவிட்டு எவ்விடம் போவோம்? யுத்தத்திற்கு சன்னத்தர்களாக இருக்கிறோம். நீ காலாட் படைகளுக்கு அதிபதி, நம்மை ஜயிப்பதற்குச் சீக்கிரம் முயற்சி செய். நீ யோசனையில்லாதவன். பிரதிக்ஞையை நிறைவேற்றாதவன். சபைக்குரியவனல்ல, ஆதலால் நம்மைக் கொன்று பந்துக்களுடைய துக்கத்தை நிவர்த்திசெய்" என்றார்.

இப்படிப்பரம புருஷனால் பரிஹசிக்கப்பட்ட அஸுரன் மஹாசர்ப்பம் போல் மிகவும் கோபத்தால் கலங்கிய இந்திரியங்களுள்ளவனாகி பகவானுடைய சமீபம் வந்து கதாயுதத்தால் அவரை அடித்தான். சத்ருவாகிய அசுரன் மார்பில் கதாயுதத்தால் அடிக்கும்போது பகவான் அந்த அடி தம்முடைய சரீரத்தில் படாமலிருக்கும்படி குறுக்காக ஒதுக்கங் கொடுத்து ஏமாற்றினார். அது மிருத்யுவை யோகா ருடன் வஞ்சித்தது போலிருந்தது கோபமுள்ளவனும், பரபரப்பினால் உதட்டைக் கடித்துக்கொள்ளுகிறவனும், கதாயுதத்தை அடிக்கடி சுழற்றிக்கொண்டு

இருப்பவனுமான அசுரனைப் பகவான் எதிர்த்தார். அசுரன் கதாயுதத்தால் பிரபுவாகிய பகவானுடைய வலத்தோளை உத்தேசித்து அடித்தான்.

ஓ விதுர! அதன் அடி தம்மீது படுவதற்கு முன்னமேயே பகவான் யுத்தத்தை நன்றாக அறிந்த வராகையால் தம்முடைய கதாயுதத்தால் சத்துருவின் கதாயுதத்தை அடித்தார், இப்படி ஹிரண்யாக்ஷனும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் ஒருவரை யொருவர் ஜயிக்கவேண்டும் என்ற விருப்பத்துடன் மிகுந்த முயற்சியுள்ளவர்களாகப் பெரியவையான கதாயுதங்களைக் கொண்டு அடித்துக்கொண்டார்கள். இப்படி அவ்விருவர்களும் பூமிக்காக யுத்தம் செய்தார் கள். கூர்மையான கதைகளால் அவர்களுடை ய சரீரம் அடிக்கப்பட்டு இரத்தம் பெருகியது. அதனால் இருவர்களுக்கும் அதிகக் கோபமுண்டாயிற்று. பலவகையான நடையைக் காண்பித்தார்கள். அந்த யுத்தமானது மதித்த இரண்டு விர்ஷபங்கள் பசுவின் நிமித்ததம் சண்டை செய்வது போலிருந்தது. ஓ குரு வம்சத்தில் பிறந்தவரே! யக்ஞவராஹ ரூபியான பகவானுக்கும், அசுரனுக்கும் பூமியின் நிமித்தமாக நேர்ந்த யுத்தத்தைப் பார்ப்பதற்குப் ப்ரஹ்மதேவர் அவ்விடம் அனேக மஹரிஷிகளுடன் வந்தார். மேலும் ஆயிரம் மஹரிஷிகளுக்கும் அதிபதிகளாகிய அவர் பராக்கிரம கர்வமுள்ளவனும், பயமற்றவனும் செய்வதற்குப் பதில் செய்பவனும், பதில் செய்யமுடியாத பராக்கிரமமுள்ளவனுமாயிருக்கும் அஸுரனைப் பார்த்து, ஆதிவராஹ ஸ்வரூபியும். புராண புருஷனுமான ஸ்ரீமந் நாராயணனை நோக்கி, 'ஓ தேவ! உம்முடைய பாதங்களைச் சரணமடைந்த

தேவர்களுக்கும், ப்ராஹ்மணர்களுக்கும், பசுக்களுக்கும், அபராதஞ் செய்யாத பிராணிகளுக்கும் இந்த அஸுரன் கெடுதியைச் செய்தவன். பயத்தைச் செய்தவன் கெட்ட காரியத்தைச் செய்தவன், நம்மிடமிருந்தும் வரத்தை அடைந்தவன். தன்னுடன் யுத்தஞ் செய்யத் தகுந்த வீரனைத் தேடிக்கொண்டு உலகம் முழுவதும் அலைந்தவன். இவனை எதிர்த்துயுத்தம் செய்பவன் உலகத்திலொருவனுமில்லை. மிக்க உபத்திரவத்தைச் செய்தவன் மிக்க மாயாவி. கர்வமுள்ளவன். பயம் இல்லாதவன். மிக்க அசத்து, ஆதலால் ஓ தேவ! கோபங்கொண்ட ஸர்ப்பத்தினிடம் சிறுவன் விளையாடுவதுபோல் அவனுடன் விளையாடுவது உசிதமல்ல ஓ நாசமற்றவரே! பயங்கர உருவமுள்ள இந்த அஸுரன் தனக்குப் பலம் விருத்தியடையக்கூடிய காலத்தை அடைந்து விருத்தியடைவதற்கு முந்தியே பாபியாகிய இவனை நீர் உம்முடைய மாயா பலத்தால் நாசஞ் செய்யும். இந்த சந்தியா காலமானது மிகவும் கோரமானது. உலகங்களுக்கு நாசத்தைச் செய்யக்கூடியது. ஓ ஸகல ஜகத்ஸ்வரூபியாயிருப்பவரே! அபிஜித் என்னும் சுபமாகிய காலம் வந்துவிட்டது. தேவர்களுக்கு ஜயத்தை உண்டுபண்ணும். உமக்கு மித்திரர்களான எங்களுடைய க்ஷேமத்திற்காக இவனைக் கொல்லுக. தெய்வச் செயலால் இந்த அஸுரன் தனக்கு மிருத்யுவாக முன்னமே ஏற்பட்டிருந்த உம்மிடம் சேர்ந்தான். ஆதலால் இவனைக் கொன்று உலகத்திற்கு க்ஷேமத்தை உண்டு பண்ணும், என்று பிரார்த்தித்தார்.

அத்தியாயம்–19

ஹிரண்யாக்ஷ வதம்

1–29 அதனைக் கேட்ட பகவான் ப்ரஹ்மதேவர் கபடமற்றவராகச் சொல்லுகிறாரென்று நினைத்துச் சிரித்து (கால ஸ்வரூபியான என்னாலும் நல்ல முகூர்த்தம் எதிர்பார்க்கப்பட வேண்டுமாவென்று) ப்ரீதியுள்ள பார்வையால் அந்த வார்த்தையை அங்கீகரித்தார். பின்பு தமக்கெதிரில் பயமில்லாமல் சஞ்சரிக்கும் சத்ருவினுடைய கன்னத்திற்குக் கீழாகக் கதாயுதத்தால் அடித்தார். பிறகு அந்த அசுரன் தன்னுடைய கதையால் பகவானுடைய கதாயுதத்தை அடித்தான். அதனால் கதையானது அடிக்கப்பட்டுப் பகவானுடைய கையிலிருந்து சிதறிக் கீழே விழுந்தது. அது மிகவும் ஆச்சரியமாக விருந்தது. அப்பொழுது அஸுரன் ஆயுதமில்லாமலிருக்கும் பகவானைப் பார்த்து அது சத்ருவை ஜயிக்க தகுந்த சமயமானாலும் தர்மத்தை நினைத்துக் கொண்டு அடிக்க வில்லை. இப்படிப் பகவானுடைய கதை உடைந்தபின் தேவர்கள் ஹா ஹா என்று கதறும்போது பகவான் அந்தத் தர்மத்தைப் பெரிதாக நினைத்ததுமின்றிச் சக்கரத்தை நினைத்தார்.

அப்பொழுது அவருடைய மாஹாத்மியத்தை நன்றாக அறியாதவர்களான தேவர்கள் யுத்தத்தில் தைத்தியர்களுக்குள் தாழ்ந்தவனும் தம்முடைய பார்ஷதர்களுக்குள் முக்கியனுமான ஹிரண்யாக்ஷனுடன் யுத்தஞ் செய்பவரும் யுத்தத்தில் பரப்பரப்புள்ள சக்ராயுதத்தைத் தரித்தவருமாகிய பகவானைப்

பார்த்து, 'உமக்கு க்ஷேமமுண்டாகும்; இந்த அசுரனைக் கொல்லும், என்று சொன்னதுமல்லாமல் நான்கு புறத்திலும் பலவகையாகப் பேசிக்கொண்டார் கள். இம்மாதிரியான தேவர்களுடைய வார்த்தையைக் கேட்டும் தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரும், சக்ராயுதத்துடன் யுத்தத்திற்கு ஸன்னத்தராயிருப் பவருமான பகவானைப் பார்த்தும், அந்த அஸுரன் மிக்க கோபத்துடன் உதட்டைக் கடித்துக் கொண்டான். மேலும் பயங்கரங்களாகிய சிங்கப் பற்களுள்ள அவன் கண்களால் எரிப்பவன்போலப் பகவானிடம் ஓடி வந்து, 'நீ கொல்லப்பட்டாய்' என்று சொல்லிக் கதாயுதத்தால் அடித்தான். யக்ஞவராஹ ரூபியான பகவான் சத்ருவாகிய அஸுரன் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே வாயுவிற்குச் சமமான வேகமுள்ள அந்தக் கதாயுதத்தை வலக்காலால் சிரமமின்றி உதைத்தார்.

மேலும், "ஓ அஸுரனே! ஆயுதத்தை எடுத்துக் கொள். ஜயிக்க வேண்டுமென்ற விருப்பமுள்ளவனாக இருப்பதால் அதற்குத் தகுந்த முயற்சியைச் செய்" என்றும் சொன்னார். அதனைக் கேட்ட அஸுரன் அந்தக் கதையை வராஹரூபியான பகவானை உத்தேசித்துப் ப்ரயோகித்தான். தம்மைப் பார்த்து வேகமாக வரும் அந்தக் கதையைக் கண்ட பகவான் தம்மீது விழுவதற்கு முன்னமேயே அதைப் பிடித்துக் கொண்டார். அது கருடன் பெண் சர்ப்பத்தைப் பிடித்தது போலிருந்தது. பிறகு பகவான் அந்தக் கதையை அந்த அஸுரனுக்குக் கொடுக்க விரும்பியும் அவன் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவன்

தன்னுடைய பராக்கிரமம் தடைப்பட்டபடியால் மானங் குறைந்து காந்தியற்றவனாயிருந்தான்.

மேலும், ப்ராஹ்மணனை உத்தேசித்து ஆபிசார கர்மத்தைச் செய்பவர் போல் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை உத்தேசித்து ஜ்வலிக்கும் அக்கினி போன்ற மூன்று முனையுள்ள சூலத்தைப் ப்ரயோகித்தான். அந்த அஸுரனால் ப்ரயோகிக்கப்பட்டதும் ஆகாசத்தின் மத்தியில் காந்தியுடன் ப்ரகாசிப்பதுமான அந்தச் சூலத்தைப் பகவான் கூர்மையான முனையுள்ள சக்ராயுதத்தைக் கொண்டு இந்திரன் கருடனுடைய சிறகுகளை வெட்டியது போல வெட்டினார். பின்பு பகவானுடைய சக்ராயுதத்தால் தன் சூலம் வெட்டப் பட்டதைப் பார்த்த அஸுரன் மிக்க கோபத்துடன் கையை முஷ்டி பண்ணிக் கொண்டு மிகுந்த விஸ்தாரமுள்ளதும், விபூதிகளுள்ளதுமான அவருடைய மார்பில் குத்திக் கர்ஜித்துக் கொண்டு கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்தான்.

ஓ விதுரரே! அந்த ஆதிவராஹமூர்த்தியாகிய பகவான் இம்மாதிரி அவனால் அடிக்கப்பட்டும் புஷ்ப மாலையால் அடிக்கப்பட்ட யானைபோல அசையவே இல்லை. பின்பு அந்த அஸுரன் யோகமாயைக்கு அதிபதியாகிய பகவானிடத்தில் பலவகையான மாயையைச் செய்தான். அவைகளைக் கண்டு ஜனங்கள் ப்ரளய காலம் வந்துவிட்டதென்று நினைத்தார்கள். காற்று மிகவும் கடுமையாக வீசிற்று. தூளிகளாலுண்டான இருள் பரவிற்று. யந்திரங்களால் எறியப்பட்டது போல எல்லாத் திக்குகளிலும் கற்கள் விழுந்தன. ஆகாயத்திலிருக்கும் நட்சத்திரங்களின்

தேஜஸ் குறைந்தது. மேகங்கள், மின்னல், கர்ஜனம் ஆகிய இவைகளுடன் அமேத்யம், மூத்திரம் ஆகிய துர்நாற்றமுள்ளவைகளையும், மயிர்களையும், எலும்புகளையும் வர்ஷித்தன. மலைகள் பலவகையான ஆயுதங்களை விட்டன. மேலும் திக்கையே வஸ்திர மாய் உடையவர்களும், அவிழ்ந்த தலை மயிர்கள் உள்ளவரும் சூலாயுதத்தை தரித்தவர்களுமான ராக்ஷஸ ஸ்திரீகள் காணப்பட்டார்கள். யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், காலாட்படை, குதிரைபடை, இரதங்கள், யானைகள் முதலிய ஸைனியங்களால் கடுமையான வார்த்தைகள் சொல்லப்பட்டன. இம்மாதிரியான மாயையைப் பார்த்து மூன்று ஸவனங்களாகிய பாதங்களுள்ள அந்த மாயைகளை நாசம் பண்ணக் கூடிய தம்முடைய சக்ரத்தைப் பிரயோகித்தார்.

அப்பொழுது திதி தேவியானவள் தன்னுடைய பர்த்தாவாகிய மாரீசருடைய கட்டளையை நினைத்துக் கொண்டாள். அப்பொழுது அவளுடைய ஹிருதயம் ஆனது நடுங்கிற்று. அவளுடைய ஸ்தனத்திலிருந்து இரத்தம் பெருகிற்று. பின்பு அந்த அஸுரன் தான் செய்த மாயைகள் வீணாகிவிட்டதைப் பார்த்துப் பகவானுக்கு எதிரில் வந்து கோபத்துடன் இருகைகளால் அவரைக் கட்டி வஜ்ரம் போன்ற முஷ்டிகளால் அடித்தான். அப்பொழுது; பகவான் அந்த அஸுரனுடைய கன்னத்தில் தமது கையால் அடித்தார். அது மஹேந்திரன் விருத்திராசுரனை அடித்தது போலிருந்தது. ஸகல உலகங்களையும் ஜயிப்பவரான பரமபுருஷன் விளையாட்டாகச் சத்துருவை அடித்தபொழுது அவனுடைய சரீரம் நடுங்கிற்று. கண்களிரண்டும் வெளியில் வந்தன.

கைகளும், கால்களும், கழுத்தும் சிதறின. இப்படி அவனுடைய சரீரமானது பெருங்காற்றினால் பெரிய மரம் வீழ்வது போலக் கீழே விழுந்தது. இப்படிப் பகவானால் அடிக்கப்பட்டுப் பூமியில் படுத்தவனும், விசேஷ தேஜஸுள்ளவனும், பயங்கரமாகிய சிங்கப் பற்கள் உள்ளவனும், உதட்டைக் கடித்தவனுமாகிய அஸுரனைப் ப்ரஹ்மா முதலியவர்கள் பார்த்து "ஆச்சரியம், இம்மாதிரியான மரணம் யாருக்குக் கிடைக்கும்? யோகிகள் மோக்ஷத்தை அடைய விரும்பி எவரை ரஹஸ்யத்தில் சித்தத்தை ஒருவகைப் படுத்தித் தியானஞ் செய்கிறார்களோ, அந்தப் பரம புருஷனுடைய முகத்தை தரிசித்துக் கொண்டே அவரால் அடிக்கப்பட்டு அஸுரன் சரீரத்தை விட்டான். இவர்கள் பகவானுடைய பார்ஷதர்கள், பாபத்தால் இம்மாதிரியான ஜன்மத்தை அடைந்தவர் கள். இன்னும் சில ஜன்மத்திற்குப் பிறகு தங்களுடைய பதத்தை அடைவார்கள்" என்று சொல்லிக் கொண்டார்கள்.

30 அப்பொழுது தேவர்கள் பகவானை நோக்கி, "ஓ ஈச! ஸகல யாகங்களை விஸ்தரிப்பவரும், பரிபாலன சமயத்தில் சத்வார்த்தியாக அவதரிப்பவருமாகிய உமக்கு அடிக்கடி நமஸ்காரம் செய்கிறோம். ஜகத்திற்கு உபத்திரவத்தைச் செய்பவனாகிய இந்த அஸுரன் எங்களுடைய பாக்கியத்தால் கொல்லப் பட்டான். நாங்கள் கவலையற்றவர்களாக ஆனோம்" என்று ஸ்தோத்திரஞ் செய்தார்கள்.

31–38 ஸஹிக்க முடியாத பராக்கிரமமுள்ள ஹிரண்யாக்ஷனை ஆதிவராஹ ரூபியான பகவான்

கொன்று ப்ரஹ்மதேவர் முதலியவர்களால் கொண்டா டப்பட்டும் குறைவற்ற உத்ஸவமுள்ள தம்முடைய லோகம் சென்றார். "ஓ விதுர! நான் என்னுடைய குருவினிடமிருந்து தெரிந்துகொண்டபடி பகவான் வராஹாவதாரஞ் செய்து ஹிரண்யாக்ஷனைக் கொன்ற கதையைச் சொன்னேன்" என்று மைத்ரேயர் விதுரருக்கு உபதேசித்தார். ஓ பரிக்ஷித்து மஹாராஜனே! அதனைக் கேட்ட விதுரர் பாகவதோத்தமராகையால் மிகுந்த ஆனந்தமடைந்தார். உலகத்தில் புண்ய ச்லோகர்களும் (நல்வினையைக் கொடுக்கும் பெயருள்ளவர்கள்) மிகுந்த கீர்த்தியுள்ளவர்களுமாகிய அரசர்களுடைய கதையைக் கேட்பதினாலேயே சந்தோஷமுண்டாகிறது. ஸ்ரீவத்ஸமென்ற அடையாளம் உள்ள ஸ்ரீமஹாவிஷ்ணுவின் சரிதத்தைக் கேட்பதால் ஆனந்தம் உண்டாவதற்கு என்ன ஆட்சேபம்? கஜேந்திரமானது முதலையால் பிடிக்கப்பட்டு பகவான் உடைய பாதாரவிந்தத்தைத் தியானஞ் செய்யும் போது பெண் யானைகள் கதறின. அப்பொழுது அவர் யானையை அந்தக் கஷ்டத்திலிருந்து காப்பாற்றினார். கபடமற்ற மனமுள்ளவர்களும், அவரையே சரணமாக அடைபவர்களுமான மனிதர்களால் எளிதில் ஆராதிக்கக் கூடியவரும், அசத்துக்களால் ஆராதிக்க முடியாதவருமான பகவானை க்ருதக்ஞனான (செய்த உபகாரங்களை நினைப்பவன்) எவன்தான் உபாசிக்க மாட்டான்? ஆதிவராஹ மூர்த்தியின் க்ரீடாரூபமானதும், மிக்க அற்புதமானதுமான ஹிரண்யாக்ஷ வதத்தை எவன் கேட்கிறானோ, கானம் செய்கிறானோ, அனுமோதிக் கிறானோ அவன் ப்ரஹ்மஹத்யை செய்தவனானாலும், ஒரு க்ஷணத்திற்குள் சுத்தனாகி விடுகிறான். இந்த ஹிரண்யாக்ஷ வதம் என்கிற கதையானது மிகுந்த

புண்ணியத்தைக் கொடுக்கக்கூடியது; மிகவும் பரிசுத்தியை உண்டு பண்ணைக்கூடியது; தனத்தை உண்டு பண்ணைக் கூடியது; கீர்த்தியை விருத்தி செய்யக்கூடியது; தீர்க்கமான ஆயுளையும் அவரவர்கள் உடைய இஷ்டத்தையும் கொடுக்க வல்லது. யுத்தத்தில் பிராணனையும், இந்திரியங்களையும் காப்பாற்றக் கூடியது. மிகுந்த பராக்கிரமத்தைக் கொடுக்கக் கூடியது. ஓ மஹாராஜ! இக்கதையைப் பக்தியாய்க் கேட்பவர்கள் மரணமடையும் காலத்தில் ஸ்ரீமந் நாராயணனை அடைவார்கள்.

Sri Rama Nama Bank

நாம பெட்டகம்



Help Preserve Namas
from
Air, Water, Fire & Pests

Each pettagam
preserves
13 crores of
Nama

Sponsor
Steel cubboards
(Pettagam)
Rs. 3500/-

ஸ்ரீ ராம் ஜெய ராம் ஜெய் ஜெய ராம் என்ற
மஹா மந்த்ரம்

13 எழுத்துக்கள் கொண்டது.
அக்ஷரத்திற்கு 1 கோடியாக 13 கோடி கொள்ளளவு கொண்ட
பெட்டகங்களில் நாமம் ப்ரதிஷ்டை
செய்யப்படுகிறது.இப்பெட்டகங்கள் நாமத்தை ஈரம், காற்று,
மழை, தீ, பூச்சி இவைகளிலிருந்து சுமார் 60 வருடத்திற்கு
குறையாமல் நாமத்தைப் பாதுகாத்து பல கோடி நபர்கள் தர்சன
மாத்திரத்தினால் நாம ஸ்மரணம் பெற ஏதுவாகும்.



ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

பாகம் –5

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்கந்தம் 10 அத்தியாயம் 1 முதல்
ஸ்கந்தம் 10 அத்தியாயம் 54 வரை

Released by Maran's Dog, Toronto , Canada

இஞ்சிக்கொல்லை
R. சிவராம சாஸ்திரிகள்
அவர்களால் 1908ல் மொழி
பெயர்க்கப்பட்டது.

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ராம நாம வங்கியின் ப்ரசாரப் பிரதிப் பிரிவு
ராம மந்திரம் –2, விநாயகம் தெரு,
சென்னை – 600 033. ☎: 24893736

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

TITLE	:	SRIMAD BHAGAVATHAM, TAMIL VACHANAM
AUTHOR	:	INZIKOLLAI R. SIVARAMA SASTRIGAL WRITTEN IN 1908
SIZE	:	CROWN OCTAVE
EXTENT	:	2736 PAGES CONSISTING OF SEVEN VOLUMES
PRICE	:	RS.600/ SET
FIRST EDITION	:	1996
SECOND EDITION	:	2004
THIRD EDITION	:	2007

ப்ரதி பத அர்த்தங்கள்

மூல ஸ்லோகங்கள்

ஸமஸ்கிருதத்திலும் தமிழிலும்

பதப்பிரிப்பும் அர்த்தமும் தமிழில்

ஸ்ரீமத் பாகவதம்

7 பாகங்கள்

6224 பக்கங்கள்

1500 /

ஸ்ரீமந் நாராயணீயம்

656 பக்கங்கள்

200/

பகவத் கீதை

312 பக்கங்கள்

60/

கீத கோவிந்தம்

272 பக்கங்கள்

60/

ஸௌந்தர்ய லஹரீ

96 பக்கங்கள்

25 /

சிவானந்த லஹரீ

96 பக்கங்கள்

25 /

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :

பஜனை புத்தகங்கள்

கீதகோவிந்தம் ப்ரதிபத அர்த்தம்

ஹரி சங்கீர்த்தனமாலா

கோவிந்தபுரம் பஜன பத்ததி

தக்ஷிண ஸம்ப்ரதாய பஜனமாலா

அபங்க முத்தாரம்

தக்ஷிணஸம்ப்ரதாயகல்யாணமாலா

பத்ராசல ராமதாசர் கீர்த்தனைகள்

லலிதா பஜனை கீர்த்தனைகள்

ஸ்ரீ ஆண்டாள் கல்யாணம்

ராதா மாதவ பஜனை பத்ததி

நவராத்ரி கீர்த்தனை

ஸ்ரீ ப்ரும்மேந்திராள் கீர்த்தனைகள்

நந்தன் சரித்திர கீர்த்தனைகள்

ஹரிபாட்

கீதகோவிந்தம்

போதேந்திராள் கீர்த்தனைகள்

அபங்கப்ரவாஹம்

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :

திவ்ய சரித்திரங்கள்

ஸ்ரீ போதேந்திராள்

ஸ்ரீ ஐயாவாள்

ஸ்ரீ ஸத்குரு

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள்

ஸ்ரீ துளஸிதாசர்

ஸ்ரீ ப்ரும்மேந்திராள்

ஸ்ரீ பத்ராசல ராமதாசர்

பக்தை மீரா

ஸ்ரீ யாக்ஞ வல்கியர்

ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர்

ஸ்ரீ ஞானேஸ்வர்

பக்த துகாராம்

ஸ்ரீ ஸமர்த்த ராமதாசர்

ஆலங்குடி பெரியவாள்

ஸ்ரீவாசுதேவப்ரும்மம்

பக்த ரத்னங்கள்

ஏகநாதர்

ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்

ஸ்ரீ ஐயாவாளின் நாமஅனுபவங்கள்

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :

ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி அண்ணாவின்

தமிழ்

உரையுடன்

ஸ்ரீ பகவன் நாம போதேந்திர

ஸரஸ்வதி ஸ்வாமிகள்

அருளிச்செய்த

ஸ்ரீபகவன் நாம ரஸோதயம்

கலியுகத்தில் அனுஷ்டிக்க வேண்டிய ஸாதனை பகவ
நாம உச்சாடனமே. அதுவே அடைய வேண்டிய
குறிக்கோளும்.
பாரத தேசத்தில் அவதரித்த மஹான்கள் அனைவரு
மக்களுக்கு இதையே காட்டினர்.
பகவன் நாமம் மட்டிலும் போதுமானது என்ற நா
மஹிமையை வேதம், உபநிஷதம், ஸஹஸ்ரநாமம்,
இதிஹாஸம், புராணம் இவைகளிலிருந்து பகவன் நா
நிரூபணம்
செய்தவர் ஸ்ரீ பகவன் நாம போதேந்திர ஸரஸ்வதி
ஸ்வாமிகள் ஆவர்.
ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி அண்ணா இந்த நாம
சித்தாந்தத்திற்கு தமிழ் உரை வழங்கியுள்ளார்.
நமக்காகவும் இனி வரும் தலை
முறையினர்களுக்காகவும்
ஜாதி மத பேதமின்றி ஒவ்வோருவர் வீட்டிலும்
பாதுகாக்கப்பட வேண்டிய புத்தகம்

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

ஸ்ரீமத் பாகவதம்-தமிழ் வசனம்

பாகம்-5

பொருளடக்கம்

ஸ்கந்தம்-10

		பக்கம்
1.	கம்ஸன் தேவகியின் குழந்தைகளைக் கொன்றது	1
2.	கர்ப்ப ஸ்துதி	16
3.	ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்	27
4.	தேசத்துக் குழந்தைகளைக் கம்ஸன் கொல்ல.....	37
5.	நந்தன் வசுதேவரைச் சந்தித்தது	45
6.	ஸ்ரீகிருஷ்ணன் பூதனையைக் ஸம்ஹரித்தது	51
7.	த்ருணாவர்த்த வதம்	59
8.	ஸ்ரீகிருஷ்ணனுக்கு கர்க்கர் நாமகரணஞ் செய்தது	67
9.	யசோதை ஸ்ரீகிருஷ்ணனைக் கட்டியது	78
10.	ஸ்ரீகிருஷ்ணன் அர்ச்சுன மரங்களைக் பூமியில்.....	83
11.	ஸ்ரீகிருஷ்ணன் வத்ஸாசுரனைக் கொன்றது	91
12.	அகாசுர வதம்	102
13.	ப்ரஹ்மதேவர் கன்றுகளை அபகரித்தது	112
14.	ப்ரஹ்மதேவர் ஸ்ரீகிருஷ்ணனைத் துதித்தது	127
15.	தேனுகாசுர வதம்	143
16.	காளிய நர்த்தனம்	152
17.	காளியன் யமுனையில் வசித்த காரணம்	168
18.	ப்ரலம்பாசுர வதம்	172
19.	ஸ்ரீகிருஷ்ணன் பந்துக்களைக் காட்டுத்	177
20.	மழைக்காலத்தின் வர்ணனை	180
21.	கோபிகைகள் ஸ்ரீகிருஷ்ணனுடைய சரிதத்தை.....	188
22.	பகவான் கோபிகைகளின் வஸ்திரங்களை.....	195
23.	தீக்ஷித பத்தினிகளை அநுகிரஹத்தது	202

பக்கம்

24 ஸ்ரீகிருஷ்ணன் இந்திர யாகத்தைத் தடுத்தது 211
25. ஸ்ரீகிருஷ்ணன் கோவர்த்தன மலையை தூக்கியது 217
26. ஸ்ரீகிருஷ்ணனுடைய மஹிமையை நந்தர்..... 222
27. பகவானுடைய கோவிந்த பட்டாபிஷேகம் 226
28. வருணலோகம் சென்ற நந்தரை ஸ்ரீகிருஷ்ணன்..... 231
29. ராஸக்கீரீடையின் ஆரம்பம் 234
30. கோபிகள் கிருஷ்ணனைத்தேடியது 244
31. கோபிகா கீதை 252
32. கிருஷ்ணன் கோபிகைகளுக்குத் தரிசனம்..... 257
33. ராஸக்கீரீடை 262
34. ஸுதர்சனனுடைய சாபமோக்ஷம் 271
35. கோபிகைகள் ஸ்ரீகிருஷ்ண சரிதத்தை..... 275
36. கம்ஸன் கோகுலத்திற்கு அக்ரூரரை..... 280
37. பகவான் கேசியைக் கொன்றது 290
38. அக்ரூரர் கோகுலம் சென்றது 296
39. அக்ரூரர் விஷ்ணு லோகத்தைப் பார்த்தது 304
40. அக்ரூரர் பகவானை ஸ்தோத்திரம் செய்தது 313
41. ஸ்ரீகிருஷ்ணன் மதுரா நகரம் சென்றது 318
42, ஸ்ரீகிருஷ்ணன் வில்லை முறித்தது 326
43. ஸ்ரீகிருஷ்ணன் குவலயாபீடத்தைக் கொன்றது 332
44. கம்ஸ வதம் 338
45. ராமகிருஷ்ணர்களின் வித்தியாப்யாசம் 346
46. கிருஷ்ணன் உத்தவரைக் கோகுலத்திற்கு..... 354
47. உத்தவர் கோபிகைச் சமாதனம் செய்தது 362
48. அக்ரூரரை ஹஸ்தினாபுரத்திற்கு அனுப்பியது 377
49. அக்ரூரரை ஹஸ்தினாபுரம் சென்று திரும்பியது 384
50. ஸ்ரீகிருஷ்ணன் பந்துக்களை துவாரகா சேர்த்தது 389
51. பகவான் முசுகுந்தரை அநுக்கிரஹத்தது 398
52. ருக்மிணீதேவி பகவானுக்குச் செய்தி அனுப்பியது 407
53. கிருஷ்ணன் ருக்மிணியை அபகரித்தது 414
54. கிருஷ்ணன் ருக்மிணீயைக் கல்யாணம் 422

ஸ்கந்தம்–10

அத்தியாயம்–1

கம்ஸன் தேவகியின் குழந்தைகளைக் கொன்றது

1–13 அதனைக்கேட்ட பரீஷித்துமஹாராஜன் சுகரை நோக்கி "ஓ முனிகளுக்குட் சிறந்தவரே! சந்திரவம்சம், ஸூர்யவம்சம், ஆகிய இவைகளின் விஸ்தாரத்தையும், அந்த வம்சங்களில் பிறந்த அரசர்களுடைய மிகவும் அற்புதமான சரிதத்தையும் வர்ணித்தீர். பின்னும் தர்ம ஸ்வபாவமுள்ள யதுவின் வம்சத்தையும், அவருடைய சரிதத்தையும் விசேஷ மாகச் சொன்னீர். அந்த யதுவின் குலத்தில் ஸ்ரீமஹா விஷ்ணு பூர்ணாம்சமாக அவதரித்துச் செய்த லீலைகளைச் சொல்லவேண்டும். ஸகல ஜகத்ஸ்வரூபி யும் அந்தர்யாமியாக இருப்பவருமான பகவான், யதுவின் வம்சத்தில் அவதரித்து எந்த எந்த லீலைகளைச் செய்தாரோ, அந்தந்த லீலைகள் எல்லாவற்றையும் விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும்.

அந்த பகவானுடைய சரிதத்தை ஒன்றிலும் பற்றுதலில்லாத முக்தர்களும் கானஞ்செய்கிறார்கள். அந்த சரிதமானது கேட்பவர்களுக்கு ஸம்ஸார துக்கத்தை நிவர்த்திக்கக்கூடிய மேலான மருந்தாக இருப்பதால், மோக்ஷத்தையடைய வேண்டுமென்ற விருப்பமுள்ள ஜனங்களும் அதனை ஆதரிக்கிறார்கள். பின்னும் அந்தச் சரிதமானது கேட்பவர்களுடைய காதிற்கு இனிமையாக இருப்பதால், ஸம்ஸாரிகளான

ஸாமான்ய ஜனங்களும், அத்தனை விரும்புகிறார்கள். உத்தமஸ்லோகராகிய பகவானுடைய சரிதத்தைக் கேட்கவேண்டுமென்ற விருப்பம் எவனுக்குத்தான் உண்டாகமாட்டாது? பசுக்களைக் கொல்லும் குரூர மான நடையுள்ள மிகுந்த மூடனுக்கு ஒருகால் பகவானுடைய குணங்களைக் கேட்க விருப்பமுண்டா காமலிருக்கலாம், மேலும், என்னுடைய பிதாமஹர் களாகிய (பிதாவின் பிதா) பாண்டவர்கள் திமிங்கலம் முதலிய ஜலஜந்துக்களால் பயங்கரமான, ஸமுத்திரம் போல, பீஷ்மர் முதலிய சூரர்களால் நிறைந்த கௌரவ ஸைன்யத்தை சிரமமின்றி எந்த ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய ஸஹாயத்தால் ஜயித்தார்களோ; என் மாதாவின் கர்பத்திலிருக்கும் எனது சரீரம் அச்வத்தாமவின் அஸ்திரத்தால் எரிக்கப்படும்பொழுது சரணமடைந்த என் மாதாவின் வேண்டுகோளின்படி எந்த பகவான் சக்ராயுதத்தை கையிலெடுத்துக்கொண்டு கர்பத்திலிருக்கும் என்னை காப்பாற்றினாரோ, அவருடைய சரிதங்களைச் சொல்லவேண்டும். (பகவானுடைய சரிதத்தைக் கேட்பதில் மற்ற ஜனங்களைவிட எனக்கு விசேஷ பாத்தியம் உண்டு என்று கருத்து)

அந்தப் பகவான் ஸகலப் பிராணிகளுடைய ஹிருதயத்தில் அந்தர்யாமியாக வஸிக்கிறார்; மேலும், அவர் அந்தர்முகர்களான யோகிகளுக்கு மோக்ஷத்தை யும் விஷயங்களில் ஆசையுள்ள ஜனங்களுக்கு கால ஸ்வரூபியாக இருந்து ஸம்ஸாரத்தையும் கொடுக்கிறார். அவர் மாயையால் மனிதனாக அவதரித்தவரேயன்றி உண்மையில் மனிதனல்ல. நீர் ஆத்மாவின் உண்மையை உள்ளபடி அறிந்தவராகையால், அதனைச் சொல்வதற்கு

நீரே வல்லவர். ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய சரிதம் சுருக்கமாக முந்திய ஸ்கந்தத்தில் சொல்லப்பட்டது. பின்னும் அதில், பலராமன் ரோகிணிதேவியின் புத்திரன் என்றும், ஸ்ரீகிருஷ்ணனுடைய ஸகோதர னென்றும் சொல்லப்பட்டது. ஒரு புருஷன் ஒரே ஜன்மத்தில் இரண்டுஸ்தீரீகளின் கர்பத்திலுண்டானான் என்பது எப்படிப் பொருந்தும்? ஸ்ரீகிருஷ்ணபகவான் அவதரித்தவுடன் வஸுதேவருடைய கிருஹத்தை விட்டு ஏன் நந்தகோகுலஞ்சென்றார்? பக்தர்களிடத்தில் பிரீதியுள்ள அந்தப் பகவான் தம்முடைய பந்துக்களுடன் எவ்விடத்தில் வாஸம் செய்தார்?

கோகுலத்தில் வஸிக்கும்பொழுதும், மதுரா நகரத்திலிருக்கும் பொழுதும் எதைச் செய்தார்? மாதாவின் ஸஹோதரனாகிய (அம்மான்) கம்ஸனை எதற்காகக் கொன்றார்? அம்மானை வதஞ்செய்வது உசிதமல்லவே, பின்னும் அந்த பகவான் எவ்வளவு ஸ்திரீகளைக் கல்யாணம் செய்துகொண்டார்? மனுஷ்ய தேஹத்துடன் எவ்வளவு வருஷங்கள் பூமியில் வஸித்தார்? ஓ மஹர்ஷியே! என்னால் கேட்கப்பட்டதும் கேட்கப்படாததுமான கிருஷ்ணனு டைய சரிதம் எல்லாவற்றையும், விஸ்தாரமாகச் சொல்லவேண்டும். நீர் எல்லாவற்றையும் அறிந்தவ ராகையால் உம்மைக் கேட்கிறேன். உம்முடைய தாமரை மலர்போன்ற முகத்திலிருந்து இடைவிடாமல் பெருகிவரும் ஸ்ரீகிருஷ்ண கதையாகிய அமிருதத்தை நான் பானஞ்செய்துகொண்டு இருப்பதால் ஸஹிக்க முடியாத பசியும்,தாஹமும், என்னை உபத்ரவிக்க வில்லை" என்று கேட்டார்.

14–26 ஓ சௌனகரே! இம்மாதிரியான அரசனுடைய நல்வார்த்தையை பாகவதர்களுக்குட் சிறந்தவரான சுகர் கேட்டு, அரசனைக் கொண்டாடி, ஸ்ரீகிருஷ்ணனுடைய சரிதத்தைச் சொல்ல ஆரம்பித்தார். அது கலியின் தோஷத்தை நிவர்த்திக்கக்கூடியது. எப்படியென்றால், "ராஜரிஷிகளுக்குள் சிறந்தவரான ஓ பரீக்ஷித்து மஹாராஜ! ஸ்ரீவாஸுதேவருடைய கதையை கேட்கவேண்டுமென்று திடமான நிச்சயம் உமக்கு உண்டாகியிருப்பது மிகவும் மேலானது. அந்தப் பகவானுடைய கதையைச் சொல்லும்படி என்னைத் தூண்டின நீர், சொல்லுகிறவனாகிய நான், கேட்பவர்கள் ஆகிய மூன்று பேர்களும் சுத்தர்களாகி விடுகிறார்கள்.

அந்தப்பகவானுடைய பாதத்திலிருந்து உண்டான கங்கா ஜலமானது தன்னை தரிசிப்பவனையும், ஸ்நானஞ்செய்பவனையும், ஆசமனஞ்செய்பவனையும் பரிசுத்தபடுத்தவில்லையா? முன்னொருகால் பூமியில் கர்வமுள்ள அநேக அரசர்கள் நிறைந்து இருந்தார்கள். அவர்கள் முன்ஜன்மத்தில் அஸுரர்கள். அவர்கள் பூமிக்கு விசேஷ பாரமாக இருந்தார்கள். அதனால் பூமி மிகவும் சிரமத்தை அடைந்தது. பசுவேஷம் தரித்து கண்ணீரைப் பெருக்கி ப்ரஹ்மதேவரிடம் சென்று அவரைச் சரணமடைந்து தனக்கு நேர்ந்த துக்கத்தைத் தெரிவித்து அவருடைய பக்கத்தில் நின்றாள். அதனைக்கேட்ட ப்ரஹ்மதேவர் மற்ற தேவர்களுடனும் பரமசிவனுடனும் பூமி தேவியுடனும் திருப்பாற்கடல் சென்றார். அவ்விடத்தில் புருஷஸூக்தமென்ற மந்திரத்தைச் சொல்லி, ஸ்ரீமஹாவிஷ்ணுவை ஸ்தோத்திரம் செய்தார். அந்த மஹா

விஷ்ணு ஸகல பிராணிகளுடைய சரீரத்தில் ஜீவ ஸ்வரூபியாகவிருந்து கர்மங்களைச் செய்பவர். எல்லாவற்றையும் அடைந்தவராகையால் பூர்ணர். அப்படிப்பட்ட பகவானைதுதித்து உத்திரவை எதிர்பார்த்து ஸாவதானராக நிற்கும் ப்ரஹ்மதேவர், ஆகாசவாணியை கேட்டு தேவர்களை நோக்கி, "ஓ தேவர்களே! நான் சொல்வதைக் கேட்டு அந்தப்படி சீக்கிரமாகச் செய்யவேண்டும். பூமிக்கு நேர்ந்த தாபத்தை பகவான் முன்னமேயே தெரிந்து கொண்டிருக்கிறார். அந்தப் பரமபுருஷன் வஸுதேவருடைய கிருஹத்தில் அவதரிக்கப் போகிறார். அவர் அவதரிப்பதற்கு முன்னமேயே, யது வம்சத்தில் நீங்கள் ஸ்திரீகளாக ஜனிக்கவேண்டும். தேவர்களுக்கும் தேவராகிய அந்தப் பகவான் தம்முடைய கால சக்தியால் பூமியின் பாரத்தை போக்கடித்துக் கொண்டு, எவ்வளவு காலம் பூமியில் வஸிக்கிறாரோ, அவ்வளவு காலம் நீங்களும் பூமியிலிருந்து அவரை பூஜிக்கவேண்டும்.

மேலும், அந்தப் பகவானுக்கு பிரியத்தைச்செய்ய வேண்டி நாராயணனுடைய அம்சரும், ஸ்வதந்திரரும், ஆயிரம் முகங்கள் உள்ளவருமான ஆதிசேஷன், பகவானுக்குத் தமையனாக அவதரிக்கப் போகிறார். எந்த மாயையின் மஹிமையால் இந்த ஜகத் முழுவதும் மோஹமடைந்து இருக்கிறதோ, அந்த விஷ்ணுவின் மாயையானது அவருடைய உத்தரவின் படி ஏதோ ஒரு கார்யநிமித்தம் பூமியில் அவதரிக்கப் போகிறாள்". என்று தேவர்களுக்கு ஆக்ஞாபனம் செய்து, பூமிதேவிக்கு ஸமாதான வார்த்தைகளைச் சொல்லி, தமது உலகம் சென்றார்.

27–55 அந்த சமயத்தில் சூரஸேனரென்ற அரசன் மதுரா நகரத்தில் வஸித்து அதைச் சார்ந்த தேசங்களையும் சூரஸேனதேசங்களையும் பரிபாலித்து வந்தார். அந்த மதுரா நகரமானது யதுவின் வம்சத்தில் பிறந்த அரசர்களுக்கு வாசஸ்தலமாக (ராஜதானி) இருந்தது. அந்தப் பட்டணத்தில் ஸ்ரீமந் நாராயணன் எப்பொழுதும் ஸான்னித்தியஞ் செய்து கொண்டிருக்கிறார். அந்த மதுரா நகரத்தில் ஒருகால் சூரருடைய புத்திரராகிய வஸுதேவரென்பவர் தேவகியென்னும் பெண்ணைக் கல்யாணஞ்செய்து கொண்டு வதூகிருஹப்ரவேசத்திற்காக அவளுடன் ரதத்திலேறினார். அப்பொழுது உக்கிரஸேனருடைய புத்ரனாகிய கம்ஸனென்பவன் ஸஹோதரியான தேவகியினிடம் பிரியத்தால் (சிறிய தகப்பன் பெண்) குதிரைகளின் கடிவாளங்களைப் பிடித்து ஸாரத்யஞ் செய்தான்.

அந்த ரதத்தைச்சுற்றி ஸுவர்ணமயமான அநேக ரதங்கள் சென்றன., தேவகியின் பிதாவாகிய தேவக ரென்பவர் பெண்ணிடத்தில் மிகுந்த அன்புள்ளவராகை யால் ஸுவர்ண மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட நானூறு யானைகளையும், ஒன்றரை லக்ஷம் குதிரைகளையும், ஆயிரத்தெண்ணூறு ரதங்களையும், ஸ்திரீதனமாகக் கொடுத்ததுமன்றி, இருநூறு வேலைக் காரிகளையும் கொடுத்தார். அந்த வேலைக்காரிகள் யௌவன வயதுள்ளவர்கள்; நன்றாக அலங்கரிக்கப் பட்டவர்கள்; அவர்களுக்கு வாஹனங்களும் கொடுக்கப் பட்டன. சங்கம், தூர்யம், மிருதங்கம் துந்துபி முதலிய மங்கள வாத்யங்கள் முழங்கின. இப்படி வஸுதேவர் தேவகியுடன் வீதியில் வரும்பொழுது குதிரைகளின்

கடிவாளத்தைப் பிடித்து ரதத்தை நடத்தும் கம்ஸனை நோக்கி, அசரீரி வாக்கானது "ஓ மூட! எவளை ஸஹோதரியெனறு ப்ரீதியுடன் அழைத்துப் போகிறா யோ, அந்தத் தேவகியின் எட்டாவது கர்ப்பமானது உன்னைக் கொல்லும்" என்று சொன்னது. கம்ஸனோ இயற்கையில் துஷ்டன்; பாப கர்மத்தில் நோக்க முள்ளவன்; போஜ குலத்தில் பிறந்தவர்களுக்குள் அதமன்; அப்படிப்பட்ட ஸ்வபாவமுள்ள கம்ஸன் ஆகாசவாணியைக் கேட்டு, ஸஹோதரியான தேவகியின் தலைமயிரை ஒரு கையால் பிடித்து, மற்றொரு கையில் கத்தியையெடுத்துக்கொண்டு கொல்ல முயற்சித்தான் எல்லோராலும் வெறுக்கூடிய காரியத்தைச் செய்பவனும், கொல்லும் ஸ்வபாமுள்ள வனும், வெட்கமில்லாதவனுமாகிய கம்ஸனை நோக்கி, மிகுந்த பாக்கியசாலியாகிய வஸுதேவர் நல்வார்த்தை சொல்ல ஆரம்பித்தார்.

எப்படியெனில்:– "நீர் சூரர்களால் ச்லாகிக்கக் கூடிய குணங்களுள்ளவர், போஜவம்சத்தில் ஜனித்தவர் களுக்கு கீர்த்தியை யுண்டுபண்ணுகிறவர், அப்படிப் பட்ட நீர் ஸ்திரீவதஞ்செய்யலாமா? இவள் உமக்கு ஸஹோதரியல்லவா? அதிலும் இது விவாஹ காலமல்லவா? ஓ சூர! ஸகல பிராணிகளுக்கும் சரீரமுண்டாகும் பொழுதே மரணமும் உண்டாகிறது. ஆதலால் அந்த மரணம் இன்றைக்கு வருமோ, நூறு வருஷங்களுக்குப்பிறகு வருமோ தெரியவில்லை. எப்பொழுதாகிலும் மரணம் வருமென்பது நிச்சயம். (மரணம் வருமேயென்று பயந்து இவளைக் கொல்லுகிறேனென்று சொல்வது சரியல்ல. (மரணம் நிவர்த்திக்கக் கூடியதல்லவென்று கருத்து.) ஜீவன் இந்த

சரீரத்தை விடவேண்டிய ஸமயம் (மரணம்) நேரும் பொழுது, அவனுடைய கர்மத்திற்குக் கட்டுப்பட்டு கர்மத்திற்கு அனுகுணமான சரீரத்தைப் பிடித்துக் கொண்டே, பழைய சரீரத்தை விடுகிறான். (இந்த சரீரம் போனபிறகு வேறு சரீரம் கிடைக்கிறதில்லை யென்றால், பாபத்தைச் செய்தாவது, இந்தச் சரீரத்தை காப்பாற்றிக் கொள்ளவேண்டும். இவன் விரும்பாம லிருந்தாலும், அவனுடைய கர்மத்திற்குத்தக்கபடி அவசியம் சரீரமுண்டாகிறதென்பது நிச்சயமாகையால், இந்தச்சரீர நிமித்தம் பாபத்தைச்செய்வது உசிதமில்லை என்பது கருத்து.) மனிதன் எப்படி ஒருகாலை பூமியில் ஊன்றிக்கொணடு மற்றொரு காலையெடுத்து வைத்து நடக்கிறானோ, அட்டையானது ஒரு திருணத்திலிருந்து மற்றொன்றுக்குச் செல்லும்பொழுது மற்றொரு திருணத்தைப் பிடித்துக்கொண்டே எப்படி முந்தியதை விடுகிறதோ, அதுபோலவே ஜீவன் வேறு சரீரத்தை அடைந்தே, முந்திய சரீரத்தை விடுகிறான்.

ஜீவன் அரசன் முதலியவர்களுடைய மேலான சரீரத்தை நேரில் பார்த்தும், இந்திரன் முதலிய தேவர்களுடைய சரீரத்தை சாஸ்த்திரங்களைக் கேட்ப தாலும் தெரிந்து கொணடிருக்கிறான். அப்படிப்பட்ட மனிதன் அந்த மேலான சரீரத்தை அடைய விரும்பி, அதன் ஸம்ஸ்காரமுள்ள மனத்தால், அதனையே தியானஞ்செய்கிறான். அப்பொழுது தன்மயனாகி (தேவசரீரத்தையடைந்தவன் போல் எண்ணிக்கொண்டு) இந்த சரீர ஞாபகமில்லாமலிருக்கின்றான். இது போலவே, ஜாக்ரதவஸ்தையில் மேற்சொல்லியபடி பார்த்தும் கேட்டும் தெரிந்துகொணடபடி, அந்த சரீரத்தை ஸ்வப்னத்தில் பார்க்கிறான்; அதனை

தன்னதாக பாவிக்கிறான்; அதன்பின் ஜாக்ரதவஸ்தை யின் ஞாபகம் மாறிவிடுகிறது. பிராணிகள் வேறு சரீரத்தை அடைந்து முந்திய சரீரத்தை விடுவது, மேற்காட்டியது போன்றதேயாம். மரணமடையும் ஜீவனுடைய மனமானது அதிருஷ்டத்தால் (கர்மத்தால்) தூண்டப்பட்டு எந்த சரீரத்தை விரும்புகிறதோ, ஐந்து பூதங்களாலேற்பட்ட அந்த சரீரத்தை ஜீவன் அடை கிறான். குளம் முதலியவைகளிலிருக்கும் ஜலத்திலும், எண்ணெய் முதலியவைகளிலும், சந்திரன், ஸூர்யன் முதலிய தேஜஸ் ப்ரதிபலிப்பையடைகிறது.

அது அசையாமலிருக்கும் பொழுது, காற்றினால் ஜலம் அசைவதால் அசைவதுபோல எப்படித் தோன்றுகிறதோ, அப்படி ஜீவனும் இயற்கையில் ஜனன மரண மற்றவனானாலும், தன்னுடைய அவித்யையால் ஏற்பட்ட சரீரங்களில் அபிமானம் வைத்து மோஹிக்கிறான். ஆனதால் ஒருவருக்கும் த்ரோஹஞ் செய்யக்கூடாது. அப்படிச்செய்தால் இவ்வுலகத்திலும் அரசன் தண்டிப்பான்; பரலோகத்தில் யமன் தண்டிப்பார். பிறருக்குக் கெடுதிசெய்யாமலி ருப்பவன் க்ஷேமமாக இருப்பான். ஓ தீனர்களிடத்தில் ப்ரீதியுள்ளவரே! இவள் உம்முடைய ஸஹோதரி; சிறுபெண்; தயை செய்யத்தக்கவள்; பெண்ணுக் கொப்பானவள்; ஆனதால் நல்ல ஸ்வபாவமுள்ள இவளைக் கொல்வது உசிதமில்லை" என்று ஸாம பேதங்களடங்கிய வார்த்தைகளைச் சொன்னார். அதனைக்கேட்டும், மிகவும் கொடியவனாகிய அந்தக் கம்ஸன் அஸுரர்களை அனுஸரித்தவனாகையால், வஸுதேவருடைய வார்த்தையை ஒப்புக்கொள்ள வில்லை. அப்பொழுது கம்ஸனுடைய எண்ணத்தைத்

தெரிந்துகொண்ட வஸுதேவர், அந்த ஸமயத்திற்குத் தக்கபடி செய்யவேண்டியதை, தனக்குள் பின்வருமாறு யோசிக்கலானார். எப்படியெனில்:– மிருத்யு போன்ற இந்தக் கம்ஸனுக்கு நம்முடைய புத்திக்குத்தக்கபடி உபதேசித்து, தேவகியை வதஞ் செய்யாமலிருக்கும் படிச் செய்கிறேன். அதனையும் இவன் கேட்காவிடில் நம்மிடத்தில் குற்றமில்லை. இவளிடத்தில் பிறக்கும் புத்திரர்களை கம்ஸனிடங் கொடுப்பதாகச் சொல்லி இவளைக் காப்பாற்றுகிறேன். (இப்பொழுது உபேக்ஷிக்கக்கூடாதென்று கருத்து.) அப்படிச் செய்வது ந்யாயமாவென்றால், எனக்கு புத்திரர் பிறந்து, அதுவரையில் இவனும் ஜீவித்து வருங்கார்யம் யாரால் அறியக்கூடியது (எது நடக்கவே நடக்கும்; எனக்குப் புத்திரர்கள் பிறக்குமுன் இவன் இறந்தால் ஒருவருக்கும் ஒன்றுமில்லையென்று கருத்து.)

தெய்வத்தின் கதியை மீறுவதற்கு ஒருவராலும் முடியாது; ஸமீபத்தில் வந்த மிருத்யு (கம்ஸன்) திரும்பிப்போவான்; போனவன் சிலகாலங் கழித்து திரும்பியும் வரலாம். அதெப்படியெனில், காட்டில் தீப்பற்றிக்கொண்டு எரியும்பொழுது ஸமீபத்திலிருக்கும் மரங்களைவிட்டு வெகுதூரத்திலிருக்கும் மரங்கள் தீப்பிடித்துக்கொள்ளுகிறது. ஸமீபத்திலிருக்கும் மரங்களில் தீப்பிடிக்காமலிருப்பதற்கும், தூரத்திலிருக்கும் மரங்களை அக்னி எரிப்பதற்கும் அதிருஷ்டமே காரணம். வேறொன்றையும் காரணமாகச் சொல்ல முடியாது. அதுபோல ஸகல பிராணிகளும் ஜனிப்பதற்கும் (சரீரத்தை அடைவதற்கும்) மரிப்பதற்கும், (சரீரத்தையிழப்பது) அவரவர்களுடைய அதிருஷ்டமே காரணம். ஆதலால் பிறக்கும் பிள்ளைகளைக்

கொடுப்பதாக ப்ரதிஜ்ஞை செய்து, இவளைக் காப்பாற்றுவதே, இந்த ஸமயத்திற்குத் தகுதியானது" என்று தம்முடைய புத்திக்கெட்டியபடி யோசித்து நிச்சயித்தார். பின்னுமவர் மனத்தில் கவலை உள்ளவரானாலும் சிரித்தமுகமுள்ளவராகி பாபியும் கொடிய ஸ்வபாவ முள்ளவனும், வெட்கமில்லாதவனுமாகிய கம்ஸனை நோக்கி ச்லாகித்து, "ஓ நல்ல ஸ்வபாவ முள்ளவரே! அசரிர வாக்கானது தேவகி உம்மைக் கொல்வாளென்று சொல்லவில்லையே; இவளிடத்தில் எனக்குப் பிறக்கும் பிள்ளையால் உமக்கு மரண முண்டாகும் என்றல்லவா சொல்லிற்று. ஆதலால் பிறக்கும் குழந்தைகளை உம்மிடம் ஸமர்ப்பிக்கிறேன்; இவளைக் கொல்லவேண்டாம்" என்று ஸமாதானஞ் செய்தார். அதனைக் கேட்ட கம்ஸன் அவருடைய வார்த்தையின் ஸாரத்தையறிந்து, தேவகியைக் கொல்லாமல் விட்டுவிட்டான். (பிறக்கும் பிள்ளைகளைக் கொன்று விடுவோம். ஸ்திரீவதஞ்செய்து அதனால் தோஷத்தை ஸம்பாதிக்க வேண்டாமென்று நினைத்தானென்று கருத்து) வஸுதேவரும் தம்முடைய வார்த்தையை அங்கீகரித்த கம்ஸனைக் கொண்டாடி, தம்முடைய கிருஹஞ்சென்றார்.

56–61 பின்பு பகவானையே முக்ய தைவமாகக் கொண்ட தேவகியானவள், ஒவ்வொரு வருஷத்திலும் பிரஸவகாலத்தில் முறையே எட்டுப் புத்திரர்களையும் ஒரு பெண்ணையும் பெற்றாள். அவள் முதல் சிசுவை ப்ரஸவித்தவுடன், பொய் சொல்வதில் பயமுள்ளவராகிய வஸுதேவர், மிகுந்த துக்கத்துடன் கீர்த்திமானென்ற அந்த புத்திரனை கம்ஸனிடங் கொடுத்தார். ஸத்யமான ப்ரதிஜ்ஞையுள்ளவர்கள்

எதைத்தான் ஸஹிக்கமாட்டார்கள்? பகவானே உண்மையான வஸ்து, அதனைவிட வேறொன்று மில்லையென்ற ஆத்மதத்வத்தை யறிந்தவர்கள் எதனை விரும்புவார்கள்? (அந்த உண்மையை அறிந்தவராகையால், புத்திர ஸுகத்தைவிரும்பவில்லை யென்று கருத்து) "கம்ஸன் துஷ்டனானாலும் முன் பிரதிக்ஞை செய்தபடி வஸுதேவர் புத்திரனைக் கொடுத்தார்" என்று ஸந்தோஷித்துக் கொல்லாமல் விட்டுவிடுவான் என்று எண்ணி, வஸுதேவர் கம்ஸனிடத்தில் குழந்தையைக் கொடுக்கவில்லை; துஷ்டர்கள் எதைத்தான் செய்யமாட்டார்கள்? கம்ஸன் துஷ்டனாகையால் குழந்தையைக் கொன்று விடுவான்" என்று தெரிந்தே கொடுத்தார்.

ஸ்ரீபகவானையே மனத்தில் த்யானஞ் செய்பவர்கள் எதைத்தான் விடமாட்டார்கள்? (தேவகி, பகவானையே ஹிருதயத்தில் தியானஞ் செய்தவளாகையால் புத்திரனிடத்தில் ப்ரீதியை விட்டாளென்று கருத்து) வஸுதேவர் ஸுக துக்கங்களில் ஸம புத்தியுள்ளவ ராக விருப்பதையும் ஸத்யவாதியாக இருப்பதையும் கண்டு, கம்ஸன் மனமகிழ்ந்து சிரித்துக்கொண்டு, வஸுதேவரை நோக்கி, "உங்களிருவர்களுக்கும் பிறக்கும் எட்டாவது கர்ப்பத்தால், எனக்கு மரண மென்று ஆகாசவாணியால் சொல்லப்பட்டது. இவன் முதல் குமாரன்; இவனால் எனக்குப் பயமில்லை; இவனை யெடுத்துப் போகலாம்" என்றான். அதனைக் கேட்ட வஸுதேவர், அப்படியே செய்கிறேனென்று சொல்லி, அந்தக் குழந்தையை யெடுத்துச் சென்றார். ஆனாலும் ஸ்திரபுத்தியில்லாதவனும் அஸத்தாக விருக்கும் அந்தக் கம்ஸனுடைய வார்த்தையை

நம்பவில்லை.

62–69. பின்பு நாரதமஹர்ஷி கம்ஸனிடம் வந்து, கம்ஸனை நோக்கி "நந்தன் முதலிய கோகுலத்திலி ருக்கும் கோபர்களும், அவர்களுடைய ஸ்திரீகளும், வஸுதேவர் முதலிய விருஷ்ணிகளும், தேவகி முதலிய யாதவஸ்திரீகளும், வஸுதேவர், நந்தர் இவர்களுடைய பந்துக்களும், தேவர்கள். உன்னை ஸேவித்துக் கொண்டிருப்பவர்களெல்லோரும் அஸுரர்கள். பூமிக்குச் சுமையாகவிருக்கும் அஸுராம்சமுள்ள அரசர்களைக்கொல்வதற்காக பகவான் தேவர்களால் பிரார்த்திக்கப்பட்டு, வஸுதேவரிடம் அவதரிக்கப் போகிறார்" என்று சொல்லி ஆகாச மார்க்கமாகச் சென்றார். அதனைக்கேட்ட கம்ஸன், "யாதவர்கள் தேவாம்சமுள்ளவர்கள்; தான் முன்ஜன்மத்தில் கால நேமியென்ற அஸுரனாக இருந்தவன். ஸ்ரீமஹா விஷ்ணுவினால் கொல்லப்பட்டு கம்ஸனாக ஜனித்த வன். தன்னைக் கொல்வதற்காக ஸ்ரீமஹாவிஷ்ணு தேவகியின் கர்ப்பத்தில் அவதரிக்கப்போகிறார்" என்ற உண்மையைத்தெரிந்து கொண்டு, தேவகிக்கும், வஸு தேவருக்கும் விலங்கு போட்டு, அவ்விருவர்களையும் காராகிருஹத்தில் அடைத்தான். பின்னும் தேவகி ப்ரஸவித்தவுடன் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அம்சமான புத்ரன் இவன் தானோ என்று ஸந்தேஹித்து, ஒவ்வொரு குழந்தையையும், அப்போதைக்கப்போது கொன்றான். தங்கள் உயிரையே பெரியதாக நினைத்த லுப்தர்களான அரசர்கள், பெரும்பாலும் மாதா, பிதா, ப்ராதா, புத்ரர்கள், தோழர்கள், பந்துக்கள் ஆகிய இவர்களைக் கொல்வார்கள். ஆனதால் மிக்கபலசாலியான கம்ஸன் யதுக்களை

விரோதித்துக் கொண்டதுமல்லாமல், யாதவர்களுக்கும் அதிபதியாகிய உக்கிரஸேனரென்ற தன்னுடைய பிதாவையும் நிக்ரஹித்து சூரஸேன தேசத்தைத் தானே பரிபாலித்தான்.

நோட்டு

பசுக்களைக் கொல்லும்:– இயற்கையில் துக்கமற்றவனாகிய ஆத்மாவை ஸுகதுக்க ஸம்பந்தமுள்ளவனென்று நினைத்து ஆத்ம ஸ்வரூபத்தை அறியாமலிருப்பவன் பசுக்னன் எனப்படுகிறான். அந்த மூடனைத் தவிர்த்து வேறு யார்தான் பகவத் கதையில் பிரியப்படமாட்டான்? ஸ்ரீமத் பகவானுடைய கதையாகிய அமிருதமானது லோகத்தில் பிரஸித்தமான அமிருதத்தைவிட மேலானதென்று, மூன்று விஸேஷணங்களால் காட்டப்பட்டது. அமிருதத்தை விஷய ஆசையுள்ளவர்கள் விரும்புவார்கள். கதாமிருதத்தை, விஷயங்களில் ஆசையற்ற யோகிகளும் விரும்புகிறார்கள். அமிருதமானது ஸம்ஸாரத்தை விருத்தி பண்ணக்கூடியது; கதாமிருதம் ஸம்ஸார ரோகத்தை நிவர்த்திப்பது. அமிருதம் ரஸனேந்திரியத்திற்கு மாத்திரம் (நாக்கு) ருசியைத் தரக்கூடியது; கதாமிருதமானது காதிற்கும், மனத்திற்கும் திருப்தியையுண்டு பண்ணுகிறது. அப்படிப்பட்ட கதாம்ருதத்தில் அபசுபோன்ற நடையுள்ள மூடன் தவிர யார்தான் பிரியப்படமாட்டான்? (பசுவென்றால் நல்லது; அபசு– கெட்டது, க்ன– தெரிந்துகொள்வது) நல்லதை அறியாதவன், என்று அர்த்தம். வீரராகவீயம். ஸகல ஜீவர்களும் பரமாத்மாவிற்கு தாஸர்கள் (சேஷர்கள்);

பரமாத்மா ஒருவனுக்கும் சேஷனல்ல. அப்படிப்பட்ட பரமாத்மாவைப் பிறருக்கு சேஷனென்று நினைப்பதாகிய நாசத்தைச் செய்பவன் அபசுக்னனெனப்படுகிறான். "வேறு வகையாகவிருக்கும் ஆத்மாவை, வேறு வகையாக எவன் தெரிந்து கொள்கிறானோ, ஆத்மாவை மறைத்தவனும், திருடனுமாகிய அவனால் எவ்வித பாபம் தான் செய்யப்படவில்லை?" அப்படிப்பட்ட பாபி தவிர வேறெருவனும் பகவத்கதையில் வைராக்கியத்தையடைய மாட்டான். முனிபாவ பிரகாசிகா. வாஹனங்களும்:–மூலத்தில் "யாநெ" என்னும் ஒரு பாடமுண்டு. அதற்கு கிருஹப்ரவேச ப்ரயாண காலத்தில் என்று அர்த்தம். நல்வார்த்தை சொல்வது (ஸாமோபாயம்) ஐந்துவகை. ஸ்திரீ வதஞ் செய்யாமலிருந்தால், கீர்த்திலாபம் உண்டாகுமென்றும், குலவிருத்தி யுண்டாவதால் உபகாரஞ் செய்ததாகுமென்றும், ஸகோதரியென்பதால் ஸம்பந்தமும் (பந்துத்வம்), உன்னுடைய பெண்ணுக்குச் சமமானவளென்பதால் உனக்கும் அவளுக்கும் பேதமில்லை என்றதாகிய அபேதமும், சூரர்களால் கொண்டாடக் கூடியவர் என்றதால் குணத்தைச் சொல்வதுமாகிய ஐந்துவகை ஸாமோபாயமும் செய்யப்பட்டது என்று கருத்து. ஸ்ரீத.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–2

கர்ப்பஸ்துதி.

1–5. ப்ரலம்பன், பகன், சாணூரன், திருணாவர்த்தன், மஹாசனன், முஷ்டிகன், அரிஷ்டன், த்விதன், பூதனா, கேசி, தேனுகன் முதலிய அஸுரர்கள், பாணன், பௌமன், ஜராஸந்தன் முதலிய அஸுராம்சமுள்ள அரசர்கள் ஆகிய இவர்களுடன் பலிஷ்டனாகிய கம்ஸன் யாதவர்களுக்கு உபத்திரவம் செய்தான். அந்த யாதவர்கள், கம்ஸனுடைய உபத்திரவத்தை ஸஹியாமல், குரு, பாஞ்சாலம், ஸால்வம், விதர்ப்பம், கேகயம், நிஷதம், விதேஹம், கோஸலம் முதலிய தேசங்களுக்குச் சென்றார்கள். சில பந்துக்கள், கம்ஸனையே அனுஸரித்துத் கொண்டிருந்தார்கள். தேவகியின் ஆறு குழந்தைகளும் உக்ரஸேனருடைய புத்ரனான கம்ஸனால் அப்போதைக்கப்போது கொல்லப்பட்டன. ஏழாவது தடவை தேவகி கர்ப்பத்தைத் தரித்தாள். அந்தக் கர்ப்பமானது அனந்தனென்று சொல்லப்படும் ஆதிசேஷனுடைய அம்சம். அந்த கர்ப்பமானது தேவகிக்கு ஸந்தோஷத்தையும், துக்கத்தையும் விருத்தி செய்தது.

6–14 அப்பொழுது ஸகல ஜகத்ஸ்வரூபியாக இருக்கும் பகவான், தம்மையே தைவமாகக்கொண்ட பக்தர்களான யாதவர்களுக்குக் கம்ஸனால் நேர்ந்திருக்கும் பயத்தை அறிந்து, தம்முடைய யோகமாயையை நோக்கி, "ஓ தேவி கோபர்களாலும் கோபிகைகளாலும் அலங்கரிக்கப்பட்ட கோகுலத்திற்கு நீ போக வேண்டும். அவ்விடத்தில் வஸுதேவருடைய

பத்தினியான ரோஹிணீ என்பவள் வஸிக்கிறாள். இன்னும் மற்றவர்களும் கம்ஸனிடத்தில் பயந்து, ரஹஸ்யமான இடங்களில் ஒளிந்திருக்கிறார்கள். இப்போது தேவகியின் வயிற்றிலிருக்கும் சேஷனென்ற பெயருள்ள என்னுடைய தேஜஸ்ஸை எடுத்து, ரோஹிணீயின் வயிற்றில் கொண்டு வைத்துவிடு. பின்பு நான் பூர்ணாம்சமாக தேவகியினிடத்தில் புத்ரனாக அவதரிப்பேன். நந்தனுடைய பத்தினியாகிய யசோதை யென்பவளிடம் நீ அவதரிக்க வேண்டும். மனிதர்கள் உனக்கு ஆலயங்கள் கட்டுவித்து, அவைகளில் உன்னை பிரதிஷ்டை செய்விப்பார்கள். மேலும் உனக்கு துர்க்கா, பத்ரகாளீ, விஜயா, வைஷ்ணவீ, குமுதா, சண்டிகா. கிருஷ்ணா, மாதவீ, கன்னிகா, மாயா, நாராயணீ, ஈசானா, சாரதா, அம்பிகா என்று பெயர்களுண்டாகும். உன்னை பிரார்த்திக்கும் ஜனங்களுக்கும் ஸகல இஷ்டத்தைக் கொடுப்பவளாக இருப்பாய். அதனால் தூபம், தீபம், பலவகையான உபஹாரங்கள் ஆகிய இவைகளைக் கொண்டு ஜனங்கள் உன்னைப் பூஜிக்கப்போகிறார்கள். ஒரு வயிற்றிலிருந்து மற்றொருவருடைய வயிற்றில் இழுத்து வைக்கப்பட்டபடியால், அந்தக் குழந்தைக்கு ஸங்கர்ஷணரென்றும், மிக்க பலசாலியாகையால் பலபத்ரரென்றும், ஜனங்களை ரமிக்க (ஸந்தோஷிக்க)ச் செய்வதால் ராமனென்றும் பெயருண்டாகும்" என்று ஆக்ஞாபித்தார்.

15–26 அதனை சிரஸால் வஹித்த யோகமாயை, பகவானுக்கு ப்ரதக்ஷிணஞ்செய்து, பூமிக்கு வந்து பகவானுடைய உத்திரவின்படி செய்தாள். தேவகியினுடைய கர்ப்பமானது ரோஹிணீயிடம் சென்ற

பொழுது "கர்ப்பமானது ஸ்ரவித்துவிட்டது; கஷ்டம்!" என்று பட்டணத்திய ஜனங்கள் அழுதார்கள். பின்பு ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர், பூமியின் பாரத்தை நிவர்த்திப்பதற்காக தம்முடைய அம்சமாக வஸு தேவருடைய மனத்தில் ப்ரவேசித்தார். மகா புருஷனுடைய அம்சத்தை தரித்த அந்த வஸுதேவர் ஸூரியன்போல் ப்ரகாசித்தார். ஜனங்களால் நெருங்க முடியாதவராக இருந்தார். பின்பு வஸுதேவரிட மிருந்து அழிவற்ற மங்களமான பகவதம்சமானது தேவகியினிடம் வந்தது. அந்த அம்சமானது எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக இருப்பது, கிழக்கு திக்கானது ஆனந்தகரனாகிய சந்திரனை தரிப்பதுபோல் தேவகி அந்த பகவதம்சத்தை மனத்தால் தரித்தாள்.

ஸகல ஜகத்திற்கும் இருப்பிடமான பகவானைக் கர்ப்பத்தில் தரித்தவளும், கம்ஸனுடைய காரா கிருஹத்தில் வஸிப்பவளுமான தேவகியானவள், குடத்தில் ஏற்றி வைக்கப்பட்ட தீபம் போலவும், பிறருக்கு உபதேசிக்க மனமில்லாதவனிடத்திலிருக்கும் நல்ல வித்யை போலவும் ப்ரகாசிக்கவில்லை. பகவான் தேவகியின் கர்ப்பத்திலிருப்பதால், அவள் மிக்க தேஜஸ் உள்ளவளாக இருந்தாள்; அவளுடைய காந்தியால் அந்த கிருஹமானது ப்ரகாசித்தது. அப்படிப்பட்ட தேவகியைப்பார்த்துக் கம்ஸன், "இவளுடைய வயிற்றில் என்னுடைய ப்ராணனை அபகரிக்கும் ஸ்ரீமந்நாராயணன் வந்துவிட்டார். இந்தக் கர்ப்பமானது முன்போலில்லை. இப்போது என்ன செய்யவேண்டும்? மனிதன் தன் கார்யத்திலேயே முக்கிய நோக்கமுள்ளவனானாலும் கீர்த்தி முதலியவை களை நாசஞ்செய்து கொள்ளக்கூடாது. இப்பொழுதே

தேவகியைக் கொல்வோமென்றால் அதுவும் உசிதமல்ல. ஏனென்றால் தேவகியை வதஞ்செய்தால் ஸ்திரீவதம், ஸஹோதரிவதம், கர்ப்பிணிவதம் ஆகிய இவைகளா லுண்டாகும் பாபம் நேரிடும். அதனால் கீர்த்தியும், ஐசுவரியமும், ஆயுஸ்ஸும் நாசமாகிவிடும். பிறரால் அடைய முடியாத விசேஷ கீர்த்தியை வெகுநாளாக ஸம்பாதித்திருக்கிறேனல்லவா? அந்தக் கீர்த்தி நாசமாகிவிடும். கீர்த்தியற்ற மனிதனை ஸாதுக்கள் ஆச்ரயிக்கமாட்டார்கள். ஸாதுக்களால் ஒப்புக் கொள்ளப் படாமல் மிகவும் கொடியவனாக ஜீவித்திருப்பது, ம ரணமடைவதற்குச் சமமானதேயாம். (ஜீவித்திருக்கும் பொழுதும் எல்லோரும் நிந்திப்பார்கள்.) மரணமடைந்த பிறகும், மிக்க பாபியாகவிருந்த இவன் நரகத்தை அடைவான் என்று, மனிதர்கள் நிந்திப்பார்கள்" என்று பலவகையாக யோசித்து, கம்ஸன் கொடிய எண்ணத்தை யொழித்து, தேவகியின் ப்ரஸவத்தை எதிர்பார்த்திருந்தான். பின்னுமவன் ஸ்ரீமந் நாராயண னிடத்தில் விரோத புத்திவைத்து, உட்கார்ந்திருக்கும் பொழுதும், நிற்கும்பொழுதும், படுத்திருக்கும்பொழுதும், புஜிக்கும்பொழுதும், ஸஞ்சரிக்கும்பொழுதும், ஜலம் முதலியவைகளைக் குடிக்கும்பொழுதும் பகவானையே த்யானஞ் செய்து கொண்டிருந்தான். அதனால் ஜகத் முழுவதும் மகாவிஷ்ணுவின் ஸ்வரூபமாகத் தோன்றியது.

27–44. அந்த ஸமயத்தில் ப்ரஹ்மா, பரமசிவன் நாரதர் முதலிய மகரிஷிகள், மற்ற தேவர்கள் ஆகிய இவர்கள் தேவகியிருக்குமிடம் வந்து தங்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்பவரான ஸ்ரீ பகவானை, இனிமையான வார்த்தைகளால் பின்வருமாறு ஸ்தோத்திரஞ் செய்தார்கள். எப்படியெனில்–"ஓ பகவன்!

நீர் ஸத்யஸங்கல்பர்; (பூமியில் அவதரித்து, துஷ்டர் களைச் சிக்ஷிப்பதாக வாக்களித்தபடி அவதரித்தீ ரென்று கருத்து); உம்மை அடைவதற்கு ஸத்யமே முக்கிய ஸாதனமாகவிருக்கிறது, நீர் ஸிருஷ்டிக்கு முந்தியும் ஸிருஷ்டிகாலத்திலும். பிரளயகாலத்திலும், இருப்பவர்; பிருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம் ஆகிய ஐந்து பூதங்களுக்கும் காரணமாக விருப்பவர்; (சிருஷ்டிக்கு முன்னிருப்பவரென்று காட்டப்பட்டது.); ஜகத்தில் அந்தர்யாமியாக இருப்பவர்; (ஜகத்திருக்கும் பொழுதும் இருப்பவரென்று காட்டப்பட்டது.) ஜகத்தானது நசித்தாலும் எஞ்சியிருப்பவர் நீர் ஒருவரேயாம். மேலும் நீர் ரிதம் (நல்வார்த்தை), ஸத்தியம் (ஸமமாகப் பார்ப்பது) இவைகளை லோகத்தில் பரவச்செய்பவர்; மேற்சொல்லியபடி ஸகல வகையிலும் ஸத்திய ஸ்வரூபியாகவிருக்கும் உம்மைச் சரணமடைகிறோம்.

இந்த ஜகத்தானது ஒரு விருக்ஷம் போலிருக்கிறது; (நாசமுள்ளதாகையால் விருக்ஷம் உதாஹரணமாகக் காட்டப்பட்டது) இது ஆதியானது. இந்தப் ப்ரபஞ்ச மாகிய விருக்ஷத்திற்கு ப்ரகிருதியே முக்கியமான ஸ்தானம்; ஸுகதுக்கங்களிரண்டும் பழங்களாக இருக்கின்றன; ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களே வேர்களாக இருக்கின்றன. தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகிய நான்கு புருஷார்த் தங்களும் ரஸங்களாக இருக்கின்றன. ஜ்ஞானேந் திரியங்கள் ஐந்தும் விழுதுகளாக இருக்கின்றன; பிராணனுடைய தர்மங்களான பசி, தாஹங்கள், மனத்தின் தர்மங்களான சோக மோஹங்கள், சரீர தர்மங்களான ஜரா, மரணங்கள் ஆகிய ஆறும்

ஸ்வபாவங்களாக இருக்கின்றன. ஏழு தாதுக்களும் தோல்(பட்டை)களாக இருக்கின்றன; ஐந்து பூதங்கள், மனம், புத்தி, அஹங்காரம் என்று எட்டு கிளை களிருக்கின்றன; மேலுமந்த விருக்ஷத்திற்கு ஒன்பது த்வாரங்களே பொந்துகளாக இருக்கின்றன; பத்து பிராணன் இலைகளாக இருக்கின்றன; பின்னும் அந்த விருக்ஷத்தில் ஜீவாத்மா பரமாத்மாவென்ற பக்ஷிகள் வஸிக்கின்றன. அப்படிப்பட்ட ஜகத்தாகிய விருக்ஷத்திற்கு நீர் ஒருவரே,காரணம்; (அதனைப் படைப்பவரென்று கருத்து) அதனைக் காப்பாற்று கிறவரும் நீர் ஒருவரே; அதனை ப்ரளயகாலத்தில் ஸம்ஹரிப்பவரும் நீரே.

உம்முடைய மாயையால் மோகித்த ஜனங்கள், பிருஹ்மா சிருஷ்டிக்கிறாரென்றும், ஸ்ரீமஹாவிஷ்ணு காப்பாற்றுகிறாரென்றும், ருத்திரன் ஸம்ஹரிக்கிறா ரென்றும் சொல்வார்கள். உம்முடைய உண்மையை அறிந்த வித்துவான்கள் அப்படிச் சொல்லமாட்டார் கள். ஓ பரமாத்மாவே! ஜ்ஞானஸ்வரூபியே! ஸ்தாவர ஜங்கமங்களடங்கிய ஜகத்திற்கு க்ஷேமத்தைச் செய்ய வேண்டி, ஸாதுக்களுக்கு ஸுகத்தைக் கொடுக்கக் கூடியவைகளும், துஷ்டர்களைச் சிக்ஷிக்கக்கூடிய சரீரங்களை எடுத்துக் கொள்கிறீர். ஸ்ரீராமன், கிருஷ்ணன் முதலிய அவதாரங்களைச் செய்கிறீர் என்று கருத்து). ஓ தாமரைமலர் போன்ற கண்களுள்ள வரே தாண்ட முடியாத ஸம்ஸார ஸமுத்திரத்தைத் தாண்ட விரும்பிய விவேகிகள் ஸகல ஜகத்திற்கும் இருப்பிடமான உம்மைத் த்யானஞ் செய்தார்கள். மேலும் அவர்கள், ஸம்ஸார சமுத்திரத்தைத் தாண்டு வதற்கு ஓடமாகப் பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்ட

உம்முடைய பாதத்தை ஆச்ரயித்து, அதன் ஸகாயத்தால் கன்றின் குளம்படியைப்போல் அந்தப் பெரிய ஸமுத்திரத்தை லகுவாகத்தாண்டி, அக்கரை சென்றார்கள். (உம்முடைய அவதாரமானது பக்தர் களுக்கு மோக்ஷத்தையும் கொடுக்கக் கூடியதென்று காட்டப்பட்டது.) ஓ தாமாகப்பிரகாசிப்பவரே! நீர்பக்தர்களை அனுக்ரஹிப்பவர்; உம்முடைய பாதத்தை ஆச்ரயித்து, அதனால் ஸம்ஸார ஸமுத்திரத்தைக் கடந்து அக்கரைக்குச் சென்ற விவேகிகள், தங்களுக்குப் பிந்தியவர்களான ஜனங்களிடத்தில் விசேஷ ப்ரீதி வைத்து, உம்முடைய பாதமாகிய ஓடத்தை இந்தக் கரையிலேயே வைத்துச் சென்றார்கள்.

(உம்முடைய பாதத்தை ஸ்மரித்த மாத்திரத்தில் பெரியதாகிய ஸமுத்திரம் கன்றின் குளம்படிபோல் சிறியதாகிவிட்டபடியால், ஓடத்தை அபேக்ஷியாமலேயே அக்கரை சென்றார்கள் என்றும், பகவானுடைய பாதத்தின் மஹிமை அப்படிப்பட்டதாகையால், எவ்விதத்திலாவது பகவானிடத்தில் மனத்தைச் செலுத்தவேண்டுமென்றும் கருத்து.) ஓ! தாமரைமலர் போன்ற கண்களுள்ளவரே! எவர்கள் 'நாம் முக்தர்கள்' என்று நினைத்து உம்மிடத்தில் பக்தி செய்ய வில்லையோ, அவர்கள் உம்முடைய பாதாரவிந்தத்தை ஆச்ரயிக்காமலிருப்பதால் சித்த சுத்தியை அடைகிற தில்லை. ஆனதால் அவர்கள் அநேக ஜன்மங்கள் தபஸ்செய்து, மோக்ஷத்தை அடைவதற்குத் தகுதியான பதத்தை (மேலான குலத்தில் பிறப்பது, தபஸ், வேதாத்யயனம் முதலியவை) அடைந்திருந்தாலும் கீழே விழுகிறார்கள். (விக்கினங்களால் கெடுக்கப் படுகிறார்கள்). ஓ ப்ரபுவே! உம்மிடத்திலேயே மனத்தை

செலுத்தி ஏகாந்தமாகப் பக்தி செய்பவர்கள், ஒரு பொழுதும் நல்மார்க்கத்திலிருந்து தவறமாட்டார்கள். மேலும் அவர்கள் உம்மால் பயமில்லாமல் விக்கின ஸமூஹத்தின் தலையில் ஸஞ்சரிப்பார்கள். (விக்னங் களை ஜயிப்பார்கள்.) ஸகல ஜனங்களும் உம்மைப் பூஜித்துக் கர்ம பலத்தையடைவதற்கு உபயோகமாக நீர் சுத்த ஸத்வமயமான சரீரத்தையெடுத்துக் கொள்கிறீர். (அவதரிக்கிறீர்) அந்தச் சரீரத்தை, ப்ரஹ்மசாரி வேதாத்தியயனத்தாலும், கிருஹஸ்தன் கர்மயோகத்தாலும், வானப்ரஸ்தன் தபஸ்ஸினாலும், ஸன்யாஸி ஸமாதியாலும் பூஜிக்கிறார்கள். (அவதரிக்கா விடில் உம்முடைய ஸ்வரூபம் ஜனங்களுக்கு எப்படித் தெரியுமென்று கருத்து.)

எல்லா லோகத்தையும் படைப்பவரே! நீர் இம்மாதிரி பூமியில் அவதரிக்கா விடில், அஜ்ஞானம், அதனாலுண்டாகிய பேதபுத்தி ஆகிய இவைகளை நிவர்த்திக்கும் அபரோக்ஷ ஜ்ஞானமில்லாமல் போய் விடும். எவருடைய ஸம்பந்தத்தால் புத்தி முதலிய குணங்கள் பிரகாசிக்கின்றனவோ, பரமாத்வாவாகிய எவரால் பாஹ்யமான குணம் பிரகாசிக்கிறதோ, அவர் பரமாத்மாவென்று அனுமானத்தால் அறியப்படுகிறீர். (சுத்த ஸத்வஸ்வரூபமாகிய உம்முடைய ஸ்வரூபத்தை உபாசித்து, அந்தக் கரணம் தன்மயமானால் அபரோக்ஷ ஸாக்ஷாத்கார முண்டாகிறதென்று தாத்பர்யம்.) நீர் எல்லாவற்றிற்கும் ஸாக்ஷி பூதராகையால், உம்முடைய மார்க்கம் மனத்தாலும், வாக்கினாலும் ஊகிக்கக் கூடியதே யொழிய. அவைகளுக்குப் புலப்படாதது. ஆனதால் உம்முடைய நாமதேயங்களும் குணங்களும் நிரூபிக்கமுடியாதவைகள். (அனந்தங்களாகையாலும்)

ஓ தேவ! ஆனாலும் உபாஸகர்கள் உம்மை நேரில் பார்க்கிறார்கள். (பக்தியே மேலானதென்று கருத்து.) தேவார்ச்சனம் முதலிய எதைச் செய்தாலும், அப்பொழுது உம்முடைய திவ்ய நாமதேயங்களையும், மங்களமான ஸ்வரூபங்களையும் த்யானித்துக்கொண்டும், அவைகளைச் ச்ரவணஞ் செய்துகொண்டும், வாக்கினால் உச்சரித்துக் கொண்டும், பிறரை ஸ்மரிக்கச் செய்து கொண்டும், தர்மங்களைச் செய்பவன் ஸம்ஸாரத்தை அடைய மாட்டான்.

ஓ பாபங்களை நிவர்த்திப்பவரே! உம்முடைய பாதமாகிய பூமிக்கு நேர்ந்த சுமையானது நீர் அவதரித்ததாலேயே நிவர்த்திக்கப்பட்டது. அழகான உம்முடைய பாதத்தின் அடிவைப்பினால், பூமியும் ஸ்வர்க்கமும் அடையாளமிடப்பட்டது; உம்மால் அனுக்கிரஹிக்கப்பட் பூமி முதலியவைகளைப் பார்த்த நாங்கள் கிருதார்த்தர்களாகிறோம். ஓ ஈச! ஸம்ஸாரமற்ற வராகிய உமக்கு ஜனனமேது? நீர் விளையாட்டாகச் சரீரத்தை யெடுத்துக் கொண்டவரேயொழிய கர்மாதீனமான சரீரமுள்ளவரல்ல. ஓ நித்தியமுக்தரே! உம்முடைய உண்மையை அறியாதவர்கள், அவித்யையால் ஜீவனுக்கு ஜனனமரணம் முதலியவைகளுண்டென்றும் சொல்லுகிறார்கள். (உண்மையில் அவைகளில்லையென்று தாத்பர்யம்). மேலும், நீர், மத்ஸ்யமாகவும்; அச்வமாகவும் (ஹயக்ரீவர்), ஆமையாகவும் (கூர்மம்), வராஹமாகவும் (பன்றி) நரஸிஹ்மராகவும், ஹம்ஸமாகவும், க்ஷத்திரியராகவும், ப்ராஹ்மணராகவும், உபேந்திரராகவும அவதரித்து எங்களைக் காப்பாற்றியதுபோல், இப்பொழுதும் மூவுலகத்தையும், எங்களையும் காப்பாற்றும். பூமியின்

பாரத்தை நிவர்த்தியும். ஓ யாதவர்களுக்குட் சிறந்தவரே! உமக்கு நமஸ்காரம், என்று தேவர்கள் பகவானை துதித்து, தேவகியை நோக்கி, "ஓ அம்ம, நமக்கெல்லாருக்கும் க்ஷேமத்தைச் செய்வதற்காக, பகவானாகிய பரம புருஷன் உமக்குப் புத்திரராக அவதரித்திருக்கிறார். கம்ஸனுக்கு மரணம் ஸமீபித்துவிட்டது; ஆனதால் அவனிடம் பயப்படவேண்டாம். உம் புத்திரராகிய இவர் யாதவர்களைக் காப்பாற்றுவார்" என்று ச்லாகித்து, பகவானுடைய மனுஷ்ய ஸ்வரூபத்தை ஜனன மரணங்களற்ற திவ்யஸ்வரூபமென்றும், ஸகல ஜகத்தின் ஸிருஷ்டி, பரிபாலனம், ஸம்ஹாரம், ஆகிய இவைகளுக்குக் காரணமானதென்றும் துதித்து, ப்ரஹ்மா, பரமசிவன் ஆகிய இவ்விருவர்களையும் முன்னிட்டு. ஸ்வர்க்கஞ் சென்றார்கள்.

நோட்டு.

உம்மை அடைவதற்கு: மூலத்தில் ஸத்யபரம் என்றிருப்பதால், "தேவர்களைக் காட்டிலும், ப்ராணங்களைக் காட்டிலும், எது வேறானதோ, அது ஸத். தேவர்களும், ப்ராணங்களும் ஸத்தியம்" என்ற ச்ருதியின்படி ஜகத்தைவிட விலக்ஷணமானவர். திரிஸத்யம் என்றால் பிரகிருதி, புருஷன், காலம் ஆகிய இவைகளின் ஸ்வரூபமாக இருப்பவர். ப்ரகிருதி முதலியவைகளின் ஸ்வரூபமாகிய ஸகல ஜகத்தும் பகவானுக்கு ஸ்வாதீனப்பட்டதாகையால், ஸத்ய ஸங்கல்பரென்று கருத்து. ஸத்யஸ்யயோனிம் என்பதற்கு ஜகத்திற்குக் காரணராக இருப்பவரென்று அர்த்தம். இதனால் பகவானுடைய லீலாவிபூதி இப்படிப்பட்டதென்று காட்டப்பட்டது. ஸத்தியத்திலிருப்பவரென்றால், தம்முடைய மஹிமையில்

இருப்பவரென்று அர்த்தம். இதனால் பகவான் நித்ய விபூதியுள்ளவரென்று காட்டப்பட்டது. ஸத்தியத்திற் கும் ஸத்யரென்றால் ஜீவர்களைக் காட்டிலும் ஸத்ய ரென்று அர்த்தம். ரிதஸத்யநேத்திரமென்றால் சந்திரன், ஸூர்யன் ஆகிய இவர்களை நேத்திரங்களாக உடையவர்; அல்லது சந்திர ஸூர்யர்களுக்கு அதிபதி; அல்லது செய்யப்படும் புண்ய கர்மங்களையும், வாக்கி னால் உச்சரிக்கப்படும் தர்மத்தையும், உலகத்தில் பரவச் செய்பவரென்றும், அர்த்தம். ஸத்யாத்மகமென் றால் விகாரமற்ற ஸ்வரூபமுள்ளவரென்று அர்த்தம் ப்ரதான (மாயை)மல்லவென்று காட்டப்பட்டது வீரராகவீயம்.

ஹம்ஸமாகவும் – 11–வது ஸ்கந்தத்தின் 12–வது அத்தியாயத்தில் ஹம்ஸாவதாரம் கண்டு கொள்க.

க்ஷத்திரிய– ஸ்ரீராமன். ப்ராஹ்மண:– பரசுராமன்.

◆ ◆ ◆ ◆

அத்தியாயம் –3

ஸ்ரீகிருஷ்ணாவதாரம்

1 –11 பின்பு தேவகிக்கு ப்ரஸவ காலம் நேர்ந்தது. அப்பொழுது காலத்தின் குணங்கள் யாவும் சேர்ந்தி ருந்தன. அப்பொழுது அச்வினி முதலிய நக்ஷத்திரங் களும், கிருஹங்களும், மற்ற தாரைகளும் சாந்தங்களாக விருந்தன. (யுத்தம் முதலியவைகளில்லாமலிருந்தன.) ப்ரஹ்மதேவதாகமான ரோஹிணீ நக்ஷத்திரத்தில் சந்திரனிருந்தார். திக்குகள் தெளிந்திருந்தன. ஆகாயத் தில் நக்ஷத்திரங்கள் சுத்தங்களாக உதயமாயின; பூமியிலுள்ள பட்டணங்கள், கிராமங்கள், கோகுலங்கள், ரத்னம் விளையும் ஸ்தலங்கள், ஆகிய இவைகளில் மங்கள கார்யங்கள் நடந்து வந்தன.

நதியின் ஜலம் தெளிந்தது; மடுக்களில் தாமரை மலர்கள் மலர்ந்தன. வனங்களில் எல்லா விருக்ஷங்களும் புஷ்பித்தன; அப்பூங்கொத்தில் வண்டுகள் சப்தித்தன; பறவைகள் இனிமையாக கத்தின; நல்வாஸனையுள்ள காற்று ஸுக கரமாக வீசிற்று. யாகத்தில் ஹோமஞ் செய்யப்பட்டவைகளான அக்னிகள், சாந்தங்களாக (கடுமையன்னியில்) ஜ்வலித்தன; ஸாதுக்கள், தேவர்கள் ஆகிய இவர்களுடைய மனம் பிரஸன்னமாயிற்று. மேலும் பகவானுடைய அவதார காலத்தில் ஸ்வர்க்கத் தில் தேவதுந்துபிகள் முழங்கின; கின்னரர்களும், கந்தர்வர்களும் பாடினார்கள். ஸித்தர்களும், சாரணர்களும் துதித்தார்கள். வித்யாதர ஸ்திரீகளும், அப்ஸரஸ்களும் ஸந்தோஷமாக நர்த்தனஞ் செய்தார்கள் மஹர்ஷிகளும், தேவர்களும் ஆனந்தத்தை அடைந்து,

புஷ்பமாரி பொழிந்தார்கள். மேகங்கள் ஸமுத்திரத்தில் மெதுவாக கர்ஜித்தன. மிகுந்த இருட்டுள்ள நீசித காலமும் நேர்ந்தது. அப்படிப்பட்ட திவ்யமான காலத்தில் ஸகல பிராணிகளின் ஹிருதயத்தில் வஸிப்பவராகிய பகவான், தேவரூபியான தேவகியினிடத்தில் ஆவிர்பவித்தார். (அவதரித்தார்.) அது கிழக்கு திக்கில் பூர்ணசந்திரன் உதயமானது போலிருந்தது; அந்த அப்ராகிருத சிசுவை வஸுதேவர் தர்சித்தார். அந்த சிசுவானது ஆச்சர்யமானது; தாமரை மலர் போன்ற கண்களுள்ளது; நான்கு கைகளுள்ளது; சங்கம், கதை முதலிய ஸன்னத்தமான ஆயுதங்களுள்ளது; ஸ்ரீவத்ஸமென்ற அடையாள முள்ளது; பீதாம்பரமுள்ளது; நீருண்ட மேகம் போன்ற திருமேனியுள்ளது.

மேலும் அந்தச்சிசு அணிந்திருக்கும் கௌஸ்துப மாலையானது, அதன் கழுத்தினால் ப்ரகாசிக்கிறது. (ஆபரணத்திற்கும் அலங்காரத்தை யுண்டுபண்ணக் கூடியது பகவானுடைய சரீரமென்று கருத்து.) மேலும் விலையுயர்ந்த வைடூரியங்களிழைத்த கீரீடம், குண்டலம் ஆகிய இவைகளின் காந்தியால் தலைமயிர்கள் அழகாகவிருந்தன. பின்னும் அந்தச்சிசு உத்தமமான காஞ்சி, வளை முதலிய ஆபரணங்களை தரித்து, ப்ரகாசித்தது. இப்படி லோகத்திய குழந்தை களைவிட விலக்ஷணமாக அவதரித்த ஸ்ரீபகவத் ஸ்வரூபத்தைத் தர்ஸித்து, வஸுதேவர் மிக்க ஆச்சர்ய மடைந்து, மலர்ந்த கண்களுள்ளவராகி, ஸந்தோஷத்தில் மூழ்கி (ஸ்நானஞ்செய்து) லக்ஷம் பசுக்களை ப்ராஹ்மணர்களுக்குத் தானஞ்செய்தார். (மனத்தால் ஸங்கல்பித்தாரென்று கருத்து.)

12–22 அந்தக் குழந்தையின் தேஹ காந்தியால் அந்த பிரஸவ கிருஹம் பிரகாசித்தது. அவரைத் தர்சித்த வஸுதேவர் அக்குழந்தையைப் பரமபுருஷ னென்று நிச்சயித்து, அவருடைய மஹிமையை அறிந்தவராகையால் பயமற்றவராகி, கைகூப்பி வணங்கி, பின்வருமாறு துதிக்கலானார்: "ஸகல பிராணிகளின் புத்திக்கு ஸாக்ஷியும் கேவலம்அனுபவ ஸ்வரூபியும், ஆனந்த ஸ்வரூபியும், பிரகிருதியைவிட மேலானவருமாகிய உம்மை நேரில் பார்த்தேன். (பரமாத்மா என்று தெரிந்துகொண்டேன்). அப்படிப் பட்ட பரப்ரஹ்மமாகிய நீரே, உம்முடைய பிரகிருதியைக் கொண்டு முக்குண ஸ்வரூபமான ஜகத்தைப் படைத்து, அதில் பிரவேசிக்காமலேயே பிரவேசித்தவர்போல் தோன்றுகிறீர். (அப்படிப்பட்ட நீர் தேவகியின் கர்ப்பத்தில் அவதரிப்பது என்ன ஆச்சர்யம்?). மஹத்தத்வம் முதலியவைகள் தனியே பலவிதமான வீர்யமுள்ளவைகளாலும், பதினாறு விகாரங்களுடன் சேர்ந்து விராட்டை யுண்டு பண்ணுகின்றன.

பிறகு அதில் பிரவேசித்தவை போலும் தோன்று கின்றன; உண்மையில் அவைகள் பிரவேசிக்கவில்லை. அவைகள் அண்டம் உண்டாவதற்கு முன்னமேயே அண்டத்திற்குக் காரணங்களாகவிருந்தனவல்லவா? அதுபோல பகவானாகிய நீர் ஜகத்திற்குக் காரணராக ஜகத்தின் உத்பத்திக்கு முந்தியே இருப்பவராகையால், நீர் அதில் உண்மையில் பிரவேசிக்கிறதில்லை. பிரவேசித்தவர் போல தோன்றுகிறீர். உம்முடைய ஸ்வரூபமானது புத்தியினால் ஊஹிக்கக்கூடியது; கண்ணினால் பழத்தை கிரஹிக்கும்பொழுது (பார்க்கும்

பொழுது) அத்துடனிருக்கும் ரஸம் எப்படி கிரஹிக்க படுகின்றதில்லையோ, அப்படி நீர் இந்திரியங்களுக்குப் புலப்படுகிறதில்லை. நீர் ஒன்றினாலும் மறைக்கப் படாதவராகையால் ஜகத்தில் பிரவேசிக்காதவர்; உமக்கு உள்வெளியென்ற பேதமில்லை. மேலும் நீர் எல்லா ஸ்வரூபியாக விருப்பதால், உம்மை எதனால் மறைக்கமுடியும்? பின்னும் எல்லாவற்றிற்கும் ஆத்மா வாகவுமிருக்கிறீர். (ஒன்றால் மறைக்கப்பட்டவன் மற்றொன்றுக்கு ஆத்மாவாக விருக்கமுடியாதென்று கருத்து). வ்யாபகராகவுமிருக்கிறீர். (அதனாலும் உம்மை மற்றொன்றால் மறைக்க முடியாதென்று கருத்து).

பின்னும் நீர் வஸ்துவாகவும் (ஸத்யர்)இருக்கிறீர். (ஸத்யமான வஸ்துவை அஸத்தியமானவைகள் மறைக்க முடியுமாவென்று கருத்து). தேஹம் முதலிய வையெல்லாம் ஸத்யமல்ல; அப்படிப்பட்ட தேஹம் முதலியவைகளை தன்னைவிட வேறாகவிருக்கும் ஸத்யவஸ்துவாக எவன் நினைக்கிறானோ, அவன் அறியாதவனேயாம். அவைகளைப்பற்றி விசாரித்தால் அஸத்யமானவைகளென்றே முடியும். (வாசாரம்பணம்). அஸத்யமானவைகளை ஸத்யங்களென்று நினைப்பவன் அஜ்ஞனென்பதில் என்ன ஸந்தேஹம்? (பரமாத்மாவை விட்டு, ஜகத் தனியே ஸத்யமாகவிருக்கவில்லை). ஓ ப்ரபுவே! ஆசையற்றவரும், குணங்களற்றவரும் விகாரங்களற்றவருமான உம்மால் இந்த ஜகத் உண்டு பண்ணபட்டது, பரிபாலிக்கப்படுகிறது, ஸம்ஹரிக்கப் படுகிறது என்று சொல்லுகிறார்கள். நீர் பரப்ரஹ்ம மானாலும், உம்மை ஆச்ரயித்த மாயா குணங்களால் செய்யப்படும் ஜகத் ஸிருஷ்டி முதலியவைகளை நீர் செய்கிறதாகவே சொல்லப்படுகிறது. அது உபசாரமேயாம்.

(வேலைக்காரர்களால் ஏற்படும் ஜயம் முதலியவை அரசனை அடைகிறதல்லவா?) அப்படிப்பட்ட நீர் உம்முடைய மாயையால் மூன்றுலோகங்களைப் பரிபாலிப்பதற்காக ஸத்வகுணத்தையும், ஸிருஷ்டிக்காக ரஜோகுணத்தையும், பிரளயத்தில் தமோகுணத்தையும் ஆச்ரயிக்கிறீர். ஓ எல்லாவற்றிற்கும் அதிபதியே! இந்த லோகத்தை காப்பாற்றுவதற்காக என்னுடைய கிருஹத்தில் நீர் அவதரித்திருக்கிறீர். அரசர்களாகப் பிறந்திருக்கும் அநேக அஸுரஸேனாபதிகளை வதஞ் செய்யப்போகிறீர். ஆனாலும் உம்முடைய ஜ்யேஷ்ட ஸஹோதரர்களை கம்ஸன் கொன்றான். அதனால் என்னுடைய கிருஹத்தில் நீர் அவதரித்தது உசிதமல்ல; உம்முடைய அவதாரத்தை ஸேவகர்கள் முகமாகக் கேள்விப்பட்டு, கம்ஸன் இப்பொழுதே ஆயுதத்தை எடுத்துக்கொண்டு வருவான்." என்று சொன்னார்.

23–31 பின்பு கம்ஸனிடம் பயந்தவளான தேவகி யானவள் மஹாபுருஷ லக்ஷணமுள்ள தன்னுடைய புத்ரனைப் பார்த்து, புன்சிரிப்புடன் "புத்தி முதலிய கார்ய காரணங்களைப் பிரகாசிக்கச் செய்யும் விஷ்ணு நீரேயாம். வேதங்கள், எதனை ஸத்யமென்றும்(ப்ரஹ்மம்) சேதனமென்றும், குணங்களற்றதென்றும், விகாரமற்ற தென்றும், ஸத்தாமாத்திரமென்றும், விசேஷமற்றதென்றும், ஸன்னிதிமாத்திரத்தால் ஸகல கார்யங்களையும் ஸாதிப்பதென்றும் சொல்லுகின்றனவோ, அவர் நீரே, இரண்டு பரார்த்தங்கள் சென்றபின் (ப்ரஹ்மதேவரு டைய ஆயுள்) லோகங்கள் நாசத்தை அடைகின்றன. அதன்பின் மஹாபூதங்கள் பூதஸூக்ஷ்மத்தில் லயிக் கின்றன. வ்யக்தமாகிய பூத ஸூக்ஷ்மமானது காலத்தின் மஹிமையால் ப்ராதனத்தில் லயிக்கிறது. அப்பொழுது

சேஷரென்ற பெயருடன் பாக்கியாகவிருப்பவர் நீர் ஒருவரேயாம். ப்ரகிருதிக்கும் அதிபதியாகவிருப்பவரே! நிமிஷம் முதல் வருஷம் வரையிலாகக்கணக்கிடப்பட்ட காலமானது, எவருடைய லீலையை அனுஸரிக்கிறதோ, (டக்ஷம், மாஸம் வர்ஷம் என்று அடிக்கடி மாறிக் கொண்டே இருக்கிறது; அந்தக்காலமும் பகவானுடைய சேஷ்டையென்று கருத்து) எவரால் இந்த ஜகத்தானது சேஷ்டிக்கிறதோ, க்ஷேமத்திற்கு இருப்பிடமும், எல்லாவற்றிற்கும் ஈச்வரனுமாகிய அந்த உம்மைச் சரணமடைகிறேன்.

ஓ எல்லாவற்றிற்கும் முந்தியவரே! மனிதன் ஸம்ஸாரமாகிய துஷ்ட யானையைக் கண்டு, பயந்து ஸகல லோகங்களில் அலைந்தும், பயமற்ற இடம் கிடைக்காமல் தைவச்செயலாக உம்முடைய பாதார விந்தத்தை அடைந்து மிருத்யுபயமின்றி ஸ்வஸ்தனாக தூங்குகிறான். (பகவானுடைய பாதத்தை ஸேவித்தவர் களுக்கு ஸம்ஸார பயமில்லையென்று கருத்து). உக்கிரஸேனருடைய புத்திரனாகிய கம்ஸனிடம் பயந்தவர்களான எங்களை நீர் காப்பாற்றும், பக்தர்களுக்குப் பயத்தை நிவர்த்திக்க கூடியதும், த்யானத்தால் அறியக்கூடிய ஈச்வரனுடையதுமான, இந்த ஸ்வரூபத்தை கர்ம சக்ஷுஸ்ஸிற்கு விஷயமாகச் செய்யவேண்டாம். (ஜ்ஞானக் க்ண்ணால் பார்க்கக் கூடிய ஸ்வரூபமானது, தோற்கண்ணிற்குப் புலப்பட வேண்டாமென்று கருத்து.) தைர்யமில்லாதவளாகிய நான், 'பாபியாகிய கம்ஸன் உம்முடைய அவதாரத்தை அறியாமலிருக்க வேண்டுமே' என்று பயப்படுகிறேன் ஓ ஸகல ஜகத்ஸ்வரூபியான பகவன்! சங்கம், சக்ரம், கதை, தாமரைமலர் ஆகிய இவைகளுடைய.

யுள்ளதும் நான்கு கைகளுள்ளதும், திவ்யமுமான இந்த ஸ்வரூபத்தை மறைத்துக்கொள்ளும். (லோகத் திலுள்ள சிசுக்களைப் போலிருக்க வேண்டுமென்று கருத்து). ப்ரளய காலத்தில் ஜகத்தானது எவருடைய சரீரத்தில் நெருக்கமில்லாமல் ஸுகமாக வஸிக்கிறதோ, அப்படிப்பட்ட பரமபுருஷனாகிய நீர் என்னிடம் அவதரித்திருக்கிறீர். இது மனுஷ்ய பாவனையை அங்கீகரித்ததே யொழிய வேறில்லை; இது மிகவும் ஆச்சர்யமே" என்று ஸ்தோத்திரஞ் செய்தார்கள்.

32–48. அதனைக்கேட்ட பகவான், தேவகியை நோக்கி, ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில், முன்ஜன்மத் தில் நீ ப்ரச்னியென்ற பெயருள்ளவளாகவிருந்தாய். அப்பொழுது இந்த வஸுதேவர், ஸுதபஸ் என்ற ப்ரஜாபதியாக விருந்தார். ப்ரஹ்மதேவர் உங்களிரு வரையும் நோக்கி, ப்ரஜைகளை ஸிருஷ்டிக்கும்படி ஆஜ்ஞாபித்தார். அப்பொழுது நீங்களிருவரும் இந்திரியங்களை ஜயித்து, மிகவும் கடுமையாகத் தபஸ் செய்தீர்கள். மழை, காற்று, வெய்யில், பனி, உஷ்ணம் ஆகிய ரிதுக்களின் குணங்களை ஸஹித்துக்கொண்டும் ச்வாஸ நிரோதம் (மூச்சையடக்குவது) செய்தும், மனத்தின் மலத்தை நிவர்த்தித்துக்கொண்டும் உலர்ந்த இலைகளைப் புஜித்துக்கொண்டும், சாந்த சித்தமுள்ள வர்களாகி, என்னிடத்திலிருந்து வரத்தை அடைய விரும்பி, என்னைப் பூஜித்தீர்கள். இப்படி என்னிடத் திலேயே சித்தத்தைச் செலுத்தி, மிக்க கடுமையாக தபஸ் செய்து கொண்டே, தேவமானத்தால் பன்னிரண்டு ஆயிரம் வர்ஷங்களைக் கழித்தீர்கள். இப்படித் தபஸ்ஸினாலும், ச்ரத்தையாலும், பக்தி யாலும், ஹிருதயத்தில் என்னை ஆராதித்தபடியால்,

உங்களிடத்தில் நான் ஸந்தோஷத்தை அடைந்து, உங்களுக்கிஷ்டமான வரத்தைக் கொடுக்க விரும்பி, இந்த ஸ்வரூபத்துடன் தர்சனங்கொடுத்தேன். மேலும் நான் 'வேண்டியவரத்தைக் கேட்கலாம்' என்றும் சொன்னேன். அதனைக்கேட்ட நீங்கள், கிராம்ய போகங்களை அனுபவிக்காதவர்களாகையாலும், அபுத்திரர்களாக விருந்தபடியாலும், நீங்கள், என்னுடைய மாயையால் மோஹித்து மோக்ஷத்தைக் கொடுக்கவேண்டுமென்று கேட்கவில்லை: உம்மைப் போன்ற (பகவானைப்போல்) புத்திரன் பிறக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தீர்கள்.

அதன்படியே உங்களுக்கு அனுக்ரஹஞ்செய்து மறைந்தேன். பின்பு நீங்கள் கவலையற்றவர்களாகி, கிராம்யமான விஷயபோகங்களை அனுபவித்துக் கொண்டிருந்தீர்கள். பின்பு ஸ்வபாவம், ஔதார்யம் முதலிய குணங்களில், எனக்குச் சமானனொரு வனுமில்லாததினால், நானே ப்ரச்னிகர்ப்பரென்ற பெயருடன் உங்களுக்குப் புத்திரனாகப் பிறந்தேன். மறு ஜன்மத்தில் நீங்கள் அதிதி கச்யபர்களாகப் பிறந்தீர்கள். அந்த ஜன்மத்திலும், உபேந்திரனென்ற பெயருடன் உங்களுக்குப் புத்திரனாகப் பிறந்தேன். வாமனராக (குள்ளன்) இருந்தபடியால், வாமனரென்ற பெயரை அடைந்தேன். மூன்றாவதாகிய இந்த ஜன்மத்திலும் அதே ஸ்வரூபத்துடன் உங்களுக்குப் புத்திரனானேன்; சொன்னபடி செய்தேன். முன் ஜன்மத்திய ஸமாசாரத்தை ஞாபகபடுத்துவதற்காக, இந்த ஸ்வரூப்த்தைக் காண்பித்தேன். மனுஷ்ய சிசுப் போலிருந்தால் என்னுடைய ஞாபகம் உங்களுக்கு உண்டாகாது. (இனி இந்தஸ்வரூபத்தை மறைத்துக்

கொள்ளுகிறேன் என்று தாத்பர்யம்). நீங்களிருவரும் என்னைப் புத்திரனாகவும் பரப்ரஹ்மமாகவும் த்யானித்து, என்னிடத்தில் ப்ரீதி செய்தீர்களாகில், என்னுடைய உத்தமகதியை அடைவீர்கள். கம்ஸனி டத்தில் நீங்கள் பயப்படுவதானால், என்னைக் கோகுலத்திற்கு அனுப்புங்கள். அவ்விடத்திலிருக்கும் என்னுடைய மாயையாகிய யசோதையின் கன்னிகையை சீக்கிரம் இவ்விடத்திற்கு எடுத்துவாருங்கள்; வாயிற் படிக்கதவுகள் தானாகத்திறந்துவிடும், தாண்ட முடியாத யமுனாநதியும் மார்க்கதைக் கொடுக்கும்" என்று அனுகிரஹித்து, பகவான் தம்முடைய மாயையால், தாய் தகப்பனார்கள் பார்த்திருக்கும் பொழுதே, லோகத்திய குழந்தைபோலானார்.

49–55. பின்பு பகவானுடைய உத்திரவின்படி வஸுதேவர், புத்திரனையெடுத்துக்கொண்டு, பிரசவ கிருஹத்திலிருந்து கோகுலஞ்செல்ல பயணப்பட்டார். அப்பொழுது கோகுலத்தில் நந்தனுடைய பத்னியாகிய யசோதையினிடம் மாயை பெண்ணாய்ப் பிறந்தாள். அந்த மாயையின் மஹிமையால் வாயிற் காவலாட் களும் பட்டணத்து ஜனங்களும் மோஹித்துப் படுத்துத் தூங்கினார்கள். மேலும் அவர்களுடைய ஸகல இந்திரியவிருத்திகளும் அடங்கின. பருத்த சங்கிலிகள் மாட்டிப் பூட்டப்பட்டிருந்த கதவுகள் யாவும் ஸ்ரீ கிருஷ்ணனை எடுத்துக்கொண்டு வஸுதேவர் வந்தவுடன், ஸூர்யனைக்கண்டு இருட்டு விலகுவது போல் திறந்துகொண்டன. மேகமானது மெதுவாக கர்ஜித்துக்கொண்டு வர்ஷித்தது. ஆதிசேஷன் அந்த ஜலத் துளி ஸ்ரீ கிருஷ்ணன் மீது விழாமல் படங்களைக் குடையாகப் பிடித்துக்கொண்டு பின் சென்றார். மிகுந்த

ஆழமுள்ளதும், மிக்க வேகமுள்ள அலைகளுள்ளதும், நுரைகளுள்ளதும், பயங்கரமான சுழிகளுள்ளதுமான யமுனாநதியானது ஸ்ரீ ராமனுக்கு ஸமுத்திரம் வழி விட்டதுபோல, மார்க்கத்தைக் கொடுத்தது. வஸு தேவர் கோகுலஞ் சென்றார். கோபர்கள் எல்லாரும் நித்ரைசெய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணனை யசோதையின் படுக்கையில் வைத்து, அந்தக் கன்னிகையை யெடுத்துக் கொண்டு திரும்பவும் தம்முடைய கிருஹத்திற்கு வந்து, தேவகியின் படுக்கையில் அக்குழந்தையை வைத்து,தம்முடைய பாதங்களில் விலங்கைத் தரிக்து முன்போலிருந்தார். நந்தனுடைய பத்னியாகிய யசோதைக்கு பிரஸவித்தது தெரியுமேயன்றி, அக்குழந்தை ஆண்னென்றாவது பெண்ணென்றாவது தெரியாது. மிகுந்த ச்ரமத்தால் நித்திரை செய்து கொண்டிருந்தாள்.

தேசத்துக் குழந்தைகளைக் கம்ஸன் கொல்ல முயன்றது.

பின்பு வெளியிலுள்ள வாயிற்படிகளும், உள்ளிருக்கும் வாயிற்படிக் கதவுகளும் முன்போல சாத்திக் கொண்டன. அப்பொழுது குழந்தையின் அழுகை சப்தத்தைக்கேட்டு காவலர்கள் விழித்துக்கொண்டார்கள். பின்னுமவர்கள் சீக்கிரமாக கம்ஸனிடஞ் சென்று 'தேவகி பிரஸவித்தாள்' என்று தெரிவித்தார்கள். அந்தக் கம்ஸன் மிகவும் பயந்து, தேவகியின் பிரசவ காலத்தையெதிர் பார்த்திருந்தவனாகையால், அதனைக் கேட்டவடன் சீக்கிரமாக படுக்கையிலிருந்து எழுந்து 'இதுதான் ஸமயம்' என்று சொல்லிக்கொண்டு அவிழ்ந்த தலைமயிரை கட்டி கொள்ளாமல், சீக்கிரமாக தேவகியிருக்குமிடம் வந்தான்.

அவனைக்கண்ட தேவகியானவள், "ஓ நல்ல ஸ்வபாவமுள்ளவரே! அக்னிபோன்ற தேஜஸ்ஸுள்ள அநேக சிசுக்களைக் கொன்றீர். இதுவோ பெண் குழந்தை; ஆண் குழந்தையல்ல. இவள் உமக்கு நாட்டுப்பெண்ணாவாள். இவளைக் கொல்லவேண்டாம். இந்த ஒரு பெண்ணை எனக்குக் கொடுக்கும்படி, பகவான் உம்மைத் தூண்டவேண்டும். உமக்கு நான் ஸஹோதரியல்லவா ? என்னுடைய குழந்தைகள் எல்லாம் உம்மால் கொல்லப்பட்டபடியால், புத்திர சோகத்தை அடைந்து தீனையாகவிருக்கிறேன். இது தான் எனக்குக் கடைசியான குழந்தை. இதை எனக்குக் கொடுக்கவேண்டும்" என்று சொல்லி அந்தக்

குழந்தையை மார்பில் அணைத்துக்கொண்டு, தீனமாகப் பிரார்த்தித்தாள். அதனைக் கேட்ட துஷ்டனாகிய கம்ஸன் அவளை அதட்டி, அவளுடைய கையிலிருக்கும் குழந்தையை பலாத்காரமாகப் பிடுங்கி கொண்டான். பின்னுமவன் குழந்தையின் இரண்டு கால்களைப் பிடித்து சுழற்றி, ஸஹோதரியின் பெண் என்ற ப்ரீதியையொழித்து, கல்லில் அடித்தான். அந்தக் குழந்தை அவனுடைய கையிலிருந்து உயரக் கிளம்பி, ஆகாயத்தில் எட்டு கைகளுடன் திவ்யமான புஷ்ப மாலை, வஸ்திரம், சந்தனம், ரத்னாபரணங்கள், ஆகிய இவைகளால் அலங்கரிக்கப்பட்ட திவ்ய ஸ்திரீயாக ப்ரகாசித்தாள். மேலுமவளுடைய கைகளில், வில், சூலம், பாணம், கேடகம், கத்தி, சங்கம், சக்கிரம், கதை ஆகிய ஆயுதங்கள் விளங்கின.

மேலும் ஸித்தர்கள், சாரணர்கள், கின்னரர்கள், உரகர்கள், அப்ஸரஸ்கள் ஆகிய இவர்கள் காணிக்கை களுடன் அந்த தேவியைத் தர்சித்து, ஸ்தோக்கிரஞ் செய்தார்கள். அப்படிப்பட்ட யோக மாயையானது, கம்ஸனை நோக்கி "ஓ மூட! என்னைக் கொன்றதால் உனக்கென்ன லாபம்? உனக்குப் பூர்வ சத்ருவாகவிருப் பவர் ஏதோ ஓரு இடத்தில் ஜனித்திருக்கிறார்; தீனையான என்னை வீணாக ஹிம்ஸித்தாய்" என சொன்னாள். பின்பு அவள் அநேக க்ஷேத்ரங்களில் அநேக பெயர்களுள்ளவளாகி, ஜனங்களால் பூஜிக்கப் பட்டாள். (பத்ரகாளி முதலிய ஸ்வரூபத்தை அடைந் தாள்). அதனைக்கேட்ட கம்ஸன் மிகவும் ஆச்சர்ய மடைந்து, தேவகிக்கும், வஸுதேவருக்கும், விலங்கைக் கழற்றி அவர்களை நோக்கி "ஓ ஸஹோதரியான தேவகியே; ஓ பாவா! (ஸஹோதரியின் புருஷனுக்கு

பாவாவென்று பெயர்) பாபியாகிய நான் ராக்ஷஸன் போல உங்களுடைய குழந்தைகளைக் கொன்றேன். நான் ஜீவித்திருக்கும்பொழுது பிராணிகளிடத்தில் கருணையில்லாமலும், மித்திரர்களிடத்திலும் பந்துக் களிடத்திலும் ப்ரீதியில்லாமலும் துஷ்டனாகவும், ப்ரஹ்மஹத்தை செய்தவன் போலுமிருக்கிறேன்; மரணமடைந்த பின் என்ன கதியை அடைவேனோ (தெரியவில்லை.) மனிதர்கள் பொய் சொல்வதுண்டு; தைவமும் பொய் சொன்னதே. அதன் வார்த்தையை நம்பி, ஸஹோதரியின் குழந்தைகளைக் கொன்று, மஹாபாபியானேன். ஓ மிகுந்த அதிருஷ்டமுள்ளவர் களே! இறந்த குழந்தைகளைப்பற்றி துக்கிக்க வேண்டாம். அவைகள் செய்த கர்மத்தால், அவைகள் மரணமடைந்தன.

எப்பொழுதும் பிராணிகள் ஓரேவிடத்தில் வஸிக் கிறதில்லை. (புத்திரமித்திர களத்திராதிகளான பந்துக் களை விட்டுப்பிரியாமல் எப்பொழுதும் சேர்ந்திருப்ப தில்லை). அவரவர்களுடைய கர்மத்திற்குத் தக்கபடி சில காலஞ் சேர்ந்து இருப்பதும் பிரிகிறதுமாக விருக்கிறது. மேலும் எப்படி பூமியின் விகாரமான குடம் முதலியவை உண்டாகின்றனவோ; நசிக்கிறனவோ; அப்படி தேஹமும் உண்டாகிறது, நசிக்கிறது. குடம் முதலியன உண்டாகும் பொழுதும், அவை நசித்த பின்னும், அவைகளுக்குக் காரணமாகிய மண் ஸத்ய மாகவிருப்பது போல் ஆத்மா யெப்பொழுது மிருக்கிறார். அவருக்கு விகாரமில்லை; அதனால் துக்கப்பட நியாயமில்லை. இதனுண்மையை அறியாத வர்கள் தேஹத்தையே ஆத்மாவென்று நினைக்கிறார்கள்; அது ப்ரஹ்மேயயாம். அதனால் நான், நீ என்ற பேத

புத்தியுண்டாகிறது. அதனால், புத்திரன் முதலியவர் களுடைய தேஹத்துடன் சேர்க்கையும் பிரிவும் உண்டாகின்றன. அதனால் ஸம்ஸாரமுண்டாகிறது; அஜ்ஞானம் நிவர்த்தியாகிறதில்லை. ஆனதால், உங்களுடைய குழந்தைகள கொல்லப்பட்டிருந்தாலும், உண்மையில் அவர்களுடைய கர்மத்தின் பயனை அடைந்தவர்களாகையால், அவர்களைப்பற்றி நீங்கள் துக்கிக்க வேண்டாம். ஸ்வரூபத்தின் உண்மையை அறியாமல், எவன், 'நான் கொல்லப்பட்டேன் என்றும், 'நான் கொன்றேன்' என்றும் நினைக்கிறானோ, அவன் சரீரத்தில் அபிமானமுள்ளவன்; அஜ்ஞன்; அந்த மித்யாஜ்ஞானம் நிவர்த்தியாகும்வரையில், அவனுக்கு அந்தப் புத்தி மாறுகிறதில்லை (உண்மையில் இவன் கொன்றவனுமல்ல, கொல்லப்படப்பட்டவனுமல்ல.

ஆத்மா நித்யராகையால், அவருக்கு நாசமில்லை. அவர் தேஹம் முதலியவைகளைக் காட்டிலும் விலக்ஷண ரென்று தெரிந்து கொண்டால்தான், அந்த அஜ்ஞானம் விலகுமென்று தாத்பர்யம்). பந்துக்களிடத்தில் வாத்ஸல்யமுள்ள ஸாதுக்களே! என்னுடைய கெட்ட நடையை ஸஹிக்கவேண்டும்" என்று சொல்லிக் கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு தேவகியின் பாதத்தையும் வஸுதேவருடைய காலையும் பிடித்துக் கொண்டான். இப்படி யோக மாயையின் வார்த்தையை நம்பிக் கம்ஸன், தேவகியையும், வஸுதேவரையும் விலங்கிலிருந்து விடுவித்து, அதிக பிரீதியைப் பாராட்டி, பச்சாத்தாபமடைந்தான்.

25–28. அதனைக்கண்ட தேவகி வஸுதேவர் ஆகிய இருவர்களும், அவனுடைய குற்றத்தை மன்னித்து,

அவனிடமிருந்த கோபத்தைத் தணித்துக் கொண்டார் கள். பின்னும், வஸுதேவர் சிரித்துக் கொண்டு, கம்ஸனை நோக்கி, "ஓ மஹாராஜ! உம்மால் சொல்லப் பட்டது யாவும் உண்மையே. நான் என்ற அஹங்கார மானது அஜ்ஞானத்தாலுண்டானது. அதனால் 'தான் பிறர்' என்ற பேதம் ஏற்படுகிறது. சோகம், ஸந்தோஷம், பயம், த்வேஷம், லோபம், மோஹம், மதம், ஆகிய இவைகளுள்ள அஹங்காரிகள், 'சரீரம் முதலிய பாவங்களைக் கொண்டு சரீரம் முதலியவைகளை ஈச்வரன் வதஞ்செய்கிறார்' என்பதைத் தெரிந்து கொள்ளுகிறதில்லை. பகவான் சரீரம் முதலியவைகளைக் கொண்டு, மற்றொரு சரீரம் முதலியவைகளை நாசஞ்செய்கிறார்; தாம் ஸாக்ஷி யாகவிருக்கிறார்" (அதனால் கொல்பவனுமில்லை, கொல்லப் படுகிற வனுமில்லையென்று தாத்பர்யம்) என்று சுத்தமான மனதுடன் சொன்னார். இப்படி கோபமற்றவர்களான தேவகி வஸுதேவர்களிடத்தில், கம்ஸன் விடை பெற்றுத் தன்னுடைய அரண்மனை சென்றான்.

29–47. மறுநாள் உதயத்தில் கம்ஸன் மந்திரிகளை வரவழைத்து அவர்களை நோக்கி, யோக மாயையால் சொல்லப்பட்ட ஸமாசாரத்தைத் தெரிவித்தான். அதனை கேட்ட தேவசத்ருக்களான அல்ப யோசனை யுள்ள அஸுரர்கள் (ப்ரத்ய க்ஷத்தையே உண்மையாக நினைத்தவர்கள்) தேவர்களிடத்தில் மிகுந்த கோபங் கொண்டு, கம்ஸனை நோக்கி "போஜர்களுக்கரசே! நீர் சொல்வதுண்மையானால், (உன்னைக் கொல்வதற்காக ஜனித்தவன் எவ்விடத்திலோ இருக்கிறான் என்று மாயை சொன்னதனால்) பட்டணங்கள், கிராமங்கள், கோகுலங்கள் ஆகிய ஸ்தலங்களிலிருக்கும், ஜனித்துப்

பத்து நாட்களுக்குட்பட்ட குழந்தைகளையும், பத்து நாட்களுக்கு அதிகமான குழந்தைகளையும், கொன்று விடுவோம். தேவர்களுடைய யத்தினம் பலிக்குமா? எப்பொழுதும் தேவர்கள் யுத்தம் என்றால் பயப் படுவார்கள். உம்முடைய வில்லில் நாணோசையைக் கேட்டு அவர்களுடைய மனம் நடுங்குகிறது. நீர் பாணங்களை ப்ரயோகிக்கும்பொழுது அந்தப் பாணங் களால் அடிக்கப்பட்டு உயிர்பிழைக்க வேண்டி, பல திக்குதளிலும் ஓடி ஒளிந்தார்கள். சிலர் பயந்து ஆயுதங்களையெறிந்து கைகூப்பி, அவிழ்ந்த கச்சை, தலைமயிர் இவைகளைக் கட்டிக் கொள்ளாமலேயே, 'ஜயிக்கப்பட்டோம் என்று சொன்னார்கள்.

ஆயுதமில்லாதவர்களையும், அஸ்த்ரமில்லாதவர் களையும், ரதமில்லாதவர்களையும் பயந்து வணங்கின வர்களையும், பிறருடன் யுத்தஞ் செய்பவர்களையும், யுத்தத்தில் விருப்பமில்லாதவர்களையும், எதிர்த்து யுத்தஞ் செய்யாதவர்களையும் நீர் அடிக்கிற தில்லை. மேலும் தேவர்கள், யுத்தமில்லாத ஸமயத்தில் தங்களைப் புகழ்ந்து கொள்வார்கள். (யுத்தமென்றால் பயந்து ஓடுவார்கள் என்று தாத்பர்யம்) கூடமகாலத்தில் சூரர்களாக இருப்பார்கள். அப்படிப்பட்ட தேவர்களால் என்ன செய்யமுடியும்? மஹா விஷ்ணுவோ, ஒருவருடைய கண்ணுக்கும் புலப்படாமல், ரஹஸ்யமான விடத்திலேயே வஸிப்பார் ஆனதால் அவரால் என்ன செய்யக்கூடும்? பரமசிவனோ ஸ்த்ரீகளால் நிறைந்த இளாவிருதத்திலேயே வஸிக்கிறார். (அவ்விடத் தில் புருஷர்களே இல்லை.) அவரால் என்ன செய்யக் கூடும்? எதனை செய்யப்போகிறார்? ப்ரஹ்மதேவர் எப்பொழுதும் தபஸ் (த்யானம்) செய்பவர் அவராலும்

என்ன செய்யமுடியும்? ஆனதால் தேவர்களால் கெடுதி செய்யமுடியாது. ஆனாலும், அவர்கள் நமக்கு விரோதிகளாகையால், அவர்களை உபேக்ஷித்திருப்பது சரியல்ல. சரீரத்தில் உண்டான வ்யாதி விருத்தியடைந்த பிறகு, வைத்தியஞ்செய்வது எப்படி ப்ரயோஜனமற்ற தோ, இந்த்ரியங்கள் விஷயங்களில் சென்றபிறகு, அவைகளையடக்குவது எப்படி அஸாத்யமோ, அப்படி சத்ரு விருத்தியாகி விட்டால், பிறகு அவனை ஜயிப்பது ச்ரமஸாத்யமான காரியம். ஆனதால் உம்முடைய ஸேவகர்களான எங்களுக்கு உத்திரவு கொடும். சத்ருக்களை நாசஞ் செய்கிறோம்

ஸகல தேவர்களுக்கும் மஹாவிஷ்ணுவே மூலம். அவரிடத்தில் ஸனாதனமாகிய தர்மமிருக்கிறது. அந்த விஷ்ணுவிற்கு பசுக்களும், ப்ராஹ்மணர்களும், தபஸ்ஸும், பூர்ணமான தக்ஷிணையுள்ள யாகங்களும் மூலங்களாக இருக்கின்றன. ஆனதால்; ஓ மஹாராஜ! வேதாத்யயனஞ் செய்த ப்ராஹ்மணர்களும், தபஸ்வி களையும், யாகஞ் செய்பவர்களையும், ஆஜ்யம் முதலிய ஹவிஸ்ஸைக் கொடுக்கும் பசுக்களையும் நாசஞ் செய்வோம். ப்ராஹ்மணர்கள், பசுக்கள், வேதங்கள், தபஸ், ஸத்யம், மனத்தையடக்குவது, இந்திரியங்களை ஜயிப்பது, ச்ரத்தை, தயை, பொறுமை, யாகம் ஆகிய இவைகள் ஸ்ரீமஹாவிஷ்ணுவிற்கு சரீரங்களாக விருக்கின்றன. அந்த மஹாவிஷ்ணு அஸுரர்களுக்கு விரோதி; ப்ரஹ்மா முதலிய ஸகல தேவர்களுக்கும் மூலமாக விருப்பவர். மஹரிஷிகளைக் கொல்வதே அவரைக் கொல்லும் உபாயமாகிறது. ஆனதால், உத்திரவ கொடுத்தால் பசுக்களையும் ப்ராஹ்மணர்களையும் நாசஞ்செய்கிறோம்" என்றார்கள். இப்படி துஷ்டர்களான

மந்திரிகளுடன் கம்ஸன் யோசனை செய்து, காலம் குறுகிவிட்டபடியால், ப்ராஹ்மணர்களைக் கொல்வதே தனக்கு ஹிதமென்று நிச்சயித்தான். பின்னுமவன், பிறரை உபத்திரவிப்பதிலேயே ப்ரியமுள்ளவர்களும், இஷ்டப்படி சரீரமெடுத்துக் கொள்ளும் சக்தியுள்ளவர்களுமான அஸுரர்களை நோக்கி, லோகத்தை உபத்ரவிக்கும்படி ஆஜ்ஞாபித்து, தன்னுடைய அரண்மனை சென்றான். அதனைக்கேட்ட அஸுரர்கள் ரஜோகுண ஸ்வபாவமுள்ளவர்களாகையாலும், அவர்களுக்கு மரணம் ஸமீபித்தபடியாலும், தமோகுணத்தினால் புத்தி மயக்கத்தை அடைந்து, ஸாதுக்களுக்கு விரோதமானதைச் செய்தார்கள். பெரியோர்களுக்கு அபராதஞ் செய்தால் அது ஆயுஸ், ஐஸ்வர்யம், கீர்த்தி, தர்மம், உத்தமலோகம், மற்ற காமனை முதலிய ஸகல க்ஷேமத்தையும் நாசஞ் செய்யும்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–5.

நந்தன் வஸுதேவரைச் சந்தித்தது.

கோகுலத்தில் நந்தர் தமக்குப் புத்திரன் ஜனித்ததைக்கண்டு, மிக்க ஆனந்தமடைந்து, கம்பீர மனமுள்ளவராகி, ஸ்னானஞ்செய்து சுத்தராகி, அலங்காரஞ் செய்துகொண்டு, வேதங்களையறிந்தவர்களான ப்ராஹ்மணர்களை அழைப்பித்து, பிறந்த குழந்தைக்கு ஜாதகர்மஞ் செய்வித்து, ஸ்வஸ்தி வாசனஞ் செய்வித்தார். மேலும் அவர் பித்ருக்கள், தேவர்கள் இவர்களுடைய பூஜையை நடத்தினார். பின்னுமவர் ஸுவர்ணத்தாலும், வஸ்திரத்தாலும், அலங்கிருதங்களான இரண்டு லக்ஷம் பசுக்களை ப்ராஹ்மணர்களுக்குத் தானஞ்செய்தார்.

ரத்னங்கள், தங்கம், வஸ்திரம் ஆகிய இவைகளுள்ள ஏழு தில பர்வதங்களையும் தானஞ்செய்தார். (எள்ளை மலை போல் குவித்து அதில் ரத்னங்களையும், ஸுவர்ணங்களையும் போட்டு அதன்மீது உயர்ந்த வஸ்திரங்களைச் சுற்றி மலைபோன்ற இவைகளை தானஞ்செய்வது திலபர்வத தானமெனப்படும்.) காலத்தால் பூமி முதலியவைகளும், ஸ்நானத்தால் தேஹம் முதலியவைகளும், சௌசத்தால் சில வஸ்துக்களும், ஜாதகர்மம் முதலிய ஸம்ஸ்காரங்களால் கர்ப்பமும், தபஸினால் இந்திரியங்களும், யாகத்தால் ப்ராஹ்மணன் முதலியவர்களும், தானத்தால் திரவ்யங்களும், ஸந்தோஷத்தால் மனதும், ஆத்மவித்தையால் ஆத்மாவும் சுத்தியடைகின்றன. ப்ராஹ்மணர்கள் ஸ்வஸ்திவாசனஞ் செய்தார்கள். ஸூதர்கள், மாகதர்கள்,

வந்திகள் ஆகிய இவர்கள் ஸ்தோத்திரஞ் செய்தார்கள் பாடகர்கள் கானஞ் செய்தார்கள்; பேரிகளும், துந்துபி களும் முழங்கின. கோகுலத்தில் ஒவ்வொரு வீட்டிலும், வாயிற்படியும், வீட்டின் உள்பிரதேசங்களும், மெழுகிச் சுத்தம் செய்யப்பட்டன. மேலும் அவைகள் பல வகையான த்வஜங்களாலும், பதாகைகளாலும்; பட்டுத் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டன. பசுக்களும், கன்றுகளும் அதிக ஸந்தோஷமுள்ளவைகளாக இருந்தன. மேலும், அவைகள் மஞ்சள், எண்ணெய் பலவகையான தாதுக்கள், மயில், தோகை, புஷ்பமாலை, வஸ்திரம், ஸுவர்ணமாலை ஆகிய இவைகளால் அலங்கரிக்கப் பட்டன.

கோபர்களெல்லோரும் விலை உயர்ந்த வஸ்திரங் களையுடுத்திக் கொண்டும், உத்தமமான ஆபரணங்களை அணிந்தும், கவசம் (சட்டை) தலைப்பாகை இவைகளை தரித்தும், பலவகையான காணிக்கை வஸ்துக்களை எடுத்துக்கொண்டும், நந்தருடைய கிருஹத்திற்கு வந்தார்கள். கோபிகைகளும் யசோதைக்குப் புத்திரன் பிறந்ததைக் கேள்விப்பட்டு, உயர்ந்த வஸ்திரம், ஆபரணங்கள், மை ஆகிய இவைகளால் தங்கள் சரீரத்தை அலங்கரித்துக் கொண்டார்கள். அவர்களு டைய முகமானது குங்குமத்தால் அலங்கரிக்கப்பட்டு, தாதுக்களால் பிரகாசிக்கும் தாமரை மலர்போல விளங்கிற்று. பின்னுமவர்கள் காணிக்கைகளாகப் பல வஸ்துக்களை யெடுத்துக்கொண்டு நந்தருடைய கிருகத் திற்குச் சென்றார்கள். அவர்கள் பெரிதான முன்பாக முள்ளவர்கள்; அவர்கள் நடக்கும்பொழுது ஸ்தனங்கள் அசைகின்றன. மேலுமவர்கள் உத்தமமான ரத்தினங்களிழைத்த குண்டலங்களைத் தரித்தவர்கள்;

அவர்களுடைய கண்டத்தில் ஹாரங்கள் ப்ரகாசிக் கின்றன; அவர்கள் பல வர்ணமுள்ள வஸ்திரத்தை யுடுத்திக் கொண்டவர்கள்; அவர்கள் விளையாட்டாக நடக்கும் பொழுது தலையில் வைத்துக்கொண்டிருந்த மாலைகள் நழுவிக் கீழே விழுகின்றன; வளைகள் சப்திக்கின்றன; தலைமயிர்களும், ஸ்தனங்களும் அசைகின்றன; இப்படிக் கோபிகைகள் நந்தருடைய கிருகம் சென்று அவ்விடத்தில் குழந்தையாக அவதரித்திருக்கும் ஸ்ரீ மகாவிஷ்ணுவை நோக்கி, 'வெகு காலம் எங்களைக் காப்பாற்றும்' என்று ஆசீர்வதித்து மஞ்சள்பொடி, எண்ணெய், ஜலம், ஆகிய இவைகளால் புரோக்ஷித்தார்கள் ஸகல ஜகத்திற்கும் அதிபதியும், அனந்தருமாகிய ஸ்ரீ மகாவிஷ்ணு கோகுலத்தில் ஸ்ரீ கிருஷ்ணனாக அவதரித்திருக்கும்பொழுது பல வகையான வாத்யங்கள் முழக்கப்பட்டன.

கோபர்கள் மிகவும் ஸந்தோஷத்தை அடைந்து, தயிர், நெய், பால், ஜலம், வெண்ணெய் ஆகிய இவை களை ஒருவர் மீது மற்றொருவர் விட்டெறிந்து கொண்டும், சரீரத்தில் பூசிக்கொண்டும் விளை யாடினார்கள். மிக்க விசால மனமுள்ளவராகிய நந்தர், புத்திரன் பிறந்ததால் ஆனந்தத்தை அடைந்து கோபர்களுக்கு வஸ்திரம், ஆபரணம், பசுக்கள், ஆகிய இவைகளைக் கொடுத்தார். பின்னுமவர், ஸூதர்கள், மாகதர்கள் வந்திகள், வித்தையைக் கொண்டு ஜீவிக்கும் மற்றவர்கள் ஆகிய இவர்களுக்கு இஷ்டமான வஸ்துக்களைக் கொடுத்தார். இப்படி நந்தர் புத்திரனு டைய க்ஷேமத்திற்காகவும் ஸ்ரீ மஹா விஷ்ணுவைப் பூஜிப்பதற்காகவும் எல்லாரையும் தக்கபடி பூஜித்தார். (விஷ்ணுவாக பாவித்து அர்ச்சித்தார் என்று தாத்பர்யம்)

மிகுந்த அதிருஷ்டமுள்ளவளாகிய (பலராமனைப் பெற்றதால்) ரோகிணீதேவியும் நந்தகோபரால் ஆதரிக்கப்பட்டு, திவ்வியமான மாலை, சந்தனம், ஹாரம் முதலிய ஆபரணங்கள் ஆகிய இவைகளால் அலங்கரிக்கப்பட்டு, ஆனந்தமாக சஞ்சரித்தாள். அந்த கோகுலத்தில் பகவான் அவதரித்தது முதல், கோகுல மானது மிகுந்த ஐச்வர்யமுள்ளதும், லக்ஷ்மிதேவி விளையாடும் ஸ்தலமாகவுமிருந்தது.

19–28. இப்படிச் சில நாள் சென்றபின், நந்தர் கோகுலத்தை ஸாவதானமாக ஸம்ரக்ஷிக்கும்படி கோபர்களை ஆஜ்ஞாபித்து, கம்ஸனுக்கு வருஷவரி செலுத்துவதற்காக மதுரா நகரஞ் சென்றார். அப்பொழுது வஸுதேவர் நந்தர் வந்திருக்கிறார் என்பதையும், வரி செலுத்தியாகி விட்டதென்பதையும், கேள்விப்பட்டு நந்தருடைய ஜாகைக்கு வந்தார். ப்ராணனைக் கண்ட தேஹம் போல, நந்தர் வஸு தேவரைக் கண்டு எழுந்திருந்து மிகுந்த பிரியத்துடன் இரு கைகளாலும் ஆலிங்கனஞ் செய்து கொண்டார். பின்னும் வஸுதேவரைப் பூஜித்தார். வஸுதேவர் சுகமாக ஆசனத்தில் உட்கார்ந்து, மிகுந்த ஆதரவுடன் க்ஷேமம் விசாரித்து,(வ்யாதியில்லாமலிருக்கிறீரா ?) தம்முடைய புத்திரர்களான பலராமன், கிருஷ்ணன் ஆகிய இவர்களுடைய ஞாபகமுள்ளவராகி நந்தரை நோக்கி, "ஓ ப்ராதாவே! வயது சென்றவரும், இனி நமக்குப் புத்திரன் பிறக்கப் போகிறதில்லையென்று ஆசை யொழிந்தவருமாகிய உமக்குப் பிள்ளை பிறந்தது தைவச் செயலேயாம். ஸம்ஸார சக்ரத்தில் சுழன்று கொண்டிருக்கும் ஜனங்களுக்கு மித்திரருடைய தர்சனங் கிடைப்பது அரிது. ஆனதால், புனர் ஜனனத்தை

(திரும்பவும் பிறப்பை) அடைந்தவன் போல, நான் உம்மைத் தர்ஸித்தேன். இதுவும் தைவச் செயலேயாம். நதியின் ஜலத்தில் மிதக்கும் கட்டைகள், எப்படி எப்பொழுதும் ஒரேவிடத்தில் சேர்ந்திருப்பதில்லையோ அப்படியே ஜனங்களும் ஒரேவிடத்தில் சேர்ந்து வஸிப்பதில்லை. அவர்களுடைய கர்மமானது பல வகையானதால், கர்மத்திற்குத் தக்கபடி பிரிவை அடைகிறார்கள். (ஆனதால் மித்திரனைப் பார்ப்பது துர்லபமென்று கருத்து.) பசுக்களுக்கு அனுகூலமான பூமி, ஜலம், புல், கொடி, முதலியவைகள் க்ஷேமமாக இருக்கின்றனவா ? எவ்விடத்தில் நீர் பந்துக்களுடன் வசிக்கிறீரோ, அந்த பிருஹத்வனம் குறைவற்றதாக இருக்கிறதா ? ஓ, ப்ராதாவே, உம்மையே பிதாவாக நினைத்துக் கொண்டவனும், உங்களால் (நந்தன், யசோதை இருவர்கள்) போஷிக்கப்பட்டவனுமான என்னுடைய புத்திரன் (பலராமன்) கோகுலத்தில் மாதாவுடன் வஸிக்கிறானல்லவா ? அவன் க்ஷேமமாக இருக்கிறானா ? பந்துக்களை ரக்ஷிப்பதற்காகவே புருஷனுக்குத் தர்மம், அர்த்தம், காமம் ஆகிய இவைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனதால் பந்துக்கள் கஷ்டப்பட்டால், அம்மூன்றும் பிரயோஜன மற்றவைகளாகின்றன" என்றார்.

29–30. அதனைக்கேட்ட நந்தர், வஸுதேவரை நோக்கி, "தேவகிக்கு அநேக குழந்தைகள் பிறந்தும், அவைகள் கம்ஸனால் நாசஞ் செய்யப்பட்டன. கஷ்டம்! ஒரு பெண் எஞ்சியது; அதுவும் ஆகாயஞ் சென்றது. இந்த லோகமானது அதிருஷ்டத்தையே முடிவாகவுடையது; மேலும்,ஜனங்கள் அதிருஷ்டத்தை முக்கியமாகக் கொண்டவர்கள்; தனக்கு ஸுகத்தையும்,

துக்கத்தையும் கொடுப்பது அதிருஷ்டமேயாம். இதனைத் தெரிந்து கொண்டவன் மோஹத்தை அடையான் என்றார். (புத்திரனைக் கொடுக்கும் அதிருஷ்டமானது குறையும்பொழுது, புத்திரனுக்குக் கெடுதியுண்டாகிறது; விட்டுப்பிரிந்த புத்திரன் முதலியவர்களைச் சேர்த்துவைப்பதும் அதிருஷ்டமே; ஸுகதுக்கங்கள் அதிருஷ்டத்தால் உண்டாகின்றன வானதால் மரணமடைந்த புத்திரர்களைப் பற்றி துக்கிக்க வேண்டாமென்று கருத்து).

31–32. அதனைக்கேட்ட வசுதேவர், 'அரசனுக்கு வருஷவரி செலுத்தியாகிவிட்டது; என்னையும் பார்த்தீர்; கோகுலத்தில் உத்பாதங்கள் (அபசகுனங்கள்) உண்டாகின்றன. இவ்விடத்தில் அதிக நாள் வசிக்க வேண்டாம்; கோகுலத்திற்குப் போகலாம்" என்று சொன்னார். அதனைக் கேட்ட நந்தன் முதலிய கோபர்கள், வஸுதேவரிடம் விடைபெற்று எருதுகள் கட்டிய வண்டிகளில் ஏறிக்கொண்டு கோகுலஞ் சென்றார்கள்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்– 6

ஸ்ரீகிருஷ்ணன் பூதனையை ஸம்ஹரித்தது

1. நந்தர் மதுரா நகரத்திலிருந்து கோகுலத்திற்குப் போகும் வழியில் உத்பாதங்களைக் கண்டு, "வஸுதேவர் சொன்னது உண்மையாக இருக்கலாம்" என்று யோசித்து, "ஸ்ரீமந் நாராயணன் நமக்கு க்ஷேமத்தைச் செய்யட்டும்" என்று பகவானைச் சரணமடைந்தார்.

2–10. கம்ஸனால் சிசுக்களைக் கொல்லும்படி ஆஜ்ஞாபிக்கப்பட்ட பூதனையென்ற ராட்சஸி, பட்டணங்களிலும் கிராமங்களிலும் கோகுலங்களிலும் சென்று குழந்தைகளை வதஞ்செய்து வந்தாள். எவ்விடத்தில் ராட்சதர்களை வரவொட்டாமல் தடுக்கும் ஸ்ரீபகவானுடைய திவ்யநாமங்கள் உச்சரிக்கப் படவில்லையோ அவ்விடத்தில் ராட்சதர்களுடைய சக்தி பயன்படும். ஸ்ரீ பகவானே நேரில் வஸிக்கும் கோகுலத்தில் ராக்ஷதர்களுடைய சக்தி பிரயோசனப் படுமா?) அந்தப் பூதனையென்ற ராட்சஸி நந்தர் மதுரா சென்றிருந்த சமயத்தில கோகுலத்திற்குள் புகுந்தாள். அவள் இஷ்டப்படி ஸ்வரூபமெடுத்துக் கொள்ளும் சக்தியுள்ளவளாகையால் மாயையால் உத்தம ஸ்திரீயாக வேஷந்தரித்துக் கொண்டாள். அவள் தலைமயிர் மல்லிகைப் புஷ்பத்தினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது, பின்பக்கம், ஸ்தனம் ஆகிய இவைகள் பருத்திருந்தன. இடுப்பு சிறியதாக இருந்தது. நல்ல வஸ்திரத்தைத் தரித்திருந்தாள். காதில் அணிந்திருக்கும் குண்டலங் களுடைய காந்தியால் அவளுடைய முகம் விளங்கிற்று.

மேலும் மனோஹரமாகிய மந்தஸ்மிதமுள்ளவளும், கோகுலத்திலுள்ளவர்கள் எல்லோருடைய மனத்தை அபகரிக்கக்கூடிய சரீரமுள்ளவளுமாக இருந்தாள், அவளை கண்ட கோபிகைகள், 'லக்ஷ்மிதேவி தன்னுடைய பார்த்தாவைத் தரிசிப்பதற்காக, மனித வடிவத்துடன் கையில் தாமரை மலரைத் தரித்து வருகிறாள்' என்று நினைத்தார்கள். சிசுக்களைக் கொல்லும் பால கிருஹமாகிய பூதனை குழந்தைகளைத் தேடிக்கொண்டு, தெய்வச் செயலாக நந்தருடைய கிருஹத்திற்குள் வந்தாள். அவ்விடத்தில் அசத்துக்களை நாசஞ் செய்பவரான குழந்தையைக் கண்டாள். அந்தக் குழந்தை தன்னுடைய தேஜஸ்ஸை மறைத்துக்கொண்டு, சாம்பலால் மூடப்பட்ட நெருப்புத் தணல் போலிருந்தது.

அப்பொழுது அசையும் பொருள் அசையாப் பொருளாகிய இவைகளின் ஸ்வரூபியும், இயற்கையில் ஜகத்தின் சகல வியாபாரங்களையும் அறிந்தவருமாகிய பகவான், இவள், சிசுக்ககளை கொல்பவள், வருகிறாள் என்று அறிந்திருந்தும் கண்களைமூடிக் கொண்டு, தாம் மகேசுவரரானாலும் மனுஷிய ஸ்வபாவத்தை யனுசரித்து மௌனமாக இருந்தார். அப்படிப்பட்ட அனந்தரும் தனக்கு யமனுமாகிய பகவானை மடியில் தூக்கி வைத்துக்கொண்டாள். அது தூங்கும் சர்ப்பத்தைக் கயிறு என்று பிரமித்து, மடியில் வைத்துக் கொண்டது போலிருந்தது. அழகான உரைக்குள்ளிருக்கும் கத்தி போலக் கொடிய மனமுள்ளவளும் அழகான நடையுள்ளவளுமான அந்த உத்தம ஸ்திரீரூபமுள்ள பூதனையைக் கண்டு அவளுடைய காந்தியால் பிரமித்து (இந்த குழந்தைகளுக்குத் தாய் இவளோ, நானோவென்று) ரோகிணீயும் யசோதையும்

குழந்தையை எடுக்க வேண்டாம் என்று தடை செய்யாமலேயே பார்த்திருந்தார்கள்.

11–18. கொடியவளாகிய அந்தப்பூதனை, விஷப் பாலுள்ள ஸ்தனத்தை ஸ்ரீகிருஷ்ணனுக்குக் கொடுத்தாள். அதன்பால் குரூரமான வீரியமுள்ளது. பகவான் அந்த ஸ்தனத்தை இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு கோபத்துடன் அவளுடைய பிராணனையும் சேர்த்து பானஞ்செய்தார். (இவளுடைய பால் விஷமானதால் இது அபத்தியமென்று நினைத்துப் பிராணனையும் புசித்தார்.) அப்பொழுது அவளுக்கு சகல மர்மங் களிலும் வலியுண்டாயிற்று. கால்களை நீட்டினாள். கைகளைப் பூமியில் கிடத்தினாள். கண்கள் பிதுங்கிப் போயின; தேகத்தில் வியர்வையுண்டாயிற்று போதும்; 'விடு,விடு' என்று சொல்லிக் கதறினாள். அவளுடைய சப்தத்தால் பர்வதங்களும், பூமியும் அசைந்தன. சூரியன் முதலிய கிருகங்களுடன் ஆகாயம் ஜ்வலித்தது; பாதாளம் அசைந்தது. ஜனங்கள் இடி விழுமோவென்று பயந்து பூமியில் விழுந்தார்கள். திக்குகளிலிருந்து எதிரொலியுண்டாயிற்று. அந்த ராக்ஷஸியானவள், தன்னுடைய ராட்சத ஸ்வரூபத்தை அடைந்து உயிரை இழந்தாள்; அவள் வாய் திறந்தது; கைகளும் தலைமயிர்களும் பரப்பப்பட்டன. அவளுடைய தேகமானது வஜ்ரத்தால் அடிக்கப்பட்ட விருத்ராஸுரன் போல் பூமியில் விழுந்தது. அப்படி விழுந்த அவளுடைய சரீரத்தால் ஆறு குரோசத்திற்குட் பட்ட பூமியிலிருக்கும் விருட்சங்கள் பொடியாக்கப் பட்டன. அது மிக்க ஆச்சரியகரமாக இருந்தது, மேலும் அவளுடைய முகம் ஏர்க்கால் போன்ற பயங்கரமான சிங்கப்பற்களுள்ளதாகவும் மலையின்

குகை போன்ற மூக்குள்ளதாகவுமிருந்தது ஸ்தனங்களோ குண்டு கற்கள் போலிருந்தன. மயிர்கள் விரிந்தும் சிவந்த நிறமுள்ளவையுமாக இருந்தன. கண்கள் பாழுங்கிணறு போல் ஆழமாக இருந்தன. நிதம்பமானது (இடுப்பின் பின்பக்கம்) மணல் திட்டுப் போலப் பயங்கரமாக இருந்தது. கைகளும் கால்களும் அணைக் கட்டுகள் போலிருந்தன. வயிறு ஜலமற்ற மடுவைப் போலிருந்தது. அந்த சரீரத்தைப் பார்த்துக் கோபர் களும், கோபிகைகளும் முந்தி அவளுடைய சப்தத்தைக் கேட்டு நடுங்கினவர்களானாலும் விசேஷமாகப் பயந்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் அந்த சரீரத்தின் மீது பயமற்று விளையாடினார்;

19–31. அதனைக் கண்ட கோபிகைகள் வேகமாக ஓடி குழந்தையை எடுத்தார்கள். பின்னும் அந்தக் கோபிகைகள் யசோதை, ரோஹிணீ ஆகிய இவர்களு டன் அந்தக் குழந்தைக்குக் கோபுச்சப்ரமணம் (பசுவின் வாலைக் கையில் வைத்துக்கொண்டு நான்கு புறத்திலும் சுற்றுதல்) செய்து கோமூத்திரத்தால் குழந்தைக்கு ஸ்நானம் செய்வித்து, கோதூளியைப்பூசி கோமயத்தால் (சாணம்) நெற்றி முதலிய பன்னிரண்டு அவயவங்களில் கேசவ முதலிய திவ்ய நாமங்களை உச்சரித்து ரக்ஷை செய்தார்கள். மேற்சொல்லியபடி கோபிகைகள், பரபரப்பினால் ஆசமனஞ் செய்யாமலேயே ரக்ஷையைச் செய்து பிந்தி ஆசமனஞ் செய்து அங்கன்யாஸம் (வைப்பு) கரன்யாஸம் இவைகளைச் செய்து அக்குழந்தைக்கும் அவைகளைச் செய்தார்கள். எப்படியெனில் 'ஓ குழந்தாய் ,உன்னுடைய பாதத்தை அஜரென்ற திவ்ய நாமதேயமுள்ள பகவான் ரக்ஷிக் கட்டும். உன்னுடைய முழங்கால்களை ஸூக்ஷ்மரூபியான

பகவான் காப்பாற்றட்டும். துடைகளை யஜ்ஞ ஸ்வரூபி யான ஈச்வரன் ரக்ஷிக்கட்டும். இடுப்பை அச்யுதர் ரக்ஷிக்கட்டும். வயிற்றை ஹயக்ரீவர் ரக்ஷிக்கட்டும். ஹிருதயத்தை கேசவரும், உன்னுடைய மார்பை ஈச்வரனும், கழுத்தை இனரும் (ஸூர்யன்) கையை விஷ்ணுவும், முகத்தை உருக்ரமரும் (த்ரிவிக்ரமாவதாரஞ் செய்தவர்), சிரஸ்ஸை ஈச்வரரும் ரக்ஷிக்கட்டும். மேலும் சக்ராயுதமுள்ள பகவான் முன்னும், கதாயுதம் தரித்த பகவான் பிந்தியும், வில்லை தரித்த மதுஸூதனர், கத்தியை தரித்தவராகிய அஜனர் ஆகிய இவர்கள் இரு பக்கங்களிலும், சங்கத்தைத் தரித்த பகவான் கோணங்களிலும், உருகாயரான பகவான் (பெரியோர்களால் கானஞ் செய்யக்கூடியவர்) உயரவும் இருந்துக் காப்பாற்றட்டும்.

கருடன் கீழிருந்து ரக்ஷிக்கட்டும். ஹலதரரான பகவான் (கலப்பையைத் தரித்தவர்) எங்குமிருந்து ரக்ஷிக்கட்டும். மேலும் உன்னுடைய இந்திரியங்களை ஹிருஷீகேசர் (இந்திரியங்களுக்கு அதிபதி) ரக்ஷிக்கட்டும். ஸ்ரீமந் நாராயணன் ப்ராணனைக் காப்பாற்றட்டும். ச்வேத த்வீபத்திற்கு அதிபதியான பகவான் சித்தத்தைக் காப்பாற்றட்டும். யோகேசராகிய பகவான் மனத்தை ரக்ஷிக்கட்டும். பிரச்னி கர்ப்பர் உன்னுடைய புத்தியை ரக்ஷிக்கட்டும் பரராகிய பகவான் அகங்காரத்தை ரக்ஷிக்கட்டும் விளையாடுகிற உன்னை கோவிந்தர் காப்பாற்றட்டும். படுத்துக்கொண்டிருக்கும் உன்னை மாதவர் ரக்ஷிக்கட்டும். நடந்து கொண்டி ருக்கிற உன்னை வைகுண்டர் ஸம்ரக்ஷிக்கட்டும். உட்கார்ந்திருக்கும் உன்னை லக்ஷ்மீபதியாகிய பகவான் ரக்ஷிக்கட்டும். சகல கிருகங்களுக்கும் பயங்கரரும்,

யஜ்ஞத்தை அநுபவிப்பவருமாகிய பகவான் அன்னம் முதலியவைகளை புஜிக்கும் உன்னை ஸம்ரக்ஷிக் கட்டும். மேலும் டாகினிகள், ராக்ஷஸிகள், கூச்மாண் டர்கள், குழந்தைகளுக்கு விரோதிகளான கிருஹங்கள், பூதங்கள், பிரேதங்கள், பிசாசங்கள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், விநாயகர்கள், கோடராரேவதி, ஜ்யேஷ்டா, பூதனா, மாதிருகா முதலியவர்கள் சரீரத்தையும், பிராணனையும் இந்திரியங்களையும் கெடுக்கக்கூடிய அபஸ்மாரங்கள், ஸவப்னத்தில் காணப்பட்ட பெரிதான உத்பாதங்கள், விருத்த கிருஹங்கள், பால கிருஹங்கள் ஆகிய எல்லாம் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் திவ்ய நாமதேயத்தை உச்சரித்ததால் நாசத்தை அடையட்டும்" என்று கோபிகைகள் மிக்கப் பிரியத்துடன் ரக்ஷை செய்தார்கள். பின்பு யசோதை குழந்தையையெடுத்துப் பால் கொடுத்து தொட்டிலில் படுக்க வைத்தாள்.

32–41. அந்த ஸமயத்தில் நந்தர் முதலிய கோபர்கள் மதுராவிலிருந்து கோகுலம் வந்தார்கள். பூதனையின் சரீரத்தைக் கண்டார்கள். மிகவும் ஆச்சரியத்தை அடைந்தார்கள். அப்பொழுது நந்தர் "வஸுதேவர் மஹர்ஷியாகவாவது, ஜ்ஞானியாகவாவது, சிறந்த யோகியாகவாவது இருக்கவேண்டும். அவர் எவ்விதம் உத்பாதங்கள் உண்டாகின்றன என்று சொன்னாரோ அதன் பயன் அவ்விதமே காணப் பட்டது" என்று சொல்லி ஆச்சரியப்பட்டார். பின்பு கோகுலத்தில் வஸிக்கும் கோபர்கள் அந்தப் பூதனையின் சரீரத்தைக் கோடாலிகளால் பிளந்து அப்புறப்படுத்தி, கட்டைகளில் வைத்து எரித்தார்கள். அதிலிருந்து கிளம்பிய புகையானது அகில் கட்டையின் வாஸனைப்

போல் வீசிற்று. ஸ்ரீ கிருஷ்ணபகவான் அவளுடைய ஸ்தன்யத்தைப் பானஞ்செய்ததனால் அவள் சுத்தை யானாள். இப்படி லோகத்திலுள்ள குழந்தைகளை கொன்றவளும், ரக்தபானஞ் செய்தவளும், ராக்ஷஸியு மான பூதனை ஸ்ரீ கிருஷ்ணனைக் கொல்ல வேண்டுமென்ற விருப்பத்தால் அவருக்கு ஸ்தன்யத்தை கொடுத்ததனால் நல்ல கதியை அடைந்தாள்.

இப்படியிருக்க ஸ்ரீகிருஷ்ணனுடைய தாய்கள் அவரிடத்தில் பிரியம் வைத்திருப்பது போல் மிக்க ச்ரத்தையுடனும், பக்தியுடனும், பரமாத்மாவாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்குப் ப்ரியமானவைகளை அர்ப்பணஞ் செய்தவர்கள் மேலான கதியை அடைவார்கள் என்பதில் என்ன ஸந்தேஹம்? பகவானுடைய பாதங்கள் பக்தர்களுடைய ஹிருதயத்திலிருப்பவைகள்; பெரியோர்களாலும் நமஸ்கரிக்கக் கூடியவைகள்; அப்படிப்பட்ட பாதங்களால் பகவான் பூதனையின் சரீரத்தில் ஸஞ்சரித்து அவளுடைய ஸ்தனத்தை பானஞ் செய்ததினால் அந்த ராக்ஷஸி கிருஷ்ணனுடைய தாய்களால் அடையக்கூடிய உத்தமகதியான ஸ்வர்க்கத்தை அடைந்தாள். இப்படியிருக்க கிருஷ்ணனால் எவர்களுடைய ஸ்தன்யம் (பால்) குடிக்கப்பட்டதோ, எந்தப் பசுக்களுடைய பால் குடிக்கப்பட்டதோ அந்தத் தாய்களுக் கும், பசுக்களுக்கும் ஸ்வர்க்கங்கிடைக்கும் என்பதில் என்ன ஸந்தேஹம்! மோக்ஷம்வரையில் உள்ள ஸகல புருஷார்த்தங்களையும் கொடுக்கக்கூடிய ஸ்ரீ பகவான் தம்மிடத்தில் புத்திர ஸ்நேஹம் வைத்த எந்தக் கோபிகைகளின் ஸ்தன்யத்தைப் பானஞ் செய்தாரோ, எந்த யசோதை முதலியவர்கள் பகவானைப் புத்திர னாகப் பாவித்து, எப்போதும் அவரையே தரிசித்துக்

கொண்டிருந்தார்களோ, அவர்களுக்கு மறுபடியும் ஸம்ஸார ஸம்பந்தம் உண்டாகிறதில்லை. (ஸம்ஸாரம் அஜ்ஞானத்தால் உண்டாகக் கூடியது.)

42–45. அந்தப் பூதனையின் சரீரம் எரியும்பொழுது உண்டாகிய வாசனையையுணர்ந்த கோபர்கள் இது என்ன, எங்கிருந்து உண்டாயிற்று என்று சொல்லிக் கொண்டு கோகுலத்தில் ப்ரவேசித்தார்கள். அவ்விடத் திலிருந்த கோபர்களும், கோபிகைகளும் பூதனை கோகுலத்திற்கு வந்தது முதலியவைகளைச் சொன்னார் கள். அதனைக்கேட்ட கோபர்கள் குழந்தை ஸ்தன்ய பானஞ் செய்ததால் ராக்ஷஸி மரணமடைந்ததையும் குழந்தை க்ஷேமமாக இருப்பதையும் யோசித்து மிகவும் ஆச்சரியமடைந்தார்கள். மேலான புத்தி யுள்ளவராகிய நந்தர் மதுரா நகரத்திலிருந்து வந்து தம்முடைய புத்திரனையெடுத்து உச்சியில் முகர்ந்து விசேஷ ஸந்தோஷத்தையடைந்தார். பூதனைக்கு மோக்ஷத்தை யுண்டுபண்ணிய ஸ்ரீ கிருஷ்ணனுடைய அற்புதமான இந்த பால்ய சரிதத்தை எவன் சிரத்தையுடன் கேட்கிறானோ, அவனுக்கு ஸ்ரீ கோவிந்தராகிய பகவானிடத்தில் பக்தியுண்டாகும்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்– 7

திருணாவர்த்த வதம்.

1–3. அதனைக் கேட்ட பரீக்ஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி "ஈச்வரனாகிய ஹரியானவர் எந்தெந்த அவதாரங்களைச் செய்து காதுக்கு இனிமையானவை களும், மனோஹரங்களுமான கிரீடைகளைச் செய்தாரோ, அவைகளை எனக்குச் சொல்லவேண்டும் அவைகளைக் கேட்பவர்களுக்கு மனச்சலிப்பு உண்டாகிறதில்லை. அச்ரத்தை யுண்டாகிறதில்லை, அந்தக்கரணம் சுத்தமாகிறது. ஸ்ரீபகவானிடத்தில் பக்தியுண்டாகிறது; பக்தர்களிடத்தில் ஸ்நேஹமுண் டாகிறது; மேலும் ஸ்ரீகிருஷ்ணன் மனுஷ்ய சரீரத்தை யெடுத்துக்கொண்டு கோபர்களின் ஜாதியை அனுஸரித்து எந்த பால்ய கிரீடைகளைச் செய்தாரோ? அந்த அற்புதமான ஹரியின் சரிதத்தை எனக்குச் சொல்லக்கூடுமானால் சொல்லும்" என்று கேட்டார்.

4–38. அதனைக் கேட்ட சுகர் அரசனை நோக்கி 'ஒரு நாள் குழந்தைக்கு ஸ்நானஞ் செய்விக்கும் தினத்தில் ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஜன்ம நக்ஷத்திரமும் சேர்ந்தது. அன்றைய தினத்தில் யசோதை அநேக ஸ்திரீகளை வரவழைத்து ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஸ்நானஞ் செய்வித்தாள். அப்பொழுது வாத்தியங்கள் முழங்கின, பாடகர்கள் பாடினார்கள். ப்ராஹ்மணர்கள் ஸ்வஸ்திவாசனஞ் செய்தார்கள். மேலும் யசோதை அன்னம், வஸ்திரம், புஷ்பம், பசு ஆகிய இவைகளைக் கொடுத்து ப்ராஹ்மணர்களைப்

பூஜித்தாள். இப்படி ஸ்ரீ கிருஷ்ணனுக்கு மங்கள ஸ்நானஞ் செய்வித்தவுடன் குழந்தைக்கு தூக்கம் வருவதைக் கண்டு தொட்டிலில் படுக்கவைத்தாள். பின்பு அவள் அன்றைய உத்ஸவத்தில் நோக்கமுள்ள வளாகி தன்னுடைய கிருஹத்திற்கு வந்த கோகுல வாஸிகளுக்கு மரியாதை செய்து கொண்டிருந்தாள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் ஸ்தன்யத்திற்காக (பால் குடிக்க விரும்பி) அழுது கால்களை உயர உதறினார். குழந்தை அழுத சப்தம் அவள் காதில் விழவில்லை. குழந்தை காலை உயரத் தூக்கி உதறும்பொழுது தொட்டிலுக்குமேல் வைக்கப்பட்டிருக்கும் வண்டியின் மீது தளிர்போல மிருதுவும், அல்பமுமான குழந்தை கால்பட்டு அதனால் அந்த வண்டியின் பித்தளை வெண்கலம் முதலியவை உடைந்து போயின. அச்சும் சக்கரங்களும் மாறின; ஏர்க்கால் நொறுங்கிப் போயிற்று; இப்படி அந்த வண்டி உடைந்து மாறி பூமியில் விழுந்தது.

அதனைக்கண்டு அந்த உத்ஸவத்திற்காக வந்திருந்த கோபர்களும், கோபிகைகளும் நந்தரும் யசோதையும் மிக்க ஆச்சர்யத்தை அடைந்து 'இந்தவண்டி எப்படி தானாக மாறி விழுந்தது' என்று பேசிக்கொண்டு கவலைப்பட்டு மன வருத்தத்துடன் குழந்தையைச் சுற்றிக் கொண்டார்கள். இப்படி ஸந்தேஹத்தை அடைந்திருக்கும் அவர்களை நோக்கி அருகிலுள்ள குழந்தைகள் 'அழுது கொண்டிருந்த இந்த குழந்தை காலால் உதைத்து இந்த சகடத்தைத் தள்ளியது, ஸந்தேஹமில்லை" என்று சொன்னார்கள். அதைக் கேட்ட கோபர்கள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய அளவற்ற பலத்தை அறியாதவர்களாகையால் குழந்தைகள்

சொல்வதை நம்பவில்லை. (குழந்தையால் இந்த சகடத்தை உதைத்து கீழேதள்ள முடியாது, இந்த பையன்கள் ஏதோ சொல்கிறார்கள் என்று நினைத்தார்கள்) பின்பு யசோதையானவள் அழுது கொண்டிருக்கும் குழந்தையையெடுத்து பாலக்கிருஹம் உபத்திரவிக்கிறதென்ற ஸந்தேஹமுள்ளவளாகி ப்ராஹ்மணர்களைக் கொண்டு ஆசீர்வதிக்கச்செய்து ஸ்தன்யபானஞ் செய்வித்தாள். பிறகு கோபர்கள் எட்டு திக்குகளிலும் கலசங்களை அதற்குவேண்டிய ஸாமக்ரியைகளை வைத்தார்கள். ப்ராஹ்மணர்கள் அதனை தயிர், அக்ஷதை, தர்ப்பம், ஜலம் ஆகிய இவைகளால் பூஜித்து விதிப்படி அக்னியில் ஹோமஞ் செய்து சாந்தி செய்தார்கள்.

எவர்கள் அஸூயை, பொய், தம்பம், ஈர்ஷ்யை, ஹிம்ஸை, மானம் ஆகிய இவைகளற்றவர்களோ, அந்த ஸத்யவாதிகளாகிய ப்ராஹ்மணர்களால் செய்யப் படும் ஆசீர்வாதம் வீணாகாது என்று நந்தகோபர் நினைத்து ஸாமம், ரிக், யஜுஸ் ஆகிய மந்திரங்களால் மந்திரிக்கப்பட்ட பரிசுத்தமான ஔஷதிகளுள்ள தீர்த்தங்களால் ப்ராஹ்மணர்களைக் கொண்டு குழந்தைக்கு ஸ்நானஞ் செய்வித்து ஸ்வஸ்திவாசனம் நடத்தி ஹோமத்தால் அக்கினியைப் பூஜித்து ப்ராஹ்மணர்களுக்கு போஜனஞ் செய்வித்தார். மேலும் நந்தகோபர் குழந்தையின் க்ஷேமத்தை யுத்தேசித்து, வஸ்திரத்தாலும், புஷ்பத்தாலும், ஸுவர்ண மாலை களாலும் அலங்கரிக்கப்பட்ட ஸகல நற்குணங்கள் பொருந்திய பசுக்களை ப்ராஹ்மணர்களுக்கு தானஞ் செய்தார். அந்தப் பிராம்மணர்களும் ஆசீர்வாதஞ் செய்தார்கள். மந்திரங்களை அறிந்தவர்களும்,

யோகிகளுமாகிய ப்ராஹ்மணர்களால் செய்யப்படும் ஆசீர்வாதங்கள் ஒருபொழுதும் பயனற்றதாக ஆகிறதில்லை. பீன்பு ஒருகால் யசோதை தன்னுடைய மடியில் குழந்தையை வைத்துக் கொஞ்சிக்கொண்டிருந்தாள். அப்பொழுது குழந்தை மலையின் சிகரம் போல பாரமுள்ளதாகவிருந்தபடியால் அதனைத் தூக்க முடியாதவளாகி குழந்தையைப் பூமியில் வைத்து ஆச்சர்யத்தை அடைந்து (குழந்தைக்கு அரிஷ்டம் நேரிடாமலிருப்பதற்காக) மஹா புருஷனை த்யானஞ் செய்து, வீட்டு வேலைகளில் நோக்கமுள்ளவளாகவிருந்தாள்' (ஸ்ரீ கிருஷ்ணனுடைய வயிற்றில் ஜகத்து இருக்கிறதென்பதை அறியவில்லையென்று தாத்பர்யம்) அந்த ஸமயத்தில் கம்ஸனுடைய வேலைக்காரனும், கம்ஸனால் தூண்டப்பட்டவனுமான, திருணாவர்த்தன் என்ற அஸுரன் சுழல்காற்றின் ஸ்வரூபத்தையெடுத்துக் கொண்டு பூமியில் உட்கார்ந்திருக்கும் ஸ்ரீ கிருஷ்ணனாகிய குழந்தையைத் தூக்கிக் கொண்டு போனான்.

அந்தக் காற்றின் கோரமான சப்தத்தால் திக்குகளிலும், விதிக்குகளிலும் எதிரொலியுண்டாயிற்று. மேலும் ஒரு முஹூர்த்த காலம் கோகுலம் முழுவதும் இருள் மூடியது போலத் தூளியால் மறைக்கப்பட்டது. அந்த தூளியால் கோகுலத்தில் வஸிப்பவர்கள் கண்களை மூடிக்கொண்டார்கள். யசோதை எந்தவிடத்தில் குழந்தையை வைத்திருந்தாளோ அந்தவிடத்தில் குழந்தையில்லை; மேலும் திருணாவர்த்தனால் வாரியிறைக்கப்பட்ட கற்களால் பீடிக்கப்பட்டு மயங்கி எல்லோரும் தன்னையாவது பிறரையாவது அறியவில்லை; இம்மாதிரி கொடிய

காற்றினால் மண்மழை பெய்யும்பொழுது குழந்தையைக் காணாமல் தாயான யசோதையானவள் கன்றையிழந்த பசுபோல மிக்க தீனமாகத்துக்கித்துப் பூமியில் வீழ்ந்தாள். பீன்பு காற்றினாலுண்டான மண் மழை அடங்கியது; அப்பொழுது கோபிகைகளும் யசோதை அழுவதை கேட்டு ஸ்ரீ கிருஷ்ணனைக் காணாமல் அழுதார்கள். சுழல்காற்றின் ஸ்வரூபத்துடன் ஸ்ரீ கிருஷ்ணனைத் தூக்கி கொண்டு ஆகாயமார்க்கமாக செல்லும் திருணாவர்த்தன் வேகம் குறைந்தவனாகி, கிருஷ்ணனைத் தூக்கச் சக்தியற்றவனானான். திருணாவர்த்தன் தன்னைக்காட்டிலும் அக்குழந்தை மிகுந்த பாரமுள்ளதாக விருந்ததால் 'இது கல்' என்று நினைத்துக்குழந்தையைக் கீழே தள்ள யத்தனித்தான்.

ஆனால் அக்குழந்தை அவனுடைய கழுத்தை கட்டிக் கொண்டிருந்தமையால், அந்த அத்புதமான குழந்தையைத் தள்ளவும் முடியவில்லை. அஸுரனுடைய கழுத்தைக் குழந்தை இறுக்கிப்பிடித்துக் கொண்டதால் அஸுரனுடைய கண்கள் வெளியில் வந்தன. அவன் சேஷ்டையற்றவனாகிக் கதறமுடியாமல் மரணமடைந்து கழுத்தைப் பிடித்துக் கொண்டிருக்கும் குழந்தையுடன் கோகுலத்தில் விழுந்தான். பரம சிவனுடைய பாணத்தால் அடிபட்ட திருபுரம்போல் ஆகாயத்திலிருந்த ஒரு கற் பாறையில் விழுந்து அவயவங்கள் சிதறுண்டு கிடக்கும் பயங்கரனான திருணாவர்த்தனைக் கோபிகைகளெல்லாரும் ஒன்று சேர்ந்து பார்த்தார்கள். மேலுமவர்கள் அஸுரனால் ஆகாயத்திற்குக் கொண்டு போகப்பட்டதும், மிருத்யுவின் முகத்தை அடைந்து திரும்பியதும், திருணாவர்த்தனுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு

கொண்டு மார்பில் தொங்குகிறதுமான குழந்தையை யெடுத்து மிக்க ஆச்சர்யத்தை அடைந்து யசோதை யினிடம் கொடுத்தார்கள். இப்படி நந்தன் முதலிய கோபர்களும், யசோதை முதலிய கோபிகைகளும் க்ஷேமமாகத் திரும்பி வந்த குழந்தையை அடைந்து விசேஷ ஸந்தோஷத்தை அடைந்தார்கள். "இந்தக் குழந்தையை ராக்ஷஸன் கொல்ல முயன்றும் குழந்தை க்ஷேமமாக வந்தது, இது மிகவும் அத்புதம்" என்று சிலர் பேசிக்கொண்டார்கள். மற்றுஞ்சிலர் துஷ்டனாகிய அஸுரன் தன்னுடைய பாபத்தால் கொல்லப்பட்டு மரணமடைந்தான், ஸாதுவாகிய குழந்தை பிழைத்தது, இதென்ன ஆச்சர்யம்" என்றார்கள்.

பின்னுஞ் சிலர் "நாம் என்ன தபஸ் செய்தோம்? பகவானைப் பூஜித்தோமா? குளம் வெட்டுவது முதலிய பூர்த்த தர்மத்தைச் செய்தோமா? அல்லது பஞ்சயக்ஞம் அக்னி ஹோத்திரம் முதலியவைகளைச் செய்தோமா? அல்லது எல்லாப் பிராணிகளிடத்திலும் அன்புபாராட்டி வந்தோமா? மரணமடைந்தான் என்று நினைக்கும்படியாகவிருந்த குழந்தை தைவ வசத்தால் திரும்பிவந்தானே! பந்துக்களை ஸந்தோஷப்படுத்தினானே! இது எதனுடைய பயனோ?" என்றார்கள். நந்தகோபர் பிருஹத்வனத்தில் பல உத்பாதங்களுண்டாவதைக் கண்டு ஆச்சர்யத்தை அடைந்து வஸுதேவருடைய வார்த்தையை நினைத்து ச்லாகித்தார். பின்பு ஒருகால் யசோதை குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு புத்திர ஸ்நேஹத்தால் பெருகும் ஸ்தன்யத்தைக் குழந்தைக்குக் கொடுத்தாள். குழந்தை போதுமான வரையில் பால்குடித்து சிரித்து விளையாட அதன் அழகான முகத்தைப் பார்த்திருந்தாள். அப்பொழுது

குழந்தை கொட்டாவி விட அதன் வாயில் ஆகாயம், பூமி, சந்திரன், ஸூர்யன், நக்ஷத்திரங்கள், திக்குகள், அக்னி, வாயு ஸமுத்திரங்கள், த்வீபங்கள், மலைகள், நதிகள், காடுகள், ஸ்தாவரஜங்கமரூபிகளான பிராணிகள் முதலிய எல்லாம் காணப்பட்டன. இப்படிக் குழந்தை யின் வயிற்றில் யசோதை ஜகத்து வஸிப்பதைப் பார்த்து பயந்து கண்களை மூடிக்கொண்டு மிகவும் ஆச்சர்யத்தை அடைந்தாள்.

நோட்டு

இந்த அத்யாயத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் சகடத்தை உதைத்தார்; அது உடைந்து விழுந்ததென்று சொல்லப் பட்டிருக்கிறது. திருணாவர்த்தன் முதலியவர்களைப் போல், வண்டி வேஷத்துடன் அஸுரன் வந்தானா அல்லது ஸ்ரீ கிருஷ்ணனுடைய தொட்டிலுக்குமேல் வண்டி வைக்கப்பட்டிருந்ததா? என்று ஸம்சய முண்டாகிறது. இது அஸுரனல்ல; வண்டியென்றே சொல்வது உசிதம். ஏனென்றால் மூலத்தில் சகடம், அன: என்று சொல்லியிருக்கிறதே யொழிய அஸுர சப்தம் ஒருவிடத்திலும் ப்ரயோகிக்கப்படவில்லை. மற்ற பகன், வத்ஸன் முதலியவர்களைச் சொல்லுமிடத்தில் அஸுர சப்தமிருக்கிறது. மேலும் உண்மையில் அஸுரனாகவிருந்தால் வண்டி உடைந்து விழுந்தபின் அஸுர ஸ்வரூபத்துடன் விழுந்திருக்கவேண்டும். அஸுரர்கள் மரிக்கும்பொழுது தங்களுடைய ஸ்வரூபத்தையெடுத்துக் கொள்வது வழக்கம். அப்படி ராக்ஷஸ ஸ்வரூபத்தையடைந்ததாகவும் சொல்லப்பட வில்லை. இந்த அத்யாயத்தின் 12–வது ச்லோகத்தின் வ்யாக்யானத்தில் விஜயத் வஜீயத்தில் 'வண்டி முன்

போல வைக்கப்பட்டது' என்று எழுதப்பட்டிருந்தது. மேலும் அஸுரன் வண்டியாக வந்திருந்தால் பிந்தி அவ்விடம் வந்து கோபர்கள் இவ்விடத்தில வண்டி யேது? புதிதாக விருக்கிறதுயென்று யோசித்திருக்க வேண்டும். அப்படி யோசித்ததாகச் சொல்லப்பட வில்லை 'இது எப்படி உடைந்தது?' என்று யோசித்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் முந்தி அவ்விடத்தில் ஒரு சகடம் வைத்திருக்க வேண்டுமென்று தெரியவருகிறது. மேலும் 11–வது அத்தியாயத்தில் உபநந்தருடைய வார்த்தையிலும் (அனச்சொபரிநாபதத்) வண்டியும் இவன் மீது விழவில்லையென்றிருக்கிறது. ஆனதால் வண்டி வைத்திருந்ததென்று சொல்ல வேண்டுமேயல்லாமல், அஸுரன் என்று சொல்வதற்கு நியாமில்லையென்று ஆக்ஷேபமுண்டாகிறது. ஆனாலும் அஸுரன்தான் வண்டியாக வந்தானென்று சொல்வதற்கு சில ஆதாரங்களிருக்கின்றன. அவைகளாவன; வீரராகவீய வ்யாக்யானத்தில் சகடரூபமாகிய அஸுரன் வந்தா னென்று ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஹரிவம்சத்தில் சகடத்தில் அஸுரன் ஆவேசித்தான் (புகுந்தான்) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்– 8

ஸ்ரீகிருஷ்ணனுக்கு கர்க்கர் நாமகரணஞ் செய்தது.

ஓ பரீக்ஷித்து மஹாராஜ! மிகுந்த தபஸ்வியும் யாதவர்களுக்குப் புரோஹிதருமான கர்க்காசார்யர், வஸுதேவரால் தூண்டப்பட்டு நந்தகோகுலத்திற்கு வந்தார். நந்தர் கர்க்காசார்யரைக் கண்டு மிக்கப் பிரியத்துடன் எழுந்திருந்து கைகூப்பி நமஸ்கரித்து அவரை ஸ்ரீ மஹா விஷ்ணுவாகப் பாவித்துப் பூஜித்தார். இப்படி நந்தகோபர் அவருக்கு ஆதித்யஞ் செய்து ஆஸனத்தில் வீற்றிருக்கச் செய்து ப்ரியமான வார்த்தைகளைச் சொல்லி அவரைச் சந்தோஷப் படுத்தி "ப்ராஹ்மணோத்தம! எல்லாவற்றிலும் பூர்ண ராகிய உமக்கு நாங்கள் எதைச்செய்வோம்? பெரியோர் தங்களிருப்பிடத்தைவிட்டு மற்றொருவரு டைய வீட்டிற்குச் செல்வது கிருஹஸ்தர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுப்பதற்கேயாம்.

கிருஹஸ்தர்கள் அளவற்ற குடும்ப கார்யமுள்ளவர் களாகையால் அவர்கள் பெரியோர்கள் வஸிக்குமிடந் தேடிப்போகச் சக்தியற்றவர்கள்; ஆனதால் கிருஹஸ்தர்களைத்தேடி மஹான்கள் வராதவரையில் கிருஹஸ்தர்களுக்கு க்ஷேமம் எப்படி கிடைக்கும்? இந்த்ரியங்களுக்குப் புலப்படாத நவக்கிருஹங்களுடைய ஸஞ்சாரத்தால் மனிதர்களுக்கேற்படும் சுபா சுபபலத்தைத் தெரிந்து கொள்வதற்கு ஸாதனமான ஜ்யோதிச் சாஸ்திரத்தை நீர் செய்தவர். அந்த சாஸ்திரத்தைக் கொண்டு ஜனங்கள் சுபாசுப பலனைத் தெரிந்து கொள்ளுகிறார்கள். நீர் வேதமந்திரங்களை

யறிந்தவர்களுக்குட் சிறந்தவர். மனிதர்களுக்குள் ப்ராஹ்மணன் உத்தம ஜன்மமுள்ளவனாகையால், ப்ராஹ்மணன் எல்லோருக்கும் குருவாகிறான். ஆனதால் இவ்விரண்டு குழந்தைகளுக்கும் நாமகரணம் (பெயர் வைப்பது) முதலிய ஸம்ஸ்காரம் செய்துவைக்க தக்கவர்" என்று வேண்டிக்கொண்டார்.

7–9. அதனைக் கேட்ட கர்க்காசாரியார் நந்தரை நோக்கி நான் யாதவர்களுக்கு ஆசார்யர் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம், நான் இந்த குழந்தைக்கு நாமகரணம் முதலிய ஸம்ஸ்காரங்களைச் செய்தால் உமக்கும், வஸுதேவருக்குமுள்ள ஸ்நேஹத்தை அறிந்த கெட்டமனமுள்ள கம்ஸன் இந்த குழந்தையை தேவகியின் புத்திரன் என்றே நினைப்பான். மேலும் அவன் தேவகியின் எட்டாவது கர்ப்பம் பெண்ணாக ஜனிக்காது என்று நினைத்தும், தேவகியினுடைய புத்திரியின் வார்த்தையை நினைத்துக் கொண்டும் ஸம்சயமற்றவனாகி இவ்விடம் வந்து குழந்தையைக் கொன்று விடுவான், அதனால் நமக்கு மிக்க கெடுதி ஸம்பவிக்கும்" என்றார்.

10–21. அதனைக்கேட்ட நந்த கோபர் கர்க்கரை நோக்கி என்னைச் சார்ந்த பந்துக்களுக்கும் தெரியாமல் இந்த நந்தகோகுலத்தில் த்விஜாதி (ப்ராஹ்மண க்ஷத்திர்ய வைச்யர்கள்) களுக்குரிய ஸம்ஸ்காரத்தை ஸ்வஸ்தி வாசனத்தை முன்னிட்டுச் செய்யும் என்று பிரார்த்தித்தார். அதனைக்கேட்ட மஹர்ஷி தம்முடைய அபிப்பிராயத்தையே நந்தகோபர் பிரார்த்தித்தபடியால் அதனை யொப்புக்கொண்டு ரஹஸ்யத்தில் அந்தக் குழந்தைகளுக்கு நாமகரணஞ் செய்தார் (பெயரிட்டார்).

எப்படியென்றால் இந்த ரோஹிணீயின் புத்திரன் தன்னுடைய குணங்களால் மித்திரர்களை ஸந்தோஷப் படுத்துவதால் ராமனென்ற பெயரை அடைவான்; மிகுந்த பலமுள்ளவனாகையால் பலனென்றும் இவனைச் சொல்வார்கள்; ஒருவருக்கொருவர் விரோதப்படும் யாதவர்களை ஒன்று படுத்துவதால் ஸங்கர்ஷண னென்றும் சொல்வார்கள். (தேவகியின் கர்ப்பத்திலிருந்து ரோஹிணீயின் கர்பத்திற்கு கொண்டுவரப்பட்டமை யான காரணத்தை மறைத்தார்) கிருதயுகம் முதலிய ஒவ்வொரு யுகத்திலும் இவன் சரீரத்தையெடுத்துக் கொள்கிறான். இப்போது கிருஷ்ண (கருப்பு) வர்ணத்தை அடைந்தான். அதனால் இவனுக்கு கிருஷ்ணனென்று பெயர். உம்முடைய இந்த புத்திரன் இதற்கு முன் ஒருகால் வஸுதேவருக்குப் புத்திரனாகப் பிறந்தான்.

அதனால் அவனையறிந்தவர்கள் வாஸுதேவ னென்று சொல்கிறார்கள். உம்முடைய புத்திரனுக்கு அவனுடைய குணங்களுக்கும் கர்மங்களுக்கும் ஒத்ததான அநேக திவ்விய நாமங்களும், ரூபங்களும் இருக்கின்றன. அவைகளை எனக்குத் தெரியும். மற்ற ஜனங்களுக்குத் தெரியாது. இந்தக்குமாரன் உங்களுக்கு மிகுந்த க்ஷேமத்தையுண்டு பண்ணுவான். கோபர்களுக் கும், கோகுலத்திற்கும் ஸந்தோஷத்தை யுண்டுபண்ணு வான். நீங்கள் இவனால் ஸம்ரக்ஷிக்கப்பட்டு ஸகல துக்கங்களையும் (துர்க்கம்) தாண்டப்போகிறீர்கள். கோகுலத்திற்கு அதிபதியான ஓ நந்த! முன்னொருகால் அரசனில்லாத தேசத்தில் திருடர்களால் பீடிக்கப்பட்ட ஸாதுக்கள் இவனால் காப்பாற்றப்பட்டு திருடர்களை ஜயித்தார்கள். எந்த மனிதர்கள் இவனிடத்தில் ப்ரீதி

செய்கிறார்களோ, அவர்களே மஹாபாக்யசாலிகள். விஷ்ணுவை சார்ந்தவர்களுக்கு எப்படி அஸுரர்களுடைய உபத்திரவம் ஏற்படுகிறதில்லையோ, அப்படி இவரிடத்தில் ப்ரீதிசெய்பவர்களுக்கு சத்ருக்களுடைய உபத்திரவ முண்டாகிறதில்லை. ஆனதால் இந்த உம்முடைய குழந்தை காந்தியாலும் கீர்த்தியாலும், மாஹாத்மியத்தாலும், குணங்களாலும் ஸ்ரீமந் நாராயணனுக்குச் சமமானவன். ஸாவதானராக இவனைக் காப்பற்றும்." என்று ஆஜ்ஞாபித்து தமதிருப்பிடஞ் சென்றார். அதனைக்கேட்ட நந்தகோபர் மிகுந்த ஸந்தோஷத்தையடைந்து தாம் எல்லாவற்றையும் அடைந்தவர் என்று நினைத்தார்.

22–33. இப்படி சிலகாலஞ் சென்றபின் ராமன், கிருஷ்ணன் இருவர்களும் கோகுலத்தில் தவழ்ந்து விளையாடினார்கள். சேறாகவிருந்த இடைத்தெருவில் அவ்விரண்டு குழந்தைகளும் இடுப்பில் அணிந்திருக்கும் சலங்கைகள் சப்திக்கும்படி தவழ்ந்து நடந்தார்கள். மேலுமவர்கள் சலங்கை சப்தத்தைக் கேட்டு சந்தோஷத்தையடைந்தார்கள். பின்னுமவர்கள் வீதியில் போய் கொண்டிருப்பவர்கள் பின் இரண்டு மூன்று அடிகள் சென்று பின்பு பயந்தவர்கள் போல தாய்களின் சமீபஞ் சென்றார்கள். இப்படி தேஹத்தில் சேற்றைப் பூசிக் கொண்டு தங்களிடம் வந்த குழந்தைகளை எடுத்துக் கட்டிக்கொண்டு தாய்கள் ஸ்தன்யங் கொடுத்தார்கள். மேலுமவர்கள் குழந்தை பால் குடிக்கும்பொழுது புன்சிரிப்புள்ளதும், ஸ்வல்பமான பற்களுள்ளதுமான குழந்தைகளுடைய அழகான முகத்தைப்பார்த்து ஆனந்தமடைந்தார்கள். சில காலஞ்சென்றபின் அந்த ராம கிருஷ்ணர்கள் இருவர்களும் கன்றுக்குட்டிகளுடைய

வால்களைப் பிடித்துக்கொண்டு அவைகளால் இழுக்கப் பட்டு அதன் வழியே சென்று விளையாடினார்கள், அது பார்ப்பவர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கக் கூடியதாயிருந்தபடியால் கோபிகைகள் வீட்டுவேலை களையும் விட்டு குழந்தைகளின் விளையாட்டைப் பார்த்து சிரித்துக்கொண்டு ஆனந்தமடைந்தார்கள். இப்படி சில காலஞ்சென்றபின், ராமனும் கிருஷ்ணனும் மாடு முதலிய கொம்புள்ளவைகள், அக்னி, சிங்கப் பற்களுள்ள பிராணிகள், கத்தி, ஜலம், பறவை, முள் ஆகிய இவைகளுடன் விளையாட ஆரம்பித்தார்கள். அதனைக்கண்ட ரேவதியும், யசோதையும் குழந்தைகளுக்கு அபாயம் நேரிடுமேயென்று அந்த விளையாட்டைத் தடுப்பதற்கு முயன்றும் தடுக்க முடியவில்லை.

ஆனாலும் குழந்தைகளுக்கு அபாயம் வருமோ என்று பயந்து வீட்டு வேலைகளைச் செய்ய முடியாமல் கவலையடைந்திருந்தார்கள். ஓ ராஜர்ஷியே! இப்படி ஸ்வல்ப காலஞ் சென்றபின் கோகுலத்தில் ராமனும் கிருஷ்ணனும் சிலகாலம் தவழ்ந்தும் (முழங்கால்களால் நடந்தும்) சில ஸமயம் நடந்தும் விளையாடினார்கள். பின்பு கிருஷ்ண பகவான் பலராமனுடன் தம்முடைய தோழர்களான கோபால பாலகர்களுடனும் கோபிகை களுக்கு ஆனந்தத்தை யுண்டு பண்ணிக்கொண்டு விளையாடினார். ஸ்ரீகிருஷ்ணனுடைய அழகான பாலக்ரீடைகளைப் பார்த்து கோபிகைகளெல்லாரும் ஒன்று சேர்ந்து யசோதையை நோக்கி "உம்முடைய புத்திரனாகிய ஸ்ரீ கிருஷ்ணன் மாடு கறப்பதற்கு முன்னமேயே கன்றுக்குட்டிகளை அவிழ்த்துவிடுகிறான்; கன்று அவிழ்த்துவிட்டாயே என்று சொன்னால்

சிரிக்கிறான். திருடுவதற்குடயோகமான உபாயங்களைச் செய்து தயிர்பால்களைத் திருடி அவைகள் ருசியுள்ள தானால் அவைகளைப் புஜிக்கிறான். தான் புஜிக்கும் பொழுது வானரங்களுக்கும் பிரித்துக் கொடுக்கிறான். (மர்க்கமென்ற பாடத்தில் வெண்ணெயை தான் புஜித்து தன் தோழர்களுக்கும் கொடுக்கிறாரென்று தாத்பர்யம்.) அந்த வானரங்களில் ஏதாவதொன்று புஜிக்காவிடில், தயிர் முதலியவை வைத்திருக்கும் சட்டியை உடைக்கிறான். தயிர், பால் முதலியவை களொன்றும் கிடைக்காவிடில் வீட்டு யஜமானன் மீது கோபித்து படுத்திருக்கும் குழந்தைகளை அடித்து அழும்படிசெய்து வெளியே போகிறான்.

தயிர் பால் வைத்திருக்கும் பாத்திரம் கைக்கு எட்டாவிடில் உரல், முக்காலி முதலியவை களைப் போட்டு கைக்கு எட்டும்படியான உபாயத்தைச் செய்கிறான். உரியில் வைத்திருக்கும் பாத்திரங்கள் முதலியவைகளில் கல் முதலியவைகளையெறிந்து த்வாரஞ் செய்கிறான். அந்த உபாயங்கள் உம்முடைய புத்திரனுக்குத் தெரியும், இருட்டானவிடத்தில் வைக்கப்பட்டிருந்தாலும் அவன் அணிந்திருக்கும் ரத்னாபரணங்களால் ப்ரகாசத்தை யுண்டுபண்ணிக் கொண்டு திருடுகிறான். மேலும், அவன் கோபிகைகள் எப்பொழுது வீட்டுவேலைகளில் நோக்கமுள்ளவர் களாகி மற்றதைக் கவனிக்கமுடியாதவர்களாக விருப்பார்களோ அந்த ஸமயம் பார்த்து இம்மாதிரி யான திருட்டுத்தனங்களைச் செய்கிறான். பின்னுமவன், 'அட திருடா' என்று அழைக்கப்பட்டால் நான் திருடனல்ல, நீதான் திருடன்; நான் வீட்டின் யஜமானன்; என்று தைர்யமாகச் சொல்லுகிறான். தேவ

பூஜை முதலிய வைகளுக்காக சுத்தஞ் செய்திருக்கும் ஸ்தலத்தில் மூத்திரம் விடுவது முதலியவைகளைச் செய்கிறான். இப்படி திருட்டுத்தனங்களை செய்து உம்மிடத்தில் ஸாதுபோலவிருக்கிறான்" என்று ஸ்ரீ கிருஷ்ணனுடைய முகத்தைப் பார்த்துக் கொண்டே சொன்னார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் பயந்தவர்போல கண்களை மூடியும் திறந்து கொண்டு மிருந்தார். கோபிகைகளுடைய வார்த்தையைக் கேட்ட யசோதையானவள் சிரித்துக் கொண்டு குழந்தையைக் கண்டிக்க மனமில்லாதவளாகவிருந்தாள்.

பின்பு ஒருகால் கோபிகைகளெல்லோரும் ஸ்ரீ கிருஷ்ணனைத் தடயத்துடன் பிடித்து யசோதைக்குக் காண்பிக்கவேண்டுமென்று பேசிக்கொண்டு ஒவ்வொரு வீட்டிலும் கிருஷ்ணன் தயிர் பால் முதலியவைகளைத் திருடும் ஸமயம் பார்த்து ஸ்ரீ கிருஷ்ணனைக் கிட்டியாக ஒவ்வொருவரும் தனியே பிடித்து யசோதையினிடம் அழைத்து வந்தார்கள். அவ்விடம் வந்தவுடன் கோபிகைகளால் அழைத்து வரப்பட்ட குழந்தைகள் அவரவர்களுடைய குழந்தையாகவிருந்தன. கிருஷ்ணன் யசோதையின் பக்கத்திலிருந்தார். அதனைக் கண்ட கோபிகைகளெல்லோரும் வெட்கமடைந்து தங்கள் தங்கள் வீட்டிற்குச் சென்றார்கள்.

34–44. பின்பு ஒருகால் விளையாடிக் கொண்டிருந்த பலராமன் முதலிய குழந்தைகள் யசோதையினிடம் வந்து "கிருஷ்ணன் மண்ணைத் தின்றான்" என்று சொன்னார்கள். அதனைக்கேட்ட யசோதையானவள் குழந்தைக்கு ஹிதஞ்செய்ய விரும்பி பயத்தால் பரபரப்புள்ள கண்களுடன் விழித்துக்கொண்டிருக்கும்

கிருஷ்ணனைக் கையில் பிடித்து அதட்டி, "ஓ துஷ்ட ஸ்வபாவமுள்ளவனே ஏன் ரஹஸ்யமாக மண்ணைத் தின்றாய்? உன்னுடைய தோழர்களும் சொல்லுகிறார்கள். உன்னுடைய தமையனாகிய ராமனும் சொல்லுகிறான் என்று கேட்டாள். அதனைக் கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் "ஓ அம்ம! நான் மண்ணை பக்ஷிக்கவில்லை; எல்லாரும் பொய் சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்வது உண்மையானால் என்னுடைய வாயை நீ நேரில் பார்க்கலாம்" என்றார்.

அதனைக்கேட்ட யசோதை அப்படியானால் வாயைத் திற என்றாள். அதனைக்கேட்டு குறைவற்ற அணிமா முதலிய ஐச்வர்யங்களுள்ளவரும், விளையாட்டாக மனித சரீரத்தை யெடுத்துக் கொண்டவருமாகிய ஸ்ரீகிருஷ்ணன் வாயைத் திறந்தார். அதில் ஸ்தாவரம், ஜங்கமம் இவைகளடங்கிய ஜகத்தும், அந்தரிக்ஷமும், திக்குகள், பர்வதங்கள், த்வீபங்கள், ஸமுத்திரங்கள் இவைகளடங்கிய பூலோகமும், சந்திரனும், மின்னலும், நக்ஷத்திரங்களும், ஸ்வர்க்கலோகமும், ஜலமும், தேஜஸ்ஸும், வாயுவும், ஆகாயமும், வைகாரி கங்களான இந்திரியங்களும், மனதும், பூத தன்மாத்திரைகளும், ஸத்வம் முதலிய குணங்களும் காணப்பட்டன. மேலும் யசோதை ஜீவன், காலம், ஸ்வபாவம், கர்மம், ஆசயம் ஆகிய இவைகளால் ஏற்படும் ஸ்தாவர ஜங்கம சரீர பேதங்களுள்ள அத்புதமான ஜகத்தையும், கோகுலத்தையும், தன்னையும் (யசோதையையும்) குழந்தையின் வயிற்றில் கண்டாள். பின்னும் அவள் 'இது ஸ்வப்னமோ அல்லது தேவனுடைய மாயையோ அல்லது நம்முடைய புத்தி மோஹந்தானோ அல்லது என் குழந்தையான ஸ்ரீ கிருஷ்ணனுடைய இயற்கையான

ஐச்வர்யமோ' என்று ஸந்தேஹித்தாள். பின்னுமவள் கிருஷ்ணனை ஈச்வரனென்றே நிச்சயித்து "எது சித்தம், மனம், கர்மம், வாக்கு ஆகிய இவைகளால் ஊகிக்க (விதர்க்கிக்க) முடியாததோ, இந்த ஜகத்தானது எதனை ஆச்ரயித்திருக்கிறதோ, எதனால் லோகம் காப்பாற்றப்படுகிறதோ, எதனால் ஜகத் பிரகாசிக்கிறதோ எது இம்மாதிரியானதென்று குறிப்பிட முடியாததோ அந்த பரப்ரஹ்மத்தை நமஸ்கரிக்கிறேன். பின்னும் இந்த நந்தர் என்னுடைய பர்த்தா; இந்த கிருஷ்ணன் என்னுடைய புத்ரன்; கோகுலத்திற்கதிபதியாகிய நந்தனுக்கு நான் பத்னீ; ஸகல ஐச்வர்யங்களுள்ளவள்; இந்த கோபிகைகளும் கோபர்களும் பசுக்களும் என்னைச் சார்ந்தவைகள், என்ற கெட்ட எண்ணமானது எவருடைய மாயையால் உண்டாகிறதோ அவரைச் சரணமடைகிறேன்" என்று சொன்னாள்.

45–47. அப்பொழுது பகவான் தம்முடைய மாயா மஹிமையால் யசோதையின் ஞானத்தை மறைத்து தம்மிடத்தில் முன் போல் புத்திரனென்ற ஆசையை யுண்டுபண்ணினார். அதனால் அவள் முந்திய க்ஷணத்தில் அனுபவித்ததை மறந்து ஸ்ரீ கிருஷ்ணனை மடியில்வைத்து முன்போல் விசேஷ புத்திர ப்ரீதியுள்ளவளாகியிருந்தாள். கர்ம காண்டங்கள் இந்திரன் முதலிய தேவர்களென்றும், உபநிஷத்துகள் ப்ரஹ்மமென்றும், ஸாங்கியர்கள் புருஷனென்றும், யோகிகள் பரமாத்மாவென்றும், பக்தர்கள் பகவானென்றும், எவரை ஸ்தோத்திரஞ் செய்கிறார்களோ அந்த ஸ்ரீ ஹரியை யசோதை தன்னுடைய புத்திரனென்று நினைத்தாள்" என்று சுகர் சொன்னார்.

48–49. அதனைக்கேட்ட அரசன் "ஓ ப்ராஹ்மணோத்தம! நந்தர் இம்மாதிரியான மிகுந்த க்ஷேமத்தை அடைய தகுந்த புண்யம் என்ன செய்தார்? ஸ்ரீ மஹாவிஷ்ணு எவளுடைய ஸ்தன்யத்தைப் பானஞ் செய்தாரோ, அந்த பாக்யசாலியான யசோதையால் என்ன ஸுகிருதஞ் செய்யப்பட்டது? ஸ்ரீ கிருஷ்ணனுடைய கம்பீரமான பால சரிதத்தை இப்பொழுதும் கவிகள் கானஞ்செய்கிறார்கள். அது ஜனங்களுடைய பாபத்தைப் போக்கக்கூடியது. அந்த பகவானுடைய பாலக்ரீடைகளைத் தாய்தகப்பனார்களான வஸுதேவர் தேவகி ஆகிய இவர்களும் அனுபவிக்கக்கூடவில்லை. அப்படிப்பட்ட பகவானுடைய லீலைகளை அனுபவித்த நந்தர் யசோதை இவர்கள் செய்த புண்யமென்ன? அதனைச் சொல்லவேண்டும்" என்றார்.

50–54. அதனைக்கேட்ட சுகர் அரசனை நோக்கி "வஸுக்களுக்குட் சிறந்தவராகிய த்ரோணர் என்பவர் தம்முடைய பத்னியாகிய தரையென்பவளுடன் ப்ரஹ்ம தேவருடைய ஆக்ஞையை (பூமியில் கோபனாக அவதரித்து பசுக்களை ரக்ஷிக்க வேண்டுமென்றதை) சிரஸால் வஹித்து ப்ரஹ்மதேவரை நோக்கி "பூமியில் நாங்கள் ஜனித்தபின் ஜகத்பதியான ஸ்ரீமந் நாராயணனிடத்தில் மிகுந்த பக்தி எங்களுக்கிருக்க வேண்டும்; பகவானிடத்தில் பக்தி செய்வதால் "அக்ஞன் ஸம்ஸாரத்தை நிவர்த்தித்துக் கொள்வான் ஆனதால், அப்படி அனுக்கிரஹிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். ப்ரம்ஹதேவரும் அப்படியே அனுக்ரஹித்தார்; அந்த த்ரோணர் நந்தராக ஜனித்தார்; தரையென்பவள் யசோதையாகப்பிறந்தாள்; அதனால் அந்த தம்பதிகளுக்கு புத்திரனாகிய ஸ்ரீ மஹா

விஷ்ணுவினிடத்தில் மிகுந்த ப்ரியமுண்டாயிற்று; ஸ்ரீ கிருஷ்ணனும் ப்ரஹ்மதேவருடைய ஆக்ஞையை உண்மையாகச் செய்வதற்காக கோகுலத்தில் பலராமனுடன் வஸித்து லீலைகளைச் செய்து கோபர்களையும், கோபிகைகளையும் ஸந்தோஷிக்கச் செய்தார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம் –9.

யசோதை ஸ்ரீ கிருஷ்ணனைக் கட்டியது

நந்தருடைய பத்னியாகிய யசோதை ஒரு ஸமயம் வீட்டிலிருக்கும் வேலைக்காரிகளுக்கு மற்ற வேலையைக் கொடுத்து தான் தயிர் கடைந்தாள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணனுடைய பால்ய லீலைகளை நினைத்து அவைகளையே சொல்லிக்கொண்டிருந்தாள். யசோதை வெண்பட்டையுடுத்திக்கொண்டிருந்தாள். அதன்மேல் ஒட்டியாணம் போடப்பட்டிருந்தது. புத்திரனிட்த்தி லிருக்கும் ஸ்நேஹத்தால் அவளுடைய ஸ்தனங்களிலி ருந்து பால் பெருகியது. மேலும் அவளுடைய சரீரம் அசைந்தது. கயிற்றைப் பிடித்து இழுக்கும் ச்ரமத்தால் கைகளும் அதில் அணிந்திருக்கும் கங்கணங்களும், காதுகளிலிருக்கும் குண்டலங்களும் அசைந்தன. முகத்தில் வியர்வையுண்டாயிற்று. தலை மயிர்கள் அவிழ்ந்து அதிலிருந்து மால புஷ்பங்கள் உதிர்ந்தன.

இப்படி யசோதை தயிர் கடையும்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் ஸ்தன்யம் (பால்) குடிப்பதற்காக யசோதை யின் ஸமீபஞ்சென்று மத்தைப் பிடித்துக்கொண்டு தமக்குப் பால் கொடுக்கும்படி வேண்டிக்கொண்டார். (தயிர்கடைவதைத் தடுத்தார்) அதனால் அவள் பிரியமடைந்தாள். இப்படி மடியில் உட்கார்ந்து பால் குடிக்க விரும்பிய குழந்தையின் புன்சிரிப்புள்ள முகத்தை பார்த்துக்கொண்டே யசோதை புத்திர ப்ரீதி யால் பால் சுரப்புள்ள ஸ்தனத்தை ஸ்ரீகிருஷ்ணனுக்குக் கொடுத்தாள். அப்பொழுது அடுப்பில் காய்ந்து கொண்டிருந்த பால் பொங்கி வழிந்தது. அதனைக் கண்ட

யசோதை ஸ்தன்ய பானஞ் செய்து திருப்தியடையாத குழந்தையைக் கீழே விட்டு ஓடினாள். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் கோபங்கொண்டு சிவந்த உதடுகள் துடிக்க பல்லைக் கடித்து கபடமாக கண் ஜலத்தைப் பெருக்கி அம்மிக் குழவியினால் தயிர்ச்சட்டியை உடைத்து அதிலிருந்த வெண்ணெயை எடுத்துக் கொண்டு வீட்டிற்குள் ஒளிந்துகொண்டார். யசோதை பாலைக்காய்ச்சி இறக்கி வைத்துத் திரும்பவும் தயிர் கடைந்த இடம் வந்தாள். தயிர்ப்பானை உடைந்திருப் பதைப் பார்த்தாள். "இது நம்முடைய குழந்தை செய்த கார்யம்" என்று நிச்சயித்தாள். ஸ்ரீ கிருஷ்ணனும் அவ்விடத்திலில்லை; அதனால் சிரித்தாள்.

பின்பு அவள் ஸ்ரீகிருஷ்ணனைத் தேடிக்கொண்டு உள்ளே சென்றாள். அவ்விடத்தில் ஸ்ரீகிருஷ்ணன் ஒரு உரலின்மீதேறி வெண்ணெயை யெடுத்துப் பூனை முதலியவைகளுக்குக்கொடுத்து தம்முடைய திருட்டை யாரேனும் பார்த்துவிடுவார்களோ என்ற ஸந்தேஹத் தால் அங்கும் இங்கும் பார்த்துக்கொண்டும் சிரித்துக் கொண்டுமிருந்தார். அதனைக்கண்ட யசோதை கையில் தடியை யெடுத்துக்கொண்டு மெள்ள மெள்ள கிருஷ்ணனுக்கு பின் சென்றாள். அவளைக்கண்டு ஸ்ரீகிருஷ்ணன் மிக்க அழுதுகொண்டும் பயந்தவர்போல கலங்கி வேகமாக உரலை விட்டிறங்கி பயந்தவர் போல் ஓடினார். தபஸ் செய்து (பகவானை த்யானித்து) ஈச்வர ஸ்வரூபமாக ஆகிய யோகிகளுடைய மனமும் எந்தப் பகவானை யடையவில்லையோ, அந்த ஸ்ரீ கிருஷ்ணனை யசோதை பின் தொடர்ந்தாள். சிறுத்த இடையுள்ள வளும், பருத்தும், அசைவதுமான பின் பக்கமுள்ளவளு மான யசோதை ஸ்ரீகிருஷ்ணன் பின் ஓட முடியாமல்

மெதுவாகப் போனாள். ஆனாலும் அவள் தலை மயிர்கள் அவிழ்ந்து அதிலிருந்து புஷ்பங்கள் கீழே உதிரும்படி தொடர்ந்து, கிருஷ்ணனைப் பிடித்துக் கொண்டாள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் தாம் குற்றஞ் செய்தவராகையால் மை தீட்டப்பட்டிருந்த கண்களைத் தன் கையினால் கசக்கி அழுது விழித்துக் கொண்டுமிருந்தார். அதனைக் கண்ட யசோதை அவர் கையைப் பிடித்துக்கொண்டு பயங்காட்டி அதட்டினாள். குழந்தையினிடத்தில் மிகுந்த ப்ரியமுள்ள யசோதை புத்திரன் பயந்திருக்கிறான் என்று நினைத்து கையிலி ருந்த தடியையெறிந்து அவருடைய மஹிமையை அறியாதவளாகையால் கயிற்றினால் அவரைக் கட்டி விடுவோம் என்றும் நினைத்தாள்.

எவருக்கு உள், வெளியென்பது இல்லையோ, எவருக்கு முன் பின் என்பதும் இல்லையோ, எவர் ஜகத்திற்கு பூர்வரும்; (முந்தியவரும்) அபரரும் (பிந்தியவரும்) உள்ளும் வெளியாகவும் இருக்கிறாரோ, எவர் ஜகத் ஸ்வரூபியாகவிருக்கிறாரோ, மனித சரீரத்தை யெடுத்துக்கொண்டிருக்கும் அந்தப் பகவானை யசோதை தன்னுடைய புத்திரன் என்று நினைத்து பிராகிருத சிசுவைப்போல் உரலுடன் சேர்த்துக் கட்டினாள். இப்படி குற்றஞ்செய்த ஸ்ரீ கிருஷ்ணனை யசோதை கயிற்றால் கட்டும்பொழுது அந்தக்கயிறு முடிச்சுப் போடுவதற்கு இரண்டு அங்குலம் குறைவாக விருந்தது. அதனைக்கண்ட யசோதை வேறு கயிற்றை அதில் முடிந்தாள். அதுவும் குறைவாகவிருந்தது. பின்னும் இன்னொரு கயிற்றையும் முடிந்தாள். அதுவும் இரண்டு அங்குலம் குறைவாக விருந்தது இப்படி வீட்டிலிருக்கும் கயிறுகளைச் சேர்த்து முடிந்தும்

குறைவாகவேயிருந்தன. அதனைக் கண்ட கோபிகை களும் யசோதையும் மிகுந்த ஆச்சர்யத்தை அடைந்தார் கள். அப்பொழுது யசோதையின் சரீரத்தில் வியர்வை உண்டாயிற்று. தலைமயிர் அவிழ்ந்து புஷ்பங்கள் உதிர்ந்தன. இப்படி தாயார் ச்ரமப்படுவ்தைக் கண்ணுற்ற ஸ்ரீகிருஷ்ணன் அவளிடத்தில் கிருபையால் தாமாகக் கட்டுப்பட்டார். ஸ்ரீ கிருஷ்ணன் ஸ்வதந்திரர். ப்ரஹ்மா முதலிய தேவர்களடங்கிய ஜகத்முழுவதும் அவருக்கு ஸ்வாதீனமாகவிருக்கிறது.

அப்படிப்பட்ட பகவான் தாம் பக்தர்களுக்கு வசப்பட்டவரென்பதை இந்த விஷயத்தில் காண்பித் தார். மோக்ஷத்தைக் கொடுப்பவராகிய பகவானுடைய எந்த பிரஸாதத்தை (அனுக்ரஹத்தை) யசோதை அடைந்தாளோ, அது ப்ரஹ்மதேவருக்குக் கிடைக்க வில்லை. பரமசிவனால் அடையப்படவில்லை. எப்பொழுதும் பகவானுடைய ஸரீரத்தில் வஸிப்பவளான லக்ஷ்மீதேவிக்கும் கிடைக்கவில்லை. யசோதையின் புத்திரனாகிய ஸ்ரீ கிருஷ்ணன் பக்தர்களால் எப்படி எளிதில் அறியப்படுகிறாரோ, அப்படி தேஹாபிமான முள்ள ஸம்ஸாரிகளாலும், ஆத்ம ஸ்வரூபத்தையறிந்த ஞானிகளாலும் அறியப்படுகிறதில்லை. யசோதை ஸ்ரீ கிருஷ்ணனை உரலுடன் சேர்த்துக்கட்டிவிட்டு வேலைகளை பார்த்துக் கொண்டிருந்தாள்.

21–22. குபேரனுடைய புத்திரர்களாகிய நளகூபரன், மணிக்கிரீவன் என்ற இரண்டு குஹ்யகர்களும் நாரதரு டைய சாபத்தால் அர்ஜுன மரங்களாக (மருதை மரம்) முளைத்து சாப விமோசனகாலத்தை எதிர்பார்த்திருந் தார்கள். அவர்களை (அனுக்ரஹிப்பதற்கு) ஸ்ரீகிருஷ்ணன்

பார்த்தார்.

நோட்டு

எவருக்கு உள்– அப்படி ஸகல ஸ்வரூபியாக இருப்பவரை எப்படிக் கட்டமுடியுமென்று கருத்து– அது ப்ரஹ்ம தேவருக்கு; ப்ரஹ்மதேவர் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் புத்திரராகையாலும், பரமசிவன் தாரக ப்ரஹ்மத்தை உபாசிப்பவராகையாலும், ஸ்ரீதேவி பத்தினியாகையாலும் பகவானுடைய பிரஸாதத்திற்குத் தகுதியானவர்கள்; அப்படியும் அவர்களால் பகவானுக்கு நிக்ரஹத்தையாவது அனுக்ரஹத்தையாவது செய்ய முடியவில்லை. பகவானைக் கட்டுவது, பயங்காட்டுவது முதலியவைகளைக் செய்யும்படியான பிரஸாதத்தை யசோதை அடைந்தாள்– முனிபாவ. பார்த்தார்– பகவான் தாம் கட்டுப்பட்டிருந்தாலும் பிறருடைய துக்கத்தை நிவர்த்திப்பதில் நோக்கமுள்ளவரென்று தாத்பர்யம்– முனி.

♣ ♣ ♣ ♣

ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுன மரங்களைப் பூமியில் தள்ளியது

1. அதனைக் கேட்ட அரசன் சுகரை நோக்கி "ஓ பகவன்! இவர்களுக்குச் சாபம் நேர்ந்ததற்கு என்ன காரணம்? எதனால் தேவர்ஷியாகிய நாரதருக்குக் கோபமுண்டாயிற்று? அம்மாதிரியான என்ன துஷ் கிருத்யத்தை குஹ்யகர்கள் செய்தார்கள். அவைகளைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

2–24. அதனைக்கேட்ட சுகர் அரசனை நோக்கி "குபேரனுக்கு நளகூபரன், மணிக்கிரீவனென்று இரண்டு குமாரர்கள். அவர்கள் பரமசிவனுக்கு வேலைக் காரர்களாகவிருந்தார்கள். அதனால் அவர்கள் மிக்க கர்வங்கொண்டு, மதித்து வாருணியென்ற மத்யத்தைக் குடித்து மயக்கமடைந்து அசையும் கண்களுள்ளவர் களாகி கைலாஸ பர்வதத்தின் உத்யான வனத்தில் பின்தொடர்ந்து கானஞ்செய்யும் ஸ்திரீகளுடன் ஸஞ்சரித்தார்கள். மேலும் அவர்கள் தாமரை மலர்களால் பிரகாசிக்கும் கங்கையில் பிரவேசித்து ஸ்திரீகளுடன் சேர்ந்து இரண்டு மத யானைகள் பெண் யானை களுடன் விளையாடினாற் போல க்ரீடித்தார்கள். அப்பொழுது தேவர்ஷியாகிய நாரதர் தைவச் செயலாக அவ்விடம் வந்தார்.

அவ்விடத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் குஹ்யகர்கள் மதங்கொண்டவர்களென்று தெரிந்து கொண்டார், அப்பொழுது வஸ்திரமில்லாதிருந்த

தேவஸ்திரீகள் நாரதரைக்கண்டு வெட்கமடைந்து 'சபிப்பாரோ' என்று பயந்து தங்கள் துங்கள் வஸ்திரங்களையுடுத்திக் கொண்டார்கள். நளகூபரனும், மணிக்ரீவனும் வஸ்திரமுடுத்திக் கொள்ளவில்லை. இப்படி பானத்தாலும், பணத்தாலும் மதித்தவர்களான குஹ்யகர்களை அனுக்ரஹிப்பதற்காக சாபங்கொடுக்க விரும்பி நாரதர் அவர்களை நோக்கி, "ப்ரியகரமான விஷயங்களை அனுபவிக்கும் புருஷனுடைய புத்தியை பணத்தாலுண்டாகும் மதம் எப்படிக் கெடுத்து விடுகிறதோ அப்படி நல்லகுலத்தில் பிறந்திருப்பது, ரஜோ குணத்தின் காரியங்கள் முதலியவைகளாலுண்டாகும் மதம் கெடுக்கிறதில்லை. பணத்தாலுண்டாகிய மதம் இருக்குமானால் ஸ்திரீ சங்கமம், சூதாட்டம், மதுபானம் ஆகிய இவைகளும் அவனிடத்தில் இருக்கும்.

மேலும் பணத்தால் கர்வங் கொண்டவர்கள் இந்தச் சரீரத்தைக் கிழத்தன்மையற்றதென்றும் மரணமற்றதென்றும் நினைத்து, கருணையற்றவர்களாகி, இந்திரியங்கள் போகும் வழியில் சென்று, சரீரத்தைப் போஷிப்பதற்காக, ஜீவஹிம்ஸை செய்கிறார்கள். இந்தச் சரீரம் ஜீவித்திருக்கும்பொழுது, அரசனென்ற பெயருள்ளதானாலும் பசு முதலியவைகளால் பக்ஷிக்கப் பட்டால், அமேத்தியமென்ற பெயரையும் அடைகிறது. அக்னியால் எரிக்கப்பட்டால் சாம்பல் என்ற பெயரடைகிறது; புழுவென்னும் பெயரடைகிறது. (மரணமடைந்த சரீரத்தை அக்கினியில் தஹிக்காவிடினும் நாய் முதலியவைகள் பக்ஷிக்காவிடினும் புழுவாக ஆகிறது.) அப்படிப்பட்ட சரீரத்தை போஷிப்பதற்காக ஜீவஹிம்ஸை செய்பவன் தன்னுடைய

அனுகூலத்தை அறியாதவனாகிறான்; ப்ராணிகளுக்குத் த்ரோகஞ் செய்பவன் நரகத்தை அடைவான். மேலும் சரீரத்தை 'நான்' என்று நினைப்பதும் 'என்னுடையது' என்று நினைப்பதும் உசிதமல்ல. இந்தச் சரீரம் அன்னங் கொடுத்து வளர்த்தவனுக்குச் சொந்தமா? அல்லது பிதாவிற்குச் சொந்தமானதா? அல்லது மாதாவினுடையதோ? மாதாவின் தகப்பனுடையதா? (மாதாமஹர்) விலைக்கு வாங்கினவனுக்கு சொந்தமானதா? ஜயிக்கக்கூடிய பலசாலியினுடையதா? அக்னிக்குச் சொந்தமா? நாய்க்குச் சொந்தமானதா? இப்படி எல்லோருக்கும் இந்தச் சரீரத்தில் பாத்தியமிருக்கிறது. இந்தத் தேஹம் அவ்யக்தத்திலிருந்து (காரணம்) உண்டானது; அதனிடத்திலேயே லயிக்கிறது.

ஆனதால் இப்படிப்பட்ட சரீரத்தைத் தன்னுடையது என்று வித்வான் நினைப்பானா? அதற்காக பிராணிகளை ஹிம்ஸிப்பானா? அப்படி ஹிம்ஸிப்பவன் அஸத்தேயாம். பணத்தால் கர்வங்கொண்ட குருடனுக்கு கண்ணைக் கொடுக்கும் மேலான அஞ்ஜனம் (மை) தாரித்யமேயாகும் (ஏழைத்தனம்) தரித்ரன் ஒருவனே தன்னைப்போல் மற்றவர்களையும் நினைப்பான். முள் தைத்து அதனாலுண்டாகிய உபத்ரவத்தை யறிந்தவன் பிராணிகளெல்லாருக்கும் ஸுகதுக்கங்கள் ஸமமென்று நினைத்து பிறர்க்கு அந்த உபத்திரவமுண்டாகாமலிருக்க வேண்டும் என்று எண்ணுவான் உபத்திரவத்தையடையாத ஸுகஜீவியானவன் பிறருடைய உபத்திரவத்தை யறியான். தரித்ரனுக்கு அஹங்காரமொழியும், மதங்களும் அவனிடமிருக்கிறதில்லை. தைவச் செயலாக சரீரத்தை சேஷிக்கச் செய்வது முதலிய கஷ்டத்தை யடைவான். அதுவே அவனுக்கு மேலான தபஸாகின்றது

எப்பொழுதும் பசியால் இளைத்த சரீரமுள்ளவனும், யார் அன்னங்கொடுப்பார்கள் என்று அன்னத்தை எதிர் பார்ப்பவனுமாகிய தரித்திரனுடைய இந்திரியங்கள் உலர்ந்துபோகின்றன. (பலக்குறைவை அடைகின்றன.) ஆனதால் ஜீவஹிம்ஸை செய்யவேண்டுமென்ற எண்ணம் மாறுகிறது. மேலும் எல்லாவற்றையும் ஸமமாகப்பார்க்கும் ஸாதுக்களுடைய சேர்க்கை தரித்திரனுக்குக் கிடைக்குமேயொழிய, பணக்காரனுக்குக் கிடைக்கிறதில்லை. அந்த ஸாது ஸங்கத்தால் அவனுக்கு ஆசை நிவர்த்தியாகிறது.

பின்பு சுத்தனாகிறான். ஸூர்யனைக் கண்டவுடன் கண்களுக்கு பந்தகமாயிருந்த இருள் விலகுவதுபோல் ஸ்ரீ பகவானுடைய பாதத்தையே விரும்பியவர்களும், எல்லாவற்றையும் ஸமமாகப் பார்ப்பவர்களுமான ஸாதுக்களைத் தர்சிக்கும் வரையில்தான் புருஷனுக்கு பந்தமிருக்குமேயல்லாமல் அதற்குப் பிறகும் பந்தமிருக்கிறதில்லை. ஸாதுக்களால் உபேக்ஷிக்கக் கூடியவர்களும், பணத்தால் கர்வங் கொண்டவர்களும், அஸத்துக்களை ஆச்ரயித்தவர்களுமான துஷ்டர்களால் என்ன பிரயோஜனம்? ஆனதால் மத்யபானஞ் செய்து மதி மயங்கியவர்களும், காமவெறி கொண்டவர்களும், பணத்தால் மதித்தவர்களும், இந்திரியங்களை ஜயிக்காதவர்களுமான இவர்களுடைய (அஜ்ஞானத் தால் உண்டாகிய) மதத்தை நான் போக்கடிக்கிறேன். இவர்கள் குபேரனுடைய புத்திரர்களாக இருந்தும், மதங்கொண்டவர்களாகி தாங்கள் வஸ்திரமில்லாமல் இருப்பதையும் அறியவில்லை. ஆதலால் இவர்கள் விருக்ஷ ஜன்மத்தை அடையவேண்டும். இம்மாதிரியான அஹங்காரம் இவர்களுக்கு இனி நேரிடவேண்டாம்.

இந்த விருக்ஷ ஜன்மத்திலும் என்னுடைய அனுக் கிரஹத்தால் முந்திய ஞாபகம் இவர்களுக்கு இருக்கட்டும். இப்படி நூறு தேவ வர்ஷங்கள் சென்றபின் ஸ்ரீகிருஷ்ண பகவானைத் தர்சித்துத் தங்களுடைய ஸ்வரூபத்தையடைந்து ஸ்வர்க்கத்தையடைவார்கள்" என்று அனுக்கிரஹித்து நாராயணனுடைய ஆச்ரமஞ் சென்றார்.

25–39. அந்த நளகூபரன், மணிக்ரீவன் ஆகிய இருவர்களும் இரண்டு அர்ஜுன விருக்ஷங்களாக முளைத்தார்கள். நாரத மஹர்ஷி பாகவதர்களுக்குட் சிறந்தவராகையால் அவருடைய வார்த்தையை உண்மையாகச் செய்வதற்காக உரலுடன் சேர்த்துக் கட்டப்பட்ட ஸ்ரீகிருஷ்ணன் அந்த மரங்களின் ஸமீபஞ் சென்றார். பின்னும் அந்த ஸ்ரீகிருஷ்ண பகவான் தேவர்ஷியாகிய நாரதர் என்னுடைய பக்தராகையால் அவருடைய வார்த்தையின்படி குபேரனுடைய புத்திரர்களாகிய இவர்களை அனுக்கிரஹிக்கிறேன்'. என்று நினைத்து இரட்டையாக முளைத்திருக்கும் அந்த விருக்ஷங்களின் நடுவில் பிரவேசித்தார். அப்படி கிருஷ்ணன் மரங்களின் மத்தியில் புகுந்தபொழுது உரல் குறுக்காக மாட்டிக்கொண்டது. பால ஸ்வரூபியாகிய பகவான் உரலை இழுக்க சீக்கிரத்தில் மரங்களின் வேர்அறுந்து கிளைகளும், தளிர்களும் அசையும்படி பயங்கரமான சப்தத்துடன் அவ்விரு மரங்களும் கீழே விழுந்தன. அந்த மரங்களிலிருந்து அக்னி கிளம்பியது போல மிக்க தேஜஸ்ஸுள்ளவர் களும், திக்குகளை பிரகாசிக்கச் செய்பவர்களுமாகிய இரண்டு ஸித்தர்கள் தங்களுடைய ஸ்வரூபத்தை யடைந்து வெளிக்கிளம்பினார்கள். மேலும் அவர்கள்

அஞ்ஜலி செய்துகொண்டு ஸகல ஜகத்துக்கும் அதிபதியான ஸ்ரீகிருஷ்ணை பகவானை நமஸ்கரித்து பின்வருமாறு ஸ்தோத்திரஞ் செய்தார்கள். "ஓ கிருஷ்ணை! உம்முடைய மஹிமை அளவற்றது; நீர் எல்லாவற்றிற்கும் காரணராகிய பரமபுருஷன்; ஸ்தூலம், ஸூக்ஷ்மம், ஆகிய இந்த பிரபஞ்சம் முழுவதும் உம்முடைய சரீரமென்று ஆத்மாவின் உண்மையை அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். ஸகல ப்ராணிகளுடைய சரீரம், பிராணன். அஹங்காரம், இந்திரியம் ஆகிய இவைகளுக்கு நீர் ஒருவரே அதிபதி. மேலும் நீர் கால ஸ்வரூபியாகவும், நாசமற்றவராகிய விஷ்ணு ஸ்வரூபியாகவும் இருக்கிறீர். பின்னும் நீரே மஹத் தத்துவமாயுமிருக்கிறீர்.

ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய இவைகளின் ஸ்வரூபமும், ஸூக்ஷ்மமுமான பிரகிருதியும் நீரே. ஸகல சரீரங்களின் விகாரத்தைச் செய்பவரும் நீரே. அவைகளுக்கு யஜமானனான புருஷனும் நீரே. மேலும் இந்திரியங்களுக்குப் புலப்படும் பிரகிருதியின் குணங்களாகிய புத்தி, அஹங்காரம், இந்திரியங்கள் ஆகிய விகாரங்களால் உம்மை அறியமுடியாது. எல்லாவற்றிற்கும் முந்தியதும் ஸித்த வஸ்துவுமான உம்மை குண ஸம்பந்தமுள்ளவனால் அறியமுடியுமா? உம்முடைய ஸன்னிதானத்தால் ப்ரகாசிக்கும் குணங்களால் உம்முடைய மஹிமை மறைக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட வஸுதேவருடைய புத்திரரும்) எல்லாவற்றையும் படைப்பவரும், பகவானும், பிரஹ்மமுமாகிய உமக்கு நமஸ்காரம். பிராணிகளிடத்தில் நீர் அவதரித்தாலும் உண்மையில் உமக்கு சரீரமில்லாமையால் அந்த அவதாரங்களில் உம்மால் செய்யப்படும்

ஒப்புயர்வில்லாத சரிதங்களால் நீர் ஈச்வரரென்று அறியப்படுகிறீர். அப்படிப்பட்ட நீர் இப்பொழுது ஜனங்களுக்கு க்ஷேமத்தையும், மோக்ஷத்தையும் கொடுப்பதற்காக ஸகல பலனையும் கொடுப்பவராக பூர்ணமாகிய அம்சத்துடன் அவதரித்திருக்கிறீர். மேலான க்ஷேம ஸ்வரூபியாக விருப்பவரே! ஜகத்திற்கு மங்களத்தை செய்பவரே! உம்மை நமஸ்கரிக்கிறேன்; வஸுதேவருடைய புத்திரரும், சாந்தரும், யதுக்களுக்கு அதிபதியுமான உமக்கு நமஸ்காரம்; ஓ! அணிமா முதலிய ஐச்வர்யங்களுள்ளவரே! நாரத மஹர்ஷியின் அனுக்கிரஹத்தால் உம்முடைய தர்சனங்கிடைத்தது.

உம்மூடைய வேலைக்காரர்களாகிய (குபேரனுடைய புத்திரர்கள்) எங்களுக்கு விடைகொடும். எங்களுடைய வாக்கானது உம்முடைய குணங்களையே சொல்லட்டும். காதுகள் உம்முடைய கதையையே கேட்கட்டும்; கைகள் உம்மைப்பூஜிக்கட்டும்; மனமானது உம்முடைய பாதங்களை த்யானஞ் செய்யட்டும்; உமக்கு வாஸஸ்தலமாகிய ஜகத்தை எங்களுடைய சிரஸ் நமஸ்கரிக்கட்டும்; உம்முடைய சரீரமாகிய ஸாதுக்களை எங்களுடைய கண்கள் பார்த்துக்கொண்டே இருக்கும்படி அனுக்ரஹிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள்.

40–44. அதனைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ண பகவான் கருணையை ஸ்வபாவமாகக் கொண்ட நாரத மஹர்ஷி சாபங் கொடுத்து உங்களை அனுக்கிரஹித்தது முந்தியே என்னால் அறியப்பட்டதேயாம். ஸமமான சித்தமுள்ளவர்களும், என்னிடத்தில் சித்தத்தைச் செலுத்தியவர்களுமான ஸாதுக்களை தர்சிக்கும் வரையில்தான், புருஷனுக்கு பந்தமிருக்கும். ஸூர்யனை

தர்சித்தபிறகும் இருளிருக்குமா ? ஆனதால் ஓ நளகூபர! மணிக்ரீவ! என்னையே த்யானித்துக் கொண்டு உங்களுடைய லோகத்திற்குப் போகலாம். நீங்கள் கேட்டுக்கொண்டபடி என்னிடத்தில் உங்களுக்கு பக்தியுண்டாயிற்று. இது திரும்பவும் ஜன்மத்தைக் கொடுக்காது" என்று அனுக்கிரஹித்தார். அதனைக் கேட்ட அவ்விருவர்களும் உரலில் கட்டப்பட்டிருக்கும் ஸ்ரீகிருஷ்ணனிடம் விடைபெற்றுப் பலமுறை அவருக்கு ப்ரதக்ஷிண நமஸ்காரங்களைச் செய்து வடக்கு திக்கை நோக்கிச் சென்றார்கள்.

♣ ♣ ♣ ♣

Released by Maran's Dog, Toronto , Canada

அத்தியாயம் –11

ஸ்ரீகிருஷ்ணன் வத்ஸாஸுரனைக் கொன்றது

1–6. ஓ பரீக்ஷித்து மஹாராஜ! நந்தர் முதலிய கோபர்கள் மரங்கள் விழுந்த சப்தத்தைக் கேட்டு இடி விழுந்ததோ என்று பயந்து அவ்விடம் வந்தார்கள். பூமியில் விழுந்திருக்கிற மரங்களைக் கண்டு அவைகள் விழுந்ததற்குக் காரணமென்னதென்று அறியக் கூடியதாயினும் அதனை யறியாமல் மோஹித்தார்கள். மேலுமவர்கள் உரலுடன் சேர்த்துக் கட்டப்பட்டும் உரலை இழுத்துக் கொண்டுமிருக்கிற ஸ்ரீகிருஷ்ணனை யும் கண்டார்கள். "இதென்ன ஆச்சர்யம்; இது யாரால் செய்யப்பட்ட கார்யம். உத்பாதமாக விருக்கிறதே" என்று ஆச்சர்யமடைந்தார்கள். அருகிலிருந்த குழந்தைகள் கோபர்களை நோக்கி "இந்த கிருஷ்ணன் உரலை இழுத்துக்கொண்டு மரங்களின் மத்தியில் பிரவேசித்தான். அப்பொழுது உரல் குறுக்காக மாட்டிக்கொண்டது. அதனை இவன் இழுத்தான்; அதனால் மரங்கள் விழுந்தன. அவ்விரண்டு மரங்களி லிருந்து இரண்டு திவ்ய புருஷர்கள் கிளம்பினார்கள். அவர்களை நாங்கள் நேரில் பார்த்தோம் என்றார்கள். அதனைக்கேட்ட கோபர்கள் "சிறுவனால் பருத்த மரங்களைக் கீழே தள்ளமுடியுமா ?" என்று குழந்தைகளுடைய வார்த்தையை நம்பவில்லை. சிலர் "ஒரு கால் இந்த் கிருஷ்ணனால் செய்யப்பட்டிருக்கலாமோ" என்றும் ஸந்தேஹித்தார்கள். அப்பொழுது நந்தர் உரலுடன் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும் தம்முடைய குழந்தையைக் கண்டு சிரித்த முகத்துடன் கட்டை அவிழ்த்துவிட்டார்.

Released by Maran's Dog, Toronto , Canada

7–9. பின்பு சில ஸமயம் கோபிகைகள் கைகொட்டி பகவானை உத்ஸாஹப்படுத்துகிறார்கள். ஸ்ரீகிருஷ்ணன் லோகத்திய சிறுவன்போல நர்த்தனஞ் செய்கிறார். சில ஸமயம் பாடுகிறார். இப்படி மரத்தால் செய்யப் பட்ட பிரதிமை புருஷனுக்கு வசப்பட்டிருப்பது போல, ஸ்ரீகிருஷ்ணன் கோபிகைகளுக்கு வசப்பட்டிருந்தார். கோபிகைகள" ஓ கிருஷ்ண! பீடத்தை (ஆஸனப் பலகை, முக்காலி முதலிய) கொண்டுவா, மரக்காலை கொண்டுவா; கட்டையை எடுத்துவா" என்று ஆக்ஞாபிக்கிறார்கள். அதனைக் கேட்டு தூக்கிக் கொண்டு வரமுடியாதவர் போல அபினயஞ்செய்து அவைகளைத் தூக்குகிறார். பின்னும் இதைத்தூக்க இவனால் முடியாதென்பதை அறிந்திருக்கும் பந்துக் களுக்குப் பிரியத்தைச் செய்துகொண்டு கையை அசைத்தார். 'பகவானுடைய ஐஸ்வர்யம் இப்படிப் பட்டது' என்று அறிந்திருக்கும் வித்வான்களுக்கு ஈச்வரன் பக்தர்களுக்கு வசப்பட்டவர் என்பதைக் காண்பித்து பாலக்ரீடைகளைகைச் செய்து கோகுல வாசிகளுக்கு ஸந்தோஷத்தை யுண்டு பண்ணினார்.

10–16. ஒருநாள் ஸ்ரீகிருஷ்ணன் கோபிகைகளின் ஸமீபத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்பொழுது தெருவில் 'பழங்களை வாங்குங்கள்' என்று பழம் விற்பவள் கூவினாள். அதைக்கேட்டு எல்லாருக்கும் ஸகல பலத்தையும் கொடுப்பவராகிய ஸ்ரீகிருஷ்ணன் இரண்டு கைகளிலும் தான்யத்தை எடுத்துக்கொண்டு ஓடினார். வெளியில் வந்து 'பழம் விற்பவளே! இவ்விடம் வா, நான் அதிக தான்யத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். இதை உன்னுடைய அளவினால் (படி முதலியவை) அளந்து எடுத்துக்கொண்டு

பழங்களை அளந்து கொடு" என்றார். மஹாத்மா வாகிய அந்தப் பகவானுடைய வார்த்தையைக்கேட்டு பழம்விற்பவள் குட்டி யானைபோல நடந்து வரும், தாமரை மலர் போன்ற கண்களுள்ள பகவானைப் பார்த்து மலர்ந்த கண்களுள்ளவளாகி அவருடைய கையிலிருக்கும் தான்யத்தை கூடையில் போடச் சொல்லி அவருடைய கையை பழங்களால் நிரம்பச் செய்தாள். கூடையைப் பார்த்தாள். கூடை ரத்னங்களால் நிறைந்திருந்தது. ஸகல பலத்தையும் கொடுப்பவரான பகவான் வாங்கின பழங்களெல்லா வற்றையும் கோபஸ்திரீகளுக்குக் கொடுத்து வீதியில் விளையாடிக் கொண்டிருக்கும் ஸ்நேஹிதர்களுடன் சேர்ந்து விளை யாடினார். இம்மாதிரி பலராமனும், ஸ்ரீகிருஷ்ணனும் கோகுலத்தில் எழுந்து, தத்தி, தத்தி நடந்து சில நாட்கள் சென்றபின் எழுந்து நடக்கச் சக்தி யுள்ளவர்களானார்கள்.

12–20. பலராமனும், ஸ்ரீகிருஷ்ணனும் அநேக கோப குமாரர்களுடன் யமுனா தீரஞ்சென்று விளை யாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ரோஹிணீ தேவி அர்ஜுன மரங்களை முறித்த ஸ்ரீகிருஷ்ண னையும் பலராமனையும் அழைத்தாள். அவர்கள் விளையாட்டிலேயே நோக்கமுள்ளவர்களாக விருந்த படியால் வரவில்லை. புத்திரர்களிடத்தில் ப்ரீதியுள்ள வளாகிய ரோஹிணீ தான் கூப்பிட்டும் குழந்தைகள் வராததால் அவர்களை அழைத்து வரும்படி யசோதையை அனுப்பினாள். புத்திரர்களிடத்தில் மிகுந்த ப்ரீதியால் பால்சுரந்த ஸ்தனங்களுள்ள அந்த யசோதை கோப குமாரர்களுடனும், பலராமனுடனும் மிகுந்த வேகமாக விளையாடிக் கொண்டிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணனை

நோக்கி "தாமரை மலர் போனற கண்களுள்ள ஓ கிருஷ்ணை! கிருஷ்ணை! இவ்விடம் வா, பால் குடிக்கலாம்; பசியால் ச்ரமத்தை அடைந்திருக்கிறாய்; (ஆனதால்) சாப்பிடவேண்டும்; விளையாடினது போதும். குலத்திற்கு ஸந்தோஷத்தை யுண்டுபண்ணும் குழந்தாய்! ராம! நீ காலையில் போஜனஞ் செய்தவனல்லவா ? விளையாட்டினால் களைப்படைந் திருக்கிறாய்; உன் தம்பியுடன் சீக்கிரம் வா, ஓ தாசார்ஹ! நந்தகோபர் போஜனஞ் செய்யவேண்டி உன்னையெதிர்பார்கிறார்.

சீக்கிரம் வா; எங்களுக்கு ப்ரியத்தைச்செய்; ஓ கோபகுமாரர்களே! நீங்கள் உங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள்; ஓ கிருஷ்ண! உன்னுடைய சரீரம் புழுதியடைந்திருக்கிறது. புளி போட்டுகாய்ச்சின அரப்பு, தைலம் ஆகிய இவைகளை வைத்துக் கொண்டு வெகுநாழியாக உன்னையெதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீ வெகு நேரமாக விளையாடு கிறாய். ஆனதால் ஸ்நானஞ்செய்; இன்றையதினம் உன்னுடைய ஜன்ம நக்ஷத்திரம் கூடியிருக்கிறது. நீ மங்களஸ்நானஞ்செய்து சுத்தனாய் ப்ராஹ்மணர் களுக்குப் பசுக்களை தானஞ்செய். உன்னுடைய தோழர்களைப்பார். அவரவர்களுடைய தாய்கள், அவர்களுக்கு ஸ்நானஞ் செய்வித்திருக்கிறார்கள். ஆனதால் நீயும் போஜனஞ் செய்து அலங்காரஞ் செய்து கொண்டு விளையாடு" என்று சொல்லி யசோதை லோகநாதனாகிய பகவானைத் தன் புத்திர னென்று நினைத்து மிக்க ப்ரீதியுடன் பலராமனையும் ஸ்ரீகிருஷ்ணனையும் கையில் பிடித்து அழைத்துக் கொண்டு தம்முடைய கிருஹஞ்சென்று மங்கள

ஸ்நானஞ் செய்வித்தாள்.

,21–27. பின்பு ஒரு ஸமயம் நந்தர் முதலிய கோபர்கள் ஒரு கூட்டங்கூடி பிரஹத்வனத்தில் மிகுந்த உத்பாதங்களை அனுபவித்து கோகுலத்தின் நன்மையைப்பற்றி யோஜித்தார்கள். (ஸ்ரீகிருஷ்ணனுக்கு பிருந்தாவனஞ் சென்று விளையாட வேண்டுமென்று ஸங்கல்பமுண்டானதால் ஸ்ரீ கிருஷ்ணனே அந்தர்யாமி யாக கோபர்களைத் தூண்டினாரென்று தாத்பர்யம்). அந்தக் கூட்டத்தில் ஞானத்தால் சிறந்தவரும், வயதில் முதிர்ந்தவரும், தேசம், காலம், கார்யம், ஆகிய இவைகளின் உண்மையை அறிந்தவரும் ,ராமனுக்கும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் அனுகூலத்தைச் செய்பவருமான உபநந்தரென்ற கோபர் மற்றவர்களை நோக்கி "கோகுலத்திற்கு கெடுதல் வரப்போகின்றனவென்று உத்பாதங்களால் தெரியவருகிறது. ஆனதால் கோகுலத்தின் நன்மையை விரும்பிய நாம் எல்லாரும் இவ்விடத்தை விட்டு வேறு ஸ்தலஞ் செல்லவேண்டும். குழந்தைகளைக் கொல்பவளான ராக்ஷஸியினிடமிருந்து இக்குழந்தைக்கு கெடுதி நேராமலிருந்தது மிகவும் பிரயாஸமான கார்யம். வண்டியும் இவன் மீது விழவில்லை. இதெல்லாம் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அனுக்கிரஹமேயாம். மேலும் இந்தக் குழந்தையை சுழல் காற்றின் ஸ்வரூபமாக வந்த அஸுரன் பறவைகள் ஸஞ்சரிக்கும் ஆகாயத்தில் கொண்டு போய் கற்பாறையில் தள்ளினான் அப்படிப்பட்ட குழந்தையை தேவர்கள் காப்பாற்றினார்கள். சிறுவனாகிய இந்த கிருஷ்ணன் பருத்த மரங்களின் நடுவில் சென்றும் பிழைத்தானல்லவா ? அது ஸ்ரீமந் நாராயணனுடைய அனுக்ரஹமேயாம். ஆனதால் இப்பொழுது காணப்

படும் உத்பாதங்களின் பயனாகிய அரிஷ்டம் நேரிடுவதற்கு முன்னமேயே குழந்தைகளை யெடுத்துக் கொண்டு பரிவாரங்களுடன் வேறு இடத்திற்குப் போவோம். பிருந்தாவனமென்ற வனமானது பசுக்களுக்கு ஹிதமானது; கோபர்களாலும், கோபிகைகளாலும் ஸேவிக்கக்கூடியது; அதிலிருக்கும் மலைகளும், திருணங்களும், கொடிகளும் புண்ணியமானவைகள். அவ்விடத்திற்குச்சென்று ஸுகமாக வஸிப்போம். நான் சொல்வது உங்களுக்கும் ஸம்மதமானால் பசுக்கள் முந்தி போகட்டும், வண்டியைக் கட்டுங்கள், தாமஸியாமல் பிருந்தாவனத்திற்கு போவோம்" என்றார்.

30–40. அதனைக்கேட்ட கோபர்களெல்லோரும், ஒரே மனமுள்ளவர்களாகி 'நீர் சொல்வதே உசிதம், என்று ஒப்புக் கொண்டார்கள். பின்னுமவர்கள் தங்கள் தங்கள் வண்டிகளைப் பூட்டி அவைகளில் வயது முதிர்ந்தவர்களையும், சிறுவர்களையும் பணம் முதலிய ஸாமக்ரியைகளையும் ஏற்றிக்கொண்டு வில்லைக் கையிலெடுத்து ஸாவதானர்களாக பிருந்தா வனத்தை நோக்கி புறப்பட்டார்கள். பசுக்கள் முந்தி சென்றன. கொம்புகளும், தூர்ய வாத்யங்களும் முழங்கப்பட்டன. கோபிகைகள் ஸ்தனங்களில் குங்குமங்களை அலங்கரித்துக் கொண்டும், நல்ல வஸ்திரங்களையுடுத்திக் கொண்டும், கழுத்தில் பவுன் மாலை முதலிய ஹாரங்களைதரித்துக் கொண்டும் வண்டிகளில் ஏறிக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனுடைய லீலைகளை கானம் செய்தார்கள். அப்பொழுது யசோதையும், ரோஹிணீயும் ஸ்ரீகிருஷ்ணன், பலராமன் இவர்களுடன் ஒரு வண்டியிலேறிக்கொண்டு ஸ்ரீ

கிருஷ்ணன், ராமன் இவர்களுடைய கதையைக் கேட்டுக்கொண்டே பிருந்தாவனத்திற்குச் சென்றார்கள். இப்படி கோபர்கள் பிருந்தாவனஞ் சென்று வண்டிகளை அர்த்த சந்திரன் போல வட்டமாக நிறுத்திக்கொண்டு வஸித்தார்கள்.அந்த ஸ்தலமானது எல்லா ருதுக்களிலும் ஸுகத்தைக் கொடுக்கக்கூடியது. அவ்விடத்தில் ஸ்ரீ கிருஷ்ணனும் பலராமனும், அந்த வனத்தையும், கோவர்த்தன பர்வதத்தையும், யமுனையின் மணல் திட்டுக்களையும், பார்த்து அதிக ஸந்தோஷத்தை யடைந்தார்கள். இப்படி ஸ்ரீ கிருஷ்ணனுடையவும், பலராமனுடையவும், பால்யக் கிரீடைகளாலும் இனிமையான வார்த்தைகளாலும் (மழலைச்சொல்) கோபர்களும், கோபிகைகளும் ஸந்தோஷத்தை அடைந்தார்கள்.

இப்படிச் சில காலஞ் சென்றபின் ஸ்ரீ கிருஷ்ணனும், ராமனும் கன்றுகளை மேய்க்கும் வயதை அடைந்தார் கள். அப்பொழுது அவர்கள் ஒரு நாள் கோகுலத்திற்கு ஸமீபத்தில் பலவகையான விளையாட்டு ஸாமான்களை யெடுத்துக்கொண்டு கோபர்களுடைய குழந்தைகளுடன் வேணுகானஞ் செய்தார்கள். சில வேளை பில்வக்காய் முதலியவைகளை தூரத்தில் எறிந்து விளையாடினார் கள். மற்றுஞ் சிலவேளை காலில் சலங்கைகளை கட்டிக்கொண்டு கூத்தாடினார்கள். பின்னுமவர் களுக்குள் சிலர் கம்பளம் முதலியவைகளைப் போற்றிக்கொண்டு ரிஷபம் போல கத்தினார்கள். ஒரு ரிஷபத்தின் சப்தத்தைக் கேட்டு மற்ற ரிஷபங்கள் கத்துவதுபோல மற்ற கோப குமாரர்களும் கத்தினார்கள். சிலர் பசுக்களைப் போலவும் விருஷபங்கள் போலவும் வேஷந்தரித்து ஒருவருக்கொருவர் விளையாட்டாக

யுத்தஞ் செய்தார்கள். பின்னும் சகோரம், க்ரௌஞ்சம், சக்ரவாகம், பரத்வாஜம், மயில் முதலிய பக்ஷிகள் கத்தும்பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணர்களும் கத்தினார்கள். புலி, சிங்கம் இவைகள் கர்ஜிக்கும்பொழுது பயந்தவர்கள் போலிருந்து ஸாமான்ய ஜனங்கள் போல ஸஞ்சரித்தார்கள்.

வத்ஸாஸுர வதம்.

43–45. ஒருநாள் ஸ்ரீ கிருஷ்ணனும், பலராமனும் தங்களுடைய ஸ்நேஹிதர்களுடன் யமுனையில் கன்றுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் பொழுது அவர்களைக் கொல்ல வேண்டுமென்ற எண்ணத் துடன் ஒரு அஸுரன் வந்தான். மேலுமவன் கன்று வேடம் பூண்டு கன்றுகளுடன் கன்றாக சேர்ந்து ஸஞ்சரித்தான். அதனையறிந்த ஸ்ரீ கிருஷ்ணன் பலராமனுக்கு மாத்திரம் அவனைக் குறிப்பிட்டுக் காட்டி தாம் அறியாதவர் போல அந்த அஸுரனுடைய ஸமீபஞ்சென்றார். பின்னுமவர் கன்று வேஷங் கொண்ட அஸுரனுடைய பின்னங் கால்களையும், வாலையும் சேர்த்துப்பிடித்து உயிரையிழக்கும்படி சுழற்றி விளா மரத்திலெறிந்தார். அதனாலடிக்கப் பட்டு விளாம்பழங்கள் உதிர்ந்தன. அந்த அஸுரனும் பருத்த சரீரத்துடன் விழுந்தான். அதனைக் கண்ட சிறுவர்கள் ஆச்சர்யப்பட்டு நல்ல கார்யம், நல்ல கார்யம் என்று கொண்டாடினார்கள். (விளாந் தோப்பில் பகவான் எறிந்தாரென்றும் அதனால் அடிக்கப்பட்ட விளாமரங்கள் விழுந்தனவென்றும் சிலர் சொல்வார்கள்.) இந்த வத்ஸரூபியான அஸுரனுடைய வதத்தைக் கண்ணுற்ற தேவர்கள் அதிக ஸந்தோஷத்தை அடைந்து ஸ்ரீ கிருஷ்ணன் மீது

புஷ்பங்களை வர்ஷித்தார்கள். இப்படி ஸ்ரீ கிருஷ்ணனும் பலராமனும் ஸகல லோகங்களையும் காப்பாற்றுபவர்களானாலும் கன்றுகளை மேய்த்துக் கொண்டு காலை ஆஹாரத்தையெடுத்துக்கொண்டு ஸஞ்சரித்தார்கள்.

பகாஸுர வதம்.

46–52. ஒரு ஸமயத்தில் கோபகுமாரர்கள் எல்லாரும் தங்கள் தங்கள் கன்றுகளை தண்ணீர் காட்டுவதற்காக ஒரு குளத்திற்கு ஓட்டிக்கொண்டு போய் தாங்களும் ஜலத்தைப் பானஞ் செய்தார்கள். அவ்விடத்தில் வஜ்ரத்தால் அடிக்கப்பட்டு சிதறின மலையின் சிகரம் போல பருத்த சரீரமுள்ள ஒரு பிராணியைக் கண்டு பயந்தார்கள். அந்தப் பிராணி யாரென்றால், ஒரு அஸுரன் கொக்கு வேஷந்தரித்து, கிருஷ்ணனைக் கொல்ல விரும்பி, அவ்விடத்திலிருந்தான். கூர்மையான மூக்குள்ள அந்த கொக்கு வேஷங்கொண்ட பலசாலி யான அஸுரன் ஸ்ரீகிருஷ்ணனை விழுங்கினான். அதனைக்கண்ட பலராமனைத் தவிர மற்ற சிறுவர்கள் பிராணனை விட்டுப்பிரிந்த இந்திரியங்கள் போல மூர்ச்சையடைந்தார்கள். அந்த பகாஸுரன் (பக: கொக்கு, அதன் வேஷங்கொண்ட அஸுரன்) ஸகல ஜகத்தையும் படைத்தவராகிய ப்ரஹ்ம தேவருக்குத் தந்தையாகிய ஸ்ரீகிருஷ்ணனை முழுங்க முயன்றும் கடைவாய்களிலும், கண்டத்திலும் அக்னி போல் தஹித்ததால் விழுங்க முடியாமல் கக்கினான். பின்னுமவன் யாதொரு கெடுதியையும் அடையாம லிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணனை மூக்கினால் கொத்திக் கொன்று விட நினைத்து அவருடைய ஸமீபஞ் சென்றான் அதனைக்கண்ட ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய

இரண்டு கைகளால் கம்ஸனுடைய தோழனாகிய அந்த அஸுரனுடைய மூக்கைப்பிடித்து சிறுவர்கள் பார்த்திருக்கும்பொழுது வீரணமென்ற திருணத்தைக் கிழிப்பதுபோல் விளையாட்டாகக் கிழித்தார். ஸாதுக்களைக் காப்பாற்றுகிறவராகிய பகவானுடைய அந்தச் சரிதத்தைப் பார்த்து தேவர்கள் ஸந்தோஷித்தார் கள். அப்பொழுது ஸ்வர்க்கத்தில் வஸிப்பவர்களான தேவர்கள் நந்தனவனத்திலுள்ள மல்லிகை முதலிய புஷ்பங்களை வர்ஷித்தார்கள். ஆனகம், சங்கம் முதலிய வாத்யங்களை முழக்கினார்கள். பகாஸுரனைக் கொன்றவராகிய ஸ்ரீகிருஷ்ண பகவானை ஸ்தோத்திரஞ் செய்தார்கள். அதனைக் கண்ட கோபகுமாரர்கள் ஆச்சர்யத்தை அடைந்தார்கள்.

53–59. தனது ஸ்தானத்தையடைந்த பிராணனை இந்திரியங்கள் அடைந்தாற்போல பகாஸுரனுடைய வாயிலிருந்து விடுபட்ட ஸ்ரீ கிருஷ்ணனை ராமன் முதலிய சிறுவர்கள் ஆலிங்கனஞ் செய்து கொண்டு மிகுந்த ஸுகத்தை அடைந்தவர்களாகி கன்றுகளைச் சேர்த்துக் கொண்டு கோகுலஞ்சென்று நடந்த ஸமாசாரத்தைத் தெரிவித்தார்கள். அதனைக்கேட்ட கோபர்களும், கோபிகைகளும் அதிக ஸந்தோஷத்தை அடைந்து, மரித்துப் பிழைத்தவனைப் பார்ப்பது போல ஸ்ரீ கிருஷ்ணனை அன்புடன் பார்த்தார்கள். பின்னும் நந்தர் முதலிய கோபர்கள் "ஆச்சர்யம்; இந்தச் சிறுவனுக்குப் பல கெடுதிகள் நேர்ந்தன; ஆனாலும் இவன் அவைகளால் ஆபத்தை அடையாமல் பிழைத்தான். இவனைக் கொல்ல விரும்பிய அஸுரர்கள் ஏற்கனவே பிறருக்கு உபத்திரவத்தைச் செய்தவர்களான தால் அக்னியில் விழுந்த வெட்டுப் பூச்சிகள் போல

மரணமடைந்தார்கள். அவர்கள் குரூரமான பார்வை யுள்ளவர்களானாலும் இந்தக் குழந்தைக்குப் பயத்தைச் செய்ய அவர்களால் முடியவில்லை. ஆச்சர்யம்; வேதத்தை அறிந்தவர்களுடைய வார்த்தை ஒருபோதும் பொய்யா கிறதில்லை. கர்க்க மஹர்ஷி எப்படிச் சொன்னாரோ அவ்விதமே நடந்தது" என்று ஸ்ரீ கிருஷ்ணன் ராமன் இவர்களுடைய கதைகளையே சொல்லிக்கொண்டு ஸம்ஸார துக்கமின்றி ஆனந்தமாக காலத்தை கழித்தார்கள். கண்ணைப் பொற்றிக்கொள்வது, கரைகட்டுவது, குரங்குகள் போலத் தாவுவது முதலிய விளையாட்டுகளைச் செய்துகொண்டு கௌமார வயதைக் (ஐந்து வயதை) கழித்தார்கள்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–12.

அகாஸுரவதம்.

ஒருநாள் ஸ்ரீ கிருஷ்ணன் காலையில் எழுந்து இன்றைய தினம் வனத்தில் போஜனஞ் செய்ய வேண்டும், என்று நினைத்து ஸ்நேஹிதர்களான கன்று மேய்க்கும் மற்ற கோப குமாரர்களுக்குத் தெரிவிப்பதற்காக கொம்பை ஊதி தம்முடைய கன்றுகளை முன்னிட்டு கோகுலத்திலிருந்து வெளியில் புறப்பட்டார். அந்த அழகான கொம்பு சப்தத்தைக்கேட்டு (ஆயிரக்கணக்கான கோப குமாரர்களும் வெண்ணெய் உள்ள தயிரன்னம், எண்ணெய் உள்ள புளியன்னம் முதலியவைகளை உரியில் வைத்தெடுத்துக் கொண்டும், பிரம்பு, கொம்பு வாத்தியம், புல்லாங் குழல் ஆகிய இவைகளையெடுத்துக் கொண்டும், ஆயிரத்திற்கு அதிகங்களான தங்கள் தங்கள் கன்றுகளை முன்னிட்டுக் கொண்டும், கிருஷ்ணனுடன் ஸந்தோஷமாக புறப்பட்டார்கள்.

மேலுமவர்கள் வனஞ்சென்று தங்கள் தங்கள் கன்றுகளை கணக்கிட முடியாத கிருஷ்ணன் கன்றுகளுடன் சேர்த்துவிட்டு அந்த அந்த இடங்களில் குழந்தைகள் விளையாடுகிற வண்ணம் விளையாடினார்கள். எப்படியெனில் அந்தச் சிறுவர்களுக்கு அவர்களுடைய தாய்கள் காசம் (காக்காப்பொன்) குந்து மணி, தங்கம், ஆகிய இவைகளால் அலங்காரஞ் செய்திருந்தும், அவர்கள் பழம், தளிர், பூங்கொத்து புஷ்பம், மயில் தோகைகள், ஆகிய இவைகளால் அலங்காரஞ் செய்து கொண்டார்கள். அவர்களில்

ஒருவனுடைய உரி முதலியவைகளை மற்றொருவன் திருடுவதும், கண்டுபிடிக்கப்பட்டால் ஸமீபத்தில் அவைகளைப் போடுவதும், கண்டு பிடிக்காவிடில் ஸாமான் யாருடையதோ, அவர்களைப் பார்த்து சிரித்துக்கொண்டு மறுபடியும் திருப்பிக் கொடுத்து விடுவதுமாக விளையாடினார்கள். ஸ்ரீகிருஷ்ணன் வனத்தைப் பார்ப்பதற்காக வெகுதூரஞ் சென்றால் அப்பொழுது அந்தச் சிறுவர்கள் நான் முன்னே நான் முன்னேயென்று சொல்லிக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனிடஞ் சென்று (அவரைத்தொட்டு) விளையாடினார்கள்.

பின்னும் அந்தச் சிறுவர்களில் சிலர் புல்லாங் குழலை ஊதினார்கள். மற்றுஞ் சிலர் கொம்பு வாத்யங்களை முழக்கினார்கள். சிலர் வண்டுகள் சப்திக்கும் பொழுது தாங்களும் அவைகளுடன் பாடினார்கள். சிலர் குயில்கள் கத்தும் பொழுது தாங்களும் அவைகள்போல கத்தினார்கள். சிலர் பறவைகளுடைய நிழலுடன் ஓடுகிறார்கள். சிலர் ஹம்ஸங்களுடன் நடந்தார்கள். சிலர் கொக்குகளுடன் தாங்களும் அசையாமல் உட்கார்ந்திருந்தார்கள். சிலர் மயில்கள் கூத்தாடும்பொழுது நர்த்தனஞ் செய்தார்கள். சிலர் மரத்தின் கிளைகளில் தொங்குகின்ற குரங்குகளுடைய வாலைப்பிடித்து இழுத்தார்கள். சிலர் அதை விடாமலேயே மரத்திலேறினார்கள். சிலர் அந்தக் குரங்குகளுடன் பல்லைக்காட்டுவது முதலிய விகாரங்களைச் செய்தார்கள். சிலர் குரங்குகள் தாவும்பொழுது ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்கு தாவினார்கள். சிலர் தவளைகள் தத்தும் பொழுது தாங்களும் தத்தினார்கள். சிலர் நதிகளில் நீந்தினார்கள். சிலர் ஜலத்தில் தோன்றும் பிரதி

பிம்பத்தைப்பார்த்து சிரித்தார்கள். சிலர் எதிரொலியைக் கேட்டு திட்டினார்கள். அந்தச்சிறுவர்கள் புண்யத்தை குவியல் குவியலாகச் செய்தவர்களாகையால் ஸ்ரீ கிருஷ்ணனுடன் சேர்ந்து மேற்சொல்லியபடி விளையாடினார்கள். அந்த ஸ்ரீ கிருஷ்ணன் வித்வான் களுக்கு ப்ரஹ்மமாகவும், ஸுகமாகவும், அனுபவமாகவும் இருப்பவர்; பக்தர்களுக்கு முக்ய தைவமாக விருப்பவர்; மாயைக்கு வசப்பட்ட ஸம்ஸாரிகளுக்கு மானிடக் குழந்தையாகத் தோன்றுகிறவர்; (ப்ரம்ஹத்தை அறிந்தவர்களுக்கு அனுபவகாலத்தில் மாத்திரம் பகவானுடைய தர்சனம் கிடைக்கிறது. பக்தர்கள் பகவானை விசேஷ கௌரவத்துடன் பூஜிக்கிறார்கள். இந்த கோபகுமாரர்கள் கிருஷ்ணனைத் தோழனாக நினைத்து விளையாடினார்கள். அதனால் அவர்களுடைய பாக்கியம் மேலானதென்று கருத்து). அநேக ஜன்மங் களில் கஷ்டப்பட்டு பகவானிடத்தில் மனதைச் செலுத்திய யோகிகளுக்கும் எவருடைய பாத தூளி கிடைக்கவில்லையோ, அந்த ஸ்ரீ கிருஷ்ணனை எப்பொழுதும் நேரில் பார்க்கும் கோகுலவாஸிகளுடைய பாக்கியத்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா ?

13–18. அந்த அகனென்ற அஸுரன் இச் சிறுவர்களின் விளையாட்டைப் பார்த்து ஸஹியாமல் அவர்களின் ஸமீபஞ்சென்றான். அமிருதபானஞ்செய்த தேவர்களும் எந்த அஸுரனிடம் பயந்து, 'இவன் எப்பொழுது மரணமடைவான்' என்று அவனுடைய நாசத்தை தங்களுடைய ஸௌக்யத்திற்காக எதிர் பார்த்திருக்கிறார்களோ, பூதனை, பகன் இவர்களுக்குத் தம்பியும், கம்ஸனால் அனுப்பப்பட்டவனுமான அந்த அகன் என்பவன் கிருஷ்ணன் முதலிய சிறுவர்களைப்

பார்த்து "இந்த கிருஷ்ணன் நம்முடைய் ஸஹோதரர்களைக் கொன்றவன்; அவ்விருவர்களையும் வதஞ்செய்ததற்குப் பதிலாக இந்த கிருஷ்ணனையும் ராமனையும் கொன்றுவிடுகிறேன். இவ்விருவர்களையும் என்னுடைய ஸஹோதரர்களுக்கு எள்ளுந் ஜலமுமாகச் செய்தால் (மரித்தவர்களுக்குத் தர்ப்பணத்தால் திருப்தியுண்டாவது போல பூதனைக்கும் பகனுக்கும் இவர்களைக் கொல்வதால் திருப்தியுண்டாகுமென்பது கருத்து) கோகுலத்தில் வஸிப்பவர்கள் மரணமடைந்த வர்களுக்குச் சமமானவர்களேயாம். லோகத்தில் பிராணிகள் குழந்தைகளைத் தங்களுடைய பிராணனாக நினைத்திருக்கிறார்களல்லவா ? பிராணன் போய் விட்டால் சரீரம் ஜீவிக்குமா ? ஆனதால் கிருஷ்ணனை வதஞ்செய்வதால் மற்றவர்களும் மரணமடைவார்கள்" என்று நிச்சயித்து ஒரு மலைப் பாம்பின் உருவந் தரித்து அந்தச் சிறுவர்களை விழுங்க வேண்டுமென்ற ஆசையுடன் வழியில் படுத்திருந்தான். அவனுடைய சரீரம் பத்துமைல் தூரம் பரவியிருக்கும் ஒரு மலை போல் பருத்திருந்தது. அவனுடைய வாயானது குஹை போல் அகலமாயிருந்தது. அவனுடைய கீழ் உதடானது பூமியிலும், மேலுதடு மேகத்திலும் இருந்தன. மேலும் அவன் வாயின் உட்புரம் குஹை போலவும் இருளடைந்தும், சிங்கப் பற்கள் மலையின் சிகரம்போல நாக்கு வழி போல நீண்டதாயும், மூச்சு உக்கிரமாயும், கண்கள் காட்டுத்தீ போலவுமிருந்தன. இப்படி அத்புதமாகவிருக்கும் அந்தப் பாம்பின் சரீரத்தைக்கண்ட சிறுவர்கள் இது பிருந்தாவனத்தின் அழகு என மலைப் பாம்பு வாயைத்திறந்து கொண்டி ருந்தாற் போலிருக்கிறதென்று உத்ப்ரேக்ஷித்தார்கள்.

19–35. எப்படியெனில் "ஓ நண்பர்களே! ஆச்சர்யம்! நமக்கு எதிரிலிருக்கும் இது ஒரு பிராணி போலும், நம்மை விழுங்குவதற்காக வாயைத்திறந்து கொண்டிருக்கும் பாம்பு போலுமிருக்கிறதல்லவா இதனைப்பார்த்துச் சொல்லுங்கள். ஸூர்யனுடைய கிரணத்தால் சிவந்த மேகமானது மேலுதடுபோலத் தோன்றுகிறது அந்த மேகத்தின் ஒளியால் சிவந்த பூமியானது கீழுதடுபோலத் தோன்றுகிறது. இரண்டு பக்கங்களிலுமிருக்கும் மலையின் குஹைகள் கடை வாய்கள் போலவும், மலையின் சிகரங்கள் சிங்கப் பற்கள் போலவும் தோன்றுகின்றன. நீண்ட வழியானது நாக்குபோலும், காட்டுத்தீயுடன் கூடிய காற்றானது ச்வாஸம் போலவும், காட்டுத் தீயினாலெறிக்கப்பட்ட பிராணிகளின் நாற்றம் உள்ளிருக்கும் மாம்ஸத்தின் நாற்றம் போலவும் தோன்றுகிறதல்லவா? ஆனதால் இது நம்மெல்லோரையும் விழுங்கி விடுமோ, அப்படி விழுங்குமானால் பகாஸுரனைப் போல் ஸ்ரீ கிருஷ்ணன் இதனையும் ஒரு க்ஷணத்தில் நாசஞ்செய்துவிடுவார்" என்று பேசிக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனுடைய முகத்தைப்பார்த்துச் சிரித்து கைகொட்டிக்கொண்டு அதனுட் சென்றார்கள். அப்பொழுது அதனுடைய உண்மையைறியாமல் பேசிக் கொண்டிருக்கும் சிறுவர்களுடைய வார்த்தைகளைக் கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் தாம் ஸகல ஜனங்களுடைய ஹிருதயத்தில் வஸிப்பவராகையால் உண்மையில் அஸுரன் பாம்பின் உருவங்கொண்டு படுத்திருக்கிறான்; சிறுவர்கள் அதையறியாமல் பாம்பு போலிருக்கிறதென்று சொல்லுகிறார்கள்" என்பதைத் தெரிந்து கொண்டு அவர்களை அதன்வாயில் பிரவேசிக்காமலிருக்கும்படித் தடுக்க வேண்டுமென்று நினைத்தார். அதற்குள் அந்தச்

சிறுவர்கள் கன்றுகளுடன் அஸுரனுடைய வாயில் ப்ரவேசித்தார்கள். ஆனால் அந்த அஸுரன் தன்னுடைய பந்துக்களுடைய வதத்தை மனத்தில் நினைத்து கிருஷ்ணனுடைய வரவை யெதிர்பார்த்திருந்தான். அதனால் வாயை மூடவில்லை. அதனால் சிறுவர்களையும் விழுங்கவில்லை.

அப்பொழுது எல்லோருக்கும் அபயத்தைக் கொடுப்பவரான ஸ்ரீ கிருஷ்ணன் தம்மையே கதியாக நினைத்தவர்களும், தம்முடைய கையிலிருந்து நழுவினவர்களும், தீனர்களும், மிருத்யு போன்ற அஸுரனுடைய வயிற்றிலிருந்து அக்னியால் எரிக்கப் படப் போகிறவர்களுமான சிறுவர்களைப்பார்த்து இது தைவச்செயலாக ஏற்பட்டதென்று ஆச்சர்ய மடைந்தார். மேலும் எல்லாவற்றையும் அறிந்தவராகிய அந்த கிருஷ்ணன் ஸாதுக்களாகிய சிறுவர்களை நாசஞ்செய்து தான் ஜீவித்திருக்க வேண்டும் என்ற அஸுரனுடைய எண்ணம் நிறைவேறாமலிருப்பதற்கு என்ன உபாயஞ் செய்யலாமென்று யோசித்துத் தாமும் அஸுரன்வாயில் ப்ரவேசித்தார். அப்பொழுது மேகத்தில் மறைந்திருந்த தேவர்கள் பயந்து ஹா!ஹா! என்று கதறினார்கள். அகாஸுரனுடைய பந்துக்களான கம்ஸன் முதலிய ராக்ஷஸர்கள் ஸந்தோஷித்தார்கள். அந்த அஸுரன் ஸ்ரீ கிருஷ்ணனையும் சிறுவர்களையும், கன்றுகளையும் பொடியாக்க வேண்டுமென்று நினைத்திருந்தான். அவனுடைய தொண்டையிலிருந்து அழிவற்றவரான ஸ்ரீ கிருஷ்ணன் தேவர்கள் துக்கிப்பதையும், ராக்ஷஸர்கள் ஸந்தோஷிப்பதையும் கேட்டுத் தம்முடைய சரீரத்தை விருத்தி செய்தார். (பருத்தாரென்று கருத்து). பின்பு ஸ்ரீ கிருஷ்ணனுடைய

சரீரம் பருத்து அஸுரனுடைய தொண்டையை அடைத்துக்கொண்டதனால் பருத்த சரீரமுள்ள அந்த அஸுரனுடைய ப்ராணன் அவனுடைய சரீரத்திற்குள் அங்குமிங்கும் அலைந்து வெளியில் செல்ல மார்க்க மில்லாமல் அவனுடைய சிரஸ்ஸை (ப்ரஹ்மரந்திரம்) பேதித்து வெளியில் சென்றது. அவனுடைய கண்கள் வெளியில் பிதுங்கின. பின்னும் அவனுடைய இந்த்ரியங்கள் யாவும் அந்த ப்ராணனுடன் வெளியே சென்றன. (அஸுரன் மரணமடைந்தானென்று கருத்து)

அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் மரணமடைந்த தம் தோழர்களையும், கன்றுகளையும் தம்முடைய அமிருத திருஷ்டியால் (பார்வையால்) பிழைக்கச் செய்து அவர்களுடன் அந்தப் பாம்பின் வாயிலிருந்து வெளிப் பட்டார். அந்த ஸமயத்தில அந்த ஸர்ப்பத்தின் பருத்த சரீரத்திலிருந்து ஒரு தேஜஸ்ஸானது ஆகாயத்தில் கிளம்பி கிருஷ்ணன் எப்போது வெளியில் வருவார் என்று காத்திருந்தது. அதனுடைய காந்தியால் பத்து திக்குகளும் பிரகாசித்தன. பின்னும் அந்த தேஜஸ் ஸ்ரீ கிருஷ்ணன் வெளிவந்தவுடன் ஸகல தேவர்களும் பார்த்திருக்க கிருஷ்ணனிடத்தில் ப்ரவேசித்தது. அதனைக்கண்ட தேவர்கள் ஸந்தோஷித்தார்கள். மிகவும் ஸந்தோஷித்து தங்களுடைய கார்யத்தை (அஸுரவதம்) செய்தவரான ஸ்ரீ கிருஷ்ணன் மீது புஷ்பமாரி பெய்தார்கள். அப்ஸரஸ்ஸுகள் நர்த்தனஞ் செய்தார்கள். கந்தர்வர்கள் கானஞ்செய்தார்கள். வித்யாதரர்கள் வாத்யங்களை முழங்கினார்கள். வேலைக்காரர்கள் "ஜய" என்று சொன்னார்கள். இப்படியெல்லோரும் கிருஷ்ணனைப் பூஜித்தார்கள். ப்ரஹ்மதேவர் அத்புதமான ஸ்துதி, வாத்யம், கானம்,

ஜய என்ற சப்தம் முதலிய அநேக மங்கள சப்தத்தை தம்முடைய லோகத்திற்கருகில் கேட்டு, சீக்கிரமாக வந்து ஸ்ரீகிருஷ்ணனுடைய மஹிமையைப் பார்த்து ஆச்சர்யத்தை அடைந்தார்.

36–44. ஓ பரீக்ஷித்து அரசனே! பின்பு பிருந்தா வனத்தில் அந்த ஸர்ப்பத்தின் சரீரம் உலர்ந்து வெகு நாள் சிறுவர்கள் விளையாடும் குஹையாகவிருந்தது. இப்படி ஸ்ரீகிருஷ்ணன் கௌமாரமாகிய ஐந்தாவது வயதில் அஸுரனிடத்திலிருந்து சிறுவர்களுக்கு நேர்ந்த ஆபத்தை நிவர்த்தித்தார். அந்த அஸுரனையும் ஸம்ஸார பந்தத்திலிருந்து நிவர்த்தியடையும்படிச் செய்தார். இந்த ஸமாசாரத்தை அந்தச் சிறுவர்கள் ஆறாவது வயதில் இன்றைய தினந்தான் நடந்ததென்று கோபர்களுக்குச் சொன்னார்கள். மாயையால் மானிடக் குழந்தையாக அவதரித்திருக்கும் ஸ்ரீகிருஷ்ணன் கார்ய காரணங்களை விட வேறு ஆனதாலும், ஜகத்தைப் படைப்பவரானதாலும், அவருடைய சரீர ஸ்பர்சத்தால் அகாஸுரன் பாபங்கள் நீங்கி சுத்தனானான். மேலும் வன் துஷ்டர்களால் அடையமுடியாத ஸாரூப்யத்தை அடைந்தான். பகவான் இப்படிச் செய்தது ஆச்சர்யமல்ல; மேலும் எந்தப் பகவானுடைய திவ்ய சரீரத்தின் ப்ரதிமையை மனத்தால் த்யானிப்பதால் ப்ரஹ்லாதர் முதலியவர்கள் பரம பாகவதர்களானார் களோ, அந்தப் பகவானே நேரில் அஸுரனுக்குட் புகுந்ததால் அஸுரன் மோக்ஷத்தையடைந்தானென்பது என்ன ஆச்சர்யம். அந்த ஸ்ரீகிருஷ்ணன் எல்லாவற்றிற் கும் மேலானவர்; நித்யமான ஆத்மஸுகானுபவத்தால் மாயையை விலக்கினவர்" என்று சொன்னார். அதனைக்கேட்ட பரீக்ஷித்து மஹாராஜன் தமக்கு

நாதராகிய ஸ்ரீ கிருஷ்ணனுடைய அத்புதமான சரித்திரத்தைக் கேட்க ஆவலுள்ளவராகி சுகரை நோக்கி பின்வருமாறு கேட்கலானார். "ஓ ப்ராஹ்ம ணோத்தம! கௌமாரத்தில் (ஐந்தாவது வயதில்) நடந்த கிருஷ்ண சரிதத்தை கோபகுமாரர்கள் பௌகண்டத்தில் (ஆறாவது வயதில்) நடந்ததாகக் கோகுல வாஸிகளுக்குச் சொன்னார்களென்று சொன்னீரல்லவா? அதெப்படி பொருந்தும்? வெகு நாளைக்கு முன் நடந்த ஸமாசாரம் அப்பொழுது நடந்ததென்று எப்படி நினைக்கப்படும்? ஓ மஹா யோகியே! குருவே! அதனைத் தெரிந்து கொள்ள மிகவும் ஆசைப்படுகிறேன். அதனைச் சொல்ல வேண்டும்; இது பகவானுடைய மாயையாக விருக்க வேண்டுமேயொழிய வேறில்லை. ஓ குருவே! நான் க்ஷத்திரியனானாலும் உம்முடைய முகமாக அடிக்கடி ஸ்ரீகிருஷ்ண கதையாகிய அமிருதத்தைப் பானஞ் செய்வதால் (கதையைக் கேட்பதால்) மிகவும் தன்யனாகிறேன் (க்ருதார்த்தன்)" என்று கேட்டார். ஓ பாகவதோத்தமர்களுக்குட சிறந்த சௌனகரே! மேற்காட்டியபடியுள்ள பரீக்ஷித்தின் வார்த்தையைக் கேட்ட சுகர் பகவானை த்யானஞ்செய்து அதனால் பரவசங்களான இந்திரியங்களுள்ளவராகி திரும்பவும் ச்ரமப்பட்டு வெளிப்பார்வையை அடைந்து அரசனை நோக்கி விடை சொல்லலானார் என்று ஸூதர் சொன்னார்.

நோட்டு.

கௌமாரம்– ஐந்து வயது வரையில் கௌமார மெனப்படும். ஆறாவது வயது முதல் பத்துவயது வரையில் பௌகண்டமெனப்படுகிறது. அதன்பின்

பதினைந்து வயது வரையில் கிசோரமெனப்படும். அதன்மேல் யௌவனம்.

அத்தியாயம்–13

பிரஹ்மதேவர் கன்றுகளை அபகரித்தது.

1–3. அதனைக் கேட்ட சுகர் அரசனை நோக்கி 'ஓ மிகுந்த பாக்கியமுள்ளவரே! பாகவதர்களுக்குட் சிறந்தவரே! நல்ல கேள்வியைக் கேட்டீர். ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரித்திரத்தைப் பல தடவை கேட்டிருந்தும் (புதியது போல் செய்கிறீர்). திரும்பவும் கேட்க விரும்புகிறீர். காமுகர்கள் ஸ்த்ரீ விஷயமான வார்த்தையைக் கேட்டுப் பின்னும் அவர்களுடைய சரிதத்தைக் கேட்க எப்படி விரும்புவார்களோ, அது போல பகவானுடைய கதையைக் கேட்பதையே ப்ரயோஜனமாகக் கொண்ட வாக்கு, செவி, மனம் ஆகிய இவைகளுள்ள ஸாதுக்கள் ஒவ்வொரு க்ஷணத்திலும் அச்யுதராகிய (நித்யர்) ஸ்ரீகிருஷ்ண னுடைய சரிதத்தைப் புதியது போல் கேட்க விரும்பு வார்கள். இது ஸாரத்தை அறிந்த ஸாதுக்களுக்கு இயற்கையான குணமேயாம். ஓ மஹாராஜ! ஆசார்யர்கள் அன்புள்ள சிஷ்யனுக்கு ரஹஸ்யமான விஷயத்தையும் உபதேசிப்பார்கள் கவனமாகக் கேளும்: உமக்கு ஸ்ரீ கிருஷ்ண சரிதத்தைக் சொல்லுகிறேன்" என்று சொல்லத் தொடங்கினார்.

4–6. இப்படி ஸ்ரீ கிருஷ்ண பகவான் மிருத்யு போன்ற அகாஸுரனுடைய வாயில் புகுந்த சிறுவர்களை ஸம்ரக்ஷித்து யமுனையின் மணலுக்கு அவர்களை அழைத்துவந்து அவர்களை நோக்கி, "ஓ தோழர்களே! இந்த மணல் திட்டானது மிகவும் அழகாக இருக்கிறது. இது நாம் விளையாடுவதற்குத்

தகுந்த மிருதுவான மணல்களுள்ளது; மேலும், சமீபத்திலுள்ள மடுவில் தாமரைகள் மலர்ந்திருப்ப தால் அவைகளின் வாஸனையை முகர்ந்து மயங்கிய வண்டுகளுடன் பறவைகளும் ஜலத்தில் சப்திக்கின்றன. அதனால் எதிரொலியுண்டாகிறது. அதனால் விருக்ஷங்கள் பிரகாசிக்கின்றன. அதனால் நாமெல் லோரும் இவ்விடத்திலேயே போஜனம் செய்யவேண்டும். பகலில் போஜனஞ்செய்ய வேண்டியகாலம் தவறிவிட்டது. எல்லோரும் பசியால் களைப்படைந்திருக்கிறோம். கன்றுகள் தண்ணீர் குடித்துவிட்டு நமக்கு அருகில் புல் மேய்ந்துகொண்டு மெதுவாக ஸஞ்சரிக்கட்டும்" என்றார்.

7–27. அதனைக் கேட்ட சிறுவர்கள் அப்படியே செய்வோமென்று சொல்லிக் கன்றுகளுக்குத் தண்ணீர் காட்டி, அவைகளைப் புல் தரையில் மேயும்படிச் செய்து, தங்கள் தங்கள் உரிகளை அவிழ்த்து வைத்துக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனுடன் ஸந்தோஷ மாகப் போஜனஞ் செய்தார்கள். இப்படி அந்தச் சிறுவர்கள் மண்டலமாக (வட்டமாக) வரிசை வரிசையாக ஸ்ரீகிருஷ்ணனை நடுவில் வைத்து ஸ்ரீ கிருஷ்ணனுடைய முகத்தைப் பார்த்து ஆனந்த மடைந்து மலர்ந்த கண்களுள்ளவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய வட்டமான பந்தியானது தாமரை மலரின் காயைச் சுற்றிக்கொண்டிருக்கும் இதழ் போலிருந்தது. அவர்களில் சிலர் புஷ்பங்களிலும், சிலர் இலைகளிலும், சிலர் முளைகளிலும், சிலர் பழங்களிலும், சிலர் உரிகளிலும், சிலர் பட்டைகளிலும், சிலர் பாறைகளிலும், அன்னத்தை வைத்துக்கொண்டு போஜனஞ்செய்தார்கள். இப்படி எல்லோரும் போஜனஞ்

செய்யும் பொழுது தங்கள் தங்கள் அன்னத்தின் ருசியைத் தனித்தனியே ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு சிரிக்கிறார்கள். மற்றவர்களைச் சிரிக்கச் செய்கிறார்கள். இப்படி ஸ்ரீ கிருஷ்ணனுடன் சேர்ந்து போஜனஞ் செய்தார்கள். ஸ்ரீகிருஷ்ணன் இடுப்பில் உடுத்திக்கொண்டிருக்கும் வஸ்திரத்திற்கும், வயிற்றிற்கும் நடுவில் வேணு வாத்தியத்தைச் (புல்லாங்குழல்) சொருகிக் கொண்டு இடது கக்ஷத்தில் கொம்பு, பிரம்பு இவைகளை வைத்துக் கொண்டும், இடது கையில் (வெண்ணெய் உள்ள) தயிரன்னத்தையும், அதற்கு உபயோகமான ஊறுகாய்களை விரல்களிலும் வைத்துக்கொண்டு பரிஹாஸமான வார்த்தைகளைப் பேசி தோழர்களை சந்தோஷப்படுத்திக் கொண்டு, தாம் யாகங்களில் ஹவிஸ்ஸைப் புஜிப்பவரானாலும், அந்தச் சிறுவர்களுடைய நடுவிலிருந்து போஜனஞ் செய்து பாலக்கிரீடை செய்தார்.

அதனை ஆகாயத்திலிருந்து தேவர்கள் பார்த்தார் கள். ஓபரீக்ஷித்து மஹாராஜ! இப்படி அந்தச் சிறுவர்களெல்லாரும் ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலேயே மனத்தைச்செலுத்தி போஜனஞ் செய்துகொண்டிருக் கும் ஸமயத்தில் கரையில் மேய்ந்துகொண்டிருந்த கன்றுகள் திருணத்தில்(புல்) ஆசைப்பட்டு வெகுதூரஞ் சென்றன. அப்பொழுது கன்றுகளைக் காணாமல் சிறுவர்கள் பயந்து மனவருத்தமடைந்தார்கள். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் அவர்கள் பயத்தை நிவர்த்தித்து "ஓ தோழர்களே! போஜனத்தை நிறுத்த வேண்டாம். நான் கன்றுகளை இவ்விடம் வரவழைக் கிறேன்" என்று ஸமாதானஞ்செய்து கையில் வைத்திருந்த அன்னக் கபளத்துடன் மலையின் குஹை, கொடிவீடு,

புதர் முதலிய இடங்களில் கன்றுகளைத் தேடிக் கொண்டு ஸஞ்சரித்தார். அப்பொழுது ஓ குரு வம்சத்தை வஹிப்பவரே! தாமரை மலரிலிருந்து பிறந்தவரான ப்ரஹ்மதேவர் ஸ்ரீ கிருஷ்ணன் அகாஸு ரனைக் கொன்றதைப் பார்த்து மிகவும் ஆச்சர்ய மடைந்து, மாயையால் குழந்தை வேஷந் தரித்த பகவானுடைய அழகான மஹிமையைப் பின்னும் பார்க்க விரும்பி, அவருடைய கன்றுகளையும், தோழர்களான சிறுவர்களையும், வேறு இடத்திற்குக் கொண்டு ஒளித்துவைத்துவிட்டுத் தாமும் மறைந்தார். பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் கன்றுகளைத் தேடியும் காணாமல் யமுனையின் மணலுக்கு வந்தார். அவ்விடத்தில் கோபகுமாரர்களுமில்லை; பின்னுமவர் கன்றுகளையும், தோழர்களையும் காணாமல் வனத்தில் நான்கு புறத்திலும் தேடினார்.

எங்கு தேடியும் அவர்களைக் காணாமையால் ஸகல ஜகத்தையும் பார்க்கச் சக்தியுள்ளவராகிய ஸ்ரீகிருஷ்ணன், இது ப்ரஹ்ம தேவரால் செய்யப்பட்ட காரியம் என்று தெரிந்துகொண்டு சீக்கிரமாகத் திரும்பி வந்தார். எல்லாவற்றையும் பார்ப்பவரும், ஈச்வரனு மாகிய ஸ்ரீ கிருஷ்ணன் ப்ரஹ்மதேவருக்கும், சிறுவர் களுடைய தாய்களுக்கும் ஸந்தோஷத்தையுண்டு பண்ணுவதற்காகக் கன்றுகளாகவும், கோப குமாரர்களாகவும் வேஷந்தரித்தார். ஸ்ரீகிருஷ்ணன் மௌனமாக இருந்துவிட்டால் சிறுவர்களைக் காணாமல் கோபிகைகள் துக்கிப்பார்கள். ப்ரஹ்ம தேவரிடமிருந்து சிறுவர்களை வரவழைத்தால் பிரஹ்ம தேவர் மோஹிக்கமாட்டார். இருவர்களையும் ஸந்தோஷிக்கச் செய்ய வேண்டித் தாமே கன்றுகளாகவும்,

கோப குமாரர்களாகவும் ஆனாரென்று கருத்து.) எவ்வளவு கன்றுகள் கோகுலத்திலிருந்து வனத்திற்கு வந்தனவோ, அவ்வளவு கன்றுகளாக ஆனார்; ஒவ்வொரு கன்றுகளுடைய கால் முதலிய அவயவங்களும், சேஷ்டைகளும் எப்படியிருந்தனவோ, அப்படியே இந்தக் கன்றுகளுடைய அவயவம் முதலியவையும் இருந்தன. பின்னும் அந்தப் பகவான் எவ்வளவு சிறுவர்கள் தம்முடன் வந்தார்களோ, அவ்வளவு சிறுவர்களானார். கைகள், கால்கள், கண்கள், ஸ்வபாவம், குணம் பெயர், ஆகிருதி, வயது, சேஷ்டை முதலியவைகளும் கோப குமாரர்களுடையவை போலவே இருந்தன.

மேலும் வஸ்திரம், ஆபரணம், கொம்பு, வாத்தியம் வேணு (புல்லாங்குழல்), புஷ்பத்தின் இதழ், உறி முதலியவைகளும் அவர்களுடையது போலவே இருந்தன. இப்படிப் பகவான் ஸகல ஸ்வரூபியாகப் ப்ரகாசித்ததால், "எல்லா ஜகத்தும் ஸ்ரீ மகாவிஷ்ணு வின் ஸ்வரூபம்" என்ற வாக்கியம் உண்மையாயிற்று, இப்படி ஸகல ஸ்வரூபியாகப் பிரகாசித்த பகவான் தம்முடைய ஸ்வரூபங்களான பசுக்கன்றுகளைச் சிறுவர்களின் உருவங்கொண்ட தாம் தனித்தனியே ஓட்டிக் கொண்டு, அவர்களுடன் விளையாடிக் கொண்டு கோகுலத்தில் ப்ரவேசித்தார். பின்னும் அந்தப் பகவான் அந்த அந்தக் கன்றுகளை அந்த அந்தக் கொட்டிலில் சேரும்படிச் செய்து அந்த அந்தச் சிறுவர்களாக, அவர் அவர்கள் வீட்டில் ப்ரவேசித்தார். அவர் அவர்களுடைய தாய்கள் புல்லாங்குழலினுடைய சப்தத்தைக் கேட்டுப் பரபரப்பாய் எழுந்து வந்து பரப் பிரஹ்மத்தைத் தங்கள் புத்திரர்களென்று நினைத்து,

கைகளால் தழுவி அவர்களிடத்திலிருக்கும் ப்ரீதியால் பால் சுரப்புள்ள ஸ்தனத்தின் பாலைக் கொடுத்தார்கள் (ஸ்தன்யபானஞ் செய்து வைத்தார்கள்). அந்த பாலானது அமிருதம் போல் ருசியுள்ளது; மத்யம் போல் மதத்தைக் கொடுக்கக்கூடியது; ஓ அரசனே! லக்ஷ்மீ பதியாகிய ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய ஸ்வரூபிகளாகிய சிறுவர்களை அந்த அந்தச் ஸமயங் களுக்கேற்ற நியமங்கள் தவறாம லிருக்கும்படியும் அவர் அவர்களுடைய தாய்களால் செய்விக்கப்படும் கைகளால் பிடிப்பது, ஸ்நானம், சந்தனப்பூச்சு, அலங்காரஞ் செய்வது, ரக்ஷை, திலகம், போஜனம் முதலியவைகளை அனுபவிக்கும்படியும், ஸாயங்காலம் வீடுவந்து சேரும்படியும் நடத்தி வந்தார். (கோபிகைகள் தங்களுடைய புத்திரர்களென்றே நினைத்திருந்தார்கள்)

பசுக்களும் கொட்டிலில் "ஹ"ம்" என்ற சப்தத்தைச் செய்து தங்கள் தங்கள் கன்றுகளை அழைக்க, அவைகள் பசுக்களிடஞ் செல்ல, அவை களை அடிக்கடி நக்கிக் கொடுத்துத் தங்கள் மடி யிலிருந்து பெருகும் பாலைக் குடிக்கச் செய்தன. தங்களுடைய கன்றுகளென்றே நினைத்திருந்தன. கோபிகைகளும் சிறுவர்களுருவங்கொண்ட பகவானைத் தங்களுடைய குமாரர்களென்றே நினைத்திருந்தார்கள். ஆனால் பசுக்களுக்குக் கன்றுகளிடத்திலும், கோபிகை களுக்குக் குழந்தைகளிடத்திலும் முந்தியிருந்த பிரீதி யைக்காட்டிலும் அதிக ப்ரீதியுண்டாயிற்று. ஸ்ரீ கிருஷ்ணனும் கோபிகைகளுடைய குமாரர்களாகவே பாவனை செய்துவந்தார். ஆனால் பகவானுக்கு "நான் இவர்களுடைய குமாரன்; இவர்கள் எனக்குத் தாய்கள்" என்ற மோஹம் ஏற்படவில்லை. இதற்கு முன்

கோகுலத்தில் வஸிப்பவர்கள் எல்லோரும் யசோதையின் புத்திரனாகிய ஸ்ரீ க்ருஷ்ணனிடத்தில் தங்கள் தங்கள் புத்திரர்களைக் காட்டிலும் எவ்வளவு அதிக ப்ரீதி வைத்திருந்தார்களோ, அவ்வளவு ப்ரியத்தை இப்பொழுது தங்கள் தங்கள் குமாரர்களிடத்தில் வைத்தார்கள். அதனால் அந்த ஸ்நேகமாகிய கொடியானது ஒரு வருஷகாலம் நாள்தோறும் அளவில்லாமல் விருத்தியடைந்தது. (அன்பு அதிகமாயிற்றென்று தாத்பர்யம்.) இம்மாதிரி ஸ்ரீ கிருஷ்ணன் தாமே கன்றுகளாகவும், அவைகளை மேய்க்கும் சிறுவர்களாகவுமிருந்து தம்மைத்தாமே பரிபாலித்துக்கொண்டு கோகுலத்திலும், வனத்திலும் விளையாடினார்.

28–34. இப்படி பகவான் ஸகல ஸ்வரூபியாக ஒரு வர்ஷகாலம் விளையாடினார். வருஷம் பூர்த்தியாவதற்கு ஐந்து ஆறு நாட்கள் பாக்கியிருக்கும் பொழுது ஒரு நாள் ஸ்ரீ கிருஷ்ணன் பலராமனுடன் கன்றுகளை ஓட்டிக் கொண்டு வனத்திற்குச் சென்றார். அன்றைய தினம் கோவர்த்தனமலையின் சிகரத்தில் புல்மேய்ந்து கொண்டிருந்த பசுக்கள் கோகுலத்திற்கு அருகில் ஸஞ்சரிக்கும் கன்றுகளைக் கண்டன. அவைகளைப் பார்த்தவுடன் அவைகளிடத்திலுள்ள ஸ்நேஹாதிசயத்தால் மெய்மறந்து தங்களை மேய்க்கின்றனை கோபர்களையும், வேலி முதலிய தடைகளையும் தாண்டிக் கழுத்தைச் சுருக்கிக் கொண்டும், முகம், வால் இவைகளைத் தூக்கிக் கொண்டும், ஹூம்ங்காரஞ் செய்துகொண்டும், பால் பெருக்குடன் இரண்டுகால் பிராணிபோல இரண்டு கால்களால் வேகமாகக் கோகுலத்தின் ஸமீபஞ் சென்றன. (விருஷபம் முதலியவைகளும் சென்றனவென்று கருத்து.) அப்படி ஓடிய பசுக்கள் இளங்கன்று

களுள்ளவைகளானாலும், முந்திய கன்றுகளான அவைகளுக்குப் பால் கொடுத்தன. தன்னுடைய உடல்களையும், பாலுள்ள மடியையும் நக்கிக் கொண்டும் இருந்தன. அவைகளை மேய்த்துக் கொண்டிருந்த கோபர்கள் பசுக்களைத் தடுக்க முயன்றும், முயற்சி பயனற்றதாக ஆனதால் வெட்கம், அதிகக் கோபம் ஆகிய இவைகளை அடைந்து, கஷ்டமான வழிகளைத் தாண்டி பசுக்கள் சென்றவிடம் வந்தார்கள். அவ்விடத்தில் மேய்ந்துக் கொண்டிருக்கும் கன்றுகளையும், அவைகளை மேய்க்கும் தங்கள் குமாரர்களையும் கண்டார்கள். அவர்களைப் பார்த்தவுடன் மிகுந்த ப்ரேமையாகிய ஜலத்தில் மூழ்கின மனமுள்ளவர்களாகி, அவர்களிடத்தில் மிகுந்த அன்பு வைத்தவர்களாகி, கோபமில்லாமல் கைகளால் சிறுவர்களைத் தழுவி (ஆலிங்கனஞ் செய்து), உச்சியில் முகர்ந்து பரமானந்தத்தை அடைந்தார்கள்.

இப்படிப் பசுக்கள் கன்றுகளைப் பார்த்தும், கோபர்கள் தங்கள் குமாரர்களை ஆலிங்கனஞ் செய்து கொண்டும் ஆனந்தத்தை அடைந்தார்கள். பின்னும், பசுக்கள் கன்றுகளை விட்டுப்பிரிய மனமில்லாமல் அவைகளை நினைத்துக் கண்ணீரைப் பெருக்கி மிகுந்த சிரமத்துடன் அந்த இடத்தை விட்டு அப்புறஞ் சென்றன, அப்படியே கோபர்களும் சிறுவர்களை விட்டுப்பிரிய மனமில்லாதவர்களாகி, அவர்களை நினைத்துக்கொண்டே கண்ணீரைப் பெருக்கிக் கொண்டும் அப்புறஞ் சென்றார்கள்.

35–57. அதனைக்கண்ட பலராமன் பசுக்கள் ஊட்டுவதை மறந்த கன்றுகளிடத்திலும் அதிகப் ப்ரீதியுள்ள

வையாக இருப்பதையும், கோபர்கள் ஸ்தன்யபானத்தை மறந்தவர்களான குழந்தைகளிடத்திலும் விசேஷ ப்ரியமுள்ளவர்களாக இருப்பதையும் பார்த்து, அதன் காரணத்தை அறியாமல் பின்வருமாறு யோசிக்கலானார்; இதென்ன ஆச்சரியம்? ஸகல ஸ்வரூபியாக இருக்கும் ஸ்ரீ வாஸுதேவரிடத்தில் ஜனங்கள் எப்படி விசேஷ ப்ரீதி செய்கிறார்களோ, அதுபோல் பசுக்களும், கோபர்களும் தங்கள் குழந்தைகளிடத்தில் அதிக ப்ரியம் வைத்திருக்கிறார்கள். இது அபூர்வமாக இருக்கிறது, இதற்கு முன் கோபர்கள் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் விசேஷ ப்ரியமுள்ளவர்களாகவும், தங்கள் குமாரர்களிடம் ஸாமான்ய ப்ரியமுள்ளவர் களாகவும் இருந்தார்களென்று கருத்து) இது தேவர்களால் செய்யப்பட்ட மாயையா? அல்லது மனிதர்களால் செய்யப்பட்ட மாயையா? அல்லது அஸுரர்களால் ப்ரயோகிக்கப்பட்ட மாயையோ! இது எவ்விடமிருந்து வந்தது.

இது என்னையும் மோஹிக்கச் செய்வதால் எனக்கு ப்ரபுவாகிய பகவானுடைய மாயைதானென்று நினைக்கிறேன். மற்றவர்களால் ப்ரயோகிக்கப்படும் மாயையால் என் புத்திக்கு மயக்கமுண்டாகாது? என்று யோசித்து, பலராமன் ஞானக்கண்ணால் பார்க்கும்பொழுது சிறுவர்களும், கன்றுகளும் ஸ்ரீ கிருஷ்ணனாகவே புலப்பட்டன. (இதுவரையில் பல ராமனுக்கும் உண்மை தெரியாது) அப்பொழுது பலராமன் ஸ்ரீகிருஷ்ணனை நோக்கி, "கன்றுகள் மகர் ஷிகளுடைய அம்ஸமுள்ளவைகளென்றும், சிறுவர்கள் தேவர்களுடைய அம்ஸமுள்ளவர்களென்றும் நினைத்திருந்தேன். இப்பொழுது எல்லாம் நீராகவே

தோன்றுகிறீர். ஆனதால் எல்லாம் உம்முடைய ஸ்வரூபமாக எப்படி ஆயிற்று? அதனை நன்றாக சொல்லவேண்டும் என்று கேட்டார். அதனைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணன் நடந்த ஸமாசாரத்தைச் சுருக்கமாக உபதேசித்தார் அதனால் பலராமன் தெரிந்து கொண்டார்.

இப்படி ஸ்ரீகிருஷ்ணன் கன்றுகளாகவும், கோப குமாரர்களாகவும் ஒரு வருஷகாலம் விளையாடினார். அது ப்ரஹ்மதேவருக்கு த்ருடியென்னும் கால அளவாயிற்று. அப்பொழுது ப்ரஹ்மதேவர் கோகுலத் திலிருக்கும் கன்றுகளையும், சிறுவர்களையும் பார்த்துக் கோகுலத்திலுள்ள கன்றுகளும், கோபகுமாரர்களும் என்னுடைய மாயையாகிற படுக்கையில் படுத்திருக்கிறார்கள். இன்னும் எழுந்திருக்கவில்லை. அப்படியிருக்க அவ்வளவு சிறுவர்களும் ஒரு வருஷ காலமாக ஸ்ரீ மஹாவிஷ்ணுவுடன் விளையாடுகிறார் களே, இவர்கள் யாவர்? எங்கிருந்து வந்தவர்கள்?" என்று இந்த வித்தியாசத்தைப்பற்றி யோசித்தும், இவர்கள் பகவத் ஸ்வரூபிகள் என்று தெரிந்துகொள்ள வில்லை; மோஹ மற்றவரும், ஸகல ஜகத்தையும் மோஹிக்கச் செய்பவருமான ஸ்ரீ மஹாவிஷ்ணுவிற்கு, மோஹத்தை யுண்டுபண்ண வேண்டுமென்று ப்ரஹ்ம தேவர் முயன்றும், அப்படிச்செய்ய முடியாமல் போனது மின்றித் தாமே மோஹித்தார், இரவிலுண்டான இருளில் பனியாலுண்டாகும் இருள் எப்படி அடங்குகிறதோ, சூரியன் பிரகாசிக்கும்பொழுது மின்மினிப் பூச்சியின் பிரகாசம் வேறாகயிராமல் அந்தப் பிரகாசத்தில் எப்படி அடங்கியிருக்கிறதோ அப்படி மஹாபுருஷனை மோஹிக்கச் செய்ய முயன்ற ப்ரஹ்ம

தேவருடைய மாயை பயன்படாமல் போனதுமின்றி பிரம்மதேவருக்கே மோஹத்தை யுண்டுபண்ணிற்று. (பகவானுடைய மாயையில் அடங்கிற்று என்று கருத்து) அப்பொழுது கோகுலத்திலிருக்கும் கன்று களையும்; கோபகுமாரர்களையும் பிரஹ்மதேவர் பார்த்தார். அவர்களெல்லோரும் மேகம் போன்ற கருத்த திருமேனியுள்ளவர்களாக இருந்தார்கள்; பீதாம்பரத்தைத் தரித்திருந்தார்கள்; சங்கம், சக்கரம், கதாயுதம், தாமரை, மலர் ஆகிய இவைகளைத் தரித்த நான்கு கைகளுள்ளவர்களாக இருந்தார்கள்.

கிரீடம், குண்டலம், ஹாரம், வனமாலை ஆகிய இவைகளைத் தரித்திருந்தார்கள்; அவர்களுடைய தோள்வளைகள் ஸ்ரீவத்ஸத்தின் காந்தியால் பிரகாசித் திருந்தன பின்னும் அவர்கள் ரத்தின மயங்களான கங்கணங்களையும், மோதிரங்களையும் கையில் அணிந்தவர்களாகவும், முன்ஜன்மத்தில் மிகுந்த புண்ணியஞ்செய்த ஜனங்களால் பக்தியால் ஸமர்ப் பிக்கப்பட்ட மிருதுவான துளசிமாலையால் தலை முதல் கால்வரையில் அலங்கரிக்கபட்டவர்களாகவும் இருந்தார்கள். பின்னும் அவர்கள் சந்திரிகைபோல சுத்தமான சிரிப்புள்ளவர்களாகவும், சிவந்த கடைக் கண் பார்வையுள்ளவர்களாகவும் இருந்ததால் பக்தர்களுடைய மனோரதத்தை ரஜோ குணத்தால் படைப்பவர்களும், ஸத்வ குணத்தால் காப்பாற்றுகிற வர்கள் போலவும் விளங்கினார்கள். இன்னும் பிரஹ்ம தேவர் முதல் ஸ்தம்பம் என்ற சிறிய பூச்சிவரையி லுள்ள ஸ்தாவர ஜங்கமங்களெல்லாம் சரீரமெடுத்துக் கொண்டு நர்த்தனஞ் செய்வது, பாடுகிறது முதலிய பல உபசாரங்களைச் செய்துகொண்டு ஒவ்வொருவரையும்

உபாஸித்துக் கொண்டுமிருந்தன. பின்னும் அணிமா முதலிய ஐச்வர்யங்களும், மாயை முதலிய சக்திகளும் மஹத் முதலிய இருபத்து நான்கு தத்வங்களும் அவர்களையுபாசித்தன. மேலும் காலம், ஸ்வபாவம், (வஸ்துக்களை வேறுவகையாக மாற்றக் கூடியது), ஸம்ஸ்காரம், காமம், கர்மம், குணம் ஆகிய இவைகள் பகவானுடைய மஹிமைக்கு அடங்கினவை களாகி, சரீரத்துடன். அவைகளை உபாஸித்துக் கொண்டும் இருந்தன. பின்னுமவர்களுடைய மேலான மாஹாத்மியமானது ஆத்ம ஞானமுள்ளவர்களுக்கும் புலப்படாததாக இருந்தது. மேலும், அவர்களுடைய சரீரங்கள் ஸத்ய ஸ்வரூபங்களாகவும், அனந்தங் களாகவும் ஆனந்த ஸ்வரூபங்களாகவும், ஸஜாதீயம், விஜாதீயம் முதலிய பேதமற்றவைகளாகவும், ஒரே விதங்களாகவும் பிரகாசித்தன.

எவருடைய தேஜஸ்ஸால் சரம், அசரம் அடங்கிய இவ்வுலகம் முழுவதும் பிரகாசிக்கிறதோ, அந்த பரப்ரஹ்மத்தினுடைய உருவங்களாக அவர்களெல் லோரையும் ஒரே காலத்தில் ப்ரஹ்மதேவர் தரிசித்தார். அதைக்கண்ட ப்ரஹ்மதேவர் அதிக ஆச்சரியமடைந்து அவர்களைப் பார்க்கமுடியாமல் முகங்களைத் திருப்பிக் கொண்டு அவர்களுடைய காந்தியால் அடக்கப்பட்ட இந்திரியங்களுள்ளவராகி, கோகுல தேவதையின் பக்கத்தில் தங்கத்தால் செய்யப்பட்ட நான்கு முகங்களுள்ள பிரதிமைபோல மௌனமாக நின்றார். இப்படி ஸரஸ்வதியின் பர்த்தாவாகிய ப்ரஹ்மதேவர் பரமாத்ம ஸ்வரூபத்தைப் பார்த்து 'இது இன்னதென்று தெரியாமல் மோஹித்தார் அந்த ஸ்வரூபமானது யுக்திக்கு எட்டாதது;

மற்றவர்களால் அடையக்கூடாத மஹிமையுள்ளது; தாமாகப் பிரகாசிக்கக் கூடியது; ஸுகஸ்வரூபமானது இது அல்ல, இது அல்ல என்று சொல்லும் வேதத்தால் தெரிந்து கொள்ளக்கூடியது; பிரகிருதியைக் காட்டிலும் மேலானது. (அதனால் ப்ரஹ்ம தேவர் அந்த ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளவில்லை என்று கருத்து.) இப்படி பிரஹ்மதேவர் மோஹத்தையடைந்திருக்கும்பொழுது ஸ்ரீகிருஷ்ண பகவான் "இவர் ஸத்திய லோகத்திற்கு அதிபதியென்ற அபிமானமுள்ளவர். ஆனதால் நம்முடைய ஸ்வரூபத்தை இவர் தர்சிக்கத்தகுந்தவரல்ல" என்று நினைத்து எந்த மாயையால் அத்புதத்தைக் காண்பித்தாரோ, அந்த மாயையை மறைத்துக் கொண்டார். (அந்த அத்புத ஸ்வரூபம் ப்ரஹ்மதேவருடைய கண்ணுக்குப் புலப்படாமலிருக்கச் செய்தாரென்று கருத்து.)

58–64. பின்பு ப்ரஹ்மதேவர் முன்னிருந்த அறிவை மறந்து பிணம்போல் கிடந்து எழுந்திருந்து வெளிப் பார்வையை அடைந்து கஷ்டப்பட்டு கண்களைத் திறந்து கொண்டு தம்மையும் திக்குகளையும் பார்த்தார். பிருந்தாவனம் அவர் கண்ணுக்குப் புலப்பட்டது; அது ஜனங்களுக்கு நிழல் முதலியவற்றைத் தரக்கூடிய மரங்களால் நிறைந்தும், பார்க்க ப்ரியமானதுமாக இருந்தது. மேலும், அவ்விடத்தில் இயற்கையில் மிகுந்த விரோதமுள்ள மனிதர்களும், மிருகங்களும், ஒருவருக்கொருவர் ஸ்நேஹிதர்கள் போல் விரோதமின்றி வஸித்தார்கள். பின்னும் அவ்விடத்தில் பகவான் வஸிப்பதால் கோபம், ஆசை முதலியவை இல்லாமலிருந்தன. (அவ்விடத்திலிருக்கும் பிராணிகளுக்குக் கோபம் முதலியவைகள் இல்லை

என்று கருத்து) அவ்விடத்தில் ஸ்ரீகிருஷ்ணன் இயற்கையில் தம்மைவிட இரண்டாவது வஸ்து இல்லாதவராக இருந்தாலும், கன்றுகளைத் தேடிக்கொண்டும், அளவற்ற ஞானமுள்ளவரானாலும் தோழர்களைத், தேடிக்கொண்டும், எல்லாவற்றிற்கும் மேலானவரானாலும் பால வேஷத்தைத் தரித்தும், ப்ரஹ்மமானாலும் கையில் அன்ன கபளத்துடன் முன்போல் இடக் குழந்தையாக அபிநயஞ்செய்தும் ஸஞ்சரித்தார். அவரைப் ப்ரஹ்மதேவர் தர்சித்தார். கண்டவுடன் ஹம்ஸத்திலிருந்து சீக்கிரமாக இறங்கி, ஸுவர்ணமயமான தடிபோல் விழுந்து, நான்கு தலைகளிலிருக்கும் கிரீடங்கள் படும்படி ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதங்களில் நமஸ்கரித்து, ஆனந்தக் கண்ணீரால் அந்தப் பாதங்களுக்கு அபிஷேகஞ் செய்தார். முந்தி தம்மால் பார்க்கப்பட்ட பகவானுடைய மஹிமையை நினைத்து நினைத்து அடிக்கடி ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதங்களில் நமஸ்காரஞ்செய்து கொண்டுமிருந்தார். பின்பு மெதுவாக எழுந்திருந்தது, கண்களைத் துடைத்துக் கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்து அஞ்சலிசெய்து வணக்கத்துடன் ஜாக்கிரதையுள்ள வராகித் தலைவணங்கி, கத்கத ஸ்வரத்துடன் ஸ்தோத் திரஞ் செய்யலானார்.

நோட்டு.

ப்ரஹ்மதேவர் ஸ்ரீகிருஷ்ணனை மோஹிக்கச் செய்வ தற்காக கன்றுகளையும், சிறுவர்களையும் அபஹரித்து ஸத்யலோகஞ் சென்றார். அப்பொழுது ஸத்யலோகத்தில் நான்கு முகங்களுடன் ப்ரஹ்மதேவருடைய உருவங்கொண்டு பகவான் பிரஹ்மாவின் ஆஸனத்தில் வீற்றிருந்தபடியால், த்வாரபாலர்கள் வெளியிலிருந்து

வரும் ப்ரஹ்மதேவரை நீ யார் என்று தடை செய்தார்கள். பின்பு மிகவும் ச்ரமப்பட்டு பட்டணத்திற்குள் புகுந்தும், அவ்விடத்தில் தம்முடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கும் மற்றொரு ப்ரஹ்ம தேவரைக் கண்டு ஆச்சர்யமடைந்து திரும்பி கோகுலம் வந்தார் என்ற அர்த்தமுள்ள ஒரு ச்லோகம் வீரராகவீயத்துடன் அச்சிட்டிருக்கும் புஸ்தகத்தில் காணப்படுகிறது.

♣ ♣ ♣ ♣

ப்ரஹ்மதேவர் ஸ்ரீகிருஷ்ணனை ஸ்துதித்தது.

1–41. ஓ ஸ்துதிக்கத்தக்கவரே! உம்மை ஸந்தோஷப்படுத்துவதற்காக நமஸ்கரிக்கிறேன். நீர் மேகம் போன்ற திருமேனியுள்ளவர்; மின்னல் போன்ற நிறமுள்ள வஸ்திரத்தைத் தரித்தவர்; குன்றுமணிகளால் செய்யப்பட்ட குண்டலங்களாலும், தலையில் அலங்காரமாக வைத்துக் கொள்ளப்பட்ட மயில் தோகைகளாலும் ப்ரகாசிக்கும் முகமுள்ளவர்; காட்டுப் புஷ்பங்களால் செய்யப்பட்ட மாலையைத் தரித்தவர்; கையிலிருக்கும் அன்ன கபளம், பிரம்பு, கொம்பு, வாத்தியம், புல்லாங்குழல் ஆகிய அடையாளங்களால் ப்ரகாசிப்பவர்; மிருதுவான பாதங்களுள்ளவர்; இடக்குழந்தையாக விருப்பவர்; (பகவானுக்கு ப்ரஹ்மதேவர் அபராதஞ் செய்ததால் பயந்து நடுங்கி, பகவானுடைய மஹிமையை அறியாமல் ஸ்ரீ கிருஷ்ண ஸ்வரூபத்தையே சொல்லி நமஸ்கரித்தாரென்று கருத்து)

ஓ தேவ! என்னை அனுக்கிரஹிப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டதும், உம்முடைய இஷ்டத்திற்கொற்றதும், சுத்த ஸத்வஸ்வரூபமுமான இந்த கோப சரீரத்தின் மஹிமையைத் தெரிந்து கொள்வதற்கே என்னால் முடியவில்லை. ஆனதால் ஸ்வரூபமும், அனுபவஸ்வரூபமுமாகிய உம்முடைய மஹிமையை சாந்தமாகிய மனத்தாலும் யார் தெரிந்து கொள்வான்? (ஒருவராலும் முடியாதென்று கருத்து). அப்படியானால் மூடர்கள் எப்படி ஸம்ஸாரத்தைத்

தாண்டுவார்கள் என்றால் (அடுத்த ச்லோகத்தால் அவர்களுக்கு உபாயஞ் சொல்லப்படுகிறது) எவர்கள் ஞான மார்க்கத்தில் ச்ரமப்படாமல் தங்கள் தங்கள் இடத்திலேயே இருந்துகொண்டு ஸாதுக்களால் சொல்லப்படும் உம்முடைய சரிதங்களைக் கேட்டு சரீரம், வாக்கு, மனம் ஆகிய இவைகளால் உம்மைப் பூஜித்துக் கொண்டு ஜீவிக்கிறார்களோ, அவர்களால் நீர் ஜயிக்கப்படுகிறீர். (ஒருவராலும் ஜயிக்கப்படாத வரானாலுமென்று கருத்து). ஓ ப்ரபுவே! மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடிய பக்தியை விட்டு (உம்மிடம் பக்தி செய்யாமல்) ஞானத்தை மாத்திரம் அடைவதற்கு எவர்கள் முயன்று ச்ரமப்படுகிறார்களோ, அவர்களுக்குச் ச்ரமம் மிஞ்சுமேயொழிய ஞானமுண்டாகிறதில்லை.

உமியைக்குத்தி அரிசியெடுக்க விரும்பியவனுக்கு ச்ரமம் மாத்திரம்தான் உண்டாகுமேயொழிய அரிசி கிடைக்குமா? (பக்தியால்தான் ஞானமுண்டாக வேண்டுமென்று கருத்து) ஓ எங்கும் நிறைந்திருப்பவரே! இவ்வுலகத்தில் அனேக யோகிகள் (யோகத்தால் ஞான முண்டாகாமல்) எல்லாக்கர்மங்களையும் உம்மிடத்தில் ஸமர்ப்பித்தும், உம்முடைய சரிதத்தை ச்ரவணஞ் செய்தும் அதனால் பக்தியை அடைந்து ஆத்ம ஞானமுள்ளவர்களாகி ஸுகமாக உத்தம கதியை அடைந்தார்கள். (உம்முடைய ஸகுண ஸ்வரூபத்தை யாவது நிர்க்குண ஸ்வரூபத்தையாவது தெரிந்து கொள்வது கஷ்டமானாலும் உம்முடைய கதையைக் கேட்பதால்தான் உம்மை அடையமுடியுமென்று கருத்து). ஓ பூமன்! குணங்களை அதிக்ரமித்தவராகிய உம்முடைய மஹிமை (நிர்குணஸ்வரூபம்) விகாரமற்றது; ஆத்ம ஸ்வரூபத்தையடைந்த அந்தக்கரணவிருத்திக்குப்

புலப்படுவது; ஸ்வப்ரகாசத்தால் அறியக்கூடியது; மற்ற வகையால் அறியமுடியாதது; ஆனதால் அந்த உம்முடைய நிர்க்குணரூபம் இந்திரியங்களை அடக்கின யோகிகளால் (இந்திரியங்களை அந்தர்முகங்களாகச் செய்த) அறியக்கூடியதாகிறது. மேலும் மிகவும் ஸமர்த்தர்களாகயிருப்பவர்கள் அநேக நாட்களில் பூமியிலுள்ள தூளிகளையும், ஆகாயத்திலுள்ள பனித்துளிகளையும், நக்ஷத்திரம் முதலியவைகளுடைய கிரணங்களையும் பிரித்தெண்ணி கணக்கிடுவார்கள்.

லோகத்தின் ஹிதத்திற்காக அவதரித்தவரும், குணங்களுக்கு அதிஷ்டாதாவுமாகிய உம்முடைய குணங்களை யாரால் கணக்கிட முடியும்? ஆனதால் எவன் உம்முடைய கிருபையை எதிர்பார்த்து (எப்பொழுது பகவான் நம்மிடத்தில் கிருபை செய்வா ரென்று) தன்னுடைய கர்மத்தின் (புண்ய பாபம்) பயனை உதாஸீனனாக அனுபவித்துக் கொண்டு சரீரத்தாலும், மனத்தாலும், வாக்கினாலும் உம்மை நமஸ்கரித்துக் கொண்டும் காலத்தைக் கழிக்கிறானோ, அவன் மோக்ஷத்தில் பாகமுள்ளவனாகிறான். ஓ ஈச! நான் செய்த குற்றத்தைப் பாரும். ஸ்வரூபத்தாலும், காலத்தாலும், தேசத்தாலும், அளவிடக்கூடாத வரும், எல்லாவற்றிற்கும் காரணரும், மாயாவிகளையும் மோஹிக்கச் செய்பவருமான உம்மிடத்தில் நான் மாயையை ப்ரயோகித்து என்னுடைய ஸாமர்த்தி யத்தை அறிய(இவ்வளவென்று) விரும்பினேனல்லவா? இப்படிச் செய்வதற்கு நான் சக்தியுள்ளவனா? அக்னி யினிடத்திலிருந்து உண்டான ஜ்வாலையால் அக்னியை என்ன செய்யமுடியும்? (உம்மிடத்திலிருந்து உண்டான என்னால் உம்மை மோஹிக்கச் செய்யமுடியுமாவென்று

கருத்து) ஓ நாசமற்றவரே! நான் ரஜோ குணத்தாலுண்டானவன்; ஒன்றையும் அறியாதவன்; ஜகத்தைப்படைப்பவன் என்ற கர்வத்தால் குருடான கண்ணுள்ளவன்: நானொரு லோகத்திற்கு அதிபதி யென்று நினைத்தவன்; ஆனாலும் நான் உம்முடைய வேலைக்காரனானதால் அப்படிப்பட்ட என்னுடைய குற்றத்தை மன்னித்து என்னிடத்தில் கிருபை செய்யவேண்டும். மேலும் பிரகிருதி, மஹத்தத்வம், அஹங்காரம், ஆகாயம், வாயு, தேஜஸ், ஜலம், பிருதிவி ஆகிய இவைகளுள்ள அண்ட கடத்தில் 84– அங்குல அளவுள்ள சரீரமுள்ளவனாக இருக்கிறேன். அப்படிப்பட்ட அண்டங்களில் அநேக அண்டங்கள் பரமாணுக்கள் போல் உம்முடைய மயிர்க்கால் வழியாக ஸஞ்சரிக்கின்றன.

அப்படிப்பட்ட உம்முடைய மஹிமைக்கும் எனக்கும் எவ்வளவு வித்யாஸமிருக்கிறது (நான் மிகவும் அல்பனாகையால் மன்னிக்க வேண்டுமென்று கருத்து) ஓ இந்திரியங்களுக்குப் புலப்படாதவரே! ஸ்தூலமென்றும், ஸூக்ஷ்மமென்றும், கார்யமென்றும், காரணமென்றும், இருக்கிறதென்றும், இல்லையென்றும் சொல்லப்படும் ஜகத் முழுவதும் உம்முடைய வயிற்றிலிருக்கிறது. உமக்கு வெளியிலொன்றுமில்லை. நானும் உம்முடைய வயிற்றில் வஸிக்கிறேன். ஆனதால் என்னுடைய பிழையைப் பொருத்துக் கொள்ளும். மாதாவினுடைய கர்பத்தில் வஸிக்கும் குழந்தை காலால் உதைத்தால் அது குற்றமாகுமா? மேலும் பிரளய காலத்தில் ஸமுத்திரம் பொங்கி எங்கும் ஜலமாகவிருக்கும் போது ஸ்ரீமந் நாராயணனுடைய தொப்பிளிலிருந்து ப்ரஹ்மா உண்டானார் என்று

ஜனங்கள் சொல்வது பொய்யல்ல, உண்மையே. ஆனாலும் நான் உம்மிடத்திலிருந்து உண்டானவனே யாம். ஏனென்றால் நீர் ஸகல பிராணிகளுக்கும் ஆத்மாவாகவிருப்பதால் நாராயணரென்று சொல்லப் படுகிறீர் (நாரமென்றால் பிராணிகளின் கூட்டம். அயனமென்றால் இருப்பிடம். எவருக்கு பிராணிகளின் கூட்டம் இருப்பிடமாகவிருக்கிறதோ அவர் நாராயணர்) எல்லாவற்றையும் சேஷ்டிக்கச் செய்வதாலும் நீரே நாராயணர்; ஸகல ஜகத்தையும் தெரிந்து கொள்வதாலும் நீரே நாராயணர்; மேலும் இருபத்தி நான்கு தத்வங்களும், ஜலமும் எவருக்கு இருப்பிடமோ, அவர் நாராயணரென்று பிரஸித்த மானாலும் அவரும் உம்முடைய சரீரமேயாம்.

அளவிடக் கூடாதவராகிய நீர் ஜலத்தில் வஸித்தி ரென்பதும் உம்முடைய மாயையே தவிர வேறில்லை. மனத்தால் நினைக்கமுடியாத ஐச்வர்யமுள்ள பகவன்! ஸகல ஜகத்திற்கும் ஆச்ரயமாகிய உம்முடைய சரீரம் ஜலத்தில் வஸித்ததென்பது உண்மையானால் பிரளய காலத்தில் தாமரைமலரின் தண்டு வழியாக உள் புகுந்து நூறு வர்ஷங்கள் தேடியும் என் கண்ணுக்குப் புலப்படவில்லையே? பின்பு தாமரை மலரில் வந்திருந்து நூறு வர்ஷங்கள் தபஸ் செய்தபோது ஹிருதயத்தில் தோன்றியது. அவ்விடத்திலும் சீக்கிரமாகத் தோன்றவில்லை (ஆனதால் உம்முடைய சரீரம் ஒருவிடத்தில் வஸித்ததென்பது மாயையேயாம்) ஓ மாயையைப் போக்கடிப்பவரே! இந்த கிருஷ்ணாவ தாரத்தில் வெளியில் எல்லாராலும் ஸ்பஷ்டமாகப் பார்க்கப்படுகிற ப்ரபஞ்சம் முழுவதையும உம்முடைய வயிற்றிலிருப்பதாக யசோதைக்குக் காண்பித்தீரல்லவா?

அதனால் ப்ரபஞ்சமும் மாயையேயொழிய உண்மையல்லவென்று காட்டப்பட்டது. கண்ணாடியில் முன்னிருக்கும் வஸ்து ப்ரதிபலிப்பது போல வெளியிலிருக்கும் ப்ரபஞ்சம் உம்முடைய வயிற்றில் ப்ரதிபலிக்கிறது ஆனதால் ப்ரபஞ்சம் உண்மையானது என்று சொல்வதும் பொருந்தாது. ஏனென்றால் உம்முடைய வயிற்றில் இந்த ஜகத்துமிருக்கிறது. நீரும் (கிருஷ்ணனும்) இருக்கிறீர். அப்படி வெளியிலும் ஜகத்தும் தோன்றுகிறது, நீருமிருக்கிறீர், ஆனதால் ஜகத் உண்மையல்ல. (வெளியிலிருப்பதின் பிரதிபிம்பமானால் அதற்கு விபரீதமாகத் தோன்றவேண்டும். அப்படிக் காணப்படவில்லை.)

மேலும் கண்ணாடியில் மற்றவை ப்ரதிபலிக்குமேயல்லாமல் அந்தக் கண்ணாடியும் ப்ரதிபலனத்தை அடையாது. (உம்முடைய வயிற்றில் நீரும் காணப்படுவதால் பிரதி பிம்பமென்று சொல்வது பொருந்தாதென்று கருத்து) மேலும் நீர் முதலில் ஒருவராகவிருந்தீர். பின்பு கோகுலத்திலிருக்கும் எல்லாச் சிறுவர்களாகவுமிருந்தீர். அதன்பின் அவ்வளவு ஸ்வரூபங்களும், நான்கு கைகளுள்ளவைகளும், தத்வம் முதலியவைகளால் ப்ரஹ்மதேவர் உபாஸிக்கப்பட்டவைகளுமாக எனக்குத் தோன்றின. பிறகு உலகம் முழுவதும் உம்முடைய ஸ்வரூபமாகத் தோன்றியது. அதன் பின் எங்கும் வியாபித்திருக்கும் ஒப்பற்ற பரப்ரஹ்மமாகவிருக்கிறீர். ஆனதால் நீர் ஒருவரே ஸத்யமான வஸ்து. மற்றவை யாவும் உண்மையானதல்லவென்று உம்மால் இன்றைய தினம் எனக்குக் காட்டப்பட்டதாகிறது. மேலும் நீர் எப்பொழுது ப்ரகிருதியை ஆச்ரயித்து மாயையாகிய வலையை

வீசுகிறீரோ, அப்பொழுது உம்முடைய உண்மையை அறியாதவர்கள் ப்ரஹ்மதேவர் லோகத்தைப் படைக்கிறாரென்றும், மஹா விஷ்ணுவாகிய நீர் காப்பாற்றுகிறீரென்றும் முக்கண்ணனாகிய பரமசிவன் நாசஞ்செய்கிறாரென்றும் நினைக்கிறார்கள். (அப்படி அவர்களுக்கு பல வகையாகத் தோன்றுகிறவரும் நீரே. அதற்கு உம்முடைய மாயையே காரணமாகிறதென்று கருத்து) இப்படி ஸ்வதந்திரராகிய நீர் வாமனராகவும், மஹர்ஷியாகவும் (நாரதர் முதலியவர்கள்) ஸ்ரீராமன் முதலிய மனிதராகவும், ஸிம்மம் முதலிய திர்யக் ஜாதியாகவும், மத்ஸ்யமாகவும், கூர்மமாகவும், அவதரிப்பது துஷ்டர்களுடைய கர்வத்தை அடக்குவதற்காகவும், ஸாதுக்களைக் காப்பாற்றுகிறதற்காகவுமே தவிர உண்மையில் உமக்கு ஜனனமில்லை. (இஷ்டமிருந்தால் சரீரத்தை யெடுத்துக் கொள்பவரென்று கருத்து) ஓ அளவற்ற ஸ்வரூபியே! ஓ பகவன்! ஓ பரமாத்மாவே! யோகிகளுக்கு அதிபதியே! நீர் யோகமாயையைப் பரவச்செய்து கொண்டு க்ரீடிக்கிறீர். அப்படிப்பட்ட உம்முடைய மஹிமையை எவ்விடத்தில், எந்த காலத்தில் எப்படி எவ்வளவு யாரால் அறியமுடியும்; ஆனதால் கண்ணுக்குப் புலப்படும் இந்த ஜகத் முழுவதும் உண்மையானதல்ல. ஸ்வப்னம் போன்றது; மிகுந்த துக்கத்தைக் கொடுக்கக்கூடியது; சைதன்ய மற்றது; அப்படிப்பட்ட ப்ரபஞ்சமானது, நித்யரும், ஸுகஸ்வரூபியும், ஞானஸ்வரூபியம், அனந்தருமாகிய உம்மிடத்திலேயே உண்டாகிறது போலவும் நசிக்கிறது போலவும், தோன்றுகிறது. (அதிஷ்டானமாகிய உம்முடைய குணத்தால் ஜகத்தும் நித்யம் போலவும், ஸுகம் போலவும், சேதனம் போலவும் தோற்றுகிறது. உண்மையில் அப்படியில்லையென்று கருத்து) இதற்கும்

உம்முடைய மாயையே காரணம் நீர் ஒருவர்தான் ஸத்யவஸ்து, நீர் கண்ணுக்குப் புலப்படாத ஆத்மா; (பார்க்கப்படும் வஸ்துக்கள் அஸத்தியங்கள்; நீர் அப்படிப்பட்டவரல்ல என்று கருத்து) மேலும் விகாரமுள்ளது ஸத்யமல்ல. உமக்கு ஜனனம் முதலிய விகாரங்களில்லை. ஜகத்திற்கு முந்தியிருக்கும் ஆதி புருஷன் நீரொருவரே; ஸத்யர்; அழிவற்றவர்; எல்லாவற்றிற்கும் முந்தியவர்; நித்யர்; பூர்ணர்; எப்பொழுதும் ஸுகஸ்வரூபி; குறைவற்றவர்; மரண தர்மமற்றவர்; தேசத்தாலும், காலத்தாலும் அளவிடக் கூடாதவர்; வஸ்துவாலும் அளவிடக் கூடாதவர்; தாமாக ப்ரகாசிப்பவர்; நிர்மலர்; உபாதியற்றவர்.

எவர்கள் குருவாகிய ஸூர்யனிடமிருந்து உப நிஷத்தாகிய கண்ணை அடைந்து அதனால் ஸம்ஸார ஸமுத்திரத்தைத் தாண்டுகிறார்களோ, அவர்கள் ஸகல பிராணிகளுக்கும் ஆத்மாவாக விருக்கும் அப்படிப் பட்ட உம்மை ப்ரத்ய காத்ம ஸ்வரூபரென்று தெரிந்து கொள்வார்கள். கயிற்றைப் பார்த்து ஸர்ப்பம் என்று நினைப்பது எப்படி உண்மையை அறியாததால் நேரிடுகிறதோ, அப்படி ஆத்மாவின் உண்மையை அறியாததால் (அஞானத்தால்) ப்ரபஞ்சம் (ஸம்ஸாரம்) உண்டாயிருக்கிறது. அதற்கு காரணமாகிய அஞானம் நிவர்த்தியாகி ஞானம் உண்டான பிறகு அந்தப் புருஷன் திரும்பவும் ஸம்ஸாரத்தை அடையமாட்டான் (ஞானத்தால் ஸம்ஸாரத்தைத் தாண்டலாமென்பது காட்டப்பட்டது) பந்தம் மோக்ஷம் இரண்டும் அஞானத்தாலேற்பட்டிருக்கின்றனவேயொழிய உண்மையிலில்லை. அகண்டானுபவ ஸ்வரூபியும், சுத்தனுமாகிய ஆத்மாவிடத்தில் அஞானம், பந்தம்,

ஞானம், மோக்ஷம் இவைகள் ஸம்பந்திக்குமா? ஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறாக பந்தமாவது மோக்ஷமாவது இல்லை (கட்டுப்பட்டவனுக்கு விடுதலை யுண்டு. ஒருபொழுதும் கட்டுப்படாதவனை விடுப் பட்டான் என்று எப்படி சொல்லலாம்? ஆனதால் ஞானத்தால் ஸம்ஸாரத்தைத் தாண்டுகிறார்கள் என்பது ஔபசாரிகமென்ற கருத்தினால் முந்திய ச்லோகத்தில் தாண்டுகிறவர்கள் போல என்று சொல்லப்பட்டது) ஆத்ம ஸ்வரூபத்தை விசாரித்தால் ஸூர்யனை ராத்திரிக்கும் பகலுக்கும் காரணராகச் சொல்வது போல் ஆத்மாவிற்கு பந்தம், மோக்ஷமுண்டென்ற வ்யவஹாரம் ஏற்படுகிறது.

பரமாத்மாவாகிய உம்மை சரீரம் முதலியவை களென்று நினைத்தும், சரீரம் முதலியவைகளை பரமாத்மாவாகிய நீர் என்று நினைத்தும் காணாமற்போன ஆத்மாவை வெளியில் தேடுகிறார்கள் (வீட்டில் காணாமற் போன வஸ்துவைக் காட்டில் தேடினால் கிடைக்குமா?) மூடர்களுடைய அறியாத் தன்மை ஆச்சர்யப்படத் தக்கதாகவிருக்கிறது. (ப்ரத்யகாத்ம ஸ்வரூபமாக அறிந்தால் ஆத்மாநுபவம் உண்டாகுமென்று கருத்து) ஓ அனந்தரே! ஸாதுக்கள் இந்த சரீரத்திலேயே (சித், ஜடம் ஆத்மாவல்ல; இவையுள்ள சரீரத்தில்) உம்மைத் தேடி ஜடத்தை ஆத்மாவல்லவென்று தள்ளிவிட்டு உம்மைத் தெரிந்து கொள்ளுகிறார்கள். சரீரத்திலிருக்கும் ஸத் பதார்த்தத்தைத் தெரிந்துகொள்வதே போதுமானது. அஸத் பதார்த்தத்தை எதற்காகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் கயிற்றைப் பார்த்து ஸர்ப்பம் என்று நினைத்தவனுக்கு கயிறு என்ற ஞானமுண்டாக

வேண்டுமானால் ஸர்ப்பம் அவ்விடத்தில் இல்லாதிருந்தாலும் அதனுடைய ஸ்வரூபஞானமுண்டாகி ,இது ஸர்ப்பமல்ல; இது கயிறு என்று அறிய வேண்டியது அவச்யமாகவிருப்பதுபோல், அனாத்ம ஸ்வரூபத்தை யறிந்து அதனை யபவதித்து (அதல்லவென்று) பின்பு ஆத்மஸ்வரூபத்தை அறியவேண்டும். (ப்ரத்யகாத்ம ஸ்வரூபமாக அறிந்தால் தான் முக்தி கிடைக்குமென்று கருத்து) ஓ தேவ! இப்படி விசாரித்து அனாத்மாக்களை யபவதித்து உம்முடைய ஸ்வரூபத்தையறிய வேண்டியதாகவிருந்தாலும் அப்போர்பட்ட ஞான்ம் உம்முடைய பாதாரவிந்தங்களை ஸேவித்து அதன் ஸ்வல்ப ப்ரஸாதத்தையாவது அடைந்தவனுக்கே உண்டாகிறது. மற்றவன் எவனானாலும் எவ்வளவு காலம் விசாரித்தாலும் உம்முடைய உண்மையை அறிய மாட்டான் (முந்திய ச்லோகங்களால் ஞானத்தால் மோக்ஷம் கிடைக்குமென்று சொல்லப்பட்டாலும் அந்த ஞானமும் பக்தியில்லாதவனுக்கு உண்டாகிறதில்லை. ஆனதால் பக்தியே மேலான தென்று கருத்து) ஓ தேவ! எனக்கு எந்த ஜன்மமாக விருந்தாலும், உம்முடைய வேலைக்காரர்களுக்குள் ஒருவனாகவிருந்து உம்முடைய பாதாரவிந்தத்தை ஸேவித்துக் கொண்டிருக்கும் பாக்கியத்தை அனுக்ரஹிக்கவேண்டும். ஓ ப்ரபுவே! ஸகல யாகங்களும் இப்பொழுதும் உமக்கு திருப்தியுண்டு பண்ண சக்தியற்றவைகளாகவிருக்கின்றன. அப்படிப்பட்ட நீர் கோபகுமாரர்களாகவிருந்து கோப ஸ்திரீகளுடைய ஸ்தன்யத்தையும் (பால்) கன்றுகளாக விருந்து பசுக்களுடைய பாலையும் அமிருதத்தைப் போல பானஞ் செய்தீரல்லவா? அதனால் அந்த கோபிகைகளும், பசுக்களும் மிகவும் மேலானவர்கள். நந்தகோபர் முதலிய கோகுலத்தில் வஸிப்பவர்களுக்கு

ஒப்புயர்வில்லாத ஸுகஸ்வரூபியும், பூர்ணரும் நித்யரும் ப்ரஹ்மமுமான நீர் மித்திரராகவிருப்பதால் அவர்களுடைய பாக்கியமானது ஆச்சரியப்படக்கூடியது.

ஓ அச்யுதரே இந்தக் கோபர்களுடைய மஹிமையைப் பற்றியுஞ் சொல்லவேண்டுமோ? பத்து இந்திரியங்களுக்கு அதிஷ்டான தேவதைகள், மனத்தின் தேவதையான சந்திரன், அஹங்காரத்தின் அதி தேவதையான பரமசிவன், புத்தியின் தேவதையும், ப்ரஹ்மாவுமாகிய நான் ஆகிய பதின்மூன்று தவர்களும் இந்திரியங்களாகிய பாத்திரங்களால் உம்முடைய பாதங்களாகிய தாமரைமலரின் அமிருதத்தைப் பானஞ் செய்கிறோம். ஆதலால் நாங்களே மிக்க பாக்கியசாலிகளாகவிருக்கிறோம், (ஸகல இந்திரியங்களால் உம்முடைய ஸகல குணங்களையும் ஸேவிக்கும் கோகுலவாஸிகளின் பாக்கியம் மிக்க மேலானதென்று கருத்து) உம்முடைய பாததூளிகையை வேதங்கள் எப்பொழுதும் தேடுகின்றன. அப்படிப்பட்ட உம்மை கோகுலத்தில் வஸிப்பவர்கள் உயிராக நினைத்திருக்கிறார்கள். ஆனதால் அந்த கோகுலவாஸிகளுக்குள் யாருடையவாவது பாததூளி கிடைக்கும்படியாக பூமியில், வனத்தில், கோகுலத்தில் எந்த ஜன்மம் கிடைத்தாலும் அதுவே மேலான பாக்கியம், ஓ தேவ! கோபிகை போல வேஷந்தரித்துவந்த பூதனையும், பகன், அகன் முதலியவர்களுடன் உம்மை அடைந்தாள். அப்படியிருக்க வீடு, பணம், புத்திரர்கள், பிரியம், மனது, சரீரம், பசுக்கள், ப்ராணன், இந்திரியங்கள் ஆகிய எல்லாவற்றையும் உம்மிடத்தில் ஸமர்ப்பித்திருக்கும் கோகுலவாஸிகளுக்கு நீர் எதனைக் கொடுப்பீர்? ஸகல பலஸ்வரூபமான உம்முடைய

ஸ்வரூபந்தான் உம்மிடத்திலிருப்பது. அதற்கு மேலான வஸ்து வேறென்றுமில்லை.

அதை பக்தர்களைப் போல வேஷந்தரித்த பூதனைக்குக் கொடுத்தீர். உண்மையாகப் பக்தி செய்யும் கோகுலவாஸிகளுக்கு அதைக் காட்டிலும் மேலான எந்த வஸ்துவைக் கொடுக்கப் போகிறீர் என்று நான் யோசித்தும் நிச்சயமுண்டாகாமல் என் மனம் மோஹிக்கிறது. வைராக்யமுள்ளவர்களான ஸன்யாஸி களுக்கும் என்னை அடைவதே பலனாகவிருக்கிறது. ஆசை முதலியவைகளை ஜயிக்காதவர்களான இவர்களுக்கு என்னுடைய ஸ்வரூபத்தையடைவதைக் காட்டிலும் மேலான பலன் வேண்டுமாவென்றால், ஓ கிருஷ்ண! உம்முடைய பக்தனாக ஆகிறவரையில்தான் ஆசை திருடனாகவிருக்கும். (ஞானரத்தினத்தை அபஹரிப்பது) வீடு ஜயிலாக ஆகும். கிருஹமானது கால் விலங்காகும், (உம்முடைய பக்தர்களால் மேற்சொல்லிய ஆசை உம்மிடத்தில் வைக்கப்பட்டன வாகையால் அவை பந்தகங்களாகிறதில்லை. (ஆனது பற்றி ஸன்யாஸிகளைக் காட்டிலும் கோகுலவாஸிகள் மேலானவர்கள் என்று கருத்து). நீர் பக்த ஜனங்களுக்கு ஆனந்தத்தையுண்டு பண்ணுவதற்காக லோகத்தை அனுஸரித்துக் கொண்டிருக்கிறீர். உண்மையில் நீர் ப்ரபஞ்சத்தின் ஸம்பந்தமற்றவர். ஓ ப்ரபுவே! உம்முடைய மஹிமை என்னுடைய மனத்திற்கும், சரீரத்திற்கும், வாக்குக்கும் எட்டவில்லை. பலவகையாகச் சொல்வதில் என்ன பிரயோஜனம்? தெரிந்தவர்கள் தெரிந்துகொள்ளட்டும், எனக்குத் தெரிய வில்லை (பகவானுடைய ஸ்வரூபத்தையறிந்ததாகச் சொல்பவர்களை பரிஹஸித்தார்)

ஓ கிருஷ்ண! விருஷ்ணிகளுடைய குலமாகிய தாமரையை மலரச்செய்வதால் ஸூர்யன் போன்றவரே! பூமி, தேவர்கள், ப்ராஹ்மணர்கள், பசுக்கள் ஆகிய ஸமுத்திரங்களை விருத்தி செய்வதாலும் தர்மத்திற்கு விருத்தமான பாஷண்ட தர்மமாகிய ராத்திரியின் இருளைப் போக்கடிப்பதாலும் சந்திரன் போன்றவரே! பூமியில் அரசர்களாகப் பிறந்திருக்கும் அஸுரர்களான கம்ஸன் முதலியவர்களை நாசஞ் செய்பவரே! ஸூர்யனாலும் பூஜிக்கத்தக்கவரே! ஓ பகவன்! கல்பம் வரையில் உம்மை நமஸ்கரிக்கிறேன். நீர் எல்லா வற்றையும் அறிந்தவர்; ஸகல ஜகத்திற்கும் அதிபதி; உம்முடைய மஹிமை உம்மாலேயே அறியக்கூடியது; இந்த ஜகத்தும் உம்மிடத்திலேயே இருக்கிறது. என்னை விடை கொடுத்து அனுப்பும்" என்று சொல்லி மூன்று தடவை ப்ரதக்ஷிணஞ்செய்து பகவானுடைய பாதங்களை நமஸ்கரித்து ப்ரஹ்மதேவர் தம்முடைய லோகஞ் சென்றார்.

42–48. பகவான் ப்ரஹ்மதேவருக்கு விடை கொடுத்து தம்முடைய தோழர்களை முன்போல யமுனையின் மணல் திட்டில் வரவழைத்தார். அந்த கோப குமாரர்கள் ஒரு வருஷகாலமாகத் தங்களுடைய பிராணனாகிய கிருஷ்ணனை விட்டுப்பிரிந்திருந்தும் பகவானுடைய மாயையால் அதனை மறந்து அந்த ஒரு வருஷத்தையும் அரைக்ஷணமாக நினைத்தார்கள். பகவானுடைய மாயையால் மோஹித்து இந்த ஜகத்தானது தன்னையே அடிக்கடி மறந்து விடுகிறது. அப்படியிருக்க மாயையால் மோஹித்த மனமுள்ளவர்கள் எதைத்தான் மறக்கமாட்டார்கள்.

அப்பொழுது கோபகுமாரர்கள் ஸ்ரீகிருஷ்ணனை நோக்கி "நல்வரவு! வாரும். ஒரு கடளங்கூட நீர் புஜிக்கவில்லையே, சாப்பிடும்" என்றார்கள். அதனைக் கேட்ட ஸ்ரீ கிருஷ்ணபகவான் சிரித்துகொண்டு அந்தச் சிறுவர்களுடன் சேர்ந்து போஜனஞ்செய்து மலைப் பாம்பின் தோலை அவர்களுக்குக் காண்பித்துக் கொண்டு கோகுலத்தை நோக்கிப் புறப்பட்டார். மேலும் பகவான் மயில் தோகை, புஷ்பங்கள், தாதுக்கள் இவைகளால் தம்முடைய சரீரத்தை அலங்கரித்துக் கொண்டும், கொம்பு வாத்தியத்தை ஊதிக்கொண்டும், கன்றுகளை ஓட்டிக்கொண்டும், கோபிகைகளுக்கு நேத்திரானந்ததைக் கொடுக்கத் தக்கவராக கோகுலஞ்சென்றார். அவருடன் செல்லும் கோபர்கள் அவருடைய சுத்தமான சரித்திரத்தைக் கானஞ்செய்தார்கள் அந்தக் கோடகுமாரர்கள் கோகுலஞ் சென்று தங்கள் பந்துக்களை நோக்கி "யசோதைக்கும் நந்தருக்கும் புத்திரராகிய ஸ்ரீகிருஷ்ணனால் இன்றைய தினம் பெரிதாகிய ஒரு ஸர்ப்பம் கொல்லப்பட்டது. நாங்களும் காப்பாற்றப்பட்டோம்" என்று ஒரு வருஷத்திற்கு முன் நடந்த ஸமாசாரத்தை அன்றைக்கு நடந்ததென்று சொன்னார்கள் என்று சுகர் சொன்னார்.

49. அதனைக்கேட்ட அரசன் சுகரை நோக்கி "ஓ ப்ராஹ்மண! பிறருடைய புத்திரராகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் தங்களுடைய புத்திரர்களிடத்திலுள்ள விச்வாஸத்தைக் காட்டிலும் அதிகமான ஸ்நேகம் உண்டாவதற்கு என்ன காரணம்? அதனைச் சொல்ல வேண்டும்." என்று கேட்டார்.

50–59. அதனைக்கேட்ட சுகர் அரசனை நோக்கி

"ஓ அரசனே! ஸகல பிராணிகளுக்கும் தங்களுடைய ஆத்மாவினிடத்திலேயே விசேஷ ப்ரியம். புத்திரன், பணம், களத்திரம் முதலியவைகள் ஆத்மாவிற்கு உபயோகப்படுவதால் அவைகளில் ப்ரியமேயொழிய வேறில்லை. ஓ அரசர்களுக்குட் சிறந்தவரே! தங்கள் தங்கள் ஆத்மாவினிடத்தில் எவ்வளவு ப்ரியமோ, அவ்வளவு ப்ரியம் புத்திரன், பணம், வீடு முதலியவைகளிடத்தில்லை. (அவைகளில் நம்முடையது, என்ற அபிமானமேயொழிய நானென்ற அபிமானமில்லையென்று கருத்து) சரீரத்தையே ஆத்மாவென்று சொல்பவர்களுடைய மதத்திலும் தேஹத்தில் எவ்வளவு பிரியமோ அவ்வளவு ப்ரீதி புத்திரன் முதலியவர்களிடத்திலில்லை. இந்தச் சரீரம் மரணத்தை அடையும்பொழுதும் இன்னுஞ் சிலகாலஞ் ஜீவித்திருக்கவேண்டுமென்ற ஆசை அதிகமாக விருக்கிறது. ஆனதால் சரீரத்தில் விசேஷ அபிமான மிருந்தாலும், ஆத்மாவிடத்தில் விசேஷ ப்ரீதியிருக்கிறது. அதற்காக ஸகல சராசரங்களுக்குமிருக்கின்றன இந்த ஸ்ரீ கிருஷ்ணன் ஸகல பிராணிகளுக்கும் ஆத்மாவாக விருக்கிறார். இவர் ஜகத்திற்க்கு க்ஷேமத்தைச் செய்வதற்க்காக மாயையால் ஸரீரமுள்ளவர் போல் தோன்றுகிறார், உண்மையாக விசாரித்தால் அசையும் பொருள் அசையாப் பொருள் அடங்கிய இந்த ஜகத்து முழுவதும் பகவானுடைய ஸ்வரூபமேயொழிய அதைக் காட்டிலும் வேறான வஸ்து ஒன்றுமில்லை. ஸகல பிராணிகளுக்கும் மாயையே காரணமாகவிருக்கிறது. அதற்கும் ஸ்ரீ கிருஷ்ணனே காரணம் ஆனதால் கிருஷ்ணனைக் காட்டிலும் வேறான வஸ்து இருக்கிறதோ? யோசியும், புண்யகரமான கீர்த்தியுள்ள ஸ்ரீ பகவானுடைய தளிர்போன்ற பாதங்களாகிய,

Released by Maran's Dog, Toronto , Canada

மஹான்களால் அடையக்கூடிய ஓடத்தை, எவர்கள் ஆச்ரயித்திருக்கிறார்களோ, அவர்களுடைய ஸம்ஸார ஸமுத்திரம் கன்றின் குளம்படியாக ஆகிவிடும். மேலும் அவர்களுக்கு வைகுண்டம் வாஸஸ்தலமாகிறது. ஆபத்துள்ள ஸ்தலத்தை அவர்கள் ஒருபொழுதும் அடையமாட்டார்கள். கௌமார வயதில் நடந்த கிருஷ்ணனுடைய சரிதத்தை கோபகுமாரர்கள் பௌகண்ட வயதில் தங்கள் பந்துக்களுக்குச் சொன்ன விஷயமாக நீர் கேட்டதற்கு பதில் சொன்னேன்.

60–61. ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய தோழர்களுடன் சேர்ந்து புல்தரையில் போஜனஞ் செய்ததையும், அகாஸுரனைக் கொன்றதையும், கன்றுகளாகவும், கோபர்களாகவும் ஒருவருஷமிருந்ததையும், ப்ரஹ்மதேவர் பகவானைத் துதித்ததையும், எவன் காதினால் கேட்கிறானோ உச்சரிக்கிறானோ அவன் ஸகல புருஷார்த்தங்களையும் அடைகிறான். இப்படி ராமகிருஷ்ணர்கள் இருவர்களும் கண் பொத்திக்கொள்வது, அணைக்கட்டுவது, குரங்குகளுடன் தாவிச்செல்வது முதலிய விளையாட்டுகளைச் செய்து கோகுலத்தில் கௌமாரவயதைக் கழித்தார்கள்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–15

தேனுகாஸுரவதம்

அந்த ராமகிருஷ்ணர்கள் இருவர்களும் பௌகண்ட மென்ற வயதையடைந்து பசுக்களை மேய்க்கத் தகுந்தவர்களாகித், தங்களுடைய தோழர்களுடன் பிருந்தாவனத்தில் மாடுகளை மேய்த்துக் கொண்டு தங்கள் காலடிகளால் அந்த வனத்தைப் புண்ய பூமியாகச் செய்துகொண்டு ஸஞ்சரித்தார்கள். ஒரு நாள் ஸ்ரீ கிருஷ்ண பகவான் புல்லாங்குழலை ஊதிப்பசுக்களை முன்னடத்திக்கொண்டு பசுக்கள் மேயத்தகுதியானதும், மிகுந்த புஷ்பங்களுள்ளதுமான காட்டில் விளையாடுவதற்காக பலராமனுடன் சென்றார். மற்ற கோபர்கள் (இடையர்கள்) ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதத்தைக் கானஞ் செய்துகொண்டு அவர் பின்சென்றார்கள். அந்த வனத்தில் வண்டுகளும், மிருகங்களும், பறவைகளும் காதுக்கினிமையாகச் சப்தித்துக்கொண்டிருந்தன. அவ்விடத்திலிருக்கும் குளத்தின் ஜலமானது ஸாதுக்களுடைய மனம்போல் தெளிந்திருந்தது.

அந்த ஜலத்தின் ஸம்பந்தப்படுவதால் குளிர்ச்சியுள்ளதும், தாமரை மலரின் ஸம்பந்தப்படுவதால் வாஸனையுள்ளதுமான காற்று வீசிற்று. அதனைக் கண்டு ஸ்ரீ கிருஷ்ணன் அவ்விடத்தில் விளையாட வேண்டுமென்று நினைத்தார். மேலும் அந்த வனத்தில் சிவந்த தளிர்களால் பிரகாசிக்கும் மரங்கள், பழங்கள், புஷ்பங்கள் ஆகிய இவைகளுடைய பாரத்தால் வணங்கியிருந்தன. அவைகளைப் பார்த்து

எல்லாவற்றிற்கும் முந்திய புருஷனாகிய பகவான் சிரித்துக்கொண்டு தமையனாகிய பலராமனை நோக்கி "ஓ தேவர்களுக்குட் சிறந்தவரே! இந்த மரங்கள் தங்களுடைய பாபத்தைப் போக்கடித்துக் கொள்வதற்காக புஷ்பங்களையும், பழங்களையும் காணிக்கையாக எடுத்துக்கொண்டு தேவர்களால் பூஜிக்கப்பட்ட உம்முடைய தாமரைமலர் போன்ற பாதத்தைத் தலையால் (கிளையால்) தொட்டு வணங்குகின்றன. ஆச்சர்யம்! ஓ பாபமற்றவரே! எல்லா லோகங்களையும் பரிசுத்தப்படுத்தக்கூடிய உம்முடைய கீர்த்தியை இந்த வண்டுகள் கானஞ் செய்துக்கொண்டு ஆதிபுருஷராகிய உம்முடைய திருவடிகளையுபாஸிக்கின்றன. பெரும்பாலும் இவைகள் மஹர்ஷிகளாகவிருக்கவேண்டும். நீர் மனிதனாக அவதரித்து வனத்தில் ரஹஸ்யமாக வஸித்தாலும் தங்களுக்கு தைய்வமாகிய உம்மை மஹர்ஷிகள் விடுகிறதில்லை.

ஓ கொண்டாடக் கூடியவரே! இந்த மயில்கள் கூத்தாடுகின்றன. கோபிகைகள் பார்ப்பதுபோல பெண் மான்கள் உம்மை பார்த்து உமக்கு பிரியத்தைக் கொடுக்கின்றன. இந்த குயில் கூட்டங்களும் வீட்டிற்கு (வனம்) வந்தவராகிய உமக்கு இனிமையான சப்தத் தால் ப்ரியத்தைச் செய்கின்றன. ஆனதால் காட்டில் வஸிக்கும் பிராணிகளும் மிகுந்த புண்யம் செய்தவை களேயாம். வீட்டிற்கு வந்தவர்களை யுபசரிப்பது ஸாதுக்களுடைய இயற்கையான குணமல்லவா? இந்தப் பூமியானது இன்றையதினம் மேலானதாக ஆயிற்று. உம்முடைய பாதங்களைத் தொடுகிற புற்பூண்டுகளும், உம்முடைய நகங்களால் தொடப்பட்ட

கொடிகளும், மரங்களும், தயையுடன் உம்மால் பார்க்கப்பட்ட ஆறுகளும், மலைகளும், பறவைகளும், மிருகங்களும் புண்யம் பெற்றன. லக்ஷ்மீதேவியாலும் விரும்பப்பட்ட மார்பில், அணிந்துகொள்வதால் கோப ஸ்திரீகள் மேலானவர்களானார்கள்" என்று சொல்லிக் கொண்டு ஸ்ரீகிருஷ்ணன் அழகு பொருந்திய ப்ருந்தா வனத்தைப் பார்த்து மிகுந்த பிரீதியுடன் மலையின் ஸமீபத்தில் ஓடுகின்ற ஆற்றங்கரையில் தோழர்களுடன் பசுக்களை மேய்த்துகொண்டு ஸஞ்சரித்தார். இப்படி பலராமனுடன், தோழர்களுடனும், ஸஞ்சரிக்கும் ஸ்ரீகிருஷ்ணன் மதங்கொண்ட வண்டுகள் ரீங்காரஞ் செய்யும் பொழுது தாமும் பாடுகிறார்.

அவர்களுடைய தோழர்கள் அவருடைய சரிதத்தைச் சொல்லுகின்றார்கள். பின்னும் அந்த ஸ்ரீகிருஷ்ணன் சிலவிடங்களில் ஹம்ஸக்ஷிகள் கத்தும் பொழுது தாமும் அவைகள் போல சப்திக்கிறார். மயில்கள் கூத்தாடும்பொழுது தாமும் அவைகள் போல நர்த்தனஞ் செய்கிறார். அதனைக்கண்ட கோபர்கள் ஸந்தோஷப்படுகிறார்கள். வெகுதூரம் சென்ற பசுக்களை அவைகளுடைய பெயரைச் சொல்லி மேக சப்தம் போல் கம்பீரமாக அன்புடன் ஸ்ரீ கிருஷ்ணன் கூப்பிடுகிறார். அந்தச் சப்தமானது கோபர்களுக்கும், பசுக்களுக்கும் இனிமையாகவிருந்தது. சகோரம், க்ரௌஞ்சம், சக்கிரவாகம், பரத்வாஜம், மயில் ஆகிய இவைகள் சப்திக்கும்பொழுது தாமும் அவைகள்போல சப்திக்கிறார். புலி, சிங்கம், முதலியவைகளைக்கண்டு பயந்தவர் போல அபினயஞ் செய்கிறார். சில சமயத்தில் விளையாடிக் களைப்படைந்த பலராமனைக் கோபர்களுடைய

மடியை தலையனையாக வைத்துப் படுக்கச்செய்து அவருக்குக் கால் பிடிப்பது போன்ற உபசாரங்களை தாமே செய்கிறார். கோபர்கள் கையைப் பிடித்துக் கொண்டு கூத்தாடிக்கொண்டும், பாடிக்கொண்டும், ஓடிக்கொண்டும், சண்டைச் செய்துக் கொண்டுமிருப் பதை ராமகிருஷ்னர்கள் பார்த்து சிரித்துக்கொண்டு அவர்களைக் கொண்டாடுகிறார்கள். ஒரு சமயம் ஸ்ரீ கிருஷ்ணன் முஷ்டியுத்தம் (குத்துச்சண்டை) செய்து அதனால் களைப்படைந்து ஒரு மரத்தினடியில் தளிர்களைப் பரப்பி ஒரு கோபனுடைய மடியில் தலையை வைத்துக்கொண்டு படுத்தார். அந்த ஸமயத்தில் மஹாத்மாவான கிருஷ்ணனுக்குச் சில கோபர்கள் கால்பிடித்தார்கள். புண்யசாலிகளான மற்றுஞ்சிலர் விசிறியினால் விசிறினார்கள்.

ஓ மஹாராஜனே! இன்னுஞ் சிலர் அவரிடத்தில் மிகுந்த அன்புள்ளவர்களாகி அந்த ஸமயத்திற்குத் தகுதியான அவருடைய இனிமையான சரித்திரங் களை மெதுவாகப் பாடினார்கள். இப்படி லக்ஷ்மீ தேவியால் பூஜிக்கப்பட்ட தளிர்போன்ற பாதங்களுள்ள வரும், மாயையால் தம்முடைய உண்மையான ரூபத்தை மறைத்துக் கொண்டவருமாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவான் தம்முடைய சரிதங்களால் இடக் குழந்தையாக அபினயஞ் செய்து கொண்டும் மனிதரால் செய்யமுடியாதவைகளைச் செய்து தாம் ஈச்வரன் என்பதையும் காண்பித்துக்கொண்டும், ஸாமான்ய ஜனங்களுடன் தாமும் மனிதன்போல விளையாடினார்.

20–41. பலராமனுக்கும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும்

தோழர்களான ஸ்ரீதாமா, ஸுபலன், ஸ்தோக கிருஷ்ணன் முதலிய கோபர்கள் மிகுந்த அன்புடன் பலராமனையும், கிருஷ்ணனையும் நோக்கி "ஓ மிகுந்த பலமுள்ள ராம! துஷ்டர்களை சிக்ஷிக்கும் ஓ கிருஷ்ணா! இதற்குக் கொஞ்ச தூரத்தில் அநேக பனை மரங்கள் நிறைந்த பெரிய வனமிருக்கிறது. அந்த வனத்தில் பனம் பழங்கள் ஏராளமாக விழுந்து கொண்டுமிருக் கின்றன. ஆனால் தேனுகன் என்ற துஷ்ட அஸுரன், ஒருவரும் அவ்விடத்தில் வராதபடி அந்த வனத்தை காத்துக் கொண்டுமிருக்கிறான். அவன் கழுதையின் உருவங்கொண்டவன்; மிக்க பலமுள்ளவன்; அவனுக்குச் சமமான பலமுள்ள அநேக பந்துக்கள் அவனைச் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

சத்துருக்களைச் சிக்ஷிப்பவரான ஓ கிருஷ்ண! மனிதர்களைச் சாப்பிடும் அந்த அஸுரனுடைய பயத்தால் மனிதர்களும், பசுக்களும், பறவைகளும், அவ்விடம் செல்லுகிறதில்லை. அவ்விடத்தில் எங்களால் புஜிக்கப்படாதவைகளும் வாஸனையுள்ளவைகளுமான பழங்கள் இருக்கின்றன. அவைகளின் நல்வாஸனை எங்கும் பரவியிருக்கிறது. அதனை முகர்ந்த மாத்திரத்தில் அந்தப் பழங்களைப் புஜிக்க வேண்டுமென்று எங்களுக்கு விருப்பம் உண்டாகிறது. ஓ கிருஷ்ண! அந்தப் பழங்களை எங்களுக்குக்கொடும். ஓ பலராம! தமக்கு இஷ்டமிருந்தால் அவ்விடம் போவோம் என்றார்கள். அதனைக்கேட்ட ராமகிருஷ்ணர்கள் இருவரும் தோழர்களுடைய இஷ்டத்தை நிறைவேற்ற வேண்டி சிரித்துக்கொண்டு அவர்களுடன் அந்தப் பனங்காட்டிற்குச் சென்றார்கள். பலராமன் அந்தக் காட்டில் நுழைந்து மதயானைபோல் பனைமரங்களை

கைகளால் அசைத்தார். பழங்கள் உதிர்ந்தன. அந்தச் சப்தத்தைக் கேட்டு கழுதையின் உருவங்கொண்ட அந்த அஸுரன் ஓடிவந்தான். அவன் ஓடிவந்த வேகத்தில் பூமியும், மலையும் அசைந்தன மிகுந்த பலமுள்ள அந்த அஸுரன் பின்னங்கால்களால் மார்பிலுதைத்து கழுதைபோல் சப்தித்துக்கொண்டு அலைந்தான். பின்னும் அந்த அஸுரன் பலராமனிடம் வந்து புறங்காட்டி நின்று பலராமனைக் கொல்வதற்காக கோபத்துடன் பின்னங்கால்களாலுதைத்தான். பலராமர் அந்தக் கழுதையின் இருகால்களையும் ஒரே கையால் பிடித்துத்தூக்கி உயிர்துறக்கும்படி சுழற்றி பனமரங்களின் மீது எறிந்தார்.

அந்த அஸுரனுடைய சரீரத்தால் அழிக்கப்பட்ட பருத்த நுனியுள்ள பனைமரம் பக்கத்திலிருந்த மரத்தின்மீது சாய்ந்து முறிந்தது. அந்த மரமும் மற்றொரு மரத்தின்மீது சாய்ந்தது. அதுவும் இன்னுமொரு மரத்தின் மீது சாய்ந்தது. இப்படி விளையாட்டாக பலராமனால் சுற்றி எறியப்பட்ட அஸுரனுடைய சரீரத்தால் ஒரு மரம் மற்றொன்றிலும் அது இன்னொன்றிலும் சாய்ந்து அங்குள்ள மரங்கள் யாவும் பெருங்காற்றில் அகப்பட்டவைப்போல அசைந்தன. ஓ அரசனே! வஸ்திரத்தில் நூல்கள் குறுக்காகவும், நீளமாகவும், சேர்ந்திருப்பதுபோல இவ்வுலகங்கள் யாவும் எந்தப் பகவானிடத்தில் வஸிக்கின்றனவோ, அந்த அனந்தராகிய ஜகதீசன் தேனுகனை வதம்செய்தது ஆச்சர்யமல்ல. இந்த ஸமாசாரத்தைக் கேட்டு அவனுடைய பந்துக்கள் கிருஷ்ணனையும் ராமனையும் கொல்வதற்காக நரி வேஷம் தரித்து பந்துவதத்தை நினைத்துத் கோபங்

கொண்டவர்களாகி எதிர்த்து வந்தார்கள் அப்பொழுது பலராமனும் கிருஷ்ணனும் ஒவ்வொரு நரியின் பின்னங்கால்களைப் பிடித்து சுழற்றிப் பனைமரத்தின் மீது எறிந்தார்கள. அப்பொழுது அந்த காட்டின் பூமியானது பனம்பழங்களாலும், உயிரற்ற அஸுரருடைய சரீங்களாலும் நிறைந்திருந்ததால், மேகங்களால் பூர்ணமான ஆகாயத்திற்கு சமமாகவிருந்தது. இம்மாதிரியான ராமகிருஷ்ணர்களுடைய செய்கையைக் கண்டு தேவர்கள் முதலியவர்கள் புஷ்பமாரி பெய்தார்கள். வாத்தியங்களைக் கோஷித்தார்கள், ஸ்தோத்திரம் செய்தார்கள். பின்பு அந்த அசுரன் மரணமடைந்ததால் மனிதர்கள் பயமில்லாமல் சென்று பனம் பழங்களைப் புஜித்தார்கள். பசுக்களும் புற்களை மேய்ந்தன. அதன்பின் தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரும், புண்ணியத்தைக் கொடுக்கக்கூடிய சரித்திரம், நாமதேயம் இவைகளுள்ளவருமான ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடன் வரும் கோபகுமாரர்களால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவராகிப் பலராமனுடன் கோகுலஞ் சென்றார்.

42–46. இப்படிக் கோகுலத்திற்கு வந்த ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்ப்பதற்காகக் கோபஸ்திரீகள் கூட்டமாகச் சேர்ந்து எதிர்கொண்டு வந்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் பசுக்கள் நடப்பதால் கிளம்பிய புழுதியடைந்த தலைமயிரில் மயில் தோகையை வைத்துக் கொண்டவரும், காட்டுப் பூக்களால் அலங்கரித்துக் கொண்டவரும், அழகான பார்வையுள்ளவரும், மனோகரமான சிரிப்புள்ளவரும், வேணுகானஞ் செய்பவருமாக இருந்தார். அவருடைய சரிதத்தைக் கோபர்கள் கானஞ் செய்தார்கள், பகலில்

ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப்பிரிந்து துக்கித்துக் கொண்டிருந்த கோபஸ்திரீகள் ஸாயங்காலத்தில் பகவானுடைய முகமாகிய தேனைக் கண்களாகிய வண்டுகளால் குடித்து (நன்றாக பார்த்து) ஸந்தோஷத்தை அடைந்தார்கள். கிருஷ்ணனும் வெட்க முள்ள சிரிப்பு, வணக்கம் ஆகிய இவைகளுடன் அவர்களுடைய கடைக்கண்களால் பார்க்கப்பட்டு (இப்படி கோபிகைகள் பகவானைப்பார்ப்பதே அவருக்கு பூஜையென்று கருத்து) கோகுலத்தில் ப்ரவேசித்தார். அப்போது புத்திரனிடத்தில் மிக்க பிரியமுள்ளவர்களாகிய யசோதையும், ரோஹிணீயும், அந்தக் காலத்திற்குத் தக்கபடியும் தங்களிஷ்டப்படியும் ஆசீர்வாதஞ் செய்தார்கள். அப்பொழுது பலராமனும், ஸ்ரீ கிருஷ்ணனும் ஸ்நானம், சரீரத்தைப் பிடிக்கச் செய்வது முதலியவைகளால், களைப்பை நிவர்த்தித்துக் கொண்டும், அழகான வஸ்திரங்களை யுடுத்திக் கொண்டும், திவ்யமான மாலை, சந்தனம், இவைகளைத் தரித்துக் கொண்டும் மாதாவினால் கொடுக்கப்பட்ட ருசியான அன்னத்தைப் புஜித்து அவர்களால் செல்லங் கொடுக்கப்பெற்று நல்ல படுக்கையில் படுத்து ஸுகமாக நித்திரை செய்தார்கள்.

47–52. இப்படிப் பிருந்தாவனத்தில் சஞ்சரிக்கும் ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஒரு நாள் பலராமனை அழைக் காமல் மற்ற கோபர்களுடன் யமுனா நதிக்குச் சென்றார். அப்பொழுது மிக்க வெயிலாக இருந்ததால் பசுக்களும், கோபர்களும், மிகுந்த தாஹத்தை அடைந்து, யமுனையில் ஒரு மடுவிலிருக்கும் ஜலத்தைக் குடித்தார்கள், அது விஷங்கலந்த ஜலமானதால் தெய்வ கதியாக அதைக் குடித்தவுடன் எல்லோரும்

மூர்ச்சையை அடைந்து மரணமடைந்தார்கள். சிறந்த யோகிகளுக்கும் அதிபதியாகிய ஸ்ரீ கிருஷ்ணன் அதைப் பார்த்து தம்மையே கதியாகக் கொண்டவர்கள் மரணமடைந்ததால் அமிருதத்தை வர்ஷிக்கும் தமது பார்வையால் அவர்களைப் பிழைக்கச்செய்தார். அவர்கள் ஞாபகத்தை அடைந்து ஜலத்தினருகிலிருந்து எழுந்து ஒருவருக்கொருவர் பார்த்து மிகவும் ஆச்சர்யத்தை அடைந்தார்கள். பின்னும் விஷஜலத் தால் மரணமடைந்த தாம் ஸ்ரீ கிருஷ்ணனுடைய அனுக்ரஹம் பொருந்திய பார்வையாலேயே பிழைத்தோம் என்று நினைத்தார்கள்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–16

காளியமர்த்தனம்

1–3. "யமுனாநதி காளியனென்ற ஸர்ப்பத்தால் கெடுக்கப்பட்டிருந்ததைப் பார்த்து ஸ்ரீ கிருஷ்ணன் அந்த நதியைச் சுத்தப்படுத்துவதற்காக அந்த ஸர்ப்பத்தை வெளியில் துரத்தினார்" என்று சுகர் சொல்ல, அதைக் கேட்ட பரீக்ஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி, "அந்தக் காளியனென்ற ஸர்ப்பம் அநேக யுகமாக ஜலத்தில் வஸித்த காரணமென்ன? (ஜலத்தில் வசிக்கும் ஜந்துவல்லவேயென்று கருத்து.) மிக்க ஆழமான ஜலத்திற்குள் வஸிக்கும் அந்த ஸர்பத்தை ஸ்ரீ கிருஷ்ண பகவான் எவ்விதமாக அடக்கினார்? ஓ ப்ராஹ்மண! தம்முடைய இஷ்டப்படி நடப்பவரும் (ஸ்வதந்திரர்) காலதேசங்களால் அளவிடக்கூடாத வருமான ஸ்ரீ கிருஷ்ண பகவான் இடக் குழந்தையாக இருந்து செய்த மேலான செய்கைகளாகிய அமிருதத்தைப் பானஞ் செய்து, போதுமென்ற திருப்தியுண்டாகுமா? ஆனதால் அதனைச் சொல்லவேண்டும்" என்றார்.

4–11. அதனைக் கேட்ட சுகர் அரசனை நோக்கி, "யமுனையில் ஒருமடு இருந்தது. அதில் காளியனென்ற ஸர்ப்பம் வஸித்துக் கொண்டிருந்தது. அந்த ஸர்ப்பத்தின் விஷாக்கினியால் அந்த மடுவின் ஜலம் கொதித்துக் கொண்டிருந்தமையால், ஆகாயத்தில் பறக்கும் பறவைகளும் அந்த உஷ்ணத்தால் கீழே வீசும் அலைக் காற்றினால் அந்த மடுவின் கரையில் விழுகின்றன. மேலும் அந்த விஷ ஜலத்துளிகளுடன் மரம், கொடி,

செடி., முதலிய ஸ்தாவரங்களும், மிருகம் முதலிய ஜங்கமங்களும் நசித்து வந்தன. அப்பொழுது துஷ்டர்களைச் சிக்ஷிப்பதற்காக அவதரித்தவராகிய ஸ்ரீ கிருஷ்ணன், கொடுமையான விஷ வேகமுள்ள காளியனையும், அவனால் கெடுக்கப்பட்டிருக்கும் யமுனா நதியையும் பார்த்து அருகிலிருந்த மிகவும் உயரமான கடம்ப மரத்தின் மீதேறி, இடுப்பிலுள்ள வஸ்திரம் முதலியவைகளைக் கெட்டியாக இறுக்கி கட்டிக் கொண்டு, ஒரு கையை மற்றொரு கையால் அடித்து (கைகொட்டி) அந்த விஷ ஜலமுள்ள மடுவில் குதித்தார்.

புருஷர்களுக்குட் சிறந்தவராகிய ஸ்ரீ கிருஷ்ணன் குதித்த வேகத்தால் அந்த மடுவிலிருந்த ஸர்ப்பங்கள் விஷவேகத்துடன் பெருமூச்சு விட்டன. அதனால் ஜலம் உயரக்கிளம்பியது; மேலும் அந்த மடுவில் விஷாக்னியால் கொதித்தும், பயங்கரமாயுமுள்ள அலைகளுண்டானதால் ஜலம் கரையின் மேல் நூறு விற்கடை தூரம் பரவியது; அதிகப்பலமுள்ள ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு இது பெரிதல்ல. இப்படி மத யானை போன்ற பலமுள்ள ஸ்ரீ கிருஷ்ணபகவான் அந்த மடுவில் கைகளால் ஜலத்தை அடித்து நீந்திக் கொண்டு விளையாடினார். அப்பொழுது அந்தச் சப்தத்தைக் கேட்ட காளியனென்ற ஸர்ப்பமானது தன்னுடைய வீட்டுக்கு நேர்ந்த அவமானத்தைப் பார்த்து அதனை ஸஹியாமல் மேலே கிளம்பியது. (அப்பொழுது) மிக்க அழகுள்ளவரும், மிருதுவான சரீரமுள்ளவரும், மேகம் போன்ற காந்தியுள்ளவரும், பீதாம்பரத்தைத் தரித்தவரும், ஸ்ரீ வத்ஸத்தால் அலங்கரிக்கப்பட்டவரும், புன்சிரிப்புள்ள அழகிய

முகமுள்ளவரும், தாமரை மலரின் நடுபோன்ற பாதங்களுள்ளவரும், பயமற்று விளையாடிக் கொண்டிருப்பவருமான ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய ஸமீபத்தில், அந்தக் காளியனென்ற ஸர்ப்பஞ்சென்று அவருடைய மர்மஸ்தானங்களில் கடித்துத்தன்னுடலால் அவரைச்சுற்றிக்கொண்டது. இப்படி ஸர்ப்பத்தின் உடலால் சுற்றப்பட்டு அசையாமலிருக்கும் ஸ்ரீ கிருஷ்ண பகவானைப்பார்த்த கோபர்கள் மிகவும் வருத்தமடைந்தார்கள். மேலுமவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனையே அந்தரங்கத் தோழனாக நினைத்தவர் களானதாலும், தங்களுடைய சரீரம், மித்திரர்கள், பொருள், களத்திரம், ஆசை ஆகிய இவைகளை ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் ஸமர்ப்பித்தவர்களானதாலும், துக்கத்தாலும் (மனவருத்தம்), சோகத்தாலும் (அழுவது), பயத்தாலும் புத்தி மயங்கினவர்களாகியப் பூமியில் விழுந்தார்கள். அப்பொழுது பசுக்களும், விருஷபங் களும், கன்றுகளும் துக்கத்தால் கதறிக்கொண்டு விசேஷ பயத்தை அடைந்து, ஸ்ரீ கிருஷ்ணையே பார்த்துக் கொண்டு அழுகின்றவை போல நின்றன.

12–22. அப்பொழுது கோகுலத்திலும், பூமியிலும், ஆகாயத்திலும், சரீரத்திலும் அதிபயங்கரமான முவ்வகையான அபசகுனங்கள் காணப்பட்டன. அந்த உத்பாதங்களால் பயம் ஸமீபத்தில் வரப்போகிறதென்று காட்டப்பட்டது. அப்பொழுது நந்தன் முதலிய கோபர்கள் அந்த உத்பாதங்களைக் கண்டு, "பலராமனை விட்டுத்தனியாக ஸ்ரீ கிருஷ்ணன் பசுக்களை ஓட்டிக் கொண்டு வனத்திற்குப் போயிருக்கிறார்" என்பதை யறிந்து, ஸ்ரீ கிருஷ்ணனுடைய மஹிமையை அறியாத வர்களாகையால், "ஸ்ரீகருஷ்ணன் மரணமடைந்தார்"

எனறு நிச்சயஞ் செய்து கொண்டார்கள். மேலும், அவர்கள் கிருஷ்ணனையே நினைத்து, அவரையே தங்கள் ப்ராணனாகப்பாவித்துத் துக்கம், சோகம், பயம், இவைகளை அடைந்தார்கள். பின்னும் வயது சென்றவர்கள், சிறுவர்கள், ஸ்திரீகள் முதலிய எல்லோரும் பசுக்கள் போல ஸ்ரீகிருஷ்ணனைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையுடன் தீனர்களாகிக் கோகுலத்திலிருந்து புறப்பட்டார்கள். இப்படி பயந்து துக்கிக்கும் கோபர்களைப் பார்த்து, ரோஹிணீயின் புத்திரராகிய பலராமன் தம்பியின் மஹிமையை அறிந்தவராகையால் சிரித்துக் கொண்டு மௌனமாக இருந்தார். அந்தக் கோபர்கள் தங்களுக்குப் ப்ரீதி பாத்திரனாகிய ஸ்ரீ கிருஷ்ணனைத் தேடிக்கொண்டு உத்தம புருஷ லக்ஷணங்களுள்ள அவருடைய காலடிகளைப் பார்த்து அந்த வழியாகச் சென்று யமுனையின் கரைக்குச் சென்றார்கள்.

பின்னுமவர்கள் அந்த மார்க்கத்தில் மற்ற கோபர்களுடைய காலடிகளின் இடையில் தாமரைப்பூ, யவம், அங்குசம், அசணி, துவஜம் முதலிய அடையாளங்களுள்ள ஸ்ரீ கிருஷ்ணனுடைய காலடி களைக் கண்டு, அதன் வழியே சீக்கிரமாகச் சென்று காளியனுடைய மடுவிற்கு வந்தார்கள். அவ்விடத்தில் ஜலத்தில் ஸர்ப்பத்தின் உடலால் சுற்றப்பட்டு அசைவற்று இருக்கும் ஸ்ரீ கிருஷ்ணனையும், அதனைப் பார்த்து மூர்ச்சையடைந்திருக்கும் கோபகுமாரர்களை யும், அருகில் நின்று கதறுகின்ற பசுக்களையும் பார்த்து மிகவும் வருத்தத்தையடைந்தார்கள். அப்பொழுது கோபஸ்திரீகள் அனந்தனாகிய பகவானிடத்தில் பிரியமுள்ளவர்களாகையால் அவர்

தங்களிடத்தில் வைத்திருக்கும் ஸ்நேஹத்தையும், அவருடைய சிரிப்பையும், பார்வையையும், வார்த்தை யையும், நினைத்து அப்படிப்பட்ட கிருஷ்ணன் ஸர்ப்பத்தால் சுற்றப்பட்டிருப்பதையும் பார்த்து மிகுந்த வருத்தத்தையடைந்து, கிருஷ்ணனில்லாத இம்மூவுலகத்தையும் சூன்யமாகப் பார்த்தார்கள். மேலுமவர்கள் கிருஷ்ணனுக்கு கெடுதி நேரிட்டதென்று துக்கபடும் யசோதையினிடம் வந்து, அவளுக்கு சமமான வருத்தமுள்ளவர்களாகிக் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு மிகவும் பயத்துடன் ஸ்ரீ கிருஷ்ணனுடைய முகத்தையே பார்த்துக் கொண்டு, கிருஷ்ணனுடைய சரிதத்தையே சொல்லிக் கொண்டு, பிரக்ஞையற்றவர் களாக இருந்தார்கள். அப்பொழுது நந்தன் முதலியவர்கள் கிருஷ்ணனையே பிராணனாக பாவித்தவர்களாகை யால் அந்த மடுவில் இறங்குவதற்கு யத்தனித்தார்கள். அதனைக்கண்ட பலராமன் கிருஷ்ணனுடைய மஹிமையை அறிந்தவராகையால் மடுவில் இறங்க வேண்டாமென்று கோபர்களைத் தடுத்தார்.

23–32. அந்தச் ஸமயத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் சிறுவர்கள், ஸ்திரீகள் முதலிய கோகுலத்தில் வஸிப்ப வர்கள் எல்லோரும் தமக்காகத் துக்கப்படுவதையும், தம்மையே கதியென்று நினைத்திருப்பதையும் அறிந்து மனிதர்களின் ஸ்வபாவத்தை அனுஸரித்து ஒரு முஹூர்த்தம் ஸர்ப்பத்தால் சுற்றப்பட்டிருந்து, பின்பு தம்முடைய சரீரத்தைப் பருக்கச் செய்து, அதிலிருந்து மேலே கிளம்பினார். ஸ்ரீகிருஷ்ணனுடைய சரீரமானது விருத்தியடையும்பொழுது அந்தக் காளியன் மிகுந்த சிரமத்தையடைந்து, ஸ்ரீ கிருஷ்ணனை விட்டு விட்டு கோபத்துடன் படங்களைத் தூக்கிக்கொண்டும், மூக்கின்

வழியாக விஷத்தைக் கக்கிக்கொண்டும், மழுபோன்ற கண்களுடனும், கொள்ளிக்கட்டை போன்ற முகத்துடனும் கிருஷ்ணனைப் பார்த்துக் கோண்டே நின்றது. இப்படி இரண்டாகப் பிளந்த நாக்கினால் இரண்டு கடைவாய்களை நக்கிக்கொண்டு உக்கிரமான விஷாக்கினியுள்ள கண்களுடன் கூடியதுமான அந்த ஸர்ப்பத்தின் மீது ஏறுவதற்கு ஸமயம் பார்த்துக் கிருஷ்ணன் கருடன் போல் அதனைச் சுற்றி விளை யாடினார். சுற்றுவதால் காளியனுக்கு தேஹத்தில் பலம் குறைந்தது. அந்த ஸமயத்தில் எல்லாவற்றிற்கும் முந்தியவராகிய கிருஷ்ணன் உயரமான தோள்களுள்ள அந்தக் காளியன் மீதேறி நர்த்தனஞ்செய்தார்.

அவருடைய தாமரை மலர்போன்ற பாதமானது காளியனுடைய தலையிலிருக்கும் ரத்தினங்களுடைய காந்தியால் மிக்க சிவப்பாகவிருந்தது. எல்லா வித்தைகளுக்கும் குருவாகிய கிருஷ்ணன் அசைந்து கொண்டிருக்கும் அந்த ஸர்ப்பத்தின் தலைகளிலும் நர்த்தனஞ்செய்தார். இப்படிக் கிருஷ்ணன் நர்த்தனம் செய்ய யத்தனிக்கும்பொழுது கந்தர்வர்கள், ஸித்தர்கள், சாரணர்கள், மஹரிஷிகள், தேவஸ்திரீகள் ஆகிய இவர்கள புஷ்பமாரி பெய்து, மிருதங்கம், பணவம், ஆனகம் முதலிய வாத்தியங்களுடன், ஸ்ரீ கிருஷ்ணனு டைய ஸமீபஞ்சென்று வாத்தியங்களை முழக்கினது மன்றிப் பாடினார்கள். துஷ்டர்களைச் சிக்ஷிப்பவரான ஸ்ரீகிருஷ்ணன் காளியனுடைய முக்கிய அங்கங்களான எல்லாத் தலைகளிலும் ஏறி எந்தத்தலை வணங்க வில்லையோ; அதனைக்காலால் மிதித்துக் கொண்டு விளையாடினார். அப்பொழுது காளியன் வாயினாலும் மூக்கினாலும் ரத்தத்தைக் கக்கிக்கொண்டு உயிர்

துறக்கும் படியான அவஸ்தையையடைந்தான். பின்னுமந்தக் காளியன் கோபத்தால் பெருமூச்சு விட்டுக் கண்களால் விஷத்தைக் கக்கிக்கொண்டு எந்தத் தலைகளை உயரத்தூக்க எத்தனித்தானோ, அந்தந்த தலைகளை புராண புருஷராகிய கிருஷ்ணன் புஷ்பங்களால் புஜிக்கப்பட்டவர் போல காலால் உதைத்து வணங்கச் செய்துகொண்டு தாண்டவம் ஆடிக்கொண்டு, அவனை அடக்கினார். (புஷ்பங்களால் பூஜிக்கப்பட்ட பகவான் க்ஷேமத்தைக் கொடுப்பது போல காளியனுடைய மதத்தையடக்கினார் என்பது கருத்து) ஓ பரீக்ஷித்து அரசனே! இப்படிப் பகவான் அற்புதமாக நர்த்தனஞ் செய்ததால் குடைபோன்ற ஸர்ப்பத்தின் படங்கள் நசுக்கப்பட்டன. அதன் உடல் முறிந்தது. முகத்திலிருந்து ரத்தம், வெளிப்பட்டது.

அவ்வளவு அவஸ்தையை அடைந்த ஸர்ப்பமானது தன்தலையில் நர்த்தனஞ் செய்பவரைப் புராணபுருஷ ரென்றும் ஸ்தாவர ஜங்கமங்களுக்குக் காரணரென்றும், நாராயணனென்றும் நினைத்து மனத்தால் அவரைச் சரணமடைந்தது. ஸகல லோகங்களையும் வயிற்றில் வைத்துக் கொண்டிருக்கும் கிருஷ்ணனுடைய பாரத்தைத் தாங்காமல் வருத்தப்படுபவனும் அவருடைய காலால் மிதிக்கப்பட்டு நசுங்கிய படங்களையுடைய வனுமான காளியனையும் அவன் மீது ஏறி நர்த்தனஞ் செய்யும் கிருஷ்ணனையும் பார்த்துக் காளியனுடைய பத்தினிகள் வஸ்திரம், ஆபரணம், தலைமுடிச்சு இவைகள் நழுவியவர்களாக ஸ்ரீ கிருஷ்ணனிடம் வந்தார்கள். பின்னுமவர்கள் மனங்கலங்கினவர்களாகித் தங்கள் குழந்தைகளை முன்னிட்டு இருகைகளையும் கூப்பிக்கொண்டு தங்கள் புருஷனை விடுவித்துக்

கொள்வதற்காகச் சரீரத்தைப் பூமியில் கிடத்தி, எல்லாருக்கும் அதிபதியும், காப்பாற்றுகிறவருமான கிருஷ்ணனைச் சரணமடைந்து பின்வருமாறு துதித்தார்கள்.

33–53. துஷ்டர்களைச் சிக்ஷிப்பதற்காக நீர் அவதரித்தவராகையால் அக்கிரமஞ் செய்த இந்தக் காளியனை நீர் சிக்ஷித்தது நியாயமேயாம். மேலும் நீர் சத்துருக்களையும், புத்திரர்களையும், ஸமமாகப் பார்ப்பவர்; அதனால் துஷ்டர்களைச் சிக்ஷிப்பதே தர்மம் என்று ஆலோசித்துச் சிக்ஷிக்கிறீர். (சிக்ஷிப்பது ப்ரதிகூலமென்று அந்த ஸமயத்தில் தோன்றினாலும் பிந்தியகாலத்தில் அது ஹிதத்தைச் செய்வதால் அதுவும் அனுகூலமென்று நினைத்தே நீர் சிக்ஷிக்கிறீர் என்று கருத்து.) உம்மால் செய்யப்பட்ட சிக்ஷையானது எங்களுக்கு அனுக்கிரஹமேயொழிய வேறில்லை. நீர் யாரை சிக்ஷிக்கிறீரோ அவனுக்குப் பாபம் நிவர்த்தி யாகிறது. இந்தக் காளியனுக்கு ஸர்ப்ப ஜன்மத்தை யுண்டுபண்ணிய பாபமானது இப்பொழுது நிவர்த்தியாகி விட்டது. ஆனதால் உம்முடைய கோபம் எங்களுக்கு அனுக்கிரஹமாகிறது. எங்களுடைய பர்த்தாவாகிய இந்தக் காளியன் முன் ஜன்மத்தில் அஹங்காரமற்ற வராகி எவ்விதத் தபஸ் செய்தாரோ, அல்லது ஸகல பிராணிகளிடத்திலும் தயை செய்வதாகிய தர்மத்தை யனுஷ்டித்தாரோ, எல்லாவற்றையும் ஜீவிக்கச் செய்பவரான நீர் அந்த தபஸ்ஸாலும், தர்மத்தாலும் ஸந்தோஷத்தை அடைகிறீர். உம்முடைய பாதத்தில் ஒட்டிய தூளியின் ஸ்பர்சம் மிகவும் துர்லபம். அந்தப் பாததூளிக்காக லக்ஷ்மீதேவி மிக்க நியமங்களுடன் ஸகல ஆசைகளையும் ஒழித்து வெகுநாள் தபஸ்

செய்தாள். அப்படிப்பட்ட உம்முடைய பாததூளி இந்தக் காளியனுக்கு எந்த புண்யத்தின் மஹிமையால் கிடைத்ததோ தெரியவில்லை. மேலும் உம்முடைய பாததூளியை அடைந்தவர்கள் சக்கரவர்த்தியாக இருக்கவேண்டுமென்றாவது, ஸ்வர்க்க ராஜ்யத்தையாவது ப்ரஹ்ம பட்டத்தையாவது, கீழுலகங்களுக்கு அதிபதியாக இருப்பதையாவது, யோகஸித்திகளையாவது, மோஷத்தையாவது விரும்பமாட்டார்கள். ஸம்ஸார சக்கரத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் ஜீவன், உம்முடைய பாததூளியை விரும்பினானாகில் உடனே அவனுக்கு இஷ்டமான ஸம்பத்து கிடைக்கிறது.

ஆனதால், இந்த ஸர்ப்பராஜன், தமோ குணமுள்ளவரானாலும், கோப ஸ்வாவமுள்ளவரானாலும், மற்றவர்களால் அடையமுடியாததான அந்தப் பாததூளியை அடைந்தார். ஸகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாக வஸிப்பவரும், காலத்தாலும், தேசத்தாலும் அளவிடக் கூடாதவரும், ஆகாசம் முதலிய பூதங்களுக்கும் ஆச்ரயமாக இருப்பவரும், எல்லாவற்றிற்கும் முன்னிருப்பவரும், எல்லாவற்றிற்கும் காரணரும், காரணங்களைவிட மேலானவரும், மனத்தால் எண்ண முடியாத ஜ்ச்வர்யம் முதலிய குணங்களுள்ளவருமான உமக்கு நமஸ்காரம். மேலும் நீர் ஞானம் சித்சக்தி ஆகிய இவைகள் நிறைந்தவர்; ப்ரஹ்மம்; குணங்களற்றவர்; விகாரமற்றவர்; ப்ரகிருதியை ப்ரவர்த்திக்கச் செய்பவர்; ப்ரகிருதி ஸம்பந்தமற்ற அளவில்லாத சக்தியுள்ளவர்; (குணங்களற்றிருப்பதால் ப்ரஹ்மம்; ஞான ஸ்வரூபமாகையால் காரணாதீதமும், ப்ரகிருதியை ப்ரவர்த்திக்கும்படி செய்யும் அனந்த சக்தி உள்ளவர் ஆகையால், காரணமாகவிருப்பவரென்று கருத்து)

பின்னும் நீர் காலஸ்வரூபி; காலசக்திக்கு ஆச்ரயமாக விருப்பவர்; ஸிருஷ்டி முதலிய ஸமயங்களுக்கு ஸாக்ஷியாகவிருப்பவர்; ஜகத்ஸ்வருபியாக இருப்பவர்; அதற்கு ஸாக்ஷியாகவிருப்பவர்; அதனைப் படைத்தவர்; அதற்குக் காரணமாக இருப்பவர்; ஐந்து பூதங்கள், தன் மாத்திரைகள், இந்திரியங்கள், ப்ராணன், மனம், புத்தி சித்தம் இவைகளின் ஸ்வரூபமாகவிருப்பவர்; முக்குணங்களின் காரியமான அகங்காரமுள்ளவர்களும், தம்முடைய அம்சமாக இருப்பவர்களுமான ஜீவர்களுடைய அனுபவமுள்ளவர்; அபிமானமற்றவர்; ஸூக்ஷ்மர்; கூடஸ்தர் (உபாதியின் விகாரமற்றவர்); எல்லாவற்றையும், அறிந்தவர்; இருக்கிறார் இல்லை; ஸம்ஸாரி, ஸம்ஸாரமற்றவர்; ஒருவர், அநேகர் என்று பலவகையான வாதங்களை அனுஸரிப்பவர்; (மாயையால் என்று கருத்து) சப்தம், பொருள் ஆகிய இவைகளின் சக்தியுள்ளவர்; இந்திரியங்களுக்கும் காரணமாகவிருப்பவர். அவைகளைத்தாம் அபேக்ஷிக்காதவர்; ரிக்வேதம் முதலிய சாஸ்திரங்களையுண்டு பண்ணினவர்; ப்ரவிருத்தி தர்ம ஸ்வரூபி; நிவிருத்தி தர்ம ஸ்வருபி; ஸகல வேத ஸ்ருபியும், அப்படிப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணனும், பலராம ஸ்வரூபியும், வஸுதேவருடைய புத்திரரும், ப்ரத்யும்ன ஸ்வருபியும், அனிருத்தரும், பக்தர்களைக் காப்பாற்றுகிறவருமாகிய உமக்கு நமஸ்காரம். பின்னும் நீர் அந்தக்கரணம் முதலியவைகளைப் ப்ரகாசிக்கச் செய்பவர்; அந்தக் கரணம் முதலியவைகளால் தம்மை மறைத்துக்கொண்டு கொண்டு ப்ராகாசிப்பவர்; சித்தம், புத்தி முதலியவைகளின் விருத்திகளான சைதன்யம், நிச்சயம், முதலியவைகளால் காட்டக்கூடியவர்; (அவைகளுக்கு ஸாக்ஷியாகவிருப்பவரென்று கருத்து.) ஒன்றுக்கும்

விஷயமாகாதவர்; இப்படிப்பட்டதென்று ஊஹிக்க முடியாத மஹிமையுள்ளவர்; ஆனாலும் ஸகல ப்ரபஞ்சத்திற்குள் இருந்து அவைகளைப் ப்ரகாசிக்கச் செய்வதால் ஊஹிக்கக் கூடியவர்; இந்திரியங்களை ப்ரவர்த்திக்கச் செய்பவர்; ஆத்மாவில் ரமிப்பவர்; ஆத்மாவில் ரமிப்பதையே ஸ்வபாவமாகக் கொண்டவர்; (அப்படிப்பட்ட ஸாதனத்தை யனுஷ்டித்தவரல்லவென்று கருத்து.) ஸ்தூல ஸூக்ஷ்மங்களின் ஸ்வரூபத்தை அறிந்தவர்; (அவைகளில் அபிமானமற்றவரென்று கருத்து); எல்லாவற்றிற்கும் அத்யக்ஷர்; ஜகத்தின் ஸம்பந்தமற்றவர்; ஜகத்தாக மாறுகிறதற்கு அதிஷ்டான மாயுள்ளவர்; அவர்களுக்கு ஸாக்ஷியாக இருப்பவர்; காரணர்; ஓ ப்ரபுவே! இந்த லோகத்தைப் படைப்பது, ஸம்ரக்ஷிப்பது, நாசஞ்செய்வது ஆகிய இவைகளை நீர் அபிமானவற்றவராகி கால சக்தியைத் தரித்து, மாயையால் செய்தீர்.

ஓ அமோகமான விளையாட்டுள்ளவரே! நீர் பார்வையால் அவர்களுடைய ஸ்வபாவங்களை ப்ரகாசட் படுத்திக்கொண்டு விளையாடுகிறீர். அப்படிப்பட்ட உமக்கு மூவுலகத்திலிருக்கும் ஸாதுக்களும், மூடர்களும் சரீரங்களேயாம். ஸாதுக்கள் சாந்த சரீரங்கள், மூடர்கள் அசாந்த சரீரங்கள்; தர்மத்தைப் பரிபாலனம் செய்வதற்கும், ஸாதுக்களைக் காப்பாற்றுவதற்காகவும் அவதரித்தவராகிய உமக்கு, சாந்தங்களான சரீரங்கள் பிரியமானவைகள். ஆனதால் எங்களுடைய பார்த்தா வாகிய காளியன் உம்முடைய ப்ரஜையல்லவா? ஓ சாந்தமான ரூபமுள்ளவரே! உம்முடைய ஸ்வரூபத்தை யறியாத உம்முடைய குழந்தையான இந்த ஸர்ப்பராஜனால் செய்யப்பட்ட ஒரு குற்றத்தை மன்னிக்க

வேண்டும். ஓ பகவன்! இந்த ஸர்ப்பராஜன் ப்ராணாவஸ்தையை அடைந்திருக்கிறார். பரிதபிக்கக்கூடிய ஸ்திரீகளான எங்களுக்கு ப்ராணனாகிய பார்த்தாவைக் கொடுத்து எங்களை அனுக்ரஹிக்கவேண்டும். (துஷ்டர்களை அனுக்கிரஹித்தால் பிறருக்கு உபத்திரவத்தைச் செய்வார்களென்று நினைக்கவேண்டாம்.) உம்முடைய வேலைக்காரிகளான நாங்கள் எதனைச் சிரத்தையுடன் அனுஷ்டித்தால் பயமற்றுச் சஞ்சரிப்போமோ அதனையுபதேசியும்" என்று பிரார்த்தித்தார்கள்.

54–59. இப்படி நாகபத்தினிகளால் துதிக்கப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணபகவான் தம்முடைய பாதத்தால் மிதிக்கப்பட்டு நசுங்கியிருக்கும் தலைகளுள்ள காளியனை விட்டுவிட்டார். அப்பொழுது காளியன் இந்திரிய பலத்தை அடைந்து பெருமூச்சுவிட்டு, அஞ்சலிபந்தம் செய்து, ஸ்ரீ கிருஷ்ணனை நோக்கி, "நாங்கள் துஷ்டர்கள், தமோ குணத்தை முக்கியமாகக் கொண்டவர்கள்; பிறக்கும்போதே மிகுந்த கோபமுள்ளவர்கள் ஆனதால் பிராணிகளுக்குச் சரீரத்தில் அபிமானத்தை யுண்டு பண்ணும் ஸ்வபாவமானது கெட்டதானாலும், அது விடமுடியாதல்லவா? ஓ எல்லாவற்றையும் காப்பாற்றுபவரே! இந்த ஜகத் முழுவதும் பல வகையான ஸ்வபாவமுள்ளதானலும், அநேக விதமான பராக்கிரமம், இருப்பிடம், காரணம், மனது இவைகளுள்ளதாகவும் மாயையால் பலவகையாக உம்மால் ஸிருஷ்டிக்கப்பட்டது. அந்த ஜகத்திற்குள்ள டங்கிய ஸர்ப்பங்களாகிய நாங்கள் மிகுந்த கோபமுள்ள ஜாதிகள். உம்முடைய மாயையால் மோஹித்தவர்கள்; ஆனதால் நிவர்த்திக்க முடியாத உம்முடைய அனுக்கிரஹத்தால் அந்த மாயையை ஜயிக்கவேண்டும்.

ஆனதால் எங்களுக்கு அனுக்கிரஹத்தையாவது சிக்ஷையையாவது உம்முடைய இஷ்டப்படி செய்யும்" என்று சொன்னான்.

60–63. அதனைக்கேட்ட மனித வடிவங்கொண்ட ஸ்ரீ கிருஷ்ண பகவான் அந்த ஸர்ப்பத்தை நோக்கி, "ஓ ஸர்ப்பமே! நீ இனி இவ்விடத்தில் வஸிக்கக்கூடாது. உன்னுடைய பந்துக்கள், குழந்தைகள், ஸ்திரீகள் ஆகிய இவர்களுடன் ஸமுத்திரத்திற்குப் போக வேண்டும். இந்த மடுவின் ஜலமானது பசுக்களுக்கும், மனிதர்களுக்கும், உபயோகப்படட்டும்; தாமதிக்க வேண்டாம்; உனக்கு என்னால் செய்யப்பட்ட இந்த உத்தரவை எவன் நினைக்கிறானோ, எவன் இரண்டு ஸந்தியா காலங்களிலும். இதைச் சொல்லுகிறானோ, அவனுக்கு ஸர்ப்ப பயம் இல்லாமலிருக்கட்டும். எவன் இந்த மடுவில் ஸ்நானஞ் செய்து தேவதைகளுக்கும். பிதுருக்களுக்கும் தர்ப்பணம் செய்கிறானோ, எவன் இதில் ஸ்நானஞ் செய்து உபவாஸமிருந்து இந்தக் கதைகளை நினைத்துக்கொண்டு தேவர்களைப் பூஜிக்கிறானோ அவனுடைய ஸகல பாபங்களும் நிவர்த்தியாகின்றன. நீ கருடனிடத்தில் பயந்து உன்னுடைய ரமணகம் என்ற த்வீபத்தை விட்டு இந்த மடுவுக்கு வந்தவனல்லவா? இப்பொழுது என்னுடைய பாதத்தால் நீ அடையாளமிடப்பட்டவனாதலால், கருடன் உன்னைப்பூஜிக்கமாட்டார்" என்று சொன்னார்.

64–68. அத்புதமான சரிதங்களுள்ள ஸ்ரீ கிருஷ்ணனால் இப்படி அனுக்ரஹிக்கப்பட்ட அந்த ஸர்ப்ப ராஜன் தன்னுடைய பத்தினிகளுடன் மிகுந்த ஆதரவோடு ஸந்தோஷமாக உயர்ந்த வஸ்திரத்தாலும்

மாலைகளாலும், ரத்னங்களாலும், ஆபரணங்களாலும், சந்தனங்களாலும், தாமரை மாலையாலும், பூஜித்து ஜகத்பதியான கிருஷ்ணனுக்கு நல்ல வார்த்தை சொல்லிப் பிரதக்ஷிணஞ் செய்து நமஸ்கரித்து, அவரிடம் விடைபெற்று ஸ்திரீகளுடனும், புத்திரர்களுடனும், ஸ்நேஹிதர்களுடனும், ஸமுத்திரத்தின் தீவுக்குச் சென்றான். விளையாட்டாக மனித வடிவங்கொண்ட பகவானுடைய அனுக்கிரஹத்தால் அன்றைய தினமே யமுனை விக்ஷமில்லாத அமிருதம் போன்ற ஜலமுள்ளதாக ஆயிற்று.

நோட்டு.

கடம்பமரத்தின்– காளியனுடைய விஷவேகத்தால் ஸமீபத்திலுள்ள மரங்களும், கொடிகளும், எரிந்து போயிருக்க, இந்தக் கடம்பமரம் மாத்திரம் எப்படி ஜீவித்திருந்தது, என்றால், ஸ்ரீகிருஷ்ணனுடைய பாத ஸ்பர்சம் கிடைக்கத்தக்க அதிருஷ்டம் இருந்ததால் ஜீவித்திருந்தது. ஸ்ரீ த. ஸ்ரீ கருட பகவான் தேவலோகத்திலிருந்து அமிருதக் குடத்தைக் கொண்டு வரும்பொழுது இந்த மரத்தின் மீது உட்கார்ந்தார். அந்த அமிருத ஸம்பந்தம் பெற்றதால் மரம் பட்டுப் போகாமலிருந்தது என்று கூறுவர். சிலர் பூமியிலும்– பூமி அசைவது முதலியவை பூமியிலுண்டாகும் உத்பாதங்கள். குறைக்கொள்ளிவிழுவது முதலியவை ஆகாயத்திலிருந்து உண்டானவை. இடது கண் துடிப்பது முதலியவை சரீரத்திலுண்டானவை.– ஸ்ரீ த. பசுக்கள் போல– பசுக்களுக்குக் கன்றுகளிடத்தில் அதிகப் ப்ரீதியுண்டு. காலடிகளின் இடையில் மூலத்தில் கவாம் என்ற பதமிருப்பதால் யோகிகள்

வேதத்தின் மார்க்கமாகக் சென்று இதல்ல, இதல்ல வென்று உபாதிகளைத் தள்ளிப் பகவானுடைய ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்வதுபோல கோபர்களுடைய காலடிகளுடன் சேர்ந்திருக்கும் பகவானுடைய காலடிகளைப் பார்த்து அந்த லக்ஷணங்களால் இதல்ல, இதல்லவென்று கோபர்களுடைய அடிவைப்பைத் தள்ளிப் பகவானுடைய காலடியைத் தெரிந்துகொண்டு அதன் வழி சென்றார்கள் என்று கருத்து– **ஸ்ரீதரீயம்.** காளியனுடைய பத்தினிகள் 33வது ச்லோகம் முதல் ஆறு ச்லோகங்களால் பகவான் செய்த சிக்ஷை ஸரியானதென்று சொல்லிப்பிந்திய 10 ச்லோகங்களால் ஸ்ரீ கிருஷ்ணனை ஸ்தோத்திரஞ்செய்து, பிந்திய 5– ச்லோகங்களால் ப்ரார்த்தித்தார்கள். ஸகல பிராணி களிடத்திலும்– இது முதல் 10 ச்லோகங்களால் யாரைச் சரணடையக்கூடுமோ, அவருடைய குணங்கள் நிரூபிக்கப்படுகின்றன. சரண்யனுடைய குணங்கள் அண்டினவர்களுடைய காரியத்தை முடிக்கத் தக்கவைகள், ஆச்ரயிக்கத் தகுதியானவைகளென்று இருவகைகளுள்ளன. மூலத்தில் பூதாய, பராய, பரமாத்மனே என்றிருப்பதால் எல்லாவற்றிற்கும் மேலானவராக இருப்பதாகிய பரத்வம் காட்டப்பட்டது. எவர் ஈச்வரனோ, எவர் அழிவற்றவரோ, எவர் மூவுலகங்களிலும் வ்யாபித்திருக்கிறாரோ, அவரே உத்தம புருஷன். அவரே பரமாத்மாவென்று சொல்லப் படுகிறார்; இப்படி எல்லாவற்றிற்கும் மேலானவராக இருந்தாலும் சுலபரென்பது ஸகல பிராணிகளிடத் திலும் வஸிக்கிறார் என்பதால் காட்டப்பட்டது. இதனால் பக்தர்கள் ஆச்ரயிக்கச் சௌகரியமான பரத்வம், சௌலப்யம் முதலிய குணங்கள் பகவானிடத்திலிருக்கின்றனவென்று விளங்குகிறது.

அண்டினவர்களுடைய கெடுதியை நிவர்த்திக்கும் உபாயத்தையறிந்திருப்பதாகிய ஞானம். அவர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்யத்தக்க உபாயத்தை யறிந்திருப்பதாகிய விஜ்ஞானம், சேர்க்க முடியாததைச் சேர்க்கும் ஸாமர்த்யமாகிய சக்தி, எல்லோருக்கும் சேஷி(யஜமானன்) யாகவிருப்பது, ஸ்ரீ, காமம் முதலிய ஆறு குணங்களுள்ளவராக இருப்பது, முதலிய குணங்கள், ஞான விஜ்ஞான நிதியே, என்பதால் காட்டப்பட்டது. இதனால் அண்டினவர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்பவரென்று ஸ்பஷ்டமாக விளங்குகிறது. காலசக்திக்கு–எல்லாவற்றிற்கும் காலம் காரணமானாலும் தனியே காரணமல்லவென்று கருத்து. பயமற்று ஸஞ்சரிப்போமோ– எதனைச் செய்வதால் கருடனுடைய பயமற்று, காளியன் ஸஞ்சரிப்பாரோ வீரராகவீயம். இந்த அத்தியாய மானது விஜய்த்வஜீய வ்யாக்யானத்துடனிருக்கும் புஸ்தகத்தில் 14வது அத்தியாயமாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது.

அத்தியாயம்–17

காளியன் யமுனையில் வஸித்த காரணம்.

அதனைக்கேட்ட அரசன் சுகரை நோக்கி "ஸர்ப்பங்களுக்கு வாஸஸ்தலமாகிய ரமணகமென்ற த்வீபத்தை விட்டுக், காளியன் -யமுனையின் மடுவிற்கு வந்த காரணமென்ன? அந்த ஒரு ஸர்ப்பம் மாத்திரம் கருடனுக்கு என்ன அபராதஞ் செய்தது" என்று கேட்டார்.

2–18. அதைக்கேட்ட சுகர் அரசனை நோக்கி "ஓ மிகுந்த பராக்கிரமமுள்ளவரே! கருடனால் பக்ஷிக்கக் கூடிய ஸர்ப்பங்கள் தங்களைக் காப்பாற்றுபவரான கருடனுக்குத் தங்களில் ஒவ்வொருவரும் மாஸத்திலும் பர்வதினத்தில் ஒவ்வொரு ஸர்ப்பத்தை ஒருமரத்தின் அடியில் பலியாகக் கொடுக்கிறோமென்று ஒப்புக் கொண்டு நடத்திவந்தன. இந்தக் காளியனென்ற ஸர்ப்பம் மிகுந்த விஷ வீர்யமுள்ளதாகையால் அந்த மதத்தால் கருடனை லக்ஷ்யஞ்செய்யாமல் (தான் கருடனுக்கு பலியைக் கொடுக்காமலும்) பிறரால் கொடுக்கப்படும் பலியைத் தானே புஜித்து வந்தது. பகவானிடத்தில் பக்தியுள்ளவராகிய கருடன் அதனைக் கேட்டு கோபங்கொண்டு காளியனை கொல்வதற்கு மிகுந்த வேகமாக ஓடிவந்தார். பயங்கரமாகிய நாக்குள்ளவனும், விஷம், பற்கள், ஆகிய இவைகளை ஆயுதங்களாகக் கொண்டவனுமாகிய அந்த காளியன் கருடனைக்கண்டு தன்னுடைய அநேக படங்களை தூக்கிக்கொண்டும், கொடிய கண்களை விழித்துக் கொண்டும் கருடனை விஷப்பற்களால் கடித்தான்.

மிகுந்த வேகமுள்ளவரும், உக்கிரமான பராக்கிரமுள்ளவரும், ஸ்ரீமந் நாராயணனுக்கு வாஹனமுமாகிய கருடன் காளியனை அதட்டித் தங்க வர்ணமுள்ள தம்முடைய வலது இறக்கையால் அடித்தார். இப்படி கருடனுடைய இறக்கையால் அடிக்கப்பட்டுக் காளியன் மிக்க வருத்தமடைந்து இந்த யமுனையின் மடுவிற்கு வந்தார். இது கருடன் வரக்கூடாத ஸ்தலம். ஏனென்றால் முன்னொருக்கால் கருடன் இந்த மடுவிலுள்ள மீன்களில் ஒன்றை எடுத்துக்கொண்டார். அப்பொழுது ஸௌபரியென்பவர் அந்த மத்ஸ்யத்தை விட்டு விடும்படி சொல்லியும், கருடன் மிக்கப் பசியுள்ளவராகவிருந்தபடியால் அவருடைய வார்த்தையை லக்ஷ்யஞ்செய்யாமல் அதனை புஜித்தார். அப்பொழுது மத்ஸ்யங்களுக்கு அரசனாகிய மத்ஸ்யத்தை கருடன் புஜித்ததால் மற்ற மத்ஸ்யங்கள் துக்கப்படுவதைக் கண்டு ஸௌபரி என்பவர் அவைகளுக்கு க்ஷேமத்தைச் செய்ய விரும்பி கிருபையுடன் இனி கருடன் இந்த மடுவில் வந்து மத்ஸயங்களை புஜித்தால் உடனே மரணமடைவான்; ஸத்யமாகச் சொல்லுகிறேன்" என்று சபித்தார்.

இந்த ஸமாசாரம் காளியனுக்கு மாத்திரம் தெரியும்; மற்ற ஸர்பங்களுக்குத் தெரியாது. அதனால் காளியன் கருடனிடத்தில் பயந்து யமுனையின் மடுவில் வஸித்தான். அவனை ஸ்ரீ கிருஷ்ணபகவான் வெளியில் துரத்தினார். ஸ்ரீ கிருஷ்ணன் திவ்யமான மாலை, சந்தனம், வஸ்திரம், உத்தமமான ரத்தினங்கள், ஸுவர்ணம் ஆகிய இவைகளால் அலங்கரிக்கப்பட்டவராகி மடுவிலிருந்து கரைக்கு வந்தார். அவரைக் கண்டு எல்லா கோபர்களும் திரும்பிவந்த பிராணனைக்

கண்ட இந்திரியங்கள் போல எழுந்திருந்து மிகுந்த ஸந்தோஷத்தால் அசைவற்றவராகி அதிகப் பிரியத்தை அடைந்தார்கள். இப்படிக் கோபர்களும் யசோதை, ரோஹிணீ, நந்தர், மற்ற கோபர்கள், கோபிகைகள் ஆகிய இவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனைக் கண்டவுடன் எழுந்திருந்த பூர்ண மனோரதமுள்ளவர்களானார்கள். ஸ்ரீ கிருஷ்ணனுடைய மஹிமையை அறிந்த பலராமன் ஸ்ரீ கிருஷ்ணனை ஆலிங்கணஞ் செய்துகொண்டு சிரித்தார். பசுக்களும், விருக்ஷபங்களும் மிகுந்த ஆனந்தத்தை அடைந்தன. முன் உலர்ந்து போயிருந்த மரங்களும் தளிர்த்தன. நந்தருடைய குருக்களான ப்ராஹ்மணர்கள் தங்கள் தங்கள் ஸ்திரீகளுடன் 'ஓ நந்த காளியனால் பிடிக்கப்பட்ட உம்முடைய புத்திரன் தைவச்செயலால் க்ஷேமத்தை அடைந்தான்' என்று சொன்னார்கள். விசேஷ அதிருஷ்டமுள்ள வளான யசோதை ஸர்பத்தினிடமிருந்து திரும்பி வந்தவராகிய ஸ்ரீ கிருஷ்ணனை தழுவி மடியில் வைத்து ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கினாள்.

19–25. அப்போழுது ஸூர்யன் அஸ்தமனத்தை அடைந்தார். அதனால் ஸ்ரீ கிருஷ்ணன் யசோதை, நந்தர், மற்ற கோபர்கள், பலராமர், பசுக்கள் ஆகிய இவைகளுடன் அன்றைய ராத்திரி அந்த யமுனையின் கரையில் வஸித்தார். ஓ அரசர்களுக்குட் சிறந்தவரே! இப்படி கோபர்கள் பசியாலும், தாஹத்தாலும், ச்ரமத் தாலும் வருத்தமடைந்து அவ்விடத்தில் வஸித்தார்கள். அவர்கள் எல்லோரும் நித்திரை செய்யும்பொழுது காட்டுத்தீ பற்றிக்கொண்டது. கோபர்களைச் சுற்றி எரிய ஆரம்பித்தது. அந்த அக்னியின் உஷ்ணத்தால் அவர்கள் விழித்துக் கொண்டு மாயையால் மனித

வடிவங் கொண்டவராகிய ஸ்ரீகிருஷ்ணனை நோக்கி "ஓ கிருஷ்ண! கிருஷ்ண! அதிகப் பராக்கிரமுள்ள ஓ பலராம! உங்களை சார்ந்தவர்களாகிய எங்களை மிக்க கொடிய இந்த அக்னி புஜிக்கிறது; ஓ ப்ரபுவே, பயமற்றதாகிய உம்முடைய பாதத்தை ஒருபொழுதும் விடமாட்டோம். ஆனதால் உமக்குத் தோழர்களும், பந்துக்களுமான எங்களை இந்த மிருத்யு போன்ற அக்னியிலிருந்து காப்பாற்றும் என்று சொல்லி சரணமடைந்தார்கள். ஜகத்திற்கு அதிபதியாகிய ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய பந்துக்களுக்கு நேர்ந்த ஆபத்தைப் பார்த்து அளவிடக்கூடாத மஹிமையுள்ள வரானதால் அந்த அக்னியைப் பானஞ்செய்தார் (குடித்தார்).

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–18

ப்ரலம்பாஸுர வதம்.

பின்பு மறுநாள் காலையில் ஸ்ரீ கிருஷ்ணன் கோகுலஞ் சென்றார். அவருடைய பந்துக்கள் ஸந்தோஷத்துடன் கிருஷ்ணனுடைய சரிதங்களை கானம் செய்துகொண்டும், அவரைச் சுற்றிக் கொண்டும் சென்றார்கள். பசுக்களும் பகவானைச் சுற்றிக்கொண்டு போயின. இப்படி ஸ்ரீ கிருஷ்ணனும், பலராமனும் மாயையால் கோப (இடையர்கள்) வடிவங்கொண்டு கோகுலத்தில் விளையாடினார்கள். அப்பொழுது க்ரீஷ்மம் (கோடைக்காலம், ஆனி, ஆடி, மாஸங்கள்) வந்தது. அது பிராணிகளுக்கு அதிக ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியதல்ல. ஆனாலும் அந்தக் காலமானது ஸ்ரீ கிருஷ்ணனும் பலராமனும் அவ்விடத்தில் வஸிப்பதால் வஸந்தகாலம் (சித்திரை, வைகாசி) போலிருந்தது.

எப்படியென்றால், கோடைக்காலம் ஆனாலும் மலையாறுகளின் ஜலம் வற்றாமல் ஓடிக்கொண்டிருந் தமையால் அதன் சப்தத்தால் ஜல்லியென்ற பிராணிகளின் கொடிய சப்தம் அடங்கியிருந்தது மேலும் அந்த மலையருவிகளுடைய ஜலத் துளிகளின் ஸம்பந்தத்தால் கொழுத்த மரங்களால் அழகாக விருந்தது. பின்னும் அந்த வனத்தில் ஆறுகள் குளங்கள் ஆகியவைகளின் அலைக்காற்று தாமரைமலர், நீலோத்பலம் முதிலியவைகளின் தூளியுடன் வீசிற்று அதனாலும், எங்கும் பசும்புல் தரைகளாகவிருப்பதாலும், வெயிலுடைய தாபமும் காட்டுத்தீயின் உபத்திரவமும்

உண்டாகவில்லை. அந்த வனத்திலுள்ள ஆழமான குளங்களில் ஜலம் பூர்ணமாகவிருப்பதால் அதன் அல்லக் காற்று விஷம்போல உக்கிரமானவைகளானாலும் அந்த பூமியிலுள்ள ஜலத்தை கிரஹிக்க முடியவில்லை புல்தரைகளைக் காயச் செய்யவில்லை. ஆனதால் பிருந்தாவனத்திலுள்ள மரங்கள் எல்லாம் புஷ்பித்தி ருந்தன. பலவகையான மிருகங்களும் பறவைகளும் சப்தித்துக் கொண்டிருந்தன. மயில்களும், வண்டுகளும் பாடிக்கொண்டிருந்தன. குயில்களும், ஸாரஸபக்ஷிகளும் சப்தித்தன. ஆனதால் அந்த வனம் அழகாகவிருந்தது. அப்படிப்பட்ட வனத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் விளையாடு வதற்கு பலராமனுடனும், கோபர்களுடனும் பசுக்களை முன்னடத்திப் புல்லாங்குழல் ஊதிக்கொண்டு சென்றார். அவ்விடத்தில் ராமன், கிருஷ்ணன் முதலிய கோபர்கள் தளிர், மயில் தோகை, பூங்கொத்து, மாலைகள், தாதுக்கள் ஆகிய இவைகளால் அலங்கரித்துக்கொண்டு நர்த்தனஞ் செய்தார்கள்.

யுத்தஞ்செய்தார்கள்; பாடினார்கள்; ஸ்ரீகிருஷ்ணன் நர்த்தனஞ்செய்யும்பொழுது சிலர் பாடினர்; சிலர் வாத்தியங்களை முழங்கினார்கள்; சிலர் புல்லாங் குழலை ஊதியும், சிலர் கொம்புகளை ஊதியும், சிலர் கரத்தாலும் ச்லாகித்தார்கள். இடையர்களுடைய ஜாதியில் இடையர்களாக ஜனித்திருக்கும் தேவர்கள், வேஷதாரிகள் மாறு வேஷங்கொண்டவனை துதித்தார் போல் ஸ்ரீ கிருஷ்ணனையும், பலராமனையும் துதித்தார்கள். ஜில்பாக்களால் அலங்கரிக்கப்பட்ட அவ்விருவர்களும் சுற்றுவது, தாண்டுவது ஒருவனை யொருவன் தூக்கிப்போடுவது, தட்டிக்கொடுப்பது, இழுப்பது, முஷ்டியுத்தஞ் செய்வது ஆகிய இவைகளை

செய்துக்கொண்டு விளையாடினார்கள். இன்னும் இந்த ராமகிருஷ்ணர்களிருவர்களும் மற்றவர்கள் நர்த்தனஞ் செய்யும்பொழுது தாங்கள் பாடிக்கொண்டு வாத்தியங்களை முழக்கிக்கொண்டும், நன்றாகவிருக்கிறது, நன்றாகவிருக்கிறது எனக்கொண்டாடிக்கொண்டுமிருந் தார்கள். சிலஸமயம் அவ்விருவர்களும் கும்படமென்ற மரத்தின் பழங்களாலும், வில்வப் பழங்களாலும், நெல்லிக்கனிகளாலும், முஷ்டிகளாலும் மற்றொருவன் தன்னைப்பிடிக்க முடியாமல் ஓடுவதாலும், கண்களைக் கட்டிக்கொள்வது முதலியவைகளாலும், மிருகங்கள் போலவும், பறவைகள் போலவும், சேஷ்டிப்பதனால் சில ஸமயம் தவளைகள் போல் தத்தி நடப்பதாலும், பரிஹாசம் பண்ணிக்கொள்வதாலும், ஊஞ்சல் ஆடுவ தாலும், அரசனைப்போல் நடப்பதாலும், லோகத்தில் வழங்கி வருகிறபடி ஆறுகளிலும், மலைகளிலும், காடுகளிலும், ஓடைகளிலும் விளையாடினார்கள்.

இப்படி ராமகிருஷ்ணர்கள் இருவர்களும் கோபர்களுடன் பசுக்களை மேய்த்து வரும்பொழுது ப்ரலம்பன் என்ற ஒரு அஸுரன் ஒரு இடையனாக வேஷந்தரித்து அவர்களைக் கொல்வதற்காக அந்த கூட்டத்தில் சேர்ந்தான். எல்லாவற்றையும் அறிந்த ஸ்ரீ கிருஷ்ணன் ராக்ஷஸன் வந்திருப்பதையறிந்திருந்தும், அவனை கொல்வதற்காக மற்றவர்களிடம் போல் அவரிடத்திலும் அன்பைக் காண்பித்தார். அப்பொழுது பகவான் எல்லாக் கோபர்களையும் அழைத்து. "வயதிற்கும் பலத்திற்கும் தக்கபடி இரண்டு இரண்டு பேர்களாக சேர்ந்து விளையாடுவோம்" என்று சொன்னார். அதைக்கேட்ட கோபர்கள் பலராமனையும் கிருஷ்ணனையும் ஒவ்வொரு கக்ஷிக்கும் தலைவர்களாக

ஏற்படுத்திக் கொண்டு, சிலர் கிருஷ்ணனுடைய பக்ஷத்திலும், சிலர் பலராமனுடைய பக்ஷத்திலுமாக இருந்தார்கள். இப்படி இரண்டு இரண்டு பேர்களாக விளையாட்டுச் சண்டை செய்வதில் ஜயித்தவர்களை அபஜயமடைந்தவர்கள் தூக்கினார்கள். இப்படி அவர் களெல்லோரும் ஒரு ஸமயம் ஜயித்து வாஹனத்தின் மீதேறியும், மற்றொரு சமயம் அபஜயத்தையடைந்து தான் வாஹனமாக விருந்துக்கொண்டும், மாடுகளை மேய்த்துக்கொண்டும் பாண்டீரகமென்ற ஆலமரத்திற்கு சென்றார்கள்.

ராமனுடைய பக்ஷத்திலிருந்த ஸ்ரீதாமன், விருஷபன் முதலியவர்களும், அப்படியே ஸ்ரீதாமா என்பவனுடன் கிருஷ்ணன், யுத்தஞ்செய்து அபஜயமடைந்த படியால், கிருஷ்ணன் அவர்களை தூக்கினார். பத்ரஸேனனென் பவன் விருஷபனென்பவனைத் தூக்கினான். கோப வேஷங் கொண்டிருக்கும் ப்ரலம்பனென்ற அஸுரன் பலராமனைத் தூக்கினான். அப்போழுது அந்த ப்ரலம்பன் எந்த ஸ்தலம் வரையில் தூக்கிக் கொண்டு போகவேண்டுமோ அந்த இடத்தைத் தாண்டி வெகு வேகமாகப் பலராமனைத் தூக்கிச்சென்றான் ஏனென்றால் கிருஷ்ணன் ஸமீபத்திலிருந்தால் பலராமனை ஜயிப்பது கஷ்டம்.

20–32. இப்படி அஸுரன் ஓடும்பொழுது அவன் அதனால் கண்ணுக்குப் புலப்படாமல் வெகுதூரம் கொண்டு போவோம் என்று வேகமாக ஓடினான். தோள் மீதிருந்த பலராமன்மலைபோல் பாரமாக ஆனபடியால் அவனால் சுமக்க முடியாமல் அவன் வேகமானது குறைந்தது. மேலுமவன் ஸ்வர்ணத்தால்

அலங்கரிக்கபட்டிருக்கும் தன்னுடைய அஸுர சரீரத்தை எடுத்துக்கொண்டான். அந்த சரீரமானது மின்னல்களுடன் கூடிய மேகம் சந்திரனை தூக்கினாற் போல விளங்கியது. பின்னும் அந்த சரீரமானது ஆகாயத்தில் ஸஞ்சரித்துக் கொண்டும், ஜ்வலிக்கும் கண்களாலும், புருவங்களாலும் பயங்கரமான சிங்கப் பற்களாலும், ப்ரகாசிக்கும் தலைமயிர்களாலும், கீரீட குண்டலங்களுடைய காந்திகளாலும் அத்புதமாக விருந்தது. அதனைக்கண்டு பலராமன் கொஞ்சம் பயந்தார் பின்பு தம்முடைய ஸ்வருபத்தை நினைத்துக் கொண்டு தம்மை ஆகாய மார்க்கமாகத் தூக்கிக் கொண்டு போகும் சத்துருவை மிகுந்த கோபத்துடன் தலையில் முஷ்டியாலடித்தார்.

அது இந்திரன் மலையை வஜ்ஜிரத்தால் அடித்தது போலிருந்தது. இப்படிப் பலராமனுடைய முஷ்டியால் அடிக்கப்பட்ட அந்த அஸுரன் தலை யுடைந்து, வாயினால் ரத்தத்தைக் கக்கிக்கொண்டு, ப்ரக்ஞையற்றுக் கதறிக்கொண்டு பூமியில் விழுந்து உயிரை விட்டான். அது இந்திரனுடைய ஆயுதத்தால் அடிபட்டு மலைவிழுந்தாற் போலிருந்தது. நல்லவன் போல கோப வேஷங்கொண்டிருந்த ப்ரலம்பாஸுரனை மிக்க பலமுள்ளவராகிய பலராமன் கொன்றதைப் பார்த்து கோபர்கள் மிகவும் ஆச்சர்யத்தை அடைந்து ச்லாகிக்கத் தக்கவராகிய பலராமனை ஸரணமடைந்து ப்ரியத்துடன் ஆசீர்வதித்தார்கள். மிக்க பாபியான ப்ரலம்பனுடைய வதத்தைப் பார்த்துத் தேவர்கள் மிகுந்த ஸுகத்தை அடைந்து பலராமன் மீது புஷ்பமாரி பெய்து நல்ல காரியத்தைச் செய்தீர், நல்ல காரியத்தைச் செய்தீர் என்று சொன்னார்கள்.

அத்தியாயம்–19

ஸ்ரீகிருஷ்ணன் பந்துக்களைக் காட்டுத்தியிலிருந்து காப்பாற்றியது

1–5. கோபர்கள் விளையாட்டில் ஞாபகமுள்ள வர்களாக இருந்தபொழுது, பசுக்கள் புற்களின் மீதுள்ள ஆசையினால் வெகுதூரம் தங்களிஷ்டப்படி சென்று புதருள்ள ஒரு காட்டிற்குச் சென்றன. அது மிஞ்சிப் புல்லுள்ள வனம் (ஊஹாம் புல்காடு என்று சிலர் சொல்வார்கள்). அப்பொழுது அவ்விடத்தில் காட்டுத் தீ பற்றிக்கொண்டிருந்ததனால் அவ்விடஞ் சென்ற ஆடுகளும், பசுக்களும், தாஹத்தை அடைந்து கதறின. பின்பு ராமன், கிருஷ்ணன் முதலிய கோபர்களெல் லோரும் பசுக்களைக் காணாமல் பச்சாத்தாபமடைந்து, பசுக்கள் சென்றவிடத்தைத் தேடினார்கள். மேலும் அவர்கள், தங்களுடைய ஜீவனத்துக்குக் காரணமான பசுக்கள் காணாமற் போனதால் பிரக்ஞையற்றுப் பசுக்களுடைய காலடிகளாலும் நசுக்கப்பட்ட புல் தரைகளாலும், பற்களால் கடிக்கப்பட்ட திருணங் களாலும் இதுதான் பசுக்கள் சென்ற மார்க்கமென்று தெரிந்துகொண்டு அந்த வழியே சென்றார்கள். ஆனாலும், மிஞ்சிப்புல் காட்டில் வழி தெரியாமல் கதறிக்கொண்டிருக்கும் பசுக்களைக் கண்டுபிடிக்காம லேயே களைப்படைந்து, தாஹமுள்ளவர்களாகித் திரும்பிவராமல் அலைந்து கொண்டிருந்தார்கள்.

6–11. அப்பொழுது மேகம்போன்ற கருத்த திரு மேனியுள்ள ஸ்ரீகிருஷ்ணன் உயரமான ஒரு மரத்தின் மீதேறி அந்தப் பசுக்களின் பெயரைச்சொல்லி உரக்க

அழைத்தார். மேக கர்ஜ்ஜனை போன்ற கிருஷ்ணனுடைய சப்தத்தைக் கேட்டுப் பசுக்கள் மிகுந்த சந்தோஷத்துடன் பதில் கத்தின. இந்தச் சமயத்தில் நாலு பக்கமும் காட்டுத்தீ பற்றிக்கொண்டது. அதற்கு அனுகூலமாகக் காற்றும் வீசியது அந்த பெரியதான அக்னியானது ஸ்தாவரம், ஜங்கமம் முதலிய பிராணிகளை நாசஞ்செய்யத் தொடங்கிற்று. அதனைக் கண்டு கோபர்களும் பசுக்களும் பயந்தன. கோபர்கள் கிருஷ்ணனை நோக்கி, "ஓ கிருஷ்ண! கிருஷ்ண! மிகுந்த பராக்கிரமமுள்ள ஓ பலராம! காட்டுத் தீயினால் எரிக்கப்பட்டு உம்மைச் சரணமடையும் எங்களைக் காப்பபாற்றும். ஸகல தர்மத்தையுமறிந்த ஓ கிருஷ்ண! நாங்கள் உம்மையே நாதனாகக் கொண்டவர்கள்; உம்மிடத்திலேயே பிரியமுள்ளவர்கள்; ஆனதால் உம்முடைய பந்துக்கள் நாசமடைவது தகுதியல்ல" என்று சரணமடைந்தார்கள். அது மிருத்யு பயத்தால் ஜனங்கள் ஸ்ரீமந் நாராயணனைச் சரணமடைவது போலிருந்தது.

12–17. ஸ்ரீ கிருஷ்ண பகவான் பந்துக்களுடைய தீனமான வார்த்தையைக் கேட்டுப் பயப்படவேண்டாம் கண்களை மூடிக்கொள்ளுங்கள்" என்று சொன்னார். அதனைக்கேட்டு எல்லோரும் கண்களை மூடிக் கொண்டார்கள். கோபிகைகளுக்கு அதிபதியான ஸ்ரீ கிருஷ்ணன் அந்த அக்கினியைத் தாம் பானஞ்செய்து பந்துக்களைக் காப்பற்றினார். பிறகு அவர்கள் கண்களை விழித்துப் பார்க்கையில் பாண்டீர வனத்தில் தாங்களிருப்பதாகத் தெரிந்துகொண்டு, மிகவும் ஆச்சர்யமடைந்தார்கள். பின்னுமவர்கள் கிருஷ்ணனுடைய யோக மஹிமையையும், யோக மாயையால்

காட்டுத்தீயிலிருந்து தாங்கள் தப்பிப் பிழைத்ததையும் பார்த்து ஸ்ரீ கிருஷ்ணனை தேவனென்று நினைத்து, ஸ்தோத்திரஞ் செய்தார்கள். அப்படிப்பட்ட கிருஷ்ணன் பலராமனுடன் ஸாயங்காலத்தில் பசுக்களைத் திருப்பி ஓட்டிக்கொண்டும், வேணுகானஞ் செய்துகொண்டும் கோகுலஞ் சென்றார்கள். கோபஸ்திரீகள் பகலில் ஸ்ரீ கிருஷ்ணனைப் பாராமல் ஒவ்வொரு க்ஷணத்தையும் நூறு யுகங்கள் போல கழித்து வந்தவர்களாகையால் ஸாயங்காலத்தில் அந்தப் பகவானைப் பார்த்து மிகுந்த ஆனந்தத்தை அடைந்தார்கள்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–20

மழைகாலத்தின் வர்ணனை

ஸ்ரீ கிருஷ்ணன் காட்டுத்தீயிலிருந்து தங்களைக் காப்பாற்றியது, பலராமன் ப்ரலம்பாஸுரனைக் கொன்றது முதலிய அற்புதமான ஸமாசாரத்தைக் கோபர்கள் தங்கள் தங்கள் ஸ்திரீகளுக்குச் சொன்னார்கள். அதனைக்கேட்ட வயதுசென்ற கோபர்களும், ஸ்திரீகளும் ஆச்சர்யப்பட்டுச் சிறந்த தேவர்களே ராமகிருஷ்ணர்களாக கோகுலத்தில் அவதரித்திருக்கிறார்கள் என்று நினைத்தார்கள்.

3–31. பிறகு வர்ஷாகாலம் நேர்ந்தது. அது ஸகல பிராணிகளும் உண்டாகக் கூடிய காலம். ஆகாயமானது கலங்கிற்று. சந்திரன் ஸூர்யன் இவைகளைச் சுற்றி கோட்டையுண்டாயிற்று. மேலும் மின்னல், கர்ஜனம், இவைகளுடன் கூடிய கறுத்த மேகங்களால் இடைவிடாமல் மறைக்கப்பட்ட ஆகாயமானது ஸத்வம் முதலிய குணங்களால் மறைக்கப்பட்டு வெளிப்படாத தேஜஸ்ஸுள்ள ப்ரஹ்மம்போல் விளங்கிற்று. ஸூர்யன் எட்டுமாஸ காலமாக பூமியிலிருந்து தம்மால் எடுத்துக் கொள்ளப்பட்ட ஜலமாகிய பணத்தை ஜனங்களுக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டிய ஸமயம் வந்தபொழுது அந்த ஜலத்தைப் பூமியல் வர்ஷிப்பதற்கு ஆரம்பித்தார். இயற்கையில் கருணையுள்ள ஜனங்கள் பிறர் துக்கப் படுவதைப் பார்த்து ஸஹியாமல் அவர்களுக்காகத் தங்களுயிரையும் எப்படி விட்டு விடுகிறார்களோ, அப்படி காற்று, மின்னல் இவைகளுடன் கூடிய பெரிய மேகங்கள் லோகத்திற்கு க்ஷேமத்தைச் செய்யும்

ஜலத்தை வர்ஷித்தன. ஏதோ ஒரு வஸ்துவையடை வதற்காகத் தபஸ் செய்து இளைத்த சரீரமுள்ளவனுக்கு இஷ்டம் பூர்த்தியானபின் எப்படி சரீரம் பருக்குமோ அதுபோலக் கோடை காலத்தால் உலர்ந்துப் போன பூமியானது மேகங்கள் மழைபெய்தவுடன் பருத்தது. கலியுகத்தில் பாபத்தால் ப்ராஹ்மணர்கள் எப்படி பிரகாசிக்கிறார்களோ அப்படி ஸாயங்காலத்தில் மின் மினிப்பூச்சிகள் இருட்டினால் பிராகாசித்தன. கலி யுகத்தில் வேதங்கள் எப்படி விளங்குகிறதில்லையோ அதுபோல் சந்திரன் முதலிய கிரஹங்கள் பிராகாசிக்க வில்லை. ஆசார்யன் நித்ய கர்மங்களை முடித்துப் படிக்கலாமென்று சொன்னவுடன் சிஷ்யர்கள் எப்படி அத்யயனஞ் செய்கிறார்களோ, அப்படி முந்தி மௌனமாக விருந்த தவளைகள் மேகத்தின் சப்தத்தைக் கேட்டுக் கத்தின.

இந்திரியங்களுக்கு ஸ்வாதீனனாகிய சாஸ்திரத்தைக் கடந்த புருஷனுடைய ஸம்பத்துக்கள் விருத்தியடைவது போல, கோடை காலத்தில் ஜலமில்லாமலிருந்த அற்ப நதிகள் கரை புரண்டு சென்றன (பாபிகளுடைய ஸம்பத்தானது நிலையற்றதென்று காட்டப்பட்டது) அரசர்களுடைய சேனையானது, பச்சைநிறம், பொன்னிறம், இவைகளுள்ள வஸ்திரங்களால் எப்படி விசித்திரமாக இருக்குமோ, அதுபோல் பூமியானது இளம்புற்களால், பச்சை நிறமுள்ளதாகவும், இந்திர கோபங்களால் (மழைகாலத்தில் ஆகாயத்திலிருந்து விழும் சிவந்த நிறமுள்ள பட்டுப்பூச்சிகள்) சிவந்த நிறமுள்ளவைகளாகவும் நிலைவாழைப்பூக்களுடைய காந்தியுள்ளதாகவும் இருந்தது. மழையால் விருத்தியடையும் பயிர்களால் நிறைந்த வயல்கள்

பயிரிட்டவர்களுக்கு ஸந்தோஷத்தையுண்டுபண்ணினை. மேலும் அவரவர்களுடைய அதிருஷ்டத்துக்குத் தக்க படி பலன் கிடைக்கிறது என்பதையறியாமல் வீணில் அஹங்காரமடைந்தவர்கள், பச்சாதாபத்தையடைந்தார் கள். ஸ்ரீமந் நாராயணனை ஸேவிப்பவர்கள் எப்படி அழகான சரீரத்தையடைகிறார்களோ, அதுபோல ஜலத்தில் ஸஞ்சரிக்கும் பிராணிகளும் ஸ்தலத்தில் வஸிக்கும் ஜந்துக்களும் புதிதான மழை ஜலத்தை யடைந்து அழகான ஸ்வரூபத்தையடைந்தன. விஷயங்களில் மூழ்கினதும், பலவகையான காமனை யுள்ளதுமான, குணங்களுள்ளதுமான புருஷனுடைய மனமானது யோக பரிபாகமில்லாததினால் எப்படி கலங்குமோ, அப்படி ஸமுத்திரமானது அநேக நதிகளுடன் சேர்ந்து காற்றினாலுண்டு பண்ணப்பட்ட அலைகளுடன் மேலுங்கீழுமாக கலங்கிற்று.

பகவானிடத்திலேயே மனத்தைச் செலுத்தியவர்கள் எவ்வளவு துக்கங்கள் நேர்ந்தாலும் எப்படி வருத்தமடையார்களோ, அதுபோல மழையினுடைய தாரைகளால் அடிக்கப்பட்டும் மலைகளும் அசைய வில்லை (பகவானிடத்தில் பக்திசெய்வதே ஸகல பாபத்தையும் போக்கக்கூடியது என்பது கருத்து) காலத்தின் மஹிமையால் வேதங்களைப் பிராமணர்கள் அத்தியயனஞ் செய்யாததால் அவைகள் ஒளிந்து போனாற்போல மழைக்காலத்தில் வழி நடப்பவர்கள் இல்லாததால் வழிகள் புற்களால் மூடப்பட்டு இது வழியோ அல்லவோ என்று ஸந்தேகிக்கக் கூடியவை களாகவிருந்தன. (வேதத்தை அத்தியயனம் செய்தவர்கள் எப்பொழுதும் அதைப்படித்து கொண்டிருக்க வேண்டு மென்பது காட்டப்பட்டது) நற்குணங்கள் பொருந்திய

புருஷர்களிடத்தில், ஸ்திரீகள எப்படி ஸ்திரமாக ப்ரியப்படுகிறதில்லையோ, அதுபோல லோகோப காரிகளான மேகங்களிடத்தில் மின்னல்கள் ஸ்வல்ப காலமிருந்தன. (ஸ்திரீகளிடத்தில் மிகுந்த பிரீதிவைக்க கூடாது என்பது காட்டப்பட்டது) ஸப்தமாகிய குணமுள்ள ஆகாயத்தில் நாண் கயிறு இல்லாத இந்திர வில்லானது, ஸத்வம் முதலிய குணங்களுடைய ஸம்பந்தத்தால் ஏற்பட்ட ஜகத்தில் குணஸம்பந்தமற்ற பரமாத்மா வஸிப்பது போல் விளங்கிற்று. ஜீவன் நான் வித்துவான், கொடுப்பவன், சூரன் என்ற அஹங் காரத்தை தன்னிடத்தில் ஏற்படுத்திக் கொண்டு சரீரம் முதலியவைகளை தானென்று நினைத்து அஹங் காரத்தால் மறைக்கப்பட்டு, சரீரம் முதலியவைகளைக் காட்டிலும் தாம் வேறாக எப்படிப் பிரகாசிக்கவில்லை யோ, அப்படி சந்திரன் தன்னுடைய கிரணங்களால் பிரகாசிக்கும் மேகங்களால் மறைக்கப்பட்டிருந்தான். ஸம்ஸாரத்திலிருந்து கஷ்டப்பட்டு நிர்வேதத்தையடைந்த ஜனங்கள் பகவத் பக்தர்களைக் கண்டமாத்திரத்தில் எப்படி ஆனந்தப்படுவார்களோ, அப்படி மயில்கள் மேகங்களைக் கண்டு ஸந்தோஷத்தையடைந்தன.

பசி தாஹங்களை ஸஹித்து தபஸ் செய்தவர்கள் இஷ்டத்தையடைந்த பிறகு எப்படிப் பருத்த சரீர முள்ளவர்களாக ஆகிறார்களோ, அதுபோல மரங்கள் வேர்களால் மழை ஜலத்தைக் குடித்துவிட்டுத் தளிர்த்துப் புஷ்பித்துப் பலித்தன. விஷய ஸுகத்தில் ஆசைக் கொண்ட கிராம்ய ஜனங்கள் ஓய்வில்லாமல் பலவகையான காரியங்களைச் செய்துகொண்டு கிரஹஸ்தாச்ரமத்திலிருப்பது போல, ஸாரஸ பக்ஷிகள் சேறு, முள் இவைகளுள்ள குளக்கரையில் வஸிக்கின்றன.

கிராம்ய ஜனங்கள் விஷயத்தில் ஆசையுள்ளவர்கள்; அல்ப ஸுகத்தை விரும்பியுவர்களென்று காட்டப் பட்டது) கலியுகத்தில் பாஷண்ட தூர்வாதத்தால் ஆச்ரம தர்மங்கள் கெட்டுப்போவதுபோல பர்ஜன்யன் மழையைப் பெய்யும்பொழுது ஆறு, குளங்கள் இவைகளுடைய கரைகள் உடைந்தன. அரசர்கள் புரோஹிதருடைய உபதேசத்தால் உசிதமான காலங்களில் யாசகர்களுக்கு அவரவர்களிஷ்டப்படும் வஸ்துக்களை எப்படிக் கொடுக்கிறார்களோ, அப்படி காற்றினால் தூண்டப்பட்ட மேகங்கள் பிராணிகளுக்கு ஜலத்தைக் கொடுத்தன. (அரசர்கள் இப்படி நடக்க வேண்டுமென்று காட்டப்பட்டது) அந்த மழைகாலத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் பலராமனுடனும், கோபர்களுடனும் விளையாடுவதற்காக வனத்திற்குச் சென்றார். அந்த வனமானது பேரீச்சம்பழம் முதலியவைகளால் நிறைந்திருந்தது.

பருத்தமடியின் பாரத்தால் மிருதுவாக நடக்கும் பசுக்களும் ஸ்ரீ கிருஷ்ணனால் அழைக்கப்பட்டு பால் பெருக்குடன் வேகமாக சென்றன; வனத்திலுள்ள ஸகல பிராணிகளும் ஸந்தோஷமாக இருந்தன. வனங்கள் பழம் தேன் முதலியவைகளால் பூர்ணங் களாகவிருந்தன. மலையில் மழை பெய்யும் பொழுது சப்தமுண்டாயிற்று. அநேக குஹைகளிருந்தன. அவைகளை ஸ்ரீ கிருஷ்ணன் பார்த்தார். மேலுமவர் மழை பெய்யும்பொழுது மரத்தினடியிலும் குகையிலும் வஸித்துக் கிழங்கு, வேர், பழம் ஆகியவை புஜித்துக் கொண்டு விளையாடினார். பின்னுமவர் வீட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட தயிரன்னத்தையும், பலவகையான ஊறுகாய்களையும் ஜலக்கரையில் கற்பாறையில்

வைத்துக்கொண்டு பலராமனுடனும் மற்ற கோபர் களுடனும் புஜித்தார். அப்பொழுது விருஷபங்களும், பருத்த கன்றுகளும் மடியின் பாரமுள்ள பசுக்களும் புற்றரையில் படுத்துக் கண்களை மூடிக்கொண்டு அசைப்போட்டுக்கொண்டிருந்தன. அந்த மழைகாலத் திய வேடிக்கை ஸகல பிராணிகளுக்கும் இன்பத்தைக் கொடுக்கக்கூடியதாக இருந்தது. அதனைப்பார்த்து ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய ஸங்கல்பத்தால் விருத்தியான வனத்தின் காந்தியை ச்லாகித்தார்.

32–49. இப்படிக் கோகுலத்தில் ஸ்ரீ கிருஷ்ணனும், ராமனும் வஸிக்கும்பொழுது சரத்காலம் (ஐப்பசி, கார்த்திகை) வந்தது. ஆகாசம் மேகங்களின் மறை வில்லாமல் சுத்தமாயிற்று; ஜலம் தெளிந்தது; கடுமை யான காற்று ஓழிந்தது; யோகத்தை அப்யஸித்து நடுவில் விக்கினத்தால் தடுக்கப்பட்டு யோகத்திலிருந்து நழுவியவர்களுடைய மனமானது திரும்பவும் யோகாப் யாஸஞ் செய்ததால் சுத்தமானாற் போல மழைக் காலத்தில் கலங்கியிருந்த ஜலம் சரத்காலம் வந்ததால் தெளிந்தது. மஹர்ஷிகள் ஆசைகளை யொழித்து சாந்தர்களாகி பாடமற்றவர்களாக எப்படி பிரகாசிக்கிறார் களோ, அதுபோல மேகங்கள் தங்களுடைய சொத்தாகிய ஜலம் முழுவதையும் கொடுத்து வெண்மை நிறத்துடன் ப்ரகாசித்தன. ஞானிகள் ஞானத்தை எப்படி சிலருக்கு உபதேசித்தும், சிலருக்கு உபதேசியாமலும் இருக்கிறார் களோ, அதுபோல மலைகள் சுத்தமான ஜலத்தை சிலவிடத்தில் பெருகவிட்டன. தரித்திரனும் குடும்பியும் இந்திரியங்களை ஜயிக்காதவனுமாகிய புருஷன் எப்படி தாபத்தையடைவானோ அப்படி ஸ்வல்ப ஜலத்தில் ஸஞ்சரிக்கும் மீன் முதலிய பிராணிகள் சரத்கால

வெய்யிலால் பயத்தையடைந்தன, ஆத்மஞானத்தை யடைந்த புத்தி மான்கள் சரீரத்திலும், புத்திரன் முதலியவர்களிடத்திலும், நான், என்னுடையது என்ற அஹங்காரத்தை எப்படி நாளடைவில் விட்டுவிடுவார் களோ, அதுபோலப் பூமி சேறில்லாமல் உலர்ந்தது. கொடிகளும் ஈரமில்லாமல் உலர்ந்தன மனத்தின் வியாபாரங்கள் அடங்கியபொழுது புருஷன் முடிவாகக் கர்மங்களை விட்டு எப்படி ஒழிவையடைகிறானோ, அப்படிச் சரத்காலம் வந்தவுடன் ஸமுத்திரமானது அசையாமலிருந்தது.

யோகிகள் இந்திரியங்களை வெளியிற் செல்ல விடாமல் தடுத்து ஞானத்தை எப்படி காப்பாற்றி கொள்ளுகிறார்களோ, அப்படி பயிரிடுவோர் கரைகளைக் கெட்டிசெய்து வயல்களில் ஜலத்தை கட்டினார்கள். ஞானமானது அஞ்ஞானத்தை எப்படி போக்கடிக்கிறதோ, ஸ்ரீ கிருஷ்ணன் கோபஸ்திரீகளுக்கு எப்படித் தாபத்தை நிவர்த்திக்கிறாரோ, அப்படி சரத் காலத்திய வெயிலின் உஷ்ணத்தைச் சந்திரன் போக்கடித்தார். ஆகாயமானது மேகங்களால் மறைக் கப்படாமல் நன்றாக பிரகாசிக்கும் நக்ஷத்திரங்களுடன் விளங்கிற்று. அது வேதங்களுடைய அர்த்தத்தை நன்றாயறிந்து ஸத்வ குணத்துடன் பிரகாசிக்கும் ஸாதுவின் மனம் போலிருந்தது. பூமியில் ஸ்ரீகிருஷ்ணன் விருஷ்ணி வம்சத்தார்களால் சூழப்பட்டிருப்பதுபோல ஆகாயத்தில் சந்திரன் நக்ஷத்திரங்களுடன் பிரகாசித்தார். கோபஸ்திரீகள் கிருஷ்ணனை மனத்தால் ஆலிங்கனம் செய்துக்கொண்டு ஸுகப்படுவது போல் ஜனங்கள் ஸமமான குளிர்ச்சி, உஷ்ணம், இவைகளுள்ள காட்டுக் காற்றையடைந்து ஸுகத்தை அடைந்தார்கள். பலனை

விரும்பாமல் பகவானை ஆராதித்தாலும் விரும்பாத பயன்கள் எப்படிக் கிடைக்கின்றனவோ, அப்படி பசுக்களும், மிருகங்களும், ஸ்திரீகளும் தங்கள் புருஷர்களை விரும்பாதிருந்தும் அவர்களால் பின் தொடரப்பட்டு சரத்காலத்தில் கர்ப்பத்தை அடைந்தார்கள். அரசனால் ஜனங்கள் எப்படி ஸுகப்படுகிறார்களோ, அப்படி ஸூர்யனைக்கண்டு தாமரை மலர்கள் மலர்ந்தன. அரசனைக்கண்டு திருடர்கள் எப்படி ஸந்தோஷிக்கிறதில்லையோ, அப்படி குமுதங்கள் ஸூர்யனைக் கண்டு மலரவில்லை.

பட்டணங்களிலும் கிராமங்களிலும் புதிய அன்னத்தை உண்பதற்காகச் செய்யும் ஆக்ராயணம் எனற வைதீக கர்மங்கள் நடந்தன. லௌகீகங்களான மஹோத்ஸவங்களும் நடந்தன. ராமகிருஷ்ணர்கள் பூமியில் வஸிப்பதால் எல்லாப் பயிர்களும் பலித்தது. அவைகளால் பூமி நிறைந்திருந்தது. வியாபாரிகள் சரத்காலம் வந்தவுடன் வியாபாரத்திற்கு வெளியில் சென்று லாபத்தை அடைந்தார்கள். ஸன்னியாஸிகள் மழைகாலத்தில் ஸஞ்சாரத்தையொழித்து சாதுர்மாஸ்ய விருதத்தை யநுஷ்டித்துச் சரத்காலம் வந்தவுடன் தங்களிஷ்டப்படி ஸஞ்சரிக்க ஆரம்பித்தார்கள். அரசர்கள் திக்விஜயத்திற்காகப புறப்பட்டார்கள். ஸநாதனர்கள் தேசாந்திரஞ் சென்று வித்தையை அப்யஸித்தார்கள்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம் 21

கோபிகைகள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதத்தை வர்ணித்தது.

1–6. சரத்காலம் வந்ததால் ஆறு குளங்களிலிருக்கும் ஜலம் தெளிந்தது. தாமரை மலரின் வாஸனையுடன் காற்று வீசிற்று. இந்தச் ஸமயத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் கோபர்களுடன் பசுக்களை ஓட்டிக் கொண்டு காட்டிற்குச் சென்றார். அந்தக் காட்டில் குளக்கரைகளிலும், ஆற்றங்கரைகளிலும், மற்ற விடங்களிலும் இருக்கும் மரங்களெல்லாம் புஷ்பித்திருந்தன. புஷ்பங்களின் தேனைக்குடித்து மதித்த வண்டுகளும், மற்றப்பறவைகளும் சப்தித்துக் கொண்டிருந்தன. அப்போர்ப்பட்ட வனத்தில் கோபர்களுடன் பசுக்களை மேய்த்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணன் புல்லாங் குழலை ஊதினார் (வேணு கானஞ் செய்தார்). அந்தச் சப்தத்தைக் கோகுலத்திலிருக்கும் கோபஸ்திரீகள் கேட்டு, காமவெறி கொண்டு தங்களுடைய தோழிகளை நோக்கி ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதத்தைச் சொல்ல ஆரம்பித்தார்கள். மேலுமவர்கள் மயில் தோகையைத் தலையில் வைத்துக் கொண்டவரும், கர்ணிகார புஷ்பத்தைக் காதுகளில் வைத்துக் கொண்டவரும், தங்கச் சரிகையுள்ள வஸ்திரத்தை உடுத்திக் கொண்ட வரும் வைஜயந்தி என்ற மாலையைத் தரித்தவரும் கோபர்களால் கானம் பண்ணப்பட்ட கீர்த்தியுள்ள வரும், நடன்போல வேஷந்தரித்தவரும், தம்முடைய பாதஸ்பர்சத்தால் பிருந்தாவனத்திற்கு அழகைச்செய்ட வரும், புல்லாங்குழலையெடுத்து அதன் த்வாரங்களை

உதட்டிலுள்ள அமிருதத்தால் பூர்த்திசெய்து கொண்டு கானஞ் செய்பவருமாகிய ஸ்ரீ கிருஷ்ணனைத் தியானஞ் செய்தார்கள் (துதித்தார்கள்.) அதனால் அவர்களுடைய மனம் மன்மத தாபத்தால் கலங்கியது. இப்படி கோகுலத்திலுள்ள ஸ்திரீகளெல்லோரும் ஸகல பிராணிகளின் மனத்தையும் அபகரிக்கக் கூடிய வேணு கானத்தைக் கேட்டு ஸ்ரீகிருஷ்ணனுடைய லீலையைப் பின் வருமாறு ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு ஆனந்தத்தை அடைந்தார்கள். (மனத்தால் கிருஷ்ணனை ஆலிங்கனஞ் செய்து கொண்டார்களென்பது கருத்து.)

7. எப்படியென்றால், "ஓ தோழிகளே! கோபர்களுடன் பசுக்களை மேய்த்துக்கொண்டும், வேணு கானஞ் செய்துகொண்டும், ஸ்நேகமுள்ள கடைக்கண் பார்வையுடனும், ஸஞ்சரிக்கும் ராமகிருஷ்ணர்களுடைய முகத்தைத் தர்சிப்பதே கண்களுக்குப் பயன்; இதை விட மேலானது ஒன்றுமில்லை" என்று ஒரு கோபஸ்திரீ சொன்னாள்.

8. மற்றும் சில ஸ்திரீகள், "மாந்தளிர், மயில் தோகை, பூங்கொத்து, நீலோத்பல புஷ்பம், தாமரை மலர் இவைகளின் மாலையால் அலங்கரிக்கப் பட்டவர்களும் அவைகளின் காந்தியால் கறுத்தும் சிவந்தும் இருக்கும் வஸ்திரமுள்ளவர்களுமாகிய ராம கிருஷ்ணர்களிருவர்களும் நாட்டியசாலையில் கானஞ் செய்து கொண்டிருக்கும் இரண்டு சிறந்த நடர்கள் போல கோபர்களுடைய நடுவில் மிகவும் விளங்குகிறார்கள்" என்றார்கள். (அந்தக் கோபர்களே பாக்கியசாலிகள் என்பது கருத்து.)

9. பின்னும் சில ஸ்திரீகள், "ஓ கோபிகைகளே! ஸ்ரீ கிருஷ்ணனுடைய உதட்டின் அமிருதமானது கோபி கைகளால் அனுபவிக்கக்கூடியதல்லவா? அப்படியி ருந்தும் இந்தப் புல்லாங்குழலானது தனதிஷ்டப்படி அந்த அமிருதத்தை தான் தனியே பானஞ்செய்கிறது. ஆனதால் இது எவ்விதப் புண்ணியஞ் செய்ததோ? மரங்கள் தங்கள் ஜாதியில் பிறந்த புல்லாங்குழலுடைய பாக்கியத்தைக் கண்டு ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கின. (மரங்களிலிருந்து பெருகும் புஷ்பரசம் ஆனந்தக் கண்ணீரென்று சொல்லப்பட்டிருக்கிறது) நதிகளும் குளங்களும் தங்களுடைய ஜலத்தால் வளர்ந்த மூங்கிலிருந்து உண்டான இந்தப் புல்லாங் குழல் இவ்வளவு பாக்கியம் பெற்றதேயென்று மயிர்க் கூச்சலடைந்தன. (நதிகளுடைய ஜலத்தால் மூங்கில் வளருகிறபடியால் புல்லாங்குழலுக்கு நதிகள் மாதாவா யிற்றா! புஷ்பிக்கும் தாமரை மலர்கள் அவைகளுக்கு மயிர்க்கூச்சமென்று சொல்லப்பட்டது.) பெரியோர்கள் தங்கள் வம்சத்தில் பிறந்தவன் பகவானைச் ஸேவித்து, பக்தனாக இருந்தால் அதனால் சந்தோஷித்து ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி மயிர்கூச்சலடைவது வழக்கமல்லவா?" என்றார்கள்.

10. இன்னுஞ் சில ஸ்திரீகள்,"அடிதோழி! தேவகி யின் புத்திரனாக ஸ்ரீ கிருஷ்ணன் பிருந்தாவனத்தில் ஸஞ்சரிப்பதால் அந்த வனம் மிகவும் அழகாயிருக் கிறது மேலும், கிருஷ்ணனுடைய வேணுகானத்தைக் கேட்டு அங்கிருக்கும் மயில்கள்' இது மிருதுவாகக் கர்ஜிக்கும் கருத்த மேகம்' ஏன்று நினைத்து நர்த்தனம் செய்கின்றன. அதனைக் கண்ட மலையிலுள்ள மற்ற

மிருகங்கள் மற்ற வேலைளை விட்டு அதையே பார்த்துக் கொண்டிருக்கின்றன. இம்மாதிரியான பாக்கியம் ஸ்வர்க்கலோகத்திற்கும் கிடைக்கவில்லை யாதலால் இந்தப் பிருந்தாவனத்தால் பூமிக்கு விசேஷ கீர்த்தி ஏற்பட்டிருக்கின்றது" என்று சொன்னார்கள்.

11. இன்னுஞ் சில ஸ்திரீகள், "பிருந்தாவனத்தில் ஸ்ரீ க்ருஷ்ணன் வேணுகானம் செய்யும்பொழுது அதனைக் கேட்டும், அத்புதமான அவருடைய ஸ்வருபத்தைத் தர்சித்துக் கொண்டுமிருக்கிற பெண் மான்கள் தங்களுடைய புருஷர்களுடன் ப்ரீதியாக ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்து பூஜிக்கின்றனவல்லவா? ஆனதால் மந்த புத்தியுள்ளவையானாலும் அவைகளே மேலானவை" என்று சொன்னார்கள். (மான்களை விடத் தாங்கள் புத்தியுள்ளவர்களானாலும் தங்களுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லையென்பது கருத்து.)

12. பின்னுஞ்சில ஸ்திரீகள், "ஓ கோபிகைகளே! ஸ்திரீகளுக்கு ஆனந்தத்தையுண்டு பண்ணக்கூடிய அழகு, ஸ்வபாவம் ஆகிய இவைகளுள்ள ஸ்ரீ கிருஷ்ணன் பிருந்தாவனத்தில் வேணுகானஞ் செய்யும் பொழுது விமானத்தின் மீதேறி ஆகாச மார்க்கமாகச் செல்லும் தேவஸ்திரீகள் ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்து அவருடைய கானத்தையுங்கேட்டு மன்மத தாபங் கொண்டு தைரியத்தைவிட்டு மோஹமடைந்தார்கள். அவர்களுடைய (பர்த்தாவின் மடியிலிருக்கும்பொழுதும்) எக்கு முடிச்சு அவிழ்ந்தது; தலை முடிச்சும் அவிழ்ந்தது; அதிலிருந்த புஷ்பங்கள் கீழே நழுவின" என்றார்கள்.

Released by Maran's Dog, Toronto , Canada
Released by Maran's Dog, Toronto , Canada
Released by Maran's Dog, Toronto , Canada

13. இன்னுஞ் சில ஸ்திரீகள், "ஸ்ரீ கிருஷ்ணனுடைய முகமாக வெளிப்படும் வேணுகானமாகிய அமிருதத்தைப் பசுக்கள் காதுகளை உயரத்தூக்கிக் கொண்டு பானஞ்செய்கின்றன. (தலை குனிந்திருந்தால் காதில்சென்ற மேற்கண்ட அமிருதம் சிந்தி போய் விடுமென்றெண்ணிக் காதுகளை உயரத் தூக்கிக் கொண்டன) கன்றுகள் ஊட்டுவதற்குச் சென்றவுடன் பகவான் கானஞ்செய்ய, அதனைக்கேட்ட அந்தக் கன்றுகள் முகத்தை உயரத் தூக்கிக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனைத் தர்சித்து, மனத்தில் த்யானித்துக் கொண்டு ஊட்டுவதை மறந்து நிற்கின்றன. பால் பெருகி ஒடுகிறது; கன்றுகளும் பசுக்களும் கொஞ்சம் ஆனந்தப் பாஷ்பத்தைப் பெருகவிட்டன" என்றார்கள்.

14. மற்றுஞ் சில ஸ்திரீகள், "ஓ அம்ம! இந்த பிருந்தாவனத்தில் பறவைகள், தளிர்களுள்ள மரத்தின் கிளைகளிலிருந்து ஸ்ரீ கிருஷ்ணனைத் தர்சித்து, அவருடைய மதுரமான கானத்தைக் கேட்டு,மற்ற வார்த்தைகளை விட்டுக் கண்களை மூடிக்கொண்டு ஆனந்தத்தை அடைகின்றன. ஆனதால் அவைகளை மஹர்ஷிகளென்றே நினைக்கிறேன். மஹர்ஷிகள் வேதமாகிய மரத்தின் கிளையிலேறிப் பலத்தை விரும்பாமல் கர்மங்களைச் செய்துகொண்டு ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதத்தையே கேட்கிறார்கள் அல்லவா ?" என்றார்கள்.

15. இன்னுஞ் சில ஸ்திரீகள், 'நதிகள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய வேணுகானத்தைக் கேட்டு மன்மத தாபங் கொண்டு சுழிகளால் (சுழல்கள்) வேகங்குறைந்தவைகளாகி, அலைகளாகிய கைகளால் தாமரை மலர்களைக்

காணிக்கைகளாக எடுத்துக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதங்களைத் தொடுகின்றன." என்றார்கள்.

16. பின்னுஞ் சில கோபிகைகள் ஸ்ரீ கிருஷ்ணன் பலராமனுடனும், கோபர்களுடனும் வெய்யிலில் பசுக்களை மேய்த்துக்கொண்டும், வேணுகானஞ் செய்துகொண்டும் ஸஞ்சரிக்கும்பொழுது மேகங்கள் கறுத்த திருமேனியுள்ள ஸ்ரீ கிருஷ்ணனைத் தங்களுக்குச் ஸ்நேஹிதரென்று நினைத்து, மிகுந்த ப்ரியத்துடன் புஷ்பங்கள் போன்ற ஜலத்துளிகளை அவர் மீது வர்ஷித்துக் குடைபிடிப்பது போல வெய்யிலை மறைக்கின்றன' 'என்று சொன்னார்கள். (அசேதனங்கள் கூட பகவானை உபசரிக்கின்றன. நமக்கு அந்தப் பாக்கியங் கிடைக்கவில்லையென்று கருத்து.)

17. மற்றுஞ் சில ஸ்திரீகள் "ஸ்ரீ கிருஷ்ணன் பிருந்தாவனத்தில் ஸஞ்சரிக்கும்பொழுது அவருடைய பாதங்களிலிருந்த குங்குமம் புற்களில் ஒட்டிக் கொண்டது. அது கோபிகைகளுடைய ஸ்தனத்திலிருந்து பகவானுடைய பாதத்தில் ஸம்பந்தித்தது. அதை வேடஸ்திரீகள் எடுத்துத் தங்களுடைய முகத்திலும், ஸ்தனங்களிலும் வைத்துக்கொண்டு மன்மத தாபத்தை நிவர்த்தித்துக் கொண்டார்கள். ஆனதால் அவர்கள் மேலானவர்கள் (கிருதார்த்தர்கள்)" என்றார்கள்.

18. மற்றுஞ் சில ஸ்திரீகள், "ஓ கோபிகைகளே! இந்தக் கோவர்த்தன மலையானது ராமகிருஷ்ணர்களுடைய பாதஸ்பர்சத்தை அடைந்திருக்கிறது; ராம கிருஷ்ணர்களுக்கும் அவர்களுடன் ஸஞ்சரிக்கும் பசுக்களுக்கும் ஜலம், நல்ல புற்கள், குகை கிழங்கு

ஆகிய இவைகளைக் கொடுத்துப் பூஜிக்கிறது. ஆனதால் இந்தப் பர்வதம் ஹரிதாஸர்களுக்குட் சிறந்தது (பக்தர்களுக்குட் சிறந்தது); ஆச்சர்யம்" என்றார்கள்)

19. இன்னுஞ் சில ஸ்திரீகள், "ஓ அந்தரங்கத் தோழிகளே! ராமகிருஷ்ணர்களிருவரும் பசுக்களை அணைந்து சுறக்கும் கயிறுகளை தலையில் சுற்றிக் கொண்டும், முரட்டு மாடுகளைக் கட்டுவதற்கு மோரைக் கயிறுகளை தோள்களில் வைத்துக் கொண்டும், கோப வேஷத்துடன் பிருந்தாவனத்தில் கோபர்களுடன் வேணுகானஞ்செய்து பசுக்களை மேய்த்து வரும்பொழுது ஜங்கமங்களான பிராணிகள் அசையாமல் நின்றன. ஸ்தாவரங்களான மரம் முதலியவை மயிர் கூச்சலை அடைந்தன; ஆச்சர்யம்' என்றார்கள்.

20. இப்படி கோபஸ்திரீகளெல்லோரும் பிருந்தா வனத்தில் ஸஞ்சரிக்கும் ஸ்ரீ கிருஷ்ணனுடைய விளையாட்டுக்களை வருணித்துக்கொண்டு தன்மயமானார்கள்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–22

பகவான் கோபிகைகளின் வஸ்திரங்களை அபஹரித்தது

1–7. நந்தகோகுலத்திலுள்ள சிறு பெண்களெல் லோரும் ஹேமந்த ருதுவின் முதல் மாதமான மார்கழி மாஸத்தில், அந்த மாஸம் முழுவதும் ஹவிஸ்ஸைப் புஜித்துக் காத்தியாயனி விருதத்தை அனுஷ்டித் தார்கள். காலையில் யமுனையின் ஜலத்தில் ஸ்நானஞ் செய்து அருணோதய காலத்தில் ஜலக்கரையில் மணலால் காத்தியாயனியின் பிம்பஞ்செய்து அதைச் சந்தனம், வாஸனையுள்ள புஷ்பமாலைகள், தூப தீபங்கள், பலவகையான நிவேதனங்கள், பழங்கள், தளிர்கள், அக்ஷதைகள் முதலியவைகளால் பூஜித்து, 'ஓ காத்தியாயனி! மஹாமாயையே! மகாயோகினி எல்லாவற்றிற்கும் அதிபதியாயிருப்பவளே! நந்தகோப ருடைய புத்திரனாகிய ஸ்ரீ கிருஷ்ணன் எங்களுக்குப் புருஷனாகும்படி நீ செய்ய வேண்டும்" என்று ஒவ்வொரு பெண்களும் தனியே பிரார்த்தித்துப்பூஜை செய்தார்கள் இப்படி அந்தப் பெண்கள் எல்லோரும் கிருஷ்ணனிடத்திலேயே மனத்தைத் செலுத்தி, கிருஷ்ணன் தங்களுக்குப் புருஷனாக ஆக வேண்டுமென்ற எண்ணத்துடன் பத்திரகாளியைப் பூஜித்தார்கள். ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்திருந்து, ஒவ்வொருவருடைய பெயரையுஞ் சொல்லி அழைத்து, ஒருவர் கையை மற்றொருவர் பிடித்துக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதத்தை உரக்கக்கானம் பண்ணிக்கொண்டு ஸ்நானத்திற்காக யமுனா நதிக்குச் செல்லுகிறது வழக்கம்.

8–12. ஒரு நாள் இந்தப் பெண்கள் யமுனையின் கரையில் தங்கள் வஸ்திரங்களை வைத்துவிட்டு ஜலத்திலிறங்கி, கிருஷ்ணனுடைய சரிதத்தைச் சொல்லிக் கொண்டு ஸந்தோஷமாக விளையாடினார்கள். அப்பொழுது யோகீச்வரர்களுக்கும் அதிபதியாயிருக்கும் பகவான் வ்ரதத்தின் பலத்தை அவர்களுக்குக் கொடுப்பதற்காகத் தோழர்களுடன் அவ்விடம் வந்தார் பிறகு கிருஷ்ணன் அவர்களுடைய வஸ்திரங்களை எடுத்துக் கொண்டு வேகமாகக் கடம்ப மரத்தின் மேலேறி, சிரித்துக் கொண்டு அந்தப் பெண்களை நோக்கி, ஓ பெண்களே! நீங்கள் கரையில் வந்து அவரவர்களுடைய வஸ்திரத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்; நீங்கள் வ்ரதஞ்செய்து கஷ்டப்பட்டிருப்பதால் உங்களைப் பரிஹாஸஞ் செய்யவில்லை; உண்மையாகச் சொல்லுகிறேன்; இதுவரையில் நான் பொய் சொன்னதில்லை என்பது இந்த கோபகுமாரர்களுக்குத் தெரியும்; நீங்கள் தனியாகவாவது ஒன்று சேர்ந்தாவது கரையில் வந்து வஸ்திரத்தை வாங்கிக்கொள்ளுங்கள்" என்று பரிஹாஸமாகச் சொன்னார்.

13–16. அவருடைய பரிஹாஸ வார்த்தையைக்கேட்ட அந்தப் பெண்கள் மிகுந்த பிரீதியுடன் ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு வெட்கத்தால் ஜலத்திலிருந்து வெளியே வரவில்லை. ஆனாலும் கிருஷ்ணனுடைய பரிஹாஸ வார்த்தையால் மனங்கலங்கினவர்களாகிக் குளிர்ந்த ஜலத்தில் கழுத்து வரையில் முழுகிக்கொண்டு, குளிரால் நடுக்கமடைந்து ஸ்ரீகிருஷ்ணனை நோக்கி நீர் நந்தராஜனுடைய புத்திரர்; கோகுலத்திலிருப்பவர்களுக்குள் சிறந்தவர்; எல்லோருக்கும் பிரியத்தைச்

செய்பவரென்று எங்களுக்குத் தெரியும். ஆகையால் அந்யாயத்தைச் செய்யவேண்டாம். நாங்கள் குளிரால் நடுக்கமடைந்திருக்கிறோம். எங்கள் வஸ்திரத்தைக் கொடும். ஓ அழகுள்ளவரே! உமக்கு வேலை செய்பவர்களாக இருக்கிறோம். உம்முடைய உத்தரவின்படி நடக்கிறோம். அப்படிக் கொடுக்காவிட்டால் அரசனிடத்தில் (நந்தர் அல்லது கம்ஸன்) தெரிவிப்போம்" என்று சொன்னார்கள்.

17–20. அதனைக்கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களை நோக்கி, "நீங்கள் எனக்குத் தாஸிகளும், நான் சொல்வதைச் செய்பவர்களுமாக இருப்பது உண்மையானால், கரையில் வந்து வஸ்திரங்களை வாங்கிக் கொள்ளுங்கள்; இல்லாவிட்டால் கொடுக்க மாட்டேன். கிழவனாகிய அரசன் என்ன செய்வார்" என்று சொன்னார், அதனைக் கேட்ட அந்தப் பெண்கள் குளிரால் நடுக்கமுள்ளவர்களாகி, இரு கைகளால் ரஹஸ்ய ஸ்தானத்தை மறைத்துக் கொண்டு ஜலத்திலிருந்து கரைக்கு வந்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களுடைய சுத்தமான எண்ணத்திற்கே ஸந்தோஷப்பட்டு வஸ்தரங்களைத் தோளில் வைத்துக்கொண்டு அந்தப் பெண்களிடத்தில் மிகுந்த பிரீதியுடன், "வ்ருதத்தை அனுஷ்டிக்கும் நீங்கள் வஸ்திரமில்லாமல் ஜலத்தில் இறங்கியபடியால் அது தேவர்களுக்கு அபராதம் செய்ததாயிற்று. அந்தப் பாபத்தின் நிவர்த்திக்காகத் தலையில் அஞ்சலி செய்து கொண்டு நமஸ்கரித்து உங்களுடைய வஸ்திரங்களை வாங்கிக்கொள்ளுங்கள்" என்று சிரித்துக்கொண்டு சொன்னார்.

21–24. அதனைக் கேட்ட பெண்கள் மஹாத்மா வாகிய கருஷ்ணன் வார்த்தை தர்மத்திற்கு ஒத்தது என்று நினைத்து, ஒரு கையினால் ரஹஸ்ய ஸ்தானத்தை மறைத்துக் கொண்டு, மற்றொரு கையினால் நமஸ்கரித்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் திரும்பவும் அவர்களை நோக்கி, "எவன் பகவானை ஒரு கையால் நமஸ்கரிக்கிறானோ, அவனுடைய கையை வெட்டிவிடுவது அவனுக்குச் சிக்ஷை என்று தர்ம சாஸ்திரக்காரர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால் மனிதன் இரு கைகளாலும் பகவானை நமஸ்கரிக்கவேண்டும்; நீங்கள் அப்படிச் செய்வீர்களானால் எனக்கு மிகவும் ஸந்தோஷகரமாக இருக்கும். வஸ்திரமில்லாமல் ஜலத்தில் பிரவேசித்த தாலும், ஒரு கையால் நமஸ்கரித்ததாலும் உண்டான இருவகைப் பாபத்தையும் நிவர்த்தித்துக் கொள்ள வேண்டுமென்ற விருப்பம் உங்களுக்கிருக்குமானால் இரண்டு கைகளாலும் நமஸ்கரித்து வஸ்திரங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று தர்மமான வார்த்தையைச் சொன்னார்.

25–28. அதனைக் கேட்ட அந்தப் பெண்கள் வஸ்திரமில்லாமல் ஸ்நானஞ்செய்தது வ்ருதத்திற்கு குறைவைச் செய்யக்கூடியது. ஆனதால் அதற்குப் பிராயச்சித்தத்தை அனுஷ்டிக்க வேண்டியது அவசியம் என்று நினைத்து. ஸகல கர்மங்களின் பல ஸ்வரூபியும், பாபத்தைப் போக்கடிப்பவருமான ஸ்ரீ கிருஷ்ணனை (இருகைகளாலும்) நமஸ்கரித்தார்கள். அப்படி நமஸ்கரித்த பெண்களைப் பார்த்து ஸ்ரீ கிருஷ்ணன் கருணை, ஸ்நேஹம் இவைகளுள்ளவராகி, வஸ்திரங்களை அவர்களுக்குக் கொடுத்தார். இப்படி அந்தப் பெண்கள்

ஸ்ரீ கிருஷ்ணனால் ஏமாற்றப்பட்டார்கள். வெட்கத்தை விடும்படி செய்யப்பட்டார்கள்; பரிஹாஸஞ் செய்யப்பட்டார்கள்; விளையாட்டாகப் பேசப்பட்டார்கள். மேலும், ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களுடைய வஸ்திரங்களையும் அபஹரித்துக் கொண்டார்; ஆனாலும் அவரிடத்தில் அந்தப் பெண்கள் அசூயை அடையவில்லை. அவருடைய சேர்க்கையால் ஸுகத்தை அடைந்தார்கள், பின்னும் அவர்கள், வஸ்திரங்களை யுடுத்திக்கொண்டு கிருஷ்ணனால் ஸ்வாதீனப் படுத்தப்பட்டவர்களாகி, கிருஷ்ணனிடத்தில் சித்தத்தைச் செலுத்தி, வெட்கத்துடன் ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்துக் கொண்டு அவ்விடத்திலேயே நின்றார்கள்.

29–33. அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய பாதத்தையடைய வேண்டி வ்ருதத்தை யனுஷ்டித்த பெண்களுடைய அபிப்பிராயத்தை யறிந்தவராகையால் அவர்களை நோக்கி, "ஓ பதிவ்ரதைகளான பெண்களே! என்னை சேவிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் வ்ரதாநுஷ்டானஞ் செய்த உங்களுடைய அபிப்பிராயம் எனக்குத் தெரியும். நானும் அதனை ஒப்புக் கொண்டதால் அது ஸத்தியமாகக் கூடியதேயாம். என்னிடத்தில் சித்தத்தைச் செலுத்தியவர்களுடைய காமனையானது மற்றொரு காமனையை உண்டு பண்ணுகிறதில்லை. வறுக்கப்பட்ட தானியங்களும், பக்குவமான தானியங்களும் பெரும்பாலும் முளைக்கிற தில்லையல்லவா? ஆனதால் ஓ பெண்களே! கோகுலம் போகலாம். பூர்ணமனோரதமுள்ளவர்களாக வருகிற ராத்திரிகளில் என்னுடன் ரமிக்கலாம். இதற்காகக் காத்யாயனீ வ்ரதஞ் செய்தீர்களல்லவா?" என்று ஆஜ்ஞாபித்தார். அதனைக்கேட்ட அந்தப் பெண்கள்

பூர்ண மனோரதமுள்ளவர்களாகி, ஸ்ரீகிருஷ்ணனுடைய பாதாரவிந்தத்தை த்யானஞ் செய்துகொண்டு அவரை விட்டுப்பிரிய மனமில்லாமல் ச்ரமப்பட்டு கோகுலத்திற்குச் சென்றார்கள்.

34–42. பின்பு ஸ்ரீ கிருஷ்ணன், பலராமனுடனும், கோபர்களுடனும் பிருந்தாவனத்திலிருந்து பசுக்களை மேய்த்துக்கொண்டு வெகுதூரஞ் சென்று கோபர்களை நோக்கி, "ஓ ஸ்தோக! கிருஷ்ண! அம்சுவே! ஸ்ரீதாம! ஸுபல! அர்ஜுன! விசால! விருஷப! ஓஜஸ்வியே! தேவப்ரஸ்த! வருதப! இந்த மரங்களைப் பாருங்கள். காற்று, மழை, வெயில், பனி இவைகளை ஸஹித்து, அண்டினவர்களுக்கு நிழலைக் கொடுத்துக் குடை போல இருக்கின்றன; இவைகள் பிறருக்கு உபகாரஞ் செய்வதற்காகவே ஜீவிக்கின்றன. அவைகளுடைய பிறப்பானது ஸகல பிராணிகளுக்கும் உபகாரமாக இருக்கிறது; ஆச்சரியம். ஸாதுக்களுடைய கிரஹத்திற்கு அதிதிகள் சென்றால் எப்படி அவர்களுடைய இஷ்டம் பூர்த்தியாகாமலிருப்பதில்லையோ, அதுபோல் இவைகளையடைந்தவர்கள் மனவருத்தத்துடன் திரும்புகிறதில்லை. இவைகள் இலைகளாலும், புஷ்பங்களாலும், பழங்களாலும், நிழல்களாலும், வேர்களாலும், மரவுரிகளாலும் கட்டைகளாலும், வாஸனையுள்ள பிசின்களாலும் சாம்பல்களாலும், தளிர்களாலும், பிறருடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்கின்றன. பிராணிகள் பணத்தாலும், பிராணனாலும், புத்தியாலும், வாக்கினாலும், பிறருக்கு க்ஷேமத்தை எப்பொழுதும் செய்துகொண்டிருப்பதே அவைகளுடைய ஜன்மத்தின் பலனாகிறது" என்று சொல்லிக்கொண்டு தளிர்கள், பழங்கள், பூங்கொத்துகள்,

புஷ்பங்கள், இலைகள் ஆகிய இவைகளின் பாரத்தால் வணங்கிய மரங்களின் நடுவில் போகும் வழியாக யமுனா நதிக்குச் சென்றார். அவ்விடத்தில் கோபர்கள் பசுக்களுக்கு யமுனையில் ஜலம்காட்டி (குளிர்ந்த ருசியுள்ள ஜலத்தை குடிக்கச் செய்து) தாங்களும் யமுனையின் ருசியுள்ள தீர்த்தத்தைப் பானஞ் செய்தார்கள். இப்படி யமுனையின் கரையில் பசுக்கள் மேய்த்துக் கொண்டிருக்கும் கோபர்கள் மிகவும் பசியுள்ளவர்களாகி ராமகிருஷ்ணர்களிடம் வந்து பின்வருமாறு சொன்னார்கள்.

♣ ♣ ♣ ♣

தீக்ஷிதபத்தினிகளை அனுக்கிரஹித்தது

1–2. கோபர்கள் யமுனையின் கரையில் உட்கார்ந்து பசியுள்ளவர்களாகி, ஜகத்திற்கு அதிபதிகளாகிய ராம கிருஷ்ணர்களை நோக்கி, "ஓ மிகுந்த பராக்கிரமமுள்ள ராம! துஷ்டர்களைச் சிக்ஷிக்கும் கிருஷ்ண! பசியால் நாங்கள் உபத்திரவிக்கப்படுகிறோம். அதனை நிவர்த்திக்கவேண்டும்" என்று தெரிவித்துக் கொண்டார்கள்.

3–9. அதனைக்கேட்டு ஜகதீசராகிய ஸ்ரீ கிருஷ்ணன் தம்மிடத்தில் பக்தியுள்ளவர்களாகிய ப்ராஹ்மண பத்தினிகளை அனுக்கிரஹிக்க விரும்பி, கோபர்களை நோக்கி, "இதோ ஸமீபத்தில் ப்ரஹ்மிஷ்டர்களான ப்ராஹ்மணர்கள் ஸ்வர்க்கத்தை அடைவதற்காக ஸத்திரம் (யாகம்) செய்கிறார்கள். அவ்விடஞ்சென்று நாங்கள் வரச்சொன்னதாக அண்ணாவின் பெயரையாவது என்னுடைய பெயரையாவது சொல்லி அன்னங் கொடுக்க வேண்டுமென்று கேளுங்கள்" என்றார். அதனைக் கேட்ட கோபர்கள் அவருடைய உத்தரவின் படி யாகசாலைக்குச் சென்று, அஞ்ஜலி செய்து தண்டம் போல் பூமியில் விழுந்து நமஸ்காரஞ் செய்து, "ஓ ப்ராஹ்மணர்களே! நாங்கள் ஸ்ரீ கிருஷ்ண ராமர் களுடைய உத்திரவினால் உங்களிடம் வந்திருக்கிறோம். உங்களுக்கு க்ஷேமமுண்டாகும். இந்த யாக சாலைக்கு ஸமீபத்தில் ராமனும் ஸ்ரீ கிருஷ்ணனும் பசுக்களை மேய்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பசியுள்ள வர்களாக இருக்கிறார்கள். அதனால் ஆஹாரத்தைப்

புஜிக்க விரும்புகிறார்கள். தர்மத்தை யறிந்தவர்களுக் குட் சிறந்தவர்களான வேதியர்களே! உங்களுக்குச் ச்ரத்தையிருக்குமானால் அவர்களுக்காக அன்னத்தைக் கொடுங்கள். தீக்ஷை முதல் பசுவைக் கொல்லும் தினம் வரையிலும், ஸௌத்ராமணியிலும் தீக்ஷிதருடைய அன்னத்தைப் புஜிக்கக்கூடாது. மற்ற காலத்தில் தோஷமில்லை" என்று யாசித்தார்கள்.

10–15. இம்மாதிரியான பகவானுடைய யோசனையைக் கேட்டும் அந்தப் ப்ராஹ்மணர்கள் கோபர்களுடைய வார்த்தையைக் கேட்காதவர்கள் போலவே இருந்தார்கள். அவர்கள் அல்பமான ஸ்வர்க்கத்தை அடைவதற்காக மிகுந்த ச்ரமமுள்ள கர்மத்தை யநுஷ்டிப்பவர்கள்; மூடர்கள்; தங்களை ஞானிகளென்று நினைத்துக்கொண்டவர்கள்; மேலும் தேசம், காலம், சரு, புரோடாசம் முதலிய த்ரவ்யம், மந்திரம், தந்திரம், ரித்விக், அக்னி, தேவதை, யஜமானன், யாகம், தர்மம், ஆகிய இவைகள் எந்தப் பகவானுயைய ஸ்வரூபமாக விருக்கின்றனவோ, அந்த பரப்ரஹ்மமாகிய ஸ்ரீகிருஷ்ண பகவானை மனிதன் என்று நினைத்து அவருடைய உண்மையான ஸ்வரூபத்தை அவர்கள் அறியவில்லை. அவர்கள் சரீரத்தில் அபிமானமுள்ளவர்கள்; நாம் ப்ராஹ்மணர் கள் என்ற துரபிமானமுள்ளவர்கள்; ஆனதால் அவர்கள் கோபர்களுக்குக் கொடுக்கிறோம் என்றாவது இல்லையென்றாவது பதில் சொல்லவில்லை, பின்பு கோபர்கள் ஆசையொழிந்தவர்களாகி, ராமகிருஷ்ணர் களிடம் வந்து தெரிவித்தார்கள். அதனைக்கேட்ட பகவான் சிரித்துக்கொண்டு கோபர்களை நோக்கி, "நீங்கள் தீக்ஷிதர்களுடைய பத்தினிகளிருக்கும் சாலைக்குச்

சென்று நான் பலராமனுடன் இவ்விடம் வந்திருப்பதைச் சொல்லுங்கள். அவர்களுக்கு என்னிடத்தில் ப்ரீதி யுண்டு, அவர்களுடைய சரீரம் வீட்டில் வஸிக்கிறதே யொழிய அவர்களுடைய மனம் என்னிடத்திலேயே வஸிக்கிறது. அவர்கள் மிகவும் அன்னத்தைக் கொடுப்பார்கள்" என்று திரும்பவும் போகச் சொன்னார். (கார்யத்தில் நோக்கமுள்ளவன் ஒரு தடவை யாசித்துக் கிடைக்காவிடில் அதனால் மன வருத்தத்தை அடையக்கூடாது. யாசகன் அவமானத்தை யடைவது ஸஹஜமே என்ற லோகவழக்கத்தை இதன் மூலமாய்ப் பகவான் வெளியிட்டார்).

16–24. பின்பு கோபர்கள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய உத்திரவின்படி பத்தினிசாலைக்குச் சென்று, அவ்விடத்தில் அலங்கரித்த சரீரங்களுடன் உட்கார்ந் திருக்கும் ப்ராஹ்மண ஸ்திரீகளை நமஸ்கரித்து, வணக்கத்துடன் "ப்ராஹ்மண ஸ்திரீகளான உங்களுக்கு நமஸ்காரம். எங்களுடைய வார்த்தையைக் கேளுங்கள். இதற்குச் ஸமீபத்தில் ஸஞ்சரிக்கும் ஸ்ரீ கிருஷ்ணனால் உங்களிடம் அனுப்பப்பட்டு வந்தோம். ஸ்ரீ கிருஷ்ணன் பலராமனுடனும், கோபர்களுடனும் பசுக்களை மேய்த்துக்கொண்டு வெகுதூரம் வந்துவிட்டார், அதனால் அவரும், அவருடன் வந்தவர்களும் பசியுள்ள வர்களாக இருக்கிறார்கள் அன்னங் கொடுக்க வேண்டும்" என்று சொன்னார்கள். அதனைக்கேட்ட அந்த ஸ்திரீகள் அந்தக் கிருஷ்ணனுடைய கதையை நினைத்துக்கொண்டு அவரைப்பார்க்க வேண்டுமென்ற விருப்பமுள்ளவர்களாக இருந்தவர்களானதால், கிருஷ்ணன் வருகிறார் என்பதைக் கேட்டவுடன் மிகுந்த பரபரப்புள்ளவர்களாகிப் பக்ஷ்யம், போஜ்யம்,

லேஹ்யம், சோஷ்யம், என்ற நான்கு வகையான ருசியுள்ள அன்னங்களைப் பாத்திரங்களில் எடுத்துக் கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனிருக்கும் இடத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். அது ஸகல நதிகளும் ஸமுத்திரத்தை நோக்கிச் செல்வதுப் போலிருந்தது. அப்பொழுது அவர்களுடைய புருஷர்களும், பிதாக்களும், ஸஹோதரர்களும், யாகசாலையை விட்டு போகக்கூடா தென்று தடுத்தார்கள், அப்படியும், அவர்கள் அதனைக் கேட்காமல் உத்தமச்லோகராகிய பகவானிடத்தில் வெகுநாளாக மனதைச் செலுத்திய வர்களாகையால் யமுனையின் கரைக்கு வந்து அசோக மரங்களின் தளிர்களால் அலங்கரிக்கபட்ட அந்த வனத்தில் பலராமனுடனும், கோபர்களுடனும் ஸஞ்சரிக்கும் ஸ்ரீகிருஷ்ணனைத் தர்சித்தார்கள்.

ஸ்ரீகிருஷ்ணன் கறுத்த தேஹமுள்ளவராகவும், பீதாம்பரத்தை தரித்தவராகவும், வனமாலையாலும், மயில் தோகையாலும், தாதுக்களாலும், தளிர் களாலும், நடன் போல் வேஷத்தைத் தரித்தவராகவும் தோழனுடைய தோளில் கையை வைத்துக்கொண்ட வராகவும், மற்றொரு கையால் தாமரைமலரைச் சுற்றிக்கொண்டும், காதுகளில் நீலோத்பலத்தை வைத்துக்கொண்டும், கன்னங்களில் தொங்கும் தலை மயிர்களுள்ள சிரித்த முகமுள்ளவராகவு மிருந்தார், அந்த ஸ்திரீகள் அநேகந்தடவை கிருஷ்ணனுடைய குணங்களைக் கேட்டு கிருஷ்ணனிடத்தில் மனதைச் செலுத்தியவர் களாகையால் இப்பொழுது நேரில் பார்த்தும் கிருஷ்ணனை மனத்தில் வெகுகாலம் தியானம் பண்ணியும் பாபத்தை நிவர்த்தித்துக் கொண்டார்கள். அது அகங்கார விருத்திகள்

பிராஞனிடத்தில் லயத்தையடைவது போலிருந்தது.

25–29. இப்படி கைல ஆசைகளையும் ஒழித்துத் தம்மை தர்சிப்பதற்காக வந்திருந்த ஸ்திரீகளை நோக்கி எல்லாருடைய புத்திக்கும் ஸாக்ஷியாகவிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணன் சிரித்த முகத்துடன் "ஓ மிகுந்த பாக்கிய முள்ளவர்களே! ஸுகமாக வந்தீர்களா? உட்காருங்கள். நாங்கள் உங்களுக்கு என்ன செய்யவேண்டும்? நம்மைப் பார்ப்பதற்காக நீங்கள் வந்தது யுக்தமானதேயாம். தன்னுடைய ஹிதத்தை அறிந்த வித்வான்கள் எல்லாருக்கும் ஆத்மாவாகவும், பிரியருமாகவிருக்கும் என்னிடத்தில் பலனை யுத்தேசியாமல் இடைவிடாது உண்மையாக பக்தி செய்கிறார்கள். ப்ராணன், புத்தி, மனது, தேஹம், களத்திரம், குழந்தைகள், பணம் முதலிவைகள் எதற்காக மிக்கப் பிரியத்துடன் காப்பாற்றபடுகின்றனவோ, அந்த ஆத்மாவைக் காட்டிலும் பிரியமான வஸ்து வேறு இருக்கிறதா? (ஆத்மாவாகிய என்னை தர்சிக்க வேண்டுமென்று நீங்கள் வந்தது யுக்தம்) யாகசாலைக்கு நீங்கள் செல்லவேண்டும். உங்களுடைய பர்த்தாக்களான ப்ராஹ்மணர்கள் உங்களை வைத்துக்கொண்டு யாகங்களை முடித்துக்கொள்வார்கள் என்றார்.

30–31. அதைக்கேட்ட அந்த ப்ராஹ்மண ஸ்திரீகள் பகவானை நோக்கி "ஓ ப்ரபுவே! நாங்கள் ஸகல பந்துக்களையும் விட்டு உம்முடைய பாதத்தை அடைந்தோம். உம்முடைய பாதத்தால் தள்ளபட்ட துளசிமாலையை சிரஸ்ஸால் வஹித்துத் தாஸிகளாக விருக்கிறோம். அப்படியிருக்க நீர் இப்படிச் சொல்வது உசிதமல்ல, 'உம்மை அடைந்தவன் திரும்பமாட்டான்'

என்று சொல்லும் வேதவாக்கியத்தை உண்மையாகச் செய்யும். ஓ காமம் முதலிய சத்துருக்களை நாசஞ் செய்பவரே! நாங்கள் திரும்பிச் சென்றாலும் எங்களுடைய புருஷர்களாவது, பிதாக்களாவது, புத்திரர்களாவது, ஸஹோதரர்களாவது, பந்துக்களாவது எங்களை அங்கீகரிக்கமாட்டார்கள். மற்றவர்கள் ஆதரிப்பார்களா? ஆனதால் உம்முடைய நுனிக் காலில் விழுந்தவர்களான எங்களுக்கு வேறுகதியில்லை. எங்களை வேலைக்காரிகளாக அங்கீகரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

32–35. அதனைக் கேட்ட பகவான் அவர்களை நோக்கி "உங்களுடைய புருஷர்களாவது, பிதா, ஸஹோதரர்கள் முதலியவர்களாவது, உங்களிடத்தில் அஸூயைப்படமாட்டார்கள். என்னுடைய உத்திரவினால் மற்ற ஜனங்களும் தேவர்களும் இதை அனுமதிப்பார்கள், என்னுடைய பக்தர்களுக்கு ஸுகத்தையும், ஸ்நேஹிதத்தையும் விருத்திசெய்வது சரீர சம்பந்தமல்ல (என்னுடன் சேர்ந்திருப்பதால் அவை விருத்தியாகுமென்பதில்லையென்று கருத்து). மனத்தை என்னிடத்தில் எப்பொழுதும் செலுத்திக் கொண்டு சீக்கிரத்தில் என்னை அடைவீர்கள். என்னை த்யானஞ் செய்வதாலும், என்னுடைய கதைகளைக் கேட்பதாலும், கதைகளைச் சொல்லுவதாலும், என்னிடம் பக்தியுண்டாவது போல ஸமீபத்தி லிருப்பதால் உண்டாகிறதில்லை. ஆனதால் வீட்டிற்குப் போகலாம்" என்றார். அதனைக்கேட்ட ஸ்திரீகள் யாகசாலைக்கு வந்தார்கள். அந்த ப்ராஹ்மணர்களும் அஸூயையின்றி அந்த ஸ்திரீகளை வைத்துக்கொண்டு யாகத்தை முடித்தார்கள்.

36. அந்த ஸ்திரிகளுக்குள் ஒருவள் பகவானை தர்சிப்பதற்காக புறப்படும்பொழுது அவளுடைய பர்த்தா வெளியில் போகக்கூடாதென்று தடுத்தபடியால் அவள் பகவானிடம் வரமுடியாதவளாகி வீட்டிலேயே முன் கேள்விப்பட்டிருந்த பகவானுடைய ரூபத்தை த்யானஞ்செய்து கர்ம சரீரத்தை விட்டுவிட்டாள்.

37–38. ஸ்ரீ கிருஷ்ணபகவான் நான்கு வகையான அன்னத்தைக் கோபர்களுக்குக் கொடுத்துத் தாமும் புஜித்தார். இப்படிப் பகவான் விளையாட்டாக மனித வேஷங்கொண்டு லோகத்தையனுஸரித்து கோபர்களை யும், கோபஸ்திரீகளையும், பசுக்களையும் தம்முடைய ரூபத்தாலும், வாக்கினாலும், சேஷ்டையாலும் ஸந்தோஷிக்கச் செய்துகொண்டு விளையாடினார்.

39–53. பின்பு அந்த ப்ராஹ்மணர்கள் "ஜகத்பதி களான ஸ்ரீ ராமகிருஷ்ணர்கள் யாசித்ததைக் கவனிக் காமல் அவர்களை மனிதர்களாக நினைத்து அலக்ஷ்யஞ் செய்து குற்றவாளிகளானோம். ஸ்திரீகளுக்குப் பகவானிடத்தில் ஏற்பட்ட பக்தி நமக்கில்லையே, நம்முடைய முவ்வகையான ஜன்மங்கள் நம்முடைய வித்யை, ப்ரஹ்மசர்யம் முதலிய வ்ருதம், பல விஷயங்களை அறிந்திருப்பது, மேலான குலத்தில் பிறந்திருப்பது, கர்மங்களை அனுஷ்டிப்பதில் ஸாமர்த்தியம், ஆகிய இவைகள் யாவும் நிந்திக்க கூடியவைகள் (பயனற்றவையாயினவென்று கருத்து). பகவானை அலக்ஷ்யஞ் செய்தோமே. நாம் பிறருக்கு ஆசார்யர்களாகவிருந்தும் நம்முடைய விஷயத்தில் தவறினோம்; பகவானுடைய மாயை யோகிகளையும் மோஹிக்கச்செய்கிறது. ஜகத்குருவாகிய பகவானிடத்தில்

ஸ்திரீகளுக்குண்டான மேலான பக்தியைப் பாருங்கள். அந்த பக்தியால் ஸம்ஸாரம் நிவர்த்திக்கபடுகிறது. இவர்களுக்கு த்விஜாதிக்குரிய ஸம்ஸ்காரங்களில்லை. இவர்கள் குருகுலவாஸஞ் செய்யவில்லை, தபஞ் செய்யவில்லை, ஆத்மவிசாரஞ் செய்யவில்லை. ஸந்தியோபாஸனம் முதலியவைகளைச் செய்யவில்லை. அப்படியிருந்தும் அவர்களுக்கு உத்தம ச்லோகராகிய பகவானிடத்தில் திருடமான பக்தியிருக்கிறது. மேற் கண்டவைகளுள்ளவர்களானாலும் நமக்கு அந்தப் பக்தியுண்டாகவில்லை. மேலும் ஸாதுக்களுக்கு அதிபதியான பகவான் பணம், வீடு முதலியவைகளில் ஆசைக்கொண்டவர்களும் தங்களுடைய ஷேமத்தில் தவறினவர்களுமான நமக்குக் கோபர்களைக்கொண்டு ஞாபகப்படுத்தினார்.

கைவல்யம் முதலியவைகளுக்கு அதிபதியான ஸ்ரீ பகவானுக்கு நம்மால் ஆகவேண்டிய காரியமென்ன இருக்கிறது. பகவானுக்கு இது ஒரு லீலையே. லக்ஷ்மீ தேவியே சஞ்சல ஸ்பாவத்தைவிட்டு எவருடைய பாதத்தை ஸேவிக்க விரும்பி எவரை அடைகிறாளோ, அந்தப் பகவான் பிறரை யாசிக்கிறார் என்பது ஜனங்களை மோஹிக்கச் செய்கிறது. மேலும் தேசம், காலம், சரு, புரோடாசம் முதலிய த்ரவியங்கள், மந்திரம் தந்திரம், ரித்விக்குகள், அக்னிகள், தேவதை, யஜமானன், யாகம், அதனாலுண்டாகும் அபூர்வமென்ற தர்மம் ஆகிய இவைகள் எவருடைய ஸ்வருபமாக இருக்கின்றனவோ, அப்படிப்பட்ட யோகேச்வரர்களுக்கும் அதிபதியான ஸ்ரீமஹா விஷ்ணுவானவர் யதுவம்சத்தில் அவதரித்திருப்பதாகக் கேள்விப்பட்டோமல்லவா? அப்படியும் அதனை மறந்துவிட்டோமே என்று

பச்சாதாபத்தை அடைந்ததுமன்றி, "தடையற்ற ஞானமுள்ள ஸ்ரீ கிருஷ்ணனாகிய உமக்கு நமஸ்காரம், உம்முடைய மாயையால் புத்தி மயங்கிக் கர்ம மார்க்கத்தில் சுற்றிக் கொண்டிருக்கிறோம். அந்த மஹா புருஷனுடைய மாயையால் மோஹித்து (மயங்கி) அவருடைய மஹிமையை அறியாமல் குற்றஞ்செய்தோம். அதனால் அந்தப் பிழையை ஆதிபுருஷனாகிய ஸ்ரீ கிருஷ்ணன் பொறுக்கவேண்டும்" என்று சொல்லி தாங்கள் செய்த அபராதத்தை நினைத்து ஸ்ரீ கிருஷ்ணனை நேரில் தர்சிக்க வேண்டுமென்ற அபிப்பிராயங் கொண்டார்கள். ஆனாலும் கிருஷ்ணனைப் பார்ப்பதற்காகச் சென்றால் கம்ஸன் என்ன செய்வானோவென்று ஸ்ரீ கிருஷ்ணனிருக்கு மிடத்திற்குப் போகவில்லை.

♣ ♣ ♣ ♣

கிருஷ்ணன் இந்திரயாகத்தைத் தடுத்தது.

1–7. இப்படி ப்ராஹ்மணர்கள் கம்ஸனிடம் பயந்து தங்களுடைய ஆச்ரமங்களிலிருந்து கொண்டே பகவானை யுபாஸித்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணனும் பலராமனுடன் கோகுலத்தில் வஸித்தார். ஒரு ஸமயம் கோபர்கள் எல்லோரும் இந்திரனைப் பூஜிக்கவேண்டி அதற்குரிய யத்தினங்களைச் செய்து கொண்டிருந் தார்கள். அப்பொழுது எல்லோருக்கும் ஆத்மாவும், எல்லாவற்றையும் அறிந்தவருமான ஸ்ரீ கிருஷ்ணன் அந்த விஷயத்தை அறிந்தவரானாலும், அறியாதவர் போல நந்தர் முதலிய பெரியோர்களை நோக்கி, மிகவும் வணக்கமாகி என்ன யாகஞ் செய்யப் போகிறீர்கள்? ஏன் இவ்வளவு பரபரப்பு? இந்த யாகம் எந்த பலனைக் கொடுக்கக்கூடியது? இதனால் எந்தத் தேவதை ஆராதிக்கப்படுகிறது? எதனால் இந்த யாகம் முடியக்கூடியது? இதில் உங்களுக்கு எப்படி அதிகாரமேற்பட்டது? அண்ணா! இதைத் தெரிந்து கொள்ளு வேண்டுமென்ற மிக்க ஆவலுள்ளவனாக இருக்கிறேன். சொல்லவேண்டும்; மேலும், எல்லோரையும் தாமாகப் பாவித்தவர்களும், தன்னைச் சார்ந்தவன், பிறர் என்ற பேத புத்தியற்றவர்களும்; மித்திரன், சத்ரு, உதாஸீனன் என்ற எண்ணமில்லாத வர்களுமான ஸாதுக்கள் ஒன்றையும் ரஹஸ்யமாக வைத்துக் கொள்ளமாட்டார்கள். பேதபுத்தியுள்ளவர் களானாலும், உதாஸீனனைக் சத்துரு போலத் தள்ளிவிட வேண்டும். (கேட்காமலிருந்தால் சொல்ல வேண்டியதில்லை). மித்திரனைத் தன்னுடைய

ஆத்மாவாகப் பாவிக்கவேண்டும். ஜனங்களில் சிலர் மித்திரர்களுடன் யோசித்துக் கர்மங்களைச் செய்கிறார்கள். சிலர் யோசியாமலே செய்கிறார்கள். யோசித்துக் கர்மங்களை அனுஷ்டிக்கும் வித்வானுக்குப் பயன் கிடைப்பது போல் யோசியாமல் செய்யும் மூடனுக்குப் பயன் கிடைக்கிறதில்லை. ஆனதால் உங்களால் செய்யப்படப்போகிற யாகம் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டதா? அல்லது வழக்கமாகச் செய்து வரப்படுகிறதா? காரணத்துடன் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

8–11. அதனைக்கேட்ட நந்தர் கிருஷ்ணனை நோக்கி, "பகவானாகிய இந்திரனுக்கு மேகங்கள் பிரியமான சரீரங்கள். அந்த மேகங்கள் பிராணிகளுக்குப் பிராணனை விருத்தி செய்யக்கூடிய ஜலத்தை வர்ஷிக்கின்றன, ஆனதால் மேகங்களுக்கு அதிபதியும், ஈச்வரனுமாகிய இந்திரனை நாமும் மற்றவர்களும் அவருடைய ரேதஸ்ஸால் (மழை ஜலத்தால்) விருத்தியான தான்யம் முதலியவைகளைக் கொண்டு பூஜிப்பது வழக்கம். அந்த இந்திர யாகத்திற்கு உபயோகப்பட்டு எஞ்சியதைத் தர்மம், அர்த்தம், காமம், இவைகளுக்கு மனிதர்கள் உபயோகப்படுத்துகிறர்கள். புருஷப்ரயத்தனமுள்ளவர்களுக்கு பர்ஜன்யன் பலத்தைக் கொடுக்கிறார். (மழையில்லாவிடில் பயிர்கள் பலிக்காதென்று கருத்து.) இந்தத் தர்மமானது பரம்பரையாக நடந்து வருகிறது. கர்மத்தாலாவது, இந்தத் தர்மத்தைச் செய்யாமல் நிறுத்தினால் அவனுக்கு க்ஷேமம் கிடைக்கிறதில்லை" என்று சொன்னார்.

12–30. இப்படி நந்தரும், மற்ற கோகுலவாஸிகளும்

சொல்வதைக் கேட்டுக் கிருஷ்ணன் இந்திரனுக்குக் கோபத்தை உண்டு பண்ணுவதற்காக அவர்களை நோக்கி, "ஸகல பிராணிகளும் கர்மத்தாலுண்டாகின்றன கர்மத்தாலேயே மரணமடைகின்றன. (ஜனனத்திற்கும், மரணத்திற்கும் கர்மமே காரணமாக இருக்கிறது.) ஸுகம், துக்கம், பயம், க்ஷேமம் ஆகிய இவைகளும் கர்மத்தாலேயே உண்டாகின்றன. (கர்மம் ஜடமல்லவா? அது எப்படிப் பலனைக் கொடுக்கும்? ஆனதால் கர்மத்திற்குப் பர தந்திரனாகிய ஈச்வரன் (தேவதை) பலத்தைக் கொடுக்கிறான் என்ற மதத்தை நிந்திக்கிறார்) மற்ற ஜீவர்கள் செய்யும் கர்மத்திற்கும் பலனை, ஈச்வரன் கொடுக்கிறாரென்றாலும் கர்மத்தைச் செய்யாதவனுக்கு அவர் ப்ரபுவாகிறதில்லை. ஆனதால் அவர்களுடைய கர்மத்திற்குத் தக்கபடி பலனை ஜனங்கள் அனுபவிக்கிறார்கள். ஆனதால் ஜனங்களுக்கு இந்திரனால் என்ன ப்ரயோஜனம்?

மேலும் பிராணிகளுக்கு அவரவர்களுடைய ஸ்வபாவத்திற்குத் தக்கபடி ஏற்பட்டிருக்கும் சுபகர்மத்தையாவது, அசுபத்தையாவது இந்திரனால் மாற்ற முடியுமா? ஜனங்களும் ஸ்வாபவத்திற்கு வசப்பட்ட மனிதர்கள் அடங்கிய இந்த ஜகத் முழுவதும் ஸ்வபாவத்திலேயே இருக்கிறது. ஆனதால் ஜீவன் கர்மத்தினால் பலவகையான சரீரத்தையடைந்து, அவைகளை விட்டுவிடுகிறான். கர்மத்தாலேயே சத்துருவாகவும், மித்திரனாகவும், உதாஸீனனாகவும் ஆகிறான், ஆனதால் கர்மமே மேலானது. அதுவே ஈச்வரன் ஆனதால் ஸ்வபாவத்திற்கு வசப்பட்டு, தனக்குரிய கர்மத்தைச் செய்பவன் கர்மத்தையே மேலானதென்று நினைக்கவேண்டும். எதை ஆச்ரயித்து ஜீவிக்கிறானோ

அதுவே அவனுக்குத் தெய்வம். ஒன்றை ஆச்ரயித்து ஜீவிப்பவன் அதனை விட்டு மற்றொன்றைப் பூஜிப்பானாகில் அவனுக்கு க்ஷேமங் கிடைக்கிறதில்லை. பரபுருஷனிடத்தில் ஆசையுள்ள வ்யபசாரிக்கு க்ஷேமம் கிடைக்குமா ? ப்ராஹ்மணன் வேதத்தை அத்தியயனஞ் செய்வது முதலியவைகளால் ஜீவிக்கவேணடும். க்ஷத்திரியன் பூமியைக் காப்பாற்றுவதால் ஜீவிக்க வேண்டும். வைச்யன் வார்த்தை என்ற விருத்தியைச் செய்து ஜீவிக்கவேண்டும். வைச்யனுடைய விருத்தியாகிய வார்த்தையென்பது பயிரிடுவது, மாடு மேய்ப்பது; வியாபாரஞ்செய்வது, வட்டிவாங்குவது ஆகிய நான்கு வகையுள்ளது. அவ்வகையில் நாம் பசுக்களைக் கொண்டு ஜீவிப்பவர்கள்.

இந்த ஜகத் உண்டாவதற்கும், க்ஷேம மாயிருப்ப தற்கும், நாசமடைவதற்கும் ஸத்துவம், ரஜஸ், தமஸ், என்ற குணங்கள் காரணங்களாக இருக்கின்றன. அவைகளில் ரஜோ குணத்தால் பலவகையான இந்த ஜகத்து உண்டாகிறது, ஆனதால் மேகங்களும் ரஜோ குணத்தால் உண்டாகி ஜலத்தை எங்கும் வர்ஷிக் கின்றன. அந்த ஜலங்களால் ஸகல தான்யங்களும் விருத்தியடைகின்றன; அவைகளை ஜனங்கள் உபயோகித்துக் கொள்கிறார்கள். இந்திரன் எதைச் செய்யப்போகிறான் ? நமக்குத் தேசமாவது, பட்டணமாவது, கிராமமாவது, வீடாவது இல்லை. காட்டிலேயே வஸிப்பவர்கள். ஆனதால் காடுகளும், மலைகளும், நமக்கு வீடாகின்றன. ஆனது பற்றி பசுக்களையும், ப்ராஹ்மணர்களையும், மலையையும் நாம் பூஜிக்கவேண்டும். இந்திரனுடைய யாகத்திற்காகச் சேர்க்கப்பட்ட ஸாமக்கிரியைகளைக் கொண்டு இந்த

யாகத்தை முடிக்கவேண்டும் பாயசம் முதல் பருப்பு வரையிலுள்ள பலவகையான பதார்த்தங்கள் சமைக்கப் படட்டும்; கோதுமை முதலியவைகளால் செய்யக்கூடிய பக்ஷ்யங்களும், அதிரஸம், முறுக்கு, முதலியவைகளும் செய்யப்படட்டும். வேதத்தை அறிந்தவர்களான ப்ராஹ்மணர்கள் அக்கினியில் ஹோமஞ் செய்யட்டும். அவர்களுக்குப் பலவகையான அன்னங்களைக் கொடுத்துப் போஜனம் செய்விக்க வேண்டும். பசுக்களைத் தக்ஷிணையாகக் கொடுங்கள். நாய், சண்டாளன், பதிதர்கள் எல்லோருக்கும் அவரவர் களுக்குத் தக்கபடி வஸ்துக்களைக் கொடுங்கள் மேலும் பசுக்களுக்குப் புற்களைக் கொடுங்கள். மலைக்குப் பலிபோடுங்கள், பின்பு நீங்கள் நல்ல வஸ்திரம் முதலியவைகளால் அலங்கரித்துக் கொண்டு போஜனஞ் செய்துவிட்டு, பசுக்களையும், ப்ராஹ்மணர் களையும், அக்னியையும், பர்வதத்தையும் ப்ரதக்ஷணம் செய்யுங்கள். இப்படிச் செய்வது யுக்தமென்று எனக்குத் தோன்றுகிறது. இந்த யாகமே எனக்கும், பசுக்களுக்கும், ப்ராஹ்மணர்களுக்கும் ப்ரீதிகரமானது" என்று சொன்னார்.

31–38. இப்படிக் காலஸ்வரூபியாகிய பகவான் இந்திரனுடைய கர்வத்தை அடக்குவதற்காக நந்தன் முதலியவர்களை நோக்கிச் சொன்னவார்த்தையைக் கேட்டு அவர்கள் யுக்தமென்று அதை ஒப்புக் கொண்டார்கள். பின்னுமவர்கள் ஸ்ரீ கிருஷ்ணன் சொன்னபடி எல்லாவற்றையும் செய்து, அந்தச் ஸாமக்கிரியைகளைக் கொண்டு ப்ராஹ்மணர்களையும், மலையையும் பூஜித்து, ஸ்வஸ்திவாசனம் செய்வித்து, மிகுந்த ஆதரவுடன் பசுக்களுக்கு புற்களை கொடுத்து,

பர்வதத்திற்குப் பலியையும் போட்டார்கள் பின்னுமவர்கள் பசுக்களை முன் நடத்திக்கொண்டு, பர்வதத்தை பிரதக்ஷிணஞ் செய்தார்கள். அப்பொழுது கோப ஸ்திரீகளும் ப்ராஹ்மணர்களால் ஆசீர்வதிக்கப் பட்டு எருதுகள் கட்டிய வண்டியின் மீதேறி, ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதங்களைக் கானம் பண்ணிக் கொண்டு பர்வதத்தைச் சுற்றி வந்தார்கள். அந்தச் ஸமயத்தில் ஸ்ரீகிருஷ்ணனும் கோபர்களுக்கு நம்பிக்கை யுண்டுபண்ணுவதற்காகப் பெரிதான வேறு ஸ்வரூபத்தை யெடுத்துக்கொண்டு, "நான் பர்வதம்" என்று சொல்லிக் கொண்டு "பர்வதத்திற்கு" என்று போடப்பட்ட பலியைப் புஜித்தார். பிறகு கோபர்கள் பர்வதத்தை நமஸ்கரிக்கும் பொழுது தாமும், "ஓ கோபர்களே! பாருங்கள். இந்த மலையானது தன்னுடைய ஸ்வரூபத்துடன் நமக்கு அனுக்ரஹத்தைச் செய்தது. இது தனதிஷ்டப்படி ரூபத்தை எடுத்துக் கொள்ளும் சக்தியுள்ளது. இதனை யார் அலக்ஷ்யம் செய்கிறார்களோ, அவர்களை இந்த மலையானது புலி, சிங்கம் முதலிய துஷ்டமிருகங்களாகவிருந்து கொல்லுகிறது. ஆனதால் நமக்கும், பசுக்களுக்கும் க்ஷேமமுண்டாவதற்காக இதற்கு நமஸ்காரம் செய்வோம்" என்று சொல்லிக் கொண்டு நமஸ்காரம் செய்தார். இப்படிக் கோபர்கள் ஸ்ரீ கிருஷ்ணனால் தூண்டப்பட்டும், பர்வதத்திற்கும், பசுக்களுக்கும், ப்ராஹ்மணர்களுக்கும் பூஜை செய்து, கிருஷ்ணனுடன் கோகுலஞ் சென்றார்கள்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம் – 25

கிருஷ்ணன் கோவர்த்தன் மலையைத் தூக்கினது.

ஓ பரிக்ஷித்து மஹாராஜனே! இந்திரன் கோபர் களால் தனக்குச் செய்யப்படும் பூஜையை கிருஷ்ணன் தடுத்துவிட்டார் என்பதைத் தெரிந்துக்கொண்டு கிருஷ்ணனையே தெய்வமாகக் கொண்ட கோபர்களி டத்தில் கோபங்கொண்டான். மேலுமவன், தன்னையே மூன்று லோகத்திற்கதிபதியென்று நினைத்துக்கொண்டு ஸம்வர்த்தகம் என்ற பெயருள்ள மேகங்களுடைய கணத்தை (கூட்டம்) வரவழைத்து மழைபெய்யும்படி தூண்டினதுமன்றி வனவாஸிகளான கோபர்களுக்கு எவ்வளவு தனகர்வமிருக்கிறது; ஆச்சரியம்; மனிதனாகிய கிருஷ்ணனுடைய வார்த்தையைக்கேட்டு தேவனாகிய என்னை அலக்ஷ்யஞ் செய்தார்கள்.

ஆத்ம விசாரஞ் செய்யாமல் கர்மங்களைச்செய்து அவைகளாகிய ஓடத்தால் ஸம்ஸார ஸமுத்திரத்தைத் தாண்ட விரும்பிய மூடர்கள் போல மனிதராகிய கிருஷ்ணனை ஆச்ரயித்துக் கோபர்கள் எனக்கு அபராதஞ்செய்தார்கள். கிருஷ்ணனோ சிறுவன்; அதிகமாக பேசக்கூடியவன்; வணக்கமில்லாதவன்; தன்னை பண்டிதன் என்று நினைத்துக்கொண்டவன்; கோபர்களோ பணத்தால் கர்வங்கொண்டவர்கள்; மதித்தவர்கள்; பருத்த சரீரமுள்ளவர்கள்; அவர்களு டைய பணக்கொழுப்பை நீங்கள் போக்கடியுங்கள். பசுக்களை நாசஞ்செய்யுங்கள். நானும் ஐராவதத்தின் மீதேறிக்கொண்டு தேவர்களுடன் நந்தகோகுலத்தை நாசஞ்செய்வதற்காக உங்கள் பின் வருகிறேன்" என்று

சொன்னான்.

8–14. இம்மாதிரி இந்திரனால் உத்திரவுசெய்து கட்டிலிருந்து அவிழ்த்து விடப்பட்டவையான மேகங்கள் மழையைப் பெய்து கோகுலத்தை உபத்திரவித்தன. அவைகள் மின்னல்களால் ப்ரகாசித்தன; இடிகளால் சப்தித்தன; கடுமையான காற்றுக் கூட்டங்களால் தூண்டப்பட்டு ஜலமாகிய கற்களை (ஆலங்கட்டி) வர்ஷித்தன; இப்படி மேகங்கள் தூண்கள் போல் பெரிதாகிய தாரைகளுடன் இடைவிடாது மழைபெய்யும்பொழுது பூமி முழுவதும் ஜலத்தால் மறைக்கப்பட்டு மேடுபள்ளந் தெரியாதிருந்தது. அப்பொழுது அதிக மழையாலும் அதிகக் காற்றினாலும் நடுக்கமடைந்து கோபர்களும், கோப ஸ்திரீகளும், குளிரால் வருத்தமடைந்து கிருஷ்ணனைச் சரணமடைந்தார்கள். பசுக்களும் மழையால் உபத்திரவ மடைந்து தங்கள் தலைகளையும், கன்றுகளையும், சரீரத்தால் மறைத்துக்கொண்டு கிருஷ்ணனுடைய பாதத்தையடைந்தன. "ஓ கிருஷ்ண! பக்தர்களிடத்தில் ப்ரிதியுள்ளவரே நம்மிடத்தில் கோபங்கொண்டு இந்திரன் மழை பெய்யச் செய்திருப்பதால் உம்மையே நாதனாகக்கொண்ட கோகுலத்தை நீர் காப்பாற்ற வேண்டும்" என்று கோபர்களும் பிரார்த்தித்தார்கள்.

15–23. அதனைக்கேட்ட பகவான் கல்மழையால் அடிபட்டு பிரக்ஞையில்லாமலிருக்கும் கோகுலத்தைப் பார்த்து இது இந்திரன் செய்தகார்யம்; இந்திரனுடைய யாகத்தை நாம் கெடுத்துவிட்டபடியால் அவன் கோபங்கொண்டு அகாலத்தில் மிகுந்த காற்றுடன் கல்மழை பெய்யச்செய்து கோகுலத்தை நாசஞ்

செய்கிறான்; அதற்குத் தகுந்ததை என்னுடைய மஹிமையால் நான் செய்கிறேன்; தான் ஒரு லோகத்திற்கு அதிபதியென்ற அஹங்காரங்கொண்ட மூடனாகிய இந்திரனுடைய கர்வத்தை போக்கடிக்கிறேன். ஸத்வகுணமுள்ள தேவர்களுக்கு தாங்கள் லோகாதிபதிகள் என்ற கர்வம் உண்டாகிறதில்லை. மேலும் அஸத்துக்களுடைய அஹங்காரத்தை நிவர்த்திப்பதும் அவர்களுக்கு அனுக்கிரஹமாக ஆகிறது; ஆனதால் என்னையே சரணடைந்ததும், என்னையே நாதனாகக் கொண்டதும், என்னால் அங்கீகரிக்கபட்டதுமான கோகுலத்தை என்னுடைய மஹிமையால் காப்பாற்றுகிறேன்; இதுவே என்னுடைய வ்ரதம் என்று சொல்லிக் கோவர்த்தன பர்வதத்தை ஒரு கையால் தூக்கிக் குழந்தைகள் நாய்க்குடையை எடுத்து குடையாகப் பிடித்தாற்போல விளையாட்டாகக் குடையாகப் பிடித்தார்.

பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் கோபர்களை நோக்கி "ஓ அம்மா! ஓ அண்ண! ஓ கோகுலத்தில் வஸிப்பவர்களே! பசுக்களுடன் இந்த மலையின் பள்ளத்தில் ஸுகமாக வஸியுங்கள் என்னுடைய கையிலிருக்கும் மலை விழுமோவென்று நீங்கள் பயப்படவேண்டாம். காற்றுக்கும் மழைக்கும் பயப்படவேண்டாம் அதற்குரிய உபாயம் செய்திருக்கிறேன் என்றார். இப்படிக் கிருஷ்ணனால் ஸமாதானஞ் செய்யப்பட்ட கோபர்கள் தங்கள் குழந்தைகளுடனும், வேலைக்காரர்களுடனும், ஸாமக்கிரியைகளுடனும் நெருக்கமில்லாமல் ஸுகமாக அந்தப் பள்ளத்தில் வஸித்தார்கள். மேலும் கிருஷ்ணனையே பார்த்துக் கொண்டிருந்த அவர்களுக்கு பசி தாஹம் இவைகளாலுண்டாகும் வருத்தமாவது,

ஸுகத்தில் விருப்பமாவது உண்டாகவில்லை. இப்படி ஸ்ரீ கிருஷ்ணன் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து ஏழு நாள் வைத்த அடி மாறாமல் நின்றார்.

24–33. பின்பு இந்திரன் ஸ்ரீ கிருஷ்ணனுடைய யோக மஹிமையை பார்த்து, அதிக ஆச்சரியமடைந்து கர்வமற்றவனாகித் தனது எண்ணம் பூர்த்தியாகாமல் தானாக மழையை நிறுத்தினான். ஆகாயம் மேகங்களால் மறைக்கப்படாமல் சுத்தமாயிற்று. சூரியன் ப்ரகாசித்தார். கடுமையான காற்றும் மழையும் அடங்கியது. அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் கோபர்களை நோக்கி காற்றும் மழையும் அடங்கின. நதிகளில் பெரும்பாலும் ஜலம் வற்றிப்போயின. நீங்கள் பயமற்று ஸ்திரீகளுடனும், குழந்தைகளுடனும், ஸாமக்கிரியைகளுடனும், வெளியில் வரலாம் என்றார். அதனைக்கேட்ட கோபர்கள் தங்கள் தங்கள் பசுக்களை ஓட்டிக்கொண்டு, ஸ்திரீகளையும் குழந்தைகளையும், வயது முதிர்ந்தவர்களையும், அழைத்துக் கொண்டு, ஸாமக்க்ரியைகளை வண்டியி வேற்றிக்கொண்டு வெளியில் வந்தார்கள். ப்ரபுவாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானும் எல்லாரும் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது விளையாட்டாக அந்த மலையை முன்னிருந்தவிடத்தில் வைத்தார். அதனைக் கண்ட கோகுலவாஸிகளெல்லாரும் ஸ்ரீ கிருஷ்ணனிடம் வந்து அவரவர்கள் யோக்கியதைக்குத் தக்கபடி ஆலிங்கனஞ் செய்துகொள்வது, அஞ்சலி செய்வது முதலியவையால் பூஜித்தார்கள். கோப ஸ்திரீகளும் தயிர், அக்ஷதைகள், ஜலம் ஆகிய இவைகளால் பூஜித்து ஆசிர்வதித்தார்கள். யசோதை, ரோஹிணீ தேவி, நந்தர், பலிஷ்டரான பலராமன் ஆகிய இவர்கள்

கிருஷ்ணனைத் தழுவி அவரிடத்திலிருக்கும் ப்ரீதியால் பயந்து (குழந்தைக்குக் கெடுதி நேராமலிருக்க வேண்டுமேயென்று பயந்து) ஆசிர்வாதஞ் செய்தார்கள். ஆகாயத்திலுள்ள தேவகணங்கள், சித்தர்கள், கந்தர்வர்கள், சாரணர்கள் ஆகிய இவர்கள் ஸ்தோத்திரஞ் செய்தார்கள். புஷ்பங்களை வர்ஷித்தார்கள். தேவர்களால் தூண்டப்பட்டு சங்கம் துந்துபி முதலிய வாத்தியங்கள் முழக்கப்பட்டன. தும்புரு முதலிய சிறந்த கந்தர்வர்கள் கானஞ் செய்தார்கள். பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் கோவர்த்தன மலையிலிருந்து பலராமனுடன் கோகுலத்திற்கு வந்தார். கோபர்களும் அவரிடத்தில் மிகுந்த ப்ரியத்துடன் அவர் பின் சென்றார்கள். கோபஸ்திரீகளும் தங்கள் இஷ்டரான கிருஷ்ணனுடைய சரிதங்களைச் சொல்லிக்கொண்டு ஸந்தோஷமாகச் சென்றார்கள்.

அத்தியாயம் - 26

கிருஷ்ணனுடைய மஹிமையை நந்தர் சொல்லியது.

1–14. கோபர்கள் கிருஷ்ணனுடைய மஹிமையை அறியாதவர்களானதால் கோவர்த்தனத்ததைத் தூக்கியது முதலிய அத்புதமான செயல்களைப் பார்த்து ஆச்சர்ய மடைந்து நந்தரை நோக்கி, "இந்தக் குழந்தையின் செய்கைகள் அத்புதங்களாகவிருக்கின்றன, இவன் கிராமியர்களான நம்மிடத்தில் ஜனிப்பதற்கு நியாய மில்லையே. ஒரு பெரிதான யானை தாமரை மலரைத் தூக்கினாற்போல ஏழு வயதுள்ள இந்தச் சிறுவன் விளையாட்டாக ஒரு கையால் பெரிதான மலையை எப்படித் தூக்கிப் பிடித்தான்?

மேலும், காலத்தால் வயது அபஹரிக்கப்படுவது போல இவன் குழந்தையாகவிருக்கும் போது கண்களை மூடிக்கொண்டு மிக்க பலமுள்ள பூதனையின் பிராண னைப் பால் குடிக்கிற வ்யாஜமாக அபஹரித்தான். பின்னுமிவன் மூன்று மாஸக் குழந்தையாக இருக்கும் பொழுது வண்டியின் கீழே படுத்திருந்தான். காலைத் தூக்கி உதைத்தான். நுனிக்காலால் அடிபட்டு அந்த வண்டி உடைந்து தலை கீழாக மாறிவிழுந்தது. இவன் ஒரு வயதுக் குழந்தையாக இருக்கும் பொழுது திருணாவர்த்தனென்ற அஸுரன் இவனைத் தூக்கிக் கொண்டு ஆகாயஞ் சென்றான். அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவனைக் கொன்றான். ஒரு நாள் வெண்ணெய் திருடியதற்காக யசோதை இவனை உரலுடன் சேர்த்துக்கட்டினாள். அத்துடன் மருத மரங்களுக்கு நடுவில் சென்று அவைகளையும்

தள்ளினான். பின்னொரு ஸமயம் பலராமனுடனும், கோபகுமாரர்களுடனும் வனத்தில் பசுக்களை மேய்த்துக் கொண்டிருக்கும் பொழுது இவனைக் கொல்வதற்காக வந்த பகனென்ற அஸுரனைக் கிழித்துக் கொன்றான். இன்னும் கழுதையுருவங் கொண்ட அஸுரனையும், அவனுடைய பந்துக்களை யும் கொன்று பனங்காட்டில் எல்லோருஞ் சென்று அதிலிருக்கும் பக்குவமான பழங்களைப் புஜிக்கும்படி செய்தான். பின்னும் இவன் பலசாலியான பலராமனைக் கொண்டு ப்ரலம்பனென்ற அஸுரனைக் கொன்றான். கோபர்களுக்கும், பசுக்களுக்கும் நேர்ந்த காட்டுத்தீயின் விபத்தை நிவர்த்தித்தான். கொடிய விஷவேகமுள்ள காளிய ஸர்ப்பத்தின் கர்வத்தை அடக்கி, யமுனையின் மடுவிலிருந்து அதைத் துரத்தி, அந்த ஜலத்தை விஷமற்றதாகச் செய்தான். ஓ நந்த! உன்னுடைய புத்திரனாகிய இவனிடத்தில் எங்களெல்லோருக்கும் அதிக ப்ரியமிருக்கிறது. அது விடமுடியாதது (மாறாதது என்று தாத்பர்யம்). இது இவனுக்கு இயற்கையானதா என்ன? ஏழுவயதுச் சிறுவனால் பெரிதான மலையைத் தூக்கமுடியுமா? ஓ கோகுலத் திற்கு அதிபதியே! உம்முடைய குழந்தையைப் பற்றி எங்களுக்குச் ஸந்தேஹமிருக்கிறது" என்றார்கள்.

15–23. அதனைக்கேட்ட நந்தர் அவர்களை நோக்கி," ஓ கோபர்களே! என் குழந்தையைப் பற்றி நீங்கள் ஸந்தேஹப்பட வேண்டாம். இந்தக் குமாரனைப் பற்றி கர்க்காசார்யர் எதனைச் சொன்னாரோ, அதைச் சொல்லுகிறேன், கேளுங்கள்; எப்படியென்றால்:– "இவர் ஒவ்வொரு யுகத்திலும் பூமியில் அவதரிக்கிறார். இவருக்கு சுக்லம், ரக்தம்,

பீதம் என்று சென்ற மூன்று யுகங்களிலும் வர்ணம் ஏற்பட்டிருந்தது. இந்த யுகத்தில் கிருஷ்ணனாக ஆகியிருக்கிறார். உன்னுடைய குழந்தையாகவிருக்கும் இவர் முன்னொருகால் வஸுதேவருக்கு புத்திரனாகப் பிறந்தார், அதனால் அதனுண்மையை அறிந்தவர்கள் இவரை வாஸுதேவரென்றுஞ் சொல்லுகிறார்கள். உன்னுடைய புத்திரனுக்கு அவருடைய குணங்களுக்கும், சரிதங்களுக்கும் தக்கபடி அநேக நாமதேயங்களும், ரூபங்களும் இருக்கின்றன. அவைகள் எனக்குத தெரியுமேயல்லாமல் பிறருக்குத் தெரியாது. இவர் உங்களுக்கு க்ஷேமத்தையுண்டு பண்ணுவார். கோபர் களையும், கோகுலத்தையும் ஸந்தோஷிக்கச் செய்வார். இவரைக்கொண்டு நீங்கள் வெகு ஆபத்தைத் தாண்டுவீர்கள்.

ஓ கோகுலத்திற்கு அதிபதியான நந்த! முன்னொருகால் அரசனில்லாத தேசத்தில் ஸாதுக்கள் திருடர்களால் உபத்திரவிக்கப்பட்டிருந்தார்கள். இவரு டைய ஸகாயத்தால் அந்த ஸாதுக்கள் திருடர்களை ஜயித்தார்கள். விஷ்ணுவைச் சார்ந்தவர்களை எப்படி அஸுரர்கள் உபத்திரவிக்க மாட்டார்களோ, அப்படி மிகுந்த அதிருஷ்டமுள்ள இவரிடத்தில் பக்தி செய்பவர்களை (ப்ரீதி வைப்பவர்கள்) சத்துருக்கள் உபத்திரவிக்க மாட்டார்கள் (சத்ரு பயமில்லையென்று கருத்து) இந்த குமாரன் குணத்திலும் கீர்த்தியிலும், சாந்தியிலும், மாஹாத்மியத்திலும் நாராயணருக்கு ஒப்பானவன். இவருடைய செய்கையைப் பற்றி ஆச்சர்யப்படட வேண்டியதில்லை" என்று கர்க்காசார்யர் எனக்குச் சொல்லித் தமதிருப்பிடஞ் சென்றார். அதுமுதல் அஸாத்தியமானவைகளை விளையாட்டாகச்

செய்யும் ஸ்ரீ கிருஷ்ணனை நாராயணனுடைய அம்ஸ மென்றே நினைத்திருக்கிறேன்" என்று சொன்னார்.

24–25. அதனைக்கேட்ட கோபர்கள் மிகவும் ஸந்தோஷமடைந்து ஆச்சர்யமற்றவர்களாகி நந்தனையும் ஸ்ரீ கிருஷ்ணனையும் பூஜித்தார்கள். மஹேந்திர னுடைய யாகத்தை ஸ்ரீ கிருஷ்ணன் தடுத்ததால் இந்திரன் கோபங்கொண்டு இடி முழக்கத்துடனும், மிகுந்த காற்றுடனும் அதிக மழை பெய்யச்செய்தான், அதனால் பசுக்களும், பாலர்களும், ஸ்திரீகளும் ச்ரமப்பட்டு ஸ்ரீ கிருஷ்ணனைச் சரணமடைந்தார்கள். அப்பொழுது ஸ்ரீ பகவான் சிரித்துக் கொண்டு குழந்தை வடிவங்கொண்டவரானாலும் ஒரு கையால் கோவர்த்தன மலையை விளையாட்டாக நாய் குடையை தூக்குவது போல குடையாகப் பிடித்து, கோகுலத்தைச் ஸம்ரக்ஷித்தார். அதனால் இந்திரனுடைய மதங் குறைந்தது. அந்தப் பசுக்களுக்கு அதிபதியான பகவான் நம்மிடத்தில் ஸந்தோஷத்தை யடையட்டும்.

♣ ♣ ♣ ♣

பகவானுக்கு அபிஷேகஞ் செய்தது.

1–13. இப்படிக் கோவர்த்தன மலையைக் குடையாகப்பிடித்துக் கோகுலத்தைப் பகவான் காப்பாற்றியபின் கோலோகத்திலிருந்து காமதேனுவும், இந்திரனும் பூமிக்கு வந்து ரஹஸ்யத்தில் ஸ்ரீ கிருஷ்ணனைத் தர்சித்தார்கள். அப்பொழுது இந்திரன் பகவானிடத்தில் அபராதஞ் செய்தவனானதால் வெட்கமடைந்து சூரியன் போலப் ப்ரகாசிக்கும் கிரீடம் படும்படி மிகுந்த தேஜஸ்ஸுள்ள ஸ்ரீ கிருஷ்ணனுடைய இரண்டு பாதங்களில் நமஸ்கரித்தார். மேலும் அவருடைய மாஹாத்மியத்தைக் கேட்டும் நேரில் பார்த்துமிருப்பதால் தான் மூவ்வுலங்களுக்கும் அதிபதியென்ற மதமற்றவனாகி, கைகளைக் கூப்பிக் கொண்டு, "உம்முடைய ஸ்வரூபம் சுத்த ஸத்வமுள்ளது; ஒரே வகையானது; விசேஷ ஞானமுள்ளது; (எல்லாவற்றையும் அறிந்ததென்று கருத்து) ரஜஸ், தமஸ் ஆகிய இவைகளின் ஸம்பந்தமற்றது; அப்படிப்பட்ட உமக்கு மாயையின் கார்யமாகிய ஸம்ஸார ஸம்பந்தமில்லை ஸம்ஸார ஸம்பந்தம் அஞ்ஞானத்தாலுண்டாகக் கூடியது. (ஸர்வ�ஞராகிய உமக்கு அஞ்ஞானத்தாலுண்டாகும் ஸம்ஸாரமில்லை யென்று தாத்பர்யம்) ஓ ஈச! உமக்கு அஞ்ஞானம், சரீர ஸம்பந்தம் ஆகிய இவைகளில்லை. அப்படியிருக்க தேஹஸம்பந்தத்தாலுண்டாகும் லோபம் முதலியவைகள் உமக்கில்லை என்பதில் என்ன ஸந்தேஹம்? அவைகள் மற்றொரு சரீரத்திற்குக் காரணங்களாக இருப்பவைகள்; அப்படிப்பட்ட கோபம், லோபம், முதலிய கெட்ட

குணங்கள் உம்மிடத்திலில்லாமலிருந்தாலும் துஷ்டர் களைச் சிக்ஷித்துத் தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக நீர் அஹங்காரிகளைத் தண்டிக்கிறீர். மேலும் நீர் இந்த லோகத்திற்குப் பிதாவாகவிருப்பவர்; ஹிதத்தை உபதேசிப்பவர்; அதிபதியாகவிருப்பவர்; தான் லோகாதிபதியென்று அஹங்காரமுள்ளவர்களுடைய துரபிமானத்தைப் போக்கடிப்பதற்காக இஷ்டப்படி விளையாட்டாக அவதரித்து விளையாடுகிறீர். நீர் கால ஸ்வரூபியாகையால் உம்மை ஜயிக்க ஒருவராலும் முடியாது. மிகுந்த மழை பெய்யுங்காலத்திலும் பயப்படாமலிருந்த உம்மைப்பார்த்து மூடனும், லோகாதிபதியென்ற கர்வமுள்ளவனுமான என்னைப் போன்றவர்கள் கர்வத்தை விட்டுப் பெரியோர்களால் அடையக்கூடிய பக்திமார்க்கத்தை அடைகிறார்கள். ஆனதால் உம்முடைய விளையாட்டே மூடர்களுக்குச் சிக்ஷையாக ஆகிறது.

ஓ ஈச! உம்முடைய மஹிமையை யறியாதவனும், ஐச்வர்ய மதத்தில் முழ்கினவனும், மூடனுமாகிய நான் உமக்கு அபராதம் செய்தேன். அதனை நீர் பொறுக்க வேண்டும். இம்மாதிரியான கெட்ட புத்தி இனி எனக்கு உண்டாகாமலிக்கும்படி அனுக்கிரஹிக்க வேண்டும். பூமிக்கு சுமையாகவிருக்கும் துஷ்டர்களான அஸுரர்களைக் கொல்வதற்காகவும் உம்முடைய பாதங்களை ஸேவிப்பவர்களைக் காப்பாற்றுவதற்காக வும் நீர் பூமியில் அவதரித்தவரல்லவா? ஆனதால்தான் அதிக அபராதம் செய்திருந்தாலும் அதனைப் பொறுக்கவேண்டும். ஸகலப்பிராணிகளிடத்திலும், அந்தர்யாமியாக வஸிப்பவரும், காலதேசங்களால் அளவிடக்கூடாதவரும், எல்லாவற்றிற்கும் வாஸஸ்தலமும்

யாதவர்களுக்கு அதிபதியாயும், தமதிஷ்டப்படிச் சரீரத்தை எடுத்துக்கொண்டவரும், சுத்தமான ஞான ஸ்வரூபியும், ஸகல ஸ்வரூபியும், ஸகலத்திற்கும் காரணரும், ஸகல பூதஸ்வரூபியுமான உமக்கு நமஸ்காரம். ஓ பகவான்! என்னை உத்தேசித்துக் கோபர்களால் செய்யப்படும் யாகத்தை நீர் தடுத்ததால் நான் மிதவும் கோபங்கொண்டு காற்று மழையையுண்டுபண்ணிக் கோகுலத்தை நாசஞ்செய்ய முயன்றேன். ஓ ஈச! என்னுடைய முயற்சியையும் மதத்தையும் நீர் நாசஞ்செய்ததால் அனுக்கிரஹிக்கப் பட்டவனாக ஆகின்றேன். இப்போழுது உம்மை ஈச்வரனாகவும் குருவாகவும் ஆத்மாவாகவும் நினைத்து சரணமடைந்தேன்" என்று பரார்த்தித்தான்.

14–17. அதனைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணபகவான் "ஓ மஹேந்திர! நீ இந்திரபதத்தை யடைந்து ஐச்வர்ய மதமுள்ளவனாகி என்னை நினைக்காமலிருந்ததனால் உனக்கு அனுக்கிரஹம் செய்வதற்காகவே யாகத்தைத் தடுத்தேன். ஐச்வர்ய மதமுள்ளவன் என்னை நினைக் கிறதேயில்லை. ஆனதால் எவனை அனுக்கிரகிக்க விரும்புகிறேனோ அவனுடைய ஸம்பத்தை அபஹரிப்பேன் ஆனதால் நீ ஸ்வர்க்கத்துக்குப் போகலாம். என்னுடைய உத்திரவினால் முன்போல உன்னுடைய அதிகாரத்தை நடத்திவரலாம். உனக்கு க்ஷேமமுண்டாகும் என்று சிரித்துக்கொண்டு மேகங் கர்ஜிப்பதுபோல உரக்கச்சொன்னார்.

18–28. பிறகு காமதேனுவானது தன்னுடைய ஸந்ததியாகிய பசுக்களுடன் கோபவேஷங்கொண்ட பகவானுடைய ஸமீபம் வந்து ஓ கிருஷ்ண! கிருஷ்ண!

மஹாயோகியே! ஜகத்ஸ்வரூபியே! ஜகத்தை நடத்து பவரே எல்லா லோகத்திற்குமதிபதியான உம்மால் காப்பாற்றப்பட்டு நாங்கள் நாதனுள்ளவர்களாக விருக்கிறோம் (இந்திரன் பசுக்களைக் கொல்ல முயன்றாலும் உம்மால் காப்பாற்றப்பட்டோம்) எங்களுக்கு நீர்தான் முக்கிய தைவம், நீரே இந்திரன்; ஓ ஜகத்திற்கதிபதியே! பசுக்களுக்கும், பிராஹ்மணர் களுக்கும். தேவர்களுக்கும், ஸாதுக்களுக்கும், க்ஷேமத்தைச் செய்வதற்காக நீர் இந்திரனாகவிருக்க வேண்டும். பூமியின் பாரத்தை நிவர்த்திப்பதற்காகப் பூமியில் அவதரித்திருக்கிறீர்; ப்ரஹ்மதேவரால் தூண்டப்பட்டு இவ்விடம் வந்திருக்கும் நாங்கள் உம்மை இந்திரனாக அபிஷேகம் செய்யப்போகிறோம்" என்று சொல்லி அந்தக் காமதேனு தன்னுடைய பாலினால் கிருஷ்ணனுக்கு அபிஷேகஞ் செய்தாள்.

அப்பொழுது இந்திரனும் தேவமாதாக்களால் தூண்டப்பட்டு தேவர்களுடன் ஐராவதத்தால் ஆகாய கங்கையிலிருந்து கொண்டுவரப்பட்ட தீர்த்தத்தால் பகவானுக்கு அபிஷேகஞ் செய்தான். கோவிந்த னென்றும் பகவானுக்குப் பெயரிட்டான். (பசுக்களுக்கு அதிபதி) அப்பொழுது தும்புரு, நாரதர் முதலியவர் களும் கந்தர்வர்களும், வித்யாதரர்களும், ஸித்தர்களும், சாரணர்களும் ஜனங்களுடைய பாபத்தை நிவர்த்திக் கும் பகவானுடைய சரிதத்தைக் கானம் செய்தார்கள். தேவஸ்திரீகள் ஸந்தோஷமாக நர்த்தனஞ்செய்தார்கள். சிறந்த தேவர்கள் ஸ்தோத்திரஞ் செய்தார்கள். புஷ்பமாரி பெய்தார்கள், மூவ்வுலகங்களும் மிகுந்த ஸுகத்தையடைந்தன. பசுக்கள் பாலால் பூமியை நனைத்தன. நதிகள் பால் முதலிய பிரவாகமுள்ளவை

களாகவிருந்தன. மரங்கள் தேனைப் பெருகவிட்டன. நெல் முதலியவைகள் உழாமல் விதைத்துப் பலித்தன. மலைகளில் ரத்தினங்கள் ப்ரகாசித்தன.. ஸ்ரீ கிருஷ்ணனுக்கு அபிஷேகஞ் செய்தவுடன் இயற்கையில் கொடியவைகளான மிருகங்களும் ஒன்றுக்கொன்று விரோதமில்லாமல் இருந்தன. இப்படி மஹேந்திரன் கிருஷ்ணனுக்கு அபிஷேகஞ்செய்து (பசுக்களுக்கதி பதியாக) கோவிந்தனென்ற பெயரைக் கொடுத்து பகவானிடம் விடைபெற்று தேவதை முதலியவர் களுடன் ஸ்வர்க்கலோகஞ் சென்றான்.

♣ ♣ ♣ ♣

வருணலோகஞ்சென்ற நந்தரைக் கிருஷ்ணன் திருப்பிக்கொண்டு வந்தது

1–8. ஒரு நாள் நந்தர் ஏகாதசி தினத்தில் உபவாஸமிருந்து ஸ்ரீமந் நாராயணனைப் பூஜித்து மறுநாள் துவாதசி தினத்தில் ஸ்நானஞ் செய்வதற்காக யமுனாதீரம் சென்று, அருணோதயத்திற்கு முந்தி, அஸுரர்களுடைய காலத்தில், இது அசுரர்களுடைய காலமென்று அறியாமல் ஜலத்தில் இறங்கினார். அப்பொழுது ஒரு அஸுரன் ஸமயத்தையறியாமல் ஜலத்தில் இறங்கிய நந்தரைத் தூக்கிக்கொண்டு வருணனுடைய ஸமீபஞ்சென்றான். பின்பு ஸ்நானத் திற்காக ஜலத்திலிறங்கிய நந்தரைக் காணாமல் கோபிகைள், ஓ கிருஷ்ண! ஓ ராம! என்று கதறினார்கள்.

அதைக் கேட்ட பகவான், தம்முடைய பிதா வருணனிடமிருப்பதாகத் தெரிந்துகொண்டு, தன்னுடைய பந்துக்களைப் பயப்பட வேண்டாமென்று ஸமாதானஞ் செய்து வருண லோகஞ் சென்றார். அப்பொழுது வருணன் தன்னுடைய லோகத்திற்கு வந்த பகவானைத் தர்சித்து மிகவும் அவரைப் பூஜித்து அதிக ஸந்தோஷத் துடன், "என்னுடைய சரீரமானது இப்பொழுது பயனுள்ளதாக ஆயிற்று. இப்பொழுது தான் என்னுடைய மனோரதம் பூர்ணமாயிற்று உம்முடைய பாதத்தையடைந்தவர்கள் ஸம்ஸாரத்தைத் தாண்டி மோக்ஷத்தை அடைந்தார்கள். ஒப்புயர்வில்லாத ஐச்வர்யமுள்ளவரும், பூர்ணரும், ஸகல ஜீவர்களுக்கு அதிபதியுமான உம்மை நமஸ்கரிக்கிறேன். லோகத்தை

படைப்பதற்குக் காரணமாகிய மாயையானது உம்மிடத்தில் இல்லை. (இல்லாதது போலிருக்கிறது). ஓ ப்ரபுவே! ஜகத் குருவே உம்முடைய மஹிமையை அறியாதவனாகிய என்னுடைய வேலைக்காரன் உம்முடைய தகப்பனாரை இவ்விடம் அழைத்து வந்தான். அந்த அபராதத்தை மன்னிக்க வேண்டும். உம்முடைய தகப்பனாரை இவ்விடத்தில் கொண்டு வந்ததால் உம்முடைய பாதாரவிந்த தர்சனம் எனக்குக் கிடைத்தது. என்னுடைய வேலைக்காரனால் கொண்டு வரப்பட்ட நந்தர் இதோ இருக்கிறார்; அழைத்துப் போகலாம். ஓ பிரபுவே! நாங்கள் உம்மைச்சார்ந்த பிரஜைகளாகையால் எங்களுடைய அபராதத்தை மன்னித்து அனுக்கிரஹிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

9–17. ஸகல ஜகத்பதியான ஸ்ரீ கிருஷ்ணன் வருணனுடைய வார்த்தையினால் ஸந்தோஷித்துத் தன்னுடைய பிதாவைவழைத்துக்கொண்டு கோகுலத்திற்கு வந்தார். அவரைக்கண்டு பந்துக்கள் ஸந்தோஷித்தார்கள். நந்தர் இதற்குமுன் பார்க்கப் படாத லோகபாலனுடைய ஐச்வரியத்தையும், அங்கிருப்பவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் வணங்கி இருப்பதையும் பார்த்து ஆச்சர்யமடைந்து தங்களுடைய பந்துக்களுக்கு அந்த விஷயத்தைத் தெரிவித்தார். அந்தகோபர்கள் அதனைக்கேட்டு மிகுந்த ஆசையுடன் கிருஷ்ணனை ஈச்வரரென்று நினைத்து நம்மெல்லோருக்கும் பகவான் மோக்ஷத்தைக் கொடுப்பாரோ என்றும் ஜனங்கள் நினைத்தார்கள். எல்லாவற்றையும் அறிந்தவராகிய ஸ்ரீ கிருஷ்ணன், பந்துக்களுடைய அபிப்பிராயத்தைபறிந்து, அவர்களுடைய மனோரதத்தை

நிறைவேற்றுவதற்காக, "இந்த லோகத்திலுள்ள ஜனங்கள் அவித்யை (தேஹத்தை 'நான்' என்று நினைத்திருப்பது), காமம், கர்மம் இவைகளால் தேவசரீரம், பசு பக்ஷி முதலியவைகளின் சரீரம் இவைகளையடைந்து தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தை அறிய வில்லையென்று மிகுந்த கிருபையால் ப்ரகிருதியைக் காட்டிலும் மேலான ப்ரஹ்மஸ்வரூபத்தைப் பந்துக்களுக்கு காண்பித்தார். அந்த ஸ்வரூபம் ஸத்தியமானது. (பாதிக்க முடியாதது) ஞானஸ்வரூபம்; (ஜடமல்ல) காலதேசத்தில் அளவிடக்கூடாதது. தாமாகப் பிரகாசிப்பது; சாச்வதமானது. மகர்ஷிகள் குணஸம்பந்த மற்றபோது அதனை அறிவார்கள். இப்படி அந்த கோபர்கள் ப்ரஹ்மமாகிற மடுவில் மூழ்கி கிருஷ்ணனால் தூக்கபட்டு அந்தப் ப்ரஹ்மத்தின் லோகத்தை கண்டார்கள். அது ஸ்ரீ கிருஷ்ணனுடைய கிருபையால் அக்ரூரரால் பார்க்கப் பட்டது. நந்தன் முதலிய கோபர்கள் அதனைக்கண்டு மிகுந்த ஆனந்த ஸுகத்தையடைந்து கிருஷ்ணனை ஸ்தோத்திரம் செய்து, அவரிடத்தில் கௌரவ புத்தியை வைத்து மிகவும் ஆச்சர்யமடைந்திருந்தார்கள்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–29

ராஸக்ரீடையின் ஆரம்பம்

ஸ்ரீ கிருஷ்ணபகவானும் யோகமாயையை ஆச்ரயித்து அந்தச் சரத்கால ராத்ரிகளில் ராஸக்ரீடை செய்ய விரும்பினார். மல்லிகைகள் புஷ்பித்தன; தேசாந்திரம் சென்றிருந்த புருஷன் வெகுநாள் கழித்துவந்து பத்னியின் முகத்தில் குங்குமத்தை வைத்து சிவப்பாகச் செய்தாற்போல சந்திரன் சுக கரங்களான கிரணங்களால் கிழக்குத் திக்கை சிவக்கச் செய்துகொண்டு உதயமானார். அதனால் ஓஷதிகளும், ஜனங்களும் தாபமற்றவர்களானார்கள் (பகலில் ஸூர்யனுடைய வெயிலாலுண்டான உஷ்ணம் அடங்கியதென்று கருத்து). அப்பொழுது கிருஷ்ண பகவான் லக்ஷ்மிதேவியின் முகம் போல சிவந்த காந்தியுடன் பூர்ணமாக உதயமான சந்திரமண்டலத் தையும், அந்தச் சந்திரனுடைய கிரணங்களால் வனம் ப்ராகாசிப்பதையும் பார்த்து ஸ்திரீகள் ஆசைப்படும் படி இனிமையாக கானஞ்செய்தார்.

அந்த கானமானது மன்மதனை விருத்திசெய்யக் கூடியதாகவிருந்தது. அதனைக் கேட்ட கோப ஸ்திரீகள் கிருஷ்ணனிடத்தில் மனத்தைச் செலுத்தியவர்களாகி ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளாமலேயே காதிலணிந்திருக்கும் குண்டலங்கள் அசைய ஸ்ரீ கிருஷ்ணனிருக்குமிடத்திற்கு வேகமாக வந்தார்கள். சில ஸ்திரீகள் மாடு கறந்து கொண்டிருக்கும் போது பகவானுடைய கானத்தைக் கேட்டு நிறுத்தி விட்டு ஸ்ரீ கிருஷ்ணனிடஞ் சென்றார்கள். சிலர்

அடுப்பில் பாலை வைத்துவிட்டும், சிலர் அடுப்பில் பக்குவமாகிக் கொண்டிருக்கும் கோதுமை முதலிய அன்னத்தை கீழே இறக்காமலும், பரிமாரிக் கொண்டிருந்த சில ஸ்திரீகள் அதை விட்டும், குழந்தைகளுக்கு பால் கொடுத்துக்கொண்டிருந்த சில ஸ்திரீகள் அதனை விட்டும், புருஷனுக்குச் சுச்ரூஷை செய்து கொண்டிருந்தவர்கள் அதனை லக்ஷ்யஞ் செய்யாமலும், ஆஹாரத்தைப் புஜித்துக கொண்டிருந்த சில ஸ்திரீகள் போஜனத்தை லக்ஷ்யஞ்செய்யாமலும், ஸ்ரீ கிருஷ்ணனிடஞ் சென்றார்கள். மேலும் சந்தனம் முதலியவைகளைப் பூசிக்கொண்டிருந்தவர்களும், உடம்பு துடைத்துக் கொண்டிருந்தவர்களும், கண்களுக்கு மையிட்டுக் கொண்டிருந்தவர்களுமான சில கோபிகைகள் அவைகளை முடித்துக்கொள்ளாம லேயே பகவானுடைய ஸமீபஞ்சென்றார்கள். பின்னுஞ் சிலர் இடுப்பு வஸ்திரத்தை மேல் வஸ்திரமாகவும், மாற்றித் தரித்துக் கொண்டும், ஆபரணங்களை மாற்றி தரித்துக் கொண்டும் ஸ்ரீ கிருஷ்ணனிடஞ் சென்றார்கள். இப்படி அந்த வேலைகளை முடிக்காமலேயே வெளியில் செல்லும் ஸ்திரீகள் அவர்களுடைய பிதா, பர்த்தா, ஸஹோதரர்கள், பந்துக்கள் ஆகிய எல்லோரும் தடுத்தார்கள். அப்படியும் அவர்களில் சில ஸ்திரீகள் மனம் ஸ்ரீ கிருஷ்ணனால் அபஹரிக்கப்பட்டிருந்தமை யால் திரும்பாமலேயே ஸ்ரீகிருஷ்ணனிடஞ் சென்றார்கள்.

9–11. சில கோபிகைகள் வீட்டிற்குள்ளிருந்து வெளிவரமுடியாமல் வீட்டிலேயே வஸித்தார்கள். ஆனாலும் அவர்கள் கண்களை மூடிக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனையே த்யானஞ்செய்தார்கள் ஸ்ரீகிருஷ்ணனை விட்டுப் பிரிந்திருந்ததால் உண்டான ஸஹிக்கமுடியாத

விரஹதாபத்தை அனுபவித்தார்கள். அதனால் அவர் களுக்கு பாபகர்மம் நிவர்த்தியாயிற்று. பகவானை ஆலிங்கனஞ்செய்துகொண்டது போல், த்யானஞ் செய்ததால் உண்டான சுகத்தை அனுபவித்தார்கள். அதனால் புண்யகர்மம் நிவர்த்தியாயிற்று. இப்படி புண்யம் பாபம் ஆகிய பந்தகமான கர்மங்கள் நாசமடைந்தன. அவர்கள் ஸ்ரீகிருஷ்ணனை பரப்ரஹ்ம மென்று த்யானஞ் செய்யாமல் ஜாரனென்று (அன்னிய புருஷன்) நினைத்தும் முக்குணங்களாலேற்பட்ட இந்த சரீரத்தை விட்டுவிட்டார்கள் (மோக்ஷத்தை அடைந்தார்களென்று கருத்து) என்று சுகர் சொன்னார்.

12. அதனைக் கேட்ட பரீக்ஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி "ஓ முனியே! கோபஸ்திரீகள் ஸ்ரீ கிருஷ்ணனை அழகான மனிதன்; தங்களுக்கு பர்த்தா என்று நினைத்தார்களேயொழிய பரப்ரஹ்மம் என்று நினைக்கவில்லையே; குணஸம்பந்தமுள்ள புத்தியால் ஸம்ஸாரம் எப்படி நிவர்த்தியாயிற்று? அதனைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

13–16. அதனைக் கேட்ட சுகர் அரசனை நோக்கி "சிசுபாலன் பகவானிடத்தில் விரோத புத்தியை வைத்தும் முக்தியடைந்தானென்று முன்னமேயே சொல்லியிருக்கிறேன், அப்படியிருக்க பகவானிடத்தில் பிரியம் வைத்தவர்கள் மோக்ஷத்தை அடைவதற்கு என்ன ஸந்தேஹம்? நாசமற்றவரும், அளவிடக்கூடாத வரும், குணஸம்பந்தமற்றவரும், குணங்களுக்கு. அதிபதியுமான பகவான் ஜனங்களுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பதற்காகவே அவதரிக்கிறார். அப்படிப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் காமத்தை (மன்மத விஷயமான

ஆசை) யாவது, கோபத்தையாவது, பயத்தையாவது, ஸ்நேஹத்தையாவது, ஸம்பந்தத்தையாவது (பகவானைப் தானாகப் பாவிப்பது) பக்தியையாவது, எப்பொழுதும் பகவானிடத்தில் எவர்கள் செலுத்துகிறார்களோ, அவர்கள் தன்யமாக ஆகிறார்கள் (மோக்ஷத்தை அடைவார்கள்) அசையாப் பொருளாகிய ஸ்தாவரங் களும் ஸ்ரீ கிருஷ்ணனை ஆச்ரயித்து மோக்ஷத்தை அடைகின்றன. அப்படிப்பட்ட யோகீச்வரர்களுக்கு அதிபதியும், ஜனன மற்றவருமாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானை எவ்விதமாகவாவது ஆச்ரயித்தவர்கள் மோஷத்தை அடைந்தார்களென்பது ஆச்சர்யமல்ல

17–27. இப்படித் தம்முடைய கானத்தைக் கேட்டு வந்த கோபிகைகளை கண்ட பகவான் "ஓ மிகுந்த பாக்யமுள்ளவர்களே! நல்வரவா! உங்களுக்கு ப்ரியமான எதனைச் செய்வோம்? கோகுலத்திலுள்ளவர்கள் க்ஷேமமாக இருக்கிறார்களா? வந்த கார்யமென்ன? இந்த ராத்திரி பயங்கரமாக விருக்கிறது, கொடிய பிராணிகள் ஸஞ்சரிக்கின்றன. உங்களுடைய புருஷர் களும், தாய்களும், தந்தைகளும், ஸஹோதரர்களும் தேடுகிறார்கள். பந்துக்களுக்கு பயத்தையுண்டு பண்ணவேண்டாம். இவ்விடத்திலிருக்கக்கூடாது, கோகுலத்திற்கு போகலாம். சந்திரனுடைய காந்தியால் ப்ரகாசிக்கும் இந்த வனத்தைப் பார்த்தீர்கள். யமுனை யின் ஜலக்காற்றினால் அசையும் மரங்களுடைய தளிர்களால் அழகாகவிருக்கிறது. ஆனதால் தாமஸி யாமல் கோகுலஞ்சென்று புருஷர்களுக்கு நீங்கள் சுச்ரூஷை செய்யுங்கள். உங்களுடைய குழந்தைகளும் கன்றுகளும் அழுகின்றன. அவைகளுக்குப் பாலைக் கொடுங்கள். பசுக்களைக் காக்கவேண்டும் ஆனால்

என்னிடத்தில் இருக்கும் ப்ரீதியினால் என்னிடத் திலேயே சித்தத்தைச் செலுத்தி நீங்கள் என்னிடத்தில் வந்தது யுக்தமேயாம். பிராணிகள் என்னிடத்தில் ப்ரியப்படுவார்கள். கபடமில்லாமல் புருஷர்களுக்குச் சுச்ரூஷை செய்வதும், குழந்தைகளைக் காப்பாற்று வதும், மாமனார் மாமியார் முதலிய பந்துக்களுக்குச் சுச்ரூஷை செய்வதும் ஸ்திரீகளுக்கு முக்கியமான தர்மம். மேலும் புருஷன் கெட்ட நடத்தையுள்ளவனா னாலும், அதிருஷ்டமில்லாதவனானாலும், வயது முதிர்ந்தவனானாலும், ரோகமுள்ளவனானாலும், ஏழையானாலும், ஸ்திரீகள் அவனுக்குச் சுச்ரூஷை செய்யவேண்டும். அவனை விடக்கூடாது. அதனால் அந்த ஸ்திரீகளுக்கு உத்தமலோகங்கிடைக்கும், குல ஸ்திரீகள். ஜாரபுருஷனை ஆசைப்படுவதால் ஸ்வர்க்கம் கிடைக்கிறதில்லை, அபகீர்த்தி உண்டாகிறது; எல்லாராலும் வெறுக்கக்கூடியது; மேலும் என்னுடைய குணங்களைக் கேட்பதனாலும் என்னுடைய சரிதங்களைச் சொல்வதாலும், என்னை த்யானிப்ப தாலும், என்னைத் தர்சிப்பதாலும் என்னிடத்தில எப்படி பக்தி உண்டாகிறதோ அப்படி ஸமீபத்திலி ருப்பதால் உண்டாகிறதில்லை. ஆனதால் அவரவர்கள் வீட்டுக்குச் செல்லுங்கள்" என்றார்.

28–41. இப்படி கோவிந்தனால் சொல்லப்பட்ட அப்பிரியமான வார்த்தையைக்கேட்ட கோபிகைகள் தங்களுடைய மனோரதம் நிறைவேறாததனால் துக்கித்து மிகுந்த கவலையை அடைந்தார்கள். மேலுமவர்கள் துக்கத்தால் உஷ்ணமாகப் பெருமூச்சிவிட்டு அதனால் உலர்ந்துபோன உதடுகளுடன்கூடிய முகங்களுள்ளவர் களாகிக் தலைகுனிந்து கால் கட்டைவிரலால் பூமியைக்

கீறிக்கொண்டு கண்களிலுள்ள மையைக் கரைத்துக் கொண்டு பெருகும் கண்ணீரால் ஸ்தனத்திலுள்ள குங்குமங்களை அலம்புகிறவர்களாகி மௌனமாக விருந்தார்கள். அவர்கள் கிருஷ்ணனை அடையவேண்டு மென்ற எண்ணத்தால் எல்லா பந்துக்களையும் விட்டவர்கள்; எல்லா ஆசைகளையும் ஒழித்தவர்கள்; கிருஷ்ணனிடத்தில் அதிகப் ப்ரீதியுள்ளவர்கள்; அப்படிப்பட்ட அந்த கோபிகைகள் விரோதிபோல பேசுகின்ற ஸ்ரீ கிருஷ்ணனை நோக்கிக் கண்களைத் துடைத்துகொண்டு, கோபத்தால் தழுதழுத்த ஸ்வரத்துடன் "பிரபுவே! இப்படி நீர் கொடிய வார்த்தையை சொல்லக்கூடாது. ஸகல ஆசைகளையும் ஒழித்து உம்முடைய பாதத்தை அடைந்தவர்களான எங்களை நீர் அங்கீகரிக்க வேண்டும்; விடக்கூடாது.

மோக்ஷத்தையடைய விரும்பி தம்மை உபாஸிக்கும் பக்தர்களை ஸ்ரீமந் நாராயணன் அங்கீகரியாமல் விட்டுவிடுவாரா? எல்லாத் தர்மத்தையுமறிந்தவரான நீர் புருஷர்களையும் அனுஸரித்திருப்பதே ஸ்திரிகளு டைய தர்மம் என்று சொன்னீர். நீர் பிராணிகளுக்கு பிரியரும், பந்துவும் ஆத்மாவாவுமாவிருக்கிறீர். ஆனதால் உமக்குச் சுச்ரூஷை செய்வதாலேயே, பர்த்தா முதலிய பந்துக்களை அனுஸரித்ததாகிறது. ஓ தாமரைமலர் போன்ற கண்களுள்ளவரே! எல்லாருக்கும் ஆத்மாவாகவிருக்கும் உம்மிடத்தில் வித்வான்கள் பக்தி செய்கிறார்கள். பர்த்தா, புத்திரன் முதலிய பந்துக்களால் உபத்திரவமேயொழிய ஸுக மில்லை. அவர்களால் என்ன ப்ரியோஜனம்? ஓ பரமேச்வர! எங்களிடத்தில் தயை செய்யவேண்டும். வெகுநாளாக உம்மிடத்தில் வைத்திருக்கும் ஆசையைக்

கெடுக்கவேண்டாம். இதுவரையில் கிருஹகிருத்யங் களில் ஸம்கமாக பிரவேசித்திருந்த எங்களுடைய மனத்தையும், கைகளையும் நீர் அபஹரித்தீர். எங்களுடைய கால்கள் உம்முடைய பாதங்களைவிட்டு ஒரு அடிகூடச் செல்லவில்லை. நாங்கள் எப்படி வீட்டிற்கு போவோம்? எப்படி வீட்டுவேலைகளைச் செய்வோம்? ஓ தோழரே! உம்முடைய புன்சிரிப்புள்ள பார்வையாலும், இனிமையான கானத்தாலும், எங்களுக்கு மன்மதாக்கினி உண்டாயிருக்கிறது.

அதனை உம்முடைய உதட்டிலுள்ள அமிருத ப்ரவாஹத்தால் அணைத்துவிடும். அப்படிச் செய்யா விடில் உம்மைவிட்டுப் பிரிந்ததாலுண்டான அக்கினி எங்கள் சரீரத்தை உபயோகித்து. த்யானஞ் செய்து உம்மை அடைவோம். மேலும் லக்ஷ்மிதேவிக்கு ஸந்தோஷத்தைக் கொடுத்ததான உம்முடைய பாதத்தை எப்பொழுது ஸ்பர்சித்தோமோ, உம்மால் ஸந்தோஷப் படுத்தபட்டோமோ, அது முதல் வேறு ஜனங்களுடைய முன்னிருப்பதற்கும் பிடிக்கவில்லை. (பர்த்தா முதலிய பந்துக்களிடஞ் செல்லுவதற்கு இஷ்டமில்லையென்று கருத்து). எந்த லக்ஷ்மிதேவி யினுடைய கடாக்ஷலேசத்திற்காக ப்ரஹ்மா முதலிய தேவர்கள் தபஸ் செய்கிறார்களோ, அப்படிப்பட்ட ஸ்ரீதேவி உம்முடைய மார்பில் வஸிப்பவளானாலும், துளசியால் அடையப்பட்டதும், பக்தர்களால் ஸேவிக்கப்பெற்றதுமான உம்முடைய பாதத்தூளியை அடையவேண்டுமென்று விரும்புகிறாள். அதுபோல நாங்களும் அதனையடைந்தோம். (உம்முடைய பாதத்தின் அழகு மிகவும் ஆச்சர்யபடக்கூடியதென்று தாத்பர்யம்) ஓ பாபங்களைப் போக்கடிப்பவரே!

வீடுகளைவிட்டு உம்மை உபாஸிக்க விரும்பி, உம்முடைய பாதத்தை அடைந்தோம். (யோகிகள் போல எல்லாவற்றையும் விட்டு வந்தோமென்று கருத்து.) கிருபை செய்யவேண்டும். ஓ அழகிய புருஷரே! உம்முடைய அழகான சிரிப்பைப்பார்த்தால் மன்மத தாபத்தை அடைந்தவர்களான எங்களை வேலைக்காரிகளாக அங்கீகரிக்கவேண்டும். பின்னும் காதிலணிந்திருக்கும் குண்டலங்களால் அழகான கன்னங்களுள்ளதும், அதராமிர்தமுள்ளதும், தொங்கும் தலைமயிர்களுள்ளதுமான உம்முடைய முகத்தையும், புன்சிரிப்புள்ள பார்வையையும், எல்லாருக்கும் அபயத்தை கொடுக்கும் இரு கைகளையும், லக்ஷ்மி தேவிக்கு முக்கியமாக ஸந்தோஷத்தையுண்டு பண்ணும் மார்பையும் பார்த்து நாங்கள் உமக்குத் தாஸிகளானோம்.

உம்முடைய வேணுகானத்தைக் கேட்டுப் பசுக்களும், பறவைகளும், மரங்களும், மிருகங்களும் மயிர்க் கூச்சலடைகின்றனவே; அப்படிப்பட்ட இனிமையான பதங்களுள்ளதும், மூர்ச்சனையுள்ளது மான (ஸ்வரத்தின் ஆலாபன விசேஷம்) புல்லாங்குழல் சப்தத்தைக் கேட்டும், மூவுலகங்களிலும் சிறந்த அழகுள்ளதுமான உம்முடைய சரீரத்தைத் தர்சித்தும் எந்த ஸ்திரீதான் தன்னுடைய தர்மத்தைத் தவற மாட்டாள்? (ஸ்திரீகள் தங்களுடைய புருஷர்களை விடக்கூடாது; ஜார புருஷனை அடைவது யுக்தமல்ல வென்று சொன்னீர், அது சரிதான். ஆனாலும் உம்முடைய கானத்தைக் கேட்டு, ஸ்வரூபத்தையும் தரிசித்ததால் அவர்களுக்குரிய தர்மத்தைக்கூட விட்டு விடும்படி நேரிடுகிறது. ஆனதால் கானத்தைக்கேட்ட

Released by Maran's Dog, Toronto , Canada

மாத்திரத்திலேயே ஸ்வதர்மத்தை விட்டுவிடலாம். நேரில் உம்மைத் தர்சித்ததின் அதனை விடுவதற்கு என்ன ஆக்ஷேபமென்று தாத்பர்யம்.) ஓ! உபத்திரவ மடைந்தவர்களுக்குப் பந்துவே! ஆதிபுருஷராகிய ஸ்ரீமந் நாராயணன் தேவலோகத்தை எப்படிக் காப்பாற்று கிறாரோ, அப்படிக் கோகுலத்தில் வஸிப்பவர்களை நீர் காப்பாற்றுவதற்காக அவதரித்திருக்கிறீர். ஆனதால் உமக்குத் தாஸிகளான எங்களுடைய விரகதாபமுள்ள ஸ்தனங்களிலும், தலைகளிலும் உம்முடைய தாமரை மலர் போன்ற கைகளை வைத்து ஸுகப்படுத்தும்" என்று பிரார்த்தித்தார்கள்.

42–48. இப்படிப் பரவசமான மனத்துடன் சொல்லிய கோபிகைகளுடைய வார்த்தையைக் கேட்ட ஸ்ரீ கிருஷ்ணபகவான், தாம் ஆத்மாராமரானாலும், யோகீசுவரர்களுக்கு அதிபதியானாலும் அவர்களிடத் தில் கிருபைசெய்து, சிரித்து, அவர்களுடன் ரமித்தார். அந்த ஸ்திரீகள் பிரியனாகிய ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்து முகமலர்ச்சியுள்ளவர்களாகி, ஸ்ரீகிருஷ்ணனைச் சுற்றிக்கொண்டார்கள். அப்படி ஸ்திரீகளுடன் கூடிய ஸ்ரீகிருஷ்ணன் நட்சத்திரங்களால் சூழப்பட்ட சந்திரன் போலப் ப்ரகாசித்தார். மேலும், அவர்களுடைய கம்பீரமான சிரிப்பு, பற்கள் ஆகிய இவை குமுத புஷ்பங்கள் போலிருந்தன. இப்படிப் பகவான் வைஜயந்தி என்ற மாலையைத் தரித்துக்கொண்டு, அநேக ஸ்திரீகளுடைய கூட்டத்திற்கு அதிபதியாக ஒவ்வொரு வனத்திலும் சஞ்சரித்தார்; அவரும் கானஞ்செய்தார்; ஸ்திரீகளும் அவரைக் கொண்டாடி னார்கள். பின்னுமவர் அந்த ஸ்திரீகளை யமுனா நதியின் மணல் திட்டிற்கு அழைத்துச் சென்றார்.

அவ்விடத்திலுள்ள மணல்கள் ஸ்வர்ணமயங்களாக இருந்தன. தாமரைப் புஷ்பம், குமுத புஷ்பம் இவை களின் வாசனையுள்ளதான அலைக்காற்று வீசியது. அந்த அழகான இடத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் கோப ஸ்திரீகளின் மீது கையை நீட்டுவது, ஆலிங்கனஞ் செய்துகொள்வது, கையைத் தொடுவது, தலை மயிரைத் தொடுவது, தொண்டைகளை ஸ்பரிசிப்பது, ஸ்தனங்களைத் தொடுவது, பரிகாசஞ் செய்வது, நகங்களால் கிள்ளுவது, விளையாட்டாக பார்ப்பது சிரிப்பது முதலியவைகளைச் செய்து அவர்களுக்கு மன்மதனை விருத்திசெய்து அவர்களை ஸந்தோஷப் படுத்தினார்! இப்படி அந்த ஸ்திரீகள் பகவானிடத் திலிருந்து மனத்தை அடைந்து ஒவ்வொருவரும் லோகத்திலுள்ள ஸ்திரீகளுக்குள் தாங்கள் மேலானவர் களென்று நினைத்துக் கர்வங்கொண்டார்கள். அப்பொழுது கேசவராகிய (ப்ரஹ்மதேவரையும் பரம சிவனையும் ஸ்வாதீனப்படுத்திக் கொண்டவர்) பகவான், அந்தக் கோபிகைகளுடைய கர்வத்தைப் (நாம் மிகுந்த அழகுள்ளவர்கள்; கிருஷ்ணன் நம்மக்குச் ஸ்வாதீனமாக இருக்கிறார் என்ற கர்வம்) போக்கடித்து அவர்களை அனுக்ரஹிப்பதற்காக அவ்விடத்திலேயே மறைந்தார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம் 30

கோபிகள் ஸ்ரீகிருஷ்ணனைத் தேடியது

1–36. பகவான் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்தபொழுது கோப ஸ்திரீகள் அவரைக்காணாமல் பெண் யானைகள் யூதபதியான ஆண் யானையைக் காணாமல் துக்கித்தாற்போல் அழுதார்கள். பின்னும வர்கள் பகவானுடைய நடை, அன்பு பொருந்திய சிரிப்பு, விளையாட்டான பார்வை, மனோகரமான வார்த்தை விளையாட்டு ஆகிய இவைகளை நினைத்து, மதி மயங்கித் தன்மயர்களாகி, அந்தந்தச் சேஷ்டைகளைச் (சிரிப்பு முதலியவை) செய்து விளையாடினார்கள்.

இப்படி அந்த ஸ்த்ரீகள் ஸ்ரீகிருஷ்ணனுடைய சேஷ்டைகளை நினைத்துத், தங்களைக் கிருஷ்ணன் என்று நினைத்து கொண்டு நடை, சிரிப்பு முதலிய சேஷ்டைகளைச் செய்து, 'நான் கிருஷ்ணன்' என்று ஒவ்வொருவரும் சொல்லிக்கொண்டார்கள். பின்னுமவர்கள் ஒன்று சேர்ந்து ஸ்ரீ கிருஷ்ணனுடைய குணங்களையே சொல்லிக்கொண்டு பைத்தியங் கொண்டவர்கள் போல் வனம் வனமாக சஞ்சரித்தார் கள். ஸகல ப்ராணிகளுடைய ஹிருதயங்களிலும், வெளியிலும் ஆகாசம்போல வியாபித்து இருப்பவருமான ஸ்ரீ கிருஷ்ணனை பார்த்தாயோவென்று மரங்களை கேட்கிறார்கள். எப்படியென்றால் "ஓ அசுவத்த மரமே! பிலக்ஷமே (இருளி மரம்)! ஆலமரமே! நந்தருடைய புத்திரன் அன்பு பொருந்திய சிரிப்பினாலும், பார்வையாலும் எங்களுடைய மனத்தை அபஹரித்துச்

சென்றார். அவரைப் பார்த்தீர்களா? ஓ மருதாணியே! அசோகமே! புன்னைமரமே! நாகைமரமே! சம்பக மரமே! கர்வமுள்ள ஸ்திரீகளுடைய கர்வத்தைப் போக்கடிக்கும் சிரிப்புள்ள ராமனுடைய ஸஹோதரன் எவ்விடத்திற்குப் போனார்? ஓ நல்ல ஸ்வபாவமுள்ள துளசியே! கோவிந்தருடைய பாதங்களில் பிரிய முள்ளவளே! வண்டுகளுடன் உன்னைத் தரித்துக் கொண்டிருக்கும் இஷ்டரான அச்சுதரைப் பார்த்தாயா! ஓ மாலதியே! மல்லிகையே! ஓ ஜாதியே! யூதிகையே! மாதவராகிய பகவான் உங்களை ஸ்பரிசித்து அதனால் உங்களை ஸந்தோஷிக்கச் செய்து கொண்டு சென்றிருப்பாரே! அவரைக் கண்டதுண்டா! மேலும் மாமரம், பிரியாளு, பலா, அஸனம், கோவிதாரம், எலுமிச்சை, பில்வம், மகிழமரம், ஓட்டுமாமரம், கதம்பம், நீபம் (கடம்ப மரத்தின் ஜாதிபேதம்) முதலிய யமுனையின் கரையில் முளைத்துப் பிறருக்கு உபகாரஞ் செய்துக்கொண்டிருக்கும் மரங்கள் யாவும் ஸ்ரீ கிருஷ்ணனைக் காணாமல் துக்கிப்பவர்களான எங்களுக்கு அவர் சென்ற மார்க்கத்தைச் சொல்லட்டும்.

ஓ பூமி தேவியே! நீ என்ன தவஞ்செய்தாய்! பகவானுடைய பாதங்கள் உன்மீது பட்டபடியால் மயிர்கூச்சலை அடைந்திருக்கிறாய்! இந்த மயிர்க் கூச்சல் இப்பொழுது ஸ்ரீகிருஷ்ணனுடைய பாதம் பட்டதால் ஏற்பட்டதா? (பூமியில் ஒரு இடத்தில் பகவானுடைய பாதம் பட்டதால் மயிர்கூச்சலுண் டாயிற்றென்பது சரியல்ல) அல்லது த்ரிவிக்கிரம அவதாரஞ்செய்த பகவான் பூமி முழுவதையும் ஒரு அடியாக அளந்த ஸமயத்தில் உன்னுடைய சரீரம்

முழுவதிலும் அவருடைய பாதம்பட்டதல்லவா? அதனாலுண்டாயிற்றா? அல்லது அதற்கும் முன் வராஹவதாரஞ் செய்த பகவானுடைய சரீரத்தை ஆலிங்கனஞ்செய்து கொண்டதாலுண்டானதா? எப்படியானாலும் பகவான் சென்றவிடம் உனக்குத் தெரிந்திருக்கும். அதனைச் சொல்! ஓ தோழி! மானுடைய பத்தினியே! ஸ்ரீ கிருஷ்ணன் உன்னுடைய ஸமீபம் வந்தாரா? அழகான அவருடைய சரீரத்தைப் பார்த்து ஸுகத்தை அடைந்தீர்களா? ஸ்திரீயை ஆலிங்கனஞ் செய்துகொள்ளும் ஸமயத்தில் ஸ்திரீகளுடைய ஸ்தனங்களிலிருந்த குங்குமம் பகவானுடைய கழுத்திலிருக்கும் குந்த புஷ்பத்தின் மாலையில் சம்பந்திக்கிறது. "அந்த மாலையின் வாஸனைபோல வாஸனையுள்ள காற்று வீசுகிறது அதிகப் பழங்களின் சுமையால் வணங்கியிருக்கும் மரங்களைப் பார்த்து, "இவைகள் ஸ்ரீ கிருஷ்ணனைக் கண்டு வணங்கி இருக்கின்றன" என்று நினைத்துச் சில கோபிகைகள், "ஓ மரங்களே! ஸ்ரீகிருஷ்ணன் ஒரு கையைத் தம் ஸ்திரீயின் தோளில் வைத்துக்கொண்டு, மற்றொரு கையால் தாமரை மலரை யெடுத்துக்கொண்டு உங்களுடைய நமஸ்காரத்தை அன்பு பொருந்திய பார்வையால் ஸ்வீகரித்துக்கொண்டும் சென்றிருப்பாரே? அவர் அணிந்திருக்கும் துளசிமாலையின் வாஸனையில் ஆசைப்பட்டு, வண்டுகளும் அவர் பின் செல்லுமே. அந்தப் பகவானைப் பார்த்தீர்களோ?" என்றார்கள். இன்னுஞ்சில ஸ்திரீகள், "இந்தக்கொடிகள் மரங்களின் கிளைகளை (கைகளை) ஆலிங்கனஞ்செய்து கொண்டிருக்கின்றன. ஆனதால் ஸ்ரீ கிருஷ்ணனுடைய கையின் நகங்கள் இவைகளில் பட்டிருக்கவேண்டும். ஆனதால் இவைகளைக் கேளுங்கள்" என்றார்கள்.

(கொடிகள் ஸ்திரீகளாகவும், மரங்களைப் புருஷர்களாகவும் வர்ணிக்கிற வழக்கம், அந்தக் கொடிகள் புஷ்பித்திருப்பதால் மயிர்க்கூச்சலுள்ளவைகளாகச் சொல்லப்பட்டிருக்கிறது) இப்படிக் கோபிகைகள் ஸ்ரீ கிருஷ்ணனைத் தேடிக் கொண்டு பைத்தியங் கொண்டவர்கள் போலப் பிரலாபித்துத் தங்களை ஸ்ரீ கிருஷ்ணனாகப் பாவித்துப் பகவான் செய்த அந்த லீலைகளைச் செய்ய ஆரம்பித்தார்கள். எப்படியெனில், ஒரு கோபிகை பூதனை வேடந்தரித்தாள். மற்றொரு ஸ்திரீ ஸ்ரீ கிருஷ்ண வேஷங்கொண்டு, பூதனையின் ஸ்தன்யத்தைக் குடித்தாள். மற்றொரு ஸ்திரீ குழந்தையாக இருக்கும் ஸ்ரீ கிருஷ்ணனாகத் தன்னைப் பாவித்துச் சகடமாக இருப்பவளை உதைத்தாள்.

திருணாவர்த்தனாக இருந்தவள் கிருஷ்ணனாக இருப்பவளைத் தூக்கிக்கொண்டு போனாள். இரண்டு ஸ்திரீகள் ராமகிருஷ்ணர்களாக இருந்தார்கள் மற்றவர்கள் கன்றுகளாக இருந்தார்கள் கன்றுகளாக இருந்தவர்களை ராமகிருஷ்ணர்களாக இருந்தவர்கள் தூக்கிச் சுழற்றி எறிந்தார்கள். மேலும் கிருஷ்ணனாக இருந்தவள் பகனாக இருந்தவளை அடித்தாள். கிருஷ்ணன் போலிருப்பவள் வெகுதூரத்திலிருக்கும் பசுக்களைக் கிருஷ்ணன் அழைப்பதுப்போல் அழைத்தாள். கிருஷ்ணன் போல் வேணுகானஞ் செய்து விளையாடுகிறவளை மற்றொரு கோபிகை "நல்லது, நல்லது" என்று ஸ்வீகரித்தாள். ஒருத்தியுடைய தோளில் மற்றொருத்தி கையை வைத்துக்கொண்டு, வேறொருத்தியை நோக்கி, "நான் கிருஷ்ணன்; என்னுடைய அழகான நடையைப் பார்" என்று தன்னைக் கிருஷ்ணனாக நினைத்துச் சொன்னாள். மற்றுமொருத்தி

"நீங்கள் காற்று மழைக்குப் பயப்படவேண்டாம். அதற்குத் தகுந்த உபாயஞ் செய்திருக்கிறேன்" என்று சொல்லி ஒருகையால் வஸ்திரத்தைத் தூக்கிப் பிடித்தாள். ஒரு கோபிகை மற்றொருத்தியுடைய தலையில் காலை வைத்துக்கொண்டு, "ஓ துஷ்டனாகிய ஸர்ப்பமே! நான் துஷ்டர்களைச் சிக்ஷிப்பவன், நீ இந்த ஸ்தலத்தைவிட்டுப் போகவேண்டும்" என்றாள். மற்றொரு ஸ்திரீ, "ஓ கோபர்களே! காட்டுத்தீயைப் பார்த்தீர்களா? கண்களை மூடிக்கொள்ளுங்கள். உங்களுக்கு க்ஷேமத்தைச் சீக்கிரத்தில் செய்கிறேன்" என்றாள்.

மற்றொருகோபிகை புஷ்பமாலையால் மற்றொருத்தியைக் கட்டி, "ஓ கிருஷ்ணை! துயிர்ச்சட்டியை உடைத்து வெண்ணெய் திருடினவனாகிய உன்னை உரலுடன் சேர்த்துக் கட்டுகிறேன்" என்றாள். அதனைக் கேட்டுக் கிருஷ்ணனாக இருந்தவள் கண்களை மூடிக் கொண்டு பயந்தவள்போல் அபிநயஞ்செய்தாள். இப்படி கோபஸ்திரீகள் கிருஷ்ண லீலைகளைச் செய்து திரும்பவும் பிருந்தாவனத்திலுள்ள மரங்களையும், கொடிகளையும் கிருஷ்ணனைப் பார்த்தீர்களா" என்று கேட்டுக்கொண்டு சஞ்சரிக்கும்பொழுது பகவான் நடந்து சென்ற மார்க்கத்திலுள்ள காலடிகளைக் கண்டார்கள். அவைகளைக் கண்டு அவர்கள், மஹாத்மாவாகிய நந்தகுமாரருடைய காலடிகள்தான்; ஸந்தேஹமில்லை. தாமரைமலர், ரேகை, துவஜரேகை, அங்குசரேகை ஆகிய இவைகள் காணப்படுகின்றன" என்று சொல்லிக் கொண்டு, அதன்வழியாகச் சென்றார்கள் அவ்விடத்தில் ஒரு ஸ்திரீயினுடைய காலடியும் காணப்பட்டது. அதனைக் கண்டு

கோபிகைகள் மிக்கவருத்தமடைந்து, "இது எவளுடைய காலடி? பகவான் அவளுடைய தோளில் கையை வைத்துக்கொண்டு சென்றிருக்கிறார். அவள் யானையின் பின் பெண்யானை செல்வது போல் போயிருக்கிறாள். நம்மை எல்லோரையும் விட்டு இவளிடத்தில் மிக்க ப்ரீதியுடன் பகவான் இவளை ரஹஸ்யமாக அழைத்துச் சென்றாரே, இவள் பகவானை நன்றாகப் பூஜித்தவளென்பது நிச்சயம்.

ஓ தோழிகளே! கோவிந்தருடைய பாததூளிகள் மிகவும் புண்ணியகரமானவைகள். அவைகளைப் ப்ரஹ்மதேவரும் பரமசிவனும், லக்ஷ்மீதேவியும் பாபநிவர்த்திக்காக சிரசில் தரிக்கிறார்கள். எவன் ஸ்ரீ கிருஷ்ணனை அழைத்துக்கொண்டு சென்று, எல்லாக் கோபிகைகளுக்கும் சொந்தமாகிய கிருஷ்ணனுடைய அதரத்தை (உதட்டை) ரஹஸ்யத்தில் பானஞ் செய்கிறாளோ, அவளுடைய காலடியைப் பார்க்க எங்களுடைய மனம் கலங்குகிறது. இவ்விடத்தில் புல்தரைகளாக இருப்பதால் அவளுடைய காலடிகள் தெரியவில்லை. ஒருகால் அவளை ஸ்ரீகிருஷ்ணன் தூக்கிக்கொண்டு சென்றாரோ? (அவளுக்கு கால் வலியுண்டாகியிருக்கலாம் என்று கருத்து) ஸ்ரீகிருஷ்ணன் அவளிடத்தில் ஆசைகொண்டு அவளைத் தூக்கிக் கொண்டு நடந்திருக்கிறாரென்பது நிச்சயம். இந்த காலடி மிகவும் அழுந்தியிருக்கிறது. ஆதலால் பகவான் சுமை தூக்கியிருக்கவேண்டும் கோபிகைகளே! பாருங்கள்! இவ்விடத்தில் ஸ்திரீயை புஷ்பம் பறிப்பதற்காகக் கீழே இறக்கியிருக்கிறார். அவளுடைய பிரியத்திற்காக ஸ்ரீகிருஷ்ணனால் இவ்விடத்தில் புஷ்பங்கள் பறிக்கப் பட்டன. அதனால் எல்லா அடிகளும் நுனிக்கால்

அழுந்தினவைகளாக இருக்கின்றன. பாருங்கள். இவ்விடத்தில் கிருஷ்ணனுடைய மடியில் உட்கார்ந் திருந்த அடையாளங்கள் காணப்படுகின்றன. இவ்விடத்தில் பறித்த புஷ்பங்களை அந்த ஸ்திரீயின் தலையில் வைத்துப் பகவான் அலங்கரித்திருக்க வேண்டும்" என்று கோபிகைகள் சொல்லிக்கொண்டு வனங்களில் சஞ்சரித்தார்கள். பகவான் இயற்கையில் எப்பொழுதும் சந்தோஷமுள்ளவர்; ஸ்திரீகளுடைய விளையாட்டிற்கு வசப்பட்டவரல்ல. ஆத்மாவிலேயே ரமிப்பவர் அப்படியிருந்தும் பகவான் அவர்களுடன் கிரீடித்ததாக வர்ணித்ததால் காமிகளுடைய நடை இம்மாதிரியென்றும் ஸ்திரீகளுடைய துஷ்டத்தனம் இப்படிபட்டதென்றும் காண்பிக்கப்பட்டது.

37–41. மற்ற ஸ்திரீகளைவிட்டு எவளை பகவான் அழைத்துச் சென்றாரோ அவள், "தம்மிடத்தில் மிகவும் ஆசை கொண்டவர்களான எல்லாக் கோபிகைகளையும் விட்டு ஸ்ரீகிருஷ்ணன் நம்மிடத்தில் ஆசைப்பட்டிருக் கிறார். அதனால் எல்லா ஸ்திரீகளையும்விட நாமே மேலானவள்; அழகுள்ளவள்" என்று கர்வமடைந்தாள். பின்னும் அவள் மற்றொரு வனத்திற்குச் சென்று ஸ்ரீகிருஷ்ணனை நோக்கி "எனக்கு நடக்க சக்தியில்லை. எவ்விடம் போக வேண்டுமோ அவ்விடத்திற்கு என்னைத் தூக்கிக்கொண்டு செல்லும்" என்று சொன்னாள். அதனைக் கேட்ட பகவான், "என் தோளில் ஏறிக்கொள்' என்று சொன்னார். அவளும் ஏறிக் கொள்ள தயாராக இருந்தாள். அந்தச் ஸமயத்தில் பகவான் மறைந்தார். அவள் அவரைக் காணாமல், 'ஓ நாத! ஸந்தோஷத்தைக் கொடுப்பவரே! பிரியமானவரே! அழகான கைகளுள்ளவரே! எங்கே

இருக்கிறீர்? எங்கே இருக்கிறீர்? தீனையும் உம்முடைய வேலைக்காரியுமான எனக்குத் தரிசனங் கொடும்" (கண்ணுக்குப் புலப்படும்) என்று சொல்லிப் பச்சாத்தாபத்தை அடைந்தாள்.

42–46. ஸ்ரீகிருஷ்ணனைக்காணாமல் மதிமயங்கி துக்கித்துக் கொண்டிருக்கும் அவளை ஸ்ரீகிருஷ்ணனை தேடிவரும் மற்ற கோபிகைகள் கண்டார்கள். அப்பொழுது அவள் அவர்களை நோக்கி, பகவான் தன்னிடத்தில் கிருபை செய்ததையும், தன்னை அவமதித்துத் தனியே விட்டுப்போனதையும் சொன்னாள். அதனைக் கேட்ட ஸ்திரீகள் மிகவும் ஆச்சரியமடைந்தார்கள். பின்பு அவர்கள் சந்திரிகை யுள்ளவரையில் வனத்தில் ஸஞ்சரித்து, இருள் வந்தவுடன் திரும்பினார்கள். ஆனாலும் மனத்தில் அவரையே நினைத்துக்கொண்டும் அவருடைய வார்த்தைகளையே பேசிக்கொண்டும், அவர்போல நடந்து கொண்டும், அவராகத் தங்களைப் பாவித்துக் கொண்டும் (தன்மயர்களாகி) அவருடைய குணங் களையே கானஞ் செய்துகொண்டு, வீடு, பந்துக்கள் முதலியவைகளையும், தங்களையும் மறந்தார்கள். பின்னும் அவர்கள் திரும்பவும் யமுனையின் மணல் திட்டிற்கு வந்து ஸ்ரீகிருஷ்ணனைத் தியானஞ் செய்து கொண்டு எல்லோரும் ஒன்று சேர்ந்து பகவானுடைய வரவை எதிர்பார்த்து, அவருடைய குணங்களைக் கானஞ்செய்து கொண்டிருந்தார்கள்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–31

கோபிகா கீதை

1–18. கோபிகைகள் சொல்லுகிறார்கள், "ஓ நாயக! கிருஷ்ண! உம்முடைய அவதாரத்தால் கோகுலம் சிறந்து விளங்குகிறது. லக்ஷ்மீதேவி இவ்விடத்தை அலங்கரித்துக்கொண்டு வஸிக்கிறாள். உம்மையே பிராணனாகக் கொண்ட உம்மைச் சார்ந்தவர்கள் உம்மைத் தேடுகிறார்கள். தர்சனங் கொடும் (உம்மைப் பார்க்காவிடில் உயிரை விட்டுவிடுவார்களென்று கருத்து) சரத்காலத்தில் குளத்தில் மலர்ந்திருக்கும் தாமரை மலரின் நடுவில் உள்ள காந்தி போன்ற காந்தியுள்ள கண்ணால் எங்களைப் பார்த்து எங்களைக் கொன்றீரே; அது வதமல்லவா? ஸம்போகத்திற்கு அதிபதியே! இஷ்டத்தைக் கொடுப்பவரே! விலை கொடாமல் (கூலி வாங்காமல்) வேலைக்காரிகளாகக் கொண்டிருக்கும் எங்களுக்குத் தர்சனங்கொடும். (பார்வையால் அபஹரித்த எங்களுடைய பிராணனைத் திருப்பிக்கொடுமென்று கருத்து,) ஓ எல்லாவற்றிற்கும் சிறந்தவரே! விஷ ஜலமுள்ள யமுனையின் மடுவிலிருந்தும், அகாஸுரனிடமிருந்தும், மிகுந்த மழையிலிருந்தும், காற்றிலிருந்தும், இடியிலிருந்தும், அரிஷ்டாஸுரனிடத்திலிருந்தும், வ்யோமனிடத்திலிருந்தும் இன்னும் மற்ற பயத்திலிருந்தும் அடிக்கடி எங்களை ஸம்ரக்ஷித்தீரல்லவா? (அப்படியிருக்க, இப்பொழுது பார்வையால் மன்மதனை விருத்திசெய்து, ஏன் உபத்திரவப்படுத்துகிறீர்? என்று கருத்து). ஓ தோழரே! நீர் யசோதையின் புத்திரரல்ல. ஸகல பிராணிகளுடைய புத்திக்கு ஸாக்ஷியாயிருக்கும்

பரமாத்மா. ஆனாலும் ப்ரஹ்மதேவரால் பிரார்த்திக்கப்பட்டு, லோகத்தைக் காப்பாற்றுவதற்காக ஸாத்வதருடைய வம்ஸத்தில் அவதரித்திருக்கிறீர். (ஜகத்தை காப்பாற்றுவதற்காக அவதரித்த நீர் பக்தர்களை உபேக்ஷிப்பது யுக்தமல்ல என்று கருத்து.) ஓ விருஷ்ணி குலத்திற் பிறந்தவரே! உம்முடைய தாமரை மலர்போண்ற கையை எங்களுடைய சிரசில் வைத்து அனுக்ரஹியும். அந்தக் கையானது ஸம்ஸாரத்தைக் கண்டு பயந்து சரணமடைந்த பிராணிகளைக் காப்பாற்றும் ஸ்வபாவமுள்ளது; இஷ்டத்தைக் கொடுக்கக்கூடியது; லக்ஷ்மீதேவியைப் பாணிக்ரஹணஞ் செய்தது; ஓ கோகுலவாஸிகளுடைய உபத்திரவத்தைப் போக்கடிப்பவரே! பராக்கிரமமுள்ளவரே! பக்தர்களுடைய கர்வத்தைப் போக்கக்கூடிய சிரிப்புள்ளவரே! ஓ தோழ! வேலைக்காரிகளாக எங்களை அங்கீகரியும்; தாமரைமலர் போன்ற முகத்தைக் காண்பியும்; உம்முடைய பாதாரவிந்தத்தை எங்களுடைய ஸ்தனங்களில் வைத்து மன்மத தாபத்தைப் போக்கடியும்.

அந்தப் பாதமானது நமஸ்காரஞ் செய்தவர்களுடைய பாபத்தை நிவர்த்திக்கிறது; பசுக்களின் பின் செல்லுகிறது; மிகுந்த அழகுள்ளது; காளியனுடைய படங்களை மிதித்தது; ஓ தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரே!! உம்முடைய உத்தரவின்படி நடப்பவர்களும், உம்மைக் காணாமல் துக்கப்படுபவர்களுமான எங்களைக் கம்பீரமும், இனிமையுமான வார்த்தையாலும், உதட்டிலுள்ள அமிருதத்தாலும் ஸந்தோஷப்படுத்தும். உம்முடைய கதையாகிய அமிருதமானது தாபமுள்ளவர்களைச்

ஸுகப்படுத்துகிறது; ப்ரஹ்மத்தையறிந்தவர்களாலும் ஸ்தோத்திரம் பணணப்பட்டது; பாபங்களை நிவர்த்திக்கக்கூடியது; கேட்பதனாலேயே ஸகல ஷேமத்தையும் கொடுக்கக்கூடியது; சாந்தியையுண்டு பண்ணக்கூடியது; இப்படிப்பட்ட கதாமிருதத்தை எவர்கள் இடைவிடாமல் சொல்கிறார்களோ, அவர்களே மேலானவர்கள். அவர்கள் பிறருக்கு உயிரைக் கொடுப்பார்கள். (எவர்கள் உம்முடைய கதையைச் சொல்லுகிறார்களோ அவர்களே மேலானவர்கள்; உம்மை நேரில் தர்சிப்பவர்களுடைய பாக்கியத்தைச் சொல்லவும் வேண்டுமோ? ஆனதால் உம்மைப் பார்க்க வேணடுமென்று கருத்து.) ஓ கபட ஸ்வபாவமுள்ளரே! உம்முடைய சிரிப்பும், அன்புள்ள பார்வையும் விளையாட்டும் ரஹஸ்யத்தில் சொல்லிய விளையாட்டான வார்த்தைகளும், த்யானத்தாலுண்டான ஸுகமும் எங்களுடைய மனத்தை அபஹரிக்கின்றன.

ஓ நாதா! நீர் எப்பொழுது பசுக்களை ஓட்டிக் கொண்டு வனத்திற்குப் போகிறீரோ, அப்பொழுது தாமரை மலர் போல் அழகான உம்முடைய பாதங்கள் கற்களாலும் ச்ரமத்தையடையுமென்று எங்களுடைய மனங்கலங்குகிறது. (நாங்கள் உம்மிடத்தில் அவ்வளவு ப்ரீதியுள்ளவர்களாக இருக்கிறோம். நீர் எங்களை ஏன் ஏமாற்றுகிறீர்? என்று கருத்து.) ஸாயங்காலத்தில் வனத்திலிருந்து நீர் கோகுலத்திற்கு வரும் பொழுது தலைமயிர்களால் மறைக்கப்பட்டும், கோதூளிகளுள்ளதுமான தாமரை மலர் போன்ற உம்முடைய முகத்தைத் தர்சித்து நாங்கள் மன்மத தாபத்தை அடைகிறோம். (மன்மத தாபத்தையுண்டு

பண்ணுகிறீரேயொழிய ஸுகத்தையுண்டுபண்ணுகிறதில்லை என்று தாத்பர்யம்). ஓ மனோ துக்கத்தை நிவர்த்திப்பவரே! உம்முடைய பாதாரவிந்தமானது நமஸ்கரித்தவர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்திசெய்கிறது; ப்ரஹ்மதேவராலும் பூஜிக்கப்பட்டது; பூமிக்கு அலங்காரமானது த்யானம் செய்தால் ஸகல ஆபத்துக்களும் நிவர்த்தியாகின்றன; மேலும், விசேஷ ஸுகத்தைக் கொடுக்கக்கூடியது; அதனை எங்களுடைய ஸ்தனங்களில் வைத்துத் தாபத்தைப் போக்கடியும். ஓ வீர! உம்முடைய உதட்டின் அமிருதத்தை எங்களுக்குக் கொடும். அது ஸம்போகத்தை விருத்தி பண்ணக்கூடியது; துக்கத்தை நிவர்த்திக்கக் கூடியது; வேணுகானத்தால் அழகானது; மற்ற ஸுகங்களை மறக்கச் செய்யக் கூடியது; நீர் பகலில் பிருந்தாவனஞ் சென்றிருக்கும் பொழுது உம்மைக் காணாமல் எங்களுக்கு அரை க்ஷணமானது, யுகம்போலிருக்கிறது.

ஸாயங்காலத்தில் வனத்திலிருந்து நீர் திரும்பி வரும் பொழுது வக்கிரமான தலைமயிர்களுள்ளதும், அழகு பொருந்தியதுமான உம்முடைய முகத்தைப் பார்க்கும் எங்களுடைய கண்களுக்கு இமைகளைச் சிருஷ்டித்த பிரம்மதேவர் மூடரேயாம். (பகலில் உம்மைக் காணாமல் உம்மைத் தர்சிக்க வேண்டுமென்று ஆவலுடனிருந்த கண்கள் ஸாயங்காலத்தில் உம்மைத் தர்சிக்கும் பொழுது அவைகளுக்கு இமைக் கொட்டல் விக்கினமாயிருப்பதால் அவைகளையுண்டு பண்ணினவர் மூடரென்று சொல்லப்பட்டது.) ஓ அச்சுத! வஞ்சக! பர்த்தா, புத்திரன், ஸஹோதரர்கள், குலபந்துக்கள் ஆகிய எல்லோரையும் விட்டு உம்மையே கதியாக நினைத்து வந்தவர்களும்,

உம்முடைய கானத்தைக் கேட்டு மோஹித்தவர்களு மான ஸ்திரீகளை இரவில் எவன் வேண்டாமென்று விட்டுவிடுவான்? மேலும், ரஹஸ்யத்தில் உம்மால் செய்யப்பட்ட பிரதிக்ஞையை நினைத்தும், புன் சிரிப்புள்ள முகத்தையும், அன்பு பொருந்திய பார்வையையும், லக்ஷ்மீதேவி வஸிக்கும் விசாலமான மார்பையும் பார்த்து எங்களுக்கு மிகுந்த ஆசை உண்டாகிறது. மனது மோஹிக்கிறது, ஓ கிருஷ்ண! உம்முடைய அவதாரமானது கோகுலம், பிருந்தா வனம் இவைகளில் வஸிப்பவர்களுடைய பாபத்தை நிவர்த்திக்கின்றது. ஸகல மங்களத்தையுங் கொடுக்கிறது. பந்துக்களாகிய எங்களுடைய மனத்தின் தாபத்தை எது போக்கடிக்குமோ, அந்த ஔஷதத்தை உம்மிடத்திலேயே ஆசைப்பட்டிருக்கும் எங்களுக்குக் கொடும். ஓ ப்ரியமானவரே! உம்முடைய மிருதுவான பாதாரவிந்தத்தைக் கெட்டியான எங்களுடைய ஸ்தனங்களில் மிகவும் பயந்து மெள்ள மெள்ள வைத்துக் கொள்ளுகிறோம். அந்தக்காலால் நீர் வனத்தில் ஸஞ்சரிக்கும் பொழுது உம்முடைய பாதங்களுக்குக் கற்களால் உபத்திரவம் உண்டாகாமல் இருக்க வேண்டுமேயென்று உம்மையே ஜீவனமாகக் கொண்ட எங்களுடைய மனமானது கலங்குகிறது (விசாரத்தையடைகிறது).

அத்தியாயம்– 32

கிருஷ்ணன் கோபிகைகளுக்குத் தரிசனம் கொடுத்தது

1–16. இப்படிக் கோபிகைகள் ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்க்கவேண்டுமென்ற எண்ணத்துடன் ஸ்ரீ கிருஷ்ணனுடைய குணங்களைக் கானஞ் செய்துகொண்டும், பலவகையாகப் பிரலாபித்துக்கொண்டும் உரக்க அழுதார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் சிரித்த முகத்துடன் அவர்களுக்குத் தரிசனங் கொடுத்தார். மேலும் அவர் பீதாம்பரத்தைத் தரித்தவராகவும், மன்மதனுக்கும் மோஹத்தையுண்டு பண்ணக் கூடியவராகவும் இருந்தார். பிராணன் வந்தவுடன் கை கால் முதலிய அவயவங்கள் சேஷ்டிப்பது போல ஸ்ரீ கிருஷ்ணனைத் தரிசித்த கோபிகைகள் பிரியத்தால் மலர்ந்த கண்களுள்ளவர்களாகி எல்லோரும் எழுந்திருந்தார்கள். அவர்களில் ஒருத்தி இரு கைகளினால் ஸ்ரீ கிருஷ்ணனுடைய தாமரைமலர் போன்ற கையைப் பிடித்துக் கொண்டாள்.

மற்றோருத்தி சந்தனபூச்சுள்ள அந்தக் கையைத் தோளில் எடுத்து வைத்துக்கொண்டாள். மற்றொருத்தி ஸ்ரீ கிருஷ்ணனுடைய தாம்பூல ரசத்தை இருகைகளால் வாங்கினாள். மற்றொருத்தி தாபமுள்ள ஸ்தனங்களில் பகவானுடைய பாதாரவிந்தத்தை வைத்துக்கொண்டாள். மற்றொருத்தி புருவ நெறித்தலுடன் உதடுகளைக் கடித்துக்கொண்டு, அன்புபொருந்திய கோபமுள்ள வளாகி, (பிரணய கோபம்) கடைக்கண்ணால் அடிப்பவள் போல ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்தாள். ஸாதுக்கள் பகவானுடைய பாதாரவிந்தத்தை அடிக்கடி

ஸேவித்தும் எப்படிப் போதுமென்ற திருப்தியடை கிறதில்லையோ, அப்படி பகவானுடைய தாமரை மலர்போன்ற முகத்தைக் கண்கொட்டாமல் பார்த்தும், இன்னுமொருத்தி போதுமென்ற திருப்தியடைய வில்லை. மற்றொருத்தி வெளியிலிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணனைக் கண்வழியாக ஹிருதயத்திற்குக் கொண்டுபோய்க் கண்களை மூடிக்கொண்டு சரீரத்தில் மயிர்க்கூச்சலையடைந்து யோகிபோல அதிக ஆனந்தமுள்ளவளாக இருந்தாள். இப்படி அந்தக் கோபிகைகள் எல்லாரும் ஸ்ரீபகவானைத் தர்சித்து, அதனாலுண்டாகிய ஆனந்தத்தால் ஸுகமடைந்து ஸ்ரீகிருஷ்ணனை விட்டுப் பிரிந்ததாலுண்டாகிய தாபத்தை நிவரத்தித்துக் கொண்டார்கள்.

அது ஸம்ஸாரிகள் ப்ரஹ்ம நிஷ்டை அடைந்து, ஸகல தாபங்களையும் நிவர்த்தித்துக் கொள்வது போலிருந்தது. இப்படி மிகுந்த ஆனந்தமுள்ள அந்தக் கோபிகைகள் பகவானைச் சுற்றிக் கொண்டிருந்தது ஸத்வம் முதலிய சக்திகள் பரமாத்மாவைச் சுற்றித் கொண்டாற்போலிருந்தது. அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் அந்த ஸ்திரீகளை யமுனையின் மணல் திட்டுக்கு அழைத்து வந்தார். அவ்விடத்தில் குந்தம், மந்தாரம் முதலிய புஷ்பங்கள் புஷ்பித்து அதன் வாசனையுடன் காற்று வீசிற்று. வண்டுகள் பாடின. சரத்காலமாகை யால் சந்திரிகை சுத்தமாகப் ப்ரகாசித்தது. அதனால் இருளில்லாமலிருந்தது. யமுனா நதியின் கைகள் போன்ற அலைகளால் மிருதுவான மணல்கள் பரப்பப்பட்டிருந்தன. அது மிகவும் ஸுககரமாக இருந்தது. வேதங்கள் கர்மகாண்டத்தில் ஈச்வரனைக் காணாமல் ஞான காண்டத்தில் ஈச்வரனையடைந்து

எப்படி மனோரத பூர்த்தியையடைகின்றனவோ, அப்படி அந்தக் கோபிகைகள் பகவானைத் தர்சித்து, மனதில் தாபமற்றவர்களாகி பூர்ணமனோரதமுள்ளவர் களாக ஆனார்கள். மேலுமவர்கள் ஸ்தனங்களிலுள்ள குங்குமங்களால் அடையாளமிடப்பட்ட தங்களுடைய மேல் வஸ்திரங்களை அந்தர்யாமியாக இருக்கும், ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஆசனமாக மணலில் விரித்தார்கள். யோகீசுவரர்களுடைய ஹிருதயததில் வஸிப்பவரான ஸ்ரீகிருஷ்ணன் கோபஸ்திரீகளுடைய கூட்டத்திலிருந்து ப்ரகாசித்தார். மூவுலகத்திலுள்ள சௌந்தரியங்கள் யாவும் ஒன்று சேர்ந்து ஒரு இடத்தில் வஸித்தாற் போல ஸ்ரீ கிருஷ்ணனுடைய தேஹமானது மிக்க அழகுள்ளதாகப் ப்ரகாசித்தது அப்பொழுது அந்தக் கோபிகைகள் மன்மதனை விருத்தி செய்கிற ஸ்ரீ கிருஷ்ணனைச் சிரிப்பு, விளையாட்டு இவைகளுள்ள பார்வையால் பூஜித்து, கைகால்களைப் பிடித்துக் கொஞ்சம் கோபித்துக் கொண்டும், கிருஷ்ண, லோகத்தில் சிலர் தங்களைச் சேவிக்கும் ஜனங்களு டைய பக்திக்குத் தக்கபடி அவர்களிடத்தில் பிரீதி செய்கிறார்கள். மற்றுஞ்சிலர் தங்களைச் ஸேவியாமலி ருந்தாலும் அவர்களுடைய ஸுச்ருஷையை எதிர் பாராமலேயே அவர்களுடைய காரியத்தைப் பூர்த்தி செய்கிறார்கள் இன்னும் சிலர் ஸேவிப்பவர்களிடத் திலும், ஸேவியாமலிருப்பவர்களிடத்திலும் ப்ரீதி செய்கிறதில்லை. இதன் காரணத்தைத் தெளிவாகச் சொல்ல வேண்டும்" என்று பகவான், "செய்த உபகாரத்தை நினைக்காதவர்" என்பதை மனத்தில் வைத்துக்கொண்டு கேட்டார்கள்.

17–22. அதனைக்கேட்ட பகவான் கோபிகைகளை

நோக்கி, "ஒ தோழர்களே! பிறர் செய்த உபகாரத் திற்காகப் பதில் உபகாரம் செய்து ஒருவருக்கொருவர் ஸ்நேஹிப்பவர்கள் தங்கள் கார்யத்திற்காக முயற்சிப் பவர்களாக ஆகிறார்கள். அந்த விஷயத்தில் உண்மையான பிரியமாவது ஸ்நேஹமாவது தர்மமாவது இல்லை. அது தங்களுடைய கார்யத்திற்காக ஏற்பட்ட தேயொழிய வேறில்லை. (கறவை மாட்டிற்கு புல் முதலியவைகள் கொடுத்துப் போஷிப்பது போல் ஆகிறதென்று கருத்து.) தகப்பனார் தன் உத்தரவின்படி நடக்காத புத்திரனிடத்திலும் எப்படிப் பிரியப்படு கிறாரோ, அப்படி எவர்கள் தங்களை அனுசரியாமல் இருப்பவர்களிடத்திலும் மிக்க தயவுடன் பிரீதி செய்கிறார்களோ அந்த விஷயத்தில் தர்மம், ஸ்நேஹம், இரண்டும் சுத்தமானதாக இருக்கும்.

பரமாத்மாவினிடத்திலேயே ரமித்துக் கொண்டி ருப்பவர்கள், விஷயங்களில் வைராக்கியமுள்ளவர்கள், செய்த உபஹாரத்தை மறந்தவர்கள், உபகாரம் செய்ப்படவர்களுக்குத் துரோகஞ்செய்பவர்கள் ஆகிய நான்கு வகையான மனிதர்களும் தங்களைச் ஸேவிப்பவர்களிடத்திலும் ப்ரீதி செய்யமாட்டார்கள். ஸேவியாமலிருப்பவர்களிடத்தில் பிரீதி செய்வார்களா? மேற்காட்டியவைகளில் நான் ஒரு வகுப்பிலும் சேர்ந்தவனல்ல. ஒ தோழிகளே! ஆனாலும் பக்தர் களுக்கு என்னிடத்தில் இடைவிடாமல் பக்தியுண்டா வதற்காக அவர்களை நான் அனுசரிக்கிறதில்லை. நான்மிகுந்த கிருபையுள்ளவன். தரித்திரன் கையிலிருந்த பணம் காணாமற்போனால் அந்த விசாரத்தால் எப்படிப் பசி முதலியவைகளை மறந்து விடுகிறானோ, அப்படி என்னால் உபேக்ஷிக்கப்பட்ட

பக்தர்கள் எப்பொழுதும் என்னையே நினைத்துக் கொண்டிருப்பார்கள். இப்பொழுது நீங்கள் "இது யுக்தம்; இது அயுக்தம்" என்பதைக் கவனியாமல் லோகத்தை அலக்ஷியம் செய்தும் தர்மம், அதர்மம் இவைகளைக் கவனிக்காததால் வேதத்தை விட்டும் ஸ்நேஹத்தைக் கவனியாமல் பந்துக்களைத் தள்ளியும் என்னையே கதியென்று நினைத்தும் வந்தவர் களாகையால், உங்களுக்கு என்னுடைய ஞாபகம் எப்போழுதும் இருக்க வேண்டுமென்று உங்களுடைய கண்ணுக்குப் புலப்படாமல் உங்களுடைய வார்த்தை களைக் கேட்டுக் கொண்டு மறைந்திருந்தேன். ஆனதால் உங்களிடத்தில் பிரியமுள்ளவனான என்னிடத்தில் அசூயைப்பட வேண்டாம். விடமுடியாத ஸம்ஸார ஆசையை ஒழித்துக் கபடமில்லாமல் என்னை நீங்கள் உபாசித்ததால் வெகுகாலம் நான் பதில் உபகாரஞ் செய்தாலும் அதற்குச் சமமாக ஆகாது. ஆனதால் நீங்கள் செய்த நல்ல காரியத்திற்கு அதுவே பதில் உபகாரஞ் செய்யவேண்டும் என்று சொன்னார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம் –33

ராஸக்கிரீடை

1–27. "இம்மாதிரியான பகவானுடைய மனோகரங்களான வார்த்தைகளைக் கேட்டும், அவருடைய சரீரத்தைப் பார்த்தும் கோபிகைகள் அவரை விட்டுப் பிரிந்ததாலுண்டான தாபத்தை விட்டுச் ஸுகமடைந்தார்கள். அப்பொழுது கோவிந்தர் தம்மை அனுசரித்தவர்களும், தம்மிடத்தில் பிரியமுள்ளவர்களும், ஒருவருக்கொருவர் கைகோர்த்துக் கொண்டிருப்பவர்களுமான அந்த உத்தம ஸ்திரீகளுடன் ராஸக்கிரீடை செய்ய ஆரம்பித்தார். அப்போழுது அந்த ஸ்திரீகளை வட்டமாக நிறுத்தி, ஸ்ரீ கிருஷ்ணன் இரண்டு ஸ்திரீகளின் நடுவில் தாம் ப்ரவேசித்து, இருகைகளாலும் இரண்டு ஸ்திரீகளுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டார். எல்லாக் கோபிகைகளும் தங்கள் தங்கள் சமீபத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் இருக்கிறாரென்று நினைத்திருந்தார்கள்.

கோபிகைகளுடைய கூட்டத்திற்கு அலங்காரமான ராஸோத்சவத்தை யோகேசுவரராகிய ஸ்ரீ கிருஷ்ணன் ஆரம்பித்தார். (யோகேசர் என்று சொன்னபடியால் அவருடைய யோக மஹிமையால் எல்லா ஸ்திரீகளும் தங்கள் தங்கள் ஸமீபத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் இருப்பதாகவே நினைத்திருந்தார்கள்.) இந்த மஹோத்சவத்தைத் தரிசிப்பதற்காகத் தேவர்கள் ஸ்திரீகளுடன் விமானத்தின் மீதேறிக்கொண்டு வந்தார்கள். ஆகாயத்தில் தேவதுந்துபிகள் முழங்கப்பட்டன. புஷ்பமாரி பெய்தது; சிறந்த கந்தர்வர்கள் தங்கள் ஸ்திரீகளுடன்.

ஸ்ரீ கிருஷ்ணனுடைய சுத்தமான கீர்த்தியைக்கானஞ் செய்தார்கள். இப்படி பகவான் ராஸக்ரீடை செய்யும் பொழுது அந்த மண்டலத்திலுள்ள ஸ்திரீகளுடையவும் ஸ்ரீ கிருஷ்ணர்களுடையவும் (அநேக கிருஷ்ணனாக இருந்தபடியால் கிருஷ்ணர்களென்று சொல்லப் பட்டது) வளைகள், பாதச் சிலம்புகள், சலங்கைகள் ஆகிய இவைகளுடைய சப்தம் மிகுதியாக இருந்தது. அந்த ஸ்திரீகளுடைய மத்தியில் ஸ்ரீ கிருஷ்ணன் ஸ்வர்ணமணிகளுடைய நடுவில் மேலான மரகத ரத்தினம் போலப் ப்ரகாசித்தார்.

மேகங்களில் மின்னல்கள் ப்ரகாசித்தாற்போல் அந்த ஸ்திரீகளும் பாதங்களைத் தூக்கி வைப்பதாலும், கைகளை அசைப்பதாலும், சிரிப்புடன் கூடிய புருவத்தின் விளையாட்டுகளாலும், வணங்கிய இடுப்புகளாலும், அசையும் ஸ்தன வஸ்திரங்களாலும், கன்னங்களில் அசைகின்ற குண்டலங்களாலும் தலை, ஒட்டியாணம் ஆகிய இவைகள் அவிழ்ந்து முகத்தில் வியர்வையுள்ளவர்களாகிக் கானஞ்செய்து கொண்டு அநேஹரம் கிருஷ்ணர்களுடைய நடுவில் ப்ரகாசித்தார்கள். மேலும் நல்ல கண்ட ஸ்வரமுள்ளவர்களும், கானஞ் செய்பவர்களும், நர்த்தனஞ் செய்பவர்களும், ரதியில் பிரியமுள்ளவர்களுமான அந்த ஸ்திரீகள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஸரீர ஸ்பரிசத்தால் ஸந்தோஷத்தை அடைந்து உரக்கக் கானஞ்செய்தார்கள். அந்தக் கானத்தால் இந்த ஜகத் முழுவதும் வியாபிக்கப் பட்டது. அவர்களில் ஒருத்தி ஸ்ரீ கிருஷ்ணனுடன் சேர்ந்து ஸ்வர ஜாதிகள் தனியே தெரியும்படி கானஞ் செய்தாள். அதனைக்கேட்டுப் பகவான் மிக்கப் பிரியமடைந்து, நல்லது, நல்லது என்று ச்லாகித்து.

அந்த ஸ்வரஜாதிகளைத் துருவ தாளத்திற்குத் தக்கபடி, பாடி அவளைக் கௌவரவப்படுத்தினார். ராஸக்ரீடை செய்து களைத்த ஒருத்தி, நழுவிய மல்லிகா புஷ்பமுள்ளவளாகித் தன் கையைப் பகவானுடைய தோளில் வைத்தாள். மற்றொருத்தி சந்தனப் பூச்சுள்ளதும், உத்பல புஷ்பத்தின் வாஸனை போன்ற வாஸனை உள்ளதுமாகிய ஸ்ரீ கிருஷ்ணனுடைய கையை முகர்ந்து மயிர்கூச்சல் உள்ளவளாகி அதனை முத்தமிட்டுக் கொண்டாள், மற்றொருத்தி நர்த்தனம் செய்ததால் அசைந்த குண்டலங்களுடைய காந்தியால் ஸ்ரீ கிருஷ்ணனுடைய கன்னத்துடன் சேர்த்து முத்தமிட்டுக் கொள்ளும்பொழுது பகவான் அவளுக்குத் தம்முடைய முகத்திலிருந்த தாம்பூலத்தைக் கொடுத்தார். பாதசரம், ஒட்டியாணச் சலங்கை ஆகிய இவைகள் சப்திக்கும்படி நர்த்தனஞ் செய்தும் பாடிக் கொண்டுமிருந்த மற்றொருத்தி அதனால் களைத்துப் பகவானுடைய கையை ஸ்தனங்களில் வைத்துக் கொண்டாள். லக்ஷ்மீதேவிக்கு மாத்திரம் பர்த்தாவாக இருக்கும் கிருஷ்ணனை கோபிகைகள் பர்த்தாவாக அடைந்து அவருடைய குணங்களைக் கானஞ்செய்து கொண்டு விளையாடினார்கள்.

இப்படி அந்தக் கோபிகைகள் அந்த ராஸ சபையில் பகவானுடன் சேர்ந்து நர்த்தனம் செய்தார் கள். வண்டுகள் பாடின. காதில் வைத்துக் கொள்ளப் பட்ட நீலோத்பல புஷ்பங்களாலும், தொங்குகின்ற தலைமயிர்களாலும் வியர்வைத் துளிகளாலும் அந்த ஸ்திரீகளுடைய முகங்கள் அழகாக இருந்தன; சிறுவன் தன்னுடைய பிரதிபிம்பத்துடன் விளையாடினாற் போலப் பகவான் தம்முடைய

பார்வை, ஆலிங்கணம், கையால் தொடுவது, அன்புபொருந்திய பார்வை, கம்பீரமானவிளையாட்டு, சிரிப்பு ஆகிய இவைகளைக் கோபிகளிடத்தில் பரவச் செய்து அவர்களுடன் கிரீடித்தார். அந்தக் கோபி கைகள் பகவானுடைய சரீர ஸ்பரிசத்தால் அதிக ஆனந்தத்தை அடைந்து, பரவசமான இந்திரியங் களுள்ளவர்களாக, அவிழ்ந்தும் நழுவினவைகளுமான தலைமயிர், வெண்பட்டு,ஸ்தனவஸ்திரம் (ரவிக்கை), மாலை, ஆபரணம் ஆகிய இவைகளைத் திரும்பவும் முடிந்துக்கொள்வதற்கும். தரிப்பதற்கும் ஞாபகமில்ல தவர்களாக இருந்தார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணனுடைய விளையாட்டைக் கண்ணுற்ற தேவஸ்திரீகளும் காமவெறிகொண்டு மோஹித்தார்கள் மற்ற கிரஹங்களும் சந்திரனும் அந்த ராஸக்ரீடையைப் பார்த்து ஆச்சரியமடைந்தார்கள். எவ்வளவு கோபிகைகளிருந்தார்களோ அவ்வளவு கிருஷ்ணனாக வேஷம் தரித்துப் பகவான் தாம் ஆத்மாராமரானாலும் அவர்களுடன் ரமித்தார். (ஸ்திரீகளைச் ஸந்தோஷப்படுத்தினார்.) இப்படி விளையாடினதால் அந்த ஸ்திரீகளுடைய முகங்களில் வியர்வைத் துளியுண்டாயிற்று. அதனைப் பகவான் கருணையுடன் மிகவும் ஸுககரமாகத் தம்முடைய கையால் துடைத்தார். 'பகவானுடைய நகத்தின் ஸ்பரிசத்தால் அதிக ஆனந்தத்தையடைந்த கோபிகைகள் ஸ்வர்ண குண்டலங்களாலும் ப்ரகாசிக்கும் முகங்களாலும், அமிருதம் போன்ற சிரிப்பு, பார்வை இவைகளாலும் ஸ்ரீ கிருஷ்ணனைப் பூஜித்து, அவருடைய புண்ணியகரமான சரிதங்களைக் கானஞ் செய்தார்கள். மேலும் பகவான் லோக மரியாதையையும்

வேத மரியாதையும் மீறி, அந்த ச்ரமத்தை நிவர்த்தித்துக் கொள்வதற்காக அந்த ஸ்திரீகளுடன் ஜலத்தில் ப்ரவேஸித்தார் (ஜலக்ரீடை செய்ய ஆரம்பித்தார்.) அந்த ஸ்ரீ கிருஷ்ணனால் தரிக்கப்பட்ட மாலையில் ஸ்திரீகளுடைய ஸ்தனத்திலுள்ள குங்குமம் ஒட்டியிருந்ததால் அதன வாஸனைக்காக வண்டுகள் கானஞ் செய்துகொண்டும் அவர் பின் சென்றன. இப்படிப் பகவான் ஜலக்ரீடைக்காக ஜலத்தில் ப்ரவேசித்து சிறந்த யானை பெண் யானைகளுடன் கரையை இடித்துக் கொண்டு ஜலத்தில் இறங்கினாற் போலிருந்தது. இப்படிப் பகவான் சிறந்த யானை போல ஜலக்ரீடை செய்யும் பொழுது கோபிகைகள் சிரித்த முகத்துடன் ஜலத்தை வாரி இறைத்துப் பகவானுக்கு அபிஷேகஞ் செய்தார்கள். தேவர்கள் புஷ்பங்களை வர்ஷித்துத் துதித்தார்கள். இப்படி ஆத்மாராமராகிய பகவான் கிரீடித்தார்.

பின்னும் பகவான், ஜலத்திலுள்ள புஷ்பங்கள் கரையிலுள்ள புஷ்பங்கள் இவைகளுடைய வாஸனை யுள்ள காற்றில் ப்ரகாஸிக்கும் யமுனையின் வண்டுகள் ஸ்திரீகள் ஆகிய இவர்களுடன் மதங் கொண்ட சிறந்த யானை பெண் யானைகளுடன் அலைவது போலச் சஞ்சரித்தார். இப்படி ஸத்ய ஸங்கல்பராகிய ஸ்ரீ கிருஷ்ணன் சரத் காலத்திய குணங்களுள்ளதும், சந்திரிகையால் பிரகாசிப்பதுமான அன்றைய ராத்திரிமுழுவதும், ஸ்திரீகளுடன் கிரீடித் தார். ஆனாலும் அவர் காமனால் ஜயிக்கப்பட்ட வரல்ல; காமனை ஜயித்தவர் என்று சுகர் சொன்னார்.

28–30. அதனைக்கேட்ட அரசன் சுகரை நோக்கி, "ஜகதீசராகிய பகவான் தர்மத்தை ஸ்தாபிப்பதற் காகவும், அதர்மத்தை அடக்குவதற்காகவும் பூமியில் பூர்ணாம்சமாக அவதரித்தவரல்லவா? அவர் மேலும் தர்மத்தின் மரியாதையை ஏற்படுத்தியவர்; அதனைப் பிறருக்கு உபதேசிப்பவர்; பின்னும் அதைக் காப்பாற் றுகிறவர்; அப்படியிருக்க, அவரே தர்மத்திற்கு விரோதமாகப் பரஸ்திரீகளுடன் எப்படி ரமித்தார்? ஓ விரதங்களை அனுஷ்டித்தவரே! யாதவர்களுக்கு அதிபதியான ஸ்ரீ கிருஷ்ணன் ஸகல காமனைகளையும் அடைந்தவரல்லவா? அப்படியிருந்தும் இம்மாதிரியான காரியத்தைச் செய்தாரென்றால் அதன் அபிப்பிராயம் இன்னதென்று தெரியவில்லை இந்தச் சம்சயத்தை நிவர்த்திக்க வேண்டும்" என்று கேட்டார்.

31–41. அதனைக் கேட்ட சுகர் பரீக்ஷித்தை நோக்கி, "மேலானவர்கள் தர்மத்திற்கு விரோதமாக அனுஷ்டித்தும், பிடிவாதமான காரியங்களைச் செய்தும் இருக்கிறார்கள். (ப்ரஹ்மதேவர், இந்திரன், விசுவாமித்திரர் முதலியவர்களென்று கருத்து.) எல்லா வற்றையும் புஜிக்கின்ற அக்னிக்கு அபக்ஷ்ய பக்ஷணத்தால் எப்படித் தோஷமேற்படுகிறதில்லையோ, அப்படி மிக்க தேஜஸுள்ளவர்கள் எதைக் செய்தாலும் தோஷமாக ஆகிறதில்லை. ஆனாலும், அவர்கள் செய்தார்களே என்று நினைத்து, ஸாமானிய ஜனங்கள் ஒருபொழுதும் அப்படிச் செய்யக்கூடாது; மூடத்தன்மையால் செய்தால் நாசத்தை அடைவான். பரமசிவன் விஷத்தைப் புஜித்தாரென்று அதனை மற்றவர்கள் புஜிக்கலாமா? ஈச்வரர்கள் (உத்தமர்கள்) எதைச் சொல்லியிருக்கிறார்களோ அந்த வார்த்தை

சாத்தியமானது. (அதன்படி அனுஷ்டிக்க வேண்டும்.) அவர்கள் செய்த செய்கையில் சில ப்ரமாமணங் களல்ல. ஆனதால் அவர்களுடைய செய்கைகளில் எவை அவர்களுடைய வார்த்தையை ஒத்திருக்குமோ அதனை புத்திமான் அனுஷ்டிக்க வேண்டும். ஆனால் மேலான ஈச்வரர்கள் ஏன் அப்படிச் சாகசத்தைச் செய்யவேண்டும் என்றால் மேலானவர்கள் நல்ல கர்மத்தை அனுஷ்டித்ததால் புண்ணியமும் அவர்களுக்கில்லை; அதற்கு விரோதமாக நடந்ததால் அவர்களுக்கு ப்ரத்யவாயமும் (பாபம்) இல்லை. அவர்கள் அகங்காரமற்றுக் கர்மங்களைச் செய்பவர்கள்; அப்படியிருக்க, பசு, பக்ஷி முதலிய திர்யக் ஜந்துக்களுக்கும், மனிதர்களுக்கும், தேவர்களுக்கும் அதிபதியாகிய பகவான் அனுஷ்டித்த கர்மத்தில் நல்லது, கெட்டது என்ற பேதமுண்டா?

மேலும், முனிகள் எவருடைய பாதாரவிந்தத் தூளியைச் ஸேவித்துத் திருப்தியடைந்து யோக மஹிமையால் கர்ம பந்தத்தை நிவர்த்தித்துக் கொண்டு கட்டுப்படாமல் தங்களிஷ்டப்படி ஸஞ்சரிக்கிறார் களோ, அப்பேர்ப்பட்டவரும், இச்சையால் சரீரத்தை யெடுத்துக் கொண்டவருமாகிய (அவருடைய சரீரம் கர்மாதீனமல்லவென்று கருத்து) ஸ்ரீ கிருஷ்ணனுக்குப் பந்தமுண்டா? இல்லை. மேலும் கோபிகைளுக்கும், அவர்களுடைய புருஷர்களுக்கும் எவர் உள்ளே அந்தர்யாமியாகச் சஞ்சரிக்கிறாரோ, அவரே கிருஷ்ணனாக அவதரித்திருக்கிறார். அப்பேர்ப்பட்ட பகவான் மனுஷ்ய சரீரத்தையெடுத்துக்கொண்டு எல்லா ஜனங்களையும் அனுக்கிரஹிப்பதற்காக இம் மாதிரியான கிரீடைகளைச் செய்தார். அவைகளைக்

கேட்ட மாத்திரத்தில் விஷயங்களில் மிக்க ஆசையுள்ளவனும் அந்தர்முகனாகிவிடுவான் (பகவா னிடத்தில் பக்தியடைகிறான்) கோகுலவாஸிகளான கோபர்கள் பகவானுடைய மாயையால் மோஹித்துத் தங்கள் தங்கள் ஸ்திரீகளைப் பக்கத்திலிருப்பதாகவே நினைத்துக் கொண்டு ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் அசூயைப்படவில்லை. ப்ரஹ்ம முகூர்த்தத்தில் பகவானிடத்தில் பிரியமுள்ள அந்தக் கிருஷ்ணனை விட்டுப் பிரிய மனமில்லாதவர்களானாலும், அவருடைய உத்தரவின்படி தங்கள் தங்கள் வீட்டிற்குச் சென்றார்கள். இப்படிப் பகவான் கோபஸ்திரீகளுடன் சேர்ந்து விளையாடின கதையை எவன் ச்ரத்தையுடன் சொல்லுகிறானோ, எவன் ச்ரத்தையுடன் கேட்கிறா னோ அவன் பகவானிடத்தில் மிகுந்த பக்தியை அடைவான். சீக்கிரத்தில் சகல காமங்களையும் அடைவான். (வைராக்கியத்தை அடைவானென்று கருத்து.)

குறிப்பு

ராஸக்ரீடை:–நர்தனஞ் செய்யும் அநேக புருஷர்களும் நர்த்தனஞ் செய்யும் அநேக ஸ்திரீகளுஞ் சேர்ந்து செய்யும் நர்த்தனம் ராஸமெனப்படுகிறது. சந்திரனும் மற்ற கிரஹங்களும் பகவானுடைய கிரீடையைப் பார்த்து ஆச்சர்யமடைந்து ஆகாயத்தில் தன்னை மறந்து நின்றார்கள் சந்திரனின் கதி தடைபடவே, பிந்தி வரும் கிரகங்களும் அசைவற்று நின்றன. அதனால் ராத்திரி அதிதீர்க்கமாக ஆயிற்று. ஆனதால் அன்றைய ராத்திரி முழுவதும் பகவான் விளையாடினார். கோகுலத்திலுள்ள சிறு பெண்கள்

காத்தியாயனி. விரதம் செய்து ஒவ்வொருவரும் தனித்தனியே கிருஷ்ணனைப் பர்த்தாவாக அடைய வேண்டுமென்று ப்ரார்த்தித்ததாலும், அவர்களை பகவான் அனுக்ரஹித்த பொழுது என்னுடன் நீங்கள் வரும் ராத்திரியில் ரமிக்கலாம் என்று பகவான் சொல்லியிருப்பதாலும் எவ்வளவு கோபிகைகள் இருந்தார்களோ அவ்வளவு ஸ்வரூபத்தை எடுத்துக் கொண்டு அவர்களுடன் ரமித்தார் என்பது கருத்து. மூலத்தில், வரும் ராத்திரிகளில் ராஸக்ரீடை நடந்ததென்று சிலர் சொல்கிறார்கள்

ஒரு ராத்திரிதான் ராஸக்ரீடை நடந்ததென்று கொள்ளவேணடும். ஏன் எனில் அன்றைய ராத்திரி கடைசி முஹூர்த்தமாகிய ப்ராம்ஹ முஹூர்த்தம் வந்தவுடன் பகவான் ஸ்த்ரீகளை வீட்டுக்கு அனுப்பினாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் ஸ்திரீகளை வீட்டுக்கு அனுப்பியதாகச் சொல்லப்படவில்லை பகவானுடைய அற்புதலீலைகள் நடந்த இராத்திரி சிறந்ததானதால் அதைச் சொல்லும் பொழுது பன்மையை உபயோகிக்கலாம்.

♣ ♣ ♣ ♣

ஸுதர்சனனுடைய ஸாபமோக்ஷம்

1–10. ஒருக்கால் கோபர்கள் எல்லாரும் அம்பிகாவனஞ் சென்று அங்கிருக்கும் ஈச்வரனை தர்சிக்க விரும்பியவர்களாகி எருதுகள் கட்டிய வண்டியின் மீதேறி அம்பிகாவனஞ் சென்றார்கள். ஓ! மஹாராஜா அவ்விடத்தில் அவர்கள் சரஸ்வதி நதியில் ஸ்நானஞ் செய்து பசுபதியான மஹாதேவரையும், பார்வதியையும் பூஜாதிரவியங்களைக் கொண்டு பூஜித்தார்கள். மேலும் அவர்கள் பசுக்களையும், ஸ்வர்ணத்தையும், வஸ்திரங்களையும், தேனையும், ருசியுள்ள அன்னத்தையும், "மஹாதேவன் எங்களிடத்தில் ஸந்தோஷத்தை அடையட்டும்" என்று பிரார்த்தித்துக் கொண்டு மிக்க ஆதரவுடன் பிராமணர்களுக்குக் கொடுத்தார்கள்.

மேலும் நந்தன், நந்தகன் முதலிய எல்லா கோபர்களும் அன்றைய ராத்திரி ஜலத்தைப் புஜித்து மிக்க நியமத்துடன் ஸதல உப்வாஸமிருந்தார்கள். அந்த ஸமயத்தில் ஒரு பெரிய பாம்பு மிகுந்த பசியுடன் ஸஞ்சரித்து அவ்விடம் வந்து படுத்திருக்கும் நந்தரை விழுங்கத் தொடங்கிற்று. அப்பொழுது நந்தர், "ஓ கிருஷ்ண! கிருஷ்ண! பெரியதான ஸர்ப்பமானது என்னை விழுங்குகிறது. உன்னைச் சரணமடைந்தவனான என்னைக் காப்பாற்றும்" என்று கதறினார். அதனைக் கேட்ட கோபர்கள் சீக்கிரமாக எழுந்திருந்து பரபரப்புள்ளவர்களாகிக் கொள்ளிக் கட்டைகளால் அந்த ஸர்ப்பத்தை அடித்தார்கள். அப்படி அடிக்கப்பட்டும் அந்த ஸர்ப்பம் நந்தரை விடவில்லை.

அப்பொழுது ஸாத்வதர்களுக்கு அதிபதியாகிய ஸ்ரீ கிருஷ்ணன் அவ்விடம் வந்து தம்முடைய பாதத்தால் அந்த ஸர்ப்பத்தை உதைத்தார். அந்த ஸர்ப்பமானது பகவானுடைய பாதாரவிந்தம் பட்ட மாத்திரத்தில் பாபங்களற்றதாகி அந்த ஸர்ப்ப சரீரத்தை விட்டு வித்யாதரனின் ஸ்வரூபத்தை அடைந்தது. பின்னும் அந்த வித்யாதரன் ஸ்வர்ண மாலைகளால் அலங்கரித்த திவ்யசரீரத்துடன் பிரகாசிப்பவனாகிப் பகவானை நமஸ்கரித்தான்.

11–19. அதனைக் கண்ட பகவான் அவனை நோக்கி, "நீ யார்? நல்ல லக்ஷணங்களுள்ளவனாக இருக்கிறாய்; மிகுந்த காந்தியுடன் ப்ரகாசிக்கிறாய்; அப்படிப்பட்ட உனக்கு அல்பமான ஸர்ப்ப ஜன்மம் நேர்ந்த காரணமென்ன? என்று கேட்டார். அதனைக் கேட்ட அவன் பகவானை நோக்கி, "நான் ஸுதர்சனனென்ற கந்தர்வன், மிக்க அழகுள்ளவன்; அப்படிப்பட்ட நான் விமானத்தின் மீதேறி சஞ்சரிக்கும் பொழுது விரூபிகளான ஆங்கீரஸ மஹர்ஷிகளைப் பார்த்து பரிஹாஸஞ் செய்தேன். அதனால் இயற்கையில் கிருடையுள்ளவர்களான அவர்கள் ஸர்ப்பஜன்மத்தை அடையும்படி சாபத்தைக் கொடுத்து அனுக்கிரஹித்தார்கள். அதனால் லோக குருவாகிய உம்முடைய பாதம் என்னுடைய சரீரத்தில் படும்படியும், அதனால் பாபங்கள் நிவர்த்தியாகி சுத்தனாகும்படியும் நேர்ந்தது. ஓ பாபங்களை நிவர்த்திப்பவரே! ஸம்ஸாரத்திலிருந்து பயந்து சரணமடைகிறேன். உம்முடைய பாத ஸ்பரிசத்தால் சாபம் விலகிற்று. ஆனதால் விடை கொடுத்தலுப்பும். ஓ மஹா யோகியே! ஓ மஹா புருஷ! ஸாதுக்களுக்கு

அதிபதியே! ஓ கிருஷ்ண! உம்மைத் தரிசித்த மாத்திரத்தில் பிராமண சாபம் நீங்கிற்று. எனக்கு விடைகொடும். எவருடைய திவ்ய நாமதேயம், கேட்பவர்களையும் உச்சரிப்பவர்களையும் கேட்கச் செய்பவர்களையும் உடனே சுத்தப்படுத்துகிறதோ, அப்பேர்பட்ட உம்முடைய திவ்யமான பாதத்தால் தொடப்பட்ட எனக்குப் பாபமிருக்குமா?" என்று ஸுதர்சனன் பகவானிடம் விடைபெற்று அவருக்குப் ப்ரதக்ஷிண நமஸ்காரஞ் செய்து ஸ்வர்க்கஞ்சென்றான். நந்தருக்கு நேர்ந்த ஆபத்தும் நிவர்த்தியாயிற்று. கோபர்கள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய மஹிமையைப் பார்த்து ஆனந்தமடைந்து அவ்விடத்தில் செய்ய வேண்டிய நியமங்களை முடித்துக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனுடைய கதையை மிக்க ஆதரவுடன் சொல்லிக்கொண்டு கோகுலஞ் சென்றார்கள்.

20–32. பின்னொருகால் அத்புதமான பராக்கிரம முள்ள கோவிந்தரும் பலராமனும் ராத்திரியில் பசுக்கள், கோபிகைகள் ஆகிய இவர்களுடைய நடுவில் விளையாடினார்கள். சுத்த வஸ்திரத்தையுடுத்திக் கொண்டவர்களும், புஷ்பமாலையைத் தரித்தவர்களு மான அவர்களைக் கோபிகைகள் துதித்தார்கள். சந்திரனும் நக்ஷத்திரங்களும் பிரகாசித்தன. குமுத புஷ்பத்தின் வாஸனையால் வண்டுகள் மதித்து ஸஞ்சரித்தன. அந்த ஸமயத்தில் ஸ்வரமண்டலங் களுடைய மூர்ச்சனையை ஒரே ஸமயத்தில் ராம கிருஷ்ணர்கள் செய்துகொண்டு ஸகல பிராணிகளு டைய மனத்திற்கும், காதுகளுக்கும் இனிமையாகக் கானஞ்செய்தார்கள். அந்தக் கானத்தைக் கேட்ட கோபிகைகள் தங்களை மறந்தார்கள். அவர்கள்

இடையில் தரித்திருந்த வஸ்திரம் நழுவியது; தலை மயிர் அவிழ்ந்தது; இப்படி ராமகிருஷ்ணர்கள் இஷ்டப்படி விளையாடிக்கொண்டும், மதித்தவர்கள் போல கானஞ்செய்து கொண்டிருக்கும் ஸமயத்தில், குபேரனுடைய வேலைக்காரனாகிய சங்கசூடனென்றவன் அவ்விடம் வந்தான். மேலும் அவன் ராம கிருஷ்ணர் களால் காப்பாற்றப்படும் அந்தக் கோபிகைகளைப் பயமின்றி வடக்கு திக்கை நோக்கித் துரத்திக்கொண்டு சென்றான். அவர்கள் "ஓ கிருஷ்ண! ராம!" என்று கதறினார்கள் அப்பொழுது ராமகிருஷ்ணர்களிருவர் களும், பசுக்களைப் புலி அபஹரித்தாற் போல தங்களுடைய ஸ்திரீகளை சங்கசூடன் அபஹரிப்பதை பார்த்து "பயப்படவேண்டாம்" என்று சொல்லிக் கொண்டு ஸாலமரத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அவன்பின் சென்று குஹ்யர்களுக்குள் அதமனாகிய சங்கசூடனைத் தடுத்தார்கள். காலமிருத்யு போன்ற இவர்களைக் கண்டவுடன் பயந்து ஸ்திரீகளை விட்டு, பிழைத்தால் போதுமென்ற எண்ணத்துடன் ஓடினான் ஸ்ரீ கிருஷ்ணன் அவனுடைய தலையிலுள்ள ரத்னத்தை அபஹரிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அவனைத் துரத்திக்கொண்டு அவன் பின் சென்றார். பலராமன் ஸ்திரீகளைக் காப்பாற்றிக் கொண்டு அவ்விடத்திலி ருந்தார். பகவான் அந்த குஹ்யகன் பின் சென்று முஷ்டியால் அவனை அடித்துக் கொன்றார். பின்னுமவர் அவனுடைய தலையிலிருக்கும் மிக்க தேஜஸ்ஸுள்ள ரத்தினத்தை எடுத்துவந்து கோபிகைகள் பார்த்திருக்கும் பொழுது தமையனாகிய பலராமனிடம் கொடுத்தார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–35

கோபிகைகள் ஸ்ரீ கிருஷ்ண சரிதத்தை வர்ணித்தது

1–26. கிருஷ்ணன் காட்டிற்குச் சென்றிருக்கும் போது கோபிகைகள் அவரிடத்திலேயே மனத்தைச் செலுத்தி ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதங்களைக் கானஞ்செய்து கொண்டு சிரமப்பட்டுப் பகல்களைக் கழித்தார்கள். எப்படியெனில்:– "ஓ கோபிகைகளே! ஸ்ரீகிருஷ்ணன் இடது கன்னத்தை சாய்த்து வைத்துக் கொண்டு, அசையும் புருவங்களுடன் உதட்டில் புல்லாங்குழலை வைத்து மிருதுவான விரல்களால் அதன் துவாரங்களை அடைத்து எப்பொழுது வேணு கானம் செய்கிறாரோ அப்பொழுது ஆகாசத்தில் விமானத்தில் ஸஞ்சரிக்கும் ஸித்தர்களுடைய ஸ்திரீகள் தங்கள் புருஷர்களுடன் அந்தக் கானத்தைக் கேட்டு ஆச்சரியமடைகிறார்கள்.

பின்பு, காமவெறி கொண்டவர்களாகி அவிழ்ந்த எக்கு முடிச்சைக் கட்டிக் கொள்ளாமலேயே வெட்கத்துடன் மோஹிக்கிறார்கள். (அப்படிப்பட்ட ஸ்ரீகிருஷ்ணனை விட்டுப்பிரிந்து நாம் எப்படி வஸிப்போம்? என்பது கருத்து.) ஓ பெண்களே! ஹாரம்போல் வெண்மையான சிரிப்புள்ளவரும், மார்பில் லக்ஷ்மீதேவியுள்ளவரும், உபத்திரப்பட்டவர் களைச் சுகப்படுத்துகிறவருமான ஸ்ரீகிருஷ்ணன் எப் பொழுது வேணுகானஞ் செய்கிறாரோ, அப்பொழுது கோகுலத்திலுள்ள விருஷபங்களும், பசுக்களும், மிருகங்களும் அந்தச் சப்தத்தைக் கேட்டு பற்களால் கடித்த கவளங்களுடன் காதுகளை உயரத்தூக்கிக்

கொண்டு, தூங்கினவைபோலும், எழுதிய சித்திரங்கள் போலும் இருக்கின்றன. மேலும் அந்த பகவான் மயில் தோகைகளாலும் பலவகையான தாதுக்களாலும், தளிர்களாலும், மல்லர்கள் போல வேஷங்கொண்டு கோபர்களுடன் வேணுகானஞ் செய்து எப்பொழுது பசுக்களை அழைக்கிறாரோ, அப்பொழுது நதிகள் அந்தச் சப்தத்தைக் கேட்டு அலைகளாகிய கைகளை நீட்டிக்காற்றினால் அசையும் பகவானுடைய பாதார விந்த தூளியை ஆசைப்பட்டது போல ஓடாமல் நிற்கின்றன. அவைகள் எங்களைப் போல் புண்ணியஞ் செய்யாதவைகள்; பின்னும் கோபர்களால் ஸ்தோத் திரஞ் செய்யப்பட்டவரும், ஆதி புருஷன் போல் ஸ்திரமான ஐசுவர்யமுள்ள்வருமான ஸ்ரீகிருஷ்ணன் காட்டில் ஸஞ்சரித்து, மலையின் அடிவாரங்களிலி ருந்து வேணுகானஞ் செய்து எப்பொழுது பசுக்களை அழைக்கிறாரோ, அப்பொழுது காட்டிலுள்ள கொடிகள், புஷ்பங்கள், பழங்கள் ஆகிய இவைகளால் பூர்ணங்களாகி வணங்கிய கிளைகளுடன் தங்களிடத் திலும் அந்தர்யாமியாக வஸிக்கும் விஷ்ணுவைக் காண்பிப்பவை போல மதுதாரைகளை வர்ஷித்தன.

மேலும் அழகான திலகமுள்ளவரான ஸ்ரீகிருஷ்ணன் வேணுகானஞ் செய்யும்பொழுது வன மாலையின் வாஸனையாலும் துளசியின் மதுவாலும் மயங்கிய வண்டுகளும் உரக்க கானஞ் செய்தன. அப்பொழுது குளங்களில் வஸிக்கும் ஸாரஸம், ஹம்ஸம் முதலிய பறவைகள் கானத்தில் ஆசைப்பட்டு ஸ்ரீகிருஷ்ணனிடம் வந்து ஒரே மனத்துடன் கண்களை மூடிக்கொண்டு மௌனமாக இருக்கின்றன. பின்னும் எப்பொழுது ஸ்ரீ கிருஷ்ண பகவான் பலராமருடன்

காட்டுப் புஷ்பங்களை அலங்கரித்துக் கொண்டு மலைகளின் தாழ்வரைகளில் வேணுகானஞ் செய்து ஸகல ஜகத்தையும் ஸந்தோஷப் படுத்துகிறாரோ, அப்பொழுது பெரியோர்களைப் பூஜிக்காமல் செல்வது ஸரியல்லவென்று நினைத்து மேகமானது தனக்கு மித்திரராகிய ஸ்ரீ கிருஷ்ணன் மீது புஷ்பங்களை வர்ஷித்துக் குடை பிடிப்பதுபோல் நிழலை உண்டு பண்ணிற்று. ஓ யசோதையே! உன்னுடைய புத்திரன் பலவகையான விளையாட்டில் தேர்ந்தவராகையா லும், வேணுகானஞ் செய்வதில் ஸ்வரம் முதலியவை களைத் தாமாகவே கண்டுபிடித்தவராகையாலும், புல்லாங்குழலை உதட்டில் வைத்து நிஷாதம் முதலிய ஸ்வரங்களைப் பாடும்பொழுது இந்திரன், பரமசிவன், ப்ரஹ்மா முதலிய தேவர்கள் அடிக்கடி அந்த ஸ்வரங்களைக் கேட்டு கழுத்தை வணங்கிக் கொண்டு தாங்கள் மிகவுந் தெரிந்தவர்களானாலும் அந்த ஸ்வர பேதங்களையறியாமல் மோஹிக்கிறார்கள்; (பரமசிவன் முதலியவர்கள் மோஹிக்கும்பொழுது நாங்கள் மோஹிப்பதற்கு என்ன ஆக்ஷேபம் என்பது கருத்து.)

பின்னும், ஸ்ரீகிருஷ்ணன் பசுக்களின் குளம்புகளால் பூமிக்கு நேர்ந்த உபத்திரவத்தை த்வஜரேகை, வஜ்ர ரேகை, ஸாமரத ரேகை, அங்குசரேகை முதலியவை களால் நிறைந்த விசித்திரமான தம்முடைய காலடிகளால் நிவர்த்தித்துக்கொண்டு குட்டி யானை போல எப்பொழுது பிருந்தாவனத்தில் ஸஞ்சரிக்கிறாரோ, அப்போது நாங்கள் தலைமுடிச்சு அவிழ்ந்ததையும், வஸ்திரம் நழுவினதையும் அறியாமல் மரங்கள்போல அசைவற்று நிற்கிறோம் பசுக்களின் மணிகளைத் தரித்தவராகிய ஸ்ரீகிருஷ்ணன் பசுக்களை எண்ணிக்

கொண்டு துளசி மாலையை தரித்து சிநேகிதனுடைய தோளில் கையைவைத்துக் கொண்டு எப்பொழுது வேணுகானஞ் செய்கிறாரோ, அப்பொழுது பெண் மான்கள் அந்தக் கானத்தைக் கேட்டு அதில் நோக்கமுள்ளவைகளாகி மிக்க குணசாலியாகி ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஸமீபஞ்சென்று கோபிகைகள் போல எல்லா ஆசைகளையும் ஒழித்து நிற்கின்றன. ஓ! மிக்க புண்ணியம் பெற்றவளாகிய யசோதையே! உன்னுடைய குமாரராகிய ஸ்ரீகிருஷ்ணன் குந்த புஷ்பங்களின் மாலையைத்தரித்து; கோபர்களுடனும் பசுக்களுடனும் சிநேகிதர்களுக்கு ஸந்தோஷத்தை யுண்டு பண்ணிக்கொண்டு யமுனா நதியில் விளையாடும் போது தென்றல் காற்றானது வீசுகிறது; தேவர்கள் வந்திகள்போல் ஸ்தோத்திரம் செய்துகொண்டு காணிக்கைகளுடன் பகவானை உபாஸிக்கிறார்கள்.

பின்னும், தேவகியின் வயிற்றில் உதித்தவரான இந்தச் சந்திரன் இதோ வருகிறார்; இவர் கோகுல வாஸிகளிடத்திலும் பசுக்களிடத்திலும், ப்ரீதியுள்ளவர்; கோவர்த்தனமலையைத் தூக்கினவர்; இவர் பசுக்க ளெல்லாவற்றையும் ஓட்டிக்கொண்டு ஸ்நேஹிதர்களால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டு ஸாயங்காலத்தில் கோகுலத்திற்கு வரும்பொழுது ப்ரம்மா முதலியவர்கள் வழியில் இவரை நமஸ்கரிக்கிறார்கள். இவர் கோதூளியுள்ள தலைமயிருள்ளவர்; நம்முடைய இஷ்டத்தை நிறைவேற்றுவதற்காக வருகிறார்; மேலும் இவர் கொஞ்சம் மதத்தால் கலங்கிய கண்களுள்ளவர்; ஸ்வர்ணமயமான குண்டலங்களுடைய காந்தியால் இவருடைய கன்னம் பிரகாசிப்பதால் பக்குவமான இலந்தைப்பழத்தின் நிறம் போன்ற காந்தியுள்ளதாக

இவருடைய முகம் காணப்படுகிறது இவர் குட்டி யானைபோல் நடப்பவர்; பகலில் சூரியனுடைய வெய்யிலால் உண்டான தாபத்தை நிவர்த்தித்துக் கொண்டு, இரவில் சந்திரன் உதயமானாற்போல, இவர் கோகுலவாஸிகளான நம்முடைய தாபத்தை நிவர்த்தித்துக்கொண்டு, சிரித்த முகத்துடன் வருகிறார் என்று கோபிகைகள் பகலில் கிருஷ்ணனுடைய லீலைகளையே கானஞ் செய்து கொண்டு அவரிடத்தி லேயே மனத்தைச் செலுத்தியவர்களாகி தங்களுடைய சங்கல்பம் முதலியவைகளை அவரிடத்திலேயே செலுத்தி மிக்க ஸந்தோஷத்துடன் பகல்களைக் கழித்தார்கள்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம் –36

கம்ஸன் கோகுலத்திற்கு அக்ரூரரை அனுப்பியது

1–15. பின்பு ஒருகால் அரிஷ்டனென்ற அஸுரன் விருஷபத்தின் உருவங்கொண்டு பருத்த சரீரத்துடனும், பெரிதான கொண்டையுடனும்; குளம்படிகளால் பூமியைப் பிளந்து கொண்டும், அசைத்துக்கொண்டும் கோகுலத்திற்கு வந்தான்; விருஷபம்போல் கர்ஜித்தான். கால்களால் பூமியைப்பிளந்தான். மேலும் அவன் வாலைத் தூக்கிக்கொண்டும், மலையின் தாழ்வரை களைக் கொம்புகளால் குத்திப் புரட்டிக் கொண்டும், கொஞ்சம் சிறுநீர் விட்டுக்கொண்டும், சாணத்தைப் போட்டுக்கொண்டும், கண்களை விழித்துக் கொண்டும் நின்றான். அவனுடைய கொடிய கர்ஜனையைக் கேட்டுப்பசுக்களுடையவும், மனிதர்களுடையவும் கர்ப் பமானது அகாலத்தில் ஸ்ரவித்தது.

அதன் முதுகிலிருக்கும் கொண்டையை மலை யென்று நினைத்து மேகங்கள் அதில் உட்கார்ந்தன. கூர்மையான கொம்புகளுள்ள அந்த விருஷபத்தைக் கண்டு கோபிகைகளும், கோபர்களும், பசுக்களும் பயந்து கோகுலத்தை விட்டு ஓடினார்கள். மேலும் அவர்கள் "ஓ கிருஷ்ணா!" என்று கோவிந்தரைச் சரணமடைந்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ண பகவான், பயந்து துக்கப்படும் கோகுலத்தைப் பார்த்துப் பயப்படவேண்டாமென்று சமாதானஞ் செய்து, விருஷபாஸுரனை நோக்கி, "அட மூட! பாலர்களையும் பசுக்களையும் பயப்படச் செய்வதால் என்ன ப்ரயோஜனம்? ஓ மிக்க அஸத்தே! நான் உன்னைப்

போன்ற துஷ்டர்களுடைய கர்வத்தைப் போக்கடிப்ப வன்; ஆனதால் என்னிடம் வா" என்று கைகொட்டி, அழைத்து, அதனால் அஸுரனுக்குக் கோபத்தையுண்டு பண்ணித்தோழனுடைய தோளில் கையை நீட்டிக் கொண்டு நின்றார். அந்த அஸுரனும் மிகுந்த கோபத் துடன் பூமியைப் பிளந்துகொண்டு ஸ்ரீகிருஷ்ணனை எதிர்த்தான். உயரத்தூக்கிய அவனுடைய வாலால் அடிக்கப்பட்டு மேகங்கள் ஆகாயத்தில் சுற்றிக் கொண்டிருந்தன. மேலும் அவன் கொம்புகளை முந்தி நீட்டிக்கொண்டு அசைவற்ற சிவந்த கண்களுடன் கிருஷ்ணனைப் பார்த்து இந்திரனாற் ப்ரயோகிக்கப் பட்ட இடிபோல் ஓடிவந்தான். இப்படி ஓடிவரும் விருஷபாஸுரனுடைய இரண்டு கொம்புகளையும் பிடித்து இழுத்துப் பதினெட்டடி தூரம் பிந்தித் தள்ளினார். அது யானையைப் பிடித்துத் தள்ளினாற் போல இருந்தது.

இப்படி ஸ்ரீகிருஷ்ணனால் தள்ளப்பட்டுப் பூமியில் விழுந்த அந்த அஸுரன் மிகவும் சிரமத்தையடைந் தான். அவனுடைய சரீரம் முழுவதும் வியர்வையுள்ள தாக ஆயிற்று. அவன் திரும்பவும் எழுந்திருந்து கோபத்தாலும், ச்ரமத்தாலும் பெருமூச்சுவிட்டு ஸ்ரீ கிருஷ்ணனை நோக்கி ஓடிவந்தான். இப்படி ஓடிவரும் அஸுரனைப் பார்த்து ஸ்ரீகிருஷ்ணன் அவனுடைய இரண்டு கொம்புகளையும பிடித்துப் பூமியில் தள்ளி ஈரமாகிய வஸ்திரத்தைப் பிழிவது போலக் காலால் மிதித்தார். பின்னுமவர் அவனுடைய கொம்பை ஓடித்து, அதனால் அவனைக் கொன்றார். அவன் அப்பொழுது பூமியில் விழுந்தான், ரத்தத்தைக் கக்கினான், சாணத்தைப் போட்டான்; கால்களை

நீட்டினான்; கண்களை மிரள விழித்தான்; இவ்வளவு கஷ்டத்தையடைந்து யமலோகஞ் சென்றான். தேவர்கள் புஷ்பங்களை வர்ஷித்து பகவானை கொண்டாடினார் கள். இப்படி பகவான் விருஷபாசுரனைக் கொன்று கோபர்களால் துதிக்கப்பட்டு பலராமனுடன் கோகுலஞ் சென்றார். கோபிகைகள் அவரைப் பார்த்து மிகவும் ஸந்தோஷித்தார்கள்.

16–37. கோகுலத்தில் அத்புதமான செய்கையுள்ள ஸ்ரீ கிருஷ்ணன் அரிஷ்டாஸுரனைக் கொன்ற பிறகு தேவர்ஷியாகிய நாரதர் கம்ஸனிடஞ் சென்று. "ஓ கம்ஸ! கிருஷ்ணன் தேவகியின் புத்திரன்; பலராமன் ரோஹிணீயின் புத்திரன்; வஸுதேவர் உன்னிடம் பயந்து அவ்விருவர்களையும் நந்த கோகுலத்தில் மித்ரனாகிய நந்தரிடம் அனுப்பியிருக்கிறார். ஆகாயத் தில் சென்ற பெண் யசோதையின் குமாரி. உன்னால் அனுப்பப்பட்ட அஸுரர்கள் அந்த ராமகிருஷ்ணர்களால் கொல்லப்பட்டார்கள்" என்று சொன்னார். அதனைக் கேட்ட கம்ஸன் கோபத்தால் கலங்கின இந்திரியங் களுள்ளவனாகி வசுதேவரைக் கொல்வதற்காகக் கூர்மையான கத்தியை எடுத்துக்கொண்டான் அதனைக் கண்ட நாரதர் வஸுதேவரைக் கொல்லவேண்டா மென்று தடுத்தார். அப்பொழுது கம்ஸன் தனக்கு ராமகிருஷ்ணர்களிருவர்களும்மிருத்யுவென்று நினைத்துக் கொண்டு வஸுதேவரையும், தேவகியையும் காரா கிருஹத்தில் அடைத்தான். (வசுதேவரைக் கொன்றால் ராமகிருஷ்ணர்கள் ஓடிப்போவார்கள்! ஆனதால் கொல்லவேண்டாம், காராகிருஹத்தில் அடைத்து விடு என்று நாரதர் சொன்னாரென்று கருத்து). இப்படி கம்ஸனுக்குச் சொல்லி நாரதர் தமது இஷ்டப்படி

சென்றபின் கம்ஸன் கேசியென்பவனை வரவழைத்து. "நீ ராமகிருஷ்ணர்களைக் கொல்ல வேண்டும்" என்று உத்தரவு கொடுத்து அனுப்பினான். பின்னும் அவன் முஷ்டிகன், சாணூரன், சலன், தோஸலன் முதலியவர் களையும், மந்திரிகளையும், யானைப்பாகனையும் அழைப்பித்து "ஓ! ஓ வீரனாகிய சாணூர! முஷ்டிக! நான் சொல்வதைக் கேளுங்கள். வஸுதேவருடைய புத்திரர்களாகிய ராமகிருஷ்ணர்கள் நந்த கோகுலத்தில் வஸிக்கிறார்கள். அவர்கள் எனக்கு மிருத்யுக்கள் என்று நாரத மஹர்ஷி சொல்லியிருக்கிறார்; அவர்களை இவ்விடம் வரவழைக்கிறேன். அவர்களுடன் விளையாட்டாக மல்ல யுத்தஞ்செய்து அவர்களைக் கொல்லவேண்டும்.

மல்லயுத்தஞ் செய்யும் சபையில் பலவகையான மஞ்சங்கள் செய்யப்படவேண்டும் (பார்க்க வந்த அரசர்கள் உட்காருவதற்காக) பட்டணத்து ஜனங்களும், தேசத்து ஜனங்கள் முதலிய எல்லோரும் மல்ல யுத்தத்தைப் பார்த்து ஸந்தோஷிக்கட்டும். ஓ மஹாமாத்திர! குவலயாபீடமென்ற யானையை அந்த ஸபையின் வாயிற்படியில் நிறுத்திக்கொண்டு எனக்குச் சத்துருக்களான அந்த ராமகிருஷ்ணர்களைக் கொல்ல வேண்டும். சதுர்த்தசி தினத்தில் விதிப்படி தனுர்யாக மானது ஆரம்பிக்கப்படட்டும். இஷ்டமான வரத்தைக் கொடுப்பவரும். பூதங்களுக்கு அதிபதியுமான பரம சிவனை உத்தேசித்து சுத்தமான பசுக்களைக் கொல்லுங்கள்" என்று உத்தரவு செய்து, காரியத்தின் நிச்சயத்தை அறிந்தவனாகிய கம்ஸன் யதுக்களுக்குட் சிறந்தவராகிய அக்ரூரருடைய கையைப் பிடித்துக் கொண்டு, ஓ அக்ரூரரே! மித்திரன் செய்யவேண்டிய

காரியத்தை எனக்கு நீர் செய்யவேண்டும். போஜ விருஷ்ணிகளுக்குள் உம்மைப் போல் பிரீதியுடன் எனக்கு ஹிதத்தைச் செய்பவர் ஒருவருமில்லை. இந்திரன் விஷ்ணுவை ஆச்ரயித்துத் தன்னுடைய காரியத்தை சாதித்துக் கொண்டது போல பெரிதாகிய காரியத்தை முடித்துக் கொள்வதற்காக உம்மை ஆச்ரயித்திருக்கிறேன். ஆனதால் இந்த ரதத்தின் மீதேறிக்கொண்டு நந்தகோகுலஞ் சென்று அவ்விடத்தி லிருக்கும் வசுதேவருடைய புத்திரர்களான ராம கிருஷ்ணர்களை இவ்விடம் அழைத்து வாரும்; தாமதிக்க வேண்டாம். மஹாவிஷ்ணுவை ஆச்ரயித்து தேவர்கள் ராமகிருஷ்ணர்களை எனக்கு மிருத்யுவாக ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அவர்களை அழைத்து வாரும். நந்தன் முதலிய கோபர்களையும் அழைத்து வாரும். அவர்கள் காணிக்கைகளையெடுத்துக்கொண்டு வருவார்கள். அப்பொழுது யமன் போன்ற யானையால் ராம கிருஷ்ணர்களைக் கொல்லுகிறேன். ஒருகால் யானையால் அவர்களைக் கொல்லமுடியாமற் போனால் மேக இடிக்குச் சமமான மல்லர்களால் கொன்று விடுகிறேன். அவர்களைக் கொன்றபின் அவர்களை ஆச்ரயித்துக் கர்வம் கொண்டிருக்கும் விருஷ்ணிகளையும் போஜர் களையும், தாசார்ஹர்களையும், வஸுதேவர் முதலியவர் களையும் எனக்குப்பிதாவும் வயது முதிர்ந்தவரானாலும் ராஜ்யத்தில் விருப்பமுள்ளவருமான உக்ரஸேனரையும், அவருடைய சகோதரரான தேவர்களையும், இன்னும் மற்ற சத்ருக்களையும் நாசஞ்செய்கிறேன். இதன் பிறகு இந்தப் பூமியை யாதொரு இடையூறுமின்றி நான் அனுபவிப்பேன். ஜராசந்தன் எனக்கு ஆசார்யன்.

த்விதன் மிகுந்த தோழன். சம்பரன், நரகன், பாணன் ஆகிய இவர்கள் என்னிடத்திலேயே பிரீதியுள்ளவர்கள். அவர்களைக் கொண்டு தேவர்களைச் சார்ந்த அரசர்களை ஜயித்து பூமியை அனுபவிக்கிறேன். இதை நீர் மனதில் வைத்துக்கொண்டு "தனுர் யாகத்தையும், மதுரா நகரத்தின் அழகையும் பார்த்து வரலாம்" என்று சொல்லிக் குழந்தைகளான ராமகிருஷ்ணர்களை அழைத்து வாரும்" என்றான்.

38–41. அதனைக்கேட்ட அக்ரூரர் கம்ஸனை நோக்கி "ஓ அரசனே! உம்முடைய யோசனை நல்லது. உமக்கு நேரும் மரணத்தை அது நிவர்த்திக்கக் கூடியது. ஆனால் காரியம் முடிந்தாலும் அதில் சந்தோஷப்பட வேண்டாம். இல்லாவிடிலும் துக்கப்பட வேண்டாம். பலன் கிடைப்பது தெய்வாதீனமாக இருக்கிறது. ஜனங்கள் தெய்வ பலமில்லாத காலத்தில் முயற்சித்தும் காரியம் சித்திக்காமல் துக்கத்தை அடைகிறார்கள். தெய்வ பலமுள்ள ஸமயத்தில் காரியம் சித்திப்பதால் சந்தோஷத்தை அடைகிறார்கள். ஆனாலும் உம்முடைய உத்தரவின் படி செய்கிறேன்" என்று ஒப்புக்கொண்டார். இப்படிக் கம்ஸன் அக்ரூரருக்கும் மந்திரிகளுக்கும் ஆக்ஞாபனஞ்செய்து, அந்தப்புரஞ் சென்றான். அக்ரூரரும் தம்முடைய வீட்டிற்குச் சென்றார்.

குறிப்பு

இந்த அத்தியாயத்தில் 25–வது சுலோகம் முதல் 33 சுலோகங்களுக்கு ஒரு வியாக்கியானக்காரர்களும் வியாக்கியானஞ் செய்யவில்லை என்றாலும் சிலமூல

Released by Maran's Dog, Toronto , Canada

புத்தகங்களில் காணப்படுவதாலும். பிரகரணத்துக்கு ஒத்திருப்பதாலும் அவைகளுக்கு அர்த்தம் பின்வருமாறு கண்டுகொள்க. கம்ஸன் சொல்லுகிறான்; "ஓ மஹாமாத்திர! மிகுந்த புத்தியுள்ளவரே! நான் சொல்வதைக் கேளும். இருகண்களிலும் மதம் பெருகும் குவலயாபீடமென்ற யானையின் துதிக்கையில் இரும்பு உலக்கையை கொடுத்து மல்ல ஸபையின் வாயிலில் நிறுத்தி வைத்து. அதனைக் கொண்டு ராமகிருஷ்ணர் களிருவர்களையும் கொல்லவேண்டும்' என்று சொல்லி, பின்னும் அந்தக் கம்ஸன் அவ்விடத்தில் கூடியிருப்பவர்களை நோக்கி, "நான் பிறந்தது முதல் பந்துக்களான இவர்களிடத்தில் விரோத புத்தியுள்ளவனாக இருப்பதின் காரணத்தைச் சொல்லுகிறேன், தெரிந்து கொள்ளுங்கள்.

ஓ! மிகுந்த பாக்கியசாலிகளே! தாமரைமலர் போன்ற கண்களுள்ள என்னுடைய தாய் ஒரு நாள் வீட்டின் தோட்டத்தில் விளையாட்டாக ஸஞ்சரித்தாள். அப்பொழுது தென்றல் காற்று வீசிற்று. அந்தத் தோட்டத்திலுள்ள அசோகம்,மகிழமரம், பாக்குமரம், புன்னைமரம் இவைகள் புஷ்பித்திருந்தன. வண்டுகள் பாடின; குயில்கள் கூவின; மயில்கள் கூத்தாடின; குரங்குகள் சேஷ்டித்தன; இப்படி வஸந்தகாலத்தால் அழகான அந்தத் தோட்டத்தில் ஸஞ்சரிக்கும் அவள் ருது ஸ்நானஞ் செய்தவளாகையால் தன் பர்த்தாவை மனத்தில் நினைத்தாள். அந்த ஸமயத்தில் த்ரமிட னென்ற ஒரு கந்தர்வன் கண்ணுக்குப் புலப்படாமல் அவ்விடம் சஞ்சரித்தான். மேலுமவன் எல்லாருடைய மனத்திலிருக்கும் எண்ணத்தையும் தெரிந்து கொள்ளும் சக்தியுள்ளவனாகையால் அவளுடைய

அபிப்ராயத்தை தெரிந்துக்கொண்டு தனியே ஸஞ்சரிக்கும் அவளைப் பார்த்துக் காமவெறிகொண்டு உக்ரஸேனர் போல வேஷந்தரித்துச் சிரிப்புள்ள வார்த்தை, பார்வை ஆகிய இவைகளுடன் மன்மத தாபங்கொண்ட பதிவிரதையான அவளிடம் வந்தான். அவள் அவனைத் தன்னுடைய பர்த்தாவென்று நினைத்து அவனுடன் ரமித்தாள். பின்னுமவள் சில சேஷ்டைகளால் அவனிடத்தில் ஸந்தேஹமடைந்து மிகுந்த வருத்தத்துடன் கண்கலக்கமுள்ளவளாகி, "ஓ வஞ்சகனே! நீ யார்? துஷ்டனாகிய உன்னால் இம் மாதிரியான கெட்ட காரியம் செய்யப்பட்டது" என்று கேட்டாள்.

அதனைக் கேட்ட கந்தர்வன், "ஓ ஸ்திரீயே! நாங்கள் கந்தர்வஜாதியில் பிறந்தவர்கள்; தேவர்களுக்கு சமமானவர்கள்; தேவஸ்திரீகளால் அனுபவிக்கக் கூடியவர்கள்; உன்னை போன்ற மனுஷ்ய ஸ்திரீகள் எங்களை எளிதில் அடையமுடியாது. கிழத்தனம், மரணம் முதலிய துக்கங்களுள்ள மனிதர்களுக்கும், அவைகளற்ற தேவர்களுக்கும் அதிக தாரதம்யமிருக்கிறது" என்று சமாதானஞ் செய்தான். அதனைக் கேட்டு அவள் கோபத்தால் இந்திரியங்கள் கலங்கினவளாகி, "நீ இம்மாதிரியான துஷ்ட நடத்தையைச் செய்து திரும்பவும் என்னைச் சமாதானஞ்செய்கிறாய். அக்னி, பூமி, ஜலம், அக்னி, வாயு, ஆகாயம், சந்திரன், ஸூர்யன், திக்குகள், காமம், ஸந்தியா காலங்கள் ஆகிய இவைகளெல்லாம் ஜனங்களால் செய்யப்படும் ஸகல கர்மங்களுக்கும் சாக்ஷியாக இருக்கின்றன. அவைகளையும் லக்ஷியஞ்செய்யாமல் என் பதிவிரதாதர்மத்தை குலைத்தாய்; மதங் கொண்ட யானையால் ஜலத்தின் நடுவிலுள்ள தாமரை போல் கெடுக்கப்

Released by Maran's Dog, Toronto , Canada

பட்டேன். "ஓ தேவர்களுக்குள் அதம! அப்படிப்பட்ட நீ என்னை ஏன் பலவகையாகச் சமாதானஞ் செய்கிறாய் என்று கோபித்தாள். அதனைக்கேட்ட கந்தர்வன் சாபங் கொடுப்பாளோ என்று சந்தேகித்து அவளை நோக்கி, "ஓ தாமரை மலர்போன்ற கண்ணுள்ளவளே! தேவர்கள் மனுஷ்ய ஸ்திரீகளைச் சேர்வது அனுலோம மெனப்படுகிறது. மனிதர்கள் தேவஸ்திரீகளைச் சேர்வது பிரதிலோமமெனப்படும். (அனுலோமமான சேர்க்கை பெரியோர்களால் ஒப்புக் கொள்ளக்கூடியது என்று தாத்பர்யம்)

ஓ தாமரை மலரின் வாஸனை போன்ற வாசனையுள்ளவளே! உன் விஷயத்தில் என்னைக் குற்றஞ் செய்தவனாக நினைக்கவேண்டாம். என்னுடைய வீரியமானது வீணாகிறதில்லை. ஆனதால் பக்தியுள்ளவனும், பாக்கியமுள்ளவனும், உத்ஸாகமுள்ள வனுமான புத்திரன் உன்னிடத்தில் ஜனிப்பான். என் வார்த்தை பொய்யாக ஆகிறதில்லை" என்று சொன்னான். அதனைக் கேட்ட என் தாய் அரிதான பதிவிரதா தர்மம் குறைந்துபோனதைப்பற்றி துக்கித்து அவனை நோக்கி, "லோகமரியாதையைக் கடந்து தன் இஷ்டமாக நடப்பவனாகிய உன்னுடைய புத்திரன் நற்குணமில்லாதவனாகவும பிடிவாதமுள்ளவனாகவும், தேவதைகளாலும், பிராஹ்மணர்களாலும், மஹர்ஷி களாலும், அனுக்கிரகிக்கக் கூடாதவனாகவும் இருப் பான்" என சொன்னாள். அதனைக்கேட்ட கந்தர்வன், 'உன்னைச் சார்ந்தவர்களுக்கு அவன் சத்ருவாக இருக்கட்டும்' என்று சொல்லி, சாபம் கொடுப்பாளோ என்று பயந்து கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்தான். அதன்பிறகு என்னுடைய தாய் தன் வீட்டிற்கு வந்தாள்.

தோட்டத்தில் நடந்த சமாசாரம் வேறொருவருக்கும் தெரியாது. பின்பு அவள் கர்ப்பத்தையடைந்து பிரசவகாலம் நேர்ந்தபொழுது என்னைப் பெற்றாள், என்ற விஷயத்தை நாரதர் எனக்குச் சொன்னார். அதுமுதல் நான் பந்துக்கள் போன்ற இந்த துஷ்டர் களிடத்தில் விரோதம் வைத்திருக்க அவர்களும் எப்பொழுதும் என்னை விரோதித்துக்கொண்டிருக்க, இது உங்களுக்கு தெரிந்தவிஷயம். நான் கந்தர்வனுகுப் பிறந்தவனாகையால் துர்புத்தியான உக்ரசேனனையும், கெட்ட எண்ணமுள்ள தேவகனையும வஞ்சகனாகிய வஸுதேவனையும், அவர்களை சேர்ந்த மற்றவர்களை யும் கொல்வதால் எனக்கு தோஷமில்லை; அதனால் தான் ராமகிருஷ்ணர்களைக் கொல்லுமிடி கடுமையாக ஆக்ஞாபிக்கிறேன். மிக்க பலமுள்ள குவலயாபீடம் என்ற யானையால் அவர்கள்க் கொல்லப்பட்டால் வஸுதேவன், உக்கிரசேனன், நந்தன், தேவர்கள், கோபாலர்கள், யாதவர்கள், அவர்களைச் சார்ந்த மற்றவர்கள் ஆகிய இவர்களெல்லோரும் ராம கிருஷ்ணர்களுக்கு உத்தரக்கிரியை செய்துவிட்டு மரணமடைவார்கள் ஆனதால் தேசத்திலுள்ள ஜனங் களை வரவழையுங்கள்; கொல்லப்படும் ராம கிருஷ்ணர்களைப் பார்க்கட்டும்" என்று சொன்னான்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம் –37

பகவான் கேசியைக் கொன்றது

1–9. கம்ஸனால் அனுப்பப்பட்ட கேசியென்ற அஸுரன் பருத்த குதிரை வேஷங்கொண்டு குளம் புகளால் தரையைப் பிளந்து பூமியை அசைத்துக் கொண்டு நந்தகோகுலத்திற்கு வந்தான். அவனுடைய பிடரி மயிர்களால் மேகங்களும் விமானங்களும் அடிக்கப்பட்டன. அவனுடைய கனைப்பைக் கேட்டு எல்லோரும் பயந்தார்கள். அவனுடைய கண்கள் விசாலமாகவும், வாயானது குஹைபோலவும், கழுத்து பருத்தும் இருந்தன. மேலும் அவன் கறுத்து, மலை போன்ற சரீரமுள்ளவனாக இருந்தான். பின்னும் அவனுடைய வாலால் அடிக்கப்பட்டு மேகங்கள் நான்கு பக்கமும் பயந்து ஓடின. அவனுடைய சப்தத்தை கேட்ட கோகுலத்திலுள்ள பிராணிகள் பயந்தன; இன்னுமவன் சண்டைக்காகப் பகவானை தேடிக் கொண்டிருந்தான்.

அவனைக் கண்ட ஸ்ரீ கிருஷ்ணன் சிங்கம் போல் கர்ஜித்து அவனை யுத்தத்திற்காக அழைத்தார். அந்த அஸுரன் முகத்தைத் தூக்கிக்கொண்டு ஆகாயத்தை விழுங்குகிறவன் போல் மிகுந்த கோபத்துடன் பயங்கரமாகச் சப்தித்துக்கொண்டு கிருஷ்ணனுக்கு எதிராக ஓடிவந்து பகவானைக் கால்களால் உதைத்தான். பகவான் அவன் காலகள் தம்மீது படாமலிருக்கும்படி அவனை வஞ்சித்துக் கோபத்துடன் அவனுடைய கால்களைப் பிடித்துச் சுழற்றி, ஸர்ப்பத்தை கருடன் தூக்கியெறிவது போல எறிந்தார். அவன் நூறுவிற்கடை

Released by Maran's Dog, Toronto , Canada

தூரத்திற்கப்பால் விழுந்தான். கொஞ்ச நேரம்சென்ற பின் அவன் பிரக்ஞை தெளிந்து எழுந்திருந்து, வாயைத் திறந்துக்கொண்டு வேகமாகக் கிருஷ்ணனிடம் ஓடிவந்தான். அப்பொழுது பகவான் பாம்புப் புற்றில் கையை நுழைத்தாற்போல அவனுடைய வாயில் தம்முடைய வலது கையை சிரித்துக்கொண்டு நுழைத்தார். பழுக்கக் காய்ச்சப்பட்ட இரும்பை தொட்டாற்போல் பகவானுடைய கைப்பட்ட மாத்திரத்தில் அசுரனுடைய பற்கள் உதிர்ந்தன. ஜலோதரமென்ற வியாதியுள்ளவன் அதற்கு வைத்தியஞ் செய்யாமல் அதனை உபேக்ஷித்தால் அந்த வியாதி எப்படி விருத்தியடையுமோ, அதுப்போல அஸுரனுடைய வயிற்றுக்குட் சென்ற பகவானுடைய கையானது விருத்தியடையும்பொழுது அந்த அஸுரன் மூச்சுவிட முடியாமல் உயிர் துறந்து சுழலுகின்ற கண்களுடன் பூமியில் விழுந்தான். அவனுடைய சரீரம் வியர்வையுள்ளதாக இருந்தது. கால்களுடன் நீட்டப்பட்டன. அப்பொழுது பகவான் வெள்ளரிப்பழம் போல் வெடித்திருக்கும். அவனுடைய சரீரத்திலிருந்து கையை இழுத்துக் கொண்டார். எளிதில் சத்துருவைக் கொன்றவரானாலும் கர்வத்தை அடையவில்லை. தேவர்கள் மிகுந்த ஆச்சரியத்தையடைந்து புஷ்பங்களை வர்ஷித்து பகவானைத் துதித்தார்கள்.

10–25. கிருஷ்ணனிடத்தில் பக்தியுள்ளவரும் தேவரிஷியுமாகிய நாரதர் ஸாதுக்களைக் காப்பாற்றுபவரான ஸ்ரீ கிருஷ்ணனிடம் ரகசியமாக வந்து; "ஓ கிருஷ்ண! கிருஷ்ண! அளவிடக்கூடாத ஸ்வரூபமுள்ளவரே! நினைக்க முடியாத மஹிமையுள்ளவரே! ஜகத்துக்கு அதிபதியே! ஸகல ப்ராணிகளுக்கும்

வாசஸ்தலமாக இருப்பவரே! ஸாத்வதர்களுக்குட் சிறந்தவரே! ஓ ப்ரபுவே! நீர் ஸகல ப்ராணிகளுக்கும் ஆத்மாவாக இருக்கிறீர். விறகுகளுக்குள் தேஜஸ்ஸானது எப்படி ஒன்றாக இருக்கிறதோ. அதுபோல ஸகல பிராணிகளுடைய இருதயத்தில் இருப்பவர் நீர் ஒருவரே; ஆனால் அவர்களால் பார்க்க முடியாமல் மறைந்திருக்கிறீர். புத்திக்கும் புலப்படாதவர்; எல்லாவற்றிற்கும் சாக்ஷியாக இருப்பவர்; மஹாபுருஷன், ஈச்வரன் சுதந்திரராகிய நீர் மாயையால் குணங்களைக் கொண்டு இந்த ஜகத்தை படைத்தீர்; காப்பாற்றுகிறீர்; ஸம்ஹரிக்கிறீர்; (ஸங்கல்பத்தாலேயே எல்லாம் சித்திக்கின்றன. ஆனதால் மற்றொன்றை அபேக்ஷிக்கிற தில்லையென்று கருத்து).

அப்போர்ப்பட்ட நீர் பூமியில் அரசர்களாகி ஜனித்திருக்கும் தைத்தியர்களையும், ராக்ஷஸர்களையும் கொல்வதற்காகவும், சாதுக்களைக் காப்பாற்றுவதற்காகவும் அவதரிக்கிறீர், குதிரையுருவங்கொண்ட இந்தக் கேசியென்பவன் கர்ஜித்தால் அந்த சப்தத்தைக் கேட்டு தேவர்கள் ஸ்வர்க்கத்தை விட்டு ஓடுவார்கள். அந்த அஸுரன் தெய்வாதீனமாக உம்மால் கொல்லப்பட்டான். இன்றைக்கு மூன்றாவது தினத்தில் சாணூரன், முஷ்டிகன் முதலிய மல்லர்களையும், குவலயாபீடமென்ற யானையையும், கம்ஸனையும் கொல்லுவீர். அதனையும் பார்ப்பேன் அதன் பிறகு சங்கன் (பஞ்சஜனன்) யவனன், முரன், நரகன் முதலியவர்களை அடிக்க போகிறீர். பாரிஜாதத்தை பூமிக்குக் கொண்டு வரப்போகிறீர்). இந்திரனை ஜயிக்கப்போகிறிர். பராக்கிரமத்தைக் காண்பித்துக் கன்னிகைகளை விவாகஞ் செய்வீர். துவாரகையில் வஸிக்கும்பொழுது

நிருகனைச் சாபத்திலிருந்து நிவர்த்திக்கப்போகிறீர். ஜாம்பவதியையையும் சியமந்தகமென்ற ரத்தினத்தை யுங்கொண்டு வருவீர். மரணமடைந்த புத்திரனைப் ப்ராஹ்மணனுக்கு திருப்பிக் கொடுப்பீர். பௌண்டரகனைக் கொல்வது, காசி பட்டணத்தைக் கொளுத்துவது, தந்த வக்திரனைக் கொல்லுவது, யாகசபையில் சிசுபாலனை ஸம்ஹரிப்பது முதலிய எந்தக் காரியங்களைத் துவாரகையில் வஸித்துக்கொண்டு நீர் செய்வீரோ அவையெல்லாவற்றையும் நான் பார்ப்பேன். அவைகளைக் கவிகள் கானஞ்செய்வார்கள். பூமியின் பாரத்தைக் குறைப்பதற்காக அவதரிக்கும் நீர் அருச்சுனனுக்கு சாரதியாக இருந்து அக்ஷௌஹிணிக் கணக்கான சைன்னியங்களை நாசஞ்செய்யப் போகிறீர்; அதையும் நான் தரிசிப்பேன்.

நீர் கேவலஞ் ஞான ஸ்வரூபி. பரமானந்த ரூபியாகையால் எல்லாவற்றையும அடைந்தவர்; ஸத்திய ஸங்கல்பர்; (சங்கல்பமுள்ளவரானாலும் ஸம்சார ஸம்பந்தமில்லாதவர்) தம்முடைய சித்சக்தியால் மாயா கார்யமாகிய ஸம்ஸாரத்தில் சம்பந்தப்படாதவர்; ஒப்பற்ற ஐசுவரியமுள்ளவர்; அப்படிப்பட்ட உம்மைச் சரணமடைகிறேன். மேலும் நீர் எல்லாவற்றிற்கும் அதிபதி; உமக்கு மேலானதொன்றுமில்லை. உம்முடைய மாயையால் மஹத்தத்வம் முதலிய பேதங்கள் ஏற்படுகின்றன. விளையாட்டாக சரீரத்தை எடுத்துக்கொண்டு யாதவர்களுக்கும் விருஷ்ணிகளுக்கும் ஸாத்வதர்களுக்கும் அதிபதியாக அவதரிக்கிறீர். அப்படிபட்ட உமக்கு நமஸ்காரஞ் செய்கிறேன்" என்று தோத்திரஞ்செய்து நமஸ்கரித்து விடைபெற்று, பின்நடக்கப் போகிறவைகளைப் பார்க்க

வேண்டுமென்ற ஆசையுடன் சென்றார்

26–34. கோவிந்தராகிய ஸ்ரீகிருஷ்ணனும் கேசியை அடித்து, அதனால் பிரியமடைந்த தோழர்களுடன் வனஞ்சென்று வழக்கம்போல பசுக்களை மேய்த்தார். அப்பொழுது ஒரு ஸமயத்தில் அந்தச் சிறுவர்கள் திருடர்களாக இருந்து ஒளிந்து கொள்ளுகிறதும் சிலர் அவர்களைக் கண்டு பிடிப்பதுமாக ஒளிந்து விளையாட ஆரம்பித்தார்கள். அவர்களில் சிலர் திருடர்களாகவும் சிலர் அவர்களைக் கண்டு பிடிப்ப வர்களாகவும், சிலர் ஆடுகளாகவும் ஏற்படுத்திக் கொண்டாரகள். ஆடுகளாக இருப்படவர்களைத் திருடர்களாக இருப்பவர்கள் திருடிக்கொண்டு போவதும், அவர்களைக் கண்டு பிடிப்பதுமாகப் பயமற்று விளையாடினார்கள்.

அந்தச் ஸமயத்தில் மயனுடைய புத்திரனாகிய வியோமன் என்ற அஸுரன் கோப வேஷத்துடன் அச்சிறுவர்களின் கூட்டத்தில் ப்ரவேசித்து தான் திருடனாக இருந்தான். பின்னும் அவன் ஆடுகளாக இருப்படவர்களில் சில கோபர்களைத் தூக்கிச்சென்று ஒரு மலையின் குஹையில் வைத்துப் பாறையால் அதை மூடித் திரும்பிவந்து மறுபடியும் கோபர்களைக் கொண்டுபோய் அந்தக் குஹையில் வைத்தான். இப்படி கோபர்கள் எல்லோரும் அஸுரனால் அபஹரிக்கப் பட்டார்கள். நாலைந்து சிறுவர்கள்தான் எஞ்சினார்கள். சாதுக்களை காப்பாற்றுபவராகிய பகவான் இப்படி அஸுரன் செய்வதைத் தெரிந்துக்கொண்டு சிங்கம் செந்நாயைப் பிடித்தாற் போல அந்த வியோமனென்ற அஸுரனைப் பிடித்துக் கொண்டார். இப்படி

ஸ்ரீ கிருஷ்ணனால் பிடிக்கப்பட்ட அஸுரன் மலை போன்ற தனது ராக்ஷஸ சரீரத்தை எடுத்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றான். ஆனாலும் அவனால் முடியவில்லை. அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் தேவர்கள் பார்த்திருக்கும் போது அவனைப் பூமியில் தள்ளி, (பசுவை) ஆட்டைக் கொல்வதுபோலக் கொன்றார். பின்பு அவர் குஹையைத் திறந்து, கோபர்களை வெளிப் படுத்தி அவர்களுடன் கோகுலஞ் சென்றார். தேவர்களும் கோபர்களும் ஸ்ரீ கிருஷ்ணனைத் துதித்தார்கள்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம் 38

அக்ரூரர் கோகுலஞ் சென்றது

1–24. மிக்க புத்திசாலியாகிய அக்ரூரர் அன்றைய ராத்திரி மதுரா நகரத்திலிருந்து, மறுநாள்காலையில் ரதத்திலேறிக்கொண்டு நந்த கோகுலத்தை நோக்கிப் புறப்பட்டார். போகும் வழியில் மிகுந்த பாக்ய முள்ளவராகிய அக்ரூரர், தாமரைக் கண்ணனாகிய பகவானிடத்தில் அதிக பக்தியுடன் தமக்குள் யோசிக்கலானார். "நான் என்ன நற்காரியத்தைச் செய்தேன்? என்ன தபஸ் செய்தேன்? பாத்திரத்தில் தானஞ்செய்தேனா? இன்றையதினம் பகவானைத் தரிசிக்கப் போகிறேன். கீழ் ஜாதியில் பிறந்தவனுக்கு வேதம் எப்படி அரிதோ, அப்படி விஷயங்களில் மூழ்கினவனாகிய எனக்கு உத்தம சுலோகராகிய பகவானுடைய தரிசனம் அரிதென்று நினைக்கிறேன்.

ஆனாலும் நதியின் பிரவாகத்தில் செல்லுகிற திருணம் முதலியவைகளில் சில பிரவாகத்துடன் சென்றாலும், சில கரை சேருகின்றன அல்லவா? அதுபோல் ஜீவர்களுக்குள் நான் அதமனானாலும் எனக்கு ஸம்ஸார பந்தம் நிவர்த்தியாகும் பாக்கியம் உண்டாகலாம். அதற்குக் காரணமாகிய பகவானுடைய பாதாரவிந்தத்தை நான் நமஸ்கரிக்கப்போவதால் எனக்கு ஸகல பாபங்களும் நாசமாயின. என்னுடைய பிறப்பானது ஸபலமாயிற்று. கம்ஸன் என்னை ஸ்ரீ கிருஷ்ணனிடம் அனுப்பியபடியால் என்னை அனுக் கிரஹித்தவனாகிறான். அவனுடைய ஸகாயத்தால் பகவானுடைய பாதாரவிந்தத்தைத் தரிசிக்கப்

போகிறேன். அந்தப் பாதத்தின் நககாந்தியைச் ஸேவித்து. அம்பரீஷன் முதலிய முன்னோர்கள் கொடிய ஸம்ஸாரத்தை தாண்டினார்கள். மேலும் அந்தப் பாதமானது ப்ரஹ்மா, பரமசிவன் முதலிய தேவர்களால் பூஜிக்கப்பட்டது; லக்ஷ்மீதேவியால் ஸேவிக்கப்பெற்றது, (மிக்க அழகுள்ளதென்று கருத்து) பக்தியுள்ள மஹர்ஷிகளால் ஆச்ரயிக்கப்பெற்றது. பசுக்களை மேய்ப்பதற்காக கோபர்களுடன் வனத்தில் ஸஞ்சரிப்பது, (தயாளுவென்ற கருத்து) கோபிகைகளு டைய ஸ்தனத்திலுள்ள குங்குமத்தால் அடையாள மிடப்பட்டது; (அன்பினால் எளிதில் அடையக் கூடியது என்று கருத்து) இந்த மிருகங்கள் பிரதக்ஷிணமாகச் செல்லுகின்றன. ஆனதால் இன்றைய தினம் அழகான கன்னங்கள், மூக்குகள் இவைகளுள்ள தும், புன்சிரிப்புள்ள பார்வையுள்ளவையும், சிவந்த தாமரைமலர் போன்றவையுமான கண்களுள்ளதும், சுருண்ட மயிர்களால் மறைக்கப்பட்டதுமான பகவானுடைய முகத்தைத் தர்சிக்கப்போகிறேன்.

மிகுந்த அழகு பொருந்தியவரும் பூமியின் பாரத்தைப் போக்கடிப்பதற்காகத் தமது இஷ்டப்படி அவதரித்தவருமான ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் தரிசனம் எனக்கு கிடைக்குமா? கிடைத்தால் என்னுடைய கண்கள் ஸபலமாகும். (நம்மைப்போல் ஸ்ரீ கிருஷ்ணனும் காரியங்களைச் செய்கிறார். ஸுகங்களை அனுபவிக் கிறார். ஆனதால், அவரை விஷ்ணுவென்று எப்படிச் சொல்லலாமென்றால் மூன்று ஸ்லோகங்களால் அதற்குச் ஸமாதானஞ் சொல்லப்படுகிறது.) காரியங் களும், காரணங்களும் அவருடைய ஸங்கல்பத்தால் சேஷ்டிக்கின்றன. ஆனாலும் அவருக்கு நான் என்ற

அஹங்காரமில்லை. மேலும், அவருக்கு அக்ஞானமும், அதனாலுண்டாகும் பேதபுத்தியும். அதனால் அபிநிவேசமும் இல்லை. அப்படிப்பட்ட பகவான் தம்முடைய சங்கல்பத்தால் பிராணன், இந்திரியங்கள், புத்தி இவைகளுள்ள ஜீவர்களை தம்மிடத்திலுண்டு பண்ணி, அவர்களுடன் கோபிகைகளுடைய வீடுகளில் வீளையாட்டாக கர்மங்கள செய்துக்கொண்டு, உண்மையில் பற்றுதலில்லாதவரானாலும் ஆசையுள்ள வர்போலத் தோன்றுகிறார். ஸகல பாபங்களையும் நிவர்த்திப்பவைகளும், ஸகல மங்களங்களைக் கொடுப்பவைகளுமான பகவானுடைய குணங்களையும், சரிதங்களையும், அவதாரங்களையும் எவன் சொல்லு கிறானோ, அவனுடைய வாக்கு ஜகத்தைப் பிழைக்கச் செய்கிறது, பரிசுத்தப்படுத்துகிறது.

அவைகளுடைய சம்பந்தமற்ற வாக்குகள் பிணத்துக்கு அலங்காரஞ் செய்ததுபோல பிரயோசன மற்றவையாகிறது. அப்படிப்பட்ட பகவான் தம்மால் ஏற்படுத்தப்பட்ட தர்மங்களைக் காப்பாற்றிக்கொண்டி ருக்கும் தேவர்களுக்குச் சுகத்தை செய்பவராகையால் யதுவம்ஸத்தில் அவதரித்துத் தம்முடைய கீர்த்தியை பரவச் செய்துகொண்டு கோகுலத்தில் வஸிக்கிறார். எல்லோருக்கும் ஸகல மங்களத்தையும் கொடுக்கும் அந்தக் கீர்த்தியைத் தேவர்கள் கானஞ்செய்கிறார்கள் இன்றைய தினம் நல்ல பொழுது விடிந்தது. பகவானைத் தர்சிக்கப் போகிறேன் இது நிச்சயம். அவர் மகான்களுக்குக் கதியாக இருப்பவர்; எல்லாருக் கும் குருவாக இருப்பவர்; மூவுலகத்திலுமுள்ள ஜனங்களுக்குள் மிக்க அழகானவர்; கண்ணுள்ளவர் களுக்கு அதிக ஸந்தோஷத்தை கொடுப்பவர்;

லக்ஷ்மீதேவிக்குப் பிரியமான ஸ்வரூபமுள்ள பகவானை தரிசித்தவுடன் ராமகிருஷ்ணர்களுடைய பாதங்களை நேரில் நான் நமஸ்கரிப்பேன். அவைகள் யோகிகளின் மனத்தால் த்யானஞ் செய்யபட்டவை (யோகிகளுக்குக் கூட நேரில் கிடைக்காத பகவானுடைய பாதத்தை நான் நேரில் பார்ப்பேன் என்று கருத்து.) பின்பு அவர்களுடைய தோழர்களான கோபர்களையும் நமஸ்கரிப்பேன். அந்த பகவான் தம்முடைய பாதாரவிந்தத்தில் நமஸ்கரித்தவனாகிய என்னுடைய தலையில் தாமரை மலர்போன்ற கையை வைத்து அனுக்கிரஹிப்பாரா ? அந்தக் கையானது காலமாகிய ஸர்ப்பத்தைக்கண்டு பயந்து, சரணமடைந்தவர்களுக்கு அபயத்தைக் கொடுப்பது, அந்தப் பகவானுடைய கையை இந்திரனும், பலியும் பூஜித்து மூவுலகங்களுக்கும் இந்திரனாக ஆனார்கள்.

மேலும் அந்தக் கையானது தாமரை மலரின் வாஸனைபோன்ற வாஸனையுள்ளதாகையால் ராஸக்ரீடையில் கோபிகைகளுக்கு நேர்ந்த சிரமத்தை நிவர்த்தித்தது. பகவான் எல்லாவற்றையும் அறிந்த வரானதாலும், என்னுடைய மனத்திற்கு உள்ளும் வெளியிலுமிருப்பவரானதாலும் என்னுடைய அபிப்பிராயத்தை நித்தியமான ஞானத்தால் பார்த்துக் கொண்டே இருக்கிறார். ஆனதால் நான் கம்ஸனால் அனுப்பப்பட்டவனானாலும் என்னைச் சத்துருவாக நினைக்கமாட்டார்; (வெளியில் கம்ஸனை அனுசரிக் கிறேனேயொழிய அந்தரங்கத்தில் ஸ்ரீகிருஷ்ணனையே நினைத்துக் கொண்டிருக்கிறேன்.) பின்னும் அவருடைய பாதத்தின் ஸமீபத்தில் அஞ்சலிபந்தஞ் செய்துகொண்டு ஜாக்கிரதையாக இருக்கும் என்னைக் கிருபை பொருந்திய

அனுக்கிரஹ திருஷ்டியால் பார்ப்பாரா? அப்படிக் கடாக்ஷித்தால் அக்ஷணத்திலேயே ஸகல பாபங்களற்ற வனாகி, பயமற்று மிகுந்த ஸந்தோஷத்தை அடைவேன். பின்னும் பகவானையே தெய்வமாகக் கொண்டவனும், பந்துவும், மித்ரனுமாகிய என்னைப் பகவான் பருத்த கைகளால் ஆலிங்கனஞ் செய்துகொள்வார். அப்பொழுதே என்னுடைய ஆத்மா சுத்தமாகிவிடும். கர்மபந்தமும் நழுவிவிடும். இப்படி பகவான் ஆலிங்கனஞ் செய்த பிறகு நான் அஞ்சலிபந்தம் செய்து கொண்டிருப்பேன். அப்படிப்பட்ட என்னை நோக்கி மிக்கக் கீர்த்தியுள்ள பகவான் "ஓ தாத! அக்ரூர! என்று அழைப்பார். அப்பொழுதுதான் நான் ஜன்ம ஸாபல்யத்தையடைவேன். ஸ்ரீ கிருஷ்ணனால் எவன் ஆதரிக்கப்படவில்லையோ, அவனுடைய ஜன்மம் வியர்த்தமானதேயாம். கல்பக விருஷமானது எப்படி ஆச்ரயித்தவர்களுடைய இஷ்டத்தை கொடுக்கிறதோ. அதுபோல பகவான் எதற்காக எவர்கள் தன்னை சேவிக்கிறார்களோ, அவர்களுக்கு அதனை கொடுக் கிறார். அவருக்குப் பிரியனாவது, அப்ரியனாவது சிநேகிதனாவது, விரோதியாவது, உதாஸீனனாவது ஒருவனுமில்லை. யதுக்களுக்குட் சிறந்தவரான பலராமன் என்னுடைய இருகையையும் பிடித்துச் சிரித்துக்கொண்டு வீட்டிற்கு அழைத்துப்போய் அர்க்கியம் முதலியவைகளைக் கொடுத்து பந்துக்கள் விஷயத்தில் கம்ஸன் செய்யும் கெட்ட நடையைப் பற்றிக் கேட்பாரா" என்று யோசித்துக்கொண்டு ஸுவபல்கருடைய புத்திரராகிய அக்ரூரர் ரதத்துடன் நந்த கோகுலம் வந்தார். ஸூர்யனும் அஸ்தமித்தார்.

25–45. அப்பொழுது அக்ரூரர் ஸகல லோக

பாலர்களால் கிரீடங்களிலும் தரிக்கப்படும் சுத்தமான பாததூளியுள்ளவராகிய ஸ்ரீ கிருஷ்ணனுடைய காலடிகளைக் கண்டார். அவைகள் தாமரை மலரின் ரேகை, யவரேகை அங்குசரேகை ஆகிய இவைகளுள்ள வை. பூமிக்கு அலங்காரமாயுள்ளவை; அவைகளைப் பார்த்தவுடன் அக்ரூரர் மிகுந்த சந்தோஷத்தை அடைந்து. பரப்பரப்புடன் ரதத்திலிருந்து கீழே இறங்கினார். ஸ்ரீகிருஷ்ணனிடத்திலுள்ள பிரியத்தால் ஆனந்தக்கண்ணீரைப் பெருக்கினார். மயிர்க்கூச்சலை அடைந்தார்; மேலும் அவர், "இவை ப்ரபுவினுடைய பாததூளிகள் இவைகள் கிடைப்பது அரிது" என்று சொல்லி, அவைகளில் விழுந்து புரண்டார். கம்ஸனு டைய உத்தரவின்படி அக்ரூரர் கோகுலத்திற்குப் புறப்பட்டு, வழியில் ஸ்ரீகிருஷ்ணனுடைய காலடிகளைத் தரிசித்தும், அவருடைய சரிதங்களைக் கேட்டும், டம்பம், பயம், துக்கம், ஆகிய இவைகளை விட்டுப் பகவானை தியானித்துக் கொண்டும் இருந்தாரென்று சொன்னோமல்லவா? இப்படியிருப்பதே பிராணி களுக்கு புருஷார்ததமாகிறது. பின்பு அவர் ரதத்தின்மீதேறி, "ஸ்ரீகிருஷ்ணனும் பலராமனும் எங்கே இருக்கிறார்கள்? என்று கேட்டுக்கொண்டு சென்றார். சாயங்காலத்தில் மரத்தி லிருக்கும் கோபகுமாரர்கள் முகமாகக் கொட்டிலில் ஸ்ரீகிருஷ்ணனும், பலராமனும் இருப்பதாகத் தெரிந்து கொண்டு அவ்விடஞ்சென்று, மாடு கறக்கும் ஸ்தலத்தில் உட்கார்ந்திருக்கும் பலராமனையும், ஸ்ரீ கிருஷ்ணனையும் தரிசித்தார். அவர்களில் ஸ்ரீ கிருஷ்ணன் பீதாம்பரத்தையும், பலராமன் கறுத்த வஸ்திரத்தையும் தரித்திருந்தார்கள். மேலும் அவர்கள் சரத்காலத்தில் புஷ்பித்ததாமரை மலர்போன்ற கண்களுள்ளவர்களும், பருத்த

கைகளுள்ளவர்களும் அழகான முகங்களுள்ளவர்களும், சௌந்தரியமுள்ளவர்களும், யானைக்குட்டி போன்ற பராக்கிரமமுள்ளவர்களுமாக இருந்தார்கள். அவர்களில் ஸ்ரீ கிருஷ்ணன் கறுத்த திருமேனியுள்ளவராகவும், பலராமன் வெண்மை நிறமுள்ளவராகவும் இருந்தார்கள். பின்னும் அவர்கள் கால்கள் த்வஜ ரேகை, வஜ்ர ரேகை, அங்குச ரேகை, தாமஸ ரேகை இவைகளுள்ளனவாக இருந்தன. அப்படிப்பட்ட பாதங்களால் கோகுலத்தில் நடந்து அதனைப் பிரகாசிக்கச் செய்கிறார்கள்.

பின்னும் அவர்களுடைய சிரிப்பும், பார்வையும் தயையுள்ளனவாக இருந்தன. இன்னுமவர்கள் வன மாலை, நல்ல வாசனையுள்ள சந்தனம், சுத்த வஸ்திரம் இவைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தார் கள். அவர்கள் ஜகத்திற்குக் காரணமான பிரதான புருஷர்கள்; பூமியின் பாரத்தை நிவர்த்திப்பதற்காக அவதரித்தவர்கள்; அவர்கள் ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட மரகத மலை போலும், வெள்ளி மலை போலும், தங்களுடைய காந்தியால் சகல திக்குகளையும் பிரகாசிக்கச் செய்துகொண்டும் இருந்தார்கள். அவர்களைக் கண்டவுடன் அக்ரூரர் சீக்கிரமாக ரதத்திலிருந்து இறங்கி, ராம கிருஷ்ணர்களுடைய பாதங்களில் தடி போல் விழுந்து நமஸ்கரித்தார்கள். பகவானைத் தரிசித்ததால் மிகுந்த சந்தோஷத்தையடைந்து, கண்ணீரால் தொண்டை யடைத்து மயிர்க் கூச்சலைடைந்து, "நான் அக்ரூரன்; நமஸ்காரம்செய்தேன்" என்று சொல்வதற்கு முடியாம லிருந்தார். வணங்கியவர்களிடத்தில் பிரீதியுள்ள வரான ஸ்ரீகிருஷ்ணன் அக்ரூரருடைய அபிப்ராயத்தை

அறிந்து, சக்ர ரேகையுள்ள தமது கையினால் அவரைத்தூக்கி ஆலிங்கனஞ் செய்துக்கொண்டார். கம்பீரமணமுள்ள பலராமன் தம்முடைய பாதங்களில் நமஸ்கரித்தவராகிய அக்ரூரரைத் தூக்கித் தழுவி அவருடைய கையைத் தமது கையால் பிடித்து அழைத்துக்கொண்டு தம்பியாகிய கிருஷ்ணனுடன் தமது வீட்டிற்குச் சென்றார். அவ்விடத்தில் அவரை நல்வரவா வென்று கேட்டு. அவருடைய கால்களை அலம்பி, ஆசனங்கொடுத்து, மதுபர்க்க விதிப்படி பூஜைசெய்தார். அதிதிகளைப் பூஜிக்கும் முறையை அறிந்தவரான பலராமன் அதிதியாகிய அக்ரூரருக்குப் பசுவைக் கொடுத்து, அவருடைய களைப்பை நிவர்த்தித்து, பரிசுத்தமான ருசியுள்ள அன்னத்தைப் பிரீதியுடன் கொடுத்து புஜிக்கச் செய்தார். அவர் போஜனஞ் செய்தபின்பு பச்சைக் கற்பூரம் சேர்ந்த சந்தனத்தைப் பூசி, புஷ்பமாலைகளால் அலங்கரித்து, மிகவும் ஸந்தோஷிக்கச் செய்தார். பின்பு நந்தகோபர் அக்ரூரரை நோக்கி, "மிக்க கொடியவனாகிய கம்ஸனிடத்தில் நீங்கள் எப்படி வசிக்கிறீர்கள்? பசுக்களைக் கொல்லும் கொடிய ஸ்வபாவமுள்ளவனை, ஆடுகளுக்குக் காவலாளாக நியமித்தாற் போலக் கம்ஸன் நமக்கு அரசனாக இருக்கிறான். அவன் தன்னுடைய பிராணனைக் காப்பாற்றிக் கொள்வதில் நோக்கமுள்ளவன்; தயையில்லாதவன்; சஹோதரியின் குழந்தைகளைக் கொன்றவன்; அந்தக் கம்ஸனுடைய ராஜ்ஜியத்தில் வசிக்கும் ஜனங்களுக்கு ஜீவனமே அரிது. உங்களை எப்படி க்ஷேமமா என்று கேட்போம்" என்று இனிமையான வார்த்தையால் பூஜித்தார். அக்ரூரர் வழி நடந்துவந்த களைப்புத் தீர்ந்து சுகத்தையடைந்தார்.

அத்யாயம்–39

அக்ரூரர் விஷ்ணு லோகத்தைப் பார்த்தது

1–7. பின்பு அக்ரூரர் ராமகிருஷ்ணர்களால் மஞ்சத்தில் வைத்துப் பூஜிக்கப்பட்டு, வழியில் எவை களை நினைத்துக் கொண்டு வந்தாரோ அவ்வளவு மனோரதங்களையும் அடைந்தார். லக்ஷ்மீதேவிக்கு வாசஸ்தலமாகிய பகவான் சந்தோஷமடைந்தால் எதுதான் கிடைக்காது? (எல்லாம் கிடைக்கும் என்று கருத்து) ஆனாலும் பகவானிடத்தில் பக்தி செய்கிறவர்கள் ஒன்றையும் விரும்புகிறதில்லை. தேவகியின் புத்திரனாகிய ஸ்ரீ கிருஷ்ணன் ஸாயங்கால போஜனத்தை முடித்துக் கொண்டு, கம்ஸன் பந்துக் களிடத்தில் எப்படியிருக்கிறான் என்பதையும், அவனுடைய எண்ணத்தைப்பற்றியும் பின்வருமாறு கேட்கலானார்; எப்படியெனில்:– "ஓ நல்ல ஸ்வபாவ முள்ள அக்ரூரரே! கம்ஸனிடத்திலிருந்து நல்வரவா? உங்களுக்கு க்ஷேமமுண்டாகட்டும். நம்முடைய பந்துக்களெல்லோரும் ரோகமில்லாமல் ஸுகமாக இருக்கிறார்களா? நம்முடைய குலத்திற்கு வியாதி போன்றவனும், அம்மான் (மாதாவின் சகோதரன்) என்ற பாந்தவ்யமுள்ளவனுமாகிய கம்ஸன் விருத்தி யடைந்திருக்கும்பொழுது அவனுடைய ராஜ்யத்தில் வஸிப்பவர்களான நம்முடைய பந்துக்களுக்கு ஸுகமேது? அதை பற்றி நான் கேட்கவேண்டுமா? பூஜிக்க தக்கவர்களான எமது தாய் தந்தையர்களுக்கு எங்கள் நிமித்தமாக மிக்கக் கெடுதிகள் ஸம்பவித்தன. எங்கள் நிமித்தமாக அவர்கள் காராக்கிருஹத்தில் அடைக்கப் பட்டார்கள்; புத்திர சோகத்தை அனுபவித்தார்கள்.

பந்துக்களாகிய உங்களை நான் தர்சித்தது தைவச் செயலேயாம். இது வெகுநாளாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனதால் நீர் வந்த காரியம் என்ன? சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

8–37. அதனைக்கேட்ட அக்ரூரர், "கம்ஸன் யாதவர்களிடத்தில் விரோத புத்தி வைத்திருப்பதையும், வஸுதேவரைக் கொல்ல முயன்றதையும், எதற்காகக் கம்ஸன் தன்னை அனுப்பினானோ எந்த வார்த்தை களை சொல்லும்படி சொன்னானோ அவைகளையும் நாரதர் முகமாக உங்களிருவர்களையும் வசுதேவருடைய புத்திரர்களென்று கம்ஸன் தெரிந்து கொண்டிருக் கிறானென்பது முதலியவைகளெல்லாவற்றையும் தெரிவித்தார். அதனைக்கேட்ட ராமகிருஷ்ணர்களிரு வர்களும் நந்த கோபரைப் பார்த்து சிரித்துவிட்டு கோபர்களை நோக்கி, "நம்முடைய கோகுலத்திலுள்ள பால், தயிர், நெய் முதலியவைகளை எடுத்துக் கொள்ளுங்கள். மேலும் காணிக்கைகளாக உயர்ந்த வஸ்துக்களையெடுத்துக்கொள்ள வேண்டும். வண்டிகளைத் தயார் செய்யுங்கள்; நாளையதினம் மதுரா நகரத்திற்குச் செல்வோம். அரசனிடம் காணிக்கைகளை ஸமர்ப்பிப்போம். தனுர் யாகத்தைப் பார்ப்போம். அதற்காக தேசத்தில் ஜனங்கள் போகிறார்கள்" என்று சொல்லி கோகுலத்தில் பிரசித்தி படுத்தினார்கள். (தண்டோரா போடுவித்தார்) கோபிகைகள், ராமகிருஷ்ணர்களை அழைத்துப் போவதற்காக அக்ரூரர் வந்திருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்டுத் துக்கமடைந்தார்கள். சில ஸ்திரீகள் அதனால் மனவருத்தத்தையடைந்து பெருமூச்சுவிட்டு, வாடின முகமுள்ளவர்களானார்கள். மற்றுஞ்சில

ஸ்திரீகளுக்கு வஸ்திரம், வளை, தலை முடிச்சு ஆகிய இவைகள் நழுவின. மற்றுஞ்சிலர் பகவானைத் த்யானஞ் செய்து அதனால் ஸகல இந்திரிய வியாபாரங்களடங்கியவர்களாகி ஆத்ம லோகத்தை அடைந்தவர்கள்போல இவ்வுலகத்தை மறந்திருக் கிறார்கள். பின்னும் சிலர் அன்பு பொருந்திய சிறிப்புள்ளவர்களும், மனோஹரங்களும், விசித்திரப் பதங்களுள்ளவைகளுமான, பகவானுடைய வார்த்தைகளை நினைத்துமோஹித்தார்கள்.

பின்னும் அவர்கள் பகவானுடைய அழகான நடை, சேஷ்டை, சிரிப்புள்ள அழகான பார்வை, துக்கத்தை நிவர்த்திக்க கூடிய மேலான சரித்திரங்கள் ஆகிய இவைகளை நினைத்து ஸ்ரீகிருஷ்ணனை விட்டு பிரிய மனமில்லாதவர்களாகி, கூட்டமாக ஒன்று கூடிக் கிருஷ்ணனிடத்திலேயே மனத்தைச் செலுத்தியவர்களாகி, கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு பின்வருமாறு சொல்லலானார்கள்: "ஓ தெய்வமே! உனக்கு ஒருவரிடத்திலும் தயையில்லை. சில காலம் சேர்த்து அனுகூலத்தைச் செய்து போகத்தை அனுபவிக்காமலிருக்கும்பொழுதே பிரித்து விடுகிறாய். உன்னுடைய நடையானது குழந்தைகளுடைய சரிதம் போல் இருக்கிறது; பிரயோசனமற்றது.. கறுத்த மயிர்களால் மறைக்கப்பட்டதும் அழகான கன்னங் களுள்ளதும் உயர்ந்த மூக்குகளுள்ளதும், துக்கத்தை நிவர்த்திக்கக்கூடிய புன்சிரிப்புள்ளதுமான ஸ்ரீ கிருஷ்ணனுடைய முகத்தைக் காண்பித்து இப்பொழுது அதனைத் தரிசிக்காமலிருக்கும்படிச் செய்கிறாய். ஆனதால் உன்னால் செய்யப்படும் காரியம் நல்லதல்ல. ஓ அக்ரூர! நீர் மிகவும் கொடிய ஸ்வாபவமுள்ளவர்;

பெயர் மாத்திரம் அக்ரூரர் (நல்லவர்) என்றிருக்கிறது. எங்களுக்குக் கண்ணாக இருக்கும் ஸ்ரீ கிருஷ்ணனை அபஹரிக்கிறீரல்லவா? ஓ தெய்வமே! எங்களுக்கு உம்மால் ஸ்ரீ கிருஷ்ணனாகிய கண்ணானது கொடுக்கப் பட்டிருந்ததல்லவா? அதனால் நாங்கள் சிருஷ்டிக்கும் விஷயத்தில் உமக்கு இருக்கும் சாமர்த்தியத்தைப் பகவானுடைய சரீரத்தில் பார்த்துக்கொண்டிருந்தோம் அப்படி உம்மால் கொடுக்கப்பட்ட கண்ணை நீரே மூடன் போல அக்ரூரர் என்ற பெயருடன் அபஹரிக்கிறீர். அதனால் நீர் கொடிய ஸ்வபாவ முள்ளவரேயாம். நந்தகுமாரராகிய ஸ்ரீகிருஷ்ணனுடைய பிரியமானது ஸ்திரமில்லாதது.

ஏனென்றால் வீடு, பந்துக்கள், புத்திரர்கள், பர்த்தா ஆகிய எல்லோரையும் விட்டுத் தமக்கு வேலைக்காரிகளாகவும். தமது நிமித்தமாக கஷ்டப் படுகிறவர்களுமான எங்களைக் கவனிக்கிறதில்லை. மதுரா நகரத்திலுள்ள ஸ்திரீகளுக்கு இன்றைய தினம் நல்லபொழுது விடிந்தது. அவர்களுடைய இஷ்டம் நிறைவேறியது. கடைக்கண் பார்வையுள்ள பகவானுடைய புன்சிரிப்பாகிய மதுவை அவர்கள் பானம் பண்ணப்போகிறார்கள். ஓ ஸ்திரீகளே! அந்தப் பட்டணத்திய ஸ்திரீகள் தேன்போல் இனிமையாகப் பேசுவார்கள். அதற்கு பகவான் தைரியமுள்ளவரானா லும். வசப்பட்டு அவர்களுடைய வெட்கம், சிரிப்பு, விளையாட்டு இவைகளால் மோஹித்து, அவ்விடத்திலேயே வஸிப்பாரோ யொழியக் கிராமத்து ஜனங்களாகிய நம்மை லக்ஷ்யஞ் செய்து இவ்விடம் வருவாரோ? (வரமாட்டார் என்று தாத்பர்யம்.) இன்றைய தினம் மதுரா நகரத்திற்குப் போகிறவரும்,

லக்ஷ்மீபதியும், எல்லாக் குணங்கள் பொருந்தியவரு மான தேவகியின் புத்திரனை மார்க்கத்தில் எவர்கள் தரிசிப்பார்களோ அவர்களுடைய கண்களுக்கும், பட்டணத்தில் இந்த கிருஷ்ணனை தரிசிக்கும் தாசார்ஹர்கள், போஜர்கள், அந்தகர்கள், விருஷ்ணிகள், ஸாத்வதர்கள் ஆகிய இவர்களுடைய நேத்திரங்களுக்கும் மிகுந்த ஆனந்தமுண்டாகப் போகிறது. இந்த அக்ரூரர் மிகுந்த கொடிய ஸ்வபாவமுள்ளவர்; தயையில்லாதவர்; ஆனதால் இவருக்கு அக்ரூரர் என்ற பெயர் தகுதியானதல்ல. எங்களுக்குக் பிராணனைக் காட்டிலும் பிரியமாகவிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணனைத் தூரதேசத்திற்கு அழைத்துப்போகிறார். இந்த ஸ்ரீ கிருஷ்ணன் ரதத்தின் மீதேறிப் பிரயாணத்திற்கு ஸன்னத்தராக இருக்கிறார்.

இவர் தயையில்லாதவர்; இந்தக் கோபர்களும் வண்டிகளைப் பூட்டிக்கொண்டு கிருஷ்ணனைச் சீக்கிரப்படுத்துகிறார்கள். வயது சென்ற கோபர்களும் மௌனமாக இருக்கிறார்கள். நமக்கு இப்பொழுது தெய்வமும் அனுகூலமாக இருக்கவில்லை. (தெய்வம் அனுகூலமாக இருந்தால் இப்பொழுது மழை பெய்யலாம்; இடி விழலாம், கிருஷ்ணனுடைய பிரயாணத்திற்கு இடையூறுகள் உண்டாகலாம் என்று கருத்து) இப்பொழுது நாம் கிருஷ்ணனிடம் சென்று மதுரா நகரத்திற்குப் போகக்கூடாதென்று தடுத்து விடுவோமா? அப்படிச் செய்தால் நம்முடைய பந்துக்களும், பெரியோர்களும் என்ன செய்வார்கள்? அரை க்ஷணமேனும் கிருஷ்ணனை விட்டுப் பிரிந்திருக்க முடியாது. தெய்வத்தால் பகவானுடைய விரஹமானது நமக்கு ஏற்பட்டிருப்பதால் நம்முடைய

மனது மிகவும் தீனமாக இருக்கிறது. (நமக்கு மிருத்யுவினிடத்திலும் பயமில்லை என்று தாத்பர்யம்) ஓ கோபிகைகளே கிருஷ்ணனுடைய அழகான சிரிப்பு. பேச்சு, விளையாட்டான பார்வை, ஆலிங்கனம் ஆகிய இவைகளால் ராஸக்கிரீடையில் ராத்திரியை க்ஷணம் போலப் போக்கடித்தோமல்லவா? அப்படிப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப் பிரிந்து எப்படித் துக்கத்தைச் சகிக்க முடியும்? ஸாயங்காலத்தில் எந்த பகவான் பலராமனுடன், கோபர்களுடனும் மாடுகளை ஓட்டிக் கொண்டு, வேணுகானஞ் செய்துகொண்டு கோதூளிகள் படிந்த தலைமயிருள்ளவராகிக் கோகுலத்திற்கு வந்து கடைக்கண்ணால் நம்மைப் பார்த்து, நம்முடைய மனத்தை அபஹரிப்பாரோ, அந்தப் பகவானை விட்டுப் பிரிந்திருக்க முடியுமா என்று சொல்விக்கொண்டு கோபஸ்திரீகள் கிருஷ்ணனையே மனத்தில் நினைத்துக் கொண்டு, "ஓ கோவிந்தா! தாமோதரா! மாதவ!" என்று ஸ்திரீகள் அழுதுகொண்டிருக்கும் பொழுது ஸூர்யன் உதயமானார். அப்பொழுது அக்ரூரர் ஸந்தியாவந்தனம் முதலிய கருமங்களை முடித்துக் கொண்டு ரதத்தை நடத்தினார். நந்தன் முதலிய கோபர்களும் நெய், பால் முதலியவைகளால் நிறைந்த குடங்களை எடுத்துக் கொண்டு, வண்டிகளின் மீதேறிக் கொண்டு அவர் பின் சென்றார்கள். கோபிகைகளும் ஸ்ரீ கிருஷ்ணன் பின் சென்று கிருஷ்ணனால் பார்க்கப்பட்டவர்களாகி அவருடைய உத்தரவை எதிர்பார்த்து நின்றார்கள். அப்பொழுது யாதவர்களுக்குட் சிறந்தவராகிய ஸ்ரீ கிருஷ்ணன் தாம் மதுரா நகரத்திற்குப் போவதால் கோபிகைகள் வருத்தப்படுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு "சீக்கிரம் திரும்பிவருகிறேன்" என்று தூதன் முகமாகச் சொல்லியனுப்பி அவர்களைச்

சமாதானஞ்செய்தார். அந்தக் கோபிகைகள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய ரதத்தின் கொடியானது எது வரையில் கண்ணுக்குப் புலப்பட்டதோ, ரதஞ் செல்வதால் உயரக்கிளம்பும் தூளி எதுவரையில் பார்க்கப்பட்டதோ அதுவரையில் பகவானிடத்திலே சித்தத்தைச் செலுத்திக் கொண்டு சித்திரம் போல நின்றார்கள். பின்பு ஆசையொழிந்தவர்களாகிக் கிருஷ்ணனுடைய சரித்திரத்தைக் கானம் பண்ணிக் கொண்டு தினங்களைக் கழித்தார்கள்.

38–57. ஸ்ரீகிருஷ்ணனும், பலராமனும், அக்ரூரரும் வாயுவுக்குச் சமமான வேகமுள்ள ரதத்துடன் யமுனா தீரஞ் சென்றார்கள். அந்த யமுனையானது பாபத்தைப் போக்கடிக்கக் கூடியது; மேலும், ஸ்ரீகிருஷ்ணன் ரத்தினம்போல சுத்தமான காந்தியுள்ள யமுனையின் ஜலத்தை ஆசமனஞ் செய்து மரங்களின் கூட்டத்தின் வழியாகப் பலராமனுடன் சென்று ரதத்தில் வஸித்தார். அக்ரூரர் அவர்களிடம் விடை பெற்று அவர்களை ரதத்தில் வஸிக்கச் செய்து, யமுனையின் மடுவிற்குச்சென்று விதிப்படி ஸ்நானஞ் செய்தார். அந்த ஜலத்தில் மூழ்கி வேதமந்திரத்தை ஜபஞ் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது அந்த ஜலத்தில் ராமனும் கிருஷ்ணனும் சேர்ந்திருப்பதைத் தரிசித்து, அக்ரூரர் ரதத்திலிருந்த வஸுதேவ புத்திரர்கள் ஜலத்தில் எப்படிக் காணப்படுகிறார்கள் ? ரதத்திலில்லையோ என்று ஸந்தேஹித்து, ஜலத்திற்கு மேலே கிளம்பிக் கரையில் பார்த்தார். அவ்விடத்திலும் முன்போல ராமகிருஷ்ணர்கள் இருவர்களும் ரதத்தில் இருப்பதைக் கண்டு ஜலத்தில் பார்த்தது பொய்யோ என்று திரும்பவும் ஜலத்தில் மூழ்கினார்.

அவ்விடத்திலும் முன்போல ஸ்ரீ கிருஷ்ணனைத் தரிசித்தார். எப்படியெனில் ஆயிரம் படங்களுள்ள வரும், தாமரைத்தண்டு போல வெண்மைச் சரீரமுள்ளவரும், கறுத்த வஸ்திரத்தைத் தரித்தவரும் ஸித்தர்களாலும், கந்தர்வர்களாலும், அஸுரர்களாலும் துதிக்கப் பெற்றவருமான ஆதிசேஷனைக் கண்டார். அவருடைய மடியில் வசிக்கும் பகவானையும் தரிசித்தார். அவர் மேகம்போன்ற கறுத்த திருமேனி யுள்ளவர்; பீதாம்பரத்தைத் தரித்தவர்; நான்கு கைகளுள்ளவர்; சாந்தமான ஸ்வபாவமுள்ளவர்; தாமரை இதழ்போன்ற நீண்ட கண்களுள்ளவர்; அழகான சிரித்த முகமுள்ளவர்; புன்சிரிப்புள்ள பார்வையுள்ளவர்; அழகான புருவங்கள், காதுகள், கன்னங்கள் இவைகளுள்ளவர்; உயரமான மூக்குள்ள வர்; சிவந்த உதடுள்ளவர்; பருத்துத் தொங்குகிற கைகளுள்ளவர்; உயரமான தோள்களுள்ளவர்; மார்பில் லக்ஷ்மீதேவியை வைத்துக்கொண்டவர்; சங்கம் போன்ற கழுத்துள்ளவர்; பள்ளமான தொப்புளுள்ளவர்; மூன்று மடிப்புள்ளதும், அரச இலைக்குச் ஸமமான வயிறுள்ளவர்; பருத்த இடுப்பு, முன்பக்கம் இவைகளுள்ளவர்; கரபம் (கையின் பக்கம்) போன்ற தொடைகளுள்ளவர்; அழகான முழங்கால்கள், கணைக்கால் இவைகளுள்ளவர்; கொஞ்சம் உயர்ந்தும், சிவந்த நக காந்தியுள்ளதுமான பாதங்களுள்ளவர்; மிகவும் மிருதுவான கட்டைவிரல் முதலிய விரல்களால் பிரகாசிக்கும் பாதாரவிந்தமுள்ளவர்; மேலும் விலையுயர்ந்த ரத்தினங்கள் இழைத்த கிரீடம், வளை, தோள்வளை, அரைஞாண், பூணூல், ஹாரம், பாதசரம், குண்டலம் இவைகளால் பிரகாசிப்பவர்; தாமரைமலர், சங்கம், சக்கிரம், கதாயுதம்

ஆகிய இவைகளைக் கைகளில் தரித்தவர்; ஸ்ரீவத்ஸத்தால் அழகிய மார்புள்ளவர்; பிரகாசிக்கும் கௌஸ்துப ஹாரமுள்ளவர்; வனமாலையுள்ளவர்; மேலும் சுந்தர், நந்தர் முதலிய பார்ஷத கணங்களும், ஸனகர் முதலியவர்களும், ப்ரஹ்மா, ருத்திரன் முதலிய பாகவதர்களும் அந்தப் பகவானைப் பலவித அடிப் பிராயமுள்ள சிறந்த வார்த்தைகளால் ஸ்தோத்திரம் செய்து கொண்டிருந்தார்கள். ஸ்ரீ, புஷ்டி, வாக்கு, கீர்த்தி, காந்தி, துஷ்டி, பூமி, ஊர்ஜை, வித்தை, அவித்தை, சக்தி, மாயை ஆகிய இவைகளும் பகவானை ஸேவித்துக் கொண்டிருந்தன. அப்படிப் பட்டபகவானை அக்ரூரர் தரிசித்துப் பிரியமடைந்து, மிகுந்த பக்தியுடன் மயிர்க் கூச்சலையடைந்து பகவானிடத்தில் மனத்தைச் செலுத்தி, ஆனந்தக் கண்ணீருள்ளவராகிக், கண்டமடைத்து, மெதுவாக தைரியமடைந்து சிரசில் இருகைகளைக் கூப்பிக் கொண்டு, தழுதழுத்த வார்த்தையுடன் மெதுவாகத் ஸ்தோத்திரஞ் செய்ய ஆரம்பித்தார்.

♣ ♣ ♣ ♣

அக்ரூர் பகவானை ஸ்தோத்திரஞ் செய்தது

1–30. "ஓ கிருஷ்ண! நீர் எல்லாவற்றிற்குங் காரணங்களான ஐந்து மஹா பூதங்களுக்கும் காரணராக இருப்பவர்; உமக்கு ஆதியும் அந்தமுமில்லை; உம்முடைய தொப்புளிலிருந்து உண்டான தாமரை மலரிலிருந்து பிரும்ம தேவர் உண்டானார். அவரால் இவ்வுலகம் சிருஷ்டிக்கப்பட்டது; அப்படிப்பட்ட ஆதி புருஷனாகிய உமக்கு நமஸ்காரம். மேலும், ஜகத்திற்குக் காரணங்களான பூமி, ஜலம், அக்னி, வாயு, ஆகாயம், அஹங்காரம், மஹத்தத்துவம், மாயை, மனம், இந்திரியங்கள், சப்தம் முதலிய விஷயங்கள், தேவர்கள், ஆகிய எல்லாம் உமக்கு அவயவங்களாக இருக்கின்றன. (உம்முடைய சரீரத்திலிருந்து, உண்டானவைகள்). முன் காட்டிய மாயை முதலியவைகள் ஜடங்களானதால் (அசேதனம்) உம்முடைய ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளச் சக்தியில்லாதவைகளாக இருக்கின்றன.

மாயையின் குணங்களுள்ளவனான ஜீவன் சேதனனாலும் குணசம்பந்தமற்றவரான உம்மைத் தெரிந்து கொள்ளத் சக்தியற்றவனாக இருக்கிறான். மேலும், ஹிரண்ய கர்ப்பன் முதலியவர்கள் அத்யாத்மம், ஆதிபூதம், ஆதிதெய்வம் ஆகிய இவைகளுக்குச் ஸாக்ஷியும், அந்தர்யாமியும், மஹாபுருஷனும், ஈஸ்வரனுமாகிய உம்மைப் பூஜிக்கிறார்கள். கர்மயோகத்தை அனுஷ்டிப்பவர்களான சில ப்ராஹ்மணர்கள் வேத வித்தையைக் கொண்டு பலவகையான தேவர்களுடைய

பெயரைச் சொல்லி அநேக யாகங்களால் உம்மைப் பூஜிக்கிறார்கள். இன்னும் சிலர் எல்லா கர்மங்களையும் உம்மிடம் ஸமர்ப்பித்துச் சாந்தர்களாகி, ஞானமாகிய யாகத்தைக்கொண்டு ஞான சுருபியா யிருக்கிற உம்மைப் பூஜிக்கிறார்கள். இன்னும் சிலர் வைஷ்ணவ தீட்சைபெற்று, உம்மையே தியானஞ் செய்துகொண்டு உம்மால் சொல்லப்பட்ட பாஞ்சராத்ர விதிப்படி உம்மையே பிரத்யும்னரென்றும், அனிருத்த ரென்றும், அநேக மூர்த்திகளாகவும், நாராயணனென்ற ஒரு மூர்த்தியாகவும் பூஜிக்கிறார்கள். மற்றுஞ் சிலர் சிவதீட்சை பெற்றுச் சைவம், பாசுபதம் முதலிய மார்க்கத்தால் சிவரூபியாக! உம்மைப் பூஜிக்கிறார்கள். ஓ ஸகல தேவ ஸ்வரூபியே! இன்னும் மற்ற அற்ப தேவதைகளிடத்தில் பக்தி செய்பவர்களும் உம்மையே பூஜிப்பவர்களாக ஆகிறார்கள்.

எண்ணத்தில் பேதமேயொழிய வஸ்துவில் பேதமில்லை. மலையிலிருந்து பெருகி வரும் நதிகள் மழையால் நிறைந்து சமுத்திரத்தை அடைகிறது போல எந்த மார்க்கமாக, எந்தத் தேவதையைப் பூஜித்தாலும் அது கடைசியில் உம்மையே பூஜித்ததா கிறது. ஸத்வம், ரஜஸ், தமஸ், என்பவைகள் உம்முடைய பிரகிருதியின் குணங்கள். தாவரம் முதல் ப்ரஹ்மா வரையிலுள்ளவர்கள் பிருகிருதி சம்பந்த முள்ளவர்களாகையால் அதன் குணங்களில் ப்ரவேசித் திருக்கிறார்கள்; ஸம்பந்தபட்டிருக்கிறார்கள். (அவர்கள் பிரகிருதியிலும், அந்தப் ப்ரகிருதியானது உம்மிடத் திலும் இருக்கிறது. ஒவ்வொன்றும் லயத்தையடைந் தால் எல்லாம் உம்மையே அடைகின்றனவென்று தாத்பரியம்) நீர் அவைகளில் சம்பந்தபடாத

ஞானமுள்ளவர்; ஸகல ஸ்வரூபியாக இருப்பவர்; ஸகல புத்திகளுக்கும் சாக்ஷியாக இருப்பவர். உம்முடைய மாயையால் ஏற்பட்ட இந்த ஸம்ஸார மானது சரீரத்தில் அபிமானமுள்ள தேவர்கள் மனிதர்கள், பசுக்கள், பக்ஷிகள் முதலியவைகளுக்கே யொழிய உமக்கில்லை. மேலும் உமக்கு அக்னியானது முகமாகவும், பூமி பாதமாகவும், ஸூர்யன் கண்ணாகவும், ஆகாயம் தொப்புளாகவும், திக்குகள் காதுகளாகவும், த்யுலோகம் தலையாகவும், தேவர்கள் கைகளாகவும், சமுத்திரம் வயிறாகவும், வாயு பிராணனாகவும், பலமாகவும், விருட்சங்களும், கொடிகளும் மயிர்களாகவும், மேகங்கள் தலை மயிர்களாகவும், மலைகள் எலும்புகளாகவும், நகங் களாகவும், இரவும் பகலும் கண்கொட்டலாகவும், ப்ரஹ்மதேவர் ஆண்குறியாகவும், மழையானது வீரியமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

நாசமில்லாத ஸ்வரூபமுள்ள புருஷனாகிய உம்மிடத்தில் அநேக ஜீவர்கள், லோகபாலர்கள் ஆகிய இவர்களடங்கிய லோகங்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. பின்னும் நீர் விளையாட்டாக எந்தெந்த அவதாரங் களைச் செய்கிறீரோ, அவைகளால் ஜனங்கள் துக்கத்தை நிவர்த்தித்துக் கொண்டு உம்முடைய கீர்த்தியை கானஞ்செய்கிறார்கள். பிரளய காலத்தில் மத்ஸ்ய ரூபியாக சஞ்சரித்த உமக்கு நமஸ்காரம். மது, கைடபன் இவர்களைக் கொன்றவரும், ஹயக்ரீவராக அவதரித்தவருமாகிய உமக்கு நமஸ்காரம். கூர்மமாக அவதரித்து மந்தர மலையை முதுகில் தாங்கியவரான உம்மை நமஸ்கரிக்கிறேன். வராஹவதாரஞ் செய்து பாதாளத்திலிருந்து பூமியைக் கொண்டுவருவதாகிய

விளையாட்டைச் செய்தவராகிய உமக்கு நமஸ்காரம். ஓ சாதுக்களுடைய பயத்தை நிவர்த்திப்பவரே! அற்புதமான சிம்மாவதாரஞ் செய்த உமக்கு நமஸ்காரம். மூவுலகத்தையும் அறிந்தவராகிய உமக்கு நமஸ்காரம். பரசுராமனாக அவதரித்து, துஷ்டர்களான க்ஷத்திரியர்களுடைய கூட்டத்தை நாசஞ்செய்த உமக்கு நமஸ்காரம், வஸுதேவருக்கு புத்திரராகிய உமக்கு நமஸ்காரம். ஸங்கர்ஷணராகிய (பலராமன்) உமக்கு நமஸ்காரம்; பிரத்யும்னரும், அனிருத்தரும், ஸாத்வதர் களுக்கு அதிபதியுமாகிய உமக்கு நமஸ்காரம். சுத்தரும், புத்தரும், தைத்யர்களையும், தானவர்களையும் மோஹிக்கச் செய்த மோஹினி ரூபமுள்ளவரும் கல்கி ஸ்வரூபமெடுத்து மிலேச்சர்கள் போன்ற க்ஷத்திரியர் களை நாசஞ்செய்தவருமான உமக்கு நமஸ்காரம்.

ஓ பகவான்! ஸகல லோகங்களும் உம்முடைய மாயையால் மோகத்தை அடைந்திருக்கின்றன. தேஹமும் முதலிய அஸத் பதார்த்தங்களில் "நான் என்னுடையது" என்ற அபிமானமுள்ளவர்கள் கர்ம மார்க்கத்தில் சுற்றுகிறார்கள். ஓ பிரபுவே! சரீரம், புத்திரன், வீடு, களத்திரம், பணம், பந்துக்கள் முதலியவைகள் சொப்பனம் போன்றவைகள்; அவை களை நான் உண்மையானவைகளென்று நினைத்து மோஹிக்கிறேன். நான் அக்ஞானத்தால் மூடப்பட்டு, அநித்யங்களும், அனாத்மாக்களும், துக்ககரங்களுமான விஷயங்களை நித்தியமானவைகளென்றும், ஆத்மா வென்றும், சுகத்தைக் கொடுக்கக்கூடியவைகளென்றும் நினைத்து, சுகதுக்கங்களில் பிரியப்பட்டு, ஆத்மாவிற்கு க்ஷேமத்தைச் செய்பவரான உம்மைத் தெரிந்துகொள்ள வில்லை. ஜலத்தை விரும்பியவன் ஜலத்திலிருந்து

உண்டான பாசிகளால் மூடப்பட்டிருக்கும் ஜலத்தை விட்டுக் கானலை ஜலமென்று நினைத்து அதனை அனுசரித்தாற்போல் மாயையால் மறைக்கப்பட்டிருக்கும் உம்மை விட்டு, விஷயங்களில் நோக்கமுள்ளவனாக இருக்கிறேன். நான் விஷயங்களில் சென்ற புத்தியுள்ளவன்; என்னுடைய மனமோ கர்வத்தாலும், காமத்தாலும் கலங்கி இருக்கிறது. இந்திரியங்களால் பல விஷயங்களில் இழுக்கப்பட்டிருக்கிறது. ஆனதால் அதனைத் தடுக்க என்னால் முடியவில்லை. அப்படிப் பட்ட நான் உம்முடைய பாதத்தைச் சரணமடைந்தேன். இது அஸத்துக்களால் அடையமுடியாதது; இது உம்முடைய அனுக்கிரஹத்தால் கிடைத்ததென்று நினைக்கிறேன். ஜீவனுக்கு ஸம்ஸார நிவர்த்தி உம்முடைய கிருபையால்தான் உண்டாகவேண்டும். ஸாதுக்களை உபாஸித்தால் உம்மிடத்தில் பக்தி உண்டாகும் உம்முடைய கிருபை இல்லாவிடில் ஸாதுக்களுடைய ஸேவைக் கிடைக்கிறதில்லை. அதனால் உம்மிடத்தில் பிரீதியுண்டாகிறதில்லை. அவர்களுக்கு மோக்ஷமும் கிடைக்கிறதில்லையென்று கருத்து.) விஞ்ஞான ஸ்வரூபமாயும், ஸகல ஞானங் களுக்கும் காரணமும் புருஷனுக்கும் ஸுகதுக்கங்களை யுண்டுபண்ணுகின்ற காலம் காமம் முதலியவைகளுக்கு அதிபதியும், பரிபூரணரும், அனந்தமான சக்தியுள்ள வரும், வாஸுதேவருடைய புத்திரரும் (சித்தத்திற்கு அதிஷ்டாதாவென்று சொல்லப்பட்டது.) ஸகல ப்ராணிகளுக்கும் ஆச்ரயமாகவிருப்பவரும், (அஹங் காரத்திற்கு அதிஷ்டாதாவென்று காட்டப்பட்டது.) இந்திரியங்களுக்கு அதிபதியுமாகிய உம்மை நமஸ்கரிக்கிறேன். ஓ ப்ரபுவே! சரணாகதனாகிய என்னைக் காப்பாற்றும்" என்று ப்ரார்த்தித்தார்.

அத்தியாயம்–41

ஸ்ரீகிருஷ்ணன் மதுரா நகரஞ் சென்றது

1–18. இப்படி அக்ரூரர் ஸ்தோத்திரஞ்செய்ய, பகவான் தம்முடைய ஸ்வரூபத்தை மறைத்துக்கொண்டார். அது நர்த்தனஞ் செய்து கொண்டிருந்த நடன நாட்டியத்தை மறைத்துக்கொண்டது போலிருந்தது. அதன்பின் அக்ரூரர் ஜலத்திலிருந்து கிளம்பி, அதிசீக்கிரம் அவசரமாகச் செய்யவேண்டியவைகளைச் செய்துகொண்டு ஆச்சரியத்துடன் ரதத்திற்கு வந்தார். அவரைப் பார்த்து ஸ்ரீ கிருஷ்ணன், "அக்ரூரரே! பூமியிலாவது, ஆகாயத்திலாவது, ஜலத்திலாவது அத்புதமானதைப் பார்த்தீரோ; ஆச்சரியத்தைப் பார்த்தவர்போலத் தோன்றுகிறீர்" என்று கேட்டார். அதைகேட்ட அக்ரூரர் பகவானை நோக்கி, "பூமியிலும், ஆகாயத்திலும், ஜலத்திலும் எவ்வளவு அத்புதங்கள் இருக்கின்றனவோ, அவைகள் ஜகத் ஸ்வரூபியான உம்மிடத்திலிருக்கின்றன. அப்படிப்பட்ட உம்மைப் பார்ப்பவனாகிய என்னால் எந்த ஆச்சரியம் தான் பார்க்கப்படவில்லை; (என்னிடம் வருவதற்கு முன்னமேயே ஆச்சரியத்தைப் பார்த்தவன் போல முகக் குறியால் காணப்படுகிறீர். அப்படியிருக்க என்னைப் பார்த்தால் எல்லா ஆச்சரியமும் பார்க்கப்பட்டது என்று எப்படிச் சொல்லுகிறீர் என்றால், அடுத்த ச்லோகத்தில் சமாதானஞ் சொல்லப்பட்டிருக்கிறது.) ஓ பரமேசுவரா! பூமி, ஆகாயம், ஜலம் இவைகளில் எவ்வளவு ஆச்சரியங்கள் இருக்கின்றனவோ, அவைகள் யாவும் உம்மிடத்தில் இருக்கின்றன. அப்படிப்பட்ட உம்மை பார்த்துக்கொண்டிருக்கும் நான் உம்மைவிட

வேறு எந்த இடத்தில், எந்த ஆச்சரியத்தைப் பார்க்கப் போகிறேன்? (உம்மைவிட வேறு அத்புதமான வஸ்து இல்லை என்று தாத்பர்யம்) என்று சொல்லி, அக்ரூரர் ரதத்தை ஓட்டினார். ஸாயங்காலத்தில் ராமகிருஷ்ணர்கள் மதுராநகரத்தின் ஸமீபம் வந்து சேர்ந்தார்கள். போகும் வழியில் கிராமத்திலுள்ள ஜனங்கள் அந்தந்த இடங்களில் ராமகிருஷ்ணர்களை மிகுந்த பிரியத்துடன் பார்த்துக்கொண்டே இருந்தார்கள். அதற்குள் நந்தன் முதலிய கோபர்கள் முந்தி சென்று பட்டணத்திற்குச் ஸமீபத்தில் தோட்டத்தில் ராமகிருஷ்ணர்களுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் அவ்விடம் சென்று கோபர்களுடன் சேர்ந்து அக்ரூரருடைய கையைத் தமது கையால் பிடித்துக்கொண்டு வணங்கியிருக்கும் அவரை நோக்கி, "நீர் ரதத்துடன் மதுரா நகரஞ் சென்று வீட்டிற்குப் போகலாம்; நாங்கள் இவ்விடத்தில் ராத்திரியை கழித்துவிட்டுக் காலையில் பட்டணத்தைப் பார்க்கி றோம்" என்று சிரித்துக்கொண்டு சொன்னார்.

அதை கேட்ட அக்ரூரர், "பக்தர்களிடத்தில் பிரீதியுள்ளவரே! உங்களிருவர்களையும் இவ்விடத்தில் விட்டு நான் தனியாகப் பட்டணத்திற்குப் போக மாட்டேன்; பக்தனாகிய என்னை விடுவது உசிதமல்ல; ஆதலால் தமையனுடனும் மற்ற கோபர்களுடனும் என்னுடைய கிருஹத்திற்கு வரவேண்டும். என்னை நாதனுள்ளவனாகச் செய்யவேண்டும். கிருஹஸ்தர் களான எங்களுடைய வீட்டை உம்முடைய பாத தூளியால் சுத்தப்படுத்தும். உம்முடைய பாதத்தை அலம்புவதால் பிதிருக்களும், அக்னிகளும் தேவர்களும் திருப்தியடைகிறார்கள் மேலும், பலி சக்கரவர்த்தி

உம்முடைய பாதத்தை அலம்பிப் புண்ணிய கீர்த்தியுள்ளவனாகி ஒப்பற்ற ஐசுவரியத்தையும், பக்தர்களடையக்கூடிய கதியையும் அடைந்தார். பின்னும், உம்முடைய பாததீர்த்தமானது மூன்று லோகங்களையும் பரிசுத்தப் படுத்துகிறது. அந்த ஜலத்தைப் பரமசிவன் தலையில் தரித்தார் அந்த ஜலத்தால் ஸகரபுத்திரர்கள் சுவர்க்கலோகத்தையடைந் தார்கள். ஓ தேவர்களுக்கும் தேவரே! ஜகத்திற்கு அதிபதியே! உம்முடைய சரிதங்களைக் கேட்பதாலும் சொல்வதாலும் புண்ணியத்தைக் கொடுப்பவரே! உத்தம சுலோகரே! ஓ நாராயண! உமக்கு நமஸ்காரம்" என்று பிரார்த்தித்தார். அதனைக் கேட்ட பகவான், "நான் தமையனுடன் உம்முடைய கிருஹத்திற்கு வருகிறேன்; யாதவர்களுக்குத் துரோகஞ் செய்பவனாகிய கம்ஸனைக் கொன்று, சிநேஹிதர்களுக்குப் பிரியத்தைச் செய்வேன்" என்று சொன்னார். அதனைக் கேட்டு வருத்தத்துடன் மதுரா நகரஞ்சென்று கம்ஸனிடத்தில் சமாசாரத்தை (ஸ்ரீகிருஷ்ணன் வந்திருக்கிறாரென்பதை) சொல்லிவிட்டுத் தமது கிருஹஞ் சென்றார்.

19–31. பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் பலராமனுடனும் கோபர்களுடனும் மறுநாள் அபரான்ஹ காலத்தில் மதுரா நகரத்திற்குட் சென்று, அதன் அழகை பார்த்து வந்தார். அந்தப் பட்டணத்தில் கோட்டை வாயில்கள் ஸ்படிகத்தால் கட்டப்பட்டவைகள் உயரமானவை களுமாக இருந்தன. மேலும், அவைகளுக்கு ஸுவர்ண மயமான கதவுகள் போடப்பட்டிருந்தன. பின்னும், தானியம் வைக்கும் வீடுகள் முதலியவை தாமிரம், பித்தளை இவைகளால் செய்யப்பட்டிருந்தன. அந்த பட்டணத்தைச் சுற்றி ஆழமான அகழி இருப்பதால்

அந்த நகரம் சத்துருக்களால் அடைய முடியாததாக இருந்தது. பட்டணத்திற்கு சமீபத்திலும், தூரத்திலும் அழகான தோட்டங்கள் இருந்தன. சுவர்ணமயங் களான நாற்சந்தி மண்டபங்களும், மாளிகைகளும், அவைகளுக்குத் தகுதியான தோட்டங்கள், சபைகளும், மற்ற வீடுகளும் நிறைந்திருந்தன. வைடூரியம், வஜ்ரம், நீலம், பவழம், முத்து இவைகளால் வலபிகளும், வேதிகைகளும், ஜன்னல்களின் சமீபப் பிரதேசங்களும் அலங்கரிக்கப்பட்டிருந்ததுமன்றி, அவ்விடங்களில் மயில்களும் புறாக்களும் வசித்து சப்தித்தன. பின்னும் ராஜவீதிகளும், கடைவீதிகளும் ஜலந்தெளிக்கப்பட்டி ருந்தன. மேலும் அந்தப்பட்டணமானது புஷ்பங்களாலும் பொறிகளாலும், அக்ஷதங்களாலும், பூர்ண கும்பங் களாலும், சந்தனத்தாலும், தயிராலும், தீபங்களாலும், தளிர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

வீட்டின் வாயிற்படிகள் பாக்குக்குலைகளாலும், தாருள்ள வாழைகளாலும், துவஜங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அப்படிப்பட்ட அழகான நகரத்தில் ராமகிருஷ்ணர்கள் இருவர்களும் தங்கள் ஸ்நேஹிதர்களுடன் ராஜவீதி வழியாகப் போனார்கள். அப்படிப்பட்ட ராமகிருஷ்ணர்களைத் தரிசிக்க விரும்பி பட்டணத்திய ஸ்திரீகள் மாடியின் மீது ஏறினார்கள். சில ஸ்திரீகள் வஸ்திரத்தை மாற்றி உடுத்திக்கொண்டும், ஆபரணங்களை வித்தியாசமர்க அணிந்துக்கொண்டும், ஒரு காதில் ஓலையைத் தரித்துக்கொண்டும், ஒரு கையில் கங்கணத்தைத் தரித்துக்கொண்டும், ஒரு காலில் கொலுசைத் தரித்துக் கொண்டும், சிலர் ஒரு கண்ணுக்கு மையிட்டுக் கொள்ளாமலும் பகவானை தரிசிக்க ஓடிவந்தார்கள்.

மற்றுஞ் சில ஸ்த்ரீகள் போஜனஞ் செய்து கொண்டி
ருக்கும்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் வருகிறாரென்பதை
கேள்விப்பட்டு அன்னத்தை புஜிக்காமலேயே ஓடி
வந்தார்கள். பின்னுஞ் சிலர் எண்ணெய் தேய்த்துக்
கொண்டிருந்தார்கள். அவர்கள் ஸ்நானஞ் செய்யாம
லேயே வந்தார்கள். மற்றுஞ்சிலர் தூங்கியெழுந்திருந்த
குழந்தைகளுக்குப் பால் கொடுத்துக் கொண்டிருக்கும்
பொழுது பகவான் வருவதைக் கேள்விப்பட்டுக்
குழந்தைகளை விட்டுவிட்டு வந்தார்கள். இப்படி
மதங்கொண்ட யானைபோல நடப்பவரான பகவான்
லக்ஷ்மீதேவிக்கு ஸந்தோஷத்தை கொடுக்கின்ற தமது
சரீரத்தாலும், மேலான விளையாட்டு, சிரிப்பு,
பார்வை இவைகளாலும் அந்த ஸ்திரீகளின் மனத்தை
அபஹரித்தார். ஓ! மன்மதனை ஜயித்த அரசனே!
அந்த ஸ்திரீகள் பகவானுடைய குணங்களைப் பற்றி
முன்னமேயே கேள்விப்பட்டு அவரிடத்திலேயே
மனத்தை செலுத்தியிருந்தவர்களானதால், இப்பொழுது
நேரில் அவரைத் தரிசித்துக் கண்வழியாக ஆனந்த
மூர்த்தியாகிய அவரை ஹிருதயத்தில் வைத்துக்
கட்டிக்கொண்டு ஸகல துக்கங்களையும் நிவர்த்தித்துக்
கொண்டார்கள். மேலும் அவர்கள் மயிர் கூச்சலை
அடைந்தார்கள். பின்னுமவர்கள் மிகுந்த பிரியத்தால்
மலர்ந்த முகமுள்ளவர்களாகி, மேல்மாடியிலேறிப்
புஷ்பங்களை வர்ஷித்தார்கள். ஒவ்வொரு வீதிகளிலும்
பிராம்மணர்கள் தயிர், அக்ஷதை, பூர்ண கும்பம்,
புஷ்பமாலை, சந்தனம் முதலியவைகளால் ராம
கிருஷ்ணர்களைப் பூஜித்தார்கள். பின்னும் பட்டணத்து
ஸ்திரீகள் "பூலோகத்திற்கு மஹோற்சவத்தையுண்டு
பண்ணும் இந்த ராமகிருஷ்ணர் இருவர்களையும்
எப்பொழுதும் தரிசித்துக் கொண்டிருக்கிற கோபிகைகள்

என்ன மேலான தவஞ் செய்தார்களோ" என்று
சொல்லிக்கொண்டார்கள்.

32–35. இப்படியாகக் கிருஷ்ணன் ராஜ வீதியில்
போகும்பொழுது சுத்தமான வஸ்திரங்களையெடுத்துக்
கொண்டு எதிரில் வரும் வண்ணானைக் கண்டு
அவனை நோக்கி, "உத்தமமான வஸ்திரங்களையுடுத்திக்
கொள்ளத் தகுதியுள்ளவர்களான எங்களுக்குச் சுத்த
மான வஸ்திரங்களைக் கொடு. அப்படி கொடுப்பதால்
உனக்கு மிகுந்த க்ஷேமமுண்டாகும்; ஸம்ஸயமில்லை"
என்று கேட்டார். இப்படி எல்லாவற்றிலும் பூரணரான
ஸ்ரீ கிருஷ்ணனால் யாசிக்கப்பட்ட வண்ணான்
துஷ்டனானதால் மிகுந்த கோபத்துடன், "காடுகளிலும்
மலைகளிலும் வஸிக்கும் நீங்கள் இம்மாதிரியான
வஸ்திரங்களைத்தான் உடுத்திக் கொள்ளுகிறது
வழக்கமா? ஏன் கர்வத்துடன் அரசனுடைய சொத்தை
அபஹரிக்க விரும்புகிறீர்கள்? ஓ மூடர்களே!
உங்களுக்குப் பிழைத்திருக்க வேண்டுமென்ற
விருப்பமிருந்தால் இந்த மாதிரி கேட்கவேண்டாம்.
அரசனுடைய சேவகர்கள் உங்களை அடிப்பார்கள்.
காராகிருஹத்தில் அடைப்பார்கள். உங்களுடைய
பணத்தைப் பிடுங்கிக் கொள்வார்கள்" என்று
சொன்னான். இப்படிச் சொன்ன வண்ணானுடைய
வார்த்தையை கேட்டு ஸ்ரீகிருஷ்ணன் மிகவும் கோபங்
கொண்டு, தமது கையினால் வண்ணானுடைய
தலையை வெட்டி அவனைக் கொன்றார். அவனுடைய
வேலைகாரர்கள் வஸ்திர மூட்டைகளை ஆங்காங்கு
கிடத்திவிட்டு ஓடினார்கள். அப்பொழுது ஸ்ரீ
கிருஷ்ணன் தமக்கு இஷ்டமான வஸ்திரங்களை எடுத்து
உடுத்திக்கொண்டு, பலராமருக்கும் கோபர்களுக்கும்

கொடுத்து, எஞ்சிய வஸ்திரங்களை வீதியில் போட்டுவிட்டு தமது இஷ்டப்படி சென்றார். பின்பு ஒரு நெசவுக்காரன் பகவானுக்கு எதிரில் வந்து, ராமகிருஷ்ணர்களிடத்தில் மிகுந்த பிரியத்துடன் பட்டு வஸ்திரங்களால் செய்யப்பட்ட ஆபரணங்களால் அவர்களை அலங்கரித்தான் இப்படி அலங்கரிக்கப் பட்ட அவ்விருவர்களும் பருவ காலத்தில் வஸ்திரம் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்ட குட்டி யானைகள் போலப் பிரகாசித்தார்கள். அவனிடத்தில் ஸ்ரீகிருஷ்ணன் ஸந்தோஷித்து, அவனுக்கு இவ்வுலகத்தில் மிகுந்த ஐசுவரியத்தையும் இந்திரியங்களுடைய வலிமையையும், தம்மிடத்தில் பக்தியையும் அனுக்ரஹித்ததுமன்றி பரலோகத்தில் தம்முடைய ஸாரூப்யத்தையும் கொடுத்தார்.

பின்பு அவ்விருவர்களும் சுதாமாவென்ற புஷ்பகாரனுடைய வீட்டுக்குச் சென்றார்கள். அவன் ராமகிருஷ்ணர்களைக் கண்டு சீக்கிரமாக எழுந்திருந்து, பூமியில் விழுந்து அவர்களுக்கும், அவர்களுடன் வந்தவர்களுக்கும் ஆசனம், முதலியவைகளை கொடுத்து, புஷ்பமாலை, தாம்பூலம், சந்தனம் இவைகளால் பூஜித்தான். இன்னும் அவன், "ஓ பிரபுவே! என்னுடைய் பிறப்பானது இப்பொழுது ஸபலமாயிற்று. என்னுடைய குலமானது காப்பாற்றப்பட்டது; நீங்கள் வந்ததால் பிதிருக்களும், தேவர்களும், ரிஷிகளும் என்னிடத்தில் சந்தோஷப்படுகிறார்கள். நீங்கள் ஸகல ஜகத்திற்கும் முக்கிய காரணர்களாக இருக்கிறீர்கள். மேலும், நீங்கள் ஜனங்களுடைய க்ஷேமத்திற்கு பூமியில் அவதரித்திருக்கிறீர்கள்; ஜகத் ஸ்வரூபிகளும், லோகத்திற்கு மித்திரர்களும் பிராணிகளிடத்திலும்

ஸமமாக இருப்பவர்களும், பக்தர்களை அனுக்கிரஹிப் பவர்களுமான உங்களுக்கு ஒருவரிடத்திலும் பேதபுத்தி இல்லை. ஆனதால் வேலைக்காரனாகிய எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும். நான் எதனைச் செய்ய வேண்டும்? உங்களால் எவன் .ஆக்ஞாபிக்கப்படுகிறா னோ, அவனுக்கு அது அனுக்கிரஹமாகிறது" என்று பிரார்த்தித்து, வாசனையுள்ள உயர்ந்த புஷ்பங்களால் கட்டப்பட்ட மாலைகளை அவர்களிடம் சமர்ப்பித்தான் பின்பு அந்த ஸுதாமாவென்பவன் ராம கிருஷ்ணர்களுக்கு நமஸ்காரஞ் செய்தான். அவர்கள் 'இஷ்டமான வரத்தைக் கேள்' என்று சொன்னார்கள். அதனைக்கேட்ட ஸுதாமா, "ஸகல ஜகத்ஸ்வரூபியான உம்மிடத்தில் எனக்குப் பக்தி இருக்கவேண்டுமென்றும், உம்முடைய பகதர்களிடத்தில் பிரீதி இருக்கவேண்டும் என்றும் ஸகல பிராணிகளிடத்திலும் தயை இருக்க வேண்டும்" என்றும் கேட்டுகொண்டான். அதனைக் கேட்ட பகவான் அவனுக்கு இந்த மூன்று வரங்களையும் கொடுத்துக் குலவிருத்தியையும், ஐசுவரியத்தையும், தேஹபலத்தையும், தீர்க்கமான ஆயுளையும், கீர்த்தியையும், காந்தியையும் அனுக்கிரஹித்து அவ்விடமிருந்து வெளியில் சென்றார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–42

ஸ்ரீ கிருஷ்ணன் வில்லைமுறித்தது

1–14. பின்பு ராஜவீதி வழியாகச் செல்லுகிற ஸ்ரீ கிருஷ்ணன் சந்தனம் நிறைந்த பாத்திரத்தைக் கையிலெடுத்துக் கொண்டு தமக்கு எதிரில் வருகிற ஒரு கூனியான ஸ்திரீயைக்கண்டார். ஸுகத்தைக் கொடுப்பவராகிய பகவான், அழகான முகமுள்ள அவளை நோக்கி, "ஓ சிறந்த துடைகளுள்ளவளே! நீ யார்? இந்த சந்தனத்தை யாருக்காக எடுத்துக் கொண்டு போகிறாய்? அதனை விபரமாகச் சொல். இந்த சிறந்த சந்தனத்தை எங்களுக்குக் கொடு; உனக்கு மிகுந்த க்ஷேமம் சீக்கிரத்திலுண்டாகும்" என்றார். அதனைக்கேட்ட அவள் பகவானை நோக்கி, "ஓ அழகுள்ளவரே! நான் கம்ஸனுடைய வேலைக்காரி. என்னைத் த்ரிவக்ரா என்று சொல்லுவார்கள். எனக்கு சந்தனம் சேர்க்கத்தெரியும். என்னால் சேர்க்கப்பட்ட சந்தனத்தில் கம்ஸன் மிகவும் பிரியப்படுவார்; ஆனால் இந்தச் சந்தனத்தைப் பூசிக்கொள்வதற்கு நீங்களே தகுந்தவர்கள்" என்று சொல்லி கிருஷ்ணனுடைய ரூபம், மிருதுவாகவிருப்பது. மாதுர்யம், சிரிப்பு, பேச்சு, பார்வை ஆகிய இவைகளால் மோஹித்து அந்தச் சந்தனக் குழம்பை ராமகிருஷ்ணர்களுக்குக் கொடுத்தாள். பின்பு அவ்விருவர்களும் உத்தமமான அந்த சிவப்புச் சந்தனத்தைப் பூசிக்கொண்டு மிகவும் பிரகாசித்தார்கள். அப்பொழுது கிருஷ்ணன் அவளிடத்தில் ஸந்தோஷித்துத் தம்முடைய தர்சனத்தின் பயனைக் காண்பித்துக்கொண்டு அவளுடைய சரீரத்திலுள்ள

கோணலை நிவர்த்திக்க வேண்டும் என்று நினைத்தார். மேலுமவர் தம்முடைய இரண்டு கால்களால் அவளுடைய நுனிக்கால்களை மிதித்துக்கொண்டு உயரத்தூக்கிய இரண்டு விரல்களுள்ள கையினால் அவளுடைய முகவாய்க்கட்டையைப் பிடித்துத்தூக்கினார். அப்பொழுது அவளுடைய சரீரம் கோணலில்லாமல் ரிஜுவாக ஆனதுமன்றி அவள் பகவானுடைய திவ்ய ஹஸ்தம்பட்டதால் உத்தம ஸ்திரீயானாள். அவளுடைய ஸ்தனங்களும், இடுப்பின் பின்பாகமும், முன்பாகமும் பருத்ததாயிற்று. பின்பு அவள் நல்ல ரூபம், குணம், ஔதார்யம் இவைகளுள்ளவளாகி கிருஷ்ணனுடைய உத்தரீயத்தின் தலைப்பைப் பிடித்துக்கொண்டு, "ஓ வீர! என்னுடைய வீட்டிற்கு நாமிருவரும் போவோம். உம்மால் என்னுடைய சித்தம் கலங்கியிருப்பதால் உம்மை விட்டுப் போக எனக்கு மனமில்லை. என்னிடத்தில் தயவுசெய்ய வேண்டும்" என்று மன்மத தாபமுள்ளவளாகிப் ப்ரார்த்தித்தாள்.

இப்படி அந்த ஸ்திரீயினால் பிரார்த்திக்கப்பட்ட பகவான் பலராமனுடையவும், கோபர்களுடையவும் முகத்தைப் பார்த்து சிரித்துக்கொண்டு, "ஓ அழகான புருவமுள்ளவளே! கல்யாணஞ் செய்துகொள்ளாதவர்களும், தேசாந்திரத்திலிருந்து வந்தவர்களுமான எங்களுக்கு நீதான் கதி. எந்தக் காரியத்திற்காக இவ்விடம் வந்தேனோ. அதனை முடித்துக்கொண்டு மனக்கவலையை நிவர்த்திக்கக்கூடிய உன்னுடைய கிருஹத்திற்கு வருகிறேன்" என்று இனிமையாகச் சொல்லியனுப்பி விட்டார். கடைவீதியில் பலவகையான காணிக்கைகளாலும், தாம்பூலத்தாலும், புஷ்ப

மாலைகளாலும். சந்தனத்தாலும் ஜனங்கள் ராம கிருஷ்ணர்களைப் பூஜித்தார்கள். அந்த ஸ்ரீ கிருஷ்ணனைத் தர்சித்த ஸ்திரீகள் மன்மத தாபமுள்ளவர்களாகித் தங்களை மறந்து சித்திரத்தில் எழுதப்பட்டவர்கள் போல் அசையாமல் நின்றார்கள். அவர்களுடைய தலைமுடிச்சு அவிழ்ந்தது; கங்கணங்களும், வஸ்திரங்களும் நழுவின.

15–24. பின்பு ஸ்ரீகிருஷ்ணன் பட்டணத்து ஜனங்களை நோக்கி, "தனுர்யாகம் எவ்விடத்தில் நடக்கிறது? வில் எவ்விடத்தில் வைக்கப்பட்டிருக் கிறது? என்று கேட்டுக்கொண்டு அந்த ஸ்தலஞ் சென்று அவ்விடத்தில் ஸ்தாபித்துப் பூஜிக்கப்பட்டி ருக்கும் வில்லைப்பார்த்தார். அது இந்திரனுடைய வில்போல் அத்புதமாகவிருந்தது; அநேக வீரர்களால் காப்பாற்றப்பட்டிருந்தது; அதனைப்பார்த்த ஸ்ரீகிருஷ்ணன் அதனை எடுக்க முயற்சிக்க, காவலாட்கள் தடுத்தார்கள்; அப்படியும் அவர்களை லட்சியஞ் செய்யாமலேயே இடது கையால் விளையாட்டாக வில்லை எடுத்து வெகு சீக்கிரமாக நாணேற்றி, சகல ஜனங்களும் பார்த்துக்கொண்டிருக்க மதங்கொண்ட யானை கருப்பங் கழியை ஒடித்தாற்போல அந்த வில்லை முறித்தார். அந்த வில் ஒடிந்ததால் மிக்கச் சப்தம் உண்டாயிற்று. அது ஆகாயம், பூமி, திக்குகள் முதலிய எங்கும் பரவிற்று. அதனைக்கேட்டு கம்ஸன் பயந்து நடுங்கினான். வில்லை ஸம்ரக்ஷித்துக் கொண்டிருந்த வீரர்களும், அவர்களுடைய சேவகர் களும் கிருஷ்ணனைப் பிடிக்க விரும்பி, 'இவனை பிடியுங்கள்; கட்டுங்கள்" என்று சொல்லிக்கொண்டு கிருஷ்ணனிடம் ஓடிவந்தார்கள். இப்படிக் கெட்ட

எண்ணத்துடன் வருகிற வீரர்களைப் பார்த்துப் பலராமனும், ஸ்ரீகிருஷ்ணனும் வில்லின் இரண்டு துண்டுகளையெடுத்துக்கொண்டு அவர்களைக் கொன் றார்கள். அதைக் கேட்ட கம்ஸன் ராமகிருஷ்ணர்களைக் கொல்வதற்குச் சில ஸைன்யங்களை அனுப்பினான். அதனையும் ராமகிருஷ்ணர்கள் கொன்று அந்தக் கிரஹத்திலிருந்து வெளிக்கிளம்பி, பட்டணத்திய வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு ஸந்தோஷமாகச் ஸஞ்சரித்தார்கள். அவர்களுடைய அத்புதமான சரிதத்தைக் கண்ணுற்ற பட்டணத்து ஜனங்கள் இவர்களுடைய மஹிமை, தைர்யம், ரூபம் ஆகிய இவைகளால் இவர்களைச் சிறந்த தேவர்களென்றே நினைத்தார்கள்.

இப்படி அவ்விருவரும் தங்களிஷ்டப்படி ஸஞ்சரித்து வரும்பொழுது ஸூர்யன் அஸ்தமனத்தை அடைந்தார். ராமகிருஷ்ணர்களும் மற்ற கோபர்களு டன் பட்டணத்திலிருந்து தங்களுடைய விடுதிக்குச் சென்றார்கள். லக்ஷ்மீ தேவியானவள் மற்றவர்களை விட்டு எவருடைய தேஹத்தைத் அடைந்தாளோ, புருஷர்களுக்கு ஆபரணம் போன்றவராகிய அந்தப் பகவானுடைய திவ்யதேஹத்தைத் தர்சித்து பட்டணத்து ஸ்திரீகள் ஆனந்தத்தை அடைந்தார்கள். அதனால் கிருஷ்ணன் கோகுலத்திலிருந்து ப்ரயாணப்படும் பொழுது கோபிகைகள் எதைச்சொன்னார்களோ அவைகள் உண்மையாயின. மேலும் ராமகிருஷ்ணர் கள் விடுதியில் பாதங்களை அலம்பி, பாலன்னத்தைப் புஜித்துக் கம்ஸனுடைய எண்ணத்தைத் தெரிந்து கொண்டு அன்றைய ராத்திரி ஸுகமாக வஸித்தார்கள்.

25–31. கம்ஸன் கிருஷ்ணனால் வில் முறிக்கப் பட்டதையும், காவலாட்கள் கொல்லப்பட்டதையும், தன்னால் அனுப்பப்பட்ட ஸைன்னியங்களுடைய வதத்தையும், ராமகிருஷ்ணர்களுடைய சரிதத்தையும் கேள்விப்பட்டுப் பயந்து வெகுநேரம் தூக்கமில்லாமல் விழித்துக் கொண்டிருந்தான். மேலுமவனுக்கு அன்றைய ராத்திரி விழித்துக்கொண்டிருக்கும்பொழுதும், தூங்கும் பொழுதும் (ஸ்வப்பனத்திலும்) வெகு அபஸகுனங்கள் நேர்ந்தன. அவை மரணம் ஸமீபித்தது என்பதைக் காட்டின. அவை எவையெனில் கண்ணாடி முதலியவைகளில் தன்னுடைய சரீரம் பிரதிபலிக்கும் பொழுது அந்தப் பிரதிபிம்பத்தில் தலைமாத்திரந் தெரியவில்லை. சந்திரன் முதலிய தேஜஸ்ஸுக்கள் இரண்டாகத் தோன்றின, ப்ரதிபிம்பத்தில் இடுக்கு இருப்பதாகத் தோன்றியது; காதுகளைக் கையால் பொற்றிக்கொண்டால் (மறைத்தால்) சப்தம் கேட்கவில்லை.

மரங்கள் ஸுவர்ணமயங்களாகத் தோன்றின. தூளி, சேறு முதலியவைகளில் நடக்கும்பொழுதும் காலடி கண்ணுக்குப்புலப்படவில்லை. பின்னும் ஸ்வப்பனத்தில் பிணத்தை கட்டிக்கொள்வதாகவும், கழுதையின் மீதேறித் தாமரைக் கிழங்கைப் புஜித்து எண்ணெய் தேய்த்துக்கொண்டு, சம்பரத்தைப் புஷ்ப மாலையைத்தரித்து வஸ்திரமில்லாமல் தனியே செல்வதாகவும் தோன்றியது. இப்படி சொப்பனத்திலும், விழித்துக்கொண்டிருக்கும்பொழுதும், இன்னும் பலவகையான அபஸகுனங்களைப் பார்த்துக் கம்ஸன் மரணம் நேருமோவென்று பயந்து, கவலையுள்ளவனாகி நல்ல நித்திரையில்லாமலிருந்தான்.

32–38. மறுநாள் காலையில் ஸூர்யன் ஜலத்திலிருந்து கிளம்பி உதயமானார். கம்ஸன் மல்லர்களை விளையாடச் செய்வதாகிய உத்ஸவத்தை நடத்தினான். அந்தரங்க ஸ்தலத்தை வேலைக்காரர்கள் (மல்லர்கள் யுத்தஞ்செய்யுமிடம்) அலங்கரித்தார்கள். தூரி வாத்தியங்களும் பேரிவாத்யங்களும் முழக்கப் பட்டன. பட்டுத்தோரணங்களாலும், புஷ்பங்களாலும் மஞ்சங்கள் அலங்கரிக்கப்பட்டன. பட்டணத்திலுள்ள வர்களும், தேசத்திலிருந்து வந்தவர்களுமான ஜனங்கள், பிராஹ்மணர்கள், க்ஷத்திரியர்கள் என்ற முறைப்படி அவரவர்களுக்குத் தகுதியான மஞ்சங்களில் உட்கார்ந்தார்கள். கம்ஸன் அரசனுக்குத் தகுதியான மஞ்சத்தில் உட்கார்ந்து மனக்கவலையுடனிருந்தான். அவனுடைய ஸமீபத்தில் மந்திரிகளிருந்தார்கள். பின்னும் கம்ஸனைச்சுற்றி அநேக அரசர்கள் உட்கார்ந்தார்கள். தூர்யம் முதலிய வாத்தியங்கள் முழக்கப்பட்டன. மல்லர்கள் ஸந்தோஷத்தால் கைகளை அடித்துக்கொண்டார்கள். மேலும் மல்லர் களுடைய தாள சப்தமானது வாத்தியச் சப்தத்தைக் காட்டிலும் அதிகமாகக்கேட்கப்பட்டது. மல்லர்களும் அலங்காரஞ் செய்துக்கொண்டு மிகுந்த கரவத்துடன் தங்கள் உபாத்தியாயரை முன்னிட்டுக் கொண்டு அந்தச் சபைக்கு வந்தார்கள். பின்னும் சாணூரன், முஷ்டிகன், கூடன், சலன், தோஸலன் ஆகிய மல்லர்கள் வாத்தியச்சப்தத்தைக் கேட்டு ஸந்தோஷித்து அவ்விடம் வந்தார்கள். அப்பொழுது கம்ஸன் நந்த கோபர் முதலிய கோபர்களை அழைத்துவரும்படிச் ஸேவகர்களையனுப்ப, கோபர்களும் காணிக்கைகளுடன் அவ்விடம் சென்று அரசனிடத்தில் காணிக்கைகளைக் கொடுத்து மஞ்சத்திலுட்கார்ந்தார்கள்.

அத்யாயம்–43

கிருஷ்ணன் குவலயாபீடத்தைக் கொன்றது

1–16. காலையில் ராமகிருஷ்ணர்களிருவர்களும் ஸ்நாத்தர்களாக மல்லர்களுடைய கர்ஜனையையும், துந்துபி சப்தத்தையும் கேட்டு அந்த உத்ஸவத்தைப் பார்ப்பதற்காக அவ்விடம்வந்தார்கள். அந்த ஸபையின் வாசலில் குவலயாபீடமென்ற ஒரு யானை நிறுத்தப்பட்டிருந்தது. அம்பஷ்டனென்ற யானைப் பாகன் அதனை நடத்திக்கொண்டிருந்தான். அதனைக் கண்ட ஸ்ரீ கிருஷ்ணன் வஸ்திரம் முதலியவைகளை இறுக்கிக் கட்டிக்கொண்டு, சுருட்டையான தலைமயிர் களைச் சேர்த்து முடிந்துகொண்டு, யானைப்பாகனை நோக்கி "ஓ அம்பஷ்ட! அம்பஷ்ட! வழியைவிட்டு விலகிப்போ, தாமதிக்கவேண்டாம், அப்படி விலகாம லிருந்தால் உன்னையும், உன்னுடைய யானையையும் யமலோகத்திற்கு அனுப்பிவிடுவேன்" என்று மேகங் கர்ஜிப்பது போல உரக்கச் சொன்னார்.

அப்படிக் கிருஷ்ணனால் அதட்டப்பட்ட அம்பஷ்டன் மிகவும் கோபங்கொண்டு யானைக்கும் கோபத்தையுண்டுபண்ணிக் கிருஷ்ணன்மீது அந்த யானையைத்தூண்டினான். அந்தக் கஜமானது காலனுக் கும், அந்தகனுக்கும், யமனுக்கும் ஸமமாகவிருந்தது. பின்பு அந்த யானை வேகமாக ஓடிவந்து துதிக்கையால் கிருஷ்ணனைப் பிடித்துக்கொண்டது. அதன் துதிக்கையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு அதனையடித்துக் கால்களின் நடுவில்சென்று மறைந்துக்கொண்டார். பின்பு அந்த யானை

கிருஷ்ணனைக்காணாமல் கோபங்கொண்டு முகர்ந்து பார்த்துக் கிருஷ்ணனிருக்குமிடத்தைத் தெரிந்துக்கொண்டு திரும்பவும் கிருஷ்ணனைத் துதிக்கையால் பிடித்துக் கொண்டது. அவரும் பலாத்காரமாகத் திமிறிக்கொண்டு வெளியில் வந்தார். பின்னுமவர் மிக்கப் பலமுள்ளவரானதால் அதன் வாலைப்பிடித்து இருபத்தைந்து விற்கடைதூரம் இழுத்தார். அது கருடன் ஸர்பத்தை இழுத்தாற்போலிருந்தது. வாலைப் பிடித்துக் கொண்டிருக்கும் கிருஷ்ணனைப் பிடிப்பதற் காக யானை வலதுபக்கமாகத் திரும்பினால் கிருஷ்ணன் இடதுபக்கமாகச்சுற்றி இழுத்தார். அது இடது புறமாகத் திரும்பினால் வலதுபக்கமாக இழுத்தார்.

இப்படிச் சிறுவன் கன்றுக்குட்டியின் வாலைப் பிடித்துச் சுற்றினாற்போல கிருஷ்ணன் அந்த யானையின் வாலைபிடித்துச்சுற்றி அதனைக் கையாலடித்து அதன் கையில் அகப்படாமல் அதை ஏமாற்றினதுமன்றி அதனையும் பூமியில் தள்ளினார். இப்படிக் கீழே விழுந்த அந்த யானையானது மிகவும் கோபங்கொண்டு தன்னுடைய பராக்கிரமம் தடை பட்டதால் பூமியைத் தந்தங்களால் குத்தியது. பிறகு யானைபாகர்களால் அது தூண்டப்பட்டு ஸ்ரீ கிருஷ்ணனுக்கு எதிரில் ஓடிவந்தது. மதுவைக்கொன்ற பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ணன் தமக்கெதிரில் ஓடிவரும் யானையின் துதிக்கையைப் பிடித்து இழுத்துப் பூமியில் தள்ளினார். பூமியில் விழுந்த யானையைக் காலால் மிதித்துக்கொண்டு, அதன் தந்தங்களைப்பிடுங்கி அதனால் அடித்து யானையைக்கொன்று, யானைப் பாகர்களையும் கொன்றார். இன்னுமந்தப் பகவான் யானையின் தந்தத்தைத் தோளில் வைத்துக்கொண்டு

மல்லஸபைக்கு வந்தார். அவருடைய சரீரத்தில் யானை யின் மதஜலத்துளிகளும், ரத்தத்துளிகளுமிருந்தன. மேலும் அவருடைய முகமானது வியர்வைத் துளிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பலராமனும், சில கோபர்களும் ஸ்ரீகிருஷ்ணனுடன் அந்த ஸபைக்கு வந்தார்கள்.

17. ஸ்ரீ கிருஷ்ணனைப்பார்த்து மல்லர்கள் இடி யென்று நினைத்தார்கள். மனிதர்கள் மனிதர்களுக்குட் சிறந்தவரென்று நினைத்தார்கள். ஸ்திரீகள் மன்மதன் சரீரமெடுத்து வந்திருக்கிறான் என்று நினைத்தார்கள். கோபர்கள் தங்களுடைய பந்து (உறவினர்) என்று நினைத்தார்கள். துஷ்டர்களான அரசர்கள் தங்களைச் சிக்ஷிப்பவரென்று நினைத்தார்கள். வஸுதேவரும், தேவகியும் தங்களுடைய புத்திரனென்று நினைத்தார் கள். கம்ஸன் தனக்கு மிருத்யுவென்று நினைத்தான். கிருஷ்ணனுடைய உண்மையை அறியாத ஜனங்கள் கிருஷ்ணனைச் சிசுவென்று (சக்தியற்றவர்) நினைத் தார்கள். யோகிகள் இவரைப் பரமாத்மாவென்று நினைத்தார்கள். விருஷ்ணிகள் பரதேவதையென்று நினைத்தார்கள். இப்படி மேற்காட்டிய பத்துவகையான ஜனங்களால் பத்து வகையாகத் தெரிந்துகொள்ளப் பட்ட கிருஷ்ணன் பலராமனுடன் மல்ல ஸபைக்கு வந்தார்.

18–30. அப்போழுது கம்ஸன் குவலயாபீடம் கொல்லப்பட்டதையும், ஒருவராலும் ராமகிருஷ்ணர் கள் ஜயிக்கமுடியாதவர்களாக இருப்பதையும் பார்த்து, மிக்கக் கவலை அடைந்து, நடுங்கினான். அந்த ஸபையின் நடுவில் நீண்ட கைகளுள்ளவர்களும்,

விசித்திரமான வேஷம், ஆபரணம், மாலை, வஸ்திரம் இவைகளைத் தரித்தவர்களும், பார்ப்பவர்களுடைய மனத்தை அபஹரிப்பவர்களும், மேலான அலங்காரமுள்ள நடர்கள்போல ப்ரகாசிப்பவர்களும், புருஷோத்தமர்களுமாகிய ராமகிருஷ்ணர்களைப் பார்த்து அந்த ஸதஸ்ஸிலுள்ள அரசர்கள் மிகுந்த ஸந்தோஷத்தால் கண்கள் மலர்ந்த அவருடைய முகத்தை வெகுகாலமாகத் தர்சித்தும் போதுமென்ற திருப்தியடையவில்லை. மேலுமவர்கள் பகவானைக் கண்களால் பானஞ்செய்பவர்கள் போலவும், நாக்கினால் நக்குகிறவர்கள் போலவும், மூக்குகளால் முகர்ந்து பார்ப்பவர்கள் போலவும், கைகளால் தழுவிக்கொள்பவர்கள் போலவும் காணப்பட்டார்கள்.

பின்னுமவர்கள் தாங்கள் பார்த்தபடியும் கேள்விப் பட்டபடியும் ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதத்தை அவருடைய ரூபம், குணம், சிரிப்பு, தைர்யம் இவைகளால் நினைத்துக்கொண்டவர்கள் போல ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ள ஆரம்பித்தார் கள். எப்படியெனில் இவ்விருவரும் ஸ்ரீமந் நாராயணனுடைய அம்சபூதர்கள், வஸுதேவருடைய கிரஹத்தில் அவதரித்தவர்கள். இதோ இருக்கும் ஸ்ரீ கிருஷ்ணன் தேவகியினிடம் அவதரித்தவர் இத்தனை காலம் நந்தருடைய. கிரஹத்தில் கோகுலத்தில் மறைந்து (வஸுதேவருடைய புத்திரரென்று தெரியாமல்) வஸித்துக்கொண்டிருந்தார். இவர் நந்தகோகுலத்தில் பூதனையென்னும் ராக்ஷஸியை ஸம்ஹரித்தார். சுழல் காற்றாக வந்த திருணாவர்த்த னென்ற அஸுரனையுங் கொன்றார். இரண்டு மருத மரங்களையும் பூமியில் தள்ளினார். மேலும்

தேனுகன், கேசி, சங்ககூடன் முதலியவர்களையும் கொன்றார். பசுக்களையும், கோபர்களையும் காட்டுத் தீயிலிருந்து காப்பாற்றினார். காளியனென்ற ஸர்பத்தின் கர்வத்தையும், இந்திரனுடைய கர்வத்தையும் அடக்கினார். கோவர்த்தனம் என்ற மலையை ஒரு கையால் தூக்கிக் குடையாகபிடித்துக் கோகுலத்தை மழை, காற்று, இடி இவைகளின் உபத்திரவமில்லாமல் காப்பாற்றினார். பின்னும் கோபிகைகள் அவருடைய புன்சிரிப்புள்ள முகத்தைப்பார்த்து மிகுந்த ஆனந்தங் கொண்டவர்களாகிப் பலவகையான பாபங்களை நிவர்த்தித்துக்கொண்டார்கள். பின்னும் யதுவின் வம்ஸமானது இவருடைய அவதாரத்தால் மிகுந்த கீர்த்தியுள்ளதும், மிகுந்த மாஹாத்மியமுள்ளதும், மிகுந்த லக்ஷ்மி பொருந்தியதுமாக ஆகப்போகிறது" என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். தாமரை மலர் போன்ற கண்களுள்ள இந்தப் பலராமன் இவருக்குத் தமையன்; இவரால் ப்ரலம்பன், வத்ஸன், தேனுகன் முதலியவர்கள் கொல்லப்பட்டார்கள்" என்றும் ஜனங்கள் சொல்லிக்கொண்டார்கள்.

31–40. இப்படி ஜனங்கள் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது வாத்யங்கள் முழக்கப் பட்டன. அப்பொழுது சாணூரனென்ற மல்லன் ராமகிருஷ்ணர்களை நோக்கி "ஓ நந்தகுமாரனாகிய கிருஷ்ண! ஓ ராம! நீங்களிருவர்களும் மிக்க பலசாலிகள். முஷ்டியுத்தத்தில் தேர்ந்தவர்கள் என்று அரசன் கேள்விப்பட்டு உங்களுடைய பலத்தைப் பார்ப்பதற்காக வரவழைத்திருக்கிறார். ஜனங்கள், மனத்தாலும், வாக்கினாலும், சரீரத்தாலும், அரசனுக்கு பிரியமான காரியத்தைச் செய்தால் க்ஷேமத்தை

யடைவார்கள். அப்படியில்லாவிடில் அவர்களுக்கு க்ஷேமம் கிடைக்கிறதில்லை. கோபர்கள் காடுகளில் மிக்க ஸந்தோஷமாக மாடுகளை மேய்த்துக்கொண்டு முஷ்டியுத்தஞ்செய்து விளையாடுவது வழக்கமல்லவா? ஆனதால் நாங்களும் நீங்களுமாக அரசனுக்குப் பிரியமான கார்யத்தைச்செய்வோம். அரசன் ஸகல பிராணிகளின் ஸ்வரூபியாகையால் அவரை ஸந்தோஷிக்கச்செய்தால் ஸகலப் ப்ராணிகளும் ஸந்தோஷப்படுவார்கள்" என்று சொன்னான். அதனைக் கேட்டு கிருஷ்ணன் முஷ்டியுத்தஞ்செய்ய இஷ்டம் உள்ளவராகி அதனை ஸ்லாகித்து "அரசனுடைய ப்ரஜைகளாகிய நீங்களும் வனத்தில் ஸஞ்சரிப்பவர் களுமான நாங்களும் அரசனுக்கு ப்ரியமானதைச் செய்வோம். அதுவே எங்களுக்கு மிகுந்த அனுக்கிரஹ மாகிறது. ஆனாலும் நாங்கள் சிறுவர்களாகையால் எங்களுக்கு ஸமமான பலமுள்ளவர்களுடன் உசிதப்படி விளையாடுகிறோம். இந்த ஸபையிலுள்ள ஸதஸ்யர்களுக்கு அதர்மம் உண்டாகவேண்டாம்" என்று தேசத்துக்கும், காலத்துக்கும் தகுதியான வார்த்தையைச் சொன்னார். அதனைக் கேட்ட சாணூரன் கிருஷ்ணனை நோக்கி "நீ சிறுவனல்ல; பலராமன் பலசாலிகளுக்குட் சிறந்தவர்; ஆயிரம் யானை பலமுள்ள குவலயாபீடமென்ற யானையானது உம்மாலடிக்கப்பட்டதல்லவா? ஆகையால் நீங்களிரு வர்களும் பலசாலிகளேயாம். நீர் என்னுடன் யுத்தஞ்செய்ய வேண்டும். பலராமன் முஷ்டிகனுடன் யுத்தஞ்செய்யட்டும், இந்த விஷயத்தில் தர்மவிரோதம் ஒன்றுமில்லை," என்று சொன்னான்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்--44

கம்ஸவதம்.

இப்படிப் பகவான் சாணூரனுடன் யுத்தஞ் செய்வதாக நிச்சயித்துச் சாணூரனை தீர்த்தார்.. ரோஹிணீ தேவியின் புத்திரனாகிய பலராமன் முஷ்டிகனென்பவனை தீர்த்தார்.. அவர்கள் கைகளைக் கைகளால்பிடித்துக்கொண்டும், துடைதட்டிக் கொண்டும், ஒருவரையொருவர் கட்டிக்கொண்டும், கைகளால் கைகளைப் பிடித்துக் கொண்டும், கால்களால் கால்களைப் பிடித்தும் ஒருவரையொருவர் ஜயிக்க வேண்டுமென்ற விருப்பத்துடன் இழுத்தார்கள். மேலுமவர்கள் முஷ்டிகளை முஷ்டிகளாலும், முழங்கால்களால் முழங்கால்களையும், தலையால் தலையையும், மார்பினால் மார்பையும் அடித்துக் கொண்டார்கள். பின்னுமவர்கள் கை முதலியவை களைப் பிடித்து நாலுபக்கங்களிலும் சுற்றுவது, ஒருவரையொருவர் தூக்கியெறிவது, கைகளால் இறுகக் கட்டிகொள்வது, கீழே தள்ளிவிட்டு முந்திப்போவது, பிந்திச்செல்வது இவைகளைச் செய்து ஒருவரை யொருவர் தடுத்தார்கள். பின்னுமவர்கள் கால்களையும், முழங்கால்களையும் சேர்த்துப் பிடித்துத்தூக்குவது, கைகளால் உயரத்தூக்கி எறிவது, கழுத்தைக் கட்டிக்கொள்ளும்போது சரீரத்தை உதறி அவனைக் கீழே தள்ளுவது, கை, கால் முதலியவைகளை ஒன்றாகச் சேர்த்து கீழே அழுத்திவிடுவது முதலியவைகளைச் செய்து ஒருவருக்கொருவர் சண்டைசெய்து வந்தார்கள். அந்த ஸமயத்தில் அவ்விடம் சேர்ந்திருந்த எல்லா ஸ்திரீகளும் துயருடன்

பின்வருமாறு சொல்லிக்கொண்டார்கள். "சிறுவர்களா கிய ராமகிருஷ்ணர்களையும், பலிஷ்டர்களாகிய சாணூரன் முதலியவர்களையும் சேர்த்து யுத்தம் செய்யும்படி அரசனும் சபையில் உள்ளவர்களும் பார்த்திருப்பதால் இது மிகவும் அதர்மம். அந்த மல்லர்கள் மலை போன்றவர்கள்; இவர்களுடைய ஸகல அவயவங்களும் வஜ்ரம்போல் கெட்டியானவைகள்; ராமகிருஷ்ணர்களோ மிகவும் மிருதுவான அவயவங்களுள்ளவர்கள்; சிறுவர்கள்; யௌவன வயதையடையாதவர்கள்; ஆகையால் இவர்களுக்கும், மல்லர்களுக்கும் எவ்வளவு பேதமிருக்கிறது? இந்த ஸபையில் அதர்மம் நடக்கிறது. அதர்மமிருக்கும் ஸதஸ்ஸில் வஸிக்கக்கூடாது. வித்வானாகவிருப்பவன் ஸதஸ்ஸிலுள்ள தோஷங்களை நினைத்துக்கொண்டு சபைக்குப் போகமாட்டான்.

ஏனென்றால் அவ்விடத்தில் தர்மவிரோதமான காரியங்கள் நடந்தால், அதனைத்தான் அறிந்திருந்தும் சொல்லாமல் மௌனமாகவிருந்தாலும், எனக்குத் தெரியாதென்று விபரீதமாகச் சொன்னாலும், பாபத்தையடைவான். சத்துருவின் நாலுபக்கத்திலும் ஓடுகிற கிருஷ்ணனுடைய முகத்தைப்பாருங்கள். அது ஜலத்துளிகளால் நனைந்த தாமரைமலர்போல் வியர்வைத் துளிகளுள்ளதாகவிருக்கிறது. முஷ்டி கனிடத்தில் கோபத்தால் சிரித்துக்கொண்டும், பரபரப்புள்ளதும், சிவந்த கண்களுள்ளதும், மனோஹரமுமான பலராமனுடைய முகத்தைப் பாருங்கள். இந்தக் கிருஷ்ணன் புராண புருஷனாகிய ஸ்ரீமந் நாராயணனேயொழிய வேறில்லை. அவரே மனுஷ்யனாக அவதரித்திருக்கிறார். மேலுமிவருடைய

பாதங்களைப் பரமசிவனும் லக்ஷ்மிதேவியும் பூஜிக் கிறார்கள் அப்படிப்பட்ட ஸ்ரீகிருஷ்ணன் காட்டுப் புஷ்பங்களால் தமது சரீரத்தை அலங்கரித்துக் கொண்டும் பசுக்களை மேய்த்துக்கொண்டும், வேணுகானஞ் செய்துகொண்டும் கோகுலத்தில் ஸஞ்சரித்ததால் அந்தப் பூமி மிகவும் புண்ணியம் பெற்றதாகிறது. மேலும் இந்தக் கிருஷ்ணனுடைய திவ்ய சரீரமானது மிக்க அழகு பொருந்தியது; ஒப்புயர்வில்லா கீர்த்தியுள்ளது; ஐச்வர்யமுள்ளது; லக்ஷ்மி பொருந்தியது. அப்படிப்பட்ட அந்தத் திவ்ய சரீரத்தைத் தர்சித்த கோபிகைகள் என்ன தபஞ் செய்தார்களோ? பின்னுமவர்கள் மாடு கறக்கும்பொழுதும், நெல் முதலிய வைகளை குத்தும்பொழுதும், ஊஞ்சலாடும்பொழுதும், குழந்தைகளைச் சமாதானஞ் செய்யும்பொழுதும், ஜலம் கொட்டும் பொழுதும், பெருக்கும்பொழுதும், கிருஷ்ணனிடத்திலேயே சித்தத் தைச்செலுத்தி மிகுந்த பிரியத்துடன் ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு கிருஷ்ணனுடைய சரிதத்தையே கானஞ் செய்கிறார்கள்.

ஆனதால் அவர்கள் மேலானவர்களேயாம். பின்னு மவர்கள் காலையில் கிருஷ்ணன் கோகுலத்தி லிருந்து வனஞ்சென்று ஸாயங்காலத்தில் வனத்திலிருந்து கோகுலத்திற்கு வரும்பொழுது கருணைபொருந்திய பார்வை, சிரிப்பு ஆகிய இவைகளுள்ள கிருஷ்ணனுடைய முகத்தைபார்த்தும் அவருடைய வேணுகானத்தைக்கேட்டும் ஆனந்தத்தை அடைகிறார்கள். ஆனதால் அவர்களே மிகுந்த புண்ணியஞ்செய்தவர்கள்" என்று சொல்லிக்கொண் டார்கள். இப்படி ஸ்திரீகள் சொல்லிக்கொள்ளும்போது

யோகேச்வரராகிய ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களுடைய பயத்தை நிவர்த்திப்பதற்காகச் சத்துருவைக் கொல்வதற்கு யத்தனித்தார். இம்மாதிரியான பட்டணத்து வார்த்தையைக்கேட்டு வஸுதேவரும், தேவகியும் ராமகிருஷ்ணர்களுடைய சக்தியை அறியாதவர்களா கையால் புத்திர ஸ்நேஹத்தால் மிகவும் துக்கித்தார்கள்.

20–31. ஸ்ரீ கிருஷ்ணனும், சாணூரனும், பலராமனும், முஷ்டிகனுமாகச்சேர்ந்து முஷ்டி யுத்தத்தின் முறைப்படி யுத்தஞ்செய்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணனுடைய தேஹம் வஜ்ரம்போல் கெட்டியாக இருந்ததினால் அதனுடைய அடியினால் சாணூரனு டைய சரீரம் அடிக்கபட்டு, அடிக்கடிச் சாணூரன் களைப்படைந்தான். கொட்டப்பிராந்தின் வேகம் போன்ற வேகமுள்ள சாணூரன் இருகைகளையும் முஷ்டி செய்துக்கொண்டு மிகுந்த கோபத்துடன் ஸ்ரீ கிருஷ்ணனுடைய மார்பில் அடித்தான். இப்படிச் சாணூரனால் அடிக்கப்பட்டும் ஸ்ரீ கிருஷ்ணன் புஷ்பமாலையால் அடிக்கப்பட்ட யானைபோல் அசையவில்லை. மேலும் அவர் சாணூரனுடைய இருகைகளையும் பிடித்து நாலுபக்கங்களிலும் இழுத்துச் சுழற்றிப் பூமியில் அடித்தார். (தள்ளினார்). அதனால் சாணூரன் ஆபரணம், மாலை, தலைமயிர் ஆகிய இவைகளில் அலங்கோலமாகி மரணமடைந்தான். அவன் பூமியில் விழுந்தது இந்திரத்வஜம் விழுந்தாற் போலிருந்தது. அப்படியே முஷ்டிகன் தனது முஷ்டியால் பலராமனைக் குத்தினான். மிக்க பலசாலி யான பலராமன் தம்முடைய கையால் முஷ்டிகனை அறைந்தார். அதனால் முஷ்டிகன் காற்றினால் பூமியில் தள்ளப்பட்ட மரம்போல வாயினால் ரத்தத்தைக்

Released by Maran's Dog, Toronto , Canada

கக்கிக்கொண்டு பூமியில் விழுந்து மரணமடைந்தான். பின்பு கூடனென்பவன் பலராமனை எதிர்த்தான். பலராமன் அலக்ஷ்யமாக இடதுகையால் அவனைக் குத்தினார். அதனால் மரணமடைந்தான். அதன்பின் சலன், தோஸலன் என்ற இருவர்களும் கிருஷ்ணனை எதிர்த்தார்கள். பகவான் அவர்களைக் காலால் உதைத்தார். அவர்கள் அதனால் தலை உடைந்தவர் களாகிப் பூமியில் விழுந்து பரலோகஞ்சென்றார்கள். இப்படிச் சாணூரன், முஷ்டிகன், கூடன், சலன், தோஸலன் என்ற மல்லர்கள் மரணமடைந்ததைக் கண்ணுற்ற மற்ற மல்லர்கள் உயிர்பிழைக்க விரும்பி ஓடினார்கள். பின்னும் ராமகிருஷ்ணர்கள் தங்கள் ஸ்நேகிதர்களான கோபர்களை அழைத்து அவர்களுடன் சேர்ந்து விளையாடினார்கள். வாத்யங்கள் முழங்கப் பட்டன. அதனைக் கண்ணுற்ற ஜனங்கள் ஸந்தோஷித்தார்கள். கம்ஸனைத் தவிர மற்றவர்களும், ப்ராஹ்மணர்களும் நல்லது, நல்லது என்று ஸ்லாகித்தார்கள்.

32–43. இப்படி முக்கியர்களான மல்லர்கள் அடிக்கப்பட்டும் மற்றவர்கள் பயந்து ஓடிப்போவதை யும் கண்ட கம்ஸன் வாத்யங்களை நிறுத்திவிட்டுச் சேவகர்களை நோக்கி "வஸுதேவருடைய புத்திரர் களான இவர்கள் கெட்ட நடையுள்ளவர்கள்; ஆனதால் இவர்களைப் பட்டிணத்திலிருந்து துரத்திவிடுங்கள். கோபர்களுடைய பொருளை அபஹரியுங்கள். துர்புத்தியுள்ளவனாகிய நந்தனுக்கு விலங்கு போடுங்கள். துர்புத்தியுள்ளவராகிய வஸுதேவரும் என்னுடைய பிதாவாகிய உக்ரஸேனரும் அவர்களைச் சார்ந்தவர்களும் சத்துரு பக்ஷத்திலிருக்கிறார்கள்.

ஆனதால் அவர்களைக் கொல்லுங்கள்" என்று சொன்னான். அதனைக்கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் கோபங்கொண்டு, சிரமமில்லாமல் மிகுந்த லாகவத்துடன் கம்ஸன் உட்கார்ந்திருக்கும் உயரமான மஞ்சத்திலேறி னார். அப்பொழுது ஸஹிக்கமுடியாத தேஜஸுள்ள ஸ்ரீ கிருஷ்ணன் அவனைப் பிடித்துக்கொண்டார். அது கருடன் ஸர்ப்பத்தைப் பிடித்துக்கொண்டாற் போலிருந்தது. ஸ்வதந்திரரும், ஸகல ஜகத்திற்கும் இருப்பிடமும், தாமரை மலரைத் தொப்புளில் தரித்தவருமாகிய பகவான் கம்ஸனுடைய தலை மயிரைப் பிடித்திழுத்து உயரமான மஞ்சத்திலிருந்து பூமியில் தள்ளித் தாமும் அவன் மீது விழுந்தார். அதனால் கம்ஸன் உயிர் துறந்து மரித்தான். பின்னும் அவனுடைய சரீரத்தைப் பகவான் எல்லா ஜனங்களும் பார்த்திருக்கும்பொழுது யானையைச் சிங்கம் இழுத்தாற்போல இழுத்தார்.

அப்பொழுது ஸகல ஜனங்களும் ஹா, ஹா என்று உரக்கச்சொன்னார்கள். அந்தக் கம்ஸன் பிழைத்திருக்கும்பொழுது ஸ்ரீ கிருஷ்ணனிடம் பயந்து அன்னத்தைப் புஜிக்கும்பொழுதும், தீர்த்தம் முதலியவைகளைக் குடிக்கும்பொழுதும், ஸஞ்சரிக்கும் பொழுதும், தூங்கும்பொழுதும், மூச்சு விடும்பொழுதும், பகவானையே த்யானஞ் செய்துக்கொண்டிருந் தவனானதலால் மற்றவர்களால் அடைய முடியாததான பகவானுடைய ஸ்வரூபத்தை அடைந்தான். பின்பு கங்கன், ந்யக்ரோதன் முதலிய எட்டுச் சஹோதரர் களும் கம்ஸனுடைய வதத்திற்கு பிரதிசெய்ய விரும்பினவர்களாகி ஓடிவந்தார்கள். இப்படி வேகமாக ஓடிவரும் அவர்களைப் பலராமன் பரிகமென்ற

ஆயுதத்தால் அடித்து நாசஞ்செய்தார். அது சிங்கம் மிருகங்களைக் கொன்றாற்போலிருந்தது. அப்பொழுது ஆகாயத்தில் துந்துபி வாத்யங்கள் முழங்கப்பட்டன. ப்ரஹ்மதேவர், பரமசிவன் முதலியவர்கள் மிக்கப் பிரியத்துடன் புஷ்பமாரி பெய்து பகவானை ஸ்தோத்திரஞ் செய்தார்கள்.

44–49. ஓ பரீக்ஷித்து மஹாராஜனே! அந்தக் கம்சன் முதலியவர்களுடைய பத்தினிகள், பர்த்தாக்கள் மரணமடைந்ததால் துக்கித்துக் கண்ணீரைப்பெருக்கித் தலையில் அடித்துக்கொண்டு அந்தபுரத்தைவிட்டு வெளியில் வந்தார்கள். மேலும் கொல்லப்பட்டுப் பூமியில் படுத்திருக்கும் புருஷர்களைக் கட்டிக்கொண்டு மிக்க துக்கத்துடன் அழுதார்கள். எப்படியென்: "ஓ நாத! பிரியமுள்ளவரே! தர்மத்தையறிந்தவரே! தயை பொருந்தியவரே! வாத்ஸல்யமுள்ளவரே! நீர் ஒருவர் மரணமடைந்ததால் நாங்களும் குழந்தைகளும் மரணமடைந்தவர்களாகிறோம். நாதனாகிய உம்மை விட்டுப்பிரிந்த நாங்கள் எப்படிச் சந்தோஷமில்லாமல் இருக்கிறோமோ, அப்படி இந்த நகரமும் மங்களகார்ய மற்றதாகப் பிரகாசிக்கவில்லை. நீர் குற்றமற்றவர் களான பிராணிகளுக்கு மிகவும் த்ரோஹஞ்செய்தீர். அதனால் இம்மாதிரியான நிலைமை உமக்கு நேர்ந்தது. பிராணிகளுக்குத் த்ரோஹஞ்செய்பவன் க்ஷேமத்தை அடைவானா? இந்த ஸ்ரீகிருஷ்ணன் சகல பிராணிகளையும் சிருஷ்டிப்பவர்; நாசஞ்செய்ப வர், ஆனதால் இவருக்கு அபகாரஞ்செய்பவன் ஸுகத்தை அடையமாட்டான்" என்று ப்ரலாபித்தார்கள்.

50–52. இப்படிப் பிரலாபிக்கிற ஸ்திரீகளைக்

கண்ணுற்ற பகவான் சகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாக இருப்பவரானதால் அவர்களைச் ஸமாதானஞ்செய்து மரித்தவர்களுக்குச் செய்ய வேண்டிய உத்திரகிரியைகளைச் செய்வித்தார். பின்பு ராமகிருஷ்ணர்கள் தங்கள் தாய் தந்தைகளை விலங்கி லிருந்து விடுவித்துத் தங்களுடைய தலை அவர்களுடைய பாதத்தில் படும்படி நமஸ்கரித்தார் கள். அப்பொழுது தேவகியும் வஸுதேவரும் ராம கிருஷ்ணர்களை ஜகதீசர்களென்று நினைத்து அஞ்சலி செய்துகொண்டிருந்தார்கள். கட்டிக் கொள்ளவில்லை.

அத்யாயம்–45

ராமகிருஷ்ணர்கள் வித்தியாப்யாஸஞ் செய்தது

புருஷோத்தமராகிய கிருஷ்ணன் தம்முடைய தாய்தந்தையர்கள் உண்மையையறிந்துக் கொண்டார் கள் என்பதைத் தெரிந்துகொண்டு இவர்களுக்கு தத்வஜ்ஞானம் உண்டாக வேண்டாமென்று, ஜனங்களை மோஹிக்கச்செய்யக்கூடிய தம்முடைய மாயையாகிய வலையை வீசினார். பின்னும் ஸாத்வதர் களுக்குட் சிறந்தவராகிய பகவான் மிகுந்த வணக்கத்துடனும், ப்ரீதியுடனும் அம்மா! அண்ணா! என்று அழைத்துத் தாய்தந்தையர்களை நோக்கி "நீங்கள் எங்களிடத்தில் நித்தியம் ப்ரீதியுள்ளவராக இருந்தும் பால்யம், கௌமாரம், பௌகண்டகம் என்ற வயதுகளில் உண்டான எங்களுடைய விளையாட் டைப்பார்த்துச் ஸுகத்தையடையவில்லை. நாங்களும் உங்களுடைய சமீபத்தில் வஸிக்காததால் குழந்தைகள் தகப்பனாருடைய வீட்டில் வஸித்து அனுபவிக்கும் ஸுகம் எங்களுக்கும் கிடைக்காமற்போயிற்று.

சரீரமானது தர்மம் முதலிய சகல புருஷார்த்தங் களுக்கும் சாதனமாகவிருக்கிறது. ஆனதால் அதனை உண்டுப்பண்ணிப் போஷித்தவர்களான தாய்தந்தையர் களுக்குப் புத்திரன் நூறுவருஷகாலமாக எவ்வித ஸுச்ருஷை செய்தாலும் அவர்கள் செய்ததற்குத் தகுதியாக ஆகிறதில்லை. ஆகையால் தேஹபலம், பணம் இவைகளுள்ளவனாகவிருந்தும் எவன் தாய்தந்தையர்களைப் போஷிக்காமல் விட்டுவிடுகிறா னோ, அவன் மரணமடைந்த பிறகு தன்னுடைய

மாம்ஸத்தையே புஜிக்கும்படி யமபடர்களால் தாண்டப்படுவான். மேலும் வயது முதிர்ந்ததாய், தந்தை, பதிவ்ரதையான பார்யை (மனைவி) பாலனான புத்திரன், ஆசார்யன், ப்ராஹ்மணன், சரணமடைந்தவன் ஆகிய இவர்களை எவன் பணம் தேஹபலம் இவைகளிருக்கும்பொழுதும் காப்பாற்றவில்லையோ, அவன் ஜீவித்திருந்தாலும் மரணமடைந்தவனேயாம். ஆனதால் கம்சனிடமிருந்து நித்தியம் பயந்தவர்களும், தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியாதவர்களுமான உங்களுக்கு ஸுச்ருஷை முதலியவைகளைச்செய்யாமல் வீணாகக் காலத்தைக்கழித்தோம். ஆனதால் கம்ஸனால் உபத்திரவப்படுத்தப்பட்ட உங்களுக்கு நாங்கள் ஸுச்ருஷை செய்யாமலிருந்ததைப் பற்றி மன்னிக்கவும்" என்று மாயையால் மானிடவேடங் கொண்டவரும், ஜகத்ஸ்வரூபியுமான பகவான்சொல்ல, அதனைக்கேட்டு வஸுதேவரும் யசோதையும் மோஹத்தையடைந்து ராமகிருஷ்ணர்களை மடியில்வைத்து ஆலிங்கனஞ் செய்து சந்தோஷமடைந்தார்கள்.

பின்னுமவர்கள் ஆனந்தத்தால் கண்ணீரைப் பெருக்கிகொண்டு ராமகிருஷ்ணர்களிடத்தில் மிகுந்த ஸ்நேகமுள்ளவர்களாகிக் கண்ணீரால் கண்டமுடைந்து, ஒன்றையும் சொல்லமுடியாமல் மௌனமாக விருந்தார்கள். இப்படி ஸ்ரீகிருஷ்ணன் தாய்தந்தைகளைச் சமாதானஞ்செய்து மாதாமஹராகிய உக்ரசேனருக்கு ராஜ்யத்தைக்கொடுத்து அவரை யாதவர்களுக்கு அதிபதியாகச்செய்தார். பின்னுமவர் உக்ரசேனரை நோக்கி "ஓ மஹாராஜ! நாங்கள் உம்முடைய ப்ரஜைகள், எங்களை நீர் ஆக்ஞாபிக்கத்தகுதியுள்ளவர்; யாதவர்கள் சிங்காஸனத்தில் உட்காரக்கூடாதென்று

(ராஜ்யமில்லையென்று) யயாதி சபித்திருக்கிறார். ஆனாலும் என்னுடைய உத்திரவினால் ராஜ்ய பாலனஞ்செய்யும். நான் உமக்கு வேலைசெய்பவனாக சமீபத்திலிருக்கும்பொழுது தேவர்களும் வணங்கியவர் களாகி உமக்குக் காணிக்கைகளைக் கொடுப்பார்கள். மற்ற அரசர்கள் வணங்குவார்கள் என்பதில் என்ன சந்தேஹம்?" என்று சொல்லி வாயுபகவானை வரவழைத்து ஸுதர்மாவென்ற இந்திரனுடைய ஸபையை உக்ரஸேனருக்காகக் கொண்டுவா" என்று ஆக்ஞாபித்தார் அதனைக்கேட்ட வாயுபகவான் கிருஷ்ணனுடைய உத்திரவை மஹேந்திரனிடந் தெரிவித்தார். மஹேந்திரனும் அதனைக்கேட்டு ஸ்ரீ கிருஷ்ணனுடைய மஹிமையை அறிந்தவனானதால் தன்னுடைய ஸபையை பூமிக்கு அனுப்பினான்.

முந்திக் கம்ஸனிடம் பயந்து தேசாந்திரம் சென்றிருந்த யாதவர்களும், விருஷ்ணிகளும், அந்தகர்களும், தாஸார்ஹர்களும், குஹ்யர்களும் பல திக்குகளிலிருந்து மதுரா நகரத்திற்கு வந்தார்கள். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் தேசாந்திரத்தில் வஸித்துக் கஷ்டப்பட்டவர்களான ஸகல பந்துகளை யும் நன்றாக உபசரித்து அவரவர்களுக்கு வேண்டிய தனத்தைக் கொடுத்து அவரவர்களுடைய வீட்டில் வஸிக்கும்படிச் செய்தார். இப்படி யாதவர்கள் முதலியவர்கள் ராம கிருஷ்ணர்களால் காப்பாற்றப் பட்டு உபத்திரவமற்றவர்களாகிப் பூர்ணமனோரத முள்ளவர்களாக (குறையில்லாமல்) அவரவர்கள் வீட்டில் ஸுகமாக வஸித்தார்கள். மேலும் அவர்கள் கருணைபொருந்தியதும், அழகு பொருந்திய புன்சிரிப் புள்ள பார்வையுள்ளதுமான ஸ்ரீ கிருஷ்ணனுடைய

முகத்தை ஒவ்வொரு நாளும் தர்சித்துமிக்கப் பிரியத் துடன் எப்பொழுதும் ஸந்தோஷமாக வஸித்தார்கள். பின்னும் அவர்களில் வயது சென்றவர்கள் பகவானுடைய முகமாகிய தாமரை மலரின் அமிருதத்தைப் பானஞ்செய்து மிக்க பலமுள்ளவர் களாகவும், காந்தியுள்ளவர்களாகவும் யௌவன வயதுள்ளவர்களாகவும் ஆனார்கள்.

22–27. தேவகியின் புத்திரராகிய ஸ்ரீகிருஷ்ணன் பலராமனுடன் நந்தரிடஞ்சென்று அவரை ஆலிங் கனஞ்செய்துகொண்டு "அண்ணா! நீங்களிருவரும் மிக்கப் பிரியத்துடன் எங்களைப் போஷித்தீர்கள். தாய் தந்தைகளுக்குத் தங்கள் குழந்தைகளிடத்தில் சரீரத்தை விட அதிகப் பிரியமிருக்கும். பந்துக்கள் தங்கள் குழந்தைகளை வளர்க்கமுடியாமல் மற்றொருவரி டத்தில் ஒப்புவித்தால் அந்தக் குழந்தைகளைக் தங்களுடைய குழந்தைகளைப் போல ரக்ஷிப்பவர்களே தாய் தந்தைகள். இப்பொழுது நீங்கள் கோகுலத்திற்குப் போகலாம். நாம் பந்துக்களுக்கு ஸுகமானவைகளைச் செய்துபின் உங்களைப் பார்ப்பதற்காக கோகுலத்திற்கு வருகிறோம்" என்று ஸமாதானஞ் செய்து கோகுல வாஸிகளெல்லோரையும் வஸ்திரம், ஆபரணம், தங்கம், வெள்ளி முதலியவைகளால் பிரியத்துடன் பூஜித்தார். நந்தர் கிருஷ்ணனைவிட்டுப் பிரிய மனமில்லாமல் கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு குழந்தையை ஆலிங்கனஞ்செய்து கோபர்களை அழைத்துக்கொண்டு கோகுலஞ்சென்றார்.

28–53. பின்பு வஸுதேவர், கர்க்காசார்யர் முதலிய ப்ராஹ்மணர்களைக்கொண்டு ராமகிருஷ்ணர்களுக்கு

உபநயனஞ்செய்வித்தார். அப்பொழுது அவர் ப்ராஹ்மணர்களுக்கு அலங்காரஞ்செய்து கன்றுள்ள வைகளும், ஸுவர்ணமாலையுள்ளவைகளும், பட்டு வஸ்திரங்களால் அலங்கரிக்கப்பட்டவைளுமான பசுக்களைத் தக்ஷிணையாகக்கொடுத்தார். பின்னுமவர் ஸ்ரீ கிருஷ்ணன் அவதரித்தபொழுது எவ்வளவு பசுக்களை மனத்தால் தானஞ்செய்தாரோ, (ஸங்கல்ப் பித்தாரோ) அதனை நினைத்து அவைகளையும் தானஞ்செய்தார். வஸுதேவருடைய பசுக்களைக் கம்ஸன் அபஹரித்து வைத்துக்கொண்டிருந்ததால் அவைகளை இப்பொழுத வரவழைத்து ப்ராஹமணர் களுக்குக் கொடுத்தார். ராமகிருஷ்ணர்கள் ஸகல வித்யைகளை சிருஷ்டித்தவர்களானாலும், எல்லா வற்றையும் அறிந்தவர்களானாலும், ஜகத்திற்கு அதிபதிகளானாலும், இயற்கையான சுத்த ஞானத்தை மறைத்துக்கொண்டு, மனிதர்களின் வழக்கப்படி யதுகுலத்திற்கு ஆசார்யரான கர்க்கரிடம் ப்ரஹ்மசர்ய விரதத்தைப்பெற்றுக் குருகுல வாசஞ்செய்ய விரும்பினார்கள்.

பின்னும் அவர்கள் காசி தேசத்தில் அவந்தியென்ற பட்டணத்தில் வஸிக்கும் ஸாந்தீபினி யென்பவரிடஞ் சென்று மிக்க வணக்கமுள்ளவர்களாகி அவரை ஆசார்யனாக விதிப்படி அடைந்து தேவனைப்போல் பாவித்துக் குருஸுச்ருஷை செய்து சேவித்தார்கள். அதனைக் கண்ணுற்ற ஜனங்கள் குருகுலவாசஞ் செய்யவேண்டிய மாதிரி, இப்படிப்பட்டதென்றும், குருவுக்குச் ஸுச்ருஷை இப்படிச் செய்யப்பட வேண்டும் என்றும் தெரிந்துக் கொள்ளக்கூடியதாக விருந்தது. இப்படி ராமகிருஷ்ணர்கள் கபடமில்லாமல் ஸுச்ருஷை செய்து வந்ததால் ஸாந்தீபினீ அவர்களிடம்

மிகவும் சந்தோஷித்துச் சகல வேதங்களையும் அவைகளின் அங்கங்களையும், உபநிஷத்துக்களையும், தனுர் வேதத்தையும், மந்திரம், தேவதை இவைகளின் ஞானத்தையும், தர்மசாஸ்திரங்களையும், மீமாம்ஸை முதலியவைகளையும், தர்க்க வித்தையையும், ஆறுவகையான ராஜ நீதியையும். உபதேசித்தார். அந்த ராமகிருஷ்ணர்கள் சகல வித்யைகளையும் சிருஷ்டித்து உலகத்தில் பரவச் செய்தார்களான தாலும் சிறந்த தேவர்களாகையாலும் ஒரே ஒருதடவை ஆசார்யரிடம் உபதேசம் பெற்றவுடன் அவையெல்லா வற்றையும் தெரிந்துக்கொண்டார்கள். இன்னுமவர்கள் அறுபத்துநான்கு நாட்களில் அறுபத்து நான்கு லகளையும் அப்யஸித்தார்கள்.

பின்பு அவர்கள் ஆசார்யரிடஞ்சென்று "நாங்கள் குருதக்ஷிணை கொடுக்கவேண்டுமே; எதனைக் கொடுப்போம்; ஆக்ஞாபிக்கவேண்டும்" என்று கேட்டார்கள். அந்த பிராஹ்மணன் இவர்களுக்கு அற்புதமான மஹிமையிருப்பதையும், மனிதர்களை அதிக்கிரமித்த புத்தியிருப்பதையும் பார்த்துத் தமது பத்னியுடன் யோசித்து ராம கிருஷ்ணர்களை நோக்கி, "ப்ரபாஸ க்ஷேத்திரத்தில் சமுத்திரத்தில் விழுந்து என்னுடைய குழந்தையொருவன் மரணமடைந்தான். அவனைத் திருப்பிக்கொண்டு வந்தால் அதுவே குருதக்ஷிணையாகும்" என்றார். அதனைக்கேட்ட ராமகிருஷ்ணர்கள் மஹாவீரர்களானதால் 'அப்படியே செய்கிறோம், என்று ஒப்புக்கொண்டு ரதத்தின் மீதேறி ப்ரபாஸக்ஷேத்திரஞ் சென்று ஸமுத்திரக்கரையில் க்ஷணகாலமிருந்தார்கள். இப்படி ராமகிருஷ்ணர்கள் வந்திருப்பதை அறிந்து ஸமுத்திரராஜன் அவர்களைப்

பூஜித்தார். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் ஸமுத்திரத்தை நோக்கி "என்னுடைய குருவின் புத்திரனை நீர் பெரிய அலையால் அபகரித்ததாக கேள்விப்படுகிறேன், அந்தப்புத்திரனை சீக்கிரம் கொண்டுவாரும்' என்றார். அதனைக்கேட்ட சமுத்திரராஜன் "ஓ பிரபுவே! உம்முடைய குருபுத்திரனை நான் அபகரிக்கவில்லை. என்னுடைய ஜலத்திற்குள் பஞ்சஜனனென்ற அஸுர னொருவன் வஸிக்கிறான். அவனால் ப்ராஹ்மணருடைய குழந்தை அபகரிக்கப்பட்டது. ஆதலால் ஜலத்திற்குட் சென்று அஸுரனைக்கொன்று குருபுத்திரனை அழைத்துப்போகலாம்" என்றார். அதனைக்கேட்டுப் பகவான் ஜலத்திற்குட்சென்று சங்கரூபமுள்ள அந்த அஸுரனைக்கொன்று அவன் வயிற்றைக் கிழித்து பார்க்கையில் குருபுத்திரனில்லை.

அதனால் ஸ்ரீகிருஷ்ணன் அவனுடைய ஸரீரத்திலுண்டான ஸங்கத்தையெடுத்துக்கொண்டு ரதத்தின் மீதேறினார். பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் பலராமனுடன் ஸம்யமனீயென்ற யமனுடைய பட்டணஞ்சென்று ஸங்கத்தைக் கோஷித்தார். ஸகல ப்ரஜைகளையும் சிக்ஷிப்பவனாகிய யமன் பகவானுடைய ஸங்கத்வனியைக்கேட்டு மிகுந்த பக்தியுடன் அவ்விருவர்களையும் பூஜித்தான். பின்னுமவன் சகல பிராணிகளின் இருதயத்தில் வஸிப்பவனான கிருஷ்ணனை, "விளையாட்டாக மனிதவேடங்கொண்ட உங்களுக்கு நான் செய்ய வேண்டியதென்ன?" என்று கேட்டார். அதனைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணன் யமனை நோக்கி "ஓ மிக்க அதிருஷ்டம்முள்ள யமா! என்னுடைய குருவின் புத்திரன் இவ்விடம் கொண்டுவரப்பட்டிருக்கிறான், அவன் அவனுடைய

கர்மத்தால் இவ்விடம் வந்தவன் ஆனாலும் (அப்பாயு) என்னுடைய உத்திரவினால் அவனைக்கொண்டுவா" என்றார் அதனைக்கேட்ட யமன் "அப்படியே செய்கிறேன்", என்று ஒப்புக் கொண்டு ஸாந்தீபினியின் புத்திரனைக் கொடுத்தான். பின்பு ராமகிருஷ்ணர்கள் அந்த புத்திரனை அழைத்துக் கொண்டு குருவினிடஞ் சென்று புத்திரனை சமர்ப்பித்து இன்னும் எதனைச்செய்யவேண்டும்? என்று கேட்டார்கள். அதனைக்கேட்ட ப்ராஹ்மணன், ஓ குழந்தைகளே! உங்களால் குருஸுச்ரூஷை நன்றாகச் செய்யப்பட்டது; உங்களைப்போன்றவர்களைச் சிஷ்யர்களாக அடைந்த ஆசார்யனுக்கு எதுதான் கிடைக்காது? உங்களுக்கு ஸுத்தமான கீர்த்தியுண்டாகட்டும் (உங்களுடைய சரிதங்களை கேட்பவருக்கு புண்ணியமுண்டாகுமென்று கருத்து). உங்களுடைய கிரஹத்திற்கு போகலாமென்று அனுக்கிரஹித்தார். இப்படி ஆசாரியரிடம் விடைப்பெற்று காற்றுப்போல் வேகமாக ரதத்தின் மீதேறி தங்களுடைய பட்டணத்திற்கு வந்தார்கள். மேககர்ஜனைபோன்ற ரதத்தின் சப்தத்தைக்கேட்டு பட்டணத்து ஜனங்கள் வெகுநாளாக ராமகிருஷ்ணர்களைப் பார்க்காமலிருந்தவர்களான தால் கை தவறிப்போன பொருள் கிடைத்தாற்போல ராமகிருஷ்ணர்களைத் தர்சித்து ஸந்தோஷத்தை அடைந்தார்கள்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–46

கிருஷ்ணன் உத்தவரைக் கோகுலத்திற்கு அனுப்பியது.

விருஷ்ணிகளுக்குட் சிறந்தவரும், மந்திரியும், ஸ்ரீகிருஷ்ணனுக்குத் தோழருமான உத்தவரென்று ஒருவருண்டு. அவர் பிருஹஸ்பதியின் சிஷ்யர், மிக்க புத்திசாலி; கிருஷ்ணனுக்கு அவரிடத்தில் மிக்க பிரியம். அவர் கிருஷ்ணனிடத்தில் அநன்யமாகப் பக்திசெய்பவர்; அப்படிப்பட்ட உத்தவருடைய கையைப் பிடித்துக்கொண்டு சரணமடைந்தவர்களுடைய உபத்திரவத்தை நிவர்த்திப்பவராகிய பகவான் "ஓ நல்ல ஸ்வாபமுள்ள உத்தவ! நீர் கோகுலஞ்சென்று நம்முடைய தாய்தந்தைகளுக்கு ப்ரியத்தையுண்டு பண்ணும். நான் சொல்வதைச்சொல்லி கோபிகைகளுக்கு உண்டாகியிருக்கும் விரஹதாபத்தை நிவர்த்தியும். அந்தக் கோபிகைகள் என்னிடத்திலேயே மனத்தைச் செலுத்தியவர்கள்; என்னையே ப்ராணனாகக் கொண்டவர்கள்; எனக்காகப் பர்த்தா முதலிய பந்துக்களை விட்டவர்கள்; என்னிடத்திலேயே மிக்க ப்ரீதிவைத்து மனத்தால் என்னையே அடைந்திருக்கிறார்கள். எவர்கள் இவ்வுலகம், பரலோகம் இவைகளின் ஸுகத்தையும், அதன் ஸாதனங்களையும் விட்டு என்னையே த்யானிக்கிறார்களோ, அவர்களை நான் அங்கீகரித்து ஸுகப்படுத்துகிறேன். அப்படிப்பட்ட கோபிகைகள் மிக்க ப்ரியனாகிய என்னை விட்டுப் பிரிந்திருப்பதால் என்னை நினைத்து நினைத்து துக்கத்தை ஸஹியாமல் வருத்தப்படுவார்கள். ஆனதால் சீக்கிரத்தில் திரும்பிவருகிறேன் என்ற என் வார்த்தையைக் கேட்டால் கஷ்டப்படாமல் என்னையே

த்யானித்து ப்ராணனை வைத்துக்கொண்டிருப்பார்கள்" என்று சொன்னார்.

8–14. அதனைக்கேட்ட உத்தவர் பகவான் கோபிகைகளுக்குச் சொல்லும்படி அனுக்ரஹித்த ஸமாசரத்தைத்த தெரிந்துகொண்டு ரதத்தின்மீதேறி நந்தகோகுலஞ்சென்றார். அவர் நந்தகோகுலம் வந்த பொழுது ஸூர்யன் அஸ்தமனத்தையடைந்தார். அப்பொழுது காட்டிலிருந்து கோகுலத்துக்கு வருகின்ற பசுக்களின் தூளியால் உத்தவருடைய ரதமானது மூடப்பட்டது. மேலும் அப்பொழுது மதங்கொண்ட ரிஷபங்கள் பசுக்கள் நிமித்தமாக ஒன்றுக்கொன்று சண்டைசெய்து கர்ஜித்தன. பசுக்கள் பருத்த மடிகளுடன் கன்றுகளிருக்குமிடத்தைநோக்கி ஓடின. வெண்மை நிறமுள்ள கன்றுகள் இங்குமங்கும் துள்ளிக் குதித்துக்கொண்டிருந்ததால், அவைகள் கோகுலத்தை அலங்கரித்தன. புல்லாங்குழலுடைய சப்தமும் கேட்கப்பட்டன. கோபிகள் எல்லோரும் அலங்காரஞ் செய்துகொண்டு ராமகிருஷ்ணர்களுடைய புண்ணியகரமான சரிதங்களை கானஞ்செய்து கொண்டிருந்தார்கள். அக்னி, ஸூர்யன், அதிதிகள், பசுக்கள், ப்ராஹ்மணர்கள், பிதுருக்கள், தேவர்கள் இவர்களைப் பூஜிப்பதாலும், தூபம், தீபம், புஷ்பமாலை இவைகளாலும் கோபர்களுடைய வீடுகள் அழகாக இருந்தன. இன்னும் அங்கிருந்த தோட்டங்களிலுள்ள மரங்களெல்லாம் புஷ்பித்திருந்தன. வண்டுகளும் பறவைகளும் சப்தித்துக்கொண்டிருந்தன. மேலும் ஹம்ஸம், நீர்க்காக்கை முதலியவைகளாலும் தாமரை மலரின் கூட்டங்களாலும் அந்தக் கோகுலமானது அழகாகவிருந்தது. பின்பு நந்தர் கிருஷ்ணனுக்கு

அந்தரங்க ஸ்நேஹிதராகிய உத்தவரைப் பார்த்து மிகுந்த பிரியத்துடன் அவரை ஆலிங்கனஞ் செய்து கொண்டு, ஸ்ரீ மஹாவிஷ்ணுவாக நினைத்துப் பூஜித்தார். மேலான ருசியுள்ள அன்னத்தைக் கொடுத்துப் புஜிக்கச்செய்து மெதுவான படுக்கையில் படுக்கவைத்து, கால்பிடிப்பது, முதலியவைகளால் அவருடைய களைப்பை நிவர்த்தித்து, "ஓ மிகுந்த அதிருஷ்டமுள்ளவரே! என்னுடைய தோழரும், சூரனுடைய புத்திரனுமாகிய வஸுதேவர் தம்முடைய குழந்தை முதலிய பந்துக்களுடனும், ஸ்நேஹிதர் களுடனும் க்ஷேமமாகவிருக்கிறாரா? தர்ம ஸ்வபாவமுள்ள ஸாதுக்களான யாதவர்களை எவன் எப்பொழுதும் உபத்திரவப்படுத்திக் கொண்டிருந் தானோ, அந்தப் பாபியான கம்சன் தன்னைச் சார்ந்தவர்களுடன் நாசமடைந்தான் அது தைவச் செயலேயாம்.

கிருஷ்ணன் என்னையும் மாதாவான யசோதை யையும், பந்துக்களையும், தோழர்களையும் தம்மையே தெய்வமாகக்கொண்ட கோபர்களையும், கோகு லத்தையும், பசுக்களையும், பிருந்தாவனத்தையும், கோவர்த்தன மலையையும் நினைத்துக் கொண்டிருக்கிறாரா? ஸ்ரீ கிருஷ்ணன் பந்துக்களைப் பார்ப்பதற்காக ஒரு தடவையாவது இவ்விடம் வருவாரா? அழகான மூக்குள்ளதும், புன்சிரிப்புள்ள பார்வையுள்ளதுமான கிருஷ்ணனுடைய முகத்தை எப்பொழுது தர்சிப்போம்? ஸ்ரீகிருஷ்ணன் காட்டுத் தீயிலிருந்தும் காற்று மழையிலிருந்தும், விருஷபாஸுரனிடமிருந்தும், ஸர்ப்பத்தினிட மிருந்தும், எங்களைக் காப்பாற்றினார். பின்னுமவர் நிவர்த்திக்கமுடியாத

ஆபத்துக்களிலிருந்து ஸம்ரக்ஷித்தார். மேலும் ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதங்களையும், விளையாட்டான கடைக்கண் பார்வையையும், சிரிப்பையும், வார்த்தையையும் நினைக்கும்பொழுது கார்யங்களில் மனம் ப்ரவர்த்திக்கவில்லை. மேலும் நதிகள், மலைகள், வனங்கள், விளையாடும் ஸ்தலங்கள் ஆகிய இவைகள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதங்களால் அலங்கரிக்கப்பட்டிருப்பதால் அவைகளைப் பார்க்கும் பொழுது எங்களுடைய மனமானது ஸ்ரீகிருஷ்ண னிடத்திலேயே செல்லுகிறது. கர்க்கர் சொன்னதை நினைத்துப் பார்க்கும்பொழுது தேவர்களுடைய கார்ய நிமித்தமாகச் சிறந்த தேவர்கள் ராமகிருஷ்ணர்களாக கோகுலத்திற்கு வந்தார்கள் என்று நினைக்கக் கூடியதாகவிருக்கிறது.

மேலும் சிங்கமானது பசுக்களைக் கொன்றாற் போல பதினாயிரம் யானையின் பலமுள்ள கம்ஸனையும், மல்லர்களையும், குவலயாபீடமென்ற சிறந்த யானையையும், விளையாட்டாக ஸ்ரீகிருஷ்ணன் கொன்றார். பின்னும் சிறந்தயானை தடியை முறித்தாற்போல் ஸ்ரீகிருஷ்ணன் மூன்று பனைமரம் உயரமுள்ளதும், மிகக்கெட்டியானதுமானவில்லை ஒடித்தார்; இன்னுமவர் கோவர்த்தனமலையை ஒருகையால் தூக்கி ஏழுநாள் குடையாகப் பிடித்தார் பின்னும் தேவர்களை ஜயித்தவர்களான ப்ரலம்பன், தேனுகன் அரிஷ்டன் திருணாவர்த்தன், பகன் முதலிய அஸுரர்களை லீலையாக ஜயித்தார்;" என்று கிருஷ் ணனுடைய சரிதங்களை நினைத்துக் கிருஷ்ணனிடத்தி லேயே புத்தியைச்செலுத்தி ப்ரேமையால் ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி அதனால் கண்டமடைத்துப்

பேசமுடியாதவராகி மௌனமாகவிருந்தார். இப்படி நந்தரால் வர்ணிக்கப்படும் ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதங்களைக்கேட்ட யசோதை அவரிடத்திலிருக்கும் பிரியத்தால் பால்சுரந்த ஸ்தனங்களுள்ளவளாகி ஆனந்தக்கண்ணீரைப் பெருக்கினாள். நந்தருக்கும், யசோதைக்கும் ஸ்ரீகிருஷ்ணனிடத்திலிருக்கும் மிக்க பிரியத்தைக் கண்ணுற்ற உத்தவர் மிகுந்த ஸந்தோஷத்துடன் அவர்கள் "நீங்களிருவர்களும் மனிதர்களுக்குட் சிறந்தவர்கள். ஸகல லோகங்களுக்கும் குருவாகிய ஸ்ரீமந்நாராயணனிடத்தில் இம்மாதிரிமிகுந்த பக்தியுள்ளவர்களாக விருக்கிறீர்கள். பலராமன் கிருஷ்ணன் என்ற இவர்கள் இந்த ஜகத்திற்கு நிமித்த காரணர்களாகவும் உபாதானகாரணர்களாகவும் இருக்கிறார்கள் ப்ரதான புருஷர்களாயுமிருக்கிறார்கள்.

மேலும் இவர்கள் பிராணிகளிடத்தில் ப்ரவேசித்து பலவகையான பேத ஞானத்திற்கும், ஜீவனுக்கும் நியந்தாக்களாகவிருக்கிறார்கள்; இவர்கள் புராண புருஷர்கள்; ஜனங்கள் சாகுந்தருணத்தில் எந்தப் பகவாணிடத்தில் மனத்தை செலுத்தி அதனால் கர்ம வாஸனையையொழித்து சுத்த ஸத்வமூர்த்தியாகி ஸ்வரூபஞானத்தை அடைந்து சீக்கிரத்தில் பரமபதம் அடைகிறார்களோ, அப்படிப்பட்ட மஹிமை பொருந்தியவரும், எல்லாவற்றிற்கும் காரணமாகவும், நாராயணரும், சிலகாரணத்தால் மனிதவடிவங் கொண்டவருமான இந்த ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் நீங்கள் மனத்தைச் செலுத்தியிருப்பதால் உங்களுக்கு என்ன கார்யம் பாக்கியிருக்கிறது (எல்லாவற்றையும் அடைந்தீர்கள்) ஸாத்வதர்களுக்கு அதிபதியான பகவான் ஸ்வல்ப நாட்களில் கோகுலத்திற்கு வருவார்,

உங்களுக்குப் பிரியத்தைச் செய்வார்; ஸகல யாதவர்களுக்கும் விரோதியாகவிருந்த கம்ஸனை மல்லஸபையில் கொன்று உங்களை நோக்கி கிருஷ்ணன் எதனைச்சொன்னாரோ, (பந்துக்களுக்கு க்ஷேமத்தைச் செய்து கோகுலம் வருகிறேனென்று) அதனை உண்மையாகச் செய்வார் (சீக்கிரம் வருவாரென்று கருத்து) ஓ மிகுந்த அதிஷ்டமுள்ளவர்களே! நீங்கள் துக்கப்படவேண்டாம். ஸமீபத்தில் கிருஷ்ணனை தர்சிப்பீர்கள். மரத்திற்குள் அக்னியிருப்பதுபோல ஸகல பிராணிகளின் ஹிருதயத்திற்குள் கிருஷ்ணன் வஸிக்கின்றார் (மரத்திற்குள்ளிருக்கும் அக்னி கடைந்தால் தான்வெளிப்படும் அதுபோல பக்தியினால்தான் பகவாணுடைய ஸ்வரூபம் அறியப்படுமென்றுக் கருத்து.) அந்தப் பகவான் அஹங்கார மற்றவராகையால் ஒருவரிடத்திலும் அவருக்கு அதிக ப்ரியமில்லை, அவருக்கு விரோதியுமில்லை அவர் எல்லாரிடத்திலும் ஸமபுத்தியுள்ளவரானதால் மேலானவன் தாழ்ந்தவன், ஸமன் என்ற பேத புத்தியுமில்லை.

மேலும் அவருக்கு தாய்தந்தையர்களில்லை, பத்னியில்லை, புத்திரனில்லை. தன்னைச் சார்ந்தவனில்லை, அன்னியரென்பதில்லை. அவருக்கு சரீரமில்லை ஜனனமுமில்லை; புண்யபாபம் முதலிய கர்மமும் அவருக்கு இல்லை; ஆனாலும் அவர் ஸாதுக்களைக் காப்பாற்றுவதற்காக தேவனாகவும், மத்ஸ்யமாகவும், ஸிம்ஹமுமாகவும், மனிதனாகவும் அவதரிக்கிறார். இது அவருக்கு விளையாட்டாகவிருக்கிறது. அவர் உண்மையில் குணஸம்பந்தமில்லாதவரானாலும் ஸத்வம், ரஜஸ், தமஸ், என்ற குணங்களில் ஸம்பந்தப்பட்டவர் போலத் தோன்றுகிறார். ஒருவித ஆசையுமில்லாத

வரானாலும் மாயையின் குணங்களை கொண்டு உலகத்தை ஸ்ருஷ்டிக்கிறார்; காப்பாற்றுகிறார்; ஸம்ஹரிக்கிறார்; கண்ணிலிருக்கும் தோஷத்தால் பூமி அசைவது போல எப்படித் தோன்றுகிறதோ ஆத்மா சித்தமாகத்தம்மை நினைத்துக்கொண்டு சித்தத்தால் செய்யப்படும் கர்மங்களைத் தாம் செய்வதாக நினைத்து கொண்டிருக்கிறான். இந்தக் கிருஷ்ணன் உங்களிருவர்களுக்கு மாத்திரம் புத்திரனில்லை, ஸகல பிராணிகளுக்கும் புத்திரனாக வும், ஆத்மாவாகவும், தாய் தந்தையர்களாகவும், ஈச்வரனாகவும் இருக்கிறார். பின்னும், பார்க்கப்பட்டது, கேட்கப்பட்டது, நடந்தது, நடக்கிறது, நடக்க போகிறது, ஸ்தாவரம், ஜங்கமம், பெரியது, சிறியது ஆகிய இவைகளெல்லாம் உண்மையில் ஸ்ரீகிருஷ்ண னேயாம். அவரைத் தவிர உண்மையானது வேறொன்று மில்லை. அவரே ஸத்ய வஸ்து" என்று சொன்னார்.

45–50. இப்படி நந்தரும் உத்தவருமாகப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது பொழுதுவிடிந்தது. கோபிகைகள் எழுந்திருந்து தீபங்களை ஏற்றிவைத்துக் கொண்டு திண்ணை, ரேழி, வாயிற்படி முதலிய வைகளை மெழுகிச் சுத்தஞ்செய்து தயிர்கடைய ஆரம்பித்தார்கள். அப்பொழுது அவர்களுடைய கங்கணங்களிலும், ஒட்டியாணங்களிலும் இருக்கும் ரத்தினங்கள் தீபத்தின் ஒளியுடன் சேர்ந்து பிரகா சித்தன. மேலும் நிதம்பம், ஸ்தனம், ஹாரம், குண்டலங்கள் ஆகிய இவைகள் அசைந்தன. மேலும் அவர்கள் காதில் அணிந்திருக்கும் குண்டலங்களுடைய காந்தியால் கன்னங்கள் ப்ரகாசித்தன. முகங்கள் குங்குமங்களால் விளங்கின. இப்படி கோகுலத்திலுள்ள

கோபிகைகள் ஸ்ரீகிருஷ்ணனுடைய சரிதங்களைச் சொல்லிக்கொண்டு தயிர்கடையும்பொழுது அதனால் உண்டான சப்தமும் கானஞ் செய்வதாலுண்டான சப்தமும் ஆகாயம்வரையில் எட்டியது. பின்பு ஸூர்யன் உதயமானார். கோகுலவாஸிகளெல்லோரும் ஸ்வர்ணமயமான ரதம் நிறுத்தியிருப்பதைக்கண்டு இது யாருடையது? கம்ஸனுடைய கார்யத்தை முடிப்பவரான அக்ரூரர் வந்திருக்கிறாரா? அந்த அக்ரூரர் தாமரைக்கண்ணனாகிய ஸ்ரீகிருஷ்ணனை மதுராநகரத்திற்கு அழைத்துப் போனாரல்லவா? அதனால் கம்ஸன் அவரிடத்தில் பிரியமடைந் தானல்லவா? அப்படிப்பட்ட கம்ஸனுக்கு நம்மைக் கொண்டு அக்ரூரர் எந்தக்கார்யத்தை முடிக்கப் போகிறார்? என்று கோபிகைகள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். அந்த ஸமயத்தில் உத்தவர் ஸ்நானம் முதலிய நியமங்களை முடித்துக்கொண்டு அவ்விடம் வந்தார்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–47.

உத்தவர் கோபிகைகளை ஸமாதானஞ்செய்தது.

நீண்ட கைகளுள்ளவரும், புதிதாய் மலர்ந்த தாமரைமலர் போன்ற கண்களுள்ளவரும், பீதாம் பரத்தைத் தரித்தவரும், தாமரைப் புஷ்பமாலையை யுடையவரும், சுத்தமான ரத்தினங்களிழைத்த குண்டலங்களால் பிரகாசிக்கும் முகமுள்ளவரும், ஸ்ரீ கிருஷ்ணனுடன் ஸஞ்சரிப்பவருமான உத்தவரை கோபிகைகள் பார்த்து "இவர் யார்? சுத்தமான சிரிப்புள்ளவராகவும், அழகான சரீரமுள்ளவராகவும், கிருஷ்ணன் போல, ஆபரணம் முதலியவைகளைத் தரித்தவராயுமிருக்கிறார்" என்று சொல்லிக்கொண்டு உத்தம ஸ்லோகராகிய பகவானுடைய பாதார விந்தத்தை ஆச்ரயித்திருக்கும் உத்தவரைச் சுற்றிக் கொண்டார்கள்.

பின்பு அவர்கள் மிகவும் வணக்கமாக உத்தவரிடஞ் சென்று வெட்கச்சிரிப்புள்ள பார்வை களால் அவரையுபசரித்துக் கிருஷ்ணனால் அனுப்பப்பட்டு வந்தவரென்று தெரிந்துக்கொண்டு அவர் ஆஸனத்தில் உட்கார்ந்தபின் ரஹஸ்யமாக அவரை நோக்கி "நீர் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு மிகுந்த தோழரென்று எங்களுக்குத் தெரியும். தாய் தந்தையர் களுக்குப் பிரியத்தைச் செய்வதற்காகப் பர்த்தாவாகிய ஸ்ரீ கிருஷ்ணனால் அனுப்பப்பட்டு வந்தவர்; ஸ்ரீ கிருஷ்ணனால் நினைக்கப்பட வேண்டியவர்கள் கோகுலத்தில் தாய்தந்தையர்களே யொழிய, வேறொரு வருமில்லை (எங்களிடத்தில் அந்த அந்தக் காலத்தில்

ஸ்நேஹமேயொழிய உண்மையான ப்ரியமில்லை என்று கருத்து) பந்துக்களிடத்திலிருக்கும்ஸ்நேஹத்தை மஹர்ஷிகளாலும் விடமுடியாது. பந்துகளல்லாத மற்றவர்களைக் கார்யத்திற்காக ஸ்நேஹிப்பதேயொழிய வேறில்லை. அதுவும் கார்யம் முடியும்வரையில் ஸ்நேஹிப்பதாக அபினயஞ் செய்கிறதாகவிருக்கிறது. வண்டுகள் புஷ்பத்திலிருக்கும் மதுவைப் பானஞ் செய்கிறவரையில் அதில் வஸித்து அதன்பின் அதனைவிட்டு வேறு புஷ்பத்தில் செல்வது போல ஸ்திரீகளிடத்தில் புருஷர்கள் ஸ்நேஹம்வைப்பதும் அவர்களை அனுபவிப்பதற்காகவே. (நீடித்துப் பிரியம் வைக்கிறதில்லையென்று கருத்து) தாஸிகள் பணக்காரனிடத்தில் அவனுடைய பணத்தை அபஹரிப்பதற்காக ஸ்நேஹித்து அவன் ஏழையான பின் அவனை விட்டு விடுகிறார்களல்லவா? ஜனங்கள் தங்களைக் காப்பாற்ற அரசன் ஸாமார்த்தி யமற்றவனாக இருக்கும்பொழுது அவனை லக்ஷ்யஞ் செய்கிறதில்லையல்லவா? சிஷ்யர்கள் ஆசார்யனிடம் வித்யை அப்யஸித்தபின் அந்தக் குருவை லக்ஷ்யஞ்செய்கிறதில்லையல்லவா? தக்ஷிணைபெற்றுக் கொண்டபின் ரித்விக்குகள் எஜமானனை லக்ஷ்யஞ் செய்கிறார்களா? பறவைகள் பழமிருக்கும் பொழுது அந்த மரத்தை ஸேவிக்கின்றன. பழங்களற்ற மரத்தை ஸேவிக்கின்றனவா? அதிதிகள் போஜனஞ்செய்தபின் அந்த வீட்டில் அபிமானத்தை விட்டு விடுகிறார் களல்லவா? காட்டில் வஸிக்கும் மிருகங்கள் காட்டு தீப்பற்றிக்கொண்டால் அந்த வனத்தைவிட்டு அப்புறஞ்செல்கின்றனவல்லவா? அன்னியபுருஷன் (ஜாரன்) தன்னிடம் ஆசைப் பட்டவளான ஸ்திரீயை அனுபவித்தபின்பு அவளை விட்டுவிடுகிறானல்லவா?

அதுபோலக் கிருஷ்ணனுக்கு எங்களிடத்தில் உண்மையான பிரியமில்லை" என்று சொன்னார்கள். பின்னுமவர்கள் ஸ்ரீ கோவிந்தரிடத்தில்மனம், வாக்கு, சரீரம், ஆகிய இவைகளைச் செலுத்தி அந்தப் பகவான் பால்ய வயதிலும், கிசோர வயதிலும் எதனைச் செய்தாரோ, அந்தச் சரிதங்களை நினைத்து நினைத்து லௌகிகமான கார்யங்களையும் விட்டு வெட்கமில்லாமல் பகவானுடைய சரிதங்களைக் கானஞ்செய்துகொண்டிருந்தார்கள்.

11–13. அவர்களில் ஒரு கோபிகை கிருஷ்ணனுடைய ஸங்கமத்தைப்பற்றி த்யானஞ் செய்துகொண்டிருக்கையில் எதிரில்வந்த ஒரு வண்டை கிருஷ்ணனால் அனுப்பப்பட்டு வந்த தூதனாக வைத்துக்கொண்டு பின்வருமாறு சொல்லலானாள். (வண்டைப்பார்த்துச் சொல்வதுபோல உத்தவரைப் பார்த்துச் சொன்னாளென்றும் கருத்து) எப்படியெனில் "ஓ வண்டே! வஞ்சகராகிய கிருஷ்ணனுடைய தூத! என் காலில் விழாதே (நமஸ்கரித்து ப்ரார்த்திப்பதாக நினைத்துச் சொல்லுகிறாள்) அந்த கிருஷ்ணன் எனக்கு ஸபத்தினிகளான கோபிகைகளை ஆலிங்கனஞ் செய்துகொண்டதால் அவர்களுடைய ஸ்தனங்களிலிருந்து குங்குமங்கள் பகவானுடைய வனமாலையில் ஒட்டிக்கொண்டது. அந்த மாலையில் நீ புரண்டதனால் கருமையான உன்னுடைய மீசை சிவப்பாக விருக்கிறது. ஆனதால் யாரைக் கிருஷ்ணன். ஆலிங்கனஞ் செய்துக் கொண்டாரோ, அவளுடைய காலில் விழுந்து. அவளை ஸமாதானஞ்செய். தூதனாகிய உன்னுடைய மீசை சிவந்திருப்பதால் பகவான்

உன்னை என்னிடம்னுப்பிப் பரிஹாஸஞ்செய்கிறார் என்பதையறியலானேன். மேலும் வண்டாகிய நீ புஷ்பரஸத்தையெடுத்துக் கொண்டு புஷ்பங்களை யெப்படி விட்டுவிடுகிறாயோ, அதுபோல ஸகல லோகங்களையும் மோஹிக்கச்செய்யும் அதராமிருதத்தை ஒருதடவை கிருஷ்ணன் எங்களுக்குக் கொடுத்து பின்பு எங்களை விட்டு விட்டார். இப்படிச் செய்த உபகாரத்தை மறக்கும் ஸ்வாபமுள்ள கிருஷ்ணனுடைய பாதங்களில் லக்ஷ்மீ தேவி எப்படி ஸுச்ரூஷை செய்துகொண்டிருக்கிறாள்? ஆச்சர்யம்! அந்த விஷயத்தைத் தெரிந்துகொண்டேன். உத்தம ஸ்லோகராகிய பகவானுடைய பொய்யான கதைகளைக் கேட்டு மோஹித்துச் ஸுச்ரூஷை செய்கிறாள். லக்ஷ்மி போல நான் தெரியாதவளல்ல வென்று கருத்து).

14. பின்னும் கானஞ்செய்யும் வண்டை நோக்கிக் கிருஷ்ணனுடைய சரிதத்தைக் கானஞ்செய்கிறதென்று நினைத்து பின்வருமாறு சொல்லலானாள். எப்படியெனில், ஓ வண்டே! கிருஷ்ணனை பலமுறைப் பார்த்திருக்கிறோம். அவருடைய, ஸ்வபாவம் எல்லாம் நமக்குத்தெரியும். ஆனதால் அவரைப்பற்றி நம்முடைய முன்பாக நீ சொல்லவேண்டாம். இப்பொழுது அவர் எந்த ஸ்திரீகளிடத்தில் பிரியப்பட்டிருக்கிறாரோ, அவர்கள் முன்பாக அவரைப்பற்றிச் சொல்வாயானால் இந்தச் சரிதத்தைக்கேட்டு அவர்களுடைய ஸ்தனங்களுக்கு ஸுகமுண்டாகும். அதனால் உனக்கு இஷ்டமான வஸ்துவைக் கொடுப்பார்கள் என்றாள்.

15. பின்னுமவள் "ஓ அம்மா! நீ இப்படிச்சொல்வது

ஸரியல்ல, உன்னை உத்தேசித்துப் பகவான் மன்மத தாபத்தை அடைந்து உன்னிடம் என்னை அனுப்பினார்" என்று வண்டு சொல்வதுபோல வைத்துக்கொண்டுப் பதில்சொல்லுகிறாள்) "ஓ கபட ஸ்வபாவமுள்ள வண்டே! கிருஷ்ணனுடைய அழகான பார்வை, புருவ நெரித்தல் இவைகளைக் கண்டவுடன் அவரிடம் எவள்தான் ஆசைப்படமாட்டாள்? ஆகாயத்திலிருக்கும் தேவ ஸ்திரீகளானாலும், பூமியிலிருப்பவர்களானாலும் அவரிடத்தில் பிரியப்படுவார்கள் என்பதில் ஸந்தேஹ மில்லை. லக்ஷ்மீதேவியானவள் அவருடைய பாத தூளியை ஸேவிக்கிறாளல்லவா? அப்படியிருக்க, நாங்கள் அவரிடத்தில் ஆசைப்படுவதற்கு என்ன ஆக்ஷேபம்? ஆனாலும் தீனர்களிடத்தில் தயையுள்ள வனை உத்தமஸ்லோக னென்று சொல்லுகிற வழக்கம். அப்படிப்பட்ட உத்தம ஸ்லோகராகிய பகவான் என்னிடத்தில் தயை செய்யும்படி நீ சொல்ல வேண்டும்? என்று சொன்னாள்.

16. பின்னுமவள் தன்னுடைய பாதங்களின் ஸமீபத்தில் வண்டு வருவதைப்பார்த்துத் தன்னை ஸமாதானப்படுத்துவது போல் நினைத்துக் கொண்டு அதனைப்பார்த்து "ஓ வண்டே! நீ பிறரை ஸமாதானப்படுத்தும் வித்யையை ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் அப்யஸித்துக் கொண்டு பிரியமான வார்த்தைகளைச் சொல்லுகிறாய் என்பது எனக்குத் தெரியும். என்னுடைய காலில் நீ விழவேண்டாம். கிருஷ்ணன் நிமித்தத்தில், புத்திரன், பர்த்தா முதலிய பந்துக்களை விட்டு அவரையே அனுஸரித்தவர்களான எங்களை நன்றியறிவில்லாமல் அவர் விட்டுவிட்டார்.

இவரிடத்தில் ஏன் பிரியம் வைக்கவேண்டும்? என்று சொன்னாள். (கிருஷ்ணனைப்போல் உன்னையும் நம்பக்கூடாது என்பது கருத்து).

17. பின்னுமவள் வண்டைநோக்கி, "எவர் வேடன் போல வாலியைக் கொன்றாரோ, எவர் தம்மைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள விரும்பிய சூர்ப்பனகை யை ஸீதையினிடம் ஆசைப்பட்டு குரூபி யாகச் செய்தாரோ (காது, மூக்குகளை அறுத்தாரென்று கருத்து), எவர் பலிச்சக்கிரவர்த்தியால் கொடுக்கப் பட்ட பூமியைப் பெற்றுக்கொண்டு காக்கைபோல அவனைக் கட்டி பாதாலத்தில் அழுத்தினாரோ, அந்தக் கிருஷ்ணனுடைய ஸ்நேஹத்தால் பிரயோஜன மில்லை.ஆனாலும் அவருடைய சரித்திரங்களைச் சொல்லாமலிருக்க முடியவில்லை" என்றாள்.

18. அந்தக் கிருஷ்ணனுடைய லீலையாகிற அமிருதத்தின் துளியை ஒருதடவை பானஞ் செய்வதால்ஆசை, த்வேஷம் முதலியவைகள் நிவர்த்தி யாகின்றன. அதனால் வீடு, குடும்பம் முதலி யவைகளை உடனே விட்டு அநேகம் பெரியோர்கள் ஹம்ஸபக்ஷிகள் போல ஸன்னியாஸிகளுடைய வ்ரதத்தை அனுஷ்டிக்கிறார்கள்.

19. கிருஷ்ணனுக்கு மந்திரியாயிருக்கும் ஓ வண்டே! வேடனுடைய கானத்தைக்கேட்டுப் பெண் மான்கள் அதனை உண்மையென்று நினைத்து வேடனுடைய பாணங்களாலடிக்கப்பட்டு கெடுதியையடைவதுப் போலக் கபட ஸ்வபாவமுள்ள கிருஷ்ணனுடைய வார்த்தையை ஸத்தியமென்று நினைத்து நாங்கள் அவருடைய

நகங்களுடைய ஸ்பர்சத்தால் மன்மததாபத்தையடைந் திருக்கிறோம். ஆனதால் வேறுவார்த்தையைச் சொல்லு.

20. (சிலதூரஞ்சென்று திரும்பிவந்த வண்டைப் பார்த்துச் சொல்லுகிறாள்) "கிருஷ்ணனுக்கு ஸநேகிதனாகிய ஓ மதுகரமே! நீ கிருஷ்ணனா லனுப்பப்பட்டுத் திரும்பவும் வருகிறாயோ? உனக்கு என்னவேண்டும்? ஸ்ரீ கிருஷ்ணனுடைய தூதனா கையால் உன்னை நான் பூஜிக்கவேண்டும். கிருஷ்ண னுடைய மார்பில் லக்ஷ்மீ தேவி எப்பொழுதும் வஸிப்பதால் அந்தப் பகவானுடைய ஸமீபத்தில் என்னை எப்படி நீயழைத்துப்போவாய்?

21. எங்களுடைய நாதனாகிய கிருஷ்ணன் இப்பொழுது மதுராநகரத்தில் வஸிக்கிறாரா? அவர் கோகுலத்திலுள்ள கோபர்களையும் பந்துக்களையும் நினைத்துக்கொண்டிருக்கிறாரா? மேலுமவர் வேலைக் காரிகளான எங்களைப்பற்றி எப்பொழுதாவது சொல் வதுண்டா? அகில் கட்டைபோல் வாஸனையுள்ள தமது கையை என்னுடைய தலையில் எப்பொழுது வைப்பார்?" என்று கேட்டாள்.

22–37. இப்படிக் கிருஷ்ணனைப் பார்க்கவிரும்பும் கோபிகைகளைப்பார்த்து உத்தவர் "ஓ கோபிகைகளே! உங்களுடைய மனமானது ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் செலுத்தப்பட்டிருப்பதால் நீங்கள் ஸகல லோகங் களாலும் பூஜிக்கக் கூடியவர்களாக இருக்கிறீர்கள். த்யானம், வ்ரதம், தபஸ், ஹோமம், ஜபம் வேதாத்ய யனம், இந்திரியங்களை அடக்குவது, க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடிய மற்றவைகள், ஆகிய இவைகளால்

ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் பக்தியுண்டாக வேண்டும். அந்தப் பக்தியானது மஹர்ஷிகளுக்குங் கிடைப்பது அரிது. அப்படிப்பட்ட மேலான பக்தியானது உங்களுக்கு உண்டாயிருக்கிறது; நீங்கள் புத்திரர்கள், புருஷர்கள், தேஹம், பந்துக்கள், வீடு ஆகிய இவை களெல்லாவற்றையும் விட்டு ஸ்ரீ கிருஷ்ண னென்று சொல்லப்படும் பரம புருஷனிடத்தில் சித்தத்தைச் செலுத்தினீர்களே; இது தைவாதீன மேயாம். நீங்கள்ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப் பிரிந்தால் உங்களுக்கு அவரிடத்தில் ஏகாந்தமான பக்தி யுண்டாகிறது. அப்படிப்பட்ட பக்தியை நான் பார்த்ததால் மிகவும் அனுக்கிரஹிக்கப்பட்டவனாக யிருக்கிறேன். ஆனதால் கிருஷ்ணன் தமக்கு அந்தரங்கத் தோழனாகிய என் முகமாக உங்களுக்குச் சில ஸமாசாரங்களைச் சொல்லியனுப்பித்திருக்கிறார். அதனைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

எப்படியெனில், "ஓ! கோபிகைகளே! ஸகல ப்ராணிகளிடத்திலும் ஆகாயம், வாயு, அக்னி, ஜலம், பூமி ஆகிய பூதங்கள் எப்படியிருக்கின்றனவோ, அப்படியே மனம், பிராணன், புத்தி, இந்திரியம், இவைகளின் காரணமும் இவைகளுக்கு ஆச்ரயமாக விருக்கிறது. நானும் எல்லாப் ப்ராணிகளிடத்திலும் வஸிக்கிறேன். நான் ஸகல ஸ்வரூபியாயிருப்பதால் உங்களுக்கு என்னுடைய விரஹமே (விட்டுப்பிரிவது) இல்லை. நான் என்னிடத்தில் என்னால் என்னை எனனுடைய மாயா மஹிமையால் பூதம், இந்திரியம், குணம் இவைகளின் ஸ்வரூபமாக ஸிருஷ்டிக்கிறேன்; காப்பாற்றுகிறேன்; கொல்லுகிறேன். (ஆனதால் எல்லாவற்றிற்குங் காரணமாயும், ஸகல ஸ்வரூபமாயும்

இருப்பதால், கார்ய, காரண பேதமில்லை என்று கருத்து). ஆத்மா உண்மையில் சுத்தர்; ஞானஸ்வரூபி; குணஸம்பந்தமற்றவர்; ஆனாலும் மாயையின் விருத்திகளான ஸுஷுப்தி, ஸ்வப்னம், ஜாக்ரத் இவைகளில் முறையே விச்வன், தைஜஸன், பிராஜ்ஞன் என்று தோன்றுகிறார். (அதனால் ஸகலம் பூதஸ்வரூபியானாலும் ஆத்மாவிற்கு பூதங்களுடைய தோஷ ஸம்பந்தமில்லையென்று கருத்து). வேதம், யாகம், ஆத்மா, அனாத்மா இவைகளின் விவேகம், தபஸ், இந்திரிய நிக்கிரஹம் இவைகளாலுண்டாகும் பயன், மனத்தையடக்குவதேயாம். பூமியில் அநேகம் வழிகளாகச் செல்லும் நதிகள் ஸமுத்திரத்தை அடைவது போல மேற்சொல்லிய யோகம் முதலிய மார்க்கங்கள் பலவிதங்களானாலும் அதனாலடையக் கூடிய பலன் மனத்தையடக்குவதேயாம்.

நான் உங்களுக்கு ஸமீபத்திலில்லாமல் வெகு தூரத்திலிருப்பதற்குக் காரணமென்னவெனில், உங்களுடைய மனமானது என்னிடத்தில் எப்பொழுதும் சென்றிருக்குமென்பதேயாம். ஸ்திரீகள் தங்களுடைய நாயகன் தேசாந்திரஞ் சென்றிருக்கும் பொழுது அவர்கள் எப்படிப் புருஷர்களையே நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ, அப்படி ஸமீபத்திலிருக்கும் புருஷர்களிடத்தில் பிரியப்பட மாட்டார்கள். ஆனதால் நீங்கள் உங்களுடைய சித்தத்தை என்னிடத்திலேயே செலுத்தி ஸகல வியாபாரங்களையும் விட்டு, என்னையே நினைத்துச், சீக்கிரத்தில் என்னையடைவீர்கள். ஓ நல்ல ஸ்வபாவமுள்ளவர்களே! ராஸக்ரீடை நடந்த பொழுது எந்த ஸ்திரீகள் வீட்டிலிருந்து வெளிவரமுடியாமல்

அவ்விடத்திலேயே என்னை த்யானஞ் செய்து கொண்டிருந்தார்களோ அவர்கள் என்னுடைய சரித்திரங்களைச் சிந்தித்ததால் என்னையே அடைந் தார்களல்லவா?" என்று கிருஷ்ணன் உங்களுக்குச் சொல்லும்படி ஆக்ஞாபித்தார் என்று உத்தவர் சொன்னார்.

38–53. அதனைக்கேட்ட கோபிகைகள் முன் நடந்த விஷயங்களை நினைத்து மிகுந்த பிரியத்துடன் உத்தவரை நோக்கி "யாதவர்களுக்கு விரோதியாக இருந்த கம்ஸன் தைவாதீனமாக அடிபட்டான். ஸ்ரீ கிருஷ்ணன் ஸகல காமங்களையும் அடைந்த பந்துக்களுடன் க்ஷேமமாகவிருப்பது தைவாதீன மேயாம். எங்களுடைய வெட்கச் சிரிப்பு, மேலான பார்வை இவைகளால் பூஜிக்கப்பட்டவரான ஸ்ரீ கிருஷ்ணன் இப்பொழுது பட்டணத்திலிருக்கும் ஸ்திரீகளுக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணுகிறாரா? ஸ்ரீ கிருஷ்ணன் ரதி விசேஷத்தை அறிந்தவரானாலும், பட்டணத்து ஸ்திரீகளுக்கு ப்ரியராகவிருப்பதாலும், அவர்களுடைய விளையாட்டைப் பார்த்தும், இனிமையான வார்த்தைகளைக் கேட்டும் அவர்களி டத்தில் ஏன் ஆசைப்படமாட்டார்? (பட்டணத்து ஸ்திரீகளிடத்தில் ஆசைப்பட்டு அவ்விடத்தில் வஸிப்பாரேயொழிய இவ்விடம் வரமாட்டாரென்று கருத்து) ஓ ஸாதுவே! எந்தப் பிரஸ்தாபத்திலாவது, பட்டணத்து ஸ்திரீகளுடைய கோஷ்டியிலாவது, தமதிஷ்டப்படி பேசிகொண்டிருக்கும் பொழுதாவது கோவிந்தர் கிராமவாஸிகளான எங்களைப் பற்றிப் பேசுகிறது உண்டா? மேலும் பிருந்தாவனத்தில் ஒரு ஸமயம் ராத்ரியில் சந்திரகிரஹணத்தால் இருளில்லாம

விருக்கும் பொழுது கிருஷ்ணன் எங்களுடன் சேர்ந்து ராஸக்ரீடை செய்தார். அப்பொழுது அவருடைய இனிமையான சரிதங்களைக் கானஞ் செய்தோம். பகவான் கால் சலங்கைகள் சப்திக்கும்படி நர்த்தனஞ் செய்து ரமித்தார்; அவைகளை நினைத்துக்கொண்டிக் கிறாரா? மஹேந்திரன் மேகங்களைக்கொண்டு வனத்தை ஸந்தோஷிக்கச் செய்வது போலப் பகவான் இவ்விடம் வந்து எங்களை ஆலிங்கனஞ்செய்வது முதலியவைகளால் சந்தோஷப் படுத்துவாரா? அவரைத் தர்சிக்காமல் நாங்கள் தாபத்தை அடைந்திருக்கிறோம்.ஆனால் கிருஷ்ணன் கம்ஸனைக் கொன்று ராஜ்யத்தை அடைந்திருக்கிறார். அவர் ராஜகுமாரிகளை விவாஹஞ் செய்து பட்டணத்தில் வஸிப்பாரே யொழிய இவ்விடம் எதற்காக வரப் போகிறார்? ஸகல காமங்களையும் அடைந்தவரும், லக்ஷ்மீ பதியுமான ஸ்ரீ கிருஷ்ணனுக்கு வனவாஸி களான நம்மால் செய்யக்கூடிய கார்யமென்ன விருக் கிறது (ஒன்றுமில்லையென்று தாத்பர்யம்).

ஒரு விஷயத்திலும் ஆஸைப்படாமலிருப்பதே மேலான ஸுகம் என்று வ்யபசாரியான பிங்களாயென்பவள் சொன்னாள். அதனை நாங்கள் அறிந்திருக்கிறோம். ஆனாலும் கிருஷ்ணனிடத்தில் ஆஸையொழிய வில்லை.விரும்பா விடினும் லக்ஷ்மீ எவருடைய சரீரத்தில் இடைவிடாமல் வஸிக்கிறாளோ, அந்த உத்தம ஸ்லோகராகிய ஸ்ரீகிருஷ்ணனுடைய ரஹஸ்ய வார்த்தையை மறந்து விடமுடியுமா? இந்த நதிகளும், மலைகளும், பசுக்களும், புல்லாங்குழல் சப்தமும் அடிக்கடிக் கிருஷ்ணனுடைய ஞாபகத்தையுண்டு பண்ணுகின்றன. லக்ஷ்மீகரம் பொருந்திய அவருடைய

காலடிகளைத் தர்சிக்கும் பொழுது அவரை மறக்க முடியவில்லை. பின்னும் அந்தக் கிருஷ்ணன் அழகான நடை, மேலான சிரிப்பு, பார்வை, இனிமையான வார்த்தை ஆகிய இவைகளால் எங்களுடைய மனத்தை அபஹரித்திருக்கிறார். ஆனதால் அவரை எப்படி மறக்கமுடியும்? ஓ லக்ஷ்மீபதியே! எங்களுடைய நாத! கோகுலத்திற்கு நாதனாக விருப்பவரே! உபத்திரவத்தைப் போக்கடிப்பவரே! கோவிந்த! துக்க ஸமுத்திரத்தில் மூழ்கியிருக்கும் கோகுலத்தைக் காப்பாற்றும்" என்று சொல்லிப் பகவான் உத்தவர் முகமாகச் சொல்லியனுப்பிய வார்த்தைகளைக் கேட்டு ஸந்தோஷத்தை அடைந்து ஸ்ரீ கிருஷ்ணனை ஸ்ரீமந் நாராயணரென்றும் அவரே தாங்களென்றும் நினைத்துக்கொண்டு உத்தவரை உபசரித்தார்கள்.

54–63. பின்பு உத்தவர் ஸ்ரீகிருஷ்ணனுடைய லீலைகளைச்சொல்லிக் கோபிகைகளுக்கு ஸந்தோஷத் தை உண்டு பண்ணிக்கொண்டு சில மாதங்கள் கோகு லத்தில் வஸித்தார். அவர் சொல்லும் ஸ்ரீ கிருஷ்ண சரித்தத்தைக்கேட்டு ஆனந்தத்தையடைந்த கோபிகைகள் ஒவ்வொரு நாட்களையும் ஒரு க்ஷணத்தைப் போலக் கழித்தார்கள். இப்படி கிருஷ்ண தாஸராகிய உத்தவர் கோவர்த்தனம், பிருந்தாவனம், புஷ்பித்தமரங்கள் முதலியவைகளைப் பார்த்துக் கிருஷ்ணனுடைய ஞாபகத்தை கோகுலவாஸிகளுக்கு உண்டு பண்ணிக் கொண்டு ஸுகமாக வஸித்தார். அப்பொழுது கோபிகைகள் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் மிகுந்த பிரியம் வைத்து அதனால் துக்கப்படுவதை உத்தவர் பார்த்து அவர்களை மேலானவர்களென்று நினைத்து நமஸ்கரிக்க

வேண்டுமென்று எண்ணிப் பின்வருமாறு சொல்ல வானார். எப்படியெனில் ஸகல ஜகத் ஸிவரூபியாக விருக்கும் கோவிந்தரிடத்தில் இந்தக் கோபிகைகள் இடைவிடாமல் பக்தி செய்வதால் இவர்களே மேலான வர்கள். மஹர்ஷிகளும் நாமும் ஸம்ஸாரத்திலிருந்து பயந்து கிருஷ்ணனிடம் பக்தி செய்கிறோம். ஆதலால் பகவானிடத்தில் பக்திசெய்து அவருடைய கதைகளைச் சொல்லிக் கொண்டிருப்பவர்கள் எந்த ஜாதியில் பிறந்தவர்களானாலும் மேலானவர்களேயாம். பகவானிடத்தில் பக்தி செய்யாதவர்கள் ப்ராஹ்மண ஜன்மத்தை அடைந்தவர்களானாலும் அதனால் என்ன விசேஷம்? (பகவானுடைய சரிதத்தில் ஆசை கொண்ட பக்தர்களுக்கு ப்ராஹ்மண ஜன்மங்களால் என்ன விசேஷம் ஏற்பட்டபோகிறது என்றும் தாத்பர்யம்.) இந்த கோபிகைகள் காட்டில் ஸஞ்சரிப் பவர்கள்; வ்யபிசாரஸ்வபாவமுள்ளவர்கள்; இவர் களுக்குக் கிருஷ்ணனிடத்தில் இம்மாதிரி உறுதியான பக்தியுண்டாகியிருக்கிறதே; அமிருதத்தை மூடன் புஜித்தாலும் அது அவனுக்கு ஸுகத்தையுண்டு பண்ணுவதுபோல் அக்ஞானனாயிருந்தாலும். பகவானி டத்தில் பக்தி செய்வானானால் அவனுக்குப் பகவான் க்ஷேமத்தைச் செய்கிறார்.

மேலும் ராஸக்கிரீடையில் பகவான் தமது கையைக் கோபிகைகளுடைய கழுத்தில் வைத்துத்தழுவி எவ்விதம் கோபிகைகளைப் பகவான் அனுக்ரஹித் தாரோ, அம்மாதிரியான அனுக்ரஹம் எப்பொழுதும் அவருடைய மார்பிலேயே வஸிப்பவளும் மிகவும் பகவானிடத்தில் பிரியமுள்ளவளுமான லக்ஷ்மீ தேவிக்கும் கிடைக்கவில்லை. தாமரைமலரின் வாஸனை

போன்ற வாஸனை, காந்தி இவைகளுள்ள ஸ்வர்க்க லோகத்து ஸ்திரீகளுக்கும் கிடைக்கவில்லை. மற்றவர்களுக்கு எப்படி கிடைக்கும்? எந்தக் கோபிகைகள் பந்துகளையும், தர்மமார்க்கத்தையும் விட்டு வேதங்களாலும் தேடக்கூடிய பகவானுடைய பாதத்தை அடைந்திருக்கிறார்களோ, அவர்களுடைய பாதத் தூளியையடைந்த பிருந்தாவனத்திலுள்ள புதர், கொடி ஓஷதி இவைகள் மிக்க மேலானவை களாகின்றன. ஆனதால் அவைகளுக்குள் நான் ஒரு கொடியாகப் பிறந்தேனா? பின்னும் எந்தப் பகவானுடைய பாதத்தை ஸகல காமங்களையும் அடைந்தவர்களான ப்ரஹ்மா முதலியவர்களும், யோகீச்வரர்களும், லக்ஷ்மீ தேவியும் பூஜிக்கிறார்களோ, அந்தப் பாதத்தைக் கோபிகைகள் ராஸக்கிரீடை செய்யும்பொழுது தங்கள் ஸ்தனங்களில் வைத்துக் கொண்டு தாபம் நீங்கி ஸுகத்தை அடைந்தார்கள். இன்னும் எந்த கோபிகைகள் கிருஷ்ணசரிதத்தைக் கானஞ்செய்ததால் முவ்வுலகத்தையும் பரிசுத்தப் படுத்துகிறார்களோ, அந்தக் கோபிகைகளுடைய பாத தூளியை அடிக்கடி நமஸ்கரிக்கிறேன் என்று சொன்னார்

64–67. பின்பு உத்தவர் கோபிகைகளுக்கும், யசோதைக்கும், நந்தருக்கும், மற்ற கோபர்களுக்கும் ஸமாதானஞ்சொல்லி, அவர்களிடம் விடைபெற்று ரதத்தின் மீதேறி, மதுரா நகரத்திற்குப் புறப்பட்டார். அதைக் கண்ணுற்ற நந்தன் முதலிய கோபர்கள் பலவிதமான காணிக்கைகளையெடுத்துக்கொண்டு மிகுந்த பிரியத்துடன் கண்ணீரைப்பெருக்கி "ஓ உத்தவரே! எங்களுடைய மனமானது ஸ்ரீ கிருஷ்ணனுடைய

பாதாரவிந்தத்தையே ஆச்ரயிக்கட்டும்; வாக்கானது அவருடைய திவ்ய நாமதேயங்களையே உச்சரிக்கட்டும்; சரீரம் அவரை வணங்குவது முதலியவைகளிலுப யோகப்படட்டும். காமங்களால் ஸம்ஸாரத்தில் சுற்றிக் கொண்டிருப்பவர்களான நாங்கள் எப்பொழுதாவது தைவாதீனமாக நற்கார்யத்தைச் செய்திருந்தோமானால் அவைகளால் எங்களுக்கு ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் உறுதி யான பக்தியுண்டாகட்டும்" என்று ப்ரார்த்தித்தார்கள்.

68–69. இப்படி உத்தவர் கிருஷ்ண பக்தர்களான கோபர்களாலுபசரிக்கப்பட்டுக் கிருஷ்ணனால் காப்பாற்றப் பட்டிருக்கும் மதுரா நகரஞ்சென்றார். அவ்விடத்தில் ஸ்ரீகிருஷ்ணனை தர்சித்து நமஸ்கரித்து ராமகிருஷ் ணர்களிடம் கோகுலவாஸிகளின் பக்தி விசேஷத்தைத் தெரிவித்தார். அவர்களால் கொடுக்கப் பட்ட காணிக்கைகளை அரசனாகிய உக்ரஸேனரிடம் ஸமர்ப்பித்தார்.

♣ ♣ ♣ ♣

அக்ரூரரை ஹஸ்தினாபுரத்திற்கு அனுப்பியது.

பின்பு எல்லாருடைய அபிப்பிராயத்தையும் அறிந்தவரும், ஸகல ஸ்வரூபியுமான ஸ்ரீ கிருஷ்ணன் "தமக்கு சந்தனங்கொடுத்தவள் மன்மத தாபத்தை அடைந்து தம்முடைய வரவையெதிர்பார்த்திருக்கிறாள். அவளுடைய இஷ்டத்தைப் பூர்த்திச்செய்யவேண்டும்" என்று நினைத்து அவளுடைய வீட்டிற்குச் சென்றார். அவளுடைய வீடானது மன்மதனை விருத்திசெய்யக் கூடிய ஸாமக்ரியைகளால் பூர்ணமாகவிருந்தது. எப்படியெனில் முத்துமாலைகளாலும், த்வஜங்களாலும், கொடுங்கைகளாலும், படுக்கைகளாலும், ஆஸனங்களாலும், நல்வாஸனையுள்ள தூபங்களாலும், தீபங்களாலும், புஷ்பமாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அப்பொழுது அவள் வீட்டிற்கு வந்த தாமரைக் கண்ணனாகிய ஸ்ரீ கிருஷ்ணனைத் தர்சித்துச் சீக்கிரம் ஆஸனத்திலிருந்து எழுந்திருந்து மிகுந்த பரபரப்புள் ளவளாகி தன் தோழிகளுடன் கிருஷ்ணனையெதிர் கொண்டழைத்து ஆஸனம் முதலியவைகளைக் கொடுத்துப் பூஜித்தாள். மேலுமவள் ஸ்ரீ கிருஷ்ணனுடன் வந்த உத்தவருக்கும் ஆஸனங் கொடுத்து நன்றாக உபசரித்தாள். உத்தவர் அவள் கொடுத்த ஆஸனத் தைக் கையால் தொட்டுப் பூமியில் உட்கார்ந்தார். ஸ்ரீகிருஷ்ணன் லோக வழக்கத்தை அனுஸரித்து மிகுந்த விலையுள்ள உத்தமமான படுக்கையில் உட்கார்ந்தார் பின்பு அவள் ஸ்நானஞ் செய்து நல்ல வஸ்திரத்தையுடுத்திச் சந்தனத்தைப் பூசிக்கொண்டு ஆபரணங்களை அணிந்து, புஷ்பங்கள், தாம்பூலம்

இவைகளைத்தரித்துச் சரீரத்தை அலங்கரித்துக் கொண்டு வெட்கச்சிரிப்புடன் கிருஷ்ணனுடைய ஸமீபஞ்சென்றாள். அப்பொழுது கிருஷ்ணன் புதிய ஸங்கமத்தில் வெட்கத்தால் ஸம்சயத்துடன் ஸமீபத்தில் வருகிற ஸ்திரீயை அழைத்துக் கங்கணங்களால் அலங்கிருதமான அவளுடைய கையைப்பிடித்துப் படுக்கையில் வைத்துக்கொண்டு அவளுடன் ரமித்தார். அவள் பகவானுக்குச் சந்தனங் கொடுத்ததாலுண்டான ஸ்வல்ப புண்ணியத்தால் இம்மாதிரியான பாக்கியத்தை அடைந்தாள். அவள் மன்மத தாபத்தால் வாடிய ஸ்தனங்களிலும், மார்பிலும், கண்களிலும் கிருஷ்ணனுடைய பாதங்களை வைத்துத் தாபத்தை நிவர்த்தித்துக் கொண்டதுமின்றி ஆனந்தமூர்த்தியாகிய பகவானை இருகைகளாலும் ஆலிங்கனஞ்செய்து கொண்டு வெகுகாலமாக ஏற்பட்டிருந்த தாபத்தை நிவர்த்தித்துக் கொண்டாள்.

க்ஷேமத்தைக் கொடுக்க கூடியவரும், அடைய முடியாதவருமான ஸ்ரீ கிருஷ்ணனை அவள் சந்தனங் கொடுத்த புண்ணியத்தால் எளிதில் அடைந்தும் அதிருஷ்டமில்லாதவளானதால், பகவானை நோக்கி "ஓ தாமரை மலர்போன்ற கண்களுள்ளவரே! நாத! இவ்விடத்தில் சிலநாள் வஸித்து என்னுடன் ரமிக்க வேண்டும். உம்மைவிட்டுப்பிரிய மனமில்லை" என்று கேட்டுகொண்டாள். (கோபிகைகள் போலப் பக்தி செய்யாததனால் அதிருஷ்டமில்லாதவளென்று சொல்லப்பட்டது) அதனைக்கேட்டுப் பகவான் அவளுடைய இஷ்டத்தைப் பூர்த்திசெய்து உத்தவருடன் தமது கிருஹஞ்சென்றார். ஆராதிக்கமுடியாதவரும், எல்லாருக்கும் அதிபதியுமாகிய மஹாவிஷ்ணுவை இவள் ஆராதித்தும்

விஷயஸுகத்தில் ஆசைப்பட்டதால் புத்தியில்லாத வளானாள்.

12–27. பின்பு பகவான் பலராமன், உத்தவர் இவர்களுடன் அக்ரூரருக்குப் பிரியத்தைச்செய்ய விரும்பி ஏதனையோ செய்வதற்காக அக்ரூரருடைய கிருஹஞ்சென்றார். அக்ரூரர் தம்முடைய வீட்டிற்கு வந்த பந்துக்களான புருஷோத்தமர்களைப் பார்த்து எதிர்வந்து மிகுந்த ஆனந்தமுள்ளவராகிக் கட்டிக் கொண்டார். பின்பு கிருஷ்ணனுக்கும், பலராமனுக்கும் உத்தவருக்கும் நமஸ்காரஞ்செய்தார். அவர்களும் அக்ரூரரை நமஸ்கரித்தாரகள். பின்பு அக்ரூரர் அவர்களுக்கு ஆஸனங்கொடுத்து முறைப்படி பூஜித்தார். அவர்களுடைய பாதங்களை அலம்பி அந்த ஜலத்தை சிரஸில் புரோக்ஷித்துக் கொண்டார். பின்னுமவர் நல்ல வஸ்திரங்களாலும், ஆபரணங்களாலும், புஷ்பமாலைகளாலும் பூஜித்து, நமஸ்கரித்து அவர்களுடைய பாதங்களைத் தம்முடைய மடியில் வைத்துப்பிடித்து மிகுந்த வணக்கத்துடன் ராமகிருஷ்ணர்களை நோக்கி "கம்ஸன் தன்னைச் சார்ந்தவர்களுடன் தைவாதீனமாகக் கொல்லப்பட்டான்; இந்தக் குலமானது ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டு உங்களால் விருத்தி செய்யப்பட்டது; நீங்களிருவர்களும் ஜகத் ஸ்வரூபிகள்; ஜகத்திற்குக் காரணர்களாக விருப்படவர்கள்; ப்ரதான புருஷஸ்வரூபிகள்; ஆனதால் உங்களைத்தவிரக் காரணமாவது கார்யமாவது ஒன்றுமில்லை. ஓ பரமேச்வர! மாயை முதலிய உம்முடைய சக்திகளைக்கொண்டு ஸிருஷ்டிக்கப்பட்ட இந்த ஜகத்தில் நீர் ப்ரவேசித்தவர் போலவிருந்து ச்ருதிக்கும், ப்ரத்யக்ஷத்திற்கும் விஷயமாகும்படிச்

சேஷ்டிக்கச்செய்கிறீர். பிருதிவி முதலிய பூதங்களா லேற்பட்ட ஸ்தாவர ஜங்கமங்களில் அந்த மஹா பூதங்கள் பலவகையாகத் தோன்றுவதுப் போல உம்மால் படைக்கப்பட்ட ஜகத்தில் நீர் ஸ்வதந்திரரானாலும் பலவகையாகத் தோன்றுகிறீர். (மனிதசரீரம் முதலிய வைகளில் பால்யம், யௌவனம் முதலிய அவஸ்தை களிலும், என்று கருத்து) நீர் ரஜஸ், தமஸ், ஸத்வம் என்ற குணங்களாகிய சக்திகளைக் கொண்டு ஜகத்தைப் படைக்கிறீர்; காப்பாற்றுகிறீர்; ஸம்ஹரிக்கிறீர்; ஆனாலும் ஞானஸ்வரூபியானதால் அவைகளின் குணத்துடனும், கர்மத்துடனும் ஸம்பந் திக்கிறதில்லை. (பந்தத்திற்கு அவித்யை காரணம், அது உம்மிடத்தில் இல்லாததனால் உமக்குப் பந்தமில்லையென்று கருத்து) (ஜீவாத்மாவிற்கே உண்மையில் பந்தமில்லையென்று அடுத்த ச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது) தேஹம் முதலிய உபாதிகள் உண்மையானவையல்ல.அதனால் பேதபுத்தியும் (அவித்யை) ஸத்யமல்ல. ஆனதால் உமக்குப் பந்தமுமில்லை. எங்களுடைய அவிவேகத்தால் பந்தமோக்ஷங்கள் கல்பிக்கப் படுகின்றனவேயொழிய உண்மையில்லை. (ஆனாலும் உம்முடைய அவ தாரங்களும் லீலைகளும் பொய்யல்லவென்று சொல்லுகிறார்) ஜகத்திற்கு க்ஷேமத்தைச் செய்வதற்காக உம்மால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அனாதியான வேதமார்க்கம் பாஷண்டர்களால் எப்பொழுது கெடுக்கப்படுகிறதோ, அப்பொழுது நீர் சுத்த ஸத்வ மூர்த்தியாக அவதரிக்கிறீர் (இது உமக்கு லீலையென்று கருத்து) ஓ ப்ரபுவே! அப்படிப்பட்ட நீர் பூமிக்குச் சுமையாக விருக்கும் அஸுராம் சர்களான அக்ஷௌஹிணிக் கணக்கான அரசர்களைக்

கொன்று பூமியின் பாரத்தை நிவர்த்திப்பதற்காக வஸு தேவருடைய கிருஹத்தில் அவதரித்திருக்கிறீர் இந்தக் குலத்திற்குக் கீர்த்தியை விருத்தி செய்கிறீர்; எவர் ஸகல தேவஸ்வரூபியாகவும், பிதிருஸ்வரூபியாகவும், ப்ராஹ்மண ஸ்வரூபியாகவுமிருக்கிறாரோ, எவருடைய பாதஜலமானது (கங்கை) முவ்வுலகங்களையும் பரிசுத் தப்படுத்துகிறதோ, அப்படிப்பட்ட ஜகத்குருவாகிய நீர் என்னுடைய வீட்டிற்கு வந்ததால் என்னுடைய கிருஹம் மிக்க அதிருஷ்டமுள்ளதாயிற்று. நீர் பக்தர்களிடத்தில் பிரியமுள்ளவர்; ஸத்யவாதி; மித்திரன்; செய்த உபகாரத்தை நினைப்பவர்; பக்தர் களுக்கு ஸகல காமங்களையும் கொடுப்பவர்; உமக்கு விருத்தியுமில்லை குறைவுமில்லை; பகதர் களுக்குஉம்முடைய ஆத்மாவையும் கொடுப்பவர்; ஆனதால் விவேகியாகவிருப்பவன் யார்தான் உம்மைச் சரணமடையமாட்டான்? (உம்மையே சரணமடை வானென்று கருத்து) ஓ ஜனார்தன! யோகீச்வர்களான சிறந்த தேவர்களாலும் நீர் அடையமுடியாதவர்; அப்படிப்பட்ட உம்மைத் தைவச்செயலாகத் தர்சித்தேன். ஆனதால் புத்திரன், களத்திரம், பணம், பந்துக்கள், வீடு, தேஹம் ஆகிய இவைகளில் எனக்குண்டாகியிருக்கும் மோஹமாகிய உம்முடைய மாயா பந்தத்தை நிவர்த்தியும்" என்று ப்ரார்த்தித்தார்.

28–36. இப்படிப் பகவானாகிய ஸ்ரீகிருஷ்ணன் பக்தராகிய அக்ரூரரால் ஸ்துதிக்கப்பெற்றுச் சிரித்துக் கொண்டு அவரை மோஹிக்கச்செய்பவர்போல் "நீர் நமக்கு குருவாகவும், பிதாவின் ஸஹோதரராகவும், மேலான பந்துவாகவும் இருக்கிறீர்; நாங்களோ உம்மைச்சார்ந்த ப்ரஜைகள்; உம்மால் காப்பாற்றப்பட

வேண்டியவர்கள்; தயைசெய்யத் தகுதியானவர்கள்; மேலும் உம்மைப்போன்ற பாகவதர்கள் (பகவத்பக்தர்கள்) மிகவும் பூஜிக்கத்தக்கவர்கள்; அவர்களே ஜனங்களால் ஸேவிக்கக்கூடியவர்கள். அவர்களை ஸேவிப்பதால் மனிதர்களுக்கு க்ஷேமமுண்டாகிறது. மேலும் ஸாதுக்கள் தங்கள் கார்யத்தில் நோக்க மில்லாமல் பிறருக்கு அனுக்கிரஹஞ்செய்யும் ஸ்வாபமுள்ளவர்கள்; அவர்கள் தேவஸ்வரூபிகளாக விருப்பவர்கள்; (தேவர்கள் தங்கள் கார்யத்தில் நோக்கமுள்ளவர்கள். ஸாதுக்கள் அப்படியல்ல; ஆனதால் ஸாதுக்களையே ஸேவிக்கவேண்டுமென்றும் அர்த்தஞ்சொல்வதுண்டு). புண்ய தீர்த்தங்களும், மண்ணினாலும், கற்களாலும் செய்யப்பட்ட தேவ பிம்பங்களும், ஜனங்களைப் பரிசுத்தபடுத்துகிறதில்லை யென்பதில்லை (பரிசுத்தப் படுத்துகின்றன) அவைகள் சிலகாலஞ் சென்றபின் அனுக்கிரஹிக்கின்றன. ஸாதுக்களோ தங்களைத் தர்சித்தவுடன் பாபத்தை நிவர்த்தித்து அனுக்கிரஹஞ் செய்கிறார்கள். ஆனதால் நீர் என்னுடைய மித்திரர்களுக்குட் சிறந்தவர்; பாண்டுவின் புத்திரர் களுடைய க்ஷேமத்தைத் தெரிந்து கொண்டு வருவதற் காக ஹஸ்தினா பட்டணம் போகவேண்டும். பாண்டு மஹாராஜன் வனத்தில் மரணமடைந்தபின் துக்கப்படும் குழந்தைகளை மாதாவாகிய குந்தியுடன் திருதராஷ் டிரர் பட்டணத்திற்கு அழைத்து வந்தாரென்று கேள்விப் பட்டிருக்கிறோம். அம்பிகையென்பவளுடைய புத்திரனாகிய திருதராஷ்டிரர் கண்ணில்லாத வரானாதாலும் (குருடன்) துஷ்டனாகிய புத்திரர் களுக்கு ஸ்வாதீன ரானதாலும், ஸஹோதரனுடைய புத்திரர்களான பாண்டவர்களைத் தம்முடைய

புத்திரர்களாகப் பாவிக்கமாட்டாரென்பது திண்ணம். (நிச்சயம்). ஆனதால் நீர் அவ்விடஞ்சென்று பாண்ட வர்களுடைய க்ஷேமத்தைத் தெரிந்துகொண்டு வாரும். பின்பு அது நல்லதாயிருந்தாலும், கெட்டதாக விருந்தாலும் அதற்குத் தக்கபடி பந்துக்களான பாண்டவர்களுக்கு க்ஷேமத்தைச் செய்வோம்" என்று ஆக்ஞாபித்துப் பலராமன், உத்தவர் இவர்களுடன் தமது கிரஹஞ் சென்றார்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–49

அக்ரூரர் ஹஸ்தினாபுரஞ்சென்று திரும்பிவந்தது

அக்ரூரர் ஹஸ்தினா நகரத்திற்குப் போனார். அந்தப் பட்டணத்தில் குருவம்சத்திய அரசர்களால் கட்டுவிக்கப்பட்ட தேவாலயம் முதலியவைகள் அவர்களுடைய கீர்த்தியைக் காண்பிக்கின்றன. அவ்விடத்தில் திருதராஷ்ட்ரரையும் பீஷ்மரையும், விதுரரையும் குந்தியையும், பாஹ்லீகரையும், அவருடைய புத்திரராகிய ஸோமதத்தரையும், த்ரோணரையும், கிருபரையும், கர்ணனையும், துர்யோதனனையும், அஸ்வத்தாமாவையும், பாண்டவர் களையும், மற்ற மித்திரர்களையும் பார்த்தார். இப்படி அவரவர்களுக்குத் தக்கபடி அக்ரூரர் பந்துக்களை க்ஷேமம் விசாரித்தார். அவர்களும் இவரைக் கண்டவுடன் க்ஷேமம் விசாரித்துத் தங்கள் பந்துக்களுடைய க்ஷேமத்தையும் கேட்டார்கள்.

பின்பு அக்ரூரர் கெட்ட புத்திரனுள்ளவரும், அல்பபுத்தியுள்ளவரும், துஷ்டர்களுடைய இஷ்டப் படி நடப்பவருமான அரசனுடைய நடையை நன்றாகத்தெரிந்துக்கொள்வதற்காக அவ்விடத்தில் சில மாஸ காலம் வஸித்தார். அப்பொழுது குந்தியும், விதுரரும் அக்ரூரரை நோக்கிப் "பாண்டவர்களுடைய ப்ரதாபம், அஸ்திர ஸாமார்த்தியம், சௌர்யம், ஆகிய இவைகளை ஸஹியாமல் துர்யோதனன் முதலியவர்கள் பாண்டவர்களுக்கு விஷத்தைக் கொடுப்பது முதலிய கெடுதியைச் செய்தார்கள் என்ற ஸகல

விஷயங்களையும் தெரிவித்தார்கள். மேலும் குந்தி இந்த விஷயத்தைத்க் தெரிவிப்பதற்கு முன்னமேயே, ஸஹோதரராகிய அக்ரூரரைக்கண்டவுடன் அவருடைய ஸமீபஞ்சென்று பிறந்தவீட்டை நினைத்து கண்ணீர் விட்டுக்கொண்டு "நம்முடைய தாய்தந்தையர்களும், ஸஹோதரர்களும், அவர்களுடைய புத்திரர்களும், குல ஸ்திரீகளும், தோழிகளும், எங்களைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறார்களா? ஸஹோதரரின் புத்திரராகிய கிருஷ்ண பகவான் அத்தையின் புத்திரர்களான பாண்டவர்களை நினைக்கிறாரா? அவர் இவ்விடம் வந்து சத்துருக்களுடைய மத்தியில் செந்நாய்களிடத்தில் அகப்பட்ட பெண்மான்போல துக்கப்படும் என்னையும், பால்யத்தில் தந்தையை இழந்தவர் களான என் குழந்தைகளையும் ஸமாதானஞ் செய்வாரா? ஓ கிருஷ்ணா! கிருஷ்ணா! மஹாயோகியே! ஸகல ஜகத் ஸ்வரூபியே! ஜகத்தைக் காப்பாற்றுகிறவரே! கோவிந்தா! உம்மைச் சரணமடைகிறேன்.

குழந்தைகளுடன் துக்கப்படும் என்னைக் காப்பாற்றும். மிருத்யுபோன்ற ஸம்ஸாரத்திலிருந்து பயந்த ஜனங்களைக் காப்பாற்றுவதற்காக உம்முடைய பாதாரவிந்தத்தை விட வேறொன்றுமில்லை. அந்தப் பாதமானது மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியது; தர்மஸ்வரூபியும், எங்கும் நிறைந்த வஸ்துவும், பரமாத்மாவும், அணிமா முதலிய ஐச்வர்யமுள்ளவரும் ஞானஸ்வரூபியுமாகிய ஸ்ரீ கிருஷ்ணனாகிய உம்மை நமஸ்கரித்துச் சரணமடைகிறேன்" என்று தன்னுடைய பந்துக்களையும் ஸ்ரீ கிருஷ்ணனையும் நினைத்துக் கொண்டு உம்முடைய ப்ரபிதாமஹியாகிய குந்தியானவள்

அழுதாள் என்று பரீக்ஷித்தைப் பார்த்துச்சுகர் சொல்லிப் பின்னும் சொல்லலானார்.

15–25. அதனைக் கண்ணுற்ற அக்ரூரரும் மிகுந்த கீர்த்தியுள்ள விதுரரும், ஸமமான ஸௌக்கத்துக்க முள்ளவர்களாகையால், ஏற்கனவே குந்திதேவிக்குப் பிள்ளை பிறந்ததின் காரணங்களைச் சொல்லி அவளை ஸமாதானஞ்செய்தார்கள். பின்பு அக்ரூரர் மதுரா நகரம் போக யத்தனித்துப் புத்திரனிடத்தில் ப்ரீதியுள்ளவரும், விஷம ஸ்வாபமுள்ளவருமான அரசனிடம்வந்து பந்துக்களுடைய மத்தியில் ராம கிருஷ்ணர்கள் சொன்ன வார்த்தையைப் பின்வருமாறு சொல்லலானார். "ஓ விசித்திரவீர்யனுடைய புத்ரரே! குருவம்ஸத்திய அரசர்களுடைய கீர்த்தியை விருத்தி செய்பவரே! பாண்டுவிற்குப் பிறகு நீர் ராஜ்யத்தை அடைந்திருக்கிறீர்; ஆனாலும் ஜனங்களை ஸ்வபாவத் தால் ஸந்தோஷிக்கச் செய்துகொண்டும், பூமியைத் தர்மமாகப் பரிபாலித்தும், பந்துக்களிடத்தில் ஸமபுத்தியுடனுமிருந்தால் க்ஷேமத்தையும், கீர்த்தியை யுமடைவீர்.

இதற்கு விரோதமாக நடந்தால் ஜனங்களால் நிந்திக்கப்பட்டு மிகுந்த துக்கத்தையடைவீர். ஆனதால் பாண்டவர்களையும், துர்யோதனன் முதலியவர்களை யும் நீர் ஸமமாகப் பார்க்க வேண்டும். இவ்வுலகத்தில் ஒருவனும் தன்னுடைய பந்துக்களைவிட்டுப் பிரியாமல் எப்பொழுதும் சேர்ந்துவஸிக்கிறான் என்பதில்லை. அவரவர்களுடைய தேஹமே அநித்யமாகையால் அதனையே விட்டுப் பிரிந்து விடுகிறார்கள். அப்படி யிருக்க களத்திரம், புத்திரன் முதலியவர்களைவிட்டுப்

பிரிவதில் என்ன ஸந்தேஹம்? ஜீவன் ஒருவனாக ஜனிக்கிறான்; ஒருவனாகவே புண்ய பாபங்களின் பலன்களை அனுபவிக்கிறான். அவனால் போஷிக்கக் கூடியவர்களென்று சொல்லப்படும் பந்துக்கள் அவனுடைய பணத்தைக் கொண்டு போகிறார்கள். அதனையறியாமல் மூடனாகிய புருஷன் அதர்ம மார்க்கமாகப் பணத்தை ஸம்பாதிக்கிறான். ஜலஜந்து வாகிய மத்ஸயத்திற்கு ஜீவனமாகிய ஜலத்தை, அதன் குழந்தைகள் அபஹரிக்கவில்லையா? மேலும் புருஷன் எவர்களைத், தன்னைச் சார்ந்தவர்களென்ற புத்தியினால் காப்பாற்றுகிறானோ, அந்த மூடனாகிய புருஷனை பிராணன், பணம், புத்திரன் முதலியவர்கள் அவன் அனுபவிக்கிறதற்கு முந்தியே விட்டுவிடுகிறார்கள்.

பின்பு அந்தப்புருஷன் தன்னுடைய மனோரதம் நிறைவேறாமல் இவர்களால் விடப்பட்ட தனக்குறிய தர்மத்தை அனுஷ்டிக்காததனால் பாபியாகி நரகத்தை யடைகிறான். ஓ அரசனே! இந்த லோகமானது ஸ்வப்னத்திற்கும் மாயைக்கும், மனோரத்தத்திற்கும் ஸமமானது. (உண்மையல்லவென்று தாத்பர்யம்) ஆனதால் மனத்தையடக்கிக்கொண்டு சாந்தியடைந்து எல்லாரிடத்திலும ஸமமான புத்தியுள்ளவராகவிருக்கி வேண்டும்" என்று சொன்னார்.

26–29. அதனைக்கேட்ட திருதராஷ்ட்ரர் "ஓ அக்ரூரரே! உம்மால் சொல்லப்பட்ட இனிமையான வார்த்தையைக் கேட்டு போதுமென்ற திருப்தியை நான் அடையவில்லை. அமிருத்தைப் புஜித்தவன் போது மென்று திருப்தி அடைவானா? ஆனாலும்

புத்திரனிடத்தில் மிகுந்த ஆசையுள்ள சஞ்சலமான ஹிருதயத்தில் இந்த இனிமையான வார்த்தையானது மின்னல் போல ஸ்திரமாக இருக்கவில்லை. ஈச்வரனுடைய ஸங்கல்பத்தை எவனால் மாற்ற முடியும்? பூமியில் பாரத்தை நிவர்த்திப்பதற்காக எவர் யதுவம்ஸத்தில் அவதரித்திருக்கிறாரோ, எவர் தம்முடைய மாயையால் இந்த ஜகத்தைப்படைத்து அதற்குள் பிரவேசித்தவர் போல அதனை நடத்துகிறாரோ; எவருடைய மாயையின் மார்க்கம் அறிய முடியாததோ. எவருடைய விளையாட்டை பிரதானமாகக்கொண்ட ஸம்ஸார சக்கிரத்தின் கதி தெரிந்து கொள்ள முடிய வில்லையோ அந்த பரமேச்வரனுக்கு நமஸ்காரம்" என்று சொன்னார்.

30–31. இப்படி அக்ரூரர் அரசனுடைய எண்ணத்தைத் தெரிந்துகொண்டு பந்துக்களிடம் விடைபெற்று மதுரா நகரஞ் சென்றார். அவ்விடத்தில் ராமகிருஷ்ணர்களிடஞ்சென்று பாண்டவர்களிடத்தில் திருதராஷ்ட்ரருடைய நடையையும் தெரிவித்தார்.

10–வது ஸ்கந்தத்தின் முன்பாகம் முற்றிற்று.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–50.

கிருஷ்ணன் த்வாரகாநகரத்தில் பந்துக்களை வைத்தது

கம்ஸன் மரணமடைந்துபின்பு அஸ்தி, ப்ராப்தி யென்ற அவனுடைய இரண்டு பத்னிகளும் பிறந்த வீட்டிற்குச்சென்று தங்களுடைய பிதாவும், மகத தேசத்து அரசனுமாகிய ஜராஸந்தனிடம் தங்களுக்கு வைதவ்யம் நேர்ந்ததின் காரணத்தைத் (கிருஷ்ணன் கம்ஸனைக் கொன்றாரென்பதை) தெரிவித்தார்கள். அந்த அப்ரியமான வார்த்தையைக் கேட்ட ஜராஸந்தன் கம்ஸன் விஷயத்தில் துக்கத்தையும், கிருஷ்ணனிடத்தில் கோபத்தையும் அடைந்து பூமியில் யாதவர்களில்லாமலிருக்கும்படி செய்யவேண்டுமென்று நினைத்து அதற்காக மிகுந்த முயற்சி செய்தான்.

(அதாவது) இருபத்தி மூன்றுஅக்ஷௌஹிணி ஸைன்யத்துடன் யாதவர்களுடைய ராஜதானியாகிய மதுரா நகரத்தில் முற்றுகை போட்டான். ஸமுத்திரம் கரைபுரண்டு வந்தாற்போல எல்லாத் திக்குகளிலும் பட்டணத்தை ஸைன்யங்கள் சுற்றிக்கொண்டன. யாதவர்கள் பயந்தார்கள். அப்பொழுது அதனைக் கண்ணுற்று சில காரணத்திற்காக மனிதவடிவங் கொண்ட ஸ்ரீகிருஷ்ணன் தேசத்திற்கும், காலத்திற்கும் தக்கபடி தனக்குள் தம் அவதாரத்தின் பிரியோஜனத்தைப் பற்றிப் பின்வருமாறு யோசிக்கலானார். பூமிக்கு சுமையாகவிருப்பதும், ஜராஸந்தனால் கொண்டு வரப்பட்டதும் காலாட்படை, குதிரை, ரதம்,

யானை இவ்வகளடங்கியதும், அக்ஷௌஹிணிகணக் குள்ளதுமான இந்த ஸைன்யத்தை ஸகல அரசர்களும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே கொல்லுகிறேன். ஜராஸந்தன் திரும்பவும் ஸைன்யங்களை சேர்த்துக் கொண்டு வருவானானதால் அவனை மாத்திரம் இப்பொழுது கொல்லக்கூடாது. பூமியின் சுமையை நிவர்த்திப்பதற்காகவும், ஸாதுக்களைக் காப்பாற்றுவ தற்காகவும், துஷ்டர்களைச் சிக்ஷிப்பதற்காகவும் தான் நாம் பூமியில் அவதரித்தோம். எப்பொழுது அதர்மம் விருத்தியாகுமோ, அப்பொழுது தர்மத்தை விருத்தி செய்வதற்காக தேஹத்தை அங்கீகரிக்கிறேன்" என்று பகவான் நினைத்துக்கொண்டிருக்கையில், ஸூர்யன் போன்ற மிக்க தேஜஸுள்ள இரண்டு ரதங்கள் ஆகாயத்திலிருந்து பூமியில் இறங்கின.

அவைகளில் யுத்தத்திற்கு வேண்டிய ஸகல ஸாம க்ரியைகளும் பூர்ணங்களாகவிருந்தன. மேலுமவைகள் ஸாரதியுள்ளவைகளாகவுமிருந்தன. அவைகளில் திவ்யமான ஆயுதங்களும் காணப்பட்டன. தைவச் செயலாக வந்த அந்த ரதங்களைக் கண்ணுற்ற ஸ்ரீ கிருஷ்ணன் பலராமனை நோக்கி, உம்மையே நாதனாகக்கொண்ட யாதவர்களுக்கு வந்திருக்கும் ஆபத்தைப் பார்த்தீரா? உம்முடைய மனத்திற்கு பிடித்ததான ரதமும் ஆயுதங்களும் இதோ வந்திருக்கின்றன. இந்த ரதத்தில் ஏறிக்கொண்டு சத்துருக்களைக்கொல்லும்; பந்துக்களை காப்பாற்றும். ஸாதுக்களுக்கு க்ஷேமத்தைதச் செய்வதற்காகவே நாம் அவதரித்தோமல்லவா? இருபத்தி மூன்று அக்ஷௌஹிணி ஸைன்யங்கள் ஒரேவிடத்தில் சேர்ந்திருக்கின்றன. பூமிக்குச் சுமையாகவிருக்கும்

Released by Maran's Dog, Toronto , Canada

இதனைக் கொல்லும்" என்று சொல்லி இருவர்களும் தனியே ரதத்திலேறிக் கொண்டு ஸ்வல்ப ஸைன்யத் துடன், ஆயுதங்களுடன் பட்டணத்திலிருந்து வெளியில் வந்தார்கள். தாருகனை ஸாரதியாகக் கொண்ட ஸ்ரீ கிருஷ்ணன் சங்கத்தை ஊதினார். அதனைக்கேட்டு சத்ரு ஸைன்யங்கள் பயந்து நடுங்கின. அப்பொழுது ராமகிருஷ்ணர்களைப் பார்த்து ஜராஸந்தன் "ஓ கிருஷ்ண! புருஷோத்தமா! மந்தபுத்தியுள்ளவனே! பந்துக்களைக் கொன்றவனே! எப்பொழுதும் நீ ஒளிந்து கொண்டேயிருப்பதால், பாலனாகிய உன்னுடன் யுத்தஞ்செய்ய வெட்கப்படு கிறேன். (எல்லா புருஷர்களும் உம்மைவிட தாழ்ந்தவர்கள். நீர் அவித்யையைப் போக்கடிப்பவர்; எல்லாவற்றிற்கும் உள்ளிருப்பவர் என்றும் அர்த்தம்) உனக்கு என்னுடன் யுத்தஞ்செய்ய இஷ்டமிருந்தால் சண்டை செய்யலாம்; என்னுடைய பாணங்களால் அடிக்கப்பட்டு ஸ்வர்கத்திற்குப் போகலாம்; அல்லது என்னையாவது கொல்லலாம்" என்றான்.

19–33. அதனைக்கேட்ட பகவான் ஜராஸந்தனை நோக்கி "ஓ ராஜன் சூரர்கள் வாக்கினால் பிதற்ற மாட்டார்கள். பராக்கிரமத்தை காண்பிப்பார்கள். நீ சாகுந்தருணத்திலிருப்பவனாகையால் உன்னுடைய வார்த்தையையெடுத்துக் கொள்ளமாட்டோம்" என்றார். அதனைக்கேட்ட ஜரையின் புத்திரன் வாயுவானது, மேகங்களாலும், தூளிகளாலும் ஸூர்ய னையும், அக்னியையும் மறைத்தாற்போல் ஸைன்யம், வாஹனம், த்வஜம், குதிரை, ஸாரதி ஆகிய இவைகளுடன் ராமகிருஷ்ணர்களையெதிர்த்தான். அப்பொழுது மதுரா நகரத்தில் மேல்மாடியில் ஏறி

Released by Maran's Dog, Toronto , Canada

யுத்தத்தைப் பார்க்கும் பட்டணத்து ஸ்திரீகள் கருடத்வஜமுள்ள கிருஷ்ணனுடைய ரதத்தையும் பனைமரத்வஜமுள்ள பலராமனுடைய ரதத்தையும் காணாமல் துக்கத்தை அடைந்து மோஹித்தார்கள். அப்பொழுது கிருஷ்ணனுடைய ஸைன்யத்தில் ஜராஸந்தனாகிய மேகம் பாணமாகிய மழையை வர்ஷிக்க, அதனால் ஸைன்யம் களைப்படைந்தது. அதனைக்கண்ணுற்ற ஸ்ரீ கிருஷ்ணன் தேவர்களாலும், அஸுரர்களாலும் பூஜிக்கப்பட்டிருக்கும் சார்ங்கமென்ற மேலான வில்லையெடுத்தார். அம்பரையிலிருந்து பாணங்களையெடுத்து வில்லில் தொடுத்து கூர்மை யான பாணங்களை ப்ரையோகித்து, ரதங்கள், யானைகள் குதிரைகள், காலாட்படைகள் ஆகிய இவைகளை கொண்டு கொள்ளிக்கட்டை சுழல்வது போலச் சுற்றினார்.

யானைகள் தலை உடைப்பட்டு விழுந்தன. குதிரைகளும், த்வஜங்களும் அடிக்கப்பட்டன. காலாட்கள் கை, கால், துடை, கழுத்து ஆகிய இவைகள் வெட்டுண்டு விழுந்தார்கள். இப்படி யுத்தத்தில் அடிக்கப்பட்ட யானைகள், குதிரைகள், காலாட்கள் ஆகிய இவைகளுடைய சரீரத்திலிருந்து பெருகிய ரத்தமானது பல நதிகளாக ஓடிற்று. அதில் கைகள் ஸர்ப்பங்களாக தோன்றின. மேலும் அந்த நதிகளில் கைகளும், துடைகளும் மீன்களாகவும், தலை மயிர்கள் பாசிகளாகவும், வில்லுகள் அலைகளா கவும், ஆயுதங்களாகவும் குல்மங்களாகவும், சக்கிரங்கள் சுழிகளாகவும், மேலான ரத்னங்கள், ஆபரணங்கள் ஆகிய இவைகள் மணல்களாகவும் தோன்றின. அவைகள் பயந்தவர்களுக்கு

பயங்கரங்களாகவும், தைர்யசாலிகளுக்கு ஸந்தோஷத் தைக் கொடுக்கக் கூடியவைகளாகவுமிருந்தன. பின்னும் மிக்க தேஜஸ்ஸுள்ளவரான பலராமன் முஸலத்தை யெடுத்துக் கொண்டு சத்ரு ஸைன்யத்தைக் கொன்றார். இப்படி வஸுதேவ புத்திரர்களான ராமகிருஷ்ணர் களால் ஜராஸந்தனுடைய ஸைன்யம் கொல்லப் பட்டது. இப்படி ஜகதீசர்களான ராமகிருஷ்ணர் களுடைய சேஷ்டை மேலானதாகவிருந்தது. ஏந்த பகவான் ஸகல ஜகத்தையும் படைத்துக் காப்பாற்றி ஸம்ஹரிக்கிறாரோ. அந்த பகவான் சத்ருஸைன்யத்தை வதஞ்செய்தாரென்பது ஆச்சர்யமல்ல. ஆனாலும் மனிதர்களுடைய வழக்கப்படி வர்ணித்தோம். இப்படி சத்ரு ஸைன்யத்தை கொன்று ஜராஸந்தனு டைய ரதம் முதலியவைகளை நாசஞ் செய்து பல ராமன் ஜராஸந்தனைப் பிடித்துக்கொண்டார். அது சிங்கமானது அல்ப மிருகத்தைப் பிடித்துக்கொண்டாற் போலிருந்தது.

பின்பு வருண பாசத்தாலும், மனுஷ்ய பாசத்தாலும் ஜராஸந்தனை பலராமன் கட்ட யத்தனிக்கும்பொழுது கிருஷ்ணன் அவனைக் கொண்டு சில கார்யஞ் செய்துகொள்ள விரும்பி, அவனைக் கட்டவேண்டா மென்று பலராமனைத் தடுத்தார். மஹாவீரனாகிய ஜராஸந்தன் ராமகிருஷ்ணர்களால் விடப்பட்டு வெட்கமடைந்து தபஸ் செய்வதற்காக சென்றார். வழியில் அவனைக்கண்ட அரசர்கள் "உமக்கு யாதவர்களிடத்தில் அபஜயமுண்டானது உம்முடைய கர்ம வசமேயாம். அதனால் உமக்கு என்ன அவமானம்? ஏன் தபஸிற்குப் போகவேண்டும்" என்று சாஸ்திர யுத்திகளையும், நீதி வாக்யங்களையும் சொல்லி

ஸமாதானஞ் செய்தார்கள். அதனைக் கேட்ட ஜராசந்தன் ஸகல ஸைன்யங்களும் நாசமடைந்ததா லும், தான் அபஜயத்தை அடைந்ததாலும் மிக்க மன வருத்தத்துடன் மகததேசஞ் சென்றான்.

34–57. பகவானுடைய ஸைன்யத்தில் ஒருவருக்கும் கொஞ்சமேனும் காயமில்லை. அப்படிப் பட்ட ஸைன்யத்துடன் சத்ருவை ஜயித்து ஸ்ரீ கிருஷ்ணன் மதுரா நகரத்திற்குள் பிரவேசித்தார். தேவர்கள் புஷ்பங்களை வர்ஷித்தார்கள். பட்டணத்து ஜனங்கள் ஸந்தோஷமாக எதிர்கொண்டு அழைத்து உபசரித்தார்கள். ஸூதர்களும், மாகதர்களும், வந்திகளும் துதித்தார்கள். சங்கம், துந்துபி, பேரி, வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், தூரி முதலிய வாத்யங்கள் முழக்கப்பட்டன. அந்த பட்டணத் திலுள்ள வீதிகளில் ஜலந்தெளிக்கப்பட்டிருந்தது. ஜனங்கள் ஸந்தோஷ முள்ளவர்களாகவிருந்தார்கள். தோரணங்கள், த்வஜங்கள் ஆகிய இவைகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தன. வேதகோஷம் நடந்தேறியது. அப்பொழுது பட்டணத்து ஸ்திரீகள் தயிர், அக்ஷதம், புஷ்பம் ஆகிய இவைகளை இறைத்தார்கள்; அன்புள்ள பார்வையால் கிருஷ்ணனைப் பார்த்தார் கள்; பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் யுத்தகளத்திலிருந்து கொண்டுவரப்பட்ட மேலான ஆபரணம் முதலியவைகளை அரசனாகிய உக்கிரஸேனரிடம் ஸமர்பித்தார். பின்பும் ஜராஸந்தன் அக்ஷௌஹிணி கணக்கான ஸைன்யங்களைச் சேர்த்துக்கொண்டு யாதவர்களிடம் யுத்தத்திற்கு வந்தான். அதனையும் பகவான் நாசஞ்செய்து அவனை ஜயித்தார். இப்படி ஜராஸந்தன் பதினேழுதடவை கிருஷ்ணனுடன் யுத்தஞ்

செய்து அபஜயத்தை அடைந்தான். பதினெட்டாவது தடவையும் ஜராஸந்தன் ஸைன்யங்களைச் சேர்த்துக் கொண்டு வருவதற்கு முன்னமேயே நாரதரால் தூண்டப்பட்ட யவனன் மூன்றுக்கோடி மிலேச்ச ஸைன்யங்களுடன் மதுரா நகரம் வந்து முற்றுகை போட்டான். பூமியில் அவனுக்கு ஸமமான பராக்ரம சாலி வெறொருவருமில்லை. அவன் விருஷ்ணிகள் தனக்குச் சமமானவர் களென்று நாரதமுகமாகத் தெரிந்துக்கொண்டு யுத்தத்திற்காக மதுராநகரம் வந்து இருப்பதைப் பார்த்து, ஸ்ரீகிருஷ்ணன் பலராமனுடன் "என்ன கஷ்டம்; யாதவர்களுக்கு வருகிற ஆபத்தைப் பாரும்; யவனன் யுத்தத்திற்கு வந்திருக்கிறான்; இன்றைய தினமாவது, நாளைய தினமாவது, நாளைன்றைக்காவது ஜராஸந்தனும் வருவான். இரண்டு புறத்திலும் மிகுந்த கஷ்டம் நேர்ந்திருக்கிறது. நாம் யவனனுடன் யுத்தஞ் செய்து கொண்டிருக் கையில் ஜராஸந்தன் வந்தால் நம்முடைய பந்துக் களைக் கொன்றுவிடுவான்.

ஆனதால் மனிதர்கள் போகமுடியாத ஒரு பட்டணத்தையுண்டுபண்ணி அதில் பந்துக்களை வைத்துவிட்டு யவனனைக் கொல்வோம்" என்று யோசித்து பன்னிரண்டு யோஜனைதூரம் அகலமுள்ள ஒரு பட்டணத்தை ஸமுத்திரத்தின் நடுவில் உண்டு பண்ணினார். அந்தப் பட்டணத்தில் விச்வகர்மாவின் வேலைத்திறமை முழுமையும் காட்டப்பட்டிருந்தது. ராஜவீதிகளும், அதன் முன்னிலையில் மற்ற வீதிகளும், பிந்தி சின்ன வீதிகளும், இருபக்கங்களிலும் நாச்சந்தி மண்டபங்களும், நடுவில் கிருஹங்கள், அதன்நடுவில் ஸ்வர்ணமயமான வீடுகளும், அதன் மீது ஸ்படிகங்

களால் செய்யப்பட்ட மாடிகளும் ஏற்படுத்தப் பட்டிருந்தன. அவ்விடத்திலிருக்கும் தோட்டங்களில் தேவவிருக்ஷங்களும், கொடிகளும் பிரகாசித்தன. கோபுரங்களும் மாடியின் சிகரங்களும் ஆகாயத்தைத் தொடும்படி உயரமாகவிருந்தன. மேலும் குதிரை லாயம், அன்னசாலை முதலியவைவ வெள்ளி பித்தளை, இரும்பு முதலியவைகளால் செய்யப்பட்டிருந்தன. பின்னும் சில கிருஹங்களுக்கு ப்த்மராகம் முதலிய ரத்னங்களால் சிகரம் வைக்கப்பட்டிருந்தது. மரகத ரத்தினங்களால் தளவரிசை செய்ய பட்டிருந்தது. பின்னும் தேவாலயங்கள் பிரகாசித்தன. நான்கு வர்ணத்திய ஜனங்களும் அவ்விடத்தில் வஸித்தார்கள். ராஜ க்ருஹங்கள் கட்டப்பட்டிருந்தன.

அந்தப் பட்டணத்திற்கு, கிருஷ்ணனுக்காக இந்திரன் ஸுதர்மா வென்ற ஸபையையும், பாரிஜாத மென்ற கல்பக விருக்ஷத்தையும் அனுப்பினார். அந்த பட்டணத்தில் வஸிக்கும் மனிதர்கள் தேவர்களுடைய தன்மையை (பசி, தாஹம் முதலியவையில்லாமலிருப்பது) அடைகிறார்கள். அப்பொழுது வருணன் கருமையான நிறமுள்ளவைகளும், ஒற்றைக் காதுள்ளவைகளுமான ஆயிரங் குதிரைகளை பகவானுக்கு அனுப்பினார். குபேரன் எட்டு நிதிகளையனுப்பினார். மற்ற லோகபாலர்களும் தங்களுக்குச் சொந்தமாகிய தனத்தை அனுப்பினர். இப்படி லோகபாலர்கள் தங்கள் தங்கள் அதிகாரத்திற்காக எதை பகவான் முந்தி கொடுத்தாரோ, அதை யெல்லாவற்றையும் பகவான் பூமிக்குச் சென்றிருக்கும்பொழுது பூமிக்கு அனுப்பினார்கள். அப்படிப்பட்ட பட்டணத்தில் கிருஷ்ணன் தம்முடைய யோகமஹிமையால் ஸகல

பந்துக்களையும் மதுரா நகரத்திலிருந்து கொண்டுவந்து வைத்து, பலராமனுடன் மதுரா நகரம்வந்து ஆயுதமில்லாமல் வெளியில் வந்தார்.

அத்தியாயம் – 51

பகவான் முகுந்தரை அனுக்கிரஹித்தது

1–12. மதுரா நகரத்திலிருந்து வெளியில் வரும் ஸ்ரீ கிருஷ்ணனை யவனன் உதயமாகும் சந்திரனைப் போல பார்த்தான். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் மிக்க அழகுள்ளவரும், கருத்த திருமேனியுள்ளவரும், பீதாம் பரத்தைத் தரித்தவரும், ஸ்ரீவத்ஸத்தால் பிரகாசிக்கும் மார்புள்ளவரும், கௌஸ்துபஹாரமுள்ளவரும், பருத்த நீண்ட நான்கு கைகளுள்ளவரும், தாமரைமலர் போல் சிறந்த கண்களுள்ளவரும், எப்போதும் சிரித்த முகமுள்ளவரும், அழகான கன்னங்களுள்ளவரும், மகர குண்டலங்களால் பிரகாசிப்பவருமாக இருந்தார். அவரைக் கண்ட யவனன் ஸ்ரீவத்ஸம்,நான்கு கைகள், தாமரை மலர் போன்ற கண், வனமாலை ஆகிய நாரதர் சொன்ன லக்ஷணங்களைக் கொண்டு இவர் கிருஷ்ணனென்று தெரிந்து கொண்டான். பின்னுமவன், "இவன் ஆயுதமில்லாமல் காலால் நடந்து செல்வதால் நானும் ஆயுதமில்லாமல் இவனுடன் யுத்தஞ் செய்வேன்" என்று நிச்சயஞ் செய்து திரும்பிப் பாராமல் ஓடுகின்ற கிருஷ்ணன் பின் சென்றான்.

அவர் யோகிகளால்டைய முடியாதவரானாலும் அடிக்கடி அவனுடைய கையில் அகப்பட்டவர் போல் அபிநயஞ்செய்து வெகுதூரம் அவனை அழைத்துச் சென்றார். அப்பொழுது யவனன், 'யது குலத்தில் பிறந்த நீ சத்துருவைக் கண்டு பயந்து ஓடுவது தகுதியல்ல" என்று வைது கொண்டு அவர்பின் சென்றும் அவரை அவனால் பிடிக்க முடியவில்லை.

ஆனால் அவனுக்குப் பாபங்கள் நிவர்த்தியாயின, இப்படி அவனால் நிந்திக்கப்பட்டும் பகவான் ஒரு மலையின் குஹையில் நுழைந்தார். அந்த யவனனும் அந்த குஹைக்குள் சென்றான். ஆனால் அவ்விடத்தில் கிருஷ்ணனைக் காணவில்லை. வேறொரு புருஷன் படுத்திருக்கக் கண்டான். அப்பொழுது யவனன், "என்னை இவன் வெகு தூரம் ஏமாற்றி அழைத்து வந்து நல்லவன் போலத் தூங்குகிறான்" என்று நினைத்துத் தூங்குகிறவனைக் கிருஷ்ணனென்று எண்ணி, காலால் உதைத்தான், அங்கு வெகுகாலமாகத் தூங்கிக் கொண்டிருந்த அவன் எழுந்திருந்து, மெதுவாகக் கண்களைத் திறந்து நான்கு புறத்திலும் பார்க்கும் பொழுது பக்கத்திலிருக்கும் யவனனைக் கண்டான். அப்பொழுது அவனுடைய கோபப்பார் வையால் யவனனுடைய சரீரத்தில் அக்னியுண்டாகி யவனனை எரித்துவிட்டதென்று சுகர் பரீக்ஷித்தை நோக்கி சொன்னார்.

13. அதனைத் கேட்ட பரீக்ஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி, "ஓ ப்ராஹ்மண! இந்தக் குஹையில் படுத்திருந்த புருஷன் யார்? அவன் யாருடைய பிள்ளை? எவ்வளவு பராக்கிரமுள்ளவன்? எதற்காக அந்தக் குஹையில் படுத்துத் தூங்கினான்? அதனைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

14–20. அதனைக்கேட்ட சுகர், அரசனை நோக்கி "அந்தப் புருஷன் இக்ஷ்வாகு குலத்தில் பிறந்த அரசன்; மாந்தாதாவின் புத்திரர்; முசுகுந்தரென்று பெயர் பெற்றவர்; ப்ராஹ்மண பக்தியுள்ளவர்; ஸத்திய ப்ரதிக்ஞர்; முன்பு ஒருகால் இந்திரன் முதலிய

தேவர்கள் அஸுரர்களிடம் பயந்து தங்களைக் காப்பாற்றவேண்டுமென்று முசுகுந்தரைக் கேட்டுக் கொண்டார்கள். அவர் அதனை ஒப்புக்கொண்டு வெகுகாலம் தேவஸேனாதிபதியாக இருந்து தேவர் களைக் காப்பாற்றி வந்தார். பின்பு தேவர்களுக்கு ஸுப்பிரமணியர் சேனாதிபதியாக வந்த பொழுது தேவர்கள் முசுகுந்தனை நோக்கி, "ஓ மஹாராஜ! இத்தனை காலம் எங்களைக் காப்பாற்றியதால் மிகவும் களைப்படைந்திருக்கிறீர். மேலும், இதற்காக பூலோகத்தையும், ராஜ்ஜியத்தையும், விட்டு இவ்விடம் வந்தீர், உம்முடைய புத்திரர்கள், ஸ்திரீகள், மந்திரிகள், பந்துக்கள் முதலியவர்கள் இப்பொழுது இல்லை. பலசாலியான காலஸ்வரூபியாகிய பகவான் பசுக்களை இடையன் மேய்ப்பது போலப் ப்ரஜைகளை நடத்திக் கொண்டு விளையாடுகிறார். ஆனதால் மோக்ஷத்தைத் தவிர வேறு இஷ்டமான வரத்தைக்கேளும். அந்த மோக்ஷத்தைக் கொடுப்பதற்கு விஷ்ணு ஒருவர் தான் ஸாமர்த்தியமுள்ளவர்" என்று சொன்னார்கள்.

21. அப்பொழுது தேவர்களை நோக்கி முசுகுந்தர், "நான் மிகுந்த களைப்புள்ளவனாக இருப்பதால் தூங்குவதற்கு விரும்புகிறேன்" என்றார். அதனைக் கேட்ட தேவர்கள், "இந்த மலையின் குஹையில் தூங்கும்படியும் யார் உம்மை எழுப்புகிறானோ அவன் சாம்பலாக ஆகட்டும்" என்று சொன்னார்கள். அதனைக்கேட்ட முசுகுந்தர் தேவர்களை நமஸ்கரித்து, அந்த மலையின் குஹையில் தேவர்களுடைய அனுக் கிரஹத்தால் தூங்கினான்.

22–34. அப்படிப்பட்ட யவனன் சாம்பலாக

ஆனவுடன், புத்திசாலியாகிய முசுகுந்தருக்கு ஸ்ரீ கிருஷ்ணன் தர்சனங் கொடுத்தார். அப்பொழுது முசுகுந்தர் மேகம்போல கருத்த திருமேனியுள்ளவரும், பீதாம்பரத்தைத் தரித்தவரும், ஸ்ரீவத்ஸத்துடன் கூடிய மார்புள்ளவரும், கௌஸ்துபத்தால் பிரகாசிப்பவரும், நான்கு கைகளுள்ளவரும், வைஜயந்தியென்னும் மாலை யால் பிரகாசிப்பவரும், அழகு பொருந்தியதும், மகர குண்டலங்களால் விளங்குவதும், ப்ரஸன்னமுமான முகமுள்ளவரும், அன்பு பொருந்திய புன்சிரிப்பு உள்ள வரும், மூவுலகத்திலும் அழகான சரீரமுள்ளவரும், மதித்த சிங்கம்போன்ற பராக்கிரமுள்ளவருமான ஸ்ரீ கிருஷ்ணபகவானைத் தரிசித்து, அவருடைய தேஜஸ் ஸால் அடக்கப்பட்டு, அவருடைய தேஜஸ்ஸைப் பற்றிச் ஸந்தேகித்து மெள்ள மெள்ளப் பேசலானார்.

எப்படியெனில், "இந்தக் காட்டில் மலையின் குஹையில் வந்திருக்கும் நீர் யார்? இந்த வனத்தில் முட்கள் அதிகமாக இருக்கின்றனவே, அப்படிப்பட்ட வனத்தில் தாமரை இலைபோல மிருதுவாகவிருக்கும் கால்களால் ஸஞ்சரிக்கிறீரே; நீர் தேஜஸ்விகளுடைய தேஜஸ்ஸா? நீர் ஸூரியனா? அக்னியா? சந்திரனா? மகேந்திரனா? அல்லது மற்ற லோகபாலகர்களில் ஒருவரா? தீபமானது காந்தியால் இருளைப் போக்குவது போல குஹையிலிருக்கும் இருளானது உம்முடைய தேஜஸ்ஸால் நிவர்த்திக்கப்படுவதால் ப்ரஹ்மா, விஷ்ணு, மஹேச்வரர்களான மூன்று தேவர்களுக்குள் ஒருவராக இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். உண்மையைத் தெரிந்து கொள்ள நான் விரும்புவதால் உம்முடைய பிறப்பு, குலம் இவைகளைச் சொல்லக் கூடுமானால் சொல்லும். நான் இக்ஷ்வாகு குலத்தில் பிறந்தவன் மாந்தாதாவின் புத்திரன்; முசுகுந்தனென்று எனக்குப்

பெயர்; வெகுநாளாக நான் விழித்துக் கொண்டிருந்த மையால் களைப்படைந்து தூக்கத்தால் மயங்கி இந்தக் குஹையில் படுத்துத் தூங்கினேன். யாரோ ஒருவன் என்னையெழுப்பினான். அவனும் அவனுடைய பாபத் தினால் சாம்பலாக்கப்பட்டான். ஓ சத்ருக்களைக் கொல்பவரே! பின்பு அழகிய நீர் பார்க்கப்பட்டீர். நீர் அதிக தேஜஸ் உள்ளவராக இருப்பதால் உம்மை நன்றாகப் பார்க்க முடியவில்லை, ஆனதால் நீர் எல் லோராலும் ச்லாகிக்கக் கூடியவர்" என்று சொன்னார்.

35–42. அதனைக்கேட்ட ஸகல பிராணிகளிடத் திலும் அந்தர்யாமியாக வஸிக்கும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் சிரித்துக் கொண்டு முசுகுந்தரை நோக்கி, "என்னுடைய பிறப்பும், நாமதேயங்களும், சரிதங்களும் பல இருக் கின்றன. அவைகளைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. பூமியிலுள்ள தூளிகளை வெகு ஜன்மங்களெடுத்து எண்ணினாலும் எண்ணலாம்; என்னுடைய குணங்களையாவது சரிதங்களையாவது, நாமதேயங் களையாவது, பிறப்புக்களையாவது இவ்வளவென்று எண்ணமுடியாது. மஹர்ஷிகளும் கூட மேற்சொல்லிய வைகளை முழுமையும் தெரிந்து கொள்ள அஸக்தர் களாக இருக்கிறார்கள். ஆனாலும் இப்பொழுது என் னுடைய பெயர் முதலியவைகளைச் சொல்லுகிறேன், கேள்; முன்னொருகால் ப்ரஹ்ம தேவர் பூமிக்குச் சுமையாக இருக்கும் துஷ்டர்களைக் கொல்ல வேண்டு மென்று என்னைக் கேட்டுக் கொண்டதனால் அதனை ஒப்புகொண்டு, யதுவின் வம்சத்தில் வஸு தேவருக்குப் புத்திரனாக அவதரித்தேன் அதனால் என் னை வஸுதேவரென்று சொல்லுவார்கள். காலநேமியாகிய கம்ஸன் கொல்லப்பட்டான். பிரலம்பன் முதலிய துஷ்டர்களும் கொல்லப்பட்டார்கள். இந்த யவனனும்

உம்முடைய உக்ரமான கண்ணினால் எரிக்கப்பட்டான். நீர் முன் ஜன்மத்தில் என்னை ஆராதித்திருப்பதால் பக்தர் களிடத்தில் ப்ரீதியுள்ளவனாகிய நான் உம்மை அனுக் கிரகிப்பதற்காக இந்த குஹைக்கு வந்தேன். உமக்கு வேண்டிய வரத்தைக் கொடுக்கிறேன்; கேட்கலாம். என்னை சரணம் அடைந்தவன் பின்பு துக்கிக்கத் தகுந்தவனல்ல" என்று சொன்னார்.

43–57. அதனைக்கேட்ட முசுகுந்தர் கிருஷ்ணனை ஸ்ரீமந் நாராயணனென்று தெரிந்துகொண்டு, அவரை நமஸ்கரித்து மிக்க ஸந்தோஷத்துடன் கர்க்கருடைய வார்த்தையை நினைத்துக்கொண்டு (இருபத்தெட்டா வது சதுர் யுகத்தில் பகவான் பூமியில் அவதரிக்கப் போகிறாரென்று கர்க்கர் சொல்லியிருப்பதை) 'ஓ ஈச! புருஷன், ஸ்திரீயென்ற என்ற இருவகையான ஜனங் களும் ஸத்யராகிய. உம்மையறியாமல் உம்முடைய மாயையால் மோஹித்து,துக்கத்திற்குக் காரணமாகிய ஸம்ஸாரத்திலேயே ப்ரவர்த்திக்கிறார்கள். மேலும், ஸுகத்தை அடையவேண்டுமென்ற விருப்பமுள்ளவர் களாக இருக்கிறார்களேயொழிய அதற்குத் தகுந்த முயற்சி செய்கிறதில்லை. இவ்வுலகத்தில் மனுஷ்ய ஜன்மத்தை அடைவது அரிது. அதிலும் ஊமை, குருடு செவிடு, நொண்டி முதலியவையில்லாமல் ஸகல அங்கங்களுள்ளவனாக இருப்பது மிக்க அரிது. அப்படிப்பட்ட ஜன்மத்தை ஜனங்கள் அடைந்தும் ஸம்ஸாரமாகிய பாழுங்கிணற்றில் பசுபோல விழுகிறார்களேயொழிய உம்முடைய பாதத்தை ஸேவிக்கிறதில்லை. விஷயங்களிலே ஆசைப்படுகிறார்கள். ஒருவராலும் ஜயிக்கப்படாதவரே! நான் இவ்வளவு காலம் என்னை மனிதனென்றும் அரசனென்றும்

நினைத்து ராஜ்ய ஸம்பத்தால் கர்வமடைந்து புத்திரன், களத்திரம், போக்கிஷம், பூமி ஆகிய இவைகளில் ஆசையுள்ளவனாகவிருந்து வீணாகக் காலத்தைக் கழித்தேன். குடத்திற்கும், சுவற்றிற்கும் ஒப்பான இந்த சரீரத்தில் அபிமானத்துடன் தன்னை அரசனென்று நினைத்துக் கொண்டு ரதம், யானை, குதிரை, காலாட் படை ஆகிய இவைகளால் சூழப்பட்டு, உம்மை ஸேவிக் காமலிருந்தேன் (த்யானிக்கவில்லை).

துஷ்டர்களைச் சிக்ஷிப்பவராக நீர் இருக்கிறீர் என்று நினைக்காமல் தேகம் முதலியவைகளில் அபிமானமுள்ளவனாக இருப்பவனும், இப்படிச்செய்ய வேண்டுமென்ற மனோரத பரம்பரையுள்ளவனும், இஷ்டம் கிடைத்தாலும் கிடைக்காவிடினும் விஷயங் களில் ஆசைப்படுகிறவனுமாகிய மூடனை நீர் சிக்ஷிக் கிறீர். அது, பசியினால் கடைவாய்களை நக்கிக் கொண்டிருக்கும் ஸர்ப்பமானது எலியை விழுங்கினாற் போலிருக்கிறது. இந்தச் சரீரமானது ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட ரதங்களிலும், யானைகளின் மீதும் ஏறிச் சஞ்சரிக்கும் அரசன் என்ற பெயரை அடைந்திருக்கிறது. அந்தச் சரீரமே சில காலஞ்சென்ற பின் (மரணமடைந்த பின்) அக்னியினால் தஹிக்கப் பட்டால் சாம்பலென்றும், இல்லாவிட்டால் புழு வென்றும், நாய் முதலியவைகளால் புஜிக்கப் பட்டால் அமேத்தியமென்றும் பெயரை அடைகிறது. (மேலும்இவன் ஜீவித்திருக்கும் பொழுதும் ஸுகத்தை அடைகிற தில்லை.) அரசனானாலும் ஸகல திக்குகளை ஜயித்து தனக்குச் சமமான அரசர்களால் நமஸ்கரிக்கப்பட்ட வனானாலும் விஷயத்தில் ஆசைப்பட்டு ஸ்திரீகளுக்கு கிரீடாமிருகம்போல் (விளையாடுவதற்காக வளர்க்கப் பட்ட மான் முதலியவை) ஸ்வாதீனனாகயிருக்கிறான்.

மேலும் விஷயத்தில் ஆசை கொண்டவனுக்குச் ஸுகமேயில்லை. ஏனென்றால் நல்ல போகங்களை அனுபவிக்க விரும்பித் தவஞ்செய்ய ஆரம்பித்துப் போகங்களை யொழித்து அதற்குத் தகுந்த நல்ல கர்மங்களையனுஷ்டிக்கிறான்.

அதன் பயன் கிடைத்த பின்னும் திரும்பவும் மஹாராஜனாக ஆக வேண்டுமென்று தபஞ் செய்கிறான். அது கிடைத்தபின் மகேந்திரனாக வேண்டுமென்று விரும்புகிறான். ஆனதால் அதிக ஆசையுள்ளவனுக்குச் சுகமேயில்லை. ஸம்ஸார சக்கரத்தில் சுழன்று கொண்டிருக்கும் ஜனத்திற்கு ஸம்ஸாரபந்தம் நிவர்த்தி யாக வேண்டுமானால் உம்முடைய அனுக்கிரஹத் தால் ஸாதுக்களுடைய சேர்க்கையுண்டாகும். ஸாதுக் களுக்குக் காரிய காரணங்களுக்கு நியந்தா வுமான உம்மிடத்தில் பக்தியுண்டாகும் (அதனால் முக்தியடைவானென்று தாத்பர்யம்). ஓ ஈச! ராஜ்யத் தை விட்டு விலகும்படி என்னை நீர் செய்தது எனக்கு அனுக்கிரஹமேயாம். ஸாதுக்களான அரசர்கள் இம் மாதிரியான நிவிருத்தியை அடைவதற்காக வனம் செல்லுகிறார்கள். உம்முடைய பாதத்தை ஸேவிப்பதைக் காட்டிலும் வேறொன்றையும் நான் விரும்பவில்லை. இது ஏழைகளால் ப்ரார்த்திக்கக் கூடியது; இதனைக் காட்டிலும் மேலானதொன்றும் இல்லை. மோக்ஷத் தை கொடுப்பவரான உம்மை ஆராதித்து விவேகி யாக இருப்பவன் விஷயங்களில் ஆசைப்படுவானா? ஆனதால் ரஜஸ், தமஸ், ஸத்வம் ஆகிய குணங்களா லேற்படும் ஸகல காமங்களையும் விட்டுப் புண்ய பாபங்களற்றவரும், ஞானகனரும், குணங்களற்றவரும், ஒருவரும், புருஷருமாகிய உம்மைச் சரணமடைகிறேன்.

ஓ காப்பாற்றுகிறவரே! வெகு காலமாக துர்க்கத்தால் (பாபத்தால்) பீடிக்கப்பட்டும், காமம் முதலிய ஆறுவகைச் சத்துருக்களுள்ளவனும், ஆசையையொழிக் காதவனுமாகிய நான் தைவாதீனமாகச் சாந்தியை அடைந்து உம்முடைய பாதாரவிந்தத்தை அடைந்தேன். ஓ பரமாத்மாவே! உம்முடைய பாதம், பயத்தை நிவர்த் திப்பது; மோக்ஷத்தைக் கொடுத்து துக்கத்தை நிவர்த் திப்பது; ஆனதால் என்னைக் காப்பாற்றும்" என்றார்.

58–68. அதனைக் கேட்ட கிருஷ்ணன் அரசனை நோக்கி, "ஓ மஹாராஜா! உம்முடைய புத்தியானது மிகவும் சுத்தமானது; உறுதியானது; வேண்டிய வரங்களைக் கொடுப்பதாகச் சொல்லியும் விஷயத்தில் ஆசைப்படவில்லை. என்னிடத்தில் உறுதியான பக்தி செய்தவர்களுடைய புத்தியானது விஷயத்தில் செல்லாது, உம்முடைய புத்தியைப்பரீக்ஷிப்பதற்காகவே வரங்கொடுப்பதாகச் சொன்னேன். என்னிடத்தில் த்ரு பக்தியில்லாமல், அதற்காக முயற்சிக்கும் சிலருடைய புத்தியானது அடங்கியிருந்தாலும், சில ஸமயம் விஷயத்தில் ஆசைப்படும். ஆனதால் நீர் எப் பொழுதும் என்னிடத்திலேயே மனத்தைச் செலுத்திக் கொண்டு பூமியில் ஸஞ்சரியும்; என்னிடத்தில் ஒரு பொழுதும் பக்தி குறைய வேண்டாம். நீர் க்ஷத்திரி யனாகவிருந்தும் வேட்டையில் மிருகங்களைக் கொன்றீ ரல்லவா? அந்தப் பாபத்திற்காக என்னையே மனத்தில் த்யானஞ் செய்து கொண்டிரும். அந்தத் தபஸ்ஸினால் அந்தப் பாபம் நிவர்த்தி யடையும், அடுத்த ஜன்மத்தில் நீர் ப்ராஹ்மணனாகப் பிறந்து ஸகல பிராணிகளுக்கும் மித்திரனாகவிருந்து என்னை அடைவீர்" என்று அனுக்கிரஹித்தார் (மோக்ஷத்தை அடைவீரென்று கருத்து).

அத்தியாயம்–52

ருக்மிணீதேவி பகவானுக்குச் செய்தி அனுப்பியது.

1–4. இப்படி இக்ஷ்வாகு குலத்தரசனாகிய முசுகுந்தர் ஸ்ரீ கிருஷ்ணனால் அனுக்கிரஹிக்கப்பட்டு அவரைப் பிரதக்ஷிணஞ் செய்து நமஸ்கரித்து அந்தக் குஹையில் இருந்து வெளியில் வந்தார். மேலுமவர் மனிதர்கள், பசுக்கள், மரங்கள், கொடிகள் ஆகிய இவைகள் எல்லாம் சிறுத்திருப்பதைப்பார்த்துக் கலியுகம் வந்து விட்டதென்று தெரிந்து கொண்டு, தபஸ் செய்ய வேண்டுமென்ற ச்ரத்தையுடன் விஷயங்களில் ஆசை அற்றவராகி, ஸம்சயமற்று ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் மனத்தைச் செலுத்தி வடக்குத் திக்கை நோக்கிச் சென்றார். அவ்விடத்தில் கந்தமாதனமென்ற மலையில் நரநாராயணர்கள் வஸிக்கும் பதரிகாச்ரமத்தில் ஸுகதுக் கங்களையும், சீதோஷ்ணங்களையும் ஸஹித்து, சாந்தராகித் தபஸ் செய்து பகவானைச் ஸேவித்து கொண்டிருந்தார்.

5–14. ஸ்ரீகிருஷ்ணன் திரும்பவும் மதுரா நகரத்திற்கு வந்து மிலேச்ச சைன்னியத்தை கொன்று அவர்களுடைய தனத்தை த்வாரகைக்குக் கொண்டு போனார். இப்படியே பகவான் மிலேச்சர்களுடைய தனங்களை மனிதர்களைக் கொண்டும், எருதுகளைக் கொண்டும் த்வாரகைக்கு அனுப்பியபின், இருபத்தி மூன்று அக்ஷௌஹிணீ ஸைன்னியங்களுக்கு அதிபதி யான ஜராஸந்தன் யுத்தத்திற்கு வந்தான். அவனுடைய வேகத்தைக் கண்ணுற்ற ராமகிருஷ்ணர்களிருவர்களும் பயந்தவர்கள் போல அபிநயஞ் செய்து கொண்டு ஓடினார்கள். உண்மையில் பயமில்லாதவர்களானாலும் பயந்தவர்கள் போலத் தாமரை போன்ற மிருதுவான கால்களால் வெகு யோஜனை தூரம் ஓடினார்கள். அதனைக்கண்ட பலசாலியான ஜராஸந்தன் ஈசுவரர்கள்

ஆன ராமகிருஷ்ணர்களுடைய உண்மையையறியாத வனானதால் சிரித்துக் கொண்டு ஸைன்னியங்களுடன் அவர்கள் பின் ஓடினான். இப்படி வெகுதூரம் ஓடியும் களைப்படையாமல் ப்ரவர்ஷணமென்ற உயரமான மலையின் மீதேறினார்கள்.

அந்த மலையில் எப்பொழுதும் மழை மிகுதியாக இருக்குமாகையால் அதற்கு ப்ரவர்ஷணமென்று பெயர் உண்டாயிற்று. ஜராஸந்தன் அந்தப் பர்வதத்தில் ராமகிருஷ்ணர்கள் ஒளிந்து கொண்டார்கள் என்று நினைத்து, அவர்களைப் பலவாறாகத் தேடியும் அவர்களைக் காணவில்லை. பின்பு அவன் அந்த மலையைச் சுற்றிக் கட்டைகளை அடுக்கி அக்னியை கொளுத்தினான். அந்த மலையின் தாழ்வரைகள் எரியும் பொழுது ராம கிருஷ்ணர்கள் பதினோரு யோசனை தூரம் உயரமான அந்த மலையிலிருந்து சத்துருவிற்குத் தெரியாமல் பூமியில் குதித்துத் திரும்பவும் த்வாரகா நகரஞ் சென்றார்கள். பின்பு ஜராஸந்தன் ராமகிருஷ்ணர்களை எரித்துவிட்டோம் என்று நினைத்துக்கொண்டு ஸைன்யத்துடன் மகத தேசஞ்சென்றான்.

15–17. ஆனர்த்த தேசத்திற்கு அதிபதியான ரைவதர் என்பவர் ப்ரஹ்மதேவரால் தூண்டப்பட்டு, ரேவதி யென்ற, தமது கன்னிகையைப் பலராமருக்கு மணஞ் செய்து கொடுத்தாரென்று ஏற்கனவே சொன் னோம் (ஒன்பதாவது ஸ்கந்தத்தில்) ஓ மகாராஜா ! கோவிந்தராகிய பகவான் பீஷ்மகருடைய புத்திரியும் லக்ஷ்மீ தேவியின் அம்சமுமான ருக்மிணியென்பவளைச் ஸ்வயம்வரத்தில் சிசுபாலனைச் சார்ந்த ஸால்வன் முதலியவர்களை ஜயித்து, ஸகல ஜனங்களும் பார்த்து இருக்கும்பொழுது விவாஹஞ் செய்துகொண்டார். அது கருடன் தேவர்களை ஜயித்து அமிருதத்தைக் கொண்டு வந்தது போலிருந்தது என்று சுகர் சொன்னார்.

18–20. அதனைக்கேட்ட அரசன் சுகரை நோக்கி "ஓ ப்ராஹ்மண! ஒப்பற்ற தேஜஸுள்ளவராகிய ஸ்ரீ கிருஷ்ணன் ஸ்வயம்வரத்தில் ஸால்வன் முதலிய அரசர் களை ஜயித்து ருக்மிணியைப் பாணிக் கிரஹணஞ் செய்துகொண்ட கதையைச் சொல்லும் "ஓ ப்ராஹ்மண! விஷ்ணுவின் கதைகள் புண்ணியத்தைக் கொடுக்கக் கூடியவைகள்; தேன் போல் இனிமையானவைகள்; ஜனங்களுடைய பாபத்தைப் போக்கக்கூடியவைகள்; எப்பொழுதும் புதிதாகவிருப்பவைகள்; அதனைக் கேட்டு போதுமென்ற திருப்தி யாருக்கு உண்டாகும்?" என்றார்.

ருக்மிணீ கல்யாண கதை.

21–26. விதர்ப்ப தேசத்து அரசனாகிய பீஷ்மகர் என்பவருக்கு ருக்மி, ருக்மரதன், ருக்மபாஹு, ருக்மகேசன், ருக்மமாலி, என்ற ஐந்து புத்திரர்களும், ருக்மிணீ யென்ற ஒரு பெண்ணுமுண்டு. அந்தப்பெண் இளையவள். நல்ல நடையுள்ள அந்தப்பெண் தன் வீட்டிற்கு வந்தவர்கள் முகமாக ஸ்ரீகிருஷ்ணனுடைய ஸ்வரூபம், வீர்யம், குணம், அழகு இவைகளைப் பற்றிக் கேள்விப்பட்டு, தனக்கு கிருஷ்ணனே தகுதியான் பர்த்தாவென்று நினைத்தாள். ஸ்ரீகிருஷ்ண பகவானும் அந்தப் பெண்ணினுடைய புத்தி, லக்ஷணம், ஔதார்யம், ரூபம், சுபாவம், குணம், அழகு இவை களைப்பற்றிக் கேள்விப்பட்டுத் தமக்குத் தகுந்த பத்னியென்று நினைத்து அவளைக் கல்யாணஞ் செய்து கொள்வதாக ஸங்கல்பித்தார். ருக்மிணியின் பந்துக்கள் ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கும் ருக்மிணிக்கும் விவாஹத்தை நடத்தச் ஸம்மதித்தார்கள். ஆனால் ருக்மியென்ற ருக்மி ணியின் ஸஹோதரன் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் விரோத புத்தியுள்ளவனானதால் தங்கையைச் சிசுபாலனுக்கு விவாஹஞ் செய்விக்கவேண்டுமென்று நினைத்து, பந்துக் களுடைய இஷ்டத்திற்கு இசையாமல் அதனைத்

தடுத்தான். அவனுடைய அபிப்பிராயத்தை அறிந்த ருக்மிணி தனக்குள் யோசித்து மிகவும் கவலையடைந்து தனக்கு ஆப்தராகிய ஒரு ப்ராஹ்மணனை ஸ்ரீ கிருஷ்ணனிடம் அனுப்பினாள்.

27–35. ருக்மிணியால் அனுப்பப்பட்ட ப்ராஹ்மணன் த்வாரகா நகரம் வந்து, காவலாட்களின் அனுமதியின் மீது பகவானுடைய கிரஹத்திற்குட் ப்ரவேசித்து ஸ்வர்ணமயமான ஆஸனத்தில் உட்கார்ந்திருக்கும் ஆதி புருஷனாகிய ஸ்ரீ கிருஷ்ணனைத் தர்சித்தார். ப்ராஹ்மணர்களையே தைவமாகக் கொண்ட ஸ்ரீகிருஷ்ணன் பிராமணனைக் கண்டவுடன் ஆஸனத்தை விட்டெழுந்திருந்து தம்முடைய ஆஸனத்தில் ப்ராஹ்மணனை உட்காரவைத்துத் தேவர்கள் தம்மைப் பூஜிப்பது போல் உபசரித்தார். ப்ராஹ்மணன் ஆஹாரத்தை புஜித்துக் களைப்பாறிய பின் அவருடைய பாதங்களைப் பகவான் தமது கைகளால் பிடித்து, அவரை நோக்கி, ஓ ப்ராஹ்மண ச்ரேஷ்டர்களுக்குட் சிறந்தவரே! கிடைத்ததைக் கொண்டு ஸந்தோஷப்படும் உம்முடைய தர்மமானது பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறதா? அதிகக் கஷ்டப்படாமல் ஸ்வதர்மத்தை நடத்துகிறீரா? ப்ராஹ்மணன் கிடைத்ததைக்கொண்டு ஸந்தோஷப்படுவதே அவனுக்கு ஸ்வதர்மம். தன்னுடைய தர்மத்தை விடாமல் அனுஷ்டிக்க வேண்டும். அப்படிச் செய்வதால் ஸகல காமங்களும் கிடைக்கின்றன. கிடைத்ததைக் கொண்டு ஸந்தோஷப்படாமல் அதிக ஆசைப்படுகிறவன் மஹேந்திரபதத்தை அடைந்தவன் ஆனாலும் அதனால் அவனுக்குத் திருப்தியுண்டாகிறதில்லை; அதனால் அவன் ஸுகப்படுகிறதில்லை.

ஏழையானாலும் அதிக ஆசையில்லாமல் கிடைத்ததைக் கொண்டு ஸந்தோஷிப்பவன் கை, கால், முதலிய ஸகல அவயவங்களிலும் தாபமற்றவனாகுவான் ஸுகப்படு

வான். தைவச் செயலாகக் கிடைத்ததைக் கொண்டு ஸந்தோஷிப்பவர்களும், பிராணிகளிடத்தில் தயையுள்ளவர்களும், அஹங்கார மற்றவர்களும். ஸாந்தர்களுமான ஸாதுக்களை நான் சிரஸால் அடிக்கடி நமஸ்கரிக்கிறேன். ஓ ப்ராஹ்மண! க்ஷேமமா? எந்த அரசனுடைய ராஜ்யத்தில் அரசனால் காப்பாற்றப் பட்டுப் ப்ரஜைகள் ஸுகமாக வஸிக்கிறார்களோ, அந்த அரசனிடத்தில் நான் மிகவும் ப்ரியப்படுகிறேன். நீர் ஸமுத்திரத்தைத் தாண்டி எதற்காக இவ்விடம் வந்தீரோ; அதெல்லா வற்றையும் சொல்லக்கூடியதானால் சொல்லும்; நம்மால் செய்யக்கூடியதென்ன?" என்று கேட்டார்.

36–38. இப்படிப் பரமேசுவரரும், விளையாட்டாக மனித வடிவங் கொண்டவருமான பகவானால் கேட்கப் பட்ட ப்ராஹ்மணர் அவரிடம் எல்லாவற்றையும் தெரிவித்தார். எப்படியெனில், விதர்ப்ப தேசத்து அரசனுடைய புத்ரியும், உமக்கு வேலைக்காரியுமான ருக்மிணிக்கு விவாஹம் ஸமீபத் திருப்பதால் அவள் உமக்குச் சில ஸமாசாரத்தைச் சொல்லியனுப்பியிருக்கிறாள். பீஷ்மகருடைய புத்திரியான அவளால் அனுப்பப்பட்டு உம்முடைய ஸமீபம் வந்தேன். அதனைக் கேட்டு மேல் செய்யவேண்டியதைச் செய்யவும்; ருக்மிணியால் சொல்லியனுப்பியதைக் கேளும்.

39. ஓ அச்யுத! எல்லா லோகங்களிலும் ஸுந்தர புருஷ! உம்மைப் பற்றிக் கேள்விப்படுகிறவர்களுடைய காதின் வழியாக நீர் உள்ளே ப்ரவேசித்து, ஸகல அவயங்களின் தாபத்தை நிவர்த்திக்கிறீர். உம்முடைய சரீரத்தைத் தர்சிப்பதே கண்களுக்குப் பயன். தர்சிப்பவர்களுக்கு ஸகல புருஷார்த்தங்களும் கிடைக்கின்றன. அப்படிப்பட்ட உம்முடைய குணங்களையும் ஸ்வரூபத்தையும் கேள்விப்பட்டு என்னுடைய மனமானது வெட்கமற்று உம்மிடத்தில் ப்ரவேசிக்கிறது. (உம்முடைய குணங்களுக்கும், எனக்கும் மிகுந்த தாரதம்யமிருந்தாலும்

மேலான விஷயத்தையடைய விரும்புவதால் வெட்கமில்லாமல் உம்மை அடைய விரும்புகிறேன் என்று கருத்து.)

40. 'ஓ முகுந்த! மனிதர்களுக்குட் சிறந்தவரே! (கன்னிகைக்கு இவ்வளவு தைர்யமாவென்று சங்கிக்க வேண்டாம்). குலத்திலும், ரூபத்திலும், ஸ்வபாவத்திலும், வித்தையிலும், வயதிலும், ஸம்பத்திலும், தேஜஸ்ஸிலும், ஒப்பற்றவரும் (தமக்குச் சமரும்), ஜனங்களுடைய மனத்தை ரமிக்கச் செய்பவருமான உம்மிடத்தில் நல்ல குலத்தில் பிறந்தவளும் புத்தியுள்ளவளுமான எவள்தான் ஆசைப்படமாட்டாள்? அதிலும் இது விவாஹ ஸமயம் (தவறினால் உம்மை அடைவதற்கு நியாயமில்லை. மேலும் மணப்பிள்ளைக்கு எந்தெந்த குணமிருக்க வேண்டுமென்று கன்னிகையும், அவள் தாயும் தந்தையும், பந்துக்கள் முதலியவர்களும் அபேக்ஷிப்பார்களோ அந்தக் குணங்கள் யாவும் உம்மிடத் திலிருக்கின்றனவென்று தாத்பர்யம்).

41. 'ஓ தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரே! பிரபுவே! உம்மைப் பர்த்தாவாக நான் வரித்திருக்கிறேன். என்னுடைய ஆத்மாவை உம்மிடம் ஸமர்பித்தேன். ஆனதால் நீர் இவ்விடம் வந்து என்னை பத்தினியாக அங்கீகரிக்கவேண்டும். வீரராகிய உம்முடைய வளான என்னைச் சிசுபாலன் சீக்கிரத்தில் தொடவேண்டாம். சிங்கத்திற்கென்று வைத்ததை நரி அபஹரிக்கலாமா? (நீர் வராமலி ருந்தால் சிசுபாலன் என்னை ஸ்பரிசிக்கும்படி நேரும். அப்படிச் செய்யாமல் சீக்கிரம் வந்து அனுக்கிரஹிக்க வேண்டுமென்று கருத்து).

42. பூர்த்த தர்மம் (கிணறு, குளம் வெட்டுவிப்பது முதலியவை), இஷ்ட தர்மம் (யாகம் முதலியவை) தானம், தீர்த்த யாத்திரை, கிருச்ரமம் முதலிய வ்ரதம், தேவ பூஜை, குருபூஜை, ப்ராஹ்மண பூஜை முதலியவைகளைச் செய்து நான் பரமாத்மாவை ஆராதித்திருந்தால் ஸ்ரீகிருஷ்ணன் இவ்விடம் வந்து

என்னை பாணிக்கிரஹணஞ்செய்து கொள்ளட்டும். சிசுபாலன் முதலிய மற்றவர்களுக்கு என்னுடைய பாணிக்கிரஹணம் கிடைக்க வேண்டாம்.

43. ஒருவராலும் ஜயிக்கமுடியாதவரே! நாளைய தினம் நடக்கப் போகிற கல்யாணத்திற்காக நீர் ஒருவருக்கும் தெரியாமல் விதர்ப்பதேசம் வந்து சைன்னியத்தை அடித்து, பராக்கிரமத்தைக் காண்பித்து, ராக்ஷஸ விதிப்படி என்னை விவாகஞ் செய்து கொள்ளும்.

44. 'அந்தப்புரத்தில் ஸஞ்சரிக்கும் உன்னுடைய பந்துக்களைக் கொன்று உன்னை அபஹரிக்கவேண்டும். கல்யாணகாலத்தில் அப்படிச் செய்வது உசிதமா' என்று கேட்பீரோ? விவாஹத்திற்கு முந்திய தினத்தில் பட்டணத்திற்கு வெளியிலிருக்கும் அம்பிகையின் ஆலயத்திற்குக் கல்யாணப்பெண்போவது வழக்கம். (அப்பொழுது அம்பிகையின் ஆலயத்திலிருந்தே என்னைத் தூக்கிக் கொண்டு போகலாம்).

45. 'ஓ தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரே உம்முடைய பாதாரவிந்த தூளியைப் பூசிக் கொள்வதனால் (ஸ்நானம்) அக்ஞானம் நிவர்த்தியாகிறதென்று பரமசிவன் நினைத்து, பாததூளியை விரும்புவது போல் பெரியோர்களும் அதனையே ஸேவிக்கிறார்கள். ஆனதால் அப்படிப்பட்ட உம்முடைய அனுக்கிரஹம் எனக்கும் கிடைக்காவிடில் வ்ரதங்களைச் செய்து அதனால் இளைத்து, ப்ராணனை விட்டு விடுவேன். அடுத்த ஜன்மத்திலும் நீர் என்னையே அனுக்கிரஹிக்காவிட்டால் அப்பொழுதும் மரணமடைவேன். இப்படி எவ்வளவு ஜன்மமெடுத்தும் உம்முடைய அனுக்கிரஹத்தை எதிர்பார்த்திருப்பேன்.'

46. "ஓ யாதவர்களுக்கு தைவமே! ருக்மிணியால் சொல்லியனுப்பப்பட்ட ரஹஸ்ய வார்த்தைகளைச் சொன்னேன். இதைப் பற்றி யோசித்து எதனைச் செய்ய வேண்டுமோ அதனைச் செய்யும்" என்று ப்ராஹ்மணர் ஸ்ரீ கிருஷ்ணனிடம் தெரிவித்தார்.

அத்தியாயம்–53

கிருஷ்ணன் ருக்மிணியை அபஹரித்தது

1–13. ப்ராஹ்மண முகமாக ருக்மிணி சொல்லி யனுப்பிய வார்த்தையைக் கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் சிரித்துத் தமது கையால் அந்தப் ப்ராஹ்மணனுடைய கையைப் பிடித்துக் கொண்டு, "அழகான முகமுள்ள ருக்மிணியானவள் என்னையே நினைத்துக் கொண்டிருப்பது போல் நானும் அவளையே நினைத்துக் கொண்டு ராத்ரியில் கூட தூக்கமில்லாமலிருக்கிறேன். ருக்மியானவன் என்னிடம் விரோத புத்தியுள்ளவனாகையால் என்னுடைய விவாஹமும் தடைப்பட்டதென்பது எனக்குத் தெரியும். (ருக்மிணியால் சொல்லப்படாமலிருந்தாலும் எனக்குத் தெரியுமென்று கருத்து). ஆனதால் கட்டையிலிருந்து அக்னி ஜ்வாலையை எடுப்பதுபோல அத்மர்களான அரசர்களை ஜயித்து அழகான அவயங்களுள்ளவளும், என்னிடத்திலேயே சித்தத்தைச் செலுத்தியவளுமான ருக்மிணியைக் கொண்டு வருவேன்" என்று சொல்லிவிட்டு மறுநாள் ராத்திரி ருக்மிணியின் விவாஹத்திற்கு ஸமயமென்பதை அறிந்து ஸாரதியை நோக்கி, 'தாருக! ரதத்தை கொண்டுவா" என்று ஆக்ஞாபித்தார். அதனைக் கேட்ட தாருகன் ஸைன்யம், ஸுக்ரீவம், மேகபுஷ்பம், வலாஹகம் என்ற பெயருள்ள நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட ரதத்துடன் வந்து, இரு கைகளையும் கூப்பிக்கொண்டு கிருஷ்ணனுடைய முன்பாக நின்றான். பின்பு கிருஷ்ணன் அந்த ரதத்தில் ப்ராஹ்மணனை ஏற்றிக் கொண்டுத் தாமும் ஏறிக் கொண்டு ஆனர்த்த தேசத்திலிருந்து ஒரு ராத்திரியில் விதர்ப்ப தேசம் வந்தார். குதிரைகள் அவ்வளவு வேகமாகச் சென்றன.

குண்டின பட்டணத்திற்கு அதிபதியான பீஷ்மகர், புத்திரனாகிய ருக்மியிடத்திலுள்ள பிரியத்தால் அவனுடைய இஷ்டப்படி ருக்மிணியைச் சிசுபாலனுக்குக் கொடுப்பதாக நிச்சயஞ் செய்துகொண்டு கல்யாண கார்யங்களைச் செய்வித்தார். பட்டணத்து வீதிகளும் நாற்சந்தி மண்டபங்களும் குப்பையில்லாமல் சுத்தஞ் செய்யப்பட்டும் ஜலந்தெளிக்கப்பட்டுமிருந்தன. மேலும், பலவகையான தோரணங்களாலும், த்வஜங்களாலும், பதாகைகளாலும் (கொடிகள்) அலங்கரிக்கப்பட்டிருந்தன. மேலும் அந்தப் பட்டணத்திலுள்ள ஸ்திரீகளும், புருஷர்களும் புஷ்பங்களாலும், சந்தனங்களாலும், சுத்த வஸ்திரத்தித்தாலும் சரீரத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒவ்வொரு வீடுகளும் அகில் முதலிய தூபங்களால் வாஸனை கூட்டப்பட்டிருந்தன. அரசன் பிதிருக்களையும், தேவர்களையும், ப்ராஹ்மணர்களையும் விதிப்படி பூஜித்தார். மேலும் ப்ராஹ்மணர்களுக்குப் போஜனஞ் செய்வித்தார். பின்பு ருக்மிணிக்கு ஸ்நானஞ் செய்வித்து, மங்கள ஹஸ்த ஸூத்திரம் தரிக்கச் செய்து, புது வஸ்திரங்களாலும், மேலான ஆபரணங்களாலும் அலங்கரித்தார். பின்பு ப்ராஹ்மணர்கள் ஸாமம், ரிக், யஜுஸ் ஆகிய இவைகளின் மந்திரங்களையுச்சரித்துக் கல்யாணப் பெண்ணுக்கு ரக்ஷையைச் செய்தார்கள். அதர்வண வேதத்தையறிந்தவரான புரோஹிதர் கிருஹசாந்திக்காக ஹோமஞ் செய்தார். தங்கம், வெள்ளி, வஸ்திரம், எள், வெல்லம், பசுக்கள் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்கு அரசன் தானஞ் செய்தார்.

14–18. அப்படியே சேதி தேசத்தரசனாகிய

தமகோஷரென்பவர், புத்திரனாகிய சிசுபாலனுக்காக மங்கள கார்யங்களை செய்தார். பின்னுமவர் மதங் கொண்ட யானைப்படை, ஸ்வர்ணத்தால் அலங் கரிக்கப்பட்ட ரதங்கள், காலாட்படை, குதிரைகள் ஆகிய இவைகளுள்ள ஸைன்னியங்களுடன் குண்டின பட்டணத்திற்கு வந்தார். அதனைக்கண்ட பீஷ்மக மஹாராஜன் அவரையெதிர் கொண்டழைத்து, நன்றாகப் பூஜித்து ஒரு மாளிகையில் இறக்கினார். மேலும் அந்த விடுதிக்கு ஸால்வன், ஜராஸந்தன், தந்தவக்த்ரன், வீடுரதன், பௌண்ட்ரகன் முதலிய சிசுபாலனை சார்ந்தவர்கள் வந்தார்கள். பின்னுமவர்கள் ராமகிருஷ் ணர்களுக்கு விரோதிகளானதாலும், சிசுபாலனைச் சார்ந்தவர்களானதாலும் கிருஷ்ணன் இவ்விடம் வந்து ஒருகால் ருக்மிணியை அபஹரிப்பாரானால் அப் பொழுது நாமெல்லோரும் சேர்ந்து அவருடன்யுத்தஞ் செய்து அவரை ஜயித்து, சிசுபாலனுடைய விவாஹத்தை முடித்துவைக்கிற தென்ற நிச்சயத்துடனிருந்தார்கள்.

19–20. அப்பொழுது பலராமன் சத்துருக்களு டைய எண்ணத்தைக் கேள்விப்பட்டு, ஸ்ரீகிருஷ்ணன் ஒருவராகச் சென்றதையும் பார்த்து, ஒருகால்யுத்தமுண் டாகுமோவென்று ஸந்தேஹித்து ரதம், யானை, குதிரை, காலாட்படையென்று நான்கு அங்கங்களுள்ள அதிக ஸைன்னியத்துடன் கிருஷ்ணனிடத்திலிருக்கும் ஸ்நே ஹத்தால் குண்டின பட்டணத்திற்கு வந்தார்.

21–26. அப்பொழுது பகவானுடைய வரவை எதிர்பார்த்திருக்கும் பீஷ்மகருடைய புத்திரியான ருக்மிணியானவள் ப்ராஹ்மணன் திரும்பி வராததால் பின்வருமாறு தமக்குள் யோசிக்கலானாள். எப்படியெ னில், "என்னுடைய கல்யாணத்திற்கு ஒரு ராத்திரிதான்

மத்தியிலிருக்கிறது. இன்னும் ஸ்ரீ கிருஷ்ணன் வர வில்லை. நான் அதிர்ஷ்டமில்லாதவள்; பகவான் வராத காரணம் இன்னதென்று தெரியவில்லை. என்னால் அனுப்பபட்ட ப்ராஹ்மணரும் திரும்பி வரவில்லை. ஒருகால் தோஷமற்றவராகிய பகவான் என்னுடைய தைர்யம் முதலியவைகளைப் பார்த்து, என்னை விவாஹஞ் செய்துகொள்வதில் பிரிய மில்லாமல் அதில் முயற்சி செய்யாமலிருக்கிறாரோ? (ஒருவேளை கிருஷ்ணன் த்வாரகா நகரத்திலிருந்து புறப்பட்டும் வழியில் தடைப்பட்டிருக்கிறாரோ?) அதிருஷ்டமற்ற வளாகிய எனக்கு ஹவம் அனுகூலமாக இருக்கவில்லை. ருத்திரருடைய பத்தினியும், பார்வதராஜனுடைய புத்தி ரியுமான அம்பிகையும் என்னிடத்தில் ப்ரியப் படவில்லை" என்று யோசித்துக் கொண்டு பகவானை த்யானித்து. இப்பொழுது பகவான் வரலாம் என்று ஆனந்தக் கண்ணீர் நிறைந்த கண்களை மூடிப் பகவானையே தியானஞ்செய்து கொண்டிருந்தாள். அப் பொழுது அவளுடைய இடது கையும், தொடையும், கண்ணும் துடித்தது. அதனால் பகவான் வந்து விட்டாரென்று அவள் தெரிந்து கொண்டாள்.

27–30. பின்பு கிருஷ்ணனால் அனுப்பப்பட்ட "நான் வந்தேன் என்பதைச் சொல்லும்" என்ற அந்த ப்ராஹ்மணன் அந்தப்புரஞ்சென்று ராஜகுமாரியைக் கண்டார். ருக்மிணியும் லக்ஷணத்தை அறிந்தவளான தால் சிரித்த முகமுள்ளவரும், பரபரப்பில்லாமல் நடப்பவருமான ப்ராஹ்மணரை நோக்கி சிரித்துக் கொண்டு பகவான் வந்தாராவென்று கேட்டாள் அதனைக்கேட்ட ப்ராஹ்மணர் ஸ்ரீகிருஷ்ணன் வந்திருக் கிறார் என்பதையு ம், "உன்னை அழைத்துப் போகிறேன்" என்று பகவான் சொன்னார் என்பதையும்

ருக்மிணிக்குத் தெரிவித்தார். அதனைக் கேட்டு ருக்மிணீ ஸந்தோஷத்தை அடைந்து. ப்ராஹ்மணர் செய்த உபகாரத்திற்குப் பதில் எதனைச் செய்யலா மென்று யோஜித்தும் அதற்கு ஒன்றும் பதிலாகா தென்று நிச்சயித்து, அவருக்கு நமஸ்காரஞ் செய்தாள்.

31–34. பின்பு பீஷ்மக மகாராஜன் ருக்மிணியின் விவாஹத்தைப் பார்ப்பதற்காக ராமகிருஷ்ணர்கள் வந்திருக்கிறார்களென்று கேள்விப்பட்டு, தூர்யம் முதலிய வாத்திய கோஷங்களுடன் அவர்களையெதிர் கொண்டழைத்துப் பூஜித்தார். மேலுமவர் சுத்தமான வஸ்திரங்களையும், மற்றுங் காணிக்கைகளையும், மதுபர்க்கத்தையும் எடுத்து வந்து விதிப்படிப் பூஜித்து உபசரித்தார் பின்னுமவர் அழகான விடுதியேற்படுத்தி அவர்களுக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும், அவருடைய சைன்னியங்களுக்கும் மர்யாதை செய்தார். இப்படி பீஷ்மக மஹாராஜன் ருக்மிணியின் விவாஹத் திற்காக அவ்விடம் வந்த அரசர்களுக்கு அவரவர்களுடைய வயதிற்கும், பலத்திற்கும், ஐச்வர்யத்திற்கும், வீரியத்திற்கும் தக்கபடி ஸகல வஸ்துக்களையுங் கொடுத்து உபசரித்தார்.

35–37. அந்தப் பட்டணத்திலுள்ள ஜனங்கள் கிருஷ்ணன் வந்திருப்பதைக் கேள்விப்பட்டு, அவ்விடம் வந்து ஸ்ரீ கிருஷ்ணனுடைய முகத்தைத் தர்சித்தார்கள். பின்னுமவர்கள், "இந்த கிருஷ்ணனுக்கே ருக்மிணி தகுந்த பத்னி. இந்த கிருஷ்ணனும் ருக்மிணிக்குத் தகுந்த பர்த்தா. நம்மால் ஏதாவது புண்ணியஞ் செய்யப்பட்டிருந்தால் அதன் மஹிமையால் ஸ்ரீ கிருஷ்ணன் ருக்மிணியை விவாஹஞ் செய்து கொள்ளட்டும்" என்று ப்ரியமாகப் பேசிக் கொண்டார்கள்.

38–57. பின்பு கல்யாணப் பெண்ணாகிய ருக்மிணி அம்பிகையின் ஆலயத்திற்கு வாஹனமில்லாமல் காலால் நடந்து சென்றாள். அப்பொழுது சூரர்களான அரசனுடைய ஸேவகர்கள் அவளைக் காப்பாற்றிக்கொண்டு நாலு பக்கத்திலும் சூழ்ந்து கொண்டு சென்றார்கள். அந்த ருக்மிணியும் ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதாரவிந்தத்தைத் த்யானஞ் செய்து கொண்டு சென்றாள். பின்னுமவளைச்சுற்றி அவளுடைய தோழிகளும், தாய்களும் சென்றார்கள். மிருதங்கம், சங்கம், பேரி, தூரி, பணவம் முதலிய வாத்தியங்கள் முழக்கப்பட்டன சூரர்களான ஸேவகர்கள் ஆயுதபாணிகளாக அவளை ஸம்ரக்ஷித்துக் கொண்டு சென்றார்கள். மேலும், சிறந்த தாஸிகள் பலவகையான பூஜாத்ரவியங்களை எடுத்துக்கொண்டு சென்றார்கள். ப்ராஹ்மண ஸ்திரீகள் புஷ்பம், சந்தனம், உயர்ந்த வஸ்திரம், ஆபரணம் ஆகிய. இவைகளால் அலங்கரித்துக்கொண்டு சென்றார்கள். ஸூதர்களும், மாகதர்களும், வந்திகளும் ஸ்தோத்திரஞ் செய்தார்கள். வாத்தியக்காரர்கள் வாத்தியங்களைச் கோஷித்தார்கள். இப்படி அம்பிகாலயஞ்சென்று கால் கைகளை அலம்பி ஸுத்தையாகி, சாந்தமனமுள்ளவளாகி அம்பிகாலயத்திற்குட் ப்ரவேசித்தாள். அப்பொழுது பூஜாவிதிகளை அறிந்தவர்களான ப்ராஹ்மண ஸ்திரீகள் ஆசமனஞ் செய்து பரம சிவனுக்கும் அம்பிகைக்கும் ருக்மிணியை நமஸ்காரஞ் செய்யும்படி செய்தார்கள். அப்பொழுது ருக்மிணி யானவள், "ஓ அம்பிகையே! உமக்கு நமஸ்காரஞ் செய்கின்றேன். கணபதி முதலியவர்களுடன் கூடிய பரமசிவனையும் நமஸ்கரிக்கிறேன். ஸ்ரீ கிருஷ்ணன் எனக்குப் பர்த்தாவாக ஆக வேண்டும். அதனை பகவான் அனுமோதிக்கட்டும்" என்று சொல்லி நமஸ்கரித்தாள். மேலுமவள் ப்ராஹ்மண ஸ்திரீகளை முன்னிட்டு

ஜலத்தாலும், சந்தனத்தாலும், தூபதீபங்களாலும், வஸ்திரங்களாலும், புஷ்பமாலைகளாலும், ஆபரணங்களாலும் பரமசிவனையும் அம்பிகையையும் பூஜித்தாள்.

பின்னுமவள் உப்பு பக்ஷணங்கள், அதிரஸம், தாம்பூலம், பழங்கள், கரும்பு, மங்கள ஸூத்ரம் ஆகிய இவைகளால் ஸுமங்கலிகளான ப்ராஹ்மண ஸ்திரீகளையும், பூஜித்தாள். அந்த ஸ்திரீகள் நிர்மால்யத்தை ருக்மிணிக்குக் கொடுத்து ஆசிர்வாதஞ் செய்தார்கள். பின்பு ருக்மிணி அந்த ப்ராஹ்மண ஸ்திரீகளுக்கும், அம்பிகைக்கும் நமஸ்காரஞ் செய்து நிர்மால்யத்தைப் பெற்றுக் கொண்டாள். பின்பு அவள் மௌனத்தை விட்டு. ரத்தினமிழைத்த மோதிரத்தால் ப்ரகாசிக்கும் தனது கையால் வேலைக்காரியை பிடித்துக்கொண்டு அம்பிகாலயத்திலிருந்து வெளியில் வந்தாள். அவள் தேவமாயை போல் வீரர்களை மோஹிக்கச் செய்பவளாகவும், அழகான இடுப்புள்ளவளாகவும், குண்டலங்களால் பிரகாசிக்கும் முகமுள்ளவளாகவும், யௌவன வயதுள்ளவளாகவும், ஒட்டியாணத்தைத் தரித்தாவளாகவும், ப்ரகாசிக்கும் ஸ்தனங்களுள்ளவளாகவும், தலைமயிர்களைக்கண்டு பயந்து அசைகின்றவைகள் போன்ற கண்களுள்ளவளாகவும், சுத்தமான சிரிப்புள்ளவளாகவும், கோவைப்பழம் போல சிவந்த உதடுகளுள்ளவளாகவும், அதன் காந்தியால் சிவந்த பற்களையுடையவளாகவும், ஹம்ஸம்போல நடப்பவளாகவும் இருந்தாள். அவள் நடக்கும் பொழுது காலில் அணிந்திருக்கும் பாதச் சிலம்புகள் இனிமையாகச் சப்தித்தன. அப்படிப்பட்ட ருக்மிணியைக் கண்ணுற்ற வீரர்களான அரசர்கள் மன்மத தாபத்தை அடைந்து மோஹித்தார்கள், இப்படி விளையாட்டாக, நடப்பது என்ற வ்யாஜமாக

தன்னுடைய அழகைப் பகவானுக்குக் காண்பித்தாள். அந்தப் பெண்ணைப் பார்த்த அரசர்கள் அவளுடைய சிரிப்பு, வெட்கப்பார்வை இவைகளால் மோஹித்து கையிலிருந்த ஆயுதங்களையெறிந்து, ரதம், யானை, குதிரை முதலிய வாஹனங்களிலிருந்து பிரக்ஞை யற்றுப் பூமியில் விழுந்தார்கள்.

இப்படி ருக்மிணி மெள்ள மெள்ள நடந்து வரும்பொழுது பகவானை எப்பொழுது அடைவோம் என்று யோசித்துக் கொண்டு முகத்தை மறைக்கும் தலைமயிர்களை இடக்கையின் நகங்களால் விலக்கிக் கொண்டு அவ்விடம் வந்திருக்கும் அரசர்களையும் ஸ்ரீகிருஷ்ணனையும் பார்த்தாள், இப்படி ஆலயத்திலிருந்து வெளியில் வந்து ருக்மிணி ரதத்திலேற யத்தனிக்கும்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் அந்த ருக்மிணியைத் தூக்கிக் கருடத்வஜமுள்ள தம்முடைய ரதத்தில் வைத்துக்கொண்டு அந்த அரசர்களை லக்ஷ்யஞ்செய்யாமல் பலராமனை முன்னிட்டுச் சென்றார். அது சிங்கம் நரிக்கூட்டத்திலிருந்துத் தனது பாகத்தைக் கொண்டு போனாற் போலிருந்தது. அப்பொழுது ஜராஸந்தன் முதலிய மற்ற அஹங்கார முள்ள அரசர்கள் தங்களைக் கிருஷ்ணன் லக்ஷ்யஞ் செய்யாமலிருந்ததையும், தங்களுக்குக் கீர்த்தி குறைந்து விட்டதையும் பற்றிப் பொறாமை அடைந்தார்கள். மேலுமவர்கள், "சிங்கங்களின் கீர்த்தியை மிருகங்கள் அபஹரித்தாற் போல் கோபர்களால் நம்முடைய கீர்த்தி அபஹரிக்கப்பட்டது; கஷ்டம். ஆனதால் நம்மை நிந்திக்கவேண்டும்" என்று சொல்லிக் கொண்டார்கள்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–54

கிருஷ்ணன் ருக்மிணியை கல்யாணஞ் செய்து கொண்டது

பின்பு ஜராஸந்தன் முதலியவர்கள் மிக்க கோபங் கொண்டு தகுந்த முயற்சியுடன் வாஹனத்தின் மீதேறி அவரவர்களுடைய ஸைன்னியத்துடன் ஆயுதபாணி களாக கிருஷ்ணனைப் பின்தெர்டர்ந்து சென்றார்கள். அவர்களைக் கண்ணுற்ற யாதவ ஸேனாதிபதிகள் தங்கள் வில்லுகளை மண்டலமாக வளைத்து சப்திக்கச் செய்துகொன்டு நின்றார்கள். அப்பொழுது குதிரை யேற்றம். யானையேற்றம், ரதத்திலேறுவது இவைகளை யறிந்தவர்களான சத்துருக்கள், மேகங்கள் மலைகளில் மழையைப் பெய்வதுப்போல் யாசதவஸைன்னியத்தில் பாணங்களை வர்ஷித்தார்கள். அப்பொழுது நல்ல இடுப்புள்ள ருக்மிணிதேவி பர்த்தாவாகிய கிருஷ்ண னுடைய ஸைன்னியம் சத்துருக்களுடைய பாணங்களால் மறைக்கப் பட்டிருப்பதை பார்த்து மிகுந்த பயத்தால் கலங்கிய கண்களுள்ளவளாகி, கிருஷ்ணனுடைய முகத்தை வெட்கத்துடன் பார்த்தாள். அதனைக்கண்ட பகவான் சிரித்து, "ஓ அழகிய கண்களுள்ளவளே! பயப்பட வேண்டாம், சீக்கிரத்தில் உன்னைச் சார்ந்த ஸைன்னியங்களால் சத்துரு ஸைன்னியம் கொல்லப் படும்" என்று சொன்னார். அதற்குள் கதன், ஸங்கர் ஷணர் முதலிய வீரர்கள் சத்துருக்களுடைய கார்யத்தைச் ஸஹியாமல் நாராசமென்ற பாணங் களைப் ப்ரயோகித்து, சத்துருக்களுடைய குதிரை, யானை, ரதம் இவைகளை அடித்தார்கள். அதனால் யானை, ரதம், குதிரை இவைகளின் மீது உட்கார்ந் திருந்த வீரர்களுடைய தலைகள் வெட்டப்பட்டுக்

கிரீடம், குண்டலம், தலைப்பாகை இவைகளுடன் கோடிக்கணக்காகக் கீழே விழுந்தன. மேலும் கத்தி, கதாயுதம், வில் இவைகளுடன் கைகளும், தடைகளும், கால்களும் வெட்டுண்டு விழுந்தன. பின்னும் குதிரை களும், கோபுர கழுதைகளும், யானைகளும், ஒட்டகங் களும், காலாட்படைகளும் கொல்லப்பட்டன. இப்படி விருஷ்ணிகளால் சத்ரு ஸைன்னியம் கொல்லப்பட்ட பொழுது ஜராஸந்தன் முதலிய அரசர்கள் திரும்பி குண்டினபட்டணம் வந்து, களத்திரத்தைப் பறி கொடுத்தவன்போல் துக்கப்பட்டுக் கொண்டிருப்பவனும். காந்தியற்றவனும் உத்ஸாஹமில்லாதவனும், வாடின முகமுள்ளவனுமான சிசுபாலனை நோக்கி, "ஓ புருஷர்களுக்குட் சிறந்தவனே! இந்த விஷயத்தில் நீ வருத்தப்பட வேண்டாம்.

பிராணிகளிடத்தில் ஸுகமாவது, துக்கமாவது நிலையாக நிற்கிறதில்லை. (எப்பொழுதும் ஒருவன் ஸுகத்தையடைந்தானென்பதுமில்லை; எப்பொழுதும் ஒருவன் துக்கத்தையடைந்தானென்பதுமில்லை) மரத்தி னால் செய்யப்பட்ட பொம்மையானது ஆட்டி வைப் பவனுடைய இஷ்டப்படி எப்படி நர்த்தனஞ் செய்கிறதோ அது போல இந்த ஜனங்கள் ஈச்வரனுக்கு வசப்பட்டு சேஷ்டிக்கிறார்களேயொழிய ஸுகத்தை அடைவதற்காகவாவது, துக்கத்தை அடைவதற்காகவா வது இவர்களுக்கு ஸ்வாதந்தரியமில்லை. நான் இருபத்து மூன்று அக்ஷௌஹிணி ஸைன்னியங்களுடன் பதினேழுதடவை கிருஷ்ணனுடன் யுத்தஞ்செய்தும் அபஜயத்தை அடைந்தேன். ஒரு தடவை நான் மாத்திரம் தனியே கிருஷ்ணனை ஜயித்தேன். ஆனாலும் அபஜயப் பட்டபொழுது துக்கிக்கவில்லை; ஜயித்தபொழுதும் ஸந்தோஷப்படவில்லை. இந்த ஜகத்தானது அதிருஷ்டத்து

உடன் கூடிய காலத்தால் நடத்தப்படுகிறது என்று தெரிந்து கொண்டிருக்கிறேன். இப்பொழுது மிக்க சூரர்களான ஸேனைகளுக்கு அதிபதியான நாம் ஸ்வல்பசைன்னியங்களுள்ள யாதவர்களால் கிருஷ்ணனுடைய ஒத்தாசையைக் கொண்டு ஜயிக்கப்பட்டோம். இது சத்துருக்களுக்கு அனுகூல காலமாகையால் அவர்கள் ஜயித்தார்கள். நமக்குக் காலம் எப்பொழுது அனுகூலமாக இருக்குமோ அப்பொழுது நாமும் ஜயிப்போம்" என்று ஸமாதானஞ் செய்தார்கள். அதனைக் கேட்ட சிசுபாலன் தைர்யமடைந்து, தன்னுடைய ஸைன்னியத்துடன் சேதி தேசஞ் சென்றான். சண்டையில் மரணமடைந்தவர்கள் போக பாக்கியான ஸைன்னியங்கள் அவரவர்கள் நகரத்திற்குச் சென்றார்கள்.

18–26. பின்பு ருக்மி என்பவன் மிகுந்த கோபத்துடன் எல்லா அரசர்களும் கேட்டுக் கொண்டிருக்க, "யுத்தத்தில் கிருஷ்ணனைக் கொல்லாமலும், ருக்மிணியைத் திருப்பியழைத்துவராமலும், நான் குண்டின பட்டணத்திற்கு வருகிறதில்லை; ஸத்தியமாகச் சொல்லுகிறேன்" என்று பிரதிக்ஞை செய்து, கிருஷ்ணன் ருக்மிணியைப் பலாத்காரமாக அபஹரித்ததை ஸஹியாமல் அக்ஷௌஹிணி ஸைன்னியத்துடன் கிருஷ்ணனைப் பின்தொடர்ந்தான். பின்னுமவன் வில்லைக் கையிலெடுத்துக்கொண்டு யுத்தத்திற்கு தகுந்த முயற்சியுடன் ரதத்திலேறி ஸாரதியை நோக்கி, "கிருஷ்ணன் எவ்விடத்திலிருக்கிறாரோ, அவ்விடத்திற்கு ரதத்தை நடத்து; அவருடன் யுத்தஞ் செய்யவேண்டும்; இடையனும், துஷ்ட புத்தியுள்ளவனும், என்னுடைய தங்கையை அபஹரித்தவனுமான கிருஷ்ணனுடன் யுத்தஞ் செய்து இப்பொழுது அவனுடைய வீரன்

என்ற கர்வத்தை கூர்மையான பாணங்களால் போக்கடிக்கிறேன் என்று கெட்ட புத்தியுள்ள ருக்மி, தன்னைத்தானே புகழ்ந்துகொண்டு கிருஷ்ணனுடைய உண்மையான பலத்தையறியாதவனாகையால் தான் ஒருவனாக 'நில், நில்' என்று அதட்டிக் கொண்டு ஒரே ரதத்துடன் வேகமாக ஓடி வந்தான். இன்னுமவன் கெட்டியான வில்லையெடுத்து பாணங்களை பூட்டி மூன்று பாணங்களால் கிருஷ்ணனை அடித்து, "ஓ திருடனே யது குலத்திற்கு அபகீர்த்தியை யுண்டு பண்ணுகிறவனே காக்கை ஹவிஸ்ஸை அபஹரித்தாற் போல் என்னுடைய தங்கையைத் திருடிக்கொண்டு எங்கே போகிறாய்? மூடனும், கபடயுத்தஞ் செய்பவனும், மாயாவியுமான உன்னுடைய கர்வத்தை இப்பொழுது போக்கடிக்கிறேன். என்னுடைய பாணத்தால் அடிக்கப்பட்டுப் பூமியில் விழுவதற்கு முன்னமேயே ருக்மிணியை விட்டு விடு" என்று சொன்னான்.

27–32. அதனைக் கேட்ட கிருஷ்ணன் சிரித்துக் கொண்டு ருக்மியுடைய வில்லை வெட்டி, ஆறு பாணங்களால் ருக்மியையும், எட்டு பாணங்களால் நான்கு குதிரைகளையும், இரண்டு பாணங்களால் ஸாரதியையும், மூன்று பாணங்களால் த்வஜத்தையும் அடித்தார். பின்பு ருக்மியானவன் வேறு வில்லையெடுத்துக் கொண்டு ஐந்து பாணங்களால் கிருஷ்ணனை அடித்தான். அவைகளால் அடிக்கப்பட்ட கிருஷ்ணன் அந்த வில்லை வெட்டினார். ருக்மியானவன் பின்னுமொரு வில்லை எடுத்துக் கொண்டான். கிருஷ்ணன் அதனையும் வெட்டினார். பின்னுமவன் பரிகம், பட்டஸம், சூலம், கேடகம், கத்தி, சக்தி, தோமரம் முதலிய ஆயுதங்களையெடுக்க, கிருஷ்ணனும் முறையே அவைகளை வெட்டினார். பின்பு ருக்மிணி

ஆனவன் கத்தியைக் கையிலெடுத்துக்கொண்டு ரதத்தில் இருந்து குதித்து அக்கினியை நோக்கி விளக்கு வெட்டும் பூச்சி வந்தாற் போல கிருஷ்ணனைக் கொல்ல வேண்டுமென்ற விருப்பத்தால் ஓடிவந்தான். அப்பொழுது கிருஷ்ணன் சில பாணங்களைப் ப்ரயோகித்து அவனுடைய கத்தியையும், கத்தியின் உரையையும், எள்ளளவாக வெட்டினார். மேலும் அவர் ருக்மியைக் கொல்ல விரும்பிக் கூர்மையான கத்தியை எடுத்துக் கொண்டார்.

33–38. அதனைக் கண்ட ருக்மிணிதேவி பயத்தால் மனங்கலங்கி கிருஷ்ணனுடைய பாதங்களில் நமஸ்கரித்து மிகவும் தீனமாகப் பர்த்தாவை நோக்கி "ஓ யோகேச! அளவிடக் கூடாத மஹிமையுள்ளவரே! ஓ தேவர்களுக்கும் தேவ! ஜகத்திற்கு அதிபதியே! நல்ல ஸ்வபாவமுள்ளவரே! நீண்ட கைகளுள்ளவரே! என்னுடைய ஸஹோதரனாகிய ருக்மியைக் கொல்ல வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டாள். அப்பொழுது அவளுடைய சரீரமானது பயத்தால் நடுங்கியது; துக்கத்தால் முகம் வாடியது; கண்ணீரால் கண்டமடைத்தது; அதைர்யத்தால் ஸுவர்ணமாலை நழுவியது. இப்படிப்பட்ட ருக்மிணி பகவானுடைய பாதத்தைப் பிடித்துக்கொண்டபடியால் அவளிடம் தயை செய்து, ருக்மியைக் கொல்லாமல் பகவான் அவனை வஸ்திரத்தால் கட்டி, மீசை தலைமயிர் இவைகளைக் க்ஷௌரஞ்செய்து விட்டார் அதற்குள் யானை தாமரைக் கொடியைப் பிடுங்கினாற் போல யாதவர்கள் சத்துருவின் சைன்னியத்தை நாசஞ் செய்தார்கள்; அந்த ஸமயத்தில் பிரபுவாகிய பலராமன் கிருஷ்ணனுடைய ஸமீபஞ்சென்று கொல்லப் பட்டவன் போலிருக்கும் ருக்மியைப் பார்த்து,

கட்டையவிழ்த்து கிருஷ்ணனை நோக்கி, "ஓ கிருஷ்ண இந்த ருக்மியின் மீசை, தலைமயிர் இவைகளைக் க்ஷௌரஞ்செய்து விகாரஞ்செய்தது ஸரியல்ல. இது ஸ்நேஹிதர்களுக்கு வதத்திற்குச் சமமானதேயாம்" என்று சொன்னார்.

39. பின்னுமந்த பலராமன் ருக்மிணியை நோக்கி, "ஓ பதிவ்ரதையே! உன்னுடைய ஸஹோதரனுக்கு நேர்ந்த அவமானத்தைப்பற்றி எங்களிடம் நீ அஸூயைப்பட வேண்டாம். தன்னால் செய்யப்பட்ட புண்ணிய பாபங்களின் பயனை புருஷன் அனுபவிக்கிறான். ஆனதால் அவனுக்குச் ஸுகதுக்கங்களைப் புண்ணிய பாபங்கள் கொடுக்கின்றனவேயொழிய வேறு மனிதன் ஸுகத்தையாவது துக்கத்தையாவது உண்டுபண்ணுகிறானென்பதில்லை" என்று சொன்னார்.

40. பின்னுமவர் கிருஷ்ணனை நோக்கி, "பந்துவாக இருப்பவன் வதஞ் செய்யக்கூடிய குற்றஞ் செய்தாலும் அவனைக் கொல்லக்கூடாது. அவன் செய்த குற்றத்தாலேயே அவன் அடிக்கப்பட்டிருப்பதால் அவனை ஏன் திரும்பவும் அடிக்கவேண்டும்?" என்றார்.

41. பின்னுமவர் திரும்பவும் ருக்மிணியை நோக்கி "ஸஹோதரனானாலும் ஸஹோதரனைக் கொல்லுவது க்ஷத்திரியர்களுக்குத் தர்மம் என்று ப்ரஹ்மதேவரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால் இது மிகக் கடுந்தர்மமானாலும் இந்த விஷயத்தில் எங்களிடத்தில் யாதொன்றும் குற்றமில்லை" என்று சொன்னார்.

42. பின்னுமவர் கிருஷ்ணனை நோக்கி, "பணத்தின் கர்வத்தால் விவேகமற்ற அரசர்கள் ராஜ்யத்திற்காகவாவது, பூமிக்காகவாவது, பணத்திற் காகவாவது, ஸ்திரீ விஷயமாகவாவது, மானத்திற்காக வாவது, தேஜஸுக்காகவாவது, இன்னும் மற்ற காரணத்தினாலாவது பிறரை ஜயிப்பது வழக்கம். ஆனாலும் நமக்கு இது ஸரியல்ல" என்றார்.

43–50. பின்னுமவர் ருக்மிணியை நோக்கி, "ஓ ருக்மிணியே! ஸகலப் பிராணிகளிடத்திலும் விரோத புத்தி யுள்ளவர்களான ருக்மி முதலியவர்களுக்கு நீ புத்தியில்லாதவள் போல க்ஷேமத்தைப் ப்ரார்த்திப்பது தகுதியல்ல. (ஸகல ப்ராணிகளுக்குள் துஷ்டர்களான சிசுபாலன் முதலியவர்களுக்குக் கெடுதலையும், பந்துக்களுக்கு க்ஷேமத்தையும் நீ பிரார்த்திப்பதால் ஸமபுத்தியுள்ளவளல்ல என்றும் அர்த்தஞ் சொல்வ துண்டு; அல்லது ஸகல ப்ராணிகளுக்குள் கெட்ட நடையுள்ள உன்னுடைய ஸஹோதரர்களுக்குக் கிருஷ்ணனால் செய்யப்பட்ட சிக்ஷையானது அனுக் கிரஹமேயொழிய வேறில்லை. அதனை நீ சிக்ஷையாக நினைப்பதால் உன்னுடைய புத்தி ஸரியானதல்ல என்றுஞ் சொல்வதுண்டு) மேலும் தேஹத்தையே ஆத்மாவென்று நினைத்துச்சிலரை மித்திரர்களென்றும் சிலரைச் சத்துருக்களென்றும், சிலரைச் ஸமர்க களென்றும், ஜனங்கள் ஈச்வரனுடைய மாயையால் மோஹித்து நினைக்கிறார்கள். ஸூரியன் ஒன்றானா லும் எப்படி ஜலத்தில் அநேக ஸூரியன் இருப்பதாக மூடர்கள் பார்க்கிறார்களோ, எப்படி ஆகாயம் ஒன்றானாலும் குடம் முதலியவைகளில் வெவ்வேறாக இருப்பதாகத் தெரிந்து கொள்ளுகிறார்களோ, அப்படி ஆத்மா ஒருவனும் சுத்தனுமாக இருந்தாலும்

அநேகனென்று மூடர்கள் சொல்லுகிறார்கள். (ஆத்மா உண்மையில் சுத்தனாக இருந்தால் ஏன் சுத்தனென்று அறியப்படவில்லை என்றால் அடுத்த ச்லோகத்தால் ஸமாதானஞ் சொல்லப்படுகிறது) த்ரவியம், ப்ராணன், குணம் இவைகளின் ஸ்வரூபமான சரீரத்திற்கு உற்பத்தியும் நாசமும் உண்டு.

அதன் குணங்களை சுத்தனாகிய ஆத்மாவிடத்தில் ஏற்படுத்திக் கொள்வதனால் ஆத்மா ஸம்ஸாரியாக ஆகிறான். (தேஹமாகிய உபாதியின் ஸம்பந்தத்தால் ஆத்மா சுத்தனென்று அறியப்படவில்லை என்று கருத்து) ஓ பதிவ்ரதையான ருக்மிணியே! ஆத்மாவைக் காட்டிலும் வேறாக இந்திரியங்களும், அவைகளுக்கு அதிஷ்டமான தேவதைகள் முதலியவை களுமில்லை. அதனால் அதிபூதம், அதிதைவம், அத்தியாத்மம் முதலியவைகளுடனும் பரமாத்மா சேர்ந்திருக்கிறார் என்பதுமில்லை. அவைகளை விட்டுப் பிரிந்திருக் கிறாரென்பதுமில்லை. ஏனென்றால் அதிபூதம் முதலியவைகள் உண்மையில் ஸத்தியங்களல்ல. அஸத்தியங்களான அவைகளுடன் ஸத்திய வஸ்துவான பரமாத்மா சேர்ந்திருக்கிறார் என்று சொல்வது எப்படி பொருந்தும்? சேர்க்கையே இல்லையென்றால் பிரிவு எப்படி உண்டாகும்? மேலும், இந்திரியங்களுக்கும், பூதங்களுக்கும் பரமாத்மாவே காரணம். பின்னும் அவைகள் ஆத்ம சைதன்யத்தாலேயே ப்ரகாசிக் கின்றன். ஆனதால் ஆத்ம சைதன்யத்தைக் காட்டிலும் இந்திரியம் முதலியவைகள் வேறல்ல. சக்ஷுஸ், அதன் விஷயமாகிய ரூபம் இவைகள் ஸூரியனைக் காட்டிலும் வேறல்ல. (தைஜஸமானதால் பேதமில்லை யென்று தாத்பர்யம்). அதுபோலவே ஆத்மாவின் பிரகாசிப்பபால் பூதம் முதலியவைகள் பிரகாசிப்பதால்

ஆத்மாவிற்கும் அவைகளுக்கும் பேதமில்லை. உற்பத்தி, நாசம் முதலிய விகாரங்கள் சரீரத்தைச் சார்ந்தவை களேயொழிய ஆத்மாவிற்கு ஒருபொழுதுமில்லை. உண்டானால் அதன் தர்மத்தை அவித்யையால் ஆத்மாவினுடையதாக நினைத்துக் கொண்டு நான் பிறந்தேன் என்று சொல்லுகிறான்.

உண்மையில ஆத்மாவிற்கு ஜன்னமில்லை. அப்படியே சரீரம் போனால் நான் மரணமடை கிறேன் என்று சொல்லுகிறான். ஆத்மாவிற்கு மரணம் இல்லை) சந்திரன் அமாவாசை தினத்தில் நாசமடை கிறானென்றால் உண்மையில் சந்திரன் மரணமடை கிறதில்லை. கலைகள் குன்றந்து போகின்றன. அதை சந்திரனிடத்தில் சொல்லுகிறார்கள். இதுவே முன் சொன்ன ஆத்ம விஷயத்தில் உதாஹரணமாகிறது. ஆத்மாவிற்கு சரீர ஸம்பந்த மில்லையென்றால் எப்படி ஆத்மா பயனை அனுபவிக்கக் கூடுமென்றால், படுத்துத் தூங்குகிறவன் எப்படி ஸ்வப்னத்தில் அஸத்தியமான வஸ்துக்களை யனுபவிக்கிறானோ, அப்படி விஷயங்கள் அஸஸ்தியங்களானாலும் அவித்யையால், மூடன் ஸம்ஸாரத்தை அடைகிறான். (போக்தாவாக நினைத்துக் கொள்கிறான்) ஆனதால் துக்கம் அஜ்ஞானத்தாலுண்டாகிறது; மனத்தை உலரச்செய்கிறது; மோஹிக்கச்செய்கிறது; 'ஓ சுத்தமான சிரிப்புள்ளவளே! அப்படிப்பட்ட துக்கத்தைத் தத்துவ ஞானத்தால் நிவர்த்தித்துக் கொண்டு துக்கப்படாமலிரு' என்று ஸமாதானஞ் செய்தார்.

51–53. அதனைக் கேட்ட ருக்மிணியானவள் துக்கத்தைவிட்டு நிச்சயத்தை அடைந்தாள். இம்மாதிரி

Released by Maran's Dog, Toronto , Canada

யான பலராமனுடைய வார்த்தையை ருக்மி கேட்டுக் கொண்டிருந்தும் அவன் மனத்திற்கு ஸமாதானம் ஏற்படவில்லை. பின்னுமவன் ப்ராணனுடன் விடப் பட்டு காந்தியற்றவனாகித் தன்னுடைய எண்ணம் நிறைவேறாமல் தனக்கு நேர்ந்த அவமானத்தை நினைத்துத் துக்கித்து எந்த இடத்தில் அவமானத்தை அடந்தானோ அந்த விடத்தில் போஜகடமென்ற பட்டணத்தையுண்டு பண்ணிக்கொண்டு அவ்விடத்தி லேயே வஸித்தான். ஸ்ரீ கிருஷ்ணனைக் கொல்லாம லும், ருக்மிணியைத் திரும்பியழைத்து வராமலும் குண்டின பட்டணத்திற்கு வருகிறதில்லை' என்று ஏற்கனவே ப்ரதிக்ஞை செய்தவனானதால் குண்டின பட்டணத்திற்குப் போகவில்லை.

ருக்மிணீ கல்யாணம்

54–64. இப்படி ஸ்ரீ கிருஷ்ணன் பீஷ்மகருடைய புத்திரியாகிய ருக்மிணியைத் தமது நகரத்திற்கு அழைத்து வந்து விதிப்படி விவாஹஞ் செய்து கொண்டார். அப்பொழுது அந்த நகரத்திலுள்ள ஜனங்கள் யாதவர்களுக்கு அதிபதியாகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் மிக்க ப்ரியம் வைத்தவர்களான தால் பகவானுடைய கல்யாணத்தைத் தங்கள் தங்கள் வீட்டில் நடக்கும் கல்யாணமென்று நினைத்து உத்ஸவங் கொண்டாடினார்கள். ஸ்திரீகளும் புருஷர்களும் மிகவும் ஸந்தோஷமுள்ளவர்களாகவும், சுத்தமான ரத்னகுண்டலங்களைத் தரித்தவர்களாகவும் இருந்தார்கள். மேலுமவர்கள் பலவகையான அலங்காரங்களுள்ள கிருஷ்ணன், ருக்மிணி இவர்களுக்கு பலவகையான வஸ்துக்களை உபஹாரங் களாகக் கொடுத்தார்கள். மேலும் அந்தப் பட்டணம்

Released by Maran's Dog, Toronto , Canada

த்வஜங்களாலும், பலவிதமான மாலை, வஸ்திரம், ரத்ன தோரணம் ஆகிய இவைகளாலும், ஒவ்வொரு கோபுரவாசலிலும் நெல்பொரி, அக்ஷதம், புஷ்பம் முதலிய மங்கள த்ரவ்யங்களாலும், பூர்ணகும்பங் களும், அகருதூபங்களாலும், தீபங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

பின்னும் வீதிகளில் ஜலந்தெளிக்கப்பட்டிருந்தது; வாசலில் கட்டப்பட்டிருக்கும். வாழைமரம், பாக்கு மரம் முதலியவைகளால் ப்ரகாசித்தது; பின்னும், ருக்மிணியின் விவாஹத்திற்காக அழைக்கப்பட்ட மித்திரர்களான அரசர்கள் ஸைன்னியங்களுடன் வந்திருந்ததால் அவர்களுடைய மதங்கொண்ட யானைகள் அந்த வாழை மரம் முதலியவைகளைத் தொடுகின்றன. அப்பொழுது குருக்கள், ஸிருஞ்ஜயர் கள், கேகயர்கள், விதர்ப்பர்கள், யாதவர்கள், குந்திகள் ஆகிய இவர்கள் ஒருவருக்கொருவர் சேர்ந்து பேசிக் கொண்டு மிகவும் ஸந்தோஷத்தை அடைந்தார்கள். பகவான் ருக்மிணியை அபஹரித்து வந்த கதையை எங்கும் ஜனங்கள் சொல்லி கானஞ்செய்தார்கள். அதனைக் கேட்டு அரசர்களும் ராஜகுமாரிகளும் மிகவும் ஸந்தோஷத்தை அடைந்தார்கள். லக்ஷ்மீ தேவியின் அம்சமான ருக்மிணியுடன் லக்ஷ்மீதேவியின் பர்த்தாவாகிய ஸ்ரீ கிருஷ்ணன் சேர்ந்திருப்பதைத் தர்சித்து, த்வாரகாவாஸிகளான ஜனங்கள் மிகவும் ஸந்தோஷத்தை அடைந்தார்கள்

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada



Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

பாகம் –1

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்கந்தம் 1 அத்தியாயம் 1 முதல்
ஸ்கந்தம் 3 அத்தியாயம் 19 வரை

Released by Maran's Dog, Toronto , Canada

இஞ்சிக்கொல்லை
R. சிவராம சாஸ்திரிகள்
அவர்களால் 1908ல் மொழி
பெயர்க்கப்பட்டது.

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ராம நாம வங்கியின் ப்ராசாரப் பிரதாப் பிரிவு
ராம மந்திரம் –2, விளாங்கம் தெரு,
சென்னை – 600 033. ☎: 24893736

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்
தமிழ் வசனம்

TITLE	:	SRIMAD BHAGAVATHAM, TAMIL VACHANAM
AUTHOR	:	INZIKOLLAI R. SIVARAMA SASTRIGAL WRITTEN IN 1908
SIZE	:	CROWN OCTAVE
EXTENT	:	2736 PAGES CONSISTING OF SEVEN VOLUMES
PRICE	:	RS.600/ SET
FIRST EDITION	:	1996
SECOND EDITION	:	2004
THIRD EDITION	:	2007

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பகவன் நாம போதேந்திர
ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின்
பாத கமலங்களிலும்

பரஞ்ஜர் மஹாத்மா
ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள்
அவர்களின்
பாத கமலங்களிலும்

சமர்ப்பணம்

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்

புத்தக விலைப்பட்டியல்...

அரியதும், பழையதுமான க்ரந்தங்களையும், நாமறிந்தாராத விஷயங்களையும் வெளியிடும் பணியில்...

ரூ.	
1500	ஸ்ரீமத் பாகவதம் ப்ரதி பத அர்த்தம்
700	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் மூலம் தமிழில் பெரிய எழுத்தில்
600	ஸ்ரீமத் பாகவதம் வசனம் 7 பாகம்
550	ஸ்ரீமத் பாகவதம் மூலம் தமிழில் பெரிய எழுத்தில்
450	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் மூலம் தமிழில்
350	ஸ்ரீ துளஸீ ராமாயணம் மூலமும் வசனமும்
300	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் வசனம்
300	ஞானேஸ்வரி
250	ஸ்ரீமத் பாகவதம் மூலம் தமிழில்
200	நாராயணீயம் ப்ரதிபத அர்த்தம்
200	ஸ்ரீகிருஷ்ண சைதன்யர்
200	கர்க ஸம்ஹிதை
200	நந்த நந்தன்
150	உஜ்ஜ்வல நீலமணி
140	பார்த்தஸாரதி
100	த்வாரிகாதீசன்
100	பகவான் வாசுதேவன்
100	திருப்பாவை உபன்யாஸம்
100	ஸ்ரீபகவன் நாம ரஸோதயம்
100	பக்த துகாராம் திவ்யசரித்திரம்
100	ஸ்ரீ மத் பாகவத கதாம்ருதம்
60	கீதகோவிந்தம் ப்ரதிபத அர்த்தம்
60	ஸ்ரீ ஞானேஸ்வர் திவ்ய சரித்திரம்
60	ஸ்துதி மணிகள்
60	ஸ்ரீமத் பகவத் கீதை ப்ரதி பத அர்த்தம்
60	ராதே/பருந்தாவனராதே!!
60	பாதுகா ஸஹஸ்ரம் -பாசுரங்கள்
60	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்-பாசுரங்கள்
50	நாராயணீயம் -பாசுரங்கள்
50	ஹரி ஸங்கீர்த்தன மாலா
50	தர்ம சாஸ்திரம்
50	ஸ்ரீமத் பாகவத ஸங்க்ரஹம்
40	கோவிந்தபுரம் பஜன பத்ததி
40	தக்ஷிண ஸம்ப்ரதாய பஜன மாலா
40	ஸ்ரீமத் ராமாயணம் ஸங்க்ரஹம்
40	ஏகநாதர் திவ்ய சரித்திரம்
40	ஸ்ரீ ருக்மிணி கல்யாணம்-பாசுரங்கள்
35	தக்ஷிண ஸம்ப்ரதாய கல்யாண மாலா
35	அபங்க முத்தாரம்
35	நாம ஸங்கீர்த்தனாவளி
30	வ்ரஜ ரஸம்
30	ப்ரேம சாம்ராஜ்யம்
30	பக்தி
	பஞ்சகீதை
	ஸ்ரீ க்ருஷ்ண கர்ணாம்ருத ரஸாயனம்
	ஸ்ரீ க்ருஷ்ண கீதாம்ருதம்
	சிவானந்த லஹரீ - ப்ரதிபத அர்த்தம்
	ஸௌந்தர்ய லஹரீ - ப்ரதிபத அர்த்தம்
	ஐயாவாளின் நாம அனுபவங்கள்
	ஸ்ரீ சுந்தர காண்டம்



25	ஸ்ரீ ராம மாதுரீ
25	பக்த ரத்தினங்கள்
25	பாண்டுரங்க லீலைகள் -பாசுரங்கள்
25	கிருஷ்ண கர்ணாம்ருதம் -பாசுரங்கள்
25	தியாகராஜர் அனுபவங்கள்
25	ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் கீர்த்தனைகள்
25	ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம்
25	பக்தை மீரா
25	பக்த ஸாம்ராஜ்யம்
25	நாம ஸாம்ராஜ்யம்
25	ஸ்ரீ லலிதா பஜனை கீர்த்தனைகள்
25	மனாசே ஸ்லோக
25	பகவன் நாம ரஸாயனம்
20	ஸ்ரீ பாத ஸப்ததி
20	ஸ்ரீ யாக்ஞவல்கியர் திவ்ய சரித்திரம்
20	ஸ்ரீ துளஸி தாஸர் திவ்ய சரித்திரம்
20	ஸௌந்தர்யலஹரி - தமிழ் பாடல்கள்
15	ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம்
15	குருவாயூரப்பன் அந்தாதி-பாசுரங்கள்
15	தயாசதகம்-பாசுரங்கள்
15	ஸம்க்ஷேப ராமாயணம் -பாசுரங்கள்
15	ஸ்ரீ ஆண்டாள் கல்யாணம்
15	ஸ்ரீ ராதா மாதவ - பஜனை பத்ததி
15	நவராத்திரி கீர்த்தனைகள்
15	பக்தி ஸந்தேஹ த்வாந்த பாஸ்கரம்
15	ஸ்ரீ ப்ரும்மேந்திராள் திவ்ய சரித்திரம்
15	நந்தன் சரித்திரக் கீர்த்தனைகள்
15	ஸ்ரீ ப்ரும்மேந்திராள் கீர்த்தனைகள்
15	ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் திவ்ய சரித்திரம்
15	திருமாலை
15	**Divine History**
	(Hindi, English, Malayalam, Telugu, Tamil)
	Sri Bodendral
	Sri Sridhara Ayyaval
	Sri Sadguru Swamigal
10	கீத கோவிந்தம்
10	ஹரி பாட்
10	ஸ்ரீ ஸமர்த்த ராமதாஸர் திவ்ய சரித்திரம்
7	திருவரங்கன் திருவந்தாதி- பாசுரங்கள்
7	பரமார்த்த ஸ்துதி- பாசுரங்கள்
7	நாமாயணம்
6	ஸ்ரீ போதேந்திராள் கீர்த்தனைகள்
6	ஸ்ரீ போதேந்திராள் நாம வந்தனம்
6	நாமப்ரபாவம்
5	ஸ்ரீபோதேந்திராள் அஷ்டோத்திரம்
5	ஸ்ரீ ராம நாம மஹிமை
5	அபங்கப்ரவாஹம்
4	ஸ்ருதிகளிலிருந்து ராமநாமத்தின் பெருமை
3	புருஷ ஸூக்தம்
3	ஸ்ரீ ஸூக்தம்

Released by Maran's Dog, Toronto , Canada

100 Nos விநியோகவெளியீடு

75	ஸ்ரீ ராம நாமாவளி
75	ஸ்ரீ நவீன ராமாயணம்
75	ஸாதுக்கள் மஹிமை
75	ப்ராத ஸ்மரண ஸ்தோத்திரம்
100	நெய்க்குடத்தை
100	பாசுரப்படி ராமாயணம்
100	ஸ்ரீ ஸப்த ரிஷி ராமாயணம்
100	ஸ்ரீ சந்திர ஸேகராஷ்டகம்
100	ஸ்ரீபோதேந்திராள்சரித்திரசுருக்கம்

Sanskrit Prasadhams

தேவீ நாமஸ்தோத்திர மஞ்ஜரீ
ஸ்ரீ வாஞ்சிய க்ஷேத்ர மாஹாத்ம்யம்
ஸ்ரீ நடராஜ நாம மஞ்ஜரீ
ஸ்ரீ நடராஜ ஸ்தவ மஞ்ஜரீ
ஸ்ரீ பாலா ஸபர்யா
ஸ்ரீசிவ நாம மஞ்ஜரீ
ஸ்துதி த்ரயீ
ஸ்ரீ மீனாக்ஷீ ஸ்தோத்ரமஞ்ஜரீ
ஸ்ரீஸ்கந்த ஸ்தவ மஞ்ஜரீ
ஸ்ரீதத்தாத்ரேய ஸ்துதிமஞ்ஜரீ
ஸ்ரீமத்த்யார்ஜுனக்ஷேத்ர மாஹாத்ம்யம்
ஸ்ரீவிஷ்ணுஸ்துதிமஞ்ஜரீ
ஆத்ட நாதஸ்துதிமஞ்ஜரீ
ஸ்ரீபகவத்ஸ்துதிமஞ்ஜரீ
அனுமன் நாற்பது
கோபால விம்ஸதி
ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்
ஸ்ரீமத் ராமாயணரஹஸ்யம்
கலியுக தர்ம சாஸ்திரம்
பூஜா கல்பம்

Released by Maran's Dog, Toronto , Canada

கோஸம்ரக்ஷணம்
தினசரிராமாயணம்
தினசரிபாகவதம்
ஆசாரமும் ஆஹாரமும்
பூஜா ராமாயணம்
ஸ்ரீ வாசுதேவ ப்ரம்மம் திவ்ய சரித்திரம்
மன அமைதி வேண்டுமா?
ஜய கல்யாண ஸ்ரீக்தி லஹரீ
நாமவைபவம்
நாமச் சிறப்பு
நாமவிசேஷம்
ஸ்ரீபகவன் நாம மகிமை
ஆயிரம் நாமக் குறிப்புகள்
போதேந்த்ர அமுதம்
ஸ்ரீ ஆலங்குடி சுவாமிகள் திவ்ய சரித்திரம்
ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு ஸஹஸ்ர நாமம்
ஸ்ரீ த்யாகப்ரும்ம அஷ்டோத்திரம்
100 / 100
ஸ்ரீ கீதா ஸாரம் -பாசுரங்கள்
நாரத பக்திசூத்ரம்
நித்ய ஸ்லோக பத்ததி

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவத ரகசியம்

1000 பக்கங்கள்

இந்த நூல் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ ராம நாம வங்கியின்
நாம உதவிகளுக்கு
நாமத்தை ஆஸ்ரயிப்பவர்களுக்கு
ப்ரஸாதமாக வழங்கப்படுகிறது.

ஸ்ரீமத் பாகவதம்

மூலம் தமிழில்

904
பக்கங்கள்
விலை
ரூ.250/-

ஸ்ரீமத் பாகவத விஷயம்

கர்க ஸம்ஹிதை
நந்த நந்தன்
பார்த்தஸாரதி
பகவான் வாசுதேவன்
த்வாரிகாதீசன்
ஸ்துதி மணிகள்
ஸ்ரீமத் பாகவத ஸங்க்ரஹம்
தினசரி பாகவதம்
ஸ்ரீமத் பாகவத கதாம்ருதம்

ஸ்ரீமத் பாகவதம்

பெரிய எழுத்தில்
மூலம் தமிழில்

1064 பக்கங்கள்
விலை ரூ. 550/-

ஸ்ரீமத் பாகவதம்
ப்ரதி பத அர்த்தம்

மூல ஸ்லோகங்கள் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும், பதப்பிரிப்பும்
அர்த்தமும் தமிழில்,
7 பாகங்கள் - 6224பக்கங்கள்
விலை ரூ. 1500/

ஸ்ரீ பகவன் நாம்மா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

ஸ்ரீமத் ராமாயண விஷயம்

ராமாயண ஸங்க்ரஹம்
(SANSKRIT)
தினசரி ராமாயணம்
சுந்தரகாண்டம்

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

மூலம் தமிழில்

899 பக்கங்கள்
விலை ரூ. 450/-

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

தமிழ் வசனம்

7 பாகங்கள்
1322 பக்கங்கள்
விலை ரூ. 300/

ஸ்ரீமத் ராமாயண ரஹஸ்யம்

616 பக்கங்கள்

இந்த நூல் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ ராம நாம வங்கியின்
நாம உதவிகளுக்கு
நாமத்தை
ஆஸ்ரயிப்பவர்களுக்கு
ப்ரஸாதமாக வழங்கப்படுகிறது.

ஸ்ரீ துளஸீ ராமாயணம்

தமிழில் மூலமும் உரையும்

விலை ரூ. 350/-

764 பக்கங்கள்
8 வண்ணப்படங்கள் அடங்கியது

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

நந்தலாவின் எழுத்துக்களில்

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமஹாபாரதம்

ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்

இராமாயண ரஹஸ்யம்

பகவான் வாசுதேவன்

நந்த நந்தன்

பார்த்தஸாரதி

த்வாரிகாதீசன்

கர்கஸம்ஹிதை

உஜ்வல நீலமணி

ஸ்ரீ ஞானேஸ்வர்

பக்த துகாராம்

ஏகநாதர்

ராதே!பருந்தாவன ராதே!!

வ்ரஜ ரஸம்

ப்ரேம சாம்ராஜ்யம்

பக்தி

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

முன்னுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் கலிகாலத்தில் பிறக்கப் போகும் ஜனங்களின் துக்கம், மனக்கவலை, அறியாமை இவற்றைப் போக்கி, அவர்களுக்கு பரம அனுக்ரஹம் செய்யவே, தன் திவ்ய லீலை களை விவரிக்கும் ஸ்ரீ பாகவதத்தின் மூலம், ஸாதுக் களின் காதுக்கு அம்ருதமாயுள்ள தன் புகழை உலகில் பரவச் செய்தார். இந்த அம்ருதத்தை காதுகள் ஆகிய பாத்திரத்தில் வாங்கி அனுபவிக்கும் மனிதன், பக்திக்கும் முக்திக்கும் இடையூறாக இருக்கும் கர்மவாஸனையாகின்ற பந்தம் நீங்கப்பெற்று அவற்றை அடைகிறான் என்று ஸ்ரீபாகவதம் 9வது ஸ்கந்தம் 24வது அத்யாயம் 61,62 ஸ்லோகங்களில் கூறப்பட்டிருக்கிறது. மேலும், ஸ்ரீபாகவதத்தில் கலியில் கலுஷிதமான ஜீவன்களுக்கு ஏற்ற பகவன் நாம கீர்த்தனம், பகவானிடம் உறவு கொண்டுள்ள ஸாதுக்களின் ஸங்கம், க்ருஷ்ண பக்தியை வளர்க்கும் கதாச்ரவணம் இவற்றின் மஹிமையே கூறப்பட்டு இருக்கிறது.

வியாசர் ஸகல ஸாஸ்திரங்களையும் வெளியிட்டும், மன நிம்மதியின்றி எல்லா ஸாஸ்த்ரங்களின் ஸாரமாக பகவத் குண கீர்த்தன பிரதானமான ஸ்ரீபாகவதத்தை வெளியிட்டார். அதன் பின்னரே அவர் நிம்மதியடைந்தார். இதில் வேதோபனிஷத் ஸாரமே நிரம்பியுள்ளது.

Released by Maran's Dog, Toronto , Canada

பாகவதமே பகவான். பகவானே பாகவதம். ஸ்ரீக்ருஷ்ணன் தன் அவதார கார்யம் முடிந்தவுடன் பாகவதத்திலே நுழைந்து விட்டான். பாகவதத்தில் நுழைந்த பகவானை அதை படிப்பதாலேயே பார்க்க முடியும்.

இந்த பாகவதாம்ருதம் யாவருக்கும் எளிதில் கிடைக்கும்படி ஸ்ரீ பாகவத்தின் பாவ அர்த்ததுடன் கூடிய இந்த தமிழாக்கத்தை வெளியிட்டிருக் கிறோம். யாவரும் படித்து அனுபவித்து ஸ்ரீகிருஷ்ண க்ருபைக்கு பாத்திரர்கள் ஆகும்படி பிரார்த்திக் கிறோம்.

நாவுண்டு நீயுண்டு நாமம் தரித்து ஒத
பாவுண்டு தெஞ்சே பயமுண்டோ
பூவுண்டு வண்டு உறங்கும் சோலை மதில் அரங்கத்தே
உலகையுண்டு உறங்குவான் ஒருவனுண்டு.

இங்ஙணம்

"ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்"

ஸ்ரீமத் பாகவதம்-தமிழ் வசனம்

பாகம்–1

பொருளடக்கம்

		பக்கம்
முன்னுரை		1
	ஸ்கந்தம் –1	
1.	சௌனக ப்ரச்னம்	67
2.	ஸூதர் ப்ரத்யுத்தரம்	84
3.	பகவதவதாரங்கள்	94
4.	வியாசர் கவலை அடைந்தது	105
5.	வியாசருக்கு நாரதர் உபதேசம்	111
6.	நாரதருடைய முன் ஜன்மம்	123
7.	அர்ஜுனன் அச்வஸ்த்தாமாவை சிக்ஷித்தது	131
8.	பகவானை குந்தி ஸ்தோத்திரம் செய்தது	144
9.	பீஷ்மர் தர்மம் உரைத்தது	154
10.	ஸ்ரீகிருஷ்ணன் துவாரகை சென்றது	165
11.	துவாரகா வாசிகள் பகவானை உபசரித்தது	172
12.	பரீக்ஷித்தின் உற்பத்தி	181
13.	த்ருதராஷ்ட்ரர் வெளியில் சென்றது	188
14.	தர்மபுத்திரருக்கு நேர்ந்த அபசகுனங்கள்	199
15.	தர்மபுத்திரர் பரலோகம் சென்றது	206
16.	பரீக்ஷித் தர்மத்தைத் கண்டது	216
17.	பரீக்ஷித் மஹாராஜன் கலியை நிக்ரஹித்தது	223
18.	பரீக்ஷித்துக்கு நேர்ந்த ப்ராஹ்மண சாபம்	230
19.	கங்கை கரைக்கு சுகர் வந்தது	238

ஸ்கந்தம் –2

		பக்கம்
1.	விராட்புருஷனுடைய அவயவங்கள்	245
2.	பகவானிடத்தில் மனத்தை செலுத்தும் வகை	256
3.	பகவத் குணங்களின் மேன்மை	269
4.	பரீக்ஷித் ஜகத் சிருஷ்டியைப் பற்றி கேட்டது	274
5.	ஜகத்சிருஷ்டி	279
6.	விராட் புருஷனுடைய விபூதிகள்	288
7.	பகவானுடைய லீலாவதாரம்	297
8.	பரீக்ஷித்தின் கேள்வி	313
9.	சுகருடைய மறுமொழி	318
10.	தத்துவங்களின் உற்பத்தி உரைத்தது	328

ஸ்கந்தம்–3

1.	விதுரருக்கும் உத்தவருக்கும் சம்வாதம்	338
2.	உத்தவர் ஸ்ரீ கிருஷ்ண சரிதத்தை வர்ணித்தது	348
3.	ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதங்கள்.	355
4.	விதுரர் மைத்ரேயரைச் சந்தித்தது	360
5.	மைத்ரேயருக்கும் விதுரருக்கும் ஸம்வாதம்	366
6.	விராட் ஸிருஷ்டி	375
7.	விதுரருடைய பிரச்னங்கள்	381
8.	ப்ரஹ்மதேவருடைய உற்பத்தி	388
9.	ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ப்ரஹ்மதேவர் ஸ்தோத்திரஞ்	395
10.	பத்து வகையான சர்க்கங்கள்	405
11.	காலத்தின் ஸ்வரூபம்	410
12.	ஸனகர் முதலியவர்களுடைய ஸிருஷ்டி	417
13.	வராஹாவதாரம்	424
14.	திதி தேவி கர்ப்பத்தை அடைந்தது	433
15.	ஜய விஜயர்களுடைய சாபம்	442
16.	ஜய விஜயர்களுக்கு அனுக்கிரகம்	455
17.	திதிக்குப் புத்திரர்கள் பிறந்தது	462
18.	யக்ஞவராஹருக்கும் ஹிரண்யாக்ஷனுக்கும் யுத்தம்	467
19.	ஹிரண்யாக்ஷவதம்	472

ஸ்ரீமத் பாகவதம்

முன்னுரை

இது ஸ்ரீ பகவானுடைய அற்புத லீலைகளையும் அனந்த கல்யாண குணங்களையும் முக்கியமாய் வர்ணிக்கும் சுகருக்கு இது வ்யாச மஹர்ஷியால் சுகருக் கு உபதேசிக்கப் பட்டது, ஸ்ரீ சுகர் பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சொன்னார், அப்பொழுது சூதர் அவ்விட மிருந்து இக்கதையை ஸ்ரீ சுகபகவானின் அனுமதியின் பேரில் தெரிந்து கொண்டார். பிறகு அவர் நைமி சாரண்யத்தில் வசிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்குச் சொன்னார்.

ஸ்ரீமத் பாகவதம் என்பது யாது?

ஸ்ரீமத் பாகவதம் என்ற புராணம் எல்லா வற்றிலும் மேலானது (1) ஸகல உபநிஷத்துக் களால் நிரூபிக்கப்படும் பரமாத்மா இதனால் வர்ணிக்கப்பட்டிருக்கிறார். (2) வ்யாஸ மஹர்ஷியானவர் விஸ்தாரமான வேதங்களை பிரித்தும் பாரதம் முதலிய இதிஹாசங்களைச் செய்தும் தனது மனது ப்ரஸன்னமாகாததால் பகவானுடைய குணங்களையே முக்கியமாக வர்ணிக்க வேண்டும் என்று இதைச் செய்தார். (3) கீதா, ஸஹஸ்ரநாம, ராமாயண, இந்த சப்தங்கள் தனியே உச்சரிக்கப்பட்டாலும், அவை

முறையே பகவத்கீதை, விஷ்ணு சகஸ்ரநாமம், ஸ்ரீவால்மீகி ராமாயணம் என்பவற்றையே குறிப்பிடுதல் போல பாகவதம் என்ற சப்தமும் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் குணத்தைச் சொல்லும் விஷ்ணு பாகவதத்தையே காட்டுகிறது.(4) மேலும் இது ஸகல லோகங்களாலும் நமஸ்கரிக்கப்பட்ட பாதங்கள் உள்ள ஸ்ரீசுகமஹர்ஷியாலும் அத்யயனம் செய்யப்பட்டது. (5) இது மோக்ஷத்தை விரும்பிய பரீக்ஷித்து மஹாராஜனுக்கு சுகமஹர்ஷியால் மோக்ஷசாஸ்திரம் என்று உபதேசிக்கப் பட்டுள்ளது.

ஆட்சேபம்: "ஹேமாத்ரி என்னும் பெயருள்ள ஒரு ப்ரபுவினுடைய அரண்மனை வித்வான்களின் முக்கியரான போப தேவர் என்ற பண்டிதர் இருந்தார். அவர் கோபால பக்தனாக இருந்த அந்தப் ப்ரபுவை ஸந்தோஷப்படுத்துவதற்காக அவருடைய நியமனப்படி இந்தப் புராணத்தை எழுதி அரசனிடம் கொடுத்தார். அரசன் அதை முழுதும் மற்ற பண்டிதர்களுடன் பரிசோதித்து அதில் உள்ள பதச்சேர்க்கை முதலியவைகளால் ஆச்சர்யப்பட்டு அதனை உலகில் பரவச்செய்ய விரும்பி அதனை அனேகம் பிரதிகள் எழுதுவித்து பண்டிதர்களைக் கொண்டு வ்யாக்யானமும் செய்து பரவச்செய்தார்" என்ற ஒரு கதையை பெரியோர்களால் சொல்லக்கேட்டு இருக்கிறோம்; அப்படியிருக்க வ்யாஸர் செய்தார் என்பது பொருந்துமா ? என்றால்':–

ஸமாதானம்: இந்த விஷ்ணுபாகவதம் போப தேவர் செய்ததன்று. ஹேமாத்ரி என்ற ப்ரபு ஒரு

நாள் சபையில் வித்வான்களை நோக்கி," இரண்டு முகூர்த்தங்களில் பாகவதத்தின் அத்யாயச் சுருக்கங்களை ச்லோகமாகச் சொல்ல உங்களில் யார் சக்தியுள்ளவர்" என்று கேட்டார். அப் பொழுது போபதேவர் என்ற பண்டிதர் நாளைய தினம் சொல்கிறேன் என்றார். மறுநாள் பாகவதாத்யாயஸாரம் என்ற கதானு க்ரமணிகையை செய்து அந்த ப்ரபுவிடம் கொடுத்தார்.

அதன் முதல் ச்லோகம் பின்வருமாறு:" வித்வானாகிற போபதேவரால் மந்திரியாகிய ஹேமாத்ரியின் திருப்திக்காக இதில் ஸ்ரீமத் பாகவதத்தின் அத்யாய ஸாரம் நிரூபிக்கப் படுகின்றது." இதனால் ப்ரபு திருப்தி அடையா மலிருந்து அவருடைய நியமனப்படி பக்தி முக்தாபலம், பக்திலஹரி என்ற இரண்டு பக்தி நிரந்தங்களைச் செய்தார். அதனால் ப்ரபு பண்டிதரை மிகவும் கௌரவப்படுத்தினார்.

தவிர போபதேவர் செய்த க்ரந்தங்களின் விவரமானது பக்திமுத்தாபலம் என்னும் க்ரந்த த்தின் வியாக்யானத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதாவது ஸாஸ்திரங்களை படித்த வர்களுக்குள் சிறந்தவரான போப தேவரால் வ்யாகரணவிஷயமாக 10 க்ரந்தங்களும் மனிதர் களின் வைத்ய விஷயமாக 15 க்ரந்தங்களும் 16 வ்யாக்யானங்களும் ஸாஹித்ய விஷயமாக 3 க்ரந் தங்களும் செய்யப்பட்டன. அவைகள் யாவும் ஸல்லோராலும் கொண்டாடத்தக்கவைகளே. தவிரவும் இந்த போபதேவர் ஸ்ரீமத் பாகவத

க்ரந்தத்தை 22 தடவை படித்தார் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அவரால் வேத வ்யாஸ ஸ்தோத்திரமும் ஸ்லோகமாக செய்யப் பட்டு இருக்கிறது. மேற்காட்டிய காரணங் களால் முன்னே சொன்ன ஆக்ஷேபத்துக்கு இடமே இல்லை. தவிரவும் ஸ்ரீமத் பாகவதத்தின் முதல் ச்லோகத்தின் வ்யாக்யானத்தில் ஸ்ரீதரா சார்யாள் அவர்கள் "பாகவதம் என்பது வேறு என்று சந்தேகப்படக்கூடாது" என்பதாகச் சொல்லி இருக்கிறார்.

ஆட்சேபம்: ஸ்ரீமத் பாகவதம் வ்யாசரால் செய்யப்பட்டது என்பது முற்றிலும் பொருந்தாது. அந்த மஹர்ஷியினால் செய்யப்பட்ட மஹா பாரதம், ஸ்காந்தம், விஷ்ணு புராணம் முதலிய கிரந்தங்கள் எளிதில் படிக்கக்கூடியவை களாகவும் எளிதில் அர்த்தம் செய்து கொள்ள க்கூடியவைகளாகவும் இருக்கின்றன. இந்த பாகவதத்திலோ மேற்காட்டியவைகள் முற்றிலும் மாறிஇருக்கின்றன. ஒருவரால் செய்யப்பட்ட க்ரந்தங்களில் இவ்வளவு மாறுதல்கள் இருக்க நியாயமில்லை. ஆகையால் இதன் கர்த்தா வ்யாஸர் அல்லர் என்பதேயாம்.

சமாதானம்: சொல்லிய ஆக்ஷேபம் சரியானதே. ஆனாலும், ஸ்ரீவ்யாஸ பகவான் ஸ்ரீ நாராயணனுடைய அவதாரம். அவர் வேத–ராசியை ஜனங்கள் அத்யயனம் செய்ய முடியாமல் புத்திக் குறைவுள்ளவர்களாக இருக்கும் காலத்தில் அக்குறையை நீக்கு வதற்காக வேதங்களை நான்கு சாகைகளாகப்

பிரித்தார். அவற்றைப் படிப்பதற்கும் கேட்பதற்கும் அதிகாரம் இல்லாத ஸ்திரீகள், சூத்ரர்கள் இவர்களுக்காக மஹாபாரதம், இதிஹாஸம் முதலியவைகளை எளிதில் அர்த்தமாகும்படி எளிய நடையில் எழுதி வெளியிட்டார். அப்படியே வேதார்த்தத்தை பகவத்கீதை, ப்ரம்ஹஸூத்திரம் இவை களால் வெளியிட்டார். இப்படி மந்தாதிகாரிகளை உத்தேசித்து எளியவைகளைச் செய்தார். உத்தமாதி காரியான வித்வான்களுக்கு உபயோகப்படும்படி ஸகல வேதங்களால் நிரூபிக்கப்படும் பரமாத்மா வை கடினமான சந்தர்ப்பத்தால் வர்ணித்தார். ஆகையால் அதிகாரி பேதத்தால் நடையின் பேதம் ஏற்பட்டதே ஒழிய கர்த்தாவின் பேதத்தால் ஏற்பட்டதல்ல.

ரகுவம்சம், மேகசந்தேசம், நளோதயம், ஹரிச்சந்திரோபாக்யானம், நளோபாக்யானம் இவைகள் மஹா கவியான காளிதாஸரால் செய்ய ப்பட்ட கிரந்தங்கள். இவைகளின் பதங்கள், அவைகளின் சேர்க்கை, விருத்தி, பாகம் முதலியவைகள் வெவ்வேறாக காணப்படுகின்றன, அதனால் இவைகளை காளிதாஸர் எழுதவில்லை எனச் சொல்லக்கூடுமா?

மேலும், ஆத்மபோதம், ஸௌந்தர்யலஹரி இவைகள் ஸ்ரீமத் பகவத்பாதர்களால் செய்யப் பட்டவைகளானாலும், ஒன்றுக்கொன்று மேற்காட்டிய விஷயங்களில் மாறுபட்டுள்ளவைகளாக இருக்கின்றன. ஆகையால் ஸர்வக்ஞர்களாயும் பகவானுடைய அவதார பூதராயுமான வ்யாஸ மஹர்ஷியினுடைய வாக்கானது கங்காப் பிரவாஹம்

போலத் தடையற்றது.

ஆட்சேபம்: பாகவதம் என்பது தேவீபாகவதமே ஒழிய வ்யாஸ மஹர்ஷியால் செய்யப்பட்டது அல்ல. ஏனென்றால் "ஸ்ரீமத் பாகவதத்தை எழுதி ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்தில் வைத்துத் தானஞ்செய்பவருக்கு மோக்ஷம் கிடைக்கும்" மத்ஸ்ய புராணம். இதே விஷயத்தை ஸ்ரீ தரா சார்யாள் முதலியவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பற்றி கொஞ்சம் யோசிப்போம். ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்துக்கும் ஸ்ரீமத் பாகவதத் திற்கும் என்ன சம்பந்தம். ஸ்ரீமகாவிஷ்ணுவுக்கு கருடன் வாகனம் என்று பிரசித்தமே தவிர, சிங்கம் வாகனம் என்பது ஓர் இடத்திலும் சொல்லப்படவில்லை. வேறு வாகனமிருப்பதாகவும் தெரியவில்லை; பகவானே நரஸிம்ஹாவதாரஞ் செய்தவராகையால் ஸிம்மம் என்று சொல்லி இருக்கிறதென்று யோசிப்போமானால் பரமாத் மாவின் ஸ்வரூபமாகிய ஸிம்மத்தின் மீது அவரை நினைப்பிக்கும் க்ரந்தத்தை வைத்து தானஞ்செய்வது நியாயமாகுமா? ஆகையால் தேவீபாகவதம் என்று சொல்வதே உக்தமம். ஸிம்மம் ஸ்ரீதேவியின் வாகனமாகையால், அதில் வைத்துத் தானஞ் செய்வது மோக்ஷத்தைக் கொடுக்கும் என்பது பொருந்தும்.

ஸமாதானம்: முன்னே காட்டியுள்ள ஆக்ஷேபம் முற்றிலும் பொருந்தாது. ஸகல ஸ்வரூபியான ஸ்ரீ பகவானுக்கு, ஆஞ்சநேயர், குதிரை, யானை இவைகள் வாகனமாக இருக்கின்றன. இப்பொழுது தேவாலயங்களில் உத்ஸவ காலத்தில்

மேற்காட்டிய வாகனங்களில் பகவானை அலங்கரிப்பது வழக்கமாக இருந்துவருகிறது. "விஷ்ணுவின் வாகனங்களைச் சொல்கிறோம்: முதல்நாள் ஹம்ஸம், இரண்டாம் நாள் ஸிம்மம், முன்றாம் நாள் ஆஞ்சநேயர், நான்காம் நாள் ஆதிசேஷன், ஐந்தாம் நாள் கருடன், ஆறாம் நாள் யானை, ஏழாம் நாள் ரதம், எட்டாம் நாள் குதிரை, ஒன்பதாம் நாள் பல்லக்கு, பத்தாம் நாள் புஷ்பகம்" வைகானஸ தந்திரம், – தெய்வீக யக்ஞாதிகாரம், உத்ஸவ படலம்."பகவான் உத்ஸவ தினங்களில் ஹம்ஸம், ஸிம்மம், ஹனுமான், ஆதிசேஷன், கருடன், யானை, ரதம், குதிரை, பல்லக்கு, புஷ்ப மண்டபம் ஆகிய வாஹனங்களில் முறையே வீற்றிருந்து அர்ச்சாவதாரத்தின் மஹிமையை காண்பிக்கிறார்; அதிகாரிகை இதே விஷயம் வைசம்பாயன காரிகையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் பகவானுடைய அனந்த கல்யாண குணங்களை வர்ணித்து இருக்கும் ஸ்ரீமத் பாகவதம் ஸ்ரீமந் நாராயண ஸ்வரூபமே தவிர வேறில்லை. அதை ஸிம்ஹாஸனத்தில் வைத்து தானம் செய்வதில் கொஞ்சமேனும் ந்யாய விரோதமில்லை; 'ரிஷியின் அம்சம் இல்லாதவன் காவியம் எழுதமாட்டான்; விஷ்ணுவின் அம்சம் இல்லாதவன் அரசனாகிறதில்லை' என்றபடி அரசன், விஷ்ணுவின் அம்சம் உள்ள வனாகையால் ஸிம்ஹாஸனத்துக்குரியவனாகிறான். அப்படி இருக்க பகவானுக்கு ஸிம்ஹாஸனம் உண்டென்று ஏன் சொல்லக்கூடாது? ஹேமாத்ரி முதலிய க்ரந்தங்களில் தானப் பிரகரணத்தில் ரோகிகளின் வ்யாதி நிவர்த்திக்காக, அந்தந்த வ்யாதிக்குத்

தக்கபடி ஒரே தேவதையை அநேக வாகனங்களில் பூஜித்து தானம்செய்யும்படி சொல்லப் பட்டிருக்கிறது. அப்படிப்போல் ஸம்ஸார வ்யாதியால் உபத்திரவம் அடைந்தவனுக்கு அதன் நிவர்த்திக்காக இம்மாதிரியான தானம் பிராய சித்தமாகச் சொல்லப்பட்டது. தேவீ பாகவதம் முதலிய சக்தியை நிரூபிக்கும் க்ரந்தங்களில் தேவிக்கு ஸிம்மவாஹனம் என்று சொல்லப்பட்டு இருந்தாலும் ஸிம்மம் ஸ்ரீதேவியின் வாகனமே ஒழிய பகவானுடையதல்ல, என்று சொல்ல முடியாது. ஏனென்றால் ஸ்ரீதேவி மஹாவிஷ்ணுக்கு பத்னியாகையால் தான் பர்த்தாவினுடைய வாகனங்களில் தனதிஷ்டப்படி ஒருவேளை கருடன்மீதும், ஒருகால் ஸிம்மத்தின்மீதும் பின்னர் யானைமீதும் ஏறி ஸஞ்சரிக்கலாமே ஒழிய அவருக்குச் சொந்தமான வாகனம் இன்னதென்று கல்பிப்பது பொருந்தாது. வீடு, தோட்டம், வயல், பணம், வேலைக்காரர்கள், வேலைக்காரிகள், வாகனம், பசு, ஆபரணம், கடன் இவைகளில் பர்த்தாவுக்கு அதிகாரமே ஒழிய பத்னிக்கு அதிகாரம் இல்லையென்று மனுஸ்மிருதி முதலிய வைகள் சொல்லுகின்றன. ஸ்திரீ ஒருபொழுதும் ஸ்வாதந்திரயத்தையடையத்தக்கவளல்ல. புருஷன் உடைய வாகனங்களில் அவர்களுடைய பத்னி ஏறினதால் அவைகள் அவர்களுடையதாகி விடுமா? அப்படி உலகத்தில் வழக்கமும் இல்லை.

ஆட்சேபம்: ஸ்ரீ வ்யாஸ மஹர்ஷியானவர் இந்தப் பாகவத சாஸ்திரம் எல்லா உபநிஷத்துக்களுக்கு ஸமமானது என்று காட்டுவதற்காகவே ஸகல

வேதார்த்தங்களைச் ஸ்லோக ரூபமாகச் செய்தார். சில இடங்களில் வேதத்தில் உள்ளபதச் சேர்க்கையே காட்டி இருக்கிறார். வேதத்தின் அர்த்தம் அறியாமலேயே சம்பிரதாயப்படி படிப்பதால் மேலான பலன் கிடைப்பது போல் வேதத்திற்குச் சமமான ஸ்ரீமத்பாகவத கிரந்தத்தை தானஞ் செய்வதாலும் மோக்ஷம் கிடைக்கும் என்று சொல்லப்பட்டது. இதனால் புத்தகதானத்திற்கே இவ்வளவு பலன் கிடைக்குமாகில், குருமுகமாக சாஸ்த்ரமுறைப்படி இதைத் தெரிந்துகொண்டவனுக்கு முக்தி கிடைப்பது நிச்சயம் என்று பொருள். மோக்ஷத்தை விரும்பியவர்களும் இடையூராகிய பாபத்தை நிவர்த்தித்துக் கொள்ள முடியும். அதனால் பாகவத தானத்தால் மோக்ஷம் கிடைக்குமென்று வியாசமஹர்ஷி சொன்னார். "புத்தியள்ளவன் கலியுகத்தில் தானத்தாலேயே பாபத்தை நிவர்த்தித்துக் கொள்ளவேண்டும்"–விஷ்ணு ஸ்மிருதி. "மூவுலகத்திலும் தானத்தைவிட மேலானது ஒன்றுமில்லை. தானத்தால் ஸ்வர்க்கம், லக்ஷ்மி, சத்ருஜயம், வித்யை, ஸ்திரீகள், வ்யாதிநிவர்த்தி ஆகியவைகள் கிடைக்கும். —ஸௌர புராணம். இவ்வுலகத்திலும், பரலோகத்திலும் தானமே முக்கியமான க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது. இதுவே மோக்ஷத்துக்கு ஸாதனம் என்று வேதம் சொல்லுகிறது. ப்ரஹ்ம கைவர்த்த புராணம். க்ருதயுகத்தில் தபஸும், த்ரேதா யுகத்தில் ஞானமும், துவாபர யுகத்தில் யக்ஞமும், கலியுகத்தில் தானமும் க்ஷேமத்தைக் கொடுக்கும் —மனுஸ்மிருதி. ஆகையால் தானமே மேலானது —ச்ருதி. "ஸ்ரீகிருஷ்ண பகவான்,

அர்ஜுனனுடைய வார்த்தையை கேட்டு தர்ம புத்திரரை தமது கையால் தடவிச் சொன்னதாவது, ஓ அரசனே ப்ருஹ்ம ஹத்தியை, கள் குடிப்பது, திருடுவது, ஆசார்ய பத்னியைப் புணர்வது முதலிய பாபங்கள் தானத்தாலேயே நிவர்த்தி யாகின்றன. புத்திரன், பணம், புண்ணியம் முதலியவைகள் தானத்தாலேயே கிடைக்கின்றன —ஸ்காந்தம்.

ஆட்சேபம்: பாகவதத்திற்கு வ்யாக்யானம் செய்த ஸ்ரீதராசார்யார் முதலானவர்கள் முதல் ஸ்லோகத்துக்கு வ்யாக்யானம் செய்யும்பொழுது பாகவதலக்ஷணமாகக் காட்டிய வசனங்கள் பின் வருமாறு கண்டுகொள்க.

எந்தக் க்ரந்தத்தில் காயத்ரி மூலமாக தர்ம விஸ்தாரம் வர்ணிக்கப்பட்டிருக்கிறதோ விருத்ரா ஸுரனின் கதை எதில் இருக்கிறதோ அந்த 18000 க்ரந்தங்களுள்ளதே பாகவத புராணம் என்று சொல்லப்பட்டது. —மத்ஸ்ய புராணம். எதில் ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யை விருத்ராஸுர வதம் 18000 க்ரந்தங்கள் 12 ஸ்கந்தங்கள் ஆகிய இவைகள் இருக்கின்றனவோ எது காயத்ரியால் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறதோ அதை பாகவதம் என்று சொல்லுகிறார்கள் —ஸ்காந்தம். ஓ அம்பரீஷா! ஸம்ஸார பந்தம் நிவர்த்தியாக வேண்டுமானால் சுகரால் சொல்லப்பட்ட பாகவதத்தை பிறர் சொல்லக்கேட்கவேண்டும். தானாகவாவது படிக்க வேண்டும்—பத்மபுராணம். இது ப்ருஹ்ம ஸூத்ரங்களுடைய அர்த்தம்; மஹாபாரதத்தின் உண்மையான அர்த்தம் காயத்ரீ மந்திரத்துக்கு

பாஷ்யம். புராணங்களுடைய ஸாரம் வேதத்தின் அர்த்தங்களால் நிறைந்தது. 12 ஸ்கந்தங்கள் உள்ளது; 100 விச்சேதமுள்ளது, 18000 க்ரந்தங்கள் உள்ளது; பாகவதம் என்ற பெயருள்ளது— கருட புராணம்.

இதில் சொல்லியுள்ள லட்சணங்கள் யாவும் தேவீ பாகவதத்தில் பொருந்தி இருக்கின்றனவே ஒழிய விஷ்ணு பாகவதத்தில் பொருந்தியவைகளாக இல்லை. மேலும் மஹா மாயா ரூபியான சக்தியின் மஹிமையால் மஹாவிஷ்ணு ஹயக்ரீவர். ஆனார். தேவீ பாகவதம் ஸ்கந்தம் 1. அத்யாயம் 5, ஹயக்ரீவபரமாத்மா அகஸ்தியமஹர்ஷிக்கு உபதேசித்த தேவீ விஷயமான க்ரந்தங்களுக்கு ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யையென்று பெயர். அந்த வித்யை விஷ்ணுபாகவதத்திலாவது, மற்ற புராணங்களிலாவது சொல்லப்படாததானாலும், தேவீபாகவதமே பாகவதமென்பதற்கு அர்த்தம்.

ஸமாதானம்: பாகவதம் என்றால் விஷ்ணு பாகவதமென்றே அர்த்தம் கொள்ளவேண்டும். ஹயக்கிரீவ ப்ருஹ்மவித்யை என்றால் ஹயக்ரீவ பரப்ருஹ்மத்துக்கு மற்றவர் சொன்ன வித்தை என்றாவது ஹயக்ரீவர் பிறருக்குச் சொன்ன வித்தை என்றாவது அர்த்தம் செய்யக்கூடாது. ஹயக்ரீவர் பிறரிடம் உபதேசம் பெற்றார் என்றாவது பிறர்க்கு உபதேசித்தார் என்றாவது ஒரு க்ரந்தத்திலும் சொல்லவில்லை. பிரளய காலத்தில் எல்லா வித்தையும் காணாமல் கொண்டு

வந்தார், ஆதலால் ஹயக்கிரீவரால் கொண்டு வரப்பட்ட வித்யை என்றே அர்த்தம் செய்ய வேண்டும். மேலும் ப்ரஹ்ம சப்தத்துக்கு வேதம் என்று அர்த்தம் வைத்துக்கொண்டால் வேத வித்யை என்றும், உண்மை என்று அர்த்தம் கொண்டால் தத்வ ஞானம் என்றும், தபஸ் என்று அர்த்தம் கொண்டால் தபோ வித்யை என்றும், நான்கு முகங்கள் உள்ள ப்ருஹ்மதேவர் என்று அர்த்தங்கொண்டால் ப்ருஹ்மதேவருக்கு உபதேசம் செய்யப்பட்ட ப்ருஹ்ம வித்யை என்றும், ப்ராஹ்மணர்கள் அர்த்தம் செய்யக்கூடிய வித்யை யென்று அர்த்தம் ஏற்படுகிறதே ஒழிய தேவீ விஷயமான வித்யை என்ற அர்த்தம் ஏற்படவில்லை. ஆகையால் ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யை விஷ்ணு பாகவதத்திலேயே நிரூபிக்கப்பட்டு இருக்கிறது.

ஆட்சேபம்: தேவீ விஷயமான க்ரந்தங்களில் அகஸ்திய மஹர்ஷிக்கு ஹயக்ரீவர் மகாவித்யை உபதேசித்தார் என்று சொல்லி இருப்பது பொருந்துமா ?

ஸமாதானம்: பொருந்தும். ஹயக்ரீவரால் எடுத்து வரப்பட்டவைகளில் அகஸ்திய மஹர்ஷிக்கு உபதேசிக்கப்பட்ட மந்திரங்களும் சேர்ந்தவையாம். பூர்ணிமா திதியில் தானம் செய்யவேண்டும் என்று சொல்லி இருக்கிறது. சிவாலயங்களிலும், விஷ்ணு ஆலயங்களிலும் பஞ்ச பர்வங்களில் பூர்ணிமா திதியில் விசேஷமான ஆராதனம் செய்கிறார்கள். தேவீ ஆலயங்களில் பூர்ணிமா திதியில் யாதொரு விசேஷ ஆராதனமும்

நடப்பதாகத் தெரியவில்லை. மேலும் ஏகாதசி, பூர்ணிமா இந்தத் தினங்களில் ஹயக்ரீவரை ஜபித்தவன் மகானுபாவனாக ஆகிறான். ஹயக்ரீவோபநிஷத் ப்ருஹ்ம ஸூத்திரங்களுடைய அர்த்தமே "பாகவதம்" என்ற கருட புராணத்தில் சொல்லிய லக்ஷணம், தேவீ பாகவதத்தில் கொஞ்சமேனும் இல்லை விஷ்ணு பாகவதத்திலேயே பொருந்தி இருக்கிறது.

ஸ்ரீமத் பாகவத மஹிமை

முன்னொரு காலத்தில் நைமிசாரண்யத்தில் வசிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகள் ஸூதரை நோக்கி கோரமாகிய இக்கலியுகத்தில் பிராணிகள் அதர்மத்தில் ஆசையுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு பக்தி, ஞானம் வைராக்யம் விவேகம் ஆகிய இவைகள் எதனால் உண்டாகும்? எது பலவிதமான ச்ரேயஸ்ஸான தனங்களில் மேலானது? எது சுத்தமானவைகளுக்கும் பரிசுத்தியை உண்டு பண்ணுகிறது? எது ஸ்ரீ கிருஷ்ணனுக்கு மிகவும் பிரியத்தை உண்டு பண்ணக்கூடியது? சிந்தாமணியானது இவ் வுலகத்திய சுகத்தை மட்டும் கொடுக்கும். மகேந்திரன் ஸ்வர்க்க ஸுகத்தை மாத்திரம் கொடுப்பான். ஆச்சார்யர்களுக்கு சந்தோஷ முண்டானால் யோகிகளுக்கும் கிடைக்க அரிய தான வைகுண்ட பதத்தையும் கொடுப் பார்கள். ஆனதால் அதைச் சொல்லவேண்டும் என்று கேட்டார்கள்.

இதைக் கேட்ட ஸூதர் சௌனகரை நோக்கி, உமக்கு இவ்விஷயத்தில் பிரியம் உண்டானதால் எது ஸம்சார தாபத்தை நிவர்த்தி செய்யுமோ, எது ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு சந்தோஷத்தை உண்டு பண்ணுமோ, எது பக்தியை விசேஷமாக வ்ருத்தி செய்கிறதோ, அதனை யோசித்துச் சொல்லுகிறேன். ஜாக்கிரதையாக கேளுங்கள். பரீக்ஷித்து மஹாராஜனுக்கு சுகரால் உபதேசிக் கப்பட்ட ஸ்ரீமத் பாகவத சாஸ்திரமே சித்த சுத்தியை உண்டுபண்ணக்கூடியது; ஜன்மாந்திரத்தில்

புண்ணியம் செய்தவன்தான் பாகவதத்தைக் கேட்பான், படிப்பான். சபையில் பரீக்ஷித்துக்கு சுகர் பாகவத கதையைச் சொல்லும் பொழுது தேவர்கள் அனைவரும் அமிர்த குடத்தை எடுத்துக்கொண்டு வந்து சுகரை நமஸ்கரித்து இந்த அமிர்தத்தை அரசன் புஜிக்கட்டும். நாங்கள் பாகவதமாகிய அமிருதத்தை பானஞ் செய்கிறோம். நீர் அமிர்த குடத்தை அரசனுக்கு கொடுத்துவிட்டு கதாமிருதத்தை எங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். அதனைக் கேட்டு சமீபத்தில் இருக்கும் சக்ரவர்த்தியானவர், ரத்னத்துக்கும், காசமணிக்கும் எவ்வளவு பேதமோ அவ்வளவு தாரதம்யம் பகவத் கதைக்கும் அமிருதத்துக் குமுள்ளது என்று யோசித்து தேவர்களை நோக்கி சிரித்தார். சுகரும், தேவர்கள் பகவத் பக்தி இல்லாதவர்கள் என்று நினைத்து கதாம்ருதத்தை தேவர்களுக்குக் கொடுக்க சம்மதிக்கவில்லை. ஆகையால் பாகவதக் கதையானது தேவர்களுக்கும் அரிதாயிற்று. பின்பு பரீக்ஷித்து மகாராஜனுக்கு ஸ்ரீமத் பாகவதக் கதையால் மோக்ஷம் கிடைத்ததைப் பார்த்து ப்ருஹ்மதேவர் ஆச்சரியம் அடைந்து ஸத்ய லோகத்தில் தராசைக் கட்டி மோக்ஷ சாதனங்கள் எல்லாவற்றையும் நிறுத்தார். ஸ்ரீமத் பாகவதமே பாரமுள்ளதாக இருந்தது. மற்றவை இலகுவாகவிருந்தன. அதனைக் கண்டு ஸகல மஹர்ஷிகளும் மிகவும் ஆச்சரியப்பட்டு ஸ்ரீமத் பாகவதத்தை பகவானுடைய ஸ்வரூபமாக நினைத்தார்கள். அதனைப் படிப்பதாலும், கேட்பதாலும் உடனே மோக்ஷம் கிடைக்கும். இந்த

க்ரந்தத்தை ஏழு தினங்களில் முழுமையும் விதிப்படி கேட்டால் ஸகல பலன்களும் ஸித்திக்கின்றன. இதனை ஸனகர் முதலான யோகிகள் நாரதருக்கு முன் காலத்தில் உபதேசித்தார். தேவர்ஷியாகிய நாரதரும் ப்ருஹ்மத்தை வர்ணிக்கும் இந்தக் க்ரந்தத்தை கேட்டார். ஏழு நாட்களில் இதைக் கேட்க வேண்டிய முறையும் நாரதருக்கு அவர்களால் உபதேசிக்கப்பட்டது, என்று சொன்னார்.

இதைக் கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்கும் முறையைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற விருப்பம் நாரதருக்கு உண்டான காரணம் என்ன? அவர் பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை நன்றாக அறிந்தவர் அல்லவா? மேலும் ஸனகர் முதலிய ப்ருஹ்ம புத்திரர்களோடு நாரதருக்கு ஸம்வாதம் எவ்விடத்தில் நேர்ந்தது? இதற்குப் ப்ரத்யுத்தரம் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

அதனைக் கேட்டு ஸூதர் பின்வருமாறு விடை சொல்லலானார். "ஹே சௌனகரே சுகர் என்னை அந்தரங்க சிஷ்யனாக நினைத்து எனக்கு எதனை உபதேசித்தாரோ அதனை உமக்கு சொல்லுகிறேன். முன் ஒரு காலத்தில் விசாலா நகரத்தில் நான்கு மஹரிஷிகள் ஸாது ஸங்கம் செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் சேர்ந்தார்கள். அப்பொழுது அவ்விடத்தில் தெய்வச்செயலால் தேவர்ஷியாகிய நாரதரும் வந்தார். அவர்கள் நாரதரைக்கண்டு,

ஓ ப்ருஹ்மபுத்திரரே! நீர் ஒரு விஷயத்திலும் ஆசை இல்லாதவர்: அப்படி இருந்தும் மிக்க வேகமாக எவ்விடம் செல்லுகிறீர்? உம்முடைய முகம் வாடினதாகக் காணப்படுகிறது, அதற்குக் காரணம் என்ன? ஜனங்கள் பொருள் செலவழித்த காலத்தில் எப்படி வருத்தப்படுவார்களோ அப்படி சூன்ய சித்தராக இருக்கிறீர். நீர் இப்படி இருப்பது உசிதமல்ல. ஆதலால், அதன் காரணத்தைச் சொல்ல வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

அதைக் கேட்டு நாரதர் விடை சொன்னதாவது:– "நான் பூமியையே எல்லாவற்றிலும் மேலானது என்று நினைத்து, புஷ்கரம், பிரயாகை, காசி, கோதாவரி, ஹரிக்ஷேத்திரம், குருக்ஷேத்திரம், ஸ்ரீரங்கம், இராமேச்வரம் முதலிய தீர்த்தங்கள் சென்று எங்கும் அலைந்தேன். அப்படியும் மனதுக்கு சந்தோஷம் ஏற்படவில்லை. இந்தப் பூமி முழுவதையும் கலி அதர்மத்துடன் வியாபித்துக் கொண்டுவிட்டான். அதனால் சத்யம், தபஸ், சௌசம், தயை, கொடுப்பது ஆகிய இவை ஓர் இடத்திலாவது இருப்பதாகக் காணப்படவில்லை. எல்லா ஜனங்களும் தங்கள் தங்கள் வயிறு நிரம்ப புஜிப்பதில் மாத்திரம் ஆசையுள்ள வர்களாகவும், கபடமாகப் பேசும் தன்மை உள்ளவர் களாகவும், பாஷண்டர் களிடத்தில் (வேதவிரோதிகள்) ப்ரீதி உள்ளவர் களாகவும் இருக்கிறார்கள். ஒவ்வொரு வீடுகளிலும் ஸ்திரீகளே பிரபுவாயிருந்து அதிகாரம் செய் கிறார்கள். மைத்துனனே புத்தி சொல்லுகிறான். எல்லோரும் பெண்களை விலைக்குவிற்கிறார்கள்.

தம்பதிகள் ஒருவருக்கொருவர் கலகஞ்செய்து கொள் கிறார்கள். ஆசிரமங்கள், புண்ய தீர்த்தங்கள், நதிகள், தேவாலயங்கள் ஆகிய இவைகள் பெரும்பாலும் துஷ்டர்களால் கெடுக்கப்பட்டன. யோகி, சித்தன், ஞானி நல்ல கர்மாவைச் செய்பவன் ஆகிய இவர்கள் ஒருவரும் காணப்படவில்லை. நல்ல காரியங்கள் யாவும் கலியாகிய அக்னியால் எரிந்து சாம்பலாக்கப்பட்டன. ஒவ்வொரு தேசத்திலும் ஜனங்கள் அன்ன விக்ரயம் செய்கிறார்கள். ப்ராஹ்மணர்கள் வேதத்தை விற்கிறார்கள். ஸ்திரீகள் பெரும்பாலும் விபசாரம் செய்கிறார்கள். இம்மாதிரியான கலியின் விளையாட்டை எங்கும் பார்த்துக் கொண்டு நான் யமுனையின் கரைக்கு வந்தேன். அதுதான் ஸ்ரீ கிருஷ்ண பகவான் விளையாடின இடம். அவ்விடத்தில் ஒரு அற்புதத்தைக் கண்டேன். அதாவது யௌவன வயதுடைய ஒரு பெண் மனவருத்தத்துடன் அவ்விடம் இருந்தார். அவளுடைய பக்கத்தில் இரண்டு வயது சென்றவர்கள் பிரக்ஞை இல்லாதவர்களாக பெருமூச்சு விட்டுக்கொண்டு படுத்திருக்கக் கண்டேன். அந்தப் பெண் அவர்களுக்குப் பணிவிடை செய்தும், அழுது கொண்டும், தன்னைக் காப்பாற்றுகிறவர் யார் என்று பத்து திக்குகளையும் பார்த்துக் கொண்டு இருந்தாள். வெகு தூரத்திலேயே அவர்களைப் பார்த்து மிகுந்த ஆச்சரியம் அடைந்து உண்மையை தெரிந்து கொள்ள விரும்பி அவர்களுடைய சமீபம் சென்றேன். அந்தப் பெண் என்னை நோக்கி, "ஓ சாதுவே க்ஷணகாலம் தாங்கள் இவ்விடம் இருக்கவேண்டும்.

என்னுடைய கவலையை தீர்க்க வேண்டும். தங்களைப்போல் உள்ள சாதுக்களை தரிசித்தால் ஸகல பாபங்களும் நிவர்த்தியாகும் என்பதில் ஸந்தேகமில்லை. தங்களுடைய தரிசனம் வரும் க்ஷேமத்தைக் காட்டுகின்றது. தங்களுடன் ஸம்வாதம் செய்தால் பலவகையிலும் கவலை தீர்ந்துவிடும்." என்று தெரிவித்துக் கொண்டாள்.

அதைக்கேட்டு அந்தப் பெண்ணை நோக்கி "நீ யார்? இவ்விருவர்களும் யார்? ஓ தேவி! நீ கவலைப்படும் காரணம் என்ன? இவைகளை விஸ்தாரமாகச் சொல்" என்று கேட்டேன்.

அதனைக் கேட்டு அந்தப்பெண் சொன்னதாவது: எனக்கு பக்தி என்று பெயர். இவ்விருவரும் என்னுடைய புத்திரர்கள். ஒருவனுக்கு ஞானம் என்று பெயர். மற்றவனுக்கு வைராக்யம் எனப் பெயர். இவ்விருவர்களும் காலமஹிமையால் கிழத்தனத்தை யடைந்தார்கள். இந்தப் பெண்கள் கங்கை முதலிய நதிகள். என்னை சேவிப் பதற்காக வந்தவர்கள், மேலும் நான் தங்களிட த்தில் என் விஷயத்தை விஸ்தாரமாக தெரிவிக்க வேண்டியவளாக இருக்கிறேன். அதாவது நான் திராவிட (தமிழ்) தேசத்தில் பிறந்தவள். கர்நாடக தேசத்திலும், மஹாராஷ்ட்ர தேசத்தின் சில பாகங்களிலேயும் வளர்ந்தவள். கூர்ஜர தேசத்தில் கிழத்தனத்தை அடைந்தேன். மிக்க பாவியான கலியின் சாபத்தால் பாஷண்டர்கள் என்னுடைய அவயங்களை துண்டித்துவிட்டார்கள். ஆகையால் தேகபலம் குறைந்து புத்திரர்களுடன் மிகுந்த சிரமத்தை

அடைந்து இந்த பிருந்தாவனம் சேர்ந்தேன். இவ்விடம் வந்தவுடன் அழகான சரீரம் உள்ள யௌவனமுடையவளாக ஆனேன். இதோ படுத்துக்கொண்டு இருக்கும் இவ்விரு குழந்தைகளும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கிழத்தனமுள்ளவர்களாக இருப்பதால் அவர்களைப் பார்த்து நானும் துக்கிக்கிறேன். உலகத்தில் தாய் வயது சென்றவளாகவும் புத்திரர்கள் யௌவனமுள்ளவர்களாகவும் இருப்பது பழக்கம். இப்பொழுது புத்திரர்கள் வயது சென்றவர்களாகவும், புத்திரர்களுடைய தாயாகிய நான் யுவதியாகவும் இருக்கக் காரணம் யாது? நாங்கள் நால்வரும் எப்பொழுதும் சேர்ந்தே சஞ்சரித்துக் கொண்டிருக்கிறோம். தாங்கள் யோகிகளுக்குள் சிறந்தவர்களாகையால் இவ்விஷயத்தை அறிந்து சொல்ல வல்லமை உள்ளவராவீர். ஆதலால் என்னிடம் கிருபை வைத்து என்னுடைய சந்தேகத்தைத் தீர்க்கவேண்டும்'' என்று கேட்டாள்.

அதைக் கேட்ட நான் அந்தப் பெண்ணை நோக்கி "ஓ பால்யப்பெண்ணே நான் எல்லா விஷயத்தையும் ஞானக் கண்ணால் அறிந்து சொல்கிறேன். நீ கவலைப்பட வேண்டாம் ஸ்ரீ நாராயணன் உனக்கு க்ஷேமத்தைச் செய்வார் என்று சமாதானம் செய்து ஒரு க்ஷணநேரத்தில் அவ்விஷயங்களைத் தெரிந்துகொண்டு, பின்னும் அந்தப் பெண்ணைப் பார்த்து பின்வருமாறு சொன்னேன். பெண்ணே இந்தக்கலியுகம் மிகவும் மோசமானது. அதனால் நல்லொழுக்கம், யோகமார்க்கம், தவம் ஆகிய இவைகள்

கெடுக்கப்பட்டன. எல்லா ஜனங்களும் அசுரர்கள் போல் கெட்ட காரியத்தையே செய்கிறார்கள். ஸாதுக்கள் துக்கப்படுகிறார்கள். அஸாதுக்கள் சந்தோஷிக்கிறார்கள். இந்தக்காலத்தில் எவன் நல்ல காரியத்தை அனுஷ்டிக்கிறானோ அவனே தீரன் என்று சொல்லப் படுகின்றான். இந்தப் பூமி ஒவ்வொரு வருஷங்களிலும் முறையே ஸ்பர்சிக்க தகாதவர்களும் பார்க்கத்தகாதவர்களும் ஆதிசேஷனுக்குச் சுமையாகிவிட்டாள். நல்ல கர்மங்கள் ஒரிடத்திலும் காணப்படவில்லை. உன்னையும் உன்னுடைய புத்திரர்களையும் இக்காலத்தில் ஒருவரும் பார்க்கிறதில்லை. ஜனங்கள் விஷயங்களில் ஆசைக்கொண்டு காரியம் அகாரியம் என்ற பகுத்தறிவு இல்லாதவர்களாகி உன்னை ஆதரிக்காமல் உபேக்ஷித்தபடியால் நீ இளைத்திருக்கிறாய். இந்த பிருந்தாவனத்தின் மஹிமையால் நீ யுவதி ஆனாய். பக்தியானது இவ்விடத்தில் இல்லாததினால் இவர்களுக்கு கிழத்தனம் போகவில்லை என்று மறுமொழி சொன்னேன். அப்போது அந்தப்பெண் மிக்க பாபியான கலியை பரீக்ஷித்து மகாராஜன் ஏன் உலகத்தில் வைத்திருந்தார்? கலியுகம் வந்தவுடன் முன்னிருந்த ஸகல வஸ்துக்களின் ஸாரங்களும் எங்கே போயின? மிகுந்த தயையுள்ள ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் ஏன் பார்த்திருந்தார்? என்று கேட்டாள். அதைக்கேட்டு நான் பின்வருமாறு சொன்னேன்: ஸ்ரீ கிருஷ்ணபகவான் பூமியில் இருந்து வைகுண்டம் சென்ற தினத்திலேயே உலகத்தில் கலி வந்துவிட்டான். அப்பொழுது அரசனாக இருந்த பரீக்ஷித்து திக்விஜயம்

செய்துவரும் காலத்தில் வழியில் கலியைக் கண்டார் அவனும் அவரை சரணம் அடைந்தான்.

அவர் தவம், யோகம், சமாதி ஆகிய இவைகளால் அடையக்கூடாத உத்தமமான பிரயோசனம் பகவானுடைய நாமங்களை பஜனை பண்ணுவதனால் இக்கலியில் எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது என்று நினைத்து கலியுகத்தில் பிறக்கும் மனிதர்களுடைய ஸௌக்கியத்தின் பொருட்டே கலியைக் கொல்லவில்லை. கெட்ட காரியங்களைச் செய்வதனால் வஸ்துக்களுடைய ஸாரம் போய்விட்டது. ப்ராஹ்மணர்கள் ஒவ்வொரு வீட்டிலும் அரிசிக்கு ஆசைப்பட்டு பாகவத கதையைச் சொல்ல ஆரம்பித்ததால் கதையின் ஸாரம் போய்விட்டது. மேலும் ப்ராஹ்மணர்கள் மிக்க கோரமான பல காரியங்களையும் செய்து நாஸ்திகர்களாக (பரலோகத்தில் சிரத்தை இல்லாதவர்களாக) ஒவ்வொரு தீர்த்தக் கரைகளில் வஸிப்பதால் தீர்த்தத்தின் ஸாரம் போய்விட்டது. காமம், கோபம், லோப விஷயங்களில் ஆசை ஆகிய இவைகளால் கலங்கிய மனம் உள்ளவர்கள் தவம் செய்வதால் தவத்தின் ஸாரம் போய்விட்டது. மனிதர்கள் மனதை அடக்காமல் உலோபம் உம்பம் இவைகளை அடைந்து பாஷண்ட மதத்தை ஆசிரயித்தும் தியான யோகத்தின் ஸாரம் போய்விட்டது. வித்வான்களும் மோக்ஷத்தையடைய முயற்சியாமல் எருமைகள் போல் ஸ்திரீகளுடன் ரமித்து புத்திரர்களை உண்டு பண்ணுவதிலேயே சாமர்த்தியத்தை அடைந்திருக்கிறார்கள். பெரியோர் களுடைய சம்பிரதாயப்படியுள்ள விஷ்ணுபக்தி

ஒரிடத்திலும் இல்லை. இம்மாதிரி ஒவ்வோரிட ங்களிலும் வஸ்துக்களின் ஸாரம் போய் விட்டது. ஆனால் இது யுகத்தின் தர்மம். எவர் மீது குற்றஞ் சொல்லக்கூடும்? அதனால் தானே சமீபத்தில் இருக்கும் புண்டரீ காக்ஷன் (தாமரைக்கண்ணன்) இதை சகித்துக் கொண்டி ருக்கிறார் என்று சொன்னேன். இதனைக்கேட்டு அந்த பெண்ணானவள் "ஓ தேவ ரிஷியே! நீர் மிகவும் மேலானவர் என்னுடைய அதிர்ஷ்ட வசத்தால் நீர் இவ்விடம் வந்தீர். ஸாதுக் களுடைய தரிசனம் ஸகல சித்திகளையும் கொடுக்கும். தங்கள் உபதேசத்தால் ப்ரஹ்லாதர் என்பவர் மாயையைக் கடந்து ஆத்ம ஸ்வரூபத்தை அடைந்தவராக விளங்குகிறார். மேலும் தங்களுடைய கிருபையால் துருவர் என்பவர் சாஸ்வதமாகிய (துருவ) பதத்தை அடைந்தார். ஆகையால் ஸகல க்ஷேமத்தைக் கொடுப்பவரும் ப்ருஹ்மதேவரின் புத்திரருமாகிய தங்களை நமஸ்கரிக்கிறேன். என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள். அதனைக்கேட்டு நான் பின்வருமாறு சொன்னேன். "ஓ சிறு பெண்ணே! ஏன் கவலைப்படுகிறாய்? ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரை மலர்போன்ற பாதங்களை இடைவிடாது தியானஞ்செய்: துக்கம் ஒருபோதும் நேரிடாது. துச்சாதனன் முதலியவர்களால் செய்யப்பட்ட உபத்திரவித்திலிருந்து திரௌபதியைக் காப்பாற்றினார். கோப ஸ்திரீகளை ஸம்ரக்ஷித்தார். அவர் இப்பொழுது தேசாந்திரம் போகவில்லை. உன்னிடத்தில் தமது ப்ராணனைக்காட்டிலும்

விசேஷமான ப்ரியம் வைத்திருக்கிறார். பக்தியாகிய உன்னால் அழைக்கப்பட்டு அவர் நீசர்களுடைய வீட்டுக்கும் வருகிறார். கிருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம் இம்மூன்று யுகங்களிலும் முறையே ஸத்யம், ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகள் மோக்ஷத்துக்கு ஸாதனங்களாக இருந்தன. இக்கலியுகத்தில் பக்தி மாத்திரத்தாலேயே மோக்ஷம் கிடைக்கிறது; ஆனது பற்றியே ஞான ஸ்வரூபியாகிய பகவான் உனக்கு சரீரத்தை உண்டு பண்ணினார். பின்பு நீ ஒருக்கால் இரு கைகளையும் கூப்பிக்கொண்டு நான் என்ன செய்யவேண்டும் என்று பகவானைக் கேட்டாய். அப்பொழுது அவர் என் பக்தர்களை போஷிக்க வேண்டும் என்று ஆக்ஞாபித்தார். நீயும் அதனை ஒப்புக் கொண்டாய். அதனால் பகவான் சந்தோஷித்து முக்தியை உனக்கு ஊழியப் பெண்ணாக இருக்கும்படி செய்தார். பின்னும் ஞானம், வைராக்கியம் என்ற இவர்களை உன்னிடம் ஒப்படைத்தார். பின்பு நீ வைகுண்டத்தில் உன்னுடைய நிஜ ரூபத்துடன் இவர்களை போஷித்து வந்தாய். பூமியில் பக்தி விருத்தியாக் வேண்டியதற்காக சாயா ஸ்வரூபமயமான ரூபத்துடன் முக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய இவர்களுடன் பூமிக்கு வந்தாய். கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் ஆகிய இம் மூன்று யுகங்களிலும் மிகுந்த ஆனந்தத்துடன் இருந்தாய். கலியில் முக்தி என்னும் பெண் பாஷண்டர்களாகிய வியாதியால் மிகவும் குறைந்துவிட்டாள். அவள் உன்னுடைய அனுமதியினால் வைகுண்டத்துக்கு மறுபடியுஞ் சென்றாள்..

உன்னால் நினைக்கப்படும் போதெல்லாம் வைகுண்டத்திலிருந்து வருவதும் போவதுமாக இருக்கிறாள். ஞானம், வைராக்கியம் இவ்விருவர் களும் புத்திர சிநேகம் கொண்டு உன்னால் காப்பாற்றப்பட்டும், இக்கலியில் ஜனங்கள் அவர்களை உபேஷித்து விட்டபடியால் வயது சென்றவர்களாகி விட்டார்கள். ஆனாலும் உன்னுடைய கவலையை நான் போக்கடிக்கிறேன். இக்கலியுகத்துக்குச் ஸமமான யுகம் வேறில்லை. இந்த யுகத்திலும் ஒவ்வொரு ஜனங்கள் இடத்திலும் உன்னை ஸ்திரமாக இருக்கும்படி செய்கிறேன். அப்படிச் செய்யாவிடில் நான் விஷ்ணு பக்தன் அல்ல. கலியில் முக்கிய பாவிகளான ஜனங்களும் பகவத் பக்தியை பெற்று வைகுண்டத்தை அடைகிறார்கள். யமன், பிசாசங்கள், ராக்ஷதர்கள், அசுரர்கள் ஆகிய இவர்கள் பக்தி உள்ளவர்களை உபத்திரவிக்க மாட்டார்கள். பக்தியால் பகவான் வசப்படுவது போல தவம், வேதம், ஞானம், நல்லகர்மா இவைகளால் ஸ்வாதீனப் படுவதில்லை. அந்த விஷயத்தில் புண்ணியம் செய்தால் தான் பக்தி பண்ணவேண்டுமென்ற விருப்பமுண்டாகும்.கலியில் பக்தியே மேலானது. பக்தியை நிந்தித்ததால் துர்வாஸர் துக்கத்தை அடைந்தார். அனேக விரதங்களாலும், புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் பண்ணுவதாலும், போகங்களாலும், யாகங்களாலும், முக்தியைக் கொடுக்கக்கூடியது, என்று சொன்னேன். "இதனைக் கேட்டு பக்தியாகிய அந்தப்பெண் என்னை நோக்கி "ஓ நாரதரே நீர் மிகவும் மேலானவர். உம்மிடத்தில் எனக்கு மிகுந்த பிரீதி

உண்டாகி யிருக்கிறது. உம்மை ஒருபொழுதும் விடமாட்டேன். உம்முடைய மனதில் எப்பொழுதும் வசிப்பேன். தங்களுடைய அனுக்கிரஹத்தால் என் கவலை தீர்ந்துவிட்டது. ஆனாலும் என்னுடைய இந்த புத்திரர்களுக்கு மூர்ச்சை தெளிய வில்லை. இவர்களை எழுப்பிவிடும்'' என்று வேண்டிக் கொண்டாள்.

அப்பொழுது எனக்கு அவளிடத்தில் தயை உண்டாயிற்று. பின்பு நான் அவ்விருவர்களுடைய காதில் உபநிஷத் வாக்கியங்களையும் கீதா வாக்கியங் களையும் சொல்லி ''ஓ ஞானமே விழித்துக்கொள். ஓ வைராக்கியமே எழுந்திரு'' என்று இரைந்து சொன்னேன். அப்பொழுது அவர்கள் கொட்டாவி விட்டுக்கொண்டு எழுந்து இருந்தார்கள். ஆனாலும் பசி, தாகம் முதலிய வற்றால் வருத்தப்பட்டு மறுபடியும் படுத்துத் தூங்க யத்தனித்தார்கள். அது கண்டு நான் என்ன செய்கிறது என்று பகவானை த்யானஞ் செய்தேன். அப்பொழுது ''ஓ மஹர்ஷியே! ஏன் விசனப்படுகிறீர். புண்ணிய கர்மாக்களை அனுஷ்டிப்பீர் ஆனால், இவர்களுடைய தூக்கமும் கிழத்தனமும் நீங்கும். அந்தக் கர்மங்களை சில ஸாதுக்கள் உபதேசிப்பார்கள். அதனால் பக்தியானது உலகம் முழுவதும் பரவிவிடும் என்று ஆகாசத்தில் இருந்து ஒரு தொனி உண்டாயிற்று. அதனை நானும் மற்றவர்களும் கேட்டு ஆச்சரியம் அடைந்தோம். பின்பு ஆகாச வாணியால் சொல்லப்பட்டபடி எப்பொழுது, எந்தவிடத்தில் எவர்கள் எந்த கர்மங்களை நமக்கு உபதேசிப்பார்களோ என்று நான்

யோசித்து ஞானம், வைராக்யம் இவ்விருவர் களையும் அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு ஒவ்வொரு புண்ய தீர்த்தங்களுக்கும் சென்று இவ்விஷயத்தைப் பற்றி ஒவ்வொரு மஹர்ஷி களையும் கேட்டுக் கொண்டே சஞ்சரித்தேன். ஒருவரும் எந்தக் கர்மாவை அனுஷ்டிக்க வேண்டும் என்று நிச்சயமாகச் சொல்லவில்லை. சிலர் இதைச் செய்ய முடியாத காரியம் என்றும், பின்னும் சிலர் இதனைத் தெரிந்து கொள்வதே சிரமம் என்றும் சொன்னார்கள். சிலர் பேசாமலே இருந்துவிட்டார்கள். சிலர் இதனைக் கேட்டு இருந்த இடத்தைவிட்டே ஓடிப் போனார்கள். மேலும் எல்லா வேதங் களாலும், கீதா வாக்கியங்களாலும் விழித்துக் கொள்ளாத ஞான வைராக்கியங்கள் வேறு எந்த உபாயத்தால் எழுந்திருக்கப் போகிறார்கள்.? நாரத மஹர்ஷியாலும் அறியப்படாத விஷயம் மற்ற மஹர்ஷிகளால் சொல்லமுடியுமா? என்று ஜனங்கள் ரகசியமாக பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். அப்பொழுது எனக்கு யாதொரு நிச்சயமும் உண்டாக வில்லை. ஆனாலும் பதரிகா வனம் சென்று தவம் செய்யத் தொடங்கினேன். அவ்விடத்தில் மிக்க தேஜஸ் விகளான ஸனகர் முதலிய யோகிகளைக் கண்டேன். கண்டவுடன் விசேஷ ஆனந்தம் அடைந்து அவர்களை நோக்கி ஓ யோகி சிரேஷ்டர்களே! நான் செய்த பாக்ய விசேஷத்தால் தங்களைக் கண்டேன்.

நீங்கள் ஐந்து வயதுள்ளவர்களானாலும் முன்னோர்களுக்கும் முந்தியவர்கள். எப்பொழுதும்

வைகுண்டத்திலேயே இருப்பவர்கள். ஸ்ரீ மஹா விஷ்ணுவின் லீலைகளை கானஞ் செய்பவர்கள். எப்பொழுதும் பகவானையே சரணமடைந்தவர்கள். ஆகையால் ஜரை (கிழத்தனம்) உங்களை உபத்திரவிப் பதில்லை. ஆகையால் என்னை அனுக்கிரஹிக்க வேண்டும். ஆகாச வாணியால் சொல்லப்பட்ட கர்மங்கள் எவை? பக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகள் எல்லா வர்ணாச்சரமங்களிலும் ஸ்திரமாய் வசிக்கும்படி என்ன உபாயம் செய்யலாம் அதனைச் சொல்லவேண்டும் என்று கேட்டேன். அப்பொழுது அவர்கள் என்னைப் பார்த்து ஓ தேவரிஷியே இவ்விஷயத்தில் லகுவான உபாயமொன்றிருக்கிறது. நீர் வைராக்கியத்தை அடைந்தவர்களுள் மேலானவர். பகவத் பக்தர்களுட் சிறந்தவர். ஆகையால் பக்தியை உலகத்தில் ஸ்தாபிப்பதற்கு நீர் தகுதியானவரே அனேக மகரிஷிகள் அனேக மார்க்கங்களை காட்டியிருக்கிறார்கள். ஆனாலும் அவைகள் பெரும்பாலும் ஸ்வர்க்கத்தையே கொடுக்கக் கூடியவைகளாகவிருக்கின்றன. மேலும் ச்ரமப்பட்டு செய்யக் கூடியவைகளாயுமிருக்கின்றன; மோக்ஷத்தை கொடுக்கும் மார்க்கம் மிகவும் ரஹஸ்யமானது. அதனை உபதேசிப்பவர்கள் கிடைப்பதரிது. ஆகாச வாணியால் சொல்லப்பட்ட கர்மம் யாதெனில் ஜ்ஞான யக்ஞமேயாம். சிலர் திரவ்ய யஜ்ஞத்தை (யாகம்) அனுஷ்டிக்கிறார்கள். பின்னும் சிலர் தபோ யஜ்ஞத்தையும் மற்றும் சிலர் யோக யஜ்ஞத்தையும், இன்னும் சிலர் ஸ்வாத்யாய யக்ஞத்தையும் (வேதங்களை அத்யயனம் செய்வது) அனுஷ்டிக்கிறார்கள். இவைகளில் ஜ்ஞான யஜ்ஞமே

மேலானது. அது சுகரால் பரீக்ஷித் மஹாராஜனுக்கு உபதேசிக்கப்பட்ட பாகவதத்தைக் கேட்பதேயாகும். அந்தப் பாகவத சாஸ்த்ரத்தைக் கேட்பதால் பக்தி ஜ்ஞான வைராக்கியங்களுக்கு நேர்ந்த கஷ்டமும் விலகும். மேலும், சிங்கத்தின் சப்தத்தைக் கேட்ட செந்நாய்கள் போலப் பாகவதக் கதையைக் கேட்ட மாத்திரத்தில் கலியின் தோஷங்கள் யாவும் ஓடுகின்றன. பக்தியானது, ஜ்ஞானம் வைராக்யம் ஆகிய இவைகளுடன் ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு ஜனங்களிடத்திலும் நன்றாய் ப்ரகாசிக்கும் என்று உபதேசித்தார்கள்.

அப்பொழுது நான் அவர்களைப் பார்த்து "ஓ ப்ரம்ஹ தேவரின் குமாரர்களே! வேதாந்த வாக்யங்களாலும், கீதா பாடத்தாலும் விழித்துக் கொள்ளாத அவர்கள் பாகவத பாடத்தால் எழுந்திருப்பார்களா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் பின்வருமாறு விடை சொன்னார்கள். ஸ்ரீமத் பாகவத கதையானது உபநிஷத்துக்களின் ஸாரத்தால் செய்யப்பட்டதாகையால் இது மிகவும் மேலானது. பாலில் நெய் இருந்தாலும் அது எப்படி தனியாகத் தெரியவில்லையோ அதுபோல வேதத்தில் ஸாரமானது எங்கு இருந்தாலும் நன்றாய்ப் பிரகாசிக்கவில்லை. ஆனாலும், அந்தப் பாலைக் காய்ச்சிக் கடைந்து அதிலிருந்து தனியாக நெய் எடுக்கப்பட்டால் அது தேவர்களுக்கு மிகவும் திருப்தியை உண்டு பண்ணுகிறது. தவிரவும் கரும்பில் அடி முதல் நுனி வரையில் சர்க்கரை இருந்தாலும் அதனைப் பிரித்தெடுத்த பிறகுதான் புஜிக்கக்

கூடியதாகிறது. அது போலவே வேதத்திலுள்ள ஸாரங்கள் எல்லாவற்றையும் எடுத்து ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்டது. இது பக்தி, ஞானம், வைராக்யம் இவைகளை உலகத்தில் ஸ்தாபிப்பதற்காகவே வெளியிடப்பட்டது. முன் னொருகால் ஸ்ரீவேதவ்யாஸ மஹர்ஷி ஸ்ரீமத் மஹாபாரதத்தைச் செய்தும், வேதங்களை அத்யயனஞ் செய்தும் உபநிஷத்துக்களின் உண்மையான அர்த்தத்தைத் தெரிந்து கொண்டும், பகவத் கீதையைச் செய்தும், அக்ஞானம் விலகாமல் தாபமடைந்து ஸரஸ்வதி நதிக்கரையில் கவலைப் பட்டுக் கொண்டிருக்கும்பொழுது உம்மால் நான்கு ச்லோகங்கள் உபதேசிக்கப்பட்டன; அவைகளைக் கேட்டு அவர் உடனே கவலை தீர்ந்தவராக, அவைகளைக் கொண்டு பாகவதத்தைச் செய்தாரல்லவா ?அப்படி இருக்க பாகவதத்தை கேட்பதால் துக்கம் விலகுமாவென்று நீரே கேட்பது மிகவும் ஆச்சர்யமாக விருக்கிறது' என்று சொன்னார்கள். பின்பு நான் அவர்களைக் கொண்டாடி, அவர்களை நோக்கி இந்த ஞான யஜ்ஞத்தை எவ்விடத்தில் செய்யலாம் ? எவ்வளவு நாட்களில் பாகவதம் கேட்கப்படவேண்டும் ? அதன்முறை எப்படி ? பாகவத சாஸ்த்ரத்தின் மஹிமையை ஸகல வேதங்களுமறிந்த தாங்களே சொல்லவேண்டும்' என்று கேட்டுக் கொண்டேன்.

அப்பொழுது அவர்கள், "ஓ நாரதரே! கங்கையின் ஸமீபத்தில் ஆனந்த வனமென்பது ஒன்று உண்டு. அது மிகவும் ஏ்காந்தமான இடம். ஜலஸௌக்யமுள்ளது; அனேக மஹர்ஷிகள்

அவ்விடத்தில் வஸிக்கிறார்கள்' அவ்விடத்தில் வஸிக்கும் பறவை முதலியவைகளுக்கும் இயற்கையான விரோதம் இல்லை. அவ்விடத்தில் பாகவத கதையைச சொல்லுவதாகிய ஜ்ஞான யஜ்ஞத்தை நீர் நடத்த வேண்டும், அவ்விடத்திற்கு பக்தியானவள் தன் புத்ரர்களுடன் வருவாள். அந்தக் கதையைக் கேட்ட மாத்திரத்தில் அவர்கள் யௌவன வயஸை அடைவார்கள்' என்று சொல்லி என்னை அழைத்துக் கொண்டு பாகவத கதையைக் கேட்பதற்காக ஆனந்தவனம் சென்றார்கள். அப்பொழுது இதனைக் கேட்டுப் பூலோகம், தேவலோகம், ப்ரஹ்மலோகம் ஆகிய இவ்விடங்களிலிருந்து பகவத் பக்தர்கள் எல்லோரும் ஆனந்தவனம் சென்றார்கள். அன்றியும் ப்ரகு, வஸிஷ்டர், ச்யவனர், கௌதமர், மேதாதிதி, தேவலர், தேவராதர், பராசுராமர், விச்வாமித்ரர், சகலர், மார்க்கண்டேயர், பிப்பலாதர் முதலிய மஹர்ஷிகளும், வ்யாஸர், பராசரர் முதலிய யோகிகளும், சாயாசுகர், ஜாஜலி, ஜஹ்னு முதலியவர்களும் தங்கள் தங்களுடைய ஸ்திரீகள், புத்ரர்கள், சிஷ்யர்கள் முதலியவர்களுடன் கங்காதீரஞ் சென்றார்கள். மேலும் ஆறு சாஸ்த்ரங்களும், பதினேழு புராணங்களும், நான்கு வேதங்களும், கங்கை முதலிய நதிகளும், புஷ்கரம் முதலிய குளங்களும், க்ஷேத்ரங்களும் பத்து திக்குக்களும், தண்டகை முதலிய வனங்களும், மேரு முதலிய மலைகளும் திவ்ய சரீரமுள்ளவைகளாய்க் கதையை கேட்பதற்காக அவ்விடம் வந்து கூடின. மேலும் தேவர்கள், கந்தர்வர்கள், கின்னரர்கள் ஆகிய இவர்களும்

வந்தார்கள். எல்லோருக்கும் ஆசார்யர்களான ஸனகர் முதலியவர்களை ப்ரகுமஹர்ஷி தாம் நேரில் அழைத்து வந்தார். அப்பொழுது அந்த ஜ்ஞான யஜ்ஞத்தில் நான் தீக்ஷை செய்து கொண்டு அந்தக் குமாரர்களுக்கு ஆஸனங் கொடுத்து நமஸ்காரஞ்செய்து அவர்களைப் பூஜித்தேன். அங்கே ஒருபக்கத்தில் மஹர்ஷிகளும் மற்றொரு பக்கத்தில் தேவகணங்களும், இன்னொரு பக்கத்தில் வேதம் உபநிஷத் முதலியவைகளும், மற்றொரு பக்கத்தில் தீர்த்தங்களும், இன்னொரு பக்கத்தில் ஸ்திரீகளும், தங்களுக்குத் தகுந்த ஆஸனங்களில் உட்கார்ந்தார்கள். 'ஜய்' என்றும், 'நமஸ்காரம்' என்றும் சப்தங்கள் மிகுதியா யுண்டாயின, சங்க வாத்தியங்கள் முழங்கின. ஆகாசத்தில் தேவர்கள் விமானங்களிலிருந்து கல்பக விருக்ஷத்தின் புஷ்பங்களின் மழையைப் பெய்தார்கள். இப்படி எல்லோரும் ஒரே மனமாய் பாகவத மாஹாத்மியத்தைக் கேட்க விரும்பியிருக்கும் பொழுது என்னை உத்தேசித்து ப்ரஹ்ம குமாரர்கள் பின்வருமாறு சொன்னார்கள்: 'ஸ்ரீமத் பாகவத கதையை ஜனங்கள் எப்பொழுதும் கேட்வேண்டும். அதனைக் கேட்டமாத்திரத்தால் பகவான் மனதில் ஆவிர்ப்பவிக்கிறார். இது பதிமிண்ணாயிரம் க்ரந்தங்களடங்கியது. பன்னிரண்டு ஸ்கந்தங்கள் உள்ளது. பரிக்ஷித்து மஹா ராஜனுக்கு சுகரால் உபதேசிக்கப்பட்டது. இதுவே மோக்ஷத்தை கொடுக்கக்கூடியது. மற்றப் பலவையான சாஸ்த்ரங்கள் புத்திக்கு மயக்கத்தை யுண்டுபண்ணுகின்றன. எந்த வீட்டில் பாகவத கதை படிக்கப்படுகிறதோ

அதுவே புண்ய க்ஷேத்ரமாகும், அச்வமேதயாகங்கள், நூறு வாஜபேயங்கள் இவைகளை ஆயிரம் செய்தாலும், அதனாலுண்டாகும் புண்யமானது பாகவத கதையைப் படிப்பதனா லுண்டான ஸுகிருதத்தின் 16ல் ஒரு பாகத்திற்கும் ஸமமாகாது. ஒவ்வொரு நாளும் பாகவதத்தில் ஒரு ச்லோகத் தையாவது அதன் பாதியையாவது அவசியம் படிக்க வேண்டும். ஒவ்வொரு வேதங்களின் முதல் மந்த்ரங்கள் வேத மாதாவாகிய காயத்ரீ மஹாமந்தரம், புருஷ ஸூக்தம், வேதங்கள், பாகவதம், த்வாதசாக்ஷரம், ஸூர்யன், ப்ரயோகம், ஸம்வத்ஸரமாகிய காலம், ப்ராஹ்மணர்கள், அக்னிஹோத்ரம், காமதேனு, த்வாதசி திதி, துளஸி, வஸந்தருது, புருஷோத்தமராகிய நாராயணர், ஆகிய இவர்களுக்குள் தாரதம்யமில்லை. எவன் ஒவ்வொரு நாளும், பாகவதத்தை படித்து அதன் அர்த்தத்தை தெரிந்துகொள்ளுகிறானோ, அவனுக்கு கோடி ஜன்மங்களில் செய்யப்பட்ட பாபங்களும் நிவர்த்தியாகின்றன. தவிரவும், மரண காலத்தில் இந்தச் சுக சாஸ்த்ரத்தைக் கேட்பதால் வைகுண்டத்தையடைவார்கள். இந்தப் பாகவத புஸ்தகத்தை ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்தில் வைத்து விஷ்ணுபக்தர்களுக்குத் தானம் செய்கிறவன் ஸ்ரீகிருஷ்ணனுடைய ஸாயுஜ்ய பதத்தையடைகிறான். பிறந்தது முதல் ஒரு பொழுதாவது பாகவத கதையைக் கேட்காதவன் சண்டாளனுக்கும், கழுதைக்கும் ஸமானனென்று சொல்லப்படுகிறான். தவிரவும், அவனை பக்தர்கள் உயிருள்ள பிணமென்றும், பூமிக்குச்சுமையாயிருப்பவனென்றும் சொல்லுகிறார்கள். இந்த கதையை இந்திரியங்களை

ஜயித்து, மனத்தை அடக்கி வெகுநியமத்துடன் கேட்கவேண்டுமாதலால் அவ்வளவு நியமத்தை அனுஷ்டிப்பது இக்கலி காலத்து ஜனங்களால் முடியாததாகுமென்றும், இவர்களுக்கு ஆயுஸ் மிகக் குறைந்ததென்றும் யோசித்து சுகர் ஏழு நாளில் இதைக் கேட்கவேண்டுமென்று ஒரு விதி நியமித்திருக்கிறார்.

அந்த விதிப்படி ஏழு நாளில் பாகவதத்தை கேட்பதனால் ஸகல யாகங்கள் செய்த பலன்களும், ஸகல வ்ரதங்களை அனுஷ்டித்த பலன்களும், ஸகல தீர்த்தங்களில் ஸ்நானம் செய்த பலன்களும் உண்டாகும் என்று எனக்கு உபதேசித்தார்கள் என்று ஸூதர் சௌனகர் முதலிய மஹர்ஷி களுக்குச் சொன்னார். இதைக் கேட்டுச் சௌனகர், பாகவத புராணம் மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியதென்றும், மற்றவைகளைக் காட்டிலும் மேலானதென்றும், தாங்கள் சொல்லக் கேட்டு மிகவும் ஆச்சர்யமடைந்தோம். அவ்வளவு மேன்மை அந்தச் சாஸ்த்ரத்திற்குக் கிடைத்த காரணமென்ன? சொல்ல வேண்டும் என்றார். அதனைக் கேட்டு ஸூதர் அவரை நோக்கிச் சொன்னார். "ஓ சௌனகரே! ஸ்ரீ கிருஷ்ண பகவான் பூமியை விட்டுத் தம் உலகம் போகும் முன்னிலையில் உத்தவர், பகவானை நோக்கித் தாங்கள் வைகுண்டம் சென்றால் பக்தர்களை யார் ஸம்ரக்ஷிப்பார்? கலியுகத்தில் ஜனங்கள் துஷ்டர்களாகிவிடுவார்கள்; நிர்குணமாகிய உம்முடைய ஸ்வரூபத்தை ஜனங்கள் உபாஸிப்பது மிகவும் கஷ்டம். அதற்காகவே தாங்கள் பூமியில் அவதாரஞ் செய்திருக்கிறீர்கள். ஆகையால்

இவ்வுலகத்திலேயே வஸிக்க வேண்டுமேயொழிய மேலுலகம் செல்லக் கூடாது என்று வேண்டிக் கொண்டார். இதனைக் கேட்டு பகவான், 'பக்தர்களுக்காக நாம் செய்யவேண்டியதென்ன? என்று யோசித்து? தேஜோ ரூபியாக ஸ்ரீமத் பாகவதத்தில் ப்ரவேசித்தார். அதனாலேதான் அது எல்லாவற்றிலும் மேலானது. அதனைக் கேட்பதாலும், படிப்பதாலும் துக்கம், தாரித்ரியம், பாபம் முதலாகிய இவைகள் நிவர்த்தி யாகின்றன. ஏழு நாளில் இந்த க்ரந்தம் முழுவதையும் விதிப்படிக் கேட்டால் தேவர்களாலும் தாண்ட முடியாத விஷ்ணுவின் மாயையைக் கடந்து ஸ்வரூபஜ்ஞானத்தை அடையலாம். 'ஓ சௌனகர் முதலியவர்களே! இப்படி பாகவதத்தின் மஹிமையை வர்ணித்தவுடன் ஆனந்தவனத்தில் பக்தியின் புத்ரர்களான ஜ்ஞான வைராக்கியர்கள் மிக்க பலத்துடனும் அழகான சரீரத்துடனும் எழுந் திருந்தார்கள். பக்தியும், ஹே கிருஷ்ண!, ஹே கோவிந்த! ஹே முராரே! என்று சொல்லிக் கொண்டு விசேஷ சந்தோஷமடைந்தாள். பின்னும் அவர்களுடைய ஆஜ்ஞையால் பகவத்பக்தருடைய மனதில் வஸித்து வந்தாள். மேலும் அவ் விடத்தில் ஸ்ரீமந்நாராயண மூர்த்தி நீருண்ட மேகம் போலக் கறுத்த திருமேனியோடு நான்கு கைகளிலேயும் சக்ரம் முதலிய ஆயுதங்களை ஏந்திப் பீதாம்பரத்தையுடுத்திக் கொண்டு துளஸி மாலையால் அலங்கரிக்கப் பட்டுக் கோடி மன்மதனைப் போல அழகு உள்ளவராகி பக்தர்களுக்கு தர்சனங் கொடுத்தார். அப்பொழுது எல்லோரும் பரமானத்தத்தை யடைந்து பகவானை ஸ்தோத்ரம் செய்தார்கள். மேலும் ஸ்ரீமத் பாகவதமே மேலானதென்றும்

தெரிந்து கொண்டார்கள்.

ப்ராஹ்மணர்களுடைய பொருள்களை அபஹரிப் பதாகிய மஹாபாபங்களைச் செய்தவர்களும் ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்பதனால் பரிசுத்தராகி விடுகிறார்கள் என்பதில் ஸந்தேக மில்லை. துங்கபத்ரா நதிக்கரையில் ஒரு பட்டணத்தில் ஆத்மதேவரென்ற ஒரு ப்ராஹ்மண ச்ரேஷ்டரிருந்தார். அவர் ஸகல வேதங்களையும் அத்யயனஞ் செய்தவர். ஸூர்யன் போன்ற தேஜஸ் உள்ளவர். தன்னுடைய வர்ணாச்ரம தர்மங்களைக் குறைவின்றி நடத்தி வருபவர். ஆனால் அவர் மிகுந்த ஏழை. அவருக்குத் துந்துலீ என்ற பத்னியொருத்தியுண்டு. அவள் மிகவும் அழகுள்ளவள், மேலான குலத்தில் பிறந்தவள், ஆனாலும் வெகுவாகப் பேசுகிறவள், வீட்டு வேலைகளில் மிகவும் ஸாமார்த்திய முள்ளவள். சண்டையில் மிகுந்த ப்ரியமுள்ளவள். தான் சொன்னதே சரியென்று ஸ்தாபிக்கும் ஸ்வபாவமுள்ளவள். அந்தத் தம்பதிகளிருவர்களும் பல வகையான தர்மங்களை அனுஷ்டித் தார்கள். அப்படியும் அவர்களுக்குப் பெண்ணாவது பிள்ளையாவது பிறக்கவில்லை. அதனால் கவலையடைந்து அந்த ப்ராஹ்மணன் வீட்டை விட்டுக் காட்டுக்குச் சென்றார். அவ்விடத்தில் மத்யானகாலத்தில் ஒரு குளத்தில் ஸ்நானம் பண்ணித் தாஹத்தைத் தீர்த்துக் கொண்டு தெய்வச் செயலால் அவ்விடம் வந்த ஒரு ஸன்யாசியின் அருகிற் சென்று அவரை நமஸ்கரித்துப் பெருமூச்சு விட்டு அவருடைய பக்கத்தில் நின்றார். அவரைப் பார்த்து

ஸன்யாஸியானவர், ஓ ப்ராஹ்மண! நீர் ஏன் துக்கப்படுகிறீர் என்று கேட்டார். அதனைக் கேட்டுப் ப்ராஹ்மணன் அந்த ஸன்யாஸியை நோக்கி, எனக்குப் புத்திரனில்லை என் வீட்டில் இருக்கும் பசுவும் மலட்டாயிருக்கிறது, என்னால் வைத்து வளர்க்கப்பட்ட மரமும் புஷ்பிக்கிறது மில்லை காய்க்கிறதுமில்லை, என் வீட்டிற்கு கொண்டு வந்த பழங்களும் காய்ந்து போகின்றன. குழந்தைகளிலில்லாமலும், பாக்யமில்லாமலும் இருக்கும் நான் பிழைத்திருந்து என்ன ப்ரயோஜனம் என்று சொல்லி மிகவும் கதறினார்.

அதனைக் கேட்டு அந்த ஸன்யாஸியானவர் அவருடைய நெற்றியில் எழுதப்பட்டிருக்கும் அக்ஷரங்களை வாசித்துப் பார்த்து ப்ராஹ்மணனை நோக்கி, ஓ ப்ராஹ்மண! உமக்கு ஏழு ஜன்மம் வரையில் பிள்ளை பிறக்காது, ஸகரர் என்னும் ராஜன் புத்ர சோகத்தை அடைந்தாரல்லவா? ஆகையால் பிள்ளை பிறக்கவில்லை யென்று நீர் வருத்தப்படுவது நியாயமில்லை. ஆகையால் குடும்பத்தின் ஆசையை யொழித்து ஸன்யாஸஞ் செய்துகொள்ளும் என்றார். அதனைக் கேட்டும் ப்ராஹ்மணன் கொஞ்சமேனும் அதற்கு ஸம்மதிக் காமல் விஷய ஸுகத்திலேயே ஆசைப்பட்டு பிள்ளை பிறக்கும்படி அனுக்ரஹிக்க வேண்டுமென்று பலவாறாக வேண்டிக் கொண்டார். ஸன்யாஸி யானவர்; "ஓ ப்ராஹ்மண! தெய்வச் செயலை மாற்றுவதற்கு யாரால் முடியும்? அதனை மாற்ற முயன்றால் துக்கத்தையே அடையும்படி நேரிடும். ஆகையால் உமக்கு புத்ரஸுகம்

கிடைக்காது. ஆயினும் உமக்கு ஒரு பழத்தைக் கொடுக்கிறேன். இதனை உம்முடைய பத்னியிடம் கொடுத்து புஜிக்கும்படி செய்யும். உத்தமமான புத்ரன் பிறப்பான் என்று சொல்லிப் பழத்தைக் கொடுத்தார். ப்ராஹ்மணன் அதைப் பெற்றுக் கொண்டு தம்முடைய வீட்டிற்கு வந்து தமது பத்னியிடம் கொடுத்து அவளை நோக்கி, இது முதல் ஒரு வருஷம் வரையில் ஒருவேளை போஜனம் செய்துகொண்டு, ஸத்யம், சௌசம், தயை, இவைகளில் தவறாமல் நியமத்துடன் நீ இருக்கவேண்டும். இப்பழத்தை புஜி. நல்ல பிள்ளை பிறக்கும், என்று சொல்லிவிட்டு, கிராமாந்தரம் போய்விட்டார். அந்தத் துந்துலீ என்பவள் தன்னுடைய தோழிகளின் முன்பாக இவ்விஷயங்கள் எல்லாவற்றையும் சொல்லி வருத்தப்பட்டாள். எப்படியென்றால் இந்தப் பழத்தை நான் புஜித்த மாத்திரத்தில் வயிற்றில் கர்ப்பம் உண்டாய்விடும். வயிறு பெருத்துவிடும். ஆசாரம் குறைந்துவிடும். தேஹத்தில் வலிமை குறையும். வீட்டு வேலைகளை எப்படிச் செய்ய முடியும்? வயிற்றுக்குள்ளிருக்கும் கர்ப்பமானது வெளி வருவது மிகவும் கஷ்டம், ஒருக்கால் சிசு வயிற்றில் குறுக்காக விழுந்துவிட்டால் நான் உயிரையிழக்கும்படி நேரிடுமே! ப்ரஸவ காலத்தில் உண்டாகும் உபத்ரவத்தை நான் எப்படி ஸஹிப்பேன்? இந்த ஒருவருஷம் நியமமா யிருப்பது மிகவும் கஷ்டம். நான் ப்ரஸவித் திருக்கும்பொழுது வீட்டிலிருக்கும் எல்லா தனங்களையும், பர்த்தாவின் ஸஹோதரியானவள்

அபஹரித்துவிடுவாள். ப்ரஸவித்தபிறகு குழந்தையைக் காப்பாற்றுவது மிகவும் கஷ்டம். ஆகையால், மலடியாகவாவது விதவையாகவாவது இருப்பதே மேலானதென்று நினைக்கிறேன். என்று சொல்லி அப்பழத்தை அவள் புஜிக்கவில்லை. பின்பு ப்ராஹ்மணன் தமது பத்னியை நோக்கிப் பழத்தை புஜித்தாயா என்று கேட்க அவள் புஜித்தேன் என்றும் அவருக்குச் சொன்னாள். இந்தச் சமயத்தில் அந்த துந்துலியின் ஸஹோதரி ஒருத்தி தெய்வச் செயலாய் அவள் வீட்டுக்கு வந்தாள். அப்பொழுது துந்துலீ அவளிடத்தில் இவ்விஷயம் முழுவதையும் சொன்னாள். அதைக் கேட்டு அவள் துந்துலியை நோக்கி நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். நான் இப்பொழுது கர்ப்பமாயிருக்கிறேன், நான் ப்ரஸவிக்கிற வரையில் நீ வீட்டிற்குள்ளேயே இருந்து கர்ப்பிணியாகயிருப்பதுபோலப் பிறருக்குச் சொல்லிக்கொண்டு இரு. உன் வீட்டிலிருக்கும் பணம் முழுவதையும், நீ என் புருஷனுக்கு கொடுத்துவிடுவாயானால், எனக்குப் பிறக்கும் குழந்தையை உனக்குக் கொடுத்து விடுகிறேன். உன் வீட்டில் வந்திருந்து, குழந்தையையும் வளர்க்கிறேன். இந்தப் பழத்தைப் பசுவுக்குக் கொடுத்து விடு, என்று சொன்னாள். அவளும் அப்படியே செய்தாள். பின்பு அவள் ப்ரஸவித்ததும் அந்தக் குழந்தையை அதன் தகப்பன் ரஹஸ்யமாகத் துந்துலியினிடம் கொடுத்தான். துந்துலியும் 'ஸுகமாய் ப்ரஸவித்தேன்' என்று தன்னுடைய பர்த்தாவிடம் தெரிவித்தாள். அந்த ஆத்மதேவர் மிகுந்த ஸந்தோஷமடைந்து

ஜாதகர்மம் முதலியவைகளைச் செய்தார். அப் பொழுது துந்துலியானவள் தனது பர்த்தாவை நோக்கி, 'ஸ்தனத்தில் பாலில்லை, எத்தனை நாள் அன்யர்களுடைய பாலைக் கொண்டு குழந்தையை வளர்க்க முடியும். என்னுடைய தங்கையின் குழந்தை இறந்து போய் விட்டதால் அவளுக்குப் பால் மிகுதியா யிருக்கிறது. அவளை வரவழைத்து வீட்டில் வைத்துக் கொண்டு குழந்தையை வளர்க்கும்படி செய்ய வேண்டும்' என்று சொன்னாள், அவரும் அதற்கு சம்மதித்து அப்படியே செய்தார். அந்தக் குழந்தைக்கு துந்துகாரி என்று பெயர் வைக்கப்பட்டது. அதற்குப்பின் மூன்று மாதம் கழித்து வீட்டிலிருந்த பசுவானது ப்ரஸவித்தது. நல்ல தேஜஸ்வியும், அழகுள்ளவனுமான புத்ரன் பிறந்தான். ஆனால் அக்குழந்தைக்கு காது மட்டும் பசுவின் காது போலிருந்தது, அதனால் அவனுக்கு கோகர்ணனென்னு பெயரிடப்பட்டது. அவன், வித்வானாயும், சுத்தனாயும், ஆசாரமுள்ளவனாயு மிருந்தான். துந்துகாரியோ மிகவும் துஷ்டனாகியும், திருடனாகியும், அசுத்தனாகியும், மஹா பாபியாகியுமிருந்தான். இப்படிச் சில காலம் சென்ற பிறகு துந்துகாரியானவன் தாஸிகள் இடத்தில் ஆசைப்பட்டுப் பணம் முழுவதையும் செலவழித்துத் தாய் தகப்பன் இருவர்களையும் அடித்து வீட்டிலிருக்கும் பாத்திரங்களையும் பிடுங்கிக் கொண்டு போனான். அப்பொழுது அவனுடைய தகப்பனாராகிய ஆத்மதேவர், அபுத்ரனாயிருப்பதே மேலானது; இந்தத்

துஷ்டப்பிள்ளையையடைந்து நான் மிகவும் கஷ்டப்படுகிறேன். என்னை இப்பொழுது யார் காப்பாற்றுவார்கள்? என்று கத்தினார். அப் பொழுது கோகர்ணன் ஸம்ஸாரத்தின் துக்கங்களை அவருக்குச் செவ்வையாக எடுத்துரைத்து வைராக்யத்தை உண்டுபண்ணினான். பின்பு அவர் புத்ரனுடைய உபதேசத்தால் வீட்டை விட்டுக் காட்டுக்குச் சென்று ஒவ்வொரு நாளும் பாகவதத்தில் பத்தாவது ஸ்கந்தத்தைப் படித்து அதனால் ஸ்ரீகிருஷ்ண ஸாயுஜ்யத்தையடைந்தார். பிறகு அந்தத் துந்துகாரியென்பவன், தாயாரை நோக்கி வீட்டில் பணம் எங்கேயிருக்கிறது? சொல்லு, இல்லாவிடில் உன்னை கொல்வேன், என்று அதட்டினான். அதனால் அவள் ஒருநாள் இரவில் ஒரு கிணற்றில் விழுந்து மரண மடைந்தாள். கோகர்ணனென்பவன் விஷயங்களில் ஆசையில்லாதவனாகித் தீர்த்தயாத்ரை செய்து கொண்டிருந்தான். துந்துகாரியென்பவன் வீட்டிலேயே ஐந்து தாஸிகளை வைத்துக் கொண்டு அவர்களைப் போஷிப்பதற்காக கெட்ட காரியங்களையே செய்து வந்தான். அந்தத் தாஸிகள் நகை வேண்டுமென்ற விருப்பத்தால் அவனை நிர்ப்பந்தித்தார்கள். அதற்காக அவன் தேசாந்தரம் சென்று நல்லவஸ்தரங்கள் நகைகள் முதலியவைகளைத் திருடிக் கொண்டு வந்து கொடுத்தான். இப்படி மிகுதியான பணத்தையும் நகைகளையும் இவன் திருடிக்கொண்டு வந்திருக் கிறான் என்று தெரிந்து அந்தத் தாஸிகள் ஒரு நாள் ராத்ரி இவன் இவ்வளவு வஸ்துக்களையும்

திருடிக்கொண்டு வந்திருப்பதனால் அரசனுடைய சேவகர்கள் இவ்விடம் வந்து நம்மை பிடித்துக் கொள்வார்களே என்று யோஜித்து ஒருவருக்கும் தெரியாமல் கயிறுகளால் இவனைக் கட்டி கழுத்தில் சுருக்கிட்டார்கள். அப்படியும் அவன் சீக்கிரத்தில் மரிக்கவில்லை. அப்பொழுது அவர்கள் அக்னியை அவன் முகத்திற்போட்டு உபத்ரவிக்க அவன் இறந்தான். பின்பு அவன் சரீரத்தை ஒருவருக்கும் தெரியாமல் ஓரிடத்தில் அடக்கம் செய்தார்கள். மறுநாள் துந்துகாரி எங்கேயென்று கேட்பவர்களுக்குப் பணம் ஸம்பாதிப்பதற்காக தேசாந்தரம் போயிருக்கிறானென்றும், ஒரு வருஷத்தில் திரும்பி வருவானென்றும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இறந்துபோன துந்துகாரி அவனுடைய பாபத்தால் ப்ரேத ஜன்மத்தையடைந்து வாயு சரீரத்துடன் அங்குமிங்கும் அலைந்து கொண்டு வெயில், குளிர், பனி, மழை இவைகளை ஸஹித்தும்; பசி, தாஹத்தால் துன்பத்தை யடைந்தும் மிகவும் துக்கித்துக் கொண்டிருந்தான். சில காலத்தில் கோகர்ணன் துந்துகாரி இறந்து போனானென்பதைக் கேள்விப்பட்டு அவனை உத்தேசித்து கயாக்ஷேத்திரத்தில் ச்ராத்தம் செய்ததுமின்றி ஒவ்வொரு தீர்த்தங்களிலும் அவனை உத்தேசித்துப் பிண்டதானம் முதலிய வைகளையும் செய்தான்.

பிறகு சில காலத்தில் தன்னுடைய பட்டணம் வந்து தன்னுடைய வீட்டின் திண்ணையில் அன்று ராத்ரிப் படுத்திருந்தான். அப்பொழுது

ப்ரேத ரூபியாயிருக்கும் துந்துகாரி, அவ் விடத்தில் படுத்திருக்கும் தன் பந்துவைப் பார்த்து, ஒருக்கால் ஆடுபோலவும், பின்னு மொருக்கால் யானை போலவும், எருமை போலவும், இந்திரன் போலவும், அக்னி போலவும், புருஷன் போலவும், பலவகையான ரூபத்தை எடுத்துக் கொண்டான். கோகர்ணன் அவனைப் பார்த்து, 'நீ, யார்? ப்ரேதமா அல்லது பிசாசமா அல்லது ராக்ஷஸனா? என்று கேட்டான். இதைக்கேட்டு விடை சொல்லமுடியாமல் அழுது கொண்டு அது ஜாடை காட்டினது. அப்பொழுது கோகர்ணன் இருகையிலும் ஜலத்தையெடுத்து ப்ரோக்ஷித்தான். அதனால் அது தன்னுடைய பாபங்கள் விலகி விடை சொல்ல ஆரம்பித்தது. 'நான் உன்னுடைய ஸஹோதரன், எனக்கு துந்துகாரியென்று பெயர். நான் செய்த பாப கர்மங்களால் ப்ராஹ்மண ஜன்மம் போய்விட்டது; அனேக ப்ராணிகளை ஹிம்ஸித்துத் தாஸிகளைப் போஷித்து வந்தேன்; கடைசியில் அவர்களாலேயே கொல்லப்பட்டேன்; அதனால் ப்ரேத ஜன்மத்தை அடைந்து கஷ்டப்படுகிறேன்; நீ எனக்குப் பந்துவாகையால் என்னிடத்தில் தயைசெய்து என்னைக் காப்பாற்று' என்றது.

அதனைக் கேட்ட கோகர்ணன், 'ஓ' துந்துகாரியே உனக்காக கயா க்ஷேத்திரத்தில் விதிப்படி பிண்டதானஞ் செய்தேன். அப்படியிருக்க உனக்கு ப்ரேதமாயிருக்கும் தன்மை ஏன் போகவில்லை? இனி நான் செய்யவேண்டிய

தென்ன ? என்று கேட்டான். அதைக் கேட்டு அந்த ப்ரேதமானது நூறு கயா ச்ரார்த்தம் செய்தாலும் என்னுடைய பாபம் நிவர்த்தி யாகாது. ஆகையால் வேறு ஓர் உபாயத்தை யோஜிக்கவேண்டும் என்றது. அதைக்கேட்டு கோகர்ணன், உன்னுடைய பாபங்கள் விலக்கத் தகுந்த உபாயத்தை ஆலோசித்து அதை அனுஷ்டிக்கிறேன். அதுவரையில் நீ கவலை யற்றவனாகியிரு என்று சொல்லிவிட்டு, ராத்ரி முழுவதும் அது விஷயமாக யோசித்தும் யாதொரு நிச்சயமும் தோன்றாதவனாயிருந்தான்.' காலையில் அந்தப் பட்டணத்திலிருக்கும் ஜனங்கள் எல்லோரும் தேசாந்தரத்திலிருந்து வந்த கோகர்ணனைப் பார்த்து, க்ஷேமம் விசாரித்தார்கள். கோகர்ணன் ராத்ரியில் நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் அவர்களிடம் தெரிவித்தான். அவர்கள் யோசித்து ஒன்றும் தோன்றாமல் ஸூர்ய பகவானைக் கேட்க வேண்டுமென்று சொன்னார்கள். உடனே கோகர்ணன் ஸூர்யனை ஸ்தோத்திரம் செய்து அவர் வேகத்தைத் தடுத்துவிட்டான். அப் பொழுது ஸூர்யபகவான், ஏழுநாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்டால் ப்ரேதத்வம் நிவர்த்தியாகும் என்று அனுக்ரஹித்தார். அதனைக் கேட்டு கோகர்ணன் பாகவத கதையைப் படிப்பதற்கு முயற்சித்தான். அதனைக் கேட்பதற்காகப் பல தேசங்களிலிருந்தும், பல கிராமங்களிலிருந்தும் நொண்டிகள், கண்ணில் லாதவர்கள், ரோகிகள் ஆகிய இவர்கள் வந்தார்கள். இன்னும் அநேகம் பெரியோர்களும்

கூடினார்கள். அவ்விடத்துக் கருகிலிருந்த ஏழு கணுக்களுள்ள ஒரு மூங்கிலில் வாயு சரீரத்தை யுடைய அந்த ப்ரேதம் ஸ்ரீமத் பாகவதத்தை கேட்பதற்காக வந்து சேர்ந்தது. அப்பொழுது கோகர்ணன் விஷ்ணுபக்தனாகிய ஒரு ப்ராஹ்மணனைக் கேட்பவராக வைத்துக் கொண்டு பாகவத கதையை வர்ணித்தார். முதல்நாள் கதை முடிந்தவுடன், அருகிலிருந்த மூங்கிலில் ஒரு கணு வெடித்ததுமின்றி ஏழாவது நாளில் ப்ரேதமானது தனது பூர்வ சரீரத்தைவிட்டு மேகம்போலக் கருத்த திருமேனியுடன், பீதாம்பரம், கிரீடம், குண்டலம், துளஸீமாலை இவைகளால் அலங்கரிக்கப்பட்டு திவ்ய ரூபத்தையடைந்து கோகர்ணனை நோக்கி "ஓ ஸாதுவே நான் உன்னால் க்ஷேமத்தை யடைந்தேன் என்று ச்லாகித்தது. இந்த சமயத்தில் விஷ்ணு தூதர்கள் வைகுண்டத்திலிருந்து விமானத்துடன் வந்தார்கள். எல்லோரும் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே, துந்துகாரி அவ்விமானத்தில் ஏறினான். அப்பொழுது கோகர்ணன் விஷ்ணு தூதர்களைநோக்கி 'ஓ விஷ்ணு தாஸர்களே இவ்விடத்திலிருக்கும் எல்லா ஜனங்களும் ஸ்ரீமத் பாகவதக் கதையைக் கேட்டார்களே; ஆதலால் பலத்தில் பேதமுண்டாகக் காரணமென்ன என்று வினவினான். அதனைக்கேட்ட ஹரி தாஸர்கள், ஓ ஸாதுவே எல்லோரும் ச்ரவணம் பண்ணினவர்களானாலும் இந்த ப்ரேதமானது, செய்தது போல மற்றவர்கள் செய்யவில்லை; ஆகையால் தான் பலன் வேறாயிற்று. 'இது பலத்தைக் கொடுக்குமோ கொடாதோ என்று

சந்தேகப்பட்டு ஜபித்த மந்தரமும் பலவிடங்களில் மனத்தைச் செலுத்திக்கொண்டு செய்த ஜபமும்; விஷ்ணு பக்தர்களில்லாத தேசமும், பாத்ரமான ப்ராஹ்மணர்களில்லாத ச்ராத்தமும், வேதாத்யயனஞ் செய்யாதவனுக்குக் கொடுத்த தானமும், அனாசாரமுள்ள குலமும் ஆகிய இவைகள் ப்ரயோசன மற்றவைகள். குருவின் வார்த்தையில் நம்பிக்கையும், தன்னைத் தீனனாக நினைத்துக் கொள்வதும், மனஸை அட்க்கிக் கொள்வதும், கதையைக் கேட்பதில் ஸ்திரமான புத்தியும் ஆகிய இவைகளுடன் கதையைக் கேட்பது மேலானது. இன்னொரு தடவை இந்தக் கதையைக் கேட்டால் எல்லோருக்கும் வைகுண்டம் கிடைக்கும். ஓ கோகர்ணா! உனக்குப் பகவானாகிய கோவிந்தர் கோலோகத்தைக் கொடுப்பார் என்று சொல்லி வைகுண்டம் சென்றார்கள்.

பின்பு கோகர்ணன் ஆவணி மாதத்தில் மறுபடியும் படனத்தை நடத்தினான். அவர்களும் கேட்டார்கள். கதை முடிந்தவுடன் அநேக விமானங்களுடன் நாராயணமூர்த்தியே நேரில் வந்து சங்கத்தை ஊதினார். பின் அவர் கோகர்ணனைக் கட்டிக் கொண்டு தமக்குச் சமமாக அவனைச் செய்து மற்ற எல்லோர்களையும் விமானத்தில் வைத்துக் கொண்டு கோலோகம் சென்றார். ஸப்தாஹ யஞ்ஞத்தின் மஹிமை இப்பேர்ப்பட்டது. ஸப்தாஹ யஜ்ஞத்தால் கிடைக்கும் பலம் காற்று, ஜலம், இலை இவைகளைப் புஜித்து கடும் தபஸ் செய்வதாலும், யோகத்தாலும் அடையமுடியாது. இந்த இதிகாஸத்தை சித்ரகூட பர்வதத் திலிருக்கும் சாண்டில்ய மஹர்ஷியும் படித்து

பரமானந்தத்தையடைகிறார். இது மிகவும் பரிசுத்தமானது. ஒரு தடவை கேட்ட மாத்திரத்தில் ஸகல பாபத்தையும் நிவர்த்திக்கக் கூடியது. ச்ராத்த காலத்தில் படித்தால் பித்ருக்களுக்கு த்ருப்தி உண்டாகும். இதனை நித்யம் படித்தால் மோக்ஷமும் கிடைக்கும்.

'ஓ சௌனகரே ஸ்ரீமத் பாகவதத்தை ஏழுநாளில் படிப்பதற்குச் சில விதிகள் உண்டு. எப்படி யென்றால் முதல் ஜ்யோதிஷ சாஸ்திரம அறிந்தவர்களை கொண்டு நல்லமுஹூர்த்தம் பார்த்து அதில் ஆரம்பிக்க வேண்டும். ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி இந்த மாதத்தில் ஆரம்பிப்பது மேலானது. 'இன்னகாலத்தில் பாகவதம் படிக்க ஆரம்பிக்கப் போகிறோம், அதனைக் கேட்க தாங்கள் எல்லோரும் வரவேண்டும். ஏழு நாளுமிருக்க முடியாமல் போனால் ஒரு நாளாவது கேட்க வேண்டும். இந்த ஜ்ஞான யஜ்ஞத்தில் ஒரு க்ஷணம் கிடைப்பது மிகவும் அரிது. ஆகையால் குடும்பத்துடன் எல்லோரும் வர வேண்டும் என்று ஒவ்வொரு தேசங்களிலும் கிராமங்களிலும் பத்திரிகை மூலமாக ப்ரஸித்தப் படுத்தவேண்டும். வந்தவர்களுக்கு இடம் முதலியவைகளைக் கொடுத்து உபசரிக்கவேண்டும். வாழை, மாந்தளிர் முதலிய மங்கள த்ரவ்யங்களால் மண்டபத்தை அலங்கரித்து நான்கு திக்குகளிலேயும் த்வஜங்கள் கட்டி வந்தவர்களுக்கு உட்காரத் தகுந்த இடங்களைச் செய்விக்கவேண்டும். மேலும் கதை சொல்பவருக்கு, திவ்யமான ஆஸனம் அமைத்து வைக்கவேண்டும். கதை சொல்லு

கிறவர் வைராக்ய முள்ளவராகவும், வேத சாஸ்திரங்களை யறிந்தவராகவும், விஷ்ணு பக்தராகவும், அதிக ஆசையில்லாதவராகவும், உதாரணம் சொல்வதில் ஸமர்த்தராயும், ப்ராஹ்மணராகியும் இருக்க வேண்டும். சொல்லுகிறவர்க்கு உதவி செய்வதற்காக அவர் போன்ற மற்றொருவர் அவருடைய பக்கத்திலிருக்கவேண்டும். சொல்லுகிறவர் வ்ரதம் — ஆரம்பிப்பதற்கு முன்பு க்ஷௌரம் செய்து கொள்ளவேண்டும். அருணோதயத்திற்குள் தம்முடைய நித்யகர்மங்களைச் சுருக்கமாகவாவது முடித்துக் கொண்டு கதையை ஆரம்பிக்க வேண்டும். மண்டபத்தில் ஸ்ரீமத் பாகவத புஸ்தகத்தையும் பகவானுடைய விக்ரஹத்தையும் நன்றாகப் பூஜித்து ப்ரதக்ஷிண நமஸ்காரஞ் செய்து கடைசியில், 'ஹே கிருஷ்ண! ஸம்ஸாரமாகிய ஸமுத்திரத்தில் முழுகியிருக்கும் தீனனாகிய என்னைக் காப்பாற்றும்' என்று ஸ்தோத்திரம் செய்யவேண்டும். பிறகு கதை சொல்லு பவருக்கு வஸ்த்ரம், ஆபரணம் முதலியவைகள் கொடுத்து, 'சுகரால் சொல்லப்பட்ட ஸ்ரீமத் பாகவதத்தை அறிந்த ப்ராஹ்மணோத்தம! இந்தக் கதையை உபதேசித்து என்னுடைய அஜ்ஞானத்தைப் போக்கும், என்று கேட்டுக் கொள்ள வேண்டும். பணம், வீடு, புத்ரன் இவைகளில் அபிமானத்தை யொழித்து சுத்தசித் தனாயிருந்து கதையை கேட்கவேண்டும். கதையைச் சொல்லுகிறவர் ஸூர்யோதயம் முதல் முன்றரை யாமம் கதை சொல்ல வேண்டும். மத்யா ன்னத்தில் மாத்யான்ஹிக கர்மத்திற்காக இரண்டு நாழிகை நிறுத்திவிட வேண்டும். மல மூத்ர

உபத்ரவமில்லாம விருப்பதற்காக மிதமாய் புஜிக்க வேண்டும். கதை கேட்கிறவன் ஒரு தடவை ஹவிஸை புஜிக்கலாம். சக்தியிருந்தால் ஏழு நாள் உபவாஸமிருப்பது மேலானது. அல்லது நெய், பால், இவைகளை புஜிக்கலாம். பழங்களையாவது புஜிக்கலாம். எப்படியிருந்தால் கதை கேட்க விக்னமில்லாமலிருக்குமோ அப்படி சக்திக்கனுகுணமாக நடத்த வேண்டும். ஆனால் ஸ்திரீஸங்கம், பாயில் படுப்பது இவைகள் கூடாதெனவாம். ஒவ்வொரு நாளும் கதை முடிந்த பிறகே போஜனம் பண்ண வேண்டும். வேதங்களையும், பக்தர்களையும், ப்ராஹ்மணர்களையும் நிந்திக்க கூடாது.

இப்படி ஏழு நாளான பிறகு புஸ்தகத்தையும், அதன் கதையைச் சொல்லுகிறவர்களையும் பூஜித்து, கதை கேட்டவர்களுக்கு ப்ரஸாதம் (துளசி) கொடுக்கப்படவேண்டும். பின்பு மிருதங்கம், தாளம், வீணை முதலியவைகளோடு பகவானுடைய குணத்தைக் கானம் பண்ணவேண்டும். அதன் பிறகு கதை சொன்னவருக்கும், மற்ற ப்ராஹ் மணர்களுக்கும், யாசகர்களுக்கும் தனம் அன்னம் முதலியவைகளைக் கொடுக்கவேண்டும். கேட்கிறவர்கள் ஸன்யாஸியாயிருந்தால் மறுநாள் பகவத் கீதையைப் படிக்கவேண்டும். கிரஹஸ் தராயிருந்தால் தசமஸ்கந்தத்தில் எவ்வளவு சுலோகங்களிருக்கின்றனவோ, அவ்வளவு ஹோமம் பண்ண வேண்டும். ஹோமம் பண்ணச் சக்தியில்லாவிட்டால், யஜ்ஞத்தின் மத்தியில் நேர்ந்த ஸகல தோஷங்களையும் நிவர்த்திப்பதற்காக விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தைப் படிக்கவேண்டும்.

அதன் பிறகு பன்னிரண்டு ப்ராஹ்மணர்களுக்கு போஜனம் செய்துவைத்து அவர்களுக்கு ஸுவர்ணம், பசு, இவைகளைக் கொடுக்க வேண்டும். சக்தியிருக்குமானால் மூன்று பலம் தங்கத்தால் சிங்கத்தின் உருவத்தைச் செய்து அதில் பாகவத புஸ்தகத்தை வைத்து அதைப் பூஜித்து அதை ஆசார்யனுக்கு கொடுக்க வேண்டும். இது ஜ்ஞான யஜ்ஞமாம்.

ஓ சௌனரே! ஆனந்த வனத்தில் ஸனகாதிகள் ஜ்ஞான யஜ்ஞத்தை விதிப்படி முடித்தபிறகு தெய்வச் செயலால் அவ்விடம் சுகர் வந்தார். அவர் வ்யாஸருக்குப் புத்ரர் ஞானமாகிய ஸமுத்திரத்திற்குச் சந்திரன் போன்றவர். ஆத்ம லாபத்தால் பூர்த்தியடைந்தவர். எப்பொழுதும் ஸ்ரீமத் பாகவதத்தைப் படிப்பவர். பதினாறு வயதுள்ளவர். அவரைக் கண்டு அங்கிருந்த ஸதஸ்யர்கள் எல்லோரும் விதிப்படி பூஜிக்க அவர் ஸ்ரீமத் பாகவதத்தின் முதலாவது ஸ்கந்தத்தின் இரண்டு மூன்று ச்லோகங்களில் குறிக்கப்பட்ட விஷயத்தை விஸ்தாரமாகச் சொன்னார். அப்பொழுது பகவான் தம்முடைய பக்தர்களான ப்ரஹ்லாதர், மஹாபலி, உத்தவர் ஆகிய இவர்களுடன் அவ்விடம் வந்து அவர்களை அனுக்ரஹித்ததுமல்லாமல் ஜ்ஞான யஜ்ஞும் நடக்கும் இடத்தில் நாம் இப்படியே ஸான்னித்யம் செய்கிறோம்' என்று அனுக்ரஹித்தார். ஆனதால் ஸ்ரீமத் பாகவதமானது, ஸம்ஸாரமாகிய ஸமுத்ர்த்தில் முழுகிய ஜனங்களைக் காப்பாற்றுகிறேன் என்று கர்ஜித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்.

இதனைக் கேட்டு சௌனகர் ஸூதரை நோக்கி "ஸூதரே சுகர் பரீக்ஷித்துக்கு எந்தக் காலத்தில் உபதேசித்தார்? கோகர்ணர் படித்த காலம் எது? ஆனந்தவனத்தில் குமாரர்கள் சொன்ன ஸமயம் எது? என்று கேட்டார். அவற்றைக் கேட்ட ஸூதர், சௌனகரை நோக்கி" சௌனகரே! ஸ்ரீகிருஷ்ணபகவான் வைகுண்டம் சென்ற நாள் முதல் நூற்று முப்பது வருஷங்களுக்குப் பிறகு கலியுகத்தில் புரட்டாசி மாதம் நவமியில் சுகர் பரீக்ஷித்துக்கு ஸ்ரீமத் பாகவதத்தைச் சொல்ல ஆரம்பித்தார். அது முதல் இருநூறு வருஷங்களுக்குப் பிறகு ஸ்ரீமத் பாகவத கதையைச் சொன்னார். அதில் இருந்து நூற்றுமுப்பது வருஷத்துக்குப் பிறகு (மூவாயிரம் வருஷமென்று சிலர் சொல்லுகிறார்கள்) சுக்லபக்ஷ நவமியில் ப்ரஹ்மபுத்திரர்களான ஸனகாதிகள் சொன்னார்கள். நான்குவித புருஷார்த்தங்களை கொடுக்கிறதற்கு இக்கலியில் ஸ்ரீமத் பாகவத சாஸ்திரத்தைத் தவிர மேலானது ஒன்றுமில்லை. மிகவும் ரஹஸ்யமானது, ஸகல சாஸ்த்திரங்களுடைய ஸாரமானது. ஆகையால் இதனை பக்தியுடன் படியுங்கள் என்று ஸூதர் சொல்லி முடித்தார். (பத்ம புராணம், உத்ர காண்டம் அத்யாயம் ஒன்று முதல் ஆறுவரையில்)

பாகவத பேதங்கள்

அடியில் கண்டபடி ஒரு தமிழ் புஸ்தகத்தால் தெரியவருகிறது. எப்படி யெனில்: பாகவதமானது ஏழு வகையுள்ளது.

1. இதிஹாஸ பாகவதம்: இது வ்யாஸ மஹர்ஷியால் செய்யப்பட்டது. 18,000 ஸ்லோகம் அடங்கியது. இதில் அத்யாயங்கள் 200 இருக்கின்றன. மேலும் இது 12 ஸ்கந்தங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. பரீக்ஷித் மஹாராஜனுக்குச் சுகரால் உபதேசிக்கப்பட்டது.

2. புராண பாகவதம்: இது நாரதரால் ருக்மிணீதேவிக்குச் சொல்லப்பட்டது. இதைச் செய்தவர் வ்யாஸ மஹர்ஷியே. மேலும் இது 600 அத்யாயங்களுள்ளது.

3. ஸம்ஹிதா பாகவதம்: வைசம்பாயனரால் ஜனமேஜயருக்கு உபதேசிக்கப்பட்டது. 50,000 க்ரந்தங்கள் அடங்கியது. 1100 அத்யாயங்கள் அடங்கிய 12 கண்டங்களாகப் பிரிக்கப் பட்டது.

4. உபஸம்ஹிதா பாகவதம்: இது ஸூதர் ஸனகருக்கு அகஸ்திய மஹர்ஷியால் உபதேசிக்கப் பட்டது. இதிலுள்ள 70,000 ஸ்லோகங்கள், 2,000 அத்யாயங்களாகவும் 100 பரிச்சேதங் களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

5. விஷ்ணு ரஹஸ்ய பாகவதம்: இது காச்யபருக்கு ஹாரீதரரால் சொல்லப்பட்டது. இடையிலே தண்டகங்கள் கலந்த 1,00,000 (லக்ஷம்) ஸ்லோகங்களுள்ளது. ஆயிரம் அங்கங்களுள்ளது. 10,000 அத்யாயங்களுள்ளது.

6. விஷ்ணு யாமள பாகவதம்: இது

பராசரால் மைத்ரேயருக்கு உபதேசிக்கப்பட்டது. இதில் 80,000 ச்லோகங்களிருக்கின்றன. மேலும் 800 அத்யாயங்களுள்ளது. 8 ஸ்தானங்களுள்ளது.

7. கௌதம ஸம்ஹிதா பாகவதம்: கௌதமர் கௌசிகருக்குச் சொன்னது. 100 அத்யாயங்கள் உள்ளது. 10,000 ஸ்லோகங்களுள்ளது. 4,00,000 ஸ்லோகங்களுள்ள கௌதம ஸம்ஹி தையில் க்ரந்தலக்ஷண கண்டத்தில் பாகவத லக்ஷணமென்ற முதல் அத்யாயத்தில் மேல் காட்டிய விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸப்தாஹவிதி

முன்னொரு காலத்தில் பரமசிவன் பார்வதியை நோக்கி ஏ! பார்வதீ! ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைப் படிப்பவன், முதலில் வ்யாஸரையும், சுகரையும் நமஸ்கரித்து மஹா விஷ்ணுவை த்யானம் செய்து கொண்டு, முதல் நாளில் முதலாவது ஸ்கந்தம் முதல் ஹிரண்யா க்ஷவதம் வரையில் படிக்க வேண்டும். இரண்டாம் நாளில் பரதனுடைய சரிதம் வரையிலும், மூன்றாம் நாளில் பகவான் ப்ரஹ்லாதரை அனுக்ரஹித்த கதை வரையிலும், நான்காம் நாளில் பத்தாவது ஸ்கந்தத்தில் ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் வரையிலும், ஐந்தாம் நாளில் ருக்மிணி கல்யாணம் வரையிலும், ஆறாம் நாளில் உத்தவருடைய ஸம்வாதம் வரையிலும், ஏழாம் நாளில் முடிவு வரையிலும் படிக்க வேண்டும். படிக்கும்போது அத்யாயத்தின் நடுவில் நிறுத்தக் கூடாது. அப்படி நிறுத்தினால் மறுபடியும் அந்த

அத்யாயத்தை அடிமுதல் படிக்க வேண்டும். படிக்கும்போது அர்த்தத்தைத் தெரிந்துகொண்டே படிக்கவேண்டும். சொல்லுகிறவன் வடக்கு முகமாகவும் கேட்கிறவன் கிழக்கு முகமாவும் அல்லது மாறுதலாகவும் இருக்கலாம். ஒவ்வொரு அத்யாயம் படித்தவுடனும் ஐந்து குந்துமணி நிறையுள்ள தங்கத்தைத் தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டும். முழுவதும் முடிந்தபிறகு பசுவை தக்ஷிணையாகக் கொடுக்கலாம். அந்தப் பசுவின் கொம்புகள் ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப் படவேண்டும். ஏ தேவீ! இம்மாதிரியான விதிப் பிரகாரம் ஸ்ரீமத் பாகவதத்தை யார் படிக்கிறார்களோ, கேட்கிறார்களோ அவர்களுக்கு ஸர்வாபீஷ்டமும் நிறைவேறும். இதனைப் படிக்குங்காலத்தில் ஸகல தேவர்களும், ஸகல மஹரிஷிகளும் ஸ்ரீ விஷ்ணுவின் பார்ஷதர்களும் மஹாவிஷ்ணுவும் அவ்விடத்தில் எப்பொழுதும் மிகுந்த ஆனந்தத்துடன் வஸிக் கிறார்கள், என்று சொன்னார். பத்ம புராணம், பாதாள காண்டம், அத்யாயம் 71.

ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்ட காலம்

கலியுகத்தில் முதல் ஆயிரம் வருஷங்களில் ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்டது.

த்வாபர யுகத்தில் பகவான், வ்யாஸரூபியாய் அவதரித்து வேதங்களைப் பிரித்து, அவைகளை பைலர் முதலானவர்களிடம் ஒப்புவித்தார். பின்பு அவற்றைப் படித்தல், முதலியவைகளில் அதிகாரம் இல்லாத ஸ்த்ரீகள், சூத்ரர்கள் முதலியவர்

களுக்காக, அவைகளின் அர்த்தத்தையே, மஹா பாரதமாகச் செய்து வெளியிட்டார். மேலும் அவரால் மஹா புராணங்களும், உப புராணங்களும் வெளியிடப்பட்டன. கடைசியில் ஸ்ரீமத் பாகவதமும் செய்யப்பட்டது.

ஆக்ஷேபம் — பெரியோர்கள் ஆத்மச்லாகை (தன்னைத் தானே புகழ்வது) செய்து கொள்ள மாட்டார்களாகையாலும், இதிஹாஸ புராணங்களில் வ்யாஸ மஹர்ஷியை ச்லாகித்திருப்பதாலும் சொல்வது பொருந்துமா?

ஸமாதானம்:- அப்படியில்லை. வ்யாஸமஹர்ஷி வேதங்களைப் பிரித்துத் தாம் செய்த மஹா பாரதத்தைச் சுருக்கமாய்ச் செய்யும்படி தமது சிஷ்யர்களான வைசம்பாயனர், ஜைமினி யென்னும் இவர்களுக்கு ஆக்ஞாபனஞ் செய்தார். அவர்களும் தனியே பாரதச் சுருக்கம் செய்தார்கள். இப்பொழுது வழங்கிவரும் பாரதம் வைசம்பாயனர் செய்ததேயாம். மேலும் புராணங்கள், வெகு காலத்திற்கு முந்தியே மார்க் கண்டேயர் முதலிய மஹர்ஷிகளால் செய்யப் பட்டிருந்தன. ஆனாலும் கால மஹிமையால் அவைகளில் சிலவற்றில் சில பாகங்களும் பின்னும் சிலவற்றில் சில ஸர்க்கங்களும் சிலவற்றில் ஸந்தர்ப்பம், விஷயம் இவைகளைச் சொல்லும் — ஸ்லோகங்களும் காணாமல் போயின. சில புராணங்கள் பூர்த்தியாகச் செய்யப்படாமலிருந்தன. இப்படி பற்பல வகையாக குறையுள்ள புராணங்களை வ்யாஸ மஹர்ஷி அந்தந்த புராண நடைக்குச்

சமமான நடையிலேதான் சீர்த்திருத்தினார். பின்னும் அவருடைய சிஷ்யர்கள் அவைகளுக்கு உபோத்காதம் (முகவுரை) அவைகளிலுள்ள ச்லோகம் முதலியவைகளின் ஸங்க்யை, அனுக்ர மணிகை, அந்தந்த புராணத்தைச் சொன்னவர்கள், கேட்டவர்கள் அவர்களுக்குள் நேர்ந்த ஸம்வாதம் முதலியவைகளை எழுதிச் சேர்த்தார்கள்.

பின்பு அவைகளை விட மேலானதாக வ்யாஸ மஹர்ஷி ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்து தம்முடைய புத்ரராகிய சுகருக்கு உபதேசித்தார். பின்பு ஸூதர் அந்த பாகவதத்தைச் சுகரிடமிருந்து தெரிந்து கொண்டு சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்குச் சொன்னார். ஆகையால் இந்த விஷ்ணு பாகவதம் வ்யாஸரால் செய்யப்பட்டதேயாம். மற்ற புராணங்கள் அவரால் சீர்திருத்தப்பட்டதேயாம்.

பரீக்ஷித்து மஹாராஜனுக்குக் கலியும் வந்த பிறகு தர்ம புத்ரர் ராஜ்யாபிஷேகம் செய்வித்ததாக பாகவதம், விஷ்ணு புராணம், பாரதம் முதலிய வைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னமேயே பாகவதம் செய்யப்பட்டிருக்குமாகில் பரீக்ஷித்தின் சரித்திரம் அதில் சொல்ல நியாய மில்லை, ஆகையால் இது கலியுகத்தின் ஆரம் பத்தில் செய்யப்பட்டதேயாம்.

ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தவர்

பாகவதத்தைச் செய்தவர் ஸ்ரீ வேதவ்யாஸ மஹரிஷி. வேதங்களைப் பிரித்த காரணத்தால் இவருக்கு இப்பெயருண்டாயிற்று. இவர் மஹா

விஷ்ணுவின் அவதாரம். இவருடைய பிதா பராசர மஹர்ஷி. இவருடைய தாய் ஸத்யவதி. இவள் வஸுவின் வீர்யத்தைப் புஜித்த மத்ஸயத் தினிடம் உண்டானவள். ஆனது பற்றி இவளுக்கு மத்ஸயகந்தி என்னும் பெயர் சிலகாலம் வழங்கின துண்டு. பராசர மஹர்ஷி ஒருக்கால் தீர்த்த யாத்திரை செய்துவரும் பொழுது வழியில் ஆற்றில் ஓடம் தள்ளிக் கொண்டிருக்கும் வலையன் கன்னியான மத்ஸயகந்தியைக் கண்டார். மேலுமவர் அவளுடைய லாவண்யத்தைக் கண்டு மோஹித்து அவளிடம் ஆசை கொண்டார். அப்பொழுது நல்வாசனையுண்டாகும்படி அனுக்ரஹித்தார். அதுமுதல் அவளுக்கு யோஜனகந்தியென்று பெயர் வழங்கினது. அவ்விருவர்களுக்கும் பிறந்தவர் வ்யாஸமஹர்ஷி.

அவர் வேதங்களைப் பிரித்தும் ஸ்த்ரீ, சூத்ரர் களுக்காக ஐந்தாவது வேதமாகிய பாரதத்தையும் செய்தார். அப்படியும் அவர் மனத்திற்கு சந்தோஷ முண்டாகாததனால் கவலையுள்ளவராக ஸரஸ்வதீ நதிக்கரையில் சம்யப்ராஸமென்ற ஆச்ரமத்தில் வசித்தார். அப்பொழுது தெய்வச் செயலாய் அவ்விடம் வந்த நாரதரிடம் உபதேசம் பெற்று ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தார்.

கதை நடந்த க்ஷேத்ரம்

கலியுகத்தில், ஸூதர் நைமிசாரண்யத்தில் வஸிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்கு இந்த பாகவத கதையைச் சொன்னார். மேலும்

நைமிசமென்பது ஒரு புண்யக்ஷேத்ரம் ஆனது பற்றி அவ்விடத்தில் அநேக மஹர்ஷிகள் வஸிப்பார்கள். அனேக பெரியோர்கள் அவ்விடத்திற்கு வருவது முண்டு. ப்ரஹ்மதேவர் ப்ராஹ்மணர்களை நோக்கி இந்த மனோமயாகிய சக்ரத்தை ப்ரயோகிக்கிறேன்; இதனுடைய நேமி (முனை) எவ்விடத்தில் மழுங்குமோ அதுவே தபஸ் செய்ய தகுதியான க்ஷேத்ரம் என்று சொல்லி ஸூர்யனுக் கொப்பான சக்ரத்தை மனத்தால் ஸிருஷ்டித்து, பரமசிவனைக் குறித்து நமஸ்காரம் செய்து அதை ப்ரயோகித்தார். அதைப் பார்த்திருந்த ப்ராஹ்மணர்களும் மிகுந்த ஸந்தோஷத்துடன் அதன்பின் சென்றார்கள். அது கீழே விழுந்து அதன் நேமி மழுங்கின இடத்திற்கு நைமிசமென்று பெயருண்டாயிற்று. அவ்விடத்தில் மஹர்ஷிகள் வஸித்தார்கள். வாயு புராணம். அந்த க்ஷேத்ரத்தை நைமிஷமென்று சொல்வதுண்டு. ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் கௌரமுகரென்ற மஹர்ஷியை நோக்கி ஒரு நிமிஷத்திற்குள் அஸுர ஸைன்யங்கள் இவ்விடத்தில் கொல்லப்பட்டபடியால் இவ்விடத்திற்கு நைமிஷமென்று பெயருண்டாகட்டும். இது ப்ராஹ்மணர்கள் முக்யமாய் வஸிக்கும் இடம் என்று சொன்னார் வராஹபுராணம்.

மஹர்ஷிகளுக்கு உபயோகமாகிய மரங்கள் நிமிஷங்களென்று சொல்லப்படுகின்றன. அவைகள் ஏராளமாக இருக்குமிடமே நைமிஷமெனப் படுகிறது. அல்லது நிமிஷரென்னும் மஹர்ஷி தபஸ் செய்த இடமாகையால் நைமிஷமென்று அதற்குப் பெயருண்டாயிற்று. விஜயத்.

ஸூதருடைய வரலாறு

"இந்த விராட்ரூபியான மஹாபுருஷனுடைய முகத்திலிருந்து ப்ராஹ்மண ஜாதியும், கைகளிலிருந்து க்ஷத்திரிய ஜாதியும், துடைகளிலிருந்து வைச்ய ஜாதியும், பாதங்களிலிருந்து சூத்ரர்களும் உண்டானார்கள். என்று ஸ்ருதியில் சொல்லப்பட்டிருப்பது போல அவருடைய ரோமாஞ்சத்திலிருந்து (மயிர்க்கூச்சிலிருந்து) ஸூத ஜாதியி உண்டாயிற்று. அவரே ரோமஹர்ஷணர். மஹாபாரத தாத்பர்ய நிர்ணயம் – அத்யாயம் 90, பகவானுடைய கதையைக் கேட்டுக் கொண்டு இருக்கும்போது பக்தி விசேஷத்தால் மயிர்க்கூச்சிலுண்டானபடியால் அவருக்கு ரோமஹர்ஷணர் என்று பெயருண்டாயிற்று. இவர் ஸூத ஜாதியிற் பிறந்தவர் –அபியுக்தர்கள். அவருக்கு ஸ்ரீ வேத வ்யாஸ மஹர்ஷியானவர் ஸகல புராணங்களையும், இதிஹாஸங்களையும் உபதேசித்தார்.

பிறகு ரோமஹர்ஷணர் நைமிசாரண்யத்தில் வஸிக்கும் மஹர்ஷிகளுக்குப் புராணங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்படியிருக்கையில் ஒருநாள் பலராமன் அவ்விடம் வந்தார். அவரைக் கண்டவுடன் ஸகல மஹர்ஷிகளும் எழுந்திருந்து விதிப்படி மரியாதை செய்தார்கள். அப்பொழுது ரோமஹர்ஷணர் மாத்திரம் ஆஸனத்திலிருந்து எழுந்திருக்கவில்லை. அதைக் கண்ட பலராமன் மிகவும் கோபங்கொண்டார். பிறகு அவர் 'தாழ்ந்த குலத்தில் பிறந்தவராகிய இந்த ரோமஹர்ஷணர் நம்மைக்கண்டு எழுந்திருக்காமலும், இந்த மஹர்ஷிகளின் முன்பாக உயரமான ஆஸனத்திலுட்கார்ந்து

மிருக்கிறார், இவரை நிக்ரஹிக்கவேண்டும்' என்று எண்ணிக் கையிலிருந்த தர்ப்பத்தால் அவரையடித்தார். அதனால் ரோமஹர்ஷணரும் உடனே இறந்தார். அப்பொழுது மஹர்ஷிகளனைவரும் பலராமனை நோக்கி பிரபுவே! நீர் செய்தது தர்மத்திற்கொத்ததல்ல. இவருக்கு நாங்கள் ப்ரஹ்மாஸனத்தைக் கொடுத்து அவருடைய தேஹத்தில் ச்ரமம் உண்டாகாமலிருக்கும்படியும், அவர் வெகுகாலம் ஜீவித்திருக்கும்படியும் அனுக்ரஹித்திருந்தோம். நீர் லோகத்தை அனுக்ரஹிப்பதற்காக அவதரித்தவராகையால், எங்களுடைய வார்த்தை பொய்யாகமலிருக்கும்படிச் செய்ய வேண்டும். இந்த தோஷத்தை நிவர்த்தித்துக் கொள்வதற்காக நீர் ப்ராயச்சித்தத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்றார்கள். அதைக் கேட்ட பலராமன் அவர்களை நோக்கி பிதாவிற்கும் புத்திரனுக்கும் பேதமில்லையென்று ஸ்ருதியில் சொல்லப்பட்டிருப்பதனால், ரோமஹர்ஷணருடைய குமாரராகிய உக்ரச்ரவஸ் என்பவர் அந்த ஆஸனத்தில் உட்கார்ந்து உங்களுக்குப் புராண கதைகளைச் சொல்லட்டும். அவருக்கு எவ்வளவு நாள் கதை சொன்னாலும் தேஹத்தில் ச்ரமமில்லாமலிருக்கட்டும். மேலும் வெகுநாள் ஜீவித்திருப்பார் என்று சொல்லி தீர்த்த யாத்திரைக்குச் சென்றார். (பாகவதம் ஸ்கந்தம் 10, அத்தியாயம் 78)

மேல் காட்டியபடி ரோமஹர்ஷணருக்குப் பிறகு அந்த உக்ரச்ரவஸ், அந்த ஆஸனத்திலிருந்து மஹர்ஷிகளுக்குப் புராணங்களைச் சொல்லிக்

கொண்டிருந்தார். அந்த ரோமஹர்ஷணர் ஸூத ஜாதியில் பிறந்தவராகையால் அவருக்கு ஸூத ரென்று பெயருண்டு. அவருடைய பிள்ளைக்கும் ஸூதரென்று பெயர் வழங்கி வருகிறது. பல ராமன் பாரதயுத்தம் நடக்கும்போது நைமிசாரண்யஞ் சென்றார். ஆகையால் அதுவரையில் அவ்விடத்தில் கதை சொல்லிக் கொண்டிருந்தவர் ரோமஹர்ஷணரேயாம். பிறகு அவருடைய புத்ரராகிய உக்ரச்ரவஸே புராணஞ்சொன்னார். ஆகையால் ஸ்ரீமத் பாகவதத்தைச் சொன்னவர் உக்ரச்ரவஸ் என்ற ஸூதரேயாம். இவர் ஸகல புராணங்களையும் இதிஹாஸங்களையும் அறிந்தவர். த்ரையாருணி, கச்யபர், ஸாவர்ணி, அகிருதவ்ருணர், சிம்சுபாயனர், ஹாரீதர் ஆகிய ஆறு பேர்களும் வ்யாசமஹர்ஷியின் சிஷ்யராகிய என் தகப்பனார் இடமிருந்து ஒவ்வொரு ஸம்ஹிதையை அத்யயனஞ் செய்தார்கள். நான் இவர்கள் எல்லோருக்கும் சிஷ்யனாக இருந்து எல்லா புராண ஸம்ஹிதைகளையும் தெரிந்து கொண்டேன் என்று ஸூதர் சொன்னார். (பாகவதம் ஸ்கந்தம் 12 அத்யாயம் 6, ச்லோகம் 5 , 6)

சுகருடைய சரிதம்

முன்னொரு காலத்தில் மஹாமேரு பர்வதத்தில் ஸ்ரீவேத வ்யாஸ மஹர்ஷி உத்தமனாகிய புத்ரனையடைய வேண்டித் தபஸ் செய்தார். அதனால் பரமசிவன் ஸந்தோஷப்பட்டு அவரை நோக்கி 'ஓ மஹர்ஷியே உம்முடைய இஷ்டப்படி மிகுந்த தேஜஸுள்ளவனும், கீர்த்தியுள்ள

வனுமாகிய புத்ரன் உண்டாவான்' என்று அனுக்ரஹித்தார். பிறகு ஒருக்கால் ஒப்பற்ற ரூபமுள்ள கிருதாசி என்ற அப்ஸரஸ்த்ரீ அவ்விடம் வந்தாள். அவளைக் கண்டவுடன் இவருக்கு மன்மத தாபமுண்டாகியது. அப்பொழுது மஹர்ஷியானவர் கிளி வேஷத்தையெடுத்துக் கொண்டார். பிறகு மிகவும் தைர்யத்தால் மன்மத தாபத்தை மஹர்ஷியடக்க முயன்றும் அது குறையாமல் விருத்தியாயிற்று. மேலும் அவருடைய வீர்யம் நழுவினது. அதிலிருந்து உண்டான புத்ரர்தான் சுகரென்ற பெயரையடைந்தார். இவர் பிறந்தவுடனே கங்கா நதியானவள் திவ்ய சரீரத்துடன் அவ்விடம் வந்து அவருக்கு ஸ்னானஞ் செய்துவைத்தாள். ஆகாயத்திலிருந்து தண்டம், கிருஷ்ணாஜினம் ஆகிய இவைகள் விழுந்தன. விச்வாஸு முதலிய கந்தர்வர்கள் கானஞ்செய்தார்கள், தேவதுந்துபிகள் முழங்கின. இந்திரன் முதலிய லோக பாலர்களும் அவ்விடம் வந்ததுமின்றி புஷ்பங்களை வர்ஷித்தார்கள். பரமசிவன் பார்வதியுடன் அக்குழந்தைக்கு விதிப்படி உபனயனம் செய்தார். மஹேந்திரன் அற்புதமான கமண்டலுவை கொடுத்தார் இவருடைய பிதாவாகிய வ்யாஸ மஹர்ஷி பிறந்தவுடன் ஸகல வேதங்களும் தோன்றியது போலச் சுகருக்கும் வேதங்களும், ஸகல புராணங்களும், இதிஹாஸங்களும் தோன்றின. மேலும் அவர் ப்ரஹஸ்பதி பகவானை ஆசார்யராகவரித்தார். ஆனதால் அந்தச் சுகர் எல்லாவித்தைகளையும் அப்யஸித்தவர். அவர் பால்யவயதுள்ளவரானாலும் தேவர்களாலும் மஹர்ஷிகளாலும் மற்றவர்களாலும்

கொண்டாடக் கூடியவராக இருந்தார். மேலும் அவருடைய மனஸானது மோக்ஷ தர்மத்திலேயே விருப்பமுள்ளதாக விருந்ததேயொழிய விஷயத்தில் செல்லவில்லை. பிறகு அவர் தம்முடைய பிதாவாகிய வ்யாஸ மஹர்ஷியை நோக்கி மோக்ஷ தர்மங்களைச் சொல்லவேண்டும் என்று கேட்டார். அதைக்கேட்ட வ்யாஸ மஹர்ஷியானவர் தன் புத்ரரை நோக்கி மோக்ஷ தர்மம் தெரிந்து கொள்ள வேண்டுமானால் மிதிலா நகரத் தரசராகிய ஜனகரிடம் போய் தெரிந்து கொள்ளும் என்றார். அதைக் கேட்ட சுகர் அப்படியே மிதிலா நகரம் சென்று ஜனகருடைய அரண்மனைக்கு போகும் போது அவ்விடமிருந்த காவலாட்களால் தடுக்கப்பட்டார். ஆனாலும் கோபங்கொள்ளவில்லை. வெகுதூரம் நடந்து வந்த தால் சரீரத்திற்கு நேர்ந்த ச்ரமத்தையும், பசி தாஹம் இவைகளால் நேர்ந்த துக்கத்தையும் ஸஹித்தார். பிறகு அவ்விடமிருந்த ஒரு காவலாள் அவரை வணங்கி உள்ளே அழைத்து நிழலில் உட்காரச் செய்தான். அதனாலும் அவர் ஸந்தோஷிக்கவில்லை. பிறகு மந்திரியானவர் மிக வணக்கத்துடன் வந்து சுகரை வணங்கி அந்தப் புரத்திற் கழைத்துபோய் திவ்யமான ஆஸனத்தில் உட்காரவைத்தார். பிறகு மிகவும் ரூபவதிகளான சிறு பெண்கள் அனேகர்கள் அவ்விடம் வந்து உத்தமமாகிய அன்னத்தால், வாத்ய கோஷங்களாலும் நர்த்தனங்களாலும் பிரியமான வார்தைகளாலும் உபசரித்தார்கள். மேலும், அவரைத் தோட்டத்திற்கழைத்துப்போய் அழகான மரங்களையும், பக்ஷிகளையும், தாமரஸ ஓடை

களையும் காண்பித்தார்கள். இப்படி அவர்களால் உபசரிக்கப்பட்டும் அவைகளில் பிரியப்படாமலேயே மோக்ஷ மார்க்கத்தையே த்யானித்துக் கொண்டு அன்றைய ராத்திரியைக் கழித்தார். மறுநாள் காலையில் ஜனகமஹாராஜன் இவரை சபைக்கு வரவழைத்து உபசரித்து மோக்ஷ தர்மத்தை உபதேசித்தார். (மஹாபாரதம், சாந்திபர்வம், அத்யாயம் 323 - 325)

ஸ்ரீ கிருஷ்ணாவதார காலம்

ஸ்ருஷ்டி முதல் 28வது மஹாயுகத்திற்குட் பட்ட த்வாபர யுகத்தின் முடிவில், தேவகியின் இடம் பகவான் அவதரித்தார். 28 வது மஹா யுகத்தில் த்வாபரயுகத்தின் கடைசியில் யது வம்சத்தில் பகவான் அவதரிக்கப் போகிறாரென்று கர்க்காசார்யர் முன்னமே சொல்லியிருக்கிறார் விஷ்ணு புராணம் 5வது பாகம், அத்யாயம் 23.

மேற்காட்டிய த்வாபர யுகமானது நிகழும் கலியுகத்திற்கு முந்தியேயாம். பகவான் பூலோகத்தில் கிருஷ்ணனாக அவதரித்து 125-வருஷங்கள் பூமியில் வஸித்து, பிறகு வைகுண்டம் சென்றார். ஓ ப்ரபுவே! யதுவம்சத்தில் அவதரித்து 125 வருஷங்களாயின. ஸ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம் 11 அத்யாயம் 6.

"வஸுக்கள், அச்வினீ தேவர்கள், மருத்துக்கள், ஆதித்யர்கள், ருத்ரர்கள், ஸாத்யர்கள் ஆகிய இவர்களுடன் மஹேந்திரனனான். என் முகமாகப்

பின்வருமாறு விக்ஞாபனம் செய்கிறான். கெட்ட நடத்தையுள்ள அஸுரர்களைக் கொன்று பூமியின் பாரத்தை நிவர்த்தி செய்தீர். ஸ்வர்க்கத்தில் இருக்கும் எல்லாத் தேவர்களும் உங்களால் யஜமானனுள்ளவர்களாக ஆகட்டும். நீங்கள் பூமியில் அவதரித்து 125 வருஷங்கள் ஆயின. உங்களுக்கு இஷ்டமிருந்தால் வைகுண்டம் வரலாம் விஷ்ணு புராணம் பாகம் 5, அத்யாயம் 37.

இப்படித் தேவர்கள் ப்ரார்த்தித்தவுடன் ஸ்ரீ பகவான் உத்தவரை நோக்கி, இன்றைய முதல் 7வது நாளில் ஸமுத்ரம் இந்தப் பட்டணத்தைக் கவர்ந்து கொள்ளும். அவ்வுலகத்தை நான் விட்டவுடன் இவ்வுலகம், மங்களகார்யமற்றதும், கலியினால் அவமதிக்கப்பட்டதுமாய் விடும் ஸ்ரீ மத் பாகவதம் ஸ்கந்தம் 11, அத்யாயம் 7.

"என்றைய தினத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஸ்வர்க்கம் சென்றாரோ அன்றைய தினமே கலியுகம் வந்தது. விஷ்ணு புராணம் பாகம் 4, அத்யாயம் 24.

இதனால் தேவர்கள் ப்ரார்த்தித்தவுடன் தாமதம் இன்றிப்பகவான் வைகுண்டஞ் சென்றாரென்று தெரிய வருகிறது.

ஆகையால் 28 வது மஹாயுகத்தில் த்வா பாயுகத்தின் கடைசி பாகத்தில் பகவான் அவதரித்து 125 வருஷங்கள் பூலோகத்தில் வஸித்தார். பின்பு வைகுண்டம் செல்லும்போது கலி வந்து விட்டது (த்வாபரயுகம் முடிந்தது.)

Released by Maran's Dog, Toronto , Canada

"என்றைய தினம் ரோஹிணி நக்ஷத்திரமோ அன்றைய தினம் ராத்திரி இருட்டில் தேவகியினிடம் பகவான் அவதரித்தார். பாகவதம் ஸ்கந்தம் 10, அத்யாயம் 3.

"நான் வருஷா காலத்தில் ச்ராவண மாஸத்தில் க்ருஷ்ண பக்ஷத்திய அஷ்டமி திதியில் தேவகியினிடம் அவதரிக்கப் போகிறேன் விஷ்ணு புராணம், பாகம் 5, அத்யாயம் 1.

"ச்ராவண மாஸத்தில் க்ருஷ்ணபக்ஷத்திய அஷ்டமி திதியில் ரோகிணி நக்ஷத்திரத்தில், அர்த்தராத்திரி காலத்தில், சந்த்ரோதயமாகும் ஸமயத்தில், அபிஜித் முஹூர்த்தத்தில், தேவகியிடம் மஹாவிஷ்ணு வானவர் அவதரித்தார். அதே காலத்தில் அவருடைய மாயையும் யசோதையினிடம் கோகுலத்தில் புத்ரியாகப் பிறந்தாள். ஹரிவம்சம் பாகம் 1, அத்யாயம், 25.

மேற்காட்டிய ப்ரமாணங்களால் 28 வது மஹாயுகத்தில் த்வாபர யுகத்தில் 8, 63, 875வது வருஷத்தில் ச்ராவண மாஸத்தில் கிருஷ்ண பக்ஷம் அஷ்டமீ திதியில், ரோகிணி நக்ஷத்திரத்தில், அர்த்தராத்ரியில், பகவான் அவதரித்தாரென்று நிச்சயிக்கப்படுகிறது. ஆகையால் பகவான் அவதரித்த காலம் முதல் நிகழும் 24 வது பரிவிருத்தியில் ஸௌம்யவருஷம் வரையில் **5230** வருஷங்கள் ஆயினவென்று பெரியோர்களால் சொல்லப் படுகிறது.

♣ ♣ ♣ ♣

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்ரீ கிருஷ்ணாய பரமாத்மனே நம:

அத்யாயம்-1

சௌனக ப்ரச்னம்.

Released by Maran's Dog, Toronto , Canada

"எதனிடமிருந்து ஸகல ப்ரபஞ்சங்களும் உண்டாகின்றனவோ, எதனால் காப்பாற்றப்படுகின்றனவோ, எதனிடத்தில் லயிக்கின்றனவோ, அது ப்ரஹ்மம்" என்ற ச்ருதியில் சொல்லியபடியுள்ள தடஸ்த லக்ஷணமுள்ளவரும், அன்வய வ்யதிரேகங்களால் ஸகல ஜகத்காரணரும், எல்லாவற்றையும் அறிந்தவரும், ஸ்வயமாய் ப்ரகாசிப்பவருமான எந்தப்பரமேச்வரர், நான்கு முகங்களுள்ள ப்ரஹ்மதேவருக்கு வேதங்களை மனத்தால் உபதேசித்தாரோ, (அந்த வேதங்களைத் தெரிந்து கொள்வதில், வித்வான்களும் மோஹிக்கிறார்கள்.) தேஜஸ், ஜலம், பூமி ஆகிய இவைகள் ஒன்றில் ஒன்று மாறுதலாகத் தோன்றுகிறது போல எந்தப் பரமாத்மாவிடம் (அவர் ஸத்யராகையால் முக்குணங்களுடைய கார்யமும், ஸத்யமாகத் தோற்றுகிறதோ, அந்த ஸத்ய ஸ்வரூபியாகிய பரமாத்மாவைத் த்யானிக்கிறோம். அவர் தம்முடைய தேஜஸினால் மாயாகார்யமாகிய ப்ரபஞ்சத்தைத் தாண்டினவர்.

2. வேதவ்யாஸ மஹாமுனியால் செய்யப்பட்டதும், அழகு பொருந்தியதுமான, ஸ்ரீமத் பாகவத க்ரந்தத்தில் மோக்ஷத்தைக் கூட விரும்பாமல் செய்யும், ஈச்வரருடைய ஆராதனரூபமாகிய உத்தம தர்மமானது காட்டப் பட்டிருக்கிறது. பிறருடைய மேன்மையை ஸஹிக்காம

Released by Maran's Dog, Toronto , Canada

விருப்பதாகிய மாத்ஸர்யமில்லாத ஸாதுக்களால், அறியக்கூடியதும் (ஜீவன், மாயை, ஜகத் என்னுமிவை கள் பரமாத்மாவைவிட வேறானவையல்ல) மேலான ஸுகத்தைக் கொடுக்கக்கூடியதும், மூன்று வகையான தாபங்களைப் போக்கக்கூடியதும், உண்மையுமான வஸ்துவானது இதில் நன்றாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. மற்ற சாஸ்த்ரங்களாலும் இதர ஸாதனங்களாலும் ஈச்வரனை ஹிருதயத்தில் நிலைக்கச் செய்யமுடியுமா? ஆகையால் அவைகளால் என்ன பிரயோஜனம். இந்த ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்க விரும்பிய புண்யவான் களுடைய மனத்தில் கேட்ட க்ஷணத்திலேயே பகவான் ஸ்திரமாக வஸிக்கிறார்.

3. வேதமாகிய கல்பக விருக்ஷம் அதனுடைய பழம் ஸ்ரீமத் பாகவதமேயாம். இது வைகுண்டத்திலி ருந்து நாரதரால் எனக்கும், என்னால் சுகருக்கும், அவர் முகமாகப் பூமியிலும் நழுவியது. (பரவிற்று) இது அமிருத த்ரவமுள்ளது (ருசியுள்ளது) ரஸரூபமா யுள்ளது. ஓ! ரஸத்தையறிந்தவர்களே! அதன் விசேஷ பாவனையில் ஸமார்த்தியமுள்ளவர்களே! மேற்காட்டிய பழத்தை முக்தர்களாக இருக்கும் பொழுதும், அடிக்கடி புஜியுங்கள்.

4–231/2. ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் க்ஷேத்ரமாகிய நைமிசமென்னும் வனத்தில், சௌனகர் முதலிய மஹர்ஷிகள், ஸ்வர்க்கலோகத்தை யடைவதற்காக, ஆயிரம் வருஷங்கள் ஸத்ரமென்னும் யாகத்தை யனுஷ்டித்து வந்தார்கள். அப்பொழுது ஒருநாள் அவர்கள் காலையில் அக்னிகார்யங்களை முடித்துக் கொண்டு, எல்லோராலும் பூஜிக்கப்பட்டு, ஸுகமாய்

உட்கார்ந்திருக்கும் ஸூதரை நோக்கி மிக்க ப்ரீதியுடன் "ஓ பாபமற்றவரே! புராணங்கள், இதிஹாஸங்கள், தர்மசாஸ்த்ரங்கள் இவைகளை நீர் படித்திருப்பதுடன் அவ்வவற்றின் அர்த்தத்தைப் பிறருக்கும் தெரியும்படி சொல்லியுமிருக்கிறீர். ஓ ஸாதுவே! வேதங்களை யறிந்தவர்களுக்குட் சிறந்தவராகிய வ்யாஸபகவானுக்கு தெரிந்தவைகளும், பரம்(ஸகுணப்ரஹ்மம்) அபரம் (நிர்குணப்ரஹமம்) இவைகளை நன்றாய் அறிந்த மற்ற மஹர்ஷிகளுக்குத் தெரிந்தவைகளும், அவர்களுடைய அனுக்ரஹத்தால் தங்களால் உண்மையாக அறியப்பட்டவைகளே! ஆசார்யர்கள், ரஹஸ்யமான விஷயத்தையும், ப்ரியனாகிய சிஷ்யனுக்குச் சொல்வது வழக்கம். ஆகையால் [எப்பொழுதும் க்ஷேமத்தையே கொடுப்பது இன்னதென்று ஸகல க்ரந்தங்களைப் படித்து தாங்கள் நிச்சயமாகத் தெரிந்து கொண்டதை எங்களுக்கு உபதேசிக்கவேண்டும்.] ஓ ஸூதைக்குரியவரே! இந்தக் கலியுகத்தில் ஜனங்கள் பெரும்பாலும் அதிக காலம் ஜீவித்திருப்பதில்லை; சோம்பலுள்ளவர்கள்; அதிலும் மிகவும் மந்தபுத்தியுள்ளவர்கள்; தவிரவும் பாக்யக் குறைவுள்ளவர்கள்; (விக்னங்களால் வருத்தப் பட்டவர்கள்)வியாதி முதலியவைகளால் துன்பமடைந்த வர்கள்; ஆகையால் வெகுகாலம் அநேக சாஸ்த்ரங்களைக் குருமுகமாய்க் கேட்கவும், அவைகளில் சாரத்தை தாமாகத் தெரிந்துகொள்ளவும் சக்தியற்றவர்கள்; பலவகை கர்மங்களைச் சொல்லும் அநேக சாஸ்த்ரங்களோ, தனித்தனியே தெரிந்துகொள்ள வேண்டியவைகளாக இருக்கின்றன. ஆனதால் எதனால் பரமாத்மாவின் ப்ரஸாதம் ஸித்திக்குமோ அந்த ஸாரமான விஷயத்தை தங்களுடைய புத்திக்குத் தோன்றியபடி எடுத்து உபதேசிக்க வேண்டும்.

அதனால் ஸகல ப்ராணிகளும் க்ஷேமத்தையடைவார்கள். ஓ! ஸூதரே! தங்களுக்கு இவ்விஷயம் யாவும், தெரிந்த வையே. நமக்கு க்ஷேமமுண்டாகட்டும். அளவில்லாத, ஐச்வர்யம் முதலியவைகளுள்ள, ஸாத்வதர்களுக்கு நாதனாகிய புருஷோத்தமன், தேவகியினிடம் வஸுதேவருக்குப் புத்ரனாக எதனைச் செய்வதற்காக அவதரித்தாரோ அந்தச் சரிதத்தைக் கேட்க விரும்பும் எங்களுக்கு தாம் உபதேசிக்கவேண்டும். எந்த பகவான் பூமியில் அவதரித்ததால் ப்ராணிகளுக்கு க்ஷேமம், ஐச்வர்யம், இவைகள் கிடைத்தனவோ, கோரமாகிய ஸம்ஸாரத்தை (இறப்புப்பிறப்பை) அழிந்தவன் எவருடைய திவ்யநாமங்களை உச்சரித்த மாத்ரத்தில் அதிலிருந்து விடுபடுகிறானோ, எவருடைய நாமத்தை கண்டு பயமும் பயப்படுகிறதோ, மேலும் இந்திரியங்களை ஜயித்தவர்களான முனிகள் எவருடைய பாதங்களையே ஆச்ரயித்திருக்கிறார்களோ, எவருடைய பாதத்திலிருந்து உண்டான கங்கையின ஜலமானது, தர்சிப்பவர்களையும், தொடுகிறவர்களையும், ஆசமனம் செய்பவர்களையும், பரிசுத்தர்களாகச் செய்கிறதோ; புண்ய ச்லோகர்களால் கொண்டாடக்கூடிய அந்தப் பகவானுடைய சரிதம் ஸம்ஸாரதுக்கத்தைப் போக்குமாகையால் சுத்தனாக வேண்டுமென்ற எண்ணமுள்ள எவன்தான் அதைக் கேட்கமாட்டான். ஆகையால் நாரதர் முதலிய ஞானிகளால், எப்பொழுதும், கானஞ் செய்யப்பட்டதும், ஸம்ஸார துக்கத்தை நிவர்த்திப்பதுமான, மேலான அந்த சரிதத்தை கேட்க நாங்கள் மிக ச்ரத்தையுள்ளவர் களாக இருக்கிறோம். ப்ரஹ்மா,ருத்ரன், முதலிய மூர்த்தி பேதத்தைத் தரிப்பவரும், தம்முடைய மாய மஹிமையால் லீலைகளைச் செய்பவருமாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அவதார கதைகளைச் சொல்ல

வேண்டும். அவைகளைப் போதிக்க தாங்கள் வல்லமை யுள்ளவர்களே. உத்தமச்லோகராகிய பகவானுடைய சரிதத்தைக்கேட்கக் கேட்க எங்களுக்கு போதுமென்ற திருப்தியுண்டாகிறதில்லை, பகவானுடைய சரிதமானது, கேட்பவர்களான ரஸிகர்களுக்கு அடிக்கடி இன்பத்தை கொடுக்கும். ஸ்ரீமஹா விஷ்ணுவானவர் மாயையால் மனிதனாக அவதரித்து, பலராமனுடன் சேர்ந்து மனிதர்களால் செய்யமுடியாத கோவர்த்தன பர்வதத்தை தூக்கியது முதலிய லீலைகளைச் செய்தாரல்லவா? இப்பொழுது கலியுகம் வந்துவிட்ட படியால், நாங்கள் விஷ்ணுவின் பதத்தையடைய விரும்பி மேல் சொல்லிய பகவானுடைய சரிதத்தைக் கேட்பதற்காகவே தீர்க்க ஸத்ரஞ் செய்வதான காரணத்தைக் கொண்டு இந்த நைமிசாரண்யத்தில் வஸிக்கிறோம். ஸமுத்ரத்தைத் தாண்ட விரும்பியவர் களுக்கு ஓடக்காரன் கிடைத்தாற்போல அதர்மத்திற்கு பந்துவாகிய இந்தக்கலியைக்கடக்க விரும்பிய எங்களுக்கு, உம்முடைய தர்சனம் தெய்வச்செயலால் நேர்ந்தது. தர்மத்தைக் காப்பாற்றி வந்தவரும், யோகிகளுக்கு அதிபதியுமான ஸ்ரீகிருஷ்ணபகவான் மனித சரீரத்தைவிட்டு தன்னுடைய ஸ்வரூபத்தை யடைந்தபின்பு தர்மம் யாரைச் சரணமடைந்தது சொல்லவேண்டும் என்று கேட்டார்கள்.

நோட்டு.

ஸ்ரீ வேதவ்யாஸபகவான் பாகவத சாஸ்த்ரத்தைச் செய்யவிரும்பி இடையூறின்றி முடியவேண்டியதற்காக பெரியோர்களுடைய ஸம்ப்ரதாயப்படி பரமாத்மாவை ஸ்மரிப்பதாகிய மங்களத்தைக் காட்டுகிறார். – ஸ்ரீ தரியம்.

1–1. எவரிடமிருந்து–ஸ்ரீ பாதராயணர் என்னும் வ்யாஸ பகவான், ஸகல ஜனங்களையும், ஸம்ஸார பந்தத்திலிருந்து நிவர்த்தித்து, அனுக்ரஹிப்பதற்காக வேதாந்தத்தாலே அறியக்கூடியதும், மற்றப்ரமாணங் களுக்குப புலப்படாததுமான பரப்ரஹ்மத்தை எல்லா வர்ணத்தார்களும் அறியச்செய்ய நினைத்து, ஸ்ரீமத் பாகவதமென்னும் க்ரந்தத்தை நாரதருடைய உபதேசத் தால் செய்யவிரும்பினார். அது, விக்னமில்லாமல் முடியவேண்டியதற்காக பரமாத்மாவை த்யானஞ் செய்தார். "எதனிடமிருந்து இந்த ப்ரபஞ்சம் உண்டாகின்றதோ"–"இந்த ஆகாசரூபமாகிய ஆனந்த மில்லாமற்போனால் எவன் ஜீவிப்பான்" என்ற அன்வயவ்யதிரேகச்ருதிகளால் ப்ரஹ்மம், ஜகத்காரண மென்றும், அர்த்தேஷு அபிக்ஞ: என்று அன்வயஞ் செய்து, ஸகல பதார்த்தத்தையறிந்தவர் என்று அர்த்தஞ்செய்வதால், ப்ரஹ்மத்தினிடத்தில் எல்லா வற்றையும் அறிந்திருப்பது முதலிய ஸகலகல்யாண குணங்களிருப்பதாயும், காட்டப்பட்டது. பரமாத்மா வானவர், ப்ரஹ்மதேவருக்கு தேஜஸ், ஜலம், பூமி இவைகளை ஒன்றோடொன்று கலந்து ஸிருஷ்டிக்கும் வகையை உபதேசித்தது போல ப்ரீதியுடன் வேதத்தையும் உபதேசித்தார். "வேதங்கள் முடிவில்லாத துகள்" என்றபடி வேதங்களை பூராவாகத் தெரிந்து கொள்ள முடியாததாகையால், தடையற்ற ஞானமுள்ள யோகிகளும் மோஹிக்கிறார்கள். "அந்த விஷ்ணுவின் மேலான பதத்தை எப்பொழுதும் ஸூரிகள் பார்க்கிறார்கள்." என்றபடி நித்திய ஸூரிகள், நாராயணனுடைய திவ்ய மங்களதேஹத்தின் ஒப்பற்ற காந்தியை தர்சித்து மோஹிக்கிறார்கள். மேல்காட்டிய மூன்று பூதங்களுடைய த்ரிவிருத்கரண ஸ்ருஷ்டியானது,

எவரிடத்தில் பொய்யாக இருக்கிறதோ (அது பகவானிடத்தில் ஸம்பந்திக்கிற தில்லையென்று கருத்து) மேலும் எவர் தன்னுடைய தேஜஸினால் ஸகல தோஷங்களையும் நாசம் செய்கிறாரோ முக்காலத்திலும் இருப்பவராகையால் எவர் நித்யரோ, ருத்ரன் முதலியவர்களைவிட சிறந்தவராகையால பரனோ, அந்த பர ப்ரஹ்மத்தை த்யானிக்கிறோம்– பாகவத சந்த்ரிகா.

ஒருகால் அஸுரர்கள் பூமியில் அரசர்களாகப் பிறந்து அந்த பாரத்தால் பூமி மிக வருத்தமடைந்தாள். அப்போது ப்ரஹ்மா, ருத்ரன் முதலிய தேவர்கள், பூமிக்கு நேர்ந்த ச்ரமத்தை நிவர்த்திக்குபடி ஸ்ரீ மஹா விஷ்ணுவை வேண்டிக்கொண்டார்கள். பகவான், அவர்களுடைய ப்ரார்த்தனைக்கிசைந்து, வெகுகாலமாய் தபஸ் செய்துகொண்டிருக்கும் ஸத்யவதியினிடம் பராசரருக்கு புத்ரனாக அவதரித்தார். இவர்தான் வ்யாஸரென்று சொல்லப்படுகிறார். இவர் மந்தபுத்தி யுள்ள ஜனங்களிடத்தில் மிகுந்த கருணையுள்ளவராய் வேதங்களை பிரித்து அதன் அர்த்தத்தை நன்றாய் காட்டுவதற்காக ப்ரஹ்ம ஸூத்ரங்களைச்செய்தார். பின்பு அதைப் படிக்கத்தகாத ஸ்த்ரீகள் சூத்ரர்களுக்காக புராணங்களையும் வெளியிட்டார். பின்னும் அவர் வேதத்தின் அர்த்தத்தை நன்றாய் காட்டுகிறதும் 12 ஸ்கந்தமுள்ளதும், 18,000 க்ரந்தங்களடங்கியதுமான பாகவத புராணத்தைச் செய்ய ஆரம்பித்து, தான் எப்பொழுதும் ப்ரஹ்ம ஸாக்ஷாத் காரமுள்ளவரான்லும் இயற்கையில் விக்ன ஸம்பந்தமில்லாதவரானாலும், க்ரந்தாரம்பத்தில் செய்யவேண்டிய ஸம்ப்ரதாயத்தை வித்வான்களுக்குத் தெரிவிப்பதற்காக, நாராயண

ஸ்மரணமாகிய மங்களத்தைச் செய்தார். அதாவது பரனைத் த்யானஞ்செய்கிறோம். க்ரந்தத்தின் ஆரம்பத்தில் நமஸ்கரிக்கக்கூடிய தேவதைகள் இருவகையானவைகள். 1. ஆதிகாரிகதேவதை—ஸூரியன் முதலிய க்ரஹங்கள். 2. அபிஷ்டதேவதை.— பகவான். இருவகையான தேவதைகளின் ஸ்வரூபியும் ஸகல கல்யாண குணங்கள் நிறைந்தவருமான பரமாத்மாவே இந்த பாகவத ஸாஸ்த்ரத்தால் வர்ணிக்கப்படுகிறார். நாராயணனைவிட பரன் வேறொருவருமில்லை "அந்த புண்டரீகாக்ஷனே தேவன், அந்த நாராயணனே பரன்" - ஹரிவம்சம்.

"ப்ரஹ்மத்தை யறிந்தவன் பரனை யடைகிறான்"
—ச்ருதி.

இவர் ஜகத்திற்கு காரணமாயிருப்பவர், "எவரிடமிருந்து இந்த பூதங்கள் உண்டாகின்றவோ, எவரால் உண்டானவைகள் ஜீவிக்கின்றனவோ, எவரிடம் லயிக்கின்றனவோ ? அதுவே ப்ரஹ்மம்" —ச்ருதி.

நான் எல்லாவற்றிற்கும் உற்பத்தி ஸ்தானம், என்னிடமிருந்தே எல்லாம் உண்டாகின்றன. எல்லா பிராணிகளையும் ஸ்ருஷ்டிக்கிறவனும், காப்பாற்றுகிறவனும், நாசஞ்செய்கிறவனும், நானொருவனே" —ஸ்மிருதி.

மேல்காட்டிய அன்வயத்தால் விஷ்ணுவே ஜகத் காரணரென்று ஏற்படுகிறது.

ஆக்ஷேபம்: ருத்ரன் முதலியவர்களும், ஜகத்திற்குக்

காரணமென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே அப்படிக்கிருக்க மேற்காட்டியது எப்படி பொருந்தும்.

ஸமாதானம்: வேதத்தில் சிலபாகத்தில் அப்படி சொல்லப்பட்டிருந்தாலும், பெரும்பாலும் விஷ்ணுவே ஜகத்காரணம் என்றே சொல்லப்பட்டிருக்கிறது 'எல்லா வேதங்களும் எந்தபதத்தைச் சொல்லுகின்றனவோ' —ச்ருதி.

"ஸகல வேதங்களாலும் அறியக்கூடியவன் நானே"
—ஸ்மிருதி.

ஆக்ஷேபம்:— பரமாணுவே ஜகத்காரணம், என்று ஏன் சொல்லக்கூடாது ?

ஸமாதானம்:— அப்படியல்ல, ப்ரத்யக்ஷத்திற்கும் ஆகமத்திற்கும் விரோதமில்லாத யுக்தியால், ப்ரஹ்மமே ஜகத்காரணமென்று சொல்லக்கூடும். புத்ரனுக்கு பிதாவே காரணமென்று தெரியவருகிறதல்லவா ? அது போல் ப்ரஹ்மதேவர் முதலியவர்களுக்கு சேதனனே காரணமாயிருக்க வேண்டும், மாயை முதலியவைகள் அசேதனமாகையால் அவைகளைக் காரணமென்று சொல்லக்கூடாது. இந்தவிஷயம் ச்ருதியில் பலவிடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பரமாணுவே ஜகத்திற்கு காரணமென்று சொல்பவர்கள் ச்ருதி விருத்தமான யுக்தியைக் காட்டுவதனால் அது ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல. அந்த பரமாத்மா எல்லாவற்றையும் பொதுவாகவும் விசேஷமாகவும் அறிந்தவர். அதனால் ப்ரஹ்மதேவருக்கு வேதங்களை யுபதேசித்தவர். அவருடைய அனுக்ரஹமில்லாதவரையில் ப்ரஹ்ம தேவர் முதலியவர்களும் மோஹிக்கிறார்கள். தேஜஸ்,

ஜலம், பூமி, இவைகளின் கார்யம் எப்படி ஸத், அஸத் இவைகளைவிட வேறாக ஆகிறதில்லையோ? பகவானால் செய்யப்படுகிறபடியால் ஈச்வர ஸிருஷ்டி, ஜீவஸ்ருஷ்டி, ஜடஸிருஷ்டி, ஆகிய இவைகள் மூன்றும் பொய்யானதல்ல. மாயைக்கடந்த ஆனந்தானுபவ ரூபராயுமிருக்கும் பரமபுருஷனைத் த்யானிக்கிறோம். தேஜஸ் ஒன்றானாலும்,தான் தன் கார்யமான பூமி முதலியவைகளில் பிரவேசித்து சிலகாலத்தில் வெளிப் படுவது போல, பகவான் ஜகத்தை ஸிருஷ்டித்து, அவைகளில் பிரவேசிக்கிறார். பின்பு பக்தர்களை அனுக்ரஹிப்பதற்காக கிருஷ்ணன் முதலிய அவதாரஞ் செய்கிறார். இதுவே ஈச்வர ஸிருஷ்டியெனப்படும், ஸூர்யன் முதலிய தேஜஸினால் ஜலத்தில் அனேக ப்ரதிபிம்பங்கள் ஸ்தூலசரீரம் முதலிய உபாதிகளால் ஈச்வரனுடைய ப்ரதிபிம்பங்களாகிய ஜீவர்கள் உண்டாகிறார்கள். இதுவே ஜீவஸர்க்கம் எனப்படும். மண்ணினால் குடம் முதலியவைகளை யுண்டு பண்ணுவதுபோல ஈச்வரன் அஹங்காரம் முதலியவை களை ஸிருஷ்டிக்கிறார். இதுவே ஜடஸர்க்கம்,– விஜயத் வஜீயம்:

1–4: லக்ஷணம்– இருவகை (1) தடஸ்தலக்ஷணம்– மேற்காட்டியது 2. ஸ்வரூப லக்ஷணம்–ஸத்யஸ்வரூபி. ஸகலத்தையுமறிந்தவர் ஸகல சக்தியுள்ளவரென்பது அன்வயம்– ஆகாசம் முதலிய கார்யங்களின் ஸத்தை யானது, ஆத்மாவின் ஸத்தையால் என்பது. வ்யதிரேகம்–எதிலில்லாததால் அது இல்லையோ அது (உதா) ஆகமஸத்தையில்லாததனால் ஆகாசபுஷ்பங் களில்லை– ஸ்ரீத.

பரமாத்மா, ஸத்ரூபியாய் ஏல்லாவற்றிலும் அனுவ்ருத்தித்திருப்பதால் எல்லாவற்றிற்கும் காரண மாகிறார் (உதா) மண்ணானது அதன் கார்யமாகிய குடம், மடக்கு, தோண்டி முதலியவைகளிலும், தங்கமானது அதன் கார்யமாகிய குண்டலம் முதலிய நகைகளிலும், படர்ந்திருக்கிறது– ஸ்ரீத.

5. அறிந்தவரும் – ப்ரதானம் (மாயை) ஜகத்காரண மானாலும் அதல்லவென்று காட்டப்பட்டது. "மாயை ஜடமாகையாலும், வேதத்தில் ஸிருஷ்டிக்க ஸங்கல் பித்தாரென்று சொல்லியிருப்பதாலும், அம்மாதிரியான ஸங்கல்பம் மாயையினிடம் ஏற்பட நியாயமில்லாததனா லும், மாயை ஜகத்காரணமல்ல– வ்யாஸஸூத்ரம்.

2–1 ப்ரகாசிப்பவர்.– இதனால் சேதனனாகிய ஜீவனைவிட மேலானவரென்று காட்டப்பட்டது.

2–2 உபதேசித்தாரோ.–"எல்லாவற்றிற்கும் முந்தி ஹிரண்யகர்ப்பர் உண்டானார். அவர் ஸகல பூதங்களுக்கும் ஒரே யஜமானனாக விருந்தார். அவர் பூமியையும் அந்தரிக்ஷத்தையும், காப்பாற்றிவந்தார் என்ற ச்ருதிப்படி ப்ரஹ்மதேவருக்கும் மேலானவரென்று காட்டப்பட்டது. எவர் முதலில் ப்ரஹ்மாவை யுண்டு பண்ணுகிறாரோ, எவர் அவருக்கு வேதங்களை உபதேசிக்கிறாரோ, அந்த ஸ்வப்ரகாசரான தேவனை மோக்ஷமடைய விரும்பிய நான் சரணமடைகிறேன்." –ச்ருதி.

மனதால்– ப்ரஹ்மதேவர் பிறரிடத்தில் வேதாத்ய யனஞ் செய்தாரென்று ஓரிடத்திலும் சொல்லப்

படாமலிருந்தாலும் பரமாத்மாவின் ஸங்கல்ப மாத்ரத்தால் ப்ரஹ்மதேவருக்கு வேதங்கள் தோன்றினவென்று தாத்பர்யம்.

வேதங்கள்.— ப்ரஹ்மா தானாக வேதங்களைத் தெரிந்துகொண்டவரல்லவென்பது கருத்து.— ஸ்ரீத.

ப்ரஹ்மதேவருக்கும் ஞானத்தையுபதேசித்தவரும், இயற்கையில் அளவற்ற நித்ய ஞானமுள்ளவரும், எல்லாவற்றையும் ப்ரகாசிக்கச் செய்பவரும் மற்ற தேஜஸை அபேக்ஷியாமலேயே ப்ரகாசிப்பவரும். ஸத்ய ஸ்வரூபியாயுமுள்ள பரமாத்மாவே ஜகத்காரணம், அவரே திவ்ய மங்களஸ்வருபி, அவரை த்யானிப்பதால் ஸகல க்ஷேமங்களும் கிடைக்கும்.

இந்த புராணத்தில் காயத்ரியின் அர்த்தமாகிய பரப்ரஹ்மவித்யை நன்றாய் காட்டப்பட்டிருக்கிறது.— அந்த காயத்ரீ, வேதமாதா, இது வேதத்தையே ப்ரமாணமாய் கொண்டது. "எதில் காயத்ரியை அனுஸரித்து தர்மங்கள் விஸ்தாரமாக வர்ணிக்கப்படுகின்றனவோ, எதில் வ்ருத்ராஸுரவதத்தின் கதை சொல்லப்பட்டிருக்கிறதோ அது பாகவதமென்று சொல்லப்படுகிறது. அதை எழுதி ஸுவர்ணத்தால் செய்யப்பட்ட ஸிம்ஹ ப்ரதிமையுடன் புரட்டாசி மாஸத்திய பௌர்ணமியில் எவன் தானஞ்செய்கிறானோ அவன் உத்தமகதியையடைகிறான். இது 18,000 க்ரந்தங்களுள்ளது"— மத்ஸ்யபுராணம், "ஓ அம்பரீஷ! உனக்கு ஸம்ஸார பந்தம் நிவர்த்தியாக வேண்டுமானால் சுகஸ்வாமியால் உபதேசிக்கப்பட்ட ஸ்ரீமத் பாகவதத்தை பிறர் சொல்லக் கேளும் தானாகவாவது படியும்," — பத்மபுராணம்,

ஸகலஜகத்தையும், படைத்து அவைகளைக் காப்பாற்றுகிறவர் என்றாலும் ஸ்வயம் ப்ரகாசர் என்றாலும் காயத்ரியின் அர்த்தமானது காட்டப்பட்டிருக்கிறது. 6. மாறுத— கோடைகாலத்தில் மாத்யாஹ்னவேளையில் வனம் முதலிய சூன்யமாகிய விடங்களில், வெயிலை ஜலமென்று நினைத்து தாஹமுள்ள ஜனங்கள் அதனால் தாஹத்தைப் போக்கிக்கொள்ளலாமென்று அதையனுஸரிக்கிறார்களல்லவா ? அவ்விடத்தில் தோற்றுகிற ஜலமானது வாஸ்தவமல்ல. ஆச்ரயமாகிய தேஜஸ் உண்மையானதால் (வ்யவஹாரகாலத்தில்) ஜலமிருப்பதுபோல தோன்றுகிறதுபோல ஸத்வம், ரஜஸ், தமஸ், ஆகிய முக்குணங்களால் உண்டாகியிருக்கும் ஸிருஷ்டிகள் யாவும், ஸத்யமன்று. ஆச்ரயமாகிய ஆத்மாவின் ஸத்தையால் ஸத்தாகத் தோற்றுகிறது. ஸ்ரீத, 11.— வ்யாச மஹா— வ்யாச மஹாமுனியால் செய்யப்பட்ட இந்தப் பாகவதமென்ற க்ரந்தத்தில் பக்தியாகிய தர்மம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆபிசார ப்ரயோகமாகிய ச்யேனயாகம் போல் இது பாபமுள்ளதல்ல. மோக்ஷஸாதனமாகையால், மிகவும் மேலானது. மாத்ஸர்யம் முதலிய துர்க்குணமில்லாத ஸாதுக்களால் அனுஷ்டிக்கக்கூடியது. இதனால் நித்ய வஸ்துவாகிய பரமாத்மாவே அறியக்கூடியவர். அவரே அக்னிமுதலிய ரூபமாகவிருந்து ஸ்வர்க்கம் முதலியவைகளைக் கொடுக்கிறார். முவ்வகையான தாபத்தைப் போக்குகிறார், புண்யசாலிகள் இந்த கிரந்தத்தைக் கேட்க வேண்டுமென்று விரும்பிய க்ஷணத்திலே அவர்களுடைய ஹிருதயத்திலே பகவான் ஸ்திரமாக வஸிக்கிறார். மற்ற க்ரந்தங்கள் இதுபோல பக்தியையுண்டுபண்ணி அதனால் ஈச்வரனை மனத்திலிருக்கச் செய்கிறதில்லை. ஆகையால் இதுவே உத்தமமானது.—சந்திரிகா. அழகு—

"தோஷமற்ற ஸகல புராணங்கள் பாகவதமில்லாத காலத்தில் ஸாதுக்களுடைய ஸபையில் ப்ரகாசிக்கும்" என்றபடி பந்தகமாகாத "ஓ அர்ஜுன! நீ செய்கிறதை யும், புஜிக்கிறதையும், ஹோமஞ்செய்கிறதையும் தானஞ் செய்கிறதையும், தபஸ்செய்வதையும் எனக்கு அர்ப்பணம் செய்துவிடு"– பகவத்கீதை. என்றபடி பலனையுத்தேசியாமல் செய்யும் கர்மங்களே மேலான வைகள். அவைகளே கபடமற்ற தர்மங்கள். "பகவானுடைய நாமங்களைச் சொல்லுவது முதலிய பக்தியே மனிதர்களுக்கு மேலான தர்மம். அதனாலேயே பகவான் ஸந்தோஷப்படுகிறார்" என்றபடி பக்தியே மேலானதர்மம்.– விஜயத்வஜீயம். மோக்ஷத்தை விரும்பியவர்களுக்கு மிகரமணீயமானது– ஸ்ரீத. 28– அமிருதத்ரவ– மோக்ஷத்திற்கு ஸாதனமாகிய பக்திரஸமுள்ளது. இதை சரீரம் போகும்வரையில் பானஞ்செய்யுங்கள். சந்த் செய்யப்பட்ட–கர்த்தா வினுடைய மேன்மையால் க்ரந்தத்திற்கு மேன்மை காட்டப்பட்டது. அறியக்கூடியதும்.– ஞானகாண்டத் தை உயர்ந்ததென்று காட்டப்பட்டது.– புண்ய 23– புண்யம் செய்யாதவர்களுக்கு ஸ்ரீமத் பாகவதத்தை கேட்கவேண்டுமென்ற ஆசையுண்டாகாது. 24– ஸ்திர மாக.– தேவதாகாண்டத்தைவிட மேலானதென்று கருத்து. மேற்காட்டியபடி கர்ம காண்டம் தேவதா காண்டம். ஞானகாண்டம் மூன்று பாகங்களடங்கிய வேதார்த்தம் முழுவதும் தெரிந்துகொள்ளக் கூடியதா யிருப்பதால் ஸகல சாஸ்த்ரத்தை விட இது மேலானது. ஆகையால் ஸாதுக்கள் முகமாய் கேட்டுத் கொள்ள வேண்டும்– ஸ்ரீத. பரவிற்று– சிஷ்ய பரம்பரையாய். நசுக்கிவிடாமல் ஜாக்ரதையாய் கொண்டுவரப்பட்ட தென்று காட்டப்பட்டிருக்கிறது. சுகருக்கு உபதேசஞ்

செய்தது முதலியவைகள் பாகவதஞ்செய்த காலத்திற்கு பிந்திய காலத்தில் நடந்ததானாலும் வருங்கார்யமும் நடந்தது போலவே சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீத. அமிருதம் சுகமென்றால் கிளியால் கொத்தப்பட்ட பழம் மிகரஸமுள்ளதென்று பிரஸித்தம் அமிருதம்– மேலான ஆனந்தம் அதேரஸம், அதையுடையது," அவரே ரஸம், ரஸத்தை யடைந்தே இவன் ஆனந்தமுடையவனாக ஆகிறான்" ச்ருதி. ரஸரூப:– மற்ற பழங்களில் எப்படி மேற்புறத் தில் தோலும் அதற்குள்ளே ரஸமுமிருக்கிறதோ? அடபடி இதில் தோல் முதலிய ரஸமற்ற பாகங்களில்லை;

ஆக்ஷேபம்– பழமென்றும் அதையே ரஸமென்றும் சொல்வது பொருந்துமா? ரஸமுள்ள பழமென்று சொல்ல வேண்டாமா?

ஸமாதானம்:– மற்ற பழங்கள் போல தோல் முதலியவைகளில்லாமல் ரஸமாகவே இருக்கிறதென் பதை காண்பிப்பதற்காக ரஸமென்று சொல்லப்பட்டது. பூமியில் விழுந்த ரஸமென்றால் அது த்ரவரூபமாய் போய்விடாமல் புஜிக்கதக்க பழமென்பதால் காட்டப் பட்டது முக்தர்– ஆத்மாவிடத்திலேயே ரமித்து கொண்டிருப் பவர்களும், மற்ற க்ரந்தங்களில் ஆசையில்லாத வர்களுமான மஹர்ஷிகளும் பகவானிடம் யாதொரு காரணமுமில்லா மல் பக்தி செய்கிறார்கள். இம்மாதிரியான குண முள்ளவர் ஸ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம்,1–"அத்யாயம்" 7. ஸ்வர்க்க லோகத்தை– ஸ்வர்காய– பகவான். அவரே லோகம் (பக்தர்களுக்குருட்டிடம்) அவரை யடைவதற்காக–ஸ்ரீத ஸ்வர்க்க– மேலான ஆனந்தம், அப்பேர்பட்டலோகம் பரமபதம், அதையடைவதற்காக– ஸத்ரம்– எந்த யாகத்தில் ரித்விக்குகளே யஜமானர்களாக விருக்கிறார்களோ

அது முனி.. ஸத்ரம்—ஸாதுக்களைக் காப்பாற்றுகிறது. —விஜ. அக்னி—நித்ய நைமித்திக ஹோமங்களை— முனி. புராணங்கள் 1.ப்ரஹ்ம புராணம் 2. பாத்மம். 3. விஷ்ணுபுராணம். 4. சிவபுராணம் 5. நாரதபுராணம் 6. மார்கண்டேயம், 7. ஆக்னேயம். 8. பவிஷ்யபுராணம். 9. ப்ரஹ்மகைவர்த்தம். 10 லிங்க புராணம் 11. வராஹபுராணம் 12. ஸ்காந்தம். 13. வாமனம். 14 கூர்மபுராணம். 15. மத்ஸ்யபுராணம். 16.கருடபுராணம். 17. ப்ரஹ்மாண்டம். 18வது ஸ்ரீமத் பாகவதபுராணம். 24—பல— அனேகசாஸ்த்ரங்களை அப்யஸித்தாலும் அவ்வளவு பலன் கிடைக்கிறதில்லை யென்று கருத்து ஸ்ரீத. 3—31 க்ஷேம.—ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் கதையைக் காலதாமதமின்றிக் கேட்க வேண்டுமென்று விரும்பி சுருக்கமாய் ஆசிர்வாதஞ் செய்தார்கள். "ஒரு முஹூர்த்தமாவது ஒரு க்ஷணமாகிலும் ஸ்ரீ வாஸுதேவரை ஸ்மரிக்காமலி ருப்பதே கெடுதிக்கு காரணம்.— ஸ்ரீத. 32—ஸாத்—பகவத் பக்தர்கள். ஸ்ரீத. 4—14 நாரதர்— இவர் ப்ரஹ்மதேவருடைய மனத்திலிருந்து உண்டா னவர். இவர் தேவர்ஷி இவருடைய குணங்கள் மஹாபாரதம் ஸபாபர்வத்திலும், சாந்திபர் வத்திலும் நன்றாக வர்ணிக்கப் பட்டிருக்கின்றன. இவர் கானவித்தையை அப்யளித்த கதை அத்புத ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர் ஞானத்தை பிறகுக்குபதேசிப்பதாலும், அக்ஞானத்தைப் போக்குவதாலும் நாரதரென்ற பெயரை யடைந்தார். 21— உத்தம—எவருடைய பெயரை உச்சரித்த மாத்ரத்தில் புண்யம் கிடைக்குமோ, அவர் சொல்லவேண்டும்— மஹர்ஷியின் கேள்விகள் ஆறு.

அவைகளில் 1. சாஸ்த்ரங்களுடைய ஸாரமானது எது, 2. ஸ்ரீ கிருஷ்ணபகவான் செய்த கார்யங்கள் எவை, 3 ஸிருஷ்டி முதலிய லீலைகள், 4 அவதார கதைகள். 5. பகவானுடைய சரிதம், 6. தர்மத்தை ஸம்ரக்ஷித்தது. ஸ்ரீத.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–2.

ஸூதர் ப்ரத்யுத்தரஞ் சொன்னது.

ரோமஹர்ஷணருடைய புத்ரரான ஸூதர் அந்த ப்ராஹ்மணர்களுடைய நல்வார்த்தைகளைக் கேட்டு ஸந்தோஷித்து அவர்களுடைய கேள்வியை ச்லாகித்துப் ப்ரத்யுத்தரஞ் சொல்ல ஆரம்பித்துப் பின்வருமாறு தன் குருவை வணங்கினார்.

2–31/2. சுகர் அதி பால்யவயதிலே (உபநயனஞ் செய்யப்படாமலிருக்கும் வயதிலே) கர்மமார்க்கத்தில் விருப்பமில்லாதவராய், துறவியாகப் போகும்பொழுது, பிதாவாகிய வ்யாஸர் பிள்ளையை விட்டுப் பிரியமன மில்லாதவராய் ஓ! புத்ரா! என்று உரக்க அழைத்தார். அப்பொழுது மரங்கள் விடைகூறின. (மரங்களின் ரூபமாயிருந்து பிதாவின் ப்ரீதியைக் குறைப்பதற்காகச் சுகரே அப்படிக்கூறினார் என்பதாம்) அவர் ஸகல ப்ராணிகளுடைய ஹ்ருதயத்தில் வசிப்பவர், அந்த சுக மஹாயோகியை நமஸ்கரிக்கிறேன். எவர் ஸம்ஸாரமா கிய இருட்டைக்கடக்க விரும்பிய ஜனங்களிடத்தில், கருணை வைத்து ஒப்பற்ற, மஹிமையுள்ளதும், ஸகல வேதங்களின் ஸாரமாயும், நிகரில்லாததாயும், ஆத்ம தத்துவத்தைக் காட்டுவதில் தீபமாயுள்ளதுமான, ரஹஸ்யமாகிய புராணத்தை வெளியிட்டாரோ, வ்யாஸருடைய புத்ரரும், முனிகளுக்குக் குருவுமாகிய அந்தச்சுகருக்கு நமஸ்காரம் செய்கிறேன். நாராயண ரையும், மனிதர்களுக்குட் சிறந்தவரான நரனையும், ஸரஸ்வதி தேவியையும், வ்யாஸரையும் நமஸ்காரஞ் செய்து பின்பு (ஜயத்தை) க்ரந்தத்தைச் சொல்லுகிறேன்.

4–35. 'ஓ மஹர்ஷிகளே! நன்றாய்க் கேட்டீர்கள், தாங்கள் கேட்டவிஷயம் உலகத்திற்கே மங்களத்தைக் கொடுக்கக்கூடியது. எதனால் பரமாத்மா ஸந்தோஷி ப்பாரோ அம்மாதிரி ஸ்ரீ கிருஷ்ணன் விஷயமாகக் கேட்டீர்கள். பலனை உத்தேசியாமல் இடையூறின்றி ஸ்ரீ மஹா விஷ்ணுவிடத்தில் செய்யும் பக்தியே மேலான தர்மம். அதனால் பரமாத்மா மிகவும் ஸந்தோஷமடை கிறார். பகவானாகிய வாஸுதேவரிடத்தில் பக்தி செய்தால், வைராக்யமும் காரணமற்ற உண்மையான ஞானமுமுண்டாகும். புருஷர்கள் குறைவின்றி தங்களுக்குரிய தர்மங்களை யனுஷ்டித்தும் அதனால் பகவானுடைய கதையைக்கேட்க வேண்டுமென்ற ஆசையுண்டாகாவிட்டால் அது பயன்படாததேயாகும். மஹாவிஷ்ணுவின் கதையாகிய அமிர்தத்தைப் பானஞ் செய்தும் (கதையைக் கேட்டும்) சித்தமுருகுதல், ஆனந்தத்தால் கண்ணீர் பெருகுதல், மயிர்க் கூச்சலிடல், என்னும் இவைகள் எவனுக்கு உண்டாகவில்லையோ, அவன் ஆத்மதத்துவத்தை பலதடவை குருமுகமாகக் கேட்டாலும் அதன் உண்மையை அறியமாட்டான். (பகவத்பக்தி, வைராக்யம், ஆத்மஞானம், என்னும் இவைகளே மேலான தர்மமென்று கருத்து). மோக்ஷத் திற்கு உபயோகமாகிய தர்மத்திற்கு இரண்டாவது புருஷார்த்தமாகிய அர்த்தம் பலனென்றும் தர்மத்தை விட்டுபிரியாத அந்த அர்த்தத்திற்குக் காமம் ப்ரயோஜன மென்றும் சிலர் சொல்வது மஹரிஷிகளால் ஒப்புக் கொள்ளபடவில்லை. இது பிரசித்தமான விஷயம். இந்திரியங்களை திருப்தி செய்வதே (விஷயானுபவம்) காமத்திற்கு பலனென்று சொல்வதும் சரியல்ல. ஆனால் ஜீவிப்பதற்குப் போதுமான அளவு விஷயத்தை அனுபவிப்பதே பலனாம். தத்துவத்தைத் தெரிந்து

கொள்ள விரும்பியவனுக்கு கர்மங்களால் கிடைக்கும் பலன் பயன்படாது. உண்மையை அறியவேண்டுமென்ற விருப்பமே அவனுக்குப் பலன். மேலும், நாசமற்றதான ஞானஸ்வரூபத்தையே தத்வமென்று, உண்மையை யறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். அதனையே உப நிஷத்தை அத்யயனஞ் செய்தவர்கள் ப்ரஹ்மம் என்றும், ஹிரண்யகர்ப்பனை உபாஸிப்பவர்கள், பரமாத்மாவென் றும், ஸாத்வதர்கள் பகவான் என்றும் சொல்லுகிறார்கள் "ஆகையால் ச்ரத்தையுள்ள முனிகள் வேதாந்தம் முதலிய சாஸ்த்ரங்களைக் குருமுகமாகக் கேட்டு, ஸ்திரமான ஞானம்,வைராக்யம், பக்தி இவைகளை அடைந்து ஜீவனுக்கும், பரமாத்மாவுக்கும் பேதமில்லை என்று தெரிந்துகொள்கிறார்கள். ஓ! ப்ராஹ்மண ச்ரேஷ்டர்களே! அவரவர்களுடைய ஜாதிக்கும், ஆச்ரமத்திற்கும் தகுதியான தர்மத்தை ஸாங்கமாய் (குறைவின்றி) அனுஷ்டித்தால், அவர்களிடத்தில் ஸ்ரீ நாராயணன் ப்ரியப்படுகிறார். இதுவே அதற்குப் பலமாகும். ஆகையால் பகவானுடைய கதையைக் கேட்கும்போதும் அவருடைய நாமபஜனம் செய்யும் போதும், அவரைத்யானஞ் செய்யுங்காலத்திலும், அவரைப் பூஜிக்கும் போதும், வேறு விஷயத்தில் மனத்தைச் செலுத்தாமலிருக்க வேண்டும்.விவேகிகள் பகவத்யானமாகிற கத்தியால் அஹங்கார ஸம்பந்தத்தை யுண்டுபண்ணும் கர்மபந்தத்தை வெட்டுகிறார்கள். ஆகையால் பகவானுடைய கதையைக் கேட்பதில் விருப்பமில்லாதவர் யார்? (எல்லோரும் விரும்புவார்கள்) ஓ! ப்ராஹ்மணர்களே! புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வதால் பாபங்கள் நீங்குகின்றன, பின்பு பெரியோர்களுடைய சேர்க்கையுண்டாகின்றது. பிறகு தர்மத்தில் ச்ரத்தையும் அதன்பின் வாஸுதேவருடைய

கதையைக்கேட்க விருப்பமும், பின்பு அதில் ப்ரீதியு மாகிய இவைகள் முறையே உண்டாகின்றன. தம் கதையைக் கேட்பவர்களுக்கும், நாமபஜனஞ் செய்பவர் களுக்கும், புண்யத்தைக்கொடுப்பவரும், ஸாதுக்களுக்கு அனுகூலத்தை செய்பவருமான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா தம்முடைய கதையை கேட்பவர்களுடைய ஹ்ருதயத்தில் வசித்துக்கொண்டு காமம், கோபம் முதலியவைகளை நாசஞ்செய்கிறார். எப்பொழுதும் பகவத் பக்தர்களை ஸேவிப்பதாலும், பாகவத சாஸ்த்ரத் தைப் படிப்பதாலும் பெரும்பாலும் அக்ஞானம் விலகும். அதனால் உத்தமச்லோகராகிய (புண்யகரமான பெயருள்ள) பகவானிடம் ஸ்திரமான பக்தியுண்டாகும். அப்பொழுது ரஜோகுணம், தமோகுணம் ஆகிய இவைகளாலுண்டாகும் காமம், க்ரோதம் முதலிய வற்றால் அவர்களுடைய மனஸ் விகாரமடையாமல் ஸத்வகுணமுள்ளதாய் சாந்தமாயிருக்கும். இப்படி பகவானிடம் பக்தி செய்கிறவனுடைய மனஸானது அதன் மஹிமையால் சாந்தமாய் விடும். ஆசைகளும் ஒழிந்துவிடும்; பின்பு பரமாத்மாவின் உண்மையான ஸ்வரூபஞானமுண்டாகும். ஆத்மரூபியான ஈச்வரனு டைய ஸாக்ஷாத்காரமுண்டானவுடன் அஹங்காரம் அடியோடே நாசமடைகிறது. ஸம்சயங்கள் யாவும் நிவர்த்தியாகின்றன. ப்ராரப்தகர்மம் தவிற மற்றவைகள் நசிக்கின்றன. ஆகையால் வித்வான்கள் பகவானாகிய வாஸுதேவரிடத்தில் எப்பொழுதும் மிகுந்த ஸந்தோஷத் துடன் பக்திசெய்கிறார்கள். அதனால் அவர்களுடைய சித்தம் சுத்தமாகிறது. பரமபுருஷன் ஒருவரானாலும் உலகத்தைக் காப்பாற்றுவதற்கு ஸத்வ குணத்தாலும், ஸ்ருஷ்டிப்பதற்கு ரஜோ குணத்தாலும், ஸம்ஹரிப்ப தற்கு தமோ குணத்தாலும், முறையே ஹரி, (விஷ்ணு)

பிரஹ்மா, ருத்ரன் என்னும் பெயரடைகிறார். ஆனால் ஸ்த்வமூர்த்தியான வாஸுதேவரிடமிருந்து மனிதர் களுக்கு க்ஷேமங்கள் யாவும் கிடைக்கின்றன. அக்னியானது கட்டையைப்பிடித்து எரிக்கும்போது அந்தக் கட்டையாகிற உபாதி ஸம்பந்தத்தால் புகை உண்டாகிறது. அதிலிருந்து வேதங்களில் சொல்லிய கர்மங்களுக்கு யோக்யமான அக்னி விருத்தியடைகிறது அதுபோல லயஸ்வரூபமாகி தமஸ்ஸினிடமிருந்து ரஜோகுணமும், அதனிடமிருந்து ஸத்வகுணமும், அதன்னால் ப்ரஹ்மப்ராப்தியும் உண்டாகிறது. முன் காலத்தில் பெரியோர்களான முனிவர்கள் சுத்த ஸத்வ மூர்த்தியும், பகவானுமாகிய, மஹாவிஷ்ணுவை (இந்த்ரியங்களுக்குப் புலப்படாதவரை) பஜித்தார்கள். ஆகையால் அந்த மார்க்கத்தை அனுஸரிப்பவர்கள், ஸம்ஸாரத்திலிருந்து க்ஷேமத்தை அடைவார்கள். மோக்ஷத்தை விரும்பியவர்கள், கோரஸ்வரூபமுள்ள பரமசிவன், பித்ரு கணங்கள், முதலியவைகளை உபாஸியாமல் அவர்களை நிந்திக்காமலும், சாந்தங் களான, நாராயணனுடைய கலைகளை, (அம்சங்கள்) உபாஸிக்கிறார்கள். ரஜோகுணம், தமோகுணம், இந்த ஸ்வபாவமுள்ள ஜனங்கள், ஐஸ்வர்யம், புத்ரன், அழகு, இவைகளை அடையவிரும்பி தங்களுக்கு ஸமமான ஸ்வபாவமுள்ள, பித்ருக்களையும், ருத்ரன், ஹிரண்ய கர்பன், முதலியவர்களையும், ஸேவிக்கிறார்கள். வேதங்கள், யாகத்தின் ஸ்வரூபத்தைச் சொல்லுகின்ற வைகளானாலும் யாகத்தால் ஆராதிக்கப்படும் தேவதை விஷ்ணுவாகையால், அவைகள் யாவும், வஸுதேவரு டைய புத்ரனாகிய பகவானையே சொல்லுகின்றன.

யோக சாஸ்த்ரங்கள் எல்லாம் ப்ராணாயாமம்

முதலியவைகளை, நிரூபிப்பவைகளானாலும், அவைகள் பகவானை அடைவதற்கு உபாயமாகையால் அந்தப் பரமாத்மாவையே சொல்லுகிறவைகளாகின்றன. மற்ற கர்மங்களும், அந்தப் பரம புருஷனுடைய ஆராதனத் திலேயே உபயோகிக்கப்படுகின்றன. ஞானசாஸ்த்ரம், தபஸ். தர்மசாஸ்த்ரம், கர்மத்தின் பலனாகிய ஸ்வர்க்கம், முதலியவைகள் யாவும், பரமாத்ம பரங்களேயாகின்றன. நிர்குணராயும், எங்கும் நிறைந்தவருமான அந்த பகவானே காரணரூபமாயும், கார்யரூபமாயுமிருந்து, முக்குண ஸ்வரூபமாயுள்ள தம்முடைய மாயையால் முதலில் உலகத்தை ஸ்ருஷ்டித்தார். மேலும் அவர் அந்த மாயையால் உண்டாகி ப்ரகாசிக்கும் ஆகாயம் முதலியவைகளில் உட்பிரவேசித்து இயற்கையில் தாம் குணமற்றவரானாலும், குணமுள்ளவர்போலத் தோன்று கிறார். அவர் விஞ்ஞானத்தால் (சித்சக்தி) நிறைந்தவர் கட்டைகளில் ஜ்வலிக்கும் அக்னி உண்மையில் ஒன்றானாலும், ஆச்ரய பேதத்தால் வெவ்வேறாகத் தோன்றுகிறது போல ஜகத்ரூபியான பரமபுருஷன் ஒருவரானாலும், ஒவ்வொரு ப்ராணிகளிடத்திலும், வெவ்வேறாகக் காணப்படுகிறார். அந்தப் புருஷோத்த மனே பூதஸூக்ஷ்மங்கள், இந்த்ரியங்கள், மனம் ஆகிய இவைகளால் உண்டுபண்ணப்பட்ட ப்ராணிகளிடத்தில் ப்ரவேசித்து விஷயங்களை அனுபவிக்கச்செய்கிறார். லோககர்த்தாவாகிய ஈச்வரன் திர்யக் (புறவை பசு முதலிவைகள்) தேவர்கள், மனிதர்கள் இவைகளில் ஸத்வ மூர்த்தியாய் அவதரித்து உலகங்களைக் காப்பாற்று கிறார். இவைகளே லீலாவதாரமெனப்படுகின்றது.

நோட்டு.

11–22. பால்ய– எனக்கு உபநயனம் செய்ய

வேண்டும் என்று ஆசார்யரிடம் வராதவர், அல்லது, தான் ஒருவராகப்போனார்.– ஸ்ரீத– தேஹம் முதலிய வைகளில் அபிமானமற்றவர்.– இவர் ருத்ரனுடைய அவதாரம்– விஜய. 12–4– ஸரஸ்வதி தேவியென்றால் ஸ்ரீதேவி,நரனென்றால் வாயுபகவான் – விஜ, ஜயம்– ஸம்ஸாரத்தை ஜயிப்பதால் இப்பெயர் கிடைத்தது, 14–நாரண தாரண– "ஓ அர்ஜுன! நான் வேதங்களாலும், தபஸினாலும், யாகத்தாலும் அறியமுடியாதவன்" என்ற ஸ்மிருதியின்படி பக்தியைவிட வேறு காரண மற்ற–ஸ்ரீத.– வீர. விஷ்ணுவின் பிரஸாதத்தால் உண்டான ஞானம். விஜ.

12–24 தர்ம–மோக்ஷத்திற்கு ஸாதனமாகிய தர்மத்திற்கு பணம் பலனல்ல. தர்மத்திற்காகவென்று, ஸம்பாதிக்கப்பட்ட பணத்திற்கு காமம் ப்ரயோஜன மாகாது. விஜ 11–12 ஹரி–

ஆக்ஷேபம்:– விஷ்ணு ஒருவரே ப்ரஹ்மா, பரமசிவன், என்ற பெயரை அடைகிறார் என்று சொன்னதால், மூன்று தேவர்களும் ஒருவரென்றும், ஒருவருக்கொருவர் பேதமில்லாதவர்களென்றும் ஏற்படுகிறது. "ப்ரஹ்மாவும், சிவனும் நாராயணனே" ச்ருதி. நாராயணர் என்ற பெய்ருடைய ப்ரஹ்மதேவர் கல்பத்தின் முதலில் ஜனங்களை ஸிருஷ்டித்தார். பிறகு அந்த பகவானாகிய விஷ்ணுவானவர் காலாக்னி ருத்ரரூபியாயிருந்து ஸகல லோகத்தையும் ஸம்ஹரித் தார். பகவான் ஒருவரே உலகத்தை ஸ்ருஷ்டிப்பது, பரிபாலிப்பது, நாசம் பண்ணுவது, ஆகிய கார்யங்களை முறையே ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் ஆகிய பெயருடன்

நடத்திவருகிறார்."– ஸ்மிருதி, ஆகையால் மஹாவிஷ்ணு மும்மூர்த்திகளுக்குள் ஒருவரென்றே ஏற்படுகிறது. மேலும், இம்மூவர்களைக் காட்டிலும் மேலான பரதத்வம் ஒன்றிருப்பதாகவும் ஏற்படுகிறது. அந்தப் புருஷனால் ஜகத்முழுவதும் பூர்ணமாயிருக்கிறது." "அதைக்காட்டிலும் எது மேற்பட்டதோ, அது ரூபமற்றது எவர்கள் இதையறிகிறார்களோ அவர்கள் மரண தர்மமில்லாதவர்களாக ஆகிறார்கள்."– ச்ருதிகள் "இவர் அமிர்தத்துக்கு ஹேதுவாயிருப்பவர்"– ச்ருதி இதனால் மும்மூர்த்திகளுக்கும் மேலான பகவத் ஸ்வரூபமே ஸகல ஜகத்திற்குக் காரணம். அதை பஜிப்பவர்களே மோக்ஷத்தையடைவார்கள். நாராயணனை பஜிப்பவர்கள் மோக்ஷத்தையடையமாட்டார்கள். அவர் பரமாத்மாவுமல்ல.

ஸமாதானம்:– மும்மூர்த்திகளும் ஒருவரேயென்று சொல்வது ந்யாயமல்ல "நாராயணனிடமிருந்து ப்ரஹ்மா உண்டாகிறார், நாராயணனிடமிருந்து ருத்ரன் உண்டாகிறார், நாராயணனிடமிருந்து பன்னிரண்டு ஆதித்யர்களும், பதினோரு ருத்ரர்களும், எட்டு வஸுக்களும், எல்லாவேதங்களும் உண்டானார்கள்" "நாராயணன் ஒருவரேயிருந்தார். ப்ரஹ்மாவும், ருத்ரனும் அப்பொழுது இல்லை. நாராயணர் ஒருவரேயிருந்தார். சங்கரராவது, ப்ரஹ்மாவாவது அப்பொழுது இல்லை. "அவர் முனியாகவிருந்து ஸங்கல்பித்தார். அவரிடமி ருந்து இவையாவும் உண்டாயின." "எவருடைய தொப்பிளில் தோன்றிய தாமரஸ புஷ்பத்திலிருந்து மஹாத்மாவான ப்ரஜாபதி உண்டானாரோ." "அதில் ப்ரஹ்மா உண்டானார்." "அவர் முந்தி மூன்று கண்களுள்ளவரும், மூன்று தலைகளுள்ளவரும்,

மூன்று கால்களுள்ளவருமான ஸம்ஹாரமூர்த்தியை யுண்டுபண்ணினார்" ப்ரஹ்மதேவர், தக்ஷர் முதலியவர் கள், காலம், மற்ற ஸகல ப்ராணிகள் இவைகள் யாவும் மஹாவிஷ்ணுவின் விபூதிகளேயாம். மேலும், ருத்ரன், காலன், அந்தகன் நான்குவிதமான ப்ராணிகள், இவைகள் ஜனார்த்தனனுடைய வீபூதியே. மேற்காட்டிய ச்ருதிகளாலும், ஸ்மிருதிகளாலும், ப்ரஹ்மா, ருத்ரன் இருவர்களும், மஹாவிஷ்ணுவால் ஸிருஷ்டிக்கப்பட்ட வர்கள் என்று தெரியவருகிறது. நாராயணனைக் காட்டிலும் மேற்பட்ட வேறு தத்வமிருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஸகல ஜகத்தும் புருஷனேயாம். ஜகத்தானது அவனை உபஜீவிக்கிறது." "அவருக்கு ஸமானனும் மேற்பட்டவனும் காணப்படவில்லை" ச்ருதிகள் ஓ! அர்ஜுனா! என்னைக்காட்டிலும் மேலானதொன்று மில்லை." ஸ்மிருதி. ப்ரளய காலத்தில் எல்லாம் ப்ரகிருதியில் லயித்திருக்கும் பொழுது ஸகல ஜகத் ரூபியான நாராயணன் ஒருவரேயிருக்கிறார். புண்டரீ காக்ஷனைவிட வேறு மேலான தெய்வமில்லை. மேல்காட்டிய ப்ரமாணங்களால் மஹாவிஷ்ணுவே மேலானவைரென்று ஏற்படுகிறது.

ஆக்ஷேபம்– மும்மூர்த்திகளும் ஒருவரென்றும், விஷ்ணுவைக்காட்டிலும் மேலான தத்வமிருக்கிற தென்றும் ப்ரமாணங்களை காட்டியிருக்கிறோமே.

ஸமாதானம்– அதிற்சொல்லிய சிவ, சம்பூ ஈச, முதலிய சப்தங்களுக்கு நாராயணனென்றே அர்த்தங் கொள்ளவேண்டும். ருத்ரன் முதலியவர்கள் கர்மத்துக்கு வசப்பட்டவர்களென்று சொல்லியிருக்கிறது. வாஸு

தேவன் கர்மவச்யரென்று ஓரிடத்திலும் சொல்லப் படவில்லை. ஆகையால் நாராயணனே எல்லா தெய்வங்களிலும் மேலானவர். அவரை அடைவதற்கு அவரே காரணம். வீர.15–6 ஞானசா –கபிலரால் சொல்லப்பட்ட ப்ரகிருதி புருஷ விஷயமான க்ரந்தம், தபஸ், சாந்த்ராயணம் முதலியவை. வீர. லீலாவதார– ஈச்வரனுடையவை கர்மாதீனமல்ல வென்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–3

பகவதவதாரங்கள்

உலகங்களை ஸிருஷ்டிப்பதற்காக, பகவான் ஆதியில் மஹத்தத்வம், அஹங்காரம் முதலியவைகளுடன் கூடியதும், 16 கலைகளுள்ளதுமான புருஷதேஹத்தை எடுத்துக்கொண்டார். பின்பு ஜலத்தால் உலகமுழுவதும் மூடப்பட்டிருக்க, அவர் அந்த ஜலத்தில் படுத்து யோகநித்ரை செய்தார். அப்பொழுது அவருடைய மடுப்போலிருக்கும் தொப்புளிற் தோன்றிய தாமரை புஷ்பத்திலிருந்து ஒருவர் உண்டானார்;அவரே மரீசி முதலிய ப்ரஜாபதிகளுக்கு அதிபதியாகிய ப்ரஹ்மதேவர். மேற்சொல்லிய புருஷரூபத்தில் ஏற்பட்டிருக்கும் அவயவங்களின் அமைப்புகளால் தேவர்கள், மனிதர்கள் முதலியவர்கள் ஸிருஷ்டிக்கப்பட்டு உலகமானது விஸ்தாரமாகிற்று. மேற்காட்டிய பகவத் ரூபமே சுத்தமானது மேலான ஸத்வகுணமுள்ளது ஞானக் கண்ணுள்ள யோகிகள் இந்த பகவத் ஸ்வரூபத்தை அனேகங்கால்கள், கைகள், முகங்கள், தலைகள், கண்கள், மூக்குகள், காதுகள் என்னும் இவைகளால் அற்புதமான தாகவும், அனேக கிரீடங்கள், குண்டலங்கள் முதலிய வைகளால் ப்ரகாசிப்பதுமாக பார்க்கிறார்கள்:அந்த தேஹத்திலிருந்தே அனேக அவதாரங்கள் வெளிப் படுகின்றன.காரியம் முடிந்தவுடன் அதனிடத்திலேயே அடங்குகின்றன. மேலும் அந்த ரூபம் நாசமற்றது. அதனுடைய அம்சம், ப்ரஹ்மதேவர். அவருடைய அம்சமுள்ளவர்கள், மரீசி முதலிய ப்ரஜாபதிகள். அவர்களாலே தேவர்களும், மனிதர்களும், பசு, பக்ஷி முதலியவைகளும், ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன.

6–28. புருஷ தேஹத்தை அங்கீகரித்த அந்த தேவனே கௌமாரமென்ற ஸிருஷ்டியில் ப்ராஹ்ம மணராயிருந்து, ப்ரஹ்மசர்ய வ்ரதத்தை அனுஷ்டித்து வந்தார். இது ஒரு அவதாரம். மேலுமவர் பன்றி சரீரமெடுத்து பாதாளலோகஞ் சென்று, அவ்விடமிருந்த பூமியை இவ்வுலகத்திற்கு கொண்டு வந்தார். இது மற்றொரு அவதாரம். தவிர ரிஷி ஜன்மாவில் தேவ ரிஷியான நாரதராய் அவதரித்து ஸாத்வத தந்த்ர மென்ற பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தைச் செய்து வெளியிட்டார். அதில் சொல்லிய கர்மங்கள் துக்கத்தைக் கொடுக்கிறதில்லை, (பகவானுடைய ஆராதன ரூபங்களாகையால்) அந்த மஹாபுருஷனே தர்மகலையின் ஸிருஷ்டியில் நரன், நாராயணன் என்ற திவ்யநாமங்களுடன் ரிஷிகளாக அவதரித்தார். அந்த நான்காவது அவதாரத்தில் இந்த்ரியங்களையும் மனத்தையும் அடக்கி கடுமையான தபஸ் செய்தார். அவரே கபிலரென்ற மேலான பெயருடன் ஸித்த புருஷனாக 5–வது அவதாரஞ்செய்து காலமஹிமையில் ஒளிந்து போன தத்வங்களின் உண்மையைத் தெரிவிக்கும் ஸாங்க்ய சாஸ்த்ரத்தை ஆஸுரி என்ற ப்ராஹ்மணருக்கு உபதேசித்தார். பின்னுமொரு சமயத்தில் அத்ரி மஹர்ஷியானவர் மஹாவிஷ்ணுவை நோக்கி "உமக்கு சமமான புத்ரன் எனக்கு உண்டாகும் படி அனுக்ரஹிக்க வேண்டும்" என்று பிரார்த்திக்க பகவான் அப்போர்ப்பட்ட புத்ரன் தம்மைத்தவிர வேறொருவரும் இல்லாமையால் தம்மை அத்ரி ஏமாற்றி விட்டாரென்று வெறுப்பில்லாமல், தானே தத்தாத்ரே யராக அவதரித்தார். மேலும் அவர் அலர்க்கன் என்ற அரசனுக்கும், ப்ரஹ்லாதன் முதலியவர்களுக்கும், ஆன்வீக்ஷகியை (ஆத்மவித்தையை) உபதேசித்தார்.

பின்னுமவர் ஆகூதி என்பவளிடம் ருசி என்பவருக்கு 'யக்ஞர்' என்ற பெயருடன் அவதரித்து ஸ்வாயம்புவ மன்வந்த்ரத்தில் தாம் இந்த்ரனாகவிருந்து தம்முடைய புத்ரர்களான யாமன் முதலிய தேவர்களுடன், உலகத் தைக் காப்பாற்றினார். இன்னும் அந்த பகவான் ஆக்னீதரருடைய புத்ரராகிய நாபி என்பவருக்கு மேருதேவியினிடத்தில் ரிஷபரென்ற பெயருடன் அவதரித்து எல்லா ஆச்ரமங்களிலும் மேலான பரமஹம் ஸாச்ரமத்தை யோகிகளுக்கு உபதேசித்தார். பின்னு மொருக்கால் மஹர்ஷிகளால் ப்ரார்த்திக்கபட்டு ப்ருது வென்ற ராஜர்ஷியாக அவதரித்து, பசுவின்ரூபத்தை தரித்து பூமியினிடமிருந்து ஸகல வஸ்துக்களையும் கறந்து உலகத்தைக்காப்பாற்றியதால், இந்த அவதாரம் மிகவும் விரும்பத் தக்கதாயிருந்தது. தவிரவும் சாக்ஷுஷமன்வந்தரத்தில் ஸத்யவ்ரதருக்காக மாயையால் காண்பிக்கப்பட்ட ப்ரளயத்தில், மத்ஸ்யரூபத்தை தரித்து பூமியாகிய ஓடத்தில் வைவஸ்வத மனுவாக ஆகப்போகிற ஸத்யவ்ரதரை வைத்து காப்பாற்றினார். அந்தப்ரபுவே, தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து ஸமுத்ரத்தை அமிருதத்திற்காகக் கடையும்போது, ஆமை உருவம் கொண்டு மத்தாகிய மந்தரமலையை, முதுகில் தாங்கினார். அவரே தன்வந்தரியாக அவதரித்தும், பிந்தி மோஹினி வேஷங்கொண்டு, அஸுரர்களை மோஹிக்கச் செய்து, தேவர்களுக்கு அமிருதத்தைக்கொடுத்து புஜிக்கவும் செய்தார். மிக்க பலிஷ்டனாகிய, ஹிரண்யகசிபுவை நரஸிம்ம சரீர மெடுத்து பாயைப் பின்னுகிறவன் கோரையைப் பிளப்பது போல் நகங்களால் துடையில் கிழித்து அவனைக்கொன்றார். இது பதினான்காவது அவதாரம். பின்னுமொரு ஸமயத்தில், மஹாபலியென்ற அஸுரன்

யாகஞ்செய்யும்பொழுது, பகவான் வாமனரூபியாக அவனுடைய யாகசாலை சென்று மூன்றடி பூமியை யாசித்தார். மேலும் அதனால் அவனிடமிருந்து ஸ்வர்க்க ராஜ்யத்தை பிடுங்கிக்கொண்டு அவனை நிக்ரஹித்தார். இது பதினைந்தாவது அவதாரம். பின்னுமொருக்கால் பூமியில் பரசுராமனாக அவதரித்து தர்ம விரோதஞ் செய்யும் அரசர்களை கோபத்துடன் இருபத்தொருதரம் கொன்று பூமியில் க்ஷத்ரிய வம்சமில்லாமலொழியச் செய்தார். இது பதினாறாவது. அந்த பரமபுருஷனே ஸத்யவதியிடத்தில் பராசரருக்கு வ்யாஸராய் அவதரித் தார். இவருடைய காலத்தில் மந்தபுத்தியுள்ளவர்களாக யிருந்த படியால் வேதங்கள் சாகை சாகையாக பிரிக்கப்பட்டன. மேலும், ராவணன் முதலிய ராக்ஷஸர் களை கொல்வதற்காக ஸ்ரீ ராமாவதாரஞ்செய்து, ஸமுத்ரத்தில் அணைகட்டியது முதலிய ஆச்சர்யங் களைக் காட்டினார். இது பதினெட்டாவது அவதாரம். பின்பு விருஷ்ணி குலத்தில் பலராமன், ஸ்ரீ கிருஷ்ணன் என்ற திவ்ய நாமதேயங்களுடன் அவதரித்துப் பூமியின் பாரத்தை நிவர்த்தித்தார். இது பத்தொன்பதாவது அவதாரம். பின்பு கலியுகத்தில் கீகடம் (மத்ய கயை) என்ற தேசத்தில் புத்தனென்ற பெயருடன் ஜினருக்கு (சுத்தோதனனென்று சிலர்) புத்ரனாக அவதரிப்பார். கலியின் முடிவில் யுகஸந்தியில் அரசர்களெல்லோரும் பெரும்பாலும் திருடர்களாக ஆய்விடுவார்கள். அப்பொழுது ஜகத்திற்கு குருவாகிய பகவான் கல்கியென்ற பெயருடன் விஷ்ணுயசஸ் என்பவருக்குப் புத்ரனாக அவதரிப்பார். இது இருபத்தொன்றாவது அவதாரம்.

ஓ! "ப்ராஹ்மணர்களே! குறையாத, ஜலமுள்ள

பெரிதாகிய ஏரியிலிருந்து அனேக வாய்க்கால்கள் ஒடுவது போல, ஸத்வ மூர்த்தியாகிய விஷ்ணுவின் அவதாரங்கள் கணக்கிட முடியாதவைகள். ரிஷிகள், முனிகள், தேவர்கள், மனுவின் புத்ரர்கள், ப்ரஜாபதிகள் எல்லோரும் மஹாவிஷ்ணுவின் அம்சாவதாரமே தவிர வேறில்லை. மேலும், முன்காட்டிய படியுள்ள பகவானுடைய அம்சங்கள், கலைகள், விபூதிகள், ஸாக்ஷாத் விஷ்ணுவாகிய கிருஷ்ணன் இவர்கள், அஸுரர்களால் உலகத்திற்கு உபத்ரவம் நேரும்போது அவர்களை நிக்ரஹித்து உலகத்தைச் ஸுகிக்கச் செய்கிறார்கள்.

29. இந்தப் பகவானுடைய அதிரஹஸ்யமான அவதாரங்களைக் காட்டும் ச்லோகங்களைக் காலையிலும், மாலையிலும், சுத்தனாய் பக்தியுடன் படித்தவன் ஸம்ஸார துக்கத்திலிருந்து நிவர்த்தியடைகிறான்.

30–39. ரூபமில்லாதவனும், சித்ரூபியாயுமிருக்கும் ஜீவனுக்குப் பகவானுடைய மாயையின் குணங்களாகிய மஹத்தத்வம் முதலியவைகளால் இந்த ஸ்தூலசரீர மேற்படுத்தப்பட்டது. வாயுவை (காற்றை) ஆச்ரயித்த மேகங்கள் ஆகாயத்திலிருப்பதாயும், பூமியின் தூளிக்காற்றிலிருப்பதாகவும், அக்ஞர்கள் நினைப்பது (ஆரோபிப்பது) போல எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாயிருக்கும் ஆத்மாவினிடம் சரீரம் ஆரோபிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஸ்தூல சரீரத்திற்கு மேற்பட்டதும் கை, கால் முதலிய அவயவ பரிமாணங்களற்றதும், பார்க்கப்படாததும், கேட்கப்படாததாயும், ஸூக்ஷ்மமாயும், ஜீவனுடைய உத்கிறந்தி (வெளியில் போவது) முதலியவைகளுக்கு ஸாதனமாயுமுள்ள லிங்க சரீரமும் முன்காட்டியதுபோல ஆரோபிக்கப்படுகிறது. ஸ்தூல

சரீரம் லிங்கசரீரமாகிய இவைகள் பரமாத்மாவினிடம் ஆரோபிக்கப்படுவதற்குக்காரணம் அவித்யையே, உண்மையில் ஆத்மாவிற்கு இவ்விரண்டின் ஸம்பந்தமுமில்லை. இம்மாதிரியான உண்மையான ஸ்வரூபஜ்ஞானம் எந்தக்காலத்தில் உண்டாகிறதோ அப்பொழுது ஜீவன், ஞான ஸ்வரூபியான ப்ரஹ்மாத்ம பாவத்தையடைவான். ஈச்வரனுடைய மாயையானது ஓய்வடையுமானால் அப்பொழுது ஜீவன் ப்ரஹ்மமாக ஆகிறான். பரமானந்த ரூபியாய் விளங்குகிறான். அந்தர்யாமியான பகவான் ஒன்றையுஞ் செய்யாமலிருப்பவரானாலும் கர்மங்களை செய்கிறவரென்றும், உத்பத்தியில்லாதவரானாலும் பிறந்தாரென்றும், கவிகள் வேதத்தின் ரஹஸ்யமான விஷயத்தை வர்ணிப்பது ஜீவனுக்கு பிறப்பு முதலியவைகளுண்டென்று சொல்வதுபோல மாயையேதவிற வேறில்லை. வீண்போகாத லீலைகளுள்ளவரும், ஸகல ப்ராணிகளிடம் மறைந்திருப்பவருமான ஈச்வரனே இந்த லோகத்தைப் படைக்கிறார்;காப்பாற்றுகிறார்; ஸம்ஹரிக்கிறார். ஆனாலும் ஸ்வதந்தரராகையால் ஆறு இந்த்ரியங்களுக்கு யஜமானராயிருப்பதால் அதுகளின் விஷயங்களை வெகு தூரத்திலிருந்தே க்ரஹிக்கிறார். அவைகளில் ஸம்பந்தப்படுகிறதில்லை. மூடன் எப்படி நடனம் (நர்த்தனம் செய்கிறவனால்) செய்யப்படும் அபினயத்தை அறியமாட்டானோ அப்படி அற்பபுத்தி யுள்ளவன் ஸகல ஜகத்தைப் படைப்பவரும், ஸங்கல்பத்தால் ரூபங்களையும் வாக்கினால் பெயர்களையும், விஸ்தரிப்பவருமான பகவானுடைய லீலாவிபூதிகளை யுக்தி(தர்க்கம்) முதலியவைகளின் ஸாமர்த்யத்தால் அறியமாட்டான். ஆனால், நல்மார்க்கத்தை ஸ்தாபிப்பவரும், சத்ருக்களை ஜயிக்கும் வீர்யமுள்ளவரும் சக்ராயுதம் தரித்தவருமான பரமாத்மாவின் ஸ்வரூபத்தை,

இடைவிடாமல் கபடமற்று பகவானுடைய பாதங்களாகிய தாமரஸ புஷ்பத்தின் வாஸனையை ஸேவிக்கும் பக்தனே ச்ரமபட்டு தெரிந்துகொள்ளுகிறான். ஓ ப்ராஹ்மணர்களே! இதைத் தெரிந்து கொண்டு ஸகல லோகத்திற்கும் நாதராகிய ஸ்ரீ வாஸுதேவரிடம், எவர்கள் இடைவிடாமல் மனத்தைச் செலுத்துகிறார்களோ, அவர்களுக்குக் கர்ப்பவாஸம் முதலிய துக்கத்தை உண்டுபண்ணும் பிறப்பு இறப்பு நேரிடமாட்டாது. ஆதையால் எல்லாவற்றையும் அறிந்த அந்த பக்தர்களே தன்யர்கள் (மேலானவர்கள்)

40–44. ஸர்வஜ்ஞரான வேதவ்யாஸ மஹர்ஷி உத்தமச்லோக (நல்வினையை கொடுப்பதால் மேலான பெயருள்ள) ராகிய பகவானுடைய சரித்தத்தைக் காட்டுகிறதும். வேதங்களுக்கு ஸமமாயுள்ளதுமான ஸ்ரீமத் பாகவத புராணத்தைச் செய்து முடித்தார். பிறகு உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டி ஸகல மங்களங்களுக்கும் இருப்பிடமாயும், அர்த்தத்தாலும், சப்தத்தாலும் மிகவும் மேலானதுமான அந்தப் புராணத்தை, யோகிகளுக்குட் சிறந்தவரும், தம்முடைய புத்ரரத்னமுமாகிய சுகருக்கு உபதேசித்தார். அந்தச்சுகர் எல்லாவேதங்களிலும், இதிஹாஸங்களிலுமிருந்து அவற்றின் ஸாரத்தை எடுத்து செய்யப்பட்ட இந்தச் சாஸ்த்ரத்தை, கங்கைக்கரையில் மிகுந்த வைராக்கியத்துடன், ப்ராயோபவேசஞ் செய்திருக்கும் பரீக்ஷித்து மஹாராஜனுக்கு, அனேக மஹர்ஷிகள் கேட்டிருக்கும் போது சொன்னார். இவ்விதமாக அது பூமியில் பரவியது. ஓ! ப்ராஹ்மணர்களே! அந்த ஸமயத்தில் நான் அவ்விடம் போனேன். மேலும் அவ்விடத்தில் உட்கார்ந்திருந்த மிகுந்த தேஜஸுள்ள அந்த ப்ரஹ்ம

ரிஷியான சுகருடைய அனுக்ரஹம் பெற்றேன்; நீங்களனைவரும் 'அதன் விஷயத்தை தெரிந்துகொள்ள வேண்டும்' என்று மிகுந்த ஆவலுள்ளவர்களாய் இருப்பதால் நான் சுகரிடம் கேட்டபடி, என்புத்திக் கெட்டியவரையில் சொல்லுகிறேன். (கிருஷ்ணபகவான் தர்மம், ஞானம் இவைகளுடன் தமது லோகஞ்சேர்ந்த பிறகு கலியில் ஞானக்கண்ணில்லாமல் கஷ்டப்படும் ஜனங்களுக்கு இந்த புராணமாகிய ஸூர்யன் உதயமாகி இருக்கிறது.)

நோட்டு.

17–22. 16 கலைகள்– இந்த்ரியங்கள் 11, ஐந்து பூதங்கள், இந்த பதினாறு கலைகள், பகவானுடைய சரீரம் உண்மையில் இப்போர்ப்பட்டதல்ல. ஆனாலும், விராட்தேஹத்தின் அந்தர்யாமியாயிருக்கும் பகவானை விராட்ரூபமாக உபாஸிப்பதற்குபயோகமாகச் சொல்லப் பட்டது. ஸ்ரீத. 18–12. [illegible]ளமார– இவருக்கு ஸனத்குமாரரென்று பெயர். ஆனால் இவர் ஸனகர் முதலியவர்களில் சேர்ந்தவரல்ல. விஜயத் ஆதிபுருஷன் ப்ரஹ்மதேவருடைய ஸ்வரூபமாகவிருந்து ஸனத்குமாரர் முதலியவர்களாக அவதரித்தார். பிறகு ஈச்வரனை யுபாஸித்தார். அவர்கள் அனுப்ரவேசாவதார ரூபிகளெனப்படுவார்கள். மேலுமவர்கள் அவித்யையுள்ளவர்களேயாம். ஆனாலும் பகவானையுபாஸித்துக் காலாந்தரத்தில் ஞானத்தை யடைவார்கள். வீர இது இந்த ஒரு அத்யாயத்தில் 21 அவதாரங்கள் நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. ஆனாலும் அவைகள் வரிசையாகச் சொல்லப்படவில்லை. ஆனாலும் இவ்விடத்தில் சொல்லிவருவதில் முதலாவது என்பதேயாம். ஸ்ரீத.

16 தேவர்ஷி–மஹிதாஸரென்ற மஹர்ஷி. விஜ20. தர்ம– யமனுடைய அம்சம். ஸ்ரீத. கபிலர்– இவர் ப்ரஸித்தராகிய கபிலரல்லவென்று சிலர். விஜ. 31 வெறுப்–மூலத்தில் அனஸூயயா என்றிருப்பதால், அத்ரியின் பத்னியாகிய அனஸூயை யென்பவளால் அடையப்பட்டார்.– வீர. விஜ. 19–4. யாம– ஒவ்வொரு மன்வந்தரத்திலும் தேவர்களுடைய பெயர் மாறுகிறதுண்டு– விஜ. நாபி–ஸ்வாயம்புவ மனுவின் புத்ரர்– வீர. இந்த்ரனுடைய புத்ரன்.– முனிமஹர்ஷி– வேனனைக்கொன்ற பிறகு.– வீர மாயையால்– மன்வந்தரத்தின் முடிவில் ப்ரளயமில்லாமற் போனாலும், அக்காலத்தில் மார்க்கண்டேயருக்குக் காண்பித்தது போல காண்பிக்கப்பட்டது– ஸ்ரீத. துடையில்– மடியில் வைத்துக்கொண்டு. விஜ வாமன– துஷ்டர்களுடைய கர்வத்தைக் குறைப்பதால் இப்பெயர் கிடைத்தது– ஸ்ரீத. கோபத்துடன்.– சக்தியில்லாதவனுக்குக் கோபமுண்டாகுமேயல்லாமல், ஸாமர்த்யமுள்ளவர்களுக்கு கோபமுண்டாக ந்யாய மில்லையாகையால் கோபங்கொண்டவர்போல வென்பது கருத்து– விஜ. ரிஷிகள்– மனுவின் புத்ரர்களாகிய ப்ரியவ்ரதர் முதலியவர்கள்.– விஜ. கலைகள்– குமாரர்கள், நாரதர் முதலியவர்கள். கலாவதாரபூதர்கள், அதிலும் குமாரர் முதலியவர்கள் ஞானமுள்ளவர்கள் ப்ருது முதலியவர்கள் பகவானு டைய சக்தி விசேஷமுள்ளவர்கள்– ஸ்ரீத. விபூதிகள்– "எந்தப்ராணிகள் விபூதியுள்ளனவைகளோ, எது அழகு பொருந்தியதோ, எது பலமுள்ளதோ, அவைகள் யாவும் என்னுடைய தேஜஸ்ஸின் அம்சத்திலிருந்து உண்டானவர்கள்" பகவத்கீதை. ரூபமில்லாத–ஜீவனுக்கு தேஹஸம்பந்தம் விஷ்ணுவின் மாயையால் ஏற்பட்ட

தாகையால் ஞானத்தால் அந்த அவித்யை நிவர்த்தி யாகிறதென்பது இதுமுதல் ஐந்து ச்லோகங்களால் காட்டப்பட்டிருக்கிறது. ஸ்ரீத. ஆரோபி- நான் தேவன், இந்த சரீரம் என்னுடையது, என்ற அபிமானத்திற்கு விஷயமாகச் செய்யப்பட்டிருக்கிறது. உண்மையில் தேவர்கள் முதலிய சரீரம் ஜீவனுடைய ஸ்வரூபமல்ல.

ஆக்ஷேபம்– தேவசரீரம் முதலியவைகள் அவை களுக்கு அபிமானியாகிய ஜீவனால் தரிக்கப்படுகிற தாகையால் அவனுடையதென்று ஏன் சொல்லக்கூடாது?

ஸமாதானம்– "எவனுக்கு ஆத்மா சரீரமோ எவன் ஆத்மாவினிடத்திலிருக்கிறானோ" என்ற ச்ருதிப்படியும். ஜீவனும் பரமபுருஷனால் தரிக்கப்படுகிறபடியால் எல்லாவற்றிற்கும் பரமாத்மாவே முக்யமான ஆதாரம்– வீர. ஆகாயம் வாயு இவைகள் கண்ணிற்குப் புலப்படாதவைகளானாலும், மேகக்கூட்டத்தை ஆகாசமென்றும், பூமியிலிருந்து கிளம்பும் தூளிகளை வாயுவென்றும் சொல்வதுபோல, அக்ஞஜனங்கள் ப்ரதிமையைப் பார்த்து அதையே ஈச்வரனென்று சொல்லுகிறார்கள். அதனால் ஸர்வ ஸாக்ஷியான பகவான், இந்த்ரியங்களால் பார்க்கக்கூடியவர் (த்ருச்யர்) என்றும் சித்ரூபியான அவர் ஜடரென்றும் ஏற்படுகிறது. ஆகையால் இது ப்ராந்தியேயாம்.– விஜ. ஸூக்ஷ்மம்– "இவன் அவ்யக்தன், நினைக்கமுடியாதவன் விகாரமற்ற வன்"– பகவத்கீதை. ஒன்றையும்– புண்யபாபங்களற்ற வர், கர்மாதீனமான சரீரமில்லாதவர்–வீர. ரஹஸ்யம்.– உத்பத்தியை அடையாமலே பலவகையாக உண்டா கிறார்" என்ற ச்ருதியில் உத்பத்தியடையாதவரென்றால்

ஜீவன்போல் கர்மாதீனமாக ஜன்மமில்லாதவரென்றும் தனதிஷ்டப்படி பகவானுக்கு உத்பத்தியுண்டென்றும் அர்த்தம். அதைக் கவிகளே அறிவார்கள். "தீரர்கள் அந்தப் பகவானுடைய சரீரத்தை அறிகிறார்கள்" ச்ருதி: ஆகையால் பகவானுடைய ஜன்மகர்மங்கள், ஜீவனுடையது போன்றவைகள் என்று நினைக்கக் கூடாது என்பது வேதவாக்யத்தாலேயே காட்டப் பட்டிருக்கிறது– வீர லீலைகள் ஜீவன் அனாதியாகிய கர்மத்தால் புண்ய பாபங்களைச் செய்து அதனால் ஸகல துக்கங்களை அடைவதுபோல் பகவானுடைய செய்கைகள் அவரைக்கட்டுப்படுத்துகிறதில்லை. மேலும் அவைகள் அவருக்கு லீலைகளாகும். அவைகள் வீண் போகாதவைகள் என்றதால் ஜீவனுடைய கர்மங்கள் அனேக விக்னமுள்ளவைகள் என்று காட்டப்பட்டன. இப்படி பலவகையிலும் ஜீவனைக்காட்டிலும் மேலானவரென்பது தாத்பர்யம். ஆறு– ஞானம், சக்தி, தேஹபலம், ஐச்வர்யம், வீர்யம் தேஜஸ் இவைகளுக்கு அதிபதி. அல்பபுத்தி– நான், என்னுடையது என்ற அபிமானமுள்ளவன். நடன– வேஷதாரியானவன், பலவகையான வேஷங்களைத் தரித்தாலும் எப்படி இவன் வேறாக ஆகிறதில்லையோ, அப்படி பகவான் மத்ஸ்யம், ஆமை முதலியவைகளின் உருவங்கொண்டாலும் அவருடைய உண்மையான ரூபம் மாறுகிறதில்லை மேலும் வேஷம் தரிப்பது முதலிய சேஷ்டைகள் அவனுக்கு விளையாட்டாயிருப்பது போல் பகவானுக்கும் அவைகள் லீலைகளேயாகும். அறிந்த– பகவந்த: என்ற பதத்திற்கு நீங்கள் என்று அர்த்தங்கொண்டு ஏ சௌனகர் முதலியவர்களே! நீங்கள் மேலானவர்கள். ப்ராயோபவேசம்– ஜீவித்திருப்பதில் ஆசையில்லாமல் ஆஹாரமில்லாமலிருக்கிறதாகிய வ்ரதம் வீர.–விஜய.

அத்யாயம்–4.

வியாஸர் கவலை யடைந்தது.

அதனைக் கேட்டுத் தீர்க்கஸத்ரம் செய்துகொண்டிருக்கும் மஹர்ஷிகளுக்குள் வயது சென்றவரும், கூட்டத்தில் முக்யரும், ரிக்வேதியுமாகிய சௌனகரென்பவர் ஸூதரைக் கொண்டாடிப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினார்.

2–13. "ஓ மிகுந்த பாக்யமுள்ள ஸூதரே! பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சுகஸ்வாமியால் சொல்லப்பட்ட புண்யகரமான ஸ்ரீமத் பாகவதகதையை எங்களுக்குச் சொல்லவேண்டும். கதை சொல்வதில் தாங்கள் மிக்க ஸாமர்த்யமுள்ளவர்கள். இந்தக்கதை எந்தயுகத்தில் எந்தவிடத்தில் நடந்தது எதற்காக யாரால் தூண்டப்பட்டு, இந்த கிரந்தத்தை வ்யாஸமஹாமுனிவர் செய்தார். மேலும் அவருடைய புத்ரரான சுகரென்பவர் மஹாயோகி; தாம், பிறர் என்ற பேதபுத்தியில்லாமல் எல்லாவற்றையும் ப்ரஹ்ம ஸ்வரூபமாகப் பார்ப்பவர். பரமாத்மாவினிடத்திலேயே புத்தியைச் செலுத்தியவர், மாயையாகிய தூக்கத்தைவிட்டு விழித்தவர். இவருடைய ஸ்வபாவம் வெளியில் தெரியாது. பார்வைக்கு மூடன்போல் தோன்றுகிறவர். இவர் குரு ஜாங்கலமென்னும் தேசத்தில் ஹஸ்தினாபுரத்தில் பயித்தியம் பிடித்தவன் போலவும், ஊமையன் போலவும், மூடன் போலவும் ஸஞ்சரிக்கும்போது, இவருடைய உண்மையைப் பட்டணத்து ஜனங்கள், எப்படித்தெரிந்து கொண்டார்கள்? இவர் எல்லா ஆசைகளையும் ஒழித்துத் துறவியாய்ப் போகும்போது பிதாவாகிய

வ்யாஸமஹர்ஷி புத்ரஸ்நேஹத்தால் அவர் பின்செல்ல வ்ழியில் ஜலக்ரீடை செய்துகொண்டிருந்த அப்ஸர ஸ்த்ரீகள், வஸ்த்ரமில்லாதவரும், யுவாவுமாகிய சுகரைக் கண்டு வெட்கப்படவில்லை. இவருக்குப்பின்னே வருகின்றவரும், மரவுரியை யுடுத்திக்கொண்டவரும் வயது சென்றவருமான வ்யாஸ மஹர்ஷியைப் பார்த்த வுடன் வெட்கமடைந்து தம்தம் ஆடைகளையுடுத்திக் கொண்டார்கள். இந்த ஆச்சர்யத்தைக் கண்ணுற்ற மஹர்ஷியானவர், அவர்களை இது விஷயமாகக் கேட்க அவர்கள் மஹர்ஷியை நோக்கி "புருஷன், ஸ்திரீ, என்ற பேதபுத்தி உமக்கிருக்கிறது. சுத்த திருஷ்டியுள்ள உம்முடைய புத்ரருக்கு அம்மாதிரியான எண்ணமில்லை" என்று பிரத்யுத்தரஞ் சொன்னார்கள். அப்போர்ப் பட்ட சுகருக்கும், பாண்டுவின் வம்சத்தில் பிறந்த பரீக்ஷித்து மஹாராஜனுக்கும் எப்படி ஸம்வாதம் (பேச்சு) நேர்ந்தது? அதனாலல்லவா இந்த பாகவத கதை வெளிப்பட்டது. இவர் கிருஹஸ்தர்களுடைய வீட்டிற்குப் பிக்ஷைக்காகச் சென்றால் அந்த கிருஹத்தை சுத்தப்படுத்துவதற்காக ஸ்வல்பகாலம் (மாடு கறப்பதற்கு எவ்வளவுகாலம் பிடிக்குமோ அவ்வள காலம்) காத்திருப்பார். இவர் ஒரே இடத்திலிருந்து பாகவத கதையைச் சொன்னது மிக ஆச்சர்யம். ஏ! ஸூதரே! ஜனங்கள் அபிமன்யுவின் புத்ரராகிய பரீக்ஷித்து மஹா ராஜனைப் பாகவதர் (பகவானுடைய பக்தர்கள்)களுக் குட் சிறந்தவராகச் சொல்லுகிறார்கள். அவருடைய பிறப்பு, மிகவும் அத்புதமானது. ஆகையால் அவருடைய சரிதத்தைச் சொல்லவேண்டும். பாண்டவர்களுக்குக் கீர்த்தியை விருத்தி செய்தவரான அந்தச்சக்ரவர்த்தி தமது அளவற்ற ராஜ்யத்தையும், லக்ஷ்யஞ்செய்யாமல், என்ன காரணத்தால் கங்கையின் கரையில் ப்ராயோப

வேசஞ் செய்தார். ஓ! ஸூதரே! சத்ருக்கள் உத்தம வஸ்துக்களை காணிக்கையாக எடுத்துவந்து தங்களுடைய க்ஷேமத்திற்காக அவருடைய பாதபீடத்தை (கால் வைத்துக்கொள்ளும் ஆஸனம்) நமஸ்கரிக்கிறார்களோ அவ்வளவு பராக்ரமமுள்ள மஹாராஜன் யௌவனமுள்ளவராயினும், ஒழிக்கமுடியாத பணத்தின் ஆசையையும், ப்ராணனிடத்திலுள்ள அபிமானத்தையும், விடவேண்டுமென்று எப்படி விரும்பினார்? உத்தமச்லோகராகிய பகவானிடத்திலேயே ,மனத்தைச் செலுத்தியவர்கள், லோகத்திற்கு க்ஷேமம், ஐச்வர்யம் இவைகளை உண்டுபண்ணுவதற்காக ஜீவிக்கிறார்களே தவிர சொந்தமான கார்யத்திற்காகவல்ல. ஆகையால் இந்த அரசன், சரீரத்தைவிட விரும்பிய காரணம் யாது? (பிறருக்கு உபயோகமான சரீரத்தை தான் கெடுப்பது ந்யாயமல்லவென்பது கருத்து) வேதத்தின் அர்த்தம் தவிர இதிஹாஸ புராணங்களின் அர்த்தங்களைச் சொல்வதில் மிக்க ஸாமர்த்யமுள்ள வரென்று உங்களை நினைக்கிறேன். ஆகையால் என்னால் கேட்கப்பட்ட எல்லா விஷயங்களையும் சொல்லவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

14–18 இவற்றைக்கேட்ட ஸூதர் சொல்லத் தொடங்கினார் மூன்றாவது த்வாபரயுகத்தின் கடைசியில் வஸுவின் வீர்யத்திற்குண்டான ஸத்யவதியினிடம், பராசரருக்கு புத்ரனாக அவதரித்த ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அம்சம் இந்த வ்யாஸ மஹாமுனியே. இவர் மஹாயோகி. நடந்தது, நடக்கப்போகிறது இவைகளை அறிந்தவர். அவர் ஒருக்கால் ஸரஸ்வதீ நதிக்கரையில் ஆசமனஞ் செய்து சுத்தராய் ஸூர்யோதய காலத்தில், தாம் தனியாய் உட்கார்ந்து "அறியக்கூடாத

வேகமுள்ள காலமஹிமையால் யுகதர்மங்கள் கலந்து போய்விட்டன. ஜந்து பூதங்களுக்கும் சக்தி குறைந்து விட்டது, ஜனங்களுக்கு ச்ரத்தை, தேஹபலம், ஸத்வகுணம், ஆயுஸ் இவைகளும் குறைந்துபோயின. புத்தியோ கெட்டமார்க்கத்தில் செல்லுகிறது" என்று ஞானக்கண்ணால் பார்த்து எல்லா ஜாதியார்களுக்கும் எல்லா ஆச்ரமிகளுக்கும் என்னசெய்தால் அனுகூலம் உண்டாகுமென்று எல்லோருக்குமுபகாரமான விஷயத்தைச் செய்ய விரும்பி யோசித்தார்.

19–23. வேதத்தில் சொல்லப்பட்டதும், நான்கு ரித்விக்குகளால் முடிக்கக்கூடியதும், சுத்தமானதுமான யாகமே ஜனங்களுக்கு அனுகூலத்தைச் செய்யக்கூடிய தென்று நிச்சயித்து அந்தக் கர்மம் எப்பொழுதும் தொடர்சியாய் நடந்தேறி வருவதற்காக ஒன்றாயிருந்த வேதராசியை நான்காகப் பிரித்தார். மேலும் அந்த நான்கு பாகங்களும் ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வம், என்று பெயர்களுண்டாயின. (பாரதம் முதலிய) இதிகாசங்களும்,(பாகவதம் முதலிய) புராணங்களும், ஐந்தாவது வேதமென்று சொல்லப்படுகின்றன. மேற் காட்டிய 'ரிக்,யஜுஸ், ஸாமம், அதர்வ'என்ற நான்கு வேத சாகைகள் பைலர், வைசம்பாயனர், கவியாகிய ஜைமினி, ஸுமந்து என்கிற மஹர்ஷிகளிடம் முறையே ஒப்புவிக்கப்பட்டன. என்னுடைய பிதாவாகிய ரோம ஹர்ஷணரிடம் இதிஹாஸங்களும், புராணங்களும், கொடுக்கப்பட்டன. மேற்சொல்லிய மஹர்ஷிகளே தங்கள் தங்களுடைய வேதசாகைகளை பல வகையாகப் பிரித்தார்கள். அவைகள் அல்ப புத்தியுள்ள இக்காலத்து ஜனங்களால் அத்யயனஞ் செய்யப்படுகின்றன. அவர்கள் தங்கள் தங்கள் சிஷ்யர்களுக்கும் அத்யயனஞ்

செய்வித்து, அவைகளை உலகத்திற் பரவச் செய்தார்கள். யார் யார் எந்த எந்த சாகைகளை அத்யயனஞ் செய்தார் களோ, அவர்வர்களுக்கு அந்த அந்த சாகைகள் சொந்தமாயின.

24–32. தீனர்களிடத்தில் ப்ரீதியுள்ள பகவானாகிய வ்யாஸ மஹர்ஷியால் இப்படி வேதங்கள் பிரிக்கப் பட்டன. ப்ராஹ்மணர், க்ஷத்ரியர், வைச்யர் ஆகிய இவர்களுக்குள், அதமர்களாகிய த்விஜபந்துக்களுக்கும், ஸ்திரீகளுக்கும், சூத்ரர்களுக்கும், வேதத்தைக் கேட்க அதிகாரமில்லாததனால், அவர்கள் இதிஹாஸத்தால் க்ஷேமத்தை யடையட்டுமென்னுங் கருணையால், வ்யாஸமஹர்ஷி மஹா பாரதம் என்ற க்ரந்தத்தைச் செய்தார். ஓ! ப்ராஹ்மணர்களே, இப்படி எப்பொழுதும் எல்லாப் பிராணிகளுக்கும் க்ஷேமத்தை செய்வதிலேயே நோக்கமுள்ள அந்த மஹர்ஷியானவர் எல்லாவற்றையு மறிந்தவராயிருந்தும் அவருடைய மனத்திற்கு சாந்தி உண்டாகவில்லை; அதனால் அவர் ஸந்தோஷமில்லா மல் ஸரஸ்வதி நதியின் சுத்தமான கரையில் தாம் ஒருவராயிருந்து யோஜித்து பின்வருமாறு சொல்லலா னார். "நான் வ்ரதமுள்ளவனாய் வேதங்களை அத்யயனஞ் செய்தேன். குருக்களையும், அக்னியையும் பூஜித்தேன். ஆசார்யனுடைய கட்டளையின்படி கபடமற்று நடந்தேன். பாரதமென்ற வ்யாஜத்தால், வேதத்தின் அர்த்தத்தை எல்லோருக்கும் தெரியும்படி வெளியிட்டேன். அதில் ஸ்திரீகளாலும், சூத்ரர்களாலும், அறியக்கூடியவைகளான தர்மங்கள் காட்டப்பட்டன. அப்படியிருந்தும் என்னுடைய ஆத்மா(ஜீவன்) இயற்கையில் பூர்ணனானாலும், ப்ரஹ்மவர்சஸ் உள்ளவர்களுக்குட் சிறந்தவனானாலும், ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை யடையாதவன் போலத் தோற்றுகிறான்.

இதற்கென்ன காரணம்? இது ஆச்சர்யமாயிருக்கிறது ஆனால் பாகவத தர்மங்கள் விஸ்தாரமாக வெளியிடப் படவில்லை. அவைகளில் பரம ஹம்ஸர்களுக்கு மிகவும் ப்ரியமிருக்குமே. அவைகளே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிற்கு ப்ரியமானவைகள், அதனால்தான் நம்முடைய மனத்திற்கு ஆனந்தமுண்டாகவில்லையோ" என்று யோஜித்து ஆத்மாவை சூன்யனாக நினைத்து வருத்தமடைந்தார்.

33. இந்த ஸமயத்தில் ஸரஸ்வதி நதிக்கரையில் இருக்கும் அந்த வ்யாஸமஹர்ஷியின் ஆச்ரமத்திற்கு நாரதர் வந்தார். அப்பொழுது அந்த மஹர்ஷியானவர் தேவர்களால் பூஜிக்கப்பட்ட நாரதரைக் கண்டு எதிர் கொண்டழைத்து சாஸ்த்ரமுறை தவறாமல் அவரைப் பூஜித்தார்.

நோட்டு.

25–3. தீர்க்க– அநேக வர்ஷங்களால் முடிக்கக்கூடிய யாகம்– சந்த் 14– பேத– மூலத்தில் நிர்விகல்பக என்றிருப்பதால் நிச்சய ஞானமுள்ளவர். ஸமதிருக்– மித்ரன். சத்ரு,. மற்றவர் ஆகிய இவர்களிடத்தில் ஸமபுத்தியுள்ளவர். ஏகாந்தமதி– ஜனஸஞ்சாரமற்ற விடத்தில் வஸிப்பதில் ப்ரியமுள்ளவர். மூட–– எல்லாவற்றையும் அறிந்தவராயிருந்தும் தன்னுடைய ஸாமர்த்யத்தை வெளியிடாதவர்– சந்த். 16–விழித்த–– "ஸகல ப்ராணிகளுக்கும் எது ராத்ரியோ, அதில் யோகியானவன் விழித்துக் கொண்டிருக்கிறான்.பகவத் 26–33. மூன்றாவது– மஹாயுகத்தில். 26–28. வேதத்தின்– இவர் ஸூதஜாதி யாகையால் வேதத்தில் இவருக்கு அதிகாரமில்லையென்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–5.

வ்யாஸருக்கு நாரதர் உபதேசித்தது.

பின்பு மிகுந்த கீர்த்தியுள்ளவரும், எப்பொழுதும் வீணையைத் தரித்தவரும், தேவர்ஷியுமான நாரதர் ஸமீபத்தில் ஸுகமாய் உட்கார்ந்திருக்கும் ப்ரஹ்மர்ஷி யாகிய, வ்யாஸமஹர்ஷியை நோக்கி ப்ரஸன்னமுக முள்ளவராய்ப் பின்வருமாறு சொல்லத்துடங்கினார்; "ஓ! மஹா பாக்யமுள்ள பராசர புத்ரரே! உம்முடைய சரீராபிமானியான ஆத்மாவானது (ஜீவன்) அந்தச் சரீரத்தாலும், மனத்திற்கு அபிமானியான ஆத்மா வானது, அந்த மனத்தாலும் ஸந்தோஷப்படுகிறதா? அறியவேண்டிய ஸகல தர்மங்களையும் பூர்ணமாகக் காட்டுவதும், ஆச்சர்யத்தை யுண்டுபண்ணுகிறதுமான மஹா பாரதத்தை விஸ்தாரமாகச் செய்தவர் நீரன்றோ? ஆகையால் விஷயம் யாவும் உமக்குத் தெரிந்திருக்க லாமே. மேலும் நீர் நித்யவஸ்துவாகிய, பரமாத்ம ஸ்வரூபத்தை நன்றாக விசாரித்து அறிந்தவரல்லவா? அப்படியிருந்தும், ஒன்றையும் அறியாதவர் போல ஏன் துக்கிக்கிறீர்?" என்று கேட்டார்.

4–11. இதனைக் கேட்ட வ்யாஸ மஹா முனியானவர், பின்வருமாறு சொல்லத் தொடங்கினார். "தாங்கள் சொன்னவைகள் யாவும் என்னிடம இருக்கின்றன. ஆனாலும் என்மனத்திற்கு ஸந்தோஷம் உண்டாகவில்லை. அதன் காரண மின்னதென்றும் விளங்கவில்லை பரம் (கார்யம்) அபரம் (காரணம்) இவைகளுக்கு அதிபதியும், ஸங்கல்பமாத்ரத்தால் முக்குணங்களைக் கொண்டு ஜகத்தை ஸிருஷ்டிப்பவரும்

அவைகளைக் காப்பாற்றுபவரும் பின்னும் அவைகளை நாசஞ்செய்பவரும், அவைகளில் ஸம்பந்தப் படாதவருமான புராண புருஷனை, நீர் உபாஸித்தவர், ரஹஸ்யங்களான விஷயங்கள் யாவும் தங்களுக்குத் தெரியும். மேலும் நீர் ஸூர்யன்போல மூவுலகத்திலும் ஸஞ்சரிப்பதால் எல்லாவற்றையும் அறிந்தவர். ஸகல ப்ராணிகளினுள்ளில் ஸஞ்சரிக்கிற ப்ராணவாயுபோல எல்லாருடைய புத்தியின் ப்ரவர்த்தியையும் அறிந்தவர். ஆனதுபற்றி ப்ரஹ்ம புத்ரராகிய உம்மைக் கேட்கிறேன் வேதங்களை முறைப்படி அத்யயனஞ்செய்து, அதன் உண்மையான அர்த்தத்தைபறிந்து, வ்ரதங்களை யனுஷ்டித்து, யோகத்தால் ப்ரஹ்மஸ்வரூபத்தையும் அறிந்தேன். அப்படியிருந்தும் எந்தப் பாகம் எனக்கு மிகவும் குறைவாயிருக்கிறதோ அந்த பாகத்தை யுபதேசிக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்தார். அதனைக்கேட்ட நாரதர், வ்யாஸமஹாமுனியை நோக்கி, "இயற்கையில் பரிசுத்தமான பகவானுடைய யசஸ்ஸை, (குணங்களை) வர்ணிப்பதால் பரமாத்மா ஸந்தோஷிப்பார். மற்ற ஞானத்தால் பகவான் திருப்தி அடையமாட்டார்; ஆகையால் தர்மாதி ஞானத்தைக் குறைந்ததாக நினைக்கிறேன். உம்மால் அந்த பகவானுடைய குணங்கள் பெரும்பாலும் முக்யமாக வர்ணிக்கப்படவில்லை. மஹாபாரதம் முதலியவைகளில் ஈச்வரனுடைய குணங்கள் வர்ணிக்க பட்டிருந்தாலும் தர்மங்களையும் அதன் ஸாதனங்களையும், முக்யமாக, மஹர்ஷிகள் ஸ்மிருதிகளில் சொல்லியிருப்பதுபோல, பரமாத்மாவின் மஹிமையையே ப்ரதானமாக நீர் வர்ணிக்கவில்லை. எச்சிற்குழியில் கிடக்கும் சித்ரான்னம் முதலியவைகளைக் காக்கைகள் தின்று திருப்தி அடையுமேயொழிய, மானஸ ஸரஸில் ஸஞ்சரிக்கும்

ஹம்ஸங்கள். அவைகளில் ஆசைப்படுகிறதில்லை. அப்படிப்போல லோகத்தைப் பரிசுத்த படுத்தும் பகவானுடைய மஹிமையை வர்ணிக்காத க்ரந்தங்கள், அற்புதமான பதச்சேர்க்கையுள்ளவைகளானாலும், அவற்றால் காமிகள் ஸந்தோஷப்படுவார்களே யொழிய ப்ரஹ்மிஷ்டர்களான பரமஹம்ஸர்கள் திருப்தியடைகிற தில்லை. ஒவ்வொரு ச்லோகத்திலும் அபசப்தங்கள் இருந்தாலும், நாசமற்றவராகிய பகவானுடைய திவ்ய நாமங்களும், மஹிமையும் வர்ணிக்கபட்டிருந்தால் அந்த க்ரந்தம் ஜனங்களுடைய பாபங்களை போக்கும். அதைச் சொல்பவர்களிருந்தால் பெரியோர்கள் கேட்பார்கள். கேட்பவர்களிருந்தாலும் அவர்கள் சொல்லுவார்கள். இரு வகையாருமில்லாத போது தாமே கானஞ்செய்வார்கள்.

12–22. உபாதிகளின் ஸம்பந்ததத்தை நிவர்த்திக்கும், ப்ரஹ்மஞானமும், பகவத்பக்தியில்லாதவனுக்குப் பலனை (அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தைக்) கொடுக்கிறதில்லை. மேலும் கர்மங்கள் எப்பொழுதும் துக்கரூபங்கங்களே. ஆதலால் பலனையுத்தேசித்துச் செய்யப்பட்டனைகள் ஆனாலும், பலனை யுத்தேசியாமல் செய்யப்பட்டவை களானாலும், பகவானிடம் அர்ப்பிக்கபடாதவரையில் அவைகள் ப்ரகாசிக்கிறதில்லை. ஓ! மஹாபாக்யமுள்ள வ்யாஸமஹர்ஷியே! நீர் உண்மையான ஞானமுள்ளவர்; சுத்தமான கீர்த்தியுள்ளவர்; ஸத்யத்திலேயே ஆசை உள்ளவர்; வ்ரதங்களை யனுஷ்டித்தவர்; ஆகையால் ஸகலபந்தங்களும் நிவர்த்தியாக வேண்டியதற்காகப் பகவானுடைய பலவகையான லீலாவிபூதிகளை ஒரே மனதாகச் சிந்தியும். பகவானுடைய சரித்தில் ஆசையில்லாமல், மற்ற சரிதங்களைச் சொல்ல

விரும்பியவர்களுடைய புத்தியானது தேவதா ரூபங்களையும், அநேக நாமங்களையும், சிந்தித்து நிலைபெறாமல் பெருங்காற்றிலகப்பட்ட கப்பல் போல, ஒரு நிலையாய் இருக்கிறதில்லை. ஜனங்கள் இயற்கையாகவே காம்ய கர்மங்களில் ஆசையுள்ளவர்கள். அந்தக்கர்மங்கள் ஞானிகளால் நிந்திக்கக்கூடியவைகளானாலும் அவைகளை தர்மங்களென்றே சொல்லியிருக்கிறீர். ஆகையால் அவைகளை ப்ராகிருத ஜனங்களும் அப்படியே நினைத்திருக்கிறார்கள். "கர்மங்களாலும், ப்ரஜையாலும், தனத்தாலும், மோக்ஷத்தையடைய முடியாது" என்ற ச்ருதியின்படி காம்ய கர்மங்கள் சிறந்தவைகளல்ல என்று ஞானிகளுடைய வார்த்தையை அக்ஞர்கள் நம்புவதற்கு ந்யாயமில்லாமல் இருக்கிறது. இப்படி நீர் செய்தது, ஒரு பெரிய சாஸ்த்ர விருத்தமான கார்யம். ஆனது பற்றி, காலத்தாலும், தேசத்தாலும், அளவிடக் கூடாத ப்ரபுவின் ஸகலஸ்வரூபத்தை நிவிர்த்தி மார்க்கததைக்கொண்டு வித்வான்தான் தெரிந்து கொள்வான். அது அக்ஞனால் அறிய முடியாது. ஆகையால தேஹம் முதலியவைகளில் அபிமானம் உள்ளவர்களும், ஸத்வம் முதலிய குணங்களால் விஷயத்தில் செல்லுகிறவர்களுமான ப்ராகிருதஜனங் களுக்காகப் பகவானுடைய லீலைகளை வர்ணியும். பின்னும் உலகத்தில் தன் ஜாதிக்கும், ஆச்ரமத்திற்கும் உரியதான தர்மத்தைவிட்டு பகவானுடைய தாமரை மலர் போன்ற பாதங்களை ஸேவித்துக் கொண்டு இருந்தவன் பக்தியின் பயனை அடைவதற்கு முன்னமே பலன் பாதியில் மரணம் அடைந்தாலும், பக்தியின் தொடர்ச்சியற்றுப் போனாலும் அவனுக்கு அந்த

வாஸனையிருக்குமாகையால் ஒரு போதும் அந்த க்ஷேமக்குறைவு நேரிடாது. மேலும் ஈச்வரனிடம் பக்தி செய்யாமல் தன்னுடைய தர்மத்தை நன்றாய் அனுஷ்டித்தாலும் அதனால் என்ன கிடைக்கப்போகிறது? (ஒன்றும் இல்லையென்பது தாத்பர்யம்) ப்ரஹ்மதேவர் முதல் ஸ்தம்பமென்ற புழு வரையில் ஸம்ஸாரத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் எல்லா ப்ராணிகளாலும், எந்தவஸ்து அடையப்படவில்லையோ அதையடைய முயற்சிக்கவேண்டும். எப்படி நாம் விரும்பாமல் இருக்குங்காலத்திலும், துக்கம் நேரிடுகிறதோ அப்படியே விஷயஸுகமும் எந்தவிடத்திலும் அந்த அந்தக்காலத்தில் கர்மத்தின் மஹிமையைக்கொண்டு ஜனங்களால் அடையப்படுகிறது. கர்மத்தை மாத்ர மனுஷ்டித்தவன் ஸம்ஸாரதுக் கத்தையடைவது போல, ஒருவன் பகவத் பக்தி செய்து அந்த ஜன்மாவில் அது பூர்த்தியடையாமல் தாழ்மையான வேறு ஜன்மமடைந்திருந்தாலும் அதில் அவனுக்கு துக்கம் நேரிடுகிறதில்லை பகவானுடைய பாதங்களில் பக்தி செய்தவன் மறுஜன்மத்திலும் அவைகளை மறக்கமாட்டான்; அவைகளுக்கு வசப்படுவான். ஈச்வரனை விட்டு ஜீவன் எப்படி வேறில்லையோ அப்படி ப்ரபஞ்சம் பகவானைவிட வேறில்லை அவரிடமிருந்தே இந்த ஜகத் உண்டானது அவராலேயே காப்பாற்றப்படுகிறது. அந்த பரமாத்மாவை நீரே தெரிந்து கொள்வீர்; ஆனாலும் ஸ்வல்ப பாகத்தைத் தெரிவித்தேன்; வீணாகாத ஞானமுள்ள நீர் பிறப்பில்லாத பரம புருஷனுடைய அம்சமேயாம். மேலும் நீர் இயற்கையில் ஜனனமரணமில் லாதவரானாலும், உலகத்தின் க்ஷேமத்திற்காக சரீரமெடுத்துக் கொண்டீர். ஆகையால்

இவ்விஷயத்தைத் தெரிந்துகொள்ளும். அந்தமஹா மஹிமை பொருந்திய பரம புருஷனுடைய சரிதத்தை வர்ணியும். சாஸ்த்ரங்களைக் கேட்பது (ச்ரவணம்) யாகஞ் செய்தல், குளம், கிணறு, வெட்டுவித்தல், ப்ரியமான வார்த்தை சொல்லுதல், மஹாதானஞ் செய்தல் ஆகிய இவைகளின் பலன் என்னவென்றால் உத்தமச்லோகராகிய பகவானுடைய குணங்களை வர்ணிப்பதேயாம். இதுவே சாச்வதமாகிய பலன். இதற்கு உதாரணமாக என்னுடைய முன்ஜன்ம விருத்தாந்தத்தைச சொல்லுகிறேன்.

23–38. நான் முன்ஜன்மத்தில் ப்ராஹ்மணர் களுடைய வீடுகளில் வேலைசெய்து கொண்டிருந்த சூத்ரஸ்த்ரீயின் புத்ரனாகவிருந்தேன். அப்பொழுது மழைகாலத்தில் ஒரே இடத்தில் வஸிப்பதாகிய சாதுர் மாஸ்யவ்ரதத்தை யனுஷ்டித்த சில ஸன்யாஸிகளுக்கு பால்யத்திலேயே நான் சுச்ரூஷை செய்துவந்தேன். பால்யமுள்ளவனானாலும், விளையாட்டு ஸாமான்களை வைத்துக்கொள்ளாமலும், பால் சாபல்யமில்லாமலும், இந்த்ரியங்களை ஜயித்து அவர்கள் ஏவினதைச் செய்வதிலேயே நோக்கமுள்ளவனாயிருந்தேன். அப்பொழுது ஸமபுத்தியுள்ள அவர்களுக்கு ஸ்வல்ப மாய்ப்பேசும் என்னிடத்தில் கருணையுண்டாயிற்று. ஒருநாள் அவர்கள் புஜித்த பிறகு, பாத்ரத்தில் எஞ்சி இருந்த, அன்னத்தை அவர்களுடைய அனுமதியின் பேரில் நான் புஜித்தேன். அதனால் ஸகல பாபங்களும் நிவர்த்தியாகிச் சுத்தனானேன். இப்படிச் சித்தம் சுத்தமான போது, அவர்கள் அனுஷ்டிக்கும் பகவத் பக்தியாகிய தர்மத்திலேயே எனக்கு ப்ரியம் நேர்ந்தது அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய லீலைகளைக்

கானஞ் செய்துகொண்டிருந்தார்கள். இனியவைகளான அவைகளை நான் எப்பொழுதும் அந்தரங்க ப்ரியத்துடன் கேட்டேன். அதனால் எனக்கு பக்தி அதிகரித்தது. அதிலேயே விசேஷ நோக்கமுள்ள எனக்குப் பகவானிடம் ஸ்திரமான பக்தியுண்டானதால், அப்பொழுதே பரப்ரஹ்மமானது ப்ரபஞ்ச ஸம்பந்த மற்றதென்றும், அதுவே நானென்றும், என்னிடத்தில் ஸ்தூல ஸூக்ஷ்மசரீரங்கள் அவித்யையால் (பொய்யாக ஆரோ பிக்கப்பட்டனவேயொழிய, உண்மையிலில்லை என்றும் நான் தெரிந்து கொண்டேன். இப்படி மழைகாலம், சரத்காலம் ஆகிய இரண்டு ருதுக்களிலும் மஹாத்மாக்களாகிய, அந்த ஸன்யாஸிகளால் சொல்லப்பட்ட மஹாவிஷ்ணுவின் மஹிமையை மூன்று காலங்களிலும் ச்ரவணஞ்செய்தேன். அதனால் சிறந்த பக்தியுண்டானது மன்றி, ரஜோகுணமும், தமோ குணமும், என்னைவிட்டு விலகின. அவர்களுக்குச் சுச்ரூஷை செய்வதிலேயே ஆசையுள்ளவனும், வணக்கமுள்ளவனும், பாப மில்லாதவனும், ச்ரத்தை யுள்ளவனும், இந்த்ரியங்கள் ஜயித்தவனும், பால்ய வயதுள்ளவனும், எப்பொழுதும் கூடவே ஸஞ்சரிப்பவனுமாகிய எனக்கு அந்த முனிவர்கள் தீனர்களிடத்தில் ப்ரீதியுள்ளவர்களாகையால் விச்வரூபயாத்ரைக்கு முன்னிலையில், ப்ரஹ்ம வித்தையை யுபதேசித்தார்கள். அது மிகவும் ரஹஸ்ய மானது. ஈச்வரனால் நேரில் சொல்லப்பட்டது. அதனால் நான் ஸகல ப்ரபஞ்சங்களையும் ஸிருஷ்டிக்கும் வாஸு தேவராகிய பகவானுடைய மாயாமஹிமையைத் தெரிந்துகொண்டதுமன்றி அவருடைய பதத்தை அடையும் ஸாதனத்தையும் தெரிந்து கொண்டேன். ஓ! நன்றாய் வ்ரதங்களையனுஷ்டித்த ப்ராஹ்மணோத்தம!

வ்யாதியையுண்டுபண்ணும் த்ரவ்யங்கள், வேறு பதார்த்தத்தின் சேர்க்கையால் ரோகத்தை நிவர்த்திப்பது போல, கர்மமானது ஸம்ஸாரமாகிய வ்யாதியைக் கொடுக்கக்கூடியதானாலும், பரமாத்மாவிடம் ஸமர்ப்பிக்கப் பட்டால், அது முவ்வகையான தாபங் களையும் போக்குகிறது என்ற தர்மரஹஸ்யத்தையும், அவர்கள் எனக்கு உபதேசித்தார்கள். கர்மயோகங்கள் எல்லாம், ஸம்ஸாரத்தைக் கொடுக்கின்றவைகள் ஆனாலும், மேற்காட்டிய ஈச்வரனுடைய ஸந்தோஷத்திற்காகச் செய்கிறோம் என்ற எண்ணத்துடன் செய்து அவரிடத்தில் ஸமர்ப்பிக்கப்படுமானால் அவை பந்தகங்களாகிறதில்லை. பகவானுடைய ஸந்தோஷ மாகிய பலனை விரும்பிச் செய்யப்படும் கர்மமானது, பக்தியோகத்துடன் கூடிய ஞானத்தை உண்டு பண்ணுகிறது. "எதனைச் செய்கிறாயோ, எதனைப் புஜிக்கிறாயோ, எதனை ஹோமஞ்செய்கிறாயோ, எதனைக்கொடுக்கிறாயோ அதனை என்னிடம் கொடுத்துவிடு" என்ற பகவான் உடைய ஆக்ஞையின்படி பெரியோர்கள் கர்மங்களைச் செய்கிறார்கள். கிருஷ்ணனுடைய கல்யாண குணங்களையும், திவ்ய நாமங்களையும், வாக்கினால் உச்சரிக்கிறார்கள் அவரை த்யானஞ்செய்கிறார்கள். பக்தியோகத்தால் நல்ல ஞானமுள்ள புருஷனானவன்" வஸுதேவருடைய புத்ரராயும், ப்ரத்யும்னராயும், அனிருத்தராயும், ஸங்கர்ஷண மூர்த்தியாயுமிருக்கும் பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறோம்" என்று த்யானஞ்செய்து, யக்ஞபுருஷனாகிய பகவானை உபாஸிக்கிறான். அந்த ஈச்வரனுக்கு மேற்காட்டிய மந்த்ரத்தால் குறிக்கப்பட்ட சரீரத்தை விட வேறு சரீரமில்லை.

39–40 பகவானுடைய கட்டளைப்படி நடந்த

எனக்கு, அந்தப் பகவான், தம்முடைய ஞானம் முதலிய வைகளுக்குச் சமமான ஞானத்தையும் ஐச்வர்யத்தையும், தம்மிடத்தில் பக்தியையும் கொடுத்தார். அனேக சாஸ்த்ரங்களைக் குருமுகமாக கேட்ட வ்யாஸரே! ப்ரபுவாகிய பகவானுடைய மஹிமையை நீரும் வர்ணியும். அதனால் வித்வான் களால் அறியவேண்டிய விஷயங்கள் யாவும் உம்மால் அறியப்படும். துக்கத் தினால் வருத்தமடைந்தவர்களுக்கு அதனை நிவர்த்தி செய்யும் உபாயம் இதுவேயொழிய வேறில்லை.

நோட்டு.

28–17. ஆத்மா–சரீரவ்யாதி, மனோவ்யாதி முதலிய துக்கங்களில்லாமல், பகவத் பஜனத்தால் ஸந்தோஷ மடைந்திருக்கிறானா. சந்த். வீர. 21– பாரதம்தேசத்தாலும், காலத்தாலும், அளவிடக்கூடாத பரப்ரஹ்மத்தை விசாரித்தும் அர்த்தத்தாலும், சப்தத்தாலும், மஹத்தான சப்த ப்ரஹ்மமாகிய வேதத்தையும் நன்றாய் விசாரித்திருக்கிறீர். ஆனதால் தாங்கள் பூமியில் அவதரித்ததின் கார்யம் முடிந்து விட்டது. அப்படியி ருந்தும், அவதரித்த கார்யத்தைச் செய்யாதவர்போல் கவலைப்படுகிறீர்.– பரம் –ப்ரஹ்மா, ருத்ரன் இவர்கள். 30–அபரம்– இந்த்ரன் முதலியவர்கள். ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் மேலானவர். வீர. யோகத் தால்– "யாகம், நல்ல ஆசாரம் இந்த்ரிய நிக்ரஹம், பிறருக்கு ஹிம்ஸை செய்யாமலிருப்பது தானம் வேதாத்யயனம் முதலிய கர்மங்களுக்குள் யோகத்தால் ஆத்மாவின் உண்மையை அறிவதே மேலானது"– யாக்ஞ்யவல்க்யஸ்மிருதி அத்புதமான– யமகம் முதலிய சப்தாலங்காரங்களும்,

உத்ப்ரேக்ஷை முதலிய அர்த்தாலங்காரங்களும் பொருந்தியிருந்தாலும். ஸ்ரீத. கானம்– விசேஷ ஆனந்தத்தை உண்டுபண்ணுவதால் கானஞ்செய்கிறார் கள். ஸ்தோத்ரஞ்செய்து பாபங்களைப் போக்கடித்துக் கொள்ளுகிறார்கள். ஸ்ரீத. "பரம ஹம்ஸர்களுக்கு அவை ப்ரியமானவைகள். அவைகளே பகவானுக்கு ப்ரியமானவைகள்." என்றபடி பாகவத தர்மங்களை வர்ணிக்காமலிருக்கும் க்ரந்தங்கள் பரமஹம்ஸர்களால் ஆதரிக்கக்கூடியவையல்லவென்று காட்டப்பட்டது– வீர. நிலைபெறாமல் "ஓ அர்ஜுன! பரமாத்மாவைவிட வேறு ஒன்றுமில்லை என்னும் புத்தியானது ஒருவகையேயாம். அந்த நிச்சயமில்லாதவர்கள் இந்த்ரன, அக்னி முதலிய தேவதைகளைச் சிந்தித்து புத்தியைப் பலவகையாகச் செலுத்துகிறார்கள்." பகவத் கீதை– என்னபலன்? பகவத் பக்தியின்றி தர்மத்தை மாத்ரம் அனுஷ்டிப்பவனிடம் பகவான் ப்ரீதி செய்கிறதில்லை. அதனால் பாபம் நீங்குகிறது மில்லை. அதனால் ஆரம்பித்த கார்யம் பூர்த்தியாகிறது மில்லை ஸ்ரீத. சுற்றி– ஸ்வர்க்கம் முதலிய மேலுலகங் களிலும், பூமி முதலிய கீழ் உலகங்களிலும் ஸஞ்சரிக்கும் ஜனங்கள், அவர்களால் முந்திச் செய்யப்பட்ட பாபபுண்யங்களால் துக்கத்தையும் ஸுகத்தையும் அடைவதுபோல புண்ய பாபங்களைக் கொண்டு மோக்ஷத்தையடைய முடியாதாகையால், அதனை அடைவதற்கு முயற்ச்சிக்கவேண்டும். சந்த்– ப்ரபஞ்சம்– அசையும் பொருள் அசையாப்பொருள் இவைகளடங்கியது. "இந்த ப்ரபஞ்ச முழுவதும் பரப்ரஹ்மம்."–ச்ருதி. ஸ்வல்ப– "நல்ல ஆசார்யர்களை யடைந்த புருஷன் பரமாத்மாவைத் தெரிந்துகொள்ளு கிறான்" ச்ருதி– வ்யாஸரென்ற திவ்யநாமத்துடன் பகவான்

ப்ரகாசிப்பதுபோல ப்ரபஞ்சமென்ற பெயருடனும் அவரே விளங்குகிறார்– சந்த். நான்–பெரியோர் களுடைய சேர்க்கையால் க்ஷேமம் கிடைக்கு மென்பது காட்டப்பட்டது. சாதுர்மாஸ்யம்–ஒவ்வொரு வர்ஷத்தி லும் நான்கு மாஸங்கள் ஸஞ்சாரத்தை நிறுத்தி ஒரே இடத்தில் வஸிக்கவேண்டும் என்று ச்ருதியில் சொல்லியிருக்கிறபடி ஸன்யாசிகள், "வர்ஷக் காலமானது ப்ராணிகள் உண்டாகும் ஸமயமானதால் பெரும்பாலும் மார்க்கங்கள் ஜந்துக்களால் நிறைந்து இருக்கும் ஆகையால் அவர்களுக்கு ஹிம்ஸை நேரிடாமலிருப்பதற்காக நான்கு பக்ஷங்கள் இந்தக் கிராமத்திலேயே வஸிப்பதாக உத்தேத்திருக்கிறோம். உங்களுடைய ஸௌகர்யத்தைத் தெரிவிக்கவேண்டும்." அவர்கள் அப்படிக் கேட்ட ஸன்யாஸியை நோக்கி, தாங்கள் இவ்விடத்திலேயே ஸுகமாய் வஸியுங்கள், எங்களால் கூடிய சுச்ரூஷைச்செய்து நாங்கள் க்ருதார்த்தர்களாக ஆகிவிடுகிறோம்" என்று பதில் சொல்லுவார்கள். பின்பு ஆஷாடமாஸத்திய பூர்ணமி முதல் நான்கு பக்ஷங்கள் ஒரே இடத்தில் போக்குவார்கள். இதுவே சாதுர்மாஸ்ய விரதமெனப்படும். பிறகு ஐந்தாவது பக்ஷத்தின் பிரதமையில் ஸஞ்சாரத்திற்கு ஆரம்பிப்பார்கள். அதுவே விச்வரூப யாத்ரையாகும். புஜித்தேன்–எச்சிலான ஸ்தலத்தை சுத்திசெய்வது முதலியவற்றையுஞ் செய்தேன்.– விஜ. ஆக்ஞை– ச்ருதிகளும் ஸ்மிருதிகளும் பகவானுடைய கட்டளை. ப்ரத்யும்ன– இதுமுதல் இரண்டு ச்லோகங்களால் பகவானுடைய குணங்களையும் நாமங்களையும் ஸ்மரிப்பதும், பலத்தையுத்தேசியாமல் கர்மானுஷ்டா னம் செய்யும் ப்ரகாரங்களும். அப்படிச் செய்பவனே

மேலானவனென்றும் காட்டப்பட்டிருக்கிறது."ஓம் தத்ஸத் என்பது பரப்ரஹ்மத்தை முவ்வகையாக சொல்வதாக ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது" என்று பகவான் சொல்லிருப்பதனால் வாஸுதேவ, ப்ரத்யும்ன, அனிருத்த, ஸங்கர்ஷண இந்த நான்கு ரூபமாய் இருக்கும் பகவானுக்கு நமஸ்காரம் பண்ணுகிறோம் என்பதால் பகவானுடைய திவ்ய நாமத்தை உச்சரிக்கவேண்டிய வகை காட்டப்பட்டது. மூலத்தில் தீமஹி–த்யானம் செய்கிறோம்' என்று இருப்பதால் ப்ரணவ சப்தத்தால் காட்டப்பட்ட அனந்த கல்யாணகுணங்கள் நிறைந்த பகவானைத் த்யானம் பண்ணுகிற ப்ரகாசமும், ரக்ஷிப்பது என்ற அர்த்தமுள்ள ' அவ' என்ற தாதுவிலிருந்து ப்ரணவம் ஏற்பட்டதாகையால் எல்லாரையும் ரக்ஷிப்பதாகிய பரமாத்மாவின் குணமும், மேலும் அந்த ப்ரணவம் அகாரம், உகாரம், மகாரம் இம்மூன்று அக்ஷரங்களால் அமைந்திருப்பதால் எல்லாவற்றிற்கும் பரமாத்மா காரணமென்றும், எல்லாவற்றிற்கும் அதிபதியென்றும் காட்டப்பட்டிருக்கிறது. தவிரவும், வாஸுதேவ என்பதால் பரமாத்மாவானவர் எல்லாவற்றிற்கும் ஆதாரமென்றும், எல்லோருக்கும் அந்தராத்மாவென்றும், ப்ரத்யும்ன என்பதால்,"அவ்விடத்தில ஸூர்யன் ப்ரகாசிக்கிற தில்லை, சந்த்ரனும் நக்ஷத்ரங்களும், மின்னல்களும் அக்னியும் விளங்குகிறதில்லை" என்ற ச்ருதிப்படி நிகரில்லாத ப்ரகாசமுள்ளவர் என்பதும்; அனிருத்த என்பதால் ஸர்வவ்யாபகரென்றும். ஸங்கர்ஷண என்பதால் இந்த்ரியங்களுக்குப் புலப்படாத விஷயங்களைத் தெரிவிப்பவரென்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. வீர ஐச்வர்யம்– அணிமா முதலியவைகள். பக்தி–இடை விடாமல் பகவானை ஸ்மரிப்பது– ஸ்ரீத.

அத்யாயம்–6.

நாரதருடைய முன்ஜன்மம்.

ஸத்யவதியின் புத்ரராகிய வ்யாஸமஹர்ஷியானவர், தேவர்ஷியாகிய நாரதருடைய பிறப்பு, சரிதம், ஆகிய இவைகளைக் கேட்டுப் பின்னும் அவரை நோக்கி ஓ! நாரதரே! உமக்கு ஞானோபதேசஞ் செய்த ஸன்யாஸிகள் சென்றபிறகு, பால்யவயதுள்ளவரான நீர் என்ன செய்தீர்? ப்ரஹ்மதேவருடைய புத்ரரே! அபரவயதில் என்ன செய்துகொண்டிருந்தீர்? தேஹவியோக காலம் நேர்ந்த போது சரீரத்தை எப்படிவிட்டீர்? ஜீவன் ஒரு சரீரத்தைவிட்டு மற்றொரு சரீரமடைந்தபின் முன் ஜன்மத்தின் விஷயங்கள் காலமஹிமையால் மறந்து போகின்றனவே அப்படிக்கிருக்க முன்காலத்தில் நடந்த விஷயம் எப்படித் தங்கள் ஞாபகத்திலிருக்கிறது? என்றார். அதனைக்கேட்ட நாரதர் வ்யாஸமஹர்ஷியை நோக்கி "எனக்கு ஞானோபதேசஞ்செய்த ஸன்யாஸிகள் தேசாந்தரம் போனபிறகு சிறுவயதுள்ள நான் என்ன செய்தேனென்றால், என் தாயாருக்குக் குழந்தை நானொருவனே; ஆனதுபற்றியும் எனக்கு வேறு கதியில்லாததனாலும் என்னுடைய தாயார் என்னிடம் மிகவும் ப்ரியம் வைத்திருந்தாள். அவள் ஒன்றையும் அறியாதவள்; வேலைசெய்து ஜீவிப்பவள்; மரத்தால் செய்யப்பட்ட ப்ரதிமை மனிதர்களால் ஆட்டி வைக்கப் படுவதுபோல, இந்த ஜனங்கள்யாவும் ஈச்வரனுக்கு ஸ்வாதீனப் பட்டிருக்கிறார்கள். என்தாயார் என்னுடைய யோகக்ஷேமத்தை வஹிக்க விரும்பினவளானாலும் அதை நடத்த ஸாமர்த்யமற்றவளாக விருந்தாள். திக்கு, தேசம், காலம் ஆகிய இவைகளின் பிரிவையறியாத ஐந்து வயதுள்ள சிறுவனாகிய நான்மாத்ரு ஸ்நேஹத்தா

அந்த ப்ராஹ்மண கிருஹத்திலேயே வஸித்தேன். ஒருநாள் ராத்ரி என் தாயார் மாடு கறப்பதற்காக வீட்டிற்கு வெளியே வரும்போது ஒருபாம்பைக் காலால் மிதித்தாள். அப்பொழுது அனாதையான அவளை அந்தஸர்ப்பம் காலனால் தூண்டப்பட்டு கடித்தது. உடனே அவள் மரணமடைந்தாள். அப்பொழுது நான் "ஈச்வரன் பக்தர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுப்பதி லேயே நோக்கமுள்ளவராகையால் நமக்கு நேர்ந்த மாத்ருதுக்கம் அனுக்ரஹமேயொழிய வேறில்லை என்று நினைத்து வடக்குத்திக்கை நோக்கிப் புறப்பட்டேன். ஸம்பத்துள்ள அனேக தேசங்களையும், கிராமங்களையும், கோகுலங்களையும், ரத்னம் விளையும் பூமிகளையும், பயிரிடுபவர்கள் வஸிக்கும் இடங்களையும், மலையடிவாரங்களையும், பாக்குமரம் முதலியவைகளின் தோட்டங்களையும், தானாக முளைத்த மரங்களிருக்குங் காடுகளையும், மரங்கள் வைத்து விருத்திசெய்யப்பட்ட இடங்களையும், பல வகையான தாதுக்களால் அழகான மலைகளையும், யானைகளால் முறிக்கப்பட்ட கிளைகளுள்ள மரங்களை யும், நல்ல ஜலமுள்ள குளங்களையும், தேவர்கள் ஜலக்ரீடை செய்யும் தாமரஸ ஓடைகளையும், அவைகளிலிருக்கும் அழகான குரலுள்ள பக்ஷிகளையும், தேனீக்களையும், அவைகளால் அலங்கிருதமான தாமரைத்தடாகங்களையும், பார்த்துகொண்டு நான் ஒருவனாக அவைகளைக் கடந்துசென்று, பயங்கரமாகிய ஒரு வனத்தைக் கண்டேன். அது கோரைகளும், மூங்கில்களும், வண்டுகளால் துளைக்கப்பட்ட மூங்கில்களும், நாணல்களும், தர்ப்பங்களும், அடர்ந்து இருப்பதாலும், ஸர்ப்பங்களும், கோட்டான்களும், நரிகளும் வஸிக்குமிடமாயிருந்தாலும் மிகவும் பயங்கர

மாயிருந்தது. அப்பொழுது நான் வெகுதூரம் நடந்த தால், பசி, தாஹமுண்டாகி, அவற்றால் இந்த்ரியங்கள், சரீரம் இவைகளின் வலிமை குறைந்து களைப்படைந் தேன். பின்பு ஒரு நதியின் மடுவில் ஸ்நானஞ்செய்து, ஆசமனம் பண்ணிச்ரமத்தை நிவர்த்தித்துக் கொண்டேன். பின்பு மனிதர்களுடைய ஸஞ்சாரமில்லாத அந்தக் காட்டில் ஒரு அரசமரத்தின்கீழ் உட்கார்ந்து ஸன்யாஸிகளிடம் உபதேசம் பெற்றப்படி ஹிருதயத்தி லிருக்கும் பரமாத்மாவை த்யானஞ் செய்தேன். பகவானுடைய பக்தியால் மனத்தை ஒருவகைப்படுத்தி அவருடைய தாமரை போன்ற பாதத்தை த்யானஞ் செய்யும்போது என்னுடைய இருகண்களிலிருந்து ஆனந்தபாஷ்யம் பெருகியது. அப்பொழுது ஸ்வல்ப காலத்தில் என்னுடைய ஹிருதயத்தில் பகவத் ஸ்வரூபம் ப்ரகாசித்தது ஓ! வ்யாஸ மஹர்ஷியே! விசேஷ ப்ரேமையால் மயிர்க்கூச்சலுண்டாயிற்று. அதனால் மிக்க ஸுகமுள்ளவனாய் ஆனந்த ப்ரவாஹத்தில் மூழ்கி என்னையும் பகவத் ஸ்வரூபத்தையும் மறந்திருந்தேன். இப்படியிருக்க மிக்க அழகுள்ளதும், ஸகல துக்கங்களை யும் போக்கடிக்கக்கூடியதுமான அந்தப்பகவானுடைய ரூபம் மறைந்தது. உடனே அதனைக்காணாமல் மிகவும் மனவருத்தமடைந்து சீக்ரமாக எழுந்திருந்தேன். மறுபடியும் அந்த பகவத் ஸ்வரூபத்தைப் பார்க்கவிரும்பி மனத்தையடக்கி அதே ரூபத்தை ஹிருதயத்தில் த்யானஞ்செய்தேன். அப்படியும் அந்த ரூபம் நேரில் தோன்றவில்லை. ஒரு தடவை பார்த்ததால் த்ருப்தி யுண்டாகாததனால் மனக்கவலையடைந்தேன்.

21–26. இப்படிக் காட்டில் கவலையுடனிருக்கும் என்னை நோக்கி வேதவாக்யங்களுக்கு விஷயமாகாத

பகவான் "ஓ! குழந்தாய்! கர்மம் முதலிய தோஷங்கள் அற்றுப்போகாத யோகிகளால் என்னைப் பார்க்க முடியாது. ஆனதால் இந்த சூத்ர ஜன்மத்தில் நீ என்னைப் பார்க்கத் தகுந்தவனல்ல. ஆனால் ஒரு தரம் என் ரூபத்தைக் காண்பித்த காரணமென்னவெனில்.. ஒரு தரம் என் ரூபத்தைப் பார்த்தவனுக்குப் பின்னும் பார்க்கவேணுமென்ற எண்ணம் உண்டாகும். அதனால் என்னிடமே மனத்தைச் செலுத்தியவர்களுக்கு ஸகல மனோதோஷங்களும் நிவர்த்தியாய் விடுகின்றன. வெகுகாலம் ஸாதுக்களுக்குச் சுச்ரூஷை செய்ததால் உனக்கு என்னிடத்தில் ஸ்திரமான பக்தியுண்டாயிற்று. ஆனதால் தோஷத்தை யுண்டுபண்ணும் இவ்வுலகத்தை விட்டு என்னுடைய பார்ஷதனாக ஆய்விடுவாய் என்னிடத்தில் உனக்கு உண்டான பக்தியொருபொழு தும் குறையாமலிருக்கும். மேலும் ப்ரளய காலத்திலும் என்னுடைய அனுக்ரஹத்தால் முந்திய ஞாபகம் தவறாமலிருக்கும்" என்று அனுக்ரஹித்தார். இப்படி அனுக்ரஹிக்கப்பட்ட நான் மஹாபூதமாயும், ஆகாச சரீரமுள்ளவரும், எல்லாருக்கும் அதிபதியாயும், எல்லாருக்கும் ஸமீபத்திதலிருப்பவரானாலும், ஒருவராலும் அறியப்படாதவருமான அந்தப் புருஷனுக்கு நமஸ்காரஞ்செய்தேன்.

27–32. பின்பு அனந்த (நாசமற்ற)னுடைய திவ்ய நாமங்களை வெட்கப்படாமல் உச்சரித்துக்கொண்டும் அவரால் செய்யப்பட்ட ரஹஸ்யமான லீலாவிபூதிகளை நினைத்தும் மற்ற ஆசைகளை யொழித்தும், கர்வம், மாத்ஸர்யம் இவைகளை விலக்கிக் காலத்தை எதிர்பார்த்து ஸந்தோஷமாகப் பூமியில் ஸஞ்சரித்தேன். இப்படி ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலேயே மனத்தைச் செலுத்தி,

ஒன்றிலும் பற்றுதலில்லாமல் சுத்த சித்தனாகவிருந்தேன். இப்படிக்கிருக்கையில் சுத்தமான ஆகாசத்தில் மின்ன லுடன் மேகவரிசை தோன்றினாற்போல திடீரென்று மரணகாலம் நேர்ந்தது. அப்பொழுது சுத்தமான அந்தப்பார்ஷத சரீரத்திற்குப் பகவதிச்சைப்படி நான் போகும்போது ப்ராரப்தகர்மம் நசித்து ஐந்து பூதங்களா லேற்பட்டிருந்த பழய சரீரம் கீழேவிழுந்தது. பிறகு நான் இந்த மூவுலகத்தையும் காரணரூபமாய் அடக்கிக் கொண்டு ப்ரளயகாலத்தில் ஸமுத்ர ஜலத்தில் ஸ்ரீ நாராயணன் சயனஞ் செய்துகொண்டிருக்கும்போது, பின்பு அவரிடம் சயனஞ்செய்ய விரும்பிய ப்ரஹ்ம தேவரின் ச்வாஸத்தின் வழியாக அவருடைய ஹிருத யத்தில் ப்ரவேசித்தேன். பிறகு 1000 சதுர்யுகங்கள் கொண்ட ப்ரஹ்மதேவருடைய ராத்ரி முடிந்தவுடன் மறுநாள் காலையில் ப்ரஹ்மதேவர் ஜகத்தை ஸிருஷ்டிக்க யத்தனித்தார். அப்பொழுது அவருடைய இந்த்ரியங்களிலிருந்து மரீசி முதலிய ப்ரஜாபதிகளும் நானும் உண்டானோம். நான் குறைவின்றி ப்ரஹ்மசர்ய விருதங்களையனுஷ்டித்து, மூவுலகத்தில், உள்ளிலும் வெளியிலும் மஹாவிஷ்ணுவின் அனுக்ரஹத்தால் ஒரிடத்திலும் தடையற்ற நடையுள்ளவனாகிச் சஞ்சரிக்கிறேன்.

33–37. தவிரவும், இந்த வீணை ஈச்வரனால் கொடுக்கப்பட்டது. இது ஷட்ஜம் முதலிய ஸ்வரங்களா கிய நாதப்ரஹ்மத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. ஆனதால் மூர்ச்சனை முதலியவைகளுடன் ஸ்ரீ நாராயணனுடைய கதையைக் கானஞ்செய்து கொண்டே ஸஞ்சரிக்கிறேன். பகவானுடைய மஹிமையை நான் கானஞ் செய்யும்போது, ஜகத்தை பரிசுத்தப்

படுத்தும் பாதங்களுள்ளவரும், எல்லோராலும் ப்ரியப் படக்கூடிய லீலைகளுள்ளவருமான பகவான் என்னால் அழைக்கப்பட்டவர் போல என் மனத்தில் வந்திருந்து தர்சனங் கொடுக்கிறார். விஷயத்தில் ஆசையால் அடிக்கடி அவைகளையே கவர்ந்து கொண்டிருக்கும் சித்தமுள்ளவர்களுக்கு பகவானுடைய லீலைகளை வர்ணிப்பதே ஸம்ஸாரஸாகரத்தை தாண்டச்செய்யும் ஓடமென்று நிச்சயிக்கப்படுகிறது. காமம் முதலிய ஆறுவகை சத்துருக்களால் பீடிக்கப்படும் மனது பகவானை ஸேவிப்பதால் சுத்தமாவதுபோல யமம் முதலிய யோக ஸாதனங்களால் சுத்தப்படுகிறதில்லை. தோஷமற்றவரே என்னுடைய பிறப்பு, என்னுடைய சரிதம் முதலிய ரஹஸ்யங்களைப்பற்றி உம்மால் கேட்கப்பட்டவைகளெல்லாவற்றையும் உம்முடைய மனம் ஸந்தோஷப்படும்படி விஸ்தாரமாகச் சொன்னேன் என்று சொன்னார்.

38–39. ஓ! சௌனகர் முதலிய மஹர்ஷிகளே! இப்படி தெய்ச்செயலாய் வந்த நாரதர் ஸத்யவதியின் புத்ரராகிய வ்யாஸருடன் ஸம்பாஷணை செய்து 'நான் போய்வருகிறேன்' என்று சொல்லி வீணையை மீட்டிக்கொண்டே சென்றார். நாரதர் உலகமெங்குஞ் சென்று சார்ங்கமென்ற வில்லைத்தரித்த ஈச்வரனுடைய சரிதத்தை வாக்கினாலும், வீணையைக் கொண்டும் கானஞ்செய்து, ஸகல லோகத்தையும் ஸம்ஸாரதுக்கத் திலிருந்து காப்பாற்றுகிறார்; ஆகையால் இவரே பாக்யசாலி. இது இப்படி இருப்பது ஆச்சரியம்.

நோட்டு.

ஸன்யாஸிகள் மூலத்தில் பிக்ஷுவென்றிருப்பதால்

ஞானபிக்ஷை கொடுப்பவர்களென்று அர்த்தம்– விஜ. யோகம்–இல்லாதவைகளை ஸம்பாதிப்பது. க்ஷேமம்– ஸம்பாதித்தவைகளைக் காப்பாற்றுவது– வீர. தாயார் என்னிடத்தில் மிக்கப்ரியம் வைத்திருந்தபடியால் பெரியோர்கள் பின் நான் போகவில்லை– விஜ. ஸ்நேஹத்தால்– எப்பொழுது இதன் நேஹம் குறையு மென்று எதிர்பார்த்திருந்தேன் ஸ்ரீத. நினைத்து– "எவனையனுக்ரஹிக்க வேண்டுமென்று விரும்புகிறேனோ அவனுடைய பணத்தையும் பந்துக்களையும் நாசஞ் செய்கிறேன்"– ஸ்ருதி. புறப்பட்டேன்– மாதாவிற்கு அபரக்ரியை செய்தபிறகு– விஜ க்ராமங்கள்–"ப்ராஹ்மணர்களும் அவர்களுடைய வேலைக்காரர்களும் வஸிக்குமிடம், அல்லது சூத்ரர்கள் அவர்களுடைய வேலைக்காரர்களும் வஸிக்குமிடம்"– ப்ரகு வேத– எதையடையாமல் வாக்குகள் மனத்துடன் திரும்புகின்றனவோ– ச்ருதி திருப்தி– விஷயத்தில் ஆசையுள்ளவனுக்கு ஒருதடவை விஷயத்தையனுபவித் தால் திருப்தியுண்டாகாததுபோல– வீர. மஹாபூதம்– ரிக்வேதம் முதலியவைகள் இந்த மஹாபூதத்தின் நிச்வாஸமே"– ச்ருதி. காலத்தை– ப்ராரப்த கர்மத்தின் முடிவை– ஸ்ரீத. ப்ரவேசித்தேன்– "ப்ரஹ்மதேவர் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் தேஹத்தில் ப்ரவேசித்து அவருடன் ஒன்றாய் கலந்து யோகநித்ரையை யடைந்தார்"– கூர்மப்புராணம்.1000 சதுர்யுக– மனுஷ்யமானத்தால் 1000 சதுர்யுகமானால் ப்ரஹ்மதேவருக்கு ஒரு பகல் முடியும், அவ்வளவு காலங்களடங்கியது ஒரு ராத்ரியாகும். இம்மாதிரியான பகலும் ராத்ரியும் சேர்ந்தால் ஒருதினம், அப்படி 30 தினங்கள் ஒருமாதமாகும், அப்போர்பட்ட மாஸங்களில் 12 கொண்டது ஒரு வர்ஷம், அப்படி நூறு வர்ஷங்கள்

ப்ரஹ்மதேவருக்கு பரமாயுஸ். இதுவே ப்ராஹ்மமான மெனப்படும். மரீசி– வஸிஷ்டர் முதலிய மஹர்ஷிகளும்– வீர.– வெளியிலும்– கர்மிகள் முவ்வுலகத்திலும் வெளியில் வரமாட்டார்கள், தபஸ், முதலியவைகளால் ப்ரஹ்மலோகத்தை யடைந்தவர்கள். இதற்குள் வருகிறதில்லை. ஸ்ரீத ஈச்வரனால்– ப்ரஹ்மதேவரால் கொடுக்கப்பட்டது– சந்த். மூர்ச்சனை.– ஸ்வரத்தின் ஆரோஹாவரோஹம்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–7.

அர்ஜுனன் அச்வத்தாமாவைச் சிக்ஷித்தது.

சௌனக் மஹர்ஷியானவர், ஸூதரை நோக்கிப் "பிறகு பகவானாகிய வ்யாஸமஹர்ஷி, நாரதருடைய அபிப்பிராயத்தை யறிந்து எதனைச்செய்தார்" என்று கேட்டார்.

2–8. இதனைக்கேட்ட ஸூதர், சௌனகரை நோக்கி ப்ரஹ்ம பத்னியாகிய ஸரஸ்வதி நதியின் மேல் கரையில் 'சமயாப்ராஸம்' என்னும் ஒரு ஆச்ரமமுண்டு. அது மஹர்ஷிகள் யாகஞ் செய்யுமிடம். மேலும் அது இலந்தை மரங்களால் அலங்கரிக்கப்பட்டது. அந்த முக்யமான ஆச்ரமத்தில் வ்யாஸ மஹர்ஷியானவர், ஆசமனஞ்செய்து, சுத்தராய் உட்கார்ந்து, மனத்தை ஒரு வகைப்படுத்தி த்யானஞ்செய்தார். பக்தி யோகத்தால் சுத்தமாயும், ஸ்திரமாயுமுள்ள மனத்தில் புருஷோத்தமனையும், அவரை ஆச்ரயித்த மாயையும் தர்சித்தார். "மேலும் ஜீவன் உண்மையில் மாயையைக் கடந்த ஸ்வரூபமுள்ளவனானாலும், அந்த மாயைக்கு வசப்பட்டு பிரமித்து, தான் முக்குண ஸம்பந்த முள்ளவனென்றும், மாயாகுணங்களால் செய்யப்படும் கார்யங்களைத் தான் செய்வதாக நினைத்துமிருக்கிறான்" என்றும் தெரிந்துகொண்டார். பின்னும் அந்த அனர்த் தத்தை போக்கக்கூடிய பக்தியோகத்தையும் அறிந்தார். பின்னும் அவர் உலகத்திற்கு ஏற்பட்டிற்கும், இவ்வித மான அக்ஞானத்தை நிவர்த்திப்பதற்காக, ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தார். அதனைக் கேட்ட மாத்ரத்தில் பரமபுருஷனாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில்,

ஸ்திரமான பக்தியுண்டாகிறது. அதனால் சோகம் மோஹம், பயம், ஆகிய இவைகள் நிவர்த்தியாகின்றன. மேலும் அவர் தம்மால் செய்யப்பட்ட அந்த ஸம்ஹிதையைப் பரிசோதித்து நிவிர்த்திமார்க்கத்தில் ஆசையுள்ள தம்முடைய குமாரராகிய சுகருக்கு அதை உபதேசித்தார்" என்று சொல்லி முடித்தார்.

9–20. இதனைக்கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஓ ஸூதரே! அந்தச்சுகர் ஒருவிஷயத்திலும் ஆசையில்லாதவர்; நிவிர்த்திமார்க்கத்திலேயே நோக்க முள்ளவர்; ஆத்மாவிடமே ரமிப்பவர்; அப்படியிருக்க அந்தப் பெரிதாகிய க்ரந்தத்தை எதற்காக அவர் அப்யஸித்தார் என்று கேட்டார். அதனைக்கேட்டு ஸூதர் சௌனகரை நோக்கி, "ஓ சௌனகரே! மஹர்ஷிகள், ஆத்மாராமர்களானாலும், பகவத் ஸ்வரூபத்தை நன்றாய் அறிந்தவர்களாகையால் ஸம்சய மற்றவர்களானாலும், க்ரந்தங்களைப் படிப்பதில் ஆசையில்லாதவர்களானாலும், பகவானிடத்தில் பலனை உத்தேசியாமலே பக்திசெய்கிறார்கள், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சரிதங்கள், வைராக்யமடைந்த மனத்தையும் வசப்படுத்திக்கொள்ள ஸாமர்த்யமுள்ள வைகள், ஆனதால் சுகமஹர்ஷி, பகவத் குணங்களில் விசேஷ ஆசையுள்ளவராகி அந்தப் பெரியதாகிய உபாக்யானத்தை அப்யஸித்தார். அவர் வ்யாஸ மஹர்ஷியின் புத்ரர். அவரிடத்தில் விஷ்ணு பக்தர்கள் ப்ரியப்படுவார்கள். ஓ! மஹர்ஷிகளே! பரீக்ஷித் என்ற ராஜரிஷியின் பிறப்பு, அவர்செய்த கார்யங்கள், அவருடைய மரணம், பாண்டவர்களுடைய மஹா ப்ரஸ்தானம், இவைகளை கிருஷ்ணகதையைச் சொல்லு வதற்கு உபயோகமாகச் சொல்லுகிறேன். எப்படியெனில்,

கௌரவர்களும், ஸிருஞ்ஜயர்களும், யுத்தத்தில் அடிக்கப்பட்டு ஸ்வர்க்கமடைந்தார்கள். பீமஸேனன் தன்னுடைய கதாயுதத்தால் துர்யோதனனுடைய துடையை அடித்து முறித்தான். பின்பு "த்ரோணருடைய புத்ரராகிய அச்வஸ்தாமாவென்பவர் த்ரௌபதியின் புத்ரர்களை நாசஞ்செய்வதே தம்முடைய யஜமானாகிய துர்யோதனனுக்கு ப்ரியமான கார்யம்" என்று நினைத்து உபபாண்டவர்கள் தூங்கும் ஸமயத்தில் அவர்களுடைய தலையை வெட்டினார். இது துர்யோதனனுக்கு ப்ரியமன்று. மேலும் அதை எல்லோரும் வெறுக்கக் கூடிய கார்யம் என்று நிந்தித்தார்கள். அப்பொழுது அக்குழந்தைகளுடைய தாயாகிய த்ரௌபதிதேவி புத்ரசோகத்தால் பரிதபித்துக் கண்ணீரைப் பெருக்கி அழுதாள். அந்தஸமயத்தில் அவளை நோக்கி அர்ஜுனன், "ஓ! நல்ல ஸ்வபாவமுள்ளவளே! என்னுடைய காண்டீவத்தில் பாணங்களைத்தொடுத்து அவைகளை ப்ரயோகித்து ப்ராஹ்மணர்களுக்குள், அதமனும், ஆயுத பாணியும் ஆததாயியுமான அச்வஸ்தாமாவினுடைய தலையை உன்னிடம் கொடுத்து உன்னுடைய துக்கத்தை நிவர்த்திக்கிறேன். அந்தத் தலையை ஆஸனமாகச் செய்து புத்ரசோகத்தை போக்கிக்கொள் வாய்" என்று ஸமாதானஞ்செய்தான். இப்படி அழகான வார்த்தைகளைச் சொல்லி ஸமாதானஞ்செய்து தகுந்த முயற்சியுடன் குரு புத்ரராகிய அச்வஸ்தாமாவை அர்ஜுனன் துரத்தினார். அவருக்கு மித்ரரும், ஸாரதியு மாயிருப்பவர் ஸ்ரீ கிருஷ்ணனே. அவருடைய வில் பயங்கரமானது. ரதமோ, ஹனுமத்வஜமுள்ளது. சிசுக்களைக் கொன்றவரான அந்த அச்வஸ்தாமா பின் தொடர்ந்துவரும் அர்ஜுனரை வெகுதூரத்தில் கண்டு பயந்து ப்ராணனைக் காப்பாற்றிக்கொள்ள

வேண்டி, பூமியில் எதுவரையில் போகக்கூடுமோ அதுவரையில் "சிவபெருமானிடத்தில் பயந்து ப்ரஹ்ம தேவர் ஓடியதுபோலத் திரும்பிப்பாராமலே ஓடினார். அப்படியும் தம்மைக் காப்பாற்றக்கூடியவர் கிடைக்காத தனாலும், குதிரைகள் களைத்துப்போனபடியாலும் அவர் ப்ரஹ்மாஸ்த்ரமே தன்னைக் காப்பாற்றுமென்று நினைத்தார். பின்பு ஆசமனஞ்செய்து சுத்தராய், ப்ரயோகித்த அஸ்த்ரத்தைத் திருப்பும் வகையறியாத வராயிருந்தும் ப்ராணனுக்குக் கெடுதி நேரிடும் ஸமயமாகையால் அந்த அஸ்த்ரத்தை ப்ரயோகித்தார்.

21–26. பின்பு எல்லா திக்குகளிலும் அந்த அஸ்த்ரத்தின் தேஜஸ் பரவியது. அதனைக்கண்டு அர்ஜுனன் தம்முயிர்க்குச் சேதம் வந்ததென்று நினைத்து ஸாரதியாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானை நோக்கி "ஓ! கிருஷ்ண! கிருஷ்ண! மிகுந்த பராக்ரம முள்ளவரே! பக்தர்களுக்கு நேரும் பயத்தை நிவர்த்திப் பவரே! ஸம்ஸாரத்தால் கஷ்டப்படும் ஜனங்களுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பவர் தாமொருவரே. நீரே முந்திய புருஷன். நீரே எல்லாவற்றிற்கும் பிரபு. ப்ரகிருதியைக்காட்டிலும் வேறானவர். ஆனந்த ஸ்வரூபத்திலிருப்பவர். நீர் மாயையைக்கடந்தவரானாலும், மாயைக்கு வசப்பட்டு ஸம்ஸாரத்தில் மூழ்கியிருக்கும் ஜனங்களுக்கு தர்மம் முதலிய புருஷார்த்தங்களைக் கொடுக்கிறீர். வேறிடத்தில் மனஸைச் செலுத்தாமல் தம்மையே பஜிப்பவர்கள் இந்த திவ்யமங்கள சரீரத்தை த்யானஞ் செய்கிறார்கள். ஓ! தேவர்களுக்குத்தேவனே! இதோ மிகவும் பயங்கரமான தேஜஸ் எங்கும் பரவிவருகிறதே, இது இன்னதென்று தெரியவில்லை. இதனைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

27–28. அதனைக்கேட்டுக் கிருஷ்ணபகவான் அர்ஜுனனை நோக்கி த்ரோணருடைய புத்ரராகிய அச்வஸ்தாமாவினால் ப்ரஹ்மாஸ்த்ரம் ப்ரயோகிக்கப் பட்டிருக்கிறது. இது அதன் தேஜஸ்ஸை தவிர வேறில்லை அவருக்கு அதனைத் திருப்பி பெற்றுக்கொள்ளும் வழி தெரியாமையால் இதுவரையில் உபயோகிக்காம லிருந்து இப்பொழுது தம் உயிருக்குச் சேதம் வருஞ் சமயமாகையால் தம்மைக்காப்பாற்றிக் கொள்ளவேண்டி அதனை உபயோகித்திருக்கிறார். அதனைத் தடுக்க முடியாது. உனக்கு அந்த ப்ரஹ்மாஸ்த்ரம் நன்றாகத் தெரியுமாகையால் அதனை ப்ரயோகித்து எதிரியின் அஸ்த்ரத்தை நாசஞ்செய் என்றார்.

29–39. இப்படிப் பகவான் சொல்லிய வார்த்தையைக் கேட்டுச் சத்ருக்களைக் கொல்லும் வல்லமையுள்ள அர்ஜுனன் ஆசமனஞ்செய்து, ஸ்ரீ கிருஷ்ணபகவானை ப்ரதக்ஷிணஞ் செய்து எதிரியின் அஸ்த்ரத்தை யடக்குவதற்காக ப்ரஹ்மாஸ்த்ரத்தை ப்ரயோகித்தார். அவ்விரண்டு அஸ்த்ரங்களுடைய தேஜஸ்ஸுகளும், ப்ரளய காலத்தில், அக்னியும், ஸூர்யனும் விருத்தியடைவது போல பூமி, அந்தரிக்ஷம் ஆகிய இவைகளை ஆக்ரமித்து ப்ரகாசித்தன. அவ்விருவர்களுடைய அஸ்த்ரங்களின் தேஜஸானது மூவ்வுலகங்களையும் தஹித்தது, அந்தத் தாபத்தை ஸஹியாமல் ஜனங்கள் இது ப்ரளயகாலத்திய அக்னி என்றே நினைத்தார்கள். அப்பொழுது ப்ரஜைகள் உபத்ரவப்படுகிறதையும், லோகங்களுக்கு நாசம் நேர்ந்ததையும் பார்த்து அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணனுடைய அனுமதிப்படி அந்த இரண்டு அஸ்த்ரங்களையும் உபஸம்ஹரித்தார். பிறகு அச்வஸ்தாமாவின் ஸமீபம் சென்று பசுவை

ரசனையால் கட்டுவது போல் கோபத்தால் சிவந்த கண்களுள்ளவனாகிய கிருபியின் புத்ரரைக்கட்டினார். பின்னுமவரைத் தம்முடைய கூடாரத்திற்குக் கொண்டு போக முயன்றார். அப்பொழுது தாமரைமலர் போன்ற கண்களுள்ள கிருஷ்ணபகவான் மிகுந்தகோபத்துடன் அர்ஜுனனை நோக்கி "ஏ பார்த்த! இவன் ராத்ரியில் தூங்கிக்கொண்டிருந்த யாதொரு அபராதமும் செய்யாத குழந்தைகளைக் கொன்றவன், ப்ராஹ்மணர்களுக்குள் அதமன், ஆனதால் இவனைக் கொல்லவேண்டுமே தவிர காப்பாற்றுவது உசிதமல்ல. மத்யம் முதலியவை களைக் குடித்து மதித்திருப்பவன், அஜாக்ரதையா யிருப்பவன், பயித்யங்கொண்டவன், தூங்குகிறவன், பாலியவயதுள்ளவன், முயற்சிக்காதவன், சரணமென்று வந்தவன், ரதமில்லாதவன் பயந்து ஓடுகிறவன், ஆகிய இம்மாதிரியான சத்ருக்களை தர்மத்தையறிந்தவர்கள் கொல்லமாட்டார்கள். எவன் ப்ராணிகளிடத்தில் தயையில்லாமல் பிறரைக்கொன்று தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ளுகிறானோ அந்த துஷ்டனை சிக்ஷிப்பதே அவனுக்கு க்ஷேமமெனப்படும். தண்டிக்கப் படாதவரையில் பாபம் விலகாது; அதனால் நரகத்தையடைவான். மேலும் த்ரௌபதியின் முன்பாக உன் குழந்தைகளைக் கொன்றவருடைய தலையை உன்னிடம் சேர்ப்பிக்கிறேன்" என்று நான் கேட்டிருக்கும் போது உறுதி செய்திருக்கிறாய். இவன் தன்னுடைய யஜமானனாகிய துர்யோதனனுக்கு இஷ்டமில்லாத கார்யத்தைச் செய்தவன். குலத்திற்கு அபகீர்த்தியை யுண்டு பண்ணினவன்; மிகுந்த பாபீ, ஆததாயீ. உன்னுடைய புத்ரர்களை நரிசஞ்செய்தவன். ஆனதால் இவனைக் கொல்லவேண்டும் என்று (அர்ஜுனனுடைய புத்தியைப் பரிசோதிப்பதற்காகச்) சொன்னார்.

40–41. இம்மாதிரி கிருஷ்ணபகவானால் தூண்டப்பட்டும் மஹாத்மாவாகிய அர்ஜுனன் அச்வஸ்தாமா தமது பின்னைகளைக் கொன்றவரானாலும், குருபுத்ரராகையால் வதஞ் செய்ய இஷ்டப்படவில்லை. பின்பு மித்ரராகிய ஸ்ரீ கிருஷ்ணன் ஸாரத்யஞ் செய்ய அர்ஜுனன் தம்முடைய கூடாரஞ் சேர்ந்து புத்ரநாசத்தால் துக்கிக்கும் த்ரௌபதியை நோக்கி ஓ! த்ரௌபதி! உன்னுடைய புத்ரர்களைக் கொன்றவர் இதோ இருக்கிறார். உன்னிஷ்டப்படி இவருக்குச் சிக்ஷை செய்கிறேன் என்றான்.

42–48. யாகத்தில் கொல்லுவதற்காக யூபத்தில் கட்டப்பட்ட பசுபோல கயிற்றினால் கட்டப்பட்டவரும் கெட்டகார்யம் செய்ததால் தலைகுனிந்தவருமான குரு புத்ரரைக்கண்டு த்ரௌபதியானவள்; நல்ல ஸ்வாபமுள்ளவளாகையால் ஆசார்யருடைய புத்ரரென்று கௌரவத்தாலும், தைன்யமடைந்தவரென்ற தயையாலும் அவருக்கு நமஸ்காரஞ்செய்தாள். பின்னும் பதிவ்ரதையான த்ரௌபதியானவள், அவரைக்கட்டிக் கொண்டு வந்ததை ஸஹியாதவளாகி தன்னுடைய பர்த்தாவை நோக்கி "இவரை விட்டுவிடவேண்டும். இவர் ப்ராஹ்மணர்;தவிரவும் குருபுத்ரராகையால் ஆசார்யர். ரஹஸ்யமந்த்ரங்கள், உபஸம்ஹாரம், ப்ரயோகம் ஆகிய இவைகளுடன் எல்லா அஸ்த்ரங்களையும் இவருடைய பிதாவான த்ரோணரிடமிருந்து தாங்கள் அப்யஸித்தீர்கள். அவரே புத்ரரூபியாக இருக்கிறார். அதனால்தான் சூரனாகிய புத்ரனை அடைந்த கிருபியானவள் த்ரோணருடைய பாதிசரீரமாயிருந்தும் அவருடன் உடன்கட்டையேறவில்லை. தாங்கள் ஸகலதர்மங்களையும் அறிந்தவர்கள்; மிகுந்த பாக்யமுள்ளவர்கள்; ஆதலால் ஆசார்யருடைய

வம்சமானது, துக்கப்படும்படி தாங்கள் செய்வது உசிதமல்ல அது எப்பொழுதும் பூஜிக்கத்தக்கது; நமஸ்கரிக்கக்கூடியது; மேலும் இவரைக்கொன்று விட்டால் இவருடைய மாதாவும், பர்த்தாவையே தைவ மாகக் கொண்டவளுமான கிருபி என்பவள் புத்ர நாசத்தால் நான் வருத்தமடைகிறது போல துக்கப் படுவாளல்லவா? ப்ராஹ்மணவம்சத்திற்குக் கோப முண்டாகும். க்ஷத்ரியர்கள் செய்தார்களேயாகில், அந்த க்ஷத்ரிய வம்சம் பரிவாரங்களுடன் துக்கிக்கும்படி நேரும். ஆதலால் ப்ராஹ்மணகுலத்தால் நம்முடைய க்ஷத்ரிய குலம் எரிக்கப்படவேண்டாம்" என்று சொன்னாள்.

49–50. ஓ! ப்ராஹ்மணர்களே! தர்மத்திற்கொத்ததும், ந்யாய விரோதமில்லாததும், தயையுள்ளதும், கபட மற்றதும், ஸமபுத்தியுடன் சொல்லப்பட்டதும், மேன்மையுள்ளதுமான (பூஜிக்கக்கூடியது)த்ரௌபதியின் வார்த்தையைக் கேட்டு அருகிலிருந்த அரசனாகிய தர்மபுத்ரர், நகுலர், ஸஹதேவர், ஸாத்யகி, அர்ஜுனன், தேவகியின் புத்ரரான கிருஷ்ணபகவான், மற்றவர்கள், ஸ்த்ரீகள் ஆகிய எல்லோரும் அது உசிதமென்று ஒப்புக்கொண்டார்கள்.

51. அப்பொழுது பீமஸேனன் "இவரைக் கொல்வதே அவருக்கு க்ஷேமகரமான கார்யம், இவர் நித்ரை செய்து கொண்டிருக்கும் சிசுக்களை வீணாக வதஞ் செய்தார்; அதனால் இவருக்காவது, இவருடைய யஜமானனாகிய துர்யோதனனுக்காவது, யாதொரு ப்ரயோஜனமுமில்லை." என்று மிகுந்த கோபத்துடன் சொன்னான்.

52–58. மேல்காட்டிய இவர்களுடைய வார்த் தையைக் கேட்டு நான்கு கைகளுள்ள ஸ்ரீகிருஷ்ண பகவான், தம்முடைய மித்ரரத்னமாகிய அர்ஜுனனை நோக்கி "ஓ! அர்ஜுன! ப்ராஹ்மணனைக் கொல்லக் கூடாதென்ற சாஸ்த்ரத்தாலும், ஆததாயியை வதஞ் செய்யலாமென்றும் சாஸ்த்ரமிருப்பதால் அந்த சாஸ்த்ரம் என்னுடைய ஆக்ஞாரூபமாகையாலும் அப்படியே நீ செய்யவேண்டும். தவிரவும் த்ரௌபதியினிடம் உன்னால் செய்யப்பட்ட ப்ரதிக்ஞையையும், நிறை வேற்றவேண்டும்; பீமஸேனனுக்கும், த்ரௌபதிக்கும் எனக்கும் இஷ்டமானதைச் செய் என்று சிரித்துக் கொண்டு ஆக்ஞாபித்தார். இதனைக் கேட்டவுடனே பகவானுடைய அபிப்ராயமின்னதென்று, அர்ஜுனன் தெரிந்துகொண்டு, கத்தியினால் அந்த ப்ராஹ்மண ருடைய தலையிலிருக்கும் ரத்னத்தை மயிர்களுடன் எடுத்துப்பின்பு, கட்டை அவிழ்த்து அவ்விடமிருந்து துரத்தினான். அப்பொழுது அவருக்கு பாலஹத்யாதி தோஷத்தாலும் ஸஹஜமான ரத்னமில்லாததனாலும், தேஜஸ் குறைந்து விட்டது. க்ஷௌரஞ்செய்துவிடுதல், பணத்தை யபஹரித்துக்கொள்ளுதல், இருக்குமிடத்தை விட்டுத் துரத்திவிடுதல், ஆகிய இவைகள் வதத்திற்குச் சமமானவைகள். ப்ராஹ்மணதமர்கள் கொல்லக்கூடிய குற்றஞ்செய்தாலும், அவர்களுக்கு மேற்காட்டிய வதமே யொழிய, தேஹநாசஞ் செய்வது உசிதமல்ல. பின்பு பாண்டுபுத்ரர்கள், த்ரௌபதியுடன் புத்ரசோகமுள்ள வர்களாகி இறந்து போன தம்முடைய பந்துக்களுக்குச் செய்யவேண்டிய தஹனம் முதலிய உத்தர ஸம்ஸாரங்களைச் செய்து முடித்தார்கள்.

நோட்டு.

ப்ரஹ்மபத்னி"– ப்ரஹ்மாவையே தெய்வமாயுடையவள். அல்லது ப்ராஹ்மணர்களால் ஸேவிக்கப்பட்டது– ஸ்ரீத. சம்யா– யாகத்திற்கு உபயோகமான சம்யா என்னும் மரத்தின்கிளை விழுந்தவிடத்தில் ஏற்பட்ட ஆச்ரமம். மஹர்ஷிகளின் ஆஹாரத்திற்கு உபயோகமாகிய இலந்தைப் பழங்களுள்ளதென்பது தாத்பர்யம்.– விஜ. சோகம்–ஈச்வரன் எல்லாவற்றையும் அறிந்தவர். ஸர்வசக்தியுள்ளவர். அவருடைய மாயையால் நிஜரூபத்தை மறந்தவன் ஜீவன். அவனுக்கு பகவத்பக்தியால் ஞானமுண்டாகிறது. அதனால் மோஷத்தையடைகிறான். "ஆனந்தரூபமாகிய சித்சக்தியால் நிறைந்தவர் ஈச்வரன், அவித்யையால் தன்னுடைய உண்மையான ரூபத்தையறியாதவனும், ஸகல துக்கங்களுக்கு இருப்பிடமுமாயிருப்பவனே ஜீவன்," ஸ்வாமி மாயையானது எவருடைய வசத்திலிருக்கிறதோ. அவர் ஈச்வரனெனப்படுகிறார். எவன் அந்த மாயைக்கு வசப்பட்டு கஷ்டப்படுகிறானோ அவன் ஜீவன் என்று சொல்லப்படுகிறான்' ஸம்ஸாரத்திலுண்டான முவ்வகை தாபத்தாலுண்டானது சோகம், சரீரத்தை ஆத்மாவென்று நினைப்படதே மோஹம். நரகம் முதலியவைகளில் உண்டாவது பயம். அவைகளைப் போக்குவது பக்தியெனப்படுகிறது– சந்த். ஆசையில்லாத– நல்ல சிஷ்யனை ஸம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையில்லாதவர்– விஜ. க்ரந்தங்களை– "மோஹத்தால் கலங்கியிருக்கும் உன்னுடைய புத்தியானது எப்பொழுது தெளியுமோ? அப்பொழுது கேட்டது, கேட்கவேண்டியது இவைகளிலிருந்து நிர்வேதத்தையடைவாய்," பகவத்கீதை, பலனை– அனேக

ஜன்மங்களில் பரமாத்மாவை நேரில் பார்த்தவர்களும், முக்தியில் விசேஷ ஆனந்தமுள்ளவர்களுமான சுகர் முதலியவர்களுக்கு பாகவதத்தில் ஆசையுண்டாயிற்று என்பதில் என்ன ஆச்சர்யம்.– விஜ. ஆசையுள்ளவராகி– பகவானுடைய கல்யாணகுணங்கள் யாவும் அனுபவத்தாலேயே அறியக்கூடியவைகள் என்று வேதாந்த சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், ஸ்வாத்யாயத்தால் யோகத்தை அடையவேண்டும், யோகத்தால் ஸ்வாத்யாயமுள்ளவனாக ஆகிறான்' என்றபடி பகவானுடைய குணங்களை வர்ணிக்கும் க்ரந்தத்தை அப்யஸிப்பது அவச்யமேயாம். மேலும் பகவானுடைய அவதாரங்களும், அவைகளின் குணங்களும், பக்தர்களும், அவர்களுடைய குணங்களும், வேதாந்தத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. அவைகள் யாவும் இந்த பாகவதத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறதுமன்றி வேதாந்தத்தில் சொல்லியிருக்கும் குணங்களைவிட அதிகமாக பகவத்குணங்கள் நன்றாகக் காட்டப்பட்டிருக்கின்றன. வீர. அப்யஸித்தார்– பிறருக்குமுபதேசித்தார். விஜ. சிவபெருமானிடம்– பரமசிவன் ப்ரஹ்மதேவருடைய ஐந்தாவது தலையை வெட்டுகிறதற்காக வரும்போது அவர் ஓடினார். ஆர்கியென்று ஒருபாடமுண்டு. அதற்கு பரமசிவனுடைய மூன்றாவது கண்ணின் தேஜஸினால் எரிக்கப்பட்டு பயந்து சனீஸ்வரன் ஓடினார் என்று அர்த்தங்கொள்ளவேண்டும்.–விஜ.

முன்னொருக்கால் ப்ரஹ்மதேவர் தன்னால் ஸிருஷ்டிக்கப்பட்ட ஒரு அப்ஸர ஸ்த்ரீயினிடம் ஆசைப்பட்டு மான்வேஷங்கொண்டு ரமிக்க முயற்சித்தார். அப்பொழுது பரமசிவன் அவரைத்துரத்தினார். அர்க

யென்னும் ஒரு பாடமுண்டு. அதற்கு ஸூர்யன் ஓடியது போலவென்று அர்த்தம். அதாவது வித்யுன்மாலி யென்று ஒரு ராக்ஷஸனிருந்தான். அவனுடைய தபஸினால் பரமசிவன் ஸந்தோஷமடைந்து அவனுக்குத் தங்க விமானமொன்றைக் கொடுத்தார். அவன் அந்த விமானத்திலேறிக் கொண்டு ஸூர்யன் பின்னே போய்க்கொண்டிருந்தான். அப்பொழுது ராக்ஷஸனுடைய விமானத்தின் காந்தியானது, ஸூர்யதேஜஸை விட மேலானதாக விருந்தபடியால் அந்த விமானத்தை உருகிப்போகச்செய்தார். அதனால் பரமசிவன் கோபங் கொண்டு ஸூர்யனை துரத்த ஸூர்யன் பயந்து ஓடினார். அப்பொழுது பரமசிவனுடைய கடும் பார்வையால் ஸூர்யன் எரிக்கப்பட்டு காசியில் விழுந்தார். அவருக்கு இப்பொழுதும் லோலார்கனென்று (அலைந்த ஸூர்யன்) பெயர் வழங்கிவருகிறது. இது வாமனபுராணத்தில் விஸ்தாரமாய் சொல்லப்பட்டிருக் கிறது.– ஸ்ரீத. தக்ஷப்ரஜாபதியானவர் பரமசிவனுக்கு ஹவிர்பாகங்கொடாமல் யாகஞ்செய்ய அப்பொழுது பரமேச்வரன் வீரபத்ரராக அவதரிக்க அவரிடமிருந்து ஓடினார்– வீர. ஆர்கியென்றபாடத்தில்– ஸூர்யனு டைய பிள்ளையாகிய மிருத்யுவானவர் பரமசிவனைக் கண்டு ஓடினார்– சந்த். கிருஷ்ண–பூமியிலுள்ள ஸகல ஜனங்களுக்கும் ஸுகத்தை யுண்டுபண்ணுகிறவர்– ஸ்ரீத. மிகுந்த– மூலத்தில் மஹாபாஹு வென்றிருப்ப தால் க்ஷத்ரியர்களை யுண்டுபண்ணிய கைகளுள்ளவர் என்று காட்டப்பட்டது– வீர. நரகபாபத்தைச்செய்த மனிதர்கள் அதற்குத் தக்கபடி அதனால் சிக்ஷிக்கப் படுவார்களானால் அவர்கள் சுத்தர்களாகி புண்யசாலிகள் போல ஸ்வர்க்கத்தை யடைகிறார்கள்”–ஸ்மிருதி

ஆததாயி– அக்னிவைப்பவன், விஷங்கொடுப்பவன், ஆயுதம்பிடித்தவன், பணம், பூமி, பார்யை இவைகளை யபஹரிப்பவன் ஆகிய ஆறு பெயர்கள். மேல்காட்டிய ஆததாயியை ஆலோசிக்காமலேயே கொன்றுவிடலாம்– ஸ்ரீத. பாதிசரீரம்– “பத்னியென்பவள் பர்த்தாவினுடைய சரீரத்தின் பாதிபாகம்” –ச்ருதி.

♣♣♣♣

அத்யாயம்–8

பகவானைக் குந்தி ஸ்தோத்ரஞ் செய்தது.

பின்பு அந்த பாண்டவர்கள் யுத்தத்தில் இறந்து போன பந்துக்களுக்குத் தர்ப்பணம் (எள்ளுஞ்ஜலமும்) செய்வதற்காக ஸ்ரீ க்ருஷ்ண பகவானுடன் ஸ்த்ரீகளை முன்னிட்டுக்கொண்டு கங்கையின் கரை சேர்ந்தார்கள். மேலும் அவர்கள், அந்தக் கங்கா ஜலத்தில், ஸ்நானஞ் செய்து தர்ப்பணம் பண்ணி, பகவானுடைய பாதத்தி லிருந்து உண்டானதால் பரிசுத்தமாயிருக்கும் அந்தத் தீர்த்தத்தில் பின்னும் ஸ்நானஞ் செய்தார்கள்.

3–11. பிறகு அவ்விடத்தில் தம்முடைய தம்பி களுடன் உட்கார்ந்திருக்கும் தர்மபுத்ரரையும், த்ருதராஷ்டரரையும், புத்ரசோகமுள்ள காந்தாரியையும், குந்தியையும், த்ரௌபதியையும் நோக்கி ஸ்ரீ க்ருஷ்ண பகவானானவர், மஹர்ஷிகளுடன் "பந்துக்கள் மரண மடைந்தார்களென்று நீங்கள் துக்கப்படுவது நியாயமல்ல காலமஹிமையால் ப்ராணிகளுக்கு நேரிடும் நரகம் தடுக்கமுடியாதது என்று ஸமாதான வார்த்தைகளைச் சொல்லி, துர்யோதனனால் அபஹரிக்கப்பட்டிருந்த அஜாதசத்ருவின் (எவ்விடத்திலும் விரோத புத்தி யில்லாதவர்) ராஜ்யத்தை அவருக்கு வசப்படுத்தினார். மேலும் த்ரௌபதிதேவியின் தலைமயிரைப் பிடித்து இழுத்ததால் ஆயுஸ் குறைந்தவர்களான துச்சாஸனன் முதலியவர்களைக் கொல்வித்தார். மஹேந்த்ரனுடைய கீர்த்தியை உபேந்த்ரர் உலகத்தில் பரவச்செய்தது போல முக்ய கல்பங்களுள்ள மூன்று அச்வமேத யாகங்களைச் செய்வித்துப் பரிசுத்தமான அவருடைய

கீர்த்தியை விஸ்தாரப்படுத்தினார். பிறகு வ்யாஸ மஹா முனி முதலியவர்களைப் பூஜித்து அவர்களால் தாம் கொண்டாடப்பட்டு ஸாத்யகி, உத்தவர் முதலானவர் களுடன் பாண்டவர்களுக்குச் சொல்லிக்கொண்டு ரதத்தின் மீதேறி த்வாரகையை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது உத்தரையானவள் மிகவும் பயந்தவளாய் ஸ்ரீ க்ருஷ்ணனிடம் வந்து அவரை நோக்கி "மஹா யோகியே! தேவர்களுக்கும் தேவரே! ஸகல ஜகத்திற்கும் அதிபதியே! என்னைக் காப்பாற்றும். பயத்தை நிவர்த்திப்பவர் நீர் ஒருவரேயொழிய மற்றவைகளெல் லாம் ஒன்றுக்கொன்று பயத்தை யுண்டுபண்ணுகின்றன ஏ நாத! அக்னிபோல் கொதித்துக் கொண்டிருக்கும் எஃகுமுனையுள்ள பாணமானது எனக்கு எதிரில் வருகிறது. அதனால் என் சரீரம் எரிக்கப்பட்டாலும் எனக்கு ஸம்மதம், என் வயிற்றிலிருக்கும் சிசுவுக்கு மாத்ரம் கெடுதி நேரிடாமல் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக்கொண்டாள். பக்தர்களிடம் வாத்ஸல்ய முள்ள பகவான் அதனைக்கேட்டு 'இது பாண்டவர்களை நாசஞ்செய்வதற்காக அஸ்வஸ்தாமாவினால் ப்ரயோகிக்கப்பட்ட அஸ்த்ரம்' என்று நிச்சயித்தார்.

12–37. அப்பொழுது பாண்டவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு எதிரில்வரும் பாணங்களைப் பார்த்து அதனைத் தடுப்பதற்காக சிறந்த அஸ்த்ரங்களை எடுத்தார்கள். ஸ்ரீ பகவான் தம்மிடத்திலேயே மனத்தைச் செலுத்திய பக்த சிரோமணிகளான பாண்டவர்களுக்கு நேர்ந்த விஸனத்தைப் பார்த்து அந்த அஸ்த்ரம் வேறு அஸ்த்ரங்களால் தடுக்க முடியாததாகையால் தம்முடைய ஸுதர்சனமென்ற சக்ரத்தை ப்ரயோகித்து, அதனால் அவர்களை

ரக்ஷித்தார். மேலும் ஸகல ப்ராணிகளிடத்திலும் அந்தர்யாமியாயிருக்கும் யோகேசராகிய அந்த க்ருஷ்ண பரமாத்மாவானவர் விராடபுத்ரியான உத்தரையின் வயிற்றிலிருக்கும் கர்பத்தைத் தம்முடைய மாயையால் மறைத்தார். ஏ சௌனகரே! ப்ரஹ்மாஸ்த்ரமென்பது மற்றவைகளால் தடுக்க கூடியதல்ல. வீணாய்ப் போகாதது. ஆனாலும் விஷ்ணுவின் தேஜஸையடைந்து அடங்கினது. பகவான் மாயையால் ஸிருஷ்டி, பரிபாலனம், ஸம்ஹாரம் ஆகிய இவைகளைச் செய்கிறவராகையாலும், ஸகல ஆச்சர்யரூபியாயிருப்ப தாலும், அவரிடத்தில் மேற்சொல்லிய விஷயத்தை அத்புதமென்று நினைக்கவேண்டாம். இப்படிப் பாண்டவர்கள் பகவானுடைய ஒத்தாசையால் ப்ரஹ்மாஸ்த்ரத்திலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். அப்பொழுது பதிவ்ரதையான குந்திதேவியானவள் த்வாரகா நகரத்திற்கு ப்ரயாணமாயிருக்கும் க்ருஷ்ண பகவானை நோக்கி தன்னுடைய புத்ரர்களுடனும், த்ரௌபதியுடனும், பகவத் ஸ்வரூபத்தை அறியாத வளான நான் எல்லாவற்றிற்கும் முந்தியபுருஷனை நமஸ்கரிக்கிறேன். அவர் ஸகலத்திற்கும் ஈச்வரன். ப்ரகிருதி (மாயை)க்கு மேற்பட்டவர். ஸகலத்திற்கும் மேற்பட்டவர். ஸகலப்ராணிகளாலும் பார்க்கமுடியாத வர். ஆனால் ப்ராணிகளுடைய உள்ளிலும் வெளியிலும் இருப்பவர். மாயையாகிய திரையால் மறைக்கப்பட்டவர். இந்திரியங்களுக்குப் புலப்படாதவர். நாசமில்லாதவர். அந்தப் பரமபுருஷனாகிய நீர், வேஷதாரி(நடன்) போல தேஹாபிமானமுள்ளவர்களால் அறியப்படுகிறீரில்லை. சுத்தசித்தர்களும் மனனம்செய்யும் ஸ்வபாவமுள்ளவர் களுமான பரமஹம்ஸர்களும், உம்முடைய ஸ்வரூபத் தைத் தேடுகிறார்கள். அப்படியிருக்க, ஸ்திரீகளாகிய

நாங்கள் பக்தியோகத்தை யடைவதற்காக உம்மை எப்படி தர்சிப்போம்? க்ருஷ்ணன், வாஸுதேவர், தேவகீநந்தனர் (தேவகியின் புத்ரர்) கோவிந்தர் என்னும் திவ்ய நாமங்களுள்ளவரும், நந்தனென்ற கோபரு (யாதவர்)க்குப் புத்ரரும், தாமரைமலருடன் கூடிய நாபியுள்ளவரும், தாமரஸ புஷ்பமாலையுள்ளவரும், தாமரைமலர் போன்ற கண்கள், கால்கள் ஆகிய இவைகளுள்ளவருமான உமக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். ஏ! ப்ரபுவே! துஷ்டனாகிய கம்ஸனால் துன்பப்படுத்தப் பட்ட தேவகியை எப்படிக் காப்பாற்றினீரோ அப்படியே என்னையும் என்னுடைய புத்ரர்களையும் கூட்டங் கூட்டமாக ஆபத்துக்கள் வந்தாலும், அவைகளிலிருந்து ஸம்ரக்ஷிக்கிறீர் (தமக்கு மாதாவிடமிருக்கும் ப்ரீதியைக் காட்டிலும் என்னிடம் அதிக விச்வாஸமென்பது கருத்து) விஷம், அக்னி, ராக்ஷஸர்கள், அஸத்துக்களுடைய ஸபை, வனவாஸ கஷ்டம், ஒவ்வொரு யுத்தத்திலும் மஹாரதர்களாகிய பீஷ்மர் முதலியவர்களுடைய அஸ்த்ரங்கள், கடைசியாக அச்வத்ஸ்தாமாவின் ப்ரஹ்மாஸ்த்ரம் ஆகிய இவைகளிலிருந்து உம்மால் காப்பாற்றப்பட்டோம். மேலும் துர்யோதனனால் தூண்டப்பட்டு, எங்களை சபிப்பதற்காக வந்த துர்வாஸ மஹாமுனியை ஸகல ஜகத்துடன் திருப்தியடையச் செய்து அவரிடமிருந்தும் காப்பாற்றினீர். நீர் ஸகல ஜகத்திற்கும் குருவாயிருப்பவர், தங்களுடைய தர்சன மானது மோக்ஷத்தை கொடுக்கத்தக்கது, அப்போர்ப்பட்ட உம்முடைய தர்சனம் ஆபத்காலங்களில் கிடைப்பதால் அந்த விபத்து அடிக்கடி வந்தாலும் ஸம்மதம். மேலான குலத்தில் பிறந்திருப்பது, ஐச்வர்யம், சாஸ்த்ரங்களை படித்திருப்பது, அழகு ஆகிய இவைகளால் மிகுந்த கர்வமுள்ள புருஷன் உம்முடைய பெயரை உச்சரிக்க

மாட்டான். தரித்ரனாலேயே அந்த திவ்யநாமதேயம் இடைவிடாமல் சொல்லப்படும். (ஸம்பத் க்ஷேமத்திற்கு விரோதியென்று கருத்து) தங்களுக்கு பக்தர்களே பணம். முக்குணங்களின் வ்ருத்திகள் தங்களிடத்தில் ஸம்பந்தக்கிறதில்லை. நீர் ஆத்மாவிலேயே ரமிப்பவர்; சாந்தர்; மோக்ஷத்தைக்கொடுக்கும் ஸாமர்த்யமுள்ளவர்; இப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரஞ்செய்கிறேன். நீர் தேவகியின் புத்ரரானாலும், ப்ராகிருத சிசுக்கள் போன்றவரல்ல. உம்மைக் காலரென்றும், எல்லாவற்றிற் கும் ஈச்வரரென்றும்; ஆதியந்தமற்ற ப்ரபுவென்றும், எல்லாரிடத்திலும் ஸமமாக ஸஞ்சரிப்பவரென்றும் நான் நினைக்கிறேன். உமக்கு ஓரிடத்திலும் பக்ஷபாத மில்லை. ஜனங்கள் ஒருவருக்கு ஒருவர் சண்டை செய்வதற்கும் நீரே நிமித்தம்; வேறில்லை மேலும் சிலர் விரோதிகளென்றும். சிலர் மித்ரர்களென்றும் பேதபுத்தி உமக்கில்லை. நீர் மனுஷ்ய சரீரமெடுத்து அவர்கள்போல் அபினயஞ் செய்வதால் உம்மிடத்தில் பேதபுத்தி யிருப்பதாகத் தோன்றுகிறதேயொழிய உண்மையிலில்லை. (அனுக்ரஹத்தையாவது நிக்ரஹத் தையாவது செய்கிறதில்லை) தங்களுடைய அபிப்ராயம் ஒருவராலும் அறியமுடியாதது. ஜகத்ருபியாயிருக்கும் ப்ரபுவே! பிறப்பில்லாதவரும், ஒன்றையுஞ்செய்யாதவரும், பரமாத்மாவாக விருப்பவருமான நீர்,வராஹ(பன்றி) மாகியும், மத்ஸ்யமாகியும், வாமனராகியும் அவதரித்தீ ரென்பது பொருந்துமா? அது லோகத்தை அனுஸரித்ததேயொழிய உண்மையில் உமக்கு ஜன்மமில்லை. கோகுலத்தில் நந்தருடைய கிரஹத்தில், தயிர்பானையை உடைத்ததற்காக யசோதை, உம்மைக் கட்டுவதற்கு கயிற்றை எடுத்தாளல்லவா? அப்போது நீர் கண்களிலிருந்த மை கரையும்படி கண்ணீரைப்

பெருகிக் கொண்டு கலங்கிய கண்களுள்ளவராய்த் தலைகுனிந்து மிகவும் பயந்தவர் போல் அபினயஞ் செய்தீரல்லவா? அது எனக்கு மோஹத்தை யுண்டு பண்ணுகிறது. உண்மையில் ஜனனம், மரணம் முதலியவைகளும் உம்மிடமிருந்து பயப்படுகிறது. உம்முடைய சரிதம் ஜகத்திற்கு மோஹகரமாகையால் உம்முடைய ஜன்மங்களைப் பலவகையாய்ப் பெரியோர் கள் சொல்லுகிறார்கள். அதாவது "புண்ய ச்லோகராகிய யதுவின் கீர்த்தியை விருத்தி செய்வதற்காக அவருடைய வம்சத்தில், மலயபர்வதத்தை கௌரவப் படுத்துவதற்கு, அதில் சந்தனவிருக்ஷம் முளைத்தது போல் அவதரித்தீர்" என்று சிலர் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் "வஸுதேவர், தேவகி இவர்களால் ப்ரார்த்திக்கப்பட்டு உண்மையில் பிறப்பில்லாதவரானா லும், தேவ விரோதிகளை நாசஞ்செய்து இவ்வுலகத் திற்கு க்ஷேமத்தை யுண்டுபண்ணுவதற்காக தேவகியின் புத்ரராக அவதரித்தீர்" என்று கூறுகிறார்கள். மற்றுஞ் சிலர் "பூமியில் துஷ்டர்கள் அதிகமாயிருந்த படியால் மிகுந்த பாரத்தால் ஸமுத்ரத்தின் நடுவில் தத்தளிக்குங் கப்பல்போல் கஷ்டப்படும் பூமியின் பாரத்தை நிவர்த்திப்பதற்காக ப்ரஹ்மதேவருடைய வேண்டு கோளின்படி அவதரித்தீர்" என்று சொல்லுகிறார்கள் இன்னுஞ்சிலர் "ஆத்மாவின் ஆனந்த ஸ்வரூபத்தை யறியாமல் தேஹம் முதலியவைகளில் அபிமானம் வைத்துக் கர்மங்களைச் செய்துகொண்டு கஷ்டப்படும் ஜனங்களுக்கு மேற்காட்டிய துக்கத்தை நிவர்த்திக்க வேண்டி கேட்பதற்கும் ஸ்மரிப்பதற்கும் தகுதியான லீலைகளைச் செய்வதற்காக ஜன்மாவை அங்கீகரித்தீர்" என்கிறார்கள். எந்த ஜனங்கள் உம்முடைய சரிதத்தை பிறர்சொல்லக் கேட்கிறார்களோ, தம் வாக்கினால்

உச்சரித்து கானஞ்செய்கிறார்களோ, அடிக்கடி நினைக்கிறார்களோ, நினைத்து ஆனந்தப்படுகிறார்களோ, அவர்கள் பிறப்பு, இறப்பு ஆகிய இவைகளைப் போக்குகிற உம்முடைய பாதங்களை வெகு சீக்ரமாக அடைவார்கள்.

38–44. பக்தர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும் ப்ரபுவே! தங்களிடம் விசேஷ ப்ரியமுள்ளவர் களும், தங்களுக்கு வேலைக்காரர்களுமான எங்களை விட்டுப்போவது உசிதமல்ல துர்யோதனன் முதலிய அரசர்கள் நிமித்தமாக விசேஷ பாபங்கள் செய்த எங்களுக்கு உம்முடைய பாதாரவிந்தத்தைத் தவிர வேறு கதியில்லை. மேலும் இந்த்ரியங்களுக்கு அதிபதி யான ஜீவனில்லாத வரையில் எப்படி நாமரூபங்கள் பயன்படுகிறதில்லையோ அப்படி உம்முடைய ஸான்னித்யமில்லாத வரையில் யாதவர்களுடன் கூடிய பாண்டவர்களாகிய எங்களுடைய கீர்த்தியும், ஸம்பத்தும் பயன்படாதவைகளேயாம். மேலும், எங்களுடைய ராஜ்யத்திற்குட்பட்ட இந்த பூமியானது உம்முடைய பாதங்களிலுள்ள த்வஜரேகை, வஜ்ரரேகை, அங்குசரேகை முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு விளங்குகிறது. நீர் அப்புறம் போனால் இந்தப்பூமி பிரகாசிக்காது. உம்முடைய கடாக்ஷ வீக்ஷண்யத்தால் இந்த தேசத்தில் ஐச்வர்யம் விருத்தியடைகின்றன.செடி கொடி முதலியவைகள் நன்றாய் விருத்தியடைகின்றன. ஓ! ஜகத்பதியே! ஜகத்ரூபியாயிருப்பவரே! ஜகத்தில் அந்தர்யாமியாயிருப்பவரே! பந்துக்களான பாண்டவர் களிடத்திலும், விருஷ்ணிகளிடத்திலும் எனக்கிருக்கும் ஸ்நேஹ(அபிமான)மாகிய பந்தத்தை நிவர்த்தியும். ஓ! மதுரா நகரத்தரசனாகிய க்ருஷ்ணா! கங்கையின்

ப்ரவாஹமானது இடையில் நேரும் விக்னங்களை லக்ஷ்யஞ்செய்யாமல் ஸமுத்ரத்தையே யடைவதுபோல என்னுடைய மனஸும் வேறிடஞ்செல்லாது இடை விடாமல் உம்மையே பஜிக்கும்படி அனுக்ரஹிக்க வேண்டும். ஓ! க்ருஷ்ண! அர்ஜுனனுக்கு மித்ரரே! விருஷ்ணிகளுக்குட் சிறந்தவரே! பூமிக்குக் கெடுதி செய்யும் அரசர்களை நாசஞ் செய்பவரே! குறைவற்ற வீர்யமுள்ளவரே! ஏ கோவிந்த! (காமதேனுவின் ஐச்வர்யத்தை யடைந்தவர்) பசுக்கள், ப்ராஹ்மணர்கள், தேவர்கள் ஆகிய இவர்களின் உபத்ரவத்தை போக்கடிப் பவரே! யோகிகளுக்கு அதிபதியும், ஜகத்திற்கு குருவாயு மிருப்பவரே! பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன் என்று ஸ்தோத்ரம் பண்ணினாள்.

45–46. இந்தப்படி குந்திதேவியால் இனிமையான வாக்யங்களைக் கொண்டு ஸ்தோத்ரஞ் செய்யப்பட்ட பகவான் தம்முடைய ஸகல மஹிமைகளையும் வெளியிட்டு கொஞ்சம் சிரித்து, தமது மாயையால் அவளை ப்ரமிக்கச்செய்தார். பின்பு குந்தியின் ப்ரார்த் தனைப்படி "எப்பொழுதும் என்னிடத்திலுனக்கு ஸ்திரமாக பக்தி இருக்கட்டும்" என்று அனுக்ரஹித்து ஹஸ்தினாபுரஞ் சேர்ந்து அவ்விடத்தில் ஸுபத்ரை முதலிய ஸ்த்ரீகளுக்கு சொல்லிக்கொண்டு தமது பட்டணத்திற்குப் போக முயற்சித்தார். அப்பொழுது இவ்விடத்தில் தாங்கள் சிலகாலம் வஸிக்கவேண்டும் என்று தர்மபுத்ரர் அன்புடன் கேட்டுக்கொள்ள, பகவானும் அதை அங்கீகரித்து அவ்விடத்தில் வஸித்தார்.

47–53. பிறகு பகவானுடைய அபிப்ராயத்தை

அறியாத வ்யாஸமஹர்ஷி முதலியவர்களாலும், அத்புதகார்யங்களைச் செய்யும் க்ருஷ்ண பகவானாலும், பலவகையான இதிஹாஸங்களை கொண்டு தர்மபுத்ரர் ஸமாதானஞ் செய்யப்பட்டும் அதனால் அவருக்கு துக்கம் நீங்கவில்லை. ஓ ப்ராஹ்மணர்களே! தர்ம புத்ரர் யுத்தத்தில் இறந்துபோன பந்துக்களையே நினைத்து, அவிவேகமுள்ளவராய் அபிமானம், மோஹம் என்னும் இவைகளுக்கு வசப்பட்டு பின்வருமாறு சொல்லலானார். 'துராத்மாவாகிய என்னுடைய மனத்தில் ஸ்திரமாயிருக்கும் அறியாத்தன்மை மிகவும் ஆச்சர்யப்படத்தக்கது. நாய், நரி முதலியவைகளுக்குச் சொந்தமான இந்த சரீரத்திற்காக அனேக அக்ஷௌஹிணி ஸைன்யங்களைக் கொன்றேன். பாலர்கள், ப்ராஹ்மணர்கள், மித்ரர்கள், பிதிருவ்யர்கள், ஸஹோதரர்கள், குரு ஆகிய இவர்களுக்கு த்ரோஹஞ்செய்த நான், அனேகவர்ஷங்கள் பாபத்தின் பலனாகிய நரகத்தை அனுபவித்தாலும் ஒருபொழுதும் மோக்ஷத்தையடையப் போகிறதில்லை.யுத்தத்தில் சத்ருக்களைக் கொல்வது அரசர்களுக்கு தர்மமேயொழியப் பாபமில்லை' என்று சாஸ்த்ரத்தில் சொல்லியிருப்பது என் விஷயத்தில் பொருந்தாது. ஏனென்றால் 'அரசன் தன்னுடைய ப்ரஜைகளுக்கு, சத்ருக்களால் உபத்ரவம் நேரிடும்போது, அவர்களைக்கொல்வது ந்யாயம்' என்பது சாஸ்த்ரத்தி னுடைய தாத்பர்யம். துர்யோதனனால், ப்ரஜைகள் காப்பாற்றப்பட்டு ஸுகமாய் வஸிக்கும்போது ராஜ்யமடையவேண்டுமென்ற ஆசையால் மாத்ரம் நான் சண்டைசெய்து பந்துக்களைக் கொன்றேனாகையால், என் புத்திக்கு ஸமாதானமாகவில்லை இப்படிப் புருஷர்களைக்கொன்றதால் அவர்களுடைய பந்துக்களான ஸ்த்ரீகளுக்கும் நான் த்ரோஹஞ் செய்தவனாகிறேன்.

இந்தப் பாபம் க்ரஹஸ்தாச்ரமத்தில் செய்யக்கூடிய ஸத்கர்மங்களால் நிவர்த்தித்துக் கொள்ளமுடியாது. அநேக ப்ராணிகளை (அறியாத்தன்மையால்) கொன்ற தால் நேர்ந்த இந்த பாபத்தை புத்தி பூர்வமாகச் செய்யும் ஹிம்ஸையுள்ள யாகத்தால் நிவர்த்திசெய்து கொள்ளவும் முடியாது. 'கலங்கிய ஜலத்தால் கலங்கிய ஜலத்தை சுத்தப்படுத்த முடியுமா? மத்யத்தால் உண்டான அசுத்தியானது, மத்யத்தால் நிவர்த்தி யாகுமா?' என்று பலவாறாகத் துக்கித்தார்.

நோட்டு

பயத்தை–மிருத்யுவிற்கு வசப்பட்டிருக்கும் மனிதனால் மற்றொருவனை மிருத்யுவினிடமிருந்து காப்பாற்ற முடியாதென்று கருத்து– வீர. அறியாத– பீஷ்மர் மரணமடையப் போகிறார், அதற்காக எல்லோரும் கங்கையின் கரைக்குச் செல்லவேண்டும், அவ்விடத்தில் அவரிடமாக தர்மங்களைக் கேட்கச்செய்து அதனால் தர்மபுத்ரருடைய துக்கத்தைப் போக்கவேண்டுமென்பது பகவானுடைய அபிப்பிராயம்.– ஸ்ரீ த. அக்ஷௌஹிணி– ரதங்கள் 21870, யானைகள் 21801, குதிரைகள் 65610, காலாட்கள் 109350 யாகத்தால்– "எவன் அச்வமேதஞ் செய்து பகவானை பூஜிக்கிறானோ அவன் ப்ரஹ்மஹத் யை முதலிய பாபங்களிலிருந்து விடுபடுகிறான்" என்று ச்ருதியில் சொல்லப்பட்டிருந்தாலும் என்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–9

பீஷ்மர் தர்மம் உரைத்தது.

இப்படி தர்மபுத்ரர் "பந்துக்களுக்கு த்ரோஹஞ் செய்தோமே" என்று பயந்து ஸகல தர்மங்களையும் தெரிந்துகொள்ள விரும்பி பீஷ்மர் வஸிக்கும் குருக்ஷேத்ரம் சென்றார்.

ப்ராஹ்மணர்களே! அப்பொழுது அவருடைய தம்பிகளும், பகவானும், வ்யாஸரும், தௌம்யர் முதலானவர்களும், உத்தமமான குதிரைகள் பூட்டிய ரதங்களிலேறிக்கொண்டு அவர்பின் சென்றார்கள். மேலும் ஸ்ரீ க்ருஷ்ணபகவானும் அர்ஜுனருக்கு ஸாரத்யம் செய்துகொண்டு சென்றார். அவர்களுடைய நடுவில் அந்தத் தர்மபுத்ரர் குஹ்யகர்களால் சூழப்பட்ட குபேரன்போல ப்ரகாசித்தார்.

4–8. அவ்விடத்தில் ஸ்வர்க்கத்திலிருந்து விழுந்திருக்கும் தேவரைப்போல், பூமியில் கிடக்கும் பீஷ்மரைக்கண்டு, பாண்டவர்களும், அவர்களுடைய பரிவாரங்களும், ஸ்ரீ க்ருஷ்ணபகவானும், அவருக்கு நமஸ்காரஞ் செய்தார்கள். அந்த ஸமயத்தில் ஸகல ப்ரஹ்மர்ஷிகளும், சிறந்த தேவர்ஷிகளும், ராஜர்ஷிகளும், அந்தப்பீஷ்மரைப் பார்ப்பதற்காக வந்து கூடினார்கள். மேலும், பர்வதர், நாரதர், தௌம்யர், வ்யாஸபகவான், ப்ரஹதச்வர், பரத்வாஜர், அவருடைய சிஷ்யர்கள், ரேணுகையின் புத்ரராகிய பரசுராமர், வஸிஷ்டர், இந்த்ரப்ரமதர், ச்ருதர், கிருதஸ்மதர், அஸிதர், நக்ஷீவான், கௌதமர், அத்ரி, விச்வாமித்ரர்,

ஸுதர்சனர், காச்யபர், ப்ரஹஸ்பதி, சுகர் முதலிய நிர்மல ஸ்வபாவமுள்ள மற்றவர்களும் தங்கள் தங்கள் சிஷ்யர்களுடன் அவ்விடமே வந்துசேர்ந்தார்கள்.

9–24. தேசத்தையும் காலத்தையும், நன்றாக அறிந்த பீஷ்மர் வந்தவர்களைத் தனியே தெரிந்துகொண்டு மிக்க பாக்யசாலிகளான மஹர்ஷிகளைப் பூஜித்தார். மேலும் ஸமீபத்தில் உட்கார்ந்திருப்பவரும், ஜகதீசரும், மாயையால் சரீரமெடுத்தவருமான ஸ்ரீ க்ருஷ்ண பகவானைப் பார்த்து, அவருடைய மஹிமையை அறிந்தவராகையால், அவரை ஹிருதயத்தில் வைத்து அர்ச்சித்தார். பின்னும் அவர் மிகுந்த வணக்கத்தோடும் ப்ரேமையோடும், பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் பாண்டவர்களைப் பார்த்து அபிமானத்தால் கண்ணீரைப் பெருக்கி அதனால் கண் தெரியாதவராய்ப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினார். "ஏ தர்மபுத்ர! நீங்கள் ப்ராஹ்மணர்களையும் தர்மத்தையும், ஸ்ரீ க்ருஷ்ண பகவானையும் ஆச்ரயித்தவர்களாகவிருந்தும் கஷ்டப்பட்டு ஜீவிப்பது ந்யாயமல்ல இது வெறுக்கக் கூடிய கார்யம். உங்களுடைய பிதாவும் அதிரதருமாகிய பாண்டு மரணமடைந்த பிறகு உங்களுடைய மாதாவாகிய குந்திதேவி பால்யவயதுள்ள குழந்தைகளுடன் அடிக்கடி மிகுந்த கஷ்டத்தை அனுபவித்தாள். மேகங்கள் வாயுவுக்கு வசப்பட்டிருப்பதுபோல, ஜனங்கள் காலத்திற்கு வசப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் உங்களுக்கு நேர்ந்த கஷ்டங்கள் யாவும் அந்தக் காலத்தால் செய்யப்பட்டவைகளேயாம். எந்த பக்ஷத்தில் அரசனாகிய தர்மபுத்ரரும், கதாயுதத்தைக் கையில் பிடித்த பீமஸேனனும் காண்டீவமென்னும் வில்லையுடைய அர்ஜுனனும் இருக்கிறார்களோ, மேலும்

அவர்களுக்கு க்ருஷ்ணபகவான் மித்ரரோ அவ்விடத்திலும் ஆபத்துநேரிட்டதென்பது காலத்தின் மஹிமையேயாம்:

இதோ இருக்கும் க்ருஷ்ண பகவானுடைய எண்ணத்தைத் தெரிந்துகொள்ள ஒருவராலும் முடியாது. கவிகளும், யோகிகளும், இவருடைய ஸ்வரூபத்தை அறிய விரும்பியும், அதை அறியாமல் மோஹிக்கிறார்கள். ஏ! தர்மபுத்ரரே! மேற்சொல்லிய காரணத்தால் 'இவையாவும் ஈச்வரனுக்கு வசப்பட்டவை என்று நிச்சயித்து அந்த ஈச்வரனை அனுஸரித்து அனாதர்களான ப்ரஜைகளைக் காப்பாற்றும்; ஸிருஷ்டிக்கு முந்தியிருந்த புராண புருஷராகிய பகவான் இவர்தான். இவரே நாராயணன் ஆனாலும் தம்முடைய மாயையால் லோகத்தை ப்ரமிக்கச் செய்து கொண்டு (தன் ஸ்வரூபத்தைக் காட்டாமல்) விருஷ்ணிவம்சத்தில் ப்ரகாசிக்கிறார். இவருடைய மஹிமை மிகவும் ரஹஸ்யமானது; அதனைப் பகவானாகிய பரமசிவனும், தேவர்ஷியாகிய நாரதரும், கபிலருமே அறிவார்கள். நீங்கள் இவரை அம்மானுடைய பிள்ளை (அம்மான் சேய்) என்றும் உங்களுடைய இஷ்டப்படி நடப்பவரென்றும், பிரதி உபகாரத்தை எதிர்பாராமல் உபகாரஞ்செய்பவர் என்றும், நினைத்து அவரை மந்த்ரியாகவும், தூதராகவும், ஸாரதியாகவும், ஸ்நேஹவிசேஷத்தால் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அப்படி நினைப்பது அறியாத்தன்மையே. ஸகல ஜகத்ருபியும், ஸமமாயிருப்பவரும், ஒருவராய் விளங்குபவரும், அஹங்காரமில்லாதவரும், ஆசை முதலியவைகளில்லாதவருமான, இந்தப் பகவானுக்கு மேலான கார்யமென்றும், கீழான கார்யமென்றும், தகுதியுடையது

என்றும், வேறுபாடு தோன்றுகிற பேதபுத்தி ஒரிடத்திலும் உண்டாகிறதில்லை. ஆனாலும் இடைவிடாமல் பக்தி செய்பவர்களிடத்தில் இவருக்கு க்ருபை உண்டாகிறது. இப்போது நான் உயிரைவிடஸித்தனாயிருக்கையில், ஸ்ரீ க்ருஷ்ணபகவான் எனக்கு தர்சனங் கொடுப்பதற்காக நேரில் இவ்விடம் வந்திருக்கிறார். ஆகையால் இடைவிடாமல் பக்திசெய்பவர்களிடத்தில் பகவானுக்கு உண்டாகும் க்ருபையை பாருங்கள். மனிதனானவன் தன்னுடைய மனதை பகவானிடத்தில் பக்தியுடன் செலுத்தியும் அவருடைய பெயரையே வாக்கினால் உச்சரித்துக்கொண்டும் சரீரத்தைவிடுவானாகில் அவன் காமங்களாலும் கர்மங்களாலும் பாதிக்கப்படமாட்டான் ஆகையால் தேவர்களுக்கும் தேவரும், சிரிப்பினாலும், சிவந்தகண்களாலும், அழகான முகமுள்ளவரும், த்யானத்திற்கு விஷயமானவரும், நான்கு கைகளுள்ளவருமான பகவான் நானிந்த சரீரத்தை விடுகிறவரையில் என் முன்பு இருக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

25. இதனைக்கேட்டு தர்மபுத்ரர் சரதல்ப (ப்ராணப் படுக்கை)த்தில் படுந்துக் கொண்டிருக்கும் பீஷ்மரை நோக்கி மற்ற மஹர்ஷிகள் கேட்டுக்கொண்டிருக்கும் போது பலவகையான தர்மங்களைச் சொல்லவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

26–28. ஸகல தர்மங்களையு மறிந்தவராகிய பீஷ்மர் மனுஷ்ய ஜாதிக்குப் பொதுவானவைகளும், வர்ணாச்ரமங்களுக்கு உரியவைகளும், வைராக்ய ஸம்பந்தத்தால் ஏற்படும் நிவிருத்தி ரூபமாயும் ஆசையின் ஸம்பந்தத்தால் ஏற்படும் ப்ரவிருத்தி ரூபமாயுமுள்ள

தர்மங்களையும், ராஜதர்மங்கள், தானதர்மங்கள், மோக்ஷதர்மங்கள், ஸ்த்ரீதர்மங்கள், பகவத்தர்மங்கள், ஆகிய இவைகளையும், தனித்தனியாகப் பிரித்துச் சுருக்கமாகவும், விஸ்தாரமாகவும் சொன்னார். மேலும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்களையும், அவைகளை அடைவதற்கு தகுந்த உபாயங்களையும், அனேக இதிஹாஸங்களிலும், உபாக்யானங்களிலும் சொல்லியபடி வர்ணித்தார்.

29–31. இப்படி தர்மங்களை யுபதேசித்துக் கொண்டிருக்கும்போது உத்தராயணம் வந்தது. இஷ்டப்படி மரணமடையச் சக்தியுள்ள யோகியாகிய பீஷ்மரால் தமது மரணத்திற்காக எதிர்பார்க்கப்பட்டிருந்த காலம் இதுவேயாம். அப்பொழுது ஆயிரம் ரதிகர்களைக் காப்பாற்றும் வல்லமையுள்ள பீஷ்மர் மௌனமாக (வார்த்தைகளை அடக்கிக்கொண்டு) ஆதிபுருஷரும், பீதாம்பரத்தை ,தரித்தவரும், நான்கு கைகளுள்ளவரும் எதிரில் உட்கார்ந்திருப்பவருமாகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் ஸகல ஆசைகளையும் ஒழித்து சுத்தமாக விருக்கும் மனத்தை கண்களை மூடிக் கொள்ளாமலேயே செலுத்தினார். மேலும் அவருக்கு இம்மாதிரி பரிசுத்தமாகிய த்யானவிசேஷத்தால் அசுபங்கள் விலகின. பகவானுடைய கருணைநிறைந்த பார்வையால் ஆயுதங்களாலுண்டாகிய காயங்களும் அவற்றின் உபத்திரவமும் நீங்கின. சகல இந்திரியங்களும் பலவிடங்களில் செல்லாமல் ஒருவழிப்பட்டன. பின்னும் ஸாத்வதர்களுக்குட் சிறந்தவரும், ஒப்பற்ற மஹிமையுள்ளவரும் தம்முடைய ஸ்வரூபமான பரமானந்தத்தை யடைந்தவரும், ஸிருஷ்டிக்குக் காரணமாகிய ப்ரகிருதியின் ஸம்பந்தத்தை சிலகாலம் லீலையாக அங்கீகரிப்பவருமான பகவானிடத்தில்

ஒருவித ஆசையுமில்லாத தமது புத்தியைச் செலுத்தினார். இப்படி எல்லாவகையிலும் பகவத் பரராயிருந்து சரீரத்தை விடுகிறவரையில் ஸ்ரீ கிருஷ்ணனை பின்வருமாறு ஸ்தோத்ரஞ் செய்யலானார்.

32–35. "மூவ்வுலகத்திலும் மிகுந்த அழகுள்ளதும், பச்சிலை போல் நீலவர்ணமுள்ளதுமான திவ்யசரீரத்தை யடைந்தவரும், ஸூர்ய கிரணம்போல் பொன்னிறமான வஸ்த்ரத்தை தரித்தவரும், நான்குபுறத்திலும் தொங்கும் சிறந்த தலைமயிர்களால் அழகான முகமுள்ளவரும். அர்ஜுனனுக்கு தோழருமான பகவானிடத்தில் பலனையுத்தேசியாமல் எனக்கு ஸ்திரமான பக்தியுண்டாகட்டும். மேலும் யுத்தத்தில் அர்ஜுனனுக்கு ஸாரத்யஞ் செய்யும்போது குதிரைகள் ஓடியதால் பூமியிலிருந்து கிளம்பிய தூளிகள் எவருடைய தலைமயிரில் படிந்தனவோ, எவருடைய முகம் அப்படிப்பட்ட மயிர்களோடு கூடிய வேர்வை ஜலத்துளிகளால் அலங்கரிக்கப்பட்டதோ, எவருடைய கவசம் என்னுடைய பாணங்களால் மூடப்பட்டு ப்ரகாசித்ததோ, அந்த கிருஷ்ண பகவானிடத்தில் என்னுடைய மனஸானது ரமிக்கட்டும்; பின்னும் எந்த பகவான் தம்முடைய ஸ்நேஹிதனாகிய அர்ஜுனனுடைய வார்த்தையின்படி இரண்டு பக்கத்து ஸைன்யங்களுடைய நடுவில் ரதத்தைச்செலுத்தி சத்ரு ஸைன்னியத்திலிருப்பவர்களனைவரையும் 'இவர் த்ரோணர், இவர் பீஷ்மர், இவர் க்ருபர்' என்று சுட்டிக்காட்டிப் பார்வையாலேயே அவர்களுடைய ஆயுஸைக்குறைத்து, அதனால் அர்ஜுனனுக்கு ஜயத்தை யுண்டுபண்ணினாரோ. அந்த கிருஷ்ணனிடத்திலேயே என் மனம் ஸந்தோஷமடையட்டும்.

36–42. அர்ஜுனன் சத்ரு ஸைன்யத்தில் யுத்தத் திற்கு ஸன்னத்தனாயிருந்த, நான் முதலிய் பந்துக்களைப் பார்த்து இவர்களைக் கொல்வதால் பாபம் நேரிடுமென்ற எண்ணத்துடன் யுத்தஞ்செய்வதில் ஆசையில்லாதவனாக விருக்கும்போது, அவனுக்கு ஆத்மவித்யை யுபதேசித்து, அந்த எண்ணத்தை எவர் மாற்றினாரோ, அந்த பரமபுருஷனுடைய பாகங் களையே என் மனஸ்த்யானிக்கட்டும்; மேலும் ஸ்ரீ கிருஷ்ணன் ஆயுதமெடுக்காமல் யுத்தத்தில் ஒத்தாசை செய்வதாகப் பாண்டவர்களுக்கு ப்ரதிஜ்ஞை செய்தவரானாலும், ஸ்ரீ கிருஷ்ணனை ஆயுதமெடுக்கச் செய்கிறேன் என்று என்னால் செய்யப்பட்ட ப்ரதிஜ் ஞையை நிறைவேற்றுவதற்காக, அர்ஜுனனுடைய ரதத்தைவிட்டுக் கீழே இறங்கி சக்ராயுதத்தை எடுத்துக் கொண்டு யானையைக்கொல்வதற்கு சிங்கம்வந்தாற் போல பூமி அசையும்படியாகவும். மேல்வஸ்த்ரந்தவறி விழும்படியாகவும் வெகு வேகமாயோடி வந்தார். அப்பொழுது நான் சிரித்துக்கொண்டு அவரை பாணங்களாலடித்தேன். அதனால் அவருடைய கவசம் உடைந்தது; சரீரமுழுவதும் ரக்தத்தால் நனைந்தது. அப்பொழுது அர்ஜுனனால் தடுக்கப்பட்டும் அவனை மீறிக்கொண்டு என்னைக் கொல்வதற்காக ஓடிவந்தார். அந்தப் பகவானாகிய முகுந்தரே எனக்குக் கதி. பின்னும் அவர் ஒரு வகையில் குதிரையோட்டுங் கோலையும். மற்றொருகையில் குதிரைகளின் கடிவாளங்களையும் பிடித்து ஸாரதி வேஷம்பூண்டு, அனேக அகார்யங்களைச் செய்தாவது அர்ஜுனனுடைய ரதத்தைக் காப்பாற்றிக்கொண்டிருந்தார். இந்த பகவானைத் தர்சித்ததால் சண்டையில் அடிபட்டு

மரணமடைந்தவர்களனைவரும் பகவத் ஸாரூப்யத்தை அடைந்தார்கள். ஆகையால் மரணமடையும் தசை யிலிருக்கும் என்னுடைய சித்தம் இந்தப் பரம புருஷனிடத்தில் கலந்திருக்கட்டும். மேலும் அழகான நடை, லீலை, சிரிப்பு, ஸ்நேஹமான பார்வை இவை களால் கௌரவப்படுத்தப்பட்டவர்களும், பகவானிடத் திலேயே ஸதா மனதைச் செலுத்தி அவரால் செய்யப்பட்ட லீலைகளை அனுஸரிப்பவர்களுமான கோபஸ்த்ரீகள் வேறு விஷயத்தில் சித்தமில்லாதவர்களாக பகவத் ஸ்வரூபமாகிய பரமானந்த ரூபத்தை யடைந்தார்கள். ஆனதுபற்றி அவரிடமே என்னுடைய சித்தம் வஸிக்கவேண்டும். தவிரவும் தர்மபுத்ரர் ராஜஸூய யாகஞ் செய்தபோது, அநேக முனிவர்களாலும், அரசர்களாலும் நிறைந்த யாகசஸையின்நடுவில் இந்த கிருஷ்ணபகவான் எல்லாராலும் பார்க்கக்கூடிய அத்புத சரீரமுள்ளவராய்ப் ப்ரகாசித்ததுமல்லாமல் எல்லாருக்கும் முந்தி பூஜிக்கப்பட்டார். அந்த புருஷோத்தமனாகிய இவர் என்னுடைய கண்களுக் கெதிரில் ப்ராகாசிக்கிறார். எனக்கு மிகுந்த பாக்யம் கிடைத்தது. இது மிகுந்த ஆச்சர்யம். காற்றானது மூங்கிலை எரிப்பதற்கு அக்னியை யுண்டு பண்ணுவது போல எந்தப்பகவான் பூமியின் பாரத்தைத் துலைப் பதற்காக கௌரவர்களுக்கு இந்த்ரிய சாபல்யத்தை யுண்டுபண்ணினாரோ, பக்தர்களுடைய உபத்ரவத்தை நிவர்த்திக்கும் பாதங்களை யுடையவரும், எதிரிலிருப் பவருமான பகவானை ஹிருதயத்தில் வைத்துக் கொண்டு இந்த மனித சரீரத்தை விட்டுவிடுகிறேன்.

43. ஸூர்யன் ஒருவனானாலும் பார்ப்பவர்களுடைய கண்களின் தோஷத்தால் பலவகையாகத் தோன்றுகிறது

போல பகவான் ஒருவரானாலும், தன்னால் ஸிருஷ்டிக்கப் பட்ட ஒவ்வொரு ப்ராணிகளின் ஹிருதயத்திலும் வெவ்வேறாகத் தோற்றுகிறார். இதற்கு அவித்யையே காரணம் (அதிஷ்டான பேதத்தால் பேதமேயொழிய உண்மையில் பேதமில்லை என்பது கருத்து) என்று தெரிந்துகொண்டேன். பேதபுத்தியும், மோஹமும் நாசமாயின. ஆதியந்தமில்லாத ஆத்ம ஸ்வரூபத்தை அவருடைய கிருபையால் நன்றாய் தெரிந்து கொண்டேன். தன்யனாகிவிட்டேன் என்றார்

44–48. இப்படிச்சொல்லிவிட்டு மனோவ்யாபாரம், வாக்வாயாபாரம், கண்களின் வ்யாபாரம் ஆகிய இவைகளை கிருஷ்ணனிடத்தில் செலுத்தி ச்வாஸத்தை அடக்கி பரமாத்மாவிடம் லயித்தார். அப்பொழுது அவ்விடமிருந்து எல்லோரும் பீஷ்மரானவர் உபாதி ஸம்பந்தமில்லாத பரப்ரஹ்மமாக ஆனதைக்கண்டு ஸாயங்காலத்துப் பறவைகள்போல் மௌனமாய் இருந்தார்கள். அப்பொழுது தேவர்களும், மனிதர்களும் துந்துபி வாத்யங்களை முழக்கினார்கள். அங்கிருந்த அரசர்களுக்குள் ப்ரஹ்மிஷ்டர்கள் ச்லாகித்தார்கள். ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி பெய்தது. பரமாத்ம ஸ்வரூபத்தையடைந்த அந்த பீஷ்மருக்கு உத்ரக்ரியை களை தர்மபுத்ரர்செய்து ஸ்வல்பகாலம் துக்கித்தார் அப்பொழுது மஹர்ஷிகள் மிகுந்த ஸந்தோஷத்துடன் பகவானுடைய ரஹஸ்யமாகிய பெயர்களைச்சொல்லி கிருஷ்ணனை ஸ்தோத்ரம்பண்ணி அவரையே த்யானஞ் செய்துகொண்டு தங்களுடைய ஆச்ரமஞ் சென்றார்கள்.

49–50. பிறகு தர்மபுத்ரர் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடன் ஹஸ்தினா பட்டணம் போய் புத்ரசோகத்தால் துக்கிக்கும் காந்தாரியையும்

த்ருதராஷ்ட்ரராலும், ஸ்ரீ வாஸு தேவராகிய பகவானாலும் அனுமோதிக்கப்பட்டு வம்சபரம் பரையாய் கிடைத்த ராஜ்யத்தை தர்மமாகப் பரிபாலித்தார்.

நோட்டு

தேசத்தை– தான் பாணங்களின் மீது படுத்திருப்பதனால் எதிர்கொண்டழைப்பதற்கும், நமஸ்கரிப்பதற்கும் இது ஸமயமல்லவென்று மனத்தால் பகவானை பூஜித்தார். மித்ரரோ– ஸ்ரீ கிருஷ்ணன் பாண்டவர்களுக்கு மித்ரராயிருந்து காலத்தையே அனுஸரித்திருந்தார் என்று காட்டப்பட்டிருக்கிறது. "த்ரவ்யம், கர்மம், காலம், ஸ்வபாவம், ஜீவனம் ஆகிய இவைகள் பகவானுடைய அனுக்ரஹத்தால் கிடைக்கின்றன. அவருடைய அனுக்ரஹமில்லாதவரையில் மேற்சொல்லியவைகள் மனிதனுக்குக் கிடைக்கலாம்"– வீர. முந்தியிருந்த– ஜகத் ஸிருஷ்டிக்குமுன் ஸத்தாகவே இருந்தது. நாராயணன் ஒருவரே இருந்தார்"– ச்ருதி. பகவான்– பகவான் புருஷன் என்ற சப்தங்கள் சாச்வதராகிய வாஸுதேவரையே குறிக்கின்றன" "ஓ! மைத்ரேய! பகவான் என்ற சப்தமானது பரப்ரஹ்ம மாகிய வாஸுதேவரைச் சொல்லுகிறதேயொழிய மற்றவைகளைச் சொல்லுகிறதில்லை" ஸ்ரீத– ஒருருவாய்– இந்த ஜகத்தில் பரமாத்மாவைக் காட்டிலும் வெவ்வேறான வஸ்துக்களில்லை. அனேக வஸ்துக்களி ருப்பதாகப் பார்ப்பவன் ஸம்ஸாரத்தை யடைகிறான்" எப்பொழுது இவனுக்கு எல்லாம் ஆத்மஸ்வரூபமாகத் தோற்றுகிறதோ அப்பொழுது எதைக் கொண்டு எதைப் பார்க்கப்போகிறான்– நான்கு கை– பீஷ்மருக்கு

நான்கு கைகளுள்ளதாக பகவத் ஸ்வரூபம் ப்ரகாசித்தது. வீர– ஒப்பற்ற மஹிமை– எந்த நிலமையில் வேறுவிஷயத்தைப் பார்க்கமாட்டானோ வேறு விஷயத்தைக் கேட்கிறதில்லையோ அதுவே பூமா எனப்படும்" "மேலும் கீழும் முன்னும் பின்னும் இருபக்கங்களிலும் அவரே இருக்கிறார். காணப்படும் ஜகத் முழுமையும் அவரே" என்ற ச்ருதிகளில் சொல்லிய அனுப்ரவேசஞ் செய்தார். ஒருவராகவிருக்கும் பரமாத்மாவை பலவகையாக நினைக்கிறார்கள்"– ச்ருதி. லயித்தார்– பீஷ்மர் ப்ரஹ்மத்தினிடம் பேதமில்லாமல் கலந்து விட்டாரென்று அர்த்தங் கொள்ளக்கூடாது. "அப்பொழுது ஸத்துடன் சேருகிறான்" என்று ச்ருதியில் சொல்லியபடி ஸம்பந்தித்தார் என்றே அர்த்தம். மேற்காட்டிய ச்ருதியிலும் அபேதமாகக் கலக்கிறான் என்றே சொல்லப்பட்டிருப்பதாய் அர்த்தங்கொள்வோமானால் ஸுஷுப்தியில் பரமாத்மாவிடம் கலந்து ஒன்றாக ஆன ஜீவன் மறுபடி பிரிய ந்யாயமில்லை. மேலும்– அந்தக்கரணரூபமாகிய உபாதி நாசத்தால் அபேதத்தை யடைந்த ஜீவன் விழித்துக்கொள்ளும்போது மேற் காட்டிய உபாதி ஸம்பந்தத்தையடைந்து பரமாத்மா வினிடமிருந்து பிரிகிறான் என்று சொல்லுவதும் பொருந்தாது. மனது ப்ராணனாகிய ப்ரஹ்மத்தினிடம் பறவைபோலக் கட்டுப்பட்டிருப்பதாகச் சுருதியில் சொல்லியிருப்பதால் லயிக்கிறதில்லை– சந்த்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–10

ஸ்ரீ க்ருஷ்ணன் த்வாரகை சென்றது.

இதனைக்கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஓ! ஸூதரே! தர்மசிந்தனையுள்ளவர்களுக்குள் சிறந்த வராகிய தர்மபுத்ரர் ராஜ்யத்தில் ஆசைப்பட்டு யுத்தத்திற்கு வந்தவர்களான துர்யோதனன் முதலிய வர்களைக் கொன்று, தம்முடைய தம்பிகளுடன் ராஜ்யத்தை அடைந்து, மிகுந்த போகங்களை யனுபவித்து ராஜ்யத்தை எப்படி பரிபாலித்தார்? பிறகு எதனைச் செய்தார்? அதைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

2–3. அதைக்கேட்ட ஸூதர் சொல்லத் தொடங்கினார். குரு வம்சமாகிய வனமானது அதிலிருந்து உண்டான கோபமாகிய அக்னியால் எரிக்கப்பட்டபோது, ஸம்ஸார்த்தை விருத்தி செய்பவ ராகிய பகவான் அதை மறுபடியும் முளைக்கச்செய்து (பரீக்ஷித்தைக் காப்பாற்றி) தர்மபுத்ரருக்கு ராஜ்யத்தைக் கொடுத்து மிகுந்த ஆனந்தத்தை யடைந்தார். பின்பு, பீஷ்மருடைய வார்த்தைகளைக் கேட்டதாலும், ஸ்ரீ க்ருஷ்ணனுடைய உபதேசத்தாலும், தர்மபுத்ரருக்கு 'நான் செய்கிறவன்' 'பலனை யனுபவிக்கிறவன்' என்ற மோஹம் நீங்கியது 'ஜகத்தானது பரமேச்வராதீனமே யொழிய ஸ்வதந்த்ரமுள்ளதன்று என்று ஞானமுண்டா யிற்று. அப்படிப்பட்ட தர்மபுத்ரர் நாசமற்றவரான பகவானை மஹேந்த்ரன்போல ஆச்ரயித்து, ஸமுத்ரத் திற்குட்பட்ட பூமியைத் தம்முடைய தம்பிகளுடன் பரிபாலித்தார்.

4–6. ஒருவரிடத்திலும் விரோத புத்தியில்லாத வராகிய தர்மராஜன் அரசு புரிந்து வரும் நாளில் காலத்தில் மழைபெய்தது; பூமியானது ஜனங்களுக்கு வேண்டிய வஸ்துக்களை யுண்டுபண்ணிற்று; பெரிய மடியுள்ள பசுக்கள் பாலால் கொட்டில் முழுவதையும் நனைத்தன. ஆறுகள் பூரணப்ரவாஹ முள்ளவைகளாகி, வயல்களுக்கு ஜலத்தைக்கொடுத்துப் பயிர்களை விருத்திசெய்து வந்தன. ஸமுத்ரம் முத்து முதலிய ரத்னங்களை விசேஷமாக உண்டுபண்ணிற்று. மலைகள் மனோசிலை முதலிய தாதுக்களை விருத்திசெய்தன. எல்லா ருதுக்களிலும் கொடிகள், மரங்கள் ஆகிய இவைகள் பழங்களாலும், புஷ்பங்களாலும் நிறைந் திருந்தன. நெல், பயறு, கடலை, கோதுமை முதலிய தான்யங்களை அவ்வவற்றின் பயிர்கள் விருத்திசெய்தன. மேலும் மனோவ்யாதி, சரீரவ்யாதி, குளிர்ச்சி, உஷ்ணம் இவைகளால் நேரிடும் உபத்ரவம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம், ஆத்யாத்மிகம் ஆகிய முவ்வகை தாபங் களும் ஜனங்களுக்கு ஒருபோதும் நேரிடவேயில்லை.

7–18. அப்பொழுது ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தியானவர், ஹஸ்தினா பட்டணத்தில் சில மாஸங்கள் வஸித்துத் தம்முடைய மித்ரர்களின் துக்கத்தை நிவர்த்தித்து, ஸஹோதரியான ஸுபத்ராதேவிக்கு அதிக ப்ரியத்தை யுண்டுபண்ணி, பின்பு தர்மபுத்ரரைத் தழுவி நமஸ்கரித்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு ரதத்திலேறினார். அப்பொழுது சிலர் பகவானை ஆலிங்கனம் செய்ய நமஸ்கரித்தார்கள். இப்படி பகவான் த்வாரகைக்குப் போக, முயற்சித்ததைப் பார்த்து, ஸுபத்ரை, த்ரௌபதி, குந்தி, உத்தரை, விதுரர், தர்மபுத்ரர், த்ருதராஷ்ட்ரர், யுயுதஸு

(த்ருதராஷ்டருக்கு வைச்யஸ்த்ரியினிடம் பிறந்தவர்) கிருபர், நகுல, ஸஹதேவர்கள், பீமஸேனர், தௌம்யர் முதலாகிய எல்லோரும் பகவானைவிட்டுப் பிரிந்திருப் பதை ஸஹியாமல், வருத்தப்பட்டார்கள். மனோஹர மாகிய பகவானுடைய கதையை ஒருதடவை கேட்டதினாலேயே, நல்ல ஞானமுண்டாகிறது; சரீரம் முதலியவைகளில் அபிமானம் விலகுகிறது; ஆகையால் வித்வான்கள், அதனையொருபொழுதும் விட மாட்டார்கள். அப்படியிருக்க அவரை எப்பொழுதும் பார்ப்பது, ஆலிங்கனம் செய்துகொள்வது, பேசுவது, சேர்ந்துபடுத்துக்கொள்வது, ஒரே இடத்தில் உட்காருவது, சேர்ந்து புஜிப்பது, ஆகிய இவைகளால் அந்த பகவானிடத்திலேயே புத்தியைச் செலுத்திய பாண்டவர்களால் அவரைவிட்டுப் பிரிந்திருக்க முடியுமா? ஆகையால் அவர்களெல்லாரும் கண் கொட்டாமலேயே அவரைப் பார்த்துக்கொண்டு, விசேஷ ஸ்நேஹமுள்ளவர்களாய் அந்த அந்த இடங்களில் நின்றார்கள். அவர்களுடைய மனஸானது, அவர்பின் சென்றது. அப்பொழுது ஸ்ரீ க்ருஷ்ணபகவான் அரண்மனையிலிருந்து வெளியில் வரும்போது, அவர்மீதிருந்த ப்ரியத்தால், ஸுபத்ரை முதலிய ஸ்த்ரீகள், 'கண்ணீரைப்பெருக்குவது அமங்கலம்' என்று நினைத்து, அடக்கிக் கொண்டார்கள். மேலும் அப்பொழுது, மிருதங்கம், சங்கம், பேரி, வீணை, பணவம், கோமுகம், சர்சரீ, ஆனகம், கண்டா, துந்துபி ஆகிய பத்துவகை வாத்யங்களும் முழங்கின. கௌரவ ஸ்த்ரீகள் அனைவரும் ப்ரேமை, வெட்கம், சிரிப்பு இவைகளுடன், மேல்மாடியிலிருந்து பகவானைத் தர்சித்து, அவர்மீது புஷ்பங்களை வர்ஷித்தார்கள். ஸ்ரீ பகவானிடத்தில் மிகுந்த ப்ரீதியுள்ளவரும், சுருட்டை

மயிருள்ளவருமாகிய அர்ஜுனர், தம்மிடத்தில் மிக்க விச்வாஸமுள்ளவராகிய ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவிற்கு, ரத்னகாம்புள்ளதும், முத்துமாலைகளால் அலங்கரிக்கப் பட்டதுமான வெள்ளைக்குடையைப் பிடித்தார். உத்தவரும், ஸாத்யகியும் மிக அத்புதங்களான சாமரங்களையெடுத்து விசிறினார்கள். இப்படி பகவான், புஷ்பம் முதலியவைகளால் வீதியில் பூஜிக்கப்பட்டு ப்ரகாசித்தார்.

19—30. அப்பொழுது ப்ராஹ்மணர்கள் மனுஷ்யாவதாரமெடுத்த பகவானுக்குத் தகுதியானவைகளும், சுத்த ஸ்வரூபத்திற்குத் தகாதவைகளுமான ஆசீர்வாதங்களைச் செய்தார்கள். உத்தமச்லோகராகிய ஸ்ரீ க்ருஷ்ணனிடத்திலேயே மனத்தைச் செலுத்தினவர்களான பட்டணத்திலிருக்கும் ஸ்த்ரீகள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளும் வார்த்தைகள் எல்லோருக்கும் த்ருப்திகரமானவைகளாகவும், ஸகல உபநிஷத்துகளுக்கு ஸம்மதமானவைகளுமாயிருந்தன. எப்படியென்றால் க்ருஷ்ணனுடைய தேஜஸ்ஸைப் பார்த்து ஆச்சர்யமடைந்த சில ஸ்த்ரீகளை நோக்கி சிலர் சொல்லுகிறார்கள். ப்ரளயகாலத்தில் ஜீவோபாதிகளான ஸத்வம் முதலியவைகள் ஈச்வரனிடத்தில் அடங்கியிருக்கும்போது குணங்களுடைய சேர்க்கைக்குமுன் எவர் ப்ரபஞ்ச ஸம்பந்தமில்லாத ரூபத்துடன் ஒருவராகவிருந்தாரோ, அவரே இந்த க்ருஷ்ண பகவானாக அவதரித்திருக்கிறார். (ஸிருஷ்டிக்குமுன்னும், ப்ரளயத்திலும், ப்ரபஞ்ச ஸம்பந்தமில்லாமலிருப்பவர் இவரே என்று கருத்து) அந்த பரமாத்மாவே ஸகல வேதங்களையும் வெளியிட்டு மறுபடியும் தன்னுடைய காலசக்தியால் தூண்டப்பட்டதும், ஜீவர்களை

மோஹிக்கச்செய்வதும், ஸிருஷ்டிக்க விரும்பியதுமான ப்ரகிருதியை அனுஸரித்தார். அந்தப்ரகிருதியே பெயர் ரூபம் இவைகளில்லாத ஜீவனிடத்தில அவைகளை யுண்டுபண்ணிற்று. யோகிகள் இந்த்ரியங்களை ஜயித்து, ச்வாஸத்தையடக்கி விசேஷ பக்தியால் சுத்தமான மனமுள்ளவர்களாய் எவருடைய பதத்தையடைகிறார் களோ; அந்தப்புருஷன் இவரே. நம்முடைய புத்தியைப் பரிசுத்தப்படுத்துவதற்கு தகுந்தவர், இவரேயொழிய யோகம் முதலியவைகளால் முடியாது. அடி தோழி! ஆத்மாவின் ரஹஸ்யத்தையறிந்த வித்வான்கள், எவரை ஸ்தோத்ரஞ்செய்கிறார்களோ, வேதங்களிலும், ரஹஸ்யமான ஆகமங்களிலும், எவர் வர்ணிக்கப்படுகிறாரோ, எந்த ஈச்வரன் ஜகத்தை உண்டுபண்ணுவது பரிபாலிப்பது, நாசஞ்செய்வது ஆகிய பற்றுதலில்லையோ, அவரே க்ருஷ்ணனுடைய சரீரமெடுத்துக் கொண்டிருக்கிறார். எந்த காலத்தில் அரசர்கள் தமோ குணங்களுள்ளவர்களாகி தங்கள் ப்ராணனை மாத்திரம் போஷிக்கிறார்களோ அந்தக்காலத்தில், ஐச்வர்யம், செய்த பிரதிஜ்ஞையைக் காப்பாற்றுவது, உண்மையை யுபதேசிப்பது, தயை, கீர்த்தி ஆகிய இவைகளை வெளிப்படுத்துவதற்காக ஒவ்வொரு யுகத்திலும் இவரே ஸத்வகுணரூபியாய் அவதரிக்கிறார். யதுவினுடைய குலம் மிகவும் மேலானது, மதுராநகரம் மிகவும் புண்ய பூமியுள்ளது. புருஷோத்தமரும், ப்ரியமான கீர்த்தியுள்ளவருமான பகவான் தம்முடைய அவதாரத்தாலும் நடையினாலும், அவைகளை அலங்கரிக்கிறார். ஆச்சர்யம்! த்வாரகாநகரத்தின் பாக்யம் அத்புதமானது; எல்லா நகரங்களிலும் ஸ்வர்க்கம் மேலானது என்ற ஸ்வர்க்கத்தின் கீர்த்தியைப் போக்கக்கூடியது; அதில் வஸிக்கும் ஜனங்கள், தங்களை அனுக்ரஹிப்பதற்காகவே

அவ்விடத்தில் வஸிப்பவரும், புன்சிரிப்புள்ள பார்வை யுள்ளவருமான ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவை எப்பொழுதும் தர்சிக்கிறார்கள். அந்தப் பகவானுடைய பத்னிகள் முன் ஜன்மத்தில் வ்ரதங்கள், ஸ்நாநம், ஹோமம் முதலியவைகளால் ஈச்வரனையுபாஸித்தவர் களென்பதில் ஸந்தேஹமில்லை. தவிரவும் கோபஸ்த்ரீகள் எல்லோரும், அவருடைய அதரத்தைப் பானஞ்செய்கிறார்கள் தவிரவும் அதையே மனததில் நினைத்து மோஹிக்கிறார்கள். பலிஷ்டர்களான சிசுபாலன் முதலியவர்களை ஸ்வயம்வரத்தில் ஜயித்து பகவானால் விவாஹஞ்செய்து கொள்ளப்பட்டவர் களும், ப்ரத்யும்னன், ஸாம்பன் முதலியவர்களுக்குத் தாயார்களுமான ருக்மிணி, ஸத்யபாமா முதலியவர் களுடைய வீடுகளிலும், நரகாஸுரனைக் கொன்று ஸ்ரீ க்ருஷ்ணனால் அபஹரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மற்ற ஸ்த்ரீகளுடைய கிருஹங்களிலும், பகவான் எப்பொழுதும் அவர்களுக்கு வேண்டியதை ஸம்பாதித்துக் கொடுத்து அவர்களை ஸந்தோஷப்படுத்திக்கொண்டு வஸிக்கிறார். ஆனதால் ஸ்த்ரீகளுக்கு ஸ்வாதந்த்ரயம், சௌசம் இவைகளில்லாமலிருந்தும், ஸ்த்ரீயாக விருப்பதே மேலானதென்று விளங்குகிறது" என்று பேசிக்கொண்டார்கள்.

31. இம்மாதிரியான பட்டணத்து ஸ்த்ரீகளுடைய வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ க்ருஷ்ணன், பார்வையா லேயே, அவர்களை ச்லாகித்துச் சிரித்துக்கொண்டு சென்றார். அப்பொழுது தர்மபுத்ரர் சத்ருக்களிடத்தில் ஸந்தேஹப்பட்டு, பகவானைக்காப்பாற்றுவதற்காக அவரிடம் ப்ரியத்தால் சதுரங்க ஸைன்யத்தையனுப் பினார். பின்பு ஸ்ரீ க்ருஷ்ணபகவான் வெகுதூரம் தம்மை

பின்தொடர்ந்து வந்தவர்களும், தம்மைவிட்டுப் பிரிய மனமில்லாதவர்களும், ஸ்திரமான பக்தியுள்ளவர்களு மான கௌரவர்களைத் திருப்பிவிட்டுத் தமது நகரம் நோக்கி புறப்பட்டார். அவர் குருஜாங்கலம், பாஞ்சால்ம், சூரசேனம், யமுனையின் கரையிலிருக்கும் தேசம், ப்ரஹ்மாவர்தம், மத்ஸ்யம், ஸரஸ்வதி நதிக்கரையிலுள்ள தேசம், ஜலமில்லாத தேசம், அல்ப ஜலமுள்ள தேசம், ஸௌவீரம், ஆபீரம், ஸைந்தவம் ஆகிய இவைகளைத் தாண்டி ஆனர்த்த தேசம் போனார். குதிரைகள் கொஞ்சம் களைப்படைந்தன. அந்தந்த இடத்தில் வஸிப்பவர்கள் பகவானை எதிர்கொண்டழைத்துப் பூஜித்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணபகவான் ரதத்தைவிட்டு இறங்கி ஜலமிருக்குமிடஞ் சென்று ஸந்தியோபாஸ்தி செய்தார்.

நோட்டு.

பிரகிருதி– மாயை "மாயையை ப்ரகிருதியென்றும், மாயையை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டிருப்பவனை மஹேச்வரனென்றும் தெரிந்து கொள்ள வேண்டும்." ச்ருதி– சுத்தமான மேலான ஸூக்ஷ்மபுத்தியினால் பார்க்கப்படுகிறார்"– ச்ருதி.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்—11

துவாரகாவாஸிகள் பகவானை உபசரித்தது

இப்படி ஸ்ரீ கிருஷ்ணபகவான் மிகுந்த ஐசுவரியம் உள்ள தன்னுடையதான ஆனர்த்த தேசத்தையடைந்து திவ்யமாகிய சங்கத்தை ஊதினார். அப்பொழுது மிகவும் வெண்மையான மத்ய பாகமுள்ளதும், பகவான் உடைய உதடுகளின் காந்தியால் சிவந்ததுமான அந்தச் சங்கமானது செந்தாமரை புஷ்பத்தில் உரக்கச் சப்தித்துக் கொண்டிருக்கும் ஹம்ஸம் போல விளங்கிற்று. அதனைக் கேட்டு அந்தத் தேசத்தில் வஸிப்பவர்கள் கிருஷ்ணன் வருகிறார் என்பதை தெரிந்துகொண்டு அவரை விட்டுப் பிரிந்திருந்ததாலுண்டான தாபத்தை விட்டுச் சந்தோஷமடைந்தார்கள். மேலும் அவர்கள் எல்லோரும் ஸம்ஸார பயத்தைப் போக்கக்கூடிய அந்தச் சப்தத்தைக் கேட்டவுடன் தங்கள் யஜமானனாகிய ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையுள்ள வர்களாக அவருக்கு எதிரில் சென்றார்கள். அந்த பகவான் தன்னுடைய ஆத்மாவிலேயே ரமிப்பவர். ஆனந்தானு பவத்தால் எப்பொழுதும் பூர்ணகாமர்; எல்லோருக்கும் அனுகூலத்தைச் செய்பவர். அப்போர்ப்பட்ட பகவான் இடத்தில் சூரியனிடத்தில் தீபத்தைக் கொடுப்பது போல ஜனங்கள் காணிக்கைகளைச் சமர்ப்பித்து, பிதாவைக் கண்ட குழந்தைகள் போல மலர்ந்த முகமுள்ள வர்களாய், கத்கத ஸ்வரத்துடன் தங்களைக் காப்பாற்றும் அந்தப்பகவானை நோக்கி, வேறாத ப்ரஹ்மதேவராலும், ஸனகர் முதலியவர்களாலும், இந்திரன் முதலியவர் களாலும் நமஸ்கரிக்கப்பட்ட தாமரை மலர் போன்ற உம்முடைய பாதங்களுக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்.

அவைகள் இவ்வுலகத்தில் ஸுகத்தை விரும்பியவர் களுக்கு முக்கிய கதியானவைகள். ஸகல வஸ்துக் களையும் பக்குவஞ்செய்யும் ஸ்வபாவமுள்ள காலமானது எல்லாவற்றிற்கும் மேலானதனாலும் உம்முடைய பாதங் களுக்கு சுவாதீனப்பட்டதேயாம். (உம்முடைய பாதார விந்தங்களை ஆசிரயித்தவர்களுக்குப் பிறப்பு , கிழத்தனம், மரணம் முதலியவைகள் இல்லையென்பது கருத்து:)

'ஓ ஜகத்திற்கு அந்தர்யாமியாயிருப்பவரே தாம் எங்களுக்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டும். நீரே ஸகலத்திற்கும் மாதா, மித்திரர், பிதா, பதி, நீரே நல்ல ஆசாரியர். முக்கியமாகிய தெய்வம், உம்மை யனுசரித் ததாலேயே நாங்கள் தன்யர்களானோம். ஸ்வர்க்கவாஸி களான தேவர்களாலும் பார்க்க முடியாததும் பிரியமான சிரிப்பு, மனோகரமான பார்வை ஆகிய இவை களுடன் கூடிய முகமுள்ளவரும், ஸகல விதத்திலும் அழகு பொருந்திய தம்முடைய சரீரத்தை எப் பொழுதும் நாங்கள் தரிசிக்கும்படி நேர்ந்ததால் நாங்களே நாதனுள்ளவர்கள். தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரே! நீர் பந்துக்களைப் பார்க்கவேண்டி குரு நகரத்திற்காவது மதுரா நகரத்திற்காகவது சென்றால், அப்பொழுது நாங்கள் சூரியனில்லாத ஸமயத்தில் கண்கள் போல ஒவ்வொரு நிமிஷத்தையும் கோடி வருஷங்களுக்குச் சமமாகக் கழிக்கிறோம்' என்று ஸ்தோத்ரஞ் செய்தார்கள்.

10–34 இப்படி ஜனங்கள் செய்த ஸ்தோத்திரத்தைக் கேட்டுப் பக்தர்களைக் காப்பாற்றும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவர்களைக் கடாக்ஷித்தால் அனுக்ரஹித்துக் கொண்டு பட்டணத்திற்குள் சென்றார். அந்த நகரம்

ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் சமமாயுள்ள பலசாலிகளான போஜர்கள், மனுக்கள், தாசார்ஹர்கள், குகுரர்கள், அந்தகர்கள், விருஷ்ணிகள் ஆகிய இவர்களால் போகவதி என்னும் பட்டணம் நாகங்களால் ரட்சிக்கப்படுவது போல, காப்பாற்றப்பட்டிருந்தது. மேலும் அந்தப் பட்டணமானது எல்லா ருதுக்களிலும் புஷ்பிப்பவைகளும் பலிப்பவைகளுமான புண்ய விருஷங்களாலும் கொடிகளாலும், கொடி வீடுகளாலும், உத்யான வனங்களாலும் (பழங்களையே பிரதானமாயுள்ள மரங்கள் உள்ளது), புஷ்பத்தோட்டங்களாலும், விளையாடும் தோட்டங்களாலும், தாமரையோடைகளாலும் அழகாய் இருந்தது. கோபுர வாசல்களிலும் வீட்டு வாசல்களிலும் மங்கள தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. வீதிகளில் பலவகையான த்வஜங்கள் கட்டப்பட்டு வெயிலினாது தாபமில்லாமலிருந்தது. ராஜவீதி, கடைவீதி, நாற் சந்திகள், மற்ற வீதிகள் ஆகிய இவைகள் குப்பையில்லாமல் சுத்தஞ் செய்யப்பட்டிருந்தன. பழங்கள், புஷ்பங்கள், அட்சதைகள் முதலிய மங்கள திரவியங்கள், இறைக்கப்பட்டிருந்தன; வாசனை ஜலம் தெளிக்கப் பட்டிருந்தது. ஒவ்வொரு வாசலும் தயிர், அட்சதை, பழங்கள், கரும்பு இவைகளாலும், பூர்ண கும்பங்களாலும், தூபங்களாலும், தீபங்களாலும், பலிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பின்னும் வஸுதேவர், அக்ரூரர், உக்ரஸேனர், அற்புதமான பராக்கிரமுள்ள பலராமர், பிரத்யும்னன், சாருதேஷ்ணன், ஸாம்பன், கதன் முதலியவர்கள் மிகவும் பிரியராகிய பகவான் வருகிறார் என்று கேள்விப்பட்டு யானையை முன் நடத்தி, ப்ராஹ்மணர்களை முன்னிட்டுக் கொண்டு அதிக ஸந்தோஷத்தால் படுக்கை, போஜனம் இவைகளிலும் மனமில்லாதவர்களாக ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு எதிரே

சென்றார்கள். மேலும் அப்பொழுதும் சங்கம் முதலிய வாத்தியங்கள் முழங்கின. வேதங்கள் கோஷிக்கப்பட்டன. இப்படி எல்லோரும் விஸ்வாசத்தால் உண்டான பரப்பரப்புள்ளவர்களாக ரதங்கள் மீதேறிக்கொண்டு எதிர்க்கொண்டு சென்றார்கள். சிறந்த தாஸிகளும் கூட்டம் கூட்டமாக வாகனங்களின் மீதேறிக்கொண்டு அவரைப் பார்க்க வேண்டுமென்ற மிகுந்த ஆசையுடன் சென்றார்கள். அவர்கள் காதில் அணிந்திருந்த குண்டலங்களுடைய காந்தியால் அவர்களுடைய முகம் பிரகாசித்தது. ரஸாபினயஞ் செய்யக்கூடிய நடர்களும், தாளம் முதலியவைகளை யனுசரித்து நர்த்தனஞ் செய்பவர்களும், பாடுகிறவர்களும், ஸூதர்களும், மாகதர்களும், வந்திகளும் உத்தமச்லோகராகிய பகவானுடைய அற்புதமான சரிதத்தைக் கானஞ் செய்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் தம்மைப் பார்ப்பதற்காக வந்த பந்துக்களுக்குத் தக்கபடி வணங்குவதாலும், நமஸ்கரிப்பதாலும், தழுவுவதாலும், கையைப் பிடிப்பதாலும், புன்சிரிப்புக் கொண்ட பார்வையாலும், சண்டாளன் வரையிலுள்ள எல்லாருக்கும் அபயங் கொடுத்து, அவரவர்களுக்கு இஷ்டமான வரங்களை அளித்து மரியாதை செய்தார்.

மேலும் ஆசாரியர்களும், ப்ராஹ்மணர்களும், பெரியோர்களும், மற்றவர்களும் அவரவர் ஸ்திரீகளுடன் பகவானுக்கு ஆசீர்வாதஞ் செய்தார்கள்; வந்திகள் ஸ்தோத்திரம் செய்தார்கள்; துவாரகா பட்டணத்தில் கிருஷ்ணன் இராஜவீதியில் வரும்பொழுது குல ஸ்திரீகள் அவரைத் தரிசிப்பதற்காக மாடிகளின் மீதேறினார்கள். லக்ஷ்மிதேவிக்கு இருப்பிடமாகிய

பகவானுடைய சரீரத்தைத் துவாரகா வாஸிகளான ஜனங்கள் எப்பொழுதும் பார்த்தவர்களானாலும் அவர் களுக்குப் போதுமென்ற திருப்தி உண்டாகவில்லை. அவருடைய மார்பு, கைகள், பாதங்கள் ஆகிய இவைகள் லக்ஷ்மிதேவிக்கும், லோகபாலர்களுக்கும், பக்தர் களுக்கும் முறையே வஸிக்குமிடமாக இருக்கின்றன. அப்போர்ப்பட்ட ஸ்ரீ கிருஷ்ண பகவான் வழியில் வெள்ளைக் குடை, சாமரங்கள் ஆகிய இவைகளால் பூஜிக்கப்பட்டும். பூக்களால் வர்ஷிக்கப் பெற்றும் பீதாம்பரத்தாலும், துளசி மாலையாலும் பிரகா சித்தார். அது சூரியன், சந்திரன், இந்திரன், வில், மின்னல், இவைகளுடன் மேகம் சேர்ந்து பிரகாசித்தது போலிருந்தது. பின்னுமவர் வஸுதேவர், தேவகி இவர் களுடைய அரண்மனை சென்று, வஸுதேவருக்கும் தேவகி முதலிய ஏழு தாயார்களுக்கும் சந்தோஷமாக நமஸ்காரஞ் செய்தார். அவர்களும் இவரைத் தழுவி னார்கள். தேவகி முதலிய ஸ்திரீகள் கிருஷ்ணனை மடியில் உட்கார வைத்துக்கொண்டு ஆனந்தக்கண்ணீ ரால் அவருக்கு அபிஷேகம் செய்தார்கள். பிறகு அந்தப் பரமாத்மா 16,000 பத்தினிகளுடைய அரண் மனைகள் அடங்கிய தமது அரண்மனைக்குச் சென்றார். அது ஸகல வஸ்துக்களாலும் நிறைந்ததும் சிறந்த துமாக விருந்தது. அப்பொழுது அங்கிருந்த ருக்மணி முதலிய ஸ்திரீகள் தேசாந்தரத்திலிருந்து வந்த தங்கள் உடைய பர்த்தாவைச் சமீபத்தில் கண்டு அளவற்ற ஆனந்தமடைந்து ஆசனத்திலிருந்து சரீரத்தாலும் அந்தக்கரணத்தாலும் சீக்கிரமாக எழுந்திருந்தார்கள். அவர்கள், பர்த்தா தேசாந்திரம் போயிருக்கும் காலத்தில் செய்யவேண்டிய விரதங்களை யனுஷ்டித்துக் கொண்டு இருந்தவர்கள். கடைக்கண்ணால் பார்ப்பவர்களாலும்

வெட்கத்தால் தலை குனிந்தவர்களாகவுமிருந்தார்கள். ஓ சௌனகரே கம்பீர மனமுள்ள பகவானைக் காணாத போது மனத்தாலும், நேரில் பார்த்த போது பார்வைகளாலும் (புத்ரர்களைக் கொண்டு தழுவ செய்பவர்கள் போல) ஸ்ரீ கிருஷ்ணனை ஆலிங்கனம் செய்து கொண்டார்கள். (ப்ரீதியாகப் பார்த்தார்கள் என்பது கருத்து) அப்பொழுது தங்களுடைய கண்களி லுண்டான ஆனந்த ஜலத்தை வெட்கத்தால் அந்த ஸ்திரீகள் அடக்கிக்கொண்டிருந்தும் அது அடங்காமல் பெருகியது; ஸ்ரீ கிருஷ்ணன் எப்பொழுதும் அவர் களுடைய பக்கத்திலேயே வஸிக்கிறார். ஆனாலும் அவர்களுக்கு அவருடைய பாதங்கள் புதியவைகளாக தோன்றுகின்றன. சஞ்சல ஸ்வபாவமுள்ள ஸ்ரீதேவியும் அவரிடத்திலேயே ஸ்திரமாக வசிப்பதால் எவளுக்குத் தான் அவரிடம் பிரேமை யிராது?

35–40 காற்றானது மூங்கில் காட்டில் அவைகளைக் கொண்டே அக்னியை உண்டுபண்ணி அதனால் அவை களை எரிப்பதுபோல ஸ்ரீ கிருஷ்ணன், தாம் ஆயுதம் எடுக்காமலே பூமிக்குப் பாரமாயிருந்த அனேக அக்ஷௌஹிணி சைன்யங்களால் விருத்தியடைந்த தேஜஸுள்ள அரசர்களுக்குள் ஒருவருக்கொருவர் விரோ தத்தை உண்டு பண்ணி, அதனால் அவர்களை நாசஞ் செய்து சாந்தியடைந்தார். இப்படி பகவான் பிராகிருத புருஷன்போல பூமியில் மாயாவதாரஞ் செய்து அநேக உத்தமஸ்திரீகளின் நடுவிலிருந்து விளையாடினார். ஸ்திரீகள் கம்பீரமாகிய அபிப்பிராயத்தைக் காண் பிக்கும் கடாக்ஷமுள்ளவர்கள், மனோகரமான மந்தகாச முள்ளவர்கள். வெட்கமுள்ளவர்கள். அவர்களால் பரம சிவனும் மோகித்து வெட்கமடைந்துவில்லை எறிந்தார்.

ஸ்திரீகள் அப்போர்ப்பட்ட சக்தியுள்ளவர்களானாலும் தங்களுடைய விலாசங்களால் கிருஷ்ணனை ஆசைப்படச் செய்ய முடியாதவர்களாகவிருந்தார்கள். (சம்சாரத்தில் பற்றுதல் இல்லாதவரென்பது கருத்து.) இப்படி ஸ்ரீ கிருஷ்ணன் வைராக்யமுள்ளவராக விருந்து ஜனங்கள் தங்களைப்போல அவரையும் ஸம்சாரியென்றே நினைக்கிறார்கள். அதனால் தான் அஜ்ஞர்களென்று சொல்லப்படுகிறார்கள். ஆத்மாவினிடமிருக்கும் ஆனந்தம் முதலிய குணங்களில் ஆத்மாவை ஆசிரயித்திருக்கும் புத்தியானது சம்பந்திக்காமல் இருப்பது போல், பகவான் பிரகிருதி காரிய மாகிய சம்சாரத்திலிருந்தும் அதன் குணங்களாகிய சுகம், துக்கம் இவைகளுடன் சம்பந்தப்படாமல் இருக்கிறார். அதுவே அவருடைய ஐசுவரியமென்று சொல்லப்படுகிறது. அகங்காரமானது ஆத்மாவைத் தனது வசப்பட்டவனாக நினைப்பதுபோல் ஸ்ரீ கிருஷ்ணனுடைய உண்மையை அறியாதவர்களான அந்த ஸ்திரீகளெல்லோரும் கிருஷ்ணன் தங்கள் இடத்தில் ஆசை கொண்டவர், தங்களையே அனுஸரித்திருப்பவர் என்று அஜ்ஞானத்தால் நினைத் திருந்தார்கள்.

நோட்டு

ஸூர்ய-ஜகத்தைத் தம்முடைய தேஜஸால் பிரகா சிக்கச் செய்பவரும், வேறு பிரகாசத்தை அபேட் சியாமல் விளங்குகிறவருமான சூரியனுக்குத் தீபத்தால் எப்படி பிரயோசனமில்லையோ அப்படி ஸகல வித காமங்களால் பூர்ணராகிய பகவானுக்கு ஜனங்களால்

கொடுக்கப்படும் காணிக்கைகளால் ஒருவித பயனுமில்லை என்று காட்டப்பட்டது, கத்கதஸ்வர-ஆனந்தம், துக்கம் இவைகள் நேரும்போது கண்ணீர் பெருகி அதனால் கண்டம் அடைத்துப்போகும். அப்பொழுது தாராள மாகப் பேசமுடியாமல் சிரமப்பட்டுப் பேசும் ஸ்வர மேயாம். ஸனகர்-மூலத்தில் வைரிஞ்ச என்றிருப்பதால் அதற்குச் சங்கரனென்று அர்த்தம் விஜ, பசுவின் கன்றுகளைப் ப்ரஹ்மதேவர் அபகரித்த பிறகு அவரால் நமஸ்கரிக்கப்பட்டது. பகவான் பாணாசுரனிடத்தில் யுத்தஞ் செய்யும்போது, சங்கரனால் ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டது. சந்த். க்ஷேமம்-மோக்ஷம் விஜயமாதா - பிறந்தது முதல் போஷிப்பதால். மித்ரர்- எல்லா வற்றிற்கும் அந்தராத்மாவாக விருப்பத்துடன் ஸத்காரி யத்தைச் செய்யும்படி தூண்டுவதால். பிதா-இது ஹிதமென்றும், இது அஹிதமென்றும் உபதேசித்து, சாஸ்திரத்தைக் கொண்டு சிட்சிப்பதால், பதி-பர்த்தா, ஜீவனம் முதலியவைகளைக் கொடுத்துக் காப்பாற்று வதால், ஆசாரியர்-அர்ஜுனனை நிமித்தமாய் வைத்துக் கொண்டு உலகத்தில் கீதா சாஸ்திரத்தைப் பரவச் செய்ததாலே. தெய்வம்- மோட்சத்தைக் கொடுப்பதால் சந்த், ஸுதர்கள்- புராணத்தை யறிந்தவர்கள் ஸுதர்களென்று சொல்லப்படுகிறார்கள். வம்சாவளியைச் சொல்புவர்கள் மாகதர்களெனப்படு வார்கள். ஸமயத்திற்குத் தக்கபடி பேசக்கூடிய புத்தி சாலிகள் வந்திகளெனப்படுவார்கள். மேகம்-இது அபூதோபமை யென்று சொல்லப்படுகிறது, மேகம் போன்றவர் பகவான், சூரியன் போன்றது வெண்குடை, புஷ்பவர்ஷம் போன்றது நட்சத்திரங்கள் என்பர் சிலர்.

சூரியன் போன்றது கீரிடம், சந்திரன் போன்றது வெண்குடை, இந்திரனுடைய வில் போன்றது வனமாலை மின்னல் போன்றது பீதாம்பரம். ஏழு தாயார்–வசு தேவருக்குப் பதினெட்டு ஸ்திரீகள். அவர்களெல் லோரையும் நமஸ்கரித்தார். அவர்களுக்குள் முக்கிய மானவர்கள் ஏழு ஸ்திரீகள், 1. தேவகீ, 2. ச்ருததேவா, 3. சாந்திதேவா, 4. உபதேவா, 5. ஸ்ரீதேவா, 6. தேவரக்ஷிதா, 7. ஸஹதேவா, தழுவ –தேசாந்திரத் திலிருந்து வந்த பகவானைப் ப்ரத்யும்னன் முதலிய வர்களைக் கொண்டு கட்டிக் கொள்ளச்செய்வது போல மனத்தால் தியானம் செய்தார்கள், பின்னும் மிகுந்த ஆசையுடன் பார்த்தார்கள். பரமசிவனும்– மூலத்தில் அமதன: என்று பதம் பிரித்து இப்படி ஸ்ரீ தரஸ்வாமி அர்த்தஞ்செய்தார். மதன: என்று பதம் பிரிப்பதால் மன்மதன் என்று அர்த்தம் –வீர, விஜ.

அத்தியாயம் 12

பரீக்ஷித்தின் உற்பத்தி

சௌனக மகரீஷியானவர் ஸூதரைப் பார்த்து 'ஓ ஸூதரே! அசுவத்தாமாவினால் பிரயோகிக்கப்பட்ட ப்ரஹ்மாஸ்த்ரத்தின் தேஜஸால் எரிக்கப்படும் உத் தரையின் கர்ப்பத்தை ஸ்ரீ கிருஷ்ணபகவான் மறுபடி பிழைக்கச் செய்தாரென்று சொன்னீர்களே, மிக்க புத்திசாலியும் மகாத்மாவுமான அக்குழந்தையின் பிறப் பையும், அதன் சரித்திரத்தையும், அவருக்கு சுகர் ஞானோபதேசம் செய்ததையும், அவருடைய முடி வையும், மரணமடைந்த பிறகு அவருக்கு நேர்ந்த கதியையும் சிரத்தையுடன் கேட்க விரும்புகிறேன். சொல்லக்கூடியதானால் சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

4–6 இதனைக் கேட்டு ஸூதர் சொல்லுவதாவது தர்மபுத்திரர் கிருஷ்ணனுடைய பாதங்களைச்சேவித்து ஸகல ஆசைகளையும் ஒழித்துத் தகப்பன் குழந்தை களைக் காப்பாற்றுவதுபோல பிரஜைகளைச் சந்தோ ஷப்படுத்திக் காப்பாற்றி வந்தார். அவருக்குப் பகவானுடைய அனுக்கிரஹத்தால் ஸகல சம்பத்துகளும், ராஜசூயம் முதலிய யாகங்களின் பலனாகிய உத்தம லோகங்களும், திரௌபதி முதலிய ஸ்திரீகளும், பீமசேனன் முதலிய தம்பிகளும், ஸகல பூமியும். ஜம்பூத்வீபத்திற்கு ஆதிபத்யமும், ஸ்வர்க்கம் வரையில் பரவிய கீர்த்தியும் கிடைத்தன. பசியுள்ளவனுக்கு அன்னத்தின் மேலே விருப்பமிருக்குமே யொழி வேறு

விஷயத்தில் ஆசையுண்டாகிறதில்லை. அதுபோல் ஸ்ரீ பகவானிடத்திலேயே சித்தத்தைச் செலுத்தி, அதனால் ரமித்துக் கொண்டிருக்கும் தர்மபுத்ரருக்கு தேவர்களாலும் விரும்பத்தக்க சுகங்கள் கிடைத்திருந்தும் அவைகளால் அவர் சந்தோஷமடையவில்லை.

7–14 1/2, ஓ சௌனகரே! உத்தராதேவியின் கர்ப்பத்திலிருந்த சிசுவானது அச்வஸ்த்தாமாவினுடைய ப்ரஹ்மாஸ்திரத்தின் தேஜஸ்ஸால் எரிக்கப்படும்பொழுது ஒரு புருஷன் அந்தச் சிசுவிற்கு நேரில் தோன்றினார். அவர் கட்டைவிரல் அளவுள்ளவர், சுத்தர், சுவர்ண கீரிடமுள்ளவர், மிக்க அழகான பார்வையுள்ளவர், பீதாம்பரம் தரித்தவர், ஜன்மம் முதலிய விகாரங்கள் அற்றவர், அழகு பொருந்தியவைகளும், நீண்டவை களுமான கைகளுள்ளவர், சுத்த ஸ்வர்ண குண்டலங் களுள்ளவர், 'என் பக்தனுக்கும் உபத்திரவம் நேரிடு கிறதா?' என்ற கோபத்தால் சிவந்த கண்கள் உள்ளவர், கதாயுதத்தைத் தரித்தவர். மேலும் அவர் குறைக்கொள்ளி போன்ற தம் கதையைச் சுழற்றிக் கொண்டு. அக்குழந்தைக்கு நான்கு புறத்திலும் சஞ்சரித்து, சூரியன் பனியைப் போக்குவதுபோல அஸ்திர தேஜஸ்ஸை அக்குழந்தையின் சமீபம் வர வொட்டாமல் தடுத்துக்கொண்டுமிருந்தார். அவரைப் பார்த்து அந்தக் குழந்தையானது இவர் யாரென்று ஆச்சரியத்துடன் ஆலோசித்துக் கொண்டிருந்தது. இப்படி ஒன்பது மாத காலஞ் சென்றது. பத்தாவது மாதத்தில் அளவிடக் கூடாத ரூபமுள்ளவரும், தர்மத்தைப் பரிபாலிப்பவரும், எங்கும் நிறைந்தவரு மான அந்தப் பிரபுவானவர் அக்குழந்தை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே அவ்விடத்தில் மறைந்தார்.

அதன் பிறகு வரும் மேலான சிரேயஸை காண்பிக்கத் தக்க சுப லக்னம் நேர்ந்தது. அதிலிருந்த சுபகிரகங்கள் ஒருவருக்கொருவர் மித்ரர்களாக இருந்தார்கள். அப் போர்ப்பட்ட சமயத்தில் பாண்டுவின் வம்சத்தை விருத்திசெய்யும் புத்திரனானவன் பாண்டுவே மறு படியும் பிறந்ததுபோல அவதரித்தான். அப்பொழுது தர்மபுத்ரர் மிகுந்த சந்தோஷத்துடன் தௌம்யர், கிருபர் முதலிய ப்ராஹ்மணர்களைக் கொண்டு ஜாதகர்மம் ஸ்வஸ்திவாசனம் ஆகிய இவைகளைச் செய்வித்தார். மேலும், அவர் தானத்திற்குரிய பாத்திரம் தேசம் காலம் என்னும் இவைகளை அறிந்தவரா கையால், உத்தமமாகிய அந்தப் புண்ணிய காலத்தில் ஸ்வர்ணம், பசு, பூமி, கிராமங்கள் சிறந்த குதிரைகள் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்தது மல்லாமல் போஜனமும் செய்வித்தார்.

15–17 1/2. அப்பொழுது ஜ்யோதிஷ சாஸ்திரத்தை நன்றாய்க் கற்றுணர்ந்த எல்லாப் ப்ராம்ஹ்மணர்களும் மிகுந்த சந்தோஷமுள்ளவர்களாய் வணக்கமுள்ள அவ் வரசனை நோக்கி, 'ஓ புருஷவம்சத்திய அரசர்களில் சிறந்தவரே தடுக்க முடியா தெய்வ வசத்தால் புரு வம்சத்தின் தொடர்ச்சியற்றுப் போகும் சமயத்தில் அந்த வம்சத்தில் பிறந்தவர்களான உங்களுடைய க்ஷேமத்திற்காக) ஸ்ரீ மகா விஷ்ணுவே இப்புத்ர ரத்னத்தை அனுக்ரகித்திருக்கிறார். விஷ்ணுவினால் கொடுக்கப்பட்டவனாகையால் இவன் விஷ்ணுராத னென்று பிரசத்தியடைவான். இவன் மிகுந்த கீர்த்தி யுள்ளவனும், பாகவதர்களுள் சிறந்தவனுமாவான். இவ் விஷயத்தில் ஸம்சயப்பட வேண்டாம் என்றார்கள்.

18–29 1/2, இதனைக் கேட்ட தர்மராஜன் ப்ராஹ்ம

விஷயத்தில் ஆசையுண்டாகிறதில்லை. அதுபோல் ஸ்ரீ பகவானிடத்திலேயே சித்தத்தைச் செலுத்தி, அதனால் ரமித்துக் கொண்டிருக்கும் தர்மபுத்ரருக்கு தேவர்களாலும் விரும்பத்தக்க சுகங்கள் கிடைத்திருந்தும் அவைகளால் அவர் சந்தோஷமடையவில்லை.

7–14 1/2, ஓ சௌனகரே! உத்தராதேவியின் கர்ப்பத்திலிருந்த சிசுவானது அச்வஸ்த்தாமாவினுடைய ப்ரஹ்மாஸ்திரத்தின் தேஜஸ்ஸால் எரிக்கப்படும்பொழுது ஒரு புருஷன் அந்தச் சிசுவிற்கு நேரில் தோன்றினார். அவர் கட்டைவிரல் அளவுள்ளவர், சுத்தர், சுவர்ண கீரிடமுள்ளவர், மிக்க அழகான பார்வையுள்ளவர், பீதாம்பரம் தரித்தவர், ஜன்மம் முதலிய விகாரங்கள் அற்றவர், அழகு பொருந்தியவைகளும், நீண்டவை களுமான கைகளுள்ளவர், சுத்த ஸ்வர்ண குண்டலங் களுள்ளவர், 'என் பக்தனுக்கும் உபத்திரவம் நேரிடு கிறதா?' என்ற கோபத்தால் சிவந்த கண்கள் உள்ளவர், கதாயுதத்தைத் தரித்தவர். மேலும் அவர் குறைக்கொள்ளி போன்ற தம் கதையைச் சுழற்றிக் கொண்டு. அக்குழந்தைக்கு நான்கு புறத்திலும் சஞ்சரித்து, சூரியன் பனியைப் போக்குவதுபோல அஸ்திர தேஜஸ்ஸை அக்குழந்தையின் சமீபம் வர வொட்டாமல் தடுத்துக்கொண்டுமிருந்தார். அவரைப் பார்த்து அந்தக் குழந்தையானது இவர் யாரென்று ஆச்சரியத்துடன் ஆலோசித்துக் கொண்டிருந்தது. இப்படி ஒன்பது மாத காலஞ் சென்றது. பத்தாவது மாதத்தில் அளவிடக் கூடாத ரூபமுள்ளவரும், தர்மத்தைப் பரிபாலிப்பவரும், எங்கும் நிறைந்தவரு மான அந்தப் பிரபுவானவர் அக்குழந்தை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே அவ்விடத்தில் மறைந்தார்.

அதன் பிறகு வரும் மேலான சிரேயஸை காண்பிக்கத் தக்க சுப லக்னம் நேர்ந்தது. அதிலிருந்த சுபகிரகங்கள் ஒருவருக்கொருவர் மித்ரர்களாக இருந்தார்கள். அப் போர்ப்பட்ட சமயத்தில் பாண்டுவின் வம்சத்தை விருத்திசெய்யும் புத்திரனானவன் பாண்டுவே மறு படியும் பிறந்ததுபோல அவதரித்தான். அப்பொழுது தர்மபுத்ரர் மிகுந்த சந்தோஷத்துடன் தௌம்யர், கிருபர் முதலிய ப்ராஹ்மணர்களைக் கொண்டு ஜாதகர்மம் ஸ்வஸ்திவாசனம் ஆகிய இவைகளைச் செய்வித்தார். மேலும், அவர் தானத்திற்குரிய பாத்திரம் தேசம் காலம் என்னும் இவைகளை அறிந்தவரா கையால், உத்தமமாகிய அந்தப் புண்ணிய காலத்தில் ஸ்வர்ணம், பசு, பூமி, கிராமங்கள் சிறந்த குதிரைகள் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்தது மல்லாமல் போஜனமும் செய்வித்தார்.

15–17 1/2. அப்பொழுது ஜ்யோதிஷ சாஸ்திரத்தை நன்றாய்க் கற்றுணர்ந்த எல்லாப் ப்ராம்ஹ்மணர்களும் மிகுந்த சந்தோஷமுள்ளவர்களாய் வணக்கமுள்ள அவ் வரசனை நோக்கி, 'ஓ புருஷவம்சத்திய அரசர்களில் சிறந்தவரே தடுக்க முடியா தெய்வ வசத்தால் புரு வம்சத்தின் தொடர்ச்சியற்றுப் போகும் சமயத்தில் அந்த வம்சத்தில் பிறந்தவர்களான உங்களுடைய க்ஷேமத்திற்காக) ஸ்ரீ மகா விஷ்ணுவே இப்புத்ர ரத்னத்தை அனுக்ரகித்திருக்கிறார். விஷ்ணுவினால் கொடுக்கப்பட்டவனாகையால் இவன் விஷ்ணுராத னென்று பிரசத்தியடைவான். இவன் மிகுந்த கீர்த்தி யுள்ளவனும், பாகவதர்களுள் சிறந்தவனுமாவான். இவ் விஷயத்தில் ஸம்சயப்பட வேண்டாம் என்றார்கள்.

18–29 1/2, இதனைக் கேட்ட தர்மராஜன் ப்ராஹ்

Released by Maran's Dog, Toronto , Canada

மணர்களை நோக்கி, புண்ய ச்லோகர்களும் ராஜர்ஷி களுமான நம்முடைய முன்னோர்கள் போல இக் குழந்தையும் நல்ல கீர்த்தியுள்ளவனாய் இருப்பானா? என்று மிக்க ஆதரவுடன் கேட்டார். அப்பொழுது ப்ராஹ்மணர்கள் தர்ம புத்ரரை நோக்கி, 'ஓ குந்தியின் புத்ரரே! இவன் மனுவின் புத்ரராகிய இக்ஷ்வாகுபோல, பிரஜைகளைக் காப்பாற்றுவான், தசரத புத்ரராகிய ஸ்ரீ ராமன் போல ப்ராஹ்மணர்களிடம் பிரியமுள்ள வனாவான். வீணாகாத பிரதிக்ஞையுள்ளவனாயி ருப்பான். ஔசீனர தேசத்திற் கதிபதியான சிபிச் சக்ரவர்த்தி போலச் சரணமென்று வந்தவர்களைக் காப்பாற்றுவான், மிகுந்த தாதா, துஷ்யந்தருடைய புத்ரனான பரதன் போலத் தன் பந்துக்களுக்கும், யாகம் செய்பவர்களுக்கும் விசேஷ கீர்த்தியை உண்டு பண்ணுவான். மேலும் இவன் உம்முடைய தம்பியாகிய அர்ஜுனன், கார்த்தவீர்யன் ஆகிய இவர்கள் போல வில்லைப் பிடித்தவர்களுக்குள் சிறந்தவனாவான், அக்னி போல ஸமீபத்தில் நெருங்க முடியாதவனாவான், சிங்கம் போலப் பராக்கிரமமுள்ளவனாவான்' ஹிம்வத் பர்வதம்போல ஸாதுக்களால் ஸேவிக்கத்தக்கவனா வான், பூமிபோலப் பொறுமையுள்ளவனாவான், மாதா பிதிருக்கள், புத்ரர்களின் விஷயமாய் நேரும் சிரமங் களைச் சகிப்பதுபோல ப்ரஜைகள் விஷயமாக உண்டாகும் சிரமத்தைப் பொறுத்துக் கொள்ளும் ஸ்பாவமுள்ளவனாவான். எல்லோரையும் சமமாய்ப் பார்ப்பதில் ப்ரஹ்மதேவரையொத்தவனாவான், அண்டின வர்களிடத்தில் தயவு செய்யும் விஷயத்தில் பரமசிவன் போன்றவனாவான். லக்ஷ்மீபதியாகிய மஹாவிஷ்ணு போல ஸகல பிராணிகளுக்கும் இருப்பிடமாவான், ஸ்ரீ கிருஷ்ணன்போல ஸகல நற்குணங்களால் ஏற்படும்

மஹிமையுள்ளவனாவான், கொடுப்பதில் ரந்திதேவன் போன்றவனாவான். யயாதிபோலத் தர்மசிந்தையுள்ள வனாயிருப்பான், பலிசக்கரவர்த்தி போலத் தைரிய முள்ளவனாவான், பிரஹ்லாதர் போல ஸ்ரீ கிருஷ்ண னிடம் பக்தியுள்ளவனாவான். மேலும் இவன் அநேக அசுவமேத யாகங்களைச் செய்வான். பெரியோர் களை ஸேவிப்பான். இவனுடைய புத்ரர்கள் ராஜ ரிஷிகளாக விருப்பார்கள். கெட்ட மார்க்கத்தை அனுஷ்டிப்பவர்களைச் சிக்ஷிப்பான், தர்மத்தை ஸம்ர க்ஷிப்பதற்காகக் கலியை நிக்ரஹிப்பான். பின்னுமிவன் (சிருங்கி என்ற) ப்ராஹ்மண புத்திரனால் தூண்டப் பட்ட தக்ஷகனால் தனக்கு மரணம் நேரிடப் போவதாய்க் கேள்விப்பட்டு, ஸகல ஆசைகளையும் ஒழித்து வைராக்கியத்தை யடைவான். பிறகு வியாஸ புத்ரராகிய சுகரிடம் ஆத்ம தத்வத்தை உபதேசம் பெற்று, கங்கைக் கரையில் இந்தச் சரீரத்தை விட்டு நிர்ப்பயமான விஷ்ணுபதத்தை யடைவான் என்று வருங் காரியத்தைச் சொல்லி தர்ம புத்திரரால் ஸம்மானிக்கப்பட்டுத் தங்களிருப்பிடம் சென்றார்கள்.

30–31 1/2 பிறகு அந்தக் குழந்தை மாதாவின் கர்ப்பத்தில் தன்னால் பார்க்கப்பட்டவரை மனத்தில் தியானஞ் செய்து கொண்டே 'அந்தப் புருஷன் இவர் தானோ, இவர்தானோ என்று ஒவ்வொருவரிடமும் பரீக்ஷித்தான். ஆனதுபற்றி அவனுக்கு, 'பரீக்ஷித்' என்ற பெயருண்டாயிற்று. அந்த ராஜகுமாரன் சுக்ல பக்ஷத்தில் பதினைந்து கலைகளால் சந்திரன் நாளுக்கு நாள் விருத்தியடைவதுபோல, தர்மபுத்ரர் முதலிய வர்களால் போஷிக்கப்பட்டு வளர்ந்தான். ஸகலவித்தை களும் அவனையடைந்தன. அப்பொழுது தர்மராஜன்

பந்துக்களின் வதத்தால் நேர்ந்த பாவங்களை நிவர்த் தித்துக் கொள்வதற்காக அசுவமேதஞ் செய்யவேண்டு மென்று விரும்பினார். ஆனாலும் 'நியாயமான வரி வாங்குவதாலும், குற்றவாளிகளுக்கு அவர்களுடைய குற்றத்திற்குத் தக்கபடி அபராதம் விதிப்பதாலும் ஸம்பாதித்த பொருள் பிரஜைகளை ரக்ஷிப்பதற்கே போதுமானதாயிருந்ததாகையால் அந்தப் பொருளைக் கொண்டு யாகத்தை முடிக்க முடியாதே என்ன செய்கிறது என்று கவலைப்பட்டிருந்தார்.

33–361/2 அப்பொழுது அவருடைய அபிப்ராயத் தையறிந்து ஸ்ரீ கிருஷ்ணனால் தூண்டப்பட்ட பீமசேனன் முதலியவர்கள் வடக்குத் திக்கில் சென்று மருத்தருடைய யாகத்திற்கு உபயோகப்பட்டு மிகுந்து கிடக்கும் தனத்தைக் கொண்டு வந்தார்கள். அவை களைக் கொண்டு யாக சாமகிரிகளைச் சம்பாதித்துத் தர்மபுத்ரர் ஸ்ரீ கிருஷ்ணனை வைத்துக் கொண்டு குறைவில்லாமல் நிறைவேற்ற வேண்டும் என்ற பயம் உள்ளவராய், பாப நிவர்த்திக்காக மூன்று தரம் அசுவ மேதத்தை யனுஷ்டித்து, யக்ஞ புருஷராகிய பகவானை ஆராதித்தார். ஸ்ரீ கிருஷ்ணனும் ப்ராஹ்மணர்களைக் கொண்டு தர்மராஜனுக்கு யாகஞ் செய்வித்து மித்ரர்களான பாண்டவர்களுடைய இஷ்டப்படி சில காலம் அவ்விடத்தில் வசித்தார். பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் அரசனிடத்திலும் திரௌபதியினிடத்திலும் விடை பெற்றுத் தம்முடைய பந்துக்களுடனும், அர்ஜுனன் உடனும் துவாரகா நகரஞ் சென்றார்.

நோட்டு

இந்த அத்தியாயத்தில் வைராக்கியத்தின் பிரகாரமும், பகவான் பக்தர்களிடத்தில் தயையுள்ளவரென்பதும், காட்டப்பட்டிருக்கிறது விஜ. சகல ஸம்பத்துக்களும் –காமாதுரனுக்கு ஐசுவரியத்தில் பிரியமிருக்குமே யல்லாமல் வைராக்கிய முள்ளவனுக்கு அவைகளில் பிரீதி உண்டாகிறதில்லை என்று காட்டப்பட்டது விஜ, புண்ணிய காலத்தில்-"கொப்பூழ்க் கொடி அறுப்பதற்கு முன் சூதகமில்லை" "புத்திரன் பிறந்த காலத்திலும் வியதபாத புண்ணிய காலத்திலும் செய்யப்பட்ட தானங்கள் குறையாத பலனைக் கொடுக்கின்றன," – ஸ்மிருதி "ப்ராஹ்மணர்களுடைய வீட்டில் புத்திரன் பிறந்த காலத்தில் ஸகல தேவர்களும் பிதிரு தேவர்களும் அந்த வீட்டிற்கு வருகிறார்கள். ஆதலால் அந்தக் காலம் 'நூறு சூர்ய கிரகணங்களைக் காட்டிலும் மேலான புண்ணிய காலம்" -ஸ்மிருதி. சிபி- இவர் தம்மைச் சரணமடைந்த புறாவைக் காப்பாற்றவேண்டிப் பருந்துக்கு தம்முடைய மாமிசத்தைக் கொடுத்தார் ஸ்ரீத. இவர் உசினருடைய புத்ரர் - வீர. விஜ.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–13

திருதராஷ்டிரர் வெளியில் சென்றது

விதுரர் தீர்த்த யாத்திரை செய்வதற்காக ஹஸ்தினா புரத்திலிருந்து புறப்பட்டுச் ஸகல தீர்த்தங்களுக்கும் சென்று, அவைகளில் ஸ்நானம் முதலியவைகளைச் செய்து, வழியில் மைத்ரேயரைக் கண்டு, அவரிடமாக ஸ்ரீமத் நாராயணனே தமக்குக் கதியென்று தெரிந்துக் கொண்டு, அதனால் அறிய விரும்பியதை அறிந்தும் ஹஸ்தினாபுரஞ் சென்றார். மேலும், கர்மயோகம், ஞானயோகம் ஆகிய இவைகளைப்பற்றி விதுரர் கேட்ட கேள்விகளுக்கு மைத்திரேயர் சிலவற்றிற்குப் பதில் சொல்லி வரும்பொழுதே விதுரருக்கு ஸம்சயங்கள் யாவும் நீங்கின. ஸ்ரீ கோவிந்தரிடத்தில் ஸ்திரமான பக்தி உண்டாயிற்று. அதனால் அதற்குமேல் அவர் கேட்கவில்லை.

3–6 தர்மபுத்திரர், அவருடைய தம்பிகள், திருதராஷ்டிரர் யுயுத்ஸு, ஸஞ்சயர், கிருபர், குந்தீதேவி, காந்தாரி, திரௌபதி, ஸுபத்ரை உத்தரை, த்ரோணருடைய பத்தினியாகிய க்ருபி, இன்னும் மற்ற பந்துக்களின் ஸ்திரீகள், பாண்டுவின் பந்துக்கள் ஆகிய எல்லோரும் தங்களுடைய பிள்ளைகளுடனும், ஸ்திரீகளுடனும் எதிர்சென்று வெகுநாள் தீர்த்தயாத்திரை செய்து திரும்பிவந்த பந்துவாகிய விதுரரைக் கண்டு மிகுந்த சந்தோஷத்துடன் அழைத்தார்கள். அப்படி அழைத்ததானது கை, கால் முதலிய அவயவங்கள் ப்ராணனைக் கண்டு சந்தோஷமடைந்தது போலிருந்தது. மேலும் அவர்கள் விதுரரிடம் வந்து முறைப்படி ஆலிங்கனம்

நமஸ்காரம் முதலியவைகளைச் செய்து வெகுநாள் பிரிந்திருந்ததனால் மிகுந்த ஆசையுள்ளவர்களாய் ஆனந்தக்கண்ணீரைப் பெருக்கினார்கள். அரசனாகிய தர்மராஜனும் ஆசனத்தில் உட்கார்ந்திருக்கும் அந்த விதுரரைப் பூஜித்தார்.

7–11, பிறகு ஆகாரத்தை யுண்டு களைதீர்ந்து ஸுகமாய் உட்கார்ந்திருக்கும் அவரை நோக்கி, தர்ம புத்திரர் பின்வருமாறு கேட்கலானார். பறவைகளால் தங்கள் தங்கள் குஞ்சுகள் சிறகுகளால் மறைத்துக் காப்பாற்றப்படுவது போல நாங்களனைவரும், எங்களுடைய மாதாவுடன் விஷம், அக்னி முதலிய ஆபத்துக்களிலிருந்து உம்மால் காப்பாற்றப்பட்டோம். ஆதலால் எங்களுடைய ஞாபகம் உமக்கிருக்கிறதா? பூமி முழுவதும் சுற்றிய தங்களுக்குத் தேச யாத்ரை எப்படி நடந்தது? எந்தெந்த தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தீர்கள்? எந்தெந்த க்ஷேத்திரம் சென்றீர்கள்? உங்களைப் போன்ற பகவத் பக்தர்களே மிக்க பரிசுத்தமானவர்கள். ஆதலால் அவர்கள் தங்களுடைய மனதில் எப்பொழுதும் பகவான் வஸிப்பதால் தீர்த்தங்களைப் பரிசுத்தப்படுகிறார்கள். மேலும் ஸ்ரீ பகவானையே தெய்வமாகக் கொண்ட நமது சிநேகிதர்களும் பந்துக்களும் யாதவர்களும் உம்மால் பார்க்கப் பட்டார்களா? அவர்களைப் பற்றிக் கேள்விபட்டதுண்டா? அவர்களுடைய பட்டணங்களில் சுகமாக இருக்கிறார்களா?! என்றார்.

12–15 அதனைக் கேட்டு விதுரர் தீர்த்தயாத்திரையின் நிமித்தமாகச் சென்ற விடங்களில் நடந்த சமாசாரங்களைப் பூர்ணமாகத் தர்மராஜனுக்கு சொன்னார்.

ஆனால் யதுகுலத்திற்கு நேர்ந்த கெடுதியை மாத்திரம் சொல்லவில்லை. மனிதர்களால் துக்கம் சகிக்க முடியாதது. ஆகையால் அதை அவர்கள் விரும்புகிற தில்லை யல்லவா ? தவிரவும் விதுரர் மிகுந்த கருணை யுள்ளவர். துக்கமுள்ளவர்களைப் பார்த்துச் சகிக்க மாட்டார். 'ஆனதால் யதுக்களுக்குக் கெடுதி யுண்டாயிற்று என்று சொன்னவுடன் பாண்டவர்கள் வருத்தப்படுவார்கள். அவர்களைப் பார்ப்பது மிகவும் கஷ்டமான கார்யம்' என்று நினைத்தே அதைச் சொல்லவில்லை. பின்பு அந்த விதுரர் பெரிய தமையனராகிய திருதராஷ்டிரருக்கு ஆத்ம தத்துவத்தை உபதேசித்தும், மற்றுமுள்ளவர்களுக்குப் பிரியத்தை விருத்திசெய்து கொண்டும் சில காலம் அவ்விடத்தில் வசித்தார். அவர்கள் விதுரரைத் தெய்வமாக நினைத்துப் பூஜித்தார்கள். மாண்டவ்ய மஹர்ஷியின் சாபத்தால் யமனே இப்படி ஜன்மத்தை அடைந்து விதுரராக பிறந்தவர்; யமன் இப்படி அநேக வர்ஷங்கள் பூலோகத்திலிருக்கும் காலத்தில் அவருடைய உலகத்தில் அர்யமா வென்பவர் பாபிகளுக்கு தக்க சிக்ஷை விதித்துக்கொண்டு அந்த வேலையை நடத்தி வந்தார்.

16. பகவானுடைய சகாயத்தால் தர்மபுத்திரர் ராஜ்யத்தை அடைந்து, தம்முடைய குலவிருத்திக்குக் காரணரும், பௌத்ரருமாகிய பரீக்ஷித், லோகபாலர்கள் போன்ற தம்பிகள் ஆகிய இவர்களுடன் விசேஷ ஐசுவர்யங்களைப் பெற்று ஆனந்தமடைந்தார்.

17–18. பிறகு கிருஷ்ண பகவான் தர்மபுத்திரர் முதலியவர்களிடம் விடைபெற்று, பின் தொடர்ந்துவரும்

பந்துக்களைத் தடுத்துத் திருப்பிவிட்டு அர்ஜுனன், உத்தவர், ஸாத்யகி என்பவர்களுடன் துவாரகா நகரம் சென்றார். இப்படி கிருஹ கிருத்யங்களிலேயே ஆசை யுள்ளவர்களாகவும், அவற்றால் மதித்தவர் களாகவும் அவர்கள் வெகு காலம் கழித்தார்கள். காலத்தை மீறுவதற்குப் ப்ரஹ்மதேவராலும் முடியாதன்றோ ?

19–29. அப்பொழுது விதுரர் அஜ்ஞர்களாகவே இவர்கள் வெகுகாலத்தைப் போக்கிவிட்டார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு திருதராஷ்டிரரை நோக்கி, 'ஓ அரசனே! சமீபத்தில் பயம் நேரிடுகிறதைப் பாரும். சீக்கிரம் பட்டணத்தை விட்டு வெளியில் போகவேண்டும். கால மஹிமையால் நேரும் பயம் ஓரிடத்திலும் ஒரு வகையாலும் தடுக்கமுடியாத தாகையால் அது நம்மெல்லோருக்கும் சமீபித்துவிட்டது. அந்தக் காலம் நேரிடு மானால் ப்ராணனுக்கே அபாயம் உண்டா கிறது. அப்படி யிருக்கையில் பணம் முதலியவைகள் போய் விடுகிறதே என்பதில் என்ன ஆச்சர்யம் ? பிதா, சகோதரர்கள், சிநேகிதர்கள், புத்திரர்கள் ஆகிய இவர்கள் எல்லோரும் சண்டையில் கொல்லப் பட்டார்கள். வயது சென்று விட்டது. சரீரத்தில் ஜரை வந்துவிட்டது; இயற்கையிலேயே நீர் கண் இல்லாதவர். இப்போது கிழத்தனத்தால் உமக்குக் காதுகளும் கேட்கும் சக்தியுள்ளவைகளாயிருக்கவில்லை. புத்தியும் குறைந்திருக்கிறது. பற்கள் உதிர்ந்துபோயின. வயிற்றில் அக்கினி குறைந்து போயிற்று. வியாதி அதிகரித்திருக்கிறது. கபத்தின் வேகம் அதிகமா யிருக்கிறது. இவ்வளவு கஷ்டமான நிலைமையிலும் இன்னும் பிழைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் உமக்கிருப்பது ஆச்சரியப்படத்தக்கதே. மேலும் நீர்

வீட்டில் நெருப்பு வைத்தும், விஷம் கலந்த அன்னத்தைக் கொடுத்தும், இராஜ்யம் முதலிய ஐசுவர்யங்களை அபகரித்தும், இன்னும் பலவகையான கெடுதிகளைப் பாண்டவர்களுக்குச் செய்ததுமல்லாமல் அவர்களுடைய பத்னியை ஸபையில் அவமானப் படுத்தியும் இருக்கிறீர். அவைகளை நினைத்து நினைத்து மிகுந்த கோபத்துடன் பீமஸேனன் வீட்டைக் காத்திருக்கும் நாய்க்குச் சோறு போடுவது போல உமக்கு அன்னம் போடுகிறான். அதனைப் புஜிக்கிறீர், இது மேலான ஜீவனமா? இவ்வளவு தைன்ய மடைந்தும் இனியும் வெகுகாலம் ஜீவிக்க வேண்டு மென்று விரும்புகிறீர். ஆனாலும் கால மகிமையால் வஸ்திரங்கள் கிழிந்துபோவதுபோல உம்முடைய சரீரம் கிழத்தனத்தால் குறைகிறது. கீர்த்தி முதலிய வையிலும், பிரயோஜனமற்ற சரீரத்திலும் அபிமானம் முதலியவைகளை விட்டு எவன் சரீரத்தை விடு கிறானோ அவனே தீரனென்று சொல்லப்படுகிறான். அவன் இன்ன கதியை அடைந்தான் என்று பிறரால் அறிய முடியவில்லை. தவிரவும் குருவின் உபதேசத் தாலாவது, தானாகவாவது, ஸம்ஸாரத்தில் வைராக்யத் தையடைந்து ஸ்திர சித்தமுள்ளவனாகி, ஸ்ரீ மஹா விஷ்ணுவை மனதில் தியானஞ் செய்துகொண்டு வீட்டை விட்டுப் போகிறவனே உத்தமன். இனி வருங்காலம் பெரும்பாலும் நற்குணங்களைக் குறைக்கக் கூடியதாகையால் நீர் பந்துக்களுக்குத் தெரியாமல் வடக்குத் திக்கை நோக்கிச் செல்லும் என்றார்.

30–31. அஜமீட வம்சத்தில் பிறந்த கண்களில்லாதவ (குருட)ரான திருதராஷ்டிரர் தம்பியான விதுரருடைய வார்த்தைக் கேட்டு, பந்துக்களிடம் தமக்கிருக்கும்

ஸ்திரமான அபிமானத்தை விட்டு, தம்பியால் உப தேசிக்கப்பட்ட வழியே வடக்கு திக்கை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது அவருடைய பத்னியும் நல்ல நடத்தையுள்ளவளும், மிக்க பதிவிரதையுமான காந்தாரி என்பவள் தன் புருஷன் பின் சென்றாள். அவ்விருவர்களும் ஹிமய மலைக்குப் போனார்கள். சூரர்களுக்குச் சண்டையில் ஸந்தோஷ முண்டாவது போல் இராஜ்யத்திலிருந்து ஒழிவடைந்தவர்களுக்கு அந்தப் பர்வதமானது மிகுந்த ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியது.

32–35. அன்றைய தினம் காலையில் தர்மபுத்ரர் ஸந்தியோபாஸ்தி செய்து, அக்னி கார்யத்தை முடித்து, எள், பசு, ஸுவர்ணம் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குத் தானஞ்செய்து குருக்களை நமஸ்கரிப் பதற்காக வழக்கப்படி அவர்களுடைய அரண்மனை சேர்ந்தார். அவ்விடத்தில் விதுரர், திருதராஷ்டிரர், காந்தாரி ஆகிய அவர்களையுங் காணாமல் மிகவும் நடுக்கமுள்ளவராய் அங்கிருக்கும் ஸஞ்சயரை நோக்கி, ஓ காவல்கணருடைய புத்ரரே; நம்முடைய பிதிரு வ்யரைக் காணோமே, அவர் எங்கே போனார்? வயது சென்றவரே, தவிரவும் கண்களில்லாதவ வராயிற்றே, தாயாரான காந்தாரியும் எவ்விடம் சென்றாள்? அவள் புத்ர சோகமுள்ளவளே; இவர் களுக்குச் சிநேகிதராகிய விதுரர் போனவிடம் தெரியவில்லையே? நாம் அறியாமையால் ஏதாவது குற்றஞ் செய்தேனோ? அதனால் திருதராஷ்டிரர் என்னிடத்தில் கோபங்கொண்டு மற்ற பந்துக்கள் இறந்து போன துக்கத்தால் தமது பார்யையுடன் கங்கையின் ஜலத்தில் விழுந்து மரணமடைந்தாரா?

எங்களுடைய பிதாவாகிய பாண்டு மஹாராஜன் காலஞ் சென்றபோது சிசுக்களாகிய எங்களை விதுரரும் திருதராஷ்டிரருமே காப்பாற்றினார்கள், அப்படிப்பட்டவர்கள் எவ்விடஞ் சென்றார்கள்? சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

36–38 1/2. இதனைக் கேட்டு ஸஞ்சயர் தம் யஜமானனைக் காணாமல் கவலையுள்ளவராக மிகுந்த தைன்யத்துடன் சிநேகத்தாலுண்டான அதைரியத்தால் வருத்தப்பட்டு உடனே மறுமொழி உரைக்கவில்லை. பின்பு அவர் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே தைரியத்துடன் திருதராஷ்டிரருடைய பாதங்களை நினைத்துக்கொண்டே தர்மபுத்திரரை நோக்கி அவர்கள் போனவிடம் எனக்கும் தெரியாது: மஹாத்மாக்களான அவர்கள் என்னையும் ஏமாற்றிவிட்டார்கள்; நானும் அவர்களைக் காணாமல் கவலையுள்ளவனாயிருக்கிறேன்' என்றார்.

39–41 1/2. இப்படி அவ்விருவர்களும் பேசிக்கொண்டு இருக்கும் பொழுது நாரதர் தும்புருவுடன் அவ்விடத்திற்கு வந்தார். அவரைக் கண்டு தர்ம புத்திரர் தம்பிகளுடன் எழுந்திருந்து நமஸ்காரஞ் செய்து விதிப்படி பூஜித்து, ஓ நாரதரே! மிகுந்த மஹிமை பொருந்திய உம்முடைய தரிசனம் தெய்வச் செயலால் கிடைத்தது. எங்களுடைய பிதாவின் ஸஹோதரர்களான விதுரரும், திருதராஷ்டிரரும், புத்ர சோகமடைந்த காந்தாரியும் இன்னவிடம் போனார்களென்று தெரியவில்லை. அவர்களைக் காணாமல் துக்கமாகிய சமுத்திரத்தில் சழ்கியிருக்கிறோம். அது கரையற்றது, இந்த சமயத்தில்

கப்பல்காரர்போல நீங்கள் வந்திருக்கிறீர்கள், எங்களைக் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

42–63. இதைக் கேட்டு நாரதர் தர்மபுத்திரரை நோக்கி, 'ஓ தர்மபுத்திரரே! ஜகத் யாவும் ஈசுவரனுக்கு வசப்பட்டவை. (பிராணிகளைச் சேர்த்துவைப்பவர் அவரே. அவைகளைப் பிரிப்பவரும் அவரே) ஆகையால் ஒருவரைப் பற்றியும் துக்கிக்காதீர். மூக்குக் கயிறுள்ள எருதுகள் போலும் தந்திரியில் (பிணையல்) சிறு கயிறுகளால் கட்டப்பட்ட பசுக்கள் போலவும் எல்லா லோகங்களும், லோக பாலர்களும் வேதங்களாகிய நீண்ட கயிற்றில் வர்ணாசிரமம் முதலிய சிறுகயிறுகளால் கட்டப்பட்டு, பரமேசுவரனுடைய கட்டளையை நிறைவேற்றுகிறார்கள். உலகத்தில் விளையாட்டுக் கருவிகளை விளையாடுகிறவன் தனதிஷ்டப்படி சிலவேளை சேர்த்தும், பிரித்தும் வைப்பதுபோல மனிதர்கள் சேர்ந்திருப்பதற்கும் பிரிந்து போவதற்கும் பகவான் உடைய விருப்பமே காரணம். இவ்வுலகத்தை ஜீவரூபமாக நித்யமென்று நினைத்தாலும் எவ்விதத்திலும் பந்துக்களைப் பற்றித் துக்கிக்க நியாயமில்லை. மோகத்தால் அபிமானம் வைத்ததாலேயே துக்கம் நேரிடுகிறது. மேலும் ஜகத்தை நித்யா நித்யமென்று சொல்வது பொருந்தாது. ஆகையால் அஞ்ஞானத்தால் ஏற்பட்ட அதைரியத்தை விட்டு விடும். ஆனால் என்னை விட வேறு கதியில்லாத திருதராஷ்டிரர் முதலியவர்கள் நானில்லாமல் எப்படி ஜீவிப்பார்கள், என்று கேட்கலாம், அப்படி நினைப்பது சரியன்று. பத்துப் பூதங்களாலுண்டான இந்தச்சரீரம் காலத்திற்கும், கர்மத்திற்கும் வசப்பட்டது. ஆகையால் நம்முடைய சரீரமே அழியும் சுபாவமுள்ளது. மலைப்

பாம்பின் வாயில் அகப்பட்டவனால் எப்படி மற்றவனை இரட்சிக்க முடியாதோ அதுபோல், நாம் பிறரைக் காப்பாற்றுவது சாத்தியமன்று. கைகளுள்ள ஜந்துக்களான மனிதர்கள் முதலியவர்களுக்குக் கைகளில்லாத பசு முதலியவைகளும், நாற்கால் பிராணிகளுக்குப் புல் முதலியவைகளும், புலி முதலிய பெரிய ஜந்துக்களுக்கு அல்படலமுள்ளவைகளும் எப்படி ஆகாரமாகின்றனவோ அப்படி எல்லா ஜீவனும் வேறு ஜீவனுக்கு ஆகாரமா யிருக்கிறது. ஆதலால் எல்லாம் மரணடயமுள்ளதாகவே காணப்படுகின்றன. ஏ தர்மபுத்திரரே! இந்த ஜகத் யாவும் பகவானுடைய ஸ்வரூபமேயொழிய வேறில்லை. அவர் ஒருவரே, போக்தர் (அனுபவிப்பவர்) போக்தா வின். ஸ்வரூபமாய் இருப்பவர் அவரே. போக்கிய ருபமாயுமிருப்பவர் அவரே. ஆனாலும், மாயையால் பலவகையாகத் தோன்றுகிறார். ஏ மகராஜ! ஸகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாக வசிக்கும் பகவான் தேவவிரோதிகளான அசுரர்களைக் (அசுரர் களுடைய அம்சமுள்ள இராஜாக்களைக்) கொல் வதற்காகக் காலங்காலமாய் துவாரகையில் வசிக்கிறார். தேவகாரியம் அநேகமாக முடிந்துவிட்டது. மிச்சமான பாகத்தை முடிக்கக் காலத்தை எதிர்ப் பார்த்திருக்கிறார். பகவான் இவ்வுலகத்திலிருக்கும் வரையில் நீங்களும் இவ்வுலகத்தில் வசிக்கலாம். திருதராஷ்டிரர் தம்பியாகிய விதுரருடனும், காந்தாரி யுடனும் இமயமலையின் தென்பாகத்தில் மகர்ஷி களுடைய ஆசிரமம் போயிருக்கிறார், அவ்விடத்தில் கங்கா நதியானது ஸப்தரிக்ஷிகளுடைய பிரீதியின் நிமித்தம் ஏழு வகையாக ஓடிற்று. அதனால் ஸப்த ஸ்ரோதஸ் என்று பெயருண்டாயிற்று. அந்தத் தீர்த்தத்தில் ஒவ்வொரு காலத்திலும் திருதராஷ்டிரர் ஸ்நானஞ்

செய்து அக்னிகாரியஞ்செய்து ஜலத்தைப் புசித்து, சாந்தமனமுள்ளவராய் ஆசைகளையும் ஒழித்து, சாஸ் திரத்தில் சொல்லியபடியுள்ள ஆசனத்தையடைந்து சுவாசத்தை யடக்கி, இந்திரியங்களை விஷயங்களில் செல்ல வொட்டாமல் அடக்கிப் பகவானையே மனத்தில் தியானஞ் செய்து அதனால் ராஜஸ, தாமஸ தோஷங்களை நிவர்த்தித்துக்கொண்டு, மனத்தை ஸ்தூல தேஹத்திலிருந்து புத்தியுடன் ஒன்றாகச் சேர்த்து, அந்தப் புத்தியைப் பார்க்கப்படும் விஷயங்களிலிருந்து க்ஷேத்ரக்ஞனுடன் சேர்த்து, அந்த க்ஷேத்ரக்ஞனைப் பார்க்கிறவரிடமிருந்து பிரித்து, கடாகாசத்தைக் கடத்திலிருந்து பிரித்து மகாகாசத்தில் சேர்ப்பது போல ஸகலத்திற்கும் ஆதாரமாகிய ப்ரஹ்மத் தினிடம் சேர்த்து, மாயையின் வாஸனையை யழித்து, இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கி, ஆகாரங் களை நிவர்த்தித்துக் கட்டைபோல அசையாமல் இருக்கிறார். ஸகல கர்மங்களையும் விட்டவரான அவருக்கு நீர் இடையூறாக வேண்டாம். மேலும் இன்று முதல் ஐந்தாவது நாளில் அவர் சரீரத்தை விடப் போகிறார். அந்தச் சரீரம் உடனே எரிந்து போகும் திருதராஷ்டிரருடைய சரீரம் பர்ணசாலை யுடன் கார்ஹபத்யம் முதலிய அக்னிகளால் எரிக்கப் படும்போது ஆசிரமத்திற்கு வெளியிலிருக்கும் அவருடைய பத்னியும் பதிவ்ரதை யுமான காந்தாரி யானவள் உடன் கட்டையேறிச் சரீரத்தை விட்டு விடுவாள், விதுரர் இந்த ஆச்சரியத்தைக் கண்டு திருதராஷ் டிரருக்கு நல்ல கதி கிடைத்ததால் சந்தோஷித்து அவரை விட்டுப் பிரிந்ததால் கொஞ்சம் துக்கத்தை அடைந்தும் தீர்த்த யாத்திரைக்குப் போவார். ஆகையால் அவர்களை அழைத்து

வருவதற்காகவது, அவருடைய சரீரத்தைத் தகிப்பதற்காகவது நீர் போக வேண்டியதில்லை என்று சொல்லி, நாரதர் தும்புருவுடன் ஸ்வர்க்கம் சென்றார். தர்மபுத்திரரும் நாரதருடைய வார்த்தையைக் கேட்டு அதை மனத்தில் வைத்துச் ஸகல துக்கங்களையும் நிவர்த்தித்துக் கொண்டார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம் 14

தர்மபுத்திரருக்கு நேர்ந்த அபசகுனங்கள்

பந்துக்களைப் பார்ப்பதற்கும், புண்ணிய ச்லோக ராகிய கிருஷ்ணனுடைய அபிப்ராயத்தைத் தெரிந்து கொள்ளுவதற்கும் துவாரகா நகரஞ் சென்றிருந்த அர்ஜுனன், சென்று சில மாஸங்களாகியும் திரும்பி வரவில்லை, அப்பொழுது அஸ்தினாபுரத்தில் மிக்க கோரங்களான அபசகுனங்கள் ஏற்பட்டன. மனிதர்கள் உடைய மனதில் கோபம், ஆசை, பொய், ஆகிய இவைகளுண்டாயின. மனிதர்கள் பாபமான காரியத்தைச் செய்து ஜீவித்தார்கள். பெரும்பாலும் ஜனங்கள் கபடமாகப் பேசினார்கள். தோழர்களும் வஞ்சனையாக பேசிக் கொண்டார்கள். பிதா, மாதா, மித்ரன், சகோதரர்கள், தம்பதிகள் ஆகிய இவர்கள் யாவரும் ஒருவருக்கொருவர் கலகம் செய்து கொண் டார்கள். தகப்பன்மார்கள் பணம் வாங்கிக் கொண்டு பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொடுத்தார்கள். புத்திரர்கள் பிதாவைக் காப்பாற்றுவதில்லை. ப்ராஹ்மணர்கள் வேதத்தில் சிரத்தை இல்லாதவர்கள் ஆனார்கள். மேலும் சூத்திரர்கள் வேதத்தைப் படிக்க ஆரம்பித்தார்கள். இப்படிக் காலகதி கோரமா யிருந்தது. இப்படி காலமானது மாறிப் போனதால், மனிதர்களுக்கு ஏற்பட்டிருக்கும் லோபம் முதலிய மனத்தின் துர்க்குணங்களையும், அதர்மத்தை அனுஷ் டிப்பதாகிய சரீர துர்க்குணத்தையும், மிகுந்த அபச குனங்கள் நேரிடுவதையும் கண்டு தர்மபுத்திரர் பீமசேனனை நோக்கி, 'ஓ பீம! பந்துக்களைப் பார்ப் பதற்காகவும், புண்ணிய ச்லோகராசிய கிருஷ்ணன்

னுடைய எண்ணத்தைத் தெரிந்து கொள்ளு வதற்காகவும் துவாரகா நகரம் சென்ற அர்ஜுனன், ஏழு மாதங்களாகியும் இன்னும் வரவில்லை, அதன் காரணமும் இன்னதென்று தெரியவில்லை, எவருடைய அனுக்கிரகத்தால் இராஜ்யம், ஸ்திரீ, ப்ராஹ்மணன், குலவிருத்தி, சத்ருக்களை ஜயிப்பது, ஐசுவரியம், உத்தம லோகங்கள் ஆகிய இவைகள் நமக்குக் கிடைத்தனவோ, அந்தப் பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய சரீரத்தை விடப் போகிறாரென்று தேவர்ஷியாகிய நாரதர் சொன்ன காலம் வந்து விட்டது போலிருக்கிறது. அந்தப் பகவானை விட்டுப் பிரிவதைக் காட்டிலும் வேறு நமக்கு கெடுதி நேரிட நியாயமில்லை. ஓ புருஷசிரேஷ்டா! ஆகாயத்தில் உண்டானவைகளும், பூமியில் உண்டாகின்றவைகளும், சரீரத்தில் காணப்படுகின்றவைகளுமான அபசகுனங் களைப்பார். புத்திக்கு மோகமும் மிக்க கடுமையுமான பயம் வரப்போகிறதென்பதை இவைகள் காட்டு கின்றன. இடக்கண்ணும், இடத்தொடையும் அடிக்கடி துடிக்கின்றன. இருதயத்தில் நடுக்க முண்டாகிறது. அந்த தைஹிகமான அபசகுனத்தால் வெகு சீக்கிரத்தில் கெடுதி நேரிடுமென்று காட்டப்படுகிறது.

13-23. இந்தப்பெட்டை நரியானது குறைக் கொள்ளியை வாயில் கௌவிக்கொண்டு உதயமாகும் சூரிய மண்டலத்தைப் பார்த்து ஊளையிடுகிறது. நாயானது என்னைப் பார்த்துப் பயமில்லாமல் அழுகிறது. என்னைப் பசு முதலிய மேலானவைகள் இடமாகவும், கழுதை முதலியவைகள் வலமாகவும் சுற்றுகின்றன, குதிரைகள் அழுகின்றன. வரும் மரணத்தைக் குறிக்கும் மாடப்புறாவும், கோட்டானும்

அதற்கு விரோதியான காக்கையும் விகாரமாகக் கத்துகின்றன. இவைகளைக் கேட்க மனம்நடுங்கு கிறது; ஜகத்தானது சூனியமாய் விடுமென்று நினைக் கிறேன். திக்குகள் அழுக்கடைந்து நன்றாய் விளங்க வில்லை, பரிவேஷம் (சூரியன், சந்திரன் இவர்களைச் சுற்றிக் கோட்டைக் கட்டுவது) உண்டாயிருக்கிறது; பூமியானது மலைகளுடன் அசைகிறது. மேகங்களின் மறைவில்லாமல் ஆகாயம் சுத்தமாயிருக்கும்போதும் இடியுண்டாகிறது; அகாலத்தில் மேக கர்ஜிதம் கேட்கிறது. மண்காற்று கடுமையாக வீசுகிறது. இருட்டுப் பரவுகிறது. மேகங்கள் வெறுக்கக் கூடிய வையாக எல்லா விடங்களிலும் இரத்த மழையைப் பொழிகின்றன; சூரியனுடைய தேஜஸ் மங்கிவிட்டது ஆகாயத்தில் கிரகங்கள் யுத்தஞ் செய்கின்றன, ருத்ரருடைய பரிவாரங்களாகிய பூதகணங்கள் மற்ற ப்ராணிகளுடன் சேர்ந்து எங்கும் பரவியிருப்பதால் ஆகாயம், பூமி இவைகள் தீப்பட்டவைபோலிருக் கின்றன. ஆறுகளும், நதிகளும் (மேற்கு முகமாய்ச் செல்லுகிறவைகள்), குளங்களும் ஏரிகளும், பிரஜை களுடைய மனமும் கலங்கிவிட்டன. ஆஜ்யம் (நெய்) முதலியவைகளை ஹோமஞ் செய்வதால் அக்னி ஜ்வலிக்கிறதில்லை, இந்தக் காலம் எதனைச் செய்யப் போகிறதோ தெரியவில்லை. மேலும் குழந்தைகள் ஸ்தன்ய பானஞ் செய்யவில்லை. தாயார்களுடைய ஸ்தனங்களில் பாலும் பெருகவில்லை. பூக்கள் கண்ணீரைப் பெருக்கி அழுகின்றன. கொட்டிலி லிருக்கும் ஹ்ருஷபங்கள் சந்தோஷமாக இருக்கவில்லை. தேவதாப் பிரதிமைகள் அழுகின்றவை போலிருக் கின்றன, அவை அசைகின்றன. இந்தச் தேசமும், கிராமங்களும், பட்டணங்களும், உத்தியானங்களும்,

இரத்தினம் விளையும் பூமிகளும், ஆசிரமங்களும் பிரகாசியாமல் இருப்பதுடன் அவைகளில் வசிப்பவர்களும் சந்தோஷமற்றவர்களாய் இருக்கிறார்கள், இவைகள் நமக்கு எவ்விதமான துக்கத்தைக் காண்பிக்கப் போகின்றனவோ, இப்படிப்பட்ட பெரிய உற்பாதங்களைப் பார்க்கும் போது மற்ற புருஷர்களுடைய பாதங்களில்லாத வஜ்ரரேகை முதலியவைகளால் அலங்கிருதமான ஸ்ரீ பகவானுடைய பாதங்களின் ஸ்பரிசம் பூமிக்கு இல்லாமல் பூமிதேவி பாக்கியக்குறை உள்ளவளாய் ஆகிவிடுவாள்போலத் தோன்றுகிறது என்றார்.

24–45. இப்படி தர்மராஜரும் பீமஸேனரும் பேசிக் கொண்டிருக்கும்போது அர்ஜுனன் துவாரகா நகரத்திலிருந்து திரும்பிவந்து தர்மபுத்திரரை நமஸ்கரித்தான். அப்பொழுது அர்ஜுனன் முன்போலிராமல் மிக்க மனவருத்தமுள்ளவனாகவும், தலையைக் குனிந்து இரு கண்களிலும், நீரைப் பெருக்கித் துக்கித்தவனாயுமிருந்தான்; இப்படிச் சோபையில்லாமலிருக்கும் அர்ஜுனனைப் பார்த்து தர்மபுத்திரர் பயந்து, பந்துக்களின் நடுவில் தம்பியை நோக்கி, ஓ அர்ஜுன துவாரகா நகரத்தில் நம்முடைய பந்துக்களாகிய யாதவர்கள், போஜர்கள், தாசார்ஹர்கள், ஸாத்வதர்கள், வ்ருஷ்ணிகள், தூயரும் பூஜ்யருமாகிய, மாதாமகர், அம்மானாகிய வசுதேவர், அவருடைய தம்பிகள் உக்ரசேனருடைய சகோதரிகளும், வசுதேவருடைய பத்தினிகளுமான தேவகி முதலிய ஏழு ஸ்திரீகள், அவர்களுடைய புத்திரர்கள், மருமகள் ஆகிய இவர்கள் க்ஷேமமாயிருக்கிறார்களா? கெட்ட பிள்ளையுள்ள அரசனாகிய உக்ரசேனர், அவருடைய

தம்பியாகிய தேவகர் ஆகிய இவர்கள் பிழைத்திருக்கிறார்களா? மேலும் ஹிருதிக (ச்வல்பர்)ருடைய பிள்ளையான அக்ரூரர், ஜயந்தன், கதன், சாரணன், ஸத்யஜித் அல்லது சத்ருஜித் முதலியவர்கள் க்ஷேமமாய் இருக்கிறார்களா? மேலும் சாத்வதர்களுக்கு அதிபதியான பலராமன் ஸகல விருஷ்ணிகளுக்குள் மகாரதரும் யுத்தத்தில் கம்பீர வேகமுள்ளவருமான பிரத்யும்னர், ஸுஷேணர், சாருதேஷ்ணர் ஜாம்பவதியின் புத்திரராகிய சாம்பர், மற்ற ரிஷப குமாரர்கள், பகவானுடன் சஞ்சரிக்கும் சுருததேவர், உத்தவர் முதலியவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனையும் பல ராமனையும் ஆசிரயித்த யாதவ சிரேஷ்டர்களாகிய சுநந்தர், தந்தர் முதலியவர்கள் ஆகிய பந்துக்கள் எல்லாரும் க்ஷேமமாயிருக்கிறார்களா? மேலும் அவர்கள் நம்மிடத்தில் பிரியத்துடன் நம்மை நினைத்துக் கொண்டிருக்கிறார்களா? ப்ராஹ்மணர்களிடம் விசேஷ பக்தியுள்ளவரும், பக்தர்களிடத்தில் பிரீதியுள்ளவருமான ஸ்ரீ கிருஷ்ண பகவான், உலகங்களுடைய மங்களத்திற்காகவும் க்ஷேமத்திற்காகவும் (கிடைத்ததைக் காப்பாற்றுவதற்காகவும்) துவாரகா நகரத்தில் மித்திரர்களுடன் ஸுதர்மையில் ஸுகமாக வசிக்கிறாரா? எந்த ஸ்ரீ பகவானுடைய இருகைகளால் காப்பாற்றப்பட்ட துவாரகையில் பந்துக்கள் நன்றாகப் பூஜிக்கப்பட்டு மிகுந்த ஆனந்தத்துடன் பார்ஷதகணங்கள் போல ஸஞ்சரிக்கிறார்களோ, அந்த ஸ்ரீ பகவான் பலராமனுடன் யதுகுலத்தில் பிரகாசிக்கிறாரா? ஸத்யபாமா முதலிய பதினாயிரம் ஸ்திரீகளும் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய பாதஸேவையே தபஸ் முதலியவைகளைக் காட்டிலும் மேலானது என்று நினைத்து அவருக்குச் சிசுருஷை செய்து வருகிறார்களா?

அவர்களுக்குப் பகவான் தம்முடைய பலத்தால் தேவர்களை ஜயித்து, அவர்களால் அனுபவிக்கக் கூடியவைகளும் இந்திராணிக்குத் தகுதியானவை களுமான பாரிஜாதம் முதலியவைகளைக் கொடுத் தாரல்லவா? எந்தப் பகவான் தேவர்களை ஜயித்து, தேவ சிரேஷ்டர்கள் வசிக்கக்கூடிய சுதர்மா என்ற சபையை பலாத்காரமாகப் பூமியில் கொண்டுவந்து, அதில் தம்முடைய கைகளின் பலத்தை அவலம்பித்து, ஜீவிக்கும் யாதவர்கள் வஸிக்கும்படியாகச் செய்தாரோ, அந்தப் பரமபுருஷன் ஸுகமாக வாசஞ் செய்கிறாரா? (அவர் பூமியில் வஸித்தால்தான் நமக்கும் ஜனங்கள் ளுக்கும் க்ஷேமமுண்டாகுமென்பது கருத்து) மேலும் குழந்தாய் அர்ஜுன! உனக்குத் தேஜஸ் குறைந்திருப் பதாகத் தோற்றுகிறதே, சரீரத்தில் வியாதி இல்லாம லிருக்கிறதா? வெகுநாளாகத் துவாரகா நகரத்தில் வசித்ததால் பந்துக்கள் உன்னைக் கௌரவப்படுத்த வில்லையா? அல்லது அவமதித்தார்களா? அல்லது பிரியமற்ற நிஷ்டூர வார்த்தைகளைச் சொன்னார்களா? அதனால் மனவருத்த மடைந்தாயா? அல்லது யாசகர்களுக்குச் சிலவற்றைக் கொடுப்பதாகப் ப்ரதிக்ஞை செய்து, பின்பு ஆசையால் அவற்றை அவர்களுக்குக் கொடுக்கத் தவறிப் போனாயா? எல்லாரையும் நீ காப்பாற்றும் ஸ்பாவமுள்ள வனன்றோ? அப்படிப்பட்டவன், ப்ராஹ்மணன், குழந்தை, பசு, வயது சென்றவர், வியாதியுள்ளவர், ஸ்திரீ, மற்றைப் ப்ராணிகள் இவர்களில் சரண மடைந்தவரைக் காப்பாற்றாமல் விட்டுவிட்டாயோ? ஆசைப்படக்கூடாத ஸ்திரீயினிடம் ஆசைபடாமலிருக் கிறாயா? விரும்பக்கூடிய ஸ்திரீ அழுக்கு வஸ்திரம் முதலியவைகளுள்ளவளானாலும் அவளிடம் அனுராகம்

வைக்காமலிருக்கிறாயோ? அல்லது வழியில் மேலான வர்களாலாவது, ஸமமானவர்களாலாவது? ஜயிக்கப் படாமலிருக்கிறாயோ? அல்லது குழந்தைகளுக்கு அன்னமிடாமல் புசித்தாயோ? (அதிதிகள் வேலைக் காரர்கள் கர்ப்பிணி, ரோகிகள், கன்னிகைகள் இவர்களுக்கு ஆகாரங் கொடாமல் புசித்தாயோ?) இன்னும் மற்ற கெட்ட காரியங்கள் எவையேனும் உன்னால் அனுஷ்டிக்கப்பட்டனவோ? மிகவும் பிரியரும், அந்தரங்க பந்துவுமான ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப் பிரிந்தோமேயென்று வருத்தப்படுகிறாயோ? உனக்கு இதை விட வேறு வியாதி ஒன்று மிருக்க நியாயமில்லை என்று கேட்டார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்15

தர்மபுத்திரர் பரலோகஞ்சென்றது.

1–7, இம்மாதிரி தர்மபுத்திரர் பலவகையாகச் சந்தேகம்படும்படி அர்ஜுனனுடைய சரீரத்தில் காந்தியின் குறைவு முதலியவைகள் உண்டாயிருந்தன. அவர் ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப் பிரிந்ததால் விசேஷ வருத்தமடைந்தார். அந்தத் துக்கத்தாலேயே தாமரை மலர்போன்ற அவருடைய முகமும் ஹிருதயமும் வாடி இருந்தன. தேஜஸ் குறைந்திருந்தது. பிரபுவாகிய அந்த ஸ்ரீ கிருஷ்ணபகவானையே மனத்தில் தியானித்துக் கொண்டிருந்ததனால் சீக்கிரமாக விடைசொல்ல முடியாதவராயிருந்தார்.

பிறகு மிகச் சிரமப்பட்டுத் துக்கத்தை மனத்தில் அடக்கிக் கைகளால் கண்களைத் துடைத்து, பகவான் தம்மிடம் வைத்திருந்த சக்யம். மைத்ரி, ஸமஹ்ருத் துவம் முதலியவைகளை நினைத்துக் கொண்டும் துக்கத்தினால் கண்டமடைத்து அரைகுறையான வார்த் தையுள்ளவராகத் தமையனை நோக்கி. ஓ மகாராஜ! ஸ்ரீ கிருஷ்ண பகவான் பந்துவாக விருந்து என்னை ஏமாற்றினார். தேவர்களாலும் ஆச்சரியப்படக்கூடிய என்னுடைய மிகுந்த தேஜஸ்ஸை அபஹரித்தார். எந்தப் பகவான் பூமியை விட்டுப்போனதால் இவ்வுலகம் முழுவதும் ப்ராணனில்லாத சரீரம் போலப் பார்க்க அழகாக இருக்கவில்லையோ, (துரித்திரன் போலவென்றும் சொல்வதுண்டு) தவிரவும், துருபத மகாராஜனுடைய சபையில் திரௌபதியின் சுயம்வரத்திற்காக வந்தவர்களும், மன்மதனால் மதித்த

வர்களுமான அரசர்களுடைய தேஜஸை எவர் தமது பார்வையாலேயே அபகரித்தாரோ, எவருடைய அனுக்கிரகத்தால் நான் மத்ஸ்ய யந்திரத்தைப் பிளந்து திரௌபதியைக் கல்யாணஞ் செய்து கொண்டேனோ, எவருடைய ஸான்னித்தியத்தால் காண்டவ வனத்தை அக்கினி பகவானுக்குக் கொடுத்து அதற்கு விரோதஞ்செய்யும் தேவேந்திரனை ஜயித் தேனோ, எவருடைய ஒத்தாசையால் மயனால் உண்டு பண்ணப்பட்டதும், மிகவும் ஆச்சரியகரமானதும், மாயா மயமாயுள்ள சபையானது நம்மால் அடையப் பட்டதோ, மேலும் எவருக்காக வந்த அரசர்கள் மிக்க உத்தம வஸ்துக்களைக் காணிக்கையாகக் கொடுத்தார்களோ, எந்த பரம புருஷன் சமீபத்தில் இருந்தால் உங்களுடைய தம்பியும் அநேக யாஜனை பலமுள்ளவருமான பீமஸேனர் ராஜஸூயயாகத் திற்காக ஜராசந்தன் என்பவனைக் கொன்றாரோ, ஜராசந்தனால் காராகிருகத்தில் அடைக்கப்பட்டிருந்த அரசர்கள் எவரால் விடுவிக்கப்பட்டு உங்களுடைய யாகத்திற்குக் காணிக்கைகளுடன் வந்தார்களோ, ராஜஸூயயாகத்தில் மஹாபிஷேகத்தையடைந்ததும், மேலானதுமான திரௌபதியின் தலைமயிரை துச்சாதனன் பிடித்து இழுக்கும்பொழுது உம்முடைய பத்னியாகிய அவள் எந்தப் பகவானை ஸ்மரித்தாளோ, எவர் உடனே அவ்விடம் வந்து சேர்ந்தாரோ, எவரை நமஸ்கரிக்கும் பொழுது திரௌபதியின் கண்ணீர் எவருடைய காலில் விழுந்ததோ, எவர் துச்சாசனன் முதலியவர்களுடைய ஸ்திரீகள் தலைமயிரை விரித்துக்கொண்டு அழும்படி செய்தாரோ, மேலும் பதினாயிரம் ஸிஷ்யர்களுடன் போஜனம் செய்பவரான துர்வாசஸஸ் என்னும் மஹர்ஷி

நமது சத்துவாகிய துர்யோதனனால் தூண்டப்பட்டு, நம்முடைய ஆசிரமம் வந்தபொழுது எந்தப் பகவான் (கீரையை) தாம் புசித்து அதனால் மூவுலகத்தில் இருக்கும் துர்வாசஸ் முதலிய மகரிஷிகளையும் திருப்தியடையச் செய்து நம்மைக் காப்பாற்றினாரோ, யாருடைய தேஜஸ்ஸினால் பரமசிவன் பார்வதியுடன் கூட ஆச்சரியமடைந்து பாசுபதமென்ற தமது அஸ்திரத்தை எனக்குக் கொடுத்தாரோ, மற்றுமுள்ள தேவர்களும் அவரவர்களுடைய அஸ்திரங்களையும் கொடுத்தார்களோ, இச்சரீரத்துடனேயே நான் ஸ்வர்க்க லோகத்தில் இந்திரனுடைய ஆசனத்தையும் அடைந்தேனோ, மேலும் ஸ்வர்க்கத்திலேயே வெகு காலம் வசித்துத் தேவர்களுக்கு விரோதியான அசுரர்களைக் கொன்றேனோ, அந்தப் பரமபுருஷன் என்னை இப்பொழுது ஏமாற்றிவிட்டார். கரையற்ற கௌரவ ஸைன்யமாகிய சமுத்திரத்தை எவருடைய ஒத்தாசையால் நான் ஒருவனாகத் தாண்டினேனோ, பின்னும் சத்துருக்களால் அபகரிக்கப்பட்ட பசுக்களையும் அவர்களுடைய தேஜஸ்ஸிற்கு இருப்பிடமான இரத்தினக் கிரீடங்களையும் பிடுங்கிக் கொண்டேனோ, பீஷ்மர், கர்ணர், துரோணர், சல்யர் இவர்களுடைய ஸைனியங்கள் மிகுந்த பலமுள்ள க்ஷத்திரியர்களால் அலங்கரிக்கப்பட்டவையானாலும், அவைகளின் நடுவில் எந்தக் கிருஷ்ண பகவான் என்னுடைய ரதத்தில் சாரதியாகவிருந்து ஒவ்வொரு சேனாதிபதிகளுடைய ஆயுஸ்ஸையும், மனோபலத்தையும், தேகபலத்தையும் பார்வையாலேயே குறைத்து விட்டாரோ, விஷ்ணுபக்தனாகிய ப்ரஹ்லாதன் இடத்தில் ஹிரண்யகசிபுவினால் தூண்டப்பட்ட அரசர்களுடைய கொடுமைபோல் எந்தக் கிருஷ்ணனால்

காப்பாற்றப்பட்ட என்னிடத்தில் அளவற்ற மஹிமையுள்ளவர்களான துரோணர், பீஷ்மர், கர்ணன், அசுவத்தாமா, ஸுசர்மா, சல்யர், ஜயத்ரதர், பாஹ்லீகர் இவர்களால் ப்ரயோகிக்கப்பட்ட அஸ்திரங்கள் வீணாகப்போயினவோ, மேலும்; ஜயத்ரதனைக் கொல்லும்பொழுது தண்ணீர் குடிக்காததனால், குதிரைகள் களைத்துப்போக, இரதத்திலிருந்து எந்தப் பகவான் கீழே இறங்கி, பாணத்தால் பூமியைப் பிளந்து. அதிலிருந்து ஜலத்தையுண்டுபண்ணினாரோ, அப்பொழுது எவருடைய மஹிமையால் சத்ருக்கள் மெய்மறந்து என்னை அடிக்காமலிருந்தார்களோ, அந்த மகாபுருஷரும், மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியவருமாகிய பகவானை சாரதியாய் வைத்துக் கொண்டேனோ, நான் மிகவும் அற்ப புத்தியுள்ளவன். அந்த அபராதத்தால்தான் என்னை அவர் ஏமாற்றிவிட்டாரோ, தெரியவில்லை!

18–27. லக்ஷ்மீபதியாகிய பகவான், "ஓ பார்த்த! (குந்தியின் புத்ரன்) ஓ அர்ஜுன! ஓ குரு நந்தனா! (கௌரவர்களைச் சந்தோஷப்படுத்திகிறவன்) ஏ தோழா! என்று சிரித்துக்கொண்டு பலவகையாக வேடிக்கை வார்த்தைகளைப் பேசினார் அல்லவா? அவைகள் யாவும் இப்பொழுது என் மனத்திலிருக்கின்றன.ஒரே படுக்கையில் படுத்துக்கொள்வது, ஒரே ஆசனத்தில் உட்காருவது, சேர்ந்தே ஸஞ்சரிப்பது புசிப்பது, தம்முடைய குணங்களை தோத்திரம் செய்து கொள்வது, ஆகிய இவைகளால் எங்களிருவர்களுக்கும் மனமும் ஒன்றுபட்டிருந்ததால் சில சமயம் நீர் சொன்ன படி செய்தார் அல்லவா என்று நான் கிருஷ்ணனைப்

பரிகாசஞ் செய்தாலும் தகப்பன் பிள்ளை செய்த பிழையைப் போலவும், அற்ப புத்தியுள்ள என்னுடைய குற்றத்தை விசேஷ மஹிமை பொருந்திய வராகையால் ஸகித்திருந்தார், என்னிடத்தில் மிகவும் மித்ரரும், அளவற்ற பிரீதியுள்ளவரும், அனுகூலத்தைச் செய்ய விரும்பியவருமான புருஷோத்தமனை விட்டுப்பிரிந்து, வழியில் அந்தப் பகவானுடைய களத்திரங்களைக் காப்பாற்ற முயன்றும் சக்தியற்றவனாக அஸத்துக்களால் ஸ்திரீயானவள் போல கோபர்களால் ஜயிக்கப் பட்டேன். இந்த காண்டீபம், பாணங்கள், ரதம், குதிரைகள், ரதியாகிய நான் ஆகிய எல்லாம் முன்னிருந்தவைகளானாலும் பகவானிருந்த. வரையில் அவையெல்லாம் காரியத்திற்கு உபயோகப்பட்டன; பகவான் ஸ்வர்க்கம் போன பிறகு ஒருக்ஷணத்திற்குள் சாம்பலில் செய்த ஆஹுதிபோலவும், வஞ்சகனுக்குத் தானம் செய்தது போலவும், களர் பூமியில் பயிரிடுதல் போலவும் பிரயோசனமற்றவைகளாயின. ஓ மகாராஜ! துவாரகா நகரத்தில் வசிக்கும் பந்துக்களுடைய க்ஷேமத்தை விசாரித்தீரல்லவா? அவர்கள் எல்லாரும் ப்ராஹ்மண சாபத்தால் மூடர்களாய், மத்யத்தைக் குடித்து மதங்கொண்ட..வர்களாய் ஒருவருக்கொருவர் பந்துக்களல்லாதவர்கள் போல் முஷ்டியால் அடித்துக் கொண்டு, நான்கு ஐந்து பெயர்கள் தவிர மற்றவர்கள் எல்லாரும் இறந்தார்கள், பிராணிகள் ஒருவரை யொருவர் காப்பாற்றுவதும், ஒருவரை யொருவர் கொல்வதுமாகி எல்லாம் பகவானுடைய இச்சையே தவிர வேறில்லை, ஜலத்தில் மத்ஸ்யம் முதலிய ஜந்துக்களில் பெரியவைகள் சிறிய ப்ராணிகளைக் கொல்வதுபோல் ஸகல ப்ராணிகளிலும் பலசாலிகள் அற்ப பலமுள்ளவர்களை ஜயிக்கிறார்கள், இப்படியே

யாதவர்களும் ஒருவருக்கொருவர் அடித்துக்கொள் ளும்படி பகவான் செய்து பூமியின் பாரத்தைப் போக்கினார், தேசத்திற்கும் காலத்திற்கும் தகுந்த வைகளும், மனத்தின் தாபங்களைப் போக்கக் கூடிய வைகளுமான கோவிந்தனுடைய வார்த்தைகளை நினைக்க நினைக்க அவைகள் மனதை அபஹரிக் கின்றன என்று பிரலாபித்தார்.

28–31. இப்படி அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரைமலர் போன்ற பாதங்களை நினைத்து அவரிடம் விசேஷ பக்தியை அடைந்தார். அதனால் சித்த சுத்தி உண்டாயிற்று. சண்டையில் பகவானால் உபதேசிக்கப்பட்ட ஞானமானது, கால மகிமையாலும், கர்ம வசத்தாலும் தமோ குணத்தாலும் மறைக்கப்பட்டிருந்தது, அதனால் அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய திவ்ய சரணங்களைத் தியானித்து பூர்ணமான பக்தியை அடைந்துமனத்தில் இருந்து எல்லா அழுக்கும் நீங்கினவராய் முந்திய ஞானத்தை நினைத்துக்கொண்டார்.

முக்குணங்கள் புண்யபாபங்கள், ஸ்தூல சரீரம் ஆகிய இவைகளின் பற்றுதல் (சம்பந்தம்) அற்றுப் போயிற்று. உத்பத்தி முதலியவைகள் விலகின. ஸ்வரூப ஞானம் உண்டானது. ஸகல ஸம்ஸயங்களும் நாசமாயின. ஆனதால் அர்ஜுனன் எந்த வகையிலும் துக்கமற்றவனானான்.

32–33. இம்மாதிரி பகவான் வைகுண்டம் சென்ற தையும், யதுகுலத்தின் நாசத்தையும் அர்ஜுனன் இடமாகத் தர்மபுத்திரர் தெரிந்து கொண்டு அந்தக்

அந்தக்கரணத்தையடக்கித் தானும் ஸ்வர்க்கம் போக விரும்பினார். குந்திதேவியும் அர்ஜுனன் வார்த்தையைக்கேட்டு பகவானிடத்தில் இடைவிடாமல் பக்தி செய்து அவரிடத்திலேயே மனத்தைச் செலுத்தி ஸம்சாரத்திலிருந்து வைராக்யத்தை யடைந்தாள். (ஜீவன் முக்தியை அடைந்தாளென்பது கருத்து)

34–35. காலில் தைத்த ஒரு முள்ளைப் பின்னும் ஒரு முள்ளினால் எடுப்பதுபோல, பகவான் யது குலத்தில் கிருஷ்ணனாக அவதரித்து, பூமியின் பாரத்தை நிவர்த்தித்து, அந்தச் சரீரத்தையும் விட்டுவிட்டார். பூமிக்குப்பாரமாயிருந்த, சரீரமும், அதைப் போக்கடித்த கிருஷ்ண சரீரமும் பகவானுடையதாகையால் அவைகளில் அவருக்கு சமான ப்ரீதியே தவிர பேதமில்லை. மேலும் வேஷதாரியான நடன் மறுபடி வேஷத்தைக் கலைத்து விடுவதுபோல ஈசுவரன் மத்ஸ்யம், கூர்மம் (ஆமை) முதலிய உருவங்களையெடுத்து, அவைகளை விட்டு விடுகிறார். அப்படியே கிருஷ்ணனாகவிருந்து பூமிக்குப் பாரமாயுள்ள அரசர்களை நாசஞ் செய்து அந்தச் சரீரத்தையும் விட்டுவிட்டார்.

36–38 1/2. எல்லோராலும் கேட்கக் கூடிய திவ்ய சரிதமுள்ள பகவான் என்றைய தினம் இவ்வுலகத்தை விட்டு வைகுண்டஞ் சென்றாரோ, அன்றையதினமே அஞ்ஞர்களைக் கலி சூழ்ந்து கொண்டது. அப்பொழுது பட்டணத்திலும், தேசத்திலும், வீடுகளிலும். மனத்திலும் கலி நெருங்குவதால் பணக்காரர்களுக்கு நல்ல பாத்திரத்தில் தானஞ் செய்ய வேண்டுமென்ற எண்ண மில்லாமலிருப்பது, பொய் சொல்வது, கபடமாகப் பேசுவது, பிறரை ஹிம்சிப்பது ஆகிய

அதர்மங்கள் யாவும் பரவின, அதனைப் பார்த்து வித்வானாகிய தர்மபுத்திரர் இவ்வுலகத்தைவிட்டுப் போக முயற்சித்தார். பின்பு, அவர் தமக்குச் ஸமான குணங்கள் பொருந்தியவருமான பரீக்ஷித்திற்கு ஹஸ்தினாபட்டணத்தில் ராஜ்யாபிஷேகஞ் செய்வித்து, சூரஸேனருடைய புத்திரராகிய வஜ்ரரையும் மதுரா நகரத்திற்கு அரசனாகச் செய்தார்.

39–50. பின்பு மிக்க ஸாமார்த்தியமுள்ள தர்மபுத்ரர் பிராஜாபத்யம் என்ற இஷ்டியைச் செய்து அக்னிகளை ஆத்மாவில் ஆரோபித்துக்கொண்டார். அப்பொழுது சரீரத்தில் அணிந்து கொண்டிருந்த வளை முதலிய ஆபரணங்களையும், பட்டு முதலியவைகளையும் விட்டு மோஹம், அஹங்காரம் முதலியவைகளை விட்டவராய், ஸகல பந்தங்களையும் நிவர்த்தித்துக் கொண்டார், ஸகல இந்திரியங்களை மனத்திலும், அதனைப் ப்ராணனிடத்திலும், அதனை அபானனிடத்திலும், அதனை வ்யாபாரத்துடனும், மிருத்யுவினிடத்திலும், அதனை ஐந்து பூதங்களால் ஏற்பட்ட சரீரத்திலும், அதனைக் குணத்திலும, அதனை அவித்தையிலும், அதனை ஜீவனிடத்திலும் அந்த ஜீவனை நாச மற்றவரும் கூடஸ்தருமாகிய பரப்ரஹ்மத்திலும் லயப் படுத்தினார். மேலுமவர் மரவுரியை உடுத்திக்கொண்டு ஆஹாரமில்லாமலும் மௌனியாகவும், தலையை அவிழ்த்துக்கொண்டு மூடன் போலவும், பைத்தியம் பிடித்தவன்போலவும், பிசாசு போலவும், ஒன்றையும் பாராதவராய்ச் செவிடன் போலப் பிறர் சொல்வதைக் கேளாமல் பெரியோர்களான முன்னோர்கள் போன வழியாக வடக்குத் திக்கை நோக்கிச் சென்றார். அப்பொழுது எதை அடைந்தவர்கள் மறுபடியும்

ஸம்ஸாரத்தை அடையமமாட்டார்களோ, அந்தப்பர மாத்வையே தியானித்துக் கொண்டிருந்தார். அவருடைய தம்பிகள் அனைவரும் நிச்சயமுள்ளவர்களாய்த் தர்ம புத்திரர் பின் சென்றார்கள். அதர்மத்தின் ஒத்தாசை யுள்ள கலியானது பிரஜைகளைப் பார்த்து அவருடைய சமீபத்திலும் சென்றது. அப்பொழுது ஸகல தர்மங் களையும் நன்றாக அனுஷ்டித்தவர்களான தர்ம புத்திரர் முதலியவர்கள் ஸ்ரீ நாராயணருடைய சரணங்களே நமக்குச் சரணமென்று நினைத்து, அதனால் பக்தி அதிகரித்தவர்களாகி, சித்தசுத்தியை யடைந்து, பரம புருஷனாகிய ஸ்ரீ நாராயணனிடத்தில் ஸ்திர புத்தியுள்ளவர்களாய், யோகிகளால் அடையக் கூடியதும் ஸம்ஸாரிகளுக்குக் கிடைக்காததுமான மேலான கதியை அடைந்தார்கள். மேலும் ஞானியாகிய விதுரரும் ப்ரபாஸ தீர்த்தக்கரையில் ஸ்ரீ கிருஷ்ணன் இடத்தில் சித்தத்தைச் செலுத்தி. இந்தச் சரீரத்தை விட்டுப் பித்ரு தேவதைகளால் அழைக்கப்பட்டுத் தமது உலகஞ் சென்றார். அப்பொழுது திரௌபதியும் தன்னுடைய பதிகளுக்குத் தன்னிடத்தில் ப்ரீதியில் லாமையைப் பார்த்து வாஸுதேவரிடம் இடை விடாமல் பக்தி செய்து உத்தமகதியையடைந்தாள்.

51. பகவான் வைகுண்டம் சென்றதும், பாண்டவர்கள் பகவானை யடைந்ததுமாகிய இக்கதைகள் மிகவும் பரிசுத்தமானவைகள். இவைகளைச் ச்ரத்தையுடன் கேட்பவர்களுக்கு ஸ்ரீ மஹாவிஷ்ணுவிடத்தில் பக்தியும், அதனால் மோக்ஷமும் கிடைக்கும்.

நோட்டு

ஸக்யம்:அனுகூலத்தைச் செய்ய விரும்பியிருப்பது. மைத்ரி: உபகாரியாகவிருப்பது, ஸஹிருத்வம் பந்துவாகவிருப்பது. ஸ்ரீத. ஸக்யம்-சமான வயது உள்ளவராக இருப்பதால் ஏற்படக்கூடியது. மைத்ரி உபகாரத்தால் ஏற்படக்கூடியது; அதிகப் ப்ரேமை யால் உண்டாகக் கூடியது, சந்த்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்-16

பரீக்ஷித்து தர்மத்தைக் கண்டது

1-4 'பரீக்ஷித்து பிறந்தபோது அவருடைய ஜாதகத்தைப் பார்த்து ஜ்யோதிஷ சாஸ்திரமறிந்த ப்ராஹ்மணோத்தமர்கள் சொன்னபடியே பின், ஹஸ்தினாபுரத்தில் உத்தரையின் புத்திரர் அரசனாக இருந்து ப்ராஹ்மணர்களுடைய கட்டளையின்படி பாகவதர்களுக்குள் சிறந்தவராகி இராஜ்யத்தைக் காப்பாற்றிவந்தார். அவர் உத்தரனுடைய பெண்ணாகிய இராவதீ என்பவளை விவாஹஞ் செய்துகொண்டார். பின்னும் அவர் கிருபரைக் குருவாக வைத்துக் கொண்டு கங்கையின் கரையில் மூன்று அச்வமேத யாகங்களைச் செய்தார். அவைகளில் தேவர்கள் நேரில் வந்து ஹவிர்ப்பாகங்களைப் பெற்றுக் கொண்டார்கள். மேலும் அவர் திக் விஜயஞ் செய்து வரும்பொழுது வழியில் ஒரு எருதையும் பசுவையும் ஒரு சூத்திரன் காலால் உதைக்கக் கண்டார். அவன் ராஜவேஷம் பூண்டிருந்தான். அவனே கலிபுருஷன், அவனைத் தமது பலத்தால் நிக்ரஹித்தார் என்று ஸூதர் சௌனகருக்குச் சொன்னார்.

5–10 'இதனைக் கேட்டு சௌனகர் "ஓ ஸூதரே! பரீக்ஷித் மஹாராஜா கலியை நிக்ரஹிக்க காரணமென்ன? அவன் அரசனாகவும் சூத்ரனாகவுமிருந்து பசுவைக் காலால் ஏன் உதைத்தான்? அந்த விஷயம் பகவத் கதையிலடங்கினதாலும், ஈசுவரனுடைய பாதங்களாகிய தாமரைப் புஷ்பங்களிலிருந்து பெருகி

வரும் மதுவைப் பானஞ் செய்து திருப்தியடைந் திருக்கும் மஹான்களுடைய கதையில் சேர்ந்ததாலும் அதைச் சொல்ல வேண்டும். அற்ப ஆயுள் உள்ள வர்களும் மரிக்கும் ஸ்பாவ முள்ளவர்களுமான மனிதர் களுக்கு மோட்சத்தில் விருப்பமிருக்குமாகில் பகவான் உடைய கதையைக் கேட்பது முதலியவைகளால் அவர்கள் ஆயுஸ்ஸைக் கழிக்க வேண்டுமே அல்லாமல் கெட்ட விஷயங்களால் வீணாக அதைச் செலவிடக் கூடாது. இந்த யாகத்திற்காக மஹர்ஷிகள் அந்தகனை (யமனை) வரவழைத்திருக்கிறார்கள். பகவானுடைய லீலைகளையே கேட்கவேண்டும். சோம்பல், புத்திக் குறைவு, அற்பமான ஆயுள் ஆகிய இவைகளுள்ள புருஷனுடைய ஆயுஸ்ஸானது இராத்திரியில் தூக்கத் தாலும்' பகலில் ஸம்ஸாரத்திற்கு உபயோகமான காரியங்களிலும் செல்லுகிறது. ஆகையால் பகவான் உடைய கதையைக் கேட்பதில் காலத்தை உபயோகியா தவர்களுடைய ஜீவனம் வீணானது என்றார்கள்.

11–17 இதனைக் கேட்டு ஸூதர் சௌனகரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார். பரீக்ஷித்து மகாராஜன் திக்விஜயம் செய்து வருங்காலத்தில் தம் உடைய ஆளுகைக்குட்பட்ட குருஜாங்கலம் இவை களில் கலி வந்து பிரவேசித்தாரென்ற அப்ரியமான வார்த்தையைக் கேட்டவுடன் யுத்தத்தில் மிகவும் சாமார்த்தியம் உள்ளவராகையால் ஆயுதத்தை எடுத்துக் கொண்டு கறுத்த குதிரைகள் கட்டிய இரதத்திலேறிப் புறப்பட்டார். அந்த இரதமானது சிம்மத்வஜமுள்ளது. ஸகல அலங்காரமுள்ளது. யானைகள், குதிரைகள் ரதங்கள், காலாட்படைகள் ஆகிய இவைகளுள்ள சேனைகள் அவரைச் சூழ்ந்து

கொண்டன. அவர் பத்ராச்வம், கேதுமாலம், கிம் புருஷம், பாரதம், உத்தரகுரு ஆகிய வர்ஷங்களில் சென்று அங்கிருக்கும் அரசர்களை ஜயித்து அவர் களிடம் கப்பம் பெற்றுக்கொண்டார். ஒவ்வொரு வர்ஷங்களிலும் வஸிக்கும் ஜனங்கள் பரீக்ஷித்தின் முன்னோர்களாகிய பாண்டவர்களுடைய சரித்தத்தைச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அதில் கிருஷ்ண பகவானுடைய மஹிமையும் இடையில் வர்ணிக்கப் படுகிறது. அச்வஸ்த்தாமாவினுடையை அஸ்திரத்தினிட மிருந்து பரீக்ஷித்தைக் காப்பாற்றின கதையையும், விருஷ்ணிகளுக்கும் குந்தி புத்திரர்களுக்கும் ஏற்பட் டிருந்த விசேஷ சிநேகத்தைப் பற்றியும், அவர்களுக்குப் பகவானிடமிருந்த அதிக பக்தியைப் பற்றியுஞ் சொல்லிக் கொண்டார்கள். அவற்றைக் கேட்டு, 'பரீக்ஷித்து மகாராஜன் கண்கள் மலர்ந்தவராக விசேஷ சந்தோஷத்துடன் அவர்களுக்கு விலையுயர்ந்த வஸ்திரங்கள், ஹாரங்கள் ஆகிய இவைகளை வெகுமதி செய்தார். பின்னுமவர் மிகுந்த பக்தியுள்ள பாண்டவர்களிடத்தில் விசேஷ பிரீதியால் பகவான் சாரத்தியஞ் செய்தது, சபாநாயராகவிருப்பது, பாண்டவர் களுடைய மனம்போல் நடப்பது, தோழனாயிருப்பது, தூதனாயிருப்பது, ராத்திரியில் கத்தியைக் கையில் வைத்துக்கொண்டு தூங்காமல் காப்பாற்றுவது, அவர்கள் ஏவினதைச் செய்வது, அவர்கள் மஹிமையைப் பற்றி தோத்திரஞ் செய்வது, ஆகிய கதைகளையும் சொல்லி ஸகல ஜகத்தும் பகவானை நமஸ்கரிப்பதையும் பார்த்து ஈசுவரனுடைய சரணங்களில் பக்தி செய்தார்.

18–25 இப்படி அந்தப் பரீக்ஷித்து மகாராஜன் முன்னோர்கள் செய்தபடி ஒவ்வொரு நாளும் தாமும்

நடத்தி வந்தார். அப்பொழுது சமீபத்தில் ஒரு ஆச்சரியத்தைக் கண்டார். அதென்னவெனில் தர்ம மானது விருஷப ரூபமெடுத்து ஒரு காலைப் பூமியில் ஊன்றிக்கொண்டு குழந்தைகள் இறந்து போனதால் துக்கப்படும் தாய் போலக் காந்தி குறைந்து கண்ணீரைப் பெருக்கி அழுது கொண்டிருக்கும் ஒரு பசுவை நோக்கி பின்வருமாறு கேட்டது. மங்களமாகிய ஸ்பாவமுள்ளவளே! சௌக்யமாயிருக்கிறாயா? உன் னுடைய முகம் வாடியிருக்கிறது. தேகத்தில் காந்தி குறைந்திருக்கிறது. ஓ அம்மா! மனத்தில் கவலையுள்ள வளாகத் தோன்றுகிறாய். தேசாந்திரம் போயிருக்கும் பந்துக்களைப் பற்றி வருத்தப்படுகிறாயா? அல்லது ஒரு காலால் நிற்கும் என்னைப் பற்றி துக்கிக்கிறாயா? அல்லது கெட்ட அரசர்களால் அனுபவிக்கப்படும் உமது சரீரத்தைப் பற்றி கவலைப்படுகிறாயா? அல்லது யாகங்கள் விதிப்படி செய்யப்படாததால் அசுரர்கள் அவைகளை அபகரிக்கிறார்களேயென்று வருத்தப்படுகிறாயா? காலத்தில் மழை பெய்யாமல் இருப்பதால் கஷ்டப்படும் ப்ரஜைகளைப் பார்த்துச் ச்ரமப்படுகிறாயா? அல்லது பர்த்தாவினால் காப்பாற்றப் படாத ஸ்திரீகளையும, தாயார், தகப்பன் முதலியவர் களால் ரட்சிக்கப்படாத பாலர்களையும், ராக்ஷஸர்கள் போலக் குரூரஸ்பாவமுள்ளவர்களால் உபத்திரவிக்கப் பட்ட சிசுக்களையும், துராசாரமுள்ள ப்ராஹ்மணர் களிடத்திலிருக்கும் வாக்தேவியையும், ப்ராஹ்மணர் களைச் சம்ரட்சிக்காத க்ஷத்திரியர்களை சேவித்துக் கொண்டிருக்கும் மேலான குலத்தில் பிறந்தவர்களைப் பற்றிக் கவலையடைகிறாயா? அல்லது கலியினால் வியாபிக்கப்பட்ட க்ஷத்திரியர் தங்களைப் பற்றியும் இஷ்டமானவிடங்களிலும் இஷ்டப்பட்ட காலங்களிலும்

படுத்துக் கொள்வது, உட்காருவது, புசிப்பது, குடிப்பது, மைதுனம் ஆகிய இவைகளில் ஆசையுள்ள ப்ராணிகளைப் பற்றியும் துக்கிக்கிறாயா அம்மா?! அல்லது துஷ்டர்களைக் கொன்று உன்னுடைய பாரத்தை நிவர்த்திப்பதற்காக அவதாரஞ் செய்த ஸ்ரீ கிருஷ்ணபகவான் வைகுண்டஞ் சென்றதால் மோக்ஷத்தைக் கொடுக்கும் அவருடைய சரிதங்களை நினைத்து அவருடைய விரகத்தைச் ஸகிக்காமல் துன்பமடைகிறாயா? மிக்க பலசாலியான காலத்தின் மஹிமையால் உன்னுடைய அழகு போய்விட்டதா? நீ வருத்தப்படுங் காரணமென்ன? சொல்ல வேண்டும் என்று கேட்டது.

26–35 இதைக் கேட்டுப் பூமிதேவி தர்மதேவதையை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானாள் "ஓ தர்மமே! நான் வருத்தப்படும் விஷயமின்னதென்று உனக்கே தெரிந்திருக்கலாம், உலகத்திற்குச் சௌக்கியத்தைக் கொடுக்கும் நான்கு கால்களோடு நீ இருந்ததற்கு எவர் காரணமோ, எவரிடத்தில் சத்தியம், சுத்தனாக விருப்பது, தயை, பொறுமை, கொடுப்பது, சந்தோஷம், கபடமில்லாமலிருப்பது. மனது ஸ்திரமாயிருப்பது, வெளியிலிருக்கும் இந்திரியங்களை ஜயிப்பது, தனது தர்மத்தை யனுஷ்டிப்பது, சத்ரு மித்ரர் என்ற பேத புத்தியில்லாமலிருப்பது, பிறர் செய்த அபாரதத்தைப் இருப்பது, இலாபங் கிடைத்தாலும் அதில் உதாசீனனாக பொறுப்பது, சாஸ்திரங்களை விசாரிப்பது ஆத்மஞானம், வைராக்கியம் எல்லா வற்றிற்கும் எஜமானனாக விருப்பது; காரியங்களில் சாமர்த்தியம், அழகு, தைர்யம், மிருது ஸ்பாவமுள்ள வனாகவிருப்பது, பக்தி, விசேஷ வணக்கம், சுபாவம்;

மனோபலம், ஞானபலம், இந்திரியபலம், மேலான ஞானம் முதலியவைகளில் கம்பீர மனமுள்ளவராக இருப்பது, அசையாத சித்த முள்ளவராக விருப்பது சிரத்தை, கீர்த்தி, மானம், அகங்காரமில்லாமலிருப்பது ஆகிய இவைகளும் மற்ற எல்லாராலும் ஆசைப்படக் கூடியவைகளுமான மகாகுணங்கள் எப்பொழுதும் வஸித்துக் கொண்டிருந்தனவோ, அந்தக் குண நிதியாகிய ஸ்ரீநிவாஸன் இவ்வுலகத்திலில்லாததனால் பாப ஸ்பாவமுள்ள கலி இவ்வுலகத்தில் வியாபித்தான். அதனால் எனது ஸ்வரூபத்தையும், உன்னையும் தேவர்களையும், மஹர்ஷிகளையும், பிதிருக்களையும், மற்ற சாதுக்களையும், எல்லா ஜாதியார்களையும், ஆச்ரமிகளையும் பற்றிக் கவலைப்படுகிறேன், ப்ரஹ்ம தேவர் முதலியவர்கள் எந்த லக்ஷ்மீதேவியின் கடாக்ஷத்திற்காக வெகுகாலம் தபஸ் செய்தார்களோ, அந்த லக்ஷ்மீதேவியானவள் மேலானவர்களால் ஆசிரயிக்கப்பட்டவளானாலும், தான் வஸிக்குமிடமான தாமரைமலர்களின் வனத்தை விட்டுப் பகவானுடைய பாதங்களாகிய தாமரைப் புஷ்பங்களை மிகுந்த ப்ரீதியுடன் ஸேவிக்கிறாள்; வஜ்ரம், அங்குசம், துவஜம் ஆகிய இந்த ரேகைகளுள்ள அந்தப் பகவானுடைய திவ்ய விபூதிகளையறிந்து மூவுலகிலும் மேலானவளாக இருந்தேன். இப்படி கர்வமுள்ள என்னை ஈசுவரன் கடைசியில் விட்டுப்பிரிந்தார், அவர் எனக்குப் பாரமா யிருந்த அஸுராம்சமுள்ள அரசர்களுடைய அனேக அக்ஷௌஹிணியை நாசஞ் செய்வதற்காகவும், நான்கு பாதங்களுடன் உலகத்தில் உன்னை ஸஞ்சரிக்கும்படி செய்வதற்காகவும் யதுகுலத்தில் அவதரித்தார்.

36 எந்தப் புருஷோத்தமர் பிரியமான பார்வை,

அழகான சிரிப்பு, மனோஹரமான பேச்சு ஆகிய இவைகளால் ஸத்யபாமை முதலியவர்களுடைய மானத்தையும் தைர்யத்தையும் போக்கடித்தாரோ, எவருடைய பாதத்தின் அடி வைப்பினால் அலங்கரிக்கப் பட்ட எனக்கு மயிர்க்கூச்சலுண்டானதோ, அந்தப் பரமபுருஷனை விட்டுப் பிரிந்திருக்க யாரால் முடியும்" என்றாள்.

37. இப்படி இருவரும் பேசிக் கொண்டிருக்கும் பொழுது பரீக்ஷித்து என்ற ராஜரிஷியானவர் குருக்ஷேத்திரத்தில் கிழக்கு முகமாய் ப்ரவஹிக்கும் ஸரஸ்வதி நதிக்கரை வந்தார்.



அத்தியாயம்- 17

பரீக்ஷித் மகாராஜன் கலியை நிக்ரஹித்தது

1–15. அவ்விடத்தில் பரீக்ஷித் மஹாராஜர் ஒரு எருதையும், ஒரு பசுவையும், ஒரு சூத்திரன் ராஜ வேஷந்தரித்துக் கையில் தடியை எடுத்து அடித்துக் கொண்டிருக்கக் கண்டார். அவைகளில் தாமரைத் தண்டு போல் வெளுப்பான விருஷபமானது (எருது) மிகவும் பயந்து மூத்திரம் பெய்வதுபோல் நடுக்கம் அடைந்து, அந்தச் சூத்திரனால் அடிக்கப்பட்டு ஒரு காலால் நின்று மிகவும் துன்பமடைந்திருந்தது. பால் முதலியவைகளைக் கொடுக்கும் அந்தப் பசுவானது கன்றில்லாமல் அழுதுகொண்டிருந்தது. அல்லாமல் இளைத்துமிருந்தது. புல் முதலிய ஆஹாரத்தில் விருப்பமுள்ளதாகவுமிருந்தது. அதனைச் சூத்திரன் காலால் உதைத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஸுவர்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட இரதத்தின் மீதேறியிருக்கும் அந்தப் பரீக்ஷித் மஹாராஜன் வில்லில் நாணை பூட்டிக்கொண்டு பின்வருமாறு மேகம் கர்ஜிப்பது போலக் கம்பீரமாகக் கேட்கத் தொடங்கி 'அட மூட நீ யார்? என்னால் காப்பாற்றப்படுகிற தேசத்தில் பலிஷ்டனான நீ, பலமில்லாதவர்களை உபத்திரவிக்கின்றனை. உனது வேஷத்தால் அரசனாகத் தோன்றுகின்றனை. சூத்திரனுடைய காரியத்தை செய்கின்றனை யாதலால் வேஷதாரி போலிருக்கின்றாய் ஸ்ரீ கிருஷ்ண பகவானும், அர்ஜுனனும் இத்தேசத்தை விட்டு வெகு தூரஞ் சென்றுவிட்டபடியால் இரஹஸ் யத்தில் பலமில்லாதவர்களை ஹிம்ஸிக்கின்றனை. ஆகையால் நீ என்னால் கொல்லத்தகுந்தவன். ஓ

தாமரைத் தண்டு போல வெளுத்த சரீரத்துடன் விருஷப ரூபமெடுத்து ஒரு காலால் ஸஞ்சரிப்பவரே! நீர், தேவதைகளுக்குள் யார்? உம்மைப் பார்க்க எங்களுக்கு வெகு துக்கமாயிருக்கிறது. கௌரவர்களுடைய வைகளால் காப்பாற்றப்படும் பூமியில் துக்கத்தால் உண்டாகும் கண்ணீர் விழுகிற வழக்கமில்லை. ஆதலால் நீர் துக்கிக்கவேண்டாம். சூத்திரனிடமிருந்து பயம் உமக்கு நிவர்த்தியாகிவிட்டது. ஓ அம்மா! பசுவே! துஷ்டர்களை நான் சிக்ஷித்து வரும்பொழுது நீ ஏன் அழவேண்டும்? எந்த அரசனுடைய இராஜ்யத்தில் துஷ்டர்களால் ஸாதுக்களுக்கு உபத்திரவம் நேரிடு கிறதோ அவனுடைய கீர்த்தி, ஆயுள், பாக்யம் ஆகிய இவைகள் குறைவு படுவதல்லாமல் அவனுக்குக் நல்ல லோகமும் கிடைக்கிறதில்லை. உபத்திரவப் பட்டவர் களுடைய துன்பத்தை நிவர்த்திப்பதே அரசர்களுக்கு முக்கியமாகிய தர்மம். ஆனதால் பிராணிகளுக்கும் கெடுதியைச் செய்கின்ற மிக்க அஸத்தாகிய இவனைச் சிக்ஷிக்கிறேன். ஓ விருஷபமே! உன்னுடைய மூன்று கால்களை எவன் வெட்டினான்? ஸ்ரீ கிருஷ்ணன் அனுஸரித்த அரசர்களுடைய இராஜ்யத்தில் ஜனங்கள் உன்னைப் போலிருப்பது உசிதமல்ல. நிரபராதியும் ஸாதுவுமாகிய உனக்குக் கெடுதியைக் குறைக்கும் அஸத் யார்? அவனைச் சொல் உனக்கு க்ஷேமம் உண்டாகும். குற்றஞ் செய்யாதவர்களை எவன் உபத்திரவிக்கிறானோ அவனுக்கு என்னிடமிருந்து பலவகையிலும் பயமுண்டாகும். கொஞ்சமாவது பயமில்லாமல் குற்றமற்றவர்களுக்குக் கெடுதி செய்பவன் தேவனானாலும் தோள் வளைகளுள்ள அவனுடைய கையை, வெட்டி விடுவேன். கெட்ட நடையுள்ளவர்களை,

சாஸ்திர முறைப்படி சிக்ஷிக்கும் அரசர்களுக்குத் தமது தர்மத்தை யனுஷ்டிப்பவர்களைக் காப்பாற்றுவதே ஸ்வதர்மம் என்று சொன்னார்.

16–19½. இதனைக் கேட்டு தர்மமானது அரசனை நோக்கி, ஓ மஹாராஜ! எவர்களுடைய குணங்களால் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவர்களுக்கு, தூதனாக விருப்பது முதலியவைகளைச் செய்தாரோ, அந்தப் பாண்டவர்களின் குலத்தில் பிறந்தவர்களான நீங்கள் பயந்தவர்களுக்கு அடய வார்த்தை சொல்வதே உசிதம். ப்ராணிகளுக்குத் துக்கமுண்டாகுங் காரணத்தைப் பற்றிப் பல வகையான மதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சிலர் ஆத்மாவே துக்கத்திற்குக் காரணமென்றும், லோகாயதகர்கள் நவகிரஹங்களின் அதிதேவதையே துக்கத்திற்குக் காரணமென்றும், மீமாம்ஸகர்கள் கர்மமே காரணமென்றும், சிலர் ஸ்வாபவமே காரணமென்றும், சிலர் ஈசுவரனே காரணமென்றும், சொல்லுவதால் ஊகிக்க முடியாததும், குறிப்பிடக் கூடாததுமான ஏதோ ஒரு காரணத்திலிருந்து துக்கம் உண்டாகிறது. ஒன்றையும் நிச்சயமாகச சொல்லக் கூடவில்லை. இப்படி மதபேதத்தால் மோஹித்து இருப்பதால் எந்தப் புருஷனிடமிருந்து துக்கங்கள் நேரிடுகின்றனவோ அந்தப் புருஷன் இன்னாரென்று நாம் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனது பற்றி அதன் காரணத்தை நீரே உம்முடைய புத்தியால், யோசித்துத் தெரிந்து கொள்ளும் என்று சொல்லிற்று.

20–27. இதனைக் கேட்டு அரசன் யோசித்து மோஹமும் இல்லாதவராகத் தர்மத்தை நோக்கிப் பின்வருமாறு சொன்னார். தர்மமமாகிய வார்த்தையைச் சொல்வதால்

நீ தர்மமேயாம். விருஷபத்தின் சரீரத்தை தரித்து இருக்கின்றனை. அதர்மத்தை யனுஷ்டித்தவனுக்கு எவ்வித ஸந்தோஷமேற்படுமோ அது கோட் சொன்னவனுக்கு (அவனைக் காட்டிக் கொடுத்தவனுக்கு) உண்டாகிறது. அல்லது ஈசுவரனுடைய ஸங்கல்பமானது ப்ராணிகளுடைய மனத்திற்கும், வாக்குக்கும் எட்டாத தாகையால் அதை அறியமுடியாததென்பது நிச்சயம். தபஸ், சௌசம், தயை, ஸத்யம் ஆகிய நான்கு தர்மத்திற்குப் பாதங்களாகக் கிருதயுகத்தில் ஏற்படுத்துப் பட்டன. அதர்மத்தின் பாதங்களாகிய கர்வம், ஆசை, மதம் இவைகளால் தர்மத்தின் மூன்று பாதங்கள் முறிக்கப்பட்டன. இப்பொழுது நான்காவது பாதமாகிய ஸத்யத்தை அஸத்யத்துடன் கூடி கலி பிடிக்க முயற்சிக்கின்றன. இவள் பூமி தேவியே. இவளுடைய பாரத்தைப் பகவான் நிவர்த்தித்தார் அவருடைய திவ்யமாகிய அடிவைப்பினால் ஸந்தோஷமடைந்து இருந்தாள். இப்பொழுது அந்தப் பகவானை விட்டுப் பிரிந்து பூமிதேவியானவள், ப்ராஹ்மணர்களைக் காப்பாற்றாதவர்களும் ராஜவேஷத்தை மாத்திரம் தரித்த வர்களுமான சூத்திரர்கள் தமக்கு அதிபதியாக ஆகிவிடுவார்களே என்று கண்ணீரைப் பெருக்கிப் பாக்கியமற்றவள் போல் துக்கிக்கிறாள் என்று சொல்லித் தர்ம தேவதையையும், பூமியையும் ஸமாதானஞ் செய்தார்.

28-33. பின்னும் மஹாரதராகிய அவ்வரசன் அதர்மத்திற்குக் காரணமாகிய கலியைச் சிக்ஷிப்பதற்காகக் கூர்மையான கத்தியை எடுத்தார். அப்பொழுது கலியானவன் அரசன் தன்னைக் கொல்ல விரும்பியதைத் தெரிந்துகொண்டு இராஜவேஷத்தை விட்டு மிகவும்

பயந்தவனாக அவருடைய சரணங்களில் நமஸ்கரித் தான். அப்பொழுது தம்முடைய காலில் விழுந்த கலியைப் பார்த்து, தீனர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ள வரும், தைர்யமுள்ளவரும், கொண்டாடக்கூடியவரும், சரண்யருமான அரசன் கருணையுடன் அவனைக் கொல்லாமலிருந்ததுமன்றி அவனை நோக்கிச் சிரித்துக் கொண்டு அர்ஜுனனுடைய கீர்த்தியை காப்பாற்றி வரும் நாங்கள், கைகூப்பிச் சரணமடைந்தவர்களைக் கொல்லுகிறதில்லை. ஆனாலும் நீ, அதர்மத்திற்குப் பந்துவானதால் நமக்குச் சொந்தமான இவ்விடத்தில் வசிக்கக்கூடாது. இராஜ சரீரத்தில் நீ வசிக்கும்போது ஆசை, பொய்சொல்லுதல், திருடுவது, துஷ்டனாயிருப்பது, தன்னுடைய தர்மத்தை விட்டுவிடுவது, அலக்ஷ்மீ கபடம், கலஹம், டம்பம் ஆகிய அதர்மத்தின் கூட்டமும் உன்னை யனுஸரிக்கிறது. ஆதலால் அதர்ம பந்துவாகிய ஏ கலியே! ஸத்யம், தர்மம் ஆகிய இவைகள் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும், ப்ரஹ்மாவர்த்தத்தில் நீ வசிக்கக் கூடாது. இவ்விடத்தில் யாகத்தின் விதியை நன்றாக அறிந்தவர்கள் யக்ஞேசரராகிய பகவானை யாகத்தால் பூஜிக்கிறார்கள். மேலும் யாக ஸ்வரூபியான பகவான் யாகஞ் செய்பவர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கிறார். தவிரவும், ,ஸ்தாவர ஜங்கமங்களாகிய எல்லாப் ப்ராணிகளிடத்திலும் வாயுவைப் போல் அந்தர்யாமியாயிருந்து அவரவர்கள் இஷ்டத்தை நிறைவேற்றுகிறார் என்று சொன்னார்.

34–36. அதனைக் கேட்டு அந்தக் கலி மிகவும் நடுக்கமுள்ளவனாகி முயற்சியுள்ள யமனைப்போலக் கத்தியைக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் பரீக்ஷித்தை நோக்கி, ஓ ஸார்வபௌமரே! தங்களுடைய

உத்தரவுப்படி எவ்விடத்திலாவது வசிக்கிறேன். எவ்விடத்திலிருந்தாலும், வில்லையும் பாணத்தையும் கையில் வைத்துக் கொண்டிருக்கும் உம்மை பார்ப்பேன். தர்ம சிந்தையுள்ளவர்களுக்குள் சிறந்தவரே! எவ்விடத்தில் வசிக்கும்படி நீர் ஆஞ்ஞாபிக்கிறீரோ அவ்விடத்திலேயே வசிப்பேன். அப்போர்ப்பட்ட ஸ்தானத்தை எனக்குக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.

37–39. அப்பொழுது இம்மாதிரி கலியால் பிரார்த்திக்கப்பட்ட பரீக்ஷித்து மஹாராஜா. சொக்கட்டான் ஆட்டம், மத்யபானம், ஸ்திரீ ஸங்கமம், ப்ராணி ஹிம்ஸை ஆகிய நான்கு அதர்ம ஸ்தானங்களிலும் வசிக்கும்படி ஆஞ்ஞாபித்தார். அதிலும் திருப்தியடையாமல் பின்னும் சிலவிடங்கள் கொடுக்க வேண்டுமென்று கலி கேட்டுக்கொள்ள, அப்பொழுது அரசன் ஸுவர்ணத்திலிருக்கும்படி சொன்னார். அதனாலும் கலி திருப்தி யடையாமலிருக்க, பின்னும் அரசன் பொய், மதம், காமம், ரஜோ குணம், விரோதம் ஆகிய ஐந்து இடங்களையும், கலிக்குக் கொடுத்தர். இப்படி உத்தரையின் புத்திரரால் கொடுக்கப்பட்ட இந்த விடங்களில் அவருடைய உத்தரவின்படி கலி வசித்துக்கொண்டிருந்தான்.

40-44. ஆனதால் க்ஷேமத்தை விரும்பியவர்கள் இவைகளை ஸேவிக்கக் கூடாது. அவைகளில் ஆசைப்படவே கூடாது. பிறகு அவர் தபஸ், சௌசம், தயை இவைகளை உலகத்தில் பரவச் செய்து முறிந்துபோன தர்மத்தின் மூன்று பாதங்களையும் விருத்தி செய்தார். பூமியையும் விருத்தி செய்தார். அந்தப் பரீக்ஷித்து என்பவர், தர்ம புத்திரர்

காட்டிற்குப் போகும் முன்னிலையில் அவரால் தமக்குக் கொடுக்கப்பட்ட இராஜ்யத்தை அடைந்து விசேஷ கீர்த்தியுள்ளவராய் பிரகாசித்தார். அபிமன்யுவின் புத்திரராகிய அந்த அரசன் இவ்வளவு மஹிமையுள்ளவர். அவர் ராஜ்ய பாலனஞ் செய்யும் காலமாகிய இப்பொழுது நீங்கள் ஸத்ரஞ் செய்ய ஆரம்பித்திருக்கிறீர்கள்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்-18

பரீக்ஷித்திற்கு நேர்ந்த ப்ராஹ்மண சாபம்

1-10 எந்தச் சக்கரவர்த்தியானவர் தாயாருடைய கர்ப்பத்திலிருக்கும்போது அச்வஸ்த்தாமாவினுடைய அஸ்திரத்தால் எரிக்கப்பட்டும் அதியற்புதமாகிய செய்கைகளுள்ள ஸ்ரீ கிருஷ்ணனுடைய அனுக்ரஹத்தால் மரணமடையவில்லையோ எவர் ப்ராஹ்மணருடைய சாபத்தால் தக்ஷனால் தமக்கு உயிர்ச் சேதம் நேர்ந்ததும் அதனால் கொஞ்சமேனும் கவலைப்படாமல் இருந்தாரோ, சுகருடைய சிஷ்யராகிய அந்த மஹா ராஜன் ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலேயே தமது மனதைச் செலுத்தி, ஸகல ஆசைகளையும் ஒழித்து, பகவான் உடைய ஸ்வரூபத்தையறிந்து கங்கா நதிக்கரையில் சரீரத்தைவிட்டார். எந்தப் புருஷர்கள் உத்தமச் லோகருடைய கதைகளைச் சொல்வதால் காலத்தைக் கழிக்கிறார்களோ, எவர்கள் மரணகாலத்திலும் பகவான் உடைய சரணாரவிந்தங்களைத் தியானஞ் செய்கிறார் களோ அவர்களுக்கு மோஹம் உண்டாவதில்லை. மேற்சொல்லிய அபிமன்யுவின் புத்திரராகிய சக்ரவர்த்தி அரசனாயிருக்கும்போது லோகத்தில் கலி வந்திருந்தாலும் அதர்மம் பரவாமலிருந்தது. என்றைய தினம் எந்த க்ஷணத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் பூமியை விட்டு மேலுலகஞ் சென்றாரோ, அன்றைய தினமே லோகத்தில் அதர்மத்தை விருத்தி செய்யும் கலி பிரவேசித்தான். தேனீ போல் ஸாரத்தைக் க்ரஹிப்பவராகிய பரீக்ஷித்து மஹாராஜன் கலியைக்கொன்று விடவில்லை. அவன் உடைய சக்தி பரவாமலிருக்கச் செய்தார். ஏனென்றால், அந்தக் கலியின் காலத்தில் ஸங்கல்ப மாத்திரத்தில்

புண்யங்களும், செய்கையால் பாபங்களும் சித்திக் கின்றன. தைர்யமற்றவர்களிடம் சூரனாகியும், தைர்யம் உள்ளவர்களிடம் பயப்படும் ஸ்வாவமுள்ளவனாயு மிருக்கிற கலியானவன் அஜாக்ரதை உள்ளவர்களைப் பிடித்துக்கொள்ள செந்நாய்போல மிக்க ஜாக்கிரதை யுள்ளவனாக இருக்கிறான் (அவன் என்ன கெடுதியைச் செய்யப் போகிறான் என்பது கருத்து) ஓ மஹர்ஷிகளே! உங்களால் கேட்கப்பட்டதும் மிக்க புண்யகரமுமான பரீக்ஷித்தின் சரிதத்தை ஸ்ரீ வாஸுதேவருடைய திவ்ய கதைகளுடன் சொன்னேன். ஆதலால் க்ஷேமத்தை விரும்பிய மனிதர்கள் பகவானுடைய குணங்கள், சரித்திரங்கள் ஆகிய இவைகளடங்கிய கதைகளையே சொல்ல வேண்டும். அவைகளையே கேட்க வேண்டும். மற்ற கதைகளை ஸேவிக்கக் கூடாதென்பது கருத்து, என்று ஸூதர் சொன்னார்.

11–18 இதனைக் கேட்டு மஹர்ஷிகள் அவரை நோக்கி, 'ஓ ஸூதரே! நீர் மரண தர்மமுள்ள எங்களுக்கு அமிருதமான ஸ்ரீ கிருஷ்ண கதையைச் சொன்னதால் வெகுகாலம் ஜீவித்திருக்கும் எங்களால் இப்பொழுது அனுஷ்டிக்கப்படும் ஸத்ரத்தை யாதொரு குறைவுமின்றி முடிப்பது அரிதாகையால் அதன் பூர்ண பலத்தை அடைவோமென்பது நிச்சயமில்லை, ஆகிலும், அதனைச் செய்து கொண்டு புகையினால் கறுத்த சரீரமுள்ள வர்களாகிக் கஷ்டப்படும் எங்களுக்கு ஸ்ரீ கோவிந் தருடைய பாதங்களாகிய தாமரை மலரின் தேனைக் கொடுத்தீரல்லவா? பகவத் பக்தர் களுடைய சேர்க் கையின் சிறிது பாகத்திற்குச் ஸ்வர்க்கமாவது, மோக்ஷமாவது, மற்ற ராஜ்யம் முதலியவைகளாவது ஸமமானவையல்ல. மஹான்களுக்கு முக்கியமான

கதி பரம புருஷனே. அவரிடத்தில் ப்ராகிருத குணங்களில்லை. அவரிடத்தில் பொருந்தியிருக்கும் கல்யாண குணங்கள் இவ்வளவென்று பரமசிவன், ப்ரஹ்மா முதலிய தேவர்களாலும் அறிய முடியவில்லை. அப்பேர்ப்பட்ட பகவானுடைய கதையைக் கேட்டு ரஸிகனான எவன்தான் போதுமென்று திருப்தி அடைவான்? ஆதலால் பகவத் பக்தர்களுக்குள் முக்கியரும் எல்லாவற்றையு மறிந்தவருமான நீர் மிக்க கம்பீரமாயும், பரிசுத்தமாயுமுள்ள மஹா விஷ்ணுவின் சரிதத்தைக் கேட்க விரும்பும் எங்களுக்கு விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும். மஹா பாகவத சிரோமணியான அந்தப் பரீக்ஷித்து மஹாராஜன் சுகரால் உபதேசிக்கப்பட்ட ஞானத்தால் மோக்ஷமென்ற பெயருள்ள ஸ்ரீ நாராயணனுடைய சரணத்தையடைந் தாரல்லவா? மிகுந்த புண்யத்தைக் கொடுப்பதும், மிகவும் அற்புதமுமாகிய யோகத்தைக் காட்டுவதும், நாசமற்றவராகிய பகவானுடைய சரீரத்தால் அலங்கரிக் கப்பட்டதும், பக்த பக்தர்களுக்கு மனோஹரமாய், பரீக்ஷித்துக்குச் சுகரால் உபதேசிக்கப்பட்டதுமான ஸ்ரீமத் பாகவதமென்ற ஆக்யானத்தை நன்றாகத் தெரியும்படி சொல்ல வேண்டும் என்று ப்ரார்த்தித் தார்கள்.

18–23 இதனைக் கேட்டு ஸூதர் சொல்லுகிறார். ஆச்சரியம், யான் விலோம ஜாதியுள்ளவனானாலும் என்னுடைய பிறப்பும் இப்பொழுது பெரியோர்களைச் ஸேவித்ததால் சபலமாயிற்று. மிக்க மகான்களாகிய புருஷர்களுடன் பேசக் கூடிய பாக்யம் கிடைத்த தாலேயே தாழ்ந்த குலத்தில் பிறந்ததால் உண்டான மனக்கவலை நீங்கியது. எந்தப் புருஷன் அளவற்ற

சக்தி, அளவற்ற குணங்கள் ஆகிய இவைகளுள்ளவரோ, நாசமற்றவரோ; அதனால் அனந்தரென்று சொல்லப் படுகிறாரோ, மகான்களுக்கு முக்கிய கதியாயிருக்கும் அந்தப் புருஷோத்தமருடைய குணங்களைச் சொல்லுகிற எனக்குத் துக்கமே நேரிடாது. லக்ஷ்மீ தேவியானவள் தன்னைப் ப்ரார்த்திக்கும் ப்ரஹ்மா முதலிய தேவர்களை லக்ஷியம் செய்யாமல் தன்னை விரும்பாதவரான ஸ்ரீ நாராயணனுடைய பாததூளியை சேவிக்கிறாள். அவருக்குச் சமமானவராவது, மேற்பட்ட வராவது ஒருவருமில்லை. இதனாலேயே அவருடைய மஹிமை நன்றாக விளங்கும். தவிரவும், எவருடைய சரண நகத்திலிருந்து பெருகியதும், ப்ரஹ்மதேவரால் சேவிக்கப்பட்டதுமான கங்காஜலம் பரமசிவன் முதலிய எல்லோரையும் பரிசுத்தப்படுத்துகிறதோ, அந்த முகுந்தனைத் தவிர வேறு யாரைப் பகவான் என்று சொல்லக்கூடும்? அந்த ஸர்வேசனிடம் அந்தரங்கத்தைச் செலுத்தியவர்கள் தைர்யமுள்ள வர்களாகத் தேகம் முதலியவைகளில் வெகுநாளாக உண்டாகியிருக்கும் விசேஷ அபிமானத்தை யொழித்து, அஹிம்சை, சமம் இவைகளுடன் கூடி பரமஹம் சர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆனதால் ஸூர்யனுக்குச் சமமான தேஜஸுள்ள ஓ மஹர்ஷிகளே! பகவான் உடைய சரிதத்தைச் சொல்லுகிறேன். பறவைகள் தம்முடைய சக்திக்குத் தக்கபடி ஆகாயத்தில் பறக்குமே அல்லாமல் வெகு உயரத்தில் சக்தியை மீறிப் பறக்க அவைகளால் முடியுமா? வித்வான்கள் தமது புத்திக்கு எட்டியவரையில் மஹாவிஷ்ணுவின் லீலைகளை வர்ணிக் கிறார்கள். அப்படிப்போல எனக்குத் தெரிந்தவரையில் பகவானுடைய சரிதத்தைச் சொல்லுகிறேன் என்று பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்.

24–31 பரீட்சித்து மஹாராஜன் ஒரு நாள் காட்டில் வேட்டையாடி வரும்போது மிருகங்களை நாடிச் சென்றதால் மிகுந்த பசி தாகமுள்ளவராய், ஏரி குளங்களைத் தேடிப் போகும்போது ஒரு ஆசிரமத்தைக் கண்டார். பின்பு அதனுள் சென்று அவ்விடத்தில் கண்களை மூடிக்கொண்டு நிஷ்டையிலிருக்கும் ஒரு மஹர்ஷியைக் கண்டார். அந்த மஹர்ஷி இந்திரியங் களையும் ஸ்வாசத்தையும் அடக்கிக் கொண்டிருந்தார். அவருடைய புத்தியானது விஷயங்களிற் செல்ல வில்லை. ஜாக்ரத், சுவப்னம், சுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளையும் தாண்டி விகாரமற்ற ப்ருஹ்ம ஸ்வரூபியாயிருந்தார். அவருடைய ஜடைகள் நாலு பக்கங்களிலும் அவரை மறைத்துக் கொண்டிருந்தன. தவிரவும் மானின் தோலைப் போர்த்துக் கொண்டு இருந்தார், அவரை நோக்கி அரசன் மிகுந்த தாகத்தால் அதிக வருத்தப்பட்டுத் தண்ணீர் கொடுக்கும்படி பல தரம் வேண்டிக்கொண்டார். இப்படி மகாராஜன் கேட்டு அவருக்கு குடிக்க நீர் கொடாமலிருந்தது இன்றி ஆசனங் கொடுப்பது உட்காருவதற்கு இடம் காட்டுவது. அர்க்கியம், ப்ரியமான வார்த்தை முதலியவைகளாலும் அவரை உபசரிக்கவுமில்லை. அப்பொழுது அரசன், 'மஹர்ஷி தம்மை அவமதித்தார்' என்று நினைத்துப் பசி, தாகம் இவைகளால் துன்பப்பட்டவராகையாலும் அவருக்கு மஹர்ஷியினிடம் கோபமும் விரோதமும் உண்டாயின. இம்மாதிரியான கெட்டகுணம் இதற்கு முன் நேர்ந்தது இல்லை, பின்பு அரசன் ஆசிரமத்திலிருந்து வெளியில் வரும்போது, 'இந்த மஹர்ஷி உண்மையில் நாம், வந்தது தெரியாமல் நிஷ்டையிலிருக்கிறாரா, அல்லது க்ஷத்திரியன் வந்தாலென்ன, போனாலென்னவென்று

கபடமாகக் கண்களை மூடிக்கொண்டிருக்கிறாரா? என்று பரீட்சிப்பதற்காக உயிரிழந்த ஒரு பாம்பை வில் கழியின் நுனியால் தூக்கி அவருடைய கழுத்தில் போட்டுத் தமது பட்டணம் சென்றார்.

32–38 அப்பொழுது மிகுந்த தேஜஸ்வியான சிருங்கி யென்னும் அந்த மஹர்ஷியின் புத்திரன் தோழர் களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அந்த இடத்தில் அரசன் செய்த காரியத்தைக் கேள்விப் பட்டு, தன் தோழர்களை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானான்." ஆச்சரியம் அதர்மம் மேலிட்டது. நாய்களைக் காவலுக்காக வைப்பதுபோல க்ஷத்திரியர்களைப் ப்ராஹ்மணர்கள் காவலாளர்களாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். வாசலில் காத்துக்கொண்டு இருக்கும் அவன் எப்படி பூஜிக்கத் தக்கவனாவான்? பலியைப் புஜிக்கும் காக்கைகள் போலும் (ஜனங் களால் கொடுக்கப்படும் வரியைக் கொண்டு ஜீவிப்பவ னென்பது கருத்து). வாசலைக்காத்திருக்கும் நாய்கள் போன்ற கொழுத்த க்ஷத்திரியர்கள் யஜமானனுக்குக் குற்றஞ்செய்யும்படி நேர்ந்ததே. கெட்ட மார்க்கத்தில் சஞ்சரிப்பவர்களைச் சிக்ஷிப்பவரான ஸ்ரீ கிருஷ்ண பகவான் வைகுண்டஞ் சென்றாலும் மரியாதை தவறினவர்களை நான் நிக்ரஹிக்கிறேன் என்னுடைய பலத்தைப் பாருங்கள் என்று சொல்லி கோபத்தால் கண்கள் சிவக்க, கௌசிகீ நதியின் ஜலத்தால் ஆசமனஞ் செய்து, என்னுடைய பிதாவிற்கு அபராதஞ் செய்தவனும், மரியாதை தவறினவனும், குலத்திற்கு நெருப்புத் தணல் (குலத்தைக் கெடுப்பவனென்று கருத்து) போன்றவனுமாகிய அரசனை இது முதல் ஏழாவது நாளில் தக்ஷகன் கடித்து எரிந்து விடுவானாக

என்று சபித்தான். பின்பு ஆசிரமம் வந்து அந்த இடத்தில் பிதாவின் கழுத்தில் சர்ப்பத்தைக் கண்டு மிகவும் துக்கப்பட்டுக் கதறினான்.

38–39 1/2 இதைக் கேட்டு சமீகரென்னும் அந்த மஹர்ஷியானவர் மெள்ள கண்களைத் திறந்து தம்முடைய தோளில் உயிரில்லாத பாம்பிருக்கக்கண்டு அதனை எடுத்து எறிந்துவிட்டுத் தமது புத்திரனை நோக்கி, 'ஓ குழந்தாய் ஏன் அழுகிறாய்? எவர்கள் உனக்கு எவ்விதக் குற்றத்தைச் செய்தார்கள்?' என்று கேட்டார்.

40–50 1/2 அதனைக் கேட்டு, சிருங்கியென்பவர் நடந்த விஷயம் எல்லாவற்றையும் உண்மையாகத் தெரிவித்தார். அதனைக் கேட்டும் மஹர்ஷியானவர் தம்முடைய புத்திரன் மகாராஜனைச் சபித்தது உசிதமல்லவென்று நினைத்து, அவனை நோக்கிப் பின்வருமாறு தர்மத்தின் இரகசியத்தை உபதேசித்தார். ஓ ஒன்றையு மறியாதவனே! அரசன் செய்த சிறு குற்றத்திற்காகப் பெரிதாகிய சிக்ஷையைச் செய்தது உசிதமன்று. பெரியதாகிய பாபத்தைச் செய்தாய். ஓ விவேகமற்றவனே! அரசன் மகாவிஷ்ணுவின் அம்சம் உள்ளவனாகையால் அவனைச் ஸாமானிய மனிதனாக நினைக்கக் கூடாது. அவனுடை தேஜஸ் ஸகிக்க முடியாதது. அவனால் காப்பாற்றப்பட்டு ஜனங்கள் ஒருவரிடத்திலும் பயமில்லாதவர்களாக வசிக்கிறார்கள். மகாவிஷ்ணுவின் அம்சமுள்ள அவ்வரசனில்லாவிடில் ஜனங்கள் ஆடுகளின் கூட்டம்போல் க்ஷணகாலத் திற்குள் நாசமடைவார்கள். தேசத்தில் அரசனில்லாத வரையில் ஜனங்களுடைய தனங்களை அபகரிக்கும்

திருடர்கள் மிகுதியாய் விடுவார்கள். ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்வார்கள். கடுமையாகப் பேசுவார்கள். பசுக்கள், ஸ்திரீகள், பணங்கள் ஆகிய இவைகளை அபகரிப்பார்கள். ஆகையால் அதனாலுண்டாகும் பாபம் நம்மைச் சேர்ந்ததாகும். (அரசனைச் சபித்தாலென்பது கருத்து) மேலும், வர்ணாசிரம தர்மங்கள் குறைந்து விடும். நல்லொழுக்கம் மறைந்துவிடும். நாய்கள் போலவும், குரங்குகள் போலவும் அர்த்தம், காமம் இவைகளிலேயே ஜனங்கள் மிகவும் ஆசை கொள்வார்கள். அதனால் வர்ண ஸங்கரம் உண்டாகும், தவிரவும் பரீக்ஷித் மகாராஜனோ தர்மத்தைக்காப்பாற்றி கிறவர். சக்ரவர்த்தி, மிகுந்த கீர்த்தியுள்ளவர், பகவத் பக்தர். அச்வமேத யாகஞ் செய்தவர். மேலும் என்னிடம் வந்த சமயத்தில் பசி தாகத்தால் ச்ரமம் அடைந்து தீனராயிருந்தவர். ஆனது பற்றி அவரைச் சபிப்பது நியாயமல்ல. குற்றஞ்செய்யாத வேலைக்காரர் களிடம் செய்த அபராதத்தைச் ஸகல ஜகத்ரூபியான பகவான் பொறுத்துக் கொள்ளட்டும். விஷ்ணு பக்தர்களை ஒருவன் நிந்தித்தாலும், ஏமாற்றினாலும், அவமதித்தாலும், அடித்தாலும் அவர்கள் ப்ரதி செய்ய சாமர்த்தியமுள்ளவர்களானாலும் ஒன்றுஞ் செய்கிறதில்லை என்று சொல்லித் தமது புத்திரன் செய்த குற்றத்தைப் பற்றி மஹர்ஷி பச்சாதாப மடைந்து, அரசன் செய்த குற்றத்தை மனத்தில் நினைக்காமலேயே இருந்தார். பெரும்பாலும் சாதுக்கள் பிறர் செய்த கெடுதியால் அவர்களிடத்தில் கோபித்து வருத்தமடைகிறதில்லை. உபகாரத்தால் சந்தோஷம் அடைகிறதுமில்லை. ஏனென்றால் ஆத்மாவானது உண்மையில் சுகத்திலாவது துக்கத்திலாவது ஸம்பந்திக்கிறதில்லை.

அத்தியாயம்-19

கங்கைக்கரைக்குச் சுகர் வந்தது

பரீக்ஷித்து மகாராஜன் தம்முடைய பட்டணஞ் சென்ற பிறகு மஹர்ஷியின் ஆசிரமத்தில் தாம் செய்து வந்த குற்றத்தை நினைத்து வருத்தப்பட்டுத் தமக்குள் தாம் பின்வருமாறு யோசிக்கலானார்: 'யாதொரு அபராதமுஞ் செய்யாதவரும், தேஜஸ்ஸை அடக்கிக் கொண்டவருமான தபஸ்வியினுடைய கழுத்தில் ஸர்ப்பத்தைப் போட்டேன். அது மிகக் கெட்ட கார்யம். 'பாபத்தைச் செய்யக்கூடாது' என்ற தெய்வத்தின் கட்டளையை மீறினதாக ஆயிற்று, ஆனதால் தடுக்க முடியாத துக்கம் சீக்கிரத்தில் நேரிடும். இனி நான் இப்படிப்பட்ட கெட்ட காரியத்தைச் செய்யாமல் இருப்பதற்காகவும், செய்த பாபத்திற்குப் ப்ராயச்சித்த மாகவும் அந்தத் துக்கம் எனக்கே நேரில் வரவேண்டும் (புத்திரன் முதலியவர்களுக்கும் நேரிட வேண்டாம் என்பது கருத்து) நான் ப்ராஹ்மணர்களுக்குக் கோபத்தை யுண்டுபண்ணினதால் ப்ராஹ்மண குலமாகிய அக்னி யானது மிக்க பாபியான என்னுடைய இராஜ்யம், சைன்யம், பூர்ணமான செல்வம் ஆகிய இவைகளை இப்பொழுதே எரிக்கட்டும். ப்ராஹ்மணர்கள், தேவர்கள் பசுக்கள் ஆகிய இவர்கள் விஷயத்தில் மறுபடியும் எனக்கு இப்படிப்பட்ட கெட்ட புத்தி யுண்டாக வேண்டாம் என்று சிந்தித்தார்.

4-17. இந்தச் சமயத்தில் சமீக மஹர்ஷியின் சிஷ்யன் ஒருவன் குருவின் அனுமதிப்படி வந்து, சிருங்கியின்

சாபத்தை அரசனிடம் தெரிவித்தான். அதனைக்கேட்டு மகாராஜன் 'விஷயங்களில் மிகுந்த ஆசையுள்ள நான் வைராக்யமடைவதற்குத் தட்சகனுடைய விஷாக்னியே காரணமென்றும், அது சீக்கிரமாக நேரிடவேண்டும்' என்றும் நினைத்தார். பின்னுமவர் இவ்வுலகம், பரலோகம் ஆகிய இவ்விரண்டையும் துச்சமென்று தள்ளிவிட்டு, ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதஸேவையையே பெரிதாக நினைத்துக் கங்கைக் கரையில் பிராயோபவேசஞ் செய்ய முயற்சித்தார். எந்த நதியானது துளஸியுடன் சேர்ந்த மகாவிஷ்ணுவின் பாததூளியை விட மிக்க புண்யகரமான ஜலப்பிரவாகமுள்ளதோ, லோகபாலர்களுட்பட எல்லாரையும் வெளியிலும் அந்தரங்கத்திலும் பரிசுத்தப் படுத்துகிறதோ, அந்தக், கங்காநதியைச் சாகுந் தருணத்திலிருக்கும் எவன்தான் ஸேவிக்க மாட்டான்? இப்படி அந்த நதிக்கரையில் பிராயோபவேசஞ் செய்வதாகத் தீர்மானித்து வேறு விஷயத்தில் மனதைச் செலுத்தாமல் ஸ்ரீ கிருஷ்ணன் உடைய சரணங்களையே தியானித்து, ஸகல ஆசை களையும் விட்டுவிட்டு முனியாக விருந்தார். அப்பொழுது அத்ரி, வசிஷ்டர், ச்யவனர், சரத்வான், அரிஷ்டநேமி, ப்ருகு, ஆங்கிரஸ், பராசரர், விசுவாமித்ரர், பரசுராமர், உதத்யர், இந்திரப்பரதமர், இத்மவாஹர், மேதாதிதி, தேவலர், ஆர்ஷ்டிஷேணர், பரத்வாஜர், கௌதமர், பிப்பலாதர், மைத்ரேயர், ஔர்வர், கவஷர், அகஸ்தியர், த்வைபாயனர், பகவானான நாரதர் மற்ற தேவரிஷிகள் ப்ரஹ்மரிஷிகள், ராஜரிஷிகள், அருணர் முதலியவர்கள் ஆகிய இவர்களெல்லோரும் தங்கள் தங்கள் சிஷ்யர் களுடன் அவ்விடம் வந்தார்கள். அவர்களெல்லோரும் தீர்த்தயாத்திரை செய்கிறோம் என்று வ்யாஜமாக லோகத்தைப் பரிசுத்தி செய்துகொண்டு சஞ்சரிப்பவர்கள்.

அப்பொழுது அவ்வரசன் பலவகையான ரிஷி கோத்தரத்தில் சிறந்தவர்களான அவர்களை முறை தவறாமல் பூஜித்து நமஸ்காரஞ் செய்தார். அவர்கள் சுகமாக உட்கார்ந்தபொழுது பின்னுமவர்களுக்கு நமஸ்காரஞ் செய்து அவர்கள் முன்பாக இரு கை களையும் கூப்பிக்கொண்டு சுத்த சித்தமுள்ளவராய்த் தமது இஷ்டத்தைப் பின்வருமாறு வெளியிட்டார். பெரியோர்களால் அனுக்ரஹிக்கக்கூடிய ஸ்பாவமுள்ள நான் மிகவும் தன்யனாகவிருக்கிறேன். ப்ராஹ்மணர் களுடைய சுத்தமான பாததீர்த்தத்தைபடையாத க்ஷத்திரிய குலம் நிந்திக்கக் கூடியதே. மிக்க பாப ஸ்பாவமுள்ள வனும், ஸம்சார ஸுகத்திலேயே எப்பொழுதும் ஆசையை வைத்தவனுமான எனக்கு வைராக்யத்தை யுண்டுபண்ணுவதற்காகவே ப்ராஹ்மண சாபம் நேரிடும்படி செய்து பரமபுருஷன் என்னையனு க்ரஹிக்கிறார். பகவானையே மனத்தில் த்யானிக்கிறேன். மேலும் பெரியோர்களான உங்களையும், கங்காதேவி யையும் சரணமடைகிறேன். ப்ராஹ்மண சாபத்தால் தூண்டப்பட்ட தக்ஷகன் என்னை வஞ்சித்து இஷ்டப் படி கடிக்கட்டும். நீங்கள் மகாவிஷ்ணுவின் சரிதத்தைக் கானம் செய்யுங்கள். நான் பின்பு எந்தச் சரீரத்தை யடைந்தாலும் அந்தந்த ஜன்மாவில் ஈசுவரனிடத்திலும் அவருடைய பக்தர்களிடத்திலும் எனக்கு விசேஷ சிநேக முண்டாகட்டும் என்று சொல்லித் தம்முடைய பிள்ளையான ஜன்மேஜயரிடம் இராஜ்யத்தைஒப்பித்து. கங்கையின் தென் கரையில் தர்ப்பங்களைக் கிழக்கு நுனியாகப் பரப்பி, அவைகளின் மீது வடக்கு முகமாய் வீற்றிருந்தார்.

18–21. இப்படி அரசன் ப்ராயோபவேசஞ் செய்த

பொழுது தேவர்கள் அனைவரும், அவரைக் கொண்டாடிப் புஷ்பங்களை வர்ஷித்தார்கள், துந்துபி வாத்தியங்களை முழங்கினார்கள். தவிர, பிரஜைகளையனுக்கிரஹிக்கும் ஸ்வபாவமுள்ள அவ்விடம் வந்திருந்த மஹர்ஷிகள் அவரைச் சிலாகித்து ஸாதுவாதஞ் செய்து அவரை நோக்கி, 'ராஜ ச்ரேஷ்டரே கிருஷ்ண பகவான் இடத்தில் விசேஷ பக்தியுள்ளவரும், இராஜ்யம் முதலியவைகளில் ஆசையில்லாதவருமான பாண்டவ குலத்தில் பிறந்த உமக்கு இம்மாதிரி எண்ணம் நேர்ந்தது இயல்பேயாம்' என்று சொல்லி அவர்கள் ஒருவருக்கொருவர் இந்தப் பாகவத சிரோமணியான சக்ரவர்த்தி இந்தச் சரீரத்தை விட்டு மாயா ஸம்பந்தமில்லாததும், துக்கமற்றதுமான பரமபதத்தை அடையப்போகிறபடியால் அது வரையில் நாம் எல்லோரும் இவ்விடத்திலேயே வசிப்போம் என்று நிச்சயித்துக்கொண்டார்கள்.

22–24. அப்பொழுது பக்ஷபாதமில்லாததும், தேன் போல ரஸமுள்ளதும், கம்பீரமாகிய அர்த்தமுள்ளதும் உண்மையானதுமான மஹர்ஷிகளின் வார்த்தையைக் கேட்டு பரீக்ஷித்தானவன் மகாவிஷ்ணுவின் சரிதத்தைக் கேட்க விரும்பியவராய் அவர்களை நோக்கி, ஸத்ய லோகத்தில் சரீரத்துடன் இருக்கும் வேதங்கள் போல நீங்கள் அனைவரும் இவ்விடம் வந்தீர்கள். பிறரை அனுக்ரஹிப்பதை விட வேறு பிரயோஜனம் இவ் வுலகத்திலும், மேலுலகத்திலும் உங்களுக்கில்லை. ஆகையால் உங்களைக் கேட்கிறேன். சாகுந்தருணத்தில் இருப்பவர்கள் செய்யவேண்டிய சுத்தமாகிய தர்மம் யாது? யோசித்து சொல்லுங்கள் என்று கேட்டார்.

25–39. அந்தச் சமயத்தில் வ்யாஸருடைய புத்திரர்

ஆகிய சுகர் அவதூத வேஷமுள்ளவராய், பாலர் களுடன் தெய்வச்செயலாய் அவ்விடம் வந்தார். அவரிடத்தில் ஆசிரமத்துக்குரிய அடையாளமாவது ஜாதியைக் காட்டும் குறியாவது யாதொன்றுமில்லை. அவர் ஆத்ம லாபத்தாலேயே சந்தோஷமடைந்தவர். அப்பொழுது பதினாறு வயதுள்ளவராயிருந்தார், அழகான கைகளும், கால்களும், தொடைகளும், தோள்களும். கன்னங்களும், கண்களும், உயர்ந்த மூக்குகளும், சமமான காதுகளுமுடையவராய்ப் பிரகாசித்தார். சதைகளில் மறைந்த நரம்புகளுள்ளவர், விசாலமும் உயர்ந்ததுமான மார்புள்ளவர், சுழல்போன்ற நாபி யுள்ளவர். மூன்று மடிப்புகளால் அழகான வயிறு உள்ளவர், திக்குகளையே வஸ்திரமாகக் கொண்டவர். சுருண்டும் பரந்து மிருக்கும் தலைமயிருள்ளவர். மிகவும் மேலான யௌவன முள்ள வயதுள்ளவராகையால் ஸ்திரீகளுடைய மனதை அபஹரிப்பவர். அழகான சிரிப்புள்ளவர். இப்படிப்பட்ட அவரைப்பார்த்து அவருடைய லக்ஷணத்தையறிந்தவர்களான மஹர்ஷிகள் எதிர்கொண்டழைத்தார்கள். அப்பொழுது சக்ரவர்த்தி ஆனவர் வந்த அதிதியாகிய சுகருக்கு நமஸ்காரம் செய்தார். பின்பு அவருடன் வந்த அக்ஞர்களான ஸ்திரீகளும் பாலர்களும் திரும்பி போனார்கள். சுகர் பெரிதான ஆஸனத்தில் உட்கார்ந்தார். அப்பொழுது ப்ரஹ்மரிஷிகள், தேவரிஷிகள், ராஜரிஷிகள் இவர் களுடன் மத்தியிலிருக்கும் சுகர் சுக்ரன் முதலிய கிரகங்களுடையவும் அசுவினி முதலிய நட்சத்திரங்களு டையவும், மற்ற தாரைகளுடையவும் நடுவிலிருக்கும் சந்திரன் போலவும் பிரகாசித்தார். இப்படி சாந்தமனம் உள்ளவரும் தடையற்ற மேதையுள்ளவருமான சுகரை மகா பாகவதரான பரீட்சித்து மகாராஜன் பின்னும்

நமஸ்கரித்து அஞ்சலிபந்தம் செய்து, தலைவணங்கி, ஸாவதானமாய் நின்று, பின்வருமாறு மிருதுவாகச் சொல்லலானார்; ஓ பிராஹ்மண! க்ஷத்திரியனாகிய நான் ஸாதுக்களால் ஸேவிக்கக்கூடியவனாகிறேன், என்னுடைய பாக்கியம் வியக்கத்தக்கது, நீங்கள் அதிதியாக வந்து கிருபையால் என்னைப் பரிசுத்தப் படுத்தினீர்கள்; பாதத்தை வைத்தமாத்திரத்தில் வீடு முதலிய யாவும் பரிசுத்தமாய் விடக்கூடிய உங்களைத் தரிசித்தலாலும் ஸ்பர்சித்தலாலும், உங்களுடைய பாதங்களை அலம்புதலாலும்' ஆஸனங்கொடுத்த தனாலும் யான் பரிசுத்தமடைவதில் யாது சந்தேகம்? விஷ்ணுவைக் கண்ட அசுரர்கள் போலத் தங்களைத் தரிசித்த மாத்திரத்தில் மகா பாபங்களும் உடனே நீங்குகின்றன, பாண்டவர்களிடத்தில் மிகுந்த ப்ரியம் உள்ள ஸ்ரீ கிருஷ்ண பகவான் என்னிடத்தில் சந்தோஷமடைந்தார், அத்தையின் குமாரர்களிடம் மிகுந்த பிரியத்தால் அந்த வம்சத்தில் பிறந்த எனக்கும் தங்களுடைய தரிசனத்தைச் செய்வித்தார். அவருடைய அனுக்ரஹமில்லாமற் போனால் உங்களுடைய தரிசனம் மரணமடைய சித்தனாயிருக்கும் எனக்குக் கிடைக்குமா? தாங்கள் ஸித்தர்கள். உங்களுடைய பக்தியோ கண்டுபிடிக்க முடியாதது; நீங்கள் மிகவும் தாதாவாகையால் எல்லோரையும் யாசிக்க செய்பவர், ஆகையால் ஸித்திப் பெற்றவரும், யோகிகளுக்குப் பரம குருவுமாகிய உங்களை ஒரு விஷயம் கேட்கிறேன், அஃதாவது, 'மரணமடையும் ஸமயத்தையுடைய வன் என்ன செய்யவேண்டும்? எதனைக் கேட்கவேண்டும் எதனை நினைக்கவேண்டும்? எதனை உபாஸிக்க வேண்டும்? எவற்றைச் செய்யக்கூடாது? இவைகளைச் சொல்லவேண்டும்? நீங்கள் கிருகஸ்தர்களுடைய

வீட்டில் மாடு கறப்பதற்கு எவ்வளவு காலம் செல்லுமோ அவ்வளவு காலம் கூட நிற்கிற வழக்கம் இல்லையே: ஆனதால் சீக்கிரம் சொல்லவேண்டும் என்று பிரார்த்திதார்.

40. இந்தப்படி பரீக்ஷித்து மகராஜனால் கேட்கப் பட்டவுடன் ஸகல தர்மங்களையுமறிந்த சுகர் ப்ரத்யுத்தரம் சொல்லவாரம்பித்தார்.

♣ ♣ ♣ ♣

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்கந்தம் 2

அத்தியாயம் 1

விராட் புருஷனுடைய அவயவங்கள்

சுகமஹர்ஷியானவர் பரீக்ஷித்து மஹாராஜனைப் பார்த்து ' ஓ அரசனே! உம்மால் கேட்கப்பட்ட கேள்வி மிகவும் மேலானது. உலகத்திற்கு அனுகூலத்தைச் செய்யக்கூடியது; ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்தவர்கட்குப் பிரியமானது; கேட்கத்தகுந்தவைகள், சொல்லத் தகுந்தவைகள், நினைக்கத்தகுந்தவைகள் ஆகிய இவை களில் இது மிகவும் சிறந்தது. ஓ ராஜசிரேஷ்டரே! ஆத்ம ஸ்வரூபத்தையறியாதவர்களும், ஐந்து வகையான, இம்சைகளைச் செய்பவர்களுமான கிருஹஸ்தர்களுக்குக் குருமுகமாகத் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் அனேகமிருக்கின்றன. (மோக்ஷத்தை விரும்பியவர்கள் தெரிந்து கொள்ளக்கூடியது, ப்ரஹ்மம் ஒன்றுதான் என்று தாத்பரியம்.) மேலும் ஜனங்களுடைய ஆயுளானது இரவில் தூக்கத்தாலும் பகலில் பணத்து ஆசையாலும், கிடைத்த பணத்தால் குடும்பத்தைப் போஷிப்பது முதலியவைகளாலும், யௌவனமானது மைதுனத்தாலும் வீணாகக் கழிக்கப்படுகிறது. பின்னும் ஜனங்கள் அநித்யங்களான தேகம், குழந்தைகள், பார்யை ஆகிய ஸாமக்ரியைகளில் மிகுந்த அபிமானம் வைத்திருக்கிறார்கள். மேலும் அவர்கள் சரீரம் முதலியவைகள்நாசமடைவதை நேரில் பார்த்திருந்தும்

அவைகளை நித்யங்களென்றே நினைக்கிறார்கள். ஓ பரத வம்சத்தில் பிறந்தவரே! ஸகல ஜகத் ஸ்வரூபியும் அவை களுக்கு அதிபதியும், ஸம்ஸாரத்தைப் போக்கடிப்ப வராயுள்ள புருஷோத்தமருடைய சரிதத்தையே கேட்க வேண்டும். அதுவே மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியது. அதுவே உச்சரிக்கக்கூடியது. மனனஞ் செய்யக்கூடியது. எவன் மரணமடையும் சமயத்தில் நாராயணனை ஸ்மரிக்கிறானோ அதுவே அவனுக்கு உத்தமமான லாபம். ஆத்ம ஸ்வரூப விசாரமாகிய ஸாங்கியம், அஷ்டாங்க யோகம், தன் ஜாதிக்கும் ஆசிரமத்திற்கும் உரிய தர்மங்கள் ஆகிய இவைகளை அனுஷ்டிப்பதால் மரண காலத்தில் ஸ்ரீமந் நாராயணனை ஸ்மரிக்கும்படி நேரும். அதுவே இந்த ஜன்மத்தின் ப்ரயோஜன மெனப்படுகிறது. ஓ மஹாராஜ! விதி நிஷேதங்களைக் கடந்தவர்களும், நிர்க்குண ப்ரம்ஹ ஸ்வரூபத்தை யறிந்தவர்களுமான முனிகளும் பெரும்பாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் குணங்களைத் தியானஞ் செய்து கொண்டே காலத்தைக் கழிக்கிறார்கள். ஆகையால் நான் த்வாபர யுகத்தின் கடைசியில் என்னுடைய பிதாவாகிய வ்யாஸ மஹர்ஷியினிடமிருந்து ப்ரஹ்ம ஸ்வரூபத்தை தெரிவிக்கும் இந்த ஸ்ரீமத் பாகவத புராணத்தை அத்யயனஞ் செய்தேன். ஓ ராஜரிஷியே! நான் இயற்கையில் ப்ரஹ்ம ஸ்வரூபத்தையறிந்த வனானாலும் உத்தமமான புண்யத்தைக் கொடுக்கும் பகவானுடைய சரிதத்தில் விசேஷ ப்ரேமையால் அந்த உபாக்கியானத்தை அப்யஸித்தேன். நீர் மஹாபுருஷனாகிய விஷ்ணுவின் பக்தராகையால் உமக்கு அதைச் சொல்லுகிறேன். அதில் சிரத்தை யுள்ளவர்களுக்கு முகுந்தரிடத்தில் (மோக்ஷத்தைக்

கொடுப்பவர்) பக்தியுண்டாகும். விஷயங்களில் நிர் வேதத்தையடைந்தவர்களும் மோக்ஷத்தை விரும்பியவர் களுமான யோகிகளுக்கு மஹாவிஷ்ணுவின் திவ்ய நாமங்களைக் கானம் பண்ணுவதே அபயத்தைக் கொடுக்கக்கூடியது: ஆதலால் ஸித்தர்களுக்கும், ஸித்தியடைய வேண்டியவர்களுக்கும் இதை விட அனுகூலமான மார்க்கம் வேறில்லை. புத்திரன் முதலிய வர்களிடத்தில் அபிமானம் வைத்து அறியாமலே வீணாகக் கழிக்கப்பட்ட அனேக வர்ஷங்களால் என்ன பிரயோசனம்? எந்தக் காலத்தில் ஆயுளானது வீணாகக் கழிக்கப்படுகிறதென்று தெரிந்துகொள்ளு கிறானோ அந்தக் காலமே மேலானது.

அதனால் நல்ல காரியத்தைச் செய்ய முயற்சி யுடையவனாவான். முன்னொரு காலத்தில், கட்வாங்கன் என்ற ஒரு ராஜரிஷியானவர் (தேவாஸுர யுத்தத்தில் தேவர்களுடைய பக்ஷத்திலிருந்து அஸுரர்களை ஜயித்தார். அப்பொழுது அவரிடத்தில் தேவர்கள் ஸந்தோஷப்பட்டு 'வேண்டியதைக் கேளும், என்றார்கள். கட்வாங்கன் 'நான் எத்தனை காலம் ஜீவித்திருப்பேன், என்று கேட்டான். பின்பு தேவர்கள், இன்னும் ஒரு முஹூர்த்தந்தான் உன்னுடைய ஆயுளில் பாக்கி இருக்கிறது' என்று பதில் சொன்னார்கள்.) தம்முடைய ஆயுளில் மீதியிருக்கும் காலம் இவ்வளவு என்று தெரிந்து கொண்டு ஒரு முஹூர்த்தத்துக்குள் ஸகல ஆசைகளையும் ஒழித்து, ஸ்ரீ மஹாவிஷ்ணுவைச் சரணமடைந்து அவருடைய ஸாயுஜ்யத்தை அடைந்தார். ஓ மஹாராஜ! உமக்கு இது முதல் ஏழு நாள் ஆயுள் இருக்கிறது, ஆகையால் பரலோகத்தில் ஸுகத்தைக் கொடுக்கும் கார்யத்தைச் செய்யும்.

மரணகாலம் ஸமீபித்தபோது புருஷன் பயமில்லாத வனாகப் புத்திரர்களிடத்தில் தான் வைத்திருந்த அபி மானத்தை வைராக்கியமாகிய ஆயுதத்தால் நாசஞ் செய்ய வேண்டும். மேலும் ஸன்யாஸஞ் செய்து கொண்டு புத்திரன் முதலியவர்களை விட்டுப் பிரிந்தோமே என்று விசாரப்படாமல், கங்கை முதலிய புண்ய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து, ஜனங்களுடைய நெருக்கமில்லாத சுத்தமான விடத்தில் விதிப்படி ஆஸனத்தில் உட்கார்ந்து ப்ரஹ்மத்தைத் தெரிவிக்கும் மூன்று அக்ஷர ஸ்வரூபமாகிய ப்ரண வத்தைத்தியானிக்க வேண்டும். அதனால் சுவாஸத்தை ஜயித்து, ப்ரம்ஹ பீஜமாகிய ப்ரணவத்தை நினைத்துக் கொண்டே மனத்தை அடக்க வேண்டும். புத்தியாகிய (நிச்சயரூபமானது) ஸாரதியுள்ள புருஷன் மனத்தைக் கொண்டு (கடிவாளம்) (ரூபம், ரஸம், கந்தம், சப்தம், ஸ்பர்சம் ஆகிய) ஐந்து விஷயங்களில் செல்லும் இந்திரியங்களைத் தடுக்க வேண்டும். மேலும் கர்ம வாஸனைகளால் இழுக்கப்படும் மனித்தை மங்களத்தைக் கொடுக்கும் ஈசுவர ஸ்வரூபத்தில் புத்தியைக் கொண்டு செலுத்த வேண்டும். பின்னும் பகவத் ரூபத்தில் ஏதாவது ஒரு அவயவத்தை இடைவிடாமல் மனத்திற் கொண்டு த்யானிக்க வேண்டும். பிறகு அந்த மனத்தை பரப்ரஹ்மனிடத்தில் செலுத்தி, (பரமானந்த ஸ்வரூபமாகச் செய்து) வேறு ஒன்றையும் நினைக்காமல் இருக்க வேண்டும். எதனைத் தியானம் செய்ததால் மனமானது ஆசை முதலியவைகளால் கலங்காமல் தெளியுமோ அப்படிப்பட்டது ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பாதமேயாம். ஒருகால் ரஜோகுண சம்பந்ததால் கலக்கமும், தமோகுணத்தால் மோஹமும் மனத்திற்கு ஏற்படுமானால் அப்பொழுது தாரணையால் மனத்தை

அடக்க வேண்டும், அது ரஜோ குணம், தமோ குணம் ஆகிய இவைகளால் ஏற்படும் ஸகல தோஷங்களையும் போக்கக் கூடியது. த்யானஞ் செய்கிறவர்களுக்கு மேலான க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது (இவ்வளவு மஹாத்யமுள்ளது தாரணையென்று தாத்பர்யம்) என்று சொன்னார்.

22. இதைக் கேட்டு பரீக்ஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி, 'ஓ ப்ராஹ்மணோத்தம! எப்படி தாரணைச் செய்ய வேண்டும்? எதில் மனத்தைச் செலுத்த வேண்டும்? எப்படிப்பட்ட தாரணை மனத்தில் தோஷங்களைப் போக்கும்? அதனை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்' என்று கேட்டார்.

23–39 அதைக் கேட்டுச் சுகர் பின்வருமாறு பதில் சொல்லலானார். ஓ மஹாராஜ சாஸ்திரத்தில் சொல்லியபடி ஆஸனத்தை அடைந்து மூச்சை அடக்கி, அபிமானங்களை ஒழித்து, இந்திரியங்களை ஜயித்துப் பகவத் ஸ்வரூபமாகிய ஸ்தூல ப்ரபஞ்சத்தில் நிச்சய ரூபமாகிய புத்தியையும் மனதையும் செலுத்த வேண்டும். முன் கல்பத்திலிருந்ததும், இப்பொழுது இருக்கிறதும், அடுத்த கல்பத்தில் இருக்கக் கூடியது மான ப்ரபஞ்சமானது விராட் புருஷனுடைய ஸ்வரூ பத்தில் காணப்படுகிறது. அந்த பகவத் ஸ்வரூப மானது பெரியவைகளை விடப் பெரிதானது, அந்தப் புருஷனுக்கு இந்த ஜகத்தே சரீரமாயிருக்கிறது. மேலும் (மஹத்தத்வம், அஹங்காரம் ஐந்து பூதங்கள் ஆகிய) ஏழு ஆவரணங்களுள்ள அண்ட கோசமாகிய சரீரத்திலிருக்கும் புருஷனுக்கு வைராஜன் என்று பெயர். இவரே தாரணைக்கு ஆஸ்ரயமாயிருப்பவர்.

(ஸ்தூல ரூப தாரணையால் சூட்சும ரூபத்தில் பக்தி உண்டாகுமென்பது கருத்து) மேற்காட்டிய வைராஜ னென்னும் புருஷனுக்குப் பாதாளத்தைப் பாதமாகவும், ரஸாதலத்தைப் புறங்கால்களாகவும், மஹாதலத்தைப் பாதங்களின் இரு பக்கங்களாகவும், தலா தலத்தை கணைக்கால்களாகவும், ஸுதலத்தை இரு முழங்கால் களாகவும், விதலம் அதலம் ஆகிய இவைகளை இரண்டு தொடைகளாகவும், பூதலத்தை ஜகனமாகவும், ஆகாசத்தை நாபியாகவும் ஸ்வர்க்கத்தை மார்பாகவும், மஹர்லோகத்தைக் கழுத்தாகவும், ஜனலோகத்தை முகமாகவும், தபோ லோகத்தை நெற்றியாகவும், ஸத்ய லோகத்தைச் சிரஸ் ஆகவும் சொல்லுகிறார்கள். மேலும், அநேக சிரஸுள்ள அந்தப் புருஷனுக்கு இந்திரன் முதலிய தேவர்கள் கைகள். திக்குகளே அவருக்குக் காதுகள் (இந்திரிய கோளகங்கள்,) சப்தமே ச்ரோத்ரேந்திரியம்.

அந்தப் பரமபுருஷனுக்கு அச்வினீ தேவர்களே மூக்குகள், கந்தமே கிராணேந்திரியம். ஜ்வலிக்கும் அக்னியானது அவருக்கு முகமாகும். த்யுலோகமே கண்கள், ஸூர்யனே சக்ஷுரிந்திரியம், இரவும், பகலும் ஆகிய இரண்டும் இமைகள். சதுர்முக ப்ரஹ்மாவின் பதம் அவருடைய புருவ நெரித்தலாகும். ஜலத்திற்கு அபிமானியான வருணன் அவருக்கு முகவாய்க்கட்டை, ரஸங்களே அவருடைய நாக்கு, தேசத்தாலும், காலத்தாலும் அளவிடக் கூடாதவராகிய அந்தப் புருஷோத்தமனுக்கு வேதங்கள் சிரஸாக விருக்கின்றன. யமனே சிங்கப்பற்கள், ஸ்நேகத்தின் அம்சங்களே பற்கள். ஜனங்களை மோஹிக்கச் செய்யும் மாயையே அவருடைய சிரிப்பு. அவருடைய கடைக்கண்

பார்வையே அளவற்ற ஸ்ருஷ்டி. (ஸகல ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியானது பகவானுடைய கடாக்ஷ தீனமென்பது கருத்து). வெட்கமே மேலுதடு. உலோபமே கீழுதடு. தர்மமே ஸ்தனம், அதர்ம மார்க்கமே பின்பக்கம். ப்ரஜாபதிதேவரே அவருக்கு ஆண்குறி. மித்ரா வருணர்களே விருஷணங்கள், ஸமுத்ரங்கள் வயிறு. பர்வதங்களே அவருடைய எலும்புகள், கங்கை முதலிய நதிகளே அவருடைய நாடிகளாகின்றன. மரங்களே உரோமங்கள். ஓ ராஜ சிரேஷ்டரே! வாயு பகவானே அளவற்ற வீர்யமுள்ள வைராஜருக்குப் ப்ராணன். காலமே அவருடைய (நடை) கதி. முக்குணங்களாலுண்டாகும் ஸம்ஸாரமே அவருக்குக் கர்மங்கள் அந்தப் பரமேச்வரனுக்கு மேகங்களே தலைமயிர்கள். ஓ பரீக்ஷித் மஹாராஜனே! ஸந்தியா காலங்கள் அந்தப் ப்ரபுவிற்கு வஸ்திரமாக விருக்கின்றன. அவ்யக்தமே (ப்ரதானம்) அவருக்கு ஹ்ருதயமாயிருக்கிறது. ஸகல ஓஷதிகளையும் வ்ருத்தி செய்யும் சந்திரனே மனஸ், மஹத் தத்வமே அவருடைய விஞ்ஞான சக்தி, ருத்ரனே அவருக்கு அந்தக்கரணம், குதிரை அசுவதரீ, (கழுதைக்கும் பெண் குதிரைக்கும் உண்டானது,) ஒட்டகம், யானை ஆகிய இவைகள் அவருக்கு நகங்கள், ஸகல மிருகங்களும், பசுக்களும் அவருடைய ஸ்ரோணிதேசம், பறவைகள் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும் அவருடைய வேலைத் திறமை, மனுவே புத்தி, மனித வர்க்கமே இருப்பிடம், கந்தர்வர்கள், வித்யாதரர்கள், சாரணர்கள், அப்ஸரஸ்திரீகள் ஆகிய இவைகளே ஷட்ஜம் முதலிய ஸ்வர ஸ்மிருதிகள், அஸுர ஸைன்யமே அவருடைய பராக்ரமத்திற்கு இருப்பிடம். ப்ராஹ்மணர்களே அவருக்கு முகம், க்ஷத்திரியர்களே கைகள், வைசியர்களே தொடைகள், சூத்ரர்களே

பாதங்கள் (சித்தம் ஸ்திரமாக இருப்பதற்காக விராட், ஜீவன், ஈசுவரர் ஆகிய இவர்களை ஒன்றாக உபாஸிக்க வேண்டு மென்பது கருத்து) மேலும் பலவகையான பெயருள்ள வஸுருத்ரர்கள் முதலிய தேவர்களுடன் ஹவிஸினால் செய்யக்கூடிய திரவ்ய யாகமானது அந்தப் பரம புருஷனைப் பூஜிக்கும் கர்மமேயாம், வைராஜருடைய அவயவங்கள் இம்மாதிரியானவைகள் எல்லாவற்றிற்கும், பெரியவரான இந்தப் பரமபுருஷன் இடத்தில் மோக்ஷமடைய விரும்பியவர்கள் மனத்தைச் செலுத்த வேண்டும். இதைவிட மேலானது ஒன்று இல்லை. ஸகல பிராணிகளுடைய புத்தி விருத்தி களால் ஸகலத்தையும் அனுபவிக்கிறவரும், எல்லா வற்றிற்கும் அந்தராத்மாகவும், ஸத்ய ஸ்வரூபியாய் இருக்கும் அவரையே பூஜிக்கவேண்டும்; அவரைக் காட்டிலும் வேறு இடத்தில் ஆசைபடக் கூடாது. அப்படி ஆசைப்படுவதால் ஸம்ஸாரத்தை அடையும் படி நேரிடும். ஸ்வப்னத்தில் சில ஸமயத்தில் அநேக ஜீவர்களைக் கல்பித்து, ஜீவன் அந்தந்த இந்திரியங்களைக் கொண்டு எல்லாவற்றையும் பார்ப்பதுபோல ஈசுவரன் தாம் ஒருவராக இருந்து எல்லாவற்றையும் தம்முடைய வித்யா சக்தியால் அனுபவித்து, அவைகளில் ஸம்பந்தப்படாதவராகவும் ஆனந்த நிதியாகவும் பிரகாசிக்கிறார்.

நோட்டு

ஆத்மஸ்வரூ–லக்ஷ்மீ, ப்ரம்ஹா முதலிய சேத னங்கள் எப்பொழுதும் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு உள்ளவைகளாக இருக்கிறதை அறியாதவர்கள் ...விஜ, ஸாமக்ரீ... ஆத்ம தைன்ய' என்னும் பாடத்தை ஆசிரயித்து, 'தனக்குக் குறைவை உண்டு பண்ணக்

கூடியவைகள்' என்று அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. விஜ , மனனம்... ஓ மைத்ரேயி! ஆத்மாவைப் பற்றியே விசாரிக்க வேண்டும். குரு முகமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த ஒருவராகிய ஆத்மாவையே அறியுங்கள். மற்ற வார்த்தைகளை விட்டுவிடுங்கள் ... ஸ்ருதிகள், ஸாங்கியம்... ஞான யோகத்தாலே சாங்கியர் களுக்கும், கர்ம யோகத்தால் யோகிகளுக்கும் பகவத்கீதை, அஷ்டாங்க ... யமம், நியமம், தியானம், தாரணம், ஆஸனம், பிராணயாமம், பிரத்யாஹாரம், ஸமாதி என்று எட்டு அங்கமுள்ளது. விதி நிஷேதம்... இதனைச் செய் என்று சாஸ்திரத்தில் சொல்லியிருப்பது விதியாகும், இதனைச் செய்யவேண்டாம் என்று சொல்லியிருப்பது நிஷேதமாகும் ... மேற்சொல்லிய விதி நிஷேதமென்பதற்கு விதி நிஷேதங்களைச் சொல்லும் வேதத்தால் காண்பிக்கப்படுகிற காம்ய கர்மங்களென்று அர்த்தம் கொள்ள வேண்டும். அவசியம் அனுஷ்டிக்க வேண்டியதாக வேதத்திற் சொல்லப்பட்ட பஞ்ச மஹா யக்ஞங்களே விதியென்றாவது, ஸுராபானம் செய்யக் கூடா தென்பதே நிஷேதமென்றாவது இவ்விடத்தில் அர்த்தம் அல்ல... வீர, நிர்குண ...ரஜோகுணம், தமோகுணம் இவைகளுடன் சேர்ந்த ஸத்வகுணமற்றது ...வீர, கடைசியில் மூலத்தில் த்வாபாரதெள என்று இருப்பதால் அதற்கு 'கலி யுகத்தின் ஆதியில்' என்று அர்த்தம் கொள்ள வேண்டும். வ்யாஸ மஹர்ஷியும், சந்தனு சக்ர வர்த்தியும் ஒரே காலத்தில் இருந்ததாகச் சொல்லப் பட்டிருப்பதால் ... வீர வ்யாஸ மஹர்ஷியானவர் தம்முடைய அறுநூறாவது வயதில் திருதராஷ்டிரரை உண்டுபண்ணினார் என்று சொல்லியிருப்பதாலும், துவாபரயுகத்தின் கடைசியில் பாரதக்கதை நடந்ததாகச்

சொல்லியிருப்பதாலும், துவாபரயுகத்தில் கிருஷ்ண அவதாரத்திற்கு முந்தி என்று அர்த்தம் கொள்ள வேண்டும்... விஜய. ப்ரம்ஹ ஸ்வரூபத்தில் 'ப்ரம்ஹ ஸம்ஹிதம், என்று இருப்பதால் வேதத்திற்குச் சமமானது, பாகவதம் ... பகவான் நேரில் உபதேசித்த நான்கு ஸ்லோகங்களைக் கொண்டு செய்யப் பட்டதால் அல்லது பகவத் ஸ்வரூபத்தை நன்றாய் வர்ணிப்பதால்... வீர. சொல்லுகிறேன்... முக்தனாகிய என்னாலும் அப்யஸிக்கப்பட்ட இந்த பாகவத புராணமானது, மோக்ஷத்தை அடையவேண்டிய வராகிய உமக்கு உபயோகமானது என்று தாத்பரியம் ...வீர, அவயவத்தை..யுகத்தை...வீர. பெரிதானது ... இவர் பூமியைவிடப் பெரியவர், அந்தத்தைக் காட்டிலும் பெரியவர் இவ்வுலகங்களைக் காட்டிலும் பெரியவர் ஸ்ருதி. ஸ்வர்க்கத்தை, முலத்தில் ஜ்யோதிரனீகம் என்று இருப்பதால் நக்ஷத்ர லோகம் என்று அர்த்தம் கொள்ளவேண்டும், பறவைகள்...வாத ஸ்வரூபிகளான தித்திரி முதலிய பக்ஷிகள்...வீர. திறமை...எவரால் ஹம்ஸங்கள் வெண்மை நிறமுள்ளவைகளாகவும், கிளிகள் பச்சை நிறமுள்ளவைகளாகவும், மயில்கள் பலவகை நிறமுள்ளவைகளாகவும் ஸ்ருஷ்டிக்கப் பட்டனவோ அவர் நமக்கு விருத்தியை உண்டு பண்ணுவார். மூலத்தில் வ்யாகரணம் என்று இருப்பதில் அதற்கு ஆச்சரியத்தை யுண்டுபண்ணும் வார்த்தை என்று அர்த்தம். சந்த். இருப்பிடம் மனுஷ்ய ஜன்மாவானது ஞானத்திற்கும், பக்தி முதலிய ஸ்தானங்களுக்கும் உபாயமாயிருக்கிறது. யாகம் முதலிய கர்மங்கள் ஞானம் முதலியவைகளுக்குக் காரணமாய் இருப்பதால், அக்கர்மங்களில் அதிகாரமுள்ளவர் களுக்கே ப்ரஹ்மோ பாஸனத்தில் அதிகாரம ஏற்படுகிற

படியால் மனுஷ்ய சரீரமே எல்லாவற்றிற்கும் உபயோக மான்து சந்த். அஸுரஸைன்ய அஸுரானீக வீர்ய என்று ஒரு பாடமுண்டு. அதற்கு ப்ரஹ்லாதனே ஸ்மரணம் என்று அர்த்தம் கொள்ளவேண்டும், வீர.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்- 2

பகவானிடத்தில் மனத்தை செலுத்தும் வகை

1–21. பிரளயகாலத்தில் ப்ரஹ்ம தேவரானவர் மேற் காட்டியபடி விராட் புருஷனிடத்தில் மனத்தைச் செலுத்தினார். (வைராஜ தாரணையைச் செய்தார்.) அதனால் பகவான் ஸந்தோஷமடைந்து ப்ரஹ்மதேவருக்கு மறந்து போயிருந்த ஸ்ருஷ்டி சக்தியை மறுபடியும் அனுக்கிரஹித்தார். அதனால் ப்ரஹ்மதேவர் வீணாகாத ஞானமுள்ளவராகவும், நிச்சயமாகிய புத்தியுள்ள வராகவும் ப்ரளயத்திற்கு முன்பு இருந்தது போலவே உலகத்தை ஸ்ருஷ்டித்தார் (தாரணையானது, இம் மாதிரியான மஹாத்மியமுள்ளது என்று கருத்து) வேதங்கள் யாவும் கர்மங்களையும், அவற்றின் பலன்களையும் சொல்லுகின்றன. ஆனாலும் ஸ்வர்க்கம் முதலியவைகளில் புருஷார்த்தம் ஒன்று மில்லை. அதைக் கேட்ட மாத்திரத்தில் மனதிற்கு ஆசையைக் கொடுக்கிறதே யொழிய வேறில்லை. (பெயரால் அழகுள்ளது) ஸ்வப்பனத்தில் கண்ட வஸ்துக்கள் நாம் விழித்துக் கொண்டபொழுது இல்லாமற் போவதுபோல மாயா ரூபமான கர்ம மார்க்கத்தில் அலைந்தும் கொஞ்சமேனும் ஒப்பற்ற ஸுகம் கிடைக்கிறதில்லை. ஆகையால் விவேகமுள்ளவன் தேக நிர்வாகத்திற்கு வேண்டியவரையில் தோக்கிய வஸ்துக்களை அபேக்ஷிப்பான். அவைகளிலும் ஆஸக்தியில்லாமல் ஜாக்ரதையாக இருப்பான். மேலும் இவைகள் ஸுகத்தைக் கொடுக்கக் கூடியவைகளல்ல என்ற நிச்சயமுள்ளவனாகவும் இருப்பான். ஆனதுபற்றி, தேகத்திற்குவேண்டிய விஷயங்கள் ஸுலபமாக அவனுக்குக் கிடைக்குமானால் அவன்

இக்கர்மங்களில் முயற்சி செய்யமாட்டான். கர்மங்களோ மிகவும் ச்ரமத்தைக் கொடுக்கின்றன. எவ்வாத்தேசங் களிலும் எப்பொழுதும் பிறரை அபேக்ஷியாமல் ப்ரயாஸமின்றிக் கிடைக்கும் பூமியாகிய படுக்கை ஸித்தமாக இருக்க, பணச் செலவினால் கிடைக்கக் கூடியதும், இஷ்டமான காலங்களில் அகப்படாததுமான கட்டில் முதலிய படுக்கையை ஞானமுள்ளவன் அபேக்ஷிப்பானா? தன்னுடை கைகளிருக்கத் தலை யணைகளால் என்ன ப்ரயோஜனம்? தவிரவும், அன்னத்தை வைத்துக்கொண்டு புஜிக்க அஞ்சலி (சேர்ந்த இருகைகள்) ஸ்வாதீனத்திலிருக்க, பல வகையான பாத்திரங்களை அபேக்ஷிக்கவும் வேண்டுமா? மேலும் திக்குகளும், மரவுரிகளும் உடுத்திக் கொள்ளக்கூடியவைகளாக விருக்கும்போது, பட்டு, வஸ்திரம் முதலியவைகளை ஏன் ஸம்பாதிக்க வேண்டும்? வழியில் கந்தைத்துணி அகப்படாதா? பிறரையே போஷிக்கும் ஸ்வபாவமுள்ள (பழம் முதலியவை களாலென்பது கருத்து) மரங்கள் ஆகாரத்தைக் கொடாமலிருக்குமா? தீர்த்தத்தைக் கொடுக்கும் நதிகள் வரண்டு போயினவா? வஸிப்பதற்கு மலைகளில் குகைகளிருக்கின்றனவே? அவைகள் அரசர்களால் மூடப்பட்டனவா? ஆகையால் பிறரை யாசியாமலே தேக யாத்திரையை நடத்திக்கொள்ளலாம். மேற் கூறியவைகள் கிடைக்காவிடினும் சரணாகதர்களான நம்மைப் பகவான் ஸம்ரக்ஷிக்கமாட்டாரா? இப்படி இருக்க பணத்தால் கர்வங்கொண்டு கார்யம் அகார்யம் இவைகளை அறியாத மமதை கொண்டவர்களை விவேகிகள் ஏன் உபாஸிக்கிறார்கள். ஸ்ரீ மந் நாராயண ரையே (மற்றவர்களை விட்டு) ஸேவிக்கவேண்டும். அவர் எல்லோருடைய சித்தத்திலும் தாமாகவே

எப்பொழுதுமிருப்பவர். ஆத்ம ரூபியாயிருப்பவராகையால் அவர் எல்லாருக்கும் பிரியர். சரீரம் முதலியவைபோல அநித்யரல்லர். ஸத்ய ஸ்வரூபியாயிருப்பவர். ஸேவிக்கக் கூடிய குணங்களால் நிறைந்தவர். நாசமற்றவர். அவரை ஸேவிப்பதால் ஸம்சாரத்தைக் கொடுக்கும் அவித்யை முதலியவைகள் நாசமடைகின்றன. கர்ம ஜடர்களாயும் ஞான ஹீனர்களாயுமுள்ள மனுஷ்ய பசுக்கள் விஷயங்களிலேயே ஆசை கொள்கிறார்கள். தாரணையைச் செய்கிறதில்லை. மேலும், யமலோகத் திலிருக்கும் வைதரணீ நதியில் தம்முடைய கர்ம வசத்தால் துக்கத்தை யனுபவிப்பது போல ஸம் ஸாரத்தில் மூழ்கி துக்கப்படுகிறார்கள். இப்படிக் கஷ்டப்படும் ஜனங்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் விவேகியான புருஷன் பகவானைச் சிந்திப்பதாகிய தாரணையைச் செய்யாமலிருப்பானா? சிலர் தம்முடைய ஹிருதயத்திலிருக்கும் அவகாசத்தில் நான்கு கைகள் உள்ளவரும், தாமரைமலர், சக்ரம், சங்கம், கதை ஆகிய இவைகளைத் தரிப்பவரும், ப்ராதேசமாத்ர சரீரமுள்ளவருமாக வஸிக்கும் பரம புருஷனை இடை விடாமல் தியானிக்கிறார்கள். அந்தப் புருஷன் தாமரை மலர்போன்ற நீண்ட கண்களுள்ளவர். முகமலர்ச்சி யுள்ளவர். கதம்ப (கடம்பம்) புஷ்பத்தின் தாதுகள் போல் பொன்னிறமுள்ள வஸ்திரத்தைத் தரித்தவர். மிகுந்த காந்தி பொருந்திய இரத்னங்களிழைத்த ஸ்வர்ணமயமான தோள் வளைகள், கிரிடம், குண்டலம் ஆகிய ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்டவர். அவருடைய பாதங்கள் யோகிகளுடைய மலர்ந்த ஹ்ருதய கமலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட வைகள். மார்பில் லக்ஷ்மியுள்ளவர். கௌஸ்துப ஹாரம் தரித்தவர். குறையாத காந்தியுள்ள வனமாலையால்

பிரகாசிப்பவர். மேலும், விலையுயர்ந்த அரைநாண், மோதிரம். வளை முதலிய ஆபரணங்களால் விளங்கும் திவ்ய தேஹமுள்ளவர். அவருடைய முகமானது புன்சிரிப்புள்ளது, மேலும் கறுப்புநிறமுள்ளவைகளும், காந்தியுள்ளவைகளும், பளபளப்புள்ளவவைகளுமான சுருட்டை மயிர்களால் அழகானது. கம்பீரமாகிய சிரிப்பு, பார்வை. புருவ நெரித்தல் ஆகிய இவைகளால் ஜனங்களை அனுக்கிரஹிக்கும் ஸ்வாபவமுள்ளது, இம்மாதிரியான பகவத் ஸ்வரூபத்தை மனது ஸ்வாதீனப்படுகிற வரையில் தியானிக்க வேண்டும். எப்படியெனில், மேற்காட்டிய பாதம் முதல் சிரிப்பு வரையிலுமுள்ள பகவானுடைய அவயவங்களும் சேஷ்டைகளும் ஒவ்வொன்றாகத் தியானிக்கப்பட வேண்டும். மனது அவைகளிலே பதிந்து, விஷயங்களில் செல்லாமலிருந்தபோது அதைவிட்டு வேறு அவய வத்தை த்யானிக்கவேண்டும். இப்படி ஒவ்வொரு நாளும் நித்ய கர்மங்களை முடித்துக்கொண்டு சுத்தனாகப் பரமபுருஷனுடைய பெரிதாகிய ரூபத்தை தியானஞ் செய்யவேண்டும். அவரிடத்தில் பக்தியுண்டாகும் வரையில் அவருடைய ரூபத்தைத் தியானஞ் செய்யவேண்டும். அவர் ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் மேலானவர்; ஜகத்திற்கு அதிபதி. எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாயி ருப்பவர். ஓ மஹாராஜ! ஒருவன் இப்படி சித்தம் சுத்தியானபிறகு ஸகல ஆசைகளையும் ஒழித்து இந்தச் சரீரத்தை விட வேண்டுமென்று விரும்பு வானாகில், புண்ய க்ஷேத்திரத்தில் உத்தராயணம் முதலிய காலங்களில் ஸ்திரமாயும், ஸுககரமுமான ஆஸனத்தில் உட்கார்ந்து, ப்ராணாயாமஞ் செய்து ஸுவாஸத்தை அடக்கி, வேறு விஷயங்களில் பற்றுதல் இல்லாதவனாக மனத்தால் ப்ராணனையும், இந்திரியங்

களையும் அடக்கிக்கொள்ளவேண்டும். மேலும் அந்த மனத்தை நிர்மலமாகிய புத்தியாகச் (நிச்சயரூபமானது) செய்து, அந்தப் புத்தியை அதற்கு ஸாக்ஷியாக விருக்கும் ஜீவனிடத்தில் சேர்க்க வேண்டும். அந்தச் சுத்தமாகிய ஆத்மாவை பரப்ரஹ்மத்தினிடம் லயிக்கச் செய்து சாந்தியையடைந்து கார்யத்திலிருந்து ஒழிவடைய வேண்டும். தேவர்களுக்கும் மேலான காலத்தாலும், அந்தப் பரமாத்ம ஸ்வரூபம் பாதிக்கப்படுகிறதில்லை. ஜகத்திற்கு, அதிபதிகளான தேவர்களும் அந்த ஸ்வரூபத்திற்குப் பிரபுக்களல்ல. அந்த ஆத்மாவிடத்தில் ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய குணங்களும் மாறுதலும், மஹத் தத்வம், பிரதானம் ஆகிய இவைகளும் இல்லை ஆத்மாவை விட வேறானவைகளை (இவை ஆத்மாவல்ல என்று விசாரித்து, தேகம் முதலியவைகளில் ஆத்மத்வ புத்தியை விட்டு ஒவ்வொரு க்ஷணத்திலேயும் வேறிடத்தில் பிரியம் வைக்காத தங்களுடைய ஹ்ருதயத்தில் விஷ்ணுவின் பதத்தையே பக்தர்கள் தியானஞ் செய்கிறார்கள். ஆகையால் அதுவே மேலானது என்கிறார்கள். இந்தப்பதத்தையடைந்தவனே கிருதகிருத்யன். இம்மாதிரி சாஸ்த்ர விசாரத்தில் உண்டான விசேஷ ஞானத்தால் விஷய வாஸனைகளை எரித்துப் ப்ரஹ்ம பாவத்தை அடைந்த முனியானவர் கீழ் முகமான வாயுவானது வெளியில் போகாமலிருக்கும்படி, தம்முடைய பாத மூலத்தால் (குதிகால்) ஆஸனத்தை அடைத்துக்கொண்டு சிரமம் இல்லாதவராக, தொப்புள், ஹிருதயம், மார்பு, முகவாய்க்கட்டை, புருவங்களின் மத்திய பாகம், தலை ஆகிய ஆறு ஸ்தானங்களிலும் அந்தந்த வாயுவைச் செல்லும்படி செய்யவேண்டும். பின்னும் நாபியாகிய மணிபூரகத்திலிருந்து வாயுவை ஹ்ருதயமாகிய

அநாஹதத்தில் செல்லச் செய்து அதிலிருந்து மார்பாகிய விசுத்தி ஸ்தானத்திற்குந் போகச் செய்து, சித்தத்தையடக்கிக்கொண்டு, அதை விசுத்த ஸ்தானத்தின் மேற்பாகமாகிய தாது மூலத்திற்கு மெதுவாக கொண்டு போக வேண்டும். அதிருந்து ஆக்ஞா சக்கரமாகிய புருவங்களின் மத்ய பாகத்தில் அந்த வாயுவைச் செலுத்தவேண்டும். அப்போது காதுகளையும், கண்களையும், மூக்குகளையும், முகத்தையும் மூடிக் கொண்டு வாயுவை வெளியில் விடாமல் அடக்கிக் கொண்டிருக்கவேண்டும். வேறு விஷயங்களை விரும்பக் கூடாது. இப்படி ஆக்ஞா சக்கரத்தில் ப்ராணனை அரை முஹூர்த்த காலம் நிறுத்திக்கொண்டிருந்து, பிறகு தடையற்ற ஞானமுள்ளவனாக ப்ரஹ்ம ஸ்வரூபத்தையடைந்து, ப்ரஹ்மாந்தரமாகிய தலையைப் பேதித்து வாயுவை வெளிப்படுத்தி, தேகத்தை விடவேண்டும்.

22–31. ஓ மஹாராஜ! இந்தப் ப்ரஹ்மாண்டத்தில் ப்ரஹ்மலோகம் போகிறவனானாலும் அணிமா முதலிய ஐச்வர்யங்களுள்ள தேவர்கள் வஸிக்கும் ஸ்வர்க்கம் முதலிய இடங்களுக்குச் செல்லுகிறவனானாலும் மனத்தையும், இந்திரியங்களையும் தன்னுடன் கூடவே அழைத்துக்கொண்டு போகிறான். வாயுவிற்குள் அடங்கிய லிங்க சரீரமுள்ள மஹா யோகிகள், மஹர்லோகம் முதலியவைகளிலும், ப்ரஹ்மாண்டத்திற்கு வெளியிலும் போவார்கள் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். உபாஸனை, தபஸ், அஷ்டாங்க யோகம் ஞானம் ஆகிய இவைகளை அனுஷ்டிப்பவர்கள் அர்சிராதி மார்க்கமாய்ப் போவார்கள். அந்த வழியில் போனவர்கள் மறுபடியும் திரும்புகிறதில்லை.

அப்படிப்பட்ட கதியானது யாகம் முதலியகர்மங்களால் கிடைக்கிறதில்லை. ப்ரஹ்மலோக மார்க்கத்தில் சென்றவன் முதலில் அக்னிக்கு அபிமானியான தேவதையை அடைகிறான். பிறகு ஜ்யோதிஸின் ரூபமாகிய ஸுஷும்னா நாடி வழியாய் ஒன்றிலும் ஆசைப்படாதவனாக உத்தமமான, சிம்சுமாரமென்ற ஜ்யோதி சக்கரத்தை யடைகிறான். பின்பு ஸூர்யன் முதலியவர்களுக்கு ஆசிரயமான அந்த விஷ்ணுவின் சக்கரத்தைத் தாண்டி சுத்தமான லிங்க சரீரத்துடன் தானொருவனாகப் ப்ரஹ்மத்தை அறிந்தவர்கள் வஸிக்கக்கூடியதும், எல்லோராலும் நமஸ்கரிக்கப் பட்டதுமான மஹர்லோகத்தை அடைகிறான். அந்த ஸ்தானத்தில் அநேக கால ஜீவிகளான ப்ருகு முதலியவர்கள் ஆனந்தமாக வஸிக்கிறார்கள். பிறகு அவர்கள் அந்தக் கல்பத்தின் முடிவில் ஸங்கர்ஷண பகவானுடைய முகத்திலிருந்து உண்டான அக்னியால் உலகங்கள் எரிக்கப்படுவதைப் பார்த்து, அதன் உஷ்ணத்தைச் ஸகியாமல் அந்த உலகத்திலிருந்து ஸனகர் முதலியவர்கள் வஸிக்கும், இரண்டு பரார்த்தம் வரையில் அழியாமலிருக்கக் கூடிய ப்ரஹ்ம லோகத்தை அடைகிறார்கள். அவ்விடத்தில் சோகம், ஜரை, கிழத்தனம் மரணம், துக்கம், பயம் ஆகிய இவைகள் இல்லை. ஆனாலும் அந்த உலகத்தில் இருப்பவர்கள், 'ப்ரஹ்மலோகம் சோக மோகங்களற்றது ஸ்வர்க்காதிகளுக்கு மேலானது என்று நினையாமல் கர்மஜடர்களாக, ஸம்ஸாரத்தில் கஷ்டப்படும் அக்ஞர்களைப்பற்றி வருத்தப்படுகிறார்கள். அதைத் தவிர வேறு துக்கம் அவ்விடத்திலில்லை. அந்த லோகத்தையடைந்தவன் ப்ரஹ்ம ப்ரளயத்தில் லிங்க தேகத்துடன் பூமியின் ஸ்வரூபத்தையடைந்து ஜலத்தை

அடைந்து, தாமஸியாமல், பயமில்லாதவனாகி தேஜோமயனாகி வாயுவை யடைந்து அணுபவம் முடிந்தவுடன் ஆகாச சரீரத்தைக் அடைகிறான். பின்னும் அவன் க்ராணேந்திரியத்தைக் கொண்டு வாஸனையையும், ரஸனேந்திரியத்தைக் கொண்டு ரஸத்தையும், நேத்ரத்தைக் கொண்டு உருவத்தையும் த்வகிந்திரியத்தைக் கொண்டு ஸ்பர்சத்தையும், ச்ரோத் ரேந்திரியத்தைக் கொண்டு ஆகாயத்தின் குணமாகிய சப்தத்தையும், கர்மேந்திரியங்களைக் கொண்டு அவை களின் வியாபாரங்களையும் அடக்கிக்கொள்ளுகிறான். மேலும் அவன் பூதஸூக்ஷ்மங்கள், பத்து இந்திரியங்கள் ஆகிய இவைகளுக்கு லய ஸ்தானமாயும், மனோமய மாயும்,தேவதா ரூபமாயுள்ள ஆவரணமாகிய அஹங் காரத்தை அடைந்த பிறகு அதனுடன் விஞ்ஞான தத்வத்தை அடைகிறான். பின்னும் அவன் குணங்கள் லயிக்கும் இடமான பிரதானத்தை அடைகிறான். (லயிக்கிறான்). இப்படி உபாதிகள்யாவும் லயமடைந்த பிறகு ஆனந்த ஸ்வரூபியான ஜீவன் விகாரமற்றதும், ஆனந்த ஸ்வரூபியுமான ஆத்மாவை அடைகிறான். ஓ மஹாராஜ! இம்மாதிரியான பதத்தை யடைந்தவன் மறுபடியும் திரும்புகிறதில்லை.

32–37. ஸத்யோமுக்தி, க்ரமமுக்தியென்ற இரண்டு மார்க்கங்களும் வேதங்களில் சொல்லப்பட்டவைகள். இவைகளை ஸ்ரீ பகவானாகிய வாஸுதேவர் முன்னொரு காலத்தில் ப்ரஹ்மதேவருக்கு உபதேசித்தார். நீர் இப்பொழுது அவைகளை அறிய விரும்பியபடியால் உமக்குச் சொன்னேன். ஸம்ஸாரத்தில் கஷ்டப்படும் ஜனங்கள் மோக்ஷத்தையடைவதற்கும் பல மார்க்கங்கள் இருந்தாலும் பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில்

பக்தியையுண்டு பண்ணும் மேற்காட்டிய மார்க்கமே மேலானது. அதுவே ஸுகமாய் அனுஷ்டிக்கக்கூடியது இடையூறற்றது, தவிரவும் முன்னொரு ஸமயத்தில் ப்ரஹ்மதேவர் ஒரே சித்தராக இருந்து, ஸகல வேதங்களையும் மூன்று தடவை படித்துப் பார்த்து, மேற் சொல்லிய மார்க்கமே பகவத் பக்தியைக் கொடுக்கக் கூடியது என்று நிச்சயித்தார். மேலும் பரமாத்மா ஆனவர், ஸகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாய் இருப்பதைக் கொண்டும் புத்தி முதலியவைகளைக் கொண்டும், ஸித்திக்கும் அனுமானத்தைக் கொண்டும், எல்லோராலும் பார்க்கப்படுகிறார். ஆகையால் ஓ பரீக்ஷித்து மஹாராஜனே! எந்த இடத்திலும், எக்காலத்திலும் மனிதர்கள் ஸ்ரீமந் நாராயணனையே ஸ்மரிக்க வேண்டும் அவருடைய கதையைக் கேட்க வேண்டும் திவ்ய நாமங்களை உச்சரிக்க வேண்டும், ஆகையால் ஸ்ரீ பகவானுடைய கதையாகிய அமிருதத்தைச் சுரோத்ரமாகிய பாத்திரத்தால் எவர்கள் புஜிக்கிறார்களோ, விஷய ஆசையால் கலங்கிய அவர்களுடைய சித்தமானது சுத்தமாய் விடுகிறதுமன்றி அந்தப் புண்யசாலிகள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பதத்தையும் அடைவார்கள்.

நோட்டு

ஸ்ருஷ்டித்தார். தாதாவானவர் முன்னிருந்தது போல ஸ்ருஷ்டித்தார் –ஸ்ருதி பிரளய காலத்தில் முன் கல்பத்திலுள்ள ப்ரஹ்மதேவருடன் ஸ்ருஷ்டி விஷயமான ஞானம் நஷ்டமாகி விட்டது. பிறகு ஸ்ருஷ்டி காலத்தில் இந்தக் கல்பத்திய ப்ரஹ்மதேவர் முன் அத்யாயத்தில் சொன்னபடி பகவானிடம் மனதைச்

செலுத்தி, அதனால் ஸ்ருஷ்டி ஞானத்தையடைந்தார். இப்படி அர்த்தஞ் சொல்லவேண்டும். இல்லாவிடில் முன் கல்பத்திய ப்ரஹ்மதேவரே இந்தக் கல்பத்திலுமிருந்து ஸ்ருஷ்டித்தாரென்று ஏற்படும், அப்படிச் சொல்வது ஸரியல்ல, ஒவ்வொரு கல்பத்திலும் ப்ரஹ்மதேவர் வேறு என்று கொள்வதே நியாயம். அவர்களெல்லோரும் ப்ரளயம் வந்தவுடன் ப்ரஹ்மதேவருடன் முக்தியடைகிறார்கள், ப்ரளய காலத்தில் ப்ரஹ்ம லோகத்திலிருப்பவர்கள் எல்லோரும் முத்தியை அடைகிறார்கள். ஸ்ருதிகள், தவிரவும், பகவானுடைய அளவற்ற கிருபையை அடைந்தவர்கள் மறுபடியும் பிறந்தார் களென்று சொல்வதும் உசிதமல்ல. ஆதலால் மூலத்திலிருக்கும் ஸ்மிருதி என்ற பதத்திற்கு ஸ்ருஷ்டி ஞானமென்று இவ்விடத்தில் அர்த்தங்கொள்ள வேண்டும். ஆகேஷபம் வைராஜ தாரணையால் ஸ்ருஷ்டி ஞானம் உண்டாகிற தென்றால், அந்தத் தாரணையானது அந்த ஞானத்தால் தான் உண்டாக வேண்டும், ஆதலால் அந்யோந்யாசிரய தோஷம் நேரிடுகிறது. சமாதானம் பகவானுடைய கொப்பூழில் தாமரைப் புஷ்பத்திலிருந்து ப்ரஹ்மதேவர் உண்டானார். அவருடைய தபஸினால் நாராயணன் ஸந்தோஷித்தார். அப்பொழுது ஓ சதுர்முகரே! மறுபடியும் நீர் தபஸ், ஞானம் இவைகளை யனுஷ்டிக்கவேண்டும். அவைகளால் ஆவரணம் விலகும். அப்பொழுது நீர் என்னிடத்தில் லோகங்களையும் அவைகளில் என்னையும் பார்க்கலாம் என்று பகவான் சொன்னார். பிறகு ப்ரஹ்மதேவர் ஸ்ருஷ்டிக்கப்படும் ஸகல பதார்த்தங்களையும் முன்னமே பார்த்து, அவை களைப் பகவானுடைய அவயவங்களாகப் பாவித்து அந்தத் தாரணையால் ஸ்ருஷ்டி ஞானம்

ஸாமர்த்தியம் இவைகளையடைந்தார், வீர. நிச்சயமாகிய –வியவஸாய புத்தி என்று மூலத்திலிருப்பதால் ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்று முயற்சி செய்தவர், விஜயத், வேதங்கள் ஸகல வேதம் முதலிய சப்தங்களுக்கு இந்தப் பரமாத்மாவே அர்த்தமாயிருக்கிறார். பகவான் உடைய இச்சையால் உண்டான ஸம்ஸாரத்தில் அலைந்து கொண்டு ஒன்றையும் அறியாதவனாகி, கர்ம வாஸனையினால் பலவகையான ஜன்மங்களை யடைந்து கஷ்டப்படும் ஜீவன் இந்திரன் முதலிய சப்தங்களுக்கு அந்த அந்தத் தேவதைகளை அர்த்தம் என்று நினைக்கிறான் அது ஸரியல்ல. அந்தத் தேவர்களிடத்தில் குறைவற்ற ஐசுவர்யமாவது, புருஷார்த்தமாவது, இல்லை, மேலும் அவர்களை உபாஸிப்பதால் புருஷார்த்தமொன்றும் கிடைக்கிறது இல்லை, ஆகையால் ஸ்ரீமந் நாராயணனையே ஸேவிக்கவேண்டும், ஸ்மரிக்கவேண்டும், அவரே ஸகல வேதங்களுக்கும் அர்த்தம். விஜயத். விவேகமுள்ளவன் ஸகல நாமங்களும் ஸ்ரீமந் நாராயணனையே சொல்லு கின்றன என்பதை எப்பொழுதும் மறவாமலிருப்பவன், தாய் தந்தை முதலிய பந்துக்களை விட மிகவும் ஜனங்களுக்கு வேதங்கள் அனுகூலத்தையே உபதேசிப் பவைகள் ஆகையால் ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களுள்ள ஜனங்களுடைய புத்திக்கு அநுகுணமாக ஸ்வர்க்கம் முதலிய ஸ்திரமில்லாத பலத்தைக் கொடுக்கும் கர்மங்களையும், ஸாச்வதமான மோக்ஷ ஸாதனங்களையும், அவ்வேதங்கள் உபதேசிக் கின்றன. அக்ஞர்கள் ஸ்வர்க்கம் முதலியவைகளையே அடையவிரும்பி அதன் ஸ்தானங்களை அனுஷ்டிக் கிறார்கள், ஆகையால் வேதங்கள் அற்பமுள்ள கர்மங்களை உபதேசித்து ஜனங்களை ஏமாற்றிவிட்டன.

என்று சொல்வது உசிதமல்ல வீர. கிடைக்கிறது இல்லை கர்மபலம் தாழ்ந்ததென்று காட்டப்பட்டது. கர்மங்களில் நம்மால் அனுபவிக்கக்கூடியது, நம் முடைய முயற்சில்லாமலேயே அவசியம் ஸித்திக்கும் என்று அதற்காகச் சிரமப்படமாட்டான்...சந்த. மமதை நான் ஈச்வரன். நான் போகமுள்ளவன், நான் ஸித்தன், நான் பலமுள்ளவன், ஸுகமுள்ளவன், பணக்காரன், மேலான குலத்தில் பிறந்தவன், ஆனதால் எனக்குச் சமானமானவன் லோகத்திலொருவனும் இல்லை என்று கர்வங்கொண்டார்கள், ப்ரியர்; ஜனங்கள் பணம், களத்திரம், புத்ரன் ஆகிய இவை களை ஆத்மாவின்' ஸௌக்கியத்திற்காவே ஸம்பாதிக் கிறார்கள். ஆத்மாவிற்கு ஆக்மாவாக இருப்பவர் பிரியரென்பதில் என்ன ஆக்ஷேபம் வீர. ஸத்யஸ்வரூபி புருஷார்த்த ஸ்வரூபி, வீர. ப்ராதேச கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் (தர்ஜனிக்கு) இடையிலுள்ள நீளம் ஸ்ரீத. ஜகத்தின் அளவு எவ்வளவோ அந்த அளவுள்ளவர் சந்த் மூவுலகமும் பகவானுக்குச் சரீரமானாலும் கட்டைவிரல் ப்ரமாணம் உள்ள ஹ்ருதய கமலத்தில் உபாஸிப்பதற்காக அடங்கிய சரீரம் வீர. உட்கார்ந்து இது மரணம் அடையச் சித்தமாக விருப்பவன் செய்யக்கூடிய கார்யம் இன்னதென்று சொல்லப்பட்டது. இனியும் அவனால் செய்யப்படவேண்டிய கார்யம் சொல்லப்படுகிறது பூமியின் ரூபத்தை மிகுந்த புண்யத்தால் ப்ரஹ்மம லோகஞ் சென்றவர்கள் மறு கல்பத்தில் அவர்கள் உடைய புண்யத்திற்குத் தக்கபடி அதிகாரிகள் தேவதைகளாக ஆகிறார்கள், ஹிரண்யகர்ப்பர் முதலிய வர்களையும் உபாஸித்துப் ப்ரஹ்மலோகஞ் சேர்ந்த வர்கள் ப்ரஹ்மாண்டத்தைப் பேதித்து தமதிஷ்டப்படி

விஷ்ணுபதத்தை அடைகிறார்கள். ஆனதால் பகவத் பக்தர்கள் ப்ரஹ்மாண்டத்தை பேதித்துச் செல்லும் வகை காட்டப்படுகிறது. ஈஸ்வராதிஷ்டிதமான ப்ரகிருதியிலிருந்து மஹத்தத்வம் உண்டாகிறது. அதன் அம்சம் அஹங்காரமாகும். அதனுடைய அம்சம் ஆகாயமாகும். அதனுடைய அம்சம் வாயுவாகும் (ஸ்பர்சதன்மாத்திரையால்) அதனுடைய அம்சம் (ரூபதன்மாத்திரையால்) தேஜஸ்ஸாகும். அதன் அம்சம் (ரஸதன்மாத்திரையால்) ப்ருதிவியாகும். அவைகள் யாவும் சேர்ந்தது பதினான்கு லோகங்கள் ஆகிய விராட்புருஷ சரீரமாம். அது ஐம்பது கோடி விஸ்தாரமுள்ளது. அதற்குப் ப்ருதிவியே அண்டகடாஹ மெனப்படுகிறது. அதன் முதலாவது ஆவரணமானது கோடி யோசன விஸ்தாரமுள்ளது. ஜலம் முதலிய ஒவ்வொரு ஆவரணங்களும் ஒன்றைவிட மற்றொன்று பத்து மடங்கு பெரியவைகளாம். அவைகளில் எட்டாவதான ப்ரகிருதியின் ஆவரணம் மிகவும் பெரிதானது. அர்ச்சிராதி அக்னி ஜ்யோதிஸ், பகல் சுக்லபக்ஷம், ஆறு மாஸ்யங்கள், உத்தராயணம் ஆகிய இவைகளின் அபிமான தேவதைகளடங்கிய மார்க்கத்தில் சென்றவர்கள் ப்ரஹ்மத்தையடைகிறார்கள். ஸத்யோமுக்தி எப்பொழுது இவனுடைய ஹ்ருதயத்திலிருக்கும் கர்மங்கள் யாவும் நாசமடைகின்றனவோ, பிறகு மனிதன் மரண தர்மமில்லாதவனாக ஆகிவிடுகிறான் ஸ்ரீத, க்ரமமுக்தி முன்காட்டிய அர்ச்சிராதி மார்க்கத்தை அடைந்தவர் களுக்கிக் கிடைப்பது –வீர. மூலத்தில் இரண்டு மார்க்கம் என்றிருப்பதால் தூமாதி மார்க்கமும், அச்சிராதி மார்க்கமும் என்று தாத்பர்யம். சந்த.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்– 3

பகவத் குணங்களின் மேன்மை

ஓ மஹாராஜ! வித்வான்களாகிய மனிதர்கள் சாகுந்தருணத்தில் செய்யவேண்டிய கார்யம் பகவான் உடைய கதையைக் கேட்பது முதலியவைகளே என்று சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. நீர் கேட்ட விஷயம் இதுவே. ப்ரம்ஹதேஜஸை அடைய விரும்பிய அவன் வேதங்களுக்கு அதிபதியாகிய ப்ரம்ஹ தேவரையும், இந்திரியங்களின் வல்மையை விரும்பிய அவன் இந்திரனையும், புத்ர ஸம்பத்தை விரும்பிய அவன் தக்ஷர் முதலிய ப்ரஜாபதிகளையும் பக்ஷ்ய போஜ்யங்களை விரும்பியவன் அதிதி தேவியையும், ஸ்வர்க்கத்தை விரும்பியவன் விச்வேதேவர்களையும், ஜனங்களை வசப்படுத்த விரும்பியவன் ஸாத்யர் களையும், ஸம்பத்தை விரும்பியவன், அக்னி பகவா னையும், பணத்தை விரும்பியவன் வீர்யத்தைக் கொடுப்பவர்களாகிய ருத்ரர்களையும், தீர்க்கமான ஆயுஸ்ஸை விரும்பியவள் அசுவினீ தேவர்களையும், சரீர புஷ்டியை விரும்பியவன் பூதேவியையும், பிரதிஷ்டியை (ஸ்தானத்தை விட்டு நழுவாமலிருப்பது) விரும்பிய புருஷன் உலகத்திற்குத் தாயார்களான ஆகாசம், பூமி இவைகளையும்; அழகை விரும்பிய அவன் கந்தர்வர்களையும், ஸ்திரீயை விரும்பியவன் ஊர்வசி என்கிற அப்ஸரஸ்ஸையும், எல்லோருக்கும் யஜமானனாயிருக்க வேண்டுமென்று விரும்பியவன் யக்ஞ ரூபமான மஹாவிஷ்ணுவையும், மோக்ஷத்தை விரும்பியவன் வருணனையும், வித்தையை விரும்பிய அவன் பரமசிவனையும், தம்பதிகள் ஒருவருக்கொருவர்

பிரியாமலிருக்க வேண்டியதை விரும்பியவன் பதிவிரதையான உமாதேவியையும், தர்மத்தை விரும்பிய அவன் உத்தம ச்லோகராகிய மஹாவிஷ்ணுவையும், ஸந்தானத்தை (வம்சத்தின் தொடர்ச்சி) விரும்பிய அவன் பிதுருக் களையும்; உபத்திரவ நிவர்த்தியை விரும்பியவன் யக்ஷர்களையும், பலத்தை விரும்பிய அவன் மருத்துக்களையும், இராஜியத்தை விரும்பியவன் மனுக்களாகிய தேவர்களையும், சத்துருவைக் கொல்ல விரும்பியவன் நிருதியையும், போகத்தை விரும்பியவன் ஸோமனையும், வைராக்யத்தை விரும்பியவன் ப்ரகிருதிக்கு மேற்பட்ட பரமபுருஷனையும் பூஜிக்க வேண்டும். இப்படிப் பல தேவர்களைப் பூஜிப்பவர் களுக்கு பகவத் பக்தர்களுடைய ஸங்கத்தால் பகவான் இடத்தில் ஸ்திரமான பக்தி உண்டாகிறது. இதுவே மேலான புருஷார்த்தம், பகவானுடைய கதையானது ஆசை, துவேஷம் ஆகிய இவைகளின் ஸம்பந்தமற்ற ஞானத்தை உண்டு பண்ணுகிறது. சித்தத்தைச் சுத்தி செய்கிறது. இவ்வுலகத்திலும், மேலுலகத்திலும் விஷயத்தில் வைராக்கியத்தையுண்டுபண்ணுகிறது. மோக்ஷ மார்க்கமாகிய பக்தி யோகத்தையும் உண்டு பண்ணுகிறது. ஆகையால் குரு முகமாய்ச் செய்த ச்ரவணம் முதலியவைகளால் ஸுகமடைந்த புருஷன் எவன் தான் பகவானுடைய கதையில் ஆசைப்படமாட்டான்? என்று பரிக்ஷித் மகா ராஜனுக்குச் சுகர் சொன்னாரென்று ஸூதர் சொன்னார்.

13–25 அதனைக் கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி, ஓ வித்வானாகிய ஸூதரே! சுகருடைய வார்த்தையைக் கேட்டு, பரீக்ஷித் மஹாராஜன் வியாஸ

புத்திரராயும், மிக்க ஞானியுமான அவரை நோக்கி, பின்னும் எதனைக் கேட்டார்? பகவத் பக்தர்களான ஸாதுக்களுடைய ஸபையில் பகவத் கதையே நடந்து கொண்டிருக்கும். அதனால் ஈசுவரனுடைய கதையைக் கேட்பதில் மிகுந்த ஆசையுண்டாகும். ஆனதுபற்றி அதனைக் கேட்கவேண்டுமென்ற விருப்பமுள்ள எங்களுக்குச் சொல்லவேண்டும். மேலும், மஹாரதரும், பாண்டு குலத்தில் பிறந்தவரும், பாகவதோத்தருமாகிய அந்த அரசன் பால்ய வயதில் விளையாட்டு சாமான்களைக் கொண்டு கிருஷ்ணனையே பூஜித்தார். அதுவே அவருக்கு விளையாட்டாயிற்று. அவருக்கு பாகவதத்தை உபதேசஞ் செய்த வியாஸ புத்திரராகிய சுக மஹர்ஷியானவர் கிருஷ்ணனிடத்திலே விசேஷ பக்தியுள்ளவர், ஆனதால் அவ்விருவர்களும் மஹா ஸாதுக்கள். ஸாதுக்களுடைய கூட்டத்தில் திவ்ய குணங்களால் அலங்கரிக்கப்பட்ட பகவத் கதை நடக்கும், உத்தமச்லோகராகிய பகவானுடைய கதையைச் சொல்லிக் கொண்டு கழித்த காலமே மனிதனுடைய ஆயுஸ்ஸில் மேலானது. லௌகிக வியவஹாரங்களால் கழிக்கப்படும் காலமானது வீணானதே. ஒவ்வொரு நாளும் உதயமாகிறவரும், அஸ்தமனத்தை அடைகிற வருமான அந்த ஸூர்யன் வீணாய்க் காலம் கழிப்ப வருடைய ஆயுஸ்ஸை அபகரிக்கிறார். அப்போர்ப் பட்டவர்களுடைய ஆயுஸுக்குப் பிழைத்திருப்பதைத் தவிர வேறு பிரயோசனமில்லை? பசுக்கள் ஆகாரத்தைப் புஜிக்கவில்லையா? மைதுனம் செய்யவில்லையா? ஆகையால் மேற்காட்டிய வீண் காலம் கழிப்பவன் இவைகள் போன்றவனேயாம். பின்னும் எவனுடைய காதில் பகவானுடைய சரிதம் ஒருபொழுதும் ப்ரவேசிக்கவில்லையோ, அவன்

நாயிக்குச் சமமானவன், கிராமத்திலிருக்கும் பன்றிக்கு ஒப்பானவன். சுமைகளைச் சுமக்கும் ஒட்டகம் போன்றவன், (காலால் உதைக்கும் ஸ்திரீயைத் தள்ள முடியாமல் மிக்க காமியாயிருப்பதால்) கழுதை போன்றவன், எந்த மனுஷ்யனுடைய இரு காதுகளும் பகவானுடைய குணங்களைக் கேட்கவில்லையோ, அவைகள் ஸர்ப்பம் முதலியவைகள் ப்ரவேசிக்கக் கூடிய பிலங்களேயாகும். எவன் நாக்கினால் பகவத் கதையைக் கானம் பண்ணவில்லையோ, அவனுடைய சப்தம் யாவும் தவளையின் சப்தம் போன்றவைகளே, எவனுடைய தலையானது முகுந்தனை நமஸ்கரிக்க வில்லையோ, அது பட்டுக்களால் செய்யப்பட்ட தலைப்பாகை, இரத்தின கிரீடம் இவைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தாலும் பெரிய சுமையேயாம். எவனுடைய கைகள் பகவானைப் பூஜிக்கவில்லையோ, அவைகள் தங்க வளையல்களால் அலங்கரிக்கப் பட்டவைகளானாலும் பிணத்தின் கைகளேயாகும். எவனுடைய கண்களிரண்டும் பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தைத் தரிசிக்கவில்லையோ, அவைகள் மயில் தோகையிலிருக்கும் கண்களேயாம். எந்தப் புருஷனுடைய பாதங்களிரண்டும் பகவானுடைய விசேஷ ஸான்நித்யமுள்ள புண்ய க்ஷேத்திரங்களுக்குப் போகவில்லையோ, அவைகள் மரத்தின் வேர்களுக்கு ஒப்பானவைகள். எவன் பகவத் பக்தர்களுடைய பாதங்களில் ஒட்டிய தூளியைத் தரிசிக்கவில்லையோ, எவன் பகவானுடைய பாதத்திலிருக்கும் துளஸியின் வாஸனையை மோந்து அதைச் ச்வாகிக்கவில்லையோ, அவன் பிழைத்திருக்கும் பிணமேயாம். பகவானுடைய கதையைக் கேட்டு எவனுக்கு முகத்தில் ஸந்தோஷமும், கண்களில் ஆனந்தாஷ்டமும், தேகத்தில்

மயிர்க்கூச்சலும் உண்டாகவில்லையோ, அவனுடைய ஹ்ருதயம் கருங்கல்லேயாகும். இது மிகவும் ஆச்சரியம் ஓ ஸூதரே! மனஸுக்குப் பிரியமாக நீர் பேசுகிறீர். ஆகையால் பாகவதர்களுக்குள் சிறந்தவரும், ஆத்ம வித்தையை நன்றாயறிந்தவரும் வியாச மஹாமுனியின் புத்திரருமான சுக மஹரிஷி பரீக்ஷித் மஹாராஜனை நோக்கி எதனைச் சொன்னாரோ, அதனைச் சொல்லவேண்டும் என்று கேட்டார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–4

பரீக்ஷித் ஜகத் ஸ்ருஷ்டியைப் பற்றிக் கேட்டது.

1–10. இம்மாதிரியான சௌனகருடைய வார்த்தையைக் கேட்ட ஸூதர் சௌனகரை நோக்கி பின்வருமாறு சொன்னார். உத்தரையின் புத்திரன் பரீக்ஷித்து மஹாராஜன் ஆத்ம ஸ்வரூபத்தின் உண்மையைத் தெரிவிக்கும் சுகருடைய வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ கிருஷ்ண பகவானையே உபாஸிக்க வேண்டும். அவரே பரமாத்மா என்று நிச்சயித்தார். மேலும் தேகம், பார்யை, புத்திரன், வீடு, யானை முதலியவை, திரவ்யம், பந்துக்கள் பூர்ணமாகிய இராஜ்யம் ஆகிய இவைகளில் வெகு நாளாக ஏற்பட்டிருந்த அபிமானத்தை விட்டுவிட்டார். நீங்கள் என்னைக் கேட்டதுபோல அவ்வரசனும் இந்த விஷயத்தைப் பற்றி ஸ்ரீ கிருஷ்ணனுடைய மாஹாத் மியத்தைக் கேட்பதில் மிக்க சிரத்தையுள்ளவராகப் பரமாத்ம ஸ்வரூபத்தை அறியவேண்டித் தாம் சீக்கிரத்தில் மரணமடையப் போகிறோமென்ற நிச்சயம் உள்ளவராகத் தர்மம், அர்த்தம், காமம், ஆகிய இவை களில் ஆசையில்லாதவராய், பகவானாகிய வாஸு தேவரிடத்தில் மிகுந்த பக்தியுடன் சுகரை நோக்கி, ஓ பாபமற்றவரே! ப்ராஹ்மணோத்தம! எல்லாவற்றையும் அறிந்தவரான உம்மால் சொல்லப்பட்ட வார்த்தை ஆத்ம ஞானத்தை உண்டுபண்ணக்கூடியதாயிருக்கிறது. நீர் மஹாவிஷ்ணுவின் கதைகளைச் சொல்லும் பொழுது என்னுடைய அஞ்ஞானம் விலகுகிறது. ஆனாலும் பகவான் தம்முடையமாயையால் பூமியில் அவதரித்துப்ரஹ்மா, பரமசிவன் முதலிய தேவர்களாலும்

அறியக்கூடாத இந்த ஜகத்தை அந்தப் பரமபுருஷன் எந்தச் சக்தியைக் கொண்டு உண்டு பண்ணுகிறார்? பின்னும் அதை எப்படிக் காப்பாற்றுகிறார்? மேலும், அதைப் ப்ரளய காலத்தில் எப்படி ஸம்ஹரிக்கிறார்? அவருடைய சக்தியானது அளவற்றது. பின்னும் அந்தப் புருஷன் இராமகிருஷ்ணாதி அவதாரங்களைச் செய்து விளையாடுகிறதுமல்லாமல் ப்ரஹ்மா முதலிய வர்களின் ரூபியாயுமிருந்து பலவகையான காரியங் களைச் செய்கிறார். அவருடைய சரிதம் மிக்க ஆச்சரியகரமானது. கவிகளாலும் அறிய முடியாதது, ஒருவனாகிய அந்தப் புருஷன் ஒரே காலத்தில் ப்ரக்ருதியின் குணங்களைக் கிரஹிக்கிறாரா? அல்லது ப்ரஹ்மா, ருத்ரன் முதலியவர்களின் ரூபமாயிருந்து பலவகையான லீலைகளைச் செய்து, கிரமமாக மேற்கூட்டிய ப்ரக்ருதியின் குணங்களையங்கீகரிக்கிறாரா? நீர் வேதங்களின் அர்த்தத்தையும், பரப்ரஹ்ம ஸ்வரூபத்தையும் நன்றாக அறிந்தவர். ஆகையால் இந்த ஸம்சயத்தைப் போக்கவேண்டும் என்று கேட்டார்.

11–26. இம்மாதிரியான அரசனுடைய வார்த்தையைக் கேட்ட சுகர் இந்திரியங்களுக்கு அதிபதியாகிய மஹாவிஷ்ணுவை ஸ்மரித்து, பிரத்யுத் தரஞ் செல்ல ஆரம்பித்துப் பரமாத்வை நமஸ்கரித் தார். எப்படியெனில் பரமபுருஷனை நமஸ்கரிக் கிறேன். அவர் அளவற்ற சக்தியுள்ளவர், இரஜோ குணத்தைக்கொண்டு லோகத்தை ஸ்ருஷ்டிப்பவர். ஸத்வ குணத்தைக்கொண்டு ஜகத்தைக் காப்பாற்றுகிறவர். பின்னும் அதைத் தமோ குணத்தைக்கொண்டு ஸம்ஹரிப்பவர். ஸகல பிராணிகளுக்கும் அந்தர்யாமியா

யிருப்பவர். அவருடைய ஸ்வரூபம் அறியமுடியாதது. மேலும், தர்ம சிந்தையுள்ள ஸாதுக்களுக்கு நேரிடும் துக்கத்தைப் போக்கடிக்கக் கூடியவர். துஷ்டர்களைச் சிக்ஷிப்பவர். ஸகல தேவஸ்வரூபியாயிருந்து பலனை கொடுப்பவர். பரமஹம்ஸர்கள் சுத்தமான சித்தத்தால் எதனை அடிக்கடி தேடுகிறார்களோ, அந்த ஆத்ம ஸ்வரூபத்தைப் ப்ரகாசிக்கச் செய்பவர். அப்படிப்பட்ட பகவானுக்கு அடிக்கடி நமஸ்காரஞ் செய்கிறேன். மேலும் அவர் பக்தர்களை ஸம்ரக்ஷிப்பவர். பக்தி இல்லாதவர்களுக்கு வெகு தூரத்திலிருப்பவர் (அறிய முடியாதவர்) அவருடைய ஐசுவரியத்திற்கு ஸமமான அல்லது மேலான ஐசுவரியம் ஒருவருக்குமில்லை. அந்த ஐசுவரியத்தால் ஸ்வரூபமாகிய பரப்ரஹ்மத் தினிடமே ஆனந்தப்படுகிறவர். அவரை நமஸ்கரிக்கிறேன். அந்தப்பரமபுருஷனுடைய திவ்ய நாமங்களை உச்சரிப் பதாலும், பூஜிப்பதாலும், அவருடைய கதையைக் கேட்பதாலும் ஸகல பாபங்களும் நாசமடைகின்றன. ஆகையால் அந்தத் திவ்ய மங்கள கீர்த்தியுள்ள பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். விவேகிகள் பகவானுடைய பாதங்களை உபாஸித்து இவ்வுலகத் திலும் மேலுலகத்திலுமுள்ள ஆசையை ஒழித்துச் சிரமமின்றி, ப்ரஹ்மாத்ம பாவத்தை அடைகிறார்கள். அந்தப் பகவானை நமஸ்கரிக்கிறேன். தபஸ்விகளாக ஆனாலும், தானத்தால் புண்யத்தை ஸம்பாதித்தவர் களானாலும், கீர்த்தியுள்ளவர்களானாலும் அவை களைப் பகவானிடத்தில் அர்ப்பணம் செய்யாவிடில் க்ஷேமத்தை அடைகிறதில்லை. ஆனதுபற்றி, அந்தப் புருஷனுக்கு அடிக்கடி நமஸ்காரம் செய்கிறேன். தவிரவும், கிராதர்கள் (மிருகம் முதலியவைகளை ஹிம்ஸிக்கிறவர்கள்), ஹூணர்கள் (வெண்நிறமாய்

இருப்பார்கள்) தெலுங்கு தேசத்தில் வசிக்கும் தாழ்ந்த ஜாதியான ஆந்திரர்கள், புளிந்தர்கள் (மிகுந்த ஹிம்ஸையில் பிரியமுள்ளவர்களான வேடர்கள்). சண்டாளர்கள், வலையர்கள், கழுகின் மாம்ஸத்தை புஜிக்கும் ஹீன ஜாதிகள், மிலேச்சர்கள், ஆயுதம் முதலியவைகளைச் சாணை பிடிப்பவர்கள் முதலிய பாபிஷ்டர்களும் பகவத் பக்தர்களை ஆச்ரயித்து சுத்தி யடைகிறார்கள். அந்த ப்ரபுவுக்கு நமஸ்காரம். மேலும் அவர் மனோதைரியமுள்ளவர்களால் ஆத்மாவென்று உபாஸிக்கக்கூடியவர், எல்லாவற்றிற்கும் ஈசுவரன்; வேத ஸ்வரூபீ. தபஸின் ரூபமாயிருப்பவர் குற்றமற்ற வர்களான ப்ரஹ்மா, பரமசிவன் முதலிய தேவர்களால் ஊகிக்கக்கூடிய திவ்ய சரீரமுள்ளவர். எல்லோராலும் உபாஸிக்கக்கூடிய அந்தப் பரமாத்மா என்னிடத்தில் தயவு செய்யட்டும். பின்னும் அவர் லக்ஷ்மீபதி: ஸகல யாகங்களுக்கு பலத்தைக் கொடுக்கக்கூடியவர்; ஸகல பிரஜைகளையும் ஸ்ருஷ்டிப்பவர், ஸகல லோகத்துக்கும் பிரபு கர்ம பூமியிலிருக்கும் கர்மிகளுக்கு ஸகல புருஷார்த்தத்தையும் கொடுப்பவர் அந்தகர்களுக்கும், வ்ருஷ்ணிகளுக்கும் ஸாத்வதர்களுக்கும் பெரியோர் களுக்கும் ப்ரபுவாயிருப்பதோடு அவர்களால் அடையக் கூடியவராயுமிருக்கிறார். எல்லாவற்றையும் காப்பாற்றும் அந்தக் கிருஷ்ண பகவான் என்னிடத்தில் தயவு செய்யட்டும். கவிகள் அவருடைய பாதாரவிந்தத்தை தியானஞ் செய்து அதனால் சித்தசுத்தியை அடைந்து, ஆத்ம ஸ்வரூபத்தைத் தங்களுடைய புத்திக்குத் தக்கபடி தெரிந்துகொள்கிறார்கள். ஞானத்தைக் கொடுக்கும் அந்த முகுந்தன் என்னிடத்தில் ஸந்தோஷம் அடையட்டும். கல்பத்தின் ஆதியில் ப்ரஹ்மதேவருக்கு ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும் சக்தியை (பூர்வ ஞாபகத்தை)

உண்டு பண்ணுவதற்காகப் பகவானால் தூண்டப்பட்டு. அவருடைய முகத்திலிருந்து ஸரஸ்வதியுண்டானாள். மஹரிஷிகளுக்கும் சிரேஷ்டராகிய அந்தப் பரமாத்மா என்னிடத்தில் கருணை செய்யட்டும். மேலும் அவர் மஹாபூதங்களைக் கொண்டு ஸரீரங்களை ஸ்ருஷ்டித்து அவைகளில் அந்தர்யாமியாய்ப் புருஷனென்ற டெயர் அடைந்து, பதினாறு கலாரூபியாயிருந்து அவைகளின் குணங்களைப் ப்ரகாசிக்கச் செய்கிறார். அந்தப் ப்ரபு என்னுடை வார்த்தைகளை ச்ருங்காரம் முதலிய ரஸங்கள் நிறைந்தனவாகவும். கேட்பவர்களுக்கு ஸந்தோஷத்தை யுண்டு பண்ணக் கூடியவைகளாகவும் செய்யட்டும், வேத வ்யாஸ ரூபியாயும், ப்ரஹ்ம ரூபியாயும், பக்தர்களுக்கு ஞானமாகிய மதுவைக் கொடுத்தவருமான அந்தப் பகவானை நமஸ்கரிக் கிறேன். 'ஓ மஹாராஜ! ப்ரஹ்மதேவர் தமக்கு மஹாவிஷ்ணு உபதேசித்தபடி நாரதருக்கு இதே விஷயத்தை உபதேசித்தார். அதை உமக்குச் சொல்லுகிறேன்' என்றார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–5

ஜகத்ஸ்ருஷ்டி

1–8 ஓ மஹாராஜ! அது எப்படியெனில், நாரதர் ப்ரம்ஹதேவரை நோக்கி, ஓ தேவர்களுக்கும் தேவரே; ஸகல பிராணிகளையும் ஸ்ருஷ்டிப்பவரே ஸகல பிராணிகளுக்கும் முற்பட்டவரே உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். ஆத்ம ஸ்வரூபத்தின் உண்மையைக் காட்டும் ஞானமானது எதனாலுண்டாகுமோ அதனை உபதேசிக்க வேண்டும். ஓ ப்ரபுவே! இந்த ஜகத்தானது எவரால் பிரகாசிக்கிறதோ எவரை ஆசிரயித்திருக் கிறதோ, எவரால் ஸிருஷ்டிக்கப்பட்டதோ, எவரிடத்தில் லயிக்கிறதோ, எவருக்கு ஸ்வாதீனமாக இருக்கிறதோ, எவருடைய உருவமாகவுமிருக்கிறதோ, எது ஸத்யம் ஆனதோ அதை உண்மையாகச் சொல்ல வேண்டும். நீர் உண்டானவைகளுக்கும், உண்டாகின்றவை களுக்கும், உண்டாகப் போகின்றவைகளுக்கும் அதிபதி. இந்த ஜகத்தைக் கையிலிருக்கும் நெல்லிக்கனியைப் போல ஞானத்தால் அறிந்திருக்கிறீர். ஆகையால் எல்லாம் உம்மால் அறியப்பட்டவைகளே. நீர் எவரிடமிருந்து ஞானத்தை அப்யஸித்தீர்? உமக்கு ஆதாரமாயிருப்பது யாது? நீர் யாருக்கு ஸ்வாதீனப் பட்டவர்? எவருடைய ஸ்வரூபியாக இருக்கிறீர்? ஒருவராயிருந்து பஞ்ச பூதங்களைக் கொண்டு ஸங்கல்பத்தாலே ஸகல பிராணிகளையும் ஸ்ருஷ்டிக் கிறீர். மேலும் பட்டுப்பூச்சி பட்டை உண்டு பண்ணு வதுபோல ஸ்ருஷ்டிக்கப்பட்ட ப்ராணிகளுக்குப் பிறரால் உபத்திரவம் உண்டாகாமல் தம்மிடத்தில் வைத்து

ச்ரமமில்லாமல் தம்முடைய சக்தியாகிய ப்ரகிருதியைக் கொண்டு நீர் காப்பாற்றுகிறீர். ஓ பிரபுவே; இவ் வுலகத்தில் உயர்ந்தவைகளும் தாழ்ந்தவைகளும், மத்ய நிலைமையிலுள்ளவைகளும், மனிதன் முதலிய இரண்டு கால் ஜந்துக்களும் வெண்மை முதலிய குணங்களால் ஏற்படக்கூடியவைகளும், ஸ்தூலங்களும் சூக்ஷ்மங்களும் உம்மிடத்திலிருந்தே உண்டாகின்றன என்று நினைக்கிறேன். இப்படி உமக்குப் பிரபஞ்சம் சரீரமாயிருப்பதால் நீர் எல்லோரிலும் மேலானவர். உமக்குத் தாழ்ந்தவர்களான மற்றவர்கள் உம்மை உத்தேசித்துத் தபஸ் செய்கிறார்கள். அவர்களுக்கு நீர் பலத்தைக் கொடுக்கிறீர். அப்போர்பட்ட நீர் கடும் தவம் செய்ததால் எனக்கு ஸந்தேஹமும் துக்கமும் உண்டாகின்றன. ஆகையால் எல்லாவற்றையும் அறிந்தவரே எல்லாவற்றிற்கும் அதிபதியே என்னால் கேட்கப்பட்ட விஷயங்களை எனக்குத் தெரியும்படிச் சொல்லவேண்டும்' என்று வேண்டிக் கொண்டார்.

9–29 அதனைக் கேட்ட ப்ரஹ்மதேவர் நாரதரை நோக்கி ஓ குழந்தாய்! நீ ஸந்தேகப்பட்டுக் கேட்ட விஷயம் மிகவும் மேலானது. பகவானுடைய மஹிமையைச் சொல்லும்படி என்னை நீ தூண்டின படியால் என்னிடத்தில் உனக்குக் கருணையிருப்பதாக தெரியவருகிறது. ஆனால் என்னை ஸகல ஜகத்திற்கும் ஈசுவரனென்று நீ சொன்னது புத்தி பூர்வகமாய் சொல்லும் பொய்யல்ல. என்னைக் காட்டிலும் பரமாத்மா மேற்பட்டவரென்று தெரிந்துகொள்ளாததால் இவ்வளவு மஹிமை எனக்கு இருப்பதாகச் சொல்லு கிறாய். இந்த ஜகத்தானது பரமபுருஷனுடைய தேஜஸினால் ப்ரகாசிக்கிறதேயொழிய என்னால்

ப்ரகாசிக்கிறதென்பதில்லை. ஆனால் காரண ரூபமாய் அவரிடம் அவ்யக்தமாயிருந்த ஜகத்தை நான் ஸ்ருஷ்டியால் வெளிப்படுத்துகிறேன். ஸூர்யனும், அக்னியும், சந்திரனும், அசுவினி முதலிய நக்ஷத்ரங் களும், அந்தப் பரமாத்மனுடைய தேஜஸினாலேயே பிரகாசிக்கின்றன. அந்தப் பகவானாகிய வாஸு தேவருக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். அவருடைய மாயை ஜயிக்க முடியாதது. அதனால் தான் என்னையே ஜகத் காரணனென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். அந்த மாயையும் எவரை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ள முடியாமல் எவருடைய முன்பாக நிற்பதற்கும் வெட்கப்படுகிறதோ, அவரே எல்லாவற்றிற்கும் காரணம். அந்த மாயையின் மஹிமையால் புத்திமோஹத்தை யடைந்த ஜனங்கள், நான், என்னுடையது, என்னும் அபிமானத்தை அடைகிறார்கள். மேலும் மஹா பூதங்கள், புண்ய பாபங்கள், காலம், ஸ்வபாவம், ஜீவன் ஆகிய இவைகளெல்லாம் உண்மையில் ஸ்ரீ வாஸுதேவரூபமே தவிர வேறானவையல்ல. (காரியங்கள்யாவும் காரண ரூபமென்று கருத்து.) எல்லா வேதங்களும் ஸ்ரீமந் நாராயணனையே வர்ணிக்கின்றன. ஸகல தேவர்களும் அவருடைய சரீரத்திலிருந்து உண்டானவர்கள். ஸ்வர்க்கம் முதலிய லோகங்களுக்கும் அவரே அதிபதியாக இருக்கிறார். ராஜஸூயம், அச்வமேதம், வாய்பேய்ம் முதலிய ஸகல யாகங்களாலும் அந்த ஸ்ரீ நாராயணனே ஆராதிக் கப்படுகிறார். ப்ராணாயாமம் முதலிய யோகங்களும் அவற்றாலேற்படும் தபஸும் (மனஸ் ஒருவழையாயிருப்பது), அதனால் கிடைக்கும் ஞானம், அதனால் ஏற்படும் பயனும் ஸ்ரீ நாராயணன் இடமிருந்தே கிடைக்கின்றன. அவர் எல்லாவற்றிற்கும்

ஸாஷியாயிருப்பவர். கூடஸ்தர். ஸகல பிராணிகள் உடைய ஸ்வரூபமாயுமிருக்கிறார். எல்லாவற்றிற்க்கும் ஈசுவரன். நான் அவரால் உண்டுபண்ணப்பட்டவன். அவருடைய கடாக்ஷ விசேஷத்தால் அனுக்ரகிக்கப் பட்டு ஸ்ருஷ்டிக்க வேண்டியவைகளைப் படைக் கிறேன். அவர், குணங்களில் ஸம்பந்தப்படாதவர். ஆனாலும் அவர் காப்பாற்றுவது, ஸ்ருஷ்டிப்பது, ஸம்ஹரிப்பது ஆகிய மூன்று காரியங்களுக்காக ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்று குணங்களை மாயையால் அங்கீகரிக்கிறார். 'புருஷன் எப்பொழுதும் இருக்கிறான். ஆனால் ஸத்வம் முதலிய குணங்கள் மஹாபூதங்களை ஆசிரயித்துக் காரியமா (அதிபூதம்) யிருப்பதிலும், ஞானத்தை அவலம்பித்துக் காரணமாய் இருப்பதிலும் (அத்யாத்மம்.), இந்திரியங்களை ஆசிரயித்துக் கர்த்தாவாக இருப்பதிலும், அபி மானத்தைப் புருஷனுக்கு உண்டுபண்ணிப் பந்தத்தை உண்டாக்குகின்றன. ஓ ப்ராஹ்மணராகிய நாரதரே! மாயையை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டவராகிய பகவான் மேற்சொல்லிய மூன்று வித உபாதிகளாலும் நன்றாய் அறிய முடியாத ஸ்வரூபத்தையுடையவர். அவர் எனக்கும் மற்ற எல்லாவற்றிற்கும் அதிபதி. மாயைக்கு அதிபதியான அந்தப் பகவான் பலவிதமான சரீரமெடுக்க வேண்டி, தெய்வச் செயலாய்க் கிடைத்த காலத்தையும், கர்மத்தையும், ஸ்வபாவத் தையும் தமது மாயையைக் கொண்டு அங்கீகரிக் கிறார். மேலும் அவரை ஆசிரயித்த காலத்தால் ஸத்வம் முதலிய குணங்கள் ஸமமாயிராமல் தாரதம்யத்தையடைகின்றன. அந்தப் புருஷனை ஆசிரயித்த ஸ்வபாவத்தால் வேறு உருவத்தை அடைகிறதாகிய பரிணாமம் உண்டாகிறது. பின்னும்

அந்தப் பரமாத்மாவை ஆசிரயித்த கர்மத்தினிடம் இருந்து மஹத்தத்வம் உண்டாயிற்று. பின்பு ரஜோ குணம் ஸத்வ குணம் இவைகளுடன் கூடியதும், விகாரத்தையடைந்ததுமான மஹத் தத்வத்திலிருந்து தமோகுணத்தை பிரதானமாயுடையதும், ஐந்து பூதங்களின் ஸ்வரூபமாயும், ஞானேந்திரிய ரூபமாயும், கர்மேந்திரிய ஸ்வரூபமாயுமுள்ள அஹங்காரம் உண்டாயிற்று. பிறகு அந்த அஹங்காரம் வேறு ரூபத்தை அடைந்து வைகாரிகம், தைஜஸம், தாமஸம் என்று மூவகையாயிற்று. அவைகளில் வைகாரிகன், ஸத்வ குணத்தைப் பிரதானமாக உடையவன். கர்மேந்திரியங்களை உண்டுபண்ணும் சக்தியுள்ளவன். தாமஸன் தமோ குணத்தையே பிராதனமாகக் கொண்டவன். ஞானேந்திரியங்களை உண்டு பண்ணும் சக்தியுள்ளவன். பூதங்களுக்கு முந்தின வனாகிய அந்தத் தாமஸன் வேறு ரூபத்தையடையும் பொழுது ஆகாசம் உண்டாயிற்று. சப்தமானது அதனுடைய ஸூக்ஷ்ம ரூபமாயும் குணமாயுமிருக்கிறது. மேலும் அது பார்க்கிறவன், பார்க்கப்படுகிற வஸ்து இவ்விரண்டிற்கு அடையாளமுமாயுமிருக்கிறது; வேறு உருவத்தை அடைந்த அந்த ஆகாசத்திலிருந்து வாயு உண்டாயிற்று. அதன் குணம் ஸ்பர்சமேயாம். அந்த ஆகாயத்தின் ஸம்பந்தத்தால் வாயுவானது சப்தம் உள்ளதாகவும் ஆகிறது. தேக தாரண நிமித்தமாகிய பிராணன், மனோபல வேகம், தேக பலம் ஆகிய இவைகள் வாயுவினால் உண்டாகின்றன. ஆகாசம், வாயு ஆகிய இவைகளின் ஸம்பந்தத்தால் தேஜஸா னது உண்டாகிறது. அது காலம், கர்மம், ஸ்வபாவம் ஆகிய இவைகளின் மஹிமையால் ரூபம் ஸ்பர்சம், சப்தம் ஆகிய இவைகளை அடைகிறது.

அதிலிருந்து, கந்த குணமுள்ள (வாஸனையுள்ள) ப்ருதிவியை யுண்டாக்குகிறது. அந்த ஜலம் தன் காரியமாகிய பிருதிவியில் காரண ரூபமாயிருப்பதால் ரஸம் சப்தம், ரூபம், ஆகிய இவைகள் உள்ளதாயிற்று.

30–42 மேலும் வைகாரிகமான அஹங்காரத்திலிருந்து மனஸ், திக்கு வாயு, ஸூர்யன், வருணன், அசுவினீ தேவர்கள், அக்னி, இந்திரன், உபேந்திரன், மித்ரன், ப்ரஹ்மா ஆகிய பத்துத் தேவர்களும் உண்டானார்கள். தைஜஸ அஹங்காரத்திலிருந்து பத்து இந்திரியங்கள் உண்டாயின. மேலும் ஞானசக்தியான புத்தியும், கிரியாசக்தியான பிராணனும், தைஜஸனுடைய கார்யங்களாகையால் சுரோத்ரம் (காது) துவக் (தோல்), கிராணம் (மூக்கு), சக்ஷுஸ் (கண்) ஜிஹ்வா (நாக்கு) ஆகிய ஞானேந்ரியங்கள் ஐந்தும், வாக்கு, கை, உபஸ்தம் கால் பாயு ஆகிய கர்மேந்திரியங்கள் ஐந்தும் தைஜஸனிடமிருந்தே உண்டாகின்றன. இம்மாதிரி உண்டான ப்ருதிவி முதலிய பூதங்களுடைய குணங்களும் (வாஸனை முதலியவைகள்) இந்திரிய குணங்களாகிய பார்த்தல் முதலியவைகளும் மனத்தின் குணங்களும் ஒன்றோடொன்று சேராமல் தனித்து இருந்தன. ஓ பரப்ரஹ்ம! ஸ்வரூபத்தையறிந்தவர்களுக்குள் சிறந்த நாரத, அப்பொழுது அவை ப்ரஹ்மாண்டத்தை உண்டு பண்ணச் சக்தியற்றவைகளாக இருந்தன; அத்தருணத்தில் பகவானுடைய சக்தி விசேஷத்தால் தூண்டப்பட்டு அவைகள் ஒன்றோடொன்று சேர்ந்து ப்ரதான குண பாவத்தை அங்கீகரித்து ஸமஷ்டி வியஷ்டியாகிய ப்ரமராண்ட சரீரங்களை உண்டு பண்ணின. இப்படி அநேக

வர்ஷங்கள் சென்ற பிறகு பரமாத்மாவானவர் அசேதனமாக ஜலத்தில் மிதக்கும் அந்த அண்டத்திற்குக் காலம், கர்மம், ஸ்வபாவம் ஆகியவைகளை ஆச்ரயித்துச் சைதன்யத்தை உண்டு பண்ணினார். அதாவது அந்த அண்டத்தைப் பிளந்துக் கொண்டு அந்த மஹாபுருஷன் வெளியில் வந்தார். அவர் அநேக தலைகளையும் முகங்களையும் கண்களையும் கைகளையும் தொடைகளையும் கால்களையும் உடையவராக இருந்தார். மேலும் அந்த மஹா புருஷனுடைய முகத்திலிருந்து ப்ராம்ஹண ஜாதியும், கைகளிலிருந்து க்ஷத்ரிய ஜாதியும், தொடைகளில் இருந்து வைசிய ஜாதியும், பாதங்களிலிருந்து சூத்ர ஜாதியும் உண்டாயின. மேலும் அந்தப் புருஷன் உடைய கடி இடுப்பு முதலியவைகளிலிருந்து கீழ் உலகங்களும், ஜகனம் முதலியவைகளிலிருந்து மேல் உலகங்களும் உண்டாயினவென்று வித்வான்கள் சொல்லுகிறார்கள். அதெப்படியெனில், அவருடைய பாதங்களிலிருந்து பூலோகமும், நாபியிலிருந்து புவர் லோகமும், ஹ்ருதயத்திலிருந்து ஸ்வர்லோகமும், மார்பிலிருந்து மஹர்லோகமும், கழுத்திலிருந்து ஜன லோகமும், இரண்டு ஸ்தனங்களிலுமிருந்து தபோ லோகமும், தலையிலிருந்து நித்யமானது வைகுண்டம் என்று சொல்லப்படுகிறதுமான ஸத்யலோகமும் உண்டாயின. பின்னும், அவருடைய கடியிலிருந்து அதலமும், தொடைகளிலிருந்து விதலமும் முழங் கால்களிலிருந்து மிக்க பரிசுத்தமான ஸுதலமும், கணைக்கால்களிலிருந்து தலாதலமும் குல்பங்களில் இருந்து மஹாதலமும், நுனிக்கால்களிலிருந்து ரஸா தலமும், பாதங்களிலிருந்து பாதாளமும் உண்டாயின. (உலகங்கள் பதினான்கு என்று பக்ஷம் காட்டப்பட்டது.)

மேலும், அந்தப் புருஷனுடைய பாதங்களிலிருந்து பூலோகமும், நாபியிலிருந்து புவர்லோகமும், தலையில் இருந்து ஸுவர் லோகமும் உண்டாயினவென்றும் விராட் புருஷனுடைய அவயவங்களில் லோகத்தைக் கற்பிக்கிறார்கள். (லோகங்கள் மூன்று என்ற பக்ஷமானது காட்டப்பட்டிருக்கிறது.)

நோட்டு

முந்தினவனாகி—மூலத்தில் பூதாதி என்றிருப்பதால், அதற்குப் பஞ்ச பூதங்களுக்கு முதன்மையாகிய ஆகாச என்று அர்த்தம்—சந்த். தாமஸாஹங்காரதிற்கே பூதாதி யென்றும் பெயருண்டு—வீர. சப்தமானது தாமஸன் இடமிருந்து முதலில் சப்தம் உண்டாயிற்று என்று ப்ரசித்தமாக இருக்கிறது. ஆனாலும் அந்தச் சப்த மானது ஆகாசத்தினுடைய ஸூக்ஷ்ம ரூபமாயும், அதன் குணமாகவும் மிருக்கிறது. ஆகையால் அதன் வழியாகச் சப்தம் உண்டாயிற்று என்பது கருத்து —ஸ்ரீத. பார்க்கிறவன் சுவரின் மறைவில் செல்லும் யானை முதலியவை களைக் கண்ட ஜனங்கள் யானையென்று உரக்கச் சொல்ல, அதனைக் கேட்ட அவன் ஜனங்கள் யானையைப் பார்க்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளுகிறானல்லவா? அதனால் அந்தச் சப்தமானது பார்க்கப்பட்ட வஸ்து (பார்க்கிறவர்கள் ஆகிய இவர்களுக்கு அடையாளம்...சந்த்—வீர. வைகாரிக —ஸாத்வீக அஹங்காரத்திலிருந்து ஸகல இந்திரியங் களும் உண்டாயின—ஸ்ரீத, வீர, மனஸ் அதற்கு அதிஷ்டான தேவதைகயாகிய சந்திரனும் உண்டானான். திக்கு இந்த பத்துத் தேவதைகளும் முறையே சுரோத்ரம், துவக், சக்ஷுஸ், ஜிஹ்வா, கிராணம்,

வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் ஆகிய இவைகளுக்கு அதிதேவதைகள். மேற்காட்டிய இந்திரி யங்கள் அதிதேவதைகளுடன் உண்டானவையென்று தாத்பரியம் கொள்ள வேண்டும்—வீர தைஜஸனிடம் இருந்து ஞானேந்திரியங்களும் கர்மேந்திரியங்களும் தைஜஸனிடமிருந்து உண்டாயின.—ஸ்ரீத ராஜஸாஹங் காரத்துடன் கூடிய ஸாத்வீக அஹங்காரத்தினிடமிருந்து என்று அர்த்தங் கொள்ளவேண்டும். அப்படியில்லா விடில் 30—வது ஸ்லோகத்தின் அர்த்தத்திற்கு விருத்த மாகும். ஆக்ஷேபம் 30—வது ஸ்லோகத்திற்கு மூலத்தில் கண்டபடி அதிஷ்டான தேவதைகள் உண்டானார்கள் என்று மாத்திரம் அர்த்தம் வைத்துக் கொண்டோ மானால் 31 வதான இந்த ஸ்லோகத்தில் இந்திரியங்கள் உண்டாயினவென்று அர்த்தங்கொள்ளலாம், ஒன்றுக் கொன்று விரோதமில்லை. ஸமாதானம் அப்படியல்ல இந்திரியங்களில்லாமல் அதிதேவதைகளுக்குத் தேகம் உண்டாக நியாயமில்லை, மேலும், ஆதித்யன் முதலிய தேவதைகள் நான்முகக் கடவுளால் ஸ்ருஷ்டிக்கப் பட்டவர்களாகச் சொல்லப்பட போகிறபடியால் அண்டங்களை ஸ்ருஷ்டிப்பதற்கு முன் அவர்களை ஸ்ருஷ்டிக்க நியாயமில்லை,—வீர. சரீர நோபயம் ஸஸிருஜுர்ஹ்ருத என்ற பாடத்தை யங்கீகரித்து அவைகள் பஞ்சீகரணத்தால் ஸ்தூல, பாவத்தையும், ஸூக்ஷ்மமாக விருப்பதையும் மேற்காட்டிய இரண்டு வகையுமற்றதாகிய கால கர்மஸ்வபாவத்தையும் அங்கீ கரித்து இந்தப் ப்ரம்ஹாண்டத்தைப் படைத்தன அல்லது ஒரு தத்துவத்திற்கும் காரியமாக இல்லாததும், காரணமாக இல்லாததுமாகிய ப்ரம் ஹாண்டத்தை ஸ்ருஷ்டித்தன —வீர.

அத்தியாயம்–6

விராட் புருஷனுடைய விபூதிகள்

ஜனங்களுடைய வாக்கும், அதற்கு அதிஷ்டான தேவதையாகிய அக்னியும் விராட் புருஷனுடைய முகத்திலிருந்து உண்டானவை. மேலும் அவருடைய தோல் முதலிய ஏழு தாதுக்களிலிருந்து காயத்ரீ முதலிய சந்தஸ்ஸுகள் உண்டாயின. ஹவ்யம் (தேவர்களுக்குக் கொடுக்கும் அன்னம்). அமிர்தம் (மேற்காட்டிய இருவகையிலும் பாக்கியான மனுஷர் களுக்குக் கொடுக்கக்கூடிய அன்னம்) ஆகிய இவை களும், ஆறு வகையான ரசங்களும், ஜனங்களுடைய நாக்கும் அதற்கு அதிதேவதையான வருணனும் அவருடைய நாக்கிலிருந்து உண்டாயின. மேலும் ஸகல பிராணிகளுடைய ப்ராணன்களுக்கும் மற்ற வாயுவிற்கும் அவருடைய மூக்குகள் முக்கியமான இருப்பிடம், ஔஷதிகளும், அசுவினீ தேவர்களும் மோதம், ப்ரமோதம் என்ற ஸாமான்ய விசேஷ வாஸனைகளும் அவருடைய கிராணேந்திரியத்தில் இருந்து உண்டானவை. அவருடைய சக்ஷுரிந்திரியம் ஆனது ஏழுவித உருவங்களுக்கும், சந்திரன், அக்னி, முதலிய தேஜஸ்களுக்கும் முக்கியமான ஸ்தானம். இரு கண்களும் (நேத்திர கோளங்கள்) த்யுலோகத்திற்கும், ஸூர்யனுக்கும் ஸ்தானங்களாயிருக்கின்றன. மேலும் அவருடைய காதுகள் திக்குகளுக்கும், தீர்த்தங்களுக்கும் முக்கிய ஸ்தானங்களாயிருக்கின்றன. ச்ரோத்ரேந்திரியம் ஆனது ஆகாசத்திற்கும் சப்தத்திற்கும் உற்பத்தி ஸ்தானமென்று சொல்லப்படுகிறது. அந்த மஹாபுரு ஷனுடைய சரீரமானது ஸகல பதார்த்தங்களுடைய

ஸாராம்சத்திற்கும், நிகரில்லாத ஸௌந்தர்யத்திற்கும் இருப்பிடமாயிருக்கிறது. அவருடைய துவக்கிந்திரியானது (தோல்) ஸ்பர்சம், வாயு யக்ஞம் ஆகிய இவைகளுக்கு ஸ்தானமென்று சொல்லப்படுகிறது. அவருடைய உரோமங்கள் யாகத்திற்கு ஸாதனமான உத்பிஜ்ஜ ஜாதியான அரசு, அத்தி, கருங்காலி, பலாசம் முதலிய விருக்ஷங்களுக்கும், அவருடைய தலைமயிர்கள் மேகங்களுக்கும், அந்த புருஷனுடைய மீசை, தாடி இவைகள் மின்னலுக்கும், நகங்கள் கற்களுக்கும், இரும்புகளுக்கும் இருப்பிடமாய் இருக்கின்றன. அவர் உடைய கைகள் உலகத்தைக் காப்பாற்றும் திக்பாலர்களுக்கும், காலடி வைப்பதானது பூலோகம், புவர்லோகம்: ஸுவர்லோகம் ஆகிய இவைகளுக்கும், க்ஷேமத்திற்கும் (கிடைத்ததைக் காப்பாற்றுவது). சரணத்திற்கும் (பயத்திலிருந்து ரக்ஷிப்பதற்கும்) காரணமா யிருக்கின்றன. பகவானுடைய பாதாரவிந்தமானது ஸகல இஷ்டங்களையும் கொடுக்கக்கூடியது. அந்த மஹா புருஷனுடைய சிகையானது ஜலங்களுக்கும், வீர்யத் துக்கும், ஸ்ருஷ்டிக்கும் பர்ஜன்யனுக்கும் ப்ரஜா பதிக்கும் காரணமாயிருக்கிறது. ஓ நாரதரே, அவர் உடைய பாயு என்னும் இந்திரியமானது, மல விஸர்ஜனத்திற்கும், யமனுக்கும், மித்ரனென்னும் தேவதைக்கும், ஆச்ரயமாக விருக்கிறது. மேலும் அவருடைய குதமானது நிருதிக்கும். ஹிம்ஸைக்கும், மிருத்யுவுக்கும். நரகத்திற்கும் ஆச்ரயமாயிருக்கிறது. அவருடைய பின் பாகமானது அவமானம், அதர்மம், அஜ்ஞானம் ஆகிய இவற்றுக்கும், அவருடைய நாடி களானவை ஆறுகள், மேற்கு முகமாய்ச் செல்லும் நதிகள் ஆகிய இவைகளுக்கும், அந்தப் புருஷனுடைய எலும்புகளானவை மலைகளுக்கும் ஆச்ரயங்களாக

இருக்கின்றன. பின்னும் அவருடைய வயிரானது அன்னம் முதலிய ப்ரதான ரஸங்களுக்கும் ஸமுத்திரங்களுக்கும், ப்ராணிகளுடைய லயத்திற்கும், ஹ்ருதயம் ஆனது மனத்திற்கும் ஸ்தானமாயிருக்கின்றன. மேலும் அவருடைய ஆத்மாவானது (சித்தம்) தர்மத்திற்கும், எனக்கும். உனக்கும் ஸனகர் முதலியவர்களுக்கும்: பரமசிவனுக்கும் ஸகல ஞானத்திற்கும், ப்ராணிகளின் ஸமூஹத்திற்கும் முக்ய இருப்பிடமாயிருக்கிறது. ஆகையால் நானும், நீரும், பரமசிவனும் உமக்கு மூத்த ஸஹோதரர்களான ஸனகர் முதலிய யோகிகளும், தேவர்களும், அஸுரர்களும்; மனிதர்களும், நாகங்களும், (யானைகளும்) பறவைகளும், மிருகங்களும், ஸர்ப்பங்களும் கந்தர்வர்களும், அப்ஸர ஸ்திரீகளும், யக்ஷர்களும், பூதகணங்களும், பசுக்களும், பிதிருக்களும், ஸித்தர்களும், வித்யாதாரர்களும், சாரணர்களும், ஜல ஜந்துக்களும் ஸ்தலத்தில் சஞ்சரிக்கும் ஜந்துக்களும், ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் ஜந்துக்களும், நவக்கிரஹங்களும்: நக்ஷத்திரங்களும்; தூமகேது முதலியவைகளும், மேகங்களும் மின்னல்களும், மற்றும் பலவகையான பிராணிகளும், உண்டாகின்றவைகளுமான ஸமஸ்தமும் அந்த மஹா புருஷ ஸ்வரூபமே தவிர வேறில்லை. பன்னிரண்டு அங்குல ப்ரமாணமுள்ள ஸ்வரூபமடைய அந்த மஹாபுருஷனால் இந்த ஜகத்தானது முழுவதும் வ்யாபிக்கப் பட்டிருக்கிறது. ப்ராணன் ஆனவன் (ஸூர்யன்) தன்னுடைய மண்டலத்தைப் ப்ரகாசிக்கச் செய்துகொண்டு வெளியிலும் ப்ரகாசிக்கிறார். இவர் அமிருதத்திற்கும் அபயத்திற்கும் அதிபதி. மேலும் கர்மபலத்தை அதிக்ரமித்தவர். ஆசையால் நித்ய முக்தர். ஆனாலும் ஜகத்ரூபியாயிருப்பதே அவருடைய அளவற்ற மஹிமையாயிருக்கிறது. அந்த

மஹா புருஷனுடைய அம்சமாகிய உலகங்களிலேயே ஸகல பிராணிகளும் வஸிக்கிறார்களென்று சொல்லப் படுகிறது. மூன்று லோகங்களுக்கும் மேலான மஹர் லோகத்திற்கும் மேலான லோகங்களில் அமிருதம் க்ஷேமம் அபயம் ஆகிய இவைகள் வைக்கப்பட்டிருக்கின்றன, மூவுலகங்களின் வெளியில் அவருடைய மூன்று பாதங்களிருக்கின்றன. அவைகள் ப்ரம்மசர்யம், வானப்ரஸ்தம், ஸந்யாஸம் முதலிய ஆச்ரமங்களேயாகும். மேற்காட்டிய ஆச்ரமிகள் புத்திர ரூபமாக உண்டாகாதவர்கள். மூவுலகத்தின் உள்ளே மற்றொரு பாதம் இருக்கிறது. அதுவே ப்ரம்மசர்ய வ்ரதமற்ற கிருஹஸ்தாச்ரமம் எனப்படுகிறது.

21–47. க்ஷேத்ரக்ஞனாகிய ஜீவன் போகத்திற்கும் மோக்ஷத்திற்கும் ஸாதனமாகிய இரண்டு மார்க்கங்களிலும் ஸஞ்சரிக்கிறான்; அவைகளின் தூமாதி மார்க்கம் என்பது வித்தைக்கு (ஞானத்திற்கு) ஸாதனமாகிய உபாஸனைகளால் கிடைக்கக்கூடியது. ஜீவன் முன் சொன்ன இருவகையான மார்க்கங்களையும் தன் உடைய அதிகாரத்திற்குத் தக்கபடி அடைகிறான். இப்படிவிராட் புருஷனுடைய உள்ளே இருப்பவர்களுக்கு விசித்திரமான பலன் கிடைக்கிறது. ஆனால் எதனிடத்திலிருந்து ப்ரம்மாண்டம் உண்டாயிற்றோ அதனிடமிருந்து ஐந்து பூதங்கள், இந்திரியங்கள், அதன் விஷயங்கள் ஆகிய இவைகளின் ஸ்வரூபியாயிருக்கும். விராட்புருஷன் உண்டானார். (அவர் ப்ரம்மாண்டத்திற்கு அபிமானியாயிருப்பவர்) அவைகளுக்குக் காரணமாயிருக்கும் பரமேசுவரன், அநேக கிரணங்களால் ஸூர்யன் ப்ரகாசிப்பது போல ஜகத் ரூபமாகிய விராட் புருஷனுடைய தேகத்தையும்

ப்ரம்மாண்டத்தையும் அவர் அதிக்கிரமித்துப் ப்ரகாசிக் கிறார் (ஈசுவரன் விலக்ஷண ரென்பது கருத்து). ஜகத் முழுவதும் அந்த ஸர்வேசனுடைய ஸ்வரூபமாயிருக்கு மானால் யாகமும், அதற்கு ஸாதனங்களும் பகவத் ரூபங்களென்று ஏற்படுகிறதே; யாகத்தால் பரம புருஷனை ஆராதிப்பது எப்படியெனில் (பின்வருமாறு) சொல்லப்படுகிறது) ஓ நாரத! மஹாத்மாவாகிய இவருடைய கொப்பூழில் தோன்றிய தாமரைப் புஷ்பத்திலிருந்து நான் உண்டானபோது பரமாத் மாவை ஆராதிப்பதற்காகயாக ஸாமக்ரிகளைத் தேடியும் எல்லாம் அவருடைய அவயங்களாக இருந்தனவே யொழிய அவைகளைக் காட்டிலும் வேறானவைகள் ஒன்றும் கிடைக்கவில்லை, ஆகையால் யாகத்திற்கு வேண்டிய பசுக்கள், யூபத்திற்கு உபயோகமாகிய மரங்கள், தர்ப்பங்கள், பாத்திரங்கள், நெல் முதலிய தானியங்கள், நெய் முதலிய வேறாம திரவ்யங்கள், ஸோமரஸம், ஸுவர்ணம் முதலிய உலோகங்கள், மண், ஜலம், ரிக், யஜுஸ்,ஸாமம் என்ற வேதங்கள், வெளத்ரம் முதலிய கர்மங்கள் ஜ்யோதிஷ்டோமம் முதலிய பெயர்கள். ஸ்வாஹாகாரம் முதலியவைகள். தேவதா தியானங்கள் ப்ராயச் சித்தம், செய்தவை களைப் பகவதர்ப்பணஞ் செய்வது, நான் வஸிக்கும் இந்தப் பகவானுடைய நாபியாகிய யாகசாலை ஆகிய ஸாமக்ரியைகளை அந்த மஹா புருஷனுடைய அவயங்களாலேயே ஸம்பாதித்தேன். இப்படி அவருடைய அவயவங்களால் யக்ஞ புருஷனாகிய அந்தப் பகவானையே பூஜித்தேன்; பிறகு கச்யபர் முதலிய ஒன்பது ப்ரஜாபதிகளும் மிகவும் ஸாவதானர்களாய் இந்திரன் முதலிய தேவர்களின் ரூபமாய் வியக்தரும், ப்ரஹ்மரூபமாய் அவ்யக்தருமான அந்த மஹா புருஷனைக் குறித்து யாகஞ் செய்தார்கள். பிறகு

மனுக்களும்; மற்ற மஹர்ஷிகளும் பிதிருக்களும், தேவர்களும், அஸுரர்களும். மனிதர்களும் அவரவர் களுக்கு வேண்டிய ஸமயத்தில் ப்ரபுவாகிய அவரை உத்தேசித்து யாகஞ் செய்தார்கள். இந்த ஸகல ஜகத்துக்களும் பகவானாகிய நாராயணனிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகவான் ப்ருகிரு தியின் ஸகல குணங்களையும் அடக்கிக் கொண்டு ஸ்ருஷ்டிக்கு முன்னே தாம் நிர்க்குணராக இருந்தார். அவருடைய ஆக்ஞையாலே நான் உலகத்தைப் படைக்கிறேன், பரமசிவன் ஸம்ஹரிக்கிறார், அவர் தம்முடைய ஸ்வரூபத்தால் காப்பாற்றுகிறார். இப்படி மூன்று வகையான சக்தியுள்ளவராக இருக்கிறார். காரியகாரண ரூபமாகிய ஸகல பதார்த்தங்களும் பகவானை விடவேறாக இருக்க வில்லை. ஓ நாரத உம்மால் கேட்கப்பட்ட எல்லா விஷயத்திற்கும் பதில் சொன்னேன். நான் விசேஷபக்தியுடன் ஹ்ருதயத்தில் பகவானைத்தியானித்தபடியால் என்னுடைய வாக்குப் பொய் சொல்லுகிறதில்லை. மனஸும் இந்திரியங் களும் கெட்ட மார்க்கத்தில் பிரவர்த்திக்கிறதில்லை வேத ஸ்வரூபியாயும் தப ஸ்வரூபியாயுமிருக்கும் நான் பிரஜாபதிகளால் நமஸ்கரிக்கப்படுகிறேன். மேலும் நான் எனக்குக் காரணமாகிய பகவானைத் தெரிந்து கொள்ளவேண்டி யோகத்தால் முயற்சி செய்தும் அவரைத் தெரிந்து கொள்ளமுடியவில்லை. அவர் உடைய சரணங்கள், சரணாகதர்களுக்கு ஸம்ஸார பந்தத்தைப் போக்குகின்றன. க்ஷேமத்தையும், ஸகல மங்களத்தையும் கொடுக்கின்றன. அந்தச் சரணங் களுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். ஆகாசமானது தன்னுடைய முடிவை அறியாதது போலவே அவர் உடைய மாயா வைபவத்தை அவரும் அறியவில்லை.

அப்படியிருக்கப் பிறருக்குத் தெரியுமா? என்றாலும், பரமசிவனாலும், உங்களாலும் ஆத்மஸ்வரூபம் அறிய முடிகிறதில்லை. மற்ற தேவர்களால் அறியமுடியுமா? அந்தப் பகவானுடைய மாயையால் நாம் கலங்கிய புத்தியுள்ளவர்களாய் நம்முடைய ஞானத்திற்குத் தக்கபடி இந்த ப்ரபஞ்சத்தைத் தெரிந்துகொள் கிறோம். (அவருடைய ஸ்வரூபம் முழுவதையும் தெரிந்துகொள்ள முடியவில்லை) எந்தப் பகவான் உடைய அவதார சரிதங்களை நாமும் பிறரும் கானம் செய்தபோதிலும் அவருடைய உண்மையைத் தெரிந்து கொள்ள முடியவில்லையோ. அந்தப் பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். அந்தப் புருஷனே எல்லாவற்றிற்கும் முந்தியவர். அவர் பிறப்பில்லாதவர். ஒவ்வொரு கல்பத்திலும் தம் மாலேயே தம்மை ஸ்ருஷ்டிக்கிறார். காப்பாற்றுகிறார், ஸம்ஹரிக்கிறார். அந்தப் புருஷன் சுத்தன். ஞான ஸ்வரூபி. எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாயிருப்பவர். தேகம் முதலியவைகளின் ஸம்பந்தமற்றவர். ஸத்ய ஸ்வரூபி. பூர்ணர், பிறப்பு நாசம் இவைகளில்லாதவர், நித்யர், ஒப்பற்றவர் ஓ நாரத மஹரிஷியே எவர் களுடைய சரீரமும் இந்திரியங்களும் மனஸும் மிகவும் சாந்தங்களாகவிருக்குமோ. அந்த முனிவர் களே மேற்காட்டிய ஆத்ம ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்வார்கள். துஷ்டர்கள் சொல்லுகிற சாஸ்திரவிருத்தமான யுக்திகளால் அவை கலங்குமாகில் அந்த ஆத்மஸ்வரூபம் அவர்களுக்குப் புலப்படாமல் மறைந்துவிடும். ப்ரகிருதியைப் பிரவர்த்திக்கச் செய்யும் புருஷன் பரமாத்மாவின் முதன்மையான அவதாரமேயாம். மேலும் காலம், ஸ்வபாவம். காரியம் காரணம், மனம், ஐந்து மஹாபூதங்கள், அஹங்காரம், ஸத்வம் முதலிய

குணங்கள், ஸமஷ்டி சரீரம். ஸ்வராட், ஸ்தாவரங்கள் ஜங்கமங்கள் ஆகிய இவைகள் யாவும் அவருடைய அம்சங்களேயாம். மேலும் நான் பரமசிவன், யாகம், (விஷ்ணு) தக்ஷர் முதலிய இந்த எல்லாப் பிரஜாபதிகள், நீர் ஸனகர் முதலியவர்கள், இந்திரன் முதலிய லோகபாலர்கள், கருடன் முதலியவர்கள். மனு. மாந்தாதா முதலிய அரசர்கள். லோகத்தின் பாலர் களாகிய அனந்தன். வாசுகி முதலியவர்கள் ஆகிய இவர்களும் கந்தர்வர்கள், வித்யாதரர்கள், சாரணர்கள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், ஸர்ப்பங்கள். யானைகள். மஹரிஷிகளுக்குள் சிறந்தவர்களாகிய வஸிஷ்டர் முதலியவர்கள் பிதிருகணங்களில் மேலானவர்களும் ஸித்தர்களில் சிறந்தவர்களும், தைத்யர்களுக்குள் சிறந்தவர்களும், தானவர்களுக்கு மேலானவர்களும் மற்ற, ப்ரேதங்கள். பிசாசங்கள், பூதங்கள், கூஷ்மாண்ட கணங்கள், ஜலஜந்துக்கள் மிருகங்கள், பசுக்கள் ஆகிய இவைகளுக்குள் சிறந்தவைகளுமாகிய எவை பூஜிக்கத்தக்கவைகளோ, காந்தி, வேகம் தேக பலம். பொறுமை. அழகு கெட்ட காரியஞ் செய்வதில் வெட்கம், ஸமிருத்தி புத்தி; அற்புதமாகிய வர்ணம். உருவமற்றதாயிருப்பது. உருவமுள்ளதாக விருப்பது ஆகிய இவைகளுள்ளவைகளாக எவைகளிருக்கின்றனவோ; அவைகளெல்லாம் பரமாத்மாவின் விபூதிகளேயொழிய வேறில்லை, ஆனாலும், ஓ மஹரிஷியே மிகுந்த மஹிமை பொருந்திய அந்தப் பரமாத்மாவினுடைய முக்யமான லீலாவதாரங்களென்று எவை சொல்லப் படுகின்றனவோ அவை கேட்பவர்களுடைய காதுகளின் தோஷங்களைப் போக்கக்கூடியவை. மிகவும் மனோஹரமானவை அவைகளை உமக்குச் சொல்லுகிறேன்.

நோட்டு

ஸகல–விரும்பக்கூடிய ஸகல வஸ்துக்களுக்குள் மேலானவராகிய பகவானுடைய பாதம் – வீர வேறில்லை. – "இந்த ஜகத் முழுவதும் புருஷனே" – ஸ்ருதி. ப்ராண – "இந்த ஆதித்யனே ப்ராணன்" – ஸ்ருதி ப்ராண வாயு வானது சரீரத்தில் ப்ராணன், அபானண் முதலிய பெயரை அடைந்து தானிருக்கும் சரீரத்தை சேஷ்டிக்கச் செய்துகொண்டு வெளியிலும் ஸஞ்சரிப்பதுபோல்–சந்த. ஜகத்ரூபி– ஜகத்ரூபியானாலும் அதனால் அவருடைய மஹிமை குறைவுபடுகிறதில்லை யென்ற ஸ்ருதியில் தாத்பரியம் காட்டப்பட்டது ஸ்ரீத. – மஹர்லோகம் – பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் ஆகிய மூன்று லோகங்களிலும் அனித்ய ஸுகமே தவிர நித்ய சுகமில்லை. மஹர்லோகமானது கிரம முக்தி ஸ்தானமானாலும் கல்பாந்தரத்தில் அவ்விடத்திலிருப்பவர்கள் அதை விட்டு விட வேண்டியிருப்பதால் அதிலும் நித்ய ஸுகமில்லை. மூவுலகமும் ஸங்கர்ஷணருடைய முகத்தின் அக்கினியால் எரிக்கப்படும் அந்த உஷ்ணத்தைப் பொறுக்காமல் பிருகு முதலியவர்கள் ஜனலோகம் செல்லுகிறார்கள் ஸ்ரீத.– வெளியில் – பிரகிருதி, பிராகிருதர்கள் ஆகிய இவைகளுக்கு வெளியில் இருக்கின்றன அவைகள் ஜன்மமற்ற முக்தர்களால் அடையத்தக்கவை – வீர. அதுவே – ஸம்ஸாரிகளான ஜீவவர்க்கங்களால் அடையக்கூடியது –வீர. படைக்கிறேன் – அந்தப் புருஷனே எனது உருவங்கொண்டு படைத்தலையும், தம் உருவத்தாலே காப்பாற்றுவதையும், ருத்திரருடைய ஸ்வரூபத்தை அடைந்து ஸம்ஹாரத்தையுஞ் செய்கிறார்.

அத்தியாயம்–7

பகவானுடைய லீலாவதாரம்

"நாசமற்றவரான ஸ்ரீ நாராயணன் ஸகல யக்ஞஸ்வரூபமான வராஹ சரீரத்தை யெடுத்துப் பூமியைத் தூக்க முயற்சித்தபோது ஸமுத்திரத்தில் பிரவேசித்த வனும், தைத்யர்களுள் முந்தினவனுமான ஹிரண்யாக்ஷன் என்ற அஸுரனைச் சிங்கப்பல்லால் குத்திக் கிழித்தார். அது மஹேந்திரர் வஜ்ராயுதத்தால் மலையையுடைத்தாற் போலிருந்தது. மேலும் அந்தப் புருஷோத்தமன் 'ருசி' என்ற பிரஜாபதிக்கு ஆகூதி என்ற ஸ்திரியினிடத்தில் ஸுயக்ஞரென்ற பெயருடன் அவதரித்தார். பிறகு "தக்ஷிணா என்பவளைக் கல்யாணம் செய்து கொண்டு அவளிடத்தில் 'ஸுயாமா' என்ற பெயருள்ள தேவர்களைப் பெற்றார். அப்பொழுது அந்த ஸுயக்ஞர் தாம் இந்திரனாக இருந்து உலகத்தைக் காப்பாற்றி வந்தார். அப்பொழுது ஸ்வாயம்புவ மனுவென்பவர், "நீர் மூவுலகத்திற்கும் நேர்ந்திருந்த பெரிதான உபத்திரவத்தைப் போக்கடித்தபடியால் உமக்கு 'ஹரி' என்று பெயர் உண்டாகட்டும்" என்று சொன்னார். ஓ ப்ராம்ஹணோத்தமரான நாரதரே பின்னும் அந்த மஹா புருஷன் கர்த்தமபிரஜாபதியின் வீட்டில் தேவஹூதியினிடத்தில் ஒன்பது ஸ்திரீகளுடன் கபிலராக அவதரித்தார். பிறகு அவர் தம் தாயான தேவஹூதிக்கு ப்ரஹ்ம வித்யையை உபதேசித்தார். அதனால் அவள் துக்கத்தைக் கொடுக்கக்கூடிய முக்குண ஸம்பந்தத்தை விட்டு அந்த ஜன்மத்திலேயே முக்தியை அடைந்தாள். முன்னொரு காலத்தில் நல்ல புத்திரன் வேண்டுமென்று அத்திரி மஹர்ஷியானவர்

தபஸ் செய்தார். அவருடைய தபஸினால் பகவான் சந்தோஷப்பட்டு, "நானே புத்திரனாக என்னால் (தத்தம்) கொடுக்கப்பட்டேன்" என்று சொல்லி, அதனால் தத்தாத்ரேயராக தத்தரென்ற அத்திரியின் புத்திரர் அவதரித்தார். அவருடைய பாத தூளிகளால் பரிசுத்தமான சரீரமுள்ள யது (யயாதியின் பிள்ளை) கார்த்தவீர்யார்ஜுனர் முதலியவர்கள் இவ்வுலகத்து ஸுகத்தையும், மேலுலகத்து ஸுகத்தையும் அடைந் தார்கள். மேலும் நான் பலவகையான உலகங்களை ஸ்ருஷ்டிக்க விரும்பித் தபஸ் செய்தேன். பூர்ணமாகிய அந்தத் தபஸினால் பகவான் ஸந்தோஷமடைந்து ஸனத்குமார, ஸனக ஸநந்தன ஸனத் ஸுஜாதர் என்ற பெயருடன் நான்கு வகையாக அவதரித்து, முன் கல்பத்தின் ப்ரளயத்தில் மறைந்துபோன ஆத்ம வித்தையை மஹர்ஷிகளுக்கு நன்றாக உபதேசித்தார். அதனைக் கேட்டவுடன் அவர்களுக்கு அபரோக்ஷ ஸாக்ஷாத்காரம் உண்டாயிற்று. இன்னும் அந்த மஹாபுருஷன் தர்மத்தின் பத்தினியும், தக்ஷருடைய பெண்ணுமான மூர்த்தி என்பவளிடத்தில் 'நரன், நாராயணன்', என்ற திவ்ய நாம தேயங்களுடன் இரண்டு வகையாக அவதரித்தார். அந்த அவதாரத்தில் கடுமையாக தபஸ் செய்தார். அப்பொழுது மன்மதன் உடைய சைன்யங்களாகிய ஊர்வசி முதலிய அப்சர ஸ்திரீகள் அவருடைய தபஸைக் கெடுக்க முயன்றும் முடியவில்லை. வித்வான்களாகிய ருத்ரன் முதலியவர் கள் கோபத்தால் க்ரூரமாயிருக்கும் பார்வையால் மன்மதனை ஜயித்தார்கள். ஆனாலும் தம் ஆத்மாவைத் தகிக்கும் (ஸகிக்க முடியாத) கோபாக்னியை ஜயிக்க வில்லை. (கோபத்திற்கு வசப்பட்டிருக்கிறானென்று கருத்து.) இவ்விதக் கோபமும் நாராயணாவதாரஞ்

செய்த பகவானுடைய மனதில் பிரவேசிக்கப் பயப்படு கிறது. அதற்குத் தாழ்ந்தவனாகிய காமம் அவருடைய மனத்தில் ப்ரவேசிக்க முடியுமா ?

8–54 உத்தான பாதனென்ற அரசனுடைய பத்தினியாகிய ஸுநீதியின் புத்திரர் துருவரென்று ஒருவர் இருந்தார். அவர் தம்முடைய பிதாவின் ஸமீபத்தில் ஸபத்னீ மாதாவான ஸுருசியினுடைய வார்த்தை யாகிய பாணத்தால் அடிக்கப்பட்டு, பால்ய வயதிலேயே தபஸ் செய்வதற்காகக் காட்டுக்குச் சென்றார். அவர் பகவானை ஸ்தோத்திரஞ் செய்யவே, புருஷோத்தமன் ஸந்தோஷப்பட்டு அவருக்குச் சாச்வத மாகிய பதத்தைக் கொடுத்தார். அந்த மேலான ஸ்தானத்தை அதற்குக் கீழாகவிருக்கும் ஸப்த ரிஷிகளும் ஸ்தோத்திரஞ் செய்கிறார்கள். (இது ஒரு அவதாரமென்று கருத்து) தவிரவும் வேணனென்ற அரசன் அதர்மத்தை அனுஷ்டித்து வந்ததால் ப்ராம் மணர்கள் அவனைச் சபித்தார்கள். வஜ்ரம் போன்ற அவர்களுடைய வாத்தையால் அவனுடைய ஐசுவர்யம் முதலியவைகள் நாசமாயின. அந்த வேனனுக்கு பகவான் ப்ருது என்றும் புத்திரனாக அவதரித்து, அவனை நரகத்திலிருந்து காப்பாற்றி அதனால் புத்திரன் என்ற சப்தத்தை உண்மையான அர்த்தமுள்ளதாகச் செய்தார். பின்னும் பூமி தேவி இடமிருந்து ஸகல வஸ்துக்களையும் கறந்தார். மேலும், அந்தப் ப்ரபுவானவர் ப்ரிய வ்ரதருடைய பௌத்திரரும் ஆக்னீத்ரருடைய புத்திரருமாகிய நாபி என்பவருக்கு ஸுதேவி என்பவளிடத்தில் ரிஷப ரென்ற திவ்ய நாமதேயத்துடன் அவதரித்தார். அப் பொழுது விஷயங்களின் ஆசையை ஒழித்து மிகவும்

சாந்தமாகிய அந்தக் கரணமுள்ளவராகி தம்முடைய ஸ்வரூபத்திலே இருந்து யோகியாய் மூடன்போல் சஞ்சரித்தார். அந்த நிலைமையைத் தான் மஹர்ஷிகள் பரமஹம்சாசிரமம் என்கிறார்கள். பின்னும், யக்ஞ புருஷராகிய அவர் என்னால் செய்யப்பட்ட யாகத்தில் ஹயக்ரீவராக அவதரித்தார். அந்த ஹயக்ரீவர் பொன்னிறமுள்ளவர். வேத ஸ்வரூபி. ஸகல யாக ஸ்வரூபி. சகலதேவஸ்வரூபி. வேதங்கள் யாவும் மூச்சுவிடும் அவருடைய மூக்கிலிருந்து உண்டாயின. பின்னும் ப்ரளய காலத்தில் பலவகையான வேதங்கள் என்னுடைய முகத்திலிருந்து நழுவிப்போனதால் வேத மார்க்கங் களைத் திருப்பி என்னிடம் கொடுப்பதற்காக அவை களை எடுத்துக்கொண்டு மத்ஸ்ய ரூபத்துடன் பகவான் சமுத்திர ஜலத்தில் விளையாடினார். அப்பொழுது ஸகல ப்ராணிகளுக்கும் ஆதரரும், பூமியைப் ப்ரதானமாயுடையவருமான அந்தப் பரம புருஷனை வைவஸ்வத மனு தர்சித்தார். தவிரவும், அந்த ஆதி புருஷன், தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து அமிருதத்திற்காகப் பாற்கடலைக் கடையும்பொழுது ஆமை உருவங்கொண்டு மத்தாயிருந்து மந்தர மலையைத் தம்முடைய முதுகில் தாங்கினார். அப்பொழுது அந்த மலை உராய்வதால் தினவைப் போக்கிக் கொண்டு ஸுகமாய்த் தூங்கினார். மேலும் தேவர்களுக்கு நேரும் கஷ்டங்களை நிவர்த்திக்கும் அந்த மஹாபுருஷன் சிங்கப் பற்களால் பயங்கரமாயும் குரூரமான புருவங்களுள்ளதுமான நரஸிம்ஹ சரீரத்தை எடுத்துக் கொண்டு, கதாயுதத்துடன் தமக்கு எதிரில் ஓடிவரும் ஹிரண்யகசிபு என்ற அசுரனைத் தமது மடியில் தள்ளி, நகங்களால் கிழித்துக் கொன்றார். முன்னொரு காலத்தில் ஒரு சிறந்த

யானையானது பெரிதான ஒரு ஏரியில் ஜலம் குடிக்க இறங்கினபொழுது அங்கிருந்த மிகுந்த பலசாலியான ஒரு முதலை அதைப் பிடித்துக் கொண்டது. அதனால் அந்த யானை மிகவும் துன்பமடைந்து துதிக்கையில் தாமரைப் புஷ்பத்தை வைத்துக் கொண்டு, 'ஆதி புருஷ! ஸகல லோகத்துக்கும் அதிபதியே கேட்பவர் களைப் பரிசுத்தப்படுத்தும் கீர்த்தியுள்ளவரே' என்னைக் காப்பாற்ற வேண்டும். உம்முடைய நாமங்களைக் கேட்பவர்களுக்கு ஸகல மங்களமும் உண்டாகின்றன" என உரக்கக் கதறிற்று. அளவற்ற மஹிமையுள்ள ஸ்ரீ நாராயணன் அதனைக் கேட்டுச் சக்ராயுதத்தைத் தரித்து, கருடன் மீது ஏறிக்கொண்டு அவ்விடம் வந்து சக்ராயுதத்தால் முதலையின் வாயைப் பிளந்து சரணமடைந்த யானையின் துதிக்கையைப் பிடித்து மிகுந்த கருணையால் அதை அக்குளத்திலிருந்து கரை சேர்த்தார். பின்னும் யக்ஞ புருஷனாகிய மஹாவிஷ்ணுவானவர் அதிதி தேவியின் புத்திரர் களான தேவர்களுக்குத் தம்பியாய் அவதரித்தவரானா லும், குணங்களால் சிறந்தவராயும், வாமன ரூபியாயு மிருந்து பலிச் சக்ரவர்த்தியினிடம் மூன்று அடி பூமியைப் பெற்று ஸகல உலகங்களையும் ஆக்ரமித்தார். உலகத்தில் தர்மம் தவறாமல் நடப்பவர்கள் சத்துருவைக் கொல்லும் ஸாமர்த்யமுள்ளவர்களானாலும அவர்கள் உடைய ஐசுவர்யத்தை அபஹரிப்பதற்கு யாசிக்கிற வழியைத் தவிர வேறு மார்க்கமில்லை. ஓ நாரத பலிச் சக்ர வர்த்தியானவன் பகவானுடைய பாதங்களை அலம்பி, அந்தச் சுத்தமான தீர்த்தத்தைத் தன்னுடைய தலையில் புரோக்ஷித்துக் கொண்டு (தனது புரோஹிதரான சுக்ராச்சாரியரால் தடுக்கப்பட்டும்) ப்ரதிக்ஞையை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தால்

மூவுலகத்தையும், தன்னுடைய சரீரத்தையும் சத்துரு வாகிய பகவானுக்குக் கொடுத்தான். அப்படிப்பட்ட பக்தனுக்கு பகவான் தேவராஜ்யத்தைக் கொடுப்பது போதாதென்று நினைத்துத் தமது ஸாலோக்யத்தைக் கொடுத்தார். மேலும் நீர் விசேஷ பக்தியுள்ளவராய், பகவானை நோக்கி யோக சாஸ்திரத்தை உபதேசிக்க வேண்டுமென்று கேட்டீர் அல்லவா? அப்பொழுது அவர் வாஸுதேவரே நம்மைக் காப்பாற்றுகிறவர் என்று நிச்சயமாய் நம்பியிருப்பவர்களால் சீக்கிரத்தில் அறியக்கூடியதும், பாகவத சாஸ்திரத்தில் வர்ணிக்கப் படுகிறதும் ஆத்மாவின் உண்மையைக் காட்டுகிறது மான ஞானத்தையும், யோகத்தையும் உமக்கு உபதேசித்தார். மேலும், மன்வந்தரங்களில் பகவான் மனுவின் வம்சத்தைக் காப்பாற்றுகிறவராய்ப் பத்துத் திக்குகளிலும் தம்முடைய தேஜஸை ஸ்தாபித்து, அதனால் துஷ்டர்களான அரசர்களை நிக்ரஹித்து தம்முடைய கீர்த்தியை ஸத்திய லோகத்திலும் பரவச் செய்கிறார். அந்தப் பரமாத்மாவேதான் தன்வந்த்ரியாக அவதரித்து தம்முடைய கீர்த்தி யென்கிற பெயரி னாலேயே மஹாரோக முள்ளவர்களுடைய வியாதியைப் போக்குகிறார்; பின்னும் தீர்க்கமான ஆயுஸைக் கொடுக்கக் கூடிய அந்தப் பகவான் யாகங்களில் ஹவிர்பாகத்தை (முந்தி அஸுரர்களால் தடுக்கப்பட்டிருந்ததை) அடைந்தார். மேலும், ஆயுர் வேதமாகிய வைத்திய சாஸ்திரத்தையும் உலகத்தில் பரவச் செய்தார். தவிரவும் மிகுந்த பராக்கிரமமுள்ள வரும், மஹாத்மாவுமான அந்த நாராயணன் பரசு ராமனாக அவதரித்துப் ப்ராம்மணர்களைத் துவேஷித்த வர்களும் நன்மார்க்கத்தை விட்டுத்தவறினவர்களும், நரகத்தை அடைய விரும்பினவர்களும் நாசத்தை

அடைவதற்கு என்றே தெய்வத்தால் விருத்தி பண்ணப் பட்டவர்களும் பூமிக்கு மிகுந்த உபத்திரவத்தைச் செய்பவர்களுமான க்ஷத்திரியர்களை இருபத்தோருதரம் கோடரியைக் கொண்டு கொன்றார். அந்த மஹா புருஷனே, என்னிடத்தில் தபவு செய்து, முகமலர்ச்சி யுள்ளவராய் இக்ஷ்வாகு வம்சத்தில் தம்முடைய அம்சங்களாகிய பரதன் முதலியவர்களுடன் தசரதருக்குப் பிள்ளையாக ஸ்ரீராமனென்ற பெயருடன் அவதரிப் பார். பிறகு பிதாவாகிய தசரதருடைய அனுமதியின் மேல் தம்பியாகிய லக்ஷ்மணருடனும், பார்யையான ஸீதாதேவியுடனும் தண்டகாரண்யஞ் செல்வார். அப்பொழுது இராவணன் அவரிடம் விரோதம் செய்து கொண்டதனால் பந்துக்களை யிழப்பான். பின்பு திரிபுர ஸம்ஹாரம் செய்வதற்கு முயற்சித்த பரமசிவன் போல ராவணனைக் கொல்வதற்காக இலங்கா நகரம் போக விரும்பிய ராமனைக் கண்டு ஸமுத்திரம் பயந்து நடுங்கும். மேலும் ஸீதையானவள் இலங்கா நகரத்திலிருப்பதால் அவளைப் பாராமல் கலங்கியதும், கோபத்தால்ப் சிவந்ததுமான ஸ்ரீ ராமன் உடைய பார்வையால் அந்த ஸமுத்திரத்திலிருக்கும் மகரங்களும், ஸர்ப்பங்களும், முதலைகளும் மிகவும் தாபத்தையடையும். பின்பு ஸமுத்திரம் வழிகாட்டும்; அதன் வழியாக ஸ்ரீராமன் இலங்கா நகரம் போவார்; அவ்விடத்தில் வஸிக்கும் ராவணன் மிகவும் பலமுள்ள வன்; அவன் ஐராவதத்துடன் யுத்தம் செய்யும் போது, அது தன்னுடைய தந்தங்களால் இராவணனுடைய மார்பில் குத்திற்று; பிறகு அவைகளை பிடுங்க முடியாமல் தலையை அசைக்கத் தந்தங்கள் முறிந்து போயின. அப்படி இராவணனுடைய மார்பில் பதிந்த யானையின் தந்தங்களுடைய காந்தியால் பத்துத்

திக்குகளும் ப்ரகாசிக்கின்றன. தவிரவும், அவன், எனக்கு ஸமமானவர்கள் உலகத்தில் யார் இருக்கிறார் கள் ? என்று கர்வத்தால் சிரிப்பதுமுண்டு. அப்படிப் பட்ட சத்ருவாகிய அந்த ராக்ஷஸனுடைய கர்வத்தை ஸைன்யத்தின் மத்தியில் வில்வினுடைய சப்தத்தாலேயே போக்கடித்து, அவனை நாசஞ் செய்யப் போகிறார். பிறகு அஸுராம்சமான அரசர்கள் வெகுவாய்ப் பூமியில் பிறந்ததனால் பூமிக்கு விசேஷ பாரம் ஏற்படுமாதலால் அதனை நிவர்த்திப்பதற்காக ஸாமான்ய ஜனங்களால் அறியக்கூடாத மார்க்கமுள்ள வரும், வெண்மை நிறமுள்ளது, கருமை நிறமுள்ளது மான தலைமயிர்களுள்ளவருமான ஸ்ரீ மஹாவிஷ்ணு வானவர் பலராமனாகவும் கிருஷ்ணனாகவும் அவதரித்து, தம்முடைய மஹிமையைக் காட்டும் லீலைகளைச் செய்வார். எப்படியெனில் அவர் குழந்தையாயிருக்கும்போது பூதனை யென்ற ராக்ஷஸியைக் கொல்வார். மூன்றுமாதங்கள் சென்ற பிறகு சகட ரூபியான அஸுரனை ஸம்ஹரிப்பார். முழங்கால்களைக் கொண்டு தவழும் போதே ஆகாசம் வரையில் உயர்ந்தவைகளான அர்ஜுன மரங்களின் நடுவில் புகுந்து அவைகளைப் பூமியில் தள்ளுவார். அவர் பகவதவதாரமாயில்லா விடில் இப்படிச் செய்யமுடியாது. தவிரவும், விஷ ஜலத்தைக் குடித்து மூர்ச்சையடைந்த இடையர்களையும்; பசுக்களையும் தம்முடைய அனுக்கிரஹமுள்ள பார்வையால் பிழைக்கச் செய்து யமுனையிலிருந்து அந்த மடுவைச் சுத்தப்படுத்துவதற்காக அதிலிருந்து மிகுந்த விஷ வேகமுள்ள காளியனென்ற ஸர்ப்பத்தை அதைவிட்டு ஓடும்படி செய்வார் பிறகு, அந்த அமானுஷ காரியத்தைப் பார்த்து கோபர்கள் ஆச்சரியமடைந்து

அன்று இரவு யமுனையின் கரையில் படுத்துத் தூங்கு வார்கள். கோடைக் காலமாகையால் அப்பொழுது நான்கு புறத்திலும் காட்டில் அக்கினி பற்றிக்கொள்ளும். அப்பொழுது ஒருவராலும் அறியக் கூடாத வீர்யமுள்ள பகவான் பலராமனுடன் கோபர்கள் அனைவரையும் கண்களை மூடிக் கொள்ளச் செய்து, அவர்களை அந்த ஆபத்திலிருந்தும் காப்பாற்றுவார். மேலும் அவருடைய தாயான யசோதையானவள் தன் வீட்டிலிருக்கும் கயிறுகளால் பிள்ளையான ஸ்ரீ கிருஷ்ணனைக் கட்டியும், அவைகள் முடிவதற்குப் போதாமலிருக்கும். அப்பொழுது, அந்தப் பகவான் கொட்டாவி விட்டு வாயைத் திறப்பார். யசோதை அவருடைய வயிற்றில் பதினான்கு லோகங்களையும் பார்த்துப் புத்திரனுடைய மஹிமையைத் தெரிந்து கொள்வாள். தவிரவும், வருணருடைய பாசத்தால் கட்டப்பட்டுள்ள நந்தகோபரை ஸம்ரக்ஷிப்பார். மயனுடைய புத்திரனால் பூமிக்குள் மறைக்கப்பட்டு இருந்த கோபர்களைக் காப்பாற்றுவார். பகல்முழுவதும் வேலைசெய்து களைத்து, இராத்திரி தூங்கிக் கொண்டிருக்கும் கோகுலவாஸிகளான ஜனங்களை வைகுண்ட லோகஞ் சேர்ப்பார். . இந்திரனை உத்தேசித்துக் கோபர்களால் ஒவ்வொரு வருஷத்திலும் செய்யப்பட்டு வரும் பூஜையானது ஒரு வருஷத்தில் நிறுத்தப்படும். அதனால் மிகவும் கோபங் கொண்டு பசுக்களை நாசஞ் செய்வதற்காக மழையை பெய்யச் செய்வார். அப்போது ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஏழு வயதுள்ளவரானாலும் கோவர்த்தனமென்னும் மலையை நாய்க்குடையைப் போல் எளிதில் ஒரு கையால் தூக்கிக் குடையாக ஏழுநாள் வரையிலும் பிடித்துப் பசுக்களையும், கோபர்களையும்

காப்பாற்றுவார். ஒரு நாள் ராத்திரியில் சந்திரிகை யால் வெண்ணிறமுள்ள காட்டில் ராஸக்கிரீடையில் பகவான் கானம் பண்ணுவார். அந்தப் பாட்டிலுள்ள பதங்கள் இனியவைகளாயிருக்கும், ராகாலாபனம் மிக்கமேலானதாக இருக்கும். அதனால் கோபிகை களுக்கும் மன்மத தாபம் விருத்தியாகும். அந்த ஸமயத்தில் அவர்களைச் சங்கசூடன் என்ற குபேரன் உடைய வேலைக்காரன் அபஹரித்துப் போவான். பகவான் அவனை ஸம்ஹரிப்பார். மேலும் பகன், கேசி, அரிஷ்டன் சாணூரன் முதலிய மல்லர்கள்,

குவலயாபீடமென்ற யானை, கம்ஸன், நரகாஸுரன் மௌண்ட்ரகன், ஸால்வன், தந்தவக்திரன், சம்பரன் விடூதரன், யவனன், ஏழு விருஷபங்கள் ஆகிய இவர்கள் ஸ்ரீ கிருஷ்ண பகவானாலும், பிரலம்பன், தேனுகன், துவிதனென்ற வானரன், பல்வலவன், ருக்மி முதலியவர்கள் பலராம ரூபியான மஹாவிஷ்ணு வினாலும், யுத்தத்தில் மிகுந்த ஸாமார்த்தியமுள்ள காம்போஜர், மத்ஸயர், குருக்கள், ஸிருஞ்ஜயர், கேகயர் முதலியவர்கள் பீமார்ஜுன ரூபமாகிய பரமபுருஷனா லும் கொல்லப்பட்டு வைகுண்டஞ் சேர்க்கப்படுவார் கள். பின்னும், கால மஹிமையால் ஜனங்களுக்கும் ஆயுஸும் புத்தியும் குறையும்போது, பகவான் ஒவ்வொரு யுகத்திலும்; ஸத்ய வதியினிடம் அவதரித்து, ஸமுத்திரம் போல விஸ்தாரமாகிய வேதங்களை அவர்களுக்குத் தக்கபடி சாகை சாகைகளாகப் பிரிப்பார். பின்னும் ஒரு காலத்தில் அஸுரர்கள் வேதமார்க்கத்தை ஆச்ரயித்து மயனால் செய்யப் பட்டதும் அறியக் கூடாத வேகமுள்ளதுமான (இரும்பு, வெள்ளி, தாமிரம் இவைகளால்

செய்யப்பட்ட) பட்டணங்களால் லோகங்களை உபத்திரவிப்பார்கள். அப்பொழுது பகவான் அவர்கள் உடைய புத்திக்கு மோஹத்தையும் (யுக்தமானவை களை விட்டுவிடுவது) ப்ரலோபத்தையும் (யுக்தமல்லாத வைகளை கிரஹிப்பது) உண்டாக்கும் பாஷண்ட வேஷத்தைத் தரித்து (புத்தாவதாரஞ் செய்து) தர்மம் போலத் தோன்றும் பாஷண்ட தர்மத்தை வெகுவாகச் சொல்வார். எப்பொழுது ஸாதுக்களுடைய கிருஹங்களிலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சரிதங்கள் கானஞ் செய்யப்படாமல் இருக்குமோ, எந்தக் காலத்தில் ப்ராம்மணர்களும், க்ஷத்ரியர்களும், வைச்யர்களும் பாஷண்டர்களாகவும், சூத்ரர்கள் அரசர்களாகவு மிருப்பார்களோ, எந்த ஸமயத்தில் ஸ்வாஹா, ஸ்வதா, வஷட் என்ற சப்தங்கள் கேட்க அரிதாகவிருக்குமோ, அப்பொழுது (கலியுகத்தின் முடிவில்) கல்கியாகிப் பகவான் அவதரித்துக் கலியை நிக்ரஹிப்பார். மேலும் நான் துஸும் (ஸ்ருஷ்டிக்கு முன்னிருந்த நிலையை யோஜிப்பது) மரீசி முதலிய ஒன்பது பிரஜாதிபதிகளும் ஜகத்தை ஸ்ருஷ்டிப்பதற்காக ஏற்பட்ட பகவான் உடைய மாயா விபூதிகளேயாம். தர்மமும், யக்ஞமும் (விஷ்ணு) மனுக்களும்; தேவ சிரேஷ்டர்களும் அரசர் களும், ஜகத்தைக் காப்பாற்றுவதற்காக நியமிக்கப் பட்ட விபூதிகளாகிறார்கள். அதர்மமும், ருத்ரரும், கோப ஸ்வபாவமுள்ள ஸர்ப்பங்களும், அஸுரர்களும், ஸம்ஹாரத்திற்காக ஏற்படுத்தப்பட்டவைகள். ஆகை யால் இந்த ஈச்வரனுடைய மாயா விபூதிகளெல்லாம் அளவற்ற ஆச்சர்யகரமான சக்தியுள்ளவைகள். பூமியின் தூளிகளைப் பிரித்து எண்ணக்கூடிய சக்தியுள்ள கவியாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் லீலா விபூதிகள் எல்லாவற்றையும் அறிய முடியாது.

ஆகையால் சுருக்கமாகச் சொன்னேன். அந்தப் பகவான் மிகவும் அசைந்து கொண்டிருந்ததும், ஸத்திய லோகத்திற்குக் கீழ்ப்பட்டதுமான ஸ்வர்க்கத்தைத் தம்முடைய தடையற்ற வேகத்தால் அசையாமல் இருக்கச் செய்தார். ஆகையால் எனக்கும்; உமக்கும் மூத்தவர்களான ஸநத்குமாரர் முதலியவர்களுக்கும், அந்தப் புருஷனுடைய மாயாபலம் இவ்வளவென்று தெரியாது. மற்றவர்கள் தெரிந்துகொள்ள நியாயமே யில்லை. ஆயிரம் முகங்களுள்ள ஆதிசேஷ பகவானும் அந்தப் பரமபுருஷனுடைய மஹிமையைக் கானம் பண்ணி, அதன் கரையை அடைய அசக்தராயிருக் கிறார். (முழுவதையும் சொல்ல முடியவில்லை) கடபமற்றுப் பகவானுடைய பாதங்களைப் பூஜிப்பவர் களிடத்தில் (பக்தி செய்பவர்களிடத்தில்) அவருக்குக் கருணை உண்டாகும். புருஷோத்தமருடைய மாயா பலத்தை நன்றாய்த் தெரிந்து கொண்டு அதையும் தாண்டுவார்கள். நாய், நரிகளுக்கு ஆஹாரமாகிய இந்த சரீரத்தில் அவர்களுக்கு மானமிராது. ஓ நாரத, ப்ரஹ்மாவாகிய நான், நீர், உமக்கு முன் பிறந்தவர்களான ஸனத்குமாரர் முதலியவர்கள், பகவானாகிய பரமசிவன், ப்ரஹ்லாதன்; ஸ்வாயம்புவ மனு, அவருடைய பத்தினியாகிய சதரூபை, அவருடைய பெண்கள், பிள்ளைகள் பிராசீனபர்ஹிஸ், ரிபு, என்னும் மஹரிஷி, வேனனுடைய பிதாவாகிய அங்கன், துருவன், இக்ஷ்வாகு, நளன், முசுகுந்தன், வைதேஹர், காதி, ரகு, அம்பரீஷன், ஸகரர், கயன், நஹுஷன், மாந்தாதா, அலர்க்கன், சததன்வா, நந்திதேவர், பீஷ்மர், பலி, அதூர்த் தரயன், திலீபர், ஸௌபரி, உதங்கர், சிபி.தேவலர்,பிப்பலாதர், ஸாரஸ்வதர் உத்தவர் பூரிஷேனர், பராசரர்,

விபீஷணன், ஹனுமான், சுகர், அர்ஜுனன், ஆர்ஷ்ணி ஷேணர், விதுரர், சுருததேவர் முதலிய மற்றவர்கள் ஆகிய எல்லோரும் பகவானுடைய யோகமாயையை அறிவோம். ஸ்திரீகளும், சூத்ரர்களும், ஹூணர்களும் (ஜாதி விசேஷங்கள்) வேடர்கள் பாபகர்மத்தைச் செய்து ஜீவிக்கிறவர்களும், பசு, பக்ஷி முதலிய திர்யக் ஜாதிகளும், பகவத் பக்தர்களுடைய சேர்க்கையாலேயே தேவமாயையைத் தெரிந்து கொண்டு, அதைத் தாண்டுகிறார்கள். சாஸ்திரங்களை அப்யசித்து, அவற்றை மனஸில் தரிக்கக்கூடிய சக்தியுள்ளவர்கள் மாயையை ஜயிப்பார்கள் என்பதில் சந்தேஹமே யில்லை. அந்தப் பரமாத்ம ஸ்வரூபமானது எப்பொழு தும் சாந்தமாயிருக்கிறது. தன்னை அடைந்தவர் களுக்கு ஸம்ஸார பயத்தைப் போக்கி அபயத்தைக் கொடுக்கிறது. அது சுத்தமாகிய ஞானஸ்வரூபம். தோஷமற்றது. எக்காலத்திலும் ஒரே தன்மை யுள்ளதாயிருப்பது. கார்யம், காரணம் இவைகளைவிட வேறானது. பலவகையான காரகம் கிரியை இவைகளுள்ள வேத சப்தங்களால் அந்த ஸ்வரூபம் நிரூபிக்கப்படுகிறதில்லை. மாயையானது புதிதாகக் கல்யாணஞ் செய்துகொண்ட சிறு பெண் போல வெட்கமுள்ளதாய் அந்த ஸ்வரூபத்திற்கு முன்பாக நிற்கிறதில்லை. (அதில் ஸம்பந்தப்படுகிறதில்லை.) அந்த ஸ்வரூபமே ப்ரஹ்மம். அது சோகமற்றது. எப்பொழுதும் ஸுகரூபமானது. அதனிடத்தில் மனத்தைச் செலுத்திய யோகிகள் வேறொன்றையும் அபேக்ஷிக்கிறதில்லை. மழை பெய்யச் செய்யும் மகேந்திரன் ஜலத்திற்காகக் கிணறு வெட்ட வேண்டி மண் வெட்டியை எடுத்துக் கொள்வானா? பல வகையான தாதுக்களால் உண்டான சரீரமானது

அந்தத் தாதுக்கள் பிரியும்போது நாசமடைந்தாலும் ஜீவன் ஆகாசம் போல் நாசமடைகிறதில்லை. ஏனென்றால் அவன் அதனுடன் உண்டானவனல்ல. ஜன்மம் முதலிய விகாரங்களற்றவன். அந்த ஜீவனுக்கு ஸகல வித க்ஷேமத்தையும் கொடுப்பவரும் அந்த மஹா புருஷனேயாம். மகத் தத்வம் முதலியவைகளின் பரிணாம விசேஷங்களால் ஏற்படும் சுபங்கள் அவரிடமிருந்தே உண்டாகின்றன. ஓ, குழந்தாய்! நாரத பகவானுடைய ஸ்வரூபத்தைச் சுருக்கமாகச் சொன்னேன். காரிய காரணங்களடங்கிய ஜகத்தில் அவரைக் காட்டிலும் வேறொன்றுமில்லை. (எல்லாம் பரமாத்ம ஸ்வரூப மென்று கருத்து.) ஸ்ரீமந் நாராயணனால் எனக்கு உபதேசிக்கப்பட்டபடி பகவானுடைய விபூதிகளை உனக்குச் சுருக்கமாகச் சொன்னேன். ஸகல ஸ்வரூபியாகவும், ஸகலத்திற்கு ஆதாரமாயிருக்கும் ஸ்ரீ நாராயணனிடத்தில் மனிதர் களுக்குப் பக்தியுண்டாகும்படி நீ இதை விஸ்தாரப் படுத்து. மோக்ஷத்திற்கு அதிபதியான ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் பூர்ணமாகிய பக்தி யிருக்குமானால், ஜீவன் மனுஷ்ய சரீரத்தில் ஆசைப்படமாட்டான். ஸ்திரமற்ற பார்யை, புத்திரன் முதலியவர்களால் என்ன பிரயோஜனம்? ஸகல பாபங்களையும் போக்கக்கூடிய உத்தம ச்லோகராகிய பகவானிடம் பக்தியுண்டாகாவிடில் அவன் செய்யும் தானங்களா லும் தபஸினாலும் ப்ரயோஜனமில்லை. மேலும் ஜாதிக்கும் ஆசிரமத்திற்கும் தகுந்த தர்மங்களை யனுஷ்டிப்பதாலும், சாஸ்திரங்களை படிப்பதாலும் பலனில்லை.

55. ஆகையால், ஸ்ரீ கிருஷ்ணனாகிய பரமாத்மா வினுடைய லீலைகளை வர்ணிப்பவர்களுக்கும், அதை

அனுமோதிப்பவர்களுக்கும், ச்ரத்தையுடன் நித்தியம் கேட்பவர்களுக்கும் அவித்யை விலகும் என்று ப்ரஹ்மதேவர் சொன்னார்" என்று நாரதருக்கும் ப்ரஹ்மதேவருக்கும் நடந்த ஸம்வாதத்தைப் பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சுகர் உபதேசித்தார்.

நோட்டு

நான்கு –மூலத்தில் சதுஸ்ஸன என்றிருப்பதால் அதற்கு நான்கு புருஷார்த்தங்களைக் கொடுப்பவர் ஆகையால் தத்தாத்ரேயருக்கே சதுஸ்ஸனா என்றும் மற்றொரு பெயர் – சந்த். ப்ரஹ்மதேவருடைய தபோமகிமையால் ஸனத். ஸநாதந, ஸகந்தன, ஸனக என்று நால்வகையாக அவதரித்தார் – வீர. ஸனகர், ஸனாதனர், ஸனந்தனர், ஸனத்குமாரர் என்ற திவ்ய நாமதேயங்களை அடைந்தார் – விஜ. முடியவில்லை இந்தக் கதை பதினோராவது ஸ்கந்தத்தில் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது. வெண்மை நிற பகவானுடைய தலைமயிர்களில் வெண்மை நிறமுள்ளவை சில. கருமை நிறமுள்ளவை சில. அப்படி யிருப்பது அழகேயாம். ஜரை (கிழத்தனம்) யால் ஏற்பட்டதல்ல ஓ மஹாமுனியே! வெண்மை நிறமுள்ளவையும் கருமை நிறமுள்ளவையுமான தம்முடைய கேசங்களை எடுத்தார். –விஷ்ணு புராணம் அந்த ஹரியும் வெண்மை நிறமுள்ள ஒரு மயிரையும், கருமை நிறமுள்ள ஒரு மயிரையும் எறிந்தார். அவை யதுகுலத்திலிருக்கும் ரோகிணி, தேவகி இருவர்களை யும் அடைந்தன. அவ்விரு கேசங்களில் வெண்மை நிறமுள்ளது பலராமனாக ஆயிற்று. கருமை

நிறமுள்ளது ஸ்ரீ கிருஷ்ணனாக அவதரித்தது. மஹா பாரதம். கேசம் அவதரித்தது என்பதால் பகவான் உடைய கேசமே துஷ்டர்களைக் கொல்ல ஸாமார்த்திய முள்ளது என்று காட்டப்பட்டது. பலராமன், ஸ்ரீ கிருஷ்ணன் ஆகிய இவர்களுடைய நிறமும் காட்டப் பட்டது. கேசமே அவதரித்தது என்று தாத்பரியமல்ல. ஸ்ரீ கிருஷ்ணன் ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவே என்று அர்த்தமுள்ள வசனத்தின் விரோதமேற்படுமாகையால் மேற்காட்டியபடியே அர்த்தங்கொள்ள வேண்டும். ஸ்ரீத, ஸ்திரீகளும் ஸ்திரீகளும் சூத்ரர்களும் வேதத்தை அத்யனஞ் செய்யக் கூடாது என்ற சுருதியின்படி வேதாத்யனத்திற்கு அனர்ஹர்களும் தாண்டுகிறார்கள்– முக்தியடைகிறார்கள். வேத சப்தங்களால் பத்தாவது ஸ்கந்தத்தில் ஸ்ருதி கீதையில் இந்த விஷயம் நன்றாய்க் காட்டப்பட்டிருக்கிறது.

அத்தியாயம்- 8

பரீஷித்தின் கேள்வி

அதனைக்கேட்ட பரீஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி ஓ தத்துவத்தைபறிந்தவர்களுக்குள் சிறந்தவரே! மிக்க அதிர்ஷ்டமுள்ளவரே, குணங்களை அதிக்கிரமித் வரராகிய பகவானுடைய குணங்களை, வர்ணிக்கும் படி திவ்ய திருஷ்டியுள்ள நாரதரைப் ப்ரஹ்மதேவர் தூண்டினாரல்லவா? பின்பு அந்த நாரதர் யார் யாருக்கு அந்தப் பகவத் குணங்களை எப்படி உபதேசித் தார்? அதனுடைய உண்மையை அறியவிரும்புகிறேன். அற்புதமான மகிமையுள்ள பகவானுடைய மங்களகர மாகிய கதைகளைச் சொல்ல வேண்டும். அவைகளைக் கேட்டு ச்ரத்தையாய் அவருடைய சரிதங்களை உச்சரிப் பவர்களுடைய மனத்தில் பகவான் வெகு சீக்கிரமாய்ப் ப்ரவேசிக்கிறார். விஷயங்களில் ஆசையொழிந்து மனஸைப் பகவானிடத்தில் செலுத்தி, சரீரத்தைவிட வேண்டும. சரத்காலமானது ஜலத்திலுள்ள தோஷத் தைப்போக்கி, அதை தெளியச் செய்வது போல் ஸ்ரீ கிருஷ்ண பகவான் காதின் வழியாகப் பக்தர்களுடைய ஹ்ருதய கமலத்தில் ப்ரவேசித்து மனோதோஷங்களை நாசஞ் செய்கிறார். சுத்தமான மனமுள்ள புருஷன் ஆசை, துவேஷம் முதலியவைகளை ஒழித்து கிருஷ் ணனுடைய பாதங்களை ஒருபொழுதும் விடமாட் டான். தேசாந்தரத்திலிருந்து வந்தவர்கள் தமக்குச் சொந்தமாகிய வீட்டை விடுவார்களா? தேஹத்தை யுண்டுபண்ணும் மகாபூதங்களுடைய ஸம்பந்தமற்ற வராகிய பகவானுக்கு தேஹம் எப்படி உண்டா கிறது? அல்லது காரணமில்லாமல் உண்டாகிறதா?

அதன் உண்மை உமக்குத் தெரியும். அதனைச் சொல்லவேண்டும். ஸகல லோகங்களின் அமைப்புள்ள புவன கோசமாகிய பத்மமானது எவருடையவயிற்றில் இருந்து உண்டானதோ. அந்தப் புருஷன் உண்மையில் அவயங்களில்லாதவரானாலும், லௌகிக புருஷனுக்கு எவ்வளவு அவயவங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு அவயவங்கள் உள்ளவரென்றும் அப்படிப்பட்ட அவயவங்களின் அமைப்புள்ளவெரென்று சொல்லப் படுகிறாரே, பகவானுடைய கொப்பூழில் தோன்றிய தாமரஸ புஷ்பத்திலிருந்து உண்டானவரும், ஐந்து பூதங்களாலேற்பட்ட சரீரமுள்ளவருமான ப்ரஹ்மதேவர் எவருடைய அனுக்கிரஹத்தால் ப்ராணிகளை ஸ்ருஷ்டிக்கிறார்? விராட்ரூபத்தை எப்படி நேரில் பார்த்தார்? அதைச் சொல்லவேண்டும் மாயைக்கு அதிபதியும் ஸகல கல்யாண குணங்களுக்கு இருப்பிட மாயும் ஜகத்தை உண்டுபண்ணுகிறவரும், அதைப் பரிபாலிப்பவரும், அதை ஸம்ஹரிப்பவருமான மஹா புருஷன் தம்முடைய மாயையைவிட்டு எவ்விடத்தில் சயனித்துக் கொள்கிறார்? தவிரவும் அந்த மஹா புருஷனுடைய அவயவங்களால், உலகங்களும், அவற்றின் அதிபதிகளும் ஸ்ருஷ்டிக்கப்பட்டார்கள் என்றும், லோகபாலர்களால் அந்தப் புருஷனுடைய அவயவங்கள் ஏற்பட்டன என்றும் சொல்லியிருக் கிறீரல்லவா? அதையும் விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும் மேலும், கல்பம் என்பதும், விகல்பம் என்பதும் எவ்வளவு காலங்கொண்டது? நடந்தது. நடக்கிறது, இனி நடப்பது ஆகிய காலங்களுள் எப்படி அனுமானிக்கப்படுகின்றன? ப்ரஹ்மதேவர் முதலிய வர்களின் ஆயுள் எவ்வளவு காலங்களடங்கியது? ஓ ப்ராஹ்மணோத்தம! காஷ்டை முதலாக அணுவாகியதும்,

வர்ஷம் முதலாகப் பெரிதாகியதுமான காலத்தின் பேதங்கள் எப்போர்ப்பட்டவைகள்? கர்மங்களால் அடையக்கூடிய ஸ்தானங்கள் எவை? அவைகளின் ஸ்வரூபம் யாது? ஸத்வம் முதலிய குணங்களும், குணமுள்ளவர்களான ஜீவர்களும் பரிணாமத்தை (வேறு ரூபத்தை) அடையுமிடும் போது புண்ய பாப கர்மங்களுடைய கூட்டம் எதனால், எப்படிக் கிரஹிக்கப்படுகிறது? (எந்தக் கர்மங்களை, எப்படிச் செய்தால், எவன் தேவாதி சரீரத்தை அடைவான் என்று கருத்து) தவிரவும் பூமி, பாதாளம், திக்குகள், ஆகாசம் கிரஹங்கள், நக்ஷத்திரங்கள் மலைகள், ஆறுகள், ஸமுத்திரம், த்வீபங்கள் ஆகிய இவைகள் உற்பத்தியையும், அவைகளில் வஸிக்கும் ப்ராணிகளின் உற்பத்தியையும் சொல்லவேண்டும். அண்டகோசத்தின் வெளியிலும், உள்ளேயுமுள்ள அளவும், மஹாபுருஷர் களுடைய சரிதமும் வர்ணங்கள் ஆசிரமங்கள் ஆகிய இவைகளின் நிச்சயமும் சொல்லப்படவேண்டும். பின்னும் பகவானுடைய ஆச்சர்யகரமான அவதாரங் களுடைய சரிதத்தையும் யுகங்களுடைய மானத்தையும் ஒவ்வொரு யுகத்தின் தர்மங்களையும், மனிதர்களுக்குப் பொதுவாகிய தர்மங்களையும், யார் யார், எவ்வித ஜீவனஞ் செய்கிறார்களோ அதற்குத் தகுந்த தர்மங் களையும், ராஜ தர்மங்களையும், ஆபத்தர்மங் களையும் கேட்க விரும்புகிறேன். தத்துவங்களுடைய ஸ்வரூபம், அவைகளின் காரணம், பகவானை ஆராதிக்கும் முறை. அஷ்டாங்க யோகத்தின் முறை, யோகாப்யாசஞ் செய்து அணிமா முதலிய ஐசுவரியங் களையடைந்து, அர்ச்சிராதி மார்க்கத்தை யடைதல்; லிங்க சரீரத்தின் லயம் இவைகளையும், வேதங்கள்; ஆயுர்வேதம் முதலிய உபவேதங்கள், தர்ம சாஸ்திரம்.

இதிகாஸம், புராணம் முதலியவைகளின் ஸ்வரூபத்தையும் நிரூபிக்கவேண்டும். மேலும் ஸகல பிராணிகளுடைய உற்பத்தி, ஸ்திதி ஸம்ஹாரம், , யாகம் குளம் வெட்டுவிப்பது முதலிய பூர்த்த தர்மம், அக்னிஹோத்ரம் முதலிய காம்ய கர்மங்கள் தர்மார்த்த கர்மங்கள் ஆகிய இவைகளை அனுஷ்டிக்கும் முறைகளையும் சொல்லவேண்டும். அணுசாயிகளான ஜீவர்களுடைய உற்பத்தியையும், பாஷண்ட தர்மத்தின் உற்பத்தியையும் ஆத்மாவிற்கு ஏற்படும் பந்த மோக்ஷங்களையும். ஆத்மா சுத்த ஸ்வரூபராக இருப்பதையும், ஸ்வதந்தரராகிய பகவான் தம்முடைய மாயையுடன் விளையாடுகிறதையும்; அந்த மாயையை விட்டு ஸாக்ஷிபோல உதாசீனராக இருப்பதையும், மற்றும் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள விரும்பி, தங்களைப் பிரார்த்திக்கும் சரணாகதனாகிய எனக்கு வரிசையாகச் சொல்லவேண்டும். ப்ரஹ்மதேவரால் இவைகள் அறியப்பட்டிருப்பது போல உம்மாலும் நன்றாய் அறியப்பட்டிருக்கின்றன. முன்னோர்கள் அனுஷ்டித்த தர்மத்தையே பிந்தியவர்கள் அனுஷ்டிக்கிறார்கள். ஓ ப்ராஹ்மண நான் போஜனம் செய்யாமல் விரதமுள்ளவனானாலும் தங்களுடைய முகமாகிய தாமரை மலரிலிருந்து பெருகிவரும் பகவத் கதையாகிய அமிருதத்தைப் பானஞ் செய்வதால் ப்ராணனுக்கு யாதொரு உபத்திரவமுமில்லை. ஆகையால், நாரதருக்கு ப்ரஹ்மதேவர் உபதேசித்த படி எனக்குக் தாங்கள் உபதேசிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார்.

27–29. அவற்றைக் கேட்ட சுகர் அரசனிடம் மிகவும் சந்தோஷமடைந்து, 'பகவானுடைய சரிதத்தைச்

சொல்லுகிறேன்' என்று ஒப்புக்கொண்டு, ப்ரஹ்ம கல்பத்தில் ப்ரஹ்ம தேவருக்கு ஸ்ரீநாராயணனால் உபதேசிக்கப்பட்டதும் வேதத்திற்கு சமமானதுமாகிய பாகவதத்தையே பாண்டு குலத்தில் பிறந்தவரும், மேலானவருமான பரீக்ஷித்து மஹாராஜன் கேட்டவைகளுக்குக் கிரமமாய் மறுமொழி சொல்ல ஆரம்பித்தார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–9

சுகருடைய மறுமொழி

ஓ மஹாராஜ அனுபவ ஸ்வரூபியான பரமாத்மாவிற்குத் தேஹமும் முதலியவைகளின் ஸம்பந்தம் ஸம்பவிக்கிறதில்லை. சொப்பனத்தில் கண்ட தேஹத்தின் சம்பந்தம் உண்மையில் ஜீவனுக்கு இல்லை யல்லவா? ஆகையால் பரமாத்மாவிற்கு ஸம்ஸார சம்பந்தமானது மாயையேயொழிய உண்மையிலில்லை. மேலும், அந்த ஜீவன் பலவகையான ரூபமுள்ள மாயையால் பல விதமான ரூபமுள்ளவனாகத்தோன்றுகிறான். இந்த மாயையினுடைய குணங்களில் (விஷயங்களில்) ரமித்துக் கொண்டு 'நான், என்னுடையது' என்ற அபிமானத்தை அடைகிறான். காலம் (புருஷன்), மாயை (ப்ரக்ருதி) ஆகிய இவைகளைக் காட்டிலும் மேலான தன்னுடைய மஹிமையில் எப்பொழுது ஜீவன் ரமிக்கிறானோ அப்பொழுது 'நான், என்னுடையது' என்ற இருவகையான அபிமானத்தை விட்டு மோஹம் நீங்கி, நிஜ ரூபமாக இருக்கிறான். (பக்தி யோகத்தால் மாயா சம்பந்தம் அற்றுப்போனால் மோக்ஷமும் கிடைக்குமென்பது தாத்பர்யம்.) ஸ்ருஷ்டி காலத்தில் ப்ரஹ்மதேவர் கபடம் அற்றுத் தபஸ் செய்து பகவானை சந்தோஷப்படுத்தினார். அதனால் நாராயணன் அவரிடத்தில் பிரியப்பட்டுத் தம்முடைய சத்திய ஸ்வரூபத்தை அவருக்குக் காட்டி ஜீவனுடைய தத்துவ ஞானத்திற்காக எதனைச் சொன்னாரோ, அதை நான் உமக்குச் சொல்லுகிறேன். முற்காலத்தில் பக்தர்களுக்கு முக்கிய குருவாயும் தேவர்களுக்கு முந்தினவருமான ப்ரஹ்மதேவர் தமக்கு இருப்பிடம்

ஆகிய தாமரை புஷ்பத்திலிருந்து இந்த ஜகத்தை எப்படி ஸ்ருஷ்டிக்கிறது என்று யோசித்தார். அப்படியும் அவருக்கு அது விஷயமாய் ஒன்றும் தோன்றவில்லை. ஓ பரீக்ஷித்து மஹாராஜனே! இப்படியிருக்கையில் ஒரு சமயத்தில் ஜலத்திலிருந்து தபி என்று இரண்டு தரம் தொனியுண்டாயிற்று அவ்விரண்டு அக்ஷரங்கள் ஸ்பர்சமென்ற (ககாரம் முதல் மகாரம் வரையிலுள்ள அக்ஷரங்கள்.) அக்ஷரங்களில் பதினாறாவதும் இருபத்தொன்றாவதுமாக இருந்தன. பணத்தின் ஆசையை ஒழித்தவர்களுக்கு அவையே பணமாயிருக்கின்றன. பிறகு ப்ரஹ்மதேவர் அந்த வார்த்தையைக் கேட்டு, இதைச் சொன்னவர் யாராயிருக்கலாமென்று நான்கு புறத்திலும் திரும்பித் திரும்பிப் பார்த்ததும் அவ்விடத்தில் ஒருவரையும் காணததால் மறுபடியும் அந்தத் தாமரை புஷ்பத்திலிருந்து இதைப்பற்றி யோசித்துத் தம்மைத் தபஸ் செய்யும்படி பகவான் ஆஜ்ஞாபித்திருப்பதாக நிச்சயித்துத் தபஸிற்கு முயற்சித்தார். பின்பு வீணாகாத ஞானமுள்ளவரும் மிக்க தபஸ்வியுமான அந்த ப்ரஹ்மதேவர் ஞானேந்திரியங்களையும், கர்மேந்திரியங்களையும், மனஸையும், ப்ராணனையும் ஜயித்து, தேவமானத்தால் ஆயிரம் வர்ஷங்கள் தபஸ் செய்தார். அதனால் ஸகல லோகங்களுக்கும் தாபம் உண்டாயிற்று. இப்படித் தபஸ் செய்து ப்ரஹ்மதேவர் பரமாத்மாவைச் சந்தோஷப்படுத்தினதால் அந்தப் பகவான் தமது வைகுண்ட லோகத்தை அவருக்குக் காட்டினார். அதைக் காட்டிலும் மேலானது ஒன்றுமில்லை; அது க்ஷ்டம், மோஹம் முதலிய தோஷமற்றது. புண்யஞ் செய்தவர்களான வித்வான்களால் ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டது. மேலும் ரஜோகுணமும்

தமோகுணமும், அவைகள் கலந்த ஸத்வ குணமுமே அந்த உலகத்திலில்லை. (சுத்த ஸத்வ குணமே அவ்வுலகத்தில் ப்ரகாசிப்பதென்பது தாத்பரியம்.) தவிரவும் காலத்தின் ஸாமர்த்தியம் அவ்விடத்தில் உபயோகப் படுகிறதில்லை. மாயை, ராகம், உலோபம் ஆகிய இவைகளும் அந்த லோகத்திலில்லை. பின்னும், தேவர்களாலும், அஸுரர்களாலும் பூஜிக்கப்பட்ட பார்ஷத கணங்கள் அவ்விடத்தில் வஸிக்கிறார்கள். மேலும் அந்தப் பார்ஷதர்களெல்லோரும் நீருண்ட மேகம் போன்ற நிறமுள்ளவர்கள். தாமரை மலர் போன்ற கண்களுள்ளவர்கள். பீதாம்பரத்தைத் தரித்த வர்கள். மனோஹரமாயும், சுத்தமாயுமுள்ள தேக காந்தியுள்ளவர்கள். மிகுந்த அழகுள்ளவர்கள். நான்கு கைகளுள்ளவர்கள். மிகுந்த ப்ரகாசமுள்ள உத்தம ரத்தினகளிழைத்த திவ்ய ஆபரணங்களால் அலங் கரிக்கப்பட்டவர்கள். சிலர் பவழம், வைடூரியம் தாமரைத் தண்டு இவைகள் போன்ற நிறமுள்ளவர்கள். குண்டலம், கிரீடம், மாலை இவைகளால் பிரகாசிப் பவர்கள் மிகுந்த காந்தியுள்ள மஹாத்மாக்களுடைய விமானங்களால் அந்த லோகமானது ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறது. மின்னல்களுடன் கூடிய மேகங் களால் ஆகாசம்போல, உத்தம ஸ்திரீகளின் காந்தியால் விளங்குகிறது. மேலும் அவ்விடத்தில் லக்ஷ்மிதேவி நிஜஸ்வரூபத்துடன் பகவானுடைய பாதாரவிந்தங்களைப் பலவகையான விபூதிகளால் பூஜிக்கிறாள். மேலும், அவள் ஊஞ்சலின்மீதேறித் தன்பர்த்தாவாகிய நாராயணனுடைய ஸகல கல்யாண குணங் களையும் கானம் செய்து கொண்டு ஆனந்தமாய் வஸிக்கிறாள். அப்பொழுது வஸந்த ருதுவும், அதன் பின் செல்லுகின்ற வண்டுகளும், கூடக் கானம்

செய்கின்றன. இம்மாதிரியான அந்தக் க்ருஹத்தில் யஜ்ஞபுருஷனும், ஸகல ஜகத்திற்கு அதிபதியும், பக்தர்களுக்குப் ப்ரபுவும் ஸ்ரீயப்பதியுமான பகவானைப் ப்ரஹ்மதேவர் தரிசித்தார். ஸனனந்தர் நந்தர் முதலிய பூஜ்யர்களான பார்ஷதர்கள் அவரை ஸேவிக் கிறார்கள். அந்தப் பகவான் தம்முடைய வேலைக் காரர்களுக்கு அனுக்கிரகம் செய்வதிலேயே நோக்க முள்ளவர். புன்சிரிப்புக் கொண்டதும், சிவந்த கண்களுள்ளதுமான முகமுள்ளவர். பார்க்கப்பிரியமானவர். கிரீடமுள்ளவர். குண்டலங்களால் ப்ரகாசிப்பவர். நான்கு கைகளுள்ளவர். பீதாம்பரத்தால் அலங் கரிக்கப்பட்டவர். மார்பில் வஸிக்கும் லக்ஷ்மியுள்ளவர். உயர்ந்த சிம்மாசனத்திலிருப்பவர் ப்ரக்ருதி புருஷன், மஹத்தத்வம், அஹங்காரம் ஆகிய நான்கு சக்தி களாலும் ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் மனஸ், ஐந்து பூதங்கள், ஐந்து தன்மாத்திரைகள் ஆகிய இருபத்தைந்து தத்துவங்களாலும் சூழப்பட்டவர். தமக்கு இயற்கையானதும் மற்றவர்களுக்குத் தபஸ் முதலியவைகளால் கிடைக்கக் கூடியவைகளுமான ஐசுவர்யங்களால் தமது ஸ்வரூபத்திலேயே ரமித்துக் கொண்டிருப்பவர்.

18–24 அப்போர்ப்பட்ட பகவானுடைய ஸ்வரூ பத்தைப் ப்ரஹ்மதேவர் பார்த்து, அதனால் உண்டாகிய ஆனந்தத்தால் பூர்ணரானார். அப் பொழுது அவருக்கு மயிர்க்கூச்சலுண்டாயிற்று. பகவானிடத்திலுள்ள பக்தி விசேஷத்தால் அவருடைய இரு கண்களிலிருந்தும் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. பின்னுமவர் பரம ஹம்ஸாசிரமத்தால் அடையக்கூடிய பகவானுடைய பாதாரவிந்தத்தை

நமஸ்கரித்தார். அப்பொழுது பகவான் தம்மிடத்தில் விசேஷ பிரீதியுள்ளவரும், ப்ரஜைகளை ஸ்ருஷ்டிப் பதில் தம்மால் ஏவக்கூடியவரும், அதற்காகத் தம்மைக் குறித்து தபஸ் செய்தவரும் ஸமர்த்தருமான அந்தப் ப்ரஹ்ம தேவரை நோக்கி மிகுந்த ப்ரியத்துடன் அவருடைய கையைப் பிடித்துக் கொண்டு புன் சிரிப்புடன், ஓ வேதத்தை முகத்தில் வைத்துக் கொண்டிருக்கும் ப்ரஹ்ம தேவரே! லோகங்களை ஸ்ருஷ்டிப்பதற்காக வெகுகாலம் தபஸ் செய்து என்னைச் சந்தோஷப்படுத்தினீர். கபடமுள்ள யோகி களால் என்னை ஸந்தோஷப்படுத்த முடியாது. ஆனதால் உமக்கு இஷ்டமான வரத்தைக் கேளும். உமக்கு க்ஷேம முண்டாகும். என்னைப் பார்க்கிற வரையில் தான் ச்ரேயஸை யடைவதற்கு முயற்சிக்க வேண்டும் என்னுடைய வைகுண்ட லோகத்தை நேரில் பார்ப்பது என்னுடைய ப்ரியத்தைப் (பக்தனுக்கு வரங் கொடுக்க வேண்டுமென்றதை) காட்டுகிறது. ஆகையால், அதுவும் என்னுடைய கிருபையால் உமக்கு கிடைத்ததே தவிர வேறில்லை. மேலும் 'தப' என்ற என்னுடைய வார்த்தையைக் கேட்டுத் தபஸ் செய்தீர். தபஸ் என்பது எனக்கு ஹ்ருதயமாயிருக்கிறது. அதற்கு நான் ஆத்மா (ஸ்வரூபம்) வாக இருக்கிறேன். ஆகையால் ஸ்ருஷ்டிக்க வேண்டிய காலத்தில் அதற்கு வேண்டிய ஞானமற்றவராய் நீர் மோஹமடைந் திருக்கும் பொழுது உம்மைத் தபஸ் செய்யும்படி சொன்னவன் நானே. நான் தபஸைக் கொண்டே இந்த ஜகத்தைச் ஸ்ருஷ்டிக்கிறனே. தபஸினாலேயே அதைப் பரிபாலிக்கிறேன். தபஸி னாலேயே அதை ஸம்ஹரிக்கிறேன். தபஸே என் னுடைய சக்தியாயிருக்கிறது என்று சொன்னார்.

25–30 அதனைக் கேட்டு ப்ரஹ்மதேவர் ஸ்ரீ நாராயணனை நோக்கி, 'ஓ பகவன்! நீர் ஸகல பிராணிகளுக்கும் ப்ரபுவாக அவர்களுடைய புத்தியில் வசிப்பவராகையால் தடையற்ற திவ்ய ஞானத்தால் ஒவ்வொருவருடைய எண்ணத்தையும் நன்றாய்த் தெரிந்துகொள்ளுகிறீர். ஏ நாத உருவமில்லாதவரான உம்முடைய ஸ்தூல சூக்ஷ்ம உருவங்களை நான் நன்றாய்த் தெரிந்துகொள்ளும்படி ப்ரார்த்திக்கும் எனக்குச் சொல்ல வேண்டும். நீர் உம்முடைய மாயா சக்தியால் தானே ஸகல ஸ்வரூபியாயிருந்து ஜகத்தைச் ஸ்ருஷ்டித்தும், பரிபாலித்தும், ஸம்ஹரித்தும் பட்டுப் பூச்சி போல விளையாடுகிறீரல்லவா? வீண்போகாத ஸங்கல்பமுள்ளவரே! அந்த உம்முடைய லீலைகளை நான் நன்றாய்த் தெரிந்து கொள்ளும்படி அனுக்கிரஹிக்க வேண்டும். (ப்ரஜைகளை ஸ்ருஷ்டிப் பதில் பயந்து நான் தத்துவ ஞானத்தை விரும்ப வில்லை.) உம்முடைய உத்தரவின்படி சோம்பல் இல்லாமல் ஸ்ருஷ்டியைச் செய்வேன். ஆனாலும் அந்தக் காலத்தில் 'நான் ஜகத்தைச் ஸ்ருஷ்டிப்பவன். எல்லாவற்றிற்கும் மேலானவன் என்ற அஹங்காரம் முதலியவைகள் எனக்கு உண்டாகாமலிருப்பதற்காகத் தத்துவ ஞானத்தை உபதேசிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன். ஹே ஈசுவர! மித்திரன் தோழனைக் கௌரவப்படுத்துவது போல் நீர் என்னுடைய கையைப் பிடித்து, பூஜித்து, ஜனங் களை ஸ்ருஷ்டிக்கும் அதிகாரத்தைக் கொடுத்து இருக்கிறீர். நான் தங்களுடைய ஆக்ஞா ரூபமாகிய இக்காரியத்தைச் செய்து வரும்பொழுது மேலானவர் களையும், தாழ்ந்தவர்களையும், மத்ய நிலமை உள்ளவராகவும் பிரித்து ஸ்ருஷ்டிப் பேனல்லவா?

அப்பொழுது பகவான் நம்மை மித்திரனைப் போல் கௌரவப்படுத்தினார். நான் ஸ்வதந்திரன் என்று மிகுந்த கர்வம் எனக்கு உண்டாகக் கூடுமே. அம்மாதிரியான மதம் என்னைக் கெடுத்து விடாமல் இருக்கும்படி அனுக்கிரஹிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

31–39 அதனைக் கேட்ட பகவான் ப்ரஹ்ம தேவரை நோக்கி, ஓ ப்ரஹ்மதேவரே! உம்மால் கேட்கப் பட்டபடி சாஸ்திரத்தைப் படிப்பதால் உண்டாகிய ஞானம், அனுபவத்தால் உண்டாகிய விஞ்ஞானம், பக்தி, அவைகளின் ஸாதனம் ஆகிய இவைகள் மிகவும் ரகசியமானவைகளானாலும் அவைகளை உமக்கு உபதேசிக்கிறேன். நான் எவ்வளவு ஸ்வரூப முள்ளவனோ. எப்படி உண்டாகிறேனோ அப்பேர்ப் பட்ட உண்மையான ஸ்வரூப ஞானமானது என்னுடைய அனுக்கிரஹத்தால் உமக்கு உண்டா கட்டும். ஜகத் ஸ்ருஷ்டிக்கு முன்னே நான் ஒருவனே இருந்தேன். ஸ்தூலம், ஸூக்ஷ்மம் இவைகளுக்குக் காரணமாகிய ப்ரதானம் ஆகிய இவைகள் என்னைக் காட்டிலும் வேறாக ஒன்றுமிருந்ததில்லை. பின்பு நானே இந்த ஜகத் ரூபியாய் இருக்கிறேன். ப்ரளய காலத்தில் எந்த வஸ்து நாசமடையாமல் இருக்குமோ அதுவும் நானே. மேலும், ஆகாசத்தில் இரண்டு சந்திரன் இருப்பதாகத் தோன்றுகிறதுபோல எதன் உடைய மஹிமையால் ஆத்மாவிடம் இல்லாதவைகள் தோன்றுகின்றனவோ கிரஹ மண்டலத்திலிருக்கும் ராஹுவானவன் கண்ணுக்குப் புலப்படாததுபோல எதனுடைய மஹிமையால் ஆத்மாவிடத்தில் இருப்பவைகள் மறைக்கப்படுகின்றனவோ, அதை என்

உடைய மாயையென்று தெரிந்து கொள்ளவேண்டும். மஹா பூதங்கள், தங்களால் ஏற்பட்ட பலவகையான சரீரங்களில் பிறகு ப்ரவேசித்ததாகத் தோன்றுவது போல, ஜகத்தில் காரண ரூபியாய் நான் இருப்பவனே யொழிய அவைகளில் பின்பு ப்ரவேசித்தவனல்ல. ஆத்மாவினுடைய உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டியவன், 'எல்லா அவஸ்தையிலும் எது அன்வயத் தாலும், வ்யதிரேகத்தாலும் எக்காலத்திலும், எல்லா விடத்திலும் இருக்குமோ அதே பரமாத்மா என்று தெரிந்து கொள்ளவேண்டியது. இப்பொழுது என்னால் சொல்லப்பட்டதை ஒரே மனதாகச் சிந்தியும். கல்பங்களில் பலவகையான ஸ்ருஷ்டிகளிலும் உமக்கு அபிமானம் உண்டாகாமலிருக்கட்டும் என்று ஸகல ஜனங்களுக்கும் அதிபதியான ப்ரஹ்மாவை அனுக்ர ஹித்து அவர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்த உருவத்தைப் பகவான் மறைத்துக் கொண்டார். பிறகு அந்தப் ப்ரஹ்மதேவர் கண்ணுக்குப் புலப் படாமல் மறைந்த மஹாவிஷ்ணுவிற்கு அஞ்சலி செய்து ப்ருத்வி முதலிய பூதங்களாகிய சாதனங் களைக் கொண்டு முன் கல்பத்திலிருந்ததுபோல் இந்த ஜகத்தைப் படைத்தார்.

40–46 அந்தப் ப்ரஹ்மதேவர் ப்ரஜைகளுக்கு க்ஷேமத்தைச் செய்ய விரும்பி யமம், நியமம் முதலிய வைகளைச் செய்து வந்தார். அவருடைய புத்திரர் களுக்குள் மிகவும் பிரியராகிய நாரதர் தம்முடைய ஸ்வபாவத்தாலும், வணக்கத்தாலும், இந்திரிய நிக்ர ஹத்தாலும், பிதாவாகிய ப்ரஹ்மதேவரைச் சந்தோஷப் படுத்தி அவருக்குச் சிச்ரூஷை செய்து வந்தார். அந்தப் பாகவதோத்தமராகிய நாரதர் மாயைக்கு அதிபதியான

மஹாவிஷ்ணுவின் மாயையை நன்றாய்த் தெரிந்து கொள்ள விரும்பியவர். அவருடைய சிசுரூஷையால் ப்ரஹ்மதேவருக்கு ஸந்தோஷமுண்டாயிற்று. அப் பொழுது நாரதர் இந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டார். அவருக்குப் ப்ரஹ்மதேவர் மிகவும் பிரியத்துடன் பத்து வித புராண லக்ஷணமுள்ள பாகவத புராணத்தை உபதேசித்தார். அந்த நாரதர் ஸரஸ்வதீ நதிக்கரையில் ப்ரஹ்ம தியானஞ் செய்து கொண்டிருந்த அதிக தேஜஸுள்ள வ்யாஸ மஹர்ஷிக்கு இந்த விஷயத்தை உபதேசித்தார். விராட் புருஷனிடமிருந்து இந்த ஜகத் எப்படி உண்டாயிற்றென்று கேட்டீரல்லவா? அது முதலிய கேள்விகளுக்குப் பதில் , சொல்லுகிறேன் கேளும் என்றார்.

நோட்டு

உருவம்–ஸத்யம், ஞானம் முடிவில்லாதது என்று ஸ்ருதியில் சொல்லியுள்ளபடியுள்ளது. குணம்– திவ்ய மங்கள குணங்கள். எவர் எல்லாவற்றையும் ஸாமான்யமாகவும் விசேஷமாகவும் அறிந்தவரோ, எவருடைய மேலான சக்தியும், இயற்கையான ஞானம், பலம், கிரியை ஆகிய இவைகளும் பல வகையாகக் காணப்படுகின்றனவோ சந்த். மாயை என்று–ப்ரக்ருதியின் அனுஸந்தான காலத்தில் ஆத்ம ஸ்வரூபம் நன்றாகப் ப்ரகாசிக்கிறதில்லை. ஆத்மாவின் தோற்றம் இருக்கும்போது அசேதனமாகிய ப்ரக்ருதியானது தோன்றுவதில்லை. தேஜஸிருக்கும் போது இருட்டிக்கிறதில்லை. இருட்டிலிருக்கும் போது தேஜஸ் ப்ரகாசிக்கிறதில்லை. வீர.– எந்த வஸ்துவானது ஸகல காமத்தையும் அடைந்தவனாகிய என்னுடைய ப்ரயோசனமின்றி வேதம் முதலியதில்

தோன்றுகிறதோ, எது என்னிடத்தில் பாதகமாக ஆகிறதில்லையோ, அதே மாயை (ஜீவன், ப்ரக்ருதி ஆகிய இவர்கள் மாயை என்று கருத்து) யதார்த்தமாகத் தோன்றும் என்னுடைய பிரதிபிம்ப பூதனாகிய ஜீவனும், உண்மையாகத் தோன்றும் (மூல) ப்ரக்ருதியும் மாயையெனப்படுகின்றன. ஸ்ரீ மஹா விஷ்ணுவின் சக்தியே முக்கியமாய் மாயை யெனப்படுகிறது. ப்ரக்ருதி, ஜீவர்களை மாயையென்று செல்வது ஔபசாரிகப் ப்ரயோகம், ஆனால், ஜீவன், ப்ரக்ருதி, கர்மம், காலம் ஆகிய இவைகள் எப்பொழுதும் என்னிடத்தில் வஸிப்பவைகளானாலும் அவைகளால் பாதகமில்லாததனால், அவைகள் என் இடமிருப்பதாகச் சொல்லப்படுகிறதில்லை. அரசன் ரதத்தின் மீதேறிப் போகும்போது அவருக்குக் குடை பிடிப்பது முதலிய உபசாரங்கள் செய்து கொண்டு இருப்பவர்களுக்கு ரதிகர்கள் என்று பெயர் கிடைக்குமா? விஜ. ப்ரவேசித்தவனல்ல மஹாபூதங்கள் அவைகளாலேற்பட்ட கூடம் முதலியவைகளில் ப்ரவேசித்திருந்தாலும் அவைகளை உடைப்பது, வெட்டு வது ஆகிய இவைகளில் அந்த மஹாபூதங்கள் ஸம்பந்திக் கிறதில்லை.–வீர. அன்வயவத்தாலும் காரியங்களில் காரண ரூபமாக விருப்பது; ஜாக்ரத் முதலிய அவஸ் தைகளில் ஸாக்ஷியாக விருப்பது. வ்யதிரேகம் காரணமாக இருக்கும் போது காரியமாக இல்லாமல் இருப்பது –ஸ்ரீத. அன்வயம் இது அறியக் கூடியதே என்பது வ்யதிரேகம்– மற்றவை அறியக் கூடியவை அல்லவென்பது. பரமாத்மா ஒருவரைத் தெரிந்து கொண்டதனால் எல்லாம் அறியப் பட்டவையாகிறது. ஆனதால் அதுவே அறியக் கூடியது. –வீர.

அத்தியாயம் 10

தத்துவங்களின் உற்பத்தியுரைத்தது.

இந்தப்பாகவதத்தில் ஸர்க்கம், விஸர்க்கம், ஸ்தானம் போஷணம், ஊதி, மன்வந்தரம், ஈசானு கதை, நிரோதம் முக்தி ஆசிரயம் என்ற பத்து வகையான லக்ஷணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும் பத்தாவதாகிய ஆசிரயத்தின் உண்மையைத் தெரிவிப் பதற்காக ஒன்பதுகளுடைய ஸ்வரூபத்தை சப்தத் தாலும், அர்த்தத்தாலும் பெரியோர்கள் வர்ணிக் கிறார்கள். ஆகாசம் முதலிய பஞ்சபூதங்களும், சப்தம் முதலிய விஷயங்களும், இந்திரியங்களும் மஹத் தத்து வமும், அஹங்காரமும், ஸத்வம் முதலிய குணங்கள் உடைய பரிணாம விசேஷத்தால் பரமேச்வரனிடம் இருந்து உண்டாவதே ஸர்க்கமெனப்படும். வைராஜ னால் செய்யப்படும் சராசர சிருஷ்டியே விஸர்க்கம் எனப்படும். பகவான் அவதாரஞ் செய்து ஜகத்தைப் பரிபாலிப்பது எல்லாவற்றிற்கும் மேலானவராக இருப்பது ஸ்திதி யெனப்படும். பக்தர்களை அனுக்கிர ஹிப்பதே போஷணமெனப்படும். மன்வந்தரங்களில் அனுஷ்டிக்கப்படும் தர்மம் மன்வந்தர மென்று சொல்லப்படுகிறது. கர்மங்களின் வாஸனைகள் ஊதி எனப்படுகின்றது. பல்வகையான உபாக்யானங்கள் அடங்கிய பகவானுடைய அவதார கதைகளும், பக்தர்களுடைய சரிதங்களும் ஈசானு கதையென்று சொல்லப்படுகின்றன, பகவான் யோக நித்திரை செய்யும்போது ஜீவன் தன்னுடைய உபாதிகளுடன் அவரிடத்தில் லயிப்பதே நிரோத மெனப்படுகிறது. அவித்தையால் அத்யஸ்தமாகிய அநாத்ம ரூபத்தை

ஞானத்தால் தொலைத்து, தன்னுடைய நிஜரூபமாக இருப்பதே முக்தியாகும். ஸ்ருஷ்டியும் லயமும் எதன் இடமிருந்து உண்டாகின்றனவோ, எது பரமாத்மா என்றும் ப்ரஹ்மம் என்றும் சொல்லப்படுகிறதோ, அதே ஆசிரய மெனப்படுகிறது. ஆத்யாத் மிகனென்ற ஜீவனே ஆதிதெய்வீகம் (கண் முதலியவைகளுக்கு அதிதெய்வமான சூரியன் முதலியவை) ஆகிறான். கண்கள் முதலிய இந்திரிய கோளங்கள் அடங்கிய புருஷோபாதியாகிய தேஹமே ஆதிபௌதிகம். அறிகிற வன், அறியப்படுகிறது, ஸாதனம் ஆகிய மூன்றுக்குள் ஒன்றை விட்டு மற்றவை அறியக் கூடாத வைகளா கையால் இம்மூன்றையும் எவர் சாக்ஷியாக விருந்து தெரிந்து கொள்கிறாரோ அவரே பரமாத்மா. அவருக்கு வேறு ஆச்ரயமில்லை. எல்லாவற்றிற்கும் அவர் ஆச்ரய மாயிருப்பவர்.

10–34. விராட் புருஷன் ப்ரம்மாண்டத்தை பேதித்துக் கொண்டு எப்பொழுது வெளியில் வந் தாரோ (தனியாக இருந்தார் என்று கருத்து) அப் பொழுது தாம்சுத்தராகையால் தாம்வஸிப்பதற்குச் சுத் தமான ஸ்தானம் வேண்டுமென்ற எண்ணத்துடன் பரிசுத்தமான ஜலத்தை ஸ்ருஷ்டித்தார். அந்த ஜலத்தில் வஸித்தாலும் ஜலம் அவரிடத்திலிருந்து உண்டான தாகும். அவருக்கு நாராயணனென்று பெயருண்டா யிற்று. அவருடைய அனுக்கிரஹத்தால் தான் உபா தான காரணம், கர்மம், காலம் முதலிய நிமித்த காரணம் ஆகிய இவைகள் தங்களுடைய கார்யத்தை உண்டுபண்ணுகின்றன. அவருடைய அனுக்கிரஹமில் லாதவரையில் அவைகளுக்குக் கார்யத்தை உண்டு பண்ணக்கூடிய சக்தி ஏற்படுகிறதில்லை. அந்தப் புருஷன்

தாம் பலவகையான ஸ்வரூபத்தை அங்கீகரிக்க வேண்டுமென்ற ஸங்கல்பத்தை அடைந்து யோக நித்திரையிலிருந்து எழுந்திருந்து மிகுந்த ப்ரகாசமுள்ள திவ்ய தேஹத்தைத் தம்முடைய மாயையின் சம்பந்தத் தால் ஆத்யாத்மிகம், ஆதி தெய்வீகம், ஆதி பௌதிகம் என்று மூவகையாகப் பிரித்தார். அதெப்படி எனில் கிரியா சக்தியால், பலவகையாகச் சேஷ்டிக்கும் புருஷனுக்கு இந்திரிய சக்தி, மனத்தின் சக்தி, தேஹ சக்தி ஆகிய இவைகள் உண்டாயின. சூக்ஷ்ம ரூபியாகிய அந்த ஆத்மாவினிடமிருந்து முக்கியப் ப்ராணன் உண்டானான், அரசனை அவருடைய வேலைக்காரர்கள் அனுசரிப்பதுபோலப் ப்ராணன் அவருடையதாதலால் ஸகல இந்திரியங்களும் சேஷ் டிக்கின்றன. ப்ராணன் சேஷ்டிக்காவிடில் அவைகளும் சேஷ்டிக்கிறதில்லை, அந்தப் ப்ராணன் ப்ரபுவின் வயிற்றில் பரவும்போது, பசி, தாகம் ஆகிய இவைகள் உண்டாயின. பிறகு புஜிக்கவேண்டுமென்றும், குடிக்க வேண்டுமென்றும் விருப்பம் உண்டாயிற்று. பிறகு அந்தப் ப்ரபுவினிடமிருந்து முகமானது உண்டாயிற்று (பிரிந்தது). அதிலிருந்து ஜிஹ்வேந்திரியத்திற்கு அதிஷ் டானமாகிய தாலுவும் (நாக்கும்), அதிலிருந்து ஜிஹ்வேந்திரியமும், அதிலிருந்து அதனால் கிரஹிக்கப் படும் ஆறுவகையான ரஸங்களும் உண்டாயின. பேசவேண்டுமென்ற விருப்பம் அவருக்கு உண்டான பொழுது முகத்திலிருந்து அக்னியும், (இந்திரியாபிமானி தேவதை) வாக் என்னும் இந்திரியமும், அவ்விரண் டின் வியாபாரமாகிய பேச்சும் (இந்திரிய விஷயம்) உண்டாயின. அந்த அக்னி வெகுகாலம் ஜலத்தால் தடுக்கப்பட்டிருந்தது. ப்ராணவாயுவானது அதிகமாக அசையும் பொழுது மூக்குகள் உண்டாயின. அவை

களில் கந்தத்தை வஹிக்கும் வாயு உண்டானார். (ப்ரவேசித்தார்) கந்தத்தை கிரகிக்க விரும்பும்பொழுது அவ்விடத்தில் கிராணேந்திரியம் உண்டாயிற்று. எப்பொழுது ப்ரகாசமில்லாமலிருந்ததோ, அப்பொழுது தன்னையும் இதர வஸ்துக்களையும் பார்க்க, விரும்பிய போது கண்கள், உருவத்தைக் கிரகிக்கும் சக்தி, சக்ஷுரிந்திரியம் அதற்கு அபிமானி தேவதையாகிய ஆதித்யன் ஆகிய இவைகள் உண்டாயின. யோக நித்திரை செய்யும் ப்ரபுவைத் தேவர்கள் எழுப்புங் காலத்தில் அந்தச் சப்தத்தைக் கிரகிக்க அவர் விரும் பினார். அப்பொழுது காதுகளும், திக்குகளும் ,ச்ரோத்ரேந்திரியமும், சப்தத்தைக் கிரகிக்கும் சக்தியும் உண்டாயின. மேலும் வஸ்துக்களின் மெதுவாயிருக் கும் தன்மை, கடினமாயிருக்கும் தன்மை கனமுள்ளதாக விருப்பது, கனமில்லாமலிருப்பது, குளிர்ச்சி, உஷ்ணம் ஆகிய இவைகளைக் கிரகிக்க விரும்பும்போது துவக்கிந்திரியத்திற்கு அதிஷ்டானமாகிய தோல் உண் டாயிற்று. அதில் இந்திரியமும் தேவர்களும் உண் டானார்கள். ஸ்பரிசமாகிய குணமுள்ள வாயுவானது மேற்காட்டிய துவக் இந்திரியத்தின் உள்ளிலும் வெளி யிலும் வ்யாபித்திருக்கிறது. பின்னும் பலவகையான கார்யங்களைச் செய்ய விரும்பிய அவரிடமிருந்து கைகள் முளைத்தன. அவ்விரண்டு கைகளுக்கும் இந்திரன் தேவதையானான். எடுப்பது (ஆதானம்) அவைகளின் கார்யமாம். இன்னும், தமதிஷ்டப்படி நடக்க விரும்பிய அந்த ஆத்மாவிடமிருந்து பாதங்கள் முளைத்தன. அவைகளுக்கு யக்ஞஸ்வரூபியாகிய மஹாவிஷ்ணுவே தேவதையாக இருக்கிறார். நடப்பது அவைகளின் காரியம். யாகத்திற்கு உபயோகமான ஹவிஸ்ஸை வெகுதூரம் நடந்து ஸம்பாதிப்பதே அவை

களின் ப்ரயோஜனம். பிறகு குழந்தை, ஆனந்தம், அமிருதம் (ஸுகம் அல்லது ஸ்வர்க்கம்) ஆகிய இவை களை அடைய விரும்பிய அவரிடமிருந்து சிஸ்னம் (ஆண்குறியும் பெண்குறியும்) உண்டாயின. ஸ்திரீ களுடைய ஸம்போகத்தால் ஏற்படும் ஸுகத்திற்குக் காரணமும், இந்திரியம், தேவதை ஆகிய இவை களுக்கு ஆசிரயமுமான உபஸ்தேந்திரியம் அந்த சிஸ்னத்திலிருந்து உண்டாயிற்று. தாதுக்களின் மலத்தை (புஜித்த அன்னம் முதலியவைகளுடைய ஸாரமற்ற பாகத்தை) வெளிப்படுத்த விரும்பிய அந்தப் புருஷ னிடமிருந்து குதமானது உண்டாயிற்று. அதிலிருந்து பாயுவென்ற இந்திரியமும், அதனிடமிருந்து அதிதேவ தையான மித்திரனும் உண்டானார்கள். மலத்தை வெளிப்படுத்துவது இந்திரியம் அதன் ஸ்தானம் ஆகிய இரண்டையும் ஆசிரயித்தது. ஒரு தேஹத்தில் இருந்து மற்றொரு தேஹத்திற்குப் போகவிரும்பிய ப்ரஹத்தினுடைய ஸமஷ்டி அபானவாயுவினிடம் இருந்து நாபியாக உண்டாயிற்று. அதில் அபானனும், அதற்கு அதிஷ்டமான தேவதையாகிய மிருத்யுவும் உண்டாயின. மரணமானது பிராணன், அபானன் ஆகிய இவைகளைக் க்ரஹிக்க வேண்டுமென்று விரும்பிய அந்தப் ப்ரபுவினிடமிருந்து வயிறு, ஆந்த்ரம் (மாம்ஸ விசேஷம்), நாடிகள் ஆகிய இவைகள் உண்டாயின. அந்த நாடி, ஆந்த்ரம் ஆகிய இவை களுக்கு நதிகளும் ஸமுத்ரமும் (முறையே) தேவதைகள். அவைகளால் துஷ்டியும், புஷ்டியும் உண்டாயின. தம்முடைய ப்ரக்ருதியைச் சிந்திக்கும் அந்தப் ப்ரபு வினிடமிருந்து ஹ்ருதயம் உண்டாயிற்று. அதனிடம் இருந்து சந்திரனென்று ப்ரஸித்தியுள்ள மனஸ் உண் டாயிற்று. மேற்சொல்லிய ஹ்ருதயமே காமத்திற்கும்,

ஸங்கல்பத்திற்கும் இருப்பிடம் துவக் (மேல்தோல்) சர்மம் (உள்ளேயிருப்பது) மாம்ஸம் ரத்தம் மேதஸ் மஜ்ஜை எலும்பு ஆகிய ஏழு தாதுக்களும் பூமி, ஜலம், தேஜஸ் ஆகிய இவைகளின் ஸ்வரூபமாயுள்ளவைகள். ப்ராணன்கள் ஆகாயம் ஜலம், வாயு ஆகிய இவை களால் உண்டான இந்திரியங்களாவும் விஷயங்களில் செல்லும் ஸ்வபாவமுள்ளவை. சப்தம் முதலிய குணங் கள் அஹங்காரத்திலிருந்து உண்டானவை. ஸகல விகாரங்களுக்கும் (காமம், ஸங்கல்பம், ஸம்சயம், சிரத்தை, வெட்கம் முதலியவைகளுக்கும்) ஆதாரமா யுள்ளது மனதேயாம், விஞ்ஞான ஸ்வரூபமாயிருப்பதே (பலவகையான பிரபஞ்ச ரூபமாக ஆகவேண்டுமென்று பகவானுடைய எண்ணம்) புத்தியெனப்படுகிறது. பூமி முதலிய எட்டு ஆவரணங்களுள்ள மேற்சொல்லிய ரூபமானது பகவானுடைய ஸ்தூல ரூபம். ஸூக்ஷ்ம சரீரமானது மேற்காட்டிய ஸ்தூல ரூபத்துக்குக் காரணமாயிருப்பது. அது மிகவும் ஸூக்ஷ்மமாகையால் இந்திரியங்களுக்குப் புலப்படாதது. பேதமற்றது, ஆதி, மத்யம், அந்தம் ஆகிய இவைகளற்றது. எப்பொழுதும் ஒரே வகையுள்ளது. (இளைப்பு, விருத்தி முதலியவை களற்றது என்று கருத்து) வாக்குக்கும், மனத்திற்கும் மேலானது.

35–47. மேற்காட்டியபடி என்னால் உமக்கு உப தேசிக்கப்பட்ட பகவானுடைய ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபங் கள் மாயையால ஏற்பட்டவைகளாகையால் அவைகளை வித்வான்கள் உண்மையானவைகளாக அங்கீகரிக்கிறது இல்லை. (உபாஸனத்திற்காகப் பகவானிடம் ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபங்கள் ஆரோபிக்கபட்டனவென்று கருத்து) ஓ மஹாராஜ அந்தப் பகவான் ப்ரஹ்மதேவ ஸ்வரூபியாக

இருந்து, சப்தங்களின் பொருளாக விருக்கும் உருவங் களையும்; சப்தங்களைக் கொண்டு பெயர்களையும் ஸ்ருஷ்டிக்கிறார். மேலும் அவர் மாயையால் கர்மங்கள் அற்றவர்போல தோன்றினாலும் உண்மையில் கர்மங்கள் அற்றவர். ஒன்பது ப்ரஜாபதிகள் மனுக்கள் தேவர்கள், ரிஷிகள், பிதிரு கணங்கள் ஸித்தர்கள்; சாரணர்கள், கந்தர்வர்கள், வித்யாதாரர்கள், அஸுரர்கள், குஹ்யகர்கள் கின்னரர்கள் அப்ஸரஸுகள், நாகர்கள், ஸர்ப்பங்கள், கிம்புருஷர்கள், மாத்ரு கணங்கள், ராக்ஷஸர்கள், பிசாசங்கள் ப்ரேத கணங்கள், பூத கணங்கள், விநாயக கணங்கள் கூஷ்மாண்டங்கள், உன்மாதங்கள், வேதாலங் கள், யாதுதானர்கள் கிருஹங்கள், பறவைகள், மிருகங் கள், பசுக்கள், விருக்ஷங்கள், மலைகள், மலைப்பாம்பு கள், ஸ்தாவர ஜங்கமங்கள் என்ற இரண்டு வகை யுள்ளவையும், ஜராயுஜம், அண்டஜம், ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம் என்று நான்கு வகையுள்ளவைகளுமான ப்ராணிகள், ஜல ஜந்துக்கள், ஸ்தல ஜந்துக்கள் ஆகிய எல்லாவற்றையும் தரிக்கிறார். (ப்ரபஞ்ச ஸ்வரூபமாக இருக்கிறார் என்று கருத்து.) மேற்காட்டிய ப்ராணி களில் மேலானவை. மத்ய நிலையுள்ளவை, தாழ்ந்தவை ஆகிய இவைகள் புண்யம், பாபம், இரண்டின் கலப்பு ஆகிய கர்மங்களின் பலனேயாம். ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய இவைகளால் கர்மங்களின் கதி மூவகை யானது. ஸத்வத்தால் ஸ்வர்க்கம் முதலியவைகளும், ரஜஸ்ஸினால் பசு, புத்திரன் முதலியவைகளும் தமஸ்ஸினால் 21 நரகங்களும் உண்டாகின்றன. மேற் காட்டிய மூன்று வகையான கதிகளில் ஒன்றானது மற்ற இரண்டுகளால் அடக்கப்படும் பொழுது ஒவ் வொன்றிலும் மூன்று வகை ஏற்படுகின்றது. அந்தப் பகவானே இந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்து திர்யக் ஜாதி

ஆகவும், மனிதனாகவும். தேவனாகவும் அவதரித்து ஸ்ருஷ்டித்த ஜகத்தைப் பரிபாலனம் செய்தும், தர்ம ரூபியாக விருந்து அதனைப் போஷிக்கிறார். பின்பு ப்ரளய காலத்தில் மேகக்கூட்டத்தைக் காற்றானது கலைத்ததுபோல, அந்த மஹாபுருஷனே காலாக்னி ருத்ரரூபியாக விருந்து ஸம்ஹரிக்கிறார். மிகுந்த ஜ்ஞானமுள்ள அந்தப் பகவான் இப்போர்ப்பட்ட மஹிமை யுள்ளவர் என்று சொல்லப்படுகிறார். ஆனாலும் வித்வான்கள் அவரை இம்மாதிரியான குணமுள்ள வராக அறியமாட்டார்கள். ஏனெனில், இந்த ஜகத்தை உண்டு பண்ணுவது முதலியவைகளால் பரமாத்மாவிற்கு சம்பந்த மிருப்பதாகச் ஸ்ருதியின் தாத்பர்யமல்ல. மாயையைக் கொண்டு பகவானிடத்தில் ஆரோபிக்கப் பட்ட கர்த்ருவம் முதலியவைகள் அவரிடத்தில் உண்மையில் இல்லை என்று சொல்லுவதற்காக வேதமானது அவைகளை அனுமதித்தது. ப்ரஹ்மதேவ ருடைய கற்பமானது அவாந்தர கல்பத்துடன் சுருக்க மாகச் சொல்லப்பட்டது. இந்த மஹாகல்பத்தில் மஹத்தத்துவம் முதலியவைகளின் ஸ்ருஷ்டியும். ஸ்தாவரங்களின் ஸ்ருஷ்டியும் சொல்லப்பட்டிருக் கின்றன. இந்தப் பிரகாரமானது மற்ற மஹாகல்பம் முதலியவைகளுக்கும் பொதுவேயாம். காலத்தின் அளவையும் கல்பத்தின் லக்ஷணத்தையும் அதன் அவாந்தரவிபாகத்தையும் பாத்ம கல்பத்தையும் சொல்லுகிறேன். கேளும் என்றார்.

48–50. இம்மாதரியான ஸூதருடைய வார்த்தையை கேட்ட சௌனகர் அவரை நோக்கி, பாகவதர்களுக்குள் சிறந்தவராகிய விதுரர், மிகுந்த அபிமானமுள்ள பந்துக் களை விட்டுப் பிரிந்து பூமியிலிருக்கும் ஒவ்வொரு

தீர்த்தங்களிலும் சென்று யாத்திரை செய்தாரல்லவா? அந்த விதுரருக்கும், மைத்ரேயருக்கும் எந்த விடத்தில் பரமாத்மா விஷயமான ஸம்வாதம் நேர்ந்தது? அந்தப் பகவானாகிய மைத்ரேயரால் அவருக்கு உபதேசிக்கப் பட்ட ஆத்ம தத்துவம் யாது? விதுரர் பந்துக்களை விட்டுப் பிரிவதற்கு என்ன காரணம்? அவர் மறு படியும் ஏன் திரும்பிவந்தார்? அவருடைய சரிதம் எல்லாவற்றையும் சொல்லவேண்டும் என்று பிரார்த் தித்தார்.

51. அதனைக் கேட்டு ஸூதர், 'ஓ மஹரிஷிகளே பரீஷித்து மஹாராஜனால் கேட்கப்பட்டுச் சுக மஹா முனியானவர் எதனை அவருக்கு உபதேசித்தாரோ அதனைக்ரமமாக உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

நோட்டு

விஸர்க்கம் பகவான் தமோகுணத்தை அங்கீகரித்துச் செய்யும் லயம்சந்த். ப்ரஹ்மதேவரால் செய்யப்படும் ஸர்க்கம் வீர. ஸ்ருஷ்டி காலத்தில் பரமாத்மாவினிடம் இருந்து குணங்களுடைய வித்யாஸத்தால் உண்டாகும் மஹத்தத்துவத்தால் ஐந்து பூதங்கள், சப்தம் முதலிய வைகள், இந்திரியங்கள், புத்தி ஆகிய இவை முதல் அண்டம் வரையிலுள்ளவைகளின் உற்பத்தியே ஸர்க்கம். அண்டத்திற்குட்பட்ட புருஷனால் ஸ்ருஷ் டிக்கப்படும் பலவகையான ஸ்ருஷ்டியே விஸர்க்கம் விஜ். முக்திஜீவன் கர்மத்தால் கற்பிக்கப்பட்ட தேவாதி சரீரத்தைவிட்டுத் தன்னுடைய ஸ்வரூபமாகிய ஞானம், ஆனந்தம் முதலியவைகளுடனிருப்பது சந்த், பாபம் இல்லாமலிருப்பது முதலிய எட்டுக் குணங்களுடைய

வனாகத் தன்னைத் தெரிந்து கொண்டிருப்பது வீர, ப்ராகிருதம், வைகிருதம், ஸ்தூலம் ஸூக்ஷ்மம் ஆகிய இவைகளை விட்டு, சித்ஸ்வரூபியாயும், ஆனந்த ஸ்வரூபியாயும் இருப்பதுவிஜ. ஆதிபௌதிகம் சப்தம் முதலியவைகளுக்கும் ஆந்தரனாகவிருப்பவனே ஆதி பௌதிகன் வீர. ஸாக்ஷியாக இம்மூன்றுகளில் இந்திரியமாகிய ஸ்தானமில்லாவிடில் சப்தம் முதலிய விஷயங்கள் அறியப்படுகிறதில்லை. ஆனதால் ஜீவர்கள் மூன்று வகையான ஸன்னிகர்ஷமுள்ள பதார்த்தங் களை இந்திரியங்களால் அறிந்துகொள்ளுகிறாகள். பரமாத்மாவானவர்மூன்றையும் நேரில் பார்ப்பவர் வீர. ஆச்ரயமானஅசிதாஸ்ரயமான ஜீவனுக்கும் ஆச்ரயமாய் இருப்பவர். எப்படி ரதத்திலுடைய சக்கரத்திலுள்ள ஆரங்களில் நேமியும் (சக்கரத்தின் முனை) மத்யமாகிய குடத்தில் ஆரங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றனவோ, அப்படியே பூத மாத்திரைகள் ப்ரஞ்ஞாப மாத்திரை யிலும், அவைகள் ப்ராணனிடத்திலும் வைக்கப்பட்டு இ ருக்கின்றனஸ்ருதி. வீர.நாராயணன் 'ஜலங்களுக்கு நாரமென்று பெயர். அவைகள் ஸ்தானமாயிருந்தன. அதனால் நாராயணன்' என்று சொல்லப்பட்டார் ஸ்மிருதி.

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்கந்தம் 3

அத்தியாயம்-1

விதுரருக்கும்உத்தவருக்கும் ஸம்வாதம்

சுகர் பரீக்ஷித்து மகாராஜனை நோக்கி, "ஓ மகாராஜ! எல்லாவற்றிற்கும் அதிபதியும், ஹிருதயத்தில் வஸிப்பவருமான இந்த ஸ்ரீ கிருஷ்ண பகவான் பாண்டவர்களுக்குத் தூதராக அஸ்தினாபுரம் சென்றபொழுது அரசனாகிய துரியோதனனை லட்சியம் செய்யாமல் விதுரருடைய கிருஹத்திற்குச் சென்றாரல்லவா, அவ்வளவு மஹிமை பொருந்தியதும், ஸகல சம்பத்துக்களால் நிறைந்ததுமான தம்முடைய அந்த வீட்டை விட்டு விதுரர் முன்னொரு காலத்தில் காட்டில் சென்று அவ்விடத்தில் ஸர்வக்ஞரான மைத்ரேயரைச் சந்தித்து, இந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டார்" என்று சொன்னார். அதனைக் கேட்ட அரசன் சுகரை நோக்கி, "ஓ பிரபுவே! பகவானாகிய மைத்ரேயரும், விதுரரும் எவ்விடத்தில் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசிக் கொண்டார்கள்? மிகவும் சிறந்தவரான மைத்ரேயரை நோக்கிச் சுத்த சித்தரான அந்த விதுரரால் செய்யப்பட்டதும், பெரியோர்களால் அனுமோதித்துக் கௌரவப்படுத்தப்பட்டதுமான ப்ரச்னம் (கேள்வி) அற்ப விஷயமுள்ளதாக இராது. ஆகையால அதைச் சொல்ல வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

5-45 ஓ சௌனகர் முதலிய மஹர்ஷிகளே! இம்மாதிரி அரசனுடைய வார்த்தையைக் கேட்டு மஹர்ஷிகளுக்குள் சிறந்தவரும், பல விஷயங்களை

அறிந்தவருமான சுகர் மிகுந்த ப்ரியத்துடன் அரசனை நோக்கி, "திருதராஷ்டிர மகாராஜன் அதர்ம சிந்தையால் விவேகமில்லாதவராய் மிகவும் துஷ்டர்களான துரியோதனன்முதலிய புத்திரர்களை அதர்ம மார்க்கமாய்ப் போஷித்தும், தம்முடைய தம்பியாகிய பாண்டுவினுடைய குமாரர்களும், தகப்பனை இழந்தவர்களுமான தரும புத்திரர் முதலானவர்களை அரக்கு மாளிகையில் வஸிக்கச் செய்து அதில் அக்னியையும் வைத்தார். பிறகு துரியோதனன் சபையில் திரௌபதியின் தலைமயிரைப் பிடித்து இழுத்து வரச் செய்யும் பொழுது, அவள் தன்னுடைய ஸ்தனங்களிலிருக்கும் குங்குமம் கரையும்படி கண்ணீரைப் பெருக்கி அழுதாள். அப்பொழுது தனது மருமகளாகிய திரௌபதிக்கு நேர்ந்த துக்கத்தையும் புத்திரர்களுடைய கெட்ட நடையையும் பார்த்திருந்தும் மௌனமாக இருந்தார்.

மேலும் துரியோதனன் முதலியவர்கள் மிகுந்த சாதுவாகிய தருமபுத்திரரைச் சொக்கட்டான் ஆட்டத்தில் ஜயித்து நாட்டிலிருந்து காட்டிற்குப் போகச் செய்தார்கள். அப்பொழுது அவர் சத்தியத்திற்குட்பட்டுப் பன்னிரண்டு வருஷம் வனவாஸஞ் செய்தும், ஒரு வருஷம் அஞ்ஞாதவாஸஞ் செய்தும், பிறகு தம்முடைய பாகத்தைத் தமக்குக் கொடுக்கும்படி வேண்டிக் கொள்ள அப்பொழுதும் தமோ குணத்தால் அந்தத் திருதராஷ்டிர மகாராஜன் கொடுக்கவில்லை. பின்னும், ஜகத்திற்குக் குருவாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் தரும புத்திரரால் தூண்டப்பட்டு, அஸ்தினாபுரஞ் சென்று சபையில் சில வார்த்தைகளைச் சொன்னார். அவைகள் பீஷ்மர், முதலானவர்களுக்கு அமிருதமாக விருந்தன. துரியோதனன், திருதராஷ்டிரர்

முதலானவர்கள் க்ஷேமத்தைக் கொடுக்கும் புண்ணிய மில்லாதவர்களாகையால், அவைகளைப் பெரியவை களாக நினைக்கவில்லை. பின்னுமொரு சமயத்தில் திருதராஷ்டிரர் பாண்டவர்களுக்கு அவர்களுடைய பாகத்தைக் கொடுக்கும் விஷயமாய் ஆலோசிப்பதற்காக விதுரரைத் தம்முடைய அரண்மனைக்கு வரவழைத் தார். விதுரர் காரியம், அகாரியம் இவைகளை நன்றாக யோசித்துச் சொல்பவர்களுக்குள் சிறந்தவர், "விதுரருடைய வார்த்தை மிகவும் மேலானது" என்று ப்ரசித்தமாயிருக்கிறது. அப்பொழுது விதுரர் தமை யனை நோக்கி, "ஓ மகாராஜ! தரும புத்திரருக்கு ஓரிடத்திலும் விரோத புத்தியில்லாமையால் அவர் தம் சகோதரர்களுடன் உம்மால் செய்யப்பட்ட சகிக்க முடியாத அபகாரங்களைப் பொறுத்துக் கொண்டிருக் கிறார். தவிரவும், பீமசேனராகிய சர்ப்பமானது மிகுந்த கோபத்துடன் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக் கிறது. அந்த சர்ப்பத்தினிடம் நீர் எப்பொழுதும் மிகவும் பயந்து கொண்டிருக்கிறீரல்லவா? மேலும் ப்ராஹ்மணர்களையே தெய்வமாக கொண்டவராகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் குந்தியின் புத்திரர்களைத் தம்மைச் சேர்ந்தவர்களாக அங்கீகரித்திருக்கிறார். யாதவர்களுக்கு அதிபதியும், பூமியிலிருக்கும் ஸகல அரசர்களை ஜயித்தவருமாகிய அந்தப் பகவான் துவாரகா நகரத்தில் சுகமாக வஸிக்கிறார்.

மேலும், தோஷமே துரியோதனனென்ற பெயருடன் சரீரமெடுத்துக் கொண்டு உம்முடைய க்ருகத்தில் ப்ரவேசித்திருக்கிறது. இவனை அபத்யம் (எந்தக் குழந்தையால் பிதா நரகத்தையடையாமலிருப்பானோ அந்தக் குழந்தை) என்று நினைத்துப் போஷிக்கிறீர்.

இவன் பரம புருஷராகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் இடத்தில் விரோதபுத்தியுள்ளவன். இவனால் உமக்கு க்ஷேம்மம் கிடைக்காது, சம்பத்து உம்மை விட்டு விலகியது; கெட்ட நடையுள்ள இந்தப் புத்திரனை நாட்டை விட்டுத் துரத்தி விடவேண்டும். குலத்தின் க்ஷேமத்திற்காக ஒருவனைப் பரித்தியாகம் செய்வது நியாயமேயாகும், தரும புத்திரருக்கு அவருடைய பாகத்தைக் கொடுத்துவிடும்" என்றார். அதனைக் கேட்ட துரியோதனன் மிகுந்த கோபங்கொண்டு உதடுகள் துடிக்கக் கர்ணன், துச்சாதனன், சகுனி என்னும் இவர்களுடன் சாதுக்களால் விரும்பக்கூடிய ஸ்வபாமுள்ள விதுரரை யுத்தேசித்து, "தாசியின் புத்திரனாகிய விதுரன் கபட ஸ்வபாவமுள்ளவன். நம்முடைய அன்னத்தை புசித்தவனாயிருந்தும் நமக்கே விரோதம் செய்கிறான். சத்ருக்களுக்கு அனுகூலஞ் செய்வதில் ஜாக்ரதையாக இருக்கிறான். இவனை இந்த ஆலோசனை சபைக்கு எவன் அழைத்தான்? இவனை உயிருடன் பட்டணத்தை விட்டுத் துரத்த வேண்டும்" என்று அவமதித்துச் சொன்னான். இம்மாதிரி விதுரர் திருதராஷ்டிரருடைய முன்பாகத் துரியோதனனுடைய நிஷ்டுரவார்த்தை களாகிய பாணங்களால் அடிக்கப்பட்டும் அதனால் வருத்தப்படவில்லை. ஆனால், மாயையின் மஹிமை அளவிடமுடியாதது என்று ஆச்சரியமடைந்தார்.

பிறகு அவர் (விதுரர் அஸ்தினாபுர பட்டணத்தை விட்டு வெளியில் போய்ப் பீமசேனர் முதலியவர்களு டன் சேர்ந்த யுத்தத்திற்கு வருவாரோவென்று சந்தே கிக்க வேண்டாம் என்ற விஷயத்தை துரியோதனன் முதலியவர்களுக்குத் தெரிவிப்பதற்காக) தம்முடைய

வில்லை அவர்களுடைய அரண்மனை வாசலில் வைத்துவிட்டு, தம்மைத் துரத்த முயற்சிப்பதற்கு முன்னமேயே பட்டணத்திற்கு வெளியில் சென்றார். கௌரவர்களுடைய பாக்கிய ரூபியாகிய அந்த விதுரர் புண்ணியத்தைச் சம்பாதிக்க விரும்பி க்ஷேத்திராடனஞ் செய்ய ஆரம்பித்தார். க்ஷேத்திரங்களில் பகவான் ப்ரஹ்மா, ருத்திரன் முதலிய அநேக சரீரங்களுடன் ஸான்னியத்யஞ் செய்கிறார். வனங்கள், புண்யகரமாகிய தோட்டங்கள், மலைகள், கொடிவீடுகள், சுத்தமான ஜலமுள்ள நதிகள், ஏரிகள், பகவானுடைய மூர்த்திகளால் அலங்கரிக்கப்பட்ட க்ஷேத்திரங்கள் ஆகிய இவைகளில் சஞ்சரித்தார். மேலும், அவர் ஒவ்வாரு தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்தும் சுத்தமாகிய ஜீவனமுள்ளவராகப் பூமியில் படுத்துக் கொண்டு, மரவுரியை உடுத்திக் கொண்டு தம்முடைய பந்துக்களாலும், "இவர் விதுரர்" என்று தெரிந்து கொள்ள முடியாத ஸ்வரூபமுள்ளவராக ஸ்ரீ மகா விஷ்ணுவிற்குப் ப்ரியமாகிய வ்ரதங்களை அனுஷ்டித் தார். இப்படிப் பாரத வர்ஷம் முழுவதும் சஞ்சரித்துக் கடைசியில் ப்ரபாஸ தீர்த்தஞ் சென்றார். அந்தக் காலத்தில் தருமபுத்திரர் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய சகாயத்தால் ஸகல பூமியையும் பரிபாலித்து வந்தார். அப்பொழுது அவருடைய சைன்யம் ஒன்றுதான் பூமியிலிருந்தது. அரசர்களுக்கு அடையாளமாகிய வெள்ளைக் குடை ஒன்றே நிலைத்திருந்தது. மூங்கில்கள் ஒன்றோடொன்று சேர்ந்து அக்னி யுண்டுபண்ணி அதனால் அவைகள் எரிக்கப்படுவது போலக் கௌரவர்கள் நாசமடைந்தார்கள் என்று ஜனங்கள் சொல்லிக் கொள்வதை விதுரர் ப்ரபாஸ தீர்த்தக் கரையில் கேட்டு, வருத்தத்துடன் மௌனமாக

அவ்விடத்திலிருந்து மேற்கு முகமாய்ச் சரஸ்வதி நதியை நோக்கிச் சென்றார். அவ்விடத்தில் திரிதர், உசனஸ், மனு, பிருது, அக்கினி. அஸிதர், வாயு, ஸுதாஸர், கோ (பசு), சுப்பிரமண்யர், ச்ராத்த தேவர் என்னும் இவர்களுடைய பெயரால் ஏற்படுத்தப்பட்ட பதினொரு தீர்த்தங்கள் இருக்கின்றன. மேலும், மஹர்ஷிகளாலும், தேவர்களாலும் ஏற்படுத்தப்பட்ட விஷ்ணுவின் ஆலயங்கள் இருக்கின்றன. அவைகளின் மேற்புறத்திலிருக்கும் கும்பங்கள் பகவானுடைய சக்கரம் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு இருப்பதால் அவற்றைக் கண்டவுடன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய ஞாபக முண்டாகிறது. அவைகள் எல்லாவற்றையும் விதுரர் சேவித்தார்.

பிறகு, அவ்விடமிருந்து ஸௌராஷ்டிரம், ஸௌவீரம், மத்ஸ்யம், குருஜாங்கலம் என்னும் தேசங்களைத் தாண்டி, சிலகாலம் சென்றபின் யமுனையின் கரை சென்றார். அவ்விடத்தில் பகவத் பக்தராகிய உத்தவ ரைக் கண்டார். அவர் வசுதேவ புத்திரராகிய பகவானுடன் சஞ்சரிப்பவர். மிகவும் சாந்தர். ப்ரகஸ் பதியின் முந்திய சிஷ்யர், ப்ரசித்தர். இப்படிப்பட்ட உத்தவரை விதுரர் மிக்க பிரியத்துடன் தழுவி, பகவானால் போஷிக்கக்கூடிய தம்முடைய பந்துக்கள் க்ஷேமமாக வஸிக்கிறார்களாவென்று பின்வருமாறு விசாரிக்கத் தொடங்கினார். எப்படியெனில், தம்முடைய நாபியிலிருந்து உண்டான ப்ரஹ்மதேவர் உடைய வேண்டுகோளின்படி தாமே இரண்டு விதமாகப் பூமியில் அவதரித்துப் ப்ரஜைகளுக்கு ஆனந்தத்தை யுண்டு பண்ணிக் கொண்டிருக்கும் பலராமனும், ஸ்ரீ கிருஷ்ண பகவானும் சூரசேனருடைய

க்ருஹத்தில் க்ஷேமமாக வஸிக்கிறார்களா? பூஜ்யராகிய வசுதேவர் சுகமாக இருக்கிறாரா? அவர் சகோதரிகளுக்கு இஷ்டமான உத்தம வஸ்த்துக்களைக் கொடுத்து, பிதாபோல் அவர்களைப் பூஜிப்பவர்களல்லவா? யாதவ ஸைனியத்திற்கு அதிபதியான ப்ரத்யும்னர் க்ஷேமமாக இருக்கிறாரா? அவர் முன் ஜன்மத்தில் மன்மதனாக இருந்தவர். ப்ராஹ்மணர்களுடைய அனுக்கிரஹத்தால் ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு ருக்மணி தேவியினிடம் பிறந்தவர். தாமரை மலர் போன்ற கண்களுள்ள ஸ்ரீ கிருஷ்ண பகவான் இராஜ்யத்தை விரும்பாமல் உக்ரசேனருக்கு இராஜ் யாபிஷேகஞ் செய்வித்தாரல்லவா? சாத்வதர்களுக்கும், வ்ருஷ்ணிகளுக்கும், போஜர்களுக்கும், தாசார்ஹர்களுக்கும் அதிபதியான அந்த அரசன் சௌக்கியமாக இருக்கிறாரா? ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் சமமானவரும், ரதிகர்களுக்குள் முந்தியவரும், பகவானுடைய புத்திரருமாகிய சாம்பனென்பவர் க்ஷேமமாயிருக்கிறாரா? அவரை ஜாம்பவதி கடுமையான விரதங்களைச் செய்து புத்திரனாக அடைந்தாள். அவர் முன் ஜன்மத்தில் பார்வதிக்குப் புத்திரனாக இருந்த சுப்ரமண்யனேயாம். அர்ச்சுனனிடத்தில் அஸ்திர வித்தையை அப்பியசித்தவரும்; பகவானைச் சேவித்து யதுக்களுக்கும் அரிதாகிய பகவத் கதியை அடைந்தவருமான யுயுதானர் (ஸாத்யகி) க்ஷேமமா? பகவானிடத்தில் அதிகப் பக்தியுள்ளவரும், பாபமற்றவரும், விவேகியுமான அக்ரூரர் க்ஷேமமா? அவர் ஸ்ரீ கிருஷ்ணன் நடந்த இடத்தில் அவருடைய திவ்யமாகிய பாதம் வைத்த புண்ணிய ஸ்தலத்திலுள்ள தூளிகளின் விசேஷ பிரேமையால் தைரியம் தளர்ந்தவராகப் புரளுகிறவரல்லவா? வேதமானது யாக விதியாகிய பொருளையடக்கிக் கொண்டிருப்பது போல் தேவகி

ஆனவர் ஸ்ரீ மகாவிஷ்ணுவைத் தன்னுடைய வயிற்றில் தரித்தாளல்லவா? அவளுக்குச் சமமானவள் அதிதி தேவியே தவிர வேறில்லை, அந்தக் கிருஷ்ண பகவான் உடைய மாதா க்ஷேமமாக இருக்கிறாளா? அநிருத்தர் க்ஷேமமாக இருக்கிறாரா? அவர் பக்தர்களுக்கு அபீஷ்டத்தைக் கொடுப்பவர். அவரே சாஸ்திரத்திற்குக் காரணரென்றும், மனத்தைப் ப்ரவர்த்திக்கச் செய்பவர் என்றும், அந்தக்கரணத்தின் நான்காவது தத்துவமென்றும் தேவர்கள் சொல்லுகிறார்கள். தங்களுடைய ஆத்மாவிற்குத் தெய்வமாகிய ஸ்ரீ கிருஷ்ணனையே உபாசிப்பவர்களான ஹ்ருதிகர், சத்யபாமையின் புத்திரர் சாருதேஷ்ணர், கதர் முதலிய மற்ற பந்துக்கள் அனைவரும் க்ஷேமமாக இருக்கிறார்களா? தரும புத்திரர் தம்முடைய கைகள் போலிருக்கும் அர்ச்சுனன், ஸ்ரீ கிருஷ்ண பகவான் இவர்களுடன் தர்மமாக லோக மரியாதையைக் காப்பாற்றி வருகிறாரா? அர்ச்சுனன் உடைய ஒத்தாசையால் தர்மபுத்திரருக்குக் கிடைத்த இராஜ்யலக்ஷ்மியைக் கண்டு துரியோதனன் மிகவும் வருத்தப்பட்டானல்லவா? பீமசேனர் கதாயுத்தஞ் செய்யும்பொழுது அவருடைய பாதங்களின் சஞ்சாரத்தைச் சகியாமல் பூமி அசையுமே. அவர் வெகு நாளாகத் தமக்கு அபராதஞ் செய்தவர்களான சத்துருக்களைத் தக்கபடி சிட்சித்தாரா? அர்ச்சுனன் கிராத வேஷங் (வேட வடிவங்) கொண்ட பரமசிவனுடன் யுத்தஞ் செய்யும் சமயத்தில் அர்ச்சுனனுடைய பாணங்களால் அவர் மறைக்கப்பட்டு மிகவும் சந்தோஷமடைந்தாரல்லவா? ரதிகர்களுக்குள் மிகுந்த கீர்த்தியுள்ள இந்த அர்ச்சுனன் சத்ருக்களைக் கொன்றாரா? குந்திதேவியின் ஸ்தன்ய பானத்தால் வளர்ந்தவர்களும், இமைகளுடன் கண்கள் சேர்ந்து

இருப்பதுபோலக் குந்தி புத்திரர்களுடன் விசேஷ பிரேமையுடன் வசிப்பவர்களுமான நகுல சகாதேவர்கள் இருவர்களும் இரண்டு கருட பட்சிகள் மகேந்திரன் இடத்திலிருந்து அமிருதத்தைக் கொண்டு வந்தாற் போலத் தங்களுடைய ராஜ்யத்தை எதிரிகளிடமிருந்து வசப்படுத்திக் கொண்டு சந்தோஷிக்கிறார்களா? அதிரதரும், லோகத்தில் முக்கிய வீரராயுமுள்ள பாண்டு மகாராஜன் வில்லையே ஒத்தாசையாக வைத்துக் கொண்டு நான்கு திக்குகளையும் ஜயித்தார். அப்பேர்ப் பட்ட சூரனாகிய பர்த்தா இறந்தபிறகு குந்தியானவள் தன்னுடைய புத்திரர்களுக்காகவே உயிருடனிருந்தாள். ஓ, உத்தவரே துர்க்கதியை யடையத் தயாராக இருக்கும் திருதராஷ்டிரரைப் பற்றித் துக்கிக்கிறேன். அவர் தம்பியாகிய பாண்டு மகாராஜன் இறந்த பிறகு அவருடைய புத்திரர்களுக்குத் துரோகஞ் செய்ததால் சகோதரனுக்குத் துரோகஞ் செய்தவரானார். மேலும், அவர் தம்முடைய பிள்ளைகளான துரியோதனர்கள் உடைய இஷ்டப்படி என்னைப் பட்டணத்திலிருந்து துரத்தினாரல்லவா? ஆனாலும் மனுஷிய சரீரம் எடுத்து, அவர்களுடைய சித்தத்தைப் பலவகையில் செல்லும்படியாகத் தூண்டும் பகவானுடைய மார்க்கத்தை அவருடைய அனுக்கிரகத்தால் தெரிந்து கொண்டு நான் மற்றவர்கள் கண்களுக்குப் புலப்படாத வனாகிச் சஞ்சரிக்கிறேன். இதில் எனக்கு ஆச்சரியம் யாதுமில்லை. ஸ்ரீ கிருஷ்ண பகவான் துரியோதனன் முதலியவர்களைக் குற்றஞ் செய்த க்ஷணத்திலேயே கொல்லக்கூடிய சாமர்த்தியம் உள்ளவரானாலும் அப்பொழுதே அவர்களைக் கொல்லாமலிருந்தும், தாம் தூதராகி அவர்களிடம் சென்றும், அவர்களால் அவமதிக்கப்பட்டும், உதாசீனராய் இருப்பதற்கு யாது

காரணமென்று யோசிப்போமேயானால், வித்தை, தனம், மேலான குலத்தில் பிறப்பது ஆகிய மூன்று வகையாலும் ஏற்படும் மதத்தால் விவேகமற்றவர்களும், அளவற்ற சைனியர்களுடன் பூமியை அசைப்பவர்களு மான கெட்ட அரசர்களையும் நாசஞ் செய்து, பூமியின் பாரத்தைக் குறைப்பதற்காகவேயென்று நிச்சயிக்க வேண்டியதாயிருக்கிறது. உண்மையில் பிறப்பில்லாத மகாபுருஷன் துஷ்டர்களைச் ஸம்ஹரிப்பதற்காகவே ஜன்மத்தை அங்கீகரித்தார். மேலும் அவர் (அகர்த்தா) ஒன்றையுஞ் செய்யாதவரானாலும், மனிதர்களுக்குக் கர்மத்தில் ச்ரத்தை யுண்டாவதற்காகவே லீலைகளைச் செய்கிறார். இப்படி யில்லாவிடில் குணங்களை அதிக்கிரமித்தவராகிய பரமாத்மாவிற்குக் கர்மாதீன மாகிய சரீரம் எப்படி ஏற்படக் கூடும்? ஆதலால், தம்முடைய ஆக்ஞைக்குட் பட்டவர்களும் சரணம் அடைந்தவர்களுமான ஸகல லோக பாலகர்களுக்காக பூமியில் அவதரித்தவரும், ஜன்மமற்றவரும், சம்சாரத் தைப் போக்கக் கூடிய கீர்த்தியுள்ளவருமான ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய கதைகளைச் சொல்லும் என்றார்.

நோட்டு

பதினொரு –1. திரித தீர்த்தம். 2. உசனஸ் தீர்த்தம் 3. மனு 4. பிருது தீர்த்தம் 5. அக்கினி தீர்த்தம் 6. அஸித தீர்த்தம் 7. வாயு தீர்த்தம் 8. ஸுதாஸ தீர்த்தம் 9. கோ தீர்த்தம் 10. ஸுப்ரமண்ய தீர்த்தம் 11. சிரார்த்ததேவ தீர்த்தம்

அத்தியாயம்–2

உத்தவர் ஸ்ரீகிருஷ்ண சரிதத்தை வர்ணித்தது

விதுரருடைய பிரியமான வார்த்தையைக் கேட்டுப் பாகவத சிரோமணியான உத்தவர் அதிகப் பிரேமையால் ஸ்ரீ கிருஷ்ணனை மனத்தில் நினைத்துக்கொண்டு ப்ருதியுத்தரஞ் சொல்ல முடியாதவராயிருந்தார். அந்த உத்தவர் ஐந்து ப்ராயமுள்ள சிறுவனாயிருக்கும்போது ஒருநாள் பாலக்கிரீடையில் ப்ரதிமை ஒன்றை ஸ்ரீ கிருஷ்ணனாகப் பாவித்து, அதற்குப் பூஜை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது அவருடைய தாயான வள் காலையில் போஜனஞ் செய்யவேண்டியதற்காகப் பலவகையான நல்வார்த்தைகளை சொல்லி அவரை யழைத்தாள். அப்படியும் அவருக்கு ஆகாரத்தில் விருப்பம் உண்டாகவில்லை. பகவத் பக்தர்களுக்குள் சிறந்தவராகிய அப்போர்ப்பட்ட உத்தவர் பகவானுடைய சேவையாலேயே காலத்தைக் கழித்து ஜரையையடைந்தவராகையால் பகவானுடைய பாதங்களைத் தியானித்து, அதிலேயே ரமித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் விதுரருடைய கேள்விக்குப் ப்ரதியுத்தரஞ் சொல்ல முடியுமா? அவர் பகவானுடைய பாதாரவிந்த மதுவினால் விசேஷ ஆனந்த மடைந்து, மிகவும் திடமான பக்தி யோகத்தில் மூழ்கினவராகி ஒரு முகூர்த்தம் மௌனமாயிருந்தார். அப்போது அவர் உடைய எல்லா அவயவங்களிலும் மயிர்கூச்ச லுண்டாயிற்று கண்கள் மூடினவைகளாயிருந்தன. துக்கத்தால் கண்ணீர் பெருகியது. பகவத் விஷயமான விசேஷ ப்ரேம ரசம் நிறைந்தவரும் கிருதார்த்தருமாகி இருந்தார். பிறகு கொஞ்ச நேரம் சென்றபின்,

பகவானாகிய லோகத்திலிருந்து இவ்வுலகத்திற்கு வந்து கண்களைத் துடைத்துக்கொண்டு பகவான் செய்த லீலைகளை நினைத்து ஆச்சரயமுள்ளவராகி, விதுரரை நோக்கி பின்வருமாறு சொல்லலானார்: ஸ்ரீ கிருஷ்ணன் ஆகிய சூரியன் அஸ்தமயத்தையடைந்த போது காலமாகிய பெரிய சர்ப்பமானது நம்முடைய வீடுகளைக் கவர்ந்துகொண்டது. இந்த நிலைமையில் உம்மால் கேட்கப்பட்ட பந்துக்களுடைய க்ஷேமத்தைப் பற்றி எதனைச் சொல்வேன்? இவ்வுலகத்திற்கு அதிருஷ்டக்குறைவுண்டாயிற்று. யாதவர்கள் எல்லோரும் இங்கிதத்தை யறிந்தவர்களானாலும், மிகவும் ஸமர்த்தர்களானாலும், ஒரே இடத்தில் வசிப்பவர்கள் ஆனாலும் ஸகல பூதங்களுக்கும் இருப்பிடமாகிய ஈசுவரனை யாதவர்களுக்குள் சிறந்தவராக நினைத்தார் களே யொழிய மகாவிஷ்ணுவென்று தெரிந்து கொள்ளவில்லை. பாற்கடலில் இருக்கும் மத்ஸ்யங்கள் தங்களுடன் சகவாசஞ் செய்த சந்திரனையும் ஒரு வகையான ஜல ஜந்துவாக நினைத்தனவே யொழிய அமிருத ஸ்வருபியென்று தெரிந்துகொள்ளவில்லை. அவைகள் போன்ற யாதவர்களுக்குப் பாக்கியம் மிகவும் குறைந்துவிட்டது. சில யாதவர்கள் பகவான் உடைய மாயையால் மோகித்து, "இவர் யது குலத்தில் பிறந்தவர். நமக்குப் பந்து" என்று சொல்கிறார்கள்.

சிசுபாலன் முதலிய சிலர் விரோத புத்தியுள்ளவர் களாய் பகவானை நிந்தித்தார்கள். ஆனால் பகவான் இடத்திலேயே மனத்தைச் செலுத்தியவர்களுடைய (என்னை போன்றவர்களுடைய) புத்தியானது மேற் காட்டியவர்களுடைய வார்த்தையைக் கேட்டும் பிரமிக்கவில்லை, மேலும் பகவான் நன்றாகத் தவஞ்

செய்யாதவர்களும், பார்த்துத் திருப்தியடையாத கண்களுள்ளவர்களுமான மனிதர்களுக்குத் திவ்ய சரீரத்தைக் காண்பித்து ஜனங்களுடைய கண்களைக் க்ரஹித்துக் கொண்டு மறைந்தார். அந்தக் திவ்ய சரீரமானது மனுஷ்ய லீலைகளுக்குத் தகுதியானது அவருடைய மனத்திற்கும் ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியது. மிகுந்த சௌபாக்கியத்திற்கும் இருப்பிடம். ஆபரணங்களுக்கு அழகைக் கொடுக்கக் கூடிய அவயவங்களுள்ளது. மேலும் தரும புத்திரருடைய ராஜசூய யாகத்தில் வந்திருந்த ஸகல ஜனங்களும் ஆனந்தகரமாகிய அந்தச் சரீரத்தைப் பார்த்து ப்ரஹ்ம தேவர் ஸ்ருஷ்டி விஷயத்தில் தமக்கிருக்கும் சாமர்த்தியம் முழுவதையும் இந்தச் சரீரத்தில் காட்டியிருக்கிறார் என்று நினைத்தார்கள். அந்தக் திவ்ய மூர்த்தியினுடைய அனுராகமுள்ள சிரிப்பு விநோதம் விளையாட்டான பார்வை ஆகிய இவைகளில் அதிக ஆசை கொண்ட கோபஸ்திரீகள் அனைவரும் அவரவர்கள் செய்து கொண்டிருந்த காரியங்களை முடிக்காமலே பகவானையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். மேலும் அவர்களுடைய மனமானது பகவானிடத்திலேயே பதிந்து அவர் பின் சென்றது. அந்தப் பகவானுக்கு சாந்தம், அசாந்தம் என்று இருவகையான ஸ்வரூபம் உண்டு. அவைகளில் சாந்த ஸ்வரூபமாகிய சாதுக்கள், அசாந்த ஸ்வரூபமாகிய துஷ்டர்களால் உபத்திரவிக்கப் படும்போது காரியகாரணங்களுக்கு அதிபதியான பகவான் விசேஷ கருணையுள்ளவராக மாயையின் சம்பந்தத்தை அடைந்து (மகத் தத்துவத்தைக் காரியமாக உடையது அவ்யக்தம்) உண்மையில் பிறப்பில்லாதவரானாலும் எப்பொழுதும் சித்தமாக இருக்கும் அக்னியானது சில சமயத்தில் கட்டை

முதலியவைகளில் பிரகாசிப்பது போல் அவதரிக்கிறார் (பிரகாசிக்கிறார்). ஆனாலும் அளவற்ற வீரியம் உள்ள அந்தப் பகவான் வஸுதேவருடைய வீட்டில் காராகிருகத்தில்) பிறந்ததாக அபிநயஞ் செய்ததையும் கோகுலத்தில் வஸித்ததையும், கம்ஸனிடத்தில் பயந்தவர்போல் மதுரையை விட்டுப் போனதையும், ஒரு சமயத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான், தேவகி, வஸுதேவர் இவர்களுக்கு நமஸ்காரம் செய்து அவர் களை நோக்கி, ஓ அண்ண! ஓ அம்ம! கம்ஸனிடம் பயந்தவர்களான நாங்கள் உங்களுடன் சகவாசஞ் செய்து உங்களுக்குச் சிச்ருஷை செய்ய முடியாதவர் களானோம். அந்த விஷயத்தில் தயவுசெய்ய வேண்டும்! என்று கேட்டுக்கொண்டதையும் நினைக்கும்போது அவைகள் என் மனதிற்கு வருத்தத்தைப் உண்டு பண்ணுகின்றன. (ஆனாலும் அவரை ஈசுவரனல்ல வென்று எப்படி சொல்லக்கூடும்?) அவர் அசைகின்ற தம்முடைய புருவமாகிய யமனைக் கொண்டு பூமியின் பாரத்தைப் போக்கினார். (அவருடைய புருவத்தின் அசைப்பே துஷ்டர்களுக்கு யமனாக விருந்தது) அவர் உடைய பாதங்களின் தூளியை ஒரு தடவை சேவித்த வன் மறுபடி பிறப்பானா? மேலும் பகவானிடம் விரோத புத்தியுள்ள சிசுபாலன் தருமபுத்திரருடைய இராஜசூயத்தில் யோகிகளால் விரும்பக்கூடிய உத்தம பதத்தைப் பகவானுடைய அனுக்கிரஹத்தால் அடைந்தானென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அவரை விட்டுப் பிரிந்த துக்கத்தை யாரால் ஸகிக்க முடியும்? மேலும், யுத்தத்தில் அரசர்கள் அழகாக ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரை மலர்போன்ற முகத்தைத் தரிசித்து அர்ச்சுனனுடைய அஸ்திரத்தால் சுத்தர்களாகி விஷ்ணு பதத்தை

அடைந்தார்கள். அவருக்குச் சமமானவரும், மேலானவரும் உலகத்தில் ஒருவருமில்லை. அவர் ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் அதிபதி. பரமானந்த ஸ்வரூபியாகையால் ஸகல கர்மத்தையும் அடைந்தவர். இந்திரன் முதலிய லோகபாலர்கள், காணிக்கைகளுடன் அவர் உடைய தரிசனத்திற்காக வந்து, தங்களுடைய கிரீடம் அவருடைய பாத பீடத்தில் படும்படி நமஸ்கரிக்கிறார்கள். அதனாலுண்டாகும் சப்தமானது அவரைத் துதிப்பது போலிருக்கிறது. அந்த மகாபுருஷன் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும் உக்கிரசேனருடைய பக்கத்தில் நின்று, அரசர்களிடம் வேலைக்காரர்கள் சொல்லும் சம்பிரதாய வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டு கைங்கரியங்களைச் செய்து வந்தார். அதை நினைக்கும்போது என் மனம் நடுங்குகிறது. மேலும், பூதனையென்னும் துஷ்ட ராக்ஷஸியானவள் கொல்ல வேண்டுமென்று எண்ணத்துடன் காலகூட விஷயம் ஆகிய ஸ்தன்யத்தை அவருக்கு கொடுத்தும், அவள் இடத்தில் பகவான் கோபியாமலும் அவள் செய்த அபகாரத்தை நினைக்காமலும், யசோதைக்கு தகுதியாகிய உத்தம கதியை அவளுக்குக் கொடுத்தருளினார். பகவானுடைய கருணை வியக்கத்தக்கது. ஆகையால் அவரை விட்டு வேறு யாரைச் சரணம் அடைவோம்? அசுரர்களானாலும் பகவானிடத்தில் விரோதத்தாலாவது எப்பொழுதும் மனத்தைச் செலுத்தியவர்கள் ஆகையால் அவர்களும் பாகவதர்களேயாம். அவர்கள் யுத்தத்தில் கருடனையும்; அவர் மீது ஏறிவரும் சக்ரபாணியாகிய பகவானையும் தர்சித்தார்கள். முன்னொரு சமயத்தில் இந்தப் பூமியின் பாரத்தை நிவர்த்திப்பதற்காகத் ப்ரஹ்மதேவரால் ப்ரார்த்திக்கப்பட்டு ஸ்ரீ நாராயணன் ஸ்ரீ கிருஷ்ணன்

என்ற திவ்ய நாமதேயத்துடன் வஸுதேவருக்குத் தேவகியிடம் காராக்கிருகத்தில் புத்திரனாக அவதரித்தார். அப்பொழுது வஸுதேவர் கம்ஸனிடம் பயந்து வேண்டிக்கொள்ள, அவ்விடமிருந்து கோகுலஞ்சென்று, பலராமனுடன் பதினோரு வருஷங்கள் அவ்விடத்தில் வஸித்தார். யமுனையின் கரையில் கன்று மேய்க்கும் சிறுவர்களுடன் கன்றுகளை மேய்த்து கொண்டு விளையாடினார். அந்த நதியின் கரையிலிருக்கும் மரங்களின் கிளைகளில் பறவைகள் இனிமையாகச் சப்தித்துக் கொண்டிருந்தன. மேலும்; சிங்கக் குட்டி போல அழகாய்ப் பார்க்கும் ஸ்வபாவமுள்ள அந்தப் பகவான் சிறு வயதில் கோபர்கள் பார்த்து ஆனந்திக்கக் கூடிய கௌமார சேஷ்டைகளைக் காட்டியருளினார். சிலவேளை சிரிப்பதுபோலும், சில சமயம் அழுவது போலும் அபிநயஞ் செய்தார். அவரே சொற்ப காலத்திற்குப் பின் லக்ஷ்மிதேவிக்கு இருப்பிடமான வெண்மை நிறமுள்ள பசுக்களையும், விருஷங்களையும் வேணுகானஞ் செய்து சந்தோஷப்படுத்தினார். மேலும் அவர் கம்ஸனால் அனுப்பப்பட்டவர்களும், இஷ்டப்படி உருவமெடுக்கக் கூடியவர்களும், மாயாவிகளுமான அசுரர்களைச் சிறுவர்கள் ஆடும் ப்ரதிமைகளைப் போல நாசஞ் செய்தார். பின்னும் யமுனையிலிருந்து காளியன் என்ற சர்ப்பத்தின் விஷத்தால் கொதித்து இருந்த ஜலத்தைக் குடித்துப் பசுக்களும், கோபர்களும், மரணமடைந்தபோது அவர்களைப் பிழைக்கச்செய்து அந்தச் சர்ப்பத்தை, நிக்ரஹித்து அந்த ஜலத்தைச் சுத்தமாக செய்தார். பின்னும் அவர் இந்திரனை உத்தேசித்துச் செய்யும் பூஜையை நிறுத்தி, பசுக்களுக்குப் பூஜை செய்யும்படி நந்தரிடம் சொல்லி, அந்த மஹோத்ஸவத்தை ப்ராஹ்மணர்களைக் கொண்டு

முடித்து ஏராளமான இருந்த பணத்தை நல்ல விஷயத்தில் செலவிட்டார். பிறகு மகேந்திரன் கோபித்து அதிக மழை பெய்யச் செய்தான். அப் பொழுது பகவான் கோவர்த்தன மலையாகிய குடையைப் பிடித்துக் கோகுலத்தைக் காப்பாற்றினார். பின்னும் அவர் சரத்காலத்தில் நிர்மலமாகிய சந்திரிகையால் பிரகாசிக்கும் ராத்திரியில் அநேக ஸ்திரீகளுடைய மத்தியிலிருந்து இனிமையாக வேணுகானஞ் செய்து கொண்டு விளையாடினார்.

அத்தியாயம்–3

ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதங்கள்

1–23 பிறகு அந்தப் பகவான் தம்முடைய தாய் தந்தையர்களுக்கு க்ஷேமத்தைச் செய்ய விரும்பிப் பலராமனுடன் கோகுலத்திலிருந்து மதுரா நகரஞ் சென்று அவ்விடத்தில் உயரமான இராஜ மஞ்சத்தி லிருப்பவனும் தம்முடைய சத்துருக்களில் பிரதானனு மாகிய கம்ஸனைக் கொன்று, உயிரற்ற அவனுடைய சரீரத்தைப் பூமியில் இழுத்தார். மேலும் அவர் ஸாந்தீபனி என்பவரைக் குருவாக வரித்து, வேதங்களை அவைகளின் அங்கங்களுடன் அவரிடமிருந்து ஒரு தரம் உபதேசித்த மாத்திரத்திலேயே க்ரஹித்துக் கொண்டார். சில நாளைக்கு முன் இறந்து போன குரு புத்திரனை, பஞ்சஜனனென்ற ராக்ஷஸனுடைய வயிற்றைக் கிழித்து, அழைத்து வந்து, குருதக்ஷணை யாக ஆசார்யரிடம் சமர்ப்பித்தார். பீஷ்ம மகாராஜ னுடைய புத்திரியும், லக்ஷ்மீதேவி போன்றவளுமாகிய ருக்மிணி தேவியின் ரூபலாவண்யத்தால் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பி விதர்ப்ப தேசத்தில் வந்து கூடிய அரசர்களுடைய சிரசில் பாதங்களை வைத்து மிகுந்த இலாகவத்துடன் தம் முடைய சொத்தாகிய அந்த ருக்மிணியை அபகரித் தார். பின்பு அவளைக் காந்தர்வ விதிப்படி கல்யாணஞ் செய்துகொண்டார். பின்னும் அவர் அங்குக் குத்தப் படாதவைகளான வ்ருஷபங்களை ஜயித்து, நக்னஜித் தின் புத்திரியை விவாகஞ் செய்து கொண்டார். அப்பொழுது ஏற்கனவே அந்த வ்ருஷபங்களை அடக்கமுடியாமல் வெட்கப்பட்டு அப்புறம் சென்ற

அரசர்கள் அந்த ராஜகுமாரியிடம் ஆசைகொண்டு ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் யுத்தத்திற்கு வந்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களை ஆயுதங்களாலேயே கொன்றார். ஆனால் பகவானுக்குக் கொஞ்சமேனும் காயமில்லை. மேலும் அவர் தாம் சுதந்திரரானாலும் ஸ்திரீகளுக்கு வசப்பட்டவர் போல சத்யபாமையின் பிரீதிக்காக பாரிஜாத வ்ருக்ஷத்தைப் பூமிக்குக் கொண்டுவந்தார். அப்பொழுது ஸ்திரீகளின் கிரீடா மிருகம்போன்ற இந்திரன் மிகவும் கோபங்கொண்டு சைனியங்களுடன் பகவானுடன் யுத்தம் செய்தான். மேலும் அவர் ஆகாயம் வரையில் பரவிய சரீரமுள்ள வனும், பூமியின் புத்திரனுமாகிய நரகாசுரனைச் சக்ராயுதத்தால் கொன்றார். பின்பு பூமிதேவியால் ப்ரார்த்திக்கப்பட்டு நரகனுடைய புத்திரனாகிய பகதத் தனுக்கு இராஜ்யத்தைக் கொடுத்து நரகனுடைய அந்தப்புரத்தில் ப்ரவேசித்தார். அவ்விடத்தில் நரகாசுரனால் அநேக தேசங்களிலிருந்து கொண்டுவரப் பட்ட இராஜ கன்னிகைகள் இருந்தார்கள், அவர்கள் அனைவரும், உபத்திரவ மடைந்தவர்களுக்குப் பந்து வாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானைக் கண்டவுடன் எழுந்திருந்து, சந்தோஷம், வெட்கம், ஆசை ஆகிய இவைகளுடன் பார்த்தார்கள். பிறகு அவர்களெல்லோரு க்கும் தனியாக அந்தப்புரங்களை ஏற்படுத்தி, அவை களில் ஒரே சமயத்தில் தம்முடைய மாயையால் அநேக ரூபமெடுத்துக் கொண்டு விதிப்படி அவர்களை விவாகம் செய்துகொண்டார். பின்பு தமது மாயையை விஸ்தரிப்பதற்காக அந்த ஒவ்வொரு ஸ்திரீயினிடத்தி லும் தமக்கு சமமான பத்துப்புத்திரர்களை உண்டு பண்ணினார். மேலும் அவர் தமது பட்டணத்தை முற்றுகை செய்தவர்களான காலயவனன், மாகதன்,

ஸால்வன் ஆகிய இவர்களை முசுகுந்தர் முதலியவர் களை நிமித்தாமாக வைத்துக் கொண்டு தாமே கொன்றார். தம்மைச் சார்ந்தவர்களுக்குக் கீர்த்தியை உண்டு பண்ணினார். சம்பரனையும், துவிதனையும், பாணனையும், முரனையும், பல்வலனையும், தந்தவக்தி ரன் முதலியவர்களையும் கொன்றார். மற்றவர்களைப் ப்ரத்யும்னன் முதலியவர்களைக் கொண்டு கொல்வித் தார். மேலும் பாண்டவர்களுடைய பட்சத்திலும் துரியோதனனுடைய கட்சியிலும் யுத்தத்திற்குச் ஸித்தர்களாக இருப்பவர்களும், சகோதரர்களும், புத்திரர்களுமாகிய அரசர்களெல்லோரையும் நாசஞ் செய்தார். அந்த ஸைன்யத்தால் குருக்ஷேத்ர பூமியானது அசைந்தது. கர்ணன், துச்சாஸனன், சகுனி ஆகிய இவர்களுடைய துராலோசனையால் துரியோத னுடைய ஐசுவர்யமும், ஆயுசும் குறைந்ததுமன்றி அவனுடைய ஸைனியங்களும் நாசமடைந்தன. கடைசியில் துரியோதனுடைய தொடைகளும் முறிக்கப்பட்டன. அவன் பூமியில் விழுந்தான். அப் பொழுது அவனைப் பார்த்தும் சந்தோஷப்பட வில்லை. ஆனாலும், த்ரோணர், பீஷ்மர், அர்ஜுனர், பீமசேனர் ஆகிய இவர்களால் அக்ஷௌஹிணி ஸைன்யங்கள் கொல்லப்பட்டன. அதனால் பூமியின் பாரம் கொஞ்சம் குறைந்தாலும், அளவற்ற யாதவ ஸைன்யமானது , என்னுடைய அம்சர்களான ப்ரத்யும்னர் முதலியவர்களால் காப்பாற்றப்பட்டுச் சத்துருக்களால் ஜயிக்க முடியாததாக இருக்கிறது. அது பூமி பாரமல்லவா? அதை நாசஞ் செய்வதற்கு என்ன உபாயம்? மத்ய பானஞ்செய்து சிவந்த கண்களுடன் மதங்கொண்டு அவர்கள் ஒருவருக்கொரு வர் யுத்தஞ்செய்தாலொழிய அவர்களைக் கொல்ல

உபாயமில்லை. நான் என்னுடைய லோகஞ் சென்றால் யாதவர்களெல்லோரும் சண்டைசெய்து நாசமடைவார்கள் என்று ஆலோசித்து, தருமபுத்திரருக்கு இராஜ்யாபிஷேகஞ் செய்வித்து, வர்ணாசிரம தர்மங்களை அனுஷ்டித்துக் காண்பித்து, சந்தோஷிக்கச் செய்தார். பின்னும் புருவின் வம்சம் தொடர்சியற்று போகாமல் இருப்பதற்காக அபிமன்யுவினால் உத்தரையினிடம் கர்ப்பம் உண்டு பண்ணப்பட்டதல்லவா? அந்தக் கர்ப்பமானது அச்வஸ்த்தாமாவினுடைய அஸ்திரத்தால் எரிக்கப்படும்போது அக்குழந்தையை ஸ்ரீ கிருஷ்ணன் காப்பாற்றினார். மேலும் அவர் தருமபுத்திரருக்கு மூன்று அசுவமேத யாகங்களை நடத்தி வைத்தார். அந்த தருமபுத்திரரும் ஸ்ரீ கிருஷ்ண பகவானை ஆச்ரயித்தவராய்த் தம்முடைய தம்பிகளுடன் பூமியைப் பரிபாலித்தார். ஸகல ஜகத்ருபியாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானும் சிரௌத கர்மங்களையும், ஸ்மார்த்த கர்மங்களையும் அனுஷ்டித்து, துவாரகா நகரத்தில் காமங்களை அனுபவித்தார். ஆனால் ஆத்ம தத்துவத்தை அறிந்தவராகையால் அவைகளில் அபிமானம் வைக்கவில்லை. மேலும், அவர் தம்முடைய புன்சிரிப்பு உள்ள பார்வையாலும், அமிருதம், போன்ற வார்த்தையாலும், குற்றமற்ற சரித்திரத்தாலும், லக்ஷ்மீதேவிக்கு வாசஸ்தலமாகிய சரீரத்தாலும், பூலோகத்தையும், மேலுலகத்தையும் சந்தோஷிக்கச் செய்தார். இரவில் ஸ்திரீகளுக்குச் சந்தோஷத்தை உண்டு பண்ணி அவர்களிடத்தில் க்ஷணநேரம் பிரீதி செய்பவரான ஸ்ரீ கிருஷ்ண பகவான் யாதவர்களை விசேஷமாகச் சந்தோஷப்படுத்தினார். இப்படி ஸ்ரீ கிருஷ்ண பகவான் வெகு வருஷங்கள் க்ருஹஸ்தாச்ரமத்தை அனுஷ்டித்து கர்மங்களை அனுபவித்த பிறகு அவைகளில்

வைராக்கியம் அடைந்தார். கர்மங்கள் யாவும் தெய்வாதீனங்காளாயிருக்கின்றன. அவைகளை அனுபவிக்கும் புருஷனும் அந்தத் தெய்வத்துக்கு வசப்பட்டவனாகவே இருக்கிறான். அப்படியிருக்க, யோகாப்பியாசத்தால் ஈசுவரனை அனுசரித்த எவன்தான் அவைகளில் ஆசைப்படுவான்?

24–28 பிறகு ஒருகால் துவாரகா நகரத்தில் யதுகுமாரர்களும், போஜ குமாரர்களும் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அவ்விடத்தில் வந்த ப்ராஹ்மணர்களுக்கு அவர்கள் கோபத்தை உண்டு பண்ணினார்கள். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய அபிப்பிராயத்தை அறிந்த ப்ராஹ்மணர்கள் அந்தக் குமாரர்களைச் சபித்தார்கள். சில மாதம் சென்ற பின்பு, வ்ருஷ்ணிகளும், போஜர்களும், அந்தகர்களும் ரதங்களின் மீதேறிக் கொண்டு தெய்வத்தால் புத்தி மாறினவர்களாகி, மிகவும் சந்தோஷத்துடன் ப்ரபாஸமென்ற தீர்த்தம் சென்றார்கள். அந்தப் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, பிதிரு தர்ப்பணம், தேவதர்ப்பணம், ரிஷிதர்ப்பணம் ஆகிய இவைகளை முடித்துக் கொண்டு உத்தமமான பசுக்களையும், சுவர்ணத்தையும், வெள்ளியையும், படுக்கைகளையும், வஸ்திரங்களையும், மான் தோல் முதலியவைகளையும், கம்பளங்களையும், குதிரைகளையும், ரத்தினங்களையும், யானைகளையும், கன்னிகைகளையும், ஜீவனத்துக்குப் போதுமான தானியம் விளையக்கூடிய பூமியையும், ப்ராஹ்மணர்களுக்கு கொடுத்தார்கள். மேலும் பசுக்கள், ப்ராஹ்மணர்கள் ஆகிய இவைகளுக்காகவே ஜீவிப்பவர்களும், சூரர்களுமான அவர்கள் மேலான ரசமுள்ள அன்னத்தையும் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்து அவர்களுக்கு நமஸ்காரம் செய்தார்கள்.

அத்தியாயம் 4

விதுரர் மைத்ரேயரைச் சந்தித்தது

1–18. பின்பு அவர்கள் ப்ராஹ்மணர்களிடம் விடைபெற்று மத்யத்தைக் குடித்து, அதனால் மயக்கம் அடைந்து மர்ம ஸ்தானங்களைப் பிளக்கக்கூடிய கெட்ட வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டார்கள். மேலும், மத்யபானஞ் செய்து புத்தி மாறிப்போனதால் சூரியன் அஸ்தமனத்தை அடைந்து பிறகு மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்ந்து கொள்வது போலக் கலகம் செய்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ண பகவான் தம்முடைய மாயையின் காரியமாகிய அந்தக் கலகத்தைப் பார்த்து சரஸ்வது நதியில் ஆசமனஞ் செய்து ஒரு அரசமரத்தின் கீழ் உட்கார்ந்திருந்தார். அதற்கு முன்னமேயே என்னை நோக்கி, ஓ உத்தவ, நீ பத்ரிகாச்ரமம் போ என்று தம்முடைய குலத்தைக் கொல்லவேண்டுமென்று விரும்பியவரும், பக்தர்கள் உடைய உபத்திரவத்தைப் போக்கடிப்பவருமாகிய ஸ்ரீ பகவான் சொல்லியிருந்தார். அப்படியும் நான் அவர் உடைய அபிப்பிராயத்தை அறிந்திருந்தும் அவர் உடைய பாதங்களை விட்டுப் பிரிய மனமில்லாதவனாக ஸ்ரீ கிருஷ்ணன் பின் சென்றேன். பிறகு சரஸ்வதி நதியின் கரையில் ஒருவராய் உட்கார்ந்திருப்பவரும், ப்ரீதியுள்ளவரும்; நாதருமாகிய பகவானைக் கண்டேன், அவர் லக்ஷ்மிக்கு வஸிக்குமிடம்; ஆச்ரயம் அற்றவர்; கறுத்த திருமேனியுள்ளவர் ரஜோகுணம் இல்லாதவர், மிகவும், சாந்தர், அழகான கண்கள் உள்ளவர், நான்கு கைகளுள்ளவர். பீதாம்பரம் தரித்தவர், இடத்தொடையில் வலக்காலை வைத்துக்

கொண்டு சிறிய அஸ்வத்த மரத்தில் சாய்ந்து கொண்டு இருப்பவர், விஷய சுகத்தில் ஆசையில்லாதவர், ஆனந்தத்தால் நிறைந்தவர். அப்பொழுது வ்யாஸ மகா முனிக்கு மித்திரரும், கிருதகிருத்யருமாகிய மைத்ரேயர் தெய்வச் செயலால் அவ்விடம் வந்தார். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ண பகவான் பக்தராகிய மைத்ரேயர், முன்பாகப் ப்ரியம், சிரிப்பு ஆகிய இவைகளுள்ள பார்வையால் சிரமத்தை நிவர்த்தித்துக்கொண்டு என்னை நோக்கி, ஓ உத்தம உம்முடைய மனத்தில் இருக்கும் எண்ணமென்னதென்று எனக்குத் தெரியும், முன்ஜன்மத்தில் நீர் ப்ரஜாபதிகளான வஸுக்களுடைய யாகத்தில் என்னைப் பூஜித்தீர். ஆதலால் என்னுடைய ஸ்தானத்தை யடைய வேண்டுமென்று நீர் நினைத்தது மற்றவர்களுக்குத் துர்லபமேயாகும், ஓ சாதுவே! மனுஷ்ய லோகத்தை விட்டு நான் வைகுண்டம் செல்லும் சமயத்தில் மிகுந்த பக்தியுடன் என்னை நீர் தரிசித்து என்னுடைய அனுக்கிரகம் பெற்றபடியால் இதுவே உமக்குக் கடைசியான ஜன்மம். முந்திய பாத்மகல்பத்தில் என்னுடைய கொப்பூழில் தோன்றிய, தாமரஸ புஷ்பத்திலிருந்து ப்ரஹ்மதேவருக்கு என் மகிமையைக் காண்பிக்கும் ஞானத்தை உபதேசித்தேன். அதனை வித்வான்கள், பாகவத ஞானமென்றார்கள். அதனை உமக்கு உபதேசிக்கிறேனி என்றார். இப்படிப் பரமபுருஷன் மிகுந்த ப்ரீதியுடன் சொல்லி ஒவ்வொரு க்ஷணத்திலும் என்னை அனுக்கிரகிக்கும் போது, எனக்கு அவரிடத்தில் பக்திமேலிட்டு அதனால் மயிர்கூச்சலுண்டாயிற்று. துக்கத்தால் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு கத்கத ஸ்வரத்துடன் கை கூப்பிப் பகவானை நோக்கி ஓ ஈச உம்முடைய பாதார விந்தங்களை ஆச்ரயித்தவர்களுக்கு நான்கு

புருஷார்த்தங்களில் எதுதான் கிடைக்காது? ஆனாலும் எனக்குத் தருமம் முதலியவைகளில் ஆசை இல்லை. உம்முடைய பாதங்களைச் ஸேவிப்பதிலேயே விருப்பம் உள்ளவனாக இருக்கிறேன். கர்மங்களுடைய சம்பந்தம் அற்றவராகிய நீர் கர்மங்களை அனுஷ்டிப்பது, ஜன்மம் அற்றவரானாலும் பூமியில் அவதரிப்பது, காலரூபியாகிய நீர் சத்துருக்களிடம் பயந்து ஓடுவது, சமுத்திர மத்யத்திலுள்ள துவாரகா நகரத்தில் ஒளிந்து வஸிப்பது. ஆத்மாவினால் சந்தோஷப்படுகிறவரானாலும் அநேக ஸ்திரீகளைக் கல்யாணம் செய்துகொண்டு கிருஹஸ்தாசிரமத்தை அடைந்திருப்பது, ஆகிய இவைகளைக் கண்டு வித்வான்களுடைய புத்தியும் மோஹத்தை அடைகிறது. மேலும் ஓ தேவ! தடையற்றதும், பூர்ணமும், சம்சயமற்றதுமான ஆத்ம ஞானமுள்ளவராகிய நீர் ராஜ காரியங்களைப்பற்றி ஆலோசிக்க வேண்டிய ஸமயத்தில் வெகு ஜாக்கிரதை யுள்ளவராகிய என்னை வரவழைத்து ஒன்றுமறியாதவர்போல் ராஜ்யத்தில் என்னுடைய அபிமதத்தைக் கேட்கிற வழக்கமல்லவா? அதனை நினைக்கும்போது என் மனம் மோஹத்தை அடைகிறது. ஓ ஸ்வாமியே! ஆத்மாவின் உண்மையைத் தெரிவிக்கக்கூடியதும், மேலானதுமான எந்த ஞானத்தைப் பூர்ணமாக நீர் ப்ரஹ்மதேவருக்கு உபதேசித்தீரோ, அது என்னால் தெரிந்துகொள்ளக் கூடியதானால் அதை உபதேசியும். அதனால் சம்சார துக்கத்தைப் போக்கிக் கொள்ளுவேன் என்று ப்ரார்த்தித்தேன்.

19–22. பிறகு தாமரை மலர்போன்ற கண்களுள்ளவரும் குருவுமாகிய ஸ்ரீ பகவான் என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துக்கொண்டு தம்முடைய

உத்தமகதியை எனக்கு உபதேசித்தார். இம்மாதிரி பகவானுடைய பாதங்களாகிய தீர்த்தத்தை ஆராதித்து ஆத்மஞானத்தை அடைந்தேன். பின்பு அவருடைய பாதங்களில் நமஸ்கரித்து அவரைப் ப்ரதக்ஷிணஞ் செய்து அவருடைய விரஹத்தைச் ஸஹிக்காமல் மனவருத்ததுடன் இவ்விடம் வந்தேன். அவரைத் தரிஸித்ததால் உண்டான சந்தோஷமுள்ளவனும், அவரை விட்டுப் பிரிந்ததால் உண்டான துக்கமுள்ளவனுமாகிய நான் அவருக்கு மிகவும் இஷ்டமான பதரிகாசிரமத்தை உத்தேசித்துப் போகிறேன். அவ்விடத்தில் நர நாராயணரென்று திவ்ய நாமதேயங்களுடன் பகவான் முனி வேஷம் பூண்டு பிறருக்கு இம்சை இல்லாமலும், மற்றவர்களால் அனுஷ்டிக்க முடியாததுமான தபஸை வெகு காலமாகச் செய்து வருகிறார் என்று சொன்னார்.

23–25. அதைக் கேட்டு வித்வானாகிய விதுரர் சகிக்க முடியாத பந்துக்களின் நாசத்தை. உத்தவர் முதமாகத் தெரிந்துகொண்டு, அந்தத் துக்கத்தை விவேகத்தால் அடக்கிக் கொண்டார். அப்போது விதுரர், கிருஷ்ணை பக்தர்களுக்குள் முக்கியரும், பாகவதர்களுக்கு உத்தமரும். பதரிகாசிரமம் செல்லுபவருமான உத்தவரை நோக்கி, ஓ உத்தவ! யோகீசுவராகிய ஈசுவரன் ஆத்மாவின் உண்மையை காண்பிக்கும் எந்த மேலான ஞானத்தை உமக்கு உபதேசித்தாரோ அதனை நீர் எனக்கு உபதேசிக்கவேண்டும். ஏன் என்றால், விஷ்ணு பக்தர்கள் பக்தர்களைக் காப்பாற்றுவதற்காக உலகத்தில் சஞ்சரிக்கிறார்களே யொழிய, அவர்களுக்குச் சொந்தமான காரியம் வேறு ஒன்றும் இல்லை என்று ப்ரியமாகக் கேட்டுக்கொண்டார்.

26–27. அதனைக் கேட்டு உத்தவர் விதுரரை நோக்கி ஓ விதுரா! பகவான் பூலோகத்தை விட்டு வைகுண்டம் செல்லும் காலத்தில் உமக்கு உபதேசம் செய்வதற்காக மைத்ரேய மகாமுனிக்கு ஆக்ஞாபனம் செய்திருக்கிறார். ஆனதால் அவரை ஆத்மஞானத் திற்காக நீர் உபாசிக்கவேண்டும் என்று சொல்லி அன்று ராத்ரி யமுனா நதியின் மணல் திட்டில் ஸகல ஜகத் ஸ்வரூபியான பகவானுடைய கதைகளை விதுரருக்குச் சொல்லிக்கொண்டு அந்த அமிருதத்தில் ஸ்நானஞ் செய்து, தாபமில்லாதவராக அன்றிரவை ஒரு க்ஷணம் போல கழித்து மறுநாள் பதரிகாசிரமஞ் சென்றார் என்று சுகர் சொன்னார்.

28. அதனைக் கேட்டு பரீட்சித்து மகாராஜன் சுகரை நோக்கி, ஓ ப்ராஹ்மண! அதிரதர்களும், அவர்களுடைய சேனாபதிகளுமாகிய வ்ருஷ்ணிகள், போஜர்கள் ஆகிய இவர்கள் நாசமடைந்த பிறகு, ப்ரஹ்மா, விஷ்ணு, சிவபெருமான் ஆகிய இவர்களுக்கு மேலானவராகிய பகவான் தம்முடைய சரீரத்தை விட்டுவிட்டாரல்லவா? அப்பொழுது உத்தவர் மாத்திரம் எப்படியிருந்தார்? என்று கேட்டார்.

29–32. அதனைக் கேட்டு சுகர், அரசனை நோக்கி, ஓ மகாராஜ வீணாகாத சங்கற்பமுள்ள பகவான் மிகவும் விருத்தி யடைந்திருந்த தம்முடைய குலத்தைப் ப்ராஹ்மண சாபத்தை நிமித்தமாகவுடைய தம்முடைய சக்தியைக் கொண்டு நாசஞ்செய்து தம்முடைய தேகத்தைவிட்டுவிட விரும்பியபொழுது, நான் இவ்வுலகத்தை விட்டு மேலுலகஞ் சென்றால் எனக்கு ஸ்வாதீனமான ஞானத்தை அடைவதற்கு

இந்திரியங்களை ஜயித்தவர்களுக்குள் உத்தமராக இருக்கும் உத்தவரே தகுதியானவர், மேலும், என் இடத்திலிருக்கும் குணங்கள்யாவும் கொஞ்சமேனும் குறைவின்றி இவரிடத்தில் இருக்கின்றன. இவர் விஷயங்களால் கலக்க முடியாதவர். ஆதலால் இவர் ஆத்ம ஞானத்தை ஜனங்களுக்கு உபதேசித்துக் கொண்டு இருக்கட்டும் என்று யோசித்து மூவுலகத் திற்கும் குருவாயும் வேதங்களுக்குக் காரணராயும் இருக்கும் அந்த பகவான் இவரைப் பூமியில் வஸிக்கும் படி ஆக்ஞாபித்தார் உத்தவரும் அந்த உத்தர்வின்படி பத்ரிகாசிரமத்தில் பகவானைச் ஸமாதியில் பூஜித்து வந்தார்.

32–36. ஓ குரு சிரேஷ்ட விதுரரும், பரமாத்மா வாகிய கிருஷ்ணன் லோகானுக்ருஹார்த்தமாய்ப் பூமியில் அவதரித்து நடத்திய உத்தமமான சரிதங்களை உத்தவர் சொல்லக்கேட்டு, ஞானிகளுக்குத் தைரியத்தை விருத்தி செய்யக்கூடியதும் மற்றவர்களால் செய்ய முடியாததுமான பகவானால் செய்யப்பட்ட சரீர தியாகத்தையும் தெரிந்துகொண்டு (பகவான் விதுரருக்கு மைத்ரேயரை ஞானோபதேசம் செய்யும்படி ஆக் ஞாபனம் செய்தார் என்றதை) உத்தவருடைய வார்த்தையால், தம்முடைய ஞாபகம் அவருக்கு இருந்ததையும்; நன்றாகத் தெரிந்துகொண்டது இல்லாமல் பாகவதராகிய உத்தவர் பதரிகாசிரமம் சென்ற பிறகு ஸ்ரீ கிருஷ்ண பகவானையே தியானஞ் செய்து அழுதார். பிறகு பாகவதர்களுக்குள் சிறந்த வராகிய விதுரர் யமுனா நதியிலிருந்து மைத்ரேயர் வஸிக்கும் இடமாகிய கங்கா தீரத்திற்குச் சில தினங்களில் சென்றார்.

அத்தியாயம்–5

மைத்ரேயருக்கும் விதுரருக்கும் ஸம்வாதம்

1–16 ஓ மகாராஜ! இப்படி குருக்களில் சிறந்த வராகிய விதுரர், கங்கையின் கரையில் உட்கார்ந்து இருப்பவரும், அளவற்ற ஞானமுள்ளவரும், பகவத் தியானத்தால் சுத்தரும், நல்ல ஸ்வபாவமுள்ளவராக இருப்பதாகிய குணத்தால் திருப்தியடைந்தவருமான மைத்திரேயரைக் கண்டு, அவருடைய சமீபஞ் சென்று, ஓ மகரிஷியே! ஜனங்கள் சுகத்தை அடைய வேண்டியதற்காகக் கர்மங்களைச் செய்கிறார்கள். ஆனால் அவைகளால் சுகமாவது, துக்க, நாசமாவது ஏற்படுகிறதில்லை. அவைகளால் துக்கமே நேரிடுகிறது. ஆதலால் சம்சாரத்தில் எதனைச் செய்வது யுக்தமோ அதனைச் சொல்ல வேண்டும். பூர்வ ஜன்மத்திய கர்ம வசத்தால் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் பக்தி செய்யாதவனும், அதர்ம ஸ்வபாவமுள்ளவனும், துக்கத்தை அடைந்தவனுமாகிய ஜனத்தை அனுக்கிர கிப்பதற்காகவே திவ்ய மங்களங்களான விஷ்ணுவின் சரீரங்கள் இவ்வுலகத்தில் சஞ்சரிக்கின்றன. ஓ சாதுக்களில் சிறந்தவரே! எந்த உபாயத்தால் பகவானை ஆராதித்தால் இருதயம் சுத்தமாகும்? எதில் பகவான் வாசஞ் செய்து அனாதியாகிய அபரோக்ஷ ஞானத்தை கொடுப்பார்? அந்த சுக ரூபமான மார்க்கத்தை உபதேசிக்க வேண்டும். முக்குண சரூபமாகிய மாயைக்கு அதிபதியும்; படைப்பது முதலியவைகளுக்கு அதிபதி யும், சுதந்திரருமாகிய பகவான் பூமியில் அவதரித்து எந்தக் காரியங்களைச் செய்தார்? ஒரு விஷயத்திலும் ஆசை அற்றவரான அந்தப் ப்ரபு இந்த உலகத்தை முன் காலத்தில் எப்படி ஸ்ருஷ்டித்தார்? மறுபடியும்

தம்மால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஜகத்திற்கு ஜீவனத்தைக் கற்பித்து எப்படிக் காப்பாற்றுகிறார்? மறுபடியும் அந்தப் பரமாத்மாவே வியாபாரம் அற்றவராக இந்த ஜகத்து முழுவதையும் தம்முடைய இருதயாகாசத்தில் அடக்கிக் கொண்டு யோக மாயையிடம் எப்படிச் சயனஞ் செய்தார்? யோகிகளுக்கு அதிபதியும், ப்ரபஞ்சத்தின் உள் ப்ரவேசித்தவருமாகிய அந்தப் பகவான் தாம் ஒருவரானாலும் ப்ரஹ்மா முதலிய அநேக உருவங்களை எப்படித் தரிக்கின்றார்? மேலும் அவர் மத்ஸ்யம், கூர்மம் முதலிய அவதாரங்களைச் செய்து ப்ராஹ்மணர்களுக்கும், பசுக்களுக்கும், தேவர் களுக்கும் அனுகூலமான காரியங்களைச் செய்கிறார். புண்ய ஸ்லோகர்களுக்குள் ச்ரேஷ்டராகிய அந்தப் பகவானுடைய சரிதங்களைக் கேட்டு என்னுடைய மனம் திருப்தி யடையவில்லை. ஸகல லோகத்திற்கும் அதிபதியாகிய புருஷன் எந்த எந்தத் தத்துவங்களைக் கொண்டு லோக பாலர்களையும்,லோகங்களையும், லோகா லோக பர்வதங்களையும் கற்பித்தார்? மேலும் ஸகல ப்ராணிகள், அதன் கூட்டம் ஆகிய இவை களுடைய பேதமானது அவரவர்களுடைய கர்மத் திற்குத் தக்கபடி எற்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது? ஓ ப்ராஹ்மணச்ரேஷ்ட! தாமாக உண்டானவரும், லோகங்களைச் ஸ்ருஷ்டித்தவருமான ஸ்ரீமந் நாராயணன் ப்ரஜைகளுடைய ஸ்வபாவத்தையும், கர்மாவையும், பெயரையும் எப்படி வெவ்வேறாகச் செய்தார்? அவற்றை எனக்குச் சொல்லும். ஓ பகவன்! ப்ராஹ்மணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள் (பர) சூத்ரர்கள் (அபர) ஆகிய இவர்களால் அனுஷ்டிக்க வேண்டிய வ்ரதங்களை வ்யாஸ மகர்ஷியின் முகமாக அடிக்கடி கேட்டிருக்கின்றேன். அவைகள் அற்ப

பலத்தைக் கொடுக்கக் கூடியவைகள். ஆதலால் அவை களைக் கேட்கப் போதுமென்ற திருப்தி உண்டாயிற்று. ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய கதையைக் கேட்பதில் அப்படிப்பட்ட திருப்தி உண்டாகிறதில்லை. ஏனெனில், அந்தக் கதாமிருதமானது புருஷனுடைய காதுவழியாக உட்சென்று சம்சார துக்கத்தைக் கொடுக்கும் அபிமானத்தைப் வீடு முதலானவைகளில் என்னுடைய தென்பதை) போக்கடிக்கிறது. ஆகையால் சாதுக்களின் கூட்டத்தில் நாரதர் முதலிய விவேகிகளால் கொண்டாடப்பட்ட ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய கதையிலிருந்து எவன்தான் திருப்தியடைவான்? பகவத் குணங்களைச் சொல்ல வேண்டுமென்ற விருப்பமுள்ள வரும், உமக்கு மித்திரருமான வ்யாஸ மகர்ஷியானவர் எனக்குப் பாரதக் கதையைச் சொன்னார். அதில் கிராம்ய சுகங்கள் வருணிக்கப்பட்டிருந்தாலும் அவை களைத் துச்சமென்று சிந்தித்து பகவானுடைய கதையிலேயே மனம் பதிந்திருக்குமானால் விஷயங் களில் வைராக்கியமுண்டாகும். பகவானுடைய கதையை நினைப்பதனால் சுகமடைந்தவனுக்கு ஸகல துக்கங்களும் நீங்கிவிடுகின்றன. மேலும், எவர்கள் பாகவதத்தின் கருத்தையறியாதவர்களோ அவர்கள் துக்கிக்கத் தகுந்தவர்கள். வீணான வார்த்தை சிந்தை இவைகளுள்ள அவர்களுடைய ஆயுளைத் தேவனாகிய காலமானது குறைத்து விடுகிறது. ஆதலால் இவர்களைப் பற்றித் துக்கிக்கிறேன். ஓ மைத்திரேய! இந்த லோகத்துக்கு க்ஷேமத்தை யுண்டு பண்ணுகிற வரும், சம்சார துக்கமுள்ளவர்களுக்குப் பந்துவுமாகிய ஸ்ரீ மகா விஷ்ணுவினுடைய சாரமான கதையைப் புஷ்பங்களிலிருந்து வண்டானது தேனை எடுப்பது போல நீர் எடுத்துரைக்க வேண்டும். ஜகத்தைச்

ஸ்ருஷ்டிப்பதற்கும், அவைகளைப் பரிபாலிப்பதற்கும், நாசஞ் செய்வதற்கும் எவர் சத்வம் முதலிய குணங்களை அடைந்தாரோ, அவரே பின்பு பூமியில் அவதரித்துப் புருஷர்களால் செய்ய முடியாத எந்த எந்தக் காரியங்களைச் செய்தாரோ அவைகளைச் சொல்லும் என்று கேட்டார்.

17–50 இப்படி விதுரர் மனிதர்களுடைய க்ஷேமத் திற்காகக் கேட்க, அதனைக் கேட்டு, குஷாரவருடைய புத்திரராகிய மைத்ரேய மஹர்ஷி விதுரரை நோக்கி, அவரைக் கொண்டாடி, "ஓ சாதுவே! நீர் நன்றாகக் கேட்டீர். இதனால் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் மனதைச் செலுத்தியவரான உமக்குக் கீர்த்தி விருத்தியடையும். ஜனங்கள் உம்மால் அனுக்கிரகிக்கப் பட்டார்கள். ஓ விதுர! நீர் ஸ்ரீ மகா விஷ்ணுவிடத்தில் ஏகாந்த பக்திசெய்து, அவரை சுவாதீனப்படுத்திக் கொண்டிருக்கிறீர்; மேலும் நீர் வ்யாஸ மகர்ஷியின் புத்திரரானதால் "பகவத் கதையைச் சொல்ல வேண்டும்" என்று நீர் ப்ரச்னம் செய்வது ஆச்சரியம் அல்ல. பகவத் பக்தியில்லாதவர்களைச் சிட்சிப் பவராகிய யமன், ஆணிமாண்டவ்யருடைய சாபத்தால் வ்யாஸருடைய ப்ராதாவாகிய விசித்திரவீரியனுடைய களத்திரம் போன்ற தாசியினிடம் வ்யாஸ மகர்ஷிக்குப் புத்திரனாகப் பிறந்தார். அவர் நீர் தான். மேலும் நீர் ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கும், பாகவதர்களுக்கும் ப்ரியர். அதனால்தான் பகவான் பரலோகஞ் செல்லும் சமயத்தில் உம்முடைய ஞாபகம் வைத்துக்கொண்டு உமக்கு ஞானோபதேசஞ் செய்யும்படி எனக்கு ஆக்ஞாபனஞ் செய்தார். ஆதலால் யோக மாயையின் ஆச்சர்ய சக்தியால் கற்பிக்கப்பட்டவைகளும்,

ஜகத்தின் உற்பத்தி, பரிபாலனம் ஆகிய இவைகளையே ப்ரயோசனமாக வுடையவகைளுமான பகவானுடைய லீலைகளைக் க்ரமமாய் வருணிக்கிறேன். ஸ்ருஷ்டி காலத்தில் பலவகையாகத் தோன்றுகிறவரும், எல்லாப் ப்ராணிகளின் ஸ்வரூபமாக விருப்பவரும், எங்கும் இருப்பவருமாகிய பகவானுக்குத் தாமொருவராக இருக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாகும் சமயமான ஸ்ருஷ்டிக்கு முந்திய காலத்தில் அவர் ஒருவரே இருந்தார். அந்தப் பரமாத்மாதான் பார்க்கிற வராய் (திருஷ்டாவாக) இருந்து கொண்டு, பார்க்கப் படும் வஸ்துவை (திருச்யத்தை) பார்க்கவில்லை. ஏன் என்றால் அவர் தாம் ஒருவரேயாக அப்பொழுது ப்ரகாசித்துக் கொண்டிருந்தார். மாயை முதலிய சக்திகள் அடங்கியிருந்ததால் தம்மை இல்லாதவர் போல் நினைத்தார். (பார்க்கப்படும் வஸ்து இல்லாவிடில் பார்க்கிறவனென்ற வியவகாரம் இல்லாததனால் என்பது கருத்து). ஆனால் அவர் (திருக்) சக்தியுள்ளவர். காரிய காரண ஸ்வரூபமான அந்த ஸத்தாகிய திருஷ்டாவினு டைய சக்தியே மாயை என்று சொல்லப்படுகிறது. ஓ மகா பாக்கியமுள்ளவரே! ப்ரபுவாகிய பகவான் அந்த மாயையைக் கொண்டே உலகத்தைப் படைத்தார். சித்சக்தியுள்ள பரமாத்மாவானவர் காலத்தின் சக்தியால் கலங்கின குணங்களுள்ள மாயையினிடத்தில் தம்முடைய அம்சமாயிருக்கும் புருஷனைக் கொண்டு சிதாபாஸமாகிய வீர்யத்தை வைத்தார். காலத்தால் தூண்டப்பட்ட அந்த மாயையினிடமிருந்து அஞ் ஞானத்தைப் போக்கக் கூடிய விஞ்ஞான ரூபமாகிய மகத்தத்துவமானது தன்னுடைய தேகத்தில் அடங்கி இருக்கும் ஜகத்தை வெளிப்படுத்திக் கொண்டு உண்டாயிற்று. அம்சம், சிதாபாஸம், குணங்கள்

காலம் ஆகிய இவைகளுக்கு ஸ்வாதீனமாக அந்த விஞ்ஞானாத்மாவானவர் பகவானுடைய கடாக்ஷத் தால் இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிக்கவேண்டிய நிமித்தம் வேறு உருவத்தை அடைந்தார். அந்த மகத் தத்துவத் திலிருந்து காரியம் காரணம், கர்த்தா ஆகிய இவை களுக்கு ஆசிரயமும், பூதங்கள், இந்திரியங்கள், மனஸ் ஆகிய இவைகளின் உருவமாயுமிருக்கும் அகங்காரம் ஆனது உண்டாயிற்று. அது வைகாரிகம், தைஜஸம், தாமஸம் என்று மூன்று வகையுள்ளது. வைகாரிகம் என்ற அகங்காரம் வேறு உருவத்தை அடைய, அதனிடமிருந்து மனம் உண்டாயிற்று. இந்திரியங் களுக்கு அதிபதிகளும், சப்தம் முதலிய விஷயங்களைப் ப்ரகாசிக்கச் செய்பவர்களுமான காரிய தேவதைகளும் வைகாரிகர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். ஞானேந்திரியங்களும், கர்மேந்திரியங்களும் தைஜஸங் கள் என்று சொல்லப்படுகின்றன. சூட்சும பூதமாகிய சப்தமானது தாமஸ அகங்கார தத்துவத்திலிருந்து உண்டாயிற்று. அதனிடமிருந்து, ஆத்மாவிற்குச் சரீரம் ஆகிய ஆகாசமானது, எல்லாவற்றிற்கும் அதிபதியான பகவானால் பார்க்கப்பட்டு, காலம், ப்ரக்ருதி, சிதா பாஸம் இவைகளுடைய சேர்க்கையால் உண்டாயிற்று. ஆகாசத்திலிருந்து உண்டான ஸ்பர்சமானது வேறு உருவத்தை யடைந்து வாயுவை உண்டுபண்ணிற்று. அந்த வாயுவும் வேறு உருவத்தை அடைந்து ஆகாச சம்பந்தத்தால் விசேஷ உருவ பலத்துடன் ரூபதன்மாத்ரையை உண்டுபண்ணிற்று. அதுவே யோகத்தைப் ப்ரகாசிக்கச் செய்யும் ஜ்யோதிஸ்ஸாகும். அந்த ஜ்யோதிஸ்ஸானது வேறு உருவத்தை அடைந்து வாயுவுடன் பரமேசுவரனால் கடாக்ஷிக்கப்பட்டு, காலம், மாயை, அம்சம் ஆகிய இவைகளுடைய

சேர்க்கையால் ஜலத்தை உண்டு பண்ணிற்று. அந்த ஜலமானது தேஜசுடன் விகாரத்தை அடைந்து பகவானுடைய கடாக்ஷம் பெற்று, காலம், மாயை அம்சம் ஆகிய இவைகளுடைய சம்பந்தத்தால் கந்தத்தைக் குணமாயுடைய பூமியை உண்டு பண்ணிற்று. ஆகாசம் முதலிய பூதங்களுக்குள் எதற்கு எது காரணமோ, எதற்கு எது காரியமோ, அந்தக் காரிய பூதங்களுக்குக் காரண பூதங்களுடைய சேர்க்கையால் மேல்மேலும் அதிகமான குணங்கள் உண்டாகின்றன. காலலிங்கமாகிய விகாரம், மாயா லிங்கமாகிய விட்சேபம், அம்சலிங்கமாகிய சைதன்யம் ஆகிய இவைகளுள்ளவர்களும், மகத்தத்துவம் முதலிய வைகளுக்கு அபிமானிகளாயுமுள்ள இந்தத் தேவர்கள் விஷ்ணுவின் அம்ச பூதர்களேயாம். இந்தத் தேவர்கள் அநேகர்களாகையால் ப்ரம்மாண்டத்தை உண்டு பண்ண அசக்தர்களாக ப்ரபுவாகிய மகாவிஷ்ணுவிடம் வந்து கை கூப்பி, "ஓ தேவ! உம்முடைய பாதாரவிந்தத்தை நமஸ்கரிக்கிறோம். அது சரணம் அடைந்தவர்களுக்குத் தாபத்தை நிவர்த்திக்கும் குடையாக இருக்கிறது. அந்தப் பாதார விந்தத்தின் மூலத்தை ஆசிரயித்து யதிகள் சம்சார துக்கத்தை அடைகிறதில்லை. ஆகையால், ஓ, பகவான் எப்பொழுதும் ஞானப்ரகாசமுள்ள உம்முடைய பாதச் சாயையை ஆச்ரயிருக்கிறோம். ஓ, பகவான்! சுத்த சித்தர்கள், விஷயத்தில் ஆசை இல்லாத தம்முடைய மனத்தில் உம்முடைய முகமாகிய தாமரைப் புஷ்பத்தில் வஸிக்கக்கூடிய வேதங்களாகிய பட்சி களைக் கொண்டு எதனைத் தேடுகிறார்களோ, பாபங் களைப் போக்கடிக்கும் ஜலமுள்ள அநேக நதிகளுள் சிறந்தவளாகிய கங்கையானவள் எதனிடமிருந்து உண்டானாளோ அந்த உம்முடைய பாதாரவிந்தத்தைச் சரணமடைகிறோம்.

தைரிய முள்ளவர்கள் மிக்க ச்ரத்தையுடன் பகவத் குணங்களைக் கேட்டு, அதனால் பக்தியடைந்து, அதனால் தம்முடைய இருதயத்தைச் சுத்தமாகச் செய்து கொண்டு, அதில் எதனைத் தியானஞ் செய்து வைராக்யம், ஞானம் ஆகிய இவைகளை அடைகிறார் களோ, அந்தப் பாதங்களை ஆச்ரயிக்கிறோம். ப்ரபஞ்சத்தைச் ஸ்ருஷ்டிப்பதற்கும், பரிபாலிப்பதற்கும், நாசஞ் செய்வதற்கும் அவதரித்தவரான உம்முடைய பாதாரவிந்தத்தை நாங்களெல்லோரும் சரணமடை கிறோம். அதை நினைத்த மாத்திரத்தில் பக்தர்களுக்கு ஸகல பயமும் நீங்குகிறது. ஓ தேவ! இந்திரியம் முதலிய பலவகையான சாமக்கிரியுள்ள இந்த அற்பமான தேகத்தில் "நான், என்னுடையது" என்ற துரபிமானம் வைத்திருக்கும் புருஷர்களுக்குத் தங்களுடைய தேகத்தில் வஸிப்பவராகிய உம்முடைய பாதாரவிந்தம் வெகு தூரத்திலிருப்பதாக ஆகி விடுகிறது. அதைச் சரணமடைகிறோம். மாயைக்கு அதிபதியான பரம புருஷ! பெரியோர்களால் கானம் பண்ணக்கூடியவரே! எவர்கள் இந்திரியங்களை வெளியிலிருக்கும் விஷயங்களில் செலுத்தி உம்மிடத்தில் மனதைச் செலுத்தாமல் இருக்கிறார் களோ அவர்கள் உம்முடைய லீலைகளைக் கானம் பண்ணிக் கொண்டு ப்ரகாசிக்கும் பக்தர்களையும் பார்க்க மாட்டார்கள்.

ஓ தேவ! உம்முடைய கதாஅமிருதத்தைப் பானம் செய்து, மிகுந்த பக்தியால் சுத்த சித்தர்களாக இருப்பவர்கள் வைராக்கியத்தை அடைந்து, உடனே வைகுண்ட லோகஞ் சேருகிறார்கள். சிலர் பரமாத்மாவினிடத்தில் ஸ்திரமாக மனதைச் செலுத்து வதாகிய உபாயத்தால் மிக்க பலமுள்ள ப்ரக்ருதியை

ஜயித்து உம்மையே அடைகிறார்கள். ஆனால் அது ச்ரமமான மார்க்கம். உம்மைச் ஸேவிப்பதாகிய மார்க்கம் மிகவும் ச்ரமமற்றது. எல்லாவற்றிற்கும் ஆதியாக இருப்பவரே! உலகங்களைச் ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்ற விருப்பத்தால் முக்குணங்களைக் கொண்டு நாங்கள் அனைவரும் உம்மால் உண்டு பண்ணப்பட்டோம். அந்தக் குணங்களின் ஸ்பாவம் ஒன்றுக்கொன்று விரோதமாக இருப்பதால் நாங்கள் ஒன்றுசேராமல் இருக்கிறோம். உம்முடைய விளை யாட்டுக்குச் சாதனமான ப்ரம்மாண்டத்தைப் படைத்து உம்மிடம் சமர்ப்பிக்க எங்களால் முடியவில்லை.

பிறப்பில்லாதவரே! அனுபவிக்க வேண்டிய காலத்தில் போகத்தை எப்படி சமர்ப்பிப்போம்? நாங்கள் அன்னத்தை எப்படிப் புசிப்போம்? இந்த ஜீவர்கள் விக்கின மில்லாதவர்களாக நும்மிருவர் களுக்கும் பாகத்தைக் கொடுத்துக் கொண்டு எப்படித் தாமும் அன்னத்தைப் புசிப்பார்கள்? தேவர்களாகிய எங்களுக்கும் எங்களுடைய காரணத்திற்கும் நீரே காரணம். விகாரமற்றவர், புராண புருஷர். பிறப்பு அற்றவர். காரணமாகிய மாயையினிடத்தில் எல்லா வற்றையும் அறிந்த மகத் தத்துவ ஸ்வரூபமாகிய ரேதஸ்ஸை முதலில் வைத்தீர். ஓ பரமாத்மாவே! மகத்தத்துவம் முதலிய நாங்கள் எவருக்காக உண்டாயிருக்கிறோமோ, அந்தத் தங்களுக்கு எங்களால் செய்யக்கூடிய காரியம் என்ன? உங்களுடைய அனுக்கிரகம் இல்லாதவரையில் ப்ரம்மாண்டத்தைச் ச்ருஷ்டிக்க எங்களால் முடியாது. ஆகையால் உம்முடைய ஞானத்தையும், சக்தியையும் எங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அத்தியாயம்–6

விராட் ஸ்ருஷ்டி

1–29. இப்படி மகத்தத்துவம் முதலிய சக்திகள் ஒன்றோடொன்று சேராமல் உலகத்தைச் ஸ்ருஷ்டிக்கச் சக்தியற்றவைகளாக் இருப்பதைக் காலமென்ற சக்தியைத் தரித்தவரும் அளவற்ற லீலையுள்ள வருமான ஈசுவரன் பார்த்து, இருபத்து மூன்று தத்துவங்களின் கூட்டத்தில் தாம் ஒரே சமயத்தில் அனுப்பிரவேசஞ் செய்தார். க்ரியாசக்தியுடன் அதில் ப்ரவேசித்த பகவான் சிருஷ்டி சக்தியை அவைகளுக்கு ஞாபகப்படுத்திக் கொண்டு தனித்தனியாக இருந்த அவைகளை ஒன்றோடொன்னு சேர்த்தார். பின்பு ஸ்ருஷ்டி சக்தியை அடைந்த அந்த இருபத்து மூன்று தத்துவங்களும் பகவான் உடைய தூண்டுதலால் தங்கள் தங்கள் அம்சங்களைக் கொண்டு விராட் சரீரத்தைப் படைத்தன. இப்படிப் பரமாத்மாவினுடைய அனுப்ரவேசத்தால் அவைகள் உடைய அம்சங்கள் வேறு ரூபத்தை (பரிணாமத்தை) அடைந்தன. சுவர்ணம் போன்ற இந்தப் புருஷன் ஹிரண்மயன்) அண்ட கோசத்தின் நடுவில் ஜலத்தில் ஸகல ஜீவர்களுடன் வஸித்தார்.

தெய்வ சக்தி, க்ரியா சக்தி, ஆத்ம சக்தி இம்மூன்று சக்திகளுள்ளவரும், இருபத்துமூன்று தத்துவங்களால் உண்டுபண்ணப் பட்டவருமாகிய விராட் புருஷனானவர் தம்மை ஒருவகையாகவும், பத்து வகையாகவும், மூன்று வகையாகவும் பிரித்தார். பரமாத் மாவின் முதல் அவதாரமாகிய அவர் ஸகல பிராணிக ளுடைய ஆத்மாவின் அம்சம். அவரிடத்திலேயே

இந்தப் பூதக்கிரமங்கள்யாவும் தோன்றுகின்றன. விராட் புருஷன், ஸாத்யாத்மன் (இந்திரியங்களுடன் கூடியவன்) ஸாதிபூதன் (வியஷ்டி தேகங்களுள்ளவன்) ஸாதிதைவன் (தெய்வங்களுடன் கூடியவன்), என்று மூன்றுவகையாகவும், ப்ராணரூபத்தால் பத்து வகை யாகவும், இருதயத்தால் ஒருவகையாகவும் இருக்கிறார். பகவான் தத்துவங்களுடைய ப்ரார்த்தனையை நினைத்துக்கொண்டு அவைகளுக்குப் பலவகையான வ்ருத்தியைக் கற்பிப்பதற்காக தம் உடைய தேஜஸ்ஸால் விராட்டைப்பற்றி யோசித்தார். இப்படிப் பகவான் யோசித்தபோது, தேவர்களுக்குச் சில ஸ்தானங்கள் உண்டாயின. அவைகளைச் சொல்லுகிறேன். கேளும், அந்த விராட் புருஷனுக்கு முதலில் முகம் உண்டா யிற்று, லோக பாலராகிய அக்னியானவர் தம்முடைய சக்தியாகிய வாக்குடன் அந்த முகத்தில் ப்ரவேசித்தார். அந்த வாக்கினாலே ஜீவன் சப்தங்களை உச்சரிக் கிறான். பிற்கு தாதுவானது உண்டாயிற்று. லோக பாலராகிய வருணன் ஜிஹ்வேந்திரியத்துடன் அதில் ப்ரவேசித்தார். ஜீவன் அந்த இந்திரியத்தாலேதான் ரஸங்களைக் கிரஹிக்கிறான், பிறகு மூக்குகள் உண்டாயின.

அசுவினீ தேவர்கள் தங்களுடைய அம்சமாகிய க்ராணேந்திரயத்துடன் அதனைத் தங்களுடைய ஸ்தானமாக்கிச் கொண்டார்கள். அந்த இந்திரியத் தாலேயே ஜீவன் கந்தத்தைக் கிரஹிக்கிறான். பின்பு கண்கள் உண்டாயின. சூரியன் சட்சுரிந்த்ரியத்துடன் அவைகளில் ப்ரவேசித்தார். அதனால் உருவ ஞானம் உண்டாகிறது. பிறகு அந்த விராட்புருஷனுக்குச் சர்மங்கள் உண்டாயின. அந்த ஸ்தானத்தில் லோகபாலரான வாயுவானவர் தம்முடைய அம்சம் ஆகிய துவக்கிந்திரியத்துடன் ப்ரவேசித்தார். ஜீவன்

அந்த இந்திரியத்தைக் கொண்டே ஸ்பர்சத்தைக் கிரஹிக்கிறான். பின்பு அந்தப் புருஷனுக்குக் காதுகள் உண்டாயின. அவைகளில் திக்குகள் தங்களுடைய அம்சமாகிய சுரோத்திரேந்திரியத்துடன் ப்ரவேசித்தன. அந்த இந்திரியத்தைக் கொண்டே ஜீவன் சப்தத்தைக் கிரஹிக்கிறான். அந்தப் புருஷனுடைய சர்மாவை ஓஷதிகள் தங்களுடைய அம்சமாகிய உரோமங்களுடன் ப்ரவேசித்தன, ஜீவன் அவைகளைக் கொண்டே தினவைத் தெரிந்து கொள்ளுகிறான். பிறகு அந்தப் புருஷனுக்கு ஆண்குறி (மேட்ரம்) உண்டாயிற்று. ப்ரஹ்மதேவர் தம்முடைய அம்சமாகிய ரேதஸ்ஸுடன் அந்த ஸ்தானத்தை அடைந்தார் ஜீவன் அந்த ரேதஸ்ஸைக் கொண்டே ஆனந்தத்தை அடைகிறான். பிறகு அந்த விராட் புருஷனுக்குகுதமானது உண்டா யிற்று. மித்திரனானவர் தம்முடைய அம்சமாகிய பாயுவுடன் அந்த ஸ்தானத்தை அடைந்தார். அந்தப் பாயுவைக் கொண்டே ஜீவன் மலவிசர்ஜனம் முதலியவைகளைச் செய்கிறான். அந்த விராட் புருஷனுக்குக் கைகள் உண்டாயின.ஸ்வர்க்கத்திற்கு அதிபதியான இந்திரன் தம்முடைய அம்சமாகிய வார்த்தையுடன் (கிரய, விக்ரய சக்தி) அவைகளில் ப்ரவேசித்தார். அந்தச் சக்தியைக் கொண்டே ஜீவன் விருத்தியை (ஜீவிகையை) அடைகிறான். பின்னுமந்தப் புருஷனுக்குப் பாதங்கள் உண்டாயின. அவைகளில் மஹாவிஷ்ணுவானவர் தம்முடைய அம்சமாகிய கதி (நடை)யுடன் ப்ரவேசித்தார். அதைக் கொண்டே ஜீவன் போக வேண்டிய இடங்களுக்குச் செல்லுகிறான். அந்தப் புருஷனுக்கு இதயம் உண்டா யிற்று. சந்திரனானவர் தம்முடைய அம்சமாகிய மனசுடன் அந்த இருதயத்தில் ப்ரவேசித்தார். அந்த மனத்தாலேயே

ஜீவன் சங்கல்பம் முதலிய விகாரங்களை அடைகிறான். பின்னும் அவருக்குப் புத்தியுண்டாயிற்று, ப்ருகஸ்பதி பகவான் தம்முடைய அம்சமாகிய ஞானத்துடன் அந்த ஸ்தானத்தை அடைந்தார். அந்தப் போதத்தாலேயே அறியவேண்டிய விஷயங்களை ஜீவன் தெரிந்து கொள்ளுகிறான். இந்த விராட் புருஷனுக்கு அபிமானம் (அகங்காரம்) உண்டாயிற்று. அதனை ருத்திரன் அடைந்தார். அதனால் செய்யவேண்டியவைகளைச் செய்கிறான். அந்த விராட் புருஷனுக்கு ஸத்வம் (சித்தம்) உண்டாயிற்று. அந்த ஸ்தானத்தை ப்ரஹ்மா தம்முடைய அம்சமாகிய சேதனையுடன் அடைந்தார். அந்தச் சேதனையாலேயே இந்த ஜீவன் விஞ்ஞானத்தை அடைகிறான். மேலும் அந்தப் புருஷனுடைய தலையிலிருந்து த்யுலோகமும் பாதங்களிலிருந்து பூலோகமும், நாபியிலிருந்து ஆகாசமும் உண்டாயின. த்யுலோகம் முதலியவைகளில் குணங்களுடைய பரிணாமபூதகர்களான தேவர்கள் முதலியவர்கள் தோன்றுகிறார்கள் பலிஷ்டமான சத்வகுணத்தால் தேவர்கள் த்யுலோகத்தை அடைந்தார்கள். மனிதர்கள் பசு முதலியவைகளுடன் ரஜோகுண ஸம்பந்தத்தால் பூலோகத்தை அடைந்தார்கள், மேற்காட்டிய இரண்டு லோகங்களுக்கும் மத்தியிலுள்ளதும், பகவானுடைய நாபி ரூபமுமான ஆகாசத்தை ருத்திரருடைய பார்ஷத கணங்கள் தமோகுண ஸ்வபாவத்தால் அடைந்தார்கள்.

30–40. மேலும் அந்த விராட் புருஷனுடைய முகத்திலிருந்து வேதமோதும் ப்ராஹ்மண ஜாதியும் உண்டாயின. ஓ குருசிரேஷ்ட! அதனால் ப்ராஹ்மணன் நான்கு வர்ணத்திற்கும், அதிபதியும் குருவுமானான்.

அவருடைய இரு கைகளிலிருந்து பரிபாலன ரூபமாகிய விருத்தியும் க்ஷத்ரிய ஜாதியும் உண்டாயின. க்ஷத்ரியன் அந்த விருத்தியை அனுசரித்தான், அந்த க்ஷத்ரியன் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அம்ச பூதர்களாகிய ப்ராஹ்மணன் முதலியவர்களைத் திருடர்கள் முதலிய வர்களுடைய உபத்திரவங்களிலிருந்து காப்பாற்றுகிறான். ப்ரபுவாகிய அந்த விராட் புருஷனுடைய தொடைகளில் இருந்து பயிர்த்தொழில் முதலிய ஜீவன ஹேதுக்களும், வைசிய ஜாதியும் உண்டாயின. வைசியன் அந்த விருத்தியைக் கைக்கொண்டான். அவருடைய பாதங்களில் இருந்து சிசுரூஷையும், சூத்ர ஜாதியும் உண்டாயின. சூத்ரன் மேலான ஜாதியார்களுக்குச் சுச்ரூஷை செய்வதையே தனது விருத்தியாக வைத்துக் கொண்டான். அந்த சிசுரூஷையால் மஹாவிஷ்ணு சந்தோஷப்படுகிறார். மேற்காட்டியபடி நான்கு ஜாதிகளும் அவைகளின் விருத்திகளுடன் உண்டாகி, ஆத்ம சுத்திக்காக ச்ரத்தையுடன் தங்களுக்குரிய தர்மத்தைக் கொண்டு தங்களுக்குப் பிதாவாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவைப் பூஜித்தார்கள் ஓ விதுரரே, காலம், கர்மம், சுபாவம், ஆகிய சக்திகளுள்ள பகவானுடைய யோகமாயா பலத்தாலுண்டான அந்த விராட் ரூபத்தைப் பூர்ணமாக வருணிக்க எவன்தான் விரும்புவான்? (ஒருவராலும் வருணிக்க முடியாதென்று கருத்து) ஓ விதுரரே, ஆனாலும் பகவன் நாமங்களை தவிர வேறு வார்த்தைகளை உச்சரித்ததால், அசுத்தமாயிருக்கும் என்னுடைய வார்த்தையச் சுத்தப் படுத்துவதற்காக நான் குருவினிடம் தெரிந்துகொண்ட படி என்னுடைய புத்திக்கு எட்டியவரையில் ஸ்ரீ ஹரியின் கீர்த்தியைச் சொல்லுகிறேன். புண்யச் லோகராகிய பகவானுடைய குணங்களைக்

சொல்வதே புருஷர்களுடைய வாக்குக்கு முக்கியமாகிய லாபம் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். வித்வான்களால் சொல்லப்படும் ஸ்ரீ பகவானுடைய கதையைக் கேட்டதே காதுகளின் முக்கிய பலனாகும். பகவானுடைய மஹிமையானது யோகத்தால் பக்குவமாகிய புத்தியுள்ள ப்ரஹ்மதேவரால் பல வர்ஷங்களிலும் அறியமுடியவில்லை. பகவானுடைய மாயையானது மாயாவியாகிய பகவானையும் மோஹிக்கச் செய்யக்கூடியது. ஆச்சரியம். ஏனென்றால் ஸ்ரீமஹா விஷ்ணுவும் தம்முடைய மாயகதியை தாமும் அறிந்தவரல்ல. (அளவிடக் கூடாதென்று கருத்து) எவரைத் தெரிந்து கொள்வதற்காகப் ப்ரவர்த்தித்த வாக்குகளும். மனசும் அகங்காரத்திற்கு அதிஷ்டான தேவதையாகிய ருத்ரரும், புத்திக்கு அதிஷ்டான தேவதையாகிய ப்ரஹ்மாவும் இந்திரியங்களுக்கு அதிஷ்டான தேவதைகளாகிய இந்தத் தேவர்களும், இன்னும் மற்றவர்களும் அதனைத் தெரிந்து கொள்ள முடியாமலே திரும்பினார்களோ அந்தப் பகவானுக்கு நமஸ்காரம்.

அத்தியாயம்–7

விதுரருடைய ப்ரச்னங்கள்

1–7 வ்யாஸ மஹர்ஷியின் புத்திரரும் வித்வானுமாகிய விதுரர் மேற்காட்டியபடி சொல்லி வரும் மைத்ரேயரை நோக்கித் தம்முடைய வார்த்தை யால் அவரைச் சந்தோஷிக்கச் செய்து கொண்டு, "ஓ ப்ராஹ்மணோத்தம! சித்ரூபியும், விகார மற்றவருமாகிய பகவானுக்குக் கர்மங்கள் உண்டென்று சொல்லுவதும், நிர்க்குணராகிய (குணங்களற்றவராகிய) அவருக்குக் குணங்களிலிருக்கின்றன வென்றும், அவைகள் அவருக்கு விளையாட்டிற்காக (லீலை) ஏற்பட்டவை களென்று சொல்லுவதும் எப்படிப் பொருந்தும்? குழந்தைகளுடைய சேஷ்டைகளுக்கு எப்படி விளையாட்டே ப்ரயோசனமோ, அப்படியே பகவான் உடைய சேஷ்டைக்கும் லீலையே பலன் என்று சொல்லுவதும் பொருந்தாது. ஏனென்றால், குழந்தைகள் விளையாட்டுக் கருவிகளுடன் அவற்றில் ப்ரவ்ருத்திப் பதற்குக் காமம் காரணமாகிறது. மற்ற குழந்தைகள் இருப்பதால் அவர்களுடன் சேர்ந்து விளையாட வேண்டுமென்ற இச்சை உண்டாகிறது. பகவான் இயற்கையில் திருப்தியுள்ளவராகையால் அவருக்குக் காமம் உண்டாவதற்கு நியாயமில்லை. மேலும் அவர் ஒரு விஷயத்திலும் ஆசையில்லாதவர்; அத்விதீயர். ஆகையால் அவருக்கு இம்மாதிரியான விருப்பம் உண்டாயிற்று என்று சொல்வது பொருந்தாது. அவ்வித்தையை உபாதியாயுடைய ஜீவனுடைய போகத்திற்காகப் பகவான் ஸ்ருஷ்டி முதலியவைகளைச் செய்கிறார் என்று சொல்லுவதும் நியாய

விரோதமேயாம். எப்படியெனில் , "பகவான் முக்குண ஸ்வரூபியான தம்முடைய மாயையால் இந்த ஜகத்தைச் ஸ்ருஷ்டிக்கிறார்; பின்பு அதனைக் காப்பாற்றுகிறார்" பிறகு அதை மறைத்து விடுகிறார் என்று சொல்லப் படுகிறது. தேசத்தாலும், காலத்தாலும், அவஸ்தையா லும் (நிலைமை), இயற்கையாலும், மற்ற வஸ்துவினா லும் நாசஞ் செய்யப்படாத ஞானமுள்ள ஜீவனுக்கு சம்பந்தம் ஏற்பட்டதென்று சொல்வது யுக்தமல்ல. மேலும் பகவான் ஒருவரே ஸகல சரீரங்களிலும் அந்தர்யாமியாக வஸிக்கிறார். அப்படிக்கிருக்க ஜீவனுக்கு ஆனந்தம் முதலியவைகளின் குறைவாவது, துக்கமாவது கர்மங்களால் நேரிடுகிறது என்று எப்படி சொல்லலாம்? ஓ வித்வானாகிய மகர்ஷியே! அறியாத் தன்மையாகிய துக்கத்தில் என் மனம் சிக்கிக் கொண்டிருக்கிறது. ஓ ப்ரபுவே! என்னுடைய பெரியதாகிய மோஹத்தை நிவர்த்திக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்துக் கொண்டார்.

8–14 மேற்காட்டிய விஷயத்தைத் தெரிந்துகொள்ள விரும்பிய விதுரரால் இம்மாதிரி கேட்கப்பட்ட மைத்ரேயர்; பகவானிடத்தில் சித்தத்தைச் செலுத்திய வராக, தத்துவத்தை அறிந்தவராகையால் ஆச்சரியம் இல்லாதவராய், ஆச்சரியமடைந்தவர்போல் விதுரரை நோக்கி, "ஓ விதுரரே! நித்ய முக்தராகிய பகவானுக்குத் தன்யமும், சம்சார பந்தமும் உண்டென்று சொல்வது யுக்திக்கு விரோதம். அதுவே பகவானுடைய மாயையாகும். எப்படி சொப்பன சாட்சியாயிருக்கும் புருஷன் ...என்னுடைய தலை வெட்டப்பட்டது என்று நினைக்கிறானோ (உண்மையில் தலை வெட்டப்பட வில்லை) அப்படி நினைப்பது பொய்யல்லவா? மேலும், ஜலத்தில் பிரதி பிம்பித்த சந்திரனுக்கு

Released by Maran's Dog, Toronto , Canada

ஜலமாகிய உபாதியால் அசைவது முதலியவை ஏற்படுவதுபோல, அனாத்மாவாகிய தேஹம். முதலிய வைகளுடைய தருமமானது தேஹத்தில் அபிமானம் உள்ள ஜீவனுக்கே ஒழிய ஈசுவரனுக்கு இல்லை. அந்த அனாத்மாவின் குணமானது நிவர்த்தி தருமத்தாலும். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தயையினாலும், பக்தியோகத்தாலும், அந்தந்த ஸ்தானத்துக்குத் தக்கபடி மெள்ள மெள்ள மறைந்து போகும். தூங்கினவனுக்கு எப்படி ஸகல துக்கங்களும் நாசம் அடைகின்றனவோ, அப்படிப்போல் அந்தர்யாமியாகிய பரமாத்மாவினிடத்தில் ஜீவனுடைய இந்திரியங்கள் ஸ்திரமாக எப்பொழுது அடங்கியிருக்குமோ அப்பொழுது எல்லாத் துக்கங்களும் நிவர்த்தியாகும்; பகவானுடைய குணங்களைச் சொல்வதாலும், அவைகளைக் கேட்பதாலும் ஸகல துக்கங்களும் நிவர்த்தியாகின்றன. அவருடைய பாதாரவிந்தத்திலுள்ள துளியின் சேவை யானது மனத்தால் அடையப்படுமானால் துக்கங்கள் நிவர்த்திக்கப்படுமென்பதில் என்ன சந்தேகம்? என்று ப்ரத்யுத்தரஞ் சொன்னார்.

15–20 "ஓ ப்ரபுவே! உம்மால் சொல்லப்பட்ட தகுந்த ப்ரத்யுத்தரமாகிய கத்தியால் என்னுடைய சம்சயம் போக்கடிக்கப்பட்டது: மேலும் என்னுடைய மனமானது ஈசுவரன் ஸ்வதந்திரர் என்ற விஷயத்தை யும், ஜீவன் பரதந்திரன் என்பதையும் நன்றாகத் தெரிந்துகொண்டது. ஓ வித்வானாகிய மஹர்ஷியே! ஸ்ரீ பகவானுடைய சக்தியாகிய மாயையால் ஜீவனுக்கு ஆத்மானந்தம் முதலியவைகள் கிடைக்காமல் போகின்றன என்று உம்மால் நன்றாக நிரூபிக்கப்பட்டது. அந்த மாயை உண்மையானதல்ல. காரணமற்றது. தேஹம்

முதலிய ப்ரபஞ்சத்திற்கு காரணமாயுள்ளது, அது வெளியிலில்லை, (எந்த வஸ்து காரணமற்றதும், சூன்யமுமாயுருக்கிறதோ அதை நீர் நன்றாகச் சொன்னீர் என்பது கருத்து.) லோகத்தில் எவன் தேஹம் முதலியவைகளில் அபிமானம் வைத்து மூடனாயிருக்கிறானோ, எவன் ப்ரக்ருதிக்கு மேற்பட்ட பரமபுருஷனை அடைந்திருக்கிறானோ அவ்விருவர் களும் சுகத்தை அடைகிறார்கள். மத்தியிலிருப்பவர் கள் துக்கத்தை அடைகிறார்கள். (அக்ஞர்களுக்கும் ஞானிகளுக்கும் ஸம்சயமில்லை. அதனால் துக்கமில்லை யென்பது கருத்து.) சத்யம் போலத் தோன்றுகிறதும், அனாத்மாவுமான ப்ரபஞ்சம் உண்மையில்லை என்று நான் நிச்சயித்து, அந்த தோற்றத்தை உம்முடைய பாத ஸேவையாலே போக்கிக் கொள்வேன். பகவத் பக்தர்களான பெரியோர்களுடைய சேவையாலே, கூடஸ்தரும் மதுவைக் கொன்றவருமாகிய பகவான் உடைய பாதங்களில் விசேஷப் ப்ரேமையுண்டாகும். அதனால் சம்சார துக்கம் நீங்கும். தேவர்களுக்கும் தேவராகிய பகவானைச் ஸாதுக்கள் எப்பொழுதும் கானஞ் செய்வார்கள். அப்போர்ப்பட்ட மஹான்களுடைய ஸேவையானது விசேஷ புண்யஞ் செய்தவர்களுக்கும் கிடைக்க அரிதானாலும் எனக்குக் கிடைத்தது

21–41 ப்ரபுவாகிய பகவான் முதலில் மஹத் தத்துவம் முதலியவைகளையும், இந்திரியங்களையும், க்ரமமாக ஸ்ருஷ்டித்து அவைகளின் அம்சங்களைக் கொண்டு விராட் சரீரத்தையும் உண்டு பண்ணி அதனிடம் அனுப்பிரவேசஞ் செய்தார். அந்த விராட் புருஷனே முதலில் உண்டானவர். அவருக்கு ஆயிரம் பாதங்களும், ஆயிரம் தொடைகளும், ஆயிரம்

கைகளுமிருக்கின்றன. இவ்வுலகங்கள் யாவும் அவர் இடத்திலேயே நெருக்கமில்லாமல் வஸிக்கின்றன. பத்துவிதமான ப்ராணனும் (ஐந்து ப்ராணன்களுடன், வாக்கு முதலிய இந்திரியங்கள், ஐந்தும் சேர்ந்து பத்து என்பது கருத்து,) இந்திரியங்கள், அவைகளின் அபிமானி தேவதைகள், விஷயங்கள் ஆகிய மூவகையான ப்ராணன்களும் அந்த விராட் புருஷன் இடத்தில் வஸிக்கின்றன. அவரிடத்திலிருந்தே ப்ராஹ்மணர் முதலிய நான்கு வர்ணங்களும் உண்டா யின" என்று சொன்னீர்களல்லவா? அவரிடத்தில் பலவகையான ஸ்வரூபமுள்ள ப்ரஜைகள் தங்களுடைய பிள்ளைகளுடனும், பேரன்களுடனும், கொள் பேரன்களுடனும், மற்றும் வம்சத்திலுண்டானவர் களுடனும் வஸிக்கிறார்கள் அல்லவா? அவர்களுடைய விபூதிகளைச் சொல்லவேண்டும். மேலும் ப்ரஜாபதி களுக்கு அதிபதியாகிய அந்தப் புருஷன் எந்த எந்தப் ப்ரஜாதிபதிகளைச் ஸ்ருஷ்டித்தார்? ஸர்க்கம், அநுஸர்க்கம், மனுக்கள், மன்வந்தரத்தின் அதிபதிகள், இவர்களுடைய வம்சத்திலுண்டானவர்கள்; வம்சத்தின் சரிதம், கீழுலகங்கள், மேலுலகங்கள், பூலோகம், அவைகளுடைய நிலைமை, அளவு ஆகிய இவை களையும் சொல்ல வேண்டும். திர்யக் (பசு முதலிய வைகள்), மனிதர்கள், தேவர்கள், மலைப்பாம்புகள், பறவைகள் முதலிய கர்ப்பத்திலிருந்தும், அண்டத்தில் இருந்தும், வேர்வையிலிருந்தும், பூமியிலிருந்தும் உண்டாகும் நான்கு வகையான ப்ராணிகளுடைய ஸ்ருஷ்டியின் விவரத்தையும் சொல்லவேண்டும்.

மேலும், ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரர் ஆகிய இவர்களின் உருவத்தை எடுத்துக் கொண்டு ஸ்ருஷ்டி, பரிபாலனம்; சம்ஹாரம் ஆகிய இவைகளைச் செய்து

வரும் ஸ்ரீ பகவானுடைய கம்பீரமான சரிதத்தையும், உருவம், ஆதாரம், ஸ்வபாவம் இவைகளால் ஏற்படும் வர்ணாச்ரம விபாகங்களையும், ரிஷிகளுடைய பிறப்பு, சரிதம் ஆகிய இவைகளையும், வேதங்களின் பிரித்தலையும், யாகங்களினுடைய விஸ்தாரங்களையும், பக்தி யோகம் ஞானம், ஸாங்க்யம் ஆகிய இவைகள் உடைய மார்க்கத்தையும், பகவானால் செய்யப்பட்ட தந்திரத்தையும் பாஷாண்ட மார்க்கத்தின் பேதத்தையும்; ப்ரதிலோமஜாதிகளுடைய ஆசாரத்தையும், குணங்களாலும் கர்மங்களாலும் ஜீவர்களுக்கு ஏற்படும் எல்லா கதிகளையும், தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் இவைகளுக்கு அவிருத்தமான உபாயங்களையும், வார்த்தை (பயிர் முதலிய) தண்டநீதி, வ்ரதம் இவைகளுடைய விதியையும், ச்ராத்த விதியையும், பித்ருக்களுடைய ஸ்ருஷ்டியையும், கிருஹங்கள், அசுவினி முதலிய நக்ஷத்திரங்கள், மற்ற நக்ஷத்திரங்கள், காலசக்கரம் ஆகிய. இவைகளின் ஸ்திதியையும், தானம், தபஸ், யாகங்கள், பூர்த்த தர்மங்கள் ஆகிய இவைகளுடைய பலனையும், சக்தனாகிய புருஷனுக் கேற்பட்ட தர்மத்தையும், ஆபத் தர்மத்தையும், தர்மத்திற்குக் காரணமாகிய பகவான் எந்த மார்க்கத்தால் சந்தோஷப்படுவாரோ, எவர்களிடத்தில் தயை செய்வாரோ அவை யெல்லாவற்றையும் சொல்லவேண்டும்.

ஓ ப்ராஹ்மணோத்தம! தம்மை அனுசரித்திருக்கும் சிஷ்யர்களுக்கும், புத்திரர்களுக்கும், தீனர்களிடத்தில் ப்ரியமுள்ள ஆசார்யர்கள் அவர்களால் கேட்கப்படாத விஷயங்களையும் உபதேசிப்பார்கள். ஓ பகவன்! அந்த மகத்தத்துவம் முதலியவைகளுடைய லயமானது எவ்வளவு வகையுள்ளது? ப்ரளயகாலத்தில் இந்தப்

பரமேசுவரனுடைய சமீபத்தில் எவைகள் இருக்கின்றன? எவைகள் அவர் நித்திரை செய்யும் பொழுது தூங்குகின்றன? மேலும் ஜீவனுடைய உண்மையையும், பரமேசுவரனுடைய ஸ்வரூபத்தையும், உபநிஷத்துக்களால் உண்டாகும் ஞானத்தையும், எந்த அம்சத்தால் ஜீவனுக்கும் பரமாத்மாவிற்கும் ஐக்கியம் ஏற்படுகிறது என்பதையும் சொல்லவேண்டும். ஓ தோஷமற்றவரே! வித்வான்களால் எவைகள் ஞானத்திற்குச் சாதனங்களென்று சொல்லப்படுகின்றனவோ, அவைகளையும் உபதேசிக்கவேண்டும்.

ஞானம், பக்தி, வைராக்யம் ஆகிய இவைகள் குருவின் உபதேசமில்லாமல் எப்படி சித்திக்கும்? ஆதலால் மாயையால் மறைக்கப்பட்ட திவ்யசக்ஷுஸ்ஸுள்ளவனும், அதனால் அந்தகனும் (கண்ணில்லாதவன்), ஸ்ரீ பகவானுடைய கர்மங்களைத் தெரிந்துகொள்ள விரும்பிக் கேட்பவனுமாகிய எனக்கு மித்திரரான நீர் அவைகளைச் சொல்லும். ஓ பாபமற்றவரே, ஜீவனுக்கு அடியதானம் செய்வதால் கிடைக்கும் பலனுடைய பதினாறிலொரு பாகம் ஸகல வேதங்களாலும், யக்ஞங்களாலும், தபசுகளாலும், தானங்களாலும் கிடைக்காது. ஆதலால் என்னை அனுக்கிரகிக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்தார்.

42. ஓ மஹாராஜ! இப்படிக் குருக்களில் சிறந்தவராகிய விதுரர் முனிவர்களுள் சிறந்தவராகிய மைத்ரேயரை நோக்கி, முன்கற்பத்தைப் பற்றிக் கேட்க, பகவானுடைய கதையைச் சொல்வதில் தூண்டப்பட்டபடியால் மிக்க சந்தோஷத்துடன் சிரித்துக் கொண்டு மைத்ரேயர் ப்ரத்யுத்தரஞ் சொல்ல ஆரம்பித்தார்.

அத்தியாயம்–8

ப்ரஹ்மதேவருடைய உற்பத்தி

1–9. "விதுரரே! பகவானையே முக்கிய தெய்வமாய்க் கொண்ட நீர் எந்த வம்சத்தில் பிறந்தீரோ ஜனங்களைக் காப்பாற்றும் அந்த பூருவம்சமானது சாதுக்களால் ஸேவிக்கத் தக்கது. பகவானுடைய சரித்திர பரம்பரையை நீர் அடிக்கடி புதிதாகப் பண்ணுகிறீர். அற்ப ஸுகத்திற்காக்ப் பெரிதாகிய துக்கத்தை அடைந்தவர்களான மனிதர்களுக்கு அந்த சம்சார துக்கம் நீங்குவதற்காகப் பாகவத புராணத்தை ஆரம்பிக்கிறேன். பகவான் அதனைத் தாம் நேராக ரிஷிகளுக்கு உபதேசித்தார்.

அதெப்படியெனில்: முன்னொரு சமயத்தில் சனத் குமாரர் முதலிய மகர்ஷிகள் பாதாளத்திலிருக்கும் தடையற்ற ஞானமுள்ள சங்கர்ஷண பகவானை நோக்கி அவருக்கு மேற்பட்ட ஸ்வரூபத்தை அறிய விரும்பினவர்களாகப் ப்ரச்னம் செய்யவாரம்பித்தார் கள். அந்தப் பகவான் வாஸுதேவனென்ற பெயருள்ள தமக்கு ஆச்ரயமாகிய ஜ்யோதிஸ்ஸைத் தியானஞ் செய்து கொண்டிருப்பவர். அந்தர் முகமாகச் செய்யப் பட்ட தாமரை மலர்போன்ற நேத்திரத்தை ஸனத்குமாரர் முதலியவர்களுடைய க்ஷேமத்திற்காக பகிர்முகமாகச் செய்து அவர்களைப் பார்த்தார். மேலும் பாதாளத்தில் வஸிக்கும் நாக கன்னிகைகள் விசேஷப்ரேமையுடனும், பலவகையான காணிக்கைகள் உடன் தங்களுக்கு நல்ல புருஷன் கிடைக்கவேண்டும் என்ற எண்ணமுள்ளவர்களாய்ச் சங்கர்ஷண பகவான்

கால் வைத்துக்கொண்டிருக்கும் எந்தத் தாமரை புஷ்பத்தைப் பூஜிக்கிறார்களோ, அதனை மேற்சொல்லிய மகர்ஷிகள் ஆகாச கங்கையின் ஜலத்தால் நனைந்த தமது ஜடையின் சமூகங்களால் தொட்டுக்கொண்டும் (நமஸ்கரித்து என்று அர்த்தம்) அநேக கிரீடங்களில் இழைத்திருக்கும் உயர்ந்த இரத்தினங்களுடைய காந்திகளால் ப்ரகாசிக்கும் ஆயிரம் பணங்களுள்ள அந்த சங்கர்ஷண பகவானுடைய சரிதங்களைச் சொல்லிக்கொண்டும். அதிகப்ரேமையால் தடங்கின வாக்குள்ளவர்களாகக் கேட்டார்கள்.

அப்பொழுது அந்த சங்கர்ஷணர் நிவர்த்தி தர்மத்தில் ஆசையுள்ள ஸனத்குமாரருக்கு உபதேசித்தார். அந்த ஸனத் குமாரர் விரதங்களை அனுஷ்டித்தவரான சாங்கியாயனருக்குச் சொன்னார். பரமஹம்சர்களுடைய தர்மத்தில் முக்கியராகிய அந்த சாங்கியாயனர், பகவானுடைய விபூதிகளைச் சொல்ல விரும்பின வராய்த் தம்மிடத்தில் வணக்கத்துடன் வந்த எனது குருவாகிய பராசரருக்கும் ப்ரஹஸ்பதிக்கும் உபதேசித் தார். மிக்க தயையுள்ளவரான புலஸ்தியரால் புராணத்தைச் சொல்லும்படி அனுக்கிரஹிக்கப் பெற்ற அந்தப் பராசர மகர்ஷி எனக்கு உபதேசித்தார். ஓ விதுரரே! ச்ரத்தையுடன் கேட்க விரும்பிய உமக்கு நான் அதைச் சொல்லுகிறேன்.

18–20. இந்த ஜகத்தானது எந்தக் காலத்தில் சமுத்திர ஜலத்தால் மூடப்பட்டிருந்ததோ, அப்பொழுது மறைக்கப்படாத சித்சக்தியுள்ளவரும், ஆதிசேஷனாகிய படுக்கையில படுத்தவரும், தம்முடைய ஸ்வரூபானந்த திலேயே ரமிப்பவரும், கர்மங்களற்றவரும், தாம்

ஒருவராக இருப்பவருமான பகவான் கண்களை மூடிக் கொண்டு யோகநித்திரை செய்தார். (மாயா விலாசத் துடன் விளையாடிவிட்டு) மேலும் அவர் தம்முடைய சரீரத்திற்குள் பூத சூட்சுமங்களை அடக்கிக்கொண்டு காலரூபமாகிய சக்தியைத் தூண்டுகிறவராகக் கட்டையில் மறைந்திருக்கும் அக்கினிபோல் தமக்கு இருப்பிடமாகிய ஜலத்தில் வஸித்தார்.

இப்படி ஆயிரம் சதுர்யுகங்கள் ஜலத்தில் யோகநித்திரை செய்து, முன்னமேயே தம்மை எழுப்பு வதற்காக ஏற்படுத்தப்பட்ட காலசக்தியால் கிரியைகளை அடைந்து, தம்முடைய தேஹத்தில் லோகங்கள் லயித்திருப்பதைக் கண்டார். அப்பொழுது பூதசூட் சுமங்களைப் ப்ரவர்த்திக்கச் செய்யும் ஞானமுள்ள வராகிய அந்தப் பகவானுடைய நாபியிலிருந்து அவர் உடைய சரீரத்திற்குள்ளிருந்தும், மிகவும் சூட்சமமும் ஆகிய பூத சூட்சமமானது கால வசத்தால் வ்ருத்தியடைந்த ரஜோ குணத்தின் சம்பந்தத்தால் உண்டாகப் போகிறதாகி வெளிப்பட்டது. (பூத சூட்சுமங்கள் ரஜோகுண சம்பந்தத்தால் தாமரஸ புஷ்பமாக ஆயிற்று என்பது கருத்து.) கர்மங்களைத் தெரிவிக்கும் காலத்தால் ஸ்ரீபகவானிடமிருந்து உண்டான அந்தப் பத்மகோசமானது சூரியன் போலத் தன்னுடைய காந்தியால் விஸ்தாரமாகிய ஜலத்தைப்ரகாசிக்கச் செய்துகொண்டு வெளிப்பட்டது. ஜீவனுடைய போகத்திற்கு உடயோகமானவைகளை வெளிப்படுத்தும் ஸகல ஜகத் ரூபமுமான அந்தப் பத்மத்தில் (தாமரஸ புஷ்பத்தில்) அந்த விஷ்ணுவே அந்தர்யாமியாகிப் ப்ரவேசித்தார். அந்தத் தாமரஸ புஷ்பத்திலிருந்து வேத ஸ்வரூபியாகிய ப்ரஹ்மதேவர்

உண்டானார். அவரையே ஜனங்கள் சுவயம்பூ என்று சொல்லுகிறார்கள். (முன் கற்பத்தின் முடிவில் ஸ்ரீமந் நாரயணருடன் யோகநித்திரையில் ப்ரஹ்மதேவர் கலந்திருந்தார்;

(பிறகு நாராயணன் விழித்துக் கொண்டபோது அவரிடமிருந்தே பாத்ம கற்பத்தில் பத்மத்தின் வழியாக அந்த ப்ரஹ்மதேவர் வெளியானார் என்பது கருத்து) அவர் அந்தத் தாமரஸ புஷ்பத்தின் நடுவில் இருந்து நான்கு புறத்திலும் பார்த்துக் கொண்டிருக்க, ஒவ்வொரு திக்குகளிலும் ஒவ்வொரு முகமாக அவருக்கு நான்கு முகங்கள் உண்டாயின. ப்ரளய காலத்திய காற்றினால் அசைந்த பெரிதாகிய அலைகளுள்ள ஜலத்திலிருந்து உண்டான தாமரஸ புஷ்பத்தில் இருப்பவராகிய அந்த ஆதிதேவர் அந்தப் புஷ்பத்தையும், லோகங்களின் தத்துவத்தையும், தம்மையும் நன்றாகத் தெரிந்து கொள்ளவில்லை. அப்பொழுது அவர், 'தாமரஸ புஷ்பத்தில் இருக்கும் நான் யார்? இந்த ஒரு புஷ்பம் மாத்திரம் எங்கிருந்து ஜலத்தில் உண்டாயிற்று? இதற்கு ஆதாரம் கீழாக ஏதாவது இருக்கவேண்டும்" என்று யோசித்து, அந்தப் புஷ்பத்தின் தண்டிலுள்ள துவாரத்தின் வழியாக ஜலத்திற்குட் சென்றார் அவ்விடத்தில் அந்தத்தாமரைத் தண்டின் மூலத்தைத் தேடிப்பார்த்தும் அவருக்கு அது தெரியவில்லை. ஓ விதுரரே! தம்முடைய உற்பத்திக்குக் காரணமாயிருப்பதைத் தேடிச் செல்லும் அவர் ஜலத்திற்குள் இருக்கும் இருட்டிற்கு அப்புறம், மூன்று முனைகளுள்ளதும் (நடந்தது, நடக்கிறது, நடக்கப் போவது ஆகிய மூன்று முனைகள்) ப்ராணிகளுடைய ஆயுளைச்

செலவழித்து அவர்களுக்குப் பயத்தை உண்டுபண்ணு கிறதும், பெரியதும், ஸ்ரீ மகாவிஷ்ணுவின் சுதர்சனம் என்ற அஸ்திரமுமான கால சக்கரத்தைக் கண்டார். (வெகு நாளாகத் தேடினார் என்பது கருத்து.)

21–31. பிறகு அவர் தம்முடைய எண்ணம் நிறைவேறாமல் மறுபடியும் தமக்கிருப்பிடமாகிய புஷ்பத்தை அடைந்து, ஸ்வாசங்களை அடக்கி, மனத்தை ஒருவகைப்படுத்தித் தியானஞ் செய்து கொண்டிருந்தார். இப்படி நூறு வருஷங்கள் சென்றன. யோகத்தால் ஞானம் விசேஷமாக வ்ருத்தி யடைந்தது. முந்தித் தேடியும் எவர் காணப்படவில்லையோ, அவர் அவருடைய இருதயத்தில் தாமாகவே ப்ரகாசித்தார். அந்தப் புருஷன் தாமரைத் தண்டுபோல வெண்மை நிறமுள்ளதும். ஆதிசேஷனுடைய நீண்ட உடலாகிய மஞ்சத்தில் சயனித்துக் கொண்டிருந்தார். அந்த ஆதி சேஷன் தம்முடைய அனேக படங்களிலிருந்தும் உத்தம இரத்தினங்களுடைய காந்தியால் ப்ரளய காலத்திய இருட்டை விலக்கி ஜலத்தில் வஸித்து வந்தார்.

மேலும் அந்தப் புருஷன் மரகதமலையின் காந்தியைக் காட்டிலும் அழகுள்ளவராக இருந்தார். சந்த்யா காலத்தில் சிவந்த மேகங்கள் அந்த மலையின் மத்தியிலிருப்பது போல, பீதாம்பரத்தைத் தரித்து கொண்டிருந்தார். அந்த மலையின் ஸ்வர்ண சிகரம் போல அவருடைய கிரீடம் ப்ரகாசித்தது. அந்த மலையிலிருக்கும் மேகங்கள், ஓஷதிகள், புஷ்பங்கள் ஆகிய இவைகள் போல அவருடைய வனமாலை விளங்கிற்று. அதிலிருக்கும் மூங்கில்கள் போல அவருடைய கைகள் ப்ரகாசித்தன. அதிலிருக்கும்

மரங்கள் போல அவருடைய பாதங்கள் விளங்கின. அவர் தமக்குத் தகுதியான பருமன், உயரம் ஆகிய இவைகளுடன் கூடியதும், மூவுலகத்தையும் தனக்குள் அடக்கிக் கொண்டதுமான திவ்ய சரீரமுள்ளவர், பலவகையான திவ்யமான ஆபரணங்களாலும் வஸ்திரங்களாலும் அலங்கரிக்கப்பட்டவர்: மேலும் தங்கள் தங்கள் இஷ்டத்தை அடைவதற்கு வேதத்தில் சொல்லியபடி பூஜிப்பவர்களுக்கு அவர்களுடைய காமத்தைக் கொடுக்கக்கூடிய தம்முடைய பாதமாகிய தாமரை புஷ்பத்தை ப்ரகாசப் படுத்துகிறவர்.

அந்தப் பாதங்களிலிருக்கும் நகங்கள் சந்திரன் போலப் ப்ரகாசிக்கின்றன. அவைகளின் காந்தியானது புஷ்பத்தின் இதழ்போன்ற விரல்களில் பரவுகிறது, அவருடைய முகமானது ஜனங்களுடைய துக்கத்தை நீக்கும் சிரிப்புள்ளது. மிகுந்த காந்தியுள்ள குண்டலங் களால் அழகானது. சிவந்த உதடுகளுள்ளது, அழகான மூக்குள்ளது. மனோகரமாகிய புருவங்களுள்ளது. அப்போர்ப்பட்ட முகத்தால் தம்மைப் பூஜிப்பவர்களைக் கௌரவப்படுத்துகிறவர். கதம்ப புஷ்பத்தின் தாதுக்கள் போல பொன்னிறமுள்ள வஸ்திரத்தாலும், மேகலையா லும் ப்ரகாசிக்கும் இடுப்புள்ளவர். விலை உயர்ந்ததும், ஸ்ரீ வத்ஸத்துடன் கூடிய மார்புக்குத் தகுதியானது மான ஹாரத்தால் ப்ரகாசிப்பவர். மேலும் அவர் சந்தன மரம் போன்றவர். உத்தமமான தோள்வளை களில் இழைக்கப்பட்ட இரத்தினங்களால் ப்ரகாசிக்கும் அவருடைய கைகள் கிளைகள் போலிருந்தன. அந்த மரத்தின் வேர்கள் போல் அவருடைய மூலம் ஒருவராலும் காண முடியாதது. மரமானது சிறந்த ஸர்ப்பங்களின் உடல்களால் சுற்றப்பட்டிருப்பது போல அவர் ஆதிசேஷனால் சுற்றப்பட்டவர்.

பின்னும் அவர் பர்வதம் போல் ப்ரகாசித்தார். தாவர ஜங்கமங்களுக்கு இருப்பிடமாக இருப்பவர். பர்வதம் சிறந்த ஸர்ப்பத்தால் ஆசிரயிக்கப்படுவது போல் ஆதிசேஷனால் ஆச்ரயிக்கப்பட்டவர். பர்வதம் சமுத்திர ஜலத்தில் மறைந்திருப்பது போல ப்ரளய ஜலத்தில் மறைந்தவர், மைனாகம் முதலியவை சுவர்ண சிகரமுள்ளவையாக இருப்பது போல் ஸ்வர்ண கிரீடமுள்ளவர். பர்வதத்தில் இரத்தனங்கள் இருப்பது போலக் கௌஸ்துப ரத்னத்தைத் தரித்தவர், வேதங்களாகிய வண்டுகளால் ப்ரகாசிப்பதும், தம்முடைய கீர்த்தி ரூபமாயுள்ளதுமான வனமாலை யுள்ளவர். சூர்யன், சந்திரன், வாயு, அக்கினி ஆகிய இவர்களாலும் அடையமுடியாதவர், முக்காலத்திலும் ப்ரகாசிப்பவைகளும், நான்கு புறத்திலும் சஞ்சரிப்பவை களும் யுத்தத்திற்குச் சாதனங்களுமான ஸுதர்சனம் முதலியவைகளாலும் அடைய முடியாதவர், இம் மாதிரியான புருஷனை பார்த்து ஹரியென்று தெரிந்து கொண்டார்.)

32–33. இப்போர்ப்பட்ட பகவத் ஸ்வரூபத்தைப் பார்த்தபொழுதே ப்ரஹ்மதேவர் அந்தப் பகவானுடைய நாபியில் தோன்றிய தாமரைப் புஷ்பத்தையும், தம்மையும், ஜலத்தையும், வாயுவையும், ஆகாசத்தையும் கண்டார், இந்த ஐந்தை காட்டிலும் வேறொன்றும் அவருக்குப் புலப்படவில்லை. அவர் ரஜோகுணத்தின் சம்பந்தத்தை அடைந்து, ஜனங்களைச் ஸ்ருஷ்டிக்க விரும்பியவராக, மேற்காட்டிய ஐந்தைக் கொண்டே ஸ்ருஷ்டிகரணங்களைப் பார்த்து, பலவகையான ஜகத்ஸ்ருஷ்டியைப்பற்றி யோசித்து, ஸ்தோத்திரஞ் செய்யத் தகுந்தவரான ஸ்ரீமந் நாராயணனைப் பின்வருமாறு ஸ்தோத்திரஞ் செய்ய ஆரம்பித்தார்.

அத்தியாயம்–9

ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ப்ரஹ்மதேவர் ஸ்தோத்திரஞ் செய்தது

1–26 ஓ பகவன்! வெகுநாளாக உபாசித்ததனால் நான் உம்மை நன்றாகத் தெரிந்து கொண்டேன். உம்முடைய ஸ்வரூபத்தை ஜனங்கள் தெரிந்து கொள்ளாமலிருப்பதே குற்றமாகும். உம்மைத் தவிர வேறு ஒரு வஸ்துவுமில்லை. ஆதலால் அறியக் கூடியவர் நீர் ஒருவரே. உம்மைக் காட்டிலும் வேறு வஸ்து இருப்பதாகத் தோன்றினாலும், அது சுத்த சத்வகுணமுள்ளதன்று. மேலும் மாயையின் குண சம்பந்தத்தால் நீரே பல வகையாகத் தோன்றுகிறீர். ஓ பகவன்! சித்சக்தியின் ஆவிர்ப்பவத்தால் தமோ குணங்கள் நீங்கிய நீர் பக்தர்களை அனுக்கிரகிப் பதற்காக இந்த உருவத்தை அங்கீகரித்திருக்கிறீர். இந்த உருவமானது அனேக அவதாரங்களுக்குக் காரணமாய் உள்ளது. இந்த உருவத்தின் நாபியிற்றோன்றிய தாமரை புஷ்பத்திலிருந்து நான் உண்டானேன். ஓ! பரமாத்மன்! தடையற்ற ப்ரகாசமுள்ளதும், பேதமற்றதும் ஆனந்தத்தைக் காட்டிலும் வேறானதும், பூதங்களுக்கும் இந்திரியங்களுக்கும் காரணமாயிருப் பதுமான பகவத் ரூபமானது இந்த உம்முடைய உருவத்தைக் காட்டிலும் வேறானதென்று நான் நினைக்கவில்லை. அதனால்தான் இந்த ஸ்வரூபத்தை ஆச்ரயித்திருக்கிறேன்.

ஓ, உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்பவரே, உபாஸகர்களான நமக்கு க்ஷேமத்தைச் செய்வதற்காக, நீர், தியானம் பண்ணும்போது அந்த இந்த உருவத்தைக்

காண்பீத்தீர். அப்பேர்ப்பட்ட பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறோம். ஈசுவரன் இல்லை என்று சொல்பவர்களும், நரகத்தை அனுபவிக்கக் கூடியவர் களுமான புருஷர்களால் நீர், ஆதரிக்கப்படுகிறதில்லை. எவர்கள் உங்களுடைய பாதங்களாகிய தாமரை புஷ்பத்தின் வாசனையைக் க்ரஹிக்கிறார்களோ, எவர்கள் உம்முடைய கதைகளைக் கேட்கிறார்களோ, எவர்கள் மிகுந்த பக்தியால் உம்முடைய சரணத்தை ஆச்ரயிக்கிறார்களோ அவர்களுடைய இருதய புண்டரீகத்திலிருந்து நீர் ஒரு பொழுதும் விலகுகிறது இல்லை. (எப்பொழுதும் அவ்விடத்திலேயே வஸிக்கிறீர் என்பது தாத்பரியம்) ஜனங்கள் மோக்ஷத்தைக் கொடுக்கும் உம்முடைய பாதத்தை எதுவரையில் ஆச்ரயிக்கவில்லையோ அதுவரையில் பணம், வீடு, மித்திரர்கள் ஆகிய இவர்களுக்காக பயம், துக்கம், ஆசை, அவமானம், அதிக ஆசை ஆகிய இவைகளும், உபத்திரவத்திற்குக் காரணமாகிய "என்னுடையது" என்ற கெட்ட அபிமானமும் உண்டாகின்றன. எவர்கள் ஸகல அசுபங்களையும் போக்கடிக்கக் கூடிய உம்முடைய கதைகளைக் கேட்பது, நாமங்களை உச்சரிப்பது, முதலியவைகளில் ஆசையில்லாதவர் களாகவும், புத்தி கெட்டவர்களுமாக இருக்கிறார்களோ, அவர்கள் மிகவும் அதமர்கள். மேலும், அவர்கள் லோபத்தால் கெடுக்கப்பட்ட மனது உள்ளவர்களும் தீனர்களுமாகிப் போகத்தினுடைய சொற்ப ஸுகத்திற்காகத் துக்கத்தைக் கொடுக்கக் கூடிய கர்மங்களை அடிக்கடி செய்கிறார்கள். ஓ, பகவான்! பசி, தாகம், வாதம், பித்தம் ஸஹிக்க முடியாத சிலேஷ்மம், சீதம், உஷ்ணம் காற்று சகிக்க முடியாத மழை, மன்மதனாகிய அக்கினி மிகுந்த கோபம்

ஆகிய இவைகளால் ஒருவருக்கொருவர் துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த ஜனங்களைப் பார்த்து என்னுடைய மனம் துக்கிக்கிறது. ஓ ஈச! இந்திரியங்கள் விஷயங்கள் ஆகிய இவைகளாகிய மாயையின் பலமுள்ளதும், ஆத்மாவைக் காட்டிலும் வேறானது மாகிய தேஹம் முதலியவைகளுடைய உண்மையை ஜனங்கள் எப்பொழுது தெரிந்து கொள்ளுகிறார்களோ, அது வரையில் கர்மங்களுடைய பலனுள்ளதும், ப்ரயோசன மற்றதுமான சம்சாரமானது ஒழிவடைகிறது இல்லை. மேலும், ஜனங்களும் அதுவரையில் துக்கக் கூட்டத்தை அடைகிறார்கள்.

ஓ தேவ்! பகலில் பல விஷயங்களில் சென்று கஷ்டப்படும் இந்திரியங்களுள்ளவர்களும், ராத்திரியில் தூங்குகிறவர்களும், பலவகையான மனோரதத்தால் சொப்பனம் நேர்ந்த போது உடனே விழித்துக் கொள்வதால் சொப்பன சுகத்தையும் இழந்தவர்களும், இப்படி எல்லாக் காரியங்களிலும் தெய்வத்தால் தடுக்கப்பட்ட முயற்சியுள்ளவர்களுமான புருஷர்கள் ரிஷிகளானாலும் (விவேகிகளானாலும்) உம்முடைய கதையைக் கேட்பதிலும், நாமங்களை உச்சரிப்பதிலும் ஆசையில்லாதவர்களாக இருப்பார்களேயானால் அவர்கள் சம்சாரத்தை அடைகிறார்கள். ஓ நாத! குரு முகமாகத் தங்களுடைய மார்க்கத்தைச் ச்ரவணம் பண்ணின புருஷர்கள் உம்மிடத்தில் பக்தி செய்வார்கள்.

பக்தியோகத்தால் சுத்தமான அவர்களுடைய ஹ்ருதய கமலத்தில் நீர் வஸிக்கிறீர், ஓ பெரியோர் களால் கானம் பண்ணக்கூடியவரே! உம்முடைய

பக்தர்கள் தங்களுடைய மனத்தால் உம்முடைய உருவத்தைத் தங்களுடைய இஷ்டப்படி (குருமுகமாகத் தெரிந்து கொள்ளலாம்) தியானம் பண்ணுகிறார்கள். அவர்களை அனுக்கிரகிப்பதற்காக நீர் உண்மையான ஸ்வரூபத்தை அவர்களுக்குக் காண்பிக்கிறீர். அத்விதீயரும் பல விதமான ஜனங்களிடத்தில் அந்தர்யாமியாய் அவர்களுக்கு அனுகூலத்தைச் செய் பவருமான நீர் பக்தி செய்யாதவர்களுக்கு அரியதாகிய பூத தயையால் எப்படி சந்தோஷப்படுத்துகிறீரோ, அதுபோல மிகுந்த உபசாரங்களால் பூஜிப்பவர்கள் இடத்திலும், காமனையால் பூஜிக்கும் தேவர்களிடத்தி லும் சந்தோஷப்படுகிறதில்லை. ஆனதால் புருஷர் களால் செய்யப்படும் யாகம் முதலிய அநேக ஸத்கர்மங்களுக்கும், தானத்திற்கும், கடுந்தபஸுக்கும், விரதானுஷ்டானத்திற்கும், பகவானுடைய ப்ரியமே ச்ரேஷ்டமாகிய பலன். பகவானாகிய உம்மிடத்தில் சமர்ப்பிக்கப்படும் தருமமானது நாசமடைகிறதில்லை.

எப்பொழுதும் ஸ்வரூப சைதன்யத்தாலேயே பேத ஞானத்தைப் போக்குகிறவரும், வித்யாசக்தியுள்ள வருமான பரம புருஷனாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். மேலும் ஜகத்தைப் படைப்பது, பரிபாலிப்பது, சம்ஹரிப்பது ஆகிய இவைகளுக்குக் காரணமாகிய மாயையின் விலாசத்துடன் விளையாடு கிறவரும், எல்லாவற்றிற்கும் நியந்தாவுமான உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். எந்தப் பகவானுடைய அவதாரங்கள், குணங்கள், செய்கைகள் ஆகிய இவைகளால் ஏற்படும் திவ்ய நாமங்களை (தேவகீ, நந்தன, தாசரதி, சர்வஞ்ஞ, பக்த வத்ஸல, கம்சாரே, கோவர்த்தனாத்தரண என்பது முதலியவைகள்)

சாகுந்தருணத்தில் எவர்கள் (பகவந்நாமத்தை) உச்சரிக்கிறார்களோ, அவர்களுடைய பல ஜன்மங்களில் சம்பாதிக்கப்பட்ட பாபங்கள் யாவும் அந்த க்ஷணத்திலிலேயே நீங்குகின்றன. மேலும் அவர்கள் ஆவரணமற்றதும் உற்பத்தியற்றதும், சத்யமுமான ப்ரஹ்ம ஸ்வரூபத்தை அடைகிறார்கள். அந்தப் பகவானைச் சரணமடைகிறேன்.

எவர் தம்மையே அதிஷ்டானமாயுடைய ப்ரதானத்தை முக்குண ரூபமாகப் பிரித்து ஜகத்தின் உற்பத்தி, பரிபாலனம், சம்ஹாரம் ஆகிய இவைகளுக்கு முறையே காரணர்களாக இருக்கும் நான்,(ப்ரம்ஹா) பரமசிவன், விஷ்ணு ஆகிய மூன்று பாதங்களுள்ளதும் (வேர்களுள்ளது) மரீசி முதலிய ப்ராஜாபதிகளாகிய அநேக கிளைகளுள்ளதும், ஒன்றாயிருப்பதுமுமான லோக விருக்ஷமாக இருக்கிறாரோ, அந்த உம்மை நமஸ்கரிக் கிறேன். இவ்வுலகத்திலிருக்கும் ஜனங்கள் கெட்ட காரியத்திலேயே ப்ரவர்த்திக்கிறார்கள். மேலும், உம்மால் சொல்லப்பட்டதும் க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியதுமான உம்மைப் பூஜிப்பதாகிய காரியங்களைச் செய்கிறதில்லை. அப்பேர்ப்பட்ட ஜனங்களுடைய ஜீவித ஆசையை (பிழைத்திருக்க வேண்டுமென்ற எண்ணத்தை) எவர் கால ஸ்வரூபியாயிருந்து போக்குகிறாரோ அவருக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். மேலும், இரண்டுபராார்த்தம்வரையில் (ப்ரஹ்மதேவருடைய ஆயுளின் பாதியாகிய ஐம்பது வருஷங்களுக்குப் பராார்த்தமென்ற பெயர்,) அழியாமலிருப்பதும், ஸகல லோகங்களால் நமஸ்கரிக்கப்பட்டதுமான இந்தப் பதத்தை அடைந்த நானும் கால ஸ்வரூபியாகிய உம்மைக் கண்டு பயப்படுகிறேன்.

உம்மைத் தெரிந்து கொள்வதற்காக அநேக வருஷங்கள் தவஞ் செய்தேன். ஆதலால் யாகம் முதலிய சத்கர்மங்களுக்கு அதிபதியாகிய உம்மை நமஸ்கரிக்கிறேன். நீர் விஷய சுகத்தில் ஆசையில்லாத வரானாலும், திர்யக், மனுஷ்யர்கள், தேவர்கள் முதலிய வர்களின் சரீரத்தை உமது இஷ்டப்படி அங்கீகரித்து உம்மால் செய்யப்பட்ட தருமத்தின் மரியாதையைக் காப்பாற்றிக் கொண்டு இருக்கிறீர். அப்பேர்ப்பட்ட புருஷோத்தமராகிய உம்மை நமஸ்கரிக்கிறேன். எவர் ஐந்து பர்வங்களுள்ள அவித்தைக்கு வசப்படாத வரானாலும், ஸகல லோகங்களையும் வயிற்றில் வைத்துக் காப்பாற்றிக் கொண்டு, பயங்கரமான அலைகளுள்ள சமுத்திர ஜலத்திற்குள் ஆதிசேஷனாகிய மெதுவான படுக்கையில் படுத்து, ஜனங்களுக்கு நித்திரா சுகம் இப்பேர்ப்பட்டது என்பதைக் காண்பிக்கிறாரோ, எவருடைய நாபியில் தோன்றிய தாமரஸ புஷ்பத்திலிருந்து மூவுலகத்தையும் ஸ்ருஷ்டிக்கும் நான் எவருடைய அனுக்ரஹத்தால் உண்டானேனோ, எவருடைய வயிற்றில் ஸகல உலகங்களும் வஸிக்கின்றனவோ, எவர் யோக நித்திரையின் முடிவில் தாமரைமலர் போன்ற கண்களைத் திறக்கின்றாரோ, அந்தப் பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன்.

அப்பேர்ப்பட்ட இந்தப் பகவான் ஸகல உலகத் திற்கும் அனுகூலத்தைச் செய்பவர். அந்தர்யாமியா யிருப்பவர். நமஸ்கரித்தவர்களிடத்தில் ப்ரியமுள்ளவர். அந்தப் ப்ரமபுருஷன் எந்த ஞானத்தாலும், ஐசுவரியத் தாலும் இந்த ஜகத்தைச் சுகப்படுத்துகிறாரோ, அப்பேர்ப்பட்ட ஞானத்தை எனக்குக் கொடுக்கட்டும்.

அதனால் நான் இந்த ஜகத்தை முன் கல்பத்திலிருந்ததுபோல் ஸ்ருஷ்டிப்பேன். குணாவதார முள்ளவரும், முகமலர்ச்சியுள்ளவருமான இந்தப் பகவான் தம்முடைய சக்தியாகிய லக்ஷ்மீதேவியுடன் எந்த எந்த சரிதங்களைச் செய்யப்போகிறாரோ, அவைகளெல்லாம் எனக்குத் தோன்றட்டும். அந்தப் பகவானுடைய ஆக்ஞையால் ஜகத்தை (பகவானையே ப்ரபாவமாயுடையது) நான் ஸ்ருஷ்டிக்கும் பொழுதும் என்னுடைய மனமானது அந்தப் பகவானிடத்திலேயே ரமிக்கட்டும். ஸ்ருஷ்யின் வைஷம்யத்தால் ஏற்படும் பாபத்தைப் போக்கடித்துக் கொள்வேன்.

அளவற்ற சக்தியுள்ள அந்தப் பரம புருஷன் ப்ரளய ஜலத்தில் வஸிக்கும்பொழுது அவருடைய கொப்பூழிலிருந்து விஞ்ஞான சக்தியாகிய நான் உண்டானேன். அப்பேர்ப்பட்ட நான் விசித்திரமான இந்தப் ப்ரபஞ்சத்தை விஸ்தாரப்படுத்தும்பொழுது வேதத்தினுடைய அவயமாகிய என்னுடைய வாக்கின் உச்சாரணங்கள் கெட்டுப் போகாமலிருக்கட்டும். மேலும், மிகுந்த கருணையுள்ளவராகிய அந்தப் புராண புருஷன், விசேஷ விசுவாசமுள்ள சிரிப்புடன் மலர்ந்த கண்களுள்ளவராகிய என்னிடம் வந்து ஜகத்தை உண்டுபண்ணுவதற்காகத் தேன்போல இனிமையான வார்த்தையால் என்னுடைய மனக்கவலையைத் தீர்க்க வேண்டும். இப்படி ப்ரஹ்மதேவர் தம்முடைய உற்பத்திக்குக் காரணமாயிருக்கும் பகவானைத் தபஸினாலும் உபாசனையாலும், சித்தத்தை யொரு வன்கட்டுத்துவதாகிய ஸமாதியாலும் தரிசித்து, மனத்திற்கும் வாக்குக்கும் எட்டியவரையில் ஸ்தோத்திரஞ் செய்து ச்ரமப்பட்டவர்போல

மௌனமாக இருந்தார்.

27–44 மதுவென்னும் அசுரனைக் கொன்றவராகிய பகவான் ப்ரளய கால ஜலத்தால் வருத்தப்பட்ட மனமுள்ளவரும் லோகத்தைப் படைக்கும் விஞ்ஞானத் திற்காக முயற்சிப்பவரும், தம்முடைய அம்சமுமான ப்ரஹ்மதேவருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டு, "ஓ வேதகர்ப்பரே! சோம்பலை அடையாதீர். ஸ்ருஷ்யில் முயற்சியும். எதற்காக என்னைப் ப்ரார்த்திக்கிறீரோ, அதனை முன்னமேயே அனுக்கிர கித்திருக்கிறேன். மறுபடியும் நீர் தவம் செய்யும். என் விஷயமாகிய உபாசனையையும் அனுஷ்டியும். அவை களால் நம்முடைய ஹ்ருதயத்தில் ஸகல லோகங்களும் தோன்றும் (இதுவரையில் மறந்திருந்தவைகள்). மேலும் பக்தியுள்ளவராகிய நீர் உம்மிடத்திலும், லோகத்திலும், எங்கும் பரவியிருக்கும் பரப்ரஹ்மமாகிய என்னையும் என்னிடத்திலுள்ள ஜீவர்களையும் பார்ப்பீர். கட்டை களில் அக்கினி யிருப்பதுபோல ஸகல பிராணிகள் இடத்திலும் நானிருப்பதாக ஜனங்கள் எப்பொழுது பார்க்கிறார்களோ, அப்பொழுது அஞ்ஞானம் விலகும். மேலும் எப்பொழுது ஜீவன், தன்னைப் பூதங்கள், இந்திரியங்கள், குணங்கள் ஆகிய இவைகளின் சம்பந்தமற்றவனாகவும், ஸ்வரூபமாகிய என்னுடன் லயித்தவனாகவும் பார்க்கிறானோ, அப்பொழுது மோட்சத்தை அடைகிறான். பலவகையான கர்மங்களைக் கொண்டு அநேக ப்ரஜைகளைச் சிருஷ்டிக்க விரும்பிய உம்முடைய மனம் இவ்விஷயத்தில் ப்ரமையை அடையாது. என்னுடைய அனுகூலம் மேலானது. ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கும்போதும் உம்முடைய மனமானது என்னிட த்திலேயே அதிக ஆசக்தியுள்ளதாக இருக்குமாகையால்

பாபியான ரஜோகுணமானது முந்திய ரிஷியான உம்மிடத்தில் சம்பந்திக்கிறதில்லை. நான் ப்ராணி களால் அறிய முடியாதவனானாலும், பூதங்கள், இந்திரியங்கள், சத்வம் முதலிய குணங்கள், அகங்காரம் ஆகிய இவைகளுடைய சம்பந்தமற்றவனென்று உம்மால் அறியப்பட்டிருக்கிறேன். தாமரைப் புஷ்பத்தின் தண்டு வழியாக அதன் காரணத்தைத் தேடி நீர் சென்றபோது, உமக்கு என் விஷயமாக சந்தேகமிருந்த படியால், (இதற்குக் காரணமொன்றிருக்க வேண்டும். அதுவோ தெரிய வில்லை. ஆனதால் இருக்கிறதா இல்லையாவென்ற சம்சயம்) என்னுடைய ஸ்வரூபத்தை வெளியில் காண்பிக்கவில்லை. ஓ ப்ரஹ்மதேவரே! ஆச்சரியமான என் கதையின் அடையாளமுள்ளதாக என்னை ஸ்தோத்திரம் செய்ததும், தபஸ்செய்ததும் ஆகிய இவைகள் என்னுடைய அனுக்கிரகத்தால் உண்டான வையேயாகும். ஸ்ருஷ்டிக்க விரும்பிய நீர் குணங்களின் ஸம்பந்தமுள்ளவன் போலத் தோன்றும் என்னை அவைகளின் ஸம்பந்தமற்றவனாகவே வருணித்துக் கொண்டு ஸ்தோத்திரம் செய்தபடியால் உம்மிடத்தில் ப்ரியமுள்ளவனாக இருக்கிறேன். இந்த ஸ்தோத்திரத் தால் எந்த மனிதன் ஒவ்வொரு நாளும் என்னைச் சந்தோஷப்படுத்துகிறானோ, அவனிடத்தில் நான் மிக்க ப்ரியத்துடன் அவனுடைய இஷ்டங்களைப் பூர்த்தி செய்வேன். மேலும் குளம், கிணறு ஆகிய இவைகளை வெட்டுவிப்பது முதலிய பூர்த்த தர்மம், தபஸ், யக்ஞம், தானம், யோகம், ஸமாதி ஆகிய இவைகளால் கிடைக்கும் க்ஷேமமாகிய பலன் என்னுடைய ப்ரீதியென்றே ஞானிகள் நினைக்கிறார் கள். நான் ஜீவர்களுக்கு ஆத்மாவாக இருப்பவன். ப்ரியமானவர்களுக்குள் மிக்க ப்ரியமானவன். அதனால்

T-V-m 8.3-2

என்னிடத்தில் ஆசைப்பட வேண்டும். ஆதலால் ஸகல வேதஸ்வரூபமாயும் என்னிடத்திலிருந்து உண்டானதுமாகிய உம்முடைய ஸ்வரூபத்தாலேயே (வேறு ஸாதனத்தை அபேட்சியாமல்) ப்ரஜைகளைச் ஸ்ருஷ்டியும். என்னிடத்திலிருப்பவர்களை வெளிப் படுத்தும், என்று தாமரை மலர் போன்ற நாபியுள்ள வரும், ப்ரதானம் (மாயை) புருஷன் (ஜீவன்) இவர்களுக்கு அதிபதியுமான ஸ்ரீமந் நாராயணன் அனுக்ரஹித்து, ஸ்ருஷ்டிக்க வேண்டியதைப் ப்ரகாசப் படுத்தி அவருடைய கவலையைத் தீர்த்து மறைந்தார்.

அத்தியாயம்–10

பத்துவகையான ஸர்க்கங்கள்

1–2. அதனைக் கேட்டு விதுரர். மைத்ரேயரை நோக்கி, 'ஓ பகவன்! உலகங்களுக்குப் பிதாமகரும் ப்ரபுவுமாகிய ப்ரஹ்மதேவர் புருஷோத்தமன் மறைந்த பிறகு தேகத்திலுண்டானவைகளும் மனத்திலிருந்து உண்டானவைகளுமான ப்ரஜைகளை எவ்வளவு வகையாய்ப்படைத்தார்? தவிரவும், என்னால் கேட்கப் பட்ட மற்ற எல்லாக் கேள்விகளுக்கும் க்ரமமாக உத்தரஞ் சொல்லி என்னுடைய சம்சயங்களை நீக்க வேண்டும். நீர் ஸகலத்தையும் அறிந்தவர்களுக்குள் சிறந்தவர்' என்று கேட்டுக்கொண்டார்.

3–9. அதனைக் கேட்டு அந்த மைத்ரேய மகர்ஷி மிகவும் ப்ரியத்துடன் அவைகளை மறவாமலேயே தமது மனத்தில் வைத்துக்கொண்டு ப்ரத்யுத்தரம் சொல்ல ஆரம்பித்தார். ப்ரஹ்மதேவர் ஸ்ரீமந் நாராயண னுடைய ஆக்ஞையின்படி. அவரிடத்திலேயே தம்முடையை மனத்தைச் செலுத்தி தேவமானத்தில் நூறு வருஷகாலம் தவம் செய்தார். அப்பொழுது ப்ரஹ்மதேவர் எதிலிருந்து தவம் செய்தாரோ அந்தத் தாமரைப் புஷ்பத்தையும் ஜலத்தையும் ப்ரளய காலக் காற்றானது அசைத்தது. அதனைக் கண்ணுற்ற ப்ரஹ்மதேவர் தம்முடைய வித்தையாலும், மிகவும் விருத்தியடைந்த தபஸினாலும் மிக்க விஞ்ஞான பலமுள்ளவராக அந்த வாயுவையும் ஜலத்தையும் பானஞ் செய்தார். பிறகு அவர் தமக்கு இருப்பிடமும், ஆகாசத்தில் வியாபரித்ததுமான தாமரைப்

புஷ்பத்தைப் பார்த்து "பூர்வ கல்பத்தில் லயமடைந்த லோகங்களை இந்தப் புஷ்பத்தைக் கொண்டு ஸ்ருஷ்டிப்பேன்" என்று யோசித்தார். பின்பு அவர் ஸ்ரீமந் நாராயணனால் ஜகத் ஸ்ருஷ்டியில் தூண்டப் பட்டு. பதினான்கு வகையாக ஆகக் கூடிய அந்தத் தாமரை புஷ்பத்தை மூன்று வகையாகப் பிரித்தார் (மூவுலகமாக வென்பது கருத்து). ப்ராணிகளுடைய போக ஸ்தானமாகிய மூவுலகத்தின் ஸ்ருஷ்டியானது இம்மாதிரி சொல்லப்பட்டது. (மூவுலகமும் காம்ய கர்மத்தின் பலமாகையால், ப்ரஹ்மதேவரின் ஒவ்வொரு பகலிலும் அவை ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன என்பது கருத்து) பலனை உத்தேசியாமல் செய்த நல்ல கர்மங்களின் பலமே ப்ரஹ்ம பதம் என்றார். (மகர்லோகம் முதலிய சத்யலோகம் வரையிலுள்ள லோகங்கள் நிஷ்காம கர்மங்களின் பலன்களாகையால் இரண்டு பரார்த்தம் வரையில் அவைகளுக்கு நாசமில்லை.)

10. அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி "ப்ரபுவாகிய ஓ ப்ராஹ்மணோத்தம! அனேக உருவமுள்ளவரும், ஆச்சரியகரமாக காரியங்களுள்ள வருமாகிய ஸ்ரீமந் நாராயணருக்குக் காலமென்ற ஸ்வரூபம் உண்டென்று சொன்னீரல்லவா? அதனை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

11–31 1/2. பிறகு மைத்ரேயர் விதுரரை நோக்கி, காலமென்பது மகத் தத்துவம் முதலியவைகளுடைய பரிணாமத்தால் ஏற்படுகிறது. அதற்கு உற்பத்தியும் இல்லை. முடிவும் இல்லை. அந்தக் காலத்தை நிமித்த காரணமாக வைத்துக் கொண்டு, பரம புருஷன் தம்மை விளையாட்டாகச் ஸ்ருஷ்டித்துக் கொண்டார்.

விஷ்ணுவின் மாயையால் ப்ரஹ்மமானது இந்தப் ப்ரபஞ்ச உருவமாக ஆகி, அவ்யக்த ஸ்வரூபமுள்ளதும் எல்லாவற்றிற்கும் மேலானதுமான காலத்தால் தனியாகப் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் ப்ரபஞ்சமானது இப்பொழுது ப்ரகாசித்துக் கொண்டிருப்பதுபோலப் பூர்வ கற்பத்திலும் இருந்தது. அடுத்த கற்பத்திலும் இம்மாதிரியாகவே இருக்கும். அதனாலுண்டாகும் ப்ராகிருதம், வைகிருதம் என்ற பேதமுள்ள சர்க்கமானது ஒன்பது வகையுள்ளது. அந்த சர்க்கத்திற்குக் காலத்தாலும், திரவியத்தாலும, குணங்களாலும் மூன்று வகையான ப்ரளயம் ஏற்படுகிறது. பரமாத்மாவினிடமிருந்து குணங்களுடைய வித்தியாசத்தால் ஏற்படும் மகத் தத்துவத்தின் ஸ்ருஷ்டி. முதலாவது, திரவியம், ஞானம் இவைகளால் ஏற்படும் அகங்காரத்தின் ஸ்ருஷ்டி. இரண்டாவது, பூத ஸ்ருஷ்டி. மூன்றாவது, அது தன்மாத்திரையுள்ளது, த்ரவிய சக்தியுள்ளது. நான்காவது இந்திரிய ஸ்ருஷ்டி. அது ஞானம், கருமம் ஆகிய் இவைகளின் ஸ்வரூபம். ஐந்தாவது மன ஸ்ருஷ்டி. அதுவே வைகாரிக தேவ ஸ்ருஷ்டி எனப்படுகிறது. ஆறாவது அவித்தையின் ஸ்ருஷ்டி. அந்த அவித்தை ஜீவர்களுக்கு ஆவரணத்தை யும், விக்ஷேபத்தையும் உண்டுபண்ணுகிறது. இந்த ஆறு வகையான சர்க்கங்களும் ப்ராக்ருதமெனப்படு கின்றன. வைகிருதமான சர்க்கங்களையும் சொல்லு கிறேன், எவரைத் தியானஞ் செய்த மாத்திரத்தில் சம்சார துக்கம் நீங்குமோ, ரஜோ குணத்தை யடைந்த அந்தப் பரம புருஷனுக்கு இது லீலையேயாம். தாவரங்களுடைய ஸ்ருஷ்டியே வைகிருத ஸ்ருஷ்டியில் முக்கியமானது. அதுவே ஏழாவது ஸ்ருஷ்டியாகும். அந்தத் தாவர ஸ்ருஷ்டியானது ஆறுவகையானது. எப்படியெனில், புஷ்பிக்காமல் காய்க்கும் அரசு,

அத்தி; பலா முதலிய மரங்கள் ஒருவகையாம். புஷ்பித்துப் பழுக்கும் யவம், நெல், பயறு முதலிய வைகள் மற்றொரு வகையாம். புஷ்பங்களையே ப்ரதானமாயுள்ள மல்லிகை முதலிய கொடிகள் மற்று ஒருவகையாம். மூங்கில் முதலியவைகள் பின்னொரு வகையாம். மற்ற கொடிகள் ஒரு வகையாம். மற்ற மரங்களும் ஒருவகையாம். இவைகள் யாவும் நடை அற்றவை. ஆகாரமற்றவை. வெளியில் ப்ரகாசிக்காத சைதன்யமுள்ளவை, உள்ளே ஸ்பரிசத்தை அறியக் கூடியவை. பலவகையான பருமன், உயரம் முதலியவை களுமுள்ளவை, எட்டாவது திர்யக் திருஷ்டி. அது பசு, ஆடு, எருமை கிருஷ்ணசாரம், பன்றி, கவயம், குரு, செம்மறியாடு, ஒட்டகம் ஆகிய இரண்டு குளம்புகளுள்ள ஒன்பது வகையான ப்ராணிகள். கழுதை, குதிரை, அச்வதரம் கௌரம், சரபம், சமர் என்ற ஒற்றைக் குளம்புள்ள ஆறு வகையான பிராணிகள். நாய், நரி, செந்நாய், புலி, பூனை, முயல் சல்யுகம், சிம்மம், குரங்கு, யானை, ஆமை, உடும்பு ஆகிய ஐந்து நகங்களுள்ள பன்னிரண்டு வகையான ப்ராணிகள் மகரம் முதலிய ஜலத்தில் சஞ்சரிக்கும் பிராணிகள், கழுகு, பருந்து, கொக்கு, சேனம், பாஸம், பல்லூகம், மயில், ஹம்ஸம், சாரசம், சக்ரவாகம், காக்கை, கோட்டான் முதலிய பறவைகள் ஆகிய இருபத்தெட்டு வகையுள்ளது. இவைகள் யாவும் ஞானமில்லாதவை மிகவும் தமோ குணமுள்ளவை. கிராணேந்திரியத்தாலேயே தங்களுக்கு இஷ்டமானவை களை அறிந்துகொள்ள கூடியவை. தீர்க்கமாகிய ஆலோசனையற்றவை. (பசுக்களுக்கு, பசி தாகத்திலேயே அறிவு என்று கருத்து) ஒன்பதாவது மனிதர்களுடைய ஸ்ருஷ்டியோ ஒருவகையானது. அதற்கு ஆகாரம், சஞ்சரிப்பது ஆகிய இவைகள் பூமியிலேயே

ஏற்படுகின்றன. அம்மனிதர்களிடத்தில் ரஜோ குணமே அதிகம். கருமங்களைச் செய்வதிலேயே அவர்கள் ஆசையுள்ளவர்கள். துக்கத்தையே சுகமாக நினைத்த வர்கள் இம்மூன்று ஸ்ருஷ்டிகளுமே வைகிருத ஸ்ருஷ்டிகளென சொல்லப்படுகின்றன. வைகாரிக மென்று சொல்லப்பட்ட தேவ ஸிருஷ்டியும், வைகிருத ஸிருஷ்டியாகும். கௌமார ஸிருஷ்டியானது, ப்ராக்ருதம் வைகிருதம் இரண்டும் சேர்ந்ததாக ஆகும். (அவர்களுக்கு தேவத்வம், மனுஷ்யத்வம் இரண்டும் உண்டென்பது கருத்து) இந்த வைகிருதமான தேவ ஸ்ருஷ்டியானது தேவர்கள், பிதிருக்கள், அசுரர்கள். கந்தர்வர்கள், அப்ஸரசுகள், யக்ஷரக்ஷஸ்ஸுக்கள், சித்தசாரண வித்யாதரர்கள், கின்னரர் முதலியவர் கள், பூதம் பிரேத பிசாசங்கள் ஆகிய எட்டு வகை யுள்ளது, இப்படி ப்ரஹ்மாவினால் செய்யப்பட்ட சர்க்கங்கள் பத்துவகை யென்றும் சொல்லப்பட்டிருக் கின்றன. இதற்குமேல் மனுக்களையும், மன் வந்த்ரங்களையும் சொல்லுகிறேன், ஸ்ரீமத் நாராயணன் ரஜோ குணமுள்ளவராகப் ப்ரஹ்மதேவ ஸ்வரூபத்தை யடைந்து தம்மைத் தாமே தம்மைக்கொண்டு படைக்கிறார். அவர் வீணாகாத சங்கற்பமுள்ளவர். ஒ விதுரரே எல்லாவற்றிற்கும் ஈசுவரனாகிய பரமாத்மா மாயாவி ஆகையால் குணங்களுடைய சம்பந்தமுள்ள இவரிடத்திலிருந்து ஒன்றன்பின் மற்றொன்று உண்டாயிற்று என்று சொல்ல வேண்டியதில்லை. நதியில் அநேகம் சுழல்கள் ஒரே காலத்தில் உண்டாகவில்லையா? மேலும் தேவர்கள் அசுரர்கள் முதலியவர்களில், இந்தக் கற்பத்தில் எவர்கள் இருக்கிறார்களோ, அவர்களே வேறு பெயருடனும், வேறு உருவத்துடனும் பிந்திய கற்பங்களிலும் இருக்கிறார்கள்.

அத்தியாயம்–11

காலத்தின் ஸ்வரூபம்

1–15 "காரியரூபமாகிய ப்ரபஞ்சத்தின் எந்த அம்சமானது கடைசியானதோ (பிரிக்க முடியாததோ) எது காரியமாயிருக்கும் தன்மையை அடையாததோ, மேலும் எது சமுதாயமாயிருக்கும் தன்மையை அடையாததோ அதே பரமாணுவென்று தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு அவயவங்கள் உண்டென்று மனிதர்கள் ப்ரமிக்கிறார்கள். (இது காலத்தின் சூட்சும ரூபம்) காரியம் மாத்திரமாயும், மாறுதலை அடையாத தாயுமுள்ள அந்த வஸ்துவின் சேர்க்கையே மிகவும் பெரியது. அது பேதமற்றது. விசேஷமற்றது. ஓ சாதுக்களுக்குள் மேலானவரே! இந்தப்ரபஞ்சமானது பரமாணுவாயிருக்கும்பொழுது இதை எந்தக் காலம் வ்யாபித்திருந்ததோ, அதுவே காலப் பரமாணு. காரியமாயிருக்கும் ப்ரபஞ்சம் முழுவதையும் எந்தக் காலம் வ்யாபித்திருக்கிறதோ, அதுவே மகாகாலம். இரண்டு காலப் பரமாணுக்கள் சேர்ந்தால் அணுவாகிறது. மூன்று அணுக்களால் திருஸரேணு உண்டாகிறது. வீடுகளில் சன்னல் வழியாகப் ப்ரகாசிக்கும் வெயிலில் பறந்துகொண்டிருக்கும் தூளிகளே திருஸரேணு எனப்படும். மூன்று கால திருஸரேணுக்களால் த்ருடி யுண்டாகின்றது. நூறு த்ருடி கொண்டது வேதமெனப்படுகிறது. மூன்று வேதங்கொண்டது லவமெனப்படுகிறது. மூன்று லவங்கள் நிமிஷமாகின்றது, மூன்று நிமிஷங்களால் க்ஷணம் உண்டாகிறது. ஐந்து க்ஷணங்களால் காஷ்டை ஏற்படுகிறது. பதினைந்து காஷ்டைகளால்

லகு ஏற்படுகிறது. பதினைந்து லகுக்களால் நாடிகை (நாழிகை) உண்டாகிறது. இரண்டு நாடிகைகள் ஒரு முகூர்த்தமாகும். ஆறு அல்லது ஏழு நாழிகை கொண்டது ப்ரஹரமென்றும், யாமமென்றும் சொல்லப்படுகிறது. ஆறு பலம் தாமிரத்தால் செய்யப் பட்ட உயரமான வடிவமுள்ள பாத்திரத்தில், இருபது குன்றிமணி நிறையுள்ள தங்கத்தால் செய்யப்பட்டவை களும், நான்கு அங்குல விஸ்தாரமுள்ளவைகளுமான நான்கு ஊசிகளால் துவாரஞ் செய்து அந்தப் பாத்திரத்தை ஜலத்தில் மிதக்கச் செய்து அந்தப் பாத்திரம் ஜலத்தில் எவ்வளவு காலத்தில் மூழ்குமோ அந்தக் காலமே நாழிகையாகும். நாலு யாமம் கொண்டது மனிதர்களுக்கு ஒரு பகலாம், ராத்திரியும் அவ்வளவு காலமேயாம். இவ்விரண்டும் சேர்ந்தது ஒருநாள் என்று சொல்லப்படுகிறது. பதினைந்து நாட்கள் கொண்டது ஒரு பக்ஷமாகும். அது சுக்லமென்றும், கிருஷ்ணமென்றும் இருவகையுள்ளது. அவ்விரண்டு பக்ஷங்கள் கொண்டது ஒரு மாதமாகும். அது பித்ரு தேவதைகளுக்கு ஒருநாள் ஆகும். அதிலும் சுக்லபக்ஷம் பகலாகும. கிருஷ்ணபக்ஷம் ராத்திரியாகும். இரண்டு மாதம் கொண்டது ஒரு ருது. ஆறு மாதம் கொண்டது ஒரு அயன மெனப்படுகிறது. அதிலும் தக்ஷிணாயணம், உத்தராயணம் என்று இருவகை யுண்டு; தக்ஷிணாயணம் தேவர்களுக்கு ஒரு ராத்திரியாகும். உத்தராயணமோ அவர்களுக்கு ஒரு பகலாகும். ஆதலால் மனுஷ்ய மானத்தில் பன்னிரண்டு மாதம் கொண்டது தேவர்களுக்கு ஒரு நாளாகின்றது. மனுஷ்ய மானத்தில் நூறு வருஷங்கள் மனிதர்களுக்குப் பரமாயுஸ் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கால ஸ்வரூபியான் சூரிய பகவான், கிரகங்கள், அசுவனி

முதலிய இருபத்தேழு நக்ஷத்திரங்கள், மற்ற தாரைகள் ஆகிய இவைகளுள்ள காலச் சக்கரத்திலிருந்து கொண்டு பரமாணு முதல் வருஷம் வரையிலுள்ள காலமானத்தால் ஜகத்தில் சஞ்சரிக்கிறார். மேலும், மேற்சொல்லிய சம்வத்ஸர ஸ்வரூபமாகிய காலத்திற்கு சம்வத்ஸரம், பரிவத்ஸரம், இத்வத்ஸரம், அனுவத்ஸரம், வத்ஸரமென்று ஐந்து பேதங்கள் (ஸௌரம், பார்ஹஸ்பத்யம், ஸாவனம், சாந்திரம், நக்ஷத்ரம் என்ற மான பேதத்தால்) ஏற்படுகின்றன. எந்தப் பரமபுருஷன் இம்மாதிரியான கால ஸ்வரூபியாயிருந்து பலவகையாகக் காரியங்களை உண்டுபண்ணி (விதைகளுக்கு முளைக்கும் சக்தியை உண்டுபண்ணிக் கொண்டு) சம்சாரிகளுக்கு ஸ்வர்க்கம் முதலிய பலனை, யாகம் முதலிய சத் கர்மங்களால் கொடுத்துக் கொண்டும், புருஷர்களுடைய மோஹத்தை நீக்குவதற்காக ஆகாசத்தில் சஞ்சரிக்கிறாரோ; ஐந்து வகையான வத்ஸரங்களை எவர் உண்டு பண்ணுகிறாரோ, அப்பேர்ப்பட்ட தேஜோரூபியான சூரியனைப் பூஜிக்க வேண்டும்" என்றார்.

16–17 அதனைக் கேட்டு விதுரர், "ஓ பகவானாகிய மைத்ரேயரே! பிதிருக்கள், தேவர்கள், மனிதர்கள் ஆகிய இவர்களுடைய மானத்தைச் சொன்னீர். மேலும், நீர் கால ரூபியான பகவானுடைய ஸ்வரூபத்தை நன்றாக அறிந்தவர். யோகத்தால் கிடைத்த ஞானக் கண்ணால் வித்வான்கள் எல்லாவற்றையும் அறிகிறார்கள். ஆகையால் மூவுலகத்திற்கு வெளியில் இருக்கும் ஞானிகளுடைய கதியையும் சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

18–21 அதனைக் கேட்டு மைத்ரேயர், "தேவ மானத்தால் அளக்கப்பட்ட பன்னீராயிரம் வருஷங்களைக் கொண்டு க்ருதயுகம், த்ரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம் என்று நான்கு யுகங்கள் ஏற்படுத்தப்பட்டன; நாலாயிரத்தெண்ணூறு (4800) வருஷங்கள் கொண்டது க்ருதயுகம் மூவாயிரத்தறுநூறு வருஷங்கள் கொண்டது, (3600) த்ரேதாயுகம். இரண்டு ஆயரத்து நாநூறு வருஷங்கள் கொண்டது,(2400) த்வாபர யுகம். ஆயிரத்து இருநூறு வருஷங்கள் கொண்டது,(1200) கலியுகம். க்ருதயுகத்தில் முதல் நாநூறு வருஷங்கள் யுகத்தின் சந்தி எனப்படுகின்றன. கடைசி நானூறு வருஷங்கள் சந்தியாம்ச மெனப்படுகின்றன. த்ரேதாயுகத்தில் முதல் முந்நூறு வருஷங்கள் சந்தி என்றும், கடைசி முந்நூறு வருஷங்கள் சந்தியாம்ச மென்றும், துவாபர யுகத்தில் முதல் இருநூறு வருஷங்கள் சந்தி என்று கடைசி இருநூறு வருஷங்கள் சந்தியாம்சமென்றும், கலியுகத்தில் முதல் நூறு வருஷங்கள் சந்தியென்றும், கடைசி நூறு வருஷங்கள் சந்தியாம்சமென்றும் சொல்லப்படுகின்றன. சந்தி, சந்தியாம்சம் என்னும் இவ்விரண்டிற்கும் நடுவிலிருக்கும் பாகமே யுகமெனப் படுகிறது. அந்தக் காலத்தில்தான் யுக தர்மங்கள் நன்றாகப் ப்ரகாசிக்கும். க்ருதயுகத்தில் தருமமானது நான்கு பாதங்களுடன் மனிதர்களை அனுசரிக்கிறது. மற்ற யுகங்களில் அந்த தருமத்திற்கு ஒவ்வொரு பாதம் குறைகிறது. இந்த மூவுலகத்தைக் காட்டிலும் வெளியிலிருக்கும் மஹர் லோகம் முதல் ப்ரம்ஹ லோகம் வரையில் ஆயிரம் சதுர்யுகம் கொண்டது ஒரு பகலாகும். இரவும் அவ்வளவு காலமேயாகும். அதில் ப்ரஹ்ம தேவர் தூங்குகிறார். ராத்திரி முடிந்து.

பகல் ஆரம்பிக்கும்பொழுது ஸ்ருஷ்டி ஆரம்பிக்கப்படு கிறது. அந்தப் ப்ரஹ்மதேவருடைய பகலில் பதினான்கு மனுக்கள் உண்டு. எழுபத்தொரு யுகங்களுக்குக் கொஞ்சம் அதிகமான காலம் ஒவ்வொரு மனுக்களின் காலமாகும். ஒவ்வொரு மன்வந்தரங்களிலேயும் அந்தந்த மனுவின் வம்சத்தில் பிறந்த அரசர்களும், ரிஷிகளும், தேவர்களும் தேவர்களுக்கு அதிபதிகளும், அந்த மனுக்களை அனுசரிக்கிறார்கள். இது ப்ரஹ்ம தேவரால் ஒவ்வொரு நாளும் செய்யப்படும் ஸ்ருஷ்டி. இது இவ்வுலகத்தையும் வ்ருத்தி செய்யக்கூடியது. திர்யக்ஜாதிகளும், மனிதர்களும், பித்ருக்களும், தேவர்களும் இதில் ஸ்ருஷ்டிக்கப் படுகிறார்கள். மேலும் ஒவ்வொரு மன்வந்தரங்களிலும் பரம புருஷன் சத்வகுண முள்ளவராக மனு முதலியவர்களின் ஸ்வரூபமாக இருந்து இந்த ஜகத்தைக் காப்பாற்றுகிறார். பின்னும் அவர் பகலின் முடிவில் தமோகுணத்தின் சொற்ப பாகத்தை அங்கீகரித்துக் காலகதியால் எல்லாவற்றையும் தமக்குள் அடக்கிக் கொண்டு வியாபார மற்றவராய் இருக்கிறார். அப்பொழுது பூமி முதலிய மூன்று உலகங்களும், சந்திரன், சூரியன் ஆகிய இவர்களுடைய ப்ரகாசமில்லாமல் மறைந்து இருக்கின்றன. பிறகு பகவானுடைய சக்தியாகிய சங்கர்ஷண முகாக்கினியால் முவுலகமும் எரிக்கப்படும் பொழுது அந்தத் தாபத்தைப் பொறுக்காமல் பிருகு முதலிய மகர்ஷிகள் மகர்லோகத்திலிருந்து ஜனலோகம் செல்லுகிறார்கள். அப்பொழுது சமுத்திரங்கள் ப்ரளய காலத்திய காற்றினால் அசைக்கப்பட்டுப் பெரியதாகிய அலைகளுடன் பயங்கரமான ஆடம்பர முள்ளவை களாக உலகங்களை மூழ்கச் செய்யும். அந்தக் காலத்தில் அந்த ஜலத்திற்குள் ஆதிசேஷனாகிய

ஆசனத்தில் பகவான் யோக நித்திரை செய்து கொண்டிருக்கிறார். ஜனலோகத்தில் வஸித்தவர்கள் அவரை ஸ்தோத்திரம் செய்து கொண்டிருப்பார்கள். இம்மாதிரியான ராத்திரி, பகல்களால் ப்ராணிகளின் வயதைவிட அதிகமான ப்ரஹ்மதேவருடைய வயதும் அபகரிக்கப் பெற்றுக் குறைந்துபோகிறது. அந்தப் ப்ரஹ்மதேவருடைய ஆயுளின் பாதிப்பாகம் பரார்த்தம் என்று சொல்லப்படுகிறது. முதல் பரார்த்தம் சென்று விட்டது. இப்பொழுது இரண்டாவது பரார்த்தம் நடக்கிறது. முந்திய பரார்தத்தின் முன்பாகத்தில் ப்ராஹ்மம் என்ற பெரியதாகிய கற்பம் நடந்தது. சப்தப்ரஹ்மமென்று சொல்லப்படுகிற ப்ரஹ்மதேவர் உண்டான காலமாகையால் அதற்குப் ப்ராஹ்மம் என்று பெயர் கிடைத்தது. அதற்கு அடுத்த கற்பத்தைப் பாத்ம கல்பம் என்று சொல்லுகிறார்கள். அந்தக் கற்பத்தில் பகவானுடைய நாபியாகிய ஏரியிலிருந்து லோகமாகிய பத்மம் (தாமரைப் புஷ்பம்) உண்டாயிற்று. இதுவே முதலாவது கற்பம். இரண்டாவது வராஹ கற்பமென்று சொல்லப்படுகிறது. அதில் பகவான் வராஹமாக (பன்றி) அவதரித்தார். உபாதியற்றவரும், நாசமற்றவரும், உற்பத்தியற்றவரும், ஜகத் காரணரும் ஆகிய பகவானுக்கு இரண்டு பரார்த்தங்களடங்கிய ப்ரஹ்மதேவருடைய ஆயுளானது நிமிஷமாம்! பரமாணுமுதல் இரண்டு பரார்த்தம் வரையிலுள்ள மேற்சொல்லிய காலமானது வீடு முதலியவைகளில் அபிமானமுள்ள சம்சாரிகளுக்கு யஜமானனே யொழியப் பரிபூரணரான புருஷோத்தமருக்கு அதிபதியல்ல. மஹத்தத்துவம் முதலிய ஆவரணங்கள் உள்ளதுமான அண்டகோசமானது வெளியில் ஐம்பது கோடி விஸ்தாரமுள்ளது. அளவில் ஒன்றுக்கொன்று

பத்து மடங்கு அதிகங்களான பூமி முதலிய ஆவரணங்களுள்ள மேற்சொல்லிய அண்டகோசமும், மற்ற கோடிக் கணக்கான அண்டங்களும் எதனிடத்தில் ப்ரவேசித்து பரமாணுக்கள் போலத் தோன்று கின்றனவோ, அதுவே அக்ஷரம்; எல்லாக் காரணங் களுக்கும் காரணம்; மகாத்மாவாகிய புருஷனுடைய சரீரம்; அதுவே பரப்ரஹ்மம்.

அத்தியாயம்–12

ஸனகர் முதலியவர்களுடைய ஸ்ருஷ்டி

1–8. ஓ விதுரரே! பரமாத்மாவினுடைய காலமென்ற பெயருள்ள மஹிமையைச் சொன்னேன் வேதகர்ப்பராகிய ப்ரஹ்மதேவர் ஜகத்தை யுண்டு பண்ணியதைச் சொல்லுகிறேன் தெரிந்து கொள்ளும். முதலில் ப்ரஹ்மா அந்ததாமிஸ்ரம், தாமிஸ்ரம் மஹாமோஹம், மோஹம், தமஸ் ஆகிய ஐந்து அஜ்ஞான விருத்திகளை யுண்டுபண்ணினார். பின்பு , தம்மால் ஸிருஷ்டிக்கப் பட்டவைகள் பாபத்திற்கு ஏதுக்களாயிருப்பதைப் பார்த்து, அதில் சந்தோஷம் அடையவில்லை. பின்பு பகவானைத் தியானம் செய்து அதனால் சித்த சுத்தியுள்ளவராக ஸனகர், ஸநந்தனர், ஸனாதனர், ஸனத்குமாரர் ஆகிய நான்கு குமாரர்களை உண்டுபண்ணினார். அவர்கள் கர்மங்களற்றவர்கள். இந்திரியங்களை ஜயித்தவர்கள். ப்ரஹ்மதேவர் அவர்களை நோக்கி, "ஓ குழந்தைகளே! நீங்கள் பிரஜைகளைச் ஸிருஷ்டியுங்கள்" என்று ஆக்ஞாபித்தார். அவர்கள் வாஸுதேவரையே தியானஞ் செய்துகொண்டு மோக்ஷஸாதனமாகிய நிவிருத்தி தருமத்தையே அனுஷ்டிப்பவர்களாகையால் அதனை ஒப்புக்கொள்ளவில்லை. அப்பொழுது புத்திரர்களாகிய அவர்கள் பிதாவின் கட்டளையைக் கடந்ததால் ப்ரஹ்மதேவருக்குக் கோபம் உண்டாயிற்று. ஆனாலும் அவர் அதை அடக்கிக் கொள்ள முயன்றார். அப்படியும் கோபம் அடங்காமல் ப்ரஹ்மதேவருடைய புருவங்களின் மத்ய பாகத்திலிருந்து ஒரு புத்திரன் உண்டானான். அந்தக் குமாரரே நீல லோஹிதர்.

அவர் ப்ரஹ்மதேவருடைய கோபத்தின் அம்சம். தேவர்களுக்கு முந்தி யுண்டானவரும், பரமசிவனென்று சொல்லப்படப் போகின்றவருமான அந்தக் குமாரர் ப்ரஹ்மதேவரை நோக்கி "ஓ ஜகத்தைப் போஷிப் பவரே! எனக்கு இருப்பிடங்களையும், பெயர்களையும் ஏற்படுத்தும்" என்று அழுது வேண்டிகொண்டார்.

9–14. பத்மத்திலிருந்து உண்டான ப்ரஹ்மதேவர் அதனைக் கேட்டு. "ஓ தேவர்களுக்குள் சிறந்தவரே! நீர் அழ வேண்டாம். உமக்கு இருப்பிடங்களையும், பெயர்களையும் ஏற்படுத்துகிறேன். நீர் ப்ராகிருத சிசுவைப்போல் அழுதபடியால் உம்மை ருத்திரனென்று ஜனங்கள் சொல்லுவார்கள். இருதயம், இந்திரியங்கள், பிராணன், ஆகாசம், வெளியிலிருக்கும் வாயு, அக்கினிஜலம், பூமி, சூரியன், சந்திரன், தபஸ் ஆகிய இவைகள் உமக்கு வாசஸ்தலங்களாக முன்னமேயே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் உமக்கு மன்யு, மனு, மஹாகாலன், மஹான், சிவன், ரிதத்வஜன், உருரேதஸ், பவன், காலன், வாமதேவன், திருதவிருதன் என்ற பெயர்களுண்டாகும், தவிரவும் உமக்கு, தீ விருத்தி, ரசனா, உமா, நியுத், ஸர்ப்பி, இளா, அம்பிகா, இராவதீ, ஸுதா, தீக்ஷா, ருத்ராணீ என்ற பெயருள்ள ஸ்திரீகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

ஆதலால் மேற்சொல்லிய நாமதேயங்களுடன் மேற்காட்டிய ஸ்தானங்களில் ஸ்திரீகளுடன் வசித்து அநேக பிரஜைகளை உண்டு பண்ணும். நீர் ப்ரஜாபதிகளுக்கும் மேலானவர்" என்று பிரியமாகச் சொன்னார்.

15–20. இம்மாதிரி பிதாவினால் ஆக்ஞாபிக்கப் பட்ட அந்த நீலலோஹிதர் ஆகிருதி சுபாவம் ஆகிய இவைகளில் தமக்குச் சமானர்களாகிய ப்ரஜைகளை உண்டுபண்ணினார். அந்த ருத்திரரால் ஸிருஷ்டிக்கப் பட்ட ப்ரஜைகள் கூட்டங் கூட்டமாக ஜகத்தை விழுங்குகிறவர்கள் போல எங்கும் பரவியிருந்தார்கள். அதனை கண்ட ப்ரஹ்மதேவர் ஸந்தோஷமடைந்து, ருத்திரரை நோக்கி, "ஓ தேவசிரேஷ்டரே! உம்மால் ஸிருஷ்டிக்கப்பட்ட ப்ரஜைகள் என்னையும், திக்குகளையும் பார்வையால் எரிப்பவர்கள்போல் இருக்கிறார்கள். ஆதலால் நீர் இனி ஸிருஷ்டிக்க வேண்டாம். ஸகல ப்ராணிகளுக்கும் ஸுகத்தைக் கொடுக்கக்கூடிய தவத்தைச் செய்யும். உமக்கு க்ஷேமமுண்டாகட்டும். ஸகல பிராணிகளுடைய இருதய குகையில் வஸிப்பவரும், தேஜோரூபியும், பகவானாயுமுள்ள பரமாத்மாவைத் தபஸினாலேயே புருஷன் அடைகிறான். ஆதலால் நீரும் தபஸ் செய்தால் அதன் பலத்தால் • ஜகத்தை முன் கற்பத்திலிருந்தது போல் ஸிருஷ்டிப்பீர்" என்றார். அதனைக் கேட்ட ருத்திரரும் வாக்குகளுக்கு அதிபதியான ப்ரஹ்மதேவருடைய வார்த்தையை அங்கீகரித்து, அவரிடம் விடைபெற்றுக் கொண்டு தபஸ் செய்வதற்காக வனம் சென்றார்.

21–27. பிறகு ப்ரஹ்மதேவர் ஸிருஷ்டி விஷயமாகத் தியானம் செய்தார். அவருக்கு அப்பொழுது பகவான் உடைய சக்திவிசேஷத்துடன் கூடிய மரீசி, அத்திரி, அங்கிரஸ், புலஸ்தியர், புலஹர், க்ரது, பிருகு, வசிஷ்டர், தக்ஷர், நாரதர் ஆகிய பத்துப் புத்திரர்கள் உண்டானார்கள். அவர்கள் லோகத்தின் சந்தானத்திற்குப்

காரணமாயிருப்பவர்கள். அதெப்படியெனில் அவருடைய மடியிலிருந்து நாரதரும், கட்டை விரலிலிருந்து தக்ஷரும், ப்ராணனிடமிருந்து வசிஷ்டரும், தொக்கிந் திரியத்திலிருந்து ப்ருகுவும், கையிலிருந்து க்ரதுவும் நாபியிலிருந்து புலஹரும், காதுகளிலிருந்து புல்ஸ்தியரும், முகத்திலிருந்து அங்கிரசும், மனத்தில் இருந்து மரீசியும் உண்டானார்கள். மேலும் அவர் உடைய வலப்பக்க ஸ்தனத்திலிருந்து ஸ்ரீமந் நாராயண னுக்கு வாசஸ்தானமாகிய தருமம் உண்டாயிற்று. அவருடைய பின் பக்கத்திலிருந்து அதர்மம் உண்டா யிற்று. உலகத்திற்குப் பயங்கரனாகிய ம்ருத்யுவே அதற்கு அதிதேவதை. மேலும் அவருடைய ஹிருதயத் திலிருந்து காமமும், புருவங்களிலிருந்து கோபமும், உதட்டிலிருந்து லோபமும், முகத்திலிருந்து வாக்குக்கு அதிதேவதையும், ஆண்குறியிலிருந்து சமுத்திரங்களும், பாயுவிலிருந்து பாபத்திற்கு இருப்பிடமாகிய நிருதியும் உண்டானார்கள். பின்னும் அவருடைய நிழலிலிருந்து தேவஹூதிக்குப் பர்த்தாவாக ஆகப்போகிற கர்த்தமப் பிரஜாபதி உண்டானார். இப்படி ப்ரஹ்மதேவருடைய தேகத்திலிருந்தும் மனத்திலிருந்தும் இந்த ஜகத் உண்டாயிற்று.

28–32. ஓ விதுரரே! ப்ரஹ்மதேவர் தம்மிடமிருந்து உண்டானவளும், மனோகரமாகிய உருவமுள்ளவளு மான வாக்குக்கு அதிதேவதையை அவள் இஷ்டப் படாமலிருக்கும் போதும் தாம் ஆசைப்பட்டார், என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அப்பொழுது மரீசி முதலியவர்கள் அதர்மத்தைச் செய்ய முயன்ற தங்கள் உடைய பிதாவை நோக்கி, "மன்மதனை ஜயிக்காமல் உம்முடைய பெண்ணிடத்தில் நீர் ஆசைப்படுவது

உசிதமல்ல. இது நம்முடைய முன்னோர்களால் அனுஷ்டிக்கப்பட்டதுமில்லை. உமக்குப் பிந்தியவர் களாலும் செய்யக்கூடியதில்லை. ஓ ஜகத்குருவே! மிக்க தேஜஸுள்ளவர்களானாலும் இம்மாதிரியான காரியத்தில் முயற்சிப்பது நியாயமல்ல. மகான்களால் அனுஷ்டிக்கப்படும் காரியங்களைச் செய்து லோகங்கள் க்ஷேமத்தை அடைகின்றன. (நீர் இம்மாதிரியான கெட்ட காரியத்தைச் செய்தால் மற்றவர்களும் இதைச் செய்து நரகத்தை அடைவார்களென்று கருத்து.) நீர் காரணத்தில் சூட்சுமரூபமாக இருந்த ஜகத்தை உம்முடைய ப்ரகாசத்தால் ப்ரகாசிக்கச் செய்தவர். இப்படிப் பட்ட உமக்கு நமஸ்காரம் செய்கிறோம். தர்மத்தைக் காப்பாற்றவேண்டும்" என்று பிரார்த்தித் தார்கள்.

33–35. அதனைக் கேட்ட ப்ரஹ்மதேவர் வெட்கம் அடைந்து அவளை விட்டுவிட்டார். (அந்த ஆசையை யொழித்தாரென்பது கருத்து.) அவளை திக்குகள் கிரஹித்துக் கொண்டன. அது பனியால் ஏற்படும் தமஸ்ஸாகும். பின்பு ஒருகால் ஜனங்களை எப்படி ஸிருஷ்டிக்கிறதென்று அவர் தியானம் செய்யும்போது அவருடைய நான்கு முகங்களிலிருந்தும் வேதங்கள் வெளிப்பட்டன. சாதுர்ஹோத்ரம் (ஹோதா முதலிய நான்கு ரித்விக்குகள் செய்யவேண்டிய கர்மம்) அவைகளின் தந்திரம், உபவேதங்கள், நீதிசாஸ்திரம், தருமத்தின் நான்கு பாதங்கள், ஆசிரம தர்மங்கள் ஆகிய இவைகளும் உண்டாயின.

36. அதனைக் கேட்டு விதுரர் மைத்ரேயரை நோக்கி "ஓ தபஸ்ஸையே தனமாகக் கொண்டவரே!

ப்ரஜாபதிகளுக்கும் அதிபதியாகிய அந்தப் ப்ரஹ்மதேவர் எந்த எந்த வேதங்களை, எந்த எந்த முகத்தால் ஸிருஷ்டித்தார்? அவற்றைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

37–48. அதனைக் கேட்டு மைத்ரேயர் ப்ரத்யுத்தரம் சொல்லலானார். ப்ரஹ்மதேவர், ரிக், யஜுஸ், சாமம், அதர்வம் என்ற நான்கு வேதங்களைக் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திக்குகளை நோக்கியிருக்கும் தம்முடைய முகங்களால் உண்டுபண்ணினார். சாஸ்திரம் (ஹோதாவினால் செய்யப்பட வேண்டியது), இஜ்யை (அத்வர்யு செய்யவேண்டியது) ஸ்துதி, ஸ்தோமம் (உத்காதாவினால் செய்யப்பட வேண்டியது), ப்ராயசித்தம் (ப்ரஹ்மாவினால் செய்யப்பட வேண்டியது) ஆகிய இவைகளையும் உண்டுபண்ணினார். மேலும் அவர் ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வ வேதம், ஸ்தாபத்யம் (விசுவகர்மாவினால் செய்யக்கூடியது) ஆகிய இவைகளையும் படைத்தார். பின்னும் எல்லாவற்றையும் அறிந்த அவர் இதிகாசம், புராணம் ஆகிய ஐந்தாவது வேதத்தை எல்லா முகங்களாலும் உண்டுபண்ணினார். அவருடைய முந்திய முகத்தில் இருந்து ஷோடசி, உக்தியம், சயனம், அக்னிஷ்டோமம், அப்தோர்யாமம், அதிராத்ரம், வாஜ்பேயம், கோஸவம் ஆகிய இவைகளும் வித்யை, தானம், தபஸ் சத்தியம் என்ற தருமத்தின் நான்கு பாதங்களும் ஆசிரமங்களும், அவைகளின் தருமங்களும் உண்டாயின. மேலும் ஆசிரமங்களில் ப்ரம்மசரிய ஆச்ரமத்தில் ஸாவித்ரம், ப்ரஜாபத்யம், ப்ரஹ்மம், ப்ரஹத் என்று நான்கு வகையுண்டு. கிரஹஸ்தாசிரமத்தில் வார்த்தை, சஞ்சயம், சாலீனம் சிலோஞ்சம் என்று நான்கு

வகையுண்டு. வானப்பிரஸ்தர்களுக்குள் வைகானஸர்கள், வாலகில்யர்கள், ஔதும்பரர்கள், பேனபர்கள் என்ற நான்கு வகையுண்டு. சன்யாச ஆசிரமத்திலும் குடீசகர்கள், பஹூதர்கள், ஹம்ஸர்கள். நிஷ்கிரியர்கள் என்று நால்வகை யுண்டு. ஆத்மா அனாத்மா இவை களை தெரிவிக்கும் ஆன்வீக்ஷகி, கர்ம வித்தையாகிய த்ரயீ, க்ருஷி முதலிய வார்த்தை தண்டநீதி ஆகிய நான்கு வித்யைகளும் நான்கு வ்யாஹ்ருதிகளும். நான்கு முகங்களிலிருந்து உண்டாயின. அவருடைய ஹிருதயாகாசத்திலிருந்து ப்ரணவமும், ரோமங்களில் இருந்து உஷ்ணிக் சந்தசும், எலும்புகளிலிருந்து ஜகதீச் சந்தசும் மஜ்ஜையிலிருந்து பங்தி சந்தசும் ப்ராணனிடமிருந்து ப்ரஹதீச் சந்தசும் உண்டாயின. ஸ்பர்சமென்ற எழுத்துக்களே அவருடைய ஜீவன். ஸ்வரமென்ற அக்ஷரங்களே அவருக்கு தேஹம். ஊஷ்மாவென்ற அக்ஷரங்களே அவருக்கு இந்திரியங்கள் அந்தஸ்தமென்ற எழுத்துக்களே அவருக்குப் பலமாய் இருக்கின்றன. அவருடைய விளையாட்டினால் ஏழு ஸ்வரங்களும் உண்டாகின்றன. ஓ விதுரரே! இப்படி சப்த ப்ரஹ்மஸ்வரூபியான அவருடைய உருவமானது வ்யக்தமாகும் பொழுது பலவகை சக்தியுள்ளதாகவும், (இந்திரன் முதலியவர்களின் உருவமாக) அவ்யக்தமாய் இருக்கும் போது ப்ரஹ்மமாகவும் ப்ரகாசிக்கிறது.

அத்தியாயம்– 13

வராஹாவதாரம்

1–4 மைத்ரேயரால் சொல்லப்பட்டதும் மிகவும் புண்யகரமுமான வார்த்தையைக் கேட்ட விதுரர் ஸ்ரீ கிருஷ்ண கதையில் மிகுந்த ஆதரவுடன், "ஓ மஹா முனியே! ப்ரஹ்மதேவருக்குப் ப்ரியமுள்ள புத்திரராகிய அந்த ஸ்வாயம்புவ மனுவானர் ப்ரியமுள்ள பத்தினியை அடைந்து எதனைச் செய்தார்? அரசர்களுக்குள் முந்தியவாக்கிய அவருடையச் சரித்தத்தைக் கேட்க ச்ரத்தையுள்ளவனாக இருக்கிறேன். அவர் ஸ்ரீ மஹா விஷ்ணுவை ஆசிரயித்தவர், பகவானுடைய குணங்களைக் கேட்பது, முகுந்தருடைய பாதாரவிந்தத்தை ஹிருதயத்தில் தியானிப்பது ஆகிய இவைகளே வெகு காலமாகச் ச்ரமப்பட்டு வித்தியாப்யாஸம் செய்ததின் பலனாகும். ஆதலால் அவருடைய சரித்தத்தைச் சொல்ல வேண்டுமி என்று கேட்டார்.

5–13 அதனைக் கேட்ட மைத்ரேயர் பகவத் கதையைச் சொல்லும்படி தாம் தூண்டப்பட்டபடியால் மயிர்க் கூச்சலுள்ளவராகி வணக்கமுள்ளவரும், ஆயிரந்தலையுள்ள பகவானுடைய பாதபீடருமாகிய (பகவான் விதுரருடைய மடியில் ப்ரியத்தால் கால் நீட்டிச் சயனம் செய்கிற வழக்கம்) விதுரரை நோக்கிச் சொல்லலானார். ஸ்வாயம்புவ மனு தம்முடைய பத்தினியுடன் எப்பொழுது உண்டானாரோ அப்பொழுது அவர் இரு கைகளைக் கூப்பி வணங்கி, ப்ரஹ்மதேவரை நோக்கி, "நீர் ஒருவரே இந்த ஸகல ஜகத்தையும் உண்டுபண்ணினவர். அதற்கு விருத்தியை

ஏற்படுத்தியவர். போஷிப்பவர். நீர் பிறரை அபேட்சியாத வரானாலும் உம்முடைய ப்ரஜை களாகிய நாங்கள் எதனைச் செய்தால் உமக்குச் சிசுரூஷை செய்ததாக ஆகும்? ஓ ஸ்தோத்திரம் செய்யக் கூடியவரே! எதனைச் செய்தால் இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் எங்கும் கீர்த்தி உண்டாகும்? எங்களால் செய்யக்கூடிய அந்தத் தர்மங்கள் இவை களென்று சொல்லவேண்டும். உமக்கு நமஸ்காரம் செய்கிறேன்" என்று கேட்டார். அப்பொழுது ப்ரஹ்ம தேவர் புத்திரனை நோக்கி, "குழந்தாய், உம்மிடத்தில் மிகவும் பிரிய மடைந்தேன். உங்களிருவர்களுக்கும் க்ஷேமம் உண்டாகட்டும். என்னால் உபதேசிக்கப்படும் காரியத்தைக் கபடமற்றவராய்ச் செய்யும். புத்திரர்கள் தங்களுடைய சக்திக்குத் தக்கபடி மாத்சர்யமில்லாத வர்களாக (ஸனகர் முதலியவர்களே செய்யவில்லையே. அப்படியிருக்க நாம் பிதாவின் கட்டளைப்படி நடக்கவேண்டுமா வென்று நினைக்காமல்) ப்ரீதியுடன் பிதாவின் கட்டளையின்படி நடந்தார்களானால் பிதாவைப் பூஜித்ததாகும். இதுதான் புத்திரர்கள் செய்ய வேண்டிய காரியம். ஆனதால் நீர் இவளிடத்தில் உமக்குச் சமமான குணசாலிகளான குழந்தைகளை உண்டு பண்ணிக்கொண்டு பூமியை தருமமமாகப் பரிபாலியும். மஹாவிஷ்ணுவை யாகத்தால் பூஜியும். ப்ரஜைகளைக் காப்பாற்றினால் எனக்கு மேலான சிசுரூஷை செய்ததாகும். மேலும் யக்ஞ ஸ்வரூபியாகிய பகவான் எவர்களிடம் சந்தோஷப் படவில்லையோ அவர்கள் செய்யும் காரியம் யாவும் ப்ரயோசன மற்றவை. அவர்கள் தமது ஆத்மாவினாலேய ஆதரிக்கப் படுகிறதில்லை. அந்தப் பகவானும் ப்ரஜாபாலனம் செய்யும் உம்மிடத்தில் சந்தோஷப்படுவார்" என்றார்.

14–19 அதனைக் கேட்ட ஸ்வாயம்புவ மனுவானவர் ப்ரஹ்மதேவரை நோக்கி, "ஓ பாபங்களைப் போக்குகிறவரே உம்முடைய ஆக்ஞையின்படி நடக்கிறேன்; எனக்கும் ப்ரஜைகளுக்கும் வாசஸ்தலம் இன்னதென்று சொல்ல வேண்டும். ஸகல ப்ராணி களுக்கும் இருப்பிடமாகிய பூமியானது ஜலத்தில் மூழ்கியிருக்கிறது. ஓ தேவ! இந்தப் பூமிதேவியை உயரக் கொண்டு வருவதற்காக முயற்சிக்க வேண்டும்" என்றார். அதனைக் கேட்டு ப்ரஹ்மதேவர் ஜலத்தில் மூழ்கியிருக்கும் பூமியை உயரக் கொண்டுவருவதைப் பற்றித் தமக்குள் யோசிக்கலானார். ப்ரளய கால ஜலத்தை எல்லாவற்றையும் குடித்தேன். பூமியில் ப்ரஜைகள் வஸிக்கும்படி செய்தேன். தேவர்கள், அஸுரர்கள், பித்ருக்கள், மனிதர்கள், பசுக்கள், பறவைகள், மலைப்பாம்புகள், மலைகள், யானைகள், இன்னும் பலவகையான ப்ராணிகளைச் ஸிருஷ்டித்து வரும்போது பூமி ஜலத்தில் மூழ்கிப் பாதாளம் சென்றது. ஸிருஷ்டிப்பதில் பகவானால் தூண்டப்பட்ட நாம் இந்தச் சமயத்தில் என்ன செய்யலாம், எப்படிப் பூமியை வெளியில் கொண்டுவருவேன்? ஆனால்லும் எந்தப் பகவானுடைய ஹிருதயத்திலிருந்து நான் உண்டானேனோ அந்தப் பகவானே இவ்விஷயத்தில் தகுந்த உபாயத்தைச் செய்ய வேண்டும்" என்று பகவானைத் தியானம் செய்தார்.

20–27 அந்தச் சமயத்தில் அந்தப் ப்ரஹ்மதேவர் உடைய மூக்குத் துவாரத்திலிருந்து ஒரு பன்றிக்குட்டி வெளிப்பட்டது. அது கட்டைவிரல் அளவுள்ளதாக இருந்தது. மேலும் அது அவர் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே ஆகாசத்திலிருந்தபடி யானை போலப்

பெரிய சரீரமுள்ளதாக விருத்தி அடைந்தது அது ஆச்சரியப்படக்கூடியதாக இருந்தது. அதனைக் கண்ட மரீசி முதலியவர்களும் ஸனகர் முதலியவர் களும், ஸ்வவாயம்புவ மனுவும் "இதென்ன ஆச்சரியம்! பன்றி உருவத்துடன் பெரிய ப்ராணியொன்று திவ்ய சரீரமுள்ளதாக இருக்கிறது. இது ப்ரஹ்மதேவருடைய மூக்கிலிருந்து வெளிப்பட்டது. கட்டைவிரல் அளவு உள்ளதான இதன் தலை ஒரு க்ஷணத்தில் மலை போன்றதாகி விட்டதே. ஒருகால் பகவானே இந்தச் சரீரத்துடன் அவதரித்திருக்கிறாரோ? மனத்திற்குக் கவலையாய் இருக்கிறதே" என்று யோசித்துக் கொண்டு இருந்தார்கள். அப்பொழுது மலைபோன்ற சரீரமுள்ளவரும், வராஹ ரூபம் தரித்தவருமான பகவான் கர்ஜித்தார். அந்தச் சப்தத்தால் திக்குகளில் எதிரொலி உண்டாயிற்று. அதனைக் கேட்டு ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் சந்தோஷமடைந்தார்கள். தபோலோகம், ஸத்யலோகம் இவைகளில் வஸிப்பவர் கள் நம்முடைய துக்கத்தைப் போக்கக்கூடிய மாயா வராஹத்தின் அந்தச் கர்க்கர சப்தத்தைக் கேட்டுப் பரிசுத்தங்களான மூன்று வேதங்களால் ஸ்தோத்திரம் செய்தார்கள்.

28–35 வேதங்களால் ஸ்தோத்திரம் செய்யப்படும் சரீரமுள்ள அந்தப் பகவான் அந்தப் ப்ராஹ்மணோத் தமர்களால் உச்சரிக்கப்பட்டவைகளும், தம்முடைய குணங்களை அனுமதித்தவைகளுமாகிய வேதங்களைக் கேட்டுக் கொண்டு ஜலத்திற்குள் ப்ரவேசித்தார். பூமியை வெளியில் கொண்டுவருகிற முயற்சியுடன் வராஹமாக (பன்றி) அவதரித்த பகவான் ஆகாசத்தில் வாலை உயரத் தூக்கிக் கொண்டும் கடினமான

சரீரமுள்ளவரும் அதிகக் கடினமாகிய மயிருள்ளவரும், குளம்புகளால் மேகங்களை அடித்தவரும், தம்முடைய சிங்கப் பற்களுடைய தேஜஸினாலும், நேத்திர காந்தியாலும், மற்ற ப்ரகாசத்தை அபேட்சியாமல் ப்ரகாசித்திருந்தார். பிடரி மயிர்களை உதறிக் கொண்டு மிருந்தார். மேலும் அவர் யக்ஞ ஸ்வரூபி. வராஹமாக அவதரித்தவர், பயங்கரமாகிய பார்வை உள்ளவரானாலும் ப்ராஹ்மணர்களைச் சந்தோஷமாகப் பார்த்தார். அப்பொழுது அவர் பூமி சென்ற வழியை வாக்கினாலேயே தெரிந்துகொண்டு ஜலத்திற்குள் சென்றார். வஜ்ஜிரத்தால் செய்யப்பட்ட மலைபோலக் கெட்டியான சரீரமுள்ள அந்த வராஹம் வேகமாகக் குதித்ததால் சமுத்திரமானது மிகவும் உபத்திரவப்பட்டு அலைகளாகிய நீண்ட கைகளை நீட்டிக் கொண்டு, "ஓ யக்ஞ வராஹ ரூபியான பகவன்! என்னைக் காப்பாற்றும்" என்று உரக்கக் கதறினது போலிருந்தது. அப்பொழுது மூன்று கணுக்களுள்ள (ப்ராதஸ்ஸவநம், மத்யந்தினஸவநம், ஸாயம்ஸவநமென்ற) யக்ஞ ரூபியான பகவான் கரையற்ற சமுத்திர ஜலத்தைத் தம்முடைய நீண்ட குளம்புகளால் பிளந்து கொண்டு பாதாளம் சென்று பூமியைக் கண்டார். ப்ரளய காலத்தில் இவர் ஜலத்தில் சயனம் செய்துகொண்டு பூமியை வயிற்றில் வைத்துக் காப்பாற்றினார். அவர் ஸகல ஜீவராசி களுக்கும் ஆதாரமாயிருப்பவர். அப்பொழுது அவர் தம்முடைய சிங்கப் பல்லால் பூமியைத் தூக்கிக் கொண்டு மிகவும் ப்ரகாசித்தார். அந்த ஜலத்தில் அசுரர்களுக்குள் முந்தியவனான இரண்யாக்ஷன் என்பவன் கதாயுதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அவருக்கெதிரில் ஓடிவந்தான். அவன் விசேஷ கோபமுள்ளவன். ஸகிக்க முடியாத பராக்கிரமுள்ளவன்.

யானையைச் சிங்கம் கொன்றார் போல அவர் பிரயாசம் இன்றி அந்த அசுரனைக் கொன்றார். மேலும் அவர் மலையின் தாழ்வரையில் விளையாடி, அதன் தாதுக்களால் சிவந்த கன்னங்களுள்ள யானைபோல ஹிரண்யனுடைய ரத்தத்தால் சிவந்த கன்னமுள்ளவரும், பச்சிலைபோல நீல வர்ணமுள்ளவராகவும் வெண்மை நிறமுள்ள பல்லின் நுனியில் பூமியை வைத்துக் கொண்டவராகவும் இருந்தார். அவரை ஈசுவர னென்று தெரிந்து கொண்டு மஹர்ஷிகள் ப்ரஹ்மதேவரை முன்னிட்டு வேத மந்திரங்களால் பின்வருமாறு துதித்தார்கள்.

36–48 ஒருவராலும் ஜயிக்கப்படாதவரே! யாகத்தை விருத்தி செய்பவரே! சத்துருவை ஜயித்தீர். வேதமாகிய உம்முடைய சரீரத்தை உதறிக் கொள்ளும். உமக்கு நமஸ்காரஞ் செய்கிறோம். உம்முடைய உரோம கூபங்களில் (மயிர்க் கால்களில்) சமுத்திரங்கள் வஸிக்கின்றன. நீர் பூமியைப் பாதாளத்திலிருந்து கொண்டுவருவதற்காக வராஹமாக அவதரித்தவர். அப்போர்ப்பட்ட உமக்கு நமஸ்காரம். ஓ தேவ! யக்ஞ ஸ்வரூபியாகிய உம்முடைய தோளில் காயத்ரி முதலிய சந்தஸ்ஸுகளும், மயிர்களில் தர்ப்பங்களும், நேத்திரங்களில் ஆஜ்யமும் (நெய்), கால்களில் சாதுர்ஹோத்ரமும் (ஹோதா முதலியவர்கள் செய்ய வேண்டிய காரியம்), முகத்தின் முன்பாகத்தில் இருக்கும் மூக்குகளில் ஸ்ரவமும், வயிற்றில் இடையும் (தக்ஷிண பாத்திரம்), காதுகளில் சமஸ்ஸும்; வாயில் ப்ராசித்திரமும், க்ரஸனமென்ற முகத்திற்குள்ளிருக்கும் பாகத்தில் க்ரஹங்களும் இருக்கின்றன. பக்ஷிப்பது அக்னிஹோத்ரமாகும். நீர் அடிக்கடி அவதாரத்தால்

ப்ரகாசிப்பதே தீக்ஷை (தீக்ஷணியேஷ்டி). உம்முடைய கழுத்தே உபஸ்தங்கள். உம்முடைய இரு சிங்கப் பற்களே பிராயணீய உதயநீய இஷ்டிகள். நாக்கானது ப்ரவர்க்கியமாகிறது. யக்ஞ ரூபியாகிய உம்முடைய தலையானது ஸப்யம், ஆஸத்யம் என்ற அக்கினிகளாகும். உம்முடைய ஐந்து ப்ராணன்களும் இஷ்ட காசயனங்களாகும். உம்முடைய ரேதஸ்ஸே சோமரசமாகும். பால்யம் முதலிய அவஸ்தையானது வனங்களாகும். உம்முடைய சரீரத்திலிருக்கும் மாம்சம் முதலிய தாதுக்கள் அக்கினிஷ்டோமம் முதலிய ஸமஸ்தைகளாகும். சரீரத்தின் சந்திகள் துவாதசாஹம் முதலிய சத்திரங்களாகின்றன. நீர் யக்ஞ ஸ்வரூபி (ஸோமம் இல்லாதவை யக்ஞங்கள்) க்ரதுஸ்வரூபி (ஸோமம் உள்ளவைகள் கிரதுக்களாம்) மேலும் அனுஷ்டானமே சந்திபந்தங்கள். ஸகல மந்திர ஸ்வரூபி, ஸகல தேவதா ஸ்வரூபி, ஸகல திரவிய ஸ்வரூபி, ஸகல யாக ஸ்வரூபி, ஸகல கிரியா ஸ்வரூபி, வைராக்கியத்துடன் கூடிய பக்தியால் சித்தம் ஸ்திரப்பட்டு அதனாலுண்டாகும் அபரோக்ஷ சாக்ஷாத்காரமாகிய ஞானத்தைக் கொடுப்பவர். ஸகல வித்தைகளையும் உபதேசிக்கும் குரு. அப்படிப்பட்ட பகவானாகிய உமக்கு நமஸ்காரம். ஓ பூமியைத் தரிக்கும் பகவன்! மலைகளுடன் கூடிய பூமியானவள் சிங்கப்பல்லின் நுனியைக் கொண்டு உம்மால் தூக்கப்பட்டவளாகப் ப்ரகாசிக்கிறாள். இந்த உம்முடைய உருவமானது சேற்றுடன் தாமரைக் கொடியைத் தந்தங்களில் தரித்து ஜலத்திலிருந்து வெளியில் வரும் சிறந்த யானையின் உருவம்போல் விளங்குகிறது. மேலும் சிங்கப்பல்லில் பூமியைத் தரித்துக் கொண்டிருக்கும் வேதரூபமாகிய உம்முடைய ஸ்வரூபமானது,

சிகரத்தில் மேகத்தைத் தரிக்கும் குலபர்வதம் போலிருக்கிறது. அரணியில் அக்னியிருப்பதுபோல எந்தப் பூமியினிடத்தில் உம்முடைய தேஜஸ்ஸை (தாரணம் முதலிய சக்தியை) வைத்திருக்கிறீரோ, எந்தப் பூமியானது உமக்குப் பத்தினியாக இருக்கிறாளோ, அந்தப் பூமிதேவியைத் தாவரங்கள் அடங்கிய ஜகத்திற்கு வாசஸ்தலமாகச் செய்யும். நீர் லோகத்திற்குப் பிதாவல்லவா? உமக்கும் இந்தப் பூமிக்கும் நமஸ்காரம் செய்கிறோம். ஓ ப்ரபுவே! பாதாளஞ்சென்று பூமியைக் கொண்டு வரலாமென்று உம்மைத் தவிர வேறு யாரால் நினைக்க முடியும்? ஆனாலும் ஸகல ஆச்சரியங்களுக்கும் இருப்பிடமாகிய நீர்

மிகவும் அற்புதமான இந்தக் காரியத்தைச் செய்தது ஒரு ஆச்சரியமல்ல. மிகவும் அற்புதமான இந்த ஜகத்தானது உம்மால் ஸிருஷ்டிக்கப்பட்டதல்லவா ஓ ஈச! தேவ மயமாகிய உம்முடைய சரீரத்தை உதறிக் கொள்ளும் போது பிடரி மயிர்களால் இறைக்கப்பட்ட மங்களரமான ஜலத்துளிகளால் தபோலோகம், சத்யலோகம் இவைகளில் வஸிக்கும் நாங்கள் பரிசுத்தர்களாகச் செய்யப்பட்டுக் காப்பாற்றப்பட்டோம். ஓ பகவான்! கரையற்ற கர்மங்களுடைய உம்முடைய சரிதங்கள் எல்லாவற்றையும் எவன் அறிய விரும்புகிறானோ, அவனுடைய எண்ணம் நிறைவேறுகிறது இல்லை. (பகவானுடைய சரிதங்கள் அறிய முடியாதவையென்பது கருத்து) மேலும் உம்முடைய யோக மாயையின் குண சம்பந்தத்தால் இந்த ஜகத்யாவும் மோகித்திருக்கிறது, அப்படிப்பட்ட மஹிமை பொருந்திய ஓ ஈச; எல்லா ஜகத்திற்கும் க்ஷேமத்தை உண்டு பண்ணும்.

48–52 ப்ரஹ்மிஷ்டர்களான அந்த மகர்ஷிகளால் இம்மாதிரி துதிக்கப்பட்ட பகவான் தம்முடைய குளம்புகளால் கலக்கப்பட்ட ஜலத்தில் (முன்போல ஜலத்தில் மூழ்காமலிருக்கும் வண்ணம் ஜலத்திற்குத் தரிக்கும் சக்தியைக் கொடுத்து) பூமியை ஸ்தாபித்துச் சென்றார். கானம் பண்ணத் தகுந்த மாயா விலாசங்களுள்ள ஸ்ரீ மஹாவிஷ்ணுவினுடைய இந்தக் கதையானது மிகவும் அழகானது. விரும்பத்தக்கது. இதைப் பக்தியுடன் கேட்பவர்கள், கேட்கச் செய்பவர்கள் ஆகிய இவர்களுடைய ஹிருதயத்தில் சீக்கிரமாக ஜனார்த்தனர் ப்ரசன்னராக வஸிக்கிறார். ஸகல மங்களத்தையும் கொடுக்கக்கூடிய ப்ரபுவாகிய அவர் எவனிடத்தில் சந்தோஷமடைகிறாரோ. அவனுக்கு எதுதான் கிடைக்காது? மற்ற அற்ப பலன்களால் என்ன பிரயோசனம்? பரமபுருஷன் தம்மையே பூஜிப்பவர்களுடைய ஹிருதயத்தில் வஸிப்பதுமல்லாமல் மேலான தம்முடைய பதத்தையும் அவர்களுக்குக் கொடுக்கிறார். ஆதலால் உலகத்தில் முன்காலத்தில் நடந்த பகவானுடைய சரிதங்களாகிய அமிருதத்தைக் காதுகளாகிய அஞ்சலி (சேர்ந்த கைகள்) யால் பானஞ் செய்த எந்தப் புருஷன்தான் போதுமென்று திருப்தியடைவான்? அந்த பகவத் கதை சம்சார பந்தத்தைப் போக்கக் கூடியது. விவேகமற்ற பசுக்கள் தவிர மற்றவர்களுக்கு அந்த பகவத் கதையில் ஆசையொழியாது.

அத்தியாயம்–14

திதிதேவி கர்ப்பத்தை அடைந்தது

1–4. மைத்ரேயர் முகமாக வராஹாவதாரஞ் செய்த ஸ்ரீ ஹரியினுடையய கதையைக் கேட்ட விதுரர் திருப்தியடையாமல் கை கூப்பிக்கொண்டு பகவத் கதையைக் கேட்பதாகிய விரதமுள்ளவராய் மைத்ரேயரை நோக்கி, "ஓ முனிகளுக்குள் சிறந்தவரே! யக்ஞ ஸ்வரூபியான அந்த ஹரியினால் தைத்யர் களுக்குள் முந்தியவனாகிய, ஹிரண்யாக்ஷன் கொல்லப் பட்டான்" என்று நீர் சொல்லக்கேட்டேன். பகவான் பூமியைத் தம்முடைய ஸ்ருங்கத்தின் நுனியால் ப்ரயாசமின்றிக் கொண்டு வந்தாரல்லவா? அப்பொழுது அவருக்கும் அந்த அசுரனுக்கும் யுத்தம் நேர்ந்த காரணமென்ன? ஓ ரிஷியே! அதனைச் சுருக்கமாகக் கேட்டும் என்னுடைய மனம் திருப்தியடையவில்லை. ஆதலால் அவனுடைய பிறப்பு முதலியவைகளைச் ச்ரத்தையுடன் கேட்க விரும்புகிறேன். அவைகளை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும் என்று மறுபடியும் கேட்டார்.

5–15. "ஓ வீரராகிய விதுரரே! நன்றாகக் கேட்டீர். அந்தப் பகவானுடைய அவதார கதையானது மனிதர்களுக்கு மிருத்யு பாசத்தைப் போக்கக்கூடியது, உத்தானபாதருடைய புத்திரனாகிய துருவனென்ற குழந்தையானவன் நாதரிடமிருந்து இந்த அவதாரக் கதையைக் கேட்டு ம்ருத்யுவின் தலையில் காலை வைத்து விஷ்ணுபதத்தை அடைந்தான். (துருவன் பார்ஷதர்களால் கொண்டுவரட்டட்ட விமானத்தில்

ஏறும்போது சமீபத்தில் வந்த ம்ருத்யுவின் தலையில் காலை வைத்து விமானத்தில் ஏறினான்), முன்னொரு காலத்தில் தேவர்களுக்குப் ப்ரஹ்மதேவரால் சொல்லப்பட்ட ஒரு சிறு இதிகாசகத்தை நான் கேட்டிருக்கிறேன்" என்று மைத்ரேயர் சொல்ல ஆரம்பித்தார். "ஓ விதுரரே! தக்ஷருடைய பெண்ணாகிய திதிதேவியானவள் மன்மதனால் பீடிக்கப்பட்டு, சந்தியா காலத்தில் தன்னுடைய பர்த்தாவாகிய மாரீசரை இச்சித்தாள். எப்படியெனில், அவர் சூரியன் அஸ்தமனத்தை அடையும்போது அக்கினியை நாவாகவுடையவரும், யக்ஞங்களுக்கு, அதிபதியுமான பரமபுருஷனை ஹவிஸ்ஸினால் பூஜித்து அக்னி ஹோத்திரசாலையில் உட்கார்ந்து த்யானம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது திதியானவள் அவர் சமீபம் சென்று, "ஓ வித்வான் ஆகிய மஹரிஷியே! மன்மதன் வில்லை கையில் எடுத்து, ரஸ்தாளி வாழையை யானை உபத்திரவித்தாற் போல உம்மை உத்தேசித்து என்னை பீடிக்கிறான். நான் தீனையாகவிருக்கிறேன், ஸபத்தினிகளுடைய (சக்களத்திகள்) ஸமிருத்திகளைப் பார்த்து எரிக்கப்படும் என்னிடத்தில் அனுக்கிரஹஞ் செய்யவேண்டும். எந்த ஸ்திரீகள் உம்மைப் போன்ற பர்த்தாவை அடைந்தார்களோ, எவர்கள் பர்த்தாவின் இடத்தில் அதிக பஹுமானத்தை வைத்தவர்களோ, அவர்களுடைய கீர்த்தியானது உலகங்களிலும் பரவும். பர்த்தாவே, பார்யையிடத்தில் நல்ல புத்திரனாகப் பிறக்கிறானென்று சாஸ்திரம் சொல்லுகிறது. முன்னொரு காலத்தில் எங்களுடைய பிதாவும், பெண்களிடத்தில் பிரியமுள்ளவருமான தக்ஷர் பெண்களை நோக்கி. "ஓ குழந்தைகளே!

யாரை நீங்கள் விவாகஞ் செய்து கொள்ளப் போகிறீர்கள்" என்று தனித்தனியே கேட்டுப் பெண்களுடைய அபிப்பிராயத்தை தெரிந்துகொண்டு உம்முடைய ஸ்வபாவத்தை அனுசரித்தவர்களான பதின்மூன்று பெண்களையும் உமக்குக் கொடுத்தார். (ஆனதால் எங்களுக்குள் பேதபுத்தி வைக்கக்கூடாதென்பது,) ஓ தாமரை மலர்போன்ற கண்களுள்ளவரே! உபத்திரவப்பட்டவர்கள் பெரியோர்களைச் சரணம் அடைந்தால் வீண்போகாதல்லவா? ஆதலால் எனக்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

16–29. இப்படி தீனையாயும், வெகுவாகப் பேசுகிறவளும், மன்மதனால் பீடிக்கப்பட்டவளுமான அந்தத் திதியை நோக்கி மாரீசரானவர், "ஓ பயந்தவளே! உன்னுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்கிறேன். தருமம், அர்த்தம், காமம் ஆகிய இந்தத் திரிவர்க்கமும் ஸ்திரீயினால் சித்திப்பதால், அவளுக்குப் பிரியமானதை எவன்தான் செய்யமாட்டான்? நல்ல களத்திரமுள்ள புருஷன் மற்ற ஆசிரமிகளுக்கும் உபகாரஞ் செய்து (அன்னம் முதலியவைகளைக் கொடுப்பதால்) தன்னுடைய ஆசிரம தர்மத்தை அனுஷ்டிப்பதால், கப்பலால் சமுத்திரத்தை தாண்டுவது போலத் துக்க சமுத்திரத்தைத் தாண்டுகிறான்' க்ஷேமத்தை விரும்பிய புருஷனுக்கு எவளைப் பாதி சரீரமென்று சொல்லுகிறார்களோ, புருஷன் எவளிடத்தில் ஸகல பாரத்தையும் ஒப்பித்துக் கவலையற்றவனாகச் சஞ்சரிக்கிறானோ. தூக்கத்திற்கு அதிபதி (அரசன்) திருடர்களை ஜயிப்பது போல், எந்த ஸ்திரீயின் பலத்தால் க்ருஹஸ்தன் மற்ற ஆசிரமிகளால் ஜயிக்க

முடியாதவையான இந்திரியங்களைச் சிரமமின்றி அடக்குகிறானோ. (ஸ்திரீயுள்ளவனுடைய இந்திரியங்கள் பெரும்பாலும் பர ஸ்திரீகளிடம் செல்லுகிறது இல்லை யென்று கருத்து) ஓ வீட்டிற்கு அதிபதியாய் இருப்பவளே! அப்படிப்பட்ட பலவகையிலும் உபகாரஞ் செய்கிற உனக்கு என் ஆயுள் முழுவதும் பதிலுபகாரஞ் செய்தாலும் ஜன்மாந்திரங்களில் செய்தாலும் அது பதிலாகாது. மேலும் குணத்தைக் க்ரஹிக்கும் எவர்கள் பதில் செய்வோம் என்று நினைக்கிறார்களோ, அவர்கள் பதில் செய்ய முடியாதவர்களே யாவார்கள். ஆனாலும் உனக்குப் புத்திரன் பிறக்கும் உபாயத்தைச் செய்கிறேன். என்னை நிந்திக்காமல் ஒரு முகூர்த்தக் காலம் பொறுத்துக்கொள்: ஏனென்றால் இந்தக் காலமானது மிகவும் பயங்கரமானது. பயங்கரங்கள் ஆகிய ப்ராணிகள் சஞ்சரிக்கக்கூடியது. இந்தச் சமயத்தில் ருத்ரருடைய பூதகணங்கள் சஞ்சரிப்பார்கள். ஓ பதி விரதையே, இந்த சந்தியா காலத்தில் பரமசிவன் வ்ருஷபத்தின் மீதேறித் தம்முடைய பார்ஷத கணங்களுடன் எங்கும் சஞ்சரிக்கிறார். அந்தப் பரமசிவனுடைய ஜடைகளில், சுடலையில் வீசும் காற்றினால் கிளம்பிய தூளிகள் படிந்திருக்கின்றன, நான்கு புறத்திலும் பறந்து மிருக்கின்றன. காந்தி யுள்ளவைகளுமாகவுமிருக்கின்றன, மேலும் அவர் பொன்னிறமான தம்முடைய சரீரத்தில் விபூதியைத் தரித்துக் கொண்டிருக்கிறவர், அப்படிப்பட்ட உன்னுடைய தேவரன் (பர்த்தாவின் சகோதரன்) மூன்று கண்களால் பார்த்துக் கொண்டிருக்கிறார். லோகத்தில் அவருக்கு பந்துவாவது, மற்றவனாவது (உதரசீனன்), மித்திரனாவது, சத்ருவாவது இல்லை, (எல்லாரிடத்திலும் சமமாயிருப்பவரென்று கருத்து),

அவருடைய சரணங்களால், நிர்மால்யம் போல் தள்ளப்பட்டதும், தோஷமுள்ளதென்று நிச்சயிக்கப் பெற்றதுமான மாயையை (அவருடைய விபூதியை) சம்சாரிகளான நாங்கள் மிகுந்த ப்ரசாதமென்று விரும்புகிறோம். அவித்யையைத் தாண்ட விரும்பிய வித்வான்கள் அவருடைய தோஷமற்ற சரிதத்தைக் கானஞ் செய்கிறார்கள். அவருக்குச் சமமானவனும், மேலானவனும் உலகத்தில் ஒருவருமில்லை. அப்படிப் பட்ட சாதுக்களுக்கதிபதியான அவர் பிசாசத்தின் நடை போன்ற ஆசாரத்தை அனுஷ்டிக்கிறார். பின்னும் அவர் ஆத்ம ஸ்வரூபத்திலேயே ரமிப்பவர். அவருடைய அபிப்ராயத்தை (உலகத்திற்குப் புத்தியைச் சொல்கிறார் என்பதை) அறியாதவர்களும், நாய்க்கு ஆகாரமாக இருக்கும் சரீரத்தையே ஆத்மா என்று நினைத்து, அதை நல்ல வஸ்திரங்களாலும், மாலை களாலும், ஆபரணங்களாலும், சந்தனம் பூசுவது முதலியவைகளாலும் அலங்கரிப்பவர்களுமான அக்ஞர்கள் அவருடைய சரிதத்தைப் பரிகசிப்பார்கள். அவரால் ப்ரஹ்மா முதலியவர்கள் ஸ்ருஷ்டி முதலிய வேலைகளில் ஏற்படுத்தப்பட்டு, தங்கள் தங்கள் அதிகாரத்தைக் காப்பாற்றுகிறார்கள். இந்த ஜகத்திற்கு அவரே காரணம், மாயையானது அவருக்குச் ஸ்வாதீனப்பட்டிருக்கிறது. அப்போர்ப்பட்ட திவ்ய விபூதிகள் பொருந்திய பரமேசுவரன், பிசாசத்தின் செய்கையை அனுஷ்டிப்பது என்ன காரணத்தால் என்று ஊகிக்க முடியாததாக இருக்கிறது" என்றார்.

30–36. அதனைக்கேட்ட திதியானவள் மன்மதனால் கலங்கின இந்திரியங்களுள்ளவாய்த் தாசிபோல் வெட்கத்தை விட்டு அவருடைய

வஸ்திரத்தைப் பிடித்துக் கொண்டாள். அந்த மாரீசர் செய்யக்கூடாத அந்தக் காரியத்தில் தம்முடைய பார்யை நிர்பந்தம் செய்வதை அறிந்து அதிர்ஷ்ட ஸ்வரூபியான பரமேசுவரனுக்கு நமஸ்காரம் செய்து ரகஸ்யத்தில் அவளுடன் சேர்ந்தார். பிறகு ஸ்நானஞ் செய்து ப்ராணாயாமஞ் செய்து மௌனமாகத் தோஷ மற்றதும், சாஸ்வதமானதும், தேஜோ ரூபமாயுமுள்ள பரமாத்மாவைத் தியானஞ் செய்தார்.

ஓ பரத வம்சத்தில் பிறந்தவரே! திதி தேவியானவள் அந்தக் கர்மதோஷத்தால் வெட்கமடைந்து அந்த மஹர்ஷியிடம் வந்து தலை குனிந்தவளாக, "ஓ பிராமணோத்தம! ஸகல பூதங்களுக்கும் அதிபதியுமான பரமசிவனுக்கு நான் அபராதஞ் செய்தேனெல்லவா? அதனால் அவர் கோபங்கொண்டு என்னுடைய வயிற்றில் உண்டாகும் கர்ப்பத்தை கெடுத்து விடாமல் இருக்கும்படி அனுக்கிரகிக்க வேண்டும். மஹாதேவரும் உக்கிரரும், எல்லாவற்றையும் உண்டுபண்ணுகிறவரும், மங்களத்தைச் செய்பவரும், பக்தர்களைக் காப்பாற்று பவரும் சத்துருக்களைச் சிக்ஷிப்பவரும். அஸத்துக்கள் இடத்தில் கோபமுள்ளவரும் ஆகிய ருத்ரருக்கு நமஸ்காரம். வேடர்களாலும் (தயையில்லாதவர்கள்) தயவுசெய்யக் கூடிய ஸ்திரீகளாகிய நம்மிடத்தில் அனுக்கிரக ஸ்வபாவமுள்ளவரும், ஸதீதேவிக்குப் பர்த்தாவுமான அந்த பகவான் தயவு செய்யட்டும் (ஸ்திரீகளுடைய ஸ்வபாவத்தை அறிந்தவர்) என்று கேட்டுக்கொண்டாள்.

37–51. இப்படித் தன்னுடைய கர்ப்பத்திற்கு க்ஷேமத்தை விரும்புகிறவளும், நடுங்குகிறவளும்,

மூவுலகத்திற்கும் தகுந்தவளும். தமது பார்யையுமான திதிதேவியை அந்த மாரீசர் நோக்கி, சந்தியா கால நியமங்களை முடித்துக் கொண்டு, "ஓ கோப ஸ்வபாவம் உள்ளவளே! உன்னுடைய சித்தம் அசுத்தமாக விருந்தாலும், முஹூர்த்த தோஷத்தாலும் (ஸந்தியா காலமாயிருந்தபடியால்), என்னுடைய கட்டளையை மீறினதாலும், தேவர்களை அவமதித்ததாலும் உனக்குத் துஷ்டர்களான இரண்டு பிள்ளைகள் பிறப்பார்கள். அவர்கள் மூன்று உலகங்களையும் அந்தந்த லோக பாலகர்களையும் அடிக்கடி கதறச் செய்வார்கள். யாதொரு அபராதமும் செய்யாத ப்ராணிகள் அவர் களால் அடிக்கப்பட்டு மிகவும் தைன்யத்தை அடை வார்கள், உலகத்திலுள்ள ஸ்திரீகள் நிக்கிரகிக்கப் படுவார்கள். பெரியோர்களுக்கு அவர்கள் கோபத்தை யுண்டுபண்ணுவார்கள். அப்பொழுது லோகத்திற்கு அதிபதியும், அவைகளைப் பரிபாலிப்பவருமாகிய பகவான் கோபங்கொண்டு பூமியில் அவதரித்து வஜ்ராயுதத்தைத் தகித்த இந்திரன் பர்வதங்களை யுடைப்பதுபோல அவ்விருவர்களையும் கொல்லப் போகிறார்', என்று சொன்னார். அதைக் கேட்ட திதியானவள் பர்த்தாவை நோக்கி, "ஓ பிரபுவே! என் னுடைய புத்திரர்களைச் சக்ரபாணியாகிய பகவான் கொல்லட்டும், ப்ராஹ்மணர்களிடமிருந்து அவர் களுக்கு வதம் நேரிடவேண்டாம்" ப்ராஹ்மணர்களி டையே பயத்தை உண்டுபண்ணுகிறவர்களும் எந்தெந்த ஜன்மத்தை அடைந்தாலும், அவ்விடத்திலிருக்கும் நரகிகளும் (பாபிகளும்) அவர்களிடத்தில் தயவு செய்யமாட்டார்கள் என்றாள், அதைக் கேட்ட மாரீசர் திதியை நோக்கி, செய்த குற்றத்தைப் பற்றி உனக்குப் பச்சாதாபம் நேர்ந்தபடியாலும் உடனே

யுக்தம், அயுக்தம் இவைகளை விசாரித்ததாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவினிடத்திலும், பரமசிவனிடத்திலும் கௌரவ புத்தி உண்டானதாலும், என்னிடத்தில் பிரியமுண்டானதாலும் உன்னுடைய பிள்ளையாகிய ஹிரண்யகசிபுவின் புத்திரர்களுக்குள் ஒருவன் பெரியோர்களால் ஒப்புக்கொள்ளக் கூடியவனாக இருப்பான். பகவானுடைய குணங்களுடன் சுத்த மாகிய அவனுடைய கீர்த்தியையும் சேர்ந்து ஜனங்கள் கானம் செய்வார்கள்.

தாழ்ந்த மாற்றுள்ள தங்கத்தை அக்கினியில் புடம்போடுவது முதலிய உபாயங்களால் ஸுத்த ஸ்வர்ணமாகச் செய்வது போலப் பெரியோர்கள் அந்தக் குழந்தையின் ஸ்வபாவத்தை அனுசரிப்பதற்காக (தாங்களும் அவனைப்போல ஆகிறதற்காக) ஓரிடத்தி லும் துவேஷம் செய்யாமலிருப்பது முதலிய உபாயங் களால் தங்களுடைய ஆத்மாவைச் சுத்தப்படுத்திக் கொள்வார்கள்.எவருடைய ப்ரசாதத்தால் இந்த ஜகத் ப்ரகாசிக்கிறதோ எவருடைய ஸ்வரூபமாக இருக்கிறதோ அப்பேர்ப்பட்ட ஆத்மசாட்சியாக பகவான் அந்தக் குழந்தையினுடைய உண்மையான ஞானத்தால் சந்தோஷத்தை அடைவார். மேலும் அவன் பகவத் பக்தர்களுக்குள் சிறந்தவன்; அளவற்ற ஞானமுள்ளவன்; மிகுந்த ப்ரபாவமுள்ளவன்; பெரியோர்களுக்கும் பெரியவன்; மேலும் அவன் விசேஷ பக்தியால் சுத்தமான தன்னுடைய மனத்தில் ஸ்ரீமந் நாராயணனைத் தியானித்துக் கொண்டு, தேகம் முதலியவைகளின் அபிமானத்தை விட்டு விடுவான்.

பின்னும் அந்தப் புத்திரன் நல்ல ஸ்வபாவ

முள்ளவன். நல்ல குணங்களுக்கு உற்பத்தி ஸ்தானம்; பிறருடைய சம்பத்தைப் பார்த்துச் சந்தோஷப்படு கிறவன்; பிறருடைய துக்கத்தால் தானும் துக்கிப்பவன்; ஸத்ருவற்றவன்; வெயிலால், ஜகத்திற்கு உண்டாகும் தாபத்தைச் சந்திரன் போக்கடிப்பது போல லோகத்தின் துக்கத்தைப் போக்கடிப்பான். மேலும் உன்னுடைய பௌத்திரனாகிய அவன், தாமரை, மலர்போன்ற கண்களுள்ளவரும், பக்தர்களுடைய இஷ்டத்திற்குத் தக்கபடி உருவத்தைத் தரிப்பவரும், லக்ஷ்மிதேவியாகிய ஸ்திரீயை அலங்காரமாக உடையவரும், ப்ரகாசிக்கும் குண்டலங்களால் அழகான முகத்தை யுடைய வருமாகிய பகவானை உள்ளிலும், வெளியிலும், நேரிலும் தரிசிப்பான், என்று அனுக்கிரகித்தார். அதனைக் கேட்டு திதியானவள் தன்னுடைய புத்திரர் களுக்குப் பகவானால் வதம் நேரிடப்போகிறதாகத் தெரிந்து கொண்டு விசேஷ உற்சாகத்தை யடைந்தது மன்றி, பௌத்திரன் (பிள்ளையின் பிள்ளை) பகவத் பக்தனாக ஆகப்போகிறான் என்பதைத் தெரிந்து கொண்டதனால் மிகவும் சந்தோஷத்தையும் அடைந்தாள்.

அத்தியாயம்–15

ஜய விஜயர்களுடைய சாபம்

1–10 திதியானவள் சத்துருக்களுடைய தேஜஸ்ஸைப் போக்கடிக்கக்கூடிய அந்த காச்யபர் வீரியத்தை ஆயிர வருஷங்கள் (தேவர்களுக்கு இதனால் உபத்திரவம் நேரிடுமோவென்று சந்தேகப்பட்டுக் கொண்டு) தரித்திருந்தாள். அந்தக் கர்ப்பத்தினுடைய தேஜஸினால் சூரியன் முதலியவைகள் காந்தியற்றவை களாயின. லோகபாலர்களுக்கும் தேஜஸ் குறைந்தது; திக்குகளை இருள் சூழ்ந்து கொண்டது. அப்பொழுது தேவர்கள் ப்ரஹ்மதேவரிடம் சென்று, ஓ ப்ரபுவே, எதனால் நாங்கள் மிகவும் பயப்படுகிறோமோ, அந்த இருள் உண்டான காரணம் உமக்குத் தெரியுமா? உம்முடைய ஞானமானது காலத்தாலும் குறைவுபடு கிறதில்லை;; ஆதலால் உமக்குத் தெரியாத தொன்றும் இல்லை; ஓ தேவர்களுக்கும் தேவரே! ஜகத்திற்கு அதிபதியே! லோகபாலர்களுக்கும் அதிபதியே; எல்லாருடைய அபிப்ராயத்தையும் அறிந்தவரே! விஞானமாகிய பலமுள்ளவரும், மாயையால் ப்ரஹ்ம சரீரத்தை அடைந்தவரும், ரஜோ குணத்தை அங்கீகரித்தவரும் ப்ரபஞ்சத்திற்குக் காரணரும், ப்ரமாணங்களால் அறிய முடியாதவருமாகிய உமக்கு நமஸ்காரம்.

மேலும் நீர் ஜீவர்களைப் பரிபாலிப்பவர்; ஸகல லோகங்களும் உம்மிடத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நீர் எல்லாவற்றிற்கும் மேலானவர். காரிய காரண ஸ்வரூபியாயிருப்பவர்; அப்படிப்பட்ட உம்மை யார்

பலனை யுத்தேசியாமல் பூஜிக்கிறார்களோ அவர்கள் இந்திரியங்கள்;, மனம், ஸ்வாசம், ஆகிய இவைகளை ஜயித்து பக்குவமான யோகமுள்ளவர்களாக உம்முடைய ப்ரசாதத்தை அடைகிறார்கள்.

அவர்களுக்கு ஓரிடத்திலும் அவமானம் நேரிடுகிறது இல்லை. பசுக்கள் கயிறுகளால் கட்டப்படுவது போல் ஸகல ப்ரஜைகளும், உம்முடைய வாக்காகிய வேதங்களால் கட்டப்பட்டு, உம்மைப் பூஜிக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் நியந்தாவாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறோம். திதியினால் தரிக்கப்பட்டதும், காசியபர் உடைய வீரியத்தாலுண்டானதுமான கர்ப்பமானது அக்கினி கட்டையில் விருத்தியடைவது போல் வளர்கிறது. அதனால் திக்குகள் இருளால் மூடப்பட்டு இருக்கின்றன (நல்ல காரியங்கள் நடக்கவில்லை! ராத்திரி பகல் என்ற பிரிவு இல்லாததால்;) ஆதலால் நீர் உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்யும்; கருணை நிறைந்த பார்வையால் ஆபத்தை யடைந்த எங்களைப் பார்க்க வேண்டும் என்றார்கள்.

11–30 சிறந்த கைகளுள்ள ஓ விதுரரே! பகவான் ஆகிய ப்ரஹ்மதேவர் சிரித்து, (திதியின் கெட்ட செய்கையை நினைத்து) அழகான வார்த்தையால் தேவர்களைச் சந்தோஷிக்கச் செய்து கொண்டு பதில் சொல்ல ஆரம்பித்தார். எப்படியெனில், "ஓ தேவர்களே! என்னுடைய மானச புத்திரர்களும் உங்களுக்கு முந்தியவர்களுமான சனகர் முதலியவர்கள். விஷயங்களில் ஆசையில்லாதவர்களாய் ஆகாசத்தின் வழியாக லோகங்களில் சஞ்சரித்தார்கள். ஒருகால் அவர்கள் நிர்மல ஸ்வபாவமுள்ள பகவானாகிய மஹாவிஷ்ணுவின்

லோகமாகிய வைகுண்ட லோகம் சென்றார்கள். அந்த லோகம் எல்லோராலும் நமஸ்கரிக்கப்பட்டது! அவ்விடத்தில் வஸிப்பவர்கள் எல்லோரும் ஸ்ரீமந் நாராயணனுடைய சரீரம் போன்ற தேகமுள்ளவர்கள்! அவர்கள் ஒரு பயனையும் உத்தேசியாமலேயே பகவானை ஆராதிப்பவர்கள்; மேலும் அவ்விடத்தில் எல்லாவற்றிற்கும் முந்தியவரும், வேதங்களாலேயே அறியக் கூடியவரும், தர்ம ஸ்வரூபியுமான பகவான் சத்ய மூர்த்தியாகத் தம்முடைய பக்தர்களான நமக்கு க்ஷேமத்தைச் செய்து கொண்டு வஸிக்கிறார்.

அந்த லோகத்தில் கைவல்யமே சரீரத்துடன் வஸிக்கிறதென்று நினைக்கக் கூடியதும், நைச்ரேயஸம் என்ற பெயருள்ளதுமான ஒரு வனமிருக்கிறது; அதிலுள்ள மரங்கள் இஷ்டமான வஸ்துக்களைக் கொடுக்கக்கூடியவை; எல்லா ருதுக்களிலும் ஏற்படக் கூடிய அழகுள்ளது; அவ்விடத்தில் தேவர்கள் தங்களுடைய ஸ்திரீகளுடன் பகவானுடைய திவ்ய சரிதங்களைக் கானஞ் செய்கிறார்கள். அவைகள் ஜனங்களுடைய பாபத்தைப் போக்கக் கூடியவை; மேலும் அவர்கள் ஜலத்தின் மத்தியில் மலர்ந்திருக்கும் மாதவீ புஷ்பங்களுடைய வாசனையுள்ள காற்றையுங் கூட கவனியாமலிருக்கிறார்கள். (போகத்திற்கு சாதனங்களிருந்தாலும், அவைகளில் ஆசைப்படாமல் பகவத் குணங்களைக் கானம் செய்கிறார்கள்.)

பின்னும் அவ்விடத்திலிருக்கும் சிறந்த வண்டானது உரக்கக் கத்தும்போது, அதனைக் கேட்ட பாராவதங்கள் (புறாக்கள்), குயில்கள், சாரஸங்கள், சக்கரவாகங்கள், நச்சுக்குருவிகள், ஹம்சங்கள்,

கிளிகள், தித்திரிகள் (நெருப்புக்கோழிகள்), மயில்கள் ஆகிய பறவைகள் தங்களுடைய கோலாஹல சப்தத்தை நிறுத்தி விட்டு, 'இந்த வண்டானது பகவத் குணங்களைக் கானம் செய்கிறதோ? என்று ஒரு க்ஷண காலம் மௌனங்களாக இருக்கின்றன. மேலும், துளஸிமாலையுள்ள பகவான் துளஸியின் வாசனையில் பிரீதியுள்ளவராக இருப்பதைப் பார்த்து, மந்தாரம், குந்தம், மருதாணி, நீலோத்பலம், சம்பகம், அர்ண மென்ற புஷ்பம், புன்னை, நாகை மகிழம், தாமரசம், பாரிஜாதம் ஆகிய புஷ்பங்கள் துளஸியினால் செய்யப்பட்ட துபசைப் பற்றிப் புகழ்கின்றன. (அவ்விடத்தில் இருப்பவர்கள் மாத்சரியம் இல்லாத வர்களென்பது கருத்து.) மேலும், அவ்விடத்தில் ஸ்ரீ பகவானுடைய பாதாரவிந்தத்தில் நமஸ்காரஞ் செய்த மாத்திரத்தால் கிடைத்தவைகளும் (கர்மத்தால் கிடைத்தவர்களில்லையென்பது கருத்து).

வைடூர்யம், மரகதம், ஸ்வர்ணம் ஆதிய இவைகளால் செய்யப்பட்டவைகளுமான பக்தர்கள் உடைய விமானங்கள் வெகுவாக இருக்கின்றன. அந்த விமானத்திலிருப்பவர்களும் பகவானிடத்திலேயே மனமுள்ளவர்களுமான பக்தர்களுக்கு அவ்விடத்தில் இருக்கும் அழகான இடுப்பு, சிரிப்பு முதலியவைகளால் ப்ரகாசிக்கும் முகமுள்ள ஸ்திரீகளால் காமத்தை உண்டுபண்ண முடியவில்லை. பின்னும் அவ்விடத்தில் பகவானுடைய க்ருஹமானது தங்க வேலைகளால் அழகான ஸ்படிகச் சுவருள்ளதாக இருக்கிறது, அதில் லக்ஷ்மீ தேவியானவள்; தன்னுடைய ஸ்வரூபத்துடன், பாதங்களில் அணிந்த பாதசரங்களால் இனிமையான சப்தமுள்ளவளாகி, தோஷமற்றவளாய், (சஞ்சலையென்ற

தோஷமற்றவளாக) தன்னுடைய கையிலிருக்கும் தாமரைப் புஷ்பத்தால் அவ்விடத்திலுள்ள தங்கத் தூள்களைப் பெருக்குகிறவள் போலக் காணப்படுகிறாள். அவளுடைய அனுக்கிரகத்திற்காகவே ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் முயலுகிறார்கள்.

மேலும் ஓ தேவர்களே! அந்த லக்ஷ்மீதேவியானவள் தன்னுடைய உத்யானத்தில் பவழக்கரையுள்ளவைகளும் நிர்மலமாகிய ஜலமுள்ளவைகளுமான ஓடைகளில் தன்னுடைய தோழிகளுடன் துளஸியினால் பகவானைப் பூஜிக்கிறாள். அப்பொழுது ஜலத்தில் ப்ரதிபிம்பித்தும், அழகான தலைமயிருள்ளதும், மேலான மூக்குள்ளதுமான தன்னுடைய முகத்தைப் பார்த்து, பகவானால் சும்பனஞ் செய்யப்பட்டதென்று நினைத்தாள். (லக்ஷ்மியின் அழகும் பகவத்ததீனம்) எந்தக் கதைகளைக் கேட்ட மனிதர்களுக்குப் புண்யமும், அதிருஷ்டமும் குறைகின்றதோ, நரகத்தை அடைகிறார்களோ, அப்போர்ப்பட்டவைகளும், விவேகத்தைப் போக்கக் கூடியவைகளும். அர்த்தம், காமம் ஆகிய இவைகளைப் பற்றியவைகளுமான கெட்ட கதைகளைக் கேட்பவர்களும், பாபத்தைப் போக்கடிப்பவராகிய பகவானுடைய ஸ்ருஷ்டி முதலியவைகளைச் சொல்வதில் பிரியமற்றவர்களுமான ப்ராணிகள் அந்த வைகுண்டம் செல்கிறதில்லை.

தேவர்களான நம்மாலும் விரும்பப்பட்டதும், தர்மம், ஞானம் ஆகிய இவைகளுக்கு சாதனமுமான மனுஷ்ய ஜன்மத்தையடைந்தும் எவர்கள் பகவான் உடைய மாயையால் மோஹித்து அவரை ஆராதிக்க வில்லையோ, அவர்களும் அவ்விடம் செல்லுகிறது

இல்லை. எவர்கள் தேவர்களுக்கு தேவராகிய பகவானை அனுசரிக்கிறார்களோ, அவர்கள் நம்மாலும் ஆசைப்படக் கூடிய சுபாவமுள்ளவர்களேயாம். அவர் களுக்கு யமனுடைய உபத்திரவம் இல்லை. எவர்கள் ஒருவருக்கொருவர் தங்களுடைய யஜமானனாகிய பகவானுடைய குணங்களைக் கானம் செய்து, அதனால் தேகம் பரவசமாகி மயிர்க்கூச்சல் உண்டானவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் மேற்சொல்லிய வைகுண்டஞ் செல்வார்கள்.

ஜகத்திற்கு அதிபதியாகிய ஸ்ரீமந் நாராயணனுடைய வாசஸ்தலமும், ஸகல ஜகத்தினால் கொண்டாடக் கூடியதும்; தேவார்ஹமாயும், விசித்திரங்களான சிறந்த விமானங்களுடைய காந்தியுள்ளதுமான அந்த வைகுண்டத்திற்கு அம்முனிகள் தங்களுடைய யோகமாயா பலத்தால் சென்று, பரமானந்தத்தை அடைந்தார்கள். அவ்விடத்தில் அந்த மஹரிஷிகள் அற்புதமான விஷயங்களைப் பார்த்தும் அவைகளில் ஆசைப்படாமல் (பகவத் தரிசனத்தில் ஆசையால்) ஆறு ப்ராகாரங்களைத் தாண்டி ஏழாவது ப்ராகாரம் சென்று அவ்விடத்தில் இரண்டு துவாரபாலகர்களைக் கண்டார்கள். அவர்கள் ஒரே வயதுள்ளவர்கள்! விலையுயர்ந்த தோள் வளைகள், குண்டலங்கள், கிரீடம் ஆகிய இவைகளால் அழகாயிருப்பவர்கள். கையில் கதாயுதத்தைத் தரித்தவர்கள்; வனமாலை யினால் அலங்கரிக்கப்பட்டவைகள். கருமையான நிறமுள்ள நான்கு கைகளுள்ளவர்கள்.

மேலும், அவர்களுடைய முகத்தில் வக்கிரமான புருவங்களும், சிவந்த கண்களும்; பெரிய மூக்குகளும்

இருக்கின்றன. அப்பொழுது அந்த முனிகள் ஸ்வர்ணத்தாலும், வஜ்ரத்தாலும் செய்யப்பட்ட கதவுகளுள்ள ஆறு ப்ராகாரங்களுக்குள் ப்ரவேசித்தது போல, ஏழாவது ப்ராகாரத்திலும் த்வார பாலகர் களான அவ்விருவர்களும் பார்த்துக் கொண்டிருக்க, அவர்களைக் கேட்காமலேயே உள்ளே சென்றார்கள். அவர்கள் சமதிருஷ்டி உள்ளவர்களாகையால் எங்கும் பயமில்லாமல் சஞ்சரிப்பவர்கள். அவர்களை ஒருவரும் தடுக்கிறதில்லை. இப்படிப் பகவானைத் தரிசிப் பதற்காக உள்ளே செல்லுகிறவர்களும், வஸ்திரமில்லாத வர்களும், மிகவும் வயது சென்றவர்களானாலும், ஐந்து வயதுள்ளவர்கள் போல் தோன்றுகிறவர்களும், ஆத்மாவின் உண்மையை அறிந்தவர்களும், தடுக்கக் கூடாதவர்களுமாகிய அந்தச் ஸனகர் முதலிய முனிவர்களைப் பார்த்து, அந்தத் த்வாரபாலகர்கள் இருவர்களும் அவர்களுடைய தேஜஸை (தைரியத்தைப்) பற்றி பரிகாசஞ் செய்து பகவானுக்குப் ப்ரதிகூல ஸ்வபாவமுள்ளவர்களாகிப் பிரம்பினால் அவர்களைத் தடுத்தார்கள்.

31–34 இப்படி ஸகல தேவர்களும் பார்த்துக் கொண்டிருக்கும் போது ஸ்ரீ பகவானுடைய த்வார பாலகர்களால் தடுக்கப்பட்ட பூஜ்யர்களான அந்த மஹரிஷிகள், ஸகல லோகத்திற்கும் மிகுந்த ஸுகிருத்தாகிய பகவானுடைய தரிசனத்திற்கு விக்கினம் நேர்ந்ததால் கோபம் கொண்டு, கலங்கிய கண்களுடன் பகவானுக்கு மிகுந்த சிச்ருஷையைச் செய்து, அதனால் வைகுண்டவாசத்தை அடைந்து எல்லாவற்றையும் சமமாகப் பார்க்கும் ஸ்வபாவமுள்ள இந்த லோக ஜனங்களுக்குள் இவர்களுடைய

ஸ்வபாவம் வேறாகக் காணப்படுகிறதே, இதென்ன? ஓ த்வாரபாலகர்களே! மிகவும் சாந்தரும், துவேஷமற்ற வருமாகிய அந்த மஹாபுருஷனிருக்குமிடத்தில் யார் தான் போகக்கூடாது? (எல்லோரும் போகலாமென்று கருத்து.) நீங்களிருவர்களும் கபட ஸ்வபாவமுள்ளவர்கள் ஆகையால் உங்களைப் போல் மற்றவர்களும் கபடமாக இருப்பார்களென்று பிறரைப் பற்றிச் சந்தேகிக்கிறீர்கள். (பகவத் பக்தி இல்லாதவர்கள் இவ்விடம் வரமாட்டார்கள். பகவான் மிகவும் சாந்தராகையால் அவரிடத்தில் பயப்படவேண்டியது இல்லை. ஆகையால் நீங்கள் மிகவும் துஷ்டர்கள் என்று கருத்து) ஸகல ஜகத்தையும் தம்முடைய வயிற்றில் வைத்துக் காப்பாற்றும் பகவானுக்கு பேதபுத்தி இல்லை.

குடத்திற்குள் இருக்கும் ஆகாசமானது எப்படி மஹாகாசத்தில் அடங்கியதோ, அப்படியே பரமாத்மாவினிடத்தில் தாங்கள் அடங்கியவர்கள் என்று வித்வான்கள் பார்க்கிறார்கள். அப்பேற்பட்ட பகவானிடத்தில் மற்றவர்களிடத்தில் போல் பேத புத்தியாலுண்டாகும் பயமானது தேவர்கள் போல வேஷந் தரித்த உங்களால் உண்டு பண்ணப்பட்டது. ஆனதால் மந்தபுத்தியுள்ளவரும் ஸ்ரீ பகவானுடைய வேலைக்காரர்களுமாகிய உங்களுடைய க்ஷேமத் திற்காகவே யோசித்துச் சொல்லுகிறோம். நீங்கள் பேதபுத்தி உள்ளவர்களாகையால், காமம், குரோதம், உலோபம் ஆகிய மிக்க பாபிகளாகிய மூன்று சத்ருக்கள் வஸிக்கும் பூலோகத்திற்குச் செல்லுங்கள், என்றார்கள்.

35–36 அதனைக் கேட்ட அவ்விருவர்களும், ஸ்ரீ மஹா விஷ்ணுவின் வேலைக்காரர்களானாலும், ப்ராஹ்மண சாபம் அநேக அஸ்திரங்களாலும் நிவர்த்திக்க முடியாதது, என்ற நிச்சயமுள்ளவர்களாகி மிகவும் பயந்து அம்முனிவர்களுடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டு அவர்களை நோக்கி, ஓ மஹரிஷிகளே! குற்றஞ் செய்தவர்களான எங்களுக்குத் தக்கபடி சிக்ஷை விதித்தீர்கள். (தங்களிடத்தில் கொஞ்சமேனும் குற்றமில்லை யென்பது கருத்து.) ஆனாலும் நீங்கள் எங்களிடத்தில் கிருபை செய்து, பச்சாதாபமடைந்து, எங்களை அனுக்கிரஹிக்க வேண்டும். எங்களுடைய புத்திக் குறைவினால் நாங்கள் கீழுலகஞ் சென்றாலும், அவ்விடத்தில் எங்களுக்கு மோஹம் உண்டாகாமல் இருக்க வேண்டும். அப்படி மோஹம் உண்டானாலும் பகவானுடைய ஞாபகமிருக்க வேண்டும். அஃதிருந்தால் ஈசுவரனுடைய ஆக்ஞையை அதிக்ரமித்ததாலுண்டான தோஷமும் நீங்கிவிடும், என்று கேட்டுக் கொண்டார்கள்.

37–45 அப்பொழுது பெரியோர்களுக்கு மனோகரராகிய பகவான் தம்மைச் சார்ந்த த்வார பாலகர்கள் சாதுக்களுக்கு குற்றஞ் செய்தார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு, பரமஹம்சர்களான மஹர்ஷிகளாலும் தேடக்கூடிய தம்முடைய பாதங்களை அசைத்துக் கொண்டு (கால்நடையாக) லக்ஷ்மீதேவி யுடன் அவ்விடம் வந்தார். (என்னுடைய பாததரிசனத் திற்காக வந்தவர்களைத் தடுத்ததால் அவர்கள் கோபங் கொண்டார்கள். அந்தத் தரிசனத்தை அவர்களுக்குக் கொடுத்தோமன்னால் கோபம் தணிந்துவிடுமென்பது கருத்து) அந்த முனிவர்கள் அப்பொழுது அவ்விடம்

வந்த பகவானைத் தரிசித்தார்கள். அவர் அந்த முனிகளுடைய சமாதியால் அடையக் கூடிய பாக்கிய மேயாவார். மேலும் அவரை அந்த லோகத்துப் புருஷர்கள் குடை முதலியவைகளால் உபசரிக்கிறார்கள். அவருடைய பக்கங்களில் ஹம்சம் போன்ற சாமரங்கள் வீசப்படுகின்றன. அவைகளிலிருந்து வீசும் காற்றானது மிகவும் சுககரமாகவிருக்கிறது. அதனால் சந்திரன் போலப் ப்ரகாசிக்கும் வெண்குடையில் தொங்குகிற முத்து மாலைகள் அசைகின்றன. அவைகளிலிருந்து ஜலத்துளிகள் விழுகின்றன.

பின்னும் அந்தப் பகவான் எல்லாரிடத்திலும் தயைசெய்யும் நல்ல முகமுள்ளவர். ஆசைப்படக்கூடிய சத்குணங்களுக்கு வாசஸ்தலமாக இருப்பவர். ப்ரீதியுடன் பார்ப்பதால் மனத்திற்கு சந்தோஷத்தை உண்டு பண்ணுகிறவர். மேலும், அவர் சுவர்கத்திற்குச் சிரோரத்னமாக இருக்கும் தம்முடைய வைகுண்ட லோகத்தைத் தம்முடைய கருத்த மார்பிலிருக்கும் லக்ஷ்மீயால் ப்ரகாசிக்கச் செய்பவர். மேலும் பீதாம்பரம் தரித்த பெரியதாக பகவானுடைய நிதம்பத்தில் ப்ரகாசிக்கிற கடிசூத்ரத்தாலும், வண்டுகளால் சப்திக்கும் வனமாலையாலும் அந்த உலகம் விளங்குகிறது. மேலும், அந்தப் பகவான் அழகான கங்கணத்தைத் தரித்தவர். கருடனுடைய தோளில் ஒரு கையை வைத்தும், மற்றொரு கையால் தாமரைப் புஷ்பத்தைச் சுழற்றிக் கொண்டு மிருந்தார். அவருடைய கன்னங்கள் மின்னலை அவமதிக்கக் கூடிய மகர குண்டலங்களால் அலங்கரிக்கப்பட்டவை, முகமானது அழகான மூக்குள்ளது. பின்னும் அவர் ரத்னங்களிழைத்த கிரீடமுள்ளவர். கைகளுடைய

மத்தியில் ப்ரகாசிக்கின்ற கௌஸ்துப ஹாரமுள்ளவர். அவருடைய சரீரமானது மிகுந்த அழகுள்ளதாகையால், பக்தர்கள் அவருடைய திவ்ய தேகத்தைத் தரிசித்தவுடன், நானே மிகுந்த சௌந்திரியமுள்ளவன் என்ற லக்ஷ்மீதேவியுடைய அகங்காரம். இதனால் அடக்கப்பட்டதென்று நினைக்கிறார்கள்.

அப்போர்ப்பட்ட பகவானுடைய சரீரத்தைத் தரிசித்து அம்முனிகள் திருப்தி அடையாதவர்களாகி, மிகுந்த சந்தோஷத்துடன் அவருடைய பாதத்தில் தங்களுடைய சிரசு படும்படியாக நமஸ்கரித்தார்கள். அவர் ப்ரஹ்மாவாகிய என்னாலும், பரமசிவனாலும் உங்களாலும் (தேவர்களாலும், சேவிக்கத்தக்க திவ்ய சரீரத்தைப் ப்ரகாசப்படுத்துகிறவர்) அப்பொழுது அந்தப் புண்டரீகாக்ஷருடைய (தாமரைக் கண்ணன்) பாதங்களிலிருந்து துளஸியின் மதுவுடன் கூடிய காற்றானாது மூக்கு வழியாக அவர்களுக்குட் சென்றது. அவர்கள் ப்ரம்மானந்தத்தை அனுபவிக்கிறவர்களானாலும், அவர்களுடைய மனம் கலங்கினது. சரீரத்தில் மயிர்க் கூச்சலுண்டாயிற்று. பின்பு அவர்கள் பகவானுடைய கருத்த தாமரை மலர் போன்ற முகத்தையும்,அதில் சிவந்த அழகாய் உள்ள உதடுகளையும் குருக்கத்தி மலர் போல் வெண்மையான சிரிப்பையும் பார்த்து பூர்ண மனோரதமுள்ளவர்களாகத் திரும்பவும் இரத்தினங்கள் போன்ற நகங்களுக்கு ஆசிரயங்களான அவருடைய பாதங்களைத் தரிசித்துத் தியானஞ் செய்தார்கள். (எல்லா அவயவங்களுடைய லாவண்யத்தை ஒரே தடவையில் பார்த்து க்ரஹிக்க முடியாதவர்களாக அடிக்கடி பார்த்தார்களென்பது கருத்து.) அந்தப்

பகவான் யோக மார்க்கத்தைக் கொண்டு தேடுபவர்களால் தியானஞ் செய்யகூடியவர். அநேக ஞானிகளால் உபாசிக்கப்பட்டவர். புருஷரூபத்தைக் காண்பித்தவர். மற்றவர்களுக்குக் கிடைக்காதவைகளும், இயற்கையாகவே கிடைத்தவைகளுமான எட்டுவித ஐசுவர்யங்களுள்ளவர், அப்பேர்ப்பட்ட பகவானை அந்த ஸனகர் முதலிய மஹர்ஷிகள் பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்தார்கள்.

46 50 "ஓ பகவன்! நீர் ஸகல பிராணிகளுடைய ஹிருதயத்திலிருப்பவரானாலும், துஷ்டர்களுடைய கண்களுக்குப் புலப்படுகிறதில்லை. அப்பேர்ப்பட்ட நீர் எங்களுடைய கண்களுக்குப் புலப்பட்டீர். உம்மிடத்திலிருந்து உண்டானவரும், எங்களுக்குப் பிதாவுமான ப்ரஹ்மதேவர். உம்முடைய ரகசியத்தை உபதேசித்தபொழுதே, நீர் காதின் வழியாக எங்களுடைய ஹிருதயத்தை அடைந்திருக்கிறீர். ஓ பகவான்! உம்மைப் பரமாத்மா வென்றும், சுத்த சத்வ மூர்த்தியாகையால் பக்தர்களுக்கு ரதியை (ஆசையை) உண்டு பண்ணுகிறவராகவும், தெரிந்து கொள்ளுகிறோம். உம்முடைய கிருபையால் (அனுதாபம்) பக்தி யோகத்தை அடைந்து அதனால் மனத்திலிருக்கும் அகங்காரத்தை ஒழித்து, வைராக்யமடைந்த மஹரிஷிகள் உம்மை அறிவார்கள். மேலும், ஸ்தோத்திரம் பண்ணக்கூடியதும், பரிசுத்தியை உண்டு பண்ணக் கூடியதுமான உம்முடைய கதையின் ரசத்தை எவர்கள் அறிந்திருக்கிறார்களோ, எவர்கள் உம்முடைய பாதாரவிந்தத்தைச் சரணமடைந்து இருக்கிறார்களோ, அந்தப் பக்தர்கள் உம்முடைய அனுக்கிரகபரமான மோக்ஷத்தையும் விரும்புகிறதில்லை.

அப்படியிருக்க, பயமுள்ளதாகிய இந்திரபதம் முதலியவைகளை விரும்புவார்களா? ஓ பகவன்! உம்முடைய பக்தர்களைச் சபித்ததால் நாங்கள் தங்களுக்கு அபராதஞ் செய்தவர்களானோம். அதனால் எங்களுக்கு ஜன்மம் ஏற்படுமோ? வண்டானது முட்களால் வருத்தப்பட்டும் புஷ்பங்களில் ரமிப்பது போல அந்த ஜன்மாவிலும் எங்களுடைய மனமானது உம்முடைய பாதாரவிந்தத்தையே நினைத்திருக்கும் ஆனால் அந்த ஜன்மமும் எங்களுக்குக் கிடைப்பது சம்மதமேயாகும். ஆனால் துளசியானது உம்முடைய பாதத்தின் சம்பந்தத்தால் விளங்குவதுபோல் எங்களுடைய வாக்கும் தங்களுடைய குணங்களைச் சொல்வதாலேயே ப்ரகாசிக்க வேண்டும். எங்களுடைய காதுகளும் உம்முடைய கல்யாண குணங்களைக் கேட்பதாலேயே நிறைந்திருக்க வேண்டும்.

ஓ மிகுந்த கீர்த்தியுள்ளவரே! நீர் இந்த திவ்ய ஸ்வரூபத்தை நாங்கள் பார்க்கும்படி செய்ததால் எங்களுடைய கண்கள் சபலங்களாயின. இந்த ஸ்வரூபம் துஷ்டர்களுக்குப் புலப்படாது அந்தப் பகவானாகிய உமக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்' என்று சொன்னார்கள்.

அத்தியாயம்–16

ஜய விஜயர்களுக்கு அனுக்கிரகம்

1–2. அந்த ஸனகர் முதலிய யோகிகளுடைய வார்த்தையைச் சிலாகித்து வைகுண்டத்திலிருக்கும் சாக்ஷாத் பகவான், இந்த ஜயன் விஜயன் என்கிற இருவர்களும் என்னுடைய பார்ஷதர்களானாலும் இவர்கள் தர்மத்தை அதிக்ரமித்தவர்கள். ஆதலால் இவர்கள் விஷயத்தில் என்னுடைய பக்தர்களான உங்களால் செய்யப்பட்ட சிக்ஷையானது எனக்கும் அபிமதமேயாம், எனக்குப் ப்ராஹ்மணர்களே முக்கியமான தெய்வம். என்னுடைய வேலைக்காரர்களால் செய்யப்படும் குற்றமானது என்னால் செய்யப்பட்டதாகவே நினைக்கிறேன். நீங்கள் மன்னிக்கவேண்டும். எவனுடைய வேலைக்காரன் கெட்ட காரியத்தைச் செய்கிறானோ அவனைப்பற்றி ஜனங்கள் பேசிக் கொள்வார்கள் அல்லவா? அது குஷ்ட ரோகமானது தோலைக் கெடுப்பது போல யஜமானுடைய கீர்த்தியைக் கெடுத்துவிடுகிறது. என்னுடைய சுத்தமும் அமிருதமயமுமாகிய கீர்த்தியைக் கேட்பதால் அதில் ஸ்நானம் செய்யும் சண்டாளன் வரையிலுள்ள ஜகத்தானது பரிசுத்தமாகி விடுகிறது. உங்களிடமாக நல்ல கீர்த்தியை அடைந்து விளங்கும் நான் என்னுடைய கையானாலும் உங்களுக்கு விரோதம் செய்யுமானால் அதை வெட்டிவிடுவேன். ப்ராஹ்மணர்களைச் சேவித்ததால், பரிசுத்தமாகிய பாததூளி உள்ளவனாகவும், ஸகல பாபங்களையும் போக்கக் கூடியவனாகவும் நல்ல ஸ்வபாவத்தை அடைந்தவனுமாகவும் நான் இருக்கிறேன். அப்போர்ப்பட்ட என்னை

(வைராக்கிய முள்ளவனாலும்) லக்ஷ்மி ஒருபொழுதும் விடுகிறதில்லை. அவளுடைய கடாக்ஷத்தை ப்ரஹ்ம தேவர் முதலியவர்களும் அடைய விரும்பித் தபஸ் செய்கிறார்கள். ப்ராஹ்மணர்களுக்கு அன்னங் கொடுத்து அவர்கள் நெய் ஒழுகும்படி புசிக்க அவர்கள் முகமாய் நான் புசித்து எவ்வளவு திருப்தி அடைகிறேனோ அவ்வளவு சந்தோஷமானது யாகத்தில் யஜமானனால் கொடுக்கப்படும் ஹவிஸ்ஸை அக்கினி முகமாகப் புசிப்பதால் எனக்கு உண்டாகிறது இல்லை. ப்ராஹ்மணர்கள் குற்றஞ் செய்தாலும் அதைப் பொறுப்பதே உசிதம்.

எவர்களுடைய பாதத்தை அலம்பிய ஜலமானது பரமசிவனையும் மற்ற ஜகத்தையும் பரிசுத்தப்படுத்து கிறதோ, தடையற்றதும் பூர்ணமுமான யோக மாயையின் விபூதிகளை உடையவனாகிய நான் அந்தப் ப்ராஹ்மணர்களுடைய பாததூளியைச் சிரசால் தரிக்கிறேன். மேலும் என்னுடைய சரீரரமாகிய ப்ராஹ்மணர்களையும், பசுக்களையும் காப்பாற்று கிறவர்களில்லாமல் கஷ்டப்படும் மற்றப் ப்ராணிகளையும் பாப ஸ்வபாவமுள்ள எந்தப் புருஷர்கள் சர்ப்பம் போல் கோபமுள்ளவர்களாகி என்னை காட்டிலும் வேறென்று நினைக்கிறார்களோ, அவர்களை என்னுடைய வேலைக்காரனாகிய யமனிடத்திலிருக்கும் கழுகுபோன்ற தூதர்கள் உபத்திரவிக்கிறார்கள். எவர்கள் ப்ராஹ்மணர்களை என்னுடைய ஸ்வரூபமென்று நினைத்து சித்தத்தில் சந்தோஷத்துடனும், சிரித்த முகத்துடனும் பூஜிக்கிறார்களோ, பிரியமுள்ள வார்த்தையால் பேசிக்கொண்டு புத்திரனைப்போல் அழைக்கிறார்களோ, அவர்கள் என்னைப் பூஜித்தவர்களாக

ஆகிறார்கள். ஆதலால் இவ்விருவரும் யஜமானனாகிய என்னுடைய எண்ணத்தை (ப்ராஹ்மணர்களே தெய்வமென்பதை) அறியாமல், உங்களிடத்தில் குற்றஞ் செய்ததால், அதன் பலனை உடனே அனுபவித்து மறுபடியும் என்னுடைய சமீபம் சேரட்டும். இவர் களுக்குச் சீக்கிரமாக சாபத்தின் முடிவுக்காலத்தை ஏற்படுத்துவதே என்னைப்பற்றிச் செய்யும் அனுக்கிரமாகும்" என்று கேட்டுகொண்டார்.

13–25. அந்த யோகிகள் கோபமுள்ளவர்களானா லும் பின்பு பிரியாமானதும். மந்திர ஸ்வரூபமான அந்த வார்த்தையைக் கேட்ட அவர்களுடைய ஆத்மாவானது போதுமென்று திருப்தி அடையவில்லை. மேலும் அவர்கள் சொற்ப, அக்ஷரங்களுள்ளதும் மிகுந்த அர்த்தமுள்ளதும், சிறந்ததுமான பகவானுடைய வார்த்தையைக் காதுகொடுத்துக் கேட்டு அர்த்தத்தா லும் அபிப்பிராயத்தாலும் கம்பீரமாகிய அதனை நன்றாக யோசித்தும் பகவானுடைய எண்ணம் இன்னதென்று தெரிந்துகொள்ள முடியாதவர்களாக மிகுந்த சந்தோஷத்துடன் மயிர்க்கூச்சலை யடைந்து யோக மாயையால் தம்முடைய மேலான ஐசுவர்யத்தின் மேன்மையைக் காண்பிக்கும் பரமபுருஷனை நோக்கி, "ஓ பகவான், நீர் எல்லாவற்றிற்கும் அதிபதியாயிருந்து நான் அபராதஞ் செய்தேனென்றும் எனக்கு அனுக்கிரஹஞ் செய்யுங்களென்றும் சொல்லுகிற உங்களுடைய எண்ணம் இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை. ப்ராஹ்மணர்களிடத்தில் பக்தியுள்ள வராகிய உமக்குப் ப்ராஹ்மணர்கள் முக்கிய தெய்வம் என்பது ப்ரசித்தமே. தேவர்களுக்கும் தேவர்களான ப்ராஹ்மணர்களுக்கும் நீர் ஆத்மாவாகவும்

தெய்வமாகவும் இருக்கிறீர். உம்முடைய அவதாரங்களால் புராதனமான தர்மமானது காப்பாற்றப்படுகிறது. விகாரமற்றவராகிய நீர் தர்மத்திற்கு முக்கிய பலமாக ஆகிறீர். யோகிகள் உம்முடைய அனுக்கிரஹத்தால நிவிர்த்தி மார்க்கத்தை யடைந்து ஸம்சாரத்தைத் தாண்டுகிறார்கள். அப்பேர்ப்பட்ட உமக்குப் பிறர் அனுக்கிரஹஞ் செய்வதென்பது ஆச்சரியமாயிருக்கிறது. மேலும் பக்தர்களால் உம்முடைய பாதாரவிந்தத்தில் அர்ச்சிக்கப்பட்ட துளசி மாலையை வண்டானது விரும்புவதுபோல், லக்ஷ்மீதேவியானவள் பக்தர்களால் உம்முடைய பாதத்தில் சமர்ப்பிக்கப்படும் துளஸி மாலையில் வஸிக்கும் சிறந்த வண்டுக்கும் ஸ்தானமாகிய பாதத்தை விரும்பியவள்போல உம்மை ஒவ்வொரு சமயத்திலும் சேவிக்கிறாள். பணத்தை விரும்பியவர்கள் அவளுடைய பாததூளியைச் சிரசால் தரிக்கிறார்கள். சிறந்த பக்தர்களிடத்திலேயே தொடர்புடைய நீர், பலவித ஸுலக்ஷணங்களால் ஸேவிக்கும் மஹாலக்ஷ்மியையும் ஆதரிப்பதில்லை. உம்மிடத்தில் சேவிக்கக்கூடிய குணங்கள் யாவும் இருக்கின்றன்.

அப்படியிருக்க, ப்ராஹ்மணர்களுடைய பாத தூளியும் ஸ்ரீ வத்ஸமென்ற அடையாளமும் உம்மைப் பரிசுத்தப் படுத்துகிறதென்று எப்படிச் சொல்லக் கூடும்? பாதத்திலிருக்கும் துளஸி மாலையிலிருக்கும் வண்டைப் பார்த்து லக்ஷ்மீதேவியானவள் 'இந்த வண்டு சாரத்தைக் கிரஹிக்கும் ஸ்வபாவமுள்ளது, சபல ஸ்வபாவமுள்ளது. இதுவும் பகவானுடைய பாதத்திலிருக்கும் துளஸியில் ரமிக்கிறது, ஆகையால் பாதத்தின் வாவண்யம் அதிகம் ஆனதுபற்றி நான்

மார்பிலிருந்தாலும் ஸபத்னியாகிய துளஸியுடன் பாதத்தைச் சேவிப்பேன், என்று அனுசரிக்கிறாள். (அவளை நீர் ஆதரிக்கிறதில்லை) தர்ம மூர்த்தியாகிய உமக்கு மூன்று யுகங்களில் மூன்று பாதங்கள் இருக்கின்றன. (தபஸ், சௌசம், தயை) ப்ராஹ்மணர்களுக்காகவும். தேவர்களுக்காகவும், இந்த ஸ்தாவர ஜங்கமங்களடங்கிய ஜகத்தை சத்வ குணம் பொருந்தியதும், வரத்தைக் கொடுக்கிறதுமான உம்முடைய சரீரத்தால் அதற்கு விகாரமான ரஜஸ் தமஸ் ஆகிய இவைகளை அடக்கிக் காப்பாற்றுகிறீர். உம்மால் காப்பாற்ற வேண்டிய ப்ராமணோத்தமர்கள் உடைய கூட்டத்தைப் பிரியமான வார்த்தையாலும் பூஜையாலும் நீர் காப்பாற்றாமற்போனால், வேத மார்க்கமானது கெட்டுப் போய்விடும். லோகத்தில் சிறந்தவனால் அனுஷ்டிக்கப்படும் தர்மத்தையே மற்றவர்கள் பிரமாணமாகக் கொள்கிறார்கள். சத்வ குண நிதியும் ஜனங்களுக்கு க்ஷேமத்தைச் செய்ய விரும்பியவரும், தமது சக்தியால் தர்ம விரோதிகளை நாசஞ் செய்பவருமாகிய உமக்கு வேத மார்க்கம் கெட்டுப் போவது அபிதமல்ல. ப்ராஹ்மணர்களை வணங்குவதால் ஜகத்பதியாகிய உம்முடைய தேஜஸ் குறைகிறதில்லை. அது உமக்கு விளையாட்டேயாம். ஓ ஈச! இவர்களுக்கு நீர் எந்தச் சிக்ஷையை விதித்தாலும் ஜீவனத்தை ஏற்படுத்தினாலும் அதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம் அபராதஞ் செய்யாதவர்களான இவ்விருவர்களையும் நாங்கள் சபித்தபடியால் எங்களுக்கு தகுதியான சிக்ஷையை விதியும்" என்றார்கள்.

26. அதனைக் கேட்ட பகவான் "ஓ ப்ராஹ்மணர்களே!

இந்தப் பார்ஷதர்களிருவரும் அசுரஜன்மத்தை அடைந்து அந்த ஜன்மத்தில் கோபத்தால் மனத்தை என்னிடத்திலேயே செலுத்துவதாகிய யோகத்தைச் செய்து மறுபடியும் என்னுடைய சமீபத்தை அடைவார்கள். உங்களால் செய்யப்பட்ட சாபமானது என்னால் கொடுக்கப்பட்டதென்றே நினையுங்கள் என்றார்.

27–28. பின்பு அந்த மஹரிஷிகள் நேத்ரானந்தத் திற்கு பாத்திரமாயும், வேறு பிரகாசத்தை அபேக்ஷியா மல் சுயமாய்ப் ப்ரகாசிப்பவருமான ஸ்ரீ மஹாவிஷ்ணு வையும் அவருக்கு இருப்பிடமான வைகுண்ட த்தையும் பார்த்து, பகவானை பிரதக்ஷிணமாகச் சுற்றி நமஸ்காரஞ் செய்து அவரிடம் விடைபெற்று விசேஷ ஆனந்தத்து டன் மஹாவிஷ்ணுவின் விபூதியைப்பற்றிக் கொண்டாடிக்கொண்டு சென்றார்கள்.

29–37. பகவான் தம்முடைய பார்ஷதர்கள் இருவரையும் நோக்கி "நீங்கள் பயப்படவேண்டாம் உங்களுக்கு க்ஷேமமுண்டாகும். உங்களுடைய சாபத்தைப் போக்கடிக்க நான் ஸமர்த்தனானாலும் ப்ரஹ்ம தேஜஸ்ஸை அடக்க எனக்கு இஷ்டமில்லை. மேலும் முன்னொருகாலத்தில் நான் பிரளய கலகத்தால் தனித்திருக்கும்போது (அந்தப்புரத்திலிருந்து வெளியில் போன லக்ஷ்மீதேவியை) அந்தப்புரத்தில் பிரவேசிக்கும் லக்ஷ்மீதேவியைத் தடுத்தபடியால் உங்களுக்கு இந்த விஷயம் லக்ஷ்மீயினாலேயே சொல்லபட்டிருக்கிறது. ஆதலால் ப்ராஹ்மண அவமானத்தின் பலனை அனுபவித்து அந்த ஜன்மத்தில் விரோதத்தால் என்னை எப்பொழுதும் தியானம் செய்து சொற்ப

காலத்தில் என்னுடைய சமீபம் வருவீர்கள் என்று பகவான் த்வாரபாலகர்களுக்கு ஆக்ஞாபனம் செய்து அநேக விமானங்களுக்கு அலங்காரமாகவும், எல்லாவற்றிற்கும் மேலான காந்தி பொருந்தியதுமான தமது ஸ்தானஞ் சென்றார். பிறகு அந்தத் தேவ சிரேஷ்டர்கள் இருவரும் தடுக்க முடியாத ப்ரஹ்ம சாபத்தால் கர்வமற்றவர்களாக ஆனார்கள்.

ஓ குழந்தைகாள்! வைகுண்டத்திலிருந்து அவர்கள் விழும்போது விமானங்களிலிருப்பவர்கள் ஹா!ஹா! என்று கதறினார்கள். அந்தப் பார்ஷதர்களே காசியபருடைய வீரியத்திற்குத் திதியின் கர்ப்பத்தில் உண்டானவர்கள். இரட்டைப் பிள்ளைகளான அந்த அசுரர்களுடைய தேஜஸ்ஸால் அப்பொழுது உங்கள் உடைய தேஜஸ் குறைந்தவிட்டது. ஆனாலும் பகவான் க்ஷேமத்தைச் செய்வார். அவர் ஸகல ஜகத்தையும் படைத்தவர். காப்பாற்றுகிறவர் சம்கரிப்பவர் எல்லா வற்றிற்கும் முந்தினவர். அவருடைய யோக மாயை யோகேசர்களாலும் அறியமுடியாதது. அவரைச் சார்ந்தவர்களான நமக்கு அவரே க்ஷேமத்தைச் செய்வார். இந்த விஷயத்தில் நம்முடைய யோசனை பயன்படாதது என்று சொன்னார்.

அத்தியாயம் 17

திதிக்குப் புத்திரர்கள் பிறந்தது

1–15 இப்படி ப்ரஹ்மதேவரால் சொல்லப்பட்ட காரணத்தைக் கேட்டு தேவர்கள் எல்லோரும் சம்சயம் அற்றவர்களாக ஸ்வர்க்கம் சென்றார்கள். திதியானவள் தனது பர்த்தாவினுடைய கட்டளையினால் புத்திரன் உடைய சரிதத்தில் சந்தேகமுள்ளவளாக ஆயிரம் வருஷங்களைக் கழித்தாள். பிறகு இரண்டு குமாரர் களைப் பெற்றாள். அவ்விருகுழந்தைகள் பிறக்கும் போது பூமியிலும் அந்தரிக்ஷத்திலும், த்யுலோகத்தி லும் வரப்போகின்ற பயத்தைக் காட்டும் அநேக உத்பாதங்கள் உண்டாயின. மலைகளுடன் பூமி அசைந்தது. ஆகாசம் முழுவதும் ஜ்வலித்தது. குறைக் கொள்ளிகளும் இடிகளும் விழுந்தன. தூமகேதுக்கள் காணப்பட்டன. அடிக்கடி பூதாகார சப்தத்துடன் காற்றானது மரங்களை வேரோடு பிடுங்கிற்று. அந்தக் காற்றுக்கு தூளியே த்வஜமாகவும், காற்றின் ஸமூகம் ஸைன்யமாகவும் இருந்தன. சிரிப்பது போன்ற மின்னல்களுள்ள மேகங்களால் தேஜஸ் மறைக்கப்பட்டது, மேலும் ஆகாசமானது இருளால் சூழப்பட்டது. சமுத்திரத்தின் மத்தியிலிருக்கும் மகரம் முதலிய ஜந்துக்கள் கலங்கின. அலைகள் உயரக்கிளம்பின. கிணறு, குளம் முதலியவை கலங்கின. அவைகளிலுள்ள தாமரைகள் உலர்ந்து போயின. சந்திரன், சூரியர் இவர்களுக்கு ராஹுகக்ராஸம் நேர்ந்தது. (கிரஹணம்.)

மேலும் அவர்களைச் சுற்றிக் கோட்டை கட்டப் பட்டது, மேகமில்லாதபோது கர்ஜிதம் உண்டாயிற்று.

அதனால் குகை முதலிய இடங்களில் எதிரொலியும் உண்டாயிற்று. கிராமங்களில் பெண் நரிகள் அக்கினியைக் கக்கிக் கொண்டு பயங்கரமாக ஊளை யிட்டன. கோட்டான்களும், நரிகளும் சப்தித்தன, நாய்கள் பாடுகின்றவை போலும், அழுகின்றவை போலும் தலையைத் தூக்கிப் பலவகையாக்கக் குரைக்க ஆரம்பித்தன. ஓ விதுர! கழுதைகளும் கூட்டம் கூட்டமாகக் கூர்மையான குளம்புகளால் பூமியைப் பிளந்தும் தங்களுடைய ஜாதிக்குரியபடி சப்தித்தும், மதமுள்ளவைகளாக ஓடின. கழுதைகளின் சப்தத்தைக் கேட்டுப் பயந்து பறவைகள் தங்களுடைய கூடுகளிலிருந்து பூமியில் விழுந்தன. இடைச்சேரியி லும், காடுகளிலுள்ள பசுக்கள் (மிருகங்கள்) மேற்சொல்லிய சப்தத்தால் நடுங்கி மூத்திரத்தை விட்டதும் அன்றிச் சாணத்தையும் போட்டன. மேலும் பசுக்கள் பயந்தன; இரத்தங்களைக் கறந்தன. வருஷித்தன. தேவதா பிரதிமைகள் அழுதன. காற்றில்லாத போது மரங்கள் கீழே விழுந்தன. பாப கிரஹங்கள் சுபக் கிரஹ நக்ஷத்திரங்களையும் அதிக்ரமித்துச் சென்றன (அதிசாரம்) வக்ராதியால் உபத்திரவித்தன; ஒன்றுக் கொன்று மேற்காட்டியவை களும், மற்றவைகளுமாகிய அபசகுனங்களை கண்டு அவைகளின் உண்மையை அறியாதவர்களான எல்லாரும் பிரளயம் நேர்ந்துவிட்டதென்று நினைத்தார்கள். ப்ரஹ்மதேவருடைய புத்திரர்களான சனகர் முதலியவர்கள் மாத்திரம் பயப்படவில்லை.

19–31 அந்த ஆதிதைத்யர்கள் இருவரும் (திதியின் புத்திரர்கள் தைத்யர்கள்) தங்களுடைய பௌருஷத்தை வெளியிட்டுக் கொண்டு கருங்கல் போல்

வளர்ந்தார்கள்; இவர்களுடைய சுவர்ண கிரீடங்கள் உடைய நுனிகள் ஆகாயத்தை ஸ்பர்சித்திருந்தன. தோள்வளைகளுள்ள கைகள் திக்குகளின் எல்லை வரையிற் சென்றன. அரைநாண் முதலியவையுள்ள இடுப்பானது சூரியமண்டலத்திற்கு மேலாக இருந்தன. அவர்களுடைய அடி வைப்பினால் பூமி அசைந்தது. அப்பொழுது மாரீசர் அவ்விருவர்களுக்குள் எவனைத் திதியானவள் முதலில் பெற்றாளோ, அவனுக்கு ஹிரண்யாக்ஷனென்றும், தம்முடைய தேகத்திலிருந்து முதலில் திதியிடம் பிரவேசித்த வீரியத்தால் உண்டானவனுக்கு ஹிரண்யகசிபு என்றும் பெயர் வைத்தார். அந்த ஹிரண்யகசிபுவானவன் ப்ரஹ்ம தேவரிடம் வரம் பெற்று மிருத்யு பயமில்லாதவனாகி, கர்வமடைந்து உலகபாலர்களை ஜயித்து, ஸகல உலகங்களையும் ஸ்வாதீனமாக்கிக் கொண்டான். அவனுடைய தம்பியாகிய ஹிரண்யாக்ஷன் என்பவன் தமயனிடத்தில் விசேஷ ப்ரீதியுள்ளவன். மேலும் அவன் ஒவ்வொரு நாளும் கதாயுதத்தைக் கையில் பிடித்துக் கொண்டு யுத்தஞ் செய்ய விரும்பினவனாகத் தகுந்த எதிரியைத் தேடி ஸ்வர்க்கத்தில் அலைந்தான். அவன் ஸகிக்க முடியாத வேகமுள்ளவன்! அவன் அணிந்திருக்கும் ஆபரணமாகிய தங்கச் சலங்கைகள் இனிமையாகச் சப்திக்கின்றன. அவன் வைஜயந்தி என்னும் மாலையைத் தரித்தவன்; பெரிதாகிய கதாயுதத்தை தோளில் வைத்துக் கொண்டவன்; மனோ பலத்தாலும், தேகபலத்தாலும் கர்வமுள்ளவன்; ஒருவராலும் ஜயிக்க முடியாதவன்; எவரிடத்திலும் பயமற்றவன்; அப்படிப்பட்ட அந்த அசுரனைக் கண்டு கருடனைக் கண்ட சர்ப்பங்கள் போல் தேவர்கள் எல்லாரும் ஓளிந்து கொண்டார்கள்.

அந்த அசுர சிரேஷ்டன் தன்னுடைய தேஜஸ்ஸால் பயந்து இந்திரன் முதலிய தேவர்கள் ஒளிந்து கொண்டார்களென்று தெரிந்து கொண்டு மதத்துடன் கர்ஜித்தான். மிக்க பலமுள்ள அந்த அசுரன் அவ்விடத்திலிருந்து திரும்பி மிக்க ஆழமுள்ளதும், பயங்கரமான சப்தமுள்ளதுமான சமுத்திரத்தில் மதங்கொண்ட யானைபோல் விளையாடுவதற்காகப் பிரவேசித்தான். அவனைக் கண்ட மாத்திரத்தில் வருணனுடைய சைனியங்களாகிய ஜலஜந்துக்கள் பயத்துடன் மனங்கலங்கி அவனால் அடிக்கப்படாமல் இருந்தாலும் அவனுடைய தேஜஸ்ஸினாலேயே ஜயிக்கப்பட்டவைகளாக வெகுதூரம் ஓடிற்று.

அப்பொழுது அவன் தன்னுடைய தச்சுகளால் மிகுந்த அலைகளை உண்டுபண்ணிக் கொண்டு எஃகினால் செய்யப்பட்ட கதாயுதத்தால் அடித்துக் கொண்டு அநேக வருஷங்கள் சமுத்திரத்திலேயே சஞ்சரித்துப் பின்பு வருணனுடைய பட்டணம் சென்றான். அது விபாவரி என்ற பெயருள்ளது. அவ்விடத்தில் அவன் ஜலஜந்துக்களுக்கு அதிபதியும் பாதாள உலகத்தைக் காப்பாற்றுகிறவருமான வருணனைக் கண்டு சிரித்துக் கொண்டு பரிகாசத் திற்காக அவரை நமஸ்கரித்து, தாழ்ந்தவன் போல் அவரை நோக்கி, "ஓ மேலான அரசரே! நீர் உலக பாலர்களுக்கு அதிபதி; மிகுந்த கீர்த்தியுள்ளவர்; கர்வமுள்ளவர்களும் தங்களை வீரர்களென்று நினைத்தவர்களுமான துஷ்டர்களுடைய கர்வத்தை அடக்கக் கூடியவர், நீர் முன்காலத்தில் தைத்தியர் களையும், தானவர்களையும் ஜயித்து ராஜசூயமென்ற யாகத்தைச் செய்தீரல்லவா? ஆனது பற்றி

இப்பொழுது என்னுடன் யுத்தம் செய்யவேண்டும்" என்றான். இப்படி மிகுந்த கர்வத்துடன் பரிகாசம் செய்யும் அந்த ஹிரண்யாக்ஷனை நோக்கிச் சமுத்திர ராஜன் கோபத்தை அடக்கிக் கொண்டு, ஓ அசுர சிரேஷ்ட! நான் யுத்தஞ் செய்வது முதலியவகைளில் உற்சாகத்தை விட்டுவிட்டேன்.(சாந்தியை அடைந்து இருக்கிறேன்.) ஆனால் உன்னுடன் யுத்தம்செய்யத் தகுந்த புருஷன் பகவான் ஒருவரே, வேறு யாராலும் முடியாது. அவர் புராண புருஷர். உன்னைப் போன்ற வீரர்கள் அவரைத் துதிக்கிறார்கள், அவர் உன்னைப் போல் அசத்தாயிருப்பவர்களைக் கொல் வதற்காகவும், சாதுக்களை அனுக்ரஹிப்பதற்காகவும் பலவகையாக அவதரிக்கிறார். அவரிடஞ் சென்றால் கர்வமற்றவனாகி யுத்தகளத்தில் படுப்பாய், நாய்கள் உன்னைச் சுற்றிக் கொள்ளும், என்று சொன்னார்.

அத்தியாயம்–18

யக்ஞவராஹருக்கும் ஹிரண்யாக்ஷனுக்கும் யுத்தம்

1–5. மிகுந்த மதமுள்ளவனும் கம்பீர மனமுள்ளவனுமான அந்த ஹிரண்யாக்ஷன் சமுத்திர ராஜனுடைய வார்த்தையைக் கேட்டு நாரதரிடமாகப் பகவானிருக்குமிடத்தைத் தெரிந்து கொண்டு வெகு வேகமாகப் பாதாளலோகம் சென்றான். அவ்விடத்தில் சிங்கப் பல்லால் பூமியை உயரத்தூக்கி கொண்டு இருக்கும் வாரஹரூபியான பகவானைக் கண்டான். அவர் எல்லோரையும் ஜயிப்பவர். அவருடைய கண்கள் சிவந்தவைகளாக இருந்தன. அவைகளால் அசுரனுடைய காந்தியானது குறைந்தது, அவரைக் கண்ட அவன், "ஆச்சரியம். காட்டில் ஸஞ்சரிக்கும் மிருகமாகிய பன்றிக்கு இவ்வளவு தேஜஸ் இருக்கிறதே, என்று சிரித்தான். பின்னும் அவன் அவரை நோக்கி, "ஓ தேவர்களுக்குள் அதமனே! பன்றி யுருவங்கொண்ட வரே! ஒன்றையும் அறியாதவனே! பாதாள வாசிகளாகிய எங்களுக்கு ப்ரஹ்மதேவரால் இந்தப் பூமி கொடுக்கப்பட்டது, ஆனதால் இவளை விட்டுவிடு, நான் பார்த்திருக்கும் போது இந்தப்பூமியுடன் நீ க்ஷேமமாகத் திரும்பிப் போகமுடியாது. நமக்குச் சத்துருக்களாகிய தேவர்கள் உன்னை யுத்தத்தில் பலி கொடுப்பதற்காகவே வளர்ந்திருத்திருக்கிறார்களே ? நீ அசுரர்களை மறைத்திருந்து மாயையால் ஜயித்தவன். யோகமாயா பலமுள்ளவன் சொற்ப பராக்கிரம முள்ளவன். அப்படிப்பட்ட உன்னைக் கொன்று என் மித்திரர்களுடைய துக்கத்தைப் போக்கடிக்கிறேன். என்னுடைய கையிலிருக்கும் கதாயுதத்தால்

உன்னுடைய தலையை உடைக்கிறேன், அதனால் இப்பொழுது உன்னை பூஜிப்பவர்களும், முந்திய பக்தர்களுமாகிய தேவர்களும் மஹர்ஷிகளும் ஒத்தாசை இல்லாதவர்களாக ஆகிவிடுவார்களென்று சொன்னான்.

6–28. அப்பொழுது பகவான் சத்துருவினுடைய கெட்ட வார்த்தையாகிய தோமராயுதத்தால் அடிக்கப் பட்டும் தம்முடைய சிங்கப்பல்லின் நுனியிலிருக்கும் பூதேவி பயப்படுவதைப் பார்த்து அவனுடைய வார்த்தைகளைப் பொறுத்துக்கொண்டு ஜலத்தின் நடுவிலிருந்து வெளிவந்தார் அது யானையானது பெண் யானையுடன் முதலையால் பீடிக்கப்பட்டு ஜலத்திலிருந்து கிளம்பியது போலிருந்தது. அப்பொழுது அந்த அஸுரன் யானையின்டின் மகரம் போலதுபோல் அவர் பின் சென்றான். பின்னும் பயங்கரமான சிங்கப் பற்களுள்ள அந்த அஸுரன், "வெட்கமில்லாத அசத்துக்களுக்கு எதுதான் கெட்ட காரியம்" என்று இடிபோல் உரக்கச் சொன்னான். அப்பொழுது ப்ரஹ்ம தேவராலும். தேவர்களாலும் புஷ்பங்களைக் கொண்டு பூஜிக்கப்பட்டவரான அந்தப் பகவான் ஜலத்திற்கு வெளியில் வியவகார யோக்கியமாகிய இடத்தில் பூமியை வைத்து, அதில் தம்முடைய ஆதார சக்தியை ஸ்தாபித்தார்.

பின்பு, அவர் மிகுந்த கோபத்துடன், தம்மைப் பின் தொடர்ந்து வருகிறவனும் ஸ்வர்ண ஆபரணங்கள் உள்ளவனும் பெரிதான கதாயுதத்தைத் தரித்தவனும், ஸ்வர்ண மயமும் ஆச்சரயகரமுமான கவசமுள்ளவனும், கெட்ட வார்த்தைகளால் மர்மஸ்தானங்களைப்

பிளப்பவனுமாகிய அந்த அஸுரனை நோக்கி. "அட! நாங்கள் வனத்திலிருக்கும் மிருகங்களேயாம். இது உண்மையே. உன்னைப்போன்ற கிராம சிம்ஹத்தை (நாயை) தேடுகிறோம். தைரியமுள்ளவர்கள் யமனுடைய பாசத்தால் கட்டப்பட்ட உன்னுடைய ஆத்ம சிலாகையால் (தன்னைத்தானை புகழ்ந்து கொள்வது) லட்சியஞ் செய்யமாட்டார்கள். நாங்கள் பாதாளவாசிகளுடைய அடைக்கலமான சொத்தை அபகரிப்பவர்கள். வெட்கமில்லாதவர்கள் உன்னுடைய கதாயுதத்தால் வெட்டப்பட்டவர்கள். ஆனாலும் நிற்கிறோம். பலிஷ்டனாகிய உன்னுடன் விரோதத்தை உண்டுபண்ணிவிட்டு எவ்விடம் போவோம்? யுத்தத்திற்கு சன்னத்தர்களாக இருக்கிறோம். நீ காலாட் படைகளுக்கு அதிபதி, நம்மை ஜயிப்பதற்குச் சீக்கிரம் முயற்சி செய். நீ யோசனையில்லாதவன். பிரதிக்ஞையை நிறைவேற்றாதவன். சபைக்குரியவனல்ல, ஆதலால் நம்மைக் கொன்று பந்துக்களுடைய துக்கத்தை நிவர்த்திசெய்" என்றார்.

இப்படிப்பரம புருஷனால் பரிஹசிக்கப்பட்ட அஸுரன் மஹாசர்ப்பம் போல் மிகவும் கோபத்தால் கலங்கிய இந்திரியங்களுள்ளவனாகி பகவானுடைய சமீபம் வந்து கதாயுதத்தால் அவரை அடித்தான். சத்ருவாகிய அசுரன் மார்பில் கதாயுதத்தால் அடிக்கும்போது பகவான் அந்த அடி தம்முடைய சரீரத்தில் படாமலிருக்கும்படி குறுக்காக ஒதுக்கங் கொடுத்து ஏமாற்றினார். அது மிருத்யுவை யோகா ருடன் வஞ்சித்தது போலிருந்தது கோபமுள்ளவனும், பரபரப்பினால் உதட்டைக் கடித்துக்கொள்ளுகிறவனும், கதாயுதத்தை அடிக்கடி சுழற்றிக்கொண்டு

இருப்பவனுமான அசுரனைப் பகவான் எதிர்த்தார். அசுரன் கதாயுதத்தால் பிரபுவாகிய பகவானுடைய வலத்தோளை உத்தேசித்து அடித்தான்.

ஓ விதுர! அதன் அடி தம்மீது படுவதற்கு முன்னமேயே பகவான் யுத்தத்தை நன்றாக அறிந்த வராகையால் தம்முடைய கதாயுதத்தால் சத்துருவின் கதாயுதத்தை அடித்தார், இப்படி ஹிரண்யாக்ஷனும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் ஒருவரை யொருவர் ஜயிக்கவேண்டும் என்ற விருப்பத்துடன் மிகுந்த முயற்சியுள்ளவர்களாகப் பெரியவையான கதாயுதங்களைக் கொண்டு அடித்துக்கொண்டார்கள். இப்படி அவ்விருவர்களும் பூமிக்காக யுத்தம் செய்தார் கள். கூர்மையான கதைகளால் அவர்களுடை ய சரீரம் அடிக்கப்பட்டு இரத்தம் பெருகியது. அதனால் இருவர்களுக்கும் அதிகக் கோபமுண்டாயிற்று. பலவகையான நடையைக் காண்பித்தார்கள். அந்த யுத்தமானது மதித்த இரண்டு விர்ஷபங்கள் பசுவின் நிமித்ததம் சண்டை செய்வது போலிருந்தது. ஓ குரு வம்சத்தில் பிறந்தவரே! யக்ஞவராஹ ரூபியான பகவானுக்கும், அசுரனுக்கும் பூமியின் நிமித்தமாக நேர்ந்த யுத்தத்தைப் பார்ப்பதற்குப் ப்ரஹ்மதேவர் அவ்விடம் அனேக மஹரிஷிகளுடன் வந்தார். மேலும் ஆயிரம் மஹரிஷிகளுக்கும் அதிபதிகளாகிய அவர் பராக்கிரம கர்வமுள்ளவனும், பயமற்றவனும் செய்வதற்குப் பதில் செய்பவனும், பதில் செய்யமுடியாத பராக்கிரமமுள்ளவனுமாயிருக்கும் அஸுரனைப் பார்த்து, ஆதிவராஹ ஸ்வரூபியும். புராண புருஷனுமான ஸ்ரீமந் நாராயணனை நோக்கி, 'ஓ தேவ! உம்முடைய பாதங்களைச் சரணமடைந்த

தேவர்களுக்கும், ப்ராஹ்மணர்களுக்கும், பசுக்களுக்கும், அபராதஞ் செய்யாத பிராணிகளுக்கும் இந்த அஸுரன் கெடுதியைச் செய்தவன். பயத்தைச் செய்தவன் கெட்ட காரியத்தைச் செய்தவன், நம்மிடமிருந்தும் வரத்தை அடைந்தவன். தன்னுடன் யுத்தஞ் செய்யத் தகுந்த வீரனைத் தேடிக்கொண்டு உலகம் முழுவதும் அலைந்தவன். இவனை எதிர்த்துயுத்தம் செய்பவன் உலகத்திலொருவனுமில்லை. மிக்க உபத்திரவத்தைச் செய்தவன் மிக்க மாயாவி. கர்வமுள்ளவன். பயம் இல்லாதவன். மிக்க அசத்து, ஆதலால் ஓ தேவ! கோபங்கொண்ட ஸர்ப்பத்தினிடம் சிறுவன் விளையாடுவதுபோல் அவனுடன் விளையாடுவது உசிதமல்ல ஓ நாசமற்றவரே! பயங்கர உருவமுள்ள இந்த அஸுரன் தனக்குப் பலம் விருத்தியடையக்கூடிய காலத்தை அடைந்து விருத்தியடைவதற்கு முந்தியே பாபியாகிய இவனை நீர் உம்முடைய மாயா பலத்தால் நாசஞ் செய்யும். இந்த சந்தியா காலமானது மிகவும் கோரமானது. உலகங்களுக்கு நாசத்தைச் செய்யக்கூடியது. ஓ ஸகல ஜகத்ஸ்வரூபியாயிருப்பவரே! அபிஜித் என்னும் சுபமாகிய காலம் வந்துவிட்டது. தேவர்களுக்கு ஜயத்தை உண்டுபண்ணும். உமக்கு மித்திரர்களான எங்களுடைய க்ஷேமத்திற்காக இவனைக் கொல்லுக. தெய்வச் செயலால் இந்த அஸுரன் தனக்கு மிருத்யுவாக முன்னமே ஏற்பட்டிருந்த உம்மிடம் சேர்ந்தான். ஆதலால் இவனைக் கொன்று உலகத்திற்கு க்ஷேமத்தை உண்டு பண்ணும், என்று பிரார்த்தித்தார்.

அத்தியாயம்–19

ஹிரண்யாக்ஷ வதம்

1–29 அதனைக் கேட்ட பகவான் ப்ரஹ்மதேவர் கபடமற்றவராகச் சொல்லுகிறாரென்று நினைத்துச் சிரித்து (கால ஸ்வரூபியான என்னாலும் நல்ல முகூர்த்தம் எதிர்பார்க்கப்பட வேண்டுமாவென்று) ப்ரீதியுள்ள பார்வையால் அந்த வார்த்தையை அங்கீகரித்தார். பின்பு தமக்கெதிரில் பயமில்லாமல் சஞ்சரிக்கும் சத்ருவினுடைய கன்னத்திற்குக் கீழாகக் கதாயுதத்தால் அடித்தார். பிறகு அந்த அசுரன் தன்னுடைய கதையால் பகவானுடைய கதாயுதத்தை அடித்தான். அதனால் கதையானது அடிக்கப்பட்டுப் பகவானுடைய கையிலிருந்து சிதறிக் கீழே விழுந்தது. அது மிகவும் ஆச்சரியமாக விருந்தது. அப்பொழுது அஸுரன் ஆயுதமில்லாமலிருக்கும் பகவானைப் பார்த்து அது சத்ருவை ஜயிக்க தகுந்த சமயமானாலும் தர்மத்தை நினைத்துக் கொண்டு அடிக்க வில்லை. இப்படிப் பகவானுடைய கதை உடைந்தபின் தேவர்கள் ஹா ஹா என்று கதறும்போது பகவான் அந்தத் தர்மத்தைப் பெரிதாக நினைத்ததுமின்றிச் சக்கரத்தை நினைத்தார்.

அப்பொழுது அவருடைய மாஹாத்மியத்தை நன்றாக அறியாதவர்களான தேவர்கள் யுத்தத்தில் தைத்தியர்களுக்குள் தாழ்ந்தவனும் தம்முடைய பார்ஷதர்களுக்குள் முக்கியனுமான ஹிரண்யாக்ஷனுடன் யுத்தஞ் செய்பவரும் யுத்தத்தில் பரப்பரப்புள்ள சக்ராயுதத்தைத் தரித்தவருமாகிய பகவானைப்

பார்த்து, 'உமக்கு க்ஷேமமுண்டாகும்; இந்த அசுரனைக் கொல்லும், என்று சொன்னதுமல்லாமல் நான்கு புறத்திலும் பலவகையாகப் பேசிக்கொண்டார் கள். இம்மாதிரியான தேவர்களுடைய வார்த்தையைக் கேட்டும் தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரும், சக்ராயுதத்துடன் யுத்தத்திற்கு ஸன்னத்தராயிருப் பவருமான பகவானைப் பார்த்தும், அந்த அஸுரன் மிக்க கோபத்துடன் உதட்டைக் கடித்துக் கொண்டான். மேலும் பயங்கரங்களாகிய சிங்கப் பற்களுள்ள அவன் கண்களால் எரிப்பவன்போலப் பகவானிடம் ஓடி வந்து, 'நீ கொல்லப்பட்டாய்' என்று சொல்லிக் கதாயுதத்தால் அடித்தான். யக்ஞவராஹ ரூபியான பகவான் சத்ருவாகிய அஸுரன் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே வாயுவிற்குச் சமமான வேகமுள்ள அந்தக் கதாயுதத்தை வலக்காலால் சிரமமின்றி உதைத்தார்.

மேலும், "ஓ அஸுரனே! ஆயுதத்தை எடுத்துக் கொள். ஜயிக்க வேண்டுமென்ற விருப்பமுள்ளவனாக இருப்பதால் அதற்குத் தகுந்த முயற்சியைச் செய்" என்றும் சொன்னார். அதனைக் கேட்ட அஸுரன் அந்தக் கதையை வராஹரூபியான பகவானை உத்தேசித்துப் ப்ரயோகித்தான். தம்மைப் பார்த்து வேகமாக வரும் அந்தக் கதையைக் கண்ட பகவான் தம்மீது விழுவதற்கு முன்னமேயே அதைப் பிடித்துக் கொண்டார். அது கருடன் பெண் சர்ப்பத்தைப் பிடித்தது போலிருந்தது. பிறகு பகவான் அந்தக் கதையை அந்த அஸுரனுக்குக் கொடுக்க விரும்பியும் அவன் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவன்

தன்னுடைய பராக்கிரமம் தடைப்பட்டபடியால் மானங் குறைந்து காந்தியற்றவனாயிருந்தான்.

மேலும், ப்ராஹ்மணனை உத்தேசித்து ஆபிசார கர்மத்தைச் செய்பவர் போல் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை உத்தேசித்து ஜ்வலிக்கும் அக்கினி போன்ற மூன்று முனையுள்ள சூலத்தைப் ப்ரயோகித்தான். அந்த அஸுரனால் ப்ரயோகிக்கப்பட்டதும் ஆகாசத்தின் மத்தியில் காந்தியுடன் ப்ரகாசிப்பதுமான அந்தச் சூலத்தைப் பகவான் கூர்மையான முனையுள்ள சக்ராயுதத்தைக் கொண்டு இந்திரன் கருடனுடைய சிறகுகளை வெட்டியது போல வெட்டினார். பின்பு பகவானுடைய சக்ராயுதத்தால் தன் சூலம் வெட்டப் பட்டதைப் பார்த்த அஸுரன் மிக்க கோபத்துடன் கையை முஷ்டி பண்ணிக் கொண்டு மிகுந்த விஸ்தாரமுள்ளதும், விபூதிகளுள்ளதுமான அவருடைய மார்பில் குத்திக் கர்ஜித்துக் கொண்டு கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்தான்.

ஓ விதுரரே! அந்த ஆதிவராஹமூர்த்தியாகிய பகவான் இம்மாதிரி அவனால் அடிக்கப்பட்டும் புஷ்ப மாலையால் அடிக்கப்பட்ட யானைபோல அசையவே இல்லை. பின்பு அந்த அஸுரன் யோகமாயைக்கு அதிபதியாகிய பகவானிடத்தில் பலவகையான மாயையைச் செய்தான். அவைகளைக் கண்டு ஜனங்கள் ப்ரளய காலம் வந்துவிட்டதென்று நினைத்தார்கள். காற்று மிகவும் கடுமையாக வீசிற்று. தூளிகளாலுண்டான இருள் பரவிற்று. யந்திரங்களால் எறியப்பட்டது போல எல்லாத் திக்குகளிலும் கற்கள் விழுந்தன. ஆகாயத்திலிருக்கும் நட்சத்திரங்களின்

தேஜஸ் குறைந்தது. மேகங்கள், மின்னல், கர்ஜனம் ஆகிய இவைகளுடன் அமேத்யம், மூத்திரம் ஆகிய துர்நாற்றமுள்ளவைகளையும், மயிர்களையும், எலும்புகளையும் வர்ஷித்தன. மலைகள் பலவகையான ஆயுதங்களை விட்டன. மேலும் திக்கையே வஸ்திர மாய் உடையவர்களும், அவிழ்ந்த தலை மயிர்கள் உள்ளவரும் சூலாயுதத்தை தரித்தவர்களுமான ராக்ஷஸ ஸ்திரீகள் காணப்பட்டார்கள். யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், காலாட்படை, குதிரைபடை, இரதங்கள், யானைகள் முதலிய ஸைனியங்களால் கடுமையான வார்த்தைகள் சொல்லப்பட்டன. இம்மாதிரியான மாயையைப் பார்த்து மூன்று ஸவனங்களாகிய பாதங்களுள்ள அந்த மாயைகளை நாசம் பண்ணக் கூடிய தம்முடைய சக்ரத்தைப் பிரயோகித்தார்.

அப்பொழுது திதி தேவியானவள் தன்னுடைய பர்த்தாவாகிய மாரீசருடைய கட்டளையை நினைத்துக் கொண்டாள். அப்பொழுது அவளுடைய ஹிருதயம் ஆனது நடுங்கிற்று. அவளுடைய ஸ்தனத்திலிருந்து இரத்தம் பெருகிற்று. பின்பு அந்த அஸுரன் தான் செய்த மாயைகள் வீணாகிவிட்டதைப் பார்த்துப் பகவானுக்கு எதிரில் வந்து கோபத்துடன் இருகைகளால் அவரைக் கட்டி வஜ்ரம் போன்ற முஷ்டிகளால் அடித்தான். அப்பொழுது; பகவான் அந்த அஸுரனுடைய கன்னத்தில் தமது கையால் அடித்தார். அது மஹேந்திரன் விருத்திராசுரனை அடித்தது போலிருந்தது. ஸகல உலகங்களையும் ஜயிப்பவரான பரமபுருஷன் விளையாட்டாகச் சத்துருவை அடித்தபொழுது அவனுடைய சரீரம் நடுங்கிற்று. கண்களிரண்டும் வெளியில் வந்தன.

கைகளும், கால்களும், கழுத்தும் சிதறின. இப்படி அவனுடைய சரீரமானது பெருங்காற்றினால் பெரிய மரம் வீழ்வது போலக் கீழே விழுந்தது. இப்படிப் பகவானால் அடிக்கப்பட்டுப் பூமியில் படுத்தவனும், விசேஷ தேஜஸுள்ளவனும், பயங்கரமாகிய சிங்கப் பற்கள் உள்ளவனும், உதட்டைக் கடித்தவனுமாகிய அஸுரனைப் ப்ரஹ்மா முதலியவர்கள் பார்த்து "ஆச்சரியம், இம்மாதிரியான மரணம் யாருக்குக் கிடைக்கும்? யோகிகள் மோக்ஷத்தை அடைய விரும்பி எவரை ரஹஸ்யத்தில் சித்தத்தை ஒருவகைப் படுத்தித் தியானஞ் செய்கிறார்களோ, அந்தப் பரம புருஷனுடைய முகத்தை தரிசித்துக் கொண்டே அவரால் அடிக்கப்பட்டு அஸுரன் சரீரத்தை விட்டான். இவர்கள் பகவானுடைய பார்ஷதர்கள், பாபத்தால் இம்மாதிரியான ஜன்மத்தை அடைந்தவர் கள். இன்னும் சில ஜன்மத்திற்குப் பிறகு தங்களுடைய பதத்தை அடைவார்கள்" என்று சொல்லிக் கொண்டார்கள்.

30 அப்பொழுது தேவர்கள் பகவானை நோக்கி, "ஓ ஈச! ஸகல யாகங்களை விஸ்தரிப்பவரும், பரிபாலன சமயத்தில் சத்வார்த்தியாக அவதரிப்பவருமாகிய உமக்கு அடிக்கடி நமஸ்காரம் செய்கிறோம். ஜகத்திற்கு உபத்திரவத்தைச் செய்பவனாகிய இந்த அஸுரன் எங்களுடைய பாக்கியத்தால் கொல்லப் பட்டான். நாங்கள் கவலையற்றவர்களாக ஆனோம்" என்று ஸ்தோத்திரஞ் செய்தார்கள்.

31–38 ஸஹிக்க முடியாத பராக்கிரமமுள்ள ஹிரண்யாக்ஷனை ஆதிவராஹ ரூபியான பகவான்

கொன்று ப்ரஹ்மதேவர் முதலியவர்களால் கொண்டா டப்பட்டும் குறைவற்ற உத்ஸவமுள்ள தம்முடைய லோகம் சென்றார். "ஓ விதுர! நான் என்னுடைய குருவினிடமிருந்து தெரிந்துகொண்டபடி பகவான் வராஹாவதாரஞ் செய்து ஹிரண்யாக்ஷனைக் கொன்ற கதையைச் சொன்னேன்" என்று மைத்ரேயர் விதுரருக்கு உபதேசித்தார். ஓ பரிக்ஷித்து மஹாராஜனே! அதனைக் கேட்ட விதுரர் பாகவதோத்தமராகையால் மிகுந்த ஆனந்தமடைந்தார். உலகத்தில் புண்ய ச்லோகர்களும் (நல்வினையைக் கொடுக்கும் பெயருள்ளவர்கள்) மிகுந்த கீர்த்தியுள்ளவர்களுமாகிய அரசர்களுடைய கதையைக் கேட்பதினாலேயே சந்தோஷமுண்டாகிறது. ஸ்ரீவத்ஸமென்ற அடையாளம் உள்ள ஸ்ரீமஹாவிஷ்ணுவின் சரிதத்தைக் கேட்பதால் ஆனந்தம் உண்டாவதற்கு என்ன ஆட்சேபம்? கஜேந்திரமானது முதலையால் பிடிக்கப்பட்டு பகவான் உடைய பாதாரவிந்தத்தைத் தியானஞ் செய்யும் போது பெண் யானைகள் கதறின. அப்பொழுது அவர் யானையை அந்தக் கஷ்டத்திலிருந்து காப்பாற்றினார். கபடமற்ற மனமுள்ளவர்களும், அவரையே சரணமாக அடைபவர்களுமான மனிதர்களால் எளிதில் ஆராதிக்கக் கூடியவரும், அசத்துக்களால் ஆராதிக்க முடியாதவருமான பகவானை க்ருதக்ஞனான (செய்த உபகாரங்களை நினைப்பவன்) எவன்தான் உபாசிக்க மாட்டான்? ஆதிவராஹ மூர்த்தியின் க்ரீடாரூபமானதும், மிக்க அற்புதமானதுமான ஹிரண்யாக்ஷ வதத்தை எவன் கேட்கிறானோ, கானம் செய்கிறானோ, அனுமோதிக் கிறானோ அவன் ப்ரஹ்மஹத்யை செய்தவனானாலும், ஒரு க்ஷணத்திற்குள் சுத்தனாகி விடுகிறான். இந்த ஹிரண்யாக்ஷ வதம் என்கிற கதையானது மிகுந்த

புண்ணியத்தைக் கொடுக்கக்கூடியது; மிகவும் பரிசுத்தியை உண்டு பண்ணைக்கூடியது; தனத்தை உண்டு பண்ணைக் கூடியது; கீர்த்தியை விருத்தி செய்யக்கூடியது; தீர்க்கமான ஆயுளையும் அவரவர்கள் உடைய இஷ்டத்தையும் கொடுக்க வல்லது. யுத்தத்தில் பிராணனையும், இந்திரியங்களையும் காப்பாற்றக் கூடியது. மிகுந்த பராக்கிரமத்தைக் கொடுக்கக் கூடியது. ஓ மஹாராஜ! இக்கதையைப் பக்தியாய்க் கேட்பவர்கள் மரணமடையும் காலத்தில் ஸ்ரீமந் நாராயணனை அடைவார்கள்.

Sri Rama Nama Bank

நாம பெட்டகம்



Help Preserve Namas
from
Air, Water, Fire & Pests

Each pettagam
preserves
13 crores of
Nama

Sponsor
Steel cubboards
(Pettagam)
Rs. 3500/-

ஸ்ரீ ராம் ஜெய ராம் ஜெய் ஜெய ராம் என்ற
மஹா மந்த்ரம்

13 எழுத்துக்கள் கொண்டது.
அக்ஷரத்திற்கு 1 கோடியாக 13 கோடி கொள்ளளவு கொண்ட
பெட்டகங்களில் நாமம் ப்ரதிஷ்டை
செய்யப்படுகிறது.இப்பெட்டகங்கள் நாமத்தை ஈரம், காற்று,
மழை, தீ, பூச்சி இவைகளிலிருந்து சுமார் 60 வருடத்திற்கு
குறையாமல் நாமத்தைப் பாதுகாத்து பல கோடி நபர்கள் தர்சன
மாத்திரத்தினால் நாம ஸ்மரணம் பெற ஏதுவாகும்.

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

பாகம் –2

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்கந்தம் 3 அத்தியாயம் 20 முதல்
ஸ்கந்தம் 5 அத்தியாயம் 6 வரை

Released by Maran's Dog, Toronto , Canada

இஞ்சிக்கொல்லை
R. சிவராம சாஸ்திரிகள்
அவர்களால் 1908ல் மொழி
பெயர்க்கப்பட்டது.

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ராம நாம வங்கியின் ப்ரசாரப் பிரசுரப் பிரிவு
ராம மந்திரம் –2, விளாயகம் தெரு,
சென்னை – 600 033. ☎: 24893736

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

TITLE	:	SRIMAD BHAGAVATHAM, TAMIL VACHANAM
AUTHOR	:	INZIKOLLAI R. SIVARAMA SASTRIGAL WRITTEN IN 1908
SIZE	:	CROWN OCTAVE
EXTENT	:	2736 PAGES CONSISTING OF SEVEN VOLUMES
PRICE	:	RS.600/ SET
FIRST EDITION	:	1996
SECOND EDITION	:	2004
THIRD EDITION	:	2007

இதுவரை செய்துள்ள புத்த ஸேவை

சிலபுத்தகங்களைப்பற்றிசிலவிசேஷகுறிப்புகள்

1. **ஸ்ரீமத் பாகவதம் ப்ரதி பத அர்த்தம்**
   மூலஸ்லோகங்கள் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும், பதப்பிரிப்பும் அர்த்தமும் தமிழில், 7 பாகங்கள் - 6224 பக்கங்கள் **1500**
2. **ஸ்ரீமத் பாகவதம் - வசனம்**
   ஸ்ரீ இஞ்சிக்கொல்லை சிவராம சாஸ்திரிகள் - 7 பாகங்கள் - 2800 பக்கம் 1908-ல் வெளியிடப்பட்டகுமிக ப்ராசீனமான மொழிபெயர்ப்பு. ஸ்ரீதரீயம், வீரராகவீயம், விஜயத் விஜியம் இவைகளின் குறிப்பை உள்ளடக்கியது. ஸப்தாஹ க்ரமமாகபிரிக்கப்பட்டுள்ளது. **600**
3. **ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் - மூலம் - தமிழில்- பெரிய எழுத்தில்**
   24,000 ஸ்லோகங்கள் கொண்டது. பல்வேறு பாராயண க்ரமங்கள், செய்முறை, நைவேத்யம்இவைகளின்பட்டியல்கள்அடங்கியது. **700**
4. **ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் - மூலம் - தமிழில்** **450**
5. **ஸ்ரீ துளஸீ ராமாயணம் - மூலமும் வசனமும்**
   ஸ்ரீமான் ஸாஹிதி வல்லப ஆத்ரேய ஸ்வாமிகள் அவர்களின் 9 ஆண்டு கால உழைப்பின் வடிவம். துளஸிதாஸரின் சரித்திரம் விஸ்தாரமாக முன்னுரையில் கொடுக்கப்பட்டுள்ளது. மூலம் அதனுடைய அர்த்தம் இரண்டும் கொடுக்கப்பட்டுள்ளது. **350**
6. **ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் - வசனம்**
   7 காண்டங்கள் - 7 பாகம் ஸ்ரீ ஸாம்பமூர்த்தி சாஸ்திரிகள் இயற்றியது. எதையும் விஸ்தரிக்காமல் எதையும்விட்டுவிடாமல் அமைந்த சிறப்பான உரைநடை **300**
7. **ஸ்ரீமத் பாகவதம் - மூலம் - தமிழில் - பெரிய எழுத்தில்**
   18,000 ஸ்லோகங்கள் கொண்டது. பாத்ம புராணம், ஸ்காந்தபுராணம்இவைகளில்கூறப்பட்டுள்ளஸ்ரீமத்பாகவதமாஹாத்மியம் அடங்கியது. பல்வேறு அட்டவணைகள்கொண்டது. **550**
8. **ஸ்ரீமத் பாகவதம் - மூலம் - தமிழில்** **250**
9. **ஸ்ரீகிருஷ்ண சைதன்யர்**
   ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் நியமனத்துடன் - ச்யாமளா. பாகவத தர்மம் பத்திரிக்கையில் தொடராக வெளிவந்ததின் நூல்வடிவம் **200**
10. **சுதர்சிங்சக்ர அவர்களின் க்ருஷ்ணலீலைகள்**
    ஸ்ரீசக்ர அவர்ஸ்ரீமத்பாகவதத்துடன்பலபுராணவிஷயங்களைஆய்ந்து க்ருஷ்ணலீலைகளை நான்கு புத்தகங்களாகதொகுத்துள்ளார்.

நந்தலாவின் மொழிபெயர்ப்பு அவ்வளவு சரளமாக உள்ளது.படித்துஇன்புறுங்கள்.

முதல்புத்தகம்- **பகவான் வாஸுதேவன்**

இதில் மதுரா லீலைகள் கொடுக்கப் பட்டுள்ளது **100**

2-ம்புத்தகம்- **நந்தநந்தன்-**

இதில் ப்ருந்தாவன லீலைகள் விஸ்தரிக்கப் பட்டுள்ளது. **200**

3-ம்புத்தகம்- **பார்த்தஸாரதி.**

இதில் ஹஸ்தினாபுர லீலைகள் விவரிக்கப் பட்டுள்ளது. **100**

4-ம்புத்தகம்- **த்வாரகாதீசன் -**

ஸ்ரீமத் பாகவதம் உத்தரார்தம் கதா பாகம். ருக்மிணி கல்யாணம்முதல் அஷ்டமஹிஷிகளின் திருமணம் மற்றும் ஏராளமான ஸம்பவங்கள் கோர்வையாக சொல்லப்பட்டுள்ளது. **100**

11. திருப்பாவை - உபன்யாஸம்

திருப்பாவை-உபன்யாஸம் - ஸ்ரீக்ருஷ்ணப்ரேமிஸ்வாமிகள்அருளியது.

ஒலி நாடாவிலிருந்து எழுதியவர் - ஸ்ரீமதி லதாசப்ரமண்யம் **100**

12. ஸ்ரீ பகவன் நாம ரஸோதயம்

ஸ்ரீ பகவன் நாம போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்.தமிழில்அனுவாதம் ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் கலியுகத்தில் அனுஷ்டிக்க வேண்டிய ஸாதனை பகவன் நாம உச்சாடனமே. அதுவே அடைய வேண்டிய குறிக்கோளும். பாரத தேசத்தில் அவதரித்த மஹான்கள் அனைவரும் மக்களுக்கு இதையே காட்டினர்.பகவன் நாமம் மட்டிலும் போதுமானது என்ற நாம மஹிமையை வேதம், உபநிஷதம், ஸஹஸ்ரநாமம், இதிஹாஸம், புராணம் இவைகளிலிருந்து பகவன் நாம நிரூபணம் செய்தவர் ஸ்ரீபகவன் நாம போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஆவர். ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் இந்த நாம சித்தாந்தத்திற்கு தமிழ் உரைவழங்கியுள்ளார். நமக்காகவும் இனிவரும் தலைமுறையினர்களுக்காகவும் ஜாதி மத பேதமின்றி ஒவ்வொருவர் வீட்டிலும் பாதுகாக்கப்பட வேண்டிய புத்தகம் **100**

13.ஸ்ரீ லக்ஷ்மண் ராமச்சந்த்ர பாங்கர்கரின் நூல்கள்

மொழியாக்கம் நந்தலா

1 பக்த துகாராம் **100**

2 ஞானேஸ்வர் **60**

3 ஏகநாதர் **40**

14. ஸ்துதி மணிகள்

தொகுப்பு - ஸ்ரீ எஸ். த்வாரகா நாதன். ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ள அனைத்து ஸ்துதிகளும் தொகுக்கப்பட்டுள்ளது. விரிவான அட்டவணை அடங்கியது.

15. ஸ்ரீமத் பகவத் கீதை - ப்ரதிபத அர்த்தம்

ஆசிரியர் - சோமசுந்தர தீக்ஷிதர்.

ப்ரதிபத அர்த்தம் வரிசையில் எங்கள் முதல் நூல்.பதப்பிரிப்பும் அர்த்தமும் தமிழில். மூல ஸ்லோகங்கள் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும். அர்த்தம்அன்வயப் படுத்தப்பட்டுள்ளது. அதாவது கோர்வைப் படுத்தப்பட்டுள்ளது. **60**

16. தர்ம சாஸ்திரம்

வைத்யநாத திக்ஷிதியத்தின் சுருக்கம் **50**

17. கோவிந்தபுரம் பஜன பத்ததி

ஸ்ரீகிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் பஜனை ஸம்ப்ரதாய -ப்ராசீன பத்ததியின் ஸ்வரூபம் அறிந்துகொள்ள உதவும் தொகுப்பு .ஸ்ரீஸ்வாமிகள் அருளிச் செய்த ப்ரவரம் கொண்டது. **40**

18. தக்ஷிண ஸம்ப்ரதாய கல்யாண மாலா

காமலாபுரம் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பாகவதர். ஸ்ரீராதா கல்யாணம் - ஸ்ரீ சீதா கல்யாணம் - ஸ்ரீ ஆண்டாள் கல்யாணம் - ஸ்ரீ பத்மாவதி கல்யாணம் ஆகிய நான்கு கல்யாணங்கள் அடங்கியது. **35**

19. ஸ்ரீ ராம மாதுரீ

ஸ்ரீவாமிநாத ஆத்ரேயன்.100ஸ்லோகங்கள் வ்யாக்யானத்துடன் உள்ளது. **25**

20. பக்த ரத்தினங்கள்

பல பாகவதர்களின் குறிப்புகள் **25**

21. ஸ்ரீ பாத ஸப்ததி

P.R. கண்ணன் - தேவி பாத மகிமை. நாராயணீயம் இயற்றிய நாராயண பட்டத்திரி இயற்றியது. தமிழ் அர்த்தத்துடன் **20**

22. ஸ்ரீ யாக்ஞவல்க்யர் திவ்ய சரித்திரம்

ஸ்ரீமத் பாகவதம் - வசனம் எழுதிய ஸ்ரீ ஆர். இஞ்சிக் கொல்லை சிவராம சாஸ்திரிகள் இயற்றியது. **20**

23. ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் கீர்த்தனைகள் - 100

100 கீர்த்தனைகள் அர்த்தத்துடன் கொடுக்கப்பட்டுள்ளது.

தொகுப்பு வலங்கைமான் வெங்கடராம பாகவதர் **25**

24. ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம்

ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் - ஸத்குரு த்யாகப்ரும்மத்தின் பாகவத ரூபம் முழுமையாகவெளிப்படுகிறது.ஒருவித்தியாசமான சரித்திரம். அவருடைய பாடல்களை வைத்தே எழுதப்பட்டது. **25**

25. பகவன் நாம ரஸயானம்

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட நாம சித்தாந்தம். ஸ்ரீ போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் எட்டு நாம சித்தாந்த க்ரந்தங்களில் ஒன்று. ஆங்கரை

ரங்கஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு மேற்படியார் குமாரர் விசுவநாத சாஸ்திரிகள் அவர்களால் 1942ல் வெளியிடப்பட்டதின் மறுபதிப்பு 20

26. பக்தை மீரா (ஸ்ரீ மீராபாய் திவ்ய சரித்திரம்)

ஸ்ரீகிருஷ்ணப்ரேமிஸ்வாமிகள்-இப்புத்தகத்தைப் படித்துவிட்டு யாரும் கண்ணீர் சிந்தாமல் இருக்க முடியாது. நெஞ்சை உருக்கும் சரித்திரம் 20

27. பக்த ஸாம்ராஜ்யம்

ஸ்ரீ ஸ்வாமிநாத ஆத்ரேயன். பாகவத தர்மத்தின் விஷயங்கள் என்றோ எப்பொழுதோ நடந்தவை அல்ல. இன்றைக்கும் அதனை அனுஷ்டிப்பவர் விஷயத்தில் பகவான் எப்படி அருள் புரிகிறான் என்பதை விளக்கும் பல்வேறு சரித்திரங்களின் தொகுப்பு 25

28. நாம ஸாம்ராஜ்யம்

ஸ்ரீஸ்வாமிநாத ஆத்ரேயன்-இது மேலேகண்ட தொகுப்பின் தொடர்ச்சி 25

29. பக்தி ஸந்தேஹத்வாந்த பாஸ்கரம்

ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமிகள் இயற்றியகிரந்தம், பாகவததர்மத்தில் ஏற்பட்டக்கூடிய சந்தேகங்களை விளக்கும் நூல் 15

30. ஸ்ரீ ப்ரும்மேந்திராள் கீர்த்தனைகள்

ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் - அர்த்தம் தமிழில் கொடுக்கப்பட்டுள்ளது. தொகுப்பு ஸ்ரீ பா. நாகராஜன் 10

34. ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் சரித்திரம்

வலங்கைமான் வெங்கடராம பாகவதர்-ப்ராசின பக்த விஜயத்தை தழுவியது. மிகுந்த பாவ விஷயங்கள் பேசப்பட்டுள்ள சரித்திரம் 15

35. திருமாலை

தொண்டரடிப் பொடி ஆழ்வார் அருளிச் செய்தது. தமிழ் வசனம் ஆழ்வை ரா. கீதாசார்யன் 15

36. நாமாயணம்

நாம விஷயங்களும் நாம மஹிமைகளும் அடங்கியது ஸம்ஸ்கிருத ஸ்லோகங்கள் - ஆழ்வார் பாசுரங்கள் - பஜனை பாடங்கள் -இவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது. தொகுப்பு - வலங்கைமான் வெங்கடராம பாகவதர் மற்றும் ஆழ்வை ரா. கீதாசார்யன். பரிசாகக் கொடுக்க உகந்தது. 7

37. ஸ்ரீ ஞானேஸ்வரரின் ஹரிபாட்

தொகுப்பு - அபங்கம் வி. ஆர். ராதாக்ருஷ்ணன் - பாவஅர்த்தங்கள் உள்ளது. முதல் பதிப்பிலிருந்து வெகுவாக விரிவாக்கப்பட்டுள்ளது. 6

38. ஸ்ரீ போதேந்திராள் கீர்த்தனைகள்

ப்ராசீன கீர்த்தனைகள் - மற்றும் அபூர்வ கீர்த்தனைகள் அடங்கியது 6

39. ஸ்ரீ போதேந்திராள் நாம வந்தனம்

ஸ்ரீ போதேந்திராள் அதிஷ்டானத்தில் பின்பற்றப்படும் நாம வந்தனம் 6

ஸ்ரீமத் பாகவதம்-தமிழ் வசனம்

பாகம்-2

பொருளடக்கம்

பக்கம்

ஸ்கந்தம்-3

20. ஸிருஷ்டி 1
21. கர்த்தமருக்கு ஸ்ரீமஹாவிஷ்ணு தரிசனம் கொடுத்தது 9
22. தேவஹூதியின் விவாகம் 18
23. கர்த்தமருடைய யோக மஹிமை 24
24. கபிலாவதாரம் 34
25. கபிலருககும் தேவஹூதிக்கும் ஸம்வாதம் 41
26. தேவஹூதிக்குக் கபிலர் ஆத்ம தத்துவத்தை 49
27. பிரகிருதி புருஷ விவேகம் 61
28. யோகத்தின் ஸ்வரூபம் 68
29. பக்தி யோகம் 77
30. பாபிகளின் கதி 84
31. (தொடர்ச்சி) 90
32. உத்தம கதி 101
33. தேவஹூதி ஜீவன் முக்தியடைந்தது 108

ஸ்கந்தம் 4

1. மனுபுத்திரிகளின் வம்சம் 114
2. தக்ஷருக்கும் பரமசிவனுக்கும் விரோதம் நேர்தல் 126
3. ஸதியைப் பரமசிவன் யாகத்திற்குப் 133
4. ஸதிதேவி சரீரத்தை விட்டது 138
5. தக்ஷ வதம் 146
6. ப்ரஹ்மதேவர் பரமசிவனைப் பிரார்த்தித்தது 150
7. தக்ஷன் பிழைத்தது 158
8. துருவ சரிதம் 171

பக்கம்

9. துருவ சரிதம் (தொடர்ச்சி) 185
10. துருவர் புண்ய ஜனர்களுடன் யுத்தம் செய்தது 197
11. மனு துருவருக்குத் தத்துவத்தை உபதேசித்தது 202
12. துருவர் துருவபதத்தை அடைந்தது 208
13. அங்கராஜன் காணாமற் போனது 216
14. வேனனை மஹரிஷிகள் சிஷித்தது 223
15. பிருதுவின் உற்பத்தி 229
16. ஸூதர்கள் பிருதுவை துதித்தது 233
17. பிருது பூமியைக் கொல்ல முயன்றது 237
18. பூமிதேவி ஸகல பொருள்களையும் உண்டு 243
19. பிருதுவின் அசுவமேதக் குதிரை காணமற் போனது 248
20. பகவான் பிருதுவை அனுக்கிரஹித்தது 254
21. பிருது ராஜ்ய பரிபாலனஞ் செய்தது 261
22. பிருதுவிற்கு ஸனத்குமாரர் ஞானத்தை 271
23. பிருது சக்கரவர்த்தி வைகுண்டம் சென்றது 282
24. ருத்ர கீதம் 288
25. புரஞ்சனோபாக்யானம் 300
26. (முன் அத்தியாயத் தொடர்ச்சி) 311
27. (முன் அத்தியாயத் தொடர்ச்சி) 316
28. புரஞ்சனன் ஸ்திரீயாக மாறினது 321
29. நாரதர் தத்துவத்தை உபதேசித்தது 329
30. பிரசேதஸ்ஸூகளின் சரிதம் 343
31. (முன் அத்தியாயத் தொடர்ச்சி) 351

ஸ்கந்தம் –5

1. ப்ரியவிரதருடைய சரிதம் 357
2. ஆக்னீதருடைய சரிகம் 367
3. நாபியின் சரிதம் 373
4. ரிஷப சரிதம் 377
5. மோக்ஷதர்ம நிரூபணம் 381
6. தேஹத்தை விடுவதின் முறை 389

அத்தியாயம்–20

ஸிருஷ்டி

1–6. இம்மாதிரியான சூதருடைய வார்த்தையைக் கேட்ட சௌனகர் அவரை நோக்கி, சுவாயம்புவ மனுவானவர் பூமியாகிய இருப்பிடத்தை அடைந்த பகவானிடத்தில் லயித்திருக்கும் ஜீவர்களை வெளிப் படுத்த எதனைச்செய்தார் (எந்த உபாயத்தைக் கொண்டு ப்ராணிகளை ஸிருஷ்டித்தார்) விதுரர் மஹா பாகவதர் (பகவத் பக்தர்களுக்குள் சிறந்தவர்) கிருஷ்ண பகவானுக்கு முக்கிய மித்திரர், வியாசருடைய புத்திரர். மஹிமையில் அவருக்குக் குறையாதவர். ஸ்ரீ கிருஷ்ணனையும், அவருடைய பக்தர்களையும் மூன்று கரணங்களாலும் (ஸரீரம், வாக்கு, மனம்) ஆசிரயித்தவர். மேலும், திருதராஷ்டிரர் ஸ்ரீ கிருஷ்ணன் உடைய இஷ்டப்படி நடக்காமலிருந்தபடியால் அவரைப் பகவானிடத்தில் அபராதஞ் செய்தவரென்று நினைத்து அவரை விட்டவர். தீர்த்த யாத்திரையைச் செய்ததால் பரிசுத்தர். அவர் குசாவர்த்தத்தில் (கங்கா துவாரத்தில்) உட்கார்ந்திருப்பவரும் தத்துவத்தை அறிந்தவர்களுக்குள் சிறந்தவருமான மைத்ரேயரிடம் சென்று எதனைக் கேட்டார்? அவர்களிருவர்களும் பேசிக்கொள்ளும்போது நடந்த விஷயமான கதைகள் கங்கையின் ஜலங்கள் போல் பாபத்தைப் போக்கும் சக்தியுள்ளவைகள். ரஸத்தை அறிந்த எவன்தான் பகவானது லீலாமிருதத்தைப் பானஞ் செய்தது போதுமென்று திருப்தியடைவான்? ஆதலால் கானம் செய்யக்கூடிய கம்பீர சரிதமுள்ள பகவான் லீலைகளைச் சொல்லும். உமக்கு க்ஷேமமுண்டாகும்

என்று கேட்டார்.

7–11. அதனைக் கேட்ட சூதர் பகவானைத் தியானம் செய்து நைமிசாரண்யத்தில் வஸிக்கும் மகர்ஷிகளை நோக்கி பகவான் வராஹாவதாரஞ் செய்து பாதாளத்திலிருந்து பூமியைக் கொண்டு வந்த கதையையும், ஹிரண்யாக்ஷ வதத்தையும் கேட்டு விதுரர் மிகுந்த சந்தோஷமடைந்து மைத்ரேயரை நொக்கி; ஓ ப்ராஹ்மண! அவ்யக்தத்தின் மார்க்கத்தை அறிந்தவராகிய ப்ரஹ்மதேவர் ப்ரஜைகளைச் ஸிருஷ்டிப்பதற்காக ப்ரஜாபதிகளும் ஸ்வாயம்புவ மனுவும் ப்ரஹ்மதேவருடைய கட்டளையினால் இந்த ஜகத்தை எப்படிப் படைத்தார்கள்? அவர்கள் தங்கள் பார்யையுடன் சேர்ந்து ஸிருஷ்டித்தார்களா அல்லது தாங்களே உண்டுபண்ணினார்களா? அல்லது எல்லாருமாகச் சேர்ந்து ஸிருஷ்டித்தார்களா? என்று கேட்டார்.

12–54. அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி, "ஊகிக்க முடியாத ஜீவர்களுடைய அதிர்ஷ்டத்தாலும் ப்ரகிருதிக்கு அதிஷ்டாதாவாகிய பரமபுருஷனாலும் காலத்தாலும், பகவானிடத்திலிருந்து கலங்கிய முக்குணங்களிலிருந்து மஹத் தத்துவம் உண்டாயிற்று. ரஜோகுண பிரதானமாகிய அந்த மஹத்தத்துவத்திலிருந்து மூன்று குணங்களுள்ள அஹங்காரம் உண்டாயிற்று, பூதங்களுக்கு, ஆதியாய் இருக்கும் அந்த அஹங்காரமானது ஆகாசம் முதலிய மஹா பூதங்களையும் தன்மாத்திரைகளையும், ஞானேந்திரியம், கர்மேந்திரியம், அதன் தேவதைகள் இவைகளையும் ஐந்து ஐந்தாக உண்டுபண்ணிற்று.

அவைகள் தனியாக அண்டத்தைச் ஸிருஷ்டிக்கச் சக்தியற்றவைகளாகிப் பகவானுடைய அனுப்ரவேசத்தால் ஒன்று கூடி ஸ்வர்ண மயமான அண்டத்தை உண்டுபண்ணின. அது அசேதனமாக ஆயிரம் வருஷங்களுக்கு அதிகம் ஜலத்திலேயே இருந்தது. ஈசுவரன் அதில் ப்ரவேசித்தார். அவருடைய தொப்புளில் ஒரு தாமரை மலர் தோன்றியது, அது ஆயிரம் சூரியர்களைப் போல் ப்ரகாசித்தது, ஸகல பிராணிகளுக்கும் ஸ்தானமாயிருப்பது; அதிலிருந்து ப்ரஹ்மதேவர் உண்டானார். அவர் ஜலத்தில் சயனம் செய்து கொண்டிருக்கும் பகவானால் தூண்டப்பட்டு (நாம)ரூபாதிகளுடன் உலகங்களை முன் கல்பத்திலிருந்தது போல் அமைத்தார். முதலில் தாமிஸ்ரம், அந்த தாமிஸ்ரம், தமஸ், மோஹம், மஹா தமஸ் என்று ஐந்து பர்வதங்களுள்ள அவித்யையைத் தம்முடைய நிழலைக்கொண்டு (அபுத்திபூர்வம்) படைத்தார்.)

பிறகு அவர் சந்தோஷமின்றி அந்தச் சரீரத்தை விட்டார். அதுவே தமோமயமான ராத்திரியாம். பசி தாகம் இவைகளுக்கு காரணமான ராத்திரியை, அதிலிருந்து, உண்டான யக்ஷர்களும் ராக்ஷதர்களும் பெற்றுக்கொண்டார்கள். மேலும் அவர்கள் பசியாலும் தாகத்தாலும் வருத்தப்பட்டு, இவரைக் காப்பாற்ற வேண்டாம், புசியுங்கள் என்று சொல்லிக் கொண்டு அவரைத் தின்று விடுவதற்காக ஓடிவந்தார்கள். அப்பொழுது ப்ரஹ்மதேவர் பயந்து அவர்களை நோக்கி, என்னைத் தின்று விடவேண்டாம், ரட்சியுங்கள்; என்னுடைய புத்திரர்களான நீங்கள் யக்ஷர்களென்றும் ராக்ஷதர்கள் என்றும் பெயரடைவீர்கள், என்றார். பின்பு காந்தியுள்ளவராக எவர்களைப்

ப்ரதானமாகப் ஸிருஷ்டித்தாரோ, அவர்கள் தேவர்கள் ஆனார்கள். அவர்கள் அவரால் விடப்பட்ட பிரபா சரீரமாகிய பகலைப் பெற்றுக் கொண்டார்கள். பிறகு அவர் ஸ்திரீகளிடத்தில் விசேஷ ஆசையுள்ளவர்களாக அசுரர்களை ஜகனத்திலிருந்து உண்டு பண்ணினார். அவர்கள் அவரைப் புணருவதற்காக ஓடிவந்தார்கள். அப்பொழுது வெட்கமில்லாமல் சிரித்துகொண்டு பின் ஓடிவரும் அஸுரர்களைப் பார்த்துப் ப்ரஹ்மதேவர் பயந்து ஓடினார். பக்தர்களுடைய உபத்திரவத்தைப் போக்கடிப்பவரும் பக்தர்களுடைய இஷ்டப்படி ஸ்வரூபத்தையெடுத்துக்கொள்ளுபவருமான பகவானிடம் சென்று, "பிரபுவாகிய பரமாத்மாவே துக்கப்பட்டவர் களுடைய துக்கத்தைப் போக்கடிப்பவர் நீர் ஒருவரே. உம்முடைய பாதாரவிந்தத்தை ஆசிரயிக்காதவர்களுக்கு நீர் கஷ்டத்தைக் கொடுக்கிறீர்.

உம்முடைய ஆஜ்ஞையின்படி ப்ரஜைகளைச் ஸிருஷ்டித்தேன். அவர்கள் என்னைப் புணருவதற்கு முயற்சித்தார்கள்; என்னைக் காப்பாற்றும், என்று பிரார்த்தித்தார்; பிறருடைய அபிப்பிராயத்தை அறிந்த வராகிய பகவான் ப்ரஹ்மதேவருடைய தைன்யத்தைத் தெரிந்துகொண்டு' "இந்தக் காமத்தால் கலங்கிய சரீரத்தை விட்டுவிடும்" என்று சொன்னார். அதனைக் கேட்ட ப்ரஹ்மதேவரும் அப்படியே செய்தார்; அதுவே சந்தியை எனப்படுகிறது. அந்த சந்தியையாகிய ஸ்திரீயானவள் சப்திக்கும் ஆபரணங்கள் அணிந்த பாதங்களுள்ளவள். மதத்தால் கலங்கிய கண்கள் உள்ளவள். ஒட்டியானத்தால் பிரகாசிக்கும் பட்டை உடுத்திக்கொண்டவள். ஒன்றோடொன்று சேர்ந்தவை களும், உயர்ந்தவையுமான ஸ்தனங்களுள்ளவள்.

அழகான மூக்குள்ளவள், நல்ல பற்களுள்ளவள். மனோகரமான சிரிப்புள்ள பார்வையுள்ளவள். கருமையான தலைமயிருள்ளவள். பின்னுமவள் வெட்கத்தால் தன்னுடைய சரீரத்தை மறைத்துக் கொண்டும் இருந்தாள் "ஓ தர்மத்தின் அவதாரமாகிய விதுரரே! அஸுரர்கள் அந்த ஸ்திரீயைப் பார்த்து மோகித்து இவளுடைய ரூபம் வியக்கத்தக்கது. இவளுடைய யௌவன வயது ஆச்சர்யப்படத்தக்கது. நாமெல்லாம் இவளிடத்தில் ஆசைப்பட்டிருந்தாலும் இவள் ஆசையில்லாதவள் போல சஞ்சரிக்கிறாள்" என்று ஸ்திரீ ரூபம் கொண்ட சந்தியைப்பற்றிப் பலவகை யாக சந்தேகித்து; பின்பு அவளை நோக்கி, "நீ யார்? யாருடைய பெண்? நீ இவ்விடம் எதற்காக வந்தாய்? உருவமாகிய உத்தம வஸ்துவை வைத்துக்கொண்டு (அதனை எங்களுக்குக் கொடுக்காததனால்) அதிருஷ்டமற்றவர்களான எங்களை உபத்திரவிக்கிறாய்.

ஓ பெண்ணே! நீ யாராயிருந்தாலும் சரி (உன்னுடைய ஜாதி முதலியவைகளைத் தெரிந்து கொள்வதால் என்ன பிரயோசனம்?) உன்னுடைய தரிசனம் பாக்கியத்தால் கிடைத்தது. பந்து விளையாடுவதால் பார்ப்பவர்களுடைய மனத்தை அபகரிக்கிறாய் ஓ சிறந்த பெண்ணே! உயரக் கிளம்பும் பந்தைக் கையால் அடிப்பவளாகிய உன்னுடைய தாமரை மலர் போன்ற பாதமானது ஒரே இடத்தில் ஸ்திரமாக நிற்கவில்லை. பெரிதாகிய ஸ்தனங்களின் சுமையைத் தாங்க முடியாமல் தலைமயிர்களின் கூட்டமானது நிர்மலமாக இருக்கிறது. (மினு மினுப்புள்ளதென்பது கருத்து) என்று மிகுந்த பிரியத் துடன் பிரச்னஞ் செய்து புத்தி மயக்கமடைந்து

சந்தியைப் பெற்றுக் கொண்டார்கள். அவள் தனது சரீரத்தை முகந்து சிரித்துக் கொண்டு மறைந்தாள். பின்பு ப்ரஹ்மதேவர் காந்தியால் கந்தர்வ கணங்களையும், அப்ஸரோ கணங்களையும் படைத்தார். அந்தக் காந்தி பொருந்திய சந்திரிகா ரூபமான சரீரத்தை விட்டார். அதனை விசுவாவசு முதலியவர்கள் பிரியமாகப் பெற்றுக்கொண்டார்கள். பிறகு அவர் தம்முடைய சோம்பலைக் கொண்டு பூதங்களையும், பிசாசங்களையும் ஸிருஷ்டித்தார். அவைகள் வஸ்திரம் இல்லாதவைகளும், தலைமயிரை அவிழ்த்துக்கொண்டு மிருப்பதைக் கண்டு கண்களை மூடிக்கொண்டார். அப்பொழுது ப்ரஹ்மதேவரால் விடப்பட்ட ஜ்ரம்பணமென்ற (கொட்டாவி விடுவது) சரீரத்தை அவைகள் பெற்றுக்கொண்டன. அதையே நித்திரை யென்கிறார்கள். கொட்டாவி விடுவது, நித்திரை, உன்மாத்த மென்றவைகள் சோம்பலால் உண்டாகக் கூடியவைகள். ஆதலால் அதன் அவாந்தர பேதங்கள் ஆகும்), அந்த நித்திரையால் இந்திரியங்களுடைய வலிமைக் குறைவு எல்லாப் பிராணிகளிடத்திலும் காணப்படுகிறது. அதனைக் கொண்டு ஆசாரம் இல்லாதவர்களைப் புத்தி மயக்கமுள்ளவர்களாகப் பூதங்கள் செய்கின்றன. அவைகள் உன்மாதங்கள் எனப்படுகின்றன, பின்பு பகவானாகிய ப்ரஹ்மதேவர் தம்மை அன்னத்தைப் புசிப்பவராக நினைத்துக் கொண்டு சாத்தியர்களையும் பிதிர்கணங்களையும், பரோக்ஷமாக ஸிருஷ்டித்தார். பிதுருக்கள் தங்களை உண்டுபண்ணிய அந்தச் சரீரத்தைப் பெற்றுக் கொண்டார்கள். சாத்தியர்களுக்கும், பிதிருக்களுக்கும் வித்வான்களால் கொடுக்கப்படும் ஹவ்யங்களும், கவ்யங்களும் அந்தச் சரீரமேயாம். பிறகு அந்தப்

ப்ரஹ்மதேவர் சித்தர்களையும் வித்தியாதரர்களையும் பரோக்ஷமாக ஸிருஷ்டித்தார். அந்த அற்புதமாகிய அந்தர்த்தான (மறைந்திருப்பது) சக்தியை அவர்களுக்குக் கொடுத்தார். பின்பு தம்முடைய பிரதி பிம்பத்தைப் பார்த்துச் சிலாகித்துக்கொண்டு கின்னரர், கிம்புருஷர்களையும் ஸிருஷ்டித்தார். அவர்கள் அந்தச் சரீரத்தைப் பெற்றார்கள். அவர்கள் ஆணும் பெண்ணும் சேர்ந்து கிரீடித்துக்கொண்டு அவரையே கானஞ் செய்து கொண்டிருந்தார்கள். பின்பு அந்தப் ப்ரஹ்ம தேவர் ஸிருஷ்டி விருத்தியடையாமலிருப்பதைப் பார்த்து, போகமுள்ள (நீண்ட) தேகத்துடன் படுத்துக் கொண்டே பலவகையான சிந்தையுடன் அந்தச் சரீரத்தை விட்டார். அந்தத் தேகத்திலிருந்து உதிர்ந்த கேசங்கள் (மயிர்கள்) அஹிகளாயின (சர்ப்பங்கள்), கை, கால்கள் முதலியவைகளை அசைக்கும் அந்தத் தேகத்திலிருந்து சர்ப்பங்கள் உண்டாயின. அவைகளே குரூரங்களான நாகங்களெனப்படுகின்றன (மிகுந்த வேகமுள்ளவை). நீண்ட தேகத்திலிருந்து உண்டான தால் அவை நீண்ட சரீரமுள்ளவைகளும், நீண்ட கழுத்துள்ளவைகளாயு மிருந்தன பின்பு அவர் தம்மைக் கிருத கிருத்தியராக நினைத்து உலகங்களை விருத்தி செய்பவர்களான மனுக்களை மனத்தால் ஸிருஷ்டித் தார். அவர்களுக்குப் புருஷாகாரமாகிய சரீரத்தைக் கொடுத்தார்.அந்த மனுக்களைப் பார்த்து அவர்களுக்கு முன் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் ப்ரஹ்மதேவரை நோக்கி, (உலகத்தைப் படைத்தவரான) நீர் நல்ல காரியத்தைச் செய்தீர். மனுக்களின் ஸிருஷ்டியில் அக்கினி ஹோத்திரம் முதலிய கிரியைகள் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதால் நாங்கள் எல்லாரும் சேர்ந்து ஹவிஸ்ஸைப் புஜிக்கிறோம்" என்று

கொண்டாடினார்கள். பின்பு இந்திரியங்களை ஜயித்தவராகிய அந்தப் ப்ரஹ்மதேவர் தபஸ், உபாஸனை, யோகம்,சமாதி ஆகிய இவைகள் உள்ளவராய்த் தமக்கு இஷ்டர்களான ரிஷிகளான ப்ரஜைகளைச் ஸிருஷ்டித்து அவர்களுக்கு சமாதி யோகம், ஐசுவர்யம், தபஸ், வித்யை, வைராக்கியம் ஆகிய இவைகளுள்ள தம்முடைய தேஹத்தின் அம்சத்தைக் கொடுத்தார்.

அத்தியாயம்–21

கர்த்தமருக்கு ஸ்ரீ மஹாவிஷ்ணு தரிசனம் கொடுத்தது

1–5 "ஓ பகவானாகிய மைத்ரேயரே! ஸ்வாயாம்புவ மனுவின் வம்சமானது பெரியோர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டது. அதனிடமிருந்தே (ஸ்திரீ புருஷர் களுடைய சேர்க்கையாலே) ஜனங்கள் விருத்தி அடைந்தார்கள். அந்த வம்சத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும். மேலும் ஸ்வாயம்புவ மனுவின் புத்திரர்களாகிய பிரிய விரதர், உத்தானபாதர் ஆகிய இருவர்களும் ஏழு தீவுகள் அடங்கிய பூமியையும், தர்மத்தையும் எப்படிக் காப்பாற்றினார்கள்? பின்னும் அந்த மனுவிற்கு தேவஹூதி என்ற ஒரு பெண் உண்டென்றும் அவள் கர்த்தமர் என்ற பிரஜாபதியின் பாரியை என்றும் தங்களால் சொல்லப்பட்டதல்லவா? மகா யோகியாகிய அந்தக் கர்த்தமப் பிரஜாபதி ஆனவர் யோகலட்சணங்கள் பொருந்திய தேவஹூ தியினிடம் எவ்வளவு குழந்தைகளை உண்டு பண்ணினார்? ஓ ப்ராஹ்மணோத்தம! மேலும் ப்ரஹ்ம தேவருடைய புத்திரராகிய தக்ஷரும், ருசி என்பவரும், மனுவின் புத்திரியாகிய ப்ரஸூதி என்பவளையும். ஆஹூதி என்பவளையும் விவாகஞ்செய்து கொண்டு பிரஜைகளை எப்படி உண்டு பண்ணினார்கள்? அதை எனக்குச் சொல்லவேண்டும்" என்று விதுரர் கேட்டார்.

6–16 அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி, "ஓ விதுரரே! பகவானாகிய கர்த்தம பிரஜாபதியை நோக்கி, "ப்ரஜைகளைச் ஸிருஷ்டியும்"

என்று ப்ரஹ்மதேவர் ஆக்ஞாபித்தவுடன் கர்த்தமர் (ஸிருஷ்டி சக்தியை அடைவதற்காக) சரஸ்வதி நதிக்கரையில் பதினாயிரம் வருஷங்கள் தவம் செய்து, மனத்தை ஒருவகைப்படுத்தி, பக்தியுடன் ஸ்ரீமந் நாராயணனைப் பூஜித்தார். அவர் சரணாகதி செய்தவர்களுக்கு இஷ்டமானவரத்தைக் கொடுப்பவர். அப்பொழுது தாமரைக் கண்ணனாகிய பகவான் அதிக சந்தோஷமடைந்து வேதத்தாலேயே அறியக் கூடிய ப்ரஹ்ம ஸ்வரூபமாகிய தமது ஸ்வரூபத்தைக் காண்பித்தார். அவர் சுத்தர், சூரியன் போல் பிரகாசிப்பவர். தாமரைப் புஷ்பம் நீலோத்பல புஷ்பம் இவைகளால் செய்யப்பட்ட மாலையைத் தரித்தவர்; பளபளப்புள்ளவைகளும் கருமை நிறம் உள்ளவைகளுமான தலைமயிர்களால் அலங்கரிக்கப் பட்டு சுத்தமாகிய வஸ்திரமுள்ளவர். கிரீடமுள்ளவர். குண்டலங்கள் அணிந்தவர். விளையாட்டிற்காக புஷ்பத்தைத் தரித்தவர். மனத்திற்கு ஆனந்தத்தை கொடுக்கக்கூடிய சிரிப்பு, பார்வை ஆகிய இவைகள் உள்ளவர். கருடனுடைய முதுகில் தாமரை மலர் போன்ற பாதங்களை வைத்துக்கொண்டிருப்பவர். கௌஸ்துப ஹாரத்தைத் தரித்தவர். அவருடைய மார்பில் லக்ஷ்மீதேவி வஸிக்கிறாள். ஆகாயத்தில் தோன்றிய அப்படிப்பட்ட பகவானுடைய அந்தத் திவ்யசரீரத்தை தரிசித்த கர்த்தமர் மிகுந்த சந்தோஷமடைந்து மனோரதமுள்ளவராகி பிரியமுள்ள மனத்துடன் (ப்ரீதியையே ஸ்வபாவமாயுடைய மனதுள்ளளவரென்று கருத்து) கைகூப்பி நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்யக்கூடிய ஓ ஸ்வாமியே ஸகல ஜகத்திற்கும் இருப்பிடமாகிய உம்மைத் தரிசித்ததால் என்னுடைய கண்கள் பலனுள்ளவைகளாயின.

உத்தம ஜன்மங்களால் யோகசித்தி அடைந்த யோகிகளும் உம்முடைய தரிசனத்தையே விரும்புகிறார்கள். உம்முடைய பாதாரவிந்தமானது ஸம்சார்ரமாகிய ஸமுத்திரத்தைக் கடக்க ஓடமாக இருக்கிறது. உம்முடைய மாயையால் ஜனங்கள் மயக்கமடைந்து ஸம்சாரத்திலுள்ள சொல்ப காமங்களை விரும்பி அவைகளுக்காக உம்முடைய பாதத்தை உபாஸிக்கிறார்கள். அவைகளையும் கொடுக்கிறீர். (பலனை விரும்பிய மேலானவர்கள் அல்லவென்று தாத்பரியம்.) அப்படியும் காமதேனு போல கிருஹஸ்தாசிரமத்தில் தர்மம், அதர்மம் இவைகளை உண்டுபண்ணக்கூடியவளும் என்னுடை ஸ்வபாவமுள்ளவளுமாகி ஸ்திரீயைக் கல்யாணம் செய்து ஸகல புருஷார்த்தங்களுக்கும் பலமாயும் கற்பக விருஷம் போல் அண்டினவர்களுடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்பவருமான உம்முடைய பாதத்தைச் சரணமடைகிறேன். அது ஸகல புருஷார்தத்திற்கும் காரணம். (பலனை விரும்பும் பக்தர்களை நான் நிந்திப்பவனானாலும் அப்போர்ப்பட்டவனே) ஆகையால் நான் தர்ப்புத்தியுள்ளவன். ஓ! எல்லாவற்றிற்கும் அதிபதியே! நீர் ஸகல பிரஜைகளுக்கு அதிபதி. கயிற்றினால் பசுக்கள் கட்டப்படுவது போல் உம்முடைய ஆக்ஞையால் பலனை விரும்பிய உலகம் முழுவதும் கட்டப்பட்டிருக்கிறது. ஓ தர்ம ஸ்வரூபியே நானும் உலகத்தை அனுசரித்துக் காலஸ்வரூபியாகிய உமக்கு பூஜையைச் செய்கிறேன். (உம்முடைய இஷ்டப்படி நடக்கிறேன். கல்யாணத்தையும் செய்து கொள்ளுகிறேன்)

17–18 எவர்கள் உலகத்தையும், அதை அனுசரிப்

பவர்களையும் விவேகமிருந்தும் கர்மஜடர்களாகப் பசுப்போல் இருப்பவர்களையும் விட்டு உம்முடைய பாதமாகிய குடையை ஆச்ரயித்திருக்கிறார்களோ பின்னும் மத்யம போன்றதும் (சம்சார துக்கத்தை மறக்கச் செய்வதால்) அமிர்தம் போன்றதுமான (கிழத்தனம், மரணம் ஆகிய இவைகளைப் போக்குவதால் உம்முடைய குணங்களை வருணித்து அதனால் பசி, தாகம் முதலிய தேக தர்மத்தை நிவர்த்தித்துக் கொள்ளுகிறார் அவர்களுடைய ஆயுளைக் காலச் சக்கரமானது எடுத்துக்கொண்டு ஓடுகிறதில்லை (குறைக்கிறதில்லை). அது ஜகத்தை இழுத்துக் கொண்டு ஓடுகிற ஸ்வபாவமுள்ளது. அது அக்ஷர ரூபமாகிய பரப்ரஹ்மத்தினிடம் சுற்றுகின்றது. அந்தச் சக்கரத்திற்குப் பதிமூன்று மாதங்களே ஆரங்களாக விருக்கின்றன. முந்நூற்று அறுபது (360) தினங்களே பர்வங்கள் (கணுக்கள்) ருதுக்களே நேமிகள் க்ஷணம், லவம், திருடி முதலியவைகளே இலை போன்ற முனைகள். மூன்று சாதுர்மாஸ்யங்களே நாபிகள். மேலும் அது கடுமையான வேகத்துடன் ஜகத்தை இழுத்துக் கொண்டு ஓடுகிறது.

19–21 "ஓ பகவன்' பட்டுப்பூச்சி பட்டை உண்டு பண்ணுவதும், அதைச் சுற்றிக் கொள்வதும்போல நீர் ஒருவரே உலகத்தைப் படைக்க விரும்பி, தம்மிடத்தில் இருக்கும் யோகமாயையைக் கொண்டு சத்வம் முதலிய சக்திகளை அவலம்பித்து இந்த ஜகத்தைச் ஸிருஷ்டிக்கிறீர். காப்பாற்றுகிறீர். சம்ஹரிக்கிறீர். ஓ ஈச! உம்மை உபாசிப்பவர்களான எங்களுக்கு மாயையால் விஷய சுகத்தைக் கொடுப்பது உமக்குச் சம்மதமன்று. ஆனாலும் அனுக்கிரகத்திற்காகவே

அது உபயோகப்படட்டும். பிரகாசிக்கும் துளசியால் அலங்கரிக்கப்பட்ட உம்மைத் தரிசித்தேன். (இப்படிப் பட்ட உம்மைத் தரிசிப்பது க்ஷேமத்தை கொடுக்கக் கூடியது) அப்படிப்பட்ட உம்மை அடிக்கடி நமஸ்கரிக்கிறேன். நீர் ஞானத்தால் கர்ம பலனைக் கடந்தவர். மோக்ஷத்தைக் கொடுப்பவரென்று கருத்து). தம்முடைய மாயையைக் கொண்டு லோகதந்திரத்தை நடத்துகிறவர் பலனை விரும்பியவர்களாலும் பலனை விரும்பாதவர்களாலும் நமஸ்கரிக்கக் கூடிய பாதார விந்தமுள்ளவர். அற்ப இஷ்டத்தைக் கொடுப்பவர் என்று தோத்திரஞ் செய்தார்

22–35 இம்மாதிரி கர்த்தம ப்ரஜாபதியினால் கபடமின்றி ஸ்துதிக்கப்பட்ட ஸ்ரீமந் நாராயணன் கருணையுடைய முதுகிலிருந்துபடி ப்ரியம், சிரிப்பு ஆகிய இவைகளுள்ள பார்வையால் அசையும் புருவங்களுள்ள வராகி கர்த்தமரை நோக்கி பின் வருமாறு சொல்லலானார். ஓ கர்த்தம! எதற்காக நீர் என்னை தம்முடைய ஹிருதயத்தில் இந்திரியங்களை அடக்கி பூஜித்தீரோ, அந்த உம்முடைய அபிப்ராயத்தை அறிந்து முன்னமேயே அதற்கு வேண்டியதை ஸித்தஞ் செய்திருக்கிறேன்.

ஓ ப்ராஹ்மண! எவ்வளவு வருஷ காலம் அவளிடத்தில் உமக்கு ஆசை இருக்கிறதோ அவ்வளவு காலம் வரையில் அந்த ராஜ குமாரி உம்மை அடைவாள். மேலும் அவள் உம்முடைய வீரியத்தைத் தரித்து ஒன்பது வகையாகப் பிரசவிப்பாள். உம்முடைய வீரியத்திற்குண்டான பெண்களிடத்தில் மஹரிஷிகள் புத்திரர்களை உண்டு பண்ணுவார்கள்.

சுத்த சத்தராகிய நீர் என்னுடைய உத்தரவின்படி நடந்து. ஸகல கர்மங்களின் பலனை என்னிடம் சமர்ப்பித்து, கிருஹஸ்தாச்ரமத்தில் பிராணிகளிடத்தில் தயையுள்ளவராக இருந்து அபயத்தை கொடுத்து (ஸன்யாசத்தில்) என்னை அடைவீர்.

மேலும் ஸகல ஜகத்துடன் என்னிடத்தில் உம்முடைய ஸ்வரூபத்தையும் உம்மிடத்தில் என்னையும் பார்ப்பீர். நானும் உம்முடைய பத்தினியாகிய தேவஹூதியினிடத்தில் என்னுடைய அம்சமாக அவதரித்து தத்துவ ஸம்ஹிதையைச் செய்வேன், என்று சொல்லிப் பகவான் அவர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே ஸரஸ்வதி நதியால் சூழப்பட்ட பிந்து ஸரஸ்ஸிலிருந்து சென்றார். அப்பொழுது அவர் செல்லும் வழியில் ஸகல சித்தர்களும் அவரை ஸ்தோத்திரம் செய்தார்கள். கருடனுடைய பக்ஷங்களால் சாம வேதத்தின் மந்திரங்கள் உச்சரிக்கப்பட்டன. (பிருகத் தந்த்ரங்கள் இயற்கைகள் என்று ஸ்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது) அவைகளைக் கேட்டுக் கொண்டே பகவான் சென்றபிறகு கர்த்தமபிராஜா பதியானவர் அந்த பிந்து ஸரஸ்ஸின் கரையில் அந்தக் காலத்தை எதிர்பார்த்திருந்தார்.

36–44 ஓ விதுரரே! மனுவென்பவர் சுவர்ணாலங்காரமுள்ள ரதத்தின் மீதேறிப் பத்தினியுடனும் புத்திரியுடனும் பூமி முழுவதும் சுற்றி ஸ்ரீமந் நாராயணனால் குறிப்பிடப்பட்ட தினத்தில் அந்த ஸ்தலம் சென்றார். ஸ்ரீமஹா விஷ்ணு தம்முடைய பக்தராகிய கர்த்தமரிடத்தில் அதிகச் சந்தோஷத்தால் கண்ணீரைப் பெருக்க அதன் பிந்து (துளி) அவ்விடத்தில் விழுந்துபடியால்

'பிந்து ஸரஸ்' என்று அந்த ஸ்தலத்திற்கு பெயருண்டாயிற்று. அது ஸரஸ்வதி நதியின் சமீபத்திலுள்ளது அந்த ஸரஸ் புண்ணியத்தைக் கொடுக்கக்கூடியது. அதன் ஜலமானது அமிருதம்போல் ருசியுள்ளது. எவ்வளவு தடவை ஸ்நானம் செய்தாலும் அதனால் ரோக முண்டாகிறதில்லை. மகரிஷிகள் கூட்டம் கூட்டமாக அதனைச் சேவிக்கிறார்கள். அதன் கரையில் புண்ய விருஷங்களும், புண்ணியத்தைக் கொடுக்கும் கொடிகளும் கூட்டமாக இருக்கின்றன.

மேலும் அவ்விடத்தில் நல்ல மிருகங்களும், பறவைகளும் இனிமையாக சப்திக்கின்றன. எல்லா ருதுக்களிலும் புஷ்பங்கள் பழங்கள் ஆகிய இவைகளால் நிறைந்த மரங்களால் அலங்கரிக்கப் பெற்றது அடர்ந்த காடுகளிருப்பதால் அழகுள்ளதாக இருக்கிறது. மதித்த பறவைகள் கூவுகின்றன. மதித்த வண்டுகள் விளையாடுகின்றன. மயில்கள் மதங்கொண்டு ஆடுகின்றன. குயில்கள் மதத்துடன் ஒன்றுக் கொன்று கூப்பிடுகின்றன. கடம்பம், வஞ்சி, அசோகம், புன்னை மகிழம் வேங்கு குந்தம் (குருந்து மந்தாரம், வெட்பாலை, மா ஆகிய மரங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. மேலும் நீர்காக்கைகள், நீர்கோழிகளின், உட்பிரிவுகள், ஹம்ஸங்கள், சாரசங்கள், சக்கரவாகங்கள், சகோரங்கள் ஆகிய பட்சிகள் இனிமையாகச் சப்திக்கின்றன, இன்னும் மான்கள், காட்டுப் பன்றிகள், முள்ளம் பன்றிகள், பசு போன்ற கவயமென்ற மிருகங்கள், யானைகள், கோவாங் கூவங்கள் (வால்நீண்ட குரங்குகள்) குரங்குகள், சிம்ஹங்கள் கீரிகள், கஸ்தூரி மிருகங்கள் ஆகிய இவைகள் அவ்விடத்தில் இருக்கின்றன.

45–56 அரசர்களுக்கு முந்தியவரான அந்த மனுவானவர் தம்முடையபரிவாரங்களுடன் அந்தப் பிந்துசரஸை அடைந்து அவ்விடத்தில் அக்கினி காரியத்தை முடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் கர்த்தமரைக் கண்டார். அவர் கடுந்தபஸ்செய்த வராகையால் மிகுந்த தேஜஸால் பிரகாசித்திருந்தார். மேலும் அவர் தவம் செய்ததால் இளைத்த சரீரமுள்ள வரானாலும், பகவானுடைய கடைக்கண் பார்வையை அடைந்தபடியாலும், அவருடைய வார்த்தையாகிய அமிருதத்தைக் கேட்டபடியாலும், அதிகமாக இளைக் காத சரீரமுள்ளவராக இருந்தார். மேலும் அவர் மரவுரியைத் தரித்தவர். சாணை பிடிக்கப் படாத உயர்ந்தவர். ரத்தினம் போல் இருப்பவர். அப்போர்ப்பட்ட கர்த்தமரைக் கண்டு அரசன் அவருடைய சமீபம் சென்றார். அப்போது கர்த்தமர் தம்முடைய சமீபம் வந்து நமஸ்காரம் செய்யும் அரசனுக்குத் தக்கப்படி மரியாதை செய்தார். ஆசனங் கொடுத்து உட்காரச் சொன்னார். புகழ்ந்து பேசினார்.

பின்பு அந்தப் பிரஜாபதியானவர் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் கட்டளையை நினைத்துக்கொண்டு அரசனை நோக்கி, "ஓ மகாராஜா ! நீர் மகாவிஷ்ணுவின் அம்சம். அவருடைய சக்தியால்தான் உலகத்தைக் காப்பாற்றுகிறீர். மேலும், அந்த அந்தச் சமயத்திற்குத் தக்கபடி சூரியன், சந்திரன், அக்கினி, இந்திரன், வாயு, யமன், தர்மன், வருணன் ஆகிய இவர்களுடைய ஸ்வரூபத்தைத் தரிக்கிறீர். மேலும், சாதுக்களைக் காப்பாற்றுவதற்கும், அசத்துக்களைக் கொல்வதற்கும் சஞ்சரிக்கிறீர். அப்போர்ப்பட்ட ஸ்ரீ மகாவிஷ்ணு ஸ்வரூபியான உமக்கு நமஸ்காரம்.

ஜயிக்கும் ஸ்வபாவமுள்ளதும், மணிகளால் அலங்கரிக்கப்பட்டதுமான இரதத்தின் மீதேறிப் பயங்கரமானவில்லையெடுத்து நாணோசை செய்து அதனால் மனிதர்களைப் பயப்படச் செய்துகொண்டும் தம்முடைய சைனியங்களுடன் சூரியன்போல் நீர் சஞ்சரிக்காமலிருந்தால் ஸ்ரீமந் நாராயணனால் ஏற்படுத்தப் பட்ட வர்ணம் ஆச்ரமம் ஆகிய இவைகளுடைய மரியாதைகள் அசத்துக்களால் கெடுக்கப்படும் விஷயத்தில் ஆசைகொண்ட மனிதர்கள் பயமற்றவர் களாக அதர்மத்தை விருத்தி செய்வார்கள். நீர் உலகத்தை கவனியாமலிருந்தால் அசத்துக்களால் ஆக்கிரமிக்கப்பட்டு உலகம் கெட்டுப் போய்விடும், ஓ சூரராகிய மகாராஜா! என்னுடைய ஆசிரமம் தேடி வந்த காரியமென்ன ? அதனைத் தெரிவித்தால் அதிகச் சந்தோஷத்துடன் அங்கீகரிப்பேன் என்றார்.

தேவஹூதியின் விவாகம்

2–14. இப்படிச் சொல்லி மௌனமாக இருப்பவரும், நிவிர்த்தி மார்க்கத்தில் ஆசை உள்ளவருமான கர்த்தமரை நோக்கி அவ்வரசன் தன்னுடைய குணங்கள், சரிதங்கள் ஆகிய இவைகளுடைய மேன்மையைக் கேட்டு வெட்கத்துடன், "ஓ ப்ராஹ்மண! ப்ரஹ்மதேவர் தம்முடைய ஸ்வரூபமாகிய வேதங்களைக் காப்பாற்று வதற்காக (உலகத்தில் பரவச் செய்வதால்) தம்முடைய முகத்திலிருந்து உங்களை உண்டுபண்ணினார். நீங்கள் வேதங்களை நன்றாய் அறிந்தவர்கள். தபஸ்விகள். வித்தையுள்ளவர்கள். யோகாப்பியாசம் செய்தவர்கள். விஷயத்தில் ஆசை இல்லாதவர்கள். அநேகப் பாதங்கள் உள்ள அந்தப் பகவான் தம்முடைய அநேக கைகளிலிருந்து உங்களைக் காப்பாற்றுவதற்காக எங்களைப் படைத்தார். அவருக்குப் ப்ராஹ்மண ஜாதியே ஹிருதயம். க்ஷத்திரிய ஜாதியே சரீரம். ஆகையால் ப்ராஹ்மண ஜாதியும், க்ஷத்திரிய ஜாதியும் ஒன்றையொன்று காப்பாற்றுகின்றன. காரண ரூபியும், காரிய ரூபியும், விவகாரமற்றவருமான அந்தத் தேவனே எல்லாவற்றையு ம் காப்பாற்றுகிறார்.(உமக்கும் எனக்கும் ஏற்கனவே சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.) உம்மைத் தர்சித்ததாலேயே ஸகல ஸம்சயங்களும் நிவர்த்தியாயின.

ஜனங்களைக்காப்பாற்ற விரும்பிய எனக்குப் பகவானாகிய நீர் பிரியத்துடன் தர்மத்தை உபதேசித் தீர். புண்ணியம் செய்யாதவர்களுக்கு உம்முடைய

தரிசனம் கிடைக்காது. அப்போர்ப்பட்ட உம்மை நான் பார்த்து மங்களகரமாகிய உம்முடைய பாததூளியை நான் சிரஸில் வஹித்தது. உம்மால அனுக்ரஹிக்கப் பட்டது, உம்முடைய வார்த்தைகளைக் காதுகளால் கேட்டது ஆகிய இவைகள் தெய்வச் செயலால் கிடைத்ததேயொழிய வேறில்லை. ஆகையால் ஓ மகர்ஷியே! பெண்ணிடத்தில் மிகுந்த பிரியத்தால் சிரமப்படும் தீனனாகிய என்னிடத்தில் கிருபைசெய்து நான் தெரிவித்துக் கொள்வதைக் கேட்க வேண்டும்.

அதாவது ப்ரியவ்ருதன், உத்தானபாதன் இவர்களுடைய சகோதரியும் எனது குமாரியுமாகிய இந்தப் பெண் யௌவன வயது, நல்ல சுபாவம்; நற்குணங்கள் ஆகிய இவைகள் உள்ள பர்த்தாவை அடைய விரும்புகிறாள். மேலும் இவள் உம்முடைய ஸ்வபாவம், வித்தை, வயது, குணம் ஆகிய இவைகளை நாரத மகரிஷியினிடமாகத் தெரிந்துகொண்டு அதுமுதல் உம்மையே விவாகம் செய்துகொள்ளுகிறது என்று நிச்சயஞ் செய்து கொண்டாள். ஓ! ப்ராஹ்மண சிரேஷ்டரே, சிரத்தையுடன் என்னால் சமர்ப்பிக்கப் படும் எனது பெண்ணைப் பெற்றுக்கொள்ளும்! இவள் கிரஹஸ்தாச்ரம காரியங்களில் பலவகையிலும் உமக்கு ஒத்தவள். விஷயங்களில் ஆசையை ஒழித்தவன் ஆனாலும், தானாக வந்த விஷயத்தை மறுக்கக்கூடாது. அப்படியிருக்க விஷயத்தை விரும்பியவன் அதை மறுக்கலாமா? எவன் ஸ்வயமாகக் கிடைத்ததை லட்சியஞ்செய்யாமல் பிறகு கிருபணனை யாசிக்கிறானோ அவன் மிகுந்த கீர்த்தியுள்ளவனானாலும் அவனுடைய கீர்த்தியானது குறைந்துவிடும். பிறரை அவமதித்ததால் அவனுடைய மானமும் போய்விடும். ஓ வித்வானாகிய

ப்ராஹ்மண! நீர் விவாகம் செய்துகொள்வதற்காக முயற்சித்திருக்கிறீர் என்று கேள்விப்பட்டேன். விவாஹம் வரையில் ப்ரஹ்மச்சர்யத்தை அனுஷ்டிக் கிறதென்ற நீர் என்னால் கொடுக்கப்படும் கன்யா ரத்தினத்தைப் பெற்றுக்கொள்ளும்' என்று சொன்னார்.

15–23. அதனைக்கேட்ட கர்த்தமப் பிரஜாபதி அரசனை நோக்கி, 'நீர் சொல்வது சரியே நான் விவாஹம் செய்து கொள்ளவேண்டுமென்ற விருப்பம் உள்ளவனாக இருக்கிறேன். உம்முடைய குமாரத் தியையும் வேறொருவருக்கு கொடுப்பதாக நீரும் ப்ரதிக்ஞை செய்யவில்லை. இந்த முதன்மையான விவாஹமானது எங்களிருவருக்கும் தகுதியானதேயாம். ஓ மகாராஜா! விவாஹ விஷயத்தில் உம்முடைய குமாரிக்கு ஏற்பட்டிருக்கும் இஷ்டமானது பூர்த்தி யடையட்டும். தன்னுடைய தேஹகாந்தியாலேயே ஆபரணங்களால் ஏற்படும் சோபையைப் பரிஹஸிக்கும் உம்முடைய பெண்ணை யார்தான் விரும்ப மாட்டான்? இந்தப் பெண் மாடிமீது, காலிலிருக்கும் பாதஸரங்கள் சப்திக்கும்படி பந்து விளையாடும் போது, விச்வாவசு என்ற கந்தர்வன் பார்த்துப் புத்தி மயங்கி விமானத்திலிருந்து கீழே விழுந்தான். லக்ஷ்மீதேவியின் சரணங்களைச் சேவியாதவர்களால் பார்க்க முடியாதவளும், ஸ்திரீகளுக்குள் சிறந்தவளும், சுயமாகப் ப்ரார்த்திக்கிறவளும், உத்தானபாதருடைய சகோதரியும், மனுவின் புத்திரியுமாகிய இந்தப் பெண்ணை வித்வானாகிய எவன்தான் அங்கீகரிக்க மாட்டான்? ஆகையால் இந்தப் பெண்ணை விவாகஞ் செய்துக்கொள்ளுகிறேன். என்னுடைய வீரியத்தை தந்து அவள் கர்ப்பத்தை அடைகிறவரையில்

கிருஹஸ்த தர்மத்தை அனுஷ்டிப்பேன். பிறகு மஹாவிஷ்ணுவினால் உபதேசிக்கப்பட்டதும், இம்சை அற்றதும், ஞானத்தையே முக்யமாயுடையதுமான தர்மத்தை ஆசிரயிப்பேன் (சன்யாசஞ் செய்து கொள்வேன்). பலவகையான இந்த ஜகத்தானது எவரிடமிருந்து உண்டானதோ, எவரால் காப்பாற்றப் படுகின்றதோ, எவரால் சம்ஹரிக்கப்படுகிறதோ, ப்ரஜாபதிகளுக்கும் அதிபதியாகிய அந்த அனந்தனாகிய பகவான் எனக்கு இப்படிச் செய்யவேண்டுமென்று உபதேசித்திருக்கிறார் என்று சொல்லி அந்த மகரிஷியானவர் மனத்தில் ஸ்ரீ வாசுதேவரை தியானஞ் செய்துகொண்டு மௌனமாக இருந்தார. அவருடைய முகத்தை பார்த்த, தேவஹூதி அவரிடம் ஆசைக் கொண்டாள். பின்பு மனுவானவர் தம்முடைய பத்தினியாகிய சதரூபை, புத்திரியாகிய தேவஹூதி இருவர்களுடைய அபிப்பிராயத்தை நன்றாய் அறிந்த நற்குணங்கள் பொருந்திய அந்தப் ப்ராஹ்மணனுக்குத் தகுந்தவளான கன்னிகையை தானம் செய்தார். மகாராஜனுடைய பாரியையாகிய சதரூபை யென்பவள் ஆபரணங்கள், வஸ்திரங்கள், விளையாட்டுச் சாமான்கள் ஆகிய விலை உயர்ந்தவைகளைக் கன்னிகாதானமாகத் தம்பதிகளுக்குக் கொடுத்தாள்.

24–39. இப்படி அரசன் தன்னுடைய குமர்ரியைத் தகுந்த வரனுக்குக் கொடுத்து கவலையற்றவராகப் பெண்ணை விட்டுப் பிரிய மனமில்லாதவராகி, ஸ்நேகத்தால் மனம் கலங்கி, "அம்மா! குழந்தாய்" என்று சொல்லி கண்ணீரை பெருக்கி, அதனால் அவளுடைய தலைமயிரை நனைத்தார். பின்பு மகர்ஷியினிடம் விடைபெற்றுப் பத்தினியுடன்

இரதத்தின் மீதேறி சைன்யங்களுடன் தமது நகரஞ் சென்றார். வழியில் சரஸ்வதி நதியின் இருகரைகளிலும் மிகவும் சாந்தர்களான மகர்ஷிகளுடைய ஆசிரமங்களைத் தரிசித்தார். இப்படித்தமது பட்டணத்திற்கு வந்த அரசனைப் ப்ரஹ்மா வர்த்தத்திலிருக்கும் ஜனங்கள் மிகவும் சந்தோஷித்து, கானத்தாலும் ஸ்தோத்திரத்தாலும், வாத்திய சப்தத்தாலும் பூஜித்து எதிரில் சென்று அழைத்தார்கள். ஸ்ரீ நாராயணன் வராஹாவதாரம் செய்த காலத்தில் அந்த யக்ஞவராஹமானது தன்னுடைய சரீரத்தை சிலிர்த்துக் கொண்டது (அசைத்தது). அதிலிருந்து மயிர்கள் எவ்விடத்தில் உதிர்ந்தனவோ, அந்த ஸ்தலம், பர்ஹிஷ்மதீ என்ற பட்டணமாயிற்று. அது ஸகல சம்பத்துக்களால் நிறைந்திருந்தது. அந்த மயிர்களே பச்சை நிறமுள்ள தர்ப்பங்களாயின. அவைகளைக் கொண்டு மகர்ஷிகள் யாகவிரோதிகளான ராக்ஷஸர்களைத் துரத்தி யாகத்தை முடிக்கிறார்கள். பகவான் ஆகிய மனுவும் யக்ஞவராஹரிடமாகப் பூமியை அடைந்து அவ்விடத்தில் அந்த குசகாசங்களை பரப்பி, யக்ஞ புருஷனாகிய பகவானை முன்காலத்தில் பூஜித்தார். அந்த நகரஞ் சென்று, மூவகையான தாபத்தைப் போக்கக்கூடிய அரண்மனையில் தர்மத்திற்கு விரோதமில்லாமல் காமசுகங்களை அனுபவித்து முன்போல் வசித்தார். ஒவ்வொரு நாளும் விடியற் காலத்தில் கந்தர்வர்கள் தமது ஸ்திரீகளுடன் இந்த அரசனுடைய மேலான கீர்த்தியை, கானம் செய்கிறார்கள். அரசன் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் கதைகளை மிகுந்த பிரேமையுடன் சிரவணஞ் செய்து காலத்தைக் கழித்துவந்தார். இப்படி மனுவானர் பகவானிடத்திலே சித்தத்தைச்

செலுத்தி வரும்போது அந்தஸ்வாயம்புவ மனுவை, விஷயங்களிலேயே ஆசைப்படும்படி செய்யப் போகங்களால் முடியவில்லை. மேலும் அவர் பகவான் உடைய கதைகளைக் கேட்பதாலும், பகவானைத் தியானஞ் செய்வதாலும் அவருடைய கதையை வாக்கியங்களாக் அமைப்பதாலும், வாயால் சொல்வதாலும் காலத்தைக் கழித்து வந்தபடியால் அவருடைய காலத்தில் நடந்த யாமங்கள் (காலத்தில் அவயவங்கள்) ஸாரமற்றவையாக ஆகவில்லை (பலமுள்ளவையாயின). இப்படி அவர் தம்முடைய காலமாகிய எழுபத்தொரு யுகங்களிலும் ஸ்ரீவாசுதேவருடைய கதையாலேயே மூவகைத் தாபமற்றவராக இருந்தார்.

ஓ வியாச புத்திரனாகிய விதுர! பகவானை ஆசிரயித்தவர்களுக்குச் சரீரத்தில் உண்டாகும் ரோகங்களாவது, மனக் கவலையாவது, ஆகாசத்தில் இருந்து வரக்கூடிய உபத்திரவங்களாவது, சத்ருக்கள் இடமிருந்து பயமாவது, உஷ்ணம், சீதம் இவைகள் உண்டாகும் துக்கமாவது நேரிடுகிறதில்லை. அவரை மகர்ஷிகள் தர்மங்களைச் சொல்லும்படி கேட்க ஸகல பிராணிகளுக்கும் அனுகூலத்தைச் செய்பவரான அந்த மனு மனிதர்களுக்கும் அந்த அந்த ஜாதிகளுக்கும் ஆசிரமங்களுக்கும் உரியதான தர்மங்களை உபதேசித்தார். அரசர்களுக்குள் முந்தியவரும் வருணிக்கத் தக்கவருமான மனுவின் அற்புதமாகிய சரிதத்தைக் சொன்னேன். இனி அவருடைய பெண்ணாகிய தேவஹூதியின் மஹிமையைச் சொல்கிறேன் கேளும்" என்றார்.

அத்தியாயம்–23

கர்த்தமருடைய யோக மகிமை

தாய்தந்தையான சதரூருபையும், ஸ்வாயம்புவ மனுவும் ப்ரம்மாவர்த்தம் சென்றபின் அவர்களுடைய புத்திரியும் பதிவிரதையும், இங்கிதத்தை அறிந்தவளும் ஆன தேவஹூதி, பிரபுவாகிய பரமசிவனுக்குப் பார்வதி தேவிபோலக் கர்த்தமருக்குச் சிசுருஷை செய்துவந்தாள். அவள் விசுவாசத்தாலும் அந்தக் கரண சுத்தியாலும் (சமத்தாலும்), எல்லாரையும் விடத் தனது பர்த்தா மேலானவரென்று நினைத்திருந்தாலும் தமத்தாலும் (வெளியிலிருக்கும் இந்திரியங்களை அடக்குவது), கால் பிடிப்பது முதலியவற்றாலும், பிரியத்தாலும், இனிமையான வார்த்தையாலும், மிகுந்த தேஜஸ்வியாகிய தன்னுடைய பர்த்தாவைச் சந்தோஷிக்கச் செய்தாள்.

மேலும் அவள், காமத்தையும், கபடத்தையும், துவேஷத்தையும், ஆசையையும், நிஷித்த காரியத்தைச் செய்வதையும், கர்வத்தையும் விட்டவள், பர்த்தாவின் உடைய உத்தரவின்படி நடப்பதில் சாவதானமாய் முயலுபவள். பர்த்தாவை அனுசரித்தவள். அவருக்கு மிகுந்த க்ஷேமத்தை விரும்பியவள், வெகுகாலமாக விரதங்களை அனுஷ்டித்து அதனால் இளைத்தவள். அப்போர்ப்பட்ட மனுவின் குமாரியாகிய தேவஹூதியின் இடத்தில் கர்த்தமப் பிரஜாபதி சந்தோஷமடைந்து மிகுந்த கிருபையுடன், பிரேமையால் பேசமுடியாமல் கத்கத ஸ்வரத்துடன் பாரியயை நோக்கி, 'ஓ கம்பீர மனமுடையவளே! எனக்கு நீ கௌவரத்தை உண்டு

பண்ணுகிறவள்; சரீரமெடுத்தவர்களுக்கு (பிராணி களுக்கு) தங்கள் தங்கள் சரீரத்தில் அதிக ப்ரியம் இருக்கும். உன்னுடைய சரீரமோ மிகவும் மேலானது. அப்படியிருந்தாலும் அதனை லட்சியஞ் செய்யாமல், என்க்கு மிகவும் சிசுருஷை செய்து வந்தபடியாலும், என்னிடத்தில் மிகுந்த பக்தி வைத்திருப்பதாலும், நான் சந்தோஷமடைந்தேன். தனக்கு உரிய தருமத்தை அனுஷ்டித்து வந்தவனாகிய எனக்குக் கிடைத்த பகவத்பிரசாதங்கள் (திவ்யபோகங்கள்) என்னை நீ சேவித்துக் கொண்டிருந்தபடியால் உன்னாலும் அடையப்பட்டவைகளே; அவைகள் தபஸ், சமாதி, உபாசனை ஆகிய இவைகளில் மனத்தை ஒருவகைப் படுத்தியதால் கிடைத்தவை, உனக்கு திவ்ய திருஷ்டியைக் (ஞானக்கண்ணை) கொடுக்கிறேன். அதனைக் கொண்டு பயமற்றவைகளும்; துக்கம் அற்றவைகளுமான அவைகளை நேரில் பார்க்கலாம்; நீ சித்தையாக விருக்கிறாய். பதிவிரதா தர்மத்தால் கிடைத்த திவ்ய போகங்கள். அவைகள், "நாம் அரசர் என்ற அஹங்காரமுள்ள மற்றவர்களால் அடைய முடியாதவை, மற்ற மானுஷ போகங்களெல்லாம் பகவானுடைய புருவங்களின் அசைத்தலால் கெடுக்கப் பட்ட மனோரதமுள்ளவைகள். (அநித்யங்கள்); அவைகளால் என்ன பிரயோசனம்?" என்று சொன்னார்.

9–11 அதனைக் கேட்ட தேவஹூதி, தன்னுடைய பர்த்தாவாகிய கர்த்தமர் யோகமாயையிலும், உபாசனையிலும் மிகவும் தேர்ச்சியடைந்தவரென்று தெரிந்து கொண்டு கவலையற்றவளானாள். மேலும் அவள் வெட்கமுள்ள பார்வையால் அழகான சிரிப்பு உள்ள முகமுள்ளவளாகி, அதிக வணக்கத்தாலும்,

விசுவாசத்தாலும் சுத்தஸ்வரமுள்ள வளாகப் பர்த்தாவை நோக்கி, "ஓ ப்ராஹ்மணோத்தம! வீணாகாத யோக மாயைக்கு அதிபதியான உம்மிடத்தில் இவையாவும் இருக்கின்றனவென்பது எனக்குத் தெரியும். என்னுடைய விவாக காலத்தில் நீர் சொன்னபடி எனக்குக் கர்ப்பம் உண்டாகட்டும். பதிவ்ரதைகளான ஸ்த்ரீகளுடைய குணங்கள் சிறந்த விஷயத்தில் பிரசித்தமாகும். (எனக்குப் புத்திரன் உண்டாகி அதனால் என்னுடைய குணங்கள் லோகத்தில் பரவியபின்,திவ்ய சக்ஷுஸ்ஸை அடைகிறேன் என்று கருத்து.)

மேலும் நான் உம்முடைய ரூபலாவண்யத்தால் மோகித்து மன்மதனால் உபத்திரவிக்கப்பட்டிருக்கிறேன். உம்மைச் சேர்ந்து ரமிக்க வேண்டுமென்ற ஆசை யுள்ளவளாக இருக்கிறேன். பின்னும் என்னுடைய சரீரம் விரதங்களால் சிரமப்பட்டிருக்கிறது. அது போகத்திற்கு தகுந்ததாக ஆகும்படி செய்ய வேண்டும். தவிரவும், காம சாஸ்திரப்படி அதற்கு வேண்டிய சாதனங்களைச் சம்பாதிக்க வேண்டும். அதற்காக எது செய்யப்பட வேண்டியதோ, அதனைச் செய்யும் தகுதியான கிருகத்தைச் சம்பாதியும்" என்றாள்.

11–21 ஓ விதுரரே! அதனைக் கேட்ட கர்த்தமப் பிரஜாபதி தம்முடைய பார்யையின் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டி தம்முடைய யோக பலத்தால் உடனே ஒரு விமானத்தை உண்டு பண்ணினார். அது இஷ்டப்படி செல்லக் கூடியது, ஸகல இஷ்டங்களையும் கொடுக்கக்கூடியது, திவ்யமானது. ஸகல ரத்தினங்களுள்ளது. ஸகல சம்பத்துக்களும்

அதில் மேன்மேலும் விருத்தி யடைந்துள்ளது. இரத்தின மயமான தூண்களால் அலங்கரிக்கப்பட்டது. அதனுடைய சாமக்கிரியைகள் யாவும் திவ்யமானவை. எந்தக் காலத்திலும் சுகத்தை உண்டு பண்ணக்கூடியது. விசித்திரங்களான பட்டுத்தோரணங்கள பலவகையான புஷ்ப மாலைகளால் அலங்கரித்த மாலைகளிலுள்ள மதுவைப் பானஞ் செய்து வண்டுகள் சப்திக்கின்றன. மேலும் வெண்பட்டுகள், அரக்குப் பட்டுகள் முதலிய பலவகை வஸ்திரங்களால் பிரகாசிக்கின்ற கட்டில் முதலிய படுக்கைகளும் அதில் கம்பளம் விரிப்புகளும் சித்தமாக இருக்கின்றன. ஓ! பலவகையான வேலைத் திறமை காட்டப்பட்டிருக்கிறது. பலவிடங்களில்மரகத ரத்தினத்தால் தளவரிசை செய்த பவழத் திண்ணை களும் பிரகாசிக்கின்றன. வாயிற்படிகள் இரேழிகளில் இழைக்கப்பட்ட பவழங்களுடைய காந்தியாலும் வஜ்ர கதவுகளாலும் விளங்குகின்றன. இந்திரநீலக் கற்களால் மாடியின் மேற்புறத்தில் தங்கக் கலசவஜ்ரச் சுவர்களில், கண்கள்போல் பிரகாசிக்கும் மேலான பத்மராகங்கள் இழைக்கபட்டிருக்கின்றன. பல வகை யான கொடுங்கைகளாலும் விலையில்லாத தங்கத் தோரணங்களாலும் பிரகாசிக்கிறது. ஹம்ஸங்களும், புறாக்களும்,கிருத்ரிமமான (வேலை செய்து வைத்த பிரதிமைகள்) வைகளை தங்கள் ஜாதியைச் உண்மை யான பறவைகளென்று எண்ணி, அவைகள் இருக்கு மிடத்தில் செல்லுகின்றவைகளும், வருகின்றவை களுமாக இருக்கின்றன விளையாடும் இடங்கள், சயனக்கிருகம், உபயோகிக்குமிடம் வீட்டிற்கு வெளிப் பிரதேசங்கள், பிரகாரத்திற்கு வெளிப்பிரதேசங்கள் ஆகிய இவை சுககரங்களாக இருக்கின்றன. இந்த விமானமானது கர்த்தமருக்கு மோகத்தை உண்டு பண்ணுகிறது.

32–35 இப்பேர்ப்பட்ட விமானத்தைப் பார்த்தும் தேவஹூதியானவள் அதிகமாகப் பிரியப்படவில்லை. அப்பொழுது சகல பிராணிகளுடைய அபிப்ராயத்தைத் தெரிந்து கொள்ளும் சக்தியுள்ள கர்த்தம பிரஜாபதி, தம்முடைய புத்தியை நோக்கி, "ஓ தேவஹூதியே! இந்தப் பிந்துசரஸில் ஸ்நானம் செய்! இந்தத் தீர்த்தமானது ஸ்ரீ மகா விஷ்ணுவினால் ஏற்படுத்தப் பட்டது. மனிதர்களுக்கு சகல இஷ்டத்தையும் கொடுக்கக் கூடியது. இந்த விமானத்தின் மீதேறிக் கொள்" என்றார். நீலோத்பலம் போன்ற கண்களுள்ள தேவஹூதியானவள் சரஸ்வதி நதியின் ஜலமுள்ள அந்த சரஸில் மூழ்கினாள். அப்பொழுது அவளுடைய வஸ்திரங்கள் அழுக்குள்ளதாக இருந்தன. தலை மயிர்கள் ஜடையாக இருந்தன. சரீரம், ஸ்தனங்கள் ஆகிய இவைகள் அழுக்கினால் (வர்ணம் மாறி) இருந்தன. அந்தத் தேவஹூதி ஜலத்தில் மூழ்கியவுடன் ஜலத்திற்குள் ஒரு வீட்டில் ஆயிரம் பெண்கள் இருக்கக் கண்டாள். அவர்கள் எல்லோரும் சிறு வயதுள்ளவர்கள். அவர்களுடைய சரீரங்கள் நீலோத் பல புஷ்பங்கள்போல் வாசிக்கின்றன. அவர்கள் தேவஹூதியைக் கண்டமாத்திரத்தில் எழுந்திருந்து கைகூப்பி, "நாங்கள் உமக்கு இஷ்டமான காரியத்தைச் செய்யும் வேலைக்காரிகள்; என்ன செய்ய வேண்டும், ஆக்ஞாபிக்க வேண்டும்" என்று கேட்டார்கள். மேலும் அவர்கள் மேலான வாசனையுள்ள தைலம் தேய்த்து, தேவஹூதிக்கு ஸ்நானம் செய்துவைத்து, சுத்தமாகிய புதிய வெண்பட்டைக் கொடுத்து உடுத்திக் கொள்ளச் செய்தார்கள். விலை உயர்ந்தவைகளும் மிகுந்த காந்தி உள்ளவைகளுமான இரத்தினாபரணங்களால் அவளை அலங்கரித்தார்கள். அமிர்தம் போன்ற ருசியுள்ள

அன்னத்தையும், பானத்தையும் (குடிக்கக் கூடியவை கள்) அவளுக்கு கொடுத்தார்கள். பின்பு தேவஹூதி கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள். திவ்யமான ஹாரங்களாலும், சுத்தமான வஸ்திரங் களாலும் தன்னுடைய தேகம் அலங்கரிக்கப்பட்டு இருந்தது.

மேலும், மங்கள ஸ்நானத்தால் அழுக்கற்றதாகவும் இருந்தது. அந்தப் பெண்கள் அவளை மங்கள திரவியங்களைக் கொண்டும், சகல ஆபரணங்கள், சலங்கைகள், தங்கத்தால் செய்யப்பட்ட பாதசரங்கள், பலவகையான இரத்தினங்கள் இழைத்த ஒட்டியாணம், கண்டாபரணம் முதலியவை ஆகிய இவைகளால் அலங்கரித்தார்கள்; மேலும், முகமானது அழகான புருவங்களாலும், ரம்யமாகிய பற்களாலும், மனோகரம் ஆகிய பார்வையுள்ளது. தாமரை மலர் போன்றதும் ஆகிய நேத்திரங்களாலும் அழகாக இருந்தது. அப்பொழுது அவள், "இந்த சமயத்தில் பர்த்தாவாகிய மகரிஷி சமீபத்தில் இல்லை என்று நினைத்தாள்.

அப்படி நினைத்தவுடன் கர்த்தமப் பிரஜாபதி வசிக்குமிடத்தில் அவருக்கு முன்பாக, தேவஹூதி தம்முடைய பரிசாரிகைகளான பெண்களுடன் தான் இருக்கக் கண்டாள். அப்பொழுது அவள் ஜலத் திற்குள் ஆயிரம் பெண்களைப் பார்த்தது. அவர்கள் தம்மை உபசரித்தது. பர்த்தாவை ஸ்மரித்த மாத்திரத்தில் அந்தப் பெண்களுடன் மகரிஷியின் சமீபத்தில் தாமிருப்பது முதலியவைகள் யோக மகிமையால் ஏற்பட்டவையென்று யோசித்து மிகவும் ஆச்சரியமடைந்தாள்.

36–57 காமம் முதலிய சத்ருக்களை ஜயித்தவராகிய ஓ விதுரரே! அந்த மகரிஷி, மங்கள ஸ்நானம் செய்தவளும், பித்ரு கிரகத்திலிருக்கும் போதிருந்த சௌந்தரியமுள்ளவளும், அழகான ஸ்தனங்களுள்ளவளும், நல்ல வஸ்திரமுள்ளவளும், ஆயிரம் வித்யாதர ஸ்திரீகளால் சூழப்பட்டவளுமான தேவஹூதியைப் பார்த்து,. அவளிடத்தில் ஆசையுள்ளவராகிய, அந்த விமானத்தில் அவளை ஏற்றிக் கொண்டார். அந்த விமானத்தில் அந்த மகரிஷியானவர். தம்முடைய பத்னியுடன் சேர்ந்து வித்தியாதர ஸ்திரீகளால் உபசரிக்கப்பட்டு ஆகாயத்தில் நட்சத்திரங்களாகையால் சூழப்பட்டவரும் அழகான சரீரமுள்ளவரும், குமுத (ஆம்பல்) புஷ்பங்களை மலரச் செய்பவருமாகிய பூர்ண சந்திரன்போல் பிரகாசித்தார்,

எட்டு லோக பாலர்களும் விளையாடக் கூடிய மேருபர்வதத்தின் குகைகளில் அநேக ஸ்திரீகளுடன் குபேரன்போல் கிரீடித்தார். சித்தர்களும் அவரை ஸ்தோத்திரஞ் செய்தார்கள். அந்தக் குகைகள், மன்மதனை விருத்தி செய்யக்கூடிய காற்று வீசுவதால் அழகுள்ளவை; ஆகாச கங்கை உயர்ந்தவிடமிருந்து விழுகிறபடியால் இனிமையான சப்தமுள்ளவை. இப்படி அந்த மகரிஷியானவர். வைச்ரம்பகம், சுவரசனம், கந்தகம், புஷ்ப பத்ரகம், மானசம், சைத்ராத்யம் ஆகிய தேவர்களுடைய உத்தியான வனங்களில் பத்தினியுடன் ரமித்தார். மேலும், அவர் இஷ்டப்படி செல்லக்கூடியதும், மிகவும் பிரகாசிக்கிறதும், மேலானதுமாகிய விமானத்தின் மீதேறி வாயு பகவான்போல் எல்லா லோகங்களிலும்

சஞ்சரித்து, தேவர்களுக்கும் (விமானத்திலேறிச் சஞ்சரிப்பவர்கள்) மேலானவராக இருந்தார்.

சம்சாரத்தை நிவிர்த்திக்கக் கூடிய பகவானுடைய பாதங்களை ஆசிரயித்தவர்களும், தைரியமுள்ளவர்களுமான யோகிகளுக்கு எதுதான் கிடைக்காது? யோகியாகிய அந்தக் கர்த்தமர் பலவகையான அமைப்புள்ள விசித்திரமாகிய பூகோளத்தைத் தம்முடைய பத்தினியாகிய தேவஹூதிக்குக் காண்பித்துத் தம்முடைய ஆசிரமஞ் சென்றார். பின்பு அவர் ரதியில் ஆசையுள்ளவளும், மனுவின் புத்திரியுமான தேவஹூதியினிடத்தில் ஒன்பது பிரஜைகளை உண்டுபண்ணுவதாகிய எண்ணத்துடன் அநேக வருஷங்கள் இரமித்தார்.

தேவஹூதியும், அந்த விமானத்தில் சந்தோஷத்தை உண்டுபண்ணக்கூடிய மேலான படுக்கையில் அழகு பொருந்தியவரான பர்த்தாவுடன் சேர்ந்து, "இவ்வளவு காலஞ் சென்றது" என்பதைத் தெரிந்து கொள்ளாமல் ஆனந்தத்தில் மூழ்கியிருந்தாள். இப்படி அந்தத் தம்பதிகள் யோக மகிமையால் ரமித்துவரும் போது நூறு வருஷங்கள் கூட்டிய காலம் போல சென்றன. அப்பொழுது தேவஹூதியின் எண்ணத்தை (அநேக பிரஜைகளுண்டாக வேண்டுமென்றது) அறிந்தவரும், அப்படிச் செய்ய சாமர்த்தியமுள்ளவருமாகிய அந்த மகரிஷி, பத்தினியைத் தம்முடைய பாதிச் சரீரமாகப் பாவித்தும், ஆத்மக்ஞர் ஆகையால் அவளிடத்தில் ஆசை வைக்காமலும் தம்முடைய வீரியத்தை ஒன்பது வகையாக அவளிடத்தில் உபயோகித்தார். உடனே

அவள் ஒன்பது பெண்களைப் பெற்றாள். அந்தப் பெண்கள் எல்லோரும் அழகான சரீரமுள்ளவர்கள்; செந்தாமரைப் புஷ்பம் போன்ற வாசனையுள்ளவர்கள்; உடனே சன்யாசம் செய்துகொள்ள யத்தனிக்கும் மகரிஷியைப் பார்த்துப் பதிவிரதையான தேவஹூதி, சிரித்துக் கொண்டு, மனவருத்தத்துடன் தலைகுனிந்து, கால் நகத்தால் பூமியைக் கீறினவளாகக் கண்ணீரை அடக்கி கொண்டு, "ஓ பகவன்! எனக்கு நீர் செய்வதாகச் சொன்னவைகள் எல்லாம் உம்மால் செய்யப்பட்டன. ஆனாலும் சரணமடைந்தவளாகிய எனக்கு அபயப் பிரதானஞ் செய்யவேண்டும்.

ஓ பிராமண! நீர் காட்டிற்குச் சென்றால் உம்முடைய பெண்களுக்குச் சமானர்களான புருஷர் களைத் தேடி விவாகஞ் செய்யவேண்டுமே, அதனை யார் வகிப்பார்? மேலும் பெண்களால் பித்ருக்களின் ருணம் (கடன்) தீராததாகையால் சம்சார துக்கத்தைப் போக்கக்கூடிய பிரம்மவித்தாகிய புத்திரன் ஒருவன் வேண்டும். மேலும், பரமாத்மாவின் ஸ்வரூபத்தை விசாரியாமல் இந்திரிய விஷயங்களிலேயே ஆசை கொண்டு இவ்வளவு காலத்தைக் கழித்து விட்டது போதும். உம்முடைய உண்மையான மகிமையை நான் இது வரையில் தெரிந்து கொள்ளவில்லை. விஷய சுகத்தில் ஆசைப்பட்டு அதனையே தங்களிடம் அடைந்தேன். ஆனாலும் எனக்கு அதுவே அபயத்தைக் கொடுக்கடும். புத்திக்குறைவினால் அசாதுக்களிடம் சேருவதால் சம்சாரபந்தம் உண்டாகிறது. சாது சங்கஞ்செய்தால் மோக்ஷத்திற்குச் சாதனமாக ஆகிறது. இவ்வுலகத்தில் எவனுடைய செய்கைகள் தர்ம மார்க்கத்திலில்லையோ, வைராக்கியத்திற்கும் சாதனமாக

ஆகவில்லையோ, பகவானுடைய பாதசேவைக்கும் உபயோகப்படுகிறதில்லையோ, அவன் உயிரோ டிருந்தும் மரணமடைந்தவனேயாம். நான் பகவானுடைய மாயையால் வஞ்சிக்க (ஏமாற்ற)ப்பட்டு மோக்ஷத்தைக் கொடுக்கும் பிரபுவாகிய உம்மை அடைந்தும் அதில் விருப்பமில்லாதவளாக இருந்தேன்; ஆகையால் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று அழகான வார்த்தைகளைச் சொன்னாள்.

அத்தியாயம்–24

கபிலாவதாரம்

1–4. பின்பு தயாளுவாகிய கர்த்தமப் பிரஜாபதி விஷயத்தில் நிர்வேதத்தை அடைந்து இம்மாதிரி சொல்லி அதைர்யத்துடனிருக்கும் மனுவின் புத்திரியார் ஆகிய தேவஹூதியை நோக்கி "ஓ ராஜ குமாரியே குற்றமற்றவளே! நீ உன்னுடைய ஆத்மாவைப்பற்றி துக்கிக்கவேண்டாம். ஸ்ரீ பகவான் ஆகிய நாராயணன் சீக்கிரத்தில் உனக்குப் புத்திரனாக அவதரிப்பார். நீ விரதமுள்ளவளாக இந்தரியங்களை அடக்கிக் கொண்டு, உன்னுடைய தர்மத்தை அனுஷ்டிப் பதாலும் தவத்தினாலும், பாத்திரத்தில் தானம் செய்வதாலும், மிக்க சிரத்தையுடன் ஈச்வரனைப் பூஜி. உனக்கு க்ஷேமம் உண்டாகும். உன்னால் பகவான் பூஜிக்கப்பட்டு உன்னுடைய வயிற்றில ப்ரஹ்மவித்தாக அவதரித்து என்னுடைய கீர்த்தியை உலகத்தில் பரவச்செய்து கொண்டு, உன்னுடைய மனத்தில் அஹங்காரத்தைப் போக்கடிப்பார்" என்று ஸ்ரீமந் நாராயணனுடைய வார்த்தையை நினைத்துக்கொண்டு சொன்னார்.

5–20. அதனைக் கேட்ட தேவஹூதி அவருடைய வார்த்தையில் மிகுந்த ச்ரத்தை வைத்து, கூடஸ்தரும் எல்லாருக்கும் குருவுமாகிய பரமபுருஷனை ஆராதித்தாள். இப்படிச் சில காலம் சென்றபின் அந்தத் தேவஹூதியினிடத்தில் கர்த்தமருடைய வீரியத்திற்கு அரணியிலிருந்து அக்கினி போல் பகவான் புத்திரனாக அவதரித்தார். அந்தச் சமயத்தில் ஆகாசத்தில்

தேவதுந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்கின; மேகங்கள் மழையைப் பெய்தன. கந்தர்வர்கள் பாடினார்கள்; அப்ரஸரஸ்கள் நர்த்தனம் செய்தார்கள்; தேவர்கள் புஷ்பமாரி பெய்தார்கள்; ஸகல திக்குகளும், ஜனங்களும், ஜனங்களுடைய மனதுகளும் தெளிந்தன. சரஸ்வதீ நதிக்கரையிலிருக்கும் அந்தக் கர்த்தமருடைய ஆசிரமத்திற்குப் ப்ரஹ்மதேவர், மரீசி முதலிய மகர்ஷிகளுடன் வந்தார். ஓ காமம் முதலிய சத்துருக்களை ஜயித்தவராகிய விதுரரே! அப்பொழுது ப்ரஹ்மதேவர், சாங்கிய யோகத்தை நன்றாகத் தெரிவிப்பதற்காக, ஸத்வாம்சமாக அவதரித்த பரமாத்மாவாகிய பகவானைப் பார்த்து, சுத்தமான மனத்தால் அவருடைய எண்ணத்தைப் புகழ்ந்து சந்தோஷமடைந்த இந்திரி யங்களுடன் கர்த்தமரை நோக்கி, "ஓ குழந்தாய் பலஹூமானத்தைக் கொடுத்த கர்த்தம, என் சொற்படி கபடமற்று நீ நடந்தபடியால் என்னைப் பூஜித்த வனாகிறாய். பிதாவினுடைய உத்தரவை மீறாமல் அதன்படி நடப்பதே பித்ருக்களுக்குப் புத்திரர்கள் செய்யும் சிசுரூஷையாகும். உன்னுடைய இந்தப் பெண்களெல்லோரும் இந்த ஜகத்தைத் தங்களுடைய மகிமைகளால் பலவகையாக விஸ்தரிக்கப் போகிறார்கள். (புத்திர பௌத்திர பரம்பரையால் என்று கருத்து) ஆனதால் இந்தச் சிறந்த மகர்ஷிகளுக்கு உனது இஷ்டப்படி அவரவர்களுடைய ஸ்வபாவத்திற்குத் தகுதியாகக் கல்யாணம் செய்து கொடு; கீர்த்தியைப் பூமியில் பரவச்செய்; உன்னுடைய கிருஹத்தில் புத்திரனாக அவதரித்திருக்கும் கபில மகரிஷியானவர் புராண புருஷர்; தம்முடைய மாயையால் சரீரத்தை எடுத்துக்கொண்டவர்; பிராணிகளுக்குச் ஸகல அபீஷ்டங்களையும் கொடுக்கக் கூடியவர்; இது எனக்குத் தெரியும்.

ஓ மனுவின் புத்திரியாகிய தேவஹூதியே! ஸ்வர்ணமயமாகிய கேசங்களுள்ளவரும் (மயிர்கள்), தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரும், பத்மரேகை யுள்ள பாதங்களுள்ளவரும், கைடபனென்ற அசுரனைக் கொன்றவருமாகிய பகவான், ஞானம் (சாஸ்திரத்தினால் உண்டாகின்றது) விஞ்ஞானம் (அபரோக்ஷ ஞானம்) ஆகிய இவைகளாகிய உபாயங்களால் கர்ம வாசனை களை ஒழித்து அவித்யையால் (ஆத்ம சுருபத்தை அறியாததால்) உண்டான ஸம்சயமாகிய ஹிருதய கிரந்தியைப் போக்குவார். மேலும் இவர் சித்தகணங் களுக்கு அதிபதியாகவும், ஞான சாஸ்திரத்தின் ஆசாரியர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவராயும். கபிலரென்று பிரஸித்தி அடையப் போகிறார். மேலும் உனக்கு விசேஷ கீர்த்தியை விருத்தி செய்வார்" என்று அவ்விருவர்களுக்கும் சொல்லி ஸனகர் முதலிய குமாரர் களுடனும், நாரதருடனும், ஹம்ஸமாகிய வாகனத்தின் மீதேறிச் சத்யலோகம் சென்றார்.

21–25. இப்படிப் ப்ரஹ்மதேவர் தம்முடைய லோகஞ்சென்ற பிறகு, கர்த்தமர் பிதாவினுடைய உத்தரவின்படி லோகத்தைப் படைப்பவர்களான பிரஜாபதிகளுக்குத் தம்முடைய புத்திரிகளைக் கொடுத்தார். எப்படியெனில் மரீசி என்பவருக்குக் கலையென்பவளையும், அத்ரி மகரிஷிக்கு அனசூயை என்பவளையும், அங்கிரசுக்குச் சிரத்தை என்பவளை யும், புலஸ்தியருக்கு ஹவிர் பூ என்பவளையும், கிரதுவிற்குப் பதிவிரதையான கிரியை யென்பவளை யும், புலஹருக்கு கதி என்பவளையும், பிருகுவிற்குக் கியாதி என்பவளையும், வசிஷ்டருக்கு அருந்ததி என் பவளையும், அதர்வா வென்பவருக்கு சாந்தியையும்

(சாந்திக்கு அதிதேவதையென்று கருத்து) விவாகம் செய்துவைத்தார். அந்தச் சாந்தியால்தான் யாகமானது லோகத்தில் பரவச் செய்யப்படுகிறது. பின்பு அந்தக் கர்த்தமர் மணப்பிள்ளைகளாக இருக்கும் அந்தப் ப்ராஹ்மணோத்தமர்களையும் அந்தப் பெண்களையும் சந்தோஷப்படுத்தினார். பின்பு அந்த மகரிஷிகள் எல்லோரும் கர்த்தமரிடம் விடைபெற்றுத் தங்கள் தங்கள் ஆசிரமஞ் சென்றார்கள்.

26–34. பிறகு அந்தக் கர்த்தமப் பிரஜாபதி யானவர் ஸ்ரீ மகாவிஷ்ணுவே தமக்குப் புத்திரனாக அவதரித்திருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டு, ரஹசியத்தில் அவருடைய சமீபம் சென்று. 'சம்சாரத்தில் அவரவர்களுடைய பாப கர்மங்களால் மிகவும் எரிக்கப்படும் (கஷ்டப்படும்) ஜனங்களிடத்தில் வெகு காலத்திற்குப் பின் ஸகல தேவர்களும் தயவு செய்வார்கள். சன்யாசிகள் அநேக ஜன்மங்களில் அப்யசித்துப் பக்குவமான (சித்தித்த) பக்தி யோகத்தால் ஏகாந்தமான இடத்திலிருந்து எவருடைய பாதத்தைத் தரிசிக்க முயற்சிக்கிறார்களோ, அந்தப் பகவானாகிய நீர் கிராம்யர்களான தம்முடைய பந்துக்களைக் காப்பாற்றுவதற்குத் தம்முடைய லாகவத்தைக் கூட லட்சியம் செய்யாமல் நம்முடைய கிருஹத்தில் அவதரித்திருக்கிறீர், மேலும், முன்பு எனக்கு உம்மால் சொல்லப்பட்ட வார்த்தை (உமக்குப் புத்திரனாக அவதரிக்கிறேனென்பது) சத்தியமாக ஆகிவிட்டது. நீர் பக்தர்களுக்கு ஞானத்தை வ்ருத்தி செய்பவர். ஞானஸாதனமாகிய சாஸ்த்ரத்தை உலகில் பரவச்செய்ய விரும்பியவர். உம்முடைய பக்தர்களுக்கு எந்த ஸ்வரூபத்தில் ஆசையிருக்கிறதோ, அந்த அந்த

ஸ்வரூபத்தைப் பிரகிருதி சம்பந்தம் அற்றவரானாலும் நீர் எடுத்துக் கொள்ளுகிறீர். உம்முடைய உண்மையை அறியவேண்டிய வித்வான்கள் எப்போதும் உம்முடைய பாதபீடத்தில் நமஸ்காரம் செய்கிறார்கள். நீர் ஐசுவரியம், வைராக்யம், கீர்த்தி, ஞானம், வீரியம் அழகு ஆகிய இவைகளால் நிறைந்தவர். அப்போர்ப் பட்ட உம்மைச் சரணமடைகிறேன், நீர் பரமேசுவரன். பிரதான புருஷன் (பிரிகிருதிக்கு அதிஷ்டாதா) மகத்தத்துவ ஸ்வரூபியாயிருப்பவர். காலரூபி (அவை களை வேறு ரூபத்தை அடையச் செய்பவர்). ஞானம் உள்ளவர், அகங்காரரூபி. இந்திரியங்களைப் பரிபாலிப் பவர். சித் சக்தியைக் கொண்டு தம்மிடத்திலேயே பிரபஞ்சத்தை லயப்படுத்திக்கொண்டவர். சக்திகளைச் சுவாதீனப்படுத்திக் கொண்டவர். அப்போர்ப்பட்ட கபில மகரிஷியைச் சரணம் அடைகிறேன். நீர் எனக்குப் புத்திரனாக அவதரித்ததால் ஸகல ரிணங்களும் தீர்ந்துவிட்டன. மேலும் நான் ஸகல காமங்களையும் அனுபவித்தேன். ஆனதால் இனி சன்யாச மார்க்கத்தை அடைந்து, இருதயத்தில் உம்மைத் தியானித்து, துக்கமற்றவனாக இருப்பேன். அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

35–40. அதனைக் கேட்ட கபிலர், "ஓ மகரிஷியே! வைதிகமான காரியங்களிலும். லௌகிகமான காரியங் களிலும் உலகத்திற்கு என்னால் சொல்லப்பட்டது பிரமாணமேயாம். நான் உமக்குப் புத்திரனாக அவதரிக்கிறேன்" என்று சொன்னதைச் சத்தியமாகச் செய்வதற்காகவே ஜன்மத்தை அங்கீகரித்தேன். மேலும் தேஹம் முதலியவைகளில் அபிமானத்தை விட்டுவிட வேண்டுமென்று விரும்பியவர்களை உத்தேசித்து

ஆத்ம ஞானத்திற்கு உபயோகமான தத்துவங்களின் உண்மையைச் சொல்வதற்காகவும் அவதரித்தேன். பரமாத்மாவின் உண்மையைக் தெரிந்து கொள்வதாகிய மார்கம் மிகவும் சூட்சமமானது. அதனை நான் உபதேசித்திருந்தாலும், வெகு காலம் சென்றபடியால் அது ஒளிந்து போயிற்று. அதை லோகத்தில் பரவச் செய்வதற்காகவே இந்தச் சரீரத்தைத் தரித்துக் கொண்டிருக்கிறேன். உம்முடைய இஷ்டப்படி போகலாம். நான் அனுமதிக்கிறேன். என்னிடம் சமர்ப்பித்து ஜயிக்கமுடியாத சம்சாரத்தை ஜயித்து மோக்ஷத்தை அடைவதற்காக என்னை உபாசியும். ஸகல பிராணிகளுடைய ஹிருதய குகையிலிருப் பவனும், தானாகப் ப்ரகாசிக்கும் ஜோதிஸ்வரூபியும், பரமாத்மாவுமாகிய என்னை உம்முடைய ஆத்மாவின் இடத்தில் ஆத்மாவாகப் பார்த்து (பாவித்து) ஸகல துக்கங்களற்றதாகிய மோக்ஷத்தை அடைவீர். மேலும் என் மாதாவான தேவஹூதிக்கும் ஸகல கர்மங்களை நிவர்த்திக்கக்கூடிய அத்யாத்ம வித்யையை உபதேசிக் கிறேன். அதனால் இவள் சம்சாரத்தை கடந்து அபயத்தை அடைவாள்" என்று அனுக்கிரஹித்தார்.

41–47. அதனைக் கேட்ட கர்த்தமப் பிரஜாபதியானவர் புத்திரனைப் ப்ரதக்ஷிணம் செய்து காட்டிற்குச் சென்றார். மேலும் அவர் பிறருக்கு இம்சை செய்யாமலிருப்பதாகிய முனிவ்ரதத்தை அடைந்தும், ஆத்மாவையே முக்கியமான வீடாக வைத்துக் கொண்டும், ஆசைகளை யொழித்தும். அக்கினியில் இல்லாதவராக, நியதமான இருப்பிடமற்றவராகிச் சஞ்சரித்தார். சத்துக்கும். அசத்துக்கும் மேலானதும் குணங்களைப் பிரகாசிக்கச் செய்கிறதும், குண

சம்பந்தமற்றதும், ஏகாந்த பக்தியால் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கப்பட்டதுமான பரப் ப்ரஹ்மத்தினிடத்தில் மனத்தைச் செலுத்தினவராயும், அகங்காரமற்றவராயும், மமதை இல்லாதவராயும், குளிர் உஷ்ணம் இவைகளைச் ஸஹித்து எல்லாவற்றிற்கும் ஸமமான புத்தியுள்ளவரும், ஆத்மாவையே பார்ப்பவரும் ப்ரத்யகாத்மாவிடத்திலேயே ரமித்து அதனால் சாந்தமாவிருக்கும் புத்தியுள்ளவரும், தைரியமுள்ளவரும், அலைகளடங்கிய சமுத்திரம் போன்றவருமான அவர் ப்ரத்யகாத்மாவும், பகவானாயுமுள்ள ஸ்ரீ வாசுதேவரிடத்தில் மிகுந்த பக்தியுடன் மனத்தைச் செலுத்தியதால் ஸகல பந்தத்திலிருந்து தம்மை நிவர்த்தித்து கொண்டார். மேலும் அவர் ஸகல பிராணிகள் இடத்திலும் ஆத்மா இருப்பதையும் பகவானிடத்தில் ஸகல ப்ராணிகள் இருப்பதையும் கண்டார். இப்படி அவர் ஆசை துவேஷம் ஆகிய இவைகளற்ற சமமாயுமுள்ள மனத்தாலும் பரமாத்மாவினிடம் ஏகாந்தமாகப் பக்தி செய்ததாலும் பக்தர்களுடைய கதியை (மோக்ஷத்தை) அடைந்தார்.

அத்தியாயம்–25

கபிலருக்கும் தேவஹூதிக்கும் ஸம்வாதம்

1 –3 சௌனகர் சூதரை நோக்கி, "பகவான் உண்மையில் பிறப்பில்லாதவரானாலும் மனிதர்களுக்கு ஆத்ம ஞானத்தை யுண்டு பண்ணுவதற்காகத் தத்துவங்களைச் சொல்ல, கபிலரென்ற பெயருடன் அவதரித்தார். புருஷோத்தமரும், ஸகல யோகிகளுக்கும் மேலானவரும் சிரவணத்தால் அறியக்கூடியவருமான பகவானுடைய கீர்த்தியைக் கேட்கும் என்னுடைய இந்திரியங்கள் திருப்தியடையவில்லை. சுதந்திரராகிய பகவான் தம்முடைய மாயா பலத்தால் எந்தந்த காரியங்களைச் செய்தாரோ, உச்சரிக்கக்கூடிய அவைகளைச் சொல்ல வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

4–11 அதனைக் கேட்டு சூதர் பின்வருமாறு சொல்லத் தொடங்கினார். வியாச மகரிஷிக்கு மித்திரரான மைத்ரேய மகரிஷியானவர் ஆத்ம வித்தையை உபதேசிக்கும்படி விதுரரால் தூண்டப் பட்டு, பிரியத்துடன் அவரை நோக்கி "ஓ விதுரரே! இப்படிக் கர்த்தமப் பிரஜாபதி காட்டிற்குச் சென்ற பிறகு, கபில மகரிஷி மாதாவைத் திருப்தி செய்வதற்காக அந்தப் பிந்து சரசின் கரையிலேயே வஸித்தார். இப்படியிருக்கையில் ஒரு நாள் தேவஹூதியானவள் கர்ம சம்பந்தமற்றவரும், தத்துவ மார்க்கத்தின் மர்மத்தைக் காண்பிப்பவருமான தம்முடைய புத்திரர் ஆகிய கபிலரிடஞ் சென்று, ப்ரஹ்மதேவருடைய வார்த்தையை மனத்தில் வைத்துக் கொண்டு

"அளவற்ற ஐசுவரியமுள்ளவரே! அசத்துக்களான இந்திரியங்களைத் திருப்தி செய்து வைத்ததனால் (விஷயத்தில் ஆசைப்பட்டதனால்) மிகவும் களைத்துப் போனேன். அதனை விருத்தி செய்ததாலேயே விவேகத்தை (அஞ்ஞானத்தை) அடைந்தேன்.

நீர் தாண்ட முடியாத அந்த அஞ்ஞானமாகிய சமுத்திரத்தின் கரையைக் கண்டவர். உம்முடைய அனுக்கிரஹத்தால் திவ்யமாகிய சக்ஷுஸ் (கண்) எனக்குக் கிடைத்தது. எவர் புருஷர்களுக்குள் முந்திய வராகிய ஈசுவரனோ, அவரே நீர். அஞ்ஞானத்தால் விவேகமில்லாதவர்களுக்கு உதித்த சூரியன் போல் நீர் கண்ணாக இருக்கிறீர். ஓ தேவ! 'நான், என் உடையது,' என்ற மோகமானது உம்முடைய சங்கற்பத்தால் ஏற்பட்டிருக்கிறது. அந்த மோகத்தை நிவர்த்தி செய்வதற்கு நீரே தகுந்தவர். காப்பாற்றக் கூடியவரும் தம்முடைய பக்தர்களுடைய சம்சாரம் ஆகிய விருட்சத்திற்குக் கோடாரியாக இருப்பவரும், ஆத்ம தர்மத்தை அறிந்தவர்களுக்குள் சிறந்தவருமாகிய உம்மைப் ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவர்களைத் தெரிந்துகொள்வதற்காகச் சரணம் அடைந்து நமஸ்கரிக்கிறேன், என்று ப்ரார்த்தித்தாள்.

12–27 இம்மாதிரியான மாதாவினுடைய குற்றமற்ற அபிப்ராயத்தைக் கேட்டு, இது ஜனங்களுக்கு மோக்ஷத்தில் ஆசையை உண்டுபண்ணக் கூடியதென்று அதனைச் சிலாகித்து, மந்தஹாசத்தால் அழகான முகமுள்ளவராகிய சாதுக்களைக் காப்பாற்றும் பகவான் தேவஹூதியை நோக்கி "ஓ பாபமற்றவளே! எதனால் துக்கமும் ஸுகமும் மிச்சமின்றி

நிவர்த்தியாகுமோ, அந்த அத்யாத்ம யோகத்தை ஜனங்களுடைய க்ஷேமத்திற்காகச் சொல்லுகிறேன்.

ஸகல அவயங்களுடைய ஜகாக்ரயமுள்ள அந்த யோகத்தை முன் காலத்தில் கேட்க விரும்பிய மகர்ஷிகளுக்கு உபதேசித்தேன். ஆத்மா சம்சாரத்தில் கட்டுப்படுத்துவதற்கும் முக்தி யடைவதற்கும் மனதே காரணமென்று பெரியோர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். எப்படியெனில், மனதானது விஷயங்களில் பற்றுதலடையுமாகில் பந்தத்திற்கு ஏதுவாக ஆகிறது. அவைகளில் அது வைராக்யத்தை (ஆசையில்லாத் தன்மையை) அடையுமாகில் மோக்ஷத்திற்குக் காரணமாகிறது. "நான், என்னுடையது" என்ற காமம், உலோபம் முதலிய மலங்களுடைய சம்பந்தம் மனத்திற்கு அற்றுப் போனால், அப்பொழுது சுக துக்கமற்று, சமமாகவும், சுத்தமாகவும் ஆகிவிடுகிறது. இப்படிச் சுத்தமாகிய மனமுள்ள புருஷன், ஞானம், வைராக்கியம், பக்தி இவைகளுள்ள மனத்தால் ஆத்மாவை சத்வம் முதலிய குணசம்பந்தமற்றவர் என்றும், பிரகிருதியை விட மேலானவரென்றும், ஞான ஸ்வரூபியாயிருப்பதால் வைஷம்யமில்லாதவர் என்றும், மிகவும் அணுவாக இருப்பவரென்றும், வெட்டுவது முதலியவைகளுக்கு அகப்படாதவர் என்றும் தாமாகப் பிரகாசிப்பவரென்றும் உதாசீனர் என்றும் தெரிந்து கொள்வதுடன், ஆத்மாவை சம்சாரியாக்கச் செய்யும் சக்தி ப்ரகிருதிக்கு இல்லையென்றும் தெரிந்துகொள்வான். யோகி களுக்குப் ப்ரஹ்மசாக்ஷாத்காரம் சித்திப்பதற்கு ஸகல ஸ்வரூபியாகிய பகவானிடத்தில் பக்தி செய்வதே உபாயமாகும். அதற்குச் சமமான வேறு

உபாயமில்லை. கவிகள் சங்கத்தையே பந்தகமென்று சொல்லுகிறார்கள். அந்த சங்கமே சாதுக்களிடம் ஏற்படுமானால் மோக்ஷத்திற்கு ஏதுவாகின்றது. பொறுமையுள்ளவர்களும் கருணையுள்ளவர்களும், ஸகல பிராணிகளிடத்தில் பிரீதியுள்ளவர்களும், ஒருவரிடத்திலும் விரோத புத்தி இல்லாதவர்களும், சமம், தமம், முதலியவைகளுள்ளவர்களும் நல் நடையை ஆபரணமாயுடையவர்களுமாக இருப்பவர்களே ஸாதுக்களாவார்கள். மேலும், மேற்சொல்லிய ஸாதுக்களாகிய எவர்கள் மற்றவர்களிடத்தில் மனத்தைச் செலுத்தாமல் என்னிடம் த்ருடமான பக்தி செய்கிறார்களோ, மேலும் கர்மங்களையும், பந்துக்களையும் பரித்தியாகம் செய்கிறார்களோ,என் விஷயமான கதையைச் சொல்வதாலும், கேட்பதாலும் சந்தோஷப்படுகிறார்களோ என்னிடத்தில் மனத்தைச் செலுத்திய அவர்களுக்குப் பலவகையான தாபங்களால் உபத்திரவம் நேரிடுகிறதில்லை. ஸகல ஆசைகளையும் ஒழித்தவர்களான அவர்களே ஸாதுக்கள்.

ஓ பதிவிரதையே! அவர்கள் ஸகல தோஷத்தையும் போக்கடிப்பவர்கள். ஆனதால் அவர்களுடைய சகவாசம், சல்லாபம் முதலிய சங்கம் எப்பொழுதும் இருக்க வேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டும். ஸாதுக்களுடன் சங்கம் செய்வதால் என்னுடைய வீரியங்களை நன்றாகக் காண்பிக்கக் கூடியவைகளும், காதுக்கு இனிமையானவைகளுமான என்னுடைய கதைகள் நன்றாய் அறியப்படும். அந்தக் கதைகளைக் கேட்பதனால் சீக்கிரமாக மோக்ஷ மார்க்கத்தில் சிரத்தையும், அதனால் அதில் விசேஷ ஆசையும் பக்தியும் கிரமமாக உண்டாகும்.

என்னால் செய்யப்பட்ட ஸிருஷ்டி முதலியவைகளை ஆலோசிப்பதால் உண்டாகிய பக்தியால் இந்திரிய விஷயங்களிலிருந்து இவ்வுலகத்திய சுகம், பரலோகத்திய சுகம் ஆகிய இவைகளில் வைராக்யம் உண்டாகும். பின்னும் சிரமமற்ற யோகமார்க்கங்களால் சித்தத்தை அடக்குவதற்கு முயற்சிப்பான். ஜீவன் ப்ரகிருதியின் குணங்களைச் லேவியாமலிருப்பதாலும், வைராக்யத்தால் விருத்தியடைந்த ஞானத்தாலும், யோகத்தாலும், என்னிடம் வைத்த பக்தியாலும் பிரத்யகாத்மாவாகிய என்னை இந்தச்சரீரத்திலேயே அடைகிறான் என்றார்.

28–30 அதனைக் கேட்ட தேவஹூதியானவர் கபிலரை நோக்கி, "உம்மிடத்தில் செய்யவேண்டிய உசிதமாகிய பக்தி எது? ஸ்திரீயாகிய என்னால் செய்யக்கூடியது எது? எதனைச் செய்தால் உம்முடைய பதத்தைச் சீக்கிரமாக அடையலாம்? ஒப்பற்ற ஆனந்த ஸ்வரூபியான ஓ பகவன்! உண்மையைத் தெரிவிக்கும் அந்த யோகமானது எப்போர்ப்பட்டது? அதற்கு அங்கங்கள் எவ்வளவு? சிரமப்பட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியதானாலும், அதனைக் சுகமாக மந்த புத்தியுள்ள நான் எப்படித் தெரிந்து கொள்வேனோ, அப்படி அனுக்கிரஹித்துச் சொல்ல வேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

31–44 இம்மாதிரியான தாயாருடைய வார்த்தையைக் கேட்ட கபில மகரிஷி அவளுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டு, எந்தச் சரீரத்திலிருந்து தாம் உண்டானாரோ அதனிடத்தில் சிநேகமுள்ளவராகி, ஆத்ம ஸ்வரூபத்தைப் ப்ரகாசிக்கச் செய்யும் தத்துவ

சாஸ்திரத்தைச் சொன்னார். அதனைப் பக்தி உண்டு பண்ணும் யோகமென்று சொல்லுகிறார்கள். எப்படியெனில், விகாரத்தை அடையாத மனதும், சப்தம் முதலியவைகளைக் கிரஹிக்கும் ஞானேந்திரியங்களும், சாஸ்திரத்தில் சொல்லிய கர்மங்களைச் செய்யும் கர்மேந்திரியங்களும், சர்வ சர்த்தியாகிய பகவான் இடத்தில் இருக்குமானால் அந்த விருத்தியே பக்தி எனப்படுகிறது. அது பலனை உத்தேசியாமல் செய்யும் முக்தியைக் காட்டிலும் மேலானதாகும். புஜித்த ஆகாரத்தை வயிற்றிலிருக்கும் அக்கினி ஜீரணம் செய்கிறது போல் பக்தியானது யத்தனமில்லாமலேயே லிங்க சரீரத்தை போக்கடிக்கிறது, எவர்கள் என்னுடைய சரிதங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு சந்தோஷப்படுகிறார்களோ, மேலும் என்னுடைய பாத ஸேவையிலேயே பக்தி உள்ளவராகி என்னிடமே ஸகல விருப்பத்தையும் வைத்திருக்கிறார்களோ, அப்படிப்பட்ட சில புருஷர்கள் மோக்ஷத்தையும் விரும்புகிறதில்லை. பின்னும், ஸாதுக்களாகிய அவர்கள் என்னுடைய பிரசன்னமாகிற முகமுள்ளவைகளும் சிவந்த கண்களுள்ளவைகளும், பக்தர்களுக்கு வரத்தைக் கொடுப்பவைகளும், அழகாயிருப்பவைகளுமான ரூபங்களைத் தரிசித்து ஆசைப்படக்கூடிய வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பார்க்கக்கூடிய அவயவங்களைப் பார்ப்பதாலும், கம்பீரமான விளையாட்டுச் சிரிப்புள்ள அழகான வார்த்தைகளாலும் அவர்களுடையமனதும், இந்திரியங்களும் அபகரிக்கப்படுகின்றன. மோக்ஷத்தையும் விரும்பாத அந்தப் பக்தர்களை அவர்கள் செய்த பக்தி சூட்சமமாகிய (ஒருவராலும் நடக்கப்படாததால்) அர்ச்சிராதி மார்க்கமாக அழைத்துப் போகிறது.

மேலும் அவித்யை விலகின பிறகு சத்யலோகம் முதலியவைகளிலிருக்கும் போகத்தையும், அஷ்டாங்க யோகத்தையும், பாகவத ஸ்ரீயையும் எவர்கள் விரும்புகிறதில்லையோ, அவர்கள் அவைகளை என்னுடைய லோகத்தில் அடைவார்கள்.

ஓ சாந்த ஸ்வரூபமுள்ளவளே! என்னிடத்தில் பக்தி செய்தவர்கள் ஒருபொழுதும் கெட்டுப் போகிறதில்லை. எவர்கள் என்னைப் பிரியனாகவும், ஆத்மாவாகவும், புத்திரனாகவும், குருவாகவும் அனுகூலத்தைச் செய்யும் சுகிருத்தாகவும், இஷ்ட தெய்வமாகவும் நினைக்கிறார்களோ அவர்களை என்னுடைய காலச்சக்கரம் உபத்திரவிக்கிறதில்லை. ஆனதால் இந்த லோகம், பரலோகம் இரண்டு லோகத்திற்கும் செல்லும் தேகத்திலுள்ள அபிமானம், அதைச் சார்ந்த பந்துக்கள், பணம், பசுக்கள், வீடு மற்றுமுள்ளவை ஆகிய இவைகள் எல்லாவற்றையும் விட்டு (அபிமானத்தை விட்டு) சர்வக்ஞனனாகிய என்னை வேறிடத்தில் மனத்தைச் செலுத்தாமல் எவர்கள் உபாசிக்கிறார்களோ, அவர்களை சம்சாரத்திலிருந்து காப்பாற்றுகிறேன்.

பிரதானம் (மாயை) புருஷன் இவர்களுக்கு அதிபதியும் பகவானுமாகிய என்னைவிட வேறொருவனாலும் கடுமையான பயத்திலிருந்து காப்பாற்ற முடியாது. இந்த வாயுவானவன் என்னிடம் பயந்து வீசுகிறான். சூரியனும் என்னிடமிருந்தும் பயத்தால் பிரகாசிக்கிறான். இந்திரனும் என்னிடம் பயந்து வர்ஷிக்கிறான். அக்னியும் என்னிடம் பயந்து எரிக்கிறது. மிருத்யுவும் என்னிடத்தில் பயந்தே

சஞ்சரிக்கிறான். (எல்லோரும் பரமாத்மாவினிடம் பயந்து, தங்கள் தங்களுடைய வேலையை சரியாக நடத்திவருகிறார்களென்பது கருத்து.) மேலும் யோகிகள் ஞானம் வைராக்யம் ஆகிய இவைகளுள்ள பக்தி யோகத்தைக் கொண்டு மோக்ஷத்தை அடைவதற்காகப் பயமற்ற இடமாகிய என்னுடைய பாதத்தை அடைகிறார்கள். தீவிரமாகிய பக்தியால் மனத்தை என்னிடத்தில் ஸ்திரமாகச் செய்யும் புருஷர்களுக்கு இவ்வுலகத்தில் க்ஷேமத்தை அடையும் உபாயமாகும்.

அத்தியாயம்–26

தேவஹூதிக்குக் கபிலர் ஆத்மதத்துவத்தை உபதேசித்தது

1–9. பிரகிருதி, புருஷன், காலம் ஆகிய இந்தத் தத்துவங்களுடைய ஸ்வரூபத்தைத் தனியாகச் சொல்லுகிறேன். அதனைத் தெரிந்து கொண்டதனால் மோக்ஷத்தை அடையவேண்டுமென்று விருப்பமுள்ள புருஷன் பிரகிருதி சம்பந்தமுள்ள குணங்களிலிருந்து விடுபடுவான். (சம்சாரத்தைக் கொடுக்கக்கூடிய புண்ய பாபங்களால் என்பது கருத்து) புருஷன் மோக்ஷத்தை அடைவதற்குச் ஸாதனமும் அகங்காரத்தைப் போக்கக்கூடியதும், ஆத்மாவைக் காண்பிப்பதுமான ஞானமென்று எதனைச் சொல்லுகிறார்களோ, அதனை உமக்கு உபதேசிக்கிறேன். (தத்துவ ஞானம் மோக்ஷத்திற்குக் காரணமென்று ஸ்மிருதியில் சொல்லப் பட்டிருந்தாலும், ஆத்மாவைத் தெரிந்து கொள்வதற்கு அனாத்ம ஞானமும் சாதனமென்று கருத்து) ஆத்மாவானவர் உற்பத்தியற்றவர். ப்ரகிருதியைவிட மேலானவர்; குணங்களற்றவர்; ப்ரத்யக்ஷ பூர்த்தி ஸ்வரூபி (க்ஷணிக விஞ்ஞானம் ஆத்மாவல்ல வென்று கர்ட்டப்பட்டது) தாமாகப் ப்ரகாசிப்பவர்; அவருடைய சம்பந்தத்தாலேயே ஜகத்து ப்ரகாசிக்கிறது; தேஹம் முதலிய உபாதிகளுடைய சம்பந்தத்தால் அவைகள் உடைய தர்மங்களாகிய ஜனன மரணங்கள் ஆத்மாவிற்கு உண்டாகின்றனவேயொழிய உண்மையில் ஆத்மாவிற்குப் பிறப்பு, மரணம் ஆகிய இவைகளில்லை. சொப்பனத்தில் காணப்படும் வஸ்துக்கள் நசித்தாலும் திருஷ்டாவிற்கு நாசமில்லையல்லவா? அப்படி

சுத்தரும், வியாபகருமாகிய புருஷன், சூக்ஷ்மமானதும் (அவ்யக்தம்) ஸ்ரீ மகாவிஷ்ணுடையதும் முக்குண ஸ்வரூபம், லீலையாக வந்ததுமான ப்ரகிருதியை யதிருச்சையாக அடைந்தார். அப்பொழுது அந்தப் புருஷன் குணங்களைக் கொண்டு பலவகையான பிரஜைகளைச் ஸிருஷ்டிக்கும் ப்ரகிருதியைப் பார்த்துத் தம்முடைய ஞானத்தை மறைத்துக் கொண்டிருந்ததால் மோகமடைந்தார். இப்படிப் புருஷன் ப்ரகிருதியையே தாமென்று நினைத்துப் ப்ரகிருதியின் குணங்களால் செய்யப்படும் காரியங்களைத் தாம் செய்வதாக நினைக்கிறான். ஆனதால் ஒன்றையுஞ் செய்யாதவரும், எல்லாவற்றிற்கும் ஈசுவரனும், சாக்ஷியும், ஸுகரூபியுமான புருஷனுக்கு ஜனன மரணமாகிய சம்சார பந்தமும், பரதந்திரனாக இருப்பதும், ப்ரகிருதியினால் ஏற்பட்டதே யொழிய உண்மையிலில்லை. சரீரம் இந்திரியம் ஆகிய இவைகளில் புருஷன் அகங்காரத்தை (நானென்பதை) அடைவது, அதனால் கர்த்தாவாக ஆகிறது ஆகிய இவைகளுக்குப் ப்ரகிருதியே காரணம் என்று சொல்லுகிறார்கள். மேலும் ப்ரகிருதியைவிட விலக்ஷணனாகிய (சிதம்சம்) புருஷனே சுகத்தையும், துக்கத்தையும் அனுபவிப்பதற்குக் காரணமென்று சொல்லுகிறார்கள்." என்று சொன்னார்.

10. அதனைக் கேட்ட தேவஹூதி (சம்சாரியான புருஷனையும் அதற்குக் காரணமாகிய ப்ரகிருதியையும் தெரிந்துகொண்டு) கபிலரைப் பார்த்து, "புருஷோத்தம! ஸ்தூலமாகிய ஜகத்திற்குக் காரணமாகிய ப்ரகிருதியின் உடையவும், சூக்ஷ்மரூபமாகிய ஜகத்திற்குச் காரணமாகிய ஈசுவரனுடையவும் லக்ஷணத்தைச் சொல்லவேண்டும். ஏனேனில் ஸ்தூல சூக்ஷ்மமாகிய

ஜகத்து அவருடைய ஸ்வரூபமன்றோ" என்று கேட்டுக் கொண்டாள்.

11–18. அதனைக் கேட்ட பகவான் தேவஹூதியை நோக்கி, "ஸ்வபாவத்தில் விசேஷமற்றதும், விசேஷங்களுக்கு ஆசிரியமுமான ப்ரதானமே ப்ரகிருதியாகும். அது முக்குணங்களுள்ளது. அது மகத் தத்துவம் முதலியவைகளுடைய காரியமாகிறதில்லை; அது உற்பத்தி, நாசம் இவைகளற்றது (நித்யமானது) மேலும் அது காரிய காரண ரூபமாகயுள்ளது; ஓ அம்ம! பூமி, ஜலம், அக்கினி, வாயு, ஆகாச மென்ற ஐந்து பூதங்களும் கந்தம் முதலிய அதன் குணங்களும், காது துவக், கண், நாக்கு, மூக்கு, நாக்கு, கைகள், பாதங்கள் மேட்ரம், (ஆண்குறி) பாயு ஆகிய பத்து இந்திரியங்களும் மனஸ், புத்தி, அகங்காரம், சுத்தம் என்ற நான்குவகையான அந்தக் கரணமும், இருபத்து நான்கு தத்துவங்களும், ப்ரகிருதியின் காரியங்களாகும் (மேற்காட்டிய அந்தக் கரணம் ஒன்றாலும் சங்கற்பம் அத்யவசாயம் அபிமானம், சிந்தை என்ற விருத்திபேதத்தால் நான்குவகை என்று கருத்து) ஸகுண ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் இப்பேர்ப்பட்ட தென்றே பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்; ஆனால் சிலர் காலத்தை இருபத்தைந்தாவது தத்துவமென்றே சொல்கிறார்கள், ப்ரகிருதி சம்பந்தத்தை அடைந்து அஹங்காரத்தால் புத்தி மயக்கமடைந்த புருஷனுடைய ப்ரபாவமே காலம். அதனிடமிருந்தே பயமுண்டாகிறது" என்று சிலர் சொல்கிறார்கள். ஓ மனுவின் புத்திரியே! சத்வம் முதலிய குணங்களின் சமமான நிலைமையாகிய ஸ்வரூபமுள்ளதும், விசேஷமற்றதுமாகிய ப்ரகிருதியின்

சேஷ்டைக்கு எது காரணமோ அதுவே கர்மமென்றும், பகவான் என்றும் சொல்லப்படுகிறது.

19–23. எந்தப் பகவான் ஸகல ஜனங்களுக்கும் உள்ளே நியந்தாவாகவும், வெளியில் காலரூபியாகவும், தம்முடைய மாயையால் தத்துவங்களைக் அனுசரிக் கிறாரோ (அவைகளின் தர்மத்தில் சம்பந்திக்கிறது இல்லையென்று கருத்து) அந்தப் பரம புருஷன் ஜீவனுடைய அதிருஷ்டத்தால் ப்ரகிருதியில் குணங்கள் கலங்கிய போது (சத்துவம் முதலிய தாரதம்யத்தை அடைந்த போது) ஜகத்தின் உற்பத்திக்கு க்ஷேத்ரமாய் இருக்கும் தம்முடைய ப்ரகிருதியினிடத்தில் வீரியத்தை (ஸ்ருஷ்டி சாமர்த்தியத்தை) வைத்தார். அந்தப் ப்ரகிருதியானது மிகவும் ப்ரகாசிக்கும் மகத்தத்துவத்தை உண்டு பண்ணிற்று. அப்பொழுது ஜகத்தை முளைக்கச் செய்பவரும், (ஜகத்காரணர்) கூடஸ்தருமாகிய (விகாரமற்றவர்) பகவான், தம்முடைய சரீரமாகிய ப்ரகிருதியில் லயித்திருக்கும் பிரபஞ்சத்தை வெளிப் படுத்துவதற்காக தம்முடைய சங்கற்ப ரூபமாகிய ஞானத்தைக் கொண்டு ஜீவர்களுடைய ஞானத்தைக் குறைத்துக் கொண்டிருந்த கடுமையான தமோ குணத்தை அடக்கினார். எது ப்ரகாசமுள்ளதும், ராக துவேஷங்களற்றதும், ஸத்வகுணமுள்ளதுமாக இருக்கிறதோ, அந்தச் சித்தமே பகவத் தரிசன ஸ்தானமாகும். ஆனதால் எதனை வாஸுதேவரென்று சொல்லுகிறார் களோ, அதே மகத்தத்துவம் அதே சித்தம் (ஒருவரே அதிபூத ரூபத்தால் மகான் என்றும், அத்யாத்ம ரூபத்தால் சித்தமென்றும், உபாஸ்ய ரூபத்தால் வாஸுதேவரென்றும் பெயரடைகிறார்) அதிஷ்டா தாவாக இருப்பவர் க்ஷேத்ரஞ்ஞர். அஹங்காரத்திற்கு

அதிஷ்டாதா ருத்ரன், ஸங்கர்ஷணர், உபாஸ்யர். மனத்திற்கு சந்திரன் அதிஷ்டாதா. அனிருத்தர் உபாஸ்யர், புத்திக்குப் ப்ரஹ்மா அதிஷ்டாதா. ப்ரத்யும்னர் உபாஸ்யர், நூரை, அலைகள் முதலிய வைகள் இல்லாமலிருக்கும் ஜலம் போல் ஸ்வச்சமாயும் (பகவானுடைய பிம்பத்தைக் கிரஹிக்கக் கூடியது) விகாரமற்றதுமான (லயம், விக்ஷேபம் முதலியவைகள் இல்லாமலிருப்பது) சாந்தமாயுமிருக்கும் (ராகத் வேஷங்களற்றிருப்பது) சித்தத்தின் விருத்தியே மனத்திற்கு லக்ஷணமென்று சொல்லப்பட்டது.

24–29. பகவானுடைய வீர்யத்தாலுண்டான மகத்தத்வம் மாறுதலடைந்தபோது அதனிடமிருந்து கிரியா சக்தியுள்ள அஹங்காரமானது உண்டாயிற்று. அது வைகாரிகம், தைஜஸம், தாமஸம், என்று மூவகையுள்ளது. அதனிடமிருந்தே மனதும், இந்திரியங்களும் ஐந்து மகா பூதங்களும் சப்தம் முதலியவைகளும் உண்டாயின. ஆயிரம் தலைகள் உள்ளவரும், அனந்தரென்று சொல்லக்கூடியவரும், பூதங்கள் இந்திரியம், மனம் இவைகளின் ஸ்வரூபமா யுள்ள ஸங்கர்ஷணரென்ற புருஷனே அதற்கு அதிஷ்டாதாவாக இருக்கிறார். அந்த அஹங்காரம் கர்த்தாவாகவும், (தேவதாரூபம்) காரணமாகவும் (இந்திரிய ரூபத்தால்) காரியமாகவும், (பூதரூபத்தால்) சாந்தமாகவும், கோரமாகவும், மூடமாகவும், (மூக்குணங்களால்) இருக்கிறது. வைகாரிகாஹங்காரம் மாறுதலையடைந்தபோது அதனிடமிருந்த மனம் என்ற தத்துவம் உண்டாயிற்று. அதனுடைய ஸங்கல்பத்தாலும் விகற்பத்தாலும் காமன் உண்டாகிறான். அவரே அநிருத்தர் என்பவர்,

இந்திரியங்களுக்கு அதிபதி. சரத்காலத்திய நீலோத்பலம் போன்ற கறுத்த திருமேனியுள்ளவர். யோகிகளால் தியானஞ் செய்யக்கூடியவர்.

30–32. ஓ பதிவிரதையே! மாறுதலடைந்த தைஜஸ அஹங்காரத்திலிருந்து புத்தி உண்டாயிற்று. ப்ருத்வி முதலிய திரவியங்களுடைய ஸ்பூர்த்தி ஞானமும், இந்திரியங்களுக்குப் ப்ரகாசத்தை யுண்டுபண்ணும் சக்தியும் அதனிடமிருந்தே உண்டாகின்றன. சம்சயம் விபர்யாசம் (மித்யா ஞானம்) நிச்சயம் ஸ்வபாவம் ஸ்மிருதி தூக்கம் என்ற விருத்திகளால் புத்திக்கு லக்ஷணம் ஏற்படுகிறது. ஞானேந்திரியங்களுக்கும் கர்மேந்திரியங்களுக்கும் தைஜஸாஹங்காரத்திலிருந்து உண்டானவையே ப்ராணன். கிரியா சக்தியுள்ளது; புத்தியானது விஞ்ஞான சக்தியுள்ளது, (ப்ராணன் தைஜஸனாகையால் கர்மேந்திரியங்களும் தைஜஸங்களாயின. புத்தியும் தைஜஸமானதால் ஞானேந்திரியங்களும் தைஜஸங்கள்)

33–35. பகவானுடைய வீரியமான காலத்தால் தூண்டப்பட்ட தாமஸ அஹங்காரமானது மாறுதல் அடைந்து, அதனிடமிருந்து சப்தம் உண்டாயிற்று. அதனிடம் ஆகாசம் உண்டாயிற்று. சுரோத்ரம் சப்தத்துடன் சேர்ந்தது. அர்த்தத்தைச் சொல்வதாய் இருப்பது (வாசகம்) சுவர் முதலியவைகளால் மறைக்கப் பட்டவனைக் காண்பிப்பது. ஆகாசத்தின் தன்மாத் திரையாக இருப்பது ஆகிய இவைகள் சப்தத்திற்கு லக்ஷணமென்று கவிகள் சொல்லுகிறார்கள். ப்ராணி களுக்கு அவகாசத்தைக் கொடுப்பது, வெளி, உள் என்ற விவகாரத்திற்குக் காரணமாயிருப்பது.

ப்ராணன் இந்திரியங்கள்: மனம் ஆகிய இவைகளுக்கு ஸ்தானமாக இருப்பது ஆகிய இவைகளே ஆகாசத்திற்கு லக்ஷணம்.

36–38. சப்ததன்மாத்திரையுள்ள ஆகாசமானது கால கதியால் விகாரமடைந்தது. அதனிடமிருந்து ஸ்பர்சதன்மாத்திரை உண்டாயிற்று. அதிலிருந்து வாயு உண்டாயிற்று. ஸ்பர்சத்தைக் கிரஹிப்பதே துவக்கிந்திரியமாம். மெதுவாக இருப்பது, கடினமாக இருப்பது, குளிர்ச்சியாகயிருப்பது, உஷ்ணமாக இருப்பது; வாயுவிற்குத் தன்மாத்திரையாக இருப்பது ஆகிய இவைகள் ஸ்பர்சத்திற்கு லக்ஷணங்களாகும். அசைப்பது பலவிடங்களிலிருக்கும் வஸ்துக்களை ஒரேவிடத்தில் சேர்ப்பது, திரவியத்தின் வாசனையை மூக்கின் சமீபம் அல்லது தடையின்றி எங்கும் செல்வது, திரவியத்திற்கும். சப்தத்திற்கும் அதிபதியாக இருப்பது, ஸகல இந்திரியங்களுக்கும் பலத்தை உண்டுபண்ணுவது ஆகிய காரியங்கள் வாயுவின் லக்ஷணமாகும்.

39–41. ஸ்பர்ஸதன் மாத்திரையுள்ளதும், தெய்வத்தால் தூண்டப்பட்டதுமான வாயுவினிடம் இருந்து ரூபதன்மாத்திரை உண்டாயிற்று. அதனிடம் இருந்து தேஜஸ் உண்டாயிற்று. உருவத்தைக் கிரஹிப்பது சக்ஷுஸ்ஸாகும். ஓ பதிவிரதையே! திரவியங்களின் ஆகிருதியாக இருப்பதும், திரவியங்களைக் காட்டிலும் ப்ரதானமில்லாததாகத் தோன்றுகிறதும். திரவியத்தின் நிலைமை போன்ற நிலைமையுள்ளதாக இருப்பதும், தேஜசுக்கு அசாதாரணமாக இருப்பதும் ரூப

தன்மாத்திரையின் விருத்திகளாம். வஸ்துக்களை ப்ரகாசிக்கச் செய்வதும்: அரிசி முதலியவைகளை பாகஞ் செய்வதும் பசி, தாகம் இவைகளை உண்டுபண்ணுவதும், அதன் வழியாகப் புஜிப்பது பானம் செய்வதும், பனியைப் போக்கடிப்பது சோஷிக்கச் செய்வதும் தேஜஸ்ஸின் விருத்திகளா (காரியமான லக்ஷணங்கள்.)

42–44. ரூப தன்மாத்திரையுடன் கூடி தேஜஸானது தெய்வத்தால் தூண்டப்பட்டு விகாரத்தை அடைந்தது. அதனிடமிருந்து ரஸ தன்மாத்திரை உண்டாயிற்று. அதிலிருந்து ஜலமுண்டாயிற்று. ரஸத்தை கிரஹிக்கும் இந்திரியம் ரஸமாகும். அந்த ரஸமானது ஒன்றானாலும் திரவியங்களுடைய பேதத்தால் துவர்ப்பு; திக்திப்பு கசப்பு, உறப்பு, புளிப்பு உப்பு என்று பலவகையாகக் காணப்படுகிறது. ஈரமாக செய்வது, உருண்டையாகச் செய்வது, திருப்தியை உண்டு பண்ணுவது, ப்ராணனைக் காப்பாற்றுவது மிருதுவாகச் செய்வது, தாபத்தைப் போக்குவது கிணறு முதலியவைகளிலிருந்து அடிக்கடி எடுத்தாலும் குறையாமலிருப்பது, ஆகிய இவைகள் ஜலத்தின் வியாபாரங்களாகும். (காரியமாகிய லக்ஷணங்கள்).

45–47. ரஸ தன்மாத்திரையுள்ள ஜலமானது தெய்வத்தால் தூண்டப்பட்டு விகாரத்தை அடைந்தது அதனிடமிருந்து கந்த தன்மாத்திரை உண்டாயிற்று அதிலிருந்து ப்ருதிவி உண்டாயிற்று. கந்தத்தை கிரஹிக்கும் இந்திரியம் கிராணமாகும். அந்த கந்தமானது, கரம்பம், (பலவகை சேர்ந்த வாசனை

கெட்ட வாசனை, நல்ல வாசனை, சாந்தமாகியது (தாமரை மலருடையது), கடுமையான வாசனை, (பூண்டு வெங்காயம் முதலியவைகளுடையது.) புளித்த நாற்றம் என்ற திரவியங்களுடைய சேர்க்கையின் பேதத்தால் பலவகையாயுள்ளது. பகவானுடைய ப்ரிதிமைகளாக விருப்பது ஜலம் முதலியவைகளைவிட வேறாக இருப்பது, ஆகாசம் முதலியவைகளுக்கு விசேஷணமாக (உபாதியாக) இருப்பது. ஸகல பிராணிகளையும், அவைகளுடைய குணங்களையும் வெளிப்படுத்தவது ஆகிய விருத்திகள் ப்ருதிவியின் காரிய லக்ஷணங்களாகின்றன.

48–50 1/2. ஆகாசத்தின் விசேஷ குணமாகிய சப்தத்தைக் கிரஹிப்பதே சுரோத்ரம் என்று சொல்லப் படுகிறது. வாயுவின் விசேஷ குணமாகிய ஸ்பர்சமானது எதற்கு விஷயமோ அதுவே ஸ்பர்சம் (துவக்) தேஜஸின் விசேஷ குணமாகிய உருவமானது எதனால் கிரஹிக்கப் படுறதோ அது சக்ஷுஸாகும். ஜலத்தின் விசேஷ குணமாகிய ரசமானது எதனால் கிரஹிக்கப்படுகிறதோ அது ரஸனமென்று சொல்லப்படுகிறது. பூமியின் விசேஷ குணமாகிய கந்தமானது எதனால் கிரஹிக்கப் படுகிறதோ அது கிராணமாகும். ஒவ்வொன்றின் விசேஷ குணம் மற்றொன்றில் காணப்படுவதால் எல்லா விசேஷ குணங்களும் பூமியில் காணப்படுகின்றன. (ஆகாசத் திற்குக் குணம் ஒன்றுதானென்பது தாத்பரியம்.)

51–63. மகத்தத்துவம் முதலிய ஏழு தத்துவங்களும் (மகான், அஹங்காரம், பஞ்ச பூதங்கள்) ஒன்றோ டொன்று சேராமல் தனியாக இருந்தன. அதனால் அவைகள் போகத்திற்கு ஸ்தானமாகிய அண்டத்தை

உண்டுபண்ணச் சக்தி அற்றவைகளாக இருந்தன. அப்பொழுது ஜகத்திற்குக் காரணமாகிய பகவான் காலம், கர்மம், குணம் இவைகளுடன் அவைகளில் அனுப்ரவேசித்தார் (ஸ்ருஷ்டி சக்தியை அனுக்கிரஹித்தார்). அதனால் அவைகள் யாவும் க்ஷோபத்தையடைந்து ஒன்றாகச் சேர்ந்து அசேதனமாகிய அண்டத்தை உண்டுபண்ணின, அதிலிருந்து விராட்புருஷன் (ஸமஷ்ட்யபிமானி) உண்டானார். இந்த அண்டமானது விசேஷ மென்று பெயருள்ளது. ஜலம் முதலிய ஆவரணங்களால் சூழப்பட்டது அந்த ஆவரணங்கள். ஒன்றைவிட ஒன்று பத்து மடங்குபெரியவை. எல்லாவற்றிற்கும் வெளியில் ப்ரதானத்தால் சூழப்பட்டுள்ளது.

அந்த அண்டத்தில் பகவானுடைய ஸ்வரூபமாகிய லோகங்களின் விஸ்தாரம் காணப்படுகிறது. மிகுந்த ப்ரகாசமுள்ளதும், ஜலத்திலிருப்பதுமாகிய அந்த அண்டகோசத்திலிருந்து தேவர்களுக்கும் தேவராகிய மகாதேவன் எழுந்திருந்து இந்திரிய ஸ்தானங்களைப் படைத்தார். முதலில் இவருக்கு முகம் உண்டாயிற்று. அதில் வாக்கும் அதன் தேவதையான அக்னியும் ப்ரவேசித்தன. பின்பு மூக்கு உண்டாயிற்று, கிராணமானது பிராணனுடன் அவைகளை அடைந்தது. பிறகு கண்கள் உண்டாயின. அவைகளை, சக்ஷுரிந்தியமும், அதற்கு அதிஷ்டான தேவதையாகிய சூரியனும் அடைந்தார்கள். பின்பு காதுகள் உண்டாயின. கூரோத்திரேந்திரியமும் திக்குகளும் அவைகளில் ப்ரவேசித்தன. பிறகு அந்த விராட் புருஷனுக்குத் துவக்(தோல்) துவகிந்திரியத்திற்கு அதிஷ்டானம் உண்டாயிற்று. அதை மயிர்களும், மீசை முதலியவையும் ஓஷதிகளும் அடைந்தன. அதன் பிறகு சிசினம்

உண்டாயிற்று. அதனை உபஸ்தேந்திரியமாகிய ரேதஸ்ஸானது அடைந்தது. அதற்கு அதிதேவதையான ஜலம் அதை அடைந்தது. பின்பு குதமுண்டாயிற்று. அதனைப் பாயுவென்னும் இந்திரியமாகிய அபானன் அடைந்தான். அதற்கு அதிதேவதை லோகத்திற்குப் பயங்கரராகிய மிருத்யுவாம். பின்பு கைகள் உண்டாயின. அதனைப் பலமென்ற பாணீந்திரியம் அடைந்தது. அதற்கு அதிதேவதை மஹேந்திரன். அதன் பிறகு பாதங்களுண்டாயின. அவைகளைக் கதியென்ற பாதேந்திரியம் அடைந்தது அதற்கு அதிதேவதை உபேந்திரன். பின்பு நாடிகளுண்டாயின. அவைகளின் இரத்தம் நிறைந்திருந்தன. அதற்குத் தேவதைகள் நதிகள். அதன்பிறகு வயிறு உண்டாயிற்று. பசி, தாகம் இவைகள் அதை அடைந்தன. இவைகளுக்கு சமுத்திரம் அதிதேவதை. பின்பு ஹிருதயம் உண்டாயிற்று. அதை மனது அடைந்தது. அதற்கு அதிதேவதை சந்த்ரன். அந்த ஹிருதயத்தில் புத்தி ப்ரவேசித்தது. அதன் தேவதை ப்ரஹ்மா. பின்பு அஹங்காரம் உண்டாயிற்று. அதற்குத் தேவதை ருத்திரன். பின்பு சித்தம் உண்டாயிற்று. அதற்கு ஜீவன் அதிஷ்டாதா.

63–71. மேற்சொல்லியபடி அஹங்காரத்திலிருந்து உண்டான தேவர்கள் ப்ரவேசித்தும் விராட் புருஷனை எழுப்ப முடியவில்லை. எப்படியெனில், – அக்கினியானவர் வாக்குடன் முகத்தை அடைந்தும், பின்பு வாயுவானவர், கிராணத்துடன் மூக்குகளில் ப்ரவேசித்தும் அவர் எழுந்திருக்கவில்லை. சூரியன் சக்ஷுஸுடன் கண்களில் ப்ரவேசித்தும், திக்குகள் சுரோத்ரேந்திரியத்துடன் காதுகளின் புகுந்தும், ஓஷதிகள்

மயிர்களுடன் துவக்கில் ப்ரவேசித்தும், ஜலமானது ரேதஸுடன் சிசினத்தில் ப்ரவேசித்தும், மிருத்யு வானவர் கதியுடன் பாதங்களில் ப்ரவேசித்தும், இந்திரன் பலத்துடன் கைகளில் ப்ரவேசித்தும், நதிகள் இரத்தத்துடன் நாடிகளில் புகுந்தும், சமுத்திரமானது பசி, தாகத்துடன் வயிற்றில் ப்ரவேசித்தும், சந்திரன், மனத்துடன் ஹிருதயத்தில் ப்ரவேசித்தும் ப்ரம்மா புத்தியுடன் ஹிருதயத்தில் புகுந்தும், ருத்ரன் அஹங்காரத்துடன் ஹிருதயத்தில் ப்ரவேசித்தும் விராட் புருஷன் எழுந்திருக்கவில்லை.

72–74. ஜீவன், சித்தத்துடன் ஹிருதயத்தில் ப்ரவேசித்த பொழுது அந்த விராட் புருஷன் ஜலத்திலிருந்து எழுந்திருந்தார். நித்திரை செய்து கொண்டிருக்கும்போது ப்ராணன், இந்திரியங்கள், மனம், புத்தி ஆகிய இவைகள் எல்லாம் சேர்ந்தும் எவனில்லாமல் சரீரத்தை எழுப்பச் செய்யச் சக்தியற்றவைகளாக இருக்கின்றனவோ, அந்த ஜீவனுடைய ப்ரவேசத்தால்தான் விராட் புருஷன் எழுந்திருந்தார் அந்தப் ப்ரத்யகாத்மாவைப் பக்தியாலும், விரக்தியாலும், யோகாப்பியாசக்தாலுண்டான நிச்சய புத்தியாலும் காரியாகாரணங்களிலிருந்து பிரித்துத் தியானிக்க வேண்டும்.

அத்தியாயம்–27

ப்ரகிருதி புருஷ விவேகம்

1–76 "புருஷன் ப்ரகிருதியால் ஏற்பட்ட சரீரத்தில் இருந்தாலும், ப்ரகிருதியின் குணங்களில் (சுகதுக்கங்களில்) சம்பந்திக்கிறதில்லை. ஏனென்றால் புருஷன் குணங்களற்றவர். அகர்தா (கர்மங்களைச் செய்யாதவர்) விவகாரமற்றவர். இதற்கு ஜலத்தில் பிரதிபிம்பித்த சூரியன் உபமானமாகும். (ஜலத்திற்கு ஏற்படும் அசைதல் முதலியவை சூரியனிடத்தில் சம்பந்திக்கிறதில்லை.) அப்படிச் சுத்தராக இருக்கும் ஆத்மா ப்ரகிருதியின் குணங்களாகிய சத்வம் முதலியவைகளில் எப்போது சம்பந்தப்படுகிறாரோ, அப்பொழுது (அதன் காரியமாகிய) அஹங்காரத்தால் தம்முடைய உண்மையான உருவத்தை மறந்து தாமே கர்மங்களைச் செய்வதாக நினைக்கிறார். (ஆத்மாவின் இடத்தில் அவித்தியாசம் அனாதியாயுள்ளது; நானென்பது பிந்தி ஏற்பட்டது; கர்மங்களைச் செய்கிறவனென்ற அத்யாசமானது உபாதியால் ஏற்பட்டது என்று கருத்து). அந்த அபிமானத்தால் புண்ணிய பாபங்களுக்கு வசப்பட்டு அவைகளால் கிடைத்த சுகாதிகளாலும், சந்தோஷமடைய தேவனாகவும், மனிதனாகவும், பசு பட்சிகளாகவும் பிறப்பதாகிய சம்சாரத்தை அடைகிறார். அந்த சம்சாரமானது காணப்படும் வஸ்துபோல் மித்யையேயாம் (உண்மை இல்லை) ஆனாலும் விஷயங்களையே தியானஞ் செய்து கொண்டிருக்கும் ஆத்மாவிற்கு ஸ்வப்பனத்தில் தன் தலை வெட்டுவிப்பது முதலியவை காணப்படுவது போல் சம்சாரமானது உண்மையாகத் தோன்றுகிறதே

யொழியத் தோன்றாமலிருக்கிறதில்லை ஆனதால், கெட்ட மார்க்கத்திலேயே பிரவர்த்திருக்கும் மனத்தைத் தீவிரமான பக்தி யோகத்தாலும் வைராக்கியத்தாலும் மெதுவாகச் ஸ்வாதீனப்படுத்தி கொள்ள வேண்டும். மேலும் யமம் முதலிய மார்க்கங்களால் மிக்க சிரத்தையுடன் அடிக்கடி சித்தத்தை ஒருவகைப் படுத்திக் கொண்டு என்னிடத்தில் சித்தத்தைச் செலுத்துவதாலும், சத்தியத்தாலும் என் கதையைக் கேட்பதாலும், ஸகல பூதங்களிடத்திலும் ஸமமாக இருப்பதாலும் விரோதமற்றவராக இருப்பதாலும், அசத்துக்களுடைய சங்கத்தை விடுவதாலும், ஸ்திரீ சங்கமில்லாதிருப்பதாலும் இன்னத்தாலும் ஈசுவரனால் ஏற்படுத்தப்பட்ட தனது வர்ணாசிரமத்திற்குறிய தர்மத்தையனுஷ்டிப்பதாலும் பக்தி யோகத்தை செய்ய வேண்டும்.

பின்னும், தெய்வச் செயலாகக் கிடைத்ததைக் கொண்டு சந்தோஷத்தை அடைந்தும், மிதமாகப் புஜித்தும், மௌனியாகவும், ஏகாந்தமான இடத்தில் வசித்துக் கொண்டும் சாந்தனாகவும், எல்லாப் பிராணிகளிடத்திலும் சிநேகமுள்ளவனாகவும் தயவு உள்ளவனாகவும், கம்பீர மனமுள்ளவனாகவும் இருக்க வேண்டும். மேலும் புத்திரர்கள், மித்திரர்கள், களத்திரம் முதலியவைகளிலும், தேகத்திலும், "என்னைச் சார்ந்தவர்கள், நான்" என்ற அபிமானத்தையொழித்துப் பிரகிருதி, புருஷன் ஆகிய இவர்களைத் தெரிந்து கொண்டு ஜாக்கிரதம் முதலிய அவஸ்தைகளற்றவனாக இருக்க வேண்டும். அன்னிய விஷய ஞானத்தை விட்டுவிட வேண்டும். அப்படிப்பட்டவன் சக்ஷுஸில் இருக்கும் சூரியனைக் கொண்டு ஆகாயத்திலிருக்கும்

சூரியனைப் பார்ப்பது போல் அஹங்காரமுள்ள ஆத்மாவினால் சுத்தராகிய ஆத்மாவைத் தரிசிப்பான். மேலும் அப்பொழுது ஜீவன் பிரதானத்திற்கு (மாயைக்கு) பந்துவும் காரியத்தைப் பிரகாசிக்கச் செய்தும், ஸகல காரணங்களிலும், காரியங்களிலும் சேர்ந்ததும், எங்கும் நிறைந்ததும் அஹங்காரத்தில் சத்தாகத் தோன்றுகிறதுமாகிய ப்ரஹ்மத்தை அடைகிறான்.

ஜலத்தில் காணப்படும் சூரிய பிரதிபிம்பமானது எப்படி ஸ்தலத்திலிருக்கும் பிம்பத்தால் பார்க்கப்படு கிறதோ ஜலத்திலிருக்கும் சூரிய பிம்பத்தால் ஆகாசத் திலிருக்கும் சூரியன் எப்படிப் பார்க்கப்படுகிறாரோ, அப்படி ஆத்மாவின் பிரதிபிம்பங்களாகிய பூதங்கள் இந்திரியங்கள், மனது ஆகிய இவைகளிலுள்ள ஆத்ம பிரதிபிம்பங்களால் மூவைகையான அஹங்காரமுள்ளது. சத்தின் பிரதிபிம்பமுள்ள உருவமாகப் பார்க்கப் படுகிறது. இந்த சிதாபாசமுள்ள அஹங்காரத்தால் பரமாத்ம ஸ்வரூபம் அடையப்படுகிறது. மேலும் பூத சூட்சுமங்களும், இந்திரியங்களும் மனதும் புத்தி முதலியவைகளும், நித்திரையால் இல்லாதவை போலிருக்கும் போது எவர் நித்திரையற்றவராகி அஹங்காரமற்றவராகி இருக்கிறாரோ அவரே மேற்சாட்டிய பரமாத்மா எனப்படுகிறார்; அந்த ஸ்ருஷ்டிகாலத்தில் அஹங்காரம் முதலியவைகள் நாசமடைந்திருக்கும் போது உண்மையில் தான் நாசமடையாதவனாக இருந்தும் பணம் கெட்டுப் போனகாலத்தில் அதற்கு யஜமானன் அதன் நாசத்தைத் தன்னுடையதாகப் பாவித்துத் துக்கிப்பது போல் அஹங்காரத்தின் நாசத்தை ஆத்மா தன்னுடையதாகப் பாவித்துத்

துக்கிக்கிறான். அஹங்காரத்துடன் கூடிய திருஷ்யத்திற்கு (காணக்கூடியது) எது அதிஷ்டானமோ எது அவை களைப் ப்ரகாசிக்க செய்கிறதோ, அந்த ஆத்ம ஸ்வரூபத்தை மேற்காட்டியபடி ஆலோசிப்பவன் அடைவான்" என்றார்.

17–20 அதனைக் கேட்ட தேவஹூதியான்வள் ஸ்ரீ பகவானை நோக்கி, "ஓ பரப்ரஹ்மமே! ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவர்களும் நித்தியர்களாகையாலும், ஒருவரையொருவர் ஆசிரயித்தவர்களாகையாலும் புருஷனை விட்டுப் ப்ரகிருதி ஒருபொழுதும் தனித்திருக்கிறதில்லை. (பக்தி வைராக்கியம் ஆகிய இவைகளால் விவேகம் உண்டானாலும் ப்ரகிருதி. புருஷன் ஆகிய இவர்கள் ஒருவரையொருவர் விட முடியாதாகையால் எப்படி முக்தியடையக் கூடும் என்பது கருத்து.) ஓ ப்ரபுவே! பூமியைவிட்டு அதன்குணமாகிய கந்தமானது எப்படித் தனித்திருக்க முடியாதோ, எப்படி ஜலத்தை விட்டு அதன் குணமாகிய ரசமானது பிரிந்திருக்க முடியாதோ அப்படியே ப்ரகிருதியும், புருஷனும் தனித்திருக்க முடியாததே. கர்மங்களைச் செய்யாதவனாகிய புருஷனுக்கு (அகர்த்தாவிற்கு) எதன் சம்பந்தத்தால் கர்மபந்தம் நேரிடுகிறதோ; அந்தப் ப்ரகிருதியின் குணங்களிலிருக்கும்போது எப்படிப் புருஷன் முக்தனாக ஆகமுடியும்? சில சமயம் தத்துவங்களின் உண்மையை அறிந்ததால் சம்சார பந்தமானது பெரும்பாலும் நிவர்த்தியடைந்திருந்தாலும் சம்சார்த் திற்குக் காரணப்ரகிருதி சம்பந்தமாகியிருப்பதால். திரும்பவும் அந்தபந்தம் உண்டாகிறது (மிச்சமின்றிக் குறைகிறதில்லையென்று கருத்து.)

21–24 அதனைக் கேட்ட பகவான் மாதாவாகிய தேவஹூதியை நோக்கி, "புருஷன், பலனை உத்தேசியாமல் செய்யும் தர்மத்தாலும் (நிஷ்காமகர்மம்) நிர்மலமான மனத்தாலும், வெகு காலமாக என்னுடைய கதையைக் கேட்டு அதனால் விருத்தி செய்யப்பட்ட தீவிரமான பக்தியாலும் ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவர்களுடைய உண்மையைத் தெரிந்து கொள்வதா லும் அதிக வைராக்கியத்தாலும் தபஸுடன் கூடிய யோகத்தாலும் சித்தத்தை ஒருவகைப்படுத்தியதாலும், இரவும், பகலும் ப்ரகிருதியானது எரிக்கப்பட்டு (சக்தி குறைந்து) மெள்ள மெள்ள மறைந்துவிடும். அரணியானது அக்னியை உண்டு பண்ணுவதானாலும் அந்த அக்னியானது எரிக்கப்படவில்லையா? (தத்துவ ஞானத்தால் ப்ரகிருதி தகிக்கப்படுகிறதென்று கருத்து.) இப்படிப்பட்ட புருஷனுக்குப் ப்ரகிருதியானது புத்தபோக்யமாயிருப்பதாலும், (அனுபவித்த போகங்கள் உள்ள) அதனிடமுள்ள தோஷத்தை புருஷன் நன்றாய்த் தெரிந்து கொண்டபடியாலும் புருஷனால் அதுவிடப்படுகிறது. (மறுபடி உண்டாகிறதில்லை யென்று கருத்து) அப்படிப்பட்ட ப்ரகிருதியானது, தம்முடைய மஹிமையில் இருக்கும் (தம்முடைய ஆனந்தத்தை அடைந்த) ஈசுவரனுக்கு அசுபத்தை (சம்சார பந்தத்தை) உண்டு பண்ணுவதற்குச் சக்தியற்றதாக ஆகிறது. (ப்ரகிருதியின் சம்பந்தம் மாத்திரம் பந்தத்திற்குக் காரணமில்லை. அதைக் குணமென்று நினைத்து அதனிடம் ஆசைப்படுவது பந்தக மென்று கருத்து.)

25–30 மேலும் தூங்குகிறவனுக்கு சொப்பனம் மித்யையானது. அனர்த்தத்தை உண்டு பண்ணுவது

போல (தன்னுடைய தலைவெட்டப்பட்டது முதலியவை) தூங்கி விழித்தவனக்கு வாசனாவசத்தால் அந்த சொப்பனம் (சொப்பனத்தில் கண்டது) தோன்றினாலும் அவனுக்குக் கெடுதியை உண்டு பண்ணுகிறதில்லை. அதுபோல்லவே ஆத்மதத்துவத்தை அறிந்தவனும், என்னிடத்திலேயே மனத்தைச் செலுத்தியவனும் ஆத்மா ராம்னுமாகிய புருஷனுக்குப் ப்ரகிருதி அபகாரம் செய்கிறதில்லை. மேலும், அநேக ஜன்மங்களில் அத்யாத்ம வித்தையில் ஆசையுள்ளவன், ப்ரஹ்மலோகம் வரையிலுள்ள விஷயங்களில் வைராக்கியத்தை அடைந்து, என்னிடத்தில் பக்தி செய்து என்னுடைய மிகுந்த தயவினால் ஞானத்தை அடைந்து சம்சயமற்றவனாகிய, கைவல்யமென்கிற பெயருள்ளதும், தேகம் முதலியவைகளை விட வேறானதும் என்னை ஆசிரயித்ததுமான ஒப்பற்ற ஆனந்தத்தை அடைகிறான். யோகியானவன் லிங்க சரீரம் போனபின் எதனை அடைந்து அதிலிருந்து திரும்ப மாட்டானோ, அது மேற்காட்டிய ஆனந்தமேயாம். ஓ அம்ம! யோகத்தால் விருத்தி செய்யப்பட்டவைகளும், யோகத்தை தவிரமற்றவையால் கிடைக்காதவைகளுமான அணிமா முதலிய சித்திகளில் எவனுடைய மனம் ஆசைபடுகிறது இல்லையோ, அவன் என்னுடைய கதியை அடைவான். அவனைப் பார்த்து மிருத்யு பரிஹஸிக்கமாட்டான் (யோகியானாலும் யோகத்தால் கிடைக்கும் அணிமா முதலிய ஐசுவரியங்களில் ஆசை அடைந்தானேயாகில் அவனைப் பார்த்து மிருத்யு "நம்முடைய வலையில் இவன் சிக்கிக் கொண்டான்" என்று சிரிக்கிறான். ஆனதால் அணிமா முதலிய ஐச்வர்யங்கள் மோக்ஷத்திற்கு விக்கினங்களாக இருக்கின்றன. அவைகளில் ஆசைப்படக் கூடாதென்று கருத்து.

நோட்டு

கர்மங்களை: "இம்மாதிரியான ஆத்மா தேவ மனுஷ்யாதி சரீரத்தை அடைவது, சுகதுக்கங்களை அனுபவிப்பது முதலியவைகள் தேகத்தில் வைத்து இருக்கும் ஆத்மா அபிமானத்தாலும் சுதந்திராபி மானத்தாலும், ஏற்பட்டவைகளே யொழிய உண்மையிலிருப்பவைகளல்ல:–வீர, பந்துவும் 'பிதாரக்ஷகன், சேஷீ, பர்த்த' என்றபடி ஸகலவித பந்து அசத்தாகிய தேஹம் முதலியவைகளுக்குப் பிரகாசகம். அந்தப் ப்ரஹ்மாவினுடைய காந்தியால் இதெல்லாம் விளங்குகிறது" ச்ருதி வீர.

அத்தியாயம்–28

யோகத்தின் ஸ்வரூபம்
(தொடர்ச்சி)

1–7. "ஓ ராஜபுத்திரியே! எதனால் மனதானது தெளிந்து (ஆசை, துவேஷம் முதலியவைகளால் கலங்காமல், நன்மார்க்கத்தை (பகவத் ரூபத்தை) அடையுமோ, அந்த யோகத்தின் லக்ஷணத்தையும், அதன் ஸாதனங்களையும் சொல்வேன். அதாவது புருஷன் தன்னுடைய சக்திக்குத் தக்கபடி வர்ணாச்ரம தருமத்தை அனுஷ்டிக்க வேண்டும். விருத்த தர்மத்தை அனுஷ்டிக்கக்கூடாது. தெய்வச் செய்லாகக் கிடைத்ததைக் கொண்டு சந்தோஷத்தை அடையவேண்டும். பகவத் பக்தர்களைப் பூஜிக்கவேண்டும். மேலும் கிராம்ய தர்மத்தில் ஆசைப் படாமல் மோக்ஷத்திற்கு சாதனமாகிய தர்மங்களிலேயே ஆசை கொள்ளவேண்டும், சுத்தமாகிய அன்னத்தை சொற்பமாகப் புஜிக்கவேண்டும், (இரண்டு பாகத்தை அன்னத்தாலும், ஒரு பாகத்தை ஜலத்தாலும் நிரம்பி, நான்காவது பாகத்தைக் காற்றின் சஞ்சாரத்திற்கு விடவேண்டும் என்ற ஸ்மிருதியின்படி). ஜனங்கள் அற்றதும், உபத்திரவங்களற்றதுமான ஸ்தலத்தில் வசிக்கவேண்டும். பின்னும், ஒருவருக்கும் இம்சை செய்யாமலிருப்பது, உண்மை பேசுவது, பிறர் பொருளை அபகரிக்காமலிப்பது. எவ்வளவு வேண்டுமோ அதற்குமேல் பணத்தைச் சம்பாதியாமல் இருப்பது, இந்திரியங்களை ஜயிப்பது; சாந்த்ராயணம் முதலியவைகளை அனுஷ்டிப்பது; வேதங்களை அத்தியயனஞ் செய்வது, பகவானைப் பூஜிப்பது,

மௌனமாக இருப்பது, ஆசனத்தை அடைவது, ஸ்திரனாக இருப்பது, ப்ராணவாயுவை வசப்படுத்திக் கொள்வது, இந்திரியங்களை அவை அவைகளுடைய விஷயங்களிற் செல்லவொட்டாமல் செய்து ஹிருதயத்தில் வைத்துக்கொள்வது, மூலாதாரம் முதலிய ஸ்தானங்களுக்குள் ஒரு இடத்தில் மனத்துடன் ப்ராணனை நிறுத்துவது, பகவானுடைய லீலைகளைத் தியானம் செய்வது; மனத்தை ஆத்மாகாரமாகச் செய்வது முதலிய மார்க்கங்களாலும், தானம் முதலிய மற்றவையாலும் இயற்கையில் கெட்ட மார்க்கத்தில் செல்லும் துஷ்டமாகிய மனத்தைப் புத்தியைக் கொண்டு பரமாத்மாவினிடத்தில் செலுத்த வேண்டும். அதில் சோம்பலடையக் கூடாது.

8–10. சுத்தமாகிய விடத்தில் ஆசனத்தைப் போட்டு ஆசன ஜயமுள்ளவனாக (எவ்வளவு காலம் உட்கார்ந்திருந்தாலும் சிரமமற்றவனாக) ஸ்வஸ்திகம் என்ற ஆஸனத்தில் உட்கார்ந்து ருஜுவான் சரீரமுள்ளவனாகப் ப்ரணவத்தை அப்பியசிக்க வேண்டும். மேலும் பூரகம், கும்பகம் ரேசகம் ஆகிய இவைகளால் ப்ராணன் சஞ்சரிக்கும் மார்க்கத்தைச் சுத்தமாகச் செய்யவேண்டும். அல்லது அவைகளை மாறுதல் ஆகவாவது செய்யவேண்டும், எப்படியாவது சித்தம் விஷயங்களில் செல்லாமல் ஸ்திரமாக இருக்கும்படி செய்யவேண்டும், ஸ்வர்ணம் முதலிய உலோகமானது வாயு அக்கினி இவைகளைக் கொண்டு உருக்கப்பட்டால் எப்படிச் சுத்தமாகி விடுகிறதோ; அப்படிச் ஸ்வாசத்தை ஜயித்தயோகியின் சித்தமானது ரஜோகுணமற்றதாகச் சுத்தமாகிவிடும்; மேலும் ப்ராணாயாமத்தால் வாத பித்தம் முதலிய

தோஷங்களையும், தாரணத்தால் (வாயுடன் மனத்தை ஸ்திரப்படுத்துவது) பாபங்களையும், ப்ரத்யாகாரத்தால் விஷய ஸுகத்தையும், தியானத்தால் ஆசை முதலியவைகளையும் நாசம் செய்யவேண்டும்.

11–19. மனமானது நிர்மலமாகிய யோகத்தால் ஸ்திரமானபின் தன்னுடைய மூக்கின் நுனியைப் பார்த்துக் கொண்டு பகவானுடைய கலையைத் தியானஞ் செய்யவேண்டும். அந்தப் பகவத் சரீரமானது தர்மரை மலர் போல் ப்ரசன்னமாகிய முகமுள்ளது. தாமரை மலரின் மத்யம்போல் சிவந்த கண்களுள்ளது. நீலோத்பல மலர் போலக் கறுத்த திருமேனி உள்ளது, சங்கம், கதை, சக்ரம் இவைகளைத் தரித்திருப்பது! தாமரை புஷ்பத்தின் தாதுகள் போலப் பொன்னிறமான பீதாம்பரத்தைத் தரித்தது. ஸ்ரீ வத்ஸத்துடன் கூடிய மார்புள்ளது. கௌஸ்துபரத்தால் ப்ரகாசிக்கும் கண்டமுள்ளது. மதித்துவண்டுகளின் இனிமையான சப்தமுள்ள வனமாலையுள்ளது. சிறந்தஹாரம் கங்கணம், கீரிடம், தோள்வளை, பாதசரம் இவைகளால் அலங்கரிக்கப்பட்டது. கடிசூத்ரத்தால் ப்ரகாசிக்கும் மத்யபாகமுள்ளது. பக்தர்களுடைய இருதயமாகிய தாமரை மலரை ஆசனமாய் உடையது. (அதில் வஸிப்பவர்) மிகவும் பார்க்கத்தக்கது. (அழகுள்ளது) சாந்தமாயுள்ளது. மனத்திற்கும் கண்களுக்கும் சந்தோஷத்தை விருத்திசெய்யக்கூடியது. அழகான தரிசனமுள்ளது. ஸகல லோகங்களாலும் நமஸ்கரிக்கப்பட்டது. யௌவன வயதுள்ளது. பக்தர் களை அனுக்கிரஹிப்பதில் நோக்கமுள்ளது. அப்போப் பட்ட திவ்ய மங்கள விக்ர்ஹமுள்ளவரானப் பகவானை மனது வேறு விஷயத்தில் செல்லாமலிருக்கும்படி

தியானஞ் செய்யவேண்டும். அவர் கானஞ் செய்யக்கூடிய பரிசுத்தமான கீர்த்தியுள்ளவர். புண்ய ஸ்லோகர்களான பலி முதலியவர்களுக்கு கீர்த்தியை உண்டுபண்ணியவர். மேலும் அந்தப் பகவானை உட்கார்ந்திருப்பவராகவாவது, நடக்கிறவராகவாவது நிற்கிறவராகவாவது படுத்துக்கொண்டவராகவாவது, ஹிருதய குகையிலிருப்பவராகவாவது; பார்க்கக்கூடிய லீலைகளுள்ளவராகவாவது சுத்தமான மனத்தால் தியானம் செய்யவேண்டும்.

20–33. இப்படி அந்தப் பகவத் ஸ்வரூபத்தின் எல்லா அவயவங்களிலும் சித்தமானது பதிந்த பின்பு ஏதாவதொரு அவயவத்தைத் தியானஞ் செய்யவேண்டும். முதலில் பகவானுடைய பாதார விந்தத்தைத் தியானிக்க வேண்டும். அது வஜ்ர ரேகை துவஜரேகை அங்குச ரேகை, தாமரைமலர் ரேகை ஆகிய இவைகளுள்ளது. மேலானவைகளும், சிவந்தவைகளுமான நகங்களுடைய காந்தியால் ஹிருதயத்திலிருக்கும் இருளைப் போக்கக் கூடியது. அந்தப் பாதத்திலிருந்து உண்டான கங்கையின் ஜலத்தைத் தம்முடைய சிரசில் வஹித்ததால் பரமசிவனும் சிவனாக ஆனார் (மிகுந்த க்ஷேமத்தை அடைந்தார்.) மேலும் அந்தப் பாதமானது தியானம் செய்பவர்களுடைய மனத்திலிருக்கும் பாபமாகிய மலைக்கு வஜ்ரமாக விருக்கிறது (பாபத்தை நாசம் செய்கிறது) பின்பு அந்தப் பகவானுடைய இரண்டு முழங்கால்களை (இவைகள் சம்சார சம்பந்தமில்லாதவருடையவை) என்று தியானிக்க வேண்டும். அவைகள் ஸகல லோகங்களைப் படைத்தவரான ப்ரஹ்மதேவருக்கு மாதாவும் தாமரை மலர் போன்ற கண்களுள்ளவளும், தேவர்களால்

நமஸ்கரிக்கப்பட்டவளுமாகிய லக்ஷ்மி தேவியால் தன்னுடைய துடைகளில் வைத்து தூளிர் போன்ற இருகைகளால் ஸேவிக்கப்பட்டவை (பிடிக்கப்பட்டவை). மேலும் கருடனுடைய தோளில் ப்ரகாசிப்பவைகளும், பலத்திற்கு இருப்பிடமானவைகளும் (பலமுள்ளவை). காயாம்பூப்போல் விளங்குகிறவைகளுமான துடைகளையும் தியானிக்கவேண்டும். மேலும் கணுக்கால் வரையில் தொங்குகின்ற பீதாம்பரங்களின் மீது விளங்கும் கடிசூத்திரமுள்ள நிதம்பத்தையும் ஹிருதயத்தில் தியானிக்க வேண்டும்.

பின்பு அந்தப் பகவானுடைய தொப்புளை சிந்திக்க வேண்டும். ஸகல உலகங்களுக்கும் இருப்பிடம் ஆகிய வயிற்றிலிருந்தும் தொப்புளை சிந்திக்கவேண்டும். அதில் ப்ரஹ்மதேவருக்கும் உற்பத்தி ஸ்தானமும் ஸகலலோக ஸ்வரூபமான தாமரைப்புஷ்பம் இருக்கிறது. அதன்மீது சுத்தமாகிய முக்தஹாரத்தின் காந்தியால் வெண்மை நிறமுள்ளவரையும் இயற்கையில் சிறந்த மரகதரத்னம் போலிருப்பவைகளுமான பகவானுடைய ஸ்தனங்களை மனத்தால், சேவிக்க வேண்டும். பிறகு மஹாலக்ஷ்மிக்கு வாசஸ்தலமும், மனத்திற்கும் நேத்திரங்களுக்கும் ஸுகத்தை உண்டு பண்ணுகிறதுமான புருஷோத்தமனுடைய மார்பையும், கௌஸ்துப ரத்னத்திற்கு அழகை உண்டுபண்ணும் ஸகல லோகங்களால், நமஸ்கரிக்கப்பட்ட பகவான் உடைய கழுத்தையும், மந்திர மலையின் அசைதலால் கடைசல் பிடிக்கப்பட்ட கங்கணங்கள் உள்ளவைகளும், லோகபாலர்களால் ஆசிரயிக்கப்பட்டவைகளுமான கைகளையும், சஹிக்க முடியாத தேஜஸ்ஸுள்ளதும், ஆயிரம் முனைகளுள்ளதுமான சக்ராயுதத்தையும்,

தாமரை மலர்போன்ற கைகளில் ராஜஹம்சம் போல் ப்ரகாசிக்கும் சங்கத்தையும் பகவானுக்கு மிக்க பிரியம் ஆனதும், சத்ருக்களுடைய இரத்தத்தால் சிவந்ததுமான கௌமோதகியென்ற பகவானுடைய கதாயுதத்தையும் ஜீவனுடைய தத்துவ ஸ்வரூபமாகிய கௌஸ்துப ரத்ன ஹாரத்தையும், சப்திக்கும் வண்டுகளால் நிறைந்த வனமாலையையும் தியானிக்க வேண்டும். மேலும் பக்தர்களிடத்தில் கருணையால் அவதரித்திருக்கும் அந்தப் பகவானுடைய தாமரை மலர் போன்ற முகத்தை சிந்திக்க வேண்டும். அது ப்ரகாசிக்கும் மகரகுண்டலங்கள் அசைவதால் விளங்கும் சுத்தமான கன்னங்களுள்ளது. உயர்ந்த மூக்குள்ளது. மேலும் அது இரண்டு மீன்களுள்ள தாமரைப் பரிகசிக்கிறது. சுருண்ட தலைமயிர்களுள்ளது. விசேஷ காந்தி யுள்ளது. லக்ஷ்மீதேவிக்கு இருப்பிடமாயுள்ளது. மனோமயமானது. ப்ரகாசிக்கும் புருவங்களுள்ளது. பின்னும் அதிகக் கருணை பொருந்தியதும், மனோகரமுமான சிரிப்புடன் கூடியதும் விசேஷப் ப்ரசாதமுள்ளதுமான அவருடைய கடாக்ஷத்தை மூவகையான தாபத்தைப் போக்குவதற்காக இடை விடாது பாவனையால் ஹிருதயத்தில் பாவிக்க வேண்டும்.

மேலும் பகவானுடைய சிரிப்பானது நமஸ்கரித்த அனேக ஜனங்களுடைய கடுமையான துக்க சமுத்திரத்தைச் சோக்ஷிக்கச் செய்யக்கூடியது. மிகவும் மேலானது. ஸகல மகரிஷிகளையும் மோஹிக்கச் செய்யக்கூடியது. இம்மாதிரியான மந்தகாசத்தைத் தியானிக்கவேண்டும் தியானத்திற்கு விஷயமானவை களும் மேலான மேலுதடு, கீழுதடு இவைகளுடைய

காந்தியால் சிவந்த பற்களாகிய குந்த புஷ்பவரிசை யுள்ளவைகளுமான பகவானுடைய விசேஷ சிரிப்பைத் தியானிக்க வேண்டும். இப்படித் தன்னுடைய ஹிருதயாகாசத்திலிருக்கும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவிடத்தில். மிகுந்த ப்ரேமை ரசமுள்ள பக்தியினால் சித்தத்தைச் செலுத்தவேண்டும். அதனைவிட வேறொன்றையும் பார்க்க விரும்பக்கூடாது.

34–44. இம்மாதிரி ஸ்ரீ பகவானிடத்தில் விசேஷமாகப் பாவத்தைச் செலுத்தியும். பக்தியால் ஹிருதயம் உருகியும் சந்தோஷத்தால் மயிர்க்கூச்சல் அடைந்தும் அதிக ப்ரேமையால் பெருகிய ஆனந்த பாஷ்பத்தில் மூழ்கியும் பகவானாகிய மத்ஸ்யத்தைப் பிடிக்கும் உபாயமாகிய சித்தத்தை மெள்ள மெள்ளப் பகவத் ஸ்வரூபத்திலிருந்து பிரிக்கவேண்டும். (ஸபீஜ யோகத்தை நிர்பீஜ யோகமாகச் செய்யவேண்டும்) மனதானது எப்பொழுது வைராக்கியமுள்ளதாகவும் ஆசிரயமற்றதாகவும். ஒன்றையும் விஷயீகரிக்காததாக வும் இருக்குமோ அப்பொழுது தேகம் முதலிய உபாதிகள் நீங்கியபடியால் தன்னை ஒருவனாகவும் பரப்ரஹ்மமாகவும் பார்க்கிறான் (தியானம் செய்கிறவன். தியானம் பண்ணப்படுகிற வஸ்து என்று பேதமற்று ப்ரஹ்மமாக இருக்கிறானென்று கருத்து). தீபமானது தனக்கு ஆசிரயமாகிய திரி முதலியவைகள் அற்றுப்போனவுடன் மஹா தேஜஸாக ஆகிவிடுகிறது அல்லவா? இதுவே அதற்குத் திருஷ்டாந்தமாகும் இப்போர்ப்பட்ட நிலைமையை அடைந்தவன் திரும்பவும் சம்சாரத்தை அடைகிறதில்லை என்பது கருத்து.) அப்போர்ப்பட்ட புருஷன் அவித்யையின் சம்பந்தமற்ற மனத்தின் வைராக்கியத்தால் ப்ரஹ்ம நிஷ்டனாகி

அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தை அடைகிறான். சம்சாரியாக இருந்த காலத்தில் எது சுக துக்கங்களுக்குக் காரணமாயிருந்ததோ; அது இந்த நிலைமையில் இல்லை.

மேலும் மத்யத்தைக் குடித்தால் மயக்கமடைந்த வனுக்கு தன்னுடைய சரீரத்தில் வஸ்திரமிருக்கிற தென்றாவது இல்லையென்றாவது எப்படித் தெரியாதோ அப்படியே ஸ்வரூபத்தை அடைந்த சித்தன் அந்நித்திய மாகிய தன்னுடைய சரீரம் ஆசனத்திலிருப்பதையாவது, எழுந்து நடக்கிறதையாவது பார்க்கமாட்டான் (சுகதுக் கங்களை அனுபவிப்பானாவென்பது கருத்து). ஆனால் தேஹமானது முந்திய ஸம்ஸ்காரத்தால் (பழக்கம்) சேஷ்டிக்கும் எந்தக் கர்மத்தால் சரீரம் உண்டாக்கப் பட்டதோ, அந்தக் கர்மம் நசிக்கிறவரையில் இந்திரியங்களுடன் தேஹம் ஜீவித்திருக்கும். ஆனாலும் ஆத்மாவின் உண்மையை அறிந்த ஆருடன் சொப் பனத்தில் பார்க்கப்படும் வஸ்து போலிருக்கும் தேஹத்தி லும்; புத்திரன் முதலிய பந்துக்களிடத்திலும் அபிமானம் வைக்கமாட்டான். ஏனெனில் புத்திரன் மித்திரன் களத்திரம் முதலியவர்களை விராட்புருஷன் வேறாகக் காணப்படுவது போல ஆத்மாவென்று நினைக்கப்பட்டிருக்கும் தேஹம், இந்திரியம் முதலிய வைகளை விடத்தான் வேறாகவே இருக்கிறான். அக்கினியானது தன்னால் உண்டுபண்ணப்பட்ட புகை குறைக்கொள்ளி நெருப்புபொறி ஆகிய இவைகளைவிட வேறாகக் காணப்படுவது போல ஜீவனென்று சொல்லப் படுகிற பூதங்கள், இந்திரியங்கள் அந்தக்கரணம், பிரதானம் ஆகிய இவைகளைவிடப் ப்ரஹ்மமென்று சொல்லப்படுகிற திருஷ்டாவாகிய பரமாத்மாவானவர்

வேறென்று அறியவேண்டும். நான்கு வகையான பிராணிகளைத்தானாகவும், தன்னைச் ஸகல பிராணி களாகவும் பூதங்களை மஹாபூதஸ்வரூபங்களாவும் பார்ப்பான் (நினைப்பான்). மேலும் அக்கினியானது ஒரேவகையானாலும் கட்டை முதலியவைகளில் அதன் உருவத்திற்குத் தக்கபடி நீண்டும் குட்டையுமாக பலவகையாகத் தோன்றுவது போல் ஆத்மா ஒருவரா னாலும் பிரகிருதியின் குணபேதத்தால் பலவகையாகக் காணப்படுகிறார் ஆனதுபற்றி இந்த ஸ்ரீ மகா விஷ்ணுவின் மாயாசக்தியானது ஜீவனுக்குப் பந்தத்தை உண்டுபண்ணுகிறது. காரிய காரண ரூபமாயுள்ளது; அறிய முடியாத ஸ்வரூபமுள்ளது. அப்பேர்ப்பட்ட ப்ரகிருதியை ஜயித்து, ப்ரஹ்ம ஸ்வரூபமாக ஆகவேண்டும் என்று பகவான் தேவஹூதிக்கு உபதேசித்தார்.

அத்தியாயம்–29

பக்தி யோகம்

1–5 அதனைக் கேட்ட தேவஹூதியானவள் கபிலரை நோக்கி, "ஓ பகவன்! மகத்தத்துவம் முதலியவைகள் ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவைகளுக்கு சாங்கிய சாஸ்திரத்தில் சொல்லியபடி அபாதிதமான லட்சணம் உம்மால் சொல்லப்பட்டது. அதுவே பக்தியோகத்திற்குச் சாதனம். அந்தப் பக்தி யோகத்தின் மார்க்கத்தை விஸ்தாரமாகச் சொல்லும். பலவகையான சம்சாரத்தையும் என்க்குச் சொல்லும். அதன் ஸ்வரூபத்தைத் தெரிந்து கொண்டதனால் அதில் வைராக்கியம் உண்டாகும். மேலானவர் களுக்கும் மேலானவரும் மிகுந்த மஹிமையுள்ள வரும், கால ஸ்வரூபியாயுமிருக்கும் உம்மிடத்தில் பயந்தே ஜனங்கள் புண்ணியத்தைச் செய்கிறார்கள். தேஹம் முதலியவைகளில் அபிமானமுள்ளவனும், அஞ்ஞானம் கரையற்ற ஸம்சாரத்தில் வெகுநாளாகத் தூங்கியவனும் கர்மங்களில் ஆசைபட்டதால் கலைத்தவனு மாகிய புருஷனை விழிக்கச் செய்வதற்காக நீர் யோகத்தைப் ப்ரகாசிக்கச்செய்யும் சூரியனாக உதயமாகியிருக்கிறீர்" என்றாள்.

6–10 இம்மாதிரியான மாதாவினுடைய அழகான வார்த்தையைக் கேட்ட ப்கவான், மிகுந்த பிரியத்துடன் கருணையுள்ளவராகி அவளை நோக்கி, 'பக்தி யோகமானது மார்க்க பேதத்தால் பலவகையுள்ளது. புருஷர்களுடைய அபிப்பிராயமானது அவரவர்கள் உடைய ஸ்வபாவமாகிய குணங்களுடைய விருத்திகளால்

பலவகையாக மாறுகிறது. எவன் இம்சை டம்பம், மாத்சர்யம் இவைகளுள்ளவனாகவும் கோபமுள்ள வனாகவும், பேத புத்தியுள்ளவனாகவும் என்னிடம் பக்தி செய்கிறானோ அவன் தாமஸ பக்தன் எனப்படுகிறான். எவன் பேதபுத்தியுடன் கீர்த்தி ஐசுவரியம் முதலிய விஷயங்களுக்குக்காக என்னைக் பூஜிக்கிறானோ, அவன் ராஜஸ பக்தன் எனப்படுகிறான். எவன் பேத புத்தியுடன் பாப நிவ்ருத்தியை உத்தேசித்துக் கர்மத்தைச் செய்து, அவைகளை பரமாத்மாவினிடம் சமர்ப்பித்து யாகம் முதலியவை செய்ய வேண்டும் என்று செய்கிறானோ, அவன் சாத்விக பக்தனாகிறான்.

11–14 ஸகல குணங்களுக்கும் இருப்பிடமாகிய, புருஷோத்தமனுமாகிய என்னிடத்தில் என்னுடைய குணங்களைக் கேட்ட மாத்திரத்தாலேயே பலத்தில் ஆசையற்று, பேதபுத்தியற்று, சமுத்திரத்தில் கங்காஜலம் போல் எவனுடைய மனமானது இடைவிடாமல் என்னிடம் செல்லுகிறதோ அதுவே நிர்க்குண பக்தியாகும். மேலும், பக்தர்களுக்கு என்னைச் சேவிப்பதிலேயே விருப்பமிருக்கும். ஆதலால் ஸாலோக்கியம் (என்னுடன் ஒரே உலகத்தில் வஸிப்பது). ஸார்ஷ்டி (எனக்குள்ள ஐசுவரியத்தை அடைந்திருப்பது), ஸாமீப்யம் (என்னுடைய சமீபத்தில் வஸிப்பது), ஸாரூப்யம் (எனக்குச் சமமான ஸ்வரூபத்தை அடைவது) ஏகத்துவம் (என்னிடம் ஒன்றாகக் கலந்து போவது) ஆகிய இவைகள் கிடைத்தாலும் அவர்கள் அவைகளை விரும்புகிறதில்லை. (அப்படியிருக்க மற்றவையை விரும்புவார்களா ? என்று கருத்து) அதுவே மேலான பக்தியோகம் எனப்படுகிறது. அதனால் முக்குணங்களைக்

கடந்து ப்ரஹ்மபதத்தை அடைகிறான். (பக்தர்களுக்கு பகவத் சேவையே முக்யமான பலன், முக்தி இடையில் கிடைக்கும் பலன்.)

15–30 மேலும், பலத்தை உத்தேசியாமல் செய்யப் படும் நித்ய நைமித்திக கர்மங்களாலும், சிரத்தையுடன் நிஷ்காமனாகப் பகவானைப் பூஜிப்பதாலும், பரஹிம்சை இல்லாமல் இருப்பதாலும் என்னுடைய ப்ரதிமை களைத் தரிசிப்பது, ஸ்மரிசிப்பது, பூஜிப்பது, துதிப்பது, நமஸ்கரிப்பது ஆகிய இவைகளாலும் ஸகல பிராணிகளிடத்திலும் என்னைப் பாவிப்பதா லும் தைரியத்தாலும் வைராக்கியத்தாலும், பெரியோர் களைப் பூஜிப்பதாலும், தீனர்களிடத்தில் தயை செய்வதாலும் தனக்குச் சமமானவர்களிடத்தில் பிரீதி செய்வதாலும், சமத்தாலும் நியமத்தாலும், ஆத்மாவின் உண்மையை குருமுகமாகச் சிரவணஞ் செய்வதாலும் பகவானுடைய நாமங்களை உச்சரிப் பதாலும், கபடமற்றிருப்பதாலும், சாதுக்களுடைய சங்கத்தாலும், அஹங்காரத்தை ஒழிப்பதாலும் புருஷனுடைய சித்தமானது சுத்தமாகிறது. வாசனை யானது புஷ்பத்திலிருந்து வாயுவாகிய ரதத்தின் மீதேறி கிராணேந் திரியத்தை அடைவதுபோல யோகமுள்ளதும், சுத்தமுமான சித்தமானது ஆத்மாவை அடைகிறது. (மேற்காட்டிய குணங்கள் பக்தி யோகத்திற்கு என்று கருத்து.)

21–26 நான் ஸகல பிராணிகளிடத்திலும் வஸிக்கிறேன். அப்படிப்பட்ட என்னை லட்சியம் செய்யாமல் பூசை செய்வது போல் மனிதன் அபிநயஞ் செய்கிறான். ஸகல பிராணிகளிடத்திலும்

வஸிக்கும் ஈசுவரனாகிய என்னை விட்டு எவன் அறியாத்தன்மையால் ப்ரதிமை முதலியவைகளில் பூஜிக்கிறானோ, அவன் சாம்பலில் ஹோமம் செய்கிறவனேயாம். பிறரைத் துவேஷிக்கிறவன், என்னைத் துவேஷிக்கிறவனாகிறான் (எங்கும் நான் இருப்பதால்) ஆனதால் விரோத புத்தியுள்ளவனும் அஹங்காரமுள்ளவனுமாகிய புருஷனுடைய மனதானது சாந்தியை அடைகிறதில்லை. ஓ பாபம் அற்றவளே! பிராணிகளை நிந்திப்பவன். பலவகையான திரவியங்களால் விதிப்படி என்னைப் பூஜித்தாலும், அதனால் நான் சந்தோஷப்படுகிறதில்லை. பகவான் ஸகல பிராணிகளிடத்திலும் வஸிக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ளுகிற வரையில் என்னுடைய ப்ரதிமைகளைத் தங்களுடைய நித்திய கர்மத்திற்கு விரோதமில்லாமல் பூஜிக்க வேண்டும். மேலும் தனக்கும் பிறருக்கும் பேதமிருப்பதாக எவன் கொஞ்சமாவது பார்க்கிறானோ அவனுக்கு மிகுந்த பயத்தை உண்டு பண்ணுகிறேன்.

27–35 ஆனதால் ஸகல பிராணிகளிடத்திலும், அந்தர்யாமியாக வஸிக்கும் என்னைப் பேதபுத்தியற்ற வனாகப் ப்ரீதியுடன் தானத்தாலும், கௌரவப் புத்தியாலும் பூஜிக்க வேண்டும். அதிலும் அசேதனம் ஆகிய பிராணிகளைக் காட்டிலும் உயிருள்ளவை, மேலானவை.அவைகளைக் காட்டிலும் பிராணி வ்ருத்தியுள்ளவை மேலானவை. அவைகளைக் காட்டிலும் சித்தமுள்ளவை சிறந்தவையாம். அவைகளைவிட இந்திரியங்களுள்ளவை உயர்ந்தவை. அவைகளிலும் ஸ்பரிசத்தைத் தெரிந்து கொள்ளுகிறவைகளைக் காட்டிலும் ரசத்தை அறியக்கூடியவைகள்

சிறந்தவைகளாகும். அவைகளைக் காட்டிலும் கந்தத்தை அறியக் கூடியவை மேலானவையாம். அவ்வகளைவிட சப்தத்தை அறியக் கூடியவை மேலானவையாம். அவைகளைவிட உருவத்தின் பேதத்தை தெரிந்து கொள்ளுகிறவைகளும் (காக்கை முதலியவை) அவைகளைக் காட்டிலும் இரண்டு பக்கத்திலும் பற்களுள்ளவையும் (குதிரை முதலியன) சிறந்தவைகள். மேலும் காலில்லாதவைகளைக் காட்டிலும் அனேக காலுள்ளதும், அவைகளைவிட நான்கு கால்களுள்ள வைகளும், அவைகளைக் காட்டிலும் இரண்டு கால்களுள்ளவைகளும் சிறந்தவைகளாகும். பின்னும் அந்த மனிதர்களுக்குள் நான்கு ஜாதிகளே சிறந்தவைகள். அவைகளிலும் ப்ராஹ்மணனே உத்தமன். ப்ராஹ்மணர்களுக்குள் வேதாத்தியயனஞ் செய்தவன் மேலானவன். அவனைவிட வேதத்தின் அர்த்தத்தை அறிந்தவன் மேலானவன். அவனைக் காட்டிலும் சம்சயத்தைப் போக்குகிறவன் (மீமாம்சை படித்தவன்) உயர்ந்தவன். அவனைக் காட்டிலும் ஸ்வதர்மத்தை அனுஷ்டிப்பவன் சிறந்தவன். அவனைக் காட்டிலும் ஸகல ஆசையையும் ஒழித்தவன், மேலானவன். தருமம் முதலியவைகளை விரும்பமாட்டான். அவனால் அனுஷ்டிக்கப்பட்ட கர்மங்களும், அவைகளுடைய பலனும், தேஹமும், என்னிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஆனதால் எனக்கும் அதிக பேதமில்லை.

இப்படி ஸகல கர்மங்களையும் ஆத்மாவையும் என்னிடம் சமர்ப்பித்தவனும், எல்லாவற்றையும் சமமாகப் பார்ப்பதால் கர்த்தாவென்ற அபிமானமற்ற வனுமாகிய, புருஷனைக் காட்டிலும் மேலான ப்ராணி ஒன்றுமில்லை. ஆனதால் 'பகவானாகிய

ஈசுவரன் ஜீவனாக ஸகல ப்ராணிகளிடத்திலும் ப்ரவேசித்திருக்கிறார்' என்று மனத்தில் நினைத்து ஸகல ப்ராணிகளிடத்தில் கௌரவ புத்தியை அடையவேண்டும். நமஸ்கரிக்கவும் வேண்டும். ஓ மனுவின் புத்திரியே! பக்தி யோகம், யோகம் ஆகிய இரண்டையுஞ்சொன்னேன். இவைகளுள் ஏதாவது ஒரு மார்க்கத்தால் பரமாத்மாவை அடைய வேண்டும்.

36–45 எல்லாவற்றிற்கும் நியந்தாவாக இருப்பதே பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபம். மேலும், கர்மங்கள் உடைய சேஷ்டையுள்ளதும் ப்ரதான புருஷ ஸ்வரூபமாயிருப்பதுமே தெய்வம் எனப்படுகிறது. (அதிருஷ்டம்) பேதத்திற்கு (வஸ்துக்கள் வேறாக மாறுவது) காரணமாயிருப்பதே காலமென்று சொல்லப்படுகிறது. இவைகள் யாவும் பரமாத்மாவின் ஸ்வரூபமேயாம். (மகத்தத்துவம் முதலியவைகளுக்கு அபிமானிகளும் பேதபுத்தி உள்ளவர்களுமான ஜீவர்களுக்குப் பயத்தை உண்டு பண்ணுகிறவர், அந்தப் பகவானேயாம். ஸகல பிராணிகளுக்கும் ஆசிரயம் இருக்கும் ஈசுவரன் ஸகல பிராணிகளுடைய ஹிருதயத்தில் ப்ரவேசித்துப் பூதங்களைக் கொண்டே அவைகளை ஸம்ஹரிக்கிறார். விஷ்ணுவென்ற திவ்ய நாமமுள்ள பகவானே யாகத்திற்கும் பலத்தைக் கொடுப்பவர். எல்லாவற்றையும் ஸ்வாதினப் படுத்திக் கொள்பவர், கால ஸ்வரூபி அவருக்கு மித்திரனாவது, துவேஷியாவது, பந்துவாவது ஒருவருமில்லை. எவரிடமிருந்து, காற்று வீசுகிறதோ சூரியன் ப்ரகாசிக்கிறாரோ, எவரிடமிருந்து பயந்து நட்சத்திரங்கள் ப்ரகாசிக்கின்றனவோ, எவரிடமிருந்து பயந்து கொடிகளும், செடிகளும் (ஓஷதி)

தங்களுக்குரிய ருதுக்களில் புஷ்பங்களையும், பழங்களையும் உண்டு பண்ணுகின்றனவோ, எவர் இடமிருந்து பயந்து நதிகள் ஓடுகின்றனவோ, எவரிடமிருந்து பயந்து சமுத்திரமானது கரை புரளவில்லையோ, எவரிடமிருந்து பயந்து அக்கினி ப்ரகாசிக்கிறதோ எவரிடமிருந்து பயந்தே மலைகளால் நிறைந்த இந்த பூமியானது ஜலத்தில் மூழ்காமல் இருக்கிறதோ, எவருடைய உத்தரவினால் பிராணி களுக்கு ஆகாசமானது அவகாசத்தைக் கொடுக்கிறதோ, எவருடைய ஆக்ஞையால் மகத்தத்துவமானது ஏழு ஆவரணங்களுள்ள தன்னுடைய தேகத்தை லோகமாக விஸ்தாரப்படுத்துகிறதோ, சரம், அசரம் ஆகிய இவைகளடங்கிய ஜகத்தானது எவருடைய வசமாக இருக்கிறதோ, குணங்களுக்கு அபிமானிகள் ஆகிய அந்தப் ப்ரஹ்மா முதலிய தேவர்கள் அடிக்கடி இந்த ஜகத்தைப் படைப்பது முதலியவைகளை எவருடைய பயத்தால் செய்கிறார்களோ, அவரே பகவான். அவர் நாசமற்றவர். நாசத்தை உண்டு பண்ணுகிற காலஸ்வரூபியாயிருப்பவர். ஆதியற்றவர். எல்லாவற்றிற்கும் ஆதியைச் செய்பவர். மாறுதல் அற்றவர். புத்திரன் முதலிய ஜனத்தைப் பிதா முதலிய ஜனத்தைக் கொண்டு யுண்டு பண்ணுகிறவர். மிருத்யுவைக் கொண்டு அந்தகனையும் கொல்பவர்.

அத்தியாயம்–30

பாபிகளின் கதி
(முன்தொடர்ச்சி)

1–24. 'வாயுவினால் அசைக்கப்படும் மேகமானது வாயுவின் பலத்தை எப்படி அறியவில்லையோ அப்படி காலத்தால் தூண்டப்பட்ட ஜனங்கள் அதன் மஹிமையைத் தெரிந்து கொள்ளுகிறதில்லை. புருஷன் சுகத்தை அடைவதற்காக எந்தெந்த வஸ்துக்களைச் சம்பாதிக்கிறானோ, அவைகளைக் காலமானது நாசம் செய்கிறது. அதனால் புருஷன் துக்கிக்கிறான். மேலும், அநித்யமாகிய சரீரத்திற்காகவும், புத்திர மித்திர களத்திரங்களுக்காகவும், வீடு பூமி பணம் முதலியவை களை நித்யங்களாகப் பாவித்துச் சம்பாதிப்பதால் புருஷன் துர்புத்தியுள்ளவனாகிறான். சம்சாரத்தில் புருஷன் எந்த ஜன்மத்தை அடைந்தாலும் அதில் சுகத்தை அடைகிறதில்லை. அதிலிருந்து வைராக்கியமும் அவனுக்கு உண்டாகிறதில்லை. நரகத்தை அடைந்து கஷ்டப்படுபவனானாலும் நரகத்திய சுகம் (ஆகாரம்) கிடைக்கும்போது அந்தச் சரீரத்தைவிட்டு விட சம்மதிக்கிறதில்லை. அந்த மோஹமானது தேவ மாயையால் ஏற்படுகிறது. மேலும், மனைவி, பிள்ளை, வீடு, பசு, பணம் பந்து ஆகிய இவைகளில் நன்றாக அபிமானமடைந்த தன்னை "நான் கிருதார்த்தன்" என்று சிலாகிக்கிறான். மேலும் அவன் மேற்கண்ட வைகளைப் போஷிப்பதற்காகக் கவலையடைந்து அதனால் எரிக்கப்பட்டவனாகி கெட்ட அபிப்பிராயத்து உடன் மூடனாகி; இடைவிடாமல் பாபங்களை செய்கிறான். பின்னும் இவன் விபசாரியான

ஸ்திரீகளுடைய சம்போகம் முதலியவைகளை ரகசியத்தில் அனுபவித்தும். இனிமையாகப் பேசும் குழந்தைகளுடைய வார்த்தைகளைக் கேட்டு மனதும், இந்திரியங்களும் மயங்கினவனாகி, கபட தர்மமுள்ள வைகளும் துக்கத்தையே முக்கியமாக உடையவை களுமான கிருகங்களிலிருந்து துக்கத்தை விலக்கு வதற்கான காரியங்களைச் செய்துகொண்டு தன்னைச் சுகமுள்ளவனென்று பாவிக்கிறான். மேலும், அதிக இம்சையுள்ளவைகளைச் செய்து பலவிதமாகப் பணத்தைச் சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்று கிறான். அவர்களைப் பாபத்தைச் செய்து போஷிப்பதனால் புருஷன் நரகத்தை அடைகிறான். தவிரவும் கிருகத்திலும். புத்திரன் முதலியவர்கள் அனுபவித்து மிகுந்ததை அனுபவிக்கிறான். (போகமும் கிடைப்பது அரிதாக இருக்கிறது). மேலும், ஜீவனத் திற்காக எவன் எந்த விருத்தியைச் செய்கிறானோ, அது நிறைவேறாமல் நாசத்தை (லோபம்) அடையும் போது பணத்தாஸையுள்ளவனாகச் சம்பாதிக்கச் சக்தியற்றவனாகி, பிறருடைய பொருளில் ஆசை வைக்கிறான். இப்படிக் குடும்பத்தைப் போஷிக்கச் சக்தியற்றவனாக அதிருஷ்டக் குறையுள்ளவனாகிறான்.

இவன் செய்யும் முயற்சியெல்லாம் வீணாகிவிடு கிறது வேலையற்றவனாகி, தீனனாக மூடனாகி அதிகச் சிந்தையுடன் பெரு மூச்சுவிடுகிறான். அப்படிப்பட்ட புருஷனை அவனுடைய களத்திரம் முதலிய பந்துக்கள் முன்போல்(உபகாரமடைந்த காலத்தில்) ஆதரிக்கிறது இல்லை. லோபிகளான குடியானவர்கள் வயது சென்ற காளைமாட்டைப் போஷிப்பார்களா? அந்த நிலைமையில் அவனுக்கு வைராக்கியம் உண்டாகிறது

இல்லை. ஜ்ரையால் (கிழத்தனம்) சரீரம் விகாரத்தை அடைகிறது. மரிக்கக்கூடியவனாகக் கிருகத்திலிருக் கிறான். வீட்டைக்காத்திருக்கும் நாய்க்குச் சோறு போடுவதுபோல் வீட்டில் இருப்பவர்களால் ஆதரவின்றிக் கொடுக்கப்படும் அன்னத்தை புஜிக் கிறான். அதிக வியாதியுள்ளவனாகிறான், வயிற்றில் இருக்கும் அக்கினி மந்தமாகிறது. அதனால் ஆகாரம் குறைவடைகிறது. சேஷ்டை குறைகிறது பிராணவாயு வெளியில் போகும் தருணத்தில் கண் விழிகள் வெளியில் வருகின்றன. கபத்தால் பிராணன் சஞ்சரிக்கும் மார்க்கம் தடுக்கப்படுதிறது காசத்தாலும், ஸ்வாஸத்தாலும் மிகுந்த சிரமத்தை அடைகிறான். கண்டத்தில் "குர் குர்" என்ற சப்தம் உண்டாகிறது. அவ்வளவு அவஸ்தையுடன் படுத்திருப்பவனைச் சுற்றிப் பந்துக்கள் உட்கார்ந்து மிகுந்த துக்கத்துடன் அழைக்கிறார்கள். ஆனாலும் அவன் பேசுகிறதில்லை. காலனுடைய பாசத்திற்குச் ஸ்வாதீனனாகிறான். இப்படி மனிதன் குடும்பத்தைப் போஷிப்பதற்காக மரணம் வரையில் இந்திரியங்களைப் பலகர்மங்களில் செலுத்தி, அந்திய காலத்தில் மிகுந்த வேதனையால் புத்தி மயங்கினவனாகி அழுதுகொண்டிருக்கும் பந்துக்களின் மத்தியில் மரணமடைகிறான் அப்பொழுது இரண்டு எம தூதர்களைப் பார்க்கிறான். அவர்கள் கோபப்பார்வையால் பயங்கரமான ஸ்வரூபம் உள்ளவர்கள் அவர்களைக் கண்டு மனம் நடுங்கி விஷ்டை போடுகிறான். மூத்திரத்தை விடுகிறான். அவர்கள் 'இவனை யாதனா சரீரத்தில் அடைத்துக் கழுத்தில் காலபாசத்தைக் கட்டி, குற்றவாளியை அரசனுடைய சேவகர்கள் கொண்டுபோவது போல் இழுத்துக்கொண்டு போகிறார்கள். பின்னும்

அதட்டுகிறார்கள், அதனால் அந்தப் புருஷனுடைய ஹிருதயம் வெடித்துச் சரீரம் நடுங்குகிறது.

மேலும், போகும் வழியில் அவனுடைய சரீரத்தை நாய்கள் கடித்துப் புஜிக்கின்றன. அப்பொழுது மிகுந்த துன்பத்தை யடைந்து தன்னால் செய்யப்பட்ட பாபத்தை நினைத்து கொள்ளுகிறான். செல்லுகிற மார்க்கத்திலுள்ள மணல்கள் மிகவும் உஷ்ணங்களாக இருக்கின்றன. பசி, தாகம் மிகுதியாக உண்டாகின்றன. வெயில் மிகவும் கடுமையாயிருக்கிறது. சஹிக்க முடியாத காற்று வீசுகிறது. காட்டுத் தீயின் உபத்திரவம் மிகுதியாயிருக்கிறது. தங்குமிடமாவது குளம் முதலிய ஜலாதாரமாவது இல்லை. அந்த மார்க்கத்தில் நடக்க முடியாமல் பாபியான புருஷன் கஷ்டப்படுகிறான். அப்பொழுது கூடச்செல்லும் எமபடர்கள் கசையால் (குரடாவினால்) முதுகில் அடிக்கிறார்கள். அடிப்பட்டுச் சிரமத்துடன் மெள்ள மெள்ள நடக்கிறான். இப்படிப் பாபியானவன் அடிக்கடி எமபடர்களால் அடிக்கப்பட்டுக் கீழே விழுந்து மூர்ச்சை அடைந்து பின்பு எழுந்திருந்து பாபிகள் செல்லும் மார்க்கமாக எமலோகஞ் செல்லுகிறான. எமலோகமானது இப்பூமியிலிருந்து 99,000 யோசனை தூரமிருக்கிறது. அவ்வளவு தூரத்தையும் கடந்து மூன்று முகூர்த்தங்களுக்குள் எமபடர்கள் பாபியை யமலோகம் கொண்டு போகிறார்கள். பாபம் அதிகமாக இருக்குமானால் இரண்டு முகூர்த்தங்களில் இழுத்துக் கொண்டு செல்லுகிறார்கள்.

25–34. அவ்விடம் சென்றபின் ஒரு நரகத்தில் குறைக்கொள்ளி முதலியவைகளைக் கொண்டு

பாபியின் சரீரமானது எரிக்கப்படுகிறது. மற்றொரு இடத்தில் அவன் தன் சரீரத்தை தானே வெட்டிப் புஜிக்கிறான் அல்லது பிறரால், வெட்டிக் கொடுக்கப் பட்டு, தன்னுடைய சரீரத்தின் மாமிசத்தையே புஜிக்கிறான். மேலும் அந்த உலகத்தில் நாய்களும் கழுகுகளும் பாபிகளை ஜீவித்திருக்கும்பொழுதே கொத்தி நரம்புகளை இழுக்கின்றன. சர்ப்பம், தேள், கொசு முதலியவை கடித்து உபத்திரவிக்கின்றன, மேலும், பாபஞ் செய்தவர்கள் புருஷர்களானாலும், ஸ்திரீகளானாலும், புணர்ச்சியாலுண்டாகும் பாபத்தின் பலங்களாகிய அவயங்களைக் துண்டிப்பது, யானை முதலியவைகளைக் கொண்டு முறிக்கச் செய்வது, மலையின் சிகரத்திலிருந்து கீழே தள்ளுவது, ஜலத்தில் மூழ்கச் செய்வது, குழியில் புதைப்பது, முதலிய நரகவேதனைகளை யனுபவிக்கிறார்கள் ஓ அம்ம! நரகமும் (கஷ்டம்) ஸ்வர்க்கமும் (ஸுகமும்) இவ்விடத் திலேயே இருக்கின்றன. நரகத்திலுள்ள யாதனைகள் இவ்விடத்திலும் இருக்கின்றன. (எமலோகத்தில் இருப்பது பொய்யென்று நினைக்கவேண்டாம் என்று கருத்து) சம்சாரத்தில் தன்னுடைய குடும்பத்தையும் தன்னுடைய சரீரத்தையும் போஷித்து மரணம் அடைந்தவன் அவைகளை விட்டுச் செய்த பாபத்தின் பலனாகிய மேற்காட்டிய உபத்திரவங்களை அடைகிறான். இந்தச் சரீரத்தை விட்டபின்பு தானொருவனாக எமலோகஞ் செல்லுகிறான். (பந்துக்களொருவருங் கூட வருகிறதில்லை யென்பது கருத்து) பிராணிகளுக்கு அவனால் செய்யப்பட்ட துரோகத்தாலுண்டாகும் பாபமே அவனுக்கு எமலோக மார்க்கத்தில் பாதேயமாக (கட்டுச்சாதம்) இருக்கிறது. (அதன் பலனை அனுபவித்துக் கொண்டு போகிறான் என்பது

கருத்து) மேலும் அவன் பாபத்தைச் செய்து குடும்பத்தைப் போஷித்ததாலுண்டானதும், தெய்வத்தால் கொடுக்கப்பட்டதுமான பலனை நரகத்தில் அனுபவிக் கிறான், பணம் நஷ்டமான பொழுது அதற்குடையவன் துக்கிப்பதுபோல மிகவும் வருத்தத்தை அடைகிறான். அதர்மத்தையே செய்து குடும்பத்தைப் போஷிப்பவன் அந்த தாமிஸ்ரம் என்னும் கஷ்டமான நரகத்தை அடைகிறான். (நியாயமாகச் சம்பாதித்துக் குடும்பத்தைப் போஷிக்கவேண்டுமென்பது கருத்து) மனித சரீரத்திற்குத் தாழ்ந்த சரீரங்கள் எவ்வளவு இருக்கின்றனவோ, அவைகளைக் கிரமமாக அடைந்து சுத்தனாகி, (பாப பலத்தை அனுபவித்து) திரும்பவும் மனுஷ்ய சரீரத்தை அடைகிறான்.

Released by Maran's Dog, Toronto , Canada

(தொடர்ச்சி)

1–11 ஈசுவரனால் தூண்டப்பட்ட கர்மவசத்தால் ஜந்துவானவன் சரீரத்தை அடையவேண்டி ரேதஸ்ஸாகப் புருஷனிடத்தில் பிரவேசிக்கிறான். அது பின்பு ஸ்திரீயினுடைய கர்பத்தை அடைகிறது. அதன் பிறகு அந்த ரேதஸ்ஸானது ஒரு நாளில் சுக்கலமும் (புருஷனுடைய ரேதஸ்) சோணிதமும் (ஸ்திரீயின் உடையது) மிச்சரமாகிவிடுகிறது. ஐந்து நாட்களில் குமிழிபோல வட்டமாகி விடுகிறது. பத்து நாட்களில் இலந்தைப் பழம் போல் கொஞ்சம் கெட்டியாகிறது. அதன் பிறகு மாமிசமாக முட்டை போலாகிறது. ஒரு மாதமானவுடன் தலை உண்டாகிறது. இரண்டு மாதங்களில், கை, கால் முதலிய அவயவங்களுடன் சரீரம் உண்டாகிறது. மூன்று மாதங்களில் நகங்களும், மயிர்களும், எலும்புகளும், தோல்களும், ஆண் குறி அல்லது பெண்குறி முதலியவைகளும், துவாரங்களும் உண்டாகின்றன. நான்கு மாதங்களில் ஏழுவகையான தாதுக்களும் (இரத்தம், மாமிசம், மஜ்ஜை முதலியவை) ஐந்து மாதங்களில் பசி, தாகங்களும் உண்டாகின்றன. ஆறாவது மாதத்தில் ஜராயுவென்ற நரம்பினால் சுற்றப்பட்டு அந்தக் கர்ப்பமானது மாதாவினுடைய வயிற்றில் வலது பக்கத்தில் அலைந்து கொண்டிருக் கிறது. ஏழாவது மாதத்தில் அந்த ஜீவன் தன்னுடைய முன் ஜன்ம விருத்தாந்தத்தையும், தனக்கு மாயையால் பந்தமேற்ப்பட்டுத் தான்சரீரத்தை அடைந்ததையும் நினைத்துக் கொள்ளுகிறான். மாதாவினால் புஜிக்கப் பட்ட அன்னத்தாலும், பானத்தாலும் அந்தக்

Released by Maran's Dog, Toronto , Canada

தாதுக்கள் விருத்தியடைகின்றன. (ஆப்யாயநீ என்ற ஒரு நாடியின் ஒரு முனை சிசுவின் நாபியில் கட்டப்பட்டு இருக்கிறது. அதனுடைய மற்றொரு முனை ஸ்தீரியினுடைய நரம்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதன் வழியாக ஸ்திரீகளால் புஜிக்கப்பட்டவைகள் சிசுவின் வயிற்றில் செல்லுகின்றன. அதனால் அந்தச் சிசுவானது விருத்தியடைகிறது. (மார்க்கண்டேய புராணம்) மேலும், அந்தச் சிசுவானது அமேத்யம், மூத்திரம் இவைகளுள்ள குழியில் வஸிக்க மனம் இல்லாததானாலும் வேறுகதி இல்லாததனாலும் அநேக புழுக்கள் நிறைந்த அந்தப் பள்ளத்தில் வஸிக்கிறது. அவ்விடத்திலிருக்கும் புழுக்கள் மிகுந்த பசியுள்ளவைகளாகி மிகவும் மெதுவாகிய இந்தச் சிசுவின் சரீரத்தைக் கடிக்கின்றன. அதனால் ஒவ்வொரு க்ஷணத்திலும் இந்தக் குழந்தை மிகுந்த மூர்ச்சையை அடைகிறது. பின்னும், மாதாவினால் புஜிக்கப்பட்ட உறைப்பு, காரல், உஷ்ணம், உப்பு புளிப்பு ஆகிய அன்ன பானம் முதலியவைகள் அந்தச் சிசுவின் சரீரத்தை ஸ்பர்சிக்கும் போது எல்லா அவயவங்களிலும் அதற்கு வேதனை உண்டாகிறது. ஜராயுவினால் கட்டப்பட்டிருப்பதால் கழுத்து, முதுகு ஆகிய இவைகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. வெளியில் நரம்புகள் சுற்றிக் கொண்டிருக்கின்றன. ஆதலால் கூட்டில் அடைக்கப்பட்ட பறவைபோல் தனதிஷ்டப்படி செல்லமுடியாமல் அந்த சிசுவானது கஷ்டப்படுகிறது.

மேலும் அந்த ஜீவன் அப்பொழுது முந்திய கர்ம வசத்தால் அநேக ஜன்மங்களில் தன்னால் செய்யப் பட்ட கர்மங்களை நினைத்துக் கொள்கிறான்.

இப்படி மூச்சு விடுவதற்கும் முடியாமலிருந்து மாத்ரு கர்பத்தில் எவ்வித சௌக்யத்தை அடைகிறான்? (கஷ்டப்படுகிறான் என்று கருத்து) ஏழாவது மாதம் முதல் முன் ஜன்மத்திய ஞாபகமுள்ளவனாகி பிரசவ வாயுவினால் அசைக்கப்பட்டுத் தனக்குச் சகோதரம் ஆகிய (ஒரே வயிற்றிலுண்டானதால்) விஷ்டையில் உண்டாகும் புழுவைப் போல் ஒரே விடத்தில் நிலையாக இருக்கிறதில்லை. தேகத்தையே ஆத்மாவென்று நினைத்தவனும் கர்ப்பவாசத்திலிருந்து பயந்தவனும், ஏழு தாதுக்களால் கட்டப்பட்டவனும் ஆகிய அந்த ஜீவன் தன்னை மாதாவின் கர்ப்பத்தில் ஜனிக்கும்படியாகச் செய்தவராகிய பகவானைப் ப்ரார்த்தித்துக் கைகூப்பி ஸ்தோத்திரம் செய்கிறான்.

13–22 "அசத்தான எனக்கு, தக்கபடி இப்போர்ப் பட்ட கர்ப்பவாசத்தை எவர் உண்டுபண்ணினாரோ, ஜகத்தைக் காப்பாற்றுவதற்காகச் சரீரத்தை யெடுத்துக் கொண்டிருக்கும் அந்தப் பகவானுடைய தாமரை மலர் போன்றவைகளும், பூமியில் ப்ரகாசிக்கின்றவைகளும், பயமற்றவைகளுமான பாதங்களைச் சரணமடைகிறேன். பூதங்கள் இந்திரியங்கள், மனது ஆகிய இவைகள் அடங்கிய தேகமாகப் பரிணமித்திருக்கும் மாயையை ஆசிரயித்து இந்த மாதாவின் வயிற்றில் கர்மத்தால் கட்டப்பட்டவன்போல வஸிக்கும் நான்; துக்கப்படும் என்னுடைய ஹிருதயத்தில் தோன்றுகிறவரும், விகாரமற்றவரும், உபாதி சம்பந்தமற்றவரும், குறைவற்ற ஞானமுள்ளவருமாக இருக்கும் பகவானை நமஸ்கரிக்கிறேன்". (இந்தப் புருஷன் புண்யபாபங்கள் அற்றவன்' என்ற ச்ருதியின்படி சுத்தனாகிய ஜீவனுக்கும் பரமாத்மாவிற்கும் ஏன் இவ்வளவு

பேதமென்றால் அடுத்த ஸ்லோகத்தில் சமாதானங் கூறப்படகிறது.)

ஐந்து பூதங்களைக் கொண்டு செய்யப்பட்டிருக்கும் சரீரத்தால் பொய்யாக மறைக்கப்பட்டவனும், அந்தச் சரீரத்தின் சம்பந்தம் அற்றவனும், இந்திரியங்கள், குணங்கள், சிதாபாசம் ஆகிய இவைகளின் ஸ்வபமாயுள்ளவனுமாகிய நான் எங்கும் தடை படாத மஹிமை உள்ளவரும், எல்லாவற்றையும் அறிந்தவரும், ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவர்களைவிட மேலானவருமான இந்தப் புருஷனை நமஸ்கரிக்கிறேன். (ஜீவன் அவித்தையுள்ளவன். பரமாத்மா அவித்தை யற்றவர். அதுவே இருவர்களுக்குமுள்ள பேதம். எவருடைய மாயையால் ஜீவன் தன்னுடைய நிஜ ரூபத்தைமறந்து, குணங்களாலேற்படும் கர்ம பந்தமுள்ள சம்சார மார்க்கத்தில் அதிலுண்டான கஷ்டங்களை அனுபவித்துச் சஞ்சரிக்கிறானோ, அந்தப் பகவான் உடைய அனுக்கிரகத்தைக் காட்டிலும் வேறு உபாயத் தால் தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்வான்? ஞானத்தால் கர்ம பந்தம் விலகுமானாலும் அந்த ஞானம் ஈசுவரனுடைய அனுக்கிரகத்தாலேயே உண்டாக வேண்டுமாகையால் ஈசுவரனை நமஸ்கரிக்க வேண்டுமென்று கருத்து).

மேலும், ஸ்தாவரங்களிலும், ஜங்கமங்களிலும் அந்தர்யாமியாக இருப்பவராகிய அந்தத் தேவனைக் காட்டிலும் வேறு யாரால் எனக்கு முக்காலத்திய அறிவு கொடுக்கப்பட்டது? (அவராலேயே கொடுக்கப் பட்டது). ஜீவரூபமாகிய கர்ம மார்க்கத்தை அனுசரிப் பவர்களான நாம் மூவகையான தாபத்தை நிவிருத்திக்

கொள்வதற்காக அவரையே ஸேவிப்போம். ஓ பகவன்! இந்த மாதாவின் வயிற்றில் அமேத்யம் மூத்திரம் இவைகளில் விழுந்து ஜாடராக்கினியால் மிகவும் கொதித்ததேகமுள்ளவனும் வெளியில்போக விரும்பி மாதங்களை எண்ணிக் கொண்டு இருப்பவனுமாகிய இவனை எப்பொழுது இவ்விடத்திலிருந்து வெளிப் படுத்துவீர்? ஓ ஈச! மிகுந்த தயையுள்ளவரும், ஒப்பற்றவருமாகிய நீர் (தனக்குத் தானே உபமானம்) இவனுக்கு இம்மாதிரியான ஞானத்தைக் கொடுத்தீர் அல்லவா? அப்போர்ப்பட்ட நீர் உம்மால் செய்யப்பட்ட உபகாரத்தாலேயே சந்தோஷத்தை அடைய வேண்டும்.

நீர் செய்த உபகாரத்திற்குப் பதில் அஞ்சலியைவிட வேறொன்றும் செய்யமுடியாது. ஏழு நரம்புகளால் கர்ப்ப வாசத்தை அடைந்த பசு முதலியவை தங்கள் உடைய தேஹத்திலுள்ள சுக துக்கங்களை மட்டும் தெரிந்து கொள்ளுகின்றன. நான் உம்மால் கொடுக்கப் பட்ட ஞானத்தால் சமம், தமம் முதலியவைகளுள்ளவன் ஆகிய போக்தாபோல் தோன்றும் புராண புருஷராகிய உம்மை வெளியிலும், ஹிருதயத்திலும், நேரிலும் தரிசிக் கிறேன். (பசு முதலியவைகளுக்கு இவ்விதத் தரிசன மில்லை) ஓ விபுவே! பூமியானது பாழும் கிணற்றிற்கு ஒப்பானது. அதனை யடைந்தவுடன் தேவராகிய தங்களுடைய மாயையானது பிடித்துக் கொள்ளுகிறது. உடனே தேஹத்தில் நானென்ற புத்தியும், புத்திரன், மித்திரன் முதலியவைகளில் என்னைச் சார்ந்தவையென்ற எண்ணமும் உண்டாகிறது. அதனால் ஜீவன் சம்சார சக்கரத்தை அடைகிறான். ஆனதால் இந்தக் கர்ப்ப வாசம் மிகவும் கஷ்டமானாலும் வெளியில் செல்ல எனக்கு இஷ்டமில்லை. ஆகையால் தைர்யமாக

நான் இவ்விடத்திலேயே வஸித்து ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பாதங்களை ஸேவித்து பலவகையான ஜன்மங்கள் திரும்பவும் நேராம லிருக்கும்படி புத்தியைக் கொண்டு ஆத்மாவைச் சம்சாரத்திலிருந்து கரைசேர்க்கிறேன் என்று ஜீவன் சொல்லுகிறான்.

23–51 இப்படி நிச்சய புத்தியுடனிருக்கும் அவனைப் பத்து மாதங்கள் சென்றவுடன் பிரசவ வாயுவானது வெளிப்படுத்துவதற்காகத் தலைகீழாகத் திருப்பிவிடுகிறது. பின்பு அவன் தலைகீழாக இருந்து மிகுந்த வருத்ததுடன் கர்ப்பத்திலிருந்து வெளியில் வருகிறான். அப்பொழுது முந்திய எண்ணங்களெல்லாம் மாறி எல்லாம் மறந்துபோகின்றன. மூர்ச்சை அடைந்து பூமியில் விழுகிறான். மேலும் ஸ்திரீயினுடைய இரத்தத்தால் பூசப்பட்டு அமேத்தியத்திலுண்டாகும் புழுப்போலத் துடிக்கிறான். விவேகமற்றவனாகப் புத்தி, மயக்கம் மடைந்து அழுகிறான். மேலும், அந்தச் சிசுவைப் போஷிப்பவர்கள் அதன் அபிப்பிராயத்தை அறியாமல் அதற்கு இஷ்டமில்லாத ஆகாரம் முதலியவைகளைக் கொடுக்கிறார்கள். அப்பொழுது அந்த ஜீவன் அதனை வேண்டாமென்று சொல்லச் சக்தியற்றவனாயிருக்கிறான். பின்னும் வியர்வை நாற்றமுள்ள அசுத்தப்படுக்கையில் படுக்க வைக்கிறார் கள். அப்பொழுது அவன் உட்காருவதற்கும், எழுந்திருப்பதற்கும், அசைவதற்கும் முடியாமல் சொரிந்து கொள்வதற்கும் முடியாமல் அழுகிறான்.

இப்படி ஞானமற்றவனாக இருக்கும் மெதுவான தோலைக் காட்டுக் கொசுக்களும், மூட்டுப் பூச்சிகளும், கொசுக்களும் கடிக்கின்றன. இப்படி

பால்ய வயதில் (ஐந்து வயது வரையில்) துக்கத்தை அனுபவித்து, பௌகண்டத்தில் (16 வயது வரையில்) மிகுந்த கஷ்டத்தை அனுபவித்து யௌவன வயதை அடைந்தும் தன்னுடைய இஷ்டம் நிறைவேறாமல் துக்கமடைந்து அறியாத் தன்மையால் விசேஷ கோபம் உள்ளவனாகிய, தேகத்துடன் விருத்தி யடைகிற அபிமானத்தாலும், கோபத்தாலும் ஆத்ம நாசத்திற்காகக் காமியாகப் பிறருடன் விரோதம் செய்துகொள்ளுகிறான்.

ஐந்து பூதங்களால் ஏற்பட்ட சரீரத்தில் அக்ஞனாகிய ஜீவன் அடிக்கடி "நான் என்னுடையது" என்ற அபிமானத்தை அடைகிறான். அதனால் அந்த சரீரத்தைப் போஷிக்கவேண்டி கர்மங்களைச் செய்கிறான். பின்பு அந்தக் கர்மங்களால் கட்டப்பட்டு சம்சாரத்தை அடைகிறான். அந்தக் கர்மங்களே இவனுக்குத் துக்கத்தை உண்டுபண்ணிக்கொண்டு இவனை அனுசரிக்கின்றன. ஜீவன் அவித்தையாலும், கர்மத்தாலும் கட்டப்படுகிறான். தவிரவும் நல்மார்க்கத் திலிருப்பவர்களானாலும், தங்கள் வயிற்றை நிறைப்பவர்களும், ஸ்திரீ சங்கமம் செய்வதிலேயே விருப்பமுள்ளவர்களுமான பிராணிகளுடன் சேர்ந்து அவைகளில் ஆசைகொள்வார்களேயாகில் முன்னே காட்டியபடி நரகத்தை அனுபவிக்கிறார்கள். அசத்துக்களுடன் சேருவதால் சத்யம், சௌசம் (சுத்தனாக இருப்பது), தயை, மௌனம், புத்தி, பரமாத்ம விஷய ஞானம், வெட்கம், தனதான்ய முதலிய சம்பத்து, கீர்த்தி, பொறுமை மனத்தை அடக்குவது, வெளியிலிருக்கும் இந்திரியங்களை அடக்குவது மேலான தன்மை ஆகிய இவைகள்

யாவும் குறைகின்றன; ஆனதால் மனத்தை அடக்காத வர்களும் மூடர்களும் தேகத்தையே ஆத்மாவென்று நினைத்தவர்களும் விளையாடுவதற்காக வளர்க்கப்படும் மிருதங்கள்போல் ஸ்திரீகளுக்கு சுவாதீனப்பட்டவர் களும், துக்கிக்கத் தக்கவர்களுமான அசாதுக்களுடன் சேரக்கூடாது.

ஸ்திரீயினுடைய சேர்க்கையாலும், ஸ்திரீகள் இடத்தில் விசேஷ ஆசை சொண்டவனுடைய சேர்க்கையாலும், மோகமும், பந்தமும், எவ்வளவு உண்டாகுமோ அவ்வளவு மற்றவர்களுடைய சேர்க் கையால் உண்டாகிறதில்லை. (ஸ்திரீகளிடம் ஆசை வைப்பது அதிகக் கெடுதியை கொடுக்கும் என்பது கருத்து).

முன்னொருகால் ப்ரஹ்மதேவர் தம்முடைய புத்திரியின் அழகைப் பார்த்து மோகித்து அவளிடம் ஆசை கொண்டார். அப்பொழுது அவள் மான் வேடங்கொண்டு ஓடினாள். ப்ரஹ்மதேவரும் மான் உருவத்தைத் தரித்து வெட்கமில்லாதவராகி அவள்பின் சென்றார். அப்படி இருக்க அந்த ப்ரஹ்மதேவரால் சிருஷ்டிக்கப்பட்ட மரீசி முதலியவர்களால் உண்டு பண்ணப்பட்ட காசியபர் முதலியவர்களால் சிருஷ்டிக்கப்பட்ட தேவர்கள், மனிதர்கள் முதலியவர் களுக்குள் ஸ்ரீ நாராயண மகரிஷியைத் தவிர வேறு யார் தான் ஸ்திரீயாகிய மாயையில் இழுக்கப் படாதவர்கள் ? ஸ்திரீமயமாகிய என்னுடைய மாயையின் பலத்தைப் பாருங்கள். திக்குகளை ஜயிப்பவர்களானாலும் ஸ்திரீயினுடைய புருவ நெரித்தலால் ஜயிக்கப்படுகிறார்கள். ஆனதால் யோக

சித்தியை அடைய விரும்பிய என்னைச் சேவித்து, அதனால் ஆத்ம லாபத்தை அடைந்தவன் ஒரு பொழுதும் ஸ்திரீகளிடத்தில் ஆசை வைக்கக்கூடாது.

மோக்ஷத்தை விரும்பியவனுக்கு ஸ்திரீகள் நரகத்தைக் கொடுக்கக்கூடியவர்கள் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். தேவனால் உண்டு பண்ணப்பட்ட மாயையாகிய ஸ்திரீ யானவள் சிசுருஷை பண்ணுவதுபோல் புருஷனுடைய சமீபம் வருகிறாள் அல்லவா ? அதனைத் தனக்கு மிருத்யுவென்று நினைக்க வேண்டும். மேலும் அவள் புற்களால் மறைக்கப் பட்ட கிணற்றுக்கொப்பானவள். ஸ்திரீயையே நினைத்துக் கொண்டு மரணமடைந்தவன் ஸ்திரீ ஜன்மத்தை அடைகிறான். வேடனுடைய கானமானது மிருகத்திற்கு எப்படிக் கெடுதியை உண்டுபண்ணு கிறதோ அப்படி தனம், புத்திரன்,வீடு முதலியவை தனக்கு அனுகூலங்கள் போலத் தோன்றினாலும் அவைகளைத் தெய்வத்தாலேற்படுத்தப்பட்ட மிருத்யுக்களென்றே நினைக்க வேண்டும்.

மேலும், இந்த ஜீவன் தனக்கு உபாதியாகிய தேஹத்துடன் (லிங்க சரீரத்துடன்) எப்பொழுதும் கர்மங்களைச் செய்து கொண்டு அவைகளின் பலனை அனுபவிக்கிறான். ஜீவனுக்கு உபாதியாயிருக்கும் லிங்க தேகமானது ஜீவனை அனுசரிக்கிறது. பூதங்கள், இந்திரியங்கள், மனது ஆகிய இவைகள் அடங்கியதே தேகம். (ஜீவனுக்குப் போகத்தை அனுபவிக்குமிடம்.) அந்தத் தேஹமானது தன்னுடைய காரியத்தைச் செய்யச் சக்தியற்றதாக விருப்பது மரணம் எனப்படுகிறது. அந்தத் தேஹத்தில் உற்பத்தியே

ஜனனமெனப்படுகிறது; சக்ஷீரிந்திரியத்திற்கும் இருப்பிடம் ஆகிய நேத்திரகோளத்தில்உருவம் முதலியவைகளைப் பார்க்க எப்படிச் சக்தியில்லையோ, அப்படியே சக்ஷீரிந்தியத்திற்கும் சக்தியில்லை. இவ்விரண்டிற்கும் எப்படி யோக்கியதை இல்லையோ அப்படியே திருஷ்டாவாகிய ஜீவனுக்குப் பார்க்கும் தன்மையில்லை. (ஸ்தூலதேகத்தின் நாசத்தால் லிங்க சரீரத்திற்குக் கெடுதியுண்டாகிறது. அதுவே ஜீவனுக்கு மரணமென்று சொல்லப்படுகிறதே ஒழியச் ஸ்வபாவத்திலில்லை.) ஆனதால் ஜனனமரணங்களில் பயப்பட வேண்டாம். புத்திரன் பிறந்தது முதலியதால் சந்தோஷத்தை அடையவேண்டாம். ஜீவனுடைய தன்மை இம்மாதிரியென்றா அறிந்து, ஒன்றிலும் ஆசை வைக்காமலிருக்கவேண்டும். நன்றாக விசாரித்து உண்மையை அறிந்ததும், யோகம், வைராக்யம் ஆகிய இவைகளுள்ளதுமான புத்தியைக் கொண்டு தேஹம் முதலியவைகளில் அபிமானம் வைக்காமல் சஞ்சரிக்க வேண்டும். இவ்வுலகம் மாயையால் செய்யப்பட்டு இருக்கிறது.

நோட்:

இந்த அத்தியாயத்தில் **விஜயத்வஜீய** வியாக் யானத்தின்படி 51 சுலோகங்களிருக்கின்றன. மற்ற வியாக்யானங்களில் 49, 50 இந்த இரண்டு சுலோகங்களும் காணப்படவில்லை. அவைகளின் அர்த்தமாவது: புருஷனுடைய இந்திரியங்கள் தங்கள் தங்களுடைய சுகதுக்கங்களை அறியுமேயன்றி மற்றவையின் சுகதுக்கங்களை எப்படி அறிகிறதில்லையோ,

(நேநித்திரமானது காதின் சுகத்தை அறியாது) அப்படி ஈசுவரனுடைய அம்சங்களான ஜீவர்கள், பிறருடைய வைகளைத் தெரிந்துக் கொள்ளுகிறதில்லை. தேஹம் முதலியவைகளில் பற்றுதலில்லாத ஜீவனுக்கு ஞானமே புருஷார்த்தமாகிறது. சுகதுக்கம் முதலியவை ஆத்மாவிற்கு சம்பந்தமில்லாதவை. அவை தேகத்திற்கும் சம்பந்தமில்லாதவை.

இந்த முப்பத்தோறாவது அத்தியாயத்தை 32 ஆவதாகவும், இந்த ஸ்கந்தம் 14 ஆவது அத்தியாயம் உள்ளதாகவும் விஜயத்வஜீய வியாக்யானத்துடன் தேவநாகரியில் அச்சிட்டிருக்கும் புத்தகத்தில் காணப்படுகிறது. அத்தியாயக் கணக்கு மாறினாலும், ஸ்லோகத்திற்கு அர்த்தம் விடாமல் எழுதப்பட்டிருக் கிறது.

அத்தியாயம்–32

உத்தம கதி

எவன் கிருஹஸ்தனாகவிருந்து அதற்குரியவைகளான தர்மங்களையும், காமம், அர்த்தம் இவைகளையும் விரும்பி அவைகளை அனுஷ்டிக்கிறானோ எவன் பகவானை ஆராதிப்பதாகிய தர்மத்தை விட்டுக் காமத்தால் மூடனாகி, பகவானை விடக்கீழான தேவர்களையும், சிரத்தையுடன் பிதிருக்களையும் பூஜிக்கிறானோ, அவர்களை உத்தேசித்து விரதங்களைச் செய்கிறானோ. அந்தப் புருஷன் சந்திரலோகம் சென்று அவ்விடத்தில் புண்ய பலனை அனுபவித்துத் திரும்பி பூலோகம் வருகிறான். அனந்தாசனராகிய ஸ்ரீமகாவிஷ்ணு ஆதிசேஷனாகிய படுக்கையில் படுத்துத் தூங்கும் போது மேற்காட்டிய கிருஹஸ்தர்கள் செல்லக்கூடிய லோகமும் நாசமடைகிறது. (காம்யமான கர்மத்தைச் செய்தவர்களின் கதி சொல்லப்பட்டது.)

5–7. எவர்கள் காமத்தை விரும்பியாவது, அர்த்தத்தை விரும்பியாவது தங்கள் தர்மத்தை அனுஷ்டிக்கிறதில்லையோ எவர்கள் ஒன்றிலும் ஆசைப்படுகிறதில்லையோ, செய்த கர்மங்களைப் பகவானிடம் சமர்ப்பிக்கிறார்களோ, மிகவும் சாந்தர் களோ, சுத்தமான மனதுள்ளவர்களோ மோட்சத்திற்கு உபயோகமான தர்மத்தையே அனுஷ்டிப்பவர்களோ, மமதை அற்றவர்களோ, அஹங்காரமற்றவர்களோ அவர்கள் சுத்தமான ஸ்வதர்மத்தை அனுஷ்டித்து அதனால் சித்த சுத்தியை அடைந்தவர்களாகி சூரியமண்டலத்தின் வழியாக பரிபூரணராகிய

புருஷனை அடைகிறார்கள். அந்தப் புருஷன் காரணத்திற்கும் காரியத்திற்கும் அதிபதி; எல்லாவற்றிற்கும் காரணமாயிருப்பவர்; இந்த ஜகத்தைப் படைத்தவர்; அதனைச் ஸம்ஹரிப்பவர்.

8–10. ஹிரண்யகர்ப்பரை உபாசிப்பவர்கள் ப்ரஹ்மதேவருடைய ஆயுளான இரண்டு பரார்த்தம் வரையிலிருக்கக் கூடிய லோகத்தை அடைகிறார்கள், முக்குண ஸ்வரூபியும், மேலானவருமான ப்ரஹ்மதேவர் பூமி, ஜலம் தேஜஸ் வாயு, ஆகாசம், மனஸ், இந்திரியங்கள், அதன் விஷயங்கள், அகங்காரம் ஆகிய இவைகளுடன் கூடிய பிரஹ்மாண்டத்தை உபஹரிக்க விரும்பி, இரண்டு பரார்த்தங்களுக்குப் பிறகு அவ்யாகிருதி (சூட்சுமமான) ஸ்வரூபத்தை எப்பொழுது அடைகிறாரோ, அப்பொழுது ஹிரண்யகர்ப்பரை உபாசிப்பவர்களும் மனத்தை அடக்கினவர்களும், பிராணனை ஜயித்தவர்களும் வைராக்கியம் அடைந்தவர்களும் அபிமானமற்றவர்களுமான யோகிகள் பரமானந்த ஸ்வரூபியும் மேலானதும் புராண ஸ்வரூபமுமான பரப்ரஹ்மத்தை அந்த ஹிரண்யகர்பருடன் அடைகிறார்கள்.

11–16. ஆனதால், ஸகல பிராணிகளுடைய ஹ்ருதய கமலத்தில் வசிக்கும் அந்தப் பகவானிடத்தில் மனத்தைச் செலுத்தி அவரை நீ உபாசிக்கவேண்டும். அவருடைய மஹிமை உன்னால் என்னிடமிருந்து அறியப்பட்டதே. தாவரங்கள், ஜங்கமங்கள் ஆகிய இவைகளுக்கு முந்தியவரும் வேதகர்ப்பருமாகிய ப்ரஹ்மதேவர் யோகத்திற்கு அதிபதிகளும் யோகத்தை வெளிப்படுத்தியவர்களுமான மஹரிஷிகளுடன்

ஸனகர் முதலியவர்களுடனும் பேதஞானத்தாலும் அபிமானத்தாலும் பலனை உத்தேசியாமல் அனுஷ்டித்த கர்மங்களாலும் கர்த்தா வென்ற எண்ணத்தாலும் தங்களுடைய கர்மத்தின் பலனாகிய ஐசுவரியத்தை அனுபவித்துப் பிரளய காலத்தில் ஸகுணப் ப்ரஹ்மத்தை அடைந்து ஈச்வரரூபியான காலத்தின் மஹிமையால் குணங்கள் ஒன்றோடொன்று சேரும்போது (ஸ்ருஷ்டி காலத்தில்) முன்போல உண்டாகிறார். (ப்ரஹ்மதேவரும் சனகர் முதலியவர்களும் இம்மாதிரி பேத ஞானத்தால் தங்கள் தங்கள் அதிகாரமாகிய ஸம்சாரத்தையடைகிறார்கள். மற்றவர்கள் ஸம்ஸாரத்தை அடைகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை என்று கருத்து.)

16–22. எவர்கள் கர்மத்திலேயே ஆசையுள்ளவர்களாகி மிகுந்த சிரத்தையுடன் காம்ய கர்மங்களையும், நித்ய கர்மங்களையும் அனுஷ்டிக்கிறார்களோ. மேலும் எவர்கள் ரஜோ குணமுள்ள மனதுள்ளவர்களாகியும். காமத்தால் நிறைந்த சித்தமுள்ளவர்களாகியும் இந்திரியங்களுக்கும் வசப்பட்டவர்களாகியும் கிருஹஸ்த தர்மத்திலேயே மிகுந்த பிரீதியுடன் பிதிருக்களைப் பூஜிக்கிறார்களோ. தர்மம் அர்த்தம் காமம் ஆகிய இவைகளையே விரும்புகிறார்களோ. கானம் பண்ணக் கூடிய மிகுந்த மாகாத்மியமுள்ள ஸ்ரீமஹா விஷ்ணு வினுடைய கதையைக் கேட்பதில் ஆசையில்லாதவர்களோ பின்னும் நாசமற்றவராகிய பகவானுடைய கதாமிருதத்தை விட்டுக் கெட்ட கதைகளைக் கேட்கிறார்களோ, அவர்கள் தெய்வத்தால் கெடுக்கப் பட்டவர்கள்; அமேத்யத்தைப் புஜிக்கும் பன்றிகளுக்கு ஒப்பானவர்கள். கர்ப்பாதானம் முதல் மரணத்திற்குப் பிறகு செய்யக்கூடிய ஸமஸ்காரம் வரையிலுள்ள

கர்மங்களை அனுஷ்டித்த அந்த ஜனங்கள் தக்ஷிண மார்க்கமாகப் பிதிருலோகம் செல்லுகிறார்கள்; அவ்விடத்தில் தங்களுடைய புண்ய கர்மத்தின் பலனை அனுபவித்து அந்தப் புண்யம் நசித்தவுடன் திரும்பவும் இவ்வுலகத்திற்கு வந்து தங்கள் புத்திராதிகளிடத்தில் ஜனிக்கிறார்கள்.

22–43. ஆனதால் மிகுந்த பிரீதியுடன் பகவான் உடைய குணங்களைக் கேட்பது முதலிய பக்தியால் பரமேசுவரைப் பஜனம் செய். அவர் சேவிக்கத் தகுந்த பாதாரவிந்தங்களுள்ளவர்! ஸ்ரீ வாசுதேவரிடத்தில் பக்தி செய்யப்படுமானால் அது சீக்கிரத்தில் வைராக்கியத்தையும் பரப்ரஹ்ம தரிசனத்திற்கு உபயோகமான ஞானத்தையும் உண்டுபண்ணுகிறது; எந்தக்காலத்தில். இந்தப் பகவத் பக்தனுடைய சித்தமானது இந்திரிய வியாபாரங்களைக் கொண்டு ஒரே மாதிரியான விஷயங்களில், இது பிரியமானது, இது பிரியம் இல்லாதது என்ற பேதத்தை அடையாமலிருக்குமோ, அப்பொழுது அவன் ஸமதிருஷ்டியுள்ளதும், ஆசையற்றதும் ஹேயம் (விடக்கூடியது) உபாதேயம் (கிரஹிக்கக்கூடியது) இவைகளற்றதுமான அகிடபதத்தைப் (ஆனந்த ஸ்வரூபியாயிருப்பது) பார்க்கிறான்; ஞானமே பரப்ரஹ்மம் முதலிய சப்தங்களால் சொல்லப்படுகிறது; ஈசுவரனும் பரமாத்மாவுமான புருஷனொருவரே பார்க்கிறவர், பார்க்கப்படுகிறது, அதற்குச் சாதனங்கள் ஆகிய பலவகையாகத் தோன்றுகிறார்; யோகிகள் யோகத்தை நன்றாக அனுஷ்டித்து. அதனால் பிரபஞ்சத்தில் ஆசையை ஒழிக்கிறார்கள்; அதுவே அவர்கள் விரும்பிய யோகத்தின் பலனாகும். அகங்காரமென்பது ஒன்றானாலும் குணங்களால்

எப்படி மூன்றாக இருக்கிறதோ, அதே பூத ஸ்வரூபத்தால் எப்படி ஐந்து வகையுள்ளதோ, இந்திரிய ஸ்வரூபத்தால் பதினோரு வகையுள்ளதாக இருக்கிறதோ அண்டத்தை சரீரமாயுடைய ஜீவ ஸ்வரூபியாயும் இருக்கிறதோ மஹத்தத்துவம் முதலியவைகளால் உண்டுபண்ணப்பட்ட அந்த அண்டத்திலிருந்து எப்படி ஜகத்து தோன்றுகிறதோ, அப்படியே ஞான ஸ்வரூபியாகிய நிர்க்குண ப்ரஹ்மம் ஒன்றானாலும் அதுவே பகிர்முகங்களான (விஷயத்தில் செல்லுகிற) இந்திரியங்களைக் கொண்டு சப்தம் முதலிய தர்மங்களுள்ள பிரபஞ்சமாகத் தோன்றுகிறது. (உண்மையில் பிரபஞ்சமில்லை, மித்யையேயாம் என்று கருத்து) எப்பொழுது சிரத்தையுடனும், பக்தியுடனும் யோகத்தை அப்யஸித்து; அதனால் மனத்தை யொருவகைப்படுத்தி, ஆசைகளை யொழித்தது எவன் வைராக்கியத்தை அடைகிறானோ அவனுக்கு மேல் காட்டிய விஷயம் புலப்படும், (ப்ரம்ஹம், ஸத்யம், ஜகத் மித்யை என்பது.)

ஓ பூஜிக்கத்தக்கவளே! எதனால் பிரகிருதி புருஷன் ஆகிய இவர்களுடைய உண்மை தெரியுமோ, அப்படிப்பட்ட ஆத்ம ஞானத்தை உனக்குச் சொன்னேன்; நிர்க்குணமான ஞானயோகத்திற்கும், என்னையே ஆராதிப்பதாகிய பக்தி யோகத்திற்கும், பகவான் என்ற சப்தத்தின் அர்த்தமே பலனாகிறது அநேக குணங்களுக்கு ஆசிரயமாகிய திரவ்யமானது இந்திரியங்களால் பலவகையாகக் கிரஹிக்கப்படுவது போல் (பால் முதலிய வஸ்துக்கள் உருவத்திற்கும், ரசத்திற்கும், ஸ்பரிசத்திற்கும் ஆசிரயமாக இருக்கிறது. அது கண்ணால் வெளுப்பென்றும், நாக்கினால்

மதுரமென்றும் துவக்கினால் குளிர்ந்ததென்றும் கிரஹிக்கப்படுகிறதென்று கருத்து). பகவான் ஒருவர் ஆனாலும் சாஸ்திர மார்க்கங்களால் பலவகையாகக் கிரஹிக்கப்படுகிறார்; யாகங்களாலும். பூர்த்தங்களாலும் (குளம் கிணறு வெட்டுவிப்பது முதலியவை), தானத்தாலும் தபஸினாலும், வேதாத்தியயானத்தாலும், மீமாம்ஸையாலும், (தியானம்) மனத்தை அடக்குவதாலும் இந்திரியங்களைக் கெட்ட காரியத்தில் செல்ல ஒட்டாமல் தடுப்பதாலும், கர்ம சன்யாசத்தாலும் பலவகையான அங்கங்களுள்ள யோகத்தாலும் பக்தி யோகத்தாலும் காம்ய கர்மங்கள் நிஷ்காம கர்மங்கள் ஆகிய பிரவிருத்தி, நிவிருத்தி தர்மங்களாலும் ஆத்மாவின் உண்மையைத் தெரிந்து கொள்வதாலும், திருடமான வைராக்கியத்தாலும், ஸகுணராயும், நிர்க்குணராயும், தாமாகப் பிரகாசிப்பவருமான பகவான் அடையப்படுகிறார். நான்கு வகையுள்ள பக்தி யோகத்தை உனக்கு உபதேசித்தேன்; எது பிராணி களுக்குள் ஒடிக்கொண்டிருக்கிறோ (ஜனன மரணத்தை உண்டு பண்ணுகின்றதோ) அந்த அறியமுடியாத கதியுள்ள காலத்தின் ஸ்வரூபத்தையும் உனக்குச் சொன்னேன். ஓ அம்மா! எதனை அடைந்து ஜீவன் தன்னுடைய ஸ்வரூபத்தை மறந்து விடுகிறானோ அவித்தையாலும் கர்மங்களாலும் உண்டு பண்ணப் பட்ட பலவகையான அந்த ஸம்ஸாரத்தையும் நிரூபித்தேன் இதனைத் துஷ்டனுக்கு உபதேசிக்கக் கூடாது.

வணக்கமில்லாதவனுக்குச் சொல்லலாகாது, கர்வம் உள்ளவனுக்கும் துராசாரமுள்ளவனுக்கும் டம்பத் திற்காகத் தர்மத்தை அனுஷ்டிப்பவனுக்கும், அதிக

ஆசையுள்ளவனுக்கும், வீடு முதலியவைகளில் பற்றுள்ள புத்தியுள்ளவனுக்கும், என்னிடத்தில் பக்தியில்லாத வனுக்கும், என்னுடைய பக்தர்களைத் துவேஷிப் பவனுக்கும் ஒருபொழுதும் உபதேசிக்கக்கூடாது. சிரத்தையுள்ளவனும் பக்தனும் வணக்கமுள்ளவனும் அசூயையற்றவனும், பிராணிகளிடத்தில் மைத்திர முள்ளவனும் பெரியோர்களுக்குச் சிசுரூஷை செய்பவனும். பாஹ்ய விஷயங்களில் வைராக்கியம் அடைந்தவனும் சாந்தமாகிய மனமுள்ளவனும் ஞானம் உள்ளவனும் மாத்ஸரியமற்றவனும். சுத்தனுமாக இருப்பவனே இதனைத் தெரிந்து கொள்ளும் அதிகாரியாவான். எவனுக்கு நான் மிகவும் மித்திரனோ, அவனும் அதிகாரியாவான், ஓ அம்மா! எவன் என்னிடத்தில் மனத்தைச் செலுத்தி. ஒருதரமாவது இதனைக் கேட்கிறானோ தன் வாக்கினால் உச்சரிக்கிறானோ அவனும் என்னுடைய பதத்தை (அடைவான்). இது நிச்சயம்.

அத்தியாயம் 33

தேவஹூதி ஜீவன் முக்தியடைந்தது

கர்த்தமருடைய பத்னியாகிய தேவஹூதியானவள் கபிலருடைய வார்த்தையைக் கேட்டு மோஹமாகிய ஆவரணம் நீங்கியவளாகி, தத்துவ விஷயங்களால் அடையாளமிடப்பட்ட ஞானத்தைக் கொடுப்பவரான அந்தப் பகவானுக்கு நமஸ்காரஞ் செய்து ஸ்தோத்திரம் செய்தாள். உம்முடைய கொப்பூழில் தோன்றிய தாமரை மலரில் உண்டான ப்ரஹ்மதேவர் ஸிருஷ்டி காலத்தில் ஜலத்தில் சயனஞ் செய்து கொண்டும் பூதங்கள், இந்திரியங்கள், அதன் விஷயங்கள் ஆகிய இவைகளடங்கியதும், குணங்களுடைய ப்ரவாகம் உள்ளதும், காரிய காரணங்களுக்குக் காரணமுமான உம்முடைய திவ்ய சரீரத்தை தியானஞ் செய்தார். (உம்முடைய பிரசாதத்தால் ஸிருஷ்டி சக்தியை அடைந்தாரென்பது கருத்து) அந்தப் பகவானாகிய நீரே குணங்களுடைய ப்ரவாஹத்தால் பிரிக்கப்பட்ட சக்தியுள்ளவராகி உலகத்தைப் படைப்பது முதலியவைகளைச் செய்கிறீர்.

அந்த நீர் கிரியையற்றவர், ஸத்ய ஸங்கல்பமுள்ளவர்; ஜீவர்களுக்கு அதிபதி; ஊஹிக்க முடியாத அளவற்ற சக்தியுள்ளவர்; ப்ரளயகாலத்தில் இந்த ஜகத்து யாவும் எவருடைய வயிற்றிலிருந்ததோ, அந்தநீர் இந்த என்னுடைய வயிற்றில் எப்படி வஸித்திருக்கிறீர். மேலும் அப்போர்ப்பட்ட நீர் ஆலிலையில் ப்ரளய காலத்தில் எப்படி ஒருவராகச் ஸயனஞ் செய்து கொண்டிருந்தீர்? பின்னும் அந்த நீர் கால் விரலை வாயில் வைத்துக் கொள்ளும் சிசுவாக இருக்கிறீர். இதெல்லாம்

மாயையேயாம். ஓ விபுவே! நீர் வராஹம் முதலியவைகளாக அவதரித்ததுபோலத் துஷ்டர்களைச் சிக்ஷிப்பதற்காகவும், பக்தர்களைக் காப்பாற்றுவதற்காகவும், ஞான மார்க்கத்தைக் காண்பிப்பதற்காகவும் இப்பொழுது சரீரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறீர்.

ஓ பகவன்! உம்முடைய திவ்ய நாமதேயங்களைப் பிறர் சொல்லக் கேட்பதாலும், தன் வாக்கினால் உச்சரிப்பதாலும் உம்மை நமஸ்கரிப்பதாலும், உம்மை ஸ்மரிப்பதாலும் நாய் மாமிசத்தைப் புஜிப்பவன் ஆனாலும் ஜ்யோதிஷ்டோமம் முதலிய் யாகங்கள் செய்யத் தகுந்தவனாக (சுத்தனாக) ஆகிறான்; அப்படியிருக்க உம்மை நேரில் தரிசித்தவன் சுத்தனாகிறான் என்பதில் என்ன சந்தேகம்? (உம்மைத் தரிசித்ததால் நான் கிருதர்த்தையாக ஆனேன் என்று கருத்து.) எவனுடைய நாக்கின் நுனியில் உம்முடைய திவ்ய நாமங்களிருக்கின்றனவோ (நாமங்களை உச்சரிக்கின்றானோ), அவன் நாய் மாமிசத்தைப் புஜிக்கும் தாழ்ந்தவனானாலும், உம்முடைய நாம பஜனத்தால் மேலானவனாகிறான். எவர்கள் உம்முடைய நாமங்களை உச்சரிக்கிறார்களோ அவர்களே தவஞ் செய்தவர்கள்; ஹோமம் செய்தவர்கள்; புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தவர்கள், பரப்ரஹ்மம், விஷயங்களில் செல்லாமல் ஸ்திரமாக விருக்கும் மனத்தில் தியானிக்கக் கூடியவர்; தம்முடைய தேஜஸால் குணங்களை அடக்கினவர்; வேதகர்ப்பர்; ஸ்ரீ மகாவிஷ்ணு, அப்படிப்பட்ட கபிலராகிய உமக்கு நமஸ்காரஞ் செய்கிறேன்.

9–11 இப்படி தேவஹூதியால் துதிக்கப்பட்ட

கபிலரென்ற பரமபுருஷன் தம் தாயாரிடத்தில் பிரீதியுள்ளவராகி அவளை நோக்கி, "ஓ அம்ம! இஃதுவாய் அனுஷ்டிக்கக்கூடியதும், என்னால் உபதேசிக்கப்பட்டதுமான மார்க்கத்தை அனுஷ்டித்துச் சீக்கிரத்தில் ஜீவன் முத்தியை யடையப் போகிறாய்; என்னால் உபதேசிக்கப்பட்டதில் மிகுந்த சிரத்தை வைக்க வேண்டும். இது ப்ரஹ்மிஷ்டர்களால் அனுஷ்டிக்கப்பட்டது; இதை அனுசரிப்பதால் அபயமாகிய என்னை அடைவாய். இந்த என்னுடைய மதத்தை யறியாதவர்கள். சம்சாரத்தை (மிருத்யுவை) அடைகிறார்கள்" என்று எல்லோராலும் விரும்பக் கூடிய தம்முடையகதியையுபதேசித்து அவளிடம் விடைபெற்று சென்றார்.

12–32 பின்பு அந்தத் தேவஹூதியும் புத்திரனால் உபதேசிக்கப்பட்டபடி அந்த ஸரஸ்வதி நதியின் கரையிலிருக்கும் ஆசிரமத்தில் வெகுநாட்கிரதையுள்ள வளாகி யோகத்தை அனுஷ்டித்து வந்தாள். அடிக்கடி ஸ்நானம் செய்வதால் அவளுடைய தலைமயிர் ஜடைகளாயும், பொன்னிறமுள்ளவைகளாயும் இருந்தன. மேலும் அவள் மரவுரியை உடுத்திக் கொண்டிருந்தாள். அவளுடைய சரீரமானது கடுந்த பஸினால் மிகவும் இளைத்திருந்தது. அவள் கர்த்தம பிரஜாபதியினுடைய மஹிமையால் கிடைத்ததும், தேவர்களாலும் விரும்பக்கூடியதும், நிகரற்றதுமான தன்னுடைய கிருகஸ்த சுகத்தை விட்டு விட்டாள். பின்னுமவள் பால்போலும், நுரைபோலும் வெண்மை நிறமுள்ள மேல் விரிப்புள்ளவைகளும், தந்தத்தால் செய்யப்பட்டதும் ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப் பட்டவைகளுமான கட்டில் முதலியவைகள்,

தங்கத்தால் செய்யப்பட்டவைகளும் மெதுவான மெத்தை தைத்த ஆசனங்கள், ஸ்படிகக் கற்களாலும் மரகத ரத்தினங்களாலும் செய்யப்பட்ட சுவர்களுள்ள கிருகங்கள் இரத்தின தீபங்கள் மேற்கண்ட சுவர்களில் பிரதிபலிக்கும் ரத்தினாபரணங்களுள்ள வேலைக் காரிகள் ஆகிய இவைகளிலும் அபிமானத்தை ஒழித்தாள். இன்னும் அவளுக்குப் புஷ்பங்களால் நிறைந்த அநேக விருக்ஷங்களால் அழகானதும் இனிமையாகச் சப்திக்கின்ற பறவைகளுள்ளதும், தேனைக் குடித்து மதித்துப் பாடுகின்ற வண்டுகளுள்ள துமான ஒரு தோட்டமுண்டு. அதில் ஒரு ஓடை உண்டு. அதில் நீலோத்பலங்கள் மலர்ந்து வாசனை யுள்ள காற்று வீசுகிறது. அதில் கர்த்தமருடன் தேவஹூதி செல்லும்பொழுது கந்தர்வர்கள் பாடுவார் கள். அந்தத் தோட்டத்தில் வஸிப்பதற்கு தேவஸ்திரீ களும் விரும்புவார்கள். அதனிடத்திலும் தேவஹூதி அபிமானத்தை யொழித்தாள். பர்த்தாவாகிய கர்த்தமர் வனம் சென்றதாலும் புத்திரனையும் விட்டுப் பிரிந்தபடியாலும் மிகுந்த வருத்தமடைந்து வாடிய முகமுள்ளவளானாள். ஆத்ம தத்துவத்தை அறிந்தவளானாலும் கன்றை விட்டுப் பிரிந்த பசுவைப் போலத் துக்கமடைந்தாள். குழந்தாய்! ஓ விதுரரே! பின்பு அந்த தேவராகிய கபிலரையே மனத்தில் தியானஞ் செய்ததால் வெகுநாள் சென்ற பிறகு அவளுக்கு எல்லா ஆசைகளும் ஒழிந்தன. தன்னுடைய புத்திரனாகிய பகவான் சொன்னபடி பகவானுடைய ஸ்வரூபத்தை சமஸ்தமாயும் வியஸ்தமாகவும் ப்ரஸன்ன முகமுள்ளதாகவும் வெகுநாள் கபிலரையே தியானஞ் செய்து திவ்யமான வீடு முதலியவைகளிலிருக்கும் ஆசைகள் எல்லாவற்றையும் ஒழித்தாள். அப்பொழுது

அவளுடைய மனம் சுத்தமாக ஆயிற்று. ஸ்வானுபவத்தால் (ஸ்வப்ரகாசத்தால்) மாயையின் குணங்கள் மறைந்தன. பக்தி யோகத்தாலும், மிகுந்த வைராக்கியத்தாலும், உசிதமானவைகளை யனுஷ்டிப்பதாலும் ("வசதியான ஆகாரம், விளையாட்டு, யுக்தமான தூக்கம் விழிப்பு ஆகிய இவைகளுள்ளவனால் செய்யப்படும் யோகம் ஆனது துக்கத்தைப் போக்கும்" பகவத் கீதை) அதனால் உண்டான ப்ரஹ்மஜ்ஞானத்தாலும் அவள் ஜீவர்களுக்கு ஆச்ரயமாகிய பகவானிடத்திலும் புத்தியைச் செலுத்தினாள். அவளுக்கு ஜீவபாவம் நீங்கியபடியால் ஸகல துக்கங்களும் நாசமடைந்தன. சுகத்தை அடைந்தாள். எப்பொழுதும் ஸமாதியை அடைந்திருந்தபடியால் குணங்களால் ஏற்படும் ப்ரமைகள் நீங்கின. ஸ்வப்னத்தில் கண்ட வஸ்துக்களை தூங்கி விழித்தவன் போல் அஜ்ஞானமாகிய தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட அவள் தன்னுடைய சரீரத்தை மறந்திருந்தாள். அவளுடை சரீரத்தை வித்தியாதர ஸ்திரீகள் போஷித்தார்கள். ஆயினும் மனோவ்யாதி இல்லாமையால் அது பருத்திருந்தது. அழுக்குள்ள தானாலும் புகையுள்ள அக்கினிப் போல ப்ரகாசித்தது. அப்பொழுது ஸ்ரீ வாஸுதேவரிடத்திலேயே புத்தியைச் செலுத்தியவளாக இருந்தபடியால் அவள் தன் தேஹத்தை மறந்திருந்தாள். தவமாகிய யோகத்தைச் செய்து கொண்டிருந்தாள். அவளுடைய தலைமயிர்கள் அவிழ்ந்திருந்தன. தேஹம் வஸ்திரமில்லாததாக இருந்தது; ஆனாலும் ப்ரார்ப்த கர்மத்தால் சரீரம் இருந்தது. இப்படி அவள் கபிலரால் உபதேசிக்கப் பட்ட மார்க்கத்தையனுஷ்டித்துச் சீக்கிரமாக நித்ய முக்தமாகிய பரப்ரஹ்மத்தையடைந்தாள். ஓ! வீரராகிய விதுரரே! தேவஹூதியானவள் சித்தியடைந்த

க்ஷேத்திரமாகையால் மிகுந்த புண்ய க்ஷேத்ரமாகவும் ஸித்தீபதம் என்ற பெயருள்ளதுமாக லோகத்தில் ப்ரசித்தியடைந்தது. மேலும், யோகத்தால் மலங்களற்ற அந்தத் தேஹமானது ஒரு நதியாக ஆயிற்று. ஓ ஸௌம்ய! ஸ்வபாவமுள்ளவரே! அது நதிகளுக்குள் சிறந்த நதி. ஸித்தர்களால் சேவிக்கப்பட்டது. ஸித்தியைக் கொடுக்கக் கூடியது.

33–35 மகாயோகியும், பகவானுமாகிய கபிலரும் மாதாவினிடம் விடைபெற்று ஈசான்ய திக்கை (வடகிழக்கு) நோக்கிச் சென்றார். சித்தர்களும், சாரணர்களும் கந்தர்வர்களும், மகரிஷிகளும், அப்ஸரக கூட்டங்களும், சமுத்திரமும் ஸ்தோத்திரம் செய்தார்கள். சமுத்திர ராஜன் மிகவும் உபசரித்து வாசத்திற்கு இடம் கொடுத்தார். அவ்விடத்தில் கபிலர் யோகத்தைச் செய்துகொண்டிருந்தார். ஞான சாஸ்திரத்தில் சிறந்தவர்கள் இவரை ஸ்தோத்திரம் செய்தார்கள். அந்தப் பகவான் மூவுலகத்திற்கும், க்ஷேமத்தைச் செய்வதில் நோக்க முள்ளவராக இருந்தார்.

36–37 ஓ குற்றமற்றவரே! எதனைப் பற்றி நீர் கேட்டீரோ அந்த தேவஹூதிக்கும் கபிலருக்கும் நேர்ந்த சம்வாதத்தைச் சொன்னேன். இது பரிசுத்த மானது. எவன் இந்தக் கபிலரால் சொல்லப்பட்ட ரகசியமான, ஆத்ம யோகத்தைக் கேட்கிறானோ, வாக்கினால் உச்சரிக்கிறானோ அவன் கருடத் துவஜனாகிய பகவானிடத்தில் சித்தத்தைச் செலுத்தி; அவருடைய தாமரை மலர்போன்ற பாதத்தை அடைகிறான்.

சுபம்

மூன்றாவது ஸ்கந்தம் முற்றிற்று.

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்கந்தம் 4

அத்தியாயம் 1

மனுபுத்திரிகளின் வம்சம்

1–9 மனுவிற்குச் சதரூபையினிடத்தில் ஆகூதி, தேவஹூதி, பிரஸூதி என்ற மூன்று பெண்களும் (இரண்டு புத்திரர்களும்) பிறந்தார்கள். மனுவானவர் சகோதரனுள்ளவர்களானலும் ஆகூதி என்பவளை புத்திரன் இல்லாதவர்கள் புத்திரன் பிறக்க வேண்டி கன்யாதானம் செய்வது வழக்கம். மனுவிற்குப் புத்திரனிருந்தும் இன்னும் புத்திரர்கள் வேண்டுமென்ற ஆசையால் கன்யாதானம் செய்தார் என்று கருத்து). சதரூபையின்ஸம்மதத்தின் பேரில் புத்திரிகா தர்மத்தின் படி ("ஸகோதரனில்லாத இந்தப் பெண்ணை அலங்காரஞ் செய்து உமக்குக் கொடுக்கிறேன். இவளிடமுண்டாகும் பிள்ளை என்னுடைய பிள்ளை" என்று சொல்லி) ருசி என்பவருக்குக் கொடுத்தார். ப்ரஹ்மதேஜஸுள்ள அந்தப் பகவானாகிய ருசி என்ற ப்ரஜாபதியானவர் மேலான ஸமாதியால் ஸ்ரீ பகவானை ஆராதித்து ஆகூதியினிடத்தில் ஒரு புத்திரனையும், ஒரு புத்திரியையும் உண்டு பண்ணினார். அந்தப் புத்திரன் ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவின் அம்சமேயாம். யஜ்ஞரென்ற பெயருள்ளவர் அந்தப் பெண்ணானவள் லக்ஷ்மிதேவியின் அம்சமாம், அவளுக்குத் தக்ஷிணா என்று பெயர். அவள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை விட்டு பிரியாதவள். அப்பொழுது ஸ்வாயம்புவமனுவானவர் சந்தோஷத்துடன் தம்முடைய புத்திரியின் புத்திரரும் மிகுந்த யக்ஞரென்பவரைத் தம்முடைய புத்திரனாகத்

தம்முடைய கிரஹத்துக்கு அழைத்து வந்தார். ருசி யென்பவர் தக்ஷிணை என்பவளைப் புத்ரிகா வைத்துக் கொண்டார் பின்பு அந்த தக்ஷிணையென்பவள் கல்யாணஞ் செய்துகொள்ள விரும்பிய காலத்தில் யக்ஞங்களுக்கு அதிபதியான பகவானாகிய யக்ஞரைப் பர்த்தாவாக அடையவேண்டுமென்று ஆசை கொண்டாள். யக்ஞரும் (பக்தபராதீனராகையால்) ஸம்மதித்து கல்யாணம் செய்து கொண்டார். (ஒரே வயிற்றில் ஜனித்தவர்களானாலும் யக்ஞர் மஹா விஷ்ணுவின் அம்ச மாகையாலும் தக்ஷிணை லக்ஷ்மிதேவியின் அம்சமாகையாலும் விவாகம் நடந்தது.) அந்த யக்ஞரென்ற பகவான் தம்மைக் கலியாணஞ் செய்து கொண்டு ஸந்தோஷப்பட்டவளான அந்தத் தக்ஷிணையிடத்தில் சந்தோஷமடைந்து தோஷன், பிரதோஷன், சந்தோஷம், பத்ரன், சாந்தி, இடஸ்பதி, இத்மன், கவி, விபு, வஹ்னி, ஸுதேவன், ரோசனன் என்ற பன்னிரண்டு புத்திரர்களை உண்டுபண்ணினார். அவர்கள் ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில் 'துஷித' என்ற தேவர்களாக இருந்தார்கள். மேலும் அந்த மன்வந்தரத்தில் மரீசி முதலிய ஸப்தரிஷிகள், யஜ்ஞரே தேவகணங்களுக்கு அதிபதியான இந்திரன். மேலும் மிகுந்த தேஜஸுள்ள பிரியவிரதர் உத்தான பாதர் என்பவர் மனுவின் பிள்ளைகள். இவர்களுடைய புத்திரர்கள் அவர்களுடைய பிள்ளைகள் முதலியவர் களால் அந்த மன்வந்தரம் காப்பாற்றப்பட்டுவந்தது.

10–15 ஓ விதுர! மனுவானவர் தேவஹூதி யென்னும் தம்முடைய பெண்ணை கர்த்தமருக்குக் கொடுத்தார். அது சம்பந்தமான கதை பெரும்பாலும் என்னால் சொல்லப்பட்டு உம்மால் கேட்கப்பட்டது.

அந்த மனுவானவர் ப்ரஹ்மதேவருடைய புத்திரராகிய தக்ஷருக்குப் பிரஸூதி யென்பவளைக் கொடுத்தார். அந்த வம்சமும் உலகிலும் பெருகியது. கர்த்தமருடைய பெண்களெல்லாரும் ப்ரஹ்மரிஷிகளையே பர்த்தாவாக அடைந்தவர்கள். அவர்களில் பிரஸூதி என்பவள் உடைய குழந்தைகளைப் பற்றிச் சொல்வதைத் தெரிந்து கொள்ளும். கர்த்தமருடைய புத்ரியும் மரீசியின் மனைவியுமான கலா என்பவள் கச்யபர், பூர்ணிமா என்ற இருவர்களையும் பெற்றாள். அவர்கள் உடைய வம்சத்தால்இந்த ஜகத் முழுவதும் நிறைந்தது. (கச்யபருடைய வம்சம் ஆறாவது ஸ்கந்தத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. பூர்ணிமாவென்பவர் விரஜனையும் விச்வகனென்பவனையும் உண்டு பண்ணினார். தேவகுல்யா என்ற பெண்ணும் உண்டானாள்; அவளே ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பாதத்திலிருந்து உண்டான தேவகங்கை எனப்படுகிறாள். அத்திரி மஹரிஷியின் பத்னியாகிய அனுஸூயையானவள் தத்தர் துர்வாஸஸ், சந்த்ரன் ஆகிய மூன்று குமாரர்களைப் பெற்றாள். அம்மூவர்களும் முறையே மஹாவிஷ்ணு, பரமசிவன், ப்ரஹ்மா இவர்களுடைய அம்சமுள்ளவர்கள் என்றார்.

16 அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி "ஓ குருவே! தேவர்களில் சிறந்தவர்களான மும்மூர்த்திகள் எதனைச் செய்ய விரும்பி, அத்ரியின் வீட்டில் அவதரித்தார்கள்? அதனைச் சொல்ல வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

17–26 அதைக் கேட்டு மைத்ரேயர் விதுரரை நோக்கி, ப்ரஹ்மத்தை அறிந்தவர்களுக்குள் சிறந்த வராகிய அத்ரி மஹரிஷியைப் ப்ரஹ்மதேவர்

பிரஜைகளை ஸிருஷ்டிக்கும்படி ஆஜ்ஞாபித்த பொழுது மஹரிஷியானவர், அகலமான கண்களுள்ள தம்முடைய பத்தினியுடன் ரிக்ஷம் என்ற குலபர்வதஞ் சென்று தபஸ் செய்தார். அவ்விடத்தில் பலாச மரங்களும், அசோக மரங்களும் புஷ்பித்திருந்தன. மேலும் நிர்விந்தியை என்ற நதியின் ஜலம் ப்ரவஹிப் பதால் அந்தக் காடுமிகுந்த சப்தமுள்ளதாக இருக்கிறது. அந்த மலையில் மஹரிஷியானவர் பிராணாயாமஞ் செய்து அதனால் மனத்தையடக்கி நூறு வருஷகாலம் ஒரு காலால் நின்று, சீதோஷ்ணங்களற்றவராகவும், ஸுக துக்கங்களற்றவராகவும், காற்றைப் புஜித்துக் கொண்டு "எவர் ஜகத்திற்கு அதிபதியோ அவர் தமக்கு ஸமமான குழந்தையை எனக்குக் கொடுக்க வேண்டும். அவரைச் சரணமடைகிறேன்" என்று மனத்தில் யோசித்துக் கொண்டு இருந்தார். இப்படித் தபஸ் செய்யும் மஹரிஷியின் சிரஸின் வழியாக வெளியில் கிளம்பியதும், பிராணாயாமத்தால் விருத்தியானதுமாகிய மூவுலகமும் எரிக்கப்படுவதைப் பார்த்துப் ப்ரஹ்மதேவர், மஹாவிஷ்ணு, பரமசிவன் ஆகிய மூர்த்திகளும் அவருடைய ஆச்ரமம் சென்றார்கள். அப்பொழுது அவர்களை அப்ஸரஸ்ஸுகள், மஹர்ஷிகள், கந்தர்வர்கள், ஸித்தர்கள், வித்யாதரர் கள், உரகர்கள் ஆகிய இவர்கள் ஸ்துதித்தார்கள். அவர்கள் அவ்விடம் வந்ததும் ஒரு காலைப் பூமியில் வைத்துத் தபஸ் செய்யும் மஹர்ஷி, ஸமாதியிலிருந்து பகிர்முகராகித் தேவசிரேஷ்டர்களைத் தரிசித்தார். தண்டம் போல் பூமியில் விழுந்து புஷ்பம் முதலிய வைகளைக் கையில் வைத்துக்கொண்டுப் பூஜித்தார். பரமசிவன், ப்ரஹ்மதேவர், ஸ்ரீ மஹாவிஷ்ணு ஆகிய இவர்களும் முறையே விருஷபம், ஹம்ஸம், கருடன்

ஆகிய வாகனத்தின் மீதேறி, தங்கள் தங்களுடைய அடையாளமுள்ளவர்களாய் மேலும் அவர்களுடைய முகங்கள் க்ருபா த்ருஷ்டி உள்ளவைகளும், புன்னகை உள்ளவைகளுமாய் இருந்தன. அப்பொழுது தேஜஸினால் மஹரிஷியினுடைய இரு கண்களும் பார்க்க சக்தியற்றவைகளாயிருந்தும் அத்திரி மஹர்ஷியானவர் மிகவும் ச்ரமப்பட்டுக் கண்களை விழித்து மனத்தை அவர்களிடத்திலேயே செலுத்திக் கைகளைக் கூப்பிக் கொண்டு ஸகல லோகங்களிலும் சிறந்தவர்களான அவர்களை இனிமையாகவும், கம்பீர அர்த்தமுள்ளதாகவும், ஸ்தோத்திரம் செய்தார் எப்படியெனில்:

27–28 ஜகத்தை படைப்பது, பரிபாலிப்பது, ஸம்ஹரிப்பது ஆகிய இவைகளைச் செய்வதற்காக ஒவ்வொரு யுகங்களிலும் மாயையின் குணங்களைக் கொண்டு தனித்தனியே சரீரத்தை எடுத்துக் கொள்ளுகிற ஓ ப்ரஹ்மா, விஷ்ணு, மஹேச்வர! உங்களை நமஸ்கரிக்கிறேன்; உங்கள் மூவர்களில் யாரை நான் அழைத்தேன். புத்திரன் பிறக்க வேண்டி தேவர்களுக்குள் பிரதானராகிய ஒருவரைத்தானே தியானஞ் செய்தேன். அப்படியிருக்க மனத்திற்கு எட்டாதவர்களாகிய நீங்கள் மூவரும் இவ்விடம் வந்ததன் காரணம் என்ன? என்னிடம் தயவு செய்ய வேண்டும். இவ்விஷயத்தில் மிகவும் ஆச்சரியத்தை அடைகிறேன்; சொல்லவேண்டும், என்று ப்ரார்த்தித்தார்.

29–33 ஓ பிரபுவாகிய விதுரரே! அதனைக் கேட்ட அந்தத் தேவ ச்ரேஷ்டர் மூவரும் அத்ரியை நோக்கி

சிரித்து "ஓ ப்ராஹ்மண! நீர் எப்படி நினைத்துத் தியானம் செய்தீரோ, அது அப்படியே ஆகட்டும். நீர் நல்ல ஸங்கல்பம் உள்ளவர். எதனை (ஜகத் காரணத்தை) தியானித்தீரோ அது நாங்களேயாம். (எங்களுக்குள் பேதமில்லை. குணபேதத்தால் சரீர பேதமுள்ளவர்கள் என்று கருத்து) மேலும் உமக்கு எங்களுடைய அம்சமுள்ள புத்திரர்கள் ஜனிப்பார்கள். உமக்கு க்ஷேமமுண்டாகட்டும். அந்தப் புத்திரர்கள் தமக்கு லோகத்தில் மிகவும் கீர்த்தி அடைந்து உம்முடைய கீர்த்தியையும் பரவச் செய்வார்கள், என்று மஹரிஷியின் இஷ்டப்படி வரத்தை அளித்து அந்த தேவ ச்ரேஷ்டர்களும், அத்ரி மஹரிஷியால் பூஜிக்கப்பட்டு அந்தத் தம்பதிகள் (அத்திரியும், அனஸூயையும்) மறைந்தார்கள். பிறகு ப்ரஹ்ம தேவருடைய அம்சமாகச் சந்திரனும், மஹாவிஷ்ணுவின் அம்சமாகத் தத்தாத்ரேயரும், பரமசிவனுடைய அம்சமாகத் துர்வாஸஸ் என்பவரும் ஆகிய மூன்று குமாரர்கள் உண்டானார்கள். இனி அங்கிரஸ்ஸின் வம்சத்தைச் கேளும்.

34–35 அங்கிரஸ்ஸின் பத்னியாகிய சிரத்தை என்பவள் ஸினீவாலீ (காணப்படும் சந்திரகலை உள்ளது) குஹூ (நாசமடைந்த சந்திரக்லையுள்ள அமா) ராகா (பூர்ணிமா) அநுமதி (சுக்கிலசதுர்தசிக்கும் அபிமானியான தேவதை) என்ற நான்கு பெண்களைப் பெற்றாள். பின்னும் பகவானாகிய உசத்யர் ப்ரஹ்மவித்தாகிய ப்ருஹஸ்பதி ஆகிய இருவரும் அந்த அங்கிரஸ்ஸின் புத்திரர்கள். இவ்விருவர்களும் ஸ்வாரோசிஷ மன்வந்தரத்தில் மிகவும் கீர்த்தி பெற்றிருந்தார்கள்.

36–37 புலஸ்த்ய மஹரிஷியானவர், ஹவிர்புக் என்னும் பத்னியிடத்தில் அகஸ்திய மஹரிஷியையும், விச்ரவஸ்ஸையும் உண்டு பண்ணினார். அந்த அகஸ்தியர் ஜன்மாந்தரத்தில் வயிற்றில் இருக்கும் அக்னியாம். அந்த விச்ரவஸ் என்பவர் இலபிலா என்பவளிடத்தில் யக்ஷர்களுக்கு அதிபதியும் தேவனும் ஆன குபேரனை யுண்டுபண்ணினார். பின்னும் அந்த மஹரிஷியானவர் கேகஸி என்பவளிடத்தில் ராவணன், கும்பகர்ணன், விபீஷ்ணர் என்று மூன்று குமாரர்களை யுண்டுபண்ணினார்.

38. மிகுந்த புத்திசாலியான விதுரரே! புலஹருடைய பத்னியான கதி என்பவள் பதிவிரதை. அவர் கர்ம ச்ரேஷ்டன், வரீயான், ஸஹிஷ்ணு என்று மூன்று புத்திரர்களைப் பெற்றாள்.

39. க்ருது என்பவருடைய பத்னியாகிய கிரியை யென்பவள் அறுபதினாயிரம் புத்திரர்களைப் பெற்றாள். அவர்களே வாலகில்யர்களென்ற மஹரிஷிகள்; ப்ரஹ்ம தேஜஸால் ஜ்வலிப்பவர்கள்.

40–41 வஸிஷ்டர் ஊர்ஜை என்பவளிடத்தில் (அருந்ததிக்கு ஊர்ஜாவென்றும் பெயருண்டு. இவள் கர்த்தமருடைய ஒன்பதாவது பெண்) சித்திரகேது, ஸுரோசிஸ், விரஜஸ், மித்ரன், உல்பணர், வஸுபிருத், தியானர், த்யுமான் என்று ஏழுபுத்திரர்களை யுண்டு பண்ணினார். அவர்கள் சுத்தர்கள். ப்ரஹ்மரிஷிகளாக ஆனார்கள். (இவர்கள் மூன்றாவது மன்வந்தரத்தில் ஸப்த ரிஷிகள்.) சக்தி முதலிய புத்திரர்கள் வேறு ஸ்திரீயினிடம் உண்டானவர்கள்.

42. அதர்வா என்பவருடைய பத்னியாகிய சித்தி என்பவள் (கர்த்தமருடைய எட்டாவது பெண் இவளுக்குச் சாந்தியென்றும் பெயருண்டு) திருதவிருதன், தத்யஞ்சன், அச்வசிரஸ் என்ற புத்திரர்களைப் பெற்றாள். இனி ப்ருகுவின் வம்சத்தைத் தெரிந்து கொள்ளும்.

46–46 1/2 ஓ மிகுந்த அதிருஷ்டமுள்ளவரே! ப்ருகுவென்பவர் கியாதி என்ற பத்னியிடத்தில் (இவள் கர்த்தமருடைய ஏழாவது பெண்) தாதா, விதாதா என்ற இரண்டு புத்திரர்களையும் பகவத் பரையாகிய ஸ்ரீ போன்ற பெண்ணையும் பெற்றார். பிறகு மேருவானவர் ஆயதி என்றவளைத் தாதாவிற்கும், நியதி என்றவளை விதாதாவிற்கும் கொடுத்தார். பின்பு தாதாவிற்கு மிருகண்டரென்ற புத்திரனும் விதாதாவிற்குப் பிராணனென்பவரும் உண்டானார்கள். மிருகண்டருடைய புத்திரருக்கு மார்க்கண்டேயரென்று பெயர். பிராணருடைய புத்திரருக்கு வேதசிரஸ் என்று பெயர். அந்த வேதசிரஸ்ஸின் புத்திரர் சுக்கிரன். இவர் ப்ருகு வம்சத்திலுண்டான வராதலால் பார்க்கவரெனப்படுகிறார். ஓ விதுரரே! மேற் சொல்லிய ஒன்பது மஹரிஷிகள் தங்களுடைய வம்சத்தால் லோகத்தை விஸ்தரித்தார்கள். கர்த்தம ருடைய பெண்களுடைய வம்சத்தைச் சொன்னேன். இதனைச் ச்ரத்தையுடன் கேட்பவனுக்கு உடனே பாபங்கள் நீங்கும். ஆதலால் இது மேலானது.

47–59 ப்ரஹ்ம தேவருடைய புத்திரராகிய தக்ஷர், மனுவின் புத்திரியாகிய பிரஸூதியை விவாஹம் செய்து கொண்டு பதினாறு பெண்களை யுண்டு

பண்ணினார். அவர்கள் அழகான கண்களுள்ளவர்கள். அவர்களில் சிரத்தை, மைத்ரீ, தயை சாந்தி, துஷ்டி புஷ்டி, கிரியா, உன்னதி, புத்தி, மேதை, திதிக்ஷா, ஹ்ரீ, மூர்த்தி, யென்ற பதின் மூன்று பெண்களைத் தர்மத்திற்கும், ஒரு பெண்ணை (ஸ்வாஹா என்பவளை) அக்கினி பகவானுக்கும் பிதிருக்களுக்கு ஒரு பெண்ணையும் (ஸ்வதாவென்பவள்) ஸம்ஸாரத்தைப் போக்குபவரான பரமசிவனுக்கு ஒரு பெண்ணையும் (ஸதீயென்பவள்), பிதாவாகிய தக்ஷர் தானஞ் செய்தார். தர்மத்தின் பத்னியாகிய சிரத்தை ச்ருதனென்ற புத்திரனையும் மைத்ரியென்பவள் ப்ரஸாதனையும், தயையானவள் அபயனையும் சாந்தியென்பவள் ஸுகத்தையும் துஷ்டியென்பவள் முகத்தையும் (ஸந்தோஷம்) புஷ்டியானவள் ஸம்பனையும், கிரியை யென்பவள் யோகத்தையும், உன்னதியானவள் தர்ப் பனையும் (கர்வம்), புருத்தியானவள் அர்த்தத்தையும், மேதையென்பவள் ஸ்மிருதியையும், திதிக்ஷையென்ப வள் க்ஷேமத்தையும், ஹ்ரீயென்பவள் ப்ரச்ரயத்தையும், மூர்த்தி யென்பவள் நரன், நாராயணன் என்ற மஹர்ஷிகளையும் யுண்டுபண்ணினார்கள். அவ் விரண்டு மஹரிஷிகளும் ஸகல குணங்களும் உண்டாகு மிடமாக இருப்பவர்கள்! அவர்கள் பிறந்த லோகங்களும் சந்தோஷமடைந்தன. எல்லோருடைய மனங்களும், திக்குகளும், நதிகளும், சமுத்திரங்களும், காற்றும் ப்ரஸன்னங்களாயின. (தெளிந்தன) தேவ வாத்யங்கள் முழக்கப்பட்டன. புஷ்பங்கள் வர்ஷிக்கப் பட்டன. மஹரிஷிகள் ஸ்துதித்தார்கள். கின்னரர்களும், கந்தர்வர்களும் பாடினார்கள். தேவலோகத்திலுள்ள அப்ஸர ஸ்திரீகள் நர்த்தனஞ் செய்தார்கள். இப்படி எல்லா லோகங்களிலும் சுபமான காரியங்கள்

நடந்தன. ப்ரஹ்மா முதலிய தேவர்கள் அவ்விருவர் களை நோக்கி, மாயையால் இந்த ஜகத்தை (உண்மை இல்லாததை) ஆகாசத்தில் பட்டணம் உண்டுபண்ணு வது போல் காண்பிக்கிறாரோ, எவர் இப்பொழுது தர்மத்தின் கிருஹத்தில் மஹரிஷி வேஷங்கொண்டு அவதரித்திருக்கிறாரோ, அந்த ஸ்வப்ரகாசராகிய பரமபுருஷனுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். அந்தப் பகவான் ஜக்த்தின் மர்யாதையை ஸம்ரக்ஷிப்பதற்காக ஸத்வ குணத்தைக் கொண்டு ஸிருஷ்டிக்கப்பட்ட தேவர்களான எங்களைக் கிருபை நிறைந்த பார்வையால் கடாக்ஷிக்கட்டும். அவர் சாஸ்திரத்தால் ஊகிக்கத்தக்க தத்வமுள்ளவர். மேலும் அவருடைய நேத்திரமானது லக்ஷ்மீதேவிக்கு வாஸஸ்தலமும் சுத்தமுமான தாமரை மலரையும் பரிஹஸிக்கிறது என்று ஸ்தோத்திரஞ்செய்தார்கள். இம்மாதிரி தேவர்களால் கொண்டாடப்பட்ட அவ்விருவர்களும் தேவர்களால் தரிசிக்கப்பட்டவர்களாகி கந்தமாதன மென்ற பர்வதஞ் சென்றார்கள். மஹாவிஷ்ணுவின் அம்சபூதர்களாகிய அவ்விருவர்களே பூமியின் பாரத்தை குறைப்பதற்காக யதுகுலத்தில் ஸ்ரீ கிருஷ்ணனாகவும், குரு வம்சத்தில் அர்ஜுனனாகவும் அவதரித்திருக்கிறார்கள்.

60–62 அக்கினியின் பத்னியாகிய ஸ்வாஹா என்பவன் பாவகன், பவமானன், சுசியென்ற மூன்று புத்திரர்களைப் பெற்றாள். அவர்கள் அக்கினிக்கு அபிமான தேவர்கள், ஹோமஞ் செய்யப்பட்ட வைகளையே புஜிப்பவர்கள். அவர்களிடமிருந்து நாற்பத்துஐந்து அக்னிகள் (புத்திரர்கள்) உண்டானார் கள். மேற்காட்டிய புத்திரர்களும், அவர்களுடைய

தகப்பனார்களாகிய மூன்று பேர்களும், அவர்களுக்கும் பிதாவாகிய அக்கினியுமாகிய நாற்பத்து ஒன்பது (49) அக்கினிகளாயின. ப்ரஹ்மவாதிகள் (வேதத்தை அத்யயனஞ் செய்தவர்கள்) வைதிகமான யாக கர்மத்தில்: இவர்களுடைய பெயர்களைக் கொண்டே அக்கினி தேவதாகமான இஷ்டிகளைச் செய்கிறார்கள். இந்த அக்கினிகள் வைதிகாக்கினிகள். (லௌகிகங் களல்ல. லௌகிங்களான அக்கினிகள் பலவென்ற கருத்து).

63–64 அக்கினிஷ்வாத்தர்கள், பர்ஹிஷதர்கள், ஸௌம்யர்கள், ஆஜ்யபர்கள் என்ற நான்கு பித்ரு கணங்களும், ஸ்வதை யென்பவளின் (தக்ஷருடைய பதினைந்தாவது பெண்) பார்த்தாக்கள். இவர்களுள் ஸாக்கினிகள்; நிரக்கினிகளென்று இருவகையுண்டு. (அக்நௌகரணம் உள்ளவர்கள் ஸாக்கினிகள். அதில்லாதவர்கள் நிரக்கினிகள்.) அந்த ஸ்வதா தேவிக்கு வயுனா, தாரிணீ என்று இரண்டு பெண்கள் (மேனா, வைத்ரணீ என்பவர் சிலர்:) அந்த இரண்டு பெண்களும் ப்ரஹ்மத்தை உபதேசிப்பவர்கள். சாஸ்திரத்தால் உண்டான ஞானம், அனுபவ ஞானம் ஆகிய இவைகளுடைய கரையைக் கண்டவர்கள். ஊர்த்துவ ரேதஸ் உள்ளவர்களாகையால் இவர்களுக்குக் குழந்தைகளில்லை. ஆதலால் அவர்களுக்கு வம்சமில்லை.)

65–66 பரமசிவனுடைய பத்னியாகிய ஸதீதேவி யானவள் குணத்திலும், ஸ்வபாவத்திலும் தனக்கு ஸமமான பர்த்தாவை அடைந்தும் அவளுக்கு புத்திரனுண்டாகவில்லை. ஏனென்றால் அவளுடைய

பிதாவாகிய தக்ஷர் குற்றமற்றவராகிய பரமசிவன் இடத்தில் கோபித்துக் கொண்டு ப்ரதி கூலராக இருந்ததால் ஸதியானவள் பிரௌடையாகாத வயதிலேயே யோகமார்க்கத்தால் தன்னுடைய சரீரத்தை விட்டுவிட்டாள்.

நோட்டு

அக்கினியில் பக்குவமான புரோடாசம் முதலியவைகளைப் புஜிப்பவர்கள் அக்கினிஷ்வாத்தர் கள், தைத்திய தானவ, யக்ஷர்களுடைய பித்ருக்கள் பர்ஹிஷதர்கள். அக்கினிஷ்டோமம் முதலிய கர்மங்களின் தேவதைகள் ஸௌம்யர்கள். ஆகார ஆஜ்யபாக தேவதைகள் ஆஜ்யபர்கள்.

அத்தியாயம்–2

தக்ஷருக்கும் பரமசிவனுக்கும் விரோதம் நேர்தல்

1–3. அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி, "பெண்ணிடத்தில் ப்ரீதியுள்ளவரான தக்ஷர் அவளையும் லக்ஷயஞ் செய்யாமல் நல்ல ஸ்வபாவம் உள்ளவர்களுக்குள் சிறந்தவராகிய பரமசிவனிடத்தில் துவேஷம் வைத்த காரணமென்ன? அந்தச் சிவன் சரம் (அசையும் பொருள்,) அசரம் (அசையாப் பொருள்) ஆகிய இவைகளுக்குக் குரு) ஒருவரிடத்திலும் விரோதமில்லாதவர்; அவருக்குச் சாந்தியே சரீரமாக விருக்கிறது; மேலும அவர் ஆத்மாவினிடத்திலேயே ரமிப்பவர்; ஜகத்திற்குப் பெரியதாகிய தெய்வம்; அப்படிப்பட்டவரை எவன் விரோதித்துக் கொள்வான்? மணப்பிள்ளையாகிய பரமசிவனுக்கும், மாமனாராகிய தக்ஷருக்கும் விரோதம் உண்டானதன் காரணத்தைச் சொல்லவேண்டும். தவிரவும் ஸதீதேவியானவள் பிராணனை விட்டாள் என்று சொன்னீரே. ஒருவரும் ப்ராணனை விட சம்மதிக்கமாட்டார்களே. அதன் விவரத்தைச் சொல்லவேண்டும், என்று கேட்டார்.

4–19. அதனைக்கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி "முன்னொரு காலத்தில் ப்ரஜாபதிகள் ஸத்ர யாகஞ் செய்தார்கள். அந்த ஸத்ரத்தில் சிறந்த மஹரிஷிகளும் இந்திரன் முதலிய தேவர்கள் தங்களுடைய வேலைக்காரர்களுடனும், அக்கினிகள் உடனும் கூடியிருந்தார்கள். அப்பொழுது அந்த ஸத்ரத்திற்காகத் தக்ஷர் வந்தார். அவர் சூரியன் போன்ற தேஜஸ் உள்ளவர்; ஆனதால் தம்முடைய

தேஜஸ்ஸால் அந்த ஸபையைப்ரகாசிக்கச் செய்தார்; அவரைக் கண்டு அவருடைய தேஜஸ்ஸினால் காந்தி குறைந்தவர்களாகி ஸபையிலிருப்பவர்களெல்லோரும் அக்கினிக்கு அபிமானிகளாகிய தேவர்களும் தங்கள் தங்கள் ஆஸனத்திலிருந்து எழுந்திருந்தார்கள். ப்ரஹ்ம தேவரும். பரமசிவனும் மாத்திரம் எழுந்திருக்கவில்லை. ஸபையிலுள்ளவர்களால் பூஜிக்கப்பட்ட தக்ஷர் லோக குருவாகிய ப்ரஹ்மதேவருக்கு நமஸ்காரஞ் செய்து அவருடைய உத்தரவின்படி உட்கார்ந்தார். ஆனால் தாம் வருகிறதற்கு முன்னமேயே வந்திருப்பவரும் தம்மைக் கண்டு உபசரிக்காத வருமாகிய பரமசிவன் இடத்தில் கோபங்கொண்டார். மேலும் அவர் இருகண்களாலும் வக்கிரமாகச் சிவனைப்பார்த்து, கோபாக்கினியால் எரிப்பவர் போல, "ஓ ப்ரஹ்ம ரிஷிகளே! தேவர்களே! அக்கினிகளே! ஸாதுக்களுடைய ஆசாரத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள். அறியாத் தன்மையாவது மாத்ஸர்யமாவது எனக்கில்லை (அதனால் சொல்வதாக நினைக்க வேண்டாம்) இவன் லோகபாலர்களுடைய கீர்த்தியைக் குறைப்பவன்; வெட்கமில்லாதவன் ஸாதுக்களால் ஆதரிக்கப்பட்ட வரும் ஸம்பிரதாயப்படி அனுஷ்டியாமல் கர்வமுள்ள வனாகி அந்த மார்க்கத்தை கெடுத்து விட்டான் இவன் நல்லவன் போல் ப்ராஹ்மணர்கள் அக்னி ஆகிய இவர்களுடைய முன்பாக ஸாவித்திரி போன்ற என்னுடைய புத்திரியைப் பாணிக்கிரஹணஞ் செய்து கொண்டான்; அதனால் எனக்குச் சிஷ்யனானான்; என்னுடைய பெண்ணாகிய ஸதியானவள் மான் குட்டியின் கண்கள் போன்ற கண்களுள்ளவள்; இவனுடைய கண்கள் குரங்கின் கண்களை ஒத்திருக்கின்றன; அப்பேர்ப்பட்ட இவன் என்னைக்

கண்டவுடன் எழுந்திருந்து நமஸ்கரிக்க வேண்டியதாக விருக்க, வாக்கினால் கூட என்னை உபசரிக்கவில்லை; இவன் ஸத்கர்மங்களைச் செய்யாதவன் (லுப்தக்ரியன்) அசுத்தன்; அஹங்காரமுள்ளவன்; லோகத்தின் மரியாதையைக் கெடுப்பவன். அப்படிப்பட்ட இவனுக்குப் பெண்ணைக் கொடுக்க இஷ்டமில்லாதவனானாலும் நான் வேதத்தைச் சூத்திரனுக்குக் கொடுத்தாற் போல் குழந்தையைக் கொடுத்தேன் (அயோக்கியனுக்குப் பெண்ணைக் கொடுத்தேனென்று பச்சாதாபமடைந்தார்.) மேலுமிவன் ப்ரேதங்கள் வஸிக்கும் மயானத்தில் பூதகணங்களுடன் வஸ்திரமில்லாமல் தலைமயிரை விரித்துக்கொண்டு சிரித்தும், அழுது கொண்டும் பைத்தியங் கொண்டவன் போல் அலைகிறான். சிதையிலிருக்கும் சாம்பலைப் பூசிக்கொள்கிறான். ப்ரேதங்களுடைய மாலையை தரிக்கிறான், மனிதர் களுடைய எலும்புகளை ஆபரணங்களாகக் கொள்கிறான் சிவனென்ற பெயருள்ளவனே யொழிய அசிவன். (மங்களமான சுபாவமற்றவன், மதித்தவன். மதித்தவர்களால் கொண்டாடக்கூடியவன். தமோ குண ஸ்வபாவமுள்ள பிரமத கணங்களுக்கு அதிபதி, உன்மாதங்களுக்கு (சில பூதங்கள்) அதிபதி, சௌசம் (சுத்தி) அற்றவன். கெட்ட புத்தியுள்ளவன்; அப்படிப் பட்ட இவனுக்குப் பதிவிரதையான ஸதியென்பவளை ப்ரஹ்மதேவருடைய தூண்டுதலினால் கல்யாணஞ் செய்து கொடுத்தேன். கஷ்டம். என்று தமக்குப் ப்ரதிகூலரன்றி இருக்கும் பரமசிவனைத் தக்ஷர் நிந்தித்துக் கோபங் கொண்டவராகி ஜலத்தைத் தொட்டு "தேவகணங்களில் தாழ்ந்தவனாகிய இந்தச் சிவன் இந்திரன் முதலியவர்களுடன் யாகத்தில் பாகத்தை அடையவேண்டாம் என்று சபித்தார்.

அப்பொழுது அந்த ஸபையிலிருந்த சிறந்தவர்கள் தடுத்தும் அவர் ஸமாதானம் அடையவில்லை. பிறகு தக்ஷர் மிகுந்த கோபமுள்ளவராகி அவ்விடமிருந்து தம்மிருப்பிடஞ் சென்றார்.

20–26. இதைக்கேட்டுப் பரமசிவனுடைய கணங்களில் சிறந்தவராகிய நந்தியென்பவர் கோபத்தால் மிகவும் சிவந்த கண்களுள்ளவராகி இந்தத் தக்ஷன் தன்னைச் சிறந்தவனாக நினைத்துப் பதில் செய்யாதவராகிய பகவானுக்குத் துரோகஞ் செய்த படியால் இவன் பேதபுத்தியுள்ளவனாகித் தத்துவத்தை அறியாதவனாக ஆகட்டும். கபட தர்மமுள்ள ஸம்ஸாரத்தில் அபிமானம் உள்ளவனாகி, காம்யமாகிய சுகத்திற்கு ஆசைப்பட்டு வேதத்தில் சொல்லிய அர்த்த வாதத்தால் (கர்மத்தில் ஜனங்களுக்கு ஆசையுண்டாவதற்காக அதன் பலனை மேலானதென்று சொல்வது முதலியவை) ப்ரமித்துக் கர்மங்களையே அனுஷ்டிக்கட்டும்; மேலும் தேஹம் முதலியவைகளேயே ஆத்மாவென்று நினைத்து புத்தியால் ஆத்மாவின் உண்மையை மறந்து பசுப்போல் ஸ்திரீகளிடத்திலேயே மிகவும் ஆசையுள்ளவனாக ஆகட்டும். அவித்யையை வித்யையென்று நினைத்து மூடனாக இருக்கும் இந்த தக்ஷன் சீக்கிரம் ஆட்டு முகமுள்ளவனாக ஆகட்டும் என்று தக்ஷனுக்குச் சாபம் கொடுத்ததுமன்றி "பரமசிவனைத் தக்ஷன் சபிக்கும்போது அதனை எவர்கள் அனுமதித்தார்களோ, அந்தப்ராஹ்மணர்கள் சம்சாரத்தை (ஜனனமரணத்தை) யடையட்டும். புஷ்பங்கள் போல் அழகானவைகளும், தேனுடைய வாசனைப்போல் மனத்தை இழுக்கக் கூடியதுமான வேதத்தின் அர்த்தவாதங்களால் மனங்கலங்கினவர்களாக மோஹத்தை யடையட்டும்.

பரமசிவனைத் துவேஷித்தபடியால் ப்ராஹ்மணர்கள் தேஹத்தைப் போஷிப்பதற்காக எல்லாவற்றையும் புஜித்துக்கொண்டும், வித்யை தபஸ், விரதங்கள் ஆகிய இவைகளை ஜீவனத்துக்கே உபயோகித்தவர்களாகிப் பணம் தேஹம், இந்திரியம் ஆகிய இவைகளிலேயே ரமித்துக் கொண்டு யாசகர்களாக சஞ்சரிக்கட்டும் என்றும் சபித்தார்.

27–33. அதனைக் கேட்ட பிருகு என்பவர் "எவர்கள் சிவனுடைய தர்மத்தை அடைந்தவர்களோ, எவர்கள் அவர்களை அனுஸரித்தவர்களோ, அவர்கள் வேத விரோதிகளான பாஷண்டர்களாக ஆகட்டும், சௌசமற்றவர்களாகி மூடர்களாகி, ஜடை, விபூதி, எலும்பு, ஆகிய இவைகளைத் தரித்து, சிவதீக்ஷையை அடையட்டும். அந்தச் சிவதீக்ஷையில் ஸுரை (வெல்லத்தால் செய்யப்பட்டது). ஆஸவம் (மாவினால் செய்யப்பட்ட மத்யம்) ஆகிய இவை தேவதை போல ஆதரிக்கப்படுகிறது. பாஷண்ட தர்மத்தை ஆச்ரயித்து நீங்கள் புருஷர்களுக்கு ஸேதுவாக விருப்பது (மரியாதையாகவும்), வேதத்தையும் ப்ராஹ்மணர் களையும் நிந்திப்பதால் இந்தச் சாபம் உங்களுக்குத் தகுந்ததேயாகும். இந்த வேதமார்க்கமே சிரேயஸைக் கொடுக்கக் கூடியது. வெகுநாளாகப் ப்ரகாசிக்கிறது. முந்திய மஹரிஷிகள் இதனையே அனுஷ்டித்தார்கள். இது ஸ்ரீ மஹாவிஷ்ணுவிடமிருந்து உண்டானது. ஆனதால் மிகவும் மேலானதும், சுத்தமானதும்; அனாதி ஸித்தமுமான வேதமார்க்கத்தை நிந்தித்துப் பூத பதியையே தெய்வமாகக் கொண்ட பாஷண்ட மார்க்கத்தை நீங்கள் அடைவீர்கள் என்று சபித்தார். அது ப்ரஹ்ம தண்டமாகையால் நிவிருத்திக்க

முடியாதது. இதனைக் கேட்டுப் பகவான் கொஞ்சம் வருத்தமடைந்தவர் போலத் தம்முடைய கணங்களுடன் அவ்விடமிருந்து புறப்பட்டார்.

34–35. அந்தப்ரஜாபதிகளும் தேவர்களுக்குள் சிறந்தவராகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் எதில் பூஜிக்கப்படுகிறாரோ அந்த ஆயிரம் பரிவத்ஸரமுள்ள அந்த ஸத்ரத்தை முடித்து, கங்கை, யமுனை இந்த நதிகள் ஸங்கமத்தில் ஸ்நானஞ் செய்து சுத்தர்களாகத் தங்கள் தங்கள் இருப்படஞ் சென்றார்கள்.

நோட்டு

இந்த அத்தியாயத்தில் 13–வது ஸ்லோகம் முதல் 16–வது வரையிலுள்ள ஸ்லோகங்களால் தக்ஷர் பரமசிவனை நிந்திப்பதான எண்ணத்துடன் சொன்ன வார்த்தைகளுக்குப் பின் காட்டியபடியும் அர்த்தமேற் படுகிறது. லுப்தக்ரிய பரப்ரஹ்மம் ஸ்வரூபியாகையால் கர்மங்களற்றவர். அவரை விடச் சுத்தன் வேறு ஒருவருமில்லை. அஹங்காரமற்றவர் லோகமரியாதையை கெடுக்காதவர். ஆத்ம நிஷ்டனுக்குக் கர்மவித்யை உபதேசிப்பது எப்படி உசிதமன்றோ அப்படி தேவதேவராகிய பகவானுக்கு மனுஷ்ய ஸ்திரீயாகிய ஸதியைக் கொடுப்பது தகுதியில்லை என்று இஷ்டப்படவில்லை, பயித்தியங் கொண்டவன் போல என்றதால் உண்மையில் பயித்தியங் கொண்டவரல்ல. மயானத்தில் வஸிப்பது முதலியவை வைராக்யத்தைக் காண்பிப்பதேயாம், அசிவன் –இவரை விட மங்கள ஸ்வபாவமுள்ளவர் வேறொருவருமில்லை. அமத்த என்றபதம் பிரிப்பதால் மதமில்லாதவனென்று,

அர்த்தம், தமோ குண –தாழ்ந்தவர்கள் இடத்திலும் மிகுந்த பிரீதியுள்ளவர் என்ற மேலான குணம் காட்டப்பட்டது. அதிபதி மூலத்தில் பதி என்றிருப்பதால் அவர்களுடைய தோஷங்களை நீக்கிக் காப்பாற்று கிறவர் என்று கருத்து சௌசகெட்டவர்களுக்கும் புத்தியை உபதேசிப்பவர். தூர்ப்புத்தி– துஷ்டர்களி டத்திலும் "இவர் நம்மால் காப்பாற்றக்கூடியவர்கள்" என்ற புத்தியுள்ளவர் தூண்டுதலால் –இவருடைய உண்மையையறியாத பிராகிருத ஜனங்கள் "அயோக்யனுக்குப் பெண்ணைத் தக்ஷன் கொடுத்தான்" என்று சொல்வார்களே என்ற பயத்தை விட்டுச் சிவனை மணப்பிள்ளையாக அடைந்தேன் ஸ்ரீத, அர்த்தவாதத்தால் புஷ்பிணீயென்று மூலத்திலி ருப்பதால் வேதமாகிய விருக்ஷத்திற்கு ஸ்வர்க்கம் முதலியவை புஷ்பங்கள். மோக்ஷமே பலன். புஷ்பங்களைக் கண்டு அவைகளில் ஆசைப்பட்டுப் பிரமித்து அதன் பலனாகிய மோக்ஷத்தை விரும்பாத வர்களென்று அர்த்தம் விஜ. எல்லாவற்றையும் வெங்காயம் முதலியவைகள்ள விஜ.

அத்தியாயம்–3

ஸதியைப் பரமசிவன் யாகத்திற்குப் போகவேண்டாமென்றது

1–14 மணப்பிள்ளையாகிய பரமசிவனும், மாமனாராகிய தக்ஷரும் ஒருவருக்கொருவர் துவேஷ புத்தியுடன் வெகுகாலத்தைக் கழித்தார்கள். எப்பொழுது ப்ரஹ்மதேவர் ஸகல பிரஜாபதிகளுக்கும் அதிபதியாகத் தக்ஷருக்கு அபிஷேகஞ் செய்தாரோ, அப்பொழுது தக்ஷருக்குக் கர்வம் உண்டாயிற்று. (அதனால்தான் பரமசிவனைத் துவேஷித்தாரென்று கருத்து) அந்தத் தக்ஷ ப்ரஜாபதி ப்ரஹ்மிஷ்டர்களான ஈச்வரன் முதலியவர்களை அவமதித்து (பரமசிவனையும் அவரை அனுஸரித்தவர்களையும் அழைக்காமலும், பரமசிவனுக்குப் பாகம் கொடாமலும்) வாஜபேயஞ் செய்து 'ப்ரஹஸ்பதி ஸவம்' என்ற ச்ரேஷ்டமாகிய யாகத்தைச் செய்யவாரம்பித்தார். அந்த யாகத்தில் ஸகல ப்ரஹ்ம ரிஷிகளும், பிதுருக்களும், தேவரிஷிகளும், தேவதைகளும், அவர்களுடைய பத்தினிகளும் பூஜிக்கப்பட்டார்கள். இப்படி தக்ஷருடைய யாகத்தில் அவரால் பூஜிக்கப்பட்டு ஆகாசத்தில் செல்லும் தேவர்கள் தக்ஷருடைய யாகத்தைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள். ஸதி தேவியானவள் அதனைக் கேட்டாள். கைலாஸத்தில் தன்னுடைய கிருஹத்தின் ஸமீபத்தில் பல திக்குகளிலிருந்து செல்லும் கந்தர்வ ஸ்திரீகளையும் பார்த்தாள். அவர்கள் தங்கள் தங்கள் பர்த்தாவுடன் விமானத்தின் மீதேறி, நல்ல வஸ்திரத்தை யுடுத்திக் கொண்டு, ரத்னமயமான பதக்கங்களால் ப்ராகாசிக்கும் கழுத்துள்ளவராகவும்,

ப்ரகாசிக்கும் குண்டலங்களுள்ளவர்களாகவும் இருந்தார்கள். அப்பொழுது ஸதியானவள் தன்னுடைய பர்த்தாவாகிய பரமசிவனை நோக்கி மிகுந்த ஆசையுடன், "ஓ பரமசிவ! உம்முடைய மாமனாராகிய தக்ஷ பிரஜாபதியானவர் இப்பொழுது யாகஞ் செய்கிறாரல்லவா? தேவதைகளெல்லோரும் போகிறார் கள். உமக்கு இஷ்டமிருந்தால் நாமும் போவோம். என்னுடைய ஸஹோதரிகள் தங்கள் தங்கள் புருஷர் களுடன் அவ்விடம் வந்திருப்பார்கள். உம்முடன் அவ்விடம் சென்று என்னுடைய தாய் தந்தைகளால் கொடுக்கப்படும் ஸன்மானத்தை யடைய விரும்புகிறேன். மேலும் என்னுடைய சகோதரிகளையும் என்னுடைய தாயாரையும் பார்த்து வெகுநாளாகி விட்டது. என்னுடைய தாயார் என்னைப் பார்க்கவேண்டும் என்ற விருப்பமுள்ளவளாக இருப்பாள். ஓ எல்லாருக்கும் ஸுகத்தைக் கொடுப்பவரே! செய்யப்படும் யாகமானது மிகவும் சிறந்தது. ஆனதால் அவர்களையும், யாகத்தையும் (நாட்டப்படும் யூபத்தையென்று சிலர்) பார்க்க விரும்புகிறேன். ஓ ஜனனமற்றவரே! முக்குண ஸ்வரூபமும்; ஆச்சரியமுமாகிய இந்தப் ப்ரபஞ்சமானது உம்முடைய மாயையால் உம்மிடத்தில் செய்யப்பட்டு ப்ரகாசிக்கிறது. (ஆனதால் யாகத்தைப் பார்க்க வேண்டுமென்ற குதூஹலம் உமக்கில்லை.) ஆனாலும் நான் ஸ்திரீயல்லவா? உம்முடைய உண்மையை நான் அறியாதவள். ஆனதால் தீனையாக இருக்கிறேன். ஓ ஸம்ஸார ஸம்பந்தமற்ற பந்துக்களல்லாத மற்ற ஸ்திரீகள் கூடத் தங்கள் தங்கள் புருஷர்களுடன் கூட்டமாகச் செல்லுகிறார்கள். பாரும். ஹம்ஸம்போல் வெண்மை நிறமுள்ள அவர்களுடைய விமானங்களால் ஆகாசம் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. ஓ தேவசிரேஷ்ட,

பிறந்த வீட்டில் நடக்கும் உத்ஸவத்தைக் கேட்டுப் பெண்ணின் சரீரமானது அவ்விடம் போகவேண்டும் என்று விரும்பாமலிருக்குமா? பர்த்தாவினுடைய வீட்டிற்கும், ஆசாரியருடைய கிருஹத்திற்கும், மித்திரர்களுடைய கிருஹத்திற்கும் அவர்களால் அழைக்கப்படாமலிருந்தாலும் போகலாம். ஓ தேவ! நீர் என்னிடத்தில் மிகுந்த கருணைவைத்து எனக்குப் பாதி சரீரத்தைக் கொடுத்தீரல்லவா? அப்பேர்ப்பட்ட நீர் என்னுடைய எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும்" என்று மிகுந்த குதூஹலத்துடன் ப்ரார்த்தித்தாள்.

15–25 அதனைக் கேட்ட பகவான் ஸதிதேவியை நோக்கி, "ஓ நல்ல ஸ்வாவமுள்ளவளே 'பந்துக்கள் உடைய கிருஹத்திற்கு அழைக்காமலேயே போகலாம்' என்பது ஸரியானதே. ஆனாலும் அந்தப் பந்துக்கள் தங்களுடைய தேஹம் முதலியவைகளில் மிகுந்த அபிமானம் வைத்து (தங்களைச் சிறந்தவர்களாக நினைத்து) அதனால் மதித்துக் கோபங்கொண்டு நம்மிடத்தில் தோஷத்தை ஆரோபிக்காமல் இருந்தால் நாம் அவர்களுடைய வீட்டில் நடக்கும் உத்ஸவங்களைப் பார்க்கப் போகலாம். மேலும் வித்யை, தபஸ், பணம், அழகான தேஹம், யௌவனம், நல்ல குலம் ஆகிய இவைகளால் ஸாதுக்களுக்கு ஸத்குணங்கள் விருத்தி யாகும். துஷ்டர்களுக்கு மேற்கண்டவைகள் தோஷங் களாகின்றன. அவைகளால் விவேகம் கெடுக்கப் படுகிறது. அதனால் கர்வத்தை (நான் வித்வான். நல்ல குலத்தில் பிறந்தவன் என்ற அபிமானத்தை) அடைந்து ஜனங்கள் துராலோசனையுள்ளவர்களாகிப் பெரியோர்களுடைய (யோக்யதையை) பார்க்கிறதில்லை. ஆனதால் நிலையில்லாத சித்தமுள்ளவர்களான

மேற்காட்டியபடியுள்ள பந்துக்களுடைய வீட்டிற்குப் போகக்கூடாது. அவர்கள் புருவ நெரித்தலுள்ள பார்வையால் தங்கள் கிருஹத்திற்கு வந்த பந்துக்களைப் பார்க்கிறார்கள். வக்கிரவ புத்தியுள்ள வார்த்தைகளைக் கேட்பதால் மிகுந்த வருத்தம் உண்டாகிறது. அவ்வளவு துக்கம் சத்துருக்களாலும், அம்புகளாலும் உண்டாகிறதில்லை, (பந்துக்கள் அவமதித்தால் அந்தத் துக்கம் ஸஹிக்க முடியாதென்று கருத்து), அழகான புருவங்களுள்ளவளே! நீ தக்ஷ ப்ரஜாபதியின் பெண். பிதாவிற்கு உன்னிடம் மிகுந்த பிரீதியுண்டு. இவையெல்லாம் எனக்குத் தெரியும். ஆனாலும் நீ என்னை ஆச்ரயித்திருப்பதாலும், என்னிடத்தில் தக்ஷன் விரோதபுத்தி யுள்ளவனானதாலும், பிதாவாகிய அவன் உன்னைக் கௌரவப்படுத்த மாட்டான், அஸுரர்கள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவைத் துவேஷிப்பது போல் அஹங்காரமற்றவர்களாகிய ஸாதுக்களுடைய ஐசுவர்யத்தைப் பார்த்து; துஷ்டர்கள் அதை அடைய விரும்பியும், அந்தப் பதம் கிடைக்காததால் மனவருத்தம் அடைந்து அவர்களைத் துவேஷிக்கிறார்கள். (என்னிடம் தக்ஷன் விரோதம் வைத்திருப்பதற்கு இதுவே காரணம்.) ஓ அழகான இடுப்புள்ளவளே! ஸாது ஒருவரையொருவர் வணங்குவது, நமஸ்கரிப்பது, எதிர்கொண்டழைப்பது முதலியவைகளைச் செய்கிறது என்பது வழக்கமானாலும், அது அக்ஞர்களால் செய்யக் கூடியது. ஞானிகள் ப்ராக்ஞனுமாகிய பரமபுருஷனை உத்தேசித்து மனத்தால் நமஸ்காரம் முதலியவைகளைச் செய்வார்கள். தேஹத்தில் அபிமானமுள்ளவர்களை உத்தேசித்துச் செய்கிறது இல்லை. (ஆனதால் தக்ஷன் வந்த காலத்தில் மனத்தால் பரமபுருஷனை உத்தேசித்து நமஸ்காரம்

செய்தேனென்று கருத்து.) வஸுதேவரென்ற சப்தத்திற்கு ஸத்வமென்று அர்த்தம் (புண்யத்தால் ப்ரகாசிப்பது) அதில் ப்ரகாசிப்பவர் வாஸுதேவர் எனப்படுகிறார். அவர் ஆவரண மற்றவர். இந்திரியங்கள் அடங்கிய போது ப்ரகாசிப்பவர். இந்திரியங்களுக்குப் புலப்படாத அப்பேர்ப்பட்ட பகவானை எப்பொழுதும் மனத்தால் நமஸ்காரம் செய்து கொண்டிருக்கிறேன். (அதிதிகள் வரும் பொழுதுதான் நமஸ்கரிக்கிறேன் என்பதில்லை யென்று கருத்து) ஓ சிறந்த தொடைகள் உள்ளவளே! தக்ஷன் உன்னுடைய சரீரத்தை யுண்டுபண்ணின பிதாவானாலும் அவனும், அவனை யனுசரித்தவர்களும் உன்னால் பார்க்கடியவர்களல்ல. ஏன் என்றால் நான் யாகத்திற்குப் போயிருக்கும்போது குற்றஞ் செய்யாதவனாகிய என்னை அதிக்ஷேப வார்த்தை சொல்லி அவமானப்படுத்தினான். எனக்கு விரோதியாக இருக்கிறான். பல பேர்களால் கௌரவப்படுத்தப் பட்டவனுக்குப் பந்துக்களிடம் அவமானம் நேர்ந்தால் அவன் மரணமடைய வேண்டியதேயாகும். என்னுடைய வார்த்தையை அதிக்ரமித்து தக்ஷனுடைய யாகத்திற்கு நீ போவாயானால் உனக்கு க்ஷேமமுண்டாக மாட்டாது" என்று சொன்னார். அவனால் உண்டுபண்ணப்பட்ட சரீரத்தை விட்டு விடுவாய். திரும்பி வரமாட்டா யென்று கருத்து.)

அத்தியாயம்–4

ஸதிதேவி சரீரத்தை விட்டது

1–5. சங்கரன் ஸதியை நோக்கி இம்மாதிரிச் சொல்லி "இவள் பிறந்த வீட்டிற்கு போனாலும், போகாமல் இருந்தாலும் உயிரை விட்டபோகிறாள்!" என்று யோசித்து மௌனமானார். அதனைக் கேட்டும், ஸதியானவள் பந்துக்களைப் பார்க்கவேண்டுமென்ற விருப்பமுள்ளவளாகி, "பரமசிவன் பலாத்காரமாகத் தடுப்பாரோ, அல்லது உத்தரவு கொடுப்பாரோ" என்று ஸந்தேஹப்பட்டு வெளியில் வருகிறதும் உள்ளே போகிறதுமாக இருந்தாள். அப்பொழுது அந்தப் பவானியானவள், [பரமசிவனுடைய பத்னி"] பந்துக்களை பார்க்கவேண்டுமென்ற எண்ணத்திற்குத் தடையுண்டானதால் மனவருத்தமடைந்து, கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு கோபத்தால் நடுக்கம் உற்ற சரீரமுள்ளவளாகி, நிகரற்ற புருஷனாகிய சிவனை எரிப்பவள் போலக் கடுமையாகப் பார்த்தாள். பின்னும் அவள் பெருமூச்சு விட்டாள்: துக்கத்தாலும் கோபத்தாலும் அவளுடைய ஹ்ருதயம் வருத்தமடைந்தது; மேலும் ஸ்திரீ ஸ்வபாவத்தால் மூடபுத்தியுள்ளவளாகி தன்னிடத்தில தம்முடைய பாதி சரீரத்தைத் தனக்குக் கொடுத்தவரும், ஸாதுக்களுக்குப் பிரியருமான பரமசிவனைவிட்டுத் தாய் தந்தைகளுடைய வீட்டிற்குச் சென்றாள். இப்படித் தனியாக வேகமாகச் செல்லும் ஸதிதேவியை நோக்கிப் பரமசிவனுடைய கணங்களாகிய மணிமான், மதன் முதலிய அநேக பார்ஷத கணங்கள் விருஷபத்தை முன்னடத்தி அவள் பின்சென்று அவளை விருஷபத்தின் மீதேற்றி

வைத்து, சாரிகைகள் (நாணத்தான்குருவி). பந்து, கண்ணாடி, தாமரை மலர், வெண்குடை, சாமரங்கள், புஷ்பமாலை, கானத்திற்கு ஸாதனங்களாகிய துந்துபி சங்கம், புல்லாங்குழல மஹாராஜ விபூதிகளால் அவளை உபசரித்துக்கொண்டு பயமற்றவர்களாகச் அவள் பின் சென்றார்கள்.

6–23. இப்படி ஸதியானவள் தக்ஷருடைய யாகசாலைக்கு வந்தாள். அந்த யாகசாலையானது வேத சப்தத்தால் ப்ரகாசித்தது, பசுக்கள் அவ்விடத்தில் கொல்லப்படுகின்றன. அநேக ப்ரஹ்மரிஷிகளும் அவ்விடத்திலிருக்கிறார்கள், மண்ணினாலும், மரத்தாலும், இரும்பினாலும், ஸ்வர்ணத்தாலும், தர்ப்பத்தாலும், தோலினாலும் செய்யப்பட்ட பாத்திரங்களிருக்கின்றன. அந்த யாகசாலைக்கு வந்த ஸதிதேவியை அங்கிருந்தவர்களில் ஒருவரும் ஆதரிக்கவில்லை. ஏனென்றால் தக்ஷரிடம் பயந்திருந்தார்கள். ஆனால் அவருடைய ஸஹோதரிகளும், தாயாரும் இவளைக் கண்டு மிகுந்த ப்ரீதியுடன் ஆலிங்கனஞ் செய்துகொண்டார்கள். ஆனந்தபாஷ்பத்தைப் பெருக்கினார்கள். அப்படியும் ஸதியானவள் தகப்பனார் தன்னை ஆதரிக்காததால் ஸஹோதரி முதலியவர்களுடைய வார்த்தையாலும் அவர்கள் செய்யும் உபசாரத்தாலும் ஸந்தோஷம் அடையவில்லை. கொடுத்த ஆஸனத்திலும் உட்கார வில்லை. மேலும் அவள் ருத்ரனுக்குப் பாகம் கொடாமல் யாகம் நடத்தப்படுவதைப் பார்த்து, தன் பிதாவாகிய தக்ஷன் பகவானை அவமதித்ததையும் நினைத்து கோபங்கொண்டாள். அப்பொழுது ஸகல லோகங்களையும் எரிக்கிறவள்போல் கோபாக்கினியால் ஜ்வலித்தாள், அவளைப் பார்த்துப் கணங்கள்

தக்ஷனைக் கொல்வதற்காக யத்தனித்தார்கள். தேவியானவள் அவர்களைத் தடுத்துப் பரமசிவனிடம் த்வேஷமுள்ளவனும், கர்மங்களைச் செய்வதால் கர்வமடைந்தவனுமாகிய தக்ஷனை நோக்கி, எல்லாரும் கேட்டுக்கொண்டிருக்கும்போது, எவரைக் காட்டிலும் மேலானவன் லோகத்திலொருவனுமில்லையோ, எவருக்கு லோகத்தில் பிரியனில்லையோ, எவருக்குத் த்வேஷமில்லையோ, எவரிடத்தில் ஸகல பிராணிகளும் பிரியப்படுவார்களோ, அந்த எல்லாவற்றிற்கும் காரணராக இருப்பவரும், விரோதமற்றவருமான பகவானிடத்தில் உன்னைத் தவிர எவன்தான் விரோத புத்தியை அடைவான்? (ஒருவனும் பகவானைத் துவேஷிக்க மாட்டானென்று கருத்து.)

ஓ ப்ராஹ்மண! ஸாதுக்கள் பிறருடைய குணங்களைக் க்ரஹிப்பார்களேயொழியத் தோஷத்தைக் க்ரஹிக்கிறதில்லை. உம்மைப் போன்றவர்கள் (அஸூயை உள்ளவர்கள்) தோஷத்தைக் க்ரஹிப்பார்களே யொழியக் குணத்தை க்ரஹிக்கிறதில்லை. தோஷத்தைக் க்ரஹிக்காமலேயே ஸ்வல்பமான குணங்களையும் அதிகமாக விஸ்தரிப்பவர்கள் மிகவும் உத்தமர்கள் எனப்படுகிறார்கள் (மஹான்களுக்குள் சிறந்தவர்கள்). நீ தோஷத்தையே ஆரோபித்தாய். ஆனால் இது ஆச்சரியமல்ல. மரிக்கும் ஸ்வபாவமுள்ளதாகிய சரீரத்தையே ஆத்மாவென்று சொல்லுகிற அஸத்துக் களுக்கு எப்பொழுதும் மஹத்துக்களை நிந்திப்பது ஸஹஜமேயாகும். அது மஹா புருஷர்களுடைய பாதத்தில் ஒட்டிய தூளிகளால் நாசஞ் செய்யப்பட்ட தேஜஸுள்ளவர்களிடத்தில் அதுவே க்ஷேமத்திற்குக் காரணமாகிறது. (மஹாபுருஷர்கள் தங்களை

நிந்திப்பவனைப் பார்த்து ஸஹித்திருந்தாலும் அவர்களுடைய பாததூளி" அதை ஸஹியாமல் அந்த அஸத்தை நிக்கிரஹிக்கிறது ஆகையால் க்ஷேமத்திற்கு ஹேதுவாகிறது) இரண்டு அக்ஷரங்களுள்ள (சிவ) எவருடைய திவ்ய நாமத்தைப் பேச்சுடன் பேச்சாக ஒரு தடவை உச்சரித்தால் ஸகல பாவங்களும் உடனே நிவர்த்தியாகின்றனவோ அப்பேர்ப்பட்ட பரமசிவனைப் பாபியான நீ த்வேஷிக்கிறாய். ஆச்சரியம்! அவர் பரிசுத்தமான கீர்த்தியுள்ளவர். அவருடைய சரிதங்கள் பரிசுத்தியை உண்டுபண்ணக்கூடியவைகள். அவருடைய உத்தரவை மீறக்கூடாது. ப்ரஹ்மானந்தமாகிய மதுவை அடைய விரும்பியவர்கள் எவருடைய பாதமாகிய தாமரை மலரை மனதாகிய வண்டுகளால் ஸேவிக்கிறார்களோ, எவர் பக்தர்கள் விரும்பியதை அவரவர்களுடைய இஷ்டப்படி கொடுக்கிறாரோ, அந்த லோக பந்துவான பகவானுக்கு நீ துரோகம் செய்கிறாய். ப்ரஹ்மா முதலிய தேவர்கள் அந்தப் பகவானுடைய பாதத்தின் நிர்மால்யத்தைத் தலையில் வஹிக்கிறார்கள். அவர்கள் பகவான் ஜடைகளை விரித்துக்கொண்டு மயானத்தில் வஸிப்பதையும், அங்கிருக்கும் மாலை, சாம்பல், கபாலம் ஆகிய இவை களை ஆபரணங்களாகத் தரிப்பதையும் அறியார் களோ? உனக்குத்தான் தெரியுமோ? மேலும் தர்மத்தைக் காப்பாற்றுகிறவராகிய பகவானைப் பயமில்லாமல் எவர்கள் நிந்திக்கிறார்களோ அவர்களை சிக்ஷிக்கச் சக்தியுள்ளவனானால், பலாத்காரமாக அவருடைய நாக்கைத் துண்டிக்கவேண்டும். சக்தியற்ற வனானால், இரு கைகளால் காதுகளை மறைத்துக் கொண்டு வெளியே போகவேண்டும். அல்லது தானாவது ப்ராணனை விட்டுவிடவேண்டும். இதுவே

இவ்விஷயத்தில் தர்மமெனப்படுகிறது. (பகவன் நிந்தையைக் கேட்டு ஸஹிக்கக்கூடாதென்று கருத்து) ஆதலால் பரமசிவனை நிந்தித்தபடியால், உன்னால் உண்டுபண்ணப்பட்டதாகிய இந்த சரீரத்தை இனி நான் வைத்துக்கொள்ளுகிறதில்லை. மோஹத்தால் அசுத்தமாகிய அன்னத்தை புஜித்தாலும் அதைக் கக்கிவிடுவதே சுத்திக்கு காரணமென்று சொல்கிறார்கள். ஆத்மாவிலேயே ரமித்துக்கொண்டிருக்கும மனமானது வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் விதி, நிஷேதங்களில் செல்லுகிறதில்லை. தேவர்கள் ஆகாயத்தில் நடக்கிறது என்றும் மனிதர்கள் பூமியில் நடக்கிறதென்று ஏற்பட்டிருப்பது போல் எப்படியோ,அப்படி போல் அவரவர்களுக்கென்று ஏற்பட்டிருக்கும் தர்மத்தில் இருக்கவேண்டுமே யல்லாமல் அந்நியனை நிந்திக்க கூடாது. அக்நிஹோத்ரம் முதலிய கர்மங்களும், நிவிருத்தி மார்க்கங்களான சமம், தமம், முதலியவை களும் வேதத்தால் சொல்லப்பட்டிருப்பதால் அனுஷ் டிக்கக் கூடியவைகளேயாம். இரண்டு மார்க்கங்களும் ஒன்றுக்கொன்று விருத்தங்களாகையால் ஒரே காலத்தில் ஒரே புருஷனால் அனுஷ்டிக்க முடியாதவைகளாக இருக்கின்றன. ஆனதுபற்றி ஆசையுள்ளவன் கர்ம மார்க்கத்தையும், வைராக்கியமுள்ளவன் நிவிருத்தி மார்க்கத்தையும் அனுஷ்டிக்க வேண்டுமென்ற வியவஸ்தை வேதத்திலேயே ஏற்பட்டிருக்கிறது. பிரஹ்மத்தினிடத்தில் இரண்டு வகையான மார்க்கானுஷ்டானமும் ஸம்பந்திக்கிறதில்லை. (கர்மிக்கு நிவிருத்தி மார்க்கத்தை அனுஷ்டிக்காததாலும், சாந்தனுக்குக் கர்மத்தை அனுஷ்டிக்காததாலும் எப்படி தோஷமில்லையோ அப்படியே பகவானுக்கு இரண்டையும் அனுஷ்டிக்காததால் குற்றம் இல்லை

என்று கருத்து) ஓ பிதாவாகிய தக்ஷ! எங்களால் அனுபவிக்கப்படும் அணிமாதிகள் காரணமற்றவைகள் (நினைத்தமாத்திரத்தில் கிடைப்பவைகள்) ப்ரஹ்ம வித்துக்களால் அடையப்பட்டவைகள். இவை உனக்கெட்டாதவை. உன்னுடைய ஸ்மிருதிகள் யாகசாலையில் கிடைக்கக்கூடியவைகள். அந்த அன்னத்தையும் புஜித்தவர்களால் ஸ்துதிக்கப்பட்ட வைகள் (பரமசிவன் தரித்திரன் நான் ஐசுவரியம் உள்ளவனென்ற கர்வங் கொள்ளவேண்டாமென்று கருத்து). பரமசிவனுக்கு அபராதஞ் செய்தவனாகிய உன்னுடைய தேஹத்தாலுண்டான இந்தக் கெட்ட சரீரத்தால் என்ன பயன்? மஹாபுருஷனை நிந்தித் தவனால் உண்டுபண்ணப்பட்டதாகையால் இது நிந்திக்கக்கூடியது. கெட்டவனாகிய உன்னுடைய ஸம்பந்தத்தால் எனக்கும் வெட்கமுண்டாகிறது. வேடிக்கையாகப் பேசிக்கொள்ளும்போது விருஷப சத்வஜாராகிய பகவான் என்னை, "ஓ தாக்ஷாயணி" (தக்ஷனுடைய பெண்) என்று அழைத்து உன்னுடைய பெயரைச் சொல்வார். அப்பொழுது அதனைக் கேட்டுப் புன்னகையற்றவளாகி மிகுந்த துக்கத்தை யடைவேன்! ஆனதால் உன்னுடைய சரீரத்திலிருந்து உண்டான இந்தப் பிணத்துக்கொப்பான தேஹத்தை விட்டு விடுவேன்" என்று சொன்னாள்

24–30. காமன் முதலிய சத்ருக்களை அடக்கிய ஓ விதுரரே! இம்மாதிரி. யாகசாலையில் பட்டு வஸ்திரமுடுத்திய ஸதியானவள் தக்ஷனை நோக்கி சொல்லி ஆசமனஞ்செய்து வடக்கு முகமாகப் பூமியில் உட்கார்ந்து மௌனமாகக் கண்களை மூடிக் கொண்டு யோகத்தைச் செய்தாள். எப்படியெனில்,

நல்ல ஆஸனத்தில் உட்கார்ந்து பிராண வாயுவையும் அபான வாயுவையும் நாபியில் அடக்கி, அங்கிருந்து உதான வாயுவைக் கிளப்பி, மெள்ள மெள்ள ஹ்ருதயத்தில் புத்தியுடன் நிறுத்தி, அடக்கியிருந்த கண்டத்தின் வழியாகப் புருவங்களுடைய மத்திய பாகத்திற்குக் கொண்டு வந்தாள். இப்படி குற்றமற்ற வளாகிய அந்த ஸதியானவள், மஹான்களைக் காட்டிலும் மிகவும் மஹானாகிய மஹாதேவனால் மடியில் ப்ரீதியுடன் வைத்துக்கொள்ளப் பட்ட சரீரத்தில் வாயுவாகிய அக்கினியைத் தரித்தாள். பின்பு அவள் ஜகத்குருவாகிய பர்த்தாவினுடைய பாதாரவிந்தத்தையே தியானஞ்செய்து அதனால் சுத்தையாகிப் பர்த்தாவையே தர்சித்தாள். வேறொரு வரையும் பார்க்கவில்லை. ஸமாதியாகிய அக்கினியால் அவளுடைய தேஹமானது எரிக்கப்பட்டு ஜ்வலித்தது, தக்ஷனிடத்தில் கோபத்தால் சரீரத்தை விட்டாள்; ஆகாசத்திலிருப்பவர்களுக்கும் பூமியிலிருப்பவர்களுக்கும் அது ஒரு ஆச்சரியமாக இருந்தது. எல்லாராலும் பூஜிக்கக்கூடியவராகிய பரமசிவனுடைய பத்தினி ஆகிய ஸதியானவள் தக்ஷனால் கோபமுண்டு பண்ணப்பட்டு பிராணனை விட்டாள். 'ஹா' 'ஹா' என்று எல்லோரும் உரக்கச் சொன்னதுமல்லாமல் 'இந்தத் தக்ஷனுடைய துஷ்டத்தனம் மிகவும் வியக்கிக் கூடியது. லோகத்திலுள்ள சரம் (அசையும் பொருள்) அசரம் [அசையாப் பொருள்) யாவும் இவனுடைய பிரஜைகளல்லவா ? (எல்லாரிடத்திலும் இவனுக்குப் பொதுவாகவே ப்ரியமிருக்கவேண்டியது) ஸதியோ இவனுக்குப் பெண். கௌரவப்படுத்தப்பட வேண்டியவள். அப்படியிருக்க அவள் உயிரிழக்கும்படி அவமதித்தாள். பின்னுமவள் மரிக்க யத்தனிக்கும்

பொழுதும் தடுக்கவில்லை. பரமசிவனைத்வேஷித்தவன். கெட்ட அபிமானமுள்ளவன். ப்ராஹ்மணர்களில் தாழ்ந்தவன். இவனுக்குமிகுந்த அபகீர்த்தியுண்டாகப் போகிறது" என்றும் சொன்னார்கள்.

31. இம்மாதிரியான ஜனங்களுடைய வார்த்தையைக் கேட்டும். ஸதிதேவி பிராணனை விட்டதைப் பார்த்து பார்ஷத கணங்கள் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு தக்ஷனைக். கொல்வதற்காக ஓடிவந்தார்கள்.

32–34. அதனைப்பார்த்து அத்வர்யுவாகிய ப்ருகுவானவர் யாக விரோதிகளை நாஸஞ்செய்யக்கூடிய மந்திரங்களை உச்சரித்து, தக்ஷிணாக்கினியில் ஹோமஞ் செய்தார். உடனே அக்கினியிலிருந்து ரிபுக்களென்ற தேவர்கள் உண்டானார்கள். அவர்கள் துரஸ்ஸினால் ஸோமத்தை அடைந்தவர்கள். அவர்கள் குறைக் கொள்ளிகளாகிய ஆயுதத்தால் பார்ஷதர்களை எரிக்க, அவர்கள் ப்ரகாசிக்கும் ப்ரஹ்ம தேஜஸ்ஸைக்குப் பயந்து குஹ்யகர்களுடன் ஓடினார்கள்.

இந்த நான்காவது அத்தியாயத்தில் 23 வது ஸுலோகத்துடன் நான்காவது அத்தியாயம் முடிந்ததாக வும், மற்ற ஸுலோகங்கள் ஐந்தாவதென்றும். விஜயத் வஜீய வ்யாக்யானத்தில் கணக்கிடப் பட்டிருக்கிறது.)

அத்தியாயம்–5

தக்ஷ வதம்

1–4 தக்ஷனால் அவமதிக்கப்பட்டு ஸதிதேவி மரணமடைந்ததையும், பார்ஷத கணங்கள் அந்த யாகத்திலுண்டான தேவர்களால் துரத்தப்பட்டதையும், பகவானாகிய பரமசிவன் நாரதர் முகமாகத் தெரிந்து கொண்டு மிகவும் கோபங் கொண்டார்.. இரண்டு உதடுகளையும் கடித்துக் கொண்டார். மின்னல் போலும், அக்கினிஜ்வாலைகள் போலும் பிரகாசிக்கிற ஜடையைத் தூக்கிக் கர்ஜித்துப் பூமியில் அடித்தார். அதிலிருந்து பரமசிவனுடைய அம்சமுள்ள வீரபத்திரர் உண்டானார். அவர் பெரியதான சரீரமுள்ளவர். ஆகாசம் வரையில் வளர்ந்தவர். ஆயிரம் கைகள் உள்ளவர். மேகம் போன்ற காந்தியுள்ளவர். மூன்று சூர்யர்கள் போன்ற மூன்று கண்கள் உள்ளவர் பயங்கரங்களான சிங்கப் பற்களுள்ளவர். ஜ்வலிக்கும் அக்கினி போன்ற தலைமயிர்களுள்ளவர். கபால மாலையைத் தரித்தவர். பலவகையான ஆயுதங்களைத் தரித்தவர். அவர் பகவானை நோக்கி 'என்னால் உமக்குச் செய்யப் படவேண்டியது என்ன' என்று கைகூப்பிக் கேட்டார். அதனைக் கேட்ட பகவான் அந்தப் பூதத்தை நோக்கி, நீ என்னுடைய அம்சம் உள்ளவன். என்னுடைய படர்களுக்கு அதிபதி. ஆனதால் தக்ஷனையும் அவனுடைய யக்ஞத்தையும் நாசஞ்செய்" என்று ஆக்ஞாபித்தார்.

5–8 இப்படி கோபங்கொண்ட பரமசிவனால் ஆக்ஞாபிக்கப் பெற்ற வீரபத்திரர், தேவதேவரும்,

விபுவுமாகிய பகவானைப் பிரதக்ஷிணஞ் செய்து தம்மை மஹாபல முள்ளவராக நினைத்துக் கொண்டார். பின்னுமந்த வீரபத்திரர் ஜகத்தை ஸம்ஹரிக்கும் அந்தகனையும் நாசஞ் செய்யக்கூடிய சூலாயுதத்தை யெடுத்து, பாதஸரம் முதலிய ஆபரணங்கள் சப்திக்கும் படி தக்ஷனுடைய யாகசாலைக்குச் சென்றார். பகவானுடைய பார்ஷத கணங்களும் பயங்கரமாகக் கர்ஜித்துக் கொண்டு அவர்பின் சென்றார்கள். அப்பொழுது யஜமானன் ஸதஸ்யர்கள் ரித்விக்குகள், பிராம்மணர்கள், அவர்களுடைய பத்தினிகள் ஆகிய எல்லாரும் வடக்குத் திக்கில் உயரக் கிளம்பும் தூளியைப் பார்த்து, 'இதென்ன இருள்' எங்கிருந்து உண்டாயிற்று? காற்று வீசவில்லை; (உத்பாதத் தாலுண்டானதல்ல) பிராசீனபர்ஹிஸ் என்ற உக்கிரதண்டனாகிய அரசனுடைய ராஜ்யகாலம் ஆகியதால் திருடர்களில்லை. பசுக்களும் ஓட்டப்பட வில்லை. எதனால் தூளி உண்டாயிருக்கிறது? இப்பொழுது உலகத்திற்குப் பிரளயம் வரப்போகிறதா? என்ன, என்று யோசித்தார்கள்.

9–11 தக்ஷனுடைய பத்தினியாகிய பிரஸூதி முதலிய ஸ்திரீகள், "இந்தப் பிரஜாபதியான தக்ஷன் மற்ற பெண்கள் பார்த்திருக்கும்போது குற்றமற்றவள் ஆகிய ஸதி உயிரையிழக்கும்படி அவளை அவமானப் படுத்தினாரே, பிரளய காலத்தில் ஜடைகளை விரித்துக் கொண்டு, தம்முடைய சூலமாகிய ஊசியில் திக் கஜங்களைக் கோத்தும், தூக்கிக் கொண்டும் அட்ட ஹாஸமாக கர்ஜித்ததால் திக்கை வெடிக்கச் செய்து கொண்டும் நர்த்தனஞ் செய்கிறாரோ, அப்பேர்ப்பட்ட ஸஹிக்க முடியாத தேஜஸுள்ள பகவானைக்

கோபமுள்ளவராகவும் புருவ நெரித்துள்ளவராகவும், பயங்கரங்களாகிய சிங்கப்பற்களால் நட்சத்திரங்களை உயரத் தூக்கியவருமாகவும் செய்த பிரஜாபதியாகிய தட்சருக்கு க்ஷேமம் கிடைக்குமா?" என்று பலவகையாக நடுங்கின மனத்துடன் சொல்லிக் கொண்டார்கள்.

12–26 அதனைக் கேட்ட தக்ஷருக்குப் பயத்தைக் குறிப்பிடக்கூடிய அபசகுனங்கள் ஆகாசத்திலும், பூமியிலும் காணப்பட்டன. ஓ விதுரரே! அதற்குள் அநேக ஆயுதவகைகளுள்ளவர்களும் குட்டையான சரீரமுள்ளவர்களும், சிவந்த நிறமுள்ளவர்களும், பொன்னிறமுள்ளவர்களும், மகரத்தின் வயிறு, முகம் போன்ற முகமுள்ளவர்களுமான பார்ஷதகணங்கள் அந்த யாகசாலையை நான்கு புறத்திலும் சூழ்ந்து கொண்டார்கள். சிலர் யாகசாலையின் பிராக்வம் சத்தை (கிழக்கிலும், மேற்கிலுமிருக்கும் தூண்களின் மீது போடப்பட்டு, கீழ்மேலாகவிருக்கும் காஷ்டம்) முறித்தார்கள். பத்தினிகளிருக்குமிடமான பத்தினி சாலையை (யாகசாலைக்கு முன்னிருக்கும்) ஸதஸ்ஸை யும், அக்னி த்ரசாலையையும், யஜமானனுடைய கிரஹத்தையும், இன்னுஞ் சிலர் யாகசாலையையும், பின்னும் சிலர் யாக பாத்திரங்களையும் நாசஞ் செய்தார்கள்; சில கணங்கள் அக்கினிகளை அணைத் தார்கள்; சிலர் அக்கினிகுண்டங்களில் மூத்திரத்தை விட்டார்கள். சிலர் உத்தரவேதியின் மேகலைகளை அறுத்தார்கள். சிலர் மஹரிஷிகளை உபத்திரவித்தார் கள். சிலர் முனிபத்தினிகளை அதட்டினார்கள்; சிலர் ஓடுகிற ஸபீபத்திலுள்ள தேவர்களைப் பிடித்துக் கொண்டார்கள். மணிமாவென்பவன் பிருகுவைக் கட்டினான்; வீரபத்ரர் பிரஜாபதியைக் கட்டினார்; சண்டீச்வரர் பூஷாயை (ஸூயனை)யும்தத, நந்திகேசு வரர் பனனென்பவரையும் பிடித்துக் கொண்டார்கள்

எல்லா ரித்விக்குகளும், ஸதஸ்யர்களும், மற்ற தேவர்களும் பார்ஷத கணங்களால் எறியப்படும் கற்களால் மிகவும் துன்பமடைந்து பலவகையாக ஓடினார்கள்; பிருகுவானவர் ஸதஸ்ஸில் விசைகளைக் காட்டிக்கொண்டு சிரித்ததால் ஸோமருவத்தை வைத்துக் கொண்டு ஹோமஞ் செய்யும் அவருடைய விசைகளை வீரபத்திரர் பிடுங்கினார்; பகரென்பவர் சிவனைத் தக்ஷன் நிந்திக்கும்போது கண்களால் ஜாடை காட்டியபடியால் அவரைக் கீழே தள்ளி அவருடைய இரண்டு கண்களைப் பிடுங்கினார்; மேலும் தக்ஷன் பகவானை நிந்திக்கும்பொழுது பற்களை வெளியில் தெரியும்படியாகச் சிரித்தவராகிய பூஷா வென்பவருடைய பற்களை வீரபத்திரர் உடைத்தார்.

பின்பு அந்த வீரபத்திரர் தக்ஷனைப் பூமியில் கிடத்தி, அவனுடைய மார்பில் உட்கார்ந்து கூர்மையான கத்தியால் அவனுடைய கழுத்தை வெட்டியும் அது உட்லைவிட்டு வேறாக எடுக்க முடியவில்லை; அப்பொழுது ஆயுதங்களாலும், அஸ்திரங்களாலும் அவனுடைய தோல் வெட்ட முடியாமலிருப்பதைப் பற்றி யோசிக்கலானார். அப்பொழுது அவர் யாகத்தில் பசுக்களை ஆயுதம் இல்லாமலேயே கொல்லும் உபாயத்தை நினைத்துக் கொண்டு தக்ஷனுடைய கண்டத்தைத் திருகி உடலைவிட்டு எடுத்து மிகுந்த கோபத்துடன் தட்சிணாக்கனியில் ஹோமஞ் செய்தார்; பின்னுமவர் அந்த யாகசாலையில் அக்கினியை வைத்துக் கொளுத்திக் கைலாஸஞ் சென்றார். அதைக் கண்ட பூதங்களும், பிரேதங்களும், பிசாசுக்களும் 'நல்லது நல்லது' என்று கொண்டாடினார்கள். மற்றவர்கள் நிந்தித்தார்கள்.

அத்தியாயம்–6

ப்ரஹ்மதேவர் பரமசிவனைப்ரார்த்தித்தது

1–41. பின்பு ருத்ர கணங்களுடைய சூலம். கத்தி, கதை, பரிகம் முத்கரம் ஆகிய ஆயுதங்களால் அடிக்கப்பட்டு அபஜயமடைந்த தேவகணங்கள், வெட்டப்பட்டகைகளும், துண்டிக்கப்பட்டகைகளுமான ஸகல அவயவங்களுள்ளவர்களாகிப் பயந்து ரித்விக்குகளுடனும், ஸதஸ்யர்களுடனும் ப்ரஹ்மதேவரிடம் சென்று அவரை நமஸ்கரித்து எல்லாவற்றையும் தெரிவித்தார்கள். வரும் காரியத்தை அறிந்தே ப்ரஹ்மதேவரும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் தக்ஷனுடைய யாகத்திற்குப் போகவில்லை. ப்ரஹ்மா தேவர்கள் உடைய வார்த்தையைக் கேட்டு அவர்களை நோக்கி, தேஜஸ்வியாகிய புருஷன் குற்றஞ் செய்தாலும், அவருக்கு அபராதஞ் செய்ய விரும்பினாலும் அது பெரும்பாலும் க்ஷேமத்தைக் கொடுக்காது. பெரியோர்கள் குற்றம் செய்யமாட்டார்கள். அப்படிச் செய்தால் நாம் அதனை ஸஹிக்கவேண்டுமேயல்லாமல் வேறொன்றையும் நினைக்கக்கூடாது.) அப்படியிருக்க நீங்கள் யக்ஞ பாகத்தை அவருக்குக் கொடாமல் அலக்ஷ்யஞ் செய்து அவருக்கு அபராதஞ் செய்திருக்கிறீர்கள். ஆனாலும் அந்தப் பகவான் சீக்கிரத்தில் சந்தோஷிக்கும் ஸ்வபாவமுள்ளவர். ஆனதால் தாமரை மலர் போன்ற அவருடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டு அவரைச் சந்தோஷிக்கச் செய்யுங்கள். எவர் கோபங்கொண்டால் லோக பாலர்களுடன் லோகங்கள் நாசமடையுமோ; அந்தப் பகவான் மனைவியை விட்டு பிரிந்திருக்கிறார்.

தக்ஷனுடைய கெட்ட வார்த்தையைக் கேட்டு மனவருத்தம் அடைந்திருக்கிறார். அவரை நீங்கள் யாகத்தின் க்ஷேமத்தை விரும்பியவர்களாகி வேண்டிக்கொள்ளுங்கள். மேலும் சுதந்திரராகிய அவருடைய பல பராக்கிரமங்கள் இவ்வளவென்று எனக்கும் தெரியாது. யக்ஞனுக்கும் தெரியாது (அக்காலத்தில் இந்திரனாக இருந்தவருக்கு யக்ஞனென்று பெயர்). உங்களுக்கும், மற்ற பிராணிகளுக்கும் மஹரிஷிகளுக்கும் தெரியாததேயாம். அப்படியிருக்க அந்த விஷயத்தில் உபாயம் யாரால் சொல்லமுடியும்?' என்று சொல்லி அந்தத் தேவர்கள் உடனும், ப்ரஜாபதிகளுடனும், பித்ருக்களுடனும் கைலாஸ பர்வதம் நோக்கிச் சென்றார். அந்த மலையானது திரிபுர ஸம்ஹாரஞ் செய்து பரமசிவனுக்குப் பிரியமான வாசஸ்தலம். அந்த மலையானது ஓஷதி, தபஸ், மந்திரம், யோகம் ஆகிய இவைகளில் இயற்கையாகவே சித்தியடைந்தவர்களான தேவர்களாலும், கின்னரர்களாலும் கந்தர்வர்களாலும். அப்ஸரஸ்ஸுகளாலும் எக்காலத்திலும் ஆசிரயிக்கப்பெற்றது. பலவகையான தாதுக்களால் அழகாயிருப்பவைகளும், அநேக ரத்னமயமான சிகரங்களாலும். பலவகையான மரங்கள், கொடிகள். குல்மங்கள் ஆகிய இவைகளாலும். தூய்மையான மலையருவிகளாலும், அநேக குகைகளுள்ள தாழ்வரைகளாலும் ப்ரகாசிக்கிறது. ஆனதால் பார்த்தாவுடன் கிரீடிக்கும் ஸித்தமாதகர்களுக்குச் சந்தோஷத்தை உண்டுபண்ணுகிறது. அவ்விடத்தில் மயில்கள் 'கேக,காக என்று ஸ்தித்கின்றன. மதித்த வண்டுகளுடைய மூர்ச்சனை (இராகத்தின் கதி விசேஷம்) கேட்கப்படுகிறது. பின் அவ்விடத்தில் இஷ்டத்தைக் கொடுக்கக் கூடியவைகளான மரங்களிருப்பதாலும், பக்ஷிகள் இனிமையாகச்

சப்திப்பதாலும், மலையானது கையைத் தூக்கிக் கொண்டு ப்ராஹ்மணர்களை அழைப்பது போலிருக் கிறது. யானைகள் ஓடிக்கொண்டிருப்பதால் மலை ஓடுவதுபோலும், மலையருவிகள் சப்திப்பதால் மலை சப்திப்பது போலும் இருக்கிறது.

இன்னும் அந்தப் பர்வதமானது மந்தாரம், பாரிஜாதம் ஸரளம், பச்சிலை, மரம், பனைமரம், மலைமகத்தி, வேங்கை அரஜீனம், ஓட்டு மாமரம், அடம்பம், நீபமென்ற அதன் பேதம், கொன்றை எருக்கு, சதபத்ரம், மாவலிங்கை. சிறு சண்பகம், குடஜம், மல்லிகை மாதவி, பலாமரம், அத்திமரம், அரசமரம், இருளிமரம், ஆலமரம், ஹிங்கு, பூர்ஜம், ஓஷதி, பூகம், ராஜபூகம், நாகைமரம், பேரீச்சைமரம், ஆம்ராதகம், மாமரம், பிரியாளு, இலுப்பை, இங்குதம், வண்டடித்த மூங்கில்கள் முதலிய விருக்ஷங்களால் ப்ரகாசிக்கிறது. மேலும் ஆம்பல், நீலோத்பலம், செந்தாம்ரை, வெண்தாமரை முதலிய புஷ்பங்கள் நிறைந்த குளங்களிருக்கின்றன. அவைகளில் பறவைகள் இனிமையாகச் சப்திக்கின்றன. பன்றிகள், சிங்கங்கள், கரடிகள், சல்யகம் (முட்பன்றிகள்), கவயங்கள், சாபங்கள், புலிகள், குருக்கன் எருமைகள்; கர்ண, உர்ண ஏகபத நாய், கஸ்தூரி மிருகங்கள் முதலியவை களால் விளங்குகிறது. வாழைத் தோட்டத்தால் சூழப்பட்ட தாமரை ஓடையுள்ளது.

மேலும் அவ்விடத்தில் கங்கா நதி ஓடுகிறது. அதன் ஜலத்தில் பரமசிவனுடைய பத்தினியாகிய ஸதி ஸ்நானஞ் செய்ததால் புண்யகரமாயிருக்கிறது. இப்படிப்பட்ட கைலாஸத்தைப் பார்த்து, தேவர்கள்

ஆச்சரியமடைந்தார்கள். பின்னுமவர்கள் அவ்விடத்தில் அலகாவென்ற அழகான பட்டணத்தைக் கண்டார்கள். ஸௌகந்திகமென்ற வனத்தையும் அதிக ஸௌகந்திகம் என்ற தாமரை மலர்களையும் கண்டார்கள். அந்தப் பட்டணத்திற்கு வெளியில் நந்தா, அலக நந்தாவென்ற இரண்டு நதிகள் ஓடுகின்றன. அவைகள் பகவானுடைய பாதாரவிந்த தூளியால் மிக்க புண்யம் பெற்றிருக் கின்றன. ஓ விதுரரே! அந்த நதிகளின் ஜலத்தில் ஆகாசத்தில் செல்லும் தேவ ஸ்திரீகள் விமானத்தில் இருந்து இறங்கி, தங்கள் பர்த்தாவுடன் ஸ்நானஞ் செய்து ரதியாலுண்டான சிரமத்தை நிவர்த்தித்துக் கொள்ளுகிறார்கள். மேலும் அவர்கள் ஸ்நானஞ் செய்ததால் அவர்களுடைய சரீரத்திலிருந்து கரைந்த குங்குமங்களால் ஜலமானது பொன்னிறமாக ஓடுகிறது. அதனை யானைகள் தாகமில்லாத காலத்திலும் குடிக்கின்றன. பெண் யானைகளையும் குடிக்கச் செய்கின்றன. அந்த அலகா பட்டணத்தில் ஸ்வர்ண மயமான விமானங்கள் பல இருக்கின்றன. புண்ய ஜனங்கள் (குபேரனுடைய வேலைக்காரர்கள்), அவர்களுடைய ஸ்திரீகள் ஆகிய இவர்களால் நிறைந்திருக்கிறது. மின்னலுள்ள மேகங்களால் ப்ரகாசிக்கும் ஆகாசம் போலிருந்தது, தேவர்கள் அந்தக் குபேரனுடைய பட்டணத்தையும் ஸௌகந்திகம் என்ற வனத்தையும் கடந்து சென்றார்கள். அந்த வனத்தில் இஷ்டமான வஸ்துக்களைக் கொடுக்கக் கூடியவைகளும், அழகான புஷ்பம், பழம், இலை ஆகிய இவைகளுள்ளவைகளுமான திவ்ய விருக்ஷங்க ளிருக்கின்றன. மேலும் தாமரைக் குளங்கள் இருக்கின்றன. அவைகளில் ஹம்சம் முதலிய பறவை களும் வண்டுகளும் சப்திக்கின்றன. காட்டு யானைகள்

செஞ்சந்தன மரங்களில் உராய்ந்து அதன் கந்தமுள்ள காற்று வீசுகிறது. அதனால் புண்ய ஸ்திரீகளுடைய மனம் ஸந்தோஷத்தை அடைகிறது. வைடூரிய கற்களால் செய்யப்பட்ட படிகள் உள்ள ஓடைகளும் இருக்கின்றன. கிம்புருஷர்கள் அவ்விடத்தில் வஸிக்கிறார்கள். அதற்குச் சமீபத்தில் தேவர்கள் ஒரு ஆலமரத்தைக் கண்டார்கள். அது நூறு யோஜனை தூரம் உயரமுள்ளது. எழுபத்தைந்து யோஜனை நீளமுள்ள கிளைகளால் விஸ்தாரமானது. எங்கும் மிகுந்த நிழலுள்ளது. தாபமற்றது. பறவைகளின் கூடுகளற்றது. யோக ஸ்வரூபமாயுள்ளது, மோக்ஷத்தை அடைய விரும்பியவர்களுக்குக் கதியாயுள்ளது. அந்த மரத்தின் அடியில் கோபமற்ற அந்தகன் போல் உட்கார்ந்திருக்கும் பகவானைத் தேவர்கள் கண்டார்கள். அவர் சாந்தமாகிய சரீரமுள்ளவர், சாந்தர்களாகிய ஸனந்தர் முதலிய ஸித்தர்களால் உபாஸிக்கப்பட்டவர். மேலும் குஹ்யர்களுக்கும் ரக்ஷஸ்ஸுக்களுக்கும் அதிபதியும், பகவானுக்கு மித்திரனுமான குபேரன் பகவானை உபாசித்துக் கொண்டிருக்கிறார். பின்னும் அந்தப் பகவான் வித்யை, தபஸ், யோகம் இவைகளுடைய மார்க்கத்தை லோகத்தில் பரவச்செய்து லோகத்துக்கு மங்களத்தைச் செய்பவர். அவைகளைத்தாமும் அனுஷ்டிப்பவர். அவைகளுக்கு அதிபதி. லோகத்திற்கு பந்து. அவர் உடைய சரீரமானது ஸந்தியாகால மேகம் போன்றது. விபூதி, யோகதண்டம், அஜினம் (மான்தோல்) ஆகிய தபஸ்விகளுக்கு இஷ்டமான அடையாளத்தையும், சந்திர கலையையும் அவர் தரித்திருந்தார். தர்பாஸனத்தில் உட்கார்ந்து நாரதருக்கும் மற்ற ஸாதுக்களுக்கும் ப்ரஹ்மத்தை உபதேசித்துக் கொண்டும் இருந்தார். வலதுகாலை இடது துடையின் மீது வைத்தும்,

வலது கையை வலது முழங்காலில் வைத்துக் கொண்டும், மணிபந்தத்தில் ஜபமாலையைத் தரிக்கும் தர்க்க முத்திரையுடன் உட்கார்ந்திருந்தார். ப்ரஹ்மானந்தத்தில் மூழ்கிய மனமுள்ளவராகவும் இருந்தார். அப்படிப்பட்ட முக்கிய முனியாகிய பகவானை லோகபாலர்களும் முனிகளும் கைகூப்பி நமஸ்கரித்தார்கள் அப்பொழுது தேவ ச்ரேஷ்டர்களாலும் அசுரச்ரேஷ்டர்களாலும் நமஸ்கரிக்கப்பட்ட பாதாரவிந்தமுள்ள ப்ரஹ்மதேவரை பரமசிவன் பார்த்து எழுந்திருந்து அவரை நமஸ்கரித்தார். அது மிகவும் பூஜ்யராகிய மகாவிஷ்ணுவானவர் (வாமனாவதாரத்தில்) காச்யபரை நமஸ்கரித்தது போலிருந்தது. பின்னும் பரமசிவனை ஸேவித்துக்கொண்டிருந்த ஸித்தகணங்களும் மஹரிஷிகளும், ப்ரஹ்மதேவரை நமஸ்கரித்தார்கள்.

42–53. இப்படிப் பரமசிவனாலும், அங்குள்ள மற்றவர்களாலும், நமஸ்கரிக்கப்பட்ட ப்ரஹ்மதேவர் பகவானை நோக்கிச் சிரித்துக்கொண்டு "ஓ ஈச்வர! ஜகத்திற்கு உற்பத்தி ஸ்தானமாகிய ப்ரகிருதி, பீஜமாகிய புருஷன் ஆகிய இவ்விரண்டிற்கும் எது மேலானதோ, பேதமற்றதோ, அந்த ப்ரஹ்மமே நீர் என்று எனக்கு தெரியும். சரீரமுள்ள சிவ, சக்தி இவைகளைக் கொண்டு நீர் கிரீடித்துக்கொண்டு பட்டுப்பூச்சி போல ஜகத்தை படைக்கிறீர். காப்பாற்றுகிறீர். ஸம்ஹரிக்கிறீர். தர்மம், அர்த்தம் இவைகளைக் கொடுக்கும் வேதத்தை ஸம்ரக்ஷிப்பதற்காக நீரே தக்ஷனை நிமித்தமாக வைத்துக் கொண்டு யாகத்தை படைத்தீர். லோகத்தில் வர்ணாசிரம தர்மங்களும், மரியாதையும் உம்மாலேயே ஏற்படுத்தப்பட்டன. அவைகளை ப்ராஹ்மணர்கள்

ச்ரத்தையுடன் அனுஷ்டித்து வருகிறார்கள். ஓ மங்கள ஸ்வரூபியாயிருப்பவரே! ஸத்கார்யஞ் செய்பவர்களுக்கு ஸ்வர்க்கம் மோக்ஷம் ஆகிய இவைகளைக் கொடுப்ப வரும் நீரே, பாப கர்மாக்களை செய்பவனுக்கு நரகம் முதலியவைகளும் உம்மாலேயே கொடுக்கப்படுகின்றன. எக்காரணத்தாலும் இது மாறுகிறதில்லை, (எல்லாக் கர்மங்களுக்கும் பலனைக் கொடுப்பவரும் நீரே.) மேலும், உம்முடைய சரணங்களில் ஆத்மாவை சமர்ப்பித்து ஸகல பிராணிகளிடத்திலும் நீர் வஸிப்பதாகவும்,ஸகலப்ராணிகளை ஆத்மாவிடத்தில் வஸிப்பவர்களாகவும் பார்க்கிறார்களோ, ஸமபுத்தி யுள்ளவர்களான அந்த ஸாதுக்கள் பெரும்பாலும் கோபத்தால் ஜயிக்கப்பட மாட்டார்கள். (பெரியோர் களுக்குக் கோபம் நேரிடாது.) அக்ஞன்தான் கோபித்துக் கொள்வான். எவர்கள் பேத புததியுள்ள வர்களோ, கர்மங்களிலேயே ஆசைப்பட்டவர்களோ, கெட்ட எண்ணமுள்ளவர்களோ, பிறருடைய க்ஷேமத்தைப் பார்த்து வருத்தப்படுகிறார்களோ, கெட்ட வார்த்தைகளை உச்சரித்துப் பிறருக்கு மிகவும் துன்பத்தை உண்டுபண்ணுகிறார்களோ அவர்கள் தெய்வத்தால் கொல்லப்படுகிறார்கள். உம்மைப் போன்ற ஸாதுக்கள் அவர்களைக் கொல்லவேண்டாம். ஏனென்றால் ஜயிக்கமுடியாத ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் மாயையால் ஜனங்கள் எப்போது, மோஹித்து பேதபுத்தியை அடைந்து அபராதஞ் செய்கிறார்களோ, அப்பொழுது ஸாதுக்கள் அவனிடத்தில் தயை செய்வார்களேயொழியப் ,பராக்கிரமத்தைச் செலுத்த மாட்டார்கள். (ஸாதுக்கள் பிறர் துக்கப்படுவதைப் பார்த்து சஹிக்காதவர்களாகையால் 'இது நம்முடைய அதிர்ஷ்டத்தால் நேர்ந்த கெடுதி; இவ்விஷயத்தில் அவன் என்ன குற்றஞ் செய்தான் என்று நினைப்பார்கள்.

மாயையானது கெடுதியைக் கொடுக்கக் கூடியது; அந்த மாயையை நீர் ஜயித்தவர். எல்லாவற்றையும் அறிந்தவர். அந்த புத்தி மயக்கம் அடைந்தவர்களும், கர்மங்களிலேயே மனத்தைச் செலுத்தி உமக்கு அபராதஞ் செய்தவர்களுமான அக்ஞர்களை அனுக்ரஹிக்க வேண்டும்; உம்மால் நாசஞ்செய்யப்பட்டு ஸமாப்தியடையாமல் இருக்கும் யாகத்தை உத்தரணஞ் செய்யவேண்டும். யக்ஞத்தின் பாகத்தை அடையத்தக்க வராகிய உமக்கு கெட்ட ரித்துவிக்குகள் பாகங் கொடுக்கவில்லை. உம்மாலேயே யாகமானது நிறை வேற்றப்படுகிறது. (யாகத்திற்குப் பலனைக் கொடுப்பவர் நீர்தான்.) இந்த யஜமானனாகிய தக்ஷன் பிழைக்கவேண்டும், ப்ருகுவிற்கு மீசை முளைக்க வேண்டும். கண்கள் உண்டாக வேண்டும்; முன் போல் பூஷாவிற்கு பற்கள் முளைக்க வேண்டும். ஆயுதங்களாலும், கற்களாலும் முறிக்கப்பட்ட தேவர்க ளுடைய அவயவங்கள் ஸ்வஸ்தங்களாக ஆகட்டும். உம்முடைய அனுக்கிரஹத்தால் எல்லோருக்கும் ஆரோக்கியம் உண்டாகட்டும். இப்பொழுது யக்ஞம் செய்து எது மிகுதியாக விருக்கிறதோ, அது இருக்கட்டும். ஓ ருத்ர! அந்த பாகத்தால் யக்ஞமானது முடிக்கப்படட்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

நோட்டு

மணிபந்த –மணிக்கட்டு "ஒருகாலை மற்றொரு துடையில் வைத்துக் கொண்டும், மற்றொரு முழங்காலில் கையை வைத்துக் கொண்டுமிருப்பது. வீராஸனமெனப்படுகிறது யோகஸாஸ்த்ரம். தர்க்க முத்திரை ஆள்காட்டி விரலுடைய நுனியும், கட்டை விரலுடைய நுனியும் சேர்த்து வைத்துக் கொண்டு கையை நீட்டி உபதேசிப்பது.

அத்தியாயம்–7

தக்ஷன் பிழைத்தது

1–5 ஓ நீண்ட கைகளுள்ள விதுரரே! இப்படி ப்ரஹ்மதேவரால் சமாதானஞ் செய்யப்பட்டு சந்தோஷமடைந்த பரமசிவன் பின்வருமாறு சொன்னார். "பிரஜைகளுக்கு அதிபதியாகிய ஓ ப்ரஹ்மதேவரே! குழந்தைகள் செய்த அபாரதத்தை நான் மனத்தில் வைத்துக் கொள்கிறதுமில்லை. வாக்கினால் சொல்லுகிறதுமில்லை. ஏனென்றால் அவர்கள் தேவமாயையால் புத்திமயங்கிக் குற்றத்தைச் செய்கிறார்கள். ஆனாலும் அவர்களுக்குச் சிட்சையைச் செய்தேன். தக்ஷப்பிரஜாபதியின் தலை எரிக்கப்பட்டதால் அவனுக்கு ஆட்டு முகமுள்ள தலையானது உண்டாகட்டும். பகரென்பவர் தம்முடைய யக்ஞ பாகத்தை மித்திரரென்பவருடைய கண்ணால் பார்க்கட்டும். பூஷாவானவர் மாவைப் புஜிக்கட்டும். அதையும் எஜமானனுடைய பற்களால் புஜிக்கட்டும். எனக்கு யாக சிஷ்டத்தைக் கொடுத்த படியால் தேவர்களுக்கு அவயவங்கள் உண்டாகட்டும். மற்ற அத்வர்யுக்கள் அசுவினி தேவர்களுடைய கைகளாலும், பூஷாவினுடைய கைகளாலும் கைகளுள்ளவர்களாக ஆகட்டும். பிருகுவானவர் ஆட்டின் மீசையுள்ளவராக ஆவார்" என்று அனுக்ரகித்தார்.

6–54 அதனைக் கேட்டு ஸகல பூதங்களும் (பிராணிகளும்) ஸந்தோஷத்துடன், "நல்லது, நல்லது" என்றார்கள். பிறகு தேவர்கள் பரமசிவனையும் ப்ரஹ்மதேவரையும் அழைத்துக் கொண்டு தக்ஷனுடைய யாகசாலைக்குச் சென்றார்கள். அவ்விடத்தில்

பகவானாகிய பரமசிவன் சொன்னபடி எல்லாவற்றையும் செய்து யாக பசுவின் தலையைத் தக்ஷனுடைய உடலுடன் சேர்த்தார்கள். அப்பொழுது பரமசிவன் கிருபை நிறைந்த பார்வையால் தக்ஷனைப் பார்க்கத் தூங்கி விழித்தவன் போல் தக்ஷன் பிழைத்து எழுந்திருந்து தனக்கு முன் நிற்கும் பரமசிவனைப் பார்த்தான்.

பரமசிவனிடத்தில் விரோதத்தால் அசுத்தமான மனமுள்ளவனாக இருந்த தக்ஷன் பகவானைத் தரிசித்தவுடன் சரத்காலத்திய மடுப்போல் சுத்த சித்தனாக இருந்தான். அப்பொழுது பரமசிவனை ஸ்தோத்திரஞ் செய்யவேண்டுமென்ற விருப்பமுள்ளவனானாலும் இறந்து போன ஸதியை- நினைத்து கண்ணீரைப் பெருக்கி அதனால் கண்ட மடைத்து கொஞ்ச நேரம் மௌனமாக இருந்து பிறகு தைரியத்துடனும் கபடமற்றும் பரமசிவனை நோக்கி, "ஓ பகவன்! நான் உம்மை அவமதித்தவனானாலும் எனக்கு உம்மால் செய்யப்பட்ட சிக்ஷையானது மிகுந்த அனுக்கிரகமேயாம்.

நீரும், விஷ்ணுவும் அதமர்களான ப்ராஹ்மணர்களிடத்திலும் உபேக்ஷை செய்கிறதில்லை. அப்படிக்கிருக்க ஸத்கர்மங்களைச் செய்பவர்களை உபேக்ஷிப்பீர்களா? நீர் ப்ரஹ்மதேவராக இருந்து வித்யை, தபஸ், விரதம் ஆகிய இவைகளையே அனுஷ்டிப்பவர்களான ப்ராஹ்மணர்களை ஆத்ம தத்துவத்தை காப்பாற்ற வேண்டி முகத்தால் முதலில் உண்டு பண்ணினீர். ஓ சிறந்தவரே! பசுக்களைத் தண்டம் வைத்துக் கொண்டு பரிபாவிப்பது போல் அந்த

ப்ராஹ்மணர்களை ஒவ்வொரு ஆபத்துக்காலத்திலும் காப்பாற்றுகிறீர். உம்முடைய உண்மையை அறியாமல் ஸபையில் கெட்ட வார்த்தைகளாகிய அம்புகளால் உம்மை அடித்தேன். அப்படி மிகவும் மஹானாகிய உம்மை நிந்தித்ததால் அதோகதியை அடைந்திருக்கும் என்னிடத்தில் கிருபா திருஷ்டியைச் செய்து என் குற்றத்தை மறந்து காப்பாற்றினீர். ஆனதால் பகவானாகிய நீர் உம்மால் செய்யப்பட்ட காரியத்தாலேயே சந்தோஷமடைய வேண்டும்" என்று (பதில் செய்ய என்னால் முடியாதென்பது கருத்து) ஸ்தோத்திரஞ் செய்து சிவனை ஸமாதானப்படுத்தி ப்ரஹ்மதேவரிடமும் விடைபெற்று உபாத்தியார் ரித்விக் முதலியவர்களுடன் யாகத்தை நடத்தினார்.

யக்ஞத்திற்கு நேர்ந்த விக்கினத்தாலுண்டான தோஷத்தின் பரிகாரத்திற்காகவும், வீரர்களான பிரமத கணங்களுடைய சேர்க்கையாலுண்டான தோஷத்தின் பரிகாரத்திற்காகவும், மூன்று கபாலங்களில் ஸம்ஸரிக்கப் பட்டதும், விஷ்ணு தேவதாகமுமான புரோடாசத்தை ரித்விக்குகள் செய்தார்கள். ஹவிஸ்ஸுடன் கூடிய அத்வர்யுவுடன் யஜமானன் சுத்தசித்தனாக மகா விஷ்ணுவை தியானஞ் செய்தான். அப்பொழுது ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் ஆவிர்ப்பவித்தார். (தோன்றினார்). அவருடைய காந்தியால் பத்து திக்குகளும் ப்ரகாசித்தன. அதனால் மற்றத் தேஜஸ்ஸுகள் அடக்கப்பட்டன.

மேலும் அவர் கருடன்மீது ப்ரகாசித்திருந்தார். கருட்னுக்குப் பிரஹத் ரதந்த்ரமென்ற ஸாமங்கள் பக்ஷங்களாக (இறக்கைகள்) இருக்கின்றன. பகவான்

கறுத்த திருமேனியுள்ளவர். பீதாம்பரம் தரித்தவர், சூரியன் போன்ற கிரிடமுள்ளவர். வண்டுகள் போல் கறுத்த தலை மயிர்களால் ப்ரகாசிக்கும் குண்டலங் களால் அழகான முகமுள்ளவர். சங்கம், தாமரை மலர், சக்கரம், பாணம், சார்ங்கமென்ற வில், கௌமோத்கீ யென்ற கதை, நந்தக மென்ற கத்தி, தோல் (கேடயம்) ஆகிய இவைகளுள்ளவைகளும், பக்தர்களைக் காப்பாற்றுவதில் பரபரப்புள்ளவைகளும், ஸ்வர்ணா பரணங்களால் ஸ்வர்ணமயங்கள் போலிருப்பவை களுமான கைகளுள்ளவர். அதனால் புஷ்பித்த கர்ணிகார விருக்ஷம் போலப் ப்ரகாசித்தார். மார்பில் ஸ்ரீ தேவியுள்ளவர். வனமாலையுள்ளவர். கம்பீரமாகிய சிரிப்பின் இலேசத்தால் ஜகத்தை சந்தோஷிக்கச் செய்பவர். அவருடைய இரு பக்கங்களில் சாமரங்களாகிய ராஜ ஹம்சங்கள் அசைகின்றன. அவருக்குமேல் வெண்குடையாகிய சந்திரன் ப்ரகாசித்தான். இப்படி வந்த ஸ்ரீமந் நாராயணனைப் பார்த்து ப்ரஹ்மா, இந்திரன், ருத்ரன் முதலிய தேவர்கள் சீக்கிரமாக எழுந்திருந்து நமஸ்கரித்தார்கள்.

மேலும், அவர்கள் பகவானுடைய தேஜஸ்ஸால் அடக்கப்பட்ட தேஜஸ்ஸுள்ளவர்களாகி, கத்கத ஸ்வரமுள்ளவர்களாகி கைக்கூப்பிக் கொண்டு சமீபம் சென்றார்கள். பின்னும் அவர்கள் அந்தப் பகவான் உடைய மகிமையை முழுமையையும் துதிக்க முடியாத வாக்குள்ளவர்களானாலும், தங்கள் புத்திக்குத் தக்கபடி பக்தர்களுக்கு அனுக்கிரகம் செய்வதற்காகச் சரீரம் எடுத்துக் கொண்டிருக்கும் பகவானை ஸ்துதித்தார்கள். தக்ஷர் மேலான பூஜாவஸ்துக்களை எடுத்துக் கொண்டு இருகைகளையும் கூப்பிக் கொண்டு ப்ரஜாபதிகளுக்குக்

குருவும், சுநந்தர், நந்தர், முதலியவர்களுடன் கூடிய வருமான பகவானிடம் சென்று அவரை நோக்கி, "ஓ பகவன்! நீர் உம்முடைய சுய ரூபத்திலிருப்பவர். புத்தி விருத்திகளற்றவர். சித்ரூபியாக இருப்பவர். நிகரற்றவர். பயமற்றவர். மாயையை வசப்படுத்திக் கொண்டு இருப்பவர். இப்படி ஸ்வதந்திரரானாலும், அந்த மாயா சம்பந்தத்தால் புருஷராகிய ராகதுவேஷங்கள் உள்ள வர்போல் ராமனாகவும், கிருஷ்ணனாகவும் இருக்கிறீர்! என்று ஸ்தோத்திரம் செய்தார்கள்.

பின்பு, ரித்விக்குகளெல்லோரும் 'ஓ உபாதிகள் உள்ளவரே! நந்திகேச்வரருடைய சாபத்தால் நாங்கள் கர்மங்களில் ஆசை கொண்டிருக்கிறோம். தங்களுடைய உண்மை எங்களுக்குப் புலப்படவில்லை. எதனுடைய சித்திக்காக, இதற்கு இதுதேவதை. இந்தக் கிரியை இப்படி அனுஷ்டிக்கப்பட வேண்டும்' என்ற வியவஸ்தை ஏற்பட்டிருக்கிறதோ, எது வேதத்தால் விதிக்கப்பட்டிருக்கிறதோ, 'அந்த அத்வரமென்ற (யாகம்) உம்முடைய ஸ்வரூபத்தை மாத்திரம் தெரிந்து கொண்டிருக்கிறோம்' என்றார்கள்.

பிறகு ஸதஸ்யர்கள் பகவானை நோக்கி, ஆசிரயத்தைக் கொடுப்பவரே! ஸம்ஸார மார்க்கம் மிகவும் கஷ்டமானது. அதில் இளைப்பாறுவதற்கு நிழல் முதலியவை இல்லை. மிகுந்த துக்கங்களே நடக்கமுடியாத இடங்களாக இருக்கின்றன. அந்த வழியில் சஞ்சரிக்கும் துஷ்ட யானை அந்தகனேயாம். விஷயங்களே கானலாக (மிருகதிருஷ்ணிகா) இருக் கின்றன. அகங்காரத்திற்கு இருப்பிடமாகிய சரீரமே சுமையாக இருக்கிறது. சுகதுக்கங்கள் படுகுழிகளாக

இருக்கின்றன. துஷ்டர்களாகிய புலி முதலியவைகளின் பயம் மிகுதியாயிருக்கிறது. சோகமாகிற காட்டுத்தீயின் உபத்திரவம் அதிகமாக இருக்கிறது. அப்படிப்பட்ட மார்க்கத்தில் செல்லும் பலவித காமனையுள்ள அக்ஞர்கள் உம்முடைய பாதங்களை எப்பொழுது அடைவார்கள் ? என்றார்கள்.

அதன் பிறகு ருத்ரன் "ஓ வரத்தைக் கொடுப்பவரே, உம்முடைய பாதமானது இஷ்டத்தை அடைய விரும்பிய எல்லாராலும் பூஜிக்கக் கூடியது. நிஷ்காமர் களான முனிகளும், மிகுந்த பிரியத்துடன் அதனைப் பூஜிக்கிறார்கள். அப்படிப்பட்ட பாதத்தில் புத்தியை செலுத்தியவனாக என்னை அக்ஞஜனங்கள் நிந்தித்தால் அதனை, உம்முடைய மேலான அனுக்கிரஹத்தால் பூர்ணனாகிய நான் மனத்தில் வைக்கிறதில்லை" என்றார். அதன்பின்பு பிருகுவானவர் "எவருடைய மாயையால் ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் ஆத்மஞ்ஞான மற்றவர்களாக அவித்யையாகிய தமஸ்ஸினால் தூங்கின வர்களாகிய (விவேகமில்லாமல்) ' ஆத்மாவிடத்தில் இருக்கும் உம்முடைய உண்மையை இப்பொழுதும் அறியவில்லையோ, அப்படிப்பட்டவரும், சரணம் அடைந்தவர்களுக்குப் பந்துவுமாகிய நீர் தயை செய்யவேண்டும்" என்றார்.

பின்பு ப்ரஹ்மதேவர் 'உம்முடைய இந்த ஸ்வரூபத்தைப் பதார்த்தங்களின் பேதத்தைக் கிரகிக்கக் கூடிய இந்திரியங்களைக் கொண்டு புருஷன் பார்க்க முடியாது. ஜீவன் இந்திரியத்திற்கும் அதன் விஷயத்திற்கும் ஸத்வம் முதலிய குணங்களுக்கும் ஆசிரயமாக இருப்பவன். நீர் மாயாமயமாகிய தேகம்

முதலியவைகளைக் காட்டிலும் வேறானவர்!' என்று ஆத்ம தத்துவத்தை உரைத்தார்.

அதன்பின் இந்திரன் "அசுரர்களை நாசஞ்செய்யும் ஆயுதங்களைத் தரிக்கும் எட்டுக் கைகளுள்ளதும், மனத்திற்கும், கண்களுக்கும் ஆனந்தத்தைக் கொடுப்பதும், ஜகத்தைத் தனக்குள் அடக்கிக் கொள்வதுமான இந்த உம்முடைய தேகமானது யுக்தமானதேயாம்" என்றான். ரித்விக்குகளுடையை பத்தினிகள் "ஓ கொப்பூழில் தாமரை மலருடையவரே! யக்ஞ ஸ்வரூபியாக இருப்பவரே! இந்த யாகமானது முன் காலத்தில் உம்மைப் பூஜிப்பதற்காகப் ப்ரஹ்மதேவரால் உண்டு பண்ணப்பட்டது. பின்பு தக்ஷரிடத்திலுள்ள கோபத்தால் பரமசிவன் இதை நாசஞ் செய்தார். பசுவைக் கொல்வது முதலியவைகள் இல்லாமலிருக்கும் அதனை தாமரை மலர் போன்ற நேத்திரத்தால் கடாக்ஷித்துப் பரிசுத்தமாகச் செய்யும்" என்றார்கள்.

மஹரிஷிகள் 'ஓ பகவன்! நீர் கர்மங்களை உமது இஷ்டப்படி செய்கிறீர். ஆனாலும் அதனுடைய பலனாகிய சுகதுக்கங்களில் சம்பந்திக்கிறதில்லை. மேலும் எந்த லக்ஷ்மிதேவியை மற்றவர்கள் ஐசுவரியத் திற்காகப் ப்ரார்த்திக்கிறார்களோ, அவள் உம்மைத் தானாக அனுஸரித்தும் அவனை நீர் லக்ஷ்யம் செய்கிறதில்லை. ஆனதால் உம்முடைய நடை உலக விருத்தமாக இருக்கிறது" என்றார்கள். ஸித்தர்கள் "எங்களுடைய இந்த மனதாகிய யானையானது துக்கமாகிய காட்டுத் தீயினால் எரிக்கப்பட்டும் தாகத்தை யடைந்தும் உம்முடைய கதையாகிய சுத்தமான அமிருத நதியில் மூழ்கி ஸம்ஸார தாபத்தை

நினையாமலிருப்பதுடன் ப்ரஹ்மத்தை யடைந்தவன் போல அதிலிருந்து திரும்பவுமில்லை" என்றார்கள். தக்ஷருடைய பத்தினியானவள் (ப்ரஸூதி) 'ஓ ஈச! லக்ஷ்மிக்கு இருப்பிடமா யிருப்பவரே! நல்வரவாகுக தயை செய்ய வேண்டும், உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். உம்முடைய பத்தினியாகிய லக்ஷ்மீ தேவியுட்ன் இவ்விடத்திலிருந்து எங்களைக் காப்பற்ற வேண்டும். தலையில்லாத உடல்போல் உம்முடைய சம்பந்தமில்லாத யாகம் ப்ராசிக்கவில்லை" என்றார்கள்.

லோகபாலர்கள் "ஓ பூமன்! ஞானக்கண்ணால் பார்க்கக் கூடிய உம்முடைய ஸ்வரூபமானது, விஷயத்தைக் கிரகிக்கும் எங்களுடைய இந்திரியங் களால் கிரகிக்க முடியுமா? நீர் ஐந்து மகாபூதங் களுடன் ஆறாவது (ஜீவனாக) புருஷனாகத் தோன்று கிறது உம்முடைய மாயையேயாம்" என்றார்கள். யோகேசர்கள் "ஓ ப்ரபுவே! ஸகல ஜகத் ஸ்வரூபியா யிருக்கும் உம்மிடத்தில் எவன் பேத திருஷ்டியில்லாமல் ஒன்றாகப் பார்க்கிறானோ அவனைக் காட்டிலும் பிரியனாகிய புருஷன் உமக்கொருவனுமில்லை. ஆனாலும் ஓ ஈச! அநன்யமாகிய பக்தியுடன் சரணம் அடைகிறவர்களை அனுக்கிரகிக்கவேண்டும். எல்லோர் இடத்திலும் நீர்பிரியமுள்ளவரல்லவா? மேலும் எவர் ஜகத்தைப் படைப்பது, பரிபாலிப்பது, ஸம்ஹரிப்பது ஆகிய கர்மங்களுக்கு அதிபதியோ, எவர்பலவகையாகப் பேதிக்கும் குணமுள்ள தம்முடைய மாயையால் ஆத்மாவிடத்தில் பலவிதமான புத்தியை உண்டுபண்ணு கிறாரோ, எவர் தம்முடைய ஸ்வரூப ஞானத்தால் ப்ரஹ்மத்தை நிவிருத்திக்கிறாரோ அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம் செய்கிறோம்" என்றார்கள்.

சப்த ப்ரஹ்மா பகவானை நோக்கி "எவருடைய தத்துவமானது என்னாலும், மற்றவர்களாலும் அறிய முடியாததோ அப்படிப்பட்டவரும் ஸத்வ மூர்த்தியும், தர்மம் முதலியவைகளை உண்டுபண்ணுகிறவரும், குணங்களற்றவருமாகிய உம்மை நமஸ்கரிக்கிறேன்" என்றார்.

அக்கினியானவர் "எவருடை தேஜஸ்ஸால் எனக்குத் தேஜஸ்ஸு உண்டாகிறதோ யாகத்தில் ஆஜ்யத்தால் நனைக்கப்பட்ட ஹவிஸை எவருடைய தேஜஸ்ஸால் வகிக்கிறேனோ, யக்ஞத்தைக் காப்பாற்றுகிறவரும், ஐந்து வகையான யக்ஞஸ்வரூபியும், ஐந்து யஜுஸ்ஸுகளைக் கொண்டு பூஜிக்கப்பட்டவருமாகிய யக்ஞ ஸ்வரூபியாகிய உம்மை நமஸ்கரிக்கிறேன்" என்றார்.

தேவர்கள் "பிரளய காலத்தில் தம்மால் ஸ்ருஷ்டிக்கப் பட்ட ஜகத்தை வயிற்றில் வைத்துக் கொண்டு ஜலத்தில் ஆதிசேஷனாகிய படுக்கையில் நீர் படுத்துத் தூங்குகிறீர். நீரே ஏல்லாவற்றிற்கும் முந்திய புருஷன். உம்முடைய ஆத்ம தத்துவமார்க்கத்தை ஜனலோக வாசிகள் தியானிக்கிறார்கள். அப்போர்ப்பட்ட நீர் எங்களுக்கெதிரில் ஸஞ்சரிக்கிறீர். வேலைக்காரர்களான எம்மைக் காப்பாற்றுகிறீர்" என்றார்கள். கந்தர்வர்கள் 'ஓ தேவ! மரீசி முதலிய ப்ரஜாபதிகளும், ப்ரஹ்மா, இந்திரன், தேவர்கள், ருத்திரன், ஆகிய இவர்களும் உம்முடைய அம்ச பூதர்களேயாம். இந்த ஜகத்தானது உமக்கு விளையாட்டுக் கருவியாக இருக்கிறது. அப்படிப்பட்ட பகவானாகிய உமக்கு எப்பொழுதும் நமஸ்காரம் செய்கிறோம்" என்றார்கள்.

வித்யாதரர்கள் "புருஷன், புருஷார்த்தத்திற்கு ஸாதனமாகிய சரீரத்தை யடைந்தும் உம்முடைய மாயையால் சரீரத்தால் (என்னுடையது, நான்), என்ற அபிமானத்தை வைத்து அஸத்தான விஷயத்தில் ஆசை வைத்துக் கொண்டிருக்கிறான். அப்படிப்பட்ட ஆத்ம மோஹத்தை உம்முடைய கதாமிருதத்தை ஸேவிப்பவன் நிவர்த்தித்துக் கொள்வான் என்றார்கள். ப்ராஹ்மணர்கள் "நீரே யாகம், நீரே ஹவிஸ், நீரே அக்கினி, நீரே மந்திரம், ஸமித், தர்ப்பம், பாத்திரங்கள் ஆகிய இவைகளும் நீரே, ஸதஸ்யர்களும் நீரே, யஜமானன் அவருடைய பத்தினி ஆகிய இவர்களும் உம்முடைய ஸ்வரூபம். தேவதை, ஸ்வதா அக்கினி ஹோத்ரம், ஸ்வதை, ஸோமம், ஆஜ்யம், பசு ஆகிய இவைகளும் உம்முடைய ஸ்வரூபமா யிருக்கின்றன; முன்னொரு காலத்தில் நீர் வராஹாவதாரம் செய்து பாதாளத்திலிருந்த பூமியை யானை தாமரைக் கொடியை கொண்டு வருவதுபோல் விளையாட்டாகச் சிங்கப்பல்லால் உத்தரணஞ் செய்தீர் அப்பொழுது யோகிகள் உம்மை துதித்தார்கள்; நீர் வேத ஸ்வரூபி, யாக ஸ்வரூபி, கிருது ஸ்வரூபி யூபமுள்ளது கிருதுவெனப்படுகிறது).

ஓ யக்ஞத்திற்கு அதிபதியாக இருப்பவரே! உம்முடைய நாமத்தை யுச்சரித்த மாத்திரத்தில் யாகத்திற்கு நேரிடும் விக்கினங்கள் யாவும் நாசமடை கின்றன. உம்முடைய தரிசனத்தை விரும்பியவர்களும், ஸத்கர்மங்களை அனுஷ்டிக்காதவர்களுமான எங்களுக்குத் தரிசனங் கொடுக்க வேண்டும். உமக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்" என்றார்கள்.

இப்படி பகவானை எல்லோரும் ஸ்தோத்திரஞ் செய்யும்பொழுது தக்ஷர் ருத்ரனால் கெடுக்கப்பட்ட யாகத்தை திரும்பவும் அனுஷ்டித்தார். அப்பொழுது ஸ்ரீ பகவான் ஸகல பாகத்தையும் தான் அனுபவிக்கிற வரானாலும் தமக்குக் கிடைத்த பாகத்தால் சந்தோஷித்தவர் போல் தக்ஷனை அழைத்து "நானும், ப்ரஹ்மதேவரும், பரமசிவனும் ஜகத்திற்குக் காரணர்கள். மேலானவர்கள். ஆத்மாவாக இருப்பவர்கள். ஈசுவரர்கள், சாக்ஷியாக இருப்பவர்கள். தாமாகப் ப்ரகாசிப்பவர்கள். உபாதியற்றவர்கள். நான் என்னுடைய முக்குண ஸ்வரூபமாகிய மாயையை ஆசிரயித்து இந்த ஜகத்தைப் படைத்தும், ரக்ஷித்தும், ஸம்ஹரித்தும், அந்த அந்த வேலைக்குத் தகுதியான ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற பெயரையும் அடைகிறேன். அப்படிப் பட்டதும், இரண்டாவதற்றதும், சிதருபியுமான பரப் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் ப்ரஹ்ம ருத்ரர்களை வேறென்று நினைப்பவர்கள் அக்ஞர்களாகின்றார்கள்.

புருஷன் தன்னுடைய கை, கால் முதலிய அவயவங்களுக்குள் எதையும் பிறருடையதாக எப்படி நினைக்கிறதில்லையோ, அப்படி வித்வான் எல்லாப் பிராணிகளையும் தானாக நினைக்கிறான். ஒரே ஸ்வருபமுள்ளவர்களானவர்களுக்குள் பேதமில்லை யென்று எவன் நினைக்கிறானோ அவனே சாந்தியை அடைவான்" என்று அனுக்கிரகித்தார்.

53–61 இப்படிப் பகவானால் ஆக்ஞாபிக்கப்பட்டு தக்ஷர் திரிக்பாலேஷ்டியால் பகவானைப் பூஜித்து, தேவர்களை, அங்கத்தாலும் (பிரயாஜம் முதலியவை), பிரதான கர்மத்தாலும் (தர்சபௌர்ணமாஸம்) பூஜித்தார்.

ருத்ரருடைய பாகத்தால் ருத்ரனையும், முடிவில் செய்யப்படுகிற கர்மத்தால் ஸோமபர்களான மற்ற தேவர்களையும் பூஜித்தார். இப்படி தக்ஷர் யாகத்தை முடித்து ரித்விக்குகளுடன் அவபிருத ஸ்நானஞ் செய்தார். தம்முடைய மஹிமையால் அடைந்த ஸித்தியுள்ள அந்தத் தக்ஷருக்குத் தேவர்கள் தர்மத்திலேயே உம்முடைய புத்தி செல்லட்டும்' என்று அனுக்கிரகஞ் செய்து ஸ்வர்க்கஞ் சென்றார்கள். இப்படி தக்ஷருடைய பெண்ணாகிய ஸதியானவள் சரீரத்தை விட்டு ஹிமவானுடைய பத்தினியாகிய மேனை என்பவளிடத்தில் ஜனித்தாள் என்றும், பிரளயகாலத்தில் அடங்கியிருந்த சக்தியானது மஹாபுருஷனையே திரும்பவும் அடைவதுபோல் அந்தப் பார்வதியானவள் மறுபடியும் பரமசிவனையே அடைந்தாளென்றும் தக்ஷ யாகத்தைக் கெடுத்த வராகிய பரமசிவனுடைய சரிதத்தைப் ப்ருஹஸ் பதியின் சிஷ்யராகிய உத்தவரிடமிருந்து கேட்டிருக் கிறேன். ஓ குரு வம்சத்தில் பிறந்தவராகிய விதுரரே! இந்த உபாக்யானம் பரிசுத்தியை யுண்டுபண்ணக் கூடியது. மேலானது, கீர்த்தியை விருத்தி பண்ணக் கூடியது. ஆயுளை விருத்தி செய்யக்கூடியது. ஸகல பாவங்களையும் நாசஞ் செய்யக்கூடியது. இதனை எவன் நித்தியம் பிறர் சொல்லக் கேட்கிறானோ, தன் வாக்கினால் பக்தியுடன் சொல்லுகிறானோ, அவனுடைய பாவங்கள் நாசமாகின்றன' என்று விதுரருக்கு மைத்ரேயர் சொன்னார்.

குறிப்பு

ஸ்வரூபத்தில் "தம்முடைய மஹிமையிலிருப்பவர்" சுருதி. பயமற்றவர். "இரண்டாவதாலல்லவா பயமுண்டாகிறது" சுருதி. மாயையை ஜீவன்மாயைக்கு

வசப்பட்டவன். பரமாத்மா மாயையை ஸ்வாதீனப் படுத்திக் கொண்டவர் என்று கருத்து. சுத்தர் –பாவ புண்யங்களற்றவர் வீர. தம்முடைய மஹிமையில் இருந்து கொண்டு மாயையைப் புருஷ ரூபமாகப் பரிணமிக்கச் செய்து, அதில் ஜீவரூபியாக இருந்து ஸ்வதந்திரரானாலும் கர்மவசியர் போலிருக்கிறார், வீர. ஸதஸ்யர்கள் ஈசுவரனில்லாத தக்ஷயாகத்தில் பணத்தாசையால் ஸதஸ்யர்களாக இருந்தோம் என்று பச்சாத்தாப மடைந்து வைராக்கியத்தை ஸ்துதிக் கிறார்கள். ஸ்ரீத. ஐந்து வகை "இந்த யக்ஞமானது அக்கினி ஹோத்திரம், தர்ச பூர்ணமாஸம், சாதுர்மாஸ்யம், பசு, ஸோமம் என்ற ஐந்து பேதங்களுள்ளது" –சுருதி. ஐந்து மந்திரங்கள் ஆச்ராவய என்ற நான்கு அக்ஷரங்கள். அஸ்துச் ரௌஷட் என்ற நான்கு அக்ஷரங்கள். 'யேய ஜாமஹே, என்ற ஐந்து அக்ஷரங்கள். வஷட் என்ற இரண்டு அக்ஷரங்கள் சுருதி.

அத்தியாயம்–8

துருவ சரிதம்

1–6. பின்னும் மைத்ரேயர் விதுரரை நோக்கி, ஸனகர் முதலியவர்களும், நாரதரும், ரிபுவென்பவரும், ஸம்ஸரும், அருணியும், யதியும். ப்ருஹ்மபுத்திரர்கள் ஆனாலும் இவர்கள் ஊர்த்துவரேதஸ்களாகையால் கிருஹஸ்த தர்மத்தை அனுஷ்டிக்கவில்லை, (ஆனதால் இவர்களுக்குச் சந்ததியில்லை என்று கருத்து.) அதர்மத்திற்குப் பத்தினி மிருஷை (பொய்) என்பவள். அவள் தம்பன் (பிறரை ஏமாற்றுவது) என்ற புத்திரனையும், மாயை (பிறரை ஏமாற்றுவதற்கு அனுகூலமான செய்கை) என்ற பெண்ணையும் பெற்றாள். நிருதியானவர் சந்ததியில்லாதவராக இருந்தபடியால் அந்தக் குழந்தைகளைத் தம்முடைய குழந்தைகளாக வளர்த்தார். அந்தத் தம்பன் சஹோதரியான மாயையை மணம் செய்துகொண்டு, அவளிடத்தில் லோபமென்பவனையும் (அதிக ஆசை), நிகிருதி என்ற பெண்ணையும் (வஞ்சகனாக இருப்பது) உண்டு பண்ணினான். ஓ மிகுந்த புத்திசாலியான விதுரரே! அவ்விருவர்களும் தம்பதிகளாக இருந்த குரோதமென்ற புத்திரனையும் (கோபம்) ஹிம்சை என்ற பெண்ணையும் உண்டுபண்ணினார்கள். அவர்களுக்குக் கலியென்பவனும் (பாபம்), அவனுடைய சகோதரியான துருக்தியும் (கெட்டவார்த்தை) குழந்தைகள். அவர்கள் யாதனை யென்பவளையும் (கடுமையான உபத்ரவம்) நிரயம் என்ற புத்திரனையும் (நரகம்) உண்டுபண்ணினார்கள். இவைகள் அதர்மமமாகிய மரத்திற்குக் கிளைகள். சம்சாரத்தைக்

கொடுக்ககூடியவைகள். ஆனதால் சூக்ஷமத்தையடைய விரும்பியவன் அவைகளை யனுஷ்டிக்கக்கூடாது. மேலான ஆசிரமத்தை அடைந்தவன் (சந்நியாசி) அவை களை ஒருபொழுதும் அனுஷ்டிக்கக்கூடாது இப்படிச் சுருக்கமாகப் பிரதி ஸர்க்கத்தைச் சொன்னேன் இந்த அதர்மத்தின் வம்சமானது புண்யகரமானது. (இவை அனுஷ்டிக்கத் தக்கவை இல்லை என்று தெரிந்து கொள்வதால் என்று கருத்து.) இதனை மூன்று தரம் சிரவணஞ் செய்தால் ஸகல பாவமும் நாச்மாகிவிடும்.

7–9. இதன் பின்பு ஸ்ரீ மகாவிஷ்ணுவின் அம்சபூதராகிய ப்ரஹ்மதேவருடைய புத்திரரான சுவாயம்புவ மனுவின் வம்சத்தையும் சொல்லுகிறேன். அவருடைய கதையைச் சொல்வதால் புண்ணியம் சித்திக்கும். சதரூபை என்பவளுடைய பர்த்தாவாகிய சுவாயம்புவ மனுவிற்குப் பிரியவிரதர், உத்தானபாதர் என்று இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்கள் ஸ்ரீ வாசுதேவருடைய அம்சபூதர்கள். ஜகத்தைப் பரிபாலிப்பதில் நோக்கமுள்ளவர்களாக இருந்தார்கள். அவ்விருவர்களில் உத்தானபாத ரென்பவருக்கு சுநீதி, சுருசி என்று இரண்டு பத்தினிகள் இருந்தார்கள். சுருசி யென்பவளிடத்தில் அரசராகிய உத்தானபாதர் மிகுந்த பிரீதியுள்ளவராக இருந்தார். சுநீதியினிடத்தில் அரசருக்குப் பிரியமில்லை. அவளுக்குத் துருவன் என்ற பெயருள்ள ஒரு புத்திரனிருந்தான். ஒருநாள் அரசருடைய மடியில் உத்தமனென்ற சுருசியின் குமாரன் உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்தான். அரசரும் அவனிடத்தில் மிகுந்த பிரீதியுடன் சந்தோஷமாக விளையாடினார். அப்பொழுது சுநீதியின் புத்திரனாகிய துருவனும் அரசனுடைய மடியின்

மீதேறி விளையாட விரும்பியவனாகி அரசனுடைய ஸமீபம் சென்றான். அவனை அரசர் லட்சியம் செய்யவில்லை. (அவனிடம் பிரியப்படவில்லை.)

10–13. அப்பொழுது ஸமீபத்திலிருந்த சுருசி அரசருடைய மடியிலேற விரும்பும் தன்னுடைய ஸபத்தினியின் புத்திரனாகிய துருவனை நோக்கி மிகுந்த கர்வத்துடன், "ஓ குழந்தாய்! என்னுடைய வயிற்றில் நீ ஜனிக்காததால் அரசருடைய ஆஸனத்தில் ஏறுவதற்குத் தகுந்தவனல்ல. "நீ சிறுவனாகையால் வேறு ஸ்திரீயின் கர்ப்பத்தில் ஜனித்தவன்" என்று தெரிந்து கொள்ளவில்லை. அரிதாகிய விஷயத்தை விரும்புகிறாய். ஆனதால் தபஸினால் மஹா புருஷனை ஆராதித்து, அவருடைய அனுகிரஹம் பெற்று என்னுடைய வயிற்றில் ஜனித்தாயானால் உனக்கு ஸிம்மாஸனம் கிடைக்கும்" என்று அரசன் முன்பாகவே அரசனை லட்சியம் செய்யாமல் பொறாமையுடன் சொன்னாள்.

14–23. அப்பொழுது அந்தத் துருவன் பாணத்தால் அடிக்கப்பட்டவன் போல் ஸபத்தினீ மாதாவினுடைய துஷ்ட வாரத்தையைக் கேட்டு வருத்தமடைந்தவனாகி, தண்டத்தால் அடிக்கப்பட்ட ஸர்ப்பம்போல் கோபத்தால் பெருமூச்சு விட்டு அழுதுகொண்டு அவ்விடமிருந்து தன்மாதாவினிடம் சென்றான். பிதாவாகிய அரசர் மௌனமாக இருந்தார். அப்பொழுது சுநீதியானவள் சமீபம் வந்து நிற்கும் புத்திரனை மடியில் ஏற்றி வைத்துக்கொண்டாள். அந்தக் குமாரன் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தான். மேலும் அவனுடைய உதடுகள் துடித்தன. அதனைப் பார்த்த சுநீதியானவள்

அந்தப்புரத்தில் சஞ்சரிக்கும் ஜனங்கள் மூலமாக நடந்த ஸமாஸாரத்தை தெரிந்துகொண்டு, ஸபத்தினியின் வார்த்தையை நினைத்து மிகவும் துன்பமடைந்தாள். காட்டுத்தீயினால் எரிக்கப்படும் கொடிபோன்ற அவள் ஸபத்தினியின் வார்த்தையை நினைத்து, தைரியத்தை விட்டுப் பிரலாபித்தாள். அவளுடைய தாமரைமலர் போன்ற கண்களிலிருந்து துக்க பாஷ்பம் பெருகிற்று. மேலும் பெருமூச்சுவிட்டாள். இப்படி மிகுந்த வருத்தத்துடன் துக்கத்தை நிவர்த்தித்துக் கொள்ளும் உபாயத்தை அறியாதவளாகி, தன் குழந்தையை நோக்கி, "ஒ குழந்தாய்! பிறரிடத்தில் குற்றமிருப்பதாக நினைக்கவேண்டாம். பிறருக்குத் துக்கத்தை உண்டு பண்ணுவதால் தானும் துக்கத்தை அனுபவிக்கும்படி நேரிடுகிறது. சுருசியினால் சொல்லப்பட்டது உண்மையே. அதிருஷ்ட மில்லாதவளாகிய என்னுடைய வயிற்றில் நீ ஜனித்தாய். என்னுடைய ஸ்தன்யத்தை (பால்)க் குடித்து வளர்ந்தாய். உன்னுடைய பிதாவாகிய அரசர் என்னைத் தம்முடைய பத்தினியென்று சொல்லிக்கொள்வதற்கும் வெட்கப்படுகிறார். ஆனதால் உத்தமன் (சுருசியின் பிள்ளை) போல் நீயும் ஸிம்மாஸனத்தை அடைய விரும்புவாயானால் உன்னுடைய ஸபத்தினி மாதாவினால் சொல்லப் பட்டபடி ஸ்ரீமந் நாராயணனுடைய பாதாரவிந்தத்தை ஆராதிக்கவேண்டும். மாத்ஸர்யத்தை விட்டுவிடு. சுத்த ஸத்துவராகிய பகவானுடைய பாதாரவிந்தத்தை ஆராதித்துப் ப்ரஹ்மதேவர் ப்ரஹ்மபதத்தை அடைந்தார். அது ப்ராணாயாமத்தால் மனத்தை யடக்கினவர் களாலும் நமஸ்கரிக்கக் கூடியது. மேலும், உன் பிதாமஹராகிய (பிதாவின் பிதா) மனுவும் பூர்ணமாக தக்ஷிணை கொடுத்து அநேக யாகங்களைச் செய்தும்,

எல்லாரிடத்திலும் அந்தர் ஆக பகவான் இருப்பதாக நினைத்தும், பகவானை ஆராதித்துப் பூமியிலுண்டான சுகத்தையும், ஸ்வர்க்க சுகத்தையும், மோஷ சுகத்தையும் அடைந்தார், ஆனதால் ஒ குழந்தாய், துருவ! பரமபுருஷன் பக்தர்களிடத்தில் வாத்ஸல்யம் உள்ளவர் மோக்ஷத்தை அடைய விரும்பியவர்கள் அவருடைய பாதாரவிந்த மார்க்கத்தைத் தேடுவார்கள். ஆனதால் நீ மனத்தை வேறு இடத்தில் செலுத்தாமல் சுத்தமான மனத்தில் அந்தப் பரமபுருஷனை ஸ்தாபித்து (தியானம் செய்து), ஆராதிக்க வேண்டும். ப்ரஹ்மா முதலியவர்களால் தேடப்படும் லக்ஷ்மீ தேவியாம் கையில் தாமரை மலருடன் அந்த மஹா புருஷனை அனுசரிக்கிறாள். அப்போற்பட்ட தாமரைக் கண்ணனாகிய புருஷோத்தமனைக் காட்டிலும் உன்னை காப்பாற்றகிறவர் வேறொருவரும் இல்லை என்றாள்.

24–28. க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடிய மாதாவின் வார்த்தையைக் கேட்டுத் துருவன் மனத்தால் இந்திரி யங்களை அடக்கிக்கொண்டு பிதாவின் பட்டணத் திலிருந்து வெளியில் சென்றான். அதனை அறிந்த நாரதர் மிகவும் ஆச்சர்யப்பட்டு துருவனுடைய அபிப் பிராயத்தை நன்றாகத் தெரிந்துகொண்டு பாபத்தை நிவர்த்திக்கக்கூடியதான தம்முடைய கையால் துருவனுடைய தலையைத் தொட்டு, "க்ஷத்திரியர்கள் உடைய தேஜஸ் ஆச்சரியப்படக்கூடியது. இவன் சிறுவனானாலும் ஸபத்தினீ மாதாவினால் சொல்லப் பட்ட நிந்தா வார்த்தைகளை மனத்தில் வைத்து கொண்டிருக்கிறான்" என்று எண்ணி அச்சிறுவனை நோக்கி, சிறுவனாகிய நீ ஐசுவரியத்தால் நிறைந்த வீட்டை விட்டு வெளியில் தனியாகப் போகிற

காரணமென்ன ? பந்துக்களால் அவமானஞ் செய்யப் பட்டு அதனால் துக்கிக்கிறவன் போலத்தோன்றுகிறது, (உண்மையைச் சொல்) என்று கேட்டார்.

29. அதனைக் கேட்ட துருவன் அவரை நோக்கி, "ஓ பகவன்! என்னுடைய மனத்திலிருக்கும் அபிப் பிராயம் உமக்கு எப்படித் தெரிந்தது ? தியானத்தால் தெரிந்துகொண்டீரா ? அல்லது யோக மஹிமையால் அறிந்தீரா ? மனத்திற்கு வருத்தத்தைக் கொடுக்கும் சுருசியின் வார்த்தையைப் பொறுக்காமல் வெளியில் வந்தேன்" என்றான்.

30–34. அதனைக்கேட்ட நாரதர் அவனை நோக்கி, "ஓ சிறுவனே! உனக்கு அவமானத்தையாவது ஸம்மானத்தையாவது அறியக்கூடிய வயது இன்னும் வரவில்லையே. இப்பொழுது நீ விளையாட்டு முதலிய வைகளின் ஆசை கொண்டிருக்க வேண்டியவன் அல்லவா ? மேலும், இது ஸம்மானம், அவமானம் என்ற விவேகம் வந்தாலும், அறியாத்தன்மையாலேயே அவமானத்தை அடைந்த ஜனங்கள் துக்கிக்கிறார்கள் ஸம்மானம்; அவமானம் முதலியவைகள் அவரவர்கள் உடைய காரியங்களாலேயே ஏற்படுகின்றன, ஆனதால் தெய்வத்திடம் சேராத வரையில் புருஷப் பிரயத்தினம் பலனைக் கொடுக்கிறதில்லை என்பதைத் தெரிந்துக் கொண்டு, தெய்வச் செயலால் கிடைத்ததை வைத்துக் கொண்டு சந்தோஷிக்கவேண்டும். உன்னுடைய மாதா உபதேசித்தபடி எவருடைய பிரஸாதத்தை அடைய விரும்புகிறாயோ, அவரை ஆராதிப்பது மிகவும் ச்ரமமென்று நினைக்கிறேன். முனிகள், விஷயங்களில் ஆசையை ஒழித்து கடுமையான யோகத்தை செய்து

அநேக ஜன்மங்களில் பகவானை உபாசித்து, அவருடைய மார்க்கத்தைத் தேடியும் அதை அடைய வில்லை ஆனதால் இந்தப் பிடிவாதத்தை விட்டுவிடு. க்ஷேமத்தை அடையவேண்டிய காலம் வரும்போது நீயே யத்தனிப்பாய். மேலும், சுகமாவது துக்கமாவது தெய்வத்தால் ஏற்படுத்தபட்டப்படி அந்த அந்தக் காலத்தில் ஜனங்களால் அனுபவிக்கப்படுகிறது. ஆனால் சுகத்தை அனுபவிப்பதால் புண்ணியம் குறைகிறது என்றும், துக்கத்தை அனுபவிப்பதால் பாவம் குறைகிறதென்றும் நினைத்து ஸந்தோஷத்துடன் காலம் கழித்தால் மோக்ஷத்தை அடைவான். தன்னைக் காட்டிலும் மேலான குணசாலியைப் பார்த்துச் சந்தோஷப்படவேண்டும். (அசூயை அடையக் கூடாதென்று கருத்து.) தாழ்ந்தவனைப் பார்த்து தயைசெய்யவேண்டும் (அலட்சியம் செய்யக்கூடாது) தனக்கு ஸமமானவர் களைப் பார்த்துப் பிரீதிசெய்ய வேண்டும் (விரோத புத்தியை அடையக்கூடாது) இப்படிக் காலத்தைக் கழிப்பவனுக்குத் தாபம் உண்டாகிறதில்லை" என்றார்.

35–38. அதனைக்கேட்ட துருவன் நாரதரை நோக்கி, "ஓ ப்ராஹ்மண! சுகத்தாலும் துக்கத்தாலும் கெடுக்கப்பட்ட மனதுள்ள புருஷர்களுக்கு சுககரமான சாந்தி மார்க்கமானது தயைசெய்து உம்மால் உபதேசிக் கப்பட்டது. என்னைப் போன்றவர்கள் இதனைக் தெரிந்துகொள்ள முடியாது. ஆனாலும் நான் க்ஷத்திரிய தர்மமுள்ளவனும், வணக்கமில்லாதவனும் (மனத்தை அடக்காதவன்), சுருசியின் கெட்ட வார்த்தைகளாகிய பாணங்களால் பிளக்கப்பட்ட ஹிருதய முள்ளவனுமாக இருக்கிறேன், ஆனதால், உம்முடைய வார்த்தைகள் மனத்தில் செல்லவில்லை.

மூவுலகத்திலும் சிறந்ததும், என்னுடைய முன்னோர் களாலும் மற்றவர்களாலும் அடையப்படாததுமான பதத்தை அடைய நான் விரும்புகிறபடியால் அதன் மார்க்கத்தை உபதேசிக்கவேண்டும். ப்ரஹ்மதேவருடைய புத்திரராகிய நீர் எப்பொழுதும் வீணையை மீட்டிக் கொண்டு சூரியன்போல் ஜகத்தின் க்ஷேமத்திற்காக ஸஞ்சரிக்கிறீர்! என்று வேண்டிக்கொண்டான்.

39–60. அதனைக்கேட்ட நாரதர் சிறுவனை நோக்கி, "உன்னுடைய மாதாவினால் உபதேசிக்கப் பட்ட மார்க்கமே க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியது. ஸ்ரீவாசுதேவரே பகவான்; அவரிடத்திலேயே மனத்தைச் செலுத்தி அவரையே ஆராதிக்க வேண்டும். தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகிய புருஷார்த்தங்களை விரும்பியவனுக்கு ஸ்ரீமந் நாராயணனுடைய பாதஸேவையே சரணமெனப் படுகிறது. ஆனதால் யமுனா நதியின் கரையில் மதுவன மென்று ஒரு புண்ணிய பூமியிருக்கிறது. அவ்விடத்தில் பகவான் எப்பொழுதும் ஸான்னித்தியஞ் செய்து கொண்டிருக்கிறார்.

நீ அவ்விடம் சென்று புண்யகரமான யமுனா தீர்த்தத்தில் மூன்று காலம் ஸ்நானஞ் செய்து, தேவதா நமஸ்காரம் முதலியவைகளைச் செய்து, தர்ப்பம் முதலிய ஆஸனத்தில் உட்கார்ந்து, திருவிருத்தாகிய பிராணாயாமத்தால் மனத்திலிருக்கும் அழுக்கை நிவர்த்தித்து, தைர்யமுள்ள மனத்தால் ஸ்ரீமந் நாராயணனைத் தியானிக்க வேண்டும். அவர் பக்தர்களிடத்தில் தயைசெய்யும் நோக்கமுள்ளவர். எப்பொழுதும் —— முகமலர்ச்சியுள்ளவர். அழகான மூக்குள்ளவர் நல்ல புருவங்களுள்ளவர். ரம்யமான

கன்னங்களுள்ளவர், தேவர்களுக்குள் மிகவும் அழகு பொருந்தியவர். யௌவன வயதுள்ளவர். மனோஹரங் களான அவயவங்களுள்ளவர். அவருடைய உதடுகளும் கண்களும் சிவந்தவைகள். மேலும் அவர் நமஸ்கரித் தவர்களுக்கு ஆச்ரயமாக இருப்பவர். சுகஸ்வரூபி. தயையால் நிறைந்தவர். ஸ்ரீ வத்ஸமென்ற அடையாளம் உள்ளவர். மேகம்போல் கறுத்த திருமேனியுள்ளவர், வனமாலையைத் தரித்தவர், சங்கம், சக்கரம் கதை, தாமரை மலர் ஆகிய இவைகளைத் தரித்த நான்கு கைகளுள்ளவர். கிரீடம் குண்டலங்கள், தோள்வளை, வளையம் ஆகிய இவைகளைத் தரித்தவர். கௌஸ்து பஹாரமுள்ள கண்டமுள்ளவர். பீதாம்பரத்தைத் தரித்தவர். காஞ்சி கலாபத்தால் (சரங்கையுள்ள அரை நாண்) சூழப்பட்டவர். ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்டுள்ள பாதங்களுள்ளவர். தரிசிக்கக்கூடியவர். மிகுந்த அழகுள்ளவர். சாந்தர். மனத்திற்கும் நேத்திரங் களுக்கும் ஸந்தோஷத்தை விருத்தி செய்பவர். மேலும் அவர் தம்மை ஆராதிப்பவர்களுடைய ஹிருதய கமலத்தில் நக காந்தியால் பிரகாசிக்கும் பாதார விந்தத்துடன் நின்று மனத்தைவிட்டு பிரியாமல் இருப்பவர்.

மேற்காட்டியபடியுள்ள பகவானுடைய ஸ்வரூபத்தைப் புன்னகை உள்ளதாகவும், பிரீதியான பார்வையுள்ளதாகவும், ஸ்திரமானதும் ஏகாக்கிரமுமான மனத்தால் தியானிக்கவேண்டும். அவர் வரத்தைக் கொடுப்பவர்களில் மேலானவர். மங்களமாய் பகவான் உடைய ஸ்வரூபத்தை மேற்காட்டியபடி தியானிப் பவனுடைய மனம் மிகுந்த சுகத்தை அடைந்து அந்த ஸ்வரூபத்தைக் கவர்ந்து அதிலிருந்து திரும்புகிறதில்லை.

ஓ ராஜபுத்திர! ஜபிக்கக்கூடிய மந்திரம் ஒன்றுண்டு. அது மிகவும் ரகசியமானது. அதனை ஏழு நாட்கள் ஜபித்தால் தேவர்களை நேரில் தரிசிக்கலாம். அதனை உபதேசிக்கிறேன். அதாவது 'பகவானாகிய வாஸு தேவருக்கு நமஸ்காரம்" என்றதாம். இதை ஜபித்து ஜலத்தாலும், சுத்தங்களான காட்டிலுண்டான கிழங்குகளாலும், பழங்களாலும். மேலான அருகம் புற்களாலும், பூர்ஜப்பட்டைகளாலும் பகவானுக்குப் பிரியமான துளஸியாலும், பலவகையான திரவியங் களாலும், தேசத்திற்கும் காலத்திற்கும் தக்கபடி ஸாளக்கிராமம் முதலிய ப்ரதிமைகளிலும் பகவானைப் பாவித்து ஆராதிக்க வேண்டும். இப்படிப் பூஜிப்பவன் மனத்தையடக்கினவனாகி காட்டில் கிடைக்கக்கூடிய கிழங்கு முதலியவைகளைச் சொற்பமாகப் புஜித்துக் கொண்டு பகவான் தமதிஷ்டப்படி அவதரித்துச் செய்யப்போகிற சரிதங்களால் ஏற்படும் அனுகூலத் தையும் தியானிக்கவேண்டும். (துருவனுடைய காலத்திற்குப் பிறகே பகவானுடைய அவதாரங்கள் என்று கருத்து) திரவியத்தால் பகவானுக்கு எந்த உபசாரங்கள் முந்தி செய்யப்பட்டனவோ அவை களை (துவாதசாக்ஷர) மந்திரத்தை ஜபித்துக்கொண்டு மனத்தாலேயே மந்திர மூர்த்தியான பகவானை உத்தேசித்து செய்யவேண்டும். இப்படிச் சரீரத்தாலும், வாக்கினாலும் மனத்தாலும் பக்தியுடன், அந்தரங்கத்து டன் பகவானுக்குச் சிசுரூஷை செய்தால் அந்த ஸாத்விக பக்தர்களுக்கு பகவான் தர்மம் முதலிய புருஷார்த்தங்களில் எது பிராணிகளுக்கு இதமானதோ அதனைக் கொடுக்கிறார். ஆனதால் இந்திரிய விஷயங்களில் ஆசைப்படாமல் (வைராக்யத்துடன்) மிகுந்த பக்தியுடன் இடைவிடாமல் பகவானிடத்தில்

பாவத்தைச் செலுத்தி அவரை ஆராதித்தால் முக்தியை அடையலாம்" என்றார்.

61. அதனைக் கேட்ட ராஜகுமாரன் அவரைப் பிரதக்ஷிண நமஸ்காரங்களால் உபசரித்து பகவான் உடைய பாதங்களால் அழகானதும், புண்யகரமுமான மதுவனத்திற்குச் சென்றான்.

62–64. துருவன் தபஸ்ஸிற்காக வனஞ் சென்ற பின்பு நாரதர் உத்தானபாதருடைய அந்தப்புரஞ் சென்றார். அப்பொழுது அரசர் நாரதரைப் பூஜித்து ஆசனங் கொடுத்து உட்காரச் செய்தார். பின்பு நாரதர் அரசரை நோக்கி, "ஓ மகாராஜ! எதனை மனத்தில் நினைத்து வருத்தப்படுகிறீர்? முகமானது வாடியிருக்கிறதே. தர்மம், அர்த்தம், காமம் ஆகிய இவைகளுக்குள் எதுவும் கெடாமலிருக்கிறதோ? என்று கேட்டார்.

65–67. அதனைக்கேட்ட அரசர் நாரதரை நோக்கி "ஓ ப்ராஹ்மண! ஐந்து வயதுள்ள என்னுடைய சிறுவனாகிய புத்திரனையும், அவனுடைய மாதாவை யும் ஸ்திரீகளின் கூட்டமானது தயையில்லாமல் பட்டணத்தை விட்டு வனம் போகும்படி செய்தது. (தன்னால் செய்யப்பட்டதென்று சொல்வதற்கு வெட்கப் பட்டு ஸ்திரீகள் செய்தார்களென்றார்) ஓ ப்ராஹ்மண! என்னுடைய குழந்தை வனத்தில் தனியாகச் சென்று பசியினால் வருத்தப்பட்டுத் தாமரை மலர்போன்ற முகம் வாடிப் படுத்துக் கொண்டிருப்பானே, அப்பொழுது அவனை அங்கிருக்கும் செந்நாய்கள் புஜிக்காமலிருக்குமா? மிகுந்த அஸத்தாகிய நான்

பிரீதியுடன் மடியின் மீதேறி வரும் குழந்தையினிடம் பிரீதி வைக்காமலிருந்தேனே. நான் ஸ்திரீயால் ஜயிக்கப் பட்டவன்; என்னால் செய்யப்பட்ட துஷ்டநடை ஆச்சரியப் படக்கூடியது" என்று பச்சாத்தாபமடைந்தார்.

68–70. அதைக் கேட்ட நாரதர் அரசரை நோக்கி, "ஓ மகாராஜ! உம்முடைய புத்திரனைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். அவனைத் தேவர்கள் காப்பாற்றுகிறார்கள். அவனுடைய மஹிமை உமக்குத் தெரியாது அவனுடைய கீர்த்தியானது ஸகல லோகங்களில் வியாபிக்கப்போகிறது. லோகபாலர் களாலும் செய்ய முடியாததான காரியத்தைச் செய்து உம்முடைய கீர்த்தியை லோகத்தில் பரவச் செய்து கொண்டு சீக்கிரத்தில் திரும்பிவருவான்" என்று சமாதானம் செய்தார். அரசரும் நாரதருடைய வாரத்தையை நம்பி ராஜ்யத்தில் பிரீதியில்லாமல் புத்திரனையே நினைத்துக் கவலையடைந்தார்.

71–81. துருவன் நாரதருடைய ஆக்ஞையின்படி மதுவனம் சென்று ஸ்நானம் செய்து அன்று இரவு உபவாஸமிருந்து சுத்தனாகப் பரமபுருஷனைப் பூஜித்தான். மூன்று நாட்களுக்கொருதரம் விளாம்பழம், இலந்தைப்பழம் இவைகளைத் தன்னுடைய சரீர ஸ்திதிக்குத் தக்கபடி புஜித்துக் கொண்டு, ஸ்ரீமந் நாராயணனை ஆராதித்தான். இப்படி ஒரு மாத காலம் சென்றது; பின்பு ஆறு நாளுக்கொருதரம் உலர்ந்த இலை, புல் முதலியவைகளைப் புஜித்துப் பகவானை ஆராதித்து, இரண்டாவது மாதத்தைக் கழித்தான். அதன் பிறகு ஒன்பது நாளுக்கொருதரம் ஜலத்தைப்புஜித்து உத்தமச்லோகராகிய பகவானைத்

தியானித்து மூன்றாவது மாதத்தையும் சிறிது நேரத்தைப் போல கழித்தான். அதன்பின் பன்னிரண்டு நாளுக்கொருதரம் காற்றை புசித்துச் சுவாஸத்தை யடக்கி தேவதேவராகிய பகவானைத் தியானம் செய்து நான்காவது மாதத்தைப் போக்கினான். பின்பு ஐந்தாவது மாதத்தில் மூச்சை யடக்கி ஒரு காலைப் பூமியில் ஊன்றிக்கொண்டு ப்ரஹ்மத்தைத் தியானம் செய்துகொண்டு கட்டைபோல அசையாமலிருந்தான். பல விஷயங்களில் செல்லுகிறதும், பூதங்களுக்கும், இந்திரியங்களுக்கும் ஆசிரியமுமான மனத்தை வேறு இடத்தில் செல்லாமல் அடக்கிப் பகவானுடைய ஸ்வரூபத்தைத் தியானம் செய்ததால், அந்த ஸ்வரூபத்தைத் தவிர வேறொன்றும் அவனுக்குப் புலப்படவில்லை. மஹத்தத்துவம் முதலியவைக்கு ஆதாரமும், பிரகிருதி புருஷன் ஆகிய இவைகளுக்கும் அதிபதியுமான ப்ரஹ்மத்தைத் தியானம் செய்யும் துருவனுடைய தேஜஸ்ஸை சஹிக்க முடியாமல் மூன்று லோகங்களும் நடுங்கின. ஓரிடத்தில் யானையானது ஒரு காலால் நிற்குமானால் அதன் கால் வைத்த பக்கத்தில் ஓடம் எப்படி அழுத்தப்படுமோ, அப்படித் துருவன் வலதுகால் கட்டை விரலை ஊன்றும் போது அந்த பக்கத்திலும் பூமியானது வணங்கிற்று. (ப்ரஹ்மத் தியானம் செய்வதால் சரீரம் பாரமாக இருந்தது.) இப்படித் துருவன் தன்னுடைய ப்ராணனையும், அதன் மார்க்கத்தையும் தடுத்து ஜகத்ஸ்வரூபியான ஸ்ரீ மஹாவிஷ்ணுவைத் தானாகப் பாவித்துத் தியானிக்கும்பொழுது ஸகல லோகங்களும் மூச்சுவிட முடியாமல் சிரமத்தையடைந்தார்கள். அதனைக்கண்டு இந்திரன் முதலிய லோகபாலர்கள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவைச் சரணமடைந்து "ஓ பகவான்!

சராசரங்களடங்கிய இந்த ஜகத்திற்கு இம்மாதிரியான உபத்திரவம் (பிராணநிரோதம்) இதுவரையில் ஏற்பட்டதில்லை. இந்தக் கஷ்டத்திலிருந்து எங்களைக் காப்பாற்றும், சரணமடையக் கூடியவராகிய உம்மைச் சரணமடைகிறோம் என்றார்கள்.

82. அதனைக் கேட்ட பகவான் அவர்களை நோக்கி "ஓ தேவர்களே! பயப்படாதீர்கள். உத்தான பாதருடைய புத்திரனாகிய துருவன் என்னையே தியானம் செய்கிறபடியால் லோகத்திற்கு இவ்வளவு உபத்திரவம் உண்டாகியிருக்கிறது. நீங்கள் உங்கள் உடைய கிரஹத்திற்குப் போகலாம். தபஸை நிறுத்தும் படி செய்கிறேன்" என்று அனுக்கிரஹித்தார்.

அத்தியாயம்–9

(தொடர்ச்சி)

1–5 பகவானுடைய வார்த்தையைக் கேட்ட தேவர்கள் பயமற்றவர்களாகி ஸ்வர்க்கம் சென்றார்கள். பகவானும் கருடன் மீதேறித் தம்முடைய பக்தனைப் பார்ப்பதற்காக மதுவனம் சென்றார். அத்தருணத்தில் துருவன் யோகாப்யாஸத்தால் அசையாத புத்தியைக் கொண்டு தன்னுடைய ஹிருதயமாகிய தாமரை மலரில் மின்னல் போலப் ப்ரகாசிக்கும் பகவத் ஸ்வரூபத்தைத் தரிசித்துக் கொண்டிருந்தான். பகவான் அவ்விடஞ் சென்றவுடன் அவனுடைய ஹ்ருதயத்தில் ப்ரகாசித்திருந்த தேஜஸ் மறைந்தது. உடனே கண்களைத் திறந்து பார்க்க, வெளியில் அதே விதமாகப்ரகாசிக்கும் பகவானைத் தரிசித்தான். பகவானைப் பார்த்தமாத்திரத்தில் பரபரப்புள்ளவனாகி, கண்களால் பருகுகிறவன்போலப் பார்த்தும், முகத்தால் முத்தமிட்டுக் கொள்கிறவன் போலும், கைகளால் தழுவுகிறவன் போலும் தண்டம்போல் பூமியில் விழுந்து நமஸ்காரம் செய்தான். மேலுமவன் பகவானை ஸ்தோத்திரம் செய்ய விரும்பியவனானாலும், பகவத் குணங்களை அறியாதவனாகையால் கவலைப்பட்டு இருந்தான். எல்லாருடைய ஹிருதயத்திலும் வசிப்ப வராகிய பகவான், துருவனுடைய அபிப்பராயத்தைத் தெரிந்து கொண்டு கைகளைக் கூப்பி, தமக்கெதிரில் நிற்கும் சிறுவனிடம் மிகுந்த தயையால் வேத ஸ்வரூபமாகிய் சங்கத்தால் அவனுடைய இரு கன்னங்களிலும் தடவினார். அதனால் அவருக்கு ஜீவன் ஈசுவரன் ஆகிய இவர்களுடைய உண்மை நன்றாகத்

தெரிந்தது. சாசுவதமாகிய ஸ்தானத்தை அடையப் போகிற அந்தத் துருவன் பிரஸித்தமான மேலான கீர்த்தியுள்ளவனாகிய பகவானை நோக்கி மெதுவாகப் பக்தி, பிரேமை இவைகளுடன் ஸ்தோத்திரம் செய்தான்.

6–17 "ஸகல சக்தியுள்ளவராகிய எந்தப் பகவான் என்னுடைய சரீரத்திற்குள் பிரவேசித்து கை, கால் , காது, துவக், பிராணன், வாக்கு ஆகிய இவைகளைப் பிழைக்கச் செய்தாரோ, (தன் தன் காரியத்தைச் செய்யச் சக்தியுள்ளதாகச் செய்தார்) அந்தப் பரம புருஷராகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். ஓ பகவன்! நீர் ஒருவரே முக்குணங்களுள்ள தம்முடைய மாயாசக்தியைக் கொண்டு மஹத் தத்துவம் முதலிய இந்த ஸகல ஜகத்தையும் ஸ்ருஷ்டித்து இதில் ப்ரவேசித்து, அஸத்துக்களான இந்திரியகுணங்களை அடைந்து அந்த அந்தத் தேவதையாகப்ரகாசிக்கிறீர். அது, அக்கினி ஒருவரானாலும் கட்டைகளை ஆசிரயித்துப் பல அக்கினிகளாகத் தோற்றுவது போலிருக்கிறது. (ஞானம் முதலிய சக்தியுள்ள புருஷன் நீர் ஒருவரேயொழிய வேறு ஒருவருமில்லை யென்று கருத்து) ஓ உபத்திரமடைந்தவர்களுக்குப் பந்துவாக இருப்பவரே! ப்ரஹ்மதேவரும் உம்மால் கொடுக்கப்பட்ட திவ்ய ஞானத்தைக் கொண்டு இந்த ஜகத்தைப் பார்த்தார். ஓ நாத! உம்மை அடைந்தவன் தூங்கி விழித்தவன் போன்றவன். உம்முடைய பாதமானது முக்தர்களுக்கும் சரணமாக இருக்கிறது. அப்படிப்பட்ட உம்முடைய பாதாரவிந்தத்தைச் செய்த உபகாரத்தை நினைப்பவனாகிய எவன் மறந்துவிடுவான் ? (உம்மைப் பூஜிக்காதவர்கள் கிருதக்னர்களாவார்கள்.) மேலும் நீர் பக்தர்களை

ஜனன மரண துக்கத்திலிருந்து காப்பாற்றுகிறவர். அப்படிப்பட்ட உம்மை எவர்கள் ஸ்வல்ப பலத்தை விரும்பிப் பூஜிக்கிறார்களோ, அவர்கள் உம்முடைய மாயையால் ஏமாற்றப்பட்ட புத்தியுள்ளவர்களேயாம். பிணத்துக்கொப்பான சரீரத்தால் அனுபவிக்கக் கூடிய சுகத்திற்காக கற்பக விருக்ஷம் போன்ற உம்மைப் பூஜிக்கிறார்களல்லவா ? விஷய சம்பந்தத்தாலுண்டாகும் சுகமானது நரகத்திலும் மனிதர்களால் அடையப் படுகிறது.

மேலும் உம்முடைய பாதாரவிந்தத்தைத் தியானிப் பதாலும், பக்தர்கள் முகமாக உம்முடைய கதைகளைச் சிரவணஞ் செய்வதாலும் எந்த சுகமுண்டாகிறதோ, அது ஆனந்த ரூபமாகிய ப்ரஹ்ம ஸ்வரூபத்திலும் உண்டாகிறதில்லை. அப்படிக்கிருக்க, பயங்கரமான யமனுடைய கத்தி போன்ற காலத்தால் விமானத்தில் இருந்து பூமியில் விழுகிறவர்களுக்கு அம்மாதிரியான சுகம் கிடைக்குமா ? (புண்யம் நசிக்கிறவரையில் ஸ்வர்க்க சுகத்தை யனுபவித்துப் புண்யம் குறைந்த வுடன் பூமிக்கு வருகிறார்கள். ஆனதால் ஸ்வர்க்க சுகமும் இதற்கொப்பானதாகுமா ?) ஓ அனந்த! உம்முடைய குணங்களுடைய கதாமிருதத்தைப் பானம் செய்து அதனால் மதித்துப் பலவகையான வியஸனங் களுள்ள ஸம்ஸாரத்தை பிரயாசையின்றித் தாண்டுவேன். ஆனதால் சுத்தசித்தர்களும் எப்பொழுதும் இடைவிடாமல் உம்மிடத்தில் பக்தி செய்பவருமான சாதுக்களுடன் சகவாசம் முதலிய எனக்கு இருக்கும் படி அனுக்கிரகிக்க வேண்டும். ஓ பத்மநாப! எவர் உம்முடைய பாதமாகிய தாமரைமலரின் வாசனையில் ஆசைபட்ட சித்தமுள்ளவர்களிடத்தில் (பக்தர்கள்)

சகவாஸம் முதலியவைகளைச் செய்கிறார்களோ, அவர்கள் மிகுந்த பிரியமான தேகத்தையும், புத்திரன், மித்திரன், வீடு, பணம், ஸ்திரீ ஆகிய இவைகளையும் நினைக்கிறதில்லை. ஓ ஜனனமற்றவரே! மஹத்தத்துவம் முதலிய அனேககாரணங்களுள்ள காரியகாரண விசேஷங்களுள்ளதும், திர்யக், மனிதர்கள், ப்ராஹ்மணன், மலைப்பாம்பு, தேவன், அசுரர்கள் ஆகிய இவர்கள் உடைய சரீரங்களால் வியாப்தமுமான இந்த உம்முடைய விராட் உருவத்தை நான் அறிவேன். இதைவிட மேலானதை நான் அறியேன். அது சப்தத்தால் சொல்ல முடியாதது. (வாக்குக்கு எட்டாதது). பிரளய காலத்தில் இவ்வுலகத்தை வயிற்றில் அடக்கிக் கொண்டு ஆதிசேஷனாகிய படுக்கையில் நீர் யோக நித்திரை செய்கிறீர். உம்முடைய சமுத்திரம் போன்ற கொப்பூழில் தோன்றிய ஸ்வர்ணமயமாக லோக ஸ்வரூபமுமான தாமரை மலரில் ப்ரஹ்மதேவர் உண்டானார். அப்படிப்பட்ட பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். நீர் நித்யமுக்தர், பரிசுத்தர், எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக இருப்பவர், விகாரம் அற்றவர். எல்லாவற்றிற்கும் ஆதியாக இருக்கும் புருஷன், ஐசுவரியமுள்ளவர், முக்குணங்களுக்கு அதிபதி. புத்தியின் ஸ்திதியைச் சித்சக்தியைக் கொண்டு பார்ப்பவர். ஆனதால் ஜீவனுக்கும் உமக்கும் அநேக பேதமிருக்கிறது. அப்படிப்பட்ட நீர் ஜகத்தைக் காப்பாற்றுகிறவர். யக்ஞத்திற்கு அதிஷ்டாதாவாகிய விஷ்ணுவும் நீரே. பலவகையான சக்தியுள்ளவைகளும் ஒன்றுக்கொன்று விருத்த கதியுள்ளவைகளுமான வித்யை முதலியவைகள் எவரிடமிருந்து கிரமமாக உண்டாகின்றனவோ அப்போர்ப்பட்டதும், ஜகத்திற்கு உற்பத்தி ஸ்தானமும், அகண்டமும், ஆதியந்தமற்றதும்,

ஆனந்த ஸ்வரூபமும், விகாரங்களற்றதுமான ப்ரஹ்மத்தைச் சரணமடைகிறேன். ஓ பகவன்! ஆனந்த ஸ்வரூபியான உம்முடைய பாதத்தை ஸகல பலனை காட்டிலும் மேலானது என்று நிஷ்காமர்கள் உபாசித்தாலும் தீனர்களாகிய எங்களையும் (ஸம்ஸாரிகளை) மிகுந்த தயையுடன் இளங்கன்றுள்ள பசுவானது கன்றுக்குப் பால் கொடுத்துக் காப்பாற்றுவதுபோல் ஸம்ரக்ஷிக்கிறீர் என்று ஸ்தோத்திரஞ் செய்தான்.

18–26 இப்படி துதிக்கப்பட்டவர் பக்தர்களிடத்தில் பிரீதியுள்ளவருமான பகவான் ஸத்ஸங்கல்பம் உள்ள புத்திசாலியாகிய துருவனை சிலாகித்து அவனை நோக்கி 'ஓ சிறுவனாகிய ராஜகுமாரனே! உன்னுடைய எண்ணம் இப்படிப் பட்டதென்று எனக்குத் தெரியும், அது மற்றவர்களால் அடைய முடியாததானாலும் அதனை உனக்கு கொடுக்கிறேன். எந்தப்பதமானது அழிவற்றதோ, விசேஷ காந்தியுள்ளதோ கிரகங்கள், அச்வநீ முதலிய நக்ஷத்திரங்கள், மற்றதாரைகள் முதலியவையுள்ள தேஜஸ்ஸுக்களுடைய சக்கரம் எவ்விடத்திலிருக்கிறதோ, மேலும் ஒரே கம்பத்தில் அநேகம் காளைகளைக் கட்டுவது போல் எதனிடத்தில் ஸகல ஜ்யோதிஸ்ஸுமிருக்கிறதோ, எது வெகுகாலம் இருக்கக் கூடிய (மூவுலகமும் நாசத்தையடைந்தாலும் எது நாசமடைகிறதில்லையோ), தர்மம், அக்கினி, கச்யபர், சுக்கிரன், ஸப்தரிஷி, நக்ஷத்திரம் ஆகிய இவைகள் எதனை பிரதக்ஷிணமாக சுற்றுகின்றனவோ, அந்தத் துருவ பதத்தைக் கொடுக்கிறேன். ஆனால் தர்மிஷ்டராகிய உன்னுடைய பிதா உனக்கு ராஜ்யத்தை கொடுத்து வனத்திற்குப் போவார். அப்பொழுது இருபத்து ஆறாயிரம் (26,000 வருஷம் நீ

ராஜ்யத்தைப் பரிபாலிப்பாய் உன் சகோதரனாகிய உத்தமன் வேட்டைக்குச் சென்று காணாமல் போய் விடுவான். அப்பொழுது அவனுடைய மாதா அவனை தேடிச்சென்று காட்டுத்தீயினால் மரணமடைவாள்.

பின்பு நீ பூர்ணமாகத் தக்ஷணை கொடுத்து யாகங்களை யனுஷ்டித்து அதனால் யக்ஞத்தில் ப்ரீதியுள்ள என்னை ஆராதித்து இவ்வுலகத்திய சுகங்களை யனுபவித்துக் கடைசியில் என்னைச் சிந்திப்பாய். அதன்பின் முன்னே காட்டிய மேலான பதத்தையடைந்த சப்தரிஷிகளுக்கும் மேலானவனாக இருப்பாய். அந்தப் பதத்திற்கு அழிவில்லை" என்று அனுக்கிரகித்து அந்தச் சிறுவன் பார்த்திருக்கும்போதே தம்மிடம் சென்றார்.

27 அந்தச் சிறுவனும் ஸ்ரீ மகாவிஷ்ணுவினுடைய பாதசேவையால் தன்னுடைய சங்கல்பம் பூர்த்தியை யடைந்தும் அதிக உற்சாகமில்லாதவனாகத் தன்னுடைய பட்டணம் சென்றான்" என்று மைத்ரேயர் விதுரருக்குச் சொன்னார்.

28 அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி "ஓ பகவான்! பகவான் பாதசேவை செய்து துர்லபமான பதத்தை ஒரே ஜன்மத்தில் அடைந்தும் துருவர் ஏன் தம்மைக் கிருதார்த்தராக நினைக்கவில்லை?" என்று கேட்டார்.

29–35 அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி, 'துருவன் சபத்தினீ மாதாவினுடைய நிந்தா வார்த்தைகளால் வருத்தமடைந்தவனாகி பக்தியை

கொடுப்பவரான பகவானைத் தரிசித்தும் மோக்ஷத்தைக் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்திக்கவில்லை. ஆனதால் இம்மாதிரி புத்தி மாறிவிட்டதேயென்று தாபமடைந்தான். எப்படியெனில் "ஸனந்தர் முதலிய ஊர்த்துவரேதஸ் உள்ள மஹரிஷிகள் அநேக ஜன்மத்தில் யோகம் முதலியவைகளை யனுஷ்டித்தும் எவருடைய பாதத்தை அடையவில்லையோ, அப்படிப் பட்ட பாதத்தின் சாயையை நான் ஆறுமாதத்தில் அடைந்து பேத புத்தியுள்ளவனாக இருந்தேன். பாக்கியக் குறைவுள்ளவனாகிய என்னுடைய அறியாத் தன்மை வியக்கக் கூடியது. ஸம்ஸாரத்தை நிவர்த்திக்கும் பரம புருஷனுடைய பாதங்களை அடைந்து அநித்திய சுகத்தையே விரும்பினேன். மிகுந்த அஸத்தாகிய நான் நாரத பகவானுடைய உண்மையான வார்த்தையைக் கேட்டு அதனை யனுஷ்டிக்கவில்லை. ஆனதால் பொறாமையுள்ளவர்களான தேவர்கள் என் புத்தியை மாற்றிவிட்டார்கள். லோகத்தில் ஆத்மாவைக் காட்டிலும் இரண்டாவது பதார்த்தமில்லை என்பது உண்மை யாயிருக்க என்னுடைய சகோதரன் எனக்குச் சத்துரு வென்று நினைத்து மனவருத்தப்படுகிறேன்.

இது தேவருடைய மாயையேயாம். தூங்குகிறவனால் ஸ்வப்னத்தில் காணப்படும் வஸ்துக்கள் ஸத்தியமாக அப்பொழுது தோன்றினாலும் அவைகள் மித்யை அல்லவா? ஸ்ரீ பகவான் கருணை செய்யும்படி ஆராதிப்பது அரிதானாலும் கடும் தபஸ் செய்து அவருடைய பிரஸாதத்தை அடைந்தும் நான் அவரிடம் பெற்றுக்கொண்ட வரமானது ஆயுஸ் இல்லாதவனுக்கு செய்யும் வைத்தியம்போல் வியர்த்தமானதேயாம். ஸம்ஸார சுகத்தைக் கொடுக்க வேண்டுமென்று

ராஜ்யத்தைப் பரிபாலிப்பாய் உன் சகோதரனாகிய உத்தமன் வேட்டைக்குச் சென்று காணாமல் போய் விடுவான். அப்பொழுது அவனுடைய மாதா அவனை தேடிச்சென்று காட்டுத்தீயினால் மரணமடைவாள்.

பின்பு நீ பூர்ணமாகத் தக்ஷணை கொடுத்து யாகங்களை யனுஷ்டித்து அதனால் யக்ஞத்தில் ப்ரீதியுள்ள என்னை ஆராதித்து இவ்வுலகத்திய சுகங்களை யனுபவித்துக் கடைசியில் என்னைச் சிந்திப்பாய். அதன்பின் முன்னே காட்டிய மேலான பதத்தையடைந்த சப்தரிஷிகளுக்கும் மேலானவனாக இருப்பாய். அந்தப் பதத்திற்கு அழிவில்லை" என்று அனுக்கிரகித்து அந்தச் சிறுவன் பார்த்திருக்கும்போதே தம்மிடம் சென்றார்.

27 அந்தச் சிறுவனும் ஸ்ரீ மகாவிஷ்ணுவினுடைய பாதசேவையால் தன்னுடைய சங்கல்பம் பூர்த்தியை யடைந்தும் அதிக உற்சாகமில்லாதவனாகத் தன்னுடைய பட்டணம் சென்றான்" என்று மைத்ரேயர் விதுரருக்குச் சொன்னார்.

28 அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி "ஓ பகவான்! பகவான் பாதசேவை செய்து துர்லபமான பதத்தை ஒரே ஜன்மத்தில் அடைந்தும் துருவர் ஏன் தம்மைக் கிருதார்த்தராக நினைக்கவில்லை?" என்று கேட்டார்.

29–35 அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி, 'துருவன் சபத்தினீ மாதாவினுடைய நிந்தா வார்த்தைகளால் வருத்தமடைந்தவனாகி பக்தியை

Released by Maran's Dog, Toronto , Canada

கொடுப்பவரான பகவானைத் தரிசித்தும் மோக்ஷத்தைக் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்திக்கவில்லை. ஆனதால் இம்மாதிரி புத்தி மாறிவிட்டதேயென்று தாபமடைந்தான். எப்படியெனில் "ஸனந்தர் முதலிய ஊர்த்துவரேதஸ் உள்ள மஹரிஷிகள் அநேக ஜன்மத்தில் யோகம் முதலியவைகளை யனுஷ்டித்தும் எவருடைய பாதத்தை அடையவில்லையோ, அப்படிப்பட்ட பாதத்தின் சாயையை நான் ஆறுமாதத்தில் அடைந்து பேத புத்தியுள்ளவனாக இருந்தேன். பாக்கியக் குறைவுள்ளவனாகிய என்னுடைய அறியாத் தன்மை வியக்கக் கூடியது. ஸம்ஸாரத்தை நிவர்த்திக்கும் பரம புருஷனுடைய பாதங்களை அடைந்து அநித்திய சுகத்தையே விரும்பினேன். மிகுந்த அஸத்தாகிய நான் நாரத பகவானுடைய உண்மையான வார்த்தையைக் கேட்டு அதனை யனுஷ்டிக்கவில்லை. ஆனதால் பொறாமையுள்ளவர்களான தேவர்கள் என் புத்தியை மாற்றிவிட்டார்கள். லோகத்தில் ஆத்மாவைக் காட்டிலும் இரண்டாவது பதார்த்தமில்லை என்பது உண்மையாயிருக்க என்னுடைய சகோதரன் எனக்குச் சத்துரு வென்று நினைத்து மனவருத்தப்படுகிறேன்.

இது தேவருடைய மாயையேயாம். தூங்குகிறவனால் ஸ்வப்னத்தில் காணப்படும் வஸ்துக்கள் ஸத்தியமாக அப்பொழுது தோன்றினாலும் அவைகள் மித்யை அல்லவா? ஸ்ரீ பகவான் கருணை செய்யும்படி ஆராதிப்பது அரிதானாலும் கடும் தபஸ் செய்து அவருடைய பிரஸாதத்தை அடைந்தும் நான் அவரிடம் பெற்றுக்கொண்ட வரமானது ஆயுஸ் இல்லாதவனுக்கு செய்யும் வைத்தியம்போல் வியர்த்தமானதேயாம். ஸம்ஸார சுகத்தைக் கொடுக்க வேண்டுமென்று

Released by Maran's Dog, Toronto , Canada

அபிமானமுள்ளவனாகிப் பிரார்த்தித்தேன். நான் புண்ணியமற்றவன். பகவானிடத்தில் நான் வரம் பெற்றுக் கொண்டது கேட்டதைக் கொடுக்க சித்தனாக இருக்கும் சக்கரவர்த்தியை தரித்திரன் தன் கையில் இருக்கும் சிறிய பாத்திரம் நிறைய அரிசி கொடுக்க வேண்டுமென்று பிரார்த்தித்து அரிசியைப் பெற்றுக் கொண்டது போலிருக்கிறது என்று நினைத்துத் துருவர் பச்சாதாபமடைந்தார். ஓ விதுரரே! பகவான் உடைய பாதாரவிந்த தூளியை அடைந்து அதனால் திருப்தி அடைந்திருக்கும் உம்மைப் போன்றவர்கள், பகவானுக்குச் சிச்ரிஷை செய்வதைவிட வேறு ஒன்றையும் விரும்பார்கள். தெய்வச்செயலாக கிடைத்தால் சந்தோஷமடைவார்கள்.

36–64 பின்பு துருவர் வருகிறாரென்பதைக் கேட்டும் உத்தானபாதர், 'மரணமடைந்தவன் திரும்பி வருகிறான்' என்றால் அதை ஜனங்கள் எப்படி நம்பமாட்டார்களோ அப்படி "பாபியான எனக்கு இம்மாதிரியான க்ஷேமமும் கிடைக்குமோ என்று" நம்பவில்லை. ஆனாலும் தேவரிஷியான நாரதருடைய வார்த்தையை நினைத்து விசேஷ சந்தோஷமடைந்து இம்மாதிரியான நல்ல ஸமாசாரம் சொன்னவனுக்கு விலை உயர்ந்த ஹாரத்தைக் கொடுத்தார். பிறகு மேலான குதிரைகள் கட்டியதும், ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப்பட்டதுமான ரதத்தின் மீதேறிக் கொண்டு ப்ராஹ்மணர்கள் தம்முடைய குலத்திலுள்ள பெரியோர்கள், மந்திரி, பந்துக்கள் ஆகிய இவர்களுடன் நகரத்தை விட்டு புறப்பட்டார். அப்பொழுது சங்கம், துந்துபி, புல்லாங்குழல் முதலிய வாத்தியங்களை கோஷித்தார்கள். ப்ராஹ்மணர்கள் வேதம்

உச்சரித்தார்கள். ஸுநீதி, ஸுருசி என்ற ராஜ பத்தினிகள் உத்தமனென்ற ராஜ குமாரனுடனும் பல்லக்கில் ஏறிக் கொண்டு அரசர்பின் சென்றார்கள்.

இப்படி அரசர் தம்முடைய புத்திரனைப் பார்க்க விரும்பி பட்டணத்துக்குச் சமீபத்திலிருக்கும் தோட்டத்தின் அருகில் வருகிற துருவரைக் கண்டு சீக்கிரம் ரதத்திலிருந்து இறங்கி அதிக பிரேமையால் பரவசராகி பெருமூச்சுவிட்டு புத்திரனை ஆலிங்கனம் செய்துகொண்டார். பின்னும் அந்த அரசர் புத்திரனைக் கண்டதால் பூர்ண மனோரதமுள்ளவராகி ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பாதஸேவையால் பாவங்களற்ற வராக இருக்கும் துருவருடைய தலையை மோந்து ஆனந்த பாஷ்பத்தைப் பெருக்கினார். அப்பொழுது ஸாதுக்களில் முந்தியவராகிய துருவர் பிதாவினுடைய பாதங்களை நமஸ்கரித்து அவரால் ஆசீர்வதிக்கப்பட்டு இரண்டு மாதாக்களையும் நமஸ்கரித்தார். ஸுருசி யானவள் வணங்கிய குமாரனைத் தூக்கி ஆலிங்கனம் செய்து பாஷ்பத்தால் கத்கத ஸ்வரத்துடன் "வெகுகாலம் ஜீவித்திரு" என்று ஆசீர்வதித்தாள். புருஷன் பகவான் இடத்தில் செய்யும் மைத்திரி முதலிய குணங்களால் பகவான் எவனிடத்தில் தயைசெய்கிறாரோ, அவனை ஸகல பிராணிகளும் நமஸ்கரிக்கிறார்கள். ஜலமானது பள்ளத்தில் பிரவேசிக்கிறது. (அதனால் ஸுருசியும் துருவரிடம் விசுவாசத்தை வைத்தாள்.) மேலும் உத்தமனும், துருவனும், ஒருவருக்கொருவர் ஆலிங்கனஞ் செய்துகொண்டு மயிர்க் கூச்சலையடைந்து அடிக்கடி ஆனந்த பாஷ்பத்தைப் பெருக்கினார்கள். ஸுநீதியென்ற துருவருடைய மாதாவானவள் தன்னுடையப் பிராணனைக் காட்டிலும் பிரியனாகிய புத்திரனைத்

தழுவி அவனுடைய சரீர ஸ்பர்சத்தால் மனக்கவலையை யொழித்தாள். சூரனைப் பெற்றவளாகிய அவளுடைய கண்களிலிருந்து ஆனந்த ஜலம் பெருகி ஸ்தனங்களில் விழுந்தது. அந்த ஸ்தனங்களிலிருந்து பால் பெருகியது. அந்தராஜமஹிஷியை நோக்கி ஜனங்கள் "காணாமல் போன உன்னுடைய புத்திரன் தெய்வச் செயலால் திரும்பி வந்திருக்கிறான். உன் கவலையை நிவர்த்திப் பான். பூமண்டலத்தைப் பரிபாலிப்பான், பக்தர்கள் உடைய கவலையைத் தீர்க்கும் பகவானை நீ ஆராதித்தாய். அவனைத் தியானம் செய்யும் வித்வான் கள் ஜயிக்க முடியாத ஸம்ஸாரத்தை ஜயிப்பார்கள்" என்று கொண்டாடினார்கள்.

இப்படி ஜனங்களால் சிலாகிக்கப்படும் துருவரை, உத்தமனுடன், அரசன் யானையின் மீதேற்றி வைத்துக் கொண்டு ஜனங்களால் துதிக்கப்பட்டு, தம்முடைய நகரத்திற்குட் சென்றான். அந்த பட்டணத்தில் ஒவ்வொரு வீட்டின் வாசலிலும், கோட்டை வாசல் களிலும், வாழைகளும், பாக்குக்கன்றுகளும், மகர தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. மேலும் மாந்தளிர்கள், வஸ்திரங்கள், புஷ்ப மாலைகள், முத்து மாலைகள் ஆகிய இவைகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தன. பூர்ணகும்பம் வைக்கப்பட்டிருந்தது. தீபங்கள் பிரகாசித்தன. மேலும் அந்த நகரமானது அலங்கிருதங்களான பிராகாரங்களாலும் கோபுரங் களாலும், வீடுகளாலும், தங்க வேலை செய்த விமான சிகரங்களுடைய காந்திகளாலும் மனோஹரமாக இருந்தது. பின்னும் ராஜமார்க்கங்களும், நாற்சந்தி களும், அவாந்தர வீதிகளும், பிரகாரத்தின் மீதிருக்கும் வீதிகளும் குப்பையில்லாமல் சுத்தம் செய்யப்பட்டும்;

ஜலம் தெளிக்கப்பட்டும், சந்தனத்தாலும், பொரிகளா லும், அக்ஷதங்களாலும், புஷ்பங்களாலும், பழங்களா லும், அரிசிகளாலும், பலிகளாலும் அலங்கரிக்கப் பட்டு மிருந்தன. ராஜ மார்க்கத்தில் வரும் துருவருக்குப் பட்டணத்திலிருக்கும் பதிவிரதைகளான ஸ்திரீகள் வெண்மையான கடுகு, அக்ஷதம், தயிர், பூர்ண கும்பம், அருகம்புல், புஷ்பம், பழம் முதலிய மங்கள திரவியங்களை ஸமர்ப்பித்து மிகுந்த பிரீதியுடன் ஆசீர்வாதம் செய்தார்கள். இப்படி எல்லோராலும் பூஜிக்கப்பட்டும், மனோஹரமான கானங்களைக் கேட்டுக் கொண்டும் துருவர் பிதாவின் உடைய கிருஹம் சென்றார். அந்த அரண்மனையானது மேலான இரத்தினங்களால் கட்டப்பட்டது. அந்த பிதாவினுடைய கிருஹம் சென்றார்.

அதில் பிதாவினால் பகுமானிக்கப்பட்டு ஸ்வர்க்கத்தில் தேவன்போல் வசித்தார். அவ்விடத்தில் பால்போலும் நுரைபோலும் வெண்மையான மேல் விரிப்புகளும், தந்தவேலை செய்யப்பட்டவைகளும், சுவர்ணத்தால் அலங்கரிக்கப்பட்டவைகளுமான கட்டில் முதலிய படுக்கைகளும் ஸ்வர்ணமயங்களான ஆஸனங்களுமிருக்கின்றன. அங்கிருக்கும் ஸ்படிகச் சுவர்களிலும் மரகதச் சுவர்களிலும் தீபங்களும், ஸ்திரீகளும் பிரதிபிம்பிக்கிறார்கள். மேலும் அழகான தோட்டங்களிருக்கின்றன. அவைகளில் பலவகையான தேவ விருக்ஷங்களு மிருக்கின்றன. பறவைகள் ஆணும் பெண்ணுமாகச் சப்திக்கின்றன. வண்டுகள் மதங்கொண்டவைகளாகிப் பாடுகின்றன. மேலும் அவ்விடத்திலிருக்கும் ஓடைகளுடைய படிகள் வைடூரியக் கற்களால் கட்டப்பட்டு இருக்கின்றன.

அந்த ஓடைகளில் தாமரைகள் நீலோத்பலங்கள், ஆம்பல்கள் ஆகிய இவைகளிருக்கின்றன. ஹம்ஸம், நீர்க்காக்கை, சக்கரவாகம், ஸாரஸங்கள் ஆகிய நீர்ப்பறவைகளும் வசிக்கின்றன.

65–67 பின்பு உத்தானபாதர் என்ற அந்த ராஜ ரிஷியானவர் தம்முடைய புத்திரராகிய துருவருடைய சரிதத்தை (துபஸ் செய்து பகவானிடம் வரம் பெற்றது) கேட்டு மிகவும் ஆச்சரியமடைந்தார். இப்படி சில காலம் சென்றபின் துருவர் இராஜ்ய பரிபாலனம் செய்யும் வயதை அடைந்தார். ஜனங்களும் அவரிடம் மிகுந்த பிரியமுள்ளவர்களாக இருந்தார்கள். அப்பொழுது அரசர் தாம் வயது சென்றவராக இருந்ததாலும் துருவருக்குப் பட்டாபிஷேகம் செய்தார். ஜனங்களுக்கு அது சம்மதமாக இருந்தது. பின்னுமவர் விஷயங்களில் ஆசையை ஒழித்து ஆத்ம தத்துவத்தை யோசித்து வனம் சென்றார்.

அத்தியாயம்–10

துருவர் புண்ய ஜனர்களுடன் யுத்தம் செய்தது

1–3. பின்பு துருவர் சிம்சுமாரரென்ற பிரஜாபதியின் புத்திரியாகிய பிரமி என்பவளை விவாகம் செய்து கொண்டு அவளிடத்தில் கல்பன், வத்ஸரண் என்ற இரண்டு புத்திரர்களை உண்டுபண்ணினார். பின்னும் மிகுந்த பலசாலியான அவர் வாயுவின் புத்திரியாகிய இளை யென்பவளைக் கல்யாணம் செய்துகொண்டு அவளிடத்தில் உத்கலனென்ற புத்திரனையும், சிறந்த புத்திரியையும் உண்டுபண்ணினார். அவருடைய ஸபத்தினி மாதாவின் புத்திரனாகிய உத்தமன் கல்யாணம் செய்துகொள்வதற்கு முன்னமேயே ஒருநாள் வேட்டைக்காக இமயமலை சென்று அவ்விடத்தில் மிக்க பலசாலியான புண்யஜனனால் (அசுரனால்) கொல்லப்பட்டான். அவனுடைய மாதாவாகிய ஸுருசியும் புத்திரசோகத்தால் மரணமடைந்தாள்.

4–28. பின்பு துருவர் தம்முடைய ஸஹோதரன் மரணமடைந்ததைக் கேட்டு கோபம், பொறாமை, துக்கம் ஆகிய இவைகளை அடைந்து ஜயசீலமான ரதத்தின் மீதேறி புண்ய ஜனர்கள் வசிக்கும் அலகா நகரத்தை நோக்கிப் புறப்பட்டார். வடக்குத்திக்கில் இமயமலை சென்று அவ்விடத்தில் அலகா நகரத்தைக் கண்டார். அதில் பரமசிவனுடைய வேலைக்காரர் களான ராக்ஷஸர்களும். குஹ்யர்களும் வசிக்கிறார்கள். பெரிதான கைகளுள்ளவராகிய அந்தத் துருவர் அவ்விடம் சென்று சங்கத்தை ஊதினார். அதன் சப்தத்தால் ஆகாசம், திக்குகள் ஆகிய இவைகளில்

எதிரொலி உண்டாயிற்று. ஓ விதுரரே! அதனைக் கேட்டு யக்ஷஸ்திரீகள் பயந்தார்கள். பிறகு மிக்க பலசாலிகளான உபதேவர்களெல்லாரும். அந்தச் சப்தத்தை சகிக்காதவர்களாகி ஆயுதங்களை கையில் எடுத்துக்கொண்டு பட்டணத்திற்கு வெளியில் வந்தார்கள். மஹாரதரும், பயங்கரமாகிய தனுஸைத் தரித்தவருமான துருவர் தம்மை எதிர்த்து வருகிற அந்த உபதேவர்களைப் பார்த்து மூன்று பாணங்களால் தனியே ஒவ்வொருவரையும் ஒரேகாலத்தில் அடித்தார். அந்துப் பாணங்கள் அவர்கள் நெற்றியில் பதிந்தன அவர்களெல்லோரும் தங்களை அபஜயமடைந்தவர் களாக நினைத்துத் துருவருடைய திறமையைப் பற்றிப் புகழ்ந்தார்கள். பின்பு அவர்கள் காலால் மிதிக்கப்பட்ட ஸர்ப்பங்கள் போல் துருவருடைய பராக்கிரமத்தைச் சகிக்காதவர்களாகி ஒவ்வொருவரும் ஆறு பாணங்களால் துருவரை தனித்தனியே அடித்தார்கள். பின்னுமவர்கள் பரிகங்கள், கத்திகள், பிராஸமென்ற ஆயுதங்கள், சூலங்கள், பரச்வதங்கள், சக்திகள், யஷ்டிகள், முஸண்டிகள், பலவகையான இறக்கைகளுள்ள பாணங்கள் ஆகிய இவைகளை வர்ஷித்தார்கள். அவர்கள் ஒரு லக்ஷத்து முப்பது ஆயிரம் பேர்கள். (1,30,000) எல்லோரும் விசேஷ கோபங்கொண்டவர் களாக இருந்ததுமல்லாமல் துருவர் செய்ததற்குப் பதில் செய்யவேண்டுமென்ற விருப்பமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். அப்பொது அவர்களுடைய ஆயுத வர்ஷத்தால் உத்தானபாதருடைய புத்திரராகிய துருவரும், அவருடைய இரதமும் அதில் கட்டப்பட்டு இருக்கும் குதிரைகளும், ஸாரதியும் மூடப்பட்டார்கள். அது மழையால் மலை மூடப்பட்டது போலிருந்தது. அப்பொழுது அதனைப் பார்த்திருந்த சித்தர்கள்

"மனுவின் வம்சத்திலுண்டான சூரியன் புண்யஜனர் களாகிய பெரிதான சமுத்திரத்தில் மூழ்கினார். ஹா ஹா" என்று உரக்கக்கூவினார்கள். அசுரர்கள் "ஜயித்தோம் ஜயித்தோம்" என்று உரக்கச் சொல்லி சந்தோஷித்தார்கள்.

அந்தச் சமயத்தில் பனி மூட்டத்திலிருந்து சூரியன் வெளிப்பட்டாற்போல் துருவருடைய இரதமானது அதிலிருந்து வெளியில் வந்தது. துருவரும் பயங்கரமாகிய தம்முடைய வில்லில் நாண் கயிற்றைக் கட்டி, சப்திக்கச்செய்து அதில் பாணங்களைத் தொடுத்துச் சத்துருக்களுடைய அஸ்திரங்களை அடித்தார். அது மேகக் கூட்டத்தை வாயு நாசஞ் செய்தது போலிருந்தது. அதனால் சத்துருக்கள் மனவருத்தமடைந்தார்கள். துருவருடைய வில்லிலிருந்து விடப்பட்ட பாணங்கள் அவர்களுடைய கவசங்களைப் பிளந்து இடி விழுந்தாற் போல சரீரத்திலும் பிரவேசித்தன. பல்லமென்ற பாணங்களால் அறுக்கப் பட்ட அழகான குண்டலங்களுள்ள தலைகளும், சுவர்ண மயமான பனைமரம் போன்ற துடைகளும் வலயங்களால் அழகான கைகளும், விலையுயர்ந்த மகரங்கள் தோள் வளைகள், கிரீடங்கள், தலைப் பாகைகள் ஆகிய இவைகளும் யுத்த பூமியை மறைத்துக் கொண்டிருந்தன. உயிருடனிருந்த சிலர் முறிக்கப்பட்ட அவயவங்களுள்ளவர்களாகி, சிங்கத்தின் இடம் பயந்த யானைகள்போல் யுத்த பூமியிலிருந்து பயந்து ஓடினார்கள். அப்பொழுது மனுவின் வம்சத்தில் பிறந்த உத்தமராகிய துருவருடன் எதிர்த்து யுத்தத்திற்கு வரக் கூடியவர்களில்லை. அதனைக்கண்ட துருவர் அந்தப் பட்டணத்திற்குட் சென்று அதன் அழகைப்

பார்க்க விருப்பமுள்ளவரானாலும் சத்ருக்கள் திரும்பவும் சண்டைக்கு வருவார்களோவென்று தம்முடைய ஸாரதியை நோக்கி, "மாயாவிகளுடன் நடையை ஜனங்கள் தெரிந்துகொள்ள முடியாது" என்று சொல்விக்கொண்டு அலகா நகரத்திற்குட் போகவில்லை. உடனே சமுத்திரத்திலுண்டாகும் சப்தம்போல் காற்றினால் பயங்கரமான சப்தமுண்டா யிற்று, தூளி கிளம்பியது, ஒரு க்ஷண காலத்தில் ஆகாசம் முழுவதும் மேகங்களால் மூடப்பட்டது. பயங்கரமான இடிகளும் மின்னல்களும் உண்டாயின. இரத்தம், சீழ், அமேத்யம் மூத்திரம், மேதஸ் முதலிய அசுத்தவஸ்துக்கள் வர்ஷிக்கப்பட்டன. கபந்தங்கள் (தலையில்லாத உடல்கள்) துருவருடைய முன்பாக ஆகாயத்திலிருந்து விழுந்தன. பின்பு ஆகாயத்தில் மலைகள் காணப்பட்டன. அவைகள் நான்கு பக்கங்களிலும் விழுந்தன, கதாயுதம், பரிகம், முஸலாயுதம், கத்தி ஆகிய இவைகளும் கற்களும் வர்ஷிக்கப்பட்டன. மேலும் விஷப்பார்வைகளுள்ள வைகளும், அக்கினி போன்ற கண்கள் உள்ளவைகளும் இடிபோன்ற மூச்சு உள்ளவைகளுமான ஸர்ப்பங்கள் தோன்றின. பின்னும் மதங்கொண்ட யானைகளும் சிங்கங்களும், புலிகளும் கூட்டங்கூட்டமாக எதிர்த்து ஓடி வந்தன. பிரளய காலத்தைப் போல் சமுத்திரம் ஆனது பெரிதான அலைகளுடன் பயங்கரமாகி ஸகல பூமியையும் மறைத்துக்கொண்டு கரை புரண்டது இம்மாதிரியானவைகளை அசுரர்கள் மாயையால் உண்டுபண்ணினார்கள். அவைகள் பார்ப்பவர்களுக்குப் பயத்தைக் கொடுத்தன.

29–30. இப்படி துருவரிடத்தில் அசுரர்கள் நிவர்த்திக்க

முடியாத மாயாப்பிரயோகஞ் செய்ததைக் கேள்விப் பட்டு மஹரிஷிகளெல்லாரும் ஒன்று சேர்ந்து துருவருக்கு க்ஷேமமுண்டாகும்படி அனுக்கிரஹித் தார்கள். எப்படியெனில் ஓ உத்தானபாதருடைய புத்திரராகிய துருவ! எந்தப் பகவானுடைய திவ்ய நாமத்தை யுச்சரித்து ஸகல ஜனங்கள் ஸம்ஸாரத்தைத் தாண்டுகிறார்களோ, எவர் சார்ங்கமென்ற வில்லைத் தரித்தவரோ அப்போர்ப்பட்ட தேவர் உம்முடைய சத்துருக்களை நாசஞ் செய்யட்டும்" என்றார்கள்.

அத்தியாயம்–11

மனு துருவருக்குத் தத்துவத்தை உபதேசித்தது

1–5 இப்படி மஹரிஷிகளால் அனுக்கிரகிக்கப்பட்ட துருவர் நாராயணாஸ்திரத்தை வில்லில் ஸந்தானஞ் செய்தார். விதுரரே! அப்பொழுது ஆத்மஞ்ஞான முண்டானவுடனே ஸகல துக்கங்களும் எப்படி நாசமடைகின்றனவோ, அப்படி குஹ்யர்களால் ப்ரயோகிக்கப்பட்ட மாயைகள் யாவும் நாசமடைந்தன. இப்படி நாரயணாஸதிரத்தை அவர் ப்ரயோகித்தவுடன் அதிலிருந்து கிளம்பியவைகளும், ஸ்வர்ணமயமான புங்கங்களுள்ளவைகளும், ஹம்ஸத்தின் இறக்கையுள்ள வைகளுமான பாணங்கள் பயங்கரமாகச் சப்தித்துக் கொண்டு மயில்கள் வனத்தில் ப்ரவேசித்தாற் போல சத்துரு சைன்னியத்தில் ப்ரவேசித்தன.. கூர்மையான முனைகளுள்ள அந்தப் பாணங்களால் உபத்ரவிக்கப் பட்ட அந்த புண்ய ஜனங்கள் மிகுந்த கோபமடைந்து ஆயுதங்களை எடுததுக் கொண்டு ஸர்ப்பங்கள் படம் எடுத்துக் கருடனை எதிர்த்தாற்போல் துருவருடைய முன்பாக ஓடிவந்தார்கள். துருவரும் அவர்கள் மீது பாணங்களைப்ரயோகித்து அவர்களுடைய கைகள், துடைகள், கழுத்து, வயிறு ஆகிய இவைகளை அறுத்து நாசஞ் செய்தார். யோகிகள் எந்த சூரிய மண்டலத்தைப் பேதித்து மேலுலகஞ் செல்லுகிறார் களோ, அந்த மண்டலத்தை அந்தப் புண்ய ஜனங்கள் பேதித்துப் பரலோகமடைந்தார்கள். இப்படி நிரபராதிகளான குஹ்யர்கள் துருவரால் இம்சிக்கப் பட்டார்கள்.

6–35 அப்பொழுது மனுவானர் மஹர்ஷிகளுடன்

அவ்விடம் வந்து உத்தானபாதருடைய புத்திரராகிய துருவரை நோக்கி, ஓ குழந்தாய்! கோபத்தை அடக்கிக் கொள். கோபமானது நரகத்திற்கு மார்க்கம், பாபத்திற்குக் காரணமாகிறது. அந்தக் கோபத்தால் குற்றமற்றவர்களான புண்ய ஜனர்களை நாசஞ் செய்தாய். நிரபராதிகளான உபதேவர்களை நீ கொல்ல ஆரம்பித்தது நம்முடைய குலத்திற்குத் தகுதியான தல்ல, நிந்திக்கக் கூடியது, ஓ சகோதரனிடம் பிரீதியுள்ளவனே! உன்னுடைய சகோதரனாகிய உத்தமனைக் கொன்றவன் ஒருவன். அதற்காக நிரபராதி களான அநேகர்களைக் கொன்றாய், சரீரத்தை ஆத்மாவாக நினைத்துப் பசுக்கள் ஒன்றுக்கொன்று எப்படி அடித்துக் கொள்கின்றனவோ, அப்படி பிராணிகளைக் கொல்வதென்பது பகவத் பக்தர்களான ஸாதுக்களுக்குத் தகுதியானதல்ல. நீயோ ஸகல பிராணிகளிடத்திலும் வசிக்கும் பகவானை ஆராதித்து மேலான அந்த விஷ்ணுபதத்தை யடைந்தவன். நீ பகவானுடைய ஹ்ருதயத்திலிருப்பவன். பகவத் பக்தர்களுக்குப் பிரியன். ஸாதுக்களுடைய விரதத்தை அனுஷ்டிப்பவன். அப்பேர்ப்பட்ட நீ இம்மாதிரியான கெட்ட காரியத்தை எப்படிச் செய்தாய்? திதிக்ஷை (பொறுமை), கருணை, மைத்திரீ ஆகிய இவைகளால் ஸகல ஜந்துக்களிடத்திலும் ஸம புத்தியுள்ளவனாக விருந்தால் ஸகல ஸ்வரூபியான பகவான் சந்தோஷம டைகிறார்.

பகவத் பிரஸாத முண்டானால் புருஷன் ப்ரகிருதியின் குணஸம்பந்தமற்றவனாகி ஜீவபாவத்தை விட்டு ஸுகஸ்வரூபமான ப்ரஹ்மபதத்தை அடைகிறான். ஸ்திரீகளும், புருஷர்களும் ஐந்து பூதத்தாலேற்பட்ட

சரீரமுள்ளவர்கள். அந்த ஸ்திரீ புருஷர்களுடைய சேர்க்கையால் ஸ்திரீ புருஷர்கள் உண்டாகிறார்கள். இம்மாதிரி ஸ்ருஷ்டி, பரிபாலனம், ஸம்ஹாரம் ஆகிய இவைகள் நடைபெறுகின்றன. அதில் புருஷன் நிமித்தமேயாம். அவர் குணங்களற்றவர், கார்யகாரண ஸ்வரூபமாகிய ஜகத்தானது அவருடைய ஸந்நிதியில் இரும்பு போல் சேஷ்டிக்கிறது; அந்தப் பகவான் காலத்தின் மஹிமையால் குணங்கள் தாரதம்யத்தை யடையும் பொழுது ஸ்ருஷ்டி முதலியவைகளின் சக்தியை அங்கீகரித்து தாம் ஒன்றையுஞ் செய்யாத வராக இருந்தும், கர்த்தாவாகவும் ஸம்ஹரிக்காத வரானாலும் ஸம்ஹரிப்பவராகவும் இருக்கிறார். அவருடைய சேஷ்டையானது ஊகிக்க முடியாதது.

அந்தப் பகவான் நாசமற்றவர்.· ஜகத்தை நாசஞ் செய்யும் கால ஸ்வரூபியாயிருப்பவர், ஆதியற்றவர். ஆதியைச் செய்பவர். விகாரமற்றவர். அப்படிப்பட்ட பகவான், பிதா முதலிய ஜனத்தைக் கொண்டு புத்திரன் முதலியவர்களை உண்டு பண்ணுகிறார். திருடன் முதலியவர்களை அரசன் முதலியவர்களைக் கொண்டு நாசஞ் செய்கிறார். அவர் ஸமமாக ப்ரஜைகளை நடத்துகிறாரே யொழிய அவருக்குத் தம்மைச் சார்ந்தவனென்ற புத்தியாவது துவேஷியென்ற புத்தியாவது இல்லை. ஒடுகிற வாயுவின் பின் தூளிகள் போவது போல் கர்மாதீனர்களாக பிரஜைகள் அவரை அனுஸரிக்கிறார்கள். ஆயுளின் விருத்தியாவது குறைவாவது அந்தப் பகவானுக்கு, இல்லை. அவர் கர்மாதீனர்களான பிரஜைகளில். அவரவர்களுடைய கர்மத்திற்குத் தக்கபடி சிலருக்கு அதன் குறைவையும் கொடுக்கிறார். அவர் கர்ம சம்பந்தமற்றவர். சிலர்

கர்மமே காரணமென்றும், சிலர் ஸ்வபாவமே காரண மென்றும் மற்றும் சிலர் காலமே காரணமென்றும், இன்னும் சிலர் தெய்வமே காரணமென்றும், சிலர் புருஷனுடைய கர்மமே காரணமென்றும் சொல்லு கிறார்கள். அந்த ஈச்வர ஸ்வரூபமானது யாரால் அறியக்கூடும்? அது அவ்யக்தம். அளவிடக் கூடாதது. மஹத் தத்துவம் முதலிய பலவகையான சக்திகள் அதனிடமிருந்தே உண்டாகின்றன. அது தானாக உண்டானது. அதன் எண்ணத்தையே தெரிந்து கொள்ள முடியாதது. (அதனை யார் அறிவார்களென்று தாத்பரியம்.)

ஓ குழந்தாய்! உன்னுடைய சகோதரனைக் குபேரனுடைய வேலைக்காரர்கள் கொன்றார்களென்று நினைப்பது சரியல்ல. ஸ்ருஷ்டியிலும், ஸம்ஹாரத்திலும் தெய்வம் காரணமாகிறது. அந்தப் பகவானே லோகத்தைப் படைப்பவர். காப்பாற்றுகிறவர். ஸம்ஹரிப்பவர். ஆனாலும் அஹங்காரத்தை யடைகிற குணங்கள், கர்மங்கள் ஆகிய இவைகளிலும் சம்பந்திக்கிறதில்லை. ஸகல பூதஸ்வரூபமாயும், பூதங்களுக்கு அதிபதியும், பூதபாவனருமாகிப் பகவான் தம்முடைய மாயாச் சக்தியைக் கொண்டு ஸிருஷ்டி, ஸ்திதி ஸம்ஹாரங் களாகிய கர்மங்களைச் செய்கிறார். அவர் பக்தி செய்யாதவர்களுக்கு மிருத்யுவாக இருப்பவர். பக்தர் களுக்கு அமிருதராக இருப்பவர். ஜகத்திற்கு முக்கியமான கதியாக இருப்பவர். அவரை மூன்று கரணங்களாலும் ஆராதிக்க வேண்டும், மூக்குக் கயிறுகளால் கட்டப் பட்ட விருஷபங்கள் போல் ப்ரஜாபதிகளும் அவரைப் பூஜிக்கிறார்கள்.

மேலும், ஐந்து வயதுச் சிறுவனாக இருக்கும் போது

நீ ஸபத்தினீ மாதாவின் வார்த்தையைச் சஹியாமல் மாதாவையும் விட்டுப் பிரிந்து வனஞ்சென்று எவரைத் தபஸினால் ஆராதித்து மூவுலகத்திற்கும் மேலானதான பதத்தை அடைந்தாயோ, உண்மையில் அஸத்தான இந்த ஜகத்தானது எவரிடத்தில் தோற்றுகிறதோ, அப்பேர்ப்பட்டவரும் குணங்களற்ற வரும், அக்ஷர ஸ்வரூபியுமான ஆத்மாவை விரோதமற்ற புத்தியால் தியானிக்க வேண்டும். மேலும் நீ ப்ரத்யகாத்மாவும், பகவானும், நாசமற்றவரும் ஆனந்த ஸ்வரூபியும், ஸகல சக்தியுள்ள வருமான புருஷோத்தம ரிடத்தில் பக்திசெய்து, 'நான் என்னுடையது என்ற அவித்யை நிவர்த்தித்துக் கொள்வாய்.

ஓ மஹாராஜனே! நீ சாஸ்திரங்களை யறிந்தவன். ஆனதால் மருந்தினால் ரோகத்தை நிவர்த்திப்பது போல க்ஷேம விரோதியான கோபத்தை அடக்கிக் கொள். கோபமுள்ள புருஷனைக் கண்டு லோகமானது மிகவும் நடுங்குகிறது. ஆனதால் அபயத்தை அடைய விரும்பிய வித்வான் கோபத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது. உன்னுடைய சகோதரனைக் கொன்றதற்காகப் புண்ணிய ஜனர்களை நீ நாசஞ் செய்தபடியால் குபேரனை அவமதித்தாயிற்று. ஆனதால் ஓ குழந்தாய்! அந்தக் குபேரனை வணக்கத்தாலும், வணக்கமான வார்த்தைகளாலும் ஸமாதனப்படுத்திக் கொள். மகான் களுடைய தேஜஸ்ஸானது நம்முடைய குலத்தைக் கெடுக்க வேண்டாம்" என்று ஸ்வாயம்புவ மனுவானவர் பௌத்ரராகிய துருவருக்கு உபதேசித்து, துருவரால் நமஸ்கரிக்கப்பட்டு மஹரிஷிகளுடன் தம்முடைய பட்டணஞ் சென்றார்.

நோட்டு

திதிக்ஷை—மஹான்களிடத்தில், தாழ்ந்தவர்களிடம் கருணை. ஸாமான்யர்களிடம் மைத்தீரி—ஸ்ரீத. அபாரதஞ் செய்தவர்களிடம் பொறுமை—வீர. ஸந்தோஷம டைகிறார். பகவான் ஸகல ஸ்வரூபமாயிருப்பதால் தேவ மனுஷ்ய சரீரங்களும் பகவத் ஸ்வரூபமேயாம். ஆனது பற்றி பிராணிகளுக்குத் துரோகஞ் செய்தால் பகவானுக்குத் துரோகஞ் செய்ததாக ஆகிறது. ஆனது பற்றி ஸகல பிராணிகளிடம் விசுவாஸம் வைப்பதால் பகவான் ஸந்தோஷமடைகிறார். வீர. ஜீவபாவத்தை —பிழைத்திருக்கும் பொழுது காமம், குரோதம் முதலியவைகளை விட்டு—வீர. இருப்பானது— அய்ஸ்காந்தத்தின் சக்தியால் —வீர.

அத்தியாயம்–12

துருவர் துருவ பதத்தை அடைந்தது

1–7. யக்ஷர்கள், சாரணர்கள், கின்னரர்கள் ஆகிய இவர்களால் துதிக்கப்பட்ட குபேரன் "துருவன் கோபம் இல்லாதவராகிச் சாந்தராக இருக்கிறார்" என்பதைத் தெரிந்து கொண்டு யுத்த பூமிக்கு வந்து துருவரை நோக்கி, "ஓ ராஜபுத்ர! உம்முடைய பிதாமஹராகிய மனுவின் உத்தரவின்படி நீர் விரோதத்தை விட்ட படியால் உம்மிடத்தில் நான் சந்தோஷமடைகிறேன். விரோதத்தை விட்டு விடுவது மிகவும் சிரமமான காரியம். நீர் யக்ஷர்களைக் கொல்லவில்லை. யக்ஷர்களும் உம்முடைய சஹோதரனைக் கொன்றவர் களல்ல. பிராணிகள் உண்டாவதற்கும் மரணமடை வதற்கும் காலமே காரணமாகின்றது. "நான், நீ" என்று புருஷனுக்கு உண்டாகும் பேதபுத்தியானது வியர்த்தம் ஆனது. அது அஜ்ஞானத்தால் ஏற்பட்டது. தேஹத்தை ஆத்மாவென்று நினைப்பதால் அந்தப் பேதபுத்தி யானது ஸ்வப்பனத்தில் வஸ்துக்கள் தோன்றுவது போல் பிரகாசிக்கிறது. அதனால் பந்த மோக்ஷங்கள் உண்டாகின்றன. ஆனதால் நீர் இவ்விடமிருந்து உம்முடைய நகரத்திற்குப் போகலாம். உமக்கு க்ஷேமம் உண்டாகும். ஸகல பிராணிகளையும் ஆத்மாவாகப் பாவித்துப் பகவானை ஆராதியும். அவர் இந்திரியங் களுக்குப் புலப்படாதவர். ஸகல ரூபமான சரீரம் உள்ளவர். பூஜிக்கக்கூடிய பாதாரவிந்த முள்ளவர், ஸம்ஸாரத்தைப் போக்குகிறவர். முக்குண ஸ்வரூபமான தம்முடைய மாயா சக்தியுடன் கூடியவர். அதை விட்டுப் பிரிந்துமிருப்பவர். ஓ உத்தானபாதருடைய

புத்திர! என்னிடமிருந்து உமக்கு இஷ்டமான வரத்தைப் பெற்றுக்கொள்ளும். ஸந்தேகப்படவேண்டாம் நீர் ஸ்ரீ மஹாவிஷ்ணுவிற்கு அந்தரங்க பக்தரென்று கேட்டிருக்கிறேன்" என்றார்.

8–9. அதனைக் கேட்ட மஹாபாகவதராகிய துருவர் இராஜராஜராகிய குபேரனை நோக்கி, "ஸ்ரீ மஹாவிஷ்ணுவினிடத்தில் நிலையான பக்தியிருக்கும் படி அனுக்கிரஹிக்கவேண்டும். அதனால் தாண்ட முடியாத துக்கங்களை நிவர்த்தித்துக் கொள்ளலாம்" என்றார். அதனைக் கேட்ட குபேரன் மிகுந்த பிரியத்துடன் துருவனுடைய இஷ்டப்படி அனுக் கிரஹித்து, அவர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே மறைந்தார். அரசரும் தம்முடைய நகரஞ் சென்றார்.

10–27. பின்பு பூர்ணமாகத் தக்ஷிணை கொடுத்து அநேக யாகங்களை அனுஷ்டித்து யக்ஞங்களுக்கு அதிபதியும், திரவியம், காமம், தேவதை இவைகளால் செய்யப்படும் கர்மங்களின் பலனைக் கொடுப்பவரும் ஆகிய பகவானை ஆராதித்தார். ஸகல ஸ்வரூபியாய் இருப்பவரும், நாசமற்றவருமான பகவானிடத்தில் தீவிரமான பக்தி செய்து, அதனால் தம்மிடத்திலும்; ஸகல பிராணிகளிடத்திலும் அந்தப் பிரபுவைத் தரிசித்தார். மேலும் துருவர் நல் நடைத்தையுள்ள வராகவும், ப்ராஹ்மணரிடத்தில் பிரீதியுள்ளவராகவும், தீனர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ளவராகவும்; தர்ம ஸேதுக்களைக்காப்பாற்றுகிற வருமாக இருந்தார். அதனால் பிரஜைகள் அவரை தங்கள் பிதாவென நினைத்தார்கள், அவர் இருபத்தாறு ஆயிரம் வருஷங்கள் பூமியைப் பரிபாலித்தார். இப்படி அவர்

சுகத்தை அனுபவிப்பதால் புண்யத்தின் குறைவையும் செய்துகொண்டு, யாகம் முதலிய தர்மங்களை அனுஷ்டித்துப் பாபத்தின் குறைவையும் செய்து கொண்டு தர்மம், அர்த்தம், காமம் இவைகளுக்கு உபயோகமாக வெகு காலத்தைக் கழித்து, இந்திரியங்களை ஜயித்தவராகி புத்திரனுக்குப் பட்டாபிஷேகம் செய்தார். பின்பு அவர் இந்த ஜகத்தானது ஆத்மாவினிடத்தில் மாயையால் செய்யப்பட்டிருக்கிறதென்றும். அவித்யையால் ஏற்பட்டதென்றும், ஸ்வப்பனத்தில் தோன்றும் கந்தர்வ நகரத்திற்கு கொப்பானதென்றும் தெரிந்து கொண்டார். பின்னுமவர் தேகம், களத்திரம், புத்திரன், மித்திரன், சைன்னியம், பொக்கிஷம், அந்தப்புரம், அழகான விஹார பூமிகள், சமுத்திரத்திற்குட்பட்ட பூமண்டலம் இவைகள் அநித்தியங்களென்று நிச்சயித்து, பதரிகாசிரமம் சென்றார். அவ்விடத்தில் சுத்தமாகிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து சமம், தமம் முதலியவைகளையடைந்து விதிப்படி ஆசனத்தை அடைந்தும், வாயுவை யடக்கி இந்திரியங்களை அந்தர் முகமாகச் செய்துகொண்டு பகவானுடைய விராட் ரூபத்தைத் தியானித்தார். பின்பு "தியானம் செய்கிறவன், தியானம் செய்யப்படுகிறது என்ற பேதபுத்தியற்றவராகி, ஸமாதியிலிருந்து ஸ்தூல தியானத்தை விட்டார். இப்படி எப்பொழுதும் பகவானிடம் பக்தி செய்யும் பொழுது அவருடைய கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் பெருகியது. ஹிருதயமானது சிநேகமுள்ளதாக இருந்தது. சரீரத்தில் மயிர்க்கூச்சலுண்டாயிற்று. சரீரத்தில் அபிமானம் ஒழிந்தது. "நான் என்ற எண்ணம் மாறிற்று. அப்பொழுது அவர் ஆகாயத்தில் இருந்து பூமியை நோக்கி வருகிற ஒரு விமானத்தைக்

கண்டார். அது பத்துக் திக்குகளையும் ப்ரகாசிக்கச் செய்து கொண்டு உதயமான பூர்ணிமா சந்திரன் போலிருந்தது. அந்த விமானத்தில் இரண்டு தேவர்கள் இருந்தார்கள். அவர்கள் நான்கு கைகளுள்ளவர்கள். கறுத்த திருமேனியுள்ளவர்கள். யௌவன வயதுள்ளவர்கள். சிவந்த தாமரை மலர்போன்ற கண்களுள்ளவர்கள். கதையைத் தரித்தவர்கள். நல்ல வஸ்திரத்தை உடுத்திக் கொண்டவர்கள் கிரீடம், ஹாரம், தோள்வளை, அழகான குண்டலங்கள் ஆகிய இவைகளால் அலங்கரிக்கப் பட்டவர்கள்! அவர்களைக் கண்டவுடன் துருவர், "இவர்கள் பகவானுடைய பார்ஷதர்கள்" என்று தெரிந்துகொண்டு எழுந்திருந்து ஸ்ரீமந் நாராயணனுடைய திவ்ய நாமங்களை உச்சரித்துக் கொண்டே பரபரப்பினால் பூஜாக் கிரமத்தை மறந்தவராகி அஞ்சலி செய்துகொண்டு நமஸ்காரம் செய்தார். இப்படி ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதத்திலே மனத்தைச் செலுத்தியவரும். அஞ்சலிபதஞ் செய்து கொண்டிருப்பவரும் வணக்கத் தால் வணங்கிய கழுத்துள்ளவருமான துருவரை நோக்கி ஸுநந்தர், நந்தர் என்ற அவ்விருவர்களும் "ஓ அரசனே! உமக்கு க்ஷேமமுண்டாகும். எங்களுடைய வார்த்தையை ஸாவதானமாகக் கேளும். நீர் ஐந்து வயதுச் சிறுவனாக இருக்கும் பொழுது தபஸ் செய்து எந்தப் பகவானைத் திருப்தி செய்தீரோ, ஸகல ஜகத்தையும் படைத்தவரும், சார்ங்கமென்ற வில்லைத் தரித்தவருமான அந்தத் தேவருடைய பார்ஷதர்களாகிய நாங்கள் உம்மை அழைத்துப் போவதற்காக வந்திருக்கிறோம். அடைய முடியாத விஷ்ணு பதமானது உம்மால் அடையக் கூடியதாயிற்று. ஸப்த ரிஷிகளும் அந்தப் பதத்தை

அடையாமல் அதன்கீழ் ஸஞ்சரிக்கிறார்கள். சந்திரன், சூரியன், கிருஹங்கள், நக்ஷத்திரம் முதலியவைகள் எதனைப் பிரதக்ஷிணமாகச் சுற்றுகின்றனவோ, அந்தப் பதமானது உம்முடைய முன்னோர்களாலும் மற்றவர் களாலும் அடையப்படாதது. எல்லோராலும் நமஸ்கரிக்கக்கூடியது. அந்த விஷ்ணுவின் மேலான பதத்தை நீர் அடையலாம். உத்தமச்லோகர்களுக்குள் சிறந்தவராகிய பகவான் இந்தச் சிறந்த விமானத்தை உமக்காக அனுப்பியிருக்கிறார். அதன் மீதேற வேண்டும்" என்றார்கள்.

28–42. ஸ்ரீமந் நாராயணருடைய வேலைக்காரர்களுள் சிறந்தவர்களான அந்தப் பார்ஷதர்களுடைய தேன் போன்ற இனிமையான வார்த்தையைக் கேட்டு, பகவத் பக்தர்களுக்குப் பிரியராகிய துருவர் ஸ்நானம் செய்து அலங்காரம் செய்து கொண்டு மஹர்ஷிகளை நமஸ்கரித்து ஸ்வஸ்திவாசனஞ் செய்வித்தார். அந்த விமானத்தைப் பிரதக்ஷிணஞ் செய்து பூஜித்தார். பார்ஷதர்களை நமஸ்கரித்தார். பின்பு ஸ்வர்ணமயமான சரீரமுள்ளவராகி அந்த விமானத்திலேற விரும்பினார். அப்பொழுது துந்துபி, மிருதங்கம், பணவம் முதலிய வாத்தியங்கள் சப்தித்தன. சிறந்த கந்தர்வர்கள் பாடினார்கள். புஷ்பமாரி பெய்தது. ஸ்வர்க்கலோகம் செல்லும் சமயத்தில் துருவர், "தீனையான ஸுநீதியை விட்டுப் போகிறோம்" என்று நினைத்தார். அவருடைய இம்மாதிரியான எண்ணத்தைத் தெரிந்து கொண்டு பார்ஷதர்கள் விமானத்தில் ஏறிக்கொண்டு மேலுலகம் செல்லும் ஸுநீதியை துருவருக்குக் காண்பித்தார்கள். பின்பு துருவர் விமானத்துடன் செல்லுகின்ற தேவர்களால் துதிக்கப்பட்டு, புஷ்பங்களால்

இறைக்கப்பட்டு மேலுலகஞ் சென்று கிருஹங்களைக் கண்டார். இப்படி மூவுலகத்தையும் தாண்டி மேலிருக்கும் விஷ்ணுபதத்தை அடைந்தார். எந்தப் பதமானது தானாகப்ரகாசிக்கிறதோ, எதனுடைய தேஜஸ்ஸால் மற்ற லோகங்கள் ப்ரகாசிக்கின்றனவோ. எந்த லோகத்திற்குத் தயையில்லாதவர்களும், நற்காரியங்களைச் செய்யாதவர்களும் செல்லுகிறது இல்லையோ, மேலும் சாந்தர்களும், ஸமமாகப் பார்ப்பவர்களும் சுத்தர்களும், ஸகல பிராணிகளையும் சந்தோஷிக்கச் செய்பவர்களும், பகவானுக்குப் பிரிய பந்துக்களுமான பக்தர்கள் எந்தப் பத்தை அடைகிறார்களோ, அந்தத் துருவபதத்தை உத்தான பாதருடைய புத்திரராகிய துருவர் அடைந்து, கிருஷ்ண பக்தி செய்ததனால் மூவுலகத்திற்கும் சூடாமணி போல் ப்ரகாசித்தார். பசுக்கள் கட்டும் ஸ்தம்பத்தில் கட்டப்பட்ட பசுக்கள் போல் கம்பீரமான வேகத்துடன் எப்பொழுதும் சுற்றிக்கொண்டிருக்கும் ஜ்யோதிச் சக்கரமானது அதனிடத்தில் கோக்கப்பட்டுச் சுற்றுகிறது. அப்பொழுது இந்தத் துருவருடைய மஹிமையைப் பார்த்து நாரதர் வீணையை மீட்டிக் கொண்டு இந்தச்லோகங்களைப் பிரசேதஸ்ஸுகளுடைய யாகத்தில் கானஞ் செய்தார். எப்படியெனில், பதியையே தெய்வமாகக் கொண்ட ஸுநீதியின் புத்திரருக்குக் கிடைத்த இந்த உத்தம கதியானது பகவத் தர்மத்தை அனுஷ்டிக்கும் ப்ரஹ்ம ரிஷிகளாலும் அடைய முடியாதது. அப்படியிருக்க க்ஷத்திரியர்களுக்குக் கிடைக்குமா? எந்தத் துருவர் ஐந்து வயதுச் சிறுவராக இருக்கும் போது ஸபத்தினீ மாதாவின் கெட்ட வார்த்தைகளாகிய பாணங்களால் அடிக்கப் பட்டு, மனவருத்தமடைந்து என்னுடைய உத்தரவினால்

காட்டிற்குச் சென்று, பக்தர்களால் ஜயிக்கப் படுகிறவரான விபுவாகிய பகவானை ஆராதித்து அவரைச் சுவாதீனப் படுத்திக்கொண்டாரோ, அந்தப் பதத்தை அடைய வேண்டுமென்று மற்ற க்ஷத்திரியனால் விரும்பக் கூடுமா? அநேக வருஷங்கள் முயற்சித் தாலும் அடைய முடியுமா? துருவர் ஆறு, ஏழு வயதுள்ளச் சிறுவராக இருக்கும்போதே சொற்ப தினங்கள் பகவானை ஆராதித்து அந்தப் பதத்தை அடைந்தார்.

43–51. ஓ விதுரரே! உம்மால் கேட்கப்பட்டவைக ளெல்லாம் என்னால் சொல்லப்பட்டன, மிகுந்த கீர்த்தியுள்ள துருவருடைய சரீதமானது சொல்லப் பட்டது. இது பணத்தை கொடுக்கக் கூடியது. கீர்த்தியை விருத்தி பண்ணக்கூடியது. ஆயுஸ்ஸை விருத்தி பண்ணக்கூடியது. புண்யகரமானது. க்ஷேமகரமானது. ஸ்வர்க்கத்தைக் கொடுக்கக் கூடியது. நிலையான ஸ்தானத்தைக் கொடுக்கக் கூடியது. மனச்சுத்தியைக் கொடுக்கக் கூடியது. புகழக் கூடியது. பாவத்தைப் போக்கக் கூடியது. இந்தப் பகவத் பக்தர்களுடைய சரிதத்தைச் சிரத்தையாக அடிக்கடி கேட்பதால் பகவானிடத்தில் பக்தி உண்டாகும், ஸகல துக்கங்களும் நிவர்த்தியாகும். மஹத்வத்தை விரும்பிய வர்களுக்குத் அந்த பலன் கிடைக்கும். நல்ல ஸ்வபாவம் முதலியன உண்டாகும். தேஜஸை விரும்பியவர்களுக்கு தேஜஸும், நல்ல மனத்தை விரும்பியவர்களுக்கு நல்ல மனதும் உண்டாகும். இந்த மேலான துருவருடைய சரிதத்தைப் பக்தியுடன் ப்ராஹ்மணர்களுடைய கூட்டத்திலும், காலையிலும், மாலையிலும், பூர்ணிமையிலும், அமாவாஸ்ஸையிலும், துவாதசி

தினத்திலும் சிரவணத்திலும், இராத்ரியிலும், வியதீயபாதத்திலும். ஸங்கிர மணத்திலும், ஞாயிற்றுக் கிழமையிலும் சிரத்தையாயுள்ளவர்களுக்குச் சொல்ல வேண்டும். நிஷ்காமனாகக் கேட்டால் அவன் ஆத்மாவினால் சந்தோஷமடைந்து ஸித்தி அடைவான். ஆத்மாவின் உண்மை அறியாதவனுக்கு ஞானத்தை எவன் உபதேசிக்கிறானோ, கருணை உள்ளவனாகிய அவனிடத்தில் தேவர்கள் கிருபை செய்கிறார்கள். ஓ குருக்களில் சிறந்தவரே! எந்தத்துருவர் குழந்தையாக இருக்கும்பொழுது விளையாட்டு சாமான்களையும், மாதாவின் அரண்மனையையும் விட்டு ஸ்ரீ மஹா விஷ்ணுவைச் சரணமடைந்தாரோ, அந்த சுத்தமான நடத்தையுள்ள துருவருடைய சரிதத்தை உமக்குச் சொன்னேன்" என்றார்.

நோட்டு

"துருவர் விமானத்தில் ஏறும்பொழுது யமன் வந்ததாகவும், அவன் தலையில் காலை வைத்து விமானத்தின் மீதேறினார்" என்ற அர்த்தமுள்ள ஸ்லோகம் சில புஸ்தகங்களில் காணப்படுகிறது.

அத்தியாயம்–13

அங்கராஜன் காணாமற் போனது

1–5 குஷாரவருடைய புத்திரராகிய மைத்ரேயரால் சொல்லப்பட்ட துருவர் வைகுண்டபதத்தை அடைந்ததான திவ்ய சரிதத்தைக் கேட்டு விதுரர் பகவானிடத்தில் விசேஷ பக்தியுள்ளவராகி மைத்ரேயரை நோக்கி, 'பிரசேதஸ்ஸுக்க ளென்பவர்கள் எவர்கள்? ஓ விரதமுள்ளவரே! அவர்கள் யாருடைய குமாரர்கள்? எந்த வம்சத்தில் பிறந்தவர்கள்? அவர்கள் எவ்விடத்தில் யாகத்தை அனுஷ்டித்தார்கள்? நாரதர் மஹா பாகவதரென்று நினைக்கிறேன். அவர் ஆத்மஞான முள்ளவர். பகவானை ஸேவிக்கும் விதியானது அவரால் சொல்லப்பட்டது. அந்தப் பக்திமானாகிய நாரதர் 'ஸ்வதர்மத்தை அனுஷ்டிப்பவர்களான பிரசேதஸ்ஸுகளால் யக்ஞ புருஷராகிய பகவான் ஆராதிக்கப்பட்டார்' என்று சொன்னாரல்லவா? மேலும் அந்த யாகத்தில் எந்த பகவத் கதைகளை வர்ணித்தார்? அவைகளெல்லாவற்றையும் கேட்க விரும்பியவனாகிய எனக்குச் சொல்லவேண்டும்', என்று பிரார்த்தித்தார்.

6–20 அதனைக் கேட்ட மைத்ரேயர், விதுரரை நோக்கி, 'துருவர் காட்டிற்குச் சென்றபின் அவருடைய புத்திரராகிய உத்கலரென்பவர் ராஜ்யத்தில் விருப்பம் இல்லாமல் ராஜ்யலக்ஷ்மியை அடையவில்லை. அவர் பிறந்தது முதல் மிகவும் சாந்தமான மனதுள்ளவர். ஆசையற்றவர். ஸமமாகப் பார்ப்பவர். உலகத்தில் ஆத்மா வியாபித்திருப்பதாகவும் ஆத்மாவிடத்தில்

லோகமிருப்பதாகவும் பார்ப்பவர். அப்போர்ப்பட்ட அந்த உத்கலர் இடைவிடாமல் யோகத்தை அப்யஸித்து அதனால் கர்ம வாஸனையைப் போக்கிச் சாந்தமும், பேதமற்றதும், ஞானரஸத்தால் ஒன்றாயும், ஆனந்த ஸ்வபமும், எக்காலத்திலும் இருப்பதுமான ப்ரஹ்ம ஸ்வபத்தை அடைந்தார். அதனால் அவருக்கு ஆத்மாவைக் காட்டிலும் வேறொன்றும் புலப்பட வில்லை.

மேலும் அவர் ஜடன்போலவும், கண்களில்லாத வன் (குருடன்) போலவும், காது கேட்காதவன் (செவிடன்) போலவும், பைத்தியங் கொண்டவன் போலும்; ஊமை போலும் குழந்தைகளுடைய மார்க்கத்தில் இருந்தார். ஆனால் அவருடைய புத்தியானது வேறாக இருந்தது. ஜ்வாலையற்ற அக்கினி போலிருந்தார். அப்பொழுது குலத்திலிருக்கும் பெரியோர்களும், மந்திரிகளும் அவரை அடனென்றும், பயித்தியங் கொண்டவனென்றும், நினைத்துப் பிரமியின் புத்திரராகிய அவருடைய பின் சகோதரராகிய வத்ஸர ரென்பவருக்குப் பட்டாபிஷேகம் செய்தார்கள்.

அந்த வத்ஸரருக்குப் பார்யையான ஸ்வத்தி யிடத்தில் புஷ்பார்ணன். சந்திரகேது, இஷன், ஊர்ஜன் வஸு, ஜயன் என்று ஆறு புத்திரர்கள் பிறந்தார்கள். புஷ்பார்ணருக்குப் பிரபா என்றும் தோஷா என்றும் இரண்டு பத்தினிகள். அவர்களில் பிரபாஎன்பவளுக்குப் பிராத (விடியற்காலம்), மத்தியந்தினம் (பகலின் மத்தியம்), சாயம் என்று மூன்று புத்திரர்கள் பிறந்தார்கள். தோஷா என்பவளுக்குப் பிரதோஷம், நிசீதம், வியஷ்டி, யென்பவர் புஷ்கரிணீ என்பவளிடத்தில் ஸர்வதேஜஸ் என்று புத்திரனை யுண்டு பண்ணினார்.

அந்த ஸ்வதேஜஸர் ஆகூதியென்ற பத்தினியிடத்தில் சக்ஷுஸ்ஸென்ற பெயருள்ள மனுவை உண்டு பண்ணினார். அந்த மனுவின் பத்தினியாகிய நட்வலா என்பவள், புரு, குத்ஸர், கிரிதர், தியும்னர், ஸத்யவான், ரிதர், விரதர், அக்கினிஷ்டோமம், அதிராத்ரம், ஸுத்யும்னர், கிபி, உல்முகர் என்று பன்னிரண்டு புத்திரர்களைப் பெற்றாள். அவர்களில் உல்முகரென்பவர் புஷ்கரிணீ என்பவளிடத்தில் அங்கன், ஸுமனஸன், கியாதி, கிரது, அங்கிரஸ், கயன் என்று உத்தமர்களான ஆறு புத்திரர்களை உண்டுபண்ணினார். அங்கனுடைய பத்தினியாகிய ஸுநீதை யென்பவள் துஷ்டனாகிய வேனனைப் பெற்றாள். அந்த வேணனுடைய துஷ்ட நடையால் வருத்தப்பட்டு அவருடைய பிதாவாகிய அங்க மஹாராஜன் நகரத்தை விட்டுச் சென்றார்.

வாக்காகிய வஜ்ராயுதமுள்ளவர்களான மஹர்ஷிகள் கோபத்தை அடைந்து வேனனைச் சபித்தார்கள். அதனால் அவன் மரணமடைந்தான். பின்பு அரசன் இல்லாத தேசத்தில் ஜனங்களுக்குத் திருடர்கள் முதலியவர்களின் உபத்திரவம் நேரிடும் என்று யோசித்து மஹர்ஷிகள் அவனுடைய வலது கையைக் கடைந்தார்கள். அதிலிருந்து நாராயணனுடைய அம்சமானது புத்திரனாக அவதரித்தது அவருக்கு பிருதுவென்று பெயருண்டாயிற்று. அவரே முந்திய அரசன் என்றார்.

21–24 அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி, ஓ பகவன்! நல்லொழுக்கமுள்ளவரும், ஸாதுவும், ப்ராஹ்மண பக்தியுள்ளவரும், மஹாத்மாவுமான அந்த வேனருக்குத் துஷ்ட நடை எப்படி ஏற்பட்டது?

எதனால் பிதா நகரத்தை விட்டு வெளியில் போகும்படி நேர்ந்தது. குற்றம் செய்தவர்களைச் சிக்ஷிப்பவராகிய அரசனைத் தர்மத்தையறிந்த மஹரிஷிகள் என்ன குற்றத்தை முன்னிட்டுச் சபித்தார்கள்? (வேனன் என்ன குற்றம் செய்தான்?) அரசன் லோகபாலர்களுடைய அம்சமுள்ளவனாகையால் அவன் குற்றம் செய்தாலும் பிரஜைகள் அவனைக் கொல்வது உசிதமல்லவே! நீர் மேலானவைகளையும், தாழ்ந்தவைகளையும் அறிந்தவராகையால் ஸுநீதையின் புத்திரருடைய சரிதத்தைக் கேட்க விரும்பிய சிரத்தையுள்ளவனாகிய எனக்குச் சொல்ல வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

25–28 அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி, அங்கனென்ற ராஜரிஷியானவர் அச்வமேதம் என்ற பெரிய யாகத்தைச் செய்தார். அதில் ப்ரஹ்மிஷ்டர்களாகிய ப்ராஹ்மணர்களால் அழைக்கப் பட்டும் தேவர்கள் வரவில்லை. அப்பொழுது ரித்விக்குகள் மிகவும் ஆச்சரியமடைந்து யஜமானனை நோக்கி, 'ஹோமஞ் செய்யப்படுகின்ற ஹவிஸ்ஸைத் தேவதைகள் கிரகிக்கவில்லை. ஓ மஹாராஜ, ஹவிஸ்ஸுகள் தோஷமற்றவைகள். சிரத்தையாக ஸம்பாதிக்கப்பட்டவைகள். மேலும் விரதங்களை அனுஷ்டித்த ப்ரஹ்மணர்களால் அயாதயாமங்களான (வீர்யம் போகாதவை). வேதங்கள் உச்சரிக்கப்பட்டன. தேவர்களுக்குக் கொஞ்சமேனும் 'குற்றம் செய்ததாகத் தெரியவில்லை (கர்மஸாக்ஷிகளான தேவர்கள் பாகத்தைப் பெற்றுக் கொள்ளாத காரணமென்ன வென்று தெரியவில்லை என்றார்கள்).

29–30 அதனைக் கேட்ட அங்கராஜன் மனவருத்தம்

அடைந்து ஸதஸ்யர்களை நோக்கி அவர்களுடைய ஆக்ஞையால் மௌனத்தை விட்டு, 'ரித்விக்குகளால் அழைக்கப்பட்டும் தேவர்கள் வரவில்லை. பாகத்தையும் பெற்றுக் கொள்ளவில்லை. என்னால் என்ன குற்றம் செய்யப்பட்டது சொல்லவேண்டும்' என்று கேட்டார்.

31–49 அதனைக் கேட்ட ஸதஸ்யர்கள் அரசனை நோக்கி, ஓ மஹாராஜா! இந்த ஜன்மத்தில் உமக்கு கொஞ்ச மேனும் பாவமில்லை. ஆனாலும் முன் ஜன்மத்தில் பாவமிருக்கிறது. அதனால்தான் நீர் அபுத்திரராக இருக்கிறீர். நல்ல புத்திரனை அடையும் படி யத்தனம் செய்யும். புத்திரன் பிறக்க வேண்டிய யக்ஞபுக்காகிய யக்ஞபுருஷனை ஆராத்தித்தால் அவர் புத்திரனைக் கொடுப்பார்.

மேலும் மனிதன் எதனை விரும்பி, பகவானை ஆராதிக்கிறானோ, அதெல்லாவற்றையும் அவர் அவனுடைய இஷ்டப்படி கொடுக்கிறார். அப்பொழுது தேவர்களும் பாகத்தைப் பெற்றுக் கொள்வார்கள். எவ்வளவு பகவானை ஆராதிக்கிறானோ, அவ்வளவு க்ஷேமமுண்டாகிறது என்று சொல்லி அந்த அரசனுக்குப் புத்திரனுண்டாவதற்காகச் சிபிவிஷ்ட ராகிய மஹாவிஷ்ணுவை உத்தேசித்து புரோடாசத்தை ஹோமஞ் செய்தார்கள். பின்பு அக்கினியிலிருந்து ஸுவர்ண மாலையுள்ளவரும், சுத்த வஸ்திரத்தைத் தரித்தவருமான ஒரு புருஷன் தங்கப் பாத்திரத்தில் பாயஸத்தை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தார். அப்பொழுது கம்பீர மனமுள்ள அரசன் ப்ராஹ்மணர் களுடைய அனுமதியினால் அந்தப் பாயஸத்தை இரு

கைகளால் வாங்கி மிகுந்த ஸந்தோஷத்துடன் முகர்ந்து தமது பத்தினியிடம் கொடுத்தார். அந்த ராஜ மஹிஷி புத்திரனைக் கொடுக்கக் கூடிய அந்தப் பாயஸத்தைப் பார்த்தாவிடமிருந்து கிரகித்துக் கொண்டு அதனைப் புஜித்து கர்ப்பிணியானாள். பின்பு பிரஸவ காலத்தில் குமாரனைப் பெற்றாள்.

அந்தக் குழந்தை சிறு வயதிலேயே அதர்ம வம்சத்தில் பிறந்தவரும், தன்னுடைய மாதாவின் பிதாவுமான மிருத்யுவின் குணங்களை அனுஸரித் திருந்தது. அவனுக்குத் தர்ம சிந்தையே இல்லை. அவன் எப்பொழுதும் வனத்தில் வேட்டையாடிக் கொண்டு வில்லும் கையுமாக 'இருந்து மிருகங்களைக் கொன்று கொண்டு அஸத்தாக இருந்தான். அதனைக் கண்டு ஜனங்கள் 'வேனன் வருகிறான்' என்று கத்துவார்கள். மேலும் விளையாடுமிடத்தில் தன்னுடன் விளையாடும் குழந்தைகளைக் கருணையில்லாமல் பசுக்களைப் போல் கொன்று விடுவான். அரசர் புத்திரனுடைய கெட்ட சரித்தத்தை அறிந்து பலவகையாகச் சிக்ஷித்தும் அவனுடைய ஸ்வபாவம் மாறாம லிருந்தபடியால் அங்கன் மிகவும் வருத்தம் அடைந்து தனக்குள் யோசிக்கலானார். எப்படியெனில் எவர்கள் அபுத்திரர்களோ அவர்கள் பகவானை ஆராதித்தவர்கள். துஷ்டனாகிய புத்திரனாலுண்டாகும் துக்கத்தை அவர்கள் அனுபவிக்கிறதில்லை. துஷ்டனாகிய புத்திரனால் அபகீர்த்தியும் அதர்மமும் ஸகல ஜனங்கள் உடைய விரோதமும், முடிவில்லாத மனவருத்தமும் உண்டாகின்றன. புத்திரனென்ற பெயரே ஆத்மாவிற்கு மோஹத்தை உண்டு பண்ணும் பந்தமாக இருக்கிறது. அதனால் கிரஹஸ்தாசிரமத்தில் பலவகையான துக்கங்களுண்டாகின்றன.

ஆனதால் விவேகமுள்ளவன் புத்திரன் வேண்டு மென்று விரும்பமாட்டான் என்று யோசித்து மிகவும் நிர்வேதத்தையடைந்து தூக்கமில்லாதவராகிப் பக்கத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் ஸுநீதை யென்ற வேனனுடைய மாதாவிற்கும் சொல்லாமல் பட்டணத்து ஜனங்களுக்கும் புலப்படாமல் அதிக ஐசுவரியமுள்ள தம்முடைய அரண்மனையிலிருந்து வெளியில் சென்றார். மறுநாள் புரோஹிதர், மந்திரிகள், மித்திரர்கள் முதலியவர்கள் அரசனைக் காணாமல் மிகுந்த துக்கமடைந்தவர்களாகி, பக்குவமாகாத புத்தியுள்ள யோகிகள் ஸமீபத்திலிருக்கும் பகவானை வைகுண்டம் முதலியவிடங்களில் தேடுவதுபோல் எங்கும் தேடினார்கள். பின்பு அவர்கள் அரசனைக் காணாமல் திரும்பவும் பட்டணத்திற்கு வந்து கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு அவ்விடத்தில் கூடியிருக்கும் மஹர்ஷிகளுக்கு நமஸ்காரஞ் செய்து அரசன் வசிக்குமிடம் தெரியவில்லை என்று சொன்னார்கள்.

அத்தியாயம்–14

வேனனை மஹர்ஷிகள் சிக்ஷித்தது

1–22. "பின்பு பிருகு முதலிய மஹர்ஷிகள் லோகத்தின் க்ஷேமத்தை விரும்பினவர்களாகி, அரசன் இல்லாவிடில் மனிதர்கள் பசுவிற்கு சமமானவர்கள் என்று யோசித்து சூரனைப் பெற்றவர்களாகிய ஸுநீதையின் இஷ்டப்படி வேனனுக்குப் பட்டாபிஷேகம் செய்தார்கள், அவனிடத்தில் மந்திரி முதலானவர்களுக்குப் பிரியமில்லை. கடுமையாகசிக்ஷிப்பவனாகிய வேனன் அரசனாக விருப்பதைக் கேட்டு ஸர்ப்பத்தைக் கண்ட எலிகள் போல் திருடர்கள் பயந்து மறைந்தார்கள். வேனன் ராஜாஸனத்திலிருந்து லோகபாலர்களுடைய ஐசுவரியத்தை அடைந்து கர்வங்கொண்டான். பெரியோர்களான ஸாதுக்களை அவமதித்தான். இப்படி அதிக கர்வத்துடன் தடையற்ற மதித்த யானை போல் இரதத்தின் மீதேறி ஆகாசத்தையும், பூமியையும் அசைப்பவன் போல ஸஞ்சரித்து, "ஒருவரும் யாகஞ்செய்யக்கூடாது தானஞ் செய்யக்கூடாது, அக்னி ஹோத்ரம் முதலியவைகளைப் ப்ராஹ்மணர்கள் ஓரிடத்திலும் அனுஷ்டிக்கக்கூடாது" என்று பேரியை அடித்து, தர்மஞ் செய்யாமலிருக்கும்படி கோஷித்தான். தீக்ஷிதர்களான ப்ராஹ்மணர்கள் எல்லாரும் சேர்ந்து, வேனனுடைய கெட்ட நடையைப் பற்றி, "கட்டையில் இரண்டு நுனிகளிலும் அக்கினி பிடித்துக் கொண்டால் நடுவிலிருக்கும் எறும்பு முதலியவைகள் எப்படி துன்பத்தையடைகின்றனவோ, அப்படி திருடர்களிடத்திலும், அரசனிடத்திலுமாக லோகத்திற்கு இருவகையிலும் விசேஷ துக்கம்

நேர்ந்திருக்கிறது. தேசத்திற்கு அரசனில்லாமலிருப்பது உபத்திரவத்தை உண்டு பண்ணுமென்றெண்ணி அயோக்கியனானாலும் இவனுக்கு பட்டாபிஷேகம் செய்தோம். இவன் ஜனங்களை உபத்திரவிக்கிறான். எதனைச் செய்தால் லோகத்திற்கு க்ஷேமமுண்டாகும்? பால்கொடுத்து ஸர்ப்பத்தை வளர்த்தவனுக்கு அந்த ஸர்ப்பம் அனர்த்தத்தை உண்டுபண்ணுவது போல இந்த வேனன் நமக்குக் கெடுதியை உண்டுபண்ணுகிறான். ஸுநீதையின் புத்திரனாகிய வேனன் ஸ்வபாவத்திலேயே துஷ்டன். அவனை அரசனாக வைத்து கொண்டோம். அவன் இப்பொழுது ப்ரஜைகளைக் கொல்ல விரும்புகிறான். ஆனாலும் அவனை நல்வார்த்தைகளால் ஸமாதானஞ் செய்வோம். அவனுடைய துஷ்ட நடையை அறிந்திருந்தும் அரசனாக வைத்துக் கொண்டோம். நாம் சொல்லியும் நம்முடைய வார்த்தையை அங்கீகரிக்காவிடில், நமக்குப் பாவமில்லை. பின்பு நம்முடைய தேஜஸ்ஸால் அவனை எரித்துவிடுவோம்" என்று யோசித்துக் கொண்டு கோபத்தை அடக்கிக்கொண்டவர்களாகி வேனனுடைய சமீபஞ்சென்று அவனை நோக்கி, "ஓ சிறந்த அரசனே! நாங்கள் தெரிவிப்பதைக் கேளும் நாங்கள் சொல்வது உமக்கு ஆயுஸ், ஐசுவரியம், கீர்த்தி, தேகபலம் ஆகிய இவைகளைக் கொடுக்க கூடியது; மனிதர்கள் வாக்கினாலும், சரீரத்தாலும் தர்மத்தைச் செய்வார்களானாலும் அது ஸகல துக்கங்களையும் நிவர்த்தித்து மிகுந்த க்ஷேமத்தைக் கொடுக்கிறது. பலனை உத்தேசியாமல் அனுஷ்டித்தால் அது மோக்ஷத்தையும் கொடுக்கும். அந்த தர்மத்தால் ப்ரஜைகளுக்கு க்ஷேமம் உண்டாகிறது. அந்த தர்மம் நசித்தால் அரசனுடைய ஐசுவரியம் நசிக்கும்

ஆனதால் உமக்குத் தர்மம் நாசத்தை அடைய வேண்டாம். க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவன் நியாயமான வரியைப்பெற்று, அஸாதுக்களான மந்திரிகளிடமிருந்தும், திருடர் முதலியவர்களிடமிருந்தும் பிரஜைகளைக் காப்பவன் இவ்வுலகத்தில் மிகுந்த சௌக்கியத்தையடைந்து பரலோக சுகத்தையுமடைவான். மேலும் எவனுடைய ராஜ்யத்தில் ஜனங்கள் வர்ணாசிரம தர்மங்களைவிடாமல் அனுஷ்டித்து யக்ஞபுருஷனாகிய பகவானை யாகஞ் செய்வது முதலிய ஸ்வதர்மத்தால் பூஜிக்கிறார்களோ, அந்த அரசன் பகவானுடைய ஆக்ஞையின்படி நடப்பவனாகையால் ஸகல பிராணிகளிடத்தில் அந்தர்யாமியாக இருப்பவரும், ஜகத்ரூபியுமான பகவான் அவனிடத்தில் பிரியப்படுகிறார் லோகபாலர்களும், மற்ற உலகங்களும் ஆதரவுடன் அவரைப் பூஜிக்கின்றன. அப்போர்ப்பட்ட ஜகதீஸ்வரராகிய பகவான் ஸந்தோஷமடைந்தால் எதுதான் கிடைக்காது? (எல்லாம் இலகுவாகக் கிடைக்கும்) ஸகல லோகங்கள், அவைகளைக் காப்பாற்றும் லோகபாலகர்கள் யக்ஞங்கள் ஆகிய இவைகளுக்கு அதிபதியும், வேத ஸ்வரூபியும், திரவ்ய ஸ்வரூபியும் தபஸ்வரூபியுமான அப்போர்ப்பட்ட பகவானைப் பலவகையான யாகங்களால் உம்முடைய க்ஷேமத்திற்காக ஆராதிப்பவர்களும், உம்முடைய தேசத்தில் வசிப்பவர்களுமான எங்களை விரோதியாமல் அனுசரிக்கவேண்டும். உம்முடைய தேசத்தில் ப்ராஹ்மணர்கள் யாகத்தைச் செய்து பகவானுடைய அம்சபூதர்களான தேவர்களைத் திருப்தி செய்வார்களானால், அவர்கள் மிகவும் ஸந்தோஷித்து உமக்கிஷ்டமானதைக் கொடுப்பார்கள் அவர்களை அலக்ஷ்யஞ்செய்வது உமக்குத் தகுதியல்ல" என்றார்கள்.

23–28. அதனைக்கேட்ட வேணன் அவர்களை நோக்கி, "நீங்கள் மிகவும் மூடர்கள், அதர்மத்தைத் தர்மமென்று நினைப்பவர்கள். ஆகாரம் முதலியவை களை கொடுத்துப் போக்ஷிக்கும் பிரபுவாகிய அரசனை விட்டு மற்றொருவனை உபாஸிக்க விரும்புகிறீர்கள். இது அக்கினி ஸாக்ஷியாக மணம் செய்து கொண்ட புருஷனை விட்டு ஜார புருஷனிடம் பிரீதி செய்வது போலிருக்கிறது. எவர்கள் மூடத்தன்மையால் அரசனாகிய ஈசுவரனை அலக்ஷ்யஞ் செய்கிறார்களோ, அவர்களுக்கு இவ்வுலகத்திலும் மேலுகத்திலும் மோக்ஷம் கிடைக்கிறதில்லை. பர்த்தாவிடம் பிரீதி வைக்காமல் ஜார புருஷனிடத்தில் மிகுந்த பிரேமையுள்ள கெட்ட ஸ்திரீகள் போல் நீங்கள் என்னிடம் பிரியப்படாமல் யாரோ ஒருவனிடத்தில் இவ்வளவு பக்திவைத்திருக்கிறீர்களே, அந்த யக்ஞ புருஷன் யார்? விஷ்ணு, பிரம்மா, பரமசிவன், இந்திரன், வாயு, யமன், சூரியன், பர்ஜன்யன் குபேரன், சந்திரன், பூமி, அக்கினி, வருணன், ஆகிய சாபானுக்ரஹ ஸாமர்த்தியமுள்ள தேவர்களெல்லாரும் அரசனுடைய தேகத்தில் வஸிக்கிறார்கள். ஆனதால் அரசன் ஸகல தேவ ஸ்வரூபி யெனப்படுகிறான். ஓ ப்ராஹ்மணர்களே! மாத்ஸரியத்தை விட்டு யாகம் முதலிய கர்மங்களால் என்னை ஆராதியுங்கள். சுவாமி பாகத்தை எனக்குக் கொடுங்கள். என்னை விட மேலானவன் (பாகத்தை முந்தி அடையத்தக்கவன்) யார் இருக்கிறான்?"

29–35. இப்படி வேனனுக்குப் புத்திமாறியது. கெட்ட மார்க்கத்தை அடைந்தான். ஐசுவரியம் குறையும் காலம் நேர்ந்தபடியால் மிகப் பாவியான

அந்த வேனன் மஹர்ஷிகளால் சொல்லப்பட்ட நன் மார்க்கத்தை ஒப்புக் கொள்ளவில்லை. ஓ விதுரரே! இப்படி மஹரிஷிகள் அனுகூலமான வார்த்தையைச் சொல்லியும் அதனை வேனன் தன்னைப் பண்டி தனாக நினைத்து ஒப்புக் கொள்ளாமல் மஹரிஷிகளை அலக்ஷ்யம் செய்தான். அதனால் அவர்கள் கோபம் கொண்டார்கள். பின்னுமவர்கள் பாவியும், இயற் கையில் கடுமையான ஸ்வபாவமுள்ள வனுமாகிய இவன் கொல்லப்படட்டும், இவன் ஜீவித்திருந்தால் ஜகத்தைச் சாம்பலாகச் செய்துவிடுவான்; இந்த அஸத்துக்கு ராஜ்யாஸனம் தகுந்ததல்ல. இவனைத் தவிர வேறு யார்தான் யக்ஞத்திற்கு அதிபதியான பகவானை வெட்கமில்லாமல் நிந்திப்பான்? அந்தப் பகவான் உடைய அனுக்கிரஹத்தாலல்லவா இவனுக்கு இம்மாதிரியான ஐசுவரியம் கிடைத்தது" என்று சொல்லிக் கொண்டு மிகுந்த கோபமுள்ள மஹரிஷிகள் பகவானை நிந்தித்ததால் ஆயுள் குறைந்த வனாகிய வேனனை ஹுங்காரத்தால் கொன்று தங்கள் ஆசிரமம் சென்றார்கள். பின்பு ஸுநீதை யானவள் தன்னுடைய வித்யா பலத்தால் புத்திரனுடைய சரீரத்தைக் காப்பாற்றி வைத்திருந்தாள்.

36–46. அந்த மஹரிஷிகள் ஒரு ஸமயத்தில், ஸரஸ்வதி நதியில் ஸ்நானம் செய்து அக்கினி கார்யத்தை முடித்துக்கொண்டு ஸரஸ்வதியின் கரையில் உட்கார்ந்து புண்ணியக் கதைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது லோகத்திற்குப் பயங்கரமான உத்பாதங்கள் உண்டாயின. அவைகளைக் கண்ட மஹரிஷிகள் "இப்பொழுது அரசனில்லாமல் இருக்கும் பூமிக்குத் திருடர்களால் கெடுதி நேராமல் இருக்குமா?" என்று யோசித்தார்கள். அப்பொழுது திருடர்கள் அங்குமிங்கும் திருடுவதற்காக அலைவதால் தூளி கிளம்பியது. இப்படி

லோகத்தில் திருடர்கள் மிகுதியானதையும், அதனால் ஜனங்களுக்குண்டான உபத்திரவத்தையும், அரசனில்லாததால் ஜனங்கள் சக்தியுள்ளவர்களானாலும் தோஷதர்சிகளான மஹரிஷிகள் தடுக்கவில்லை. ஆனால் "சாந்தனும் எல்லாவற்றையும் ஸமமாகப் பார்ப்பவனுமாகிய ப்ராஹ்மணனானாலும் தீனர்களை யுபேக்ஷிக்கலாகாது. அப்படி உபேக்ஷித்தால் துவாரமுள்ள குடத்திலுருந்து ஜலம் வெளியில் போவது போல் அவனுடைய தபஸ் குறைந்து விடுகிறது" என்று சாஸ்திரமிருப்பதால் நாம் பேசாமலிருக்கக்கூடாது. பின்னும் அங்கன் அரசர்களுக்குள் சிறந்தவர். அவனுடைய தொடர்ச்சியற்றுப் போகக்கூடாது அந்த வம்சத்திய அரசர்கள் ஸ்ரீ பகவானை ஆச்ரயித்தவர்கள். அவர்களுடைய வீர்யம் வீணாகிறதில்லை என்று மஹரிஷிகள் யோசித்து, அந்த வேனனுடைய துடையைக் கடைந்தார்கள். அதிலிருந்து பாஹுமக னென்ற ஒருவன் உண்டானான். அவன் காக்கைபோல கறுத்த நிறமுள்ளவன். மிகவும் குட்டையான சரீரமுள்ளவன். குட்டையான கைகள் உள்ளவன். பருத்த கன்னங்களுள்ளவன். குட்டையான கால்களு ள்ளவன். பள்ளமாகிய மூக்குள்ளவன். சிவந்த கண் களுள்ளவன். சிவந்த தலைமயிர்கள் உள்ளவன். அவன் மிகுந்த வணக்கத்துடன் உங்களுக்கு என்னால் என்ன செய்யப்பட வேண்டும்?' என்று கேட்டான். அவனை மஹரிஷிகள் 'இவ்விடத்திலிரு' என்றார்கள். அதனால் அவன் நிஷாதனானான். அவனுடைய வம்சத்தில் பிறந்தவர்கள் மலை, காடு இவைகளில் வசிக்கும் நிஷாதர்களானார்கள். அந்த பாஹுமகன் வேனனுடைய மிகுந்த கல்மஷத்தை அபஹரித்தவன். (வேனனுடைய பாபமே பாஹுமகனாகப் பிறந்ததென்று தாத்பரியம்)

அத்தியாயம்–15

பிருதுவின் உற்பத்தி

1–19 பின்பு மஹர்ஷிகள் அபுத்திரனாகிய அந்த வேனனுடைய இரு கைகளையும் கடைந்தார்கள். அவைகளிலிருந்து ஒரு புத்திரனும், புத்திரியும் உண்டானார்கள். அதனைக் கண்ட மஹரிஷிகள் அவ்விருவர்களையும் பகவானுடைய அம்சபூதர்கள் என்று தெரிந்து கொண்டு மிகுந்த ஸந்தோஷமடைந்து "இந்தப் புத்திரன் லோகத்தைக் காப்பாற்றுகிற விஷ்ணுவினுடைய கலையேயாம். இந்தப் பெண் பரம புருஷனை விட்டுப் பிரியாதவளான லக்ஷ்மீதேவியின் அம்சம். இவன் மிகுந்த கீர்த்தியை அடைவான். அரசர்களுக்கு முந்தியவனாவான். மேலுமிவன் பிருதுவென்ற பெயருடன் மஹாராஜனாக இருப்பான். அழகான பற்களுள்ளவளும், குணங்களுக்கும் ஆபரணங்களுக்கும் காந்தியை உண்டு பண்ணுகிற வளுமான இந்தத் தேவியானவள் அர்ச்சிஸ் என்ற பெயருடன் பிருதுவையே பர்த்தாவாக வரிப்பாள். லோகத்தைக் காப்பாற்றுவதற்காகப் பூமியில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அம்சமே பிருதுவாக அவதரித் திருக்கிறது. அதற்குப்பின் உண்டான இந்தப் பெண் பகவானிடத்தில் பிரீதியுள்ளவளாகிய லக்ஷ்மீ தேவியே" என்று புகழ்ந்தார்கள். கந்தர்வர்களுக்குள் சிறந்தவர்கள் கானஞ் செய்தார்கள். ஸித்தர்கள் புஷ்பங்களை வர்ஷித்தார்கள். தேவ ஸ்திரீகள் நர்த்தனம் செய்தார்கள். ஆகாசத்தில் சங்கம், தூர்யம், மிருதங்கம் முதலிய வாத்தியங்கள் கோஷிக்கப்பட்டன. தேவ கணங்களும், ரிஷி கணங்களும், பிதிரு கணங்களும் அவ்விடம்

வந்தார்கள். அப்பொழுது ஜகத் குருவாகிய ப்ரஹ்ம தேவர் வேனனது புத்திரருடைய வலது கையில் சக்கிர ரேகையிருப்பதையும், பாதங்களில் தாமரை மலர் ரேகை இருப்பதையும் பார்த்து, 'எவனுக்கு, சக்கிர ரேகை மற்ற ரேகைகளால் மறைக்கப்படாமல் இருக்கிறதோ அவன் பகவானுடைய அம்சம்' என்று பிருதுவைப் பகவானுடைய கலையென்று நினைத்தார். இவருக்குப் பட்டாபிஷேகம் செய்வதற்குப் ப்ராஹ்மணர்கள் ஆரம்பித்தார்கள். அப்பொழுது ஜனங்கள் அதற்கு வேண்டிய ஸாமான்களைச் சேர்த்தார்கள். மேலும் நதிகள், சமுத்திரம், மலைகள், மரங்கள், பசுக்கள், பறவைகள், மிருகங்கள், ஆகாயம், பூமி முதலிய ஸகல பூதங்களும் காணிக்கைகளைக் கொண்டு வந்தன. பிருதுவானவர் நல்ல வஸ்திரத்தை உடுத்திக் கொண்டு ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்டு, அலங்கிருதையான அர்ச்சிஸ் என்ற பத்தினி யுடன் மஹர்ஷிகளால் செய்யப்படும் பட்டா பிஷேகத்தை அனுபவித்து அக்கினி போல் ப்ரகாசித்தார். அப்பொழுது குபேரன் ஸ்வர்ணமயமான சிம்மாஸனத்தையும், வருணன் ஜலப்பெருக்குள்ள தும் சந்திரன் போன்றதுமான குடை...யையும், வாயுவானவர் வெண்சாமரங்களையும், தர்மன் கீர்த்தி ரூபமான மாலையையும், இந்திரன் மேலான கிரீடத்தையும், யமன் எல்லாரையும் சிக்ஷிக்கும் தண்டத்தையும், ப்ரஹ்மதேவர் வேதமாகிய கவசத்தையும், ஸரஸ்வதி யானவள் உத்தமமான ஹாரத்தையும் ஸ்ரீ மஹாவிஷ்ணு வானவர் சுதர்சனமென்ற சக்கரத்தையும், அவருடைய பத்தினியாகிய லக்ஷ்மிதேவி குறையாத ஸம்பத்தையும், ருத்ரர் கத்தியையும் கொடுத்தார்கள். இந்தக் கத்தியின் உறைமீது சந்திரன் போன்ற பத்து பிம்பங்கள்

இருக்கின்றன. பார்வதியானவள் நூறு சந்திரபிம்பம் உள்ள கேடயத்தையும், சந்திரன் அமிருதமயங்களான எட்டுக் குதிரைகளையும் , துவஷ்டாவானவர் மிகவும் அழகான இரதத்தையும், அக்கினி பகவான் ஆட்டின் கொம்பினாலும் பசுவின் கொம்பினாலும் செய்யப்பட்ட வில்லையும், சூரியன் தம்முடைய கிரணமயங்களான பாணங்களையும், பூமியானவள் யோகமயங்களான பாதுகைகளையும்; (அவைகளைக் காலில் தரித்தவுடன் இஷ்டமான இடத்திற்குச் செல்லலாம்) ஆகாயமானது ஒவ்வொரு நாளும் புஷ்பத்தையும், ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் ஸித்த கந்தர்வர்கள் நர்த்தனம், நல்ல கானம், வாத்தியங்கள் முழங்குதல் ஆகிய இவைகளில் ஸாமர்த்தியத்தையும், மஹரிஷிகள் ஸத்தியமான ஆசீர்வாதங்களையும் ஸமுத்திரமானது தன்னிடத்தில் உண்டான சங்கத்தையும் கொடுத்தனர். மேலும் மேற்கு முகமாகச் செல்லுகிற ஆறுகளும், மலைகளும், கிழக்கு முகமாகப் பிரவஹிக்கும் நதிகளும் மஹாத்மா வாகிய அந்த பிருதுவின் ரத மார்க்கங்களைத் தரித்தன.

20–26 அப்பொழுது ஸூதர்களும் மாகதர்களும், வந்திகளும் அரசனை ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித் தார்கள். அவர்களை நோக்கி, "ஓ ஸூத! ஓ மாகத! நல்ல குணமுள்ள ஓ வந்தியே! லோகத்தில் என்னை என்ன குணங்கள் கொண்டு நீங்கள் ஸ்தோத்திரம் செய்வீர்கள்? ஆனதால் என் விஷயத்தில் உங்களுடைய வார்த்தைகள் பொய்யாக ஆக வேண்டாம். ஓ அழகான வார்த்தையுள்ளவர்களே! சில காலம் சென்ற பிறகு என்னுடைய குணங்களை அலங்கரிக்கலாம். மேலும் ஸதஸ்ஸிலிருப்பவர்கள் என்னைத் துதிக்கும்படி உங்களுக்கு அனுமதி கொடுக்கமாட்டார்கள். உத்தம

சுலோகராகிய பகவானுடைய குணங்களைச் சொல்ல வேண்டியதாக இருக்க, தாழ்ந்தவனை ஸ்தோத்திரம் செய்யும்படி ஆக்ஞாபனம் செய்வார்களா? தன்னிடத்தில் இல்லாதவைகளான மஹான்களுடைய குணங்களைத் தன்னிடமிருப்பதாக எவன் சொல்லச் செய்வான்? அவனைப் பெரியோர்கள் இவன் சாஸ்திரங்களைப் படித்தால் இந்தக் குணங்கள் இவனுக்குண்டாகும் என்று பரிஹஸிப்பார்கள். அதனை மந்த புத்தியுள்ளவன் தெரிந்து கொள்ள மாட்டான். ப்ராஹ்மண வதம் முதலிய கெட்ட கார்யத்தைச் செய்தவர்கள் தங்களுடைய பெளருஷத்தை எப்படி நிந்தித்துக் கொள்கிறார்களோ அப்படி மஹான்கள் பிறரால் செய்யப்படும் ஸ்தோத்திரத்தைக் கேட்டு வெட்கத்தை அடைவார்கள். ஓ ஸூத! நான் சிறந்த கர்மங்களுள்ளவனென்று இப்பொழுது ஜனங்களுக்குத் தெரியாது. அப்படியிருக்க அக்ஞன் போல் என்னிடத்தில் சிறந்த குணங்களிலிருப்பதாக ஒப்புக்கொள்வேனா? என்று மேகம்போல் கம்பீரமாக சிரித்துக் கொண்டு சொன்னார்.

அத்தியாயம்–16

ஸூதர்கள் பிருதுவை துதித்தது

1–2. இம்மாதிரி சொல்லும் அரசனை நோக்கி, "அந்த ஸூத மாகதர்கள் மஹர்ஷிகளால் தூண்டப்பட்டு அமிருதம் போன்ற வாக்கினால் துதிக்க ஆரம்பித்தார்கள்.

3–27. "தேவர்களுக்குள் சிறந்தவராகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவே மாயையால் உம்முடைய உருவத்தைத் தரித்திருக்கிறார். ஆனதால் உம்முடைய மஹிமையை வர்ணிக்க எங்களால் முடியாது. வேனருடைய அங்கத்திலிருந்து உண்டான உம்முடைய பெளருஷத்தை வர்ணிப்பதற்கு வாக்மிகளுடைய புத்தியும் பிரமிக்கிறது. ஆனாலும் முனிகளால் தூண்டப்பட்ட நாங்கள் கம்பீர கீர்த்தியுள்ளவரும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் கலாவதாரமுமான உம்முடைய் கதாமிருதத்தில் பிரீதியுடன் சிறந்த உம்முடைய சரித்தத்தைச் சொல்லுகிறோம். இந்தப் பிருதுவென்னும் அரசன் தர்மத்தை அனுஷ்டிப்பவர்களுக்குள் சிறந்தவர். இவர் ஜனங்களைத் தர்மத்தை அனுஷ்டிக்கும்படி செய்பவர் தர்மத்தின் எல்லையைக் காப்பாற்றுகிறவர். அதற்கு விரோதிகளைச் சிக்ஷிப்பவர். லோகபாலர்களுடைய சரீரத்தை தரித்தவர். பூலோகத்திற்கும் மேலுலகத்திற்கும் அனுகூலமானதைத் தக்கபடி (யாகங்களைச் செய்வது ஜனங்களைப் போஷிப்பது முதலியவை) செய்பவர். இவர் சூரியனுடைய அம்சத்தை தரித்திருப்பதால் எட்டு மாஸங்களில் பூமியிலுள்ள ஜலத்தைக் கிரஹித்து மழைக்காலத்தில் ஜலத்தை சூரியன் வர்ஷிப்பது

போல் ஸமயத்தில் ஜனங்களுக்கே உபயோகப் படுத்துகிறார். பூமியின் அம்சத்தைத் தரித்திருப்பதால் பூமியானது எப்படி எல்லாவற்றையும் சஹிக்கிறதோ, அப்படி தீனர்கள் தம்முடைய தலையில் பாதத்தை வைத்தாலும் அதனைப் பொறுத்துக்கொள்கிறார். மேலும் மனித சரீரமெடுத்திருக்கும் இந்தப் பகவான் மழை பெய்யாமல் ஜனங்கள் கஷ்டப்படும்போது மஹேந்திரன்போல் அவர்களைக் காப்பாற்றுவார். அன்புள்ள பார்வையுள்ளதும், நிர்மலமான சிரிப்பினால் அழகாயுமுள்ள முகமாகிய சந்திரனால் லோகத்தை திருப்தி செய்வார். இவருடைய மார்க்கம் பிறரால் அறியமுடியாது. இவருடைய கார்யம் மிகவும் ரகசியமானது. இவர் கம்பீரமான மேதை யுள்ளவர். பொக்கிஷத்தைக் காப்பாற்றுகிறவர். அளவற்ற மாஹாத்யமியங்களுக்கும், குணங்களுக்கும் இருப்பிடமாக இருப்பவர். வருணனைப் போன்றவர். மறைக்கப்பட்ட ஸ்வரூபமுள்ளவர். வேனனாகிய அரணிக் கட்டையிலிருந்து உண்டான அக்கினி போன்ற இந்த அரசன் சத்துருக்களால் அடைய முடியாதவர். சகிக்க முடியாத தேஜஸ் உள்ளவர். சமீபத்தில் இருப்பவரானாலும் வெகுதூரத்திலிருப்பவர் போல் அவமதிக்க முடியாதவர். எல்லாப் பிராணிகள் இடத்திலிருக்கும் அத்யக்ஷரான அந்தராத்மா, பூதங்களுடைய உள்ளிலும் வெளியிலுமிருந்து அவர்கள் செய்யும் கர்மங்களை பார்த்துக் கொண்டு தாம் உதாஸீனராக இருப்பது போல இந்த அரசன் சாரர்களைக் கொண்டு தம்முடைய தேசத்திய பிரஜைகள் செய்யும் காரியங்களைத் தெரிந்து கொண்டு அவர்களால் செயயப்படும் நிந்தை; ஸ்தோத் திரம் ஆகிய இவைகளில் உதாஸீனராக இருக்கிறார்.

தமக்குத் துவேஷியாக இருப்பவனுடைய புத்திரன் ஆனாலும், குற்றம் செய்பாதவனானாலும் அவனைச் சிக்ஷிக்கிறதில்லை. அபராதம் செய்தவன் தம்முடைய புத்திரனானாலும் தர்ம மார்க்கத்தை அனுசரித்து அவனைச் சிக்ஷிக்கிறார். பகவானாகிய சூரியனுடைய கிரணங்கள் எது வரையில் பிரகாசிக்கின்றனவோ, அந்த மானஸ பர்வதம் வரையில் உள்ள தேச வாசிகளான ஜனங்கள் இவருடைய உத்தரவின்படி நடக்கிறார்கள். இவர் தம்முடைய நடத்தையால் ஸகல பிரஜைகளையும் சந்தோஷப்படுத்துவார். அதனால் பிரஜைகள் இவரை ராஜாவென்று சொல்லுவார்கள்.

மேலுமவர் திடமான விருதமுள்ளவர். ஸத்யப் பிரதிக்ஞர். ப்ராஹ்மணர்களிடத்தில் பிரீதியுள்ளவர். பெரியோர்களை ஸேவிப்பவர், ஸகல பிராணிகளையும் காப்பாற்றுகிறவர், அவர்களுக்கு மானத்தைக் கொடுப் பவர், தூனர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ளவர். 'பிற ஸ்திரீகளை மாதாவாகப் பாவிப்பவர், பத்தினியை தம்முடைய பாதிசரீரமாக நினைப்பவர். தகப்பனார் குழந்தைகளிடம் பிரீதி செய்வது போல் பிரஜைகள் இடத்தில் பிரீதி செய்பவர், ப்ரஹ்மிஷ்டர்களுடைய வேலைக்காரராக இருப்பவர். பிராணிகள் தங்களுடைய ஆத்மாவிடத்தில சிநேஹிப்பதுபோல ஜனங்கள் இந்த அரசனிடத்தில் பிரியப்படுகிறார்கள், பின்னுமவர் மித்திரர்களுக்கு சுகத்தை விருத்தி செய்பவர், வைராக்கிய முள்ளவர்களிடத்தில் அதிகப் பிரியம் உள்ளவர், அஸாதுக்களைத் தண்டிப்பவர், எவர் ஆறு வகையான ஐசுவரியமுள்ளவரோ, எவர் முக்குணங்களுக்கு அதிபதியோ, எவர் கூடஸ்தரோ (விகாரமற்றவர்). எவர் பரமாத்மாவோ, (பலவகையாகத் தோன்றினாலும்

அது அவித்தையால் ஏற்பட்டதாகையால் மித்யை யென்று சொல்லுகிறார்களோ) அந்த பரமாத்மாவின் அம்சமே இவர். இவர் உதயபர்வதம் வரையிலுள்ள பூமண்டலத்தைக் காப்பாற்றுவார். மேலும் ஜயசீலமான ரதத்தின் மீதேறி வில்லை எடுத்துக் கொண்டு சூரியன் போல் பூமியைச் சுற்றுவார். லோக பாலகர்களும் மற்ற அரசர்களும் இவருக்கு காணிக்கைகளை ஸமர்ப்பிக் கிறார்கள். ஸ்திரீகள் இவருடைய கீர்த்தியை கானஞ் செய்வதுடன் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அம்சமாக அவதரித்த ஆதிராஜனென்று தெரிந்து கொள்வார்கள் மேலும் இந்த அரசன் பிரஜைகளுடைய க்ஷேமத் திற்காகப் பசு வேடந்தரித்த பூமியினிடமிருந்த ஸகல வஸ்துக்களையும் கறப்பார். பின்னுமவர் தம்முடைய வில்லின் நுனியால் இந்திரன்போல் பர்வதங்களைப் பேதித்து பூமியைச் சமமாகச் செய்வார். வாலைத் தூக்கிக்கொண்டு சிங்கம் ஸஞ்சரிப்பது போல் இவர் சகிக்கமுடியாத தம்முடைய வில்லை சப்திக்கச் செய்துகொண்டு பூமியில் ஸஞ்சரிக்கும்பொழுது அஸத்துக்கள் பயந்து நூறு அச்வமேதங்களைச் செய்வார், கடைசியான யாகத்தில் இந்திரன் யாகக் குதிரையை அபஹரிப்பான். பின்னுமவர் தம்முடைய உத்யான வனத்தில் தெய்வச் செயலாக பகவானாகிய ஸனத்குமாரரைச் சந்தித்து அவரை ஆராதித்து அவரிடம் ப்ரஹ்மஞ்ஞானத்தை அடைவார் மிகுந்த பராக்ரமமுள்ள பிருதுவென்ற இந்த மஹாராஜனைப் பற்றி லோகத்தில் எல்லோரும் புகழ்ந்து பேசிக் கொள்வார்கள். அதனை அரசர் கேட்பார். இப்படி ஸகல திக்குகளையும் தேஜஸ்ஸால் லோகத்தின் உபத்ரவத்தை நிவர்த்தித்து சிறந்த தேவர்களாலும், ஸஜ்ஜனர்களாலும் துதிக்கப்பட்ட மகிமையுள்ளவராகிப் பூமியை பரிபாலிப்பார்" என்று துதித்தார்கள்.

அத்தியாயம்–17

பிருது பூமியைக் கொல்ல முயன்றது

1–2 வேனனுடைய புத்திரரும் பகவானுடைய அவதார பூதருமாகிய பிருது சக்ரவர்த்தியானவர் தம்முடைய குணங்களாலும், கர்மங்களாலும் பிரசித்தி அடைந்து ப்ராஹ்மணர் முதலியவர்களையும், வேலைக்காரர்கள், மந்திரிகள், புரோகிதர்கள், பட்டணத்திலிருக்கும் ஜனங்கள், தேசத்திலிருப்பவர்கள், வியாபாரிகள் முதலிய எல்லாரையும் அவர் அவர் களுடைய இஷ்டத்தைக் கொடுத்துத் திருப்தி செய்தார் என்று மைத்ரேயர் சொன்னார்.

3–7 அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி "பிருது பசுவின் வேடங்கொண்ட பூமியிடம் ஸகல வஸ்துக்களைக் கறந்ததாகச் சொன்னீர்களே, பூமிதேவி எதற்காகப் பசுவின் கர்பத்தைத் தரித்தாள்? அவளிடத்தில் எதனைக் கறந்தார்? எது கன்றாக இருந்தது? இயற்கையில் மேடுபள்ள முள்ள பூமியை எப்படிச் சமமாகச் செய்தார்? மேலும் அவருடைய யாகக் குதிரையை மஹேந்த்ரன் அபகரித்த காரணம் என்ன? ஓ ப்ராஹ்மணோத்தம! மேலும் அந்த ராஜரிஷ்டர் ப்ரஹ்மவித்துக்களுக்குள் சிறந்தவரான ஸனத் குமாரரிடமிருந்து தத்துவ ஞானத்தையும் அபரோக்ஷ ஞானத்தையும் அடைந்தார். இந்தப் பிருது முதலியவர்கள் பகவதவதார பூதர்களாகையால் அவர்களுடைய சரிதமானது ஸ்ரீ கிருஷ்ண பகவான் உடைய சரிதமேயாம். அது புண்ணிய கரமானது; அதனைக் கேட்பவனே நல்ல காதுள்ளவன், ஆனதால்

ஸ்ரீ கிருஷ்ணபகவான் முந்திய அவதாரங்களில் எதனைச் செய்தாரோ, அந்துப் பகவானுடைய சரிதத்தை ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலும் உம்மிடத்திலும் அந்தரங்க பக்தியுள்ளவனாகிய எனக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

8–11 ஸ்ரீ பகவானுடைய கதையைச் சொல்லும் படி விதுரரால் தூண்டப்பட்ட மைத்ரேயர் மிகுந்த பிரியத்துடன் விதுரரைப் புகழ்ந்து அவரை நோக்கி, ஓ விதுரரே! மஹரிஷிகள் பிருதுவிற்குப் பட்டா பிஷேகஞ் செய்து நீர் ஜனங்களை காப்பாற்ற வேண்டும் என்று ஆக்ஞாபித்தார்கள். அப்பொழுது பூமியில் அன்ன மில்லாமற் போனதால் பிரஜைகள் பசியினால் வருத்தப்பட்டுச் சரீரம் இளைத்து அரசனிடம் சென்று, 'ஓ மஹாராஜ! பொந்திலிருக்கும் அக்கினியால் மரங்கள் எரிக்கப்படுவது போல நாங்கள் வயிற்றில் இருக்கும் அக்கினியால் எரிக்கப்படுகிறோம். (புஜிப்பதற்கு அன்னம் கிடைக்கவில்லை என்று கருத்து). காப்பாற்றுவதில் ஸமர்த்தராகிய உம்மைச் சரணம் அடைகிறோம்! நீர் எங்களுக்கு ஜீவனத்தைக் கொடுக்கும் அரசனல்லவா? ஆகையால் நாங்கள் அன்னமில்லாமல் நாசமடைவதற்கு முந்தியே எங்களுக்கு அன்னம் கொடுத்துப் பசியை நிவர்த்திக்க முயற்சியும்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

12–21 ஓ குருக்களில் சிறந்தவரே! ப்ரஜைகளுடைய தீனமான வார்த்தையைக் கேட்டுப் பிருது சக்கிரவர்த்தி வெகுகாலம் யோசித்துச் செய்ய வேண்டிய கார்யம் இன்னதென்று தமக்குள் தீர்மானித்துக் கொண்டு பூமிதேவியினிடம் மிகுந்த கோபமுள்ளவராகி, வில்லைக்

கையிலெடுத்து, அதில் பாணத்தை ஸந்தானம் செய்தார். அப்பொழுது அவர் திரிபுர ஸம்ஹாரம் செய்த பரமசிவனுக்கு ஸமமாக இருந்தார். அவரைக் கண்டு பூமிதேவியானவள் மிகவும் பயந்து நடுக்க முள்ளவளாகி வேடனால் துரத்தப்பட்ட பெண் மான்போல் ஓடினாள். அதனைக் கண்ட வேனபுத்திரர் ஆகிய பிருது சக்ரவர்த்தி மிகவும் கோபத்தால் சிவந்த கண்களுள்ளவராகிப் பாணத்தை வில்லில் பூட்டிக் கொண்டே பூமியின் பின் ஓடினார். அந்தப் பூதேவியும் கிழக்கு முதலிய திக்குகளிலும், மூலைகளிலும் ஆகாசத் திலும், பூமியிலும், அந்தரிக்ஷமும் முதலிய எங்கும் ஓடியும் தன் பின் ஆயுதத்துடன் துரத்திவரும் அரசனைக் கண்டு மிருத்புவைக் கண்ட ப்ரஜைகள் போல் ஒருவராலும் காப்பாற்றப்படாதவளாகி மிகுந்த வருத்தத்துடன் அந்த பிருதுவினிடமே வந்தாள். பின்பு அவள் அந்தச் சக்ரவர்த்தியை நோக்கி, "ஓ மிகுந்த அதிருஷ்டமுள்ளவரே! தர்மங்களை அறிந்தவரே! ஆபத்தை அடைந்தவர்களிடத்தில் பிரீதியுள்ளவரே! நீர் ஸகல பிராணிகளையும் காப்பாற்றும் அதிகார்த்தை அடைந்திருந்தும் குற்றமற்றவளும், தீனையுமான என்னை ஏன் கொல்ல யத்தனிக்கிறீர்? என்னைக் காப்பாற்றும். தர்மங்களை அறிந்தவனென்று பிரசித்தி பெற்றவர் ஸ்திரீவதம் செய்யலாமா? குற்றஞ் செய்தவர்களான ஸ்திரீகளையும் ப்ராகிருத ஜனங்கள் ஆனாலும் கொல்ல மாட்டார்கள். அப்படிக்கிருக்க கருணை பொருந்தியவர்களும், தீனர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ளவர்களுமான உம்மை போன்ற ஸாதுக்கள் குற்றஞ் செய்யாத ஸ்திரீயைக் கொல் வார்களா? மேலும் நான் ஜனங்கள் வசிப்பதற்கு ஒரு கெட்டியான ஓடமாக ஜலத்தில் இருக்கிறேன்.

என்னைப் பிளந்துவிட்டால் இந்த ஜனங்களை ஜலத்தில் எப்படி வசிக்கச் செய்வீர்? ஆகையால் என்னைக் காப்பாற்றும்" என்று வேண்டிக் கொண்டாள்.

22–27 அதனைக் கேட்ட பிருது சக்கிரவர்த்தி அவளை நோக்கி, 'ஓ பூமிதேவியே! நீ யாகத்தில் தேவதாரூபியாக ஹவிர்பாகத்தைப் பெற்றுக் கொண்டும் தான்யம் முதலியவைகளை உண்டு பண்ணுகிறதில்லை. ஒவ்வொரு நாளும் வயிறு நிரம்பப் புற்களைத் தின்றும் பால்கறக்காமல் இருக்கும் பசுவைப்போல் நீ ப்ரஹ்மதேவரால் முந்தி ஸிருஷ்டிக்கப்பட்ட ஓஷதி, விதை ஆகிய இவைகளை இப்பொழுது வெளிப் படுத்தவில்லை. என்னுடைய ராஜ்ய காலத்தில் நீ இப்படிச் செய்வதால் என்னை அவமானம் செய்கிறதாக ஆயிற்று; ஆனதால் என்னுடைய உத்தரவை மீறி நடக்கும் உன்னைக் கொல்வேன். உன்னுடைய தேஹத்தைப் பேதித்து அந்த மாம்ஸத்தால் பசியால் வருத்தப்படும் இந்த ஜனங்களைக் காப்பாற்றுகிறேன். புருஷனானாலும் ஸ்திரீயானாலும் கர்வத்தை அடைந்து பிராணிகளிடத்தில் கருணையற்றிருந்தால் அவர்களைக் கொல்வது அரசர்களுக்குத் தர்மமேயாகும். (அது வதமல்லவென்று தாத்பர்யம்). நீ இப்பொழுது மதங் கொண்டு நிலை தவறி, கபட ஸ்வபாவமுள்ள வளாக இருப்பதால் உன்னைப் பாணங்களைக் கொண்டு எள்ளளவாகப் பேதித்து என்னுடைய யோக பலத்தால் இந்த ஜனங்களைத் தரிக்கிறேன்" என்று சொன்னார்.

28–36 அதனைக் கேட்ட பூமிதேவியானவள்

கோபஸ்வரூபமான சரீரத்தைத் தரித்து யமனைப் போலிருக்கும் பிருது சக்கிரவர்த்தியைக் கண்டு நடுங்கி நமஸ்கரித்து, கைகளைக் கூப்பிக் கொண்டு பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தாள். பரம புருஷனுக்கு நமஸ்காரம் செய்கிறேன். நீர் மாயையால் மத்ஸ்யம் முதலிய பல சரீரத்தை எடுத்துக் கொள்பவர். குணஸ்வரூபி போலத் தோன்றுகிறவர். மேலும் சரீரம், இந்திரியங்கள், அவைகளின் அதிஷ்டான தேவதைகள், சரீரத்தில் நானென்ற அஹங்காரம், இராகம், துவேஷம் முதலியவை ஆகிய இவைகளை ஸ்வபானு ஸந்தானத்தாலே நாசஞ் செய்தவர். அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம். எந்தப் பகவான் என்னை ஸகல பிராணிகளுக்கும் இருப் பிடமாக ஸிருஷ்டித்து என்னிடத்தில் நான்கு வகையான பிராணிகள் வசிக்கும் படியும் செய்தாரோ ஸ்வதந்த்ரராகிய அந்தப் பகவானே ஆயுதத்துடன் என்னைக் கொல்லுவதற்கு யத்தனிக்கிறார். வேறு யாரை நான் சரணமடைவேன்? எந்தப் பகவான் முதலில் சரம் அசரம் அடங்கிய இந்த ஜகத்தைத் தம்முடைய மாயையைக் கொண்டு ஸிருஷ்டித்தாரோ, எவருடைய மாயையானது ஊகிக்க முடியாததோ, அந்தப் பகவானாகிய நீரே அந்த மாயா பலத்தால் ஜகத்தைக் காப்பாற்ற இப்பொழுது யத்தனித்திருக் கிறீர். தர்மிஷ்டராகிய நீர் என்னைக் கொல்வது உசிதமா? ஈசுவரனுடைய நடை ஜனங்களால் அறிய முடியாதது.

உம்முடைய மாயையானது ஒருவராலும் ஜயிக்க முடியாத தாகையால் அந்த மாயையால் புத்தி மயக்கம் அடைந்து ஜனங்கள் உம்முடைய உண்மையைத்

தெரிந்து கொள்ளுகிறதில்லை. எவர் ப்ரஹ்மாவை உண்டுபண்ணுகிறாரோ, எவரைக் கொண்டு ஸகலஜகத்தையும் ஸிருஷ்டிக்கிறாரோ; எவர் இயற்கையில் ஒருவரோ, மாயையால் அநேகராகத் தோன்றுகிறாரோ, அவரே ஈசுவரன். அவர் மஹா பூதங்கள், இந்திரியங்கள், அதிஷ்டான தேவதைகள், புத்தி அஹங்காரம் ஆகிய இவைகளைக் கொண்டு ஸிருஷ்டி, பரிபாலனம், ஸம்ஹாரம் ஆகிய இவைகளை அனுசரிக்கிறார். மேலும் இவைகள் யாவும் அவருக்கு ஸ்வாதீனங்களாக இருக்கின்றன. அப்பேர்ப் பட்ட பரம புருஷனாகிய உம்மை நமஸ்கரிக்கிறேன். ஓ உற்பத்தியற்றவரே! பூதங்கள், இந்திரியங்கள், அந்தக்கரணம் இவைகளின் ஸ்வரூபமாகிய ஜகத்தை ஸ்தாபிக்க வேண்டி நீர் ஆதிவராஹவதாரம் செய்து என்னைப் பாதாளத்தில் இருந்து கொண்டுவந்தீர். ஜலத்திற்குமேல் ஓடம் போலிருக்கும் என்னிடத்தில் உம்மால் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கும் ப்ரஜைகளைக் காப்பாற்ற வேண்டி இப்பொழுது பிருது சக்கரவர்த்தியாக அவதரித்திருக்கிறீர். அப்படிப்பட்ட நீர் 'பால் கொடாத காரணத்தைக் கொண்டு என்னைக் கொல்ல விரும்புகிறீர்' என்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. ஈசுவரனுடைய மாயையால் புத்தி மயக்கமடைந்த என்னைப் போன்றவர்களால் பகவத் பக்தர்களுடைய அபிப்பிராயமே அறிய முடியாது. (பகவானுடைய அபிப்பிராயம் எப்படி அறியமுடியும் என்று கருத்து). ஆகையால் இந்திரியங்களை ஜயித்தவர்களுக்குக் கீர்த்தியைக் கொடுக்கும் அந்த மஹான்களுக்கு நமஸ்காரம் செய்கிறேன். (எதனைச் செய்தால் ஜிதேந்திரியர்களுடைய கீர்த்தி விருத்தி அடையுமோ, அதனைச் செய்ய வேண்டுமேயல்லாமல் தனதிஷ்டப்படிச் செய்யக் கூடாதென்று கருத்து)

அத்தியாயம்–18

பூமிதேவி ஸகல பொருள்களையும் உண்டுபண்ணியது

1–11. கோபத்தால் துடிக்கும் உதடுகளுள்ள பிருது சக்கரவர்த்தியைப் பூமிதேவி இப்படித் துதித்துப் பின்னும் அவரை நோக்கி, "ஓ மகாராஜ! கோபத்தை அடக்கிக் கொள்ளும். நான் சொல்வதைக் கேளும். (அலக்ஷ்யம் செய்யவேண்டாமென்று கருத்து). தேனீயானது மதுவை எடுத்து கொள்வது போல் வித்வான் எல்லாரிடத்திலிருமிருந்து ஸாரமானதை எடுத்துக்கொள்வான். உண்மையை அறிந்த மஹர்ஷிகள் ஜனங்களுக்கு இவ்வுலகம், மேலுலகம் ஆகிய இவைகளின் சுகத்திற்காகப் பலவகையான உபாயங்களைக் கண்டு பிடித்ததுமல்லாமல் அவைகளைப் பிரயோகித்துமிருக்கிறார்கள். (பயிர்தொழில் அக்னி ஹோத்ரம் முதலியவை) அப்படிப்பட்ட உபாயங்களைச் சிரத்தையுடன் அனுஷ்டிப்பவன் பலனை அடைவான். அவைகளை லக்ஷ்யம் செய்யாமல் காரியத்தை ஆரம்பிப்பவன் வித்வானானாலும் அவனால் ஆரம்பிக்கப்பட்ட காரியங்கள் பலனைக் கொடுக்கிறதில்லை. முந்தி ப்ரஹ்மதேவரால் ஸிருஷ்டிக்கப்பட்ட ஓஷதிகளை, விரதங்களை அனுஷ்டிக்காத அஸத்துக்கள் அனுபவித்தார்கள். லோகத்தை காப்பாற்றுகிறவர்களான நீங்களும் அதைக் கவனிக்கவில்லை, ரக்ஷிக்கவுமில்லை, பிரஜைகளெல்லோரும் திருடர்களாக ஆகிவிட்டார்கள். ஆனதால் நான் யக்ஞத்திற்காக ஓஷதிகளை காப்பாற்ற வேண்டி அவைகளை வெளிப்படுத்தாமல் மறைத்துக் கொண்டேன. இப்படி வெகுகாலம் சென்றதால் அந்த

ஒஷதிகள் பூமியிலற்றுப்போயின. அது விஷயத்தில் ஒரு உபாயம் சொல்லுகிறேன். அதன்படி அவைகளை அடையலாம், ஓ வீரராகிய அரசனே! பிராணிகளுக்குப் பலத்தைக் கொடுக்கக்கூடிய அன்னம் வேண்டுமென்ற விருப்பம் உமக்கிருக்குமானால் பசுவின் ஸ்வரூபம் உள்ளவளாகிய எனக்குத் தகுதியான கன்றையும் கறக்கிறவனையும், கறக்கும் பாத்திரத்தையும் ஏற்படுத்தும். அதனால் உம்மிடத்தில் நான் பிரீதி அடைந்து உமக்கு அபேக்ஷிதங்களான பொருள்களை உண்டு பண்ணுகிறேன். மேலும் என்னுடைய சரீரமானது மலை முதலியவைகளால் மேடுபள்ளமாக இருப்பதால் மழை ஜலமானது எங்கும் பரவுகிறதில்லை. ஆனதால் மழைக்காலத்தில் பெய்த மழை ஜலமானது பிந்திய ருதுக்களிலும் பரவி ஓடும் படியாக என்னை ஸமமாக (மேடுபள்ளமில்லாமல்) செய்யும் என்றாள்.

12–27. பிரியமானதும், அனுகூலமானதுமான அதனைக் கேட்ட அரசர், ஸ்வாயம்புவ மனுவைக் கன்றாக வைத்துக்கொண்டு தம்முடைய கையாகிய பாத்திரத்தில் ஸகல ஒஷதிகளையும் தாமே கறந்தார். (பசுவினிடமிருந்து உண்டாகிறதாகையால் அவைகளே க்ஷீரமென்றும், அதை கறக்கிறதென்றும் சொல்லப்படுகிறது). மற்ற வித்வான்களும் தங்கள் தங்கள் இஷ்டப்படி மேலான வஸ்துக்களைக் கறந்து கொண்டார்கள். எப்படியெனில் மஹரிஷிகள் பிருஹஸ்பதியைக் கன்றாக வைத்துக்கொண்டு இந்திரியங்களாகிய பாத்திரங்களில் வேதமாகிய சுத்தமான பாலைக் கறந்தார்கள். தேவர்கள் இந்திரனைக் கன்றாக வைத்துக்கொண்டு ஸ்வர்ண மயமான பாத்திரத்தில் ஸோமம், மனத்தில் சக்தி, இந்திரிய சக்தி, தேகசக்தி

ஆகிய இவைகளாகிய பாலைத் திதியின் புத்ரர்கள் அஸுரர்களுக்குள் சிறந்தவரான பிரஹ்லாதரைக் கன்றாக வைத்துக்கொண்டு இரும்பு பாத்திரத்தில் ஸுதரையையும் (வெல்லத்தாலும், மாவினாலும், மதுவினாலும் செய்யப்பட்டு மூன்று வகையானது) பனைமரம் முதலியவைகளிலிருந்து உண்டாகும். மத்யத்தையும் கறந்தார்கள். கந்தர்வர்களும், அப்ஸரஸ்ஸுகளும் விசவாசு என்ற கந்தர்வனைக் கன்றாக வைத்துக்கொண்டு பத்ம பாத்திரத்தில் (தாமரை) வாக்கின் இனிமை அழகு ஆகிய பாலைக் கறந்தார்கள். ஓ மிகுந்த அதிர்ஷ்டமுள்ள விதுரரே! சிராத்த தேவதைகளான பிதுருக்கள் அரியமா வென்பவரைக் கன்றாக வைத்துக்கொண்டு அயக்மமான (சூளையில் வைக்கப்படாத) மண் பாத்திரத்தில் கவ்யமாகிய க்ஷீரத்தைக் கறந்தார்கள். ஸித்தர்கள் கபிலரைக் கன்றாக வைத்து ஆகாயமாகிய பாத்திரத்தில் ஸங்கல்ப மாத்திரத்தாலுண்டாகும் அணிமா முதலிய ஸித்திகளையும், வித்தியாதாரர் முதலியவர்கள் ஆகாசத்தில் ஸஞ்சரிப்பதாகிய வித்யைகளையும் கறந்தார்கள். கிம் புருஷர்கள் முதலிய மாயையில் ஆசையுள்ளவர்கள், மயனென்பவனைக் கன்றாக வைத்துக் கொண்டு மறைகிறது. முதலிய அற்புதமான மாயைகளைச் செய்பவர்களுடையதும். நினைத்த மாத்திரத்தில் கிடைக்கக்கூடியதுமான மாயா சக்தியைக் கறந்தார்கள். யக்ஷர்களும், ரக்ஷஸ்ஸுகளும், மாம்ஸத்தைப் பூஜிக்கும் பிசாசங்களும், பூதகணங்களும் உருத்திரனைக் கன்றாக வைத்துக்கொண்டு கபாலத்தில் இரத்தமாகிய மத்யத்தைக் கறந்து கொண்டார்கள். படமில்லாத பாம்புகளும், தேள் முதலிய விஷ ஜந்துக்களும், படமெடுக்கக் கூடிய ஸர்ப்பங்களும் நாகங்களும்,

(கர்த்ருவின் ஸந்நதியிலுண்டானவை) தக்ஷகனைக் கன்றாக வைத்துக் கொண்டு பிலமாகிய பாத்திரத்தில் விஷமாகிய பாலைக் கறந்தன. பசுக்கள் பரமசிவன் உடைய வாகனமாகிய விருஷபத்தைக் கன்றாக வைத்துக்கொண்டு வனமாகிய பாத்திரத்தில் புற்களாகிய பாலைக் கறந்தன. மாம்ஸத்தைப் புஜிக்கும் புலி முதலியவைகள் சிங்கத்தைக் கன்றாக வைத்துக் கொண்டு பூச்சி முதலிய சரங்களையும் பழங்கள் முதலிய அசரங்களையும் கறந்தன. விருக்ஷங்கள் ஆலமரத்தைக் கன்றாக வைத்துக்கொண்டு தனியாக முளைக்கும் சக்தியாகிய பாலைக் கறந்தன. மலைகள் ஹிமவானென்ற பர்வதத்தைக் கன்றாக வைத்துக் கொண்டு தங்களுடைய தாழ்வரைகளில் பலவகையான தாதுக்களாகிய பாலைக் கறந்தன. இப்படி எல்லாப் பிராணிகளும் தங்கள் தங்கள் பாத்திரங்களில் தங்களுக்கிஷ்டமான வஸ்துக்களைப் பிருது சக்கரவர்த்தி யினால் காட்டப்பட்ட பூமிதேவியினிடமிருந்த பெற்றுக் கொண்டார்கள். அந்த பூமியானவள் ஸகல வஸ்துக் களையும் கொடுக்கக்கூடியவள். இப்படி பாத்திர பேதத்தாலும் வத்ஸ (கன்று) பேதத்தாலும் பல வகையான அன்னத்தை அவரவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

28–32. அதன் பின்பு அரசன் மிகவும் பிரியம் உள்ளவராகி பிராணிகளுக்கு ஸகல இஷ்டத்தையும் கொடுத்த பூமிதேவியைத் தமக்குப் புத்தரியாக வைத்துக் கொண்டார். மேலும் வேன புத்திரராகிய அனந்தச் சக்கரவர்த்தி தம்முடைய வில்லின் நுனியால் மலைகளை உடைத்து தூளியாகச் செய்து பெரும்பாலும் பூமியை ஸமமாகச் செய்தார். பின்பு

அந்த அரசன் ஜனங்களுக்கு ஜீவனத்தைக் கொடுத்துக் காப்பாற்றுகிறவராகையால் ஜனங்கள் வசிப்பதற்கு கிராமங்களையும், பட்டணங்களையும், பலவகையான துர்க்கங்களையும், இடைச்சேரிகளையும், பசுக்கள் வசிக்கும் இடங்களையும், ஸைன்னியம் தங்கியிருக்கும் இடங்களையும், தங்கம் முதலிய தாதுக்கள் விளையும் ஸ்தானங்களையும், பயிரிடுவோர்கள் (குடியானவர்கள்) வசிக்குமிடங்களையும், மலையின் சமீபத்திலுள்ள கிராமங்களையும் தனியே ஏற்படுத்தினார்.. அந்தச் சக்ரவர்த்தியின் ராஜ்ய காலத்திற்குமுன் இம்மாதிரியான ஏற்பாடில்லை. இப்பொழுது ஜனங்கள் அவரவர்களுக்கு இஷ்டமான இடங்களில் பயமில்லாமல் வசித்துக் கொண்டிருந்தார்கள்.

அத்தியாயம்–19

பிருதுவின் அச்வமேதக் குதிரை காணாமற் போனது

1–25 எந்தவிடத்தில் ஸரஸ்வதி நதி கிழக்கு முகமாகப் ப்ரவகிக்கிறதோ, எது ப்ரஹ்மவர்த்தமெனப் படுகிறதோ, அந்த மனுவின் க்ஷேத்திரமாகிய புண்ணிய பூமியில் அந்த பிருது சக்கரவர்த்தியானவர் நூறு அச்வமேதங்களை அனுஷ்டிப்பதாக ஸங்கல்பஞ் செய்தார். மஹேந்திரன் அரசனுடைய அபிப்ராயத்தை அறிந்து, தம்மைப்போல நூறு யாகஞ் செய்வதற்குப் பிருதுவும் ஆரம்பித்தார்" என்று நினைத்துப் பொறாமையை அடைந்தார். அந்த யாகத்தில் யக்ஞபதியும், ஸகல லோகங்களுக்குக் குருவும், ஸகல ஸ்வரூபியுமான ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் ப்ரஹ்ம தேவருடனும், பரமசிவனுடனும் பிரத்யக்ஷமாக அவ்விடத்தில் ப்ரகாசித்தார். அப்பொழுது லோகபாலர்களும், அவர்களுடைய வேலைக்காரர்களும், கந்தர்வர்களும், முனிகளும், அப்ஸரஸ்ஸுகளும், ஸித்தர்களும், வித்யாதரர்களும், தைத்தியர்களும், தானவர்களும், குஹ்யர்கள் முதலியவர்களும், ஸுநந்தர், நந்தர் முதலிய பகவானுடைய பார்ஷத கணங்களும், கபிலரும், நாரதரும், தத்தரும், ஸனகர் முதலிய யோகிகளும், பாகவதர்களும், அவர்களை ஸேவிக்க விருப்பமுள்ளவர்களும் அவ்விடம் வந்து கூடியிருந்தார்கள். மேலும் அந்த யாகத்தில் ஸகல காமங்களையும் கொடுக்கக்கூடிய பூமியானவள் ஹவிஸ்ஸையுண்டு பண்ணினது மல்லாமல் யஜமான் உடைய இஷ்டப்படி ஸகல பொருள்களையுமுண்டு

பண்ணினாள். நதிகள் பால், தயிர், அன்னம், பானம், நெய், மோர் முதலிய ரஸபதார்த்தங்களை உண்டு பண்ணின. பலவகையான சரீரமுள்ள மரங்கள் தேன் போலினிமையான பழங்களை யுண்டு பண்ணின. சமுத்திரங்கள் இரத்தினங்களைக் குவியலாகக் குவித்தன. பர்வதங்கள் நான்கு வகையான அன்னத்தை உண்டுபண்ணின. லோகபாலர்களும் மற்றவர்களும் காணிக்கைகளைக் கொண்டுவந்தார்கள். ஸ்ரீ மஹா விஷ்ணுவையே தெய்வமாகக் கொண்ட அந்தப் பிருது சக்கரவர்த்தியின் யாக ஸம்ருத்தியைப் பார்த்து இந்திரன் அசூயை அடைந்து அதற்கு விக்கினஞ் செய்தார். எப்படியெனில் கடைசியான யாகம் நடக்கும் போது மஹேந்திரன் மறைந்து யாகக்குதிரையை அபகரித்தார். இப்படி மிகுந்த வேகமாக ஆகாசத்தில் குதிரையுடன் செல்லுகிறவனும் அதர்மத்தில் தர்ம புத்தியை யுண்டுபண்ணுகிறவனும், வேஷதாரியான பாஷண்டனுமான மஹேந்திரனை அத்ரிமஹரிஷி கண்டார். பிருதுவினிடமும் தெரிவித்தார். அப்பொழுது பிருதுவின் புத்திரர் மிகுந்த கோபத்துடன் நில்லு நில்லு" என்று சொல்லிக் கொண்டு பின்தொடர்ந்தார். அப்பொழுது ஜடைகளைத் தரித்தவராயும் தர்மமே சரீரமெடுத்திருப்பது போலிருந்தபடியால் அவரிடம் பாணத்தைப் ப்ரயோஹியாமல் பிருதுவின் புத்திரர் திரும்பினார். அதனைக் கண்ட அத்திரியானவர் 'யக்ஞத்தைக் கெடுப்பவனும்' தேவர்களுக்குள் அதமனுமான இந்திரனைக் கொல்லும் என்று தூண்டினார். அதனைக் கேட்ட பிருதுவின் புத்திரர் மிகுந்த கோபத்துடன் யானையைச் சிங்கம்போல் ஆகாசத்தில் வேகமாகச் செல்லும் இந்திரனைப் பின் தொடர்ந்தார். அப்பொழுது தேவேந்திரன் அந்த

உருவத்தையும் குதிரையையும் விட்டு அந்தர்த்யானம் அடைந்தார் (மறைந்திருந்தார்). அப்பொழுது வீர பிருதுவின் புத்திரர் அந்தக் குதிரையுடன் பிதாவிடம் சேர்ந்தார். அவருடைய அற்புதமான காரியத்தைக் கண்டு மகர்ஷிகள் சந்தோஷித்து அவருக்கு விஜிதாச்வர் என்று (குதிரையை ஜயித்தவர்) பெயர் கொடுத்தார்கள். மறுபடியும் மஹேந்திரன் கடுமையான இருட்டை மாயையால் ஸிருஷ்டித்து அதில் மறைந்து கொண்டு ஸ்வர்ணமயமான ரசனையால் கட்டப்பட்ட யாகக்குதிரையை யூபத்தின் நுனியிலிருந்து தூக்கிக் கொண்டு போனார். அப்பொழுதும் அத்திரி மஹர்ஷியானவர் விஜிதாச்வருக்கு மஹேந்திரனைக் காண்பித்தார். அப்பொழுது இந்திரன் கபாலம், கட்வாங்கம் ஆகிய 'இவைகளைத் தரித்திருந்தபடியால் சூரனாகிய விஜிதாச்வர் அவரை உபத்ரவிக்கவில்லை. அதனைக் கண்ட அத்ரி மஹர்ஷி மஹேந்த்ரனை கொல்லும்படி விஜிதாச்வரரை தூண்டினார். விஜிதாச்வர் கோபத்துடன் பாணத்தைப்ரயோகித்தார். அதனைக் கண்ட மஹேந்திரன் பயந்து குதிரையை விட்டு, கண்ணுக்கு புலப்படாமல் மறைந்தார். சூரராகிய விஜிதாச்வர் தம்முடைய குதிரையைக் கிரகித்துக் கொண்டு பிதாவினுடைய யாகசாலை சென்றார். இப்படி இந்திரன் யாகக் குதிரையை அபகரிப்பதற்காக எந்த ரூபங்களை எடுத்துக் கொண்டாரோ அந்தத் துஷ்டமான ரூபங்களை சொல்ப ஞானம் உள்ளவர்கள் கிரஹித்துக் கொண்டார்கள். அவைகள் பாபத்திற்கு அடையாளங்கள். அவைகளே பாஷண்ட விங்கமெனப்படுகின்ற இந்திரனால் கிரஹிக்கப்பட்ட வைக்ளும், விடப்பட்ட நல்மார்க்கங்கள் போலத் தோன்றுகிறவைகளும், யுக்தி வாதங்களுள்ளவைகளு

மாகிய உபதர்மங்களைத் தர்மமென்று சிலர் நினைத்தார்கள். அவர்கள் ஜைனர்களும், பௌத்தர்களுமேயாவர்.

26–38 விசேஷ கீர்த்திமானாகிய பிருதுவானவர் அதனையறிந்து இந்திரனிடத்தில் கோபங் கொண்டு வில்லில் பாணத்தை ஸந்தானஞ் செய்தார். அப்பொழுது ரித்விக்குகள், இந்திரனைக் கொல்ல முயற்சித்தவரும், பார்க்க முடியாதவரும், மிகுந்த பராக்கிரமமுள்ளவருமான அரசனை நோக்கி, 'மிகுந்த புத்திசாலியாகிய ஓ மஹாராஜ! யாகஞ் செய்வதாக ஸங்கல்பஞ் செய்து கொண்டிருக்கும் நீர் விஹிதமான பசுவதத்தை விட வேறு வதஞ் செய்வது உசிதமல்ல. உம்முடைய யாகத்தைக் கெடுக்க யத்தனித்தவனும், உமது கீர்த்தியால் மழுங்கிய காந்தியுள்ளவனுமான இந்திரனை நாங்கள் சுக்ல யஜுர்வேத மந்திரங்களால் அழைத்து அவரை அக்கினியில் ஹோமஞ் செய்கிறோம். நீர் ஒன்றும் செய்ய வேண்டாம், என்று தடுத்தார்கள். ஓ விதுரரே பின்னுமவர்கள் ஸ்ருக்கைக் கையில் வைத்துக் கொண்டு ஹோமஞ் செய்தார்கள். அப்பொழுது ப்ரஹ்மதேவர் அவ்விடம் வந்து ரித்விக்குகளை நோக்கி, "ஓ ப்ரஹ்மணர்களே! யக்ஞத்தால் ஆராதிக்கப்படும் தேவர்கள் இந்திரனுடைய ஸ்வபாவமாகையால் அந்த இந்திரனைக் கொல்வது உசிதமல்ல. மேலும், இந்த யாகத்தைக் கெடுக்க விரும்பிய இந்திரனால் தர்ம மார்க்கத்திற்கு விருத்தமான பாஷண்ட மார்க்கம் உண்டு பண்ணப்பட்டது. இந்திரன் பலசாலியாகையால் அவருடன் விரோதிக்கக் கூடாதென்று கருத்து.) பிருது சக்கரவர்த்தி தொண்ணூற்று ஒன்பது யாகங்களுள்ளவராக இருக்கட்டும், நூறாவது யாகம்

பூர்த்தி யாகாதிருந்தாலும் இந்திரனை விடப் பிருது கீர்த்தியுள்ளவராக இருப்பார் என்று சொல்லிப் பிருதுவை நோக்கி, 'நீர் மோக்ஷ தர்மத்தை அறிந்தவர்: இந்திரனிடம் நீர் கோபங்கொள்வது உசிதமல்ல. இதுவரையில் உம்மால் நன்றாக அனுஷ்டிக்கப்பட்ட யாகங்கள் போதும். உமக்கு க்ஷேமமுண்டாகும். நீரும், இந்திரனும் உத்தமச்லோகராகிய பகவானுடைய அம்சம்; யாகத்திற்கு விக்கினம் நேர்ந்ததைப் பற்றி யோசிக்க வேண்டாம். ஓ மஹாபாக்ய முள்ளவரே! என்னுடைய வார்த்தையைச் சிரத்தையுடன் கேளும். தெய்வவிருத்தமான கார்யம் சௌகரியத்தாற் செய்ய முடியாததே யாகும். மனதில் கோபத்திற்கு இடங் கொடுத்தால் மோஹமும் உண்டாகுமே யல்லாமல் சாந்தி உண்டாகிறதில்லை. ஆனதால் இந்த யாகத்தை நிறுத்திவிடும். இதனால் தேவர்களுக்கு ஆக்ரஹம் உண்டாகிறது. அதனால் தர்மவிரோதமான பாஷண்ட மார்க்கங்கள் உண்டாயிருக்கின்றன. உம்முடைய யாகக் குதிரையை அபகரித்தவராகிய இந்திரனால் உண்டுபண்ணப்பட்டவைகளும், மனோஹரங்களுமான பாஷண்ட மார்க்கத்தில் ஜகத் ஆசைப்படுகிறது. பாரும், மேலும், வேனனுடைய அபசாரத்தால் ஒளிந்து போன சாஸ்திர சம்மதமான தர்மத்தைக் காப்பாற்றுகிறத

ற்காகவே நீர் பூமியில் அவதரித்த விஷ்ணுவின் கலையாக இருக்கிறீர். அப்படிப்பட்ட நீர் இந்த ஜகத்தின் உற்பத்தியை யோசித்து ப்ரஜாபதிகளுடைய சங்கல்பத்தை நிறைவேற்றும். மிகவும் பயங்கரமான பாஷண்ட மார்க்கமே இந்திரனுடைய மாயை, அது உபதர்மங்களுக்கு மாதாவாக இருக்கிறது. அதனை உலகத்தில் பரவாமல் தடுக்க வேண்டும்" என்று ஆக்ஞாபித்தார்.

39–42 இப்படி லோகக் குருவாகிய ப்ரஹ்மதேவரால் ஆக்ஞாபிக்கப்பட்ட அரசன் மஹேந்திரனிடம் விரோதத்தை விட்டு அவரிடம் சிநேஹித்தார். பின்பு யாகத்தை நிறுத்தி அவபிருத ஸ்நானஞ் செய்தார். அப்பொழுது அவருடைய யாகத்தில் பூஜிக்கப்பட்ட தேவர்கள் அவருக்கு வரம் கொடுத்தார்கள். ப்ராஹ்மணர்களுடைய வாக்கானது பொய்யாகாதானதால் ப்ராஹ்மணர்கள் அரசனிடம் தக்ஷிணையைப் பெற்று சந்தோஷமடைந்து அவரை நோக்கி, "ஓ மிகுந்த பராக்ரமுள்ளவரே! உம்முடைய யாகத்திற்காக வந்த பிதிருக்கள், தேவரிஷிகள், மனிதர்கள் ஆகிய எல்லாரும் உம்மால் தானத்தாலும், மானத்தாலும் பூஜிக்கப் பட்டார்கள்" என்று சொல்லி அரசர்களுக்குள் முந்தியவராகிய அவருக்கு ஆசீர்வாதஞ் செய்தார்கள்.

பகவான் பிருதுவை அனுக்கிரஹித்தது

1–16. பின்பு ஸ்ரீ மஹாவிஷ்ணு இந்திரனுடன் பிருதுவின் யக்ஞத்தால் நன்றாக ஆராதிக்கப்பட்டு அந்த அரசனை நோக்கி, "உம்முடைய அச்வமேதத்திற்கு விக்னஞ் செய்பவர் இவர்தான். உம்மை ஸம்ஹாரம் செய்வதற்காக வந்திருக்கிறார். இவருடைய குற்றத்தை மன்னிக்க வேண்டும். ஓ மஹாராஜ! மனிதர்களுக்குள் சிறந்தவர்களும், புத்திசாலிகளுமாகிய ஸாதுக்கள் பிராணிகளுக்குத் துரோகம் செய்கிறதில்லை. உண்மையில் சரீரம் ஆத்மாவல்ல. (ஒருவருக்கொருவர் துரோகம் செய்தாலும் சரீரம் ஆத்மா வில்லாததானால் துரோகம் செய்ததாக ஆகிறதில்லையென்று கருத்து.) உம்மைப்போன்ற புருஷர்களும் தேவ மாயையால் மோஹிப்பார்களேயானால் பெரியோர்களைச் ஸேவித்தது வியர்த்தமாக ஆகிறது. ஆனதால் வித்வானாக இருப்பவன், "அவித்தையாலும், கர்மத்தாலும் சரீரம் ஏற்பட்டிருக்கிறது" என்று தெரிந்துகொண்டு அதனிடத்தில் அபிமானம் வைக்கமாட்டான். சரீரத்தில் அபிமானத்தை யொழித்தவன் சரீரத்தால் உண்டு பண்ணப்பட்ட வீடு, குழந்தைகள், பணம் ஆகிய இவைகளில் மமதையை (என்னுடையதென்பதை) அடைவானா? இந்த ஆத்மாசரீரம் முதலியவைகளை விட வேறானது. ஏனென்றால் ஆத்மா ஒருவர். (சரீரம் பால்யம் முதலிய அவஸ்தைகளால் அநேகம்.) ஆத்மா சுத்தர். (சரீரம் அசுத்தமானது) ஆத்மா தாமாகப் பிரகாசிப்பவர். (சரீரம் ஜடம்) ஆத்மா குணங்களற்றவர். (சரீரம் குணமுள்ளது.) ஆத்மா

எங்குமிருப்பவர். (சரீரம் அளவிடங்கியது.) ஆத்மா மறைக்கப்படாதவர் (சரீரம், கிருஹம் முதலியவை களால் மறைக்கப்பட்டது.) ஆத்மா ஸாக்ஷியாக இருப்பவர் (சரீரம் பார்க்கப்படும் வஸ்து.) ஆத்மாவிற்கு ஆத்மா இல்லை. (சரீரம் ஆத்மா உள்ளது.)

எந்தப் புருஷன் தன்னிடத்தில் இருக்கும் ஆத்மாவைத் தெரிந்துகொள்கிறானோ அவன் தேஹத்திலிருப்பவனானாலும் பிருதிவியின் குணங்களில் ஸம்பந்தப படுகிறதில்லை. ஏனென்றால் அவன் ப்ரஹ்மமாகிய என்னிடத்திலிருப்பவன்., எந்தப் புருஷன் காமனை இல்லாதவனாகிச் சிரத்தையுட ன் சுதர்மத்தை அனுஷ்டித்து என்னை உபாஸிக்கிறானோ, அவனுடைய மனம் காலக்கிரமத்தில் தெளியும் மனம் தெளிந்துடின் குணஸம்பந்தத்தை விட்டுச் சாந்தியை அடைகிறான்: அதுவே எனக்கு ஸமமான நிலைமை, அதுவே கைவல்யம். அதுவே ப்ரஹ்மாவஸ்தை. எந்தப் புருஷன் ஆத்மா உதாஸீனரென்று தேஹம், ஞானேந்திரியங்கள்; கர்மேந்திரியங்கள் மனது ஆகிய இவைகளுக்கு அதிபதி யென்றும். கூடஸ்தரென்றும் தெரிந்து கொள்கிறானோ, அவன் மோக்ஷத்தை அடைகிறான். திரவ்யம், கிரியை, காரகம், சிதாபாஸம் ஆகிய இவைகளின் ஸ்வரூபமும், வெவ்வேறு அடையாளமுள்ளதுமாகிய தேகத்திற்கு ஸம்ஸாரமே யொழிய ஆத்மாவிற்கில்லை. ஆனதால் என்னிடத் திலேயே மனத்தச் செலுத்திய வித்வான்கள் ஆபத்து வந்தாலும், ஸம்பத்து வந்தாலும் அவைகளில் துக்கத்தையாவது சந்தோஷத்தையாவது அடைகிற தில்லை: நீர்வித்வானாகையால் சுகத்திலும், துக்கத்தி லும், உத்தமர்களிடத்திலும், சமபுத்தியுள்ளவராகி

இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கி என்னால் ஏற்படுத்தப்பட்ட மந்திரி முதலியவர்களுடன் ஸகல லோகத்தையும் காப்பாற்றும். அரசனுக்குப் பிரஜை களை ஸம்ரக்ஷிப்பதே முக்கிய தர்மம். பிரஜைகளால் செய்யப்படும் புண்ணியத்தில் ஆறிலொருபாகம் அரசனை அடைகிறது. அதனால் அரசன் பரலோகத்தில் சுகத்தை அடைகிறான். எந்த அரசன் பிரஜைகளிடம் ஆறிலொரு பாகம் வரியைப் பெற்றுக் கொண்டு அவர்களைக் காப்பாற்றவில்லையோ, அவன் பாவத்தை அடைகிறான். இப்படி ப்ராஹ்மணர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டதும், பரம்பரையாக வந்ததுமான தர்மத்தை முக்கியமாக அனுஷ்டித்தும், அர்த்த கர்மங்களில் அதிக ஆசைப்படாமலும் லோகத்தைக் காப்பாற்றும். ஜனங்கள் உம்மிடத்தில் அனுராகத்தை அடைவார்கள். கொஞ்ச காலத்தில் உம்முடைய வீட்டிற்குச் சில ஸித்தர்கள் வருவார்கள். அவர்களை தரிசிக்கலாம். ஸம புத்தியுள்ளவர்ககளிடத்தில் வசிக்கும் என்னை யாகங்களாலும், தபஸினாலும், யோகங்களாலும் இலகுவாக அடைய முடியாது. அப்போர்ப்பட்ட நான் உம்முடைய குணங்களாலும், ஸ்வபாவத்தாலும் கட்டப்பட்டிருக்கிறேன். ஆனதால் இஷ்டமானவரத்தை என்னிடம் பெற்றுக்கொள்ளும்" என்று அனுக்ரஹித்தார்.

17–31. லோகத்தை ஜயித்தவராகிய அந்தப் பிருது சக்ரவர்த்தியானவர் பகவானுடைய இம்மாதிரியான ஆக்ஞையைச் சிரஸால் வகித்தார். அப்பொழுது மஹேந்திரன் பிரீதியுடன் பிருதுவின் பாதங்களில் வணங்கினார். தாம் செய்த கார்யத்தை நினைத்து வெட்கமடைந்திருக்கும் அவரைப் பிருது சக்கரவர்த்தி

பிரீதியுடன் தழுவி, அவரிடமிருந்து விரோதத்தை விட்டார். ஸகல ஜகத்ருடியாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணு தம்முடைய லோகஞ் செல்ல வேண்டியவரானாலும், பிருகு சக்கரவத்தியால் மிகவும் பூஜிக்கப்பட்டு, அவருடைய விசேஷ பக்தியால் சந்தோஷமடைந்து, தாமரை மலர் போன்ற கண்களால் பிருதுவை அனுக் கிரஹித்து அவ்விடம் கொஞ்சநேரம் தாமதித்தார். அரசர்களுக்குள் முந்தியவராகிய அந்த பிருதுவானவர் அப்படிப்பட்ட பகவானைக் தரிசித்துக் கைகூப்பி ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி, அதனால் கண்டமடைத்துப் பேச முடியாதவராகி மனத்தில் பகவானைத் தியானித்துக் கொண்டிருந்தார். இப்படி கொஞ்ச நேரம் சென்றபின் பிருதுவானவர் கண்களை துடைத்துக்கொண்டு கண்களுக்கு எதிரிலிருப்பவரும், பூமியின் மீது காலை ஊன்றிக் கொண்டவருமான பகவானை நோக்கி, "ஓ கைவல்யத்திற்கு அதிபதியே, பிரபுவே. வரங்களைக் கொடுப்பவரே! அஹங்கார ஸ்வபாவமுள்ள ப்ரஹ்மதேவர் முதலியவர்களுக்கும் அதிபதியான உம்மிடத்திலிருந்து நாரகிகளான பிராணிகளுக்கும் கிடைக்கக்கூடிய வரத்தை வித்வான் அபேக்ஷிப்பானா? ஆனதால் எனக்கு வரத்தில அபேக்ஷையில்லை மகான்களுடைய முகமாகப் பெருகி வரும் உம்முடைய பாதாரவிந்தத்தின் மதுவானது கைவல்யத்திலும் கிடைப்பது அரிதாகையால் அந்தக் கைவல்யமும் எனக்கு வேண்டாம். உம்முடைய கதையைக் கேட்பதற்கு அநேக காதுகளை எனக்கு கொடும் இதுவே எனக்கு வேண்டிய வரம்.

ஓ உத்தமசுலோக! நல்வினையைக் கொடுக்கும்

பெயருள்ளவரே! உம்முடைய பாதாரவிந்தத்தின் மதுவானது (உம்முடைய சரிதமானது) மஹான்களால் உபதேசிக்கப்பட்டால் தத்வ மார்க்கத்தை மறந்தவர் களான அற்ப யோகிகளுக்கும் திவ்ய ஞானத்தைக் கொடுக்கும். ஆனதால் மற்ற வரங்களால் பயனென்ன? (பக்தியினாலேயே மோக்ஷங் கிடைக்குமென்று தாத்பர்யம்.) ஓ மங்களகரமான கீர்த்தியுள்ளவரே! பெரியோர்கள் முகமாக ஒரு தடவையாவது தெய்வச் செயலாகக் புண்யகரமான உம்முடைய சரிதத்தை கேட்டவன் குணத்தையறியும் சுபாவமுள்ளவனானால் அதில் ஆசைப்படாமலிருப்பானா? அப்படி ஆஸக்தி அடையாமலிருந்தால் அவன் பசுவிற்கு ஒப்பானவனா கிறான். லக்ஷ்மீதேவியானவள் ஸகல புருஷார்த்தங்களை அடையவிரும்பி அந்தப் பக்தியே தனக்கு வேண்டுமென்று கேட்டுக் கொண்டாள். ஸ்ரீதேவிபோல் நானும் ஸகல புருஷர்களுக்குள் சிறந்தவரும், ஸகல குணங்களுக்கு இருப்பிடமுமான உம்மை மிகுந்த ஆசையுடன் பூஜிக்கிறேன். ஒரே விஷயத்திற்காக முயற்சிப்பவர்களுமான எங்களிருவர்களுக்கும் கலகம் உண்டாகாமலிருக்குமா? ஓ ஜகதீச! நாங்கள் ஒரே காரியத்திற்காக முயன்றவர்களாகையால் லோக மாதாவாகிய லக்ஷ்மீதேவியுடன் எனக்கு விரோதம் உண்டானாலும் உமக்கு என்னிடத்தில் தான் பிரியமிருக்கும். நீர் தீனர்களிடத்தில் பிரீதி செய்யும் ஸ்வபாவமுள்ளவர்; மேலும் தம்முடைய மஹிமையால் திருப்தி யடைந்தவராகிய உமக்கு ஸ்ரீ தேவியால் என்ன பிரயோஜனம்? ஸாதுக்கள் ஞானம் வந்த பிறகும் மாயாகாரியத்தில் ஸம்பந்தப்படாதவரான உம்மையே தியானிக்கிறார்கள். ஓ பகவான்! அவர்களுக்கு உம்முடைய பாதங்களை ஸ்மரிப்பதைவிட வேறு

பயனிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மேலும் "இஷ்டமானவரத்தை கேட்கலாம்" என்று உம்மால் சொல்லப்பட்ட வார்த்தை என்னை ஏமாற்றுவதற்காகச் சொல்லப்பட்டதென்று நினைக்கிறேன். உம்முடைய வார்த்தையால் மோஹித்தே ஜனங்கள் கர்மத்தை செய்கிறார்கள். ஆனதால் ஓ ஈச! உம்முடைய மாயையால் பரமாத்ம ஞான மில்லாமலிருக்கும் ஜனத்தைக் காப்பாற்ற வேண்டும். தகப்பன் புத்திரனுக்கு அனுகூலத்தைச் செய்வதுபோல நீர் எனக்கு இதமானதைக் செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

32–40. அதனைக்கேட்ட பகவான் அரசனை நோக்கி, "இம்மாதிரியான எண்ணம் உண்டானது தெய்வாதீனமேயாம். என்னிடத்தில் பக்தி செய்வதால் என்னுடைய மாயாபந்தம் நிவர்த்தியாகும்; நீர் கேட்டுக் கொண்டபடி என்னிடத்தில் உமக்கு பக்தி உண்டாகட்டும். என்னுடைய ஆக்ஞையின் படி நடப்பவனுக்கு ஸகல மங்களமும் உண்டாகும். ஆனதால் என் உத்தரவின்படி நீர் நடக்கவேண்டும் என்னிடத்தில் ஏகாந்த பக்திசெய்பவர்கள் ஸ்வர்க்கம், மோக்ஷம், நரகம் ஆகிய இவைகளை ஸமமாகப் பார்க்கிறார்கள். நல்ல நிச்சயஞ் செய்து கொண்மூர் என்னுடைய வார்த்தையில் சிரத்தை வைத்து இந்திரனிடமிருந்து கோபத்தை நீர் விட்டபடியால் உம்மிடத்தில் நான் ஸந்தோஷமடைந்தேன். கோபத்தை யடக்குவது மிகவும் கஷ்டமான காரியமானாலும், நீர் கோபத்தை ஜயித்தபடியால் என்னை பூஜித்ததாக ஆயிற்று" என்று பிருது சக்ரவர்த்தியின் வார்த்தையைப் புகழ்ந்து, அரசரால் திரும்பவும் பூஜிக்கப்பட்டு அவரை அனுக்கிரஹித்தார். சக்ரவர்த்தியினுடைய

யாகத்திற்காக வந்தவர்களான தேவர்கள், மஹர்ஷிகள், பிதிருக்கள், கந்தர்வர்கள், ஸித்தர்கள், சாரணர்கள், பன்னகர்கள், கின்னரர்கள், அப்ஸரஸுக்கள் முதலிய தேவர்கள், ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் பூதங்கள் ஆகிய இவர்களெல்லாரையும் அரசர் ஸ்ரீ மஹாவிஷ்ணுவாகப் பாவித்து வாக்கினாலும் மனத்திலும், அஞ்சலியாலும், பக்தியாலும் பூஜித்தார். அவர்களும் மிகுந்த சந்தோஷத்துடன் தங்கள் தங்கள் இருப்பிடஞ் சென்றார்கள். பின்பு அரசரும் அவருடைய உபாத்தியாயரும் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது அவர்களுடைய மனத்தை அபஹரித்துக் கொண்டு பகவானே தம்முடைய லோகஞ் சென்றார். பிருது சக்ரவர்த்தியும் தமக்குத் தரிசனங் கொடுத்து மறைந்தவரும் தேவர்களுக்குத் தேவருமான வாஸுதேவருக்கு நமஸ்காரஞ் செய்து தம்முடைய நகரஞ் சென்றான்.

நோட்டு

பூமியின் மீது: தேவர்கள் பூமியின் மீது நிற்பது வழக்கமில்லை. ஆனாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் பிருதுவினிடத்தில் மிகுந்த சந்தோஷமுள்ளவராக இருந்தபடியால் தம்முடைய ஸ்வரூபத்தை மறந்து பூமியில் நின்றார். மேலும் அவர் சந்தோஷத்தால் பரவசராக இருந்தபடியால் பூமியில் விழாமலிருப் பதற்காகக் கருடனுடைய தோளைப் பிடித்துக் கொண்டார். பகவான் பக்தர்களுக்கு சுவாதீனரென்று கருத்து — ஸ்ரீ த., வீர.

பிருது ராஜ்யபாலனஞ் செய்தது

1–7 அரசன் நகரத்திற்கு வருவதற்கு முன்னமே ஜனங்கள் பட்டணத்தை அலங்கரித்தார்கள். எப்படியெனில் முத்துக்களாலும், புஷ்பங்களாலும், மாலைகளாலும், பட்டுகளாலும், சுவர்ண தோரணங்களாலும், அந்தப் பட்டணமானது நாலு பக்கங்களிலும் அலங்கரிக்கப்பட்டது. மேலும் மிக்க வாஸனையுள்ள தூபங்களால் வாஸனை ஏற்றப்பட்டு இருந்தது. வீதிகளிலும், நாற்சந்திகளிலும் சந்தனக் குழம்பு, அகில் குழம்பு இவைகளுள்ள ஜலம் தெளிக்கப்பட்டிருந்தது. புஷ்பங்கள், அட்சதங்கள், பழங்கள், பச்சை நிறமுள்ள திரவியங்கள், நெற்பொரிகள், தீபங்கள் ஆகிய இவைகளால் பூஜிக்கப்பட்டிருந்தன. வாசற்படிகளில் வாழைகளும், பாக்குக் கன்றுகளும் கட்டப்பட்டிருந்தன. மாவிலை தோரணங்கள் எங்கும் கட்டப்பட்டிருந்தன. பின்னும் நகரவாஸிகள் தீபங்கள், காணிக்கைகள், மங்கள திரவியங்கள் ஆகிய இவைகளை எடுத்துக்கொண்டு அரசனை எதிர்கொண்டு அழைத்தார்கள். அழகான குண்டலங்களால் பிரகாசிக்கும் கன்னிகைகளும் அரசனுக்கெதிரே சென்றார்கள்.

இப்படிப் பிரஜைகளால் உபசரிக்கப்பட்டு, சங்கம் துந்துபி முதலிய வாத்திய கோஷத்துடனும், ரித்விக்குகளுடைய ஸ்வஸ்திவாசன சப்தத்துடனும் அரசன் அரண்மனைக்குச் சென்றார். எல்லாராலும் துதிக்கப்பட்டும் அரசன் கர்வமடையவில்லை.

பட்டணத்திய ஜனங்களையும், தேசத்திய ஜனங்களை யும், அவரவர்களுக்குத் தக்கபடி பிரியத்துடன் உபசரித்தார். தோஷமற்ற சரிதமுள்ளவரும் மஹான் களுக்குள் சிறந்தவருமான அந்தச் சக்கரவர்த்தி யானவர் மேலான அனேக காரியங்களைச் செய்து; தம்முடைய கீர்த்தியை உலகத்தில் பரவச் செய்து பூமியைப் பரிபாலனஞ் செய்து பரமபதம் அடைந்தார்.

8. "ஓ சௌனக! தோஷமற்ற ஸகல குணங்களால் நிறைந்ததும் பெரியோர்களால் பூஜிக்கப்பட்டதுமான ஆதிராஜனுடைய கீர்த்தியை மேற்கண்டபடி வர்ணிக்கும் மைத்திரேயரை நோக்கிப் பாகவதர்களுக்குள் சிறந்தவரான விதுரர் பின்வருமாறு கேட்கலானார்" என்று ஸூதர் சொன்னார்.

9–10 "ஓ மைத்திரேயரே! பிராம்மணர்களால் பட்டாபிஷேகஞ் செய்யப்பட்ட அந்தப் பிருது சக்கரவர்த்தி தேவர்களால் அடையக்கூடிய கௌர வத்தை அடைந்து, ஸ்ரீமகாவிஷ்ணுவின் அம்சமுள்ள வராகிப் பூமியினிடமிருந்து சகலவஸ்துக்களைக் கறந்தாரல்லவா? அந்த ஆதிராஜருடைய விக்கிர மத்தால் அனுபவிக்கப்பட்ட காமத்தையே பிந்திய ஜனங்களும் லோக பாலகர்களும் மற்ற அரசர்களும் இப்பொழுதும் உபஜீவித்திறார்கள். அவருடைய கீர்த்தியை வித்வானாகிய எவன்தான் கேட்க விரும்ப மாட்டான்? ஆனதால் சுத்தமாகிய அவருடைய சரிதத்தைச் சொல்லும்" என்று விதுரர் கேட்டார்.

11–15 அதனைக் கேட்ட மைத்திரேயர் விதுரரை

நோக்கி, "கங்கா நதிக்கும் யமுனா நதிக்கும் மத்தியிலுள்ள க்ஷேத்திரத்தில் வசித்துக் கொண்டு, புண்ணியத்தைக் குறைக்க விரும்பி பிராரப்த கர்மத்தால் கிடைத்த போகங்களை அனுபவித்தார். மேலும் அவர் ஏழு துவீபங்களுக்கும் தாமே அரசராக இருந்தார். அவருடைய ஆக்ஞையானது பிராம்மணர்கள் பகவத் பக்தர்கள் ஆகிய இவர்களைத் தவிர மற்றவர்களிடம் தடையற்றிருந்தது. ஒரு காலத்தில் அந்த அரசன் மகாசத்ரத்தில் தீக்ஷை செய்துகொண்டார். அதில் ப்ரஹ்மரிஷிகளும், தேவரிஷிகளும், தேவர்களும் கூடியிருந்தார்கள். அந்த ஸதஸ்ஸில் அரசரால் தக்கபடி மரியாதை செய்யப்பட்ட பெரியோர்களெல்லோரும் உட்கார்ந்திருக்கும்பொழுது நக்ஷத்திரங்களின் நடுவிலிருந்து சந்திரன் எழுந்திருந்தாற்போல் அரசர் எழுந்திருந்தார். அவர் உயரமான சரீரமுள்ளவர்; பருத்தவைகளும், நீண்டவைகளுமான கைகளுள்ளவர்; பொன்னிற முள்ளவர்; செந்தாமரை போன்ற கண்களுள்ளவர். அழகான மூக்குள்ளவர். பிரஸன்ன முகமுள்ளவர். பருத்த தோள்களுள்ளவர். அழகான பற்களுள்வர். ரமணீயமான சிரிப்புள்ளவர். மூன்று மடிப்புள்ளதும் அரசு இலைபோன்ற வடிவமான வயிறுள்ளவர். சுழல் போன்ற கொப்பூழுள்ளவர், தேஜசுள்ளவர், சுவர்ணம் போல் பிரகாசிக்கும் தொடைகளுள்ளவர், உயரமான முன்காலுள்ளவர் சூட்சுமங்களும், சுருட்டைகளும், கருமை நிறமுள்ளவைகளுமான தலை மயிருள்ளவர். சங்கம் போன்ற கழுத்துள்ளவர். விலையுயர்ந்ததான ஒரு பட்டையுடுத்திக் கொண்டும் மற்றொன்றை உத்தரீயமாகவும் தரித்திருப்பவர். விரதத்திற்காக ஆபரணங்களைத் தரித்துக் கொள்ளாமலும் இருந்தார். ஆனாலும் அவருடைய ஸகல அவயவங்களும் காந்தி

பொருந்தியவைகளாக இருந்தன. கிருஷ்ணாஜினத்தைத் தரித்திருந்தார். தர்ப்பத்தைக் கையில் வைத்துக் கொண்டிருந்தார். உசிதமான காரியங்களைச் செய்தவர் தாபத்தைப் போக்கக் கூடியவைகளும், அழகானவை களுமான கருவிழிகளுள்ள கண்களுள்ளவர். இப்படிப் பட்ட அந்தச் சக்கரவர்த்தி எல்லாரையும் ஒரு தடவை பார்த்து ஸதஸ்லிருப்பவர்கள் ஸந்தோஷப் படும்படி கேட்க மதுரமாயும் அழகான பதங்களுள்ளதும் பிரஸன்னமாகவும் சுத்தமாகவும் கம்பீரமான அர்த்தமுள்ளதுமான வார்த்தையைப் பின்வருமாறு அவசரமில்லாமல் சொல்ல ஆரம்பித்தார்.

சபைக்குரியவர்களும் இவ்விடம் வந்திருப்பவர் களுமான ஓ ஸாதுக்களே! கேட்க வேண்டும் தர்மத்தைத் தெரிந்து கொள்ள விரும்பியவர்கள். தங்களுடைய இஷ்டத்தை ஸாதுக்களிடம் தெரிவிக்க வேண்டும். ப்ரஹ்மதேவர் என்னை ஜனங்களுக்கு அரசனாக ஏற்படுத்தியிருக்கிறார். அதனால் நான் பிரஜைகளைக் காப்பாற்றுகிறேன். அவர்களுக்கு ஜீவனத்தை உண்டுபண்ணுகிறேன். அவரவர்களுடைய தர்மத்தை அனுஷ்டிக்கும்படி செய்கிறேன். பிரஜைகளை ரட்சிப்பதால் கர்மசாக்ஷியான பகவான் ஸந்தோஷ மடைகிறார். மேலும் ஜனங்களைத் தர்மம் தவறாமல் காப்பாற்றும் அரசனுக்கு எந்த லோகம் கிடைக்குமென்று வேதமறிந்தவர்கள் சொல்லுகிறார்களோ, காமங்களைக் கொடுக்கும் அந்த உலகங்கள் என்னால் அடையப் படும். மேலும் எந்த அரசன் பிரஜைகளை தர்மத்தை அனுஷ்டிக்கும்படி செய்யாமல் அவர்களிடம் வரியை மட்டில் பெற்றுக் கொள்கிறானோ, அவன் பிரஜைகள் செய்யும் பாபத்தை அடைகிறான், அவன் செய்த

புண்யமும் நசித்து விடுகிறது.

ஆனதால் ஓ பிரஜைகளே! அரசனாகிய நான் நல்ல உலகத்தை அடையும்பொருட்டு அசூயையில்லா தவர்களாகிப் பகவானிடத்தில் மனதைச் செலுத்தி, தங்கள் தங்கள் தர்மத்தை அனுஷ்டியுங்கள் (கர்மத்தைச் செய்து அதனைப் பகவானுக்கு அர்ப்பணம் செய்யுங்கள்). இப்படிச் செய்வீர்களானால் எனக்கு நல்லது செய்ததாக ஆகும். ஓ சுத்தர்களான பிதிருக்களே! தேவர்களே! மகரிஷிகளே! நீங்கள் நான் சொன்னதை அனுமோதிக்க வேண்டும். பரலோகத்தில் கிடைக்கும் பலனானது செய்கிறவனுக்கும் தூண்டுகிற வனுக்கும் அனுமோதிப்பவனுக்கும் சமமேயாகும் (கர்மத்தை அனுஷ்டிப்பது அவசியமானாலும் அதனைப் பகவதர்ப்பணம் செய்ய வேண்டியதில்லை என்று சொல்லும் சிலரை நோக்கிச் சொல்லுகிறார்) ஓ மிகவும் பூஜ்யர்களே! 'யக்ஞபதியென்ற பரமேசுவரர் ஒருவர் இருக்கிறார்' என்று சிலர் சொல்லுகிறார்கள். இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் காந்தியுள்ளவை களான போகபூமிகளும் சரீரங்களும் சில விடங்களில் காணப்படுகின்றன. பகவானில்லாதவரையில் மேற் காட்டிய பலவகையான ஜகத் இருக்க முடியாதென்று கருத்து.) மேலும் மனு; உத்தானபாதர், துருவர், ராஜசிரேஷ்டராகிய பிரியவிரதர், என்னுடைய பிதாவிற்குப் பிதாவாகிய அங்க மகாராஜன், ப்ரஹ்லாதர், பலி ஆகியவர்களும், இவர்கள் போன்ற மற்றவர்களும் ப்ரஹ்மதேவரும், பரமசிவனும், தங்களுடைய அனுபவத்தால் கர்மங்களைப் பலனைக் கொடுப்பவர் பகவான் ஒருவர் இருக்கிறார் என்று நிச்சயித்திருக் கிறார்கள். மிருத்யுவின் தௌஹித்ரரும், துக்கிக்கத்

தக்கவரும் தர்ம விஷயத்தில் மோகமடைந்தவருமான வேனன் முதலியவர்களைத் தவிர மற்றவர்கள் மேற் காட்டிய ஸாதுக்களின் அபிப்பிராயத்தை அனுசரித் தவர்களேயாம்.

தர்மம், அர்த்தம், காமம், ஸ்வர்க்கம், மோட்சம் இவைகள் ஒன்றோடொன்று சேர்ந்து ஏகரூபமாக இருப்பதால், மேற்காட்டியபடி வித்வான்கள் நினைக்கிறார்கள். (வித்வான்களுடைய அனுபவத்தால் பகவானிருப்பதாகத் தெரிவதால் கர்மத்தாலேயே ஜகத் உண்டாகிறதென்பது சரியல்ல) மேலும் எவருடைய பாதாரவிந்தத்திலிருந்து உண்டான கங்கா நதியானது எப்படிப் பாவங்களைப் போக்கடிக்கிறதோ, எவரைச் சேவிக்க வேண்டுமென்ற விருப்பமே ஒவ்வொரு நாளும் விருத்தியடைந்து துஷ்விகளுக்கு அனேக ஜன்மத்தின் பாபங்களையும் போக்கடிக்கிறதோ, எவருடைய பாதத்தை ஆசிரயித்த புருஷன் மனத்தில் ஸகலமலங் களையும் நிவர்த்தித்துக் கொண்டு விஷயங்களில் பற்றுதல் நீங்கினவனாகி மிகுந்த ஞானபலமுள்ள வனாகிய துக்கத்தைக் கொடுக்கும் ஸம்ஸாரத்தைத் திரும்பவும் அடையமாட்டானோ, அப்படிப்பட்ட பகவானை நீங்கள் மனத்தாலும், வாக்கினாலும், சரீரத்தாலும் தங்களுக்குரிய கர்மங்களாலும் பூஜிக்க வேண்டும். பின்னும் நீங்களெல்லோரும் கபடமில்லாத வர்களாக உங்களுடைய அதிகாரத்திற்குத் தக்கபடி அர்த்தஸித்தியை உத்தேசித்து இஷ்டத்தைக் கொடுக்கும் பகவானுடைய தாமரை மலர்போன்ற பாதங்களை உபாஸியுங்கள்.

இந்தப் பகவான் உண்மையில் சுத்தரும்,

விஞ்ஞானகனரும், நிர்க்குணமாயிருந்ததும் கர்ம மார்க்கத்தில் பலவகையான குணங்களுள்ள யக்ஞஸ்வரூபியாக இருக்கிறார். அந்தக் குணங்கள் எவையென்றால், யாகத்திற்கு வேண்டிய திரவியங்கள் (நெல் முதலியவை), வெண்மை முதலிய குணங்கள், நெல்லைக் குத்தி அரிசியாக்குவது முதலிய கிரியைகள், மந்திரங்கள், யாகத்தால் கிடைக்கும் உபகாரம், ஸங்கல்பம், பதார்த்தங்களுடைய சக்தி, ஜ்யோதிஷ்டோமம் முதலிய பெயர்கள் ஆகிய இவைகளேயாம். பிரதானம், காலம், வாஸனை, அதிருஷ்டம் ஆகிய இவைகளால் உண்டுபண்ணப்பட்ட சரீரத்தில் இந்தப் பிரபுவானவர் புத்தி ரூபமாக இருந்து ஆனந்த ரூபியாகவும் யாகத்தின் பலனாகவும் பிரகாசிக்கிறார். அக்கினியானது உண்மையில் ஒரே வகையேயானாலும் தனக்கு ஆசிரயமாகிய கட்டையின் நீளம் முதலியவை களைத் தான் அடைந்திருப்பதுபோல் தோன்றுகிற தல்லவா? (பகவானை உபாஸிக்கும்படி சொல்லி விட்டுப் பக்தி செய்து கொண்டிருப்பவர்களைப் பற்றி புகழ்கிறார்.) ஸகல தேவர்களுக்கும் அதிபதியும், அஞ்ஞானத்தைப் போக்கி ஞானத்தைக் கொடுப்ப வருமான ஸ்ரீமகாவிஷ்ணுவை என்னுடைய பிரஜை களுக்குள் எவர்கள் அவரவர்களுடைய தர்மத்தை அனுஷ்டிப்பதால் பூஜிக்கிறார்களோ, அவர்கள் என்னை அனுக்கிரகிப்பவர்களாக ஆகிறார்கள்.

மேலும் பொறுமை, தபஸ், வித்தை ஆகிய இவைகளால் மிகவும் பிரகாசிப்பவர்களும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பக்தர்களுமான ப்ராஹ்மணர்களிடத்தில் மிகுந்த ஐசுவரியத்தாலுண்டாகும் அரசர்களுடைய மதமானது ஒருபொழுதும் செல்ல வேண்டாம்.

சாசுவதராகிய புருஷோத்தமருக்கு ப்ராஹ்மணர்களே தெய்வம், பெரியோர்களுக்குள் சிறந்தவராகிய ஸ்ரீ மஹாவிஷ்ணு ப்ராஹ்மணர்களுடைய பாதாரவிந்தத்தை நமஸ்கரித்ததினாலேயே நாசமற்றவளான லக்ஷ்மீ தேவியையும் உலகத்தில் பரிசுத்தமான கீர்த்தியையும் அடைந்தார். ஸகல ஜனங்களுடைய ஹிருதய குகையில் வசிப்பவரும், தாமாகப் பிரகாசிப்பவரும், ப்ராஹ்மணர்களிடத்தில் பிரீதியுள்ளவருமான பகவான், ப்ராஹ்மணர்களைச் சேவிப்பவனிடத்திலேயே ஸந்தோஷப் படுகிறார். ஆனதுபற்றி, பகவத் தர்மத்தில் ஆசை யுள்வர்களும், வணக்க முள்ளவர்களுமான நீங்கள் ப்ராஹ்மணர்களையே சேவிக்க வேண்டும். பிராம்மணர் களை சேவிப்பதானாலேயே புருஷனுடைய சித்தமானது மிகவும் சுத்தமாகிறது. ப்ராஹ்மணர்களை விட தேவர்களுக்கு முகமாக அக்கினியானது வேறு இருக்கிறதா? அவர்களைச் சேவிப்பதினாலேயே ஆத்மஞானமும் மோக்ஷமும் கிடைக்கும். (எப்பொழுதும் ப்ராஹ்மணர்களை சேவிப்பதால் அக்னியில் யாகம் முதலியவைகள் செய்ய முடியாவிடினும் அதனால் கிடைக்கும் ஸகல பலனும் இதனாலேயே உண்டாகிறது என்பது கருத்து) ஸகல உபநிஷத்துக்களால் பிரக்ஞான ஸ்வரூபரென்று சொல்லப்படும் நித்யரான பரமாத்மா வானவர் தத்துவத்தை அறிந்தவர்களால் சிரத்தையுடன் ப்ராஹ்மணர்களுடைய முகத்தில் ஹோமம் பண்ணப் படும் ஹவிஸ்ஸை எப்படிப் புஜிக்கிறாரோ, அப்படி சைதன்யமில்லாத அக்கினியில் ஹோமம் பண்ணப் படும் ஹவிஸ்ஸைப் புசிக்கிறதில்லை. எந்தப் ப்ராஹ்ம மணர்கள் நித்யமும், சுத்தமானதும், புராதனமுமான வேதத்தைச் சிரத்தை, தபஸ், மங்களம், மௌனம், ஸம்யமம், சித்தத்தை ஒருவகையாகச் செலுத்துதல்

ஆகிய இவைகளால் தரித்து, அதன் அர்த்தத்தை விசாரிக்கிறார்களோ, எந்த (வேதத்தில் இந்த ஜகத்தானது கண்ணாடியில் பிரதிபிம்பம்போல் பிரகாசிக்கிறதோ. அப்படிப்பட்ட ப்ராஹ்மணர்களுடைய பாதாரவிந்தத்தில் ஒட்டிய தூளியை என் ஆயுளுள்ள வரையில் கிரீடத்தில் வகித்துக் கொண்டிருப்பேன்; எப்பொழுதும் அதனைத் தரிப்பதால் ஸகல பாவங்களும் நாசமடைகின்றன; ஸகல குணங்களும் பிரகாசிக்கின்றன, குணங்களுக்கு இருப்பிடமாயும், நல்ல சுபாவத்தையே தனமாக உடையவனும், நன்றியுள்ளவனும், சிரத்தையுள்ளவனுமான புருஷனை ஸகல ஸம்பத்துக்களும் அடைகின்றன. ஆனதால் ப்ராஹ்மணர்களுடைய கூட்டமும், பக்தர்களுடைய கூட்டமும், பசுக்களுடைய கூட்டமும் பகவானும், அவரைச் சேர்ந்தவர்களும் என்னிடத்தில் தயவு செய்யட்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

44–51 அதனைக் கேட்டுப் பிதிருக்களும், தேவர் களும், ப்ராஹ்மணர்களும், ஸாதுக்களும் ஸந்தோஷத் துடன் 'நல்லது நல்லது' என்று சொல்லி அரசனை கொண்டாடினார்கள். உலகத்தில் நல்ல புத்திரனால் தகப்பன் நல்ல உலகத்தை அடைகிறான்' என்று வேதத்தில் சொல்லியிருப்பதானது உண்மையானது. ப்ராஹ்மணர்களுடைய சாபத்தால் அடிக்கப்பட்ட வேனன் ஸத்புத்திரராகிய உம்மால் நரகத்திலிருந்து காப்பாற்றப்பட்டான். ஹிரண்யகசிபு என்னும் அசுரன் பகவானை நிந்தித்து, அதனால் நரகத்தை யடைய வேண்டியவனாக இருந்தும், புத்திரனாகிய பிரகலாத ருடைய மகிமையால் நல்ல கதியை அடைந்தான். 'வீரர்களுக்குள் சிறந்தவராகிய ஓ அரசனே! ஸகல

லோகங்களுக்கும் நாதனாகிய பகவானிடத்தில் உமக்கு இம்மாதிரியான பக்தி உண்டாகி இருப்பதால் வெகுகாலம் பூமியைப் பரிபாலனஞ் செய்து கொண்டு ஜீவித்திரும், மங்களகரரும், பரிசுத்தமுமான கீர்த்தி யுள்ள ஓ மகாராஜ்! நல்வினையைக் கொடுக்கும் கீர்த்தியுள்ளவரும், ப்ராஹ்மணர்களையே தெய்வமாகக் கொண்டவருமான பகவானுடைய கதையை நீர் சொல்லுவதால் அரசனாகிய உம்மை முகுந்தராகவே நாங்கள் நினைக்கிறோம். ஓ நாதா! நீர் பிரஜை களுக்குத் தர்மத்தை உபதேசிப்பதானது அதிக ஆச்சரியமில்லை. கருணையுள்ள மகான்களுக்குப் பிரஜைகளிடத்தில் கருணை வைப்பது இயல்பேயாம். கர்மமார்க்கத்தில் கஷ்டப்படுகிறவர்களும் ஆத்மஞான மற்றவர்களுமான எங்களுக்கு அஞ்ஞானத்தைக் கடக்கும் மார்க்கமானது உம்மால் இப்பொழுது உபதேசிக்கப்பட்டது. எந்தப் பகவான் ப்ராஹ்மண ஜாதியில் பிரவேசித்து க்ஷத்திரியனையும், க்ஷத்திரிய னிடத்தில் பிரவேசித்து ப்ராஹ்மணர்களையும், அவ்விரண்டிலும் பிரவேசித்து இந்த ஜகத்தையும் தம்முடைய தேஜஸ்ஸைக் கொண்டு காப்பாற்று கிறாரோ, அந்த பகவத் சுரூபமும், மிகுந்த ஸத்வகுண முள்ளவரும், மகாபுருஷருமான உமக்கு நமஸ்காரம்" என்று சொன்னார்கள்.

அத்தியாயம்–22

பிருதுவிற்கு ஸனத்குமாரர் ஞானத்தை உபதேசித்தது

1–16. மிகுந்த பராக்கிரமுள்ள பிருதுவை நோக்கி இம்மாதிரி ஜனங்கள் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது சூரியன் போன்ற காந்தியுள்ள நான்கு மஹரிஷிகள் அவ்விடம் வந்தார்கள். ஆகாயத்திலிருந்து இறங்குகிறவர்களும், சித்தேசுவர்களும், தம்முடைய தேஜஸ்ஸினால் லோகத்தைப் பரிசுத்தப்படுத்துகிறவர் களுமான ஸனத்குமாரர் முதலியவர்களை அரசரும் அவருடைய வேலைக்காரர்களும் தரிசித்தார்கள் அவர்களைக் கண்டவுடன் வெளியிற்சென்ற பிராணன் களை திரும்பவும் அடைய வேண்டுமென்ற எண்ணத் துடன், ஸுதஸ்யர்களுடனும், மந்திரி முதலியவர் களுடனும் பிருது சக்கரவர்த்தி எழுந்திருந்து எதிர்கொண்டழைத்தார். அது ஜீவன், கந்தம் முதலிய குணங்களைக்கண்டு அவைகளைக் கிரஹிக்க ஆசைப் பட்டுத் தயாரானது போல இருந்தது. அவர்களுடைய கௌரவத்தால் அரசன் அவர்களுக்கு வசப்பட்ட வராகித் தலைவணங்கி, சாஸ்திர முறைப்படி அர்க்கியம் முதலியவைகளைக் கொடுத்துப் பூசித்தார். பின்னுமவர் பெரியோர்களுடைய அனுஷ்டானத்தின் படி அந்த சித்தர்களுடைய பாதங்களை அலம்பி அந்த சுத்தமான தீர்த்ததைத் தலையில் புரோக்ஷித்து கொண்டார். இன்னுமவர் சுவர்ணமயமான ஆஸனத்தில் அவர்களை வீற்றிருக்கச் செய்தார். அப்பொழுது அவர்கள் தங்கள் தங்கள் வேதிகளில் பிரகாசிக்கும் அக்கினிபோலப் பிரகாசித்தார்கள்

அரசர் சிரத்தையுடன், இந்திரியங்களை அடக்கிக் கொண்டும், பரம சிவனுக்கும் முந்தி பிறந்தவர் களுமான அந்த சித்தர்களை நோக்கி, "ஓ ஸகல மங்களங்களுக்கும் இருப்பிடமான சித்தர்களே! உங்களுடைய தரிசனம் யோகிகளுக்கும் கிடைப்பதரிது. உலகம் முழுவதும் சஞ்சரிப்பவர்களானாலும் எவர் களை ஜனங்கள் எங்குமிருக்கும் ஆத்மாவைப் போலப் பார்க்கவில்லையோ, எவர்கள் ஆத்ம தரிசனத்திற்குக் காரணர்களாக இருக்கிறார்களோ, அப்படிப்பட்ட உங்களுடைய தரிசனம் எனக்கு கிடைத்தது ஆச்சரியம்! என்ன புண்ணியஞ் செய்தேன். எதனிடத்தில் ப்ராஹ்மணர்களும் ஸ்ரீ பரமசிவனும், மஹா விஷ்ணுவும், அவருடைய பக்தர்களும், சந்தோஷப்படுகிறார்களோ, அவனுக்கு இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் எதுதான் கிடைக்காது? எவர்களுடைய கிருஹத்திற்குப் பெரியோர்கள் சென்று தீர்த்தம், திருமணம், பூமி. யஜமானன், அவனுடைய வேலைக்காரர்கள் ஆகிய இவர்களை அங்கீகரிக்கிறார்களோ. அவர்கள் பணமில்லா தவர்களானாலும் மேலானவர்கள். எவர்களுடைய கிரகமானது பெரியோர்களுடைய பாத ஸ்பர்சத்தால் சுத்தமாகிறதில்லையோ, அந்த கிருஹங்கள் ஸம்பந்துக் களால் நிறைந்திருந்தாலும் ஸர்ப்பங்கள் வசிக்கும் மரங்களுக்கொப்பானவைகளேயாம். ஓ ப்ராஹ்மண சிரேஷ்டர்களே! நல்வரவா, மோஷத்தையடைய விரும்பி, பால்யத்திலேயே பெரியவைகளான விரதங்களைச் சிரத்தையுடன் அனுஷ்டிக்கிறீர்கள். இந்திரியங்களைத் திருப்தி செய்வதற்காகவே புருஷார்த்தங்களைத் தெரிந்து கொள்கிறவர்களும், வியஸனங்களுக்கும் இருப்பிடமான சம்சாரத்தில் தங்களுடைய கர்மங்களால் மூழ்கினவர்களுமான

எங்களுக்கு க்ஷேமம் கிடைக்குமா? (பிறரை க்ஷேமம் விசாரிக்க வேண்டுமேயன்றி தங்களுடைய க்ஷேமத்தைத் தாங்களே விசாரிப்பது உசிதமா எனறால் அடுத்த சுலோகத்தால் சமாதானஞ் சொல்லப்படுகிறது. ஆத்மாவினிடத்திலேயே ரமித்துக்கொண்டிருக்கும் உங்களுக்கு க்ஷேமம், அக்ஷேமம் என்ற பேதங்களில்லா லாமையால் நீங்கள் க்ஷேமமா என்று கேட்பது உசிதமல்ல. ஆனதால் தபஸ்விகளுக்கு மித்திரர்களான உங்களிடத்தில் மிகுந்த பிரீதியுடன் நான் கேட்கிறேன். "சம்சாரிகளான நாங்கள் எதனைச் செய்தால் க்ஷேமத்தை யடைவோம்." அதனைச் சொல்லவேண்டும் யோகிகளுக்கு ஆத்மாவும், ஆத்மாவைப் பிரகாசிக்கச் செய்பவருமான பகவான் பக்தர்களை அனுக்கிரஹிப் பதற்காகவே சித்தர் வேஷங்கொண்டு சஞ்சரிக்கிறார் என்றார்.

17–40. பிருது சக்ரவர்த்தியினுடைய கம்பீர அர்த்தமுள்ளதுமான நல்ல வார்த்தையைக் கேட்டு ஸனத் குமாரர் சிரித்துக்கொண்டு, அரசனை நோக்கி, "ஓ மஹாராஜ! நன்றாகக் கேட்டீர். நீர் ஸகல பிராணி களுக்கும் அனுகூலத்தை செய்யும் சுபாவமுள்ளவர். மிகவும் வித்வான்; சாதுக்களுடைய நடை இம்மாதிரி யானது. சாதுக்களுடைய சம்பாஷனையும் கேள்வியும் எல்லோருக்கும் சுகத்தை உண்டு பண்ணுகிறது. ஓ மஹாராஜ! மதுவென்னும் அசுரனைக் கொன்றவரான பகவானுடைய பாதாரவிந்தத்தில் நிரந்தரமான பக்தி உமக்கிருக்கிறது. அந்த பக்தியானது நிவர்த்திக்க முடியாத, அந்தகரணத்தின் மலத்தைப் போக்கடிக்கும் சாஸ்திரங்களை நன்றாக விசாரித்தார். ஆத்மாவைத் தவிர மற்ற விஷயங்களில் வைராக்கியம், நிர்குண

ப்ரஹ்மத்தினிடத்தில் பிரீதி வைப்பது ஆகிய இவ்விரண்டும் மனிதர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியதென்று நிச்சயமாக ஏற்படுகிறது. ப்ரஹ்மத்தினிடத்தில் பிரீதியுண்டாக வேண்டுமானால் சிரத்தையாலும் பகவத் தர்மத்தை அனுஷ்டிப்பதாலும். அத்யாத்ம விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற விருப்பத்தாலும் பகவானை உபாசிப்பதாலும், புண்ணியகரமான பகவத் கதையைக் கேட்பதாலும் பிரஹ்மத்தினிடம் நிரந்தரமான பிரீதி உண்டாகிறது. பணத்தாலேயே சந்தோஷப்படுகிறவர்கள் தாமஸர்கள். இந்திரியங்களையே திருப்தி செய்து அதனால் சந்தோஷப் படுகிறவர்கள் ராஜஸர்கள், அவர்களோடு சேராமலிருப்பதாலும், அவர்களுக்கிஷ்டமான அர்த்த காமங்களில் ஆசைப்படாமலிருப்பதாலும், நிர்ஜனமான இடத்தில் வசிக்க வேண்டுமென்ற விருப்பத்தாலும், பரமாத்மாவிடத்தில் பிரீதி உண்டாகிறது. அவைகளும் பகவானுடைய குணாமிருதத்தை பானம் பண்ணாத வரையில் (கதையைக் கேட்காவிடில்) உண்டாகாது. மேலும் பரமஹம்சர்களாகிய பெரியோர்களுடைய அனுஷ்டானத்தை அனுஸரிப்பதாலும். பிறரை ஹிம்ஸிக்காமலிருப்பதாலும். ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதமாகிய மேலான மதுவைப் பானம் பண்ணுவதாலும், இந்திரியங்களை அடக்குவதாலும், பலத்தை உத்தேசித்துக் கர்மாக்களைச் செய்யாமலிருப்பதாலும் சீதம், உஷ்ணம் இவைகளைச் சகித்திருப்பதாலும். ஸ்ரீ விஷ்ணுபக்தர்களுடைய செவிகளுக்கு அலங்காரமான பகவத் குணங்களை அடிக்கடி உச்சரிப்பதாலும் காரிய காரண ஸ்வரூபமும் குணங்களற்றதுமான ப்ரஹ்மத்தினிடத்தில் விருத்தியடையும் பக்தியாலும் விஷயங்களில் ஆசையை ஒழித்து பரமாத்மாவிடத்தில்

மிகுந்த பிரீதி உண்டாகிறது. எப்பொழுது பிரம்மத்தினிடத்தில் பிரீதியுண்டாகிறதோ அப்பொது தான் நல்ல ஆசாரியனை அடைவான்; அப்பொழுது ஞானம், வைராக்கியம் இவைகள் விருத்தியடைந்து அவைகளுடைய பலத்தால் புருஷன் அவித்யை, ராகம், துவேஷம் அபிநிவேசம் இவைகளுள்ளதும், ஜீவனை மறைக்கக் கூடியதுமான அஹங்கார தத்துவமான ஹிருதயத்தில் மறுபடி இவைகள் முளைக்காமலிருக்கும் படி, அக்கினியானது தனக்கு ஆசிரியமான கட்டையைப் போல், எரிக்கிறான், ஹிருதயமாகிற உபாதியானது எரிக்கப்பட்டால் புருஷனுக்குக் கர்த்துருத்வம் முதலிய குணங்கள் நிவர்த்தியாகின்றன. அப்பொழுது புருஷன் தனக்கு வெளியிலிருக்கும் வஸ்துக்களையும், உள்ளிருக்கும் சுக துக்காதிகளையும் பார்க்கிறதில்லை. ஏனென்றால் திருச்யம் (பார்க்கக்கூடிய). திருஷ்டா (பார்ப்பவன்) ஆகிய இவர்களுக்கு எது மறைவை உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறதோ அது நஷ்டமாய்ப் போய் விட்டபடியால் அவனுக்கு அதன் காரியமாகிய சுகதுக்கங்கள் தோன்றுகிறதில்லை. ஸ்வப்பனத்தில் தன்னை அரசனென்று ஆரோபித்துக்கொண்டு சைன்யம் முதலியவைகளைத் தான் பார்ப்பவனென்றும், அவைகள் தன்னால் பார்க்கக் கூடியவைகளென்றும் நினைத்த புருஷனுக்கு அந்த ஸ்வப்னாவஸ்தை நிவர்த்தியான பிறகு அந்த பேத ஞானம் நிவர்த்தியடைகிறதல்லவா? அதுவும் அந்தக் கரணமிருக்கும் காலமாகிய ஜாக்ரதவஸ்தையிலும் (விழித்துக் கொண்டிருக்கும் பொழுதும்), ஸ்வப்பனாவஸ்தையிலும் தன்னையும் (திருஷ்டாவையும் இந்திரிய விஷயத்தையும் (திருச்யத்தையும்), அவைகளின் சம்பந்தத்திற்குக்

காரணமாகிய அகங்காரத்தையும் புருஷன் பார்க்கிறான். சுஷுப்தியில் இம்மாதிரியான பேத ஞானமில்லை. லோகத்தில் பிம்பம். பிரதி பிம்பம் இவைகளின் பேதத்திற்குக் காரணமாகிய ஜலம் கண்ணாடி முதலிய உபாதி ஆகியவைபாலேயே பேத ஞான முண்டாகிறது. உபாதியாகிய ஜலம் முதலியவைகள் இல்லாவிடில் பேதஞானமுண்டாகிறதில்லை. ஆற்றில் கரையோரத்திலிருக்கும் நாணல் முதலியவை தங்களுடைய வேர்களால் மடுவில் இருக்கும் ஜலத்தை அபஹரிப்பது போல, விஷயங்களால் புருஷனுடைய இந்திரியங்கள் இழுக்கப்படுகின்றன. அவைகளால் மனது இழுக்கப்படுகிறது. அந்த மனமானது புத்தியினிடமிருந்து சோதனையே (விசாரிக்கும் ஸாமார்த்தியத்தை) போக்கடிக்கிறது. இது அவிவேகி களால் அறியப்படவில்லை. பின்பு முன் நடந்ததை நினைத்துக் கொள்வதாகிய ஸ்மிருதியானது கெட்டுப் போகிறது. பின்பு விவேகம் மாறிவிடுகிறது. அதனையே ஆத்மநாசமென கவிகள் சொல்லுகிறார்கள். எதனால் மற்ற விஷயங்கள் மிகவும் பிரியங்களாக ஆகின்றனவோ, தன்னுடைய எந்த அபசாரத் தாலேயே ஆத்ம நாசம் ஏற்படுகிறதோ இதைக்காட்டி லும் மேற்பட்ட கெடுதி உலகத்தில் ஒன்றுமில்லை. விஷயங்களையும், காமத்தையும் தியானம் பண்ணு வதாலும், ஆத்மநாசத்தைச் சம்பாதித்துக் கொண்ட தினாலும் ஞானம், விசேஷ ஞானம் இவைகளில்லாத வனாகி ஸ்தாவர ஜன்மத்தை அடைகிறான். மேலும் ஸம்ஸாரத்தைக் கடக்கவிரும்பியவன் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகிய இவைகளுக்கு எவைகளுடைய சேர்க்கை மிகவும் விக்கினமாக இருக்கிறதோ, அந்த உக்கிரமான சம்சாரத்தில் ஆசைப்படக்கூடாது.

மேற்காட்டிய நான்கு வகையான புருஷார்த்தங்களில் நான்காவதாகிய மோக்ஷமே முக்கியமானது என்று சொல்லப்படுகிறது. முந்திய மூன்று புருஷார்த்தங்களும் அநித்யமானவைகள்; காலத்தின் பயமுள்ளவைகள். ப்ரஹ்ம தேவர் முதலிய மேலானவர்களும் தாழ்ந்தவர் களான நம்மை போன்றவர்களும் குணங்களுடைய சம்பந்தத்தால் கிரமமாக உண்டானவர்கள், காலத்தால் கெடுக்கப்பட்ட இஷ்டத்தையுடைய அவர்களுக்கு முக்கியமான க்ஷேமமில்லை. ஓ மஹாராஜ! ஆனதால் தேக்ம், இந்திரியங்கள். பிராணன் புத்தி, அஹங்காரம் இவைகளால் மறைக்கப்பட்ட ஸ்தாவர ஜங்கம ஸ்வரூபிகளான பிராணிகளுடைய ஹிருதயத்தில் எவர் பிரகாசிக்கிறாரோ, க்ஷேத்ரக்ஞனாகிய ஜீவனை எவர் சிட்சிக்கிறாரோ எவர் ப்ரத்யக் ரூபியாக ப்ரகாசிக் கிறாரோ அவர் ஒருவரே இருக்கிறார், அவரைத் தவிர வேறு ஒருவர் இல்லையென்று தெரிந்துகொள்ளும். எவரிடத்தில் இந்த ஜகத்தானது காரியமாகவும் காரணமாகவும் மாயையாகப் புஷ்பமாலையில் ஸர்ப்பம் என்கிற புத்திபோல தோன்றுகிறதோ. விவேகத்தால் நிவர்த்தியாகிறதோ. அப்பேர்ப்பட்ட நித்திய முக்தரும் பரிசுத்தரும் ஏக ஸ்வரூபியும். கர்மவாஸனையற்றவரான பரமாத்மாவைச் சரணமடைகிறேன். விஷயங்களில் பற்றுதலில்லாத புத்தியுள்ளவர்களும், இந்திரியங்களை ஜயித்தவர்களும் ஸாதுக்களுமான யதிகள் எவருடைய தாமரை மலர் போன்ற பாதங்களுடைய விரல்களின் காந்தியைத் தியானஞ் செய்து அகங்காரத்தை போக் கடித்துக் கொள்ளுகிறார்களோ, எல்லாப் பிராணி களாலும் சரணமடையக் கூடிய அப்பேர்ப்பட்ட ஸ்ரீ வாஸு தேவரை உபாஸியும். ஸம்ஸாரமாகிய சமுத்திர மானது காமம் முதலிய ஆறுவகைக் குணங்களாகிய

முதலை, மகரம் இவைகளுள்ளதால். அதனைக் கடப்பது மிகவும் கஷ்டம், சிலர் அதைக் கடப்பதற்குத் தகுந்த ஸாதனங்களில்லாதவர்களாகவே யோகம் முதலிய கடினமான மார்க்கத்தாலும் அதைக் தாண்ட முயல் கிறார்கள். ஆகையால் நீர் பகவானுடைய பூஜிக்கத் தக்க பாதத்தைப் படகாக வைத்துக் கொண்டு தாண்ட முடியாத ஜலமுள்ள சமுத்திரத்தைச் சுகமாகத் தாண்டும்" என்று சொன்னார்.

41–47. அப்பொழுது அரசன் ப்ரஹ்மத்தை அறிந்தவரும் ப்ரஹ்ம தேவருடைய புத்திரருமான ஸனத் குமாரரால் ஆத்ம விஷயமாக உபதேசிக்கப்பட்டதைக் கேட்டு அவரைப் புகழ்ந்து. "ஓ ப்ராஹ்மணோத்தம பக்தர்களிடத்தில் தயவு பண்ணும். ஸ்ரீ மஹா விஷ்ணு வினால் முந்தியே எனக்கு அனுக்கிரஹம் செய்யப் பட்டிருக்கிறது. அதனை நிறைவேற்று வதற்காகவே நீங்கள் வந்து இருக்கிறீர்கள் என்னுடைய சரீரமும் இராஜ்யம் முதலியவைகளும் சாதுக்களுடையதேயாம். அவைகள் எனக்குச் சாதுக்களால் கொடுக்கப் பட்டவைகளே. அப்படியிருக்க எதனை நான் குரு தக்ஷிணையாகக் கொடுப்பேன்? ஆனாலும் என்னுடைய பிராணன், புத்திரர்கள், வீடுகள்! அதிலுள்ள சாமக்கிரிகள், இராஜ்யம், பலம், பூமி, பொக்கிஷம் இவைகள் உங்களுக்கு அதீனங்களே. மேலும் ஸேனாபத்யம், இராஜ்யம், ஸகல உலகங்களுக்கும் அதிபதியாக இருப்பது ஆகிய இவைகள் வேதம், சாஸ்திரம் இவைகளை படித்தவனுக்கே தகுதியானது உலகத்திலுள்ள சொத்து எல்லாம் ப்ராஹ்மணர்களு டையதே. ஆனதால் தனது சொத்தை ப்ராஹ்மணன் அனுபவிக்கிறான்.

பிறருக்குக் கொடுக்கிறான். க்ஷத்திரியன் முதலிய மற்றவர்கள் ப்ராஹ்மணர்களுடைய அனுக்ர ஹத்தால் அன்னத்தைப் புசிக்கிறார்கள் (இராஜ்யம் முதலியவை ப்ராஹ்மணர்களுக்கே சுவாதீனங்கள் என்று கருத்து) வேதங்களை அறிந்தவர்களான எவர்களால் ஆத்ம விஷயமாக நிச்சயமான மார்க்கம் எனக்கு உபதேசிக்கப்பட்டதோ பூரண கிருபையுள்ள அந்த சாதுக்களுக்கு அஞ்சல் செய்ததை விட வேறு எதனை நான் செய்வேன்? அவர்கள் தீனர்களை ஸம்ஸாரத் திலிருந்து உத்தாரணஞ் செய்வதாகிய காரியத்தால் ஸந்தோஷமடையட்டும் தனக்கு ஸ்வாதீனமான தனம் ஏராளமாக இருந்தாலும் அவைகளால் அவர்களுக்குப் பிரத்யுபகாரஞ் செய்யமுடியா" என்று புகழ்ந்தார்.

48–53. இப்படி பிருது சக்ரவர்த்தியால் பூஜிக்கப்பட்ட அந்த யோகேசர்கள் அரசனுடைய சுபாவத்தைப் பற்றி சந்தோஷித்து எல்லோரும் பார்த்திருக்கும் பொழுது ஆகாயத்தில் சென்றார்கள். மகான்களுக்குள் சிறந்தவரான பிருது சக்கரவர்த்தியும் மனத்தை ஒரு வகைப்படுத்தி அத்யாத்ம வித்தையை அப்யஸித்து ஆத்மாவையே தியானித்துக் கொண்டு தம்மைக் கிருதார்த்தராக நினைத்தார். காலத்திற்கும், தேசத்திற்கும், தம்முடைய பலத்திற்கும், பணத்திற்கும் தக்கபடி உசிதமான கர்மங்களை அனுஷ்டித்து அவைகளைப் ப்ரஹ்மார்ப்பணஞ் செய்தார் அவர்கள் கர்மங்களை அனுஷ்டித்தாலும் பலனில் ஆசைப்படாமல் வெகு ஜாக்ரதையுள்ளவராகித் தம்முடைய ஆத் மாவைக் கர்மசாக்ஷியாகவும், பிரகிருதி சம்பந்தமற்ற வருமாக நினைத்தார். இராஜ்யலக்ஷ்மீயுடன் கிருஹத் தில் அவர் வசித்திருந்தாலும், அகங்காரமற்றிருந்ததால்

சூரியன்போல இந்திரியவிஷயங்களில்ஆசைப்படாமலி ருந்தார். இப்படி பிருது சக்ரவர்த்தியானவர் அத்யாத்ம யோகத்தால் பலனை விரும்பாமல் கர்மங்களை அனுஷ்டித்துக் கொண்டு அர்ச்சிஷ் என்னும் தம்முடைய ஸ்திரீயினிடத்தில் விஜிதாச்வன், தூம்ர கேசன், ஹர்யச்வன், திரவிணன் விருகன் என்ற ஐந்து குமாரர்களை யுண்டு பண்ணினார். மேலும், அவர் ஸகல லோக பாலகர்களுடைய குணங்கள் யாவையும் உடையவராயிருந்தார் பின்னுமவர் பகவானையே தியானஞ் செய்துகொண்டு ஜகத்தை ஒவ்வொரு காலத்திலும் சம்ரக்ஷித்துக் கொண்டும், மனத்தாலும், வாக்கினாலும், சரீரத்தாலும், நற்குணங்களாலும் பிரஜைகளை சந்தோஷப்படுத்திக்கொண்டும், சோம ராஜன் போலராஜா வென்ற டெயரைத் தரித்தார். மேலுமவர் சூரியன் பூமியிலிருந்து எட்டு மாதம் ஜலத்தைக் கிரஹித்து மழைக் காலத்தில் விடுவது போல், ஜனங்களிடம் வரியைப்பெற்றுக் கொண்டு காலத்தில் அவர்களுக்கே அதனை உபயோகித்தார், அவருடைய ஆக்ஞை தடையற்றிருந்தது அவர் அக்னி போன்ற தேஜஸ்வியாக இருந்தபடியால் பிறரால் நெருங்குமுடியாதவராக இருந்தார். மகேந்திரன்போல் ஜயிக்கமுடியாதவராகவும் இருந்தார். பின்னுமவர் பொறுமையில் பூமிபோலவும், தியுலோகம் போல் ஜனங்களுக்கு இஷ்டத்தைக் கொடுப்பவராகவும், பர்ஜன்யன் போல் ஜனங்களுடைய இஷ்டத்தை வர்ஷிப்பவராகவும், சமுத்திரம் போல் காம்பீர்யமுள்ள வராகவும், யமன் போல் சிட்சிப்பவராகவும், மகேந்திரன்போல் ஐசுவரியமுள்ளவராகரும், குபேரன் போல் பொக்கிஷமுள்ளவராகவும், வருணன் போல் பணத்தைக் காப்பாற்றுகிறவராகவும் இருந்தார்.

மேலுமவர் மிகுந்த பலமுள்ளவராக இருப்பதால் ஸகல ஸ்வரூபியாகவும், வாயு போன்றவராகவும், மன்மதன் போல் அழகுள்ளவராகவும், ஸிம்மம்போல மனஸ் வியாகவும், மனுப்போல பிரஜைகளிடத்தில் பிரீதியுள்ள வராகவும் பிரம்மதேவர் போல் பிரபுவாகவும், வேதங் களைக் சொல்வதில் பிரகஸ்பதிபோலவும், ஸ்ரீ மஹாவிஷ்ணுபோல இந்திரியங்களை ஜயித்தவராகவும் இருந்தார். மேலும் அவர் பசுக்கள், ஆசாரியர்கள், பிராமணர்கள், பகவத் பக்தர்கள் ஆகிய இவர்களி டத்தில் பக்தி செய்வது, வெட்கம், வணக்கம், நல்ல ஸ்வபாவம், பிறருடைய காரியத்தை செய்வது, ஆகிய இவைகளிலும் தமக்கே ஒப்பானவராக இருந்தார்; அந்தச் சக்கரவர்த்தியினுடைய கீர்த்தியை மூவுலகத் திலும் சாதுக்கள் கானஞ்செய்தபடியால் ஸீதாபதியான ஸ்ரீராமன்போல் அவர் சாதுக்கள், ஸ்திரீகள் முதலியவர்களுடைய காதுகளில் பிரவேசித்தார். (ஸ்ரீ ராமன் போல விசேஷ கீர்த்தியுள்ளவரென்று கருத்து.)

நோட்டு

வெளியில் சென்ற வயது சென்றவர்கள் யுவாவினுடை வீட்டிற்கு வந்தால் அந்த யுவாவின் பிராணன்கள் வெளியில் செல்லுகின்றன. பிறகு வந்தவர்களுக்கு எதிர்கொண்டழைப்பது முதலிய உபசாரஞ் செய்து அந்தப் பிராணன்களை அடைகிறான்" – ஸ்மிருதி.

அத்தியாயம்–23

பிருது சக்கரவர்த்தி வைகுண்டம் சென்றது

1–18 வேனருடைய புத்திரரும், தைரியமுள்ளவரும், ஸ்தாவரங்களுக்கும் ஜீவனத்தைக் கொடுப்பவரும், சாதுக்களுடைய தர்மத்தை விருத்தி பண்ணுகிற வருமான பிருது சக்கரவர்த்தியானவர், ஒரு காலத்தில் தாம் எதற்காகப் பூமியில் அவதரித்தாரோ, அந்தப் பகவானுடைய ஆக்ஞையானது முடிக்கப்பட்டதென்றும் தம்மால் செய்யப்பட்ட பட்டணம், கிராமம் என்ற ஏற்பாடுகள் மிகவும் விருத்தியடைந்திருப்பதையும், தாம் வயது சென்றவராக இருப்பதையும் பார்த்து விட்டு தம்மை விட்டுப் பிரிவதில் மிகுந்த துக்கமுள்ளவள் போலிருக்கிற பூமியைப் புத்திரர்களிடம் ஒப்புவித்து பிரஜைகள் யாவரும் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது தம்முடைய பத்தினியாகிய அர்ச்சீஸ் என்பவளுடன் தபோவனம் சென்றார். அவ்விடத்தில் விக்கினங்களால் தடுக்க முடியாத நியமத்தை அங்கீகரித்து தாம் ராஜ்ய பரிபாலனம் செய்யும் பொழுதும், சத்துருக்களுடைய பட்டணத்தை ஜயிக்க முயற்சித்தது போல வானபிரஸ்தர்களுக்கு இஷ்டமான தபஸ் செய்ய ஆரம்பித்தார்; சிலகாலம் கிழங்கு களையும், வேர்களையும், பழங்களையும், புஜித்தும், பின்னும் சில காலம் திருணங்கள், இலைகளைப் புஜித்தும் சில மாதம் ஜலத்தைப் புஜித்துக் கொண்டும், பின்னும் சில மாதங்கள் காற்றைப் புஜித்துக் கொண்டும், கோடைக் காலத்தில் ஐந்து அக்கினியின் மத்தியிலிருந்தும், மழைக் காலத்தில் மழையில் நனைந்து கொண்டும், மாசி, பங்குனி மாதங்களில் கழுத்தளவு

ஜலத்தில் இருந்து கொண்டும், தரையில் படுத்துக் கொண்டும், பொறுமையுள்ளவராகவும், இந்திரியங் களை ஜயித்தும் மௌனத்தை அடைந்தும், ஊர்த்வரேதஸ் உள்ளவராகவும், பிராணனை அடக்கிக் கொண்டும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை ஆராதிக்க விரும்பி உக்கிரமான தபஸ் செய்தார். கிரமமாக தபஸ் விருத்தியாகி அதனால் காமக் குரோதாதிகளை ஒழித்து, அந்த யோகத்தாலேயே ஸனத்குமார பகவானால் உபதேசிக்கப்பட்ட பரமபுருஷனை அடைந்தார். இப்படி பகவத் தர்மத்தை அனுஷ்டிப்பவரும், ஸாதுவும் சிரத்தையுடன் முயற்சிப்பவருமாகிய அந்த அரசன் உடைய சித்தமானது வேறு விஷயத்திற் செல்லாமல் பரப்ரஹ்மத்தினிடத்திலேயே ஸ்திரமாக இருந்தது. பகவானை எப்போதும் தியானம் செய்வதால், பூர்த்தியான அந்தப் பக்தியினால் சுத்த சித்தராகிய அரசனுக்கு வைராக்யத்துடன் ஞானமுண்டாயிற்று. அதனால் பலவித சம்சயத்திற்குக் காரணமான அஹங்காரம் நசித்தது. மேலும், அந்த அரசனுக்கு தேகம் முதலியவைகளில் ஆத்மாவென்ற புத்தியானது நசித்தது, ஆத்ம ஸ்வரூபம் பிரகாசித்தது. அதனால் கிடைத்த ஸித்திகளிலும் ஆசை ஒழிந்தது. எந்த ஞானத்தால் அஹங்காரம் முதலியவை நசித்ததோ, அதனையும் விட்டுவிட்டார். (அந்தப் பிரயத்தனத்தை யும் ஒழித்தார் என்பது கருத்து.) யோகியானவன் ஸ்ரீமகா விஷ்ணுவினுடைய கதையில் எதுவரையில் ஆசைப்படவில்லையோ, அதுவரையில் யோகத்தாலே கிடைக்கும் ஸித்திகளில் ஆசைப்படுவான். வீரர்களுக்குள் சிறந்தவராகிய அந்த அரசன் மேற்காட்டியபடி தம்முடைய சித்தத்தைப் பரமாத்மாவிடத்திற் செலுத்தி, பரப்ரஹ்ம ஸ்வரூபத்தை அடைந்து, உசிதமான

காலத்தில் தமது சரீரத்தை விட்டார். எப்படியெனில், குதத்தைக் குதிகால்களால் அடைத்து வாயுவை உயரக் கிளப்பி, நாபியில் நிலை நிறுத்தி, அவ்விடமிருந்து ஹிருதயம், சிரஸ், கண்டம், புருவங்களின் மத்யம் ஆகிய கோஷ்டங்களில் நிலை நிறுத்தி, அந்த வாயுவைப் ப்ரஹ்மரான்ந்ரத்தில் செலுத்தி, வாயுவை சமஷ்டி வாயுவிலும் தேகத்திலிருக்கும் பிருதிவியின் பாகத்தை சமஷ்டிபிருதவியிலும், தேஜஸ்ஸை சமஷ்டி தேஜஸ்ஸிலும், இந்திரிய த்வாரங்களாகிய ஆகாயத்தை ஆகாயத்திலும், திரவாம்சத்தை ஜலத்திலும் லயிக்கச் செய்தார். பின்னுமவர் மஹா பூதங்களுக்குள் பிருதிவியை ஜலத்திலும், அந்த ஜலத்தைத் தேஜஸ்ஸிலும் அந்த தேஜஸ்ஸை வாயுவிலும், வாயுவை ஆகாயத்திலும் லயிக்கச் செய்தார். இந்திரியங்களில் மனத்தையும், இந்திரியங்களை விஷயங்களிலும் உற்பத்தி கிரமமாக லயிக்கச் செய்து, இந்திரியங்களைப் பூதாதியிலும், அந்த அகங்காரத்தை மகத்தத்துவத்திலும் சேர்த்தார். ஸகல காரியங்களையும் உண்டுபண்ணக் கூடிய அந்த மகத்தத்துவத்தை மாயையை உபாதியாக உடைய ஜீவனிடத்தில் சேர்த்தார். பிறகு அந்தப் புருஷன் ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகளின் பலத்தால் ப்ரஹ்ம ஸ்வரூபியாக இருந்து அந்த உபாதியையும் விட்டுவிட்டார்.

19–28 அந்த அரசனுடைய பத்தினியாகிய அர்ச்சிஸ் என்பவள் அரசனுடன் காட்டிற்கு வந்தாள் அல்லவா? அவள் மிகவும் மிருதுவான சரீரமுள்ளவள்; காலால் நடக்கத்தகாதவள், ஆனாலும் அவள் பர்த்தா வினால் அனுஷ்டிக்கப்படும் விரதங்களை அனுஷ்டிப் பதாலும், அவரால் கௌரவப்படுத்தப்பட்ட படியாலும்

வருத்தப்படாதவளாக இருந்தாள். பின்னும் அவள் பர்த்தாவினுடைய சரீரம் மரணமடைந்ததைப் பார்த்துக் கொஞ்சம் அழுது மலையடிவாரத்தில் அந்தத் தேகத்தைச் சிதையில் வைத்துத் தகனஞ் செய்தாள். பின்பு, அப்பொழுது செய்ய வேண்டிய காரியங் களைச் செய்து, நதி ஜலத்தில் ஸ்நானஞ் செய்து ஆகாயத்தில் இருக்கும் தேவர்களை நமஸ்கரித்து, அக்னியை மூன்று தடவை பிரதக்ஷிணஞ் செய்து பர்த்தாவின் பாதத்தைத் தியானஞ் செய்து கொண்டு அக்கினியில் பிரவேசித்தாள். அப்பொழுது ஆகாயத்தில் இருந்து தேவ ஸ்திரீகள், தேவர்களுடன் பிருது சக்கரவர்த்தியுடன் உடன் கட்டையேறிய அர்ச்சிஸ் என்பவளைப் பார்த்துப் பலவகையாக ஸ்தோத்திரம் பண்ணினார்கள். அவ்விடத்தில் புஷ்பங்களை வர்ஷித்தார்கள்; தேவ வாத்தியங்கள் யாவும் முழங்கின; அப்பொழுது தேவ ஸ்திரீகள் எல்லோரும், யக்ஞங் களுக்கு அதிபதியாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவை லக்ஷ்மீ தேவி போல, இந்த ஸ்திரீயானவள் பர்த்தாவை அடைந்தாள்; இந்த அர்ச்சிஸ் என்பவள், பிருது சக்கரவர்த்தியுடன் நமக்கும் மேலிருக்கிற லோகத் திற்குச் செல்லுகிறாள். இவள் செய்த கர்மம் இன்ன தென்று ஊகிக்க முடியாதது; நிலையற்ற ஆயுளுள்ள எந்த மனிதர்கள் பூமியில் பகவானை அடையக் கூடிய நிஷ்காம கர்ம மார்க்கத்தைச் சாதிக்கிறார்களோ, அவர்களுக்கு எதுதான் கிடைக்காது? மிகவும் சிரமப்பட்டு பூமியில் மனுஷ்ய ஜன்மத்தை அடைந்தும் எவன் விஷயத்திலேயே ஆசைப்பட்டு க்ஷேமத்தை அடைவதற்கு முயற்சிக்கிறதில்லையோ, அவன் ஆத்ம துரோகியாகவும், ஏமாற்றப்பட்டவனாகவும் ஆகிறான்" என்று சொல்லிக் கொண்டார்கள்.

29–36 இப்படி தேவ ஸ்திரீகள் புகழ்ந்து கொண்டிருக்கும்பொழுது அர்ச்சிஸ் என்பவள் ஆத்ம வித்துக்களுக்குள் சிறந்தவராகிய பிருது சக்கரவர்த்தி எந்த லோகஞ் சென்றாரோ, அந்த லோகஞ் சென்றாள். பிருதுவானவர் இம்மாதிரியான மஹிமையுள்ளவர்; பகவத் பக்தர்களுக்குள் சிறந்தவர்; கம்பீர சரித்திரமுள்ளவர் அந்த அரசனுடைய சரிதத்தை உமக்குச் சொன்னேன். மிகவும் புண்ணியத்தைக் கொடுக்கக்கூடிய இந்த சரிதத்தைச் சிரத்தையுடன், சாவதானமாக எவன் படிக்கிறானோ பிறருக்குச் சொல்லுகிறானோ, கேட்கிறானோ அவன் பிருதுவின் மார்க்கத்தை அடைவான். இதைக் கேட்பதால் ப்ராஹ்மணன் ப்ரஹ்மதேஜஸ்ஸையும் க்ஷத்திரியன் லோகாதிபத்தியத்தையும், வைசியன் ஜனங்களுக்கு அதிபதியாயிருப்பதையும், சூத்திரன் உத்தமனாயிருப்பதையும் அடைவான். புருஷனானாலும், ஸ்திரீயானாலும் மிகவும் பக்தியுடன் இந்தச் சரிதத்தைக் கேட்டால் புத்திரனில்லாதவர்களுக்குப் புத்திரனும், பணமில்லாதவர்களுக்குப் பணமும், கீர்த்தியை விரும்பியவர்களுக்கு மிகுந்த கீர்த்தியும், வித்தையும் கிடைக்கும். இது புருஷர்களுக்கு க்ஷேமத்தை கொடுக்கக் கூடியது; அமங்களத்தை நிவர்த்திக் கூடியது. பணம், கீர்த்தி, ஆயுள், ஸ்வர்க்கம் இவைகளைக் கொடுக்கக் கூடியது; கலியால் உண்டாகும் பாவத்தைப் போக்கக் கூடியது. தர்மம் முதலிய புருஷார்த்தங்களை விரும்பியவன் சிரத்தையுடன் இதனைக் கேட்கவேண்டும். க்ஷத்திரியன் இந்தச் சரிதத்தைச் சிரவணஞ் செய்து, சத்துருவை நோக்கி யுத்தத்திற்குச் சென்றால் பிருது சக்கரவர்த்திக்கு மற்ற அரசர்கள் கப்பங் கட்டுவது போலச் சத்ருக்கள் அவனுக்குக் கப்பங் கட்டுவார்கள். வேறு

விஷயத்தில், ஆசையை யொழித்துப் பகவானிடத்தில் சுத்தமான பக்தியைச் செய்து, பிருது சக்கரவர்த்தியின் சரிதத்தைக் கேட்டாலும், படித்தாலும் பகவான் இடத்தில் மிகுந்த பக்தியுண்டாகும். ஓ விதுரரே! மேலான மஹாத்மியத்தைக் காண்பிக்கும் இந்தச் சரிதத்தில் சித்தத்தைச் செலுத்திய மனிதன் பிருது சக்கரவர்த்தியின் கதியை அடைவான். ஆனதால் ஒவ்வொரு நாளும் பிருதுவின் சரிதத்தைப் பிரீதியுடன் பிறருக்கு உபதேசித்தும், கேட்டுக் கொண்டு மிருப்பவன் விஷயங்களில் ஆசையையொழித்து, சம்ஸாரமாகிய சமுத்திரத்திற்குப் படகு போன்ற பாதங்களுள்ள ஸ்ரீ மஹாவிஷ்ணுவினிடத்தில் நிரந்தரமான பக்தியை அடைவான்.

அத்தியாயம்–24

ருத்ர கீதம்

1–5. பிருது சக்கரவர்த்திக்குப் பின்பு அவருடைய புத்திரரும், மிகுந்த கீர்த்தியுள்ள வருமான விஜிதாச்வர் அரசராக இருந்தார். அவர் தமது தம்பிகளுக்கு இராஜ்யத்தைப் பிரித்துக் கொடுத்தார். எப்படியென்றால், ஹர்யச்வருக்குப் கிழக்குத் திக்கையும், தூம்ரகேசருக்குத் தெற்கு திக்கையும், விருகர் என்பவருக்கு மேற்குத் திக்கையும் கொடுத்தார். அந்த விஜிதாச்வர் பிருது சக்கரவர்த்தியின் யாகத்தில் மஹேந்திரனிடமிருந்து அந்தர்த்யான சக்தியை அடைந்தபடியால், அது முதல் அவருக்கு அந்தர்த்தானர் என்னும் பெயருண்டாயிற்று. அவர் சிகண்டினீ என்னும் ஸ்திரியிடத்தில் பாவகன், பவமானன், சுசி என்ற புத்திரர்களை உண்டுபண்ணினார். இவர்கள் வசிஷ்ட மஹரிஷியின் சாபத்தால் மனுஷ்ய ஜன்மத்தையடைந்து. பிறகு யோகமார்க்கத்தால் தங்கள் ஸ்வரூபத்தையடைந்தவர்கள். அந்த அன்தர்த்தானர் நபஸ்வதீ என்ற ஸ்திரீயிடத்தில் ஹவிர்த்தான ரென்ற புத்திரனைப் பெற்றார். விஜிதாசுவர் குதிரையை அபஹரித்த இந்திரனைக் கொல்லாமலிருந்ததால் அந்தர்த்தானரென்ற பெயரும், அந்தர்த்தான சக்தியும் அவருக்குக் கிடைத்தது; மேலுமவர் வரி வாங்குவது, சிட்சிப்பது ஆகிய இவைகளால் ராஜாக்களுடைய விருத்தியானது மிகவும் பயங்கரமாக இருப்பதைப் பார்த்து, தீர்க்கசத்திரம் செய்கிறதென்ற வியாஜத்தால் ராஜ்யத்தைவிட்டு விட்டார் (அந்த யாகத்திலும், திரவியம், தேசம்

முதலியவைகளைப் பரமாத்மாவாகவே பாவித்து அதிலும் பரமாத்மாவாகிய பரம புருஷனை ஆராதித்து புண்யமாகிற ஸமாதியால் அந்த லோகத்தை சுத்தரும், பூர்ணருமான பகவானை யாகத்தால் பூஜித்து, தீவிரமான ஸமாதியால் அந்த உலகத்தை (பகவானா யிருப்பதை அடைந்தார்.) ஓ விதுரரே! ஹவிர்த்தான ரென அவர் ஹவிர்த்தானி என்பவளிடத்தில் பர்ஹிஷ்மதன், கயன், சுக்லன், கிருஷ்ணன், ஸத்யன், ஜிதவிரதன் என்ற ஆறு புத்திரர்களை உண்டு பண்ணினார். ஹவிர்த்தானருடைய புத்திரராகிய பர்ஹிஷ்மதர் கர்ம காண்டங்களிலும். யோகங்களிலும் ஸாமார்த்தியமுள்ளவராக இருந்தார். அவர் யாகஞ் செய்யும்பொழுது இந்தப் பூமி முழுவதும் யாகசாலையாகவும், கிழக்கு நுனியான தர்ப்பங்களால் பரப்பப்பட்டதாகவும் இருந்தது. அதனால் அவருக்குப் பிராசீனபர்ஹிஸ் என்று பெயருண்டாயிற்று, அவர் ஸமுத்திர ராஜனுடைய புத்திரியாகிய சதத்ருதி என்பவளை ப்ரஹ்மதேவருடைய தூண்டுதலால் விவாஹம் செய்து கொண்டார். கல்யாண காலததில் நன்றாய் அலங்கரிக்கப்பட்ட அந்தப் பெண்ணின் அழகைப் பார்த்து எல்லா ஜனங்களும் ஆசைப்பட்டார்கள். அது, கிளி வேஷங்கொண்ட ஸ்வாஹையிடம் அக்கினி ஆசைப்பட்டது போலிருந்தது. புதிதாக விவாஹம் செய்துகொண்ட அந்தப் பெண்ணுடைய பாதஸ்பரத்தின் சப்தத்தாலேயே தேவர்கள் அஸுரர்கள், கந்தர்வர்கள், மஹரிஷிகள், ஸித்தர்கள், மனிதர்கள், உரகர்கள் ஆகிய இவர்கள் ஜயிக்கப்பட்டார்கள். பிராசீன பர்ஹிஸ்ஸுக்குச் சதத்ருதி என்பவளியத்தில் பத்து புத்திரர்கள் உண்டானார்கள். அவர்களெல்லோரும் ஒரே மாதிரியான விரதமுள்ளவர்கள்; எல்லோரும்

தர்மத்தின் கரைக் கண்டவர்கள்; பிரசேதஸ் என்னும் பெயருள்ளவர்கள்; அவர்களைப் பிதாவாகிய பிராசீன பர்ஹிஸ் பிரஜைகளை ஸிருஷ்டிக்கும்படி ஆக்ஞாபித்தார். அவர்களும் வனஞ்சென்று பதினாயிர வர்ஷ காலம் தபஸ்செய்து ஸ்ரீ மஹாவிஷ்ணுவைப் பூஜித்தார்கள். நடுவழியில் பரமசிவனைத் தரிசித்த அவரால் உபதேசிக்கப்பட்டபடி மந்திரத்தை ஜபித்தும், ஸ்வரூபத்தைத் தியானஞ் செய்தும், பூஜித்து கொண்டு மிருந்தார்கள்" என்று மைத்திரேயர் சொன்னார்.

16–18. அதனைக் கேட்ட விதுரர், "பிரசேதஸ்ஸுகளுக்கு பரமசிவனுடைய தரிசனம் எப்படிக் கிடைத்தது? பரமசிவன் மிகுந்த பிரியத்துடன் அவர்களுக்கு எதனை உபதேசித்தார்? ஓ ப்ராஹ்மணோத்தம! பிராணிகள் பரமசிவனைத் தரிசிப்பது மிகவும் துர்லபமல்லவா? அந்தப் பரமசிவன் வைராக்கியமுள்ள முனிகளால் தியானஞ் செய்யப்பட்டவரல்லவா? அந்தப் பகவான் ஆத்மாராமராக இருந்தாலும், இந்த லோகத்தைக் காப்பாற்றுவதற்காகப் பயங்கரமான சக்தியுடன் ஸஞ்சரிக்கிறார். ஆனதால் அதனை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

19–26. அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி, "பிரசேதஸ்ஸுகள் பிதாவினுடைய ஆக்ஞையைச் சிரஸால் தரித்துத் தபஸ் செய்ய வேண்டுமென்ற விருப்பத்துடன் மேற்குத் திக்கை நோக்கிச் சென்றார்கள். அவ்விடத்தில் ஏறக்குறைய ஸமுத்திரம் போல் விஸ்தாரமான பெரிய ஒரு குளத்தைக் கண்டார்கள். அந்தக் குளமானது பெரியோர்களுடைய மனம்போல்

Released by Maran's Dog, Toronto , Canada

தெளிந்திருந்தது. நீலோத்பலங்கள், செந்தாமரை, இராத்ரியில் மலரக்கூடிய புஷ்பங்கள், ஸந்தியா காலத்தில் மலரும் புஷ்பங்கள், பகலில் மலரும் புஷ்பங்கள் ஆகிய இவைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மேலும் அந்த ஸரஸில் ஹம்ஸங்கள் ஸாரங்கள், சக்ரவாகங்கள், நீர்க்கோழி இவைகள் சப்தித்துக்கொண்டிருந்தன. மதித்த வண்டுகள் கானஞ் செய்வதால் கொடிகள், மரங்கள் ஆகிய இவைகள் மயிர்கூச்சலடைந்தவை போல மொட்டுகளை வெளியிட்டன. வாயுவானது தாமரைப் புஷ்பத்தின் தூளியை நாலு திக்குகளிலும் இரைத்தது. பின்னும் அவ்விடத்தில் தேவதைகள் பாடும் மார்க்கப்படி மிருதங்கம் பணவம் முதலிய வாத்திய கோஷங்களுடன் கந்தர்வர்கள் கானம் செய்வதைக்கேட்டு, அந்த ராஜபுத்திரர்கள் மிகவும் ஆச்சர்யமடைந்தார்கள் அந்த ஸமயத்தில் அந்த ஸரஸ்ஸிருந்து பரமசிவன் வெளியில் வந்தார். அவருடைய பிரமதகணங்கள் அவரை உபாஸித்துக் கொண்டிருந்தன. அவருடைய தேகமானது புடம்போட்ட தங்கம் போல் பிரகாசித்தது. அப்படிப்பட்ட பகவானை ராஜபுத்திரர்கள் தரிசித்து மிகுந்த தயையுடன் பிரஸன்ன முகமுள்ளவராக இருந்தார். தர்மத்தில் பிரீதியுள்ள அந்தப் பரமசிவன் தம்மைச் சரணமடைந்தவர்களும், விசேஷ பிரியமுள்ளவர்களுமான இராஜ புத்திரர்களை நோக்கி, "ஓ பிராசீனபர்ஹிஸ்ஸின் புத்திரர்களே! உங்களுடைய அபிப்ராயம் எனக்கு நன்றாகத் தெரியும்; உங்களுக்கு க்ஷேமம் உண்டாகும். உங்களை அனுக்ரஹிப்பதற்காகவே தரிசனம் கொடுத்தேன். எந்தப் புருஷன் அவ்யக்தம், பிரதானம், ஜீவன் இவைகளுக்கு மேலானவராகி ஸ்ரீ வாஸுதேவரிடத்தில் பக்தி

Released by Maran's Dog, Toronto , Canada

செய்கிறானோ அவனிடத்தில் எனக்கு மிகுந்த பிரியம். நூறு ஜன்மங்களில் வர்ணாசிரமத்திற்குரிய தர்மங்களை நன்றாக அனுஷ்டித்து வந்த புருஷன் ப்ரஹ்ம லோகத்தை அடைவான். (ப்ரஹ்மதேவராக ஆகிறான் என்பது கருத்து) அதைவிட மேலான புண்ணியஞ் செய்தவன் என்னை அடைகிறான். நானும் மற்ற தேவர்களும் அவரவர்களுடைய அதிகாரம் முடிந்தவுடன் எப்படி வைஷ்ணவ பதத்தை அடைகிறோமோ அப்படியே அதைவிட மேலான புண்ணியஞ் செய்து பகவத் பக்தனாயிருக்கும் புருஷன் அந்த சரீரம் போன பிறகு பிரபஞ்சஸம்பந்த மற்ற விஷ்ணுபதத்தை அடைகிறான். ஆகையால் பாகவதர்களாகிய நீங்கள் பகவானைப் போல என்க்குப் பிரியமானவர்களே! பாகவதர்களுக்கு என்னைவிடப் பிரியமானவர்கள் வேறு ஒருவருமில்லை, நான் உங்களுக்கு எதனை உபதேசிக்கிறேனோ; அது விசேஷ க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியது; பரிசுத்த மானது; மிகுந்த மங்களகரமானது; அதனை ஒன்றோடொன்று சேராமல் நீங்கள் ஜபிக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டுப் பரமசிவன் ஸ்ரீமந் நாராயணனைத் தியானித்துக்கொண்டு கைகூப்பி, தமக்கெதிரில் நிற்கும் இராஜபுத்திரர்களை நோக்கிப் பின் வருமாறு சொல்லலானார்.

27–79. "ஓ பகவன்! நீர் ஆத்மவித்துக்களுக்குள் சிறந்தவர்களாகிய யோகிகளுக்கு ஆனந்தத்தைக் கொடுப்பதற்காக ஒப்பற்ற பரமானந்த ரூபியாகப் பிரகாசிக்கிறீர். ஆகையால் எனக்கும் ஆனந்தப் பிரார்த்தி உண்டாகட்டும். அப்படிப்பட்ட ஸகல ஸ்வரூபியும் எல்லாவற்றிற்கும் நியந்தாவுமான உமக்கு

நமஸ்காரம் எவருடைய கொப்பூழில் லோக ஸ்வரூபமான தாமரை மலர் தோன்றியதோ, (ஸகல பிரபஞ்சத்திற்கும் காரணரென்று சொல்லப்பட்டது) எவர் ஸ்தூல பூதங்கள், தன் மாத்திரைகள், இந்திரியங்கள் ஆகிய இவைகளுக்கு நியந்தாவோ, எவர் சித்தத்துக்கு அதிஷ்டமான தேவதையாகிய வாஸுதேவரோ, விஹாரங்கள் அற்றவரோ, தாமாக பிரகாசிப்பவரோ அஹங்காரத்திற்கு அதிஷ்டான தேவதையாகிய ஸங்கர்ஷண ஸ்வரூபரோ, அவ்யக்தோ, நாசமற்றவரோ, முகத்திலுண்டான அக்னியினால் உலகங்களை எரிப்பவரோ. ஜகத்திற்கு விசேஷ ஞானத்தைக் கொடுப்பவரும். புத்திக்கு அதிஷ்டான தேவதையுமான பிரத்யும்னஸ்வரூபியோ' அப்படிப்பட்ட பகவானுக்கு நமஸ்காரம் அநிருத்த ஸ்வரூபியும், இந்திரியங்களுக்கு அதிபதியான மனத்தின் ஸ்வரூபியும், தேஜஸ்ஸைக் கொண்டு எங்கும் வியாபித்திருக்கும் சூரிய ஸ்வரூபியும், விருத்தி, க்ஷயம் இவைகள் அற்றவருமாகிய பரமாத்மாவிற்கு நமஸ்காரம் ஸ்வர்க்கம் மோக்ஷம் இவைகளுக்கு மார்க்கராயும் பரிசுத்தமான மனஸில் வஸிப்பவரும், அக்னி ஸ்வரூபியும் யாகத்தை விஸ்தரிப்பவரும், யாகத்திற்கு ஸாதனமாயிருப்பவருமாகிய பரம புருஷனுக்கு நமஸ்காரம், பிதிருக்களுக்கு அன்னமய ஸோம ஸ்வரூபியும், தேவர்களுக்கு அன்ன ரூபியும், வேதத்திற்கு அதிபதியும், யக்ஞத்திற்கு முக்ய ஸாதனராயும், பிராணிகளுக்குத் திருப்தியை உண்டு பண்ணுகிறவரும், ரஸரூபியுமான ஸ்ரீ பகவானுக்கு நமஸ்காரம், சகல பிராணிகளுடைய தேகசுரூபியாயும், பிருதிவியின் ஸ்வரூபமாயும், விராட்ரூபியாயும், மூன்று உலகத்தையும் பிராணரூபியாயிருந்து காப்பாற்று கிறவரும், தேஜஸ், காந்தி இவைகளின் ரூபியுமான

பகவானுக்கு நமஸ்காரம், விஷயங்களைப் பிரகாசிக்கச் செய்யும் ஆகாச ஸ்வரூபியும், உள், வெளி என்கிற விவகாரத்திற்கு காரணரும், புண்யலோகரூபியும், ஸ்வர்க்க ஸ்வரூபியும், விசேஷ தேஜஸுள்ளவருமாகிய பகவானுக்கு நமஸ்காரம் பிரவர்த்திமார்க்க சுரூபியும், நிவர்த்தி மார்க்க ஸ்வரூபியும், பிதிருத்துவம் தேவத்வம் இவைகளைக் கொடுக்கும் கர்மபலஸ்வரூபியும். அதர்மத்தின் பல ஸ்வரூபியும், துக்கத்தைக் கொடுக்கக் கூடிய மிருத்யு ஸ்வரூபியுமான பகவானுக்கு நமஸ்காரம். ஸகல கர்மங்களுக்கும் பலத்தைக் கொடுப்பவரும், எல்லாவற்றையுமறிந்தவரும் மேலான தர்ம ஸ்வரூபியும், தடையற்ற ஞானமுள்ள ஸ்ரீ கிருஷ்ண ஸ்வரூபியுமான உமக்கு நமஸ்காரம், புராண புருஷரும், ஸாங்கியம், யோகம் இவைகளுக்கு அதிபதியும், ருத்ர ரூபியும், கர்த்தா, கரணம், கர்மம் ஆகிய மூன்று வகையான சக்தியுள்ளவரும், ஞான ஸ்வரூபியும் கிரியா ஸ்வரூபியும், பலவகையான சிருஷ்டி சுரூபியான பகவானுக்கு நமஸ்காரம். ஓ பகவன்! உம்மை தரிசிக்க விரும்பிய எங்களுக்கு உம்முடைய திவ்ய ஸ்வரூபத்தைக் காண்பிக்க வேண்டும். அது பாகவதர்களால் பூஜிக்கப்பட்டது. ஸகல இந்திரியங்களுடைய விஷயங்கள் விஷயிகள் இவைகளின் ரூபமாயுள்ளது; பக்தர்களுக்குப்; பிரியமானது; பளபளப்புள்ள மழைக்கால மேகம்போல் கறுத்த திருமேனியுள்ளது, ஸகல ஸௌந்தர்யத்திற்கும், இருப்பிடமானது அழகு பொருந்தியவைகளும், நீண்டதுமான நான்கு கைகளுள்ளது; அழகான புருவங்களுள்ளது; ரமணீயமான மூக்குள்ளது; நல்ல பற்களுள்ளது. அழகான கன்னங்களால் பிரகாசிக்கும் முகமுள்ளது; ஒருவகையான குண்டலங்களால் அலங்கரிக்கப்பட்ட காதுகளை உடையது; பிரீதியுடன்

சிரித்த முகமுள்ளது; கருணை நிறைந்த கடாக்ஷ முள்ளது; தாமரை மலரின் தாதுகள் போல் பொன்னிறமுள்ள வஸ்திரமுள்ளது கிரீடம், கங்கணம் ஹாரம், பாதஸரம், அரைஞாண் இவைகளால் அலங்கரிக்கப்பட்டது; மேலும் சங்கம், சக்ரம் கதை, தாமரையாலே கௌஸ்துபம் ரத்தினம் இவைகளால் விசேஷ காந்தியுள்ளது ஸிம்மத்தின் தோள் போன்ற தோள்களுள்ளது; கௌஸ்துப ரத்தினத்தால் அழ்கான கண்டமுள்ளது; லக்ஷ்மீதேவி எப்பொழுதும் வஸித்துக்கொண்டிருப்பதால் தங்கம் உரைக்கும் உரைகல்லும் பரிகசிக்கக்கூடிய மார்புள்ளது; மூச்சு விடுவதாலும் உள்ளே வாயுவை இழுப்பதாலும் அசைகின்ற மூன்று மடிப்புகளால் அழகானதும் அரசிலைக்குச் ஸமமுமான வயிறுள்ளது.

பின்னும் அந்த சுரூபமானது கம்பீரமான கொப்பூழில் ஸகல ஜகத்தையும் உள்ளே அடக்கிக் கொள்வதுபோலப் பிரகாசிக்கிறது; கறுத்த திருமேனி யுள்ள இடுப்பில் பீதாம்பரமும் அதன்மேல் தங்க மயமான அரைஞாணும் நன்றாகப் பிரகாசிக்கிறது; கணைக்கால்களும், கால்களும் சமமாயிருப்பதினாலும். முழங்கால் உயரமில்லாததினாலும் மிகவும் பார்க்கக் கூடியதோ, பிரஹ்லாதன் முதலிய பக்தர்களுக்குப் பயத்தைப் போக்கடித்ததோ, அஞ்ஞானிகளுக்கும் மார்க்கத்தைக் காண்பிக்கும் உம்முடைய அந்தப் பாதாரவிந்தத்தை எனக்கு காண்பியும், சித்த சுத்தியை விரும்பியவர்கள் இந்த உருவத்தைத் தியானம் செய்யவேண்டும். ஸ்வதர்மத்தை அனுஷ்டிப்பவர் களுக்கு இந்த உருவத்தினிடத்தில் பக்தி செய்வதே அபயத்தைக் கொடுக்கக்கூடியது நீர் பக்தர்களால்

அடையக்கூடியவர்; மற்றவர்களால் அடையமுடியாதவர்; ஸ்வர்க்க ராஜ்யத்தை அடைந்தவர்களாலும் விரும்பக்கூடியவர்; ஆத்மாவை அறிந்தவர்களுக்குக் கதியாயிருப்பவர்; ஆராதிக்க முடியாதவரான அப்படிப்பட்ட உம்மை ஸாதுக்களுக்கும் அரிதான பக்தியால் ஆராதிக்கும் எந்தப் புருஷன் உம்முடைய பாதத்தைத் தவிர விஷயத்தில் ஆசைப்படுவான்? காலமானது தம்முடைய மஹிமையாலும் உத்ஸாகத்தாலும் மிகுந்த கோபத்துடன் உலகத்தை நாசம் பண்ணுகிறதானாலும் உம்முடைய பாதாரவிந்தத்தில் சரணமடைந்தவனை உபத்திரவிக்கிறதில்லை. பகவத் பக்தர்களுடன் அரைக்ஷணமாவது ஸல்லாபம் செய்வாதாலுண்டான சுகத்திற்கு ஸ்வவர்க்கத்தையும், மோக்ஷத்தையும் சமமென்று நான் நினைக்கவில்லை. அப்படியிருக்க மற்ற சுகங்கள் அதற்கு ஸமமாக ஆகுமா? ஆனதால் பாபங்களைப் போக்கக்கூடிய பகவானுடைய கீர்த்தியால் அந்தரங்கத்தில் ஸ்நானம் செய்தும், அவருடைய பாதத்திலிருந்து உண்டான கங்கா ஜலத்தில் ஸ்நானஞ் செய்தும், அதனால் பாபமில்லாதவர்களும், பிராணிகளிடத்தில் தயையுள்ளவர்களும் நல்ல ஸ்வபாவமுள்ளவர்களுமான ஸாதுக்களுடைய ஸங்கமம் எனக்குக் கிடைக்கும்படி அனுக்கிரஹிக்க வேண்டும் சாதுக்களுடைய சேர்க்கையால் சித்தம் சுத்தமாகி விஷயங்களில் செல்லும் அஞ்ஞானத்தையும் அடைகிறதில்லை. அப்பொழுது அந்த முனியானவன் ஆத்மாவைத் தரிசிப்பான். அந்த ஆத்ம ஸ்வரூபத்தில் இந்த ஜகத் பிரகாசிக்கிறது. அதுவே உண்மையானது. அதுவே ப்ரஹ்மம், ஆகாயம்போல் எங்கும் வியாபித்திருக்கும் தேஜஸ், அந்தப் பரமாத்மாவானவர் பலவகையான ஸ்வரூபமுள்ள மாயையைக் கொண்டு

ஜகத்தை உண்மையானது போல் சிருஷ்டித்தார். பின்னும் அதைக் காப்பாற்றினார். ஸம்ஹரித்தார்; அந்த மாயையைப் பகவான் ஜயித்தவர், பேதமற்றவர்; சுதந்திரர், பூதங்கள், இந்திரியங்கள், அந்தக்கரணம் இவைகளால் ஊகிக்கப்படுகிற இந்த ஆத்மாவைத் தங்களுக்குரிய கர்மங்களால் எந்த யோகிகள் சிரத்தையுடன் பூஜிக்கிறார்களோ அவர்களே வேதம், ஆகமம் இவைகளில் ஸமர்த்தர்கள். நீர் ஒருவரே மேற்காட்டிய குணமுள்ள புருஷன். ஸிருஷ்டிக்கு முந்தியிருந்தவர்; ஸகல சக்திகளும் உம்மிடத்திலேயே இலயித்திருக்கின்றன. நீர் ஒருவரானாலும், ரஜஸ்ஸினாலும், தமஸ்ஸினாலும் மஹத்தத்துவம், அஹங்காரம், வாயு, அக்கினி, ஜலம், பூமி, தேவர்கள், ரிஷிகள், மற்ற பூதகணங்கள் என்ற பேதத்தை அடைகிறீர்; மேலும் மற்ற பூதகணங்கள் சக்தியால் சிருஷ்டிக்கப்பட்ட நான்கு விதமான ஜகத்தில் தம்முடைய அம்சமாக அனுப்பிரவேசம் செய்திருக்கிறீர்; ஆனாலும் நீர் ஸம்ஸாரியல்ல; தேனீக்கள் தங்களால் உண்டு பண்ணப்பட்ட தேனைப்போல, அற்பமான விஷய சுகத்தை இந்திரியங்களைக் கொண்டு அனுபவிப்பவனே ஜீவன் என்று சொல்லப்படுகிறான். எவர் தம்முடைய சக்தியால் இந்த ஜகத்தை ஸிருஷ்டித்தாரோ, எவர் மேக வரிசைகளை அசைத்துச் கொண்டு உலகங்களை சம்ஹரிக்கிறாரோ, எவருடைய ஸ்வரூபம் ஊகிக்கக் கூடியதோ, அவரே நீர். இதனை இப்படிச் செய்ய வேண்டும் என்ற சிந்தையால் மிகவும் பிரமாதத்தை அடைந்தவனும், விஷயத்தில் அதிக ஆசையுள்ளவனும், கிடைத்த விஷயத்தில் விசேஷ அபிநிவேசமுள்ளவனுமான புருஷனை, பசியால் கடைவாய்களை நக்கிக் கொண்டிருக்கும் ஸர்ப்பமானது எலியைப்போல

நீர் ஸாவதானராக நாசஞ்செய்கிறீர், எந்த உம்முடைய பாதாரவிந்தத்தை நம்முடைய குருவாகிய ப்ரஹ்ம தேவரும் பதினான்கு மனுக்களும் ஸம்சயமின்றிப் பூர்ண விசுவாசத்துடன் பூசித்தார்களோ, அந்தப் பாதார விந்தத்தை வித்வானாகிய எவன் பூஜிக்கமாட்டான்? மேலும், ருத்ரருடைய பயத்தாலே நாசமடைந்த ஜகத்திற்குப் பயமில்லாமல் வகிக்கும் ஸ்தானமாக இருந்தீர். ஓ பரப்ப்ரஹ்மமே! பரமாத்மாவே! எனக்குத் தரிசனம் கொடுக்க வேண்டும்" என்று பகவானை ஸ்தோத்திரஞ் செய்து. ஓ ராஜபுத்ரர்களே! மேற் காட்டிய மந்திரத்தை விசுவாஸத்துடன் தங்களுக்குரிய தர்மத்தை யனுஷ்டித்துப் பகவானிடத்தில் சித்தத்தைச் செலுத்தி ஜபியுங்கள். ஸகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாக இருப்பவரும், தம்முடைய மஹிமை யிலிருப்பவருமான அந்த ஸ்ரீமந் நாராயணனையே தியானத்தாலும், நாம ஜபத்தாலும் பூஜியுங்கள். ஓ ராஜபுத்திரர்களே! நீங்களெல்லோரும் ரிஷிகள் விரதத்தை அனுஷ்டித்து சித்தத்தை ஒருவகைபடுத்தி மேற்சொல்லிய ஸ்தோத்திரத்தை அடிக்கடி ஜபியுங்கள். முற்காலத்தில் இந்த ஸ்தோத்திரத்தை பிருகு முதலிய மஹரிஷிகளுக்கும், எனக்கும் ப்ரஹ்மதேவர் உபதேசித் தார், அதை ஜபஞ் செய்ததால் அஞ்ஞானமற்றவர்களாகி ஸிருஷ்டி சக்தியை அடைந்து, பலவகையான பிரஜை களைப் பிரஜாபதிகள் – ஸிருஷ்டித்தார்கள். இந்த ஸ்தோத்திரத்தை எவன் ஒவ்வொரு நாளும் ஸாவதானனாக ஜபிக்கிறானோ, அவன் சீக்கிரத்தில் க்ஷேமத்தை அடைவான், பலவகையான க்ஷேமத்திலும் மோக்ஷமே முக்கியமானது. ஞானமாகிய படகை அடைந்தவன் கரையற்ற ஸம்ஸார ஸமுத்திரத்தை இலகுவாகத் தாண்டுவான். எந்தப் புருஷன் என்னால்

சொல்லப்பட்ட இந்த ஸ்தோத்திரத்தை ஒவ்வொரு நாளும் ஜபித்து ஆராதிக்க முடியாத ஸ்ரீமந் நாராயணனை ஆராதிக்கிறானோ, அவன் என்னுடை கீதத்தால் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டவரும், க்ஷேமங் களுக்கு முக்கிய அதிபதியுமான ஸ்ரீ பகவானிடமிருந்து இஷ்டமான சுகத்தை அடைவான். எவன் காலையில் எழுந்திருந்து சிரத்தையுடன் கைகூப்பிக்கொண்டு இந்தக் கீதையைக் கேட்கிறானோ. பிறருக்குச் சொல்லு கிறானோ அவன் கர்மங்களிலிருந்து விடு படுவான். ஓ இராஜபுத்திரர்களே! பரமாத்வினுடைய ஸ்தோத்திர ரூபமான இந்தக் கீதத்தை நீங்கள் ஒருமனதாக ஜபஞ் செய்துகொண்டு தபஸ் செய்யுங்கள். கடைசியில் உங்களுக்கு எது இஷ்டமோ அதனை அடைவீர்கள்" என்று ராஜபுத்ரர்களைப் பரமசிவன் அனுக்கிரஹித்தார்.

நோட்டு

கிளி வேஷங்கொண்ட—ஸப்த ரிஷிகளுடைய விவாஹ காலத்தில் அக்கினி பகவான் ஸப்த ரிஷிகளின் பத்தினிகளிடம் ஆசைகொண்டார், அதையறிந்த ஸ்வாஹை ஸப்த ரிஷிகளின் பத்தினி வேஷங்கொண்டு தனது பர்த்தாவைத் திருப்திசெய்து, பின்பு கிளிவேஷங்கொண்டு அவருடைய ரேதஸ்ஸை நாணற் காட்டில் சேர்த்தாளென்று புராணக் கதை.

அத்தியாயம்–25

புரஞ்சனோபாக்கியானம்

1–2 இப்படிப் பரமசிவன் ராஜபுத்ரர்களுக்கு உபதேசித்து, அவர்களால் பூசிக்கப்பட்டு அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது மறைந்தார். பின்பு அவர்கள் எல்லோரும் ருத்ரரால் உபதேசிக்கப் பட்ட அந்த ஸ்தோத்திரத்தை ஜபித்துக் கொண்டு ஜலத்திலிருந்து தபஸ் செய்தார்கள்.

3–6 ஓ விதுரரே! அவர்களுடைய பிதாவாகிய பிராசீனபர்ஹிஸ் என்பவர் கர்மத்திலேயே ஆசை கொண்டவராக இருந்தபடியால் ஆத்ம தத்துவத்தை அறிந்தவராகிய நாரதர் அவ்வரசனை நோக்கி, ஓ மஹராஜ்! "எந்தக் கர்மத்தால் ஆத்மாவிற்கு சுகத்தை உண்டு பண்ணப் போகிறீர்? துக்கத்தை நிவர்த்திக்கக் கூடியதும் சுகத்தைக் கொடுக்கக் கூடியதுமான மோக்ஷமானது கர்மமார்க்கத்தால் கிடைக்கிறதில்லையே" என்று கிருபையுடன் கேட்டார். அதனைக் கேட்ட அரசன் நாரதரை நோக்கி, "மிகுந்த பாக்கிய முள்ளவவரே! எனக்கு அந்த மார்க்கம் தெரியாது. என்னுடைய புத்தியானது கர்மத்திலேயே செல்லுகிறது. புத்திரர்கள், ஸ்திரீ பணம் இவைகளைப் புருஷார்த் தமாக நினைத்து ஸம்ஸார மார்க்கத்தில் ரமித்துக் கொண்டிருப்பவன் மோக்ஷத்தை எப்படி, அடைவான்? எதனால் கர்மத்திலிருந்து நான் நிவர்த்தி அடைவேனோ, அந்த சுத்தமான ஆத்மஞானத்தை எனக்கு உபதேசிக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

7–25 அதனைக் கேட்ட நாரதர், "ஓ பிராஜாபதியே! நீர் அநேக யாகங்களைச் செய்து அவைகளில் தயையில்லாமல் அநேகம் பசுக்களை ஹிம்ஸித்திருக்கிறீர்; அந்த பசுக்கள் யாவும் உம்மால் செய்யப்பட்ட ஹிம்ஸையை நினைத்துக் கொண்டு உம்மை ஹிம்ஸிப்பதற்காகக் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. நீர் மரணமடைந்து பரலோகஞ் சென்றால் இரும்புமயமான தங்களுடைய கொம்பு களால், மிகுந்த கோபத்துடன் உம்மைக் குத்தி உபத்திரவிக்கப் போகின்றன. இந்த விஷயத்தில் உதாரணமாக வெகுநாளைக்கு முந்தி நடந்த புரஞ்சனனுடைய சரிதத்தைச் சொல்லுகிறேன், கேளும். ஓ அரசனே! வெகுநாளைக்கு முன் புரஞ்சன னென்னும் ஓர் அரசர் மிகுந்த கீர்த்தியுள்ளவராக இருந்தார். அவருக்கு அவிஞ்ஞாதன் என்ற ஒரு தோழன் உண்டு. அவருடைய சரிதம் பிறருக்கும் தெரியாது. அந்த அரசன் தோழனுடன் தமக்குத் தகுதியான பட்டணத்தைத் தேடி, பூமி முழுவதும் அலைந்தும் தகுதியான இடம் கிடைக்காததால் வருத்தமடைந்தான். இஷ்டமான காமங்களை அனுபவிக்க விரும்பினவராகையால் பூமியிலிருக்கும் பட்டணங்களிலொன்றும் அவர் மனதிற்குப் பிடிக்க வில்லை. இந்தப் புரஞ்சனன் ஹிமவத பர்வதத்தின் தென்பாகத்திலிருக்கும் தாழ்வரைகளில் ஒரு நகரத்தைக் கண்டான். அந்த நகரமானது ஒன்பது கோட்டைவாசல்களுள்ளது. ஸகல லட்சணங்களுள்ளது; பிரகாரங்கள், தோட்டங்கள் அட்டாலங்கள், அகழிகள், பலகணிகள், கோபுரங்கள் ஆகிய இவை களாகும். தங்கத்தாலும், வெள்ளியாலும் செய்யப்பட்ட சிகரங்களுள்ள வீடுகளாலும் பிரகாசிக்கிறது;

நீலங்கள், ஸ்படிகம், வைடூரியம், முத்து, மரகதம், மாணிக்கம் இவைகளால் தளவரிசை செய்யப்பட்ட உப்பரிகைகளுள்ளது. அதனால் போகவதீ பட்டணம் போல் பிரகாசித்தது. மேலும், அந்தப் பட்டணத்தில் ஸபைகள், நாற்சந்தி மண்டபங்கள், ராஜவீதிகள், விளையாடுகிற ஸ்தலங்கள், கடைவீதி, ஜனங்கள் சிரம பரிஹாரம் பண்ணிக் கொள்ளும் இடம், துவஜபதாகைகள், பவழ பூமிகள் ஆகிய இவைகள் இருக்கின்றன. அந்த நகரத்தின் வெளியில் ஒரு தோட்டமிருக்கிறது. அதில் திவ்யமான விருக்ஷங்களும், கொடிகளும் இருக்கின்றன. அந்தத் தோட்டத்தில் குளமொன்று இருக்கிறது. அதில் ஹம்ஸம் முதலிய பறவைகள் சப்தித்துக் கொண்டிருக்கின்றன. பனித்துளிகளுடன் கூடியதும், புஷ்பத்தின் வாஸனை யுள்ளதுமான காற்றினால் அசைகின்ற தளிர், கிளைகள் இவைகளுள்ள மரங்களிருக்கின்றன. அவ்விடத்தில் இருக்கும் பலவகையான காட்டு மிருகங்கள் பிறரை ஹிம்ஸிக்கிறதில்லை. குயில்கள் காதுக்கு இனிமையாகச் சப்திப்பதால் வழிப் போக்கர்கள் தங்களைக் கூப்பிடுவதுபோல நினைக்கிறார்கள். அப்படிப்பட்ட பட்டணத்திலிருந்து தெய்வச் செயலாக வெளியில் வந்த ஒரு உத்தம ஸ்திரீயைப் புரஞ்சனன் பார்த்தான்; அவளுக்கு பத்து வேலைக்காரர்கள் இருக்கிறார்கள்; ஒவ்வொரு வேலைக்காரர்களுக்கும் அநேகம் வேலைக் காரர்கள் இருக்கிறார்கள். ஐந்து தலைகளுள்ள ஸர்ப்பமானது அவளைக் காப்பாற்றுகிறது. அவள் விவாஹமாகாதவள்; பர்த்தாவை அடைய விரும்பியவள், இஷ்டப்படி உருவமெடுக்கத் தகுந்தவள்; அழகான மூக்குள்ளவன்; ரமணீயமான பற்களுள்ளவள்; அழகான கன்னங்கள், மேலான முகம் இவைகளுள்ளவள்;

காதுகளில் ஸமமான குண்டலங்களைத் தரிப்பவள்; பொன் வர்ணமான எக்கு முடிச்சுள்ளவள்; யௌவன வயதுள்ளவள்; தங்க ஒட்டியாணமுள்ளவள்; பாதத்தில் அணிந்திருக்கும் பாதஸரங்களுடைய சப்தத்துடன் தேவதைபோல் ஸஞ்சரிப்பவள்; அவளுடைய ஸ்தனங்கள் கொஞ்சமாக வெளியில் பிரகாசிக்கின்றன; மேலும் அவைகள் ஸமவிருத்தங்கள்; இடைவெளி யற்றவை; மேலும் அவள் அந்த ஸ்தனங்களை வஸ்திரத்தின் தலைப்பினால் மறைத்துக் கொண்டு பெண்யானைபோல் ஸஞ்சரிக்கிறாள்; வெட்கத்துடன் சிரிப்பதால் அழகாயிருப்பவள்; பின்னும் அவள் மிகுந்த ஆசையுடன் அழகான கடாக்ஷத்தால் அரசரைப் பார்த்தாள்.

26–31 அவளைக் கண்ட அரசர், தாமரை மலர் போன்ற கண்களுள்ளவளே! நீ யார்? யாருடைய பெண்? எவ்விடத்திலிருந்து வந்தவள்? இந்தப் பட்டணத்தில் வஸித்துக் கொண்டு எதனைச் செய்ய விரும்புகிறாய்? இந்தப் பதினோரு ஸேவகர்கள் யார்? இதோ இருக்கிற ஸ்திரீகள் யார்? உனக்கு முந்தி வரும் ஸர்ப்பமானது யாது? நீ, தர்மமாகிய பர்த்தாவைத் தேடும் ஹ்ரீ தேவதையா? ஸ்ரீ மஹாவிஷ்ணுவைத் தேடும் லக்ஷ்மிதேவியா? மஹர்ஷிகள்போல இந்திரியங் களை ஜயித்தவளாகிப் புருஷனைத் தேடும் நீ யார்? உன்னுடைய பர்த்தா உன்னுடைய பாதத்தை அடைந்த தாலேயே ஸகல கர்மங்களையும் அடைந்தவராக ஆகிறார். உன்னுடைய கையிலிருந்த தாமரைமலர் எவ்விடத்தில் விழுந்தது? ஓ அழகான தொடைக ளுள்ளவளே! மேற்சொல்லிய ஸ்திரீகளுக்குள் உன்னை ஒருத்தியாகவே சொல்ல நியாயமில்லை; ஏனென்றால்,

தேவதைகள் பூமியின் மீது நிற்கமாட்டார்கள். நீயோ பூமியில் நிற்கிறாய், ஆனதால் வீரர்களுக்குள் சிறந்த வனாகிய என்னைப் பர்த்தாவாக அடைந்து, நீ இந்தப் பட்டணத்தை லக்ஷ்மீ தேவியானவள் மஹா விஷ்ணுவுடன் வைகுண்டத்தைப் போல் அலங்கரிக் கலாம். ஓ அழகானவளே! உன்னுடைய கடைக் கண்ணினால் என்னுடைய இந்திரியங்கள் கலங்கின. வெட்கமுள்ளதும் அபிப்பராயத்துடன் கூடியதுமான சிரிப்பினால் மன்மதன் என்னை உபத்திரவிக்கிறான். அதனால் என்னை நீ அனுக்கிரஹிக்க வேண்டும்; ஓ அழகான புன்சிரிப்புள்ளவளே! அழகான புருவங்கள் உள்ளதும் அழகான கருவிழிகளுள்ள கண்களுள்ளதும், நாலுடக்கங்களிலும் தொங்கும் கறுத்த மயிர்களுள்ளதும், இனிமையாகப் பேசக்கூடியதுமான முகத்தை வெட்கத்தால் திருப்பிக் கொண்டிருக்கிறாயே? அதனை எனக்குக் காண்பிக்க வேண்டும்" என்று யாசித்தார்.

32–42 சூரராகிய விதுரரே, இப்படிக் கெஞ்சிக் கேட்கும் புரஞ்சனனைப் பார்த்து, அந்தப் பெண் இவரிடத்தில் ஆசைகொண்டு புரஞ்சனனை நோக்கி, 'ஓ புருஷர்களுக்குள் சிறந்தவரே! என்னை யுண்டு பண்ணினவரையும் பெயர் வைத்தவரையும் கோத்திரத் தையும் நான் அறியேன். நான் வஸிக்கும் இந்த நகரத்தை யுண்டு பண்ணினவர் இன்னாரென்றும் எனக்குத் தெரியாது. ஆனால் இவ்விடத்தில் வஸிப்பது தான் எனக்குத் தெரியும்; இந்தப் புருஷர்கள் என்னுடைய தோழர்கள்; இந்தப் பெண்கள் தோழிகள்; நான் தூங்கும் பொழுது இந்த ஸர்ப்பமானது இந்தப் பட்டணத்தை விழித்துக் கொண்டு காப்பாற்றுகிறது. தெய்வாதீனமாக நீர் இவ்விடம் வந்தீர். என்னுடைய

பந்துக்களை வைத்துக் கொண்டு உம்மைக் கல்யாணஞ் செய்து கொள்கிறேன்! என்னுடன் கிராம்யமான போகங்களெல்லா வற்றையும் அனுபவிக்கலாம்; என்னால் உண்டுபண்ணப்படும் காம போகங்களை அனுபவித்துக் கொண்டு வெகுகாலம் ஒன்பது வாசல்கள் உள்ள இந்த நகரத்தில் வசியும். மேலும், உம்மை விட்டு ரதியை அறியாதவனும் வேகத்தால் நிஷேதிக்கப் படாதஸுகத்தில் ஆசையில்லாதவனும், பரலோக சிந்தையற்றவனும், இவ்வுலகத்திய சிந்தை யில்லாதவனும், பசுவிற்கு ஸமமானனுமாகிய எவனைப் பர்த்தவாக அடையப் போகிறேன்? பிரவிருத்தி தர்மமாகிய கிருஹஸ்த தர்மத்தில் அர்த்த காமங்கள், புத்திரஸுகம், மோக்ஷம், கீர்த்தி, துக்கமற்ற லோகங்கள் ஆகிய இவைகள் கிடைக்கின்றன. இதுவே தர்மம் இதனை ஸன்யாஸிகள் அறியமாட்டார்கள். கிருஹஸ்தாசிரமம், பிதிருக்கள், தேவர்கள், மஹரிஷிகள், மனிதர்கள், மற்ற பிராணிகள் ஆகிய இவர்களுக்கும், தனக்கும் ஸுகத்தைக் கொடுக்கக்கூடியதென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஓ சூரரே! என்னைப் போன்ற எந்த ஸ்திரீ தாமாக வந்தவரும், கீர்த்தி யுள்ளவரும், தாதாவாயும், பிரியமான பார்வையுள்ள வருமான உம்மைப் போன்ற புருஷனைப் பர்த்தாவாக வரிக்க மாட்டாள்? ஸர்ப்பத்தின் உடல்போன்ற உம்முடைய கைகளைப் பார்த்து எவளுடைய மனம் தான் ஆசைப்படாது? நீர் அனாதர்களுடைய மனக் கவலையை க்ருணை நிறைந்த பார்வையால் போக் கடிப்பதற்காக ஸஞ்சரிக்கிறீர்" என்றாள்.

43–62 இப்படி அவ்விருவர்களும் பேசிக் கொண்டு அந்தப் பட்டணத்தில் பிரவேசித்து அநேக வருஷங்கள்

ஸந்தோஷமாக வஸித்தார்கள். அவ்விடத்தில் புரஞ்சனன் பாடகர்களுடைய கானத்தைக் கேட்டும், ஸ்திரீகளுடன் விளையாடிக் கொண்டும் கோடை காலத்தில் ஜலக்கிரீடை செய்தும் ஸந்தோஷமாகக் காலத்தைக் கழித்தார். அந்த பட்டணத்திற்கு ஏழு வாசல்கள் மேலே இருக்கின்றன. இரண்டு வாசல்கள் கீழாக இருக்கின்றன. அதற்கு அதிபதி இன்னாரென்று தெரியவில்லை. ஐந்துவாசல்கள் கிழக்கேயிருக்கின்றன. தெற்கில் ஒன்றும், வடக்கில் மற்றொன்று மிருக்கிறது. இரண்டு வாசல்கள் மேற்கே இருக்கின்றன. கத்யோகம், ஆவிர்முகீயென்ற இரண்டு வாசல்களும் கிழக்கில் ஓரே இடத்திலிருக்கின்றன. அவைகள் வழியாகப் புரஞ்சனன் தியுமான் என்ற தோழனுடன் விப்பிரர் ஜிதமிமன்ற தேசத்திற்குப் போகிறார். நளினீ, நாளினீ என்ற இரண்டு வாசல்கள் ஓரே இடத்திலிருக்கின்றன. அவைகளின் வழியாக புரஞ்சனன் அவதூதமினென்ற தோழனுடன் ஸௌரபமென்ற தேசத்திற்குப் போவது வழக்கம். முக்கை யென்ற கிழக்கிலிருக்கும் வாசல் வழியாக அவ்வரசர் ரஸஜ்ஞனென்ற தோழனுடன் பஹூதனமென்ற தேசத்திற்கும் விடணனென்பவனுடன் ஆபணமென்ற தேசத்திற்கும் செல்வார். மேலுமவர் பிதிருஹூவென்ற தெற்கு வாசல் வழியாகச் சுருததரனென்ற தோழனுடன் தக்ஷிணபாஞ்சாலத் திற்குப் போகிறார். தேவஹூயென்ற வடக்கு வாசல் வழியாக சுருததரனுடன் உத்தர பாஞ்சாலஞ் செல்கிறார். ஆஹூயென்ற மேற்கு வாசல் வழியாக துர்மதனுடன் கிராமதமென்ற தேசத்திற்குப் போகிறார். நிருதியென்ற மற்றொரு மேற்கு வாசல் வழியாக உல்பணனென்பவனுடன் வைசஸம் என்ற தேசம் செல்லுகிறார்; மேலும் அந்தப் பட்டணத்திய

ஜனங்களுக்குள் நிர்வாக், பேசஸ்கிருத் என்னுமிருவர்கள் கண்ணில்லாதவர்கள். அவர்களில் நிர்வாக் என்ப வனுடைய ஸஹாயத்தால் கண்ணுள்ளவர்களுக்கு அதிபதியான புரஞ்சனன் நடக்கிறார். பேசஸ்கிருத் என்பவனுடைய ஒத்தாசையால் காரியங்களைச் செய்கிறார். அவர் விஷூசீனனுடன் அந்தப்புரஞ் சென்றால் அப்பொழுது ஸ்திரீ, புத்திரன் ஆகிய இவர் களால் ஏற்படும் மோஹத்தையாவது, ஸந்தோஷத் தையாவது அடைகிறார். இம்மாதிரி அவ்வரசர் மிக்க காமியாகி, விஷயங்களில் ஆசைப்பட்டு விவேக மில்லாமல் தம்முடைய பார்யையின் இஷ்டப்படி நடந்தார். எப்படியெனில் தம்முடைய பத்தினி மத்யத்தைக் குடித்தால் தாமும் மத்யபானஞ் செய்தார். அவள் சாப்பிடும்போது இவரும் புசித்தார். அவள் பக்ஷணங்களை உட்கொள்ளும்போது இவரும் பக்ஷணங்களை புசித்தார். அவள் கானஞ் செய்யும் பொழுதும் கானஞ் செய்கிறார். அவள் அழுதால் இவரும் அழுகிறார். அவள் சிரித்தால் இவரும் சிரிக்கிறார். அவள் பேசும்பொழுது இவரும் பேசினார். அவள் ஓடினால் இவரும் ஓடுகிறார். அவள் நின்றால் இவரும் நிற்கிறார். அவள் படுத்திருந்தால் இவரும் படுத்திருக்கிறார். அவள் உட்கார்ந்திருந்தால் இவரும் உட்காருகிறார். எதையாவது அவள் கேட்டுக் கொண்டிருந்தால் இவரும் காது கொடுத்து கேட்கிறார். அவள் பார்க்கும்பொழுது இவரும் பார்க்கிறார். அவள் வாசனையை முகரும்போது இவரும் வாஸனையைக் கிரஹிக்கிறார். அவள் எதனையாவது தொடும்பொழுது இவரும் தொடுகிறார். அவள் துக்கிக்கும்போது இவரும் தீனன்போல் துக்கிக்கிறார். இப்படிப் புரஞ்சனன் தமது ஸ்திரீயினால் வஞ்சிக்கப்பட்டு

எல்லாப் பிரகிருதிகளாலும் ஏமாற்றப்பட்டும், ஒன்றையும் விரும்பாமல் விளையாட்டு மிருகம்போல் அவள் செய்த காரியத்தையே செய்து கொண்டிருந்தார்.

நோட்டு

புரஞ்சனன்–தன்னுடைய கர்மங்களால் சரீரமாகிய பட்டணத்தை யுண்டு பண்ணுவதால் ஜீவனென்று அர்த்தம். அவிஞ்ஞாதன் ஒருவராலும் அறியப்படாத பெயருள்ளவர் பரமாத்மா. இவர் ஜீவனுக்குத் தோழன். "இரண்டு கருடபக்ஷிகள் ஒன்றுக்கொன்று தோழமை. ஒரே மரத்தில் வஸிக்கின்றன. அவைகளில் ஒன்று அந்த மரத்தில் பழுத்த பழத்தைப் புசிக்கிறது. மற்றொன்று பழத்தைப் புசியாமல் ஸாக்ஷியாக இருக்கிறது" –சுருதி. ஸ்ரீத : அந்த அத்தியாயத்தில் அன்யோபதேசமாக அத்யாத்ம விஷயத்தை நாரதர் உபதேசிக்கிறார். 'ஏன் ஸாக்ஷாத்தாக உபதேசிக்கவில்லை யென்றால் தேஹம் முதலியவைகளில் ஆத்மாவென்ற அபிமானமுள்ளவனும் உண்மையில் ஹிதமான புருஷார்த்தத்தை அறியாதவனும், விஷயசுகமே பரம புருஷார்த்தமென்று நினைத்தவனுமாகிய புருஷனுக்கு தத்துவத்தை யுபதேசிப்பதாலும் அவன் புத்தியில் ஏறமாட்டானென்று நினைத்து வெகுகாலமாக அப்யஸிக்கப்பட்ட ஸ்திரீகள், புருஷர்கள், கர்ப்பம், ஜனனம் கிழத்தனம். மரணம், ஜாக்ராவஸ்தை, ஸ்வப்னம், ஸுஷுப்தி முதலிய ஸம்ஸாரத்தை நிரூபித்து பின்பு அவைகளின் தோஷத்தை காண்பித்து இவைகளை நாம் விட்டுவிட வேண்டும்' என்ற எண்ணத்தை உண்டுபண்ணி, பின்பு தத்துவத்தை

யுபதேசித்தால் நன்றாகப் புத்தியில் ஸ்திரமாக இருக்கு மென்ற எண்ணத்தால் அன்யாபதேசமாக உபதேசித் தார். ஜீவனை அரசனாகவும், சரீரத்தை அவனுடைய நகரமாகவும் பரமாத்மாவை ஜீவனுக்குத் தோழனா கவும், புத்தியை பத்தினியாகவும் சொல்லப்பட்டி ருக்கிறது. 'அரசன் இருந்தார்' என்றதால் ஜீவன் அநாதியென்று ஏற்படுகிறது. மிகுந்த கீர்த்தி உள்ளவர் என்றதால் பாவமற்றவர்; கிழத்தனமற்றவர்; மரண மற்றவர்; சோகமற்றவர்; பசி தாகங்களற்றவர்; ஸத்யகாமர், ஸத்யஸங்கல்பர் என்ற சுருதியாலும், "இவர் ஆயுதத்தால் வெட்டமுடியாதவர்; தஹிக்க முடியாதவர்; ஜலத்தால் நாசஞ் செய்ய முடியாதவர்; வாயுவினால் உலர்த்த முடியாதவர்; ஆனதால் நித்யர்; எங்குமிருப்பவர்; அசையாதவர்; புராண புருஷர்; என்ற ஸ்மிருதியாலும் உத்கோஷிக்கப்பட்ட குணங் களுள்ளவரென்று ஏற்படுகிறது. அவிஞ்ஞாத– அறியப் படாத பெயருள்ளவர் (ஒருவருக்கும் அவருடைய பெயர் தெரியாது) பரமாத்மாவின் பெயர் ஒருவராலும் அறியப்படாததாகையால் அவரே தோழரென்று சொல்லப்பட்டிருக்கிறார். ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் அவிஞ்ஞாதரென்றப் பகவானுக்கு ஒரு பெயர் காட்டப்பட்டிருப்பதால் அவிஞ்ஞாதவென்ற பெயருள்ளவரென்றும் சொல்லலாம். 'பெயர் தெரியாது' என்றதால் ஜீவனுக்கு அவருடைய பெயரே தெரியாது. ஸ்வரூபம் எப்படித் தெரியும்? அதுவும் அதனால் அறியப்படாததே என்று கருத்து –வீர. அலைந்தும் நல்ல சரீரத்தையடைய வேண்டிப் பிரம்மாண்டத் திலுள்ள தேவசரீரம் முதலியவைகளிலும், ஸ்தாவர சரீரங்களிலும் பிரவேசித்து அலைந்தான். கதையின் அழகுக்காகப் பட்டணத்தை வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

பத்து வேலைக்காரர்கள்–பத்து இந்திரியங்கள். அவைகளுடைய விருத்திகளே. அவைகளின் பரிகாரர் கள். ஐந்து தலைகளுள்ள – ஐந்து வியாபாரங் களுள்ள பிராணன்; தெய்வாதீனமாக – பெயர் முதலியவை எனக்குத் தெரியாமலிருந்தாலும் ஒன்பது துவாரங்களுள்ள மனுஷ்ய சரீரத்தைத் தெய்வச் செயலாக அடைந்தீர். இதில் விஷய ஸுகங்களை அடையலாம், வீர. ஜலக்கிரீடைத்தில் ஹ்ராதினி என்றிருப்பதால் ஸகல இந்திரியங்களுடன் ஜாக்ரா வஸ்தையில் விஷயசுகத்தை அனுபவித்த, அந்த அவஸ்தையில் நேர்ந்த களைப்பைப் நிவர்த்தித்துக் கொள்வதற்காக ஸ்வப்னாவஸ்தையை அடைந்தார்; ஏழு வாசல்கள்–இரண்டு கண்கள், இரண்டு மூக்குகள், இரண்டு காதுகள், முகம் ஆகிய ஏழு. இரண்டு வாசல்கள் குதம்குறி ஆகிய இரண்டு. கத்யோதம்– மின்மினிப் பூச்சி போல் அற்ப பிரகாசமுள்ள இடது கண் ஆவிர்முகி–பிரகாசமுள்ள வலது கண், தியுமான – சக்ஷுந்திரியம், அதனுடன் பிரகாசிக்கும் விஷயத்தை அடைகிறான். நளினி, நாளினி இரண்டு மூக்குகள், அவைகளின் வழியாக வாயு தேவதாகமான கிராணேந்திரியத்துடன் ஜீவன் வெளியில் சென்று வாஸனையைக் கிரஹிக்கிறான். முக்கை–முகம். ரஸஜ்ஞ–நாக்கு பஹூமதன சித்திரான்னம் முதலியவை விபணம் வாகிந்திரியம். ஆபணம்– பேச்சு.

இதன் விபரங்கள் யாவும் இந்த நான்காவது ஸ்கந்தத்தில் இருபத்தொன்பதாவது அத்தியாகத்தின் மூலத்திலேயே சொல்லப்பட்டு இருக்கின்றனவாதலால் அதிகமாக எழுதுவதை இங்கு நிறுத்தினோம்.

அத்தியாயம்–26

(முன் அத்தியாயத் தொடர்ச்சி)

1–16. அந்த வீரராகிய அரசர் ரதத்தின் மீதேறி வேட்டைக்காக வனஞ்சென்றார். அந்த இரதத்தில் ஐந்து குதிரைகள் கட்டியிருக்கின்றன. அது வெகு வேகமாகச் செல்லக்கூடியது: இரண்டு ஈஷா தண்டமுள்ளது; இரண்டு சக்கரங்களுள்ளது; ஒரு அச்சுள்ளது; மூன்று துவஜ மரங்களுள்ளது; ஐந்து ஸந்திபந்தங்களுள்ளது; ஒரு கடிவாளமுள்ளது; ஒரு ஸாரதியுள்ளது; ஒருவர் உட்காரக்கூடிய ஸ்தலமுள்ளது; இரண்டு ஏர்க்கால்களுள்ளது; ஐந்து பிரஹரணமுள்ளது; ஏழு வருதமுள்ளது; இரதத்திற்கு மேற்புரத்தில் போட்டிருக்கும் புலித்தோல் முதலியவை) ஐந்து கதிகளுள்ளது; தங்கமயமான ஸாமக்கிரிகளுள்ளது; பதினோரு ஸேனாபதிகளுக்கு அதிபதியான அந்த புரஞ்சனன் ஸ்வர்ண கவசத்தை தரித்து. குறையாத பாணங்களுள்ள தூணீரமுள்ளவனாகி ஐந்து தாழ்வாரைகளுள்ள வனஞ் சென்று பாணம், வில் ஆகிய இவைகளை வைத்துக்கொண்டு மிக்க கர்வத்துடன் வேட்டையாடுவதில் மிகுந்த ஆசையுடன் வேட்டையாடினான். ஆனால் பத்தினியை மட்டில் அழைத்துப் போகவில்லை. மேலுமவர் அரசர்களுடைய ஸ்வபாவத்தை அங்கீகரித்து. கருணையற்றவராகி, கூர்மையான பாணங்களால் காட்டு மிருகங்களைக் கொன்றார்: (க்ஷத்திரியர்களுக்கு வேட்டையாடுவது தோஷமல்லவே, ஏன் அதனைத் தோஷமாகக் கூறப்படுகிறதென்றால் ஸநாதனஞ் சொல்லப்படுகிறது.) அரசர்கள் வேட்டையாடி மிருகங்களைக் கொல்ல

வேண்டுமென்ற விதியில்லை; ஆகையால் மிருகங்களைக் கொல்வார்களாகில் சிராத்தம் முதலியவைகளுக்காக மிருகங்களைக் கொல்லக்கூடாது; பிரஸித்தமான சிராத்தங்களாக இருக்கவேண்டும். அதிலும் சுத்தமான மிருகங்களையே கொல்லவேண்டும்; அதிலும் வனத்தில் அடிக்கலாமேயொழிய மற்றவிடத்தில் ஹிம்ஸிக்கக் கூடாது; அதிலும் எவ்வளவு வேண்டுமோ. அதற்கு மேல் எடுத்துக் கொள்ளக்கூடாது. வித்வானாகிய எந்தப் புருஷன் இம்மாதிரி நியதமான கர்மத்தை அனுஷ்டிக்கிறானோ அவனுக்கு ஞானமுண்டாகும் ஆதலால் அந்தர்கர்மம் பந்தமாகிறதில்லை. விதியை மீறிக் கர்மங்களைச் செய்பவன் கர்த்தாவென்ற அபிமானமுள்ளவனாகி, கர்மத்துக்குக் கட்டுப்படுகிறான் பின்பு குணங்களில் மூழ்கி நரகத்தை அடைகிறான். இப்படி அரசருடைய பலவகையான இறக்கைகளுள்ள பாணங்களால் பேதிக்கப்பட்டு அநேக மிருகங்கள் நாசமாயின. கருணையுள்ள வர்களால் அது ஸஹிக்க முடியாததாக இருந்தது. சசங்கள் முயல்கள், பன்றிகள், மஹிஷிகள், கவயங்கள், குருக்கள், (சல்யங்கள் முதலிய சுத்தமானவைகளையும், அசுத்தமானவைகளையும் கொண்டு அரசன் மிகவும் களைப்படைந்தார்; பின்பு தமது பட்டணத்திற்கு வந்து அந்தப்புரம் சென்று ஸ்நானஞ் செய்து உசிதமான ஆகாரத்தைப் புசித்து, சிரம பரிஹாரமடைந்து படுத்துக் கொண்டார், அப்பொழுது நல்ல சந்தனம் பூசிக்கொண்டார். புஷ்ப மாலைகளைத் தரித்தார் தூப வாஸனையை மோந்தார். ஸகல அவயவங்களையும் அலங்கரித்துக் கொண்டார். அப்பொழுது பத்தினியை பார்க்க வேண்டுமென்ற எண்ண முண்டாயிற்று. அப்பொழுது அவ்வரசர் வெளியிலிருக்கும் விஷயங்களில்

ஆசையில்லாதவராகவும், ஸந்தோஷத்தையடைந்தவரும், தம்மையும் பிறரையும் மறந்தவரும், மன்மதனால் பீடிக்கப்பட்ட மனமுள்ளவருமாக இருந்தபடியால் தம்முடைய பத்தினியை எங்கும் தேடிப்பார்த்தார். அப்படியும் அவள் காணப்படவில்லை. பின்பு மனவருத்தமடைந்து அந்தப்புர ஸ்திரீகளை நோக்கி ஓ ஸ்திரீகளே! நீங்களும் உங்களுடைய யஜமானிகளும் முன்போல க்ஷேமமாயிருக்கிறீர்களா? கிருஹத்தில் மாதாவாவது, பதிவ்ரதையான பத்தினியாவது இல்லாவிடில் அந்த கிருஹத்திலிருக்கும் ஸம்பத்துக்கள் பிரகாசிக்கிறதில்லை. சக்கரம் முதலியவைகளற்ற ரதம்போல இப்படிப்பட்ட வீட்டில் விவேகியான எவன்தான் தினனாக வஸிப்பான்? என்னுடைய பத்னியானவள் துக்கஸமுத்திரத்தில் மூழ்கும் என்னை அடிக்கடி ஸமாதானஞ் செய்து, ஸந்தோஷப் படுத்துவாளே; அவள் எவ்விடத்தில் இருக்கிறாள்?" என்று கேட்டார்.

17. அதனைக் கேட்ட ஸ்திரீகள், "சத்துருவைக் கொல்லும் பராக்ரமமுள்ள ஓ மஹாராஜனே! உம்முடைய பத்தினியானவள் என்ன எண்ணங் கொண்டிருக்கிறாள் என்பது எங்களுக்குத் தெரியவில்லை; தரையில் படுத்துக்கொண்டிருக்கிறாள், பாரும்" என்று சொன்னார்கள்.

28–26. அதனைக் கேட்ட புரஞ்சனர் தேஹாபிமானத்தை விட்டுப் பூமியில் படுத்திருக்கும் பத்தினியைப் பார்த்து மனங்கலங்கி மிகுந்த துக்கத்தை அடைந்தார். பின்பு அவர் மிகுந்த வருத்தத்துடன் மெதுவான வார்த்தைகளைச் சொல்லி அவளை

ஸமாதானஞ் செய்து தம்மிடத்தில் அவளுக்குப் பிரணய கோப மிருக்கிறதாகத் தெரிந்து கொண்டார். நல்வார்த்தை சொல்வதில் ஸமர்த்தராகிய அந்தப் புரஞ்சனன் அவளை மெள்ள மெள்ள ஸமாதானஞ செய்தார். அவளைத் தம்முடைய மடியில் வைத்துக் கொண்டு கால்களையும் பிடித்தார். மேலுமவர் பத்தினியை நோக்கி, "ஓ அழகானவளே! யஜமானர்கள், வேலைக்காரர்கள் குற்றம் செய்தாலும், அவர்களைத் தங்களுக்கு ஸ்வாதீனர்களாகச் செய்துகொண்டு சிக்ஷிக்கவேண்டும்; அப்படி சிக்ஷிக்கப்படாத வேலைக் காரர்கள் புண்ணியம் பண்ணாதவர்கள் என்பது நிச்சயம். பிரபு வேலைக்காரனைச் சிக்ஷிப்பது அனுக்கிரஹமாக ஆகிறது. பந்துக்களால் செய்யப்பட்ட சிக்ஷையைப் பற்றி எவன் துக்கிக்கிறானோ, அவன் அக்ஞனேயாம். ஓ தைரியமுள்ளவளே! அழகான புருவங்களாலும், புன்சிரிப்பினாலும், கடைக்கண் பார்வையாலும், கறுத்த மயிர்களாலும், அழகானதும் உயர்ந்த மூக்குள்ளதும், இனிமையான வார்த்தை யுள்ளதுமான முகத்தைப் பந்துவாகிய எனக்குக் காண்பிக்க வேண்டும். சூரனுடைய பத்தினியே! உனக்கு யார் குற்றம் செய்தாரோ அவர் ப்ராஹ்மணர்கள், பகவத் பக்தர்களாகிய இவர்களைத் தவிர வேறு யாராயிருந்தாலும் அவனை சிக்ஷிக்கிறேன். ஆனால் மூன்று லோகத்திற்கு வெளியிலும் கூட உனக்கு அபராதஞ் செய்தவன் பயமில்லாமல் சந்தோஷமாக வஸிக்கமாட்டான். (என்னிடத்திலிருந்து பயந்து தானாகவே மரணமடைவான்.) உன்னுடைய முகமானது இதற்குமுன் இம்மாதிரி இருந்ததில்லை; நெற்றியில். திலகமில்லை; முகமானது அழுக்கடைந் திருக்கிறது; சந்தோஷமற்றதாயிருக்கிறது; அழகான

உன்னுடைய ஸ்தனங்கள் துக்கத்தால் வாடினவை களாக இருக்கின்றன, கோவைப்பழம் போன்ற உதடு தாம்பூலச் சிரிப்பு இல்லாமலிருக்கிறது; ஆனதால் உன்னை விட்டுத் தனியாக வேட்டைக்குப் போனதால் குற்றஞ் செய்தவனாக ஆகிறேன்; ஆனாலும் நான் உனக்கு ஸ்வஹிருத்தானபடியால் என் குற்றத்தை மன்னிக்கவேண்டும்; மன்மதனால் பீடிக்கப்பட்டுத் தைரியமில்லாமல் வருத்தப்படுகிறவரும், ஸ்வாதீனப் பட்டவருமாகிய பர்த்தாவை எந்த ஸ்திரீ தான் ஆராதிக்கமாட்டாள்" என்று சமாதான வார்த்தை களைச் சொன்னார்.

அத்தியாயம்–27

(முன் அத்தியாயத் தொடர்ச்சி)

1–12 புரஞ்சனனுடைய பத்தினீயும், புரஞ்சனி யென்னும் பெயருள்ளவளுமான அந்தப் பெண் இம்மாதிரி புரஞ்சனனை, வசப்படுத்திக் கொண்டு ரமித்தாள். பிறகு அவள் ஸ்நானஞ் செய்து, நல்ல வஸ்திரங்களை உடுத்திக் கொண்டும் அலங்காரஞ் செய்து கொண்டும் மேலான அன்னத்தைப் புஜித்து அரசருடைய சமீபம் வந்தாள். அவளைப் பார்த்து அரசர் சந்தோஷமடைந்து அவளை ஆலிங்கனஞ் செய்து கொண்டு ரஹஸ்யத்தில் அவள் வார்த்தையைக் கேட்டு அதனால் புத்தி மயக்கமடைந்து, ஸ்திரீயினால் பீடிக்கப்பட்டவராகி, இரவு, பகல் என்ற எண்ணமற்று, தம்முடைய ஆயுஸ்ஸு செலவாகிறதென்பதைத் தெரிந்து கொள்ளாதவராக இருந்தார். அதனால் அவருக்குத் தம்முடைய ஆத்மாவாவது, பிறராவது, பிறருடைய ஸ்வரூபமாவது தெரியவில்லை. இந்தப் புரஞ்சனியினுடைய ஸ்வரூபமே அவரால் அறியப் பட்டது. இப்படி அவ்வரசர் மன்மதனால் கலங்கிய மனமுள்ளவராகி அவளுடன் ரமித்துக் கொண்டிருந்தார். அவருடைய யெள்வன வயது முழுவதும் அரை க்ஷணம் போல் சென்றது. அந்தப் புரஞ்சனனுக்கு நூற்றுப் பதினொரு பிள்ளைகள் பிறந்தார்கள். அப்பொழுது அவருடைய வயதில் பாதி சென்றது. பின்பு பித்ருகுலத்திற்கும், சஹோதரர்களுக்கு கீர்த்தியை விருத்திபண்ணக கூடிய நூற்றுப்பத்து பெண்கள் பிறந்தார்கள். புரஞ்சனனுடைய புத்திரி களான அவர்களெல்லோரும் நல்ல ஸ்பாவம்

உள்ளவர்கள்; ஔதார்ய குணமுள்ளவர்கள். அப்பொழுது புரஞ்சனன் தம்முடைய புத்திரர் களுக்குத் தகுந்த ஸ்திரீகளை விவாகச் செய்து வைத்ததுமன்றி பெண்களுக்கும் தகுந்த புருஷர்களை தேடி விவாஹஞ் செய்வித்தார். அந்தப் புத்திரர் களுக்கு ஒவ்வொருவர்களுக்கும் தனித்தனியே நூறு புத்திரர்கள் உண்டானார்கள். அதனால் பாஞ்சால தேசத்தில் புரஞ்சனனுடைய வம்சமானது விருத்தி யாயிற்று. அப்பொழுது அவ்வரசர் தம்முடைய புத்திரர்களையும் அவர்களுடைய புத்திரர்களையும் பார்த்து அவர்களிடத்தில் அபிமானம் வைத்து விஷயங்களில் மூழ்கியிருந்தார். பின்னுமவர் நீர் யாகங்களை அனுஷ்டித்தது போல் பலவகையான பசுவை உத்தேசித்து யாகங்களைச் செய்து, அவைகளில் பசுக்களைக் கொன்று தேவர்களையும், பிதிருக்களையும், பூதபதிகளையும், பூஜித்தார். இப்படி குடும்ப விஷயத்தில் ஆசையுள்ளவரும், தமக்கு அனுகூலமான கர்மங்களைச் செய்வதில் ஜாக்கிரதை யுற்றவருமான புரஞ்சனருக்கு ஸ்திரீகளிடத்தில் மிகுந்த ஆசையுள்ளவர்களுக்கு எது விரோதியோ, அந்த ஜரை (கிழத்தனம்) நேர்ந்தது.

13–18 அப்பொழுது சண்டவேகனென்ற ஒரு கந்தர்வராஜன் இருந்தான். அவனுக்கு மிக்க பலிஷ்டர் களான முந்நூற்று அறுபது கந்தர்வர்கள் வேலைக்காரர் களாக இருந்தார்கள். மேலும் அவனுக்கு வெண்மை நிறமுள்ளவர்களும், கருமை நிறமுள்ளவர்களுமான முந்நூற்று அறுபது ஸ்திரீகள் வேலைக்காரிகளாக இருந்தார்கள். அந்தச் சண்ட வேகனுடைய வேலைக் காரர்கள் புரஞ்சனனுடைய பட்டணத்தைப் பிடித்துக்

கொள்ள யத்தனித்தார்கள். அப்பொழுது அந்தப் பட்டணத்துத் தலைவனாகிய பிரஜாகரன் என்பவன் அந்த எழுநூற்றிருபது கந்தர்வர்களுடன் தானொரு வனாக நூறு வருஷம் யுத்தம் செய்தான். அந்தப் பிரஜாகரன் வெகுகாலம் யுத்தம் செய்தும் எதிரிகள் அநேகர்களாக விருந்துபடியால், தான் களைப்படைந்து பிராண சம்சயத்தை அடைந்து பட்டணத்து ஜனங் களுடனும், பந்துக்களுடனும் மிகவும் கவலை யடைந்தான். அந்தப் புரஞ்சனன் பாஞ்சால தேசத்தில் தம்முடைய வேலைக்காரர்களால் கொடுக்கப்படும் வஸ்துக்களைப் புஜித்து, ஸ்திரீயால் ஜயிக்கப்பட்டு பட்டணத்துக்கு நேர்ந்த பயத்தை அறியாதவராக வேயிருந்தார்.

19–30 இப்படியிருக்கையில் காலனுடைய பெண் துர்பகா என்னும் பெயருள்ள ஒருத்தி தனக்குத் தகுந்த புருஷனைத் தேடி, மூவுலகமும் அலைந்தாள். "ஓ பிராசன பார்ஹிஸ்ஸே! அவளைக் கல்யாணஞ் செய்து கொள்ள ஒருவரும் சம்மதிக்கவில்லை; அவள் முன் காலத்தில் தன்னை அங்கீகரித்த பூருவிடம் சந்தோஷித்து அவருக்கு வரத்தை (ராஜ்யத்தை) கொடுத்தவள், நான் ப்ரஹ்மலோகத்திலிருந்து பூமியில் சஞ்சரிக்கும் பொழுது தெய்வச் செயலாக என்னைக் கண்டாள்; தன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டாள்; அதற்கு நான் சம்மதிக்காததனால் அவள் என்னை நோக்கி, "ஓ முனியே! என்னுடைய வேண்டுக்கோளின்படி நீர் நடவாததினால் நீர் எப்பொழுதும் ஒரே விடத்தில் இல்லாமல் அலைந்து கொண்டிருப்பீர்" என்று நிவர்த்திக்க முடியாத சாபத்தைக் கொடுத்தாள். பின்பு

நான் அந்தக்கால கன்னிகையை நோக்கி, யவனர்களுக்கு அதிபதியான பயன் என்பவனைக் கல்யாணம் செய்துகொள்" என்று சொன்னேன். அதனைக் கேட்டு அவள் பயனிடம் சென்று, "ஓ வீர! யவனர்களுக்கு அதிபதியான உம்மை நான் வரிக்கிறேன்; உம்முடைய விஷயமாய்ச் செய்யப்பட்ட சங்கல்பமானது ஒரு பொழுதும் நாசமடைகிறதில்லை. லோகத்திலும் வேதத்திலும் எதனைக் கொடுக்கலாமென்றும், பிரதிக்ரஹிக்கலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறதோ அதனைப் பிறர் யாசிக்க எவன் கொடுக்கவில்லையோ, கொடுப்பதை எவன் பெற்றுக் கொள்ளவில்லையோ, அவ்விருவர்களும் அக்ஞர்கள். அவர்களைப் பற்றி சாதுக்கள் துக்கிக்கிறார்கள். உபத்திரவமடைந்தவர் களிடத்தில் தயை செய்வதே புருஷனுக்கு தர்மம். ஆகையால் என்னிடம் தயைசெய்து சந்தேகமின்றி கல்யாணம் செய்துகொள்ளும்" என்று வேண்டிக் கொண்டாள். அதனைக் கேட்ட யவனேசுவரன் எல்லாருக்கும் மரணமுண்டு பண்ண வேண்டுமென்ற எண்ணமுள்ள அந்தப் பெண்ணை நோக்கி, "நீ அஸத்தான ஸ்திரீகளுக்குள் சிறந்தவள். அதனால்தான் உன்னை ஒருவரும் விரும்பவில்லை. ஆனாலும் உனக்குத் தகுந்த புருஷன் ஒருவன் இருக்கிறான். நான் ஞானதிருஷ்யால் தெரிந்து கொண்டேன. இந்த லோகம் முழுவதும் உனக்கு புருஷனே. நீ ஒருவருக்கும் தெரியாத நடையுடையவளாகக் காமத்தால் உண்டு பண்ணப்பட்ட இந்த லோகத்தை அனுபவித்துக் கொண்டிரு. என்னுடைய யவன ஸைன்யத்துடன் சேர்ந்து பிரஜைகளை நாசஞ்செய்வாய். ப்ரஜ்வார னென்கிற இவன் (வைஷ்ணவ ஜ்வரம்) எனக்கு சஹோதரன்; நீ எனக்கு சஹோதரியாக இருக்கக்

கடவாய். உங்களிருவர்களுடன் இந்த லோகத்தில் பயங்கரமான சைன்யத்துடன் ஒருவருக்கும் தெரியாமல் சஞ்சரிக்கிறேன்" என்ற சிரித்துக் கொண்டு சொன்னான்.

நோட்டு

பிள்ளைகள்–இந்திரியங்களுடைய மாறுதல்கள். பெண்கள்–புத்தியின் வியாபாரங்கள், பிள்ளைகள் 111 என்றும் பெண்கள் 110 என்றும் சொல்லியிருப்பதால் கிருஹஸ்தர்களுக்குப் பெண்கள் குறைந்தும், புத்திரர்கள் அதிகர்களாகவுமிருப்பதே அழகு என்று காட்டப் பட்டது. சண்டவேகன்–பயங்கரமாகிய வேகமுள்ள காலம். கந்தர்வர்கள்–முந்நூற்று அறுபது பகல்கள், ஸ்திரீகள்–இராத்திரிகள். சுக்லபக்ஷ ராத்ரிகள் வெண்மை நிறமுள்ளவை. கிருஷ்ணபக்ஷ இராத்ரிகள் கருமைநிறமுள்ளவை. காலிகன்னிகா–ஜரையென்று சொல்லப்படும் கிழத்தனம். பயன்–மிருத்யுவே பயனெனப்படுகிறான்.

அத்தியாயம்–28

புரஞ்சனன் ஸ்திரியாக மாறினது

1–28. "ஓ பிராசீன பர்ஹிஸ்ஸே! பயனென்ப வருடைய சைன்யங்கள் மிருத்யுவின் ஆஞ்ஞையின்படி பிரஜ்வாரன், காலகன்யை ஆகிய இவர்களுடன் பூமியில் ஸஞ்சரித்தார்கள், ஒரு கால் அவர்கள் பூமியிலுள்ள ஸகல விதமான போகத்தால் நிறைந்ததும், முதிர்ந்த வயதுள்ள ஸர்ப்பத்தால் காப்பாற்றப்பட்டது மான புரஞ்சனனுடைய பட்டணத்தை முற்றுகை செய்தார்கள். கால கன்னிகையென்பவள் புரஞ்சன னுடைய பட்டணத்தை பலாத்காரமாக அனுபவித்து வந்தாள். அவளால் அனுபவிக்கப்படும் புருஷன் உடனே பலமற்றவனாக ஆகிவிடுவான். அவளால் அனுபவிக்கப்படும் அந்தப்பட்டணத்தில் நாலு பக்கங் களிலும் யவனனுடைய சைன்யங்கள் பிரவேசித்து மிகவும் உபத்திரவப்படுத்தினார்கள். அந்தக் கால கன்னிகை பட்டணத்தில் பிரவேசித்தது முதல் அந்தப் பட்டணத்திற்கு அபிமானியும் குடும்பத்தில் மமதை (என்னுடையது என்ற புத்தி) உள்ளவனுமான புரஞ்சனன் பலவகையான தாபங்களை யடைந்தான். அப்பொழுது புரஞ்சனனுக்குச் சரீரத்தில் சோபை குறைந்தது. அவன் மிகவும் தீனனாகவும், விவேகமற்ற வனாகவுமிருந்தான். அவனுடைய ஐசுவரியம் கந்தர்வர்களாலும், யவனர்களாலும் அபஹரிக்கப்பட்டது. அந்தப் பட்டணமானது நாசமாயிற்று. புத்திரர்களும், பேரர்களும், மந்திரி முதலியவர்களும், பத்தினியும் புரஞ்சனனிடத்தில் பிரீதியில்லாதவர்களாக இருந்தது மன்றி விரோதிகளாயுமிருந்தார்கள். அந்தப்

பாஞ்சாலதேசம் முழுவதும் சத்துருக்களால் பீடிக்கப் பட்டிருந்தது. புரஞ்சனன் காலகன்னிகையால் பீடிக்கப் பட்டான். இவைகளெல்லாவற்றையும் பார்த்து அவ்வரசன் அதற்குப் பதில் செய்ய முடியாதவனாக மிகுந்த கவலையடைந்தான். ஆனாலும் முன் அனுபவிக்கப் பட்ட காமங்களைத் திரும்பவும் அனுபவிக்க வேண்டு மென்ற எண்ணமுள்ளவனாக இருந்தான். ஆனாலுமவன் புத்திரர்கள். ஸ்திரீ ஆகிய இவர்களுடைய பிரீதி இல்லாததாலும் அந்த நகரமானது கந்தர்வர்களாலும் யவனர்களாலும், காலகன்னையாலும் நாசம் பண்ணப் பட்டிருந்தாலும் அதைவிட்டு வெளியே போவதற்கு முயன்றான். ஆனாலும், அதனை விட்டுபோக உண்மையில் ஸம்மதமில்லை. இந்த சமயத்தில் பயனென்பவனுடைய தங்கையாகிய பிரஜ்வாரன் அவ்விடம் வந்து தன்னுடை சஹோதரனுக்குப் பிரியத்தைச் செய்யவேண்டுமென்ற விருப்பத்தால் அந்தப் பட்டணத்தை எரித்தான். இப்படி அந்தப் பட்டணமானது எரியும் பொழுது அதற்கு அபிமானியான புரஞ்சனன், பட்டணத்து ஜனங்கள், தன்னுடைய பத்தினி, புத்திரன் முதலியவர்கள் ஆகிய இவர்களுடன் மிக்க துயரத்தையடைந்தான். இப்படி அந்த நகரத்தில் வஸிக்கமுடியாமல் உபத்திரவம் நேர்ந்தபடியால் மரத்தின் பொந்திலிருந்து ஸர்ப்பம் கிளம்புவதுபோல அதிலிருந்து வெளியில் செல்ல விரும்பினான். கந்தர்வர்களால் கைகால்கள் முறிக்கப் பட்டவனும், பௌருஷமற்றவனுமான அந்தப் புரஞ்சன னுடைய கழுத்தை யவனர்கள் பிடித்துக் கொண்டார் கள். அப்பொழுது அவன் அழுததுமன்றிப் பெண்கள் புத்திரர்கள், வீடு, பொக்கிஷம் முதலியவைகளை 'நான் என்னுடையது' என்று அபிமானத்தால்

தன்னுடையதாக நினைத்து, பத்தினியை விட்டுப் பிரிதல் நேர்ந்த காலத்தில் தனக்குள் யோசிக்கலானான். எப்படியெனில், நான் பரலோகஞ் சென்ற பின் அநாதையான என்னுடைய பத்தினி தனியாகக் குழந்தைகளுடன் துக்கப்பட்டுக்கொண்டு எப்படி ஜீவிக்கப்போகிறாள் ? நான் புஜிப்பதற்கு முந்தி அவள் புஜிக்கமாட்டாள். நான் ஸ்நானம் பண்ணாமலிருந்தால் அவளும் ஸ்நானம் செய்யமாட்டாள், நான் கோபங் கொண்டால் அவள் பயப்படுவாள். நான் அதட்டினால் மௌனமாக இருப்பாள். ஒவ்வொரு சமயத்திலும் எனக்குத் தக்க ஆலோசனை சொல்லி, புத்தி புகட்டுவாள். நான் தேசாந்தரம் போயிருந்தால் துக்கப்படுவாள். சூரனைப்பெற்றவளானாலும், பர்த்தாவினுடைய விரஹத்தை ஸஹியாமல் மரணம் அடைகிறதென்ற கிருஹஸ்த தர்மத்தை யனுஸரிப்பாள். மேலும் சமுத்திரத்தின் மத்தியில் படகு உடைந்து விட்டால் அதிலிருந்து ஜனங்கள் கஷ்டப்படுவது போல என்னுடைய ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் நான், பரலோகம் சென்றபின், மிகவும் சிரமப் படுவார்களே என்று யோசித்தான். இப்படி தீன புத்தியினால் துக்கித்தவனுமான

அவனைப் பிடிப்பதற்காகப் பயமென்பவன் அவ்விடம் வந்தான். பிறகு அந்த யவனேசுவரன் பசுவைப்போல புரஞ்சனனைக் கட்டி, தன்னுடைய வீட்டிற்குக் கொண்டு போனான். அப்பொழுது புரஞ்சனனுடைய வேலைக்காரர்கள் அழுதுகொண்டு அவன்பின் சென்றார்கள் மேலும் அந்த பட்டணத்தைக் காப்பாற்றிக்கொண்டிருந்த ஸர்ப்பமும், யவனங்களால் பிடிக்கப்பட்டு அவர்களுடன் செல்ல, அந்தப் பட்டணம் ஸ்வரூப நாசத்தையடைந்து காரணரூபமாக

ஆயிற்று. அப்பொழுது புரஞ்சனனை யவனர்கள் பலாத்காரமாய் இழுத்துக் கொண்டுபோனதால், அவன் விசேஷ துக்கத்தை யடைந்ததுமன்றி முந்தியிருந்த தோஷர்கள் ஒருவரையும் பார்க்கவில்லை. அப்பொழுது அந்தப் புரஞ்னனால் முந்தி யாகத்தில் ஹிம்ஸிக்கப் பட்ட பசுக்கள் இவர் செய்த குற்றத்தை நினைத்துக் கொண்டு மிகுந்த கோபத்துடன் கோடாரிகளால் அந்தப் புரஞ்சனனைப் பிளந்தன. அப்பொழுது அந்தப் புரஞ்சனன் கரையற்றதான நகரத்தில் மூழ்கி விவேகமில்லாமல் அநேக வர்ஷங்கள் நரகத்தை யனுபவித்து தன் பத்தினியைமனதில் நினைததுக் கொண்டிருந்ததனால் விதர்ப்பதேசத்தரசனுக்கு பெண்ணாகப் பிறந்தான். (மரண காலத்தில் எதை நினைத்துக்கொண்டு உயிரை விடுகிறானோ அந்த ஜன்மத்தையே அடைகிறான்.)

29–42. பின்பு மிக்க சூரனாகிய மலயத்வஜ பாண்டியன் மற்ற அரசர்களை ஜயித்து விதர்ப் பனுடைய பெண்ணை விவாஹம் செய்து கொண்டார். அந்த மலயத்வஜருக்கு வைதர்பியினிடத்தில் ஒரு பெண்ணும், ஏழு பிள்ளைகளும் பிறந்தார்கள். அவ்வேழு பேர்களும் ஏழு திரர்விட தேசத்தரசர்கள். அவர்களெல்லோருக்கும் அற்புதக் கணக்கான பிள்ளைகள் பிறந்தார்கள். அந்த வம்சத்திய பல அரசர்களால் இப்பூமி பிந்திய மன்வந்தரங்களிலும் காப்பாற்றப்படுகிறது. மலயத்வஜருடைய பெண்ணாகிய த்ருதவிரதை என்பவளை அகஸ்தியர் கல்யாணம் செய்து கொண்டு அவளிடத்தில் திருடசுருதர் என்னும் ஒரு புத்திரனை உண்டுபண்ணினார். அவருடைய புத்திரன் இத்மவாகரென்பர். மலயத்வஜ

பாண்டியர் தம்முடைய புத்திரர்களுக்குப் பூமியைப் பிரித்துக்கொடுத்து ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை ஆராதிக்க விரும்பி, சூலபர்வதம் சென்றார். அவருடைய பத்தினியான வைதர்ப்பியும், புத்திரர்கள், போகங்கள், வீடு முதலியவை ஆகிய இவைகளை விட்டுச் சந்திரனை சந்திரிகை அனுஸரிப்பது போலப் பர்த்தாவினுடைய பின் சென்றாள். தாம்ரபர்ணீ. நவோதகா என்ற நதிகள் அங்கு ஓடுகின்றன. அவைகளில் அந்த அரசன் ஸ்நானம் பண்ணுவதாலும் ஆசமனம் செய்வதாலும் இரண்டு விதமான (மானஸம், காயிகம்) பாபங்களையும் நிவர்த்தித்துக்கொண்டு கிழங்குகள், பழங்கள், வேர்கள், புஷ்பங்கள், இலைகள், திருணங்கள், ஜலம் ஆகிய இவைகளைப் புஜித்துக் கொண்டும் தபஸ் செய்தார். அதனால் அவருடைய சரீரம் இளைத்தது. குளிர், உஷ்ணம், காற்று, மழை, பசி, தாஹம், பிரியம் அப்ரியம், ஸுகம், துக்கம், இவைகளை ஜயித்தார். மேலும் தபஸ்ஸினாலும் வித்தையினாலும், கர்மவாசனை களை யொத்து, இந்திரியம் பிராணன், சித்தம் இவை களை ஜயித்து ஆத்மாவைப் ப்ரஹ்மத்தினிடம் சேர்த்தார். பின்னுமவர் ஸ்ரீ வாஸுதேவரிடத்தில் சித்தத்தைச் செலுத்திக் கட்டைபோல ஆசையாமல் தேவமானத்தால் நூறு வர்ஷங்கள் தபஸ் செய்தார். அதனால் பகவானைத் தவிர வேறு ஒன்றும் அவருக்குப் புலப்படவில்லை. இன்னுமவர் ஆத்மா வியாபகராகையாலும், தேஹம் முதலியவைகளைப் பிரகாசிக்கச் செய்பவராகையாலும், அந்தக் கரணத்திற்கு. சாக்ஷியாக இருப்பதாலும், சரீரம் முதலியவைகளை விட வேறானதென்று அறிந்து மற்ற விஷயங்களில் ஒழிவடைந்தார். ஸ்வப்பனத்தில் ஆத்மா ஸாக்ஷி பூதனென்று நன்றாய்த் தெரிய வருகிறது. ஸ்ரீ

மஹாவிஷ்ணுவாகிய குருவினால் நேரில் சொல்லப் பட்டதும், எங்கும் பிரகாசிப்பதுமான தீபத்தால் ஆத்மாவைப் பரப்ரஹ்மமாகவும், பரப்ரஹ்மத்தை ஆத்மாவாகவும் பாவித்து ஸம்ஸாரத்திலிருந்து நிவிருத்தியடைந்தார்.

43–50. அந்த மலயத்வஜருடைய பத்தினியாகிய வைதர்ப்பியானவள் மிகவும் தர்மத்தை யறிந்தவளா கையால் மரவுரியை உடுத்திக்கொண்டு விரதங்களை அனுஷ்டித்து இளைத்த சரீரமுள்ளவளாக, ஒற்றைப் பின்னளுள்ளவளாக பர்த்தாவுக்குப் பணிவிடை செய்துகொண்டு, போகங்களில் ஆசையை யொழித்து ஜ்வாலையற்ற அக்னிபோலப் புருஷனுக்கு ஸமீபத்தில் இருந்தாள். ஆனால் பர்த்தா சரீரத்தை விட்டுவிட்டார் என்பதை அறியாதவளாகையால் முன்போலச் சிசுருஷை செய்தும், அவருடைய பாதங்களைப் பூஜித்தும், அவைகளில் உஷ்ணம் காணப்படாததினால், நடுக்கம் அடைந்து கூட்டத்தை விட்டுப்பிரிந்த பெண்மான்போல தன்னைப்பற்றித் துக்கித்துக் கொண்டு கண்ணீரைப் பெருக்கினாள். அதனால் அவளுடைய ஸ்தனங்கள் நனைந்தன. பின்னுமவள், "ஓ ராஜரிஷியே! எழுந்திரும்; எழுந்திரும்; ஸமுத்திரத்திற்குட்பட்ட இந்தப் பூமியானது திருடர்களான க்ஷத்ரியாதமர்களிடம் இருந்து பயப்படுகிறது. அதனைக் காப்பாற்றும்" என்று அவருடைய காலில் விழுந்து அழுது. கட்டைகளால் சிதையுண்டாக்கி அதில் அவருடைய சரீரத்தை எரித்து, தானும் உடன்கட்டை ஏறுவதற்கு யத்தனித்தாள்.

51–55. அந்த ஸமயத்தில் வெகு நாளாகத்

தோழனாகிய அந்தப் ப்ராஹ்மணன் (அவிக்ஞாதன்) அவ்விடம் வந்து இனிமையான வார்த்தைகளை சொல்லி அவளை ஸமாதானம் செய்து, "நீ யார்? யாருடைய பெண்? இதோ படுத்திருப்பவன் யார்? எதற்காகத் துக்கிக்கிறாய்? நான் தோழனென்று உனக்குத் தெரியுமா? என்னால் முன்னே பலவகையான சுகத்தை நீ அனுபவித்தாய். ஆனால் என்னை இன்னாரென்று நீ அறியாய். ஆனாலும் அவிஞ்ஞாதனென்ற ஒரு தோழன் உனக்கு இருந்ததாக ஞாபகமிருக்கிறதோ? ஓ தோழனே (புருஷன் கூப்பிடுவது போல் அழைத்தது முன் ஜன்மத்தில் புருஷனாக இருந்தாய் என்பதைக் குறிக்கிறது) நாமிருவர்களும் ஹம்ஸபக்ஷிகளாக மானஸ ஸரஸ்ஸில் அநேக வர்ஷங்கள் வஸித்தோம். ஆனால் நமக்கு வஸிக்கும் வீடு நிலையில்லை. அப்படியிருக்கும் பொழுது நீ என்னை விட்டுப்பிரிந்து தனியாகக் கிராம்யசுகத்தில் ஆசைப்பட்டுப் பூமிக்குச் சென்று, அவ்விடத்தில் ஒரு பெண்ணால் உண்டுபண்ணப் பட்டதும் ஐந்து தோட்டங்களுள்ளதும், ஒன்பது வாசல்களுள்ளதும், காவற்காரனுள்ளதும் மூன்று பிரகாரங்களுள்ளதும், ஆறு குடும்பங்களுள்ளதும் ஐந்துவிபணங்களுள் ஐந்து ஸ்வபாவங்களுள்ளதும், ஸ்திரீயை அரசனாகவுடையதுமான நகரத்தைப் பார்த்தாய்"

56–57. இந்திரிய விஷயங்கள் ஐந்தும் தோட்டங்கள் மூக்கு முதலிய ஒன்பது துவாரங்களே வாசல்கள், பிருதிவி,அப்பு, தேஜஸ் பரிகாரங்கள், இஷ்டமான விஷயங்களைக் கொடுக்கும் இந்திரியங் களே குடும்பங்கள். கிரியா சக்தியே விபணங்கள். ஐந்து பூதங்களே அழிவற்ற பிரகிருதி சக்திக்கு

ஸ்வாதீனனாகிய புருஷன் இதில் பிரவேசித்து, தன்னுடைய ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்ளவில்லை.

58–65. "அந்தப் பட்டணத்தில் நீ பெண்ணாசை பிடித்து ஆத்மஞானமற்று ஸ்திரீயுடன் ரமித்துக் கொண்டிருந்த படியால் அவளுடைய சம்பந்தத்தால் இம்மாதிரியான கஷ்ட தசையை அடைந்தாய். நீ விதர்ப்பனுடைய பெண்ணல்ல; இவன் உனக்குப் பதியுமல்ல; புரஞ்சனி என்ற பெண்ணால் ஒன்பது வாசல்களுள்ள பட்டணத்தில் நீ அடைக்கப்பட்டாயல்லவா? இதுதான் என்னால் உண்டுப்பண்ணப்பட்டமாயை. அதனால் புருஷனாகிய ஆத்மாவை ஸ்திரீயாக நினைக்கிறாய். நாமிருவர்களும் ஹம்ஸர்கள்; சுத்தர்கள்; நம்முடைய ஸ்வரூபத்தை சொல்லுகிறேன்; கேளும் நான்தான் நீர்; எனக்கும் உமக்கும் பேதமில்லை. வித்வான்கள் உமக்கும் எனக்கும் கொஞ்சமேனும் பேதமிருக்கிறதாக நினைக்கமாட்டார்கள். புருஷன் எப்படி தன்னுடைய தேஹத்தை கண்ணாடியில் பார்க்கும்பொழுது பெரிதாகவும், ஒன்றாகவும் பார்க்கிறானோ, அவனே அதே சரீரத்தைப் பிறருடைய கண்ணில் மேற்சொல்லியபடியல்லாமல் மாறுதலாகப் பார்க்கிறானோ. அப்படிப்போல நம்மிருவர்களுக்கும் பேதமிருப்பதாக தோற்றமே யொழிய உண்மையில் பேதமில்லை. (அவித்யையாலும், உபாதியாலும் பேதமேற்படுகிறது) என்று அந்த ஹம்ஸம் சொல்ல, அதனால் விவேகமுண்டாகி, துக்கமற்றவனாகி வெகு நாளாக மறைந்திருந்த ஸ்வரூபஞானத்தை ஸ்திரீயாயிருந்த ஹம்ஸமானது அடைந்தது. ஓ பிராசீனபர்ஹிஸ்ஸே! ஸகல ஜகத்ரூபியான பகவான் அதீந்த்ரியத்தில் (அப்ரத்யக்ஷம்) பிரியமுள்ளவராகையால் இந்த ஆத்ம தத்துவத்தைக் கதாவியாஜமாக உமக்குச் சொன்னேன்" என்றார்.

அத்தியாயம்–29

நாரதர் தத்துவத்தை உபதேசித்தது

1. அதனைக் கேட்ட பிராசீனபர்ஹிஸ் என்பவர் நாரதரை நோக்கி, "பகவன்! உம்முடைய வார்த்தைக்குச் செவ்வையாக எனக்குப் பொருள் விளங்கவில்லை. அது கவிகளுக்குத் தெரியுமேயல்லாமல் கர்மஜடர்களான எங்களுக்குத் தெரியுமா? ஆனதால் அதனை ஸ்பஷ்டமாகச் சொல்ல வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

2–25 அதனைக் கேட்ட நாரதர் பிராசீனபர்ஹிஸ்ஸை நோக்கி, "புரஞ்சனனென்பவன் ஜீவனேயாம். தன்னுடைய கர்மங்களால் சரீரமாகிய பட்டணத்தை உண்டுபண்ணிக் கொள்வதால் புரஞ்சனென்று பெயர் கிடைத்தது. அந்தச் சரீரங்கள் ஒரு காலுள்ளதும், இரண்டு கால்களுள்ளதும், மூன்று கால்களுள்ளதும், அநேக கால்களுள்ளதும், காலில்லாததுமாகப் பலவகையாக இருக்கின்றன. அவிஞ்ஞாதரென்று ஒரு தோழனிருப்பதாகச் சொன்னோமல்லவா? அவர் பரமாத்மா; நாமங்களாலும், கர்மங்களாலும், குணங்களாலும் அறியப்படாதவராகையால் அவிஞ்ஞாதரென்று சொல்லப்பட்டது. ஜீவன் எப்பொழுது பிரகிருதியின் குணங்களெல்லாவற்றையும் (ஞானேந்திரிய, கர்மேந்திரிய விஷயங்களை) அனுபவிக்க வேண்டுமென்று விரும்புகிறானோ, அப்பொழுது ஒன்பது துவாரங்களுள்ளதும், இரண்டு கைகளுள்ளதும், இரண்டு கால்களுள்ளதுமான சரீரத்தையே நல்லதென்று நினைத்து அடைகிறான், 'நான், என்னுடையது'

என்ற அபிமான புத்தியே ஸ்திரீயென்று சொல்லப் படுகிறது. அதனுடைய ஆசிரயத்தாலேயே ஜீவன் இந்திரியங்களைக் கொண்டு விஷயங்களை அனுபவிக் கிறான்: சப்தம் முதலிய விஷயங்களைக் கிரகிக்கும் ஞானேந்திரியங்களும், கொடுப்பது முதலிய கர்மத்தைச் செய்யும் கர்மேந்திரியங்களும் தோழர்களென்று சொல்லப்பட்டன. இந்திரிய வியாபாரங்களையே தோழிகளென்று சொன்னேன். ஐந்து வியாபாரங்களுள்ள பிராணனையே ஐந்து தலையுள்ள ஸர்ப்பம் என்று சொன்னேன். பதினோரு படர்களுக்கதிபதியென்பது மனதாகும். அதுவே இருவகையான இந்திரியங் களுக்கும் அதிபதியாயுள்ளது. சப்தம் முதலிய ஐந்து விஷயங்கள் பிரகாசிப்பதால் பாஞ்சாலமென்று சொல்லப்பட்டது. மேலும் இரண்டு கண்கள், இரண்டு மூக்குகள், காதுகள், முகம், சிச்னம், குதம் என்ற ஒன்பது துவாரங்களுள்ள சரீரத்தையே பட்டணமென்று சொன்னேன். அந்தந்த இந்திரியங் களுடன் ஜீவன் இரண்டிரண்டு வாசல்கள் வழியாக வெளியில் செல்லுகிறான். கண்கள், மூக்குகள், முகம் என்ற ஐந்தும் கிழக்குத்திக்கிலிருக்கும் வாசல்கள். வலது காது, தெற்கு வாசல், இடது காது, வடக்கு வாசல், குதமும் சிசனமும் மேற்கு வாசல். கதயோதை, ஆவிர்முகீ என்ற இரண்டு வாசல்களும் கண்கள் விப்ராஜிதமென்பது உருவமேயாகும். அவைகளால் ஜீவன் உருவத்தைக் கிரகிக்கிறான். நளினீ, நாளினீ என்ற வாசல்கள் மூக்குகளேயாம். வாஸனையையே ஸௌரபன் என்று சொல்லப்பட்டது. க்ராணேத்திரியம் ஆனது அவதூதனென்று சொல்லப்பட்டது. முக்ய னென்பவன் முகமேயாம். ரஸஞனென்பவன் ரஸத்தை அறியும் ரஸனமே, விபணனென்பவன் ரஸத்தை

அறியும் ரஸனமே, விடணனென்பவன் வாகிந்திரியமே. அடணனென்பவன் வாக்குவிகாரமே. பஹு தனமென்பது சித்திரான்னமே. பிதிருஹு என்பது வலது காது. இடது காதானது தேவஹு என்று சொல்லப்படுகிறது. சண்டகவேகனுடைய வேலைக் காரர்களான கந்தர்வர்களும், கந்தர்வ ஸ்திரீகளும் முறையே பகல்களும், ராத்திரிகளுமேயாம். முந்நூற்று அறுபது ராத்திரிகளும் பகல்களும் சுற்றுவதால் ஜனங்களுடைய ஆயுஸ்ஸை அபகரிக்கின்றன. கால கன்னிகை என்பவன் கிழத்தனமேயாம். அதனால்தான் ஜனங்கள் ஒருவரும் அவளை விரும்பவில்லை. யவனேச்வரனென்பவன் மிருத்யுவேயாம். அவன் லோகத்தை நாசம் செய்வதற்காக அவளைத் தங்கையாக அங்கீகரித்தான். அவனுடைய ஸைன்யங்களே மனோ வியாதிகளுமாம். அவைகள் பிராணிகளுக்குத் துக்கத்தை உண்டுபண்ணுவதால் சத்துருக்கள். பிரஜ்வாரனென்பது பலவகையான ஜ்வரம், பிரவிருத்தி தர்மத்தைச் சொல்லும் சாஸ்திரம். தக்ஷிண பாஞ்சாலமென்றும் நிவிருத்தி தர்மத்தைச் சொல்லும் சாஸ்திரம் உத்தரபாஞ்சாலமென்றும் சொல்லப்படுகின்றன. (தர்மம், அர்த்தம், காமம், அவைகளின் நிவிர்த்தி இவைகளை நன்றாக நிரூபிப்பதால் பாஞ்சாலமென்று பெயர் கொடுக்கப்பட்டது.) வலது காது பிதிரு யானமென்றும், இடது காது தேவயான மென்றும், அவைகளின் வழியாகச் சுருததரனென்று சொல்லப்படுகிற சிரோத்ரேந்திரியத்துடன் ஜீவன் வெளியில் செல்லு கிறான். ஆஸுரி என்கிற மேற்கு வாசல் சிசனமேயாம். மேற்கு என்றால் கீழே இருக்கிறதென்று அர்த்தம், உபஸ்தேந்திரியத்தையே துர்மதனென்று சொல்லப் பட்டது. குதத்தையே நிருதியென்று சொல்லப்பட்டது.

வைபஸமென்பது நரக துக்கமேயாம். பாயுவே லுப்தகமெனப்படுகிறது; கை, கால்களே குருடர்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளைக் கொண்டு புருஷன் நடக்கிறது, செய்கிறது முதலிய வைகளை அனுஷ்டிக்கிறான், ஹிருதயமே அந்தப் புரமெனப்படுகிறது. மனதேவிபஷமசி எனப்படுகிறது. அந்த மனத்தின் குணங்களான ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய இவைகளால் பிரஸாதம் (தெளிவு) ஸந்தோஷம், மோஹம் ஆகிய இவைகளை அடைகிறான். புத்தியானது எப்படி சொப்பனத்தில் விகாரத்தை அடைகிறதோ, ஜாக்ரதவஸ்தையில் இந்திரியங்களை நடத்துகிறதோ, அப்படி அதனுடைய குணங்களில் சம்பந்தப்பட்ட திருஷ்டாவாகிய ஆத்மா அந்தப் புத்தியின் வியாபாரங்களை அனுஸரிக்கிறான். மேலும் இந்தச் சரீரமே ஜீவனுக்கு ரதமாக இருக்கிறது. இந்திரியங்களே குதிரைகள். ஸம்வத்ஸரம், வயது இவைகளே ரதத்தின் கதி (நடை); புண்யபாபமென்ற கர்மங்களே சக்கரங்கள், ஸத்வம் முதலிய குணங்களே துவஜம், ஐந்து பிராணன்களே ஸந்திபந்தங்கள், மனஸ்ஸே கடிவாளம், புத்தியே ஸாரதி, ஹ்ருதயமே ரதிகன், உட்காருமிடம். சுகதுக்கங்களே ஏர்க்கால்கள். ஐந்து இந்திரிய விஷயங்களே பிரகேஷபம். ஏழு தாதுக்களே ரதத்துக்கு மேல் பரப்பப்படும் புலித்தோல் முதலியவைகள். வெளியிலிருக்கும் விஷயங்களில் செல்லுவதே வேட்டையாடுவது, பதினோரு இந்திரியங்களே ஸைன்யங்கள். இப்படிப் பல வகையான அதிதைவம், அதிபூதம், அத்யாத்மம் ஆகிய இவைகளாலுண்டாகும் துக்கங்களால் ஜீவன் நூறு வருஷ காலம் கஷ்டமடைந்து, தமோகுணத்தால் மூடப்பட்டு பிராணனுடைய தர்மங்களான பசி

தாகங்களையும், இந்திரிய தர்மங்களான அந்தத்வம் (குருடனாயிருக்கை) முதலியவைகளையும், மனத்தின் தர்மங்களான காமம் முதலியவைகளையும், குணங்களற்ற ஆத்மாவிடத்தில் ஆரோபித்து, 'நான், என்னுடையது' என்கிற அபிமானத்தையடைந்து, விவேகமற்றவனாக அற்ப சுகத்தை தியானித்து இந்தச் சரீரத்தில் வசிக்கிறான். பகவானாகிய பரமாத்மா பரமகுருவென்று அறியாமல் ஜீவன் தான் ஸ்வப்ரகாச ஸ்வரூபியானாலும், பிரகிருதியின் குணங்களில் எப்பொழுது ஸம்பந்தப்படுகிறானோ, அப்பொழுது அந்தக் குணங்களில் அபிமானத்தையடைந்து கர்மங்களைச் செய்கிறான். சுக்லம், கிருஷ்ணம், உலோஹிதம் என்கிற கர்மங்களுக்குத் தக்கபடி ஜன்மங்களையும் அடைகிறான். சுக்லகுணத்தால் மிகுந்த பிரகாசமுள்ள லோகங்களை அடைகிறான். உலோஹித குணத்தால் துக்கத்தை உண்டு பண்ணக் கூடிய உலகத்தை அடைகிறான். கிருஷ்ண குணத்தால் மிகுந்த அஞ்ஞானம், துக்கம் இவைகளைக் கொடுக்கக் கூடிய லோகத்தை அடைகிறான். சிலசமயம் புருஷ ஜன்மத்தையும், சிலகாலம் ஸ்திரீ ஜன்மத்தையும், சிலசமயம் நபும்ஸகஜன்மத்தையும் கர்மங்களுக்கும், குணங்களுக்கும் தக்கபடி அடைகிறான். நாயானது பசியால் வருத்தமடைந்து வீடு வீடாக அலைந்தும், தன்னுடைய அதிருஷ்டத்திற்குத் தக்கபடி சிக்ஷையையாவது, ஆகாரத்தையாவது அடைவதுபோல ஜீவன் கர்மங்களையே மனத்தில் வைத்துக்கொண்டு பலவகையான மார்க்கத்தில் மேலும்,கீழும், நடுவிலுமாக அலைந்து, பிரியத்தையாவது அப்பிரியத்தையாவது தெய்வச்செயலாய் அடைகிறான். அதிதைவம், அதிபூதம், அத்யாத்மம் ஆகிய இவைகளாலுண்டாகும்.

மூன்று விதமான துக்கங்களில் ஒன்றாவது ஜீவனை விட்டு விலகுகிறதில்லை. அதை நிவர்த்திக்கும் உபாயத்தை எப்படிச் செய்யமுடியும்? அதை நிவர்த்திப்பதற்குச் செய்யப்படும் உபாயமே துக்க ரூபமாகக் காணப்படுகிறது. எப்படியெனில், பருத்த சுமையைத் தலையில் தூக்கிக் கொண்டு மிகவும் களைப்படைந்த புருஷன் அந்த சிரமத்தை நிவர்த்தித்துக் கொள்ளுவதற்காகச் சுமையை தோளில் இறக்கி வைத்துக் கொண்டால் சிரமம் நிவர்த்தியாகி விடுகிறதா? ஆனதுபற்றி, கர்மங்களால் உண்டாகும் துக்கத்தை நிவர்த்திப்பதற்காகச் செய்யும் உபாயமும் கர்மமயமாக இருப்பதால் அது துக்கத்தைக் கொடுக்குமேயல்லாமல் துக்கத்தை நிவர்த்திக்கிறதில்லை. சொப்பனத்திலுண்டாகும் சொப்பனமானது போலத் துக்கத்தைக் கொடுக்கும். கர்மங்களும், அதன் நிவர்த்திக்காகச் செய்யப்படும் உபாயமும் அவித்தையினால் ஏற்பட்டனவேயாம். சரீரம் முதலிய விஷயங்கள் உண்மையில் மித்யையானாலும் மனமாகிற உபாதியினால் சொப்பனத்தில் போலப் புருஷனுக்கு ஸம்ஸார பந்தத்தை யுண்டுபண்ணுகின்றனவே யொழிய, நிவர்த்தியாகிறதில்லை. ஆகையால் ஆத்மாவிற்கு மேன்மேலும் அனர்த்தத்தைக் கொடுக்கும் ஸம்ஸாரமானது, பகவானிடத்தில் மிகுந்த பக்தி செய்வதால் நிவர்த்தியாகும். மேலும் அந்த பக்தியானது வைராக்யத்தையும் ஞானத்தையும் உண்டுபண்ணும். ஓ ராஜ சிரேஷ்டரே! அந்தப் பக்தியோகமானது பகவானுடைய கதையைச் சிரத்தையுடன் கேட்பதினாலும் அத்யயனம் பண்ணுவதாலும் சீக்கிரத்தில் உண்டாகும். சுத்த சித்தர்களான பகவத் பக்தர்கள் எந்த விடத்தில்

பகவானுடைய குணங்களைச் சொல்வதிலும், கேட்பதிலும் மிகுந்த ஆசையுள்ளவர்களாயிருக்கிறார்களோ, அந்த இடத்தில் பகவத் கதையானது நடக்கும், அவ்விடத்திலேயே மதுவைக் கொன்றவரான ஸ்ரீ பகவானுடைய சரிதமாகிய அமிருதத்தால் நிறைந்த நதிகள் பெரியோர்களுடைய முகமாகப் பிரவஹிக்கும். அந்த அமிருதத்தைப் போதும் என்ற புத்தியில்லாமல் ஸாவதானர்களாக எவர்கள் பானம் பண்ணுகிறார்களோ அவர்களைப் பசி, தாகம், பயம், சோகம், மோகம் ஆகிய இவைகள் பாதிக்கிறதில்லை. பிராணிகள் இயற்கையிலுண்டான மேற்சொல்லிய பசி முதலிய வைகளால் உபத்திரவிக்கப்பட்டுப் பகவத்கதாமிருதத்தில் ஆசைப்படாமலிருக்கிறார்கள். ப்ரஹ்மதேவர், பகவானாகிய பரமசிவன், மனு, தக்ஷர் முதலிய பிரஜாபதிகள், ஸனகர் முதலிய யோகிகள், மரீசி, அத்திரி, அங்கிரஸ், புலஸ்தியர், புலஹர், கிருது, பிருகு, வஸிஷ்டர், நாரதனாகிய நான் ஆகிய இவர்களில்லோரும் ப்ரஹ்மத்தை அறிந்தவர்கள். மிகுந்த விவேகிகளான வித்வான்களும், தபஸ், வித்தை, ஸமாதி முதலிய உபாயங்களால் ஸர்வ ஸாக்ஷியான பரமாத்மாவை எப்பொழுதும் தேடிக்கொண்டிருக்கிறார்களே யொழியத் தெரிந்து கொள்ளவில்லை. ஏனென்றால், மிகுந்த விஸ்தாரமுள்ளதும், கரையற்றதுமான வேதத்தை அத்யயனஞ் செய்து; அதிலிருக்கும் மந்திரங்களிற் சொல்லிய அடையாளமுள்ள இந்திரன் முதலிய தேவர்களைப் பூஜிக்கிறார்கள்; பரமாத்மாவைத் தெரிந்து கொள்கிறதில்லை. பரமாத்மாவானவர் தியானம் முதலியவைகளால் பூஜிக்கப்பட்டு எப்பொழுது பிரஜைகளிடத்தில் அனுக்கிரஹம் செய்கிறாரோ, அப்பொழுது லோக விவகாரத்திலும்,

வைதிக மார்க்கத்தில் இருக்கும் புத்தியை விட்டுப் பரமாத்மாவை உபாஸிக்க முயற்சிப்பான். ஓ பிராசீன பர்ஹிஸ்ஸே! ஆனதால் அஞ்ஞானத்தால் உண்மை போல் தோன்றுகிறவைகளும், கேட்கப் பிரியமான வைகளும், நித்ய வஸ்து ஸம்பந்தமில்லாதவைகளுமான கர்ம பலன்களை விரும்ப வேண்டாம். அற்ப புத்தியுள்ள சிலர் வேதங்கள் கர்மங்களைச் சொல்லுகிற தென்று சொல்லுகிறார்கள். அவர்கள் அக்ஞர் களேயாம். எந்த இடத்தில் ஸாக்ஷாத் பகவான் பிரகாசிக்கிறாரோ, அந்த ஆத்மாவாகிய லோகத்தை வேதம் சொல்கிறதென்பதை அவர்கள் அறியவில்லை. நீர் "நான் அநேக யாகங்களைச் செய்தவன்" என்ற அபிமானத்தை அடைந்து இந்தப் பூமி முழுவதும் கிழக்கு நுனியாகத் தர்ப்பங்களைப் பரப்பி அநேக பசுக்களைக் கொன்று யாகங்களை அனுஷ்டித்தும், ஆத்ம ஞானத்திற்கு உபாயமாகிய வித்தையின் ஸ்வரூபத்தையும், கர்மத்தின் ஸ்வரூபத்தையும் நன்றாய்த் தெரிந்து கொள்ளவில்லை. ஸ்ரீ மஹாவிஷ்ணு ஸகல பிராணிகளுக்கும் ஆத்மாவாக இருப்பவர்; எல்லாவற்றிற்கும் காரணர்; ஈசுவரர்; அவரைச் சரணமடைந்தால் க்ஷேமமுண்டாகிறது. அவர் எல்லாருக்கும் வேண்டியவர். அவரிடத்திலிருந்து கொஞ்சமேனும் பயமுண்டாகிறதில்லை என்று எவன் தெரிந்து கொள்ளுகிறானோ, அவனே வித்வான், எவன் வித்வானோ, அவனே குரு. அவனே ஸ்ரீ மஹாவிஷ்ணு. உம்மால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் சொன்னேன். ரஹஸ்யமான விஷயத்தை நிச்சயமாகச் சொல்லுகிறேன் கேளும்'.

53–55 அற்பமாக ஸஞ்சரிப்பது, புஷ்பம்

தோட்டத்தில் ஸ்திரீயுடன் ரமித்து விளையாடுவதும், வண்டுகளுடைய கானத்தில் ஆசைப்பட்டதும், மற்ற பிராணிகளைக் கொன்று தங்களுடைய வயிற்றை நிரப்பிக் கொள்ளும் செந்நாய்களை லட்சியஞ் செய்யாமல் அவைகளுக்கு முன்செல்லுகிறதும், வேடனுடைய பாணத்தால் பிளக்கப்பட்டதுமான மானைத் தேடிக் கண்டுபிடியும். (ஆத்மாவே மானென்று சொல்லப்படுகிறது) ஸ்திரீகளிருக்கும் வீட்டையே புஷ்பத்தோட்டமென்று சொல்லப்பட்டது. அப்படிமான காமசுகத்தையே அற்ப ஸஞ்சாரமென்று சொல்லப் பட்டது. ஸ்திரீகளுடைய இனிமையான வார்த்தையே வண்டுகளுடைய கானம் என்று சொல்லப்பட்டது. புருஷனுடைய ஆயுஸ்ஸை அபகரிக்கின்ற அகோராத்ரம் முதலிய காலங்களே செந்நாய்களென்று சொல்லப்பட்டன. (அவைகளை லட்சியம் செய்யாமல் ஆத்ம விஷய ஆசைகொண்டு கிருகத்தில் சஞ்சரிக் கிறான் என்று தாத்பர்யம்.) எப்பொழுதும் புருஷனுடைய ஆயுஸ்ஸை அபகரிக்கத் தயாராயிருக்கும் மிருத்யுவே வேடனென்று சொல்லப்பட்டது. ஆனதால் நீர் ஜீவனுடைய சரிதத்தை மானுடைய சரிதத்திற் கொப்பானது என்று நினைத்து ஹ்ருதயத்தில் சித்தத்தில் கர்மங்களையும் அடக்கிக்கொள்ளும். காமிகளுடைய வார்த்தையால் நிறைந்த கிருஹஸ்தா சிரமத்தை விட்டுவிடும். பரம ஹம்ஸர்களுக்குச் சரணமான ஈசுவரனிடத்தில் பக்தி செய்யும். இப்படிக் கிரமமாக வைராக்கியத்தை அடையவேண்டும்

56–59 அதனைக் கேட்ட பிராசீனபர்ஹிஸ் என்ற அரசன் நாரதரை நோக்கி, "ஓ ப்ராஹ்மண! தங்களால் சொல்லப்பட்டதைக் கேட்டு மனதில் நன்றாய்

விசாரித்தேன். தங்களால் சொல்லப்பட்ட ஆத்மதத்து வத்தை எனக்குக் கர்மோபதேசஞ் செய்த உபாத்தியார்கள் அறியார்கள்? அறிந்திருந்தால் எனக்கு உபதேசிக்காமலிருப்பார்களா? அதனால் அந்த விஷயத்திலிருந்த மிகுந்த சம்சயமானது உம்மால் நிவர்த்திக்கப்பட்டது. ஆனால் மற்றொரு சம்சயமி ருக்கிறது. "எந்தப் பரமாத்மாவினிடத்தில் இந்திரியங்கள் செல்லுகிறதில்லையோ, அந்த விஷயத்தில் ரிஷி களானாலும் மோஹிக்கிறார்கள். எந்த சரீரத்தால் புருஷன் கர்மங்களைச் செய்கிறானோ, அந்தச் சரீரத்தை இவ்வுலகத்தில் விட்டுப் பரலோகத்தில் கர்மத்தால் கிடைத்த வேறு சரீரத்தையடைந்து ஜீவன் சுகதுக்கங்களை யனுபவிக்கிறான்" என்று வேதத்தை யறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். மேலும் வேதத்தில் சொல்லிய கர்மங்களை ஜனங்கள் சிரத்தையுடன் அனுஷ்டிக்கிறார்கள். பிறகு அந்தக் கர்மம் நம்மால் காணவில்லை, அது வெகுநாளைக்குப் பிறகு எப்படிப் பலத்தைக் கொடுக்கும்? இந்த சம்சயங்களை நிவர்த்திக்க வேண்டும்' என்று கேட்டார்.

60--82 புருஷன் எந்த சரீரத்தால் கர்மத்தைச் செய்கிறானோ, அந்த ஸ்தூல சரீரம் நாசத்தை யடைந்தாலும்' மனஸாகிய லிங்க சரீரத்துடன் அதன் பலத்தை அனுபவிக்கிறான்; புருஷன் படுத்துத் தூங்கும் அந்த ஸ்தூல தேகத்தை விட்டு லிங்கதேகத்தை அடைந்து தன்னுடைய கர்மாவைப் புஜிப்பதுபோல அந்தத் தேகத்திற்கு சமமான வேறு தேகத்தையாவது, பசு முதலியவைகளின் தேகத்தையாவது அடைந்து லோகாந்தரத்தில் கர்மபலத்தை அனுபவிக்கிறான்' 'நான் ப்ராஹ்மணன்; இது என்னுடையது' என்ற

அகங்காரத்தை அடைந்த மனத்தால் எந்தச் சரீரத்தைப் புருஷன் கிரகித்துக் கொள்ளுகிறானோ, அப்பொழுது அந்தத் தேகத்தால் செய்யப்பட்ட கர்மத்தையும் கிரகித்துக் கொள்ளுகிறான். அதனால் தான் மறுஜன்மம் உண்டாகிறது. ஞானேந்திரியங்கள், கர்மேந்திரயங்கள் இவைகளுடைய பிரவர்த்திகளைக் கொண்டு எப்படிச் சித்திரமானது ஊகிக்கப் படுகிறதோ, அப்படியே சித்தத்தின் வியாபாரங்களால் முன் சரீரத்தால் செய்யப்பட்ட கர்மமானது ஊகிக்கப் படுகிறது. மேலும் இந்த ஜன்மத்தில் பார்க்கப் படாததும், கேட்கப்படாததுமான ஸ்வரூபத்தைச் சொப்பனத்தில் பார்க்கிறானல்லவா? அதனால் முன் ஜன்மத்திய கர்மா இருக்கிறதென்று ஊகிக்கப்படுகிறது. ஓ மகாராஜா! ஜீவன் வாசனையை ஆசிரயித்தவனா கையால் அவனுக்குமுன் தேகத்திய கர்மமிருக்கிறதாக நம்பவேண்டும். முந்தி அனுபவிக்கப்படாத விஷயமானது மனத்தில் தோன்ற நியாயமில்லை. மனுஷ்யனுக்கு முந்திய ஜன்மங்களையும், வரும் ஜன்மங்களையும், நீச ஜன்மத்தையும் மனதே காண்பிக்கிறது. உமக்கு க்ஷேமம் உண்டாகும். முந்திப் பார்க்கப்படாததும், கேட்கப்படாததுமான விஷயம் மனத்தில் தோன்று கிறதற்கு தேசம், காலம், கர்மம், இவைகளே காரணம் என்று நினைக்க வேண்டும். இந்திரியங்களுக்குப் புலப்படும் ஸகல விஷயங்களும் எல்லாருடைய மனத்திலுமிருக்கின்றன. எல்லா ஜனங்களும் மனதுள்ள வர்களே யொழிய மனதற்றவர்களல்ல. சத்வகுணம் நிறைந்ததும் பகவத்தியானத்தில் பரிசுத்தமானதுமான மனத்தில் ஸகல விஷயங்களும் ஒரே காலத்தில் சந்திரனிடத்தில் சேர்ந்த ராகுபோல் பிரகாசிக்கும் அனாதியாகிய புத்தி, மனஸ், இந்திரிய விஷயங்கள்,

குணங்கள் இவைகளுடைய கூட்டமானது எது வரையில் இருக்குமோ, அதுவரையில் நான், என்னுடைய தென்கிற அகங்காரம் விடுகிறதில்லை. சொப்பனம், மூர்ச்சை, உபதாபம், மிருத்யு, ஜ்வரம் இவைகளிலும் இந்திரியங்களில்லாததாலும் மாதா வினுடைய கர்ப்பத்திலிருக்கும் பொழுதும் பால்ய வயதிலும் இந்திரியங்கள் பருக்காமலிருப்பதினாலும் அகங்காரமானது அமாவாஸ்யையில் சந்திரன்போல் காணப்படுகிறதில்லை. சொப்பனத்தில் அனர்த்தங்கள் வருவதுபோல உண்மையில் சரீரம் முதலியவைகள் இல்லாமலிருந்தும், விஷயங்களைப் புருஷன் தியானம் பண்ணுவதால் சம்சாரம் நிவர்த்தியடைகிறதில்லை. இப்படி ஐந்து தன்மாத்திரைகளுள்ளதும், முக்குண ஸ்வரூபமும், பதினாறு விகாரத்தால் விஸ்தார மடைந்ததுமான லிங்க தேகம், சேதனையுடன் கூடினவனே ஜீவனென்று சொல்லப்படுகிறான். புருஷன் யுத்தியினாலேயே தேகத்தை அடைகிறான்; தேகத்தை விட்டுவிடுகிறான், சந்தோஷம், சோகம், பயம், சுகம், துக்கம் இவைகளையும் அடைகிறான். அட்டையானது ஒரு திருணத்தை விட்டு மற்றொரு திருணத்திற்குப் போகும் பொழுது முந்திய திருணத்தை விடாமலேயே பிந்தியதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டும், பிறகு அதை விடுவது போல் மரணத்தையடையும் புருஷனும் வேறு சரீரத்தை அடைந்தே முந்திய சரீரத்தை விடுகிறான். ஓ ராஜசிரேஷ்டரே! பிராணிகளுக்கு மனதே சம்சாரத்தைக் கொடுக்கக்கூடியது. இந்திரியங்களால் விஷயங்களைத் தியானஞ் செய்து கொண்டு புருஷன் கர்மங்களை அடிக்கடி செய்கிறான். கர்மாவினாலே தான் அவித்யையின் பந்தம் ஏற்படுகிறது. சரீரம் முதலியவைகளுக்குக்

கர்மபந்தம் அவித்யையாலேயே ஆனதால் அவை களை நன்றாய்த் தெரிந்து கொள்ளுவதற்காக ஸகல காரணங்களாலும் பகவானைப் பூஜியும். எவரிட மிருந்து இந்த ஜகத் உண்டாகிறதோ, எவரால் காப்பாற்றப்படுகிறதோ அந்த பரமாத்ம ஸ்வரூபமே இந்த ஜகத் என்றும் பக்தி செய்ய வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் பக்தி செய்வதைபோலவே எல்லாப் பிராணிகளிடத்திலும் தடையற்ற ஞானமுள்ள பகவான் வசிப்பதாக நினைக்க வேண்டும். அப்பொழுது சொப்பனம் போல அதிருஷ்டமும் (பார்க்கப்படாதது), (பார்க்கப்பட்டது) திருஷ்டமும், நடந்ததும், நடக்கிறது, நடக்க போவதுமாகிய எல்லாம் நாசத்தையடையும்" என்று பாகவதர்களுக்குள் முக்கியரான நாரதபகவான் ஜீவாத்மா பரமாத்மாக்களுடைய ஸ்வரூபத்தை உபதேசித்து அரசனிடம் விடைபெற்று, சித்தலோகஞ் சென்றார்.

83–86 பிராசீனபர்ஹிஸ் என்னும் அரசன் அதனைக் கேட்டு, புத்திரர்களை யுண்டுபண்ணி ஜனங்களைக் காப்பாற்றுவதை எனது புத்திரர்கள் செய்யவேண்டுமென்று மந்திரிகளிடம் சொல்லி விட்டு, தவத்திற்காகக் கபிலருடைய ஆசிரமம் சென்றார். அவ்விடத்தில் தம்முடைய மனஸ்ஸை ஒருவகையாகச் செய்து ஸ்ரீ கோவிந்தனுடைய பாதாரவிந்தத்தைத் தியானஞ் செய்து ஆசைகளை யொழித்து ஸ்ரீ பகவானுக்குச் சமானராக ஆனார். தேவரிஷியாகிய நாரதரால் கீதாவியாஜமாகச் சொல்லப்பட்ட இந்த அத்தியாத்ம விஷயத்தை யார் கேட்கிறானோ, பிறருக்குச் சொல்லுகிறானோ, அவன் மோட்சத்தை யடைகிறான். பகவானுடைய சரிதத்தால் லோகத்தை

பரிசுத்தப்படுகிறதும் தேவரிஷியாகிய நாரதருடைய முகத்திலிருந்து வந்ததால் சித்த சுத்தியை உண்டு பண்ணக்கூடியதுமான இந்தச் சரிதத்தைக் கேட்பவன் சம்சாரத்தில் மூழ்க மாட்டான். ஸகல பந்தங்களும் அவனுக்கு நிவர்த்தி யாகும். ஓ விதுரரே, ஆச்சரிய கரமான இந்த அத்தியாத்மவிஷயத்தைக் கதா வியா ஜமாக உமக்குச் சொன்னேன். இதனால் கிருஹஸ் தாசிரமத்திலுள்ள அகங்காரமும், கர்ம பலத்தை எப்படி அனுபவிக்கிறது என்கிற சம்சயமும் நிவர்த்தியாகும்.

அத்தியாயம்–30

பிரசேதஸ்ஸுகளின் சரிதம்

1–2. அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி, "ஓ ப்ராஹ்மணோத்தம! பிராசீனபர்ஹிஸ்ஸின் புத்திரர்கள் ருத்ரரால் உபதேசிக்கப்பட்ட கீதத்தாலே ஸ்ரீ மஹாவிஷ்ணுவைச் சந்தோஷப்படுத்தி என்ன கதியை அடைந்தார்கள்? ஓ பிருகஸ்பதியின் சிஷ்யரே! ஸ்ரீமகா விஷ்ணுவுக்குப் பிரியராகிய பரமசிவனால் அனுக்கிரஹிக்கப்பட்ட அந்தப் பிரசேதஸ்கள் மோட்சத்தை அடைந்தார்களென்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் அவர்கள் இவ்வுலகத்திலும், பரலோகத் திலும் எதனை அடைந்தார்கள்" என்று கேட்டார்.

3–20. அதனைக் கேட்ட மைத்ரேயர் விதுரரை நோக்கி "பிரசேதஸ்கள் சமுத்திரமத்தியில் ஜபயக்ஞ மாகிய தபசினால் நிரஞ்சனராகிய ஸ்ரீ மஹா விஷ்ணுவை சந்தோஷப்படுத்தினார்கள். பதினாயிரம் வருஷங்கள் சென்ற பிறகு, புராதனராகிய புருஷன் அவர்களுக்குத் தரிசனம் கொடுத்தார். அந்தப் பகவானுடைய காந்தியால் அவர்களுடைய சிரமமானது நிவர்த்தியாயிற்று. அப்பொழுது பகவான் மேருவின் சிகரத்தில் மேகமிருந்தாற்போல் கருடனுடைய தோளில் \வீற்றிருந்தார். மேலும் பீதாம்பரம் தரித் திருந்தார் கௌஸ்துப மணியால் அலங்கரிக்கப் பட்டிருந்தார் அவர் மிகவும் பிரகாசிக்கும் ஸ்வர்ண மயமான ஆபரணங்களால் பிரகாசிக்கின்ற கன்னங்கள், முகம், கிரீடம் ஆகிய இவைகளுள்ளவர்; எட்டு ஆயுதங்கள், மகரிஷிகள் தேவசிரேஷ்டர்கள் ஆகிய

இவர்களால் சேவிக்கப்பட்டிருந்தார்; கருடனாகிற கின்னரனால் அவருடைய கீர்த்தியானது கானஞ் செய்யப்பட்டிருந்தது (கருடனுடைய இறக்கைகளின் சப்தத்தால்). பருத்தவைகளான எட்டுக் கைகளின் மத்யத்தில் வசிக்கும் லக்ஷ்மீ தேவியினுடைய காந்தி போன்ற சோபையுள்ள வனமாலையால் அலங்கரிக்கப் பட்டவர்; அப்போர்ப்பட்ட பகவான் தம்மைச் சரணமடைந்த பிரசேதஸ்களை நோக்கி மேகம்போல் கம்பீரமாகக் கருணைநிறைந்த பார்வையுடன், "ஓ ராஜபுத்திரர்களே! உங்களுக்கு க்ஷேமமுண்டாகும்; இஷ்டமானதைக் கேட்கலாம் உங்களுடைய பக்தியால் நான் மிகவும் சந்தோஷப் பட்டிருக்கிறேன். உங்களுக்கும் எனக்குமுள்ள பிரீதி விசேஷத்தால் என்னுடைய ஐசுவரியம் முதலியவை உங்களு டையனவேயாம். எந்த மனிதன் ஒவ்வொரு நாளும் உங்களைப் படுக்கையில் நினைத்துக் கொள்கிறானோ அந்த மனிதனுக்கு சஹோர்தரர்களிடத்தில் பிரீதியும், ஸகல பிராணிகளிடத்தில் பிரியமும் உண்டாகிறது. மேலும் எவர்கள் காலையிலும், மாலையிலும் சுத்தர்களாக ருத்ர கீதத்தால் என்னை ஸ்தோத்திரம் செய்கிறார்களோ, அவர்களுக்கு இஷ்டமான வரங்களையும், நல்ல பிரக்ஞையையும் கொடுப்பேன். நீங்கள் தகப்பனாருடைய உத்தரவை சந்தோஷமாக நிறைவேற்றினபடியால் எல்லா லோகத்திலும் உங்களுக்கு மிகுந்த கீர்த்தியுண்டாகும். பின்னும் உங்களுக்கு மிகவும் பிரசித்தியுள்ளவனும், மிக்க குணசாலியும், ப்ரஹ்மபுத்திரர்களுக்குக் குறையாத வனுமான ஒரு புத்திரன் பிறப்பான். அவன் தன்னுடைய வீரியத்தால் அநேக பிரஜைகளை யுண்டுபண்ணி மூவுலகத்தையும் பூர்த்தி செய்வான்.

கண்டு என்னும் மகரிஷி தபஸ் செய்யும்பொழுது அவருடைய தபஸ்ஸைக் கெடுப்பதற்காக இந்திரனால் அனுப்பப்பட்ட ப்ரஹ்மலோசா என்னும் அப்ஸர ஸ்திரீயைக் கண்டு மகரிஷியானவர் மோஹித்து அவளுடன் வெகுகாலம் ரமித்தார். அப்பொழுது ஒரு பெண் பிறந்தது. அந்தப் பெண்ணை அந்த ப்ரஹ்ம லோசை யென்பவள் மரத்தில் போட்டுவிட்டு ஸ்வர்க்கம் சென்றாள். அந்தப் பெண்ணை விருக்ஷங்கள் கிரஹித்துக் கொண்டான. அந்தப்பெண் பசியினால் அழும்பொழுது ஓஷதிகளுக்கு அதிபதியான சோமராஜன் பெருவிரலைக் கொடுத்தார். அதிலிருந்து அமிருதம் பெருகி, அதனால் குழந்தைக்குப் பசி நீங்கியது. உங்களுடைய தகப்பனாராகிய பிராசீன பர்ஹிஸ் பிரஜைகளைச் சிருஷ்டிக்கும்படி ஆக்ஞாபனஞ் செய்து தபஸ் செய்வதால் அவருடைய உத்தரவின்படி நீங்கள் செய்யவேண்டும். அதற்காக அந்தக் கண்டுவின் புத்திரியைக் கல்யாணஞ் செய்து கொள்ளுங்கள். நீங்கள் எல்லோரும் ஒரேவகையான தர்மம், ஸ்வபாவம் உள்ளவர்களாகையால் அவள் ஒருத்தியே உங்கள் எல்லோருக்கும் பத்தினியாக இருப்பாள். உங்கள் எல்லோரிடத்திலும் சமமான பிரீதியுள்ளவளாக இருப்பாள், தேவமானத்தால் பத்து லட்சம் வருஷங்கள் பூமியிலுள்ள போகங்களையும் திவ்யமான போகங்களையும் என்னுடைய அனுக்கிரஹத்தால் அனுபவித்துப் பிறகு என்னிடத்தில் அழிவற்ற பக்தியைச் செய்து, அதனால் சித்த சுத்தியடைந்து சம்சாரத்தில் வைராக்கியத்தையடைந்தும் என்னுடைய லோகம் வருவீர்கள். கிருகஸ்தாசிரமத்திலிருப்பவர் களும் புண்யகர்மங்களைச் செய்து கொண்டு, என்னுடைய கதையைச் சொல்லிக் காலத்தைக்

இவர்களால் சேவிக்கப்பட்டிருந்தார்; கருடனாகிற கின்னரனால் அவருடைய கீர்த்தியானது கானஞ் செய்யப்பட்டிருந்தது (கருடனுடைய் இறக்கைகளின் சப்தத்தால்). பருத்தவைகளான எட்டுக் கைகளின் மத்யத்தில் வசிக்கும் லக்ஷ்மீ தேவியினுடைய காந்தி போன்ற சோபையுள்ள வனமாலையால் அலங்கரிக்கப் பட்டவர்; அப்போர்ப்பட்ட பகவான் தம்மைச் சரணமடைந்த பிரசேதஸ்களை நோக்கி மேகம்போல் கம்பீரமாக்கக் கருணைநிறைந்த பார்வையுடன், "ஓ ராஜபுத்திரர்களே! உங்களுக்கு க்ஷேமமுண்டாகும்; இஷ்டமானதைக் கேட்கலாம் உங்களுடைய பக்தியால் நான் மிகவும் சந்தோஷப் பட்டிருக்கிறேன். உங்களுக்கும் எனக்குமுள்ள பிரீதி விசேஷத்தால் என்னுடைய ஐசுவரியம் முதலியவை உங்களு டையனவேயாம். எந்த மனிதன் ஒவ்வொரு நாளும் உங்களைப் படுக்கையில் நினைத்துக் கொள்கிறானோ அந்த மனிதனுக்கு சஹோதரர்களிடத்தில் பிரீதியும், ஸகல பிராணிகளிடத்தில் பிரியமும் உண்டாகிறது. மேலும் எவர்கள் காலையிலும், மாலையிலும் சுத்தர்களாக ருத்ர கீதத்தால் என்னை ஸ்தோத்திரம் செய்கிறார்களோ, அவர்களுக்கு இஷ்டமான வரங்களையும், நல்ல பிரக்ஞையையும் கொடுப்பேன். நீங்கள் தகப்பனாருடைய உத்தரவை சந்தோஷமாக நிறைவேற்றினபடியால் எல்லா லோகத்திலும் உங்களுக்கு மிகுந்த கீர்த்தியுண்டாகும். பின்னும் உங்களுக்கு மிகவும் பிரசித்தியுள்ளவனும், மிக்க குணசாலியும், ப்ரஹ்மபுத்திரர்களுக்குக் குறையாத வனுமான ஒரு புத்திரன் பிறப்பான். அவன் தன்னுடைய வீரியத்தால் அநேக பிரஜைகளை யுண்டுபண்ணி மூவுலகத்தையும் பூர்த்தி செய்வான்.

கண்டு என்னும் மகரிஷி தபஸ் செய்யும்பொழுது அவருடைய தபஸ்ஸைக் கெடுப்பதற்காக இந்திரனால் அனுப்பப்பட்ட ப்ரஹ்மலோசா என்னும் அப்ஸர ஸ்திரீயைக் கண்டு மகரிஷியானவர் மோஹித்து அவளுடன் வெகுகாலம் ரமித்தார். அப்பொழுது ஒரு பெண் பிறந்தது. அந்தப் பெண்ணை அந்த ப்ரஹ்ம லோசை யென்பவள் மரத்தில் போட்டுவிட்டு ஸ்வர்க்கம் சென்றாள். அந்தப் பெண்ணை விருக்ஷங்கள் கிரஹித்துக் கொண்டான. அந்தப்பெண் பசியினால் அழும்பொழுது ஓஷதிகளுக்கு அதிபதியான சோமராஜன் பெருவிரலைக் கொடுத்தார். அதிலிருந்து அமிருதம் பெருகி, அதனால் குழந்தைக்குப் பசி நீங்கியது. உங்களுடைய தகப்பனாராகிய பிராசீன பர்ஹிஸ் பிரஜைகளைச் சிருஷ்டிக்கும்படி ஆக்ஞாபனஞ் செய்து தபஸ் செய்வதால் அவருடைய உத்தரவின்படி நீங்கள் செய்யவேண்டும். அதற்காக அந்தக் கண்டுவின் புத்திரியைக் கல்யாணஞ் செய்து கொள்ளுங்கள். நீங்கள் எல்லோரும் ஒரேவகையான தர்மம், ஸ்வபாவம் உள்ளவர்களாகையால் அவள் ஒருத்தியே உங்கள் எல்லோருக்கும் பத்தினியாக இருப்பாள். உங்கள் எல்லோரிடத்திலும் சமமான பிரீதியுள்ளவளாக இருப்பாள், தேவமானத்தால் பத்து லட்சம் வருஷங்கள் பூமியிலுள்ள போகங்களையும் திவ்யமான போகங்களையும் என்னுடைய அனுக்கிரஹத்தால் அனுபவித்துப் பிறகு என்னிடத்தில் அழிவற்ற பக்தியைச் செய்து, அதனால் சித்த சுத்தியடைந்து சம்சாரத்தில் வைராக்கியத்தையடைந்தும் என்னுடைய லோகம் வருவீர்கள். கிருகஸ்தாசிரமத்திலிருப்பவர் களும் புண்யகர்மங்களைச் செய்து கொண்டு, என்னுடைய கதையைச் சொல்லிக் காலத்தைக்

கழித்துக் கொண்டு மிருப்பவர்களுக்குக் கிருகஸ்தாசிரமம் பந்தமாக ஆகிறதில்லை. என்னுடைய சரிதங்களைக் கேட்பது, சொல்வது முதலியவைகளால் என்னை அடைந்தவர்களுக்குச் சோகம், மோகம், சந்தோஷம் இவைகள் உண்டாகிறதில்லை. சர்வஞ்ஞனாகிய நான் என்னுடைய கதையைச் சொல்லுகிறவர்கள் முகமாகக் கேட்பவர்களுடைய ஹிருதயத்தை அடைகிறேன்" (அவர்களுக்கு ப்ரஹ்ம சாட்சாத்காரம் உண்டாகிறது) என்று அனுக்கிரஹித்தார்.

21–51. ஸகல புருஷார்த்தங்களையும் கொடுப்ப வரான அந்தப் பகவானுடைய வார்த்தையைக் கேட்டு, பிரசேதஸ்ஸுகள் அவருடைய தரிசனத்தால் ரஜோ குணம், தமோகுணங்களற்றவராகி மிகவும் ஸுஹிருத் தாகிய பகவானைப் பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்தார்கள்; ஸகல துக்கங்களைப் போக்கடிப்பவரும் ஸகல க்ஷேமங்களையும் கொடுக்க கூடிய கம்பீர குணங்கள், திவ்ய நாமங்கள் ஆகிய இவைகளுள்ள வரும் மனஸ் வாக்கு இவைகளுடைய வேகத்தைக் காட்டிலும் மிகுந்த வேகமுள்ளவரும், ஸகல இந்திரியங் களுக்கு புலப்படாதவருமான உமக்கு நமஸ்காரம். சுத்த ஸ்வரூபரும், சாந்தரும், மனஸ்ஸாகிற உபாதியால் இரண்டாகத் தோன்றுகிறவரும், மாயையின் குணங்களாம் ப்ரஹ்மா முதலியவர் களுடைய சரீரத்தை எடுத்துக் கொண்டவருமான உமக்கு நமஸ்காரம். சுத்த ஸத்வ ஸ்வரூபியும், ஸம்ஸாரத்தைப் போக்கடிப்பவரும், தடையற்ற ஞானமுள்ளவரும், ஸாத்வதர்களுக்குப் பிரபுவுமாகிய ஸ்ரீ கிருஷ்ணனும், வாஸுதேவருமாகிய உமக்கு நமஸ்காரம், தாமரை மலர்போன்ற கண்களுள்ளவரும்.

தாமரைமலர் போன்ற பாதங்களுள்ளவருமான உமக்கு நமஸ்காரம். தாமரைப் புஷ்பத்தின் தாதுக்கள்போல் பொன்னிறமான வஸ்திரத்தைத் தரித்தவரும் ஸகல பிராணிகளிடத்திலும் வஸிப்பவரும் எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியுமான உமக்கு நமஸ்காரம் மிகவும் தீனர்களான எங்களிடத்தில் மிகுந்த கருணை செய்து ஸகல துக்கங்களையும் போக்கக்கூடிய உம்முடைய ஸ்வரூபமானது காண்பிக்கப்பட்டது. இதைவிட வேறு அனுக்கிரஹமுண்டோ? ஓ அமங்களத்தைப் போக் கடிப்பவரே! தீனர்களான வேலைக்காரர்களை ஸமயத்தில் ஞாபகம் வைத்துக் கொள்வதே பிரபுக்களின் குணம். அந்தக் குணமானது உம்மால் பிரகாசப் படுத்தப்பட்டது. நீர் அற்ப பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாக இருப்பதால் அவர்களுடைய இஷ்டத்தை ஏன் அறியமாட்டீர்? ஏ ஜகத் பதியே! மோக்ஷ மார்க்கத்தைப் பிரவர்த்திக்கச் செய்தவரும், புருஷார்த்த ஸ்வரூபியுமாகிய நீர் எப்பொழுதும் தயையுள்ளவராக இருக்கவேண்டுமென்பதே எங்களால் கேட்கப்படும் வரம். நீர் பரமான வஸ்துவைக் காட்டிலும் மேலானவர். உம்முடைய விபூதிகளுக்கு முடிவில்லாததால் அனந்தர் என்று சொல்லப்படுகிறீர். பாரிஜாத புஷ்பமானது சுலபமாய்க் கிடைத்திருக்க வண்டானது வேறு புஷ்பத்தை விரும்புமா? அதுபோல் உம்முடைய பாதாரவிந்தத்தை அடைந்த நாங்கள் எந்த வரத்தைத்தான் கேட்கப் போகிறோம்? உம்முடைய மாயையால் பிரமித்து "கர்ம மார்க்கத்தில் நாங்கள் சுழன்று கொண்டிருப்பதால் எங்களுக்கு ஒவ்வொரு ஜன்மத்திலும் உம்முடைய பக்தர்களுடைய ஸங்கமானது இருக்கும்படி அனுக்கிரஹிக்கிகவேண்டும் பகவத் பக்தர்களுடைய ஸங்கத்தினுடைய ஸ்வல்ப

பாகத்திற்கு, ஸ்வர்க்கத்தையும், மோக்ஷத்தையும் ஸமானமாகச் சொல்லமாட்டோம். அப்படியிருக்க மற்ற காமங்கள் ஸமமாக ஆகுமா? ஸத்துக்களுடைய ஸங்கத்தால் பகவானுடைய கதாப்பிரசங்கமும், ஆசையினுடைய ஒழிவும், பிராணிகளிடத்தில் விரோதமில்லாதிருத்தலும், உண்டாகின்றன. எந்தப் பெரியோர்களுடைய ஸதஸில் ஸன்யாஸிகளுக்குக் கதியாகிய ஸ்ரீமந் நாராயணனுடைய கதைகள் ஆசையை யொழித்த பெரியோர்களால் கானஞ் செய்யப்படுகின்றனவோ. சுத்தர்களாகிய அந்தப் பெரியோர்கள் லோகத்தைப் பரிசுத்தப்படுத்துவதற்காக ஸஞ்சரிக்கிறார்கள். அப்படிப்பட்ட உம்மைப் போன்ற ஸாதுக்களுடைய சேர்க்கையானது ஸம்ஸாரத்திலிருந்து பயந்தவனாகிய எனக்குப் பிடிக்காமலிருக்குமா? ஓ பகவன்! உம்முடைய தோழராகிய பரமசிவனுடன் சொற்பகாலம் நாங்கள் ஸல்லாபஞ் செய்ததடியால் நிவர்த்திக்க முடியாத ஸம்ஸாரமாகிய மிருத்யுவிற்கு மேலான வைத்தியராகிய உம்மை அடைந்தோம். (ஸாதுக்களுடைய ஸங்கத்தால் உண்டாகும் பலனை அடைந்தோமென்று கருத்து.) மேலும் நாங்கள் வேதங்களை நன்றாய் அத்யயனஞ்செய்து, ப்ராஹ்மணர்களையும் ஸித்தர்களையும் எப்பொழுதும் அனுஸரித்து, அவர்களுடைய பிரீதியை ஸம்பாதித்து, பெரியோர்களை நமஸ்கரித்து, மித்திரர்கள் ஸஹோதரர்கள் முதலிய பிராணிகளையும் அசூயை இல்லாமல் சமமாகப் பார்ப்பது முதலிய தபஸ்ஸை ஆகாரம் இல்லாமல் வெகுகாலம் அனுஷ்டிப்பது முதலியவைகளைச் செய்தோமல்லவா? அவையெல்லாம் அளவற்ற மகிமையுள்ள பரம புருஷராகிய உமக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணட்டும். இது ஒருவரம்.

மேலும் மனு, ப்ரஹ்மதேவர், பகவானாகிய பரமசிவன், தபஸ்ஸினாலும் ஞானத்தாலும் சுத்த சித்தர்களான மற்றவர்கள் ஆகியோ இவர்களாலும் உம்முடைய மஹிமை முழுமையும் அறியப்படவில்லை. ஆனாலும் அவர்கள் தங்களுடைய புத்திக்குத் தக்கபடி உம்மைத் துதிக்கிறார்கள். ஆனதால் நாங்களும் ஸ்தோத்திரஞ் செய்கிறோம். எல்லாரிடத்திலும் ஸமரும், ஆசை முதலியவைகளற்றவரும், மேலானவரும் எங்கும் நிறைந்தவரும், ஸத்வமூர்த்தியும், வாஸுதேவரும், பகவானுமாகிய உமக்கு நமஸ்காரம்" என்றார்கள். பக்தர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ளவரும் தடையற்ற வீர்யமுள்ளவரும், பிரசேதஸ்ஸுகளால் துதிக்கப்பட்டவரும், அவர்களிடத்தில் பிரீதியுள்ள வருமான ஸ்ரீ பகவான் இப்படி அவர்களால் துதிக்கப பெற்றுத் தம்முடைய லோகஞ் சென்றார். பகவானைத் தரிசித்துப் திருப்தியடையாமல் அந்த ராஜகுமாரர்கள் பகவத் தரிசனத்தையே விரும்பினவர்களாக இருந்தார்கள். பிறகு அவர்கள் ஜலத்திலிருந்து வெளியில் வந்தார்கள். பூமி முழுவதும் மரங்கள் அடர்ந்திருந்தன. ஸ்வர்க்கம் வரையில் செல்ல விரும்பியவைகள் போல் எல்லா மரங்களும் மிக்க உயரமாக வளர்ந்திருந்திருந்தன. (பிராசீனபர்ஹிஸ் தபஸ்ஸிற்குச் சென்ற படியால் பூமிக்கு அரசனில்லாமல் உழுது பயிரிடுவது முதலியவையற்றிருந்தபடியால் காடாக விருந்தது). அதனைக் கண்டவுடன் அந்த ராஜபுத்ரர்களுக்கு மிகுந்த கோபமுண்டாயிற்று, அப்பொழுது பூமியிலுள்ள மரங்களை நாசஞ் செய்வதற்காகப் பிரளயகாலத்திய காலாக்னி ருத்ரன் போல் அவர்கள் தங்களுடைய முகத்திலிருந்து அக்கினியையும், காற்றையும் உண்டு பண்ணினார்கள். அவைகளால் மரங்கள் நாசஞ்

செய்யப்படும்போது ப்ரஹ்மதேவர் அவ்விடஞ்சென்று பிரசேதஸ்ஸுக்களை ஸமாதானப்படுத்தினார். பின்பு எஞ்சிய மரங்கள் ப்ரஹ்மதேவருடைய தூண்டுதலால் தங்களுடைய பெண்ணைப் பிரசேதஸ்ஸுக்களுக்குக் கொடுத்தன. அவர்களும் ப்ரஹ்மதேவருடைய ஆக்ஞையால் அந்தப் பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொண்டார்கள். சாக்ஷுஷ மன்வந்தரத்தில் தக்ஷப் பிரஜாபதியாகவிருந்து ப்ரஹ்மதேவருடைய தூண்டு தலால் பிரஜைகளை ஸிருஷ்டித்தார். அவர் தம்முடைய இயற்கையான தேஜஸ்ஸால் தேஜஸ்வி களை அதிக்கிரமித்திருந்தபடியாலும், கார்யங்களில் மிகவும் சமர்த்தராக விருந்தபடியாலும் தக்ஷர் என்ற பெயரடைந்தார். அவரைப் ப்ரஹ்மதேவர் பிரஜை களை ஸிருஷ்டிக்கும்படி ஆக்ஞாபித்தார்.. தக்ஷர் மரீசி முதலியவர்களைப் பிரஜாபதிகளாக நியமித்தார். ப்ரஹ்மபுத்திரராகிய அந்தத் தக்ஷர் பரமசிவனை அலக்ஷ்யஞ் செய்ததால் மறு ஜன்மத்தில் மரங்களின் புத்திரியான மாரிஷையிடத்தில் பிறந்தார்.

அத்தியாயம்–31

(முன் அத்தியாயத் தொடர்ச்சி)

1–7 பிறகு அந்தப் பிரசேதஸ்ஸுகள் பல வர்ஷ காலம் ராஜ்யபாலனஞ் செய்து விவேகம் உண்டான வர்களாகிப் பகவானுடைய ஆக்ஞையை நினைத்துக் கொண்டு பார்யையும் குழந்தைகளையும் விட்டு ஸகல பிராணிகளையும் ஆத்மாவாக நினைத்து, ப்ரஹ்ம ஸத்திரத்தில் தீக்ஷைசெய்து கொண்டு மேற்கு சமுத்திரக்கரை சென்றார்கள். அந்த இடம் ஜாபாலியென்ற மஹரிஷி ஸித்தியடைந்த க்ஷேத்திரம். அவ்விடத்தில் அவர்கள் பிராணன், வாக்கு, மனம், கண் ஆகிய இவைகளை ஜயித்திருந்தார்கள். சாந்தமும் ருஜுவுமான சரீரமுள்ளவர்களாக இருந்தார்கள். சுத்தமான பரமாத்மாவிடத்தில் மனத்தைச் செலுத்தின வர்களாகவுமிருந்தார்கள். அப்பொழுது அவர்களைத் தேவர்களாலும், அசுரர்களாலும், துதிக்கப்பட்ட நாரதர் கண்டார். அவ்விடம் வந்த நாரதரைக் கண்ட பிரசேதஸ்ஸுக்கள் எழுந்திருந்து பிரதக்ஷிணஞ் செய்து, நமஸ்கரித்து முறைப்படி பூசித்து ஆஸனத்தில் உட்கார வைத்து அவரை நோக்கி, 'ஓ தேவரிஷியே! நல்வரவா ? தெய்வச் செயலாக எங்களுக்குத் தரிசனங் கொடுத்தீர். ஓ ப்ராஹ்மண! நீர் லோகத்தின் க்ஷேமத்திற்காகவே சூரியன் போல சஞ்சரிக்கிறீர். ஸ்ரீ பரமசிவனாலும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவினாலும் உபதேசிக் கப்பட்ட ஆத்ம தத்வத்தைக் கிருஹஸ்தாஸ்ரமத்தில் ஆசை கொண்டு நாங்கள் பெரும்பாலும் மறந்து விட்டோம். கடக்க முடியாத சம்சார சமுத்ரத்தைச்

சீக்கிரமாக நாங்கள் தாண்டும்படியாக ஆத்ம ஞானத்தைத் தெரியப்படுத்தும்" என்று பிரார்த்தித்தார்கள்.

8–29 அதனைக் கேட்ட நாரத மஹாமுனிவர் உத்தம சுலோகராகிய பகவானைத் தியானஞ் செய்து ராஜபுத்ரர்களை நோக்கி, எதனால் பகவான் சேவிக்கப்படுகிறாரோ, அந்த ஜன்மமே பயனுள்ளது; அந்தக் கர்மங்களே பயனுள்ளவை; அந்த ஆயுஸ்ஸே ஸபலம்; அந்த மனமே பிரயோஜனமுள்ளது; அந்த வாக்கே சிறந்தது. ஆத்மஞானத்தைக் கொடுக்கும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை சேவியாதவனுடைய ஜன்மத்தாலும், உபநயனத்தாலும், யாகதீக்ஷையாலும், தீர்க்கமான ஆயுஸ்ஸினாலும், சாஸ்திரத்தாலும், தபஸினாலும், வாக்கினாலும், சித்தவிருத்திகளாலும், கூர்மையான புத்தியாலும், பலத்தாலும், இந்திரிய சக்தியாலும், யோகத்தாலும், ஸாங்க்யத்தாலும், சன்யாஸத்தாலும், வேதத்தாலும், மற்ற க்ஷேமகரமான காரியங்களாலும் என்ன பயன்? ஸகல சிரேயஸ்ஸுக்களுக்கும் மேலான சிரேயஸ் பகவானேயாம். ஸகல பிராணிகளுக்கும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவே ஆத்மாவாக விருக்கிறார். அவரே ஸ்வரூபஞானத்தை யுண்டுபண்ணுகிறவர்; ப்ரியர், மரத்தினடியில் (வேரில்) ஜலம் கொட்டினால் எப்படி மரத்தின் (கிளை) முதலியவைகள் புஷ்டியை அடைகின்றனவோ, பிராணனைத் திருப்தி செய்வதால் இந்திரியங்கள் எப்படித் திருப்தியடைகின்றனவோ, அப்படிப் பகவானைப் பூஜித்தால் ஸகல பிராணி களையும் பூஜித்ததாக ஆகிறது. மழைக்காலத்தில் ஸூர்யனிடமிருந்து வெளியான ஜலங்கள் கோடைக் காலத்தில் அவரிடத்திலேயே பிரவேசிப்பது போல் ஸ்தாவர ஜங்கம பிராணிகளெல்லாம் ஸ்ரீ மஹா

விஷ்ணுவிடமிருந்தே ஸிருஷ்டி காலத்தில் வெளியா கின்றன. பிரளய காலத்தில் அவரிடத்திலேயே பிரவேசிக்கின்றன. இந்த ஜகத்தானது ஸ்ரீ மஹா விஷ்ணுவிற்கு வாஸஸ்தலம். அவரைக் காட்டிலும் வேறானதல்ல. ஸகல உபாதிகளற்றது; ஸூர்யனுடைய தேஜஸ்ஸானது வேறாகத் தோன்றினாலும் எப்படி அவரைவிட வேறானது இல்லையோ, ஜாக்ரதவஸ்தையில் இந்திரியங்கள் தோன்றினாலும் ஸுஷுப்தியில் எப்படி ஒன்றாக ஆகிவிடுகின்றனவோ, ப்ரஹ்மஞானமில்லாத போது திரவியம், கிரியை, ஞானம் ஆகிய இவை களுடைய பேதம் தோன்றினாலும் ஞானம்வந்தபின் எப்படிப் பேதம் நாசமடைகிறதோ, அப்படி சகல ஜகத்தும் பகவத் ஸ்வரூபமேயாம். ஆகாயத்தில் மேகம், இருட்டு, பிரகாசம் ஆகிய இவைகள் கிரமமாக எப்படி உண்டாகின்றனவோ, மறைகின்றனவோ, அப்படிப் பரப்ரஹ்மத்தினிடத்தில் ரஜஸ், தமஸ், ஸத்வம் ஆகிய குணங்களாலுண்டாகும் சக்திகள் உண்டாகின்றன. ஜகத்தின் ஸ்வபாவமிது, ஆனதால் காலம் பிரதானம், புருஷன் ஆகிய இவைகளின் ஸ்வரூபமாக விருப்பதால் ஸகலத்திற்கும் காரணரும், தம்முடைய தேஜஸ்ஸால் குணகார்யத்தை நாசஞ்செய்ப வரும், ஒப்பற்றவருமான பரமாத்மாவை நேரில் உபாஸியுங்கள்'. மேலும், சங்கற்ப விகற்பங்களற்ற வரும், தமக்கு ஸஜாதீயமான இரண்டாவது வஸ்து வில்லாதவரும், ப்ரஹ்ம ஞானத்திற்குப் பாதகமான துவைத ஞானம் நிவர்த்தியான பின் பிரகாசிக்கும் ஸ்வரூபமுள்ளவரும், ஆதி, மத்யம், அந்தம், ஆகிய இவைகளற்றவரும், ஸுகஸ்வரூபியும், ஞானஸ்வரூபி யுமான பரமாத்மாவை மேற்காட்டியபடி (ப்ரஹ்ம ஸ்வரூபமென்று) பூஜியுங்கள். ஸகல பிராணிகள்

இடத்திலும் தயை செய்வதாலும், கிடைத்ததைக் கொண்டு சந்தோஷப்படுவதாலும் ஸகல இந்திரியங்களை ஜயிப்பதாலும் ஸ்ரீமந் நாராயணன் சீக்கிரம் சந்தோஷப்படுகிறார். ஸகல ஆசைகளுமற்ற சுத்தமான மனத்தில் சாதுக்களால் தியானம் செய்யப்பட்ட பகவான் 'தாம் பக்தர்களுக்கு வசப்பட்டவர்' என்பதை நினைத்து அந்த மனத்திலேயே வஸிக்கிறார். பின்னும் எவர்கள் படிப்பினாலும், பணத்தாலும், குலத்தாலும், தர்மத்தாலும் கர்வங்கொண்டு ஏழைகளான சாதுக்களுக்கு கெடுதியைச் செய்கிறார்களோ, அந்தத் துர்புத்தியுள்ளவர்களால் செய்யப்படும் பூஜையைப் பகவான் அங்கீகரிக்கிறதில்லை. அவருக்கு ஏழைகளிடத்திலும் பகவானையே பணமாக நினைத்த சாதுக்களிடத்திலும் பிரியம். அவர் பக்தி ரஸத்தை நன்றாக அறிந்தவர். எந்தப் பகவான் தம்மை அனுசரித்த வளான ஸ்ரீ தேவியையும் அந்த லக்ஷ்மியையும் உபாஸிக்கும் அரசர்களையும் தேவர்களையும் லக்ஷ்யஞ்செய்கிறதில்லையோ, தம்மாலேயே பூர்ணராக விருக்கிறாரோ, தம்முடைய பக்தர்களிடத்திலேயே பிரீதியுள்ளவராக விருக்கிறாரோ, அந்தப் பகவானை எவன் தான் உபாஸிக்க மாட்டான்? உங்களுடைய வம்சத்தில் பிறந்த துருவரென்பவர் ஸபத்தினி மாதாவின் வார்த்தையை சகியாமல் மாதா முதலியவர்களை விட்டுக் காட்டிற்குச் சென்றார்; அப்பொழுது அவர் ஐந்து வயதுள்ளவர்; வழியில் அவரை நான் சந்தித்தேன். அவர் என்னுடைய உத்தரவின்படி பகவானை ஆராதித்து மற்றவர்களால் அடைய முடியாத மேலான பதத்தை அடைந்தார். சப்தரிஷிகளும் இப்பொழுது அதனைப் பார்த்து தலைகுனிந்திருக்கிறார்கள். ஆனதால் நீங்களும்

ருத்ரரால் உபதேசிக்கப்பட்ட கீதத்தால் ஸகல பிராணிகளுக்கும் அந்தர்யாமியாக விருக்கும் பகவானையுபாஸியுங்கள்" என்று ஆக்ஞாபித்து மற்றுஞ் சில புண்யகதைகளை அவர்களுக்குச் சொல்லி, ப்ரஹ்மலோகஞ் சென்றார். அந்த ராஜபுத்ரர்களும் லோகத்தின் பாபத்தைப் போக்கக்கூடிய பகவானுடைய சரிதத்தை நாரதரிடமாகக் கேட்டு, பகவானுடைய பாதத்தை தியானஞ் செய்து வைகுண்டஞ் சென்றார்கள்.

30–32 ஓ விதுரரே! உம்மால் கேட்கப்பட்ட பிரசேதஸ்ஸுகளுக்கும் நாரதருக்கும் நேர்ந்த சம்வாதமாகிய பகவத் சரிதத்தை உமக்குச் சொன்னேன். மனுவின் புத்திரரான உத்தானபாதருடைய வம்சம் நிரூபிக்கப்பட்டது. பிரியவிரதருடைய வம்சத்தையும் சொல்லுகிறேன். அவர் நாரதரிடமாக ஆத்மவித்தையை அடைந்து பூமியையும் சிலகாலம் பரிபாலித்துப் பின்பு பூமியைப் புத்திரர்களுக்கு, பிரித்துக் கொடுத்துப் பகவத் பதத்தை அடைந்தார் என்றார்.

33–35 இப்படி மைத்ரேயரால் சொல்லப்பட்ட பகவானுடைய ஸத் கதையை விதுரர் கேட்டுப் பகவானிடத்தில் மிகுந்த பக்தி யடைந்து, ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி, மைத்ரேயரை நமஸ்கரித்து ஹ்ருதயத்தில் பகவானுடைய பாதார விந்தத்தை தியானஞ் செய்தார். பின்னுமவர் மைத்ரேயரை நோக்கி "ஓ மஹா யோகியே! கருணை நிறைந்த சித்தமுள்ள உம்மால் ஸம்ஸாரத்தின் கரை காட்டப்பட்டது. ஏழைகளிடம் பிரீதியுள்ள பகவான் அவ்விடத்தில் வஸிக்கிறார்" தனக்கென்று! ஒன்றும்

வைத்துக் கொள்ளாத பக்தர்களை அவர் சென்று அடைகிறார் என்று சொல்லி அவரை நமஸ்கரித்து, பூர்ண மனோரதமுள்ளவராக அவரிடம் விடை பெற்றுப் பந்துக்களை பார்ப்பதற்காக ஹஸ்தினாபுரஞ் சென்றார்.

36. ஸ்ரீ பகவானிடத்திலேயே சித்தத்தைச் செலுத்திய அரசர்களுடைய இந்தச் சரித்திரத்தைக் கேட்பவனுக்குத் தீர்க்கமான ஆயுளும், செல்வமும் கீர்த்தியும், க்ஷேமமான கதியும், ஐச்வர்யமும் கிடைக்கும்.

ஸ்கந்தம் 5

அத்தியாயம்–1

ப்ரியவ்ரதருடைய சரிதம்

பரீக்ஷித்து மஹாராஜன் சுகமஹாமுனிவரை நோக்கி "ஓ முனியே! ப்ரியவ்ரதர் பாகவதர்களுக்குட் சிறந்தவர்; ஆத்மாவிடத்தில் ரமிப்பவர்; அப்படிப் பட்ட அரசன் கர்ம பந்தத்தைக் கொடுக்கக் கூடியதும், ஆத்மஸ்வரூபத்தை மறைக்கக் கூடியதுமான விஷய சுகத்தில் ஏன் ஆசைப்பட்டார்? கிருஹஸ்தாச்ரமத்தை அடைய வேண்டுமென்ற விருப்பம் ப்ராகிருத மனிதர் களுக்கு உண்டாகலாம். ஓ ப்ராஹ்மணோத்தம! வைராக்யமுள்ள அப்படிப்பட்ட புருஷர்களுக்கு விஷயத்தில் ஆசையுண்டாவது உசிதமா? ஓ ப்ரஹ்மரிஷியே, உத்தமச்லோகராகிய பகவானுடைய பாதங்களுடைய சாயையை ஆச்ரயித்து அதனால் சுகத்தை அடைந்த சித்தமுள்ள மஹான்களுக்கு குடும்பத்தில் எப்படி ஆசையுண்டாகும்? மேலும் ஸ்திரீ, புத்ரன், தனம் முதலிய விஷயங்களில் ஆசை கொண்டிருந்த அந்த ப்ரியவ்ரதருக்கு ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் பக்தியும் ஸித்தியும் எப்படி உண்டாயிற்று? இவ்விஷயத்தில் எனக்குண்டாகி யிருக்கும் மிகுந்த ஸம்சயத்தை நிவர்த்திக்க வேண்டும்" என்று கேட்டார்.

5–10 அதனைக் கேட்டச் சுகமஹாமுனி அரசனை நோக்கி, "நீர் நினைப்பது சரியே; ஆனாலும் உத்தம ச்லோகராகிய பகவானுடைய பாதங்களாகிய

தாமரை மலரின் மதுவை பானஞ்செய்து திருப்தியடைந்த மனமுள்ள பக்தர்களுக்கு விக்னத்தால் பாகவதர்களான பரம ஹம்ஸர்களுக்கிஷ்டமான பகவத் கதையானது ஒரு கால் தடுக்கப்பட்டி ருந்தாலும், முந்திய அப்யாச பலத்தால் பக்தியானது விட்டுப் போகிறதில்லை. ஓ மஹாராஜ்! அந்த ராஜகுமாரராகிய ப்ரியவ்ரதர் பாகவதர்களுக்குட் சிறந்தவராகி நார்த ருடைய பாதத்தை சேவித்து அதனால் ஆத்மாவின் உண்மையைத் தெரிந்து கொண்டு ப்ரஹ்மஸத்ரத்தில் தீக்ஷை செய்து கொள்ள ஆசை கொண்டிருந்தார். அப்பொழுது அவருடைய பிதாவாகிய மனு தம்முடைய புத்ரராகிய ப்ரியவ்ரதர் அரசர்களுக் கிருக்க வேண்டிய குணங்களால் அலங்கரிக்கப்பட்டி ருப்பதைக் கண்டு பூமியை பரிபாலனஞ் செய்யும்படி ஆக்ஞாபித்தார்.. அப்பொழுது ப்ரியவ்ரதர் ஸ்ரீ வாஸுதேவரிடத்தில் நிரந்தரமாக சித்தத்தைச் செலுத்தி அதனால் ஸகல இந்திரியங்களுடைய வ்யாபாரங்களை பகவதர்ப்பணஞ் செய்திருந்தபடியால், மீறக்கூடாதாயினும் பிதாவின் ஆக்ஞையை அனுஷ்டிக்க ஸம்மதிக்கவில்லை. ஏனென்றால் அரசனாக விருந்தால் ப்ரபஞ்சம்மித்யாபூதமானாலும் அதனால் ஆத்ம ஞானம் மறைக்கப்படுமென்று நினைத்திருந்தார். பின்பு பகவானாகிய ப்ரஹ்மதேவர் இந்த ஜகத்தை விருத்தி பண்ணுவதைப் பற்றி யோசித்து ஸகல ப்ராணிகளுடைய அபிப்ராயத்தை அறிந்தவராகி, ஸகல வேதங்கள், மரீசி முதலியவர்கள் ஆகிய இவர்களுடன் தம்முடைய லோகத்திலிருந்து ப்ரியவ்ரதர் வசிக்குமிடம் வந்தார். நடுவழியில் ஆகாயத்தில் சந்திரன் போல் ப்ரகாசிக்கும் அந்த ப்ரஹ்மதேவரை விமானத்தில் சஞ்சரிக்கும் சிறந்த தேவர்கள் பூஜித்தார்கள். மேலும்

ஸித்தர்கள் கந்தர்வர்கள், ஸாத்யர்கள், சாரணர்கள், கின்னரர்கள், முனிவர்கள் ஆகிய இவர்கள் கூட்டங்கூட்டமாக அவருடைய சரிதத்தை கானஞ் செய்தார்கள். பின்னும் அவருடைய காந்தியால் அந்த கந்தமாதனபர்வதத்தின் குஹையானது இருளின்றி ப்ரகாசித்தது. அப்பொழுது தேவர்ஷியான நாரதர் ஹம்ஸவாஹனத்தின் மீதேறி வந்த அவரை தம்முடைய பிதாவாகிய ப்ரஹ்மதேவரென்று தெரிந்து கொண்டு மனு ப்ரியவ்ரதர் ஆகிய இவர்களுடன் சீக்கிரமாக எழுந்திருந்து சாவதானராக கை கூப்பி முறைப்படி பூஜித்தார். ஓ மஹாராஜ! அந்த நாரதரால் ப்ரஹ்மதேவர் பூஜிக்கப்பட்டு அந்த ப்ரியவ்ரதரை நோக்கி தயவுடன் கூடிய புன்சிரிப்புள்ள பார்வை யுடன் பின்வருமாறு சொல்லலானார். (நாரதமஹர்ஷி ப்ரியவ்ரதருக்கு ஆத்மதத்வத்தை உபதேசிக்க விரும்பி கந்தமாதன பர்வதத்தின் குஹைக்கு அவரை அழைத்து வந்தார். அந்த சமயத்தில் அவரை ராஜ்யபாலனம் செய்யும்படி திரும்பி அழைத்துப் போவதற்காக மனுவும் அவ்விடம் வந்திருந்தார். அந்த சமயம் ப்ரஹ்மதேவர் அவ்விடம் வந்தார் என்று கருத்து.)

11–19 "ஓ குழந்தாய்! நான் சொல்வது உண்மையென்று தெரிந்துகொள்; அளவிடக் கூடாத மஹிமையையுள்ள பகவானிடத்தில் அசூயை அடைய வேண்டாம்; நான், நீர், இந்த மஹர்ஷி முதலிய எல்லோரும் ஸ்வாதந்திரியமில்லாதவர்களாக அந்த பகவானுடைய ஆஜ்ஞையை வஹிக்கிறோம். இப்பொழுது ஸ்ரீமந் நாராயணனே என் முகமாகச் சொல்வதால் நான் சொல்வதாய் நினைக்கக் கூடாது

என்று கருத்து.) தபஸ்ஸினாலும், வித்தையாலும், யோகபலத்தாலும், புத்திபலத்தாலும், அர்த்தங்களாலும், தர்மங்களாலும் பிறருடைய ஆச்ரயத்தாலாவது, தன்னுடைய தேஹபலத்தாலாவது ஒருவனாலும் அவரால் செய்யப்பட்ட கார்யத்தை கெடுக்க முடியாது. அவ்யக்தாகிய பகவானுடைய ஆஜ்ஞையால் சரீரத்தை பிராணிகளெல்லோரும் அடைகிறார்கள். அதனால் ஜன்மத்தையும் நாசத்தையும், சோகத்தையும், மோஹத்தையும், பயத்தையும், சுகதுக்கங்களையும் அடைகிறதுமின்றி கர்மங்களையுஞ் செய்கிறார்கள். மேலும் நாம் எல்லோரும் எவருடைய ஆஜ்ஞாபமாகிய, வேதமாகிய பிணையில், குணங்கள் கர்மங்கள் ஆகிய கயறுகளால் கட்டப்பட்டு மூக்குக் கயிற்றினாலாமுக்கப்பட்ட நாற்கால் ப்ராணிகள் மனிதர்களுக்குப் போல அந்தப் பகவானுக்கு வயப்பட்டவராக இருக்கிறோம். ஓ ப்ரியவ்ரத! காளைமாடுகள் யஜமானால் கொடுக்கப்பட்ட ஆகாரத்தை எப்படி புஜிக்கின்றனவோ, தனதிஷ்டப்படி புஜிக்க சக்தியற்றவைகளோ அப்படி குணங்கள், கர்மங்கள் ஆகிய இவைகளால் நாதனாகிய பகவான் எந்தெந்த தேகத்தை கொடுக்கிறாரோ, அதனை அடைந்து துக்கத்தையாவது சுகத்தையாவது அனுபவிக்கிறோம். மேலும் நாமெல்லோரும் கண்ணில்லாத குருடர்கள், அந்த பகவான் ஒருவரே கண்ணுள்ளவர்; அவரால் நாம் நிழலிலாவது, வெய்யிலிலாவது அழைத்துப் போகப்படுகிறோம். மோக்ஷத்தை அடைந்தவனும், ப்ராரப்த கர்மம் நசிக்கிறவரையில் அபிமான மற்றவனாகி தேகத்தை தரிக்க வேண்டியதுதான்; ஆனால் அவன் திரும்பவும் ஜன்மத்தைக் கொடுக்கும் குணங்களையாவது கர்மங்களையாவது அனுசரிக்க

மாட்டான். காமம் முதலிய ஆறு சத்ருக்களுள்ளவனும், இந்திரியங்களை ஜயிக்காதவனுமாகிய புருஷனுக்கு வனத்திலும் சம்ஸார பந்தம் விடுகிறதில்லை. இந்திரியங்களை ஜயித்தவனும் ஆத்மா ராமனுமாகிய புருஷனுக்கு கிருஹஸ்தாச்ரமம் என்ன கெடுதியைச் செய்யும்? சத்ருக்களை ஜயிக்க விரும்பியவன் துர்க்கமான இடத்திலிருந்து அவர்களை ஜயிக்க முயலுவது வழக்கம்; அதுபோல் சம்ஸாரியானவன் கிருஹஸ்தாச்ரமத்திலிருந்து ஆறு சத்ருக்களை ஜயிக்க முயற்சிக்க வேண்டும். ஆனால் நீர் பத்மநாபராகிய பகவானுடைய பாதாரவிந்தமாகிய கோட்டையிலிருந்து காமம் முதலிய சத்ருக்களை ஜயித்து ஸ்ரீ பகவானால் கொடுக்கப்பட்ட போகங்களை அனுபவித்த பிறகு மிகுந்த வைராக்யமடைந்து ஸ்வரூபத்தை அடையலாம் என்று ஆஜ்ஞாபித்தார்.

20–21 அதனைக் கேட்ட மஹா பாகவதராகிய ப்ரிய வ்ரதர் முவ்வுலகத்திற்கும் குருவாகிய ப்ரஹ்ம தேவரிடமுள்ள கௌரவத்தால் தலைகுனிந்து அப்படியே செய்கிறேனென்று ஒப்புக் கொண்டார். அப்பொழுது மனு விதிப்படி ப்ரஹ்மாவை பூஜித்தார். ப்ரியவ்ரதரும் நாரதரும் ப்ரியமாகவே பார்த்து இருந்தார்கள். (ப்ரியவ்ரதருக்கு யோகாப்யாஸத்திற்கு விரோதம் நேர்ந்த படியாலும், நாரதருக்கு ப்ரியவ்ரதரை சிஷ்யராகச் செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் நிறை வேறாததினாலும் அவ்விருவர்களும் ப்ரஹ்மதேவரிடம் அசூயைப்பட வேண்டி இருந்தாலும் ப்ரியமாகவே பார்த்திருக்கிறார்கள்.) அப்பொழுது நான்கு முகக் கடவுள் வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாததும், வ்யவஹாரத்தைக் கடந்ததுமான பரப்ரஹ்மத்தை

த்யானஞ் செய்துகொண்டே தம்முடைய லோகஞ் சென்றார். மனுவும் ப்ரஹ்மதேவரால் தமதிஷ்டத்தை நிறைவேற்றிக் கொண்டு நாரதருடைய அனுமதியின் பேரில் ப்ரியவ்ரதருக்கு பட்டாபிஷேகஞ் செய்து தாண்ட முடியாத விஷயங்களாகிய விஷஜலத்தால் நிறைந்த தடாகம் போன்ற சம்ஸார வாசனையை யொழித்தார்.

22–34 இப்படி அந்த ப்ரியவ்ரதர் ராஜ்யத்தை அடைந்து ஸகல ஜகத்திற்கும் பந்தம், நாசம் ஆகிய இவைகளைச் செய்யும் பகவானுடைய பாதார விந்தத்தை எப்பொழுதும் த்யானஞ் செய்து அதனால் ராகம் த்வேஷம் முதலிய மனத்தில் மலங்களற்ற வராகி சுத்த சித்தராக ப்ரம்ஹதேவர் முதலியவர் களுக்கும் ப்ரியராக பூமியை பரிபாலித்தார். பின்பு அந்த ப்ரியவ்ரதர் விச்வகர்மாவின் பெண்ணாகிய பர்ஹிஷ்மதி யென்பவளை விவாஹம் செய்து கொண்டு அவளிடத்தில், ஆக்னீத்ரன், இதமஜிஹ்வரன், யஜ்ஞுபாஹு, மஹாவீரன், ஹிரண்யரேதஸ், க்ருத ப்ரஷ்டன், ஸவனன், மேதா திதி, விதி ஹோத்ரன், கவியென்ற பத்துபுத்ரர்களையும் ஊர்ஜஸ்வதியென்ற ஒரு புத்ரியையும் உண்டுபண்ணினார்; அந்தப் பெண் பிள்ளைகளுக்குப் பின் பிறந்தவள்; அந்தப் புத்ரர்களெல்லோரும் குணத்திலும், ஸ்வபாவத்திலும், கார்யத்திலும், ரூபத்திலும், பராக்ரமத்திலும் பிதாவை யொத்தவர்கள். அவர்களுக்குள் கவி, மஹா வீரன் ஸவனன் ஆகியவரும் ஊர்த்வரேதஸ்ஸுக்களாக லிருந்ததுமல்லாமல், பால்யம் முதலாகவே ஆத்ம வித்தையை அப்யஸித்து பரமஹம்ஸாச்ரமத்தை அடைந்தார்கள். மேலுமவர்கள் அந்த ஆச்ரமத்திலிருந்து

சாந்தியை அடைந்து ஸகல ப்ராணிகளுக்கும் வஸிக்குமிடமாயும், ஸம்ஸாரத்திலிருந்து பயந்தவர் களுக்குச் சரணமாயுமுள்ள ஸ்ரீ வாஸுதேவருடைய பாதாரவிந்தத்தை இடைவிடாமல் த்யானித்தார்கள். அதனால் மிகுந்த பக்தியுண்டாயிற்று. அதனால் சித்தம் சுத்தமாயிற்று. அப்படிப்பட்ட சித்தத்தில் ஸகல ப்ராணிகளுக்கும் ஆத்மாவும், ப்ரத்யகாத்மா வுமான ஸ்வரூபம் ப்ரகாசித்தது. அதனிடத்தில் அபேத பாவனையால் தேஹம் முதலிய உபாதிஸம்பந்தமற்று ப்ரம்ஹபாவத்தை அடைந்தார்கள். மேலும் ப்ரியவ்ரதருக்கு மற்றொரு பத்னியிடத்தில் உத்தமன், தாமஸன், ரைவதன், என்று மூன்று புத்ரர்கள் பிறந்தார்கள். அவர்கள் மன்வந்தரத்திற்கு அதிபதிகள், இப்படி புத்ரர்கள் சாந்தி மார்க்கத்தை அடைந்திருக்க ப்ரியவ்ரதராகிய அரசன் பதினோரு அற்புத வர்ஷங்கள் (1100000000 வர்ஷங்கள்) தடையற்ற புருஷ ப்ரயத்னத்துடன் கூடிய பலமுள்ள புஜ தண்டங் களால் வில்லை எடுத்து நாண் சப்தஞ் செய் வதாலேயே (யுத்தமில்லாமலேயே) தர்ம விரோதிகளை நாசஞ் செய்து கொண்டும் பர்ஹிஷ்மதியினுடைய மிகுந்த சந்தோஷம், ஸ்திரீகளுக்கு இயற்கையான வெட்கம் புன்சிரிப்புள்ள பார்வை, இனிமையான விளையாட்டு ஆகிய இவைகளால் விவேகமற்றவர் போல் விஷயங்களில் ஆசை வைத்திருந்ததால், ஆத்மஸ்வரூபத்தை அறியாதவர்போலும் விஷய சுகத்தை அனுபவித்தார். மேலுமவர் பகவானை உபாசித்து அதனால் கிடைத்த மிகுந்த மஹிமை யுள்ளவராகி சூர்யனுடைய ரதத்திற்கு சமமான வேகமுள்ள தேஜோமயமான ரதத்தின் மீதேறி ராத்திரியையும் பகலாகச் செய்கிறேன், என்று

இரண்டாவது சூர்யன்போல் ஏழு தடவை சூர்யன்பின் சென்றார். அந்த சூர்யன் மேரு மலையை ப்ரதக்ஷிணமாகச் சுற்றிப் பூமியின் பாதி பாகத்தை ப்ரகாசிக்கச் செய்தும்; மற்றொரு பாகத்தை மறைத்துக்கொண்டும் இருக்கிறார். அந்த ப்ரியவ்ரத ருடைய ரதத்தின் சக்ர மார்க்கங்களே ஏழு சமுத்ரங்களாயின. அவைகளுக்குட்பட்ட பூமிகள், ஜம்பு, ப்லக்ஷ, சால்மலி, குசம், க்ரோஞ்சம், சாகம், புஷ்கரம் என்ற த்வீபங்களாயின. அவைகள் ஒன்றைவிட ஒன்று வெளியீலும் பரப்பிலும் இரண்டு மடங்கு அதிக மானவைகள். மேற்சொல்லிய சமுத்திரங்களில் ஒன்று உப்பு ஜலமுள்ளது, மற்றொன்று கரும்பு சாருள்ளது; மூன்றாவது மத்யமாகிய ஜலமுள்ளது, நான்காவது நெய் சமுத்திரம், ஐந்தாவது பால் சமுத்திரம், ஆறாவது கடைந்த தயிர் சமுத்திரம்; ஏழாவது சமுத்திரம்; சுத்த ஜலமுள்ளது. இந்த ஏழு சமுத்ரங்களும் ஏழு த்வீபங் களுக்கும் அகழிகளாக முறையே ஏற்படுத்தப்பட்டி ருக்கின்றன. பார்ஹிஷ்மதியின் பதியர்கிய ப்ரியவ் ரதரானவர் மேற்காட்டிய ஜம்பூத்வீபம் முதலிய ஏழு த்வீபங்களாலும் தம்மை அனுசரித்திருந்த ஆக்னீதரன், இத்மஜிஹ்வன், யஜ்ஞபாஹு, ஹிரண்யரேதஸ், கிரதுபிருஷ்டன், மேதாதிதி, விதிஹோத்ரன் என்ற பிள்ளைகளை முறையே அரசனாகச் செய்தார். ஊர்ஜஸ்வதீ என்றும் தம்முடைய பெண்ணை சுக்ராசார்யருக்கும் கல்யாணம் செய்து கொடுத்தார். அந்த சுக்ராசார்யருக்கு அவளிடத்தில் தேவயானை என்ற ஒரு பெண் பிறந்தாள்.

35. பகவானுடைய பாதாரவிந்தத்தை த்யானம் செய்து அதனால் இந்திரியங்களை ஜயித்தவனுக்கு

இம்மாதிரியான புருஷபலமிருப்பது ஆச்சர்யமல்ல. சண்டாளன் முதலியவனானாலும் பகவானுடைய திவ்ய நாமத்தை ஒரு தடவையாவது உச்சரிப்பானே யாகில் அவன் சம்ஸாரபந்தமற்றவனாக ஆகிறான்.

36–38 அந்த ப்ரியவ்ரதர் இம்மாதிரியாக அளவற்ற தேகபலம், பராக்ரமம் இவைகளுக்குள்ளவராகி, நாரத மஹர்ஷியினுடைய சரணாரவிந்த சேவாகாலத்தில் கிடைத்த ராஜ்யத்தை இவ்வளவு காலம் அனுபவித்து நிர்வேதத்தை அடைந்து தம்மை சுகமற்றவராக நினைத்து நான் செய்தது யாவும் பிசகு; அவித்தையால் ஏற்பட்ட விஷயமாகிற பாழுங்கிணற்றில் இந்திரியங்கள் என்னைத் தள்ளிவிட்டன; இந்த விஷயங்களை அனுபவித்தது போதும்; இந்த ஸ்திரீயாகிய பர்ஹிஷ்மதிக்கு விளையாட்டு மிருகமாக விருக்கும் என்னை நிந்திக்க வேண்டும், என்று தம்மை நிந்தித்துக் கொண்டார். பின்னுமவர் பரமாத்மாவின் ப்ரஸாதத்தாலே விவேகத்தை அடைந்து தம்மை அனுஸரித்திருக்கும் ஏழு புத்ரர்களுக்கு இந்த பூமியை பிரித்துக் கொடுத்து போகத்தை யனுபவிப்பவளான ஸ்திரீயையும், ஸகல ராஜ்யத்தையும், உயிரில்லாத சரீரத்தைப் போல் விட்டு, நிர்வேதமுள்ளவராக பகவானுடைய லீலைகளை த்யானஞ் செய்துகொண்டு, நாரதருடைய மார்கத்தையே திரும்பவும் அனுசரித்தார்.

39–41 அவருடைய சரிதத்தைப் பற்றிய ச்லோகங்கள் பின்வருமாறு கண்டு கொள்ளுக. எந்த ப்ரியவ்ரதர் ரதத்தின் மார்க்கத்தால் இருட்டைப் போக்கடித்து ஏழு சமுத்ரங்களை உண்டு

பண்ணினாரோ, அப்படிப்பட்ட அவ்வரசனால் செய்யப்பட்ட கார்யமான ஈச்வரனைத் தவிர வேறு யாரால் செய்ய முடியும்? அவர் பூமியில் த்வீபங்களை ஏற்படுத்தினார். நதிகளாலும், மலைகளாலும், காடு களாலும் ஒவ்வொரு த்வீபத்திலும், எல்லைகளையும் ஏற்படுத்தினார். பின்னும் விஷ்ணு பக்தர்களிடத்தில் ப்ரியமுள்ள அவர் யோகத்தாலும், மேலான கர்மத் தாலும் கிடைத்த பாதாளம், ஸ்வர்க்கம், பூமி ஆகிய லோகங்களில் உண்டான வைபவத்தை நரகத்திற்குச் சமமாக நினைத்தார்.

அத்தியாயம்–2

ஆக்னீத்ரருடைய சரிதம்

இப்படி தகப்பனாராகிய ப்ரியவ்ரதர் நிவிர்த்தி மார்கத்தை அடைந்தபோது, அவருடைய ஆக்ஞையின் படி ஆக்னீத்ரரென்பவர், ஜம்பூத்வீப வாஸிகளான ப்ரஜைகளை தம்முடைய வயிற்றில் பிறந்த குழந்தை களைப் போல் தர்மமாக பரிபாலித்தார். அவர் ஒரு கால் கிருஹஸ்தாச்ரமத்தை அடையவிரும்பி தேவ ஸ்திரீகள் விளையாட்டு ஸ்தலமாகிய மந்தரமலையின் குஹையில் ப்ரஹ்மதேவரை பூஜித்து, சித்தத்தை ஒருவகைப்படுத்தி தபஸ் செய்தார். அவருடைய அபிப்ராயத்தை தெரிந்துகொண்ட ப்ரஹ்மதேவர் தம்முடைய ஸதஸ்ஸில் கானஞ் செய்து கொண்டி ருக்கும். பூர்வசித்தீ என்னும் அபஸ்ரஸ்ஸை மந்தர மலைக்கு அனுப்பினார். அவளும் ஆக்னீத்ரருடைய ஆச்ரமத்தின் ஸமீபத்திலிருக்கும் மிக்க அழகான தோட்டத்திற்கு சென்றாள். அவ்விடத்தில் நெருக்கமாக முளைத்திருக்கும் மரங்களுடைய கிளைகளில் ஸ்வர்ணக்கொடிகள் படர்ந்திருக்கின்றன. அவைகளில் மயில் முதலியவைகள் ஆணும் பெண்ணுமாக ஷட்ஜம் முதலிய ஸ்வரங்களில் கத்துகின்றன. அதைக்கேட்டு ஸமீபத்திலுள்ள தாமரை ஓடையில் வஸிக்கும் நீர்கோழி, நீர்காகம், கொக்கு, ஹம்ஸம் முதலிய அநேக நீர் பறவைகள் விழித்துக்கொண்டு சப்திக்கின்றன. அவ்விடத்தில் அவள் அழகாய் நடப்பதால் அவளுடைய ஆபரணங்கள் சப்தித்தன. அதனைக் கேட்டு கண்களைமூடி தபஸ் செய்து கொண்டிருந்த

ஆக்னீத்ரர் கண்களைத் திறந்து ஸமீபத்தில் வரும் தேவஸ்திரீயைக் கண்டார். அவள் பெண் வண்டு போல் புஷ்பத்தை முகர்ந்து கொண்டிருந்தாள், தேவர் களுடைய மனத்திற்கும், கண்களுக்கும் ஸந்தோஷத்தை உண்டுபண்ணக்கூடிய நடை, விளையாட்டு வணக்க மான பார்வை, இனிமையான பேச்சு இவைகளைக் கொண்டு மனிதர்களுடைய மனத்தில் மன்மதனை ப்ரவேசிக்க செய்கிறாள். மேலும் அவள் தன்னுடைய முகத்திலிருந்து வெளிக்கிளம்பியதும், அமிருதம் போல ருசியுள்ளதும் மத்யம்போல் மதத்தை உண்டுபண்ணக் கூடியதுமான சிரிப்பு, பேச்சு இவைகளாலுண்டாகிய மூச்சுக் காற்றுள்ளவள். அதனை முகர்ந்து, மதித்த வண்டுகளால் சூழப்பட்டு அதனால் பயந்து வேகமாக நடக்கும்போது கொஞ்சம் அசைகின்ற ஸ்தனங்கள். தாமரைமலர்கள். ஒட்டியாணம் இவைகளுள்ளவள். அவளைக் கண்டவுடன் மன்மதன் இதுதான் ஸமயமென்று ஆக்னீத்ரரிடம் ப்ரவேசித்தான். ஆக்னீத்ரரும் மன்மதனுக்கு வசப்பட்டு ஜடன் போல அவளை நோக்கிப் பின் வருமாறு சொல்லலானார் "நீ யார்? மஹர்ஷிகள் வஸிக்கும் இந்த மலையில் எதனைச்செய்ய விரும்புகிறாய்? நீ பகவானாகிய பர தேவதையினுடைய ஒப்பற்ற மஹிமையுள்ள மாயையாக இருக்கவேண்டும். அடிதோழியே! நாண்கயிரற்ற இரண்டு வில்களை எதற்காக வைத்துக்கொண்டி ருக்கிறாய்? இந்திரியங்களை ஜயிக்காதவர்களும் மிருகத்துக் கொப்பானவர்களுமான என்னைப் போன்ற வர்களை ஸ்வாதீனப்படுத்திக் கொள்வதற்காக அவை களை வைத்துக் கொண்டிருக்கிறாயா? தாமரைமலரின் இதழ்போன்றவைகளும் மிகவும் கடுமையான கோடுக ளுள்ளதும், அழகான கணுக்களுள்ளதுமான இவைகள்,

பகவானாகிய மன்மதனுடைய பாணங்களேயாம். இவைகளை யாரிடத்தில் ப்ரயோகிக்கப் போகிறாய்? எனக்கு தெரியவில்லை, புத்தி மயக்கமடைந்த எங்களுக்கு உன்னுடைய பராக்ரமம் க்ஷேமத்தை உண்டு பண்ணட்டும். உன்னுடைய சிஷ்யர்களான இந்த வண்டுகள் ரஹஸ்யத்துடன் கூடிய ஸாமத்தை படிக்கின்றன. மேலும், மஹர்ஷிகள் வேதசாகையை அடைவதுபோல உன்னுடைய தலையிலிருந்து நழுவிய புஷ்பங்களை வண்டுகள் அடைகின்றன. (பாதஸரத்தின் சப்தத்தைக்கேட்டுச் சொல்லுகிறார்) ஓ ப்ராஹ்மண! (ஸ்திரீயையே ப்ராஹ்மணனென்று அழைக்கபபட்டது) உன்னுடைய பாதார விந்தத்தி லுள்ள பாதஸரத்திலிருக்கும் ரத்னங்களுடைய சப்தத்தைக் கேட்கிறோம். சப்திக்கிறவன் காணப்பட வில்லை. சப்தமோ மிகவும் ப்ரகாசமாக விருக்கிறது. நிதம்ப பிம்பத்தில் கதம்ப புஷ்பத்தின் காந்தி எப்படி யுண்டாயிற்று? (வஸ்த்ரத்தை நிதம்பத்தின் காந்தியாக சொல்லப்பட்டிருக்கிறது.) அந்த நிதம்பத்தில் குறைக்கொள்ளி இருக்கிறது. (ஒட்டியாணம் அக்னி போல் ஜ்வலிக்கிறது.) உன்னுடைய மறையுரி எங்கே? ஓ ப்ராஹ்மண! அழகான ஸ்தனங்களில் என்ன இருக்கிறது? நீ இளைத்த இடுப்புள்ளவளானாலும் சிரமப்பட்டு அவைகளை தரிக்கிறாய். அவைகளில் என்னுடைய கண்கள் பதிந்திருக்கின்றன. அந்த ஸ்தனங்களில் இம்மாதிரியான குங்குமப்பூ சேர்ந்த சந்தனமிருக்கிறது. அதனால் என்னுடைய ஆச்ரமம் முழுவதும் வாஸனையுள்ளதாகச் செய்கிறீர் ஓ மிக்க ஸுஹிருத்தே! உம்முடைய லோகத்தை எனக்குக் காண்பியும். அந்த லோகத்திலிருப்பவர்களுடைய மார்பானது இம்மாதிரி அபூர்வமான அவயங்களை

தரிக்கிறது. முகமானது இனிமையான பேச்சு, விலாஸம், அதராமிருதம் முதலியவைகளை தரிக்கிறது. உங்களுடைய லோகத்தில் எதனை புஜிப்பது வழக்கம்? ஹவிஸ்ஸின் வாஸனையானது வீசுகிறது. நீ விஷ்ணு வின் கலையாகையால் ஆஹாரத்தை நீ புஜிக்கிற தில்லையென்றே நினைக்கிறேன். உன்னுடைய முகமானது சரத்காலத்திய குளம் போல ப்ரஸன்னமாக விருக்கிறது. அந்த முகத்தில் கண்கொட்டவில்லாத மகரங்கள் போன்ற மகர குண்டலங்களுள்ள காது களும், மீனங்கள் போன்ற கண்களும், பல்வரிசை களுடைய அழகும், வண்டுகள் போன்ற கருத்த தலைமயிருமிருக்கின்றன ஆனதால் அந்தமுகமானது மகரங்கள், மீன்கள், பறவைகள், ஆகிய இவைகளுள்ள குளம் போலிருக்கிறது. உன்னுடைய தாமரைமலர் போன்ற கையினால் அடிக்கப்பட்ட பந்தானது சஞ்சலசித்தமுள்ள என்னுடைய கண்களை அசைக்கிறது. தலைமயிர் அவிழ்ந்திருக்கிறது. தூர்த்தனாகிய காற்றானது உன்னுடைய எக்கு முடிச்சை அபஹரிக்கிறது. அதனை நீ அறியவில்லையா? ஓ தபோதன! தபஸ்ஸை கெடுக்கும் இப்படிப்பட்ட ரூபத்தை எந்தத் தபஸ் செய்து அடைந்தீர் ஓ மித்ர! என்னுடைய இவ்விடத்தில் தபஸ் செய்யத் தகுந்தவராயிருக்கிறீர். ப்ரஹ்மதேவர் என்னிடத்தில் தயைசெய்து உன்னை அனுப்பியிருக்கிறார். ஓ ப்ராஹ்மண! ப்ரஹ்மதேவரால் கொடுக்கப்பட்ட உன்னை விடமாட்டேன். என்னுடைய மனமும் கண்களும் உன்னிடமே பதிந்திருக்கின்றன. உன்னை அனுஸரித்தவனாகியஎன்னை உனக்கு ஸ்வாதீனனாகச் செய்யவேண்டும். உன்னுடைய தோழிகளும் எனக்கு அனுகூலர்களாக விருக்கவேண்டும்" என்று விஷயத்தில்

ஆசையுள்ளவராகிய ஆக்னித்ரர் ஸ்திரீகளை இனிமையான வார்த்தையால் வசப்படுத்துவதில் ஸமர்த்தராகையால் அவளை தம்மிடம் ஆசைப்படும்படி செய்து கொண்டார்.

13–23. அந்த அப்ஸரஸ்ஸும் அவருடை புத்தி, ரூபம், ஸ்வபாவம், வித்தை, வயஸ், அழகு, ஔதார்யம் ஆகிய இவைகளால் புத்தி மயங்கினவளாகி ஜம்பூத் வீபத்திற்கு அதிபதியும் சூரர்களுக்கு அதிபதியுமான ஆக்னீத்ரருடன் வெகுகாலம் பூமியிலிருக்கும் ஸ்வர்க்க மாகிய ஒன்பது கண்டத்திலுமுள்ள சுகத்தை அனுபவித்தாள். அந்தப்பூர்வ சித்தியிடத்தில் நாபி, கிம்புருஷன், ஹரிவர்ஷன், இளாவிருதன், ரம்யகன், ஹிரண்மயன், குரு, பத்ராஸ்வன், கேது, மாலன் என்ற ஒன்பது புத்ரர்கள் பிறந்தார்கள், (புத் என்ற நரகத்திலிருந்து காப்பாற்றுகிற படியால் புத்ரனென்று) பின்பு அந்த பூர்வசித்தியானவள் ஒவ்வொரு வர்ஷங்களிலும் ஒவ்வொரு குழந்தைகளைப் பெற்று அந்த ஒன்பது குழந்தைகளையும் வீட்டிலேயே வைத்துவிட்டு ப்ரஹ்மதேவரிடஞ் சென்றாள். பின்பு அந்த ராஜபுத்திரர்களுக்கு மாதாவின் அனுக்ரஹத்தால் தேகபலம் முதலியவை இயற்கையிலுண்டாயிற்று. பிதாவாகிய ஆக்னீத்ரர் அவர்களுக்கு ஜம்பூத்வீபத்தி லுள்ள ஒன்பது கண்டங்களை ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்றாகப் பிரித்துக் கொடுத்தார். அவரவர்கள் தங்கள் கண்டத்திற்கு தங்களுடைய பெயரையே வைத்தார்கள். அதனால் அந்த ஒன்பது பெயருள்ள தாக ஒன்பது கண்டங்களும் வழங்கிவருகின்றன. ஆக்னீத்ரர் ஸகல காமங்களையும் அனுபவித்து திருப்தி அடைந்தவரானாலும் அந்த அப்ஸரஸ்ஸையே

மேலானவளாக ஒவ்வொரு நாளும் நினைத்து அவளுடைய லோகஞ் சென்றார். அவ்விடத்தில் பிதிருக்கள் சந்தோஷப்படுகிறார்கள். ஆக்னீத்ரருக்குப் பிறகு அவருடைய ஒன்பது புத்ரர்களும் மேருதேவீ, பிருதிரூபா , உக்ரதம்ஷ்டரீ, லதா, ரம்யா, ச்யாமா, நாரீ, பத்ரா, தேவவீதி என்ற மேருவின் புத்ரிகளை முறையே கல்யாணஞ் செய்து கொண்டார்கள்.

அத்தியாயம்–3

நாபியின் சரிதம்

நாபியென்பவர் புத்ரனில்லாதவராக புத்ரனை அடைய விரும்பி மேருதேவியினுடன் யஜ்ஞ புருஷராகிய ஸ்ரீமந் நாரயணரை யாகத்தால் பூஜித்தார். இப்படி சுத்த சித்தராக சிரத்தையுடன் யாகஞ் செய்தார். ப்ரவர்க்யம் நடந்தது. அப்பொழுது பாகவதர்களிடத்தில் கருணையால் அழகான அவயங் களுள்ளதும், ஸ்வதந்திரமும், ஸுகத்தைக் கொடுக்கக் கூடியதும், மனத்திற்கும், கண்களுக்கும் அழகானதுமான தம்முடைய ஸ்வரூபத்தை பக்தர்களுடைய இஷ்டத்தை நிவேற்றும் எண்ணமுள்ள பகவான் நாரயணன் பிறரால் அடைய முடியாதவரானாலும் த்ரவ்யம், தேசம், காலம், மந்திரம், ரித்விக், தக்ஷிணை, விதி முதலிய ஏழுவகையான உபாயஸம்பத்தியால் ப்ரகாசப் படுத்தினார். (தர்சனங் கொடுத்தாரென்று கருத்து) அந்த பகவத் ஸ்வரூபமானது இரண்டு கைகளுள்ளது; ஸுவர்ண மயம்; புருஷ ஸ்வரூபம்; பீதாம்பரத்தைத் தரித்தது, ஸ்ரீவத்ஸத்தால் அழகான மார்புள்ளது; மேலுமது சங்கம், பத்மம், வனமாலை, சக்ரம், கௌஸ்துபம், முதலியவைகளுள்ளது; மிகவும் பிரகாசிக்கின்ற கிரீடம், குண்டலங்கள், கைவளை, அரை ஞாண், ஹாரம், தோள்வளை; பாதஸரம் முதலிய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டது; அந்ததிவ்யரூபத்தை கண்ட ரித்விக்குகளும், யஜமானனும் தரித்திரனுக்குப் பணங்கிடைத்தாற் போல் மிக்க ஸந்தோஷமடைந்து வணக்கத்தால் தலை குனிந்தவர் களாக மிகுந்த கௌரவத்துடன் பூஜித்து ஸ்துதிக் கலானார்கள்.

ஓ மிகவும் பூஜ்யரே! உம்முடைய வேலைக்காரர் களான எங்களால் செய்யப்படும் பூஜையை அங்கீகரிக்க வேண்டும், "நமஸ்காரஞ் செய்கிறேன்" என்றதை சொல்வதுதான் எங்களுக்குத் தெரியும். ஓ ஈச்வர, ப்ரபஞ்சத்தையே அறிந்தவனும் அஸ்வதந்த் ரனுமான புருஷனால் பிரகிருதிக்கும் புருஷனுக்கும் கீழ்ப்பட்ட நாமம். ரூபம்! ஆகிருதி ஆகிய இவைகளைக் கொண்டு பரராகிய உம்முடைய ஸ்வரூபத்தை எப்படி நிரூபிக்க முடியும்? ஸகல ப்ராணிகளுடைய பாபத்தை போக்கக் கூடிய மங்களகரமாகிய உம்முடைய மேலான குணங்களுடைய கூட்டத்தின் ஸ்வல்ப பாகத்தைச் சொல்லிக் கொண்டிருப்பதே ஸாதாரண ஜனங்களுக்குத் தகுதியானது. ஓ மேலானவரே! உம்முடைய பரிஜனங்களால் கத்கத ஸ்வரமுள்ள ஸ்தோத்ரத்தாலும் ஜலத்தாலும், சுத்தமான தளிர், துளஸீ, அருகம்புல் ஆகிய இவைகளைக் கொண்டு செய்யப்படும் பூஜையால் ஸந்தோஷிக்கிறீர். அநேக அங்கங்களுள்ள இந்த யாகத்தாலும் உமக்குப் ப்ரயோஜன மொன்றுமில்லை. எப்பொழுதும் இயற்கையில் ஸகல புருஷார்த்தஸ்வரூபமான பரமானந்த ஸ்வரூபியான உமக்கு இதனால் என்ன ப்ரயோஜனம்? ஆனால் காமத்தை விரும்பிய நாங்கள் உம்மைப் பூஜித்து இஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ள ஸாதனமாக ஆகிறது. மேலும் ஓ பரமபுருஷ! நீர் நிரபேக்ஷரானாலும், ஸாபேக்ஷர் போல் தங்களுடைய க்ஷேமஸாதனத்தை அறியாத பாலர்களிடத்தில் மிகுந்த கருணையுடன் அவர்களால்தான் நன்றாய் ஆராதிக்கப்படாமலிருக்கும் பொழுதும் மோக்ஷமென்ற தம்முடைய மஹிமையை அவர்களுக்குக் கொடுக்கப் போகிறவராய் காணப்படுகிறீர். இந்த ராஜர்ஷியின்

யாகத்தில் பக்தர்களான எங்களுக்கு தர்சனங் கொடுத்ததே வரமாயிற்று. வைராக்யத்தாலுண்டான திவ்ய ஜ்ஞானமாகிய காற்றில் மலங்களற்றவர்களும், உம்முடைய ஸ்வரூபத்தை யொற்றவர்களும், ஆத்மா ராமர்களுமான மஹர்ஷிகளும் உம்முடைய மேலான குணங்களைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமே யல்லாமல் உம்மை நேரில் தர்சிக்க முடியாது. ஆனாலும் நடக்கும் பொழுது, தடுக்குவது, தும்புவது, கொட்டாவி விடுவது முதலிய அவஸ்தைகளில் உம்மை ஸ்மரிக்க முடியாத வர்களான எங்களுக்கு ஜ்வரம், மரணம் ஆகிய தசைகளிலும் ஸகல பாபங் களையும் போக்கக் கூடிய உம்முடைய நாமஸ்மரணம் உண்டாகும் படி அனுக்ரஹிக்க வேண்டும். மேலும் இந்த ராஜரிஷி யானவர் உம்மைப் போன்ற புத்ரன் வேண்டுமென்ற எண்ணமுள்ளவராகி ஸ்வர்க்கம், மோக்ஷம் ஆகிய இவைகளுக்கு அதிபதியான உம்மை ஸேவிக்கிறார். புத்ரனே புருஷார்த்தமென்று நினைத்திருக்கிறார். இது தரித்திரன் கீழானவஸ்துவை அடைய விரும்பி தனத்தையடைந்தாற் போலிருக்கிறது. ஆனால் இது ஆச்சரியமல்ல. இந்த ஸம்ஸாரத்தில் ஒருவராலும் முடியாததும், பார்க்கமுடியாத மார்க்கமுள்ளதுமான உம்முடைய மாயையால் ஜயிக்கப்படாதவன் யார்? அதனால் கவர்ந்து கொள்ளப்படாத பக்தியுள்ளவர் யார்? விஷயங்களாகிய விஷய பிரகிருதி சம்மந்த மில்லாதவன் யார்? எவன் மஹான்களுடைய சரணத்தையுபாஸித்தவனோ, அவன் இவைகளுக்குட் படமாட்டான். அநேக கார்யங்களைச் செய்பவரே ஸ்வல்பமான கார்யத்தை யுத்தேசித்து உம்மை மாந்தர்களான நாங்கள் அழைத்தது தேவராகிய உம்மை அவமதித்ததாக ஆயிற்று. ஸகல ஸ்வரூபியாகையால்

அதனை க்ஷமிக்க வேண்டும்." என்று வாக்ய நடையாக ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டவரும், பாரத வர்ஷத்திற்கு அதிபதியான நாபியினால் நமஸ்கரிக்கப் பட்டவருமான பகவான் கருணையுடன் பின்வருமாறு சொல்லலானார்.

17–19 ஓ மஹர்ஷிகளே, ஸத்யமான வாக்குள்ள நீங்கள் இந்த அரசனுக்கு "என்னைப் போன்ற புத்திரன் பிறக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்ட படியால் நான் ஒப்பற்றவனாகையால் நானே எனக்குச் சமன். ப்ராஹ்மணர்களுக்குட் சிறந்தவர்கள் எனக்கு முகமாகையால் அவர்களுடைய வார்த்தை பொய்யாக ஆகக்கூடாது. ஆனதால் ஆக்னீத்ரருடைய புத்ரராகிய நாபிக்கு நான் புத்ரனாக அவதரித்திருக்கிறேன். (இது அம்சாவதாரம்) என்று மேருதேவி கேட்டுக்கொண்டி ருக்கும் போது நாபிக்கு அனுக்ரஹஞ் செய்து மறைந்தார். இப்படி மஹர்ஷிகளால் பூஜிக்கப்பட்ட பகவான்நாபியின் இஷ்டத்தை நிறைவேற்ற வேண்டி அவருடைய ஸ்திரீயாகிய மேரு தேவியிடத்தில் சுத்தஸத்வமாகிய சரீரத்துடன் அவதரித்தார். இந்த அவதாரத்தில் நைஷ்டிக ப்ரஹ்மசாரிகள், காற்றையே வஸ்த்ரமாகக் கொண்டவர்களான தபஸ்விகள், ஜ்ஞானிகள் ஆகிய இவர்களுடைய தர்மத்தை வெளியிட்டார்.

அத்தியாயம்–4

ரிஷபசரிதம்

பிறந்தது முதல் நன்றாய் ப்ரகாசிக்கின்ற பகவானுடைய லக்ஷணங்களுள்ளவரும், ஸகலப்ராணி களையும் சமமாகப்பார்ப்பது, இந்திரியங்களை அடக்குவது, விஷயங்களில் ஆசைப்படாமலிருப்பது, ஸகல ப்ராணிகளுக்கும் நியந்தாவாக விருப்பது மிகுந்த விபூதியுள்ளவராகவிருப்பது ஆகிய இவைகளால் நாளுக்கு நாள் விருத்தியடைந்த மஹிமையுள்ள வருமான அந்த புத்ர ரத்னத்தை, மந்திரிகளும், ஜனங்களும் ப்ராஹ்மணர்களும், பூமியைப் பரிபாலனம் பண்ணத் தகுந்தவர் என்று நினைத்து. இவரே அரசனாக இருக்கவேண்டுமென்று நினைத்தார்கள். மேலும் அவர்களுடைய மேலானதும், கொண்டாடக் கூடியதுமான தேஹத்தாலும், தேஜஸ்ஸாலும், பலத்தாலும், உத்ஸாஹத்தாலும், அழகினாலும் கீர்த்தியாலும் அவருடைய தகப்பனாராகிய நாபி என்பவர் ரிஷபர் என்று அந்தக் குழந்தைக்கு பெயர் வைத்தார்.

3–7. அவருடைய ராஜ்யகாலத்தில் அந்த வர்ஷத்தில் (தேசத்தில்) இந்திரன் மழை பெய்யாம லிருக்கச் செய்தான். அதனைத் தெரிந்துகொண்ட அந்த ரிஷபதேவர் சிரித்து, தம்முடைய யோகமாயையால் அஜநாபமென்ற தன்னுடைய ராஜ்யம் முழுவதும் மழை பெய்யச் செய்தார். நாபி என்பவர் தமதிஷ்டப் படி நல்ல புத்திரனை அடைந்து மனுஷ்ய ஜன்மத்தை யடைந்தவரான பகவானாகிய புராணபுருஷனை

மாயையால் தம்முடைய புத்ரனென்று நினைத்து, "வத்ஸ! தாத!" என்று ப்ரியமான வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டு மிகுந்த ஸுகத்தை அடைந்தார். பின்பு அந்த நாபியானவர் பட்டணத்திய ஜனங்கள், மந்திரி முதலியவர்கள், தேசத்திய ஜனங்கள் ஆகிய எல்லோரும் ரிஷப தேவரிடத்தில் விசேஷ அனுராக முள்ளவர்களாக இருப்பதைத் தெரிந்துகொண்டு, அவருக்கு பட்டாபிஷேகம் செய்து ப்ராஹ்மணர்களி டத்தில் ஒப்புவித்து, மேருதேவியுடன் பதரிகாச்ரமஞ் சென்று, விக்னங்களின்றி நரநாராயணர் என்ற பகவானை தபஸ்ஸினால் ஆராதித்து சிலகாலஞ் சென்ற பின் ஜீவன் முக்தராக ஆனார். ஓ பரீக்ஷித்தே! அது விஷயமாக இரண்டு ச்லோகங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. அவைகள் பின்வருமாறு. நாபி என்ற அரசன் சுத்தமாகிய கர்மத்தைச் செய்து மஹா விஷ்ணுவை புத்ரனாக அடைந்தார். அவர்செய்த கார்யம் வேறுயாரால் செய்யப்படும். மேலுமவர் ப்ராஹ்மணர்களை பூஜித்து ப்ராஹ்மண பக்தி யுள்ளவராக யிருந்தபடியால் அவருடைய யாகத்தில் மஹர்ஷிகள் யஜ்ஞபதியான மஹாவிஷ்ணுவை அரசனுக்கு காண்பித்தார்கள், அவரைக் காட்டிலும் ப்ராஹ்மண பக்தியுள்ளவர் வேறுயாரிருக்கிறார் ?

8–12. பிறகு அந்த ரிஷபதேவர் தம்முடைய வர்ஷத்தை (தேசத்தை) கர்மபூமியென்று நினைத்து குருகுல வாசம் செய்து குருக்களிடம் விடைபெற்று கிருஹஸ்தர்கள் இம்மாதிரி இருக்கவேண்டும் என்று பிறருக்குத் தெரிவித்து ச்ரௌத கர்மங்களையும், ஸ்மார்த்த கர்மங்களையும் அனுஷ்டித்து, இந்திரனால் கொடுக்கப்பட்ட ஜயந்தி என்பவளிடத்தில் தமக்கு

சமானர்களான நூறு புத்ரர்களை உண்டு பண்ணினார். அவர்களுக்குள் மூத்தவராகிய பரதன் என்பவர் யோகியும் மேலான குணமுள்ளவருமாக இருந்தார். அவருடைய ராஜ்யம் முதல் இந்த வருஷத்திற்கு பாரதவர்ஷமென்று பெயர் வந்தது, அவருடைய பின் பிறந்தவர்களுக்குள் (தும்பிகளுக்குள்) குசாவர்த்தன, இளாவர்த்தன், ப்ரஹ்மாவர்த்தன், ஆர்யாவர்த்தன் மலையகேது, பத்ரஸேனன், இந்திரஸ்ப்ருக், விதர்பன், கீகடன், என்று ஒன்பது பேர்கள் முக்யமானவர்கள், பின்னும் கவி, ஹரி, அந்தரிக்ஷன், ப்ரபுத்தன், பிப்பலாயனன், ஆவிர் ஹோத்ரன் த்ரமீடன், சமஸன், கரபாஜனன் என்ற ஒன்பது பேர்கள் பாகவதர்கள், பாகவத தர்மத்தை காண்பிப்பவர்கள். அவர்களுடைய சரிதத்தை வஸுதேவர், நாரதர் இவர்களுடைய ஸம்வாதமாக பதினோராவது ஸ்கந்தத்தில் சொல்லு வோம் பாக்கியான எண்பத்தோரு பிள்ளைகளும் மிகவும் வணக்கமுள்ளவர்கள். வேதாத்யயனஞ் செய்த வர்கள்; தகப்பனாருடைய உத்தரவின்படி நடப்ப வர்கள். யாகத்தைச் செய்பவர்கள். கர்மாவினால் சுத்தர்கள்; ஜயந்தியின் பிள்ளைகளான அவர்கள் எல்லோரும் யாகம் செய்விப்பது முதலிய ப்ராஹ்மண தர்மத்தை யனுஷ்டித்து வந்தார்கள்.

13–18. பகவான் ரிஷபதேவரென்ற பெயருடன் அவதரித்து தாம் ஸ்வதந்தமற்றவராகவும், தாம் எப்பொழுதும் துக்க ஸம்பந்த மற்றவராயும், ஆனந்த ஸ்வரூபியும், ஈச்வரனுமாக விருந்தும், சம்சாரிபோல கர்மங்களைச் செய்து கொண்டு அந்தந்த காலத்தில் செய்யவேண்டிய தர்மத்தை தாம் அனுஷ்டித்து அதனால் பிறரை அனுஷ்டிக்கச் செய்துகொண்டும்,

சாந்தரும், ப்ராணிகளிடத்தில் ப்ரியமுள்ளவரும், கருணையுள்ளவரும், தர்மம், அர்த்த், காமம், கீர்த்தி, போகம், மோக்ஷம் இவைகளை அனுசரித்து க்ருஹஸ் தாச்ரமத்தை ஜனங்களை சரியாக அனுஷ்டிக்கச் செய்தார். லோகத்தில் பெரியோர்களால் செய்யப் படும் கார்யத்தையே மற்றவர்கள் அனுஷ்டிப்பது வழக்கம். மேலும் அந்த ரிஷபதேவர் ஸகல வேத ரஹஸ்யமான தர்மங்களை தாம் அறிந்திருந்தும், ப்ராஹ்மணர்களைச் கேட்டுக்கொண்டே ஸாமம் முதலிய உபாயங்களால் ராஜ்யபாலனஞ் செய்தார். த்ரவ்யம், தேசம், காலம், வயஸ், ச்ரத்தை, ரித்விக்குகள் பலவகையான தேவதைகளை உத்தேசித்து கர்மங்கள் ஆகிய இவைகளால் விருத்திசெய்யப்பட்ட யஞ்ஞங் களை ஒவ்வொன்றையும் முறைப்படி நூறுதரம் அனுஷ்டித்தார். ரிஷப தேவர் ராஜ்ய பரிபாலனம் செய்யுங்காலத்தில் ஒருவனும் பிறருடைய சொத்தில் கொஞ்சமேனும் ஆசைப்படுகிறதில்லை. ஆகாசத்தில் முளைத்த தாமரை புஷ்பத்தை யாராவது விரும்புவானா? எல்லா ஜனங்களும் அரசனிடத்தில் விசேஷ சிநேகம் வைத்திருந்தார்கள். அந்த ரிஷபதேவர் ஒரு கால் பூமியில் சஞ்சரிக்கும்போது ப்ரஹ்மா வர்த்தமென்ற கேஷத்திரஞ் சென்று, ப்ரஹ்மர்ஷிகள் கூடியிருக்கும் ஸதஸ்ஸில் ப்ரஜைகளெல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கும்போது வணக்கம், ப்ரியம். இவைகளுள்ளவர்களும், ஸாவதானர்களுமான தம்முடைய புத்ரர்களை நோக்கி புத்திபுகட்டும் வ்யாஜமாக பின்வருமாறு சொன்னார்.

அத்தியாயம்–5

மோக்ஷதர்ம நிரூபணம்

"ஓ புத்ரர்களே அமேத்யத்தை புஜிக்கும் பன்றி முதலியவைகளுக்கும், ஸுகதுக்கங்கள் பொதுவாக யிருப்பதால் அந்த விஷயங்களை இந்த தேஹம் அனுபவிக்கத் தக்கதல்ல. சித்தமானது எதனால் சுத்தி அடையுமோ எதனால் அழிவற்ற ப்ரஹ்மஸுகம் உண்டாகிறதோ, அந்த தபஸை அனுஷ்டிக்க வேண்டும். எவர்கள் ஸுகதுக்கங்களில் ஸமபுத்தி யுள்ளவர்களோ, மிகவும் சாந்தர்களோ, கோபமற்றவர் களோ, ஸகல பிராணிகளிடத்திலும் ப்ரீதியுள்ள வர்களோ, ஸாதுக்களோ, அவர்களே மஹான்கள். அந்த மஹான்களை ஸேவிப்பதே முக்திக்கு மார்க்கமாகிறது. ஸ்திரீகளிடத்தில் ஆசையுள்ளவர் களுடைய சேர்க்கையானது ஸம்ஸாரத்திற்குக் காரணமாகிறது. எவர்கள் ஈச்வரனாகிய என்னிடத்தில் ப்ரீதிசெய்வதையே புருஷார்த்தமாக உடையவர்களோ, தேஹத்தைப் போஷிக்கிற விஷயத்தைப் பற்றிய வார்த்தை, ஸ்திரீ, புத்ரன் ஆகிய இவைகளில் ப்ரீதி வைப்பதாகிய ஸம்ஸாரத்தில் ப்ரீதியில்லாதவர்களோ, தேஹத்தை நிர்வஹிக்கும் விஷயத்திலும் ஆசை யில்லாதவர்களோ, அவர்களே மஹான்கள். எப்பொழுது புருஷன், இந்திரியங்களை திருப்தி பண்ணி வைப்பதற்காக கர்மங்களைச் செய்கிறானோ அப்பொழுது, பாபத்தைச் செய்கிறான். முந்திய பாப கர்மத்தாலேயே துக்கத்தைக் கொடுக்கக்கூடிய இந்த சரீரம் உண்டாயிருக்கிறது. அதற்குக் காரணமாகிய

கர்மாவை பின்னும் செய்வது உசிதமல்ல, ஆத்ம தத்துவத்தைத் தெரிந்து கொள்ளுகிற வரையில் அஜ்ஞானத்தால் ஸ்வரூபம் மறைக்கப்பட்டிருக்கிறது. எதுவரையில் கர்மங்களிருக்குமோ அதுவரையில் மனமானது கர்ம ஸ்வபாவமுள்ளதாகயிருக்கும். அதனால் தான் சரீர பந்தம் உண்டாகிறது. அவித்யையினாலே ஆத்மாவானது மறைக்கப்பட்டிருக்கும் பொழுது முன் ஜன்மத்திய கர்மாவானது மனத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளுகிறது. எதுவரையில் ஸ்ரீ வாசுதேவரிடத்தில் ப்ரீதி உண்டாகிறதில்லையோ, அதுவரையில் தேக சம்பந்தம் விடுகிறதில்லை. எப்பொழுது இந்திரிய சேஷ்டையை மித்யை என்று தெரிந்து கொள்ளவில்லையோ, அப்பொழுது ஸ்வரூபஜ்ஞானமற்றதாகி ஸ்தீரீ சுகத்தை ப்ரதானமாயுடைய க்ருஹத்தை அடைந்து பல வகையான தாபங்களை அடைகிறான். புருஷன் ஸ்திரீயுடன் சேர்ந்து மிதுனீபாவத்தை அடைவதால் ஹிருதய க்ரந்தி உண்டாகிறது. அதனால் க்ருஹம், க்ஷேத்ரம், புத்ரன், மித்ரன் ஆகிய இவைகளில் (நான், என்னுடையது) என்ற மோஹம் உண்டாகிறது. கர்மத்தால் த்ருடமான மனதாகிய ஹிருதயக்ரந்தியானது எப்பொழுது குறையுமோ, அப்பொழுது இந்த மிதுனீபாவத்திலிருந்து நிவர்த்தி அடைகிறான். அஹங்காரத்தை ஒழித்து முக்தனாக பரமபதத்தையும் அடைகிறான். மேலும் பரமஹம்ஸனும் குருவுமாகிய என்னை சேவிப்பதாலும் என்னையே நினைத்துக் கொண்டிருப்பதாலும், ஆசையில்லாமல் இருப்பதாலும், சுக துக்கங்களை சஹிப்பதாலும், லோகாந்தரத்திலும் துக்கமிருக்கிறதென்று நினைப்பதாலும், தபஸ்ஸினாலும், காம்ய கர்மங்களை விடுவதாலும், என்னுடைய

கர்மங்களை அனுஷ்டிப்பதாலும், என்னுடைய கதையைச் சொல்வதாலும், என்னையே தேவதையாக நினைத்திருக்கும் சாதுக்களுடைய சங்கத்தாலும், என்னுடைய குணங்களைச் சொல்வதினாலும், விரோத புத்தியில்லாமலிருப்பதாலும் எல்லாவற்றையும் சமமாகப் பார்ப்பதாலும், சமத்தாலும், அத்யாத்ம யோகத்தாலும், ஜனங்களில்லாத இடத்தில் வசிப்பதாலும், ப்ராணன், இந்திரியம், மனது இவைகளை ஜயிப்பதாலும், பரமாத்மாவினிடத்திலிருக்கும் ச்ரத்தையாலும், ப்ரஹ்மசர்யத்தாலும், தவறுதலையாம விருப்பதாலும், வாக்நியமத்தாலும் என்னை ஹிருதயத்தில் பாவனை செய்ததால் ப்ரகாசிக்கும் ஜ்ஞானத்தாலும், விஜ்ஞானத்தாலும், யோகத்தாலும், தைர்யம், ப்ரயத்னம், விவேகம் ஆகிய இவைகளுள்ளவனாகி அஹங்காரமாகிய உபாதியை நிவர்த்தித்துக் கொள்வான். அவித்யையால் ஏற்பட்ட ஹிருதயக்ரந்தியை மேற்சொல்லிய யோகத்தால் நிவர்த்தித்து, சாதனமாகிய யோகத்திலிருந்தும் ஒழிவடைய வேண்டும். என்னுடைய லோகத்தை அடைய விரும்பியவனும், என்னுடைய அனுக்ரஹத்தையே புருஷார்த்தமாய் நினைத்தவனுமாகிய புருஷன், அரசனானாலும், குருவானாலும், புத்ரர்களுக்கும், சிஷ்யர்களுக்கும் இம்மாதிரி புத்தி புகட்ட வேண்டும். கர்ம ஜடர்களான ஜனங்களைக் கர்மத்தையே செய்விக்கக் கூடாது. மனிதன் காம்ய கர்மங்களைச் செய்யும்படி பிறரைச் செய்தால் அவனை சம்ஸார மாகிய கிணற்றில் தள்ளுகிறதாக ஆகிறது. அதனால் என்ன ப்ரயோஜனத்தை அடையப் போகிறான்? எவன் விசேஷ காமனையுள்ளவனாகி விஷயங்களில் ஆசைப்படுகிறானோ, அவன் ச்ரேயஸ்ஸை அடையும்

விஷயத்தில் தவறுதலடைந்தவன், அல்பசுகத்திற்காக ஒருவருக்கொருவர் விரோதமும், முடிவற்ற துக்கமும் நேரிடுகிறது. அதனை அறியவில்லை. இம்மாதிரி கெட்ட புத்தியுள்ளவனும், அவித்யையின் மத்தியிலிருப்ப வனுமான அஜ்ஞனை அதன் விஷயத்தை நன்றாக அறிந்த வித்வானாயிருப்பவன் திரும்பவும் அதையே செய்யும்படிச் சொல்வானா? கெட்ட மார்க்கத்தில் செல்லும் குருடனை அதே மார்க்கமாகச் செல்லும் படி யார்தான் சொல்லுவான்? எவன் சம்ஸாரத்தை அடைந்து கஷ்டப்படும் புருஷனுக்கு பக்தி மார்க்கத்தை உபதேசித்து அந்த பந்தத்தை நிவர்த்திக்கவில்லையோ, அவன் குருவுமல்ல, பந்துவுமல்ல, தகப்பனுமல்ல, தாயுமல்ல, தைவமுமல்ல, பதியுமல்ல, இந்த என்னுடைய சரீரமானது உளஹிக்க முடியாதது, (என்னுடைய இஷ்டப்படி எடுத்துக் கொள்ளப்பட்டது) தர்மத்திற்கு ஆச்ரயமான சுத்த சத்வமே ஹிருதயம், அதர்மத்தை தூரத்தில் தூரத்தி விட்டேன். அதனால் என்னை பெரியோர்கள் ரிஷபனென்று சொல்லு கிறார்கள். நீங்களும் சுத்த ஸத்வ மயமாக அவதரித் தவர்கள், ஆனதால் ஸஹோதரனாகிய பரதனை பிரியத்துடன் அனுஸரியுங்கள். அப்படி செய்வதே என்னை உபாஸித்ததாகும். பிரஜைகளை பரிபாலித் ததாகும். பூதங்களுக்குள் ஸ்தாவரங்கள் மேலானவை, அவைகளைக் காட்டிலும் சேதனமுள்ள ஜங்கமங்கள் மேலானவை. அவைகளிலும் மனிதர்கள் மேலானவர் கள், அவர்களை விட பூதங்கள், பிசாசுகள் முதலிய ப்ரமதகணங்கள் உத்தமர்கள். அவர்களைவிட கந்தர் வர்களும், ஸித்தர்களும், கின்னரர்களும் உயர்ந்தவர்கள். அவர்களைவிட அசுரர்கள் மேலானவர்கள். அவர்களை விட தேவர்கள் மேலானவர்கள். அவர்களிலும்

இந்திரன் முதலியவர்கள் சிறந்தவர்கள் அவர்களைவிட தக்ஷர் முதலிய ப்ரஹ்மபுத்ரர்கள் உயர்ந்தவர்கள். அவர்களில் ருத்ரன் உயர்ந்தவர். அவரைவிட ப்ரஹ்மதேவர் மேலானவர் அந்த ப்ரஹ்மதேவர் என்னையே தைவமாகக் கொண்டவர். எனக்கு ப்ராஹ்மணர்களே தைவம். ஓ ப்ராஹ்மணர்களே! ப்ராஹ்மணர்களுக்கு ஸமமானது ஒன்றுமில்லை. சிரத்தையுடன் ப்ராஹ்மணர்களிடம் மனிதர்களால் ஹோமஞ் செய்யப்பட்டதை எப்படி நான் புஜிக் கிறேனோ, அப்படி அக்னிஹோத்ரத்தில் ஹோமஞ் செய்வதால் திருப்தியடைகிறதில்லை. என்னுடைய புராதனமாகிய வேதமாகிய சரீரமானது ப்ராஹ் மணர்களால் தரிக்கப்பட்டிருக்கிறது. ப்ராஹ்மணர் களிடத்தில் ஸத்வம், சமம், தமம், ஸத்யம், அனுக்ரஹம், பொறுமை, தபஸ், அனுபவம் ஆகிய குணங்களிருக்கின்றன. ஆனதால் அவர்களை விட மேலானது ஒன்றுமில்லை. அனந்தனும், பரனைக் காட்டிலும் பரனும் ஸ்வர்க்கம் மோக்ஷம் ஆகிய இவை களுக்கு அதிபதியுமான என்னாலும் ப்ராஹ்மணர் களுக்கு காரியமொன்றுமில்லை. மற்றவர்களால் அவர்களுக்கென்ன ப்ரயோஜனம்? அவர்கள் என் னிடத்தில் பக்தியுள்ளவர்கள் ஏழைகள். ஓ புத்ரர்களே! ஸகல ப்ராணிகளையும் எனக்கிருப்பிடமாக அடிக்கடி மாத்ஸர்யமில்லாமல் நீங்கள் நினைக்க வேண்டும். அப்படி நினைப்படதே என்னை பூஜிப்பதாகும். மனது, வாக்கு, கண் முதலிய இந்திரியங்கள் ஆகிய இவை களுடைய வ்யாபாரத்தால் என்னை பூஜிப்படதே அவைகளுக்குப் பயன். என்னை ஆராதிக்கமலிருந்தால் காவ பாசத்திலிருந்து விடுதலையடைய முடியாது என்று உபதேசித்தார்.

28–30 ஸ்வபாவத்தில் நல்ல ஆசாரமுள்ளவர் களான புத்ரர்களுக்குப் புத்தி சொல்லும் வ்யாஜமாக, லோகத்திற்கு தர்மத்தை யுபதேசித்த பரமஸுஹிருத் தாகிய ரிஷபதேவர் இந்திரியங்களை அடக்கினவர் களும் காம்ய கர்மங்களை விட்டவர்களுமான மஹரிஷிகளுக்கு பக்தி, ஜ்ஞானம், வைராக்யம் ஆகிய இவைகளுள்ள பரமஹம்ஸ தர்மத்தையுபதேசித்தும், தம்முடைய புத்ரர்களுக்குள் மூத்தவரும் பரமபாகவதரும் பக்தர்களிடத்தில் ப்ரீதியுள்ளவருமான பரதருக்குப் பட்டாபிஷேகஞ் செய்தும் சரீர ஸம்ரக்ஷணைக்கு மாத்ரமுபயோகமான வ்யாபாரங்களுள்ளவராகி, பயித்தியங் கொண்டவன்போல் ஆகாயத்தை வஸ்த்ரமாக வைத்துக் கொண்டவராகி தலையை அவிழ்த்துக் கொண்டு ஆத்மாவிடத்தில் ஆஹவனீயாக்னியை ஆரோபித்துக் கொண்டு ப்ரஹ்மாவர்த்தத்திலிருந்து வெளியில் சென்றார். மேலுமவர் பிறர் தம்மிடத்தில் பேசினாலும் ஜனங்களுடைய நடுவில் ஜடன்போலும் குருடன்போலும், செவிடன்போலும், ஊமைபோலும், பிசாசம் போலும், பயித்யங் கொண்டவன் போலும் அவதூதவேஷந் தரித்து மௌன வ்ரதமுள்ளவராக விருந்தார். பட்டணங்கள், கிராமங்கள், ரத்னம் விளையும் பூமிகள் பயிரிடுவோர்கள் வசிக்குமிடம், புஷ்பதோட்டம் ஸைன்யங்களிருக்குமிடம், பசுக்களி ருக்குமிடம், இடையர்களிருக்குமிடம், யாத்ரைக்காரர் களுடைய கூட்டம் ரிஷிகளுடைய ஆச்ரமம் முதலிய விடங்களில் இவரை துஷ்டர்கள் அதட்டினார்கள். அடித்தார்கள். மூத்திரத்தைப் பெய்தார்கள். எச்சில் துப்பினார்கள். கல்லை எறிந்தார்கள். சாணத் தூள் இவைகளை எறிந்தார்கள். அசுத்தமான கெட்டவார்த்தை களாலும் ஹிம்ஸித்தார்கள். காட்டு யானையானது

காட்டுக் கொசுக்களால் செய்யப்படும் உபத்ரவத்தை எப்படி அறியாததோ அப்படி அந்த ரிஷபதேவர் அந்த ஹிம்ஸைகளை லக்ஷ்யஞ் செய்யாமலேயே பூமியில் தனியே ஸஞ்சரித்தார். மித்யாபூதமான தேஹம்,ஸத்போல் தோன்றுகிறது. அதில் நான், என்னுடையது என்ற அபிமானமற்று ஸ்வப்னத் திலிருப்பதால் அவருடைய மனது விகாரத்தை அடைகிறதில்லை.

31–35 பின்னுமவருடைய கைகள், கால்கள், மார்பு, விஸ்தாரமான தோள்கள், கழுத்து, முகம் அவயங்களுடைய இணைப்பு ஆகிய இவைகள் மிகவும் அழகாகவிருந்தன. இயற்கையில் புன்சிரிப்புள்ள முகமுள்ளவர்; புதிதாக மலர்ந்த தாமரை மலரின் இதழ் போன்றவைகளும், தாபத்தைப் போக்கக்கூடிய கருவிழிகள் உள்ளவைகளுமான கண்களால் பிரகாசிப் பவர். சமமானவைகளும் அழகு பொருந்தியவை களுமான கன்னங்கள், காதுகள், கழுத்துகள், மூக்குகள் ஆகிய இவைகளுள்ளவர். புன்சிரிப்புள்ள முகத்தால் பட்டணத்திய ஸ்திரீகளுடைய மனத்தில் மன்மதனை யுண்டு பண்ணுகிறார்; பின்புறத்தில் பொன்னிற முள்ள ஜடைதொங்குகிறது, அவதூதராக விருப்பதால் அவருடைய சரீரம் அழுக்கடைந்திருந்தது. அதனால் அவர் பிசாசம் முதலிய கிரஹம் பிடித்தவர் போல் காணப்பட்டார். மேலும் அந்த ரிஷபதேவர் இவ்வுலகத்தை யோகத்திற்கு விரோதியென்றும், அதற்குப் பதில்செய்வது வெறுக்கக்கூடிய தென்றும் நினைத்திருந்தார். பின்னுமவர் அஜகரமென்ற வ்ரதத்தை அடைந்து படுத்துக்கொண்டே புஜிக்கிறார்; குடிக்கிறார்; கடித்து புஜிக்கிறார்; மூத்திரம்

பெய்கிறார்; அமேத்யத்தை விடுகிறார். அமேத்யத் தாலேயே அவருடைய தேஹம் முழுவதும் பூசப் பட்டிருந்தது. அவருடைய அந்த அமேத்யவாசனை யால் நல்வாஸனையுள்ள காற்றானது பத்துயோஜனை தூரம் நான்கு திக்குகளையும் வாஸிக்கச் செய்தது, ஒரே இடத்திலிருந்து ப்ராரப்த கர்மத்தை அனுபவிப்பதே ஆஜகரவ்ரதமெனப்படுகிறது. ஆஜகரமென்றால் மலைப்பாம்பு என்று அர்த்தம்) பின்னுமவர் பசுக்கள், மான், காக்கை ஆகிய இவைகளுடைய நடைபோல் நின்றுகொண்டும், உட்கார்ந்து கொண்டும், படுத்துக் கொண்டும், அவைகளுடைய நடைபோன்ற நடை யுள்ளராகி குடித்தார்; மூத்திரம் பெய்தார். இப்படி பலவகையான யோகங்களை அனுஷ்டித்து கைவல் யத்திற்கு அதிபதியான ரிஷபதேவர் எப்பொழுதும் பரமானந்தத்தை அனுபவித்து ஸகல ப்ராணிகளுக்கும் ஆத்மாவாகிய ஸ்ரீ வாஸுதேவரிடம் அபேத பாவனை செய்திருந்தார். அவருக்கு உபாதி சம்பந்தம் கொஞ்சமேனுமில்லை. அவருக்கு தைவச்செயலாக ஸகல ஐச்வர்யங்களும் கிடைத்தன. அவைகளாவன ஆகாயத்தில் சஞ்சரிப்பது, மனம்போல் வேகமாகச் செல்வது, மறைந்து கொள்ளுகிறது, பிறருடைய சரீரத்தில் பிரவேசிப்பது, வெகு தூரத்திலிருப்பதைப் பார்ப்பது, வெகு தூரத்தில் நடப்பதைக் கேட்பது முதலியவை. அவைகளில் ரிஷப தேவர் சந்தோஷப்படவில்லை.

Released by Maran's Dog, Toronto , Canada

அத்தியாயம்–6

தேஹத்தை விடுவதின் முறை

அதனைக்கேட்ட பரீக்ஷித்து சுக மஹாமுனியை நோக்கி "ஓ பகவன்! ஆத்மாராமர்கள், யோகமாகிய அக்னியில் கர்மங்களாகிய விதைகளை வறுத்து முளைக்கச் சக்தியற்றவைகளாகச் செய்து தைவச் செயலாக கிடைத்த ஐசுவர்யங்களும் துக்கத்தைக் கொடுக்கக் கூடியவைகள் என்று அவைகளை விரும்பமாட்டார்கள்" என்றார்.

2–5. அதனைக்கேட்டச் சுகர், ஓ மஹாராஜ! நீர் சொன்னது உண்மையே சிலர் சஞ்சலமாகிய மனத்தை நம்புகிறதில்லை. மிருகங்கள் வேடனை நம்புகிறதில்லையல்லவா? அப்படியே பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. வ்யபிசாரியான ஸ்திரீ தன்னிடத்தில் பார்தா ப்ரீதியுள்ளவனாக விருப்பதைப் பார்த்து ஜாரபுருஷனை வரவழைத்து அவனைக் கொண்டு பர்த்தாவைக் கொல்வது போல், மனதானது புருஷனை வசப்படுத்திக்கொண்டு காமன் அவர்களுடைய தோழர்களான மன்மதன், லோபன், சோகம், மோஹம், பயம் முதலியவைகளுக்கு இடம் கொடுத்து யோகியை யோகத்திலிருந்து நழுவச் செய்கிறது. ஆனதால் மனது சஞ்சல ஸ்வாபவமுள்ளதாகையால் ஒருவிடத்தி லும் ஆசைவைக்கக்கூடாது. ஆசை வைப்பதால் அனேக யோகிகள் வெகுகாலமாக சம்பாதித்த தபஸ்ஸை இழந்தார்கள். ஆனதால் விவேகியாயிருப்பவன் கர்ம பந்தத்தைக் கொடுக்கும் மனத்தை தனக்கு வசப்பட்ட தென்று நினைப்பானா?

Released by Maran's Dog, Toronto , Canada

6–20. பிறகு அந்த ரிஷபதேவர் ஸகலலோக பாவர்களுக்கு அலங்கார பூதராகயிருந்தும் ஜடன் போல அவதூதவேஷம், பாஷை, நடை ஆகிய இவைகளால் பகவத் ப்ரபாவத்தை வெளியிடாதவராக தேஹத்தைவிடும் முறையை யோகிகளுக்குத் தெரியப் படுத்திக் கொண்டு தன்னுடைய சரீராபிமானத்தை விட்டுவிட விரும்பி பரமாத்மாவிடத்தில் தன்னுடைய ஆத்மாவை அபேதமாக மறைவன்னியில் சேர்த்து, விஷயவாசனைகளை யொழித்து, தேஹாபிமானத்தை விட்டு விட்டார். ஆனாலும் அவருடைய தேஹமானது யோகமாயையின் வாஸனையால் அபிமானாபாஸத்தைக் கொண்டு லோகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தது. ஒருகால் கொங்கணம், வங்கம், படகுடகம், தக்ஷணகர்நாடகம் முதலிய தேசங்களுக்கு தைவச் செயலாய் வந்தார். அவ்விடத்தில் குடகமென்ற மலையின் சமீபத்தில் கற்களை வாயில் கவ்விக்கொண்டு அவிழ்ந்த தலைமயிர்களுடன் வஸ்த்ரமில்லாதவராக பயித்தியங் கொண்டவன் போல சஞ்சரித்தார். பிறகு அந்தக்காட்டில் காற்றினால் மூங்கில்கள் ஒன்றோ டொன்று உராய்ந்து அதிலிருந்து காட்டுத்தீ உண்டாயிற்று. அது க்ரமமாக விருத்தியடைந்து, அந்த ரிஷப தேவருடைய சரீரத்துடன் அந்தக் காட்டை எரித்தது. அவருடைய சரீதத்தை கேட்ட கொங்கணம் வங்கம் இவைகளுக்கு அரசனாகிய அர்கத் என்பவர் ரிஷப தேவருடைய சரிதத்தை அப்யஸித்து 'கலியில் அதர்மம் விருத்தி அடையும்பொழுது தைவத்தால் மோஹமடைந்து தர்மமார்க்கத்தை விட்டு கெட்டதான பாஷண்டமார்க்கத்தில் மனுஷ்யர்களை ப்ரவர்த்திக்கச் செய்யப்போகிறான். அதனால் கலியில் மனுஷ்யர்களுக்குள் அதர்மர்களாயிருப்பவர்கள் தேவமாயையினால்

Released by Maran's Dog, Toronto , Canada

புத்திமயக்கமடைந்து, விதி, ஸௌசம், நல் நடத்தை இவைகளைவிட்டு தேவர்களை அலக்ஷ்யம் பண்ணுகிறதாகிய கெட்டவ்ரதங்களை தன்னுடைய இஷ்டப்படி க்ரஹித்துக்கொண்டும் ஸ்நானம் பண்ணாமலிருப்பது, ஆசமனஞ் செய்யாமலிருப்பது, அசுத்தனாக இருப்பது, தலைமயிரை கத்திரித்துக் கொள்வது முதலிய கெட்ட கார்யங்களைச் செய்து கொண்டும் அதர்மத்தை விருத்தி பண்ணும் கலியினால் மாறின புத்தியுள்ளவர்களாகி வேதம் ப்ராஹ்மணர்கள், யாகம், ஸ்ரீ மஹா விஷ்ணு மற்றப் பிராணிகள் இவைகளை பெரும்பாலும் நிந்திப்பார்கள். அதே மார்க்கமானது அந்த பரம்பரையாக அவர் களுடைய இஷ்டப்படி லோகத்தில் பரவி, அதில் ஜனங்கள் நம்பிக்கை அடைந்து நரகத்தை அடை கிறார்கள். இந்த ரிஷபதேவருடைய அவதாரமானது ரஜோகுண முள்ளவர்களுக்கு மோக்ஷமார்க்கத்தை உபதேசிப்பதற்காகவே ஏற்பட்டது. அதற்கு தகுதியான ச்லோகங்களை பெரியோர்கள் கானஞ் செய்கிறார்கள் அவையாவன – ஏழு சமுத்திரங்களுக்குட்பட்ட பூமியின் த்வீபங்களிலும், வர்ஷங்களிலும் இது மிகவும் புண்யகரமானது. அவ்விடத்திலிருக்கும் ஜனங்கள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் மங்களகரமான சரிதங்களையும், அவதாரங்களையும் கானஞ் செய்கிறார்கள். இந்த வம்சமானது கீர்த்தியால் சுத்தமானது. அந்த வம்சத்தில் ப்ரியவ்ரதர் என்பவர் இருந்தார். மேலும் புராண புருஷராகிய ஸ்ரீ மஹா விஷ்ணு அந்த பட்சத்தில் அவதரித்து மோக்ஷத்திற்குக் காரணமாகிய தர்மத்தை அனுஷ்டித்து வந்தார். இந்த ரிஷபதேவரால் அவஸ்துவென்று (வஸ்துவல்லவென்று) தள்ளப்பட்ட ஸித்திகளை யோகியானவன் ஆசைப்படுகிறதுமன்றி

Released by Maran's Dog, Toronto , Canada

அதற்காக ப்ரயத்னமும் செய்கிறான். ஆகையால் உற்பத்தியற்றவரான அந்த பகவானுடைய திக்கை அனுசரிப்பதற்குக்கூட எந்த யோகியால் முடியும்? ஸகல வேதங்களுக்கும், லோகங்களுக்கும், தேவர்களுக்கும், ப்ராஹ்மணர்களுக்கும், பசுக்களும் பரமகுருவாகிய ரிஷபதேவருடைய இந்த சரிதமானது ஸகல பாபத்தையும் போக்கக்கூடியது மிகுந்த க்ஷேமத்தைக் கொடுக்க கூடியது; இதை ச்ரத்தையுடன் எவன் ஒவ்வொரு நாளும் கேட்கிறானோ, பிறருக்குச் சொல்லு கிறானோ, அவனுக்கு பகவானாகிய வாஸுதேவரிடம் நிரந்தரமான பக்தியுண்டாகிறது. கவிகள் அந்த பக்தியில் பலவகையான பாபங்களுள்ள ஸம்ஸார தாபத்தால் பீடிக்கப்படும் ஆத்மாவை ஸ்நானஞ் செய்வித்து மோக்ஷமென்ற புருஷார்த்தங் கிடைத்தும் அதனை ஆதரிக்கிறார்களில்லை. ஏனென்றால் அவர்கள் எல்லாவற்றையும் பகவானுடையதென்றே நினைத்த வர்கள். ஓ பரீக்ஷித்தே! யதுகுலத்திற்கும் உங்களுக்கும் பதியும், குருவும், தைவமும், ப்ரியரும் குலத்திற்கு பதியுமான பகவான் உங்களுக்கு வேலைக்காரருமாக விருக்கட்டும். ஆனாலும் அவர் தம்மை பூஜிப்பவர் களுக்கு முக்தியைக் கொடுக்கிறார். பக்தியோகத்தை ஒருபொழுதும் கொடுக்கிறதில்லை. (பக்தியோகம் மேலானதென்று கருத்து) எப்பொழுதும் அனுபவிக்கப் பட்ட ஆத்ம ஸ்வரூபத்தால் ஆசைகளற்றவருமான எந்தப் பகவான் ச்ரேயஸ்ஸை அடையவேண்டிய விஷயத்தில் தவறுகளடைந்த ஜனங்களுக்கு மிக்கக் கருணையால் நிர்பயமான ஆத்மாவாகிய லோகத்தை யுபதேசித்தாரோ, அந்த ரிஷப தேவருக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்.

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada



Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

பாகம் –1

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்கந்தம் 1 அத்தியாயம் 1 முதல்
ஸ்கந்தம் 3 அத்தியாயம் 19 வரை

Released by Maran's Dog, Toronto , Canada

இஞ்சிக்கொல்லை
R. சிவராம சாஸ்திரிகள்
அவர்களால் 1908ல் மொழி
பெயர்க்கப்பட்டது.

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ராம நாம வங்கியின் ப்ராசாரப் பிரதாப் பிரிவு
ராம மந்திரம் –2, விளாங்கம் தெரு,
சென்னை – 600 033. ☎: 24893736

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்
தமிழ் வசனம்

TITLE	:	SRIMAD BHAGAVATHAM, TAMIL VACHANAM
AUTHOR	:	INZIKOLLAI R. SIVARAMA SASTRIGAL WRITTEN IN 1908
SIZE	:	CROWN OCTAVE
EXTENT	:	2736 PAGES CONSISTING OF SEVEN VOLUMES
PRICE	:	RS.600/ SET
FIRST EDITION	:	1996
SECOND EDITION	:	2004
THIRD EDITION	:	2007

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பகவன் நாம போதேந்திர
ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின்
பாத கமலங்களிலும்

பரஞ்ஜர் மஹாத்மா
ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள்
அவர்களின்
பாத கமலங்களிலும்

சமர்ப்பணம்

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்

புத்தக விலைப்பட்டியல்...

அரியதும், பழையதுமான க்ரந்தங்களையும், நாமறிந்தாராத விஷயங்களையும் வெளியிடும் பணியில்...

ரூ.	
1500	ஸ்ரீமத் பாகவதம் ப்ரதி பத அர்த்தம்
700	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் மூலம் தமிழில் பெரிய எழுத்தில்
600	ஸ்ரீமத் பாகவதம் வசனம் 7 பாகம்
550	ஸ்ரீமத் பாகவதம் மூலம் தமிழில் பெரிய எழுத்தில்
450	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் மூலம் தமிழில்
350	ஸ்ரீ துளஸீ ராமாயணம் மூலமும் வசனமும்
300	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் வசனம்
300	ஞானேஸ்வரி
250	ஸ்ரீமத் பாகவதம் மூலம் தமிழில்
200	நாராயணீயம் ப்ரதிபத அர்த்தம்
200	ஸ்ரீகிருஷ்ண சைதன்யர்
200	கர்க ஸம்ஹிதை
200	நந்த நந்தன்
150	உஜ்ஜ்வல நீலமணி
140	பார்த்தஸாரதி
100	த்வாரிகாதீசன்
100	பகவான் வாசுதேவன்
100	திருப்பாவை உபன்யாஸம்
100	ஸ்ரீபகவன் நாம ரஸோதயம்
100	பக்த துகாராம் திவ்யசரித்திரம்
100	ஸ்ரீ மத் பாகவத கதாம்ருதம்
60	கீதகோவிந்தம் ப்ரதிபத அர்த்தம்
60	ஸ்ரீ ஞானேஸ்வர் திவ்ய சரித்திரம்
60	ஸ்துதி மணிகள்
60	ஸ்ரீமத் பகவத் கீதை ப்ரதி பத அர்த்தம்
60	ராதே/பருந்தாவனராதே!!
60	பாதுகா ஸஹஸ்ரம் -பாசுரங்கள்
60	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்-பாசுரங்கள்
50	நாராயணீயம் -பாசுரங்கள்
50	ஹரி ஸங்கீர்த்தன மாலா
50	தர்ம சாஸ்திரம்
50	ஸ்ரீமத் பாகவத ஸங்க்ரஹம்
40	கோவிந்தபுரம் பஜன பத்ததி
40	தக்ஷிண ஸம்ப்ரதாய பஜன மாலா
40	ஸ்ரீமத் ராமாயணம் ஸங்க்ரஹம்
40	ஏகநாதர் திவ்ய சரித்திரம்
40	ஸ்ரீ ருக்மிணி கல்யாணம்-பாசுரங்கள்
35	தக்ஷிண ஸம்ப்ரதாய கல்யாண மாலா
35	அபங்க முத்தாரம்
35	நாம ஸங்கீர்த்தனாவளி
30	வ்ரஜ ரஸம்
30	ப்ரேம சாம்ராஜ்யம்
30	பக்தி
	பஞ்சகீதை
	ஸ்ரீ க்ருஷ்ண கர்ணாம்ருத ரஸாயனம்
	ஸ்ரீ க்ருஷ்ண கீதாம்ருதம்
	சிவானந்த லஹரீ - ப்ரதிபத அர்த்தம்
	ஸௌந்தர்ய லஹரீ - ப்ரதிபத அர்த்தம்
	ஐயாவாளின் நாம அனுபவங்கள்
	ஸ்ரீ சுந்தர காண்டம்



25	ஸ்ரீ ராம மாதுரீ
25	பக்த ரத்தினங்கள்
25	பாண்டுரங்க லீலைகள் -பாசுரங்கள்
25	கிருஷ்ண கர்ணாம்ருதம் -பாசுரங்கள்
25	தியாகராஜர் அனுபவங்கள்
25	ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் கீர்த்தனைகள்
25	ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம்
25	பக்தை மீரா
25	பக்த ஸாம்ராஜ்யம்
25	நாம ஸாம்ராஜ்யம்
25	ஸ்ரீ லலிதா பஜனை கீர்த்தனைகள்
25	மனாசே ஸ்லோக
25	பகவன் நாம ரஸாயனம்
20	ஸ்ரீ பாத ஸப்ததி
20	ஸ்ரீ யாக்ஞவல்கியர் திவ்ய சரித்திரம்
20	ஸ்ரீ துளஸி தாஸர் திவ்ய சரித்திரம்
20	ஸௌந்தர்யலஹரி - தமிழ் பாடல்கள்
15	ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம்
15	குருவாயூரப்பன் அந்தாதி-பாசுரங்கள்
15	தயாசதகம்-பாசுரங்கள்
15	ஸம்க்ஷேப ராமாயணம் -பாசுரங்கள்
15	ஸ்ரீ ஆண்டாள் கல்யாணம்
15	ஸ்ரீ ராதா மாதவ - பஜனை பத்ததி
15	நவராத்திரி கீர்த்தனைகள்
15	பக்தி ஸந்தேஹ த்வாந்த பாஸ்கரம்
15	ஸ்ரீ ப்ரும்மேந்திராள் திவ்ய சரித்திரம்
15	நந்தன் சரித்திரக் கீர்த்தனைகள்
15	ஸ்ரீ ப்ரும்மேந்திராள் கீர்த்தனைகள்
15	ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் திவ்ய சரித்திரம்
15	திருமாலை
15	**Divine History**
	(Hindi, English, Malayalam, Telugu, Tamil)
	Sri Bodendral
	Sri Sridhara Ayyaval
	Sri Sadguru Swamigal
10	கீத கோவிந்தம்
10	ஹரி பாட்
10	ஸ்ரீ ஸமர்த்த ராமதாஸர் திவ்ய சரித்திரம்
7	திருவரங்கன் திருவந்தாதி- பாசுரங்கள்
7	பரமார்த்த ஸ்துதி- பாசுரங்கள்
7	நாமாயணம்
6	ஸ்ரீ போதேந்திராள் கீர்த்தனைகள்
6	ஸ்ரீ போதேந்திராள் நாம வந்தனம்
6	நாமப்ரபாவம்
5	ஸ்ரீபோதேந்திராள் அஷ்டோத்திரம்
5	ஸ்ரீ ராம நாம மஹிமை
5	அபங்கப்ரவாஹம்
4	ஸ்ருதிகளிலிருந்து ராமநாமத்தின் பெருமை
3	புருஷ ஸூக்தம்
3	ஸ்ரீ ஸூக்தம்

Released by Maran's Dog, Toronto , Canada

100 Nos விநியோகவெளியீடு

75	ஸ்ரீ ராம நாமாவளி
75	ஸ்ரீ நவீன ராமாயணம்
75	ஸாதுக்கள் மஹிமை
75	ப்ராத ஸ்மரண ஸ்தோத்திரம்
100	நெய்க்குடத்தை
100	பாசுரப்படி ராமாயணம்
100	ஸ்ரீ ஸப்த ரிஷி ராமாயணம்
100	ஸ்ரீ சந்திர ஸேகராஷ்டகம்
100	ஸ்ரீபோதேந்திராள்சரித்திரசுருக்கம்

Sanskrit Prasadhams

தேவீ நாமஸ்தோத்திர மஞ்ஜரீ
ஸ்ரீ வாஞ்சிய க்ஷேத்ர மாஹாத்ம்யம்
ஸ்ரீ நடராஜ நாம மஞ்ஜரீ
ஸ்ரீ நடராஜ ஸ்தவ மஞ்ஜரீ
ஸ்ரீ பாலா ஸபர்யா
ஸ்ரீசிவ நாம மஞ்ஜரீ
ஸ்துதி த்ரயீ
ஸ்ரீ மீனாக்ஷீ ஸ்தோத்ரமஞ்ஜரீ
ஸ்ரீஸ்கந்த ஸ்தவ மஞ்ஜரீ
ஸ்ரீதத்தாத்ரேய ஸ்துதிமஞ்ஜரீ
ஸ்ரீமத்த்யார்ஜுனக்ஷேத்ர மாஹாத்ம்யம்
ஸ்ரீவிஷ்ணுஸ்துதிமஞ்ஜரீ
ஆத்ட நாதஸ்துதிமஞ்ஜரீ
ஸ்ரீபகவத்ஸ்துதிமஞ்ஜரீ
அனுமன் நாற்பது
கோபால விம்ஸதி
ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்
ஸ்ரீமத் ராமாயணரஹஸ்யம்
கலியுக தர்ம சாஸ்திரம்
பூஜா கல்பம்

Released by Maran's Dog, Toronto , Canada

கோஸம்ரக்ஷணம்
தினசரிராமாயணம்
தினசரிபாகவதம்
ஆசாரமும் ஆஹாரமும்
பூஜா ராமாயணம்
ஸ்ரீ வாசுதேவ ப்ரம்மம் திவ்ய சரித்திரம்
மன அமைதி வேண்டுமா?
ஜய கல்யாண ஸ்ரீக்தி லஹரீ
நாமவைபவம்
நாமச் சிறப்பு
நாமவிசேஷம்
ஸ்ரீபகவன் நாம மகிமை
ஆயிரம் நாமக் குறிப்புகள்
போதேந்த்ர அமுதம்
ஸ்ரீ ஆலங்குடி சுவாமிகள் திவ்ய சரித்திரம்
ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு ஸஹஸ்ர நாமம்
ஸ்ரீ த்யாகப்ரும்ம அஷ்டோத்திரம்
100 / 100
ஸ்ரீ கீதா ஸாரம் -பாசுரங்கள்
நாரத பக்திசூத்ரம்
நித்ய ஸ்லோக பத்ததி

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவத ரகசியம்

1000 பக்கங்கள்

இந்த நூல் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ ராம நாம வங்கியின்
நாம உதவிகளுக்கு
நாமத்தை ஆஸ்ரயிப்பவர்களுக்கு
ப்ரஸாதமாக வழங்கப்படுகிறது.

ஸ்ரீமத் பாகவதம்

மூலம் தமிழில்

904
பக்கங்கள்
விலை
ரூ.250/-

ஸ்ரீமத் பாகவத விஷயம்

கர்க ஸம்ஹிதை
நந்த நந்தன்
பார்த்தஸாரதி
பகவான் வாசுதேவன்
த்வாரிகாதீசன்
ஸ்துதி மணிகள்
ஸ்ரீமத் பாகவத ஸங்க்ரஹம்
தினசரி பாகவதம்
ஸ்ரீமத் பாகவத கதாம்ருதம்

ஸ்ரீமத் பாகவதம்

பெரிய எழுத்தில்
மூலம் தமிழில்

1064 பக்கங்கள்
விலை ரூ. 550/-

ஸ்ரீமத் பாகவதம்
ப்ரதி பத அர்த்தம்

மூல ஸ்லோகங்கள் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும், பதப்பிரிப்பும்
அர்த்தமும் தமிழில்,
7 பாகங்கள் - 6224பக்கங்கள்
விலை ரூ. 1500/

ஸ்ரீ பகவன் நாம்மா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

ஸ்ரீமத் ராமாயண விஷயம்

ராமாயண ஸங்க்ரஹம்
(SANSKRIT)
தினசரி ராமாயணம்
சுந்தரகாண்டம்

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

மூலம் தமிழில்

899 பக்கங்கள்
விலை ரூ. 450/-

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

தமிழ் வசனம்

7 பாகங்கள்
1322 பக்கங்கள்
விலை ரூ. 300/

ஸ்ரீமத் ராமாயண ரஹஸ்யம்

616 பக்கங்கள்

இந்த நூல் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ ராம நாம வங்கியின்
நாம உதவிகளுக்கு
நாமத்தை
ஆஸ்ரயிப்பவர்களுக்கு
ப்ரஸாதமாக வழங்கப்படுகிறது.

ஸ்ரீ துளஸீ ராமாயணம்

தமிழில் மூலமும் உரையும்

விலை ரூ. 350/-

764 பக்கங்கள்
8 வண்ணப்படங்கள் அடங்கியது

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

நந்தலாவின் எழுத்துக்களில்

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமஹாபாரதம்

ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்

இராமாயண ரஹஸ்யம்

பகவான் வாசுதேவன்

நந்த நந்தன்

பார்த்தஸாரதி

த்வாரிகாதீசன்

கர்கஸம்ஹிதை

உஜ்வல நீலமணி

ஸ்ரீ ஞானேஸ்வர்

பக்த துகாராம்

ஏகநாதர்

ராதே!பருந்தாவன ராதே!!

வ்ரஜ ரஸம்

ப்ரேம சாம்ராஜ்யம்

பக்தி

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

முன்னுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் கலிகாலத்தில் பிறக்கப் போகும் ஜனங்களின் துக்கம், மனக்கவலை, அறியாமை இவற்றைப் போக்கி, அவர்களுக்கு பரம அனுக்ரஹம் செய்யவே, தன் திவ்ய லீலை களை விவரிக்கும் ஸ்ரீ பாகவதத்தின் மூலம், ஸாதுக் களின் காதுக்கு அம்ருதமாயுள்ள தன் புகழை உலகில் பரவச் செய்தார். இந்த அம்ருதத்தை காதுகள் ஆகிய பாத்திரத்தில் வாங்கி அனுபவிக்கும் மனிதன், பக்திக்கும் முக்திக்கும் இடையூறாக இருக்கும் கர்மவாஸனையாகின்ற பந்தம் நீங்கப்பெற்று அவற்றை அடைகிறான் என்று ஸ்ரீபாகவதம் 9வது ஸ்கந்தம் 24வது அத்யாயம் 61,62 ஸ்லோகங்களில் கூறப்பட்டிருக்கிறது. மேலும், ஸ்ரீபாகவதத்தில் கலியில் கலுஷிதமான ஜீவன்களுக்கு ஏற்ற பகவன் நாம கீர்த்தனம், பகவானிடம் உறவு கொண்டுள்ள ஸாதுக்களின் ஸங்கம், க்ருஷ்ண பக்தியை வளர்க்கும் கதாச்ரவணம் இவற்றின் மஹிமையே கூறப்பட்டு இருக்கிறது.

வியாசர் ஸகல ஸாஸ்திரங்களையும் வெளியிட்டும், மன நிம்மதியின்றி எல்லா ஸாஸ்த்ரங்களின் ஸாரமாக பகவத் குண கீர்த்தன பிரதானமான ஸ்ரீபாகவதத்தை வெளியிட்டார். அதன் பின்னரே அவர் நிம்மதியடைந்தார். இதில் வேதோபனிஷத் ஸாரமே நிரம்பியுள்ளது.

Released by Maran's Dog, Toronto , Canada

பாகவதமே பகவான். பகவானே பாகவதம். ஸ்ரீக்ருஷ்ணன் தன் அவதார கார்யம் முடிந்தவுடன் பாகவதத்திலே நுழைந்து விட்டான். பாகவதத்தில் நுழைந்த பகவானை அதை படிப்பதாலேயே பார்க்க முடியும்.

இந்த பாகவதாம்ருதம் யாவருக்கும் எளிதில் கிடைக்கும்படி ஸ்ரீ பாகவத்தின் பாவ அர்த்ததுடன் கூடிய இந்த தமிழாக்கத்தை வெளியிட்டிருக் கிறோம். யாவரும் படித்து அனுபவித்து ஸ்ரீகிருஷ்ண க்ருபைக்கு பாத்திரர்கள் ஆகும்படி பிரார்த்திக் கிறோம்.

நாவுண்டு நீயுண்டு நாமம் தரித்து ஒத
பாவுண்டு தெஞ்சே பயமுண்டோ
பூவுண்டு வண்டு உறங்கும் சோலை மதில் அரங்கத்தே
உலகையுண்டு உறங்குவான் ஒருவனுண்டு.

இங்ஙணம்

"ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்"

ஸ்ரீமத் பாகவதம்-தமிழ் வசனம்

பாகம்–1

பொருளடக்கம்

		பக்கம்
முன்னுரை		1
	ஸ்கந்தம் –1	
1.	சௌனக ப்ரச்னம்	67
2.	ஸூதர் ப்ரத்யுத்தரம்	84
3.	பகவதவதாரங்கள்	94
4.	வியாசர் கவலை அடைந்தது	105
5.	வியாசருக்கு நாரதர் உபதேசம்	111
6.	நாரதருடைய முன் ஜன்மம்	123
7.	அர்ஜுனன் அச்வஸ்த்தாமாவை சிக்ஷித்தது	131
8.	பகவானை குந்தி ஸ்தோத்திரம் செய்தது	144
9.	பீஷ்மர் தர்மம் உரைத்தது	154
10.	ஸ்ரீகிருஷ்ணன் துவாரகை சென்றது	165
11.	துவாரகா வாசிகள் பகவானை உபசரித்தது	172
12.	பரீக்ஷித்தின் உற்பத்தி	181
13.	த்ருதராஷ்ட்ரர் வெளியில் சென்றது	188
14.	தர்மபுத்திரருக்கு நேர்ந்த அபசகுனங்கள்	199
15.	தர்மபுத்திரர் பரலோகம் சென்றது	206
16.	பரீக்ஷித் தர்மத்தைத் கண்டது	216
17.	பரீக்ஷித் மஹாராஜன் கலியை நிக்ரஹித்தது	223
18.	பரீக்ஷித்துக்கு நேர்ந்த ப்ராஹ்மண சாபம்	230
19.	கங்கை கரைக்கு சுகர் வந்தது	238

ஸ்கந்தம் –2

		பக்கம்
1.	விராட்புருஷனுடைய அவயவங்கள்	245
2.	பகவானிடத்தில் மனத்தை செலுத்தும் வகை	256
3.	பகவத் குணங்களின் மேன்மை	269
4.	பரீக்ஷித் ஜகத் சிருஷ்டியைப் பற்றி கேட்டது	274
5.	ஜகத்சிருஷ்டி	279
6.	விராட் புருஷனுடைய விபூதிகள்	288
7.	பகவானுடைய லீலாவதாரம்	297
8.	பரீக்ஷித்தின் கேள்வி	313
9.	சுகருடைய மறுமொழி	318
10.	தத்துவங்களின் உற்பத்தி உரைத்தது	328

ஸ்கந்தம்–3

1.	விதுரருக்கும் உத்தவருக்கும் சம்வாதம்	338
2.	உத்தவர் ஸ்ரீ கிருஷ்ண சரிதத்தை வர்ணித்தது	348
3.	ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதங்கள்.	355
4.	விதுரர் மைத்ரேயரைச் சந்தித்தது	360
5.	மைத்ரேயருக்கும் விதுரருக்கும் ஸம்வாதம்	366
6.	விராட் ஸிருஷ்டி	375
7.	விதுரருடைய பிரச்னங்கள்	381
8.	ப்ரஹ்மதேவருடைய உற்பத்தி	388
9.	ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ப்ரஹ்மதேவர் ஸ்தோத்திரஞ்	395
10.	பத்து வகையான சர்க்கங்கள்	405
11.	காலத்தின் ஸ்வரூபம்	410
12.	ஸனகர் முதலியவர்களுடைய ஸிருஷ்டி	417
13.	வராஹாவதாரம்	424
14.	திதி தேவி கர்ப்பத்தை அடைந்தது	433
15.	ஜய விஜயர்களுடைய சாபம்	442
16.	ஜய விஜயர்களுக்கு அனுக்கிரகம்	455
17.	திதிக்குப் புத்திரர்கள் பிறந்தது	462
18.	யக்ஞவராஹருக்கும் ஹிரண்யாக்ஷனுக்கும் யுத்தம்	467
19.	ஹிரண்யாக்ஷவதம்	472

ஸ்ரீமத் பாகவதம்

முன்னுரை

இது ஸ்ரீ பகவானுடைய அற்புத லீலைகளையும் அனந்த கல்யாண குணங்களையும் முக்கியமாய் வர்ணிக்கும் சுகருக்கு இது வ்யாச மஹர்ஷியால் சுகருக் கு உபதேசிக்கப் பட்டது, ஸ்ரீ சுகர் பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சொன்னார், அப்பொழுது சூதர் அவ்விட மிருந்து இக்கதையை ஸ்ரீ சுகபகவானின் அனுமதியின் பேரில் தெரிந்து கொண்டார். பிறகு அவர் நைமி சாரண்யத்தில் வசிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்குச் சொன்னார்.

ஸ்ரீமத் பாகவதம் என்பது யாது?

ஸ்ரீமத் பாகவதம் என்ற புராணம் எல்லா வற்றிலும் மேலானது (1) ஸகல உபநிஷத்துக் களால் நிரூபிக்கப்படும் பரமாத்மா இதனால் வர்ணிக்கப்பட்டிருக்கிறார். (2) வ்யாஸ மஹர்ஷியானவர் விஸ்தாரமான வேதங்களை பிரித்தும் பாரதம் முதலிய இதிஹாசங்களைச் செய்தும் தனது மனது ப்ரஸன்னமாகாததால் பகவானுடைய குணங்களையே முக்கியமாக வர்ணிக்க வேண்டும் என்று இதைச் செய்தார். (3) கீதா, ஸஹஸ்ரநாம, ராமாயண, இந்த சப்தங்கள் தனியே உச்சரிக்கப்பட்டாலும், அவை

முறையே பகவத்கீதை, விஷ்ணு சகஸ்ரநாமம், ஸ்ரீவால்மீகி ராமாயணம் என்பவற்றையே குறிப்பிடுதல் போல பாகவதம் என்ற சப்தமும் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் குணத்தைச் சொல்லும் விஷ்ணு பாகவதத்தையே காட்டுகிறது.(4) மேலும் இது ஸகல லோகங்களாலும் நமஸ்கரிக்கப்பட்ட பாதங்கள் உள்ள ஸ்ரீசுகமஹர்ஷியாலும் அத்யயனம் செய்யப்பட்டது. (5) இது மோக்ஷத்தை விரும்பிய பரீக்ஷித்து மஹாராஜனுக்கு சுகமஹர்ஷியால் மோக்ஷசாஸ்திரம் என்று உபதேசிக்கப் பட்டுள்ளது.

ஆட்சேபம்: "ஹேமாத்ரி என்னும் பெயருள்ள ஒரு ப்ரபுவினுடைய அரண்மனை வித்வான்களின் முக்கியரான போப தேவர் என்ற பண்டிதர் இருந்தார். அவர் கோபால பக்தனாக இருந்த அந்தப் ப்ரபுவை ஸந்தோஷப்படுத்துவதற்காக அவருடைய நியமனப்படி இந்தப் புராணத்தை எழுதி அரசனிடம் கொடுத்தார். அரசன் அதை முழுதும் மற்ற பண்டிதர்களுடன் பரிசோதித்து அதில் உள்ள பதச்சேர்க்கை முதலியவைகளால் ஆச்சர்யப்பட்டு அதனை உலகில் பரவச்செய்ய விரும்பி அதனை அனேகம் பிரதிகள் எழுதுவித்து பண்டிதர்களைக் கொண்டு வ்யாக்யானமும் செய்து பரவச்செய்தார்" என்ற ஒரு கதையை பெரியோர்களால் சொல்லக்கேட்டு இருக்கிறோம்; அப்படியிருக்க வ்யாஸர் செய்தார் என்பது பொருந்துமா ? என்றால்':–

ஸமாதானம்: இந்த விஷ்ணுபாகவதம் போப தேவர் செய்ததன்று. ஹேமாத்ரி என்ற ப்ரபு ஒரு

நாள் சபையில் வித்வான்களை நோக்கி," இரண்டு முகூர்த்தங்களில் பாகவதத்தின் அத்யாயச் சுருக்கங்களை ச்லோகமாகச் சொல்ல உங்களில் யார் சக்தியுள்ளவர்" என்று கேட்டார். அப் பொழுது போபதேவர் என்ற பண்டிதர் நாளைய தினம் சொல்கிறேன் என்றார். மறுநாள் பாகவதாத்யாயஸாரம் என்ற கதானு க்ரமணிகையை செய்து அந்த ப்ரபுவிடம் கொடுத்தார்.

அதன் முதல் ச்லோகம் பின்வருமாறு:" வித்வானாகிற போபதேவரால் மந்திரியாகிய ஹேமாத்ரியின் திருப்திக்காக இதில் ஸ்ரீமத் பாகவதத்தின் அத்யாய ஸாரம் நிரூபிக்கப் படுகின்றது." இதனால் ப்ரபு திருப்தி அடையா மலிருந்து அவருடைய நியமனப்படி பக்தி முக்தாபலம், பக்திலஹரி என்ற இரண்டு பக்தி நிரந்தங்களைச் செய்தார். அதனால் ப்ரபு பண்டிதரை மிகவும் கௌரவப்படுத்தினார்.

தவிர போபதேவர் செய்த க்ரந்தங்களின் விவரமானது பக்திமுத்தாபலம் என்னும் க்ரந்த த்தின் வியாக்யானத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதாவது ஸாஸ்திரங்களை படித்த வர்களுக்குள் சிறந்தவரான போப தேவரால் வ்யாகரணவிஷயமாக 10 க்ரந்தங்களும் மனிதர் களின் வைத்ய விஷயமாக 15 க்ரந்தங்களும் 16 வ்யாக்யானங்களும் ஸாஹித்ய விஷயமாக 3 க்ரந் தங்களும் செய்யப்பட்டன. அவைகள் யாவும் ஸல்லோராலும் கொண்டாடத்தக்கவைகளே. தவிரவும் இந்த போபதேவர் ஸ்ரீமத் பாகவத

க்ரந்தத்தை 22 தடவை படித்தார் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அவரால் வேத வ்யாஸ ஸ்தோத்திரமும் ஸ்லோகமாக செய்யப் பட்டு இருக்கிறது. மேற்காட்டிய காரணங் களால் முன்னே சொன்ன ஆக்ஷேபத்துக்கு இடமே இல்லை. தவிரவும் ஸ்ரீமத் பாகவதத்தின் முதல் ச்லோகத்தின் வ்யாக்யானத்தில் ஸ்ரீதரா சார்யாள் அவர்கள் "பாகவதம் என்பது வேறு என்று சந்தேகப்படக்கூடாது" என்பதாகச் சொல்லி இருக்கிறார்.

ஆட்சேபம்: ஸ்ரீமத் பாகவதம் வ்யாசரால் செய்யப்பட்டது என்பது முற்றிலும் பொருந்தாது. அந்த மஹர்ஷியினால் செய்யப்பட்ட மஹா பாரதம், ஸ்காந்தம், விஷ்ணு புராணம் முதலிய கிரந்தங்கள் எளிதில் படிக்கக்கூடியவை களாகவும் எளிதில் அர்த்தம் செய்து கொள்ள க்கூடியவைகளாகவும் இருக்கின்றன. இந்த பாகவதத்திலோ மேற்காட்டியவைகள் முற்றிலும் மாறிஇருக்கின்றன. ஒருவரால் செய்யப்பட்ட க்ரந்தங்களில் இவ்வளவு மாறுதல்கள் இருக்க நியாயமில்லை. ஆகையால் இதன் கர்த்தா வ்யாஸர் அல்லர் என்பதேயாம்.

சமாதானம்: சொல்லிய ஆக்ஷேபம் சரியானதே. ஆனாலும், ஸ்ரீவ்யாஸ பகவான் ஸ்ரீ நாராயணனுடைய அவதாரம். அவர் வேத–ராசியை ஜனங்கள் அத்யயனம் செய்ய முடியாமல் புத்திக் குறைவுள்ளவர்களாக இருக்கும் காலத்தில் அக்குறையை நீக்கு வதற்காக வேதங்களை நான்கு சாகைகளாகப்

பிரித்தார். அவற்றைப் படிப்பதற்கும் கேட்பதற்கும் அதிகாரம் இல்லாத ஸ்திரீகள், சூத்ரர்கள் இவர்களுக்காக மஹாபாரதம், இதிஹாஸம் முதலியவைகளை எளிதில் அர்த்தமாகும்படி எளிய நடையில் எழுதி வெளியிட்டார். அப்படியே வேதார்த்தத்தை பகவத்கீதை, ப்ரம்ஹஸூத்திரம் இவை களால் வெளியிட்டார். இப்படி மந்தாதிகாரிகளை உத்தேசித்து எளியவைகளைச் செய்தார். உத்தமாதி காரியான வித்வான்களுக்கு உபயோகப்படும்படி ஸகல வேதங்களால் நிரூபிக்கப்படும் பரமாத்மா வை கடினமான சந்தர்ப்பத்தால் வர்ணித்தார். ஆகையால் அதிகாரி பேதத்தால் நடையின் பேதம் ஏற்பட்டதே ஒழிய கர்த்தாவின் பேதத்தால் ஏற்பட்டதல்ல.

ரகுவம்சம், மேகசந்தேசம், நளோதயம், ஹரிச்சந்திரோபாக்யானம், நளோபாக்யானம் இவைகள் மஹா கவியான காளிதாஸரால் செய்ய ப்பட்ட கிரந்தங்கள். இவைகளின் பதங்கள், அவைகளின் சேர்க்கை, விருத்தி, பாகம் முதலியவைகள் வெவ்வேறாக காணப்படுகின்றன, அதனால் இவைகளை காளிதாஸர் எழுதவில்லை எனச் சொல்லக்கூடுமா?

மேலும், ஆத்மபோதம், ஸௌந்தர்யலஹரி இவைகள் ஸ்ரீமத் பகவத்பாதர்களால் செய்யப் பட்டவைகளானாலும், ஒன்றுக்கொன்று மேற்காட்டிய விஷயங்களில் மாறுபட்டுள்ளவைகளாக இருக்கின்றன. ஆகையால் ஸர்வக்ஞர்களாயும் பகவானுடைய அவதார பூதராயுமான வ்யாஸ மஹர்ஷியினுடைய வாக்கானது கங்காப் பிரவாஹம்

போலத் தடையற்றது.

ஆட்சேபம்: பாகவதம் என்பது தேவீபாகவதமே ஒழிய வ்யாஸ மஹர்ஷியால் செய்யப்பட்டது அல்ல. ஏனென்றால் "ஸ்ரீமத் பாகவதத்தை எழுதி ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்தில் வைத்துத் தானஞ்செய்பவருக்கு மோக்ஷம் கிடைக்கும்" மத்ஸ்ய புராணம். இதே விஷயத்தை ஸ்ரீ தரா சார்யாள் முதலியவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பற்றி கொஞ்சம் யோசிப்போம். ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்துக்கும் ஸ்ரீமத் பாகவதத் திற்கும் என்ன சம்பந்தம். ஸ்ரீமகாவிஷ்ணுவுக்கு கருடன் வாகனம் என்று பிரசித்தமே தவிர, சிங்கம் வாகனம் என்பது ஓர் இடத்திலும் சொல்லப்படவில்லை. வேறு வாகனமிருப்பதாகவும் தெரியவில்லை; பகவானே நரஸிம்ஹாவதாரஞ் செய்தவராகையால் ஸிம்மம் என்று சொல்லி இருக்கிறதென்று யோசிப்போமானால் பரமாத் மாவின் ஸ்வரூபமாகிய ஸிம்மத்தின் மீது அவரை நினைப்பிக்கும் க்ரந்தத்தை வைத்து தானஞ்செய்வது நியாயமாகுமா? ஆகையால் தேவீபாகவதம் என்று சொல்வதே உக்தமம். ஸிம்மம் ஸ்ரீதேவியின் வாகனமாகையால், அதில் வைத்துத் தானஞ் செய்வது மோக்ஷத்தைக் கொடுக்கும் என்பது பொருந்தும்.

ஸமாதானம்: முன்னே காட்டியுள்ள ஆக்ஷேபம் முற்றிலும் பொருந்தாது. ஸகல ஸ்வரூபியான ஸ்ரீ பகவானுக்கு, ஆஞ்சநேயர், குதிரை, யானை இவைகள் வாகனமாக இருக்கின்றன. இப்பொழுது தேவாலயங்களில் உத்ஸவ காலத்தில்

மேற்காட்டிய வாகனங்களில் பகவானை அலங்கரிப்பது வழக்கமாக இருந்துவருகிறது. "விஷ்ணுவின் வாகனங்களைச் சொல்கிறோம்: முதல்நாள் ஹம்ஸம், இரண்டாம் நாள் ஸிம்மம், முன்றாம் நாள் ஆஞ்சநேயர், நான்காம் நாள் ஆதிசேஷன், ஐந்தாம் நாள் கருடன், ஆறாம் நாள் யானை, ஏழாம் நாள் ரதம், எட்டாம் நாள் குதிரை, ஒன்பதாம் நாள் பல்லக்கு, பத்தாம் நாள் புஷ்பகம்" வைகானஸ தந்திரம், – தெய்வீக யக்ஞாதிகாரம், உத்ஸவ படலம்."பகவான் உத்ஸவ தினங்களில் ஹம்ஸம், ஸிம்மம், ஹனுமான், ஆதிசேஷன், கருடன், யானை, ரதம், குதிரை, பல்லக்கு, புஷ்ப மண்டபம் ஆகிய வாஹனங்களில் முறையே வீற்றிருந்து அர்ச்சாவதாரத்தின் மஹிமையை காண்பிக்கிறார்; அதிகாரிகை இதே விஷயம் வைசம்பாயன காரிகையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் பகவானுடைய அனந்த கல்யாண குணங்களை வர்ணித்து இருக்கும் ஸ்ரீமத் பாகவதம் ஸ்ரீமந் நாராயண ஸ்வரூபமே தவிர வேறில்லை. அதை ஸிம்ஹாஸனத்தில் வைத்து தானம் செய்வதில் கொஞ்சமேனும் ந்யாய விரோதமில்லை; 'ரிஷியின் அம்சம் இல்லாதவன் காவியம் எழுதமாட்டான்; விஷ்ணுவின் அம்சம் இல்லாதவன் அரசனாகிறதில்லை' என்றபடி அரசன், விஷ்ணுவின் அம்சம் உள்ள வனாகையால் ஸிம்ஹாஸனத்துக்குரியவனாகிறான். அப்படி இருக்க பகவானுக்கு ஸிம்ஹாஸனம் உண்டென்று ஏன் சொல்லக்கூடாது? ஹேமாத்ரி முதலிய க்ரந்தங்களில் தானப் பிரகரணத்தில் ரோகிகளின் வ்யாதி நிவர்த்திக்காக, அந்தந்த வ்யாதிக்குத்

தக்கபடி ஒரே தேவதையை அநேக வாகனங்களில் பூஜித்து தானம்செய்யும்படி சொல்லப் பட்டிருக்கிறது. அப்படிப்போல் ஸம்ஸார வ்யாதியால் உபத்திரவம் அடைந்தவனுக்கு அதன் நிவர்த்திக்காக இம்மாதிரியான தானம் பிராய சித்தமாகச் சொல்லப்பட்டது. தேவீ பாகவதம் முதலிய சக்தியை நிரூபிக்கும் க்ரந்தங்களில் தேவிக்கு ஸிம்மவாஹனம் என்று சொல்லப்பட்டு இருந்தாலும் ஸிம்மம் ஸ்ரீதேவியின் வாகனமே ஒழிய பகவானுடையதல்ல, என்று சொல்ல முடியாது. ஏனென்றால் ஸ்ரீதேவி மஹாவிஷ்ணுக்கு பத்னியாகையால் தான் பர்த்தாவினுடைய வாகனங்களில் தனதிஷ்டப்படி ஒருவேளை கருடன்மீதும், ஒருகால் ஸிம்மத்தின்மீதும் பின்னர் யானைமீதும் ஏறி ஸஞ்சரிக்கலாமே ஒழிய அவருக்குச் சொந்தமான வாகனம் இன்னதென்று கல்பிப்பது பொருந்தாது. வீடு, தோட்டம், வயல், பணம், வேலைக்காரர்கள், வேலைக்காரிகள், வாகனம், பசு, ஆபரணம், கடன் இவைகளில் பர்த்தாவுக்கு அதிகாரமே ஒழிய பத்னிக்கு அதிகாரம் இல்லையென்று மனுஸ்மிருதி முதலிய வைகள் சொல்லுகின்றன. ஸ்திரீ ஒருபொழுதும் ஸ்வாதந்திரயத்தையடையத்தக்கவளல்ல. புருஷன் உடைய வாகனங்களில் அவர்களுடைய பத்னி ஏறினதால் அவைகள் அவர்களுடையதாகி விடுமா? அப்படி உலகத்தில் வழக்கமும் இல்லை.

ஆட்சேபம்: ஸ்ரீ வ்யாஸ மஹர்ஷியானவர் இந்தப் பாகவத சாஸ்திரம் எல்லா உபநிஷத்துக்களுக்கு ஸமமானது என்று காட்டுவதற்காகவே ஸகல

வேதார்த்தங்களைச் ஸ்லோக ரூபமாகச் செய்தார். சில இடங்களில் வேதத்தில் உள்ளபதச் சேர்க்கையே காட்டி இருக்கிறார். வேதத்தின் அர்த்தம் அறியாமலேயே சம்பிரதாயப்படி படிப்பதால் மேலான பலன் கிடைப்பது போல் வேதத்திற்குச் சமமான ஸ்ரீமத்பாகவத கிரந்தத்தை தானஞ் செய்வதாலும் மோக்ஷம் கிடைக்கும் என்று சொல்லப்பட்டது. இதனால் புத்தகதானத்திற்கே இவ்வளவு பலன் கிடைக்குமாகில், குருமுகமாக சாஸ்த்ரமுறைப்படி இதைத் தெரிந்துகொண்டவனுக்கு முக்தி கிடைப்பது நிச்சயம் என்று பொருள். மோக்ஷத்தை விரும்பியவர்களும் இடையூராகிய பாபத்தை நிவர்த்தித்துக் கொள்ள முடியும். அதனால் பாகவத தானத்தால் மோக்ஷம் கிடைக்குமென்று வியாசமஹர்ஷி சொன்னார். "புத்தியள்ளவன் கலியுகத்தில் தானத்தாலேயே பாபத்தை நிவர்த்தித்துக் கொள்ளவேண்டும்"–விஷ்ணு ஸ்மிருதி. "மூவுலகத்திலும் தானத்தைவிட மேலானது ஒன்றுமில்லை. தானத்தால் ஸ்வர்க்கம், லக்ஷ்மி, சத்ருஜயம், வித்யை, ஸ்திரீகள், வ்யாதிநிவர்த்தி ஆகியவைகள் கிடைக்கும். —ஸௌர புராணம். இவ்வுலகத்திலும், பரலோகத்திலும் தானமே முக்கியமான க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது. இதுவே மோக்ஷத்துக்கு ஸாதனம் என்று வேதம் சொல்லுகிறது. ப்ரஹ்ம கைவர்த்த புராணம். க்ருதயுகத்தில் தபஸும், த்ரேதா யுகத்தில் ஞானமும், துவாபர யுகத்தில் யக்ஞமும், கலியுகத்தில் தானமும் க்ஷேமத்தைக் கொடுக்கும் —மனுஸ்மிருதி. ஆகையால் தானமே மேலானது —ச்ருதி. "ஸ்ரீகிருஷ்ண பகவான்,

அர்ஜுனனுடைய வார்த்தையை கேட்டு தர்ம புத்திரரை தமது கையால் தடவிச் சொன்னதாவது, ஓ அரசனே ப்ருஹ்ம ஹத்தியை, கள் குடிப்பது, திருடுவது, ஆசார்ய பத்னியைப் புணர்வது முதலிய பாபங்கள் தானத்தாலேயே நிவர்த்தி யாகின்றன. புத்திரன், பணம், புண்ணியம் முதலியவைகள் தானத்தாலேயே கிடைக்கின்றன —ஸ்காந்தம்.

ஆட்சேபம்: பாகவதத்திற்கு வ்யாக்யானம் செய்த ஸ்ரீதராசார்யார் முதலானவர்கள் முதல் ஸ்லோகத்துக்கு வ்யாக்யானம் செய்யும்பொழுது பாகவதலக்ஷணமாகக் காட்டிய வசனங்கள் பின் வருமாறு கண்டுகொள்க.

எந்தக் க்ரந்தத்தில் காயத்ரி மூலமாக தர்ம விஸ்தாரம் வர்ணிக்கப்பட்டிருக்கிறதோ விருத்ரா ஸுரனின் கதை எதில் இருக்கிறதோ அந்த 18000 க்ரந்தங்களுள்ளதே பாகவத புராணம் என்று சொல்லப்பட்டது. —மத்ஸ்ய புராணம். எதில் ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யை விருத்ராஸுர வதம் 18000 க்ரந்தங்கள் 12 ஸ்கந்தங்கள் ஆகிய இவைகள் இருக்கின்றனவோ எது காயத்ரியால் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறதோ அதை பாகவதம் என்று சொல்லுகிறார்கள் —ஸ்காந்தம். ஓ அம்பரீஷா! ஸம்ஸார பந்தம் நிவர்த்தியாக வேண்டுமானால் சுகரால் சொல்லப்பட்ட பாகவதத்தை பிறர் சொல்லக்கேட்கவேண்டும். தானாகவாவது படிக்க வேண்டும்—பத்மபுராணம். இது ப்ருஹ்ம ஸூத்ரங்களுடைய அர்த்தம்; மஹாபாரதத்தின் உண்மையான அர்த்தம் காயத்ரீ மந்திரத்துக்கு

பாஷ்யம். புராணங்களுடைய ஸாரம் வேதத்தின் அர்த்தங்களால் நிறைந்தது. 12 ஸ்கந்தங்கள் உள்ளது; 100 விச்சேதமுள்ளது, 18000 க்ரந்தங்கள் உள்ளது; பாகவதம் என்ற பெயருள்ளது— கருட புராணம்.

இதில் சொல்லியுள்ள லட்சணங்கள் யாவும் தேவீ பாகவதத்தில் பொருந்தி இருக்கின்றனவே ஒழிய விஷ்ணு பாகவதத்தில் பொருந்தியவைகளாக இல்லை. மேலும் மஹா மாயா ரூபியான சக்தியின் மஹிமையால் மஹாவிஷ்ணு ஹயக்ரீவர். ஆனார். தேவீ பாகவதம் ஸ்கந்தம் 1. அத்யாயம் 5, ஹயக்ரீவபரமாத்மா அகஸ்தியமஹர்ஷிக்கு உபதேசித்த தேவீ விஷயமான க்ரந்தங்களுக்கு ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யையென்று பெயர். அந்த வித்யை விஷ்ணுபாகவதத்திலாவது, மற்ற புராணங்களிலாவது சொல்லப்படாததானாலும், தேவீபாகவதமே பாகவதமென்பதற்கு அர்த்தம்.

ஸமாதானம்: பாகவதம் என்றால் விஷ்ணு பாகவதமென்றே அர்த்தம் கொள்ளவேண்டும். ஹயக்கிரீவ ப்ருஹ்மவித்யை என்றால் ஹயக்ரீவ பரப்ருஹ்மத்துக்கு மற்றவர் சொன்ன வித்தை என்றாவது ஹயக்ரீவர் பிறருக்குச் சொன்ன வித்தை என்றாவது அர்த்தம் செய்யக்கூடாது. ஹயக்ரீவர் பிறரிடம் உபதேசம் பெற்றார் என்றாவது பிறர்க்கு உபதேசித்தார் என்றாவது ஒரு க்ரந்தத்திலும் சொல்லவில்லை. பிரளய காலத்தில் எல்லா வித்தையும் காணாமல் கொண்டு

வந்தார், ஆதலால் ஹயக்கிரீவரால் கொண்டு வரப்பட்ட வித்யை என்றே அர்த்தம் செய்ய வேண்டும். மேலும் ப்ரஹ்ம சப்தத்துக்கு வேதம் என்று அர்த்தம் வைத்துக்கொண்டால் வேத வித்யை என்றும், உண்மை என்று அர்த்தம் கொண்டால் தத்வ ஞானம் என்றும், தபஸ் என்று அர்த்தம் கொண்டால் தபோ வித்யை என்றும், நான்கு முகங்கள் உள்ள ப்ருஹ்மதேவர் என்று அர்த்தங்கொண்டால் ப்ருஹ்மதேவருக்கு உபதேசம் செய்யப்பட்ட ப்ருஹ்ம வித்யை என்றும், ப்ராஹ்மணர்கள் அர்த்தம் செய்யக்கூடிய வித்யை யென்று அர்த்தம் ஏற்படுகிறதே ஒழிய தேவீ விஷயமான வித்யை என்ற அர்த்தம் ஏற்படவில்லை. ஆகையால் ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யை விஷ்ணு பாகவதத்திலேயே நிரூபிக்கப்பட்டு இருக்கிறது.

ஆட்சேபம்: தேவீ விஷயமான க்ரந்தங்களில் அகஸ்திய மஹர்ஷிக்கு ஹயக்ரீவர் மகாவித்யை உபதேசித்தார் என்று சொல்லி இருப்பது பொருந்துமா ?

ஸமாதானம்: பொருந்தும். ஹயக்ரீவரால் எடுத்து வரப்பட்டவைகளில் அகஸ்திய மஹர்ஷிக்கு உபதேசிக்கப்பட்ட மந்திரங்களும் சேர்ந்தவையாம். பூர்ணிமா திதியில் தானம் செய்யவேண்டும் என்று சொல்லி இருக்கிறது. சிவாலயங்களிலும், விஷ்ணு ஆலயங்களிலும் பஞ்ச பர்வங்களில் பூர்ணிமா திதியில் விசேஷமான ஆராதனம் செய்கிறார்கள். தேவீ ஆலயங்களில் பூர்ணிமா திதியில் யாதொரு விசேஷ ஆராதனமும்

நடப்பதாகத் தெரியவில்லை. மேலும் ஏகாதசி, பூர்ணிமா இந்தத் தினங்களில் ஹயக்ரீவரை ஜபித்தவன் மகானுபாவனாக ஆகிறான். ஹயக்ரீவோபநிஷத் ப்ருஹ்ம ஸூத்திரங்களுடைய அர்த்தமே "பாகவதம்" என்ற கருட புராணத்தில் சொல்லிய லக்ஷணம், தேவீ பாகவதத்தில் கொஞ்சமேனும் இல்லை விஷ்ணு பாகவதத்திலேயே பொருந்தி இருக்கிறது.

ஸ்ரீமத் பாகவத மஹிமை

முன்னொரு காலத்தில் நைமிசாரண்யத்தில் வசிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகள் ஸூதரை நோக்கி கோரமாகிய இக்கலியுகத்தில் பிராணிகள் அதர்மத்தில் ஆசையுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு பக்தி, ஞானம் வைராக்யம் விவேகம் ஆகிய இவைகள் எதனால் உண்டாகும்? எது பலவிதமான ச்ரேயஸ்ஸான தனங்களில் மேலானது? எது சுத்தமானவைகளுக்கும் பரிசுத்தியை உண்டு பண்ணுகிறது? எது ஸ்ரீ கிருஷ்ணனுக்கு மிகவும் பிரியத்தை உண்டு பண்ணக்கூடியது? சிந்தாமணியானது இவ் வுலகத்திய சுகத்தை மட்டும் கொடுக்கும். மகேந்திரன் ஸ்வர்க்க ஸுகத்தை மாத்திரம் கொடுப்பான். ஆச்சார்யர்களுக்கு சந்தோஷ முண்டானால் யோகிகளுக்கும் கிடைக்க அரிய தான வைகுண்ட பதத்தையும் கொடுப் பார்கள். ஆனதால் அதைச் சொல்லவேண்டும் என்று கேட்டார்கள்.

இதைக் கேட்ட ஸூதர் சௌனகரை நோக்கி, உமக்கு இவ்விஷயத்தில் பிரியம் உண்டானதால் எது ஸம்சார தாபத்தை நிவர்த்தி செய்யுமோ, எது ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு சந்தோஷத்தை உண்டு பண்ணுமோ, எது பக்தியை விசேஷமாக வ்ருத்தி செய்கிறதோ, அதனை யோசித்துச் சொல்லுகிறேன். ஜாக்கிரதையாக கேளுங்கள். பரீக்ஷித்து மஹாராஜனுக்கு சுகரால் உபதேசிக் கப்பட்ட ஸ்ரீமத் பாகவத சாஸ்திரமே சித்த சுத்தியை உண்டுபண்ணக்கூடியது; ஜன்மாந்திரத்தில்

புண்ணியம் செய்தவன்தான் பாகவதத்தைக் கேட்பான், படிப்பான். சபையில் பரீக்ஷித்துக்கு சுகர் பாகவத கதையைச் சொல்லும் பொழுது தேவர்கள் அனைவரும் அமிர்த குடத்தை எடுத்துக்கொண்டு வந்து சுகரை நமஸ்கரித்து இந்த அமிர்தத்தை அரசன் புஜிக்கட்டும். நாங்கள் பாகவதமாகிய அமிருதத்தை பானஞ் செய்கிறோம். நீர் அமிர்த குடத்தை அரசனுக்கு கொடுத்துவிட்டு கதாமிருதத்தை எங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். அதனைக் கேட்டு சமீபத்தில் இருக்கும் சக்ரவர்த்தியானவர், ரத்னத்துக்கும், காசமணிக்கும் எவ்வளவு பேதமோ அவ்வளவு தாரதம்யம் பகவத் கதைக்கும் அமிருதத்துக் குமுள்ளது என்று யோசித்து தேவர்களை நோக்கி சிரித்தார். சுகரும், தேவர்கள் பகவத் பக்தி இல்லாதவர்கள் என்று நினைத்து கதாம்ருதத்தை தேவர்களுக்குக் கொடுக்க சம்மதிக்கவில்லை. ஆகையால் பாகவதக் கதையானது தேவர்களுக்கும் அரிதாயிற்று. பின்பு பரீக்ஷித்து மகாராஜனுக்கு ஸ்ரீமத் பாகவதக் கதையால் மோக்ஷம் கிடைத்ததைப் பார்த்து ப்ருஹ்மதேவர் ஆச்சரியம் அடைந்து ஸத்ய லோகத்தில் தராசைக் கட்டி மோக்ஷ சாதனங்கள் எல்லாவற்றையும் நிறுத்தார். ஸ்ரீமத் பாகவதமே பாரமுள்ளதாக இருந்தது. மற்றவை இலகுவாகவிருந்தன. அதனைக் கண்டு ஸகல மஹர்ஷிகளும் மிகவும் ஆச்சரியப்பட்டு ஸ்ரீமத் பாகவதத்தை பகவானுடைய ஸ்வரூபமாக நினைத்தார்கள். அதனைப் படிப்பதாலும், கேட்பதாலும் உடனே மோக்ஷம் கிடைக்கும். இந்த

க்ரந்தத்தை ஏழு தினங்களில் முழுமையும் விதிப்படி கேட்டால் ஸகல பலன்களும் ஸித்திக்கின்றன. இதனை ஸனகர் முதலான யோகிகள் நாரதருக்கு முன் காலத்தில் உபதேசித்தார். தேவர்ஷியாகிய நாரதரும் ப்ருஹ்மத்தை வர்ணிக்கும் இந்தக் க்ரந்தத்தை கேட்டார். ஏழு நாட்களில் இதைக் கேட்க வேண்டிய முறையும் நாரதருக்கு அவர்களால் உபதேசிக்கப்பட்டது, என்று சொன்னார்.

இதைக் கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்கும் முறையைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற விருப்பம் நாரதருக்கு உண்டான காரணம் என்ன? அவர் பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை நன்றாக அறிந்தவர் அல்லவா? மேலும் ஸனகர் முதலிய ப்ருஹ்ம புத்திரர்களோடு நாரதருக்கு ஸம்வாதம் எவ்விடத்தில் நேர்ந்தது? இதற்குப் ப்ரத்யுத்தரம் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

அதனைக் கேட்டு ஸூதர் பின்வருமாறு விடை சொல்லலானார். "ஹே சௌனகரே சுகர் என்னை அந்தரங்க சிஷ்யனாக நினைத்து எனக்கு எதனை உபதேசித்தாரோ அதனை உமக்கு சொல்லுகிறேன். முன் ஒரு காலத்தில் விசாலா நகரத்தில் நான்கு மஹரிஷிகள் ஸாது ஸங்கம் செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் சேர்ந்தார்கள். அப்பொழுது அவ்விடத்தில் தெய்வச்செயலால் தேவர்ஷியாகிய நாரதரும் வந்தார். அவர்கள் நாரதரைக்கண்டு,

ஓ ப்ருஹ்மபுத்திரரே! நீர் ஒரு விஷயத்திலும் ஆசை இல்லாதவர்: அப்படி இருந்தும் மிக்க வேகமாக எவ்விடம் செல்லுகிறீர்? உம்முடைய முகம் வாடினதாகக் காணப்படுகிறது, அதற்குக் காரணம் என்ன? ஜனங்கள் பொருள் செலவழித்த காலத்தில் எப்படி வருத்தப்படுவார்களோ அப்படி சூன்ய சித்தராக இருக்கிறீர். நீர் இப்படி இருப்பது உசிதமல்ல. ஆதலால், அதன் காரணத்தைச் சொல்ல வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

அதைக் கேட்டு நாரதர் விடை சொன்னதாவது:– "நான் பூமியையே எல்லாவற்றிலும் மேலானது என்று நினைத்து, புஷ்கரம், பிரயாகை, காசி, கோதாவரி, ஹரிக்ஷேத்திரம், குருக்ஷேத்திரம், ஸ்ரீரங்கம், இராமேச்வரம் முதலிய தீர்த்தங்கள் சென்று எங்கும் அலைந்தேன். அப்படியும் மனதுக்கு சந்தோஷம் ஏற்படவில்லை. இந்தப் பூமி முழுவதையும் கலி அதர்மத்துடன் வியாபித்துக் கொண்டுவிட்டான். அதனால் சத்யம், தபஸ், சௌசம், தயை, கொடுப்பது ஆகிய இவை ஓர் இடத்திலாவது இருப்பதாகக் காணப்படவில்லை. எல்லா ஜனங்களும் தங்கள் தங்கள் வயிறு நிரம்ப புஜிப்பதில் மாத்திரம் ஆசையுள்ள வர்களாகவும், கபடமாகப் பேசும் தன்மை உள்ளவர் களாகவும், பாஷண்டர் களிடத்தில் (வேதவிரோதிகள்) ப்ரீதி உள்ளவர் களாகவும் இருக்கிறார்கள். ஒவ்வொரு வீடுகளிலும் ஸ்திரீகளே பிரபுவாயிருந்து அதிகாரம் செய் கிறார்கள். மைத்துனனே புத்தி சொல்லுகிறான். எல்லோரும் பெண்களை விலைக்குவிற்கிறார்கள்.

தம்பதிகள் ஒருவருக்கொருவர் கலகஞ்செய்து கொள் கிறார்கள். ஆசிரமங்கள், புண்ய தீர்த்தங்கள், நதிகள், தேவாலயங்கள் ஆகிய இவைகள் பெரும்பாலும் துஷ்டர்களால் கெடுக்கப்பட்டன. யோகி, சித்தன், ஞானி நல்ல கர்மாவைச் செய்பவன் ஆகிய இவர்கள் ஒருவரும் காணப்படவில்லை. நல்ல காரியங்கள் யாவும் கலியாகிய அக்னியால் எரிந்து சாம்பலாக்கப்பட்டன. ஒவ்வொரு தேசத்திலும் ஜனங்கள் அன்ன விக்ரயம் செய்கிறார்கள். ப்ராஹ்மணர்கள் வேதத்தை விற்கிறார்கள். ஸ்திரீகள் பெரும்பாலும் விபசாரம் செய்கிறார்கள். இம்மாதிரியான கலியின் விளையாட்டை எங்கும் பார்த்துக் கொண்டு நான் யமுனையின் கரைக்கு வந்தேன். அதுதான் ஸ்ரீ கிருஷ்ண பகவான் விளையாடின இடம். அவ்விடத்தில் ஒரு அற்புதத்தைக் கண்டேன். அதாவது யௌவன வயதுடைய ஒரு பெண் மனவருத்தத்துடன் அவ்விடம் இருந்தார். அவளுடைய பக்கத்தில் இரண்டு வயது சென்றவர்கள் பிரக்ஞை இல்லாதவர்களாக பெருமூச்சு விட்டுக்கொண்டு படுத்திருக்கக் கண்டேன். அந்தப் பெண் அவர்களுக்குப் பணிவிடை செய்தும், அழுது கொண்டும், தன்னைக் காப்பாற்றுகிறவர் யார் என்று பத்து திக்குகளையும் பார்த்துக் கொண்டு இருந்தாள். வெகு தூரத்திலேயே அவர்களைப் பார்த்து மிகுந்த ஆச்சரியம் அடைந்து உண்மையை தெரிந்து கொள்ள விரும்பி அவர்களுடைய சமீபம் சென்றேன். அந்தப் பெண் என்னை நோக்கி, "ஓ சாதுவே க்ஷணகாலம் தாங்கள் இவ்விடம் இருக்கவேண்டும்.

என்னுடைய கவலையை தீர்க்க வேண்டும். தங்களைப்போல் உள்ள சாதுக்களை தரிசித்தால் ஸகல பாபங்களும் நிவர்த்தியாகும் என்பதில் ஸந்தேகமில்லை. தங்களுடைய தரிசனம் வரும் க்ஷேமத்தைக் காட்டுகின்றது. தங்களுடன் ஸம்வாதம் செய்தால் பலவகையிலும் கவலை தீர்ந்துவிடும்." என்று தெரிவித்துக் கொண்டாள்.

அதைக்கேட்டு அந்தப் பெண்ணை நோக்கி "நீ யார்? இவ்விருவர்களும் யார்? ஓ தேவி! நீ கவலைப்படும் காரணம் என்ன? இவைகளை விஸ்தாரமாகச் சொல்" என்று கேட்டேன்.

அதனைக் கேட்டு அந்தப்பெண் சொன்னதாவது: எனக்கு பக்தி என்று பெயர். இவ்விருவரும் என்னுடைய புத்திரர்கள். ஒருவனுக்கு ஞானம் என்று பெயர். மற்றவனுக்கு வைராக்யம் எனப் பெயர். இவ்விருவர்களும் காலமஹிமையால் கிழத்தனத்தை யடைந்தார்கள். இந்தப் பெண்கள் கங்கை முதலிய நதிகள். என்னை சேவிப் பதற்காக வந்தவர்கள், மேலும் நான் தங்களிட த்தில் என் விஷயத்தை விஸ்தாரமாக தெரிவிக்க வேண்டியவளாக இருக்கிறேன். அதாவது நான் திராவிட (தமிழ்) தேசத்தில் பிறந்தவள். கர்நாடக தேசத்திலும், மஹாராஷ்ட்ர தேசத்தின் சில பாகங்களிலேயும் வளர்ந்தவள். கூர்ஜர தேசத்தில் கிழத்தனத்தை அடைந்தேன். மிக்க பாவியான கலியின் சாபத்தால் பாஷண்டர்கள் என்னுடைய அவயங்களை துண்டித்துவிட்டார்கள். ஆகையால் தேகபலம் குறைந்து புத்திரர்களுடன் மிகுந்த சிரமத்தை

அடைந்து இந்த பிருந்தாவனம் சேர்ந்தேன். இவ்விடம் வந்தவுடன் அழகான சரீரம் உள்ள யௌவனமுடையவளாக ஆனேன். இதோ படுத்துக்கொண்டு இருக்கும் இவ்விரு குழந்தைகளும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கிழத்தனமுள்ளவர்களாக இருப்பதால் அவர்களைப் பார்த்து நானும் துக்கிக்கிறேன். உலகத்தில் தாய் வயது சென்றவளாகவும் புத்திரர்கள் யௌவனமுள்ளவர்களாகவும் இருப்பது பழக்கம். இப்பொழுது புத்திரர்கள் வயது சென்றவர்களாகவும், புத்திரர்களுடைய தாயாகிய நான் யுவதியாகவும் இருக்கக் காரணம் யாது? நாங்கள் நால்வரும் எப்பொழுதும் சேர்ந்தே சஞ்சரித்துக் கொண்டிருக்கிறோம். தாங்கள் யோகிகளுக்குள் சிறந்தவர்களாகையால் இவ்விஷயத்தை அறிந்து சொல்ல வல்லமை உள்ளவராவீர். ஆதலால் என்னிடம் கிருபை வைத்து என்னுடைய சந்தேகத்தைத் தீர்க்கவேண்டும்'' என்று கேட்டாள்.

அதைக் கேட்ட நான் அந்தப் பெண்ணை நோக்கி "ஓ பால்யப்பெண்ணே நான் எல்லா விஷயத்தையும் ஞானக் கண்ணால் அறிந்து சொல்கிறேன். நீ கவலைப்பட வேண்டாம் ஸ்ரீ நாராயணன் உனக்கு க்ஷேமத்தைச் செய்வார் என்று சமாதானம் செய்து ஒரு க்ஷணநேரத்தில் அவ்விஷயங்களைத் தெரிந்துகொண்டு, பின்னும் அந்தப் பெண்ணைப் பார்த்து பின்வருமாறு சொன்னேன். பெண்ணே இந்தக்கலியுகம் மிகவும் மோசமானது. அதனால் நல்லொழுக்கம், யோகமார்க்கம், தவம் ஆகிய இவைகள்

கெடுக்கப்பட்டன. எல்லா ஜனங்களும் அசுரர்கள் போல் கெட்ட காரியத்தையே செய்கிறார்கள். ஸாதுக்கள் துக்கப்படுகிறார்கள். அஸாதுக்கள் சந்தோஷிக்கிறார்கள். இந்தக்காலத்தில் எவன் நல்ல காரியத்தை அனுஷ்டிக்கிறானோ அவனே தீரன் என்று சொல்லப் படுகின்றான். இந்தப் பூமி ஒவ்வொரு வருஷங்களிலும் முறையே ஸ்பர்சிக்க தகாதவர்களும் பார்க்கத்தகாதவர்களும் ஆதிசேஷனுக்குச் சுமையாகிவிட்டாள். நல்ல கர்மங்கள் ஒரிடத்திலும் காணப்படவில்லை. உன்னையும் உன்னுடைய புத்திரர்களையும் இக்காலத்தில் ஒருவரும் பார்க்கிறதில்லை. ஜனங்கள் விஷயங்களில் ஆசைக்கொண்டு காரியம் அகாரியம் என்ற பகுத்தறிவு இல்லாதவர்களாகி உன்னை ஆதரிக்காமல் உபேக்ஷித்தபடியால் நீ இளைத்திருக்கிறாய். இந்த பிருந்தாவனத்தின் மஹிமையால் நீ யுவதி ஆனாய். பக்தியானது இவ்விடத்தில் இல்லாததினால் இவர்களுக்கு கிழத்தனம் போகவில்லை என்று மறுமொழி சொன்னேன். அப்போது அந்தப்பெண் மிக்க பாபியான கலியை பரீக்ஷித்து மகாராஜன் ஏன் உலகத்தில் வைத்திருந்தார்? கலியுகம் வந்தவுடன் முன்னிருந்த ஸகல வஸ்துக்களின் ஸாரங்களும் எங்கே போயின? மிகுந்த தயையுள்ள ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் ஏன் பார்த்திருந்தார்? என்று கேட்டாள். அதைக்கேட்டு நான் பின்வருமாறு சொன்னேன்: ஸ்ரீ கிருஷ்ணபகவான் பூமியில் இருந்து வைகுண்டம் சென்ற தினத்திலேயே உலகத்தில் கலி வந்துவிட்டான். அப்பொழுது அரசனாக இருந்த பரீக்ஷித்து திக்விஜயம்

செய்துவரும் காலத்தில் வழியில் கலியைக் கண்டார் அவனும் அவரை சரணம் அடைந்தான்.

அவர் தவம், யோகம், சமாதி ஆகிய இவைகளால் அடையக்கூடாத உத்தமமான பிரயோசனம் பகவானுடைய நாமங்களை பஜனை பண்ணுவதனால் இக்கலியில் எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது என்று நினைத்து கலியுகத்தில் பிறக்கும் மனிதர்களுடைய ஸௌக்கியத்தின் பொருட்டே கலியைக் கொல்லவில்லை. கெட்ட காரியங்களைச் செய்வதனால் வஸ்துக்களுடைய ஸாரம் போய்விட்டது. ப்ராஹ்மணர்கள் ஒவ்வொரு வீட்டிலும் அரிசிக்கு ஆசைப்பட்டு பாகவத கதையைச் சொல்ல ஆரம்பித்ததால் கதையின் ஸாரம் போய்விட்டது. மேலும் ப்ராஹ்மணர்கள் மிக்க கோரமான பல காரியங்களையும் செய்து நாஸ்திகர்களாக (பரலோகத்தில் சிரத்தை இல்லாதவர்களாக) ஒவ்வொரு தீர்த்தக் கரைகளில் வஸிப்பதால் தீர்த்தத்தின் ஸாரம் போய்விட்டது. காமம், கோபம், லோப விஷயங்களில் ஆசை ஆகிய இவைகளால் கலங்கிய மனம் உள்ளவர்கள் தவம் செய்வதால் தவத்தின் ஸாரம் போய்விட்டது. மனிதர்கள் மனதை அடக்காமல் உலோபம் உம்பம் இவைகளை அடைந்து பாஷண்ட மதத்தை ஆசிரயித்தும் தியான யோகத்தின் ஸாரம் போய்விட்டது. வித்வான்களும் மோக்ஷத்தையடைய முயற்சியாமல் எருமைகள் போல் ஸ்திரீகளுடன் ரமித்து புத்திரர்களை உண்டு பண்ணுவதிலேயே சாமர்த்தியத்தை அடைந்திருக்கிறார்கள். பெரியோர் களுடைய சம்பிரதாயப்படியுள்ள விஷ்ணுபக்தி

ஒரிடத்திலும் இல்லை. இம்மாதிரி ஒவ்வோரிட ங்களிலும் வஸ்துக்களின் ஸாரம் போய் விட்டது. ஆனால் இது யுகத்தின் தர்மம். எவர் மீது குற்றஞ் சொல்லக்கூடும்? அதனால் தானே சமீபத்தில் இருக்கும் புண்டரீ காக்ஷன் (தாமரைக்கண்ணன்) இதை சகித்துக் கொண்டி ருக்கிறார் என்று சொன்னேன். இதனைக்கேட்டு அந்த பெண்ணானவள் "ஓ தேவ ரிஷியே! நீர் மிகவும் மேலானவர் என்னுடைய அதிர்ஷ்ட வசத்தால் நீர் இவ்விடம் வந்தீர். ஸாதுக் களுடைய தரிசனம் ஸகல சித்திகளையும் கொடுக்கும். தங்கள் உபதேசத்தால் ப்ரஹ்லாதர் என்பவர் மாயையைக் கடந்து ஆத்ம ஸ்வரூபத்தை அடைந்தவராக விளங்குகிறார். மேலும் தங்களுடைய கிருபையால் துருவர் என்பவர் சாஸ்வதமாகிய (துருவ) பதத்தை அடைந்தார். ஆகையால் ஸகல க்ஷேமத்தைக் கொடுப்பவரும் ப்ருஹ்மதேவரின் புத்திரருமாகிய தங்களை நமஸ்கரிக்கிறேன். என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள். அதனைக்கேட்டு நான் பின்வருமாறு சொன்னேன். "ஓ சிறு பெண்ணே! ஏன் கவலைப்படுகிறாய்? ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரை மலர்போன்ற பாதங்களை இடைவிடாது தியானஞ்செய்: துக்கம் ஒருபோதும் நேரிடாது. துச்சாதனன் முதலியவர்களால் செய்யப்பட்ட உபத்திரவித்திலிருந்து திரௌபதியைக் காப்பாற்றினார். கோப ஸ்திரீகளை ஸம்ரக்ஷித்தார். அவர் இப்பொழுது தேசாந்திரம் போகவில்லை. உன்னிடத்தில் தமது ப்ராணனைக்காட்டிலும்

விசேஷமான ப்ரியம் வைத்திருக்கிறார். பக்தியாகிய உன்னால் அழைக்கப்பட்டு அவர் நீசர்களுடைய வீட்டுக்கும் வருகிறார். கிருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம் இம்மூன்று யுகங்களிலும் முறையே ஸத்யம், ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகள் மோக்ஷத்துக்கு ஸாதனங்களாக இருந்தன. இக்கலியுகத்தில் பக்தி மாத்திரத்தாலேயே மோக்ஷம் கிடைக்கிறது; ஆனது பற்றியே ஞான ஸ்வரூபியாகிய பகவான் உனக்கு சரீரத்தை உண்டு பண்ணினார். பின்பு நீ ஒருக்கால் இரு கைகளையும் கூப்பிக்கொண்டு நான் என்ன செய்யவேண்டும் என்று பகவானைக் கேட்டாய். அப்பொழுது அவர் என் பக்தர்களை போஷிக்க வேண்டும் என்று ஆக்ஞாபித்தார். நீயும் அதனை ஒப்புக் கொண்டாய். அதனால் பகவான் சந்தோஷித்து முக்தியை உனக்கு ஊழியப் பெண்ணாக இருக்கும்படி செய்தார். பின்னும் ஞானம், வைராக்கியம் என்ற இவர்களை உன்னிடம் ஒப்படைத்தார். பின்பு நீ வைகுண்டத்தில் உன்னுடைய நிஜ ரூபத்துடன் இவர்களை போஷித்து வந்தாய். பூமியில் பக்தி விருத்தியாக் வேண்டியதற்காக சாயா ஸ்வரூபமயமான ரூபத்துடன் முக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய இவர்களுடன் பூமிக்கு வந்தாய். கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் ஆகிய இம் மூன்று யுகங்களிலும் மிகுந்த ஆனந்தத்துடன் இருந்தாய். கலியில் முக்தி என்னும் பெண் பாஷண்டர்களாகிய வியாதியால் மிகவும் குறைந்துவிட்டாள். அவள் உன்னுடைய அனுமதியினால் வைகுண்டத்துக்கு மறுபடியுஞ் சென்றாள்..

உன்னால் நினைக்கப்படும் போதெல்லாம் வைகுண்டத்திலிருந்து வருவதும் போவதுமாக இருக்கிறாள். ஞானம், வைராக்கியம் இவ்விருவர் களும் புத்திர சிநேகம் கொண்டு உன்னால் காப்பாற்றப்பட்டும், இக்கலியில் ஜனங்கள் அவர்களை உபேஷித்து விட்டபடியால் வயது சென்றவர்களாகி விட்டார்கள். ஆனாலும் உன்னுடைய கவலையை நான் போக்கடிக்கிறேன். இக்கலியுகத்துக்குச் ஸமமான யுகம் வேறில்லை. இந்த யுகத்திலும் ஒவ்வொரு ஜனங்கள் இடத்திலும் உன்னை ஸ்திரமாக இருக்கும்படி செய்கிறேன். அப்படிச் செய்யாவிடில் நான் விஷ்ணு பக்தன் அல்ல. கலியில் முக்கிய பாவிகளான ஜனங்களும் பகவத் பக்தியை பெற்று வைகுண்டத்தை அடைகிறார்கள். யமன், பிசாசங்கள், ராக்ஷதர்கள், அசுரர்கள் ஆகிய இவர்கள் பக்தி உள்ளவர்களை உபத்திரவிக்க மாட்டார்கள். பக்தியால் பகவான் வசப்படுவது போல தவம், வேதம், ஞானம், நல்லகர்மா இவைகளால் ஸ்வாதீனப் படுவதில்லை. அந்த விஷயத்தில் புண்ணியம் செய்தால் தான் பக்தி பண்ணவேண்டுமென்ற விருப்பமுண்டாகும்.கலியில் பக்தியே மேலானது. பக்தியை நிந்தித்ததால் துர்வாஸர் துக்கத்தை அடைந்தார். அனேக விரதங்களாலும், புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் பண்ணுவதாலும், போகங்களாலும், யாகங்களாலும், முக்தியைக் கொடுக்கக்கூடியது, என்று சொன்னேன். "இதனைக் கேட்டு பக்தியாகிய அந்தப்பெண் என்னை நோக்கி "ஓ நாரதரே நீர் மிகவும் மேலானவர். உம்மிடத்தில் எனக்கு மிகுந்த பிரீதி

உண்டாகி யிருக்கிறது. உம்மை ஒருபொழுதும் விடமாட்டேன். உம்முடைய மனதில் எப்பொழுதும் வசிப்பேன். தங்களுடைய அனுக்கிரஹத்தால் என் கவலை தீர்ந்துவிட்டது. ஆனாலும் என்னுடைய இந்த புத்திரர்களுக்கு மூர்ச்சை தெளிய வில்லை. இவர்களை எழுப்பிவிடும்'' என்று வேண்டிக் கொண்டாள்.

அப்பொழுது எனக்கு அவளிடத்தில் தயை உண்டாயிற்று. பின்பு நான் அவ்விருவர்களுடைய காதில் உபநிஷத் வாக்கியங்களையும் கீதா வாக்கியங் களையும் சொல்லி ''ஓ ஞானமே விழித்துக்கொள். ஓ வைராக்கியமே எழுந்திரு'' என்று இரைந்து சொன்னேன். அப்பொழுது அவர்கள் கொட்டாவி விட்டுக்கொண்டு எழுந்து இருந்தார்கள். ஆனாலும் பசி, தாகம் முதலிய வற்றால் வருத்தப்பட்டு மறுபடியும் படுத்துத் தூங்க யத்தனித்தார்கள். அது கண்டு நான் என்ன செய்கிறது என்று பகவானை த்யானஞ் செய்தேன். அப்பொழுது ''ஓ மஹர்ஷியே! ஏன் விசனப்படுகிறீர். புண்ணிய கர்மாக்களை அனுஷ்டிப்பீர் ஆனால், இவர்களுடைய தூக்கமும் கிழத்தனமும் நீங்கும். அந்தக் கர்மங்களை சில ஸாதுக்கள் உபதேசிப்பார்கள். அதனால் பக்தியானது உலகம் முழுவதும் பரவிவிடும் என்று ஆகாசத்தில் இருந்து ஒரு தொனி உண்டாயிற்று. அதனை நானும் மற்றவர்களும் கேட்டு ஆச்சரியம் அடைந்தோம். பின்பு ஆகாச வாணியால் சொல்லப்பட்டபடி எப்பொழுது, எந்தவிடத்தில் எவர்கள் எந்த கர்மங்களை நமக்கு உபதேசிப்பார்களோ என்று நான்

யோசித்து ஞானம், வைராக்யம் இவ்விருவர் களையும் அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு ஒவ்வொரு புண்ய தீர்த்தங்களுக்கும் சென்று இவ்விஷயத்தைப் பற்றி ஒவ்வொரு மஹர்ஷி களையும் கேட்டுக் கொண்டே சஞ்சரித்தேன். ஒருவரும் எந்தக் கர்மாவை அனுஷ்டிக்க வேண்டும் என்று நிச்சயமாகச் சொல்லவில்லை. சிலர் இதைச் செய்ய முடியாத காரியம் என்றும், பின்னும் சிலர் இதனைத் தெரிந்து கொள்வதே சிரமம் என்றும் சொன்னார்கள். சிலர் பேசாமலே இருந்துவிட்டார்கள். சிலர் இதனைக் கேட்டு இருந்த இடத்தைவிட்டே ஓடிப் போனார்கள். மேலும் எல்லா வேதங் களாலும், கீதா வாக்கியங்களாலும் விழித்துக் கொள்ளாத ஞான வைராக்கியங்கள் வேறு எந்த உபாயத்தால் எழுந்திருக்கப் போகிறார்கள்.? நாரத மஹர்ஷியாலும் அறியப்படாத விஷயம் மற்ற மஹர்ஷிகளால் சொல்லமுடியுமா? என்று ஜனங்கள் ரகசியமாக பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். அப்பொழுது எனக்கு யாதொரு நிச்சயமும் உண்டாக வில்லை. ஆனாலும் பதரிகா வனம் சென்று தவம் செய்யத் தொடங்கினேன். அவ்விடத்தில் மிக்க தேஜஸ் விகளான ஸனகர் முதலிய யோகிகளைக் கண்டேன். கண்டவுடன் விசேஷ ஆனந்தம் அடைந்து அவர்களை நோக்கி ஓ யோகி சிரேஷ்டர்களே! நான் செய்த பாக்ய விசேஷத்தால் தங்களைக் கண்டேன்.

நீங்கள் ஐந்து வயதுள்ளவர்களானாலும் முன்னோர்களுக்கும் முந்தியவர்கள். எப்பொழுதும்

வைகுண்டத்திலேயே இருப்பவர்கள். ஸ்ரீ மஹா விஷ்ணுவின் லீலைகளை கானஞ் செய்பவர்கள். எப்பொழுதும் பகவானையே சரணமடைந்தவர்கள். ஆகையால் ஜரை (கிழத்தனம்) உங்களை உபத்திரவிப் பதில்லை. ஆகையால் என்னை அனுக்கிரஹிக்க வேண்டும். ஆகாச வாணியால் சொல்லப்பட்ட கர்மங்கள் எவை? பக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகள் எல்லா வர்ணாச்சரமங்களிலும் ஸ்திரமாய் வசிக்கும்படி என்ன உபாயம் செய்யலாம் அதனைச் சொல்லவேண்டும் என்று கேட்டேன். அப்பொழுது அவர்கள் என்னைப் பார்த்து ஓ தேவரிஷியே இவ்விஷயத்தில் லகுவான உபாயமொன்றிருக்கிறது. நீர் வைராக்கியத்தை அடைந்தவர்களுள் மேலானவர். பகவத் பக்தர்களுட் சிறந்தவர். ஆகையால் பக்தியை உலகத்தில் ஸ்தாபிப்பதற்கு நீர் தகுதியானவரே அனேக மகரிஷிகள் அனேக மார்க்கங்களை காட்டியிருக்கிறார்கள். ஆனாலும் அவைகள் பெரும்பாலும் ஸ்வர்க்கத்தையே கொடுக்கக் கூடியவைகளாகவிருக்கின்றன. மேலும் ச்ரமப்பட்டு செய்யக் கூடியவைகளாயுமிருக்கின்றன; மோக்ஷத்தை கொடுக்கும் மார்க்கம் மிகவும் ரஹஸ்யமானது. அதனை உபதேசிப்பவர்கள் கிடைப்பதரிது. ஆகாச வாணியால் சொல்லப்பட்ட கர்மம் யாதெனில் ஜ்ஞான யக்ஞமேயாம். சிலர் திரவ்ய யஜ்ஞத்தை (யாகம்) அனுஷ்டிக்கிறார்கள். பின்னும் சிலர் தபோ யஜ்ஞத்தையும் மற்றும் சிலர் யோக யஜ்ஞத்தையும், இன்னும் சிலர் ஸ்வாத்யாய யக்ஞத்தையும் (வேதங்களை அத்யயனம் செய்வது) அனுஷ்டிக்கிறார்கள். இவைகளில் ஜ்ஞான யஜ்ஞமே

மேலானது. அது சுகரால் பரீக்ஷித் மஹாராஜனுக்கு உபதேசிக்கப்பட்ட பாகவதத்தைக் கேட்பதேயாகும். அந்தப் பாகவத சாஸ்த்ரத்தைக் கேட்பதால் பக்தி ஜ்ஞான வைராக்கியங்களுக்கு நேர்ந்த கஷ்டமும் விலகும். மேலும், சிங்கத்தின் சப்தத்தைக் கேட்ட செந்நாய்கள் போலப் பாகவதக் கதையைக் கேட்ட மாத்திரத்தில் கலியின் தோஷங்கள் யாவும் ஓடுகின்றன. பக்தியானது, ஜ்ஞானம் வைராக்யம் ஆகிய இவைகளுடன் ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு ஜனங்களிடத்திலும் நன்றாய் ப்ரகாசிக்கும் என்று உபதேசித்தார்கள்.

அப்பொழுது நான் அவர்களைப் பார்த்து "ஓ ப்ரம்ஹ தேவரின் குமாரர்களே! வேதாந்த வாக்யங்களாலும், கீதா பாடத்தாலும் விழித்துக் கொள்ளாத அவர்கள் பாகவத பாடத்தால் எழுந்திருப்பார்களா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் பின்வருமாறு விடை சொன்னார்கள். ஸ்ரீமத் பாகவத கதையானது உபநிஷத்துக்களின் ஸாரத்தால் செய்யப்பட்டதாகையால் இது மிகவும் மேலானது. பாலில் நெய் இருந்தாலும் அது எப்படி தனியாகத் தெரியவில்லையோ அதுபோல வேதத்தில் ஸாரமானது எங்கு இருந்தாலும் நன்றாய்ப் பிரகாசிக்கவில்லை. ஆனாலும், அந்தப் பாலைக் காய்ச்சிக் கடைந்து அதிலிருந்து தனியாக நெய் எடுக்கப்பட்டால் அது தேவர்களுக்கு மிகவும் திருப்தியை உண்டு பண்ணுகிறது. தவிரவும் கரும்பில் அடி முதல் நுனி வரையில் சர்க்கரை இருந்தாலும் அதனைப் பிரித்தெடுத்த பிறகுதான் புஜிக்கக்

கூடியதாகிறது. அது போலவே வேதத்திலுள்ள ஸாரங்கள் எல்லாவற்றையும் எடுத்து ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்டது. இது பக்தி, ஞானம், வைராக்யம் இவைகளை உலகத்தில் ஸ்தாபிப்பதற்காகவே வெளியிடப்பட்டது. முன் னொருகால் ஸ்ரீவேதவ்யாஸ மஹர்ஷி ஸ்ரீமத் மஹாபாரதத்தைச் செய்தும், வேதங்களை அத்யயனஞ் செய்தும் உபநிஷத்துக்களின் உண்மையான அர்த்தத்தைத் தெரிந்து கொண்டும், பகவத் கீதையைச் செய்தும், அக்ஞானம் விலகாமல் தாபமடைந்து ஸரஸ்வதி நதிக்கரையில் கவலைப் பட்டுக் கொண்டிருக்கும்பொழுது உம்மால் நான்கு ச்லோகங்கள் உபதேசிக்கப்பட்டன; அவைகளைக் கேட்டு அவர் உடனே கவலை தீர்ந்தவராக, அவைகளைக் கொண்டு பாகவதத்தைச் செய்தாரல்லவா ?அப்படி இருக்க பாகவதத்தை கேட்பதால் துக்கம் விலகுமாவென்று நீரே கேட்பது மிகவும் ஆச்சர்யமாக விருக்கிறது' என்று சொன்னார்கள். பின்பு நான் அவர்களைக் கொண்டாடி, அவர்களை நோக்கி இந்த ஞான யஜ்ஞத்தை எவ்விடத்தில் செய்யலாம் ? எவ்வளவு நாட்களில் பாகவதம் கேட்கப்படவேண்டும் ? அதன்முறை எப்படி ? பாகவத சாஸ்த்ரத்தின் மஹிமையை ஸகல வேதங்களுமறிந்த தாங்களே சொல்லவேண்டும்' என்று கேட்டுக் கொண்டேன்.

அப்பொழுது அவர்கள், "ஓ நாரதரே! கங்கையின் ஸமீபத்தில் ஆனந்த வனமென்பது ஒன்று உண்டு. அது மிகவும் ஏ்காந்தமான இடம். ஜலஸௌக்யமுள்ளது; அனேக மஹர்ஷிகள்

அவ்விடத்தில் வஸிக்கிறார்கள்' அவ்விடத்தில் வஸிக்கும் பறவை முதலியவைகளுக்கும் இயற்கையான விரோதம் இல்லை. அவ்விடத்தில் பாகவத கதையைச சொல்லுவதாகிய ஜ்ஞான யஜ்ஞத்தை நீர் நடத்த வேண்டும், அவ்விடத்திற்கு பக்தியானவள் தன் புத்ரர்களுடன் வருவாள். அந்தக் கதையைக் கேட்ட மாத்திரத்தில் அவர்கள் யௌவன வயஸை அடைவார்கள்' என்று சொல்லி என்னை அழைத்துக் கொண்டு பாகவத கதையைக் கேட்பதற்காக ஆனந்தவனம் சென்றார்கள். அப்பொழுது இதனைக் கேட்டுப் பூலோகம், தேவலோகம், ப்ரஹ்மலோகம் ஆகிய இவ்விடங்களிலிருந்து பகவத் பக்தர்கள் எல்லோரும் ஆனந்தவனம் சென்றார்கள். அன்றியும் ப்ரகு, வஸிஷ்டர், ச்யவனர், கௌதமர், மேதாதிதி, தேவலர், தேவராதர், பராசுராமர், விச்வாமித்ரர், சகலர், மார்க்கண்டேயர், பிப்பலாதர் முதலிய மஹர்ஷிகளும், வ்யாஸர், பராசரர் முதலிய யோகிகளும், சாயாசுகர், ஜாஜலி, ஜஹ்னு முதலியவர்களும் தங்கள் தங்களுடைய ஸ்திரீகள், புத்ரர்கள், சிஷ்யர்கள் முதலியவர்களுடன் கங்காதீரஞ் சென்றார்கள். மேலும் ஆறு சாஸ்த்ரங்களும், பதினேழு புராணங்களும், நான்கு வேதங்களும், கங்கை முதலிய நதிகளும், புஷ்கரம் முதலிய குளங்களும், க்ஷேத்ரங்களும் பத்து திக்குக்களும், தண்டகை முதலிய வனங்களும், மேரு முதலிய மலைகளும் திவ்ய சரீரமுள்ளவைகளாய்க் கதையை கேட்பதற்காக அவ்விடம் வந்து கூடின. மேலும் தேவர்கள், கந்தர்வர்கள், கின்னரர்கள் ஆகிய இவர்களும்

வந்தார்கள். எல்லோருக்கும் ஆசார்யர்களான ஸனகர் முதலியவர்களை ப்ரகுமஹர்ஷி தாம் நேரில் அழைத்து வந்தார். அப்பொழுது அந்த ஜ்ஞான யஜ்ஞத்தில் நான் தீக்ஷை செய்து கொண்டு அந்தக் குமாரர்களுக்கு ஆஸனங் கொடுத்து நமஸ்காரஞ்செய்து அவர்களைப் பூஜித்தேன். அங்கே ஒருபக்கத்தில் மஹர்ஷிகளும் மற்றொரு பக்கத்தில் தேவகணங்களும், இன்னொரு பக்கத்தில் வேதம் உபநிஷத் முதலியவைகளும், மற்றொரு பக்கத்தில் தீர்த்தங்களும், இன்னொரு பக்கத்தில் ஸ்திரீகளும், தங்களுக்குத் தகுந்த ஆஸனங்களில் உட்கார்ந்தார்கள். 'ஜய்' என்றும், 'நமஸ்காரம்' என்றும் சப்தங்கள் மிகுதியா யுண்டாயின, சங்க வாத்தியங்கள் முழங்கின. ஆகாசத்தில் தேவர்கள் விமானங்களிலிருந்து கல்பக விருக்ஷத்தின் புஷ்பங்களின் மழையைப் பெய்தார்கள். இப்படி எல்லோரும் ஒரே மனமாய் பாகவத மாஹாத்மியத்தைக் கேட்க விரும்பியிருக்கும் பொழுது என்னை உத்தேசித்து ப்ரஹ்ம குமாரர்கள் பின்வருமாறு சொன்னார்கள்: 'ஸ்ரீமத் பாகவத கதையை ஜனங்கள் எப்பொழுதும் கேட்வேண்டும். அதனைக் கேட்டமாத்திரத்தால் பகவான் மனதில் ஆவிர்ப்பவிக்கிறார். இது பதிமிண்ணாயிரம் க்ரந்தங்களடங்கியது. பன்னிரண்டு ஸ்கந்தங்கள் உள்ளது. பரிக்ஷித்து மஹா ராஜனுக்கு சுகரால் உபதேசிக்கப்பட்டது. இதுவே மோக்ஷத்தை கொடுக்கக்கூடியது. மற்றப் பலவையான சாஸ்த்ரங்கள் புத்திக்கு மயக்கத்தை யுண்டுபண்ணுகின்றன. எந்த வீட்டில் பாகவத கதை படிக்கப்படுகிறதோ

அதுவே புண்ய க்ஷேத்ரமாகும், அச்வமேதயாகங்கள், நூறு வாஜபேயங்கள் இவைகளை ஆயிரம் செய்தாலும், அதனாலுண்டாகும் புண்யமானது பாகவத கதையைப் படிப்பதனா லுண்டான ஸுகிருதத்தின் 16ல் ஒரு பாகத்திற்கும் ஸமமாகாது. ஒவ்வொரு நாளும் பாகவதத்தில் ஒரு ச்லோகத் தையாவது அதன் பாதியையாவது அவசியம் படிக்க வேண்டும். ஒவ்வொரு வேதங்களின் முதல் மந்த்ரங்கள் வேத மாதாவாகிய காயத்ரீ மஹாமந்தரம், புருஷ ஸூக்தம், வேதங்கள், பாகவதம், த்வாதசாக்ஷரம், ஸூர்யன், ப்ரயோகம், ஸம்வத்ஸரமாகிய காலம், ப்ராஹ்மணர்கள், அக்னிஹோத்ரம், காமதேனு, த்வாதசி திதி, துளஸி, வஸந்தருது, புருஷோத்தமராகிய நாராயணர், ஆகிய இவர்களுக்குள் தாரதம்யமில்லை. எவன் ஒவ்வொரு நாளும், பாகவதத்தை படித்து அதன் அர்த்தத்தை தெரிந்துகொள்ளுகிறானோ, அவனுக்கு கோடி ஜன்மங்களில் செய்யப்பட்ட பாபங்களும் நிவர்த்தியாகின்றன. தவிரவும், மரண காலத்தில் இந்தச் சுக சாஸ்த்ரத்தைக் கேட்பதால் வைகுண்டத்தையடைவார்கள். இந்தப் பாகவத புஸ்தகத்தை ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்தில் வைத்து விஷ்ணுபக்தர்களுக்குத் தானம் செய்கிறவன் ஸ்ரீகிருஷ்ணனுடைய ஸாயுஜ்ய பதத்தையடைகிறான். பிறந்தது முதல் ஒரு பொழுதாவது பாகவத கதையைக் கேட்காதவன் சண்டாளனுக்கும், கழுதைக்கும் ஸமானனென்று சொல்லப்படுகிறான். தவிரவும், அவனை பக்தர்கள் உயிருள்ள பிணமென்றும், பூமிக்குச்சுமையாயிருப்பவனென்றும் சொல்லுகிறார்கள். இந்த கதையை இந்திரியங்களை

ஜயித்து, மனத்தை அடக்கி வெகுநியமத்துடன் கேட்கவேண்டுமாதலால் அவ்வளவு நியமத்தை அனுஷ்டிப்பது இக்கலி காலத்து ஜனங்களால் முடியாததாகுமென்றும், இவர்களுக்கு ஆயுஸ் மிகக் குறைந்ததென்றும் யோசித்து சுகர் ஏழு நாளில் இதைக் கேட்கவேண்டுமென்று ஒரு விதி நியமித்திருக்கிறார்.

அந்த விதிப்படி ஏழு நாளில் பாகவதத்தை கேட்பதனால் ஸகல யாகங்கள் செய்த பலன்களும், ஸகல வ்ரதங்களை அனுஷ்டித்த பலன்களும், ஸகல தீர்த்தங்களில் ஸ்நானம் செய்த பலன்களும் உண்டாகும் என்று எனக்கு உபதேசித்தார்கள் என்று ஸூதர் சௌனகர் முதலிய மஹர்ஷி களுக்குச் சொன்னார். இதைக் கேட்டுச் சௌனகர், பாகவத புராணம் மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியதென்றும், மற்றவைகளைக் காட்டிலும் மேலானதென்றும், தாங்கள் சொல்லக் கேட்டு மிகவும் ஆச்சர்யமடைந்தோம். அவ்வளவு மேன்மை அந்தச் சாஸ்த்ரத்திற்குக் கிடைத்த காரணமென்ன? சொல்ல வேண்டும் என்றார். அதனைக் கேட்டு ஸூதர் அவரை நோக்கிச் சொன்னார். "ஓ சௌனகரே! ஸ்ரீ கிருஷ்ண பகவான் பூமியை விட்டுத் தம் உலகம் போகும் முன்னிலையில் உத்தவர், பகவானை நோக்கித் தாங்கள் வைகுண்டம் சென்றால் பக்தர்களை யார் ஸம்ரக்ஷிப்பார்? கலியுகத்தில் ஜனங்கள் துஷ்டர்களாகிவிடுவார்கள்; நிர்குணமாகிய உம்முடைய ஸ்வரூபத்தை ஜனங்கள் உபாஸிப்பது மிகவும் கஷ்டம். அதற்காகவே தாங்கள் பூமியில் அவதாரஞ் செய்திருக்கிறீர்கள். ஆகையால்

இவ்வுலகத்திலேயே வஸிக்க வேண்டுமேயொழிய மேலுலகம் செல்லக் கூடாது என்று வேண்டிக் கொண்டார். இதனைக் கேட்டு பகவான், 'பக்தர்களுக்காக நாம் செய்யவேண்டியதென்ன? என்று யோசித்து? தேஜோ ரூபியாக ஸ்ரீமத் பாகவதத்தில் ப்ரவேசித்தார். அதனாலேதான் அது எல்லாவற்றிலும் மேலானது. அதனைக் கேட்பதாலும், படிப்பதாலும் துக்கம், தாரித்ரியம், பாபம் முதலாகிய இவைகள் நிவர்த்தி யாகின்றன. ஏழு நாளில் இந்த க்ரந்தம் முழுவதையும் விதிப்படிக் கேட்டால் தேவர்களாலும் தாண்ட முடியாத விஷ்ணுவின் மாயையைக் கடந்து ஸ்வரூபஜ்ஞானத்தை அடையலாம். 'ஓ சௌனகர் முதலியவர்களே! இப்படி பாகவதத்தின் மஹிமையை வர்ணித்தவுடன் ஆனந்தவனத்தில் பக்தியின் புத்ரர்களான ஜ்ஞான வைராக்கியர்கள் மிக்க பலத்துடனும் அழகான சரீரத்துடனும் எழுந் திருந்தார்கள். பக்தியும், ஹே கிருஷ்ண!, ஹே கோவிந்த! ஹே முராரே! என்று சொல்லிக் கொண்டு விசேஷ சந்தோஷமடைந்தாள். பின்னும் அவர்களுடைய ஆஜ்ஞையால் பகவத்பக்தருடைய மனதில் வஸித்து வந்தாள். மேலும் அவ் விடத்தில் ஸ்ரீமந்நாராயண மூர்த்தி நீருண்ட மேகம் போலக் கறுத்த திருமேனியோடு நான்கு கைகளிலேயும் சக்ரம் முதலிய ஆயுதங்களை ஏந்திப் பீதாம்பரத்தையுடுத்திக் கொண்டு துளஸி மாலையால் அலங்கரிக்கப் பட்டுக் கோடி மன்மதனைப் போல அழகு உள்ளவராகி பக்தர்களுக்கு தர்சனங் கொடுத்தார். அப்பொழுது எல்லோரும் பரமானத்தத்தை யடைந்து பகவானை ஸ்தோத்ரம் செய்தார்கள். மேலும் ஸ்ரீமத் பாகவதமே மேலானதென்றும்

தெரிந்து கொண்டார்கள்.

ப்ராஹ்மணர்களுடைய பொருள்களை அபஹரிப் பதாகிய மஹாபாபங்களைச் செய்தவர்களும் ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்பதனால் பரிசுத்தராகி விடுகிறார்கள் என்பதில் ஸந்தேக மில்லை. துங்கபத்ரா நதிக்கரையில் ஒரு பட்டணத்தில் ஆத்மதேவரென்ற ஒரு ப்ராஹ்மண ச்ரேஷ்டரிருந்தார். அவர் ஸகல வேதங்களையும் அத்யயனஞ் செய்தவர். ஸூர்யன் போன்ற தேஜஸ் உள்ளவர். தன்னுடைய வர்ணாச்ரம தர்மங்களைக் குறைவின்றி நடத்தி வருபவர். ஆனால் அவர் மிகுந்த ஏழை. அவருக்குத் துந்துலீ என்ற பத்னியொருத்தியுண்டு. அவள் மிகவும் அழகுள்ளவள், மேலான குலத்தில் பிறந்தவள், ஆனாலும் வெகுவாகப் பேசுகிறவள், வீட்டு வேலைகளில் மிகவும் ஸாமார்த்திய முள்ளவள். சண்டையில் மிகுந்த ப்ரியமுள்ளவள். தான் சொன்னதே சரியென்று ஸ்தாபிக்கும் ஸ்வபாவமுள்ளவள். அந்தத் தம்பதிகளிருவர்களும் பல வகையான தர்மங்களை அனுஷ்டித் தார்கள். அப்படியும் அவர்களுக்குப் பெண்ணாவது பிள்ளையாவது பிறக்கவில்லை. அதனால் கவலையடைந்து அந்த ப்ராஹ்மணன் வீட்டை விட்டுக் காட்டுக்குச் சென்றார். அவ்விடத்தில் மத்யானகாலத்தில் ஒரு குளத்தில் ஸ்நானம் பண்ணித் தாஹத்தைத் தீர்த்துக் கொண்டு தெய்வச் செயலால் அவ்விடம் வந்த ஒரு ஸன்யாசியின் அருகிற் சென்று அவரை நமஸ்கரித்துப் பெருமூச்சு விட்டு அவருடைய பக்கத்தில் நின்றார். அவரைப் பார்த்து

ஸன்யாஸியானவர், ஓ ப்ராஹ்மண! நீர் ஏன் துக்கப்படுகிறீர் என்று கேட்டார். அதனைக் கேட்டுப் ப்ராஹ்மணன் அந்த ஸன்யாஸியை நோக்கி, எனக்குப் புத்திரனில்லை என் வீட்டில் இருக்கும் பசுவும் மலட்டாயிருக்கிறது, என்னால் வைத்து வளர்க்கப்பட்ட மரமும் புஷ்பிக்கிறது மில்லை காய்க்கிறதுமில்லை, என் வீட்டிற்கு கொண்டு வந்த பழங்களும் காய்ந்து போகின்றன. குழந்தைகளிலில்லாமலும், பாக்யமில்லாமலும் இருக்கும் நான் பிழைத்திருந்து என்ன ப்ரயோஜனம் என்று சொல்லி மிகவும் கதறினார்.

அதனைக் கேட்டு அந்த ஸன்யாஸியானவர் அவருடைய நெற்றியில் எழுதப்பட்டிருக்கும் அக்ஷரங்களை வாசித்துப் பார்த்து ப்ராஹ்மணனை நோக்கி, ஓ ப்ராஹ்மண! உமக்கு ஏழு ஜன்மம் வரையில் பிள்ளை பிறக்காது, ஸகரர் என்னும் ராஜன் புத்ர சோகத்தை அடைந்தாரல்லவா? ஆகையால் பிள்ளை பிறக்கவில்லை யென்று நீர் வருத்தப்படுவது நியாயமில்லை. ஆகையால் குடும்பத்தின் ஆசையை யொழித்து ஸன்யாஸஞ் செய்துகொள்ளும் என்றார். அதனைக் கேட்டும் ப்ராஹ்மணன் கொஞ்சமேனும் அதற்கு ஸம்மதிக் காமல் விஷய ஸுகத்திலேயே ஆசைப்பட்டு பிள்ளை பிறக்கும்படி அனுக்ரஹிக்க வேண்டுமென்று பலவாறாக வேண்டிக் கொண்டார். ஸன்யாஸி யானவர்; "ஓ ப்ராஹ்மண! தெய்வச் செயலை மாற்றுவதற்கு யாரால் முடியும்? அதனை மாற்ற முயன்றால் துக்கத்தையே அடையும்படி நேரிடும். ஆகையால் உமக்கு புத்ரஸுகம்

கிடைக்காது. ஆயினும் உமக்கு ஒரு பழத்தைக் கொடுக்கிறேன். இதனை உம்முடைய பத்னியிடம் கொடுத்து புஜிக்கும்படி செய்யும். உத்தமமான புத்ரன் பிறப்பான் என்று சொல்லிப் பழத்தைக் கொடுத்தார். ப்ராஹ்மணன் அதைப் பெற்றுக் கொண்டு தம்முடைய வீட்டிற்கு வந்து தமது பத்னியிடம் கொடுத்து அவளை நோக்கி, இது முதல் ஒரு வருஷம் வரையில் ஒருவேளை போஜனம் செய்துகொண்டு, ஸத்யம், சௌசம், தயை, இவைகளில் தவறாமல் நியமத்துடன் நீ இருக்கவேண்டும். இப்பழத்தை புஜி. நல்ல பிள்ளை பிறக்கும், என்று சொல்லிவிட்டு, கிராமாந்தரம் போய்விட்டார். அந்தத் துந்துலீ என்பவள் தன்னுடைய தோழிகளின் முன்பாக இவ்விஷயங்கள் எல்லாவற்றையும் சொல்லி வருத்தப்பட்டாள். எப்படியென்றால் இந்தப் பழத்தை நான் புஜித்த மாத்திரத்தில் வயிற்றில் கர்ப்பம் உண்டாய்விடும். வயிறு பெருத்துவிடும். ஆசாரம் குறைந்துவிடும். தேஹத்தில் வலிமை குறையும். வீட்டு வேலைகளை எப்படிச் செய்ய முடியும்? வயிற்றுக்குள்ளிருக்கும் கர்ப்பமானது வெளி வருவது மிகவும் கஷ்டம், ஒருக்கால் சிசு வயிற்றில் குறுக்காக விழுந்துவிட்டால் நான் உயிரையிழக்கும்படி நேரிடுமே! ப்ரஸவ காலத்தில் உண்டாகும் உபத்ரவத்தை நான் எப்படி ஸஹிப்பேன்? இந்த ஒருவருஷம் நியமமா யிருப்பது மிகவும் கஷ்டம். நான் ப்ரஸவித் திருக்கும்பொழுது வீட்டிலிருக்கும் எல்லா தனங்களையும், பர்த்தாவின் ஸஹோதரியானவள்

அபஹரித்துவிடுவாள். ப்ரஸவித்தபிறகு குழந்தையைக் காப்பாற்றுவது மிகவும் கஷ்டம். ஆகையால், மலடியாகவாவது விதவையாகவாவது இருப்பதே மேலானதென்று நினைக்கிறேன். என்று சொல்லி அப்பழத்தை அவள் புஜிக்கவில்லை. பின்பு ப்ராஹ்மணன் தமது பத்னியை நோக்கிப் பழத்தை புஜித்தாயா என்று கேட்க அவள் புஜித்தேன் என்றும் அவருக்குச் சொன்னாள். இந்தச் சமயத்தில் அந்த துந்துலியின் ஸஹோதரி ஒருத்தி தெய்வச் செயலாய் அவள் வீட்டுக்கு வந்தாள். அப்பொழுது துந்துலீ அவளிடத்தில் இவ்விஷயம் முழுவதையும் சொன்னாள். அதைக் கேட்டு அவள் துந்துலியை நோக்கி நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். நான் இப்பொழுது கர்ப்பமாயிருக்கிறேன், நான் ப்ரஸவிக்கிற வரையில் நீ வீட்டிற்குள்ளேயே இருந்து கர்ப்பிணியாகயிருப்பதுபோலப் பிறருக்குச் சொல்லிக்கொண்டு இரு. உன் வீட்டிலிருக்கும் பணம் முழுவதையும், நீ என் புருஷனுக்கு கொடுத்துவிடுவாயானால், எனக்குப் பிறக்கும் குழந்தையை உனக்குக் கொடுத்து விடுகிறேன். உன் வீட்டில் வந்திருந்து, குழந்தையையும் வளர்க்கிறேன். இந்தப் பழத்தைப் பசுவுக்குக் கொடுத்து விடு, என்று சொன்னாள். அவளும் அப்படியே செய்தாள். பின்பு அவள் ப்ரஸவித்ததும் அந்தக் குழந்தையை அதன் தகப்பன் ரஹஸ்யமாகத் துந்துலியினிடம் கொடுத்தான். துந்துலியும் 'ஸுகமாய் ப்ரஸவித்தேன்' என்று தன்னுடைய பர்த்தாவிடம் தெரிவித்தாள். அந்த ஆத்மதேவர் மிகுந்த ஸந்தோஷமடைந்து

ஜாதகர்மம் முதலியவைகளைச் செய்தார். அப் பொழுது துந்துலியானவள் தனது பர்த்தாவை நோக்கி, 'ஸ்தனத்தில் பாலில்லை, எத்தனை நாள் அன்யர்களுடைய பாலைக் கொண்டு குழந்தையை வளர்க்க முடியும். என்னுடைய தங்கையின் குழந்தை இறந்து போய் விட்டதால் அவளுக்குப் பால் மிகுதியா யிருக்கிறது. அவளை வரவழைத்து வீட்டில் வைத்துக் கொண்டு குழந்தையை வளர்க்கும்படி செய்ய வேண்டும்' என்று சொன்னாள், அவரும் அதற்கு சம்மதித்து அப்படியே செய்தார். அந்தக் குழந்தைக்கு துந்துகாரி என்று பெயர் வைக்கப்பட்டது. அதற்குப்பின் மூன்று மாதம் கழித்து வீட்டிலிருந்த பசுவானது ப்ரஸவித்தது. நல்ல தேஜஸ்வியும், அழகுள்ளவனுமான புத்ரன் பிறந்தான். ஆனால் அக்குழந்தைக்கு காது மட்டும் பசுவின் காது போலிருந்தது, அதனால் அவனுக்கு கோகர்ணனென்னு பெயரிடப்பட்டது. அவன், வித்வானாயும், சுத்தனாயும், ஆசாரமுள்ளவனாயு மிருந்தான். துந்துகாரியோ மிகவும் துஷ்டனாகியும், திருடனாகியும், அசுத்தனாகியும், மஹா பாபியாகியுமிருந்தான். இப்படிச் சில காலம் சென்ற பிறகு துந்துகாரியானவன் தாஸிகள் இடத்தில் ஆசைப்பட்டுப் பணம் முழுவதையும் செலவழித்துத் தாய் தகப்பன் இருவர்களையும் அடித்து வீட்டிலிருக்கும் பாத்திரங்களையும் பிடுங்கிக் கொண்டு போனான். அப்பொழுது அவனுடைய தகப்பனாராகிய ஆத்மதேவர், அபுத்ரனாயிருப்பதே மேலானது; இந்தத்

துஷ்டப்பிள்ளையையடைந்து நான் மிகவும் கஷ்டப்படுகிறேன். என்னை இப்பொழுது யார் காப்பாற்றுவார்கள்? என்று கத்தினார். அப் பொழுது கோகர்ணன் ஸம்ஸாரத்தின் துக்கங்களை அவருக்குச் செவ்வையாக எடுத்துரைத்து வைராக்யத்தை உண்டுபண்ணினான். பின்பு அவர் புத்ரனுடைய உபதேசத்தால் வீட்டை விட்டுக் காட்டுக்குச் சென்று ஒவ்வொரு நாளும் பாகவதத்தில் பத்தாவது ஸ்கந்தத்தைப் படித்து அதனால் ஸ்ரீகிருஷ்ண ஸாயுஜ்யத்தையடைந்தார். பிறகு அந்தத் துந்துகாரியென்பவன், தாயாரை நோக்கி வீட்டில் பணம் எங்கேயிருக்கிறது? சொல்லு, இல்லாவிடில் உன்னை கொல்வேன், என்று அதட்டினான். அதனால் அவள் ஒருநாள் இரவில் ஒரு கிணற்றில் விழுந்து மரண மடைந்தாள். கோகர்ணனென்பவன் விஷயங்களில் ஆசையில்லாதவனாகித் தீர்த்தயாத்ரை செய்து கொண்டிருந்தான். துந்துகாரியென்பவன் வீட்டிலேயே ஐந்து தாஸிகளை வைத்துக் கொண்டு அவர்களைப் போஷிப்பதற்காக கெட்ட காரியங்களையே செய்து வந்தான். அந்தத் தாஸிகள் நகை வேண்டுமென்ற விருப்பத்தால் அவனை நிர்ப்பந்தித்தார்கள். அதற்காக அவன் தேசாந்தரம் சென்று நல்லவஸ்தரங்கள் நகைகள் முதலியவைகளைத் திருடிக் கொண்டு வந்து கொடுத்தான். இப்படி மிகுதியான பணத்தையும் நகைகளையும் இவன் திருடிக்கொண்டு வந்திருக் கிறான் என்று தெரிந்து அந்தத் தாஸிகள் ஒரு நாள் ராத்ரி இவன் இவ்வளவு வஸ்துக்களையும்

திருடிக்கொண்டு வந்திருப்பதனால் அரசனுடைய சேவகர்கள் இவ்விடம் வந்து நம்மை பிடித்துக் கொள்வார்களே என்று யோஜித்து ஒருவருக்கும் தெரியாமல் கயிறுகளால் இவனைக் கட்டி கழுத்தில் சுருக்கிட்டார்கள். அப்படியும் அவன் சீக்கிரத்தில் மரிக்கவில்லை. அப்பொழுது அவர்கள் அக்னியை அவன் முகத்திற்போட்டு உபத்ரவிக்க அவன் இறந்தான். பின்பு அவன் சரீரத்தை ஒருவருக்கும் தெரியாமல் ஓரிடத்தில் அடக்கம் செய்தார்கள். மறுநாள் துந்துகாரி எங்கேயென்று கேட்பவர்களுக்குப் பணம் ஸம்பாதிப்பதற்காக தேசாந்தரம் போயிருக்கிறானென்றும், ஒரு வருஷத்தில் திரும்பி வருவானென்றும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இறந்துபோன துந்துகாரி அவனுடைய பாபத்தால் ப்ரேத ஜன்மத்தையடைந்து வாயு சரீரத்துடன் அங்குமிங்கும் அலைந்து கொண்டு வெயில், குளிர், பனி, மழை இவைகளை ஸஹித்தும்; பசி, தாஹத்தால் துன்பத்தை யடைந்தும் மிகவும் துக்கித்துக் கொண்டிருந்தான். சில காலத்தில் கோகர்ணன் துந்துகாரி இறந்து போனானென்பதைக் கேள்விப்பட்டு அவனை உத்தேசித்து கயாக்ஷேத்திரத்தில் ச்ராத்தம் செய்ததுமின்றி ஒவ்வொரு தீர்த்தங்களிலும் அவனை உத்தேசித்துப் பிண்டதானம் முதலிய வைகளையும் செய்தான்.

பிறகு சில காலத்தில் தன்னுடைய பட்டணம் வந்து தன்னுடைய வீட்டின் திண்ணையில் அன்று ராத்ரிப் படுத்திருந்தான். அப்பொழுது

ப்ரேத ரூபியாயிருக்கும் துந்துகாரி, அவ் விடத்தில் படுத்திருக்கும் தன் பந்துவைப் பார்த்து, ஒருக்கால் ஆடுபோலவும், பின்னு மொருக்கால் யானை போலவும், எருமை போலவும், இந்திரன் போலவும், அக்னி போலவும், புருஷன் போலவும், பலவகையான ரூபத்தை எடுத்துக் கொண்டான். கோகர்ணன் அவனைப் பார்த்து, 'நீ, யார்? ப்ரேதமா அல்லது பிசாசமா அல்லது ராக்ஷஸனா? என்று கேட்டான். இதைக்கேட்டு விடை சொல்லமுடியாமல் அழுது கொண்டு அது ஜாடை காட்டினது. அப்பொழுது கோகர்ணன் இருகையிலும் ஜலத்தையெடுத்து ப்ரோக்ஷித்தான். அதனால் அது தன்னுடைய பாபங்கள் விலகி விடை சொல்ல ஆரம்பித்தது. 'நான் உன்னுடைய ஸஹோதரன், எனக்கு துந்துகாரியென்று பெயர். நான் செய்த பாப கர்மங்களால் ப்ராஹ்மண ஜன்மம் போய்விட்டது; அனேக ப்ராணிகளை ஹிம்ஸித்துத் தாஸிகளைப் போஷித்து வந்தேன்; கடைசியில் அவர்களாலேயே கொல்லப்பட்டேன்; அதனால் ப்ரேத ஜன்மத்தை அடைந்து கஷ்டப்படுகிறேன்; நீ எனக்குப் பந்துவாகையால் என்னிடத்தில் தயைசெய்து என்னைக் காப்பாற்று' என்றது.

அதனைக் கேட்ட கோகர்ணன், 'ஓ' துந்துகாரியே உனக்காக கயா க்ஷேத்திரத்தில் விதிப்படி பிண்டதானஞ் செய்தேன். அப்படியிருக்க உனக்கு ப்ரேதமாயிருக்கும் தன்மை ஏன் போகவில்லை? இனி நான் செய்யவேண்டிய

தென்ன ? என்று கேட்டான். அதைக் கேட்டு அந்த ப்ரேதமானது நூறு கயா ச்ரார்த்தம் செய்தாலும் என்னுடைய பாபம் நிவர்த்தி யாகாது. ஆகையால் வேறு ஓர் உபாயத்தை யோஜிக்கவேண்டும் என்றது. அதைக்கேட்டு கோகர்ணன், உன்னுடைய பாபங்கள் விலக்கத் தகுந்த உபாயத்தை ஆலோசித்து அதை அனுஷ்டிக்கிறேன். அதுவரையில் நீ கவலை யற்றவனாகியிரு என்று சொல்லிவிட்டு, ராத்ரி முழுவதும் அது விஷயமாக யோசித்தும் யாதொரு நிச்சயமும் தோன்றாதவனாயிருந்தான்.' காலையில் அந்தப் பட்டணத்திலிருக்கும் ஜனங்கள் எல்லோரும் தேசாந்தரத்திலிருந்து வந்த கோகர்ணனைப் பார்த்து, க்ஷேமம் விசாரித்தார்கள். கோகர்ணன் ராத்ரியில் நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் அவர்களிடம் தெரிவித்தான். அவர்கள் யோசித்து ஒன்றும் தோன்றாமல் ஸூர்ய பகவானைக் கேட்க வேண்டுமென்று சொன்னார்கள். உடனே கோகர்ணன் ஸூர்யனை ஸ்தோத்திரம் செய்து அவர் வேகத்தைத் தடுத்துவிட்டான். அப் பொழுது ஸூர்யபகவான், ஏழுநாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்டால் ப்ரேதத்வம் நிவர்த்தியாகும் என்று அனுக்ரஹித்தார். அதனைக் கேட்டு கோகர்ணன் பாகவத கதையைப் படிப்பதற்கு முயற்சித்தான். அதனைக் கேட்பதற்காகப் பல தேசங்களிலிருந்தும், பல கிராமங்களிலிருந்தும் நொண்டிகள், கண்ணில் லாதவர்கள், ரோகிகள் ஆகிய இவர்கள் வந்தார்கள். இன்னும் அநேகம் பெரியோர்களும்

கூடினார்கள். அவ்விடத்துக் கருகிலிருந்த ஏழு கணுக்களுள்ள ஒரு மூங்கிலில் வாயு சரீரத்தை யுடைய அந்த ப்ரேதம் ஸ்ரீமத் பாகவதத்தை கேட்பதற்காக வந்து சேர்ந்தது. அப்பொழுது கோகர்ணன் விஷ்ணுபக்தனாகிய ஒரு ப்ராஹ்மணனைக் கேட்பவராக வைத்துக் கொண்டு பாகவத கதையை வர்ணித்தார். முதல்நாள் கதை முடிந்தவுடன், அருகிலிருந்த மூங்கிலில் ஒரு கணு வெடித்ததுமின்றி ஏழாவது நாளில் ப்ரேதமானது தனது பூர்வ சரீரத்தைவிட்டு மேகம்போலக் கருத்த திருமேனியுடன், பீதாம்பரம், கிரீடம், குண்டலம், துளஸீமாலை இவைகளால் அலங்கரிக்கப்பட்டு திவ்ய ரூபத்தையடைந்து கோகர்ணனை நோக்கி "ஓ ஸாதுவே நான் உன்னால் க்ஷேமத்தை யடைந்தேன் என்று ச்லாகித்தது. இந்த சமயத்தில் விஷ்ணு தூதர்கள் வைகுண்டத்திலிருந்து விமானத்துடன் வந்தார்கள். எல்லோரும் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே, துந்துகாரி அவ்விமானத்தில் ஏறினான். அப்பொழுது கோகர்ணன் விஷ்ணு தூதர்களைநோக்கி 'ஓ விஷ்ணு தாஸர்களே இவ்விடத்திலிருக்கும் எல்லா ஜனங்களும் ஸ்ரீமத் பாகவதக் கதையைக் கேட்டார்களே; ஆதலால் பலத்தில் பேதமுண்டாகக் காரணமென்ன என்று வினவினான். அதனைக்கேட்ட ஹரி தாஸர்கள், ஓ ஸாதுவே எல்லோரும் ச்ரவணம் பண்ணினவர்களானாலும் இந்த ப்ரேதமானது, செய்தது போல மற்றவர்கள் செய்யவில்லை; ஆகையால் தான் பலன் வேறாயிற்று. 'இது பலத்தைக் கொடுக்குமோ கொடாதோ என்று

சந்தேகப்பட்டு ஜபித்த மந்தரமும் பலவிடங்களில் மனத்தைச் செலுத்திக்கொண்டு செய்த ஜபமும்; விஷ்ணு பக்தர்களில்லாத தேசமும், பாத்ரமான ப்ராஹ்மணர்களில்லாத ச்ராத்தமும், வேதாத்யயனஞ் செய்யாதவனுக்குக் கொடுத்த தானமும், அனாசாரமுள்ள குலமும் ஆகிய இவைகள் ப்ரயோசன மற்றவைகள். குருவின் வார்த்தையில் நம்பிக்கையும், தன்னைத் தீனனாக நினைத்துக் கொள்வதும், மனஸை அட்க்கிக் கொள்வதும், கதையைக் கேட்பதில் ஸ்திரமான புத்தியும் ஆகிய இவைகளுடன் கதையைக் கேட்பது மேலானது. இன்னொரு தடவை இந்தக் கதையைக் கேட்டால் எல்லோருக்கும் வைகுண்டம் கிடைக்கும். ஓ கோகர்ணா! உனக்குப் பகவானாகிய கோவிந்தர் கோலோகத்தைக் கொடுப்பார் என்று சொல்லி வைகுண்டம் சென்றார்கள்.

பின்பு கோகர்ணன் ஆவணி மாதத்தில் மறுபடியும் படனத்தை நடத்தினான். அவர்களும் கேட்டார்கள். கதை முடிந்தவுடன் அநேக விமானங்களுடன் நாராயணமூர்த்தியே நேரில் வந்து சங்கத்தை ஊதினார். பின் அவர் கோகர்ணனைக் கட்டிக் கொண்டு தமக்குச் சமமாக அவனைச் செய்து மற்ற எல்லோர்களையும் விமானத்தில் வைத்துக் கொண்டு கோலோகம் சென்றார். ஸப்தாஹ யஞ்ஞத்தின் மஹிமை இப்பேர்ப்பட்டது. ஸப்தாஹ யஜ்ஞத்தால் கிடைக்கும் பலம் காற்று, ஜலம், இலை இவைகளைப் புஜித்து கடும் தபஸ் செய்வதாலும், யோகத்தாலும் அடையமுடியாது. இந்த இதிகாஸத்தை சித்ரகூட பர்வதத் திலிருக்கும் சாண்டில்ய மஹர்ஷியும் படித்து

பரமானந்தத்தையடைகிறார். இது மிகவும் பரிசுத்தமானது. ஒரு தடவை கேட்ட மாத்திரத்தில் ஸகல பாபத்தையும் நிவர்த்திக்கக் கூடியது. ச்ராத்த காலத்தில் படித்தால் பித்ருக்களுக்கு த்ருப்தி உண்டாகும். இதனை நித்யம் படித்தால் மோக்ஷமும் கிடைக்கும்.

'ஓ சௌனகரே ஸ்ரீமத் பாகவதத்தை ஏழுநாளில் படிப்பதற்குச் சில விதிகள் உண்டு. எப்படி யென்றால் முதல் ஜ்யோதிஷ சாஸ்திரம அறிந்தவர்களை கொண்டு நல்லமுஹூர்த்தம் பார்த்து அதில் ஆரம்பிக்க வேண்டும். ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி இந்த மாதத்தில் ஆரம்பிப்பது மேலானது. 'இன்னகாலத்தில் பாகவதம் படிக்க ஆரம்பிக்கப் போகிறோம், அதனைக் கேட்க தாங்கள் எல்லோரும் வரவேண்டும். ஏழு நாளுமிருக்க முடியாமல் போனால் ஒரு நாளாவது கேட்க வேண்டும். இந்த ஜ்ஞான யஜ்ஞத்தில் ஒரு க்ஷணம் கிடைப்பது மிகவும் அரிது. ஆகையால் குடும்பத்துடன் எல்லோரும் வர வேண்டும் என்று ஒவ்வொரு தேசங்களிலும் கிராமங்களிலும் பத்திரிகை மூலமாக ப்ரஸித்தப் படுத்தவேண்டும். வந்தவர்களுக்கு இடம் முதலியவைகளைக் கொடுத்து உபசரிக்கவேண்டும். வாழை, மாந்தளிர் முதலிய மங்கள த்ரவ்யங்களால் மண்டபத்தை அலங்கரித்து நான்கு திக்குகளிலேயும் த்வஜங்கள் கட்டி வந்தவர்களுக்கு உட்காரத் தகுந்த இடங்களைச் செய்விக்கவேண்டும். மேலும் கதை சொல்பவருக்கு, திவ்யமான ஆஸனம் அமைத்து வைக்கவேண்டும். கதை சொல்லு

கிறவர் வைராக்ய முள்ளவராகவும், வேத சாஸ்திரங்களை யறிந்தவராகவும், விஷ்ணு பக்தராகவும், அதிக ஆசையில்லாதவராகவும், உதாரணம் சொல்வதில் ஸமர்த்தராயும், ப்ராஹ்மணராகியும் இருக்க வேண்டும். சொல்லுகிறவர்க்கு உதவி செய்வதற்காக அவர் போன்ற மற்றொருவர் அவருடைய பக்கத்திலிருக்கவேண்டும். சொல்லுகிறவர் வ்ரதம் — ஆரம்பிப்பதற்கு முன்பு க்ஷௌரம் செய்து கொள்ளவேண்டும். அருணோதயத்திற்குள் தம்முடைய நித்யகர்மங்களைச் சுருக்கமாகவாவது முடித்துக் கொண்டு கதையை ஆரம்பிக்க வேண்டும். மண்டபத்தில் ஸ்ரீமத் பாகவத புஸ்தகத்தையும் பகவானுடைய விக்ரஹத்தையும் நன்றாகப் பூஜித்து ப்ரதக்ஷிண நமஸ்காரஞ் செய்து கடைசியில், 'ஹே கிருஷ்ண! ஸம்ஸாரமாகிய ஸமுத்திரத்தில் முழுகியிருக்கும் தீனனாகிய என்னைக் காப்பாற்றும்' என்று ஸ்தோத்திரம் செய்யவேண்டும். பிறகு கதை சொல்லு பவருக்கு வஸ்த்ரம், ஆபரணம் முதலியவைகள் கொடுத்து, 'சுகரால் சொல்லப்பட்ட ஸ்ரீமத் பாகவதத்தை அறிந்த ப்ராஹ்மணோத்தம! இந்தக் கதையை உபதேசித்து என்னுடைய அஜ்ஞானத்தைப் போக்கும், என்று கேட்டுக் கொள்ள வேண்டும். பணம், வீடு, புத்ரன் இவைகளில் அபிமானத்தை யொழித்து சுத்தசித் தனாயிருந்து கதையை கேட்கவேண்டும். கதையைச் சொல்லுகிறவர் ஸூர்யோதயம் முதல் முன்றரை யாமம் கதை சொல்ல வேண்டும். மத்யா ன்னத்தில் மாத்யான்ஹிக கர்மத்திற்காக இரண்டு நாழிகை நிறுத்திவிட வேண்டும். மல மூத்ர

உபத்ரவமில்லாம விருப்பதற்காக மிதமாய் புஜிக்க வேண்டும். கதை கேட்கிறவன் ஒரு தடவை ஹவிஸை புஜிக்கலாம். சக்தியிருந்தால் ஏழு நாள் உபவாஸமிருப்பது மேலானது. அல்லது நெய், பால், இவைகளை புஜிக்கலாம். பழங்களையாவது புஜிக்கலாம். எப்படியிருந்தால் கதை கேட்க விக்னமில்லாமலிருக்குமோ அப்படி சக்திக்கனுகுணமாக நடத்த வேண்டும். ஆனால் ஸ்திரீஸங்கம், பாயில் படுப்பது இவைகள் கூடாதெனவாம். ஒவ்வொரு நாளும் கதை முடிந்த பிறகே போஜனம் பண்ண வேண்டும். வேதங்களையும், பக்தர்களையும், ப்ராஹ்மணர்களையும் நிந்திக்க கூடாது.

இப்படி ஏழு நாளான பிறகு புஸ்தகத்தையும், அதன் கதையைச் சொல்லுகிறவர்களையும் பூஜித்து, கதை கேட்டவர்களுக்கு ப்ரஸாதம் (துளசி) கொடுக்கப்படவேண்டும். பின்பு மிருதங்கம், தாளம், வீணை முதலியவைகளோடு பகவானுடைய குணத்தைக் கானம் பண்ணவேண்டும். அதன் பிறகு கதை சொன்னவருக்கும், மற்ற ப்ராஹ் மணர்களுக்கும், யாசகர்களுக்கும் தனம் அன்னம் முதலியவைகளைக் கொடுக்கவேண்டும். கேட்கிறவர்கள் ஸன்யாஸியாயிருந்தால் மறுநாள் பகவத் கீதையைப் படிக்கவேண்டும். கிரஹஸ் தராயிருந்தால் தசமஸ்கந்தத்தில் எவ்வளவு சுலோகங்களிருக்கின்றனவோ, அவ்வளவு ஹோமம் பண்ண வேண்டும். ஹோமம் பண்ணச் சக்தியில்லாவிட்டால், யஜ்ஞத்தின் மத்தியில் நேர்ந்த ஸகல தோஷங்களையும் நிவர்த்திப்பதற்காக விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தைப் படிக்கவேண்டும்.

அதன் பிறகு பன்னிரண்டு ப்ராஹ்மணர்களுக்கு போஜனம் செய்துவைத்து அவர்களுக்கு ஸுவர்ணம், பசு, இவைகளைக் கொடுக்க வேண்டும். சக்தியிருக்குமானால் மூன்று பலம் தங்கத்தால் சிங்கத்தின் உருவத்தைச் செய்து அதில் பாகவத புஸ்தகத்தை வைத்து அதைப் பூஜித்து அதை ஆசார்யனுக்கு கொடுக்க வேண்டும். இது ஜ்ஞான யஜ்ஞமாம்.

ஓ சௌனரே! ஆனந்த வனத்தில் ஸனகாதிகள் ஜ்ஞான யஜ்ஞத்தை விதிப்படி முடித்தபிறகு தெய்வச் செயலால் அவ்விடம் சுகர் வந்தார். அவர் வ்யாஸருக்குப் புத்ரர் ஞானமாகிய ஸமுத்திரத்திற்குச் சந்திரன் போன்றவர். ஆத்ம லாபத்தால் பூர்த்தியடைந்தவர். எப்பொழுதும் ஸ்ரீமத் பாகவதத்தைப் படிப்பவர். பதினாறு வயதுள்ளவர். அவரைக் கண்டு அங்கிருந்த ஸதஸ்யர்கள் எல்லோரும் விதிப்படி பூஜிக்க அவர் ஸ்ரீமத் பாகவதத்தின் முதலாவது ஸ்கந்தத்தின் இரண்டு மூன்று ச்லோகங்களில் குறிக்கப்பட்ட விஷயத்தை விஸ்தாரமாகச் சொன்னார். அப்பொழுது பகவான் தம்முடைய பக்தர்களான ப்ரஹ்லாதர், மஹாபலி, உத்தவர் ஆகிய இவர்களுடன் அவ்விடம் வந்து அவர்களை அனுக்ரஹித்ததுமல்லாமல் ஜ்ஞான யஜ்ஞும் நடக்கும் இடத்தில் நாம் இப்படியே ஸான்னித்யம் செய்கிறோம்' என்று அனுக்ரஹித்தார். ஆனதால் ஸ்ரீமத் பாகவதமானது, ஸம்ஸாரமாகிய ஸமுத்ர்த்தில் முழுகிய ஜனங்களைக் காப்பாற்றுகிறேன் என்று கர்ஜித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்.

இதனைக் கேட்டு சௌனகர் ஸூதரை நோக்கி "ஸூதரே சுகர் பரீக்ஷித்துக்கு எந்தக் காலத்தில் உபதேசித்தார்? கோகர்ணர் படித்த காலம் எது? ஆனந்தவனத்தில் குமாரர்கள் சொன்ன ஸமயம் எது? என்று கேட்டார். அவற்றைக் கேட்ட ஸூதர், சௌனகரை நோக்கி" சௌனகரே! ஸ்ரீகிருஷ்ணபகவான் வைகுண்டம் சென்ற நாள் முதல் நூற்று முப்பது வருஷங்களுக்குப் பிறகு கலியுகத்தில் புரட்டாசி மாதம் நவமியில் சுகர் பரீக்ஷித்துக்கு ஸ்ரீமத் பாகவதத்தைச் சொல்ல ஆரம்பித்தார். அது முதல் இருநூறு வருஷங்களுக்குப் பிறகு ஸ்ரீமத் பாகவத கதையைச் சொன்னார். அதில் இருந்து நூற்றுமுப்பது வருஷத்துக்குப் பிறகு (மூவாயிரம் வருஷமென்று சிலர் சொல்லுகிறார்கள்) சுக்லபக்ஷ நவமியில் ப்ரஹ்மபுத்திரர்களான ஸனகாதிகள் சொன்னார்கள். நான்குவித புருஷார்த்தங்களை கொடுக்கிறதற்கு இக்கலியில் ஸ்ரீமத் பாகவத சாஸ்திரத்தைத் தவிர மேலானது ஒன்றுமில்லை. மிகவும் ரஹஸ்யமானது, ஸகல சாஸ்த்திரங்களுடைய ஸாரமானது. ஆகையால் இதனை பக்தியுடன் படியுங்கள் என்று ஸூதர் சொல்லி முடித்தார். (பத்ம புராணம், உத்ர காண்டம் அத்யாயம் ஒன்று முதல் ஆறுவரையில்)

பாகவத பேதங்கள்

அடியில் கண்டபடி ஒரு தமிழ் புஸ்தகத்தால் தெரியவருகிறது. எப்படி யெனில்: பாகவதமானது ஏழு வகையுள்ளது.

1. இதிஹாஸ பாகவதம்: இது வ்யாஸ மஹர்ஷியால் செய்யப்பட்டது. 18,000 ஸ்லோகம் அடங்கியது. இதில் அத்யாயங்கள் 200 இருக்கின்றன. மேலும் இது 12 ஸ்கந்தங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. பரீக்ஷித் மஹாராஜனுக்குச் சுகரால் உபதேசிக்கப்பட்டது.

2. புராண பாகவதம்: இது நாரதரால் ருக்மிணீதேவிக்குச் சொல்லப்பட்டது. இதைச் செய்தவர் வ்யாஸ மஹர்ஷியே. மேலும் இது 600 அத்யாயங்களுள்ளது.

3. ஸம்ஹிதா பாகவதம்: வைசம்பாயனரால் ஜனமேஜயருக்கு உபதேசிக்கப்பட்டது. 50,000 க்ரந்தங்கள் அடங்கியது. 1100 அத்யாயங்கள் அடங்கிய 12 கண்டங்களாகப் பிரிக்கப் பட்டது.

4. உபஸம்ஹிதா பாகவதம்: இது ஸூதர் ஸனகருக்கு அகஸ்திய மஹர்ஷியால் உபதேசிக்கப் பட்டது. இதிலுள்ள 70,000 ஸ்லோகங்கள், 2,000 அத்யாயங்களாகவும் 100 பரிச்சேதங் களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

5. விஷ்ணு ரஹஸ்ய பாகவதம்: இது காச்யபருக்கு ஹாரீதரரால் சொல்லப்பட்டது. இடையிலே தண்டகங்கள் கலந்த 1,00,000 (லக்ஷம்) ஸ்லோகங்களுள்ளது. ஆயிரம் அங்கங்களுள்ளது. 10,000 அத்யாயங்களுள்ளது.

6. விஷ்ணு யாமள பாகவதம்: இது

பராசரால் மைத்ரேயருக்கு உபதேசிக்கப்பட்டது. இதில் 80,000 ச்லோகங்களிருக்கின்றன. மேலும் 800 அத்யாயங்களுள்ளது. 8 ஸ்தானங்களுள்ளது.

7. கௌதம ஸம்ஹிதா பாகவதம்: கௌதமர் கௌசிகருக்குச் சொன்னது. 100 அத்யாயங்கள் உள்ளது. 10,000 ஸ்லோகங்களுள்ளது. 4,00,000 ஸ்லோகங்களுள்ள கௌதம ஸம்ஹி தையில் க்ரந்தலக்ஷண கண்டத்தில் பாகவத லக்ஷணமென்ற முதல் அத்யாயத்தில் மேல் காட்டிய விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸப்தாஹவிதி

முன்னொரு காலத்தில் பரமசிவன் பார்வதியை நோக்கி ஏ! பார்வதீ! ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைப் படிப்பவன், முதலில் வ்யாஸரையும், சுகரையும் நமஸ்கரித்து மஹா விஷ்ணுவை த்யானம் செய்து கொண்டு, முதல் நாளில் முதலாவது ஸ்கந்தம் முதல் ஹிரண்யா க்ஷவதம் வரையில் படிக்க வேண்டும். இரண்டாம் நாளில் பரதனுடைய சரிதம் வரையிலும், மூன்றாம் நாளில் பகவான் ப்ரஹ்லாதரை அனுக்ரஹித்த கதை வரையிலும், நான்காம் நாளில் பத்தாவது ஸ்கந்தத்தில் ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் வரையிலும், ஐந்தாம் நாளில் ருக்மிணி கல்யாணம் வரையிலும், ஆறாம் நாளில் உத்தவருடைய ஸம்வாதம் வரையிலும், ஏழாம் நாளில் முடிவு வரையிலும் படிக்க வேண்டும். படிக்கும்போது அத்யாயத்தின் நடுவில் நிறுத்தக் கூடாது. அப்படி நிறுத்தினால் மறுபடியும் அந்த

அத்யாயத்தை அடிமுதல் படிக்க வேண்டும். படிக்கும்போது அர்த்தத்தைத் தெரிந்துகொண்டே படிக்கவேண்டும். சொல்லுகிறவன் வடக்கு முகமாகவும் கேட்கிறவன் கிழக்கு முகமாவும் அல்லது மாறுதலாகவும் இருக்கலாம். ஒவ்வொரு அத்யாயம் படித்தவுடனும் ஐந்து குந்துமணி நிறையுள்ள தங்கத்தைத் தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டும். முழுவதும் முடிந்தபிறகு பசுவை தக்ஷிணையாகக் கொடுக்கலாம். அந்தப் பசுவின் கொம்புகள் ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப் படவேண்டும். ஏ தேவீ! இம்மாதிரியான விதிப் பிரகாரம் ஸ்ரீமத் பாகவதத்தை யார் படிக்கிறார்களோ, கேட்கிறார்களோ அவர்களுக்கு ஸர்வாபீஷ்டமும் நிறைவேறும். இதனைப் படிக்குங்காலத்தில் ஸகல தேவர்களும், ஸகல மஹரிஷிகளும் ஸ்ரீ விஷ்ணுவின் பார்ஷதர்களும் மஹாவிஷ்ணுவும் அவ்விடத்தில் எப்பொழுதும் மிகுந்த ஆனந்தத்துடன் வஸிக் கிறார்கள், என்று சொன்னார். பத்ம புராணம், பாதாள காண்டம், அத்யாயம் 71.

ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்ட காலம்

கலியுகத்தில் முதல் ஆயிரம் வருஷங்களில் ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்டது.

த்வாபர யுகத்தில் பகவான், வ்யாஸரூபியாய் அவதரித்து வேதங்களைப் பிரித்து, அவைகளை பைலர் முதலானவர்களிடம் ஒப்புவித்தார். பின்பு அவற்றைப் படித்தல், முதலியவைகளில் அதிகாரம் இல்லாத ஸ்த்ரீகள், சூத்ரர்கள் முதலியவர்

களுக்காக, அவைகளின் அர்த்தத்தையே, மஹா பாரதமாகச் செய்து வெளியிட்டார். மேலும் அவரால் மஹா புராணங்களும், உப புராணங்களும் வெளியிடப்பட்டன. கடைசியில் ஸ்ரீமத் பாகவதமும் செய்யப்பட்டது.

ஆக்ஷேபம் — பெரியோர்கள் ஆத்மச்லாகை (தன்னைத் தானே புகழ்வது) செய்து கொள்ள மாட்டார்களாகையாலும், இதிஹாஸ புராணங்களில் வ்யாஸ மஹர்ஷியை ச்லாகித்திருப்பதாலும் சொல்வது பொருந்துமா?

ஸமாதானம்:- அப்படியில்லை. வ்யாஸமஹர்ஷி வேதங்களைப் பிரித்துத் தாம் செய்த மஹா பாரதத்தைச் சுருக்கமாய்ச் செய்யும்படி தமது சிஷ்யர்களான வைசம்பாயனர், ஜைமினி யென்னும் இவர்களுக்கு ஆக்ஞாபனஞ் செய்தார். அவர்களும் தனியே பாரதச் சுருக்கம் செய்தார்கள். இப்பொழுது வழங்கிவரும் பாரதம் வைசம்பாயனர் செய்ததேயாம். மேலும் புராணங்கள், வெகு காலத்திற்கு முந்தியே மார்க் கண்டேயர் முதலிய மஹர்ஷிகளால் செய்யப் பட்டிருந்தன. ஆனாலும் கால மஹிமையால் அவைகளில் சிலவற்றில் சில பாகங்களும் பின்னும் சிலவற்றில் சில ஸர்க்கங்களும் சிலவற்றில் ஸந்தர்ப்பம், விஷயம் இவைகளைச் சொல்லும் — ஸ்லோகங்களும் காணாமல் போயின. சில புராணங்கள் பூர்த்தியாகச் செய்யப்படாமலிருந்தன. இப்படி பற்பல வகையாக குறையுள்ள புராணங்களை வ்யாஸ மஹர்ஷி அந்தந்த புராண நடைக்குச்

சமமான நடையிலேதான் சீர்த்திருத்தினார். பின்னும் அவருடைய சிஷ்யர்கள் அவைகளுக்கு உபோத்காதம் (முகவுரை) அவைகளிலுள்ள ச்லோகம் முதலியவைகளின் ஸங்க்யை, அனுக்ர மணிகை, அந்தந்த புராணத்தைச் சொன்னவர்கள், கேட்டவர்கள் அவர்களுக்குள் நேர்ந்த ஸம்வாதம் முதலியவைகளை எழுதிச் சேர்த்தார்கள்.

பின்பு அவைகளை விட மேலானதாக வ்யாஸ மஹர்ஷி ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்து தம்முடைய புத்ரராகிய சுகருக்கு உபதேசித்தார். பின்பு ஸூதர் அந்த பாகவதத்தைச் சுகரிடமிருந்து தெரிந்து கொண்டு சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்குச் சொன்னார். ஆகையால் இந்த விஷ்ணு பாகவதம் வ்யாஸரால் செய்யப்பட்டதேயாம். மற்ற புராணங்கள் அவரால் சீர்திருத்தப்பட்டதேயாம்.

பரீக்ஷித்து மஹாராஜனுக்குக் கலியும் வந்த பிறகு தர்ம புத்ரர் ராஜ்யாபிஷேகம் செய்வித்ததாக பாகவதம், விஷ்ணு புராணம், பாரதம் முதலிய வைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னமேயே பாகவதம் செய்யப்பட்டிருக்குமாகில் பரீக்ஷித்தின் சரித்திரம் அதில் சொல்ல நியாய மில்லை, ஆகையால் இது கலியுகத்தின் ஆரம் பத்தில் செய்யப்பட்டதேயாம்.

ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தவர்

பாகவதத்தைச் செய்தவர் ஸ்ரீ வேதவ்யாஸ மஹரிஷி. வேதங்களைப் பிரித்த காரணத்தால் இவருக்கு இப்பெயருண்டாயிற்று. இவர் மஹா

விஷ்ணுவின் அவதாரம். இவருடைய பிதா பராசர மஹர்ஷி. இவருடைய தாய் ஸத்யவதி. இவள் வஸுவின் வீர்யத்தைப் புஜித்த மத்ஸயத் தினிடம் உண்டானவள். ஆனது பற்றி இவளுக்கு மத்ஸயகந்தி என்னும் பெயர் சிலகாலம் வழங்கின துண்டு. பராசர மஹர்ஷி ஒருக்கால் தீர்த்த யாத்திரை செய்துவரும் பொழுது வழியில் ஆற்றில் ஓடம் தள்ளிக் கொண்டிருக்கும் வலையன் கன்னியான மத்ஸயகந்தியைக் கண்டார். மேலுமவர் அவளுடைய லாவண்யத்தைக் கண்டு மோஹித்து அவளிடம் ஆசை கொண்டார். அப்பொழுது நல்வாசனையுண்டாகும்படி அனுக்ரஹித்தார். அதுமுதல் அவளுக்கு யோஜனகந்தியென்று பெயர் வழங்கினது. அவ்விருவர்களுக்கும் பிறந்தவர் வ்யாஸமஹர்ஷி.

அவர் வேதங்களைப் பிரித்தும் ஸ்த்ரீ, சூத்ரர் களுக்காக ஐந்தாவது வேதமாகிய பாரதத்தையும் செய்தார். அப்படியும் அவர் மனத்திற்கு சந்தோஷ முண்டாகாததனால் கவலையுள்ளவராக ஸரஸ்வதீ நதிக்கரையில் சம்யப்ராஸமென்ற ஆச்ரமத்தில் வசித்தார். அப்பொழுது தெய்வச் செயலாய் அவ்விடம் வந்த நாரதரிடம் உபதேசம் பெற்று ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தார்.

கதை நடந்த க்ஷேத்ரம்

கலியுகத்தில், ஸூதர் நைமிசாரண்யத்தில் வஸிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்கு இந்த பாகவத கதையைச் சொன்னார். மேலும்

நைமிசமென்பது ஒரு புண்யக்ஷேத்ரம் ஆனது பற்றி அவ்விடத்தில் அநேக மஹர்ஷிகள் வஸிப்பார்கள். அனேக பெரியோர்கள் அவ்விடத்திற்கு வருவது முண்டு. ப்ரஹ்மதேவர் ப்ராஹ்மணர்களை நோக்கி இந்த மனோமயாகிய சக்ரத்தை ப்ரயோகிக்கிறேன்; இதனுடைய நேமி (முனை) எவ்விடத்தில் மழுங்குமோ அதுவே தபஸ் செய்ய தகுதியான க்ஷேத்ரம் என்று சொல்லி ஸூர்யனுக் கொப்பான சக்ரத்தை மனத்தால் ஸிருஷ்டித்து, பரமசிவனைக் குறித்து நமஸ்காரம் செய்து அதை ப்ரயோகித்தார். அதைப் பார்த்திருந்த ப்ராஹ்மணர்களும் மிகுந்த ஸந்தோஷத்துடன் அதன்பின் சென்றார்கள். அது கீழே விழுந்து அதன் நேமி மழுங்கின இடத்திற்கு நைமிசமென்று பெயருண்டாயிற்று. அவ்விடத்தில் மஹர்ஷிகள் வஸித்தார்கள். வாயு புராணம். அந்த க்ஷேத்ரத்தை நைமிஷமென்று சொல்வதுண்டு. ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் கௌரமுகரென்ற மஹர்ஷியை நோக்கி ஒரு நிமிஷத்திற்குள் அஸுர ஸைன்யங்கள் இவ்விடத்தில் கொல்லப்பட்டபடியால் இவ்விடத்திற்கு நைமிஷமென்று பெயருண்டாகட்டும். இது ப்ராஹ்மணர்கள் முக்யமாய் வஸிக்கும் இடம் என்று சொன்னார் வராஹபுராணம்.

மஹர்ஷிகளுக்கு உபயோகமாகிய மரங்கள் நிமிஷங்களென்று சொல்லப்படுகின்றன. அவைகள் ஏராளமாக இருக்குமிடமே நைமிஷமெனப் படுகிறது. அல்லது நிமிஷரென்னும் மஹர்ஷி தபஸ் செய்த இடமாகையால் நைமிஷமென்று அதற்குப் பெயருண்டாயிற்று. விஜயத்.

ஸூதருடைய வரலாறு

"இந்த விராட்ரூபியான மஹாபுருஷனுடைய முகத்திலிருந்து ப்ராஹ்மண ஜாதியும், கைகளிலிருந்து க்ஷத்திரிய ஜாதியும், துடைகளிலிருந்து வைச்ய ஜாதியும், பாதங்களிலிருந்து சூத்ரர்களும் உண்டானார்கள். என்று ஸ்ருதியில் சொல்லப்பட்டிருப்பது போல அவருடைய ரோமாஞ்சத்திலிருந்து (மயிர்க்கூச்சிலிருந்து) ஸூத ஜாதியி உண்டாயிற்று. அவரே ரோமஹர்ஷணர். மஹாபாரத தாத்பர்ய நிர்ணயம் – அத்யாயம் 90, பகவானுடைய கதையைக் கேட்டுக் கொண்டு இருக்கும்போது பக்தி விசேஷத்தால் மயிர்க்கூச்சிலுண்டானபடியால் அவருக்கு ரோமஹர்ஷணர் என்று பெயருண்டாயிற்று. இவர் ஸூத ஜாதியிற் பிறந்தவர் –அபியுக்தர்கள். அவருக்கு ஸ்ரீ வேத வ்யாஸ மஹர்ஷியானவர் ஸகல புராணங்களையும், இதிஹாஸங்களையும் உபதேசித்தார்.

பிறகு ரோமஹர்ஷணர் நைமிசாரண்யத்தில் வஸிக்கும் மஹர்ஷிகளுக்குப் புராணங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்படியிருக்கையில் ஒருநாள் பலராமன் அவ்விடம் வந்தார். அவரைக் கண்டவுடன் ஸகல மஹர்ஷிகளும் எழுந்திருந்து விதிப்படி மரியாதை செய்தார்கள். அப்பொழுது ரோமஹர்ஷணர் மாத்திரம் ஆஸனத்திலிருந்து எழுந்திருக்கவில்லை. அதைக் கண்ட பலராமன் மிகவும் கோபங்கொண்டார். பிறகு அவர் 'தாழ்ந்த குலத்தில் பிறந்தவராகிய இந்த ரோமஹர்ஷணர் நம்மைக்கண்டு எழுந்திருக்காமலும், இந்த மஹர்ஷிகளின் முன்பாக உயரமான ஆஸனத்திலுட்கார்ந்து

மிருக்கிறார், இவரை நிக்ரஹிக்கவேண்டும்' என்று எண்ணிக் கையிலிருந்த தர்ப்பத்தால் அவரையடித்தார். அதனால் ரோமஹர்ஷணரும் உடனே இறந்தார். அப்பொழுது மஹர்ஷிகளனைவரும் பலராமனை நோக்கி பிரபுவே! நீர் செய்தது தர்மத்திற்கொத்ததல்ல. இவருக்கு நாங்கள் ப்ரஹ்மாஸனத்தைக் கொடுத்து அவருடைய தேஹத்தில் ச்ரமம் உண்டாகாமலிருக்கும்படியும், அவர் வெகுகாலம் ஜீவித்திருக்கும்படியும் அனுக்ரஹித்திருந்தோம். நீர் லோகத்தை அனுக்ரஹிப்பதற்காக அவதரித்தவராகையால், எங்களுடைய வார்த்தை பொய்யாகமலிருக்கும்படிச் செய்ய வேண்டும். இந்த தோஷத்தை நிவர்த்தித்துக் கொள்வதற்காக நீர் ப்ராயச்சித்தத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்றார்கள். அதைக் கேட்ட பலராமன் அவர்களை நோக்கி பிதாவிற்கும் புத்திரனுக்கும் பேதமில்லையென்று ஸ்ருதியில் சொல்லப்பட்டிருப்பதனால், ரோமஹர்ஷணருடைய குமாரராகிய உக்ரச்ரவஸ் என்பவர் அந்த ஆஸனத்தில் உட்கார்ந்து உங்களுக்குப் புராண கதைகளைச் சொல்லட்டும். அவருக்கு எவ்வளவு நாள் கதை சொன்னாலும் தேஹத்தில் ச்ரமமில்லாமலிருக்கட்டும். மேலும் வெகுநாள் ஜீவித்திருப்பார் என்று சொல்லி தீர்த்த யாத்திரைக்குச் சென்றார். (பாகவதம் ஸ்கந்தம் 10, அத்தியாயம் 78)

மேல் காட்டியபடி ரோமஹர்ஷணருக்குப் பிறகு அந்த உக்ரச்ரவஸ், அந்த ஆஸனத்திலிருந்து மஹர்ஷிகளுக்குப் புராணங்களைச் சொல்லிக்

கொண்டிருந்தார். அந்த ரோமஹர்ஷணர் ஸூத ஜாதியில் பிறந்தவராகையால் அவருக்கு ஸூத ரென்று பெயருண்டு. அவருடைய பிள்ளைக்கும் ஸூதரென்று பெயர் வழங்கி வருகிறது. பல ராமன் பாரதயுத்தம் நடக்கும்போது நைமிசாரண்யஞ் சென்றார். ஆகையால் அதுவரையில் அவ்விடத்தில் கதை சொல்லிக் கொண்டிருந்தவர் ரோமஹர்ஷணரேயாம். பிறகு அவருடைய புத்ரராகிய உக்ரச்ரவஸே புராணஞ்சொன்னார். ஆகையால் ஸ்ரீமத் பாகவதத்தைச் சொன்னவர் உக்ரச்ரவஸ் என்ற ஸூதரேயாம். இவர் ஸகல புராணங்களையும் இதிஹாஸங்களையும் அறிந்தவர். த்ரையாருணி, கச்யபர், ஸாவர்ணி, அகிருதவ்ருணர், சிம்சுபாயனர், ஹாரீதர் ஆகிய ஆறு பேர்களும் வ்யாசமஹர்ஷியின் சிஷ்யராகிய என் தகப்பனார் இடமிருந்து ஒவ்வொரு ஸம்ஹிதையை அத்யயனஞ் செய்தார்கள். நான் இவர்கள் எல்லோருக்கும் சிஷ்யனாக இருந்து எல்லா புராண ஸம்ஹிதைகளையும் தெரிந்து கொண்டேன் என்று ஸூதர் சொன்னார். (பாகவதம் ஸ்கந்தம் 12 அத்யாயம் 6, ச்லோகம் 5 , 6)

சுகருடைய சரிதம்

முன்னொரு காலத்தில் மஹாமேரு பர்வதத்தில் ஸ்ரீவேத வ்யாஸ மஹர்ஷி உத்தமனாகிய புத்ரனையடைய வேண்டித் தபஸ் செய்தார். அதனால் பரமசிவன் ஸந்தோஷப்பட்டு அவரை நோக்கி 'ஓ மஹர்ஷியே உம்முடைய இஷ்டப்படி மிகுந்த தேஜஸுள்ளவனும், கீர்த்தியுள்ள

வனுமாகிய புத்ரன் உண்டாவான்' என்று அனுக்ரஹித்தார். பிறகு ஒருக்கால் ஒப்பற்ற ரூபமுள்ள கிருதாசி என்ற அப்ஸரஸ்த்ரீ அவ்விடம் வந்தாள். அவளைக் கண்டவுடன் இவருக்கு மன்மத தாபமுண்டாகியது. அப்பொழுது மஹர்ஷியானவர் கிளி வேஷத்தையெடுத்துக் கொண்டார். பிறகு மிகவும் தைர்யத்தால் மன்மத தாபத்தை மஹர்ஷியடக்க முயன்றும் அது குறையாமல் விருத்தியாயிற்று. மேலும் அவருடைய வீர்யம் நழுவினது. அதிலிருந்து உண்டான புத்ரர்தான் சுகரென்ற பெயரையடைந்தார். இவர் பிறந்தவுடனே கங்கா நதியானவள் திவ்ய சரீரத்துடன் அவ்விடம் வந்து அவருக்கு ஸ்னானஞ் செய்துவைத்தாள். ஆகாயத்திலிருந்து தண்டம், கிருஷ்ணாஜினம் ஆகிய இவைகள் விழுந்தன. விச்வாஸு முதலிய கந்தர்வர்கள் கானஞ்செய்தார்கள், தேவதுந்துபிகள் முழங்கின. இந்திரன் முதலிய லோக பாலர்களும் அவ்விடம் வந்ததுமின்றி புஷ்பங்களை வர்ஷித்தார்கள். பரமசிவன் பார்வதியுடன் அக்குழந்தைக்கு விதிப்படி உபனயனம் செய்தார். மஹேந்திரன் அற்புதமான கமண்டலுவை கொடுத்தார் இவருடைய பிதாவாகிய வ்யாஸ மஹர்ஷி பிறந்தவுடன் ஸகல வேதங்களும் தோன்றியது போலச் சுகருக்கும் வேதங்களும், ஸகல புராணங்களும், இதிஹாஸங்களும் தோன்றின. மேலும் அவர் ப்ரஹஸ்பதி பகவானை ஆசார்யராகவரித்தார். ஆனதால் அந்தச் சுகர் எல்லாவித்தைகளையும் அப்யஸித்தவர். அவர் பால்யவயதுள்ளவரானாலும் தேவர்களாலும் மஹர்ஷிகளாலும் மற்றவர்களாலும்

கொண்டாடக் கூடியவராக இருந்தார். மேலும் அவருடைய மனஸானது மோக்ஷ தர்மத்திலேயே விருப்பமுள்ளதாக விருந்ததேயொழிய விஷயத்தில் செல்லவில்லை. பிறகு அவர் தம்முடைய பிதாவாகிய வ்யாஸ மஹர்ஷியை நோக்கி மோக்ஷ தர்மங்களைச் சொல்லவேண்டும் என்று கேட்டார். அதைக்கேட்ட வ்யாஸ மஹர்ஷியானவர் தன் புத்ரரை நோக்கி மோக்ஷ தர்மம் தெரிந்து கொள்ள வேண்டுமானால் மிதிலா நகரத் தரசராகிய ஜனகரிடம் போய் தெரிந்து கொள்ளும் என்றார். அதைக் கேட்ட சுகர் அப்படியே மிதிலா நகரம் சென்று ஜனகருடைய அரண்மனைக்கு போகும் போது அவ்விடமிருந்த காவலாட்களால் தடுக்கப்பட்டார். ஆனாலும் கோபங்கொள்ளவில்லை. வெகுதூரம் நடந்து வந்த தால் சரீரத்திற்கு நேர்ந்த ச்ரமத்தையும், பசி தாஹம் இவைகளால் நேர்ந்த துக்கத்தையும் ஸஹித்தார். பிறகு அவ்விடமிருந்த ஒரு காவலாள் அவரை வணங்கி உள்ளே அழைத்து நிழலில் உட்காரச் செய்தான். அதனாலும் அவர் ஸந்தோஷிக்கவில்லை. பிறகு மந்திரியானவர் மிக வணக்கத்துடன் வந்து சுகரை வணங்கி அந்தப் புரத்திற் கழைத்துபோய் திவ்யமான ஆஸனத்தில் உட்காரவைத்தார். பிறகு மிகவும் ரூபவதிகளான சிறு பெண்கள் அனேகர்கள் அவ்விடம் வந்து உத்தமமாகிய அன்னத்தால், வாத்ய கோஷங்களாலும் நர்த்தனங்களாலும் பிரியமான வார்தைகளாலும் உபசரித்தார்கள். மேலும், அவரைத் தோட்டத்திற்கழைத்துப்போய் அழகான மரங்களையும், பக்ஷிகளையும், தாமரஸ ஓடை

களையும் காண்பித்தார்கள். இப்படி அவர்களால் உபசரிக்கப்பட்டும் அவைகளில் பிரியப்படாமலேயே மோக்ஷ மார்க்கத்தையே த்யானித்துக் கொண்டு அன்றைய ராத்திரியைக் கழித்தார். மறுநாள் காலையில் ஜனகமஹாராஜன் இவரை சபைக்கு வரவழைத்து உபசரித்து மோக்ஷ தர்மத்தை உபதேசித்தார். (மஹாபாரதம், சாந்திபர்வம், அத்யாயம் 323 - 325)

ஸ்ரீ கிருஷ்ணாவதார காலம்

ஸ்ருஷ்டி முதல் 28வது மஹாயுகத்திற்குட் பட்ட த்வாபர யுகத்தின் முடிவில், தேவகியின் இடம் பகவான் அவதரித்தார். 28 வது மஹா யுகத்தில் த்வாபரயுகத்தின் கடைசியில் யது வம்சத்தில் பகவான் அவதரிக்கப் போகிறாரென்று கர்க்காசார்யர் முன்னமே சொல்லியிருக்கிறார் விஷ்ணு புராணம் 5வது பாகம், அத்யாயம் 23.

மேற்காட்டிய த்வாபர யுகமானது நிகழும் கலியுகத்திற்கு முந்தியேயாம். பகவான் பூலோகத்தில் கிருஷ்ணனாக அவதரித்து 125-வருஷங்கள் பூமியில் வஸித்து, பிறகு வைகுண்டம் சென்றார். ஓ ப்ரபுவே! யதுவம்சத்தில் அவதரித்து 125 வருஷங்களாயின. ஸ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம் 11 அத்யாயம் 6.

"வஸுக்கள், அச்வினீ தேவர்கள், மருத்துக்கள், ஆதித்யர்கள், ருத்ரர்கள், ஸாத்யர்கள் ஆகிய இவர்களுடன் மஹேந்திரனனான். என் முகமாகப்

பின்வருமாறு விக்ஞாபனம் செய்கிறான். கெட்ட நடத்தையுள்ள அஸுரர்களைக் கொன்று பூமியின் பாரத்தை நிவர்த்தி செய்தீர். ஸ்வர்க்கத்தில் இருக்கும் எல்லாத் தேவர்களும் உங்களால் யஜமானனுள்ளவர்களாக ஆகட்டும். நீங்கள் பூமியில் அவதரித்து 125 வருஷங்கள் ஆயின. உங்களுக்கு இஷ்டமிருந்தால் வைகுண்டம் வரலாம் விஷ்ணு புராணம் பாகம் 5, அத்யாயம் 37.

இப்படித் தேவர்கள் ப்ரார்த்தித்தவுடன் ஸ்ரீ பகவான் உத்தவரை நோக்கி, இன்றைய முதல் 7வது நாளில் ஸமுத்ரம் இந்தப் பட்டணத்தைக் கவர்ந்து கொள்ளும். அவ்வுலகத்தை நான் விட்டவுடன் இவ்வுலகம், மங்களகார்யமற்றதும், கலியினால் அவமதிக்கப்பட்டதுமாய் விடும் ஸ்ரீ மத் பாகவதம் ஸ்கந்தம் 11, அத்யாயம் 7.

"என்றைய தினத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஸ்வர்க்கம் சென்றாரோ அன்றைய தினமே கலியுகம் வந்தது. விஷ்ணு புராணம் பாகம் 4, அத்யாயம் 24.

இதனால் தேவர்கள் ப்ரார்த்தித்தவுடன் தாமதம் இன்றிப்பகவான் வைகுண்டஞ் சென்றாரென்று தெரிய வருகிறது.

ஆகையால் 28 வது மஹாயுகத்தில் த்வா பாயுகத்தின் கடைசி பாகத்தில் பகவான் அவதரித்து 125 வருஷங்கள் பூலோகத்தில் வஸித்தார். பின்பு வைகுண்டம் செல்லும்போது கலி வந்து விட்டது (த்வாபரயுகம் முடிந்தது.)

Released by Maran's Dog, Toronto , Canada

"என்றைய தினம் ரோஹிணி நக்ஷத்திரமோ அன்றைய தினம் ராத்திரி இருட்டில் தேவகியினிடம் பகவான் அவதரித்தார். பாகவதம் ஸ்கந்தம் 10, அத்யாயம் 3.

"நான் வருஷா காலத்தில் ச்ராவண மாஸத்தில் க்ருஷ்ண பக்ஷத்திய அஷ்டமி திதியில் தேவகியினிடம் அவதரிக்கப் போகிறேன் விஷ்ணு புராணம், பாகம் 5, அத்யாயம் 1.

"ச்ராவண மாஸத்தில் க்ருஷ்ணபக்ஷத்திய அஷ்டமி திதியில் ரோகிணி நக்ஷத்திரத்தில், அர்த்தராத்திரி காலத்தில், சந்த்ரோதயமாகும் ஸமயத்தில், அபிஜித் முஹூர்த்தத்தில், தேவகியிடம் மஹாவிஷ்ணு வானவர் அவதரித்தார். அதே காலத்தில் அவருடைய மாயையும் யசோதையினிடம் கோகுலத்தில் புத்ரியாகப் பிறந்தாள். ஹரிவம்சம் பாகம் 1, அத்யாயம், 25.

மேற்காட்டிய ப்ரமாணங்களால் 28 வது மஹாயுகத்தில் த்வாபர யுகத்தில் 8, 63, 875வது வருஷத்தில் ச்ராவண மாஸத்தில் கிருஷ்ண பக்ஷம் அஷ்டமீ திதியில், ரோகிணி நக்ஷத்திரத்தில், அர்த்தராத்ரியில், பகவான் அவதரித்தாரென்று நிச்சயிக்கப்படுகிறது. ஆகையால் பகவான் அவதரித்த காலம் முதல் நிகழும் 24 வது பரிவிருத்தியில் ஸௌம்யவருஷம் வரையில் **5230** வருஷங்கள் ஆயினவென்று பெரியோர்களால் சொல்லப் படுகிறது.

♣ ♣ ♣ ♣

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்ரீ கிருஷ்ணாய பரமாத்மனே நம:

அத்யாயம்-1

சௌனக ப்ரச்னம்.

Released by Maran's Dog, Toronto , Canada

"எதனிடமிருந்து ஸகல ப்ரபஞ்சங்களும் உண்டாகின்றனவோ, எதனால் காப்பாற்றப்படுகின்றனவோ, எதனிடத்தில் லயிக்கின்றனவோ, அது ப்ரஹ்மம்" என்ற ச்ருதியில் சொல்லியபடியுள்ள தடஸ்த லக்ஷணமுள்ளவரும், அன்வய வ்யதிரேகங்களால் ஸகல ஜகத்காரணரும், எல்லாவற்றையும் அறிந்தவரும், ஸ்வயமாய் ப்ரகாசிப்பவருமான எந்தப்பரமேச்வரர், நான்கு முகங்களுள்ள ப்ரஹ்மதேவருக்கு வேதங்களை மனத்தால் உபதேசித்தாரோ, (அந்த வேதங்களைத் தெரிந்து கொள்வதில், வித்வான்களும் மோஹிக்கிறார்கள்.) தேஜஸ், ஜலம், பூமி ஆகிய இவைகள் ஒன்றில் ஒன்று மாறுதலாகத் தோன்றுகிறது போல எந்தப் பரமாத்மாவிடம் (அவர் ஸத்யராகையால் முக்குணங்களுடைய கார்யமும், ஸத்யமாகத் தோற்றுகிறதோ, அந்த ஸத்ய ஸ்வரூபியாகிய பரமாத்மாவைத் த்யானிக்கிறோம். அவர் தம்முடைய தேஜஸினால் மாயாகார்யமாகிய ப்ரபஞ்சத்தைத் தாண்டினவர்.

2. வேதவ்யாஸ மஹாமுனியால் செய்யப்பட்டதும், அழகு பொருந்தியதுமான, ஸ்ரீமத் பாகவத க்ரந்தத்தில் மோக்ஷத்தைக் கூட விரும்பாமல் செய்யும், ஈச்வரருடைய ஆராதனரூபமாகிய உத்தம தர்மமானது காட்டப் பட்டிருக்கிறது. பிறருடைய மேன்மையை ஸஹிக்காம

Released by Maran's Dog, Toronto , Canada

விருப்பதாகிய மாத்ஸர்யமில்லாத ஸாதுக்களால், அறியக்கூடியதும் (ஜீவன், மாயை, ஜகத் என்னுமிவை கள் பரமாத்மாவைவிட வேறானவையல்ல) மேலான ஸுகத்தைக் கொடுக்கக்கூடியதும், மூன்று வகையான தாபங்களைப் போக்கக்கூடியதும், உண்மையுமான வஸ்துவானது இதில் நன்றாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. மற்ற சாஸ்த்ரங்களாலும் இதர ஸாதனங்களாலும் ஈச்வரனை ஹிருதயத்தில் நிலைக்கச் செய்யமுடியுமா? ஆகையால் அவைகளால் என்ன பிரயோஜனம். இந்த ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்க விரும்பிய புண்யவான் களுடைய மனத்தில் கேட்ட க்ஷணத்திலேயே பகவான் ஸ்திரமாக வஸிக்கிறார்.

3. வேதமாகிய கல்பக விருக்ஷம் அதனுடைய பழம் ஸ்ரீமத் பாகவதமேயாம். இது வைகுண்டத்திலி ருந்து நாரதரால் எனக்கும், என்னால் சுகருக்கும், அவர் முகமாகப் பூமியிலும் நழுவியது. (பரவிற்று) இது அமிருத த்ரவமுள்ளது (ருசியுள்ளது) ரஸரூபமா யுள்ளது. ஓ! ரஸத்தையறிந்தவர்களே! அதன் விசேஷ பாவனையில் ஸமார்த்தியமுள்ளவர்களே! மேற்காட்டிய பழத்தை முக்தர்களாக இருக்கும் பொழுதும், அடிக்கடி புஜியுங்கள்.

4–231/2. ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் க்ஷேத்ரமாகிய நைமிசமென்னும் வனத்தில், சௌனகர் முதலிய மஹர்ஷிகள், ஸ்வர்க்கலோகத்தை யடைவதற்காக, ஆயிரம் வருஷங்கள் ஸத்ரமென்னும் யாகத்தை யனுஷ்டித்து வந்தார்கள். அப்பொழுது ஒருநாள் அவர்கள் காலையில் அக்னிகார்யங்களை முடித்துக் கொண்டு, எல்லோராலும் பூஜிக்கப்பட்டு, ஸுகமாய்

உட்கார்ந்திருக்கும் ஸூதரை நோக்கி மிக்க ப்ரீதியுடன் "ஓ பாபமற்றவரே! புராணங்கள், இதிஹாஸங்கள், தர்மசாஸ்த்ரங்கள் இவைகளை நீர் படித்திருப்பதுடன் அவ்வவற்றின் அர்த்தத்தைப் பிறருக்கும் தெரியும்படி சொல்லியுமிருக்கிறீர். ஓ ஸாதுவே! வேதங்களை யறிந்தவர்களுக்குட் சிறந்தவராகிய வ்யாஸபகவானுக்கு தெரிந்தவைகளும், பரம்(ஸகுணப்ரஹ்மம்) அபரம் (நிர்குணப்ரஹமம்) இவைகளை நன்றாய் அறிந்த மற்ற மஹர்ஷிகளுக்குத் தெரிந்தவைகளும், அவர்களுடைய அனுக்ரஹத்தால் தங்களால் உண்மையாக அறியப்பட்டவைகளே! ஆசார்யர்கள், ரஹஸ்யமான விஷயத்தையும், ப்ரியனாகிய சிஷ்யனுக்குச் சொல்வது வழக்கம். ஆகையால் [எப்பொழுதும் க்ஷேமத்தையே கொடுப்பது இன்னதென்று ஸகல க்ரந்தங்களைப் படித்து தாங்கள் நிச்சயமாகத் தெரிந்து கொண்டதை எங்களுக்கு உபதேசிக்கவேண்டும்.] ஓ ஸூதைக்குரியவரே! இந்தக் கலியுகத்தில் ஜனங்கள் பெரும்பாலும் அதிக காலம் ஜீவித்திருப்பதில்லை; சோம்பலுள்ளவர்கள்; அதிலும் மிகவும் மந்தபுத்தியுள்ளவர்கள்; தவிரவும் பாக்யக் குறைவுள்ளவர்கள்; (விக்னங்களால் வருத்தப் பட்டவர்கள்)வியாதி முதலியவைகளால் துன்பமடைந்த வர்கள்; ஆகையால் வெகுகாலம் அநேக சாஸ்த்ரங்களைக் குருமுகமாய்க் கேட்கவும், அவைகளில் சாரத்தை தாமாகத் தெரிந்துகொள்ளவும் சக்தியற்றவர்கள்; பலவகை கர்மங்களைச் சொல்லும் அநேக சாஸ்த்ரங்களோ, தனித்தனியே தெரிந்துகொள்ள வேண்டியவைகளாக இருக்கின்றன. ஆனதால் எதனால் பரமாத்மாவின் ப்ரஸாதம் ஸித்திக்குமோ அந்த ஸாரமான விஷயத்தை தங்களுடைய புத்திக்குத் தோன்றியபடி எடுத்து உபதேசிக்க வேண்டும்.

அதனால் ஸகல ப்ராணிகளும் க்ஷேமத்தையடைவார்கள். ஓ! ஸூதரே! தங்களுக்கு இவ்விஷயம் யாவும், தெரிந்த வையே. நமக்கு க்ஷேமமுண்டாகட்டும். அளவில்லாத, ஐச்வர்யம் முதலியவைகளுள்ள, ஸாத்வதர்களுக்கு நாதனாகிய புருஷோத்தமன், தேவகியினிடம் வஸுதேவருக்குப் புத்ரனாக எதனைச் செய்வதற்காக அவதரித்தாரோ அந்தச் சரிதத்தைக் கேட்க விரும்பும் எங்களுக்கு தாம் உபதேசிக்கவேண்டும். எந்த பகவான் பூமியில் அவதரித்ததால் ப்ராணிகளுக்கு க்ஷேமம், ஐச்வர்யம், இவைகள் கிடைத்தனவோ, கோரமாகிய ஸம்ஸாரத்தை (இறப்புப்பிறப்பை) அழிந்தவன் எவருடைய திவ்யநாமங்களை உச்சரித்த மாத்ரத்தில் அதிலிருந்து விடுபடுகிறானோ, எவருடைய நாமத்தை கண்டு பயமும் பயப்படுகிறதோ, மேலும் இந்திரியங்களை ஜயித்தவர்களான முனிகள் எவருடைய பாதங்களையே ஆச்ரயித்திருக்கிறார்களோ, எவருடைய பாதத்திலிருந்து உண்டான கங்கையின ஜலமானது, தர்சிப்பவர்களையும், தொடுகிறவர்களையும், ஆசமனம் செய்பவர்களையும், பரிசுத்தர்களாகச் செய்கிறதோ; புண்ய ச்லோகர்களால் கொண்டாடக்கூடிய அந்தப் பகவானுடைய சரிதம் ஸம்ஸாரதுக்கத்தைப் போக்குமாகையால் சுத்தனாக வேண்டுமென்ற எண்ணமுள்ள எவன்தான் அதைக் கேட்கமாட்டான். ஆகையால் நாரதர் முதலிய ஞானிகளால், எப்பொழுதும், கானஞ் செய்யப்பட்டதும், ஸம்ஸார துக்கத்தை நிவர்த்திப்பதுமான, மேலான அந்த சரிதத்தை கேட்க நாங்கள் மிக ச்ரத்தையுள்ளவர் களாக இருக்கிறோம். ப்ரஹ்மா,ருத்ரன், முதலிய மூர்த்தி பேதத்தைத் தரிப்பவரும், தம்முடைய மாய மஹிமையால் லீலைகளைச் செய்பவருமாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அவதார கதைகளைச் சொல்ல

வேண்டும். அவைகளைப் போதிக்க தாங்கள் வல்லமை யுள்ளவர்களே. உத்தமச்லோகராகிய பகவானுடைய சரிதத்தைக்கேட்கக் கேட்க எங்களுக்கு போதுமென்ற திருப்தியுண்டாகிறதில்லை, பகவானுடைய சரிதமானது, கேட்பவர்களான ரஸிகர்களுக்கு அடிக்கடி இன்பத்தை கொடுக்கும். ஸ்ரீமஹா விஷ்ணுவானவர் மாயையால் மனிதனாக அவதரித்து, பலராமனுடன் சேர்ந்து மனிதர்களால் செய்யமுடியாத கோவர்த்தன பர்வதத்தை தூக்கியது முதலிய லீலைகளைச் செய்தாரல்லவா? இப்பொழுது கலியுகம் வந்துவிட்ட படியால், நாங்கள் விஷ்ணுவின் பதத்தையடைய விரும்பி மேல் சொல்லிய பகவானுடைய சரிதத்தைக் கேட்பதற்காகவே தீர்க்க ஸத்ரஞ் செய்வதான காரணத்தைக் கொண்டு இந்த நைமிசாரண்யத்தில் வஸிக்கிறோம். ஸமுத்ரத்தைத் தாண்ட விரும்பியவர் களுக்கு ஓடக்காரன் கிடைத்தாற்போல அதர்மத்திற்கு பந்துவாகிய இந்தக்கலியைக்கடக்க விரும்பிய எங்களுக்கு, உம்முடைய தர்சனம் தெய்வச்செயலால் நேர்ந்தது. தர்மத்தைக் காப்பாற்றி வந்தவரும், யோகிகளுக்கு அதிபதியுமான ஸ்ரீகிருஷ்ணபகவான் மனித சரீரத்தைவிட்டு தன்னுடைய ஸ்வரூபத்தை யடைந்தபின்பு தர்மம் யாரைச் சரணமடைந்தது சொல்லவேண்டும் என்று கேட்டார்கள்.

நோட்டு.

ஸ்ரீ வேதவ்யாஸபகவான் பாகவத சாஸ்த்ரத்தைச் செய்யவிரும்பி இடையூறின்றி முடியவேண்டியதற்காக பெரியோர்களுடைய ஸம்ப்ரதாயப்படி பரமாத்மாவை ஸ்மரிப்பதாகிய மங்களத்தைக் காட்டுகிறார். – ஸ்ரீ தரியம்.

1–1. எவரிடமிருந்து–ஸ்ரீ பாதராயணர் என்னும் வ்யாஸ பகவான், ஸகல ஜனங்களையும், ஸம்ஸார பந்தத்திலிருந்து நிவர்த்தித்து, அனுக்ரஹிப்பதற்காக வேதாந்தத்தாலே அறியக்கூடியதும், மற்றப்ரமாணங் களுக்குப புலப்படாததுமான பரப்ரஹ்மத்தை எல்லா வர்ணத்தார்களும் அறியச்செய்ய நினைத்து, ஸ்ரீமத் பாகவதமென்னும் க்ரந்தத்தை நாரதருடைய உபதேசத் தால் செய்யவிரும்பினார். அது, விக்னமில்லாமல் முடியவேண்டியதற்காக பரமாத்மாவை த்யானஞ் செய்தார். "எதனிடமிருந்து இந்த ப்ரபஞ்சம் உண்டாகின்றதோ"–"இந்த ஆகாசரூபமாகிய ஆனந்த மில்லாமற்போனால் எவன் ஜீவிப்பான்" என்ற அன்வயவ்யதிரேகச்ருதிகளால் ப்ரஹ்மம், ஜகத்காரண மென்றும், அர்த்தேஷு அபிக்ஞ: என்று அன்வயஞ் செய்து, ஸகல பதார்த்தத்தையறிந்தவர் என்று அர்த்தஞ்செய்வதால், ப்ரஹ்மத்தினிடத்தில் எல்லா வற்றையும் அறிந்திருப்பது முதலிய ஸகலகல்யாண குணங்களிருப்பதாயும், காட்டப்பட்டது. பரமாத்மா வானவர், ப்ரஹ்மதேவருக்கு தேஜஸ், ஜலம், பூமி இவைகளை ஒன்றோடொன்று கலந்து ஸிருஷ்டிக்கும் வகையை உபதேசித்தது போல ப்ரீதியுடன் வேதத்தையும் உபதேசித்தார். "வேதங்கள் முடிவில்லாத துகள்" என்றபடி வேதங்களை பூராவாகத் தெரிந்து கொள்ள முடியாததாகையால், தடையற்ற ஞானமுள்ள யோகிகளும் மோஹிக்கிறார்கள். "அந்த விஷ்ணுவின் மேலான பதத்தை எப்பொழுதும் ஸூரிகள் பார்க்கிறார்கள்." என்றபடி நித்திய ஸூரிகள், நாராயணனுடைய திவ்ய மங்களதேஹத்தின் ஒப்பற்ற காந்தியை தர்சித்து மோஹிக்கிறார்கள். மேல்காட்டிய மூன்று பூதங்களுடைய த்ரிவிருத்கரண ஸ்ருஷ்டியானது,

எவரிடத்தில் பொய்யாக இருக்கிறதோ (அது பகவானிடத்தில் ஸம்பந்திக்கிற தில்லையென்று கருத்து) மேலும் எவர் தன்னுடைய தேஜஸினால் ஸகல தோஷங்களையும் நாசம் செய்கிறாரோ முக்காலத்திலும் இருப்பவராகையால் எவர் நித்யரோ, ருத்ரன் முதலியவர்களைவிட சிறந்தவராகையால பரனோ, அந்த பர ப்ரஹ்மத்தை த்யானிக்கிறோம்– பாகவத சந்த்ரிகா.

ஒருகால் அஸுரர்கள் பூமியில் அரசர்களாகப் பிறந்து அந்த பாரத்தால் பூமி மிக வருத்தமடைந்தாள். அப்போது ப்ரஹ்மா, ருத்ரன் முதலிய தேவர்கள், பூமிக்கு நேர்ந்த ச்ரமத்தை நிவர்த்திக்குபடி ஸ்ரீ மஹா விஷ்ணுவை வேண்டிக்கொண்டார்கள். பகவான், அவர்களுடைய ப்ரார்த்தனைக்கிசைந்து, வெகுகாலமாய் தபஸ் செய்துகொண்டிருக்கும் ஸத்யவதியினிடம் பராசரருக்கு புத்ரனாக அவதரித்தார். இவர்தான் வ்யாஸரென்று சொல்லப்படுகிறார். இவர் மந்தபுத்தி யுள்ள ஜனங்களிடத்தில் மிகுந்த கருணையுள்ளவராய் வேதங்களை பிரித்து அதன் அர்த்தத்தை நன்றாய் காட்டுவதற்காக ப்ரஹ்ம ஸூத்ரங்களைச்செய்தார். பின்பு அதைப் படிக்கத்தகாத ஸ்த்ரீகள் சூத்ரர்களுக்காக புராணங்களையும் வெளியிட்டார். பின்னும் அவர் வேதத்தின் அர்த்தத்தை நன்றாய் காட்டுகிறதும் 12 ஸ்கந்தமுள்ளதும், 18,000 க்ரந்தங்களடங்கியதுமான பாகவத புராணத்தைச் செய்ய ஆரம்பித்து, தான் எப்பொழுதும் ப்ரஹ்ம ஸாக்ஷாத் காரமுள்ளவரான்லும் இயற்கையில் விக்ன ஸம்பந்தமில்லாதவரானாலும், க்ரந்தாரம்பத்தில் செய்யவேண்டிய ஸம்ப்ரதாயத்தை வித்வான்களுக்குத் தெரிவிப்பதற்காக, நாராயண

ஸ்மரணமாகிய மங்களத்தைச் செய்தார். அதாவது பரனைத் த்யானஞ்செய்கிறோம். க்ரந்தத்தின் ஆரம்பத்தில் நமஸ்கரிக்கக்கூடிய தேவதைகள் இருவகையானவைகள். 1. ஆதிகாரிகதேவதை—ஸூரியன் முதலிய க்ரஹங்கள். 2. அபிஷ்டதேவதை.— பகவான். இருவகையான தேவதைகளின் ஸ்வரூபியும் ஸகல கல்யாண குணங்கள் நிறைந்தவருமான பரமாத்மாவே இந்த பாகவத ஸாஸ்த்ரத்தால் வர்ணிக்கப்படுகிறார். நாராயணனைவிட பரன் வேறொருவருமில்லை "அந்த புண்டரீகாக்ஷனே தேவன், அந்த நாராயணனே பரன்" - ஹரிவம்சம்.

"ப்ரஹ்மத்தை யறிந்தவன் பரனை யடைகிறான்"
—ச்ருதி.

இவர் ஜகத்திற்கு காரணமாயிருப்பவர், "எவரிடமிருந்து இந்த பூதங்கள் உண்டாகின்றவோ, எவரால் உண்டானவைகள் ஜீவிக்கின்றனவோ, எவரிடம் லயிக்கின்றனவோ ? அதுவே ப்ரஹ்மம்" —ச்ருதி.

நான் எல்லாவற்றிற்கும் உற்பத்தி ஸ்தானம், என்னிடமிருந்தே எல்லாம் உண்டாகின்றன. எல்லா பிராணிகளையும் ஸ்ருஷ்டிக்கிறவனும், காப்பாற்றுகிறவனும், நாசஞ்செய்கிறவனும், நானொருவனே" —ஸ்மிருதி.

மேல்காட்டிய அன்வயத்தால் விஷ்ணுவே ஜகத் காரணரென்று ஏற்படுகிறது.

ஆக்ஷேபம்: ருத்ரன் முதலியவர்களும், ஜகத்திற்குக்

காரணமென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே அப்படிக்கிருக்க மேற்காட்டியது எப்படி பொருந்தும்.

ஸமாதானம்: வேதத்தில் சிலபாகத்தில் அப்படி சொல்லப்பட்டிருந்தாலும், பெரும்பாலும் விஷ்ணுவே ஜகத்காரணம் என்றே சொல்லப்பட்டிருக்கிறது 'எல்லா வேதங்களும் எந்தபதத்தைச் சொல்லுகின்றனவோ' —ச்ருதி.

"ஸகல வேதங்களாலும் அறியக்கூடியவன் நானே"
—ஸ்மிருதி.

ஆக்ஷேபம்:— பரமாணுவே ஜகத்காரணம், என்று ஏன் சொல்லக்கூடாது ?

ஸமாதானம்:— அப்படியல்ல, ப்ரத்யக்ஷத்திற்கும் ஆகமத்திற்கும் விரோதமில்லாத யுக்தியால், ப்ரஹ்மமே ஜகத்காரணமென்று சொல்லக்கூடும். புத்ரனுக்கு பிதாவே காரணமென்று தெரியவருகிறதல்லவா ? அது போல் ப்ரஹ்மதேவர் முதலியவர்களுக்கு சேதனனே காரணமாயிருக்க வேண்டும், மாயை முதலியவைகள் அசேதனமாகையால் அவைகளைக் காரணமென்று சொல்லக்கூடாது. இந்தவிஷயம் ச்ருதியில் பலவிடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பரமாணுவே ஜகத்திற்கு காரணமென்று சொல்பவர்கள் ச்ருதி விருத்தமான யுக்தியைக் காட்டுவதனால் அது ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல. அந்த பரமாத்மா எல்லாவற்றையும் பொதுவாகவும் விசேஷமாகவும் அறிந்தவர். அதனால் ப்ரஹ்மதேவருக்கு வேதங்களை யுபதேசித்தவர். அவருடைய அனுக்ரஹமில்லாதவரையில் ப்ரஹ்ம தேவர் முதலியவர்களும் மோஹிக்கிறார்கள். தேஜஸ்,

ஜலம், பூமி, இவைகளின் கார்யம் எப்படி ஸத், அஸத் இவைகளைவிட வேறாக ஆகிறதில்லையோ? பகவானால் செய்யப்படுகிறபடியால் ஈச்வர ஸிருஷ்டி, ஜீவஸ்ருஷ்டி, ஜடஸிருஷ்டி, ஆகிய இவைகள் மூன்றும் பொய்யானதல்ல. மாயைக்கடந்த ஆனந்தானுபவ ரூபராயுமிருக்கும் பரமபுருஷனைத் த்யானிக்கிறோம். தேஜஸ் ஒன்றானாலும்,தான் தன் கார்யமான பூமி முதலியவைகளில் பிரவேசித்து சிலகாலத்தில் வெளிப் படுவது போல, பகவான் ஜகத்தை ஸிருஷ்டித்து, அவைகளில் பிரவேசிக்கிறார். பின்பு பக்தர்களை அனுக்ரஹிப்பதற்காக கிருஷ்ணன் முதலிய அவதாரஞ் செய்கிறார். இதுவே ஈச்வர ஸிருஷ்டியெனப்படும், ஸூர்யன் முதலிய தேஜஸினால் ஜலத்தில் அனேக ப்ரதிபிம்பங்கள் ஸ்தூலசரீரம் முதலிய உபாதிகளால் ஈச்வரனுடைய ப்ரதிபிம்பங்களாகிய ஜீவர்கள் உண்டாகிறார்கள். இதுவே ஜீவஸர்க்கம் எனப்படும். மண்ணினால் குடம் முதலியவைகளை யுண்டு பண்ணுவதுபோல ஈச்வரன் அஹங்காரம் முதலியவை களை ஸிருஷ்டிக்கிறார். இதுவே ஜடஸர்க்கம்,– விஜயத் வஜீயம்:

1–4: லக்ஷணம்– இருவகை (1) தடஸ்தலக்ஷணம்– மேற்காட்டியது 2. ஸ்வரூப லக்ஷணம்–ஸத்யஸ்வரூபி. ஸகலத்தையுமறிந்தவர் ஸகல சக்தியுள்ளவரென்பது அன்வயம்– ஆகாசம் முதலிய கார்யங்களின் ஸத்தை யானது, ஆத்மாவின் ஸத்தையால் என்பது. வ்யதிரேகம்–எதிலில்லாததால் அது இல்லையோ அது (உதா) ஆகமஸத்தையில்லாததனால் ஆகாசபுஷ்பங் களில்லை– ஸ்ரீத.

பரமாத்மா, ஸத்ரூபியாய் ஏல்லாவற்றிலும் அனுவ்ருத்தித்திருப்பதால் எல்லாவற்றிற்கும் காரண மாகிறார் (உதா) மண்ணானது அதன் கார்யமாகிய குடம், மடக்கு, தோண்டி முதலியவைகளிலும், தங்கமானது அதன் கார்யமாகிய குண்டலம் முதலிய நகைகளிலும், படர்ந்திருக்கிறது– ஸ்ரீத.

5. அறிந்தவரும் – ப்ரதானம் (மாயை) ஜகத்காரண மானாலும் அதல்லவென்று காட்டப்பட்டது. "மாயை ஜடமாகையாலும், வேதத்தில் ஸிருஷ்டிக்க ஸங்கல் பித்தாரென்று சொல்லியிருப்பதாலும், அம்மாதிரியான ஸங்கல்பம் மாயையினிடம் ஏற்பட நியாயமில்லாததனா லும், மாயை ஜகத்காரணமல்ல– வ்யாஸஸூத்ரம்.

2–1 ப்ரகாசிப்பவர்.– இதனால் சேதனனாகிய ஜீவனைவிட மேலானவரென்று காட்டப்பட்டது.

2–2 உபதேசித்தாரோ.–"எல்லாவற்றிற்கும் முந்தி ஹிரண்யகர்ப்பர் உண்டானார். அவர் ஸகல பூதங்களுக்கும் ஒரே யஜமானனாக விருந்தார். அவர் பூமியையும் அந்தரிக்ஷத்தையும், காப்பாற்றிவந்தார் என்ற ச்ருதிப்படி ப்ரஹ்மதேவருக்கும் மேலானவரென்று காட்டப்பட்டது. எவர் முதலில் ப்ரஹ்மாவை யுண்டு பண்ணுகிறாரோ, எவர் அவருக்கு வேதங்களை உபதேசிக்கிறாரோ, அந்த ஸ்வப்ரகாசரான தேவனை மோக்ஷமடைய விரும்பிய நான் சரணமடைகிறேன்." –ச்ருதி.

மனதால்– ப்ரஹ்மதேவர் பிறரிடத்தில் வேதாத்ய யனஞ் செய்தாரென்று ஓரிடத்திலும் சொல்லப்

படாமலிருந்தாலும் பரமாத்மாவின் ஸங்கல்ப மாத்ரத்தால் ப்ரஹ்மதேவருக்கு வேதங்கள் தோன்றினவென்று தாத்பர்யம்.

வேதங்கள்.— ப்ரஹ்மா தானாக வேதங்களைத் தெரிந்துகொண்டவரல்லவென்பது கருத்து.— ஸ்ரீத.

ப்ரஹ்மதேவருக்கும் ஞானத்தையுபதேசித்தவரும், இயற்கையில் அளவற்ற நித்ய ஞானமுள்ளவரும், எல்லாவற்றையும் ப்ரகாசிக்கச் செய்பவரும் மற்ற தேஜஸை அபேக்ஷியாமலேயே ப்ரகாசிப்பவரும். ஸத்ய ஸ்வரூபியாயுமுள்ள பரமாத்மாவே ஜகத்காரணம், அவரே திவ்ய மங்களஸ்வருபி, அவரை த்யானிப்பதால் ஸகல க்ஷேமங்களும் கிடைக்கும்.

இந்த புராணத்தில் காயத்ரியின் அர்த்தமாகிய பரப்ரஹ்மவித்யை நன்றாய் காட்டப்பட்டிருக்கிறது.— அந்த காயத்ரீ, வேதமாதா, இது வேதத்தையே ப்ரமாணமாய் கொண்டது. "எதில் காயத்ரியை அனுஸரித்து தர்மங்கள் விஸ்தாரமாக வர்ணிக்கப்படுகின்றனவோ, எதில் வ்ருத்ராஸுரவதத்தின் கதை சொல்லப்பட்டிருக்கிறதோ அது பாகவதமென்று சொல்லப்படுகிறது. அதை எழுதி ஸுவர்ணத்தால் செய்யப்பட்ட ஸிம்ஹ ப்ரதிமையுடன் புரட்டாசி மாஸத்திய பௌர்ணமியில் எவன் தானஞ்செய்கிறானோ அவன் உத்தமகதியையடைகிறான். இது 18,000 க்ரந்தங்களுள்ளது"— மத்ஸ்யபுராணம், "ஓ அம்பரீஷ! உனக்கு ஸம்ஸார பந்தம் நிவர்த்தியாக வேண்டுமானால் சுகஸ்வாமியால் உபதேசிக்கப்பட்ட ஸ்ரீமத் பாகவதத்தை பிறர் சொல்லக் கேளும் தானாகவாவது படியும்," — பத்மபுராணம்,

ஸகலஜகத்தையும், படைத்து அவைகளைக் காப்பாற்றுகிறவர் என்றாலும் ஸ்வயம் ப்ரகாசர் என்றாலும் காயத்ரியின் அர்த்தமானது காட்டப்பட்டிருக்கிறது. 6. மாறுத— கோடைகாலத்தில் மாத்யாஹ்னவேளையில் வனம் முதலிய சூன்யமாகிய விடங்களில், வெயிலை ஜலமென்று நினைத்து தாஹமுள்ள ஜனங்கள் அதனால் தாஹத்தைப் போக்கிக்கொள்ளலாமென்று அதையனுஸரிக்கிறார்களல்லவா ? அவ்விடத்தில் தோற்றுகிற ஜலமானது வாஸ்தவமல்ல. ஆச்ரயமாகிய தேஜஸ் உண்மையானதால் (வ்யவஹாரகாலத்தில்) ஜலமிருப்பதுபோல தோன்றுகிறதுபோல ஸத்வம், ரஜஸ், தமஸ், ஆகிய முக்குணங்களால் உண்டாகியிருக்கும் ஸிருஷ்டிகள் யாவும், ஸத்யமன்று. ஆச்ரயமாகிய ஆத்மாவின் ஸத்தையால் ஸத்தாகத் தோற்றுகிறது. ஸ்ரீத, 11.— வ்யாச மஹா— வ்யாச மஹாமுனியால் செய்யப்பட்ட இந்தப் பாகவதமென்ற க்ரந்தத்தில் பக்தியாகிய தர்மம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆபிசார ப்ரயோகமாகிய ச்யேனயாகம் போல் இது பாபமுள்ளதல்ல. மோக்ஷஸாதனமாகையால், மிகவும் மேலானது. மாத்ஸர்யம் முதலிய துர்க்குணமில்லாத ஸாதுக்களால் அனுஷ்டிக்கக்கூடியது. இதனால் நித்ய வஸ்துவாகிய பரமாத்மாவே அறியக்கூடியவர். அவரே அக்னிமுதலிய ரூபமாகவிருந்து ஸ்வர்க்கம் முதலியவைகளைக் கொடுக்கிறார். முவ்வகையான தாபத்தைப் போக்குகிறார், புண்யசாலிகள் இந்த கிரந்தத்தைக் கேட்க வேண்டுமென்று விரும்பிய க்ஷணத்திலே அவர்களுடைய ஹிருதயத்திலே பகவான் ஸ்திரமாக வஸிக்கிறார். மற்ற க்ரந்தங்கள் இதுபோல பக்தியையுண்டுபண்ணி அதனால் ஈச்வரனை மனத்திலிருக்கச் செய்கிறதில்லை. ஆகையால் இதுவே உத்தமமானது.—சந்திரிகா. அழகு—

"தோஷமற்ற ஸகல புராணங்கள் பாகவதமில்லாத காலத்தில் ஸாதுக்களுடைய ஸபையில் ப்ரகாசிக்கும்" என்றபடி பந்தகமாகாத "ஓ அர்ஜுன! நீ செய்கிறதை யும், புஜிக்கிறதையும், ஹோமஞ்செய்கிறதையும் தானஞ் செய்கிறதையும், தபஸ்செய்வதையும் எனக்கு அர்ப்பணம் செய்துவிடு"– பகவத்கீதை. என்றபடி பலனையுத்தேசியாமல் செய்யும் கர்மங்களே மேலான வைகள். அவைகளே கபடமற்ற தர்மங்கள். "பகவானுடைய நாமங்களைச் சொல்லுவது முதலிய பக்தியே மனிதர்களுக்கு மேலான தர்மம். அதனாலேயே பகவான் ஸந்தோஷப்படுகிறார்" என்றபடி பக்தியே மேலானதர்மம்.– விஜயத்வஜீயம். மோக்ஷத்தை விரும்பியவர்களுக்கு மிகரமணீயமானது– ஸ்ரீத. 28– அமிருதத்ரவ– மோக்ஷத்திற்கு ஸாதனமாகிய பக்திரஸமுள்ளது. இதை சரீரம் போகும்வரையில் பானஞ்செய்யுங்கள். சந்த் செய்யப்பட்ட–கர்த்தா வினுடைய மேன்மையால் க்ரந்தத்திற்கு மேன்மை காட்டப்பட்டது. அறியக்கூடியதும்.– ஞானகாண்டத் தை உயர்ந்ததென்று காட்டப்பட்டது.– புண்ய 23– புண்யம் செய்யாதவர்களுக்கு ஸ்ரீமத் பாகவதத்தை கேட்கவேண்டுமென்ற ஆசையுண்டாகாது. 24– ஸ்திர மாக.– தேவதாகாண்டத்தைவிட மேலானதென்று கருத்து. மேற்காட்டியபடி கர்ம காண்டம் தேவதா காண்டம். ஞானகாண்டம் மூன்று பாகங்களடங்கிய வேதார்த்தம் முழுவதும் தெரிந்துகொள்ளக் கூடியதா யிருப்பதால் ஸகல சாஸ்த்ரத்தை விட இது மேலானது. ஆகையால் ஸாதுக்கள் முகமாய் கேட்டுத் கொள்ள வேண்டும்– ஸ்ரீத. பரவிற்று– சிஷ்ய பரம்பரையாய். நசுக்கிவிடாமல் ஜாக்ரதையாய் கொண்டுவரப்பட்ட தென்று காட்டப்பட்டிருக்கிறது. சுகருக்கு உபதேசஞ்

செய்தது முதலியவைகள் பாகவதஞ்செய்த காலத்திற்கு பிந்திய காலத்தில் நடந்ததானாலும் வருங்கார்யமும் நடந்தது போலவே சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீத. அமிருதம் சுகமென்றால் கிளியால் கொத்தப்பட்ட பழம் மிகரஸமுள்ளதென்று பிரஸித்தம் அமிருதம்– மேலான ஆனந்தம் அதேரஸம், அதையுடையது," அவரே ரஸம், ரஸத்தை யடைந்தே இவன் ஆனந்தமுடையவனாக ஆகிறான்" ச்ருதி. ரஸரூப:– மற்ற பழங்களில் எப்படி மேற்புறத் தில் தோலும் அதற்குள்ளே ரஸமுமிருக்கிறதோ? அடபடி இதில் தோல் முதலிய ரஸமற்ற பாகங்களில்லை;

ஆக்ஷேபம்– பழமென்றும் அதையே ரஸமென்றும் சொல்வது பொருந்துமா? ரஸமுள்ள பழமென்று சொல்ல வேண்டாமா?

ஸமாதானம்:– மற்ற பழங்கள் போல தோல் முதலியவைகளில்லாமல் ரஸமாகவே இருக்கிறதென் பதை காண்பிப்பதற்காக ரஸமென்று சொல்லப்பட்டது. பூமியில் விழுந்த ரஸமென்றால் அது த்ரவரூபமாய் போய்விடாமல் புஜிக்கதக்க பழமென்பதால் காட்டப் பட்டது முக்தர்– ஆத்மாவிடத்திலேயே ரமித்து கொண்டிருப் பவர்களும், மற்ற க்ரந்தங்களில் ஆசையில்லாத வர்களுமான மஹர்ஷிகளும் பகவானிடம் யாதொரு காரணமுமில்லா மல் பக்தி செய்கிறார்கள். இம்மாதிரியான குண முள்ளவர் ஸ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம்,1–"அத்யாயம்" 7. ஸ்வர்க்க லோகத்தை– ஸ்வர்காய– பகவான். அவரே லோகம் (பக்தர்களுக்குருட்டிடம்) அவரை யடைவதற்காக–ஸ்ரீத ஸ்வர்க்க– மேலான ஆனந்தம், அப்பேர்பட்டலோகம் பரமபதம், அதையடைவதற்காக– ஸத்ரம்– எந்த யாகத்தில் ரித்விக்குகளே யஜமானர்களாக விருக்கிறார்களோ

அது முனி.. ஸத்ரம்—ஸாதுக்களைக் காப்பாற்றுகிறது. —விஜ. அக்னி—நித்ய நைமித்திக ஹோமங்களை— முனி. புராணங்கள் 1.ப்ரஹ்ம புராணம் 2. பாத்மம். 3. விஷ்ணுபுராணம். 4. சிவபுராணம் 5. நாரதபுராணம் 6. மார்கண்டேயம், 7. ஆக்னேயம். 8. பவிஷ்யபுராணம். 9. ப்ரஹ்மகைவர்த்தம். 10 லிங்க புராணம் 11. வராஹபுராணம் 12. ஸ்காந்தம். 13. வாமனம். 14 கூர்மபுராணம். 15. மத்ஸ்யபுராணம். 16.கருடபுராணம். 17. ப்ரஹ்மாண்டம். 18வது ஸ்ரீமத் பாகவதபுராணம். 24—பல— அனேகசாஸ்த்ரங்களை அப்யஸித்தாலும் அவ்வளவு பலன் கிடைக்கிறதில்லை யென்று கருத்து ஸ்ரீத. 3—31 க்ஷேம.—ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் கதையைக் காலதாமதமின்றிக் கேட்க வேண்டுமென்று விரும்பி சுருக்கமாய் ஆசிர்வாதஞ் செய்தார்கள். "ஒரு முஹூர்த்தமாவது ஒரு க்ஷணமாகிலும் ஸ்ரீ வாஸுதேவரை ஸ்மரிக்காமலி ருப்பதே கெடுதிக்கு காரணம்.— ஸ்ரீத. 32—ஸாத்—பகவத் பக்தர்கள். ஸ்ரீத. 4—14 நாரதர்— இவர் ப்ரஹ்மதேவருடைய மனத்திலிருந்து உண்டா னவர். இவர் தேவர்ஷி இவருடைய குணங்கள் மஹாபாரதம் ஸபாபர்வத்திலும், சாந்திபர் வத்திலும் நன்றாக வர்ணிக்கப் பட்டிருக்கின்றன. இவர் கானவித்தையை அப்யளித்த கதை அத்புத ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர் ஞானத்தை பிறகுக்குபதேசிப்பதாலும், அக்ஞானத்தைப் போக்குவதாலும் நாரதரென்ற பெயரை யடைந்தார். 21— உத்தம—எவருடைய பெயரை உச்சரித்த மாத்ரத்தில் புண்யம் கிடைக்குமோ, அவர் சொல்லவேண்டும்— மஹர்ஷியின் கேள்விகள் ஆறு.

அவைகளில் 1. சாஸ்த்ரங்களுடைய ஸாரமானது எது, 2. ஸ்ரீ கிருஷ்ணபகவான் செய்த கார்யங்கள் எவை, 3 ஸிருஷ்டி முதலிய லீலைகள், 4 அவதார கதைகள். 5. பகவானுடைய சரிதம், 6. தர்மத்தை ஸம்ரக்ஷித்தது. ஸ்ரீத.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–2.

ஸூதர் ப்ரத்யுத்தரஞ் சொன்னது.

ரோமஹர்ஷணருடைய புத்ரரான ஸூதர் அந்த ப்ராஹ்மணர்களுடைய நல்வார்த்தைகளைக் கேட்டு ஸந்தோஷித்து அவர்களுடைய கேள்வியை ச்லாகித்துப் ப்ரத்யுத்தரஞ் சொல்ல ஆரம்பித்துப் பின்வருமாறு தன் குருவை வணங்கினார்.

2–31/2. சுகர் அதி பால்யவயதிலே (உபநயனஞ் செய்யப்படாமலிருக்கும் வயதிலே) கர்மமார்க்கத்தில் விருப்பமில்லாதவராய், துறவியாகப் போகும்பொழுது, பிதாவாகிய வ்யாஸர் பிள்ளையை விட்டுப் பிரியமன மில்லாதவராய் ஓ! புத்ரா! என்று உரக்க அழைத்தார். அப்பொழுது மரங்கள் விடைகூறின. (மரங்களின் ரூபமாயிருந்து பிதாவின் ப்ரீதியைக் குறைப்பதற்காகச் சுகரே அப்படிக்கூறினார் என்பதாம்) அவர் ஸகல ப்ராணிகளுடைய ஹ்ருதயத்தில் வசிப்பவர், அந்த சுக மஹாயோகியை நமஸ்கரிக்கிறேன். எவர் ஸம்ஸாரமா கிய இருட்டைக்கடக்க விரும்பிய ஜனங்களிடத்தில், கருணை வைத்து ஒப்பற்ற, மஹிமையுள்ளதும், ஸகல வேதங்களின் ஸாரமாயும், நிகரில்லாததாயும், ஆத்ம தத்துவத்தைக் காட்டுவதில் தீபமாயுள்ளதுமான, ரஹஸ்யமாகிய புராணத்தை வெளியிட்டாரோ, வ்யாஸருடைய புத்ரரும், முனிகளுக்குக் குருவுமாகிய அந்தச்சுகருக்கு நமஸ்காரம் செய்கிறேன். நாராயண ரையும், மனிதர்களுக்குட் சிறந்தவரான நரனையும், ஸரஸ்வதி தேவியையும், வ்யாஸரையும் நமஸ்காரஞ் செய்து பின்பு (ஜயத்தை) க்ரந்தத்தைச் சொல்லுகிறேன்.

4–35. 'ஓ மஹர்ஷிகளே! நன்றாய்க் கேட்டீர்கள், தாங்கள் கேட்டவிஷயம் உலகத்திற்கே மங்களத்தைக் கொடுக்கக்கூடியது. எதனால் பரமாத்மா ஸந்தோஷி ப்பாரோ அம்மாதிரி ஸ்ரீ கிருஷ்ணன் விஷயமாகக் கேட்டீர்கள். பலனை உத்தேசியாமல் இடையூறின்றி ஸ்ரீ மஹா விஷ்ணுவிடத்தில் செய்யும் பக்தியே மேலான தர்மம். அதனால் பரமாத்மா மிகவும் ஸந்தோஷமடை கிறார். பகவானாகிய வாஸுதேவரிடத்தில் பக்தி செய்தால், வைராக்யமும் காரணமற்ற உண்மையான ஞானமுமுண்டாகும். புருஷர்கள் குறைவின்றி தங்களுக்குரிய தர்மங்களை யனுஷ்டித்தும் அதனால் பகவானுடைய கதையைக்கேட்க வேண்டுமென்ற ஆசையுண்டாகாவிட்டால் அது பயன்படாததேயாகும். மஹாவிஷ்ணுவின் கதையாகிய அமிர்தத்தைப் பானஞ் செய்தும் (கதையைக் கேட்டும்) சித்தமுருகுதல், ஆனந்தத்தால் கண்ணீர் பெருகுதல், மயிர்க் கூச்சலிடல், என்னும் இவைகள் எவனுக்கு உண்டாகவில்லையோ, அவன் ஆத்மதத்துவத்தை பலதடவை குருமுகமாகக் கேட்டாலும் அதன் உண்மையை அறியமாட்டான். (பகவத்பக்தி, வைராக்யம், ஆத்மஞானம், என்னும் இவைகளே மேலான தர்மமென்று கருத்து). மோக்ஷத் திற்கு உபயோகமாகிய தர்மத்திற்கு இரண்டாவது புருஷார்த்தமாகிய அர்த்தம் பலனென்றும் தர்மத்தை விட்டுபிரியாத அந்த அர்த்தத்திற்குக் காமம் ப்ரயோஜன மென்றும் சிலர் சொல்வது மஹரிஷிகளால் ஒப்புக் கொள்ளபடவில்லை. இது பிரசித்தமான விஷயம். இந்திரியங்களை திருப்தி செய்வதே (விஷயானுபவம்) காமத்திற்கு பலனென்று சொல்வதும் சரியல்ல. ஆனால் ஜீவிப்பதற்குப் போதுமான அளவு விஷயத்தை அனுபவிப்பதே பலனாம். தத்துவத்தைத் தெரிந்து

கொள்ள விரும்பியவனுக்கு கர்மங்களால் கிடைக்கும் பலன் பயன்படாது. உண்மையை அறியவேண்டுமென்ற விருப்பமே அவனுக்குப் பலன். மேலும், நாசமற்றதான ஞானஸ்வரூபத்தையே தத்வமென்று, உண்மையை யறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். அதனையே உப நிஷத்தை அத்யயனஞ் செய்தவர்கள் ப்ரஹ்மம் என்றும், ஹிரண்யகர்ப்பனை உபாஸிப்பவர்கள், பரமாத்மாவென் றும், ஸாத்வதர்கள் பகவான் என்றும் சொல்லுகிறார்கள் "ஆகையால் ச்ரத்தையுள்ள முனிகள் வேதாந்தம் முதலிய சாஸ்த்ரங்களைக் குருமுகமாகக் கேட்டு, ஸ்திரமான ஞானம்,வைராக்யம், பக்தி இவைகளை அடைந்து ஜீவனுக்கும், பரமாத்மாவுக்கும் பேதமில்லை என்று தெரிந்துகொள்கிறார்கள். ஓ! ப்ராஹ்மண ச்ரேஷ்டர்களே! அவரவர்களுடைய ஜாதிக்கும், ஆச்ரமத்திற்கும் தகுதியான தர்மத்தை ஸாங்கமாய் (குறைவின்றி) அனுஷ்டித்தால், அவர்களிடத்தில் ஸ்ரீ நாராயணன் ப்ரியப்படுகிறார். இதுவே அதற்குப் பலமாகும். ஆகையால் பகவானுடைய கதையைக் கேட்கும்போதும் அவருடைய நாமபஜனம் செய்யும் போதும், அவரைத்யானஞ் செய்யுங்காலத்திலும், அவரைப் பூஜிக்கும் போதும், வேறு விஷயத்தில் மனத்தைச் செலுத்தாமலிருக்க வேண்டும்.விவேகிகள் பகவத்யானமாகிற கத்தியால் அஹங்கார ஸம்பந்தத்தை யுண்டுபண்ணும் கர்மபந்தத்தை வெட்டுகிறார்கள். ஆகையால் பகவானுடைய கதையைக் கேட்பதில் விருப்பமில்லாதவர் யார்? (எல்லோரும் விரும்புவார்கள்) ஓ! ப்ராஹ்மணர்களே! புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வதால் பாபங்கள் நீங்குகின்றன, பின்பு பெரியோர்களுடைய சேர்க்கையுண்டாகின்றது. பிறகு தர்மத்தில் ச்ரத்தையும் அதன்பின் வாஸுதேவருடைய

கதையைக்கேட்க விருப்பமும், பின்பு அதில் ப்ரீதியு மாகிய இவைகள் முறையே உண்டாகின்றன. தம் கதையைக் கேட்பவர்களுக்கும், நாமபஜனஞ் செய்பவர் களுக்கும், புண்யத்தைக்கொடுப்பவரும், ஸாதுக்களுக்கு அனுகூலத்தை செய்பவருமான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா தம்முடைய கதையை கேட்பவர்களுடைய ஹ்ருதயத்தில் வசித்துக்கொண்டு காமம், கோபம் முதலியவைகளை நாசஞ்செய்கிறார். எப்பொழுதும் பகவத் பக்தர்களை ஸேவிப்பதாலும், பாகவத சாஸ்த்ரத் தைப் படிப்பதாலும் பெரும்பாலும் அக்ஞானம் விலகும். அதனால் உத்தமச்லோகராகிய (புண்யகரமான பெயருள்ள) பகவானிடம் ஸ்திரமான பக்தியுண்டாகும். அப்பொழுது ரஜோகுணம், தமோகுணம் ஆகிய இவைகளாலுண்டாகும் காமம், க்ரோதம் முதலிய வற்றால் அவர்களுடைய மனஸ் விகாரமடையாமல் ஸத்வகுணமுள்ளதாய் சாந்தமாயிருக்கும். இப்படி பகவானிடம் பக்தி செய்கிறவனுடைய மனஸானது அதன் மஹிமையால் சாந்தமாய் விடும். ஆசைகளும் ஒழிந்துவிடும்; பின்பு பரமாத்மாவின் உண்மையான ஸ்வரூபஞானமுண்டாகும். ஆத்மரூபியான ஈச்வரனு டைய ஸாக்ஷாத்காரமுண்டானவுடன் அஹங்காரம் அடியோடே நாசமடைகிறது. ஸம்சயங்கள் யாவும் நிவர்த்தியாகின்றன. ப்ராரப்தகர்மம் தவிற மற்றவைகள் நசிக்கின்றன. ஆகையால் வித்வான்கள் பகவானாகிய வாஸுதேவரிடத்தில் எப்பொழுதும் மிகுந்த ஸந்தோஷத் துடன் பக்திசெய்கிறார்கள். அதனால் அவர்களுடைய சித்தம் சுத்தமாகிறது. பரமபுருஷன் ஒருவரானாலும் உலகத்தைக் காப்பாற்றுவதற்கு ஸத்வ குணத்தாலும், ஸ்ருஷ்டிப்பதற்கு ரஜோ குணத்தாலும், ஸம்ஹரிப்ப தற்கு தமோ குணத்தாலும், முறையே ஹரி, (விஷ்ணு)

பிரஹ்மா, ருத்ரன் என்னும் பெயரடைகிறார். ஆனால் ஸ்த்வமூர்த்தியான வாஸுதேவரிடமிருந்து மனிதர் களுக்கு க்ஷேமங்கள் யாவும் கிடைக்கின்றன. அக்னியானது கட்டையைப்பிடித்து எரிக்கும்போது அந்தக் கட்டையாகிற உபாதி ஸம்பந்தத்தால் புகை உண்டாகிறது. அதிலிருந்து வேதங்களில் சொல்லிய கர்மங்களுக்கு யோக்யமான அக்னி விருத்தியடைகிறது அதுபோல லயஸ்வரூபமாகி தமஸ்ஸினிடமிருந்து ரஜோகுணமும், அதனிடமிருந்து ஸத்வகுணமும், அதன்னால் ப்ரஹ்மப்ராப்தியும் உண்டாகிறது. முன் காலத்தில் பெரியோர்களான முனிவர்கள் சுத்த ஸத்வ மூர்த்தியும், பகவானுமாகிய, மஹாவிஷ்ணுவை (இந்த்ரியங்களுக்குப் புலப்படாதவரை) பஜித்தார்கள். ஆகையால் அந்த மார்க்கத்தை அனுஸரிப்பவர்கள், ஸம்ஸாரத்திலிருந்து க்ஷேமத்தை அடைவார்கள். மோக்ஷத்தை விரும்பியவர்கள், கோரஸ்வரூபமுள்ள பரமசிவன், பித்ரு கணங்கள், முதலியவைகளை உபாஸியாமல் அவர்களை நிந்திக்காமலும், சாந்தங் களான, நாராயணனுடைய கலைகளை, (அம்சங்கள்) உபாஸிக்கிறார்கள். ரஜோகுணம், தமோகுணம், இந்த ஸ்வபாவமுள்ள ஜனங்கள், ஐஸ்வர்யம், புத்ரன், அழகு, இவைகளை அடையவிரும்பி தங்களுக்கு ஸமமான ஸ்வபாவமுள்ள, பித்ருக்களையும், ருத்ரன், ஹிரண்ய கர்பன், முதலியவர்களையும், ஸேவிக்கிறார்கள். வேதங்கள், யாகத்தின் ஸ்வரூபத்தைச் சொல்லுகின்ற வைகளானாலும் யாகத்தால் ஆராதிக்கப்படும் தேவதை விஷ்ணுவாகையால், அவைகள் யாவும், வஸுதேவரு டைய புத்ரனாகிய பகவானையே சொல்லுகின்றன.

யோக சாஸ்த்ரங்கள் எல்லாம் ப்ராணாயாமம்

முதலியவைகளை, நிரூபிப்பவைகளானாலும், அவைகள் பகவானை அடைவதற்கு உபாயமாகையால் அந்தப் பரமாத்மாவையே சொல்லுகிறவைகளாகின்றன. மற்ற கர்மங்களும், அந்தப் பரம புருஷனுடைய ஆராதனத் திலேயே உபயோகிக்கப்படுகின்றன. ஞானசாஸ்த்ரம், தபஸ். தர்மசாஸ்த்ரம், கர்மத்தின் பலனாகிய ஸ்வர்க்கம், முதலியவைகள் யாவும், பரமாத்ம பரங்களேயாகின்றன. நிர்குணராயும், எங்கும் நிறைந்தவருமான அந்த பகவானே காரணரூபமாயும், கார்யரூபமாயுமிருந்து, முக்குண ஸ்வரூபமாயுள்ள தம்முடைய மாயையால் முதலில் உலகத்தை ஸ்ருஷ்டித்தார். மேலும் அவர் அந்த மாயையால் உண்டாகி ப்ரகாசிக்கும் ஆகாயம் முதலியவைகளில் உட்பிரவேசித்து இயற்கையில் தாம் குணமற்றவரானாலும், குணமுள்ளவர்போலத் தோன்று கிறார். அவர் விஞ்ஞானத்தால் (சித்சக்தி) நிறைந்தவர் கட்டைகளில் ஜ்வலிக்கும் அக்னி உண்மையில் ஒன்றானாலும், ஆச்ரய பேதத்தால் வெவ்வேறாகத் தோன்றுகிறது போல ஜகத்ரூபியான பரமபுருஷன் ஒருவரானாலும், ஒவ்வொரு ப்ராணிகளிடத்திலும், வெவ்வேறாகக் காணப்படுகிறார். அந்தப் புருஷோத்த மனே பூதஸூக்ஷ்மங்கள், இந்த்ரியங்கள், மனம் ஆகிய இவைகளால் உண்டுபண்ணப்பட்ட ப்ராணிகளிடத்தில் ப்ரவேசித்து விஷயங்களை அனுபவிக்கச்செய்கிறார். லோககர்த்தாவாகிய ஈச்வரன் திர்யக் (புறவை பசு முதலிவைகள்) தேவர்கள், மனிதர்கள் இவைகளில் ஸத்வ மூர்த்தியாய் அவதரித்து உலகங்களைக் காப்பாற்று கிறார். இவைகளே லீலாவதாரமெனப்படுகின்றது.

நோட்டு.

11–22. பால்ய– எனக்கு உபநயனம் செய்ய

வேண்டும் என்று ஆசார்யரிடம் வராதவர், அல்லது, தான் ஒருவராகப்போனார்.– ஸ்ரீத– தேஹம் முதலிய வைகளில் அபிமானமற்றவர்.– இவர் ருத்ரனுடைய அவதாரம்– விஜய. 12–4– ஸரஸ்வதி தேவியென்றால் ஸ்ரீதேவி,நரனென்றால் வாயுபகவான் – விஜ, ஜயம்– ஸம்ஸாரத்தை ஜயிப்பதால் இப்பெயர் கிடைத்தது, 14–நாரண தாரண– "ஓ அர்ஜுன! நான் வேதங்களாலும், தபஸினாலும், யாகத்தாலும் அறியமுடியாதவன்" என்ற ஸ்மிருதியின்படி பக்தியைவிட வேறு காரண மற்ற–ஸ்ரீத.– வீர. விஷ்ணுவின் பிரஸாதத்தால் உண்டான ஞானம். விஜ.

12–24 தர்ம–மோக்ஷத்திற்கு ஸாதனமாகிய தர்மத்திற்கு பணம் பலனல்ல. தர்மத்திற்காகவென்று, ஸம்பாதிக்கப்பட்ட பணத்திற்கு காமம் ப்ரயோஜன மாகாது. விஜ 11–12 ஹரி–

ஆக்ஷேபம்:– விஷ்ணு ஒருவரே ப்ரஹ்மா, பரமசிவன், என்ற பெயரை அடைகிறார் என்று சொன்னதால், மூன்று தேவர்களும் ஒருவரென்றும், ஒருவருக்கொருவர் பேதமில்லாதவர்களென்றும் ஏற்படுகிறது. "ப்ரஹ்மாவும், சிவனும் நாராயணனே" ச்ருதி. நாராயணர் என்ற பெய்ருடைய ப்ரஹ்மதேவர் கல்பத்தின் முதலில் ஜனங்களை ஸிருஷ்டித்தார். பிறகு அந்த பகவானாகிய விஷ்ணுவானவர் காலாக்னி ருத்ரரூபியாயிருந்து ஸகல லோகத்தையும் ஸம்ஹரித் தார். பகவான் ஒருவரே உலகத்தை ஸ்ருஷ்டிப்பது, பரிபாலிப்பது, நாசம் பண்ணுவது, ஆகிய கார்யங்களை முறையே ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் ஆகிய பெயருடன்

நடத்திவருகிறார்."– ஸ்மிருதி, ஆகையால் மஹாவிஷ்ணு மும்மூர்த்திகளுக்குள் ஒருவரென்றே ஏற்படுகிறது. மேலும், இம்மூவர்களைக் காட்டிலும் மேலான பரதத்வம் ஒன்றிருப்பதாகவும் ஏற்படுகிறது. அந்தப் புருஷனால் ஜகத்முழுவதும் பூர்ணமாயிருக்கிறது." "அதைக்காட்டிலும் எது மேற்பட்டதோ, அது ரூபமற்றது எவர்கள் இதையறிகிறார்களோ அவர்கள் மரண தர்மமில்லாதவர்களாக ஆகிறார்கள்."– ச்ருதிகள் "இவர் அமிர்தத்துக்கு ஹேதுவாயிருப்பவர்"– ச்ருதி இதனால் மும்மூர்த்திகளுக்கும் மேலான பகவத் ஸ்வரூபமே ஸகல ஜகத்திற்குக் காரணம். அதை பஜிப்பவர்களே மோக்ஷத்தையடைவார்கள். நாராயணனை பஜிப்பவர்கள் மோக்ஷத்தையடையமாட்டார்கள். அவர் பரமாத்மாவுமல்ல.

ஸமாதானம்:– மும்மூர்த்திகளும் ஒருவரேயென்று சொல்வது ந்யாயமல்ல "நாராயணனிடமிருந்து ப்ரஹ்மா உண்டாகிறார், நாராயணனிடமிருந்து ருத்ரன் உண்டாகிறார், நாராயணனிடமிருந்து பன்னிரண்டு ஆதித்யர்களும், பதினோரு ருத்ரர்களும், எட்டு வஸுக்களும், எல்லாவேதங்களும் உண்டானார்கள்" "நாராயணன் ஒருவரேயிருந்தார். ப்ரஹ்மாவும், ருத்ரனும் அப்பொழுது இல்லை. நாராயணர் ஒருவரேயிருந்தார். சங்கரராவது, ப்ரஹ்மாவாவது அப்பொழுது இல்லை. "அவர் முனியாகவிருந்து ஸங்கல்பித்தார். அவரிடமி ருந்து இவையாவும் உண்டாயின." "எவருடைய தொப்பிளில் தோன்றிய தாமரஸ புஷ்பத்திலிருந்து மஹாத்மாவான ப்ரஜாபதி உண்டானாரோ." "அதில் ப்ரஹ்மா உண்டானார்." "அவர் முந்தி மூன்று கண்களுள்ளவரும், மூன்று தலைகளுள்ளவரும்,

மூன்று கால்களுள்ளவருமான ஸம்ஹாரமூர்த்தியை யுண்டுபண்ணினார்" ப்ரஹ்மதேவர், தக்ஷர் முதலியவர் கள், காலம், மற்ற ஸகல ப்ராணிகள் இவைகள் யாவும் மஹாவிஷ்ணுவின் விபூதிகளேயாம். மேலும், ருத்ரன், காலன், அந்தகன் நான்குவிதமான ப்ராணிகள், இவைகள் ஜனார்த்தனனுடைய வீபூதியே. மேற்காட்டிய ச்ருதிகளாலும், ஸ்மிருதிகளாலும், ப்ரஹ்மா, ருத்ரன் இருவர்களும், மஹாவிஷ்ணுவால் ஸிருஷ்டிக்கப்பட்ட வர்கள் என்று தெரியவருகிறது. நாராயணனைக் காட்டிலும் மேற்பட்ட வேறு தத்வமிருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஸகல ஜகத்தும் புருஷனேயாம். ஜகத்தானது அவனை உபஜீவிக்கிறது." "அவருக்கு ஸமானனும் மேற்பட்டவனும் காணப்படவில்லை" ச்ருதிகள் ஓ! அர்ஜுனா! என்னைக்காட்டிலும் மேலானதொன்று மில்லை." ஸ்மிருதி. ப்ரளய காலத்தில் எல்லாம் ப்ரகிருதியில் லயித்திருக்கும் பொழுது ஸகல ஜகத் ரூபியான நாராயணன் ஒருவரேயிருக்கிறார். புண்டரீ காக்ஷனைவிட வேறு மேலான தெய்வமில்லை. மேல்காட்டிய ப்ரமாணங்களால் மஹாவிஷ்ணுவே மேலானவைரென்று ஏற்படுகிறது.

ஆக்ஷேபம்– மும்மூர்த்திகளும் ஒருவரென்றும், விஷ்ணுவைக்காட்டிலும் மேலான தத்வமிருக்கிற தென்றும் ப்ரமாணங்களை காட்டியிருக்கிறோமே.

ஸமாதானம்– அதிற்சொல்லிய சிவ, சம்பூ ஈச, முதலிய சப்தங்களுக்கு நாராயணனென்றே அர்த்தங் கொள்ளவேண்டும். ருத்ரன் முதலியவர்கள் கர்மத்துக்கு வசப்பட்டவர்களென்று சொல்லியிருக்கிறது. வாஸு

தேவன் கர்மவச்யரென்று ஓரிடத்திலும் சொல்லப் படவில்லை. ஆகையால் நாராயணனே எல்லா தெய்வங்களிலும் மேலானவர். அவரை அடைவதற்கு அவரே காரணம். வீர.15–6 ஞானசா –கபிலரால் சொல்லப்பட்ட ப்ரகிருதி புருஷ விஷயமான க்ரந்தம், தபஸ், சாந்த்ராயணம் முதலியவை. வீர. லீலாவதார– ஈச்வரனுடையவை கர்மாதீனமல்ல வென்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–3

பகவதவதாரங்கள்

உலகங்களை ஸிருஷ்டிப்பதற்காக, பகவான் ஆதியில் மஹத்தத்வம், அஹங்காரம் முதலியவைகளுடன் கூடியதும், 16 கலைகளுள்ளதுமான புருஷதேஹத்தை எடுத்துக்கொண்டார். பின்பு ஜலத்தால் உலகமுழுவதும் மூடப்பட்டிருக்க, அவர் அந்த ஜலத்தில் படுத்து யோகநித்ரை செய்தார். அப்பொழுது அவருடைய மடுப்போலிருக்கும் தொப்புளிற் தோன்றிய தாமரை புஷ்பத்திலிருந்து ஒருவர் உண்டானார்;அவரே மரீசி முதலிய ப்ரஜாபதிகளுக்கு அதிபதியாகிய ப்ரஹ்மதேவர். மேற்சொல்லிய புருஷரூபத்தில் ஏற்பட்டிருக்கும் அவயவங்களின் அமைப்புகளால் தேவர்கள், மனிதர்கள் முதலியவர்கள் ஸிருஷ்டிக்கப்பட்டு உலகமானது விஸ்தாரமாகிற்று. மேற்காட்டிய பகவத் ரூபமே சுத்தமானது மேலான ஸத்வகுணமுள்ளது ஞானக் கண்ணுள்ள யோகிகள் இந்த பகவத் ஸ்வரூபத்தை அனேகங்கால்கள், கைகள், முகங்கள், தலைகள், கண்கள், மூக்குகள், காதுகள் என்னும் இவைகளால் அற்புதமான தாகவும், அனேக கிரீடங்கள், குண்டலங்கள் முதலிய வைகளால் ப்ரகாசிப்பதுமாக பார்க்கிறார்கள்:அந்த தேஹத்திலிருந்தே அனேக அவதாரங்கள் வெளிப் படுகின்றன.காரியம் முடிந்தவுடன் அதனிடத்திலேயே அடங்குகின்றன. மேலும் அந்த ரூபம் நாசமற்றது. அதனுடைய அம்சம், ப்ரஹ்மதேவர். அவருடைய அம்சமுள்ளவர்கள், மரீசி முதலிய ப்ரஜாபதிகள். அவர்களாலே தேவர்களும், மனிதர்களும், பசு, பக்ஷி முதலியவைகளும், ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன.

6–28. புருஷ தேஹத்தை அங்கீகரித்த அந்த தேவனே கௌமாரமென்ற ஸிருஷ்டியில் ப்ராஹ்ம மணராயிருந்து, ப்ரஹ்மசர்ய வ்ரதத்தை அனுஷ்டித்து வந்தார். இது ஒரு அவதாரம். மேலுமவர் பன்றி சரீரமெடுத்து பாதாளலோகஞ் சென்று, அவ்விடமிருந்த பூமியை இவ்வுலகத்திற்கு கொண்டு வந்தார். இது மற்றொரு அவதாரம். தவிர ரிஷி ஜன்மாவில் தேவ ரிஷியான நாரதராய் அவதரித்து ஸாத்வத தந்த்ர மென்ற பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தைச் செய்து வெளியிட்டார். அதில் சொல்லிய கர்மங்கள் துக்கத்தைக் கொடுக்கிறதில்லை, (பகவானுடைய ஆராதன ரூபங்களாகையால்) அந்த மஹாபுருஷனே தர்மகலையின் ஸிருஷ்டியில் நரன், நாராயணன் என்ற திவ்யநாமங்களுடன் ரிஷிகளாக அவதரித்தார். அந்த நான்காவது அவதாரத்தில் இந்த்ரியங்களையும் மனத்தையும் அடக்கி கடுமையான தபஸ் செய்தார். அவரே கபிலரென்ற மேலான பெயருடன் ஸித்த புருஷனாக 5–வது அவதாரஞ்செய்து காலமஹிமையில் ஒளிந்து போன தத்வங்களின் உண்மையைத் தெரிவிக்கும் ஸாங்க்ய சாஸ்த்ரத்தை ஆஸுரி என்ற ப்ராஹ்மணருக்கு உபதேசித்தார். பின்னுமொரு சமயத்தில் அத்ரி மஹர்ஷியானவர் மஹாவிஷ்ணுவை நோக்கி "உமக்கு சமமான புத்ரன் எனக்கு உண்டாகும் படி அனுக்ரஹிக்க வேண்டும்" என்று பிரார்த்திக்க பகவான் அப்போர்ப்பட்ட புத்ரன் தம்மைத்தவிர வேறொருவரும் இல்லாமையால் தம்மை அத்ரி ஏமாற்றி விட்டாரென்று வெறுப்பில்லாமல், தானே தத்தாத்ரே யராக அவதரித்தார். மேலும் அவர் அலர்க்கன் என்ற அரசனுக்கும், ப்ரஹ்லாதன் முதலியவர்களுக்கும், ஆன்வீக்ஷகியை (ஆத்மவித்தையை) உபதேசித்தார்.

பின்னுமவர் ஆகூதி என்பவளிடம் ருசி என்பவருக்கு 'யக்ஞர்' என்ற பெயருடன் அவதரித்து ஸ்வாயம்புவ மன்வந்த்ரத்தில் தாம் இந்த்ரனாகவிருந்து தம்முடைய புத்ரர்களான யாமன் முதலிய தேவர்களுடன், உலகத் தைக் காப்பாற்றினார். இன்னும் அந்த பகவான் ஆக்னீதரருடைய புத்ரராகிய நாபி என்பவருக்கு மேருதேவியினிடத்தில் ரிஷபரென்ற பெயருடன் அவதரித்து எல்லா ஆச்ரமங்களிலும் மேலான பரமஹம் ஸாச்ரமத்தை யோகிகளுக்கு உபதேசித்தார். பின்னு மொருக்கால் மஹர்ஷிகளால் ப்ரார்த்திக்கபட்டு ப்ருது வென்ற ராஜர்ஷியாக அவதரித்து, பசுவின்ரூபத்தை தரித்து பூமியினிடமிருந்து ஸகல வஸ்துக்களையும் கறந்து உலகத்தைக்காப்பாற்றியதால், இந்த அவதாரம் மிகவும் விரும்பத் தக்கதாயிருந்தது. தவிரவும் சாக்ஷுஷமன்வந்தரத்தில் ஸத்யவ்ரதருக்காக மாயையால் காண்பிக்கப்பட்ட ப்ரளயத்தில், மத்ஸ்யரூபத்தை தரித்து பூமியாகிய ஓடத்தில் வைவஸ்வத மனுவாக ஆகப்போகிற ஸத்யவ்ரதரை வைத்து காப்பாற்றினார். அந்தப்ரபுவே, தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து ஸமுத்ரத்தை அமிருதத்திற்காகக் கடையும்போது, ஆமை உருவம் கொண்டு மத்தாகிய மந்தரமலையை, முதுகில் தாங்கினார். அவரே தன்வந்தரியாக அவதரித்தும், பிந்தி மோஹினி வேஷங்கொண்டு, அஸுரர்களை மோஹிக்கச் செய்து, தேவர்களுக்கு அமிருதத்தைக்கொடுத்து புஜிக்கவும் செய்தார். மிக்க பலிஷ்டனாகிய, ஹிரண்யகசிபுவை நரஸிம்ம சரீர மெடுத்து பாயைப் பின்னுகிறவன் கோரையைப் பிளப்பது போல் நகங்களால் துடையில் கிழித்து அவனைக்கொன்றார். இது பதினான்காவது அவதாரம். பின்னுமொரு ஸமயத்தில், மஹாபலியென்ற அஸுரன்

யாகஞ்செய்யும்பொழுது, பகவான் வாமனரூபியாக அவனுடைய யாகசாலை சென்று மூன்றடி பூமியை யாசித்தார். மேலும் அதனால் அவனிடமிருந்து ஸ்வர்க்க ராஜ்யத்தை பிடுங்கிக்கொண்டு அவனை நிக்ரஹித்தார். இது பதினைந்தாவது அவதாரம். பின்னுமொருக்கால் பூமியில் பரசுராமனாக அவதரித்து தர்ம விரோதஞ் செய்யும் அரசர்களை கோபத்துடன் இருபத்தொருதரம் கொன்று பூமியில் க்ஷத்ரிய வம்சமில்லாமலொழியச் செய்தார். இது பதினாறாவது. அந்த பரமபுருஷனே ஸத்யவதியிடத்தில் பராசரருக்கு வ்யாஸராய் அவதரித் தார். இவருடைய காலத்தில் மந்தபுத்தியுள்ளவர்களாக யிருந்த படியால் வேதங்கள் சாகை சாகையாக பிரிக்கப்பட்டன. மேலும், ராவணன் முதலிய ராக்ஷஸர் களை கொல்வதற்காக ஸ்ரீ ராமாவதாரஞ்செய்து, ஸமுத்ரத்தில் அணைகட்டியது முதலிய ஆச்சர்யங் களைக் காட்டினார். இது பதினெட்டாவது அவதாரம். பின்பு விருஷ்ணி குலத்தில் பலராமன், ஸ்ரீ கிருஷ்ணன் என்ற திவ்ய நாமதேயங்களுடன் அவதரித்துப் பூமியின் பாரத்தை நிவர்த்தித்தார். இது பத்தொன்பதாவது அவதாரம். பின்பு கலியுகத்தில் கீகடம் (மத்ய கயை) என்ற தேசத்தில் புத்தனென்ற பெயருடன் ஜினருக்கு (சுத்தோதனனென்று சிலர்) புத்ரனாக அவதரிப்பார். கலியின் முடிவில் யுகஸந்தியில் அரசர்களெல்லோரும் பெரும்பாலும் திருடர்களாக ஆய்விடுவார்கள். அப்பொழுது ஜகத்திற்கு குருவாகிய பகவான் கல்கியென்ற பெயருடன் விஷ்ணுயசஸ் என்பவருக்குப் புத்ரனாக அவதரிப்பார். இது இருபத்தொன்றாவது அவதாரம்.

ஓ! "ப்ராஹ்மணர்களே! குறையாத, ஜலமுள்ள

பெரிதாகிய ஏரியிலிருந்து அனேக வாய்க்கால்கள் ஒடுவது போல, ஸத்வ மூர்த்தியாகிய விஷ்ணுவின் அவதாரங்கள் கணக்கிட முடியாதவைகள். ரிஷிகள், முனிகள், தேவர்கள், மனுவின் புத்ரர்கள், ப்ரஜாபதிகள் எல்லோரும் மஹாவிஷ்ணுவின் அம்சாவதாரமே தவிர வேறில்லை. மேலும், முன்காட்டிய படியுள்ள பகவானுடைய அம்சங்கள், கலைகள், விபூதிகள், ஸாக்ஷாத் விஷ்ணுவாகிய கிருஷ்ணன் இவர்கள், அஸுரர்களால் உலகத்திற்கு உபத்ரவம் நேரும்போது அவர்களை நிக்ரஹித்து உலகத்தைச் ஸுகிக்கச் செய்கிறார்கள்.

29. இந்தப் பகவானுடைய அதிரஹஸ்யமான அவதாரங்களைக் காட்டும் ச்லோகங்களைக் காலையிலும், மாலையிலும், சுத்தனாய் பக்தியுடன் படித்தவன் ஸம்ஸார துக்கத்திலிருந்து நிவர்த்தியடைகிறான்.

30–39. ரூபமில்லாதவனும், சித்ரூபியாயுமிருக்கும் ஜீவனுக்குப் பகவானுடைய மாயையின் குணங்களாகிய மஹத்தத்வம் முதலியவைகளால் இந்த ஸ்தூலசரீர மேற்படுத்தப்பட்டது. வாயுவை (காற்றை) ஆச்ரயித்த மேகங்கள் ஆகாயத்திலிருப்பதாயும், பூமியின் தூளிக்காற்றிலிருப்பதாகவும், அக்ஞர்கள் நினைப்பது (ஆரோபிப்பது) போல எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாயிருக்கும் ஆத்மாவினிடம் சரீரம் ஆரோபிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஸ்தூல சரீரத்திற்கு மேற்பட்டதும் கை, கால் முதலிய அவயவ பரிமாணங்களற்றதும், பார்க்கப்படாததும், கேட்கப்படாததாயும், ஸூக்ஷ்மமாயும், ஜீவனுடைய உத்கிறந்தி (வெளியில் போவது) முதலியவைகளுக்கு ஸாதனமாயுமுள்ள லிங்க சரீரமும் முன்காட்டியதுபோல ஆரோபிக்கப்படுகிறது. ஸ்தூல

சரீரம் லிங்கசரீரமாகிய இவைகள் பரமாத்மாவினிடம் ஆரோபிக்கப்படுவதற்குக்காரணம் அவித்யையே, உண்மையில் ஆத்மாவிற்கு இவ்விரண்டின் ஸம்பந்தமுமில்லை. இம்மாதிரியான உண்மையான ஸ்வரூபஜ்ஞானம் எந்தக்காலத்தில் உண்டாகிறதோ அப்பொழுது ஜீவன், ஞான ஸ்வரூபியான ப்ரஹ்மாத்ம பாவத்தையடைவான். ஈச்வரனுடைய மாயையானது ஓய்வடையுமானால் அப்பொழுது ஜீவன் ப்ரஹ்மமாக ஆகிறான். பரமானந்த ரூபியாய் விளங்குகிறான். அந்தர்யாமியான பகவான் ஒன்றையுஞ் செய்யாமலிருப்பவரானாலும் கர்மங்களை செய்கிறவரென்றும், உத்பத்தியில்லாதவரானாலும் பிறந்தாரென்றும், கவிகள் வேதத்தின் ரஹஸ்யமான விஷயத்தை வர்ணிப்பது ஜீவனுக்கு பிறப்பு முதலியவைகளுண்டென்று சொல்வதுபோல மாயையேதவிற வேறில்லை. வீண்போகாத லீலைகளுள்ளவரும், ஸகல ப்ராணிகளிடம் மறைந்திருப்பவருமான ஈச்வரனே இந்த லோகத்தைப் படைக்கிறார்;காப்பாற்றுகிறார்; ஸம்ஹரிக்கிறார். ஆனாலும் ஸ்வதந்தரராகையால் ஆறு இந்த்ரியங்களுக்கு யஜமானராயிருப்பதால் அதுகளின் விஷயங்களை வெகு தூரத்திலிருந்தே க்ரஹிக்கிறார். அவைகளில் ஸம்பந்தப்படுகிறதில்லை. மூடன் எப்படி நடனம் (நர்த்தனம் செய்கிறவனால்) செய்யப்படும் அபினயத்தை அறியமாட்டானோ அப்படி அற்பபுத்தி யுள்ளவன் ஸகல ஜகத்தைப் படைப்பவரும், ஸங்கல்பத்தால் ரூபங்களையும் வாக்கினால் பெயர்களையும், விஸ்தரிப்பவருமான பகவானுடைய லீலாவிபூதிகளை யுக்தி(தர்க்கம்) முதலியவைகளின் ஸாமர்த்யத்தால் அறியமாட்டான். ஆனால், நல்மார்க்கத்தை ஸ்தாபிப்பவரும், சத்ருக்களை ஜயிக்கும் வீர்யமுள்ளவரும் சக்ராயுதம் தரித்தவருமான பரமாத்மாவின் ஸ்வரூபத்தை,

இடைவிடாமல் கபடமற்று பகவானுடைய பாதங்களாகிய தாமரஸ புஷ்பத்தின் வாஸனையை ஸேவிக்கும் பக்தனே ச்ரமபட்டு தெரிந்துகொள்ளுகிறான். ஓ ப்ராஹ்மணர்களே! இதைத் தெரிந்து கொண்டு ஸகல லோகத்திற்கும் நாதராகிய ஸ்ரீ வாஸுதேவரிடம், எவர்கள் இடைவிடாமல் மனத்தைச் செலுத்துகிறார்களோ, அவர்களுக்குக் கர்ப்பவாஸம் முதலிய துக்கத்தை உண்டுபண்ணும் பிறப்பு இறப்பு நேரிடமாட்டாது. ஆதையால் எல்லாவற்றையும் அறிந்த அந்த பக்தர்களே தன்யர்கள் (மேலானவர்கள்)

40–44. ஸர்வஜ்ஞரான வேதவ்யாஸ மஹர்ஷி உத்தமச்லோக (நல்வினையை கொடுப்பதால் மேலான பெயருள்ள) ராகிய பகவானுடைய சரித்தத்தைக் காட்டுகிறதும். வேதங்களுக்கு ஸமமாயுள்ளதுமான ஸ்ரீமத் பாகவத புராணத்தைச் செய்து முடித்தார். பிறகு உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டி ஸகல மங்களங்களுக்கும் இருப்பிடமாயும், அர்த்தத்தாலும், சப்தத்தாலும் மிகவும் மேலானதுமான அந்தப் புராணத்தை, யோகிகளுக்குட் சிறந்தவரும், தம்முடைய புத்ரரத்னமுமாகிய சுகருக்கு உபதேசித்தார். அந்தச்சுகர் எல்லாவேதங்களிலும், இதிஹாஸங்களிலுமிருந்து அவற்றின் ஸாரத்தை எடுத்து செய்யப்பட்ட இந்தச் சாஸ்த்ரத்தை, கங்கைக்கரையில் மிகுந்த வைராக்கியத்துடன், ப்ராயோபவேசஞ் செய்திருக்கும் பரீக்ஷித்து மஹாராஜனுக்கு, அனேக மஹர்ஷிகள் கேட்டிருக்கும் போது சொன்னார். இவ்விதமாக அது பூமியில் பரவியது. ஓ! ப்ராஹ்மணர்களே! அந்த ஸமயத்தில் நான் அவ்விடம் போனேன். மேலும் அவ்விடத்தில் உட்கார்ந்திருந்த மிகுந்த தேஜஸுள்ள அந்த ப்ரஹ்ம

ரிஷியான சுகருடைய அனுக்ரஹம் பெற்றேன்; நீங்களனைவரும் 'அதன் விஷயத்தை தெரிந்துகொள்ள வேண்டும்' என்று மிகுந்த ஆவலுள்ளவர்களாய் இருப்பதால் நான் சுகரிடம் கேட்டபடி, என்புத்திக் கெட்டியவரையில் சொல்லுகிறேன். (கிருஷ்ணபகவான் தர்மம், ஞானம் இவைகளுடன் தமது லோகஞ்சேர்ந்த பிறகு கலியில் ஞானக்கண்ணில்லாமல் கஷ்டப்படும் ஜனங்களுக்கு இந்த புராணமாகிய ஸூர்யன் உதயமாகி இருக்கிறது.)

நோட்டு.

17–22. 16 கலைகள்– இந்த்ரியங்கள் 11, ஐந்து பூதங்கள், இந்த பதினாறு கலைகள், பகவானுடைய சரீரம் உண்மையில் இப்போர்ப்பட்டதல்ல. ஆனாலும், விராட்தேஹத்தின் அந்தர்யாமியாயிருக்கும் பகவானை விராட்ரூபமாக உபாஸிப்பதற்குபயோகமாகச் சொல்லப் பட்டது. ஸ்ரீத. 18–12. [illegible]ளமார– இவருக்கு ஸனத்குமாரரென்று பெயர். ஆனால் இவர் ஸனகர் முதலியவர்களில் சேர்ந்தவரல்ல. விஜயத் ஆதிபுருஷன் ப்ரஹ்மதேவருடைய ஸ்வரூபமாகவிருந்து ஸனத்குமாரர் முதலியவர்களாக அவதரித்தார். பிறகு ஈச்வரனை யுபாஸித்தார். அவர்கள் அனுப்ரவேசாவதார ரூபிகளெனப்படுவார்கள். மேலுமவர்கள் அவித்யையுள்ளவர்களேயாம். ஆனாலும் பகவானையுபாஸித்துக் காலாந்தரத்தில் ஞானத்தை யடைவார்கள். வீர இது இந்த ஒரு அத்யாயத்தில் 21 அவதாரங்கள் நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. ஆனாலும் அவைகள் வரிசையாகச் சொல்லப்படவில்லை. ஆனாலும் இவ்விடத்தில் சொல்லிவருவதில் முதலாவது என்பதேயாம். ஸ்ரீத.

16 தேவர்ஷி–மஹிதாஸரென்ற மஹர்ஷி. விஜ20. தர்ம– யமனுடைய அம்சம். ஸ்ரீத. கபிலர்– இவர் ப்ரஸித்தராகிய கபிலரல்லவென்று சிலர். விஜ. 31 வெறுப்–மூலத்தில் அனஸூயயா என்றிருப்பதால், அத்ரியின் பத்னியாகிய அனஸூயை யென்பவளால் அடையப்பட்டார்.– வீர. விஜ. 19–4. யாம– ஒவ்வொரு மன்வந்தரத்திலும் தேவர்களுடைய பெயர் மாறுகிறதுண்டு– விஜ. நாபி–ஸ்வாயம்புவ மனுவின் புத்ரர்– வீர. இந்த்ரனுடைய புத்ரன்.– முனிமஹர்ஷி– வேனனைக்கொன்ற பிறகு.– வீர மாயையால்– மன்வந்தரத்தின் முடிவில் ப்ரளயமில்லாமற் போனாலும், அக்காலத்தில் மார்க்கண்டேயருக்குக் காண்பித்தது போல காண்பிக்கப்பட்டது– ஸ்ரீத. துடையில்– மடியில் வைத்துக்கொண்டு. விஜ வாமன– துஷ்டர்களுடைய கர்வத்தைக் குறைப்பதால் இப்பெயர் கிடைத்தது– ஸ்ரீத. கோபத்துடன்.– சக்தியில்லாதவனுக்குக் கோபமுண்டாகுமேயல்லாமல், ஸாமர்த்யமுள்ளவர்களுக்கு கோபமுண்டாக ந்யாய மில்லையாகையால் கோபங்கொண்டவர்போல வென்பது கருத்து– விஜ. ரிஷிகள்– மனுவின் புத்ரர்களாகிய ப்ரியவ்ரதர் முதலியவர்கள்.– விஜ. கலைகள்– குமாரர்கள், நாரதர் முதலியவர்கள். கலாவதாரபூதர்கள், அதிலும் குமாரர் முதலியவர்கள் ஞானமுள்ளவர்கள் ப்ருது முதலியவர்கள் பகவானு டைய சக்தி விசேஷமுள்ளவர்கள்– ஸ்ரீத. விபூதிகள்– "எந்தப்ராணிகள் விபூதியுள்ளனவைகளோ, எது அழகு பொருந்தியதோ, எது பலமுள்ளதோ, அவைகள் யாவும் என்னுடைய தேஜஸ்ஸின் அம்சத்திலிருந்து உண்டானவர்கள்" பகவத்கீதை. ரூபமில்லாத–ஜீவனுக்கு தேஹஸம்பந்தம் விஷ்ணுவின் மாயையால் ஏற்பட்ட

தாகையால் ஞானத்தால் அந்த அவித்யை நிவர்த்தி யாகிறதென்பது இதுமுதல் ஐந்து ச்லோகங்களால் காட்டப்பட்டிருக்கிறது. ஸ்ரீத. ஆரோபி- நான் தேவன், இந்த சரீரம் என்னுடையது, என்ற அபிமானத்திற்கு விஷயமாகச் செய்யப்பட்டிருக்கிறது. உண்மையில் தேவர்கள் முதலிய சரீரம் ஜீவனுடைய ஸ்வரூபமல்ல.

ஆக்ஷேபம்– தேவசரீரம் முதலியவைகள் அவை களுக்கு அபிமானியாகிய ஜீவனால் தரிக்கப்படுகிற தாகையால் அவனுடையதென்று ஏன் சொல்லக்கூடாது?

ஸமாதானம்– "எவனுக்கு ஆத்மா சரீரமோ எவன் ஆத்மாவினிடத்திலிருக்கிறானோ" என்ற ச்ருதிப்படியும். ஜீவனும் பரமபுருஷனால் தரிக்கப்படுகிறபடியால் எல்லாவற்றிற்கும் பரமாத்மாவே முக்யமான ஆதாரம்– வீர. ஆகாயம் வாயு இவைகள் கண்ணிற்குப் புலப்படாதவைகளானாலும், மேகக்கூட்டத்தை ஆகாசமென்றும், பூமியிலிருந்து கிளம்பும் தூளிகளை வாயுவென்றும் சொல்வதுபோல, அக்ஞஜனங்கள் ப்ரதிமையைப் பார்த்து அதையே ஈச்வரனென்று சொல்லுகிறார்கள். அதனால் ஸர்வ ஸாக்ஷியான பகவான், இந்த்ரியங்களால் பார்க்கக்கூடியவர் (த்ருச்யர்) என்றும் சித்ரூபியான அவர் ஜடரென்றும் ஏற்படுகிறது. ஆகையால் இது ப்ராந்தியேயாம்.– விஜ. ஸூக்ஷ்மம்– "இவன் அவ்யக்தன், நினைக்கமுடியாதவன் விகாரமற்ற வன்"– பகவத்கீதை. ஒன்றையும்– புண்யபாபங்களற்ற வர், கர்மாதீனமான சரீரமில்லாதவர்–வீர. ரஹஸ்யம்.– உத்பத்தியை அடையாமலே பலவகையாக உண்டா கிறார்" என்ற ச்ருதியில் உத்பத்தியடையாதவரென்றால்

ஜீவன்போல் கர்மாதீனமாக ஜன்மமில்லாதவரென்றும் தனதிஷ்டப்படி பகவானுக்கு உத்பத்தியுண்டென்றும் அர்த்தம். அதைக் கவிகளே அறிவார்கள். "தீரர்கள் அந்தப் பகவானுடைய சரீரத்தை அறிகிறார்கள்" ச்ருதி: ஆகையால் பகவானுடைய ஜன்மகர்மங்கள், ஜீவனுடையது போன்றவைகள் என்று நினைக்கக் கூடாது என்பது வேதவாக்யத்தாலேயே காட்டப் பட்டிருக்கிறது– வீர லீலைகள் ஜீவன் அனாதியாகிய கர்மத்தால் புண்ய பாபங்களைச் செய்து அதனால் ஸகல துக்கங்களை அடைவதுபோல் பகவானுடைய செய்கைகள் அவரைக்கட்டுப்படுத்துகிறதில்லை. மேலும் அவைகள் அவருக்கு லீலைகளாகும். அவைகள் வீண் போகாதவைகள் என்றதால் ஜீவனுடைய கர்மங்கள் அனேக விக்னமுள்ளவைகள் என்று காட்டப்பட்டன. இப்படி பலவகையிலும் ஜீவனைக்காட்டிலும் மேலானவரென்பது தாத்பர்யம். ஆறு– ஞானம், சக்தி, தேஹபலம், ஐச்வர்யம், வீர்யம் தேஜஸ் இவைகளுக்கு அதிபதி. அல்பபுத்தி– நான், என்னுடையது என்ற அபிமானமுள்ளவன். நடன– வேஷதாரியானவன், பலவகையான வேஷங்களைத் தரித்தாலும் எப்படி இவன் வேறாக ஆகிறதில்லையோ, அப்படி பகவான் மத்ஸ்யம், ஆமை முதலியவைகளின் உருவங்கொண்டாலும் அவருடைய உண்மையான ரூபம் மாறுகிறதில்லை மேலும் வேஷம் தரிப்பது முதலிய சேஷ்டைகள் அவனுக்கு விளையாட்டாயிருப்பது போல் பகவானுக்கும் அவைகள் லீலைகளேயாகும். அறிந்த– பகவந்த: என்ற பதத்திற்கு நீங்கள் என்று அர்த்தங்கொண்டு ஏ சௌனகர் முதலியவர்களே! நீங்கள் மேலானவர்கள். ப்ராயோபவேசம்– ஜீவித்திருப்பதில் ஆசையில்லாமல் ஆஹாரமில்லாமலிருக்கிறதாகிய வ்ரதம் வீர.–விஜய.

அத்யாயம்–4.

வியாஸர் கவலை யடைந்தது.

அதனைக் கேட்டுத் தீர்க்கஸத்ரம் செய்துகொண்டிருக்கும் மஹர்ஷிகளுக்குள் வயது சென்றவரும், கூட்டத்தில் முக்யரும், ரிக்வேதியுமாகிய சௌனகரென்பவர் ஸூதரைக் கொண்டாடிப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினார்.

2–13. "ஓ மிகுந்த பாக்யமுள்ள ஸூதரே! பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சுகஸ்வாமியால் சொல்லப்பட்ட புண்யகரமான ஸ்ரீமத் பாகவதகதையை எங்களுக்குச் சொல்லவேண்டும். கதை சொல்வதில் தாங்கள் மிக்க ஸாமர்த்யமுள்ளவர்கள். இந்தக்கதை எந்தயுகத்தில் எந்தவிடத்தில் நடந்தது எதற்காக யாரால் தூண்டப்பட்டு, இந்த கிரந்தத்தை வ்யாஸமஹாமுனிவர் செய்தார். மேலும் அவருடைய புத்ரரான சுகரென்பவர் மஹாயோகி; தாம், பிறர் என்ற பேதபுத்தியில்லாமல் எல்லாவற்றையும் ப்ரஹ்ம ஸ்வரூபமாகப் பார்ப்பவர். பரமாத்மாவினிடத்திலேயே புத்தியைச் செலுத்தியவர், மாயையாகிய தூக்கத்தைவிட்டு விழித்தவர். இவருடைய ஸ்வபாவம் வெளியில் தெரியாது. பார்வைக்கு மூடன்போல் தோன்றுகிறவர். இவர் குரு ஜாங்கலமென்னும் தேசத்தில் ஹஸ்தினாபுரத்தில் பயித்தியம் பிடித்தவன் போலவும், ஊமையன் போலவும், மூடன் போலவும் ஸஞ்சரிக்கும்போது, இவருடைய உண்மையைப் பட்டணத்து ஜனங்கள், எப்படித்தெரிந்து கொண்டார்கள்? இவர் எல்லா ஆசைகளையும் ஒழித்துத் துறவியாய்ப் போகும்போது பிதாவாகிய

வ்யாஸமஹர்ஷி புத்ரஸ்நேஹத்தால் அவர் பின்செல்ல வ்ழியில் ஜலக்ரீடை செய்துகொண்டிருந்த அப்ஸர ஸ்த்ரீகள், வஸ்த்ரமில்லாதவரும், யுவாவுமாகிய சுகரைக் கண்டு வெட்கப்படவில்லை. இவருக்குப்பின்னே வருகின்றவரும், மரவுரியை யுடுத்திக்கொண்டவரும் வயது சென்றவருமான வ்யாஸ மஹர்ஷியைப் பார்த்த வுடன் வெட்கமடைந்து தம்தம் ஆடைகளையுடுத்திக் கொண்டார்கள். இந்த ஆச்சர்யத்தைக் கண்ணுற்ற மஹர்ஷியானவர், அவர்களை இது விஷயமாகக் கேட்க அவர்கள் மஹர்ஷியை நோக்கி "புருஷன், ஸ்திரீ, என்ற பேதபுத்தி உமக்கிருக்கிறது. சுத்த திருஷ்டியுள்ள உம்முடைய புத்ரருக்கு அம்மாதிரியான எண்ணமில்லை" என்று பிரத்யுத்தரஞ் சொன்னார்கள். அப்போர்ப் பட்ட சுகருக்கும், பாண்டுவின் வம்சத்தில் பிறந்த பரீக்ஷித்து மஹாராஜனுக்கும் எப்படி ஸம்வாதம் (பேச்சு) நேர்ந்தது? அதனாலல்லவா இந்த பாகவத கதை வெளிப்பட்டது. இவர் கிருஹஸ்தர்களுடைய வீட்டிற்குப் பிக்ஷைக்காகச் சென்றால் அந்த கிருஹத்தை சுத்தப்படுத்துவதற்காக ஸ்வல்பகாலம் (மாடு கறப்பதற்கு எவ்வளவுகாலம் பிடிக்குமோ அவ்வள காலம்) காத்திருப்பார். இவர் ஒரே இடத்திலிருந்து பாகவத கதையைச் சொன்னது மிக ஆச்சர்யம். ஏ! ஸூதரே! ஜனங்கள் அபிமன்யுவின் புத்ரராகிய பரீக்ஷித்து மஹா ராஜனைப் பாகவதர் (பகவானுடைய பக்தர்கள்)களுக் குட் சிறந்தவராகச் சொல்லுகிறார்கள். அவருடைய பிறப்பு, மிகவும் அத்புதமானது. ஆகையால் அவருடைய சரிதத்தைச் சொல்லவேண்டும். பாண்டவர்களுக்குக் கீர்த்தியை விருத்தி செய்தவரான அந்தச்சக்ரவர்த்தி தமது அளவற்ற ராஜ்யத்தையும், லக்ஷ்யஞ்செய்யாமல், என்ன காரணத்தால் கங்கையின் கரையில் ப்ராயோப

வேசஞ் செய்தார். ஓ! ஸூதரே! சத்ருக்கள் உத்தம வஸ்துக்களை காணிக்கையாக எடுத்துவந்து தங்களுடைய க்ஷேமத்திற்காக அவருடைய பாதபீடத்தை (கால் வைத்துக்கொள்ளும் ஆஸனம்) நமஸ்கரிக்கிறார்களோ அவ்வளவு பராக்ரமமுள்ள மஹாராஜன் யௌவனமுள்ளவராயினும், ஒழிக்கமுடியாத பணத்தின் ஆசையையும், ப்ராணனிடத்திலுள்ள அபிமானத்தையும், விடவேண்டுமென்று எப்படி விரும்பினார்? உத்தமச்லோகராகிய பகவானிடத்திலேயே ,மனத்தைச் செலுத்தியவர்கள், லோகத்திற்கு க்ஷேமம், ஐச்வர்யம் இவைகளை உண்டுபண்ணுவதற்காக ஜீவிக்கிறார்களே தவிர சொந்தமான கார்யத்திற்காகவல்ல. ஆகையால் இந்த அரசன், சரீரத்தைவிட விரும்பிய காரணம் யாது? (பிறருக்கு உபயோகமான சரீரத்தை தான் கெடுப்பது ந்யாயமல்லவென்பது கருத்து) வேதத்தின் அர்த்தம் தவிர இதிஹாஸ புராணங்களின் அர்த்தங்களைச் சொல்வதில் மிக்க ஸாமர்த்யமுள்ள வரென்று உங்களை நினைக்கிறேன். ஆகையால் என்னால் கேட்கப்பட்ட எல்லா விஷயங்களையும் சொல்லவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

14–18 இவற்றைக்கேட்ட ஸூதர் சொல்லத் தொடங்கினார் மூன்றாவது த்வாபரயுகத்தின் கடைசியில் வஸுவின் வீர்யத்திற்குண்டான ஸத்யவதியினிடம், பராசரருக்கு புத்ரனாக அவதரித்த ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அம்சம் இந்த வ்யாஸ மஹாமுனியே. இவர் மஹாயோகி. நடந்தது, நடக்கப்போகிறது இவைகளை அறிந்தவர். அவர் ஒருக்கால் ஸரஸ்வதீ நதிக்கரையில் ஆசமனஞ் செய்து சுத்தராய் ஸூர்யோதய காலத்தில், தாம் தனியாய் உட்கார்ந்து "அறியக்கூடாத

வேகமுள்ள காலமஹிமையால் யுகதர்மங்கள் கலந்து போய்விட்டன. ஜந்து பூதங்களுக்கும் சக்தி குறைந்து விட்டது, ஜனங்களுக்கு ச்ரத்தை, தேஹபலம், ஸத்வகுணம், ஆயுஸ் இவைகளும் குறைந்துபோயின. புத்தியோ கெட்டமார்க்கத்தில் செல்லுகிறது" என்று ஞானக்கண்ணால் பார்த்து எல்லா ஜாதியார்களுக்கும் எல்லா ஆச்ரமிகளுக்கும் என்னசெய்தால் அனுகூலம் உண்டாகுமென்று எல்லோருக்குமுபகாரமான விஷயத்தைச் செய்ய விரும்பி யோசித்தார்.

19–23. வேதத்தில் சொல்லப்பட்டதும், நான்கு ரித்விக்குகளால் முடிக்கக்கூடியதும், சுத்தமானதுமான யாகமே ஜனங்களுக்கு அனுகூலத்தைச் செய்யக்கூடிய தென்று நிச்சயித்து அந்தக் கர்மம் எப்பொழுதும் தொடர்சியாய் நடந்தேறி வருவதற்காக ஒன்றாயிருந்த வேதராசியை நான்காகப் பிரித்தார். மேலும் அந்த நான்கு பாகங்களும் ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வம், என்று பெயர்களுண்டாயின. (பாரதம் முதலிய) இதிகாசங்களும்,(பாகவதம் முதலிய) புராணங்களும், ஐந்தாவது வேதமென்று சொல்லப்படுகின்றன. மேற் காட்டிய 'ரிக்,யஜுஸ், ஸாமம், அதர்வ'என்ற நான்கு வேத சாகைகள் பைலர், வைசம்பாயனர், கவியாகிய ஜைமினி, ஸுமந்து என்கிற மஹர்ஷிகளிடம் முறையே ஒப்புவிக்கப்பட்டன. என்னுடைய பிதாவாகிய ரோம ஹர்ஷணரிடம் இதிஹாஸங்களும், புராணங்களும், கொடுக்கப்பட்டன. மேற்சொல்லிய மஹர்ஷிகளே தங்கள் தங்களுடைய வேதசாகைகளை பல வகையாகப் பிரித்தார்கள். அவைகள் அல்ப புத்தியுள்ள இக்காலத்து ஜனங்களால் அத்யயனஞ் செய்யப்படுகின்றன. அவர்கள் தங்கள் தங்கள் சிஷ்யர்களுக்கும் அத்யயனஞ்

செய்வித்து, அவைகளை உலகத்திற் பரவச் செய்தார்கள். யார் யார் எந்த எந்த சாகைகளை அத்யயனஞ் செய்தார் களோ, அவர்வர்களுக்கு அந்த அந்த சாகைகள் சொந்தமாயின.

24–32. தீனர்களிடத்தில் ப்ரீதியுள்ள பகவானாகிய வ்யாஸ மஹர்ஷியால் இப்படி வேதங்கள் பிரிக்கப் பட்டன. ப்ராஹ்மணர், க்ஷத்ரியர், வைச்யர் ஆகிய இவர்களுக்குள், அதமர்களாகிய த்விஜபந்துக்களுக்கும், ஸ்திரீகளுக்கும், சூத்ரர்களுக்கும், வேதத்தைக் கேட்க அதிகாரமில்லாததனால், அவர்கள் இதிஹாஸத்தால் க்ஷேமத்தை யடையட்டுமென்னுங் கருணையால், வ்யாஸமஹர்ஷி மஹா பாரதம் என்ற க்ரந்தத்தைச் செய்தார். ஓ! ப்ராஹ்மணர்களே, இப்படி எப்பொழுதும் எல்லாப் பிராணிகளுக்கும் க்ஷேமத்தை செய்வதிலேயே நோக்கமுள்ள அந்த மஹர்ஷியானவர் எல்லாவற்றையு மறிந்தவராயிருந்தும் அவருடைய மனத்திற்கு சாந்தி உண்டாகவில்லை; அதனால் அவர் ஸந்தோஷமில்லா மல் ஸரஸ்வதி நதியின் சுத்தமான கரையில் தாம் ஒருவராயிருந்து யோஜித்து பின்வருமாறு சொல்லலா னார். "நான் வ்ரதமுள்ளவனாய் வேதங்களை அத்யயனஞ் செய்தேன். குருக்களையும், அக்னியையும் பூஜித்தேன். ஆசார்யனுடைய கட்டளையின்படி கபடமற்று நடந்தேன். பாரதமென்ற வ்யாஜத்தால், வேதத்தின் அர்த்தத்தை எல்லோருக்கும் தெரியும்படி வெளியிட்டேன். அதில் ஸ்திரீகளாலும், சூத்ரர்களாலும், அறியக்கூடியவைகளான தர்மங்கள் காட்டப்பட்டன. அப்படியிருந்தும் என்னுடைய ஆத்மா(ஜீவன்) இயற்கையில் பூர்ணனானாலும், ப்ரஹ்மவர்சஸ் உள்ளவர்களுக்குட் சிறந்தவனானாலும், ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை யடையாதவன் போலத் தோற்றுகிறான்.

இதற்கென்ன காரணம்? இது ஆச்சர்யமாயிருக்கிறது ஆனால் பாகவத தர்மங்கள் விஸ்தாரமாக வெளியிடப் படவில்லை. அவைகளில் பரம ஹம்ஸர்களுக்கு மிகவும் ப்ரியமிருக்குமே. அவைகளே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிற்கு ப்ரியமானவைகள், அதனால்தான் நம்முடைய மனத்திற்கு ஆனந்தமுண்டாகவில்லையோ" என்று யோஜித்து ஆத்மாவை சூன்யனாக நினைத்து வருத்தமடைந்தார்.

33. இந்த ஸமயத்தில் ஸரஸ்வதி நதிக்கரையில் இருக்கும் அந்த வ்யாஸமஹர்ஷியின் ஆச்ரமத்திற்கு நாரதர் வந்தார். அப்பொழுது அந்த மஹர்ஷியானவர் தேவர்களால் பூஜிக்கப்பட்ட நாரதரைக் கண்டு எதிர் கொண்டழைத்து சாஸ்த்ரமுறை தவறாமல் அவரைப் பூஜித்தார்.

நோட்டு.

25–3. தீர்க்க– அநேக வர்ஷங்களால் முடிக்கக்கூடிய யாகம்– சந்த் 14– பேத– மூலத்தில் நிர்விகல்பக என்றிருப்பதால் நிச்சய ஞானமுள்ளவர். ஸமதிருக்– மித்ரன். சத்ரு,. மற்றவர் ஆகிய இவர்களிடத்தில் ஸமபுத்தியுள்ளவர். ஏகாந்தமதி– ஜனஸஞ்சாரமற்ற விடத்தில் வஸிப்பதில் ப்ரியமுள்ளவர். மூட–– எல்லாவற்றையும் அறிந்தவராயிருந்தும் தன்னுடைய ஸாமர்த்யத்தை வெளியிடாதவர்– சந்த். 16–விழித்த–– "ஸகல ப்ராணிகளுக்கும் எது ராத்ரியோ, அதில் யோகியானவன் விழித்துக் கொண்டிருக்கிறான்.பகவத் 26–33. மூன்றாவது– மஹாயுகத்தில். 26–28. வேதத்தின்– இவர் ஸூதஜாதி யாகையால் வேதத்தில் இவருக்கு அதிகாரமில்லையென்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–5.

வ்யாஸருக்கு நாரதர் உபதேசித்தது.

பின்பு மிகுந்த கீர்த்தியுள்ளவரும், எப்பொழுதும் வீணையைத் தரித்தவரும், தேவர்ஷியுமான நாரதர் ஸமீபத்தில் ஸுகமாய் உட்கார்ந்திருக்கும் ப்ரஹ்மர்ஷி யாகிய, வ்யாஸமஹர்ஷியை நோக்கி ப்ரஸன்னமுக முள்ளவராய்ப் பின்வருமாறு சொல்லத்துடங்கினார்; "ஓ! மஹா பாக்யமுள்ள பராசர புத்ரரே! உம்முடைய சரீராபிமானியான ஆத்மாவானது (ஜீவன்) அந்தச் சரீரத்தாலும், மனத்திற்கு அபிமானியான ஆத்மா வானது, அந்த மனத்தாலும் ஸந்தோஷப்படுகிறதா? அறியவேண்டிய ஸகல தர்மங்களையும் பூர்ணமாகக் காட்டுவதும், ஆச்சர்யத்தை யுண்டுபண்ணுகிறதுமான மஹா பாரதத்தை விஸ்தாரமாகச் செய்தவர் நீரன்றோ? ஆகையால் விஷயம் யாவும் உமக்குத் தெரிந்திருக்க லாமே. மேலும் நீர் நித்யவஸ்துவாகிய, பரமாத்ம ஸ்வரூபத்தை நன்றாக விசாரித்து அறிந்தவரல்லவா? அப்படியிருந்தும், ஒன்றையும் அறியாதவர் போல ஏன் துக்கிக்கிறீர்?" என்று கேட்டார்.

4–11. இதனைக் கேட்ட வ்யாஸ மஹா முனியானவர், பின்வருமாறு சொல்லத் தொடங்கினார். "தாங்கள் சொன்னவைகள் யாவும் என்னிடம இருக்கின்றன. ஆனாலும் என்மனத்திற்கு ஸந்தோஷம் உண்டாகவில்லை. அதன் காரண மின்னதென்றும் விளங்கவில்லை பரம் (கார்யம்) அபரம் (காரணம்) இவைகளுக்கு அதிபதியும், ஸங்கல்பமாத்ரத்தால் முக்குணங்களைக் கொண்டு ஜகத்தை ஸிருஷ்டிப்பவரும்

அவைகளைக் காப்பாற்றுபவரும் பின்னும் அவைகளை நாசஞ்செய்பவரும், அவைகளில் ஸம்பந்தப் படாதவருமான புராண புருஷனை, நீர் உபாஸித்தவர், ரஹஸ்யங்களான விஷயங்கள் யாவும் தங்களுக்குத் தெரியும். மேலும் நீர் ஸூர்யன்போல மூவுலகத்திலும் ஸஞ்சரிப்பதால் எல்லாவற்றையும் அறிந்தவர். ஸகல ப்ராணிகளினுள்ளில் ஸஞ்சரிக்கிற ப்ராணவாயுபோல எல்லாருடைய புத்தியின் ப்ரவர்த்தியையும் அறிந்தவர். ஆனதுபற்றி ப்ரஹ்ம புத்ரராகிய உம்மைக் கேட்கிறேன் வேதங்களை முறைப்படி அத்யயனஞ்செய்து, அதன் உண்மையான அர்த்தத்தைபறிந்து, வ்ரதங்களை யனுஷ்டித்து, யோகத்தால் ப்ரஹ்மஸ்வரூபத்தையும் அறிந்தேன். அப்படியிருந்தும் எந்தப் பாகம் எனக்கு மிகவும் குறைவாயிருக்கிறதோ அந்த பாகத்தை யுபதேசிக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்தார். அதனைக்கேட்ட நாரதர், வ்யாஸமஹாமுனியை நோக்கி, "இயற்கையில் பரிசுத்தமான பகவானுடைய யசஸ்ஸை, (குணங்களை) வர்ணிப்பதால் பரமாத்மா ஸந்தோஷிப்பார். மற்ற ஞானத்தால் பகவான் திருப்தி அடையமாட்டார்; ஆகையால் தர்மாதி ஞானத்தைக் குறைந்ததாக நினைக்கிறேன். உம்மால் அந்த பகவானுடைய குணங்கள் பெரும்பாலும் முக்யமாக வர்ணிக்கப்படவில்லை. மஹாபாரதம் முதலியவைகளில் ஈச்வரனுடைய குணங்கள் வர்ணிக்க பட்டிருந்தாலும் தர்மங்களையும் அதன் ஸாதனங்களையும், முக்யமாக, மஹர்ஷிகள் ஸ்மிருதிகளில் சொல்லியிருப்பதுபோல, பரமாத்மாவின் மஹிமையையே ப்ரதானமாக நீர் வர்ணிக்கவில்லை. எச்சிற்குழியில் கிடக்கும் சித்ரான்னம் முதலியவைகளைக் காக்கைகள் தின்று திருப்தி அடையுமேயொழிய, மானஸ ஸரஸில் ஸஞ்சரிக்கும்

ஹம்ஸங்கள். அவைகளில் ஆசைப்படுகிறதில்லை. அப்படிப்போல லோகத்தைப் பரிசுத்த படுத்தும் பகவானுடைய மஹிமையை வர்ணிக்காத க்ரந்தங்கள், அற்புதமான பதச்சேர்க்கையுள்ளவைகளானாலும், அவற்றால் காமிகள் ஸந்தோஷப்படுவார்களே யொழிய ப்ரஹ்மிஷ்டர்களான பரமஹம்ஸர்கள் திருப்தியடைகிற தில்லை. ஒவ்வொரு ச்லோகத்திலும் அபசப்தங்கள் இருந்தாலும், நாசமற்றவராகிய பகவானுடைய திவ்ய நாமங்களும், மஹிமையும் வர்ணிக்கபட்டிருந்தால் அந்த க்ரந்தம் ஜனங்களுடைய பாபங்களை போக்கும். அதைச் சொல்பவர்களிருந்தால் பெரியோர்கள் கேட்பார்கள். கேட்பவர்களிருந்தாலும் அவர்கள் சொல்லுவார்கள். இரு வகையாருமில்லாத போது தாமே கானஞ்செய்வார்கள்.

12–22. உபாதிகளின் ஸம்பந்ததத்தை நிவர்த்திக்கும், ப்ரஹ்மஞானமும், பகவத்பக்தியில்லாதவனுக்குப் பலனை (அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தைக்) கொடுக்கிறதில்லை. மேலும் கர்மங்கள் எப்பொழுதும் துக்கரூபங்கங்களே. ஆதலால் பலனையுத்தேசித்துச் செய்யப்பட்டனைகள் ஆனாலும், பலனை யுத்தேசியாமல் செய்யப்பட்டவை களானாலும், பகவானிடம் அர்ப்பிக்கபடாதவரையில் அவைகள் ப்ரகாசிக்கிறதில்லை. ஓ! மஹாபாக்யமுள்ள வ்யாஸமஹர்ஷியே! நீர் உண்மையான ஞானமுள்ளவர்; சுத்தமான கீர்த்தியுள்ளவர்; ஸத்யத்திலேயே ஆசை உள்ளவர்; வ்ரதங்களை யனுஷ்டித்தவர்; ஆகையால் ஸகலபந்தங்களும் நிவர்த்தியாக வேண்டியதற்காகப் பகவானுடைய பலவகையான லீலாவிபூதிகளை ஒரே மனதாகச் சிந்தியும். பகவானுடைய சரித்தில் ஆசையில்லாமல், மற்ற சரிதங்களைச் சொல்ல

விரும்பியவர்களுடைய புத்தியானது தேவதா ரூபங்களையும், அநேக நாமங்களையும், சிந்தித்து நிலைபெறாமல் பெருங்காற்றிலகப்பட்ட கப்பல் போல, ஒரு நிலையாய் இருக்கிறதில்லை. ஜனங்கள் இயற்கையாகவே காம்ய கர்மங்களில் ஆசையுள்ளவர்கள். அந்தக்கர்மங்கள் ஞானிகளால் நிந்திக்கக்கூடியவைகளானாலும் அவைகளை தர்மங்களென்றே சொல்லியிருக்கிறீர். ஆகையால் அவைகளை ப்ராகிருத ஜனங்களும் அப்படியே நினைத்திருக்கிறார்கள். "கர்மங்களாலும், ப்ரஜையாலும், தனத்தாலும், மோக்ஷத்தையடைய முடியாது" என்ற ச்ருதியின்படி காம்ய கர்மங்கள் சிறந்தவைகளல்ல என்று ஞானிகளுடைய வார்த்தையை அக்ஞர்கள் நம்புவதற்கு ந்யாயமில்லாமல் இருக்கிறது. இப்படி நீர் செய்தது, ஒரு பெரிய சாஸ்த்ர விருத்தமான கார்யம். ஆனது பற்றி, காலத்தாலும், தேசத்தாலும், அளவிடக் கூடாத ப்ரபுவின் ஸகலஸ்வரூபத்தை நிவிர்த்தி மார்க்கததைக்கொண்டு வித்வான்தான் தெரிந்து கொள்வான். அது அக்ஞனால் அறிய முடியாது. ஆகையால தேஹம் முதலியவைகளில் அபிமானம் உள்ளவர்களும், ஸத்வம் முதலிய குணங்களால் விஷயத்தில் செல்லுகிறவர்களுமான ப்ராகிருதஜனங் களுக்காகப் பகவானுடைய லீலைகளை வர்ணியும். பின்னும் உலகத்தில் தன் ஜாதிக்கும், ஆச்ரமத்திற்கும் உரியதான தர்மத்தைவிட்டு பகவானுடைய தாமரை மலர் போன்ற பாதங்களை ஸேவித்துக் கொண்டு இருந்தவன் பக்தியின் பயனை அடைவதற்கு முன்னமே பலன் பாதியில் மரணம் அடைந்தாலும், பக்தியின் தொடர்ச்சியற்றுப் போனாலும் அவனுக்கு அந்த

வாஸனையிருக்குமாகையால் ஒரு போதும் அந்த க்ஷேமக்குறைவு நேரிடாது. மேலும் ஈச்வரனிடம் பக்தி செய்யாமல் தன்னுடைய தர்மத்தை நன்றாய் அனுஷ்டித்தாலும் அதனால் என்ன கிடைக்கப்போகிறது? (ஒன்றும் இல்லையென்பது தாத்பர்யம்) ப்ரஹ்மதேவர் முதல் ஸ்தம்பமென்ற புழு வரையில் ஸம்ஸாரத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் எல்லா ப்ராணிகளாலும், எந்தவஸ்து அடையப்படவில்லையோ அதையடைய முயற்சிக்கவேண்டும். எப்படி நாம் விரும்பாமல் இருக்குங்காலத்திலும், துக்கம் நேரிடுகிறதோ அப்படியே விஷயஸுகமும் எந்தவிடத்திலும் அந்த அந்தக்காலத்தில் கர்மத்தின் மஹிமையைக்கொண்டு ஜனங்களால் அடையப்படுகிறது. கர்மத்தை மாத்ர மனுஷ்டித்தவன் ஸம்ஸாரதுக் கத்தையடைவது போல, ஒருவன் பகவத் பக்தி செய்து அந்த ஜன்மாவில் அது பூர்த்தியடையாமல் தாழ்மையான வேறு ஜன்மமடைந்திருந்தாலும் அதில் அவனுக்கு துக்கம் நேரிடுகிறதில்லை பகவானுடைய பாதங்களில் பக்தி செய்தவன் மறுஜன்மத்திலும் அவைகளை மறக்கமாட்டான்; அவைகளுக்கு வசப்படுவான். ஈச்வரனை விட்டு ஜீவன் எப்படி வேறில்லையோ அப்படி ப்ரபஞ்சம் பகவானைவிட வேறில்லை அவரிடமிருந்தே இந்த ஜகத் உண்டானது அவராலேயே காப்பாற்றப்படுகிறது. அந்த பரமாத்மாவை நீரே தெரிந்து கொள்வீர்; ஆனாலும் ஸ்வல்ப பாகத்தைத் தெரிவித்தேன்; வீணாகாத ஞானமுள்ள நீர் பிறப்பில்லாத பரம புருஷனுடைய அம்சமேயாம். மேலும் நீர் இயற்கையில் ஜனனமரணமில் லாதவரானாலும், உலகத்தின் க்ஷேமத்திற்காக சரீரமெடுத்துக் கொண்டீர். ஆகையால்

இவ்விஷயத்தைத் தெரிந்துகொள்ளும். அந்தமஹா மஹிமை பொருந்திய பரம புருஷனுடைய சரிதத்தை வர்ணியும். சாஸ்த்ரங்களைக் கேட்பது (ச்ரவணம்) யாகஞ் செய்தல், குளம், கிணறு, வெட்டுவித்தல், ப்ரியமான வார்த்தை சொல்லுதல், மஹாதானஞ் செய்தல் ஆகிய இவைகளின் பலன் என்னவென்றால் உத்தமச்லோகராகிய பகவானுடைய குணங்களை வர்ணிப்பதேயாம். இதுவே சாச்வதமாகிய பலன். இதற்கு உதாரணமாக என்னுடைய முன்ஜன்ம விருத்தாந்தத்தைச சொல்லுகிறேன்.

23–38. நான் முன்ஜன்மத்தில் ப்ராஹ்மணர் களுடைய வீடுகளில் வேலைசெய்து கொண்டிருந்த சூத்ரஸ்த்ரீயின் புத்ரனாகவிருந்தேன். அப்பொழுது மழைகாலத்தில் ஒரே இடத்தில் வஸிப்பதாகிய சாதுர் மாஸ்யவ்ரதத்தை யனுஷ்டித்த சில ஸன்யாஸிகளுக்கு பால்யத்திலேயே நான் சுச்ரூஷை செய்துவந்தேன். பால்யமுள்ளவனானாலும், விளையாட்டு ஸாமான்களை வைத்துக்கொள்ளாமலும், பால் சாபல்யமில்லாமலும், இந்த்ரியங்களை ஜயித்து அவர்கள் ஏவினதைச் செய்வதிலேயே நோக்கமுள்ளவனாயிருந்தேன். அப்பொழுது ஸமபுத்தியுள்ள அவர்களுக்கு ஸ்வல்ப மாய்ப்பேசும் என்னிடத்தில் கருணையுண்டாயிற்று. ஒருநாள் அவர்கள் புஜித்த பிறகு, பாத்ரத்தில் எஞ்சி இருந்த, அன்னத்தை அவர்களுடைய அனுமதியின் பேரில் நான் புஜித்தேன். அதனால் ஸகல பாபங்களும் நிவர்த்தியாகிச் சுத்தனானேன். இப்படிச் சித்தம் சுத்தமான போது, அவர்கள் அனுஷ்டிக்கும் பகவத் பக்தியாகிய தர்மத்திலேயே எனக்கு ப்ரியம் நேர்ந்தது அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய லீலைகளைக்

கானஞ் செய்துகொண்டிருந்தார்கள். இனியவைகளான அவைகளை நான் எப்பொழுதும் அந்தரங்க ப்ரியத்துடன் கேட்டேன். அதனால் எனக்கு பக்தி அதிகரித்தது. அதிலேயே விசேஷ நோக்கமுள்ள எனக்குப் பகவானிடம் ஸ்திரமான பக்தியுண்டானதால், அப்பொழுதே பரப்ரஹ்மமானது ப்ரபஞ்ச ஸம்பந்த மற்றதென்றும், அதுவே நானென்றும், என்னிடத்தில் ஸ்தூல ஸூக்ஷ்மசரீரங்கள் அவித்யையால் (பொய்யாக ஆரோ பிக்கப்பட்டனவேயொழிய, உண்மையிலில்லை என்றும் நான் தெரிந்து கொண்டேன். இப்படி மழைகாலம், சரத்காலம் ஆகிய இரண்டு ருதுக்களிலும் மஹாத்மாக்களாகிய, அந்த ஸன்யாஸிகளால் சொல்லப்பட்ட மஹாவிஷ்ணுவின் மஹிமையை மூன்று காலங்களிலும் ச்ரவணஞ்செய்தேன். அதனால் சிறந்த பக்தியுண்டானது மன்றி, ரஜோகுணமும், தமோ குணமும், என்னைவிட்டு விலகின. அவர்களுக்குச் சுச்ரூஷை செய்வதிலேயே ஆசையுள்ளவனும், வணக்கமுள்ளவனும், பாப மில்லாதவனும், ச்ரத்தை யுள்ளவனும், இந்த்ரியங்கள் ஜயித்தவனும், பால்ய வயதுள்ளவனும், எப்பொழுதும் கூடவே ஸஞ்சரிப்பவனுமாகிய எனக்கு அந்த முனிவர்கள் தீனர்களிடத்தில் ப்ரீதியுள்ளவர்களாகையால் விச்வரூபயாத்ரைக்கு முன்னிலையில், ப்ரஹ்ம வித்தையை யுபதேசித்தார்கள். அது மிகவும் ரஹஸ்ய மானது. ஈச்வரனால் நேரில் சொல்லப்பட்டது. அதனால் நான் ஸகல ப்ரபஞ்சங்களையும் ஸிருஷ்டிக்கும் வாஸு தேவராகிய பகவானுடைய மாயாமஹிமையைத் தெரிந்துகொண்டதுமன்றி அவருடைய பதத்தை அடையும் ஸாதனத்தையும் தெரிந்து கொண்டேன். ஓ! நன்றாய் வ்ரதங்களையனுஷ்டித்த ப்ராஹ்மணோத்தம!

வ்யாதியையுண்டுபண்ணும் த்ரவ்யங்கள், வேறு பதார்த்தத்தின் சேர்க்கையால் ரோகத்தை நிவர்த்திப்பது போல, கர்மமானது ஸம்ஸாரமாகிய வ்யாதியைக் கொடுக்கக்கூடியதானாலும், பரமாத்மாவிடம் ஸமர்ப்பிக்கப் பட்டால், அது முவ்வகையான தாபங் களையும் போக்குகிறது என்ற தர்மரஹஸ்யத்தையும், அவர்கள் எனக்கு உபதேசித்தார்கள். கர்மயோகங்கள் எல்லாம், ஸம்ஸாரத்தைக் கொடுக்கின்றவைகள் ஆனாலும், மேற்காட்டிய ஈச்வரனுடைய ஸந்தோஷத்திற்காகச் செய்கிறோம் என்ற எண்ணத்துடன் செய்து அவரிடத்தில் ஸமர்ப்பிக்கப்படுமானால் அவை பந்தகங்களாகிறதில்லை. பகவானுடைய ஸந்தோஷ மாகிய பலனை விரும்பிச் செய்யப்படும் கர்மமானது, பக்தியோகத்துடன் கூடிய ஞானத்தை உண்டு பண்ணுகிறது. "எதனைச் செய்கிறாயோ, எதனைப் புஜிக்கிறாயோ, எதனை ஹோமஞ்செய்கிறாயோ, எதனைக்கொடுக்கிறாயோ அதனை என்னிடம் கொடுத்துவிடு" என்ற பகவான் உடைய ஆக்ஞையின்படி பெரியோர்கள் கர்மங்களைச் செய்கிறார்கள். கிருஷ்ணனுடைய கல்யாண குணங்களையும், திவ்ய நாமங்களையும், வாக்கினால் உச்சரிக்கிறார்கள் அவரை த்யானஞ்செய்கிறார்கள். பக்தியோகத்தால் நல்ல ஞானமுள்ள புருஷனானவன்" வஸுதேவருடைய புத்ரராயும், ப்ரத்யும்னராயும், அனிருத்தராயும், ஸங்கர்ஷண மூர்த்தியாயுமிருக்கும் பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறோம்" என்று த்யானஞ்செய்து, யக்ஞபுருஷனாகிய பகவானை உபாஸிக்கிறான். அந்த ஈச்வரனுக்கு மேற்காட்டிய மந்த்ரத்தால் குறிக்கப்பட்ட சரீரத்தை விட வேறு சரீரமில்லை.

39–40 பகவானுடைய கட்டளைப்படி நடந்த

எனக்கு, அந்தப் பகவான், தம்முடைய ஞானம் முதலிய வைகளுக்குச் சமமான ஞானத்தையும் ஐச்வர்யத்தையும், தம்மிடத்தில் பக்தியையும் கொடுத்தார். அனேக சாஸ்த்ரங்களைக் குருமுகமாக கேட்ட வ்யாஸரே! ப்ரபுவாகிய பகவானுடைய மஹிமையை நீரும் வர்ணியும். அதனால் வித்வான் களால் அறியவேண்டிய விஷயங்கள் யாவும் உம்மால் அறியப்படும். துக்கத் தினால் வருத்தமடைந்தவர்களுக்கு அதனை நிவர்த்தி செய்யும் உபாயம் இதுவேயொழிய வேறில்லை.

நோட்டு.

28–17. ஆத்மா–சரீரவ்யாதி, மனோவ்யாதி முதலிய துக்கங்களில்லாமல், பகவத் பஜனத்தால் ஸந்தோஷ மடைந்திருக்கிறானா. சந்த். வீர. 21– பாரதம்தேசத்தாலும், காலத்தாலும், அளவிடக்கூடாத பரப்ரஹ்மத்தை விசாரித்தும் அர்த்தத்தாலும், சப்தத்தாலும், மஹத்தான சப்த ப்ரஹ்மமாகிய வேதத்தையும் நன்றாய் விசாரித்திருக்கிறீர். ஆனதால் தாங்கள் பூமியில் அவதரித்ததின் கார்யம் முடிந்து விட்டது. அப்படியி ருந்தும், அவதரித்த கார்யத்தைச் செய்யாதவர்போல் கவலைப்படுகிறீர்.– பரம் –ப்ரஹ்மா, ருத்ரன் இவர்கள். 30–அபரம்– இந்த்ரன் முதலியவர்கள். ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் மேலானவர். வீர. யோகத் தால்– "யாகம், நல்ல ஆசாரம் இந்த்ரிய நிக்ரஹம், பிறருக்கு ஹிம்ஸை செய்யாமலிருப்பது தானம் வேதாத்யயனம் முதலிய கர்மங்களுக்குள் யோகத்தால் ஆத்மாவின் உண்மையை அறிவதே மேலானது"– யாக்ஞ்யவல்க்யஸ்மிருதி அத்புதமான– யமகம் முதலிய சப்தாலங்காரங்களும்,

உத்ப்ரேக்ஷை முதலிய அர்த்தாலங்காரங்களும் பொருந்தியிருந்தாலும். ஸ்ரீத. கானம்– விசேஷ ஆனந்தத்தை உண்டுபண்ணுவதால் கானஞ்செய்கிறார் கள். ஸ்தோத்ரஞ்செய்து பாபங்களைப் போக்கடித்துக் கொள்ளுகிறார்கள். ஸ்ரீத. "பரம ஹம்ஸர்களுக்கு அவை ப்ரியமானவைகள். அவைகளே பகவானுக்கு ப்ரியமானவைகள்." என்றபடி பாகவத தர்மங்களை வர்ணிக்காமலிருக்கும் க்ரந்தங்கள் பரமஹம்ஸர்களால் ஆதரிக்கக்கூடியவையல்லவென்று காட்டப்பட்டது– வீர. நிலைபெறாமல் "ஓ அர்ஜுன! பரமாத்மாவைவிட வேறு ஒன்றுமில்லை என்னும் புத்தியானது ஒருவகையேயாம். அந்த நிச்சயமில்லாதவர்கள் இந்த்ரன, அக்னி முதலிய தேவதைகளைச் சிந்தித்து புத்தியைப் பலவகையாகச் செலுத்துகிறார்கள்." பகவத் கீதை– என்னபலன்? பகவத் பக்தியின்றி தர்மத்தை மாத்ரம் அனுஷ்டிப்பவனிடம் பகவான் ப்ரீதி செய்கிறதில்லை. அதனால் பாபம் நீங்குகிறது மில்லை. அதனால் ஆரம்பித்த கார்யம் பூர்த்தியாகிறது மில்லை ஸ்ரீத. சுற்றி– ஸ்வர்க்கம் முதலிய மேலுலகங் களிலும், பூமி முதலிய கீழ் உலகங்களிலும் ஸஞ்சரிக்கும் ஜனங்கள், அவர்களால் முந்திச் செய்யப்பட்ட பாபபுண்யங்களால் துக்கத்தையும் ஸுகத்தையும் அடைவதுபோல புண்ய பாபங்களைக் கொண்டு மோக்ஷத்தையடைய முடியாதாகையால், அதனை அடைவதற்கு முயற்ச்சிக்கவேண்டும். சந்த்– ப்ரபஞ்சம்– அசையும் பொருள் அசையாப்பொருள் இவைகளடங்கியது. "இந்த ப்ரபஞ்ச முழுவதும் பரப்ரஹ்மம்."–ச்ருதி. ஸ்வல்ப– "நல்ல ஆசார்யர்களை யடைந்த புருஷன் பரமாத்மாவைத் தெரிந்துகொள்ளு கிறான்" ச்ருதி– வ்யாஸரென்ற திவ்யநாமத்துடன் பகவான்

ப்ரகாசிப்பதுபோல ப்ரபஞ்சமென்ற பெயருடனும் அவரே விளங்குகிறார்– சந்த். நான்–பெரியோர் களுடைய சேர்க்கையால் க்ஷேமம் கிடைக்கு மென்பது காட்டப்பட்டது. சாதுர்மாஸ்யம்–ஒவ்வொரு வர்ஷத்தி லும் நான்கு மாஸங்கள் ஸஞ்சாரத்தை நிறுத்தி ஒரே இடத்தில் வஸிக்கவேண்டும் என்று ச்ருதியில் சொல்லியிருக்கிறபடி ஸன்யாசிகள், "வர்ஷக் காலமானது ப்ராணிகள் உண்டாகும் ஸமயமானதால் பெரும்பாலும் மார்க்கங்கள் ஜந்துக்களால் நிறைந்து இருக்கும் ஆகையால் அவர்களுக்கு ஹிம்ஸை நேரிடாமலிருப்பதற்காக நான்கு பக்ஷங்கள் இந்தக் கிராமத்திலேயே வஸிப்பதாக உத்தேத்திருக்கிறோம். உங்களுடைய ஸௌகர்யத்தைத் தெரிவிக்கவேண்டும்." அவர்கள் அப்படிக் கேட்ட ஸன்யாஸியை நோக்கி, தாங்கள் இவ்விடத்திலேயே ஸுகமாய் வஸியுங்கள், எங்களால் கூடிய சுச்ரூஷைச்செய்து நாங்கள் க்ருதார்த்தர்களாக ஆகிவிடுகிறோம்" என்று பதில் சொல்லுவார்கள். பின்பு ஆஷாடமாஸத்திய பூர்ணமி முதல் நான்கு பக்ஷங்கள் ஒரே இடத்தில் போக்குவார்கள். இதுவே சாதுர்மாஸ்ய விரதமெனப்படும். பிறகு ஐந்தாவது பக்ஷத்தின் பிரதமையில் ஸஞ்சாரத்திற்கு ஆரம்பிப்பார்கள். அதுவே விச்வரூப யாத்ரையாகும். புஜித்தேன்–எச்சிலான ஸ்தலத்தை சுத்திசெய்வது முதலியவற்றையுஞ் செய்தேன்.– விஜ. ஆக்ஞை– ச்ருதிகளும் ஸ்மிருதிகளும் பகவானுடைய கட்டளை. ப்ரத்யும்ன– இதுமுதல் இரண்டு ச்லோகங்களால் பகவானுடைய குணங்களையும் நாமங்களையும் ஸ்மரிப்பதும், பலத்தையுத்தேசியாமல் கர்மானுஷ்டா னம் செய்யும் ப்ரகாரங்களும். அப்படிச் செய்பவனே

மேலானவனென்றும் காட்டப்பட்டிருக்கிறது."ஓம் தத்ஸத் என்பது பரப்ரஹ்மத்தை முவ்வகையாக சொல்வதாக ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது" என்று பகவான் சொல்லிருப்பதனால் வாஸுதேவ, ப்ரத்யும்ன, அனிருத்த, ஸங்கர்ஷண இந்த நான்கு ரூபமாய் இருக்கும் பகவானுக்கு நமஸ்காரம் பண்ணுகிறோம் என்பதால் பகவானுடைய திவ்ய நாமத்தை உச்சரிக்கவேண்டிய வகை காட்டப்பட்டது. மூலத்தில் தீமஹி–த்யானம் செய்கிறோம்' என்று இருப்பதால் ப்ரணவ சப்தத்தால் காட்டப்பட்ட அனந்த கல்யாணகுணங்கள் நிறைந்த பகவானைத் த்யானம் பண்ணுகிற ப்ரகாசமும், ரக்ஷிப்பது என்ற அர்த்தமுள்ள ' அவ' என்ற தாதுவிலிருந்து ப்ரணவம் ஏற்பட்டதாகையால் எல்லாரையும் ரக்ஷிப்பதாகிய பரமாத்மாவின் குணமும், மேலும் அந்த ப்ரணவம் அகாரம், உகாரம், மகாரம் இம்மூன்று அக்ஷரங்களால் அமைந்திருப்பதால் எல்லாவற்றிற்கும் பரமாத்மா காரணமென்றும், எல்லாவற்றிற்கும் அதிபதியென்றும் காட்டப்பட்டிருக்கிறது. தவிரவும், வாஸுதேவ என்பதால் பரமாத்மாவானவர் எல்லாவற்றிற்கும் ஆதாரமென்றும், எல்லோருக்கும் அந்தராத்மாவென்றும், ப்ரத்யும்ன என்பதால்,"அவ்விடத்தில ஸூர்யன் ப்ரகாசிக்கிற தில்லை, சந்த்ரனும் நக்ஷத்ரங்களும், மின்னல்களும் அக்னியும் விளங்குகிறதில்லை" என்ற ச்ருதிப்படி நிகரில்லாத ப்ரகாசமுள்ளவர் என்பதும்; அனிருத்த என்பதால் ஸர்வவ்யாபகரென்றும். ஸங்கர்ஷண என்பதால் இந்த்ரியங்களுக்குப் புலப்படாத விஷயங்களைத் தெரிவிப்பவரென்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. வீர ஐச்வர்யம்– அணிமா முதலியவைகள். பக்தி–இடை விடாமல் பகவானை ஸ்மரிப்பது– ஸ்ரீத.

அத்யாயம்–6.

நாரதருடைய முன்ஜன்மம்.

ஸத்யவதியின் புத்ரராகிய வ்யாஸமஹர்ஷியானவர், தேவர்ஷியாகிய நாரதருடைய பிறப்பு, சரிதம், ஆகிய இவைகளைக் கேட்டுப் பின்னும் அவரை நோக்கி ஓ! நாரதரே! உமக்கு ஞானோபதேசஞ் செய்த ஸன்யாஸிகள் சென்றபிறகு, பால்யவயதுள்ளவரான நீர் என்ன செய்தீர்? ப்ரஹ்மதேவருடைய புத்ரரே! அபரவயதில் என்ன செய்துகொண்டிருந்தீர்? தேஹவியோக காலம் நேர்ந்த போது சரீரத்தை எப்படிவிட்டீர்? ஜீவன் ஒரு சரீரத்தைவிட்டு மற்றொரு சரீரமடைந்தபின் முன் ஜன்மத்தின் விஷயங்கள் காலமஹிமையால் மறந்து போகின்றனவே அப்படிக்கிருக்க முன்காலத்தில் நடந்த விஷயம் எப்படித் தங்கள் ஞாபகத்திலிருக்கிறது? என்றார். அதனைக்கேட்ட நாரதர் வ்யாஸமஹர்ஷியை நோக்கி "எனக்கு ஞானோபதேசஞ்செய்த ஸன்யாஸிகள் தேசாந்தரம் போனபிறகு சிறுவயதுள்ள நான் என்ன செய்தேனென்றால், என் தாயாருக்குக் குழந்தை நானொருவனே; ஆனதுபற்றியும் எனக்கு வேறு கதியில்லாததனாலும் என்னுடைய தாயார் என்னிடம் மிகவும் ப்ரியம் வைத்திருந்தாள். அவள் ஒன்றையும் அறியாதவள்; வேலைசெய்து ஜீவிப்பவள்; மரத்தால் செய்யப்பட்ட ப்ரதிமை மனிதர்களால் ஆட்டி வைக்கப் படுவதுபோல, இந்த ஜனங்கள்யாவும் ஈச்வரனுக்கு ஸ்வாதீனப் பட்டிருக்கிறார்கள். என்தாயார் என்னுடைய யோகக்ஷேமத்தை வஹிக்க விரும்பினவளானாலும் அதை நடத்த ஸாமர்த்யமற்றவளாக விருந்தாள். திக்கு, தேசம், காலம் ஆகிய இவைகளின் பிரிவையறியாத ஐந்து வயதுள்ள சிறுவனாகிய நான்மாத்ரு ஸ்நேஹத்தா

அந்த ப்ராஹ்மண கிருஹத்திலேயே வஸித்தேன். ஒருநாள் ராத்ரி என் தாயார் மாடு கறப்பதற்காக வீட்டிற்கு வெளியே வரும்போது ஒருபாம்பைக் காலால் மிதித்தாள். அப்பொழுது அனாதையான அவளை அந்தஸர்ப்பம் காலனால் தூண்டப்பட்டு கடித்தது. உடனே அவள் மரணமடைந்தாள். அப்பொழுது நான் "ஈச்வரன் பக்தர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுப்பதி லேயே நோக்கமுள்ளவராகையால் நமக்கு நேர்ந்த மாத்ருதுக்கம் அனுக்ரஹமேயொழிய வேறில்லை என்று நினைத்து வடக்குத்திக்கை நோக்கிப் புறப்பட்டேன். ஸம்பத்துள்ள அனேக தேசங்களையும், கிராமங்களையும், கோகுலங்களையும், ரத்னம் விளையும் பூமிகளையும், பயிரிடுபவர்கள் வஸிக்கும் இடங்களையும், மலையடிவாரங்களையும், பாக்குமரம் முதலியவைகளின் தோட்டங்களையும், தானாக முளைத்த மரங்களிருக்குங் காடுகளையும், மரங்கள் வைத்து விருத்திசெய்யப்பட்ட இடங்களையும், பல வகையான தாதுக்களால் அழகான மலைகளையும், யானைகளால் முறிக்கப்பட்ட கிளைகளுள்ள மரங்களை யும், நல்ல ஜலமுள்ள குளங்களையும், தேவர்கள் ஜலக்ரீடை செய்யும் தாமரஸ ஓடைகளையும், அவைகளிலிருக்கும் அழகான குரலுள்ள பக்ஷிகளையும், தேனீக்களையும், அவைகளால் அலங்கிருதமான தாமரைத்தடாகங்களையும், பார்த்துகொண்டு நான் ஒருவனாக அவைகளைக் கடந்துசென்று, பயங்கரமாகிய ஒரு வனத்தைக் கண்டேன். அது கோரைகளும், மூங்கில்களும், வண்டுகளால் துளைக்கப்பட்ட மூங்கில்களும், நாணல்களும், தர்ப்பங்களும், அடர்ந்து இருப்பதாலும், ஸர்ப்பங்களும், கோட்டான்களும், நரிகளும் வஸிக்குமிடமாயிருந்தாலும் மிகவும் பயங்கர

மாயிருந்தது. அப்பொழுது நான் வெகுதூரம் நடந்த தால், பசி, தாஹமுண்டாகி, அவற்றால் இந்த்ரியங்கள், சரீரம் இவைகளின் வலிமை குறைந்து களைப்படைந் தேன். பின்பு ஒரு நதியின் மடுவில் ஸ்நானஞ்செய்து, ஆசமனம் பண்ணிச்ரமத்தை நிவர்த்தித்துக் கொண்டேன். பின்பு மனிதர்களுடைய ஸஞ்சாரமில்லாத அந்தக் காட்டில் ஒரு அரசமரத்தின்கீழ் உட்கார்ந்து ஸன்யாஸிகளிடம் உபதேசம் பெற்றப்படி ஹிருதயத்தி லிருக்கும் பரமாத்மாவை த்யானஞ் செய்தேன். பகவானுடைய பக்தியால் மனத்தை ஒருவகைப்படுத்தி அவருடைய தாமரை போன்ற பாதத்தை த்யானஞ் செய்யும்போது என்னுடைய இருகண்களிலிருந்து ஆனந்தபாஷ்யம் பெருகியது. அப்பொழுது ஸ்வல்ப காலத்தில் என்னுடைய ஹிருதயத்தில் பகவத் ஸ்வரூபம் ப்ரகாசித்தது ஓ! வ்யாஸ மஹர்ஷியே! விசேஷ ப்ரேமையால் மயிர்க்கூச்சலுண்டாயிற்று. அதனால் மிக்க ஸுகமுள்ளவனாய் ஆனந்த ப்ரவாஹத்தில் மூழ்கி என்னையும் பகவத் ஸ்வரூபத்தையும் மறந்திருந்தேன். இப்படியிருக்க மிக்க அழகுள்ளதும், ஸகல துக்கங்களை யும் போக்கடிக்கக்கூடியதுமான அந்தப்பகவானுடைய ரூபம் மறைந்தது. உடனே அதனைக்காணாமல் மிகவும் மனவருத்தமடைந்து சீக்ரமாக எழுந்திருந்தேன். மறுபடியும் அந்த பகவத் ஸ்வரூபத்தைப் பார்க்கவிரும்பி மனத்தையடக்கி அதே ரூபத்தை ஹிருதயத்தில் த்யானஞ்செய்தேன். அப்படியும் அந்த ரூபம் நேரில் தோன்றவில்லை. ஒரு தடவை பார்த்ததால் த்ருப்தி யுண்டாகாததனால் மனக்கவலையடைந்தேன்.

21–26. இப்படிக் காட்டில் கவலையுடனிருக்கும் என்னை நோக்கி வேதவாக்யங்களுக்கு விஷயமாகாத

பகவான் "ஓ! குழந்தாய்! கர்மம் முதலிய தோஷங்கள் அற்றுப்போகாத யோகிகளால் என்னைப் பார்க்க முடியாது. ஆனதால் இந்த சூத்ர ஜன்மத்தில் நீ என்னைப் பார்க்கத் தகுந்தவனல்ல. ஆனால் ஒரு தரம் என் ரூபத்தைக் காண்பித்த காரணமென்னவெனில்.. ஒரு தரம் என் ரூபத்தைப் பார்த்தவனுக்குப் பின்னும் பார்க்கவேணுமென்ற எண்ணம் உண்டாகும். அதனால் என்னிடமே மனத்தைச் செலுத்தியவர்களுக்கு ஸகல மனோதோஷங்களும் நிவர்த்தியாய் விடுகின்றன. வெகுகாலம் ஸாதுக்களுக்குச் சுச்ரூஷை செய்ததால் உனக்கு என்னிடத்தில் ஸ்திரமான பக்தியுண்டாயிற்று. ஆனதால் தோஷத்தை யுண்டுபண்ணும் இவ்வுலகத்தை விட்டு என்னுடைய பார்ஷதனாக ஆய்விடுவாய் என்னிடத்தில் உனக்கு உண்டான பக்தியொருபொழு தும் குறையாமலிருக்கும். மேலும் ப்ரளய காலத்திலும் என்னுடைய அனுக்ரஹத்தால் முந்திய ஞாபகம் தவறாமலிருக்கும்" என்று அனுக்ரஹித்தார். இப்படி அனுக்ரஹிக்கப்பட்ட நான் மஹாபூதமாயும், ஆகாச சரீரமுள்ளவரும், எல்லாருக்கும் அதிபதியாயும், எல்லாருக்கும் ஸமீபத்திதலிருப்பவரானாலும், ஒருவராலும் அறியப்படாதவருமான அந்தப் புருஷனுக்கு நமஸ்காரஞ்செய்தேன்.

27–32. பின்பு அனந்த (நாசமற்ற)னுடைய திவ்ய நாமங்களை வெட்கப்படாமல் உச்சரித்துக்கொண்டும் அவரால் செய்யப்பட்ட ரஹஸ்யமான லீலாவிபூதிகளை நினைத்தும் மற்ற ஆசைகளை யொழித்தும், கர்வம், மாத்ஸர்யம் இவைகளை விலக்கிக் காலத்தை எதிர்பார்த்து ஸந்தோஷமாகப் பூமியில் ஸஞ்சரித்தேன். இப்படி ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலேயே மனத்தைச் செலுத்தி,

ஒன்றிலும் பற்றுதலில்லாமல் சுத்த சித்தனாகவிருந்தேன். இப்படிக்கிருக்கையில் சுத்தமான ஆகாசத்தில் மின்ன லுடன் மேகவரிசை தோன்றினாற்போல திடீரென்று மரணகாலம் நேர்ந்தது. அப்பொழுது சுத்தமான அந்தப்பார்ஷத சரீரத்திற்குப் பகவதிச்சைப்படி நான் போகும்போது ப்ராரப்தகர்மம் நசித்து ஐந்து பூதங்களா லேற்பட்டிருந்த பழய சரீரம் கீழேவிழுந்தது. பிறகு நான் இந்த மூவுலகத்தையும் காரணரூபமாய் அடக்கிக் கொண்டு ப்ரளயகாலத்தில் ஸமுத்ர ஜலத்தில் ஸ்ரீ நாராயணன் சயனஞ் செய்துகொண்டிருக்கும்போது, பின்பு அவரிடம் சயனஞ்செய்ய விரும்பிய ப்ரஹ்ம தேவரின் ச்வாஸத்தின் வழியாக அவருடைய ஹிருத யத்தில் ப்ரவேசித்தேன். பிறகு 1000 சதுர்யுகங்கள் கொண்ட ப்ரஹ்மதேவருடைய ராத்ரி முடிந்தவுடன் மறுநாள் காலையில் ப்ரஹ்மதேவர் ஜகத்தை ஸிருஷ்டிக்க யத்தனித்தார். அப்பொழுது அவருடைய இந்த்ரியங்களிலிருந்து மரீசி முதலிய ப்ரஜாபதிகளும் நானும் உண்டானோம். நான் குறைவின்றி ப்ரஹ்மசர்ய விருதங்களையனுஷ்டித்து, மூவுலகத்தில், உள்ளிலும் வெளியிலும் மஹாவிஷ்ணுவின் அனுக்ரஹத்தால் ஒரிடத்திலும் தடையற்ற நடையுள்ளவனாகிச் சஞ்சரிக்கிறேன்.

33–37. தவிரவும், இந்த வீணை ஈச்வரனால் கொடுக்கப்பட்டது. இது ஷட்ஜம் முதலிய ஸ்வரங்களா கிய நாதப்ரஹ்மத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. ஆனதால் மூர்ச்சனை முதலியவைகளுடன் ஸ்ரீ நாராயணனுடைய கதையைக் கானஞ்செய்து கொண்டே ஸஞ்சரிக்கிறேன். பகவானுடைய மஹிமையை நான் கானஞ் செய்யும்போது, ஜகத்தை பரிசுத்தப்

படுத்தும் பாதங்களுள்ளவரும், எல்லோராலும் ப்ரியப் படக்கூடிய லீலைகளுள்ளவருமான பகவான் என்னால் அழைக்கப்பட்டவர் போல என் மனத்தில் வந்திருந்து தர்சனங் கொடுக்கிறார். விஷயத்தில் ஆசையால் அடிக்கடி அவைகளையே கவர்ந்து கொண்டிருக்கும் சித்தமுள்ளவர்களுக்கு பகவானுடைய லீலைகளை வர்ணிப்பதே ஸம்ஸாரஸாகரத்தை தாண்டச்செய்யும் ஓடமென்று நிச்சயிக்கப்படுகிறது. காமம் முதலிய ஆறுவகை சத்துருக்களால் பீடிக்கப்படும் மனது பகவானை ஸேவிப்பதால் சுத்தமாவதுபோல யமம் முதலிய யோக ஸாதனங்களால் சுத்தப்படுகிறதில்லை. தோஷமற்றவரே என்னுடைய பிறப்பு, என்னுடைய சரிதம் முதலிய ரஹஸ்யங்களைப்பற்றி உம்மால் கேட்கப்பட்டவைகளெல்லாவற்றையும் உம்முடைய மனம் ஸந்தோஷப்படும்படி விஸ்தாரமாகச் சொன்னேன் என்று சொன்னார்.

38–39. ஓ! சௌனகர் முதலிய மஹர்ஷிகளே! இப்படி தெய்ச்செயலாய் வந்த நாரதர் ஸத்யவதியின் புத்ரராகிய வ்யாஸருடன் ஸம்பாஷணை செய்து 'நான் போய்வருகிறேன்' என்று சொல்லி வீணையை மீட்டிக்கொண்டே சென்றார். நாரதர் உலகமெங்குஞ் சென்று சார்ங்கமென்ற வில்லைத்தரித்த ஈச்வரனுடைய சரிதத்தை வாக்கினாலும், வீணையைக் கொண்டும் கானஞ்செய்து, ஸகல லோகத்தையும் ஸம்ஸாரதுக்கத் திலிருந்து காப்பாற்றுகிறார்; ஆகையால் இவரே பாக்யசாலி. இது இப்படி இருப்பது ஆச்சரியம்.

நோட்டு.

ஸன்யாஸிகள் மூலத்தில் பிக்ஷுவென்றிருப்பதால்

ஞானபிக்ஷை கொடுப்பவர்களென்று அர்த்தம்– விஜ. யோகம்–இல்லாதவைகளை ஸம்பாதிப்பது. க்ஷேமம்– ஸம்பாதித்தவைகளைக் காப்பாற்றுவது– வீர. தாயார் என்னிடத்தில் மிக்கப்ரியம் வைத்திருந்தபடியால் பெரியோர்கள் பின் நான் போகவில்லை– விஜ. ஸ்நேஹத்தால்– எப்பொழுது இதன் நேஹம் குறையு மென்று எதிர்பார்த்திருந்தேன் ஸ்ரீத. நினைத்து– "எவனையனுக்ரஹிக்க வேண்டுமென்று விரும்புகிறேனோ அவனுடைய பணத்தையும் பந்துக்களையும் நாசஞ் செய்கிறேன்"– ஸ்ருதி. புறப்பட்டேன்– மாதாவிற்கு அபரக்ரியை செய்தபிறகு– விஜ க்ராமங்கள்–"ப்ராஹ்மணர்களும் அவர்களுடைய வேலைக்காரர்களும் வஸிக்குமிடம், அல்லது சூத்ரர்கள் அவர்களுடைய வேலைக்காரர்களும் வஸிக்குமிடம்"– ப்ரகு வேத– எதையடையாமல் வாக்குகள் மனத்துடன் திரும்புகின்றனவோ– ச்ருதி திருப்தி– விஷயத்தில் ஆசையுள்ளவனுக்கு ஒருதடவை விஷயத்தையனுபவித் தால் திருப்தியுண்டாகாததுபோல– வீர. மஹாபூதம்– ரிக்வேதம் முதலியவைகள் இந்த மஹாபூதத்தின் நிச்வாஸமே"– ச்ருதி. காலத்தை– ப்ராரப்த கர்மத்தின் முடிவை– ஸ்ரீத. ப்ரவேசித்தேன்– "ப்ரஹ்மதேவர் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் தேஹத்தில் ப்ரவேசித்து அவருடன் ஒன்றாய் கலந்து யோகநித்ரையை யடைந்தார்"– கூர்மப்புராணம்.1000 சதுர்யுக– மனுஷ்யமானத்தால் 1000 சதுர்யுகமானால் ப்ரஹ்மதேவருக்கு ஒரு பகல் முடியும், அவ்வளவு காலங்களடங்கியது ஒரு ராத்ரியாகும். இம்மாதிரியான பகலும் ராத்ரியும் சேர்ந்தால் ஒருதினம், அப்படி 30 தினங்கள் ஒருமாதமாகும், அப்போர்பட்ட மாஸங்களில் 12 கொண்டது ஒரு வர்ஷம், அப்படி நூறு வர்ஷங்கள்

ப்ரஹ்மதேவருக்கு பரமாயுஸ். இதுவே ப்ராஹ்மமான மெனப்படும். மரீசி– வஸிஷ்டர் முதலிய மஹர்ஷிகளும்– வீர.– வெளியிலும்– கர்மிகள் முவ்வுலகத்திலும் வெளியில் வரமாட்டார்கள், தபஸ், முதலியவைகளால் ப்ரஹ்மலோகத்தை யடைந்தவர்கள். இதற்குள் வருகிறதில்லை. ஸ்ரீத ஈச்வரனால்– ப்ரஹ்மதேவரால் கொடுக்கப்பட்டது– சந்த். மூர்ச்சனை.– ஸ்வரத்தின் ஆரோஹாவரோஹம்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–7.

அர்ஜுனன் அச்வத்தாமாவைச் சிக்ஷித்தது.

சௌனக் மஹர்ஷியானவர், ஸூதரை நோக்கிப் "பிறகு பகவானாகிய வ்யாஸமஹர்ஷி, நாரதருடைய அபிப்பிராயத்தை யறிந்து எதனைச்செய்தார்" என்று கேட்டார்.

2–8. இதனைக்கேட்ட ஸூதர், சௌனகரை நோக்கி ப்ரஹ்ம பத்னியாகிய ஸரஸ்வதி நதியின் மேல் கரையில் 'சமயாப்ராஸம்' என்னும் ஒரு ஆச்ரமமுண்டு. அது மஹர்ஷிகள் யாகஞ் செய்யுமிடம். மேலும் அது இலந்தை மரங்களால் அலங்கரிக்கப்பட்டது. அந்த முக்யமான ஆச்ரமத்தில் வ்யாஸ மஹர்ஷியானவர், ஆசமனஞ்செய்து, சுத்தராய் உட்கார்ந்து, மனத்தை ஒரு வகைப்படுத்தி த்யானஞ்செய்தார். பக்தி யோகத்தால் சுத்தமாயும், ஸ்திரமாயுமுள்ள மனத்தில் புருஷோத்தமனையும், அவரை ஆச்ரயித்த மாயையும் தர்சித்தார். "மேலும் ஜீவன் உண்மையில் மாயையைக் கடந்த ஸ்வரூபமுள்ளவனானாலும், அந்த மாயைக்கு வசப்பட்டு பிரமித்து, தான் முக்குண ஸம்பந்த முள்ளவனென்றும், மாயாகுணங்களால் செய்யப்படும் கார்யங்களைத் தான் செய்வதாக நினைத்துமிருக்கிறான்" என்றும் தெரிந்துகொண்டார். பின்னும் அந்த அனர்த் தத்தை போக்கக்கூடிய பக்தியோகத்தையும் அறிந்தார். பின்னும் அவர் உலகத்திற்கு ஏற்பட்டிற்கும், இவ்வித மான அக்ஞானத்தை நிவர்த்திப்பதற்காக, ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தார். அதனைக் கேட்ட மாத்ரத்தில் பரமபுருஷனாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில்,

ஸ்திரமான பக்தியுண்டாகிறது. அதனால் சோகம் மோஹம், பயம், ஆகிய இவைகள் நிவர்த்தியாகின்றன. மேலும் அவர் தம்மால் செய்யப்பட்ட அந்த ஸம்ஹிதையைப் பரிசோதித்து நிவிர்த்திமார்க்கத்தில் ஆசையுள்ள தம்முடைய குமாரராகிய சுகருக்கு அதை உபதேசித்தார்" என்று சொல்லி முடித்தார்.

9–20. இதனைக்கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஓ ஸூதரே! அந்தச்சுகர் ஒருவிஷயத்திலும் ஆசையில்லாதவர்; நிவிர்த்திமார்க்கத்திலேயே நோக்க முள்ளவர்; ஆத்மாவிடமே ரமிப்பவர்; அப்படியிருக்க அந்தப் பெரிதாகிய க்ரந்தத்தை எதற்காக அவர் அப்யஸித்தார் என்று கேட்டார். அதனைக்கேட்டு ஸூதர் சௌனகரை நோக்கி, "ஓ சௌனகரே! மஹர்ஷிகள், ஆத்மாராமர்களானாலும், பகவத் ஸ்வரூபத்தை நன்றாய் அறிந்தவர்களாகையால் ஸம்சய மற்றவர்களானாலும், க்ரந்தங்களைப் படிப்பதில் ஆசையில்லாதவர்களானாலும், பகவானிடத்தில் பலனை உத்தேசியாமலே பக்திசெய்கிறார்கள், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சரிதங்கள், வைராக்யமடைந்த மனத்தையும் வசப்படுத்திக்கொள்ள ஸாமர்த்யமுள்ள வைகள், ஆனதால் சுகமஹர்ஷி, பகவத் குணங்களில் விசேஷ ஆசையுள்ளவராகி அந்தப் பெரியதாகிய உபாக்யானத்தை அப்யஸித்தார். அவர் வ்யாஸ மஹர்ஷியின் புத்ரர். அவரிடத்தில் விஷ்ணு பக்தர்கள் ப்ரியப்படுவார்கள். ஓ! மஹர்ஷிகளே! பரீக்ஷித் என்ற ராஜரிஷியின் பிறப்பு, அவர்செய்த கார்யங்கள், அவருடைய மரணம், பாண்டவர்களுடைய மஹா ப்ரஸ்தானம், இவைகளை கிருஷ்ணகதையைச் சொல்லு வதற்கு உபயோகமாகச் சொல்லுகிறேன். எப்படியெனில்,

கௌரவர்களும், ஸிருஞ்ஜயர்களும், யுத்தத்தில் அடிக்கப்பட்டு ஸ்வர்க்கமடைந்தார்கள். பீமஸேனன் தன்னுடைய கதாயுதத்தால் துர்யோதனனுடைய துடையை அடித்து முறித்தான். பின்பு "த்ரோணருடைய புத்ரராகிய அச்வஸ்தாமாவென்பவர் த்ரௌபதியின் புத்ரர்களை நாசஞ்செய்வதே தம்முடைய யஜமானாகிய துர்யோதனனுக்கு ப்ரியமான கார்யம்" என்று நினைத்து உபபாண்டவர்கள் தூங்கும் ஸமயத்தில் அவர்களுடைய தலையை வெட்டினார். இது துர்யோதனனுக்கு ப்ரியமன்று. மேலும் அதை எல்லோரும் வெறுக்கக் கூடிய கார்யம் என்று நிந்தித்தார்கள். அப்பொழுது அக்குழந்தைகளுடைய தாயாகிய த்ரௌபதிதேவி புத்ரசோகத்தால் பரிதபித்துக் கண்ணீரைப் பெருக்கி அழுதாள். அந்தஸமயத்தில் அவளை நோக்கி அர்ஜுனன், "ஓ! நல்ல ஸ்வபாவமுள்ளவளே! என்னுடைய காண்டீவத்தில் பாணங்களைத்தொடுத்து அவைகளை ப்ரயோகித்து ப்ராஹ்மணர்களுக்குள், அதமனும், ஆயுத பாணியும் ஆததாயியுமான அச்வஸ்தாமாவினுடைய தலையை உன்னிடம் கொடுத்து உன்னுடைய துக்கத்தை நிவர்த்திக்கிறேன். அந்தத் தலையை ஆஸனமாகச் செய்து புத்ரசோகத்தை போக்கிக்கொள் வாய்" என்று ஸமாதானஞ்செய்தான். இப்படி அழகான வார்த்தைகளைச் சொல்லி ஸமாதானஞ்செய்து தகுந்த முயற்சியுடன் குரு புத்ரராகிய அச்வஸ்தாமாவை அர்ஜுனன் துரத்தினார். அவருக்கு மித்ரரும், ஸாரதியு மாயிருப்பவர் ஸ்ரீ கிருஷ்ணனே. அவருடைய வில் பயங்கரமானது. ரதமோ, ஹனுமத்வஜமுள்ளது. சிசுக்களைக் கொன்றவரான அந்த அச்வஸ்தாமா பின் தொடர்ந்துவரும் அர்ஜுனரை வெகுதூரத்தில் கண்டு பயந்து ப்ராணனைக் காப்பாற்றிக்கொள்ள

வேண்டி, பூமியில் எதுவரையில் போகக்கூடுமோ அதுவரையில் "சிவபெருமானிடத்தில் பயந்து ப்ரஹ்ம தேவர் ஓடியதுபோலத் திரும்பிப்பாராமலே ஓடினார். அப்படியும் தம்மைக் காப்பாற்றக்கூடியவர் கிடைக்காத தனாலும், குதிரைகள் களைத்துப்போனபடியாலும் அவர் ப்ரஹ்மாஸ்த்ரமே தன்னைக் காப்பாற்றுமென்று நினைத்தார். பின்பு ஆசமனஞ்செய்து சுத்தராய், ப்ரயோகித்த அஸ்த்ரத்தைத் திருப்பும் வகையறியாத வராயிருந்தும் ப்ராணனுக்குக் கெடுதி நேரிடும் ஸமயமாகையால் அந்த அஸ்த்ரத்தை ப்ரயோகித்தார்.

21–26. பின்பு எல்லா திக்குகளிலும் அந்த அஸ்த்ரத்தின் தேஜஸ் பரவியது. அதனைக்கண்டு அர்ஜுனன் தம்முயிர்க்குச் சேதம் வந்ததென்று நினைத்து ஸாரதியாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானை நோக்கி "ஓ! கிருஷ்ண! கிருஷ்ண! மிகுந்த பராக்ரம முள்ளவரே! பக்தர்களுக்கு நேரும் பயத்தை நிவர்த்திப் பவரே! ஸம்ஸாரத்தால் கஷ்டப்படும் ஜனங்களுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பவர் தாமொருவரே. நீரே முந்திய புருஷன். நீரே எல்லாவற்றிற்கும் பிரபு. ப்ரகிருதியைக்காட்டிலும் வேறானவர். ஆனந்த ஸ்வரூபத்திலிருப்பவர். நீர் மாயையைக்கடந்தவரானாலும், மாயைக்கு வசப்பட்டு ஸம்ஸாரத்தில் மூழ்கியிருக்கும் ஜனங்களுக்கு தர்மம் முதலிய புருஷார்த்தங்களைக் கொடுக்கிறீர். வேறிடத்தில் மனஸைச் செலுத்தாமல் தம்மையே பஜிப்பவர்கள் இந்த திவ்யமங்கள சரீரத்தை த்யானஞ் செய்கிறார்கள். ஓ! தேவர்களுக்குத்தேவனே! இதோ மிகவும் பயங்கரமான தேஜஸ் எங்கும் பரவிவருகிறதே, இது இன்னதென்று தெரியவில்லை. இதனைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

27–28. அதனைக்கேட்டுக் கிருஷ்ணபகவான் அர்ஜுனனை நோக்கி த்ரோணருடைய புத்ரராகிய அச்வஸ்தாமாவினால் ப்ரஹ்மாஸ்த்ரம் ப்ரயோகிக்கப் பட்டிருக்கிறது. இது அதன் தேஜஸ்ஸை தவிர வேறில்லை அவருக்கு அதனைத் திருப்பி பெற்றுக்கொள்ளும் வழி தெரியாமையால் இதுவரையில் உபயோகிக்காம லிருந்து இப்பொழுது தம் உயிருக்குச் சேதம் வருஞ் சமயமாகையால் தம்மைக்காப்பாற்றிக் கொள்ளவேண்டி அதனை உபயோகித்திருக்கிறார். அதனைத் தடுக்க முடியாது. உனக்கு அந்த ப்ரஹ்மாஸ்த்ரம் நன்றாகத் தெரியுமாகையால் அதனை ப்ரயோகித்து எதிரியின் அஸ்த்ரத்தை நாசஞ்செய் என்றார்.

29–39. இப்படிப் பகவான் சொல்லிய வார்த்தையைக் கேட்டுச் சத்ருக்களைக் கொல்லும் வல்லமையுள்ள அர்ஜுனன் ஆசமனஞ்செய்து, ஸ்ரீ கிருஷ்ணபகவானை ப்ரதக்ஷிணஞ் செய்து எதிரியின் அஸ்த்ரத்தை யடக்குவதற்காக ப்ரஹ்மாஸ்த்ரத்தை ப்ரயோகித்தார். அவ்விரண்டு அஸ்த்ரங்களுடைய தேஜஸ்ஸுகளும், ப்ரளய காலத்தில், அக்னியும், ஸூர்யனும் விருத்தியடைவது போல பூமி, அந்தரிக்ஷம் ஆகிய இவைகளை ஆக்ரமித்து ப்ரகாசித்தன. அவ்விருவர்களுடைய அஸ்த்ரங்களின் தேஜஸானது மூவ்வுலகங்களையும் தஹித்தது, அந்தத் தாபத்தை ஸஹியாமல் ஜனங்கள் இது ப்ரளயகாலத்திய அக்னி என்றே நினைத்தார்கள். அப்பொழுது ப்ரஜைகள் உபத்ரவப்படுகிறதையும், லோகங்களுக்கு நாசம் நேர்ந்ததையும் பார்த்து அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணனுடைய அனுமதிப்படி அந்த இரண்டு அஸ்த்ரங்களையும் உபஸம்ஹரித்தார். பிறகு அச்வஸ்தாமாவின் ஸமீபம் சென்று பசுவை

ரசனையால் கட்டுவது போல் கோபத்தால் சிவந்த கண்களுள்ளவனாகிய கிருபியின் புத்ரரைக்கட்டினார். பின்னுமவரைத் தம்முடைய கூடாரத்திற்குக் கொண்டு போக முயன்றார். அப்பொழுது தாமரைமலர் போன்ற கண்களுள்ள கிருஷ்ணபகவான் மிகுந்தகோபத்துடன் அர்ஜுனனை நோக்கி "ஏ பார்த்த! இவன் ராத்ரியில் தூங்கிக்கொண்டிருந்த யாதொரு அபராதமும் செய்யாத குழந்தைகளைக் கொன்றவன், ப்ராஹ்மணர்களுக்குள் அதமன், ஆனதால் இவனைக் கொல்லவேண்டுமே தவிர காப்பாற்றுவது உசிதமல்ல. மத்யம் முதலியவை களைக் குடித்து மதித்திருப்பவன், அஜாக்ரதையா யிருப்பவன், பயித்யங்கொண்டவன், தூங்குகிறவன், பாலியவயதுள்ளவன், முயற்சிக்காதவன், சரணமென்று வந்தவன், ரதமில்லாதவன் பயந்து ஓடுகிறவன், ஆகிய இம்மாதிரியான சத்ருக்களை தர்மத்தையறிந்தவர்கள் கொல்லமாட்டார்கள். எவன் ப்ராணிகளிடத்தில் தயையில்லாமல் பிறரைக்கொன்று தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ளுகிறானோ அந்த துஷ்டனை சிக்ஷிப்பதே அவனுக்கு க்ஷேமமெனப்படும். தண்டிக்கப் படாதவரையில் பாபம் விலகாது; அதனால் நரகத்தையடைவான். மேலும் த்ரௌபதியின் முன்பாக உன் குழந்தைகளைக் கொன்றவருடைய தலையை உன்னிடம் சேர்ப்பிக்கிறேன்" என்று நான் கேட்டிருக்கும் போது உறுதி செய்திருக்கிறாய். இவன் தன்னுடைய யஜமானனாகிய துர்யோதனனுக்கு இஷ்டமில்லாத கார்யத்தைச் செய்தவன். குலத்திற்கு அபகீர்த்தியை யுண்டு பண்ணினவன்; மிகுந்த பாபீ, ஆததாயீ. உன்னுடைய புத்ரர்களை நரிசஞ்செய்தவன். ஆனதால் இவனைக் கொல்லவேண்டும் என்று (அர்ஜுனனுடைய புத்தியைப் பரிசோதிப்பதற்காகச்) சொன்னார்.

40–41. இம்மாதிரி கிருஷ்ணபகவானால் தூண்டப்பட்டும் மஹாத்மாவாகிய அர்ஜுனன் அச்வஸ்தாமா தமது பின்னைகளைக் கொன்றவரானாலும், குருபுத்ரராகையால் வதஞ் செய்ய இஷ்டப்படவில்லை. பின்பு மித்ரராகிய ஸ்ரீ கிருஷ்ணன் ஸாரத்யஞ் செய்ய அர்ஜுனன் தம்முடைய கூடாரஞ் சேர்ந்து புத்ரநாசத்தால் துக்கிக்கும் த்ரௌபதியை நோக்கி ஓ! த்ரௌபதி! உன்னுடைய புத்ரர்களைக் கொன்றவர் இதோ இருக்கிறார். உன்னிஷ்டப்படி இவருக்குச் சிக்ஷை செய்கிறேன் என்றான்.

42–48. யாகத்தில் கொல்லுவதற்காக யூபத்தில் கட்டப்பட்ட பசுபோல கயிற்றினால் கட்டப்பட்டவரும் கெட்டகார்யம் செய்ததால் தலைகுனிந்தவருமான குரு புத்ரரைக்கண்டு த்ரௌபதியானவள்; நல்ல ஸ்வாபமுள்ளவளாகையால் ஆசார்யருடைய புத்ரரென்று கௌரவத்தாலும், தைன்யமடைந்தவரென்ற தயையாலும் அவருக்கு நமஸ்காரஞ்செய்தாள். பின்னும் பதிவ்ரதையான த்ரௌபதியானவள், அவரைக்கட்டிக் கொண்டு வந்ததை ஸஹியாதவளாகி தன்னுடைய பர்த்தாவை நோக்கி "இவரை விட்டுவிடவேண்டும். இவர் ப்ராஹ்மணர்;தவிரவும் குருபுத்ரராகையால் ஆசார்யர். ரஹஸ்யமந்த்ரங்கள், உபஸம்ஹாரம், ப்ரயோகம் ஆகிய இவைகளுடன் எல்லா அஸ்த்ரங்களையும் இவருடைய பிதாவான த்ரோணரிடமிருந்து தாங்கள் அப்யஸித்தீர்கள். அவரே புத்ரரூபியாக இருக்கிறார். அதனால்தான் சூரனாகிய புத்ரனை அடைந்த கிருபியானவள் த்ரோணருடைய பாதிசரீரமாயிருந்தும் அவருடன் உடன்கட்டையேறவில்லை. தாங்கள் ஸகலதர்மங்களையும் அறிந்தவர்கள்; மிகுந்த பாக்யமுள்ளவர்கள்; ஆதலால் ஆசார்யருடைய

வம்சமானது, துக்கப்படும்படி தாங்கள் செய்வது உசிதமல்ல அது எப்பொழுதும் பூஜிக்கத்தக்கது; நமஸ்கரிக்கக்கூடியது; மேலும் இவரைக்கொன்று விட்டால் இவருடைய மாதாவும், பர்த்தாவையே தைவ மாகக் கொண்டவளுமான கிருபி என்பவள் புத்ர நாசத்தால் நான் வருத்தமடைகிறது போல துக்கப் படுவாளல்லவா? ப்ராஹ்மணவம்சத்திற்குக் கோப முண்டாகும். க்ஷத்ரியர்கள் செய்தார்களேயாகில், அந்த க்ஷத்ரிய வம்சம் பரிவாரங்களுடன் துக்கிக்கும்படி நேரும். ஆதலால் ப்ராஹ்மணகுலத்தால் நம்முடைய க்ஷத்ரிய குலம் எரிக்கப்படவேண்டாம்" என்று சொன்னாள்.

49–50. ஓ! ப்ராஹ்மணர்களே! தர்மத்திற்கொத்ததும், ந்யாய விரோதமில்லாததும், தயையுள்ளதும், கபட மற்றதும், ஸமபுத்தியுடன் சொல்லப்பட்டதும், மேன்மையுள்ளதுமான (பூஜிக்கக்கூடியது)த்ரௌபதியின் வார்த்தையைக் கேட்டு அருகிலிருந்த அரசனாகிய தர்மபுத்ரர், நகுலர், ஸஹதேவர், ஸாத்யகி, அர்ஜுனன், தேவகியின் புத்ரரான கிருஷ்ணபகவான், மற்றவர்கள், ஸ்த்ரீகள் ஆகிய எல்லோரும் அது உசிதமென்று ஒப்புக்கொண்டார்கள்.

51. அப்பொழுது பீமஸேனன் "இவரைக் கொல்வதே அவருக்கு க்ஷேமகரமான கார்யம், இவர் நித்ரை செய்து கொண்டிருக்கும் சிசுக்களை வீணாக வதஞ் செய்தார்; அதனால் இவருக்காவது, இவருடைய யஜமானனாகிய துர்யோதனனுக்காவது, யாதொரு ப்ரயோஜனமுமில்லை." என்று மிகுந்த கோபத்துடன் சொன்னான்.

52–58. மேல்காட்டிய இவர்களுடைய வார்த் தையைக் கேட்டு நான்கு கைகளுள்ள ஸ்ரீகிருஷ்ண பகவான், தம்முடைய மித்ரரத்னமாகிய அர்ஜுனனை நோக்கி "ஓ! அர்ஜுன! ப்ராஹ்மணனைக் கொல்லக் கூடாதென்ற சாஸ்த்ரத்தாலும், ஆததாயியை வதஞ் செய்யலாமென்றும் சாஸ்த்ரமிருப்பதால் அந்த சாஸ்த்ரம் என்னுடைய ஆக்ஞாரூபமாகையாலும் அப்படியே நீ செய்யவேண்டும். தவிரவும் த்ரௌபதியினிடம் உன்னால் செய்யப்பட்ட ப்ரதிக்ஞையையும், நிறை வேற்றவேண்டும்; பீமஸேனனுக்கும், த்ரௌபதிக்கும் எனக்கும் இஷ்டமானதைச் செய் என்று சிரித்துக் கொண்டு ஆக்ஞாபித்தார். இதனைக் கேட்டவுடனே பகவானுடைய அபிப்ராயமின்னதென்று, அர்ஜுனன் தெரிந்துகொண்டு, கத்தியினால் அந்த ப்ராஹ்மண ருடைய தலையிலிருக்கும் ரத்னத்தை மயிர்களுடன் எடுத்துப்பின்பு, கட்டை அவிழ்த்து அவ்விடமிருந்து துரத்தினான். அப்பொழுது அவருக்கு பாலஹத்யாதி தோஷத்தாலும் ஸஹஜமான ரத்னமில்லாததனாலும், தேஜஸ் குறைந்து விட்டது. க்ஷௌரஞ்செய்துவிடுதல், பணத்தை யபஹரித்துக்கொள்ளுதல், இருக்குமிடத்தை விட்டுத் துரத்திவிடுதல், ஆகிய இவைகள் வதத்திற்குச் சமமானவைகள். ப்ராஹ்மணதமர்கள் கொல்லக்கூடிய குற்றஞ்செய்தாலும், அவர்களுக்கு மேற்காட்டிய வதமே யொழிய, தேஹநாசஞ் செய்வது உசிதமல்ல. பின்பு பாண்டுபுத்ரர்கள், த்ரௌபதியுடன் புத்ரசோகமுள்ள வர்களாகி இறந்து போன தம்முடைய பந்துக்களுக்குச் செய்யவேண்டிய தஹனம் முதலிய உத்தர ஸம்ஸாரங்களைச் செய்து முடித்தார்கள்.

நோட்டு.

ப்ரஹ்மபத்னி"– ப்ரஹ்மாவையே தெய்வமாயுடையவள். அல்லது ப்ராஹ்மணர்களால் ஸேவிக்கப்பட்டது– ஸ்ரீத. சம்யா– யாகத்திற்கு உபயோகமான சம்யா என்னும் மரத்தின்கிளை விழுந்தவிடத்தில் ஏற்பட்ட ஆச்ரமம். மஹர்ஷிகளின் ஆஹாரத்திற்கு உபயோகமாகிய இலந்தைப் பழங்களுள்ளதென்பது தாத்பர்யம்.– விஜ. சோகம்–ஈச்வரன் எல்லாவற்றையும் அறிந்தவர். ஸர்வசக்தியுள்ளவர். அவருடைய மாயையால் நிஜரூபத்தை மறந்தவன் ஜீவன். அவனுக்கு பகவத்பக்தியால் ஞானமுண்டாகிறது. அதனால் மோஷத்தையடைகிறான். "ஆனந்தரூபமாகிய சித்சக்தியால் நிறைந்தவர் ஈச்வரன், அவித்யையால் தன்னுடைய உண்மையான ரூபத்தையறியாதவனும், ஸகல துக்கங்களுக்கு இருப்பிடமுமாயிருப்பவனே ஜீவன்," ஸ்வாமி மாயையானது எவருடைய வசத்திலிருக்கிறதோ. அவர் ஈச்வரனெனப்படுகிறார். எவன் அந்த மாயைக்கு வசப்பட்டு கஷ்டப்படுகிறானோ அவன் ஜீவன் என்று சொல்லப்படுகிறான்' ஸம்ஸாரத்திலுண்டான முவ்வகை தாபத்தாலுண்டானது சோகம், சரீரத்தை ஆத்மாவென்று நினைப்படதே மோஹம். நரகம் முதலியவைகளில் உண்டாவது பயம். அவைகளைப் போக்குவது பக்தியெனப்படுகிறது– சந்த். ஆசையில்லாத– நல்ல சிஷ்யனை ஸம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையில்லாதவர்– விஜ. க்ரந்தங்களை– "மோஹத்தால் கலங்கியிருக்கும் உன்னுடைய புத்தியானது எப்பொழுது தெளியுமோ? அப்பொழுது கேட்டது, கேட்கவேண்டியது இவைகளிலிருந்து நிர்வேதத்தையடைவாய்," பகவத்கீதை, பலனை– அனேக

ஜன்மங்களில் பரமாத்மாவை நேரில் பார்த்தவர்களும், முக்தியில் விசேஷ ஆனந்தமுள்ளவர்களுமான சுகர் முதலியவர்களுக்கு பாகவதத்தில் ஆசையுண்டாயிற்று என்பதில் என்ன ஆச்சர்யம்.– விஜ. ஆசையுள்ளவராகி– பகவானுடைய கல்யாணகுணங்கள் யாவும் அனுபவத்தாலேயே அறியக்கூடியவைகள் என்று வேதாந்த சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், ஸ்வாத்யாயத்தால் யோகத்தை அடையவேண்டும், யோகத்தால் ஸ்வாத்யாயமுள்ளவனாக ஆகிறான்' என்றபடி பகவானுடைய குணங்களை வர்ணிக்கும் க்ரந்தத்தை அப்யஸிப்பது அவச்யமேயாம். மேலும் பகவானுடைய அவதாரங்களும், அவைகளின் குணங்களும், பக்தர்களும், அவர்களுடைய குணங்களும், வேதாந்தத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. அவைகள் யாவும் இந்த பாகவதத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறதுமன்றி வேதாந்தத்தில் சொல்லியிருக்கும் குணங்களைவிட அதிகமாக பகவத்குணங்கள் நன்றாகக் காட்டப்பட்டிருக்கின்றன. வீர. அப்யஸித்தார்– பிறருக்குமுபதேசித்தார். விஜ. சிவபெருமானிடம்– பரமசிவன் ப்ரஹ்மதேவருடைய ஐந்தாவது தலையை வெட்டுகிறதற்காக வரும்போது அவர் ஓடினார். ஆர்கியென்று ஒருபாடமுண்டு. அதற்கு பரமசிவனுடைய மூன்றாவது கண்ணின் தேஜஸினால் எரிக்கப்பட்டு பயந்து சனீஸ்வரன் ஓடினார் என்று அர்த்தங்கொள்ளவேண்டும்.–விஜ.

முன்னொருக்கால் ப்ரஹ்மதேவர் தன்னால் ஸிருஷ்டிக்கப்பட்ட ஒரு அப்ஸர ஸ்த்ரீயினிடம் ஆசைப்பட்டு மான்வேஷங்கொண்டு ரமிக்க முயற்சித்தார். அப்பொழுது பரமசிவன் அவரைத்துரத்தினார். அர்க

யென்னும் ஒரு பாடமுண்டு. அதற்கு ஸூர்யன் ஓடியது போலவென்று அர்த்தம். அதாவது வித்யுன்மாலி யென்று ஒரு ராக்ஷஸனிருந்தான். அவனுடைய தபஸினால் பரமசிவன் ஸந்தோஷமடைந்து அவனுக்குத் தங்க விமானமொன்றைக் கொடுத்தார். அவன் அந்த விமானத்திலேறிக் கொண்டு ஸூர்யன் பின்னே போய்க்கொண்டிருந்தான். அப்பொழுது ராக்ஷஸனுடைய விமானத்தின் காந்தியானது, ஸூர்யதேஜஸை விட மேலானதாக விருந்தபடியால் அந்த விமானத்தை உருகிப்போகச்செய்தார். அதனால் பரமசிவன் கோபங் கொண்டு ஸூர்யனை துரத்த ஸூர்யன் பயந்து ஓடினார். அப்பொழுது பரமசிவனுடைய கடும் பார்வையால் ஸூர்யன் எரிக்கப்பட்டு காசியில் விழுந்தார். அவருக்கு இப்பொழுதும் லோலார்கனென்று (அலைந்த ஸூர்யன்) பெயர் வழங்கிவருகிறது. இது வாமனபுராணத்தில் விஸ்தாரமாய் சொல்லப்பட்டிருக் கிறது.– ஸ்ரீத. தக்ஷப்ரஜாபதியானவர் பரமசிவனுக்கு ஹவிர்பாகங்கொடாமல் யாகஞ்செய்ய அப்பொழுது பரமேச்வரன் வீரபத்ரராக அவதரிக்க அவரிடமிருந்து ஓடினார்– வீர. ஆர்கியென்றபாடத்தில்– ஸூர்யனு டைய பிள்ளையாகிய மிருத்யுவானவர் பரமசிவனைக் கண்டு ஓடினார்– சந்த். கிருஷ்ண–பூமியிலுள்ள ஸகல ஜனங்களுக்கும் ஸுகத்தை யுண்டுபண்ணுகிறவர்– ஸ்ரீத. மிகுந்த– மூலத்தில் மஹாபாஹு வென்றிருப்ப தால் க்ஷத்ரியர்களை யுண்டுபண்ணிய கைகளுள்ளவர் என்று காட்டப்பட்டது– வீர. நரகபாபத்தைச்செய்த மனிதர்கள் அதற்குத் தக்கபடி அதனால் சிக்ஷிக்கப் படுவார்களானால் அவர்கள் சுத்தர்களாகி புண்யசாலிகள் போல ஸ்வர்க்கத்தை யடைகிறார்கள்”–ஸ்மிருதி

ஆததாயி– அக்னிவைப்பவன், விஷங்கொடுப்பவன், ஆயுதம்பிடித்தவன், பணம், பூமி, பார்யை இவைகளை யபஹரிப்பவன் ஆகிய ஆறு பெயர்கள். மேல்காட்டிய ஆததாயியை ஆலோசிக்காமலேயே கொன்றுவிடலாம்– ஸ்ரீத. பாதிசரீரம்– “பத்னியென்பவள் பர்த்தாவினுடைய சரீரத்தின் பாதிபாகம்” –ச்ருதி.

♣♣♣♣

அத்யாயம்–8

பகவானைக் குந்தி ஸ்தோத்ரஞ் செய்தது.

பின்பு அந்த பாண்டவர்கள் யுத்தத்தில் இறந்து போன பந்துக்களுக்குத் தர்ப்பணம் (எள்ளுஞ்ஜலமும்) செய்வதற்காக ஸ்ரீ க்ருஷ்ண பகவானுடன் ஸ்த்ரீகளை முன்னிட்டுக்கொண்டு கங்கையின் கரை சேர்ந்தார்கள். மேலும் அவர்கள், அந்தக் கங்கா ஜலத்தில், ஸ்நானஞ் செய்து தர்ப்பணம் பண்ணி, பகவானுடைய பாதத்தி லிருந்து உண்டானதால் பரிசுத்தமாயிருக்கும் அந்தத் தீர்த்தத்தில் பின்னும் ஸ்நானஞ் செய்தார்கள்.

3–11. பிறகு அவ்விடத்தில் தம்முடைய தம்பி களுடன் உட்கார்ந்திருக்கும் தர்மபுத்ரரையும், த்ருதராஷ்டரரையும், புத்ரசோகமுள்ள காந்தாரியையும், குந்தியையும், த்ரௌபதியையும் நோக்கி ஸ்ரீ க்ருஷ்ண பகவானானவர், மஹர்ஷிகளுடன் "பந்துக்கள் மரண மடைந்தார்களென்று நீங்கள் துக்கப்படுவது நியாயமல்ல காலமஹிமையால் ப்ராணிகளுக்கு நேரிடும் நரகம் தடுக்கமுடியாதது என்று ஸமாதான வார்த்தைகளைச் சொல்லி, துர்யோதனனால் அபஹரிக்கப்பட்டிருந்த அஜாதசத்ருவின் (எவ்விடத்திலும் விரோத புத்தி யில்லாதவர்) ராஜ்யத்தை அவருக்கு வசப்படுத்தினார். மேலும் த்ரௌபதிதேவியின் தலைமயிரைப் பிடித்து இழுத்ததால் ஆயுஸ் குறைந்தவர்களான துச்சாஸனன் முதலியவர்களைக் கொல்வித்தார். மஹேந்த்ரனுடைய கீர்த்தியை உபேந்த்ரர் உலகத்தில் பரவச்செய்தது போல முக்ய கல்பங்களுள்ள மூன்று அச்வமேத யாகங்களைச் செய்வித்துப் பரிசுத்தமான அவருடைய

கீர்த்தியை விஸ்தாரப்படுத்தினார். பிறகு வ்யாஸ மஹா முனி முதலியவர்களைப் பூஜித்து அவர்களால் தாம் கொண்டாடப்பட்டு ஸாத்யகி, உத்தவர் முதலானவர் களுடன் பாண்டவர்களுக்குச் சொல்லிக்கொண்டு ரதத்தின் மீதேறி த்வாரகையை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது உத்தரையானவள் மிகவும் பயந்தவளாய் ஸ்ரீ க்ருஷ்ணனிடம் வந்து அவரை நோக்கி "மஹா யோகியே! தேவர்களுக்கும் தேவரே! ஸகல ஜகத்திற்கும் அதிபதியே! என்னைக் காப்பாற்றும். பயத்தை நிவர்த்திப்பவர் நீர் ஒருவரேயொழிய மற்றவைகளெல் லாம் ஒன்றுக்கொன்று பயத்தை யுண்டுபண்ணுகின்றன ஏ நாத! அக்னிபோல் கொதித்துக் கொண்டிருக்கும் எஃகுமுனையுள்ள பாணமானது எனக்கு எதிரில் வருகிறது. அதனால் என் சரீரம் எரிக்கப்பட்டாலும் எனக்கு ஸம்மதம், என் வயிற்றிலிருக்கும் சிசுவுக்கு மாத்ரம் கெடுதி நேரிடாமல் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக்கொண்டாள். பக்தர்களிடம் வாத்ஸல்ய முள்ள பகவான் அதனைக்கேட்டு 'இது பாண்டவர்களை நாசஞ்செய்வதற்காக அஸ்வஸ்தாமாவினால் ப்ரயோகிக்கப்பட்ட அஸ்த்ரம்' என்று நிச்சயித்தார்.

12–37. அப்பொழுது பாண்டவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு எதிரில்வரும் பாணங்களைப் பார்த்து அதனைத் தடுப்பதற்காக சிறந்த அஸ்த்ரங்களை எடுத்தார்கள். ஸ்ரீ பகவான் தம்மிடத்திலேயே மனத்தைச் செலுத்திய பக்த சிரோமணிகளான பாண்டவர்களுக்கு நேர்ந்த விஸனத்தைப் பார்த்து அந்த அஸ்த்ரம் வேறு அஸ்த்ரங்களால் தடுக்க முடியாததாகையால் தம்முடைய ஸுதர்சனமென்ற சக்ரத்தை ப்ரயோகித்து, அதனால் அவர்களை

ரக்ஷித்தார். மேலும் ஸகல ப்ராணிகளிடத்திலும் அந்தர்யாமியாயிருக்கும் யோகேசராகிய அந்த க்ருஷ்ண பரமாத்மாவானவர் விராடபுத்ரியான உத்தரையின் வயிற்றிலிருக்கும் கர்பத்தைத் தம்முடைய மாயையால் மறைத்தார். ஏ சௌனகரே! ப்ரஹ்மாஸ்த்ரமென்பது மற்றவைகளால் தடுக்க கூடியதல்ல. வீணாய்ப் போகாதது. ஆனாலும் விஷ்ணுவின் தேஜஸையடைந்து அடங்கினது. பகவான் மாயையால் ஸிருஷ்டி, பரிபாலனம், ஸம்ஹாரம் ஆகிய இவைகளைச் செய்கிறவராகையாலும், ஸகல ஆச்சர்யரூபியாயிருப்ப தாலும், அவரிடத்தில் மேற்சொல்லிய விஷயத்தை அத்புதமென்று நினைக்கவேண்டாம். இப்படிப் பாண்டவர்கள் பகவானுடைய ஒத்தாசையால் ப்ரஹ்மாஸ்த்ரத்திலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். அப்பொழுது பதிவ்ரதையான குந்திதேவியானவள் த்வாரகா நகரத்திற்கு ப்ரயாணமாயிருக்கும் க்ருஷ்ண பகவானை நோக்கி தன்னுடைய புத்ரர்களுடனும், த்ரௌபதியுடனும், பகவத் ஸ்வரூபத்தை அறியாத வளான நான் எல்லாவற்றிற்கும் முந்தியபுருஷனை நமஸ்கரிக்கிறேன். அவர் ஸகலத்திற்கும் ஈச்வரன். ப்ரகிருதி (மாயை)க்கு மேற்பட்டவர். ஸகலத்திற்கும் மேற்பட்டவர். ஸகலப்ராணிகளாலும் பார்க்கமுடியாத வர். ஆனால் ப்ராணிகளுடைய உள்ளிலும் வெளியிலும் இருப்பவர். மாயையாகிய திரையால் மறைக்கப்பட்டவர். இந்திரியங்களுக்குப் புலப்படாதவர். நாசமில்லாதவர். அந்தப் பரமபுருஷனாகிய நீர், வேஷதாரி(நடன்) போல தேஹாபிமானமுள்ளவர்களால் அறியப்படுகிறீரில்லை. சுத்தசித்தர்களும் மனனம்செய்யும் ஸ்வபாவமுள்ளவர் களுமான பரமஹம்ஸர்களும், உம்முடைய ஸ்வரூபத் தைத் தேடுகிறார்கள். அப்படியிருக்க, ஸ்திரீகளாகிய

நாங்கள் பக்தியோகத்தை யடைவதற்காக உம்மை எப்படி தர்சிப்போம்? க்ருஷ்ணன், வாஸுதேவர், தேவகீநந்தனர் (தேவகியின் புத்ரர்) கோவிந்தர் என்னும் திவ்ய நாமங்களுள்ளவரும், நந்தனென்ற கோபரு (யாதவர்)க்குப் புத்ரரும், தாமரைமலருடன் கூடிய நாபியுள்ளவரும், தாமரஸ புஷ்பமாலையுள்ளவரும், தாமரைமலர் போன்ற கண்கள், கால்கள் ஆகிய இவைகளுள்ளவருமான உமக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். ஏ! ப்ரபுவே! துஷ்டனாகிய கம்ஸனால் துன்பப்படுத்தப் பட்ட தேவகியை எப்படிக் காப்பாற்றினீரோ அப்படியே என்னையும் என்னுடைய புத்ரர்களையும் கூட்டங் கூட்டமாக ஆபத்துக்கள் வந்தாலும், அவைகளிலிருந்து ஸம்ரக்ஷிக்கிறீர் (தமக்கு மாதாவிடமிருக்கும் ப்ரீதியைக் காட்டிலும் என்னிடம் அதிக விச்வாஸமென்பது கருத்து) விஷம், அக்னி, ராக்ஷஸர்கள், அஸத்துக்களுடைய ஸபை, வனவாஸ கஷ்டம், ஒவ்வொரு யுத்தத்திலும் மஹாரதர்களாகிய பீஷ்மர் முதலியவர்களுடைய அஸ்த்ரங்கள், கடைசியாக அச்வத்ஸ்தாமாவின் ப்ரஹ்மாஸ்த்ரம் ஆகிய இவைகளிலிருந்து உம்மால் காப்பாற்றப்பட்டோம். மேலும் துர்யோதனனால் தூண்டப்பட்டு, எங்களை சபிப்பதற்காக வந்த துர்வாஸ மஹாமுனியை ஸகல ஜகத்துடன் திருப்தியடையச் செய்து அவரிடமிருந்தும் காப்பாற்றினீர். நீர் ஸகல ஜகத்திற்கும் குருவாயிருப்பவர், தங்களுடைய தர்சன மானது மோக்ஷத்தை கொடுக்கத்தக்கது, அப்போர்ப்பட்ட உம்முடைய தர்சனம் ஆபத்காலங்களில் கிடைப்பதால் அந்த விபத்து அடிக்கடி வந்தாலும் ஸம்மதம். மேலான குலத்தில் பிறந்திருப்பது, ஐச்வர்யம், சாஸ்த்ரங்களை படித்திருப்பது, அழகு ஆகிய இவைகளால் மிகுந்த கர்வமுள்ள புருஷன் உம்முடைய பெயரை உச்சரிக்க

மாட்டான். தரித்ரனாலேயே அந்த திவ்யநாமதேயம் இடைவிடாமல் சொல்லப்படும். (ஸம்பத் க்ஷேமத்திற்கு விரோதியென்று கருத்து) தங்களுக்கு பக்தர்களே பணம். முக்குணங்களின் வ்ருத்திகள் தங்களிடத்தில் ஸம்பந்தக்கிறதில்லை. நீர் ஆத்மாவிலேயே ரமிப்பவர்; சாந்தர்; மோக்ஷத்தைக்கொடுக்கும் ஸாமர்த்யமுள்ளவர்; இப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரஞ்செய்கிறேன். நீர் தேவகியின் புத்ரரானாலும், ப்ராகிருத சிசுக்கள் போன்றவரல்ல. உம்மைக் காலரென்றும், எல்லாவற்றிற் கும் ஈச்வரரென்றும்; ஆதியந்தமற்ற ப்ரபுவென்றும், எல்லாரிடத்திலும் ஸமமாக ஸஞ்சரிப்பவரென்றும் நான் நினைக்கிறேன். உமக்கு ஓரிடத்திலும் பக்ஷபாத மில்லை. ஜனங்கள் ஒருவருக்கு ஒருவர் சண்டை செய்வதற்கும் நீரே நிமித்தம்; வேறில்லை மேலும் சிலர் விரோதிகளென்றும். சிலர் மித்ரர்களென்றும் பேதபுத்தி உமக்கில்லை. நீர் மனுஷ்ய சரீரமெடுத்து அவர்கள்போல் அபினயஞ் செய்வதால் உம்மிடத்தில் பேதபுத்தி யிருப்பதாகத் தோன்றுகிறதேயொழிய உண்மையிலில்லை. (அனுக்ரஹத்தையாவது நிக்ரஹத் தையாவது செய்கிறதில்லை) தங்களுடைய அபிப்ராயம் ஒருவராலும் அறியமுடியாதது. ஜகத்ருபியாயிருக்கும் ப்ரபுவே! பிறப்பில்லாதவரும், ஒன்றையுஞ்செய்யாதவரும், பரமாத்மாவாக விருப்பவருமான நீர்,வராஹ(பன்றி) மாகியும், மத்ஸ்யமாகியும், வாமனராகியும் அவதரித்தீ ரென்பது பொருந்துமா? அது லோகத்தை அனுஸரித்ததேயொழிய உண்மையில் உமக்கு ஜன்மமில்லை. கோகுலத்தில் நந்தருடைய கிரஹத்தில், தயிர்பானையை உடைத்ததற்காக யசோதை, உம்மைக் கட்டுவதற்கு கயிற்றை எடுத்தாளல்லவா? அப்போது நீர் கண்களிலிருந்த மை கரையும்படி கண்ணீரைப்

பெருகிக் கொண்டு கலங்கிய கண்களுள்ளவராய்த் தலைகுனிந்து மிகவும் பயந்தவர் போல் அபினயஞ் செய்தீரல்லவா? அது எனக்கு மோஹத்தை யுண்டு பண்ணுகிறது. உண்மையில் ஜனனம், மரணம் முதலியவைகளும் உம்மிடமிருந்து பயப்படுகிறது. உம்முடைய சரிதம் ஜகத்திற்கு மோஹகரமாகையால் உம்முடைய ஜன்மங்களைப் பலவகையாய்ப் பெரியோர் கள் சொல்லுகிறார்கள். அதாவது "புண்ய ச்லோகராகிய யதுவின் கீர்த்தியை விருத்தி செய்வதற்காக அவருடைய வம்சத்தில், மலயபர்வதத்தை கௌரவப் படுத்துவதற்கு, அதில் சந்தனவிருக்ஷம் முளைத்தது போல் அவதரித்தீர்" என்று சிலர் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் "வஸுதேவர், தேவகி இவர்களால் ப்ரார்த்திக்கப்பட்டு உண்மையில் பிறப்பில்லாதவரானா லும், தேவ விரோதிகளை நாசஞ்செய்து இவ்வுலகத் திற்கு க்ஷேமத்தை யுண்டுபண்ணுவதற்காக தேவகியின் புத்ரராக அவதரித்தீர்" என்று கூறுகிறார்கள். மற்றுஞ் சிலர் "பூமியில் துஷ்டர்கள் அதிகமாயிருந்த படியால் மிகுந்த பாரத்தால் ஸமுத்ரத்தின் நடுவில் தத்தளிக்குங் கப்பல்போல் கஷ்டப்படும் பூமியின் பாரத்தை நிவர்த்திப்பதற்காக ப்ரஹ்மதேவருடைய வேண்டு கோளின்படி அவதரித்தீர்" என்று சொல்லுகிறார்கள் இன்னுஞ்சிலர் "ஆத்மாவின் ஆனந்த ஸ்வரூபத்தை யறியாமல் தேஹம் முதலியவைகளில் அபிமானம் வைத்துக் கர்மங்களைச் செய்துகொண்டு கஷ்டப்படும் ஜனங்களுக்கு மேற்காட்டிய துக்கத்தை நிவர்த்திக்க வேண்டி கேட்பதற்கும் ஸ்மரிப்பதற்கும் தகுதியான லீலைகளைச் செய்வதற்காக ஜன்மாவை அங்கீகரித்தீர்" என்கிறார்கள். எந்த ஜனங்கள் உம்முடைய சரிதத்தை பிறர்சொல்லக் கேட்கிறார்களோ, தம் வாக்கினால்

உச்சரித்து கானஞ்செய்கிறார்களோ, அடிக்கடி நினைக்கிறார்களோ, நினைத்து ஆனந்தப்படுகிறார்களோ, அவர்கள் பிறப்பு, இறப்பு ஆகிய இவைகளைப் போக்குகிற உம்முடைய பாதங்களை வெகு சீக்ரமாக அடைவார்கள்.

38–44. பக்தர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும் ப்ரபுவே! தங்களிடம் விசேஷ ப்ரியமுள்ளவர் களும், தங்களுக்கு வேலைக்காரர்களுமான எங்களை விட்டுப்போவது உசிதமல்ல துர்யோதனன் முதலிய அரசர்கள் நிமித்தமாக விசேஷ பாபங்கள் செய்த எங்களுக்கு உம்முடைய பாதாரவிந்தத்தைத் தவிர வேறு கதியில்லை. மேலும் இந்த்ரியங்களுக்கு அதிபதி யான ஜீவனில்லாத வரையில் எப்படி நாமரூபங்கள் பயன்படுகிறதில்லையோ அப்படி உம்முடைய ஸான்னித்யமில்லாத வரையில் யாதவர்களுடன் கூடிய பாண்டவர்களாகிய எங்களுடைய கீர்த்தியும், ஸம்பத்தும் பயன்படாதவைகளேயாம். மேலும், எங்களுடைய ராஜ்யத்திற்குட்பட்ட இந்த பூமியானது உம்முடைய பாதங்களிலுள்ள த்வஜரேகை, வஜ்ரரேகை, அங்குசரேகை முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு விளங்குகிறது. நீர் அப்புறம் போனால் இந்தப்பூமி பிரகாசிக்காது. உம்முடைய கடாக்ஷ வீக்ஷண்யத்தால் இந்த தேசத்தில் ஐச்வர்யம் விருத்தியடைகின்றன.செடி கொடி முதலியவைகள் நன்றாய் விருத்தியடைகின்றன. ஓ! ஜகத்பதியே! ஜகத்ரூபியாயிருப்பவரே! ஜகத்தில் அந்தர்யாமியாயிருப்பவரே! பந்துக்களான பாண்டவர் களிடத்திலும், விருஷ்ணிகளிடத்திலும் எனக்கிருக்கும் ஸ்நேஹ(அபிமான)மாகிய பந்தத்தை நிவர்த்தியும். ஓ! மதுரா நகரத்தரசனாகிய க்ருஷ்ணா! கங்கையின்

ப்ரவாஹமானது இடையில் நேரும் விக்னங்களை லக்ஷ்யஞ்செய்யாமல் ஸமுத்ரத்தையே யடைவதுபோல என்னுடைய மனஸும் வேறிடஞ்செல்லாது இடை விடாமல் உம்மையே பஜிக்கும்படி அனுக்ரஹிக்க வேண்டும். ஓ! க்ருஷ்ண! அர்ஜுனனுக்கு மித்ரரே! விருஷ்ணிகளுக்குட் சிறந்தவரே! பூமிக்குக் கெடுதி செய்யும் அரசர்களை நாசஞ் செய்பவரே! குறைவற்ற வீர்யமுள்ளவரே! ஏ கோவிந்த! (காமதேனுவின் ஐச்வர்யத்தை யடைந்தவர்) பசுக்கள், ப்ராஹ்மணர்கள், தேவர்கள் ஆகிய இவர்களின் உபத்ரவத்தை போக்கடிப் பவரே! யோகிகளுக்கு அதிபதியும், ஜகத்திற்கு குருவாயு மிருப்பவரே! பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன் என்று ஸ்தோத்ரம் பண்ணினாள்.

45–46. இந்தப்படி குந்திதேவியால் இனிமையான வாக்யங்களைக் கொண்டு ஸ்தோத்ரஞ் செய்யப்பட்ட பகவான் தம்முடைய ஸகல மஹிமைகளையும் வெளியிட்டு கொஞ்சம் சிரித்து, தமது மாயையால் அவளை ப்ரமிக்கச்செய்தார். பின்பு குந்தியின் ப்ரார்த் தனைப்படி "எப்பொழுதும் என்னிடத்திலுனக்கு ஸ்திரமாக பக்தி இருக்கட்டும்" என்று அனுக்ரஹித்து ஹஸ்தினாபுரஞ் சேர்ந்து அவ்விடத்தில் ஸுபத்ரை முதலிய ஸ்த்ரீகளுக்கு சொல்லிக்கொண்டு தமது பட்டணத்திற்குப் போக முயற்சித்தார். அப்பொழுது இவ்விடத்தில் தாங்கள் சிலகாலம் வஸிக்கவேண்டும் என்று தர்மபுத்ரர் அன்புடன் கேட்டுக்கொள்ள, பகவானும் அதை அங்கீகரித்து அவ்விடத்தில் வஸித்தார்.

47–53. பிறகு பகவானுடைய அபிப்ராயத்தை

அறியாத வ்யாஸமஹர்ஷி முதலியவர்களாலும், அத்புதகார்யங்களைச் செய்யும் க்ருஷ்ண பகவானாலும், பலவகையான இதிஹாஸங்களை கொண்டு தர்மபுத்ரர் ஸமாதானஞ் செய்யப்பட்டும் அதனால் அவருக்கு துக்கம் நீங்கவில்லை. ஓ ப்ராஹ்மணர்களே! தர்ம புத்ரர் யுத்தத்தில் இறந்துபோன பந்துக்களையே நினைத்து, அவிவேகமுள்ளவராய் அபிமானம், மோஹம் என்னும் இவைகளுக்கு வசப்பட்டு பின்வருமாறு சொல்லலானார். 'துராத்மாவாகிய என்னுடைய மனத்தில் ஸ்திரமாயிருக்கும் அறியாத்தன்மை மிகவும் ஆச்சர்யப்படத்தக்கது. நாய், நரி முதலியவைகளுக்குச் சொந்தமான இந்த சரீரத்திற்காக அனேக அக்ஷௌஹிணி ஸைன்யங்களைக் கொன்றேன். பாலர்கள், ப்ராஹ்மணர்கள், மித்ரர்கள், பிதிருவ்யர்கள், ஸஹோதரர்கள், குரு ஆகிய இவர்களுக்கு த்ரோஹஞ்செய்த நான், அனேகவர்ஷங்கள் பாபத்தின் பலனாகிய நரகத்தை அனுபவித்தாலும் ஒருபொழுதும் மோக்ஷத்தையடையப் போகிறதில்லை.யுத்தத்தில் சத்ருக்களைக் கொல்வது அரசர்களுக்கு தர்மமேயொழியப் பாபமில்லை' என்று சாஸ்த்ரத்தில் சொல்லியிருப்பது என் விஷயத்தில் பொருந்தாது. ஏனென்றால் 'அரசன் தன்னுடைய ப்ரஜைகளுக்கு, சத்ருக்களால் உபத்ரவம் நேரிடும்போது, அவர்களைக்கொல்வது ந்யாயம்' என்பது சாஸ்த்ரத்தி னுடைய தாத்பர்யம். துர்யோதனனால், ப்ரஜைகள் காப்பாற்றப்பட்டு ஸுகமாய் வஸிக்கும்போது ராஜ்யமடையவேண்டுமென்ற ஆசையால் மாத்ரம் நான் சண்டைசெய்து பந்துக்களைக் கொன்றேனாகையால், என் புத்திக்கு ஸமாதானமாகவில்லை இப்படிப் புருஷர்களைக்கொன்றதால் அவர்களுடைய பந்துக்களான ஸ்த்ரீகளுக்கும் நான் த்ரோஹஞ் செய்தவனாகிறேன்.

இந்தப் பாபம் க்ரஹஸ்தாச்ரமத்தில் செய்யக்கூடிய ஸத்கர்மங்களால் நிவர்த்தித்துக் கொள்ளமுடியாது. அநேக ப்ராணிகளை (அறியாத்தன்மையால்) கொன்ற தால் நேர்ந்த இந்த பாபத்தை புத்தி பூர்வமாகச் செய்யும் ஹிம்ஸையுள்ள யாகத்தால் நிவர்த்திசெய்து கொள்ளவும் முடியாது. 'கலங்கிய ஜலத்தால் கலங்கிய ஜலத்தை சுத்தப்படுத்த முடியுமா? மத்யத்தால் உண்டான அசுத்தியானது, மத்யத்தால் நிவர்த்தி யாகுமா?' என்று பலவாறாகத் துக்கித்தார்.

நோட்டு

பயத்தை–மிருத்யுவிற்கு வசப்பட்டிருக்கும் மனிதனால் மற்றொருவனை மிருத்யுவினிடமிருந்து காப்பாற்ற முடியாதென்று கருத்து– வீர. அறியாத– பீஷ்மர் மரணமடையப் போகிறார், அதற்காக எல்லோரும் கங்கையின் கரைக்குச் செல்லவேண்டும், அவ்விடத்தில் அவரிடமாக தர்மங்களைக் கேட்கச்செய்து அதனால் தர்மபுத்ரருடைய துக்கத்தைப் போக்கவேண்டுமென்பது பகவானுடைய அபிப்பிராயம்.– ஸ்ரீ த. அக்ஷௌஹிணி– ரதங்கள் 21870, யானைகள் 21801, குதிரைகள் 65610, காலாட்கள் 109350 யாகத்தால்– "எவன் அச்வமேதஞ் செய்து பகவானை பூஜிக்கிறானோ அவன் ப்ரஹ்மஹத் யை முதலிய பாபங்களிலிருந்து விடுபடுகிறான்" என்று ச்ருதியில் சொல்லப்பட்டிருந்தாலும் என்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–9

பீஷ்மர் தர்மம் உரைத்தது.

இப்படி தர்மபுத்ரர் "பந்துக்களுக்கு த்ரோஹஞ் செய்தோமே" என்று பயந்து ஸகல தர்மங்களையும் தெரிந்துகொள்ள விரும்பி பீஷ்மர் வஸிக்கும் குருக்ஷேத்ரம் சென்றார்.

ப்ராஹ்மணர்களே! அப்பொழுது அவருடைய தம்பிகளும், பகவானும், வ்யாஸரும், தௌம்யர் முதலானவர்களும், உத்தமமான குதிரைகள் பூட்டிய ரதங்களிலேறிக்கொண்டு அவர்பின் சென்றார்கள். மேலும் ஸ்ரீ க்ருஷ்ணபகவானும் அர்ஜுனருக்கு ஸாரத்யம் செய்துகொண்டு சென்றார். அவர்களுடைய நடுவில் அந்தத் தர்மபுத்ரர் குஹ்யகர்களால் சூழப்பட்ட குபேரன்போல ப்ரகாசித்தார்.

4–8. அவ்விடத்தில் ஸ்வர்க்கத்திலிருந்து விழுந்திருக்கும் தேவரைப்போல், பூமியில் கிடக்கும் பீஷ்மரைக்கண்டு, பாண்டவர்களும், அவர்களுடைய பரிவாரங்களும், ஸ்ரீ க்ருஷ்ணபகவானும், அவருக்கு நமஸ்காரஞ் செய்தார்கள். அந்த ஸமயத்தில் ஸகல ப்ரஹ்மர்ஷிகளும், சிறந்த தேவர்ஷிகளும், ராஜர்ஷிகளும், அந்தப்பீஷ்மரைப் பார்ப்பதற்காக வந்து கூடினார்கள். மேலும், பர்வதர், நாரதர், தௌம்யர், வ்யாஸபகவான், ப்ரஹதச்வர், பரத்வாஜர், அவருடைய சிஷ்யர்கள், ரேணுகையின் புத்ரராகிய பரசுராமர், வஸிஷ்டர், இந்த்ரப்ரமதர், ச்ருதர், கிருதஸ்மதர், அஸிதர், நக்ஷீவான், கௌதமர், அத்ரி, விச்வாமித்ரர்,

ஸுதர்சனர், காச்யபர், ப்ரஹஸ்பதி, சுகர் முதலிய நிர்மல ஸ்வபாவமுள்ள மற்றவர்களும் தங்கள் தங்கள் சிஷ்யர்களுடன் அவ்விடமே வந்துசேர்ந்தார்கள்.

9–24. தேசத்தையும் காலத்தையும், நன்றாக அறிந்த பீஷ்மர் வந்தவர்களைத் தனியே தெரிந்துகொண்டு மிக்க பாக்யசாலிகளான மஹர்ஷிகளைப் பூஜித்தார். மேலும் ஸமீபத்தில் உட்கார்ந்திருப்பவரும், ஜகதீசரும், மாயையால் சரீரமெடுத்தவருமான ஸ்ரீ க்ருஷ்ண பகவானைப் பார்த்து, அவருடைய மஹிமையை அறிந்தவராகையால், அவரை ஹிருதயத்தில் வைத்து அர்ச்சித்தார். பின்னும் அவர் மிகுந்த வணக்கத்தோடும் ப்ரேமையோடும், பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் பாண்டவர்களைப் பார்த்து அபிமானத்தால் கண்ணீரைப் பெருக்கி அதனால் கண் தெரியாதவராய்ப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினார். "ஏ தர்மபுத்ர! நீங்கள் ப்ராஹ்மணர்களையும் தர்மத்தையும், ஸ்ரீ க்ருஷ்ண பகவானையும் ஆச்ரயித்தவர்களாகவிருந்தும் கஷ்டப்பட்டு ஜீவிப்பது ந்யாயமல்ல இது வெறுக்கக் கூடிய கார்யம். உங்களுடைய பிதாவும் அதிரதருமாகிய பாண்டு மரணமடைந்த பிறகு உங்களுடைய மாதாவாகிய குந்திதேவி பால்யவயதுள்ள குழந்தைகளுடன் அடிக்கடி மிகுந்த கஷ்டத்தை அனுபவித்தாள். மேகங்கள் வாயுவுக்கு வசப்பட்டிருப்பதுபோல, ஜனங்கள் காலத்திற்கு வசப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் உங்களுக்கு நேர்ந்த கஷ்டங்கள் யாவும் அந்தக் காலத்தால் செய்யப்பட்டவைகளேயாம். எந்த பக்ஷத்தில் அரசனாகிய தர்மபுத்ரரும், கதாயுதத்தைக் கையில் பிடித்த பீமஸேனனும் காண்டீவமென்னும் வில்லையுடைய அர்ஜுனனும் இருக்கிறார்களோ, மேலும்

அவர்களுக்கு க்ருஷ்ணபகவான் மித்ரரோ அவ்விடத்திலும் ஆபத்துநேரிட்டதென்பது காலத்தின் மஹிமையேயாம்:

இதோ இருக்கும் க்ருஷ்ண பகவானுடைய எண்ணத்தைத் தெரிந்துகொள்ள ஒருவராலும் முடியாது. கவிகளும், யோகிகளும், இவருடைய ஸ்வரூபத்தை அறிய விரும்பியும், அதை அறியாமல் மோஹிக்கிறார்கள். ஏ! தர்மபுத்ரரே! மேற்சொல்லிய காரணத்தால் 'இவையாவும் ஈச்வரனுக்கு வசப்பட்டவை என்று நிச்சயித்து அந்த ஈச்வரனை அனுஸரித்து அனாதர்களான ப்ரஜைகளைக் காப்பாற்றும்; ஸிருஷ்டிக்கு முந்தியிருந்த புராண புருஷராகிய பகவான் இவர்தான். இவரே நாராயணன் ஆனாலும் தம்முடைய மாயையால் லோகத்தை ப்ரமிக்கச் செய்து கொண்டு (தன் ஸ்வரூபத்தைக் காட்டாமல்) விருஷ்ணிவம்சத்தில் ப்ரகாசிக்கிறார். இவருடைய மஹிமை மிகவும் ரஹஸ்யமானது; அதனைப் பகவானாகிய பரமசிவனும், தேவர்ஷியாகிய நாரதரும், கபிலருமே அறிவார்கள். நீங்கள் இவரை அம்மானுடைய பிள்ளை (அம்மான் சேய்) என்றும் உங்களுடைய இஷ்டப்படி நடப்பவரென்றும், பிரதி உபகாரத்தை எதிர்பாராமல் உபகாரஞ்செய்பவர் என்றும், நினைத்து அவரை மந்த்ரியாகவும், தூதராகவும், ஸாரதியாகவும், ஸ்நேஹவிசேஷத்தால் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அப்படி நினைப்பது அறியாத்தன்மையே. ஸகல ஜகத்ருபியும், ஸமமாயிருப்பவரும், ஒருவராய் விளங்குபவரும், அஹங்காரமில்லாதவரும், ஆசை முதலியவைகளில்லாதவருமான, இந்தப் பகவானுக்கு மேலான கார்யமென்றும், கீழான கார்யமென்றும், தகுதியுடையது

என்றும், வேறுபாடு தோன்றுகிற பேதபுத்தி ஒரிடத்திலும் உண்டாகிறதில்லை. ஆனாலும் இடைவிடாமல் பக்தி செய்பவர்களிடத்தில் இவருக்கு க்ருபை உண்டாகிறது. இப்போது நான் உயிரைவிடஸித்தனாயிருக்கையில், ஸ்ரீ க்ருஷ்ணபகவான் எனக்கு தர்சனங் கொடுப்பதற்காக நேரில் இவ்விடம் வந்திருக்கிறார். ஆகையால் இடைவிடாமல் பக்திசெய்பவர்களிடத்தில் பகவானுக்கு உண்டாகும் க்ருபையை பாருங்கள். மனிதனானவன் தன்னுடைய மனதை பகவானிடத்தில் பக்தியுடன் செலுத்தியும் அவருடைய பெயரையே வாக்கினால் உச்சரித்துக்கொண்டும் சரீரத்தைவிடுவானாகில் அவன் காமங்களாலும் கர்மங்களாலும் பாதிக்கப்படமாட்டான் ஆகையால் தேவர்களுக்கும் தேவரும், சிரிப்பினாலும், சிவந்தகண்களாலும், அழகான முகமுள்ளவரும், த்யானத்திற்கு விஷயமானவரும், நான்கு கைகளுள்ளவருமான பகவான் நானிந்த சரீரத்தை விடுகிறவரையில் என் முன்பு இருக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

25. இதனைக்கேட்டு தர்மபுத்ரர் சரதல்ப (ப்ராணப் படுக்கை)த்தில் படுந்துக் கொண்டிருக்கும் பீஷ்மரை நோக்கி மற்ற மஹர்ஷிகள் கேட்டுக்கொண்டிருக்கும் போது பலவகையான தர்மங்களைச் சொல்லவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

26–28. ஸகல தர்மங்களையு மறிந்தவராகிய பீஷ்மர் மனுஷ்ய ஜாதிக்குப் பொதுவானவைகளும், வர்ணாச்ரமங்களுக்கு உரியவைகளும், வைராக்ய ஸம்பந்தத்தால் ஏற்படும் நிவிருத்தி ரூபமாயும் ஆசையின் ஸம்பந்தத்தால் ஏற்படும் ப்ரவிருத்தி ரூபமாயுமுள்ள

தர்மங்களையும், ராஜதர்மங்கள், தானதர்மங்கள், மோக்ஷதர்மங்கள், ஸ்த்ரீதர்மங்கள், பகவத்தர்மங்கள், ஆகிய இவைகளையும், தனித்தனியாகப் பிரித்துச் சுருக்கமாகவும், விஸ்தாரமாகவும் சொன்னார். மேலும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்களையும், அவைகளை அடைவதற்கு தகுந்த உபாயங்களையும், அனேக இதிஹாஸங்களிலும், உபாக்யானங்களிலும் சொல்லியபடி வர்ணித்தார்.

29–31. இப்படி தர்மங்களை யுபதேசித்துக் கொண்டிருக்கும்போது உத்தராயணம் வந்தது. இஷ்டப்படி மரணமடையச் சக்தியுள்ள யோகியாகிய பீஷ்மரால் தமது மரணத்திற்காக எதிர்பார்க்கப்பட்டிருந்த காலம் இதுவேயாம். அப்பொழுது ஆயிரம் ரதிகர்களைக் காப்பாற்றும் வல்லமையுள்ள பீஷ்மர் மௌனமாக (வார்த்தைகளை அடக்கிக்கொண்டு) ஆதிபுருஷரும், பீதாம்பரத்தை ,தரித்தவரும், நான்கு கைகளுள்ளவரும் எதிரில் உட்கார்ந்திருப்பவருமாகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் ஸகல ஆசைகளையும் ஒழித்து சுத்தமாக விருக்கும் மனத்தை கண்களை மூடிக் கொள்ளாமலேயே செலுத்தினார். மேலும் அவருக்கு இம்மாதிரி பரிசுத்தமாகிய த்யானவிசேஷத்தால் அசுபங்கள் விலகின. பகவானுடைய கருணைநிறைந்த பார்வையால் ஆயுதங்களாலுண்டாகிய காயங்களும் அவற்றின் உபத்திரவமும் நீங்கின. சகல இந்திரியங்களும் பலவிடங்களில் செல்லாமல் ஒருவழிப்பட்டன. பின்னும் ஸாத்வதர்களுக்குட் சிறந்தவரும், ஒப்பற்ற மஹிமையுள்ளவரும் தம்முடைய ஸ்வரூபமான பரமானந்தத்தை யடைந்தவரும், ஸிருஷ்டிக்குக் காரணமாகிய ப்ரகிருதியின் ஸம்பந்தத்தை சிலகாலம் லீலையாக அங்கீகரிப்பவருமான பகவானிடத்தில்

ஒருவித ஆசையுமில்லாத தமது புத்தியைச் செலுத்தினார். இப்படி எல்லாவகையிலும் பகவத் பரராயிருந்து சரீரத்தை விடுகிறவரையில் ஸ்ரீ கிருஷ்ணனை பின்வருமாறு ஸ்தோத்ரஞ் செய்யலானார்.

32–35. "மூவ்வுலகத்திலும் மிகுந்த அழகுள்ளதும், பச்சிலை போல் நீலவர்ணமுள்ளதுமான திவ்யசரீரத்தை யடைந்தவரும், ஸூர்ய கிரணம்போல் பொன்னிறமான வஸ்த்ரத்தை தரித்தவரும், நான்குபுறத்திலும் தொங்கும் சிறந்த தலைமயிர்களால் அழகான முகமுள்ளவரும். அர்ஜுனனுக்கு தோழருமான பகவானிடத்தில் பலனையுத்தேசியாமல் எனக்கு ஸ்திரமான பக்தியுண்டாகட்டும். மேலும் யுத்தத்தில் அர்ஜுனனுக்கு ஸாரத்யஞ் செய்யும்போது குதிரைகள் ஓடியதால் பூமியிலிருந்து கிளம்பிய தூளிகள் எவருடைய தலைமயிரில் படிந்தனவோ, எவருடைய முகம் அப்படிப்பட்ட மயிர்களோடு கூடிய வேர்வை ஜலத்துளிகளால் அலங்கரிக்கப்பட்டதோ, எவருடைய கவசம் என்னுடைய பாணங்களால் மூடப்பட்டு ப்ரகாசித்ததோ, அந்த கிருஷ்ண பகவானிடத்தில் என்னுடைய மனஸானது ரமிக்கட்டும்; பின்னும் எந்த பகவான் தம்முடைய ஸ்நேஹிதனாகிய அர்ஜுனனுடைய வார்த்தையின்படி இரண்டு பக்கத்து ஸைன்யங்களுடைய நடுவில் ரதத்தைச்செலுத்தி சத்ரு ஸைன்னியத்திலிருப்பவர்களனைவரையும் 'இவர் த்ரோணர், இவர் பீஷ்மர், இவர் க்ருபர்' என்று சுட்டிக்காட்டிப் பார்வையாலேயே அவர்களுடைய ஆயுஸைக்குறைத்து, அதனால் அர்ஜுனனுக்கு ஜயத்தை யுண்டுபண்ணினாரோ. அந்த கிருஷ்ணனிடத்திலேயே என் மனம் ஸந்தோஷமடையட்டும்.

36–42. அர்ஜுனன் சத்ரு ஸைன்யத்தில் யுத்தத் திற்கு ஸன்னத்தனாயிருந்த, நான் முதலிய் பந்துக்களைப் பார்த்து இவர்களைக் கொல்வதால் பாபம் நேரிடுமென்ற எண்ணத்துடன் யுத்தஞ்செய்வதில் ஆசையில்லாதவனாக விருக்கும்போது, அவனுக்கு ஆத்மவித்யை யுபதேசித்து, அந்த எண்ணத்தை எவர் மாற்றினாரோ, அந்த பரமபுருஷனுடைய பாகங் களையே என் மனஸ்த்யானிக்கட்டும்; மேலும் ஸ்ரீ கிருஷ்ணன் ஆயுதமெடுக்காமல் யுத்தத்தில் ஒத்தாசை செய்வதாகப் பாண்டவர்களுக்கு ப்ரதிஜ்ஞை செய்தவரானாலும், ஸ்ரீ கிருஷ்ணனை ஆயுதமெடுக்கச் செய்கிறேன் என்று என்னால் செய்யப்பட்ட ப்ரதிஜ் ஞையை நிறைவேற்றுவதற்காக, அர்ஜுனனுடைய ரதத்தைவிட்டுக் கீழே இறங்கி சக்ராயுதத்தை எடுத்துக் கொண்டு யானையைக்கொல்வதற்கு சிங்கம்வந்தாற் போல பூமி அசையும்படியாகவும். மேல்வஸ்த்ரந்தவறி விழும்படியாகவும் வெகு வேகமாயோடி வந்தார். அப்பொழுது நான் சிரித்துக்கொண்டு அவரை பாணங்களாலடித்தேன். அதனால் அவருடைய கவசம் உடைந்தது; சரீரமுழுவதும் ரக்தத்தால் நனைந்தது. அப்பொழுது அர்ஜுனனால் தடுக்கப்பட்டும் அவனை மீறிக்கொண்டு என்னைக் கொல்வதற்காக ஓடிவந்தார். அந்தப் பகவானாகிய முகுந்தரே எனக்குக் கதி. பின்னும் அவர் ஒரு வகையில் குதிரையோட்டுங் கோலையும். மற்றொருகையில் குதிரைகளின் கடிவாளங்களையும் பிடித்து ஸாரதி வேஷம்பூண்டு, அனேக அகார்யங்களைச் செய்தாவது அர்ஜுனனுடைய ரதத்தைக் காப்பாற்றிக்கொண்டிருந்தார். இந்த பகவானைத் தர்சித்ததால் சண்டையில் அடிபட்டு

மரணமடைந்தவர்களனைவரும் பகவத் ஸாரூப்யத்தை அடைந்தார்கள். ஆகையால் மரணமடையும் தசை யிலிருக்கும் என்னுடைய சித்தம் இந்தப் பரம புருஷனிடத்தில் கலந்திருக்கட்டும். மேலும் அழகான நடை, லீலை, சிரிப்பு, ஸ்நேஹமான பார்வை இவை களால் கௌரவப்படுத்தப்பட்டவர்களும், பகவானிடத் திலேயே ஸதா மனதைச் செலுத்தி அவரால் செய்யப்பட்ட லீலைகளை அனுஸரிப்பவர்களுமான கோபஸ்த்ரீகள் வேறு விஷயத்தில் சித்தமில்லாதவர்களாக பகவத் ஸ்வரூபமாகிய பரமானந்த ரூபத்தை யடைந்தார்கள். ஆனதுபற்றி அவரிடமே என்னுடைய சித்தம் வஸிக்கவேண்டும். தவிரவும் தர்மபுத்ரர் ராஜஸூய யாகஞ் செய்தபோது, அநேக முனிவர்களாலும், அரசர்களாலும் நிறைந்த யாகசஸையின்நடுவில் இந்த கிருஷ்ணபகவான் எல்லாராலும் பார்க்கக்கூடிய அத்புத சரீரமுள்ளவராய்ப் ப்ரகாசித்ததுமல்லாமல் எல்லாருக்கும் முந்தி பூஜிக்கப்பட்டார். அந்த புருஷோத்தமனாகிய இவர் என்னுடைய கண்களுக் கெதிரில் ப்ராகாசிக்கிறார். எனக்கு மிகுந்த பாக்யம் கிடைத்தது. இது மிகுந்த ஆச்சர்யம். காற்றானது மூங்கிலை எரிப்பதற்கு அக்னியை யுண்டு பண்ணுவது போல எந்தப்பகவான் பூமியின் பாரத்தைத் துலைப் பதற்காக கௌரவர்களுக்கு இந்த்ரிய சாபல்யத்தை யுண்டுபண்ணினாரோ, பக்தர்களுடைய உபத்ரவத்தை நிவர்த்திக்கும் பாதங்களை யுடையவரும், எதிரிலிருப் பவருமான பகவானை ஹிருதயத்தில் வைத்துக் கொண்டு இந்த மனித சரீரத்தை விட்டுவிடுகிறேன்.

43. ஸூர்யன் ஒருவனானாலும் பார்ப்பவர்களுடைய கண்களின் தோஷத்தால் பலவகையாகத் தோன்றுகிறது

போல பகவான் ஒருவரானாலும், தன்னால் ஸிருஷ்டிக்கப் பட்ட ஒவ்வொரு ப்ராணிகளின் ஹிருதயத்திலும் வெவ்வேறாகத் தோற்றுகிறார். இதற்கு அவித்யையே காரணம் (அதிஷ்டான பேதத்தால் பேதமேயொழிய உண்மையில் பேதமில்லை என்பது கருத்து) என்று தெரிந்துகொண்டேன். பேதபுத்தியும், மோஹமும் நாசமாயின. ஆதியந்தமில்லாத ஆத்ம ஸ்வரூபத்தை அவருடைய கிருபையால் நன்றாய் தெரிந்து கொண்டேன். தன்யனாகிவிட்டேன் என்றார்

44–48. இப்படிச்சொல்லிவிட்டு மனோவ்யாபாரம், வாக்வாயாபாரம், கண்களின் வ்யாபாரம் ஆகிய இவைகளை கிருஷ்ணனிடத்தில் செலுத்தி ச்வாஸத்தை அடக்கி பரமாத்மாவிடம் லயித்தார். அப்பொழுது அவ்விடமிருந்து எல்லோரும் பீஷ்மரானவர் உபாதி ஸம்பந்தமில்லாத பரப்ரஹ்மமாக ஆனதைக்கண்டு ஸாயங்காலத்துப் பறவைகள்போல் மௌனமாய் இருந்தார்கள். அப்பொழுது தேவர்களும், மனிதர்களும் துந்துபி வாத்யங்களை முழக்கினார்கள். அங்கிருந்த அரசர்களுக்குள் ப்ரஹ்மிஷ்டர்கள் ச்லாகித்தார்கள். ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி பெய்தது. பரமாத்ம ஸ்வரூபத்தையடைந்த அந்த பீஷ்மருக்கு உத்ரக்ரியை களை தர்மபுத்ரர்செய்து ஸ்வல்பகாலம் துக்கித்தார் அப்பொழுது மஹர்ஷிகள் மிகுந்த ஸந்தோஷத்துடன் பகவானுடைய ரஹஸ்யமாகிய பெயர்களைச்சொல்லி கிருஷ்ணனை ஸ்தோத்ரம்பண்ணி அவரையே த்யானஞ் செய்துகொண்டு தங்களுடைய ஆச்ரமஞ் சென்றார்கள்.

49–50. பிறகு தர்மபுத்ரர் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடன் ஹஸ்தினா பட்டணம் போய் புத்ரசோகத்தால் துக்கிக்கும் காந்தாரியையும்

த்ருதராஷ்ட்ரராலும், ஸ்ரீ வாஸு தேவராகிய பகவானாலும் அனுமோதிக்கப்பட்டு வம்சபரம் பரையாய் கிடைத்த ராஜ்யத்தை தர்மமாகப் பரிபாலித்தார்.

நோட்டு

தேசத்தை– தான் பாணங்களின் மீது படுத்திருப்பதனால் எதிர்கொண்டழைப்பதற்கும், நமஸ்கரிப்பதற்கும் இது ஸமயமல்லவென்று மனத்தால் பகவானை பூஜித்தார். மித்ரரோ– ஸ்ரீ கிருஷ்ணன் பாண்டவர்களுக்கு மித்ரராயிருந்து காலத்தையே அனுஸரித்திருந்தார் என்று காட்டப்பட்டிருக்கிறது. "த்ரவ்யம், கர்மம், காலம், ஸ்வபாவம், ஜீவனம் ஆகிய இவைகள் பகவானுடைய அனுக்ரஹத்தால் கிடைக்கின்றன. அவருடைய அனுக்ரஹமில்லாதவரையில் மேற்சொல்லியவைகள் மனிதனுக்குக் கிடைக்கலாம்"– வீர. முந்தியிருந்த– ஜகத் ஸிருஷ்டிக்குமுன் ஸத்தாகவே இருந்தது. நாராயணன் ஒருவரே இருந்தார்"– ச்ருதி. பகவான்– பகவான் புருஷன் என்ற சப்தங்கள் சாச்வதராகிய வாஸுதேவரையே குறிக்கின்றன" "ஓ! மைத்ரேய! பகவான் என்ற சப்தமானது பரப்ரஹ்ம மாகிய வாஸுதேவரைச் சொல்லுகிறதேயொழிய மற்றவைகளைச் சொல்லுகிறதில்லை" ஸ்ரீத– ஒருருவாய்– இந்த ஜகத்தில் பரமாத்மாவைக் காட்டிலும் வெவ்வேறான வஸ்துக்களில்லை. அனேக வஸ்துக்களி ருப்பதாகப் பார்ப்பவன் ஸம்ஸாரத்தை யடைகிறான்" எப்பொழுது இவனுக்கு எல்லாம் ஆத்மஸ்வரூபமாகத் தோற்றுகிறதோ அப்பொழுது எதைக் கொண்டு எதைப் பார்க்கப்போகிறான்– நான்கு கை– பீஷ்மருக்கு

நான்கு கைகளுள்ளதாக பகவத் ஸ்வரூபம் ப்ரகாசித்தது. வீர– ஒப்பற்ற மஹிமை– எந்த நிலமையில் வேறுவிஷயத்தைப் பார்க்கமாட்டானோ வேறு விஷயத்தைக் கேட்கிறதில்லையோ அதுவே பூமா எனப்படும்" "மேலும் கீழும் முன்னும் பின்னும் இருபக்கங்களிலும் அவரே இருக்கிறார். காணப்படும் ஜகத் முழுமையும் அவரே" என்ற ச்ருதிகளில் சொல்லிய அனுப்ரவேசஞ் செய்தார். ஒருவராகவிருக்கும் பரமாத்மாவை பலவகையாக நினைக்கிறார்கள்"– ச்ருதி. லயித்தார்– பீஷ்மர் ப்ரஹ்மத்தினிடம் பேதமில்லாமல் கலந்து விட்டாரென்று அர்த்தங் கொள்ளக்கூடாது. "அப்பொழுது ஸத்துடன் சேருகிறான்" என்று ச்ருதியில் சொல்லியபடி ஸம்பந்தித்தார் என்றே அர்த்தம். மேற்காட்டிய ச்ருதியிலும் அபேதமாகக் கலக்கிறான் என்றே சொல்லப்பட்டிருப்பதாய் அர்த்தங்கொள்வோமானால் ஸுஷுப்தியில் பரமாத்மாவிடம் கலந்து ஒன்றாக ஆன ஜீவன் மறுபடி பிரிய ந்யாயமில்லை. மேலும்– அந்தக்கரணரூபமாகிய உபாதி நாசத்தால் அபேதத்தை யடைந்த ஜீவன் விழித்துக்கொள்ளும்போது மேற் காட்டிய உபாதி ஸம்பந்தத்தையடைந்து பரமாத்மா வினிடமிருந்து பிரிகிறான் என்று சொல்லுவதும் பொருந்தாது. மனது ப்ராணனாகிய ப்ரஹ்மத்தினிடம் பறவைபோலக் கட்டுப்பட்டிருப்பதாகச் சுருதியில் சொல்லியிருப்பதால் லயிக்கிறதில்லை– சந்த்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–10

ஸ்ரீ க்ருஷ்ணன் த்வாரகை சென்றது.

இதனைக்கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஓ! ஸூதரே! தர்மசிந்தனையுள்ளவர்களுக்குள் சிறந்த வராகிய தர்மபுத்ரர் ராஜ்யத்தில் ஆசைப்பட்டு யுத்தத்திற்கு வந்தவர்களான துர்யோதனன் முதலிய வர்களைக் கொன்று, தம்முடைய தம்பிகளுடன் ராஜ்யத்தை அடைந்து, மிகுந்த போகங்களை யனுபவித்து ராஜ்யத்தை எப்படி பரிபாலித்தார்? பிறகு எதனைச் செய்தார்? அதைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

2–3. அதைக்கேட்ட ஸூதர் சொல்லத் தொடங்கினார். குரு வம்சமாகிய வனமானது அதிலிருந்து உண்டான கோபமாகிய அக்னியால் எரிக்கப்பட்டபோது, ஸம்ஸார்த்தை விருத்தி செய்பவ ராகிய பகவான் அதை மறுபடியும் முளைக்கச்செய்து (பரீக்ஷித்தைக் காப்பாற்றி) தர்மபுத்ரருக்கு ராஜ்யத்தைக் கொடுத்து மிகுந்த ஆனந்தத்தை யடைந்தார். பின்பு, பீஷ்மருடைய வார்த்தைகளைக் கேட்டதாலும், ஸ்ரீ க்ருஷ்ணனுடைய உபதேசத்தாலும், தர்மபுத்ரருக்கு 'நான் செய்கிறவன்' 'பலனை யனுபவிக்கிறவன்' என்ற மோஹம் நீங்கியது 'ஜகத்தானது பரமேச்வராதீனமே யொழிய ஸ்வதந்த்ரமுள்ளதன்று என்று ஞானமுண்டா யிற்று. அப்படிப்பட்ட தர்மபுத்ரர் நாசமற்றவரான பகவானை மஹேந்த்ரன்போல ஆச்ரயித்து, ஸமுத்ரத் திற்குட்பட்ட பூமியைத் தம்முடைய தம்பிகளுடன் பரிபாலித்தார்.

4–6. ஒருவரிடத்திலும் விரோத புத்தியில்லாத வராகிய தர்மராஜன் அரசு புரிந்து வரும் நாளில் காலத்தில் மழைபெய்தது; பூமியானது ஜனங்களுக்கு வேண்டிய வஸ்துக்களை யுண்டுபண்ணிற்று; பெரிய மடியுள்ள பசுக்கள் பாலால் கொட்டில் முழுவதையும் நனைத்தன. ஆறுகள் பூரணப்ரவாஹ முள்ளவைகளாகி, வயல்களுக்கு ஜலத்தைக்கொடுத்துப் பயிர்களை விருத்திசெய்து வந்தன. ஸமுத்ரம் முத்து முதலிய ரத்னங்களை விசேஷமாக உண்டுபண்ணிற்று. மலைகள் மனோசிலை முதலிய தாதுக்களை விருத்திசெய்தன. எல்லா ருதுக்களிலும் கொடிகள், மரங்கள் ஆகிய இவைகள் பழங்களாலும், புஷ்பங்களாலும் நிறைந் திருந்தன. நெல், பயறு, கடலை, கோதுமை முதலிய தான்யங்களை அவ்வவற்றின் பயிர்கள் விருத்திசெய்தன. மேலும் மனோவ்யாதி, சரீரவ்யாதி, குளிர்ச்சி, உஷ்ணம் இவைகளால் நேரிடும் உபத்ரவம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம், ஆத்யாத்மிகம் ஆகிய முவ்வகை தாபங் களும் ஜனங்களுக்கு ஒருபோதும் நேரிடவேயில்லை.

7–18. அப்பொழுது ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தியானவர், ஹஸ்தினா பட்டணத்தில் சில மாஸங்கள் வஸித்துத் தம்முடைய மித்ரர்களின் துக்கத்தை நிவர்த்தித்து, ஸஹோதரியான ஸுபத்ராதேவிக்கு அதிக ப்ரியத்தை யுண்டுபண்ணி, பின்பு தர்மபுத்ரரைத் தழுவி நமஸ்கரித்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு ரதத்திலேறினார். அப்பொழுது சிலர் பகவானை ஆலிங்கனம் செய்ய நமஸ்கரித்தார்கள். இப்படி பகவான் த்வாரகைக்குப் போக, முயற்சித்ததைப் பார்த்து, ஸுபத்ரை, த்ரௌபதி, குந்தி, உத்தரை, விதுரர், தர்மபுத்ரர், த்ருதராஷ்ட்ரர், யுயுதஸு

(த்ருதராஷ்டருக்கு வைச்யஸ்த்ரியினிடம் பிறந்தவர்) கிருபர், நகுல, ஸஹதேவர்கள், பீமஸேனர், தௌம்யர் முதலாகிய எல்லோரும் பகவானைவிட்டுப் பிரிந்திருப் பதை ஸஹியாமல், வருத்தப்பட்டார்கள். மனோஹர மாகிய பகவானுடைய கதையை ஒருதடவை கேட்டதினாலேயே, நல்ல ஞானமுண்டாகிறது; சரீரம் முதலியவைகளில் அபிமானம் விலகுகிறது; ஆகையால் வித்வான்கள், அதனையொருபொழுதும் விட மாட்டார்கள். அப்படியிருக்க அவரை எப்பொழுதும் பார்ப்பது, ஆலிங்கனம் செய்துகொள்வது, பேசுவது, சேர்ந்துபடுத்துக்கொள்வது, ஒரே இடத்தில் உட்காருவது, சேர்ந்து புஜிப்பது, ஆகிய இவைகளால் அந்த பகவானிடத்திலேயே புத்தியைச் செலுத்திய பாண்டவர்களால் அவரைவிட்டுப் பிரிந்திருக்க முடியுமா? ஆகையால் அவர்களெல்லாரும் கண் கொட்டாமலேயே அவரைப் பார்த்துக்கொண்டு, விசேஷ ஸ்நேஹமுள்ளவர்களாய் அந்த அந்த இடங்களில் நின்றார்கள். அவர்களுடைய மனஸானது, அவர்பின் சென்றது. அப்பொழுது ஸ்ரீ க்ருஷ்ணபகவான் அரண்மனையிலிருந்து வெளியில் வரும்போது, அவர்மீதிருந்த ப்ரியத்தால், ஸுபத்ரை முதலிய ஸ்த்ரீகள், 'கண்ணீரைப்பெருக்குவது அமங்கலம்' என்று நினைத்து, அடக்கிக் கொண்டார்கள். மேலும் அப்பொழுது, மிருதங்கம், சங்கம், பேரி, வீணை, பணவம், கோமுகம், சர்சரீ, ஆனகம், கண்டா, துந்துபி ஆகிய பத்துவகை வாத்யங்களும் முழங்கின. கௌரவ ஸ்த்ரீகள் அனைவரும் ப்ரேமை, வெட்கம், சிரிப்பு இவைகளுடன், மேல்மாடியிலிருந்து பகவானைத் தர்சித்து, அவர்மீது புஷ்பங்களை வர்ஷித்தார்கள். ஸ்ரீ பகவானிடத்தில் மிகுந்த ப்ரீதியுள்ளவரும், சுருட்டை

மயிருள்ளவருமாகிய அர்ஜுனர், தம்மிடத்தில் மிக்க விச்வாஸமுள்ளவராகிய ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவிற்கு, ரத்னகாம்புள்ளதும், முத்துமாலைகளால் அலங்கரிக்கப் பட்டதுமான வெள்ளைக்குடையைப் பிடித்தார். உத்தவரும், ஸாத்யகியும் மிக அத்புதங்களான சாமரங்களையெடுத்து விசிறினார்கள். இப்படி பகவான், புஷ்பம் முதலியவைகளால் வீதியில் பூஜிக்கப்பட்டு ப்ரகாசித்தார்.

19—30. அப்பொழுது ப்ராஹ்மணர்கள் மனுஷ்யாவதாரமெடுத்த பகவானுக்குத் தகுதியானவைகளும், சுத்த ஸ்வரூபத்திற்குத் தகாதவைகளுமான ஆசீர்வாதங்களைச் செய்தார்கள். உத்தமச்லோகராகிய ஸ்ரீ க்ருஷ்ணனிடத்திலேயே மனத்தைச் செலுத்தினவர்களான பட்டணத்திலிருக்கும் ஸ்த்ரீகள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளும் வார்த்தைகள் எல்லோருக்கும் த்ருப்திகரமானவைகளாகவும், ஸகல உபநிஷத்துகளுக்கு ஸம்மதமானவைகளுமாயிருந்தன. எப்படியென்றால் க்ருஷ்ணனுடைய தேஜஸ்ஸைப் பார்த்து ஆச்சர்யமடைந்த சில ஸ்த்ரீகளை நோக்கி சிலர் சொல்லுகிறார்கள். ப்ரளயகாலத்தில் ஜீவோபாதிகளான ஸத்வம் முதலியவைகள் ஈச்வரனிடத்தில் அடங்கியிருக்கும்போது குணங்களுடைய சேர்க்கைக்குமுன் எவர் ப்ரபஞ்ச ஸம்பந்தமில்லாத ரூபத்துடன் ஒருவராகவிருந்தாரோ, அவரே இந்த க்ருஷ்ண பகவானாக அவதரித்திருக்கிறார். (ஸிருஷ்டிக்குமுன்னும், ப்ரளயத்திலும், ப்ரபஞ்ச ஸம்பந்தமில்லாமலிருப்பவர் இவரே என்று கருத்து) அந்த பரமாத்மாவே ஸகல வேதங்களையும் வெளியிட்டு மறுபடியும் தன்னுடைய காலசக்தியால் தூண்டப்பட்டதும், ஜீவர்களை

மோஹிக்கச்செய்வதும், ஸிருஷ்டிக்க விரும்பியதுமான ப்ரகிருதியை அனுஸரித்தார். அந்தப்ரகிருதியே பெயர் ரூபம் இவைகளில்லாத ஜீவனிடத்தில அவைகளை யுண்டுபண்ணிற்று. யோகிகள் இந்த்ரியங்களை ஜயித்து, ச்வாஸத்தையடக்கி விசேஷ பக்தியால் சுத்தமான மனமுள்ளவர்களாய் எவருடைய பதத்தையடைகிறார் களோ; அந்தப்புருஷன் இவரே. நம்முடைய புத்தியைப் பரிசுத்தப்படுத்துவதற்கு தகுந்தவர், இவரேயொழிய யோகம் முதலியவைகளால் முடியாது. அடி தோழி! ஆத்மாவின் ரஹஸ்யத்தையறிந்த வித்வான்கள், எவரை ஸ்தோத்ரஞ்செய்கிறார்களோ, வேதங்களிலும், ரஹஸ்யமான ஆகமங்களிலும், எவர் வர்ணிக்கப்படுகிறாரோ, எந்த ஈச்வரன் ஜகத்தை உண்டுபண்ணுவது பரிபாலிப்பது, நாசஞ்செய்வது ஆகிய பற்றுதலில்லையோ, அவரே க்ருஷ்ணனுடைய சரீரமெடுத்துக் கொண்டிருக்கிறார். எந்த காலத்தில் அரசர்கள் தமோ குணங்களுள்ளவர்களாகி தங்கள் ப்ராணனை மாத்திரம் போஷிக்கிறார்களோ அந்தக்காலத்தில், ஐச்வர்யம், செய்த பிரதிஜ்ஞையைக் காப்பாற்றுவது, உண்மையை யுபதேசிப்பது, தயை, கீர்த்தி ஆகிய இவைகளை வெளிப்படுத்துவதற்காக ஒவ்வொரு யுகத்திலும் இவரே ஸத்வகுணரூபியாய் அவதரிக்கிறார். யதுவினுடைய குலம் மிகவும் மேலானது, மதுராநகரம் மிகவும் புண்ய பூமியுள்ளது. புருஷோத்தமரும், ப்ரியமான கீர்த்தியுள்ளவருமான பகவான் தம்முடைய அவதாரத்தாலும் நடையினாலும், அவைகளை அலங்கரிக்கிறார். ஆச்சர்யம்! த்வாரகாநகரத்தின் பாக்யம் அத்புதமானது; எல்லா நகரங்களிலும் ஸ்வர்க்கம் மேலானது என்ற ஸ்வர்க்கத்தின் கீர்த்தியைப் போக்கக்கூடியது; அதில் வஸிக்கும் ஜனங்கள், தங்களை அனுக்ரஹிப்பதற்காகவே

அவ்விடத்தில் வஸிப்பவரும், புன்சிரிப்புள்ள பார்வை யுள்ளவருமான ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவை எப்பொழுதும் தர்சிக்கிறார்கள். அந்தப் பகவானுடைய பத்னிகள் முன் ஜன்மத்தில் வ்ரதங்கள், ஸ்நாநம், ஹோமம் முதலியவைகளால் ஈச்வரனையுபாஸித்தவர் களென்பதில் ஸந்தேஹமில்லை. தவிரவும் கோபஸ்த்ரீகள் எல்லோரும், அவருடைய அதரத்தைப் பானஞ்செய்கிறார்கள் தவிரவும் அதையே மனததில் நினைத்து மோஹிக்கிறார்கள். பலிஷ்டர்களான சிசுபாலன் முதலியவர்களை ஸ்வயம்வரத்தில் ஜயித்து பகவானால் விவாஹஞ்செய்து கொள்ளப்பட்டவர் களும், ப்ரத்யும்னன், ஸாம்பன் முதலியவர்களுக்குத் தாயார்களுமான ருக்மிணி, ஸத்யபாமா முதலியவர் களுடைய வீடுகளிலும், நரகாஸுரனைக் கொன்று ஸ்ரீ க்ருஷ்ணனால் அபஹரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மற்ற ஸ்த்ரீகளுடைய கிருஹங்களிலும், பகவான் எப்பொழுதும் அவர்களுக்கு வேண்டியதை ஸம்பாதித்துக் கொடுத்து அவர்களை ஸந்தோஷப்படுத்திக்கொண்டு வஸிக்கிறார். ஆனதால் ஸ்த்ரீகளுக்கு ஸ்வாதந்த்ரயம், சௌசம் இவைகளில்லாமலிருந்தும், ஸ்த்ரீயாக விருப்பதே மேலானதென்று விளங்குகிறது" என்று பேசிக்கொண்டார்கள்.

31. இம்மாதிரியான பட்டணத்து ஸ்த்ரீகளுடைய வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ க்ருஷ்ணன், பார்வையா லேயே, அவர்களை ச்லாகித்துச் சிரித்துக்கொண்டு சென்றார். அப்பொழுது தர்மபுத்ரர் சத்ருக்களிடத்தில் ஸந்தேஹப்பட்டு, பகவானைக்காப்பாற்றுவதற்காக அவரிடம் ப்ரியத்தால் சதுரங்க ஸைன்யத்தையனுப் பினார். பின்பு ஸ்ரீ க்ருஷ்ணபகவான் வெகுதூரம் தம்மை

பின்தொடர்ந்து வந்தவர்களும், தம்மைவிட்டுப் பிரிய மனமில்லாதவர்களும், ஸ்திரமான பக்தியுள்ளவர்களு மான கௌரவர்களைத் திருப்பிவிட்டுத் தமது நகரம் நோக்கி புறப்பட்டார். அவர் குருஜாங்கலம், பாஞ்சால்ம், சூரசேனம், யமுனையின் கரையிலிருக்கும் தேசம், ப்ரஹ்மாவர்தம், மத்ஸ்யம், ஸரஸ்வதி நதிக்கரையிலுள்ள தேசம், ஜலமில்லாத தேசம், அல்ப ஜலமுள்ள தேசம், ஸௌவீரம், ஆபீரம், ஸைந்தவம் ஆகிய இவைகளைத் தாண்டி ஆனர்த்த தேசம் போனார். குதிரைகள் கொஞ்சம் களைப்படைந்தன. அந்தந்த இடத்தில் வஸிப்பவர்கள் பகவானை எதிர்கொண்டழைத்துப் பூஜித்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணபகவான் ரதத்தைவிட்டு இறங்கி ஜலமிருக்குமிடஞ் சென்று ஸந்தியோபாஸ்தி செய்தார்.

நோட்டு.

பிரகிருதி– மாயை "மாயையை ப்ரகிருதியென்றும், மாயையை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டிருப்பவனை மஹேச்வரனென்றும் தெரிந்து கொள்ள வேண்டும்." ச்ருதி– சுத்தமான மேலான ஸூக்ஷ்மபுத்தியினால் பார்க்கப்படுகிறார்"– ச்ருதி.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்—11

துவாரகாவாஸிகள் பகவானை உபசரித்தது

இப்படி ஸ்ரீ கிருஷ்ணபகவான் மிகுந்த ஐசுவரியம் உள்ள தன்னுடையதான ஆனர்த்த தேசத்தையடைந்து திவ்யமாகிய சங்கத்தை ஊதினார். அப்பொழுது மிகவும் வெண்மையான மத்ய பாகமுள்ளதும், பகவான் உடைய உதடுகளின் காந்தியால் சிவந்ததுமான அந்தச் சங்கமானது செந்தாமரை புஷ்பத்தில் உரக்கச் சப்தித்துக் கொண்டிருக்கும் ஹம்ஸம் போல விளங்கிற்று. அதனைக் கேட்டு அந்தத் தேசத்தில் வஸிப்பவர்கள் கிருஷ்ணன் வருகிறார் என்பதை தெரிந்துகொண்டு அவரை விட்டுப் பிரிந்திருந்ததாலுண்டான தாபத்தை விட்டுச் சந்தோஷமடைந்தார்கள். மேலும் அவர்கள் எல்லோரும் ஸம்ஸார பயத்தைப் போக்கக்கூடிய அந்தச் சப்தத்தைக் கேட்டவுடன் தங்கள் யஜமானனாகிய ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையுள்ள வர்களாக அவருக்கு எதிரில் சென்றார்கள். அந்த பகவான் தன்னுடைய ஆத்மாவிலேயே ரமிப்பவர். ஆனந்தானு பவத்தால் எப்பொழுதும் பூர்ணகாமர்; எல்லோருக்கும் அனுகூலத்தைச் செய்பவர். அப்போர்ப்பட்ட பகவான் இடத்தில் சூரியனிடத்தில் தீபத்தைக் கொடுப்பது போல ஜனங்கள் காணிக்கைகளைச் சமர்ப்பித்து, பிதாவைக் கண்ட குழந்தைகள் போல மலர்ந்த முகமுள்ள வர்களாய், கத்கத ஸ்வரத்துடன் தங்களைக் காப்பாற்றும் அந்தப்பகவானை நோக்கி, வேறாத ப்ரஹ்மதேவராலும், ஸனகர் முதலியவர்களாலும், இந்திரன் முதலியவர் களாலும் நமஸ்கரிக்கப்பட்ட தாமரை மலர் போன்ற உம்முடைய பாதங்களுக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்.

அவைகள் இவ்வுலகத்தில் ஸுகத்தை விரும்பியவர் களுக்கு முக்கிய கதியானவைகள். ஸகல வஸ்துக் களையும் பக்குவஞ்செய்யும் ஸ்வபாவமுள்ள காலமானது எல்லாவற்றிற்கும் மேலானதனாலும் உம்முடைய பாதங் களுக்கு சுவாதீனப்பட்டதேயாம். (உம்முடைய பாதார விந்தங்களை ஆசிரயித்தவர்களுக்குப் பிறப்பு , கிழத்தனம், மரணம் முதலியவைகள் இல்லையென்பது கருத்து:)

'ஓ ஜகத்திற்கு அந்தர்யாமியாயிருப்பவரே தாம் எங்களுக்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டும். நீரே ஸகலத்திற்கும் மாதா, மித்திரர், பிதா, பதி, நீரே நல்ல ஆசாரியர். முக்கியமாகிய தெய்வம், உம்மை யனுசரித் ததாலேயே நாங்கள் தன்யர்களானோம். ஸ்வர்க்கவாஸி களான தேவர்களாலும் பார்க்க முடியாததும் பிரியமான சிரிப்பு, மனோகரமான பார்வை ஆகிய இவை களுடன் கூடிய முகமுள்ளவரும், ஸகல விதத்திலும் அழகு பொருந்திய தம்முடைய சரீரத்தை எப் பொழுதும் நாங்கள் தரிசிக்கும்படி நேர்ந்ததால் நாங்களே நாதனுள்ளவர்கள். தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரே! நீர் பந்துக்களைப் பார்க்கவேண்டி குரு நகரத்திற்காவது மதுரா நகரத்திற்காகவது சென்றால், அப்பொழுது நாங்கள் சூரியனில்லாத ஸமயத்தில் கண்கள் போல ஒவ்வொரு நிமிஷத்தையும் கோடி வருஷங்களுக்குச் சமமாகக் கழிக்கிறோம்' என்று ஸ்தோத்ரஞ் செய்தார்கள்.

10–34 இப்படி ஜனங்கள் செய்த ஸ்தோத்திரத்தைக் கேட்டுப் பக்தர்களைக் காப்பாற்றும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவர்களைக் கடாக்ஷித்தால் அனுக்ரஹித்துக் கொண்டு பட்டணத்திற்குள் சென்றார். அந்த நகரம்

ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் சமமாயுள்ள பலசாலிகளான போஜர்கள், மனுக்கள், தாசார்ஹர்கள், குகுரர்கள், அந்தகர்கள், விருஷ்ணிகள் ஆகிய இவர்களால் போகவதி என்னும் பட்டணம் நாகங்களால் ரட்சிக்கப்படுவது போல, காப்பாற்றப்பட்டிருந்தது. மேலும் அந்தப் பட்டணமானது எல்லா ருதுக்களிலும் புஷ்பிப்பவைகளும் பலிப்பவைகளுமான புண்ய விருஷங்களாலும் கொடிகளாலும், கொடி வீடுகளாலும், உத்யான வனங்களாலும் (பழங்களையே பிரதானமாயுள்ள மரங்கள் உள்ளது), புஷ்பத்தோட்டங்களாலும், விளையாடும் தோட்டங்களாலும், தாமரையோடைகளாலும் அழகாய் இருந்தது. கோபுர வாசல்களிலும் வீட்டு வாசல்களிலும் மங்கள தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. வீதிகளில் பலவகையான த்வஜங்கள் கட்டப்பட்டு வெயிலினாது தாபமில்லாமலிருந்தது. ராஜவீதி, கடைவீதி, நாற் சந்திகள், மற்ற வீதிகள் ஆகிய இவைகள் குப்பையில்லாமல் சுத்தஞ் செய்யப்பட்டிருந்தன. பழங்கள், புஷ்பங்கள், அட்சதைகள் முதலிய மங்கள திரவியங்கள், இறைக்கப்பட்டிருந்தன; வாசனை ஜலம் தெளிக்கப் பட்டிருந்தது. ஒவ்வொரு வாசலும் தயிர், அட்சதை, பழங்கள், கரும்பு இவைகளாலும், பூர்ண கும்பங்களாலும், தூபங்களாலும், தீபங்களாலும், பலிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பின்னும் வஸுதேவர், அக்ரூரர், உக்ரஸேனர், அற்புதமான பராக்கிரமுள்ள பலராமர், பிரத்யும்னன், சாருதேஷ்ணன், ஸாம்பன், கதன் முதலியவர்கள் மிகவும் பிரியராகிய பகவான் வருகிறார் என்று கேள்விப்பட்டு யானையை முன் நடத்தி, ப்ராஹ்மணர்களை முன்னிட்டுக் கொண்டு அதிக ஸந்தோஷத்தால் படுக்கை, போஜனம் இவைகளிலும் மனமில்லாதவர்களாக ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு எதிரே

சென்றார்கள். மேலும் அப்பொழுதும் சங்கம் முதலிய வாத்தியங்கள் முழங்கின. வேதங்கள் கோஷிக்கப்பட்டன. இப்படி எல்லோரும் விஸ்வாசத்தால் உண்டான பரப்பரப்புள்ளவர்களாக ரதங்கள் மீதேறிக்கொண்டு எதிர்க்கொண்டு சென்றார்கள். சிறந்த தாஸிகளும் கூட்டம் கூட்டமாக வாகனங்களின் மீதேறிக்கொண்டு அவரைப் பார்க்க வேண்டுமென்ற மிகுந்த ஆசையுடன் சென்றார்கள். அவர்கள் காதில் அணிந்திருந்த குண்டலங்களுடைய காந்தியால் அவர்களுடைய முகம் பிரகாசித்தது. ரஸாபினயஞ் செய்யக்கூடிய நடர்களும், தாளம் முதலியவைகளை யனுசரித்து நர்த்தனஞ் செய்பவர்களும், பாடுகிறவர்களும், ஸூதர்களும், மாகதர்களும், வந்திகளும் உத்தமச்லோகராகிய பகவானுடைய அற்புதமான சரிதத்தைக் கானஞ் செய்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் தம்மைப் பார்ப்பதற்காக வந்த பந்துக்களுக்குத் தக்கபடி வணங்குவதாலும், நமஸ்கரிப்பதாலும், தழுவுவதாலும், கையைப் பிடிப்பதாலும், புன்சிரிப்புக் கொண்ட பார்வையாலும், சண்டாளன் வரையிலுள்ள எல்லாருக்கும் அபயங் கொடுத்து, அவரவர்களுக்கு இஷ்டமான வரங்களை அளித்து மரியாதை செய்தார்.

மேலும் ஆசாரியர்களும், ப்ராஹ்மணர்களும், பெரியோர்களும், மற்றவர்களும் அவரவர் ஸ்திரீகளுடன் பகவானுக்கு ஆசீர்வாதஞ் செய்தார்கள்; வந்திகள் ஸ்தோத்திரம் செய்தார்கள்; துவாரகா பட்டணத்தில் கிருஷ்ணன் இராஜவீதியில் வரும்பொழுது குல ஸ்திரீகள் அவரைத் தரிசிப்பதற்காக மாடிகளின் மீதேறினார்கள். லக்ஷ்மிதேவிக்கு இருப்பிடமாகிய

பகவானுடைய சரீரத்தைத் துவாரகா வாஸிகளான ஜனங்கள் எப்பொழுதும் பார்த்தவர்களானாலும் அவர் களுக்குப் போதுமென்ற திருப்தி உண்டாகவில்லை. அவருடைய மார்பு, கைகள், பாதங்கள் ஆகிய இவைகள் லக்ஷ்மிதேவிக்கும், லோகபாலர்களுக்கும், பக்தர் களுக்கும் முறையே வஸிக்குமிடமாக இருக்கின்றன. அப்போர்ப்பட்ட ஸ்ரீ கிருஷ்ண பகவான் வழியில் வெள்ளைக் குடை, சாமரங்கள் ஆகிய இவைகளால் பூஜிக்கப்பட்டும். பூக்களால் வர்ஷிக்கப் பெற்றும் பீதாம்பரத்தாலும், துளசி மாலையாலும் பிரகா சித்தார். அது சூரியன், சந்திரன், இந்திரன், வில், மின்னல், இவைகளுடன் மேகம் சேர்ந்து பிரகாசித்தது போலிருந்தது. பின்னுமவர் வஸுதேவர், தேவகி இவர் களுடைய அரண்மனை சென்று, வஸுதேவருக்கும் தேவகி முதலிய ஏழு தாயார்களுக்கும் சந்தோஷமாக நமஸ்காரஞ் செய்தார். அவர்களும் இவரைத் தழுவி னார்கள். தேவகி முதலிய ஸ்திரீகள் கிருஷ்ணனை மடியில் உட்கார வைத்துக்கொண்டு ஆனந்தக்கண்ணீ ரால் அவருக்கு அபிஷேகம் செய்தார்கள். பிறகு அந்தப் பரமாத்மா 16,000 பத்தினிகளுடைய அரண் மனைகள் அடங்கிய தமது அரண்மனைக்குச் சென்றார். அது ஸகல வஸ்துக்களாலும் நிறைந்ததும் சிறந்த துமாக விருந்தது. அப்பொழுது அங்கிருந்த ருக்மணி முதலிய ஸ்திரீகள் தேசாந்தரத்திலிருந்து வந்த தங்கள் உடைய பர்த்தாவைச் சமீபத்தில் கண்டு அளவற்ற ஆனந்தமடைந்து ஆசனத்திலிருந்து சரீரத்தாலும் அந்தக்கரணத்தாலும் சீக்கிரமாக எழுந்திருந்தார்கள். அவர்கள், பர்த்தா தேசாந்திரம் போயிருக்கும் காலத்தில் செய்யவேண்டிய விரதங்களை யனுஷ்டித்துக் கொண்டு இருந்தவர்கள். கடைக்கண்ணால் பார்ப்பவர்களாலும்

வெட்கத்தால் தலை குனிந்தவர்களாகவுமிருந்தார்கள். ஓ சௌனகரே கம்பீர மனமுள்ள பகவானைக் காணாத போது மனத்தாலும், நேரில் பார்த்த போது பார்வைகளாலும் (புத்ரர்களைக் கொண்டு தழுவ செய்பவர்கள் போல) ஸ்ரீ கிருஷ்ணனை ஆலிங்கனம் செய்து கொண்டார்கள். (ப்ரீதியாகப் பார்த்தார்கள் என்பது கருத்து) அப்பொழுது தங்களுடைய கண்களி லுண்டான ஆனந்த ஜலத்தை வெட்கத்தால் அந்த ஸ்திரீகள் அடக்கிக்கொண்டிருந்தும் அது அடங்காமல் பெருகியது; ஸ்ரீ கிருஷ்ணன் எப்பொழுதும் அவர் களுடைய பக்கத்திலேயே வஸிக்கிறார். ஆனாலும் அவர்களுக்கு அவருடைய பாதங்கள் புதியவைகளாக தோன்றுகின்றன. சஞ்சல ஸ்வபாவமுள்ள ஸ்ரீதேவியும் அவரிடத்திலேயே ஸ்திரமாக வசிப்பதால் எவளுக்குத் தான் அவரிடம் பிரேமை யிராது?

35–40 காற்றானது மூங்கில் காட்டில் அவைகளைக் கொண்டே அக்னியை உண்டுபண்ணி அதனால் அவை களை எரிப்பதுபோல ஸ்ரீ கிருஷ்ணன், தாம் ஆயுதம் எடுக்காமலே பூமிக்குப் பாரமாயிருந்த அனேக அக்ஷௌஹிணி சைன்யங்களால் விருத்தியடைந்த தேஜஸுள்ள அரசர்களுக்குள் ஒருவருக்கொருவர் விரோ தத்தை உண்டு பண்ணி, அதனால் அவர்களை நாசஞ் செய்து சாந்தியடைந்தார். இப்படி பகவான் பிராகிருத புருஷன்போல பூமியில் மாயாவதாரஞ் செய்து அநேக உத்தமஸ்திரீகளின் நடுவிலிருந்து விளையாடினார். ஸ்திரீகள் கம்பீரமாகிய அபிப்பிராயத்தைக் காண் பிக்கும் கடாக்ஷமுள்ளவர்கள், மனோகரமான மந்தகாச முள்ளவர்கள். வெட்கமுள்ளவர்கள். அவர்களால் பரம சிவனும் மோகித்து வெட்கமடைந்துவில்லை எறிந்தார்.

ஸ்திரீகள் அப்போர்ப்பட்ட சக்தியுள்ளவர்களானாலும் தங்களுடைய விலாசங்களால் கிருஷ்ணனை ஆசைப்படச் செய்ய முடியாதவர்களாகவிருந்தார்கள். (சம்சாரத்தில் பற்றுதல் இல்லாதவரென்பது கருத்து.) இப்படி ஸ்ரீ கிருஷ்ணன் வைராக்யமுள்ளவராக விருந்து ஜனங்கள் தங்களைப்போல அவரையும் ஸம்சாரியென்றே நினைக்கிறார்கள். அதனால் தான் அஜ்ஞர்களென்று சொல்லப்படுகிறார்கள். ஆத்மாவினிடமிருக்கும் ஆனந்தம் முதலிய குணங்களில் ஆத்மாவை ஆசிரயித்திருக்கும் புத்தியானது சம்பந்திக்காமல் இருப்பது போல், பகவான் பிரகிருதி காரிய மாகிய சம்சாரத்திலிருந்தும் அதன் குணங்களாகிய சுகம், துக்கம் இவைகளுடன் சம்பந்தப்படாமல் இருக்கிறார். அதுவே அவருடைய ஐசுவரியமென்று சொல்லப்படுகிறது. அகங்காரமானது ஆத்மாவைத் தனது வசப்பட்டவனாக நினைப்பதுபோல் ஸ்ரீ கிருஷ்ணனுடைய உண்மையை அறியாதவர்களான அந்த ஸ்திரீகளெல்லோரும் கிருஷ்ணன் தங்கள் இடத்தில் ஆசை கொண்டவர், தங்களையே அனுஸரித்திருப்பவர் என்று அஜ்ஞானத்தால் நினைத் திருந்தார்கள்.

நோட்டு

ஸூர்ய-ஜகத்தைத் தம்முடைய தேஜஸால் பிரகா சிக்கச் செய்பவரும், வேறு பிரகாசத்தை அபேட் சியாமல் விளங்குகிறவருமான சூரியனுக்குத் தீபத்தால் எப்படி பிரயோசனமில்லையோ அப்படி ஸகல வித காமங்களால் பூர்ணராகிய பகவானுக்கு ஜனங்களால்

கொடுக்கப்படும் காணிக்கைகளால் ஒருவித பயனுமில்லை என்று காட்டப்பட்டது, கத்கதஸ்வர-ஆனந்தம், துக்கம் இவைகள் நேரும்போது கண்ணீர் பெருகி அதனால் கண்டம் அடைத்துப்போகும். அப்பொழுது தாராள மாகப் பேசமுடியாமல் சிரமப்பட்டுப் பேசும் ஸ்வர மேயாம். ஸனகர்-மூலத்தில் வைரிஞ்ச என்றிருப்பதால் அதற்குச் சங்கரனென்று அர்த்தம் விஜ, பசுவின் கன்றுகளைப் ப்ரஹ்மதேவர் அபகரித்த பிறகு அவரால் நமஸ்கரிக்கப்பட்டது. பகவான் பாணாசுரனிடத்தில் யுத்தஞ் செய்யும்போது, சங்கரனால் ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டது. சந்த். க்ஷேமம்-மோக்ஷம் விஜயமாதா - பிறந்தது முதல் போஷிப்பதால். மித்ரர்- எல்லா வற்றிற்கும் அந்தராத்மாவாக விருப்பத்துடன் ஸத்காரி யத்தைச் செய்யும்படி தூண்டுவதால். பிதா-இது ஹிதமென்றும், இது அஹிதமென்றும் உபதேசித்து, சாஸ்திரத்தைக் கொண்டு சிட்சிப்பதால், பதி-பர்த்தா, ஜீவனம் முதலியவைகளைக் கொடுத்துக் காப்பாற்று வதால், ஆசாரியர்-அர்ஜுனனை நிமித்தமாய் வைத்துக் கொண்டு உலகத்தில் கீதா சாஸ்திரத்தைப் பரவச் செய்ததாலே. தெய்வம்- மோட்சத்தைக் கொடுப்பதால் சந்த், ஸுதர்கள்- புராணத்தை யறிந்தவர்கள் ஸுதர்களென்று சொல்லப்படுகிறார்கள். வம்சாவளியைச் சொல்புவர்கள் மாகதர்களெனப்படு வார்கள். ஸமயத்திற்குத் தக்கபடி பேசக்கூடிய புத்தி சாலிகள் வந்திகளெனப்படுவார்கள். மேகம்-இது அபூதோபமை யென்று சொல்லப்படுகிறது, மேகம் போன்றவர் பகவான், சூரியன் போன்றது வெண்குடை, புஷ்பவர்ஷம் போன்றது நட்சத்திரங்கள் என்பர் சிலர்.

சூரியன் போன்றது கீரிடம், சந்திரன் போன்றது வெண்குடை, இந்திரனுடைய வில் போன்றது வனமாலை மின்னல் போன்றது பீதாம்பரம். ஏழு தாயார்–வசு தேவருக்குப் பதினெட்டு ஸ்திரீகள். அவர்களெல் லோரையும் நமஸ்கரித்தார். அவர்களுக்குள் முக்கிய மானவர்கள் ஏழு ஸ்திரீகள், 1. தேவகீ, 2. ச்ருததேவா, 3. சாந்திதேவா, 4. உபதேவா, 5. ஸ்ரீதேவா, 6. தேவரக்ஷிதா, 7. ஸஹதேவா, தழுவ –தேசாந்திரத் திலிருந்து வந்த பகவானைப் ப்ரத்யும்னன் முதலிய வர்களைக் கொண்டு கட்டிக் கொள்ளச்செய்வது போல மனத்தால் தியானம் செய்தார்கள், பின்னும் மிகுந்த ஆசையுடன் பார்த்தார்கள். பரமசிவனும்– மூலத்தில் அமதன: என்று பதம் பிரித்து இப்படி ஸ்ரீ தரஸ்வாமி அர்த்தஞ்செய்தார். மதன: என்று பதம் பிரிப்பதால் மன்மதன் என்று அர்த்தம் –வீர, விஜ.

அத்தியாயம் 12

பரீக்ஷித்தின் உற்பத்தி

சௌனக மகரீஷியானவர் ஸூதரைப் பார்த்து 'ஓ ஸூதரே! அசுவத்தாமாவினால் பிரயோகிக்கப்பட்ட ப்ரஹ்மாஸ்த்ரத்தின் தேஜஸால் எரிக்கப்படும் உத் தரையின் கர்ப்பத்தை ஸ்ரீ கிருஷ்ணபகவான் மறுபடி பிழைக்கச் செய்தாரென்று சொன்னீர்களே, மிக்க புத்திசாலியும் மகாத்மாவுமான அக்குழந்தையின் பிறப் பையும், அதன் சரித்திரத்தையும், அவருக்கு சுகர் ஞானோபதேசம் செய்ததையும், அவருடைய முடி வையும், மரணமடைந்த பிறகு அவருக்கு நேர்ந்த கதியையும் சிரத்தையுடன் கேட்க விரும்புகிறேன். சொல்லக்கூடியதானால் சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

4–6 இதனைக் கேட்டு ஸூதர் சொல்லுவதாவது தர்மபுத்திரர் கிருஷ்ணனுடைய பாதங்களைச்சேவித்து ஸகல ஆசைகளையும் ஒழித்துத் தகப்பன் குழந்தை களைக் காப்பாற்றுவதுபோல பிரஜைகளைச் சந்தோ ஷப்படுத்திக் காப்பாற்றி வந்தார். அவருக்குப் பகவானுடைய அனுக்கிரஹத்தால் ஸகல சம்பத்துகளும், ராஜசூயம் முதலிய யாகங்களின் பலனாகிய உத்தம லோகங்களும், திரௌபதி முதலிய ஸ்திரீகளும், பீமசேனன் முதலிய தம்பிகளும், ஸகல பூமியும். ஜம்பூத்வீபத்திற்கு ஆதிபத்யமும், ஸ்வர்க்கம் வரையில் பரவிய கீர்த்தியும் கிடைத்தன. பசியுள்ளவனுக்கு அன்னத்தின் மேலே விருப்பமிருக்குமே யொழி வேறு

விஷயத்தில் ஆசையுண்டாகிறதில்லை. அதுபோல் ஸ்ரீ பகவானிடத்திலேயே சித்தத்தைச் செலுத்தி, அதனால் ரமித்துக் கொண்டிருக்கும் தர்மபுத்ரருக்கு தேவர்களாலும் விரும்பத்தக்க சுகங்கள் கிடைத்திருந்தும் அவைகளால் அவர் சந்தோஷமடையவில்லை.

7–14 1/2, ஓ சௌனகரே! உத்தராதேவியின் கர்ப்பத்திலிருந்த சிசுவானது அச்வஸ்த்தாமாவினுடைய ப்ரஹ்மாஸ்திரத்தின் தேஜஸ்ஸால் எரிக்கப்படும்பொழுது ஒரு புருஷன் அந்தச் சிசுவிற்கு நேரில் தோன்றினார். அவர் கட்டைவிரல் அளவுள்ளவர், சுத்தர், சுவர்ண கீரிடமுள்ளவர், மிக்க அழகான பார்வையுள்ளவர், பீதாம்பரம் தரித்தவர், ஜன்மம் முதலிய விகாரங்கள் அற்றவர், அழகு பொருந்தியவைகளும், நீண்டவை களுமான கைகளுள்ளவர், சுத்த ஸ்வர்ண குண்டலங் களுள்ளவர், 'என் பக்தனுக்கும் உபத்திரவம் நேரிடு கிறதா?' என்ற கோபத்தால் சிவந்த கண்கள் உள்ளவர், கதாயுதத்தைத் தரித்தவர். மேலும் அவர் குறைக்கொள்ளி போன்ற தம் கதையைச் சுழற்றிக் கொண்டு. அக்குழந்தைக்கு நான்கு புறத்திலும் சஞ்சரித்து, சூரியன் பனியைப் போக்குவதுபோல அஸ்திர தேஜஸ்ஸை அக்குழந்தையின் சமீபம் வர வொட்டாமல் தடுத்துக்கொண்டுமிருந்தார். அவரைப் பார்த்து அந்தக் குழந்தையானது இவர் யாரென்று ஆச்சரியத்துடன் ஆலோசித்துக் கொண்டிருந்தது. இப்படி ஒன்பது மாத காலஞ் சென்றது. பத்தாவது மாதத்தில் அளவிடக் கூடாத ரூபமுள்ளவரும், தர்மத்தைப் பரிபாலிப்பவரும், எங்கும் நிறைந்தவரு மான அந்தப் பிரபுவானவர் அக்குழந்தை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே அவ்விடத்தில் மறைந்தார்.

அதன் பிறகு வரும் மேலான சிரேயஸை காண்பிக்கத் தக்க சுப லக்னம் நேர்ந்தது. அதிலிருந்த சுபகிரகங்கள் ஒருவருக்கொருவர் மித்ரர்களாக இருந்தார்கள். அப் போர்ப்பட்ட சமயத்தில் பாண்டுவின் வம்சத்தை விருத்திசெய்யும் புத்திரனானவன் பாண்டுவே மறு படியும் பிறந்ததுபோல அவதரித்தான். அப்பொழுது தர்மபுத்ரர் மிகுந்த சந்தோஷத்துடன் தௌம்யர், கிருபர் முதலிய ப்ராஹ்மணர்களைக் கொண்டு ஜாதகர்மம் ஸ்வஸ்திவாசனம் ஆகிய இவைகளைச் செய்வித்தார். மேலும், அவர் தானத்திற்குரிய பாத்திரம் தேசம் காலம் என்னும் இவைகளை அறிந்தவரா கையால், உத்தமமாகிய அந்தப் புண்ணிய காலத்தில் ஸ்வர்ணம், பசு, பூமி, கிராமங்கள் சிறந்த குதிரைகள் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்தது மல்லாமல் போஜனமும் செய்வித்தார்.

15–17 1/2. அப்பொழுது ஜ்யோதிஷ சாஸ்திரத்தை நன்றாய்க் கற்றுணர்ந்த எல்லாப் ப்ராம்ஹ்மணர்களும் மிகுந்த சந்தோஷமுள்ளவர்களாய் வணக்கமுள்ள அவ் வரசனை நோக்கி, 'ஓ புருஷவம்சத்திய அரசர்களில் சிறந்தவரே தடுக்க முடியா தெய்வ வசத்தால் புரு வம்சத்தின் தொடர்ச்சியற்றுப் போகும் சமயத்தில் அந்த வம்சத்தில் பிறந்தவர்களான உங்களுடைய க்ஷேமத்திற்காக) ஸ்ரீ மகா விஷ்ணுவே இப்புத்ர ரத்னத்தை அனுக்ரகித்திருக்கிறார். விஷ்ணுவினால் கொடுக்கப்பட்டவனாகையால் இவன் விஷ்ணுராத னென்று பிரசத்தியடைவான். இவன் மிகுந்த கீர்த்தி யுள்ளவனும், பாகவதர்களுள் சிறந்தவனுமாவான். இவ் விஷயத்தில் ஸம்சயப்பட வேண்டாம் என்றார்கள்.

18–29 1/2, இதனைக் கேட்ட தர்மராஜன் ப்ராஹ்ம

விஷயத்தில் ஆசையுண்டாகிறதில்லை. அதுபோல் ஸ்ரீ பகவானிடத்திலேயே சித்தத்தைச் செலுத்தி, அதனால் ரமித்துக் கொண்டிருக்கும் தர்மபுத்ரருக்கு தேவர்களாலும் விரும்பத்தக்க சுகங்கள் கிடைத்திருந்தும் அவைகளால் அவர் சந்தோஷமடையவில்லை.

7–14 1/2, ஓ சௌனகரே! உத்தராதேவியின் கர்ப்பத்திலிருந்த சிசுவானது அச்வஸ்த்தாமாவினுடைய ப்ரஹ்மாஸ்திரத்தின் தேஜஸ்ஸால் எரிக்கப்படும்பொழுது ஒரு புருஷன் அந்தச் சிசுவிற்கு நேரில் தோன்றினார். அவர் கட்டைவிரல் அளவுள்ளவர், சுத்தர், சுவர்ண கீரிடமுள்ளவர், மிக்க அழகான பார்வையுள்ளவர், பீதாம்பரம் தரித்தவர், ஜன்மம் முதலிய விகாரங்கள் அற்றவர், அழகு பொருந்தியவைகளும், நீண்டவை களுமான கைகளுள்ளவர், சுத்த ஸ்வர்ண குண்டலங் களுள்ளவர், 'என் பக்தனுக்கும் உபத்திரவம் நேரிடு கிறதா?' என்ற கோபத்தால் சிவந்த கண்கள் உள்ளவர், கதாயுதத்தைத் தரித்தவர். மேலும் அவர் குறைக்கொள்ளி போன்ற தம் கதையைச் சுழற்றிக் கொண்டு. அக்குழந்தைக்கு நான்கு புறத்திலும் சஞ்சரித்து, சூரியன் பனியைப் போக்குவதுபோல அஸ்திர தேஜஸ்ஸை அக்குழந்தையின் சமீபம் வர வொட்டாமல் தடுத்துக்கொண்டுமிருந்தார். அவரைப் பார்த்து அந்தக் குழந்தையானது இவர் யாரென்று ஆச்சரியத்துடன் ஆலோசித்துக் கொண்டிருந்தது. இப்படி ஒன்பது மாத காலஞ் சென்றது. பத்தாவது மாதத்தில் அளவிடக் கூடாத ரூபமுள்ளவரும், தர்மத்தைப் பரிபாலிப்பவரும், எங்கும் நிறைந்தவரு மான அந்தப் பிரபுவானவர் அக்குழந்தை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே அவ்விடத்தில் மறைந்தார்.

அதன் பிறகு வரும் மேலான சிரேயஸை காண்பிக்கத் தக்க சுப லக்னம் நேர்ந்தது. அதிலிருந்த சுபகிரகங்கள் ஒருவருக்கொருவர் மித்ரர்களாக இருந்தார்கள். அப் போர்ப்பட்ட சமயத்தில் பாண்டுவின் வம்சத்தை விருத்திசெய்யும் புத்திரனானவன் பாண்டுவே மறு படியும் பிறந்ததுபோல அவதரித்தான். அப்பொழுது தர்மபுத்ரர் மிகுந்த சந்தோஷத்துடன் தௌம்யர், கிருபர் முதலிய ப்ராஹ்மணர்களைக் கொண்டு ஜாதகர்மம் ஸ்வஸ்திவாசனம் ஆகிய இவைகளைச் செய்வித்தார். மேலும், அவர் தானத்திற்குரிய பாத்திரம் தேசம் காலம் என்னும் இவைகளை அறிந்தவரா கையால், உத்தமமாகிய அந்தப் புண்ணிய காலத்தில் ஸ்வர்ணம், பசு, பூமி, கிராமங்கள் சிறந்த குதிரைகள் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்தது மல்லாமல் போஜனமும் செய்வித்தார்.

15–17 1/2. அப்பொழுது ஜ்யோதிஷ சாஸ்திரத்தை நன்றாய்க் கற்றுணர்ந்த எல்லாப் ப்ராம்ஹ்மணர்களும் மிகுந்த சந்தோஷமுள்ளவர்களாய் வணக்கமுள்ள அவ் வரசனை நோக்கி, 'ஓ புருஷவம்சத்திய அரசர்களில் சிறந்தவரே தடுக்க முடியா தெய்வ வசத்தால் புரு வம்சத்தின் தொடர்ச்சியற்றுப் போகும் சமயத்தில் அந்த வம்சத்தில் பிறந்தவர்களான உங்களுடைய க்ஷேமத்திற்காக) ஸ்ரீ மகா விஷ்ணுவே இப்புத்ர ரத்னத்தை அனுக்ரகித்திருக்கிறார். விஷ்ணுவினால் கொடுக்கப்பட்டவனாகையால் இவன் விஷ்ணுராத னென்று பிரசத்தியடைவான். இவன் மிகுந்த கீர்த்தி யுள்ளவனும், பாகவதர்களுள் சிறந்தவனுமாவான். இவ் விஷயத்தில் ஸம்சயப்பட வேண்டாம் என்றார்கள்.

18–29 1/2, இதனைக் கேட்ட தர்மராஜன் ப்ராஹ்

Released by Maran's Dog, Toronto , Canada

மணர்களை நோக்கி, புண்ய ச்லோகர்களும் ராஜர்ஷி களுமான நம்முடைய முன்னோர்கள் போல இக் குழந்தையும் நல்ல கீர்த்தியுள்ளவனாய் இருப்பானா? என்று மிக்க ஆதரவுடன் கேட்டார். அப்பொழுது ப்ராஹ்மணர்கள் தர்ம புத்ரரை நோக்கி, 'ஓ குந்தியின் புத்ரரே! இவன் மனுவின் புத்ரராகிய இக்ஷ்வாகுபோல, பிரஜைகளைக் காப்பாற்றுவான், தசரத புத்ரராகிய ஸ்ரீ ராமன் போல ப்ராஹ்மணர்களிடம் பிரியமுள்ள வனாவான். வீணாகாத பிரதிக்ஞையுள்ளவனாயி ருப்பான். ஔசீனர தேசத்திற் கதிபதியான சிபிச் சக்ரவர்த்தி போலச் சரணமென்று வந்தவர்களைக் காப்பாற்றுவான், மிகுந்த தாதா, துஷ்யந்தருடைய புத்ரனான பரதன் போலத் தன் பந்துக்களுக்கும், யாகம் செய்பவர்களுக்கும் விசேஷ கீர்த்தியை உண்டு பண்ணுவான். மேலும் இவன் உம்முடைய தம்பியாகிய அர்ஜுனன், கார்த்தவீர்யன் ஆகிய இவர்கள் போல வில்லைப் பிடித்தவர்களுக்குள் சிறந்தவனாவான், அக்னி போல ஸமீபத்தில் நெருங்க முடியாதவனாவான், சிங்கம் போலப் பராக்கிரமமுள்ளவனாவான்' ஹிம்வத் பர்வதம்போல ஸாதுக்களால் ஸேவிக்கத்தக்கவனா வான், பூமிபோலப் பொறுமையுள்ளவனாவான், மாதா பிதிருக்கள், புத்ரர்களின் விஷயமாய் நேரும் சிரமங் களைச் சகிப்பதுபோல ப்ரஜைகள் விஷயமாக உண்டாகும் சிரமத்தைப் பொறுத்துக் கொள்ளும் ஸ்பாவமுள்ளவனாவான். எல்லோரையும் சமமாய்ப் பார்ப்பதில் ப்ரஹ்மதேவரையொத்தவனாவான், அண்டின வர்களிடத்தில் தயவு செய்யும் விஷயத்தில் பரமசிவன் போன்றவனாவான். லக்ஷ்மீபதியாகிய மஹாவிஷ்ணு போல ஸகல பிராணிகளுக்கும் இருப்பிடமாவான், ஸ்ரீ கிருஷ்ணன்போல ஸகல நற்குணங்களால் ஏற்படும்

மஹிமையுள்ளவனாவான், கொடுப்பதில் ரந்திதேவன் போன்றவனாவான். யயாதிபோலத் தர்மசிந்தையுள்ள வனாயிருப்பான், பலிசக்கரவர்த்தி போலத் தைரிய முள்ளவனாவான், பிரஹ்லாதர் போல ஸ்ரீ கிருஷ்ண னிடம் பக்தியுள்ளவனாவான். மேலும் இவன் அநேக அசுவமேத யாகங்களைச் செய்வான். பெரியோர் களை ஸேவிப்பான். இவனுடைய புத்ரர்கள் ராஜ ரிஷிகளாக விருப்பார்கள். கெட்ட மார்க்கத்தை அனுஷ்டிப்பவர்களைச் சிக்ஷிப்பான், தர்மத்தை ஸம்ர க்ஷிப்பதற்காகக் கலியை நிக்ரஹிப்பான். பின்னுமிவன் (சிருங்கி என்ற) ப்ராஹ்மண புத்திரனால் தூண்டப் பட்ட தக்ஷகனால் தனக்கு மரணம் நேரிடப் போவதாய்க் கேள்விப்பட்டு, ஸகல ஆசைகளையும் ஒழித்து வைராக்கியத்தை யடைவான். பிறகு வியாஸ புத்ரராகிய சுகரிடம் ஆத்ம தத்வத்தை உபதேசம் பெற்று, கங்கைக் கரையில் இந்தச் சரீரத்தை விட்டு நிர்ப்பயமான விஷ்ணுபதத்தை யடைவான் என்று வருங் காரியத்தைச் சொல்லி தர்ம புத்திரரால் ஸம்மானிக்கப்பட்டுத் தங்களிருப்பிடம் சென்றார்கள்.

30–31 1/2 பிறகு அந்தக் குழந்தை மாதாவின் கர்ப்பத்தில் தன்னால் பார்க்கப்பட்டவரை மனத்தில் தியானஞ் செய்து கொண்டே 'அந்தப் புருஷன் இவர் தானோ, இவர்தானோ என்று ஒவ்வொருவரிடமும் பரீக்ஷித்தான். ஆனதுபற்றி அவனுக்கு, 'பரீக்ஷித்' என்ற பெயருண்டாயிற்று. அந்த ராஜகுமாரன் சுக்ல பக்ஷத்தில் பதினைந்து கலைகளால் சந்திரன் நாளுக்கு நாள் விருத்தியடைவதுபோல, தர்மபுத்ரர் முதலிய வர்களால் போஷிக்கப்பட்டு வளர்ந்தான். ஸகலவித்தை களும் அவனையடைந்தன. அப்பொழுது தர்மராஜன்

பந்துக்களின் வதத்தால் நேர்ந்த பாவங்களை நிவர்த் தித்துக் கொள்வதற்காக அசுவமேதஞ் செய்யவேண்டு மென்று விரும்பினார். ஆனாலும் 'நியாயமான வரி வாங்குவதாலும், குற்றவாளிகளுக்கு அவர்களுடைய குற்றத்திற்குத் தக்கபடி அபராதம் விதிப்பதாலும் ஸம்பாதித்த பொருள் பிரஜைகளை ரக்ஷிப்பதற்கே போதுமானதாயிருந்ததாகையால் அந்தப் பொருளைக் கொண்டு யாகத்தை முடிக்க முடியாதே என்ன செய்கிறது என்று கவலைப்பட்டிருந்தார்.

33–361/2 அப்பொழுது அவருடைய அபிப்ராயத் தையறிந்து ஸ்ரீ கிருஷ்ணனால் தூண்டப்பட்ட பீமசேனன் முதலியவர்கள் வடக்குத் திக்கில் சென்று மருத்தருடைய யாகத்திற்கு உபயோகப்பட்டு மிகுந்து கிடக்கும் தனத்தைக் கொண்டு வந்தார்கள். அவை களைக் கொண்டு யாக சாமகிரிகளைச் சம்பாதித்துத் தர்மபுத்ரர் ஸ்ரீ கிருஷ்ணனை வைத்துக் கொண்டு குறைவில்லாமல் நிறைவேற்ற வேண்டும் என்ற பயம் உள்ளவராய், பாப நிவர்த்திக்காக மூன்று தரம் அசுவ மேதத்தை யனுஷ்டித்து, யக்ஞ புருஷராகிய பகவானை ஆராதித்தார். ஸ்ரீ கிருஷ்ணனும் ப்ராஹ்மணர்களைக் கொண்டு தர்மராஜனுக்கு யாகஞ் செய்வித்து மித்ரர்களான பாண்டவர்களுடைய இஷ்டப்படி சில காலம் அவ்விடத்தில் வசித்தார். பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் அரசனிடத்திலும் திரௌபதியினிடத்திலும் விடை பெற்றுத் தம்முடைய பந்துக்களுடனும், அர்ஜுனன் உடனும் துவாரகா நகரஞ் சென்றார்.

நோட்டு

இந்த அத்தியாயத்தில் வைராக்கியத்தின் பிரகாரமும், பகவான் பக்தர்களிடத்தில் தயையுள்ளவரென்பதும், காட்டப்பட்டிருக்கிறது விஜ. சகல ஸம்பத்துக்களும் –காமாதுரனுக்கு ஐசுவரியத்தில் பிரியமிருக்குமே யல்லாமல் வைராக்கிய முள்ளவனுக்கு அவைகளில் பிரீதி உண்டாகிறதில்லை என்று காட்டப்பட்டது விஜ, புண்ணிய காலத்தில்-"கொப்பூழ்க் கொடி அறுப்பதற்கு முன் சூதகமில்லை" "புத்திரன் பிறந்த காலத்திலும் வியதபாத புண்ணிய காலத்திலும் செய்யப்பட்ட தானங்கள் குறையாத பலனைக் கொடுக்கின்றன," – ஸ்மிருதி "ப்ராஹ்மணர்களுடைய வீட்டில் புத்திரன் பிறந்த காலத்தில் ஸகல தேவர்களும் பிதிரு தேவர்களும் அந்த வீட்டிற்கு வருகிறார்கள். ஆதலால் அந்தக் காலம் 'நூறு சூர்ய கிரகணங்களைக் காட்டிலும் மேலான புண்ணிய காலம்" -ஸ்மிருதி. சிபி- இவர் தம்மைச் சரணமடைந்த புறாவைக் காப்பாற்றவேண்டிப் பருந்துக்கு தம்முடைய மாமிசத்தைக் கொடுத்தார் ஸ்ரீத. இவர் உசினருடைய புத்ரர் - வீர. விஜ.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–13

திருதராஷ்டிரர் வெளியில் சென்றது

விதுரர் தீர்த்த யாத்திரை செய்வதற்காக ஹஸ்தினா புரத்திலிருந்து புறப்பட்டுச் ஸகல தீர்த்தங்களுக்கும் சென்று, அவைகளில் ஸ்நானம் முதலியவைகளைச் செய்து, வழியில் மைத்ரேயரைக் கண்டு, அவரிடமாக ஸ்ரீமத் நாராயணனே தமக்குக் கதியென்று தெரிந்துக் கொண்டு, அதனால் அறிய விரும்பியதை அறிந்தும் ஹஸ்தினாபுரஞ் சென்றார். மேலும், கர்மயோகம், ஞானயோகம் ஆகிய இவைகளைப்பற்றி விதுரர் கேட்ட கேள்விகளுக்கு மைத்திரேயர் சிலவற்றிற்குப் பதில் சொல்லி வரும்பொழுதே விதுரருக்கு ஸம்சயங்கள் யாவும் நீங்கின. ஸ்ரீ கோவிந்தரிடத்தில் ஸ்திரமான பக்தி உண்டாயிற்று. அதனால் அதற்குமேல் அவர் கேட்கவில்லை.

3–6 தர்மபுத்திரர், அவருடைய தம்பிகள், திருதராஷ்டிரர் யுயுத்ஸு, ஸஞ்சயர், கிருபர், குந்தீதேவி, காந்தாரி, திரௌபதி, ஸுபத்ரை உத்தரை, த்ரோணருடைய பத்தினியாகிய க்ருபி, இன்னும் மற்ற பந்துக்களின் ஸ்திரீகள், பாண்டுவின் பந்துக்கள் ஆகிய எல்லோரும் தங்களுடைய பிள்ளைகளுடனும், ஸ்திரீகளுடனும் எதிர்சென்று வெகுநாள் தீர்த்தயாத்திரை செய்து திரும்பிவந்த பந்துவாகிய விதுரரைக் கண்டு மிகுந்த சந்தோஷத்துடன் அழைத்தார்கள். அப்படி அழைத்ததானது கை, கால் முதலிய அவயவங்கள் ப்ராணனைக் கண்டு சந்தோஷமடைந்தது போலிருந்தது. மேலும் அவர்கள் விதுரரிடம் வந்து முறைப்படி ஆலிங்கனம்

நமஸ்காரம் முதலியவைகளைச் செய்து வெகுநாள் பிரிந்திருந்ததனால் மிகுந்த ஆசையுள்ளவர்களாய் ஆனந்தக்கண்ணீரைப் பெருக்கினார்கள். அரசனாகிய தர்மராஜனும் ஆசனத்தில் உட்கார்ந்திருக்கும் அந்த விதுரரைப் பூஜித்தார்.

7–11, பிறகு ஆகாரத்தை யுண்டு களைதீர்ந்து ஸுகமாய் உட்கார்ந்திருக்கும் அவரை நோக்கி, தர்ம புத்திரர் பின்வருமாறு கேட்கலானார். பறவைகளால் தங்கள் தங்கள் குஞ்சுகள் சிறகுகளால் மறைத்துக் காப்பாற்றப்படுவது போல நாங்களனைவரும், எங்களுடைய மாதாவுடன் விஷம், அக்னி முதலிய ஆபத்துக்களிலிருந்து உம்மால் காப்பாற்றப்பட்டோம். ஆதலால் எங்களுடைய ஞாபகம் உமக்கிருக்கிறதா? பூமி முழுவதும் சுற்றிய தங்களுக்குத் தேச யாத்ரை எப்படி நடந்தது? எந்தெந்த தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தீர்கள்? எந்தெந்த க்ஷேத்திரம் சென்றீர்கள்? உங்களைப் போன்ற பகவத் பக்தர்களே மிக்க பரிசுத்தமானவர்கள். ஆதலால் அவர்கள் தங்களுடைய மனதில் எப்பொழுதும் பகவான் வஸிப்பதால் தீர்த்தங்களைப் பரிசுத்தப்படுகிறார்கள். மேலும் ஸ்ரீ பகவானையே தெய்வமாகக் கொண்ட நமது சிநேகிதர்களும் பந்துக்களும் யாதவர்களும் உம்மால் பார்க்கப் பட்டார்களா? அவர்களைப் பற்றிக் கேள்விபட்டதுண்டா? அவர்களுடைய பட்டணங்களில் சுகமாக இருக்கிறார்களா?! என்றார்.

12–15 அதனைக் கேட்டு விதுரர் தீர்த்தயாத்திரையின் நிமித்தமாகச் சென்ற விடங்களில் நடந்த சமாசாரங்களைப் பூர்ணமாகத் தர்மராஜனுக்கு சொன்னார்.

ஆனால் யதுகுலத்திற்கு நேர்ந்த கெடுதியை மாத்திரம் சொல்லவில்லை. மனிதர்களால் துக்கம் சகிக்க முடியாதது. ஆகையால் அதை அவர்கள் விரும்புகிற தில்லை யல்லவா ? தவிரவும் விதுரர் மிகுந்த கருணை யுள்ளவர். துக்கமுள்ளவர்களைப் பார்த்துச் சகிக்க மாட்டார். 'ஆனதால் யதுக்களுக்குக் கெடுதி யுண்டாயிற்று என்று சொன்னவுடன் பாண்டவர்கள் வருத்தப்படுவார்கள். அவர்களைப் பார்ப்பது மிகவும் கஷ்டமான கார்யம்' என்று நினைத்தே அதைச் சொல்லவில்லை. பின்பு அந்த விதுரர் பெரிய தமையனராகிய திருதராஷ்டிரருக்கு ஆத்ம தத்துவத்தை உபதேசித்தும், மற்றுமுள்ளவர்களுக்குப் பிரியத்தை விருத்திசெய்து கொண்டும் சில காலம் அவ்விடத்தில் வசித்தார். அவர்கள் விதுரரைத் தெய்வமாக நினைத்துப் பூஜித்தார்கள். மாண்டவ்ய மஹர்ஷியின் சாபத்தால் யமனே இப்படி ஜன்மத்தை அடைந்து விதுரராக பிறந்தவர்; யமன் இப்படி அநேக வர்ஷங்கள் பூலோகத்திலிருக்கும் காலத்தில் அவருடைய உலகத்தில் அர்யமா வென்பவர் பாபிகளுக்கு தக்க சிக்ஷை விதித்துக்கொண்டு அந்த வேலையை நடத்தி வந்தார்.

16. பகவானுடைய சகாயத்தால் தர்மபுத்திரர் ராஜ்யத்தை அடைந்து, தம்முடைய குலவிருத்திக்குக் காரணரும், பௌத்ரருமாகிய பரீக்ஷித், லோகபாலர்கள் போன்ற தம்பிகள் ஆகிய இவர்களுடன் விசேஷ ஐசுவர்யங்களைப் பெற்று ஆனந்தமடைந்தார்.

17–18. பிறகு கிருஷ்ண பகவான் தர்மபுத்திரர் முதலியவர்களிடம் விடைபெற்று, பின் தொடர்ந்துவரும்

பந்துக்களைத் தடுத்துத் திருப்பிவிட்டு அர்ஜுனன், உத்தவர், ஸாத்யகி என்பவர்களுடன் துவாரகா நகரம் சென்றார். இப்படி கிருஹ கிருத்யங்களிலேயே ஆசை யுள்ளவர்களாகவும், அவற்றால் மதித்தவர் களாகவும் அவர்கள் வெகு காலம் கழித்தார்கள். காலத்தை மீறுவதற்குப் ப்ரஹ்மதேவராலும் முடியாதன்றோ ?

19–29. அப்பொழுது விதுரர் அஜ்ஞர்களாகவே இவர்கள் வெகுகாலத்தைப் போக்கிவிட்டார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு திருதராஷ்டிரரை நோக்கி, 'ஓ அரசனே! சமீபத்தில் பயம் நேரிடுகிறதைப் பாரும். சீக்கிரம் பட்டணத்தை விட்டு வெளியில் போகவேண்டும். கால மஹிமையால் நேரும் பயம் ஓரிடத்திலும் ஒரு வகையாலும் தடுக்கமுடியாத தாகையால் அது நம்மெல்லோருக்கும் சமீபித்துவிட்டது. அந்தக் காலம் நேரிடு மானால் ப்ராணனுக்கே அபாயம் உண்டா கிறது. அப்படி யிருக்கையில் பணம் முதலியவைகள் போய் விடுகிறதே என்பதில் என்ன ஆச்சர்யம் ? பிதா, சகோதரர்கள், சிநேகிதர்கள், புத்திரர்கள் ஆகிய இவர்கள் எல்லோரும் சண்டையில் கொல்லப் பட்டார்கள். வயது சென்று விட்டது. சரீரத்தில் ஜரை வந்துவிட்டது; இயற்கையிலேயே நீர் கண் இல்லாதவர். இப்போது கிழத்தனத்தால் உமக்குக் காதுகளும் கேட்கும் சக்தியுள்ளவைகளாயிருக்கவில்லை. புத்தியும் குறைந்திருக்கிறது. பற்கள் உதிர்ந்துபோயின. வயிற்றில் அக்கினி குறைந்து போயிற்று. வியாதி அதிகரித்திருக்கிறது. கபத்தின் வேகம் அதிகமா யிருக்கிறது. இவ்வளவு கஷ்டமான நிலைமையிலும் இன்னும் பிழைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் உமக்கிருப்பது ஆச்சரியப்படத்தக்கதே. மேலும் நீர்

வீட்டில் நெருப்பு வைத்தும், விஷம் கலந்த அன்னத்தைக் கொடுத்தும், இராஜ்யம் முதலிய ஐசுவர்யங்களை அபகரித்தும், இன்னும் பலவகையான கெடுதிகளைப் பாண்டவர்களுக்குச் செய்ததுமல்லாமல் அவர்களுடைய பத்னியை ஸபையில் அவமானப் படுத்தியும் இருக்கிறீர். அவைகளை நினைத்து நினைத்து மிகுந்த கோபத்துடன் பீமஸேனன் வீட்டைக் காத்திருக்கும் நாய்க்குச் சோறு போடுவது போல உமக்கு அன்னம் போடுகிறான். அதனைப் புஜிக்கிறீர், இது மேலான ஜீவனமா? இவ்வளவு தைன்ய மடைந்தும் இனியும் வெகுகாலம் ஜீவிக்க வேண்டு மென்று விரும்புகிறீர். ஆனாலும் கால மகிமையால் வஸ்திரங்கள் கிழிந்துபோவதுபோல உம்முடைய சரீரம் கிழத்தனத்தால் குறைகிறது. கீர்த்தி முதலிய வையிலும், பிரயோஜனமற்ற சரீரத்திலும் அபிமானம் முதலியவைகளை விட்டு எவன் சரீரத்தை விடு கிறானோ அவனே தீரனென்று சொல்லப்படுகிறான். அவன் இன்ன கதியை அடைந்தான் என்று பிறரால் அறிய முடியவில்லை. தவிரவும் குருவின் உபதேசத் தாலாவது, தானாகவாவது, ஸம்ஸாரத்தில் வைராக்யத் தையடைந்து ஸ்திர சித்தமுள்ளவனாகி, ஸ்ரீ மஹா விஷ்ணுவை மனதில் தியானஞ் செய்துகொண்டு வீட்டை விட்டுப் போகிறவனே உத்தமன். இனி வருங்காலம் பெரும்பாலும் நற்குணங்களைக் குறைக்கக் கூடியதாகையால் நீர் பந்துக்களுக்குத் தெரியாமல் வடக்குத் திக்கை நோக்கிச் செல்லும் என்றார்.

30–31. அஜமீட வம்சத்தில் பிறந்த கண்களில்லாதவ (குருட)ரான திருதராஷ்டிரர் தம்பியான விதுரருடைய வார்த்தைக் கேட்டு, பந்துக்களிடம் தமக்கிருக்கும்

ஸ்திரமான அபிமானத்தை விட்டு, தம்பியால் உப தேசிக்கப்பட்ட வழியே வடக்கு திக்கை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது அவருடைய பத்னியும் நல்ல நடத்தையுள்ளவளும், மிக்க பதிவிரதையுமான காந்தாரி என்பவள் தன் புருஷன் பின் சென்றாள். அவ்விருவர்களும் ஹிமய மலைக்குப் போனார்கள். சூரர்களுக்குச் சண்டையில் ஸந்தோஷ முண்டாவது போல் இராஜ்யத்திலிருந்து ஒழிவடைந்தவர்களுக்கு அந்தப் பர்வதமானது மிகுந்த ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியது.

32–35. அன்றைய தினம் காலையில் தர்மபுத்ரர் ஸந்தியோபாஸ்தி செய்து, அக்னி கார்யத்தை முடித்து, எள், பசு, ஸுவர்ணம் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குத் தானஞ்செய்து குருக்களை நமஸ்கரிப் பதற்காக வழக்கப்படி அவர்களுடைய அரண்மனை சேர்ந்தார். அவ்விடத்தில் விதுரர், திருதராஷ்டிரர், காந்தாரி ஆகிய அவர்களையுங் காணாமல் மிகவும் நடுக்கமுள்ளவராய் அங்கிருக்கும் ஸஞ்சயரை நோக்கி, ஓ காவல்கணருடைய புத்ரரே; நம்முடைய பிதிரு வ்யரைக் காணோமே, அவர் எங்கே போனார்? வயது சென்றவரே, தவிரவும் கண்களில்லாதவ வராயிற்றே, தாயாரான காந்தாரியும் எவ்விடம் சென்றாள்? அவள் புத்ர சோகமுள்ளவளே; இவர் களுக்குச் சிநேகிதராகிய விதுரர் போனவிடம் தெரியவில்லையே? நாம் அறியாமையால் ஏதாவது குற்றஞ் செய்தேனோ? அதனால் திருதராஷ்டிரர் என்னிடத்தில் கோபங்கொண்டு மற்ற பந்துக்கள் இறந்து போன துக்கத்தால் தமது பார்யையுடன் கங்கையின் ஜலத்தில் விழுந்து மரணமடைந்தாரா?

எங்களுடைய பிதாவாகிய பாண்டு மஹாராஜன் காலஞ் சென்றபோது சிசுக்களாகிய எங்களை விதுரரும் திருதராஷ்டிரருமே காப்பாற்றினார்கள், அப்படிப்பட்டவர்கள் எவ்விடஞ் சென்றார்கள்? சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

36–38 1/2. இதனைக் கேட்டு ஸஞ்சயர் தம் யஜமானனைக் காணாமல் கவலையுள்ளவராக மிகுந்த தைன்யத்துடன் சிநேகத்தாலுண்டான அதைரியத்தால் வருத்தப்பட்டு உடனே மறுமொழி உரைக்கவில்லை. பின்பு அவர் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே தைரியத்துடன் திருதராஷ்டிரருடைய பாதங்களை நினைத்துக்கொண்டே தர்மபுத்திரரை நோக்கி அவர்கள் போனவிடம் எனக்கும் தெரியாது: மஹாத்மாக்களான அவர்கள் என்னையும் ஏமாற்றிவிட்டார்கள்; நானும் அவர்களைக் காணாமல் கவலையுள்ளவனாயிருக்கிறேன்' என்றார்.

39–41 1/2. இப்படி அவ்விருவர்களும் பேசிக்கொண்டு இருக்கும் பொழுது நாரதர் தும்புருவுடன் அவ்விடத்திற்கு வந்தார். அவரைக் கண்டு தர்ம புத்திரர் தம்பிகளுடன் எழுந்திருந்து நமஸ்காரஞ் செய்து விதிப்படி பூஜித்து, ஓ நாரதரே! மிகுந்த மஹிமை பொருந்திய உம்முடைய தரிசனம் தெய்வச் செயலால் கிடைத்தது. எங்களுடைய பிதாவின் ஸஹோதரர்களான விதுரரும், திருதராஷ்டிரரும், புத்ர சோகமடைந்த காந்தாரியும் இன்னவிடம் போனார்களென்று தெரியவில்லை. அவர்களைக் காணாமல் துக்கமாகிய சமுத்திரத்தில் சழ்கியிருக்கிறோம். அது கரையற்றது, இந்த சமயத்தில்

கப்பல்காரர்போல நீங்கள் வந்திருக்கிறீர்கள், எங்களைக் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

42–63. இதைக் கேட்டு நாரதர் தர்மபுத்திரரை நோக்கி, 'ஓ தர்மபுத்திரரே! ஜகத் யாவும் ஈசுவரனுக்கு வசப்பட்டவை. (பிராணிகளைச் சேர்த்துவைப்பவர் அவரே. அவைகளைப் பிரிப்பவரும் அவரே) ஆகையால் ஒருவரைப் பற்றியும் துக்கிக்காதீர். மூக்குக் கயிறுள்ள எருதுகள் போலும் தந்திரியில் (பிணையல்) சிறு கயிறுகளால் கட்டப்பட்ட பசுக்கள் போலவும் எல்லா லோகங்களும், லோக பாலர்களும் வேதங்களாகிய நீண்ட கயிற்றில் வர்ணாசிரமம் முதலிய சிறுகயிறுகளால் கட்டப்பட்டு, பரமேசுவரனுடைய கட்டளையை நிறைவேற்றுகிறார்கள். உலகத்தில் விளையாட்டுக் கருவிகளை விளையாடுகிறவன் தனதிஷ்டப்படி சிலவேளை சேர்த்தும், பிரித்தும் வைப்பதுபோல மனிதர்கள் சேர்ந்திருப்பதற்கும் பிரிந்து போவதற்கும் பகவான் உடைய விருப்பமே காரணம். இவ்வுலகத்தை ஜீவரூபமாக நித்யமென்று நினைத்தாலும் எவ்விதத்திலும் பந்துக்களைப் பற்றித் துக்கிக்க நியாயமில்லை. மோகத்தால் அபிமானம் வைத்ததாலேயே துக்கம் நேரிடுகிறது. மேலும் ஜகத்தை நித்யா நித்யமென்று சொல்வது பொருந்தாது. ஆகையால் அஞ்ஞானத்தால் ஏற்பட்ட அதைரியத்தை விட்டு விடும். ஆனால் என்னை விட வேறு கதியில்லாத திருதராஷ்டிரர் முதலியவர்கள் நானில்லாமல் எப்படி ஜீவிப்பார்கள், என்று கேட்கலாம், அப்படி நினைப்பது சரியன்று. பத்துப் பூதங்களாலுண்டான இந்தச்சரீரம் காலத்திற்கும், கர்மத்திற்கும் வசப்பட்டது. ஆகையால் நம்முடைய சரீரமே அழியும் சுபாவமுள்ளது. மலைப்

பாம்பின் வாயில் அகப்பட்டவனால் எப்படி மற்றவனை இரட்சிக்க முடியாதோ அதுபோல், நாம் பிறரைக் காப்பாற்றுவது சாத்தியமன்று. கைகளுள்ள ஜந்துக்களான மனிதர்கள் முதலியவர்களுக்குக் கைகளில்லாத பசு முதலியவைகளும், நாற்கால் பிராணிகளுக்குப் புல் முதலியவைகளும், புலி முதலிய பெரிய ஜந்துக்களுக்கு அல்படலமுள்ளவைகளும் எப்படி ஆகாரமாகின்றனவோ அப்படி எல்லா ஜீவனும் வேறு ஜீவனுக்கு ஆகாரமா யிருக்கிறது. ஆதலால் எல்லாம் மரணடயமுள்ளதாகவே காணப்படுகின்றன. ஏ தர்மபுத்திரரே! இந்த ஜகத் யாவும் பகவானுடைய ஸ்வரூபமேயொழிய வேறில்லை. அவர் ஒருவரே, போக்தர் (அனுபவிப்பவர்) போக்தா வின். ஸ்வரூபமாய் இருப்பவர் அவரே. போக்கிய ருபமாயுமிருப்பவர் அவரே. ஆனாலும், மாயையால் பலவகையாகத் தோன்றுகிறார். ஏ மகராஜ! ஸகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாக வசிக்கும் பகவான் தேவவிரோதிகளான அசுரர்களைக் (அசுரர் களுடைய அம்சமுள்ள இராஜாக்களைக்) கொல் வதற்காகக் காலங்காலமாய் துவாரகையில் வசிக்கிறார். தேவகாரியம் அநேகமாக முடிந்துவிட்டது. மிச்சமான பாகத்தை முடிக்கக் காலத்தை எதிர்ப் பார்த்திருக்கிறார். பகவான் இவ்வுலகத்திலிருக்கும் வரையில் நீங்களும் இவ்வுலகத்தில் வசிக்கலாம். திருதராஷ்டிரர் தம்பியாகிய விதுரருடனும், காந்தாரி யுடனும் இமயமலையின் தென்பாகத்தில் மகர்ஷி களுடைய ஆசிரமம் போயிருக்கிறார், அவ்விடத்தில் கங்கா நதியானது ஸப்தரிக்ஷிகளுடைய பிரீதியின் நிமித்தம் ஏழு வகையாக ஓடிற்று. அதனால் ஸப்த ஸ்ரோதஸ் என்று பெயருண்டாயிற்று. அந்தத் தீர்த்தத்தில் ஒவ்வொரு காலத்திலும் திருதராஷ்டிரர் ஸ்நானஞ்

செய்து அக்னிகாரியஞ்செய்து ஜலத்தைப் புசித்து, சாந்தமனமுள்ளவராய் ஆசைகளையும் ஒழித்து, சாஸ் திரத்தில் சொல்லியபடியுள்ள ஆசனத்தையடைந்து சுவாசத்தை யடக்கி, இந்திரியங்களை விஷயங்களில் செல்ல வொட்டாமல் அடக்கிப் பகவானையே மனத்தில் தியானஞ் செய்து அதனால் ராஜஸ, தாமஸ தோஷங்களை நிவர்த்தித்துக்கொண்டு, மனத்தை ஸ்தூல தேஹத்திலிருந்து புத்தியுடன் ஒன்றாகச் சேர்த்து, அந்தப் புத்தியைப் பார்க்கப்படும் விஷயங்களிலிருந்து க்ஷேத்ரக்ஞனுடன் சேர்த்து, அந்த க்ஷேத்ரக்ஞனைப் பார்க்கிறவரிடமிருந்து பிரித்து, கடாகாசத்தைக் கடத்திலிருந்து பிரித்து மகாகாசத்தில் சேர்ப்பது போல ஸகலத்திற்கும் ஆதாரமாகிய ப்ரஹ்மத் தினிடம் சேர்த்து, மாயையின் வாஸனையை யழித்து, இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கி, ஆகாரங் களை நிவர்த்தித்துக் கட்டைபோல அசையாமல் இருக்கிறார். ஸகல கர்மங்களையும் விட்டவரான அவருக்கு நீர் இடையூறாக வேண்டாம். மேலும் இன்று முதல் ஐந்தாவது நாளில் அவர் சரீரத்தை விடப் போகிறார். அந்தச் சரீரம் உடனே எரிந்து போகும் திருதராஷ்டிரருடைய சரீரம் பர்ணசாலை யுடன் கார்ஹபத்யம் முதலிய அக்னிகளால் எரிக்கப் படும்போது ஆசிரமத்திற்கு வெளியிலிருக்கும் அவருடைய பத்னியும் பதிவ்ரதை யுமான காந்தாரி யானவள் உடன் கட்டையேறிச் சரீரத்தை விட்டு விடுவாள், விதுரர் இந்த ஆச்சரியத்தைக் கண்டு திருதராஷ் டிரருக்கு நல்ல கதி கிடைத்ததால் சந்தோஷித்து அவரை விட்டுப் பிரிந்ததால் கொஞ்சம் துக்கத்தை அடைந்தும் தீர்த்த யாத்திரைக்குப் போவார். ஆகையால் அவர்களை அழைத்து

வருவதற்காகவது, அவருடைய சரீரத்தைத் தகிப்பதற்காகவது நீர் போக வேண்டியதில்லை என்று சொல்லி, நாரதர் தும்புருவுடன் ஸ்வர்க்கம் சென்றார். தர்மபுத்திரரும் நாரதருடைய வார்த்தையைக் கேட்டு அதை மனத்தில் வைத்துச் ஸகல துக்கங்களையும் நிவர்த்தித்துக் கொண்டார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம் 14

தர்மபுத்திரருக்கு நேர்ந்த அபசகுனங்கள்

பந்துக்களைப் பார்ப்பதற்கும், புண்ணிய ச்லோக ராகிய கிருஷ்ணனுடைய அபிப்ராயத்தைத் தெரிந்து கொள்ளுவதற்கும் துவாரகா நகரஞ் சென்றிருந்த அர்ஜுனன், சென்று சில மாஸங்களாகியும் திரும்பி வரவில்லை, அப்பொழுது அஸ்தினாபுரத்தில் மிக்க கோரங்களான அபசகுனங்கள் ஏற்பட்டன. மனிதர்கள் உடைய மனதில் கோபம், ஆசை, பொய், ஆகிய இவைகளுண்டாயின. மனிதர்கள் பாபமான காரியத்தைச் செய்து ஜீவித்தார்கள். பெரும்பாலும் ஜனங்கள் கபடமாகப் பேசினார்கள். தோழர்களும் வஞ்சனையாக பேசிக் கொண்டார்கள். பிதா, மாதா, மித்ரன், சகோதரர்கள், தம்பதிகள் ஆகிய இவர்கள் யாவரும் ஒருவருக்கொருவர் கலகம் செய்து கொண் டார்கள். தகப்பன்மார்கள் பணம் வாங்கிக் கொண்டு பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொடுத்தார்கள். புத்திரர்கள் பிதாவைக் காப்பாற்றுவதில்லை. ப்ராஹ்மணர்கள் வேதத்தில் சிரத்தை இல்லாதவர்கள் ஆனார்கள். மேலும் சூத்திரர்கள் வேதத்தைப் படிக்க ஆரம்பித்தார்கள். இப்படிக் காலகதி கோரமா யிருந்தது. இப்படி காலமானது மாறிப் போனதால், மனிதர்களுக்கு ஏற்பட்டிருக்கும் லோபம் முதலிய மனத்தின் துர்க்குணங்களையும், அதர்மத்தை அனுஷ் டிப்பதாகிய சரீர துர்க்குணத்தையும், மிகுந்த அபச குனங்கள் நேரிடுவதையும் கண்டு தர்மபுத்திரர் பீமசேனனை நோக்கி, 'ஓ பீம! பந்துக்களைப் பார்ப் பதற்காகவும், புண்ணிய ச்லோகராசிய கிருஷ்ணன்

னுடைய எண்ணத்தைத் தெரிந்து கொள்ளு வதற்காகவும் துவாரகா நகரம் சென்ற அர்ஜுனன், ஏழு மாதங்களாகியும் இன்னும் வரவில்லை, அதன் காரணமும் இன்னதென்று தெரியவில்லை, எவருடைய அனுக்கிரகத்தால் இராஜ்யம், ஸ்திரீ, ப்ராஹ்மணன், குலவிருத்தி, சத்ருக்களை ஜயிப்பது, ஐசுவரியம், உத்தம லோகங்கள் ஆகிய இவைகள் நமக்குக் கிடைத்தனவோ, அந்தப் பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய சரீரத்தை விடப் போகிறாரென்று தேவர்ஷியாகிய நாரதர் சொன்ன காலம் வந்து விட்டது போலிருக்கிறது. அந்தப் பகவானை விட்டுப் பிரிவதைக் காட்டிலும் வேறு நமக்கு கெடுதி நேரிட நியாயமில்லை. ஓ புருஷசிரேஷ்டா! ஆகாயத்தில் உண்டானவைகளும், பூமியில் உண்டாகின்றவைகளும், சரீரத்தில் காணப்படுகின்றவைகளுமான அபசகுனங் களைப்பார். புத்திக்கு மோகமும் மிக்க கடுமையுமான பயம் வரப்போகிறதென்பதை இவைகள் காட்டு கின்றன. இடக்கண்ணும், இடத்தொடையும் அடிக்கடி துடிக்கின்றன. இருதயத்தில் நடுக்க முண்டாகிறது. அந்த தைஹிகமான அபசகுனத்தால் வெகு சீக்கிரத்தில் கெடுதி நேரிடுமென்று காட்டப்படுகிறது.

13-23. இந்தப்பெட்டை நரியானது குறைக் கொள்ளியை வாயில் கௌவிக்கொண்டு உதயமாகும் சூரிய மண்டலத்தைப் பார்த்து ஊளையிடுகிறது. நாயானது என்னைப் பார்த்துப் பயமில்லாமல் அழுகிறது. என்னைப் பசு முதலிய மேலானவைகள் இடமாகவும், கழுதை முதலியவைகள் வலமாகவும் சுற்றுகின்றன, குதிரைகள் அழுகின்றன. வரும் மரணத்தைக் குறிக்கும் மாடப்புறாவும், கோட்டானும்

அதற்கு விரோதியான காக்கையும் விகாரமாகக் கத்துகின்றன. இவைகளைக் கேட்க மனம்நடுங்கு கிறது; ஜகத்தானது சூனியமாய் விடுமென்று நினைக் கிறேன். திக்குகள் அழுக்கடைந்து நன்றாய் விளங்க வில்லை, பரிவேஷம் (சூரியன், சந்திரன் இவர்களைச் சுற்றிக் கோட்டைக் கட்டுவது) உண்டாயிருக்கிறது; பூமியானது மலைகளுடன் அசைகிறது. மேகங்களின் மறைவில்லாமல் ஆகாயம் சுத்தமாயிருக்கும்போதும் இடியுண்டாகிறது; அகாலத்தில் மேக கர்ஜிதம் கேட்கிறது. மண்காற்று கடுமையாக வீசுகிறது. இருட்டுப் பரவுகிறது. மேகங்கள் வெறுக்கக் கூடிய வையாக எல்லா விடங்களிலும் இரத்த மழையைப் பொழிகின்றன; சூரியனுடைய தேஜஸ் மங்கிவிட்டது ஆகாயத்தில் கிரகங்கள் யுத்தஞ் செய்கின்றன, ருத்ரருடைய பரிவாரங்களாகிய பூதகணங்கள் மற்ற ப்ராணிகளுடன் சேர்ந்து எங்கும் பரவியிருப்பதால் ஆகாயம், பூமி இவைகள் தீப்பட்டவைபோலிருக் கின்றன. ஆறுகளும், நதிகளும் (மேற்கு முகமாய்ச் செல்லுகிறவைகள்), குளங்களும் ஏரிகளும், பிரஜை களுடைய மனமும் கலங்கிவிட்டன. ஆஜ்யம் (நெய்) முதலியவைகளை ஹோமஞ் செய்வதால் அக்னி ஜ்வலிக்கிறதில்லை, இந்தக் காலம் எதனைச் செய்யப் போகிறதோ தெரியவில்லை. மேலும் குழந்தைகள் ஸ்தன்ய பானஞ் செய்யவில்லை. தாயார்களுடைய ஸ்தனங்களில் பாலும் பெருகவில்லை. பூக்கள் கண்ணீரைப் பெருக்கி அழுகின்றன. கொட்டிலி லிருக்கும் ஹ்ருஷபங்கள் சந்தோஷமாக இருக்கவில்லை. தேவதாப் பிரதிமைகள் அழுகின்றவை போலிருக் கின்றன, அவை அசைகின்றன. இந்தச் தேசமும், கிராமங்களும், பட்டணங்களும், உத்தியானங்களும்,

இரத்தினம் விளையும் பூமிகளும், ஆசிரமங்களும் பிரகாசியாமல் இருப்பதுடன் அவைகளில் வசிப்பவர்களும் சந்தோஷமற்றவர்களாய் இருக்கிறார்கள், இவைகள் நமக்கு எவ்விதமான துக்கத்தைக் காண்பிக்கப் போகின்றனவோ, இப்படிப்பட்ட பெரிய உற்பாதங்களைப் பார்க்கும் போது மற்ற புருஷர்களுடைய பாதங்களில்லாத வஜ்ரரேகை முதலியவைகளால் அலங்கிருதமான ஸ்ரீ பகவானுடைய பாதங்களின் ஸ்பரிசம் பூமிக்கு இல்லாமல் பூமிதேவி பாக்கியக்குறை உள்ளவளாய் ஆகிவிடுவாள்போலத் தோன்றுகிறது என்றார்.

24–45. இப்படி தர்மராஜரும் பீமஸேனரும் பேசிக் கொண்டிருக்கும்போது அர்ஜுனன் துவாரகா நகரத்திலிருந்து திரும்பிவந்து தர்மபுத்திரரை நமஸ்கரித்தான். அப்பொழுது அர்ஜுனன் முன்போலிராமல் மிக்க மனவருத்தமுள்ளவனாகவும், தலையைக் குனிந்து இரு கண்களிலும், நீரைப் பெருக்கித் துக்கித்தவனாயுமிருந்தான்; இப்படிச் சோபையில்லாமலிருக்கும் அர்ஜுனனைப் பார்த்து தர்மபுத்திரர் பயந்து, பந்துக்களின் நடுவில் தம்பியை நோக்கி, ஓ அர்ஜுன துவாரகா நகரத்தில் நம்முடைய பந்துக்களாகிய யாதவர்கள், போஜர்கள், தாசார்ஹர்கள், ஸாத்வதர்கள், வ்ருஷ்ணிகள், தூயரும் பூஜ்யருமாகிய, மாதாமகர், அம்மானாகிய வசுதேவர், அவருடைய தம்பிகள் உக்ரசேனருடைய சகோதரிகளும், வசுதேவருடைய பத்தினிகளுமான தேவகி முதலிய ஏழு ஸ்திரீகள், அவர்களுடைய புத்திரர்கள், மருமகள் ஆகிய இவர்கள் க்ஷேமமாயிருக்கிறார்களா? கெட்ட பிள்ளையுள்ள அரசனாகிய உக்ரசேனர், அவருடைய

தம்பியாகிய தேவகர் ஆகிய இவர்கள் பிழைத்திருக்கிறார்களா? மேலும் ஹிருதிக (ச்வல்பர்)ருடைய பிள்ளையான அக்ரூரர், ஜயந்தன், கதன், சாரணன், ஸத்யஜித் அல்லது சத்ருஜித் முதலியவர்கள் க்ஷேமமாய் இருக்கிறார்களா? மேலும் சாத்வதர்களுக்கு அதிபதியான பலராமன் ஸகல விருஷ்ணிகளுக்குள் மகாரதரும் யுத்தத்தில் கம்பீர வேகமுள்ளவருமான பிரத்யும்னர், ஸுஷேணர், சாருதேஷ்ணர் ஜாம்பவதியின் புத்திரராகிய சாம்பர், மற்ற ரிஷப குமாரர்கள், பகவானுடன் சஞ்சரிக்கும் சுருததேவர், உத்தவர் முதலியவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனையும் பல ராமனையும் ஆசிரயித்த யாதவ சிரேஷ்டர்களாகிய சுநந்தர், தந்தர் முதலியவர்கள் ஆகிய பந்துக்கள் எல்லாரும் க்ஷேமமாயிருக்கிறார்களா? மேலும் அவர்கள் நம்மிடத்தில் பிரியத்துடன் நம்மை நினைத்துக் கொண்டிருக்கிறார்களா? ப்ராஹ்மணர்களிடம் விசேஷ பக்தியுள்ளவரும், பக்தர்களிடத்தில் பிரீதியுள்ளவருமான ஸ்ரீ கிருஷ்ண பகவான், உலகங்களுடைய மங்களத்திற்காகவும் க்ஷேமத்திற்காகவும் (கிடைத்ததைக் காப்பாற்றுவதற்காகவும்) துவாரகா நகரத்தில் மித்திரர்களுடன் ஸுதர்மையில் ஸுகமாக வசிக்கிறாரா? எந்த ஸ்ரீ பகவானுடைய இருகைகளால் காப்பாற்றப்பட்ட துவாரகையில் பந்துக்கள் நன்றாகப் பூஜிக்கப்பட்டு மிகுந்த ஆனந்தத்துடன் பார்ஷதகணங்கள் போல ஸஞ்சரிக்கிறார்களோ, அந்த ஸ்ரீ பகவான் பலராமனுடன் யதுகுலத்தில் பிரகாசிக்கிறாரா? ஸத்யபாமா முதலிய பதினாயிரம் ஸ்திரீகளும் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய பாதஸேவையே தபஸ் முதலியவைகளைக் காட்டிலும் மேலானது என்று நினைத்து அவருக்குச் சிசுருஷை செய்து வருகிறார்களா?

அவர்களுக்குப் பகவான் தம்முடைய பலத்தால் தேவர்களை ஜயித்து, அவர்களால் அனுபவிக்கக் கூடியவைகளும் இந்திராணிக்குத் தகுதியானவை களுமான பாரிஜாதம் முதலியவைகளைக் கொடுத் தாரல்லவா? எந்தப் பகவான் தேவர்களை ஜயித்து, தேவ சிரேஷ்டர்கள் வசிக்கக்கூடிய சுதர்மா என்ற சபையை பலாத்காரமாகப் பூமியில் கொண்டுவந்து, அதில் தம்முடைய கைகளின் பலத்தை அவலம்பித்து, ஜீவிக்கும் யாதவர்கள் வஸிக்கும்படியாகச் செய்தாரோ, அந்தப் பரமபுருஷன் ஸுகமாக வாசஞ் செய்கிறாரா? (அவர் பூமியில் வஸித்தால்தான் நமக்கும் ஜனங்கள் ளுக்கும் க்ஷேமமுண்டாகுமென்பது கருத்து) மேலும் குழந்தாய் அர்ஜுன! உனக்குத் தேஜஸ் குறைந்திருப் பதாகத் தோற்றுகிறதே, சரீரத்தில் வியாதி இல்லாம லிருக்கிறதா? வெகுநாளாகத் துவாரகா நகரத்தில் வசித்ததால் பந்துக்கள் உன்னைக் கௌரவப்படுத்த வில்லையா? அல்லது அவமதித்தார்களா? அல்லது பிரியமற்ற நிஷ்டூர வார்த்தைகளைச் சொன்னார்களா? அதனால் மனவருத்த மடைந்தாயா? அல்லது யாசகர்களுக்குச் சிலவற்றைக் கொடுப்பதாகப் ப்ரதிக்ஞை செய்து, பின்பு ஆசையால் அவற்றை அவர்களுக்குக் கொடுக்கத் தவறிப் போனாயா? எல்லாரையும் நீ காப்பாற்றும் ஸ்பாவமுள்ள வனன்றோ? அப்படிப்பட்டவன், ப்ராஹ்மணன், குழந்தை, பசு, வயது சென்றவர், வியாதியுள்ளவர், ஸ்திரீ, மற்றைப் ப்ராணிகள் இவர்களில் சரண மடைந்தவரைக் காப்பாற்றாமல் விட்டுவிட்டாயோ? ஆசைப்படக்கூடாத ஸ்திரீயினிடம் ஆசைபடாமலிருக் கிறாயா? விரும்பக்கூடிய ஸ்திரீ அழுக்கு வஸ்திரம் முதலியவைகளுள்ளவளானாலும் அவளிடம் அனுராகம்

வைக்காமலிருக்கிறாயோ? அல்லது வழியில் மேலான வர்களாலாவது, ஸமமானவர்களாலாவது? ஜயிக்கப் படாமலிருக்கிறாயோ? அல்லது குழந்தைகளுக்கு அன்னமிடாமல் புசித்தாயோ? (அதிதிகள் வேலைக் காரர்கள் கர்ப்பிணி, ரோகிகள், கன்னிகைகள் இவர்களுக்கு ஆகாரங் கொடாமல் புசித்தாயோ?) இன்னும் மற்ற கெட்ட காரியங்கள் எவையேனும் உன்னால் அனுஷ்டிக்கப்பட்டனவோ? மிகவும் பிரியரும், அந்தரங்க பந்துவுமான ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப் பிரிந்தோமேயென்று வருத்தப்படுகிறாயோ? உனக்கு இதை விட வேறு வியாதி ஒன்று மிருக்க நியாயமில்லை என்று கேட்டார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்15

தர்மபுத்திரர் பரலோகஞ்சென்றது.

1–7, இம்மாதிரி தர்மபுத்திரர் பலவகையாகச் சந்தேகம்படும்படி அர்ஜுனனுடைய சரீரத்தில் காந்தியின் குறைவு முதலியவைகள் உண்டாயிருந்தன. அவர் ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப் பிரிந்ததால் விசேஷ வருத்தமடைந்தார். அந்தத் துக்கத்தாலேயே தாமரை மலர்போன்ற அவருடைய முகமும் ஹிருதயமும் வாடி இருந்தன. தேஜஸ் குறைந்திருந்தது. பிரபுவாகிய அந்த ஸ்ரீ கிருஷ்ணபகவானையே மனத்தில் தியானித்துக் கொண்டிருந்ததனால் சீக்கிரமாக விடைசொல்ல முடியாதவராயிருந்தார்.

பிறகு மிகச் சிரமப்பட்டுத் துக்கத்தை மனத்தில் அடக்கிக் கைகளால் கண்களைத் துடைத்து, பகவான் தம்மிடம் வைத்திருந்த சக்யம். மைத்ரி, ஸமஹ்ருத் துவம் முதலியவைகளை நினைத்துக் கொண்டும் துக்கத்தினால் கண்டமடைத்து அரைகுறையான வார்த் தையுள்ளவராகத் தமையனை நோக்கி. ஓ மகாராஜ! ஸ்ரீ கிருஷ்ண பகவான் பந்துவாக விருந்து என்னை ஏமாற்றினார். தேவர்களாலும் ஆச்சரியப்படக்கூடிய என்னுடைய மிகுந்த தேஜஸ்ஸை அபஹரித்தார். எந்தப் பகவான் பூமியை விட்டுப்போனதால் இவ்வுலகம் முழுவதும் ப்ராணனில்லாத சரீரம் போலப் பார்க்க அழகாக இருக்கவில்லையோ, (துரித்திரன் போலவென்றும் சொல்வதுண்டு) தவிரவும், துருபத மகாராஜனுடைய சபையில் திரௌபதியின் சுயம்வரத்திற்காக வந்தவர்களும், மன்மதனால் மதித்த

வர்களுமான அரசர்களுடைய தேஜஸை எவர் தமது பார்வையாலேயே அபகரித்தாரோ, எவருடைய அனுக்கிரகத்தால் நான் மத்ஸ்ய யந்திரத்தைப் பிளந்து திரௌபதியைக் கல்யாணஞ் செய்து கொண்டேனோ, எவருடைய ஸான்னித்தியத்தால் காண்டவ வனத்தை அக்கினி பகவானுக்குக் கொடுத்து அதற்கு விரோதஞ்செய்யும் தேவேந்திரனை ஜயித் தேனோ, எவருடைய ஒத்தாசையால் மயனால் உண்டு பண்ணப்பட்டதும், மிகவும் ஆச்சரியகரமானதும், மாயா மயமாயுள்ள சபையானது நம்மால் அடையப் பட்டதோ, மேலும் எவருக்காக வந்த அரசர்கள் மிக்க உத்தம வஸ்துக்களைக் காணிக்கையாகக் கொடுத்தார்களோ, எந்த பரம புருஷன் சமீபத்தில் இருந்தால் உங்களுடைய தம்பியும் அநேக யாஜனை பலமுள்ளவருமான பீமஸேனர் ராஜஸூயயாகத் திற்காக ஜராசந்தன் என்பவனைக் கொன்றாரோ, ஜராசந்தனால் காராகிருகத்தில் அடைக்கப்பட்டிருந்த அரசர்கள் எவரால் விடுவிக்கப்பட்டு உங்களுடைய யாகத்திற்குக் காணிக்கைகளுடன் வந்தார்களோ, ராஜஸூயயாகத்தில் மஹாபிஷேகத்தையடைந்ததும், மேலானதுமான திரௌபதியின் தலைமயிரை துச்சாதனன் பிடித்து இழுக்கும்பொழுது உம்முடைய பத்னியாகிய அவள் எந்தப் பகவானை ஸ்மரித்தாளோ, எவர் உடனே அவ்விடம் வந்து சேர்ந்தாரோ, எவரை நமஸ்கரிக்கும் பொழுது திரௌபதியின் கண்ணீர் எவருடைய காலில் விழுந்ததோ, எவர் துச்சாசனன் முதலியவர்களுடைய ஸ்திரீகள் தலைமயிரை விரித்துக்கொண்டு அழும்படி செய்தாரோ, மேலும் பதினாயிரம் ஸிஷ்யர்களுடன் போஜனம் செய்பவரான துர்வாசஸஸ் என்னும் மஹர்ஷி

நமது சத்துவாகிய துர்யோதனனால் தூண்டப்பட்டு, நம்முடைய ஆசிரமம் வந்தபொழுது எந்தப் பகவான் (கீரையை) தாம் புசித்து அதனால் மூவுலகத்தில் இருக்கும் துர்வாசஸ் முதலிய மகரிஷிகளையும் திருப்தியடையச் செய்து நம்மைக் காப்பாற்றினாரோ, யாருடைய தேஜஸ்ஸினால் பரமசிவன் பார்வதியுடன் கூட ஆச்சரியமடைந்து பாசுபதமென்ற தமது அஸ்திரத்தை எனக்குக் கொடுத்தாரோ, மற்றுமுள்ள தேவர்களும் அவரவர்களுடைய அஸ்திரங்களையும் கொடுத்தார்களோ, இச்சரீரத்துடனேயே நான் ஸ்வர்க்க லோகத்தில் இந்திரனுடைய ஆசனத்தையும் அடைந்தேனோ, மேலும் ஸ்வர்க்கத்திலேயே வெகு காலம் வசித்துத் தேவர்களுக்கு விரோதியான அசுரர்களைக் கொன்றேனோ, அந்தப் பரமபுருஷன் என்னை இப்பொழுது ஏமாற்றிவிட்டார். கரையற்ற கௌரவ ஸைன்யமாகிய சமுத்திரத்தை எவருடைய ஒத்தாசையால் நான் ஒருவனாகத் தாண்டினேனோ, பின்னும் சத்துருக்களால் அபகரிக்கப்பட்ட பசுக்களையும் அவர்களுடைய தேஜஸ்ஸிற்கு இருப்பிடமான இரத்தினக் கிரீடங்களையும் பிடுங்கிக் கொண்டேனோ, பீஷ்மர், கர்ணர், துரோணர், சல்யர் இவர்களுடைய ஸைனியங்கள் மிகுந்த பலமுள்ள க்ஷத்திரியர்களால் அலங்கரிக்கப்பட்டவையானாலும், அவைகளின் நடுவில் எந்தக் கிருஷ்ண பகவான் என்னுடைய ரதத்தில் சாரதியாகவிருந்து ஒவ்வொரு சேனாதிபதிகளுடைய ஆயுஸ்ஸையும், மனோபலத்தையும், தேகபலத்தையும் பார்வையாலேயே குறைத்து விட்டாரோ, விஷ்ணுபக்தனாகிய ப்ரஹ்லாதன் இடத்தில் ஹிரண்யகசிபுவினால் தூண்டப்பட்ட அரசர்களுடைய கொடுமைபோல் எந்தக் கிருஷ்ணனால்

காப்பாற்றப்பட்ட என்னிடத்தில் அளவற்ற மஹிமையுள்ளவர்களான துரோணர், பீஷ்மர், கர்ணன், அசுவத்தாமா, ஸுசர்மா, சல்யர், ஜயத்ரதர், பாஹ்லீகர் இவர்களால் ப்ரயோகிக்கப்பட்ட அஸ்திரங்கள் வீணாகப்போயினவோ, மேலும்; ஜயத்ரதனைக் கொல்லும்பொழுது தண்ணீர் குடிக்காததனால், குதிரைகள் களைத்துப்போக, இரதத்திலிருந்து எந்தப் பகவான் கீழே இறங்கி, பாணத்தால் பூமியைப் பிளந்து. அதிலிருந்து ஜலத்தையுண்டுபண்ணினாரோ, அப்பொழுது எவருடைய மஹிமையால் சத்ருக்கள் மெய்மறந்து என்னை அடிக்காமலிருந்தார்களோ, அந்த மகாபுருஷரும், மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியவருமாகிய பகவானை சாரதியாய் வைத்துக் கொண்டேனோ, நான் மிகவும் அற்ப புத்தியுள்ளவன். அந்த அபராதத்தால்தான் என்னை அவர் ஏமாற்றிவிட்டாரோ, தெரியவில்லை!

18–27. லக்ஷ்மீபதியாகிய பகவான், "ஓ பார்த்த! (குந்தியின் புத்ரன்) ஓ அர்ஜுன! ஓ குரு நந்தனா! (கௌரவர்களைச் சந்தோஷப்படுத்திகிறவன்) ஏ தோழா! என்று சிரித்துக்கொண்டு பலவகையாக வேடிக்கை வார்த்தைகளைப் பேசினார் அல்லவா? அவைகள் யாவும் இப்பொழுது என் மனத்திலிருக்கின்றன.ஒரே படுக்கையில் படுத்துக்கொள்வது, ஒரே ஆசனத்தில் உட்காருவது, சேர்ந்தே ஸஞ்சரிப்பது புசிப்பது, தம்முடைய குணங்களை தோத்திரம் செய்து கொள்வது, ஆகிய இவைகளால் எங்களிருவர்களுக்கும் மனமும் ஒன்றுபட்டிருந்ததால் சில சமயம் நீர் சொன்ன படி செய்தார் அல்லவா என்று நான் கிருஷ்ணனைப்

பரிகாசஞ் செய்தாலும் தகப்பன் பிள்ளை செய்த பிழையைப் போலவும், அற்ப புத்தியுள்ள என்னுடைய குற்றத்தை விசேஷ மஹிமை பொருந்திய வராகையால் ஸகித்திருந்தார், என்னிடத்தில் மிகவும் மித்ரரும், அளவற்ற பிரீதியுள்ளவரும், அனுகூலத்தைச் செய்ய விரும்பியவருமான புருஷோத்தமனை விட்டுப்பிரிந்து, வழியில் அந்தப் பகவானுடைய களத்திரங்களைக் காப்பாற்ற முயன்றும் சக்தியற்றவனாக அஸத்துக்களால் ஸ்திரீயானவள் போல கோபர்களால் ஜயிக்கப் பட்டேன். இந்த காண்டீபம், பாணங்கள், ரதம், குதிரைகள், ரதியாகிய நான் ஆகிய எல்லாம் முன்னிருந்தவைகளானாலும் பகவானிருந்த. வரையில் அவையெல்லாம் காரியத்திற்கு உபயோகப்பட்டன; பகவான் ஸ்வர்க்கம் போன பிறகு ஒருக்ஷணத்திற்குள் சாம்பலில் செய்த ஆஹுதிபோலவும், வஞ்சகனுக்குத் தானம் செய்தது போலவும், களர் பூமியில் பயிரிடுதல் போலவும் பிரயோசனமற்றவைகளாயின. ஓ மகாராஜ! துவாரகா நகரத்தில் வசிக்கும் பந்துக்களுடைய க்ஷேமத்தை விசாரித்தீரல்லவா? அவர்கள் எல்லாரும் ப்ராஹ்மண சாபத்தால் மூடர்களாய், மத்யத்தைக் குடித்து மதங்கொண்ட..வர்களாய் ஒருவருக்கொருவர் பந்துக்களல்லாதவர்கள் போல் முஷ்டியால் அடித்துக் கொண்டு, நான்கு ஐந்து பெயர்கள் தவிர மற்றவர்கள் எல்லாரும் இறந்தார்கள், பிராணிகள் ஒருவரை யொருவர் காப்பாற்றுவதும், ஒருவரை யொருவர் கொல்வதுமாகி எல்லாம் பகவானுடைய இச்சையே தவிர வேறில்லை, ஜலத்தில் மத்ஸ்யம் முதலிய ஜந்துக்களில் பெரியவைகள் சிறிய ப்ராணிகளைக் கொல்வதுபோல் ஸகல ப்ராணிகளிலும் பலசாலிகள் அற்ப பலமுள்ளவர்களை ஜயிக்கிறார்கள், இப்படியே

யாதவர்களும் ஒருவருக்கொருவர் அடித்துக்கொள் ளும்படி பகவான் செய்து பூமியின் பாரத்தைப் போக்கினார், தேசத்திற்கும் காலத்திற்கும் தகுந்த வைகளும், மனத்தின் தாபங்களைப் போக்கக் கூடிய வைகளுமான கோவிந்தனுடைய வார்த்தைகளை நினைக்க நினைக்க அவைகள் மனதை அபஹரிக் கின்றன என்று பிரலாபித்தார்.

28–31. இப்படி அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரைமலர் போன்ற பாதங்களை நினைத்து அவரிடம் விசேஷ பக்தியை அடைந்தார். அதனால் சித்த சுத்தி உண்டாயிற்று. சண்டையில் பகவானால் உபதேசிக்கப்பட்ட ஞானமானது, கால மகிமையாலும், கர்ம வசத்தாலும் தமோ குணத்தாலும் மறைக்கப்பட்டிருந்தது, அதனால் அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய திவ்ய சரணங்களைத் தியானித்து பூர்ணமான பக்தியை அடைந்துமனத்தில் இருந்து எல்லா அழுக்கும் நீங்கினவராய் முந்திய ஞானத்தை நினைத்துக்கொண்டார்.

முக்குணங்கள் புண்யபாபங்கள், ஸ்தூல சரீரம் ஆகிய இவைகளின் பற்றுதல் (சம்பந்தம்) அற்றுப் போயிற்று. உத்பத்தி முதலியவைகள் விலகின. ஸ்வரூப ஞானம் உண்டானது. ஸகல ஸம்ஸயங்களும் நாசமாயின. ஆனதால் அர்ஜுனன் எந்த வகையிலும் துக்கமற்றவனானான்.

32–33. இம்மாதிரி பகவான் வைகுண்டம் சென்ற தையும், யதுகுலத்தின் நாசத்தையும் அர்ஜுனன் இடமாகத் தர்மபுத்திரர் தெரிந்து கொண்டு அந்தக்

அந்தக்கரணத்தையடக்கித் தானும் ஸ்வர்க்கம் போக விரும்பினார். குந்திதேவியும் அர்ஜுனன் வார்த்தையைக்கேட்டு பகவானிடத்தில் இடைவிடாமல் பக்தி செய்து அவரிடத்திலேயே மனத்தைச் செலுத்தி ஸம்சாரத்திலிருந்து வைராக்யத்தை யடைந்தாள். (ஜீவன் முக்தியை அடைந்தாளென்பது கருத்து)

34–35. காலில் தைத்த ஒரு முள்ளைப் பின்னும் ஒரு முள்ளினால் எடுப்பதுபோல, பகவான் யது குலத்தில் கிருஷ்ணனாக அவதரித்து, பூமியின் பாரத்தை நிவர்த்தித்து, அந்தச் சரீரத்தையும் விட்டுவிட்டார். பூமிக்குப்பாரமாயிருந்த, சரீரமும், அதைப் போக்கடித்த கிருஷ்ண சரீரமும் பகவானுடையதாகையால் அவைகளில் அவருக்கு சமான ப்ரீதியே தவிர பேதமில்லை. மேலும் வேஷதாரியான நடன் மறுபடி வேஷத்தைக் கலைத்து விடுவதுபோல ஈசுவரன் மத்ஸ்யம், கூர்மம் (ஆமை) முதலிய உருவங்களையெடுத்து, அவைகளை விட்டு விடுகிறார். அப்படியே கிருஷ்ணனாகவிருந்து பூமிக்குப் பாரமாயுள்ள அரசர்களை நாசஞ் செய்து அந்தச் சரீரத்தையும் விட்டுவிட்டார்.

36–38 1/2. எல்லோராலும் கேட்கக் கூடிய திவ்ய சரிதமுள்ள பகவான் என்றைய தினம் இவ்வுலகத்தை விட்டு வைகுண்டஞ் சென்றாரோ, அன்றையதினமே அஞ்ஞர்களைக் கலி சூழ்ந்து கொண்டது. அப்பொழுது பட்டணத்திலும், தேசத்திலும், வீடுகளிலும். மனத்திலும் கலி நெருங்குவதால் பணக்காரர்களுக்கு நல்ல பாத்திரத்தில் தானஞ் செய்ய வேண்டுமென்ற எண்ண மில்லாமலிருப்பது, பொய் சொல்வது, கபடமாகப் பேசுவது, பிறரை ஹிம்சிப்பது ஆகிய

அதர்மங்கள் யாவும் பரவின, அதனைப் பார்த்து வித்வானாகிய தர்மபுத்திரர் இவ்வுலகத்தைவிட்டுப் போக முயற்சித்தார். பின்பு, அவர் தமக்குச் ஸமான குணங்கள் பொருந்தியவருமான பரீக்ஷித்திற்கு ஹஸ்தினாபட்டணத்தில் ராஜ்யாபிஷேகஞ் செய்வித்து, சூரஸேனருடைய புத்திரராகிய வஜ்ரரையும் மதுரா நகரத்திற்கு அரசனாகச் செய்தார்.

39–50. பின்பு மிக்க ஸாமார்த்தியமுள்ள தர்மபுத்ரர் பிராஜாபத்யம் என்ற இஷ்டியைச் செய்து அக்னிகளை ஆத்மாவில் ஆரோபித்துக்கொண்டார். அப்பொழுது சரீரத்தில் அணிந்து கொண்டிருந்த வளை முதலிய ஆபரணங்களையும், பட்டு முதலியவைகளையும் விட்டு மோஹம், அஹங்காரம் முதலியவைகளை விட்டவராய், ஸகல பந்தங்களையும் நிவர்த்தித்துக் கொண்டார், ஸகல இந்திரியங்களை மனத்திலும், அதனைப் ப்ராணனிடத்திலும், அதனை அபானனிடத்திலும், அதனை வ்யாபாரத்துடனும், மிருத்யுவினிடத்திலும், அதனை ஐந்து பூதங்களால் ஏற்பட்ட சரீரத்திலும், அதனைக் குணத்திலும, அதனை அவித்தையிலும், அதனை ஜீவனிடத்திலும் அந்த ஜீவனை நாச மற்றவரும் கூடஸ்தருமாகிய பரப்ரஹ்மத்திலும் லயப் படுத்தினார். மேலுமவர் மரவுரியை உடுத்திக்கொண்டு ஆஹாரமில்லாமலும் மௌனியாகவும், தலையை அவிழ்த்துக்கொண்டு மூடன் போலவும், பைத்தியம் பிடித்தவன்போலவும், பிசாசு போலவும், ஒன்றையும் பாராதவராய்ச் செவிடன் போலப் பிறர் சொல்வதைக் கேளாமல் பெரியோர்களான முன்னோர்கள் போன வழியாக வடக்குத் திக்கை நோக்கிச் சென்றார். அப்பொழுது எதை அடைந்தவர்கள் மறுபடியும்

ஸம்ஸாரத்தை அடையமமாட்டார்களோ, அந்தப்பர மாத்வையே தியானித்துக் கொண்டிருந்தார். அவருடைய தம்பிகள் அனைவரும் நிச்சயமுள்ளவர்களாய்த் தர்ம புத்திரர் பின் சென்றார்கள். அதர்மத்தின் ஒத்தாசை யுள்ள கலியானது பிரஜைகளைப் பார்த்து அவருடைய சமீபத்திலும் சென்றது. அப்பொழுது ஸகல தர்மங் களையும் நன்றாக அனுஷ்டித்தவர்களான தர்ம புத்திரர் முதலியவர்கள் ஸ்ரீ நாராயணருடைய சரணங்களே நமக்குச் சரணமென்று நினைத்து, அதனால் பக்தி அதிகரித்தவர்களாகி, சித்தசுத்தியை யடைந்து, பரம புருஷனாகிய ஸ்ரீ நாராயணனிடத்தில் ஸ்திர புத்தியுள்ளவர்களாய், யோகிகளால் அடையக் கூடியதும் ஸம்ஸாரிகளுக்குக் கிடைக்காததுமான மேலான கதியை அடைந்தார்கள். மேலும் ஞானியாகிய விதுரரும் ப்ரபாஸ தீர்த்தக்கரையில் ஸ்ரீ கிருஷ்ணன் இடத்தில் சித்தத்தைச் செலுத்தி. இந்தச் சரீரத்தை விட்டுப் பித்ரு தேவதைகளால் அழைக்கப்பட்டுத் தமது உலகஞ் சென்றார். அப்பொழுது திரௌபதியும் தன்னுடைய பதிகளுக்குத் தன்னிடத்தில் ப்ரீதியில் லாமையைப் பார்த்து வாஸுதேவரிடம் இடை விடாமல் பக்தி செய்து உத்தமகதியையடைந்தாள்.

51. பகவான் வைகுண்டம் சென்றதும், பாண்டவர்கள் பகவானை யடைந்ததுமாகிய இக்கதைகள் மிகவும் பரிசுத்தமானவைகள். இவைகளைச் ச்ரத்தையுடன் கேட்பவர்களுக்கு ஸ்ரீ மஹாவிஷ்ணுவிடத்தில் பக்தியும், அதனால் மோக்ஷமும் கிடைக்கும்.

நோட்டு

ஸக்யம்:அனுகூலத்தைச் செய்ய விரும்பியிருப்பது. மைத்ரி: உபகாரியாகவிருப்பது, ஸஹிருத்வம் பந்துவாகவிருப்பது. ஸ்ரீத. ஸக்யம்-சமான வயது உள்ளவராக இருப்பதால் ஏற்படக்கூடியது. மைத்ரி உபகாரத்தால் ஏற்படக்கூடியது; அதிகப் ப்ரேமை யால் உண்டாகக் கூடியது, சந்த்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்-16

பரீக்ஷித்து தர்மத்தைக் கண்டது

1-4 'பரீக்ஷித்து பிறந்தபோது அவருடைய ஜாதகத்தைப் பார்த்து ஜ்யோதிஷ சாஸ்திரமறிந்த ப்ராஹ்மணோத்தமர்கள் சொன்னபடியே பின், ஹஸ்தினாபுரத்தில் உத்தரையின் புத்திரர் அரசனாக இருந்து ப்ராஹ்மணர்களுடைய கட்டளையின்படி பாகவதர்களுக்குள் சிறந்தவராகி இராஜ்யத்தைக் காப்பாற்றிவந்தார். அவர் உத்தரனுடைய பெண்ணாகிய இராவதீ என்பவளை விவாஹஞ் செய்துகொண்டார். பின்னும் அவர் கிருபரைக் குருவாக வைத்துக் கொண்டு கங்கையின் கரையில் மூன்று அச்வமேத யாகங்களைச் செய்தார். அவைகளில் தேவர்கள் நேரில் வந்து ஹவிர்ப்பாகங்களைப் பெற்றுக் கொண்டார்கள். மேலும் அவர் திக் விஜயஞ் செய்து வரும்பொழுது வழியில் ஒரு எருதையும் பசுவையும் ஒரு சூத்திரன் காலால் உதைக்கக் கண்டார். அவன் ராஜவேஷம் பூண்டிருந்தான். அவனே கலிபுருஷன், அவனைத் தமது பலத்தால் நிக்ரஹித்தார் என்று ஸூதர் சௌனகருக்குச் சொன்னார்.

5–10 'இதனைக் கேட்டு சௌனகர் "ஓ ஸூதரே! பரீக்ஷித் மஹாராஜா கலியை நிக்ரஹிக்க காரணமென்ன? அவன் அரசனாகவும் சூத்ரனாகவுமிருந்து பசுவைக் காலால் ஏன் உதைத்தான்? அந்த விஷயம் பகவத் கதையிலடங்கினதாலும், ஈசுவரனுடைய பாதங்களாகிய தாமரைப் புஷ்பங்களிலிருந்து பெருகி

வரும் மதுவைப் பானஞ் செய்து திருப்தியடைந் திருக்கும் மஹான்களுடைய கதையில் சேர்ந்ததாலும் அதைச் சொல்ல வேண்டும். அற்ப ஆயுள் உள்ள வர்களும் மரிக்கும் ஸ்பாவ முள்ளவர்களுமான மனிதர் களுக்கு மோட்சத்தில் விருப்பமிருக்குமாகில் பகவான் உடைய கதையைக் கேட்பது முதலியவைகளால் அவர்கள் ஆயுஸ்ஸைக் கழிக்க வேண்டுமே அல்லாமல் கெட்ட விஷயங்களால் வீணாக அதைச் செலவிடக் கூடாது. இந்த யாகத்திற்காக மஹர்ஷிகள் அந்தகனை (யமனை) வரவழைத்திருக்கிறார்கள். பகவானுடைய லீலைகளையே கேட்கவேண்டும். சோம்பல், புத்திக் குறைவு, அற்பமான ஆயுள் ஆகிய இவைகளுள்ள புருஷனுடைய ஆயுஸ்ஸானது இராத்திரியில் தூக்கத் தாலும்' பகலில் ஸம்ஸாரத்திற்கு உபயோகமான காரியங்களிலும் செல்லுகிறது. ஆகையால் பகவான் உடைய கதையைக் கேட்பதில் காலத்தை உபயோகியா தவர்களுடைய ஜீவனம் வீணானது என்றார்கள்.

11–17 இதனைக் கேட்டு ஸூதர் சௌனகரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார். பரீக்ஷித்து மகாராஜன் திக்விஜயம் செய்து வருங்காலத்தில் தம் உடைய ஆளுகைக்குட்பட்ட குருஜாங்கலம் இவை களில் கலி வந்து பிரவேசித்தாரென்ற அப்ரியமான வார்த்தையைக் கேட்டவுடன் யுத்தத்தில் மிகவும் சாமார்த்தியம் உள்ளவராகையால் ஆயுதத்தை எடுத்துக் கொண்டு கறுத்த குதிரைகள் கட்டிய இரதத்திலேறிப் புறப்பட்டார். அந்த இரதமானது சிம்மத்வஜமுள்ளது. ஸகல அலங்காரமுள்ளது. யானைகள், குதிரைகள் ரதங்கள், காலாட்படைகள் ஆகிய இவைகளுள்ள சேனைகள் அவரைச் சூழ்ந்து

கொண்டன. அவர் பத்ராச்வம், கேதுமாலம், கிம் புருஷம், பாரதம், உத்தரகுரு ஆகிய வர்ஷங்களில் சென்று அங்கிருக்கும் அரசர்களை ஜயித்து அவர் களிடம் கப்பம் பெற்றுக்கொண்டார். ஒவ்வொரு வர்ஷங்களிலும் வஸிக்கும் ஜனங்கள் பரீக்ஷித்தின் முன்னோர்களாகிய பாண்டவர்களுடைய சரித்தத்தைச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அதில் கிருஷ்ண பகவானுடைய மஹிமையும் இடையில் வர்ணிக்கப் படுகிறது. அச்வஸ்த்தாமாவினுடையை அஸ்திரத்தினிட மிருந்து பரீக்ஷித்தைக் காப்பாற்றின கதையையும், விருஷ்ணிகளுக்கும் குந்தி புத்திரர்களுக்கும் ஏற்பட் டிருந்த விசேஷ சிநேகத்தைப் பற்றியும், அவர்களுக்குப் பகவானிடமிருந்த அதிக பக்தியைப் பற்றியுஞ் சொல்லிக் கொண்டார்கள். அவற்றைக் கேட்டு, 'பரீக்ஷித்து மகாராஜன் கண்கள் மலர்ந்தவராக விசேஷ சந்தோஷத்துடன் அவர்களுக்கு விலையுயர்ந்த வஸ்திரங்கள், ஹாரங்கள் ஆகிய இவைகளை வெகுமதி செய்தார். பின்னுமவர் மிகுந்த பக்தியுள்ள பாண்டவர்களிடத்தில் விசேஷ பிரீதியால் பகவான் சாரத்தியஞ் செய்தது, சபாநாயராகவிருப்பது, பாண்டவர் களுடைய மனம்போல் நடப்பது, தோழனாயிருப்பது, தூதனாயிருப்பது, ராத்திரியில் கத்தியைக் கையில் வைத்துக்கொண்டு தூங்காமல் காப்பாற்றுவது, அவர்கள் ஏவினதைச் செய்வது, அவர்கள் மஹிமையைப் பற்றி தோத்திரஞ் செய்வது, ஆகிய கதைகளையும் சொல்லி ஸகல ஜகத்தும் பகவானை நமஸ்கரிப்பதையும் பார்த்து ஈசுவரனுடைய சரணங்களில் பக்தி செய்தார்.

18–25 இப்படி அந்தப் பரீக்ஷித்து மகாராஜன் முன்னோர்கள் செய்தபடி ஒவ்வொரு நாளும் தாமும்

நடத்தி வந்தார். அப்பொழுது சமீபத்தில் ஒரு ஆச்சரியத்தைக் கண்டார். அதென்னவெனில் தர்ம மானது விருஷப ரூபமெடுத்து ஒரு காலைப் பூமியில் ஊன்றிக்கொண்டு குழந்தைகள் இறந்து போனதால் துக்கப்படும் தாய் போலக் காந்தி குறைந்து கண்ணீரைப் பெருக்கி அழுது கொண்டிருக்கும் ஒரு பசுவை நோக்கி பின்வருமாறு கேட்டது. மங்களமாகிய ஸ்பாவமுள்ளவளே! சௌக்யமாயிருக்கிறாயா? உன் னுடைய முகம் வாடியிருக்கிறது. தேகத்தில் காந்தி குறைந்திருக்கிறது. ஓ அம்மா! மனத்தில் கவலையுள்ள வளாகத் தோன்றுகிறாய். தேசாந்திரம் போயிருக்கும் பந்துக்களைப் பற்றி வருத்தப்படுகிறாயா? அல்லது ஒரு காலால் நிற்கும் என்னைப் பற்றி துக்கிக்கிறாயா? அல்லது கெட்ட அரசர்களால் அனுபவிக்கப்படும் உமது சரீரத்தைப் பற்றி கவலைப்படுகிறாயா? அல்லது யாகங்கள் விதிப்படி செய்யப்படாததால் அசுரர்கள் அவைகளை அபகரிக்கிறார்களேயென்று வருத்தப்படுகிறாயா? காலத்தில் மழை பெய்யாமல் இருப்பதால் கஷ்டப்படும் ப்ரஜைகளைப் பார்த்துச் ச்ரமப்படுகிறாயா? அல்லது பர்த்தாவினால் காப்பாற்றப் படாத ஸ்திரீகளையும, தாயார், தகப்பன் முதலியவர் களால் ரட்சிக்கப்படாத பாலர்களையும், ராக்ஷஸர்கள் போலக் குரூரஸ்பாவமுள்ளவர்களால் உபத்திரவிக்கப் பட்ட சிசுக்களையும், துராசாரமுள்ள ப்ராஹ்மணர் களிடத்திலிருக்கும் வாக்தேவியையும், ப்ராஹ்மணர் களைச் சம்ரட்சிக்காத க்ஷத்திரியர்களை சேவித்துக் கொண்டிருக்கும் மேலான குலத்தில் பிறந்தவர்களைப் பற்றிக் கவலையடைகிறாயா? அல்லது கலியினால் வியாபிக்கப்பட்ட க்ஷத்திரியர் தங்களைப் பற்றியும் இஷ்டமானவிடங்களிலும் இஷ்டப்பட்ட காலங்களிலும்

படுத்துக் கொள்வது, உட்காருவது, புசிப்பது, குடிப்பது, மைதுனம் ஆகிய இவைகளில் ஆசையுள்ள ப்ராணிகளைப் பற்றியும் துக்கிக்கிறாயா அம்மா?! அல்லது துஷ்டர்களைக் கொன்று உன்னுடைய பாரத்தை நிவர்த்திப்பதற்காக அவதாரஞ் செய்த ஸ்ரீ கிருஷ்ணபகவான் வைகுண்டஞ் சென்றதால் மோக்ஷத்தைக் கொடுக்கும் அவருடைய சரிதங்களை நினைத்து அவருடைய விரகத்தைச் ஸகிக்காமல் துன்பமடைகிறாயா? மிக்க பலசாலியான காலத்தின் மஹிமையால் உன்னுடைய அழகு போய்விட்டதா? நீ வருத்தப்படுங் காரணமென்ன? சொல்ல வேண்டும் என்று கேட்டது.

26–35 இதைக் கேட்டுப் பூமிதேவி தர்மதேவதையை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானாள் "ஓ தர்மமே! நான் வருத்தப்படும் விஷயமின்னதென்று உனக்கே தெரிந்திருக்கலாம், உலகத்திற்குச் சௌக்கியத்தைக் கொடுக்கும் நான்கு கால்களோடு நீ இருந்ததற்கு எவர் காரணமோ, எவரிடத்தில் சத்தியம், சுத்தனாக விருப்பது, தயை, பொறுமை, கொடுப்பது, சந்தோஷம், கபடமில்லாமலிருப்பது. மனது ஸ்திரமாயிருப்பது, வெளியிலிருக்கும் இந்திரியங்களை ஜயிப்பது, தனது தர்மத்தை யனுஷ்டிப்பது, சத்ரு மித்ரர் என்ற பேத புத்தியில்லாமலிருப்பது, பிறர் செய்த அபாரதத்தைப் இருப்பது, இலாபங் கிடைத்தாலும் அதில் உதாசீனனாக பொறுப்பது, சாஸ்திரங்களை விசாரிப்பது ஆத்மஞானம், வைராக்கியம் எல்லா வற்றிற்கும் எஜமானனாக விருப்பது; காரியங்களில் சாமர்த்தியம், அழகு, தைர்யம், மிருது ஸ்பாவமுள்ள வனாகவிருப்பது, பக்தி, விசேஷ வணக்கம், சுபாவம்;

மனோபலம், ஞானபலம், இந்திரியபலம், மேலான ஞானம் முதலியவைகளில் கம்பீர மனமுள்ளவராக இருப்பது, அசையாத சித்த முள்ளவராக விருப்பது சிரத்தை, கீர்த்தி, மானம், அகங்காரமில்லாமலிருப்பது ஆகிய இவைகளும் மற்ற எல்லாராலும் ஆசைப்படக் கூடியவைகளுமான மகாகுணங்கள் எப்பொழுதும் வஸித்துக் கொண்டிருந்தனவோ, அந்தக் குண நிதியாகிய ஸ்ரீநிவாஸன் இவ்வுலகத்திலில்லாததனால் பாப ஸ்பாவமுள்ள கலி இவ்வுலகத்தில் வியாபித்தான். அதனால் எனது ஸ்வரூபத்தையும், உன்னையும் தேவர்களையும், மஹர்ஷிகளையும், பிதிருக்களையும், மற்ற சாதுக்களையும், எல்லா ஜாதியார்களையும், ஆச்ரமிகளையும் பற்றிக் கவலைப்படுகிறேன், ப்ரஹ்ம தேவர் முதலியவர்கள் எந்த லக்ஷ்மீதேவியின் கடாக்ஷத்திற்காக வெகுகாலம் தபஸ் செய்தார்களோ, அந்த லக்ஷ்மீதேவியானவள் மேலானவர்களால் ஆசிரயிக்கப்பட்டவளானாலும், தான் வஸிக்குமிடமான தாமரைமலர்களின் வனத்தை விட்டுப் பகவானுடைய பாதங்களாகிய தாமரைப் புஷ்பங்களை மிகுந்த ப்ரீதியுடன் ஸேவிக்கிறாள்; வஜ்ரம், அங்குசம், துவஜம் ஆகிய இந்த ரேகைகளுள்ள அந்தப் பகவானுடைய திவ்ய விபூதிகளையறிந்து மூவுலகிலும் மேலானவளாக இருந்தேன். இப்படி கர்வமுள்ள என்னை ஈசுவரன் கடைசியில் விட்டுப்பிரிந்தார், அவர் எனக்குப் பாரமா யிருந்த அஸுராம்சமுள்ள அரசர்களுடைய அனேக அக்ஷௌஹிணியை நாசஞ் செய்வதற்காகவும், நான்கு பாதங்களுடன் உலகத்தில் உன்னை ஸஞ்சரிக்கும்படி செய்வதற்காகவும் யதுகுலத்தில் அவதரித்தார்.

36 எந்தப் புருஷோத்தமர் பிரியமான பார்வை,

அழகான சிரிப்பு, மனோஹரமான பேச்சு ஆகிய இவைகளால் ஸத்யபாமை முதலியவர்களுடைய மானத்தையும் தைர்யத்தையும் போக்கடித்தாரோ, எவருடைய பாதத்தின் அடி வைப்பினால் அலங்கரிக்கப் பட்ட எனக்கு மயிர்க்கூச்சலுண்டானதோ, அந்தப் பரமபுருஷனை விட்டுப் பிரிந்திருக்க யாரால் முடியும்" என்றாள்.

37. இப்படி இருவரும் பேசிக் கொண்டிருக்கும் பொழுது பரீக்ஷித்து என்ற ராஜரிஷியானவர் குருக்ஷேத்திரத்தில் கிழக்கு முகமாய் ப்ரவஹிக்கும் ஸரஸ்வதி நதிக்கரை வந்தார்.



அத்தியாயம்- 17

பரீக்ஷித் மகாராஜன் கலியை நிக்ரஹித்தது

1–15. அவ்விடத்தில் பரீக்ஷித் மஹாராஜர் ஒரு எருதையும், ஒரு பசுவையும், ஒரு சூத்திரன் ராஜ வேஷந்தரித்துக் கையில் தடியை எடுத்து அடித்துக் கொண்டிருக்கக் கண்டார். அவைகளில் தாமரைத் தண்டு போல் வெளுப்பான விருஷபமானது (எருது) மிகவும் பயந்து மூத்திரம் பெய்வதுபோல் நடுக்கம் அடைந்து, அந்தச் சூத்திரனால் அடிக்கப்பட்டு ஒரு காலால் நின்று மிகவும் துன்பமடைந்திருந்தது. பால் முதலியவைகளைக் கொடுக்கும் அந்தப் பசுவானது கன்றில்லாமல் அழுதுகொண்டிருந்தது. அல்லாமல் இளைத்துமிருந்தது. புல் முதலிய ஆஹாரத்தில் விருப்பமுள்ளதாகவுமிருந்தது. அதனைச் சூத்திரன் காலால் உதைத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஸுவர்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட இரதத்தின் மீதேறியிருக்கும் அந்தப் பரீக்ஷித் மஹாராஜன் வில்லில் நாணை பூட்டிக்கொண்டு பின்வருமாறு மேகம் கர்ஜிப்பது போலக் கம்பீரமாகக் கேட்கத் தொடங்கி 'அட மூட நீ யார்? என்னால் காப்பாற்றப்படுகிற தேசத்தில் பலிஷ்டனான நீ, பலமில்லாதவர்களை உபத்திரவிக்கின்றனை. உனது வேஷத்தால் அரசனாகத் தோன்றுகின்றனை. சூத்திரனுடைய காரியத்தை செய்கின்றனை யாதலால் வேஷதாரி போலிருக்கின்றாய் ஸ்ரீ கிருஷ்ண பகவானும், அர்ஜுனனும் இத்தேசத்தை விட்டு வெகு தூரஞ் சென்றுவிட்டபடியால் இரஹஸ் யத்தில் பலமில்லாதவர்களை ஹிம்ஸிக்கின்றனை. ஆகையால் நீ என்னால் கொல்லத்தகுந்தவன். ஓ

தாமரைத் தண்டு போல வெளுத்த சரீரத்துடன் விருஷப ரூபமெடுத்து ஒரு காலால் ஸஞ்சரிப்பவரே! நீர், தேவதைகளுக்குள் யார்? உம்மைப் பார்க்க எங்களுக்கு வெகு துக்கமாயிருக்கிறது. கௌரவர்களுடைய வைகளால் காப்பாற்றப்படும் பூமியில் துக்கத்தால் உண்டாகும் கண்ணீர் விழுகிற வழக்கமில்லை. ஆதலால் நீர் துக்கிக்கவேண்டாம். சூத்திரனிடமிருந்து பயம் உமக்கு நிவர்த்தியாகிவிட்டது. ஓ அம்மா! பசுவே! துஷ்டர்களை நான் சிக்ஷித்து வரும்பொழுது நீ ஏன் அழவேண்டும்? எந்த அரசனுடைய இராஜ்யத்தில் துஷ்டர்களால் ஸாதுக்களுக்கு உபத்திரவம் நேரிடு கிறதோ அவனுடைய கீர்த்தி, ஆயுள், பாக்யம் ஆகிய இவைகள் குறைவு படுவதல்லாமல் அவனுக்குக் நல்ல லோகமும் கிடைக்கிறதில்லை. உபத்திரவப் பட்டவர் களுடைய துன்பத்தை நிவர்த்திப்பதே அரசர்களுக்கு முக்கியமாகிய தர்மம். ஆனதால் பிராணிகளுக்கும் கெடுதியைச் செய்கின்ற மிக்க அஸத்தாகிய இவனைச் சிக்ஷிக்கிறேன். ஓ விருஷபமே! உன்னுடைய மூன்று கால்களை எவன் வெட்டினான்? ஸ்ரீ கிருஷ்ணன் அனுஸரித்த அரசர்களுடைய இராஜ்யத்தில் ஜனங்கள் உன்னைப் போலிருப்பது உசிதமல்ல. நிரபராதியும் ஸாதுவுமாகிய உனக்குக் கெடுதியைக் குறைக்கும் அஸத் யார்? அவனைச் சொல் உனக்கு க்ஷேமம் உண்டாகும். குற்றஞ் செய்யாதவர்களை எவன் உபத்திரவிக்கிறானோ அவனுக்கு என்னிடமிருந்து பலவகையிலும் பயமுண்டாகும். கொஞ்சமாவது பயமில்லாமல் குற்றமற்றவர்களுக்குக் கெடுதி செய்பவன் தேவனானாலும் தோள் வளைகளுள்ள அவனுடைய கையை, வெட்டி விடுவேன். கெட்ட நடையுள்ளவர்களை,

சாஸ்திர முறைப்படி சிக்ஷிக்கும் அரசர்களுக்குத் தமது தர்மத்தை யனுஷ்டிப்பவர்களைக் காப்பாற்றுவதே ஸ்வதர்மம் என்று சொன்னார்.

16–19½. இதனைக் கேட்டு தர்மமானது அரசனை நோக்கி, ஓ மஹாராஜ! எவர்களுடைய குணங்களால் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவர்களுக்கு, தூதனாக விருப்பது முதலியவைகளைச் செய்தாரோ, அந்தப் பாண்டவர்களின் குலத்தில் பிறந்தவர்களான நீங்கள் பயந்தவர்களுக்கு அடய வார்த்தை சொல்வதே உசிதம். ப்ராணிகளுக்குத் துக்கமுண்டாகுங் காரணத்தைப் பற்றிப் பல வகையான மதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சிலர் ஆத்மாவே துக்கத்திற்குக் காரணமென்றும், லோகாயதகர்கள் நவகிரஹங்களின் அதிதேவதையே துக்கத்திற்குக் காரணமென்றும், மீமாம்ஸகர்கள் கர்மமே காரணமென்றும், சிலர் ஸ்வாபவமே காரணமென்றும், சிலர் ஈசுவரனே காரணமென்றும், சொல்லுவதால் ஊகிக்க முடியாததும், குறிப்பிடக் கூடாததுமான ஏதோ ஒரு காரணத்திலிருந்து துக்கம் உண்டாகிறது. ஒன்றையும் நிச்சயமாகச சொல்லக் கூடவில்லை. இப்படி மதபேதத்தால் மோஹித்து இருப்பதால் எந்தப் புருஷனிடமிருந்து துக்கங்கள் நேரிடுகின்றனவோ அந்தப் புருஷன் இன்னாரென்று நாம் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனது பற்றி அதன் காரணத்தை நீரே உம்முடைய புத்தியால், யோசித்துத் தெரிந்து கொள்ளும் என்று சொல்லிற்று.

20–27. இதனைக் கேட்டு அரசன் யோசித்து மோஹமும் இல்லாதவராகத் தர்மத்தை நோக்கிப் பின்வருமாறு சொன்னார். தர்மமமாகிய வார்த்தையைச் சொல்வதால்

நீ தர்மமேயாம். விருஷபத்தின் சரீரத்தை தரித்து இருக்கின்றனை. அதர்மத்தை யனுஷ்டித்தவனுக்கு எவ்வித ஸந்தோஷமேற்படுமோ அது கோட் சொன்னவனுக்கு (அவனைக் காட்டிக் கொடுத்தவனுக்கு) உண்டாகிறது. அல்லது ஈசுவரனுடைய ஸங்கல்பமானது ப்ராணிகளுடைய மனத்திற்கும், வாக்குக்கும் எட்டாத தாகையால் அதை அறியமுடியாததென்பது நிச்சயம். தபஸ், சௌசம், தயை, ஸத்யம் ஆகிய நான்கு தர்மத்திற்குப் பாதங்களாகக் கிருதயுகத்தில் ஏற்படுத்துப் பட்டன. அதர்மத்தின் பாதங்களாகிய கர்வம், ஆசை, மதம் இவைகளால் தர்மத்தின் மூன்று பாதங்கள் முறிக்கப்பட்டன. இப்பொழுது நான்காவது பாதமாகிய ஸத்யத்தை அஸத்யத்துடன் கூடி கலி பிடிக்க முயற்சிக்கின்றன. இவள் பூமி தேவியே. இவளுடைய பாரத்தைப் பகவான் நிவர்த்தித்தார் அவருடைய திவ்யமாகிய அடிவைப்பினால் ஸந்தோஷமடைந்து இருந்தாள். இப்பொழுது அந்தப் பகவானை விட்டுப் பிரிந்து பூமிதேவியானவள், ப்ராஹ்மணர்களைக் காப்பாற்றாதவர்களும் ராஜவேஷத்தை மாத்திரம் தரித்த வர்களுமான சூத்திரர்கள் தமக்கு அதிபதியாக ஆகிவிடுவார்களே என்று கண்ணீரைப் பெருக்கிப் பாக்கியமற்றவள் போல் துக்கிக்கிறாள் என்று சொல்லித் தர்ம தேவதையையும், பூமியையும் ஸமாதானஞ் செய்தார்.

28-33. பின்னும் மஹாரதராகிய அவ்வரசன் அதர்மத்திற்குக் காரணமாகிய கலியைச் சிக்ஷிப்பதற்காகக் கூர்மையான கத்தியை எடுத்தார். அப்பொழுது கலியானவன் அரசன் தன்னைக் கொல்ல விரும்பியதைத் தெரிந்துகொண்டு இராஜவேஷத்தை விட்டு மிகவும்

பயந்தவனாக அவருடைய சரணங்களில் நமஸ்கரித் தான். அப்பொழுது தம்முடைய காலில் விழுந்த கலியைப் பார்த்து, தீனர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ள வரும், தைர்யமுள்ளவரும், கொண்டாடக்கூடியவரும், சரண்யருமான அரசன் கருணையுடன் அவனைக் கொல்லாமலிருந்ததுமன்றி அவனை நோக்கிச் சிரித்துக் கொண்டு அர்ஜுனனுடைய கீர்த்தியை காப்பாற்றி வரும் நாங்கள், கைகூப்பிச் சரணமடைந்தவர்களைக் கொல்லுகிறதில்லை. ஆனாலும் நீ, அதர்மத்திற்குப் பந்துவானதால் நமக்குச் சொந்தமான இவ்விடத்தில் வசிக்கக்கூடாது. இராஜ சரீரத்தில் நீ வசிக்கும்போது ஆசை, பொய்சொல்லுதல், திருடுவது, துஷ்டனாயிருப்பது, தன்னுடைய தர்மத்தை விட்டுவிடுவது, அலக்ஷ்மீ கபடம், கலஹம், டம்பம் ஆகிய அதர்மத்தின் கூட்டமும் உன்னை யனுஸரிக்கிறது. ஆதலால் அதர்ம பந்துவாகிய ஏ கலியே! ஸத்யம், தர்மம் ஆகிய இவைகள் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும், ப்ரஹ்மாவர்த்தத்தில் நீ வசிக்கக் கூடாது. இவ்விடத்தில் யாகத்தின் விதியை நன்றாக அறிந்தவர்கள் யக்ஞேசரராகிய பகவானை யாகத்தால் பூஜிக்கிறார்கள். மேலும் யாக ஸ்வரூபியான பகவான் யாகஞ் செய்பவர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கிறார். தவிரவும், ,ஸ்தாவர ஜங்கமங்களாகிய எல்லாப் ப்ராணிகளிடத்திலும் வாயுவைப் போல் அந்தர்யாமியாயிருந்து அவரவர்கள் இஷ்டத்தை நிறைவேற்றுகிறார் என்று சொன்னார்.

34–36. அதனைக் கேட்டு அந்தக் கலி மிகவும் நடுக்கமுள்ளவனாகி முயற்சியுள்ள யமனைப்போலக் கத்தியைக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் பரீக்ஷித்தை நோக்கி, ஓ ஸார்வபௌமரே! தங்களுடைய

உத்தரவுப்படி எவ்விடத்திலாவது வசிக்கிறேன். எவ்விடத்திலிருந்தாலும், வில்லையும் பாணத்தையும் கையில் வைத்துக் கொண்டிருக்கும் உம்மை பார்ப்பேன். தர்ம சிந்தையுள்ளவர்களுக்குள் சிறந்தவரே! எவ்விடத்தில் வசிக்கும்படி நீர் ஆஞ்ஞாபிக்கிறீரோ அவ்விடத்திலேயே வசிப்பேன். அப்போர்ப்பட்ட ஸ்தானத்தை எனக்குக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.

37–39. அப்பொழுது இம்மாதிரி கலியால் பிரார்த்திக்கப்பட்ட பரீக்ஷித்து மஹாராஜா. சொக்கட்டான் ஆட்டம், மத்யபானம், ஸ்திரீ ஸங்கமம், ப்ராணி ஹிம்ஸை ஆகிய நான்கு அதர்ம ஸ்தானங்களிலும் வசிக்கும்படி ஆஞ்ஞாபித்தார். அதிலும் திருப்தியடையாமல் பின்னும் சிலவிடங்கள் கொடுக்க வேண்டுமென்று கலி கேட்டுக்கொள்ள, அப்பொழுது அரசன் ஸுவர்ணத்திலிருக்கும்படி சொன்னார். அதனாலும் கலி திருப்தி யடையாமலிருக்க, பின்னும் அரசன் பொய், மதம், காமம், ரஜோ குணம், விரோதம் ஆகிய ஐந்து இடங்களையும், கலிக்குக் கொடுத்தர். இப்படி உத்தரையின் புத்திரரால் கொடுக்கப்பட்ட இந்த விடங்களில் அவருடைய உத்தரவின்படி கலி வசித்துக்கொண்டிருந்தான்.

40-44. ஆனதால் க்ஷேமத்தை விரும்பியவர்கள் இவைகளை ஸேவிக்கக் கூடாது. அவைகளில் ஆசைப்படவே கூடாது. பிறகு அவர் தபஸ், சௌசம், தயை இவைகளை உலகத்தில் பரவச் செய்து முறிந்துபோன தர்மத்தின் மூன்று பாதங்களையும் விருத்தி செய்தார். பூமியையும் விருத்தி செய்தார். அந்தப் பரீக்ஷித்து என்பவர், தர்ம புத்திரர்

காட்டிற்குப் போகும் முன்னிலையில் அவரால் தமக்குக் கொடுக்கப்பட்ட இராஜ்யத்தை அடைந்து விசேஷ கீர்த்தியுள்ளவராய் பிரகாசித்தார். அபிமன்யுவின் புத்திரராகிய அந்த அரசன் இவ்வளவு மஹிமையுள்ளவர். அவர் ராஜ்ய பாலனஞ் செய்யும் காலமாகிய இப்பொழுது நீங்கள் ஸத்ரஞ் செய்ய ஆரம்பித்திருக்கிறீர்கள்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்-18

பரீக்ஷித்திற்கு நேர்ந்த ப்ராஹ்மண சாபம்

1-10 எந்தச் சக்கரவர்த்தியானவர் தாயாருடைய கர்ப்பத்திலிருக்கும்போது அச்வஸ்த்தாமாவினுடைய அஸ்திரத்தால் எரிக்கப்பட்டும் அதியற்புதமாகிய செய்கைகளுள்ள ஸ்ரீ கிருஷ்ணனுடைய அனுக்ரஹத்தால் மரணமடையவில்லையோ எவர் ப்ராஹ்மணருடைய சாபத்தால் தக்ஷனால் தமக்கு உயிர்ச் சேதம் நேர்ந்ததும் அதனால் கொஞ்சமேனும் கவலைப்படாமல் இருந்தாரோ, சுகருடைய சிஷ்யராகிய அந்த மஹா ராஜன் ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலேயே தமது மனதைச் செலுத்தி, ஸகல ஆசைகளையும் ஒழித்து, பகவான் உடைய ஸ்வரூபத்தையறிந்து கங்கா நதிக்கரையில் சரீரத்தைவிட்டார். எந்தப் புருஷர்கள் உத்தமச் லோகருடைய கதைகளைச் சொல்வதால் காலத்தைக் கழிக்கிறார்களோ, எவர்கள் மரணகாலத்திலும் பகவான் உடைய சரணாரவிந்தங்களைத் தியானஞ் செய்கிறார் களோ அவர்களுக்கு மோஹம் உண்டாவதில்லை. மேற்சொல்லிய அபிமன்யுவின் புத்திரராகிய சக்ரவர்த்தி அரசனாயிருக்கும்போது லோகத்தில் கலி வந்திருந்தாலும் அதர்மம் பரவாமலிருந்தது. என்றைய தினம் எந்த க்ஷணத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் பூமியை விட்டு மேலுலகஞ் சென்றாரோ, அன்றைய தினமே லோகத்தில் அதர்மத்தை விருத்தி செய்யும் கலி பிரவேசித்தான். தேனீ போல் ஸாரத்தைக் க்ரஹிப்பவராகிய பரீக்ஷித்து மஹாராஜன் கலியைக்கொன்று விடவில்லை. அவன் உடைய சக்தி பரவாமலிருக்கச் செய்தார். ஏனென்றால், அந்தக் கலியின் காலத்தில் ஸங்கல்ப மாத்திரத்தில்

புண்யங்களும், செய்கையால் பாபங்களும் சித்திக் கின்றன. தைர்யமற்றவர்களிடம் சூரனாகியும், தைர்யம் உள்ளவர்களிடம் பயப்படும் ஸ்வாவமுள்ளவனாயு மிருக்கிற கலியானவன் அஜாக்ரதை உள்ளவர்களைப் பிடித்துக்கொள்ள செந்நாய்போல மிக்க ஜாக்கிரதை யுள்ளவனாக இருக்கிறான் (அவன் என்ன கெடுதியைச் செய்யப் போகிறான் என்பது கருத்து) ஓ மஹர்ஷிகளே! உங்களால் கேட்கப்பட்டதும் மிக்க புண்யகரமுமான பரீக்ஷித்தின் சரிதத்தை ஸ்ரீ வாஸுதேவருடைய திவ்ய கதைகளுடன் சொன்னேன். ஆதலால் க்ஷேமத்தை விரும்பிய மனிதர்கள் பகவானுடைய குணங்கள், சரித்திரங்கள் ஆகிய இவைகளடங்கிய கதைகளையே சொல்ல வேண்டும். அவைகளையே கேட்க வேண்டும். மற்ற கதைகளை ஸேவிக்கக் கூடாதென்பது கருத்து, என்று ஸூதர் சொன்னார்.

11–18 இதனைக் கேட்டு மஹர்ஷிகள் அவரை நோக்கி, 'ஓ ஸூதரே! நீர் மரண தர்மமுள்ள எங்களுக்கு அமிருதமான ஸ்ரீ கிருஷ்ண கதையைச் சொன்னதால் வெகுகாலம் ஜீவித்திருக்கும் எங்களால் இப்பொழுது அனுஷ்டிக்கப்படும் ஸத்ரத்தை யாதொரு குறைவுமின்றி முடிப்பது அரிதாகையால் அதன் பூர்ண பலத்தை அடைவோமென்பது நிச்சயமில்லை, ஆகிலும், அதனைச் செய்து கொண்டு புகையினால் கறுத்த சரீரமுள்ள வர்களாகிக் கஷ்டப்படும் எங்களுக்கு ஸ்ரீ கோவிந் தருடைய பாதங்களாகிய தாமரை மலரின் தேனைக் கொடுத்தீரல்லவா? பகவத் பக்தர் களுடைய சேர்க் கையின் சிறிது பாகத்திற்குச் ஸ்வர்க்கமாவது, மோக்ஷமாவது, மற்ற ராஜ்யம் முதலியவைகளாவது ஸமமானவையல்ல. மஹான்களுக்கு முக்கியமான

கதி பரம புருஷனே. அவரிடத்தில் ப்ராகிருத குணங்களில்லை. அவரிடத்தில் பொருந்தியிருக்கும் கல்யாண குணங்கள் இவ்வளவென்று பரமசிவன், ப்ரஹ்மா முதலிய தேவர்களாலும் அறிய முடியவில்லை. அப்பேர்ப்பட்ட பகவானுடைய கதையைக் கேட்டு ரஸிகனான எவன்தான் போதுமென்று திருப்தி அடைவான்? ஆதலால் பகவத் பக்தர்களுக்குள் முக்கியரும் எல்லாவற்றையு மறிந்தவருமான நீர் மிக்க கம்பீரமாயும், பரிசுத்தமாயுமுள்ள மஹா விஷ்ணுவின் சரிதத்தைக் கேட்க விரும்பும் எங்களுக்கு விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும். மஹா பாகவத சிரோமணியான அந்தப் பரீக்ஷித்து மஹாராஜன் சுகரால் உபதேசிக்கப்பட்ட ஞானத்தால் மோக்ஷமென்ற பெயருள்ள ஸ்ரீ நாராயணனுடைய சரணத்தையடைந் தாரல்லவா? மிகுந்த புண்யத்தைக் கொடுப்பதும், மிகவும் அற்புதமுமாகிய யோகத்தைக் காட்டுவதும், நாசமற்றவராகிய பகவானுடைய சரீரத்தால் அலங்கரிக் கப்பட்டதும், பக்த பக்தர்களுக்கு மனோஹரமாய், பரீக்ஷித்துக்குச் சுகரால் உபதேசிக்கப்பட்டதுமான ஸ்ரீமத் பாகவதமென்ற ஆக்யானத்தை நன்றாகத் தெரியும்படி சொல்ல வேண்டும் என்று ப்ரார்த்தித் தார்கள்.

18–23 இதனைக் கேட்டு ஸூதர் சொல்லுகிறார். ஆச்சரியம், யான் விலோம ஜாதியுள்ளவனானாலும் என்னுடைய பிறப்பும் இப்பொழுது பெரியோர்களைச் ஸேவித்ததால் சபலமாயிற்று. மிக்க மகான்களாகிய புருஷர்களுடன் பேசக் கூடிய பாக்யம் கிடைத்த தாலேயே தாழ்ந்த குலத்தில் பிறந்ததால் உண்டான மனக்கவலை நீங்கியது. எந்தப் புருஷன் அளவற்ற

சக்தி, அளவற்ற குணங்கள் ஆகிய இவைகளுள்ளவரோ, நாசமற்றவரோ; அதனால் அனந்தரென்று சொல்லப் படுகிறாரோ, மகான்களுக்கு முக்கிய கதியாயிருக்கும் அந்தப் புருஷோத்தமருடைய குணங்களைச் சொல்லுகிற எனக்குத் துக்கமே நேரிடாது. லக்ஷ்மீ தேவியானவள் தன்னைப் ப்ரார்த்திக்கும் ப்ரஹ்மா முதலிய தேவர்களை லக்ஷியம் செய்யாமல் தன்னை விரும்பாதவரான ஸ்ரீ நாராயணனுடைய பாததூளியை சேவிக்கிறாள். அவருக்குச் சமமானவராவது, மேற்பட்ட வராவது ஒருவருமில்லை. இதனாலேயே அவருடைய மஹிமை நன்றாக விளங்கும். தவிரவும், எவருடைய சரண நகத்திலிருந்து பெருகியதும், ப்ரஹ்மதேவரால் சேவிக்கப்பட்டதுமான கங்காஜலம் பரமசிவன் முதலிய எல்லோரையும் பரிசுத்தப்படுத்துகிறதோ, அந்த முகுந்தனைத் தவிர வேறு யாரைப் பகவான் என்று சொல்லக்கூடும்? அந்த ஸர்வேசனிடம் அந்தரங்கத்தைச் செலுத்தியவர்கள் தைர்யமுள்ள வர்களாகத் தேகம் முதலியவைகளில் வெகுநாளாக உண்டாகியிருக்கும் விசேஷ அபிமானத்தை யொழித்து, அஹிம்சை, சமம் இவைகளுடன் கூடி பரமஹம் சர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆனதால் ஸூர்யனுக்குச் சமமான தேஜஸுள்ள ஓ மஹர்ஷிகளே! பகவான் உடைய சரிதத்தைச் சொல்லுகிறேன். பறவைகள் தம்முடைய சக்திக்குத் தக்கபடி ஆகாயத்தில் பறக்குமே அல்லாமல் வெகு உயரத்தில் சக்தியை மீறிப் பறக்க அவைகளால் முடியுமா? வித்வான்கள் தமது புத்திக்கு எட்டியவரையில் மஹாவிஷ்ணுவின் லீலைகளை வர்ணிக் கிறார்கள். அப்படிப்போல எனக்குத் தெரிந்தவரையில் பகவானுடைய சரிதத்தைச் சொல்லுகிறேன் என்று பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்.

24–31 பரீட்சித்து மஹாராஜன் ஒரு நாள் காட்டில் வேட்டையாடி வரும்போது மிருகங்களை நாடிச் சென்றதால் மிகுந்த பசி தாகமுள்ளவராய், ஏரி குளங்களைத் தேடிப் போகும்போது ஒரு ஆசிரமத்தைக் கண்டார். பின்பு அதனுள் சென்று அவ்விடத்தில் கண்களை மூடிக்கொண்டு நிஷ்டையிலிருக்கும் ஒரு மஹர்ஷியைக் கண்டார். அந்த மஹர்ஷி இந்திரியங் களையும் ஸ்வாசத்தையும் அடக்கிக் கொண்டிருந்தார். அவருடைய புத்தியானது விஷயங்களிற் செல்ல வில்லை. ஜாக்ரத், சுவப்னம், சுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளையும் தாண்டி விகாரமற்ற ப்ருஹ்ம ஸ்வரூபியாயிருந்தார். அவருடைய ஜடைகள் நாலு பக்கங்களிலும் அவரை மறைத்துக் கொண்டிருந்தன. தவிரவும் மானின் தோலைப் போர்த்துக் கொண்டு இருந்தார், அவரை நோக்கி அரசன் மிகுந்த தாகத்தால் அதிக வருத்தப்பட்டுத் தண்ணீர் கொடுக்கும்படி பல தரம் வேண்டிக்கொண்டார். இப்படி மகாராஜன் கேட்டு அவருக்கு குடிக்க நீர் கொடாமலிருந்தது இன்றி ஆசனங் கொடுப்பது உட்காருவதற்கு இடம் காட்டுவது. அர்க்கியம், ப்ரியமான வார்த்தை முதலியவைகளாலும் அவரை உபசரிக்கவுமில்லை. அப்பொழுது அரசன், 'மஹர்ஷி தம்மை அவமதித்தார்' என்று நினைத்துப் பசி, தாகம் இவைகளால் துன்பப்பட்டவராகையாலும் அவருக்கு மஹர்ஷியினிடம் கோபமும் விரோதமும் உண்டாயின. இம்மாதிரியான கெட்டகுணம் இதற்கு முன் நேர்ந்தது இல்லை, பின்பு அரசன் ஆசிரமத்திலிருந்து வெளியில் வரும்போது, 'இந்த மஹர்ஷி உண்மையில் நாம், வந்தது தெரியாமல் நிஷ்டையிலிருக்கிறாரா, அல்லது க்ஷத்திரியன் வந்தாலென்ன, போனாலென்னவென்று

கபடமாகக் கண்களை மூடிக்கொண்டிருக்கிறாரா? என்று பரீட்சிப்பதற்காக உயிரிழந்த ஒரு பாம்பை வில் கழியின் நுனியால் தூக்கி அவருடைய கழுத்தில் போட்டுத் தமது பட்டணம் சென்றார்.

32–38 அப்பொழுது மிகுந்த தேஜஸ்வியான சிருங்கி யென்னும் அந்த மஹர்ஷியின் புத்திரன் தோழர் களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அந்த இடத்தில் அரசன் செய்த காரியத்தைக் கேள்விப் பட்டு, தன் தோழர்களை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானான்." ஆச்சரியம் அதர்மம் மேலிட்டது. நாய்களைக் காவலுக்காக வைப்பதுபோல க்ஷத்திரியர்களைப் ப்ராஹ்மணர்கள் காவலாளர்களாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். வாசலில் காத்துக்கொண்டு இருக்கும் அவன் எப்படி பூஜிக்கத் தக்கவனாவான்? பலியைப் புஜிக்கும் காக்கைகள் போலும் (ஜனங் களால் கொடுக்கப்படும் வரியைக் கொண்டு ஜீவிப்பவ னென்பது கருத்து). வாசலைக்காத்திருக்கும் நாய்கள் போன்ற கொழுத்த க்ஷத்திரியர்கள் யஜமானனுக்குக் குற்றஞ்செய்யும்படி நேர்ந்ததே. கெட்ட மார்க்கத்தில் சஞ்சரிப்பவர்களைச் சிக்ஷிப்பவரான ஸ்ரீ கிருஷ்ண பகவான் வைகுண்டஞ் சென்றாலும் மரியாதை தவறினவர்களை நான் நிக்ரஹிக்கிறேன் என்னுடைய பலத்தைப் பாருங்கள் என்று சொல்லி கோபத்தால் கண்கள் சிவக்க, கௌசிகீ நதியின் ஜலத்தால் ஆசமனஞ் செய்து, என்னுடைய பிதாவிற்கு அபராதஞ் செய்தவனும், மரியாதை தவறினவனும், குலத்திற்கு நெருப்புத் தணல் (குலத்தைக் கெடுப்பவனென்று கருத்து) போன்றவனுமாகிய அரசனை இது முதல் ஏழாவது நாளில் தக்ஷகன் கடித்து எரிந்து விடுவானாக

என்று சபித்தான். பின்பு ஆசிரமம் வந்து அந்த இடத்தில் பிதாவின் கழுத்தில் சர்ப்பத்தைக் கண்டு மிகவும் துக்கப்பட்டுக் கதறினான்.

38–39 1/2 இதைக் கேட்டு சமீகரென்னும் அந்த மஹர்ஷியானவர் மெள்ள கண்களைத் திறந்து தம்முடைய தோளில் உயிரில்லாத பாம்பிருக்கக்கண்டு அதனை எடுத்து எறிந்துவிட்டுத் தமது புத்திரனை நோக்கி, 'ஓ குழந்தாய் ஏன் அழுகிறாய்? எவர்கள் உனக்கு எவ்விதக் குற்றத்தைச் செய்தார்கள்?' என்று கேட்டார்.

40–50 1/2 அதனைக் கேட்டு, சிருங்கியென்பவர் நடந்த விஷயம் எல்லாவற்றையும் உண்மையாகத் தெரிவித்தார். அதனைக் கேட்டும் மஹர்ஷியானவர் தம்முடைய புத்திரன் மகாராஜனைச் சபித்தது உசிதமல்லவென்று நினைத்து, அவனை நோக்கிப் பின்வருமாறு தர்மத்தின் இரகசியத்தை உபதேசித்தார். ஓ ஒன்றையு மறியாதவனே! அரசன் செய்த சிறு குற்றத்திற்காகப் பெரிதாகிய சிக்ஷையைச் செய்தது உசிதமன்று. பெரியதாகிய பாபத்தைச் செய்தாய். ஓ விவேகமற்றவனே! அரசன் மகாவிஷ்ணுவின் அம்சம் உள்ளவனாகையால் அவனைச் ஸாமானிய மனிதனாக நினைக்கக் கூடாது. அவனுடை தேஜஸ் ஸகிக்க முடியாதது. அவனால் காப்பாற்றப்பட்டு ஜனங்கள் ஒருவரிடத்திலும் பயமில்லாதவர்களாக வசிக்கிறார்கள். மகாவிஷ்ணுவின் அம்சமுள்ள அவ்வரசனில்லாவிடில் ஜனங்கள் ஆடுகளின் கூட்டம்போல் க்ஷணகாலத் திற்குள் நாசமடைவார்கள். தேசத்தில் அரசனில்லாத வரையில் ஜனங்களுடைய தனங்களை அபகரிக்கும்

திருடர்கள் மிகுதியாய் விடுவார்கள். ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்வார்கள். கடுமையாகப் பேசுவார்கள். பசுக்கள், ஸ்திரீகள், பணங்கள் ஆகிய இவைகளை அபகரிப்பார்கள். ஆகையால் அதனாலுண்டாகும் பாபம் நம்மைச் சேர்ந்ததாகும். (அரசனைச் சபித்தாலென்பது கருத்து) மேலும், வர்ணாசிரம தர்மங்கள் குறைந்து விடும். நல்லொழுக்கம் மறைந்துவிடும். நாய்கள் போலவும், குரங்குகள் போலவும் அர்த்தம், காமம் இவைகளிலேயே ஜனங்கள் மிகவும் ஆசை கொள்வார்கள். அதனால் வர்ண ஸங்கரம் உண்டாகும், தவிரவும் பரீக்ஷித் மகாராஜனோ தர்மத்தைக்காப்பாற்றி கிறவர். சக்ரவர்த்தி, மிகுந்த கீர்த்தியுள்ளவர், பகவத் பக்தர். அச்வமேத யாகஞ் செய்தவர். மேலும் என்னிடம் வந்த சமயத்தில் பசி தாகத்தால் ச்ரமம் அடைந்து தீனராயிருந்தவர். ஆனது பற்றி அவரைச் சபிப்பது நியாயமல்ல. குற்றஞ்செய்யாத வேலைக்காரர் களிடம் செய்த அபராதத்தைச் ஸகல ஜகத்ரூபியான பகவான் பொறுத்துக் கொள்ளட்டும். விஷ்ணு பக்தர்களை ஒருவன் நிந்தித்தாலும், ஏமாற்றினாலும், அவமதித்தாலும், அடித்தாலும் அவர்கள் ப்ரதி செய்ய சாமர்த்தியமுள்ளவர்களானாலும் ஒன்றுஞ் செய்கிறதில்லை என்று சொல்லித் தமது புத்திரன் செய்த குற்றத்தைப் பற்றி மஹர்ஷி பச்சாதாப மடைந்து, அரசன் செய்த குற்றத்தை மனத்தில் நினைக்காமலேயே இருந்தார். பெரும்பாலும் சாதுக்கள் பிறர் செய்த கெடுதியால் அவர்களிடத்தில் கோபித்து வருத்தமடைகிறதில்லை. உபகாரத்தால் சந்தோஷம் அடைகிறதுமில்லை. ஏனென்றால் ஆத்மாவானது உண்மையில் சுகத்திலாவது துக்கத்திலாவது ஸம்பந்திக்கிறதில்லை.

அத்தியாயம்-19

கங்கைக்கரைக்குச் சுகர் வந்தது

பரீக்ஷித்து மகாராஜன் தம்முடைய பட்டணஞ் சென்ற பிறகு மஹர்ஷியின் ஆசிரமத்தில் தாம் செய்து வந்த குற்றத்தை நினைத்து வருத்தப்பட்டுத் தமக்குள் தாம் பின்வருமாறு யோசிக்கலானார்: 'யாதொரு அபராதமுஞ் செய்யாதவரும், தேஜஸ்ஸை அடக்கிக் கொண்டவருமான தபஸ்வியினுடைய கழுத்தில் ஸர்ப்பத்தைப் போட்டேன். அது மிகக் கெட்ட கார்யம். 'பாபத்தைச் செய்யக்கூடாது' என்ற தெய்வத்தின் கட்டளையை மீறினதாக ஆயிற்று, ஆனதால் தடுக்க முடியாத துக்கம் சீக்கிரத்தில் நேரிடும். இனி நான் இப்படிப்பட்ட கெட்ட காரியத்தைச் செய்யாமல் இருப்பதற்காகவும், செய்த பாபத்திற்குப் ப்ராயச்சித்த மாகவும் அந்தத் துக்கம் எனக்கே நேரில் வரவேண்டும் (புத்திரன் முதலியவர்களுக்கும் நேரிட வேண்டாம் என்பது கருத்து) நான் ப்ராஹ்மணர்களுக்குக் கோபத்தை யுண்டுபண்ணினதால் ப்ராஹ்மண குலமாகிய அக்னி யானது மிக்க பாபியான என்னுடைய இராஜ்யம், சைன்யம், பூர்ணமான செல்வம் ஆகிய இவைகளை இப்பொழுதே எரிக்கட்டும். ப்ராஹ்மணர்கள், தேவர்கள் பசுக்கள் ஆகிய இவர்கள் விஷயத்தில் மறுபடியும் எனக்கு இப்படிப்பட்ட கெட்ட புத்தி யுண்டாக வேண்டாம் என்று சிந்தித்தார்.

4-17. இந்தச் சமயத்தில் சமீக மஹர்ஷியின் சிஷ்யன் ஒருவன் குருவின் அனுமதிப்படி வந்து, சிருங்கியின்

சாபத்தை அரசனிடம் தெரிவித்தான். அதனைக்கேட்டு மகாராஜன் 'விஷயங்களில் மிகுந்த ஆசையுள்ள நான் வைராக்யமடைவதற்குத் தட்சகனுடைய விஷாக்னியே காரணமென்றும், அது சீக்கிரமாக நேரிடவேண்டும்' என்றும் நினைத்தார். பின்னுமவர் இவ்வுலகம், பரலோகம் ஆகிய இவ்விரண்டையும் துச்சமென்று தள்ளிவிட்டு, ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதஸேவையையே பெரிதாக நினைத்துக் கங்கைக் கரையில் பிராயோபவேசஞ் செய்ய முயற்சித்தார். எந்த நதியானது துளஸியுடன் சேர்ந்த மகாவிஷ்ணுவின் பாததூளியை விட மிக்க புண்யகரமான ஜலப்பிரவாகமுள்ளதோ, லோகபாலர்களுட்பட எல்லாரையும் வெளியிலும் அந்தரங்கத்திலும் பரிசுத்தப் படுத்துகிறதோ, அந்தக், கங்காநதியைச் சாகுந் தருணத்திலிருக்கும் எவன்தான் ஸேவிக்க மாட்டான்? இப்படி அந்த நதிக்கரையில் பிராயோபவேசஞ் செய்வதாகத் தீர்மானித்து வேறு விஷயத்தில் மனதைச் செலுத்தாமல் ஸ்ரீ கிருஷ்ணன் உடைய சரணங்களையே தியானித்து, ஸகல ஆசை களையும் விட்டுவிட்டு முனியாக விருந்தார். அப்பொழுது அத்ரி, வசிஷ்டர், ச்யவனர், சரத்வான், அரிஷ்டநேமி, ப்ருகு, ஆங்கிரஸ், பராசரர், விசுவாமித்ரர், பரசுராமர், உதத்யர், இந்திரப்பரதமர், இத்மவாஹர், மேதாதிதி, தேவலர், ஆர்ஷ்டிஷேணர், பரத்வாஜர், கௌதமர், பிப்பலாதர், மைத்ரேயர், ஔர்வர், கவஷர், அகஸ்தியர், த்வைபாயனர், பகவானான நாரதர் மற்ற தேவரிஷிகள் ப்ரஹ்மரிஷிகள், ராஜரிஷிகள், அருணர் முதலியவர்கள் ஆகிய இவர்களெல்லோரும் தங்கள் தங்கள் சிஷ்யர் களுடன் அவ்விடம் வந்தார்கள். அவர்களெல்லோரும் தீர்த்தயாத்திரை செய்கிறோம் என்று வ்யாஜமாக லோகத்தைப் பரிசுத்தி செய்துகொண்டு சஞ்சரிப்பவர்கள்.

அப்பொழுது அவ்வரசன் பலவகையான ரிஷி கோத்தரத்தில் சிறந்தவர்களான அவர்களை முறை தவறாமல் பூஜித்து நமஸ்காரஞ் செய்தார். அவர்கள் சுகமாக உட்கார்ந்தபொழுது பின்னுமவர்களுக்கு நமஸ்காரஞ் செய்து அவர்கள் முன்பாக இரு கை களையும் கூப்பிக்கொண்டு சுத்த சித்தமுள்ளவராய்த் தமது இஷ்டத்தைப் பின்வருமாறு வெளியிட்டார். பெரியோர்களால் அனுக்ரஹிக்கக்கூடிய ஸ்பாவமுள்ள நான் மிகவும் தன்யனாகவிருக்கிறேன். ப்ராஹ்மணர் களுடைய சுத்தமான பாததீர்த்தத்தைபடையாத க்ஷத்திரிய குலம் நிந்திக்கக் கூடியதே. மிக்க பாப ஸ்பாவமுள்ள வனும், ஸம்சார ஸுகத்திலேயே எப்பொழுதும் ஆசையை வைத்தவனுமான எனக்கு வைராக்யத்தை யுண்டுபண்ணுவதற்காகவே ப்ராஹ்மண சாபம் நேரிடும்படி செய்து பரமபுருஷன் என்னையனு க்ரஹிக்கிறார். பகவானையே மனத்தில் த்யானிக்கிறேன். மேலும் பெரியோர்களான உங்களையும், கங்காதேவி யையும் சரணமடைகிறேன். ப்ராஹ்மண சாபத்தால் தூண்டப்பட்ட தக்ஷகன் என்னை வஞ்சித்து இஷ்டப் படி கடிக்கட்டும். நீங்கள் மகாவிஷ்ணுவின் சரிதத்தைக் கானம் செய்யுங்கள். நான் பின்பு எந்தச் சரீரத்தை யடைந்தாலும் அந்தந்த ஜன்மாவில் ஈசுவரனிடத்திலும் அவருடைய பக்தர்களிடத்திலும் எனக்கு விசேஷ சிநேக முண்டாகட்டும் என்று சொல்லித் தம்முடைய பிள்ளையான ஜன்மேஜயரிடம் இராஜ்யத்தைஒப்பித்து. கங்கையின் தென் கரையில் தர்ப்பங்களைக் கிழக்கு நுனியாகப் பரப்பி, அவைகளின் மீது வடக்கு முகமாய் வீற்றிருந்தார்.

18–21. இப்படி அரசன் ப்ராயோபவேசஞ் செய்த

பொழுது தேவர்கள் அனைவரும், அவரைக் கொண்டாடிப் புஷ்பங்களை வர்ஷித்தார்கள், துந்துபி வாத்தியங்களை முழங்கினார்கள். தவிர, பிரஜைகளையனுக்கிரஹிக்கும் ஸ்வபாவமுள்ள அவ்விடம் வந்திருந்த மஹர்ஷிகள் அவரைச் சிலாகித்து ஸாதுவாதஞ் செய்து அவரை நோக்கி, 'ராஜ ச்ரேஷ்டரே கிருஷ்ண பகவான் இடத்தில் விசேஷ பக்தியுள்ளவரும், இராஜ்யம் முதலியவைகளில் ஆசையில்லாதவருமான பாண்டவ குலத்தில் பிறந்த உமக்கு இம்மாதிரி எண்ணம் நேர்ந்தது இயல்பேயாம்' என்று சொல்லி அவர்கள் ஒருவருக்கொருவர் இந்தப் பாகவத சிரோமணியான சக்ரவர்த்தி இந்தச் சரீரத்தை விட்டு மாயா ஸம்பந்தமில்லாததும், துக்கமற்றதுமான பரமபதத்தை அடையப்போகிறபடியால் அது வரையில் நாம் எல்லோரும் இவ்விடத்திலேயே வசிப்போம் என்று நிச்சயித்துக்கொண்டார்கள்.

22–24. அப்பொழுது பக்ஷபாதமில்லாததும், தேன் போல ரஸமுள்ளதும், கம்பீரமாகிய அர்த்தமுள்ளதும் உண்மையானதுமான மஹர்ஷிகளின் வார்த்தையைக் கேட்டு பரீக்ஷித்தானவன் மகாவிஷ்ணுவின் சரிதத்தைக் கேட்க விரும்பியவராய் அவர்களை நோக்கி, ஸத்ய லோகத்தில் சரீரத்துடன் இருக்கும் வேதங்கள் போல நீங்கள் அனைவரும் இவ்விடம் வந்தீர்கள். பிறரை அனுக்ரஹிப்பதை விட வேறு பிரயோஜனம் இவ் வுலகத்திலும், மேலுலகத்திலும் உங்களுக்கில்லை. ஆகையால் உங்களைக் கேட்கிறேன். சாகுந்தருணத்தில் இருப்பவர்கள் செய்யவேண்டிய சுத்தமாகிய தர்மம் யாது? யோசித்து சொல்லுங்கள் என்று கேட்டார்.

25–39. அந்தச் சமயத்தில் வ்யாஸருடைய புத்திரர்

ஆகிய சுகர் அவதூத வேஷமுள்ளவராய், பாலர் களுடன் தெய்வச்செயலாய் அவ்விடம் வந்தார். அவரிடத்தில் ஆசிரமத்துக்குரிய அடையாளமாவது ஜாதியைக் காட்டும் குறியாவது யாதொன்றுமில்லை. அவர் ஆத்ம லாபத்தாலேயே சந்தோஷமடைந்தவர். அப்பொழுது பதினாறு வயதுள்ளவராயிருந்தார், அழகான கைகளும், கால்களும், தொடைகளும், தோள்களும். கன்னங்களும், கண்களும், உயர்ந்த மூக்குகளும், சமமான காதுகளுமுடையவராய்ப் பிரகாசித்தார். சதைகளில் மறைந்த நரம்புகளுள்ளவர், விசாலமும் உயர்ந்ததுமான மார்புள்ளவர், சுழல்போன்ற நாபி யுள்ளவர். மூன்று மடிப்புகளால் அழகான வயிறு உள்ளவர், திக்குகளையே வஸ்திரமாகக் கொண்டவர். சுருண்டும் பரந்து மிருக்கும் தலைமயிருள்ளவர். மிகவும் மேலான யௌவன முள்ள வயதுள்ளவராகையால் ஸ்திரீகளுடைய மனதை அபஹரிப்பவர். அழகான சிரிப்புள்ளவர். இப்படிப்பட்ட அவரைப்பார்த்து அவருடைய லக்ஷணத்தையறிந்தவர்களான மஹர்ஷிகள் எதிர்கொண்டழைத்தார்கள். அப்பொழுது சக்ரவர்த்தி ஆனவர் வந்த அதிதியாகிய சுகருக்கு நமஸ்காரம் செய்தார். பின்பு அவருடன் வந்த அக்ஞர்களான ஸ்திரீகளும் பாலர்களும் திரும்பி போனார்கள். சுகர் பெரிதான ஆஸனத்தில் உட்கார்ந்தார். அப்பொழுது ப்ரஹ்மரிஷிகள், தேவரிஷிகள், ராஜரிஷிகள் இவர் களுடன் மத்தியிலிருக்கும் சுகர் சுக்ரன் முதலிய கிரகங்களுடையவும் அசுவினி முதலிய நட்சத்திரங்களு டையவும், மற்ற தாரைகளுடையவும் நடுவிலிருக்கும் சந்திரன் போலவும் பிரகாசித்தார். இப்படி சாந்தமனம் உள்ளவரும் தடையற்ற மேதையுள்ளவருமான சுகரை மகா பாகவதரான பரீட்சித்து மகாராஜன் பின்னும்

நமஸ்கரித்து அஞ்சலிபந்தம் செய்து, தலைவணங்கி, ஸாவதானமாய் நின்று, பின்வருமாறு மிருதுவாகச் சொல்லலானார்; ஓ பிராஹ்மண! க்ஷத்திரியனாகிய நான் ஸாதுக்களால் ஸேவிக்கக்கூடியவனாகிறேன், என்னுடைய பாக்கியம் வியக்கத்தக்கது, நீங்கள் அதிதியாக வந்து கிருபையால் என்னைப் பரிசுத்தப் படுத்தினீர்கள்; பாதத்தை வைத்தமாத்திரத்தில் வீடு முதலிய யாவும் பரிசுத்தமாய் விடக்கூடிய உங்களைத் தரிசித்தலாலும் ஸ்பர்சித்தலாலும், உங்களுடைய பாதங்களை அலம்புதலாலும்' ஆஸனங்கொடுத்த தனாலும் யான் பரிசுத்தமடைவதில் யாது சந்தேகம்? விஷ்ணுவைக் கண்ட அசுரர்கள் போலத் தங்களைத் தரிசித்த மாத்திரத்தில் மகா பாபங்களும் உடனே நீங்குகின்றன, பாண்டவர்களிடத்தில் மிகுந்த ப்ரியம் உள்ள ஸ்ரீ கிருஷ்ண பகவான் என்னிடத்தில் சந்தோஷமடைந்தார், அத்தையின் குமாரர்களிடம் மிகுந்த பிரியத்தால் அந்த வம்சத்தில் பிறந்த எனக்கும் தங்களுடைய தரிசனத்தைச் செய்வித்தார். அவருடைய அனுக்ரஹமில்லாமற் போனால் உங்களுடைய தரிசனம் மரணமடைய சித்தனாயிருக்கும் எனக்குக் கிடைக்குமா? தாங்கள் ஸித்தர்கள். உங்களுடைய பக்தியோ கண்டுபிடிக்க முடியாதது; நீங்கள் மிகவும் தாதாவாகையால் எல்லோரையும் யாசிக்க செய்பவர், ஆகையால் ஸித்திப் பெற்றவரும், யோகிகளுக்குப் பரம குருவுமாகிய உங்களை ஒரு விஷயம் கேட்கிறேன், அஃதாவது, 'மரணமடையும் ஸமயத்தையுடைய வன் என்ன செய்யவேண்டும்? எதனைக் கேட்கவேண்டும் எதனை நினைக்கவேண்டும்? எதனை உபாஸிக்க வேண்டும்? எவற்றைச் செய்யக்கூடாது? இவைகளைச் சொல்லவேண்டும்? நீங்கள் கிருகஸ்தர்களுடைய

வீட்டில் மாடு கறப்பதற்கு எவ்வளவு காலம் செல்லுமோ அவ்வளவு காலம் கூட நிற்கிற வழக்கம் இல்லையே: ஆனதால் சீக்கிரம் சொல்லவேண்டும் என்று பிரார்த்திதார்.

40. இந்தப்படி பரீக்ஷித்து மகராஜனால் கேட்கப் பட்டவுடன் ஸகல தர்மங்களையுமறிந்த சுகர் ப்ரத்யுத்தரம் சொல்லவாரம்பித்தார்.

♣ ♣ ♣ ♣

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்கந்தம் 2

அத்தியாயம் 1

விராட் புருஷனுடைய அவயவங்கள்

சுகமஹர்ஷியானவர் பரீக்ஷித்து மஹாராஜனைப் பார்த்து ' ஓ அரசனே! உம்மால் கேட்கப்பட்ட கேள்வி மிகவும் மேலானது. உலகத்திற்கு அனுகூலத்தைச் செய்யக்கூடியது; ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்தவர்கட்குப் பிரியமானது; கேட்கத்தகுந்தவைகள், சொல்லத் தகுந்தவைகள், நினைக்கத்தகுந்தவைகள் ஆகிய இவை களில் இது மிகவும் சிறந்தது. ஓ ராஜசிரேஷ்டரே! ஆத்ம ஸ்வரூபத்தையறியாதவர்களும், ஐந்து வகையான, இம்சைகளைச் செய்பவர்களுமான கிருஹஸ்தர்களுக்குக் குருமுகமாகத் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் அனேகமிருக்கின்றன. (மோக்ஷத்தை விரும்பியவர்கள் தெரிந்து கொள்ளக்கூடியது, ப்ரஹ்மம் ஒன்றுதான் என்று தாத்பரியம்.) மேலும் ஜனங்களுடைய ஆயுளானது இரவில் தூக்கத்தாலும் பகலில் பணத்து ஆசையாலும், கிடைத்த பணத்தால் குடும்பத்தைப் போஷிப்பது முதலியவைகளாலும், யௌவனமானது மைதுனத்தாலும் வீணாகக் கழிக்கப்படுகிறது. பின்னும் ஜனங்கள் அநித்யங்களான தேகம், குழந்தைகள், பார்யை ஆகிய ஸாமக்ரியைகளில் மிகுந்த அபிமானம் வைத்திருக்கிறார்கள். மேலும் அவர்கள் சரீரம் முதலியவைகள்நாசமடைவதை நேரில் பார்த்திருந்தும்

அவைகளை நித்யங்களென்றே நினைக்கிறார்கள். ஓ பரத வம்சத்தில் பிறந்தவரே! ஸகல ஜகத் ஸ்வரூபியும் அவை களுக்கு அதிபதியும், ஸம்ஸாரத்தைப் போக்கடிப்ப வராயுள்ள புருஷோத்தமருடைய சரிதத்தையே கேட்க வேண்டும். அதுவே மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியது. அதுவே உச்சரிக்கக்கூடியது. மனனஞ் செய்யக்கூடியது. எவன் மரணமடையும் சமயத்தில் நாராயணனை ஸ்மரிக்கிறானோ அதுவே அவனுக்கு உத்தமமான லாபம். ஆத்ம ஸ்வரூப விசாரமாகிய ஸாங்கியம், அஷ்டாங்க யோகம், தன் ஜாதிக்கும் ஆசிரமத்திற்கும் உரிய தர்மங்கள் ஆகிய இவைகளை அனுஷ்டிப்பதால் மரண காலத்தில் ஸ்ரீமந் நாராயணனை ஸ்மரிக்கும்படி நேரும். அதுவே இந்த ஜன்மத்தின் ப்ரயோஜன மெனப்படுகிறது. ஓ மஹாராஜ! விதி நிஷேதங்களைக் கடந்தவர்களும், நிர்க்குண ப்ரம்ஹ ஸ்வரூபத்தை யறிந்தவர்களுமான முனிகளும் பெரும்பாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் குணங்களைத் தியானஞ் செய்து கொண்டே காலத்தைக் கழிக்கிறார்கள். ஆகையால் நான் த்வாபர யுகத்தின் கடைசியில் என்னுடைய பிதாவாகிய வ்யாஸ மஹர்ஷியினிடமிருந்து ப்ரஹ்ம ஸ்வரூபத்தை தெரிவிக்கும் இந்த ஸ்ரீமத் பாகவத புராணத்தை அத்யயனஞ் செய்தேன். ஓ ராஜரிஷியே! நான் இயற்கையில் ப்ரஹ்ம ஸ்வரூபத்தையறிந்த வனானாலும் உத்தமமான புண்யத்தைக் கொடுக்கும் பகவானுடைய சரிதத்தில் விசேஷ ப்ரேமையால் அந்த உபாக்கியானத்தை அப்யஸித்தேன். நீர் மஹாபுருஷனாகிய விஷ்ணுவின் பக்தராகையால் உமக்கு அதைச் சொல்லுகிறேன். அதில் சிரத்தை யுள்ளவர்களுக்கு முகுந்தரிடத்தில் (மோக்ஷத்தைக்

கொடுப்பவர்) பக்தியுண்டாகும். விஷயங்களில் நிர் வேதத்தையடைந்தவர்களும் மோக்ஷத்தை விரும்பியவர் களுமான யோகிகளுக்கு மஹாவிஷ்ணுவின் திவ்ய நாமங்களைக் கானம் பண்ணுவதே அபயத்தைக் கொடுக்கக்கூடியது: ஆதலால் ஸித்தர்களுக்கும், ஸித்தியடைய வேண்டியவர்களுக்கும் இதை விட அனுகூலமான மார்க்கம் வேறில்லை. புத்திரன் முதலிய வர்களிடத்தில் அபிமானம் வைத்து அறியாமலே வீணாகக் கழிக்கப்பட்ட அனேக வர்ஷங்களால் என்ன பிரயோசனம்? எந்தக் காலத்தில் ஆயுளானது வீணாகக் கழிக்கப்படுகிறதென்று தெரிந்துகொள்ளு கிறானோ அந்தக் காலமே மேலானது.

அதனால் நல்ல காரியத்தைச் செய்ய முயற்சி யுடையவனாவான். முன்னொரு காலத்தில், கட்வாங்கன் என்ற ஒரு ராஜரிஷியானவர் (தேவாஸுர யுத்தத்தில் தேவர்களுடைய பக்ஷத்திலிருந்து அஸுரர்களை ஜயித்தார். அப்பொழுது அவரிடத்தில் தேவர்கள் ஸந்தோஷப்பட்டு 'வேண்டியதைக் கேளும், என்றார்கள். கட்வாங்கன் 'நான் எத்தனை காலம் ஜீவித்திருப்பேன், என்று கேட்டான். பின்பு தேவர்கள், இன்னும் ஒரு முஹூர்த்தந்தான் உன்னுடைய ஆயுளில் பாக்கி இருக்கிறது' என்று பதில் சொன்னார்கள்.) தம்முடைய ஆயுளில் மீதியிருக்கும் காலம் இவ்வளவு என்று தெரிந்து கொண்டு ஒரு முஹூர்த்தத்துக்குள் ஸகல ஆசைகளையும் ஒழித்து, ஸ்ரீ மஹாவிஷ்ணுவைச் சரணமடைந்து அவருடைய ஸாயுஜ்யத்தை அடைந்தார். ஓ மஹாராஜ! உமக்கு இது முதல் ஏழு நாள் ஆயுள் இருக்கிறது, ஆகையால் பரலோகத்தில் ஸுகத்தைக் கொடுக்கும் கார்யத்தைச் செய்யும்.

மரணகாலம் ஸமீபித்தபோது புருஷன் பயமில்லாத வனாகப் புத்திரர்களிடத்தில் தான் வைத்திருந்த அபி மானத்தை வைராக்கியமாகிய ஆயுதத்தால் நாசஞ் செய்ய வேண்டும். மேலும் ஸன்யாஸஞ் செய்து கொண்டு புத்திரன் முதலியவர்களை விட்டுப் பிரிந்தோமே என்று விசாரப்படாமல், கங்கை முதலிய புண்ய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து, ஜனங்களுடைய நெருக்கமில்லாத சுத்தமான விடத்தில் விதிப்படி ஆஸனத்தில் உட்கார்ந்து ப்ரஹ்மத்தைத் தெரிவிக்கும் மூன்று அக்ஷர ஸ்வரூபமாகிய ப்ரண வத்தைத்தியானிக்க வேண்டும். அதனால் சுவாஸத்தை ஜயித்து, ப்ரம்ஹ பீஜமாகிய ப்ரணவத்தை நினைத்துக் கொண்டே மனத்தை அடக்க வேண்டும். புத்தியாகிய (நிச்சயரூபமானது) ஸாரதியுள்ள புருஷன் மனத்தைக் கொண்டு (கடிவாளம்) (ரூபம், ரஸம், கந்தம், சப்தம், ஸ்பர்சம் ஆகிய) ஐந்து விஷயங்களில் செல்லும் இந்திரியங்களைத் தடுக்க வேண்டும். மேலும் கர்ம வாஸனைகளால் இழுக்கப்படும் மனித்தை மங்களத்தைக் கொடுக்கும் ஈசுவர ஸ்வரூபத்தில் புத்தியைக் கொண்டு செலுத்த வேண்டும். பின்னும் பகவத் ரூபத்தில் ஏதாவது ஒரு அவயவத்தை இடைவிடாமல் மனத்திற் கொண்டு த்யானிக்க வேண்டும். பிறகு அந்த மனத்தை பரப்ரஹ்மனிடத்தில் செலுத்தி, (பரமானந்த ஸ்வரூபமாகச் செய்து) வேறு ஒன்றையும் நினைக்காமல் இருக்க வேண்டும். எதனைத் தியானம் செய்ததால் மனமானது ஆசை முதலியவைகளால் கலங்காமல் தெளியுமோ அப்படிப்பட்டது ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பாதமேயாம். ஒருகால் ரஜோகுண சம்பந்ததால் கலக்கமும், தமோகுணத்தால் மோஹமும் மனத்திற்கு ஏற்படுமானால் அப்பொழுது தாரணையால் மனத்தை

அடக்க வேண்டும், அது ரஜோ குணம், தமோ குணம் ஆகிய இவைகளால் ஏற்படும் ஸகல தோஷங்களையும் போக்கக் கூடியது. த்யானஞ் செய்கிறவர்களுக்கு மேலான க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது (இவ்வளவு மஹாத்யமுள்ளது தாரணையென்று தாத்பர்யம்) என்று சொன்னார்.

22. இதைக் கேட்டு பரீக்ஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி, 'ஓ ப்ராஹ்மணோத்தம! எப்படி தாரணைச் செய்ய வேண்டும்? எதில் மனத்தைச் செலுத்த வேண்டும்? எப்படிப்பட்ட தாரணை மனத்தில் தோஷங்களைப் போக்கும்? அதனை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்' என்று கேட்டார்.

23–39 அதைக் கேட்டுச் சுகர் பின்வருமாறு பதில் சொல்லலானார். ஓ மஹாராஜ சாஸ்திரத்தில் சொல்லியபடி ஆஸனத்தை அடைந்து மூச்சை அடக்கி, அபிமானங்களை ஒழித்து, இந்திரியங்களை ஜயித்துப் பகவத் ஸ்வரூபமாகிய ஸ்தூல ப்ரபஞ்சத்தில் நிச்சய ரூபமாகிய புத்தியையும் மனதையும் செலுத்த வேண்டும். முன் கல்பத்திலிருந்ததும், இப்பொழுது இருக்கிறதும், அடுத்த கல்பத்தில் இருக்கக் கூடியது மான ப்ரபஞ்சமானது விராட் புருஷனுடைய ஸ்வரூ பத்தில் காணப்படுகிறது. அந்த பகவத் ஸ்வரூப மானது பெரியவைகளை விடப் பெரிதானது, அந்தப் புருஷனுக்கு இந்த ஜகத்தே சரீரமாயிருக்கிறது. மேலும் (மஹத்தத்வம், அஹங்காரம் ஐந்து பூதங்கள் ஆகிய) ஏழு ஆவரணங்களுள்ள அண்ட கோசமாகிய சரீரத்திலிருக்கும் புருஷனுக்கு வைராஜன் என்று பெயர். இவரே தாரணைக்கு ஆஸ்ரயமாயிருப்பவர்.

(ஸ்தூல ரூப தாரணையால் சூட்சும ரூபத்தில் பக்தி உண்டாகுமென்பது கருத்து) மேற்காட்டிய வைராஜ னென்னும் புருஷனுக்குப் பாதாளத்தைப் பாதமாகவும், ரஸாதலத்தைப் புறங்கால்களாகவும், மஹாதலத்தைப் பாதங்களின் இரு பக்கங்களாகவும், தலா தலத்தை கணைக்கால்களாகவும், ஸுதலத்தை இரு முழங்கால் களாகவும், விதலம் அதலம் ஆகிய இவைகளை இரண்டு தொடைகளாகவும், பூதலத்தை ஜகனமாகவும், ஆகாசத்தை நாபியாகவும் ஸ்வர்க்கத்தை மார்பாகவும், மஹர்லோகத்தைக் கழுத்தாகவும், ஜனலோகத்தை முகமாகவும், தபோ லோகத்தை நெற்றியாகவும், ஸத்ய லோகத்தைச் சிரஸ் ஆகவும் சொல்லுகிறார்கள். மேலும், அநேக சிரஸுள்ள அந்தப் புருஷனுக்கு இந்திரன் முதலிய தேவர்கள் கைகள். திக்குகளே அவருக்குக் காதுகள் (இந்திரிய கோளகங்கள்,) சப்தமே ச்ரோத்ரேந்திரியம்.

அந்தப் பரமபுருஷனுக்கு அச்வினீ தேவர்களே மூக்குகள், கந்தமே கிராணேந்திரியம். ஜ்வலிக்கும் அக்னியானது அவருக்கு முகமாகும். த்யுலோகமே கண்கள், ஸூர்யனே சக்ஷுரிந்திரியம், இரவும், பகலும் ஆகிய இரண்டும் இமைகள். சதுர்முக ப்ரஹ்மாவின் பதம் அவருடைய புருவ நெரித்தலாகும். ஜலத்திற்கு அபிமானியான வருணன் அவருக்கு முகவாய்க்கட்டை, ரஸங்களே அவருடைய நாக்கு, தேசத்தாலும், காலத்தாலும் அளவிடக் கூடாதவராகிய அந்தப் புருஷோத்தமனுக்கு வேதங்கள் சிரஸாக விருக்கின்றன. யமனே சிங்கப்பற்கள், ஸ்நேகத்தின் அம்சங்களே பற்கள். ஜனங்களை மோஹிக்கச் செய்யும் மாயையே அவருடைய சிரிப்பு. அவருடைய கடைக்கண்

பார்வையே அளவற்ற ஸ்ருஷ்டி. (ஸகல ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியானது பகவானுடைய கடாக்ஷ தீனமென்பது கருத்து). வெட்கமே மேலுதடு. உலோபமே கீழுதடு. தர்மமே ஸ்தனம், அதர்ம மார்க்கமே பின்பக்கம். ப்ரஜாபதிதேவரே அவருக்கு ஆண்குறி. மித்ரா வருணர்களே விருஷணங்கள், ஸமுத்ரங்கள் வயிறு. பர்வதங்களே அவருடைய எலும்புகள், கங்கை முதலிய நதிகளே அவருடைய நாடிகளாகின்றன. மரங்களே உரோமங்கள். ஓ ராஜ சிரேஷ்டரே! வாயு பகவானே அளவற்ற வீர்யமுள்ள வைராஜருக்குப் ப்ராணன். காலமே அவருடைய (நடை) கதி. முக்குணங்களாலுண்டாகும் ஸம்ஸாரமே அவருக்குக் கர்மங்கள் அந்தப் பரமேச்வரனுக்கு மேகங்களே தலைமயிர்கள். ஓ பரீக்ஷித் மஹாராஜனே! ஸந்தியா காலங்கள் அந்தப் ப்ரபுவிற்கு வஸ்திரமாக விருக்கின்றன. அவ்யக்தமே (ப்ரதானம்) அவருக்கு ஹ்ருதயமாயிருக்கிறது. ஸகல ஓஷதிகளையும் வ்ருத்தி செய்யும் சந்திரனே மனஸ், மஹத் தத்வமே அவருடைய விஞ்ஞான சக்தி, ருத்ரனே அவருக்கு அந்தக்கரணம், குதிரை அசுவதரீ, (கழுதைக்கும் பெண் குதிரைக்கும் உண்டானது,) ஒட்டகம், யானை ஆகிய இவைகள் அவருக்கு நகங்கள், ஸகல மிருகங்களும், பசுக்களும் அவருடைய ஸ்ரோணிதேசம், பறவைகள் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும் அவருடைய வேலைத் திறமை, மனுவே புத்தி, மனித வர்க்கமே இருப்பிடம், கந்தர்வர்கள், வித்யாதரர்கள், சாரணர்கள், அப்ஸரஸ்திரீகள் ஆகிய இவைகளே ஷட்ஜம் முதலிய ஸ்வர ஸ்மிருதிகள், அஸுர ஸைன்யமே அவருடைய பராக்ரமத்திற்கு இருப்பிடம். ப்ராஹ்மணர்களே அவருக்கு முகம், க்ஷத்திரியர்களே கைகள், வைசியர்களே தொடைகள், சூத்ரர்களே

பாதங்கள் (சித்தம் ஸ்திரமாக இருப்பதற்காக விராட், ஜீவன், ஈசுவரர் ஆகிய இவர்களை ஒன்றாக உபாஸிக்க வேண்டு மென்பது கருத்து) மேலும் பலவகையான பெயருள்ள வஸுருத்ரர்கள் முதலிய தேவர்களுடன் ஹவிஸினால் செய்யக்கூடிய திரவ்ய யாகமானது அந்தப் பரம புருஷனைப் பூஜிக்கும் கர்மமேயாம், வைராஜருடைய அவயவங்கள் இம்மாதிரியானவைகள் எல்லாவற்றிற்கும், பெரியவரான இந்தப் பரமபுருஷன் இடத்தில் மோக்ஷமடைய விரும்பியவர்கள் மனத்தைச் செலுத்த வேண்டும். இதைவிட மேலானது ஒன்று இல்லை. ஸகல பிராணிகளுடைய புத்தி விருத்தி களால் ஸகலத்தையும் அனுபவிக்கிறவரும், எல்லா வற்றிற்கும் அந்தராத்மாகவும், ஸத்ய ஸ்வரூபியாய் இருக்கும் அவரையே பூஜிக்கவேண்டும்; அவரைக் காட்டிலும் வேறு இடத்தில் ஆசைபடக் கூடாது. அப்படி ஆசைப்படுவதால் ஸம்ஸாரத்தை அடையும் படி நேரிடும். ஸ்வப்னத்தில் சில ஸமயத்தில் அநேக ஜீவர்களைக் கல்பித்து, ஜீவன் அந்தந்த இந்திரியங்களைக் கொண்டு எல்லாவற்றையும் பார்ப்பதுபோல ஈசுவரன் தாம் ஒருவராக இருந்து எல்லாவற்றையும் தம்முடைய வித்யா சக்தியால் அனுபவித்து, அவைகளில் ஸம்பந்தப்படாதவராகவும் ஆனந்த நிதியாகவும் பிரகாசிக்கிறார்.

நோட்டு

ஆத்மஸ்வரூ–லக்ஷ்மீ, ப்ரம்ஹா முதலிய சேத னங்கள் எப்பொழுதும் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு உள்ளவைகளாக இருக்கிறதை அறியாதவர்கள் ...விஜ, ஸாமக்ரீ... ஆத்ம தைன்ய' என்னும் பாடத்தை ஆசிரயித்து, 'தனக்குக் குறைவை உண்டு பண்ணக்

கூடியவைகள்' என்று அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. விஜ , மனனம்... ஓ மைத்ரேயி! ஆத்மாவைப் பற்றியே விசாரிக்க வேண்டும். குரு முகமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த ஒருவராகிய ஆத்மாவையே அறியுங்கள். மற்ற வார்த்தைகளை விட்டுவிடுங்கள் ... ஸ்ருதிகள், ஸாங்கியம்... ஞான யோகத்தாலே சாங்கியர் களுக்கும், கர்ம யோகத்தால் யோகிகளுக்கும் பகவத்கீதை, அஷ்டாங்க ... யமம், நியமம், தியானம், தாரணம், ஆஸனம், பிராணயாமம், பிரத்யாஹாரம், ஸமாதி என்று எட்டு அங்கமுள்ளது. விதி நிஷேதம்... இதனைச் செய் என்று சாஸ்திரத்தில் சொல்லியிருப்பது விதியாகும், இதனைச் செய்யவேண்டாம் என்று சொல்லியிருப்பது நிஷேதமாகும் ... மேற்சொல்லிய விதி நிஷேதமென்பதற்கு விதி நிஷேதங்களைச் சொல்லும் வேதத்தால் காண்பிக்கப்படுகிற காம்ய கர்மங்களென்று அர்த்தம் கொள்ள வேண்டும். அவசியம் அனுஷ்டிக்க வேண்டியதாக வேதத்திற் சொல்லப்பட்ட பஞ்ச மஹா யக்ஞங்களே விதியென்றாவது, ஸுராபானம் செய்யக் கூடா தென்பதே நிஷேதமென்றாவது இவ்விடத்தில் அர்த்தம் அல்ல... வீர, நிர்குண ...ரஜோகுணம், தமோகுணம் இவைகளுடன் சேர்ந்த ஸத்வகுணமற்றது ...வீர, கடைசியில் மூலத்தில் த்வாபாரதெள என்று இருப்பதால் அதற்கு 'கலி யுகத்தின் ஆதியில்' என்று அர்த்தம் கொள்ள வேண்டும். வ்யாஸ மஹர்ஷியும், சந்தனு சக்ர வர்த்தியும் ஒரே காலத்தில் இருந்ததாகச் சொல்லப் பட்டிருப்பதால் ... வீர வ்யாஸ மஹர்ஷியானவர் தம்முடைய அறுநூறாவது வயதில் திருதராஷ்டிரரை உண்டுபண்ணினார் என்று சொல்லியிருப்பதாலும், துவாபரயுகத்தின் கடைசியில் பாரதக்கதை நடந்ததாகச்

சொல்லியிருப்பதாலும், துவாபரயுகத்தில் கிருஷ்ண அவதாரத்திற்கு முந்தி என்று அர்த்தம் கொள்ள வேண்டும்... விஜய. ப்ரம்ஹ ஸ்வரூபத்தில் 'ப்ரம்ஹ ஸம்ஹிதம், என்று இருப்பதால் வேதத்திற்குச் சமமானது, பாகவதம் ... பகவான் நேரில் உபதேசித்த நான்கு ஸ்லோகங்களைக் கொண்டு செய்யப் பட்டதால் அல்லது பகவத் ஸ்வரூபத்தை நன்றாய் வர்ணிப்பதால்... வீர. சொல்லுகிறேன்... முக்தனாகிய என்னாலும் அப்யஸிக்கப்பட்ட இந்த பாகவத புராணமானது, மோக்ஷத்தை அடையவேண்டிய வராகிய உமக்கு உபயோகமானது என்று தாத்பரியம் ...வீர, அவயவத்தை..யுகத்தை...வீர. பெரிதானது ... இவர் பூமியைவிடப் பெரியவர், அந்தத்தைக் காட்டிலும் பெரியவர் இவ்வுலகங்களைக் காட்டிலும் பெரியவர் ஸ்ருதி. ஸ்வர்க்கத்தை, முலத்தில் ஜ்யோதிரனீகம் என்று இருப்பதால் நக்ஷத்ர லோகம் என்று அர்த்தம் கொள்ளவேண்டும், பறவைகள்...வாத ஸ்வரூபிகளான தித்திரி முதலிய பக்ஷிகள்...வீர. திறமை...எவரால் ஹம்ஸங்கள் வெண்மை நிறமுள்ளவைகளாகவும், கிளிகள் பச்சை நிறமுள்ளவைகளாகவும், மயில்கள் பலவகை நிறமுள்ளவைகளாகவும் ஸ்ருஷ்டிக்கப் பட்டனவோ அவர் நமக்கு விருத்தியை உண்டு பண்ணுவார். மூலத்தில் வ்யாகரணம் என்று இருப்பதில் அதற்கு ஆச்சரியத்தை யுண்டுபண்ணும் வார்த்தை என்று அர்த்தம். சந்த். இருப்பிடம் மனுஷ்ய ஜன்மாவானது ஞானத்திற்கும், பக்தி முதலிய ஸ்தானங்களுக்கும் உபாயமாயிருக்கிறது. யாகம் முதலிய கர்மங்கள் ஞானம் முதலியவைகளுக்குக் காரணமாய் இருப்பதால், அக்கர்மங்களில் அதிகாரமுள்ளவர் களுக்கே ப்ரஹ்மோ பாஸனத்தில் அதிகாரம ஏற்படுகிற

படியால் மனுஷ்ய சரீரமே எல்லாவற்றிற்கும் உபயோக மான்து சந்த். அஸுரஸைன்ய அஸுரானீக வீர்ய என்று ஒரு பாடமுண்டு. அதற்கு ப்ரஹ்லாதனே ஸ்மரணம் என்று அர்த்தம் கொள்ளவேண்டும், வீர.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்- 2

பகவானிடத்தில் மனத்தை செலுத்தும் வகை

1–21. பிரளயகாலத்தில் ப்ரஹ்ம தேவரானவர் மேற் காட்டியபடி விராட் புருஷனிடத்தில் மனத்தைச் செலுத்தினார். (வைராஜ தாரணையைச் செய்தார்.) அதனால் பகவான் ஸந்தோஷமடைந்து ப்ரஹ்மதேவருக்கு மறந்து போயிருந்த ஸ்ருஷ்டி சக்தியை மறுபடியும் அனுக்கிரஹித்தார். அதனால் ப்ரஹ்மதேவர் வீணாகாத ஞானமுள்ளவராகவும், நிச்சயமாகிய புத்தியுள்ள வராகவும் ப்ரளயத்திற்கு முன்பு இருந்தது போலவே உலகத்தை ஸ்ருஷ்டித்தார் (தாரணையானது, இம் மாதிரியான மஹாத்மியமுள்ளது என்று கருத்து) வேதங்கள் யாவும் கர்மங்களையும், அவற்றின் பலன்களையும் சொல்லுகின்றன. ஆனாலும் ஸ்வர்க்கம் முதலியவைகளில் புருஷார்த்தம் ஒன்று மில்லை. அதைக் கேட்ட மாத்திரத்தில் மனதிற்கு ஆசையைக் கொடுக்கிறதே யொழிய வேறில்லை. (பெயரால் அழகுள்ளது) ஸ்வப்பனத்தில் கண்ட வஸ்துக்கள் நாம் விழித்துக் கொண்டபொழுது இல்லாமற் போவதுபோல மாயா ரூபமான கர்ம மார்க்கத்தில் அலைந்தும் கொஞ்சமேனும் ஒப்பற்ற ஸுகம் கிடைக்கிறதில்லை. ஆகையால் விவேகமுள்ளவன் தேக நிர்வாகத்திற்கு வேண்டியவரையில் தோக்கிய வஸ்துக்களை அபேக்ஷிப்பான். அவைகளிலும் ஆஸக்தியில்லாமல் ஜாக்ரதையாக இருப்பான். மேலும் இவைகள் ஸுகத்தைக் கொடுக்கக் கூடியவைகளல்ல என்ற நிச்சயமுள்ளவனாகவும் இருப்பான். ஆனதுபற்றி, தேகத்திற்குவேண்டிய விஷயங்கள் ஸுலபமாக அவனுக்குக் கிடைக்குமானால் அவன்

இக்கர்மங்களில் முயற்சி செய்யமாட்டான். கர்மங்களோ மிகவும் ச்ரமத்தைக் கொடுக்கின்றன. எவ்வாத்தேசங் களிலும் எப்பொழுதும் பிறரை அபேக்ஷியாமல் ப்ரயாஸமின்றிக் கிடைக்கும் பூமியாகிய படுக்கை ஸித்தமாக இருக்க, பணச் செலவினால் கிடைக்கக் கூடியதும், இஷ்டமான காலங்களில் அகப்படாததுமான கட்டில் முதலிய படுக்கையை ஞானமுள்ளவன் அபேக்ஷிப்பானா? தன்னுடை கைகளிருக்கத் தலை யணைகளால் என்ன ப்ரயோஜனம்? தவிரவும், அன்னத்தை வைத்துக்கொண்டு புஜிக்க அஞ்சலி (சேர்ந்த இருகைகள்) ஸ்வாதீனத்திலிருக்க, பல வகையான பாத்திரங்களை அபேக்ஷிக்கவும் வேண்டுமா? மேலும் திக்குகளும், மரவுரிகளும் உடுத்திக் கொள்ளக்கூடியவைகளாக விருக்கும்போது, பட்டு, வஸ்திரம் முதலியவைகளை ஏன் ஸம்பாதிக்க வேண்டும்? வழியில் கந்தைத்துணி அகப்படாதா? பிறரையே போஷிக்கும் ஸ்வபாவமுள்ள (பழம் முதலியவை களாலென்பது கருத்து) மரங்கள் ஆகாரத்தைக் கொடாமலிருக்குமா? தீர்த்தத்தைக் கொடுக்கும் நதிகள் வரண்டு போயினவா? வஸிப்பதற்கு மலைகளில் குகைகளிருக்கின்றனவே? அவைகள் அரசர்களால் மூடப்பட்டனவா? ஆகையால் பிறரை யாசியாமலே தேக யாத்திரையை நடத்திக்கொள்ளலாம். மேற் கூறியவைகள் கிடைக்காவிடினும் சரணாகதர்களான நம்மைப் பகவான் ஸம்ரக்ஷிக்கமாட்டாரா? இப்படி இருக்க பணத்தால் கர்வங்கொண்டு கார்யம் அகார்யம் இவைகளை அறியாத மமதை கொண்டவர்களை விவேகிகள் ஏன் உபாஸிக்கிறார்கள். ஸ்ரீ மந் நாராயண ரையே (மற்றவர்களை விட்டு) ஸேவிக்கவேண்டும். அவர் எல்லோருடைய சித்தத்திலும் தாமாகவே

எப்பொழுதுமிருப்பவர். ஆத்ம ரூபியாயிருப்பவராகையால் அவர் எல்லாருக்கும் பிரியர். சரீரம் முதலியவைபோல அநித்யரல்லர். ஸத்ய ஸ்வரூபியாயிருப்பவர். ஸேவிக்கக் கூடிய குணங்களால் நிறைந்தவர். நாசமற்றவர். அவரை ஸேவிப்பதால் ஸம்சாரத்தைக் கொடுக்கும் அவித்யை முதலியவைகள் நாசமடைகின்றன. கர்ம ஜடர்களாயும் ஞான ஹீனர்களாயுமுள்ள மனுஷ்ய பசுக்கள் விஷயங்களிலேயே ஆசை கொள்கிறார்கள். தாரணையைச் செய்கிறதில்லை. மேலும், யமலோகத் திலிருக்கும் வைதரணீ நதியில் தம்முடைய கர்ம வசத்தால் துக்கத்தை யனுபவிப்பது போல ஸம் ஸாரத்தில் மூழ்கி துக்கப்படுகிறார்கள். இப்படிக் கஷ்டப்படும் ஜனங்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் விவேகியான புருஷன் பகவானைச் சிந்திப்பதாகிய தாரணையைச் செய்யாமலிருப்பானா? சிலர் தம்முடைய ஹிருதயத்திலிருக்கும் அவகாசத்தில் நான்கு கைகள் உள்ளவரும், தாமரைமலர், சக்ரம், சங்கம், கதை ஆகிய இவைகளைத் தரிப்பவரும், ப்ராதேசமாத்ர சரீரமுள்ளவருமாக வஸிக்கும் பரம புருஷனை இடை விடாமல் தியானிக்கிறார்கள். அந்தப் புருஷன் தாமரை மலர்போன்ற நீண்ட கண்களுள்ளவர். முகமலர்ச்சி யுள்ளவர். கதம்ப (கடம்பம்) புஷ்பத்தின் தாதுகள் போல் பொன்னிறமுள்ள வஸ்திரத்தைத் தரித்தவர். மிகுந்த காந்தி பொருந்திய இரத்னங்களிழைத்த ஸ்வர்ணமயமான தோள் வளைகள், கிரிடம், குண்டலம் ஆகிய ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்டவர். அவருடைய பாதங்கள் யோகிகளுடைய மலர்ந்த ஹ்ருதய கமலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட வைகள். மார்பில் லக்ஷ்மியுள்ளவர். கௌஸ்துப ஹாரம் தரித்தவர். குறையாத காந்தியுள்ள வனமாலையால்

பிரகாசிப்பவர். மேலும், விலையுயர்ந்த அரைநாண், மோதிரம். வளை முதலிய ஆபரணங்களால் விளங்கும் திவ்ய தேஹமுள்ளவர். அவருடைய முகமானது புன்சிரிப்புள்ளது, மேலும் கறுப்புநிறமுள்ளவைகளும், காந்தியுள்ளவைகளும், பளபளப்புள்ளவவைகளுமான சுருட்டை மயிர்களால் அழகானது. கம்பீரமாகிய சிரிப்பு, பார்வை. புருவ நெரித்தல் ஆகிய இவைகளால் ஜனங்களை அனுக்கிரஹிக்கும் ஸ்வாபவமுள்ளது, இம்மாதிரியான பகவத் ஸ்வரூபத்தை மனது ஸ்வாதீனப்படுகிற வரையில் தியானிக்க வேண்டும். எப்படியெனில், மேற்காட்டிய பாதம் முதல் சிரிப்பு வரையிலுமுள்ள பகவானுடைய அவயவங்களும் சேஷ்டைகளும் ஒவ்வொன்றாகத் தியானிக்கப்பட வேண்டும். மனது அவைகளிலே பதிந்து, விஷயங்களில் செல்லாமலிருந்தபோது அதைவிட்டு வேறு அவய வத்தை த்யானிக்கவேண்டும். இப்படி ஒவ்வொரு நாளும் நித்ய கர்மங்களை முடித்துக்கொண்டு சுத்தனாகப் பரமபுருஷனுடைய பெரிதாகிய ரூபத்தை தியானஞ் செய்யவேண்டும். அவரிடத்தில் பக்தியுண்டாகும் வரையில் அவருடைய ரூபத்தைத் தியானஞ் செய்யவேண்டும். அவர் ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் மேலானவர்; ஜகத்திற்கு அதிபதி. எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாயி ருப்பவர். ஓ மஹாராஜ! ஒருவன் இப்படி சித்தம் சுத்தியானபிறகு ஸகல ஆசைகளையும் ஒழித்து இந்தச் சரீரத்தை விட வேண்டுமென்று விரும்பு வானாகில், புண்ய க்ஷேத்திரத்தில் உத்தராயணம் முதலிய காலங்களில் ஸ்திரமாயும், ஸுககரமுமான ஆஸனத்தில் உட்கார்ந்து, ப்ராணாயாமஞ் செய்து ஸுவாஸத்தை அடக்கி, வேறு விஷயங்களில் பற்றுதல் இல்லாதவனாக மனத்தால் ப்ராணனையும், இந்திரியங்

களையும் அடக்கிக்கொள்ளவேண்டும். மேலும் அந்த மனத்தை நிர்மலமாகிய புத்தியாகச் (நிச்சயரூபமானது) செய்து, அந்தப் புத்தியை அதற்கு ஸாக்ஷியாக விருக்கும் ஜீவனிடத்தில் சேர்க்க வேண்டும். அந்தச் சுத்தமாகிய ஆத்மாவை பரப்ரஹ்மத்தினிடம் லயிக்கச் செய்து சாந்தியையடைந்து கார்யத்திலிருந்து ஒழிவடைய வேண்டும். தேவர்களுக்கும் மேலான காலத்தாலும், அந்தப் பரமாத்ம ஸ்வரூபம் பாதிக்கப்படுகிறதில்லை. ஜகத்திற்கு, அதிபதிகளான தேவர்களும் அந்த ஸ்வரூபத்திற்குப் பிரபுக்களல்ல. அந்த ஆத்மாவிடத்தில் ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய குணங்களும் மாறுதலும், மஹத் தத்வம், பிரதானம் ஆகிய இவைகளும் இல்லை ஆத்மாவை விட வேறானவைகளை (இவை ஆத்மாவல்ல என்று விசாரித்து, தேகம் முதலியவைகளில் ஆத்மத்வ புத்தியை விட்டு ஒவ்வொரு க்ஷணத்திலேயும் வேறிடத்தில் பிரியம் வைக்காத தங்களுடைய ஹ்ருதயத்தில் விஷ்ணுவின் பதத்தையே பக்தர்கள் தியானஞ் செய்கிறார்கள். ஆகையால் அதுவே மேலானது என்கிறார்கள். இந்தப்பதத்தையடைந்தவனே கிருதகிருத்யன். இம்மாதிரி சாஸ்த்ர விசாரத்தில் உண்டான விசேஷ ஞானத்தால் விஷய வாஸனைகளை எரித்துப் ப்ரஹ்ம பாவத்தை அடைந்த முனியானவர் கீழ் முகமான வாயுவானது வெளியில் போகாமலிருக்கும்படி, தம்முடைய பாத மூலத்தால் (குதிகால்) ஆஸனத்தை அடைத்துக்கொண்டு சிரமம் இல்லாதவராக, தொப்புள், ஹிருதயம், மார்பு, முகவாய்க்கட்டை, புருவங்களின் மத்திய பாகம், தலை ஆகிய ஆறு ஸ்தானங்களிலும் அந்தந்த வாயுவைச் செல்லும்படி செய்யவேண்டும். பின்னும் நாபியாகிய மணிபூரகத்திலிருந்து வாயுவை ஹ்ருதயமாகிய

அநாஹதத்தில் செல்லச் செய்து அதிலிருந்து மார்பாகிய விசுத்தி ஸ்தானத்திற்குந் போகச் செய்து, சித்தத்தையடக்கிக்கொண்டு, அதை விசுத்த ஸ்தானத்தின் மேற்பாகமாகிய தாது மூலத்திற்கு மெதுவாக கொண்டு போக வேண்டும். அதிருந்து ஆக்ஞா சக்கரமாகிய புருவங்களின் மத்ய பாகத்தில் அந்த வாயுவைச் செலுத்தவேண்டும். அப்போது காதுகளையும், கண்களையும், மூக்குகளையும், முகத்தையும் மூடிக் கொண்டு வாயுவை வெளியில் விடாமல் அடக்கிக் கொண்டிருக்கவேண்டும். வேறு விஷயங்களை விரும்பக் கூடாது. இப்படி ஆக்ஞா சக்கரத்தில் ப்ராணனை அரை முஹூர்த்த காலம் நிறுத்திக்கொண்டிருந்து, பிறகு தடையற்ற ஞானமுள்ளவனாக ப்ரஹ்ம ஸ்வரூபத்தையடைந்து, ப்ரஹ்மாந்தரமாகிய தலையைப் பேதித்து வாயுவை வெளிப்படுத்தி, தேகத்தை விடவேண்டும்.

22–31. ஓ மஹாராஜ! இந்தப் ப்ரஹ்மாண்டத்தில் ப்ரஹ்மலோகம் போகிறவனானாலும் அணிமா முதலிய ஐச்வர்யங்களுள்ள தேவர்கள் வஸிக்கும் ஸ்வர்க்கம் முதலிய இடங்களுக்குச் செல்லுகிறவனானாலும் மனத்தையும், இந்திரியங்களையும் தன்னுடன் கூடவே அழைத்துக்கொண்டு போகிறான். வாயுவிற்குள் அடங்கிய லிங்க சரீரமுள்ள மஹா யோகிகள், மஹர்லோகம் முதலியவைகளிலும், ப்ரஹ்மாண்டத்திற்கு வெளியிலும் போவார்கள் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். உபாஸனை, தபஸ், அஷ்டாங்க யோகம் ஞானம் ஆகிய இவைகளை அனுஷ்டிப்பவர்கள் அர்சிராதி மார்க்கமாய்ப் போவார்கள். அந்த வழியில் போனவர்கள் மறுபடியும் திரும்புகிறதில்லை.

அப்படிப்பட்ட கதியானது யாகம் முதலியகர்மங்களால் கிடைக்கிறதில்லை. ப்ரஹ்மலோக மார்க்கத்தில் சென்றவன் முதலில் அக்னிக்கு அபிமானியான தேவதையை அடைகிறான். பிறகு ஜ்யோதிஸின் ரூபமாகிய ஸுஷும்னா நாடி வழியாய் ஒன்றிலும் ஆசைப்படாதவனாக உத்தமமான, சிம்சுமாரமென்ற ஜ்யோதி சக்கரத்தை யடைகிறான். பின்பு ஸூர்யன் முதலியவர்களுக்கு ஆசிரயமான அந்த விஷ்ணுவின் சக்கரத்தைத் தாண்டி சுத்தமான லிங்க சரீரத்துடன் தானொருவனாகப் ப்ரஹ்மத்தை அறிந்தவர்கள் வஸிக்கக்கூடியதும், எல்லோராலும் நமஸ்கரிக்கப் பட்டதுமான மஹர்லோகத்தை அடைகிறான். அந்த ஸ்தானத்தில் அநேக கால ஜீவிகளான ப்ருகு முதலியவர்கள் ஆனந்தமாக வஸிக்கிறார்கள். பிறகு அவர்கள் அந்தக் கல்பத்தின் முடிவில் ஸங்கர்ஷண பகவானுடைய முகத்திலிருந்து உண்டான அக்னியால் உலகங்கள் எரிக்கப்படுவதைப் பார்த்து, அதன் உஷ்ணத்தைச் ஸகியாமல் அந்த உலகத்திலிருந்து ஸனகர் முதலியவர்கள் வஸிக்கும், இரண்டு பரார்த்தம் வரையில் அழியாமலிருக்கக் கூடிய ப்ரஹ்ம லோகத்தை அடைகிறார்கள். அவ்விடத்தில் சோகம், ஜரை, கிழத்தனம் மரணம், துக்கம், பயம் ஆகிய இவைகள் இல்லை. ஆனாலும் அந்த உலகத்தில் இருப்பவர்கள், 'ப்ரஹ்மலோகம் சோக மோகங்களற்றது ஸ்வர்க்காதிகளுக்கு மேலானது என்று நினையாமல் கர்மஜடர்களாக, ஸம்ஸாரத்தில் கஷ்டப்படும் அக்ஞர்களைப்பற்றி வருத்தப்படுகிறார்கள். அதைத் தவிர வேறு துக்கம் அவ்விடத்திலில்லை. அந்த லோகத்தையடைந்தவன் ப்ரஹ்ம ப்ரளயத்தில் லிங்க தேகத்துடன் பூமியின் ஸ்வரூபத்தையடைந்து ஜலத்தை

அடைந்து, தாமஸியாமல், பயமில்லாதவனாகி தேஜோமயனாகி வாயுவை யடைந்து அணுபவம் முடிந்தவுடன் ஆகாச சரீரத்தைக் அடைகிறான். பின்னும் அவன் க்ராணேந்திரியத்தைக் கொண்டு வாஸனையையும், ரஸனேந்திரியத்தைக் கொண்டு ரஸத்தையும், நேத்ரத்தைக் கொண்டு உருவத்தையும் த்வகிந்திரியத்தைக் கொண்டு ஸ்பர்சத்தையும், ச்ரோத் ரேந்திரியத்தைக் கொண்டு ஆகாயத்தின் குணமாகிய சப்தத்தையும், கர்மேந்திரியங்களைக் கொண்டு அவை களின் வியாபாரங்களையும் அடக்கிக்கொள்ளுகிறான். மேலும் அவன் பூதஸூக்ஷ்மங்கள், பத்து இந்திரியங்கள் ஆகிய இவைகளுக்கு லய ஸ்தானமாயும், மனோமய மாயும்,தேவதா ரூபமாயுள்ள ஆவரணமாகிய அஹங் காரத்தை அடைந்த பிறகு அதனுடன் விஞ்ஞான தத்வத்தை அடைகிறான். பின்னும் அவன் குணங்கள் லயிக்கும் இடமான பிரதானத்தை அடைகிறான். (லயிக்கிறான்). இப்படி உபாதிகள்யாவும் லயமடைந்த பிறகு ஆனந்த ஸ்வரூபியான ஜீவன் விகாரமற்றதும், ஆனந்த ஸ்வரூபியுமான ஆத்மாவை அடைகிறான். ஓ மஹாராஜ! இம்மாதிரியான பதத்தை யடைந்தவன் மறுபடியும் திரும்புகிறதில்லை.

32–37. ஸத்யோமுக்தி, க்ரமமுக்தியென்ற இரண்டு மார்க்கங்களும் வேதங்களில் சொல்லப்பட்டவைகள். இவைகளை ஸ்ரீ பகவானாகிய வாஸுதேவர் முன்னொரு காலத்தில் ப்ரஹ்மதேவருக்கு உபதேசித்தார். நீர் இப்பொழுது அவைகளை அறிய விரும்பியபடியால் உமக்குச் சொன்னேன். ஸம்ஸாரத்தில் கஷ்டப்படும் ஜனங்கள் மோக்ஷத்தையடைவதற்கும் பல மார்க்கங்கள் இருந்தாலும் பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில்

பக்தியையுண்டு பண்ணும் மேற்காட்டிய மார்க்கமே மேலானது. அதுவே ஸுகமாய் அனுஷ்டிக்கக்கூடியது இடையூறற்றது, தவிரவும் முன்னொரு ஸமயத்தில் ப்ரஹ்மதேவர் ஒரே சித்தராக இருந்து, ஸகல வேதங்களையும் மூன்று தடவை படித்துப் பார்த்து, மேற் சொல்லிய மார்க்கமே பகவத் பக்தியைக் கொடுக்கக் கூடியது என்று நிச்சயித்தார். மேலும் பரமாத்மா ஆனவர், ஸகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாய் இருப்பதைக் கொண்டும் புத்தி முதலியவைகளைக் கொண்டும், ஸித்திக்கும் அனுமானத்தைக் கொண்டும், எல்லோராலும் பார்க்கப்படுகிறார். ஆகையால் ஓ பரீக்ஷித்து மஹாராஜனே! எந்த இடத்திலும், எக்காலத்திலும் மனிதர்கள் ஸ்ரீமந் நாராயணனையே ஸ்மரிக்க வேண்டும் அவருடைய கதையைக் கேட்க வேண்டும் திவ்ய நாமங்களை உச்சரிக்க வேண்டும், ஆகையால் ஸ்ரீ பகவானுடைய கதையாகிய அமிருதத்தைச் சுரோத்ரமாகிய பாத்திரத்தால் எவர்கள் புஜிக்கிறார்களோ, விஷய ஆசையால் கலங்கிய அவர்களுடைய சித்தமானது சுத்தமாய் விடுகிறதுமன்றி அந்தப் புண்யசாலிகள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பதத்தையும் அடைவார்கள்.

நோட்டு

ஸ்ருஷ்டித்தார். தாதாவானவர் முன்னிருந்தது போல ஸ்ருஷ்டித்தார் –ஸ்ருதி பிரளய காலத்தில் முன் கல்பத்திலுள்ள ப்ரஹ்மதேவருடன் ஸ்ருஷ்டி விஷயமான ஞானம் நஷ்டமாகி விட்டது. பிறகு ஸ்ருஷ்டி காலத்தில் இந்தக் கல்பத்திய ப்ரஹ்மதேவர் முன் அத்யாயத்தில் சொன்னபடி பகவானிடம் மனதைச்

செலுத்தி, அதனால் ஸ்ருஷ்டி ஞானத்தையடைந்தார். இப்படி அர்த்தஞ் சொல்லவேண்டும். இல்லாவிடில் முன் கல்பத்திய ப்ரஹ்மதேவரே இந்தக் கல்பத்திலுமிருந்து ஸ்ருஷ்டித்தாரென்று ஏற்படும், அப்படிச் சொல்வது ஸரியல்ல, ஒவ்வொரு கல்பத்திலும் ப்ரஹ்மதேவர் வேறு என்று கொள்வதே நியாயம். அவர்களெல்லோரும் ப்ரளயம் வந்தவுடன் ப்ரஹ்மதேவருடன் முக்தியடைகிறார்கள், ப்ரளய காலத்தில் ப்ரஹ்ம லோகத்திலிருப்பவர்கள் எல்லோரும் முத்தியை அடைகிறார்கள். ஸ்ருதிகள், தவிரவும், பகவானுடைய அளவற்ற கிருபையை அடைந்தவர்கள் மறுபடியும் பிறந்தார் களென்று சொல்வதும் உசிதமல்ல. ஆதலால் மூலத்திலிருக்கும் ஸ்மிருதி என்ற பதத்திற்கு ஸ்ருஷ்டி ஞானமென்று இவ்விடத்தில் அர்த்தங்கொள்ள வேண்டும். ஆகேஷபம் வைராஜ தாரணையால் ஸ்ருஷ்டி ஞானம் உண்டாகிற தென்றால், அந்தத் தாரணையானது அந்த ஞானத்தால் தான் உண்டாக வேண்டும், ஆதலால் அந்யோந்யாசிரய தோஷம் நேரிடுகிறது. சமாதானம் பகவானுடைய கொப்பூழில் தாமரைப் புஷ்பத்திலிருந்து ப்ரஹ்மதேவர் உண்டானார். அவருடைய தபஸினால் நாராயணன் ஸந்தோஷித்தார். அப்பொழுது ஓ சதுர்முகரே! மறுபடியும் நீர் தபஸ், ஞானம் இவைகளை யனுஷ்டிக்கவேண்டும். அவைகளால் ஆவரணம் விலகும். அப்பொழுது நீர் என்னிடத்தில் லோகங்களையும் அவைகளில் என்னையும் பார்க்கலாம் என்று பகவான் சொன்னார். பிறகு ப்ரஹ்மதேவர் ஸ்ருஷ்டிக்கப்படும் ஸகல பதார்த்தங்களையும் முன்னமே பார்த்து, அவை களைப் பகவானுடைய அவயவங்களாகப் பாவித்து அந்தத் தாரணையால் ஸ்ருஷ்டி ஞானம்

ஸாமர்த்தியம் இவைகளையடைந்தார், வீர. நிச்சயமாகிய –வியவஸாய புத்தி என்று மூலத்திலிருப்பதால் ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்று முயற்சி செய்தவர், விஜயத், வேதங்கள் ஸகல வேதம் முதலிய சப்தங்களுக்கு இந்தப் பரமாத்மாவே அர்த்தமாயிருக்கிறார். பகவான் உடைய இச்சையால் உண்டான ஸம்ஸாரத்தில் அலைந்து கொண்டு ஒன்றையும் அறியாதவனாகி, கர்ம வாஸனையினால் பலவகையான ஜன்மங்களை யடைந்து கஷ்டப்படும் ஜீவன் இந்திரன் முதலிய சப்தங்களுக்கு அந்த அந்தத் தேவதைகளை அர்த்தம் என்று நினைக்கிறான் அது ஸரியல்ல. அந்தத் தேவர்களிடத்தில் குறைவற்ற ஐசுவர்யமாவது, புருஷார்த்தமாவது, இல்லை, மேலும் அவர்களை உபாஸிப்பதால் புருஷார்த்தமொன்றும் கிடைக்கிறது இல்லை, ஆகையால் ஸ்ரீமந் நாராயணனையே ஸேவிக்கவேண்டும், ஸ்மரிக்கவேண்டும், அவரே ஸகல வேதங்களுக்கும் அர்த்தம். விஜயத். விவேகமுள்ளவன் ஸகல நாமங்களும் ஸ்ரீமந் நாராயணனையே சொல்லு கின்றன என்பதை எப்பொழுதும் மறவாமலிருப்பவன், தாய் தந்தை முதலிய பந்துக்களை விட மிகவும் ஜனங்களுக்கு வேதங்கள் அனுகூலத்தையே உபதேசிப் பவைகள் ஆகையால் ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களுள்ள ஜனங்களுடைய புத்திக்கு அநுகுணமாக ஸ்வர்க்கம் முதலிய ஸ்திரமில்லாத பலத்தைக் கொடுக்கும் கர்மங்களையும், ஸாச்வதமான மோக்ஷ ஸாதனங்களையும், அவ்வேதங்கள் உபதேசிக் கின்றன. அக்ஞர்கள் ஸ்வர்க்கம் முதலியவைகளையே அடையவிரும்பி அதன் ஸ்தானங்களை அனுஷ்டிக் கிறார்கள், ஆகையால் வேதங்கள் அற்பமுள்ள கர்மங்களை உபதேசித்து ஜனங்களை ஏமாற்றிவிட்டன.

என்று சொல்வது உசிதமல்ல வீர. கிடைக்கிறது இல்லை கர்மபலம் தாழ்ந்ததென்று காட்டப்பட்டது. கர்மங்களில் நம்மால் அனுபவிக்கக்கூடியது, நம் முடைய முயற்சில்லாமலேயே அவசியம் ஸித்திக்கும் என்று அதற்காகச் சிரமப்படமாட்டான்...சந்த. மமதை நான் ஈச்வரன். நான் போகமுள்ளவன், நான் ஸித்தன், நான் பலமுள்ளவன், ஸுகமுள்ளவன், பணக்காரன், மேலான குலத்தில் பிறந்தவன், ஆனதால் எனக்குச் சமானமானவன் லோகத்திலொருவனும் இல்லை என்று கர்வங்கொண்டார்கள், ப்ரியர்; ஜனங்கள் பணம், களத்திரம், புத்ரன் ஆகிய இவை களை ஆத்மாவின்' ஸௌக்கியத்திற்காவே ஸம்பாதிக் கிறார்கள். ஆத்மாவிற்கு ஆக்மாவாக இருப்பவர் பிரியரென்பதில் என்ன ஆக்ஷேபம் வீர. ஸத்யஸ்வரூபி புருஷார்த்த ஸ்வரூபி, வீர. ப்ராதேச கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் (தர்ஜனிக்கு) இடையிலுள்ள நீளம் ஸ்ரீத. ஜகத்தின் அளவு எவ்வளவோ அந்த அளவுள்ளவர் சந்த் மூவுலகமும் பகவானுக்குச் சரீரமானாலும் கட்டைவிரல் ப்ரமாணம் உள்ள ஹ்ருதய கமலத்தில் உபாஸிப்பதற்காக அடங்கிய சரீரம் வீர. உட்கார்ந்து இது மரணம் அடையச் சித்தமாக விருப்பவன் செய்யக்கூடிய கார்யம் இன்னதென்று சொல்லப்பட்டது. இனியும் அவனால் செய்யப்படவேண்டிய கார்யம் சொல்லப்படுகிறது பூமியின் ரூபத்தை மிகுந்த புண்யத்தால் ப்ரஹ்மம லோகஞ் சென்றவர்கள் மறு கல்பத்தில் அவர்கள் உடைய புண்யத்திற்குத் தக்கபடி அதிகாரிகள் தேவதைகளாக ஆகிறார்கள், ஹிரண்யகர்ப்பர் முதலிய வர்களையும் உபாஸித்துப் ப்ரஹ்மலோகஞ் சேர்ந்த வர்கள் ப்ரஹ்மாண்டத்தைப் பேதித்து தமதிஷ்டப்படி

விஷ்ணுபதத்தை அடைகிறார்கள். ஆனதால் பகவத் பக்தர்கள் ப்ரஹ்மாண்டத்தை பேதித்துச் செல்லும் வகை காட்டப்படுகிறது. ஈஸ்வராதிஷ்டிதமான ப்ரகிருதியிலிருந்து மஹத்தத்வம் உண்டாகிறது. அதன் அம்சம் அஹங்காரமாகும். அதனுடைய அம்சம் ஆகாயமாகும். அதனுடைய அம்சம் வாயுவாகும் (ஸ்பர்சதன்மாத்திரையால்) அதனுடைய அம்சம் (ரூபதன்மாத்திரையால்) தேஜஸ்ஸாகும். அதன் அம்சம் (ரஸதன்மாத்திரையால்) ப்ருதிவியாகும். அவைகள் யாவும் சேர்ந்தது பதினான்கு லோகங்கள் ஆகிய விராட்புருஷ சரீரமாம். அது ஐம்பது கோடி விஸ்தாரமுள்ளது. அதற்குப் ப்ருதிவியே அண்டகடாஹ மெனப்படுகிறது. அதன் முதலாவது ஆவரணமானது கோடி யோசன விஸ்தாரமுள்ளது. ஜலம் முதலிய ஒவ்வொரு ஆவரணங்களும் ஒன்றைவிட மற்றொன்று பத்து மடங்கு பெரியவைகளாம். அவைகளில் எட்டாவதான ப்ரகிருதியின் ஆவரணம் மிகவும் பெரிதானது. அர்ச்சிராதி அக்னி ஜ்யோதிஸ், பகல் சுக்லபக்ஷம், ஆறு மாஸ்யங்கள், உத்தராயணம் ஆகிய இவைகளின் அபிமான தேவதைகளடங்கிய மார்க்கத்தில் சென்றவர்கள் ப்ரஹ்மத்தையடைகிறார்கள். ஸத்யோமுக்தி எப்பொழுது இவனுடைய ஹ்ருதயத்திலிருக்கும் கர்மங்கள் யாவும் நாசமடைகின்றனவோ, பிறகு மனிதன் மரண தர்மமில்லாதவனாக ஆகிவிடுகிறான் ஸ்ரீத, க்ரமமுக்தி முன்காட்டிய அர்ச்சிராதி மார்க்கத்தை அடைந்தவர் களுக்கிக் கிடைப்பது –வீர. மூலத்தில் இரண்டு மார்க்கம் என்றிருப்பதால் தூமாதி மார்க்கமும், அச்சிராதி மார்க்கமும் என்று தாத்பர்யம். சந்த.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்– 3

பகவத் குணங்களின் மேன்மை

ஓ மஹாராஜ! வித்வான்களாகிய மனிதர்கள் சாகுந்தருணத்தில் செய்யவேண்டிய கார்யம் பகவான் உடைய கதையைக் கேட்பது முதலியவைகளே என்று சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. நீர் கேட்ட விஷயம் இதுவே. ப்ரம்ஹதேஜஸை அடைய விரும்பிய அவன் வேதங்களுக்கு அதிபதியாகிய ப்ரம்ஹ தேவரையும், இந்திரியங்களின் வல்மையை விரும்பிய அவன் இந்திரனையும், புத்ர ஸம்பத்தை விரும்பிய அவன் தக்ஷர் முதலிய ப்ரஜாபதிகளையும் பக்ஷ்ய போஜ்யங்களை விரும்பியவன் அதிதி தேவியையும், ஸ்வர்க்கத்தை விரும்பியவன் விச்வேதேவர்களையும், ஜனங்களை வசப்படுத்த விரும்பியவன் ஸாத்யர் களையும், ஸம்பத்தை விரும்பியவன், அக்னி பகவா னையும், பணத்தை விரும்பியவன் வீர்யத்தைக் கொடுப்பவர்களாகிய ருத்ரர்களையும், தீர்க்கமான ஆயுஸ்ஸை விரும்பியவள் அசுவினீ தேவர்களையும், சரீர புஷ்டியை விரும்பியவன் பூதேவியையும், பிரதிஷ்டியை (ஸ்தானத்தை விட்டு நழுவாமலிருப்பது) விரும்பிய புருஷன் உலகத்திற்குத் தாயார்களான ஆகாசம், பூமி இவைகளையும்; அழகை விரும்பிய அவன் கந்தர்வர்களையும், ஸ்திரீயை விரும்பியவன் ஊர்வசி என்கிற அப்ஸரஸ்ஸையும், எல்லோருக்கும் யஜமானனாயிருக்க வேண்டுமென்று விரும்பியவன் யக்ஞ ரூபமான மஹாவிஷ்ணுவையும், மோக்ஷத்தை விரும்பியவன் வருணனையும், வித்தையை விரும்பிய அவன் பரமசிவனையும், தம்பதிகள் ஒருவருக்கொருவர்

பிரியாமலிருக்க வேண்டியதை விரும்பியவன் பதிவிரதையான உமாதேவியையும், தர்மத்தை விரும்பிய அவன் உத்தம ச்லோகராகிய மஹாவிஷ்ணுவையும், ஸந்தானத்தை (வம்சத்தின் தொடர்ச்சி) விரும்பிய அவன் பிதுருக் களையும்; உபத்திரவ நிவர்த்தியை விரும்பியவன் யக்ஷர்களையும், பலத்தை விரும்பிய அவன் மருத்துக்களையும், இராஜியத்தை விரும்பியவன் மனுக்களாகிய தேவர்களையும், சத்துருவைக் கொல்ல விரும்பியவன் நிருதியையும், போகத்தை விரும்பியவன் ஸோமனையும், வைராக்யத்தை விரும்பியவன் ப்ரகிருதிக்கு மேற்பட்ட பரமபுருஷனையும் பூஜிக்க வேண்டும். இப்படிப் பல தேவர்களைப் பூஜிப்பவர் களுக்கு பகவத் பக்தர்களுடைய ஸங்கத்தால் பகவான் இடத்தில் ஸ்திரமான பக்தி உண்டாகிறது. இதுவே மேலான புருஷார்த்தம், பகவானுடைய கதையானது ஆசை, துவேஷம் ஆகிய இவைகளின் ஸம்பந்தமற்ற ஞானத்தை உண்டு பண்ணுகிறது. சித்தத்தைச் சுத்தி செய்கிறது. இவ்வுலகத்திலும், மேலுலகத்திலும் விஷயத்தில் வைராக்கியத்தையுண்டுபண்ணுகிறது. மோக்ஷ மார்க்கமாகிய பக்தி யோகத்தையும் உண்டு பண்ணுகிறது. ஆகையால் குரு முகமாய்ச் செய்த ச்ரவணம் முதலியவைகளால் ஸுகமடைந்த புருஷன் எவன் தான் பகவானுடைய கதையில் ஆசைப்படமாட்டான்? என்று பரிக்ஷித் மகா ராஜனுக்குச் சுகர் சொன்னாரென்று ஸூதர் சொன்னார்.

13–25 அதனைக் கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி, ஓ வித்வானாகிய ஸூதரே! சுகருடைய வார்த்தையைக் கேட்டு, பரீக்ஷித் மஹாராஜன் வியாஸ

புத்திரராயும், மிக்க ஞானியுமான அவரை நோக்கி, பின்னும் எதனைக் கேட்டார்? பகவத் பக்தர்களான ஸாதுக்களுடைய ஸபையில் பகவத் கதையே நடந்து கொண்டிருக்கும். அதனால் ஈசுவரனுடைய கதையைக் கேட்பதில் மிகுந்த ஆசையுண்டாகும். ஆனதுபற்றி அதனைக் கேட்கவேண்டுமென்ற விருப்பமுள்ள எங்களுக்குச் சொல்லவேண்டும். மேலும், மஹாரதரும், பாண்டு குலத்தில் பிறந்தவரும், பாகவதோத்தருமாகிய அந்த அரசன் பால்ய வயதில் விளையாட்டு சாமான்களைக் கொண்டு கிருஷ்ணனையே பூஜித்தார். அதுவே அவருக்கு விளையாட்டாயிற்று. அவருக்கு பாகவதத்தை உபதேசஞ் செய்த வியாஸ புத்திரராகிய சுக மஹர்ஷியானவர் கிருஷ்ணனிடத்திலே விசேஷ பக்தியுள்ளவர், ஆனதால் அவ்விருவர்களும் மஹா ஸாதுக்கள். ஸாதுக்களுடைய கூட்டத்தில் திவ்ய குணங்களால் அலங்கரிக்கப்பட்ட பகவத் கதை நடக்கும், உத்தமச்லோகராகிய பகவானுடைய கதையைச் சொல்லிக் கொண்டு கழித்த காலமே மனிதனுடைய ஆயுஸ்ஸில் மேலானது. லௌகிக வியவஹாரங்களால் கழிக்கப்படும் காலமானது வீணானதே. ஒவ்வொரு நாளும் உதயமாகிறவரும், அஸ்தமனத்தை அடைகிற வருமான அந்த ஸூர்யன் வீணாய்க் காலம் கழிப்ப வருடைய ஆயுஸ்ஸை அபகரிக்கிறார். அப்போர்ப் பட்டவர்களுடைய ஆயுஸுக்குப் பிழைத்திருப்பதைத் தவிர வேறு பிரயோசனமில்லை? பசுக்கள் ஆகாரத்தைப் புஜிக்கவில்லையா? மைதுனம் செய்யவில்லையா? ஆகையால் மேற்காட்டிய வீண் காலம் கழிப்பவன் இவைகள் போன்றவனேயாம். பின்னும் எவனுடைய காதில் பகவானுடைய சரிதம் ஒருபொழுதும் ப்ரவேசிக்கவில்லையோ, அவன்

நாயிக்குச் சமமானவன், கிராமத்திலிருக்கும் பன்றிக்கு ஒப்பானவன். சுமைகளைச் சுமக்கும் ஒட்டகம் போன்றவன், (காலால் உதைக்கும் ஸ்திரீயைத் தள்ள முடியாமல் மிக்க காமியாயிருப்பதால்) கழுதை போன்றவன், எந்த மனுஷ்யனுடைய இரு காதுகளும் பகவானுடைய குணங்களைக் கேட்கவில்லையோ, அவைகள் ஸர்ப்பம் முதலியவைகள் ப்ரவேசிக்கக் கூடிய பிலங்களேயாகும். எவன் நாக்கினால் பகவத் கதையைக் கானம் பண்ணவில்லையோ, அவனுடைய சப்தம் யாவும் தவளையின் சப்தம் போன்றவைகளே, எவனுடைய தலையானது முகுந்தனை நமஸ்கரிக்க வில்லையோ, அது பட்டுக்களால் செய்யப்பட்ட தலைப்பாகை, இரத்தின கிரீடம் இவைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தாலும் பெரிய சுமையேயாம். எவனுடைய கைகள் பகவானைப் பூஜிக்கவில்லையோ, அவைகள் தங்க வளையல்களால் அலங்கரிக்கப் பட்டவைகளானாலும் பிணத்தின் கைகளேயாகும். எவனுடைய கண்களிரண்டும் பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தைத் தரிசிக்கவில்லையோ, அவைகள் மயில் தோகையிலிருக்கும் கண்களேயாம். எந்தப் புருஷனுடைய பாதங்களிரண்டும் பகவானுடைய விசேஷ ஸான்நித்யமுள்ள புண்ய க்ஷேத்திரங்களுக்குப் போகவில்லையோ, அவைகள் மரத்தின் வேர்களுக்கு ஒப்பானவைகள். எவன் பகவத் பக்தர்களுடைய பாதங்களில் ஒட்டிய தூளியைத் தரிசிக்கவில்லையோ, எவன் பகவானுடைய பாதத்திலிருக்கும் துளஸியின் வாஸனையை மோந்து அதைச் ச்வாகிக்கவில்லையோ, அவன் பிழைத்திருக்கும் பிணமேயாம். பகவானுடைய கதையைக் கேட்டு எவனுக்கு முகத்தில் ஸந்தோஷமும், கண்களில் ஆனந்தாஷ்டமும், தேகத்தில்

மயிர்க்கூச்சலும் உண்டாகவில்லையோ, அவனுடைய ஹ்ருதயம் கருங்கல்லேயாகும். இது மிகவும் ஆச்சரியம் ஓ ஸூதரே! மனஸுக்குப் பிரியமாக நீர் பேசுகிறீர். ஆகையால் பாகவதர்களுக்குள் சிறந்தவரும், ஆத்ம வித்தையை நன்றாயறிந்தவரும் வியாச மஹாமுனியின் புத்திரருமான சுக மஹரிஷி பரீக்ஷித் மஹாராஜனை நோக்கி எதனைச் சொன்னாரோ, அதனைச் சொல்லவேண்டும் என்று கேட்டார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–4

பரீக்ஷித் ஜகத் ஸ்ருஷ்டியைப் பற்றிக் கேட்டது.

1–10. இம்மாதிரியான சௌனகருடைய வார்த்தையைக் கேட்ட ஸூதர் சௌனகரை நோக்கி பின்வருமாறு சொன்னார். உத்தரையின் புத்திரன் பரீக்ஷித்து மஹாராஜன் ஆத்ம ஸ்வரூபத்தின் உண்மையைத் தெரிவிக்கும் சுகருடைய வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ கிருஷ்ண பகவானையே உபாஸிக்க வேண்டும். அவரே பரமாத்மா என்று நிச்சயித்தார். மேலும் தேகம், பார்யை, புத்திரன், வீடு, யானை முதலியவை, திரவ்யம், பந்துக்கள் பூர்ணமாகிய இராஜ்யம் ஆகிய இவைகளில் வெகு நாளாக ஏற்பட்டிருந்த அபிமானத்தை விட்டுவிட்டார். நீங்கள் என்னைக் கேட்டதுபோல அவ்வரசனும் இந்த விஷயத்தைப் பற்றி ஸ்ரீ கிருஷ்ணனுடைய மாஹாத் மியத்தைக் கேட்பதில் மிக்க சிரத்தையுள்ளவராகப் பரமாத்ம ஸ்வரூபத்தை அறியவேண்டித் தாம் சீக்கிரத்தில் மரணமடையப் போகிறோமென்ற நிச்சயம் உள்ளவராகத் தர்மம், அர்த்தம், காமம், ஆகிய இவை களில் ஆசையில்லாதவராய், பகவானாகிய வாஸு தேவரிடத்தில் மிகுந்த பக்தியுடன் சுகரை நோக்கி, ஓ பாபமற்றவரே! ப்ராஹ்மணோத்தம! எல்லாவற்றையும் அறிந்தவரான உம்மால் சொல்லப்பட்ட வார்த்தை ஆத்ம ஞானத்தை உண்டுபண்ணக்கூடியதாயிருக்கிறது. நீர் மஹாவிஷ்ணுவின் கதைகளைச் சொல்லும் பொழுது என்னுடைய அஞ்ஞானம் விலகுகிறது. ஆனாலும் பகவான் தம்முடையமாயையால் பூமியில் அவதரித்துப்ரஹ்மா, பரமசிவன் முதலிய தேவர்களாலும்

அறியக்கூடாத இந்த ஜகத்தை அந்தப் பரமபுருஷன் எந்தச் சக்தியைக் கொண்டு உண்டு பண்ணுகிறார்? பின்னும் அதை எப்படிக் காப்பாற்றுகிறார்? மேலும், அதைப் ப்ரளய காலத்தில் எப்படி ஸம்ஹரிக்கிறார்? அவருடைய சக்தியானது அளவற்றது. பின்னும் அந்தப் புருஷன் இராமகிருஷ்ணாதி அவதாரங்களைச் செய்து விளையாடுகிறதுமல்லாமல் ப்ரஹ்மா முதலிய வர்களின் ரூபியாயுமிருந்து பலவகையான காரியங் களைச் செய்கிறார். அவருடைய சரிதம் மிக்க ஆச்சரியகரமானது. கவிகளாலும் அறிய முடியாதது, ஒருவனாகிய அந்தப் புருஷன் ஒரே காலத்தில் ப்ரக்ருதியின் குணங்களைக் கிரஹிக்கிறாரா? அல்லது ப்ரஹ்மா, ருத்ரன் முதலியவர்களின் ரூபமாயிருந்து பலவகையான லீலைகளைச் செய்து, கிரமமாக மேற்கூட்டிய ப்ரக்ருதியின் குணங்களையங்கீகரிக்கிறாரா? நீர் வேதங்களின் அர்த்தத்தையும், பரப்ரஹ்ம ஸ்வரூபத்தையும் நன்றாக அறிந்தவர். ஆகையால் இந்த ஸம்சயத்தைப் போக்கவேண்டும் என்று கேட்டார்.

11–26. இம்மாதிரியான அரசனுடைய வார்த்தையைக் கேட்ட சுகர் இந்திரியங்களுக்கு அதிபதியாகிய மஹாவிஷ்ணுவை ஸ்மரித்து, பிரத்யுத் தரஞ் செல்ல ஆரம்பித்துப் பரமாத்வை நமஸ்கரித் தார். எப்படியெனில் பரமபுருஷனை நமஸ்கரிக் கிறேன். அவர் அளவற்ற சக்தியுள்ளவர், இரஜோ குணத்தைக்கொண்டு லோகத்தை ஸ்ருஷ்டிப்பவர். ஸத்வ குணத்தைக்கொண்டு ஜகத்தைக் காப்பாற்றுகிறவர். பின்னும் அதைத் தமோ குணத்தைக்கொண்டு ஸம்ஹரிப்பவர். ஸகல பிராணிகளுக்கும் அந்தர்யாமியா

யிருப்பவர். அவருடைய ஸ்வரூபம் அறியமுடியாதது. மேலும், தர்ம சிந்தையுள்ள ஸாதுக்களுக்கு நேரிடும் துக்கத்தைப் போக்கடிக்கக் கூடியவர். துஷ்டர்களைச் சிக்ஷிப்பவர். ஸகல தேவஸ்வரூபியாயிருந்து பலனை கொடுப்பவர். பரமஹம்ஸர்கள் சுத்தமான சித்தத்தால் எதனை அடிக்கடி தேடுகிறார்களோ, அந்த ஆத்ம ஸ்வரூபத்தைப் ப்ரகாசிக்கச் செய்பவர். அப்படிப்பட்ட பகவானுக்கு அடிக்கடி நமஸ்காரஞ் செய்கிறேன். மேலும் அவர் பக்தர்களை ஸம்ரக்ஷிப்பவர். பக்தி இல்லாதவர்களுக்கு வெகு தூரத்திலிருப்பவர் (அறிய முடியாதவர்) அவருடைய ஐசுவரியத்திற்கு ஸமமான அல்லது மேலான ஐசுவரியம் ஒருவருக்குமில்லை. அந்த ஐசுவரியத்தால் ஸ்வரூபமாகிய பரப்ரஹ்மத் தினிடமே ஆனந்தப்படுகிறவர். அவரை நமஸ்கரிக்கிறேன். அந்தப்பரமபுருஷனுடைய திவ்ய நாமங்களை உச்சரிப் பதாலும், பூஜிப்பதாலும், அவருடைய கதையைக் கேட்பதாலும் ஸகல பாபங்களும் நாசமடைகின்றன. ஆகையால் அந்தத் திவ்ய மங்கள கீர்த்தியுள்ள பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். விவேகிகள் பகவானுடைய பாதங்களை உபாஸித்து இவ்வுலகத் திலும் மேலுலகத்திலுமுள்ள ஆசையை ஒழித்துச் சிரமமின்றி, ப்ரஹ்மாத்ம பாவத்தை அடைகிறார்கள். அந்தப் பகவானை நமஸ்கரிக்கிறேன். தபஸ்விகளாக ஆனாலும், தானத்தால் புண்யத்தை ஸம்பாதித்தவர் களானாலும், கீர்த்தியுள்ளவர்களானாலும் அவை களைப் பகவானிடத்தில் அர்ப்பணம் செய்யாவிடில் க்ஷேமத்தை அடைகிறதில்லை. ஆனதுபற்றி, அந்தப் புருஷனுக்கு அடிக்கடி நமஸ்காரம் செய்கிறேன். தவிரவும், கிராதர்கள் (மிருகம் முதலியவைகளை ஹிம்ஸிக்கிறவர்கள்), ஹூணர்கள் (வெண்நிறமாய்

இருப்பார்கள்) தெலுங்கு தேசத்தில் வசிக்கும் தாழ்ந்த ஜாதியான ஆந்திரர்கள், புளிந்தர்கள் (மிகுந்த ஹிம்ஸையில் பிரியமுள்ளவர்களான வேடர்கள்). சண்டாளர்கள், வலையர்கள், கழுகின் மாம்ஸத்தை புஜிக்கும் ஹீன ஜாதிகள், மிலேச்சர்கள், ஆயுதம் முதலியவைகளைச் சாணை பிடிப்பவர்கள் முதலிய பாபிஷ்டர்களும் பகவத் பக்தர்களை ஆச்ரயித்து சுத்தி யடைகிறார்கள். அந்த ப்ரபுவுக்கு நமஸ்காரம். மேலும் அவர் மனோதைரியமுள்ளவர்களால் ஆத்மாவென்று உபாஸிக்கக்கூடியவர், எல்லாவற்றிற்கும் ஈசுவரன்; வேத ஸ்வரூபீ. தபஸின் ரூபமாயிருப்பவர் குற்றமற்ற வர்களான ப்ரஹ்மா, பரமசிவன் முதலிய தேவர்களால் ஊகிக்கக்கூடிய திவ்ய சரீரமுள்ளவர். எல்லோராலும் உபாஸிக்கக்கூடிய அந்தப் பரமாத்மா என்னிடத்தில் தயவு செய்யட்டும். பின்னும் அவர் லக்ஷ்மீபதி: ஸகல யாகங்களுக்கு பலத்தைக் கொடுக்கக்கூடியவர்; ஸகல பிரஜைகளையும் ஸ்ருஷ்டிப்பவர், ஸகல லோகத்துக்கும் பிரபு கர்ம பூமியிலிருக்கும் கர்மிகளுக்கு ஸகல புருஷார்த்தத்தையும் கொடுப்பவர் அந்தகர்களுக்கும், வ்ருஷ்ணிகளுக்கும் ஸாத்வதர்களுக்கும் பெரியோர் களுக்கும் ப்ரபுவாயிருப்பதோடு அவர்களால் அடையக் கூடியவராயுமிருக்கிறார். எல்லாவற்றையும் காப்பாற்றும் அந்தக் கிருஷ்ண பகவான் என்னிடத்தில் தயவு செய்யட்டும். கவிகள் அவருடைய பாதாரவிந்தத்தை தியானஞ் செய்து அதனால் சித்தசுத்தியை அடைந்து, ஆத்ம ஸ்வரூபத்தைத் தங்களுடைய புத்திக்குத் தக்கபடி தெரிந்துகொள்கிறார்கள். ஞானத்தைக் கொடுக்கும் அந்த முகுந்தன் என்னிடத்தில் ஸந்தோஷம் அடையட்டும். கல்பத்தின் ஆதியில் ப்ரஹ்மதேவருக்கு ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும் சக்தியை (பூர்வ ஞாபகத்தை)

உண்டு பண்ணுவதற்காகப் பகவானால் தூண்டப்பட்டு. அவருடைய முகத்திலிருந்து ஸரஸ்வதியுண்டானாள். மஹரிஷிகளுக்கும் சிரேஷ்டராகிய அந்தப் பரமாத்மா என்னிடத்தில் கருணை செய்யட்டும். மேலும் அவர் மஹாபூதங்களைக் கொண்டு ஸரீரங்களை ஸ்ருஷ்டித்து அவைகளில் அந்தர்யாமியாய்ப் புருஷனென்ற டெயர் அடைந்து, பதினாறு கலாரூபியாயிருந்து அவைகளின் குணங்களைப் ப்ரகாசிக்கச் செய்கிறார். அந்தப் ப்ரபு என்னுடை வார்த்தைகளை ச்ருங்காரம் முதலிய ரஸங்கள் நிறைந்தனவாகவும். கேட்பவர்களுக்கு ஸந்தோஷத்தை யுண்டு பண்ணக் கூடியவைகளாகவும் செய்யட்டும், வேத வ்யாஸ ரூபியாயும், ப்ரஹ்ம ரூபியாயும், பக்தர்களுக்கு ஞானமாகிய மதுவைக் கொடுத்தவருமான அந்தப் பகவானை நமஸ்கரிக் கிறேன். 'ஓ மஹாராஜ! ப்ரஹ்மதேவர் தமக்கு மஹாவிஷ்ணு உபதேசித்தபடி நாரதருக்கு இதே விஷயத்தை உபதேசித்தார். அதை உமக்குச் சொல்லுகிறேன்' என்றார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–5

ஜகத்ஸ்ருஷ்டி

1–8 ஓ மஹாராஜ! அது எப்படியெனில், நாரதர் ப்ரம்ஹதேவரை நோக்கி, ஓ தேவர்களுக்கும் தேவரே; ஸகல பிராணிகளையும் ஸ்ருஷ்டிப்பவரே ஸகல பிராணிகளுக்கும் முற்பட்டவரே உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். ஆத்ம ஸ்வரூபத்தின் உண்மையைக் காட்டும் ஞானமானது எதனாலுண்டாகுமோ அதனை உபதேசிக்க வேண்டும். ஓ ப்ரபுவே! இந்த ஜகத்தானது எவரால் பிரகாசிக்கிறதோ எவரை ஆசிரயித்திருக் கிறதோ, எவரால் ஸிருஷ்டிக்கப்பட்டதோ, எவரிடத்தில் லயிக்கிறதோ, எவருக்கு ஸ்வாதீனமாக இருக்கிறதோ, எவருடைய உருவமாகவுமிருக்கிறதோ, எது ஸத்யம் ஆனதோ அதை உண்மையாகச் சொல்ல வேண்டும். நீர் உண்டானவைகளுக்கும், உண்டாகின்றவை களுக்கும், உண்டாகப் போகின்றவைகளுக்கும் அதிபதி. இந்த ஜகத்தைக் கையிலிருக்கும் நெல்லிக்கனியைப் போல ஞானத்தால் அறிந்திருக்கிறீர். ஆகையால் எல்லாம் உம்மால் அறியப்பட்டவைகளே. நீர் எவரிடமிருந்து ஞானத்தை அப்யஸித்தீர்? உமக்கு ஆதாரமாயிருப்பது யாது? நீர் யாருக்கு ஸ்வாதீனப் பட்டவர்? எவருடைய ஸ்வரூபியாக இருக்கிறீர்? ஒருவராயிருந்து பஞ்ச பூதங்களைக் கொண்டு ஸங்கல்பத்தாலே ஸகல பிராணிகளையும் ஸ்ருஷ்டிக் கிறீர். மேலும் பட்டுப்பூச்சி பட்டை உண்டு பண்ணு வதுபோல ஸ்ருஷ்டிக்கப்பட்ட ப்ராணிகளுக்குப் பிறரால் உபத்திரவம் உண்டாகாமல் தம்மிடத்தில் வைத்து

ச்ரமமில்லாமல் தம்முடைய சக்தியாகிய ப்ரகிருதியைக் கொண்டு நீர் காப்பாற்றுகிறீர். ஓ பிரபுவே; இவ் வுலகத்தில் உயர்ந்தவைகளும் தாழ்ந்தவைகளும், மத்ய நிலைமையிலுள்ளவைகளும், மனிதன் முதலிய இரண்டு கால் ஜந்துக்களும் வெண்மை முதலிய குணங்களால் ஏற்படக்கூடியவைகளும், ஸ்தூலங்களும் சூக்ஷ்மங்களும் உம்மிடத்திலிருந்தே உண்டாகின்றன என்று நினைக்கிறேன். இப்படி உமக்குப் பிரபஞ்சம் சரீரமாயிருப்பதால் நீர் எல்லோரிலும் மேலானவர். உமக்குத் தாழ்ந்தவர்களான மற்றவர்கள் உம்மை உத்தேசித்துத் தபஸ் செய்கிறார்கள். அவர்களுக்கு நீர் பலத்தைக் கொடுக்கிறீர். அப்போர்பட்ட நீர் கடும் தவம் செய்ததால் எனக்கு ஸந்தேஹமும் துக்கமும் உண்டாகின்றன. ஆகையால் எல்லாவற்றையும் அறிந்தவரே எல்லாவற்றிற்கும் அதிபதியே என்னால் கேட்கப்பட்ட விஷயங்களை எனக்குத் தெரியும்படிச் சொல்லவேண்டும்' என்று வேண்டிக் கொண்டார்.

9–29 அதனைக் கேட்ட ப்ரஹ்மதேவர் நாரதரை நோக்கி ஓ குழந்தாய்! நீ ஸந்தேகப்பட்டுக் கேட்ட விஷயம் மிகவும் மேலானது. பகவானுடைய மஹிமையைச் சொல்லும்படி என்னை நீ தூண்டின படியால் என்னிடத்தில் உனக்குக் கருணையிருப்பதாக தெரியவருகிறது. ஆனால் என்னை ஸகல ஜகத்திற்கும் ஈசுவரனென்று நீ சொன்னது புத்தி பூர்வகமாய் சொல்லும் பொய்யல்ல. என்னைக் காட்டிலும் பரமாத்மா மேற்பட்டவரென்று தெரிந்துகொள்ளாததால் இவ்வளவு மஹிமை எனக்கு இருப்பதாகச் சொல்லு கிறாய். இந்த ஜகத்தானது பரமபுருஷனுடைய தேஜஸினால் ப்ரகாசிக்கிறதேயொழிய என்னால்

ப்ரகாசிக்கிறதென்பதில்லை. ஆனால் காரண ரூபமாய் அவரிடம் அவ்யக்தமாயிருந்த ஜகத்தை நான் ஸ்ருஷ்டியால் வெளிப்படுத்துகிறேன். ஸூர்யனும், அக்னியும், சந்திரனும், அசுவினி முதலிய நக்ஷத்ரங் களும், அந்தப் பரமாத்மனுடைய தேஜஸினாலேயே பிரகாசிக்கின்றன. அந்தப் பகவானாகிய வாஸு தேவருக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். அவருடைய மாயை ஜயிக்க முடியாதது. அதனால் தான் என்னையே ஜகத் காரணனென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். அந்த மாயையும் எவரை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ள முடியாமல் எவருடைய முன்பாக நிற்பதற்கும் வெட்கப்படுகிறதோ, அவரே எல்லாவற்றிற்கும் காரணம். அந்த மாயையின் மஹிமையால் புத்திமோஹத்தை யடைந்த ஜனங்கள், நான், என்னுடையது, என்னும் அபிமானத்தை அடைகிறார்கள். மேலும் மஹா பூதங்கள், புண்ய பாபங்கள், காலம், ஸ்வபாவம், ஜீவன் ஆகிய இவைகளெல்லாம் உண்மையில் ஸ்ரீ வாஸுதேவரூபமே தவிர வேறானவையல்ல. (காரியங்கள்யாவும் காரண ரூபமென்று கருத்து.) எல்லா வேதங்களும் ஸ்ரீமந் நாராயணனையே வர்ணிக்கின்றன. ஸகல தேவர்களும் அவருடைய சரீரத்திலிருந்து உண்டானவர்கள். ஸ்வர்க்கம் முதலிய லோகங்களுக்கும் அவரே அதிபதியாக இருக்கிறார். ராஜஸூயம், அச்வமேதம், வாய்பேய்ம் முதலிய ஸகல யாகங்களாலும் அந்த ஸ்ரீ நாராயணனே ஆராதிக் கப்படுகிறார். ப்ராணாயாமம் முதலிய யோகங்களும் அவற்றாலேற்படும் தபஸும் (மனஸ் ஒருவழையாயிருப்பது), அதனால் கிடைக்கும் ஞானம், அதனால் ஏற்படும் பயனும் ஸ்ரீ நாராயணன் இடமிருந்தே கிடைக்கின்றன. அவர் எல்லாவற்றிற்கும்

ஸாஷியாயிருப்பவர். கூடஸ்தர். ஸகல பிராணிகள் உடைய ஸ்வரூபமாயுமிருக்கிறார். எல்லாவற்றிற்க்கும் ஈசுவரன். நான் அவரால் உண்டுபண்ணப்பட்டவன். அவருடைய கடாக்ஷ விசேஷத்தால் அனுக்ரகிக்கப் பட்டு ஸ்ருஷ்டிக்க வேண்டியவைகளைப் படைக் கிறேன். அவர், குணங்களில் ஸம்பந்தப்படாதவர். ஆனாலும் அவர் காப்பாற்றுவது, ஸ்ருஷ்டிப்பது, ஸம்ஹரிப்பது ஆகிய மூன்று காரியங்களுக்காக ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்று குணங்களை மாயையால் அங்கீகரிக்கிறார். 'புருஷன் எப்பொழுதும் இருக்கிறான். ஆனால் ஸத்வம் முதலிய குணங்கள் மஹாபூதங்களை ஆசிரயித்துக் காரியமா (அதிபூதம்) யிருப்பதிலும், ஞானத்தை அவலம்பித்துக் காரணமாய் இருப்பதிலும் (அத்யாத்மம்.), இந்திரியங்களை ஆசிரயித்துக் கர்த்தாவாக இருப்பதிலும், அபி மானத்தைப் புருஷனுக்கு உண்டுபண்ணிப் பந்தத்தை உண்டாக்குகின்றன. ஓ ப்ராஹ்மணராகிய நாரதரே! மாயையை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டவராகிய பகவான் மேற்சொல்லிய மூன்று வித உபாதிகளாலும் நன்றாய் அறிய முடியாத ஸ்வரூபத்தையுடையவர். அவர் எனக்கும் மற்ற எல்லாவற்றிற்கும் அதிபதி. மாயைக்கு அதிபதியான அந்தப் பகவான் பலவிதமான சரீரமெடுக்க வேண்டி, தெய்வச் செயலாய்க் கிடைத்த காலத்தையும், கர்மத்தையும், ஸ்வபாவத் தையும் தமது மாயையைக் கொண்டு அங்கீகரிக் கிறார். மேலும் அவரை ஆசிரயித்த காலத்தால் ஸத்வம் முதலிய குணங்கள் ஸமமாயிராமல் தாரதம்யத்தையடைகின்றன. அந்தப் புருஷனை ஆசிரயித்த ஸ்வபாவத்தால் வேறு உருவத்தை அடைகிறதாகிய பரிணாமம் உண்டாகிறது. பின்னும்

அந்தப் பரமாத்மாவை ஆசிரயித்த கர்மத்தினிடம் இருந்து மஹத்தத்வம் உண்டாயிற்று. பின்பு ரஜோ குணம் ஸத்வ குணம் இவைகளுடன் கூடியதும், விகாரத்தையடைந்ததுமான மஹத் தத்வத்திலிருந்து தமோகுணத்தை பிரதானமாயுடையதும், ஐந்து பூதங்களின் ஸ்வரூபமாயும், ஞானேந்திரிய ரூபமாயும், கர்மேந்திரிய ஸ்வரூபமாயுமுள்ள அஹங்காரம் உண்டாயிற்று. பிறகு அந்த அஹங்காரம் வேறு ரூபத்தை அடைந்து வைகாரிகம், தைஜஸம், தாமஸம் என்று மூவகையாயிற்று. அவைகளில் வைகாரிகன், ஸத்வ குணத்தைப் பிரதானமாக உடையவன். கர்மேந்திரியங்களை உண்டுபண்ணும் சக்தியுள்ளவன். தாமஸன் தமோ குணத்தையே பிராதனமாகக் கொண்டவன். ஞானேந்திரியங்களை உண்டு பண்ணும் சக்தியுள்ளவன். பூதங்களுக்கு முந்தின வனாகிய அந்தத் தாமஸன் வேறு ரூபத்தையடையும் பொழுது ஆகாசம் உண்டாயிற்று. சப்தமானது அதனுடைய ஸூக்ஷ்ம ரூபமாயும் குணமாயுமிருக்கிறது. மேலும் அது பார்க்கிறவன், பார்க்கப்படுகிற வஸ்து இவ்விரண்டிற்கு அடையாளமுமாயுமிருக்கிறது; வேறு உருவத்தை அடைந்த அந்த ஆகாசத்திலிருந்து வாயு உண்டாயிற்று. அதன் குணம் ஸ்பர்சமேயாம். அந்த ஆகாயத்தின் ஸம்பந்தத்தால் வாயுவானது சப்தம் உள்ளதாகவும் ஆகிறது. தேக தாரண நிமித்தமாகிய பிராணன், மனோபல வேகம், தேக பலம் ஆகிய இவைகள் வாயுவினால் உண்டாகின்றன. ஆகாசம், வாயு ஆகிய இவைகளின் ஸம்பந்தத்தால் தேஜஸா னது உண்டாகிறது. அது காலம், கர்மம், ஸ்வபாவம் ஆகிய இவைகளின் மஹிமையால் ரூபம் ஸ்பர்சம், சப்தம் ஆகிய இவைகளை அடைகிறது.

அதிலிருந்து, கந்த குணமுள்ள (வாஸனையுள்ள) ப்ருதிவியை யுண்டாக்குகிறது. அந்த ஜலம் தன் காரியமாகிய பிருதிவியில் காரண ரூபமாயிருப்பதால் ரஸம் சப்தம், ரூபம், ஆகிய இவைகள் உள்ளதாயிற்று.

30–42 மேலும் வைகாரிகமான அஹங்காரத்திலிருந்து மனஸ், திக்கு வாயு, ஸூர்யன், வருணன், அசுவினீ தேவர்கள், அக்னி, இந்திரன், உபேந்திரன், மித்ரன், ப்ரஹ்மா ஆகிய பத்துத் தேவர்களும் உண்டானார்கள். தைஜஸ அஹங்காரத்திலிருந்து பத்து இந்திரியங்கள் உண்டாயின. மேலும் ஞானசக்தியான புத்தியும், கிரியாசக்தியான பிராணனும், தைஜஸனுடைய கார்யங்களாகையால் சுரோத்ரம் (காது) துவக் (தோல்), கிராணம் (மூக்கு), சக்ஷுஸ் (கண்) ஜிஹ்வா (நாக்கு) ஆகிய ஞானேந்ரியங்கள் ஐந்தும், வாக்கு, கை, உபஸ்தம் கால் பாயு ஆகிய கர்மேந்திரியங்கள் ஐந்தும் தைஜஸனிடமிருந்தே உண்டாகின்றன. இம்மாதிரி உண்டான ப்ருதிவி முதலிய பூதங்களுடைய குணங்களும் (வாஸனை முதலியவைகள்) இந்திரிய குணங்களாகிய பார்த்தல் முதலியவைகளும் மனத்தின் குணங்களும் ஒன்றோடொன்று சேராமல் தனித்து இருந்தன. ஓ பரப்ரஹ்ம! ஸ்வரூபத்தையறிந்தவர்களுக்குள் சிறந்த நாரத, அப்பொழுது அவை ப்ரஹ்மாண்டத்தை உண்டு பண்ணச் சக்தியற்றவைகளாக இருந்தன; அத்தருணத்தில் பகவானுடைய சக்தி விசேஷத்தால் தூண்டப்பட்டு அவைகள் ஒன்றோடொன்று சேர்ந்து ப்ரதான குண பாவத்தை அங்கீகரித்து ஸமஷ்டி வியஷ்டியாகிய ப்ரமராண்ட சரீரங்களை உண்டு பண்ணின. இப்படி அநேக

வர்ஷங்கள் சென்ற பிறகு பரமாத்மாவானவர் அசேதனமாக ஜலத்தில் மிதக்கும் அந்த அண்டத்திற்குக் காலம், கர்மம், ஸ்வபாவம் ஆகியவைகளை ஆச்ரயித்துச் சைதன்யத்தை உண்டு பண்ணினார். அதாவது அந்த அண்டத்தைப் பிளந்துக் கொண்டு அந்த மஹாபுருஷன் வெளியில் வந்தார். அவர் அநேக தலைகளையும் முகங்களையும் கண்களையும் கைகளையும் தொடைகளையும் கால்களையும் உடையவராக இருந்தார். மேலும் அந்த மஹா புருஷனுடைய முகத்திலிருந்து ப்ராம்ஹண ஜாதியும், கைகளிலிருந்து க்ஷத்ரிய ஜாதியும், தொடைகளில் இருந்து வைசிய ஜாதியும், பாதங்களிலிருந்து சூத்ர ஜாதியும் உண்டாயின. மேலும் அந்தப் புருஷன் உடைய கடி இடுப்பு முதலியவைகளிலிருந்து கீழ் உலகங்களும், ஜகனம் முதலியவைகளிலிருந்து மேல் உலகங்களும் உண்டாயினவென்று வித்வான்கள் சொல்லுகிறார்கள். அதெப்படியெனில், அவருடைய பாதங்களிலிருந்து பூலோகமும், நாபியிலிருந்து புவர் லோகமும், ஹ்ருதயத்திலிருந்து ஸ்வர்லோகமும், மார்பிலிருந்து மஹர்லோகமும், கழுத்திலிருந்து ஜன லோகமும், இரண்டு ஸ்தனங்களிலுமிருந்து தபோ லோகமும், தலையிலிருந்து நித்யமானது வைகுண்டம் என்று சொல்லப்படுகிறதுமான ஸத்யலோகமும் உண்டாயின. பின்னும், அவருடைய கடியிலிருந்து அதலமும், தொடைகளிலிருந்து விதலமும் முழங் கால்களிலிருந்து மிக்க பரிசுத்தமான ஸுதலமும், கணைக்கால்களிலிருந்து தலாதலமும் குல்பங்களில் இருந்து மஹாதலமும், நுனிக்கால்களிலிருந்து ரஸா தலமும், பாதங்களிலிருந்து பாதாளமும் உண்டாயின. (உலகங்கள் பதினான்கு என்று பக்ஷம் காட்டப்பட்டது.)

மேலும், அந்தப் புருஷனுடைய பாதங்களிலிருந்து பூலோகமும், நாபியிலிருந்து புவர்லோகமும், தலையில் இருந்து ஸுவர் லோகமும் உண்டாயினவென்றும் விராட் புருஷனுடைய அவயவங்களில் லோகத்தைக் கற்பிக்கிறார்கள். (லோகங்கள் மூன்று என்ற பக்ஷமானது காட்டப்பட்டிருக்கிறது.)

நோட்டு

முந்தினவனாகி—மூலத்தில் பூதாதி என்றிருப்பதால், அதற்குப் பஞ்ச பூதங்களுக்கு முதன்மையாகிய ஆகாச என்று அர்த்தம்—சந்த். தாமஸாஹங்காரதிற்கே பூதாதி யென்றும் பெயருண்டு—வீர. சப்தமானது தாமஸன் இடமிருந்து முதலில் சப்தம் உண்டாயிற்று என்று ப்ரசித்தமாக இருக்கிறது. ஆனாலும் அந்தச் சப்த மானது ஆகாசத்தினுடைய ஸூக்ஷ்ம ரூபமாயும், அதன் குணமாகவும் மிருக்கிறது. ஆகையால் அதன் வழியாகச் சப்தம் உண்டாயிற்று என்பது கருத்து —ஸ்ரீத. பார்க்கிறவன் சுவரின் மறைவில் செல்லும் யானை முதலியவை களைக் கண்ட ஜனங்கள் யானையென்று உரக்கச் சொல்ல, அதனைக் கேட்ட அவன் ஜனங்கள் யானையைப் பார்க்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளுகிறானல்லவா? அதனால் அந்தச் சப்தமானது பார்க்கப்பட்ட வஸ்து (பார்க்கிறவர்கள் ஆகிய இவர்களுக்கு அடையாளம்...சந்த்—வீர. வைகாரிக —ஸாத்வீக அஹங்காரத்திலிருந்து ஸகல இந்திரியங் களும் உண்டாயின—ஸ்ரீத, வீர, மனஸ் அதற்கு அதிஷ்டான தேவதைகயாகிய சந்திரனும் உண்டானான். திக்கு இந்த பத்துத் தேவதைகளும் முறையே சுரோத்ரம், துவக், சக்ஷுஸ், ஜிஹ்வா, கிராணம்,

வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் ஆகிய இவைகளுக்கு அதிதேவதைகள். மேற்காட்டிய இந்திரி யங்கள் அதிதேவதைகளுடன் உண்டானவையென்று தாத்பரியம் கொள்ள வேண்டும்—வீர தைஜஸனிடம் இருந்து ஞானேந்திரியங்களும் கர்மேந்திரியங்களும் தைஜஸனிடமிருந்து உண்டாயின.—ஸ்ரீத ராஜஸாஹங் காரத்துடன் கூடிய ஸாத்வீக அஹங்காரத்தினிடமிருந்து என்று அர்த்தங் கொள்ளவேண்டும். அப்படியில்லா விடில் 30—வது ஸ்லோகத்தின் அர்த்தத்திற்கு விருத்த மாகும். ஆக்ஷேபம் 30—வது ஸ்லோகத்திற்கு மூலத்தில் கண்டபடி அதிஷ்டான தேவதைகள் உண்டானார்கள் என்று மாத்திரம் அர்த்தம் வைத்துக் கொண்டோ மானால் 31 வதான இந்த ஸ்லோகத்தில் இந்திரியங்கள் உண்டாயினவென்று அர்த்தங்கொள்ளலாம், ஒன்றுக் கொன்று விரோதமில்லை. ஸமாதானம் அப்படியல்ல இந்திரியங்களில்லாமல் அதிதேவதைகளுக்குத் தேகம் உண்டாக நியாயமில்லை, மேலும், ஆதித்யன் முதலிய தேவதைகள் நான்முகக் கடவுளால் ஸ்ருஷ்டிக்கப் பட்டவர்களாகச் சொல்லப்பட போகிறபடியால் அண்டங்களை ஸ்ருஷ்டிப்பதற்கு முன் அவர்களை ஸ்ருஷ்டிக்க நியாயமில்லை,—வீர. சரீர நோபயம் ஸஸிருஜுர்ஹ்ருத என்ற பாடத்தை யங்கீகரித்து அவைகள் பஞ்சீகரணத்தால் ஸ்தூல, பாவத்தையும், ஸூக்ஷ்மமாக விருப்பதையும் மேற்காட்டிய இரண்டு வகையுமற்றதாகிய கால கர்மஸ்வபாவத்தையும் அங்கீ கரித்து இந்தப் ப்ரம்ஹாண்டத்தைப் படைத்தன அல்லது ஒரு தத்துவத்திற்கும் காரியமாக இல்லாததும், காரணமாக இல்லாததுமாகிய ப்ரம் ஹாண்டத்தை ஸ்ருஷ்டித்தன —வீர.

அத்தியாயம்–6

விராட் புருஷனுடைய விபூதிகள்

ஜனங்களுடைய வாக்கும், அதற்கு அதிஷ்டான தேவதையாகிய அக்னியும் விராட் புருஷனுடைய முகத்திலிருந்து உண்டானவை. மேலும் அவருடைய தோல் முதலிய ஏழு தாதுக்களிலிருந்து காயத்ரீ முதலிய சந்தஸ்ஸுகள் உண்டாயின. ஹவ்யம் (தேவர்களுக்குக் கொடுக்கும் அன்னம்). அமிர்தம் (மேற்காட்டிய இருவகையிலும் பாக்கியான மனுஷர் களுக்குக் கொடுக்கக்கூடிய அன்னம்) ஆகிய இவை களும், ஆறு வகையான ரசங்களும், ஜனங்களுடைய நாக்கும் அதற்கு அதிதேவதையான வருணனும் அவருடைய நாக்கிலிருந்து உண்டாயின. மேலும் ஸகல பிராணிகளுடைய ப்ராணன்களுக்கும் மற்ற வாயுவிற்கும் அவருடைய மூக்குகள் முக்கியமான இருப்பிடம், ஔஷதிகளும், அசுவினீ தேவர்களும் மோதம், ப்ரமோதம் என்ற ஸாமான்ய விசேஷ வாஸனைகளும் அவருடைய கிராணேந்திரியத்தில் இருந்து உண்டானவை. அவருடைய சக்ஷுரிந்திரியம் ஆனது ஏழுவித உருவங்களுக்கும், சந்திரன், அக்னி, முதலிய தேஜஸ்களுக்கும் முக்கியமான ஸ்தானம். இரு கண்களும் (நேத்திர கோளங்கள்) த்யுலோகத்திற்கும், ஸூர்யனுக்கும் ஸ்தானங்களாயிருக்கின்றன. மேலும் அவருடைய காதுகள் திக்குகளுக்கும், தீர்த்தங்களுக்கும் முக்கிய ஸ்தானங்களாயிருக்கின்றன. ச்ரோத்ரேந்திரியம் ஆனது ஆகாசத்திற்கும் சப்தத்திற்கும் உற்பத்தி ஸ்தானமென்று சொல்லப்படுகிறது. அந்த மஹாபுரு ஷனுடைய சரீரமானது ஸகல பதார்த்தங்களுடைய

ஸாராம்சத்திற்கும், நிகரில்லாத ஸௌந்தர்யத்திற்கும் இருப்பிடமாயிருக்கிறது. அவருடைய துவக்கிந்திரியானது (தோல்) ஸ்பர்சம், வாயு யக்ஞம் ஆகிய இவைகளுக்கு ஸ்தானமென்று சொல்லப்படுகிறது. அவருடைய உரோமங்கள் யாகத்திற்கு ஸாதனமான உத்பிஜ்ஜ ஜாதியான அரசு, அத்தி, கருங்காலி, பலாசம் முதலிய விருக்ஷங்களுக்கும், அவருடைய தலைமயிர்கள் மேகங்களுக்கும், அந்த புருஷனுடைய மீசை, தாடி இவைகள் மின்னலுக்கும், நகங்கள் கற்களுக்கும், இரும்புகளுக்கும் இருப்பிடமாய் இருக்கின்றன. அவர் உடைய கைகள் உலகத்தைக் காப்பாற்றும் திக்பாலர்களுக்கும், காலடி வைப்பதானது பூலோகம், புவர்லோகம்: ஸுவர்லோகம் ஆகிய இவைகளுக்கும், க்ஷேமத்திற்கும் (கிடைத்ததைக் காப்பாற்றுவது). சரணத்திற்கும் (பயத்திலிருந்து ரக்ஷிப்பதற்கும்) காரணமா யிருக்கின்றன. பகவானுடைய பாதாரவிந்தமானது ஸகல இஷ்டங்களையும் கொடுக்கக்கூடியது. அந்த மஹா புருஷனுடைய சிகையானது ஜலங்களுக்கும், வீர்யத் துக்கும், ஸ்ருஷ்டிக்கும் பர்ஜன்யனுக்கும் ப்ரஜா பதிக்கும் காரணமாயிருக்கிறது. ஓ நாரதரே, அவர் உடைய பாயு என்னும் இந்திரியமானது, மல விஸர்ஜனத்திற்கும், யமனுக்கும், மித்ரனென்னும் தேவதைக்கும், ஆச்ரயமாக விருக்கிறது. மேலும் அவருடைய குதமானது நிருதிக்கும். ஹிம்ஸைக்கும், மிருத்யுவுக்கும். நரகத்திற்கும் ஆச்ரயமாயிருக்கிறது. அவருடைய பின் பாகமானது அவமானம், அதர்மம், அஜ்ஞானம் ஆகிய இவற்றுக்கும், அவருடைய நாடி களானவை ஆறுகள், மேற்கு முகமாய்ச் செல்லும் நதிகள் ஆகிய இவைகளுக்கும், அந்தப் புருஷனுடைய எலும்புகளானவை மலைகளுக்கும் ஆச்ரயங்களாக

இருக்கின்றன. பின்னும் அவருடைய வயிரானது அன்னம் முதலிய ப்ரதான ரஸங்களுக்கும் ஸமுத்திரங்களுக்கும், ப்ராணிகளுடைய லயத்திற்கும், ஹ்ருதயம் ஆனது மனத்திற்கும் ஸ்தானமாயிருக்கின்றன. மேலும் அவருடைய ஆத்மாவானது (சித்தம்) தர்மத்திற்கும், எனக்கும். உனக்கும் ஸனகர் முதலியவர்களுக்கும்: பரமசிவனுக்கும் ஸகல ஞானத்திற்கும், ப்ராணிகளின் ஸமூஹத்திற்கும் முக்ய இருப்பிடமாயிருக்கிறது. ஆகையால் நானும், நீரும், பரமசிவனும் உமக்கு மூத்த ஸஹோதரர்களான ஸனகர் முதலிய யோகிகளும், தேவர்களும், அஸுரர்களும்; மனிதர்களும், நாகங்களும், (யானைகளும்) பறவைகளும், மிருகங்களும், ஸர்ப்பங்களும் கந்தர்வர்களும், அப்ஸர ஸ்திரீகளும், யக்ஷர்களும், பூதகணங்களும், பசுக்களும், பிதிருக்களும், ஸித்தர்களும், வித்யாதாரர்களும், சாரணர்களும், ஜல ஜந்துக்களும் ஸ்தலத்தில் சஞ்சரிக்கும் ஜந்துக்களும், ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் ஜந்துக்களும், நவக்கிரஹங்களும்: நக்ஷத்திரங்களும்; தூமகேது முதலியவைகளும், மேகங்களும் மின்னல்களும், மற்றும் பலவகையான பிராணிகளும், உண்டாகின்றவைகளுமான ஸமஸ்தமும் அந்த மஹா புருஷ ஸ்வரூபமே தவிர வேறில்லை. பன்னிரண்டு அங்குல ப்ரமாணமுள்ள ஸ்வரூபமடைய அந்த மஹாபுருஷனால் இந்த ஜகத்தானது முழுவதும் வ்யாபிக்கப் பட்டிருக்கிறது. ப்ராணன் ஆனவன் (ஸூர்யன்) தன்னுடைய மண்டலத்தைப் ப்ரகாசிக்கச் செய்துகொண்டு வெளியிலும் ப்ரகாசிக்கிறார். இவர் அமிருதத்திற்கும் அபயத்திற்கும் அதிபதி. மேலும் கர்மபலத்தை அதிக்ரமித்தவர். ஆசையால் நித்ய முக்தர். ஆனாலும் ஜகத்ரூபியாயிருப்பதே அவருடைய அளவற்ற மஹிமையாயிருக்கிறது. அந்த

மஹா புருஷனுடைய அம்சமாகிய உலகங்களிலேயே ஸகல பிராணிகளும் வஸிக்கிறார்களென்று சொல்லப் படுகிறது. மூன்று லோகங்களுக்கும் மேலான மஹர் லோகத்திற்கும் மேலான லோகங்களில் அமிருதம் க்ஷேமம் அபயம் ஆகிய இவைகள் வைக்கப்பட்டிருக்கின்றன, மூவுலகங்களின் வெளியில் அவருடைய மூன்று பாதங்களிருக்கின்றன. அவைகள் ப்ரம்மசர்யம், வானப்ரஸ்தம், ஸந்யாஸம் முதலிய ஆச்ரமங்களேயாகும். மேற்காட்டிய ஆச்ரமிகள் புத்திர ரூபமாக உண்டாகாதவர்கள். மூவுலகத்தின் உள்ளே மற்றொரு பாதம் இருக்கிறது. அதுவே ப்ரம்மசர்ய வ்ரதமற்ற கிருஹஸ்தாச்ரமம் எனப்படுகிறது.

21–47. க்ஷேத்ரக்ஞனாகிய ஜீவன் போகத்திற்கும் மோக்ஷத்திற்கும் ஸாதனமாகிய இரண்டு மார்க்கங்களிலும் ஸஞ்சரிக்கிறான்; அவைகளின் தூமாதி மார்க்கம் என்பது வித்தைக்கு (ஞானத்திற்கு) ஸாதனமாகிய உபாஸனைகளால் கிடைக்கக்கூடியது. ஜீவன் முன் சொன்ன இருவகையான மார்க்கங்களையும் தன் உடைய அதிகாரத்திற்குத் தக்கபடி அடைகிறான். இப்படிவிராட் புருஷனுடைய உள்ளே இருப்பவர்களுக்கு விசித்திரமான பலன் கிடைக்கிறது. ஆனால் எதனிடத்திலிருந்து ப்ரம்மாண்டம் உண்டாயிற்றோ அதனிடமிருந்து ஐந்து பூதங்கள், இந்திரியங்கள், அதன் விஷயங்கள் ஆகிய இவைகளின் ஸ்வரூபியாயிருக்கும். விராட்புருஷன் உண்டானார். (அவர் ப்ரம்மாண்டத்திற்கு அபிமானியாயிருப்பவர்) அவைகளுக்குக் காரணமாயிருக்கும் பரமேசுவரன், அநேக கிரணங்களால் ஸூர்யன் ப்ரகாசிப்பது போல ஜகத் ரூபமாகிய விராட் புருஷனுடைய தேகத்தையும்

ப்ரம்மாண்டத்தையும் அவர் அதிக்கிரமித்துப் ப்ரகாசிக் கிறார் (ஈசுவரன் விலக்ஷண ரென்பது கருத்து). ஜகத் முழுவதும் அந்த ஸர்வேசனுடைய ஸ்வரூபமாயிருக்கு மானால் யாகமும், அதற்கு ஸாதனங்களும் பகவத் ரூபங்களென்று ஏற்படுகிறதே; யாகத்தால் பரம புருஷனை ஆராதிப்பது எப்படியெனில் (பின்வருமாறு) சொல்லப்படுகிறது) ஓ நாரத! மஹாத்மாவாகிய இவருடைய கொப்பூழில் தோன்றிய தாமரைப் புஷ்பத்திலிருந்து நான் உண்டானபோது பரமாத் மாவை ஆராதிப்பதற்காகயாக ஸாமக்ரிகளைத் தேடியும் எல்லாம் அவருடைய அவயங்களாக இருந்தனவே யொழிய அவைகளைக் காட்டிலும் வேறானவைகள் ஒன்றும் கிடைக்கவில்லை, ஆகையால் யாகத்திற்கு வேண்டிய பசுக்கள், யூபத்திற்கு உபயோகமாகிய மரங்கள், தர்ப்பங்கள், பாத்திரங்கள், நெல் முதலிய தானியங்கள், நெய் முதலிய வேறாம திரவ்யங்கள், ஸோமரஸம், ஸுவர்ணம் முதலிய உலோகங்கள், மண், ஜலம், ரிக், யஜுஸ்,ஸாமம் என்ற வேதங்கள், வெளத்ரம் முதலிய கர்மங்கள் ஜ்யோதிஷ்டோமம் முதலிய பெயர்கள். ஸ்வாஹாகாரம் முதலியவைகள். தேவதா தியானங்கள் ப்ராயச் சித்தம், செய்தவை களைப் பகவதர்ப்பணஞ் செய்வது, நான் வஸிக்கும் இந்தப் பகவானுடைய நாபியாகிய யாகசாலை ஆகிய ஸாமக்ரியைகளை அந்த மஹா புருஷனுடைய அவயங்களாலேயே ஸம்பாதித்தேன். இப்படி அவருடைய அவயவங்களால் யக்ஞ புருஷனாகிய அந்தப் பகவானையே பூஜித்தேன்; பிறகு கச்யபர் முதலிய ஒன்பது ப்ரஜாபதிகளும் மிகவும் ஸாவதானர்களாய் இந்திரன் முதலிய தேவர்களின் ரூபமாய் வியக்தரும், ப்ரஹ்மரூபமாய் அவ்யக்தருமான அந்த மஹா புருஷனைக் குறித்து யாகஞ் செய்தார்கள். பிறகு

மனுக்களும்; மற்ற மஹர்ஷிகளும் பிதிருக்களும், தேவர்களும், அஸுரர்களும். மனிதர்களும் அவரவர் களுக்கு வேண்டிய ஸமயத்தில் ப்ரபுவாகிய அவரை உத்தேசித்து யாகஞ் செய்தார்கள். இந்த ஸகல ஜகத்துக்களும் பகவானாகிய நாராயணனிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகவான் ப்ருகிரு தியின் ஸகல குணங்களையும் அடக்கிக் கொண்டு ஸ்ருஷ்டிக்கு முன்னே தாம் நிர்க்குணராக இருந்தார். அவருடைய ஆக்ஞையாலே நான் உலகத்தைப் படைக்கிறேன், பரமசிவன் ஸம்ஹரிக்கிறார், அவர் தம்முடைய ஸ்வரூபத்தால் காப்பாற்றுகிறார். இப்படி மூன்று வகையான சக்தியுள்ளவராக இருக்கிறார். காரியகாரண ரூபமாகிய ஸகல பதார்த்தங்களும் பகவானை விடவேறாக இருக்க வில்லை. ஓ நாரத உம்மால் கேட்கப்பட்ட எல்லா விஷயத்திற்கும் பதில் சொன்னேன். நான் விசேஷபக்தியுடன் ஹ்ருதயத்தில் பகவானைத்தியானித்தபடியால் என்னுடைய வாக்குப் பொய் சொல்லுகிறதில்லை. மனஸும் இந்திரியங் களும் கெட்ட மார்க்கத்தில் பிரவர்த்திக்கிறதில்லை வேத ஸ்வரூபியாயும் தப ஸ்வரூபியாயுமிருக்கும் நான் பிரஜாபதிகளால் நமஸ்கரிக்கப்படுகிறேன். மேலும் நான் எனக்குக் காரணமாகிய பகவானைத் தெரிந்து கொள்ளவேண்டி யோகத்தால் முயற்சி செய்தும் அவரைத் தெரிந்து கொள்ளமுடியவில்லை. அவர் உடைய சரணங்கள், சரணாகதர்களுக்கு ஸம்ஸார பந்தத்தைப் போக்குகின்றன. க்ஷேமத்தையும், ஸகல மங்களத்தையும் கொடுக்கின்றன. அந்தச் சரணங் களுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். ஆகாசமானது தன்னுடைய முடிவை அறியாதது போலவே அவர் உடைய மாயா வைபவத்தை அவரும் அறியவில்லை.

அப்படியிருக்கப் பிறருக்குத் தெரியுமா? என்றாலும், பரமசிவனாலும், உங்களாலும் ஆத்மஸ்வரூபம் அறிய முடிகிறதில்லை. மற்ற தேவர்களால் அறியமுடியுமா? அந்தப் பகவானுடைய மாயையால் நாம் கலங்கிய புத்தியுள்ளவர்களாய் நம்முடைய ஞானத்திற்குத் தக்கபடி இந்த ப்ரபஞ்சத்தைத் தெரிந்துகொள் கிறோம். (அவருடைய ஸ்வரூபம் முழுவதையும் தெரிந்துகொள்ள முடியவில்லை) எந்தப் பகவான் உடைய அவதார சரிதங்களை நாமும் பிறரும் கானம் செய்தபோதிலும் அவருடைய உண்மையைத் தெரிந்து கொள்ள முடியவில்லையோ. அந்தப் பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். அந்தப் புருஷனே எல்லாவற்றிற்கும் முந்தியவர். அவர் பிறப்பில்லாதவர். ஒவ்வொரு கல்பத்திலும் தம் மாலேயே தம்மை ஸ்ருஷ்டிக்கிறார். காப்பாற்றுகிறார், ஸம்ஹரிக்கிறார். அந்தப் புருஷன் சுத்தன். ஞான ஸ்வரூபி. எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாயிருப்பவர். தேகம் முதலியவைகளின் ஸம்பந்தமற்றவர். ஸத்ய ஸ்வரூபி. பூர்ணர், பிறப்பு நாசம் இவைகளில்லாதவர், நித்யர், ஒப்பற்றவர் ஓ நாரத மஹரிஷியே எவர் களுடைய சரீரமும் இந்திரியங்களும் மனஸும் மிகவும் சாந்தங்களாகவிருக்குமோ. அந்த முனிவர் களே மேற்காட்டிய ஆத்ம ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்வார்கள். துஷ்டர்கள் சொல்லுகிற சாஸ்திரவிருத்தமான யுக்திகளால் அவை கலங்குமாகில் அந்த ஆத்மஸ்வரூபம் அவர்களுக்குப் புலப்படாமல் மறைந்துவிடும். ப்ரகிருதியைப் பிரவர்த்திக்கச் செய்யும் புருஷன் பரமாத்மாவின் முதன்மையான அவதாரமேயாம். மேலும் காலம், ஸ்வபாவம். காரியம் காரணம், மனம், ஐந்து மஹாபூதங்கள், அஹங்காரம், ஸத்வம் முதலிய

குணங்கள், ஸமஷ்டி சரீரம். ஸ்வராட், ஸ்தாவரங்கள் ஜங்கமங்கள் ஆகிய இவைகள் யாவும் அவருடைய அம்சங்களேயாம். மேலும் நான் பரமசிவன், யாகம், (விஷ்ணு) தக்ஷர் முதலிய இந்த எல்லாப் பிரஜாபதிகள், நீர் ஸனகர் முதலியவர்கள், இந்திரன் முதலிய லோகபாலர்கள், கருடன் முதலியவர்கள். மனு. மாந்தாதா முதலிய அரசர்கள். லோகத்தின் பாலர் களாகிய அனந்தன். வாசுகி முதலியவர்கள் ஆகிய இவர்களும் கந்தர்வர்கள், வித்யாதரர்கள், சாரணர்கள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், ஸர்ப்பங்கள். யானைகள். மஹரிஷிகளுக்குள் சிறந்தவர்களாகிய வஸிஷ்டர் முதலியவர்கள் பிதிருகணங்களில் மேலானவர்களும் ஸித்தர்களில் சிறந்தவர்களும், தைத்யர்களுக்குள் சிறந்தவர்களும், தானவர்களுக்கு மேலானவர்களும் மற்ற, ப்ரேதங்கள். பிசாசங்கள், பூதங்கள், கூஷ்மாண்ட கணங்கள், ஜலஜந்துக்கள் மிருகங்கள், பசுக்கள் ஆகிய இவைகளுக்குள் சிறந்தவைகளுமாகிய எவை பூஜிக்கத்தக்கவைகளோ, காந்தி, வேகம் தேக பலம். பொறுமை. அழகு கெட்ட காரியஞ் செய்வதில் வெட்கம், ஸமிருத்தி புத்தி; அற்புதமாகிய வர்ணம். உருவமற்றதாயிருப்பது. உருவமுள்ளதாக விருப்பது ஆகிய இவைகளுள்ளவைகளாக எவைகளிருக்கின்றனவோ; அவைகளெல்லாம் பரமாத்மாவின் விபூதிகளேயொழிய வேறில்லை, ஆனாலும், ஓ மஹரிஷியே மிகுந்த மஹிமை பொருந்திய அந்தப் பரமாத்மாவினுடைய முக்யமான லீலாவதாரங்களென்று எவை சொல்லப் படுகின்றனவோ அவை கேட்பவர்களுடைய காதுகளின் தோஷங்களைப் போக்கக்கூடியவை. மிகவும் மனோஹரமானவை அவைகளை உமக்குச் சொல்லுகிறேன்.

நோட்டு

ஸகல–விரும்பக்கூடிய ஸகல வஸ்துக்களுக்குள் மேலானவராகிய பகவானுடைய பாதம் – வீர வேறில்லை. – "இந்த ஜகத் முழுவதும் புருஷனே" – ஸ்ருதி. ப்ராண – "இந்த ஆதித்யனே ப்ராணன்" – ஸ்ருதி ப்ராண வாயு வானது சரீரத்தில் ப்ராணன், அபானண் முதலிய பெயரை அடைந்து தானிருக்கும் சரீரத்தை சேஷ்டிக்கச் செய்துகொண்டு வெளியிலும் ஸஞ்சரிப்பதுபோல்–சந்த. ஜகத்ரூபி– ஜகத்ரூபியானாலும் அதனால் அவருடைய மஹிமை குறைவுபடுகிறதில்லை யென்ற ஸ்ருதியில் தாத்பரியம் காட்டப்பட்டது ஸ்ரீத. – மஹர்லோகம் – பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் ஆகிய மூன்று லோகங்களிலும் அனித்ய ஸுகமே தவிர நித்ய சுகமில்லை. மஹர்லோகமானது கிரம முக்தி ஸ்தானமானாலும் கல்பாந்தரத்தில் அவ்விடத்திலிருப்பவர்கள் அதை விட்டு விட வேண்டியிருப்பதால் அதிலும் நித்ய ஸுகமில்லை. மூவுலகமும் ஸங்கர்ஷணருடைய முகத்தின் அக்கினியால் எரிக்கப்படும் அந்த உஷ்ணத்தைப் பொறுக்காமல் பிருகு முதலியவர்கள் ஜனலோகம் செல்லுகிறார்கள் ஸ்ரீத.– வெளியில் – பிரகிருதி, பிராகிருதர்கள் ஆகிய இவைகளுக்கு வெளியில் இருக்கின்றன அவைகள் ஜன்மமற்ற முக்தர்களால் அடையத்தக்கவை – வீர. அதுவே – ஸம்ஸாரிகளான ஜீவவர்க்கங்களால் அடையக்கூடியது –வீர. படைக்கிறேன் – அந்தப் புருஷனே எனது உருவங்கொண்டு படைத்தலையும், தம் உருவத்தாலே காப்பாற்றுவதையும், ருத்திரருடைய ஸ்வரூபத்தை அடைந்து ஸம்ஹாரத்தையுஞ் செய்கிறார்.

அத்தியாயம்–7

பகவானுடைய லீலாவதாரம்

"நாசமற்றவரான ஸ்ரீ நாராயணன் ஸகல யக்ஞஸ்வரூபமான வராஹ சரீரத்தை யெடுத்துப் பூமியைத் தூக்க முயற்சித்தபோது ஸமுத்திரத்தில் பிரவேசித்த வனும், தைத்யர்களுள் முந்தினவனுமான ஹிரண்யாக்ஷன் என்ற அஸுரனைச் சிங்கப்பல்லால் குத்திக் கிழித்தார். அது மஹேந்திரர் வஜ்ராயுதத்தால் மலையையுடைத்தாற் போலிருந்தது. மேலும் அந்தப் புருஷோத்தமன் 'ருசி' என்ற பிரஜாபதிக்கு ஆகூதி என்ற ஸ்திரியினிடத்தில் ஸுயக்ஞரென்ற பெயருடன் அவதரித்தார். பிறகு "தக்ஷிணா என்பவளைக் கல்யாணம் செய்து கொண்டு அவளிடத்தில் 'ஸுயாமா' என்ற பெயருள்ள தேவர்களைப் பெற்றார். அப்பொழுது அந்த ஸுயக்ஞர் தாம் இந்திரனாக இருந்து உலகத்தைக் காப்பாற்றி வந்தார். அப்பொழுது ஸ்வாயம்புவ மனுவென்பவர், "நீர் மூவுலகத்திற்கும் நேர்ந்திருந்த பெரிதான உபத்திரவத்தைப் போக்கடித்தபடியால் உமக்கு 'ஹரி' என்று பெயர் உண்டாகட்டும்" என்று சொன்னார். ஓ ப்ராம்ஹணோத்தமரான நாரதரே பின்னும் அந்த மஹா புருஷன் கர்த்தமபிரஜாபதியின் வீட்டில் தேவஹூதியினிடத்தில் ஒன்பது ஸ்திரீகளுடன் கபிலராக அவதரித்தார். பிறகு அவர் தம் தாயான தேவஹூதிக்கு ப்ரஹ்ம வித்யையை உபதேசித்தார். அதனால் அவள் துக்கத்தைக் கொடுக்கக்கூடிய முக்குண ஸம்பந்தத்தை விட்டு அந்த ஜன்மத்திலேயே முக்தியை அடைந்தாள். முன்னொரு காலத்தில் நல்ல புத்திரன் வேண்டுமென்று அத்திரி மஹர்ஷியானவர்

தபஸ் செய்தார். அவருடைய தபஸினால் பகவான் சந்தோஷப்பட்டு, "நானே புத்திரனாக என்னால் (தத்தம்) கொடுக்கப்பட்டேன்" என்று சொல்லி, அதனால் தத்தாத்ரேயராக தத்தரென்ற அத்திரியின் புத்திரர் அவதரித்தார். அவருடைய பாத தூளிகளால் பரிசுத்தமான சரீரமுள்ள யது (யயாதியின் பிள்ளை) கார்த்தவீர்யார்ஜுனர் முதலியவர்கள் இவ்வுலகத்து ஸுகத்தையும், மேலுலகத்து ஸுகத்தையும் அடைந் தார்கள். மேலும் நான் பலவகையான உலகங்களை ஸ்ருஷ்டிக்க விரும்பித் தபஸ் செய்தேன். பூர்ணமாகிய அந்தத் தபஸினால் பகவான் ஸந்தோஷமடைந்து ஸனத்குமார, ஸனக ஸநந்தன ஸனத் ஸுஜாதர் என்ற பெயருடன் நான்கு வகையாக அவதரித்து, முன் கல்பத்தின் ப்ரளயத்தில் மறைந்துபோன ஆத்ம வித்தையை மஹர்ஷிகளுக்கு நன்றாக உபதேசித்தார். அதனைக் கேட்டவுடன் அவர்களுக்கு அபரோக்ஷ ஸாக்ஷாத்காரம் உண்டாயிற்று. இன்னும் அந்த மஹாபுருஷன் தர்மத்தின் பத்தினியும், தக்ஷருடைய பெண்ணுமான மூர்த்தி என்பவளிடத்தில் 'நரன், நாராயணன்', என்ற திவ்ய நாம தேயங்களுடன் இரண்டு வகையாக அவதரித்தார். அந்த அவதாரத்தில் கடுமையாக தபஸ் செய்தார். அப்பொழுது மன்மதன் உடைய சைன்யங்களாகிய ஊர்வசி முதலிய அப்சர ஸ்திரீகள் அவருடைய தபஸைக் கெடுக்க முயன்றும் முடியவில்லை. வித்வான்களாகிய ருத்ரன் முதலியவர் கள் கோபத்தால் க்ரூரமாயிருக்கும் பார்வையால் மன்மதனை ஜயித்தார்கள். ஆனாலும் தம் ஆத்மாவைத் தகிக்கும் (ஸகிக்க முடியாத) கோபாக்னியை ஜயிக்க வில்லை. (கோபத்திற்கு வசப்பட்டிருக்கிறானென்று கருத்து.) இவ்விதக் கோபமும் நாராயணாவதாரஞ்

செய்த பகவானுடைய மனதில் பிரவேசிக்கப் பயப்படு கிறது. அதற்குத் தாழ்ந்தவனாகிய காமம் அவருடைய மனத்தில் ப்ரவேசிக்க முடியுமா ?

8–54 உத்தான பாதனென்ற அரசனுடைய பத்தினியாகிய ஸுநீதியின் புத்திரர் துருவரென்று ஒருவர் இருந்தார். அவர் தம்முடைய பிதாவின் ஸமீபத்தில் ஸபத்னீ மாதாவான ஸுருசியினுடைய வார்த்தை யாகிய பாணத்தால் அடிக்கப்பட்டு, பால்ய வயதிலேயே தபஸ் செய்வதற்காகக் காட்டுக்குச் சென்றார். அவர் பகவானை ஸ்தோத்திரஞ் செய்யவே, புருஷோத்தமன் ஸந்தோஷப்பட்டு அவருக்குச் சாச்வத மாகிய பதத்தைக் கொடுத்தார். அந்த மேலான ஸ்தானத்தை அதற்குக் கீழாகவிருக்கும் ஸப்த ரிஷிகளும் ஸ்தோத்திரஞ் செய்கிறார்கள். (இது ஒரு அவதாரமென்று கருத்து) தவிரவும் வேணனென்ற அரசன் அதர்மத்தை அனுஷ்டித்து வந்ததால் ப்ராம் மணர்கள் அவனைச் சபித்தார்கள். வஜ்ரம் போன்ற அவர்களுடைய வாத்தையால் அவனுடைய ஐசுவர்யம் முதலியவைகள் நாசமாயின. அந்த வேனனுக்கு பகவான் ப்ருது என்றும் புத்திரனாக அவதரித்து, அவனை நரகத்திலிருந்து காப்பாற்றி அதனால் புத்திரன் என்ற சப்தத்தை உண்மையான அர்த்தமுள்ளதாகச் செய்தார். பின்னும் பூமி தேவி இடமிருந்து ஸகல வஸ்துக்களையும் கறந்தார். மேலும், அந்தப் ப்ரபுவானவர் ப்ரிய வ்ரதருடைய பௌத்திரரும் ஆக்னீத்ரருடைய புத்திரருமாகிய நாபி என்பவருக்கு ஸுதேவி என்பவளிடத்தில் ரிஷப ரென்ற திவ்ய நாமதேயத்துடன் அவதரித்தார். அப் பொழுது விஷயங்களின் ஆசையை ஒழித்து மிகவும்

சாந்தமாகிய அந்தக் கரணமுள்ளவராகி தம்முடைய ஸ்வரூபத்திலே இருந்து யோகியாய் மூடன்போல் சஞ்சரித்தார். அந்த நிலைமையைத் தான் மஹர்ஷிகள் பரமஹம்சாசிரமம் என்கிறார்கள். பின்னும், யக்ஞ புருஷராகிய அவர் என்னால் செய்யப்பட்ட யாகத்தில் ஹயக்ரீவராக அவதரித்தார். அந்த ஹயக்ரீவர் பொன்னிறமுள்ளவர். வேத ஸ்வரூபி. ஸகல யாக ஸ்வரூபி. சகலதேவஸ்வரூபி. வேதங்கள் யாவும் மூச்சுவிடும் அவருடைய மூக்கிலிருந்து உண்டாயின. பின்னும் ப்ரளய காலத்தில் பலவகையான வேதங்கள் என்னுடைய முகத்திலிருந்து நழுவிப்போனதால் வேத மார்க்கங் களைத் திருப்பி என்னிடம் கொடுப்பதற்காக அவை களை எடுத்துக்கொண்டு மத்ஸ்ய ரூபத்துடன் பகவான் சமுத்திர ஜலத்தில் விளையாடினார். அப்பொழுது ஸகல ப்ராணிகளுக்கும் ஆதரரும், பூமியைப் ப்ரதானமாயுடையவருமான அந்தப் பரம புருஷனை வைவஸ்வத மனு தர்சித்தார். தவிரவும், அந்த ஆதி புருஷன், தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து அமிருதத்திற்காகப் பாற்கடலைக் கடையும்பொழுது ஆமை உருவங்கொண்டு மத்தாயிருந்து மந்தர மலையைத் தம்முடைய முதுகில் தாங்கினார். அப்பொழுது அந்த மலை உராய்வதால் தினவைப் போக்கிக் கொண்டு ஸுகமாய்த் தூங்கினார். மேலும் தேவர்களுக்கு நேரும் கஷ்டங்களை நிவர்த்திக்கும் அந்த மஹாபுருஷன் சிங்கப் பற்களால் பயங்கரமாயும் குரூரமான புருவங்களுள்ளதுமான நரஸிம்ஹ சரீரத்தை எடுத்துக் கொண்டு, கதாயுதத்துடன் தமக்கு எதிரில் ஓடிவரும் ஹிரண்யகசிபு என்ற அசுரனைத் தமது மடியில் தள்ளி, நகங்களால் கிழித்துக் கொன்றார். முன்னொரு காலத்தில் ஒரு சிறந்த

யானையானது பெரிதான ஒரு ஏரியில் ஜலம் குடிக்க இறங்கினபொழுது அங்கிருந்த மிகுந்த பலசாலியான ஒரு முதலை அதைப் பிடித்துக் கொண்டது. அதனால் அந்த யானை மிகவும் துன்பமடைந்து துதிக்கையில் தாமரைப் புஷ்பத்தை வைத்துக் கொண்டு, 'ஆதி புருஷ! ஸகல லோகத்துக்கும் அதிபதியே கேட்பவர் களைப் பரிசுத்தப்படுத்தும் கீர்த்தியுள்ளவரே' என்னைக் காப்பாற்ற வேண்டும். உம்முடைய நாமங்களைக் கேட்பவர்களுக்கு ஸகல மங்களமும் உண்டாகின்றன" என உரக்கக் கதறிற்று. அளவற்ற மஹிமையுள்ள ஸ்ரீ நாராயணன் அதனைக் கேட்டுச் சக்ராயுதத்தைத் தரித்து, கருடன் மீது ஏறிக்கொண்டு அவ்விடம் வந்து சக்ராயுதத்தால் முதலையின் வாயைப் பிளந்து சரணமடைந்த யானையின் துதிக்கையைப் பிடித்து மிகுந்த கருணையால் அதை அக்குளத்திலிருந்து கரை சேர்த்தார். பின்னும் யக்ஞ புருஷனாகிய மஹாவிஷ்ணுவானவர் அதிதி தேவியின் புத்திரர் களான தேவர்களுக்குத் தம்பியாய் அவதரித்தவரானா லும், குணங்களால் சிறந்தவராயும், வாமன ரூபியாயு மிருந்து பலிச் சக்ரவர்த்தியினிடம் மூன்று அடி பூமியைப் பெற்று ஸகல உலகங்களையும் ஆக்ரமித்தார். உலகத்தில் தர்மம் தவறாமல் நடப்பவர்கள் சத்துருவைக் கொல்லும் ஸாமர்த்யமுள்ளவர்களானாலும அவர்கள் உடைய ஐசுவர்யத்தை அபஹரிப்பதற்கு யாசிக்கிற வழியைத் தவிர வேறு மார்க்கமில்லை. ஓ நாரத பலிச் சக்ர வர்த்தியானவன் பகவானுடைய பாதங்களை அலம்பி, அந்தச் சுத்தமான தீர்த்தத்தைத் தன்னுடைய தலையில் புரோக்ஷித்துக் கொண்டு (தனது புரோஹிதரான சுக்ராச்சாரியரால் தடுக்கப்பட்டும்) ப்ரதிக்ஞையை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தால்

மூவுலகத்தையும், தன்னுடைய சரீரத்தையும் சத்துரு வாகிய பகவானுக்குக் கொடுத்தான். அப்படிப்பட்ட பக்தனுக்கு பகவான் தேவராஜ்யத்தைக் கொடுப்பது போதாதென்று நினைத்துத் தமது ஸாலோக்யத்தைக் கொடுத்தார். மேலும் நீர் விசேஷ பக்தியுள்ளவராய், பகவானை நோக்கி யோக சாஸ்திரத்தை உபதேசிக்க வேண்டுமென்று கேட்டீர் அல்லவா? அப்பொழுது அவர் வாஸுதேவரே நம்மைக் காப்பாற்றுகிறவர் என்று நிச்சயமாய் நம்பியிருப்பவர்களால் சீக்கிரத்தில் அறியக்கூடியதும், பாகவத சாஸ்திரத்தில் வர்ணிக்கப் படுகிறதும் ஆத்மாவின் உண்மையைக் காட்டுகிறது மான ஞானத்தையும், யோகத்தையும் உமக்கு உபதேசித்தார். மேலும், மன்வந்தரங்களில் பகவான் மனுவின் வம்சத்தைக் காப்பாற்றுகிறவராய்ப் பத்துத் திக்குகளிலும் தம்முடைய தேஜஸை ஸ்தாபித்து, அதனால் துஷ்டர்களான அரசர்களை நிக்ரஹித்து தம்முடைய கீர்த்தியை ஸத்திய லோகத்திலும் பரவச் செய்கிறார். அந்தப் பரமாத்மாவேதான் தன்வந்த்ரியாக அவதரித்து தம்முடைய கீர்த்தி யென்கிற பெயரி னாலேயே மஹாரோக முள்ளவர்களுடைய வியாதியைப் போக்குகிறார்; பின்னும் தீர்க்கமான ஆயுஸைக் கொடுக்கக் கூடிய அந்தப் பகவான் யாகங்களில் ஹவிர்பாகத்தை (முந்தி அஸுரர்களால் தடுக்கப்பட்டிருந்ததை) அடைந்தார். மேலும், ஆயுர் வேதமாகிய வைத்திய சாஸ்திரத்தையும் உலகத்தில் பரவச் செய்தார். தவிரவும் மிகுந்த பராக்கிரமமுள்ள வரும், மஹாத்மாவுமான அந்த நாராயணன் பரசு ராமனாக அவதரித்துப் ப்ராம்மணர்களைத் துவேஷித்த வர்களும் நன்மார்க்கத்தை விட்டுத்தவறினவர்களும், நரகத்தை அடைய விரும்பினவர்களும் நாசத்தை

அடைவதற்கு என்றே தெய்வத்தால் விருத்தி பண்ணப் பட்டவர்களும் பூமிக்கு மிகுந்த உபத்திரவத்தைச் செய்பவர்களுமான க்ஷத்திரியர்களை இருபத்தோருதரம் கோடரியைக் கொண்டு கொன்றார். அந்த மஹா புருஷனே, என்னிடத்தில் தபவு செய்து, முகமலர்ச்சி யுள்ளவராய் இக்ஷ்வாகு வம்சத்தில் தம்முடைய அம்சங்களாகிய பரதன் முதலியவர்களுடன் தசரதருக்குப் பிள்ளையாக ஸ்ரீராமனென்ற பெயருடன் அவதரிப் பார். பிறகு பிதாவாகிய தசரதருடைய அனுமதியின் மேல் தம்பியாகிய லக்ஷ்மணருடனும், பார்யையான ஸீதாதேவியுடனும் தண்டகாரண்யஞ் செல்வார். அப்பொழுது இராவணன் அவரிடம் விரோதம் செய்து கொண்டதனால் பந்துக்களை யிழப்பான். பின்பு திரிபுர ஸம்ஹாரம் செய்வதற்கு முயற்சித்த பரமசிவன் போல ராவணனைக் கொல்வதற்காக இலங்கா நகரம் போக விரும்பிய ராமனைக் கண்டு ஸமுத்திரம் பயந்து நடுங்கும். மேலும் ஸீதையானவள் இலங்கா நகரத்திலிருப்பதால் அவளைப் பாராமல் கலங்கியதும், கோபத்தால்ப் சிவந்ததுமான ஸ்ரீ ராமன் உடைய பார்வையால் அந்த ஸமுத்திரத்திலிருக்கும் மகரங்களும், ஸர்ப்பங்களும், முதலைகளும் மிகவும் தாபத்தையடையும். பின்பு ஸமுத்திரம் வழிகாட்டும்; அதன் வழியாக ஸ்ரீராமன் இலங்கா நகரம் போவார்; அவ்விடத்தில் வஸிக்கும் ராவணன் மிகவும் பலமுள்ள வன்; அவன் ஐராவதத்துடன் யுத்தம் செய்யும் போது, அது தன்னுடைய தந்தங்களால் இராவணனுடைய மார்பில் குத்திற்று; பிறகு அவைகளை பிடுங்க முடியாமல் தலையை அசைக்கத் தந்தங்கள் முறிந்து போயின. அப்படி இராவணனுடைய மார்பில் பதிந்த யானையின் தந்தங்களுடைய காந்தியால் பத்துத்

திக்குகளும் ப்ரகாசிக்கின்றன. தவிரவும், அவன், எனக்கு ஸமமானவர்கள் உலகத்தில் யார் இருக்கிறார் கள் ? என்று கர்வத்தால் சிரிப்பதுமுண்டு. அப்படிப் பட்ட சத்ருவாகிய அந்த ராக்ஷஸனுடைய கர்வத்தை ஸைன்யத்தின் மத்தியில் வில்வினுடைய சப்தத்தாலேயே போக்கடித்து, அவனை நாசஞ் செய்யப் போகிறார். பிறகு அஸுராம்சமான அரசர்கள் வெகுவாய்ப் பூமியில் பிறந்ததனால் பூமிக்கு விசேஷ பாரம் ஏற்படுமாதலால் அதனை நிவர்த்திப்பதற்காக ஸாமான்ய ஜனங்களால் அறியக்கூடாத மார்க்கமுள்ள வரும், வெண்மை நிறமுள்ளது, கருமை நிறமுள்ளது மான தலைமயிர்களுள்ளவருமான ஸ்ரீ மஹாவிஷ்ணு வானவர் பலராமனாகவும் கிருஷ்ணனாகவும் அவதரித்து, தம்முடைய மஹிமையைக் காட்டும் லீலைகளைச் செய்வார். எப்படியெனில் அவர் குழந்தையாயிருக்கும்போது பூதனை யென்ற ராக்ஷஸியைக் கொல்வார். மூன்றுமாதங்கள் சென்ற பிறகு சகட ரூபியான அஸுரனை ஸம்ஹரிப்பார். முழங்கால்களைக் கொண்டு தவழும் போதே ஆகாசம் வரையில் உயர்ந்தவைகளான அர்ஜுன மரங்களின் நடுவில் புகுந்து அவைகளைப் பூமியில் தள்ளுவார். அவர் பகவதவதாரமாயில்லா விடில் இப்படிச் செய்யமுடியாது. தவிரவும், விஷ ஜலத்தைக் குடித்து மூர்ச்சையடைந்த இடையர்களையும்; பசுக்களையும் தம்முடைய அனுக்கிரஹமுள்ள பார்வையால் பிழைக்கச் செய்து யமுனையிலிருந்து அந்த மடுவைச் சுத்தப்படுத்துவதற்காக அதிலிருந்து மிகுந்த விஷ வேகமுள்ள காளியனென்ற ஸர்ப்பத்தை அதைவிட்டு ஓடும்படி செய்வார் பிறகு, அந்த அமானுஷ காரியத்தைப் பார்த்து கோபர்கள் ஆச்சரியமடைந்து

அன்று இரவு யமுனையின் கரையில் படுத்துத் தூங்கு வார்கள். கோடைக் காலமாகையால் அப்பொழுது நான்கு புறத்திலும் காட்டில் அக்கினி பற்றிக்கொள்ளும். அப்பொழுது ஒருவராலும் அறியக் கூடாத வீர்யமுள்ள பகவான் பலராமனுடன் கோபர்கள் அனைவரையும் கண்களை மூடிக் கொள்ளச் செய்து, அவர்களை அந்த ஆபத்திலிருந்தும் காப்பாற்றுவார். மேலும் அவருடைய தாயான யசோதையானவள் தன் வீட்டிலிருக்கும் கயிறுகளால் பிள்ளையான ஸ்ரீ கிருஷ்ணனைக் கட்டியும், அவைகள் முடிவதற்குப் போதாமலிருக்கும். அப்பொழுது, அந்தப் பகவான் கொட்டாவி விட்டு வாயைத் திறப்பார். யசோதை அவருடைய வயிற்றில் பதினான்கு லோகங்களையும் பார்த்துப் புத்திரனுடைய மஹிமையைத் தெரிந்து கொள்வாள். தவிரவும், வருணருடைய பாசத்தால் கட்டப்பட்டுள்ள நந்தகோபரை ஸம்ரக்ஷிப்பார். மயனுடைய புத்திரனால் பூமிக்குள் மறைக்கப்பட்டு இருந்த கோபர்களைக் காப்பாற்றுவார். பகல்முழுவதும் வேலைசெய்து களைத்து, இராத்திரி தூங்கிக் கொண்டிருக்கும் கோகுலவாஸிகளான ஜனங்களை வைகுண்ட லோகஞ் சேர்ப்பார். . இந்திரனை உத்தேசித்துக் கோபர்களால் ஒவ்வொரு வருஷத்திலும் செய்யப்பட்டு வரும் பூஜையானது ஒரு வருஷத்தில் நிறுத்தப்படும். அதனால் மிகவும் கோபங் கொண்டு பசுக்களை நாசஞ் செய்வதற்காக மழையை பெய்யச் செய்வார். அப்போது ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஏழு வயதுள்ளவரானாலும் கோவர்த்தனமென்னும் மலையை நாய்க்குடையைப் போல் எளிதில் ஒரு கையால் தூக்கிக் குடையாக ஏழுநாள் வரையிலும் பிடித்துப் பசுக்களையும், கோபர்களையும்

காப்பாற்றுவார். ஒரு நாள் ராத்திரியில் சந்திரிகை யால் வெண்ணிறமுள்ள காட்டில் ராஸக்கிரீடையில் பகவான் கானம் பண்ணுவார். அந்தப் பாட்டிலுள்ள பதங்கள் இனியவைகளாயிருக்கும், ராகாலாபனம் மிக்கமேலானதாக இருக்கும். அதனால் கோபிகை களுக்கும் மன்மத தாபம் விருத்தியாகும். அந்த ஸமயத்தில் அவர்களைச் சங்கசூடன் என்ற குபேரன் உடைய வேலைக்காரன் அபஹரித்துப் போவான். பகவான் அவனை ஸம்ஹரிப்பார். மேலும் பகன், கேசி, அரிஷ்டன் சாணூரன் முதலிய மல்லர்கள்,

குவலயாபீடமென்ற யானை, கம்ஸன், நரகாஸுரன் மௌண்ட்ரகன், ஸால்வன், தந்தவக்திரன், சம்பரன் விடூதரன், யவனன், ஏழு விருஷபங்கள் ஆகிய இவர்கள் ஸ்ரீ கிருஷ்ண பகவானாலும், பிரலம்பன், தேனுகன், துவிதனென்ற வானரன், பல்வலவன், ருக்மி முதலியவர்கள் பலராம ரூபியான மஹாவிஷ்ணு வினாலும், யுத்தத்தில் மிகுந்த ஸாமார்த்தியமுள்ள காம்போஜர், மத்ஸயர், குருக்கள், ஸிருஞ்ஜயர், கேகயர் முதலியவர்கள் பீமார்ஜுன ரூபமாகிய பரமபுருஷனா லும் கொல்லப்பட்டு வைகுண்டஞ் சேர்க்கப்படுவார் கள். பின்னும், கால மஹிமையால் ஜனங்களுக்கும் ஆயுஸும் புத்தியும் குறையும்போது, பகவான் ஒவ்வொரு யுகத்திலும்; ஸத்ய வதியினிடம் அவதரித்து, ஸமுத்திரம் போல விஸ்தாரமாகிய வேதங்களை அவர்களுக்குத் தக்கபடி சாகை சாகைகளாகப் பிரிப்பார். பின்னும் ஒரு காலத்தில் அஸுரர்கள் வேதமார்க்கத்தை ஆச்ரயித்து மயனால் செய்யப் பட்டதும் அறியக் கூடாத வேகமுள்ளதுமான (இரும்பு, வெள்ளி, தாமிரம் இவைகளால்

செய்யப்பட்ட) பட்டணங்களால் லோகங்களை உபத்திரவிப்பார்கள். அப்பொழுது பகவான் அவர்கள் உடைய புத்திக்கு மோஹத்தையும் (யுக்தமானவை களை விட்டுவிடுவது) ப்ரலோபத்தையும் (யுக்தமல்லாத வைகளை கிரஹிப்பது) உண்டாக்கும் பாஷண்ட வேஷத்தைத் தரித்து (புத்தாவதாரஞ் செய்து) தர்மம் போலத் தோன்றும் பாஷண்ட தர்மத்தை வெகுவாகச் சொல்வார். எப்பொழுது ஸாதுக்களுடைய கிருஹங்களிலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சரிதங்கள் கானஞ் செய்யப்படாமல் இருக்குமோ, எந்தக் காலத்தில் ப்ராம்மணர்களும், க்ஷத்ரியர்களும், வைச்யர்களும் பாஷண்டர்களாகவும், சூத்ரர்கள் அரசர்களாகவு மிருப்பார்களோ, எந்த ஸமயத்தில் ஸ்வாஹா, ஸ்வதா, வஷட் என்ற சப்தங்கள் கேட்க அரிதாகவிருக்குமோ, அப்பொழுது (கலியுகத்தின் முடிவில்) கல்கியாகிப் பகவான் அவதரித்துக் கலியை நிக்ரஹிப்பார். மேலும் நான் துஸும் (ஸ்ருஷ்டிக்கு முன்னிருந்த நிலையை யோஜிப்பது) மரீசி முதலிய ஒன்பது பிரஜாதிபதிகளும் ஜகத்தை ஸ்ருஷ்டிப்பதற்காக ஏற்பட்ட பகவான் உடைய மாயா விபூதிகளேயாம். தர்மமும், யக்ஞமும் (விஷ்ணு) மனுக்களும்; தேவ சிரேஷ்டர்களும் அரசர் களும், ஜகத்தைக் காப்பாற்றுவதற்காக நியமிக்கப் பட்ட விபூதிகளாகிறார்கள். அதர்மமும், ருத்ரரும், கோப ஸ்வபாவமுள்ள ஸர்ப்பங்களும், அஸுரர்களும், ஸம்ஹாரத்திற்காக ஏற்படுத்தப்பட்டவைகள். ஆகை யால் இந்த ஈச்வரனுடைய மாயா விபூதிகளெல்லாம் அளவற்ற ஆச்சர்யகரமான சக்தியுள்ளவைகள். பூமியின் தூளிகளைப் பிரித்து எண்ணக்கூடிய சக்தியுள்ள கவியாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் லீலா விபூதிகள் எல்லாவற்றையும் அறிய முடியாது.

ஆகையால் சுருக்கமாகச் சொன்னேன். அந்தப் பகவான் மிகவும் அசைந்து கொண்டிருந்ததும், ஸத்திய லோகத்திற்குக் கீழ்ப்பட்டதுமான ஸ்வர்க்கத்தைத் தம்முடைய தடையற்ற வேகத்தால் அசையாமல் இருக்கச் செய்தார். ஆகையால் எனக்கும்; உமக்கும் மூத்தவர்களான ஸநத்குமாரர் முதலியவர்களுக்கும், அந்தப் புருஷனுடைய மாயாபலம் இவ்வளவென்று தெரியாது. மற்றவர்கள் தெரிந்துகொள்ள நியாயமே யில்லை. ஆயிரம் முகங்களுள்ள ஆதிசேஷ பகவானும் அந்தப் பரமபுருஷனுடைய மஹிமையைக் கானம் பண்ணி, அதன் கரையை அடைய அசக்தராயிருக் கிறார். (முழுவதையும் சொல்ல முடியவில்லை) கடபமற்றுப் பகவானுடைய பாதங்களைப் பூஜிப்பவர் களிடத்தில் (பக்தி செய்பவர்களிடத்தில்) அவருக்குக் கருணை உண்டாகும். புருஷோத்தமருடைய மாயா பலத்தை நன்றாய்த் தெரிந்து கொண்டு அதையும் தாண்டுவார்கள். நாய், நரிகளுக்கு ஆஹாரமாகிய இந்த சரீரத்தில் அவர்களுக்கு மானமிராது. ஓ நாரத, ப்ரஹ்மாவாகிய நான், நீர், உமக்கு முன் பிறந்தவர்களான ஸனத்குமாரர் முதலியவர்கள், பகவானாகிய பரமசிவன், ப்ரஹ்லாதன்; ஸ்வாயம்புவ மனு, அவருடைய பத்தினியாகிய சதரூபை, அவருடைய பெண்கள், பிள்ளைகள் பிராசீனபர்ஹிஸ், ரிபு, என்னும் மஹரிஷி, வேனனுடைய பிதாவாகிய அங்கன், துருவன், இக்ஷ்வாகு, நளன், முசுகுந்தன், வைதேஹர், காதி, ரகு, அம்பரீஷன், ஸகரர், கயன், நஹுஷன், மாந்தாதா, அலர்க்கன், சததன்வா, நந்திதேவர், பீஷ்மர், பலி, அதூர்த் தரயன், திலீபர், ஸௌபரி, உதங்கர், சிபி.தேவலர்,பிப்பலாதர், ஸாரஸ்வதர் உத்தவர் பூரிஷேனர், பராசரர்,

விபீஷணன், ஹனுமான், சுகர், அர்ஜுனன், ஆர்ஷ்ணி ஷேணர், விதுரர், சுருததேவர் முதலிய மற்றவர்கள் ஆகிய எல்லோரும் பகவானுடைய யோகமாயையை அறிவோம். ஸ்திரீகளும், சூத்ரர்களும், ஹூணர்களும் (ஜாதி விசேஷங்கள்) வேடர்கள் பாபகர்மத்தைச் செய்து ஜீவிக்கிறவர்களும், பசு, பக்ஷி முதலிய திர்யக் ஜாதிகளும், பகவத் பக்தர்களுடைய சேர்க்கையாலேயே தேவமாயையைத் தெரிந்து கொண்டு, அதைத் தாண்டுகிறார்கள். சாஸ்திரங்களை அப்யசித்து, அவற்றை மனஸில் தரிக்கக்கூடிய சக்தியுள்ளவர்கள் மாயையை ஜயிப்பார்கள் என்பதில் சந்தேஹமே யில்லை. அந்தப் பரமாத்ம ஸ்வரூபமானது எப்பொழு தும் சாந்தமாயிருக்கிறது. தன்னை அடைந்தவர் களுக்கு ஸம்ஸார பயத்தைப் போக்கி அபயத்தைக் கொடுக்கிறது. அது சுத்தமாகிய ஞானஸ்வரூபம். தோஷமற்றது. எக்காலத்திலும் ஒரே தன்மை யுள்ளதாயிருப்பது. கார்யம், காரணம் இவைகளைவிட வேறானது. பலவகையான காரகம் கிரியை இவைகளுள்ள வேத சப்தங்களால் அந்த ஸ்வரூபம் நிரூபிக்கப்படுகிறதில்லை. மாயையானது புதிதாகக் கல்யாணஞ் செய்துகொண்ட சிறு பெண் போல வெட்கமுள்ளதாய் அந்த ஸ்வரூபத்திற்கு முன்பாக நிற்கிறதில்லை. (அதில் ஸம்பந்தப்படுகிறதில்லை.) அந்த ஸ்வரூபமே ப்ரஹ்மம். அது சோகமற்றது. எப்பொழுதும் ஸுகரூபமானது. அதனிடத்தில் மனத்தைச் செலுத்திய யோகிகள் வேறொன்றையும் அபேக்ஷிக்கிறதில்லை. மழை பெய்யச் செய்யும் மகேந்திரன் ஜலத்திற்காகக் கிணறு வெட்ட வேண்டி மண் வெட்டியை எடுத்துக் கொள்வானா? பல வகையான தாதுக்களால் உண்டான சரீரமானது

அந்தத் தாதுக்கள் பிரியும்போது நாசமடைந்தாலும் ஜீவன் ஆகாசம் போல் நாசமடைகிறதில்லை. ஏனென்றால் அவன் அதனுடன் உண்டானவனல்ல. ஜன்மம் முதலிய விகாரங்களற்றவன். அந்த ஜீவனுக்கு ஸகல வித க்ஷேமத்தையும் கொடுப்பவரும் அந்த மஹா புருஷனேயாம். மகத் தத்வம் முதலியவைகளின் பரிணாம விசேஷங்களால் ஏற்படும் சுபங்கள் அவரிடமிருந்தே உண்டாகின்றன. ஓ, குழந்தாய்! நாரத பகவானுடைய ஸ்வரூபத்தைச் சுருக்கமாகச் சொன்னேன். காரிய காரணங்களடங்கிய ஜகத்தில் அவரைக் காட்டிலும் வேறொன்றுமில்லை. (எல்லாம் பரமாத்ம ஸ்வரூப மென்று கருத்து.) ஸ்ரீமந் நாராயணனால் எனக்கு உபதேசிக்கப்பட்டபடி பகவானுடைய விபூதிகளை உனக்குச் சுருக்கமாகச் சொன்னேன். ஸகல ஸ்வரூபியாகவும், ஸகலத்திற்கு ஆதாரமாயிருக்கும் ஸ்ரீ நாராயணனிடத்தில் மனிதர் களுக்குப் பக்தியுண்டாகும்படி நீ இதை விஸ்தாரப் படுத்து. மோக்ஷத்திற்கு அதிபதியான ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் பூர்ணமாகிய பக்தி யிருக்குமானால், ஜீவன் மனுஷ்ய சரீரத்தில் ஆசைப்படமாட்டான். ஸ்திரமற்ற பார்யை, புத்திரன் முதலியவர்களால் என்ன பிரயோஜனம்? ஸகல பாபங்களையும் போக்கக்கூடிய உத்தம ச்லோகராகிய பகவானிடம் பக்தியுண்டாகாவிடில் அவன் செய்யும் தானங்களா லும் தபஸினாலும் ப்ரயோஜனமில்லை. மேலும் ஜாதிக்கும் ஆசிரமத்திற்கும் தகுந்த தர்மங்களை யனுஷ்டிப்பதாலும், சாஸ்திரங்களை படிப்பதாலும் பலனில்லை.

55. ஆகையால், ஸ்ரீ கிருஷ்ணனாகிய பரமாத்மா வினுடைய லீலைகளை வர்ணிப்பவர்களுக்கும், அதை

அனுமோதிப்பவர்களுக்கும், ச்ரத்தையுடன் நித்தியம் கேட்பவர்களுக்கும் அவித்யை விலகும் என்று ப்ரஹ்மதேவர் சொன்னார்" என்று நாரதருக்கும் ப்ரஹ்மதேவருக்கும் நடந்த ஸம்வாதத்தைப் பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சுகர் உபதேசித்தார்.

நோட்டு

நான்கு –மூலத்தில் சதுஸ்ஸன என்றிருப்பதால் அதற்கு நான்கு புருஷார்த்தங்களைக் கொடுப்பவர் ஆகையால் தத்தாத்ரேயருக்கே சதுஸ்ஸனா என்றும் மற்றொரு பெயர் – சந்த். ப்ரஹ்மதேவருடைய தபோமகிமையால் ஸனத். ஸநாதந, ஸகந்தன, ஸனக என்று நால்வகையாக அவதரித்தார் – வீர. ஸனகர், ஸனாதனர், ஸனந்தனர், ஸனத்குமாரர் என்ற திவ்ய நாமதேயங்களை அடைந்தார் – விஜ. முடியவில்லை இந்தக் கதை பதினோராவது ஸ்கந்தத்தில் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது. வெண்மை நிற பகவானுடைய தலைமயிர்களில் வெண்மை நிறமுள்ளவை சில. கருமை நிறமுள்ளவை சில. அப்படி யிருப்பது அழகேயாம். ஜரை (கிழத்தனம்) யால் ஏற்பட்டதல்ல ஓ மஹாமுனியே! வெண்மை நிறமுள்ளவையும் கருமை நிறமுள்ளவையுமான தம்முடைய கேசங்களை எடுத்தார். –விஷ்ணு புராணம் அந்த ஹரியும் வெண்மை நிறமுள்ள ஒரு மயிரையும், கருமை நிறமுள்ள ஒரு மயிரையும் எறிந்தார். அவை யதுகுலத்திலிருக்கும் ரோகிணி, தேவகி இருவர்களை யும் அடைந்தன. அவ்விரு கேசங்களில் வெண்மை நிறமுள்ளது பலராமனாக ஆயிற்று. கருமை

நிறமுள்ளது ஸ்ரீ கிருஷ்ணனாக அவதரித்தது. மஹா பாரதம். கேசம் அவதரித்தது என்பதால் பகவான் உடைய கேசமே துஷ்டர்களைக் கொல்ல ஸாமார்த்திய முள்ளது என்று காட்டப்பட்டது. பலராமன், ஸ்ரீ கிருஷ்ணன் ஆகிய இவர்களுடைய நிறமும் காட்டப் பட்டது. கேசமே அவதரித்தது என்று தாத்பரியமல்ல. ஸ்ரீ கிருஷ்ணன் ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவே என்று அர்த்தமுள்ள வசனத்தின் விரோதமேற்படுமாகையால் மேற்காட்டியபடியே அர்த்தங்கொள்ள வேண்டும். ஸ்ரீத, ஸ்திரீகளும் ஸ்திரீகளும் சூத்ரர்களும் வேதத்தை அத்யனஞ் செய்யக் கூடாது என்ற சுருதியின்படி வேதாத்யனத்திற்கு அனர்ஹர்களும் தாண்டுகிறார்கள்– முக்தியடைகிறார்கள். வேத சப்தங்களால் பத்தாவது ஸ்கந்தத்தில் ஸ்ருதி கீதையில் இந்த விஷயம் நன்றாய்க் காட்டப்பட்டிருக்கிறது.

அத்தியாயம்- 8

பரீஷித்தின் கேள்வி

அதனைக்கேட்ட பரீஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி ஓ தத்துவத்தைபறிந்தவர்களுக்குள் சிறந்தவரே! மிக்க அதிர்ஷ்டமுள்ளவரே, குணங்களை அதிக்கிரமித் வரராகிய பகவானுடைய குணங்களை, வர்ணிக்கும் படி திவ்ய திருஷ்டியுள்ள நாரதரைப் ப்ரஹ்மதேவர் தூண்டினாரல்லவா? பின்பு அந்த நாரதர் யார் யாருக்கு அந்தப் பகவத் குணங்களை எப்படி உபதேசித் தார்? அதனுடைய உண்மையை அறியவிரும்புகிறேன். அற்புதமான மகிமையுள்ள பகவானுடைய மங்களகர மாகிய கதைகளைச் சொல்ல வேண்டும். அவைகளைக் கேட்டு ச்ரத்தையாய் அவருடைய சரிதங்களை உச்சரிப் பவர்களுடைய மனத்தில் பகவான் வெகு சீக்கிரமாய்ப் ப்ரவேசிக்கிறார். விஷயங்களில் ஆசையொழிந்து மனஸைப் பகவானிடத்தில் செலுத்தி, சரீரத்தைவிட வேண்டும. சரத்காலமானது ஜலத்திலுள்ள தோஷத் தைப்போக்கி, அதை தெளியச் செய்வது போல் ஸ்ரீ கிருஷ்ண பகவான் காதின் வழியாகப் பக்தர்களுடைய ஹ்ருதய கமலத்தில் ப்ரவேசித்து மனோதோஷங்களை நாசஞ் செய்கிறார். சுத்தமான மனமுள்ள புருஷன் ஆசை, துவேஷம் முதலியவைகளை ஒழித்து கிருஷ் ணனுடைய பாதங்களை ஒருபொழுதும் விடமாட் டான். தேசாந்தரத்திலிருந்து வந்தவர்கள் தமக்குச் சொந்தமாகிய வீட்டை விடுவார்களா? தேஹத்தை யுண்டுபண்ணும் மகாபூதங்களுடைய ஸம்பந்தமற்ற வராகிய பகவானுக்கு தேஹம் எப்படி உண்டா கிறது? அல்லது காரணமில்லாமல் உண்டாகிறதா?

அதன் உண்மை உமக்குத் தெரியும். அதனைச் சொல்லவேண்டும். ஸகல லோகங்களின் அமைப்புள்ள புவன கோசமாகிய பத்மமானது எவருடையவயிற்றில் இருந்து உண்டானதோ. அந்தப் புருஷன் உண்மையில் அவயங்களில்லாதவரானாலும், லௌகிக புருஷனுக்கு எவ்வளவு அவயவங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு அவயவங்கள் உள்ளவரென்றும் அப்படிப்பட்ட அவயவங்களின் அமைப்புள்ளவெரென்று சொல்லப் படுகிறாரே, பகவானுடைய கொப்பூழில் தோன்றிய தாமரஸ புஷ்பத்திலிருந்து உண்டானவரும், ஐந்து பூதங்களாலேற்பட்ட சரீரமுள்ளவருமான ப்ரஹ்மதேவர் எவருடைய அனுக்கிரஹத்தால் ப்ராணிகளை ஸ்ருஷ்டிக்கிறார்? விராட்ரூபத்தை எப்படி நேரில் பார்த்தார்? அதைச் சொல்லவேண்டும் மாயைக்கு அதிபதியும் ஸகல கல்யாண குணங்களுக்கு இருப்பிட மாயும் ஜகத்தை உண்டுபண்ணுகிறவரும், அதைப் பரிபாலிப்பவரும், அதை ஸம்ஹரிப்பவருமான மஹா புருஷன் தம்முடைய மாயையைவிட்டு எவ்விடத்தில் சயனித்துக் கொள்கிறார்? தவிரவும் அந்த மஹா புருஷனுடைய அவயவங்களால், உலகங்களும், அவற்றின் அதிபதிகளும் ஸ்ருஷ்டிக்கப்பட்டார்கள் என்றும், லோகபாலர்களால் அந்தப் புருஷனுடைய அவயவங்கள் ஏற்பட்டன என்றும் சொல்லியிருக் கிறீரல்லவா? அதையும் விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும் மேலும், கல்பம் என்பதும், விகல்பம் என்பதும் எவ்வளவு காலங்கொண்டது? நடந்தது. நடக்கிறது, இனி நடப்பது ஆகிய காலங்களுள் எப்படி அனுமானிக்கப்படுகின்றன? ப்ரஹ்மதேவர் முதலிய வர்களின் ஆயுள் எவ்வளவு காலங்களடங்கியது? ஓ ப்ராஹ்மணோத்தம! காஷ்டை முதலாக அணுவாகியதும்,

வர்ஷம் முதலாகப் பெரிதாகியதுமான காலத்தின் பேதங்கள் எப்போர்ப்பட்டவைகள்? கர்மங்களால் அடையக்கூடிய ஸ்தானங்கள் எவை? அவைகளின் ஸ்வரூபம் யாது? ஸத்வம் முதலிய குணங்களும், குணமுள்ளவர்களான ஜீவர்களும் பரிணாமத்தை (வேறு ரூபத்தை) அடையுமிடும் போது புண்ய பாப கர்மங்களுடைய கூட்டம் எதனால், எப்படிக் கிரஹிக்கப்படுகிறது? (எந்தக் கர்மங்களை, எப்படிச் செய்தால், எவன் தேவாதி சரீரத்தை அடைவான் என்று கருத்து) தவிரவும் பூமி, பாதாளம், திக்குகள், ஆகாசம் கிரஹங்கள், நக்ஷத்திரங்கள் மலைகள், ஆறுகள், ஸமுத்திரம், த்வீபங்கள் ஆகிய இவைகள் உற்பத்தியையும், அவைகளில் வஸிக்கும் ப்ராணிகளின் உற்பத்தியையும் சொல்லவேண்டும். அண்டகோசத்தின் வெளியிலும், உள்ளேயுமுள்ள அளவும், மஹாபுருஷர் களுடைய சரிதமும் வர்ணங்கள் ஆசிரமங்கள் ஆகிய இவைகளின் நிச்சயமும் சொல்லப்படவேண்டும். பின்னும் பகவானுடைய ஆச்சர்யகரமான அவதாரங் களுடைய சரிதத்தையும் யுகங்களுடைய மானத்தையும் ஒவ்வொரு யுகத்தின் தர்மங்களையும், மனிதர்களுக்குப் பொதுவாகிய தர்மங்களையும், யார் யார், எவ்வித ஜீவனஞ் செய்கிறார்களோ அதற்குத் தகுந்த தர்மங் களையும், ராஜ தர்மங்களையும், ஆபத்தர்மங் களையும் கேட்க விரும்புகிறேன். தத்துவங்களுடைய ஸ்வரூபம், அவைகளின் காரணம், பகவானை ஆராதிக்கும் முறை. அஷ்டாங்க யோகத்தின் முறை, யோகாப்யாசஞ் செய்து அணிமா முதலிய ஐசுவரியங் களையடைந்து, அர்ச்சிராதி மார்க்கத்தை யடைதல்; லிங்க சரீரத்தின் லயம் இவைகளையும், வேதங்கள்; ஆயுர்வேதம் முதலிய உபவேதங்கள், தர்ம சாஸ்திரம்.

இதிகாஸம், புராணம் முதலியவைகளின் ஸ்வரூபத்தையும் நிரூபிக்கவேண்டும். மேலும் ஸகல பிராணிகளுடைய உற்பத்தி, ஸ்திதி ஸம்ஹாரம், , யாகம் குளம் வெட்டுவிப்பது முதலிய பூர்த்த தர்மம், அக்னிஹோத்ரம் முதலிய காம்ய கர்மங்கள் தர்மார்த்த கர்மங்கள் ஆகிய இவைகளை அனுஷ்டிக்கும் முறைகளையும் சொல்லவேண்டும். அணுசாயிகளான ஜீவர்களுடைய உற்பத்தியையும், பாஷண்ட தர்மத்தின் உற்பத்தியையும் ஆத்மாவிற்கு ஏற்படும் பந்த மோக்ஷங்களையும். ஆத்மா சுத்த ஸ்வரூபராக இருப்பதையும், ஸ்வதந்தரராகிய பகவான் தம்முடைய மாயையுடன் விளையாடுகிறதையும்; அந்த மாயையை விட்டு ஸாக்ஷிபோல உதாசீனராக இருப்பதையும், மற்றும் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள விரும்பி, தங்களைப் பிரார்த்திக்கும் சரணாகதனாகிய எனக்கு வரிசையாகச் சொல்லவேண்டும். ப்ரஹ்மதேவரால் இவைகள் அறியப்பட்டிருப்பது போல உம்மாலும் நன்றாய் அறியப்பட்டிருக்கின்றன. முன்னோர்கள் அனுஷ்டித்த தர்மத்தையே பிந்தியவர்கள் அனுஷ்டிக்கிறார்கள். ஓ ப்ராஹ்மண நான் போஜனம் செய்யாமல் விரதமுள்ளவனானாலும் தங்களுடைய முகமாகிய தாமரை மலரிலிருந்து பெருகிவரும் பகவத் கதையாகிய அமிருதத்தைப் பானஞ் செய்வதால் ப்ராணனுக்கு யாதொரு உபத்திரவமுமில்லை. ஆகையால், நாரதருக்கு ப்ரஹ்மதேவர் உபதேசித்த படி எனக்குக் தாங்கள் உபதேசிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார்.

27–29. அவற்றைக் கேட்ட சுகர் அரசனிடம் மிகவும் சந்தோஷமடைந்து, 'பகவானுடைய சரிதத்தைச்

சொல்லுகிறேன்' என்று ஒப்புக்கொண்டு, ப்ரஹ்ம கல்பத்தில் ப்ரஹ்ம தேவருக்கு ஸ்ரீநாராயணனால் உபதேசிக்கப்பட்டதும் வேதத்திற்கு சமமானதுமாகிய பாகவதத்தையே பாண்டு குலத்தில் பிறந்தவரும், மேலானவருமான பரீக்ஷித்து மஹாராஜன் கேட்டவைகளுக்குக் கிரமமாய் மறுமொழி சொல்ல ஆரம்பித்தார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–9

சுகருடைய மறுமொழி

ஓ மஹாராஜ அனுபவ ஸ்வரூபியான பரமாத்மாவிற்குத் தேஹமும் முதலியவைகளின் ஸம்பந்தம் ஸம்பவிக்கிறதில்லை. சொப்பனத்தில் கண்ட தேஹத்தின் சம்பந்தம் உண்மையில் ஜீவனுக்கு இல்லை யல்லவா? ஆகையால் பரமாத்மாவிற்கு ஸம்ஸார சம்பந்தமானது மாயையேயொழிய உண்மையிலில்லை. மேலும், அந்த ஜீவன் பலவகையான ரூபமுள்ள மாயையால் பல விதமான ரூபமுள்ளவனாகத்தோன்றுகிறான். இந்த மாயையினுடைய குணங்களில் (விஷயங்களில்) ரமித்துக் கொண்டு 'நான், என்னுடையது' என்ற அபிமானத்தை அடைகிறான். காலம் (புருஷன்), மாயை (ப்ரக்ருதி) ஆகிய இவைகளைக் காட்டிலும் மேலான தன்னுடைய மஹிமையில் எப்பொழுது ஜீவன் ரமிக்கிறானோ அப்பொழுது 'நான், என்னுடையது' என்ற இருவகையான அபிமானத்தை விட்டு மோஹம் நீங்கி, நிஜ ரூபமாக இருக்கிறான். (பக்தி யோகத்தால் மாயா சம்பந்தம் அற்றுப்போனால் மோக்ஷமும் கிடைக்குமென்பது தாத்பர்யம்.) ஸ்ருஷ்டி காலத்தில் ப்ரஹ்மதேவர் கபடம் அற்றுத் தபஸ் செய்து பகவானை சந்தோஷப்படுத்தினார். அதனால் நாராயணன் அவரிடத்தில் பிரியப்பட்டுத் தம்முடைய சத்திய ஸ்வரூபத்தை அவருக்குக் காட்டி ஜீவனுடைய தத்துவ ஞானத்திற்காக எதனைச் சொன்னாரோ, அதை நான் உமக்குச் சொல்லுகிறேன். முற்காலத்தில் பக்தர்களுக்கு முக்கிய குருவாயும் தேவர்களுக்கு முந்தினவருமான ப்ரஹ்மதேவர் தமக்கு இருப்பிடம்

ஆகிய தாமரை புஷ்பத்திலிருந்து இந்த ஜகத்தை எப்படி ஸ்ருஷ்டிக்கிறது என்று யோசித்தார். அப்படியும் அவருக்கு அது விஷயமாய் ஒன்றும் தோன்றவில்லை. ஓ பரீக்ஷித்து மஹாராஜனே! இப்படியிருக்கையில் ஒரு சமயத்தில் ஜலத்திலிருந்து தபி என்று இரண்டு தரம் தொனியுண்டாயிற்று அவ்விரண்டு அக்ஷரங்கள் ஸ்பர்சமென்ற (ககாரம் முதல் மகாரம் வரையிலுள்ள அக்ஷரங்கள்.) அக்ஷரங்களில் பதினாறாவதும் இருபத்தொன்றாவதுமாக இருந்தன. பணத்தின் ஆசையை ஒழித்தவர்களுக்கு அவையே பணமாயிருக்கின்றன. பிறகு ப்ரஹ்மதேவர் அந்த வார்த்தையைக் கேட்டு, இதைச் சொன்னவர் யாராயிருக்கலாமென்று நான்கு புறத்திலும் திரும்பித் திரும்பிப் பார்த்ததும் அவ்விடத்தில் ஒருவரையும் காணததால் மறுபடியும் அந்தத் தாமரை புஷ்பத்திலிருந்து இதைப்பற்றி யோசித்துத் தம்மைத் தபஸ் செய்யும்படி பகவான் ஆஜ்ஞாபித்திருப்பதாக நிச்சயித்துத் தபஸிற்கு முயற்சித்தார். பின்பு வீணாகாத ஞானமுள்ளவரும் மிக்க தபஸ்வியுமான அந்த ப்ரஹ்மதேவர் ஞானேந்திரியங்களையும், கர்மேந்திரியங்களையும், மனஸையும், ப்ராணனையும் ஜயித்து, தேவமானத்தால் ஆயிரம் வர்ஷங்கள் தபஸ் செய்தார். அதனால் ஸகல லோகங்களுக்கும் தாபம் உண்டாயிற்று. இப்படித் தபஸ் செய்து ப்ரஹ்மதேவர் பரமாத்மாவைச் சந்தோஷப்படுத்தினதால் அந்தப் பகவான் தமது வைகுண்ட லோகத்தை அவருக்குக் காட்டினார். அதைக் காட்டிலும் மேலானது ஒன்றுமில்லை; அது க்ஷ்டம், மோஹம் முதலிய தோஷமற்றது. புண்யஞ் செய்தவர்களான வித்வான்களால் ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டது. மேலும் ரஜோகுணமும்

தமோகுணமும், அவைகள் கலந்த ஸத்வ குணமுமே அந்த உலகத்திலில்லை. (சுத்த ஸத்வ குணமே அவ்வுலகத்தில் ப்ரகாசிப்பதென்பது தாத்பரியம்.) தவிரவும் காலத்தின் ஸாமர்த்தியம் அவ்விடத்தில் உபயோகப் படுகிறதில்லை. மாயை, ராகம், உலோபம் ஆகிய இவைகளும் அந்த லோகத்திலில்லை. பின்னும், தேவர்களாலும், அஸுரர்களாலும் பூஜிக்கப்பட்ட பார்ஷத கணங்கள் அவ்விடத்தில் வஸிக்கிறார்கள். மேலும் அந்தப் பார்ஷதர்களெல்லோரும் நீருண்ட மேகம் போன்ற நிறமுள்ளவர்கள். தாமரை மலர் போன்ற கண்களுள்ளவர்கள். பீதாம்பரத்தைத் தரித்த வர்கள். மனோஹரமாயும், சுத்தமாயுமுள்ள தேக காந்தியுள்ளவர்கள். மிகுந்த அழகுள்ளவர்கள். நான்கு கைகளுள்ளவர்கள். மிகுந்த ப்ரகாசமுள்ள உத்தம ரத்தினகளிழைத்த திவ்ய ஆபரணங்களால் அலங் கரிக்கப்பட்டவர்கள். சிலர் பவழம், வைடூரியம் தாமரைத் தண்டு இவைகள் போன்ற நிறமுள்ளவர்கள். குண்டலம், கிரீடம், மாலை இவைகளால் பிரகாசிப் பவர்கள் மிகுந்த காந்தியுள்ள மஹாத்மாக்களுடைய விமானங்களால் அந்த லோகமானது ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறது. மின்னல்களுடன் கூடிய மேகங் களால் ஆகாசம்போல, உத்தம ஸ்திரீகளின் காந்தியால் விளங்குகிறது. மேலும் அவ்விடத்தில் லக்ஷ்மிதேவி நிஜஸ்வரூபத்துடன் பகவானுடைய பாதாரவிந்தங்களைப் பலவகையான விபூதிகளால் பூஜிக்கிறாள். மேலும், அவள் ஊஞ்சலின்மீதேறித் தன்பர்த்தாவாகிய நாராயணனுடைய ஸகல கல்யாண குணங் களையும் கானம் செய்து கொண்டு ஆனந்தமாய் வஸிக்கிறாள். அப்பொழுது வஸந்த ருதுவும், அதன் பின் செல்லுகின்ற வண்டுகளும், கூடக் கானம்

செய்கின்றன. இம்மாதிரியான அந்தக் க்ருஹத்தில் யஜ்ஞபுருஷனும், ஸகல ஜகத்திற்கு அதிபதியும், பக்தர்களுக்குப் ப்ரபுவும் ஸ்ரீயப்பதியுமான பகவானைப் ப்ரஹ்மதேவர் தரிசித்தார். ஸனனந்தர் நந்தர் முதலிய பூஜ்யர்களான பார்ஷதர்கள் அவரை ஸேவிக் கிறார்கள். அந்தப் பகவான் தம்முடைய வேலைக் காரர்களுக்கு அனுக்கிரகம் செய்வதிலேயே நோக்க முள்ளவர். புன்சிரிப்புக் கொண்டதும், சிவந்த கண்களுள்ளதுமான முகமுள்ளவர். பார்க்கப்பிரியமானவர். கிரீடமுள்ளவர். குண்டலங்களால் ப்ரகாசிப்பவர். நான்கு கைகளுள்ளவர். பீதாம்பரத்தால் அலங் கரிக்கப்பட்டவர். மார்பில் வஸிக்கும் லக்ஷ்மியுள்ளவர். உயர்ந்த சிம்மாசனத்திலிருப்பவர் ப்ரக்ருதி புருஷன், மஹத்தத்வம், அஹங்காரம் ஆகிய நான்கு சக்தி களாலும் ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் மனஸ், ஐந்து பூதங்கள், ஐந்து தன்மாத்திரைகள் ஆகிய இருபத்தைந்து தத்துவங்களாலும் சூழப்பட்டவர். தமக்கு இயற்கையானதும் மற்றவர்களுக்குத் தபஸ் முதலியவைகளால் கிடைக்கக் கூடியவைகளுமான ஐசுவர்யங்களால் தமது ஸ்வரூபத்திலேயே ரமித்துக் கொண்டிருப்பவர்.

18–24 அப்போர்ப்பட்ட பகவானுடைய ஸ்வரூ பத்தைப் ப்ரஹ்மதேவர் பார்த்து, அதனால் உண்டாகிய ஆனந்தத்தால் பூர்ணரானார். அப் பொழுது அவருக்கு மயிர்க்கூச்சலுண்டாயிற்று. பகவானிடத்திலுள்ள பக்தி விசேஷத்தால் அவருடைய இரு கண்களிலிருந்தும் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. பின்னுமவர் பரம ஹம்ஸாசிரமத்தால் அடையக்கூடிய பகவானுடைய பாதாரவிந்தத்தை

நமஸ்கரித்தார். அப்பொழுது பகவான் தம்மிடத்தில் விசேஷ பிரீதியுள்ளவரும், ப்ரஜைகளை ஸ்ருஷ்டிப் பதில் தம்மால் ஏவக்கூடியவரும், அதற்காகத் தம்மைக் குறித்து தபஸ் செய்தவரும் ஸமர்த்தருமான அந்தப் ப்ரஹ்ம தேவரை நோக்கி மிகுந்த ப்ரியத்துடன் அவருடைய கையைப் பிடித்துக் கொண்டு புன் சிரிப்புடன், ஓ வேதத்தை முகத்தில் வைத்துக் கொண்டிருக்கும் ப்ரஹ்ம தேவரே! லோகங்களை ஸ்ருஷ்டிப்பதற்காக வெகுகாலம் தபஸ் செய்து என்னைச் சந்தோஷப்படுத்தினீர். கபடமுள்ள யோகி களால் என்னை ஸந்தோஷப்படுத்த முடியாது. ஆனதால் உமக்கு இஷ்டமான வரத்தைக் கேளும். உமக்கு க்ஷேம முண்டாகும். என்னைப் பார்க்கிற வரையில் தான் ச்ரேயஸை யடைவதற்கு முயற்சிக்க வேண்டும் என்னுடைய வைகுண்ட லோகத்தை நேரில் பார்ப்பது என்னுடைய ப்ரியத்தைப் (பக்தனுக்கு வரங் கொடுக்க வேண்டுமென்றதை) காட்டுகிறது. ஆகையால், அதுவும் என்னுடைய கிருபையால் உமக்கு கிடைத்ததே தவிர வேறில்லை. மேலும் 'தப' என்ற என்னுடைய வார்த்தையைக் கேட்டுத் தபஸ் செய்தீர். தபஸ் என்பது எனக்கு ஹ்ருதயமாயிருக்கிறது. அதற்கு நான் ஆத்மா (ஸ்வரூபம்) வாக இருக்கிறேன். ஆகையால் ஸ்ருஷ்டிக்க வேண்டிய காலத்தில் அதற்கு வேண்டிய ஞானமற்றவராய் நீர் மோஹமடைந் திருக்கும் பொழுது உம்மைத் தபஸ் செய்யும்படி சொன்னவன் நானே. நான் தபஸைக் கொண்டே இந்த ஜகத்தைச் ஸ்ருஷ்டிக்கிறனே. தபஸினாலேயே அதைப் பரிபாலிக்கிறேன். தபஸி னாலேயே அதை ஸம்ஹரிக்கிறேன். தபஸே என் னுடைய சக்தியாயிருக்கிறது என்று சொன்னார்.

25–30 அதனைக் கேட்டு ப்ரஹ்மதேவர் ஸ்ரீ நாராயணனை நோக்கி, 'ஓ பகவன்! நீர் ஸகல பிராணிகளுக்கும் ப்ரபுவாக அவர்களுடைய புத்தியில் வசிப்பவராகையால் தடையற்ற திவ்ய ஞானத்தால் ஒவ்வொருவருடைய எண்ணத்தையும் நன்றாய்த் தெரிந்துகொள்ளுகிறீர். ஏ நாத உருவமில்லாதவரான உம்முடைய ஸ்தூல சூக்ஷ்ம உருவங்களை நான் நன்றாய்த் தெரிந்துகொள்ளும்படி ப்ரார்த்திக்கும் எனக்குச் சொல்ல வேண்டும். நீர் உம்முடைய மாயா சக்தியால் தானே ஸகல ஸ்வரூபியாயிருந்து ஜகத்தைச் ஸ்ருஷ்டித்தும், பரிபாலித்தும், ஸம்ஹரித்தும் பட்டுப் பூச்சி போல விளையாடுகிறீரல்லவா? வீண்போகாத ஸங்கல்பமுள்ளவரே! அந்த உம்முடைய லீலைகளை நான் நன்றாய்த் தெரிந்து கொள்ளும்படி அனுக்கிரஹிக்க வேண்டும். (ப்ரஜைகளை ஸ்ருஷ்டிப் பதில் பயந்து நான் தத்துவ ஞானத்தை விரும்ப வில்லை.) உம்முடைய உத்தரவின்படி சோம்பல் இல்லாமல் ஸ்ருஷ்டியைச் செய்வேன். ஆனாலும் அந்தக் காலத்தில் 'நான் ஜகத்தைச் ஸ்ருஷ்டிப்பவன். எல்லாவற்றிற்கும் மேலானவன் என்ற அஹங்காரம் முதலியவைகள் எனக்கு உண்டாகாமலிருப்பதற்காகத் தத்துவ ஞானத்தை உபதேசிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன். ஹே ஈசுவர! மித்திரன் தோழனைக் கௌரவப்படுத்துவது போல் நீர் என்னுடைய கையைப் பிடித்து, பூஜித்து, ஜனங் களை ஸ்ருஷ்டிக்கும் அதிகாரத்தைக் கொடுத்து இருக்கிறீர். நான் தங்களுடைய ஆக்ஞா ரூபமாகிய இக்காரியத்தைச் செய்து வரும்பொழுது மேலானவர் களையும், தாழ்ந்தவர்களையும், மத்ய நிலமை உள்ளவராகவும் பிரித்து ஸ்ருஷ்டிப் பேனல்லவா?

அப்பொழுது பகவான் நம்மை மித்திரனைப் போல் கௌரவப்படுத்தினார். நான் ஸ்வதந்திரன் என்று மிகுந்த கர்வம் எனக்கு உண்டாகக் கூடுமே. அம்மாதிரியான மதம் என்னைக் கெடுத்து விடாமல் இருக்கும்படி அனுக்கிரஹிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

31–39 அதனைக் கேட்ட பகவான் ப்ரஹ்ம தேவரை நோக்கி, ஓ ப்ரஹ்மதேவரே! உம்மால் கேட்கப் பட்டபடி சாஸ்திரத்தைப் படிப்பதால் உண்டாகிய ஞானம், அனுபவத்தால் உண்டாகிய விஞ்ஞானம், பக்தி, அவைகளின் ஸாதனம் ஆகிய இவைகள் மிகவும் ரகசியமானவைகளானாலும் அவைகளை உமக்கு உபதேசிக்கிறேன். நான் எவ்வளவு ஸ்வரூப முள்ளவனோ. எப்படி உண்டாகிறேனோ அப்பேர்ப் பட்ட உண்மையான ஸ்வரூப ஞானமானது என்னுடைய அனுக்கிரஹத்தால் உமக்கு உண்டா கட்டும். ஜகத் ஸ்ருஷ்டிக்கு முன்னே நான் ஒருவனே இருந்தேன். ஸ்தூலம், ஸூக்ஷ்மம் இவைகளுக்குக் காரணமாகிய ப்ரதானம் ஆகிய இவைகள் என்னைக் காட்டிலும் வேறாக ஒன்றுமிருந்ததில்லை. பின்பு நானே இந்த ஜகத் ரூபியாய் இருக்கிறேன். ப்ரளய காலத்தில் எந்த வஸ்து நாசமடையாமல் இருக்குமோ அதுவும் நானே. மேலும், ஆகாசத்தில் இரண்டு சந்திரன் இருப்பதாகத் தோன்றுகிறதுபோல எதன் உடைய மஹிமையால் ஆத்மாவிடம் இல்லாதவைகள் தோன்றுகின்றனவோ கிரஹ மண்டலத்திலிருக்கும் ராஹுவானவன் கண்ணுக்குப் புலப்படாததுபோல எதனுடைய மஹிமையால் ஆத்மாவிடத்தில் இருப்பவைகள் மறைக்கப்படுகின்றனவோ, அதை என்

உடைய மாயையென்று தெரிந்து கொள்ளவேண்டும். மஹா பூதங்கள், தங்களால் ஏற்பட்ட பலவகையான சரீரங்களில் பிறகு ப்ரவேசித்ததாகத் தோன்றுவது போல, ஜகத்தில் காரண ரூபியாய் நான் இருப்பவனே யொழிய அவைகளில் பின்பு ப்ரவேசித்தவனல்ல. ஆத்மாவினுடைய உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டியவன், 'எல்லா அவஸ்தையிலும் எது அன்வயத் தாலும், வ்யதிரேகத்தாலும் எக்காலத்திலும், எல்லா விடத்திலும் இருக்குமோ அதே பரமாத்மா என்று தெரிந்து கொள்ளவேண்டியது. இப்பொழுது என்னால் சொல்லப்பட்டதை ஒரே மனதாகச் சிந்தியும். கல்பங்களில் பலவகையான ஸ்ருஷ்டிகளிலும் உமக்கு அபிமானம் உண்டாகாமலிருக்கட்டும் என்று ஸகல ஜனங்களுக்கும் அதிபதியான ப்ரஹ்மாவை அனுக்ர ஹித்து அவர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்த உருவத்தைப் பகவான் மறைத்துக் கொண்டார். பிறகு அந்தப் ப்ரஹ்மதேவர் கண்ணுக்குப் புலப் படாமல் மறைந்த மஹாவிஷ்ணுவிற்கு அஞ்சலி செய்து ப்ருத்வி முதலிய பூதங்களாகிய சாதனங் களைக் கொண்டு முன் கல்பத்திலிருந்ததுபோல் இந்த ஜகத்தைப் படைத்தார்.

40–46 அந்தப் ப்ரஹ்மதேவர் ப்ரஜைகளுக்கு க்ஷேமத்தைச் செய்ய விரும்பி யமம், நியமம் முதலிய வைகளைச் செய்து வந்தார். அவருடைய புத்திரர் களுக்குள் மிகவும் பிரியராகிய நாரதர் தம்முடைய ஸ்வபாவத்தாலும், வணக்கத்தாலும், இந்திரிய நிக்ர ஹத்தாலும், பிதாவாகிய ப்ரஹ்மதேவரைச் சந்தோஷப் படுத்தி அவருக்குச் சிச்ரூஷை செய்து வந்தார். அந்தப் பாகவதோத்தமராகிய நாரதர் மாயைக்கு அதிபதியான

மஹாவிஷ்ணுவின் மாயையை நன்றாய்த் தெரிந்து கொள்ள விரும்பியவர். அவருடைய சிசுரூஷையால் ப்ரஹ்மதேவருக்கு ஸந்தோஷமுண்டாயிற்று. அப் பொழுது நாரதர் இந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டார். அவருக்குப் ப்ரஹ்மதேவர் மிகவும் பிரியத்துடன் பத்து வித புராண லக்ஷணமுள்ள பாகவத புராணத்தை உபதேசித்தார். அந்த நாரதர் ஸரஸ்வதீ நதிக்கரையில் ப்ரஹ்ம தியானஞ் செய்து கொண்டிருந்த அதிக தேஜஸுள்ள வ்யாஸ மஹர்ஷிக்கு இந்த விஷயத்தை உபதேசித்தார். விராட் புருஷனிடமிருந்து இந்த ஜகத் எப்படி உண்டாயிற்றென்று கேட்டீரல்லவா? அது முதலிய கேள்விகளுக்குப் பதில் , சொல்லுகிறேன் கேளும் என்றார்.

நோட்டு

உருவம்–ஸத்யம், ஞானம் முடிவில்லாதது என்று ஸ்ருதியில் சொல்லியுள்ளபடியுள்ளது. குணம்– திவ்ய மங்கள குணங்கள். எவர் எல்லாவற்றையும் ஸாமான்யமாகவும் விசேஷமாகவும் அறிந்தவரோ, எவருடைய மேலான சக்தியும், இயற்கையான ஞானம், பலம், கிரியை ஆகிய இவைகளும் பல வகையாகக் காணப்படுகின்றனவோ சந்த். மாயை என்று–ப்ரக்ருதியின் அனுஸந்தான காலத்தில் ஆத்ம ஸ்வரூபம் நன்றாகப் ப்ரகாசிக்கிறதில்லை. ஆத்மாவின் தோற்றம் இருக்கும்போது அசேதனமாகிய ப்ரக்ருதியானது தோன்றுவதில்லை. தேஜஸிருக்கும் போது இருட்டிக்கிறதில்லை. இருட்டிலிருக்கும் போது தேஜஸ் ப்ரகாசிக்கிறதில்லை. வீர.– எந்த வஸ்துவானது ஸகல காமத்தையும் அடைந்தவனாகிய என்னுடைய ப்ரயோசனமின்றி வேதம் முதலியதில்

தோன்றுகிறதோ, எது என்னிடத்தில் பாதகமாக ஆகிறதில்லையோ, அதே மாயை (ஜீவன், ப்ரக்ருதி ஆகிய இவர்கள் மாயை என்று கருத்து) யதார்த்தமாகத் தோன்றும் என்னுடைய பிரதிபிம்ப பூதனாகிய ஜீவனும், உண்மையாகத் தோன்றும் (மூல) ப்ரக்ருதியும் மாயையெனப்படுகின்றன. ஸ்ரீ மஹா விஷ்ணுவின் சக்தியே முக்கியமாய் மாயை யெனப்படுகிறது. ப்ரக்ருதி, ஜீவர்களை மாயையென்று செல்வது ஔபசாரிகப் ப்ரயோகம், ஆனால், ஜீவன், ப்ரக்ருதி, கர்மம், காலம் ஆகிய இவைகள் எப்பொழுதும் என்னிடத்தில் வஸிப்பவைகளானாலும் அவைகளால் பாதகமில்லாததனால், அவைகள் என் இடமிருப்பதாகச் சொல்லப்படுகிறதில்லை. அரசன் ரதத்தின் மீதேறிப் போகும்போது அவருக்குக் குடை பிடிப்பது முதலிய உபசாரங்கள் செய்து கொண்டு இருப்பவர்களுக்கு ரதிகர்கள் என்று பெயர் கிடைக்குமா? விஜ. ப்ரவேசித்தவனல்ல மஹாபூதங்கள் அவைகளாலேற்பட்ட கூடம் முதலியவைகளில் ப்ரவேசித்திருந்தாலும் அவைகளை உடைப்பது, வெட்டு வது ஆகிய இவைகளில் அந்த மஹாபூதங்கள் ஸம்பந்திக் கிறதில்லை.–வீர. அன்வயவத்தாலும் காரியங்களில் காரண ரூபமாக விருப்பது; ஜாக்ரத் முதலிய அவஸ் தைகளில் ஸாக்ஷியாக விருப்பது. வ்யதிரேகம் காரணமாக இருக்கும் போது காரியமாக இல்லாமல் இருப்பது –ஸ்ரீத. அன்வயம் இது அறியக் கூடியதே என்பது வ்யதிரேகம்– மற்றவை அறியக் கூடியவை அல்லவென்பது. பரமாத்மா ஒருவரைத் தெரிந்து கொண்டதனால் எல்லாம் அறியப் பட்டவையாகிறது. ஆனதால் அதுவே அறியக் கூடியது. –வீர.

அத்தியாயம் 10

தத்துவங்களின் உற்பத்தியுரைத்தது.

இந்தப்பாகவதத்தில் ஸர்க்கம், விஸர்க்கம், ஸ்தானம் போஷணம், ஊதி, மன்வந்தரம், ஈசானு கதை, நிரோதம் முக்தி ஆசிரயம் என்ற பத்து வகையான லக்ஷணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும் பத்தாவதாகிய ஆசிரயத்தின் உண்மையைத் தெரிவிப் பதற்காக ஒன்பதுகளுடைய ஸ்வரூபத்தை சப்தத் தாலும், அர்த்தத்தாலும் பெரியோர்கள் வர்ணிக் கிறார்கள். ஆகாசம் முதலிய பஞ்சபூதங்களும், சப்தம் முதலிய விஷயங்களும், இந்திரியங்களும் மஹத் தத்து வமும், அஹங்காரமும், ஸத்வம் முதலிய குணங்கள் உடைய பரிணாம விசேஷத்தால் பரமேச்வரனிடம் இருந்து உண்டாவதே ஸர்க்கமெனப்படும். வைராஜ னால் செய்யப்படும் சராசர சிருஷ்டியே விஸர்க்கம் எனப்படும். பகவான் அவதாரஞ் செய்து ஜகத்தைப் பரிபாலிப்பது எல்லாவற்றிற்கும் மேலானவராக இருப்பது ஸ்திதி யெனப்படும். பக்தர்களை அனுக்கிர ஹிப்பதே போஷணமெனப்படும். மன்வந்தரங்களில் அனுஷ்டிக்கப்படும் தர்மம் மன்வந்தர மென்று சொல்லப்படுகிறது. கர்மங்களின் வாஸனைகள் ஊதி எனப்படுகின்றது. பல்வகையான உபாக்யானங்கள் அடங்கிய பகவானுடைய அவதார கதைகளும், பக்தர்களுடைய சரிதங்களும் ஈசானு கதையென்று சொல்லப்படுகின்றன, பகவான் யோக நித்திரை செய்யும்போது ஜீவன் தன்னுடைய உபாதிகளுடன் அவரிடத்தில் லயிப்பதே நிரோத மெனப்படுகிறது. அவித்தையால் அத்யஸ்தமாகிய அநாத்ம ரூபத்தை

ஞானத்தால் தொலைத்து, தன்னுடைய நிஜரூபமாக இருப்பதே முக்தியாகும். ஸ்ருஷ்டியும் லயமும் எதன் இடமிருந்து உண்டாகின்றனவோ, எது பரமாத்மா என்றும் ப்ரஹ்மம் என்றும் சொல்லப்படுகிறதோ, அதே ஆசிரய மெனப்படுகிறது. ஆத்யாத் மிகனென்ற ஜீவனே ஆதிதெய்வீகம் (கண் முதலியவைகளுக்கு அதிதெய்வமான சூரியன் முதலியவை) ஆகிறான். கண்கள் முதலிய இந்திரிய கோளங்கள் அடங்கிய புருஷோபாதியாகிய தேஹமே ஆதிபௌதிகம். அறிகிற வன், அறியப்படுகிறது, ஸாதனம் ஆகிய மூன்றுக்குள் ஒன்றை விட்டு மற்றவை அறியக் கூடாத வைகளா கையால் இம்மூன்றையும் எவர் சாக்ஷியாக விருந்து தெரிந்து கொள்கிறாரோ அவரே பரமாத்மா. அவருக்கு வேறு ஆச்ரயமில்லை. எல்லாவற்றிற்கும் அவர் ஆச்ரய மாயிருப்பவர்.

10–34. விராட் புருஷன் ப்ரம்மாண்டத்தை பேதித்துக் கொண்டு எப்பொழுது வெளியில் வந் தாரோ (தனியாக இருந்தார் என்று கருத்து) அப் பொழுது தாம்சுத்தராகையால் தாம்வஸிப்பதற்குச் சுத் தமான ஸ்தானம் வேண்டுமென்ற எண்ணத்துடன் பரிசுத்தமான ஜலத்தை ஸ்ருஷ்டித்தார். அந்த ஜலத்தில் வஸித்தாலும் ஜலம் அவரிடத்திலிருந்து உண்டான தாகும். அவருக்கு நாராயணனென்று பெயருண்டா யிற்று. அவருடைய அனுக்கிரஹத்தால் தான் உபா தான காரணம், கர்மம், காலம் முதலிய நிமித்த காரணம் ஆகிய இவைகள் தங்களுடைய கார்யத்தை உண்டுபண்ணுகின்றன. அவருடைய அனுக்கிரஹமில் லாதவரையில் அவைகளுக்குக் கார்யத்தை உண்டு பண்ணக்கூடிய சக்தி ஏற்படுகிறதில்லை. அந்தப் புருஷன்

தாம் பலவகையான ஸ்வரூபத்தை அங்கீகரிக்க வேண்டுமென்ற ஸங்கல்பத்தை அடைந்து யோக நித்திரையிலிருந்து எழுந்திருந்து மிகுந்த ப்ரகாசமுள்ள திவ்ய தேஹத்தைத் தம்முடைய மாயையின் சம்பந்தத் தால் ஆத்யாத்மிகம், ஆதி தெய்வீகம், ஆதி பௌதிகம் என்று மூவகையாகப் பிரித்தார். அதெப்படி எனில் கிரியா சக்தியால், பலவகையாகச் சேஷ்டிக்கும் புருஷனுக்கு இந்திரிய சக்தி, மனத்தின் சக்தி, தேஹ சக்தி ஆகிய இவைகள் உண்டாயின. சூக்ஷ்ம ரூபியாகிய அந்த ஆத்மாவினிடமிருந்து முக்கியப் ப்ராணன் உண்டானான், அரசனை அவருடைய வேலைக்காரர்கள் அனுசரிப்பதுபோலப் ப்ராணன் அவருடையதாதலால் ஸகல இந்திரியங்களும் சேஷ் டிக்கின்றன. ப்ராணன் சேஷ்டிக்காவிடில் அவைகளும் சேஷ்டிக்கிறதில்லை, அந்தப் ப்ராணன் ப்ரபுவின் வயிற்றில் பரவும்போது, பசி, தாகம் ஆகிய இவைகள் உண்டாயின. பிறகு புஜிக்கவேண்டுமென்றும், குடிக்க வேண்டுமென்றும் விருப்பம் உண்டாயிற்று. பிறகு அந்தப் ப்ரபுவினிடமிருந்து முகமானது உண்டாயிற்று (பிரிந்தது). அதிலிருந்து ஜிஹ்வேந்திரியத்திற்கு அதிஷ் டானமாகிய தாலுவும் (நாக்கும்), அதிலிருந்து ஜிஹ்வேந்திரியமும், அதிலிருந்து அதனால் கிரஹிக்கப் படும் ஆறுவகையான ரஸங்களும் உண்டாயின. பேசவேண்டுமென்ற விருப்பம் அவருக்கு உண்டான பொழுது முகத்திலிருந்து அக்னியும், (இந்திரியாபிமானி தேவதை) வாக் என்னும் இந்திரியமும், அவ்விரண் டின் வியாபாரமாகிய பேச்சும் (இந்திரிய விஷயம்) உண்டாயின. அந்த அக்னி வெகுகாலம் ஜலத்தால் தடுக்கப்பட்டிருந்தது. ப்ராணவாயுவானது அதிகமாக அசையும் பொழுது மூக்குகள் உண்டாயின. அவை

களில் கந்தத்தை வஹிக்கும் வாயு உண்டானார். (ப்ரவேசித்தார்) கந்தத்தை கிரகிக்க விரும்பும்பொழுது அவ்விடத்தில் கிராணேந்திரியம் உண்டாயிற்று. எப்பொழுது ப்ரகாசமில்லாமலிருந்ததோ, அப்பொழுது தன்னையும் இதர வஸ்துக்களையும் பார்க்க, விரும்பிய போது கண்கள், உருவத்தைக் கிரகிக்கும் சக்தி, சக்ஷுரிந்திரியம் அதற்கு அபிமானி தேவதையாகிய ஆதித்யன் ஆகிய இவைகள் உண்டாயின. யோக நித்திரை செய்யும் ப்ரபுவைத் தேவர்கள் எழுப்புங் காலத்தில் அந்தச் சப்தத்தைக் கிரகிக்க அவர் விரும் பினார். அப்பொழுது காதுகளும், திக்குகளும் ,ச்ரோத்ரேந்திரியமும், சப்தத்தைக் கிரகிக்கும் சக்தியும் உண்டாயின. மேலும் வஸ்துக்களின் மெதுவாயிருக் கும் தன்மை, கடினமாயிருக்கும் தன்மை கனமுள்ளதாக விருப்பது, கனமில்லாமலிருப்பது, குளிர்ச்சி, உஷ்ணம் ஆகிய இவைகளைக் கிரகிக்க விரும்பும்போது துவக்கிந்திரியத்திற்கு அதிஷ்டானமாகிய தோல் உண் டாயிற்று. அதில் இந்திரியமும் தேவர்களும் உண் டானார்கள். ஸ்பரிசமாகிய குணமுள்ள வாயுவானது மேற்காட்டிய துவக் இந்திரியத்தின் உள்ளிலும் வெளி யிலும் வ்யாபித்திருக்கிறது. பின்னும் பலவகையான கார்யங்களைச் செய்ய விரும்பிய அவரிடமிருந்து கைகள் முளைத்தன. அவ்விரண்டு கைகளுக்கும் இந்திரன் தேவதையானான். எடுப்பது (ஆதானம்) அவைகளின் கார்யமாம். இன்னும், தமதிஷ்டப்படி நடக்க விரும்பிய அந்த ஆத்மாவிடமிருந்து பாதங்கள் முளைத்தன. அவைகளுக்கு யக்ஞஸ்வரூபியாகிய மஹாவிஷ்ணுவே தேவதையாக இருக்கிறார். நடப்பது அவைகளின் காரியம். யாகத்திற்கு உபயோகமான ஹவிஸ்ஸை வெகுதூரம் நடந்து ஸம்பாதிப்பதே அவை

களின் ப்ரயோஜனம். பிறகு குழந்தை, ஆனந்தம், அமிருதம் (ஸுகம் அல்லது ஸ்வர்க்கம்) ஆகிய இவை களை அடைய விரும்பிய அவரிடமிருந்து சிஸ்னம் (ஆண்குறியும் பெண்குறியும்) உண்டாயின. ஸ்திரீ களுடைய ஸம்போகத்தால் ஏற்படும் ஸுகத்திற்குக் காரணமும், இந்திரியம், தேவதை ஆகிய இவை களுக்கு ஆசிரயமுமான உபஸ்தேந்திரியம் அந்த சிஸ்னத்திலிருந்து உண்டாயிற்று. தாதுக்களின் மலத்தை (புஜித்த அன்னம் முதலியவைகளுடைய ஸாரமற்ற பாகத்தை) வெளிப்படுத்த விரும்பிய அந்தப் புருஷ னிடமிருந்து குதமானது உண்டாயிற்று. அதிலிருந்து பாயுவென்ற இந்திரியமும், அதனிடமிருந்து அதிதேவ தையான மித்திரனும் உண்டானார்கள். மலத்தை வெளிப்படுத்துவது இந்திரியம் அதன் ஸ்தானம் ஆகிய இரண்டையும் ஆசிரயித்தது. ஒரு தேஹத்தில் இருந்து மற்றொரு தேஹத்திற்குப் போகவிரும்பிய ப்ரஹத்தினுடைய ஸமஷ்டி அபானவாயுவினிடம் இருந்து நாபியாக உண்டாயிற்று. அதில் அபானனும், அதற்கு அதிஷ்டமான தேவதையாகிய மிருத்யுவும் உண்டாயின. மரணமானது பிராணன், அபானன் ஆகிய இவைகளைக் க்ரஹிக்க வேண்டுமென்று விரும்பிய அந்தப் ப்ரபுவினிடமிருந்து வயிறு, ஆந்த்ரம் (மாம்ஸ விசேஷம்), நாடிகள் ஆகிய இவைகள் உண்டாயின. அந்த நாடி, ஆந்த்ரம் ஆகிய இவை களுக்கு நதிகளும் ஸமுத்ரமும் (முறையே) தேவதைகள். அவைகளால் துஷ்டியும், புஷ்டியும் உண்டாயின. தம்முடைய ப்ரக்ருதியைச் சிந்திக்கும் அந்தப் ப்ரபு வினிடமிருந்து ஹ்ருதயம் உண்டாயிற்று. அதனிடம் இருந்து சந்திரனென்று ப்ரஸித்தியுள்ள மனஸ் உண் டாயிற்று. மேற்சொல்லிய ஹ்ருதயமே காமத்திற்கும்,

ஸங்கல்பத்திற்கும் இருப்பிடம் துவக் (மேல்தோல்) சர்மம் (உள்ளேயிருப்பது) மாம்ஸம் ரத்தம் மேதஸ் மஜ்ஜை எலும்பு ஆகிய ஏழு தாதுக்களும் பூமி, ஜலம், தேஜஸ் ஆகிய இவைகளின் ஸ்வரூபமாயுள்ளவைகள். ப்ராணன்கள் ஆகாயம் ஜலம், வாயு ஆகிய இவை களால் உண்டான இந்திரியங்களாவும் விஷயங்களில் செல்லும் ஸ்வபாவமுள்ளவை. சப்தம் முதலிய குணங் கள் அஹங்காரத்திலிருந்து உண்டானவை. ஸகல விகாரங்களுக்கும் (காமம், ஸங்கல்பம், ஸம்சயம், சிரத்தை, வெட்கம் முதலியவைகளுக்கும்) ஆதாரமா யுள்ளது மனதேயாம், விஞ்ஞான ஸ்வரூபமாயிருப்பதே (பலவகையான பிரபஞ்ச ரூபமாக ஆகவேண்டுமென்று பகவானுடைய எண்ணம்) புத்தியெனப்படுகிறது. பூமி முதலிய எட்டு ஆவரணங்களுள்ள மேற்சொல்லிய ரூபமானது பகவானுடைய ஸ்தூல ரூபம். ஸூக்ஷ்ம சரீரமானது மேற்காட்டிய ஸ்தூல ரூபத்துக்குக் காரணமாயிருப்பது. அது மிகவும் ஸூக்ஷ்மமாகையால் இந்திரியங்களுக்குப் புலப்படாதது. பேதமற்றது, ஆதி, மத்யம், அந்தம் ஆகிய இவைகளற்றது. எப்பொழுதும் ஒரே வகையுள்ளது. (இளைப்பு, விருத்தி முதலியவை களற்றது என்று கருத்து) வாக்குக்கும், மனத்திற்கும் மேலானது.

35–47. மேற்காட்டியபடி என்னால் உமக்கு உப தேசிக்கப்பட்ட பகவானுடைய ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபங் கள் மாயையால ஏற்பட்டவைகளாகையால் அவைகளை வித்வான்கள் உண்மையானவைகளாக அங்கீகரிக்கிறது இல்லை. (உபாஸனத்திற்காகப் பகவானிடம் ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபங்கள் ஆரோபிக்கபட்டனவென்று கருத்து) ஓ மஹாராஜ அந்தப் பகவான் ப்ரஹ்மதேவ ஸ்வரூபியாக

இருந்து, சப்தங்களின் பொருளாக விருக்கும் உருவங் களையும்; சப்தங்களைக் கொண்டு பெயர்களையும் ஸ்ருஷ்டிக்கிறார். மேலும் அவர் மாயையால் கர்மங்கள் அற்றவர்போல தோன்றினாலும் உண்மையில் கர்மங்கள் அற்றவர். ஒன்பது ப்ரஜாபதிகள் மனுக்கள் தேவர்கள், ரிஷிகள், பிதிரு கணங்கள் ஸித்தர்கள்; சாரணர்கள், கந்தர்வர்கள், வித்யாதாரர்கள், அஸுரர்கள், குஹ்யகர்கள் கின்னரர்கள் அப்ஸரஸுகள், நாகர்கள், ஸர்ப்பங்கள், கிம்புருஷர்கள், மாத்ரு கணங்கள், ராக்ஷஸர்கள், பிசாசங்கள் ப்ரேத கணங்கள், பூத கணங்கள், விநாயக கணங்கள் கூஷ்மாண்டங்கள், உன்மாதங்கள், வேதாலங் கள், யாதுதானர்கள் கிருஹங்கள், பறவைகள், மிருகங் கள், பசுக்கள், விருக்ஷங்கள், மலைகள், மலைப்பாம்பு கள், ஸ்தாவர ஜங்கமங்கள் என்ற இரண்டு வகை யுள்ளவையும், ஜராயுஜம், அண்டஜம், ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம் என்று நான்கு வகையுள்ளவைகளுமான ப்ராணிகள், ஜல ஜந்துக்கள், ஸ்தல ஜந்துக்கள் ஆகிய எல்லாவற்றையும் தரிக்கிறார். (ப்ரபஞ்ச ஸ்வரூபமாக இருக்கிறார் என்று கருத்து.) மேற்காட்டிய ப்ராணி களில் மேலானவை. மத்ய நிலையுள்ளவை, தாழ்ந்தவை ஆகிய இவைகள் புண்யம், பாபம், இரண்டின் கலப்பு ஆகிய கர்மங்களின் பலனேயாம். ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய இவைகளால் கர்மங்களின் கதி மூவகை யானது. ஸத்வத்தால் ஸ்வர்க்கம் முதலியவைகளும், ரஜஸ்ஸினால் பசு, புத்திரன் முதலியவைகளும் தமஸ்ஸினால் 21 நரகங்களும் உண்டாகின்றன. மேற் காட்டிய மூன்று வகையான கதிகளில் ஒன்றானது மற்ற இரண்டுகளால் அடக்கப்படும் பொழுது ஒவ் வொன்றிலும் மூன்று வகை ஏற்படுகின்றது. அந்தப் பகவானே இந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்து திர்யக் ஜாதி

ஆகவும், மனிதனாகவும். தேவனாகவும் அவதரித்து ஸ்ருஷ்டித்த ஜகத்தைப் பரிபாலனம் செய்தும், தர்ம ரூபியாக விருந்து அதனைப் போஷிக்கிறார். பின்பு ப்ரளய காலத்தில் மேகக்கூட்டத்தைக் காற்றானது கலைத்ததுபோல, அந்த மஹாபுருஷனே காலாக்னி ருத்ரரூபியாக விருந்து ஸம்ஹரிக்கிறார். மிகுந்த ஜ்ஞானமுள்ள அந்தப் பகவான் இப்போர்ப்பட்ட மஹிமை யுள்ளவர் என்று சொல்லப்படுகிறார். ஆனாலும் வித்வான்கள் அவரை இம்மாதிரியான குணமுள்ள வராக அறியமாட்டார்கள். ஏனெனில், இந்த ஜகத்தை உண்டு பண்ணுவது முதலியவைகளால் பரமாத்மாவிற்கு சம்பந்த மிருப்பதாகச் ஸ்ருதியின் தாத்பர்யமல்ல. மாயையைக் கொண்டு பகவானிடத்தில் ஆரோபிக்கப் பட்ட கர்த்ருவம் முதலியவைகள் அவரிடத்தில் உண்மையில் இல்லை என்று சொல்லுவதற்காக வேதமானது அவைகளை அனுமதித்தது. ப்ரஹ்மதேவ ருடைய கற்பமானது அவாந்தர கல்பத்துடன் சுருக்க மாகச் சொல்லப்பட்டது. இந்த மஹாகல்பத்தில் மஹத்தத்துவம் முதலியவைகளின் ஸ்ருஷ்டியும். ஸ்தாவரங்களின் ஸ்ருஷ்டியும் சொல்லப்பட்டிருக் கின்றன. இந்தப் பிரகாரமானது மற்ற மஹாகல்பம் முதலியவைகளுக்கும் பொதுவேயாம். காலத்தின் அளவையும் கல்பத்தின் லக்ஷணத்தையும் அதன் அவாந்தரவிபாகத்தையும் பாத்ம கல்பத்தையும் சொல்லுகிறேன். கேளும் என்றார்.

48–50. இம்மாதரியான ஸூதருடைய வார்த்தையை கேட்ட சௌனகர் அவரை நோக்கி, பாகவதர்களுக்குள் சிறந்தவராகிய விதுரர், மிகுந்த அபிமானமுள்ள பந்துக் களை விட்டுப் பிரிந்து பூமியிலிருக்கும் ஒவ்வொரு

தீர்த்தங்களிலும் சென்று யாத்திரை செய்தாரல்லவா? அந்த விதுரருக்கும், மைத்ரேயருக்கும் எந்த விடத்தில் பரமாத்மா விஷயமான ஸம்வாதம் நேர்ந்தது? அந்தப் பகவானாகிய மைத்ரேயரால் அவருக்கு உபதேசிக்கப் பட்ட ஆத்ம தத்துவம் யாது? விதுரர் பந்துக்களை விட்டுப் பிரிவதற்கு என்ன காரணம்? அவர் மறு படியும் ஏன் திரும்பிவந்தார்? அவருடைய சரிதம் எல்லாவற்றையும் சொல்லவேண்டும் என்று பிரார்த் தித்தார்.

51. அதனைக் கேட்டு ஸூதர், 'ஓ மஹரிஷிகளே பரீஷித்து மஹாராஜனால் கேட்கப்பட்டுச் சுக மஹா முனியானவர் எதனை அவருக்கு உபதேசித்தாரோ அதனைக்ரமமாக உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

நோட்டு

விஸர்க்கம் பகவான் தமோகுணத்தை அங்கீகரித்துச் செய்யும் லயம்சந்த். ப்ரஹ்மதேவரால் செய்யப்படும் ஸர்க்கம் வீர. ஸ்ருஷ்டி காலத்தில் பரமாத்மாவினிடம் இருந்து குணங்களுடைய வித்யாஸத்தால் உண்டாகும் மஹத்தத்துவத்தால் ஐந்து பூதங்கள், சப்தம் முதலிய வைகள், இந்திரியங்கள், புத்தி ஆகிய இவை முதல் அண்டம் வரையிலுள்ளவைகளின் உற்பத்தியே ஸர்க்கம். அண்டத்திற்குட்பட்ட புருஷனால் ஸ்ருஷ் டிக்கப்படும் பலவகையான ஸ்ருஷ்டியே விஸர்க்கம் விஜ். முக்திஜீவன் கர்மத்தால் கற்பிக்கப்பட்ட தேவாதி சரீரத்தைவிட்டுத் தன்னுடைய ஸ்வரூபமாகிய ஞானம், ஆனந்தம் முதலியவைகளுடனிருப்பது சந்த், பாபம் இல்லாமலிருப்பது முதலிய எட்டுக் குணங்களுடைய

வனாகத் தன்னைத் தெரிந்து கொண்டிருப்பது வீர, ப்ராகிருதம், வைகிருதம், ஸ்தூலம் ஸூக்ஷ்மம் ஆகிய இவைகளை விட்டு, சித்ஸ்வரூபியாயும், ஆனந்த ஸ்வரூபியாயும் இருப்பதுவிஜ. ஆதிபௌதிகம் சப்தம் முதலியவைகளுக்கும் ஆந்தரனாகவிருப்பவனே ஆதி பௌதிகன் வீர. ஸாக்ஷியாக இம்மூன்றுகளில் இந்திரியமாகிய ஸ்தானமில்லாவிடில் சப்தம் முதலிய விஷயங்கள் அறியப்படுகிறதில்லை. ஆனதால் ஜீவர்கள் மூன்று வகையான ஸன்னிகர்ஷமுள்ள பதார்த்தங் களை இந்திரியங்களால் அறிந்துகொள்ளுகிறாகள். பரமாத்மாவானவர்மூன்றையும் நேரில் பார்ப்பவர் வீர. ஆச்ரயமானஅசிதாஸ்ரயமான ஜீவனுக்கும் ஆச்ரயமாய் இருப்பவர். எப்படி ரதத்திலுடைய சக்கரத்திலுள்ள ஆரங்களில் நேமியும் (சக்கரத்தின் முனை) மத்யமாகிய குடத்தில் ஆரங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றனவோ, அப்படியே பூத மாத்திரைகள் ப்ரஞ்ஞாப மாத்திரை யிலும், அவைகள் ப்ராணனிடத்திலும் வைக்கப்பட்டு இ ருக்கின்றனஸ்ருதி. வீர.நாராயணன் 'ஜலங்களுக்கு நாரமென்று பெயர். அவைகள் ஸ்தானமாயிருந்தன. அதனால் நாராயணன்' என்று சொல்லப்பட்டார் ஸ்மிருதி.

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்கந்தம் 3

அத்தியாயம்-1

விதுரருக்கும்உத்தவருக்கும் ஸம்வாதம்

சுகர் பரீக்ஷித்து மகாராஜனை நோக்கி, "ஓ மகாராஜ! எல்லாவற்றிற்கும் அதிபதியும், ஹிருதயத்தில் வஸிப்பவருமான இந்த ஸ்ரீ கிருஷ்ண பகவான் பாண்டவர்களுக்குத் தூதராக அஸ்தினாபுரம் சென்றபொழுது அரசனாகிய துரியோதனனை லட்சியம் செய்யாமல் விதுரருடைய கிருஹத்திற்குச் சென்றாரல்லவா, அவ்வளவு மஹிமை பொருந்தியதும், ஸகல சம்பத்துக்களால் நிறைந்ததுமான தம்முடைய அந்த வீட்டை விட்டு விதுரர் முன்னொரு காலத்தில் காட்டில் சென்று அவ்விடத்தில் ஸர்வக்ஞரான மைத்ரேயரைச் சந்தித்து, இந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டார்" என்று சொன்னார். அதனைக் கேட்ட அரசன் சுகரை நோக்கி, "ஓ பிரபுவே! பகவானாகிய மைத்ரேயரும், விதுரரும் எவ்விடத்தில் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசிக் கொண்டார்கள்? மிகவும் சிறந்தவரான மைத்ரேயரை நோக்கிச் சுத்த சித்தரான அந்த விதுரரால் செய்யப்பட்டதும், பெரியோர்களால் அனுமோதித்துக் கௌரவப்படுத்தப்பட்டதுமான ப்ரச்னம் (கேள்வி) அற்ப விஷயமுள்ளதாக இராது. ஆகையால அதைச் சொல்ல வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

5-45 ஓ சௌனகர் முதலிய மஹர்ஷிகளே! இம்மாதிரி அரசனுடைய வார்த்தையைக் கேட்டு மஹர்ஷிகளுக்குள் சிறந்தவரும், பல விஷயங்களை

அறிந்தவருமான சுகர் மிகுந்த ப்ரியத்துடன் அரசனை நோக்கி, "திருதராஷ்டிர மகாராஜன் அதர்ம சிந்தையால் விவேகமில்லாதவராய் மிகவும் துஷ்டர்களான துரியோதனன்முதலிய புத்திரர்களை அதர்ம மார்க்கமாய்ப் போஷித்தும், தம்முடைய தம்பியாகிய பாண்டுவினுடைய குமாரர்களும், தகப்பனை இழந்தவர்களுமான தரும புத்திரர் முதலானவர்களை அரக்கு மாளிகையில் வஸிக்கச் செய்து அதில் அக்னியையும் வைத்தார். பிறகு துரியோதனன் சபையில் திரௌபதியின் தலைமயிரைப் பிடித்து இழுத்து வரச் செய்யும் பொழுது, அவள் தன்னுடைய ஸ்தனங்களிலிருக்கும் குங்குமம் கரையும்படி கண்ணீரைப் பெருக்கி அழுதாள். அப்பொழுது தனது மருமகளாகிய திரௌபதிக்கு நேர்ந்த துக்கத்தையும் புத்திரர்களுடைய கெட்ட நடையையும் பார்த்திருந்தும் மௌனமாக இருந்தார்.

மேலும் துரியோதனன் முதலியவர்கள் மிகுந்த சாதுவாகிய தருமபுத்திரரைச் சொக்கட்டான் ஆட்டத்தில் ஜயித்து நாட்டிலிருந்து காட்டிற்குப் போகச் செய்தார்கள். அப்பொழுது அவர் சத்தியத்திற்குட்பட்டுப் பன்னிரண்டு வருஷம் வனவாஸஞ் செய்தும், ஒரு வருஷம் அஞ்ஞாதவாஸஞ் செய்தும், பிறகு தம்முடைய பாகத்தைத் தமக்குக் கொடுக்கும்படி வேண்டிக் கொள்ள அப்பொழுதும் தமோ குணத்தால் அந்தத் திருதராஷ்டிர மகாராஜன் கொடுக்கவில்லை. பின்னும், ஜகத்திற்குக் குருவாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் தரும புத்திரரால் தூண்டப்பட்டு, அஸ்தினாபுரஞ் சென்று சபையில் சில வார்த்தைகளைச் சொன்னார். அவைகள் பீஷ்மர், முதலானவர்களுக்கு அமிருதமாக விருந்தன. துரியோதனன், திருதராஷ்டிரர்

முதலானவர்கள் க்ஷேமத்தைக் கொடுக்கும் புண்ணிய மில்லாதவர்களாகையால், அவைகளைப் பெரியவை களாக நினைக்கவில்லை. பின்னுமொரு சமயத்தில் திருதராஷ்டிரர் பாண்டவர்களுக்கு அவர்களுடைய பாகத்தைக் கொடுக்கும் விஷயமாய் ஆலோசிப்பதற்காக விதுரரைத் தம்முடைய அரண்மனைக்கு வரவழைத் தார். விதுரர் காரியம், அகாரியம் இவைகளை நன்றாக யோசித்துச் சொல்பவர்களுக்குள் சிறந்தவர், "விதுரருடைய வார்த்தை மிகவும் மேலானது" என்று ப்ரசித்தமாயிருக்கிறது. அப்பொழுது விதுரர் தமை யனை நோக்கி, "ஓ மகாராஜ! தரும புத்திரருக்கு ஓரிடத்திலும் விரோத புத்தியில்லாமையால் அவர் தம் சகோதரர்களுடன் உம்மால் செய்யப்பட்ட சகிக்க முடியாத அபகாரங்களைப் பொறுத்துக் கொண்டிருக் கிறார். தவிரவும், பீமசேனராகிய சர்ப்பமானது மிகுந்த கோபத்துடன் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக் கிறது. அந்த சர்ப்பத்தினிடம் நீர் எப்பொழுதும் மிகவும் பயந்து கொண்டிருக்கிறீரல்லவா? மேலும் ப்ராஹ்மணர்களையே தெய்வமாக கொண்டவராகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் குந்தியின் புத்திரர்களைத் தம்மைச் சேர்ந்தவர்களாக அங்கீகரித்திருக்கிறார். யாதவர்களுக்கு அதிபதியும், பூமியிலிருக்கும் ஸகல அரசர்களை ஜயித்தவருமாகிய அந்தப் பகவான் துவாரகா நகரத்தில் சுகமாக வஸிக்கிறார்.

மேலும், தோஷமே துரியோதனனென்ற பெயருடன் சரீரமெடுத்துக் கொண்டு உம்முடைய க்ருகத்தில் ப்ரவேசித்திருக்கிறது. இவனை அபத்யம் (எந்தக் குழந்தையால் பிதா நரகத்தையடையாமலிருப்பானோ அந்தக் குழந்தை) என்று நினைத்துப் போஷிக்கிறீர்.

இவன் பரம புருஷராகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் இடத்தில் விரோதபுத்தியுள்ளவன். இவனால் உமக்கு க்ஷேம்மம் கிடைக்காது, சம்பத்து உம்மை விட்டு விலகியது; கெட்ட நடையுள்ள இந்தப் புத்திரனை நாட்டை விட்டுத் துரத்தி விடவேண்டும். குலத்தின் க்ஷேமத்திற்காக ஒருவனைப் பரித்தியாகம் செய்வது நியாயமேயாகும், தரும புத்திரருக்கு அவருடைய பாகத்தைக் கொடுத்துவிடும்" என்றார். அதனைக் கேட்ட துரியோதனன் மிகுந்த கோபங்கொண்டு உதடுகள் துடிக்கக் கர்ணன், துச்சாதனன், சகுனி என்னும் இவர்களுடன் சாதுக்களால் விரும்பக்கூடிய ஸ்வபாமுள்ள விதுரரை யுத்தேசித்து, "தாசியின் புத்திரனாகிய விதுரன் கபட ஸ்வபாவமுள்ளவன். நம்முடைய அன்னத்தை புசித்தவனாயிருந்தும் நமக்கே விரோதம் செய்கிறான். சத்ருக்களுக்கு அனுகூலஞ் செய்வதில் ஜாக்ரதையாக இருக்கிறான். இவனை இந்த ஆலோசனை சபைக்கு எவன் அழைத்தான்? இவனை உயிருடன் பட்டணத்தை விட்டுத் துரத்த வேண்டும்" என்று அவமதித்துச் சொன்னான். இம்மாதிரி விதுரர் திருதராஷ்டிரருடைய முன்பாகத் துரியோதனனுடைய நிஷ்டுரவார்த்தை களாகிய பாணங்களால் அடிக்கப்பட்டும் அதனால் வருத்தப்படவில்லை. ஆனால், மாயையின் மஹிமை அளவிடமுடியாதது என்று ஆச்சரியமடைந்தார்.

பிறகு அவர் (விதுரர் அஸ்தினாபுர பட்டணத்தை விட்டு வெளியில் போய்ப் பீமசேனர் முதலியவர்களு டன் சேர்ந்த யுத்தத்திற்கு வருவாரோவென்று சந்தே கிக்க வேண்டாம் என்ற விஷயத்தை துரியோதனன் முதலியவர்களுக்குத் தெரிவிப்பதற்காக) தம்முடைய

வில்லை அவர்களுடைய அரண்மனை வாசலில் வைத்துவிட்டு, தம்மைத் துரத்த முயற்சிப்பதற்கு முன்னமேயே பட்டணத்திற்கு வெளியில் சென்றார். கௌரவர்களுடைய பாக்கிய ரூபியாகிய அந்த விதுரர் புண்ணியத்தைச் சம்பாதிக்க விரும்பி க்ஷேத்திராடனஞ் செய்ய ஆரம்பித்தார். க்ஷேத்திரங்களில் பகவான் ப்ரஹ்மா, ருத்திரன் முதலிய அநேக சரீரங்களுடன் ஸான்னியத்யஞ் செய்கிறார். வனங்கள், புண்யகரமாகிய தோட்டங்கள், மலைகள், கொடிவீடுகள், சுத்தமான ஜலமுள்ள நதிகள், ஏரிகள், பகவானுடைய மூர்த்திகளால் அலங்கரிக்கப்பட்ட க்ஷேத்திரங்கள் ஆகிய இவைகளில் சஞ்சரித்தார். மேலும், அவர் ஒவ்வாரு தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்தும் சுத்தமாகிய ஜீவனமுள்ளவராகப் பூமியில் படுத்துக் கொண்டு, மரவுரியை உடுத்திக் கொண்டு தம்முடைய பந்துக்களாலும், "இவர் விதுரர்" என்று தெரிந்து கொள்ள முடியாத ஸ்வரூபமுள்ளவராக ஸ்ரீ மகா விஷ்ணுவிற்குப் ப்ரியமாகிய வ்ரதங்களை அனுஷ்டித் தார். இப்படிப் பாரத வர்ஷம் முழுவதும் சஞ்சரித்துக் கடைசியில் ப்ரபாஸ தீர்த்தஞ் சென்றார். அந்தக் காலத்தில் தருமபுத்திரர் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய சகாயத்தால் ஸகல பூமியையும் பரிபாலித்து வந்தார். அப்பொழுது அவருடைய சைன்யம் ஒன்றுதான் பூமியிலிருந்தது. அரசர்களுக்கு அடையாளமாகிய வெள்ளைக் குடை ஒன்றே நிலைத்திருந்தது. மூங்கில்கள் ஒன்றோடொன்று சேர்ந்து அக்னி யுண்டுபண்ணி அதனால் அவைகள் எரிக்கப்படுவது போலக் கௌரவர்கள் நாசமடைந்தார்கள் என்று ஜனங்கள் சொல்லிக் கொள்வதை விதுரர் ப்ரபாஸ தீர்த்தக் கரையில் கேட்டு, வருத்தத்துடன் மௌனமாக

அவ்விடத்திலிருந்து மேற்கு முகமாய்ச் சரஸ்வதி நதியை நோக்கிச் சென்றார். அவ்விடத்தில் திரிதர், உசனஸ், மனு, பிருது, அக்கினி. அஸிதர், வாயு, ஸுதாஸர், கோ (பசு), சுப்பிரமண்யர், ச்ராத்த தேவர் என்னும் இவர்களுடைய பெயரால் ஏற்படுத்தப்பட்ட பதினொரு தீர்த்தங்கள் இருக்கின்றன. மேலும், மஹர்ஷிகளாலும், தேவர்களாலும் ஏற்படுத்தப்பட்ட விஷ்ணுவின் ஆலயங்கள் இருக்கின்றன. அவைகளின் மேற்புறத்திலிருக்கும் கும்பங்கள் பகவானுடைய சக்கரம் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு இருப்பதால் அவற்றைக் கண்டவுடன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய ஞாபக முண்டாகிறது. அவைகள் எல்லாவற்றையும் விதுரர் சேவித்தார்.

பிறகு, அவ்விடமிருந்து ஸௌராஷ்டிரம், ஸௌவீரம், மத்ஸ்யம், குருஜாங்கலம் என்னும் தேசங்களைத் தாண்டி, சிலகாலம் சென்றபின் யமுனையின் கரை சென்றார். அவ்விடத்தில் பகவத் பக்தராகிய உத்தவ ரைக் கண்டார். அவர் வசுதேவ புத்திரராகிய பகவானுடன் சஞ்சரிப்பவர். மிகவும் சாந்தர். ப்ரகஸ் பதியின் முந்திய சிஷ்யர், ப்ரசித்தர். இப்படிப்பட்ட உத்தவரை விதுரர் மிக்க பிரியத்துடன் தழுவி, பகவானால் போஷிக்கக்கூடிய தம்முடைய பந்துக்கள் க்ஷேமமாக வஸிக்கிறார்களாவென்று பின்வருமாறு விசாரிக்கத் தொடங்கினார். எப்படியெனில், தம்முடைய நாபியிலிருந்து உண்டான ப்ரஹ்மதேவர் உடைய வேண்டுகோளின்படி தாமே இரண்டு விதமாகப் பூமியில் அவதரித்துப் ப்ரஜைகளுக்கு ஆனந்தத்தை யுண்டு பண்ணிக் கொண்டிருக்கும் பலராமனும், ஸ்ரீ கிருஷ்ண பகவானும் சூரசேனருடைய

க்ருஹத்தில் க்ஷேமமாக வஸிக்கிறார்களா? பூஜ்யராகிய வசுதேவர் சுகமாக இருக்கிறாரா? அவர் சகோதரிகளுக்கு இஷ்டமான உத்தம வஸ்த்துக்களைக் கொடுத்து, பிதாபோல் அவர்களைப் பூஜிப்பவர்களல்லவா? யாதவ ஸைனியத்திற்கு அதிபதியான ப்ரத்யும்னர் க்ஷேமமாக இருக்கிறாரா? அவர் முன் ஜன்மத்தில் மன்மதனாக இருந்தவர். ப்ராஹ்மணர்களுடைய அனுக்கிரஹத்தால் ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு ருக்மணி தேவியினிடம் பிறந்தவர். தாமரை மலர் போன்ற கண்களுள்ள ஸ்ரீ கிருஷ்ண பகவான் இராஜ்யத்தை விரும்பாமல் உக்ரசேனருக்கு இராஜ் யாபிஷேகஞ் செய்வித்தாரல்லவா? சாத்வதர்களுக்கும், வ்ருஷ்ணிகளுக்கும், போஜர்களுக்கும், தாசார்ஹர்களுக்கும் அதிபதியான அந்த அரசன் சௌக்கியமாக இருக்கிறாரா? ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் சமமானவரும், ரதிகர்களுக்குள் முந்தியவரும், பகவானுடைய புத்திரருமாகிய சாம்பனென்பவர் க்ஷேமமாயிருக்கிறாரா? அவரை ஜாம்பவதி கடுமையான விரதங்களைச் செய்து புத்திரனாக அடைந்தாள். அவர் முன் ஜன்மத்தில் பார்வதிக்குப் புத்திரனாக இருந்த சுப்ரமண்யனேயாம். அர்ச்சுனனிடத்தில் அஸ்திர வித்தையை அப்பியசித்தவரும்; பகவானைச் சேவித்து யதுக்களுக்கும் அரிதாகிய பகவத் கதியை அடைந்தவருமான யுயுதானர் (ஸாத்யகி) க்ஷேமமா? பகவானிடத்தில் அதிகப் பக்தியுள்ளவரும், பாபமற்றவரும், விவேகியுமான அக்ரூரர் க்ஷேமமா? அவர் ஸ்ரீ கிருஷ்ணன் நடந்த இடத்தில் அவருடைய திவ்யமாகிய பாதம் வைத்த புண்ணிய ஸ்தலத்திலுள்ள தூளிகளின் விசேஷ பிரேமையால் தைரியம் தளர்ந்தவராகப் புரளுகிறவரல்லவா? வேதமானது யாக விதியாகிய பொருளையடக்கிக் கொண்டிருப்பது போல் தேவகி

ஆனவர் ஸ்ரீ மகாவிஷ்ணுவைத் தன்னுடைய வயிற்றில் தரித்தாளல்லவா? அவளுக்குச் சமமானவள் அதிதி தேவியே தவிர வேறில்லை, அந்தக் கிருஷ்ண பகவான் உடைய மாதா க்ஷேமமாக இருக்கிறாளா? அநிருத்தர் க்ஷேமமாக இருக்கிறாரா? அவர் பக்தர்களுக்கு அபீஷ்டத்தைக் கொடுப்பவர். அவரே சாஸ்திரத்திற்குக் காரணரென்றும், மனத்தைப் ப்ரவர்த்திக்கச் செய்பவர் என்றும், அந்தக்கரணத்தின் நான்காவது தத்துவமென்றும் தேவர்கள் சொல்லுகிறார்கள். தங்களுடைய ஆத்மாவிற்குத் தெய்வமாகிய ஸ்ரீ கிருஷ்ணனையே உபாசிப்பவர்களான ஹ்ருதிகர், சத்யபாமையின் புத்திரர் சாருதேஷ்ணர், கதர் முதலிய மற்ற பந்துக்கள் அனைவரும் க்ஷேமமாக இருக்கிறார்களா? தரும புத்திரர் தம்முடைய கைகள் போலிருக்கும் அர்ச்சுனன், ஸ்ரீ கிருஷ்ண பகவான் இவர்களுடன் தர்மமாக லோக மரியாதையைக் காப்பாற்றி வருகிறாரா? அர்ச்சுனன் உடைய ஒத்தாசையால் தர்மபுத்திரருக்குக் கிடைத்த இராஜ்யலக்ஷ்மியைக் கண்டு துரியோதனன் மிகவும் வருத்தப்பட்டானல்லவா? பீமசேனர் கதாயுத்தஞ் செய்யும்பொழுது அவருடைய பாதங்களின் சஞ்சாரத்தைச் சகியாமல் பூமி அசையுமே. அவர் வெகு நாளாகத் தமக்கு அபராதஞ் செய்தவர்களான சத்துருக்களைத் தக்கபடி சிட்சித்தாரா? அர்ச்சுனன் கிராத வேஷங் (வேட வடிவங்) கொண்ட பரமசிவனுடன் யுத்தஞ் செய்யும் சமயத்தில் அர்ச்சுனனுடைய பாணங்களால் அவர் மறைக்கப்பட்டு மிகவும் சந்தோஷமடைந்தாரல்லவா? ரதிகர்களுக்குள் மிகுந்த கீர்த்தியுள்ள இந்த அர்ச்சுனன் சத்ருக்களைக் கொன்றாரா? குந்திதேவியின் ஸ்தன்ய பானத்தால் வளர்ந்தவர்களும், இமைகளுடன் கண்கள் சேர்ந்து

இருப்பதுபோலக் குந்தி புத்திரர்களுடன் விசேஷ பிரேமையுடன் வசிப்பவர்களுமான நகுல சகாதேவர்கள் இருவர்களும் இரண்டு கருட பட்சிகள் மகேந்திரன் இடத்திலிருந்து அமிருதத்தைக் கொண்டு வந்தாற் போலத் தங்களுடைய ராஜ்யத்தை எதிரிகளிடமிருந்து வசப்படுத்திக் கொண்டு சந்தோஷிக்கிறார்களா? அதிரதரும், லோகத்தில் முக்கிய வீரராயுமுள்ள பாண்டு மகாராஜன் வில்லையே ஒத்தாசையாக வைத்துக் கொண்டு நான்கு திக்குகளையும் ஜயித்தார். அப்பேர்ப் பட்ட சூரனாகிய பர்த்தா இறந்தபிறகு குந்தியானவள் தன்னுடைய புத்திரர்களுக்காகவே உயிருடனிருந்தாள். ஓ, உத்தவரே துர்க்கதியை யடையத் தயாராக இருக்கும் திருதராஷ்டிரரைப் பற்றித் துக்கிக்கிறேன். அவர் தம்பியாகிய பாண்டு மகாராஜன் இறந்த பிறகு அவருடைய புத்திரர்களுக்குத் துரோகஞ் செய்ததால் சகோதரனுக்குத் துரோகஞ் செய்தவரானார். மேலும், அவர் தம்முடைய பிள்ளைகளான துரியோதனர்கள் உடைய இஷ்டப்படி என்னைப் பட்டணத்திலிருந்து துரத்தினாரல்லவா? ஆனாலும் மனுஷிய சரீரம் எடுத்து, அவர்களுடைய சித்தத்தைப் பலவகையில் செல்லும்படியாகத் தூண்டும் பகவானுடைய மார்க்கத்தை அவருடைய அனுக்கிரகத்தால் தெரிந்து கொண்டு நான் மற்றவர்கள் கண்களுக்குப் புலப்படாத வனாகிச் சஞ்சரிக்கிறேன். இதில் எனக்கு ஆச்சரியம் யாதுமில்லை. ஸ்ரீ கிருஷ்ண பகவான் துரியோதனன் முதலியவர்களைக் குற்றஞ் செய்த க்ஷணத்திலேயே கொல்லக்கூடிய சாமர்த்தியம் உள்ளவரானாலும் அப்பொழுதே அவர்களைக் கொல்லாமலிருந்தும், தாம் தூதராகி அவர்களிடம் சென்றும், அவர்களால் அவமதிக்கப்பட்டும், உதாசீனராய் இருப்பதற்கு யாது

காரணமென்று யோசிப்போமேயானால், வித்தை, தனம், மேலான குலத்தில் பிறப்பது ஆகிய மூன்று வகையாலும் ஏற்படும் மதத்தால் விவேகமற்றவர்களும், அளவற்ற சைனியர்களுடன் பூமியை அசைப்பவர்களு மான கெட்ட அரசர்களையும் நாசஞ் செய்து, பூமியின் பாரத்தைக் குறைப்பதற்காகவேயென்று நிச்சயிக்க வேண்டியதாயிருக்கிறது. உண்மையில் பிறப்பில்லாத மகாபுருஷன் துஷ்டர்களைச் ஸம்ஹரிப்பதற்காகவே ஜன்மத்தை அங்கீகரித்தார். மேலும் அவர் (அகர்த்தா) ஒன்றையுஞ் செய்யாதவரானாலும், மனிதர்களுக்குக் கர்மத்தில் ச்ரத்தை யுண்டாவதற்காகவே லீலைகளைச் செய்கிறார். இப்படி யில்லாவிடில் குணங்களை அதிக்கிரமித்தவராகிய பரமாத்மாவிற்குக் கர்மாதீன மாகிய சரீரம் எப்படி ஏற்படக் கூடும்? ஆதலால், தம்முடைய ஆக்ஞைக்குட் பட்டவர்களும் சரணம் அடைந்தவர்களுமான ஸகல லோக பாலகர்களுக்காக பூமியில் அவதரித்தவரும், ஜன்மமற்றவரும், சம்சாரத் தைப் போக்கக் கூடிய கீர்த்தியுள்ளவருமான ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய கதைகளைச் சொல்லும் என்றார்.

நோட்டு

பதினொரு –1. திரித தீர்த்தம். 2. உசனஸ் தீர்த்தம் 3. மனு 4. பிருது தீர்த்தம் 5. அக்கினி தீர்த்தம் 6. அஸித தீர்த்தம் 7. வாயு தீர்த்தம் 8. ஸுதாஸ தீர்த்தம் 9. கோ தீர்த்தம் 10. ஸுப்ரமண்ய தீர்த்தம் 11. சிரார்த்ததேவ தீர்த்தம்

அத்தியாயம்–2

உத்தவர் ஸ்ரீகிருஷ்ண சரிதத்தை வர்ணித்தது

விதுரருடைய பிரியமான வார்த்தையைக் கேட்டுப் பாகவத சிரோமணியான உத்தவர் அதிகப் பிரேமையால் ஸ்ரீ கிருஷ்ணனை மனத்தில் நினைத்துக்கொண்டு ப்ருதியுத்தரஞ் சொல்ல முடியாதவராயிருந்தார். அந்த உத்தவர் ஐந்து ப்ராயமுள்ள சிறுவனாயிருக்கும்போது ஒருநாள் பாலக்கிரீடையில் ப்ரதிமை ஒன்றை ஸ்ரீ கிருஷ்ணனாகப் பாவித்து, அதற்குப் பூஜை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது அவருடைய தாயான வள் காலையில் போஜனஞ் செய்யவேண்டியதற்காகப் பலவகையான நல்வார்த்தைகளை சொல்லி அவரை யழைத்தாள். அப்படியும் அவருக்கு ஆகாரத்தில் விருப்பம் உண்டாகவில்லை. பகவத் பக்தர்களுக்குள் சிறந்தவராகிய அப்போர்ப்பட்ட உத்தவர் பகவானுடைய சேவையாலேயே காலத்தைக் கழித்து ஜரையையடைந்தவராகையால் பகவானுடைய பாதங்களைத் தியானித்து, அதிலேயே ரமித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் விதுரருடைய கேள்விக்குப் ப்ரதியுத்தரஞ் சொல்ல முடியுமா? அவர் பகவானுடைய பாதாரவிந்த மதுவினால் விசேஷ ஆனந்த மடைந்து, மிகவும் திடமான பக்தி யோகத்தில் மூழ்கினவராகி ஒரு முகூர்த்தம் மௌனமாயிருந்தார். அப்போது அவர் உடைய எல்லா அவயவங்களிலும் மயிர்கூச்ச லுண்டாயிற்று கண்கள் மூடினவைகளாயிருந்தன. துக்கத்தால் கண்ணீர் பெருகியது. பகவத் விஷயமான விசேஷ ப்ரேம ரசம் நிறைந்தவரும் கிருதார்த்தருமாகி இருந்தார். பிறகு கொஞ்ச நேரம் சென்றபின்,

பகவானாகிய லோகத்திலிருந்து இவ்வுலகத்திற்கு வந்து கண்களைத் துடைத்துக்கொண்டு பகவான் செய்த லீலைகளை நினைத்து ஆச்சரயமுள்ளவராகி, விதுரரை நோக்கி பின்வருமாறு சொல்லலானார்: ஸ்ரீ கிருஷ்ணன் ஆகிய சூரியன் அஸ்தமயத்தையடைந்த போது காலமாகிய பெரிய சர்ப்பமானது நம்முடைய வீடுகளைக் கவர்ந்துகொண்டது. இந்த நிலைமையில் உம்மால் கேட்கப்பட்ட பந்துக்களுடைய க்ஷேமத்தைப் பற்றி எதனைச் சொல்வேன்? இவ்வுலகத்திற்கு அதிருஷ்டக்குறைவுண்டாயிற்று. யாதவர்கள் எல்லோரும் இங்கிதத்தை யறிந்தவர்களானாலும், மிகவும் ஸமர்த்தர்களானாலும், ஒரே இடத்தில் வசிப்பவர்கள் ஆனாலும் ஸகல பூதங்களுக்கும் இருப்பிடமாகிய ஈசுவரனை யாதவர்களுக்குள் சிறந்தவராக நினைத்தார் களே யொழிய மகாவிஷ்ணுவென்று தெரிந்து கொள்ளவில்லை. பாற்கடலில் இருக்கும் மத்ஸ்யங்கள் தங்களுடன் சகவாசஞ் செய்த சந்திரனையும் ஒரு வகையான ஜல ஜந்துவாக நினைத்தனவே யொழிய அமிருத ஸ்வருபியென்று தெரிந்துகொள்ளவில்லை. அவைகள் போன்ற யாதவர்களுக்குப் பாக்கியம் மிகவும் குறைந்துவிட்டது. சில யாதவர்கள் பகவான் உடைய மாயையால் மோகித்து, "இவர் யது குலத்தில் பிறந்தவர். நமக்குப் பந்து" என்று சொல்கிறார்கள்.

சிசுபாலன் முதலிய சிலர் விரோத புத்தியுள்ளவர் களாய் பகவானை நிந்தித்தார்கள். ஆனால் பகவான் இடத்திலேயே மனத்தைச் செலுத்தியவர்களுடைய (என்னை போன்றவர்களுடைய) புத்தியானது மேற் காட்டியவர்களுடைய வார்த்தையைக் கேட்டும் பிரமிக்கவில்லை, மேலும் பகவான் நன்றாகத் தவஞ்

செய்யாதவர்களும், பார்த்துத் திருப்தியடையாத கண்களுள்ளவர்களுமான மனிதர்களுக்குத் திவ்ய சரீரத்தைக் காண்பித்து ஜனங்களுடைய கண்களைக் க்ரஹித்துக் கொண்டு மறைந்தார். அந்தக் திவ்ய சரீரமானது மனுஷ்ய லீலைகளுக்குத் தகுதியானது அவருடைய மனத்திற்கும் ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியது. மிகுந்த சௌபாக்கியத்திற்கும் இருப்பிடம். ஆபரணங்களுக்கு அழகைக் கொடுக்கக் கூடிய அவயவங்களுள்ளது. மேலும் தரும புத்திரருடைய ராஜசூய யாகத்தில் வந்திருந்த ஸகல ஜனங்களும் ஆனந்தகரமாகிய அந்தச் சரீரத்தைப் பார்த்து ப்ரஹ்ம தேவர் ஸ்ருஷ்டி விஷயத்தில் தமக்கிருக்கும் சாமர்த்தியம் முழுவதையும் இந்தச் சரீரத்தில் காட்டியிருக்கிறார் என்று நினைத்தார்கள். அந்தக் திவ்ய மூர்த்தியினுடைய அனுராகமுள்ள சிரிப்பு விநோதம் விளையாட்டான பார்வை ஆகிய இவைகளில் அதிக ஆசை கொண்ட கோபஸ்திரீகள் அனைவரும் அவரவர்கள் செய்து கொண்டிருந்த காரியங்களை முடிக்காமலே பகவானையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். மேலும் அவர்களுடைய மனமானது பகவானிடத்திலேயே பதிந்து அவர் பின் சென்றது. அந்தப் பகவானுக்கு சாந்தம், அசாந்தம் என்று இருவகையான ஸ்வரூபம் உண்டு. அவைகளில் சாந்த ஸ்வரூபமாகிய சாதுக்கள், அசாந்த ஸ்வரூபமாகிய துஷ்டர்களால் உபத்திரவிக்கப் படும்போது காரியகாரணங்களுக்கு அதிபதியான பகவான் விசேஷ கருணையுள்ளவராக மாயையின் சம்பந்தத்தை அடைந்து (மகத் தத்துவத்தைக் காரியமாக உடையது அவ்யக்தம்) உண்மையில் பிறப்பில்லாதவரானாலும் எப்பொழுதும் சித்தமாக இருக்கும் அக்னியானது சில சமயத்தில் கட்டை

முதலியவைகளில் பிரகாசிப்பது போல் அவதரிக்கிறார் (பிரகாசிக்கிறார்). ஆனாலும் அளவற்ற வீரியம் உள்ள அந்தப் பகவான் வஸுதேவருடைய வீட்டில் காராகிருகத்தில்) பிறந்ததாக அபிநயஞ் செய்ததையும் கோகுலத்தில் வஸித்ததையும், கம்ஸனிடத்தில் பயந்தவர்போல் மதுரையை விட்டுப் போனதையும், ஒரு சமயத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான், தேவகி, வஸுதேவர் இவர்களுக்கு நமஸ்காரம் செய்து அவர் களை நோக்கி, ஓ அண்ண! ஓ அம்ம! கம்ஸனிடம் பயந்தவர்களான நாங்கள் உங்களுடன் சகவாசஞ் செய்து உங்களுக்குச் சிச்ருஷை செய்ய முடியாதவர் களானோம். அந்த விஷயத்தில் தயவுசெய்ய வேண்டும்! என்று கேட்டுக்கொண்டதையும் நினைக்கும்போது அவைகள் என் மனதிற்கு வருத்தத்தைப் உண்டு பண்ணுகின்றன. (ஆனாலும் அவரை ஈசுவரனல்ல வென்று எப்படி சொல்லக்கூடும்?) அவர் அசைகின்ற தம்முடைய புருவமாகிய யமனைக் கொண்டு பூமியின் பாரத்தைப் போக்கினார். (அவருடைய புருவத்தின் அசைப்பே துஷ்டர்களுக்கு யமனாக விருந்தது) அவர் உடைய பாதங்களின் தூளியை ஒரு தடவை சேவித்த வன் மறுபடி பிறப்பானா? மேலும் பகவானிடம் விரோத புத்தியுள்ள சிசுபாலன் தருமபுத்திரருடைய இராஜசூயத்தில் யோகிகளால் விரும்பக்கூடிய உத்தம பதத்தைப் பகவானுடைய அனுக்கிரஹத்தால் அடைந்தானென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அவரை விட்டுப் பிரிந்த துக்கத்தை யாரால் ஸகிக்க முடியும்? மேலும், யுத்தத்தில் அரசர்கள் அழகாக ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரை மலர்போன்ற முகத்தைத் தரிசித்து அர்ச்சுனனுடைய அஸ்திரத்தால் சுத்தர்களாகி விஷ்ணு பதத்தை

அடைந்தார்கள். அவருக்குச் சமமானவரும், மேலானவரும் உலகத்தில் ஒருவருமில்லை. அவர் ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் அதிபதி. பரமானந்த ஸ்வரூபியாகையால் ஸகல கர்மத்தையும் அடைந்தவர். இந்திரன் முதலிய லோகபாலர்கள், காணிக்கைகளுடன் அவர் உடைய தரிசனத்திற்காக வந்து, தங்களுடைய கிரீடம் அவருடைய பாத பீடத்தில் படும்படி நமஸ்கரிக்கிறார்கள். அதனாலுண்டாகும் சப்தமானது அவரைத் துதிப்பது போலிருக்கிறது. அந்த மகாபுருஷன் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும் உக்கிரசேனருடைய பக்கத்தில் நின்று, அரசர்களிடம் வேலைக்காரர்கள் சொல்லும் சம்பிரதாய வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டு கைங்கரியங்களைச் செய்து வந்தார். அதை நினைக்கும்போது என் மனம் நடுங்குகிறது. மேலும், பூதனையென்னும் துஷ்ட ராக்ஷஸியானவள் கொல்ல வேண்டுமென்று எண்ணத்துடன் காலகூட விஷயம் ஆகிய ஸ்தன்யத்தை அவருக்கு கொடுத்தும், அவள் இடத்தில் பகவான் கோபியாமலும் அவள் செய்த அபகாரத்தை நினைக்காமலும், யசோதைக்கு தகுதியாகிய உத்தம கதியை அவளுக்குக் கொடுத்தருளினார். பகவானுடைய கருணை வியக்கத்தக்கது. ஆகையால் அவரை விட்டு வேறு யாரைச் சரணம் அடைவோம்? அசுரர்களானாலும் பகவானிடத்தில் விரோதத்தாலாவது எப்பொழுதும் மனத்தைச் செலுத்தியவர்கள் ஆகையால் அவர்களும் பாகவதர்களேயாம். அவர்கள் யுத்தத்தில் கருடனையும்; அவர் மீது ஏறிவரும் சக்ரபாணியாகிய பகவானையும் தர்சித்தார்கள். முன்னொரு சமயத்தில் இந்தப் பூமியின் பாரத்தை நிவர்த்திப்பதற்காகத் ப்ரஹ்மதேவரால் ப்ரார்த்திக்கப்பட்டு ஸ்ரீ நாராயணன் ஸ்ரீ கிருஷ்ணன்

என்ற திவ்ய நாமதேயத்துடன் வஸுதேவருக்குத் தேவகியிடம் காராக்கிருகத்தில் புத்திரனாக அவதரித்தார். அப்பொழுது வஸுதேவர் கம்ஸனிடம் பயந்து வேண்டிக்கொள்ள, அவ்விடமிருந்து கோகுலஞ்சென்று, பலராமனுடன் பதினோரு வருஷங்கள் அவ்விடத்தில் வஸித்தார். யமுனையின் கரையில் கன்று மேய்க்கும் சிறுவர்களுடன் கன்றுகளை மேய்த்து கொண்டு விளையாடினார். அந்த நதியின் கரையிலிருக்கும் மரங்களின் கிளைகளில் பறவைகள் இனிமையாகச் சப்தித்துக் கொண்டிருந்தன. மேலும்; சிங்கக் குட்டி போல அழகாய்ப் பார்க்கும் ஸ்வபாவமுள்ள அந்தப் பகவான் சிறு வயதில் கோபர்கள் பார்த்து ஆனந்திக்கக் கூடிய கௌமார சேஷ்டைகளைக் காட்டியருளினார். சிலவேளை சிரிப்பதுபோலும், சில சமயம் அழுவது போலும் அபிநயஞ் செய்தார். அவரே சொற்ப காலத்திற்குப் பின் லக்ஷ்மிதேவிக்கு இருப்பிடமான வெண்மை நிறமுள்ள பசுக்களையும், விருஷங்களையும் வேணுகானஞ் செய்து சந்தோஷப்படுத்தினார். மேலும் அவர் கம்ஸனால் அனுப்பப்பட்டவர்களும், இஷ்டப்படி உருவமெடுக்கக் கூடியவர்களும், மாயாவிகளுமான அசுரர்களைச் சிறுவர்கள் ஆடும் ப்ரதிமைகளைப் போல நாசஞ் செய்தார். பின்னும் யமுனையிலிருந்து காளியன் என்ற சர்ப்பத்தின் விஷத்தால் கொதித்து இருந்த ஜலத்தைக் குடித்துப் பசுக்களும், கோபர்களும், மரணமடைந்தபோது அவர்களைப் பிழைக்கச்செய்து அந்தச் சர்ப்பத்தை, நிக்ரஹித்து அந்த ஜலத்தைச் சுத்தமாக செய்தார். பின்னும் அவர் இந்திரனை உத்தேசித்துச் செய்யும் பூஜையை நிறுத்தி, பசுக்களுக்குப் பூஜை செய்யும்படி நந்தரிடம் சொல்லி, அந்த மஹோத்ஸவத்தை ப்ராஹ்மணர்களைக் கொண்டு

முடித்து ஏராளமான இருந்த பணத்தை நல்ல விஷயத்தில் செலவிட்டார். பிறகு மகேந்திரன் கோபித்து அதிக மழை பெய்யச் செய்தான். அப் பொழுது பகவான் கோவர்த்தன மலையாகிய குடையைப் பிடித்துக் கோகுலத்தைக் காப்பாற்றினார். பின்னும் அவர் சரத்காலத்தில் நிர்மலமாகிய சந்திரிகையால் பிரகாசிக்கும் ராத்திரியில் அநேக ஸ்திரீகளுடைய மத்தியிலிருந்து இனிமையாக வேணுகானஞ் செய்து கொண்டு விளையாடினார்.

அத்தியாயம்–3

ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதங்கள்

1–23 பிறகு அந்தப் பகவான் தம்முடைய தாய் தந்தையர்களுக்கு க்ஷேமத்தைச் செய்ய விரும்பிப் பலராமனுடன் கோகுலத்திலிருந்து மதுரா நகரஞ் சென்று அவ்விடத்தில் உயரமான இராஜ மஞ்சத்தி லிருப்பவனும் தம்முடைய சத்துருக்களில் பிரதானனு மாகிய கம்ஸனைக் கொன்று, உயிரற்ற அவனுடைய சரீரத்தைப் பூமியில் இழுத்தார். மேலும் அவர் ஸாந்தீபனி என்பவரைக் குருவாக வரித்து, வேதங்களை அவைகளின் அங்கங்களுடன் அவரிடமிருந்து ஒரு தரம் உபதேசித்த மாத்திரத்திலேயே க்ரஹித்துக் கொண்டார். சில நாளைக்கு முன் இறந்து போன குரு புத்திரனை, பஞ்சஜனனென்ற ராக்ஷஸனுடைய வயிற்றைக் கிழித்து, அழைத்து வந்து, குருதக்ஷணை யாக ஆசார்யரிடம் சமர்ப்பித்தார். பீஷ்ம மகாராஜ னுடைய புத்திரியும், லக்ஷ்மீதேவி போன்றவளுமாகிய ருக்மிணி தேவியின் ரூபலாவண்யத்தால் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பி விதர்ப்ப தேசத்தில் வந்து கூடிய அரசர்களுடைய சிரசில் பாதங்களை வைத்து மிகுந்த இலாகவத்துடன் தம் முடைய சொத்தாகிய அந்த ருக்மிணியை அபகரித் தார். பின்பு அவளைக் காந்தர்வ விதிப்படி கல்யாணஞ் செய்துகொண்டார். பின்னும் அவர் அங்குக் குத்தப் படாதவைகளான வ்ருஷபங்களை ஜயித்து, நக்னஜித் தின் புத்திரியை விவாகஞ் செய்து கொண்டார். அப்பொழுது ஏற்கனவே அந்த வ்ருஷபங்களை அடக்கமுடியாமல் வெட்கப்பட்டு அப்புறம் சென்ற

அரசர்கள் அந்த ராஜகுமாரியிடம் ஆசைகொண்டு ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் யுத்தத்திற்கு வந்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களை ஆயுதங்களாலேயே கொன்றார். ஆனால் பகவானுக்குக் கொஞ்சமேனும் காயமில்லை. மேலும் அவர் தாம் சுதந்திரரானாலும் ஸ்திரீகளுக்கு வசப்பட்டவர் போல சத்யபாமையின் பிரீதிக்காக பாரிஜாத வ்ருக்ஷத்தைப் பூமிக்குக் கொண்டுவந்தார். அப்பொழுது ஸ்திரீகளின் கிரீடா மிருகம்போன்ற இந்திரன் மிகவும் கோபங்கொண்டு சைனியங்களுடன் பகவானுடன் யுத்தம் செய்தான். மேலும் அவர் ஆகாயம் வரையில் பரவிய சரீரமுள்ள வனும், பூமியின் புத்திரனுமாகிய நரகாசுரனைச் சக்ராயுதத்தால் கொன்றார். பின்பு பூமிதேவியால் ப்ரார்த்திக்கப்பட்டு நரகனுடைய புத்திரனாகிய பகதத் தனுக்கு இராஜ்யத்தைக் கொடுத்து நரகனுடைய அந்தப்புரத்தில் ப்ரவேசித்தார். அவ்விடத்தில் நரகாசுரனால் அநேக தேசங்களிலிருந்து கொண்டுவரப் பட்ட இராஜ கன்னிகைகள் இருந்தார்கள், அவர்கள் அனைவரும், உபத்திரவ மடைந்தவர்களுக்குப் பந்து வாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானைக் கண்டவுடன் எழுந்திருந்து, சந்தோஷம், வெட்கம், ஆசை ஆகிய இவைகளுடன் பார்த்தார்கள். பிறகு அவர்களெல்லோரு க்கும் தனியாக அந்தப்புரங்களை ஏற்படுத்தி, அவை களில் ஒரே சமயத்தில் தம்முடைய மாயையால் அநேக ரூபமெடுத்துக் கொண்டு விதிப்படி அவர்களை விவாகம் செய்துகொண்டார். பின்பு தமது மாயையை விஸ்தரிப்பதற்காக அந்த ஒவ்வொரு ஸ்திரீயினிடத்தி லும் தமக்கு சமமான பத்துப்புத்திரர்களை உண்டு பண்ணினார். மேலும் அவர் தமது பட்டணத்தை முற்றுகை செய்தவர்களான காலயவனன், மாகதன்,

ஸால்வன் ஆகிய இவர்களை முசுகுந்தர் முதலியவர் களை நிமித்தாமாக வைத்துக் கொண்டு தாமே கொன்றார். தம்மைச் சார்ந்தவர்களுக்குக் கீர்த்தியை உண்டு பண்ணினார். சம்பரனையும், துவிதனையும், பாணனையும், முரனையும், பல்வலனையும், தந்தவக்தி ரன் முதலியவர்களையும் கொன்றார். மற்றவர்களைப் ப்ரத்யும்னன் முதலியவர்களைக் கொண்டு கொல்வித் தார். மேலும் பாண்டவர்களுடைய பட்சத்திலும் துரியோதனனுடைய கட்சியிலும் யுத்தத்திற்குச் ஸித்தர்களாக இருப்பவர்களும், சகோதரர்களும், புத்திரர்களுமாகிய அரசர்களெல்லோரையும் நாசஞ் செய்தார். அந்த ஸைன்யத்தால் குருக்ஷேத்ர பூமியானது அசைந்தது. கர்ணன், துச்சாஸனன், சகுனி ஆகிய இவர்களுடைய துராலோசனையால் துரியோத னுடைய ஐசுவர்யமும், ஆயுசும் குறைந்ததுமன்றி அவனுடைய ஸைனியங்களும் நாசமடைந்தன. கடைசியில் துரியோதனுடைய தொடைகளும் முறிக்கப்பட்டன. அவன் பூமியில் விழுந்தான். அப் பொழுது அவனைப் பார்த்தும் சந்தோஷப்பட வில்லை. ஆனாலும், த்ரோணர், பீஷ்மர், அர்ஜுனர், பீமசேனர் ஆகிய இவர்களால் அக்ஷௌஹிணி ஸைன்யங்கள் கொல்லப்பட்டன. அதனால் பூமியின் பாரம் கொஞ்சம் குறைந்தாலும், அளவற்ற யாதவ ஸைன்யமானது , என்னுடைய அம்சர்களான ப்ரத்யும்னர் முதலியவர்களால் காப்பாற்றப்பட்டுச் சத்துருக்களால் ஜயிக்க முடியாததாக இருக்கிறது. அது பூமி பாரமல்லவா? அதை நாசஞ் செய்வதற்கு என்ன உபாயம்? மத்ய பானஞ்செய்து சிவந்த கண்களுடன் மதங்கொண்டு அவர்கள் ஒருவருக்கொரு வர் யுத்தஞ்செய்தாலொழிய அவர்களைக் கொல்ல

உபாயமில்லை. நான் என்னுடைய லோகஞ் சென்றால் யாதவர்களெல்லோரும் சண்டைசெய்து நாசமடைவார்கள் என்று ஆலோசித்து, தருமபுத்திரருக்கு இராஜ்யாபிஷேகஞ் செய்வித்து, வர்ணாசிரம தர்மங்களை அனுஷ்டித்துக் காண்பித்து, சந்தோஷிக்கச் செய்தார். பின்னும் புருவின் வம்சம் தொடர்சியற்று போகாமல் இருப்பதற்காக அபிமன்யுவினால் உத்தரையினிடம் கர்ப்பம் உண்டு பண்ணப்பட்டதல்லவா? அந்தக் கர்ப்பமானது அச்வஸ்த்தாமாவினுடைய அஸ்திரத்தால் எரிக்கப்படும்போது அக்குழந்தையை ஸ்ரீ கிருஷ்ணன் காப்பாற்றினார். மேலும் அவர் தருமபுத்திரருக்கு மூன்று அசுவமேத யாகங்களை நடத்தி வைத்தார். அந்த தருமபுத்திரரும் ஸ்ரீ கிருஷ்ண பகவானை ஆச்ரயித்தவராய்த் தம்முடைய தம்பிகளுடன் பூமியைப் பரிபாலித்தார். ஸகல ஜகத்ருபியாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானும் சிரௌத கர்மங்களையும், ஸ்மார்த்த கர்மங்களையும் அனுஷ்டித்து, துவாரகா நகரத்தில் காமங்களை அனுபவித்தார். ஆனால் ஆத்ம தத்துவத்தை அறிந்தவராகையால் அவைகளில் அபிமானம் வைக்கவில்லை. மேலும், அவர் தம்முடைய புன்சிரிப்பு உள்ள பார்வையாலும், அமிருதம், போன்ற வார்த்தையாலும், குற்றமற்ற சரித்திரத்தாலும், லக்ஷ்மீதேவிக்கு வாசஸ்தலமாகிய சரீரத்தாலும், பூலோகத்தையும், மேலுலகத்தையும் சந்தோஷிக்கச் செய்தார். இரவில் ஸ்திரீகளுக்குச் சந்தோஷத்தை உண்டு பண்ணி அவர்களிடத்தில் க்ஷணநேரம் பிரீதி செய்பவரான ஸ்ரீ கிருஷ்ண பகவான் யாதவர்களை விசேஷமாகச் சந்தோஷப்படுத்தினார். இப்படி ஸ்ரீ கிருஷ்ண பகவான் வெகு வருஷங்கள் க்ருஹஸ்தாச்ரமத்தை அனுஷ்டித்து கர்மங்களை அனுபவித்த பிறகு அவைகளில்

வைராக்கியம் அடைந்தார். கர்மங்கள் யாவும் தெய்வாதீனங்காளாயிருக்கின்றன. அவைகளை அனுபவிக்கும் புருஷனும் அந்தத் தெய்வத்துக்கு வசப்பட்டவனாகவே இருக்கிறான். அப்படியிருக்க, யோகாப்பியாசத்தால் ஈசுவரனை அனுசரித்த எவன்தான் அவைகளில் ஆசைப்படுவான்?

24–28 பிறகு ஒருகால் துவாரகா நகரத்தில் யதுகுமாரர்களும், போஜ குமாரர்களும் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அவ்விடத்தில் வந்த ப்ராஹ்மணர்களுக்கு அவர்கள் கோபத்தை உண்டு பண்ணினார்கள். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய அபிப்பிராயத்தை அறிந்த ப்ராஹ்மணர்கள் அந்தக் குமாரர்களைச் சபித்தார்கள். சில மாதம் சென்ற பின்பு, வ்ருஷ்ணிகளும், போஜர்களும், அந்தகர்களும் ரதங்களின் மீதேறிக் கொண்டு தெய்வத்தால் புத்தி மாறினவர்களாகி, மிகவும் சந்தோஷத்துடன் ப்ரபாஸமென்ற தீர்த்தம் சென்றார்கள். அந்தப் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, பிதிரு தர்ப்பணம், தேவதர்ப்பணம், ரிஷிதர்ப்பணம் ஆகிய இவைகளை முடித்துக் கொண்டு உத்தமமான பசுக்களையும், சுவர்ணத்தையும், வெள்ளியையும், படுக்கைகளையும், வஸ்திரங்களையும், மான் தோல் முதலியவைகளையும், கம்பளங்களையும், குதிரைகளையும், ரத்தினங்களையும், யானைகளையும், கன்னிகைகளையும், ஜீவனத்துக்குப் போதுமான தானியம் விளையக்கூடிய பூமியையும், ப்ராஹ்மணர்களுக்கு கொடுத்தார்கள். மேலும் பசுக்கள், ப்ராஹ்மணர்கள் ஆகிய இவைகளுக்காகவே ஜீவிப்பவர்களும், சூரர்களுமான அவர்கள் மேலான ரசமுள்ள அன்னத்தையும் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்து அவர்களுக்கு நமஸ்காரம் செய்தார்கள்.

அத்தியாயம் 4

விதுரர் மைத்ரேயரைச் சந்தித்தது

1–18. பின்பு அவர்கள் ப்ராஹ்மணர்களிடம் விடைபெற்று மத்யத்தைக் குடித்து, அதனால் மயக்கம் அடைந்து மர்ம ஸ்தானங்களைப் பிளக்கக்கூடிய கெட்ட வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டார்கள். மேலும், மத்யபானஞ் செய்து புத்தி மாறிப்போனதால் சூரியன் அஸ்தமனத்தை அடைந்து பிறகு மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்ந்து கொள்வது போலக் கலகம் செய்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ண பகவான் தம்முடைய மாயையின் காரியமாகிய அந்தக் கலகத்தைப் பார்த்து சரஸ்வது நதியில் ஆசமனஞ் செய்து ஒரு அரசமரத்தின் கீழ் உட்கார்ந்திருந்தார். அதற்கு முன்னமேயே என்னை நோக்கி, ஓ உத்தவ, நீ பத்ரிகாச்ரமம் போ என்று தம்முடைய குலத்தைக் கொல்லவேண்டுமென்று விரும்பியவரும், பக்தர்கள் உடைய உபத்திரவத்தைப் போக்கடிப்பவருமாகிய ஸ்ரீ பகவான் சொல்லியிருந்தார். அப்படியும் நான் அவர் உடைய அபிப்பிராயத்தை அறிந்திருந்தும் அவர் உடைய பாதங்களை விட்டுப் பிரிய மனமில்லாதவனாக ஸ்ரீ கிருஷ்ணன் பின் சென்றேன். பிறகு சரஸ்வதி நதியின் கரையில் ஒருவராய் உட்கார்ந்திருப்பவரும், ப்ரீதியுள்ளவரும்; நாதருமாகிய பகவானைக் கண்டேன், அவர் லக்ஷ்மிக்கு வஸிக்குமிடம்; ஆச்ரயம் அற்றவர்; கறுத்த திருமேனியுள்ளவர் ரஜோகுணம் இல்லாதவர், மிகவும், சாந்தர், அழகான கண்கள் உள்ளவர், நான்கு கைகளுள்ளவர். பீதாம்பரம் தரித்தவர், இடத்தொடையில் வலக்காலை வைத்துக்

கொண்டு சிறிய அஸ்வத்த மரத்தில் சாய்ந்து கொண்டு இருப்பவர், விஷய சுகத்தில் ஆசையில்லாதவர், ஆனந்தத்தால் நிறைந்தவர். அப்பொழுது வ்யாஸ மகா முனிக்கு மித்திரரும், கிருதகிருத்யருமாகிய மைத்ரேயர் தெய்வச் செயலால் அவ்விடம் வந்தார். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ண பகவான் பக்தராகிய மைத்ரேயர், முன்பாகப் ப்ரியம், சிரிப்பு ஆகிய இவைகளுள்ள பார்வையால் சிரமத்தை நிவர்த்தித்துக்கொண்டு என்னை நோக்கி, ஓ உத்தம உம்முடைய மனத்தில் இருக்கும் எண்ணமென்னதென்று எனக்குத் தெரியும், முன்ஜன்மத்தில் நீர் ப்ரஜாபதிகளான வஸுக்களுடைய யாகத்தில் என்னைப் பூஜித்தீர். ஆதலால் என்னுடைய ஸ்தானத்தை யடைய வேண்டுமென்று நீர் நினைத்தது மற்றவர்களுக்குத் துர்லபமேயாகும், ஓ சாதுவே! மனுஷ்ய லோகத்தை விட்டு நான் வைகுண்டம் செல்லும் சமயத்தில் மிகுந்த பக்தியுடன் என்னை நீர் தரிசித்து என்னுடைய அனுக்கிரகம் பெற்றபடியால் இதுவே உமக்குக் கடைசியான ஜன்மம். முந்திய பாத்மகல்பத்தில் என்னுடைய கொப்பூழில் தோன்றிய, தாமரஸ புஷ்பத்திலிருந்து ப்ரஹ்மதேவருக்கு என் மகிமையைக் காண்பிக்கும் ஞானத்தை உபதேசித்தேன். அதனை வித்வான்கள், பாகவத ஞானமென்றார்கள். அதனை உமக்கு உபதேசிக்கிறேனி என்றார். இப்படிப் பரமபுருஷன் மிகுந்த ப்ரீதியுடன் சொல்லி ஒவ்வொரு க்ஷணத்திலும் என்னை அனுக்கிரகிக்கும் போது, எனக்கு அவரிடத்தில் பக்திமேலிட்டு அதனால் மயிர்கூச்சலுண்டாயிற்று. துக்கத்தால் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு கத்கத ஸ்வரத்துடன் கை கூப்பிப் பகவானை நோக்கி ஓ ஈச உம்முடைய பாதார விந்தங்களை ஆச்ரயித்தவர்களுக்கு நான்கு

புருஷார்த்தங்களில் எதுதான் கிடைக்காது? ஆனாலும் எனக்குத் தருமம் முதலியவைகளில் ஆசை இல்லை. உம்முடைய பாதங்களைச் ஸேவிப்பதிலேயே விருப்பம் உள்ளவனாக இருக்கிறேன். கர்மங்களுடைய சம்பந்தம் அற்றவராகிய நீர் கர்மங்களை அனுஷ்டிப்பது, ஜன்மம் அற்றவரானாலும் பூமியில் அவதரிப்பது, காலரூபியாகிய நீர் சத்துருக்களிடம் பயந்து ஓடுவது, சமுத்திர மத்யத்திலுள்ள துவாரகா நகரத்தில் ஒளிந்து வஸிப்பது. ஆத்மாவினால் சந்தோஷப்படுகிறவரானாலும் அநேக ஸ்திரீகளைக் கல்யாணம் செய்துகொண்டு கிருஹஸ்தாசிரமத்தை அடைந்திருப்பது, ஆகிய இவைகளைக் கண்டு வித்வான்களுடைய புத்தியும் மோஹத்தை அடைகிறது. மேலும் ஓ தேவ! தடையற்றதும், பூர்ணமும், சம்சயமற்றதுமான ஆத்ம ஞானமுள்ளவராகிய நீர் ராஜ காரியங்களைப்பற்றி ஆலோசிக்க வேண்டிய ஸமயத்தில் வெகு ஜாக்கிரதை யுள்ளவராகிய என்னை வரவழைத்து ஒன்றுமறியாதவர்போல் ராஜ்யத்தில் என்னுடைய அபிமதத்தைக் கேட்கிற வழக்கமல்லவா? அதனை நினைக்கும்போது என் மனம் மோஹத்தை அடைகிறது. ஓ ஸ்வாமியே! ஆத்மாவின் உண்மையைத் தெரிவிக்கக்கூடியதும், மேலானதுமான எந்த ஞானத்தைப் பூர்ணமாக நீர் ப்ரஹ்மதேவருக்கு உபதேசித்தீரோ, அது என்னால் தெரிந்துகொள்ளக் கூடியதானால் அதை உபதேசியும். அதனால் சம்சார துக்கத்தைப் போக்கிக் கொள்ளுவேன் என்று ப்ரார்த்தித்தேன்.

19–22. பிறகு தாமரை மலர்போன்ற கண்களுள்ளவரும் குருவுமாகிய ஸ்ரீ பகவான் என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துக்கொண்டு தம்முடைய

உத்தமகதியை எனக்கு உபதேசித்தார். இம்மாதிரி பகவானுடைய பாதங்களாகிய தீர்த்தத்தை ஆராதித்து ஆத்மஞானத்தை அடைந்தேன். பின்பு அவருடைய பாதங்களில் நமஸ்கரித்து அவரைப் ப்ரதக்ஷிணஞ் செய்து அவருடைய விரஹத்தைச் ஸஹிக்காமல் மனவருத்ததுடன் இவ்விடம் வந்தேன். அவரைத் தரிஸித்ததால் உண்டான சந்தோஷமுள்ளவனும், அவரை விட்டுப் பிரிந்ததால் உண்டான துக்கமுள்ளவனுமாகிய நான் அவருக்கு மிகவும் இஷ்டமான பதரிகாசிரமத்தை உத்தேசித்துப் போகிறேன். அவ்விடத்தில் நர நாராயணரென்று திவ்ய நாமதேயங்களுடன் பகவான் முனி வேஷம் பூண்டு பிறருக்கு இம்சை இல்லாமலும், மற்றவர்களால் அனுஷ்டிக்க முடியாததுமான தபஸை வெகு காலமாகச் செய்து வருகிறார் என்று சொன்னார்.

23–25. அதைக் கேட்டு வித்வானாகிய விதுரர் சகிக்க முடியாத பந்துக்களின் நாசத்தை. உத்தவர் முதமாகத் தெரிந்துகொண்டு, அந்தத் துக்கத்தை விவேகத்தால் அடக்கிக் கொண்டார். அப்போது விதுரர், கிருஷ்ணை பக்தர்களுக்குள் முக்கியரும், பாகவதர்களுக்கு உத்தமரும். பதரிகாசிரமம் செல்லுபவருமான உத்தவரை நோக்கி, ஓ உத்தவ! யோகீசுவராகிய ஈசுவரன் ஆத்மாவின் உண்மையை காண்பிக்கும் எந்த மேலான ஞானத்தை உமக்கு உபதேசித்தாரோ அதனை நீர் எனக்கு உபதேசிக்கவேண்டும். ஏன் என்றால், விஷ்ணு பக்தர்கள் பக்தர்களைக் காப்பாற்றுவதற்காக உலகத்தில் சஞ்சரிக்கிறார்களே யொழிய, அவர்களுக்குச் சொந்தமான காரியம் வேறு ஒன்றும் இல்லை என்று ப்ரியமாகக் கேட்டுக்கொண்டார்.

26–27. அதனைக் கேட்டு உத்தவர் விதுரரை நோக்கி ஓ விதுரா! பகவான் பூலோகத்தை விட்டு வைகுண்டம் செல்லும் காலத்தில் உமக்கு உபதேசம் செய்வதற்காக மைத்ரேய மகாமுனிக்கு ஆக்ஞாபனம் செய்திருக்கிறார். ஆனதால் அவரை ஆத்மஞானத் திற்காக நீர் உபாசிக்கவேண்டும் என்று சொல்லி அன்று ராத்ரி யமுனா நதியின் மணல் திட்டில் ஸகல ஜகத் ஸ்வரூபியான பகவானுடைய கதைகளை விதுரருக்குச் சொல்லிக்கொண்டு அந்த அமிருதத்தில் ஸ்நானஞ் செய்து, தாபமில்லாதவராக அன்றிரவை ஒரு க்ஷணம் போல கழித்து மறுநாள் பதரிகாசிரமஞ் சென்றார் என்று சுகர் சொன்னார்.

28. அதனைக் கேட்டு பரீட்சித்து மகாராஜன் சுகரை நோக்கி, ஓ ப்ராஹ்மண! அதிரதர்களும், அவர்களுடைய சேனாபதிகளுமாகிய வ்ருஷ்ணிகள், போஜர்கள் ஆகிய இவர்கள் நாசமடைந்த பிறகு, ப்ரஹ்மா, விஷ்ணு, சிவபெருமான் ஆகிய இவர்களுக்கு மேலானவராகிய பகவான் தம்முடைய சரீரத்தை விட்டுவிட்டாரல்லவா? அப்பொழுது உத்தவர் மாத்திரம் எப்படியிருந்தார்? என்று கேட்டார்.

29–32. அதனைக் கேட்டு சுகர், அரசனை நோக்கி, ஓ மகாராஜ வீணாகாத சங்கற்பமுள்ள பகவான் மிகவும் விருத்தி யடைந்திருந்த தம்முடைய குலத்தைப் ப்ராஹ்மண சாபத்தை நிமித்தமாகவுடைய தம்முடைய சக்தியைக் கொண்டு நாசஞ்செய்து தம்முடைய தேகத்தைவிட்டுவிட விரும்பியபொழுது, நான் இவ்வுலகத்தை விட்டு மேலுலகஞ் சென்றால் எனக்கு ஸ்வாதீனமான ஞானத்தை அடைவதற்கு

இந்திரியங்களை ஜயித்தவர்களுக்குள் உத்தமராக இருக்கும் உத்தவரே தகுதியானவர், மேலும், என் இடத்திலிருக்கும் குணங்கள்யாவும் கொஞ்சமேனும் குறைவின்றி இவரிடத்தில் இருக்கின்றன. இவர் விஷயங்களால் கலக்க முடியாதவர். ஆதலால் இவர் ஆத்ம ஞானத்தை ஜனங்களுக்கு உபதேசித்துக் கொண்டு இருக்கட்டும் என்று யோசித்து மூவுலகத் திற்கும் குருவாயும் வேதங்களுக்குக் காரணராயும் இருக்கும் அந்த பகவான் இவரைப் பூமியில் வஸிக்கும் படி ஆக்ஞாபித்தார் உத்தவரும் அந்த உத்தர்வின்படி பத்ரிகாசிரமத்தில் பகவானைச் ஸமாதியில் பூஜித்து வந்தார்.

32–36. ஓ குரு சிரேஷ்ட விதுரரும், பரமாத்மா வாகிய கிருஷ்ணன் லோகானுக்ருஹார்த்தமாய்ப் பூமியில் அவதரித்து நடத்திய உத்தமமான சரிதங்களை உத்தவர் சொல்லக்கேட்டு, ஞானிகளுக்குத் தைரியத்தை விருத்தி செய்யக்கூடியதும் மற்றவர்களால் செய்ய முடியாததுமான பகவானால் செய்யப்பட்ட சரீர தியாகத்தையும் தெரிந்துகொண்டு (பகவான் விதுரருக்கு மைத்ரேயரை ஞானோபதேசம் செய்யும்படி ஆக் ஞாபனம் செய்தார் என்றதை) உத்தவருடைய வார்த்தையால், தம்முடைய ஞாபகம் அவருக்கு இருந்ததையும்; நன்றாகத் தெரிந்துகொண்டது இல்லாமல் பாகவதராகிய உத்தவர் பதரிகாசிரமம் சென்ற பிறகு ஸ்ரீ கிருஷ்ண பகவானையே தியானஞ் செய்து அழுதார். பிறகு பாகவதர்களுக்குள் சிறந்த வராகிய விதுரர் யமுனா நதியிலிருந்து மைத்ரேயர் வஸிக்கும் இடமாகிய கங்கா தீரத்திற்குச் சில தினங்களில் சென்றார்.

அத்தியாயம்–5

மைத்ரேயருக்கும் விதுரருக்கும் ஸம்வாதம்

1–16 ஓ மகாராஜ! இப்படி குருக்களில் சிறந்த வராகிய விதுரர், கங்கையின் கரையில் உட்கார்ந்து இருப்பவரும், அளவற்ற ஞானமுள்ளவரும், பகவத் தியானத்தால் சுத்தரும், நல்ல ஸ்வபாவமுள்ளவராக இருப்பதாகிய குணத்தால் திருப்தியடைந்தவருமான மைத்திரேயரைக் கண்டு, அவருடைய சமீபஞ் சென்று, ஓ மகரிஷியே! ஜனங்கள் சுகத்தை அடைய வேண்டியதற்காகக் கர்மங்களைச் செய்கிறார்கள். ஆனால் அவைகளால் சுகமாவது, துக்க, நாசமாவது ஏற்படுகிறதில்லை. அவைகளால் துக்கமே நேரிடுகிறது. ஆதலால் சம்சாரத்தில் எதனைச் செய்வது யுக்தமோ அதனைச் சொல்ல வேண்டும். பூர்வ ஜன்மத்திய கர்ம வசத்தால் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் பக்தி செய்யாதவனும், அதர்ம ஸ்வபாவமுள்ளவனும், துக்கத்தை அடைந்தவனுமாகிய ஜனத்தை அனுக்கிர கிப்பதற்காகவே திவ்ய மங்களங்களான விஷ்ணுவின் சரீரங்கள் இவ்வுலகத்தில் சஞ்சரிக்கின்றன. ஓ சாதுக்களில் சிறந்தவரே! எந்த உபாயத்தால் பகவானை ஆராதித்தால் இருதயம் சுத்தமாகும்? எதில் பகவான் வாசஞ் செய்து அனாதியாகிய அபரோக்ஷ ஞானத்தை கொடுப்பார்? அந்த சுக ரூபமான மார்க்கத்தை உபதேசிக்க வேண்டும். முக்குண சரூபமாகிய மாயைக்கு அதிபதியும்; படைப்பது முதலியவைகளுக்கு அதிபதி யும், சுதந்திரருமாகிய பகவான் பூமியில் அவதரித்து எந்தக் காரியங்களைச் செய்தார்? ஒரு விஷயத்திலும் ஆசை அற்றவரான அந்தப் ப்ரபு இந்த உலகத்தை முன் காலத்தில் எப்படி ஸ்ருஷ்டித்தார்? மறுபடியும்

தம்மால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஜகத்திற்கு ஜீவனத்தைக் கற்பித்து எப்படிக் காப்பாற்றுகிறார்? மறுபடியும் அந்தப் பரமாத்மாவே வியாபாரம் அற்றவராக இந்த ஜகத்து முழுவதையும் தம்முடைய இருதயாகாசத்தில் அடக்கிக் கொண்டு யோக மாயையிடம் எப்படிச் சயனஞ் செய்தார்? யோகிகளுக்கு அதிபதியும், ப்ரபஞ்சத்தின் உள் ப்ரவேசித்தவருமாகிய அந்தப் பகவான் தாம் ஒருவரானாலும் ப்ரஹ்மா முதலிய அநேக உருவங்களை எப்படித் தரிக்கின்றார்? மேலும் அவர் மத்ஸ்யம், கூர்மம் முதலிய அவதாரங்களைச் செய்து ப்ராஹ்மணர்களுக்கும், பசுக்களுக்கும், தேவர் களுக்கும் அனுகூலமான காரியங்களைச் செய்கிறார். புண்ய ஸ்லோகர்களுக்குள் ச்ரேஷ்டராகிய அந்தப் பகவானுடைய சரிதங்களைக் கேட்டு என்னுடைய மனம் திருப்தி யடையவில்லை. ஸகல லோகத்திற்கும் அதிபதியாகிய புருஷன் எந்த எந்தத் தத்துவங்களைக் கொண்டு லோக பாலர்களையும்,லோகங்களையும், லோகா லோக பர்வதங்களையும் கற்பித்தார்? மேலும் ஸகல ப்ராணிகள், அதன் கூட்டம் ஆகிய இவை களுடைய பேதமானது அவரவர்களுடைய கர்மத் திற்குத் தக்கபடி எற்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது? ஓ ப்ராஹ்மணச்ரேஷ்ட! தாமாக உண்டானவரும், லோகங்களைச் ஸ்ருஷ்டித்தவருமான ஸ்ரீமந் நாராயணன் ப்ரஜைகளுடைய ஸ்வபாவத்தையும், கர்மாவையும், பெயரையும் எப்படி வெவ்வேறாகச் செய்தார்? அவற்றை எனக்குச் சொல்லும். ஓ பகவன்! ப்ராஹ்மணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள் (பர) சூத்ரர்கள் (அபர) ஆகிய இவர்களால் அனுஷ்டிக்க வேண்டிய வ்ரதங்களை வ்யாஸ மகர்ஷியின் முகமாக அடிக்கடி கேட்டிருக்கின்றேன். அவைகள் அற்ப

பலத்தைக் கொடுக்கக் கூடியவைகள். ஆதலால் அவை களைக் கேட்கப் போதுமென்ற திருப்தி உண்டாயிற்று. ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய கதையைக் கேட்பதில் அப்படிப்பட்ட திருப்தி உண்டாகிறதில்லை. ஏனெனில், அந்தக் கதாமிருதமானது புருஷனுடைய காதுவழியாக உட்சென்று சம்சார துக்கத்தைக் கொடுக்கும் அபிமானத்தைப் வீடு முதலானவைகளில் என்னுடைய தென்பதை) போக்கடிக்கிறது. ஆகையால் சாதுக்களின் கூட்டத்தில் நாரதர் முதலிய விவேகிகளால் கொண்டாடப்பட்ட ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய கதையிலிருந்து எவன்தான் திருப்தியடைவான்? பகவத் குணங்களைச் சொல்ல வேண்டுமென்ற விருப்பமுள்ள வரும், உமக்கு மித்திரருமான வ்யாஸ மகர்ஷியானவர் எனக்குப் பாரதக் கதையைச் சொன்னார். அதில் கிராம்ய சுகங்கள் வருணிக்கப்பட்டிருந்தாலும் அவை களைத் துச்சமென்று சிந்தித்து பகவானுடைய கதையிலேயே மனம் பதிந்திருக்குமானால் விஷயங் களில் வைராக்கியமுண்டாகும். பகவானுடைய கதையை நினைப்பதனால் சுகமடைந்தவனுக்கு ஸகல துக்கங்களும் நீங்கிவிடுகின்றன. மேலும், எவர்கள் பாகவதத்தின் கருத்தையறியாதவர்களோ அவர்கள் துக்கிக்கத் தகுந்தவர்கள். வீணான வார்த்தை சிந்தை இவைகளுள்ள அவர்களுடைய ஆயுளைத் தேவனாகிய காலமானது குறைத்து விடுகிறது. ஆதலால் இவர்களைப் பற்றித் துக்கிக்கிறேன். ஓ மைத்திரேய! இந்த லோகத்துக்கு க்ஷேமத்தை யுண்டு பண்ணுகிற வரும், சம்சார துக்கமுள்ளவர்களுக்குப் பந்துவுமாகிய ஸ்ரீ மகா விஷ்ணுவினுடைய சாரமான கதையைப் புஷ்பங்களிலிருந்து வண்டானது தேனை எடுப்பது போல நீர் எடுத்துரைக்க வேண்டும். ஜகத்தைச்

ஸ்ருஷ்டிப்பதற்கும், அவைகளைப் பரிபாலிப்பதற்கும், நாசஞ் செய்வதற்கும் எவர் சத்வம் முதலிய குணங்களை அடைந்தாரோ, அவரே பின்பு பூமியில் அவதரித்துப் புருஷர்களால் செய்ய முடியாத எந்த எந்தக் காரியங்களைச் செய்தாரோ அவைகளைச் சொல்லும் என்று கேட்டார்.

17–50 இப்படி விதுரர் மனிதர்களுடைய க்ஷேமத் திற்காகக் கேட்க, அதனைக் கேட்டு, குஷாரவருடைய புத்திரராகிய மைத்ரேய மஹர்ஷி விதுரரை நோக்கி, அவரைக் கொண்டாடி, "ஓ சாதுவே! நீர் நன்றாகக் கேட்டீர். இதனால் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில் மனதைச் செலுத்தியவரான உமக்குக் கீர்த்தி விருத்தியடையும். ஜனங்கள் உம்மால் அனுக்கிரகிக்கப் பட்டார்கள். ஓ விதுர! நீர் ஸ்ரீ மகா விஷ்ணுவிடத்தில் ஏகாந்த பக்திசெய்து, அவரை சுவாதீனப்படுத்திக் கொண்டிருக்கிறீர்; மேலும் நீர் வ்யாஸ மகர்ஷியின் புத்திரரானதால் "பகவத் கதையைச் சொல்ல வேண்டும்" என்று நீர் ப்ரச்னம் செய்வது ஆச்சரியம் அல்ல. பகவத் பக்தியில்லாதவர்களைச் சிட்சிப் பவராகிய யமன், ஆணிமாண்டவ்யருடைய சாபத்தால் வ்யாஸருடைய ப்ராதாவாகிய விசித்திரவீரியனுடைய களத்திரம் போன்ற தாசியினிடம் வ்யாஸ மகர்ஷிக்குப் புத்திரனாகப் பிறந்தார். அவர் நீர் தான். மேலும் நீர் ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கும், பாகவதர்களுக்கும் ப்ரியர். அதனால்தான் பகவான் பரலோகஞ் செல்லும் சமயத்தில் உம்முடைய ஞாபகம் வைத்துக்கொண்டு உமக்கு ஞானோபதேசஞ் செய்யும்படி எனக்கு ஆக்ஞாபனஞ் செய்தார். ஆதலால் யோக மாயையின் ஆச்சர்ய சக்தியால் கற்பிக்கப்பட்டவைகளும்,

ஜகத்தின் உற்பத்தி, பரிபாலனம் ஆகிய இவைகளையே ப்ரயோசனமாக வுடையவகைளுமான பகவானுடைய லீலைகளைக் க்ரமமாய் வருணிக்கிறேன். ஸ்ருஷ்டி காலத்தில் பலவகையாகத் தோன்றுகிறவரும், எல்லாப் ப்ராணிகளின் ஸ்வரூபமாக விருப்பவரும், எங்கும் இருப்பவருமாகிய பகவானுக்குத் தாமொருவராக இருக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாகும் சமயமான ஸ்ருஷ்டிக்கு முந்திய காலத்தில் அவர் ஒருவரே இருந்தார். அந்தப் பரமாத்மாதான் பார்க்கிற வராய் (திருஷ்டாவாக) இருந்து கொண்டு, பார்க்கப் படும் வஸ்துவை (திருச்யத்தை) பார்க்கவில்லை. ஏன் என்றால் அவர் தாம் ஒருவரேயாக அப்பொழுது ப்ரகாசித்துக் கொண்டிருந்தார். மாயை முதலிய சக்திகள் அடங்கியிருந்ததால் தம்மை இல்லாதவர் போல் நினைத்தார். (பார்க்கப்படும் வஸ்து இல்லாவிடில் பார்க்கிறவனென்ற வியவகாரம் இல்லாததனால் என்பது கருத்து). ஆனால் அவர் (திருக்) சக்தியுள்ளவர். காரிய காரண ஸ்வரூபமான அந்த ஸத்தாகிய திருஷ்டாவினு டைய சக்தியே மாயை என்று சொல்லப்படுகிறது. ஓ மகா பாக்கியமுள்ளவரே! ப்ரபுவாகிய பகவான் அந்த மாயையைக் கொண்டே உலகத்தைப் படைத்தார். சித்சக்தியுள்ள பரமாத்மாவானவர் காலத்தின் சக்தியால் கலங்கின குணங்களுள்ள மாயையினிடத்தில் தம்முடைய அம்சமாயிருக்கும் புருஷனைக் கொண்டு சிதாபாஸமாகிய வீர்யத்தை வைத்தார். காலத்தால் தூண்டப்பட்ட அந்த மாயையினிடமிருந்து அஞ் ஞானத்தைப் போக்கக் கூடிய விஞ்ஞான ரூபமாகிய மகத்தத்துவமானது தன்னுடைய தேகத்தில் அடங்கி இருக்கும் ஜகத்தை வெளிப்படுத்திக் கொண்டு உண்டாயிற்று. அம்சம், சிதாபாஸம், குணங்கள்

காலம் ஆகிய இவைகளுக்கு ஸ்வாதீனமாக அந்த விஞ்ஞானாத்மாவானவர் பகவானுடைய கடாக்ஷத் தால் இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிக்கவேண்டிய நிமித்தம் வேறு உருவத்தை அடைந்தார். அந்த மகத் தத்துவத் திலிருந்து காரியம் காரணம், கர்த்தா ஆகிய இவை களுக்கு ஆசிரயமும், பூதங்கள், இந்திரியங்கள், மனஸ் ஆகிய இவைகளின் உருவமாயுமிருக்கும் அகங்காரம் ஆனது உண்டாயிற்று. அது வைகாரிகம், தைஜஸம், தாமஸம் என்று மூன்று வகையுள்ளது. வைகாரிகம் என்ற அகங்காரம் வேறு உருவத்தை அடைய, அதனிடமிருந்து மனம் உண்டாயிற்று. இந்திரியங் களுக்கு அதிபதிகளும், சப்தம் முதலிய விஷயங்களைப் ப்ரகாசிக்கச் செய்பவர்களுமான காரிய தேவதைகளும் வைகாரிகர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். ஞானேந்திரியங்களும், கர்மேந்திரியங்களும் தைஜஸங் கள் என்று சொல்லப்படுகின்றன. சூட்சும பூதமாகிய சப்தமானது தாமஸ அகங்கார தத்துவத்திலிருந்து உண்டாயிற்று. அதனிடமிருந்து, ஆத்மாவிற்குச் சரீரம் ஆகிய ஆகாசமானது, எல்லாவற்றிற்கும் அதிபதியான பகவானால் பார்க்கப்பட்டு, காலம், ப்ரக்ருதி, சிதா பாஸம் இவைகளுடைய சேர்க்கையால் உண்டாயிற்று. ஆகாசத்திலிருந்து உண்டான ஸ்பர்சமானது வேறு உருவத்தை யடைந்து வாயுவை உண்டுபண்ணிற்று. அந்த வாயுவும் வேறு உருவத்தை அடைந்து ஆகாச சம்பந்தத்தால் விசேஷ உருவ பலத்துடன் ரூபதன்மாத்ரையை உண்டுபண்ணிற்று. அதுவே யோகத்தைப் ப்ரகாசிக்கச் செய்யும் ஜ்யோதிஸ்ஸாகும். அந்த ஜ்யோதிஸ்ஸானது வேறு உருவத்தை அடைந்து வாயுவுடன் பரமேசுவரனால் கடாக்ஷிக்கப்பட்டு, காலம், மாயை, அம்சம் ஆகிய இவைகளுடைய

சேர்க்கையால் ஜலத்தை உண்டு பண்ணிற்று. அந்த ஜலமானது தேஜசுடன் விகாரத்தை அடைந்து பகவானுடைய கடாக்ஷம் பெற்று, காலம், மாயை அம்சம் ஆகிய இவைகளுடைய சம்பந்தத்தால் கந்தத்தைக் குணமாயுடைய பூமியை உண்டு பண்ணிற்று. ஆகாசம் முதலிய பூதங்களுக்குள் எதற்கு எது காரணமோ, எதற்கு எது காரியமோ, அந்தக் காரிய பூதங்களுக்குக் காரண பூதங்களுடைய சேர்க்கையால் மேல்மேலும் அதிகமான குணங்கள் உண்டாகின்றன. காலலிங்கமாகிய விகாரம், மாயா லிங்கமாகிய விட்சேபம், அம்சலிங்கமாகிய சைதன்யம் ஆகிய இவைகளுள்ளவர்களும், மகத்தத்துவம் முதலிய வைகளுக்கு அபிமானிகளாயுமுள்ள இந்தத் தேவர்கள் விஷ்ணுவின் அம்ச பூதர்களேயாம். இந்தத் தேவர்கள் அநேகர்களாகையால் ப்ரம்மாண்டத்தை உண்டு பண்ண அசக்தர்களாக ப்ரபுவாகிய மகாவிஷ்ணுவிடம் வந்து கை கூப்பி, "ஓ தேவ! உம்முடைய பாதாரவிந்தத்தை நமஸ்கரிக்கிறோம். அது சரணம் அடைந்தவர்களுக்குத் தாபத்தை நிவர்த்திக்கும் குடையாக இருக்கிறது. அந்தப் பாதார விந்தத்தின் மூலத்தை ஆசிரயித்து யதிகள் சம்சார துக்கத்தை அடைகிறதில்லை. ஆகையால், ஓ, பகவான் எப்பொழுதும் ஞானப்ரகாசமுள்ள உம்முடைய பாதச் சாயையை ஆச்ரயிருக்கிறோம். ஓ, பகவான்! சுத்த சித்தர்கள், விஷயத்தில் ஆசை இல்லாத தம்முடைய மனத்தில் உம்முடைய முகமாகிய தாமரைப் புஷ்பத்தில் வஸிக்கக்கூடிய வேதங்களாகிய பட்சி களைக் கொண்டு எதனைத் தேடுகிறார்களோ, பாபங் களைப் போக்கடிக்கும் ஜலமுள்ள அநேக நதிகளுள் சிறந்தவளாகிய கங்கையானவள் எதனிடமிருந்து உண்டானாளோ அந்த உம்முடைய பாதாரவிந்தத்தைச் சரணமடைகிறோம்.

தைரிய முள்ளவர்கள் மிக்க ச்ரத்தையுடன் பகவத் குணங்களைக் கேட்டு, அதனால் பக்தியடைந்து, அதனால் தம்முடைய இருதயத்தைச் சுத்தமாகச் செய்து கொண்டு, அதில் எதனைத் தியானஞ் செய்து வைராக்யம், ஞானம் ஆகிய இவைகளை அடைகிறார் களோ, அந்தப் பாதங்களை ஆச்ரயிக்கிறோம். ப்ரபஞ்சத்தைச் ஸ்ருஷ்டிப்பதற்கும், பரிபாலிப்பதற்கும், நாசஞ் செய்வதற்கும் அவதரித்தவரான உம்முடைய பாதாரவிந்தத்தை நாங்களெல்லோரும் சரணமடை கிறோம். அதை நினைத்த மாத்திரத்தில் பக்தர்களுக்கு ஸகல பயமும் நீங்குகிறது. ஓ தேவ! இந்திரியம் முதலிய பலவகையான சாமக்கிரியுள்ள இந்த அற்பமான தேகத்தில் "நான், என்னுடையது" என்ற துரபிமானம் வைத்திருக்கும் புருஷர்களுக்குத் தங்களுடைய தேகத்தில் வஸிப்பவராகிய உம்முடைய பாதாரவிந்தம் வெகு தூரத்திலிருப்பதாக ஆகி விடுகிறது. அதைச் சரணமடைகிறோம். மாயைக்கு அதிபதியான பரம புருஷ! பெரியோர்களால் கானம் பண்ணக்கூடியவரே! எவர்கள் இந்திரியங்களை வெளியிலிருக்கும் விஷயங்களில் செலுத்தி உம்மிடத்தில் மனதைச் செலுத்தாமல் இருக்கிறார் களோ அவர்கள் உம்முடைய லீலைகளைக் கானம் பண்ணிக் கொண்டு ப்ரகாசிக்கும் பக்தர்களையும் பார்க்க மாட்டார்கள்.

ஓ தேவ! உம்முடைய கதாஅமிருதத்தைப் பானம் செய்து, மிகுந்த பக்தியால் சுத்த சித்தர்களாக இருப்பவர்கள் வைராக்கியத்தை அடைந்து, உடனே வைகுண்ட லோகஞ் சேருகிறார்கள். சிலர் பரமாத்மாவினிடத்தில் ஸ்திரமாக மனதைச் செலுத்து வதாகிய உபாயத்தால் மிக்க பலமுள்ள ப்ரக்ருதியை

ஜயித்து உம்மையே அடைகிறார்கள். ஆனால் அது ச்ரமமான மார்க்கம். உம்மைச் ஸேவிப்பதாகிய மார்க்கம் மிகவும் ச்ரமமற்றது. எல்லாவற்றிற்கும் ஆதியாக இருப்பவரே! உலகங்களைச் ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்ற விருப்பத்தால் முக்குணங்களைக் கொண்டு நாங்கள் அனைவரும் உம்மால் உண்டு பண்ணப்பட்டோம். அந்தக் குணங்களின் ஸ்பாவம் ஒன்றுக்கொன்று விரோதமாக இருப்பதால் நாங்கள் ஒன்றுசேராமல் இருக்கிறோம். உம்முடைய விளை யாட்டுக்குச் சாதனமான ப்ரம்மாண்டத்தைப் படைத்து உம்மிடம் சமர்ப்பிக்க எங்களால் முடியவில்லை.

பிறப்பில்லாதவரே! அனுபவிக்க வேண்டிய காலத்தில் போகத்தை எப்படி சமர்ப்பிப்போம்? நாங்கள் அன்னத்தை எப்படிப் புசிப்போம்? இந்த ஜீவர்கள் விக்கின மில்லாதவர்களாக நும்மிருவர் களுக்கும் பாகத்தைக் கொடுத்துக் கொண்டு எப்படித் தாமும் அன்னத்தைப் புசிப்பார்கள்? தேவர்களாகிய எங்களுக்கும் எங்களுடைய காரணத்திற்கும் நீரே காரணம். விகாரமற்றவர், புராண புருஷர். பிறப்பு அற்றவர். காரணமாகிய மாயையினிடத்தில் எல்லா வற்றையும் அறிந்த மகத் தத்துவ ஸ்வரூபமாகிய ரேதஸ்ஸை முதலில் வைத்தீர். ஓ பரமாத்மாவே! மகத்தத்துவம் முதலிய நாங்கள் எவருக்காக உண்டாயிருக்கிறோமோ, அந்தத் தங்களுக்கு எங்களால் செய்யக்கூடிய காரியம் என்ன? உங்களுடைய அனுக்கிரகம் இல்லாதவரையில் ப்ரம்மாண்டத்தைச் ச்ருஷ்டிக்க எங்களால் முடியாது. ஆகையால் உம்முடைய ஞானத்தையும், சக்தியையும் எங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அத்தியாயம்–6

விராட் ஸ்ருஷ்டி

1–29. இப்படி மகத்தத்துவம் முதலிய சக்திகள் ஒன்றோடொன்று சேராமல் உலகத்தைச் ஸ்ருஷ்டிக்கச் சக்தியற்றவைகளாக் இருப்பதைக் காலமென்ற சக்தியைத் தரித்தவரும் அளவற்ற லீலையுள்ள வருமான ஈசுவரன் பார்த்து, இருபத்து மூன்று தத்துவங்களின் கூட்டத்தில் தாம் ஒரே சமயத்தில் அனுப்பிரவேசஞ் செய்தார். க்ரியாசக்தியுடன் அதில் ப்ரவேசித்த பகவான் சிருஷ்டி சக்தியை அவைகளுக்கு ஞாபகப்படுத்திக் கொண்டு தனித்தனியாக இருந்த அவைகளை ஒன்றோடொன்னு சேர்த்தார். பின்பு ஸ்ருஷ்டி சக்தியை அடைந்த அந்த இருபத்து மூன்று தத்துவங்களும் பகவான் உடைய தூண்டுதலால் தங்கள் தங்கள் அம்சங்களைக் கொண்டு விராட் சரீரத்தைப் படைத்தன. இப்படிப் பரமாத்மாவினுடைய அனுப்ரவேசத்தால் அவைகள் உடைய அம்சங்கள் வேறு ரூபத்தை (பரிணாமத்தை) அடைந்தன. சுவர்ணம் போன்ற இந்தப் புருஷன் ஹிரண்மயன்) அண்ட கோசத்தின் நடுவில் ஜலத்தில் ஸகல ஜீவர்களுடன் வஸித்தார்.

தெய்வ சக்தி, க்ரியா சக்தி, ஆத்ம சக்தி இம்மூன்று சக்திகளுள்ளவரும், இருபத்துமூன்று தத்துவங்களால் உண்டுபண்ணப் பட்டவருமாகிய விராட் புருஷனானவர் தம்மை ஒருவகையாகவும், பத்து வகையாகவும், மூன்று வகையாகவும் பிரித்தார். பரமாத் மாவின் முதல் அவதாரமாகிய அவர் ஸகல பிராணிக ளுடைய ஆத்மாவின் அம்சம். அவரிடத்திலேயே

இந்தப் பூதக்கிரமங்கள்யாவும் தோன்றுகின்றன. விராட் புருஷன், ஸாத்யாத்மன் (இந்திரியங்களுடன் கூடியவன்) ஸாதிபூதன் (வியஷ்டி தேகங்களுள்ளவன்) ஸாதிதைவன் (தெய்வங்களுடன் கூடியவன்), என்று மூன்றுவகையாகவும், ப்ராணரூபத்தால் பத்து வகை யாகவும், இருதயத்தால் ஒருவகையாகவும் இருக்கிறார். பகவான் தத்துவங்களுடைய ப்ரார்த்தனையை நினைத்துக்கொண்டு அவைகளுக்குப் பலவகையான வ்ருத்தியைக் கற்பிப்பதற்காக தம் உடைய தேஜஸ்ஸால் விராட்டைப்பற்றி யோசித்தார். இப்படிப் பகவான் யோசித்தபோது, தேவர்களுக்குச் சில ஸ்தானங்கள் உண்டாயின. அவைகளைச் சொல்லுகிறேன். கேளும், அந்த விராட் புருஷனுக்கு முதலில் முகம் உண்டா யிற்று, லோக பாலராகிய அக்னியானவர் தம்முடைய சக்தியாகிய வாக்குடன் அந்த முகத்தில் ப்ரவேசித்தார். அந்த வாக்கினாலே ஜீவன் சப்தங்களை உச்சரிக் கிறான். பிற்கு தாதுவானது உண்டாயிற்று. லோக பாலராகிய வருணன் ஜிஹ்வேந்திரியத்துடன் அதில் ப்ரவேசித்தார். ஜீவன் அந்த இந்திரியத்தாலேதான் ரஸங்களைக் கிரஹிக்கிறான், பிறகு மூக்குகள் உண்டாயின.

அசுவினீ தேவர்கள் தங்களுடைய அம்சமாகிய க்ராணேந்திரயத்துடன் அதனைத் தங்களுடைய ஸ்தானமாக்கிச் கொண்டார்கள். அந்த இந்திரியத் தாலேயே ஜீவன் கந்தத்தைக் கிரஹிக்கிறான். பின்பு கண்கள் உண்டாயின. சூரியன் சட்சுரிந்த்ரியத்துடன் அவைகளில் ப்ரவேசித்தார். அதனால் உருவ ஞானம் உண்டாகிறது. பிறகு அந்த விராட்புருஷனுக்குச் சர்மங்கள் உண்டாயின. அந்த ஸ்தானத்தில் லோகபாலரான வாயுவானவர் தம்முடைய அம்சம் ஆகிய துவக்கிந்திரியத்துடன் ப்ரவேசித்தார். ஜீவன்

அந்த இந்திரியத்தைக் கொண்டே ஸ்பர்சத்தைக் கிரஹிக்கிறான். பின்பு அந்தப் புருஷனுக்குக் காதுகள் உண்டாயின. அவைகளில் திக்குகள் தங்களுடைய அம்சமாகிய சுரோத்திரேந்திரியத்துடன் ப்ரவேசித்தன. அந்த இந்திரியத்தைக் கொண்டே ஜீவன் சப்தத்தைக் கிரஹிக்கிறான். அந்தப் புருஷனுடைய சர்மாவை ஓஷதிகள் தங்களுடைய அம்சமாகிய உரோமங்களுடன் ப்ரவேசித்தன, ஜீவன் அவைகளைக் கொண்டே தினவைத் தெரிந்து கொள்ளுகிறான். பிறகு அந்தப் புருஷனுக்கு ஆண்குறி (மேட்ரம்) உண்டாயிற்று. ப்ரஹ்மதேவர் தம்முடைய அம்சமாகிய ரேதஸ்ஸுடன் அந்த ஸ்தானத்தை அடைந்தார் ஜீவன் அந்த ரேதஸ்ஸைக் கொண்டே ஆனந்தத்தை அடைகிறான். பிறகு அந்த விராட் புருஷனுக்குகுதமானது உண்டா யிற்று. மித்திரனானவர் தம்முடைய அம்சமாகிய பாயுவுடன் அந்த ஸ்தானத்தை அடைந்தார். அந்தப் பாயுவைக் கொண்டே ஜீவன் மலவிசர்ஜனம் முதலியவைகளைச் செய்கிறான். அந்த விராட் புருஷனுக்குக் கைகள் உண்டாயின.ஸ்வர்க்கத்திற்கு அதிபதியான இந்திரன் தம்முடைய அம்சமாகிய வார்த்தையுடன் (கிரய, விக்ரய சக்தி) அவைகளில் ப்ரவேசித்தார். அந்தச் சக்தியைக் கொண்டே ஜீவன் விருத்தியை (ஜீவிகையை) அடைகிறான். பின்னுமந்தப் புருஷனுக்குப் பாதங்கள் உண்டாயின. அவைகளில் மஹாவிஷ்ணுவானவர் தம்முடைய அம்சமாகிய கதி (நடை)யுடன் ப்ரவேசித்தார். அதைக் கொண்டே ஜீவன் போக வேண்டிய இடங்களுக்குச் செல்லுகிறான். அந்தப் புருஷனுக்கு இதயம் உண்டா யிற்று. சந்திரனானவர் தம்முடைய அம்சமாகிய மனசுடன் அந்த இருதயத்தில் ப்ரவேசித்தார். அந்த மனத்தாலேயே

ஜீவன் சங்கல்பம் முதலிய விகாரங்களை அடைகிறான். பின்னும் அவருக்குப் புத்தியுண்டாயிற்று, ப்ருகஸ்பதி பகவான் தம்முடைய அம்சமாகிய ஞானத்துடன் அந்த ஸ்தானத்தை அடைந்தார். அந்தப் போதத்தாலேயே அறியவேண்டிய விஷயங்களை ஜீவன் தெரிந்து கொள்ளுகிறான். இந்த விராட் புருஷனுக்கு அபிமானம் (அகங்காரம்) உண்டாயிற்று. அதனை ருத்திரன் அடைந்தார். அதனால் செய்யவேண்டியவைகளைச் செய்கிறான். அந்த விராட் புருஷனுக்கு ஸத்வம் (சித்தம்) உண்டாயிற்று. அந்த ஸ்தானத்தை ப்ரஹ்மா தம்முடைய அம்சமாகிய சேதனையுடன் அடைந்தார். அந்தச் சேதனையாலேயே இந்த ஜீவன் விஞ்ஞானத்தை அடைகிறான். மேலும் அந்தப் புருஷனுடைய தலையிலிருந்து த்யுலோகமும் பாதங்களிலிருந்து பூலோகமும், நாபியிலிருந்து ஆகாசமும் உண்டாயின. த்யுலோகம் முதலியவைகளில் குணங்களுடைய பரிணாமபூதகர்களான தேவர்கள் முதலியவர்கள் தோன்றுகிறார்கள் பலிஷ்டமான சத்வகுணத்தால் தேவர்கள் த்யுலோகத்தை அடைந்தார்கள். மனிதர்கள் பசு முதலியவைகளுடன் ரஜோகுண ஸம்பந்தத்தால் பூலோகத்தை அடைந்தார்கள், மேற்காட்டிய இரண்டு லோகங்களுக்கும் மத்தியிலுள்ளதும், பகவானுடைய நாபி ரூபமுமான ஆகாசத்தை ருத்திரருடைய பார்ஷத கணங்கள் தமோகுண ஸ்வபாவத்தால் அடைந்தார்கள்.

30–40. மேலும் அந்த விராட் புருஷனுடைய முகத்திலிருந்து வேதமோதும் ப்ராஹ்மண ஜாதியும் உண்டாயின. ஓ குருசிரேஷ்ட! அதனால் ப்ராஹ்மணன் நான்கு வர்ணத்திற்கும், அதிபதியும் குருவுமானான்.

அவருடைய இரு கைகளிலிருந்து பரிபாலன ரூபமாகிய விருத்தியும் க்ஷத்ரிய ஜாதியும் உண்டாயின. க்ஷத்ரியன் அந்த விருத்தியை அனுசரித்தான், அந்த க்ஷத்ரியன் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அம்ச பூதர்களாகிய ப்ராஹ்மணன் முதலியவர்களைத் திருடர்கள் முதலிய வர்களுடைய உபத்திரவங்களிலிருந்து காப்பாற்றுகிறான். ப்ரபுவாகிய அந்த விராட் புருஷனுடைய தொடைகளில் இருந்து பயிர்த்தொழில் முதலிய ஜீவன ஹேதுக்களும், வைசிய ஜாதியும் உண்டாயின. வைசியன் அந்த விருத்தியைக் கைக்கொண்டான். அவருடைய பாதங்களில் இருந்து சிசுரூஷையும், சூத்ர ஜாதியும் உண்டாயின. சூத்ரன் மேலான ஜாதியார்களுக்குச் சுச்ரூஷை செய்வதையே தனது விருத்தியாக வைத்துக் கொண்டான். அந்த சிசுரூஷையால் மஹாவிஷ்ணு சந்தோஷப்படுகிறார். மேற்காட்டியபடி நான்கு ஜாதிகளும் அவைகளின் விருத்திகளுடன் உண்டாகி, ஆத்ம சுத்திக்காக ச்ரத்தையுடன் தங்களுக்குரிய தர்மத்தைக் கொண்டு தங்களுக்குப் பிதாவாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவைப் பூஜித்தார்கள் ஓ விதுரரே, காலம், கர்மம், சுபாவம், ஆகிய சக்திகளுள்ள பகவானுடைய யோகமாயா பலத்தாலுண்டான அந்த விராட் ரூபத்தைப் பூர்ணமாக வருணிக்க எவன்தான் விரும்புவான்? (ஒருவராலும் வருணிக்க முடியாதென்று கருத்து) ஓ விதுரரே, ஆனாலும் பகவன் நாமங்களை தவிர வேறு வார்த்தைகளை உச்சரித்ததால், அசுத்தமாயிருக்கும் என்னுடைய வார்த்தையச் சுத்தப் படுத்துவதற்காக நான் குருவினிடம் தெரிந்துகொண்ட படி என்னுடைய புத்திக்கு எட்டியவரையில் ஸ்ரீ ஹரியின் கீர்த்தியைச் சொல்லுகிறேன். புண்யச் லோகராகிய பகவானுடைய குணங்களைக்

சொல்வதே புருஷர்களுடைய வாக்குக்கு முக்கியமாகிய லாபம் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். வித்வான்களால் சொல்லப்படும் ஸ்ரீ பகவானுடைய கதையைக் கேட்டதே காதுகளின் முக்கிய பலனாகும். பகவானுடைய மஹிமையானது யோகத்தால் பக்குவமாகிய புத்தியுள்ள ப்ரஹ்மதேவரால் பல வர்ஷங்களிலும் அறியமுடியவில்லை. பகவானுடைய மாயையானது மாயாவியாகிய பகவானையும் மோஹிக்கச் செய்யக்கூடியது. ஆச்சரியம். ஏனென்றால் ஸ்ரீமஹா விஷ்ணுவும் தம்முடைய மாயகதியை தாமும் அறிந்தவரல்ல. (அளவிடக் கூடாதென்று கருத்து) எவரைத் தெரிந்து கொள்வதற்காகப் ப்ரவர்த்தித்த வாக்குகளும். மனசும் அகங்காரத்திற்கு அதிஷ்டான தேவதையாகிய ருத்ரரும், புத்திக்கு அதிஷ்டான தேவதையாகிய ப்ரஹ்மாவும் இந்திரியங்களுக்கு அதிஷ்டான தேவதைகளாகிய இந்தத் தேவர்களும், இன்னும் மற்றவர்களும் அதனைத் தெரிந்து கொள்ள முடியாமலே திரும்பினார்களோ அந்தப் பகவானுக்கு நமஸ்காரம்.

அத்தியாயம்–7

விதுரருடைய ப்ரச்னங்கள்

1–7 வ்யாஸ மஹர்ஷியின் புத்திரரும் வித்வானுமாகிய விதுரர் மேற்காட்டியபடி சொல்லி வரும் மைத்ரேயரை நோக்கித் தம்முடைய வார்த்தை யால் அவரைச் சந்தோஷிக்கச் செய்து கொண்டு, "ஓ ப்ராஹ்மணோத்தம! சித்ரூபியும், விகார மற்றவருமாகிய பகவானுக்குக் கர்மங்கள் உண்டென்று சொல்லுவதும், நிர்க்குணராகிய (குணங்களற்றவராகிய) அவருக்குக் குணங்களிலிருக்கின்றன வென்றும், அவைகள் அவருக்கு விளையாட்டிற்காக (லீலை) ஏற்பட்டவை களென்று சொல்லுவதும் எப்படிப் பொருந்தும்? குழந்தைகளுடைய சேஷ்டைகளுக்கு எப்படி விளையாட்டே ப்ரயோசனமோ, அப்படியே பகவான் உடைய சேஷ்டைக்கும் லீலையே பலன் என்று சொல்லுவதும் பொருந்தாது. ஏனென்றால், குழந்தைகள் விளையாட்டுக் கருவிகளுடன் அவற்றில் ப்ரவ்ருத்திப் பதற்குக் காமம் காரணமாகிறது. மற்ற குழந்தைகள் இருப்பதால் அவர்களுடன் சேர்ந்து விளையாட வேண்டுமென்ற இச்சை உண்டாகிறது. பகவான் இயற்கையில் திருப்தியுள்ளவராகையால் அவருக்குக் காமம் உண்டாவதற்கு நியாயமில்லை. மேலும் அவர் ஒரு விஷயத்திலும் ஆசையில்லாதவர்; அத்விதீயர். ஆகையால் அவருக்கு இம்மாதிரியான விருப்பம் உண்டாயிற்று என்று சொல்வது பொருந்தாது. அவ்வித்தையை உபாதியாயுடைய ஜீவனுடைய போகத்திற்காகப் பகவான் ஸ்ருஷ்டி முதலியவைகளைச் செய்கிறார் என்று சொல்லுவதும் நியாய

விரோதமேயாம். எப்படியெனில் , "பகவான் முக்குண ஸ்வரூபியான தம்முடைய மாயையால் இந்த ஜகத்தைச் ஸ்ருஷ்டிக்கிறார்; பின்பு அதனைக் காப்பாற்றுகிறார்" பிறகு அதை மறைத்து விடுகிறார் என்று சொல்லப் படுகிறது. தேசத்தாலும், காலத்தாலும், அவஸ்தையா லும் (நிலைமை), இயற்கையாலும், மற்ற வஸ்துவினா லும் நாசஞ் செய்யப்படாத ஞானமுள்ள ஜீவனுக்கு சம்பந்தம் ஏற்பட்டதென்று சொல்வது யுக்தமல்ல. மேலும் பகவான் ஒருவரே ஸகல சரீரங்களிலும் அந்தர்யாமியாக வஸிக்கிறார். அப்படிக்கிருக்க ஜீவனுக்கு ஆனந்தம் முதலியவைகளின் குறைவாவது, துக்கமாவது கர்மங்களால் நேரிடுகிறது என்று எப்படி சொல்லலாம்? ஓ வித்வானாகிய மகர்ஷியே! அறியாத் தன்மையாகிய துக்கத்தில் என் மனம் சிக்கிக் கொண்டிருக்கிறது. ஓ ப்ரபுவே! என்னுடைய பெரியதாகிய மோஹத்தை நிவர்த்திக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்துக் கொண்டார்.

8–14 மேற்காட்டிய விஷயத்தைத் தெரிந்துகொள்ள விரும்பிய விதுரரால் இம்மாதிரி கேட்கப்பட்ட மைத்ரேயர்; பகவானிடத்தில் சித்தத்தைச் செலுத்திய வராக, தத்துவத்தை அறிந்தவராகையால் ஆச்சரியம் இல்லாதவராய், ஆச்சரியமடைந்தவர்போல் விதுரரை நோக்கி, "ஓ விதுரரே! நித்ய முக்தராகிய பகவானுக்குத் தன்யமும், சம்சார பந்தமும் உண்டென்று சொல்வது யுக்திக்கு விரோதம். அதுவே பகவானுடைய மாயையாகும். எப்படி சொப்பன சாட்சியாயிருக்கும் புருஷன் ...என்னுடைய தலை வெட்டப்பட்டது என்று நினைக்கிறானோ (உண்மையில் தலை வெட்டப்பட வில்லை) அப்படி நினைப்பது பொய்யல்லவா? மேலும், ஜலத்தில் பிரதி பிம்பித்த சந்திரனுக்கு

Released by Maran's Dog, Toronto , Canada

ஜலமாகிய உபாதியால் அசைவது முதலியவை ஏற்படுவதுபோல, அனாத்மாவாகிய தேஹம். முதலிய வைகளுடைய தருமமானது தேஹத்தில் அபிமானம் உள்ள ஜீவனுக்கே ஒழிய ஈசுவரனுக்கு இல்லை. அந்த அனாத்மாவின் குணமானது நிவர்த்தி தருமத்தாலும். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தயையினாலும், பக்தியோகத்தாலும், அந்தந்த ஸ்தானத்துக்குத் தக்கபடி மெள்ள மெள்ள மறைந்து போகும். தூங்கினவனுக்கு எப்படி ஸகல துக்கங்களும் நாசம் அடைகின்றனவோ, அப்படிப்போல் அந்தர்யாமியாகிய பரமாத்மாவினிடத்தில் ஜீவனுடைய இந்திரியங்கள் ஸ்திரமாக எப்பொழுது அடங்கியிருக்குமோ அப்பொழுது எல்லாத் துக்கங்களும் நிவர்த்தியாகும்; பகவானுடைய குணங்களைச் சொல்வதாலும், அவைகளைக் கேட்பதாலும் ஸகல துக்கங்களும் நிவர்த்தியாகின்றன. அவருடைய பாதாரவிந்தத்திலுள்ள துளியின் சேவை யானது மனத்தால் அடையப்படுமானால் துக்கங்கள் நிவர்த்திக்கப்படுமென்பதில் என்ன சந்தேகம்? என்று ப்ரத்யுத்தரஞ் சொன்னார்.

15–20 "ஓ ப்ரபுவே! உம்மால் சொல்லப்பட்ட தகுந்த ப்ரத்யுத்தரமாகிய கத்தியால் என்னுடைய சம்சயம் போக்கடிக்கப்பட்டது: மேலும் என்னுடைய மனமானது ஈசுவரன் ஸ்வதந்திரர் என்ற விஷயத்தை யும், ஜீவன் பரதந்திரன் என்பதையும் நன்றாகத் தெரிந்துகொண்டது. ஓ வித்வானாகிய மஹர்ஷியே! ஸ்ரீ பகவானுடைய சக்தியாகிய மாயையால் ஜீவனுக்கு ஆத்மானந்தம் முதலியவைகள் கிடைக்காமல் போகின்றன என்று உம்மால் நன்றாக நிரூபிக்கப்பட்டது. அந்த மாயை உண்மையானதல்ல. காரணமற்றது. தேஹம்

முதலிய ப்ரபஞ்சத்திற்கு காரணமாயுள்ளது, அது வெளியிலில்லை, (எந்த வஸ்து காரணமற்றதும், சூன்யமுமாயுருக்கிறதோ அதை நீர் நன்றாகச் சொன்னீர் என்பது கருத்து.) லோகத்தில் எவன் தேஹம் முதலியவைகளில் அபிமானம் வைத்து மூடனாயிருக்கிறானோ, எவன் ப்ரக்ருதிக்கு மேற்பட்ட பரமபுருஷனை அடைந்திருக்கிறானோ அவ்விருவர் களும் சுகத்தை அடைகிறார்கள். மத்தியிலிருப்பவர் கள் துக்கத்தை அடைகிறார்கள். (அக்ஞர்களுக்கும் ஞானிகளுக்கும் ஸம்சயமில்லை. அதனால் துக்கமில்லை யென்பது கருத்து.) சத்யம் போலத் தோன்றுகிறதும், அனாத்மாவுமான ப்ரபஞ்சம் உண்மையில்லை என்று நான் நிச்சயித்து, அந்த தோற்றத்தை உம்முடைய பாத ஸேவையாலே போக்கிக் கொள்வேன். பகவத் பக்தர்களான பெரியோர்களுடைய சேவையாலே, கூடஸ்தரும் மதுவைக் கொன்றவருமாகிய பகவான் உடைய பாதங்களில் விசேஷப் ப்ரேமையுண்டாகும். அதனால் சம்சார துக்கம் நீங்கும். தேவர்களுக்கும் தேவராகிய பகவானைச் ஸாதுக்கள் எப்பொழுதும் கானஞ் செய்வார்கள். அப்போர்ப்பட்ட மஹான்களுடைய ஸேவையானது விசேஷ புண்யஞ் செய்தவர்களுக்கும் கிடைக்க அரிதானாலும் எனக்குக் கிடைத்தது

21–41 ப்ரபுவாகிய பகவான் முதலில் மஹத் தத்துவம் முதலியவைகளையும், இந்திரியங்களையும், க்ரமமாக ஸ்ருஷ்டித்து அவைகளின் அம்சங்களைக் கொண்டு விராட் சரீரத்தையும் உண்டு பண்ணி அதனிடம் அனுப்பிரவேசஞ் செய்தார். அந்த விராட் புருஷனே முதலில் உண்டானவர். அவருக்கு ஆயிரம் பாதங்களும், ஆயிரம் தொடைகளும், ஆயிரம்

கைகளுமிருக்கின்றன. இவ்வுலகங்கள் யாவும் அவர் இடத்திலேயே நெருக்கமில்லாமல் வஸிக்கின்றன. பத்துவிதமான ப்ராணனும் (ஐந்து ப்ராணன்களுடன், வாக்கு முதலிய இந்திரியங்கள், ஐந்தும் சேர்ந்து பத்து என்பது கருத்து,) இந்திரியங்கள், அவைகளின் அபிமானி தேவதைகள், விஷயங்கள் ஆகிய மூவகையான ப்ராணன்களும் அந்த விராட் புருஷன் இடத்தில் வஸிக்கின்றன. அவரிடத்திலிருந்தே ப்ராஹ்மணர் முதலிய நான்கு வர்ணங்களும் உண்டா யின" என்று சொன்னீர்களல்லவா? அவரிடத்தில் பலவகையான ஸ்வரூபமுள்ள ப்ரஜைகள் தங்களுடைய பிள்ளைகளுடனும், பேரன்களுடனும், கொள் பேரன்களுடனும், மற்றும் வம்சத்திலுண்டானவர் களுடனும் வஸிக்கிறார்கள் அல்லவா? அவர்களுடைய விபூதிகளைச் சொல்லவேண்டும். மேலும் ப்ரஜாபதி களுக்கு அதிபதியாகிய அந்தப் புருஷன் எந்த எந்தப் ப்ரஜாதிபதிகளைச் ஸ்ருஷ்டித்தார்? ஸர்க்கம், அநுஸர்க்கம், மனுக்கள், மன்வந்தரத்தின் அதிபதிகள், இவர்களுடைய வம்சத்திலுண்டானவர்கள்; வம்சத்தின் சரிதம், கீழுலகங்கள், மேலுலகங்கள், பூலோகம், அவைகளுடைய நிலைமை, அளவு ஆகிய இவை களையும் சொல்ல வேண்டும். திர்யக் (பசு முதலிய வைகள்), மனிதர்கள், தேவர்கள், மலைப்பாம்புகள், பறவைகள் முதலிய கர்ப்பத்திலிருந்தும், அண்டத்தில் இருந்தும், வேர்வையிலிருந்தும், பூமியிலிருந்தும் உண்டாகும் நான்கு வகையான ப்ராணிகளுடைய ஸ்ருஷ்டியின் விவரத்தையும் சொல்லவேண்டும்.

மேலும், ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரர் ஆகிய இவர்களின் உருவத்தை எடுத்துக் கொண்டு ஸ்ருஷ்டி, பரிபாலனம்; சம்ஹாரம் ஆகிய இவைகளைச் செய்து

வரும் ஸ்ரீ பகவானுடைய கம்பீரமான சரிதத்தையும், உருவம், ஆதாரம், ஸ்வபாவம் இவைகளால் ஏற்படும் வர்ணாச்ரம விபாகங்களையும், ரிஷிகளுடைய பிறப்பு, சரிதம் ஆகிய இவைகளையும், வேதங்களின் பிரித்தலையும், யாகங்களினுடைய விஸ்தாரங்களையும், பக்தி யோகம் ஞானம், ஸாங்க்யம் ஆகிய இவைகள் உடைய மார்க்கத்தையும், பகவானால் செய்யப்பட்ட தந்திரத்தையும் பாஷாண்ட மார்க்கத்தின் பேதத்தையும்; ப்ரதிலோமஜாதிகளுடைய ஆசாரத்தையும், குணங்களாலும் கர்மங்களாலும் ஜீவர்களுக்கு ஏற்படும் எல்லா கதிகளையும், தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் இவைகளுக்கு அவிருத்தமான உபாயங்களையும், வார்த்தை (பயிர் முதலிய) தண்டநீதி, வ்ரதம் இவைகளுடைய விதியையும், ச்ராத்த விதியையும், பித்ருக்களுடைய ஸ்ருஷ்டியையும், கிருஹங்கள், அசுவினி முதலிய நக்ஷத்திரங்கள், மற்ற நக்ஷத்திரங்கள், காலசக்கரம் ஆகிய. இவைகளின் ஸ்திதியையும், தானம், தபஸ், யாகங்கள், பூர்த்த தர்மங்கள் ஆகிய இவைகளுடைய பலனையும், சக்தனாகிய புருஷனுக் கேற்பட்ட தர்மத்தையும், ஆபத் தர்மத்தையும், தர்மத்திற்குக் காரணமாகிய பகவான் எந்த மார்க்கத்தால் சந்தோஷப்படுவாரோ, எவர்களிடத்தில் தயை செய்வாரோ அவை யெல்லாவற்றையும் சொல்லவேண்டும்.

ஓ ப்ராஹ்மணோத்தம! தம்மை அனுசரித்திருக்கும் சிஷ்யர்களுக்கும், புத்திரர்களுக்கும், தீனர்களிடத்தில் ப்ரியமுள்ள ஆசார்யர்கள் அவர்களால் கேட்கப்படாத விஷயங்களையும் உபதேசிப்பார்கள். ஓ பகவன்! அந்த மகத்தத்துவம் முதலியவைகளுடைய லயமானது எவ்வளவு வகையுள்ளது? ப்ரளயகாலத்தில் இந்தப்

பரமேசுவரனுடைய சமீபத்தில் எவைகள் இருக்கின்றன? எவைகள் அவர் நித்திரை செய்யும் பொழுது தூங்குகின்றன? மேலும் ஜீவனுடைய உண்மையையும், பரமேசுவரனுடைய ஸ்வரூபத்தையும், உபநிஷத்துக்களால் உண்டாகும் ஞானத்தையும், எந்த அம்சத்தால் ஜீவனுக்கும் பரமாத்மாவிற்கும் ஐக்கியம் ஏற்படுகிறது என்பதையும் சொல்லவேண்டும். ஓ தோஷமற்றவரே! வித்வான்களால் எவைகள் ஞானத்திற்குச் சாதனங்களென்று சொல்லப்படுகின்றனவோ, அவைகளையும் உபதேசிக்கவேண்டும்.

ஞானம், பக்தி, வைராக்யம் ஆகிய இவைகள் குருவின் உபதேசமில்லாமல் எப்படி சித்திக்கும்? ஆதலால் மாயையால் மறைக்கப்பட்ட திவ்யசக்ஷுஸ்ஸுள்ளவனும், அதனால் அந்தகனும் (கண்ணில்லாதவன்), ஸ்ரீ பகவானுடைய கர்மங்களைத் தெரிந்துகொள்ள விரும்பிக் கேட்பவனுமாகிய எனக்கு மித்திரரான நீர் அவைகளைச் சொல்லும். ஓ பாபமற்றவரே, ஜீவனுக்கு அடியதானம் செய்வதால் கிடைக்கும் பலனுடைய பதினாறிலொரு பாகம் ஸகல வேதங்களாலும், யக்ஞங்களாலும், தபசுகளாலும், தானங்களாலும் கிடைக்காது. ஆதலால் என்னை அனுக்கிரகிக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்தார்.

42. ஓ மஹாராஜ! இப்படிக் குருக்களில் சிறந்தவராகிய விதுரர் முனிவர்களுள் சிறந்தவராகிய மைத்ரேயரை நோக்கி, முன்கற்பத்தைப் பற்றிக் கேட்க, பகவானுடைய கதையைச் சொல்வதில் தூண்டப்பட்டபடியால் மிக்க சந்தோஷத்துடன் சிரித்துக் கொண்டு மைத்ரேயர் ப்ரத்யுத்தரஞ் சொல்ல ஆரம்பித்தார்.

அத்தியாயம்–8

ப்ரஹ்மதேவருடைய உற்பத்தி

1–9. "விதுரரே! பகவானையே முக்கிய தெய்வமாய்க் கொண்ட நீர் எந்த வம்சத்தில் பிறந்தீரோ ஜனங்களைக் காப்பாற்றும் அந்த பூருவம்சமானது சாதுக்களால் ஸேவிக்கத் தக்கது. பகவானுடைய சரித்திர பரம்பரையை நீர் அடிக்கடி புதிதாகப் பண்ணுகிறீர். அற்ப ஸுகத்திற்காக்ப் பெரிதாகிய துக்கத்தை அடைந்தவர்களான மனிதர்களுக்கு அந்த சம்சார துக்கம் நீங்குவதற்காகப் பாகவத புராணத்தை ஆரம்பிக்கிறேன். பகவான் அதனைத் தாம் நேராக ரிஷிகளுக்கு உபதேசித்தார்.

அதெப்படியெனில்: முன்னொரு சமயத்தில் சனத் குமாரர் முதலிய மகர்ஷிகள் பாதாளத்திலிருக்கும் தடையற்ற ஞானமுள்ள சங்கர்ஷண பகவானை நோக்கி அவருக்கு மேற்பட்ட ஸ்வரூபத்தை அறிய விரும்பினவர்களாகப் ப்ரச்னம் செய்யவாரம்பித்தார் கள். அந்தப் பகவான் வாஸுதேவனென்ற பெயருள்ள தமக்கு ஆச்ரயமாகிய ஜ்யோதிஸ்ஸைத் தியானஞ் செய்து கொண்டிருப்பவர். அந்தர் முகமாகச் செய்யப் பட்ட தாமரை மலர்போன்ற நேத்திரத்தை ஸனத்குமாரர் முதலியவர்களுடைய க்ஷேமத்திற்காக பகிர்முகமாகச் செய்து அவர்களைப் பார்த்தார். மேலும் பாதாளத்தில் வஸிக்கும் நாக கன்னிகைகள் விசேஷப்ரேமையுடனும், பலவகையான காணிக்கைகள் உடன் தங்களுக்கு நல்ல புருஷன் கிடைக்கவேண்டும் என்ற எண்ணமுள்ளவர்களாய்ச் சங்கர்ஷண பகவான்

கால் வைத்துக்கொண்டிருக்கும் எந்தத் தாமரை புஷ்பத்தைப் பூஜிக்கிறார்களோ, அதனை மேற்சொல்லிய மகர்ஷிகள் ஆகாச கங்கையின் ஜலத்தால் நனைந்த தமது ஜடையின் சமூகங்களால் தொட்டுக்கொண்டும் (நமஸ்கரித்து என்று அர்த்தம்) அநேக கிரீடங்களில் இழைத்திருக்கும் உயர்ந்த இரத்தினங்களுடைய காந்திகளால் ப்ரகாசிக்கும் ஆயிரம் பணங்களுள்ள அந்த சங்கர்ஷண பகவானுடைய சரிதங்களைச் சொல்லிக்கொண்டும். அதிகப்ரேமையால் தடங்கின வாக்குள்ளவர்களாகக் கேட்டார்கள்.

அப்பொழுது அந்த சங்கர்ஷணர் நிவர்த்தி தர்மத்தில் ஆசையுள்ள ஸனத்குமாரருக்கு உபதேசித்தார். அந்த ஸனத் குமாரர் விரதங்களை அனுஷ்டித்தவரான சாங்கியாயனருக்குச் சொன்னார். பரமஹம்சர்களுடைய தர்மத்தில் முக்கியராகிய அந்த சாங்கியாயனர், பகவானுடைய விபூதிகளைச் சொல்ல விரும்பின வராய்த் தம்மிடத்தில் வணக்கத்துடன் வந்த எனது குருவாகிய பராசரருக்கும் ப்ரஹஸ்பதிக்கும் உபதேசித் தார். மிக்க தயையுள்ளவரான புலஸ்தியரால் புராணத்தைச் சொல்லும்படி அனுக்கிரஹிக்கப் பெற்ற அந்தப் பராசர மகர்ஷி எனக்கு உபதேசித்தார். ஓ விதுரரே! ச்ரத்தையுடன் கேட்க விரும்பிய உமக்கு நான் அதைச் சொல்லுகிறேன்.

18–20. இந்த ஜகத்தானது எந்தக் காலத்தில் சமுத்திர ஜலத்தால் மூடப்பட்டிருந்ததோ, அப்பொழுது மறைக்கப்படாத சித்சக்தியுள்ளவரும், ஆதிசேஷனாகிய படுக்கையில படுத்தவரும், தம்முடைய ஸ்வரூபானந்த திலேயே ரமிப்பவரும், கர்மங்களற்றவரும், தாம்

ஒருவராக இருப்பவருமான பகவான் கண்களை மூடிக் கொண்டு யோகநித்திரை செய்தார். (மாயா விலாசத் துடன் விளையாடிவிட்டு) மேலும் அவர் தம்முடைய சரீரத்திற்குள் பூத சூட்சுமங்களை அடக்கிக்கொண்டு காலரூபமாகிய சக்தியைத் தூண்டுகிறவராகக் கட்டையில் மறைந்திருக்கும் அக்கினிபோல் தமக்கு இருப்பிடமாகிய ஜலத்தில் வஸித்தார்.

இப்படி ஆயிரம் சதுர்யுகங்கள் ஜலத்தில் யோகநித்திரை செய்து, முன்னமேயே தம்மை எழுப்பு வதற்காக ஏற்படுத்தப்பட்ட காலசக்தியால் கிரியைகளை அடைந்து, தம்முடைய தேஹத்தில் லோகங்கள் லயித்திருப்பதைக் கண்டார். அப்பொழுது பூதசூட் சுமங்களைப் ப்ரவர்த்திக்கச் செய்யும் ஞானமுள்ள வராகிய அந்தப் பகவானுடைய நாபியிலிருந்து அவர் உடைய சரீரத்திற்குள்ளிருந்தும், மிகவும் சூட்சமமும் ஆகிய பூத சூட்சமமானது கால வசத்தால் வ்ருத்தியடைந்த ரஜோ குணத்தின் சம்பந்தத்தால் உண்டாகப் போகிறதாகி வெளிப்பட்டது. (பூத சூட்சுமங்கள் ரஜோகுண சம்பந்தத்தால் தாமரஸ புஷ்பமாக ஆயிற்று என்பது கருத்து.) கர்மங்களைத் தெரிவிக்கும் காலத்தால் ஸ்ரீபகவானிடமிருந்து உண்டான அந்தப் பத்மகோசமானது சூரியன் போலத் தன்னுடைய காந்தியால் விஸ்தாரமாகிய ஜலத்தைப்ரகாசிக்கச் செய்துகொண்டு வெளிப்பட்டது. ஜீவனுடைய போகத்திற்கு உடயோகமானவைகளை வெளிப்படுத்தும் ஸகல ஜகத் ரூபமுமான அந்தப் பத்மத்தில் (தாமரஸ புஷ்பத்தில்) அந்த விஷ்ணுவே அந்தர்யாமியாகிப் ப்ரவேசித்தார். அந்தத் தாமரஸ புஷ்பத்திலிருந்து வேத ஸ்வரூபியாகிய ப்ரஹ்மதேவர்

உண்டானார். அவரையே ஜனங்கள் சுவயம்பூ என்று சொல்லுகிறார்கள். (முன் கற்பத்தின் முடிவில் ஸ்ரீமந் நாரயணருடன் யோகநித்திரையில் ப்ரஹ்மதேவர் கலந்திருந்தார்;

(பிறகு நாராயணன் விழித்துக் கொண்டபோது அவரிடமிருந்தே பாத்ம கற்பத்தில் பத்மத்தின் வழியாக அந்த ப்ரஹ்மதேவர் வெளியானார் என்பது கருத்து) அவர் அந்தத் தாமரஸ புஷ்பத்தின் நடுவில் இருந்து நான்கு புறத்திலும் பார்த்துக் கொண்டிருக்க, ஒவ்வொரு திக்குகளிலும் ஒவ்வொரு முகமாக அவருக்கு நான்கு முகங்கள் உண்டாயின. ப்ரளய காலத்திய காற்றினால் அசைந்த பெரிதாகிய அலைகளுள்ள ஜலத்திலிருந்து உண்டான தாமரஸ புஷ்பத்தில் இருப்பவராகிய அந்த ஆதிதேவர் அந்தப் புஷ்பத்தையும், லோகங்களின் தத்துவத்தையும், தம்மையும் நன்றாகத் தெரிந்து கொள்ளவில்லை. அப்பொழுது அவர், 'தாமரஸ புஷ்பத்தில் இருக்கும் நான் யார்? இந்த ஒரு புஷ்பம் மாத்திரம் எங்கிருந்து ஜலத்தில் உண்டாயிற்று? இதற்கு ஆதாரம் கீழாக ஏதாவது இருக்கவேண்டும்" என்று யோசித்து, அந்தப் புஷ்பத்தின் தண்டிலுள்ள துவாரத்தின் வழியாக ஜலத்திற்குட் சென்றார் அவ்விடத்தில் அந்தத்தாமரைத் தண்டின் மூலத்தைத் தேடிப்பார்த்தும் அவருக்கு அது தெரியவில்லை. ஓ விதுரரே! தம்முடைய உற்பத்திக்குக் காரணமாயிருப்பதைத் தேடிச் செல்லும் அவர் ஜலத்திற்குள் இருக்கும் இருட்டிற்கு அப்புறம், மூன்று முனைகளுள்ளதும் (நடந்தது, நடக்கிறது, நடக்கப் போவது ஆகிய மூன்று முனைகள்) ப்ராணிகளுடைய ஆயுளைச்

செலவழித்து அவர்களுக்குப் பயத்தை உண்டுபண்ணு கிறதும், பெரியதும், ஸ்ரீ மகாவிஷ்ணுவின் சுதர்சனம் என்ற அஸ்திரமுமான கால சக்கரத்தைக் கண்டார். (வெகு நாளாகத் தேடினார் என்பது கருத்து.)

21–31. பிறகு அவர் தம்முடைய எண்ணம் நிறைவேறாமல் மறுபடியும் தமக்கிருப்பிடமாகிய புஷ்பத்தை அடைந்து, ஸ்வாசங்களை அடக்கி, மனத்தை ஒருவகைப்படுத்தித் தியானஞ் செய்து கொண்டிருந்தார். இப்படி நூறு வருஷங்கள் சென்றன. யோகத்தால் ஞானம் விசேஷமாக வ்ருத்தி யடைந்தது. முந்தித் தேடியும் எவர் காணப்படவில்லையோ, அவர் அவருடைய இருதயத்தில் தாமாகவே ப்ரகாசித்தார். அந்தப் புருஷன் தாமரைத் தண்டுபோல வெண்மை நிறமுள்ளதும். ஆதிசேஷனுடைய நீண்ட உடலாகிய மஞ்சத்தில் சயனித்துக் கொண்டிருந்தார். அந்த ஆதி சேஷன் தம்முடைய அனேக படங்களிலிருந்தும் உத்தம இரத்தினங்களுடைய காந்தியால் ப்ரளய காலத்திய இருட்டை விலக்கி ஜலத்தில் வஸித்து வந்தார்.

மேலும் அந்தப் புருஷன் மரகதமலையின் காந்தியைக் காட்டிலும் அழகுள்ளவராக இருந்தார். சந்த்யா காலத்தில் சிவந்த மேகங்கள் அந்த மலையின் மத்தியிலிருப்பது போல, பீதாம்பரத்தைத் தரித்து கொண்டிருந்தார். அந்த மலையின் ஸ்வர்ண சிகரம் போல அவருடைய கிரீடம் ப்ரகாசித்தது. அந்த மலையிலிருக்கும் மேகங்கள், ஓஷதிகள், புஷ்பங்கள் ஆகிய இவைகள் போல அவருடைய வனமாலை விளங்கிற்று. அதிலிருக்கும் மூங்கில்கள் போல அவருடைய கைகள் ப்ரகாசித்தன. அதிலிருக்கும்

மரங்கள் போல அவருடைய பாதங்கள் விளங்கின. அவர் தமக்குத் தகுதியான பருமன், உயரம் ஆகிய இவைகளுடன் கூடியதும், மூவுலகத்தையும் தனக்குள் அடக்கிக் கொண்டதுமான திவ்ய சரீரமுள்ளவர், பலவகையான திவ்யமான ஆபரணங்களாலும் வஸ்திரங்களாலும் அலங்கரிக்கப்பட்டவர்: மேலும் தங்கள் தங்கள் இஷ்டத்தை அடைவதற்கு வேதத்தில் சொல்லியபடி பூஜிப்பவர்களுக்கு அவர்களுடைய காமத்தைக் கொடுக்கக்கூடிய தம்முடைய பாதமாகிய தாமரை புஷ்பத்தை ப்ரகாசப் படுத்துகிறவர்.

அந்தப் பாதங்களிலிருக்கும் நகங்கள் சந்திரன் போலப் ப்ரகாசிக்கின்றன. அவைகளின் காந்தியானது புஷ்பத்தின் இதழ்போன்ற விரல்களில் பரவுகிறது, அவருடைய முகமானது ஜனங்களுடைய துக்கத்தை நீக்கும் சிரிப்புள்ளது. மிகுந்த காந்தியுள்ள குண்டலங் களால் அழகானது. சிவந்த உதடுகளுள்ளது, அழகான மூக்குள்ளது. மனோகரமாகிய புருவங்களுள்ளது. அப்போர்ப்பட்ட முகத்தால் தம்மைப் பூஜிப்பவர்களைக் கௌரவப்படுத்துகிறவர். கதம்ப புஷ்பத்தின் தாதுக்கள் போல பொன்னிறமுள்ள வஸ்திரத்தாலும், மேகலையா லும் ப்ரகாசிக்கும் இடுப்புள்ளவர். விலை உயர்ந்ததும், ஸ்ரீ வத்ஸத்துடன் கூடிய மார்புக்குத் தகுதியானது மான ஹாரத்தால் ப்ரகாசிப்பவர். மேலும் அவர் சந்தன மரம் போன்றவர். உத்தமமான தோள்வளை களில் இழைக்கப்பட்ட இரத்தினங்களால் ப்ரகாசிக்கும் அவருடைய கைகள் கிளைகள் போலிருந்தன. அந்த மரத்தின் வேர்கள் போல் அவருடைய மூலம் ஒருவராலும் காண முடியாதது. மரமானது சிறந்த ஸர்ப்பங்களின் உடல்களால் சுற்றப்பட்டிருப்பது போல அவர் ஆதிசேஷனால் சுற்றப்பட்டவர்.

பின்னும் அவர் பர்வதம் போல் ப்ரகாசித்தார். தாவர ஜங்கமங்களுக்கு இருப்பிடமாக இருப்பவர். பர்வதம் சிறந்த ஸர்ப்பத்தால் ஆசிரயிக்கப்படுவது போல் ஆதிசேஷனால் ஆச்ரயிக்கப்பட்டவர். பர்வதம் சமுத்திர ஜலத்தில் மறைந்திருப்பது போல ப்ரளய ஜலத்தில் மறைந்தவர், மைனாகம் முதலியவை சுவர்ண சிகரமுள்ளவையாக இருப்பது போல் ஸ்வர்ண கிரீடமுள்ளவர். பர்வதத்தில் இரத்தனங்கள் இருப்பது போலக் கௌஸ்துப ரத்னத்தைத் தரித்தவர், வேதங்களாகிய வண்டுகளால் ப்ரகாசிப்பதும், தம்முடைய கீர்த்தி ரூபமாயுள்ளதுமான வனமாலை யுள்ளவர். சூர்யன், சந்திரன், வாயு, அக்கினி ஆகிய இவர்களாலும் அடையமுடியாதவர், முக்காலத்திலும் ப்ரகாசிப்பவைகளும், நான்கு புறத்திலும் சஞ்சரிப்பவை களும் யுத்தத்திற்குச் சாதனங்களுமான ஸுதர்சனம் முதலியவைகளாலும் அடைய முடியாதவர், இம் மாதிரியான புருஷனை பார்த்து ஹரியென்று தெரிந்து கொண்டார்.)

32–33. இப்போர்ப்பட்ட பகவத் ஸ்வரூபத்தைப் பார்த்தபொழுதே ப்ரஹ்மதேவர் அந்தப் பகவானுடைய நாபியில் தோன்றிய தாமரைப் புஷ்பத்தையும், தம்மையும், ஜலத்தையும், வாயுவையும், ஆகாசத்தையும் கண்டார், இந்த ஐந்தை காட்டிலும் வேறொன்றும் அவருக்குப் புலப்படவில்லை. அவர் ரஜோகுணத்தின் சம்பந்தத்தை அடைந்து, ஜனங்களைச் ஸ்ருஷ்டிக்க விரும்பியவராக, மேற்காட்டிய ஐந்தைக் கொண்டே ஸ்ருஷ்டிகரணங்களைப் பார்த்து, பலவகையான ஜகத்ஸ்ருஷ்டியைப்பற்றி யோசித்து, ஸ்தோத்திரஞ் செய்யத் தகுந்தவரான ஸ்ரீமந் நாராயணனைப் பின்வருமாறு ஸ்தோத்திரஞ் செய்ய ஆரம்பித்தார்.

அத்தியாயம்–9

ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ப்ரஹ்மதேவர் ஸ்தோத்திரஞ் செய்தது

1–26 ஓ பகவன்! வெகுநாளாக உபாசித்ததனால் நான் உம்மை நன்றாகத் தெரிந்து கொண்டேன். உம்முடைய ஸ்வரூபத்தை ஜனங்கள் தெரிந்து கொள்ளாமலிருப்பதே குற்றமாகும். உம்மைத் தவிர வேறு ஒரு வஸ்துவுமில்லை. ஆதலால் அறியக் கூடியவர் நீர் ஒருவரே. உம்மைக் காட்டிலும் வேறு வஸ்து இருப்பதாகத் தோன்றினாலும், அது சுத்த சத்வகுணமுள்ளதன்று. மேலும் மாயையின் குண சம்பந்தத்தால் நீரே பல வகையாகத் தோன்றுகிறீர். ஓ பகவன்! சித்சக்தியின் ஆவிர்ப்பவத்தால் தமோ குணங்கள் நீங்கிய நீர் பக்தர்களை அனுக்கிரகிப் பதற்காக இந்த உருவத்தை அங்கீகரித்திருக்கிறீர். இந்த உருவமானது அனேக அவதாரங்களுக்குக் காரணமாய் உள்ளது. இந்த உருவத்தின் நாபியிற்றோன்றிய தாமரை புஷ்பத்திலிருந்து நான் உண்டானேன். ஓ! பரமாத்மன்! தடையற்ற ப்ரகாசமுள்ளதும், பேதமற்றதும் ஆனந்தத்தைக் காட்டிலும் வேறானதும், பூதங்களுக்கும் இந்திரியங்களுக்கும் காரணமாயிருப் பதுமான பகவத் ரூபமானது இந்த உம்முடைய உருவத்தைக் காட்டிலும் வேறானதென்று நான் நினைக்கவில்லை. அதனால்தான் இந்த ஸ்வரூபத்தை ஆச்ரயித்திருக்கிறேன்.

ஓ, உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்பவரே, உபாஸகர்களான நமக்கு க்ஷேமத்தைச் செய்வதற்காக, நீர், தியானம் பண்ணும்போது அந்த இந்த உருவத்தைக்

காண்பீத்தீர். அப்பேர்ப்பட்ட பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறோம். ஈசுவரன் இல்லை என்று சொல்பவர்களும், நரகத்தை அனுபவிக்கக் கூடியவர் களுமான புருஷர்களால் நீர், ஆதரிக்கப்படுகிறதில்லை. எவர்கள் உங்களுடைய பாதங்களாகிய தாமரை புஷ்பத்தின் வாசனையைக் க்ரஹிக்கிறார்களோ, எவர்கள் உம்முடைய கதைகளைக் கேட்கிறார்களோ, எவர்கள் மிகுந்த பக்தியால் உம்முடைய சரணத்தை ஆச்ரயிக்கிறார்களோ அவர்களுடைய இருதய புண்டரீகத்திலிருந்து நீர் ஒரு பொழுதும் விலகுகிறது இல்லை. (எப்பொழுதும் அவ்விடத்திலேயே வஸிக்கிறீர் என்பது தாத்பரியம்) ஜனங்கள் மோக்ஷத்தைக் கொடுக்கும் உம்முடைய பாதத்தை எதுவரையில் ஆச்ரயிக்கவில்லையோ அதுவரையில் பணம், வீடு, மித்திரர்கள் ஆகிய இவர்களுக்காக பயம், துக்கம், ஆசை, அவமானம், அதிக ஆசை ஆகிய இவைகளும், உபத்திரவத்திற்குக் காரணமாகிய "என்னுடையது" என்ற கெட்ட அபிமானமும் உண்டாகின்றன. எவர்கள் ஸகல அசுபங்களையும் போக்கடிக்கக் கூடிய உம்முடைய கதைகளைக் கேட்பது, நாமங்களை உச்சரிப்பது, முதலியவைகளில் ஆசையில்லாதவர் களாகவும், புத்தி கெட்டவர்களுமாக இருக்கிறார்களோ, அவர்கள் மிகவும் அதமர்கள். மேலும், அவர்கள் லோபத்தால் கெடுக்கப்பட்ட மனது உள்ளவர்களும் தீனர்களுமாகிப் போகத்தினுடைய சொற்ப ஸுகத்திற்காகத் துக்கத்தைக் கொடுக்கக் கூடிய கர்மங்களை அடிக்கடி செய்கிறார்கள். ஓ, பகவான்! பசி, தாகம், வாதம், பித்தம் ஸஹிக்க முடியாத சிலேஷ்மம், சீதம், உஷ்ணம் காற்று சகிக்க முடியாத மழை, மன்மதனாகிய அக்கினி மிகுந்த கோபம்

ஆகிய இவைகளால் ஒருவருக்கொருவர் துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த ஜனங்களைப் பார்த்து என்னுடைய மனம் துக்கிக்கிறது. ஓ ஈச! இந்திரியங்கள் விஷயங்கள் ஆகிய இவைகளாகிய மாயையின் பலமுள்ளதும், ஆத்மாவைக் காட்டிலும் வேறானது மாகிய தேஹம் முதலியவைகளுடைய உண்மையை ஜனங்கள் எப்பொழுது தெரிந்து கொள்ளுகிறார்களோ, அது வரையில் கர்மங்களுடைய பலனுள்ளதும், ப்ரயோசன மற்றதுமான சம்சாரமானது ஒழிவடைகிறது இல்லை. மேலும், ஜனங்களும் அதுவரையில் துக்கக் கூட்டத்தை அடைகிறார்கள்.

ஓ தேவ்! பகலில் பல விஷயங்களில் சென்று கஷ்டப்படும் இந்திரியங்களுள்ளவர்களும், ராத்திரியில் தூங்குகிறவர்களும், பலவகையான மனோரதத்தால் சொப்பனம் நேர்ந்த போது உடனே விழித்துக் கொள்வதால் சொப்பன சுகத்தையும் இழந்தவர்களும், இப்படி எல்லாக் காரியங்களிலும் தெய்வத்தால் தடுக்கப்பட்ட முயற்சியுள்ளவர்களுமான புருஷர்கள் ரிஷிகளானாலும் (விவேகிகளானாலும்) உம்முடைய கதையைக் கேட்பதிலும், நாமங்களை உச்சரிப்பதிலும் ஆசையில்லாதவர்களாக இருப்பார்களேயானால் அவர்கள் சம்சாரத்தை அடைகிறார்கள். ஓ நாத! குரு முகமாகத் தங்களுடைய மார்க்கத்தைச் ச்ரவணம் பண்ணின புருஷர்கள் உம்மிடத்தில் பக்தி செய்வார்கள்.

பக்தியோகத்தால் சுத்தமான அவர்களுடைய ஹ்ருதய கமலத்தில் நீர் வஸிக்கிறீர், ஓ பெரியோர் களால் கானம் பண்ணக்கூடியவரே! உம்முடைய

பக்தர்கள் தங்களுடைய மனத்தால் உம்முடைய உருவத்தைத் தங்களுடைய இஷ்டப்படி (குருமுகமாகத் தெரிந்து கொள்ளலாம்) தியானம் பண்ணுகிறார்கள். அவர்களை அனுக்கிரகிப்பதற்காக நீர் உண்மையான ஸ்வரூபத்தை அவர்களுக்குக் காண்பிக்கிறீர். அத்விதீயரும் பல விதமான ஜனங்களிடத்தில் அந்தர்யாமியாய் அவர்களுக்கு அனுகூலத்தைச் செய் பவருமான நீர் பக்தி செய்யாதவர்களுக்கு அரியதாகிய பூத தயையால் எப்படி சந்தோஷப்படுத்துகிறீரோ, அதுபோல மிகுந்த உபசாரங்களால் பூஜிப்பவர்கள் இடத்திலும், காமனையால் பூஜிக்கும் தேவர்களிடத்தி லும் சந்தோஷப்படுகிறதில்லை. ஆனதால் புருஷர் களால் செய்யப்படும் யாகம் முதலிய அநேக ஸத்கர்மங்களுக்கும், தானத்திற்கும், கடுந்தபஸுக்கும், விரதானுஷ்டானத்திற்கும், பகவானுடைய ப்ரியமே ச்ரேஷ்டமாகிய பலன். பகவானாகிய உம்மிடத்தில் சமர்ப்பிக்கப்படும் தருமமானது நாசமடைகிறதில்லை.

எப்பொழுதும் ஸ்வரூப சைதன்யத்தாலேயே பேத ஞானத்தைப் போக்குகிறவரும், வித்யாசக்தியுள்ள வருமான பரம புருஷனாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். மேலும் ஜகத்தைப் படைப்பது, பரிபாலிப்பது, சம்ஹரிப்பது ஆகிய இவைகளுக்குக் காரணமாகிய மாயையின் விலாசத்துடன் விளையாடு கிறவரும், எல்லாவற்றிற்கும் நியந்தாவுமான உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். எந்தப் பகவானுடைய அவதாரங்கள், குணங்கள், செய்கைகள் ஆகிய இவைகளால் ஏற்படும் திவ்ய நாமங்களை (தேவகீ, நந்தன, தாசரதி, சர்வஞ்ஞ, பக்த வத்ஸல, கம்சாரே, கோவர்த்தனாத்தரண என்பது முதலியவைகள்)

சாகுந்தருணத்தில் எவர்கள் (பகவந்நாமத்தை) உச்சரிக்கிறார்களோ, அவர்களுடைய பல ஜன்மங்களில் சம்பாதிக்கப்பட்ட பாபங்கள் யாவும் அந்த க்ஷணத்திலிலேயே நீங்குகின்றன. மேலும் அவர்கள் ஆவரணமற்றதும் உற்பத்தியற்றதும், சத்யமுமான ப்ரஹ்ம ஸ்வரூபத்தை அடைகிறார்கள். அந்தப் பகவானைச் சரணமடைகிறேன்.

எவர் தம்மையே அதிஷ்டானமாயுடைய ப்ரதானத்தை முக்குண ரூபமாகப் பிரித்து ஜகத்தின் உற்பத்தி, பரிபாலனம், சம்ஹாரம் ஆகிய இவைகளுக்கு முறையே காரணர்களாக இருக்கும் நான்,(ப்ரம்ஹா) பரமசிவன், விஷ்ணு ஆகிய மூன்று பாதங்களுள்ளதும் (வேர்களுள்ளது) மரீசி முதலிய ப்ராஜாபதிகளாகிய அநேக கிளைகளுள்ளதும், ஒன்றாயிருப்பதுமுமான லோக விருக்ஷமாக இருக்கிறாரோ, அந்த உம்மை நமஸ்கரிக் கிறேன். இவ்வுலகத்திலிருக்கும் ஜனங்கள் கெட்ட காரியத்திலேயே ப்ரவர்த்திக்கிறார்கள். மேலும், உம்மால் சொல்லப்பட்டதும் க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியதுமான உம்மைப் பூஜிப்பதாகிய காரியங்களைச் செய்கிறதில்லை. அப்பேர்ப்பட்ட ஜனங்களுடைய ஜீவித ஆசையை (பிழைத்திருக்க வேண்டுமென்ற எண்ணத்தை) எவர் கால ஸ்வரூபியாயிருந்து போக்குகிறாரோ அவருக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். மேலும், இரண்டுபராார்த்தம்வரையில் (ப்ரஹ்மதேவருடைய ஆயுளின் பாதியாகிய ஐம்பது வருஷங்களுக்குப் பராார்த்தமென்ற பெயர்,) அழியாமலிருப்பதும், ஸகல லோகங்களால் நமஸ்கரிக்கப்பட்டதுமான இந்தப் பதத்தை அடைந்த நானும் கால ஸ்வரூபியாகிய உம்மைக் கண்டு பயப்படுகிறேன்.

உம்மைத் தெரிந்து கொள்வதற்காக அநேக வருஷங்கள் தவஞ் செய்தேன். ஆதலால் யாகம் முதலிய சத்கர்மங்களுக்கு அதிபதியாகிய உம்மை நமஸ்கரிக்கிறேன். நீர் விஷய சுகத்தில் ஆசையில்லாத வரானாலும், திர்யக், மனுஷ்யர்கள், தேவர்கள் முதலிய வர்களின் சரீரத்தை உமது இஷ்டப்படி அங்கீகரித்து உம்மால் செய்யப்பட்ட தருமத்தின் மரியாதையைக் காப்பாற்றிக் கொண்டு இருக்கிறீர். அப்பேர்ப்பட்ட புருஷோத்தமராகிய உம்மை நமஸ்கரிக்கிறேன். எவர் ஐந்து பர்வங்களுள்ள அவித்தைக்கு வசப்படாத வரானாலும், ஸகல லோகங்களையும் வயிற்றில் வைத்துக் காப்பாற்றிக் கொண்டு, பயங்கரமான அலைகளுள்ள சமுத்திர ஜலத்திற்குள் ஆதிசேஷனாகிய மெதுவான படுக்கையில் படுத்து, ஜனங்களுக்கு நித்திரா சுகம் இப்பேர்ப்பட்டது என்பதைக் காண்பிக்கிறாரோ, எவருடைய நாபியில் தோன்றிய தாமரஸ புஷ்பத்திலிருந்து மூவுலகத்தையும் ஸ்ருஷ்டிக்கும் நான் எவருடைய அனுக்ரஹத்தால் உண்டானேனோ, எவருடைய வயிற்றில் ஸகல உலகங்களும் வஸிக்கின்றனவோ, எவர் யோக நித்திரையின் முடிவில் தாமரைமலர் போன்ற கண்களைத் திறக்கின்றாரோ, அந்தப் பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன்.

அப்பேர்ப்பட்ட இந்தப் பகவான் ஸகல உலகத் திற்கும் அனுகூலத்தைச் செய்பவர். அந்தர்யாமியா யிருப்பவர். நமஸ்கரித்தவர்களிடத்தில் ப்ரியமுள்ளவர். அந்தப் ப்ரமபுருஷன் எந்த ஞானத்தாலும், ஐசுவரியத் தாலும் இந்த ஜகத்தைச் சுகப்படுத்துகிறாரோ, அப்பேர்ப்பட்ட ஞானத்தை எனக்குக் கொடுக்கட்டும்.

அதனால் நான் இந்த ஜகத்தை முன் கல்பத்திலிருந்ததுபோல் ஸ்ருஷ்டிப்பேன். குணாவதார முள்ளவரும், முகமலர்ச்சியுள்ளவருமான இந்தப் பகவான் தம்முடைய சக்தியாகிய லக்ஷ்மீதேவியுடன் எந்த எந்த சரிதங்களைச் செய்யப்போகிறாரோ, அவைகளெல்லாம் எனக்குத் தோன்றட்டும். அந்தப் பகவானுடைய ஆக்ஞையால் ஜகத்தை (பகவானையே ப்ரபாவமாயுடையது) நான் ஸ்ருஷ்டிக்கும் பொழுதும் என்னுடைய மனமானது அந்தப் பகவானிடத்திலேயே ரமிக்கட்டும். ஸ்ருஷ்யின் வைஷம்யத்தால் ஏற்படும் பாபத்தைப் போக்கடித்துக் கொள்வேன்.

அளவற்ற சக்தியுள்ள அந்தப் பரம புருஷன் ப்ரளய ஜலத்தில் வஸிக்கும்பொழுது அவருடைய கொப்பூழிலிருந்து விஞ்ஞான சக்தியாகிய நான் உண்டானேன். அப்பேர்ப்பட்ட நான் விசித்திரமான இந்தப் ப்ரபஞ்சத்தை விஸ்தாரப்படுத்தும்பொழுது வேதத்தினுடைய அவயமாகிய என்னுடைய வாக்கின் உச்சாரணங்கள் கெட்டுப் போகாமலிருக்கட்டும். மேலும், மிகுந்த கருணையுள்ளவராகிய அந்தப் புராண புருஷன், விசேஷ விசுவாசமுள்ள சிரிப்புடன் மலர்ந்த கண்களுள்ளவராகிய என்னிடம் வந்து ஜகத்தை உண்டுபண்ணுவதற்காகத் தேன்போல இனிமையான வார்த்தையால் என்னுடைய மனக்கவலையைத் தீர்க்க வேண்டும். இப்படி ப்ரஹ்மதேவர் தம்முடைய உற்பத்திக்குக் காரணமாயிருக்கும் பகவானைத் தபஸினாலும் உபாசனையாலும், சித்தத்தை யொரு வன்கட்டுத்துவதாகிய ஸமாதியாலும் தரிசித்து, மனத்திற்கும் வாக்குக்கும் எட்டியவரையில் ஸ்தோத்திரஞ் செய்து ச்ரமப்பட்டவர்போல

மௌனமாக இருந்தார்.

27–44 மதுவென்னும் அசுரனைக் கொன்றவராகிய பகவான் ப்ரளய கால ஜலத்தால் வருத்தப்பட்ட மனமுள்ளவரும் லோகத்தைப் படைக்கும் விஞ்ஞானத் திற்காக முயற்சிப்பவரும், தம்முடைய அம்சமுமான ப்ரஹ்மதேவருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டு, "ஓ வேதகர்ப்பரே! சோம்பலை அடையாதீர். ஸ்ருஷ்யில் முயற்சியும். எதற்காக என்னைப் ப்ரார்த்திக்கிறீரோ, அதனை முன்னமேயே அனுக்கிர கித்திருக்கிறேன். மறுபடியும் நீர் தவம் செய்யும். என் விஷயமாகிய உபாசனையையும் அனுஷ்டியும். அவை களால் நம்முடைய ஹ்ருதயத்தில் ஸகல லோகங்களும் தோன்றும் (இதுவரையில் மறந்திருந்தவைகள்). மேலும் பக்தியுள்ளவராகிய நீர் உம்மிடத்திலும், லோகத்திலும், எங்கும் பரவியிருக்கும் பரப்ரஹ்மமாகிய என்னையும் என்னிடத்திலுள்ள ஜீவர்களையும் பார்ப்பீர். கட்டை களில் அக்கினி யிருப்பதுபோல ஸகல பிராணிகள் இடத்திலும் நானிருப்பதாக ஜனங்கள் எப்பொழுது பார்க்கிறார்களோ, அப்பொழுது அஞ்ஞானம் விலகும். மேலும் எப்பொழுது ஜீவன், தன்னைப் பூதங்கள், இந்திரியங்கள், குணங்கள் ஆகிய இவைகளின் சம்பந்தமற்றவனாகவும், ஸ்வரூபமாகிய என்னுடன் லயித்தவனாகவும் பார்க்கிறானோ, அப்பொழுது மோட்சத்தை அடைகிறான். பலவகையான கர்மங்களைக் கொண்டு அநேக ப்ரஜைகளைச் சிருஷ்டிக்க விரும்பிய உம்முடைய மனம் இவ்விஷயத்தில் ப்ரமையை அடையாது. என்னுடைய அனுகூலம் மேலானது. ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கும்போதும் உம்முடைய மனமானது என்னிட த்திலேயே அதிக ஆசக்தியுள்ளதாக இருக்குமாகையால்

பாபியான ரஜோகுணமானது முந்திய ரிஷியான உம்மிடத்தில் சம்பந்திக்கிறதில்லை. நான் ப்ராணி களால் அறிய முடியாதவனானாலும், பூதங்கள், இந்திரியங்கள், சத்வம் முதலிய குணங்கள், அகங்காரம் ஆகிய இவைகளுடைய சம்பந்தமற்றவனென்று உம்மால் அறியப்பட்டிருக்கிறேன். தாமரைப் புஷ்பத்தின் தண்டு வழியாக அதன் காரணத்தைத் தேடி நீர் சென்றபோது, உமக்கு என் விஷயமாக சந்தேகமிருந்த படியால், (இதற்குக் காரணமொன்றிருக்க வேண்டும். அதுவோ தெரிய வில்லை. ஆனதால் இருக்கிறதா இல்லையாவென்ற சம்சயம்) என்னுடைய ஸ்வரூபத்தை வெளியில் காண்பிக்கவில்லை. ஓ ப்ரஹ்மதேவரே! ஆச்சரியமான என் கதையின் அடையாளமுள்ளதாக என்னை ஸ்தோத்திரம் செய்ததும், தபஸ்செய்ததும் ஆகிய இவைகள் என்னுடைய அனுக்கிரகத்தால் உண்டான வையேயாகும். ஸ்ருஷ்டிக்க விரும்பிய நீர் குணங்களின் ஸம்பந்தமுள்ளவன் போலத் தோன்றும் என்னை அவைகளின் ஸம்பந்தமற்றவனாகவே வருணித்துக் கொண்டு ஸ்தோத்திரம் செய்தபடியால் உம்மிடத்தில் ப்ரியமுள்ளவனாக இருக்கிறேன். இந்த ஸ்தோத்திரத் தால் எந்த மனிதன் ஒவ்வொரு நாளும் என்னைச் சந்தோஷப்படுத்துகிறானோ, அவனிடத்தில் நான் மிக்க ப்ரியத்துடன் அவனுடைய இஷ்டங்களைப் பூர்த்தி செய்வேன். மேலும் குளம், கிணறு ஆகிய இவைகளை வெட்டுவிப்பது முதலிய பூர்த்த தர்மம், தபஸ், யக்ஞம், தானம், யோகம், ஸமாதி ஆகிய இவைகளால் கிடைக்கும் க்ஷேமமாகிய பலன் என்னுடைய ப்ரீதியென்றே ஞானிகள் நினைக்கிறார் கள். நான் ஜீவர்களுக்கு ஆத்மாவாக இருப்பவன். ப்ரியமானவர்களுக்குள் மிக்க ப்ரியமானவன். அதனால்

T-V-m 8.3-2

என்னிடத்தில் ஆசைப்பட வேண்டும். ஆதலால் ஸகல வேதஸ்வரூபமாயும் என்னிடத்திலிருந்து உண்டானதுமாகிய உம்முடைய ஸ்வரூபத்தாலேயே (வேறு ஸாதனத்தை அபேட்சியாமல்) ப்ரஜைகளைச் ஸ்ருஷ்டியும். என்னிடத்திலிருப்பவர்களை வெளிப் படுத்தும், என்று தாமரை மலர் போன்ற நாபியுள்ள வரும், ப்ரதானம் (மாயை) புருஷன் (ஜீவன்) இவர்களுக்கு அதிபதியுமான ஸ்ரீமந் நாராயணன் அனுக்ரஹித்து, ஸ்ருஷ்டிக்க வேண்டியதைப் ப்ரகாசப் படுத்தி அவருடைய கவலையைத் தீர்த்து மறைந்தார்.

அத்தியாயம்–10

பத்துவகையான ஸர்க்கங்கள்

1–2. அதனைக் கேட்டு விதுரர். மைத்ரேயரை நோக்கி, 'ஓ பகவன்! உலகங்களுக்குப் பிதாமகரும் ப்ரபுவுமாகிய ப்ரஹ்மதேவர் புருஷோத்தமன் மறைந்த பிறகு தேகத்திலுண்டானவைகளும் மனத்திலிருந்து உண்டானவைகளுமான ப்ரஜைகளை எவ்வளவு வகையாய்ப்படைத்தார்? தவிரவும், என்னால் கேட்கப் பட்ட மற்ற எல்லாக் கேள்விகளுக்கும் க்ரமமாக உத்தரஞ் சொல்லி என்னுடைய சம்சயங்களை நீக்க வேண்டும். நீர் ஸகலத்தையும் அறிந்தவர்களுக்குள் சிறந்தவர்' என்று கேட்டுக்கொண்டார்.

3–9. அதனைக் கேட்டு அந்த மைத்ரேய மகர்ஷி மிகவும் ப்ரியத்துடன் அவைகளை மறவாமலேயே தமது மனத்தில் வைத்துக்கொண்டு ப்ரத்யுத்தரம் சொல்ல ஆரம்பித்தார். ப்ரஹ்மதேவர் ஸ்ரீமந் நாராயண னுடைய ஆக்ஞையின்படி. அவரிடத்திலேயே தம்முடையை மனத்தைச் செலுத்தி தேவமானத்தில் நூறு வருஷகாலம் தவம் செய்தார். அப்பொழுது ப்ரஹ்மதேவர் எதிலிருந்து தவம் செய்தாரோ அந்தத் தாமரைப் புஷ்பத்தையும் ஜலத்தையும் ப்ரளய காலக் காற்றானது அசைத்தது. அதனைக் கண்ணுற்ற ப்ரஹ்மதேவர் தம்முடைய வித்தையாலும், மிகவும் விருத்தியடைந்த தபஸினாலும் மிக்க விஞ்ஞான பலமுள்ளவராக அந்த வாயுவையும் ஜலத்தையும் பானஞ் செய்தார். பிறகு அவர் தமக்கு இருப்பிடமும், ஆகாசத்தில் வியாபரித்ததுமான தாமரைப்

புஷ்பத்தைப் பார்த்து "பூர்வ கல்பத்தில் லயமடைந்த லோகங்களை இந்தப் புஷ்பத்தைக் கொண்டு ஸ்ருஷ்டிப்பேன்" என்று யோசித்தார். பின்பு அவர் ஸ்ரீமந் நாராயணனால் ஜகத் ஸ்ருஷ்டியில் தூண்டப் பட்டு. பதினான்கு வகையாக ஆகக் கூடிய அந்தத் தாமரை புஷ்பத்தை மூன்று வகையாகப் பிரித்தார் (மூவுலகமாக வென்பது கருத்து). ப்ராணிகளுடைய போக ஸ்தானமாகிய மூவுலகத்தின் ஸ்ருஷ்டியானது இம்மாதிரி சொல்லப்பட்டது. (மூவுலகமும் காம்ய கர்மத்தின் பலமாகையால், ப்ரஹ்மதேவரின் ஒவ்வொரு பகலிலும் அவை ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன என்பது கருத்து) பலனை உத்தேசியாமல் செய்த நல்ல கர்மங்களின் பலமே ப்ரஹ்ம பதம் என்றார். (மகர்லோகம் முதலிய சத்யலோகம் வரையிலுள்ள லோகங்கள் நிஷ்காம கர்மங்களின் பலன்களாகையால் இரண்டு பரார்த்தம் வரையில் அவைகளுக்கு நாசமில்லை.)

10. அதனைக் கேட்ட விதுரர் மைத்ரேயரை நோக்கி "ப்ரபுவாகிய ஓ ப்ராஹ்மணோத்தம! அனேக உருவமுள்ளவரும், ஆச்சரியகரமாக காரியங்களுள்ள வருமாகிய ஸ்ரீமந் நாராயணருக்குக் காலமென்ற ஸ்வரூபம் உண்டென்று சொன்னீரல்லவா? அதனை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

11–31 1/2. பிறகு மைத்ரேயர் விதுரரை நோக்கி, காலமென்பது மகத் தத்துவம் முதலியவைகளுடைய பரிணாமத்தால் ஏற்படுகிறது. அதற்கு உற்பத்தியும் இல்லை. முடிவும் இல்லை. அந்தக் காலத்தை நிமித்த காரணமாக வைத்துக் கொண்டு, பரம புருஷன் தம்மை விளையாட்டாகச் ஸ்ருஷ்டித்துக் கொண்டார்.

விஷ்ணுவின் மாயையால் ப்ரஹ்மமானது இந்தப் ப்ரபஞ்ச உருவமாக ஆகி, அவ்யக்த ஸ்வரூபமுள்ளதும் எல்லாவற்றிற்கும் மேலானதுமான காலத்தால் தனியாகப் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் ப்ரபஞ்சமானது இப்பொழுது ப்ரகாசித்துக் கொண்டிருப்பதுபோலப் பூர்வ கற்பத்திலும் இருந்தது. அடுத்த கற்பத்திலும் இம்மாதிரியாகவே இருக்கும். அதனாலுண்டாகும் ப்ராகிருதம், வைகிருதம் என்ற பேதமுள்ள சர்க்கமானது ஒன்பது வகையுள்ளது. அந்த சர்க்கத்திற்குக் காலத்தாலும், திரவியத்தாலும, குணங்களாலும் மூன்று வகையான ப்ரளயம் ஏற்படுகிறது. பரமாத்மாவினிடமிருந்து குணங்களுடைய வித்தியாசத்தால் ஏற்படும் மகத் தத்துவத்தின் ஸ்ருஷ்டி. முதலாவது, திரவியம், ஞானம் இவைகளால் ஏற்படும் அகங்காரத்தின் ஸ்ருஷ்டி. இரண்டாவது, பூத ஸ்ருஷ்டி. மூன்றாவது, அது தன்மாத்திரையுள்ளது, த்ரவிய சக்தியுள்ளது. நான்காவது இந்திரிய ஸ்ருஷ்டி. அது ஞானம், கருமம் ஆகிய் இவைகளின் ஸ்வரூபம். ஐந்தாவது மன ஸ்ருஷ்டி. அதுவே வைகாரிக தேவ ஸ்ருஷ்டி எனப்படுகிறது. ஆறாவது அவித்தையின் ஸ்ருஷ்டி. அந்த அவித்தை ஜீவர்களுக்கு ஆவரணத்தை யும், விக்ஷேபத்தையும் உண்டுபண்ணுகிறது. இந்த ஆறு வகையான சர்க்கங்களும் ப்ராக்ருதமெனப்படு கின்றன. வைகிருதமான சர்க்கங்களையும் சொல்லு கிறேன், எவரைத் தியானஞ் செய்த மாத்திரத்தில் சம்சார துக்கம் நீங்குமோ, ரஜோ குணத்தை யடைந்த அந்தப் பரம புருஷனுக்கு இது லீலையேயாம். தாவரங்களுடைய ஸ்ருஷ்டியே வைகிருத ஸ்ருஷ்டியில் முக்கியமானது. அதுவே ஏழாவது ஸ்ருஷ்டியாகும். அந்தத் தாவர ஸ்ருஷ்டியானது ஆறுவகையானது. எப்படியெனில், புஷ்பிக்காமல் காய்க்கும் அரசு,

அத்தி; பலா முதலிய மரங்கள் ஒருவகையாம். புஷ்பித்துப் பழுக்கும் யவம், நெல், பயறு முதலிய வைகள் மற்றொரு வகையாம். புஷ்பங்களையே ப்ரதானமாயுள்ள மல்லிகை முதலிய கொடிகள் மற்று ஒருவகையாம். மூங்கில் முதலியவைகள் பின்னொரு வகையாம். மற்ற கொடிகள் ஒரு வகையாம். மற்ற மரங்களும் ஒருவகையாம். இவைகள் யாவும் நடை அற்றவை. ஆகாரமற்றவை. வெளியில் ப்ரகாசிக்காத சைதன்யமுள்ளவை, உள்ளே ஸ்பரிசத்தை அறியக் கூடியவை. பலவகையான பருமன், உயரம் முதலியவை களுமுள்ளவை, எட்டாவது திர்யக் திருஷ்டி. அது பசு, ஆடு, எருமை கிருஷ்ணசாரம், பன்றி, கவயம், குரு, செம்மறியாடு, ஒட்டகம் ஆகிய இரண்டு குளம்புகளுள்ள ஒன்பது வகையான ப்ராணிகள். கழுதை, குதிரை, அச்வதரம் கௌரம், சரபம், சமர் என்ற ஒற்றைக் குளம்புள்ள ஆறு வகையான பிராணிகள். நாய், நரி, செந்நாய், புலி, பூனை, முயல் சல்யுகம், சிம்மம், குரங்கு, யானை, ஆமை, உடும்பு ஆகிய ஐந்து நகங்களுள்ள பன்னிரண்டு வகையான ப்ராணிகள் மகரம் முதலிய ஜலத்தில் சஞ்சரிக்கும் பிராணிகள், கழுகு, பருந்து, கொக்கு, சேனம், பாஸம், பல்லூகம், மயில், ஹம்ஸம், சாரசம், சக்ரவாகம், காக்கை, கோட்டான் முதலிய பறவைகள் ஆகிய இருபத்தெட்டு வகையுள்ளது. இவைகள் யாவும் ஞானமில்லாதவை மிகவும் தமோ குணமுள்ளவை. கிராணேந்திரியத்தாலேயே தங்களுக்கு இஷ்டமானவை களை அறிந்துகொள்ள கூடியவை. தீர்க்கமாகிய ஆலோசனையற்றவை. (பசுக்களுக்கு, பசி தாகத்திலேயே அறிவு என்று கருத்து) ஒன்பதாவது மனிதர்களுடைய ஸ்ருஷ்டியோ ஒருவகையானது. அதற்கு ஆகாரம், சஞ்சரிப்பது ஆகிய இவைகள் பூமியிலேயே

ஏற்படுகின்றன. அம்மனிதர்களிடத்தில் ரஜோ குணமே அதிகம். கருமங்களைச் செய்வதிலேயே அவர்கள் ஆசையுள்ளவர்கள். துக்கத்தையே சுகமாக நினைத்த வர்கள் இம்மூன்று ஸ்ருஷ்டிகளுமே வைகிருத ஸ்ருஷ்டிகளென சொல்லப்படுகின்றன. வைகாரிக மென்று சொல்லப்பட்ட தேவ ஸிருஷ்டியும், வைகிருத ஸிருஷ்டியாகும். கௌமார ஸிருஷ்டியானது, ப்ராக்ருதம் வைகிருதம் இரண்டும் சேர்ந்ததாக ஆகும். (அவர்களுக்கு தேவத்வம், மனுஷ்யத்வம் இரண்டும் உண்டென்பது கருத்து) இந்த வைகிருதமான தேவ ஸ்ருஷ்டியானது தேவர்கள், பிதிருக்கள், அசுரர்கள். கந்தர்வர்கள், அப்ஸரசுகள், யக்ஷரக்ஷஸ்ஸுக்கள், சித்தசாரண வித்யாதரர்கள், கின்னரர் முதலியவர் கள், பூதம் பிரேத பிசாசங்கள் ஆகிய எட்டு வகை யுள்ளது, இப்படி ப்ரஹ்மாவினால் செய்யப்பட்ட சர்க்கங்கள் பத்துவகை யென்றும் சொல்லப்பட்டிருக் கின்றன. இதற்குமேல் மனுக்களையும், மன் வந்த்ரங்களையும் சொல்லுகிறேன், ஸ்ரீமத் நாராயணன் ரஜோ குணமுள்ளவராகப் ப்ரஹ்மதேவ ஸ்வரூபத்தை யடைந்து தம்மைத் தாமே தம்மைக்கொண்டு படைக்கிறார். அவர் வீணாகாத சங்கற்பமுள்ளவர். ஒ விதுரரே எல்லாவற்றிற்கும் ஈசுவரனாகிய பரமாத்மா மாயாவி ஆகையால் குணங்களுடைய சம்பந்தமுள்ள இவரிடத்திலிருந்து ஒன்றன்பின் மற்றொன்று உண்டாயிற்று என்று சொல்ல வேண்டியதில்லை. நதியில் அநேகம் சுழல்கள் ஒரே காலத்தில் உண்டாகவில்லையா? மேலும் தேவர்கள் அசுரர்கள் முதலியவர்களில், இந்தக் கற்பத்தில் எவர்கள் இருக்கிறார்களோ, அவர்களே வேறு பெயருடனும், வேறு உருவத்துடனும் பிந்திய கற்பங்களிலும் இருக்கிறார்கள்.

அத்தியாயம்–11

காலத்தின் ஸ்வரூபம்

1–15 "காரியரூபமாகிய ப்ரபஞ்சத்தின் எந்த அம்சமானது கடைசியானதோ (பிரிக்க முடியாததோ) எது காரியமாயிருக்கும் தன்மையை அடையாததோ, மேலும் எது சமுதாயமாயிருக்கும் தன்மையை அடையாததோ அதே பரமாணுவென்று தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு அவயவங்கள் உண்டென்று மனிதர்கள் ப்ரமிக்கிறார்கள். (இது காலத்தின் சூட்சும ரூபம்) காரியம் மாத்திரமாயும், மாறுதலை அடையாத தாயுமுள்ள அந்த வஸ்துவின் சேர்க்கையே மிகவும் பெரியது. அது பேதமற்றது. விசேஷமற்றது. ஓ சாதுக்களுக்குள் மேலானவரே! இந்தப்ரபஞ்சமானது பரமாணுவாயிருக்கும்பொழுது இதை எந்தக் காலம் வ்யாபித்திருந்ததோ, அதுவே காலப் பரமாணு. காரியமாயிருக்கும் ப்ரபஞ்சம் முழுவதையும் எந்தக் காலம் வ்யாபித்திருக்கிறதோ, அதுவே மகாகாலம். இரண்டு காலப் பரமாணுக்கள் சேர்ந்தால் அணுவாகிறது. மூன்று அணுக்களால் திருஸரேணு உண்டாகிறது. வீடுகளில் சன்னல் வழியாகப் ப்ரகாசிக்கும் வெயிலில் பறந்துகொண்டிருக்கும் தூளிகளே திருஸரேணு எனப்படும். மூன்று கால திருஸரேணுக்களால் த்ருடி யுண்டாகின்றது. நூறு த்ருடி கொண்டது வேதமெனப்படுகிறது. மூன்று வேதங்கொண்டது லவமெனப்படுகிறது. மூன்று லவங்கள் நிமிஷமாகின்றது, மூன்று நிமிஷங்களால் க்ஷணம் உண்டாகிறது. ஐந்து க்ஷணங்களால் காஷ்டை ஏற்படுகிறது. பதினைந்து காஷ்டைகளால்

லகு ஏற்படுகிறது. பதினைந்து லகுக்களால் நாடிகை (நாழிகை) உண்டாகிறது. இரண்டு நாடிகைகள் ஒரு முகூர்த்தமாகும். ஆறு அல்லது ஏழு நாழிகை கொண்டது ப்ரஹரமென்றும், யாமமென்றும் சொல்லப்படுகிறது. ஆறு பலம் தாமிரத்தால் செய்யப் பட்ட உயரமான வடிவமுள்ள பாத்திரத்தில், இருபது குன்றிமணி நிறையுள்ள தங்கத்தால் செய்யப்பட்டவை களும், நான்கு அங்குல விஸ்தாரமுள்ளவைகளுமான நான்கு ஊசிகளால் துவாரஞ் செய்து அந்தப் பாத்திரத்தை ஜலத்தில் மிதக்கச் செய்து அந்தப் பாத்திரம் ஜலத்தில் எவ்வளவு காலத்தில் மூழ்குமோ அந்தக் காலமே நாழிகையாகும். நாலு யாமம் கொண்டது மனிதர்களுக்கு ஒரு பகலாம், ராத்திரியும் அவ்வளவு காலமேயாம். இவ்விரண்டும் சேர்ந்தது ஒருநாள் என்று சொல்லப்படுகிறது. பதினைந்து நாட்கள் கொண்டது ஒரு பக்ஷமாகும். அது சுக்லமென்றும், கிருஷ்ணமென்றும் இருவகையுள்ளது. அவ்விரண்டு பக்ஷங்கள் கொண்டது ஒரு மாதமாகும். அது பித்ரு தேவதைகளுக்கு ஒருநாள் ஆகும். அதிலும் சுக்லபக்ஷம் பகலாகும. கிருஷ்ணபக்ஷம் ராத்திரியாகும். இரண்டு மாதம் கொண்டது ஒரு ருது. ஆறு மாதம் கொண்டது ஒரு அயன மெனப்படுகிறது. அதிலும் தக்ஷிணாயணம், உத்தராயணம் என்று இருவகை யுண்டு; தக்ஷிணாயணம் தேவர்களுக்கு ஒரு ராத்திரியாகும். உத்தராயணமோ அவர்களுக்கு ஒரு பகலாகும். ஆதலால் மனுஷ்ய மானத்தில் பன்னிரண்டு மாதம் கொண்டது தேவர்களுக்கு ஒரு நாளாகின்றது. மனுஷ்ய மானத்தில் நூறு வருஷங்கள் மனிதர்களுக்குப் பரமாயுஸ் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கால ஸ்வரூபியான் சூரிய பகவான், கிரகங்கள், அசுவனி

முதலிய இருபத்தேழு நக்ஷத்திரங்கள், மற்ற தாரைகள் ஆகிய இவைகளுள்ள காலச் சக்கரத்திலிருந்து கொண்டு பரமாணு முதல் வருஷம் வரையிலுள்ள காலமானத்தால் ஜகத்தில் சஞ்சரிக்கிறார். மேலும், மேற்சொல்லிய சம்வத்ஸர ஸ்வரூபமாகிய காலத்திற்கு சம்வத்ஸரம், பரிவத்ஸரம், இத்வத்ஸரம், அனுவத்ஸரம், வத்ஸரமென்று ஐந்து பேதங்கள் (ஸௌரம், பார்ஹஸ்பத்யம், ஸாவனம், சாந்திரம், நக்ஷத்ரம் என்ற மான பேதத்தால்) ஏற்படுகின்றன. எந்தப் பரமபுருஷன் இம்மாதிரியான கால ஸ்வரூபியாயிருந்து பலவகையாகக் காரியங்களை உண்டுபண்ணி (விதைகளுக்கு முளைக்கும் சக்தியை உண்டுபண்ணிக் கொண்டு) சம்சாரிகளுக்கு ஸ்வர்க்கம் முதலிய பலனை, யாகம் முதலிய சத் கர்மங்களால் கொடுத்துக் கொண்டும், புருஷர்களுடைய மோஹத்தை நீக்குவதற்காக ஆகாசத்தில் சஞ்சரிக்கிறாரோ; ஐந்து வகையான வத்ஸரங்களை எவர் உண்டு பண்ணுகிறாரோ, அப்பேர்ப்பட்ட தேஜோரூபியான சூரியனைப் பூஜிக்க வேண்டும்" என்றார்.

16–17 அதனைக் கேட்டு விதுரர், "ஓ பகவானாகிய மைத்ரேயரே! பிதிருக்கள், தேவர்கள், மனிதர்கள் ஆகிய இவர்களுடைய மானத்தைச் சொன்னீர். மேலும், நீர் கால ரூபியான பகவானுடைய ஸ்வரூபத்தை நன்றாக அறிந்தவர். யோகத்தால் கிடைத்த ஞானக் கண்ணால் வித்வான்கள் எல்லாவற்றையும் அறிகிறார்கள். ஆகையால் மூவுலகத்திற்கு வெளியில் இருக்கும் ஞானிகளுடைய கதியையும் சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

18–21 அதனைக் கேட்டு மைத்ரேயர், "தேவ மானத்தால் அளக்கப்பட்ட பன்னீராயிரம் வருஷங்களைக் கொண்டு க்ருதயுகம், த்ரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம் என்று நான்கு யுகங்கள் ஏற்படுத்தப்பட்டன; நாலாயிரத்தெண்ணூறு (4800) வருஷங்கள் கொண்டது க்ருதயுகம் மூவாயிரத்தறுநூறு வருஷங்கள் கொண்டது, (3600) த்ரேதாயுகம். இரண்டு ஆயரத்து நாநூறு வருஷங்கள் கொண்டது,(2400) த்வாபர யுகம். ஆயிரத்து இருநூறு வருஷங்கள் கொண்டது,(1200) கலியுகம். க்ருதயுகத்தில் முதல் நாநூறு வருஷங்கள் யுகத்தின் சந்தி எனப்படுகின்றன. கடைசி நானூறு வருஷங்கள் சந்தியாம்ச மெனப்படுகின்றன. த்ரேதாயுகத்தில் முதல் முந்நூறு வருஷங்கள் சந்தி என்றும், கடைசி முந்நூறு வருஷங்கள் சந்தியாம்ச மென்றும், துவாபர யுகத்தில் முதல் இருநூறு வருஷங்கள் சந்தி என்று கடைசி இருநூறு வருஷங்கள் சந்தியாம்சமென்றும், கலியுகத்தில் முதல் நூறு வருஷங்கள் சந்தியென்றும், கடைசி நூறு வருஷங்கள் சந்தியாம்சமென்றும் சொல்லப்படுகின்றன. சந்தி, சந்தியாம்சம் என்னும் இவ்விரண்டிற்கும் நடுவிலிருக்கும் பாகமே யுகமெனப் படுகிறது. அந்தக் காலத்தில்தான் யுக தர்மங்கள் நன்றாகப் ப்ரகாசிக்கும். க்ருதயுகத்தில் தருமமானது நான்கு பாதங்களுடன் மனிதர்களை அனுசரிக்கிறது. மற்ற யுகங்களில் அந்த தருமத்திற்கு ஒவ்வொரு பாதம் குறைகிறது. இந்த மூவுலகத்தைக் காட்டிலும் வெளியிலிருக்கும் மஹர் லோகம் முதல் ப்ரம்ஹ லோகம் வரையில் ஆயிரம் சதுர்யுகம் கொண்டது ஒரு பகலாகும். இரவும் அவ்வளவு காலமேயாகும். அதில் ப்ரஹ்ம தேவர் தூங்குகிறார். ராத்திரி முடிந்து.

பகல் ஆரம்பிக்கும்பொழுது ஸ்ருஷ்டி ஆரம்பிக்கப்படு கிறது. அந்தப் ப்ரஹ்மதேவருடைய பகலில் பதினான்கு மனுக்கள் உண்டு. எழுபத்தொரு யுகங்களுக்குக் கொஞ்சம் அதிகமான காலம் ஒவ்வொரு மனுக்களின் காலமாகும். ஒவ்வொரு மன்வந்தரங்களிலேயும் அந்தந்த மனுவின் வம்சத்தில் பிறந்த அரசர்களும், ரிஷிகளும், தேவர்களும் தேவர்களுக்கு அதிபதிகளும், அந்த மனுக்களை அனுசரிக்கிறார்கள். இது ப்ரஹ்ம தேவரால் ஒவ்வொரு நாளும் செய்யப்படும் ஸ்ருஷ்டி. இது இவ்வுலகத்தையும் வ்ருத்தி செய்யக்கூடியது. திர்யக்ஜாதிகளும், மனிதர்களும், பித்ருக்களும், தேவர்களும் இதில் ஸ்ருஷ்டிக்கப் படுகிறார்கள். மேலும் ஒவ்வொரு மன்வந்தரங்களிலும் பரம புருஷன் சத்வகுண முள்ளவராக மனு முதலியவர்களின் ஸ்வரூபமாக இருந்து இந்த ஜகத்தைக் காப்பாற்றுகிறார். பின்னும் அவர் பகலின் முடிவில் தமோகுணத்தின் சொற்ப பாகத்தை அங்கீகரித்துக் காலகதியால் எல்லாவற்றையும் தமக்குள் அடக்கிக் கொண்டு வியாபார மற்றவராய் இருக்கிறார். அப்பொழுது பூமி முதலிய மூன்று உலகங்களும், சந்திரன், சூரியன் ஆகிய இவர்களுடைய ப்ரகாசமில்லாமல் மறைந்து இருக்கின்றன. பிறகு பகவானுடைய சக்தியாகிய சங்கர்ஷண முகாக்கினியால் முவுலகமும் எரிக்கப்படும் பொழுது அந்தத் தாபத்தைப் பொறுக்காமல் பிருகு முதலிய மகர்ஷிகள் மகர்லோகத்திலிருந்து ஜனலோகம் செல்லுகிறார்கள். அப்பொழுது சமுத்திரங்கள் ப்ரளய காலத்திய காற்றினால் அசைக்கப்பட்டுப் பெரியதாகிய அலைகளுடன் பயங்கரமான ஆடம்பர முள்ளவை களாக உலகங்களை மூழ்கச் செய்யும். அந்தக் காலத்தில் அந்த ஜலத்திற்குள் ஆதிசேஷனாகிய

ஆசனத்தில் பகவான் யோக நித்திரை செய்து கொண்டிருக்கிறார். ஜனலோகத்தில் வஸித்தவர்கள் அவரை ஸ்தோத்திரம் செய்து கொண்டிருப்பார்கள். இம்மாதிரியான ராத்திரி, பகல்களால் ப்ராணிகளின் வயதைவிட அதிகமான ப்ரஹ்மதேவருடைய வயதும் அபகரிக்கப் பெற்றுக் குறைந்துபோகிறது. அந்தப் ப்ரஹ்மதேவருடைய ஆயுளின் பாதிப்பாகம் பரார்த்தம் என்று சொல்லப்படுகிறது. முதல் பரார்த்தம் சென்று விட்டது. இப்பொழுது இரண்டாவது பரார்த்தம் நடக்கிறது. முந்திய பரார்தத்தின் முன்பாகத்தில் ப்ராஹ்மம் என்ற பெரியதாகிய கற்பம் நடந்தது. சப்தப்ரஹ்மமென்று சொல்லப்படுகிற ப்ரஹ்மதேவர் உண்டான காலமாகையால் அதற்குப் ப்ராஹ்மம் என்று பெயர் கிடைத்தது. அதற்கு அடுத்த கற்பத்தைப் பாத்ம கல்பம் என்று சொல்லுகிறார்கள். அந்தக் கற்பத்தில் பகவானுடைய நாபியாகிய ஏரியிலிருந்து லோகமாகிய பத்மம் (தாமரைப் புஷ்பம்) உண்டாயிற்று. இதுவே முதலாவது கற்பம். இரண்டாவது வராஹ கற்பமென்று சொல்லப்படுகிறது. அதில் பகவான் வராஹமாக (பன்றி) அவதரித்தார். உபாதியற்றவரும், நாசமற்றவரும், உற்பத்தியற்றவரும், ஜகத் காரணரும் ஆகிய பகவானுக்கு இரண்டு பரார்த்தங்களடங்கிய ப்ரஹ்மதேவருடைய ஆயுளானது நிமிஷமாம்! பரமாணுமுதல் இரண்டு பரார்த்தம் வரையிலுள்ள மேற்சொல்லிய காலமானது வீடு முதலியவைகளில் அபிமானமுள்ள சம்சாரிகளுக்கு யஜமானனே யொழியப் பரிபூரணரான புருஷோத்தமருக்கு அதிபதியல்ல. மஹத்தத்துவம் முதலிய ஆவரணங்கள் உள்ளதுமான அண்டகோசமானது வெளியில் ஐம்பது கோடி விஸ்தாரமுள்ளது. அளவில் ஒன்றுக்கொன்று

பத்து மடங்கு அதிகங்களான பூமி முதலிய ஆவரணங்களுள்ள மேற்சொல்லிய அண்டகோசமும், மற்ற கோடிக் கணக்கான அண்டங்களும் எதனிடத்தில் ப்ரவேசித்து பரமாணுக்கள் போலத் தோன்று கின்றனவோ, அதுவே அக்ஷரம்; எல்லாக் காரணங் களுக்கும் காரணம்; மகாத்மாவாகிய புருஷனுடைய சரீரம்; அதுவே பரப்ரஹ்மம்.

அத்தியாயம்–12

ஸனகர் முதலியவர்களுடைய ஸ்ருஷ்டி

1–8. ஓ விதுரரே! பரமாத்மாவினுடைய காலமென்ற பெயருள்ள மஹிமையைச் சொன்னேன் வேதகர்ப்பராகிய ப்ரஹ்மதேவர் ஜகத்தை யுண்டு பண்ணியதைச் சொல்லுகிறேன் தெரிந்து கொள்ளும். முதலில் ப்ரஹ்மா அந்ததாமிஸ்ரம், தாமிஸ்ரம் மஹாமோஹம், மோஹம், தமஸ் ஆகிய ஐந்து அஜ்ஞான விருத்திகளை யுண்டுபண்ணினார். பின்பு , தம்மால் ஸிருஷ்டிக்கப் பட்டவைகள் பாபத்திற்கு ஏதுக்களாயிருப்பதைப் பார்த்து, அதில் சந்தோஷம் அடையவில்லை. பின்பு பகவானைத் தியானம் செய்து அதனால் சித்த சுத்தியுள்ளவராக ஸனகர், ஸநந்தனர், ஸனாதனர், ஸனத்குமாரர் ஆகிய நான்கு குமாரர்களை உண்டுபண்ணினார். அவர்கள் கர்மங்களற்றவர்கள். இந்திரியங்களை ஜயித்தவர்கள். ப்ரஹ்மதேவர் அவர்களை நோக்கி, "ஓ குழந்தைகளே! நீங்கள் பிரஜைகளைச் ஸிருஷ்டியுங்கள்" என்று ஆக்ஞாபித்தார். அவர்கள் வாஸுதேவரையே தியானஞ் செய்துகொண்டு மோக்ஷஸாதனமாகிய நிவிருத்தி தருமத்தையே அனுஷ்டிப்பவர்களாகையால் அதனை ஒப்புக்கொள்ளவில்லை. அப்பொழுது புத்திரர்களாகிய அவர்கள் பிதாவின் கட்டளையைக் கடந்ததால் ப்ரஹ்மதேவருக்குக் கோபம் உண்டாயிற்று. ஆனாலும் அவர் அதை அடக்கிக் கொள்ள முயன்றார். அப்படியும் கோபம் அடங்காமல் ப்ரஹ்மதேவருடைய புருவங்களின் மத்ய பாகத்திலிருந்து ஒரு புத்திரன் உண்டானான். அந்தக் குமாரரே நீல லோஹிதர்.

அவர் ப்ரஹ்மதேவருடைய கோபத்தின் அம்சம். தேவர்களுக்கு முந்தி யுண்டானவரும், பரமசிவனென்று சொல்லப்படப் போகின்றவருமான அந்தக் குமாரர் ப்ரஹ்மதேவரை நோக்கி "ஓ ஜகத்தைப் போஷிப் பவரே! எனக்கு இருப்பிடங்களையும், பெயர்களையும் ஏற்படுத்தும்" என்று அழுது வேண்டிகொண்டார்.

9–14. பத்மத்திலிருந்து உண்டான ப்ரஹ்மதேவர் அதனைக் கேட்டு. "ஓ தேவர்களுக்குள் சிறந்தவரே! நீர் அழ வேண்டாம். உமக்கு இருப்பிடங்களையும், பெயர்களையும் ஏற்படுத்துகிறேன். நீர் ப்ராகிருத சிசுவைப்போல் அழுதபடியால் உம்மை ருத்திரனென்று ஜனங்கள் சொல்லுவார்கள். இருதயம், இந்திரியங்கள், பிராணன், ஆகாசம், வெளியிலிருக்கும் வாயு, அக்கினிஜலம், பூமி, சூரியன், சந்திரன், தபஸ் ஆகிய இவைகள் உமக்கு வாசஸ்தலங்களாக முன்னமேயே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் உமக்கு மன்யு, மனு, மஹாகாலன், மஹான், சிவன், ரிதத்வஜன், உருரேதஸ், பவன், காலன், வாமதேவன், திருதவிருதன் என்ற பெயர்களுண்டாகும், தவிரவும் உமக்கு, தீ விருத்தி, ரசனா, உமா, நியுத், ஸர்ப்பி, இளா, அம்பிகா, இராவதீ, ஸுதா, தீக்ஷா, ருத்ராணீ என்ற பெயருள்ள ஸ்திரீகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

ஆதலால் மேற்சொல்லிய நாமதேயங்களுடன் மேற்காட்டிய ஸ்தானங்களில் ஸ்திரீகளுடன் வசித்து அநேக பிரஜைகளை உண்டு பண்ணும். நீர் ப்ரஜாபதிகளுக்கும் மேலானவர்" என்று பிரியமாகச் சொன்னார்.

15–20. இம்மாதிரி பிதாவினால் ஆக்ஞாபிக்கப் பட்ட அந்த நீலலோஹிதர் ஆகிருதி சுபாவம் ஆகிய இவைகளில் தமக்குச் சமானர்களாகிய ப்ரஜைகளை உண்டுபண்ணினார். அந்த ருத்திரரால் ஸிருஷ்டிக்கப் பட்ட ப்ரஜைகள் கூட்டங் கூட்டமாக ஜகத்தை விழுங்குகிறவர்கள் போல எங்கும் பரவியிருந்தார்கள். அதனை கண்ட ப்ரஹ்மதேவர் ஸந்தோஷமடைந்து, ருத்திரரை நோக்கி, "ஓ தேவசிரேஷ்டரே! உம்மால் ஸிருஷ்டிக்கப்பட்ட ப்ரஜைகள் என்னையும், திக்குகளையும் பார்வையால் எரிப்பவர்கள்போல் இருக்கிறார்கள். ஆதலால் நீர் இனி ஸிருஷ்டிக்க வேண்டாம். ஸகல ப்ராணிகளுக்கும் ஸுகத்தைக் கொடுக்கக்கூடிய தவத்தைச் செய்யும். உமக்கு க்ஷேமமுண்டாகட்டும். ஸகல பிராணிகளுடைய இருதய குகையில் வஸிப்பவரும், தேஜோரூபியும், பகவானாயுமுள்ள பரமாத்மாவைத் தபஸினாலேயே புருஷன் அடைகிறான். ஆதலால் நீரும் தபஸ் செய்தால் அதன் பலத்தால் • ஜகத்தை முன் கற்பத்திலிருந்தது போல் ஸிருஷ்டிப்பீர்" என்றார். அதனைக் கேட்ட ருத்திரரும் வாக்குகளுக்கு அதிபதியான ப்ரஹ்மதேவருடைய வார்த்தையை அங்கீகரித்து, அவரிடம் விடைபெற்றுக் கொண்டு தபஸ் செய்வதற்காக வனம் சென்றார்.

21–27. பிறகு ப்ரஹ்மதேவர் ஸிருஷ்டி விஷயமாகத் தியானம் செய்தார். அவருக்கு அப்பொழுது பகவான் உடைய சக்திவிசேஷத்துடன் கூடிய மரீசி, அத்திரி, அங்கிரஸ், புலஸ்தியர், புலஹர், க்ரது, பிருகு, வசிஷ்டர், தக்ஷர், நாரதர் ஆகிய பத்துப் புத்திரர்கள் உண்டானார்கள். அவர்கள் லோகத்தின் சந்தானத்திற்குப்

காரணமாயிருப்பவர்கள். அதெப்படியெனில் அவருடைய மடியிலிருந்து நாரதரும், கட்டை விரலிலிருந்து தக்ஷரும், ப்ராணனிடமிருந்து வசிஷ்டரும், தொக்கிந் திரியத்திலிருந்து ப்ருகுவும், கையிலிருந்து க்ரதுவும் நாபியிலிருந்து புலஹரும், காதுகளிலிருந்து புல்ஸ்தியரும், முகத்திலிருந்து அங்கிரசும், மனத்தில் இருந்து மரீசியும் உண்டானார்கள். மேலும் அவர் உடைய வலப்பக்க ஸ்தனத்திலிருந்து ஸ்ரீமந் நாராயண னுக்கு வாசஸ்தானமாகிய தருமம் உண்டாயிற்று. அவருடைய பின் பக்கத்திலிருந்து அதர்மம் உண்டா யிற்று. உலகத்திற்குப் பயங்கரனாகிய ம்ருத்யுவே அதற்கு அதிதேவதை. மேலும் அவருடைய ஹிருதயத் திலிருந்து காமமும், புருவங்களிலிருந்து கோபமும், உதட்டிலிருந்து லோபமும், முகத்திலிருந்து வாக்குக்கு அதிதேவதையும், ஆண்குறியிலிருந்து சமுத்திரங்களும், பாயுவிலிருந்து பாபத்திற்கு இருப்பிடமாகிய நிருதியும் உண்டானார்கள். பின்னும் அவருடைய நிழலிலிருந்து தேவஹூதிக்குப் பர்த்தாவாக ஆகப்போகிற கர்த்தமப் பிரஜாபதி உண்டானார். இப்படி ப்ரஹ்மதேவருடைய தேகத்திலிருந்தும் மனத்திலிருந்தும் இந்த ஜகத் உண்டாயிற்று.

28–32. ஓ விதுரரே! ப்ரஹ்மதேவர் தம்மிடமிருந்து உண்டானவளும், மனோகரமாகிய உருவமுள்ளவளு மான வாக்குக்கு அதிதேவதையை அவள் இஷ்டப் படாமலிருக்கும் போதும் தாம் ஆசைப்பட்டார், என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அப்பொழுது மரீசி முதலியவர்கள் அதர்மத்தைச் செய்ய முயன்ற தங்கள் உடைய பிதாவை நோக்கி, "மன்மதனை ஜயிக்காமல் உம்முடைய பெண்ணிடத்தில் நீர் ஆசைப்படுவது

உசிதமல்ல. இது நம்முடைய முன்னோர்களால் அனுஷ்டிக்கப்பட்டதுமில்லை. உமக்குப் பிந்தியவர் களாலும் செய்யக்கூடியதில்லை. ஓ ஜகத்குருவே! மிக்க தேஜஸுள்ளவர்களானாலும் இம்மாதிரியான காரியத்தில் முயற்சிப்பது நியாயமல்ல. மகான்களால் அனுஷ்டிக்கப்படும் காரியங்களைச் செய்து லோகங்கள் க்ஷேமத்தை அடைகின்றன. (நீர் இம்மாதிரியான கெட்ட காரியத்தைச் செய்தால் மற்றவர்களும் இதைச் செய்து நரகத்தை அடைவார்களென்று கருத்து.) நீர் காரணத்தில் சூட்சுமரூபமாக இருந்த ஜகத்தை உம்முடைய ப்ரகாசத்தால் ப்ரகாசிக்கச் செய்தவர். இப்படிப் பட்ட உமக்கு நமஸ்காரம் செய்கிறோம். தர்மத்தைக் காப்பாற்றவேண்டும்" என்று பிரார்த்தித் தார்கள்.

33–35. அதனைக் கேட்ட ப்ரஹ்மதேவர் வெட்கம் அடைந்து அவளை விட்டுவிட்டார். (அந்த ஆசையை யொழித்தாரென்பது கருத்து.) அவளை திக்குகள் கிரஹித்துக் கொண்டன. அது பனியால் ஏற்படும் தமஸ்ஸாகும். பின்பு ஒருகால் ஜனங்களை எப்படி ஸிருஷ்டிக்கிறதென்று அவர் தியானம் செய்யும்போது அவருடைய நான்கு முகங்களிலிருந்தும் வேதங்கள் வெளிப்பட்டன. சாதுர்ஹோத்ரம் (ஹோதா முதலிய நான்கு ரித்விக்குகள் செய்யவேண்டிய கர்மம்) அவைகளின் தந்திரம், உபவேதங்கள், நீதிசாஸ்திரம், தருமத்தின் நான்கு பாதங்கள், ஆசிரம தர்மங்கள் ஆகிய இவைகளும் உண்டாயின.

36. அதனைக் கேட்டு விதுரர் மைத்ரேயரை நோக்கி "ஓ தபஸ்ஸையே தனமாகக் கொண்டவரே!

ப்ரஜாபதிகளுக்கும் அதிபதியாகிய அந்தப் ப்ரஹ்மதேவர் எந்த எந்த வேதங்களை, எந்த எந்த முகத்தால் ஸிருஷ்டித்தார்? அவற்றைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

37–48. அதனைக் கேட்டு மைத்ரேயர் ப்ரத்யுத்தரம் சொல்லலானார். ப்ரஹ்மதேவர், ரிக், யஜுஸ், சாமம், அதர்வம் என்ற நான்கு வேதங்களைக் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திக்குகளை நோக்கியிருக்கும் தம்முடைய முகங்களால் உண்டுபண்ணினார். சாஸ்திரம் (ஹோதாவினால் செய்யப்பட வேண்டியது), இஜ்யை (அத்வர்யு செய்யவேண்டியது) ஸ்துதி, ஸ்தோமம் (உத்காதாவினால் செய்யப்பட வேண்டியது), ப்ராயசித்தம் (ப்ரஹ்மாவினால் செய்யப்பட வேண்டியது) ஆகிய இவைகளையும் உண்டுபண்ணினார். மேலும் அவர் ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வ வேதம், ஸ்தாபத்யம் (விசுவகர்மாவினால் செய்யக்கூடியது) ஆகிய இவைகளையும் படைத்தார். பின்னும் எல்லாவற்றையும் அறிந்த அவர் இதிகாசம், புராணம் ஆகிய ஐந்தாவது வேதத்தை எல்லா முகங்களாலும் உண்டுபண்ணினார். அவருடைய முந்திய முகத்தில் இருந்து ஷோடசி, உக்தியம், சயனம், அக்னிஷ்டோமம், அப்தோர்யாமம், அதிராத்ரம், வாஜ்பேயம், கோஸவம் ஆகிய இவைகளும் வித்யை, தானம், தபஸ் சத்தியம் என்ற தருமத்தின் நான்கு பாதங்களும் ஆசிரமங்களும், அவைகளின் தருமங்களும் உண்டாயின. மேலும் ஆசிரமங்களில் ப்ரம்மசரிய ஆச்ரமத்தில் ஸாவித்ரம், ப்ரஜாபத்யம், ப்ரஹ்மம், ப்ரஹத் என்று நான்கு வகையுண்டு. கிரஹஸ்தாசிரமத்தில் வார்த்தை, சஞ்சயம், சாலீனம் சிலோஞ்சம் என்று நான்கு

வகையுண்டு. வானப்பிரஸ்தர்களுக்குள் வைகானஸர்கள், வாலகில்யர்கள், ஔதும்பரர்கள், பேனபர்கள் என்ற நான்கு வகையுண்டு. சன்யாச ஆசிரமத்திலும் குடீசகர்கள், பஹூதர்கள், ஹம்ஸர்கள். நிஷ்கிரியர்கள் என்று நால்வகை யுண்டு. ஆத்மா அனாத்மா இவை களை தெரிவிக்கும் ஆன்வீக்ஷகி, கர்ம வித்தையாகிய த்ரயீ, க்ருஷி முதலிய வார்த்தை தண்டநீதி ஆகிய நான்கு வித்யைகளும் நான்கு வ்யாஹ்ருதிகளும். நான்கு முகங்களிலிருந்து உண்டாயின. அவருடைய ஹிருதயாகாசத்திலிருந்து ப்ரணவமும், ரோமங்களில் இருந்து உஷ்ணிக் சந்தசும், எலும்புகளிலிருந்து ஜகதீச் சந்தசும் மஜ்ஜையிலிருந்து பங்தி சந்தசும் ப்ராணனிடமிருந்து ப்ரஹதீச் சந்தசும் உண்டாயின. ஸ்பர்சமென்ற எழுத்துக்களே அவருடைய ஜீவன். ஸ்வரமென்ற அக்ஷரங்களே அவருக்கு தேஹம். ஊஷ்மாவென்ற அக்ஷரங்களே அவருக்கு இந்திரியங்கள் அந்தஸ்தமென்ற எழுத்துக்களே அவருக்குப் பலமாய் இருக்கின்றன. அவருடைய விளையாட்டினால் ஏழு ஸ்வரங்களும் உண்டாகின்றன. ஓ விதுரரே! இப்படி சப்த ப்ரஹ்மஸ்வரூபியான அவருடைய உருவமானது வ்யக்தமாகும் பொழுது பலவகை சக்தியுள்ளதாகவும், (இந்திரன் முதலியவர்களின் உருவமாக) அவ்யக்தமாய் இருக்கும் போது ப்ரஹ்மமாகவும் ப்ரகாசிக்கிறது.

அத்தியாயம்– 13

வராஹாவதாரம்

1–4 மைத்ரேயரால் சொல்லப்பட்டதும் மிகவும் புண்யகரமுமான வார்த்தையைக் கேட்ட விதுரர் ஸ்ரீ கிருஷ்ண கதையில் மிகுந்த ஆதரவுடன், "ஓ மஹா முனியே! ப்ரஹ்மதேவருக்குப் ப்ரியமுள்ள புத்திரராகிய அந்த ஸ்வாயம்புவ மனுவானர் ப்ரியமுள்ள பத்தினியை அடைந்து எதனைச் செய்தார்? அரசர்களுக்குள் முந்தியவாக்கிய அவருடையச் சரித்தத்தைக் கேட்க ச்ரத்தையுள்ளவனாக இருக்கிறேன். அவர் ஸ்ரீ மஹா விஷ்ணுவை ஆசிரயித்தவர், பகவானுடைய குணங்களைக் கேட்பது, முகுந்தருடைய பாதாரவிந்தத்தை ஹிருதயத்தில் தியானிப்பது ஆகிய இவைகளே வெகு காலமாகச் ச்ரமப்பட்டு வித்தியாப்யாஸம் செய்ததின் பலனாகும். ஆதலால் அவருடைய சரித்தத்தைச் சொல்ல வேண்டுமி என்று கேட்டார்.

5–13 அதனைக் கேட்ட மைத்ரேயர் பகவத் கதையைச் சொல்லும்படி தாம் தூண்டப்பட்டபடியால் மயிர்க் கூச்சலுள்ளவராகி வணக்கமுள்ளவரும், ஆயிரந்தலையுள்ள பகவானுடைய பாதபீடருமாகிய (பகவான் விதுரருடைய மடியில் ப்ரியத்தால் கால் நீட்டிச் சயனம் செய்கிற வழக்கம்) விதுரரை நோக்கிச் சொல்லலானார். ஸ்வாயம்புவ மனு தம்முடைய பத்தினியுடன் எப்பொழுது உண்டானாரோ அப்பொழுது அவர் இரு கைகளைக் கூப்பி வணங்கி, ப்ரஹ்மதேவரை நோக்கி, "நீர் ஒருவரே இந்த ஸகல ஜகத்தையும் உண்டுபண்ணினவர். அதற்கு விருத்தியை

ஏற்படுத்தியவர். போஷிப்பவர். நீர் பிறரை அபேட்சியாத வரானாலும் உம்முடைய ப்ரஜை களாகிய நாங்கள் எதனைச் செய்தால் உமக்குச் சிசுரூஷை செய்ததாக ஆகும்? ஓ ஸ்தோத்திரம் செய்யக் கூடியவரே! எதனைச் செய்தால் இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் எங்கும் கீர்த்தி உண்டாகும்? எங்களால் செய்யக்கூடிய அந்தத் தர்மங்கள் இவை களென்று சொல்லவேண்டும். உமக்கு நமஸ்காரம் செய்கிறேன்" என்று கேட்டார். அப்பொழுது ப்ரஹ்ம தேவர் புத்திரனை நோக்கி, "குழந்தாய், உம்மிடத்தில் மிகவும் பிரிய மடைந்தேன். உங்களிருவர்களுக்கும் க்ஷேமம் உண்டாகட்டும். என்னால் உபதேசிக்கப்படும் காரியத்தைக் கபடமற்றவராய்ச் செய்யும். புத்திரர்கள் தங்களுடைய சக்திக்குத் தக்கபடி மாத்சர்யமில்லாத வர்களாக (ஸனகர் முதலியவர்களே செய்யவில்லையே. அப்படியிருக்க நாம் பிதாவின் கட்டளைப்படி நடக்கவேண்டுமா வென்று நினைக்காமல்) ப்ரீதியுடன் பிதாவின் கட்டளையின்படி நடந்தார்களானால் பிதாவைப் பூஜித்ததாகும். இதுதான் புத்திரர்கள் செய்ய வேண்டிய காரியம். ஆனதால் நீர் இவளிடத்தில் உமக்குச் சமமான குணசாலிகளான குழந்தைகளை உண்டு பண்ணிக்கொண்டு பூமியை தருமமமாகப் பரிபாலியும். மஹாவிஷ்ணுவை யாகத்தால் பூஜியும். ப்ரஜைகளைக் காப்பாற்றினால் எனக்கு மேலான சிசுரூஷை செய்ததாகும். மேலும் யக்ஞ ஸ்வரூபியாகிய பகவான் எவர்களிடம் சந்தோஷப் படவில்லையோ அவர்கள் செய்யும் காரியம் யாவும் ப்ரயோசன மற்றவை. அவர்கள் தமது ஆத்மாவினாலேய ஆதரிக்கப் படுகிறதில்லை. அந்தப் பகவானும் ப்ரஜாபாலனம் செய்யும் உம்மிடத்தில் சந்தோஷப்படுவார்" என்றார்.

14–19 அதனைக் கேட்ட ஸ்வாயம்புவ மனுவானவர் ப்ரஹ்மதேவரை நோக்கி, "ஓ பாபங்களைப் போக்குகிறவரே உம்முடைய ஆக்ஞையின்படி நடக்கிறேன்; எனக்கும் ப்ரஜைகளுக்கும் வாசஸ்தலம் இன்னதென்று சொல்ல வேண்டும். ஸகல ப்ராணி களுக்கும் இருப்பிடமாகிய பூமியானது ஜலத்தில் மூழ்கியிருக்கிறது. ஓ தேவ! இந்தப் பூமிதேவியை உயரக் கொண்டு வருவதற்காக முயற்சிக்க வேண்டும்" என்றார். அதனைக் கேட்டு ப்ரஹ்மதேவர் ஜலத்தில் மூழ்கியிருக்கும் பூமியை உயரக் கொண்டுவருவதைப் பற்றித் தமக்குள் யோசிக்கலானார். ப்ரளய கால ஜலத்தை எல்லாவற்றையும் குடித்தேன். பூமியில் ப்ரஜைகள் வஸிக்கும்படி செய்தேன். தேவர்கள், அஸுரர்கள், பித்ருக்கள், மனிதர்கள், பசுக்கள், பறவைகள், மலைப்பாம்புகள், மலைகள், யானைகள், இன்னும் பலவகையான ப்ராணிகளைச் ஸிருஷ்டித்து வரும்போது பூமி ஜலத்தில் மூழ்கிப் பாதாளம் சென்றது. ஸிருஷ்டிப்பதில் பகவானால் தூண்டப்பட்ட நாம் இந்தச் சமயத்தில் என்ன செய்யலாம், எப்படிப் பூமியை வெளியில் கொண்டுவருவேன்? ஆனால்லும் எந்தப் பகவானுடைய ஹிருதயத்திலிருந்து நான் உண்டானேனோ அந்தப் பகவானே இவ்விஷயத்தில் தகுந்த உபாயத்தைச் செய்ய வேண்டும்" என்று பகவானைத் தியானம் செய்தார்.

20–27 அந்தச் சமயத்தில் அந்தப் ப்ரஹ்மதேவர் உடைய மூக்குத் துவாரத்திலிருந்து ஒரு பன்றிக்குட்டி வெளிப்பட்டது. அது கட்டைவிரல் அளவுள்ளதாக இருந்தது. மேலும் அது அவர் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே ஆகாசத்திலிருந்தபடி யானை போலப்

பெரிய சரீரமுள்ளதாக விருத்தி அடைந்தது அது ஆச்சரியப்படக்கூடியதாக இருந்தது. அதனைக் கண்ட மரீசி முதலியவர்களும் ஸனகர் முதலியவர் களும், ஸ்வவாயம்புவ மனுவும் "இதென்ன ஆச்சரியம்! பன்றி உருவத்துடன் பெரிய ப்ராணியொன்று திவ்ய சரீரமுள்ளதாக இருக்கிறது. இது ப்ரஹ்மதேவருடைய மூக்கிலிருந்து வெளிப்பட்டது. கட்டைவிரல் அளவு உள்ளதான இதன் தலை ஒரு க்ஷணத்தில் மலை போன்றதாகி விட்டதே. ஒருகால் பகவானே இந்தச் சரீரத்துடன் அவதரித்திருக்கிறாரோ? மனத்திற்குக் கவலையாய் இருக்கிறதே" என்று யோசித்துக் கொண்டு இருந்தார்கள். அப்பொழுது மலைபோன்ற சரீரமுள்ளவரும், வராஹ ரூபம் தரித்தவருமான பகவான் கர்ஜித்தார். அந்தச் சப்தத்தால் திக்குகளில் எதிரொலி உண்டாயிற்று. அதனைக் கேட்டு ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் சந்தோஷமடைந்தார்கள். தபோலோகம், ஸத்யலோகம் இவைகளில் வஸிப்பவர் கள் நம்முடைய துக்கத்தைப் போக்கக்கூடிய மாயா வராஹத்தின் அந்தச் கர்க்கர சப்தத்தைக் கேட்டுப் பரிசுத்தங்களான மூன்று வேதங்களால் ஸ்தோத்திரம் செய்தார்கள்.

28–35 வேதங்களால் ஸ்தோத்திரம் செய்யப்படும் சரீரமுள்ள அந்தப் பகவான் அந்தப் ப்ராஹ்மணோத் தமர்களால் உச்சரிக்கப்பட்டவைகளும், தம்முடைய குணங்களை அனுமதித்தவைகளுமாகிய வேதங்களைக் கேட்டுக் கொண்டு ஜலத்திற்குள் ப்ரவேசித்தார். பூமியை வெளியில் கொண்டுவருகிற முயற்சியுடன் வராஹமாக (பன்றி) அவதரித்த பகவான் ஆகாசத்தில் வாலை உயரத் தூக்கிக் கொண்டும் கடினமான

சரீரமுள்ளவரும் அதிகக் கடினமாகிய மயிருள்ளவரும், குளம்புகளால் மேகங்களை அடித்தவரும், தம்முடைய சிங்கப் பற்களுடைய தேஜஸினாலும், நேத்திர காந்தியாலும், மற்ற ப்ரகாசத்தை அபேட்சியாமல் ப்ரகாசித்திருந்தார். பிடரி மயிர்களை உதறிக் கொண்டு மிருந்தார். மேலும் அவர் யக்ஞ ஸ்வரூபி. வராஹமாக அவதரித்தவர், பயங்கரமாகிய பார்வை உள்ளவரானாலும் ப்ராஹ்மணர்களைச் சந்தோஷமாகப் பார்த்தார். அப்பொழுது அவர் பூமி சென்ற வழியை வாக்கினாலேயே தெரிந்துகொண்டு ஜலத்திற்குள் சென்றார். வஜ்ஜிரத்தால் செய்யப்பட்ட மலைபோலக் கெட்டியான சரீரமுள்ள அந்த வராஹம் வேகமாகக் குதித்ததால் சமுத்திரமானது மிகவும் உபத்திரவப்பட்டு அலைகளாகிய நீண்ட கைகளை நீட்டிக் கொண்டு, "ஓ யக்ஞ வராஹ ரூபியான பகவன்! என்னைக் காப்பாற்றும்" என்று உரக்கக் கதறினது போலிருந்தது. அப்பொழுது மூன்று கணுக்களுள்ள (ப்ராதஸ்ஸவநம், மத்யந்தினஸவநம், ஸாயம்ஸவநமென்ற) யக்ஞ ரூபியான பகவான் கரையற்ற சமுத்திர ஜலத்தைத் தம்முடைய நீண்ட குளம்புகளால் பிளந்து கொண்டு பாதாளம் சென்று பூமியைக் கண்டார். ப்ரளய காலத்தில் இவர் ஜலத்தில் சயனம் செய்துகொண்டு பூமியை வயிற்றில் வைத்துக் காப்பாற்றினார். அவர் ஸகல ஜீவராசி களுக்கும் ஆதாரமாயிருப்பவர். அப்பொழுது அவர் தம்முடைய சிங்கப் பல்லால் பூமியைத் தூக்கிக் கொண்டு மிகவும் ப்ரகாசித்தார். அந்த ஜலத்தில் அசுரர்களுக்குள் முந்தியவனான இரண்யாக்ஷன் என்பவன் கதாயுதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அவருக்கெதிரில் ஓடிவந்தான். அவன் விசேஷ கோபமுள்ளவன். ஸகிக்க முடியாத பராக்கிரமுள்ளவன்.

யானையைச் சிங்கம் கொன்றார் போல அவர் பிரயாசம் இன்றி அந்த அசுரனைக் கொன்றார். மேலும் அவர் மலையின் தாழ்வரையில் விளையாடி, அதன் தாதுக்களால் சிவந்த கன்னங்களுள்ள யானைபோல ஹிரண்யனுடைய ரத்தத்தால் சிவந்த கன்னமுள்ளவரும், பச்சிலைபோல நீல வர்ணமுள்ளவராகவும் வெண்மை நிறமுள்ள பல்லின் நுனியில் பூமியை வைத்துக் கொண்டவராகவும் இருந்தார். அவரை ஈசுவர னென்று தெரிந்து கொண்டு மஹர்ஷிகள் ப்ரஹ்மதேவரை முன்னிட்டு வேத மந்திரங்களால் பின்வருமாறு துதித்தார்கள்.

36–48 ஒருவராலும் ஜயிக்கப்படாதவரே! யாகத்தை விருத்தி செய்பவரே! சத்துருவை ஜயித்தீர். வேதமாகிய உம்முடைய சரீரத்தை உதறிக் கொள்ளும். உமக்கு நமஸ்காரஞ் செய்கிறோம். உம்முடைய உரோம கூபங்களில் (மயிர்க் கால்களில்) சமுத்திரங்கள் வஸிக்கின்றன. நீர் பூமியைப் பாதாளத்திலிருந்து கொண்டுவருவதற்காக வராஹமாக அவதரித்தவர். அப்போர்ப்பட்ட உமக்கு நமஸ்காரம். ஓ தேவ! யக்ஞ ஸ்வரூபியாகிய உம்முடைய தோளில் காயத்ரி முதலிய சந்தஸ்ஸுகளும், மயிர்களில் தர்ப்பங்களும், நேத்திரங்களில் ஆஜ்யமும் (நெய்), கால்களில் சாதுர்ஹோத்ரமும் (ஹோதா முதலியவர்கள் செய்ய வேண்டிய காரியம்), முகத்தின் முன்பாகத்தில் இருக்கும் மூக்குகளில் ஸ்ரவமும், வயிற்றில் இடையும் (தக்ஷிண பாத்திரம்), காதுகளில் சமஸ்ஸும்; வாயில் ப்ராசித்திரமும், க்ரஸனமென்ற முகத்திற்குள்ளிருக்கும் பாகத்தில் க்ரஹங்களும் இருக்கின்றன. பக்ஷிப்பது அக்னிஹோத்ரமாகும். நீர் அடிக்கடி அவதாரத்தால்

ப்ரகாசிப்பதே தீக்ஷை (தீக்ஷணியேஷ்டி). உம்முடைய கழுத்தே உபஸ்தங்கள். உம்முடைய இரு சிங்கப் பற்களே பிராயணீய உதயநீய இஷ்டிகள். நாக்கானது ப்ரவர்க்கியமாகிறது. யக்ஞ ரூபியாகிய உம்முடைய தலையானது ஸப்யம், ஆஸத்யம் என்ற அக்கினிகளாகும். உம்முடைய ஐந்து ப்ராணன்களும் இஷ்ட காசயனங்களாகும். உம்முடைய ரேதஸ்ஸே சோமரசமாகும். பால்யம் முதலிய அவஸ்தையானது வனங்களாகும். உம்முடைய சரீரத்திலிருக்கும் மாம்சம் முதலிய தாதுக்கள் அக்கினிஷ்டோமம் முதலிய ஸமஸ்தைகளாகும். சரீரத்தின் சந்திகள் துவாதசாஹம் முதலிய சத்திரங்களாகின்றன. நீர் யக்ஞ ஸ்வரூபி (ஸோமம் இல்லாதவை யக்ஞங்கள்) க்ரதுஸ்வரூபி (ஸோமம் உள்ளவைகள் கிரதுக்களாம்) மேலும் அனுஷ்டானமே சந்திபந்தங்கள். ஸகல மந்திர ஸ்வரூபி, ஸகல தேவதா ஸ்வரூபி, ஸகல திரவிய ஸ்வரூபி, ஸகல யாக ஸ்வரூபி, ஸகல கிரியா ஸ்வரூபி, வைராக்கியத்துடன் கூடிய பக்தியால் சித்தம் ஸ்திரப்பட்டு அதனாலுண்டாகும் அபரோக்ஷ சாக்ஷாத்காரமாகிய ஞானத்தைக் கொடுப்பவர். ஸகல வித்தைகளையும் உபதேசிக்கும் குரு. அப்படிப்பட்ட பகவானாகிய உமக்கு நமஸ்காரம். ஓ பூமியைத் தரிக்கும் பகவன்! மலைகளுடன் கூடிய பூமியானவள் சிங்கப்பல்லின் நுனியைக் கொண்டு உம்மால் தூக்கப்பட்டவளாகப் ப்ரகாசிக்கிறாள். இந்த உம்முடைய உருவமானது சேற்றுடன் தாமரைக் கொடியைத் தந்தங்களில் தரித்து ஜலத்திலிருந்து வெளியில் வரும் சிறந்த யானையின் உருவம்போல் விளங்குகிறது. மேலும் சிங்கப்பல்லில் பூமியைத் தரித்துக் கொண்டிருக்கும் வேதரூபமாகிய உம்முடைய ஸ்வரூபமானது,

சிகரத்தில் மேகத்தைத் தரிக்கும் குலபர்வதம் போலிருக்கிறது. அரணியில் அக்னியிருப்பதுபோல எந்தப் பூமியினிடத்தில் உம்முடைய தேஜஸ்ஸை (தாரணம் முதலிய சக்தியை) வைத்திருக்கிறீரோ, எந்தப் பூமியானது உமக்குப் பத்தினியாக இருக்கிறாளோ, அந்தப் பூமிதேவியைத் தாவரங்கள் அடங்கிய ஜகத்திற்கு வாசஸ்தலமாகச் செய்யும். நீர் லோகத்திற்குப் பிதாவல்லவா? உமக்கும் இந்தப் பூமிக்கும் நமஸ்காரம் செய்கிறோம். ஓ ப்ரபுவே! பாதாளஞ்சென்று பூமியைக் கொண்டு வரலாமென்று உம்மைத் தவிர வேறு யாரால் நினைக்க முடியும்? ஆனாலும் ஸகல ஆச்சரியங்களுக்கும் இருப்பிடமாகிய நீர்

மிகவும் அற்புதமான இந்தக் காரியத்தைச் செய்தது ஒரு ஆச்சரியமல்ல. மிகவும் அற்புதமான இந்த ஜகத்தானது உம்மால் ஸிருஷ்டிக்கப்பட்டதல்லவா ஓ ஈச! தேவ மயமாகிய உம்முடைய சரீரத்தை உதறிக் கொள்ளும் போது பிடரி மயிர்களால் இறைக்கப்பட்ட மங்களரமான ஜலத்துளிகளால் தபோலோகம், சத்யலோகம் இவைகளில் வஸிக்கும் நாங்கள் பரிசுத்தர்களாகச் செய்யப்பட்டுக் காப்பாற்றப்பட்டோம். ஓ பகவான்! கரையற்ற கர்மங்களுடைய உம்முடைய சரிதங்கள் எல்லாவற்றையும் எவன் அறிய விரும்புகிறானோ, அவனுடைய எண்ணம் நிறைவேறுகிறது இல்லை. (பகவானுடைய சரிதங்கள் அறிய முடியாதவையென்பது கருத்து) மேலும் உம்முடைய யோக மாயையின் குண சம்பந்தத்தால் இந்த ஜகத்யாவும் மோகித்திருக்கிறது, அப்படிப்பட்ட மஹிமை பொருந்திய ஓ ஈச; எல்லா ஜகத்திற்கும் க்ஷேமத்தை உண்டு பண்ணும்.

48–52 ப்ரஹ்மிஷ்டர்களான அந்த மகர்ஷிகளால் இம்மாதிரி துதிக்கப்பட்ட பகவான் தம்முடைய குளம்புகளால் கலக்கப்பட்ட ஜலத்தில் (முன்போல ஜலத்தில் மூழ்காமலிருக்கும் வண்ணம் ஜலத்திற்குத் தரிக்கும் சக்தியைக் கொடுத்து) பூமியை ஸ்தாபித்துச் சென்றார். கானம் பண்ணத் தகுந்த மாயா விலாசங்களுள்ள ஸ்ரீ மஹாவிஷ்ணுவினுடைய இந்தக் கதையானது மிகவும் அழகானது. விரும்பத்தக்கது. இதைப் பக்தியுடன் கேட்பவர்கள், கேட்கச் செய்பவர்கள் ஆகிய இவர்களுடைய ஹிருதயத்தில் சீக்கிரமாக ஜனார்த்தனர் ப்ரசன்னராக வஸிக்கிறார். ஸகல மங்களத்தையும் கொடுக்கக்கூடிய ப்ரபுவாகிய அவர் எவனிடத்தில் சந்தோஷமடைகிறாரோ. அவனுக்கு எதுதான் கிடைக்காது? மற்ற அற்ப பலன்களால் என்ன பிரயோசனம்? பரமபுருஷன் தம்மையே பூஜிப்பவர்களுடைய ஹிருதயத்தில் வஸிப்பதுமல்லாமல் மேலான தம்முடைய பதத்தையும் அவர்களுக்குக் கொடுக்கிறார். ஆதலால் உலகத்தில் முன்காலத்தில் நடந்த பகவானுடைய சரிதங்களாகிய அமிருதத்தைக் காதுகளாகிய அஞ்சலி (சேர்ந்த கைகள்) யால் பானஞ் செய்த எந்தப் புருஷன்தான் போதுமென்று திருப்தியடைவான்? அந்த பகவத் கதை சம்சார பந்தத்தைப் போக்கக் கூடியது. விவேகமற்ற பசுக்கள் தவிர மற்றவர்களுக்கு அந்த பகவத் கதையில் ஆசையொழியாது.

அத்தியாயம்–14

திதிதேவி கர்ப்பத்தை அடைந்தது

1–4. மைத்ரேயர் முகமாக வராஹாவதாரஞ் செய்த ஸ்ரீ ஹரியினுடையய கதையைக் கேட்ட விதுரர் திருப்தியடையாமல் கை கூப்பிக்கொண்டு பகவத் கதையைக் கேட்பதாகிய விரதமுள்ளவராய் மைத்ரேயரை நோக்கி, "ஓ முனிகளுக்குள் சிறந்தவரே! யக்ஞ ஸ்வரூபியான அந்த ஹரியினால் தைத்யர் களுக்குள் முந்தியவனாகிய, ஹிரண்யாக்ஷன் கொல்லப் பட்டான்" என்று நீர் சொல்லக்கேட்டேன். பகவான் பூமியைத் தம்முடைய ஸ்ருங்கத்தின் நுனியால் ப்ரயாசமின்றிக் கொண்டு வந்தாரல்லவா? அப்பொழுது அவருக்கும் அந்த அசுரனுக்கும் யுத்தம் நேர்ந்த காரணமென்ன? ஓ ரிஷியே! அதனைச் சுருக்கமாகக் கேட்டும் என்னுடைய மனம் திருப்தியடையவில்லை. ஆதலால் அவனுடைய பிறப்பு முதலியவைகளைச் ச்ரத்தையுடன் கேட்க விரும்புகிறேன். அவைகளை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும் என்று மறுபடியும் கேட்டார்.

5–15. "ஓ வீரராகிய விதுரரே! நன்றாகக் கேட்டீர். அந்தப் பகவானுடைய அவதார கதையானது மனிதர்களுக்கு மிருத்யு பாசத்தைப் போக்கக்கூடியது, உத்தானபாதருடைய புத்திரனாகிய துருவனென்ற குழந்தையானவன் நாதரிடமிருந்து இந்த அவதாரக் கதையைக் கேட்டு ம்ருத்யுவின் தலையில் காலை வைத்து விஷ்ணுபதத்தை அடைந்தான். (துருவன் பார்ஷதர்களால் கொண்டுவரட்டட்ட விமானத்தில்

ஏறும்போது சமீபத்தில் வந்த ம்ருத்யுவின் தலையில் காலை வைத்து விமானத்தில் ஏறினான்), முன்னொரு காலத்தில் தேவர்களுக்குப் ப்ரஹ்மதேவரால் சொல்லப்பட்ட ஒரு சிறு இதிகாசகத்தை நான் கேட்டிருக்கிறேன்" என்று மைத்ரேயர் சொல்ல ஆரம்பித்தார். "ஓ விதுரரே! தக்ஷருடைய பெண்ணாகிய திதிதேவியானவள் மன்மதனால் பீடிக்கப்பட்டு, சந்தியா காலத்தில் தன்னுடைய பர்த்தாவாகிய மாரீசரை இச்சித்தாள். எப்படியெனில், அவர் சூரியன் அஸ்தமனத்தை அடையும்போது அக்கினியை நாவாகவுடையவரும், யக்ஞங்களுக்கு, அதிபதியுமான பரமபுருஷனை ஹவிஸ்ஸினால் பூஜித்து அக்னி ஹோத்திரசாலையில் உட்கார்ந்து த்யானம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது திதியானவள் அவர் சமீபம் சென்று, "ஓ வித்வான் ஆகிய மஹரிஷியே! மன்மதன் வில்லை கையில் எடுத்து, ரஸ்தாளி வாழையை யானை உபத்திரவித்தாற் போல உம்மை உத்தேசித்து என்னை பீடிக்கிறான். நான் தீனையாகவிருக்கிறேன், ஸபத்தினிகளுடைய (சக்களத்திகள்) ஸமிருத்திகளைப் பார்த்து எரிக்கப்படும் என்னிடத்தில் அனுக்கிரஹஞ் செய்யவேண்டும். எந்த ஸ்திரீகள் உம்மைப் போன்ற பர்த்தாவை அடைந்தார்களோ, எவர்கள் பர்த்தாவின் இடத்தில் அதிக பஹுமானத்தை வைத்தவர்களோ, அவர்களுடைய கீர்த்தியானது உலகங்களிலும் பரவும். பர்த்தாவே, பார்யையிடத்தில் நல்ல புத்திரனாகப் பிறக்கிறானென்று சாஸ்திரம் சொல்லுகிறது. முன்னொரு காலத்தில் எங்களுடைய பிதாவும், பெண்களிடத்தில் பிரியமுள்ளவருமான தக்ஷர் பெண்களை நோக்கி. "ஓ குழந்தைகளே!

யாரை நீங்கள் விவாகஞ் செய்து கொள்ளப் போகிறீர்கள்" என்று தனித்தனியே கேட்டுப் பெண்களுடைய அபிப்பிராயத்தை தெரிந்துகொண்டு உம்முடைய ஸ்வபாவத்தை அனுசரித்தவர்களான பதின்மூன்று பெண்களையும் உமக்குக் கொடுத்தார். (ஆனதால் எங்களுக்குள் பேதபுத்தி வைக்கக்கூடாதென்பது,) ஓ தாமரை மலர்போன்ற கண்களுள்ளவரே! உபத்திரவப்பட்டவர்கள் பெரியோர்களைச் சரணம் அடைந்தால் வீண்போகாதல்லவா? ஆதலால் எனக்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

16–29. இப்படி தீனையாயும், வெகுவாகப் பேசுகிறவளும், மன்மதனால் பீடிக்கப்பட்டவளுமான அந்தத் திதியை நோக்கி மாரீசரானவர், "ஓ பயந்தவளே! உன்னுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்கிறேன். தருமம், அர்த்தம், காமம் ஆகிய இந்தத் திரிவர்க்கமும் ஸ்திரீயினால் சித்திப்பதால், அவளுக்குப் பிரியமானதை எவன்தான் செய்யமாட்டான்? நல்ல களத்திரமுள்ள புருஷன் மற்ற ஆசிரமிகளுக்கும் உபகாரஞ் செய்து (அன்னம் முதலியவைகளைக் கொடுப்பதால்) தன்னுடைய ஆசிரம தர்மத்தை அனுஷ்டிப்பதால், கப்பலால் சமுத்திரத்தை தாண்டுவது போலத் துக்க சமுத்திரத்தைத் தாண்டுகிறான்' க்ஷேமத்தை விரும்பிய புருஷனுக்கு எவளைப் பாதி சரீரமென்று சொல்லுகிறார்களோ, புருஷன் எவளிடத்தில் ஸகல பாரத்தையும் ஒப்பித்துக் கவலையற்றவனாகச் சஞ்சரிக்கிறானோ. தூக்கத்திற்கு அதிபதி (அரசன்) திருடர்களை ஜயிப்பது போல், எந்த ஸ்திரீயின் பலத்தால் க்ருஹஸ்தன் மற்ற ஆசிரமிகளால் ஜயிக்க

முடியாதவையான இந்திரியங்களைச் சிரமமின்றி அடக்குகிறானோ. (ஸ்திரீயுள்ளவனுடைய இந்திரியங்கள் பெரும்பாலும் பர ஸ்திரீகளிடம் செல்லுகிறது இல்லை யென்று கருத்து) ஓ வீட்டிற்கு அதிபதியாய் இருப்பவளே! அப்படிப்பட்ட பலவகையிலும் உபகாரஞ் செய்கிற உனக்கு என் ஆயுள் முழுவதும் பதிலுபகாரஞ் செய்தாலும் ஜன்மாந்திரங்களில் செய்தாலும் அது பதிலாகாது. மேலும் குணத்தைக் க்ரஹிக்கும் எவர்கள் பதில் செய்வோம் என்று நினைக்கிறார்களோ, அவர்கள் பதில் செய்ய முடியாதவர்களே யாவார்கள். ஆனாலும் உனக்குப் புத்திரன் பிறக்கும் உபாயத்தைச் செய்கிறேன். என்னை நிந்திக்காமல் ஒரு முகூர்த்தக் காலம் பொறுத்துக்கொள்: ஏனென்றால் இந்தக் காலமானது மிகவும் பயங்கரமானது. பயங்கரங்கள் ஆகிய ப்ராணிகள் சஞ்சரிக்கக்கூடியது. இந்தச் சமயத்தில் ருத்ரருடைய பூதகணங்கள் சஞ்சரிப்பார்கள். ஓ பதி விரதையே, இந்த சந்தியா காலத்தில் பரமசிவன் வ்ருஷபத்தின் மீதேறித் தம்முடைய பார்ஷத கணங்களுடன் எங்கும் சஞ்சரிக்கிறார். அந்தப் பரமசிவனுடைய ஜடைகளில், சுடலையில் வீசும் காற்றினால் கிளம்பிய தூளிகள் படிந்திருக்கின்றன, நான்கு புறத்திலும் பறந்து மிருக்கின்றன. காந்தி யுள்ளவைகளுமாகவுமிருக்கின்றன, மேலும் அவர் பொன்னிறமான தம்முடைய சரீரத்தில் விபூதியைத் தரித்துக் கொண்டிருக்கிறவர், அப்படிப்பட்ட உன்னுடைய தேவரன் (பர்த்தாவின் சகோதரன்) மூன்று கண்களால் பார்த்துக் கொண்டிருக்கிறார். லோகத்தில் அவருக்கு பந்துவாவது, மற்றவனாவது (உதரசீனன்), மித்திரனாவது, சத்ருவாவது இல்லை, (எல்லாரிடத்திலும் சமமாயிருப்பவரென்று கருத்து),

அவருடைய சரணங்களால், நிர்மால்யம் போல் தள்ளப்பட்டதும், தோஷமுள்ளதென்று நிச்சயிக்கப் பெற்றதுமான மாயையை (அவருடைய விபூதியை) சம்சாரிகளான நாங்கள் மிகுந்த ப்ரசாதமென்று விரும்புகிறோம். அவித்யையைத் தாண்ட விரும்பிய வித்வான்கள் அவருடைய தோஷமற்ற சரிதத்தைக் கானஞ் செய்கிறார்கள். அவருக்குச் சமமானவனும், மேலானவனும் உலகத்தில் ஒருவருமில்லை. அப்படிப் பட்ட சாதுக்களுக்கதிபதியான அவர் பிசாசத்தின் நடை போன்ற ஆசாரத்தை அனுஷ்டிக்கிறார். பின்னும் அவர் ஆத்ம ஸ்வரூபத்திலேயே ரமிப்பவர். அவருடைய அபிப்ராயத்தை (உலகத்திற்குப் புத்தியைச் சொல்கிறார் என்பதை) அறியாதவர்களும், நாய்க்கு ஆகாரமாக இருக்கும் சரீரத்தையே ஆத்மா என்று நினைத்து, அதை நல்ல வஸ்திரங்களாலும், மாலை களாலும், ஆபரணங்களாலும், சந்தனம் பூசுவது முதலியவைகளாலும் அலங்கரிப்பவர்களுமான அக்ஞர்கள் அவருடைய சரிதத்தைப் பரிகசிப்பார்கள். அவரால் ப்ரஹ்மா முதலியவர்கள் ஸ்ருஷ்டி முதலிய வேலைகளில் ஏற்படுத்தப்பட்டு, தங்கள் தங்கள் அதிகாரத்தைக் காப்பாற்றுகிறார்கள். இந்த ஜகத்திற்கு அவரே காரணம், மாயையானது அவருக்குச் ஸ்வாதீனப்பட்டிருக்கிறது. அப்போர்ப்பட்ட திவ்ய விபூதிகள் பொருந்திய பரமேசுவரன், பிசாசத்தின் செய்கையை அனுஷ்டிப்பது என்ன காரணத்தால் என்று ஊகிக்க முடியாததாக இருக்கிறது" என்றார்.

30–36. அதனைக்கேட்ட திதியானவள் மன்மதனால் கலங்கின இந்திரியங்களுள்ளவாய்த் தாசிபோல் வெட்கத்தை விட்டு அவருடைய

வஸ்திரத்தைப் பிடித்துக் கொண்டாள். அந்த மாரீசர் செய்யக்கூடாத அந்தக் காரியத்தில் தம்முடைய பார்யை நிர்பந்தம் செய்வதை அறிந்து அதிர்ஷ்ட ஸ்வரூபியான பரமேசுவரனுக்கு நமஸ்காரம் செய்து ரகஸ்யத்தில் அவளுடன் சேர்ந்தார். பிறகு ஸ்நானஞ் செய்து ப்ராணாயாமஞ் செய்து மௌனமாகத் தோஷ மற்றதும், சாஸ்வதமானதும், தேஜோ ரூபமாயுமுள்ள பரமாத்மாவைத் தியானஞ் செய்தார்.

ஓ பரத வம்சத்தில் பிறந்தவரே! திதி தேவியானவள் அந்தக் கர்மதோஷத்தால் வெட்கமடைந்து அந்த மஹர்ஷியிடம் வந்து தலை குனிந்தவளாக, "ஓ பிராமணோத்தம! ஸகல பூதங்களுக்கும் அதிபதியுமான பரமசிவனுக்கு நான் அபராதஞ் செய்தேனெல்லவா? அதனால் அவர் கோபங்கொண்டு என்னுடைய வயிற்றில் உண்டாகும் கர்ப்பத்தை கெடுத்து விடாமல் இருக்கும்படி அனுக்கிரகிக்க வேண்டும். மஹாதேவரும் உக்கிரரும், எல்லாவற்றையும் உண்டுபண்ணுகிறவரும், மங்களத்தைச் செய்பவரும், பக்தர்களைக் காப்பாற்று பவரும் சத்துருக்களைச் சிக்ஷிப்பவரும். அஸத்துக்கள் இடத்தில் கோபமுள்ளவரும் ஆகிய ருத்ரருக்கு நமஸ்காரம். வேடர்களாலும் (தயையில்லாதவர்கள்) தயவுசெய்யக் கூடிய ஸ்திரீகளாகிய நம்மிடத்தில் அனுக்கிரக ஸ்வபாவமுள்ளவரும், ஸதீதேவிக்குப் பர்த்தாவுமான அந்த பகவான் தயவு செய்யட்டும் (ஸ்திரீகளுடைய ஸ்வபாவத்தை அறிந்தவர்) என்று கேட்டுக்கொண்டாள்.

37–51. இப்படித் தன்னுடைய கர்ப்பத்திற்கு க்ஷேமத்தை விரும்புகிறவளும், நடுங்குகிறவளும்,

மூவுலகத்திற்கும் தகுந்தவளும். தமது பார்யையுமான திதிதேவியை அந்த மாரீசர் நோக்கி, சந்தியா கால நியமங்களை முடித்துக் கொண்டு, "ஓ கோப ஸ்வபாவம் உள்ளவளே! உன்னுடைய சித்தம் அசுத்தமாக விருந்தாலும், முஹூர்த்த தோஷத்தாலும் (ஸந்தியா காலமாயிருந்தபடியால்), என்னுடைய கட்டளையை மீறினதாலும், தேவர்களை அவமதித்ததாலும் உனக்குத் துஷ்டர்களான இரண்டு பிள்ளைகள் பிறப்பார்கள். அவர்கள் மூன்று உலகங்களையும் அந்தந்த லோக பாலகர்களையும் அடிக்கடி கதறச் செய்வார்கள். யாதொரு அபராதமும் செய்யாத ப்ராணிகள் அவர் களால் அடிக்கப்பட்டு மிகவும் தைன்யத்தை அடை வார்கள், உலகத்திலுள்ள ஸ்திரீகள் நிக்கிரகிக்கப் படுவார்கள். பெரியோர்களுக்கு அவர்கள் கோபத்தை யுண்டுபண்ணுவார்கள். அப்பொழுது லோகத்திற்கு அதிபதியும், அவைகளைப் பரிபாலிப்பவருமாகிய பகவான் கோபங்கொண்டு பூமியில் அவதரித்து வஜ்ராயுதத்தைத் தகித்த இந்திரன் பர்வதங்களை யுடைப்பதுபோல அவ்விருவர்களையும் கொல்லப் போகிறார்', என்று சொன்னார். அதைக் கேட்ட திதியானவள் பர்த்தாவை நோக்கி, "ஓ பிரபுவே! என் னுடைய புத்திரர்களைச் சக்ரபாணியாகிய பகவான் கொல்லட்டும், ப்ராஹ்மணர்களிடமிருந்து அவர் களுக்கு வதம் நேரிடவேண்டாம்" ப்ராஹ்மணர்களி டையே பயத்தை உண்டுபண்ணுகிறவர்களும் எந்தெந்த ஜன்மத்தை அடைந்தாலும், அவ்விடத்திலிருக்கும் நரகிகளும் (பாபிகளும்) அவர்களிடத்தில் தயவு செய்யமாட்டார்கள் என்றாள், அதைக் கேட்ட மாரீசர் திதியை நோக்கி, செய்த குற்றத்தைப் பற்றி உனக்குப் பச்சாதாபம் நேர்ந்தபடியாலும் உடனே

யுக்தம், அயுக்தம் இவைகளை விசாரித்ததாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவினிடத்திலும், பரமசிவனிடத்திலும் கௌரவ புத்தி உண்டானதாலும், என்னிடத்தில் பிரியமுண்டானதாலும் உன்னுடைய பிள்ளையாகிய ஹிரண்யகசிபுவின் புத்திரர்களுக்குள் ஒருவன் பெரியோர்களால் ஒப்புக்கொள்ளக் கூடியவனாக இருப்பான். பகவானுடைய குணங்களுடன் சுத்த மாகிய அவனுடைய கீர்த்தியையும் சேர்ந்து ஜனங்கள் கானம் செய்வார்கள்.

தாழ்ந்த மாற்றுள்ள தங்கத்தை அக்கினியில் புடம்போடுவது முதலிய உபாயங்களால் ஸுத்த ஸ்வர்ணமாகச் செய்வது போலப் பெரியோர்கள் அந்தக் குழந்தையின் ஸ்வபாவத்தை அனுசரிப்பதற்காக (தாங்களும் அவனைப்போல ஆகிறதற்காக) ஓரிடத்தி லும் துவேஷம் செய்யாமலிருப்பது முதலிய உபாயங் களால் தங்களுடைய ஆத்மாவைச் சுத்தப்படுத்திக் கொள்வார்கள்.எவருடைய ப்ரசாதத்தால் இந்த ஜகத் ப்ரகாசிக்கிறதோ எவருடைய ஸ்வரூபமாக இருக்கிறதோ அப்பேர்ப்பட்ட ஆத்மசாட்சியாக பகவான் அந்தக் குழந்தையினுடைய உண்மையான ஞானத்தால் சந்தோஷத்தை அடைவார். மேலும் அவன் பகவத் பக்தர்களுக்குள் சிறந்தவன்; அளவற்ற ஞானமுள்ளவன்; மிகுந்த ப்ரபாவமுள்ளவன்; பெரியோர்களுக்கும் பெரியவன்; மேலும் அவன் விசேஷ பக்தியால் சுத்தமான தன்னுடைய மனத்தில் ஸ்ரீமந் நாராயணனைத் தியானித்துக் கொண்டு, தேகம் முதலியவைகளின் அபிமானத்தை விட்டு விடுவான்.

பின்னும் அந்தப் புத்திரன் நல்ல ஸ்வபாவ

முள்ளவன். நல்ல குணங்களுக்கு உற்பத்தி ஸ்தானம்; பிறருடைய சம்பத்தைப் பார்த்துச் சந்தோஷப்படு கிறவன்; பிறருடைய துக்கத்தால் தானும் துக்கிப்பவன்; ஸத்ருவற்றவன்; வெயிலால், ஜகத்திற்கு உண்டாகும் தாபத்தைச் சந்திரன் போக்கடிப்பது போல லோகத்தின் துக்கத்தைப் போக்கடிப்பான். மேலும் உன்னுடைய பௌத்திரனாகிய அவன், தாமரை, மலர்போன்ற கண்களுள்ளவரும், பக்தர்களுடைய இஷ்டத்திற்குத் தக்கபடி உருவத்தைத் தரிப்பவரும், லக்ஷ்மிதேவியாகிய ஸ்திரீயை அலங்காரமாக உடையவரும், ப்ரகாசிக்கும் குண்டலங்களால் அழகான முகத்தை யுடைய வருமாகிய பகவானை உள்ளிலும், வெளியிலும், நேரிலும் தரிசிப்பான், என்று அனுக்கிரகித்தார். அதனைக் கேட்டு திதியானவள் தன்னுடைய புத்திரர் களுக்குப் பகவானால் வதம் நேரிடப்போகிறதாகத் தெரிந்து கொண்டு விசேஷ உற்சாகத்தை யடைந்தது மன்றி, பௌத்திரன் (பிள்ளையின் பிள்ளை) பகவத் பக்தனாக ஆகப்போகிறான் என்பதைத் தெரிந்து கொண்டதனால் மிகவும் சந்தோஷத்தையும் அடைந்தாள்.

அத்தியாயம்–15

ஜய விஜயர்களுடைய சாபம்

1–10 திதியானவள் சத்துருக்களுடைய தேஜஸ்ஸைப் போக்கடிக்கக்கூடிய அந்த காச்யபர் வீரியத்தை ஆயிர வருஷங்கள் (தேவர்களுக்கு இதனால் உபத்திரவம் நேரிடுமோவென்று சந்தேகப்பட்டுக் கொண்டு) தரித்திருந்தாள். அந்தக் கர்ப்பத்தினுடைய தேஜஸினால் சூரியன் முதலியவைகள் காந்தியற்றவை களாயின. லோகபாலர்களுக்கும் தேஜஸ் குறைந்தது; திக்குகளை இருள் சூழ்ந்து கொண்டது. அப்பொழுது தேவர்கள் ப்ரஹ்மதேவரிடம் சென்று, ஓ ப்ரபுவே, எதனால் நாங்கள் மிகவும் பயப்படுகிறோமோ, அந்த இருள் உண்டான காரணம் உமக்குத் தெரியுமா? உம்முடைய ஞானமானது காலத்தாலும் குறைவுபடு கிறதில்லை;; ஆதலால் உமக்குத் தெரியாத தொன்றும் இல்லை; ஓ தேவர்களுக்கும் தேவரே! ஜகத்திற்கு அதிபதியே! லோகபாலர்களுக்கும் அதிபதியே; எல்லாருடைய அபிப்ராயத்தையும் அறிந்தவரே! விஞானமாகிய பலமுள்ளவரும், மாயையால் ப்ரஹ்ம சரீரத்தை அடைந்தவரும், ரஜோ குணத்தை அங்கீகரித்தவரும் ப்ரபஞ்சத்திற்குக் காரணரும், ப்ரமாணங்களால் அறிய முடியாதவருமாகிய உமக்கு நமஸ்காரம்.

மேலும் நீர் ஜீவர்களைப் பரிபாலிப்பவர்; ஸகல லோகங்களும் உம்மிடத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நீர் எல்லாவற்றிற்கும் மேலானவர். காரிய காரண ஸ்வரூபியாயிருப்பவர்; அப்படிப்பட்ட உம்மை யார்

பலனை யுத்தேசியாமல் பூஜிக்கிறார்களோ அவர்கள் இந்திரியங்கள்;, மனம், ஸ்வாசம், ஆகிய இவைகளை ஜயித்து பக்குவமான யோகமுள்ளவர்களாக உம்முடைய ப்ரசாதத்தை அடைகிறார்கள்.

அவர்களுக்கு ஓரிடத்திலும் அவமானம் நேரிடுகிறது இல்லை. பசுக்கள் கயிறுகளால் கட்டப்படுவது போல் ஸகல ப்ரஜைகளும், உம்முடைய வாக்காகிய வேதங்களால் கட்டப்பட்டு, உம்மைப் பூஜிக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் நியந்தாவாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறோம். திதியினால் தரிக்கப்பட்டதும், காசியபர் உடைய வீரியத்தாலுண்டானதுமான கர்ப்பமானது அக்கினி கட்டையில் விருத்தியடைவது போல் வளர்கிறது. அதனால் திக்குகள் இருளால் மூடப்பட்டு இருக்கின்றன (நல்ல காரியங்கள் நடக்கவில்லை! ராத்திரி பகல் என்ற பிரிவு இல்லாததால்;) ஆதலால் நீர் உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்யும்; கருணை நிறைந்த பார்வையால் ஆபத்தை யடைந்த எங்களைப் பார்க்க வேண்டும் என்றார்கள்.

11–30 சிறந்த கைகளுள்ள ஓ விதுரரே! பகவான் ஆகிய ப்ரஹ்மதேவர் சிரித்து, (திதியின் கெட்ட செய்கையை நினைத்து) அழகான வார்த்தையால் தேவர்களைச் சந்தோஷிக்கச் செய்து கொண்டு பதில் சொல்ல ஆரம்பித்தார். எப்படியெனில், "ஓ தேவர்களே! என்னுடைய மானச புத்திரர்களும் உங்களுக்கு முந்தியவர்களுமான சனகர் முதலியவர்கள். விஷயங்களில் ஆசையில்லாதவர்களாய் ஆகாசத்தின் வழியாக லோகங்களில் சஞ்சரித்தார்கள். ஒருகால் அவர்கள் நிர்மல ஸ்வபாவமுள்ள பகவானாகிய மஹாவிஷ்ணுவின்

லோகமாகிய வைகுண்ட லோகம் சென்றார்கள். அந்த லோகம் எல்லோராலும் நமஸ்கரிக்கப்பட்டது! அவ்விடத்தில் வஸிப்பவர்கள் எல்லோரும் ஸ்ரீமந் நாராயணனுடைய சரீரம் போன்ற தேகமுள்ளவர்கள்! அவர்கள் ஒரு பயனையும் உத்தேசியாமலேயே பகவானை ஆராதிப்பவர்கள்; மேலும் அவ்விடத்தில் எல்லாவற்றிற்கும் முந்தியவரும், வேதங்களாலேயே அறியக் கூடியவரும், தர்ம ஸ்வரூபியுமான பகவான் சத்ய மூர்த்தியாகத் தம்முடைய பக்தர்களான நமக்கு க்ஷேமத்தைச் செய்து கொண்டு வஸிக்கிறார்.

அந்த லோகத்தில் கைவல்யமே சரீரத்துடன் வஸிக்கிறதென்று நினைக்கக் கூடியதும், நைச்ரேயஸம் என்ற பெயருள்ளதுமான ஒரு வனமிருக்கிறது; அதிலுள்ள மரங்கள் இஷ்டமான வஸ்துக்களைக் கொடுக்கக்கூடியவை; எல்லா ருதுக்களிலும் ஏற்படக் கூடிய அழகுள்ளது; அவ்விடத்தில் தேவர்கள் தங்களுடைய ஸ்திரீகளுடன் பகவானுடைய திவ்ய சரிதங்களைக் கானஞ் செய்கிறார்கள். அவைகள் ஜனங்களுடைய பாபத்தைப் போக்கக் கூடியவை; மேலும் அவர்கள் ஜலத்தின் மத்தியில் மலர்ந்திருக்கும் மாதவீ புஷ்பங்களுடைய வாசனையுள்ள காற்றையுங் கூட கவனியாமலிருக்கிறார்கள். (போகத்திற்கு சாதனங்களிருந்தாலும், அவைகளில் ஆசைப்படாமல் பகவத் குணங்களைக் கானம் செய்கிறார்கள்.)

பின்னும் அவ்விடத்திலிருக்கும் சிறந்த வண்டானது உரக்கக் கத்தும்போது, அதனைக் கேட்ட பாராவதங்கள் (புறாக்கள்), குயில்கள், சாரஸங்கள், சக்கரவாகங்கள், நச்சுக்குருவிகள், ஹம்சங்கள்,

கிளிகள், தித்திரிகள் (நெருப்புக்கோழிகள்), மயில்கள் ஆகிய பறவைகள் தங்களுடைய கோலாஹல சப்தத்தை நிறுத்தி விட்டு, 'இந்த வண்டானது பகவத் குணங்களைக் கானம் செய்கிறதோ? என்று ஒரு க்ஷண காலம் மௌனங்களாக இருக்கின்றன. மேலும், துளஸிமாலையுள்ள பகவான் துளஸியின் வாசனையில் பிரீதியுள்ளவராக இருப்பதைப் பார்த்து, மந்தாரம், குந்தம், மருதாணி, நீலோத்பலம், சம்பகம், அர்ண மென்ற புஷ்பம், புன்னை, நாகை மகிழம், தாமரசம், பாரிஜாதம் ஆகிய புஷ்பங்கள் துளஸியினால் செய்யப்பட்ட துபசைப் பற்றிப் புகழ்கின்றன. (அவ்விடத்தில் இருப்பவர்கள் மாத்சரியம் இல்லாத வர்களென்பது கருத்து.) மேலும், அவ்விடத்தில் ஸ்ரீ பகவானுடைய பாதாரவிந்தத்தில் நமஸ்காரஞ் செய்த மாத்திரத்தால் கிடைத்தவைகளும் (கர்மத்தால் கிடைத்தவர்களில்லையென்பது கருத்து).

வைடூர்யம், மரகதம், ஸ்வர்ணம் ஆதிய இவைகளால் செய்யப்பட்டவைகளுமான பக்தர்கள் உடைய விமானங்கள் வெகுவாக இருக்கின்றன. அந்த விமானத்திலிருப்பவர்களும் பகவானிடத்திலேயே மனமுள்ளவர்களுமான பக்தர்களுக்கு அவ்விடத்தில் இருக்கும் அழகான இடுப்பு, சிரிப்பு முதலியவைகளால் ப்ரகாசிக்கும் முகமுள்ள ஸ்திரீகளால் காமத்தை உண்டுபண்ண முடியவில்லை. பின்னும் அவ்விடத்தில் பகவானுடைய க்ருஹமானது தங்க வேலைகளால் அழகான ஸ்படிகச் சுவருள்ளதாக இருக்கிறது, அதில் லக்ஷ்மீ தேவியானவள்; தன்னுடைய ஸ்வரூபத்துடன், பாதங்களில் அணிந்த பாதசரங்களால் இனிமையான சப்தமுள்ளவளாகி, தோஷமற்றவளாய், (சஞ்சலையென்ற

தோஷமற்றவளாக) தன்னுடைய கையிலிருக்கும் தாமரைப் புஷ்பத்தால் அவ்விடத்திலுள்ள தங்கத் தூள்களைப் பெருக்குகிறவள் போலக் காணப்படுகிறாள். அவளுடைய அனுக்கிரகத்திற்காகவே ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் முயலுகிறார்கள்.

மேலும் ஓ தேவர்களே! அந்த லக்ஷ்மீதேவியானவள் தன்னுடைய உத்யானத்தில் பவழக்கரையுள்ளவைகளும் நிர்மலமாகிய ஜலமுள்ளவைகளுமான ஓடைகளில் தன்னுடைய தோழிகளுடன் துளஸியினால் பகவானைப் பூஜிக்கிறாள். அப்பொழுது ஜலத்தில் ப்ரதிபிம்பித்தும், அழகான தலைமயிருள்ளதும், மேலான மூக்குள்ளதுமான தன்னுடைய முகத்தைப் பார்த்து, பகவானால் சும்பனஞ் செய்யப்பட்டதென்று நினைத்தாள். (லக்ஷ்மியின் அழகும் பகவத்ததீனம்) எந்தக் கதைகளைக் கேட்ட மனிதர்களுக்குப் புண்யமும், அதிருஷ்டமும் குறைகின்றதோ, நரகத்தை அடைகிறார்களோ, அப்போர்ப்பட்டவைகளும், விவேகத்தைப் போக்கக் கூடியவைகளும். அர்த்தம், காமம் ஆகிய இவைகளைப் பற்றியவைகளுமான கெட்ட கதைகளைக் கேட்பவர்களும், பாபத்தைப் போக்கடிப்பவராகிய பகவானுடைய ஸ்ருஷ்டி முதலியவைகளைச் சொல்வதில் பிரியமற்றவர்களுமான ப்ராணிகள் அந்த வைகுண்டம் செல்கிறதில்லை.

தேவர்களான நம்மாலும் விரும்பப்பட்டதும், தர்மம், ஞானம் ஆகிய இவைகளுக்கு சாதனமுமான மனுஷ்ய ஜன்மத்தையடைந்தும் எவர்கள் பகவான் உடைய மாயையால் மோஹித்து அவரை ஆராதிக்க வில்லையோ, அவர்களும் அவ்விடம் செல்லுகிறது

இல்லை. எவர்கள் தேவர்களுக்கு தேவராகிய பகவானை அனுசரிக்கிறார்களோ, அவர்கள் நம்மாலும் ஆசைப்படக் கூடிய சுபாவமுள்ளவர்களேயாம். அவர் களுக்கு யமனுடைய உபத்திரவம் இல்லை. எவர்கள் ஒருவருக்கொருவர் தங்களுடைய யஜமானனாகிய பகவானுடைய குணங்களைக் கானம் செய்து, அதனால் தேகம் பரவசமாகி மயிர்க்கூச்சல் உண்டானவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் மேற்சொல்லிய வைகுண்டஞ் செல்வார்கள்.

ஜகத்திற்கு அதிபதியாகிய ஸ்ரீமந் நாராயணனுடைய வாசஸ்தலமும், ஸகல ஜகத்தினால் கொண்டாடக் கூடியதும்; தேவார்ஹமாயும், விசித்திரங்களான சிறந்த விமானங்களுடைய காந்தியுள்ளதுமான அந்த வைகுண்டத்திற்கு அம்முனிகள் தங்களுடைய யோகமாயா பலத்தால் சென்று, பரமானந்தத்தை அடைந்தார்கள். அவ்விடத்தில் அந்த மஹரிஷிகள் அற்புதமான விஷயங்களைப் பார்த்தும் அவைகளில் ஆசைப்படாமல் (பகவத் தரிசனத்தில் ஆசையால்) ஆறு ப்ராகாரங்களைத் தாண்டி ஏழாவது ப்ராகாரம் சென்று அவ்விடத்தில் இரண்டு துவாரபாலகர்களைக் கண்டார்கள். அவர்கள் ஒரே வயதுள்ளவர்கள்! விலையுயர்ந்த தோள் வளைகள், குண்டலங்கள், கிரீடம் ஆகிய இவைகளால் அழகாயிருப்பவர்கள். கையில் கதாயுதத்தைத் தரித்தவர்கள்; வனமாலை யினால் அலங்கரிக்கப்பட்டவைகள். கருமையான நிறமுள்ள நான்கு கைகளுள்ளவர்கள்.

மேலும், அவர்களுடைய முகத்தில் வக்கிரமான புருவங்களும், சிவந்த கண்களும்; பெரிய மூக்குகளும்

இருக்கின்றன. அப்பொழுது அந்த முனிகள் ஸ்வர்ணத்தாலும், வஜ்ரத்தாலும் செய்யப்பட்ட கதவுகளுள்ள ஆறு ப்ராகாரங்களுக்குள் ப்ரவேசித்தது போல, ஏழாவது ப்ராகாரத்திலும் த்வார பாலகர் களான அவ்விருவர்களும் பார்த்துக் கொண்டிருக்க, அவர்களைக் கேட்காமலேயே உள்ளே சென்றார்கள். அவர்கள் சமதிருஷ்டி உள்ளவர்களாகையால் எங்கும் பயமில்லாமல் சஞ்சரிப்பவர்கள். அவர்களை ஒருவரும் தடுக்கிறதில்லை. இப்படிப் பகவானைத் தரிசிப் பதற்காக உள்ளே செல்லுகிறவர்களும், வஸ்திரமில்லாத வர்களும், மிகவும் வயது சென்றவர்களானாலும், ஐந்து வயதுள்ளவர்கள் போல் தோன்றுகிறவர்களும், ஆத்மாவின் உண்மையை அறிந்தவர்களும், தடுக்கக் கூடாதவர்களுமாகிய அந்தச் ஸனகர் முதலிய முனிவர்களைப் பார்த்து, அந்தத் த்வாரபாலகர்கள் இருவர்களும் அவர்களுடைய தேஜஸை (தைரியத்தைப்) பற்றி பரிகாசஞ் செய்து பகவானுக்குப் ப்ரதிகூல ஸ்வபாவமுள்ளவர்களாகிப் பிரம்பினால் அவர்களைத் தடுத்தார்கள்.

31–34 இப்படி ஸகல தேவர்களும் பார்த்துக் கொண்டிருக்கும் போது ஸ்ரீ பகவானுடைய த்வார பாலகர்களால் தடுக்கப்பட்ட பூஜ்யர்களான அந்த மஹரிஷிகள், ஸகல லோகத்திற்கும் மிகுந்த ஸுகிருத்தாகிய பகவானுடைய தரிசனத்திற்கு விக்கினம் நேர்ந்ததால் கோபம் கொண்டு, கலங்கிய கண்களுடன் பகவானுக்கு மிகுந்த சிச்ருஷையைச் செய்து, அதனால் வைகுண்டவாசத்தை அடைந்து எல்லாவற்றையும் சமமாகப் பார்க்கும் ஸ்வபாவமுள்ள இந்த லோக ஜனங்களுக்குள் இவர்களுடைய

ஸ்வபாவம் வேறாகக் காணப்படுகிறதே, இதென்ன? ஓ த்வாரபாலகர்களே! மிகவும் சாந்தரும், துவேஷமற்ற வருமாகிய அந்த மஹாபுருஷனிருக்குமிடத்தில் யார் தான் போகக்கூடாது? (எல்லோரும் போகலாமென்று கருத்து.) நீங்களிருவர்களும் கபட ஸ்வபாவமுள்ளவர்கள் ஆகையால் உங்களைப் போல் மற்றவர்களும் கபடமாக இருப்பார்களென்று பிறரைப் பற்றிச் சந்தேகிக்கிறீர்கள். (பகவத் பக்தி இல்லாதவர்கள் இவ்விடம் வரமாட்டார்கள். பகவான் மிகவும் சாந்தராகையால் அவரிடத்தில் பயப்படவேண்டியது இல்லை. ஆகையால் நீங்கள் மிகவும் துஷ்டர்கள் என்று கருத்து) ஸகல ஜகத்தையும் தம்முடைய வயிற்றில் வைத்துக் காப்பாற்றும் பகவானுக்கு பேதபுத்தி இல்லை.

குடத்திற்குள் இருக்கும் ஆகாசமானது எப்படி மஹாகாசத்தில் அடங்கியதோ, அப்படியே பரமாத்மாவினிடத்தில் தாங்கள் அடங்கியவர்கள் என்று வித்வான்கள் பார்க்கிறார்கள். அப்பேற்பட்ட பகவானிடத்தில் மற்றவர்களிடத்தில் போல் பேத புத்தியாலுண்டாகும் பயமானது தேவர்கள் போல வேஷந் தரித்த உங்களால் உண்டு பண்ணப்பட்டது. ஆனதால் மந்தபுத்தியுள்ளவரும் ஸ்ரீ பகவானுடைய வேலைக்காரர்களுமாகிய உங்களுடைய க்ஷேமத் திற்காகவே யோசித்துச் சொல்லுகிறோம். நீங்கள் பேதபுத்தி உள்ளவர்களாகையால், காமம், குரோதம், உலோபம் ஆகிய மிக்க பாபிகளாகிய மூன்று சத்ருக்கள் வஸிக்கும் பூலோகத்திற்குச் செல்லுங்கள், என்றார்கள்.

35–36 அதனைக் கேட்ட அவ்விருவர்களும், ஸ்ரீ மஹா விஷ்ணுவின் வேலைக்காரர்களானாலும், ப்ராஹ்மண சாபம் அநேக அஸ்திரங்களாலும் நிவர்த்திக்க முடியாதது, என்ற நிச்சயமுள்ளவர்களாகி மிகவும் பயந்து அம்முனிவர்களுடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டு அவர்களை நோக்கி, ஓ மஹரிஷிகளே! குற்றஞ் செய்தவர்களான எங்களுக்குத் தக்கபடி சிக்ஷை விதித்தீர்கள். (தங்களிடத்தில் கொஞ்சமேனும் குற்றமில்லை யென்பது கருத்து.) ஆனாலும் நீங்கள் எங்களிடத்தில் கிருபை செய்து, பச்சாதாபமடைந்து, எங்களை அனுக்கிரஹிக்க வேண்டும். எங்களுடைய புத்திக் குறைவினால் நாங்கள் கீழுலகஞ் சென்றாலும், அவ்விடத்தில் எங்களுக்கு மோஹம் உண்டாகாமல் இருக்க வேண்டும். அப்படி மோஹம் உண்டானாலும் பகவானுடைய ஞாபகமிருக்க வேண்டும். அஃதிருந்தால் ஈசுவரனுடைய ஆக்ஞையை அதிக்ரமித்ததாலுண்டான தோஷமும் நீங்கிவிடும், என்று கேட்டுக் கொண்டார்கள்.

37–45 அப்பொழுது பெரியோர்களுக்கு மனோகரராகிய பகவான் தம்மைச் சார்ந்த த்வார பாலகர்கள் சாதுக்களுக்கு குற்றஞ் செய்தார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு, பரமஹம்சர்களான மஹர்ஷிகளாலும் தேடக்கூடிய தம்முடைய பாதங்களை அசைத்துக் கொண்டு (கால்நடையாக) லக்ஷ்மீதேவி யுடன் அவ்விடம் வந்தார். (என்னுடைய பாததரிசனத் திற்காக வந்தவர்களைத் தடுத்ததால் அவர்கள் கோபங் கொண்டார்கள். அந்தத் தரிசனத்தை அவர்களுக்குக் கொடுத்தோமன்னால் கோபம் தணிந்துவிடுமென்பது கருத்து) அந்த முனிவர்கள் அப்பொழுது அவ்விடம்

வந்த பகவானைத் தரிசித்தார்கள். அவர் அந்த முனிகளுடைய சமாதியால் அடையக் கூடிய பாக்கிய மேயாவார். மேலும் அவரை அந்த லோகத்துப் புருஷர்கள் குடை முதலியவைகளால் உபசரிக்கிறார்கள். அவருடைய பக்கங்களில் ஹம்சம் போன்ற சாமரங்கள் வீசப்படுகின்றன. அவைகளிலிருந்து வீசும் காற்றானது மிகவும் சுககரமாகவிருக்கிறது. அதனால் சந்திரன் போலப் ப்ரகாசிக்கும் வெண்குடையில் தொங்குகிற முத்து மாலைகள் அசைகின்றன. அவைகளிலிருந்து ஜலத்துளிகள் விழுகின்றன.

பின்னும் அந்தப் பகவான் எல்லாரிடத்திலும் தயைசெய்யும் நல்ல முகமுள்ளவர். ஆசைப்படக்கூடிய சத்குணங்களுக்கு வாசஸ்தலமாக இருப்பவர். ப்ரீதியுடன் பார்ப்பதால் மனத்திற்கு சந்தோஷத்தை உண்டு பண்ணுகிறவர். மேலும், அவர் சுவர்கத்திற்குச் சிரோரத்னமாக இருக்கும் தம்முடைய வைகுண்ட லோகத்தைத் தம்முடைய கருத்த மார்பிலிருக்கும் லக்ஷ்மீயால் ப்ரகாசிக்கச் செய்பவர். மேலும் பீதாம்பரம் தரித்த பெரியதாக பகவானுடைய நிதம்பத்தில் ப்ரகாசிக்கிற கடிசூத்ரத்தாலும், வண்டுகளால் சப்திக்கும் வனமாலையாலும் அந்த உலகம் விளங்குகிறது. மேலும், அந்தப் பகவான் அழகான கங்கணத்தைத் தரித்தவர். கருடனுடைய தோளில் ஒரு கையை வைத்தும், மற்றொரு கையால் தாமரைப் புஷ்பத்தைச் சுழற்றிக் கொண்டு மிருந்தார். அவருடைய கன்னங்கள் மின்னலை அவமதிக்கக் கூடிய மகர குண்டலங்களால் அலங்கரிக்கப்பட்டவை, முகமானது அழகான மூக்குள்ளது. பின்னும் அவர் ரத்னங்களிழைத்த கிரீடமுள்ளவர். கைகளுடைய

மத்தியில் ப்ரகாசிக்கின்ற கௌஸ்துப ஹாரமுள்ளவர். அவருடைய சரீரமானது மிகுந்த அழகுள்ளதாகையால், பக்தர்கள் அவருடைய திவ்ய தேகத்தைத் தரிசித்தவுடன், நானே மிகுந்த சௌந்திரியமுள்ளவன் என்ற லக்ஷ்மீதேவியுடைய அகங்காரம். இதனால் அடக்கப்பட்டதென்று நினைக்கிறார்கள்.

அப்போர்ப்பட்ட பகவானுடைய சரீரத்தைத் தரிசித்து அம்முனிகள் திருப்தி அடையாதவர்களாகி, மிகுந்த சந்தோஷத்துடன் அவருடைய பாதத்தில் தங்களுடைய சிரசு படும்படியாக நமஸ்கரித்தார்கள். அவர் ப்ரஹ்மாவாகிய என்னாலும், பரமசிவனாலும் உங்களாலும் (தேவர்களாலும், சேவிக்கத்தக்க திவ்ய சரீரத்தைப் ப்ரகாசப்படுத்துகிறவர்) அப்பொழுது அந்தப் புண்டரீகாக்ஷருடைய (தாமரைக் கண்ணன்) பாதங்களிலிருந்து துளஸியின் மதுவுடன் கூடிய காற்றானாது மூக்கு வழியாக அவர்களுக்குட் சென்றது. அவர்கள் ப்ரம்மானந்தத்தை அனுபவிக்கிறவர்களானாலும், அவர்களுடைய மனம் கலங்கினது. சரீரத்தில் மயிர்க் கூச்சலுண்டாயிற்று. பின்பு அவர்கள் பகவானுடைய கருத்த தாமரை மலர் போன்ற முகத்தையும்,அதில் சிவந்த அழகாய் உள்ள உதடுகளையும் குருக்கத்தி மலர் போல் வெண்மையான சிரிப்பையும் பார்த்து பூர்ண மனோரதமுள்ளவர்களாகத் திரும்பவும் இரத்தினங்கள் போன்ற நகங்களுக்கு ஆசிரயங்களான அவருடைய பாதங்களைத் தரிசித்துத் தியானஞ் செய்தார்கள். (எல்லா அவயவங்களுடைய லாவண்யத்தை ஒரே தடவையில் பார்த்து க்ரஹிக்க முடியாதவர்களாக அடிக்கடி பார்த்தார்களென்பது கருத்து.) அந்தப்

பகவான் யோக மார்க்கத்தைக் கொண்டு தேடுபவர்களால் தியானஞ் செய்யகூடியவர். அநேக ஞானிகளால் உபாசிக்கப்பட்டவர். புருஷரூபத்தைக் காண்பித்தவர். மற்றவர்களுக்குக் கிடைக்காதவைகளும், இயற்கையாகவே கிடைத்தவைகளுமான எட்டுவித ஐசுவர்யங்களுள்ளவர், அப்பேர்ப்பட்ட பகவானை அந்த ஸனகர் முதலிய மஹர்ஷிகள் பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்தார்கள்.

46 50 "ஓ பகவன்! நீர் ஸகல பிராணிகளுடைய ஹிருதயத்திலிருப்பவரானாலும், துஷ்டர்களுடைய கண்களுக்குப் புலப்படுகிறதில்லை. அப்பேர்ப்பட்ட நீர் எங்களுடைய கண்களுக்குப் புலப்பட்டீர். உம்மிடத்திலிருந்து உண்டானவரும், எங்களுக்குப் பிதாவுமான ப்ரஹ்மதேவர். உம்முடைய ரகசியத்தை உபதேசித்தபொழுதே, நீர் காதின் வழியாக எங்களுடைய ஹிருதயத்தை அடைந்திருக்கிறீர். ஓ பகவான்! உம்மைப் பரமாத்மா வென்றும், சுத்த சத்வ மூர்த்தியாகையால் பக்தர்களுக்கு ரதியை (ஆசையை) உண்டு பண்ணுகிறவராகவும், தெரிந்து கொள்ளுகிறோம். உம்முடைய கிருபையால் (அனுதாபம்) பக்தி யோகத்தை அடைந்து அதனால் மனத்திலிருக்கும் அகங்காரத்தை ஒழித்து, வைராக்யமடைந்த மஹரிஷிகள் உம்மை அறிவார்கள். மேலும், ஸ்தோத்திரம் பண்ணக்கூடியதும், பரிசுத்தியை உண்டு பண்ணக் கூடியதுமான உம்முடைய கதையின் ரசத்தை எவர்கள் அறிந்திருக்கிறார்களோ, எவர்கள் உம்முடைய பாதாரவிந்தத்தைச் சரணமடைந்து இருக்கிறார்களோ, அந்தப் பக்தர்கள் உம்முடைய அனுக்கிரகபரமான மோக்ஷத்தையும் விரும்புகிறதில்லை.

அப்படியிருக்க, பயமுள்ளதாகிய இந்திரபதம் முதலியவைகளை விரும்புவார்களா? ஓ பகவன்! உம்முடைய பக்தர்களைச் சபித்ததால் நாங்கள் தங்களுக்கு அபராதஞ் செய்தவர்களானோம். அதனால் எங்களுக்கு ஜன்மம் ஏற்படுமோ? வண்டானது முட்களால் வருத்தப்பட்டும் புஷ்பங்களில் ரமிப்பது போல அந்த ஜன்மாவிலும் எங்களுடைய மனமானது உம்முடைய பாதாரவிந்தத்தையே நினைத்திருக்கும் ஆனால் அந்த ஜன்மமும் எங்களுக்குக் கிடைப்பது சம்மதமேயாகும். ஆனால் துளசியானது உம்முடைய பாதத்தின் சம்பந்தத்தால் விளங்குவதுபோல் எங்களுடைய வாக்கும் தங்களுடைய குணங்களைச் சொல்வதாலேயே ப்ரகாசிக்க வேண்டும். எங்களுடைய காதுகளும் உம்முடைய கல்யாண குணங்களைக் கேட்பதாலேயே நிறைந்திருக்க வேண்டும்.

ஓ மிகுந்த கீர்த்தியுள்ளவரே! நீர் இந்த திவ்ய ஸ்வரூபத்தை நாங்கள் பார்க்கும்படி செய்ததால் எங்களுடைய கண்கள் சபலங்களாயின. இந்த ஸ்வரூபம் துஷ்டர்களுக்குப் புலப்படாது அந்தப் பகவானாகிய உமக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்' என்று சொன்னார்கள்.

அத்தியாயம்–16

ஜய விஜயர்களுக்கு அனுக்கிரகம்

1–2. அந்த ஸனகர் முதலிய யோகிகளுடைய வார்த்தையைச் சிலாகித்து வைகுண்டத்திலிருக்கும் சாக்ஷாத் பகவான், இந்த ஜயன் விஜயன் என்கிற இருவர்களும் என்னுடைய பார்ஷதர்களானாலும் இவர்கள் தர்மத்தை அதிக்ரமித்தவர்கள். ஆதலால் இவர்கள் விஷயத்தில் என்னுடைய பக்தர்களான உங்களால் செய்யப்பட்ட சிக்ஷையானது எனக்கும் அபிமதமேயாம், எனக்குப் ப்ராஹ்மணர்களே முக்கியமான தெய்வம். என்னுடைய வேலைக்காரர்களால் செய்யப்படும் குற்றமானது என்னால் செய்யப்பட்டதாகவே நினைக்கிறேன். நீங்கள் மன்னிக்கவேண்டும். எவனுடைய வேலைக்காரன் கெட்ட காரியத்தைச் செய்கிறானோ அவனைப்பற்றி ஜனங்கள் பேசிக் கொள்வார்கள் அல்லவா? அது குஷ்ட ரோகமானது தோலைக் கெடுப்பது போல யஜமானுடைய கீர்த்தியைக் கெடுத்துவிடுகிறது. என்னுடைய சுத்தமும் அமிருதமயமுமாகிய கீர்த்தியைக் கேட்பதால் அதில் ஸ்நானம் செய்யும் சண்டாளன் வரையிலுள்ள ஜகத்தானது பரிசுத்தமாகி விடுகிறது. உங்களிடமாக நல்ல கீர்த்தியை அடைந்து விளங்கும் நான் என்னுடைய கையானாலும் உங்களுக்கு விரோதம் செய்யுமானால் அதை வெட்டிவிடுவேன். ப்ராஹ்மணர்களைச் சேவித்ததால், பரிசுத்தமாகிய பாததூளி உள்ளவனாகவும், ஸகல பாபங்களையும் போக்கக் கூடியவனாகவும் நல்ல ஸ்வபாவத்தை அடைந்தவனுமாகவும் நான் இருக்கிறேன். அப்போர்ப்பட்ட என்னை

(வைராக்கிய முள்ளவனாலும்) லக்ஷ்மி ஒருபொழுதும் விடுகிறதில்லை. அவளுடைய கடாக்ஷத்தை ப்ரஹ்ம தேவர் முதலியவர்களும் அடைய விரும்பித் தபஸ் செய்கிறார்கள். ப்ராஹ்மணர்களுக்கு அன்னங் கொடுத்து அவர்கள் நெய் ஒழுகும்படி புசிக்க அவர்கள் முகமாய் நான் புசித்து எவ்வளவு திருப்தி அடைகிறேனோ அவ்வளவு சந்தோஷமானது யாகத்தில் யஜமானனால் கொடுக்கப்படும் ஹவிஸ்ஸை அக்கினி முகமாகப் புசிப்பதால் எனக்கு உண்டாகிறது இல்லை. ப்ராஹ்மணர்கள் குற்றஞ் செய்தாலும் அதைப் பொறுப்பதே உசிதம்.

எவர்களுடைய பாதத்தை அலம்பிய ஜலமானது பரமசிவனையும் மற்ற ஜகத்தையும் பரிசுத்தப்படுத்து கிறதோ, தடையற்றதும் பூர்ணமுமான யோக மாயையின் விபூதிகளை உடையவனாகிய நான் அந்தப் ப்ராஹ்மணர்களுடைய பாததூளியைச் சிரசால் தரிக்கிறேன். மேலும் என்னுடைய சரீரரமாகிய ப்ராஹ்மணர்களையும், பசுக்களையும் காப்பாற்று கிறவர்களில்லாமல் கஷ்டப்படும் மற்றப் ப்ராணிகளையும் பாப ஸ்வபாவமுள்ள எந்தப் புருஷர்கள் சர்ப்பம் போல் கோபமுள்ளவர்களாகி என்னை காட்டிலும் வேறென்று நினைக்கிறார்களோ, அவர்களை என்னுடைய வேலைக்காரனாகிய யமனிடத்திலிருக்கும் கழுகுபோன்ற தூதர்கள் உபத்திரவிக்கிறார்கள். எவர்கள் ப்ராஹ்மணர்களை என்னுடைய ஸ்வரூபமென்று நினைத்து சித்தத்தில் சந்தோஷத்துடனும், சிரித்த முகத்துடனும் பூஜிக்கிறார்களோ, பிரியமுள்ள வார்த்தையால் பேசிக்கொண்டு புத்திரனைப்போல் அழைக்கிறார்களோ, அவர்கள் என்னைப் பூஜித்தவர்களாக

ஆகிறார்கள். ஆதலால் இவ்விருவரும் யஜமானனாகிய என்னுடைய எண்ணத்தை (ப்ராஹ்மணர்களே தெய்வமென்பதை) அறியாமல், உங்களிடத்தில் குற்றஞ் செய்ததால், அதன் பலனை உடனே அனுபவித்து மறுபடியும் என்னுடைய சமீபம் சேரட்டும். இவர் களுக்குச் சீக்கிரமாக சாபத்தின் முடிவுக்காலத்தை ஏற்படுத்துவதே என்னைப்பற்றிச் செய்யும் அனுக்கிரமாகும்" என்று கேட்டுகொண்டார்.

13–25. அந்த யோகிகள் கோபமுள்ளவர்களானா லும் பின்பு பிரியாமானதும். மந்திர ஸ்வரூபமான அந்த வார்த்தையைக் கேட்ட அவர்களுடைய ஆத்மாவானது போதுமென்று திருப்தி அடையவில்லை. மேலும் அவர்கள் சொற்ப, அக்ஷரங்களுள்ளதும் மிகுந்த அர்த்தமுள்ளதும், சிறந்ததுமான பகவானுடைய வார்த்தையைக் காதுகொடுத்துக் கேட்டு அர்த்தத்தா லும் அபிப்பிராயத்தாலும் கம்பீரமாகிய அதனை நன்றாக யோசித்தும் பகவானுடைய எண்ணம் இன்னதென்று தெரிந்துகொள்ள முடியாதவர்களாக மிகுந்த சந்தோஷத்துடன் மயிர்க்கூச்சலை யடைந்து யோக மாயையால் தம்முடைய மேலான ஐசுவர்யத்தின் மேன்மையைக் காண்பிக்கும் பரமபுருஷனை நோக்கி, "ஓ பகவான், நீர் எல்லாவற்றிற்கும் அதிபதியாயிருந்து நான் அபராதஞ் செய்தேனென்றும் எனக்கு அனுக்கிரஹஞ் செய்யுங்களென்றும் சொல்லுகிற உங்களுடைய எண்ணம் இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை. ப்ராஹ்மணர்களிடத்தில் பக்தியுள்ள வராகிய உமக்குப் ப்ராஹ்மணர்கள் முக்கிய தெய்வம் என்பது ப்ரசித்தமே. தேவர்களுக்கும் தேவர்களான ப்ராஹ்மணர்களுக்கும் நீர் ஆத்மாவாகவும்

தெய்வமாகவும் இருக்கிறீர். உம்முடைய அவதாரங்களால் புராதனமான தர்மமானது காப்பாற்றப்படுகிறது. விகாரமற்றவராகிய நீர் தர்மத்திற்கு முக்கிய பலமாக ஆகிறீர். யோகிகள் உம்முடைய அனுக்கிரஹத்தால நிவிர்த்தி மார்க்கத்தை யடைந்து ஸம்சாரத்தைத் தாண்டுகிறார்கள். அப்பேர்ப்பட்ட உமக்குப் பிறர் அனுக்கிரஹஞ் செய்வதென்பது ஆச்சரியமாயிருக்கிறது. மேலும் பக்தர்களால் உம்முடைய பாதாரவிந்தத்தில் அர்ச்சிக்கப்பட்ட துளசி மாலையை வண்டானது விரும்புவதுபோல், லக்ஷ்மீதேவியானவள் பக்தர்களால் உம்முடைய பாதத்தில் சமர்ப்பிக்கப்படும் துளஸி மாலையில் வஸிக்கும் சிறந்த வண்டுக்கும் ஸ்தானமாகிய பாதத்தை விரும்பியவள்போல உம்மை ஒவ்வொரு சமயத்திலும் சேவிக்கிறாள். பணத்தை விரும்பியவர்கள் அவளுடைய பாததூளியைச் சிரசால் தரிக்கிறார்கள். சிறந்த பக்தர்களிடத்திலேயே தொடர்புடைய நீர், பலவித ஸுலக்ஷணங்களால் ஸேவிக்கும் மஹாலக்ஷ்மியையும் ஆதரிப்பதில்லை. உம்மிடத்தில் சேவிக்கக்கூடிய குணங்கள் யாவும் இருக்கின்றன்.

அப்படியிருக்க, ப்ராஹ்மணர்களுடைய பாத தூளியும் ஸ்ரீ வத்ஸமென்ற அடையாளமும் உம்மைப் பரிசுத்தப் படுத்துகிறதென்று எப்படிச் சொல்லக் கூடும்? பாதத்திலிருக்கும் துளஸி மாலையிலிருக்கும் வண்டைப் பார்த்து லக்ஷ்மீதேவியானவள் 'இந்த வண்டு சாரத்தைக் கிரஹிக்கும் ஸ்வபாவமுள்ளது, சபல ஸ்வபாவமுள்ளது. இதுவும் பகவானுடைய பாதத்திலிருக்கும் துளஸியில் ரமிக்கிறது, ஆகையால் பாதத்தின் வாவண்யம் அதிகம் ஆனதுபற்றி நான்

மார்பிலிருந்தாலும் ஸபத்னியாகிய துளஸியுடன் பாதத்தைச் சேவிப்பேன், என்று அனுசரிக்கிறாள். (அவளை நீர் ஆதரிக்கிறதில்லை) தர்ம மூர்த்தியாகிய உமக்கு மூன்று யுகங்களில் மூன்று பாதங்கள் இருக்கின்றன. (தபஸ், சௌசம், தயை) ப்ராஹ்மணர்களுக்காகவும். தேவர்களுக்காகவும், இந்த ஸ்தாவர ஜங்கமங்களடங்கிய ஜகத்தை சத்வ குணம் பொருந்தியதும், வரத்தைக் கொடுக்கிறதுமான உம்முடைய சரீரத்தால் அதற்கு விகாரமான ரஜஸ் தமஸ் ஆகிய இவைகளை அடக்கிக் காப்பாற்றுகிறீர். உம்மால் காப்பாற்ற வேண்டிய ப்ராமணோத்தமர்கள் உடைய கூட்டத்தைப் பிரியமான வார்த்தையாலும் பூஜையாலும் நீர் காப்பாற்றாமற்போனால், வேத மார்க்கமானது கெட்டுப் போய்விடும். லோகத்தில் சிறந்தவனால் அனுஷ்டிக்கப்படும் தர்மத்தையே மற்றவர்கள் பிரமாணமாகக் கொள்கிறார்கள். சத்வ குண நிதியும் ஜனங்களுக்கு க்ஷேமத்தைச் செய்ய விரும்பியவரும், தமது சக்தியால் தர்ம விரோதிகளை நாசஞ் செய்பவருமாகிய உமக்கு வேத மார்க்கம் கெட்டுப் போவது அபிதமல்ல. ப்ராஹ்மணர்களை வணங்குவதால் ஜகத்பதியாகிய உம்முடைய தேஜஸ் குறைகிறதில்லை. அது உமக்கு விளையாட்டேயாம். ஓ ஈச! இவர்களுக்கு நீர் எந்தச் சிக்ஷையை விதித்தாலும் ஜீவனத்தை ஏற்படுத்தினாலும் அதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம் அபராதஞ் செய்யாதவர்களான இவ்விருவர்களையும் நாங்கள் சபித்தபடியால் எங்களுக்கு தகுதியான சிக்ஷையை விதியும்" என்றார்கள்.

26. அதனைக் கேட்ட பகவான் "ஓ ப்ராஹ்மணர்களே!

இந்தப் பார்ஷதர்களிருவரும் அசுரஜன்மத்தை அடைந்து அந்த ஜன்மத்தில் கோபத்தால் மனத்தை என்னிடத்திலேயே செலுத்துவதாகிய யோகத்தைச் செய்து மறுபடியும் என்னுடைய சமீபத்தை அடைவார்கள். உங்களால் செய்யப்பட்ட சாபமானது என்னால் கொடுக்கப்பட்டதென்றே நினையுங்கள் என்றார்.

27–28. பின்பு அந்த மஹரிஷிகள் நேத்ரானந்தத் திற்கு பாத்திரமாயும், வேறு பிரகாசத்தை அபேக்ஷியா மல் சுயமாய்ப் ப்ரகாசிப்பவருமான ஸ்ரீ மஹாவிஷ்ணு வையும் அவருக்கு இருப்பிடமான வைகுண்ட த்தையும் பார்த்து, பகவானை பிரதக்ஷிணமாகச் சுற்றி நமஸ்காரஞ் செய்து அவரிடம் விடைபெற்று விசேஷ ஆனந்தத்து டன் மஹாவிஷ்ணுவின் விபூதியைப்பற்றிக் கொண்டாடிக்கொண்டு சென்றார்கள்.

29–37. பகவான் தம்முடைய பார்ஷதர்கள் இருவரையும் நோக்கி "நீங்கள் பயப்படவேண்டாம் உங்களுக்கு க்ஷேமமுண்டாகும். உங்களுடைய சாபத்தைப் போக்கடிக்க நான் ஸமர்த்தனானாலும் ப்ரஹ்ம தேஜஸ்ஸை அடக்க எனக்கு இஷ்டமில்லை. மேலும் முன்னொருகாலத்தில் நான் பிரளய கலகத்தால் தனித்திருக்கும்போது (அந்தப்புரத்திலிருந்து வெளியில் போன லக்ஷ்மீதேவியை) அந்தப்புரத்தில் பிரவேசிக்கும் லக்ஷ்மீதேவியைத் தடுத்தபடியால் உங்களுக்கு இந்த விஷயம் லக்ஷ்மீயினாலேயே சொல்லபட்டிருக்கிறது. ஆதலால் ப்ராஹ்மண அவமானத்தின் பலனை அனுபவித்து அந்த ஜன்மத்தில் விரோதத்தால் என்னை எப்பொழுதும் தியானம் செய்து சொற்ப

காலத்தில் என்னுடைய சமீபம் வருவீர்கள் என்று பகவான் த்வாரபாலகர்களுக்கு ஆக்ஞாபனம் செய்து அநேக விமானங்களுக்கு அலங்காரமாகவும், எல்லாவற்றிற்கும் மேலான காந்தி பொருந்தியதுமான தமது ஸ்தானஞ் சென்றார். பிறகு அந்தத் தேவ சிரேஷ்டர்கள் இருவரும் தடுக்க முடியாத ப்ரஹ்ம சாபத்தால் கர்வமற்றவர்களாக ஆனார்கள்.

ஓ குழந்தைகாள்! வைகுண்டத்திலிருந்து அவர்கள் விழும்போது விமானங்களிலிருப்பவர்கள் ஹா!ஹா! என்று கதறினார்கள். அந்தப் பார்ஷதர்களே காசியபருடைய வீரியத்திற்குத் திதியின் கர்ப்பத்தில் உண்டானவர்கள். இரட்டைப் பிள்ளைகளான அந்த அசுரர்களுடைய தேஜஸ்ஸால் அப்பொழுது உங்கள் உடைய தேஜஸ் குறைந்தவிட்டது. ஆனாலும் பகவான் க்ஷேமத்தைச் செய்வார். அவர் ஸகல ஜகத்தையும் படைத்தவர். காப்பாற்றுகிறவர் சம்கரிப்பவர் எல்லா வற்றிற்கும் முந்தினவர். அவருடைய யோக மாயை யோகேசர்களாலும் அறியமுடியாதது. அவரைச் சார்ந்தவர்களான நமக்கு அவரே க்ஷேமத்தைச் செய்வார். இந்த விஷயத்தில் நம்முடைய யோசனை பயன்படாதது என்று சொன்னார்.

அத்தியாயம் 17

திதிக்குப் புத்திரர்கள் பிறந்தது

1–15 இப்படி ப்ரஹ்மதேவரால் சொல்லப்பட்ட காரணத்தைக் கேட்டு தேவர்கள் எல்லோரும் சம்சயம் அற்றவர்களாக ஸ்வர்க்கம் சென்றார்கள். திதியானவள் தனது பர்த்தாவினுடைய கட்டளையினால் புத்திரன் உடைய சரிதத்தில் சந்தேகமுள்ளவளாக ஆயிரம் வருஷங்களைக் கழித்தாள். பிறகு இரண்டு குமாரர் களைப் பெற்றாள். அவ்விருகுழந்தைகள் பிறக்கும் போது பூமியிலும் அந்தரிக்ஷத்திலும், த்யுலோகத்தி லும் வரப்போகின்ற பயத்தைக் காட்டும் அநேக உத்பாதங்கள் உண்டாயின. மலைகளுடன் பூமி அசைந்தது. ஆகாசம் முழுவதும் ஜ்வலித்தது. குறைக் கொள்ளிகளும் இடிகளும் விழுந்தன. தூமகேதுக்கள் காணப்பட்டன. அடிக்கடி பூதாகார சப்தத்துடன் காற்றானது மரங்களை வேரோடு பிடுங்கிற்று. அந்தக் காற்றுக்கு தூளியே த்வஜமாகவும், காற்றின் ஸமூகம் ஸைன்யமாகவும் இருந்தன. சிரிப்பது போன்ற மின்னல்களுள்ள மேகங்களால் தேஜஸ் மறைக்கப்பட்டது, மேலும் ஆகாசமானது இருளால் சூழப்பட்டது. சமுத்திரத்தின் மத்தியிலிருக்கும் மகரம் முதலிய ஜந்துக்கள் கலங்கின. அலைகள் உயரக்கிளம்பின. கிணறு, குளம் முதலியவை கலங்கின. அவைகளிலுள்ள தாமரைகள் உலர்ந்து போயின. சந்திரன், சூரியர் இவர்களுக்கு ராஹுகக்ராஸம் நேர்ந்தது. (கிரஹணம்.)

மேலும் அவர்களைச் சுற்றிக் கோட்டை கட்டப் பட்டது, மேகமில்லாதபோது கர்ஜிதம் உண்டாயிற்று.

அதனால் குகை முதலிய இடங்களில் எதிரொலியும் உண்டாயிற்று. கிராமங்களில் பெண் நரிகள் அக்கினியைக் கக்கிக் கொண்டு பயங்கரமாக ஊளை யிட்டன. கோட்டான்களும், நரிகளும் சப்தித்தன, நாய்கள் பாடுகின்றவை போலும், அழுகின்றவை போலும் தலையைத் தூக்கிப் பலவகையாக்கக் குரைக்க ஆரம்பித்தன. ஓ விதுர! கழுதைகளும் கூட்டம் கூட்டமாகக் கூர்மையான குளம்புகளால் பூமியைப் பிளந்தும் தங்களுடைய ஜாதிக்குரியபடி சப்தித்தும், மதமுள்ளவைகளாக ஓடின. கழுதைகளின் சப்தத்தைக் கேட்டுப் பயந்து பறவைகள் தங்களுடைய கூடுகளிலிருந்து பூமியில் விழுந்தன. இடைச்சேரியி லும், காடுகளிலுள்ள பசுக்கள் (மிருகங்கள்) மேற்சொல்லிய சப்தத்தால் நடுங்கி மூத்திரத்தை விட்டதும் அன்றிச் சாணத்தையும் போட்டன. மேலும் பசுக்கள் பயந்தன; இரத்தங்களைக் கறந்தன. வருஷித்தன. தேவதா பிரதிமைகள் அழுதன. காற்றில்லாத போது மரங்கள் கீழே விழுந்தன. பாப கிரஹங்கள் சுபக் கிரஹ நக்ஷத்திரங்களையும் அதிக்ரமித்துச் சென்றன (அதிசாரம்) வக்ராதியால் உபத்திரவித்தன; ஒன்றுக் கொன்று மேற்காட்டியவை களும், மற்றவைகளுமாகிய அபசகுனங்களை கண்டு அவைகளின் உண்மையை அறியாதவர்களான எல்லாரும் பிரளயம் நேர்ந்துவிட்டதென்று நினைத்தார்கள். ப்ரஹ்மதேவருடைய புத்திரர்களான சனகர் முதலியவர்கள் மாத்திரம் பயப்படவில்லை.

19–31 அந்த ஆதிதைத்யர்கள் இருவரும் (திதியின் புத்திரர்கள் தைத்யர்கள்) தங்களுடைய பௌருஷத்தை வெளியிட்டுக் கொண்டு கருங்கல் போல்

வளர்ந்தார்கள்; இவர்களுடைய சுவர்ண கிரீடங்கள் உடைய நுனிகள் ஆகாயத்தை ஸ்பர்சித்திருந்தன. தோள்வளைகளுள்ள கைகள் திக்குகளின் எல்லை வரையிற் சென்றன. அரைநாண் முதலியவையுள்ள இடுப்பானது சூரியமண்டலத்திற்கு மேலாக இருந்தன. அவர்களுடைய அடி வைப்பினால் பூமி அசைந்தது. அப்பொழுது மாரீசர் அவ்விருவர்களுக்குள் எவனைத் திதியானவள் முதலில் பெற்றாளோ, அவனுக்கு ஹிரண்யாக்ஷனென்றும், தம்முடைய தேகத்திலிருந்து முதலில் திதியிடம் பிரவேசித்த வீரியத்தால் உண்டானவனுக்கு ஹிரண்யகசிபு என்றும் பெயர் வைத்தார். அந்த ஹிரண்யகசிபுவானவன் ப்ரஹ்ம தேவரிடம் வரம் பெற்று மிருத்யு பயமில்லாதவனாகி, கர்வமடைந்து உலகபாலர்களை ஜயித்து, ஸகல உலகங்களையும் ஸ்வாதீனமாக்கிக் கொண்டான். அவனுடைய தம்பியாகிய ஹிரண்யாக்ஷன் என்பவன் தமயனிடத்தில் விசேஷ ப்ரீதியுள்ளவன். மேலும் அவன் ஒவ்வொரு நாளும் கதாயுதத்தைக் கையில் பிடித்துக் கொண்டு யுத்தஞ் செய்ய விரும்பினவனாகத் தகுந்த எதிரியைத் தேடி ஸ்வர்க்கத்தில் அலைந்தான். அவன் ஸகிக்க முடியாத வேகமுள்ளவன்! அவன் அணிந்திருக்கும் ஆபரணமாகிய தங்கச் சலங்கைகள் இனிமையாகச் சப்திக்கின்றன. அவன் வைஜயந்தி என்னும் மாலையைத் தரித்தவன்; பெரிதாகிய கதாயுதத்தை தோளில் வைத்துக் கொண்டவன்; மனோ பலத்தாலும், தேகபலத்தாலும் கர்வமுள்ளவன்; ஒருவராலும் ஜயிக்க முடியாதவன்; எவரிடத்திலும் பயமற்றவன்; அப்படிப்பட்ட அந்த அசுரனைக் கண்டு கருடனைக் கண்ட சர்ப்பங்கள் போல் தேவர்கள் எல்லாரும் ஓளிந்து கொண்டார்கள்.

அந்த அசுர சிரேஷ்டன் தன்னுடைய தேஜஸ்ஸால் பயந்து இந்திரன் முதலிய தேவர்கள் ஒளிந்து கொண்டார்களென்று தெரிந்து கொண்டு மதத்துடன் கர்ஜித்தான். மிக்க பலமுள்ள அந்த அசுரன் அவ்விடத்திலிருந்து திரும்பி மிக்க ஆழமுள்ளதும், பயங்கரமான சப்தமுள்ளதுமான சமுத்திரத்தில் மதங்கொண்ட யானைபோல் விளையாடுவதற்காகப் பிரவேசித்தான். அவனைக் கண்ட மாத்திரத்தில் வருணனுடைய சைனியங்களாகிய ஜலஜந்துக்கள் பயத்துடன் மனங்கலங்கி அவனால் அடிக்கப்படாமல் இருந்தாலும் அவனுடைய தேஜஸ்ஸினாலேயே ஜயிக்கப்பட்டவைகளாக வெகுதூரம் ஓடிற்று.

அப்பொழுது அவன் தன்னுடைய தச்சுகளால் மிகுந்த அலைகளை உண்டுபண்ணிக் கொண்டு எஃகினால் செய்யப்பட்ட கதாயுதத்தால் அடித்துக் கொண்டு அநேக வருஷங்கள் சமுத்திரத்திலேயே சஞ்சரித்துப் பின்பு வருணனுடைய பட்டணம் சென்றான். அது விபாவரி என்ற பெயருள்ளது. அவ்விடத்தில் அவன் ஜலஜந்துக்களுக்கு அதிபதியும் பாதாள உலகத்தைக் காப்பாற்றுகிறவருமான வருணனைக் கண்டு சிரித்துக் கொண்டு பரிகாசத் திற்காக அவரை நமஸ்கரித்து, தாழ்ந்தவன் போல் அவரை நோக்கி, "ஓ மேலான அரசரே! நீர் உலக பாலர்களுக்கு அதிபதி; மிகுந்த கீர்த்தியுள்ளவர்; கர்வமுள்ளவர்களும் தங்களை வீரர்களென்று நினைத்தவர்களுமான துஷ்டர்களுடைய கர்வத்தை அடக்கக் கூடியவர், நீர் முன்காலத்தில் தைத்தியர் களையும், தானவர்களையும் ஜயித்து ராஜசூயமென்ற யாகத்தைச் செய்தீரல்லவா? ஆனது பற்றி

இப்பொழுது என்னுடன் யுத்தம் செய்யவேண்டும்" என்றான். இப்படி மிகுந்த கர்வத்துடன் பரிகாசம் செய்யும் அந்த ஹிரண்யாக்ஷனை நோக்கிச் சமுத்திர ராஜன் கோபத்தை அடக்கிக் கொண்டு, ஓ அசுர சிரேஷ்ட! நான் யுத்தஞ் செய்வது முதலியவகைளில் உற்சாகத்தை விட்டுவிட்டேன்.(சாந்தியை அடைந்து இருக்கிறேன்.) ஆனால் உன்னுடன் யுத்தம்செய்யத் தகுந்த புருஷன் பகவான் ஒருவரே, வேறு யாராலும் முடியாது. அவர் புராண புருஷர். உன்னைப் போன்ற வீரர்கள் அவரைத் துதிக்கிறார்கள், அவர் உன்னைப் போல் அசத்தாயிருப்பவர்களைக் கொல் வதற்காகவும், சாதுக்களை அனுக்ரஹிப்பதற்காகவும் பலவகையாக அவதரிக்கிறார். அவரிடஞ் சென்றால் கர்வமற்றவனாகி யுத்தகளத்தில் படுப்பாய், நாய்கள் உன்னைச் சுற்றிக் கொள்ளும், என்று சொன்னார்.

அத்தியாயம்–18

யக்ஞவராஹருக்கும் ஹிரண்யாக்ஷனுக்கும் யுத்தம்

1–5. மிகுந்த மதமுள்ளவனும் கம்பீர மனமுள்ளவனுமான அந்த ஹிரண்யாக்ஷன் சமுத்திர ராஜனுடைய வார்த்தையைக் கேட்டு நாரதரிடமாகப் பகவானிருக்குமிடத்தைத் தெரிந்து கொண்டு வெகு வேகமாகப் பாதாளலோகம் சென்றான். அவ்விடத்தில் சிங்கப் பல்லால் பூமியை உயரத்தூக்கி கொண்டு இருக்கும் வாரஹரூபியான பகவானைக் கண்டான். அவர் எல்லோரையும் ஜயிப்பவர். அவருடைய கண்கள் சிவந்தவைகளாக இருந்தன. அவைகளால் அசுரனுடைய காந்தியானது குறைந்தது, அவரைக் கண்ட அவன், "ஆச்சரியம். காட்டில் ஸஞ்சரிக்கும் மிருகமாகிய பன்றிக்கு இவ்வளவு தேஜஸ் இருக்கிறதே, என்று சிரித்தான். பின்னும் அவன் அவரை நோக்கி, "ஓ தேவர்களுக்குள் அதமனே! பன்றி யுருவங்கொண்ட வரே! ஒன்றையும் அறியாதவனே! பாதாள வாசிகளாகிய எங்களுக்கு ப்ரஹ்மதேவரால் இந்தப் பூமி கொடுக்கப்பட்டது, ஆனதால் இவளை விட்டுவிடு, நான் பார்த்திருக்கும் போது இந்தப்பூமியுடன் நீ க்ஷேமமாகத் திரும்பிப் போகமுடியாது. நமக்குச் சத்துருக்களாகிய தேவர்கள் உன்னை யுத்தத்தில் பலி கொடுப்பதற்காகவே வளர்ந்திருத்திருக்கிறார்களே ? நீ அசுரர்களை மறைத்திருந்து மாயையால் ஜயித்தவன். யோகமாயா பலமுள்ளவன் சொற்ப பராக்கிரம முள்ளவன். அப்படிப்பட்ட உன்னைக் கொன்று என் மித்திரர்களுடைய துக்கத்தைப் போக்கடிக்கிறேன். என்னுடைய கையிலிருக்கும் கதாயுதத்தால்

உன்னுடைய தலையை உடைக்கிறேன், அதனால் இப்பொழுது உன்னை பூஜிப்பவர்களும், முந்திய பக்தர்களுமாகிய தேவர்களும் மஹர்ஷிகளும் ஒத்தாசை இல்லாதவர்களாக ஆகிவிடுவார்களென்று சொன்னான்.

6–28. அப்பொழுது பகவான் சத்துருவினுடைய கெட்ட வார்த்தையாகிய தோமராயுதத்தால் அடிக்கப் பட்டும் தம்முடைய சிங்கப்பல்லின் நுனியிலிருக்கும் பூதேவி பயப்படுவதைப் பார்த்து அவனுடைய வார்த்தைகளைப் பொறுத்துக்கொண்டு ஜலத்தின் நடுவிலிருந்து வெளிவந்தார் அது யானையானது பெண் யானையுடன் முதலையால் பீடிக்கப்பட்டு ஜலத்திலிருந்து கிளம்பியது போலிருந்தது. அப்பொழுது அந்த அஸுரன் யானையின்டின் மகரம் போலதுபோல் அவர் பின் சென்றான். பின்னும் பயங்கரமான சிங்கப் பற்களுள்ள அந்த அஸுரன், "வெட்கமில்லாத அசத்துக்களுக்கு எதுதான் கெட்ட காரியம்" என்று இடிபோல் உரக்கச் சொன்னான். அப்பொழுது ப்ரஹ்ம தேவராலும். தேவர்களாலும் புஷ்பங்களைக் கொண்டு பூஜிக்கப்பட்டவரான அந்தப் பகவான் ஜலத்திற்கு வெளியில் வியவகார யோக்கியமாகிய இடத்தில் பூமியை வைத்து, அதில் தம்முடைய ஆதார சக்தியை ஸ்தாபித்தார்.

பின்பு, அவர் மிகுந்த கோபத்துடன், தம்மைப் பின் தொடர்ந்து வருகிறவனும் ஸ்வர்ண ஆபரணங்கள் உள்ளவனும் பெரிதான கதாயுதத்தைத் தரித்தவனும், ஸ்வர்ண மயமும் ஆச்சரயகரமுமான கவசமுள்ளவனும், கெட்ட வார்த்தைகளால் மர்மஸ்தானங்களைப்

பிளப்பவனுமாகிய அந்த அஸுரனை நோக்கி. "அட! நாங்கள் வனத்திலிருக்கும் மிருகங்களேயாம். இது உண்மையே. உன்னைப்போன்ற கிராம சிம்ஹத்தை (நாயை) தேடுகிறோம். தைரியமுள்ளவர்கள் யமனுடைய பாசத்தால் கட்டப்பட்ட உன்னுடைய ஆத்ம சிலாகையால் (தன்னைத்தானை புகழ்ந்து கொள்வது) லட்சியஞ் செய்யமாட்டார்கள். நாங்கள் பாதாளவாசிகளுடைய அடைக்கலமான சொத்தை அபகரிப்பவர்கள். வெட்கமில்லாதவர்கள் உன்னுடைய கதாயுதத்தால் வெட்டப்பட்டவர்கள். ஆனாலும் நிற்கிறோம். பலிஷ்டனாகிய உன்னுடன் விரோதத்தை உண்டுபண்ணிவிட்டு எவ்விடம் போவோம்? யுத்தத்திற்கு சன்னத்தர்களாக இருக்கிறோம். நீ காலாட் படைகளுக்கு அதிபதி, நம்மை ஜயிப்பதற்குச் சீக்கிரம் முயற்சி செய். நீ யோசனையில்லாதவன். பிரதிக்ஞையை நிறைவேற்றாதவன். சபைக்குரியவனல்ல, ஆதலால் நம்மைக் கொன்று பந்துக்களுடைய துக்கத்தை நிவர்த்திசெய்" என்றார்.

இப்படிப்பரம புருஷனால் பரிஹசிக்கப்பட்ட அஸுரன் மஹாசர்ப்பம் போல் மிகவும் கோபத்தால் கலங்கிய இந்திரியங்களுள்ளவனாகி பகவானுடைய சமீபம் வந்து கதாயுதத்தால் அவரை அடித்தான். சத்ருவாகிய அசுரன் மார்பில் கதாயுதத்தால் அடிக்கும்போது பகவான் அந்த அடி தம்முடைய சரீரத்தில் படாமலிருக்கும்படி குறுக்காக ஒதுக்கங் கொடுத்து ஏமாற்றினார். அது மிருத்யுவை யோகா ருடன் வஞ்சித்தது போலிருந்தது கோபமுள்ளவனும், பரபரப்பினால் உதட்டைக் கடித்துக்கொள்ளுகிறவனும், கதாயுதத்தை அடிக்கடி சுழற்றிக்கொண்டு

இருப்பவனுமான அசுரனைப் பகவான் எதிர்த்தார். அசுரன் கதாயுதத்தால் பிரபுவாகிய பகவானுடைய வலத்தோளை உத்தேசித்து அடித்தான்.

ஓ விதுர! அதன் அடி தம்மீது படுவதற்கு முன்னமேயே பகவான் யுத்தத்தை நன்றாக அறிந்த வராகையால் தம்முடைய கதாயுதத்தால் சத்துருவின் கதாயுதத்தை அடித்தார், இப்படி ஹிரண்யாக்ஷனும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் ஒருவரை யொருவர் ஜயிக்கவேண்டும் என்ற விருப்பத்துடன் மிகுந்த முயற்சியுள்ளவர்களாகப் பெரியவையான கதாயுதங்களைக் கொண்டு அடித்துக்கொண்டார்கள். இப்படி அவ்விருவர்களும் பூமிக்காக யுத்தம் செய்தார் கள். கூர்மையான கதைகளால் அவர்களுடை ய சரீரம் அடிக்கப்பட்டு இரத்தம் பெருகியது. அதனால் இருவர்களுக்கும் அதிகக் கோபமுண்டாயிற்று. பலவகையான நடையைக் காண்பித்தார்கள். அந்த யுத்தமானது மதித்த இரண்டு விர்ஷபங்கள் பசுவின் நிமித்ததம் சண்டை செய்வது போலிருந்தது. ஓ குரு வம்சத்தில் பிறந்தவரே! யக்ஞவராஹ ரூபியான பகவானுக்கும், அசுரனுக்கும் பூமியின் நிமித்தமாக நேர்ந்த யுத்தத்தைப் பார்ப்பதற்குப் ப்ரஹ்மதேவர் அவ்விடம் அனேக மஹரிஷிகளுடன் வந்தார். மேலும் ஆயிரம் மஹரிஷிகளுக்கும் அதிபதிகளாகிய அவர் பராக்கிரம கர்வமுள்ளவனும், பயமற்றவனும் செய்வதற்குப் பதில் செய்பவனும், பதில் செய்யமுடியாத பராக்கிரமமுள்ளவனுமாயிருக்கும் அஸுரனைப் பார்த்து, ஆதிவராஹ ஸ்வரூபியும். புராண புருஷனுமான ஸ்ரீமந் நாராயணனை நோக்கி, 'ஓ தேவ! உம்முடைய பாதங்களைச் சரணமடைந்த

தேவர்களுக்கும், ப்ராஹ்மணர்களுக்கும், பசுக்களுக்கும், அபராதஞ் செய்யாத பிராணிகளுக்கும் இந்த அஸுரன் கெடுதியைச் செய்தவன். பயத்தைச் செய்தவன் கெட்ட காரியத்தைச் செய்தவன், நம்மிடமிருந்தும் வரத்தை அடைந்தவன். தன்னுடன் யுத்தஞ் செய்யத் தகுந்த வீரனைத் தேடிக்கொண்டு உலகம் முழுவதும் அலைந்தவன். இவனை எதிர்த்துயுத்தம் செய்பவன் உலகத்திலொருவனுமில்லை. மிக்க உபத்திரவத்தைச் செய்தவன் மிக்க மாயாவி. கர்வமுள்ளவன். பயம் இல்லாதவன். மிக்க அசத்து, ஆதலால் ஓ தேவ! கோபங்கொண்ட ஸர்ப்பத்தினிடம் சிறுவன் விளையாடுவதுபோல் அவனுடன் விளையாடுவது உசிதமல்ல ஓ நாசமற்றவரே! பயங்கர உருவமுள்ள இந்த அஸுரன் தனக்குப் பலம் விருத்தியடையக்கூடிய காலத்தை அடைந்து விருத்தியடைவதற்கு முந்தியே பாபியாகிய இவனை நீர் உம்முடைய மாயா பலத்தால் நாசஞ் செய்யும். இந்த சந்தியா காலமானது மிகவும் கோரமானது. உலகங்களுக்கு நாசத்தைச் செய்யக்கூடியது. ஓ ஸகல ஜகத்ஸ்வரூபியாயிருப்பவரே! அபிஜித் என்னும் சுபமாகிய காலம் வந்துவிட்டது. தேவர்களுக்கு ஜயத்தை உண்டுபண்ணும். உமக்கு மித்திரர்களான எங்களுடைய க்ஷேமத்திற்காக இவனைக் கொல்லுக. தெய்வச் செயலால் இந்த அஸுரன் தனக்கு மிருத்யுவாக முன்னமே ஏற்பட்டிருந்த உம்மிடம் சேர்ந்தான். ஆதலால் இவனைக் கொன்று உலகத்திற்கு க்ஷேமத்தை உண்டு பண்ணும், என்று பிரார்த்தித்தார்.

அத்தியாயம்–19

ஹிரண்யாக்ஷ வதம்

1–29 அதனைக் கேட்ட பகவான் ப்ரஹ்மதேவர் கபடமற்றவராகச் சொல்லுகிறாரென்று நினைத்துச் சிரித்து (கால ஸ்வரூபியான என்னாலும் நல்ல முகூர்த்தம் எதிர்பார்க்கப்பட வேண்டுமாவென்று) ப்ரீதியுள்ள பார்வையால் அந்த வார்த்தையை அங்கீகரித்தார். பின்பு தமக்கெதிரில் பயமில்லாமல் சஞ்சரிக்கும் சத்ருவினுடைய கன்னத்திற்குக் கீழாகக் கதாயுதத்தால் அடித்தார். பிறகு அந்த அசுரன் தன்னுடைய கதையால் பகவானுடைய கதாயுதத்தை அடித்தான். அதனால் கதையானது அடிக்கப்பட்டுப் பகவானுடைய கையிலிருந்து சிதறிக் கீழே விழுந்தது. அது மிகவும் ஆச்சரியமாக விருந்தது. அப்பொழுது அஸுரன் ஆயுதமில்லாமலிருக்கும் பகவானைப் பார்த்து அது சத்ருவை ஜயிக்க தகுந்த சமயமானாலும் தர்மத்தை நினைத்துக் கொண்டு அடிக்க வில்லை. இப்படிப் பகவானுடைய கதை உடைந்தபின் தேவர்கள் ஹா ஹா என்று கதறும்போது பகவான் அந்தத் தர்மத்தைப் பெரிதாக நினைத்ததுமின்றிச் சக்கரத்தை நினைத்தார்.

அப்பொழுது அவருடைய மாஹாத்மியத்தை நன்றாக அறியாதவர்களான தேவர்கள் யுத்தத்தில் தைத்தியர்களுக்குள் தாழ்ந்தவனும் தம்முடைய பார்ஷதர்களுக்குள் முக்கியனுமான ஹிரண்யாக்ஷனுடன் யுத்தஞ் செய்பவரும் யுத்தத்தில் பரப்பரப்புள்ள சக்ராயுதத்தைத் தரித்தவருமாகிய பகவானைப்

பார்த்து, 'உமக்கு க்ஷேமமுண்டாகும்; இந்த அசுரனைக் கொல்லும், என்று சொன்னதுமல்லாமல் நான்கு புறத்திலும் பலவகையாகப் பேசிக்கொண்டார் கள். இம்மாதிரியான தேவர்களுடைய வார்த்தையைக் கேட்டும் தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரும், சக்ராயுதத்துடன் யுத்தத்திற்கு ஸன்னத்தராயிருப் பவருமான பகவானைப் பார்த்தும், அந்த அஸுரன் மிக்க கோபத்துடன் உதட்டைக் கடித்துக் கொண்டான். மேலும் பயங்கரங்களாகிய சிங்கப் பற்களுள்ள அவன் கண்களால் எரிப்பவன்போலப் பகவானிடம் ஓடி வந்து, 'நீ கொல்லப்பட்டாய்' என்று சொல்லிக் கதாயுதத்தால் அடித்தான். யக்ஞவராஹ ரூபியான பகவான் சத்ருவாகிய அஸுரன் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே வாயுவிற்குச் சமமான வேகமுள்ள அந்தக் கதாயுதத்தை வலக்காலால் சிரமமின்றி உதைத்தார்.

மேலும், "ஓ அஸுரனே! ஆயுதத்தை எடுத்துக் கொள். ஜயிக்க வேண்டுமென்ற விருப்பமுள்ளவனாக இருப்பதால் அதற்குத் தகுந்த முயற்சியைச் செய்" என்றும் சொன்னார். அதனைக் கேட்ட அஸுரன் அந்தக் கதையை வராஹரூபியான பகவானை உத்தேசித்துப் ப்ரயோகித்தான். தம்மைப் பார்த்து வேகமாக வரும் அந்தக் கதையைக் கண்ட பகவான் தம்மீது விழுவதற்கு முன்னமேயே அதைப் பிடித்துக் கொண்டார். அது கருடன் பெண் சர்ப்பத்தைப் பிடித்தது போலிருந்தது. பிறகு பகவான் அந்தக் கதையை அந்த அஸுரனுக்குக் கொடுக்க விரும்பியும் அவன் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவன்

தன்னுடைய பராக்கிரமம் தடைப்பட்டபடியால் மானங் குறைந்து காந்தியற்றவனாயிருந்தான்.

மேலும், ப்ராஹ்மணனை உத்தேசித்து ஆபிசார கர்மத்தைச் செய்பவர் போல் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை உத்தேசித்து ஜ்வலிக்கும் அக்கினி போன்ற மூன்று முனையுள்ள சூலத்தைப் ப்ரயோகித்தான். அந்த அஸுரனால் ப்ரயோகிக்கப்பட்டதும் ஆகாசத்தின் மத்தியில் காந்தியுடன் ப்ரகாசிப்பதுமான அந்தச் சூலத்தைப் பகவான் கூர்மையான முனையுள்ள சக்ராயுதத்தைக் கொண்டு இந்திரன் கருடனுடைய சிறகுகளை வெட்டியது போல வெட்டினார். பின்பு பகவானுடைய சக்ராயுதத்தால் தன் சூலம் வெட்டப் பட்டதைப் பார்த்த அஸுரன் மிக்க கோபத்துடன் கையை முஷ்டி பண்ணிக் கொண்டு மிகுந்த விஸ்தாரமுள்ளதும், விபூதிகளுள்ளதுமான அவருடைய மார்பில் குத்திக் கர்ஜித்துக் கொண்டு கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்தான்.

ஓ விதுரரே! அந்த ஆதிவராஹமூர்த்தியாகிய பகவான் இம்மாதிரி அவனால் அடிக்கப்பட்டும் புஷ்ப மாலையால் அடிக்கப்பட்ட யானைபோல அசையவே இல்லை. பின்பு அந்த அஸுரன் யோகமாயைக்கு அதிபதியாகிய பகவானிடத்தில் பலவகையான மாயையைச் செய்தான். அவைகளைக் கண்டு ஜனங்கள் ப்ரளய காலம் வந்துவிட்டதென்று நினைத்தார்கள். காற்று மிகவும் கடுமையாக வீசிற்று. தூளிகளாலுண்டான இருள் பரவிற்று. யந்திரங்களால் எறியப்பட்டது போல எல்லாத் திக்குகளிலும் கற்கள் விழுந்தன. ஆகாயத்திலிருக்கும் நட்சத்திரங்களின்

தேஜஸ் குறைந்தது. மேகங்கள், மின்னல், கர்ஜனம் ஆகிய இவைகளுடன் அமேத்யம், மூத்திரம் ஆகிய துர்நாற்றமுள்ளவைகளையும், மயிர்களையும், எலும்புகளையும் வர்ஷித்தன. மலைகள் பலவகையான ஆயுதங்களை விட்டன. மேலும் திக்கையே வஸ்திர மாய் உடையவர்களும், அவிழ்ந்த தலை மயிர்கள் உள்ளவரும் சூலாயுதத்தை தரித்தவர்களுமான ராக்ஷஸ ஸ்திரீகள் காணப்பட்டார்கள். யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், காலாட்படை, குதிரைபடை, இரதங்கள், யானைகள் முதலிய ஸைனியங்களால் கடுமையான வார்த்தைகள் சொல்லப்பட்டன. இம்மாதிரியான மாயையைப் பார்த்து மூன்று ஸவனங்களாகிய பாதங்களுள்ள அந்த மாயைகளை நாசம் பண்ணக் கூடிய தம்முடைய சக்ரத்தைப் பிரயோகித்தார்.

அப்பொழுது திதி தேவியானவள் தன்னுடைய பர்த்தாவாகிய மாரீசருடைய கட்டளையை நினைத்துக் கொண்டாள். அப்பொழுது அவளுடைய ஹிருதயம் ஆனது நடுங்கிற்று. அவளுடைய ஸ்தனத்திலிருந்து இரத்தம் பெருகிற்று. பின்பு அந்த அஸுரன் தான் செய்த மாயைகள் வீணாகிவிட்டதைப் பார்த்துப் பகவானுக்கு எதிரில் வந்து கோபத்துடன் இருகைகளால் அவரைக் கட்டி வஜ்ரம் போன்ற முஷ்டிகளால் அடித்தான். அப்பொழுது; பகவான் அந்த அஸுரனுடைய கன்னத்தில் தமது கையால் அடித்தார். அது மஹேந்திரன் விருத்திராசுரனை அடித்தது போலிருந்தது. ஸகல உலகங்களையும் ஜயிப்பவரான பரமபுருஷன் விளையாட்டாகச் சத்துருவை அடித்தபொழுது அவனுடைய சரீரம் நடுங்கிற்று. கண்களிரண்டும் வெளியில் வந்தன.

கைகளும், கால்களும், கழுத்தும் சிதறின. இப்படி அவனுடைய சரீரமானது பெருங்காற்றினால் பெரிய மரம் வீழ்வது போலக் கீழே விழுந்தது. இப்படிப் பகவானால் அடிக்கப்பட்டுப் பூமியில் படுத்தவனும், விசேஷ தேஜஸுள்ளவனும், பயங்கரமாகிய சிங்கப் பற்கள் உள்ளவனும், உதட்டைக் கடித்தவனுமாகிய அஸுரனைப் ப்ரஹ்மா முதலியவர்கள் பார்த்து "ஆச்சரியம், இம்மாதிரியான மரணம் யாருக்குக் கிடைக்கும்? யோகிகள் மோக்ஷத்தை அடைய விரும்பி எவரை ரஹஸ்யத்தில் சித்தத்தை ஒருவகைப் படுத்தித் தியானஞ் செய்கிறார்களோ, அந்தப் பரம புருஷனுடைய முகத்தை தரிசித்துக் கொண்டே அவரால் அடிக்கப்பட்டு அஸுரன் சரீரத்தை விட்டான். இவர்கள் பகவானுடைய பார்ஷதர்கள், பாபத்தால் இம்மாதிரியான ஜன்மத்தை அடைந்தவர் கள். இன்னும் சில ஜன்மத்திற்குப் பிறகு தங்களுடைய பதத்தை அடைவார்கள்" என்று சொல்லிக் கொண்டார்கள்.

30 அப்பொழுது தேவர்கள் பகவானை நோக்கி, "ஓ ஈச! ஸகல யாகங்களை விஸ்தரிப்பவரும், பரிபாலன சமயத்தில் சத்வார்த்தியாக அவதரிப்பவருமாகிய உமக்கு அடிக்கடி நமஸ்காரம் செய்கிறோம். ஜகத்திற்கு உபத்திரவத்தைச் செய்பவனாகிய இந்த அஸுரன் எங்களுடைய பாக்கியத்தால் கொல்லப் பட்டான். நாங்கள் கவலையற்றவர்களாக ஆனோம்" என்று ஸ்தோத்திரஞ் செய்தார்கள்.

31–38 ஸஹிக்க முடியாத பராக்கிரமமுள்ள ஹிரண்யாக்ஷனை ஆதிவராஹ ரூபியான பகவான்

கொன்று ப்ரஹ்மதேவர் முதலியவர்களால் கொண்டா டப்பட்டும் குறைவற்ற உத்ஸவமுள்ள தம்முடைய லோகம் சென்றார். "ஓ விதுர! நான் என்னுடைய குருவினிடமிருந்து தெரிந்துகொண்டபடி பகவான் வராஹாவதாரஞ் செய்து ஹிரண்யாக்ஷனைக் கொன்ற கதையைச் சொன்னேன்" என்று மைத்ரேயர் விதுரருக்கு உபதேசித்தார். ஓ பரிக்ஷித்து மஹாராஜனே! அதனைக் கேட்ட விதுரர் பாகவதோத்தமராகையால் மிகுந்த ஆனந்தமடைந்தார். உலகத்தில் புண்ய ச்லோகர்களும் (நல்வினையைக் கொடுக்கும் பெயருள்ளவர்கள்) மிகுந்த கீர்த்தியுள்ளவர்களுமாகிய அரசர்களுடைய கதையைக் கேட்பதினாலேயே சந்தோஷமுண்டாகிறது. ஸ்ரீவத்ஸமென்ற அடையாளம் உள்ள ஸ்ரீமஹாவிஷ்ணுவின் சரிதத்தைக் கேட்பதால் ஆனந்தம் உண்டாவதற்கு என்ன ஆட்சேபம்? கஜேந்திரமானது முதலையால் பிடிக்கப்பட்டு பகவான் உடைய பாதாரவிந்தத்தைத் தியானஞ் செய்யும் போது பெண் யானைகள் கதறின. அப்பொழுது அவர் யானையை அந்தக் கஷ்டத்திலிருந்து காப்பாற்றினார். கபடமற்ற மனமுள்ளவர்களும், அவரையே சரணமாக அடைபவர்களுமான மனிதர்களால் எளிதில் ஆராதிக்கக் கூடியவரும், அசத்துக்களால் ஆராதிக்க முடியாதவருமான பகவானை க்ருதக்ஞனான (செய்த உபகாரங்களை நினைப்பவன்) எவன்தான் உபாசிக்க மாட்டான்? ஆதிவராஹ மூர்த்தியின் க்ரீடாரூபமானதும், மிக்க அற்புதமானதுமான ஹிரண்யாக்ஷ வதத்தை எவன் கேட்கிறானோ, கானம் செய்கிறானோ, அனுமோதிக் கிறானோ அவன் ப்ரஹ்மஹத்யை செய்தவனானாலும், ஒரு க்ஷணத்திற்குள் சுத்தனாகி விடுகிறான். இந்த ஹிரண்யாக்ஷ வதம் என்கிற கதையானது மிகுந்த

புண்ணியத்தைக் கொடுக்கக்கூடியது; மிகவும் பரிசுத்தியை உண்டு பண்ணைக்கூடியது; தனத்தை உண்டு பண்ணைக் கூடியது; கீர்த்தியை விருத்தி செய்யக்கூடியது; தீர்க்கமான ஆயுளையும் அவரவர்கள் உடைய இஷ்டத்தையும் கொடுக்க வல்லது. யுத்தத்தில் பிராணனையும், இந்திரியங்களையும் காப்பாற்றக் கூடியது. மிகுந்த பராக்கிரமத்தைக் கொடுக்கக் கூடியது. ஓ மஹாராஜ! இக்கதையைப் பக்தியாய்க் கேட்பவர்கள் மரணமடையும் காலத்தில் ஸ்ரீமந் நாராயணனை அடைவார்கள்.

Sri Rama Nama Bank

நாம பெட்டகம்



Help Preserve Namas
from
Air, Water, Fire & Pests

Each pettagam
preserves
13 crores of
Nama

Sponsor
Steel cubboards
(Pettagam)
Rs. 3500/-

ஸ்ரீ ராம் ஜெய ராம் ஜெய் ஜெய ராம் என்ற
மஹா மந்த்ரம்

13 எழுத்துக்கள் கொண்டது.
அக்ஷரத்திற்கு 1 கோடியாக 13 கோடி கொள்ளளவு கொண்ட
பெட்டகங்களில் நாமம் ப்ரதிஷ்டை
செய்யப்படுகிறது.இப்பெட்டகங்கள் நாமத்தை ஈரம், காற்று,
மழை, தீ, பூச்சி இவைகளிலிருந்து சுமார் 60 வருடத்திற்கு
குறையாமல் நாமத்தைப் பாதுகாத்து பல கோடி நபர்கள் தர்சன
மாத்திரத்தினால் நாம ஸ்மரணம் பெற ஏதுவாகும்.

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

பாகம் –3

ஸ்கந்தம் 5 அத்தியாயம் 7 முதல்
ஸ்கந்தம் 7 அத்தியாயம் 10 வரை

Released by Maran's Dog, Toronto , Canada

இஞ்சிக்கொல்லை
R. சிவராம சாஸ்திரிகள்
அவர்களால் 1988ல் மொழி
பெயர்க்கப்பட்டது.

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ராம நாம வங்கியின் ப்ரசார் பிரசுர் பிரிவு
ராம மந்திரம் –2, விளாயகம் தெரு,
சென்னை – 600 033. ☎: 24893736

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

TITLE	:	SRIMAD BHAGAVATHAM, TAMIL VACHANAM
AUTHOR	:	INZIKOLLAI R. SIVARAMA SASTRIGAL WRITTEN IN 1908
SIZE	:	CROWN OCTAVE
EXTENT	:	2736 PAGES CONSISTING OF SEVEN VOLUMES
PRICE	:	RS.600/ SET
FIRST EDITION	:	1996
SECOND EDITION	:	2004
THIRD EDITION	:	2007

ஸ்ரீமத் பாகவதம்

ப்ரதி பத அர்த்தம்

மூல ஸ்லோகங்கள்
ஸம்ஸ்கிருதத்திலும்
தமிழிலும்

பதப்பிரிப்பும் அர்த்தமும்
தமிழில்

7 பாகங்கள்
6224 பக்கங்கள்

விலை ரூ 1500/-

தொடர்பு கொள்க:
ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகளின்

பாகவத தர்மம்
பத்திக்கையில் வெளி வந்த தொடரின்
நூல் வடிவம்

ஸ்ரீ கிருஷ்ணை சைதன்யர்
விலை ரூ. 200/-

தொடர்பு கொள்ளவும் :

ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்

ஸ்ரீ ராம நாம வங்கியின் ப்ராசாரப் பிரகரப் பிரிவு
ராம மந்திரம் – 2, வினாயகம் தெரு,
சென்னை – 600 033. ☎ : 24893736

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

மூலம் தமிழில்

899 பக்கங்கள்

விலை ரூ. 450/-

ஸ்ரீ ராம நாமம் எழுதுவதற்கு நோட்டுகளை
இலவஸமாக வழங்கி பக்தர்கள் மூலம் "ராம" நாமம்
எழுதுவிக்கின்ற வேள்வியை நடத்தி வருகின்ற
ஸ்ரீராம நாம வங்கியின் பிரசாரப் பிரசுரப் பிரிவான

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

தமிழ் வசனம்

1322 பக்கங்கள் அடங்கியது

விலை ரூ. 300/-

ஸ்ரீ ராம நாமம் எழுதுவதற்கு நோட்டுகளை
இலவஸமாக வழங்கி பக்தர்கள் மூலம் ''ராம'' நாமம்
எழுதுவிக்கின்ற வேள்வியை நடத்தி வருகின்ற
ஸ்ரீராம நாம வங்கியின் பிரசாரப் பிரசுரப் பிரிவான

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

ஸ்ரீமத் பாகவதம்-தமிழ் வசனம்

பாகம்–3

பொருளடக்கம்

		பக்கம்
	ஸ்கந்தம்–5	
7.	பரதருடைய சரிதம்	1
8.	பரதர் மான் ஜன்மத்தை அடைந்தது	4
9.	பரதர் ப்ராஹ்மண ஜன்மத்தை அடைந்தது	10
10.	ஜடபரதர் பல்லக்குத் தூக்கியது	16
11.	ரஸுகணருக்குப் பரதர் ஞானத்தை உபதேசித்தது	23
12.	பரதர் அரசனுடைய ஸந்தேஹத்தை நிவர்த்தித்தது	27
13.	ஸம்ஸார மார்க்கம்	31
14.	(முன் அத்தியாயத்தின் விளக்கம்)	37
15.	பரதருடைய வம்சம்	45
16.	த்வீபங்களின் லக்ஷணம்	48
17.	கங்கையின் வரலாறு	54
18.	பத்ராச்வம் முதலியவை	60
19.	கிம் புருஷம்	68
20.	ப்லக்ஷத்வீபம்	74
21.	த்யுமண்டலம்	83
22.	சந்திரன் முதலியவைகளின் மண்டலம்	88
23.	த்ருவ மண்டலம்	92
24.	அதலம் முதலிய லோகங்கள்	95
25.	ஆதிசேஷன் வரலாறு	103
26.	நரகங்கள்	106
	ஸ்கந்தம்–6	
1.	அஜாமிளர் உபாக்யானம்	116
2.	அஜாமிளர் விஷ்ணுலோகஞ் சென்றது	125

பக்கம்

3. யமனுக்கும் தூதர்களுக்கும் ஸம்வாதம் 131
4. தக்ஷருடைய வம்சம் 136
5. தக்ஷர் நாரதரை சபித்தது 144
6. தக்ஷ கன்னிகைகளின் வம்சம் 149
7. விச்வரூபன் புரோகிதனாக இருந்தது 155
8. நாராயண கவசம் 160
9. விசுவரூப வதம் 166
10. விருததிராசுரயுத்தம் 176
11. (முன் அத்தியாயத் தொடர்ச்சி) 180
12. விருததிரவதம் 184
13. ப்ரஹ்மஹத்யா தோஷமுள்ள இந்திரன் ... 189
14. விருத்திரனுடைய வரலாறு 192
15. சித்திரகேதுவுக்கு ஞானோபதேசம் செய்தது 199
16. சித்திரகேதுவுக்கு நாரதர் வித்தையை உபதேசித்தது 203
17. சித்திரகேது சாபத்தால் அசுர ஜன்மத்தை 212
18. மருந்துகளின் உற்பத்தி 217
19. பும்ஸவன விரதத்தின் ஸ்வரூபம் 227

ஸ்கந்தம்–7.

1. பார்ஷதர்களுடைய சாபம் 232
2. ஹிரண்யகசிபு தன் மாதாவை சமாதனஞ் 240
3. ஹிரண்யகசிபு வரம் பெற்றது 249
4. ஹிரண்யகசிபு உலகத்தை உபத்திரவித்தது 255
5. ப்ரஹ்லாதரைக் கொல்ல முயற்சித்தது 261
6. ப்ரஹ்லாதர் சிறுவர்களுக்குத் தத்துவத்தை 272
7. நாரதருடைய உபதேசம் 278
8. ஹிரண்யகசிபுவின் வதம் 287
9. ப்ரஹ்லாத ஸ்துதி 298
10. பகவான் ப்ரஹ்லாதரை அநுக்ரஹித்தது 311

அத்தியாயம்–7

பரதருடைய சரித்ரம்

மஹாபாகவதராகிய பரதர் பகவானுடைய சங்கல் பத்தின்படி பூமியை பரிபாலித்து விச்வரூபனுடைய பெண்ணாகிய பஞ்சஜனீ என்பவளை கல்யாணஞ் செய்து கொண்டார். அவளிடத்தில் அவருக்கு பிதாவுக்கு சமமான குணசாலிகளான சுமதி, ராஷ்ட்ரபிருத், சுதர்சனன், ஆசரணன், தூம்ரகேது என்ற ஐந்து புத்ரர்கள் உண்டானார்கள். அது அஹங்காரத்திலிருந்து பூதஸூக்ஷ்மங்கள் உண்டாகிறது போலிருந்தது. பரதருடைய ராஜ்யகால முதல் இந்த வர்ஷத்திற்கு பாரத வருஷமென்று பெயருண்டாயிற்று. அதற்கு முன் இந்த வர்ஷத்திற்கு அஜநாடமென்று பெயரிருந்தது. ஸர்வஜ்ஞராகிய அந்த அரசன் தன்னுடைய பிதா, பிதாமஹர் ஆகிய இவர்கள் போல் ப்ரஜைகளை தர்மந்தவறாமல் காப்பாற்றி வந்தார். ப்ரஜைகளும் அரசனிடத்தில் விசேஷ ப்ரீதியுடன் தங்கள் தங்கள் தர்மத்தை விடாமல் அனுஷ்டித்து வந்தார்கள். மேலுமவர் யஜ்ஞங்களாலும் (யூபமில்லா தவைகள்). க்ரதுக்களாலும் (யூப முள்ளவைகளாலும்) பகவானாகிய நாராயணனை பூஜித்தார். மிக்க ஸ்ரத்தையுடன் அக்னி ஹோத்ரம், தர்ச பூர்ண மாஸம் சாதுர்மாஸ்யம், ஸோமம் இவைகளுடைய ப்ரக்ருதியா லும் பகவானை பூஜித்தார். இப்படி அநேக யாகங்கள் செய்யப்பட்டிருக்கும் பொழுது அவைகளாலுண்டான அபூர்வமென்கிற தர்மத்தை யஜுபுருஷனும், ஸகல தேவதைகளுடைய அடையாளத்தைச் சொல்லும் மந்திரங்களுக்கு அர்த்தமாகிய இந்திரன் முதலிய

தேவதைகளுக்கு அதிபதியாயிருப்பதனால் சாக்ஷாத் கர்த்தாவும், பரப்ரம்ஹமும், பரதேவதையுமான வாசு தேவரிடத்தில் சமர்ப்பித்து தம்முடைய சாமர்த்யத்தால் ஆசை முதலியவைகளை யொழித்து அத்வர்யுக்களால் ஹவிஸ்ஸானது ஹோமம் பண்ணப்படும் பொழுது யஜமானராகிய பரதர் யஜ்ஞபாகமுள்ள தேவர்களை ஸ்ரீ நாராயணனுடைய அவயங்களாக த்யானம் பண்ணினார். இப்படி சுத்தமான கர்மங்களை அனுஷ்டித்ததால் அவருடைய சித்தமானது சுத்தமா யிற்று. மேலும் அவருக்கு ஹிருதயத்துக்குள்ளிருக்கும் ஆகாச சரீரியும், வாசுதேவரும், மஹா புருஷனும், ஸ்ரீவத்ஸம், கௌஸ்துபம், சங்கம், சக்ரம், கதை இவைகளாலங்கரிக்கப்பட்டும் பக்தர்களான நாரதர் முதலியவர்களுடைய ஹிருதயத்தில் ஸ்திரமாக வசிப் பவரும், புருஷரூபியாக ப்ரகாசிப்பவருமான பரப்ரஹ்மத் தினிடத்தில் ஒவ்வொருநாளும் பக்தி அதிகரித்தது. இம்மாதிரி வெகுவர்ஷகாலம் ராஜ்யபரிபாலனஞ் செய்து தம்முடைய வம்சபரம்பரையாய் அனுபவிக்கப் படும் ஸொத்தை தம்முடைய புத்ரர்களுக்கு பிரித்துக் கொடுத்து, ஸகல சம்பத்துக்களுக்கும் இருப்பிடமான தம்முடைய க்ருஹத்தை விட்டு ஹரிக்ஷேத்ரம் என்ற புலகருடைய ஆஸ்ரமம் சென்றார். அந்த க்ஷேத்ரத்தில் பகவான் இப்பொழுதும் அங்கு வசிக்கும் பக்தர்களி டத்தில் ப்ரீதியினால் அவர்களுடைய இஷ்டப்படி தர்சனங் கொடுக்கிறார். அவ்விடத்தில் மேலும் கீழும் நாபியுள்ள சிலாசக்ரங்களுள்ள கண்டகீ என்ற நதி யானது அவ்விடத்திலிருக்கும் ஆச்ரமங்களை பரிசுத்தப் படுத்துகிறது. அந்த புலஹாச்ரமத்தில் பலவகையான புஷ்பங்கள், தளிர்கள், துளசி, ஜலம், கிழங்கு, வேர், பழம் முதலியவைகளாலும் பகவானுடைய ஆராதனத்தை

செய்து கொண்டு விஷய ஆசையையொழித்து இந்திரியங்களை நிக்ரஹித்து ஏகாந்தத்தில் மிகுந்த சுகத்தை அடைந்தார். இப்படி எப்பொழுதும் பகவானை பூஜிப்பதால், பகவானிடத்தில் அநுராகம் அதிகரித்து அதனால் ஹிருதயம் உருகி ப்ரயத்னமற்றவராகி அதிக ஆனந்தத்தால் மயிர் கூச்சிலை அடைந்து, பகவானிடத் திலிருக்கும் ப்ரீதியினால் ஆனந்தத்தைப் பெருக்கி அதனால் கண்தெரியாதவராக ஸ்ரீ பகவானுடைய சிவந்த பாதாரவிந்தத்தை த்யானஞ் செய்வதால் விருத்தி அடைந்த பக்தியோகத்தால் பூர்ணராயும், மிகுந்த ஆனந்தமடுவில் மூழ்கின புத்தியுள்ளவராகவும், பகவானுடைய பரிசர்யையைக் கூட மறந்திருந்தார் இம்மாதிரி பகவத் வ்ரதத்தை அனுசரித்து மான் தோலுடுத்தி ஒவ்வொரு காலமும் ஸ்நானம் பண்ணு வதால் நனைந்தும், பொன்னிறமுள்ளதுமான ஜடையை தரித்தும், உதயமாகிய சூர்யமண்டலத்தில் சூர்ய ப்ரகாசத்தால் ஹிரண்மயபுருஷனை த்யானம் பண்ணிக் கொண்டு பின்வருமாறு சொன்னார்.

12. ப்ரகிருதியைக் காட்டிலும், மேலானதும் கர்ம பலத்தைக் கொடுக்கக் கூடியதுமான சூர்யனுடைய ஸ்வரூபமாகிய இந்த தேஜஸ்ஸானது தன் மனத்தைக் கொண்டு இந்த ஜகத்தை ஸிருஷ்டிக்கிறது. பின்னும் இந்த ஜகத்தில் அந்தர்யாமியாக ப்ரவேசித்து ஆசையுள்ள ஜீவனை சித்சக்தியைக் கொண்டு காப் பாற்றுகிறது. மேலும் புத்திக்கு ப்ரவிருத்தியை உண்டு பண்ணும் இந்த தேஜஸ்ஸை சரணமடைகிறோம்.

அத்தியாயம்–8

பரதர் மான் ஜன்மத்தை அடைந்தது

ஒருகால் பரதர் மஹாநதியில் ஸ்நாநம் பண்ணி நித்யநைமித்திக கர்மங்களை முடித்துக்கொண்டு ப்ரணவத்தை ஜபித்து, மூன்று முகூர்த்தம் ஜலக்கரையில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது ஒரு பெண்மான் தாஹத்தால் அந்த இடத்திற்கு வந்து நதியில் ஜலத்தை அதிக ஆவலுடன் குடித்தது. அந்த சமயத்தில் சமீபத்தில் ஒரு சிங்கமானது மிகவும் பயங்கரமாக சப்தித்தது. அதை கேட்ட அந்த பெண் மான் இயற்கையிலேயே பயந்ததாகையால் மிகவும் பயந்து நாலுபுறத்திலும் மிரளவிழித்து பயத்தால் ஜலத்தை குடியாமலேயே அந்த நதியைத் தாண்டி அக்கரை சென்றது. அப்பொழுது அது கர்ப்பமுள்ளதாகயிருந்தபடியால், பயத்தாலும், தாண்டும் வேகத்தாலும் கர்ப்பமானது நழுவி ஜலத்தில் விழுந்தது. (ப்ரசவித்தது) தாண்டியது, பயம், துக்கம் ஆகிய இவைகளால் பீடிக்கப்பட்டதும், தன்னுடைய கூட்டத்தைவிட்டுப் பிரிந்ததுமான அந்த மானானது ஒரு குஹையில் பிரவேசித்தது; மரணத்தையும் அடைந்தது. அதைக்கண்ட பரதர் ஜலத்தில் விழுந்த மான்குட்டியினிடத்தில் மிகுந்த கருணை வைத்து பந்துபோல அதனை எடுத்துக்கொண்டு தமது ஆச்ரமம் சேர்ந்தார். அதுமுதல் தினந்தோறும் விசேஷப்ரியத்துடன் அந்தமான் குட்டியை போஷிப்பது, ரக்ஷிப்பது, திருப்தி செய்வது ஆகிய இவைகளுக்கு வேண்டிய கார்யத்தையே தியானம் பண்ணிக்கொண்டிருந்தார். அதனால் அவருடைய நியமங்களும், இந்திரிய

நிக்ரஹங்களும், பகவானைப் பூஜிப்பதும், நாளுக்கு நாள் முறையே குறைந்து போயின. மேலும், அவர் பின்வருமாறு தனக்குள் யோஜிக்கலானார் "ஆச்சர்யம்! இந்த மான்குட்டியானது காலத்தின் மஹிமையால் தன் பந்துக்களை விட்டுப் பிரிந்து என்னைச் சரணமாக அடைந்து என்னையே தாயாகவும், பிதாவாகவும், ப்ராதாவாகவும், ஞாதியாகவும், கூட்டத்தாராகவும் நினைத்துக் கொண்டிருப்பதுமன்றி வேறு ஒன்றையும் அறியாததாகவும் இருக்கிறது. என்னிடத்தில் விசேஷ விச்வாஸமுள்ளதாகவும் இருக்கிறது. ஆகையால் சரணாகதனை உபேக்ஷிக்க கூடாதென்கிற தர்மத்தை அறிந்த நான் இந்த மான் குட்டியை போஷிப்பது, காப்பாற்றுவது முதலியவைகளை செய்யக் கடமைப்பட்டவன். ஸாதுக்களும், சாந்தர்களும் தீனர்களிடத்தில் ப்ரீதியுள்ளவர்களுமான பெரியோர்கள் இம்மாதிரியான கார்யத்திற்காக முக்கியமான சொந்த கார்யத்தைக்கூட உபேக்ஷிக்கிறார்கள் என்று யோஜித்து, உட்காருவது, படுப்பது; நடப்பது ஸ்நாநஞ் செய்வது முதலிய கார்யங்களிலும் அந்த மான்குட்டியையே நினைத்து அதனிடத்தில் விசேஷ ப்ரேமையுள்ளவராக இருந்தார். பின்னும் அவர் தர்ப்பம் புஷ்பம், ஸமித்து, இலை, பழம், கிழங்கு, ஜலம் ஆகிய இவைகளைக் கொண்டு வருவதற்காக வெளியில் போகும்பொழுது, நாய், செந்நாய் இவைகள் மான் குட்டியைக் கொன்று விடுமோவென்று ஸந்தேஹித்து அந்த மான்குட்டியைத் தூக்கிக் கொண்டே போகிறார். வழியில் அதனிடத்தில் விசேஷப்ரீதியினாலும் அது நடக்க முடியாமலிருப்பதாலும், அதைத் தோளில் தூக்கிக் கொண்டு செல்லுகிறார். இவ்விதமாக அந்தமான் குட்டியை

மாரிலும் மடியிலும் வைத்துக் கொஞ்சி மிகுந்த சந்தோஷத்தை அடைந்தார். தேவ பூஜை முதலிய கர்மாக்கள் செய்யும்பொழுது நடுவில் எழுந்திருந்து அந்த மானைப்பார்த்து 'உனக்கு க்ஷேமம் உண்டா கட்டும்', என்று ஆசீர்வாதமும் செய்கிற வழக்கமுண்டு. அதனை காணாத போது க்ருபணன் பணங்கெட்டுப் போனால் வருத்தப்படுவது போல மன வருத்தமுள்ள வராக மிகவும் கருணையுடன் அதனைப் பார்க்க வேண்டுமென்ற விருப்பத்தாலும் அதனைவிட்டுப் பிரிந்த துக்கத்தாலும் மிகுந்த தாபமடைந்து அதைப் பற்றியே துக்கித்து பின்வருமாறு சொல்லுவார் "தாயில்லாத இந்த மான் குட்டியானது குரூர புத்தியுள்ளவனும், பாக்யமற்றவனுமாகிய என்னிடத்தில் ப்ரியம் வைத்தது, என்னுடைய தூர்க்குணங்களை அது நினையாமல் சாதுபோல திரும்பி வருமா? இந்த ஆச்ரமத்தின் சமீபத்தில் தேவனால் காப்பாற்றப்பட்டு க்ஷேமமாக புற்களை மேய்ந்துகொண்டிருக்கும் அந்த மான்குட்டியை நான் பார்ப்பேனா? தனியே சஞ்சரிக்கும் அதனை நாய், செந்நாய் முதலியவைகள் பக்ஷிக்காம லிருக்குமா? ஸகல ஜகத்திற்கும் க்ஷேமத்தைச் செய்ப வரும் வேதஸ்வரூபியுமாகிய சூரியன் அஸ்தமயத்தை அடைந்தும் இந்த மான் குட்டி வரவில்லையே. புண்யம் பண்ணாதவனாகிய என்னிடம் இந்தமான் திரும்பி வந்து பலவகையான அழகான மான் குட்டி களின் விளையாட்டுகளால் தன்னுடைய பந்துக்களின் துக்கத்தை போக்கடித்து எனக்கு ஸுகத்தைக் கொடுக்குமா?' விளையாட்டிற்காக கண்களை மூடிக்கொண்டு ஸமாதியிலிருப்பவன் போலிருக்கும் என்னிடம் பயந்து கிட்டவந்து ஜலத்துளிபோல் மிருதுவான கொம்புகளால் உராய்ந்து கொள்ளும்

தர்ப்பத்தில் ஹவிஸ்ஸை ஆவாஹனஞ் செய்திருக்கும் பொழுது சாபல்யத்தால் அந்த தர்ப்பத்தை தின்றுவிடும். அது என்னாலும் அறியப்படும். அப்பொழுது நான் அதனை அதட்டுவேன். அப்பொழுது, அது ரிஷி குமாரன்போல மிகவும் பயந்து கொண்டு விளை யாட்டை நிறுத்தி அசையாமல் நிற்குமா? மிகுந்த பாக்யமுள்ள இந்த பூமியால் என்ன தபஸ் செய்யப் பட்டது. இந்த மானுடைய வெகு அழகான குளம்பு களால் செய்யப்பட்ட அடி வரிசைகள் இதோ காணப்படுகின்றன. மானைவிட்டுப் பிரிந்து கஷ்டப் படும் எனக்கு அவைகள் மான் சென்ற மார்க்கத்தைக் காண்பிக்கின்றன; மேலும் ஸ்வர்க்கம், மோக்ஷம் இவைகளை விரும்பிய ப்ராஹ்மணர்கள் யாகம் முதலியனக் கர்மங்களை செய்யும் புண்ய பூமியாக இந்த க்ஷேத்ரம் ஆயிற்று. (எந்த பூமியில் கிருஷ்ண ஸாரங்கள் ஸஞ்சரிக்கின்றதனவோ அது புண்யபூமி என்று கருத்து.) சிங்கத்தின் சப்தத்தைக்கேட்டு இதனுடைய தாய் இறந்து போனதால் இதனை நான் வளர்த்தேன்; இப்பொழுது அந்த மான் குட்டி என்னுடைய ஆச்ரமத்தைவிட்டு வெளியில் சென்றபடியால் தீனர்களிடத்தில் ப்ரீதியுள்ள சந்திர பகவான் அதனிடம் கருணைவைத்து அதனைக் காப்பாற்றுவாரா? மானைவிட்டுப் பிரிந்ததாலுண்டான ஜ்வரமாகிய காட்டித்தீயினுடைய ஜ்வாலையால் தாபத்தை அடையும் ஹிருதயமாகிய ஸ்தலபத்ம முள்ள எனக்கு மானைக் காண்பித்து சந்திரபகவான் குளிர்ந்ததும், சாந்தமும், ப்ரியத்தால் அதிகமானதுமான தம்முடைய முகத்தின் அமிருதமயமான கிரணங்களால் என்னை சுகப்படுத்துவாரா?

23–28. இம்மாதிரி அந்த யோகியான பரதர்

கிடைக்காத மனோரதத்தால் வருத்தப்பட்ட ஹிருதய முள்ளவராகி மான் குட்டியாக தோன்றுகிற ப்ராரப்த கர்மத்தால் யோகத்தையும், பகவானை பூஜிப்பதையும் விட்டுவிட்டார். அதற்கு ப்ராரப்த கர்மமே காரணமாக விருக்கவேண்டும். இல்லாவிடில் மான் குட்டியினி டத்தில் மனிதனாகிய பரதருக்கு வயிற்றில் பிறந்த புத்ரனிடத்தில் போல் விசேஷப்ரீதி யுண்டாவதற்கு என்ன காரணம்? இந்த பரதர் மோக்ஷத்திற்கு விரோதமென்று நினைத்துவிட முடியாத புத்ராபிம மானத்தையு மொழித்தவர் இப்படி அந்தராஜரிஷிக்கு யோகமானது விக்னத்தால் கெடுக்கப்பட்டது. மேலுமவர் அந்த மான்குட்டியை போஷிப்பது, காப்பாற்றுவது, கொஞ்சுவது முதலியவைகளைச் செய்து கொண்டே பரமாத்மாவைச் சிந்திக்காமலேயே காலத்தைக் கழித்தார். இப்படியிருக்கையில் எலிவளைக்கு ஸர்ப்பம் வந்தாற் போல் அவருக்கு மரணஸமயம் நேர்ந்தது. அந்த சமயத்தில் புத்ரனைப்போல் சமீபத்தில் துக்கித்துக் கொண்டிருக்கும் அந்த மானைப்பார்த்து பரதரும் மனவருத்தமடைந்து அதனிடத்தில் விசேஷ அபிமானம் வைத்து அந்த மானையும், தம்முடைய சரீரத்தையும், இவ்வுலகத்தையும் விட்டு மரண மடைந்தார். பின்பும் அவருக்கு முன் ஜன்மத்தில் மான்குட்டியின் ஸ்மரண மிருந்தபடியால் மான் சரீரத்தை அடைந்தார். முன்ஜன்மத்தில் செய்த பகவத் பூஜையின் மஹிமையால் மிருகஜன்மத்தில் தாம் மிருகஜன்மத்தை அடைந்ததற்கு காரணமின்னதென்று தெரிந்துகொண்டு மிகவும் அனுதாபத்தை அடைந்து பின்வருமாஹ சொல்லலானார்; கஷ்டம், ஆத்மஜர் களுடைய மார்க்கத்திலிருந்து நழுவினேன், ஆச்சர்யம், ஸகல ஆசைகளையும் ஒழித்து, ஏகாந்தமான புண்ய

தபோபூமியை அடைந்தவனும், ஆத்மஜனும், ஸகல பிராணிகளுக்கும் ஆத்மாவாகிய ஸ்ரீ வாஸுதேவரி டத்தில் ச்ரவணம், மனனம், கீர்த்தனம், ஆராதனம், அனுஸ்மரணம் ஆகிய இவைகளைக்கொண்டு காலம் முழுவதும் மனத்தை செலுத்தியவனுமாகிய என்னு டைய மனதானது மான்குட்டியினிடம் சென்றதே; நான் மிகவும் மூடன். இம்மாதிரி தமக்குள் நிர்வேதத்தை அடைந்து மாதாவான மானைவிட்டு சாந்தர்களான முனிகள் வஸிக்குமிடமாயும், சாலவிருஷங்களுள்ளது மான பகவத் க்ஷேத்ரத்திற்கு காலாஞ்சன மென்னும் மலையிலிருந்து சென்றார், அவ்விடத்தில் நல்ல காலத்தை யெதிர்பார்த்துக்கொண்டு பிறருடைய சேர்க்கையில் மிக்க பயமுள்ளவராகில் தனியே ஸஞ்சரித்து காய்ந்த இலை, திருணம், கொடி முதலிய வைகளை புஜித்து மிருக ஜன்மத்தில் முடிவு காலத்தையே எதிர்பார்த்திருந்து ஒருநாள் ஜலமத்தியில் அந்த மிருகசரீரத்தை விட்டுவிட்டார்.

அத்தியாயம்–9

பரதர் ப்ராஹ்மண ஜன்மத்தை அடைந்தது

பின்பு சமம், தமம், தபஸ், வேதாத்யயனம், பிறருக்குச் சொல்லிக் கொடுப்பது, கிடைத்ததைக் கொண்டு சந்தோஷிப்பது, பொறுமை, வணக்கம், அதிதி களுக்கு அன்னமிடுதல், கர்ம வித்யை, அசூயையில்லாம லிருப்பது, ஆத்மஜ்ஞானம் ஆனந்தம் ஆகிய இவை களுள்ள அங்கிரஸ, கோத்திரத்திலுண்டாகிய ஒரு சிறந்த ப்ராஹ்மணனுக்கு ச்ருதம், ஸ்வபாவம், ஆசாரம், ரூபம், ஔதார்யம் ஆகிய இவைகளில் பிதாவிற்கு சமானர்களான ஒன்பது புத்ரர்கள் பிறந்தார்கள். இரண்டாவது பத்னியிடத்தில் ஒரு புத்ரனும், ஒரு புத்ரியும் உண்டானார்கள். அந்தப் புத்ரனே 'பரம பாகவதராகிய பரதன். மிருக சரீரத்தை விட்டு ப்ராஹ்மண ஜன்மத்தை அடைந்தவர் என்று சொல்லு கிறார்கள். அந்த ப்ராஹ்மண ஜன்மத்திலும் பிறருடைய சேர்க்கையில் மிக்க பயமுள்ளவராகி கர்மபந்தத்தைப் போக்கக்கூடிய ச்ரவணம். ஸ்மரணம், குணங்களைச் சொல்லுவது முதலியவைகளை செய்து பகவானுடைய பாதாரவிந்தத்தை மனத்தில் த்யானஞ் செய்துகொண்டு இடையூறு நேரிடுமோ வென்ற சந்தேகத்தை அடைந்து பகவானுடைய அனுக்ரஹத்தால் முன் ஜன்மங் களுடைய விருத்தாந்தத்தை நினைத்துக் கொண்டு பயித்யங் கொண்டவன் போலும், ஜடன் போலவும் குருடன் போலவும், செவிடன் போலவும், தாம் சஞ்சரித்தார். அவருடைய தகப்பனாராகிய ப்ராஹ்மணன் புத்ரனிடத்தில் விசேஷ ஸ்நேஹத்தால் ஸமாவர்த்தனம் வரையிலுள்ள சம்ஸ்காரங்களைச் செய்வித்து

உபநயனஞ் செய்த பிறகு சௌசம். ஆசமனம் முதலிய கர்மங்களை அவருக்கு உபதேசித்தார். ஆனால் புத்ரனுக்கு அது சம்மதமில்லாதவைகளாகவிருந்தன. ஆனால் புத்ரனுக்கு ஸகல நியமங்களையும் பிதா உபதேசிக்க வேண்டுமென்று உபதேசித்தார். ச்ராவணம், முதலிய மாதங்களில் வேதங்களை பிதா வ்யாஹ்ருதி ப்ரணவம், மூன்று பாதங்களுள்ள காயத்ரீ முதலிய வைகளை அவருக்கு வஸந்தகாலம், க்ரீஷ்மகாலம் முழுவதும் உபதேசித்தும் அவருக்கு அதில் மனமில் லாததனால் ஸ்வரங்களை சரியாக உச்சரியாமல் மாறுதலாகவே சொல்லி வந்தார். இப்படி புத்ரனுக்கு சௌசம், ஆசமனம், வேதாத்யயனம் முதலியவைகளில் மனம் பிரவர்த்திக்கவில்லை என்பதை நன்றாக பிதா தெரிந்து கொண்டும், புத்ரனிடமிருக்கும் அபிநிவேசத் தால் எல்லாவற்றையும் புத்ரன் கற்றுணர்ந்தவனாக ஆக வேண்டுமென்ற துரபிமானமுள்ளவராக முயற்சித்தும் அவருடைய எண்ணம் நிறைவேறாமல் மரணம் அடைந்தார். அவருடைய இரண்டாவது பத்தினியானவள் தன்னுடைய இரண்டு குழந்தை களையும் ஸபத்தினியிடம் ஒப்பித்து பர்த்தாவுடன் உடன்கட்டையேறி பதியின் லோகத்தை அடைந்தாள். பிதாவிற்குப் பின்பு மற்ற ஒன்பது சஹோதரர்களும் வேதத்தையே அத்யயனம் செய்து கர்மிகளாக விருந்தபடியால் இவருடைய மஹிமையை அறியாமல் தங்களுடைய வார்த்தையைக் கேட்காமலிருக்கும் இவரை மூடனென்று நினைத்து நிர்ப்பந்திக்காம லிருந்தார்கள். அவரைப் பார்த்து இரண்டு கால் பசுக்கள் (அஜ்ஞர்களான மனிதர்கள்) ஓ பயித்யங் கொண்டவனே! ஜட, செவிட! என்று அழைக்கிறார்கள். அதற்கு தக்கபடி இவரும் அஸமஞ்ஜமாகப் பேசுகிறார்.

பிறர் சொல்லும் கார்யத்தைச் செய்கிறார். பலாத் காரமாக பிறரால் செய்யும்படி தூண்டப்பட்டுச் செய்யப்படும் விஷ்டியென்ற கார்யத்தால் சம்பளத்திற்காக செய்யும் வேலையாலும், யாசிப்பதாலும், தைவச் செயலாலும் கிடைத்த அன்னம் ஸ்வல்பமானாலும், அதிகமானாலும், அதனை புஜிக்கிறார். இந்திரியத்தை திருப்தி செய்வதற்காக புஜிக்கிறதில்லை. மேலுமவர் காரணமற்றதும் தானாக ப்ரகாசிக்கக் கூடியதும், சுத்தமுமான அனுபவ ஸ்வரூபமாகிய பரமாத்மாவே நான்" என்ற எண்ணம் உள்ளவராகையால் சுக துக்கங்களில் தேஹாபிமானத்தை யொழித்திருந்தார். மேலுமவர் விருஷபம்போல் குளிர், உஷ்ணம், காற்று மழை, இவைகளை சஹித்து பருத்தவைகளும் கெட்டியான வைகளுமான அங்கங்களுள்ளவராகவுமிருந்தார். பின்னுமவருடைய சரீரம் பூமியில் படுப்பது, ஸ்நானஞ் செய்யாமலிருப்பது முதலியவைகளால் அழுக்கடைந் திருந்தபடியால், அழுக்கடைந்த ரத்தினத்தின் காந்தி போல் அவருடைய ப்ரம்ஹதேஜஸ் வெளியில் ப்ரகாசிக்கவில்லை; இன்னுமவர் கந்தைத் துணியை யுடுத்திக் கொண்டிருந்தார். யக்ஞோபவிதமானது விசேஷ அழுக்குள்ளதாகவிருந்தது. அதனால் இவரை ப்ராஹ்மணன் என்றும் மேலானவரென்றும் அடை யாளத்தால் அறியமுடியவில்லை. அதனால் அஜ்ஞ ஜனங்கள் இவரை அவமதித்தார்கள். இவர் பிறரிடத்தில் வேலை செய்து ஆஹாரத்தை பெற்றுக் கொள்ள ஆரம்பித்த போது அவருடைய சகோதரர் களும் வயலில் சேற்றை உழும்படி செய்தார்கள். அதனையுள்செய்தார். ஆனால் இந்த பக்கம் மேடு இந்தப்பக்கம் பள்ளம் இந்தவிடத்திலிருந்து மண்ணை எடுக்க வேண்டும், இந்தவிடத்தில் மண் போட

வேண்டுமென்பது அவருக்குத் தெரியாது. சகோதரர்கள் அரிசி, நொய், புண்ணாக்கு, உமி, உளுத்துப்போன உளுந்து, காந்திப்போன அன்னம் ஆகிய இவைகளில் எதனைக் கொடுத்தாலும் அதனை அமிருதமாக நினைத்துப் புஜிப்பார். (இதுவரையில் அவராக வேஷமில்லாமலும் பற்றுதலில்லாமலுமிருந்தாரென்று சொல்லப்பட்டது. இனி மரணத்திலும், பயப்பட வில்லையென்பது சொல்லப்படுகிறது)

12–18 பின்னொருகால் திருடர்களுக்கு அதிபதியான ஒரு சூத்ரன் தனக்கு பிள்ளை பிறக்கவேண்டி பத்ரகாளிக்கு ஒரு புருஷ பசுவைக் கொன்று அதன் ரத்தத்தால் திருப்தி செய்து வைக்கிறதென்று யத்தனித்தான். அவனுடைய வேலைக்காரர்கள் பாதி ராத்திரியில் தானாகவரும் பசுவைத் தேடியும் அகப் படாமல் ஒரு வயல்கரையில் வயலிலுள்ள தான்யங் களை மிருகங்கள், பன்றிகள், மஹிஷங்கள் ஆகிய இவைகள் அழிக்காமல் காற்றுக் கொண்டு வீராஸனத்தில் உட்கார்ந்திருக்கும் இந்த ப்ராஹ்மணோத்தமரைக் கண்டார்கள். அவரைக் கண்ட அந்த திருடர்கள் நல்ல லக்ஷணமுள்ள பசு கிடைத்தது, யஜமானுடைய கார்யம் முடிந்தது" என்று நினைத்து அவரை கயிற்றினால் கட்டி மிக்க சந்தோஷத்துடன் காளி கோவிலுக்குக் கொண்டுவந்தார்கள். பிறகு அவருக்கு ஸ்நானஞ் செய்வித்து புதுவஸ்த்ர முடுத்தி ஆபரணங் களாலும், மாலையாலும், சந்தனத்தாலும், திலகத்தா லும் அலங்கரித்து போஜனஞ் செய்வித்து தூப தீபங்கொடுத்து பொரிகள் தளிர்கள், பழங்கள் முதலிய உபஹாரங்களுள்ள மாலையை கழுத்தில் போட்டு மிருதங்கம் முதலிய வாத்யகோஷங்களுடன் காளிக்கு

முன் உட்காரவைத்தார்கள். பிறகு அந்த யஜமான னுக்கும் புரோஹிதனாகிய திருடன் இந்தப் புருஷ பசுவின் ரத்தத்தால் காளியை பூஜிக்க விரும்பி பத்ரகாளி மந்திரத்தால் மந்திரிக்கப்பட்ட கூர்மையான கத்தியை எடுத்துக் கொண்டான். இப்படி ரஜோ குணம், தமோகுணம் இவைகளால் பூர்ணமான மனது ள்ளவர்களும், பணக்கொழுப்புள்ளவர்களும், பகவா னுடைய கலாவதாரர்களான வீரர்களையும் லக்ஷ்யஞ் செய்யாமல் சஞ்சரிப்பவர்களும், பிறருக்கு ஹிம்சை செய்வதையே வேடிக்கையென்று நினைத்தவர்களுமான அந்த சூத்ரர்கள் பரப்ரஹ்மமாக விருப்பவரும், ப்ரஹ்மரிஷியின் புத்ரரும் விரோத புத்தியற்றவரும், ஸகல ப்ராணிகளிடத்தில் ப்ரீதியுள்ளவருமான ப்ராஹ்மணோத்தமரை பலி கொடுப்பதற்காக ஏற்படுத் தியதை அந்த பத்ரகாளி பார்த்தாள். அது அவளுக்கு இஷ்டமில்லாததாக விருந்தது. மேலும் அவருடைய ப்ரஹ்மதேஜஸ்ஸால் காளியின் சரீரம் சஹிக்க முடியாத தாபத்தை அடைந்தது. அப்பொழுது அந்த தேவியானவள் அந்த பிம்பத்திலிருந்து வெளிவந்தாள். அவளுடைய முகமானது பொறாமை, கோபம் ஆகிய இவைகளாலும் பயங்கரமான புருவங்களாலும் வக்ரமான சிங்கப்பற்களாலும், சிவந்த கண்களாலும் பயங்கரமாகவிருந்தது. பின்னுமவள், அட்டஹாசஞ் செய்துகொண்டு மிக்க கர்வங்கொண்டவர்களும், பாபிகளுமான அந்தத் திருடர்களுடைய கழுத்தை அந்தக் கத்தியாலேயே வெட்டி அதிலிருந்து பெருகி வரும் உஷ்ணமான ரத்தத்தை தன்னுடைய பரிவாரங் களுடன் பானஞ் செய்து தன்னுடைய பார்ஷதர் களுடன் கானஞ்செய்தாள்; நர்த்தனஞ் செய்தாள்; அவர்களுடைய தலைகளை பந்துகளாக வைத்துக் கொண்டு விளையாடினாள்.

19–20 இப்படியே மஹான்களுக்கு அபராதஞ் செய்தால் அது முழுவதும் தனக்கே கெடுதியையுண்டு பண்ணுகிறது. ஓ மஹாராஜ! தலையை வெட்டுவதற்கு கத்தியை கையில் வைத்துக் கொண்டிருக்கும் போதும் பயமில்லாமல் அந்த ப்ராஹ்மணன் உட்கார்ந்திருந்தது ஆச்சர்யமல்ல. ஏனெனில் அவர் தேஹம் முதலிய வைகளில் அபிமானத்தை விட்டவர்; ஸகல ப்ராணி களிடத்திலும் ப்ரீதியுள்ளவர்; விரோத புத்தியற்றவர்; காலமாகிய சக்கரத்தை ஆயுதமாயுடைய பகவானால் அந்த அந்த பாவங்களைக் கொண்டு காப்பாற்றப் பட்டவர்; நிர்பயமான பகவானுடைய பாதத்தை அடைந்தவர். பாகவதர்; பரமஹம்ஸர்.

அத்தியாயம்–10

ஜடபரதர் பல்லக்குத் தூக்கினது

பின்பு ஒருகால் ஸிந்து, சௌவீரம் ஆகிய தேசங்களுக்கு அதிபதியான ரஹூகணனென்ற அரசன் ஆத்ம தத்வத்தையறிய விரும்பி கபிலருடைய ஆசரமம் செல்ல முயற்சித்தார். அப்பொழுது இக்ஷுமதியென்னும் நதியின் கரையில் அரசனுடைய பல்லக்குத் தூக்குகிறவர்களுக்கு அதிபதியாகவிருப்பவன் பல்லக்குத் தூக்குவதற்காக ஆளைத்தேடினான். அப்பொழுது அந்தப் ப்ராஹ்மணனை தெய்வச் செயலால் கண்டான். அப்பொழுது அவன் 'இவன் பருத்த அவயங்களுள்ளவன் வலிமையுள்ளவன்; எருது போலவும், கழுதை போலவும் சுமை தூக்குவதற்குத் தகுந்தவன்' என்று யோஜித்து ஏற்கனவே பலாத் காரமாக கொண்டுவரப்பட்டவர்களுடன் அந்த ப்ராஹ்மணரையும் சேர்த்து பல்லக்குத் தூக்கும்படி செய்தான். அந்த மஹானுபாவராகிய ப்ராஹ்மணர் அந்தக் காரியத்தை செய்யத் தகாதவரானாலும் பல்லக்குத் தூக்கினார். ஆனால் அந்த ப்ராஹ்மணன் தாம் நடக்கும்போது ஒரு விற்கடை தூரம் முந்திப் பார்த்துக்கொண்டே குதித்துத் செல்லும் சுபாவ முள்ளவர். ஆகையால் அவருடைய நடை சமமாக வில்லாததால் பல்லக்கு ஒரு பக்கம் தாழ்ந்தும் ஒரு பக்கம் உயர்ந்து மிருப்பதைக் கண்டு ரஹூகணர் ஆட்களை நோக்கி "ஓ பல்லக்குத் தூக்குகிறவர்களே! சமமாக நடந்து செல்லுங்கள் ஏன் பல்லக்கை இப்படி விஷமமாக தூக்குகிறீர்கள்" என்று சொன்னார். அதனைக் கேட்ட அவர்கள் "அரசன் நம்மைத்

தண்டிப்பாரோ" யென்று பயத்துடன் "ஓ மஹாராஜ! நாங்கள் உம்முடைய ஆக்ஞையின் படி ஜாக்கிரதையாகத் தூக்குகிறோம். ஆனால் இவன் இப்பொதுதான் பல்லக்குத் தூக்க வந்திருக்கிறான், அப்படியும் சீக்ரமாக செல்லுகிறதில்லை. இவனுடன் உம்முடைய வாஹனத்தைச் சுமக்க எங்களால் முடியாது. ஒருவன் செய்யும் குற்றம் அவனைச் சார்ந்தவர்களுக்கும் ஏற்படுகிறது" என்றார்கள் அதனைக் கேட்ட ரஹூகண ணென்ற அரசன் பெரியோர்களை உபாஸித்தவரானா லும், ஸ்வபாவத்திற்கு ஸ்வாதீனப்பட்டு கொஞ்சம் கோபம்கொண்டு தூளிகளால் மறைக்கப்பட்ட அக்னிபோன்றவரும் நன்றாய் வெளியில் ப்ரகாசிக்காத ப்ரஹ்மதேஜஸ்ஸுள்ள வருமான அந்த ப்ராஹ்ம ணோத்தமரை நோக்கி "ஓ ப்ராதாவே! வெகு தூரம் நீ ஒருவனாக பல்லக்கைத் தூக்கிகொண்டு வந்துபடியால் மிகவும் களைப்படைந்தாய். உனக்கு சரீரம் பருத்திருக்கவில்லை. உனக்கு தேஹபலமுமில்லை. கிழத்தனத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறாய். ஓ தோழ! உன்னுடன் பல்லக்கைச் சுமக்குமிவர்கள் கிழத்தன மில்லாதவர்களும், பருத்த கொழுத்த சரீரமுள்ளவர் களுமாக விருக்கிறார்கள்" என்று பல வகையான வக்ரமான வாரத்தைகளைச் சொல்லி தமோகுண ஸ்பாவத்தால் நிந்தித்தார். அதனைக்கேட்டும் அந்த ப்ராஹ்மணன் அவித்யையால் செய்யப்பட்ட த்ரவ்யம், குணம், கர்மம், சித்தம் ஆகிய இவைகளுள்ளதும், அவஸ்துவும், கைகால் முதலிய அவயங்களுடைய அமைப்புள்ளதுமான சரீரத்தில் 'நான், என்னுடையது' என்ற நித்யாபிமான மற்றவராகையாலும், ப்ரஹ்ம ஸ்வரூபியாக விருப்பதால் ஒன்றும் பதில் சொல்லாமலேயே முன்போல தூக்கிக்கொண்டே சென்றார், பின்பும்

பல்லக்கு முன் போலவே செல்வதை நோக்கி ரஹூகணர் அந்த ப்ராஹ்மணனை நோக்கி 'அட! ஏன் என்னை லக்ஷ்யஞ்செய்யாமல் உனதிஷ்டப்படி நடக்கிறாய்? நீ ஜீவித்திருந்தாலும் மரணமடைந்தவனுக்குச் சமனாய் இருக்கிறாய். அரசனுடைய உத்தரவை மீறிச் செல்லு கிறாய், ஆனதால் யமன் ஜனங்களைச் சிக்ஷிப்பது போல உன்னை நான் சிக்ஷிக்கிறேன். அப்பொழுது நீ ஸ்வபாவகுணத்தை அடைவாய் என்று பலவகையாக நிந்தித்தார். ஏனென்றால் தாம் அரசனென்ற அபிமான முள்ளவர்; ரஜோகுணத்தாலும் தமோ குணத்தாலும் பகவத் பக்தர்களை திரஸ்கரிப்பவர்; தம்மை பண்டித ரென்று நினைத்தவர்; யோகேச்வர்களுடைய நடையை அறியாதவர்; அப்படிப்பட்ட அரசனை நோக்கி ப்ரஹ்மஸ்வரூபியும், ஸகலப் பிராணிகளிடத்தில் ஸமஹிருத்தும், ஸகல பிராணிகளுக்கு ஆத்மாவு மாகிய அந்த ப்ராஹ்மணர் கர்வமில்லாமல் பரஸன்ன முகத்துடன் பின்வருமாறு சொல்லலானார். "ஓ சூரனாகிய மஹாராஜ! உம்மால் சொல்லப்பட்டது யாவும் உண்மையே (நீ பருத்த சரீரமுள்ளவன் ச்ரமத்தை அடையாதவன் என்று சொன்னது) உண்மையில் சுமையென்ற ஒரு வஸ்து இல்லை. சுமக்கிறவனென்பதுமில்லை. நடக்கிறவன் என்றதும் உண்மையிலில்லை. நடந்து செல்லக்கூடிய மார்க்க மென்பதும் மித்யை. பருத்திருப்பது, முதலியவை சேதனனுக்கிருப்பதாக வித்வான்கள் சொல்லமாட் டார்கள். அது தேஹத்தின் தர்மமேயொழியசேதனனு டைய தர்மமல்ல. பருத்திருப்பது, இளைத்திருப்பது, வ்யாதிகள், மனோவிகாரங்கள், பசி, தாஹம், பயம், சண்டை, விருப்பம், கிழத்தனம், தூக்கத்தில் ஆசை, கோபம், அஹங்காரம், மதம் ஆகிய இவைகள்

தேஹத்தில் அபிமானமுள்ளவனுக்கே யொழிய அபிமானமற்றவனாகிய எனக்கில்லை. ஓ அரசனே! எவை ஆதி, அந்தம் இவையுள்ளவையோ அவையாவும் ஜீவன் மிருதங்களேயாம் (நான் மட்டில் ஜீவன் மிருதனல்லவென்பது கருத்து) ஓ ஸ்தோத்திரஞ் செய்யக் கூடியவரே! இவன் யஜமானன் இவன் வேலைக்காரன் என்பது நிச்சயமாக விருக்குமானால் ஒருவனே ஆஜ்ஞாபனஞ்செய்வதும், அதனை வேலைக்காரர்கள் அங்கீகரிப்பதும் உசிதமாகும். (அம்மாதிரியான நிச்சயமில்லை. இந்த க்ஷணத்தில் நான் அரசனாகி விட்டால் நீர்வேலைக்காரனாகி விடுவீர். நான் எஜமானனாகி விடுவேன் என்று கருத்து.) ஆனதால் அரசன் வேலைக்காரன் என்ற பேதமானது உண்மையில் கொஞ்சமேனுமில்லை வ்யவஹாரத்தாலேற்படுகிறது. யஜமானனென்பவன் யார்? அவனுக்கு வேலைக்கார னென்பவன் யார்? ஆனாலும் உமக்கு அரசனென்ற அபிமான மிருக்குமானால் என்னால் செய்யப்பட வேண்டிய கார்யத்தைச் சொல்லும், அதனைச் செய்கிறேன். மேலும் பயித்தியங்கொண்டவன் போலும், ஊமை போலும், குருடன்போலும், ஜடன் போலும் இருப்பவனும் ப்ரஹ்ம பாவத்தை அடைந்த வனுமாகிய எனக்கு உம்மால் செயயப்படும் சிக்ஷையால் என்ன பயன்? (முக்தனுக்கு அர்த்தமாவது அனர்த்த மாவது இல்லையென்று கருத்து) அல்லது நான் முக்தனில்லாமல் மதங்கொண்டவனாகவாவது. கர்வ முள்ளவனாகவாவதிருந்தாலும் உம்மால் செய்யப் படும் சிக்ஷை வீணானதேயாம், (ஜடனைச் சிக்ஷித்துக் நல்மார்க்கத்துக்குக் கொண்டுவருவது அஸாத்யமென்று கருத்து) இம்மாதிரி அந்த ப்ராஹ்மணோத்தமர் அரசன் சொன்ன வார்த்தையை அனுமதிப்பதாலேயே

பதில் சொல்லி தாம் அவித்யையின் ஸம்பந்தமற்ற வராகையால், ப்ராரப்த கர்மத்தை அனுபோகத்தால் குறைக்கவிரும்பி அரசனுடைய பல்லக்கை முன்போல் சுமந்து கொண்டிருந்தார். ஸிந்து, ஸௌவீரம் ஆகிய தேசங்களுக்கு அதிபதியாகிய அந்த அரசன் ஆத்மதத் வத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற மிகுந்த ச்ரத்தையுள்ளவராக விருந்தபடியால், அதில் அதிகார முள்ளவராகி அந்த ப்ராஹ்மணோத்தமரால் சொல்லப் பட்டவார்த்தையை கேட்டார், அது அநேக யோக சாஸ்திரங்களுக்கு சம்மதமானது; ஹிருதயத்திலிருக்கும் அவித்யையை நிவர்த்திக்கக்கூடியது; அதனைக் கேட்டவுடன் அரசன் சீக்கிரம் வாஹனத்திலிருந்து இறங்கி அந்த ப்ராஹ்மணோத்தமரை நமஸ்கரித்து செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டுமென்று பிரார்த் தித்து தாம் அரசன் என்ற கர்வத்தை விட்டு அவரை நோக்கி பின்வருமாறு சொல்லலானார்.

15–24. "நீர் யார்? ரஹஸ்யமாக ஸஞ்சரிக்கிறீர், யஜ்ஞோபவீதம் தரித்திருக்கிறீர்; தத்தாத்ரேயர் முதலிய அவதூதர்களுக்குள் நீர் யார்? யாருடைய புத்ரர்? இவ்விடம் வந்த காரணமென்ன? என்னுடைய க்ஷேமத்திற்காக வந்தவரானால், கபிலமஹர்ஷியா? மஹேந்திரனுடைய வஜ்ரத்தினிடம் எனக்கு பயமில்லை. மூன்று நேத்ரங்களுள்ள பரம சிவனுடைய சூலாயுதத் தினிடமும் பயப்படேன். யமனுடைய தண்டத்தி னிடமும் நடுக்கமில்லை. அக்னி, சூர்யன், சந்திரன், வாயு, குபேரன் ஆகிய இவர்களுடைய அஸ்திரங்களைக் கண்டு பயப்படேன். ப்ராஹ்மணர்களை அவமதித்ததால் மிகவும் பயத்தை அடைகிறேன், (உம்மை வாஹனம் சுமக்கும்படிச் செய்தேனே என்பது கருத்து) நீர்

ஆசையற்றவராகி, ஜ்ஞானமாகிய மாஹாத்மியத்தை மறைத்துக் கொண்டு ஜடன்போல் ஸஞ்சரிக்கிறீர் அளவற்ற மஹிமையுள்ளவர்; யோக சாஸ்த்ர ஸம்மதமான உம்முடைய வார்த்தை வித்வான்களாலும் மாற்றமுடியாது. ஆனதால் உம்முடைய விருத்தாந்தத்தைத் தெரிவிக்கவேண்டும். மேலும் நான் யோகேச்வரரும், ஆத்மதத்வத்தை அறிந்த மஹர்ஷிகளுக்குக் குருவும், ஜ்ஞான சக்தியால் அவதரித்தவரும், ஸாக்ஷாத் நாராயணருமான கபிலரைக் தர்சித்து ஸம்ஸாரத்தி லிருந்து காப்பாற்றக்கூடியது எது? என்பதைக் கேட்க அவருடைய ஆச்ரமம் நோக்கிச் செல்லுகிறேன் நீர் லோகத்தைக் காப்பாற்றுவதற்காக பிறருக்குத் தெரியாமல் சஞ்சரிக்கும் அந்தக் கபில மஹர்ஷியா? அஜ்ஞனும், விஷயங்களில் ஆசையுள்ளவனுமான புருஷனால் யோகேச்வரர்களுடைய நடை அறிய முடியுமா? மேலும் நீர் தமக்கு ச்ரமமில்லையென்று சொன்னீர், ஆனாலும் வாஹனத்தைச் சுமந்து கொண்டு நடந்துபடியால் உமக்கு ச்ரமமிருக்க வேண்டுமென்றே அனுமானிக்கிறேன். ஏனென்றால் நான் யுத்தம் முதலிய கார்யத்தைச் செய்யும்போது ச்ரமத்தை அடைகிறேனல்லவா? ஆனால் இவை உண்மையல்ல. வ்யவஹாரமாத்ரமென்று சொன்னீர், அதெப்படி பொருந்தும்? வ்யவஹார மார்க்கத்தை உண்மையென்றே ஒப்புக் கொள்ளவேண்டும். குடம் தன்னுருவத்தில் குறையுள்ளதானால் ஜலங்கொண்டு வருவதற்குபயோகப்படுகிறதா? மேலும் பருத்திருப்பது முதலியவை உபாதியான தேஹத்தின் தர்மங்களென்று சொன்னீர். அடுப்பில் ஒரு பாத்திரத்தை வைத்து அதில் பாலைவிட்டு அதில் அரிசியைப்போட்டு அடுப்பில் அக்னியை ஜ்வலிக்கச் செய்தால் பாத்திரம்

கொதித்து அதனால் பால் உஷ்ணமாகி அதனால் அரிசி பக்குவமாகிறது. இவைகளில் ஒன்றையும் மித்யையென்று சொல்ல முடியாது. அதுபோல் தேஹம் இந்திரியம், ப்ராணன், மனம் ஆகிய உபாதிவசத்தால் புருஷனுக்கேற்படும் ஸம்ஸாரம் உண்மையாக விருக்க வேண்டுமேயல்லாமல், உண்மையிலில்லை, யென்று எப்படிச் சொல்லக்கூடும்? மேலும் எவன் எந்தக் காலத்தில் அரசனோ அவன் அப்பொழுது ப்ரஜைகளை காப்பாற்றவும், சிக்ஷிக்கவும் கடமைப்பட்டவனல்லவா? சிக்ஷிப்பதால் ஜடத்தன்மை விலகாவிடுனும் ஸ்வதர்மத்தை அனுஷ்டித்ததால் பகவானை ஆராதித்ததாகிறது. அதனால் பாபம் விலகுகிறது. அப்படியிருக்க அது வ்யர்த்தமென்று சொன்னீரே, அதெப்படி பொருந்தும்? ஸம்ஸாரத்தில் கஷ்டப்படுபவர்களுக்கு பந்துவாகவிருப் பவரே! நான் அரசனென்ற அபிமானத்தால் பெரியோர் களை அவமதித்தவன்; அப்படிப்பட்ட என்னிடத்தில் ஸ்நேஹ திருஷ்டியை வைக்கவேண்டும். அதனால் பெரியோர்களை அவமதித்ததாலுண்டான பாபத்தை நிவர்த்தித்துக் கொள்வேன் பரமசிவன் போல ஸமர்த்தனானாலும் மஹான்களை அவமதித்தால் சீக்ரத்தில் நாசமடைவான். ஜகத்திற்கு தோழரும், எல்லாரையும் ஸமமாகப் பார்ப்பவரும் அபிமான மற்றவருமான உமக்கு பேதபுத்தி இல்லை என்றார்.

அத்தியாயம்–11

ரஹூகணருக்குப் பரதர் ஜ்ஞானத்தை யுபதேசித்தது

அதனைக் கேட்ட ப்ராஹ்மணோத்தமர் அரசனை நோக்கி 'நீர் அவித்வானாயிருந்தும், வித்வான்கள் பேசுவதுபோலப் பேசுகிறீர், ஆனதால் வித்வான் களுக்குள் சிறந்தவரல்ல. லௌகிக வ்யவஹாரத்தை ஸத்யமென்று நீர்சொல்வதால் உண்மையை அறிந்த வித்வான்கள் அதனை ஒப்புக் கொள்ளமாட்டார்கள். அப்படியே பலவகையான கிருஹஸ்த தர்மங்கள், யாகங்கள் ஆகியவைகளை நிரூபிக்கும் வேதத்திலும் (வைதிக வ்யவஹாரமும் உண்மையான அர்த்தமின்ன தென்று நிச்சயிக்கப்படவில்லை.) ஆசை முதலியவை களற்றதும் ஹிம்ஸையற்றதும், பரமாத்மாவினிடத்தில் ஸமர்பிக்கப்பட்டதுமான தர்மமே சுத்தமெனப்படுகிறது. ஆனால் வேதாந்த ச்ரவணஞ்செய்தவனும் கர்மத்தில் ப்ரவர்த்திக்கிறானேயென்றால் எவன் ஸ்வப்னத்தை திருஷ்டாந்தமாக வைத்துக் கொண்டு கிருஹஸ்தாச்ரமி களுடைய ஸௌக்யத்தை துச்சமென்று ஊஹிக்க வில்லையோ அவனுக்கு வேதவாக்யங்கள் இயற்கையில் சிறந்தவைகளானாலும் தத்வஜ்ஞானத்தை யுண்டு பண்ணுகிறதில்லை. எதுவரையில் புருஷனுடைய மனமானது ஸத்வகுணத்திற்காவது, ரஜோகுணத் திற்காவது வசப்பட்டிருக்கிறதோ அதுவரையில் அந்த மனமானது ஜ்ஞானேந்திரியங்களுடனும் கர்மேந்திரியங் களுடனும் புருஷனுக்குத் தர்மத்தையாவது அதர்மத் தையாவது உண்டுபண்ணுகிறது. ஆத்மாவிற்கு உபாதி யான அந்த மனமானது முந்திய வாஸனையுள்ளதாகிய

விஷயங்களில் சேர்ந்து குணங்களால் அசைக்கப்பட்டு காமம் முதலிய ரூபாந்திரத்தை அடைகிறது. பதினாறு கலைகளில் முக்கியமாயுமிருக்கிறது; அது தனியான பெயர்களால் தேவசரீரம் முதலியவைத் தரித்து அந்த அந்த தேஹங்களால் மேலானதாக இருப்பதையும், தாழ்ந்ததாக விருப்பதையும் செய்கிறது. மேலும் ஸம்ஸாரமாகிய சக்ரத்தை செலுத்துவதும், மாயையால் ஜீவனுக்கு உபாதியாயிருப்பதுமான அந்த மனமானது ஜீவனைத் தழுவிக் கொண்டு தடுக்க முடியாத துக்கத்தையாவது ஸுகத்தையாவது இரண்டையுமாவது அந்த காலத்திற்குத் தக்கபடி பலனையும் உண்டு பண்ணுகிறது. ஜீவனுக்கு ஸம்சாரம் மனத்தாலேயே உண்டாகிறது. ஸ்தூலமும், ஸூக்ஷ்மமும் க்ஷேத்ரஜ்ஞனாகிய ஜீவனால் பார்க்கக் கூடியதாகிறது. மேலும் அந்த மனத்தையே குணத்தில் அபிமானம் வைப்பதற்கும் அபிமானமற்றவனாயிருப்பதற்கும், பரத்திற்கும், அபரத்திற்கும் காரணமென்று சொல்லுகிறார்கள். (மோக்ஷத்திற்கும் மனதே காரணம்) தீபமானது நெய்யில் நனைக்கப்பட்டவர்த்தியை எரிக்கும் பொழுது புகையுள்ள ஜ்வாலையை அடைகிறது. மற்ற காலத்தில் தன்னுடைய நிஜரூபமான தேஜோரூபத்தை அடைகிறது போல, மனதானது 'குணங்களில் அபிமானத்தைத அடைந்த பொழுது புருஷனுக்கு சம்ஸாரத்தையும், அபிமானமற்றிருக்கும் போது மோக்ஷத்தையும் உண்டு பண்ணுகிறது. (மனது ஒரு வஸ்துவானாலும் அவஸ்தா பேதத்தால் சம்ஸாரத்திற்கும் மோக்ஷத்திற்கும் காரணமாகிறது) மற்ற காலத்தில் குணங்களாலும், கர்மங்களாலும், கட்டப்பட்ட மனதானது பதினோரு வகையான விருத்திகளை அடைகிறது. ஜ்ஞானேந்திரியங்களும், அபிமானங்களும், கர்மேந்திரியங்களும், மனத்தின்

விருத்திகளாம். சூரனாகிய அரசனே! மேற்சொல்லிய விருத்திகளுக்கு மாத்திரைகளும், கர்மங்களும் தேஹமும், விஷயங்களாகின்றன. அவை எவை என்றால் வாசனை, ரூபம், சப்தம், விஸர்க்கம் முதலியவைகள். சம்போகம், உபத்திரவம், அதிகமாகப் பேசுவது, சில்பம், தேஹம் என்று பதினோரு விஷயங்கள், சிலர் அஹங்காரத்தை பன்னிரண்டாவது விஷயமாகச் சொல்லுகிறார்கள். ஜீவன் அஹங்காரத்தை அடைந்து சரீரமாகிய படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கிறான். (மேற் சொல்லிய விஷயங்களில் அவாந்தர பேதங்கள் பல விருப்பதால் அவைகள் அனந்தங்களென்று அறிய வேண்டும்) திரவியம், ஸ்வபாவம், ஸம்ஸ்காரம், அதிர்ஷ்டம், காலம், இவைகளால் மனத்தின் விகாரங்கள் நூற்றுக்கணக்காகவும் மாறுகின்றன. ஆனால் அவைகள் ஒன்றோடொன்று ஸம்பந்தத்தாலும், தானாகவும் மாறுகிறதில்லை. மாயையால் செய்யப்பட்டதும் ஜீவனுக்கு உபாதியுமான மனத்தின் விபூதிகள் நித்யங்கள். க்ஷேத்ரஜ்ஞனை ஆச்ரயித்தவைகள். மேலு மவைகள்

ஜ்ஞானத்தை உபதேசித்தது

சில காலம் (ஜாக்ரத்ஸ்வப்னங்களில்) பிரகாசங்களாகவும், சிலகாலம் (ஸுஷுப்தியில்) மறைந்துமிருக்கின்றன. ஜீவனால் அடையக் கூடிய தத்பதார்த்தமாகிய ஆத்மா எங்கும் வ்யாபித்தவர். ஜகத்திற்கு காரணராகிய புருஷன்; அபரோக்ஷர், தேஜோரூபி உத்பத்தியற்றவர்; ப்ரஹ்மதேவர் முதலியவைகளுக்கும் மேலானவர்; ஸகல ப்ராணிகளிடத்திலும் வஸிப்பவர் வாஸுதேவர், தம்முடைய மாயையால் ஜீவனுக்கு

நியந்தாவாக விருப்பவர்; ஸ்தாவரங்களுக்கு, ஜங்கமங் களுக்கும், வாயுவானவர். எப்படி ப்ராண ரூபியாகிய நியந்தாவாகவிருக்கிறாரோ, அப்படி பகவானாகிய பரமாத்மா ஜீவனுக்கு நியந்தாவாக விருக்கிறார். ஓ மஹாராஜ! எதுவரையில் மனிதன் ஜ்ஞானத்தை அடைந்து அதனால் மாயையை கடந்து, விஷயங்களில் ஆசையையொழித்து காமம் முதலிய சத்ருக்களை ஜயித்து ஆத்மாவின் உண்மையை அறியவில்லையோ அதுவரையில் ஸம்ஸாரத்தில் சுற்றுகிறான். மேலும் எதுவரையில் மனமே ஸம்ஸாரதாபத்தைக் கொடுக்க் கூடியதென்றும், சோகம், மோஹம், வ்யாதி, விஷயங்களில் ஆசை, விரோதம் ஆகிய இவைகளுள்ள மனத்தாலேயே மமதையுண்டாகிறதென்றும் இவன் தெரிந்து கொள்ளவில்லையோ, அதுவரையில் துக்கத்தை அடைவான்; ஆனதால் மிகுந்த பலமுள்ளதும், சத்ருவும், உபேக்ஷித்த படியால் விருத்தியடைந்ததும், ஆத்மாவை மறைப்பதும், மித்யாபூதமான மனத்தை, ஸகல லோகங்களுக்கும் குருவாகிய ஸ்ரீ மஹா விஷ்ணுவினுடைய சரணங்களை உபாஸிப்பதாகிய அஸ்த்ரத்தால் நாசஞ்செய்யும்" என்றார்.

அத்தியாயம்–12

பரதர் அரசனுடைய ஸந்தேகத்தை நிவர்த்தித்தது

அதனைக்கேட்ட ரஹூகணர் அந்த ப்ராஹ்ம ணோத்தமரை நோக்கி "லோகத்தைக் காப்பாற்று வதற்காக சரீரமெடுத்துக்கொண்டு ஸஞ்சரிப்பவரும், தமது பரமானந்த ஸ்வரூப ப்ரகாசத்தால் ப்ராகிருத தேஹங்களை துச்சமாக நினைப்பவரும், அவதூத ப்ராஹ்மண வேஷத்தால் மறைக்கப்பட்ட நித்யமான அனுபவமுள்ளவருமான உமக்கு நமஸ்காரஞ்செய்கிறேன். ஜ்வரத்தால் பீடிக்கப்பட்டவனுக்கு நல்ல ஔஷதமெப் படியோ, வெயிலால் பீடிக்கப்பட்டவனுக்கு குளிர்ந்த ஜலமெப்படியோ,அப்படி அபிமானத்தால் விவேக மற்றவனாகிய எனக்கு உம்முடைய அமிருததத்திற் கொப்பான வார்த்தையானது மேலான ஔஷதமாயிற்று. எனக்கு எந்த விஷயத்தில் ஸம்சயமிருக்கிறதோ, அதைப்பற்றி பிந்தி கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொது உம்மால் சொல்லப்பட்ட வார்த்தையானது ஆத்மவிஷயமாக விருப்பதால். அதனுடைய அர்த்தம் நன்றாகத் தெரியவில்லை. அதை எளிதில் எனக்குத் தெரியும்படிச் சொல்லவேண்டும் அதனைத் தெரிந்து கொள்ள விருப்பமுள்ளவனாக விருக்கிறேன். ப்ரத்ய க்ஷமாகக் காணப்படும் கர்மங்களின் பலன் யாவும் (சுமைசுமப்பது முதலியவை) வ்யவஹாரமூலமென்று சொன்னீரல்லவா? அது உண்மையாக இருக்கக் கூடுமா? இந்த விஷயத்தில் என்மனது பிரமிக்கிறது," என்று கேட்டார்.

5–12. அதனைக் கேட்ட ப்ராஹ்மணர் அரசனை

நோக்கி, "ஓ மஹாராஜ! பூமியின் விகாரமானது எதற்காகவாவது பூமியில் ஸஞ்சரிக்கிறதோ அதனை ஜனமென்று சொல்லுகிறோம். (அசையாப் பொருள் களை கல் முதலியவைகளென்று சொல்லுகிறோ மென்பது கருத்து) பூமியின் விகாரமாகிய தேஹத்தால் கால்களும், அவைகளுக்கு மேலிருக்கும் கணைக்கால், முழங்கால், துடை, இடுப்பு, மார்பு, கழுத்து, தோள், முதலிய அவயவங்கள் ஒன்றின் மேல் ஒன்றாக இருக்கின்றன; ச்ரமம், சுமையென்பது மித்யையாம். ச்ரமத்திற்கு ஆச்ரயமேற்படுமாகில் அதை உண்மை யென்று ஒப்புக்கொள்ளலாம். அதுவே ஏற்படுகிற தில்லை, தேஹத்திற்கு ச்ரமமா? கால் முதலிய அவயவங்களுக்கு ச்ரமமா? ஒன்றுக்குமில்லை. (ஆகை யால் ச்ரமமென்பது மித்யையேயாம்) என்னுடைய தோளில் மரத்தால் செய்யப்பட்ட பல்லக்கு இருக்கிறது. அதில் ஸௌவீரராஜனென்ற பெயருள்ள தேஹமானது இருக்கிறது. அந்த சரீரத்தில் உமக்கு "நான் ஸிந்து தேசத்திற்கு அரசன்" என்ற அபிமானம் வேரூன்றியி ருக்கிறது. அதனால் கர்வங் கொண்டு விவேகமற்ற வனாக இருக்கிறீர். மேலும் நீர் 'ஜனங்களை நான் ஸம்ரக்ஷிக்கிறேன்' என்று தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளுகிறதுமல்லாமல் மிக்க கஷ்டப்பட்டு தீனர்களாகவிருக்கும் பந்து ஜனங்களை நிக்ரஹிப்பதால் தயவில்லாதவனாக விருக்கிறீர். அசையும் பொருள் அசையாப் பொருள் ஆகிய ஜகத் முழுவதும் பூமியி லிருந்தே உண்டாகிறது. பூமியிலேயே நசிக்கிறது. ஆகையால் நாமரூபங்கள் வ்யவஹார மூலமேயொழிய உண்மையானவையல்ல. ஆனால் பூமியை ஸத்யமென்று சொல்லலாமேயென்றால் 'க்ஷிதி' என்ற சப்தமும் மித்யையான அர்த்தத்தால் ஏற்பட்டதேயொழிய

வேறில்லை. அதற்கு காரணம் பரமாணுக்கள், பூமி அவைகளின் கார்யம். ஆனதால் உண்மையானதல்ல. அந்தப் பரமாணுக்கள் ஸத்யங்களோமென்றால் அவைகளும் மித்யா பூதங்களேயாம். அவித்யையுள்ள மனத்தால் பரமாணுக்கள் கல்பிதங்களேயாம், அவை களுடைய ஸமூஹத்தால் கார்யங்கள் ஏற்படுகின்றன. ஆனதால் இளைப்பு, பருத்திருப்பது அணுவாக விருப்பது, பெரியதாக விருப்பது, கார்யம், காரணம், சேதனம், ஜடம், த்ரவ்யம், ஸ்வபாவம, காலம் ஆகிய இவைகள் அவித்யையுள்ள **புத்தியால்** ஏற்பட்டிருக் கிறது ஆனால் நித்யமான வஸ்து எதுவென்றால் ஜ்ஞானஸ்வரூபமும், கத்தமானதும், ஒன்றாயும், உள்வெளியற்றதுமான ப்ரஹ்மமே உண்மையானது. அதுவே ப்ரத்யக்; சாந்தமானது; பகவானென்று சொல்லப்பட்டது; கவிகள் அதனை வாஸுதேவ ரென்று சொல்லுகிறார்கள். ஓ ரஹூகண! இந்த ப்ரஹ்மத்தைத் தபஸினால் அடையமுடியாது. அன்னம் முதலியவைகளை தேவர்களுக்குக் கொடுப்பதாலும், கிருஹஸ்தாச்ரமத்தாலும், வேதாப்யாசத்தாலும், ஜலம், அக்னி ஸூர்யன் முதலியவர்களை உபாஸிப் பதாலும் அந்த பரமாத்மாவை யறிய முடியாது. மஹான் களுடைய பாதாரவிந்த தூளியை சேவிப்பதாலேயே அந்த வஸ்துவை அடையலாம்.

13–16. கிராம்ய கதைகளைச் சொல்லாமல் உத்தம ச்லோகராகிய பகவானுடைய கதைகளை ஒவ்வொரு நாளும் சொல்லிக்கொண்டு எவன் காலத்தைக் கழிக்கிறானோ அவனுக்கு பகவானிடத்தில் ஸ்திரமான பக்தியுண்டாகும், நான் முன் ஜன்மத்தில் பரதனென்ற அரசனாகவிருந்தேன். விஷயங்களில்

ஆசையில்லாதவனாக விருந்தேன். பகவானையே ஆராதித்துக் கொண்டிருந்தேன். ஆனால் ஒருமான் குட்டியினிடத்தில் ஆசை வைத்தேன். அதனால் மானாகப் பிறந்தேன். அந்த ஜன்மத்திலும் முன் ஜன்மத்திய ஜ்ஞானம் எனக்கிருந்தது. அது நான்செய்த பகவதாராதனத்தின் பயன். அது முதல் பிறருடைய சேர்க்கையில் நான் பயந்தவனாகி பிறருக்குத் தெரியாமல் ஸஞ்சரிக்கிறேன். ஆனதால் ஒன்றிலும் ஆசைப்படாமலிருப்பதால் ஜ்ஞானமுண்டாகும், அந்த ஜ்ஞானமாகிய கத்தியால் மோஹத்தை வெட்ட வேண்டும். பிறகு மனிதன் பகவானுடைய கதைகளைச் சொல்வது கேட்பது முதலியவையால் ஜ்ஞானத்தை அடைந்து ஸம்ஸார மார்க்கத்தைக் கடந்து பகவானை அடைவான்.

அத்தியாயம்–13

ஸம்ஸாரமார்க்கம்

"வ்யாபாரிகள் பணத்தாசையால் எப்பொழுதும் காடு, தேசம் ஆகிய இவைகளில் ஸஞ்சரித்து ச்ரமப்படுவதுபோல தாண்டமுடியாத ப்ரவர்த்தி மார்க்கத்தில் ஜனங்கள் அவித்யையால் ப்ரவேசித்து ரஜோகுணம், தமோ குணம், ஸத்வ குணம், ஆகிய இவைகளால் பிரிக்கப்படும் கர்மங்களை கார்யமென்று பார்க்கிறார்கள். மேலும் ஸுகத்தில் ஆசைகொண்டவர் களாகிய ஸம்ஸாரமாகிய காட்டில் ஸஞ்சரித்து ஒரு பொழுதும் ஸுகத்தை அடைகிறதில்லை. ஸம்ஸாரமாகிய காட்டில் ஆறு திருடர்களிருக்கிறார்கள். அவர்கள் கெட்ட யஜமானனாகிய புத்தியின் தனமாகிய தர்மத்தை அனுபவத்தால் குறைக்கிறார்கள். இடையன் தூங்கும் சமயத்தில் செந்நாய்கள் ஆடுகளை அபஹரிப்பது போல் ஜீவன் மதித்திருக்கும் பொழுது புத்ரன் முதலியவர்கள் 'நீர் எனக்கு பிதா, எனக்கு பர்த்தா' என்று சொல்லி அவனை மோஹிக்கச் செய் கிறார்கள். மேலும் மிகுந்த கொடிகள், திருணங்கள், குல்மங்கள் ஆகிய இவைகளுள்ள மார்க்கத்தில் கொசு முதலியவைகளால் மனிதன் உபத்ரவிக்கப்படுவது போல, காமம் முதலியவைகளால் வ்யாப்தமான கிருஹஸ்தாச்ரமத்திலிருப்பவன் உபத்ரவத்தை அடை கிறான். கந்தர்வ நகரம்போல் மித்யையான தேஹத்தை ஸத்யமென்றும் நினைக்கிறான். பிசாசம் போன்ற தங்கம் முதலியதை கிரஹிக்கக் கூடியதென்றும் நினைக்கிறான். ஓ மஹாராஜ! காட்டு மார்க்கமாகச் செல்லும் வழிப்போக்கன் சூழல் காற்றினால் கிளம்பிய

தூள்களால் திக்குகள் தெரியாமல் கஷ்டப்படுவது போல் கிருஹம், பணம் முதலியவைகளை ஆத்மா வென்று நினைத்திருக்கும் அஜ்ஞன் ஸம்ஸாரத்தில் கஷ்டப்படுவான். பின்னுமவன் ஸ்த்ரீயினிடத்தில் ஆசைப்பட்டு அதனால் விவேகத்தை இழந்துவிடு கிறான். மேலும் வனத்தில் மனிதன் கண்ணுக்குப் புலப்படாமல் சப்திக்கும் ஜல்லியென்ற ஜந்துக்களின் சப்தத்தாலும், கண்ணுக்கு நேரில் கத்தும் கோட்டான் முதலியவைகளுடைய கடுமையான சப்தத்தாலும் மனங்கலங்கி பசியினால் வருத்தமடைந்து அபுண்ய விருக்ஷங்களை (ஏவைகளுடைய நிழல் தாஹத்தை யுண்டுபண்ணுமோ அவைகள்) ஆச்ரயிக்கிறான். சிலகாலத்தில் கானலை ஜலமென்று நினைத்து அத னையநுசரிக்கிறான். அதுபோல சம்சாரியாகவிருப்பவர் களும், நேரிலும் மறைவிலும் அப்ரியமான வார்த் தையைச் சொல்பவர்களுடைய வார்த்தைகளால் மனவருத்தமடைந்து பசியால் ச்ரமப்பட்டு பாபிகளை யும் ஆச்ரயிக்கிறார்கள். பின்னும் ஜலமற்ற நதிகளை அடைந்தவர்கள், ஜலத்தை அடையாமல் துக்கத்தை அடைவது போல் இவ்வுலகத்திலும், பரலோகத்திலும் துக்கத்தைக் கொடுக்கும் பாஷண்ட மார்க்கத்தை ஆசிரயிக்கிறார்கள். தாயாதிகள் முதலியவர்களை அன்னத்தைக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளு கிறார்கள். காட்டுத்தீக்குச் சமமான கிருஹத்திலிருந்து துக்கமாகிய அக்னியால் எரிக்கப்பட்டு வருத்தப்படு கிறார்கள். சில சமயம் ராக்ஷஸர்கள் போன்ற அரசர்கள் ப்ராணனுக்கொப்பான அவர்களுடைய பணத்தை அபகரிக்கிறார்கள். அதனால் மிகவும் துக்கிக்கிறார்கள். மேலும் சூரர்கள் சிலவேளை பிறருடைய பணத்தை அபஹரிக்கிறார்கள். அப்பொழுது பணத்தைப் பறிகொடுத்து

துக்கிக்கிறான். சிலவேளை தான் மிக்க சுகத்தை அடைந்தவன் போல் ஸ்வப்னகாலம் சந்தோக்ஷிக்கிறான். இன்னுஞ் சிலவேளை கற்களாலும், முட்களாலும் நிறைந்த வனத்தில் ஸஞ்சரித்து அதனால் மிகுந்த ச்ரமமடைந்து அதன் மத்தியில் இருக்கும் மரத்திலேற விரும்பியவன் போல ஸம்சாரியானவன் பலவித விக்னங்களால் தடுக்கப்பட்டு பெரியதான கர்மங்களை செய்யவிரும்பி வருத்தப்பட்டவன் போலிருக்கிறான். அடிக்கடி பசியால் வருத்தப்பட்டு ஜனங்களிடத்தில் கோபிக்கிறான். சிலசமயம் தூக்கமாகிய மலைப்பாம் பினால் விழுங்கப்பட்டு ஒன்றையுமறியாதவனாக விருக்கிறான். சர்ப்பம் போன்ற துஷ்டர்களால் பீடிக்கப்பட்டு விவேகமற்றவனாகி மோஹமாகிய பாழுங்கிணற்றில் விழுந்திருக்கிறான். சிலகாலம் பரஸ்த்ரீகளை ஆசிக்கிறான். அந்தஸ்த்ரீகளுடைய பர்த்தாவினால் உபத்ரவிக்கப்படுகிறான். மிக்க சிரமப் பட்டு பரஸ்த்ரீகளை அடைந்தாலும் பலிஷ்டர்களான மற்றவர்கள் அந்தஸ்த்ரீயை அபஹரிக்கிறார்கள். சிலசமயம் குளிர், வெயில், மழை, காற்று ஆகிய இவைகளுக்கு பதில் செய்ய முடியாதவனாகவிருக்கிறான். சிலவேளை ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு பணத்தின் விஷயமாக பிறரிடம் துவேஷிக்கிறான். அளவில் பணஞ்சிலவான பொழுது படுக்கை, கம்பளம் முதலியவை, வீடு வாஹனம் ஆகிய இவைகளில்லாமல் பிறரை யாசிக்கிறான். அதிலும் கிடைக்காவிடில் பிறருடைய சொத்தை அபேக்ஷிக்கிறான். அதனால் அவமானத்தை அடைகிறான். ஸம்பந்திகளும் ஒருவருக் கொருவர் பண விஷயமாக விரோதத்தையடைந்து மிகுந்த கஷ்டம் பணச்சிலவு ஆகிய இவைகளுள்ள சம்சாரமார்க்கத்தில் மரணமடைந்தவர்களுக்குச்

சமானர்களாகிவிருக்கிறார்கள். ஓ சூரனாகிய அரசனே! அந்த மார்க்கத்தில் ஜனங்கள் ஆபத்தை அடைந்தவர்களை விட்டு ஜனித்தவர்களை வைத்துக்கொண்டு விளையாடி வருகிறபடியாலதனைக் கடந்தவன் ஒருவனுமில்லை. மிக்க தைர்யமுள்ளவர்களும், திக்கஜங்களை ஜயித்தவர்களுமான அரசர்கள் "இந்த பூமி என்னுடையது, என்னுடையது" என்று விரோதத்தை விருத்திச் செய்து கொண்டு யுத்தத்தில் மரணமடைகிறார்களேயொழிய விஷ்ணுபதத்தை அடைகிறதில்லை. எவன் சந்நியாசியோ அவனே அந்த பதத்தை அடைவான். பின்னுமவன் சிலசமயம் கொடிபோன்ற ஸ்த்ரீகளுடைய கையினால் தழுவப்பட்டும், மதுரமாகப் பேசும் பறவைகள் போன்ற குழந்தைகளிடத்தில் ஆசையுள்ளவனாகியும் சம்ஸாரத்தில் ஆஸக்தியை அடைகிறான். சில சமயம் சிங்கம் போன்ற கால சக்ரத்தாலுண்டாகும் இறப்புப் பிறப்பிலிருந்து பயந்து கொக்குக்கும், கழுகுக்கும் சமமான பாஷண்டர்களுடன் ஸ்நேஹஞ்செய்து கொள்ளுகிறான். அதனால் பயனடையாமல் ப்ராஹ்மண குலத்தை அடைய விரும்புகிறான். ஆனால் புனருபனயனம் முதலிய ப்ராயசித்தங்களைச் செய்து கொள்ள இஷ்டமில்லாதவனாகி வானரங்கள் போன்ற நல்லொழுக்கமற்ற சூத்ரன் போன்றவர்களை ஆச்ரயிக்கிறான். அப்பொழுது வானரங்கள் போல ஸ்த்ரீயுடன் ரமித்துக் கொண்டு ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்ப்பதாலேயே மரணத்தை மறந்து விடுகிறான். இன்னுமவன் மரம்போன்ற கிருஹத்தில் ஸ்த்ரீ ஸம்போகத்தால் தீனனாகி தனக்கு நேர்ந்த பந்தத்தை நிவர்த்தித்துக் கொள்ள முடியாதவனாகி பார்வதகுஹை போன்ற வ்யாதி முதலியவைகளை அடைந்து யானை போன்ற

மிருத்யுவினிடம் பயந்து கொடிபோன்ற முந்திய கர்மத்தை ஆச்ரயித்திருக்கிறான். சிலசமயம் மிக்க ப்ரயாஸத்தால் , இம்மாதிரியான ஆபத்திலிருந்து நிவர்த்தியடைந்தாலும் திரும்பவும் ப்ரவர்த்தி மார்க்கத்தையே அடைகிறான். இம்மார்க்கத்தின் மாயையால் ப்ரவர்த்தித்து சுழன்று கொண்டிருக்கும் ஜனமானது இப்பொழுதும் அதன் கரையை அடைகிறதில்லை. ஓ ரஹூகணனே நீயும் இந்த மார்க்கத்தை அடைந்திருக்கிறாய். நீ தண்டாதிகாரத்தை விட்டு ஸகல ப்ராணிகளிடம் மைத்ரியுள்ளவனாகி, விஷயங்களில் அபிநிவேசத்தை விட்டு ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ஸேவித்து அதனால் கிடைத்த கூர்மையான ஜ்ஞானமாகிய கத்தியை அடைந்து இந்த மார்க்கத்தைக் கடந்து அக்கரை செல்லும்" என்றார்.

21–23 அதனைக் கேட்ட ரஹூகணர் "ஆச்சர்யம் மனுஷ்ய ஜன்மமே மிகவும் மேலானது, மற்ற ஜன்மங்களால் என்ன ப்ரயோஜனம்? மற்ற ஜன்மங்களில் பகவத் பக்தர்களான உம்மைப் போன்ற மஹான்களுடைய ஸமாகமம் கிடைக்கிறதில்லை. உம்முடைய பாதாரவிந்த தூளியால் பாபங்களற்ற வனுக்குப் பகவானிடத்தில் சுத்தமான பக்தியுண்டாகிறதென்பதில் என்ன ஆச்சர்யம்? இந்த முஹூர்த்தத்தில் கிடைத்த உங்களுடைய சேர்க்கையால் ஊஹிக்க முடியாத காரணமுள்ள அவிவேகமானது நிவர்த்தியாயிற்று. மஹான்களுக்கு நமஸ்காரம், சிசுக்களுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். ஜ்ஞானிகளுக்கு நமஸ்காரம் வடுக்களுக்கு நமஸ்காரம். ப்ரஹ்மஜ்ஞானிகளும் அவதூதர்களுமான அடையாளத்துடன் பூமியில் சஞ்சரிப்பவர்களுமான மஹான்களுக்கும், அரசர்களுக்கும் க்ஷேமமுண்டாகட்டும்" என்றார்.

24–27 "ஓ பரீக்ஷித்தே! மேலான மஹிமையுள்ள அந்த ப்ராஹ்மணோத்தமர் ஸிந்துதேசத்தரசனாகிய ரஹூகணருக்கு அவர் செய்த அபாரதத்தை நினைக்காமல் மிகுந்த தயவுடன் ஆத்மதத்துவத்தை யுபதேசித்து சமுத்ரம்போல தயைநிறைந்த சித்த முள்ளவராகி பூமியில் சஞ்சரித்தார். பிறகு ரஹூகணரும் ப்ராஹ்மணோத்தமரிடம் ஆத்மதத்வத்தை உபதேசித்துக் கொண்டு அவித்யையால் ஏற்பட்டிருந்த தேஹாத்ம புத்தியை விட்டுவிட்டார்., ஓ மஹாராஜ, பகவத்பக்தர்களை ஆச்ரயித்தவர்களுடைய மஹிமை இம்மாதிரியானது" என்று சொல்லக்கேட்ட பரீக்ஷித்து மஹாராஜன் சுகரைநோக்கி, "ஓ மஹாபாகவதரே! விசேஷங்களை அறிந்தவராகிய உம்மால் சம்சார மார்க்கம் நிரூபிக்கப்பட்டது. ஆனாலும் நேராகச் சொல்லாமல் காட்டில் சஞ்சரிப்பவன் கதையைச் சொல்லும் வ்யாஜமாகச் சொன்னீர். அது புத்திசாலி களால் அறியக் கூடியதேயொழிய அஜ்ஞர்களுக்கும் தெரியும்படி ப்ரகிருதத்திற்குத் தக்கபடி சம்ஸார மார்க்கத்தை நிரூபிக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

அத்தியாயம்–14

(முன் அத்தியாயத்தின் விளக்கம்)

அதனைக்கேட்ட சுகர் பின்வருமாறு சொல்லலானார். தேஹத்தையே ஆத்மாவென்று நினைத்தவர்களுக்கு சத்வம் முதலிய குணவிசேஷங்களால் ஏற்படும் புண்யம், பாபம், இரண்டுஞ் சேர்ந்தது ஆகிய கர்மங்களால் பலவகையான தேஹங்கள் உண்டா கின்றன. அவைகளுடன் சேர்ந்திருப்பது அவைகளை விட்டுப் பிரிவது ஆகிய சம்சாராநுபவம் அனாதியாக விருக்கிறது. அதற்குக் காரணம் ஆறு இந்திரியங் களேயாம். காட்டு மார்க்கம் போல் துக்ககரமான சம்சார மார்க்கத்தில் இந்தப் ப்ராணிகள் இந்திரியங் களால் தள்ளப்பட்டு அதிலும் பகவானாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவிற்கு ஸ்வாதீனமான மாயையால் மோஹமடைந்து பணம் சம்பாதிப்பதிலே நோக்கமுள்ள வியாபாரியானவன் தன்னுடைய சரீரத்தால் உண்டுப் பண்ணப்பட்ட கர்மங்களை பலத்தின் வழியாக அனுபவிப்பதுபோல் ஸ்மசானம் போல அமங்களமான சம்சார மார்க்கத்தை அடைந்திருக்கிறார்கள், அப்பொழுதும் பயனற்றவைகளும். பலவித விக்னங் களுள்ளவைகளுமான சேஷ்டையை அடைகிறார்கள், அப்படியும் அந்த சம்ஸார தாபத்தை நிவர்த்திக்கக் கூடியதும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவாகிய குருவின் சரணா ரவிந்தத்தை சேவித்த பக்தர்களுடைய மார்க்கமுமான பக்தி மார்க்கத்தை இப்பொழுது கூட ஒருவரும் அனுசரிக்கிறதில்லை. காட்டில் திருடர்களிருப்பது போல சம்சார மார்க்கத்தில் இந்த ஆறு இந்திரியங் களும் திருடர்களாக விருக்கின்றன. ஏனென்றால்

மிக்க ச்ரமப்பட்டு சம்பாதிக்கப்பட்டதும், தர்மத்திற்கு சாதனமுமான புருஷனுடைய பணத்தைத் திருடர்கள் அபஹரிக்கிறார்கள் இந்திரியங்கள் பார்வை, தொடுவது, ருசி பார்ப்பது, முகருவது, ஸங்கல்பம், நிச்சயம், இது முதலிய கிராம்ய போகங்களால் மனத்தை ஜயிக்காதவனும் கெட்ட புத்தியுள்ளவனு மாகிய புருஷனுடைய பரமபுருஷனை ஆராதிப்பதாகிய தர்மத்தை அபஹரிக்கின்றன. எப்படி செந்நாய்களும், நரிகளும் ஆட்டுமந்தையிலிருந்து ஆட்டை அபஹரிக் கின்றனவோ அப்படி தாரம், (களத்திரம்) அபத்யம் (குழந்தை) என்ற பெயருள்ளவைகளும் செந்நாய் முதலியவைகளின் செய்கையுள்ளவர்களுமான பந்துக்கள் சம்ஸாரியான புருஷனுடைய பணத்தை அவன் பார்த்திருக்கும் பொழுதே அபஹரிக்கிறார்கள். எப்படி வருஷந்தோறும் வயலை உழுதும் விதை விதைக்கும் போது திருணங்களும், கொடிகளும் நெருக்கமாக உண்டாகின்றனவோ, அப்படியே கிரஹஸ்தாச்ரமம் கர்மக்ஷேத்ரமாகையால் கர்மங்கள் நாசமடைகிறதில்லை. ஏனென்றால் இந்த ஆச்ரமமானது கர்மங்களுக்கு பாத்ரமாயிருக்கிறது. (கற்பூரமில்லாதபோதும் அதன் வாசனையிருப்பதுபோல கர்ம வாசனை நசிக்கிற தில்லை) மேலும் காட்டுக் கொசுக்கள், பூச்சி, பறவைகள், திருடர்கள்,எலி ஆகிய இவைகளுக்குச் சமமான அல்ப மனிதர்களால் பணங்கள் அபஹரிக்கப்பட்டு சம்ஸாரி யானபுருஷன் சம்ஸாரத்தில் சுற்றிக்கொண்டு அவித்யை, காமம், கர்மங்கள் ஆகிய இவைகளில் சம்பந்தப்பட்ட மனமுள்ளவனாகி கந்தர்வ நகரம்போல மித்யாபூதமான இந்த ப்ரபஞ்சத்தை சத்யமென்று நினைக்கிறான். சில சமயம் பானம், போஜனம், மைதுனம் ஆகிய இவைகளில் ஆசை கொண்டு கானல் போன்ற விஷயங்களில்

ஆசைப்படுகிறான். மேலும் வனத்தில் குளிரால் வருத்தப்பட்டவன் அக்னியைத் தேடியும் அகப் படாமல் அக்னியை வாயில் வைத்துக் கொண்டிருக்கும் பிசாசத்தை அனுஸரித்தும் அது கிடைக்கிறதில்லை. கிடைத்தாலும் அதனால் எப்படி பக்ஷிக்கப்படு கிறானோ அப்படி சம்சாரியானவன் ரஜோகுணத்தால் ஸுவர்ணத்தை அடைய விரும்பி ச்ரமப்படுகிறான்; அது கிடைக்கிறதில்லை. கிடைத்தாலும் மதம் முதலியவைகளை யுண்டுபண்ணி புருஷனை கெடுத்து விடுகிறது. அந்தஸுவர்ணமானது ஸகல தோஷங் களுக்கும் இருப்பிடம். அக்னியினுடைய அமேத்யம். வீடு, பணம் முதலியவைகளில் ஆத்மாவென்ற அபிநிவேசமடைந்து, சம்சாரமாகிய காட்டில் நாலு பக்கத்திலும் அலைகிறான். சில சமயம் காற்றின் சமூகம் போன்ற ஸ்திரீயினுடைய மடியில் உட்கார்ந்து அந்த காலத்திலுண்டான ரஜோகுணத்தால் மறைக்கப் பட்ட புத்தியுள்ளவனாகிய தூளிகளடைந்த கண் களுள்ளவன் போல திக்குகளிலிருக்கும் தேவதை களை தெரிந்து கொள்ளுகிறதில்லை. சிலசமயத்தில் விஷயங்கள் பயனற்றவையென்று அறிந்தும் தேகத்தில் அபிநிவேசத்தை அடைந்து அதனால் விவேகமற்ற வனாகி, கானல் போன்ற அந்த விஷயங்களையே அனுசரிக்கிறான். சிலசமயம் கோட்டான், ஜல்லியென்ற ஜந்து ஆகிய இவைகளுடைய சப்தம் போன்ற மிக்க கடுமையாக நேரிலாவது, மறைவிலாவது கடுஞ்சொற் களைச் சொல்லும் சத்ருக்கள், அரசர்கள் ஆகிய இவர் களுடை வார்த்தையைக் கேட்டு வருத்தப்படுகிறான். பின்னுஞ் சிலகாலம் முன்ஜன்மத்தில் செய்த புண்யத்தில் பலத்தை அனுபவித்து பிறகு அபுண்ய விருஷங்கள், விஷஜலத்தால் நிறைந்த கிணறு ஆகிய

இவைகள் போல பயனற்ற பணமுள்ளவர்களும், மரணமடைந்தவர்கட்கு ஸமமமானவர்களுமான பிரபுக்களை அனுசரிக்கிறான். பின்னுஞ் சிலசமயம் அஸத்துக்களுடைய சேர்க்கையால் ஏமாற்றப்பட்டு ஜலமில்லாத ஆற்றின் பள்ளத்தைப்போல பாஷண்டமதத்தை ஆச்ரயிக்கிறான், இன்னும் அவருடைய தகப்பன் முதலிய பந்துக்களைப் பார்த்து பொய்யான சுகத்தை அனுபவிக்கிறான், சிலவேளை க்ரஹஸ்தாச்ரமத்திற்குரிய கர்மங்களைச் செய்ய விரும்பி அதற்கு விக்னமான லௌகீக துக்கங்களால் தடுக்கப்பட்டு முட்களாலும் கற்களாலும் நிறைந்த பூமியில் நடப்பவன் போல துக்கிக்கிறான், சில சமயம் ஸஹிக்க முடியாத ஜாடராக்னியால் (பசியால்) சரீரத்தின் வலிமை குறைந்தவனாகி தன்னுடைய குடும்பத்தினிடம் கோபிக்கிறான். அந்தப் புருஷன் தூக்கமாகிய மலைப்பாம்பினால் பீடிக்கப்பட்டு விசேஷ மோஹத்தை அடைந்து சூன்யமாகிய வனத்தில் போய் தூங்குகிறான். அப்பொழுது பிணம் போல அவன் ஒன்றையும் அறிகிறதில்லை. சிலசமயம் துஷ்டர்களாகிய ஸர்ப்பங்களால் மானம் குறைந்தவனாகி தூங்குவதற்கும் சமயம் கிடைக்காமல் துக்கப்படுகிறான். அதனால் ஒவ்வொரு க்ஷணத்திலும் விவேகம் குறைகிறது. பிறகு கண்ணில்லாதவன் பாழுங்கிணற்றில் விழுவது போல் பாபங்களைச் செய்கிறான். சிலசமயம் காமத்தில் விசேஷ ஆசையுள்ளவனாகி பரஸ்திரீகளையும் பிறருடைய பணத்தையும் அபஹரிக்கிறான். அப்பொழுது அவைகளுக்கு யஜமானனாவது அரசனாவது அவனைக் கொல்லுகிறான். பிறகு அந்தப் பாபியான புருஷன் கரையற்ற நரகத்தை அடைகிறான். ஆகையால் ப்ரவிர்த்தி மார்க்கத்தில் இகலோகத்திலும் பரலோகத்திலும் சம்ஸாரத்தை

கொடுக்கக் கூடியது கர்மமென்று சொல்லுகிறார்கள். தெய்வச் செயலாய் சம்ஸார பந்தத்திலிருந்து நிவர்த்தி அடைந்தாலும் மற்றொருவன் அதைக் கெடுத்துவிடுகிறான். அதன் பலத்தை இவன் அடைகிறதில்லை. மேலும் குளிர், வெயில், காற்று முதலிய ஆதிதைவிகம் ஆதி பௌதிகம் ஆத்யாத்மிகம் இவைகளாலுண்டாகும் துக்கங்களை நிவர்த்தித்துக்கொள்ள ஸாமார்த்திய மற்றவனாகி முடிவில்லாத ஆலோசனை செய்துகொண்டு துக்கிக்கிறான். பின்னுமவன் பிறருடன் இருபது சோழி கொண்ட நாணயமாகிய காகணிகையின் நிமித்தம் விரோதத்தை அடைகிறான். இந்த ஸம்ஸார மார்க்கத்தில் ஸுகம், துக்கம், ஆசை, விரோதம், பயம், அபிமானம், ஸந்தோஷம், சோகம், மோகம், மாசர்யம் அசூயை, அவமானம், பசி, தாஹம், மனோவ்யாதி, சரீரவ்யாதி, ஜனனம், மரணம், இவை முதலியவைகள் புருஷனுக்கு உபத்ரவத்தை உண்டுபண்ணுகின்றன, சிலஸமயம் தேவமாயையின் மஹிமையால் ஸ்திரீயினால் தழுவப்பட்டு விவேகமற்றவனாகி அவளுடன் விளையாடுவதற்கு தகுந்தவீடு கட்டுவதில் நோக்கமுள்ளவனாக இருக்கிறான். மேலும் அவளுடைய ஆச்ரயத்தால் ஏற்பட்ட பிள்ளைகள் பெண்கள் இவர்களுடைய வார்த்தை, அவர்களைப் பார்ப்பது அவர்களுடைய நடை ஆகிய இவைகளால் மனங்கலங்கி மனத்துக்கு வசப்பட்டு ஆத்மாவை நரகத்துக்குப் பாத்ரமாகச் செய்கிறான். பரமாணு முதல் இரண்டு பரார்த்தம் வரையில் கணக்கிடப்பட்ட காலமுள்ளவயதினால் ப்ரஹ்மா முதல் ஸ்தம்பம் வரையிலுள்ள ப்ராணிகளை வேகமாக அபஹரிக்கின்ற பகவானுடைய காலசக்ரத்தினிடமிருந்து பயந்து அந்த காலரூபியும் யஜ்ஞபுருஷனுமான ஈச்வரனை லக்ஷ்யஞ்செய்யாமல் கழுகுகளுக்கும்,

கொக்குகளுக்கும் ஸமானர்களும் பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப்படாததுமான பாஷண்ட தேவதை களைக் கட்டுப்பாடாக புருஷன் ஆச்ரயிக்கிறான், பாஷண்ட மதத்தில் பிரவேசித்து அது பயனற்றதென்று தெரிந்துகொண்ட பிறகு ப்ராஹ்மண்யத்தை அடைய விரும்புகிறான். ஆனாலும் அந்த ப்ராஹ்மண்யத்தை அடைய தகுதியான புனருபநயனம் முதலிய ப்ராயச் சித்தங்களைச் செய்துகொண்டு வேதத்தில் சொல்லிய வைகளும், ஸ்ருதியில் சொல்லியவைகளுமான கர்மங் களை அனுஷ்டித்து யஜ்ஞ புருஷனாகிய பகவானை ஆராதிக்க இஷ்டமில்லாமல் சூத்ரனைபோல் குடும்பத்தைப் போஷித்துக் கொண்டும், வானரஜாதி போல் மைதுனகர்மாவைச் செய்து கொண்டும் இருக்கிறான். அக்னிஹோத்திரம் முதலியவைகளை அனுஷ்டிக்கிறதில்லை. அப்பொழுதும் தனதிஷ்டப்படி க்ரீடித்துக் கொண்டும் ஒருவருக்கொருவர் முகத்தை பார்த்து ஸந்தோஷிப்பது முதலிய க்ராம்ய கர்மங் களைச் செய்து கொண்டே மரணத்தை மறந்து விடுகிறான். மேலும் மரங்களில் வசித்துக் கொண்டி ருக்கும் குரங்குபோல புருஷன் பிள்ளை ஸ்திரீ இவர் களிடத்தில் ப்ரீதி வைத்து கிருஹத்தில் மைதுனத் திலேயே ப்ரீதி உள்ளவனாக இருக்கிறான். சிலசமயம் பணமில்லாததனால் படுக்கை முதலிய போகங்கள் கிடைக்காமல் அவைகளுக்காக முயன்றும் இஷ்டம் நிறைவேறாமல் பிறருடைய ஸொத்தில் ஆசைக் கொண்டு அதனால் அவமானத்தை அடைகிறான். இம்மாதிரி பணத்தைப்பற்றிய விரோதமுள்ளவனா யிருந்து சில சமயம் ஒருவருக்கொருவர் ஸ்நேஹிப்பதும், பிரிவதுமாக இருக்கிறது. இம்மாதிரியான பலவகை துக்கங்களுள்ள சம்ஸார மார்க்கத்தில் எவன்

ஆபத்தை அடைந்தானோ அவனை விட்டுவிட்டு மற்றவனும் அதிலிருந்து திரும்புகிறதில்லை. துக்கித்துக் கொண்டும், ஸந்தோஷித்துக் கொண்டும், பாடிக் கொண்டும் இருக்கிறான். எவர்கள் ஆத்மாவை அடக்கினவர்களோ, சாந்தர்களோ, கோபமில்லாதவர் களோ அவர்களே இந்த மார்க்கத்தைத் தாண்டுவார்கள். திக்கஜங்களை ஜயிக்கும் பராக்ரமமுள்ள அரசர் களாலும் இதனுண்மையைத் தெரிந்து கொள்ள முடியாது. ஆனால், "இந்தப் பூமி என்னுடையது, என்னுடையது" என்று யுத்தஞ்செய்து மரணமடை கிறார்கள். ஸ்வர்க்கம் முதலிய புண்யலோகத்தை அடைந்தவனும், ஆபத்திலிருந்து விடுபட்டு முந்திய கர்மவசத்தால் திரும்பவும் ஸம்ஸார மார்க்கத்தை அடைந்து பூலோகத்தை அடைகிறான்.

42–47. ரிஷபருடைய புத்ரராகிய பரதமஹா ராஜனுடைய மார்க்கத்தை மனத்தாலும் அனுசரிக்க யாரால் முடியும்? கருடனுடைய வேகத்தை தேனீக்கள் அனுஸரிக்குமா? அந்த பரதமஹாராஜன் பூமி, புத்ரன் பந்துக்கள், பணம், களத்ரம் இவைகளில் ஆசைப் படாமலிருந்தார். மேற்சொல்லியவைகளில் வைராக்ய மடைவது மிகவும் துர்லபமல்லவா? பின்னுமவர் தேவர்களால் ப்ரார்த்திக்கக்கூடியவனும், பரதமஹா ராஜனை கடாக்ஷித்தவளுமாகிய லக்ஷ்மீயையும் அவர் விரும்பவில்லை. ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சேவையில் ஆசைகொண்ட மஹான்களுக்கு மோக்ஷமும் பெரிதான தல்ல. பின்னுமவர் மான் ஜன்மத்தை விடும்பொழுது யஜ்ஞஸ்வரூபியும், தர்மத்துக்கு பலத்தை கொடுப் பவரும், தர்மத்தை அனுஷ்டிப்பவரும், யோகஸ்வரூபி யும், ஞானத்தையே முக்யமாயுடையவரும், மாயைக்கு

அதிபதியும் ஸகல பிராணிகளுக்கு இருப்பிடமும், பிரளயகாலத்தில் எல்லாவற்றையும் ஸம்ஹரிப்ப வருமான ஸ்ரீ நாராயணனை நமஸ்கரிக்கிறேன்" என்று கம்பீரமாக சொன்னார். மேலுமிந்த பரதமஹா ராஜருடைய குணங்களும் சரிதமும் பகவத் பக்தர் களால் கொண்டாடப்பட்டவைகள்; சுத்தமானவைகள்; ஆனதால் அவருடைய சரிதமானது க்ஷேமத்தையும், தீர்க்கமான ஆயுஸ்ஸையும், பணத்தையும், கீர்த்தியை யும், மோக்ஷத்தையும், கேட்பவர்களுக்கும், பிறருக்கு சொல்பவருக்கும், அனுமோதிப்பவர்களுக்கும் கொடுக் கிறது, இந்த சரிதத்தை கேட்டவன் ஸகல க்ஷேமங் களையும் ஸ்வயமாகவே அடைவான்; பிறரிடமிருந்து ஒன்றையும் அபேக்ஷிக்கமாட்டான்.

அத்தியாயம்–15

பரதருடைய வம்சம்

பரதருடைய புத்ரராகிய ஸுமதி என்பவர் ரிஷபதேவரைப் போல் ஜீவன் முக்தர்களுடைய மார்க்கத்தை அனுஷ்டித்து வந்தார். அவரைப் பார்த்து சில பாஷண்டிகள் பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப் படாததும், வேதத்தில் சொல்லப்படாததுமான ஒரு தேவதையை தங்களுடைய புத்திக்குத்தக்கபடி மிக்க பாவியான கலியில் ஏற்படுத்தப் போகிறார்கள். அந்த ஸுமதி என்பவருக்கு த்ருவஸேனையென்பவளிடத்தில் தேவதாஜித் என்று ஒரு புத்ரன் பிறந்தான். அவருக்கு ஆஸுரி என்பவளிடத்தில் தேவத்யும்னன் என்று ஒரு புத்ரன் உண்டானான். அவனுக்கு தேனுமதி என்பவளிடத்தில் ஸுவர்சலையிடத்தில் ப்ரதீஹனென்ற சிறந்த குமாரன் உண்டானான். அவன் அநேகர் களுக்கு ஆத்ம வித்தையை உபதேசித்து அதனால் தான் சுத்தனாகி மஹாபுருஷனை நேரில் அனுபவித்தான். அவருக்கு ப்ரதிஹர்தா, ப்ரஸ்தோதா, உத்காதா என்ற மூன்று புத்ரர்கள் பிறந்தார்கள்; அவர்கள் யாகஸ்ருவ பத்தை நன்றாய் அறிந்தவர்கள். ப்ரதிஹர்தாவிற்கு ஸ்துதியென்பவிளிடத்தில் வ்யோமன், பூமா என்று இரண்டு புத்ரர்கள் பிறந்தார்கள். பூமாவிற்கு ரிஷிகுல்யை என்பவளிடத்தில் உத்கீதனும், அவருக்கு தேவகுல்பை என்பவளிடத்தில் ப்ரஸ்தோதா யென்ப வரும், அவருக்கு வரருத்ஸை யென்பவளிடத்தில் விபு யென்பவரும், அவருக்கு பாரதீயினிடத்தில் ப்ரது ஷேணனும், அவருக்கு ஆகூதியினிடத்தில் நக்தனென் பவரும், அவருக்கு கயனென்ற கீர்த்திமானாகிய

புத்ரனும் உண்டானார்கள். அவர் ஜகத்தை காப்பாற்று வதற்காக மனிதனாக அவதரித்த மஹாவிஷ்ணுவின் அம்சமேயாம். அதனால்தான் மஹாபுருஷனாக இருந்தார். அவர் ஜனங்களைக் காப்பாற்றுவது. ப்ரியப்படுத்துவது, சிக்ஷிப்பது முதலிய க்ஷத்ரிய தர்மத்தையும், யாகம் முதலியவைகளையும் அநுஷ்டிப் பவர், மஹாபுருஷனும், பரனைக் காட்டிலும் பரனு மாகிய பரப்ரஹ்மத்தினிடத்தில் மூன்று கரணங்களை யும் உண்மையாக ஸமர்ப்பித்து, ப்ரஹ்மத்தை அறிந்தவர்களுடைய பாதங்களை சேவித்து அதனால் பக்தியோகத்தை அடைந்து சித்தசுத்தி உள்ளவராகி அகங்காரமற்ற மனத்தில் ப்ரகாசிக்கும் ப்ரம்ஹமானுபவ முள்ளவராக இருந்ததுமன்றி அபிமானமில்லாமலேயே பூமியைப் பரிபாவித்தார். ஓ பாண்டுவின் குலத்தில் பிறந்தவரே! அவருடைய சரிதத்தை வித்வான்கள் பின்வருமாறு கானஞ் செய்கிறார்கள். பகவானுடைய அம்சமாகிய கயனென்ற அரசன்போல் நடப்பதற்கு பகவதம்சத்தை தவிர வேறு யாரால் முடியும்? அவர் அனேக யாகங்களைச் செய்தவர்; கம்பீர மனமுள்ளவர்; பலவகையான சாஸ்த்ரங்களை அறிந்தவர். தர்மத்தைக் காப்பாற்றுகிறவர்; ஸகல சம்பத்துள்ளவர்; சாதுக் களுடைய சபைக்கு அதிபதி; சாதுக்களை சேவிப்பவர்; வீண்போகாத ஆசீர்வாதமுள்ள ச்ரத்தை முதலிய தக்ஷருடைய பெண்கள் அவருக்கு நதிகளைக் கொண்டு அபிஷேகம் செய்வித்தார்கள். அவருடைய குணங்களால் சந்தோஷம் அடைந்து பூமி தேவியானவள் அவருடைய ராஜ்யத்திலுள்ள ப்ரஜைகளுக்கு இஷ்டமான வஸ்துக் களைக் கொடுத்தாள். ஆசையற்ற வராகிய அந்த மகாராஜனுக்கு வைதிகமான கர்மங்கள் ஸகல காமங் களை உண்டு பண்ணின. யுத்தத்தில் பாணங்களைக்

கொண்டு ஜயிக்கப்பட்ட எல்லா அரசர்களும் அவருக்கு கப்பங் கட்டினார்கள். தக்ஷிணையாலும், காப்பாற்று வதாலும் பூஜிக்கப்பட்ட ப்ராஹ்மணர்கள் தாங்கள் செய்த தர்மத்தின் ஆறிலொரு பாகத்தை அவருக்கு கொடுத்தார்கள். அந்த மகாராஜனுடையை யாகத்தில் ஸோமபானம் நடக்கும் பொழுது இந்திரன் கர்வங் கொண்டிருந்தார். அப்பொழுது சுத்தமும் ஸ்திரமுமான பக்தியுடன் அரசனால் சமர்ப்பிக்கப்படும். யாக பலனை மஹாவிஷ்ணு நேரில் பெற்றுக் கொண்டார். எந்த பகவான் திருப்தி அடைந்தால் தேவதைகள், திர்யக் ஜாதிகள், மனிதர்கள், மரங்கள், கொடிகள், ப்ரஹ்ம தேவர் முதலிய எல்லோரும் திருப்தியடைவார்களோ, அந்த பகவான் கயமஹாராஜனுடைய யாகத்தில் விசேஷ திருப்தி அடைந்தார்.

15–21 கயமஹாராஜனுக்கு ஜயந்தியினிடத்தில் சித்ரரதன், ஸ்வாதி, அவரோதனன் என்ற மூன்று புத்ரர்கள் பிறந்தார்கள். சித்ரரதனுக்கு ஊர்ணையினி டத்தில் ஸம்ராட்டும், அவருக்கு உத்கலையினிடத்தில் மரீசியும் அவருக்கு பிந்துமதியினிடத்தில் பிந்துமானும் அவருக்கு சரகையினிடத்தில் மதுவும், அவருக்கு ஸுமனஸ் என்பவளிடத்தில் வீரவ்ரதனும், அவருக்கு போஜையிடத்தில் மன்யு, ப்ரமன்யு, என்பவர்களும் உண்டானார்கள். மன்யுவுக்கு சத்யையிடத்தில் பிறந்தவன் புவனன், அவனுக்கு தோஷையிடத்தில் த்வஷ்டாவும், அவருக்கு விரோசனையினிடத்தில் விரஜனும், அவருக்கு விஷூசியினிடத்தில் நூறு புத்ரர்களும், ஒரு பெண்ணும் பிறந்தார்கள். ஸ்ரீ மஹா விஷ்ணுவானவர் தேவதைகளை அலங்கரிப்பதுபோல் ப்ரியவரதருடைய வம்சத்தை விரஜரென்பவர் தமது கீர்த்தியால் அலங்கரித்தார்.

அத்தியாயம்–16

த்வீபங்களின் லக்ஷணம்

அதனைக்கேட்ட பரீக்ஷீத்து மஹாராஜன் சுகரை நோக்கி "எதுவரையில் ஸூர்யப்ரகாசமிருக்கிறதோ எந்த எந்த இடத்தில் நக்ஷத்திரங்கள் முதலிய தேஜஸ் ஸூக்களுடன் சந்திரன் ப்ரகாசிக்கிறாரோ, அவ்விடத்தில் ப்ரியவ்ரதருடைய ரதம் சென்றதாகையால் ஏழு ஸமுத்திரங்கள் உண்டுபண்ணப்பட்டன. என்றும் அதனால் பூமி ஏழு த்வீபங்களாகப் பிரிக்கப்பட்டது" என்றும் உம்மால் சொல்லப்பட்டது, ஆனாலும் அவைகளுடைய அளவு, லக்ஷணம் முதலியவைகளை தெரிந்து கொள்ள விரும்புகிறேன். முக்குணங்களால் ஏற்பட்ட பகவானுடைய ஸ்தூலமாகிய ரூபத்தில் வைக்கப்பட்ட மனத்தை குணங்களுடைய ஸம்பந்த மற்றதும், அதிஸூக்ஷ்மமும் வாஸூதேவனென்று பெயருள்ளதுமான பரமாத்ம ஜ்யோதிஸ்ஸினிடத்தில் ஸமர்ப்பித்திருக்கிறேன். ஆனதால் ஓ குருவே! நான் கேட்ட விஷயத்தைச் சொல்லவேண்டும் என்று கேட்டார்.

4–20. அதைக்கேட்டு சுகரானவர் "ஓ அரசனே! ஸகல குணங்களால் நிறைந்தவரும், பகவானுமாகிய மஹாபுருஷனுடைய மாயை எதுவோ. அதனையும், இருப்பிடங்களையும், நாமங்களையும், லக்ஷணத்தையும், மனத்தாலும், வாக்கினாலும் தெரிந்துகொள்ளுவதற்கு தேவருடைய ஆயுஸ்ஸுள்ள புருஷனாலும் முடியாது. ஆனதால் முக்யமாக பூகோளத்தைப் பெயராலும். ஸ்வரூபத்தாலும், லக்ஷணத்தாலும் நிரூபிக்கிறேன்.

இந்த பூமண்டலமாகிய தாமரை மலருடைய நடுவி லிருக்கும் ஜம்பூத்வீபமானது லக்ஷயோஜனை தூரம் அகலமுள்ளது. தாமரை இலைபோல் ஸமவட்டமாய் இருக்கிறது. இதில் ஒன்பது வர்ஷங்களிருக்கின்றன. அவைகள் ஒன்பதாயிரம் யோஜனை தூரம் அகல முள்ளவை. ஒவ்வொரு வர்ஷங்களின் எல்லைகளில் மலைகளுண்டு. இவைகளுடைய நடுவில் இளாவிருத மென்ற வர்ஷமிருக்கிறது. அதனுடைய நடுவில் குல பர்வதங்களுக்குட் சிறந்த மேருவென்ற தங்கமலை இருக்கிறது, மேலும் அது லக்ஷயோஜனை உயர முள்ளது; பூமண்டலமாகிய தாமரைப் புஷ்பத்தின் நடுவிலிருக்கும் காயாக விளங்குகிறது, அது உச்சியில் முப்பத்திரண்டாயிரம் யோஜனை அகலமுள்ளது அடியில் பதினாறாயிரம் யோஜனைதூரம் பூமிக்குள் ப்ரவேசித்திருக்கிறது, இளாவிருத வர்ஷத்திற்கு பக்கத்தில் ரம்யகம், ஹிரண்மயம், குரு என்ற வர்ஷங் களுக்கு நீலம், ச்வேதம், ச்ருங்கவரன் என்ற மூன்று மலைகள் கிழக்கு திக்கில் நீண்டு எல்லைகளாக இருக்கின்றன. அவைகள் இருபக்கத்திலும் உப்பு ஸமுத்ரத்தை எல்லையாயுடையவைகள்; இரண்டா யிரம் யோஜனைதூரம் அகலமுள்ளவைகள்; ஒன்றை விட ஒன்று நீளத்தில் மாத்திரம் பத்திலொருபாகம் குறைந்தவைகள், இளா விருதத்திற்கு தென்பக்கத்தில் நிஷதம், ஹேமகூடம் ஹிமாலயம் என்ற மூன்று மலைகள் கிழக்குதிக்கில் நீண்டவைகளாக இருக்கின்றன. அவைகள் நீலம் முதலிய பர்வதங்கள் போல் லக்ஷம் யோஜனை தூரம் உயரமுள்ளவைகள். முறையே ஹரிவர்ஷம் கிம்புருஷவர்ஷம், பாரதவர்ஷம் ஆகிய இவைகளுக்கு எல்லைகளாக இருக்கின்றன இளாவிருத வர்ஷத்திற்கு மேற்கிலும், கிழக்கிலும்,

மால்யவான், கந்தமாதனன் என்ற மலைகள் கேதுமாலம், பத்ராச்வம் என்பவைகளுக்கு எல்லைகளாக விருக்கின்றன. அந்த மலைகள் வடக்கில் நீலமலை வரையிலும், தெற்கில் நிஷதம் வரையிலும் பரவியிருக்கின்றன; மேலும் அவைகள் இரண்டாயிரம் யோஜனை தூரம் பருத்தவைகள். மந்தரம், மேரு மந்தரம், ஸுபார்சவம், குமுதம் என்ற மலைகள் மேருவிற்கு நாலு திக்கிலும் ஒத்தாசை மலைகளாக ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அவைகள் அகலத்திலும், உயரத்திலும் லக்ஷ யோஜனை தூரமுள்ளவைகள். மேற்சொல்லிய மலைகளில் முறையே மாமரம்; நாகை மரம் கதம்ப மரம் ஆலமரம் ஆகிய இவைகள் அந்த அந்த மலைக்கு த்வஜங்கள் போல் ப்ரகாசிக்கின்றன, அவைகள் லக்ஷ யோஜனை தூரத்திற்கு அதிகமான உயரமுள்ளவைகள்; அவ்வளவு கிளைகளுள்ளவைகள். மேலும் அந்த மலைகளில் நூறு யோஜனை அகலமுள்ளவைகளும் பால், தேன், கருப்பஞ்சாறு. சுத்த ஜலம் இவை களுள்ளவைகளுமான நான்கு மடுக்களிருக்கின்றன. அவைகளை சேவிக்கும் உபதேவர்களும் இயற்கையில் அணிமா முதலிய யோகைச்வர்யங்களை தரிக்கிறார்கள். பின்னும் அந்த மலைகளில் நந்தனம், சைத்ரரதம், வைப்ராதிகமம், விச்வ தோபத்ரம், என்ற நான்கு உத்யானவனங்களிருக்கின்றன. அவைகளில் சிறந்த தேவர்கள் அநேக தோழிகளுடன் கூடிய உத்தம தேவ ஸ்திரீகளுடன் விளையாடுகிறார்கள். உபதேவர்கள் அவர்களுடைய மஹிமையை கானஞ் செய்கிறார்கள், மேற்சொல்லிய மந்தரமலையின் நடுவிலிருக்கும் 101000, யோஜனை தூரம் உயரமுள்ள மாமரத்திலிருந்து மலையின்; சிகரம் போல பருத்த பழங்கள் விழுகின்றன, அவைகள் அமிருதத்திற் கொப்பானவைகள்;

மேலுமவைகள் மிக்க உயரத்திலிருந்து விழுவதனால் உடைந்து போகின்றன; அவைகளுடைய மிக்க வாசனை யுள்ள ரஸமானது அருணோதா என்ற பெயருள்ள நதியாக மந்தரமலையிலிருந்து இளாவிருத்தத்திற்குக் கிழக்கில் ப்ரவஹிக்கிறது. பார்வதியின் வேலைக்காரி களான புண்ய ஜனஸ்திரீகள் அந்த நதியை சேவிப் பதால் அவர்களுடைய சரீரத்தில் பட்டு, வீசும் நல்ல வாசனையுள்ள காற்றினால் பத்து யோஜனை தூரம் வாசனையாக இருக்கிறது. அம்மாதிரி மேருமந்தரமென்ற மலையிலிருக்கும் நாகை மரத்திலிருந்த யானையின் சரீரம் போன்றவைகளும், ரஸத்தால் நிறைந்தவை களுமான பழங்கள் கீழே விழுகின்றன; அவைகளுடைய ரஸமானது ஜம்பூ நதியென்ற பெயருடன் மேரு மந்தரத்தின் சிகரத்திலிருந்து பூமியில் விழுகிறது. பின்னுமது இளாவிருதத்திற்கு தெற்கில் ப்ரவஹிக்கிறது. அதன் இரு கரையோரங்களிலும் இருக்கும் மண்ணானது அந்த நதியில் ஜல சம்பந்தத்தாலும், காற்று, சூர்யன் இவைகளுடைய சம்பந்தத்தாலுண்டாகும் பாக (உஷ்ணத்தின் சேர்க்கை)த்தாலும் ஜாம் பூதமென்ற பெயருள்ள தங்கமாக ஆகிறது. அதனை தேவர்கள் தம்முடைய ஸ்திரீகளுடன் கிரீடம், வளை அரைஞாண் முதலிய ஆபரணங்களாகச் செய்து தரித்துக் கொள்ளு கிறார்கள். சுபார்ச்வம் என்ற மலையிலிருக்கும் கதம்ப விருக்ஷத்தினுடைய பொந்துகளிலிருந்து மது தாரைகள் (தேன் பிரவாகங்கள்) ஐந்து வகையாகப் பெருகி இளாவிருதத்திற்கு மேற்கிலோடி அங்கிருப்பவர்களை சந்தோஷப்படுத்துகின்றன. அந்த ஒவ்வொரு நதியும் ஐந்து பாகம் விஸ்தாரமுடையவைகள்; அவைகளை பூஜிப்பவர்களுடைய முகத்திலிருந்து வீசும் காற்றானது நூறு யோஜனை தூரம் வாசிக்கிறது. இது போலவே

குமுத மலையில் இருக்கும் சதவல்கமென்ற ஆலமரத்தி விருந்து பால், தயிர், நெய், தேன், வெல்லம், அன்னம், வஸ்திரம், படுக்கை, ஆஸனம், ஆபரணம் முதலிய எல்லா வஸ்துக்களையும் கொடுக்கும் நதிகள் ப்ரவஹிக் கின்றன. அவைகள் இளாவிருதத்திற்கு வடக்கிலோடி அங்கிருப்பவர்களை சந்தோஷப்படுத்துகின்றன. அவை களை உபயோகப்படுத்திக் கொள்பவர்களுக்கு கிழத் தனத்தாலுண்டாகும் நரை, ச்ரமம், வியர்வையா லுண்டான நாற்றம் கிழத்தனம், மரணம், வியாதி, அபமிருத்யு, குளிர், உஷ்ணம், வர்ணம் மாறுதல் முதலிய உபத்திரவங்கள் ஒருபொழுதும் நேரிடுகிற தில்லை. உயிருள்ளவரையில் மேலான சுகத்தையே அடைகிறார்கள். குரங்கம், குரரம், குஸும்பம் வைகங்கதம், த்ருகூடம், சசிரம், பதங்கம், ருசகம், நிஷதம், சுஷிதிவாசம், கபிலம், சங்கம், வைடூர்யம், சாரு, விஹங்கம், ரிஷபம், நாகம், காலம், அம்புஜனம், நாரதம் முதலிய மலைகள் மேருவைச் சுற்றி அடியில் சின்ன மலைகளாக தாமரை மலருடைய காய்க்கு தாதுகள் போல ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஜடரம், தேவகூடம் என்ற இரண்டு மலைகளும் மேருவிற்கு கிழக்கிலிருக்கின்றன. அவைகள் பதினெண்ணாயிரம் யோஜனை தூரம் வடக்கில் பரவியும் இரண்டாயிரம் யோஜனை தூரம் பருத்தும் உயர்ந்து மிருக்கின்றன. மேருவிற்கு மேற்கில் பவனன் பாரியாத்ரன் என்ற மலைகள் இருக்கின்றன தெற்கில் கைலாஸம் கரவீரம் என்றும் கிழக்கில் நீண்ட மலைகள் இருக்கின்றன வடக்கில் திருச்ருங்கம, மகரம் என்ற மலைகள் இருக்கின்றன. இந்த எட்டு மலையின் நடுவில் தங்க மலையான மேரு ப்ரகாசிக்கிறது. மேருவின் சிகரத்தின்

நடுவில் ப்ரஹ்மதேவருடைய பட்டணமிருக்கிறது. அது சமசதுரச்ரமானது; தங்கமயமானது; அதற்கு நாலு பக்கங்களிலும் ஒவ்வொரு திக்கிலும் அவர வருக்குத் தக்கபடி இந்திரன் முதலிய லோக பாலர் களுடைய எட்டு நகரங்கள் கட்டப்பட்டுள்ளன. அவை பிரஹ்மாவின் பட்டணத்தில் நான்கில் ஒரு பாக அளவுள்ளவைகள். இந்த அத்யாயத்தில் வர்ஷங்களென்று சொல்லப்படுவதற்கு தேசங்களென்று அர்த்தம்.

அத்தியாயம்–17

கங்கையின் வரலாறு

த்யுலோகத்தின் மேல் பாகத்தில் விஷ்ணுபதி என்ற நதி ஒன்று இருக்கிறது. யஜ்ஞஸ்வரூபியாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணு திருவிக்ரமாவதாரஞ் செய்து லோகத்தை அளக்கும்பொழுது அவருடைய வலதுகால் கட்டை விரல் நகத்தினால் மேலிருக்கும் அண்ட கடாஹம் உடைந்தது; அதன் வழியாக அண்டத்துக்குள் ப்ரவேசித்த வெளியிலிருந்த ஜலமே த்யுலோகத்தின் மேல் பாகத்தில் நதியாயிற்று. அதற்கு அந்த சமயம் விஷ்ணுபதி யென்று பெயர் (பாகீரதி முதலிய நாமங்கள் பிந்தி ஏற்பட்டவை) மேலுமந்த நதியானது பகவானுடைய பாதாரவிந்தத்தை அடைந்ததால் அதிலிருக்கும் குங்குமத்தால் அலங்கரிக்கப்பட்டது; ஸகல ஜகத்தின் பாபங்களை போக்கக்கூடிய பகவானுடைய பாதஸ்பர்சத்தை அடைந்தது; சுத்தமானது; வெகுகாலமாக ஆகாயத்தில் இருக்கின்றது. திருடமான நிச்சயமுள்ளவரும், பரம பாகவதருமான உத்தான பாதருடைய புத்ரர் தம்முடைய குலதேவதையாகிய ஸ்ரீ பகவானுடைய பாதாரவிந்த ஜலமென்று ஒவ்வொரு சந்த்யாகாலத்திலும் அந்த கங்கா ஜலத்தை மிகுந்த ஆதரவுடன் சிரஸில் தரிக்கிறார். அவர் அந்த காலத்தில் அதிக பகவத் பக்தியுள்ளவரும், அதனால் உருகின ஹிருதயமுள்ளவரும் பகவானிடத்தில் விசேஷ ப்ரீதியினால் மூடின கண்களுள்ளவரும், ஆனந்த பாஷ்பம் உள்ளவரும், மயிர்க்கூச்சலுள்ளவருமாக விருந்தார். மேலும் அந்த நதியின் மஹிமையை அறிந்த அந்த ஸப்தரிஷிகள் ஸகல ஸ்வரூபியான பகவானிடத்தில்

இடைவிடாமல் பக்தி செய்ததனால் மற்ற புருஷார்த்தங்களில் ஆசையில்லாதவர்களாகயிருந்தும் 'தபஸ்ஸின் ஸித்தி இதுதான்' என்று நினைத்து இப்பொழுதும் அந்த கங்கையை ஜடைகளில் தரிப்பதுமன்றி சரீரத்துடன் வந்த முக்தியை முழுகுஷாக்கள் போல அந்த நதியினிடத்தில் கௌரவத்தை வைத்திருக்கிறார்கள். அந்த நதியானது அங்கிருந்து கோடிக்கணக்கான விமானங்களால் நெருக்கமான ஆகாய மார்க்கமாக கீழே வந்து சந்த்ர மண்டலஞ் சென்று அதனை நனைத்து மேருவின் சிகரத்திலிருக்கும் ப்ரஹ்ம லோகத்தில் விழுகிறது. அங்கிருந்து நான்குவகையாகப் பிரிந்து ஸீதா, அளக, நந்தா, சக்ஷுஸ், பத்ரா என்ற பெயருடன் நான்கு திக்குகளிலும் ப்ரவஹித்து சமுத்ரத்தையே அடைகின்றது. ஸீதா யென்ற விரிவானது ப்ரஹ்மலோகத்திலிருந்து மேரு பர்வதத்திற்கு ஒத்தாசையான மலைகளில் விழுந்து அதிலிருந்து குமுதம், குகுரம் முதலிய மலைகளின் சிகரங்களைத் தாண்டிக் கீழ் கீழாக கந்த மாதனம் என்ற மலையில் விழுந்து பத்ராச்வ மென்ற வர்ஷத்திற்குக் கிழக்கிலிருக்கும் உப்பு சமுத்ரத்தை அடைகிறது. இம்மாதிரி சக்ஷுமஸ் என்ற பிரிவானது மால்யவானுடைய சிகரத்திலிருந்து கீழாக விழுந்து கேதுமாலத்திற்குப் பக்கத்தில் மேற்கு திக்கில் சமுத்ரத்தில் விழுகிறது, பத்ரை பிரிவானது மேரு சிகரத்தின் வடக்கிலிருந்து கீழ்கீழாக ஒவ்வொரு மலைகளிலும் விழுந்து ச்ருங்கவானுடைய சிகரத்தில் விழுந்து உத்தரகுருவின் பக்கத்தில் வடக்கில் ஓடி சமுத்ரத்தை அடைகிறது. அளகநந்தை என்பது ப்ரஹ்ம லோகத்தின் தென் பாகமாக அநேகமலைகளில் விழுந்து ஹேமகூடம், ஹிமகூடம் இவைகளில் அதிவேகமாகச் சென்று

கர்மக்ஷேத்திரமாகிய பாரதவர்ஷத்தின் வழியாக சமுத்திரத்தில் ப்ரவேசிக்கிறது. அது போலவே மேரு முதலிய பர்வதங்களிலிருந்து உண்டாகும். அநேக நதங்களும், நதிகளும் ஒவ்வொரு வர்ஷத்திலும், பலவிருக்கின்றன. இந்த ஜம்பூத்வீபத்திலும், பாரத வர்ஷமே கர்ம க்ஷேத்ரம், மற்ற எட்டு வர்ஷங்களும் புண்யம் பண்ணினவர்கள். பாக்கியான புண்யத்தின் பலத்தை அனுபவிக்கக் கூடிய ஸ்தலங்கள்; அவை களையே பூமிஸ்வர்க்கமென்று சொல்லுகிறார்கள். அந்த வர்ஷங்களில் வசிப்பவர்களுக்கு ஆயுஸ்ஸு மிகவும் அதிகம். மேலுமவர்கள் தேவர்களுக் கொப் பானவர்கள்; பதினாயிரம் யானை பலமுள்ளவர்; அதிக பலமுள்ளவர்கள்; வஜ்ரம் போன்ற சரீரமுள்ள வர்கள்; த்ரேதாயுகத்தில் ஜனங்கள் சுகமாக வஸிப்பது போல் அவர்கள் சுகமாகக் காலத்தைக் கழிக்கிறார்கள். பின்னும் அங்கிருக்கும் சிறந்த தேவர்கள் தங்கள் தங்கள் கணநாயகர்களால் பூஜிக்கப்பட்டு எல்லா ருதுக்களிலும் உண்டாகும் புஷ்பங்கள், பழங்கள், தளிர்கள் இவைகளுடன் வணங்கியிருக்கும் மரங்களால் அழகான தோட்டங்களிலும், ஆச்ரமங்களிலும், பர்வதக்குஹைகளிலும் விளையாடுகிறார்கள். மேலும் அவ்விடத்தில் தாமரை ஓடைகளிருக்கின்றன. அவை களில் மலர்ந்த தாமரச புஷ்பங்களுடைய வாசனையால் சந்தோஷமடைந்த ராஜஹம்ஸங்கள், நீர்க்கோழி, நீர்க்காக்கை, ஸாரஸங்கள், சக்ரவாகங்கள் முதலிய பக்ஷிகளும் வண்டுகளும் சப்தித்துக் கொண்டிருக் கின்றன. அது தடாகங்களில் அங்கிருக்கும் புருஷர்கள் ஸ்த்ரீகளுடன் ஜலக்ரீடை செய்து அவர்களுடைய சிரிப்பு, பார்வை இவைகளால் ஆனந்தமடைந்து தங்களிஷ்டப் படி க்ரீடிக்கிறார்கள்.

15–25 ஒன்பது வர்ஷங்களிலும் மஹாபுருஷனும், பகவானுமாகிய ஸ்ரீமந் நாராயணன் அந்தந்த வர்ஷத்தி லிருப்பவர்களை அனுக்ரஹிப்பதற்காக அநேக மூர்த்தி களுடன் இக்காலத்திலும் ஸாந்நித்யஞ் செய்துகொண் டிருக்கிறான். இளாவிருதத்தில் பகவானாகிய பரமசிவன் ஒருவரே புருஷன். மற்றவர்களெல்லோரும் ஸ்திரீ களேயாம். அவ்வருஷத்திற்கு வரும் புருஷன் ஸ்திரீயாக ஆகிவிடுவான் என்று பார்வதி சபித்திருக்கிறாள். அந்த சாபத்தை அறியாமல் அவ்விடத்தில் ப்ரவேசித்த ஒருவன் தன் பரிவாரங்களுடன் ஸ்திரீயாக ஆனான். அந்தக் கதைகளைப் பிந்திச் சொல்லுவோம். அவ்விடத் திலிருக்கும் பரமசிவன் பார்வதியினுடைய வேலைக் காரிகளான அநேக ஸ்திரீகளால் உபசரிக்கப்பட்டு நான்கு விதமான சரீரமுள்ள மஹா புருஷனான ஸ்ரீ நாராயணனுடைய தாமசமான மூர்த்தியை தம்முடைய யோகபலத்தால், ஆவிர்பவிக்கச் செய்து பின்வரும் மந்திரத்தை ஜபித்துக் கொண்டு அந்த மூர்த்தியை பூஜிக்கிறார். அந்த மூர்த்தியானது பரமசிவனுக்கு காரணமாகிய தாமசமூர்த்தி. பரமசிவன் அதனை பின்வருமாறு ஸ்தோத்திரஞ் செய்தார். பகவானும், வாசுதேவரும், ஸகல குணங்களை ப்ராகாசிக்கச் செய்பவரும், அளவிடக் கூடாத வருமான மஹா புருஷனுக்கு நமஸ்காரம். ஓ சேவிக்கத் தகுந்தவரே! பரமேச்வரனாகிய உம்மை சேவிக்கிறேன்; உம்முடைய பாதாரவிந்தமானது ஸகல ஜகத்தையும் காப்பாற்றக் கூடியது; சகலவிதமான ஐஸ்வர்யத்திற்கும் முக்கியமான ஸ்தானம்; பக்தர்களுக்கு தன்னுடைய ஸ்வரூபத்தை ப்ரகாஸிக்கச் செய்யக் கூடியது. சம்ஸாரத்தை நிவர்த்திக்கக் கூடியது; சம்ஸாரத்தை நம்முடைய மனதானது எப்படி விஷயத்தில் ப்ரவர்த்திக்கிறதோ, அப்படி லோகத்தை நியமனம் பண்ணுவதற்காக

சங்கல்பித்தவரான உம்முடைய திருஷ்டியானது விஷயங்களாலும் சித்விருத்திகளாலும் இழுக்கப்படு கிறதில்லை; ஆனதால் இந்திரியங்களை ஜயிக்க முயற்சிக்கும் எந்த புருஷன் மதங்கொண்டவன் போல அஸத்தான விஷயங்களில் அபிநிவேசத்தை வைத்து மாயையிலே மோஹித்த புருஷன் ஈச்வர ஸ்வரூபத்தைப் பார்க்கமாட்டான். பகவானுடைய பாதஸ்பர்சத்தால் கலங்கிய இந்திரியங்களுள்ள நாககன்னிகைகள் அவரை பூஜிக்க முடியாமலிருந்தார்கள். அந்தப் பகவான் இந்த ஜகத்தைப் படைத்தவர்; காப்பாற்றுகிறவர்; மேற்காட்டிய உத்பத்தி முதலியவைகள் அவருக்கு இல்லை; அவரை அனந்தரென்று லக்ஷ்மிதேவியும் மந்தரங்களும் சொல்லுகின்றன. அவருடைய அநேக சிரஸ்ஸுகளில் ஏதோ ஒரு பாகத்தில் இந்த பூமண்ட லமானது கடுகுபோல இருக்கிறது! அதனை அவர்கள் தெரிந்துகொள்ளவில்லை. அப்படிப்பட்ட பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். அவரிடமிருந்து குணநிமித் தமான மஹத்தத்வம் உண்டாயிற்று. அதனிடமிருந்து ஸத்வகுண ப்ரதானராகிய ப்ரஹ்மதேவர் உண்டானார். அவரிடமிருந்து உண்டான நான் முக்குணங்களைக் கொண்டு தேவதைகளையும், பூதவர்க்கத்தையும், இந்திரிய வர்க்கத்தையும் படைக்கிறேன். மேலும் மஹத்தத்வம் முதலிய நாம் எல்லோரும் அவருடைய அனுக்ரஹததாலேயே இந்த ப்ரஹ்மாண்டத்தை ஸிருஷ்டிக்கிறோம், மஹத்தத்வம், வைகாரிக தேவர்கள், தாமஸ பூதங்கள், இந்திரியங்கள் முதலிய எல்லாம் கயிற்றால் கட்டப்பட்ட பறவைகள்போல அவருடைய ஆக்ஞையால கட்டப்பட்டிருக்கிறோம். அந்தப் பகவா னால் உண்டு பண்ணப்பட்ட மாயையை ஜனங்கள் அறிவார்களோ யொழிய அதனைத் தாண்டும் உபாயத்தைத்

தெரிந்து கொள்கிறார்களில்லை. அந்த மாயையானது கர்மங்களைச் செய்யும்படி தூண்டுகிறது. ஜனங்களோ குணங்களால் மோஹமடைந்திருக்கிறார்கள். ஜகத்தின் உற்பத்தி, நாசம் இவைகளின் ஸ்வரூபியாகிய அந்த மஹா புருஷனுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன்.

அத்தியாயம்–18

பத்ராச்வம் முதலியவை

பத்ராச்வமென்ற வர்ஷத்தில் தர்மருடைய புத்ரராகிய பத்ரச்ரவஸ் என்பவர் பகவானாகிய வாஸுதேவருக்கு மிகவும் ப்ரியமான ஹயக்ரீவரென்ற மூர்த்தியை மிகுந்த யோகபலத்தால் அவ்விடத்தில் ஆவிர்பவிக்கச் செய்து தம்முடைய பரிவாரங்களுடன் அதனைப் பின்வருமாறு ஸ்தோத்ரம் பண்ணுகிறார். ஆத்மாவை சுத்தப்படுத்துகிறவரும், தர்மரூபியுமான பகவானுக்கு நமஸ்காரம், லோகத்தில் ஜனங்கள் மரணமடைந்த பிதா, புத்ரன் முதலிய பந்துக்களுக்கு ஸம்ஸ்காரத்தைச் செய்து அவர்களுடைய பணத்தைக் கொண்டு வெகுகாலம் ஜீவிக்க வேண்டுமென்று விரும்பி அல்பமான விஷயசுகத்திற்காக பாபத்தையே செய்ய முயற்சிக்கிறார்கள். ஜனங்களை கொல்பவர் பகவானாகவிருந்தும் அவர் ஜனங்களுடைய கண்களுக்குப் புலப்படுகிறதில்லை. இந்தப் பகவானுடைய சரீரமானது மிகவும் வியக்கத்தக்கது. ஓ உத்பத்தியில்லாதவரே! சாஸ்த்ரங்களைப் படித்த வித்வான்களும், அத்யாத்ம ஸ்வரூபத்தை அறிந்த ஞானிகளும் ஜகத்தை அநித்யமென்று சொல்லுகிறார்கள். ஆனாலும் உம்முடைய மாயையால் திரும்பவும் மோஹிக்கிறார்கள். ஆனதால் உம்முடைய சரிதமானது ஆச்சர்யகரமாயிருக்கிறது. அப்படிப்பட்ட உத்பத்தியற்றவராகிய உமக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். நீர் ஒன்றையும் செய்யாதவர், ஆனாலும் ஜகத்தைப் படைப்பது முதலியவைகளைச் செய்பவரென்று வேதத்தில் சொல்லியிருக்கிறது. ஆனாலுமது ஆச்சர்யமல்ல. நீர் கார்யகாரண ஸ்வரூபியாக

விருப்பதால் உமக்கு கர்மங்கள் உண்டென்று சொல்வது உசிதம், உண்மையில் உபாதியற்றவராய் இருப்பதால் ஒன்றையும் செய்யாதவரென்று சொல்வதும் பொருந்தும், முன்னொரு கால் கங்கனென்ற அஸுரன் வேதங்களை அபஹரித்துக் கொண்டு பாதாளம் சென்றான். அப்பொழுது ப்ரஹ்மதேவரால் ப்ரார்த்திக்கப்பட்டு எந்த பகவான் ஹயக்ரீவனாக அவதரித்து அந்தவேதங்களை திரும்பவும் கொண்டுவந்து ப்ரஹ்மதேவருக்குக் கொடுத்தாரோ ஸத்யஸங்கல்பராகிய அந்த பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன்.

7–15. ஹரிவர்ஷத்திலும் பகவான் நரஸிம்ஹரூபியாக ப்ரகாசிக்கிறார். அந்த அவதாரத்தின் காரணத்தைப் பிந்தி சொல்லுவோம், பாகவதர்களுக்குட் சிறந்தவரும், தைத்யர்கள், தானவர்கள் இவர்களுடைய குலத்தை பரிசுத்தப்படுத்தும் ஸ்வபாவமுள்ளவருமான ப்ரஹ்லாதர் இடைவிடாத பக்தியுடன் அந்த நரஸிம்ஹரூபத்தை அந்த வர்ஷத்திலிருக்கும் புருஷர்களுடன் உபாஸிக்கிறார். பின்வருமாறு ஸ்தோத்திரமும் செய்கிறார், தேஜோரூபங்களைவிட தேஜஸ்வியும், நரஸிம்ஹரூபியுமான பகவானுக்கு நமஸ்காரம். வஜ்ரம் போன்ற சிங்கப் பற்களுள்ளவரே! வக்ரமாகிய நகங்களுள்ளவரே! எங்களுடைய கர்ம வாசனைகளை நிவர்த்தியும். உக்ர ஸ்வபாவமுள்ளவரும், மகாத்மாவுமான உம்மை நமஸ்கரிக்கிறேன். அஜ்ஞானத்தை நிவர்த்தியும் அபயத்தைக் கொடும். ஸகல ஜகத்திற்கும் க்ஷேமுண்டாகட்டும். துஷ்டர்கள் துஷ்ட ஸ்வபாவத்தை விட்டு விடட்டும், எல்லா ப்ராணிகளும் ஒருவருக்கொருவர் க்ஷேமத்தையே ப்ரார்த்திக்கட்டும், அவர்களுடைய மனதும் சாந்தியை அடையட்டும், நம்முடைய புத்தியும்,

பலனை உத்தேசியாமல் பகவானிடத்தில் ப்ரவேசிக் கட்டும், 'நமக்கு ஒருவரிடத்திலும் ஸங்கம் உண்டாக வேண்டாம், அப்படி உண்டானால் பகவத் பக்தர் களுடைய சங்கமே நேரிடட்டும், வீடு, புத்ரன், பணம் இவைகளில் ஆசை உண்டாக வேண்டாம், ப்ராணனைக் காப்பாற்றிக் கொள்வதற்கு வேண்டியதை மாத்திரம் யாசிப்பவனஎவ்வளவு சந்தோஷத்தை அடைகிறானோ. அவ்வளவு சந்தோஷம் வீடு முதலியவைகளில் ஆசை யுள்ளவனுக்கு கிடைக்கிறதில்லை, பகவத் பக்தர்களி டத்தில் சேருவதனால் ஸ்ரீ பகவானுடைய சரிதமானது அறியப்படுகிறது. அதை நன்றாக ச்ரவணம் பண்ணு கிறவர்களுடைய ஹிருதயத்தில் ஸ்ரீ பகவான் எப் பொழுதும் வசிப்பதுமன்னியில் அங்கிருக்கும் மலத்தை யும் போக்குகிறார், கங்கை முதலிய நதிகளின் தீர்த்தமானது சரீரத்தின் மலத்தைப் போக்குமேயல்லாமல் மனத்திலிருக்கும் மலத்தைப் போக்குவதில்லை, அப்படிப்பட்ட பகவானுடைய சரிதத்தை எவன்தான் சேவிக்கமாட்டான். எவனுக்கு பகவானிடத்தில் பக்தி இருக்கிறதோ அவனிடத்தில் தேவர்கள் தர்மம் ஜ்ஞானங் முதலிய குணங்களுடன் வசிக்கிறார்கள், பகவானிடத்தில் பக்தியில்லாதவனும், விஷய சுகம் கிடைக்காவிடில் அதற்காக அலையும் மனதுள்ளவனு மான புருஷனுக்கு மஹான்களுடைய குணங்களாகிய வைராக்யம் முதலியவைகள் எப்படி உண்டாகும்? மத்ஸ்யங்களுக்கு ஜலமானது எப்படி ஆச்ரயமோ அப்படி பகவானாகிய மஹாவிஷ்ணு ப்ராணிகளுக்கு ஆத்மாவாக விருக்கிறார். அப்படியிருக்க மிகவும் ப்ரஸித்தியுள்ளவனானாலும் வீடு முதலியவைகளில் ஆசைவைத்தால் அவனை வயதில் பெரியவனென்று சொல்லலாமே தவிர ஜ்ஞானம் முதலியவைகளில்

பெரியவனென்று சொல்லக்கூடாது. ஆனதால் க்ருஹஸ்தாச்ரமமானது ஆசை அபிநிவேசம், துக்கம், கோபம், மானம், பயம், தைன்யம் முதலியவை களுக்குக் காரணமாயிருக்கிறது. ஆனதால் சம்ஸார மண்டலத்தைவிட்டு பயமற்றதான நரஸிம்ஹருடைய பாதாரவிந்தத்தை பஜியுங்கள்.

16–24. கேதுமாலமென்ற வர்ஷத்தில் பகவான் லக்ஷ்மீதேவிக்கும் ப்ரஜாபதியின் புத்ரர்களும், புத்ரி களுமான பகல் ராத்ரிகளுக்கும் ப்ரியத்தைச் செய்ய வேண்டி ப்ரத்யும்ன ஸ்வரூபியாக ப்ரகாசிக்கிறார். மகா புருஷனுடைய சக்ரத்தின் தேஜஸ்ஸிலிருந்து பயந்தவர்களான அந்த ஸ்திரீகளுடைய கர்ப்பமானது ஒரு ஸம்வத்ஸரத்தின் முடிவில் உயிரில்லாமல் வெளிப்படுகிறது. மேலும் பகவான் மிகவும் அழகான நடையாலும், மந்தஸ்மிதத்தாலும், பார்வையாலும் ப்ரகாசிக்கும் புருவங்களாலும், அழகான முககாந்தியால் லக்ஷ்மீதேவியை சந்தோஷிக்கச் செய்து தன்னுடைய இந்திரியங்களுக்கு திருப்தி செய்து வைக்கிறார். லக்ஷ்மீ தேவியானவள் மாயைமயமான அந்த பகவத் ரூபத்தை ராத்திரிகளில் அதற்கு அபிமானிகளான தேவதைகளுடனும், பகல்களில் அதற்கு அபிமானி களான தேவதைகளுடனும், மேலான ஸமாதியோகத்தால் உபாஸிக்கிறாள், பின்வருமாறு அவர்கள் ஸ்தோத்ரமும் செய்கிறார்கள். இந்திரியங்களுக் கதிபதியான பகவா னுக்கு நமஸ்காரம், அவர் ஸகல சிறந்த வஸ்துக்களால் குறிப்பிடக்கூடிய ஸ்வரூபமுள்ளவர். கர்மங்களுக்கும், ஞானங்களுக்கும் ஸங்கல்பம் முதலியவைகளுக்கும், விஷயங்களுக்கும் அதிபதியாயிருப்பவர்; பதினாறு கலைகளின் ஸ்வரூபியாயிருப்பவர்; வேதத்திற் சொல்லிய

கர்மங்களாலடையக்கூடியவர்; அன்னஸ்வரூபியாயிருப்பவர்; அமிர்தமயமாக விருப்பவர்; பரமானந்த ஸ்வரூபி; ஸகல ஜகத்ரூபி; தேகபலம் மனோபலம், காந்தி இவைகளைக் கொடுப்பவர்; அழகானவர்; ஸகல காம ஸ்வரூபி; அப்படிப்பட்ட பகவானுக்கு மனத்தாலும் வாக்கினாலும் நமஸ்காரஞ் செய்கிறோம். ஸ்திரீகளை அநேக வ்ரதங்களை அனுஷ்டித்து இந்திரியங்களுக்கதிபதியான உம்மை ஆராதித்தும் மற்றொருவனை புருஷனாக அடைய விரும்புகிறார்களோ. அவர்களுடைய குழந்தை தனம். ஆயுஸ் முதலியவைகளில் அந்த புருஷர்கள் ஸ்வாதந்தர்யமில்லாதவர்கள், ஆனதால் காப்பாற்ற முடியாது. பயந்த ஜனங்களைக் காப்பாற்றும் புருஷர் நீர் ஒருவரே. நீர் ஆத்ம லாபத்தைவிட ஒன்றையும் மேலானதாக நினைக்கிறதில்லை. மற்றவர்களெல்லோரும் ஒருவருக்கொருவர் பயப்படுகிறார்கள், எவர்கள் உம்முடைய பாதார விந்தத்தை வேறொன்றையும் யாசிக்காமல் பூஜிக்கிறார்களோ, அவர்கள் ஸகல கர்மங்களையும் அடைகிறார்கள். எவள் பலனை உத்தேசித்து உம்மை பூஜிக்கிறாளோ, அவள் விரும்பியதை மாத்திரம் கொடுக்கிறீர். அதனை அனுபவித்த பிறகு அவள் துக்கப்படுகிறாள் ஓ பகவன்! லக்ஷ்மீயாகிய உன்னை பூஜித்தாலல்லவோ ஸகல காமங்களும் கிடைக்கும். என்னை பூஜிப்பதனால் அவைகள் கிடைக்குமா? என்று சொல்வீராகில் ப்ரஹ்மதேவர் முதலிய தேவர்கள் இந்திரிய சுகத்தில் ஆசைப்பட்டு உம்முடைய பாதத்தை பூஜியாமல் என்னை உத்தேசித்து தபஸ் செய்கிறார்கள். ஆனாலும் என்னுடைய கடாக்ஷவீக்ஷணத்தால் உண்டாகும் ஐச்வர்யத்தை அடையவில்லை, ஏனென்றால் நான் உம்மையே த்யானஞ் செய்து கொண்டிருப்பதால்

உம்மை யார் பூஜிக்கிறானோ, அவனை கடாக்ஷிப்பதே யொழிய மற்றவனைப் பார்க்க மாட்டேன். ஓ நாசமற்றவரே! ஸகல காமங்களையும் கொடுக்கக்கூடிய தென்று ஸாதுக்களால் ஸ்தோத்ரம் பண்ணப்பட்ட எந்தக்கையை பக்தர்களுடைய சிரஸ்ஸில் வைத்தீரோ அந்த அமிருதஹஸ்தத்தை என்னுடைய சிரஸ்ஸிலும் வைக்க வேண்டும். ஓ மேலானவரே! என்னைமாரில் அடையாளமாக வைத்துக்கொண்டிருக்கிறீர், ஆனாலும் உமக்கு பக்தர்களிடத்திலேயே மிகுந்த கிருபை இருக்கிறது. ஆனதால் உம்முடைய அபிப்ராயத்தை அறிந்து கொள்வதற்கு யாரால் முடியும்?

25–28. ரம்யகமென்ற வர்ஷத்தில் பகவானுக்கு ப்ரியமான மத்ஸ்யாவதார ஸ்வரூபமானது அந்த வர்ஷத்திற்கதிபதியான மனுவுக்கு முன்காலத்தில் காண்பிக்கப்பட்டது. அந்தஸ்வரூபத்தை இப்பொழுதும் அங்கிருப்பவர்கள் மிகுந்த பக்தியுடன் ஆராதிக்கிறார்கள். ஸத்வகுண ப்ரதானரும், மிகவும் முக்யரும் ஸூத்ராத்மாவும், தேஜஸ், மனோபலம் தேஹபலம், இவைகளின் ஸ்வரூபியுமான மத்ஸ்யமூர்த்திக்கு நமஸ்காரஞ் செய்கிறோம். ஓ பகவன்! வேதமாகிய சப்தமுள்ள நீர் ஜகத்தினுள்ளிலும் வெளியிலும், லோக பாலர்களாலும் காணப்படாமல் ஸஞ்சரிக்கிறீர். மேலும் நீர்மனிதன் மரப்பொம்மையை ஆட்டிவைப்பது போல் இந்த ஜகத்தை விதியாலும் நிஷேதத்தாலும் ஸ்வாதீனப்படுத்திக் கொண்டிருக்கிறீர். லோக பாலர்கள் எல்லோரும் சேர்ந்து மாத்ஸர்யமாகிய ஜ்வரமுள்ளவர்களாகி இரண்டுகால் ப்ராணிகள், நாலுகால் ப்ராணிகள், ஜங்கமம், ஸ்தாவரம் முதலிய ஜகத்தை காப்பாற்ற முயன்றும் அவர்களால் முடியவில்லை. அப்படிப்பட்ட ஜகத்தை ப்ராணரூபியாகக் காப்பாற்றும்

ஈச்வரன் நீர் ஒருவரே. மேலும் நீர் ப்ரளய காலத்தில் ஓஷதிகளுக்கு இருப்பிடமான பூமியையும் என்னையும் தம்முடைய தேஜஸ்ஸால் காப்பாற்றுகிறீர்; பின்னும் ஜகத்திற்கு பிராணனாயுமிருக்கிறீர். அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்.

29–32. ஹிரண்மயமென்ற வர்ஷத்தில் பகவான் கூர்மரூபியாக ப்ரகாசிக்கிறார். அவ்விடத்தில் பிதிருகணங் களுக்கதிபதியான அர்யமா என்பவர் அந்த வர்ஷத்தி லுள்ள புருஷர்களுடன் கூர்மமூர்த்தியை உபாசிக்கிறார். 'ஸத்வகுணங்களால் நிறைந்தவரும் இருப்பிடமில்லாத வரும், புராணரும், காலத்தால் அளவிடக்கூடாதவரும், எங்குமிருப்பவரும், ஆதாரமற்றவரும், கூர்மரூபியுமான பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறோம் என்ற மந்தரத்தை ஜபிக்கிறார்கள். பகவானுடைய மாயையால் இந்த ஜகத்தானது ப்ரகாசிக்கிறது. அதற்கு அளவு இல்லை. அது மித்யையாகையால் அதனைக் கணக்கிட வும் முடியாது. ஆனாலும் ப்ருத்வீ முதலிய அந்த திருச்யஸ்வரூபமுழுவதும் பகவத் ஸ்வரூபமேயாம். அதைவிட வேறில்லை. அப்படிப்பட்ட ஊஹிக்க முடியாத ப்ரபஞ்சஸ்வரூபியான பகவானுக்கு நமஸ் காரம்; ஜராயுஜம், ச்வேதஜம், அண்டஜம், உத்பிஜ்ஜம் முதலிய ஸ்தாவர ஜங்கமங்களும்; தேவதைகள், ரிஷிகள், இந்திரியங்கள், த்யுலோகம், ஆகாசம். பூமி, மலை, ஆறு, சமுத்ரம், த்வீபம், நவக்ரஹங்கள். நக்ஷத்ரம் என்ற எல்லா நாமதேயங்களுக்கும் அர்த்த மாயிருப்பவர் நீர் ஒருவரே; இப்படி கணக்கில்லாத நாமங்களும் ரூபங்களும், உம்மிடத்தில் கவிகளால் கல்பிக்கப்பட்டிருந்தும் தத்வஜ்ஞானத்தால் அது நிவர்த்தியாகிறது. அப்படிப்பட்ட பரமார்த்த ஸ்வரூ பியான உமக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்.

33–37. உத்தரகுருவில் யஜ்ஞபுருஷராகிய பகவான் வராஹ ரூபியாய் ப்ரகாசிக்கிறார். பூமிதேவியானவள் அவ்விடத்தில் வஸிப்பவர்களுடன் மிகுந்த பக்தியுள்ள வளாகி அந்த மூர்த்தியை பூஜிக்கிறாள். மேலுமவள் 'மந்தரங்களால் ப்ரகாசிப்பவரும், யஜ்ஞஸ்வரூபியும், க்ரதுஸ்வரூபியும், பெரிதான யாகங்களை அவயங்களாக உடையவரும் முன்று யுக ஸ்வரூபியும் குணங்களற்ற வரும், கர்மத்தால் சுத்தரும், மஹாபுருஷனுமான பகவானுக்கு நமஸ்காரம் என்ற உபநிஷத்தை ஜபிக் கிறாள். கட்டையில் மறைந்திருக்கும் அக்கினியைக் கடைந்து எடுப்பது போல வித்வான்களும், கர்மங்களா லும், அதன் பலன்களாலும், மறைக்கப்பட்டிருக்கும் ஆத்மாவை தேஹத்திலும் இந்திரியங்களிலும் தேடுகிறார்கள், அப்படித் தேடுவதினால் ப்ரகாசிக்கும் ஸ்வரூபமுள்ள பகவானுக்கு நமஸ்காரம்; திரவ்யம் இந்திரிய வ்யாபாரம் தேவதை, தேஹம், காலம், அஹங்காரம் முதலிய மாயாகுணங்களால் நீர் தோன்று கிறீர்; விசாரத்தாலும் யமம், நியமம், முதலியவைகளா லும் நிச்சய புத்தியினாலும், உம்முடைய மாயா ஸ்வரூபம் நிவர்த்தியாகிறது; அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம்; இரும்பானது அயஸ்காந்தத்தின் மஹிமையால் அசைந்து அதற்கு எதிர்முகமாக எப்படிச் செல்லு கிறதோ, அப்படி ஜகத்தை படைக்க வேண்டுமென்ற விருப்பம் உமக்கு உண்டான போது உம்முடைய மாயை ஜடமானாலும் உம்முடைய சந்நிதான விசேஷத்தால் ஜகத்தை உண்டுபண்ணுவது, பரிபாலிப் பது, நாசஞ்செய்வது முதலியவைகளை செய்கிறது. உமக்கு நமஸ்காரம்; ஜகத்துகுக் காரணரான எந்த பகவான் வராஹாவதாரஞ் செய்து அஸுரனைக் கொன்று என்னை சிங்கப்பல்லாலெடுத்துக்கொண்டு விளையாடும் யானை போல பாதாளத்திலிருந்து வந்தாரோ அந்த ப்ரபுவிற்கு நமஸ்காரஞ் செய்கிறேன்..

அத்தியாயம்–19

கிம்புருஷம்

கிம்புருஷமென்ற வர்ஷத்தில் ஆதிபுருஷனாகிய பகவான் லக்ஷ்மணனுக்குத் தமயனாகிய ராமனாக ப்ரகாசிக்கிறார். பாகவதர்களுக்குட் சிறந்தவரும் ஸ்ரீ ராமனுடைய சமீபத்திலேயே வஸிப்பதில் ஆசையுள்ள ஹனுமான் அந்த வர்ஷத்தில் உள்ளவர்களுடன் இடைவிடாமல் பக்தி செய்து கொண்டு ஸ்ரீ ராமனை உபாஸிக்கிறார். மேலுமவர் ஆர்ஷ்ணிஷேணர்–கந்தர் வர்கள் ஆகிய இவர்களால் கானம் பண்ணப்பட்டதும் மிகவும் கூஷ்மகரமான ஸ்ரீ ராமனுடைய கதையை ப்ரியத்துடன் கேட்கிறார். தாமும் பின்வருமாறு கானஞ் செய்கிறார். பெரியோர்களுடைய சுபாவம்; வ்ரதம் இவைகளுள்ளவரும், மனத்தை ஜயித்தவரும், லோகத்தை அனுசரித்தவரும், ஸாதுவென்று ப்ரஸித் தரும், ப்ராஹ்மணர்களையே தைவமாகக் கொண்ட வரும், மஹாபுருஷரும், மஹாராஜனும், உத்தம ச்லோகருமான ஸ்ரீ ராமனுக்கு நமஸ்காரம். எது **சுத்தமான** ஸ்வரூபமோ, எது தன்னுடைய தேஜஸ்ஸால் குண சம்பந்தத்தாலுண்டாகும் அவஸ்தைகளைப் போக் கடிக்கிறதோ, எது மிகவும் சாந்தமோ, எது கண்ணுக்குப் புலப்படுவதைவிட வேறானதோ, புத்திசாலிகளால் எது அறியக் கூடியதோ, எது நாமரூபங்களற்றதோ அந்த ஸ்ரீ ராம பிரான் பரப்ரஹ்மத்தைச் சரணமடை கிறேன். அப்படிப்பட்ட பரமாத்மா மனுஷ்யனாக அவதரித்தது, ராவணனைக் கொல்வதற்காகவே; அப்படி இல்லாவிடில் தன்னுடைய ஆத்மாவினிடத் திலேயே ரமித்துக் கொண்டிருக்கும் பரமாத்மாவிற்கு

ஸீதா நிமித்தமான துக்கங்கள் ஏற்படக் கூடுமா? அந்தப் பகவான் தைர்யமுள்ளவர்களுக்கு ஆத்மாவாக இருப்பவர்! மிகவும் ஸுஹிருத்; ஆனாலும் மூவுலகத் திலும் ஒன்றிலும் அவருக்கு ஆசையில்லை. அதனால் ஸீதா விஷயமான துக்கமும் அவருக்கு இல்லை. லக்ஷ்மணனையும் பரியாத்யாகஞ் செய்தார். அந்தப் பகவான் சிறந்த குலத்தாலும், அழகினாலும், புத்தியாலும், ஸ்வரூபத்தாலும் சந்தோஷப்படுகிறதில்லை. மேற்சொல்லிய குணங்களற்றவரும், வானரங்களுமான எங்களை யுத்தத்திற்கு ஒத்தாசையாக அங்கீகரித்தார். தேவனானாலும், அஸுரனானாலும், மனிதனானா லும் குரங்கானாலும் ஸ்ரீ ராமனையே பஜிக்கவேண்டும். அவர் ஸ்வல்பமாக பஜனம் பண்ணினாலும் அதை வெகுவாக நினைக்கக்கூடியவர்; மனிதனாக அவதரித்த மகாவிஷ்ணு அயோத்தியில் வசிக்கும் எல்லா ப்ராணிகளையும் ஸ்வர்க்கம் செல்லும்படி செய்தவர்.

7–14 பாரதவர்ஷத்தில் பகவான் நாராயணனென்ற பெயருடன் தர்மம், ஜ்ஞானம் வைராக்கியம், ஐஸ்வர்யம், இந்த்ரியங்களை அடக்குவது இவைகளை விருத்தி செய்து கொண்டு தைர்யமுள்ளவர்களை அனுக்ரஹிப் பதற்காக அஹங்காரமற்றவராய் தபஸ் செய்துகொண்டி ருக்கிறார். அவருடைய கதி ஒருவராலும், அறிய முடியாதது. வர்ணங்களுக்கும் ஆச்ரமங்களுக்கும், உரிய வார்த்தைகளால் பகவானால் சொல்லப்பட்ட ஸாங்க்யம், யோகம் இவைகளாலும் பகவானுடைய மஹிமையை மனுவிற்கு உபதேசிக்கப்போகிற நாரத பகவான் மிகுந்தபக்தியுடன் அந்த நாரயணனை உபாஸிக்கிறார். சாந்தஸ்வபாவமுள்ளவரும், அகங்கார மற்றவரும் ஏழையை பணமாய் கொண்டவரும்,

ரிஷிகளுக்குட் சிறந்தவரும் பரமஹம்ஸரும், மேலான குருவும், ஆத்மா ராமர்களுக்கு அதிபதியுமான நாராயணனுக்கு நமஸ்காரம் என்ற மந்திரத்தையும் ஜபிக்கிறார். இந்த ஜகத்தை உண்டு பண்ணுகிறவரானாலும், எவர், "நான் கர்த்தா" என்ற அபிமானமற்றவரோ, தேஹத்தை அடைந்தவரானாலும் அதன் குணங்களான பசி தாகம் முதலியவை எவருக்கு இல்லையோ, எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியானாலும் எவருடைய திருஷ்டியானது குணங்களால் விகாரத்தை அடைகிறதில்லையோ, ஒன்றிலும் சம்பந்தப்படாதவரும் ஸாக்ஷியுமான அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். ஓ யோகத்திற்கு அதிபதியாயிருப்பவரே! மரணகாலத்தில் தேஹம் முதலியவைகளில் ஆசையை ஒழித்து நிர்குணராகிய உம்மிடத்தில் பக்தியுடன் மனத்தை சமர்ப்பிப்பதே யோகம். இதனையே ப்ரஹ்மதேவர் யோகமென்று சொல்லியிருக்கிறார். எவன் இவ்வுலகம், பரலோகம் இவைகளின் சுகத்திலாசைப்பட்டு புத்ரன், களத்ரம், ஐச்வர்யம் இவைகளைப் பற்றியே யோசித்துக் கொண்டு சரீரம் போய்விடுமென்று பயப்படுகிறானோ அவன் வித்வானாலும் அவனுடைய முயற்சியானது பயனற்றதேயாம். ஆனதால் ஓ ப்ரபுவே! உம்முடைய மாயையால் துச்சமான தேஹத்தில் "நான் என்னுடையது" என்ற அபிமானம் ஏற்பட்டிருக்கிறது. அதை நிவர்த்திப்பது மிகவும் ச்ரமம். ஆனாலும் அதனை எதனால் பேதிக்கமுடியுமோ, அந்த வாஸுதேவரூபமான பக்தி உம்மிடத்திலிருக்கும்படி அனுக்ரஹிக்கவேண்டும்.

15–26 இந்த பாரத வர்ஷத்திலும் அநேக நதிகளும் மலைகளுமிருக்கின்றன. மலயம், மங்களப்ரஸ்தம், மைனாகம், திருகூடம், ரிஷபம், கூடரம், கொல்லம்,

சஹ்யம், வேதகிரி, ரிச்யரகம், ஸ்ரீ சைலம், வெங்கடாத்ரி, மஹேந்திரம், வாரீதாய, நந்தி, விந்த்யம், சக்திமான், ரிஷகிரி, பாரியாத்ரம், த்ரோணம், சித்ர கூடம், கோவர்த்தனம், ரைவதகம், குகும்பம், நீலம், காகமுகம், இந்திரகீலம், ராமகிரி முதலிய லக்ஷக்கணக்கான மலைகளிருக்கின்றன. அவைகளுடைய தாழ்வரையிலிருந்து உண்டாகும் நதங்களும், நதிகளும், கணக்கில்லாமலிருக்கின்றன. இந்த நதிகளுடைய ஜலங்கள், பாரத வர்ஷத்திலிருக்கும் ப்ரஜைகளை தங்களுடைய பெயர்களாலேயே பரிசுத்தப்படுகின்றன. சரீரத்தாலும் தொடுகின்றன. சந்த்ரபடா, தாம்ரபர்ணி, அவடோதா, கிருதமால, வைஹாயஸி, காவேரி, வேணி, பிநாகினி, பயஸ்விநி, பயோதா, சர்கரவந்தா துங்கபத்ரா, கிருஷ்ணவேணி, பீமரதி, கோதாவரி, நிர்விந்த்யா, பயோஷ்ணி, தாபி ரேவா, சிலர், ஸுரசா, நர்மதா, சர்மன்வதீ, ஸிந்து, சோணம் ஆகிய இவைகள் நதங்கள், (மேற்கே போகிறவை) மஹாநதி, வேதஸ்மிருதி, ரிஷிகுல்யா, த்ருசமா, கௌசிகீ, மந்தாகினி, யமுனா, சரஸ்வதி, த்ருஷத்வதி, கோமிதி, ஸரயூ, போகவதி, சுஷ்மா, சதத், சந்ரபாகா, மருத்ரதா, விதஸ்தா, பெண்ணை, அஸிக்நீ, விச்வா ஆகிய இவைகள் மஹா நதிகள், இந்த வர்ஷத்தில் பிறந்த ஜனங்கள், ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்களாலேற்பட்ட ப்ராரப்தகர்மத்தால் திவ்ய சரீரத்தையும் மனுஷ்யசரீரத்தையும் நாரகிசரீரத்தையும் தங்கள் தங்கள் கர்மத்திற்குத் தக்கபடி அடைகிறார்கள். எல்லா கதிகளும் கர்மத்துக்குத் தக்கபடி கிடைக்கின்றன. அந்தந்த ஜாதிக்கு தக்கபடி எதனை மோக்ஷஸாதனமாக சொல்லியிருக்கிறார்களோ, அதனை யனுஷ்டிப்பதால் மோக்ஷமும் கிடைக்கிறது. ஸகல ப்ராணிகளின் ஸ்வரூபமாயும் திசை முதலிய

தோஷங்களற்றவரும், வாக்குக்கெட்டாதவரும், ஆதார மற்றவருமான பகவானிடத்தில் பலனையுத்தேசியாமல் செய்யும் பக்தியோகமானது பலவகையான கதிகளை யுண்டு பண்ணும். அது அவித்யாக்ரந்திகள் நாசமடைந்தால் விருத்தியடையும், அதனால் விஷ்ணு பக்தர்களுடன் மேலான சேர்க்கை உண்டாகும். தேவர்கள் பின்வருமாறு கானஞ்செய்கிறார்கள். பாரத வர்ஷத்தில் மனிதனாகப் பிறந்தவர்கள் என்ன புண்யஞ்செய்தார்கள்? அவர்களிடத்தில் மகாவிஷ்ணு தாமாகவே தயை செய்திருக்கிறார். அவர்களுடைய சரீரம் பகவானுடைய ஸேவைக்கு உபயோகப்படுகிறது. ஆதலால் இந்த வர்ஷத்தில் ஜனிப்பதற்கு நாங்கள் விரும்புகிறோம். அனுஷ்டிக்க முடியாத கிருதுக்களாலும் தபஸினாலும், வ்ரதத்தாலும், தானம் முதலியவைகளாலும் துச்சமான ஸ்வர்க்கப்ராப்தியாலும் என்ன ப்ரயோஜனம்? ஸ்வர்க்கத்தில் இந்திரியங்களை த்ருப்தி செய்வதால் ஸ்ரீமந் நாராயணனுடைய பாதார விந்தத்தை ஒருவரும் ஸ்மரிக்கிறதில்லை. கல்பம் வரையில் ஜீவித்திருப்பவர்களான மேலானவர்களிருக்கும் லோகத்தை அடைந்து மறுபடி ஜன்மத்தை அடைவதைக் காட்டிலும் பாரத வர்ஷத்தில் ஜனிப்பதே மேலானது, அவர்களுக்கு ஆயுஸ்ஸு கொஞ்சமானாலும் அவர்கள் சந்யாஸஞ் செய்துகொண்டு பயமற்ற மஹாவிஷ்ணுவின் பதத்தை அடைகிறார்கள். எந்த இடத்தில் ஸ்ரீ நாராயணனுடைய கதையாகிற அமிருத நதி ஓடவில்லையோ, பகவத் பக்தர்களான ஸாதுக்கள் எவ்விடத்தில் வஸிக்கவில்லையோ, எவ்விடத்தில் யஜ்ஞபதியான பகவானை யாகத்தால் ஆராதிக்கவில்லையோ, அது ப்ரஹ்மலோகமானாலும் அதனை சேவிக்கக் கூடாது. இந்த பாரத வர்ஷத்தில் பிறந்த மனிதர்களில் எவர்கள் ஞானம், கிரியை, த்ரவ்யம் இவைகளால் நிறைந்திருந்து மோக்ஷத்தை அடைவதற்கு

முயற்சிக்கவில்லையோ, அவர்கள் குரங்குகள் போல திரும்பவும் பந்தத்தை அடைகிறார்கள். மேலும் பாரத வர்ஷத்திய ஜனங்கள் மிக்க ச்ரத்தையுடன் விதிப்படி மந்த்ரங்களை உச்சரித்து ஹவிஸ்ஸை ஹோமஞ் செய்கிறார்கள். அதனை இந்திரன் முதலிய அநேக நாமங்களுள்ள பகவான் ஒருவரே க்ரஹிக்கிறார். பகவான் மனிதர்களால் யாசிக்கப்படும் வஸ்துவை கொடுக்கிறாரென்பது உண்மையே. ஆனால் அவர்களுக்கு மறுபடியும் சிலவற்றை யாசிக்க வேண்டுமென்று விருப்ப முண்டாவதால் பரமார்த்தத்தைக் கொடுக்கிறதில்லை. ஒன்றையும் விரும்பாதவர்கட்கு சகல திசையும் நிவர்த்திக்கக் கூடிய தம்முடைய பாதார விந்தத்தையும் கொடுக்கிறார். பகவான் தம்மை பூஜிப்பவர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கிறவராகையால் நாம் செய்த யாகம். அத்யயனம், மற்ற சுபகர்மங்கள் ஆகிய இவைகளின் பலன் ஸ்வர்க்கத்தை கொடுத்தது போக பாக்கியிருந்தால், அதனால் பாரதவர்ஷத்தில் நாங்கள் ஜனிக்க வேண்டும். அந்த ஜன்மத்திலும் பகவானை சேவிக்க வேண்டுமென்ற எண்ணமிருக்க வேண்டும். அந்த பாரத வர்ஷத்தில் பகவான் தம்மைப் பூஜிப்பவர்களுக்கு க்ஷேமத்தைச் செய்கிறார்.

27–38 ஜம்பூத்வீபத்திற்கு உபத்வீபங்கள் எட்டு இருக்கின்றன வென்று சிலர் சொல்லுகிறார்கள். ஸகரமஹாராஜனுடைய புத்ரர்கள் யாகக் குதிரையைத் தேடிச் செல்லும் போது இப்பூமியை வெட்டினார்கள். அதனால், மேல் சொல்லிய உபத்வீபங்களேற்பட்டன. அவைகள் ஸ்வர்ணப்ரஸ்தம், சந்திரசுக்லம், ஆவர்த்தனம், ரமணகம் மந்தேஹாருணம், பாஞ்சஜன்யம், ஸிம்ஹளம், இலங்கையென்று பெயர் பெற்றனவாம். இம்மாதிரி ஜம்பூத்வீபத்திலுள்ள வர்ஷங்களின் பிரிவைச் சொன்னோம்.

அத்தியாயம்–20

ப்லக்ஷத்வீபம்

இனி ப்லக்ஷம் முதலிய த்வீபங்களுடைய அளவு, லக்ஷணம் ஸ்வரூபம், வர்ஷவிபாகம் இவைகளை உள்ளபடி நிரூபிக்கிறோம். ஜம்பூத்வீபமானது தனக்குச் சமமான அகலமுள்ள உப்பு சமுத்ரத்தால் எப்படி சுற்றப்பட்டு வ்யாபரிக்கப்பட்டிருக்கிறதோ, மேருவானது ஜம்பூத்வீபத்தால் எப்படி வ்யாபரிக்கப்பட்டிருக்கிறதோ, அப்படி உப்பு சமுத்திரமும் **தன்னைவிட** இரண்டு பங்கு அகலமுள்ள ப்லக்ஷதவீபத்தால் சுற்றப்பட்டிருக்கிறது. அது அகழிக்கு வெளியில் தோட்டமிருப்பது போல் விளங்குகிறது. அந்த த்வீப வ்ருக்ஷமான ப்லக்ஷ மரமானது, ஜம்பூத்வீபத்திலுள்ள ஜம்பூவிருக்ஷம் போல உயரமானது. த்வீபத்திற்கு விசேஷகாந்தியை உண்டுபண்ணுகிறது தங்கமயமானது; அவ்விடத்தில் ஏழு ஜ்வாலைகளுள்ள அக்னி பகவான் ப்ரகாசிக்கிறார். அந்த த்வீபத்திற்கு அதிபதி ப்ரியவ்ரதருடைய புத்ரராகிய இத்மஜிஹ்வர். அவர் அந்த த்வீபத்தை ஏழு வர்ஷங்களாப் பிரித்துத் தம்முடைய ஏழு புத்ரர்களுக்கும் அவைகளைக் கொடுத்து தாம் உயர்கதியை அடைந்தார். அந்த வர்ஷங்கள் சிவம், யசஸ்யம், சுபத்ரம், சாந்தம், க்ஷேமம், அபயம் அமிருதம் என்ற பெயருள்ளவைகளாம். அந்த வர்ஷங்களில் ஏழு மலைகளும் ஏழு நதிகளுமுண்டு. மணிகூடம், வஜ்ரகூடம், இந்திரசேனம், ஜ்யோதிஷ்மான், தாம்ரவர்ணம், ஹிரண்யக்ரீவம். மேதமாலம் என்ற ஏழுமலைகள் எல்லைகளாக இருக்கின்றன. அருணா, ஸிருமணா, ஆங்கீரஸி, சாவித்திரி, சுப்ரபாதா, ரிதமம்பரா, சத்யம்பரா என்ற ஏழு

நதிகளுமுண்டு. அந்த நதிகளில் ஸ்நானஞ் செய்தால் ரஜோகுணம், தமோகுணம் நீங்கியவர்களான ஹம்ஸர்கள் பதங்கர்கள் ஊர்த்வாயனர்கள் ஸத்யாங்கர்கள் என்ற பேருள்ள நான்கு ஜாதி ஜனங்களிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆயுஸ்ஸு அதிகம். அவர்கள் தேவர்களுக்குச் சமமான பார்வை, அவயங்கள் இவைகளுள்ளவர்கள். மேலுமவர்கள் ஸ்வர்க்கத்திற்கு வழியான வேதஸ்வரூபியான சூர்யபகவானை வேதமந்திரங்களைக் கொண்டு "புராண புருஷராகிய மகாவிஷ்ணுவின் ஸ்வரூபம் எதுவோ ஸத்யம், வ்ரதம், வேதம், மோக்ஷம், மிருத்யு இவைகளுக்கு எவர் காரணமோ அந்த சூர்யனைச் சரணமைடைகிறோம்" என்று உபாஸிக்கிறார்கள். ப்லக்ஷம் முதலிய ஐந்து த்வீபங்களிலுள்ள புருஷர்களுக்கு ஆயுஸ்ஸு, இந்திரியம், தேஜஸ் தேகபலம், மனோபலம் புத்தி பராக்ரமம் இவைகள் இயற்கையிலேயே விருத்தியடைகிறது. ப்லக்ஷத்வீபமானது தனக்குச்சமமான அகலமுள்ள கருப்பஞ்சாறு ஸமுத்ரத்தால் சுற்றப்பட்டிருக்கிறது. அதுபோலவே சால்மலமென்ற த்வீபமும் இரண்டு பங்கு விஸ்தாரமுள்ளது. அது தனக்குச் சமமான அகலமுள்ள ஸுராசமுத்ரத்தால் சுற்றப்பட்டிருக்கிறது. அந்த த்வீபத்திலிருக்கும் சால்மலி என்ற விருக்ஷமானது ப்லக்ஷத்திற்குச் சமமான உயரமுள்ளது. அந்த மரத்தின் மூலத்தில் கருடனுடைய ஆலயமிருக்கின்றது, அந்த கருடன் தம்முடைய அவயவங்களாகிய சந்தஸ்ஸுகளால் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ஸ்தோத்ரஞ் செய்பவர். அந்த சால்மலி மரமானது த்வீபத்திற்கு அலங்காரமாக இருக்கிறது. ப்ரியவ்ரதருடைய புத்ரராகிய யஜ்ஞபாஹு என்பவர் அந்தத்வீபத்திற்கு அதிபதி, அவர் அந்த த்வீபத்தை ஏழு வர்ஷங்களாகப் பிரித்து தமது ஏழு

புத்ரர்களுக்கு கொடுத்தார்; அந்த அந்த வர்ஷங்கள் அவரவர்களுடைய பெயருள்ளதாக வழங்கி வந்தன. மேலும் அந்த வர்ஷங்கள் சுரோசனம், ஸௌமனஸ்யம், ரமணகம் தேவராஹம், பாரிபக்ஹம், ஆப்யாயனம் அபிஜ்ஞாதம் என்று பெயருள்ளவைகளாம். அவவர் ஷங்களில் ஸ்வரஸம். சதச்ருங்கம் வாம தேவம், குமுதம் முகுந்தம் புஷ்பவர்ஷம் சதச்ருதி என்ற ஏழு மலைகளும் அனுமதி ஸிநீவாலீ, ஸரஸ்வதீ, குஹூ: ரஜ்நீ, நந்தா, ராஜா என்ற ஏழு நதிகளுமிருக்கின்றன. அந்த வர்ஷத்திலிருக்கும் ச்ருததர வித்யாதர வசுந்தர. இத்மதா என்ற பெயருள்ள நான்கு ஜாதியார்கள் வேதஸ்வரூபியான ஸோமபகவானை "சுக்லபக்ஷத்தில் தேவர்களுக்கும் கிருஷ்ண பஷத்தில் பிதிருக்களுக்கும் தம்முடைய கிரணங்களால் அன்னத்தைக் கொடுக்கும் ஸோமன் நம்மெல்லோருக்கும் ராஜாவாக விருக்கட்டும்" என்று ஸ்தோத்திரஞ் செய்கிறார்கள்.

11–16. சுரா ஸமுத்திரத்திற்கு வெளியில் அதை விட இரண்டு மடங்கு விஸ்தாரமுள்ள குசத்வீபமிருக்கிறது. அதற்குச் சமமான அகலமுள்ள நெய் சமுத்ரம் அதைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. அந்த த்வீபத்தில் தேவனால் ஏற்படுத்தப்பட்ட குசஸ்தம்பமானது (தர்பம்) புஷ்பம் அழகான இலை இவைகள் அந்த த்வீபத்தில் பத்து திக்குகளையும் பிரகாசிக்க செய்கிறது. ப்ரியவ்ரதருடைய புத்திரராகிய ஹிரண்யரேதஸ்ஸென்பவர் அந்த த்வீபத்திற்கதிபதி. அவர் அந்த த்வீபத்தை ஏழாகப் பிரித்து வசுதானன், த்ருடருசி, நாபி, குப்தர், ஸத்யவ்ரதர், விப்ரர், வாமதேவர் என்ற பெயருள்ள தம்முடைய புத்ரர்களுக்குக் கொடுத்து தாம் தபஸ் செய்தார்' அந்த வர்ஷங்களில் பப்ரு, சதுஸ்ருங்கம்,

கபிலம், சித்ரகூடம், தேவாநீகம் ஊர்த்தரோமா, த்ரவிணம் என்ற ஏழு மலைகளும், ரஸகுல்யா மதுகுல்யா, ச்ருவிந்தா, தேவகர்பா, கிருதச்யுதா, மந்தரமாலா என்ற ஏழு நதிகளுமிருக்கின்றன, குசல, கோவித, அபியுக்த, குலக என்ற பெயருள்ள அவ்விடத்திலுள்ள நான்கு ஜாதியார்கள் அந்த நதிகளுடைய ஜலத்தை கொண்டு ஜாதவேதஸ்வரூபியான பகவானைப் பூஜிக்கிறார்கள். ஹே அக்னியே, நீர் பரப்ரஹ்மஸ்வரூபியான ஸ்ரீ மஹாவிஷ்ணுவிற்கு ஹவிஸ்ஸை வகிக்கிறவராயிருக் கிறீர், பரமபுருஷனுடைய அங்கங்களான தேவதைகளை உத்தேசித்துக் கொடுக்கப்படும் ஹவிஸ்ஸை அக்நியான மகாபுருஷனிடத்தில் சமர்ப்பியும்" என்றும் ஸ்துதிக் கிறார்கள்.

17–22. அதனைவிட இரண்டு பங்கு விஸ்தாரமுள்ள க்ரௌஞ்சத்வீபமானது அதற்கு வெளியிலிருக்கிறது. குசத்வீபத்தை நெய் சமுத்ரம் சுற்றிக்கொண்டிருப்பது போல அதற்கு சமமான விஸ்தாரமுள்ள தயிர் சமுத்திரம் க்ரௌஞ்சத்வீபத்தை சுற்றிக்கொண்டிருக் கிறது. அந்த த்வீபத்தில் க்ரௌஞ்சமென்ற மலை யிருப்பதால் அந்த பெயர் வந்தது. அந்த மலையானது முன்னொருகால் சுப்ரஹ்மண்யருடைய சக்தி என்ற ஆயுதத்தாலடிக்கப்பட்டது. ஆனாலும் வருணன் தபிராகிய ஜலத்தால் அதனை நனைத்துக் காப்பாற்றிய படியால் பயமற்றதாக இருக்கிறது. அந்த த்வீபத் திற்கும் ப்ரியவ்ரதருடைய புத்ரராகிய கிருதபிருஷ்டர் என்பவர் அதிபதி, அவர் அந்த த்வீபத்தை ஏழாகப் பிரித்துத் தம்முடைய ஏழு பிள்ளைகளுக்கும் கொடுத்து மிகுந்த க்ஷேமத்தைக் கொடுக்கக்கடிய பகவானுடைய பாதாரவிந்தத்தை யடைந்தார். கிருதபிருஷ்டருடைய

புத்ரர்கள் ஆமோதர் மதுவஹர், மேகப்ருஷ்டர், சுதாமர், ரிஷிஜ்யர், லோஹிதார்ணர், வநஸ்பதி என்ற பெயருள்ளவர்கள். அவரவருடைய வர்ஷங்களுக்கும் அதே பெயர்தான். சுக்லம், வர்தமானம், போஜனம், உபர்ஹனம், ஆனந்தம், நந்தனம், சர்வதோபத்ரம் என்று ஏழு மலைகளும் அபயா, அமிருதௌகா, ஆர்யகா, தீர்த்தவதீ, த்ருத்பிதிரூபா, பவித்ரவதி, சுக்லா என்ற ஏழு நதிகளும் அவ்வர்ஷங்களிலிருக்கின்றன. அவ்விடத்திலுள்ள குரு, ருஷப, த்ரவிணக, தேவக என்று பெயருள்ள நான்கு ஜாதியார்கள். "ஜலங்களே நீங்கள் மகாபுருஷனிடத்திலிருந்து சாமார்த்தியத்தை அடைந்தவர்கள்; பூமி, புவர்லோகம், சுவர்லோகம் ஆகிய இவைகளைப் பரிசுத்தப்படுத்துகின்றீர்கள்; பாபங்களைப் போக்கக்கூடிய அவைகள் ஸ்நாநம் பண்ணும் எங்களுடைய சரீரத்தைப் பரிசுத்தப்படுத்தட்டும்" என்று ஜலமயமான தேவனை ஜலத்தால் நிறைந்த அஞ்சலியால் பூஜிக்கிறார்கள்.

23–28. தயிர் சமுத்ரத்திற்கு வெளியில் சாகத்வீபம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது முப்பத்திரண்டு லக்ஷம் யோஜனை தூரம் அகலமுள்ளது. அதற்குச் சமமான அகலமுள்ள பால் சமுத்திரத்தால் சுற்றப்பட்டிருக்கிறது. அந்தத்வீபத்தில் சாகமென்ற விருக்ஷமிருப்பதால் அதற்குச் சாகமென்று பெயருண்டாயிற்று. எந்த மரத்தினுடைய இலைகள் உட்புறத்தில் கெட்டியாயும் வெளியில் மிருதுவாயுமிருக்கின்றனவோ அந்த மரமே சாகமெனப்படுகிறது. அதனுடைய நல்வாசனையானது அந்த த்வீபம் முழுவதையும் வாசிக்கச் செய்கிறது. ப்ரியவ்ரதருடைய புத்ரராகிய மேதாதிதி என்பவர் அதற்கு அதிபதி. அவர் அந்த த்வீபத்தை ஏழு வர்ஷங்களாகப் பிரித்து புரோஜவ.

மனோஜவ, வேமான, தூம்ராநீக, சித்ரரத, பஹுரூப விச்வதார என்ற பெயருள்ள தம்முடைய புத்ரர்களுக்கு அவைகளை கொடுத்துத்தாம் பகவானாகிய அனந்தனிடத்தில் சித்தத்தைச் செலுத்தித் தபோவனஞ் சென்றார். அவர்களுடைய பெயரே அவ்வர்ஷங்களுக்கும் பெயராம். ஈசாநம், உருச்ருங்கம், பலபத்ரம், சதகேஸரம், ஸஹஸ்ரஸ்ரோதஸ், தேவ பாலம் மஹாநஸமென்ற ஏழு மலைகளும், அனகா, ஆயுர்தா, உபயஸிருஷ்டி, அபராஜிதா, பஞ்சபரி, ஸஹஸ்ரஸ்ருதி, நிஜத்ருதி என்ற ஏழு நதிகளும் இருக்கின்றன. ரித்வ்ரத ஸத்யவ்ரத, தானவ்ரத, சுவ்ரத என்ற பெயருள்ள நான்கு ஜாதியார்கள் அவ்விடத்தில் வசிக்கிறார்கள். அவர்கள், ப்ராணாயாமத்தால் ரஜோகுணம், தமோகுணம் இவைகளை நிவர்த்தித்துக் கொண்டு வாயுஸ்வரூபியான பகவானை உபாசிக்கிறார்கள். "எந்த பகவான் சகல ப்ராணி களுடைய உள்ளே ப்ரவேசித்து ப்ராணன் முதலிய வாயுவின் வியாபாரங்களால் லோகத்தைப் போஷிக் கிறாரோ இந்த ஜகத்தானது எவருக்கு ஸ்வாதீனமாக இருக்கிறதோ அந்தர்யாமியாகிய அந்த பகவான் நம்மை ரக்ஷிக்கட்டும்" என்று ஸ்தோத்ரஞ் செய்கிறார்கள்.

29–33. பால் சமுத்திரத்திற்கு வெளியில் அதனை விட இரண்டு பங்கு விஸ்தாரமுள்ள புஷ்கர த்வீபமிருக்கிறது. அதற்குச் சமமான விஸ்தாரமுள்ள சுத்தோதக சமுத்ரம் அதனைச் சுற்றிக்கொண்டிருக்கிறது. அந்த த்வீபத்தில் பெரிதான புஷ்கரம் (தாமரை மலர்) இருக்கிறது, அக்னிஜ்வாலைபோல் ப்ரகாசிக்கும் அநேக இதழ்கள் அதிலிருக்கின்றன, அது ப்ரஹ்மதேவருக்கு ஆஸனமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது, அந்த த்வீபத்தின் மத்தியில் மானஸோத்தரம் என்ற ஒரு மலையிருக்கிறது. அது உள்ளிலும் வெளியிலுமிருக்கும் வர்ஷங்களுக்கு

எல்லையாக லக்ஷயோஜனை தூரம் அகல உயரமு ள்ளதாக இருக்கிறது. அந்த மலையில் நான்கு திக்கிலும் இந்திரன் முதலிய லோகபாலர்களுடைய நான்கு பட்டணங்களிருக்கின்றன. அந்த மலையின் மேல் மேருவைச் சுற்றிவரும் ஸூர்யரதத்தின் ஸம்வத்ஸர ரூபமான சக்ரமானது தேவதைகளுக்கு இரவும் பகலு மாகிய இரண்டு அயனங்களுடன் சக்ரம் போல் சுற்றுகிறது. ப்ரியவ்ரதருடைய புத்ரராகிய வீதிஹோத்ரர் என்பவர் அந்தத்வீபத்திற்கு அதிபதி. அவர் தன்னுடைய புத்ரர்களான ரமணகன், தாதகன் என்பவர்களை அவ்வர்ஷங்களுக்கு அதிபதியாய்ச் செய்து தம் முன்னோர்கள் போல் பகவதாராதனம் செய்து கொண்டி ருந்தார். அந்த வர்ஷத்திலுள்ளவர்கள் ப்ரஹ்மதேவ ஸ்வரூபியாக அவ்விடத்தில் ப்ரகாசிக்கும் பகவானை ப்ரஹ்ம ஸாலோக்யத்திற்கு ஸாதகமான கர்மத்தால் பூஜிக்கிறார்கள். எது கர்மபலத்தை கொடுக்கக் கூடியதோ எதனால் ப்ரஹ்மம் ப்ரகாசிக்கிறதோ அந்த இரண்டு ஸ்வரூபமும் ஒன்றானாலும் வெவ்வேறாக ஜனங்கள் பூஜிக்கிறார்கள். உண்மையில் ஒருவராக இருக்கும் பகவானுக்கு நமஸ்காரம்.

34–45. சுத்தோதக சமுத்ரத்திற்கு வெளியில் சூர்ய ப்ரகாசமுள்ள இடத்திற்கும் சூர்ய ப்ரகாசமற்ற இடத்திற்கும் மத்தியில் லோகாலோகமென்ற மலை யிருக்கிறது (சுத்தோதக சமுத்ரத்திற்கு வெளியில் கோடியேஐம்பத்தேழரை லக்ஷம் தூரமுள்ள பூமியி ருக்கிறது. அதில் ஜனங்களும் வஸிக்கிறார்கள். அதன் பிறகு எட்டு கோடியே முப்பதொன்பது யோஜனை தூரம் தங்கமயமான பூமியிருக்கிறது, அதற்கப்பால் லோகாலோக பர்வதமிருக்கிறது. மேருவிற்கும் லோகா

லோகத்திற்கும் இடையில் பன்னிரண்டரை கோடி யோஜனை தூரம் இருக்கிறது) அந்தத் தங்கபூமியானது கண்ணாடி போலிருக்கிறது; அந்தத் பூமியில் போடப் பட்ட பதார்த்தமானது திரும்பவும் கண்ணுக்குக்குப் புலப்படுகிறதில்லை. ஆனதால், ஒருவகையான ப்ராணியும் அவ்விடத்தில் வஸிக்கிறதில்லை; லோகா லோகமென்கிற பெயரானது தேஜஸ்ஸுள்ள தேசம்; ப்ராகாசமற்ற தேசம் இவைகளுக்கு நடுவிலிருப்பதால் ஏற்பட்டது. அந்த மலையானது முவ்வுலகத்தின் கோடியின் நாலு பக்கமும் ஈச்வரனால் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அந்த மலைக்கு உட்பட்ட முவ்வுலகத் தையும் சூர்யன் முதல் த்ருவன் வரையிலுள்ள தேஜஸ் பதார்த்தங்களுடைய கிரணங்கள் ப்ரகாசிக்கச் செய் கிறான். அதன் பின்னிருக்கும் ஸ்தலத்தை ப்ரகாசிக்கச் செய்ய அவைகளால் முடியவில்லை; அவ்வளவு உயரமு மகலமுமுள்ளது அந்த மலை. லோகத்தினுடைய அளவு, லக்ஷணம், ஸ்வரூபம் ஆகிய இவைகள் மேற்காட்டியபடி கவிகளால் சொல்லப்பட்டிருக்கிறது. ஐம்பது கோடி யோஜனை தூரம் விஸ்தாரமுள்ள பூகோளத்தில் நாலிலொரு பாகம் லோகோலோக பர்வதம் (பன்னி ரண்டரை கோடி யோஜனை தூரமுள்ளது. இதுவும் மேருவின் ஒரு பாகமாம்) அதன் மேற்புறத்தில் நான்கு திக்குகளிலும் ரிஷபம், புஷ்கரசூடம், வாமனம், அபராஜிதமென்ற நான்கு திக்கஜங்களை ஸகல ஜகத்திற்கும் குருவாகிய ப்ரஹ்மதேவர் ஏற்படுத்தியி ருக்கிறார். அவைகள் எல்லா லோகங்களுடைய ஸ்திதிக்குக் காரணங்களாக இருக்கின்றன. மேலும் அந்த மலையில் மகாபுருஷனும், மகாவிபூதிகளுக்கு அதிபதியுமான ஸ்ரீ நாராயணன் தம்முடைய விபூதிகளான மஹேந்திரன் முதலிய லோகபாலர்களுக்கு பலவகையான

சாமர்த்யத்தை வ்ருத்தி செய்வதற்காக தம்முடைய சுத்த சத்வம், தர்மம், ஞானம், மிகுந்த வைராக்யம், ஐச்வர்யம், அஷ்டமாசித்தி இவைகளுடனும், விக்ஷ்வக்ஸேனர் முதலிய பார்ஷதர்களுடனும் ஸகல லோகத்திற்கும் க்ஷேமத்தை செய்வதற்காக எங்கும் வசிக்கிறார். இந்த பகவான் தம்முடைய மாயையால் செய்யப்பட்ட பலவித லோகங்களைக் காப்பதற்காகக் கல்பம் வரையில் இப்படி இருக்கிறார். லோகாலோக பர்வதத்திற்கு முந்திய விஸ்தாரத்தைச் சொல்லியதால் அதற்கு வெளியிலிருக்கும் பூமியின் அளவும் சொல்லப்பட்டதாயிற்று. அதற்கு வெளியில் அஷ்டமகாஸித்தியைக் கொண்டு யோகிகள் செல்லக் கூடிய இடங்களென்று சொல்கிறார்கள். த்யுலோகத்திற்கும் பூமிக்கும் எது மத்தியோ, அது அண்டத்திற்கும் இடையில் இருபத்தைந்து கோடி யோஜனை தூரம் இருக்கிறது. ஹிரண்மயமான அண்டத்திலுண்டானவன் ஹிரண்யகர்ப்பனென்று பெயரடைந்தது போல இந்த சூர்யன் அசேதனமாகிய அண்டத்தில் வஸித்ததால் மார்த்தாண்டனென்று பெயர்டைந்தார். மேலும் திக்குகள், ஆகாசம், அந்தரிக்ஷம், பூமிமற்ற பேதம் ஸ்வர்க்கம், மோக்ஷம் இவைகளைக் கொடுக்கும் ஸ்தலம், அதலம் முதலிய கீழ்லோகங்கள் ஆகிய இவைகளெல்லாம் சூர்யனாலேயே பிரிக்கப்படுகின்றன. மேலும் தேவதைகள், திர்யக்ஜாதிகள் மனிதர்கள், மலைப்பாம்புகள், பறவைகள், கொடிகள் முதலிய ஸகல ப்ராணிகளுக்கும் சூர்யனே ஆத்மாவாகவும், கண்ணாகவும் அதிபதியாகவுமிருக்கிறார்.

அத்தியாயம்–21

த்யுமண்டலம்

பூமண்டலத்தின் ஸ்வரூபம் இவ்வளவே. இதனாலேயே த்யுலோகத்தின் அளவைச் சொல்லுகிறார்கள். மொச்சக் கொட்டை முதலிய விதையினுடைய இரண்டு இடிகளில் ஒன்றினுடைய அளவினால் மற்றொன்றின் அளவு சொல்லப்படுகிறது போல அந்தரிக்ஷமானது அதன் மத்தியில் சேர்ந்திருக்கிறது. அதன் மத்தியிலிருக்கும் சூர்யபகவான் வெயிலால் மூன்று லோகத்தையும் தபிக்கச் செய்து ப்ராகாசிக்கச் செய்கிறார். அந்த சூர்யன் உத்தராயணம், தக்ஷிணாயனம், வைஷுவதம் என்ற பெயர்களுள்ள மந்தகதியாலும், சீக்ரகதியாலும், சமகதியாலும், ஆரோஹணம், அவரோஹணம் இவைகளால் ஒவ்வொரு ஸ்தானங்களிலும் சஞ்சரிக்கிறார். அவர் மகரம் முதலிய ராசிகளில் சஞ்சரிக்கும் சிலவேளை பகல் குறைந்தும், சிலவேளை அதிகரித்தும், சிலசமயம் இரவு குறைந்தும்,அதிகரித்தும், இரண்டும் சமமாகவும் இருக்கும்படிச் செய்கிறார். மேஷராசியிலும், துலாராசியிலும் சூர்யன் சஞ்சரிக்கும் பொழுது இரவு பகலும் சமமாக இருக்கும். விருஷபம் முதல் ஐந்து ராசிகளில் சஞ்சரிக்கும் பொழுது பகல்களே விருத்தி அடைகின்றன. ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு நாழிகை இரவில் குறையும். விருச்சிகம் முதலிய ஐந்து ராசிகளில் சூர்யன் சஞ்சரிக்கும் போது பகல் குறைந்தும் இரவு அதிகரித்துமிருக்கும், தக்ஷிணாயனம் வரையில் பகல்களும் உத்தராயணம் வரையில் இரவுகளும் விருத்தியடைகின்றன. இம்மாதிரி ஒன்பது கோடியே ஐம்பத்தொரு லக்ஷம் யோஜனை , தூரம்

மானஸோத்தரபர்வதத்தின் ப்ரவிருத்தியென்று சொல்லு கிறார்கள். அந்த மானஸோத்திர பர்வதத்தில் மேருவிற்கு கிழக்கில் தேவதானி என்ற இந்திரனுடைய பட்டணமும், தெற்கில் ஸம்யமனி என்ற யமனுடைய பட்டணமும் மேற்கில் நிம்லோசனி என்ற வருண னுடைய பட்டணமும், வடக்கில் விபராவரி என்ற ஸோமனுடைய பட்டணமும் இருப்பதாகவும் சொல்லு கிறார்கள். அந்தப் பட்டணங்களில் ப்ராணிகளுடைய ப்ரவிர்த்தி நிவிர்த்திக்கு நிமித்தங்களான உதயம், மத்யாஹ்னம், நிசீதம் என்ற காலவிசேஷங்களை உண்டு பண்ணிக்கொண்டு சூர்யன் தாம் தக்ஷிணமாக சஞ்சரித்தாலும் மேருவை ஸவ்யமாகச் சுற்றுகிறார். பகலுடைய மத்ய காலத்தில் மாத்திரம் அவ்விடத்திலி ருப்பவர்களுக்குத் தாபம் உண்டாகிறது. எவ்விடத்தி லுதயமாகிறாரோ, அதற்கு நேரான திக்கில் அவர்களுக்கு சூர்யன் அஸ்தமனமடைகிறார். எவ்விடத்திலிருந்து வியாவையை உண்டுபண்ணுகிறாரோ, அதற்கு எதிரான திக்கில் நிசீதத்தை (பாதிராத்ரி) உண்டுபண்ணுகிறார். அப்பொழுது ஜனங்களால் அவரைப் பார்க்க முடியாது. சூர்யன் இந்திரனுடைய பட்டணத்திலிருந்து பதினைந்து நாழிகைகளில் யமனுடைய பட்டணம் வருகிறார். இடையில் இரண்டு கோடி எழுபத்தேழு லக்ஷத்து எழுபத்தையாயிரம் யோஜனை தூரமிருக்கிறது. இதுபோலவே அங்கிருந்து வருணனுடைய பட்டணத் திற்கும் அங்கிருந்து ஸோமனுடைய பட்டணத்திற்கும் அங்கிருந்து இந்திரனுடைய பட்டணத்திற்கும் செல்லுகிறார். அப்படியே சந்திரன் முதலிய கிரஹங் களும், நக்ஷத்திரங்களுடன் ஜ்யோதிக்சக்ரத்தில் சேர்ந்து அஸ்தமனத்தை அடைகின்றன. இம்மாதிரி ஒரு முகூர்த்தத்திற்கு முப்பத்தினாலு லக்ஷத்து நூற்றெட்டு

யோஜனை தூரம் சூர்யனுடைய ரதமானது செல்லுகிறது. அது வேத ஸ்வரூபமாயுள்ளது; அதற்குச் சக்கரம் ஒன்றே; அதற்கு பன்னிரண்டு மாஸங்களும் ஆதாரங்கள்! ஆறு ருதுக்களும் நேமிகள்; மூன்று சாதுர்மாஸ்யங்கள் நாபி; ஆகையால் அது சம்வத்ஸர ஸ்வரூபம்; அந்த ரதத்தின் அச்சானது மேருவின் சிகரத்திலும் மான ஸோத்தர பர்வதத்தில் சுற்றுகிறது. அந்த அச்சில் கோர்க்கப்பட்ட இரண்டாவது அச்சானது தைலயந் தரத்தின் அச்சு போல த்ருவத்தில் மாட்டப்பட்டி ருக்கிறது. ஆனால் அது பெரிய அச்சின் நாலிலொரு பாகமுள்ளது. ரதத்தில் உட்காருகிற இடம் முப்பத்தாறு லக்ஷம் யோஜனை தூரம் நீளமுள்ளது; எட்டரை யோஜனை தூரம் அகலமுள்ளது; அந்த ரதத்தின் நுகத்தடி அவ்வளவு நீளமுள்ளது. அதில் அருணனால் கட்டப்பட்ட காயத்ரி முதலிய சந்தஸ்ஸின் பெயருள்ள ஏழு குதிரைகள் ரதத்தை இழுத்து வருகின்றன. அந்த அருணன் சூர்யனுக்கு முன்பாகத்தில் மேற்கு முகமாக ஸாரத்யஞ் செய்து கொண்டிருக்கிறான். மேலும் வால்கில்யர்கள் என்று பெயருள்ளவர்களும், கட்டை விரல் அளவுள்ளவர்களுமான அறுபதினாயிரம் மஹர் ஷிகள் சூர்யனுக்கு முந்தி நல்வார்த்தையைச் சொல் வதற்காக ஏற்படுத்தப்பட்டு சூரியனை ஸ்துதிக் கிறார்கள். அப்படியே மற்ற மஹர்ஷிகளும் கந்தர்வர் களும், அப்ஸரஸுகளும், நாகங்களும், யாது தானர்களும் தேவர்களும் தனித்தனியே சூர்யனை உபாஸிக் கிறார்கள். மேலும் ஒவ்வொரு மாஸத்திலும் ஆத்மா வாகிய சூர்யனைத் தனித்தனியே பதினாலு கண்டங் களும் இரட்டையாக ஏழு கணங்களுமான ஸ்தோ மங்கள் உபாஸிக்கின்றன. பூமண்டலம் ஒன்பது கோடியே ஐம்பத்தோரு லக்ஷம் யோஜனை ப்ரவிர்த்தி

யுள்ளது. அதனை சூர்யன் ஒரு க்ஷணத்திற்கு இரண்டாயிரம் யோஜனை தூரமும் இரு நூறு கவ்யூதி தூரமுமாகக் கடந்து செல்லுகிறார்.

(சுறிப்பு)

ஸ்தானங்களில - எல்லா கிருஹங்களுக்கும் ஜரநகவலென்ற மத்யஸ்தானமென்றும், ஜராவதமென்ற வடக்கு ஸ்தானமென்றும், வைச்வாநரமென்ற தெற்கிலுள்ள ஸ்தானம் ஆகிய மூன்று ஸ்தானங்களுண்டு. ஒவ்வொரு ஆத்திரங்களும் அச்வினி முதலிய மூன்று நக்ஷத்ரங்களால் நாக வீதி, கஜவீதி யென்ற மூன்று வீதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அச்வினி, பரணி, கிருத்திகை ஆகிய மூன்றும், நாகவீதியென்று சொல்லப்பட்டது. ரோஹிணீ, மிருகசீர்ஷம், ஆர்த்ரை ஆகிய மூன்றும் கஜவீதியென்றும், புனர்வஸு, புஷ்யம், ஆயில்யம் ஆகிய மூன்றும் ஜராவத வீதியென்றும் சொல்லப்பட்டது. இந்த மூன்று வீதிகளும் உத்தர மார்க்கம், மகம், பூரம், உத்திரம் இவைகள் ஆர்ஷபீ வீதி. ஹஸ்தம், சித்திரை, ஆவாதீ இவைகள் கோவீதி. ஜ்யேஷ்டை, விசாகம் , அநுராதம் இவைகள் ஜாத்கவீ வீதி இம்மூன்று வீதிகளும் மத்யமார்க்கம். மூலம், பூராடம், உத்திராடம் இவைகள் அஜவீதி; ச்ரவணம், கனிஷ்டை, சதயம் இவைகள் மிருகவீதி, பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி இவைகள் வைச்வானரவீதி, இவைகள் தக்ஷிணமார்க்கம், உத்தராயணத்தில் துருவத்தில் சேர்க்கப்பட்ட வாயுரூபமான இரண்டு கடிவாளங்களை இழுத்துப் பிடிப்பதால் ரதத்திற்கு ஆரோஹணமும் மந்தகதியும், அதனால் பகல் நாழிகை விருத்தியும், ராத்ரியின் குறைவும் உண்டாகிறது.

வைஷுவதத்தில் பாசம் சமமாக விருப்பதால் மத்ய மண்டல ப்ரவேசமும், சாம்யகதியும் இரவும், பகலும் சமமாக விருப்பதும் உண்டாகிறது. விருஷபம் முதல் வைகாசி, ஆனி இந்த இரு மாசங்களில்தான் பகல்கள் விருத்தியடைகின்றன. ஆடி மாசம் முதல் பகல்கள் குறைகின்றன. ஆனாலும் ராத்ரியை விட பகல் விருத்தியாகின்றன என்று தாத்பர்யம். எவ்விடத்திலுதய மாகிறாரோ மேருவின் தெற்கிலிருப்பவர்களுக்கு கிழக்கு முதல் திக்குகள் காணப்படுகின்றன. மேற்கிலிருப்பவர் களுக்கு தெற்கு கிழக்காகும். வடக்கிலிருப்பவர்களுக்கு மேற்கு கிழக்காகும். கிழக்கிலிருப்பவர்களுக்கு வடக்கு கிழக்காகும். தக்ஷிணமாக நக்ஷத்திரங்களுக்கு எதிரான கதியால் மேருவை வாமமாகச் செய்தும், ப்ரதக்ஷிணா வர்த்தமான ப்ரவஹ வாயுவினால் சுற்றும் ஜ்யோதிச் சக்கரத்தால் ஒவ்வொரு நாளும் தக்ஷிணமாக ஸஞ்சரிக் கிறார். சக்கரத்தின் கதிவசத்தால் மிகுந்த தூரம் சென்ற பொழுது பூமியிலிருப்பவன் போல் தோன்றும் சூர்யனை பார்ப்பது உதயமென்றும், ஆகாசத்தில் ஏறினவன் போலத் தோன்றும் சூர்யனைப் பார்ப்பது மத்யாஹ்னம் என்றும் பூமிக்குள் பிரவேசித் தவன் போல் சூர்யன் கண்ணுக்குப் புலப்படா திருப்பதை அஸ்தமனமென்றும் சொல்லுகிறார்கள். எவன் எவ்விடத்திலிருந்து சூர்யனை உதயமாகிறவனாகப் பார்க்கிறானோ அவனுக்கு அது கிழக்கு திக்காகிறது.

அத்தியாயம்–22

சந்திரன் முதலியவைகளின் மண்டலம்

பரீக்ஷித்து மகாராஜன் சுகரை நோக்கி "ஓ பகவன் சூர்யன் மேருவையும். த்ருவனையும் ப்ரதக்ஷணமாகச் சுற்றுகிறாரென்றும், ராசிகளுக்கு எதிர் முகமாகச் செல்லுகிறாரென்றும் சொன்னீரல்லவா? அது விருத்தமாகத் தோன்றுகிறதே, அதை நான் எப்படித் தெரிந்து கொள்ளுகிறது" என்று கேட்டார் இதனைக் கேட்ட சுகர் பின்வருமாறு சொல்லலானார் "குயவனுடைய் சக்ரம் சுற்றும்போது அதிலிருக்கும் எறும்பு முதலிய ஜந்துக்கள் அதற்கு விரோதமாகச் செல்லுகிறதல்லவா? அப்படியே இன்னும் பலவிதமாகப் பலவிடங்களில் காணப்படுகின்றன. இம்மாதிரியே நக்ஷத்திரம். ராசி இவைகளுடன் கூடியதும். பருவத்தையும், மேருவையும் ப்ரதக்ஷணமாகச் சுற்றுவதுமான காலசக்கரத்தில் இருக்கும் சூர்யன் முதலிய கிருஹங்களுடைய கதியானது வேறாகவேயிருக்கிறது அப்படியே நக்ஷத்திரங்களிலும், மற்ற ராசிகளிலும் காணப்படுகிறது ஆதிபுருஷனாகிய ஸ்ரீமந் நாராயணனே லோகங்களுடைய க்ஷேமத்திற்காக வேதரூபியான தம்முடைய ஆத்மாவை கர்மங்களுடைய சுத்திக்காகப் பனிரெண்டுவகையாகப் பிரித்து வஸந்தம் முதலிய ஆறு ருதுக்களிலும் கர்ம போகத்திற்குத் தக்கபடி சீதோஷ்ணங்களை உண்டு. பண்ணுகிறார். அப்போர்ப்பட்ட மகாபுருஷ ஸ்வரூபியாகிய இந்த சூர்யனை புருஷர்கள் வேதவித்தையாலும் வர்ணாச்ரமாசாரங்களாலும் யோகம், தியானம் இவைகளாலும் பூஜித்து சீக்ரத்தில் க்ஷேமத்தை

அடைகிறார்கள், லோகங்களுக்கு ஆத்மாவாகிய இந்த சூர்யனதயுலோகத்திற்கும் பூமிக்கும் நடுவிலிருக்கும் ஆகாசத்தில் ப்ரகாசிக்கும் கால சக்ரத்தை அடைந்து ராசியென்று பெயருள்ள பன்னிரண்டு மாஸங்களை அனுபவிக்கிறார். சம்வத்ஸரத்தினுடைய ஆறிலொரு பாகத்தை எவ்வளவு காலத்தால் சூர்யன் அனுபவிக்கிறாரோ. அதை ருதுவென்றும், எவ்வளவு காலத்தால் சம்வத்ஸரத்தின் பாதியை அனுபவித்து ஆகாச மார்க்கத்தில் சஞ்சரிக்கிறாரோ. அதை அயனமென்றுஞ் சொல்லுகிறார்கள். ஆகாச மண்டலம் முழுவதையும் த்யுமண்டலத்தையும். பூமண்டலத்தையும் எவ்வளவு காலத்தால் அனுபவிக்கிறாரோ. அந்த காலத்திற்கு சம்வத்ஸரம், பரவத்ஸரம், இளாவத்ஸரம், அநுவத்ஸரம், இத்வத்ஸரம் என்று சூர்யனுடைய மந்த கதியாலும், சீக்கிரப கதியாலும், சமகதியாலும் சொல்லுகிறார்கள். இதுபோலவே சூர்ய மண்டலத்திற்கு லக்ஷயோஜனை தூரத்திற்குமேல் சந்திரனானவர் சூர்யகதியாலேற்படும் சம்வத்ஸரத்தை இரண்டு பக்ஷங்களாலும், மாஸத்தை இரண்டேகால் நக்ஷத்திரங்களாலும் பக்ஷபுத்தினத்தாலும் சூர்யனுக்கு முன்பாகச் சீக்கிரமாகச் சென்று அனுபவிக்கிறார். மேலுமவர் விருத்தியடைகின்றவைகளும்; குறைகின்றவைகளுமான கலைகளால், சுக்லபக்ஷம், கிருஷ்ணபக்ஷம் ஆகிய இவைகளாலும் பிதிருக்களுக்கு அஹோராத்ரத்தை யுண்டுபண்ணுகிறார். சகல பிராணிகளுக்கும் பிராணனாகவும் இருக்கிறார்; எல்லாரையும் ஜீவிக்கச் செய்வதால் ஜீவனாயுமிருக்கிறார். அவர் ஒவ்வொரு நக்ஷத்திரத்தையும் முப்பது முகூர்த்தங்களால் அனுபவிக்கிறார் பதினாறு கலைகளுள்ளவரும், மனோமயரும், அமிருதமயரும், அன்னமயருமாகிய சந்திரன் தேவர்கள். பிதிருக்கள்,

மனிதர்கள், பூதங்கள் பசுக்கள், பறவைகள், மலைப் பாம்புகள், கொடிகள் ஆகிய இவைகளைப் போஷிப் பதனால் சர்வஸ்வரூபியென்று சொல்லப்படுகிறார். அதற்கு மேல் லட்ச யோஜனை தூரத்தில் மேருவிற்கு தக்ஷிணமாகக் காலசக்கரத்தில் நக்ஷத்திரங்கள் சேர்க்கப் பட்டிருக்கின்றன. மேலுமவைகள் அபிஜித் என்ற நக்ஷத்திரத்துடன் இருபத்தெட்டென்று கணக்கிடப் பட்டிருக்கின்றன.

11. அதற்குமேல் இரண்டு லட்சம் யோஜனை தூரத்திற்கப்பால் சுக்ரனுடைய மண்டலமிருக்கிறது. அவர் சீக்ரகதி முதலியவைகளால் சூர்யனுக்கு முன்னும் பின்னுமாகச் செல்லுகிறார். பெரும்பாலும் லோகத்திற்கு அனுகூலத்தையே செய்பவர். அவருடைய கதி விசேஷத்தால் மழை பெய்யுமென்று ஊஹிக்கப்படு கின்றது. மேலுமவர் மழையின் ப்ரதி பந்தகத்தைப போக்கடிப்பவர். இவர் போலவே புதனும் என்று தெரிந்து கொள்ளவும்.

12. அதற்குமேல் இரண்டு லட்சம் யோஜனை தூரத்தில் புதன் இருக்கிறார். அவர் பெரும்பாலும் சௌம்யஸ்வபாவமுள்ளவர்; சுபத்தை செய்பவர்: அவர் சூர்யனுக்கு முன் எப்பொழுது செல்லுகிறாரோ அப்பொழுது பெருங்காற்று, மழையில்லாதிருப்பது முதலிய பயம் உண்டாகுமென்று சொல்லுகிறார்கள்.

13. அதற்குமேல் இரண்டு லட்சம் யோஜனை தூரத்திற்கப்பால் அங்காரகனிருக்கிறார். அவர் ஒவ்வொரு ராசியிலும் மூன்று பக்ஷங்கள் சஞ்சரிக்கிறார். வக்ரமாக சஞ்சரிக்கும்போது அசுபனாகியும் கெட்ட பலனையும் கொடுக்கிறார்.

14. அதற்குமேல் இரண்டு லட்சம் யோஜனை தூரத்தில் ப்ரஹஸ்பதி பகவான் இருக்கிறார். அவர் வக்ரகதியில்லாத போது ஒவ்வொரு ராசியிலும் ஒவ்வொரு பரிவத்ஸரகாலம் சஞ்சரிக்கிறார் மேலுமவர் ப்ராஹ்மணர்களுக்குப் பெரும்பாலும் சுகத்தையே கொடுப்பவர்.

15–16. அதற்குமேல் இரண்டு லட்சம் யோஜனை தூரத்திற்கப்பால் சனீச்வரனிருக்கிறார். அவர் ஒவ்வொரு ராசியிலும் முப்பது மாஸங்கள் தாமஸித்து அதே மாதிரி எல்லா ராசிகளிலும் அவ்வளவு அநுவத் சரங்கள் சஞ்சரிக்கிறார். பெரும்பாலுமவர் எல்லா ருக்கும் கெடுதியைச் செய்பவர், அதற்குமேல் பதினோரு லட்சம் யோஜனை தூரத்திற்கப்பால் ரிக்ஷிகள் வஸிக்கிறார்கள் லோகத்திற்கு க்ஷேமத்தை யுண்டு பண்ணுகிறவர்கள்; பகவானாகிய மகாவிஷ்ணுவினுடைய பரமபதத்தை ப்ரதக்ஷணமாகச் சுற்றுகிறவர்கள்.

குறிப்பு

ஆகாசமண்டலம் – சுக்லபக்ஷத்தின் ப்ரதமையில் ஸங்கிரமணம் நேர்ந்தால் ஸௌரமானத்திற்கும் சாந்திர மானத்திற்கும் மாஸம் ஆரம்பிக்கும், அது ஸம்வத் ஸரமெனப்படும். அந்த வர்ஷத்தில் ஸௌரமாஸத்தால் ஆறு நாட்கள் அதிகமாகின்றன (அதாவது 366 நாட்கள்) சாந்திரமானத்தால் ஆறு நாட்கள் குறைகின்றன. ஆனதால் சாந்திரமானத்தால் வர்ஷம் முந்தியும். ஸௌரமானத்தால் வர்ஷம் பிந்தியும் முடியும். இப்படி ஐந்து வர்ஷங்கள் சென்றால் நடுவில் இரண்டு மலமாஸங்கள் ஏற்படும். ஆறாவது ஸம்வத்ஸரமாகும் இரண்டு பக்ஷங்கள் – பன்னிரண்டு ராசிகளில் சூர்யன் ஒரு வர்ஷம் சஞ்சரிக்கிறார். சந்திரன் இரண்டு பக்ஷங்களில் பன்னிரண்டு ராசிகளைத் தாண்டுகிறார்.

அத்தியாயம்–23

த்ருவமண்டலம்

அதற்கப்பால் பதின்மூன்று லட்சம் யோஜனை தூரத்தில் விஷ்ணுவின் பரமபதமிருப்பதாகச் சொல்லு கிறார்கள். அவ்விடத்தில் நட்சத்திரரூபிகளாகவிருக்கும் அக்னி, இந்திரன், ப்ரஜாபதி, காச்யபர், தர்மன் ஆகிய இவர்களுக்கு தக்ஷிண பாகத்தில் மகாபாகவதரும், உத்தான பாதருடைய புத்ரருமான த்ருவர் கல்ப ஜீவிகளால் உபாஸிக்கப்பட்டிருக்கிறார். அவருடைய மஹிமை முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. அவர் அறியப்படாத வேகமுள்ள காலரூபியான ஈச்வரனுடைய ஆஜ்ஞையால் சுற்றிக் கொண்டிருக்கும் ஜ்யோதிர் கணல்களுக்கும், நட்சத்திரங்களுக்கும் பிடிப்பாகவும் ஸ்திரமாகவும், ஈச்வரனால் ஏற்படுத்தப்பட்டு ப்ரகாசிக்கிறார். அந்த நட்சத்திரம் முதலியவைகள் மேதிஸ்தம்பத்தில் தான்யங்களை யுதிர்ப்பதற்காகக் கட்டப்பட்ட பசுக்கள் போல மூன்று சவனங்களிலும் அதனுடைய ஸ்தானத்தில் சுற்றிக் கொண்டிருக்கின்றன. இம்மாதிரி பகணம், கிருஹங்கள் முதலியவைகள் இந்தக் கால சக்ரத்தில் உள்ளிலும் வெளியிலும் சம்பந்தப்படடு த்ருவனையே ஆச்ரயித்துக் காற்றினால் தூண்டப்பட்டு கல்பம் வரையில் ஸஞ்சரிக்கின்றன. ஆகாயத்தில் மேகங்கள் பருந்துகள் முதலியவை எப்படி காற்றினால் தங்கள் கர்மத்தை ஒத்தாசையாக வைத்துக் கொண்டு ஸஞ்சரிக்கின்றனவோ, அதுபோல ஜ்யோதிர்கணங்கள், ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவர்களுடைய சேர்க்கையால் அனுக்ரஹிக்கப்பட்டுக் கர்மத்தால் ஆகாய கதியை அடைந்திருக்கின்றன.

அதனால் தான் பூமியில் விழுகிறதில்லை. சிலர் இந்த ஜ்யோதிர்கணமானது சிம்சுமார சக்ரத்தில் பகவானாகிய வாசுதேவருடைய யோகத்தால் தரிக்கப்பட்டிருக்கிற தென்று சொல்லுகிறார்கள். மண்டலாகாரமான சரீர முள்ளதும், கீழ்முகமான தலையுள்ளதுமான அந்த சிம்சுமாரத்தின் வாலுக்குக் கீழாக த்ருவர் ஏற்படுத்தப் பட்டிருக்கிறார். அந்த வாலில் ப்ரஜாபதி, அக்னி, இந்திரன், தர்மன் ஆகிய இவர்கள் வஸிக்கிறார்கள். வாலின் அடியில் தாதா, விதாதா என்ற இருவர்களும் இடுப்பில் ஸப்தரிஷிகளும் வஸிக்கிறார்கள். மேலும் வலது பக்கமாக வளைந்த சரீரமுள்ள அதன் தக்ஷிண பாகத்தில் திருவோணம் முதல் புனர்வசு வரையிலுள்ள பதிமூன்று நட்சத்திரங்களும் அபிஜித் என்றது மிருக்கின்றன. வாமபாகத்தில் புஷ்யம் முதல் உத்திரா ஷாடம் வரையிலுள்ள பதினான்கு நட்சத்திரங்கள் வஸிக்கின்றன. மண்டல ஸ்வரூபமுள்ள சிம்சுமாரத்தின் இரு பக்கங்களிலுமுள்ள அவயவங்கள் சமமான ஸங்கியை உள்ளவைகள். பின் பக்கத்தில் அஜவீதியும் வயிற்றில் ஆகாச கங்கையும் ச்ரோணி தேசத்தின் தக்ஷிண பாகம், வாமபாகம் இவைகளில் முறையே புனர்வஸு, புஷ்யம் ஆகிய இவைகளும், தக்ஷிணபாதம், வாமபாதம் இவைகளில் ஆருத்ரை, ஆச்லேஷை ஆகிய இவைகளும் தக்ஷிணநாஸிகை, வாமநாஸிகை இவை களில் அபிஜித், உத்திராஷாடம் ஆகிய இவைகளும், தக்ஷிண நேத்ரம், வாம நேத்ரம் ஆகிய இவைகளில் ஸ்ரவணம் பூர்வாஷாடம் ஆகிய இவைகளும் தக்ஷிண கர்ணம், வாம கர்ணம் இவைகளில் தனிஷ்டை மூலம் ஆகிய இவைகளும் மகம் முதலிய எட்டு நட்சத்திரங்கள் முகத்தின் வாம பார்ச்வதத்திலும், மிருகசீர்ஷம் முதல் எட்டு நட்சத்திரங்கள் முகத்தின் தக்ஷிண பார்ச்வதத்திலும்

மாறுதலாக இருக்கின்றன. வலது ஸ்கந்தத்திலும், இடது ஸ்கந்தத்திலும் சதபிஷக், ஜ்யேஷ்டை ஆகிய நட்சத்திரங்களிருக்கின்றன. மேலும் மேலுதட்டில் அகஸ்தியரும், கீழுதட்டில் யமனும், முகத்தில் அங்காரகனும், மார்பில் சனைச்சரனும் கழுத்தில் (கழுத்தின் பின்பாகம்) வட்சஸ்ஸில் ஆதித்யனும், ஹிருதயத்தில் நாராயணனும், மனஸ்ஸில் சந்திரனும் நாபியில், உசநஸ்ஸும், ஸ்தனங்களில் அச்வனி தேவர்களும் ப்ராணன், அபானனிவைகளில் புதனும், கழுத்தில் ராகுவும் எல்லா அங்கங்களில் கேதுவும் ரோமங்களில் எல்லா தாரைகளும் இருக்கின்றன. (அகஸ்தியர் முதலியவர்கள் நட்சத்திர ரூபிகளாய் வஸிக்கிறார்களென்று தாத்பர்யம்) இது பகவானாகிய மகாவிஷ்ணுவின் ஸ்வரூபம். சர்வதேவதாயமானது. இதனை ஓவ்வொரு ஸந்தியாகாலத்தில் சுத்தனாக மௌனத்துடன் த்யானஞ் செய்து "ஜ்யோதிர்லோகமும், காலசக்ரரூபியும், தேவர்களும் மகாபுருஷனுமாகிய புருஷோத்தமனை த்யானஞ் செய்கிறோம்" என்று உபாஸிக்க வேண்டும். கிருகங்கள், நட்சத்திரங்கள், தாரைகள் இவைகளின் ஸ்வரூபம். ஆதிதைவமும் முன் சொல்லிய மந்திரத்தை மூன்று காலத்திலும் ஜபிப்பவர்களுக்கு பாபத்தைப் போக்கடிக்க இந்த சக்ரத்தை நமஸ்கரிப்பவனுக்கு பாசம் நிவர்த்தியாகின்றது.

அத்தியாயம்–24

அதலம் முதலிய லோகங்கள்

சூர்யமண்டலத்திற்குக் கீழாக லட்ச யோஜனை தூரத்தில் ராகுமண்டலமிருக்கிறது. அந்த ராகு நட்சத்திரம்போல சஞ்சரிக்கிறானென்று சிலர் சொல்லுகிறார்கள். அவன் தனக்குத் தகாததான தேவத் தன்மையையும், கிருகமாயிருப்பதையும் அடைந்தவன். அவனுக்கு அப்படிப்பட்ட மஹிமையானது ஸ்ரீ பகவானுடைய தயையால் கிடைத்தது; அவன் ஸிம்ஹிதையின் புத்ரனாகிய அசுரன்; அவனுடைய பிறப்பு, சரிதம் ஆகிய இவைகளைப் பிந்திச் சொல்லுவோம். சூர்யனுடைய மண்டலமானது பன்னீராயிரம் யோஜனை அகலமுள்ளது; ராகுமண்டலமானது பதின்மூன்று ஆயிரம் யோஜனை அகலமுள்ளது; அந்த ராகு மண்டலமே பர்வகாலங்களில் சூர்ய மண்டலத்தையும், சந்திர மண்டலத்தையும் மறைக்கிறது; முந்திய விரோதத்தை நினைத்துக் கொண்டு ராகுவானவன் சூர்யன், சந்திரன் ஆகிய இவர்களை எதிர்த்துச் செல்லுகிறான். அதனைத் தெரிந்து கொண்டு பகவான், சூர்யன், சந்திரன் இவர்களை ரக்ஷிப்பதற்காக சுதர்சனமென்ற தம்முடைய சக்ரத்தைப் பிரயோகித்திருக்கிறார். அதன் தேஜஸ் ஸஹிக்க முடியாதது. அது நான்குபுறத்திலும் சுற்றிக் கொண்டிருக்கிறது. அதனைக் கண்டு ராகு, சூர்யன், சந்திரன் இவர்களுடைய சமீபம் செல்லாமல் கொஞ்ச தூரத்திலேயே திரும்பி விடுகிறான். அதனையே உபராகம் (கிரஹணம்) என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். அதற்குக் கீழாக ஸித்தர்கள், சாரணர்கள், வித்யாதரர்கள் ஆகிய இவர்களுடைய

வீடுகளிருக்கின்றன. அதற்கும் கீழாக பதினாயிரம் யோஜனை தூரத்தில் யக்ஷர்கள், பிசாசங்கள், ப்ரேத கணங்கள், பூதகணங்கள் ஆகிய இவைகள் விளையாடக் கூடிய அந்தரிக்ஷமானது கடுமையாகக் காற்று வீசும் இடம் வரையிலிருக்கிறது. மேகங்கள் இருக்கிற வரையில் காற்று வீசிக் கொண்டு இருக்கிறது. அதற்குக் கீழாக நூறு யோஜனை தூரத்தில் இந்த பூமி இருக்கிறது. எதுவரையில் ஹம்ஸங்கள், பாஸங்கள், ச்யேனங்கள் கருடபக்ஷிகள் ஆகிய பறவைகள் பறக் கின்றனவோ, அதுவே பூமிக்குச் சமீபமான இடம்.

5–11 பூமியின் லட்சணம் ஏற்கனவே சொல்லப் பட்டிருக்கிறது. பூமிக்குக் கீழாக ஒன்றுக்கொன்று பதினாயிரம் யோஜனை தூரத்தில் அவ்வளவு அகலம், நீளம் உள்வைகளான ஏழு பிலங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அவைகள் அதலம், விதலம், சுதலம், ரஸாதலம், மகாதலம், பாதாலம் என்ற பெயருள் ளனவாம். அந்த பிலஸ்வர்க்கங்களில் ஸ்வர்க்கத்தைக் காட்டிலும் மேலான போகங்கள், ஐச்வர்யங்கள், ஆநந்தம், விபூதி ஆகிய இவைகளால் பூர்ணங்களான வீடுகள் உத்யானங்கள், கிரீடாகிருகங்கள் ஆகிய இவைகள் இருக்கின்றன. மேலும் அவைகளில் தைத்யர்கள், தானவர்கள், ஸர்ப்பங்கள் ஆகிய இவர்கள் எப்பொழுதும் சந்தோஷத்துடன் மிகுந்த ப்ரீதியுள்ள களத்திரம் புத்திரர்கள் முதலிய பந்துக்கள், மித்ரர்கள் ஆகிய இவர்களுடன் தங்களிஷ்டப்படி ஆனந்தமாக வஸிக்கிறார்கள். அந்த லோகங்களில் மாயாவியாகிய மயனால் செய்யப்பட்ட அனேக வீடுகளும், கோபுரங் களும், சபைகளும், நாற்சந்தி மண்டபங்களும் இருக் கின்றன. அவைகள் பலவகையான ரத்னங்களால்

இழைக்கப்பட்டவைகள்; மேலும் அவைகளில் நாகர்கள், அசுரர்கள், புறாக்கள் இவைகள் ஸ்திரீகளுடன் கிரீடித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அவ்விடத்தில் சுரங்கங்களும், ராஜகிருஹங்களும் இருக்கின்றன. மேலும் அங்கிருக்கும் உத்யானங்களும் மனத்தையும், இந்திரியங்களையும் சந்தோஷப்படுத்தக் கூடிய புஷ்பங்கள், பழங்கள், தளிர்கள் இவைகளாலழகான மரங்களிருக்கின்றன. அவைகளில் தங்கக் கொடிகள் படர்ந்திருக்கின்றன. மேலும் அந்த உத்யானங்களில் அழகான நீர்ப்பறவைகள் ஆணும் பெண்ணுமாக நிறைந்த அந்த ஓடைகளில் மீன்கள் துள்ளுகின்றன. அதனால் ஜலமும், தாமரை, ஆம்பல், குவலயம், கல்ஹாரம், நீலோத்பலம் நூறு இதழ்களுள்ள தாமரை ஆகிய இவைகள் அசைகின்றன. மேற்சொல்லிய புஷ்பங்களில் வண்டுகள் பலவகையான இனிமையாக சப்தித்துக் கொண்டு இருக்கின்றன. அதனால் அவைகள் தேவலோகத்தை விட மேலானவைகளாக இருக்கின்றன. மேலும் அவ்விடத்தில் சூர்யப்ரகாசமில்லாதிருந்தும் அஹோராத்ரம் முதலியவைகளால் பயமில்லை. அவ்விடத்திலிருக்கும் சிறந்த ஸர்ப்பங்களுடைய தலையிலிருக்கும் ரத்னங்கள் இருட்டைப் போக்கடிக் கின்றன. அந்த லோகத்தில் வசிப்பவர்கள் திவ்யமான ஓஷதிகளுடைய ரஸங்கள், ரஸாயனங்கள் இவைகளைப் புஜிப்பதாலும், ஸ்நானம், பானம் இவைகளாலும் சரீரவ்யாதி, மனோவ்யாதி இவைகளற்றவர்களாகி கிழத்தனம் முதலியவைகளில்லாமல் வஸிக்கிறார்கள். அவர்களுடைய தேகத்தில் வர்ணக்குறைவாவது, நாற்றமாவது, வியர்வையாவது, ச்ரமமாவது உண்டா கிறதில்லை. மங்களஸ்வரூபமுள்ள அவர்களுக்கு பகவா னுடைய தேஜோரூபியான சுதர்சனமென்ற சக்ரத்தைக்

காட்டிலும் வேறொருவரிடத்திலும் மரணபயமில்லை. அந்தச் சுக்கரத்தைப் பார்த்தவுடன் தேவஸ்திரீகளுடைய கர்ப்பமானது ஸ்ராவம் பாதம் இவைகளை அடைகிறது.

12–13 அதலலோகத்தில் மயனுடைய புத்ரன் பலனென்ற அசுரன் வஸிக்கிறான். அவனால் தொண்ணூற்றாறு மாயைகள் உண்டு பண்ணப்பட்டன. இக்காலத்திலிருக்கும் மாயாவிகள் அவைகளில் சிலவற்றைத் தான் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அந்த பலனென்ற அசுரன் கொட்டாவி விடும்பொழுது அவனுடைய முகத்திலிருந்து முன்று ஸ்திரீ கணங்கள் உண்டாயின. அந்த ஸ்திரீகள் தங்களிஷ்டப்படி சஞ்சரிப்பவர்கள், இதர ஜாதி புருஷர்களையும் ஆச்ரயிப்பவர்கள், மிகவும் சஞ்சலமான மனத்தையுடையவர்கள்; அவர்கள் அந்த பிலத்தில் பிரவேசித்த புருஷர்களை ஹாடகமென்ற (தங்கள்) ரஸத்தால் தங்களுடைய ஸம்போகத்திற்குத் தகுந்தவர்களாகச் செய்து தங்களுடைய வேடிக்கையான பார்வை, ஆசையுள்ள சிரிப்பு, பேச்சு, ஆலிங்கனம் முதலியவைகளால் சந்தோஷப்படுத்துகிறார்கள். அந்த ரஸத்தை உபயோகப்படுத்திய உடன் புருஷன் 'நான் ஈச்வரன், ஸித்தன்' என்று தன்னை நினைத்துக் கொண்டு ஆனந்தப்படுகிறான்.

14. அதற்குக் கீழான விதலமென்ற லோகத்தில் ஹாடகேச்வரரான பரமசிவன் தம்முடைய பார்ஷத் கணங்களுடனும், பார்வதியுடனும் பிரஜைகளின் உபத்திரவத்தை நிவர்த்திப்பதற்காக வஸிக்கிறார். அந்தப் பார்வதி பரமேச்வரன் இவர்களுடைய வீர்யமானது ஹாடகியென்ற சிறந்த நதியாக ப்ரவஹிக்கிறது.

அதனை வாயுவினால் விருத்திபண்ணப்பட்ட அக்னியானவர் குடிக்கிறார். அவரால் கக்கப்பட்ட ஹாடகமென்ற ஸ்வர்ணத்தை அங்கிருக்கும் புருஷர்களும், ஸ்திரீகளும் ஆபரணமாகச் செய்து தரிக்கிறார்கள்.

15–23 அதற்குக் கீழான ஸுதலத்தில் பலி சக்ரவர்த்தி பகவானை ஆராதித்துக் கொண்டு பயமற்றவராக வஸிக்கிறார். அவர் விரோசனனுடைய புத்ரர்; மிகுந்த கீர்த்தியுள்ளவர்; புண்ய ச்லோகர் (நல்வினையைக் கொடுக்கும் பெயருள்ளவர்) முன்னொரு காலத்தில் ஸ்ரீமந் நாராயணன் மஹேந்திரனுக்கு ப்ரியத்தைச் செய்ய வேண்டி அதிதியிடத்தில் வாமனராக அவதரித்து மூன்று லோகத்தையும் பலியினிடத்திலிருந்து அபஹரித்து பின்பு அவனிடத்தில் தயையால் பாதாலத்தில் இருக்கச் செய்தார். பலியினிடத்தில் இருக்கும் ஐச்வர்யம் இந்திரன் முதலியவர்களிடத்துலுமில்லை. இந்திரியங்களுக்கு அதிபதியும் ஸகல ப்ராணிகளுக்கு ஜீவபூதரும், மிகவும் சுத்தரும், பாத்ரரும், சமீபத்தில் வந்து யாசிப்பவருமான ஸ்ரீ பகவானிடத்தில் மிகுந்த ச்ரத்தை வைத்து மிகுந்த ஆதரவுடன் மனத்தை சமர்ப்பித்து பலி சக்ரவர்த்தி பூமியைத் தானம் செய்தார். அதனால் அவருக்குக் கிடைத்த ஐச்வர்யம் அளவற்றது. அது அவர் செய்த தானத்திற்குச் சரியான பலமல்ல. (அந்த தானத்திற்கு மோட்சம் பலமாயிருக்க வேண்டுமென்பது கருத்து) எந்த பகவானுடைய திவ்ய நாமங்களை, தும்பல், கீழே விழுவது முதலிய காலங்களில் ஒரு தடவை உச்சரித்தாலும் கர்மபந்தம் நிவர்த்தியாகிறதோ, பக்தர்களுக்கு ஆத்மாவும் ஞானத்தைக் கொடுப்பவரும் மிக்க ப்ரியருமான அந்த பகவானிடத்தில் பலியானவர் பூமியை

சமர்ப்பித்துத் தன்யாரானார். முமுட்சுக்கள் கர்மபந் தத்தை நிவர்த்திப்பதற்கு யோகம், சாங்க்யம் முதலிய கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். பகவான் இந்த பலிசக்ரவர்த்திக்குப் பகவத் ஸ்மரணத்தை போக்கக் கூடிய போகத்தையும், ஐச்வர்யத்தையும் கொடுத்த படியால் அவனை அனுக்ரஹிக்கவில்லை. பகவான் அவனிடமிருந்து பூமியை அபகரிப்பதற்கு வேறு உபாயத்தை ஆச்ரயிக்காமல் யாசிப்பது என்ற வியாஜ மாக மூன்று லோகத்தையும் அபகரித்தார். அப்பொழுது அவருடைய சரீரமும் வருணபாசத்தால் நன்றாகக் கட்டப்பட்டு மலையின் குகையில் அடைக்கப்பட்டி ருந்தாலும் பின்வருமாறு சொல்லலானார். பகவானாகிய இந்திரன் பிரகஸ்பதியை மந்திரியாக வைத்துக் கொண்டும் புருஷார்த்தங்களை சம்பாதித்துக் கொள்ள உபாயமறியாதவர். ஏனென்றால் உபேந்திரனைக் கொண்டு அல்பமான ஐச்வர்யத்தை கொடுக்கும்படி என்னை யாசித்தாரே ஒழிய மேலான பதத்தைக் கொடுக்கும்படி உபேந்திரனை யாசிக்கவில்லை. மிகுந்த வயதுள்ள காலத்தின் மஹிமையால் மன்வந்த்ரத்திற்கு ஒரு தடவைமாறும் இந்த மூவுலகமும் ஐச்வர்யமாகுமா? நம்முடைய பிதாமஹராகிய ப்ரஹ்லாதர் பகவானுக்கு தாஸனாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டாரே ஒழியத் தன் தகப்பனாருடைய ராஜ்யத்தில் ஆசைப் படவில்லை பகவானுடைய அனுக்ரகத்தை அடையாத வனும், ராகம் முதலிய த்வேஷங்களுள்ளவனுமான என்னைப் போன்ற எவன்தான் அந்த மகாநுபாவராகிய ப்ரஹ்லாதருடைய மார்க்கத்தில் ஆசைப்படுவான் என்றார். அந்தப் பலியின் சரிதத்தை விஸ்தாரமாகப் பிந்திச் சொல்லுவோம். அவருடைய வீட்டு வாசற் படியில் பக்தர்களிடத்தில் தயவுள்ள பகவான்

கதாயுதத்தைக் கையில் வைத்துக் கொண்டு வஸிக்கிறார். ராவணன் திக்விஜயம் செய்துவரும் போது பலியின் வீட்டில் ப்ரவேசித்தான். அப்பொழுது பகவான் கால் கட்டை விரலால் அவனைத் தூக்கி எறிந்தார். அவன் அநேக யோஜனை தூரத்திற்கப்பால் விழுந்தான்.

24. அதற்குக் கீழிருக்கும் தலாதலத்தில் மயனென்ற அசுரராஜன் இருக்கிறான். அவன் திருபுரர்களுக்கு அதிபதி, திருபுரர்களால் லோகத்திற்கு நேரிடும் உபத் ரவத்தை நிவர்த்திப்பதற்காக பரமசிவன் திருபுரர்களை எரித்தார். அவருடைய ப்ரஸாதத்தை அடைந்த இந்த மயன் அந்த பகவானால் காப்பாற்றப்பட்டு சக்ரத்தினி டமிருந்து பயமில்லாமல் மாயாவிகளுக்கு ஆசார்யனாக வஸிக்கிறான்.

25. அதற்குக் கீழான மகாதலத்தில் அனேகம் தலையுள்ளவைகளும், மிகுந்த கோபமுள்ளவைகளும், பருத்த உடலுள்ளவைகளும் குஹகன், தக்ஷகன், காளியன், சுவேஷணன் முதலிய ஸர்ப்ப கணங்கள் தங்களுடைய குடும்பத்துடன் மகாவிஷ்ணுவின் வாகன மாகிய கருடனிடத்திலிருந்து பயந்தவைகளானாலும் குடும்பத்தின் சம்பந்தத்தால் சிலகாலம் சந்தோஷமுள்ள வைகளாக விளையாடுகின்றன.

26. அதற்குக் கீழான ரஸாதலத்தில் தைதேயர்கள் (திதியின் புத்ரர்கள்) தானவர்கள் (தநுவின் புத்ரர்கள்) பணிகளென்ற நிவாத கவசர்கள், ஹிரண்யபுரவாஸி களான காலகேயர்கள் ஆகிய இவர்கள் வஸிக்கிறார்கள். தேவர்களுக்குச் சத்ருக்கள்; இயற்கையில் மிக்க

பலமுள்ளவர்கள். அவர்கள் இந்திரனுடைய துதியானா ஸரமையால் சொல்லப்படும் மந்திரங்களைக் கேட்டு பயப்படுகிறார்கள். அவர்கள் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் தேஜஸ்ஸால் பலம் கர்வம் இவைகளடக்கப்பட்டு ஸர்ப்பங்கள் போல அந்த பிலத்தில் வஸிக்கிறார்கள்.

27. அதற்குக் கீழே இருக்கும் பாதாளத்தில் நாகலோகத்திற்கு அதிபதிகளான வாசுகி, முதலிய ஸர்ப்பங்களும் சங்கன், குளிகன், மகாசங்கன், ச்வேதன், தனஞ்செயன், த்ருதராஷ்ட்ரன், சங்கசூடன், கம்பளாச் வதரன், தேவதத்தன் முதலிய மிக்க கோபமுள்ள மகாசர்ப்பங்கள் வஸிக்கின்றன. அவைகளில் ஐந்து தலையுள்ளவை சில. ஆறு தலையுள்ளவை பல ஏழு தலைகளுள்ளவை சில. பத்துத் தலைகளுள்ளவை சில.நூறு தலையுள்ளவை சில. ஆயிரந்தலையுள்ளவை சில. அவைகளுடைய படங்களிலிருக்கும் மேலான ரத்னங்களுடைய காந்தியால் அந்த லோகம் இருட்டில்லாமலிருக்கிறது.

குறிப்பு

மறைக்கிறது – கணித சாஸ்திரத்தில் பூமியில் சாயை சந்திரனை மறைக்கிறதென்றும் சந்திரமண்டலம் ஸூர்யனையும் மறைப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முந்திய விரோதத்தை அமிருதபானஞ் செய்யும் பொழுது சூர்யனாலும், சந்திரனாலும் அசுரனென்று காண்பிக்கப்பட்டதனால் ராகுவிற்கும் அவர்களுக்கும் விரோதமுண்டாயிற்று. ஸரமையால் – ஓ பணிகளே! இந்திரனால் அடிக்கப்படுங்களென்று.

அத்தியாயம்–25

ஆதிசேஷன் வரலாறு

அந்த பாதாளத்திற்குக் கீழ் முப்பதினாயிரம் யோஜனை தூரத்தில் பகவானுடைய தலை இருக்கிறது. அதை தாமஸி என்றும், அனந்தனென்றும் சொல்லுகிறார்கள். ஸாத்வத தந்திரக்காரர்கள் நான் என்கிற அபிமானத்திற்கு அடையாளமாக இருப்பதால் த்ருஷ்டா, த்ருச்யம் இவைகளை ஒன்றுபடுத்துவதால் ஸங்கர்ஷணனென்றும் சொல்லுகிறார்கள். ஆயிரம் தலையுள்ள அவருடைய தலைகளால் தரிக்கப்படும் இந்த பூமண்டலமானது ஒரு தலையால் சுமக்கப்படும் கடுகு போல் ப்ரகாசிக்கிறது. அதனால் அவர் அநந்த னென்று சொல்லப்படுகிறார். ப்ரளய காலத்தில் இவ்வுலகத்தை நாசஞ் செய்ய விரும்பும் அந்த பகவானுடைய புருவங்களுடைய மத்தியிலிருந்து ஸந்நிகர்ஷணரென்ற ருத்ரன் பதினோரு கணங்களுடனும், மூன்று கண்களுடனும், மூன்று முனையுள்ள சூலத்தைச் சுற்றிக் கொண்டு உண்டானார். அந்த அநந்தனுடைய பாதாரவிந்தங்களில் ஸர்ப்பச்ரேஷ்டங்கள் பகவத்பக்தர் களுடன் நமஸ்கரித்துக் குண்டலங்களுடைய சோபையால் ப்ரகாசிக்கும் சுத்தமும், அழகுமான அனந்தனுடைய கைகளில் பூசப்பட்டிருக்கும் சந்தனத்தினுடைய வாசனையால் மனங்கலங்கி மன்மதவிகாரமடைந்து, மந்தஸ்மிதஞ் செய்கிறார்கள். அப்பொழுது அவருடைய முகமானது அனுராகத்தாலுண்டாகும் மதமுள்ளதும், சந்தோஷமுள்ளதும், மதத்தால் அசையும் நேத்ரங்களுள்ளதுமாக இருக்கிறது. அந்த பகவானாகிய அனந்தன் கோபமற்றவராகி லோகங்களுடைய க்ஷேமத்திற்காக

வஸிக்கிறார். அவருடைய குணங்கள் அனந்தங்கள்; மேலும் அவர் தேவர்களாலும், அசுரர்களாலும் உரகர்களாலும், சித்தர்களாலும், கந்தர்வர்களாலும் வித்யாதரர்களாலும், த்யானிக்கப்படுகிறார். பின்னுமவர் எப்பொழுதும் சந்தோஷத்தால் மலர்ந்த கண்களுள்ளவர்; வார்த்தையாகிறஅமிருதத்தால்தம்முடையபார்ஷதகணங்களையும்தேவர்களையும் சந்தோஷிக்கச் செய்பவர். ஒருபொழுதும் வாடாத துளசியின் வாசனையாலும், மதுவினாலும் மதித்த வண்டுகளால் கானம் பண்ணப்பட்ட காந்தியுள்ள வைஜயந்தி என்னும் மாலையை தரித்தவர்; கருத்த வஸ்திரமுள்ளவர் ஒரு குண்டலம் உள்ளவர்; கலப்பையின் மேல் அழகான கையை வைத்துக் கொண்டிருப்பவர். கம்பீரமான விளையாட்டு உள்ளவர், மஹேந்திரன் சிறந்த யானையிலிருந்தாற் போல் ஸ்வர்ண மயமான மூகஷ்யை தரித்தவர்; இம்மாதிரியான பகவான் முழுட்சுக்களால் த்யானம் பண்ணப்பட்டும், ச்ரவணஞ் செய்யப்பட்டும் சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய குணங்களுள்ள அவர்களுடைய ஹிருதயத்தை அடைந்து அவித்யா ஸ்வரூபமான கர்மவாசனையை நிவர்த்திக்கிறார். அவருடைய மாகாத்மியத்தை ப்ரஹ்மதேவருடைய புத்ரராகிய நாரதர் பிரம்ஹதேவருடைய சபையில் பின்வருமாறு கானஞ் செய்தார். எந்த பகவானுடைய சங்கல்பத்தால் ப்ரகிருதியின் குணங்கள் ஜகத்தைப் படைப்பது, காப்பாற்றுவது, நாசஞ் செய்வது ஆகிய இவைகளைச் செய்தனவோ, எவருடைய ரூபம் நாசமற்றதோ, எவருக்கு ஆதியில்லையோ, எவர் தாம் ஒருவராயிருந்தும் பலவகையான கார்யப்ரபஞ்சத்தைத் தரித்தாரோ அவருடைய மார்க்கத்தை ஜனங்கள் அறிய முடியுமா? எவரிடத்தில் கார்ய காரணஸ்வரூபமான ஜகத்

ப்ரகாசிக்கிறதோ அந்த பகவான் பக்தர்களிடத்தில் கிருடையால் சுத்தமான அவதாரங்களைச் செய்கிறார்; பக்தர்களுடைய மனஸ்ஸை வசப்படுத்துவதற்காக மிகுந்த பராக்ரமமுள்ள அந்த பகவான் லீலைகளைச் செய்கிறார். எவருடைய திவ்ய நாமதேயங்களை ச்ரவணம் பண்ணினவனும், வாக்கினால் உச்சரித்தவனும், பதிதனாயிருந்தாலும், உபத்திரவப்பட்டவனானாலும், பாபத்திலிருந்து சுத்தியடைகிறானோ, அந்த பகவானாகிய ஆதிசேஷனைத் தவிர முழுட்சுவாயிருப்பவன் வேறு யாரை ஆச்ரயிப்பான்? எவருடைய சிரஸில் மலைகள், ஆறுகள், சமுத்ரம், ப்ராணிகள் ஆகிய இவைகளுள்ள பூகோளமானது. ரத்னம்போல ப்ரகாசிக்கிறதோ, எவருடைய மஹிமையானது அளவிடக் கூடாததோ அவருடைய மஹிமையை ஆயிரம் நாக்குள்ளவனானாலும் எவன் சொல்லுவான்? பகவானாகிய அனந்தர் இவ்வளவு மஹிமையுள்ளவர். அவருடைய பராக்ரமம், குணங்கள் கணக்கிட முடியாதவைகள். அவர் பூமியை லோகத்தின் க்ஷேமத்திற்காக ச்ரமமின்றி தூக்கிக் கொண்டு பாதாளத்தின் கீழ் வஸிக்கிறார். ஓ பரீக்ஷித்து மகாராஜனே! கர்மங்களால் ஏற்படுத்தப்பட்டவைகளும் மனிதர்களாலடையக் கூடியவைகளுமான கதிகள் இவ்வளவுதான். எனக்குத் தெரிந்தவரையில் உமக்குச் சொன்னேன். ப்ரவிர்த்தி தர்மத்தின் கதிகள் பலவகையானவைகள், மாறுபாடுள்ளவைகள்; அவைகளையும் உமக்குச் சொன்னேன். வேறு எதனைச் சொல்லவேண்டும் என்று அரசனைப் பார்த்துச் சுகர் கேட்டார்.

அத்தியாயம்–26

நரகங்கள்

பரீக்ஷித்து மகாராஜன் சுகரை நோக்கி ஓ மஹர்ஷியே! இந்த லோகத்திலுள்ள ஜனங்களுடைய கதிகளும் போகங்களும் பலவகையாக இருக்கின்றன என்று உம்மால் சொல்லப்பட்டது. இதன் ஆச்சர்யத்தை நான் எப்படித் தெரிந்து கொள்ளுவேன் என்று கேட்டார்.

2–3 அதனைக் கேட்ட சுகர் அரசனை நோக்கி ஓ மகாராஜ! புருஷனுடைய ச்ரத்தையானது சாத்விகம், ராஜஸம் தாமஸமென்று மூவகைப்பட்டதால் அவர்களுடைய கர்மகதிகள் பலவகையாக இருக்கின்றன. சுகம் துக்கம் முதலிய பலன்களும் அதற்குத் தக்கபடி உண்டாகின்றன. மேலும் வேதத்தால் நிஷேதிக்கப்பட்ட அதர்மத்தைச் செய்பவனுடைய ச்ரத்தையின் தர்ரதம் யத்தால் பலமும் வேறாக உண்டாகிறது. அநாதியான அவித்யை காமம் இவைகளுடைய பலன்கள், நரகங்கள் இவைகள் அளவற்றவைகளானாலும் பெரும்பாலும் அவைகளில் முக்யமானவைகளைச் சொல்லுகிறேன் என்றார்.

4–36 அதனைக் கேட்ட அரசன் ஓ பகவன்! நரகங்களென்பவைகள் ஸ்தல விசேஷங்களா? அவைகள் அவ்வுலகத்திற்கு வெளியே இருக்கின்றனவா? உள்ளே இருக்கின்றனவா? என்று கேட்டார். அதனைக் கேட்ட சுகர் அரசனை நோக்கி ஓ மகாராஜ! மூவுலகத்தின் உள்ளே தெற்கு திக்கில் பூமிக்குக் கீழாக

அண்ட ஜலத்திற்கு மேலாக நரகங்களிருக்கின்றன. அவ்விடத்தில் அக்னிஷ்வார்த்தர்கள் முதலிய பிதிரு கணங்கள் தங்களுடைய கோத்ர பந்துக்களுக்கு க்ஷேமத்தை ப்ரார்த்தித்துக் கொண்டு வஸிக்கிறார்கள். மேலும் மரணமடைந்த ஜனங்களை யமதூதர்கள் அவ்விடத்திற்கு அழைத்துச் செல்லுகிறார்கள். பிதிருக்களுக்குக் கதிபதியான யமன் கர்மத்திற்குத் தக்கபடி ஸ்ரீ பகவானுடைய ஆஜ்ஞை அனுசரித்து தம்முடைய வேலைக்காரர்களுடன் பாபிகளை சிக்ஷிக்கிறார். அவ்விடத்தில் முக்யமாக இருபத்தோரு நரகங்கள் இருப்பதாகச் சிலர் சொல்லுகிறார்கள். அவைகளின் பெயர் லக்ஷணம் முதலியவைகளைச் சொல்லுகிறேன். தாமிஸ்ரம், அந்ததாமிஸ்ரம், ரௌரவம், மகாரௌரவம், கும்பீபாகம், காலசூத்ரம், அஸிபத்ரவனம், சூகரமுகம், அந்தகூபம், க்ரமிபோஜனம், ஸந்தம்சம், தப்தோர்மி, வஜ்ரகண்டகம், சால்மலி, வைதரணி, பூயோதம், ப்ராணரோதம் விசஸனம், லாலாபக்ஷம், ஸாரமேயாதனம், அவீசிரயஸ், ரேதப்பானம் என்ற இருபத்தோரு நரகங்கள் க்ஷாரகர்தமம் ரக்ஷோகண போஜனம் சூலப் ரோதம், தந்தசூகம், அவடநிரோதனம், பரிகாவர்தனம், ஸூசீமுகம் என்ற ஏழு நரகங்களையும் சேர்த்து இருபத்தி எட்டு நரகங்களென்று சிலர் சொல்லுகிறார்கள். இந்த லோகத்தில் எவன் பிறருடைய தனத்தையாவது, குழந்தையையாவது, களத்ரத்தையாவது அபகரிக்கிறானோ, அவன்கால பாசத்தால் கட்டப்பட்டு மிகவும் பயங்கரர்களான யமபடர்களால் தாமிஸ்ர மென்ற நரகத்தில் தள்ளப்படுகிறான். மேலும் அந்த நரகத்தில் உபவாசம் மலையிலிருந்து தள்ளுவது, தடியாலடிப்பது அதட்டுவது முதலியவைகளால் உபத்ரவிக்கப்பட்டு உடனே மூர்ச்சை அடைகிறான். எவன்

பிறரை வஞ்சித்து அவர்களுடைய ஸ்திரீயை அனுபவிக் கிறானோ அவன். அந்த தாமிஸ்ரமென்ற நரகத்தில் தள்ளப்படுகிறான். அதிலும் மிகுந்த உபத்ரவத்தை யடைந்து மனங்கலங்கி கண்கள் இருட்டு தெரியாமல் வெட்டுப்பட்ட மரம்போல் விழுகிறான். அந்த இருட்டுள்ளதால் அதற்கு அந்ததாமிஸ்ரம் என்று சொல் கிறார்கள். எவன் இந்த லோகத்தில் நான் என்னு டையது என்ற அகங்காரமுள்ளவனாகி ப்ராணிகளுக்கு துரோகஞ் செய்தே ஒவ்வொரு நாளும் தன்னுடைய குடும்பத்தைப் போஷிக்கிறானோ அவன் மரணமடைந்த பிறகு ரௌரவ மென்ற மகா நரகத்தை அடைகிறான். இவ்வுலகத்தில் இந்த பாபியான புருஷனால் ஹிம்சிக் கப்பட்ட ஜனங்கள் ஸர்ப்பத்தைவிட மிகவும் க்ரமான ருருவென்ற ப்ராணிகளாக ஆகி நரகத்தில் அந்தப் புருஷனை ஹிம்ஸிக்கின்றன. அதனால்தான் அதற்கு ரௌரவமென்று பெயர். எவன் தன்னுடைய தேகத்தை மாத்திரம் போஷிக்கிறானோ, அவன் மகாரௌரவம் என்ற நரகத்தை அடைகிறான். அவனை புழுக்களும்; மாம்ச பக்ஷிணிகளான மிருகங்களும் பக்ஷிக்கின்றன. எவன் மிக்க உக்ரஸ்வபாவமுள்ளவனாகி பசுக்களையும், பறவைகளையும் ஜனங்களை உபத்ரவப்படுத்துகிறானோ, தயையில்லாதவனும் ராக்ஷஸர்களாலும் நிந்திக்கக் கூடியவனுமான அந்த புருஷனை பரலோகத்தில் யமபடர்கள் கொதிக்கும் எண்ணையுள்ள கும்பீபாகத்தில் தள்ளுகிறார்கள். எவன் மாதாபிதா, ப்ராம்ஹணர்கள் இவர்களுக்குத் துரோகஞ் செய்கிறானோ, அவன் காலஸூத்ரமென்ற நரகத்தை அடைகிறான். அந்நகரம் லக்ஷம்யோஜனை தூரம் விஸ்தாரமுள்ளது; தாம்ர மயமானது; மேல்புறத்தில் சூர்யனாலும் கீழ்புறத்தில் அக்னியாலும் தபிக்கப்பட்டது. நரகத்தை அடைந்த

பாபியானவன் பசியாலும், தாகத்தாலும், உபத்ரவப்பட்டு சரீரம் எரிக்கப்பட்டு உட்காருகிறான். சில இடத்தில் படுக்கிறான், சில இடத்தில் நிற்கிறான், சில இடத்தில் ஓடுகிறான், கெஞ்சி கேட்டுக் கொள்கிறான். இப்படிப் பசுவின் மீது எவ்வளவு மயிர்களிருக் கின்றனவோ, அவ்வளவு வர்ஷகாலம் உபத்ரவப்படு கிறான். எவன் ஆபத்தில்லாதபோதும் தனக்குரிய வேத மார்க்கத்தை விட்டு பாஷண்ட மார்க்கத்தை அனுசரிக் கிறானோ, அவனை யமபடர்கள் அஸிபத்ரவனமென்ற நரகத்தில் தள்ளி குரடாவினால் அடிக்கிறார்கள். இப்படி அந்த புருஷன் அடிபட்டு நான்குபுறத்திலும் ஓடுகிறான். அப்பொழுது இரு பக்கங்களிலும் முனை யுள்ள அஸிபத்ரங்களால் அவனுடைய அவயவங்கள் வெட்டப்படுகின்றன. அப்பொழுது அவன் ஐயோ அடிபட்டேன் என்று சொல்லிக் கொண்டு வேதனை யை சகிக்காமல் அடிக்கடி மூர்ச்சை அடைந்து கீழே விழுகிறான். தன்னுடைய தர்மத்தை விட்டு பாஷண்ட தர்மத்தை அடைந்தவன் இம்மாதிரியான பலத்தை அடைகிறான். எவன் இந்த லோகத்தில் அரசனாகவாவது, அரசனை சேர்ந்தவனாகவாவது சிக்ஷிக்கத் தகாதவனை சிக்ஷிக்கிறானோ, ப்ராஹ்ம ணனைக் கொல்லும்படி ஆஜ்ஞாபிக்கிறானோ, அந்தப் பாபியானவன் பரலோகத்தில் ஸூகரமுக மென்ற நரகத்தை அடைகிறான். அதில் மிக்க பலசாலி களான யமபடர்கள் அவனைக் கருப்பங்கழியைப் போல் வளைத்து முறிக்கிறார்கள். அப்பொழுது அதில் தன்னால் ஹிம்சிக்கப்பட்ட குற்றமற்ற ஜனங்கள் கஷ்டப்பட்டது போலத் தானும் மூர்ச்சையடைந்து கஷ்டப்படுகிறான். ஈச்வரனால் ஏற்படுத்தப்பட்ட ஜீவனோபாயத்தை உடையவைகளும், பிறருடைய

உபத்ரவத்தை அறிந்தவனாகிய எவன் துக்கத்தை உண்டுபண்ணுகிறானோ, அவன் பரலோகத்தில் அந்த கூடமென்ற நரகத்தை அடைகிறான். மேலுமந்த நரகத்தில் அந்தப் புருஷன் பூலோகத்தில் அந்த பாபியால் ஹிம்ஸிக்கப்பட்ட கொசுக்கள், பேன்கள், மூட்டுப்பூச்சிகள், ஈக்கள் முதலியவைகளும் பசுக்கள், பறவைகள், மலைப்பாம்புகள் ஆகிய இவைகளால் உபத்ரவிக்கப்படுகிறான். மேலுமவன் தூக்கமில்லாமல் ஒரே இடத்தில் ஸ்திரமாக இல்லாமலும் கெட்டதான சரீரத்தில் ஜீவன்போல அலைகிறான். எவன் அந்த லோகத்தில் தனக்குக் கிடைத்த அன்னம் முதலியவை களை அதிதி முதலியவர்களுக்கு பிரித்துக் கொடாம லும் பஞ்சயஜ்ஞங்களை அனுஷ்டிக்காமலும் புஜிக் கிறானோ, அவன் காக்கைக்குச் சமமானவனென்று சொல்லப்படுகிறான். மேலும் அவன் பரலோகத்தில் க்ரமிபோஜனமென்ற நரகத்தை அடைகிறான். அந்த நரகமானது லக்ஷம்யோஜனை தூரம் அகலமுள்ளது, புழுக்களால் நிறைந்தது; அந்தப் பாபியான புருஷனும் க்ரமிசரீரத்தை அடைந்து அங்கிருக்கும் புழுக்களால் பக்ஷிக்கப்பட்டு லட்சம் வருஷம் அந்த வாசனையை அனுபவிக்கிறான். பஞ்சமகாயஜ்ஞத்தை அனுஷ்டிக்காத புருஷனும் அதற்காக ப்ராயச்சித்தஞ் செய்து கொள் ளாமலும் இம்மாதிரியான பலனை அனுபவிக்கிறான். எவன் இந்த லோகத்தில் திருட்டுத்தனத்தாலாவது, பலாத்காரமாகவாவது ப்ராஹ்மணன் முதலியவர் களுடைய ஸுவர்ணம் ரத்னம் முதலியவைகளை அபகரிக்கிறானோ அவனை பரலோகத்தில் யமபடர்கள் நெருப்பில் காய்ச்சப்பட்டதுமான இரும்பு ஊசிகளா லும், குரடுகளாலும், அவனை உபத்ரவிக்கிறார்கள். எவன் இந்த லோகத்தில் அடையக்கூடாத ஸ்திரீயை

அடைகிறானோ, அவனை யமபடர்கள் பரலோகத்தில் இரும்பினால் செய்யப்பட்டதும் நெருப்பில் காச்சப் பட்டதுமான ஒரு ப்ரதிமையை ஆலிங்கனஞ் செய்து கொள்ளச் செய்து குரடாவினால் அடிக்கிறார்கள். எவள் இந்த லோகத்தில் சேரக் கூடாத புருஷனை அடைகிறாளோ, அவளை பரலோகத்தில் யமபடர்கள் ஸ்திரீ ரூபமான ப்ரதிமையை ஆலிங்கனம் செய்து கொள்ளச் செய்கிறார்கள். இந்த லோகத்தில் எவன் பசு முதலிய ப்ராணிகளையும் புணருகிறானோ, அவனை வஜ்ர கண்டக சால்மலியில் போட்டு இழுக்கிறார்கள்' இந்த லோகத்தில் அரசர்களாவது, அவர்களைச் சேர்ந்த வர்களாவது தர்மத்தின் மரியாதையைக் கெடுத்துவிடு கிறார்களோ, அவர்கள் மரணமடைந்த பிறகு வைதரணியில் விழுகிறார்கள். அந்த நதியில் அமேத்யம், மூத்ரம், பூயம், ரத்தம், மயிர், நகம், எலும்பு, மேதஸ், மாம்ஸம் வஸை இவைகளிருக்கின்றன. அதில் பாபி களான புருஷர்கள் கஷ்டத்தை அனுபவித்து ப்ராணன் போகாமல் தாம் செய்த பாபங்களை நினைத்துக் கொண்டு துக்கிக்கிறார்கள். எவர்கள் இந்த லோகத்தில் விருஷரம், நியமம் இவைகள் இல்லாதவர்களோ வெட்கமில்லாமல் பசுபோல் சஞ்சரிக்கிறார்களோ, அந்தப் பாபிகள், மரணமடைந்த பிறகு அமேத்யம், மூத்ரம், ச்லேஷ்மம் இவைகளால் நிறைந்த லாலாபக்ஷ மென்ற நரகத்தை அடைகிறார்கள். அதிலிருக்கும் அந்த அசுத்த வஸ்துக்களை புஜிக்கிறார்கள். இந்த லோகத்தில் எந்த ப்ராஹ்மணன் முதலியவர்கள் வேட்டையாடு வதிலேயே ப்ரியமுள்ளவர்களாக எப்பொழுதும் மிருகங் களைக் கொல்லுகிறார்களோ, அவர்களை யமதூதர்கள் பாணங்களால் அடிக்கிறார்கள். எவர்கள் பூமியில் டம்பத்துக்காக யாகங்களைச் செய்து பசுக்களைக்

கொல்லுகிறார்களோ, அவர்கள் பரலோகத்தில் வைசஸ மென்ற நரகத்தை அடைகிறார்கள். அவர்களை யமபுருஷர்கள் மிகவும் உபத்ரவிக்கிறார்கள். எவன் இந்த பூமியில் சமமான ஜாதியான பத்னியை தன்னுடைய ரேதஸ்ஸைக் குடிக்கும்படி செய்கிறானோ, அவனை பரலோகத்தில் யமதூதர்கள் ரேதகுல்யை என்ற நரகத்தில் தள்ளி ரேதஸ்ஸை குடிக்கும்படி செய்கிறார்கள். எவர்கள் இந்த லோகத்தில் திருடுகிறார்களோ, விஷத்தைக் கொடுக்கிறார்களோ, கிராமங்களையும் ஜனக்கூட்டங் களையும் நாசஞ் செய்கிறார்களோ, அவர்கள் இறந்த பிறகு வஜ்ரம் போன்ற சிங்கப் பற்களுள்ளவைகளும் யமதூதர் களுமான எழுநூறு நாய்கள் அவர்களைக் கடிக்கின்றன. எவன் இந்த லோகத்தில் சாக்ஷி சொல்லுவதிலும், பணங்கொடுத்து வாங்குவதிலும் பொய் சொல்லுகிறானோ, அவன் மரணமடைந்த பிறகு அவீசமதி என்ற நரகத்தில் தலைகீழாக விருந்து நூறு யோஜனை தூரம் உயரமுள்ள மலையின் சிகரத்திலிருந்து தள்ளப்படுகிறான். அந்த நரகத்தில் கல் தரையானது ஜலம் போல் தோன்றுகிறது. அதில் விழுந்து எள்ளளவாக பேதிக்கப்பட்டும் மரணமடைகிற தில்லை. பின்னும் யமபடர்களால் பூர்ணமாகச் செய்யப் பட்ட சரீரமுள்ளவனாகி திரும்பவும் விழுகிறான். இந்த லோகத்தில் ப்ராஹ்மணன், க்ஷத்திரியன், வைச்யன், இவர்களில் யாகம் பண்ணினவர்களுடைய களத்திரத்தை வ்ரதமுள்ள எவன் அனுபவிக்கிறானோ, ஸுரா பானஞ் செய்கிறானோ, அவன் மரணமடைந்த பிறகு நரகத்தை அடைகிறான். அவனுடைய மார்பில் யமபடர்கள் காலை வைத்து அழுத்திக் கொண்டு இரும்பை உருக்கி வாயில் விடுகிறார்கள். எவன் கர்வமுள்ளவனாகி

குலத்தாலும், வித்யையாலும், ஆசாரத்தாலும், ஜாதியாலும், ஆச்ரமத்தாலும் உத்தமர்களாயிருக்கும் மகான்களை அலக்ஷ்யம் செய்கிறானோ, அவன் ஜீவித்திருந்தும் மரணமடைந்தவனேயாம். அவன் மரண மடைந்தபின் க்ஷாரகர்த்தமென்ற நரகத்தில் தலைகீழாகக் கடினமான யாதனைகளை அடைகிறான். இகலோகத்தில் எவர்கள் புருஷனைக் கொன்று பைரவன் முதலியவர்களைப் பூஜிக்கிறார்களோ எந்த ஸ்திரீகள் மனுஷ்ய பசுக்களை புஜிக்கிறார்களோ, அவர்களால் கொல்லப்பட்ட பசுக்கள் யமலோகத்தில் அந்த பாபிகளை கத்தியினால் வெட்டி ரத்தத்தைப் பானஞ்செய்து கூத்தாடுகின்றன; சிரிக்கின்றன; கானஞ் செய்கின்றன; ராக்ஷஸர்கள் போல சந்தோஷப்படு கின்றன; இந்த லோகத்தில் எவர்கள் அபராதஞ் செய்யாதவர்களைப் பலவித உபாயங்களால் தன்னிடத்தில் விச்வஸிக்கும்படிச் செய்து கிராமத்திலாவது, காட்டி லாவது, சூலம், கயறு முதலியவைகளால் கொல்லு கிறார்களோ, அவர்கள் மரணமடைந்து சூலம், கயறு முதலியவைகளில் கோர்க்கப்பட்டு பசி, தாகங்களால் வருத்தப்பட்டு கூர்மையான மூக்குள்ள காக்கை, கழுகு, கொக்கு இவைகளால் கொத்தப்பட்டு தான் செய்த பாபத்தையே நினைத்துக் கொள்ளுகிறார்கள். எவர்கள் பூமியில் ஸர்ப்பங்கள் போல் உக்ரமான ஸ்வாவமுள்ள வர்களாக ப்ராணிகளை நடுங்கச் செய்கிறார்களோ, அவர்கள் மரணமடைந்த பிறகு தந்தசூகமென்ற நரகத்தை அடைகிறார்கள். அதில் ஐந்து தலையுள்ளதும், ஏழு தலையுள்ளதுமான ஸர்ப்பங்கள் சமீபத்தில் வந்து எலிகளைப் போல் பாபிகளை விழுங்குகின்றன. இந்த லோகத்தில் எவர்கள் சிறுவர்கள், குருடர்கள், பலமற்ற வர்கள் முதலியவர்களை பள்ளம் குதிரு, குல்மம்

முதலியவைகளில் மறைத்து வைத்து உபத்ரவிக்கிறார் களோ, அவர்களை மரணமடைந்த பிறகு பள்ளம் முதலியவைகளில் வைத்து விஷமுள்ள அக்னியாலும், புகையாலும் யமபடர்கள் உபத்ரவிக்கிறார்கள். எவன் தன் வீட்டிற்கு வந்த அதிதிகளை மிகுந்த கோபத்துடன் எரிப்பவன் போல் பார்க்கிறானோ, அவனுடைய கண்களை வஜ்ரம் போன்ற முகமுள்ள காக்கை, கழுகு, கொக்கு முதலியவைகள் கொத்திப் பிடுங்குகின்றன. எவன் தான் பணக்காரனென்ற கர்வமடைந்து குறுக்கான பார்வை உள்ளவனாகி ஆசார்யன் முதலியவர்களிடத்திலும், ஸந்தேஹமடைந்து பணம் செலவழிந்து விடுமோ, கெட்டுப் போய்விடுமோ என்ற யோஜனையால் முகம் வாடி, மனங்கலங்கி சுகமில்லாமல் பிசாசம் போல பணத்தைக் காத்துக் கொண்டிருக்கிறானோ, அவன் ஸூசிமுகமென்ற நரகத்தை அடைகிறான். அந்தப் பாபியான புருஷனை யமபடர்கள் நெசவுக்காரர்கள் போல சூத்ரங்களில் கோர்க்கிறார்கள். இம்மாதிரியான நரகங்கள் யமனுடைய லோகத்தில் பல இருக்கின்றன. அவைகளில் சில என்னால் சொல்லப்பட்டன. இம்மாதிரியே தர்மஞ் செய்தவர்கள் ஸ்வர்க்கத்திலிருக்கிறார்கள். தர்மம், அதர்மம் இவைகளுடைய பாக்கியால் திரும்பவும் பூலோகத்தில் ஜநநம் ஏற்படுகிறது.

37–40 நிவிருத்தி மார்க்கமானது இரண்டாவது ஸ்கந்தத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. புராணங்களில் பதினான்கு லோகங்களென்று சொல்லப்படும் அண்ட கோசமானது இவ்வளவுதான். இது மகாபுருஷனாகிய நாராயணனுடைய ஸ்தூலரூபம் அவருடைய மாயாகுணத்தால் ஏற்பட்டது. இதனை எவன், மிகுந்த

ஆதரவுடன் படிக்கிறானோ, கேட்கிறானோ பிறருக்குச் சொல்லுகிறானோ, ச்ரத்தை பக்தி இவைகளால் சுத்தமான புத்தியுள்ள அவனே ஸ்தோத்திரம் பண்ணக் கூடிய பகவானுடைய ஸூக்ஷ்மனுபவத்தைத் தெரிந்து கொள்ளுவான், பகவானுடைய ஸ்தூல ஸூக்ஷ்மரூபங்களைக் கேட்டு ஸ்தூலத்தை த்யானஞ் செய்து மெள்ள மெள்ள ஸூக்ஷ்ம ரூபத்தை அடைய வேண்டும். ஓ மகாராஜ! பூமி, த்வீபங்கள், வர்ஷங்கள், மலைகள், ஆகாசம், ஸமுத்ரம், பாதாளம், திக்கு, பகணம், லோகம், இவைகளுடைய அமைப்பாகிய அற்புதமான ஈச்வரனுடைய இரு ஸ்தூலரூபத்தைச் சொன்னேன். அது ஸகல ப்ராணிகளுக்கும் இருப்பிடமானது என்று சுகர் சொன்னார்.

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்கந்தம் 6

அத்தியாயம்–1

அஜாமினர் உபாக்யானம்

1–6 அதனைக் கேட்ட பரீக்ஷித்து மகாராஜன் சுகரை நோக்கி, "ஓ பகவன்; அர்ச்சிராதி மார்க்கமாகப் ப்ரஹ்ம லோகத்தை அடைந்து, அந்த ப்ரஹ்மதேவருடன் மோட்சத்தை அடைவது, அதற்குக் காரணமாகிய நிவிர்த்தி மார்க்கங்கள் ஆகிய இவைகள் உம்மால் சொல்லப்பட்டன. பிரகிருதி சம்பந்தம் அற்றுப் போகாத தனால் அடிக்கடி தேஹத்தைக் கொடுக்கக்கூடியதும், ஸ்வர்க்கம் முதலிய சுகத்தைக் கொடுப்பதுமான பிரவிர்த்தி மார்க்கத்தையும் சொன்னீர். (மூன்றாவது ஸ்கந்தத்தில்) அதர்மத்தாலுண்டாகிய பலவகை நரகங் களையும் சொன்னீர். ஸ்வாயம்புவ மனு முதல் மன்வந்தரத்தையும் நிரூபித்தீர். மேலும் பிரியவ்ருதர் உத்தானபாதர் இவர்களுடைய வம்சம், இவர்களுடைய சரிதம் ஆகியவைகளையும் த்வீபம்,வர்ஷம், சமுத்ரம் மலை நதி, மரங்கள், பூமண்டலம் இவைகளுடைய அளவு முதலியவைகளையும் ஜோதிச் சக்கரத்தையும் சொன்னீர். மிகுந்த பாக்யமுள்ளவரே! நரகத்தை அடைந்த புருஷன் எதனைச் செய்தால் அந்த வேதனை களை யடையாமல் சுகத்தை அடைவான்? அதனைச் சொல்ல வேண்டும்" என்றார்.

7–8 அதனைக் கேட்ட சுகர் "ஓ அரசனே! மனத்தாலும் வாக்கினாலும் சரீரத்தாலும் செய்த

பாபங்களுக்கு அவைகளைக் கொண்டே எவன் பிரயா சித்தம் செய்து கொள்ளவில்லையோ அவன் மரண மடைந்த பிறகு மேற்சொல்லிய நரகங்களை யடைந்து கடுமையான வேதனைகளை அனுபவிக்கிறான். ஆனதால் ரோகத்தின் காரணத்தை அறிந்த வைத்தியன் ரோகத்திற்குத் தக்கபடி வைத்தியம் செய்வதுபோல பாவத்திற்கு தக்கபடி மரணத்திற்கு முந்தியே பிராய சித்தம் செய்து கொள்ள யத்தனிக்க வேண்டும்" என்றார்.

9–10 அதனைக் கேட்ட அரசர் மகரிஷியை நோக்கி, "பாபிகள் கஷ்டப்படுவதைப் பார்ப்பதாலும் சாஸ்திரங்களில் கூறியதைப் படிப்பதாலும் பாபமானது 'கெடுதியைக் கொடுக்கும்' என்று தெரிந்து கொண்டும் புருஷன் பாபத்தைச் செய்கிறான்; அதற்குப் பிராயச் சித்தத்தை எப்படி அனுஷ்டிக்கலாம்? ஆதலால் பிரயாசித்தத்தால் பாபம் எப்படி நிவர்த்தியாகும். சில சமயம் பாபத்தில் பயந்து அதனை செய்யாமலிருக் கிறான். சில சமயம் அதனையே அதிகமாகச் செய் கிறான். ஆனதால் யானை ஸ்நானஞ் செய்வது போலப் பிராயச்சித்தம் வியர்த்தமானதென்று நினைக்கிறேன்" என்றார்.

11–20 அதனைக் கேட்ட சுகர், பிராயச்சித்த மாகிய கர்மாவினால் பாப கர்மங்கள் போக்கியில்லாமல் நாசமடைகிறதில்லை. பிராயச்சித்தம் முதலியவைகள் அவித்வானுக்காக ஏற்பட்டவைகள். கர்மங்களை அடியோடு நாசம் பண்ணக்கூடிய பிராயச்சித்தம் ஞானம் ஒன்றுதான். நித்தியம் ஆரோக்கியமான அன்னத்தையே புசிக்கும் மனிதனுக்கு வியாதிகள்

எப்படி உண்டாகிறதில்லையோ, அதுபோலவே நியமம் முதலியவைகளைச் செய்து கொண்டிருக்கும் புருஷன் தத்வஞானத்தை அடைகிறான். தர்மத்தை அறிந்த சிரத்தையுள்ள புருஷர்கள் முக்கரணங்களாலுண்டான பாபங்களை தபஸினாலும் ப்ரஹ்மசர்யத்தாலும், தமத்தாலும், தியாகத்தாலும்; ஸத்யத்தாலும், சௌசத்தாலும், யமத்தாலும், நியமத்தாலும் அக்னியானது புதரை எரிப்பது போல எரிக்கிறார்கள். ஸ்ரீ பகவத் பக்தர்களான சிலர் சூரியன் பனியைப் போக்குவதுபோல பக்தியினாலேயே ஸகல பாபங்களையும் நிவர்த்தித்துக் கொள்ளுகிறார்கள். கிருஷ்ணனிடத்திலேயே மனத்தைச் செலுத்திய பகவத் பக்தர்களை சேவிப்பதால் எப்படி சுத்தர்களாக ஆகிறார்களோ அப்படி தபஸ் முதலிய பிராயச்சித்தங்களால் பாபிகள் சுத்தர்களாக ஆகிறதில்லை. இந்தப் பக்தி மார்க்கமானது மிகவும் நல்லது. க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியது. பயமற்றது. ஏனென்றால் அந்த மார்க்கத்தை அடைந்தவர்கள் நல்ல ஸ்வபாவமுள்ளவர்களும், ஒன்றிலும் ஆசை இல்லாதவர்களும், நாராயணனையே முக்கிய கதியாய் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். நாராயணனிடத்தில் பக்தியில்லாத பாபிகள், எவ்வளவு பிராயச்சித்தங்களை அனுஷ்டித்தாலும் அவைகள் பரிசுத்தியை உண்டு பண்ணுகிறதில்லை. குளத்தை நதிகள் சுத்தப்படுத்துமா? எவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதாரவிந்தங்களில் மனத்தைச் செலுத்துகிறார்களோ, அவருடைய குணங்களைச் சொல்வதில் ஆசையுடையவர்களோ, அவர்கள் யமனையும், யமபடர்களையும் சொப்பனத்திலும் பார்க்க மாட்டார். இந்த விஷயத்தில் வெகுநாளைக்கு முன் யமதூதர்களுக்கும் விஷ்ணு தூதர்களுக்கும் நேர்ந்த ஸம்வாத பரமான ஒரு கதையைச் சொல்லுகிறேன், கேளும்."

21–31 கந்யாகுப்ஜம் என்ற தேசத்தில் அஜாமிளர் என்ற ஒரு ப்ராஹ்மணர் இருந்தார். அவர் தாஸியினிடத்திலேயே ஆசையுள்ளவர்; நல்லொழுக்கமற்றவர்; தாஸியினுடைய சேர்க்கையால் நிந்திக்கப்பட்டவர்; மேலுமவர் சொக்கட்டான் முதலிய சூதாட்டத்தாலும் வஞ்சனையாலும் கீழான விருத்தியைச் செய்துகொண்டு குடும்பத்தைப் போஷித்து, மற்றப் பிராணிகளை உபத்ரவித்து வந்தார். இம்மாதிரி தாஸியின் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகப் பாபத்தைச் செய்து கொண்டும் அவளுடைய புத்திரர்களைப் பார்த்துச் சந்தோஷித்துக் கொண்டும் எண்பது வயதைக் கழித்தார். அவருக்குப் பத்து புத்திரர்களுண்டு. அதில் இளையவனாகிய குழந்தைக்கு நாராயணன் என்று பெயர். தாய், தகப்பனார்கள் அந்தக் குழந்தையினிடத்தில் மிகவும் பிரியம் வைத்திருந்தார்கள். அஜாமிளர் இனிமையாகப் பேசும் அந்தக் குழந்தையினிடத்தில் மிகுந்த பிரியமுள்ளவராகி அதனுடைய விளையாட்டைப் பார்த்து மிகவும் சந்தோஷித்தார். மேலும் அவர் போஜனம் செய்யும் போதும் பானம் செய்யும்போதும் அக்குழந்தையினிடத்திலிருக்கும் சிநேகத்தால் அதற்கு ஆகாரம் முதலியவைகளைக் கொடுத்துச் சந்தோஷமடைவது வழக்கம். இம்மாதிரி விஷயங்களில் ஆசை கொண்டவராகிய அவர் தமக்கு மரணகாலம் நெருங்கியதைத் தெரிந்து கொள்ளாமலிருந்தார். இப்படி அஞ்ஞானராகக் காலத்தைக் கழிக்கும் அந்தப் ப்ராஹ்மணனுக்கு மரணகாலம் நெருங்கியதைத் தெரிந்து கொள்ளாமலிருந்தார். இப்படி அஞ்ஞானராகக் காலத்தைக் கழிக்கும் அந்தப் ப்ராஹ்மணனுக்கு மரணகாலம் சமீபித்தது. அப்பொழுது நாராயணனென்ற தம்முடைய குழந்தையையே நினைத்துக் கொண்டு

இருந்தார். அப்பொழுது பயங்கர ரூபமுள்ள மூன்று புருஷர்களைக் கண்டார். அவர்கள் பாசத்தைக் கையில் வைத்துக் கொண்டிருந்தார்கள்; அவர்கள் வக்ரமான மூக்குள்ளவர்கள். அவர்களுடைய மயிர்கள் மேலே தூக்கிக் கொண்டிருந்தன; அவர்கள் இந்தப் ப்ராஹ்மணரை அழைத்துக் கொண்டுபோக வந்த யமதூதர்கள்; அந்த சமயத்தில் தூரத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் நாராயணனென்ற குழந்தையைப் பார்த்து 'ஓ நாராயண! என்று உரக்க அழைத்தார். சாகுந்தருணத்தில் அஜாமிளருடைய முகத்திலிருந்து நாராயணன் என்ற திவ்ய நாமம் வெளிப்பட்டதால் அப்பொழுது விஷ்ணுவின் பார்ஷதர்கள் அவ்விடம் வந்தார்கள். பின்னுமவர்கள் யமதூதர்களைத் தடுத்து அஜாமிளரை விடுவித்தார்கள்.

32–36 விஷ்ணு தூதர்களால் தடுக்கப்பட்ட யம தூதர்கள் அவர்களை நோக்கி, "நீங்கள் யார்? தர்ம ராஜனுடைய உத்தரவிற்குத் தடை செய்கிறீர்கள், எங்கிருந்து வருகிறீர்கள். எதனால் இம்மாதிரி தடுக் கிறீர்கள்? நீங்கள் தேவர்களா அல்லது உபதேவர்களா? அல்லது சித்தர்களா? எல்லோரும் தாமரைஇதழ் போன்ற கண்களுள்ளவர்களாக இருக்கிறீர்கள். பீதாம் பரத்தைத் தரிக்கின்றீர்கள்; கிரீடம் குண்டலம் தாமரை மலர் மாலை, வில், அம்பறாத்துணி, கத்தி, கதை, சங்கம், சக்கரம், தாமரைமலர் இவைகளைத் தரிக்கின்றீர்கள்? நான்கு கைகளைத் தரிக்கிறீர்கள்? யௌவன வயது ள்ளவர்கள்; சரீர காந்தியாய் இருட்டைப் போக் கடிக்கின்றீர்கள். அப்படிப்பட்ட நீங்கள் தர்மராஜ னுடைய தூதர்களான எங்களை ஏன் தடுக்கிறீர்கள்" என்று கேட்டார்கள்.

37–68 அதனைக் கேட்ட விஷ்ணு தூதர்கள் அவர்களை நோக்கி, "நீங்கள் தர்மராஜனுடைய தூதர் களானால் தர்மத்தின் தத்துவத்தையும், அதர்மத்தின் லக்ஷணத்தையும் சொல்லுங்கள். எந்தப் பிரகாரமாகச் சிட்சை செய்கிறது? அதற்கு விஷயம் யார்? எதைச் செய்தவர்கள் தண்டிக்கக்கூடியவர்கள்? எல்லோரும் தண்டிக்கக்கூடியவர்களா? அல்லது மனிதர்களுக்குள் சிலரா?" என்று மேகம்போல் கம்பீரமாகக் கேட்டார்கள். இதனைக் கேட்ட யமதூதர்கள் அவர்களை நோக்கி, "வேதத்தால் விதிக்கப்பட்டதே தர்மம்; அதனால் விலக்கப்பட்டதே அதர்மம். வேதமென்பது ஸாக்ஷாத் நாராயணனே; தானாக உண்டானது. ஒருவராலும் செய்யப்பட்டதல்ல. எவருடைய ஸ்வரூபத்தில் முக்குண ஸ்வரூபிகளான இந்தப் பிராணிகளும், குணங்களும் ப்ராஹ்மணன் முதலிய பெயர்களும், அத்யயனம் முதலிய கிரியைகளும், வர்ணாச்ரமங்களும் இருக் கின்றனவோ அவரே நாராயணன். சூரியன், அக்னி, ஆகாசம், வாயு, ஹிருதயம், சந்திரன், ஸந்தியை, இரவு, பகல், திக்குகள், ஜலம் பூமி, காலம், தர்மம் இவைகள் ஜீவனால் செய்யப்படும் தர்மாதர்மத்திற்குச் சாட்சிகள், இவர்களால் அதர்மம் செய்தவனின்னானென்று தெரிய வருகிறது. அவனே சிட்சைக்கு ஆளாகிறான். மேலும், எல்லா மனிதர்களும் அவரவர்களுடைய கர்மத்திற்குத் தக்கபடி சிட்சிக்கத் தகுந்தவர்களாக ஆகிறார்கள். கர்மங்களைச் செய்தவர்களுக்கு குணங்களின் சேர்க்கை இருக்கிறது. தேகமுள்ளவன் கர்மத்தைச் செய்யாம விருக்க மாட்டான். அதனால் சுகம், துக்கம் இரண்டும் உண்டாகின்றன. எவனால் தர்மமாவது, அதர்மமாவது எவ்வளவு செய்யப்பட்டிருக்கிறதோ, அதன் பலனைப் பரலோகத்தில் அவனே அடைகிறான். ஓ தேவ!

சிரேஷ்டர்களே! இந்த லோகத்தில் ஜனங்கள் மூன்று வகைகளாகக் காணப்படுவது போல மறு லோகத்திலும் குண பேதத்தால் மூன்று வகையாக இருக்கிறார்கள் என்று ஊகிக்கிறோம். நடைபெறும் வசந்தம் முதலிய ருதுக்கள் எப்படிச் சென்றது, வரப்போகிறது. இவைகளின் புஷ்ப பலங்களைக் காட்டுகிறதோ, அதுபோல இந்த ஜன்மமானது முன் ஜன்மம், வரும் ஜன்மம் ஆகிய இவைகளுடைய தர்மம் அதர்மம் இவைகளைக் காட்டுகிறது. மேலும் அத்தர்யாமியாக இருக்கும் பகவான் தன் மனத்தாலேயே ஜீவனுடைய முந்திய ரூபத்தைத் தெரிந்து கொண்டு, பிந்தி அவனுக்குத் தகுதியான தேகத்தைப்பற்றி யோசிக்கிறார். அவர் உற்பத்தியற்ற பகவானல்லவா? அஞ்ஞானி எப்படி தமோகுணமுள்ளவனாகி வியக்கத்தக்கதையே உபாஸிக்கிறானோ, அப்படி ஜீவன் முன் ஜன்மத்திய ஞாபகமில்லாதவனாகி முன் ஜன்மத்தையாவது, பின் ஜன்மத்தையாவது அறிகிறதில்லை. மேலும் ஜீவன் தான் பதினாறு உபாதிகளுள்ளவனானாலும் ஞானேந்திரி யங்கள், கர்மேந்திரியங்கள் இவைகளுடைய விஷயங்கள் ஆகியவைகளைத் தான் பதினேழாவதாக இருந்து அனுபவிக்கிறான். பதினாறு கலைகளுள்ள லிங்க சரீரமானது ஜீவனிடத்தில் சந்தோஷம், துக்கம், பயம் இவைகளைக் கொடுக்கும் சம்ஸாரத்தை உண்டு பண்ணுகிறது. தேகமுடைய ஜீவன், காமம், குரோதம் இவைகளுக்கு வசப்பட்டிருப்பதுமல்லாமல் கர்மங்களைச் செய்ய வேண்டுமென்ற விருப்பமில்லாதவனாக இருந்தும் குளவியானது தன்னைச் சுற்றிக் கூட்டைக் கட்டிக் கொண்டு வெளிவரும் உபாயத்தை அறியா திருப்பதுபோலக் கர்மங்களைச் செய்து அதனால் மோகத்தை அடைகிறான். லோகத்தில் ஒருவனும்

கணநேரங்கூட கர்மத்தை செய்யாமலிருக்கிறதில்லை. ஆனால் முன் ஜன்மத்திய சம்ஸ்காரத்திற்குத் தக்கபடி இயற்கையான குணங்களால் தர்மத்தையாவது, அதர்மத்தையாவது தானாகச் செய்கிறான். மேலும், புருஷன், தாய், தகப்பனார்களுக்குத் தக்கபடி தங்களுடைய கர்மத்தால் ஸ்தூல சூட்சும சரீரத்தை அடைகிறான். புருஷனுக்கு பிரகிருதியின் சம்பத்தத்தால் இம்மாதிரியான கெடுதி உண்டாகிறது. ஈசுவரனை உபாஸிப்பதால் அந்த சம்ஸாரமானது நாசம் அடைகிறது. இந்தப் ப்ராஹ்மணர் வேதாத்தியானஞ் செய்தவன்; நல்லொழுக்கம், நற்குணங்கள் இவைகளுள்ளவன்; விரதங்களை அனுஷ்டித்தவன்; மிருதுவான ஸ்வபாவ முள்ளவன்; சாந்தன்; உண்மையே பேசுகிறவன்; மந்திரங்களை அறிந்தவன்; சுத்தன்; குரு, அக்னி, அதிதி, பெரியோர்கள் இவர்களை உபாஸிப்பவன்; அகங்காரமற்றவன்; ஸகல பிராணிகளிடத்திலும் பிரீதி யுள்ளவன்; ஸாது; சொற்பமாய்ப் பேசுகிறவன்; அசூயை இல்லாதவன்; இம்மாதிரியான இந்தப் ப்ராஹ்மணன் ஒருநாள் தகப்பனாருடைய உத்தரவின் பேரில் பழம், புஷ்பம், ஸமித், தர்ப்பங்கள் இவைகளைக் கொண்டு வருவதற்காக வனத்திற்குச் சென்றான். அவ்விடத்தில் சமித்து முதலியவைகளை எடுத்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பி வரும்பொழுது இழிகுலத்து ஒருவனைக் கண்டான். அவன் ஒரு தாஸியுடன் வெட்கமில்லாமல் கிரீடித்துக் கொண்டிருந்தான். அந்த தாஸியானவள் கள்ளைக் குடித்து அதனால் சிவந்த கண்களுடனும், மயக்க வெறியுடனும் அந்த இழிகுலத்தோனைத் தன் கையால் ஆலிங்கனஞ் செய்து கொண்டு இருந்தாள். அவனும் அவளோடு சிரித்துக்கொண்டும், பாடிக்கொண்டும் இருந்தான்.

அதனைக் கண்ட ப்ராஹ்மணன் மன்மத தாபங்கொண்டு தன் மனத்தைத் தன்னால் கூடியமட்டும் அடக்கியும் அடக்க முடியாமல் அதிகத் தாபத்தை அடைந்தான். அவள் நிமித்தமாக மன்மத பிசாசம் பிடித்து, ப்ராஹ்மணன் விவேகமில்லாதவனாகி அவளையே மனத்தில் தியானஞ் செய்துகொண்டு தன்னுடைய தர்மத்தை விட்டுவிட்டான். மேலும், தகப்பனார் சம்பாதித்த திரவியத்தால் அந்தத் தாஸியைச் சந்தோஷப்படுத்தினான். பின்னுமவன் தாஸியினுடைய கடைக்கண் பார்வைக்குச் சுவாதீனப் பட்டு நல்ல குலத்தில் பிறந்தவளும் யௌவன வயதை அடையாதவளுமான தன்னுடைய மனைவியையும் விட்டுவிட்டான். அல்ப புத்தியுள்ள இவன் தாஸியின் குடும்பத்தைப் போஷிப்பதற்காக நியாயமாகவாவது அநியாயமாகவாவது பலவிதமாகவும் பணத்தைச் சம்பாதித்தான். இவன் சாஸ்திரத்தை விட்டு தனதிஷ்டப்படி பெரியோர்களால் நிந்திக்கப்படும் நெறியை அனுஷ்டித்து வந்தபடியால் அவனுடைய ஆயுள் பாபமாகவும், அவன் புசிக்கும் அன்னம் முதலியவைகள் அசுத்தமாகவும் ஆயின. இதற்குத் தகுந்த பிராயச்சித்தத்தையும் இவன் செய்து கொள்ளவில்லை. ஆதலால் இவனை ,யமனுடைய சமீபம் கொண்டு போகிறோம். யமனால் சிட்சிக்கப்பட்டு இவன் சுத்தனாகி விடுவான்" என்றார்கள்.

அத்தியாயம்–2

அஜாமிளர் விஷ்ணுலோகஞ் சென்றது

1–21. அதனைக் கேட்ட நியாயத்தையறிந்த விஷ்ணு தூதர்கள் யமதூதர்களை நோக்கி, "தர்மத்தை அறிந்தவர்களுடைய சபையில் அதர்மம் நடக்கிறது. இது கஷ்டம். தண்டிக்கக் கூடாதவர்களான புண்யசாலிகளுக்கு வீணாகச்சிட்சை விதிக்கப்படுகிறது. எவர்கள் ஸகல பிரஜைகளையும் பிதாபோல் காப்பாற்றுகிறவர்களோ, சாதுக்களோ, சமமாக பார்ப்பவர்களோ அவர்களிடத்திலும் மாறுதல் ஏற்படுமனால் யாரைப் பிரஜைகள் சரணமடைவார்கள்? லோகத்தில் மேலானவர்கள் எதனைச் செய்கிறார்களோ, அதனையே மற்றவர்களும் செய்கிறார்கள். மேலும் அவர்கள் எதனைப் பிரமாணமென்று ஒப்புக் கொள்ளுகிறார்களோ, மற்றவர்களும் அதையே பிரமாணமென்று அனுசரிக்கிறார்கள். எவனுடைய மடியில் தலையை வைத்துக் கொண்டு தர்மம், அதர்மம் இவைகளை அறியாமல் லோகமானது, பசு போலக் கவலையற்றுத் தூங்குகிறதோ, பிராணிகளால் விரும்பக்கூடியவனும் தயவுள்ளவனுமாகிய அந்தப் புருஷன் தம்மிடம் ஆத்மாவை ஸமர்ப்பிப்பதும், விவேகமற்றதுமான லோகத்தை வஞ்சிக்கலாமா? இந்த அஜாமிளன் புத்ரனைக் கூப்பிடும் வியாஜமாகவாவது பகவானுடைய திவ்ய நாமத்தை உச்சரித்தான். இது கோடி ஜன்மத்தில் செய்த பாபங்களை நிவர்த்திக்கக் கூடிய பிராயச்சித்தம், நாராயண என்ற நான்கு அக்ஷரத்தை எவன் உச்சரிக்கிறானோ, அவன் எவ்வளவு பாபஞ் செய்தவனானாலும் அவன் பாபியல்ல. எல்லா பாபத்திற்கும்

இது பிராயச்சித்தமாக ஆகிவிடுகிறது. திருடுவது, கள் குடிப்பது, மித்ரனுக்கு துரோகஞ் செய்வது, ப்ராஹ்ம மணனைக் கொல்வது ஆசாரிய பத்னியைக் கூடுவது, ஸ்திரீ, அரசன், பிதா, ஆகிய இவர்களைக் கொல்வது முதலிய எந்த பாபஞ் செய்திருந்தாலும் அந்த பாபி களுக்கு ஸ்ரீ மகாவிஷ்ணுவின நாமத்தை உச்சரிப்பதும் அதனால் பகவானிடத்தில் புத்தியைச் செலுத்துவதுமே மேலான பிராயச்சித்தம். பாபியானவன் மனு முதலிய வர்களால் சொல்லப்பட்ட பிராயச்சித்தங்களை அனுஷ்டித்தாலும், ஸ்ரீ மகாவிஷ்ணுவின் நாமங்களை உச்சரிப்பதாகிய பிராயச்சித்தத்தால் சுத்தியடைவது போல ஆகிறதில்லை. அது உத்தம சுலோகனாகிய பகவானுடைய குணங்களை ஞாபகப்படுத்துகிறது. சாந்திராயணம் முதலிய பிராயச்சித்தத்தை அனுஷ்டித் தாலும் திரும்பவும் மனதானது கெட்ட மார்க்கத்தில் பிரவிர்த்திக்கிறது. ஆதலால் பகவானுடைய நாமங் களை உச்சரிப்பதே மேலான பிராயச்சித்தம். அதுவே சித்தத்தைச் சுத்தி செய்கிறது; அதனால் இந்த ப்ராஹ்மணன் சாகுந் தருணத்தில் பகவானுடைய நாமத்தை உச்சரித்ததால் ஸகல பாபங்களுக்கும் பிராயச் சித்தத்தை அனுஷ்டித்தவனாக ஆகிறான். ஆகையால் இவனை நீங்கள் கொண்டு போகவேண்டாம். மேலும், 'ஸங்கேதத்தாலாவாது, ப்ரகாஸமாகவாவது, பேசின வார்த்தையைப் பூர்த்தி செய்வதற்காவது பகவானுடைய நாமததை உச்சரித்தால் அது ஸகல பாபத்தையும் நிவர்த்திக்கிறது' என்று பெரியோர்கள் சொல்லு கிறார்கள். மேலும், உயரமான இடத்திலிருந்து கீழே விழும்பொழுது, வழியில் தடுக்கும்பொழுதும், சரீரத்தில் உபத்ரவத்தை அடைந்தபொழுதும், சர்ப்பம் முதலியவை கடித்த பொழுதும் ஜ்வரம் முதலிய தாபத்தை அடைந்த பொழுதும் தடி முதலியவைகளாலடிக்கப்பட்ட

பொழுதும், தெய்வச் செயலாக ஹரியென்று எவன் சொல்லுகிறானோ, அவன் வேதனையை அடையத் தகுந்தவனல்ல. புத்திசாலியான மனு முதலியவர்கள் மேலான பாபங்களுக்கு லகுவான பிராயச் சித்தங் களையும் யோசித்து விதிக்கிறார்கள். அந்தப் பாபங்கள் தபஸினாலும், தானத்தாலும், விரதம் முதலியவை களாலும் நசித்தாலும் அதன் வாஸனை நசிக்காததால் அதர்மத்திற்கு விதையாயிருக்கும் ஹிருதயம் சுத்தமாகிற தில்லை. அது பகவானுடைய பாத சேவையால்தான் சுத்தமாகிறது. மேலான வீரியமுள்ள மருந்தை தெய்வச் செயலாய் உபயோகித்த ரோகிக்கு ரோகம் எப்படி நிவர்த்தியாகிறதோ, அது போலவே தெரிந்தாவது, தெரியாமலாவது பகவானுடைய நாமத்தை எவன் உச்சரிக்கிறானோ, அவனுடைய ஸகல பாபங்களாகிய கட்டைகளை நாமமமாகிய அக்னி எரிக்கிறது. மந்திரத்தின் குணத்தை அறியாதவனானாலும் மனிதன் அதனை உச்சரிப்பதனால் அதன் பலனை அடை கிறானல்லாவா? ஓ தூதர்களே! இந்த விஷயத்தில் உங்களுக்குச் சந்தேகமிருக்குமானால் உங்களுடைய யஜமானனாகிய யமனைக் கேளுங்கள். அவருக்குத் தர்மத்தின் ரகசியம் தெரியும்" என்று என்று சொன்னார்கள்.

21–50. இம்மாதிரி அந்த விஷ்ணு தூதர்கள் பாகவத தர்மத்தை நிச்சயித்துச் சொல்லி அந்தப் ப்ராஹ்மணனை யமபாசத்திலிருந்து விடுவித்தார்கள். விஷ்ணு தூதர்களுடைய வார்த்தையைக் கேட்டு யம தூதர்கள் யமனுடைய அருகில் சென்று நடந்த செய்தியைத் தெரிவித்தார்கள். யமபாசத்திலிருந்து விடுபட்ட ப்ராஹ்மணன் பயமில்லாதவனாகி விஷ்ணு

தூதர்களை நமஸ்கரித்து எதனையோ சொல்ல ஆரம்பித்தான். அப்பொழுது அவர்கள் அவன் பார்த்து கொண்டிருக்கும் பொழுதே மறைந்தார்கள். பிறகு அஜாமிளன் இரண்டு தூதர்களுடைய பேச்சு வார்த்தை யையும், சுத்தமான பாகவத தர்மத்தையும், மூன்று குணங்களை ஆசிரயித்த யமதூதர்களால் சொல்லப் பட்ட தர்மத்தையும் கேட்டு பகவானுடைய சிறப்புக் களைச் சிரவணஞ் செய்ததால் பகவானிடத்தில் பக்தியை அடைந்தான், மேலும் தான் செய்த பாபங்களை நினைத்து மிகவும் துக்கித்தான். "நான் அறியாத்தன் மையால் தாஸியினிடத்தில் ஆசை வைத்து அவளி டத்தில் புத்ரரூபியாக அவதரித்து மிகுந்த கஷ்டத்தை அடைந்தேன். பதி விரதையான மனைவியை விட்டு கள் குடிக்கும் வேசியான இழிகுல மாதை அடைந்தேன். நான் பெரியோர்களால் நிந்திக்கப்பட்டவன்; மிகுந்த பாபத்தைச் செய்தவன்; குலத்தை கெடுத்தவன்; என்னை நிந்திக்கவேண்டும். தாய் தகப்பனார்கள் செய்த உபகாரத்தை நினையாமலும் வயது சென்றவர்களும், என்னைத் தவிர நாதனில்லாதவர்களும், பந்துக்கள ற்றவர்களும், துக்கிக்க கூடியவர்களுமான அவர்களைக் காப்பாற்றாமலிருந்தேன். ஆனதால் தர்மத்தைக் கெடுத்து, தனதிஷ்டப்படி சஞ்சரிப்பவன் எந்த நரகத்தை அடையப் போகிறான் இப்பொழுது பாசத்தால் கட்டி என்னை இழுத்தவர்கள் எங்கே சென்றார்கள்? அவர்களிடமிருந்து என்னைக் காப்பாற்றின நான்கு ஸித்தர்கள் எங்கே போனார்கள்? இது சொப்பனமா? அல்லது நேரில் பார்க்கப்பட்ட அற்புதமா? நான் இந்த ஜன்மத்தில் பாபியானாலும் சிறந்த தேவர்களைத் தரிசிக்கக்கூடிய புண்யத்தை முன் ஜன்மத்தில் செய்திருக்கிறேனென்று நினைக்கிறேன், இல்லாவிடில்

தாஸியினிடம் ஆசை கொண்ட மிக்க பாபியான என்னுடைய நாக்கு ஸ்ரீ பகவானுடைய நாமத்தை உச்சரிக்குமா? ப்ராஹ்மண்யத்தை இழந்தவனும், வெட்கமில்லாதவனும், பாபியுமாகிய எனக்கும் மங்களகரமாகிய நாராயண என்ற திவ்ய நாமத்திற்கும் எவ்வளவு தூரதம்யமிருக்கிறது, ஆனதால் திரும்பவும் சம்ஸாரத்தை அடையாமலிருக்கும்படி சித்தம், இந்திரியம், பிராணன் இவைகளை அடக்கிக்கொண்டு முயற்சிக்கிறேன். அவித்யை, காமம், கர்மம் இவைகளால் ஏற்பட்ட பந்தத்தை நிவர்த்தித்து கொள்கிறேன். ஸகல பிராணிகளிடத்திலும் பிரியம், சிநேகம் கருணை இவைகளை அடைகிறேன். எந்த மாயையினால் கிரிடா மிருகம் போல் ஸ்திரியுடன் கிரீடித்து அதமனானேனோ அதிலிருந்து நிவர்த்தி அடைகிறேன். தேகம் முதலியவைகளில் என்னுடையதென்கிற அகங்காரத்தை விட்டு, பகவானுடைய் நாமபஜனம் முதலியவற்றால் சுத்தமான மனத்தை - அவரிடம் சமர்ப்பிக்கிறேன்" என்று நிர்வேதத்தை அடைந்து கங்காத்துவாரம் சென்றார், "ஓ மகாராஜா! நொடிப் பொழுது ஸாதுக்களுடன் சேர்ந்ததால் அஜாமிளருக்கு இம்மாதிரியான புத்தியாயிற்று. பின்னுமவர் அங்கிருக்கும் தேவாலயத்தில் உட்கார்ந்து யோகத்தை அடைந்து, இந்திரியங்களிருந்து மனத்தை விலக்கி அனுபவ ரூபியான பரமாத்மாவிடத்தில் சேர்ந்தார். அப்பொழுது, முந்தி பார்க்கப்பட்ட விஷ்ணு தூதர் களைத் தரிசித்து அவர்களுக்கு நமஸ்காரஞ் செய்தார். உடனே கங்கையின் கரையை அடைந்தார். பின்னுமவர் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் தூதர்களுடன் பொன் விமானத்தின் மீதேறிக் கொண்டு ஸ்ரீ நாராயணனிருக்குமிடஞ் சென்றார். அவர் ஸகல தர்மங்களை விட்டு தாஸிக்குப்

புருஷனாயிருந்து நிந்திக்கக் கூடிய கர்மத்தை செய்து பதிதராகவிருந்தும், பகவானுடைய நாமத்தை உச்சரித் தபடியால் சுத்தரானார். பகவானுடைய நாமத்தை சொல்லுவதைவிடக் கர்மபந்தத்தை நிவர்த்திக்கக்கூடிய மார்க்கம் வேறில்லை. அவர்களுடைய மனதானது ரஜோகுணத்தாலும், தமோ குணத்தாலும் கலங்கி, திரும்பவும் கர்மத்தில் ப்ரவர்த்திக்கிறதில்லை. எவன் மிகவும் இரகசியமும், பாபத்தைப் போக்கக்கூடியதுமான இந்த இதிகாசத்தைச் சிரத்தையுடனும், பக்தியுடனும் கேட்கிறானோ, சொல்லுகிறானோ அவன் நரகத்தை அடைகிறதில்லை. யமபடர்களால் பார்க்கப்படுகிறதும் இல்லை. அவன் பாபியானாலும் விஷ்ணு லோகத்தில் வஸிக்கிறான். பிள்ளையினுடைய பெயராகிய நாராயணா வென்ற சப்தத்தைச் சாகுந்தருணத்தில் உச்சரித்த அஜாமிளரும் முக்தியடைந்தார். சிரத்தையுடன் பகவா னுடைய நாமத்தை உச்சரித்தவர்கள் முக்தியைடை வார்களென்பதில் என்ன சந்தேகம்?"

அத்தியாயம்–3

யமனுக்கும் தூதர்களுக்கும் ஸம்வாதம்

1–2 அதனைக் கேட்ட அரசர் மகரிஷியை நோக்கி, "இந்த தூதர்கள் யமனுக்கு அடங்கினவர்களாக விருப்பதால் எல்லாருக்கும் அதிபதியான தர்மராஜன், விஷ்ணு தூதர்களால் தம்முடைய கட்டளை நிறை வேறாததை அவர்கள் முகமாய்க்கேட்டு எதனைச் செய்தார்? யமனுடைய ஆஜ்ஞையானது ஓரிடத்திலும் அவமானம் அடைந்ததாகக் கேள்விப்பட்டதில்லை. இந்தச் சந்தேகத்தை நிவர்த்திக்க உம்மைத் தவிர யாராலும் முடியாது என்று நினைக்கிறேன்". என்று கூறினார்.

3–10 அதனைக் கேட்ட மகரிஷி அரசனை நோக்கி, "ஓ மகராஜ! விஷ்ணு தூதர்களால் யம படர்களுடைய முயற்சி தடைப்பட்டு அவர்கள் ஸம்யமனீ பட்டணஞ் சென்று யமனிடம் பின்வருமாறு தெரிவிக்கலானார்கள்; ஓ பிரபுவே! மூவகையான கர்மத்தைச் செய்யும் ஜனங்களுக்கு அதன் பலனைக் கொடுப்பவர்களான அதிபதிகளாக (சாஸ்தாவாகவிருப்பவர்கள்) எவ்வளவு தேவர்களிருக்கிறார்கள்? ஜனங்களைச் சிட்சிப்பவர்கள் வெகுபேர்களிருப்பார்களானால் யாருக்கு துக்கமும் சுகமும் உண்டாகும்? யாருக்கு அவைகள் கிடைக்கா? கர்மத்தைச் செய்யும் அநேக ஜனங்களைச் சிட்சிப் பவர்கள் அநேகர்களானால் சக்ரவர்த்திக்குட்பட்ட அதிகாரிகளுக்கு அந்த அதிகாரம் எப்படி உபசார மாத்திரமாகிறது. ஆனதால் ஸகல லோகங்களுக்கும் சாஸ்தாவாகவிருப்பவர் நீர் ஒருவரே. மேலும், நீர்

மனிதர்களால் செய்யப்படும் புண்ய பாபங்களைச் சொல்பவர்; அப்படி உம்முடைய ஆக்ஞைக்கு அற்புதமான சரீரமுள்ள நான்கு சித்தர்கள் அவமானஞ் செய்தார்கள். உம்முடைய உத்தரவின்படி மிக்க பாபியான ஒருவனை நாங்கள் இவ்விடம் அழைத்து வரும்பொழுது அவர்கள் எங்களுடைய பாசங்களை அறுத்து அவனைப் பலாத்காரமாக விடுவித்தார்கள். அந்தப் பாபியானவன் மரணகாலத்தில் நாராயணா என்று சொன்னான்; உடனே 'பயப்படாதே' என்று சொல்லிக் கொண்டு அவர்கள் வந்தார்கள். அவர்கள் எவர்கள்? சொல்லக்கூடுமானால் சொல்லவேண்டும்" என்று கேட்டார்கள்.

11–30 அதனைக் கேட்ட யமன் ஸ்ரீ மகாவிஷ்ணு வினுடைய பாதாரவிந்தத்தைத் தியானஞ் செய்து கொண்டு தூதர்களை நோக்கி, 'ஸ்தாவர ஜங்கம ரூபமான ஜகத்திற்கு அதிபதியாக எனக்கும் மேலானவர் ஒருவரிக்கிறார். இந்த ஜகத்தானது வஸ்திரத்தின் நூல்கள் போல் அவரிடத்தில் ஓதமாகவும், பிரோதமாக வுமிருக்கிறது; அவருடைய அம்சத்தாலேயே இந்த ஜகத் உண்டாகிறது; காப்பாற்றப்படுகிறது. நாசமடை கிறது; மூக்குக் கயிற்றினால் கட்டப்பட்ட ரிஷபம் போல் லோகமானது அவருக்குச் சுவாதீனமாக இருக்கிறது. அவர் பசுக்களைத் தும்பினால் கட்டுவதுபோல் ஜனங் களால் கட்டப்பட்ட எல்லா ஜனங்களும் அவருக்கு வசப்பட்டு கர்மங்களைச் செய்கிறார்கள். நான், மகேந்த்ரன், நிருதி, வருணன், ஸோமன், அக்னி, ஈசானன், வாயு, சூரியன், ப்ரஹ்மதேவர், ஆதித்யன், விச்வே தேவர்கள், பசுக்கள், ஸாத்தியர்கள், மருத் கணங்கள், ஸித்தர்கள், பிருகு முதலிய மற்ற

பிரஜாபதிகள் ஆகிய எல்லோரும் ரஜோ குணம் தமோ குணம் ஆகிய இவைகளையுடைய சம்பந்த மற்றவர்கள்; ஸத்வ குணத்தையே முக்கியமாயுடைய வர்கள்; அவர்களாலேயே அந்தப் பகவானுடைய அபிப்பிராயம், நடை ஆகிய இவைகள் அறிய முடியாதவை. மற்றவர்களால் அறியப்படுமா? அவர் இந்திரியங்களுக்கும், ஹிருதயத்திற்கும், பிராணனுக்கும் வாக்குக்கும், புலப்படுகிறதில்லை. மேலுமவர் ஜீவர் களைப் பார்த்துக் கொண்டிருப்பவர் போல் சக்ஷுஸைப் பார்க்க முடியுமா? (பிரமாணத்திற்குப் பரமாத்மா விஷயமாகிறதில்லையென்று கருத்து) அந்தப் பகவான் ஸ்வதந்திரர்; எல்லாவற்றிற்கும் அதிபதி; மாயைக்கு அதிபதி; மஹாத்மா; பரன்; அவருடைய தூதர்கள் அழகான ஸ்வரூபங்களுள்ளவர்களாகி அவருடைய ஸ்வரூபம், குணம், ஸ்வபாவம் ஆகிய இவைகளை அடைந்து சஞ்சரிக்கிறார்கள். அந்த விஷ்ணு தூதர்கள் தேவர்களால் பூஜிக்கப்பட்டவர்கள். அவர்களுடைய ஸ்வரூபம் பார்க்கமுடியாதது; அவர்கள் விஷ்ணு பக்தர் களைச் சத்ருக்களிடமிருந்தும், என்னிடமிருந்தும், அக்னி முதலியவைகளிடமிருந்தும் காப்பாற்றுகிறார்கள். பகவானால் ஏற்படுத்தப்பட்ட தர்மத்தை ரிஷிகளும், தேவர்களும் அறியார்கள். அசுரர்களுக்கும், மனிதர் களுக்கும் வித்யாதரர்களுக்கும், சாரணர்களுக்கும் எப்படித் தெரியும்? ப்ரஹ்மதேவர், நாரதர், பரமசிவன் ஸநத் குமாரர்கள், கபிலர், மனு, ப்ரஹ்லாதர், ஜனகர், பீஷ்மர், பலி, வியாஸர், நான் ஆகிய இவர்களுக்கு பாகவத தர்மம் தெரியும். அது ரகசியமானது; சுத்தமானது; அதனைத் தெரிந்து கொள்வது மிகவும் கஷ்டம். அதனைத் தெரிந்து கொண்டால் மோக்ஷத்தை அடைவான. ஸ்ரீ பகவானுடைய திவ்ய நாமங்களை

உச்சரிப்பது முதலியவைகளால் பகவானிடத்தில் பக்தி செய்வதே மேலான தர்மமெனப்படுகிறது. "ஓ தூதர்களே! பகவானுடைய நாமத்தின் மகிமையைப் பாருங்கள். அதனை உச்சரித்த மாத்திரத்தில் அஜாமிளனும் யமபாசத்திலிருந்து விடுபட்டான். ஆனதால் பகவானுடைய குணங்களையும், சரிதங்களையும் சொல்வது மனிதர்களுடைய பாபத்தை நிவர்த்திக்கப் போதுமானதாகிறது. மிக்க பாபியான அஜாமிளர் சாகுந் தருணத்தில் நாராயண என்று புத்திரனை அழைத்ததால் முக்தி அடைந்தார். ஜனங்கள் மாயையால் மோஹமடைந்தவர்களாகிப் பெரும்பாலும் இந்த தர்மத்தைத் தெரிந்து கொள்ளுகிறதில்லை. மதுபோலவும், புஷ்பம் போலவும் அழகான வேதத்தில் சொல்லிய யாகத்தில் சிரத்தையுள்ளவர்களாக இருக்கிறார்கள். புத்திசாலிகள் மூன்று கரணங்களையும் ஸமர்ப்பிக்கிறார்கள். அவர்கள் என்னுடைய சிட்சையை அடையமாட்டார்கள். அவர்களுக்குப் பாபமிருக்குமானாலும் பகவானுடைய நாமத்தை யுச்சரிப்பதனாலேயே அது நசித்திறது. மேலும் எவர்கள் பகவானையே சரணமடைந்தார்களோ, ஸாதுக்களோ, எல்லாவற்றையும் ஸமமாகப் பார்ப்பவர்களோ அவர்களைத் தேவர்களும், ஸித்தர்களும் தோத்திரஞ் செய்கிறார்கள். ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் கதாயுதத்தால் காப்பாற்றப்பட்ட அவர்களிடம் நீங்கள் போகவேண்டாம்; அவர்களுக்கு நாம் அதிபதியல்ல. மேலும், எவர்கள், ஆசைகளையொழித்த பரமஹம்ஸர்களால் அனுபவிக்கப்பட்ட பகவானுடைய பாதாரவிந்த மதுரஸத்தில் ஆசைப்படாமல் நரகத்திற்குக் காரணமான ஸம்ஸாரத்தில் ஆசைப்படுகிறார்களோ, அந்த அஸத்துக்களை நீங்கள் என்னிடம் அழைத்து வாருங்கள்; எவர்களுடைய நாக்கு பகவானுடைய

திவ்ய நாமங்களைச் சொல்லவில்லையோ, எவர்களுடைய மனமானது பகவானுடைய பாதாரவிந்தத்தைத் தியானிக்கவில்லையோ, எவர்களுடைய தலையானது ஒரு தடவையாவது பகவானை நமஸ்கரிக்கவில்லையோ, அந்த அஸ்த்துக்களான ஜனங்களைக் கொண்டு வாருங்கள். அந்த மகாபுருஷனுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன்; அறியாத்தன்மை உள்ளவர்களான தூதர்களால் செய்யப்பட்ட அபாரதத்தைப் புராண புருஷராகிய பகவான் சகித்துக் கொள்ளட்டும்; அஞ்சலி செய்கிறோம்" என்றார்.

31–35 ஓ பரீக்ஷித்து மகாராஜனே! மகான்களுக்கும் ஜகத்திற்கும் மங்களகரமான ஸ்ரீ மகாவிஷ்ணுவின் திவ்ய நாமங்களை உச்சரிப்பதே மேலான பிராயச்சித்தமென்று தெரிந்து கொள்ளும். மகா விஷ்ணுவின் மேலான சரிதங்களைச் சொல்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் அவரிடத்தில் பக்தியுண்டாகிறது. அதனால் புருஷன் சுத்தியை அடைவதுபோல் விரதம் முதலியவைகளால் சுத்தனாகிறதில்லை. ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதாரவிந்தத்தின் மதுவைப் பானஞ் செய்தவன் திரும்பவும் ஸம்ஸாரத்தை விரும்ப மாட்டான். அதன் ரஸத்தை அறியாதவன். பாப நிவர்த்திக்காகப் பிராயச்சித்தத்தைச் செய்கிறான். (அது யானையின் ஸ்நானம் போலாகிறது). இம்மாதிரி யமபடர்கள் தங்களுடைய யஜமானனாகிய யமனுடைய வார்த்தையைக் கேட்டு பகவானுடைய மகாத்மியத்தை நினைத்து ஆச்சரியப்பட்டு அது முதல் பகவத் பக்தர்களைப் பார்ப்பதற்கு பயமுள்ளவர்களாக இருந்தார்கள். இந்த ரகசியமான இதிஹாசத்தை அகஸ்திய பகவான் மலய பர்வதத்திலிருந்து பகவானைப் பூஜித்துக் கொண்டே சொன்னார்.

அத்தியாயம்–4

தட்சருடைய வம்சம்

1–2. அதனைக் கேட்ட மஹரிஷியை நோக்கி, "தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள், நாகங்கள், மிருகங்கள் பறவைகள் ஆகிய இவைகளுடன் (ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில் நடந்த) வரலாற்றைச் சுருக்கமாகச் சொன்னீர், பகவான் எந்த சக்தியால், எந்தப் பிரகாரமாக சிருஷ்டித்தாரோ, அதை விரிவாகச் சொல்லவேண்டும்" என்று கேட்டுக்கொண்டான்.

3–16. ஓ சௌனகாதி மகரிஷிகளே! அதனைக் கேட்ட வியாஸ புத்திரரும், மகா யோகியுமான சுகர் கேள்வியைப் பற்றிச் சிலாகித்துப் பின்வருமாறு விடை கூறினார்: "எப்பொழுது பிரசேதஸ்ஸின் புத்திரர் களான் பிராசீன பர்ஹிஸ்ஸுக்கள் சமுத்திரத்திலிருந்து கிளம்பி பூமியில் மரங்கள் நெருக்கமாக முளைத் திருப்பதைக் கண்டார்களோ. அப்பொழுது அவர்கள் மரங்களிடத்தில் கோபம் கொண்டார்கள். மேலும் அவர்கள் மரங்களை எரிப்பதற்காக முகத்திலிருந்து வாயுவையும், அக்னியையும் உண்டுபண்ணினார்கள். அவைகளால் மரங்கள் எரிக்கப்பட்டன. அதனைப் பார்த்த ஸோமராஜன் அவர்களுடைய கோபத்தைத் தனிப்பதற்காகப் பிராசீன பர்ஹிஸ்ஸுக்களை நோக்கி, "ஓ மிகுந்த பாக்யமுள்ளவர்களே! நீங்கள் லோகத்தை விருத்தி செய்யும் பிரஜாபதிகள்; தீனர்களான மரங்களை எரிக்க வேண்டாம். ப்ரஹ்மதேவருக்குப் பதியும், நாசமில்லாதவருமான ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர், மரங்களையும், ஓஷதிகளையும், பக்ஷயத்தையும்,

அன்னத்தையும் முன்பு உண்டுபண்ணினார். சஞ்சரிக்கும் பிராணிகளுக்கு அசையாப் பொருள்களும், காலால் நடப்பவைகளுக்குக் காலில்லாதவைகளும், கையில்லா தவைகள் கையுள்ளவைகளுக்கும், இரண்டு கால் பிராணி களுக்கும் நாற்கால் பிராணிகளும் ஆகாரங்களாக இருக்கின்றன. தேவதேவராகிய உங்களுடைய தகப்பனார் பிரஜைகளை சிருஷ்டிக்கும்படி உங்களுக்கு உத்தரவு செய்திருக்கிறார், அப்படியிருக்க மரங்களை எரிக்க விரும்புவது உசிதமா? உங்களுடைய முன்னோர்களால் அனுஷ்டிக்கப்பட்ட மார்க்கத்தை அனுசரியுங்கள். கோபத்தை அடக்கி கொள்ளுங்கள். குழந்தைகளுக்குத் தாய் தகப்பனார்களே பந்துக்கள். கண்களுக்கு இமைகளே பந்து. ஸ்திரீகளுக்கு பார்த்தாவே பந்து. பிரஜைகளுக்கு அரசனே பந்து. ப்ரஹ்மசாரி முதலியவர்களுக்கு கிருகஸ்தாச்ரமத்திலிருப்பவன் பந்து. அக்ஞர்களுக்கு வித்வான் பந்து. ஸகலப் பிராணிகளி டத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணு அந்தர்யாமியாக இருக்கிறார். ஆனதால் எல்லாவற்றையும் அந்தப் பகவானாகவே பார்க்க வேண்டும். அப்படிச் செய்வதால் உங்களி டத்தில் பகவான் சந்தோஷிப்பார். எவன் சரீரத்தில் உண்டான கோபத்தை ஆத்ம விசாரத்தால் அடக்கிக் கொள்கிறானோ அவன் முக்குணங்களைத் தாண்டு கிறான். மரங்களை எரித்தது போதும்; மற்றவைகளுக்கு க்ஷேமமுண்டாகட்டும். விருட்சங்களின் பெண்ணாகிய இந்தக் கன்னிகையை விவாகஞ் செய்து கொள்ளுங்கள்" என்று சொல்லி அந்தப் பெண்ணை அவர்களுக்குக் கல்யாணஞ் செய்வித்து தமதிஷ்டப்படி சென்றார். அவர்களும் அந்தப் பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொண்டார்கள்.

17–22. அந்தப் பெண்ணிடத்தில் அவர்களுக்கு

தட்சர் பிறந்தார். அவருடைய சிருஷ்டியால் லோகம் பூர்ணமாயிற்று. பெண்களிடத்தில் ப்ரீதியுள்ளவரான தட்சர் ரேதஸ்ஸாலும், மனத்தாலும் பிராணிகளைச் சிருஷ்டித்தார். அதனைச் சொல்லுகிறேன்; சுவனமாகக் கேளும். அந்த தட்சர் தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள். ஆகாயம், பூமி, ஜலம் இவைகளில் வாழும் பிராணிகள் ஆகிய இவைகளை மனத்தாலேயே சிருஷ்டித்தார்; அதனாலும் பிரஜைகள் அதிகமாக விருத்தியாகவில்லை. அப்பொழுது விந்திய பர்வதஞ் சென்று கடுமையான தவம் செய்தார். அவ்விடத்தில் அகமர்ஷணம் என்ற சிறந்த தீர்த்தமொன்றிருக்கிறது. அதில் ஒவ்வொரு காலங்களிலும் ஸ்நானஞ் செய்து, தபஸ் செய்து அதனால் ஸ்ரீ மகாவிஷ்ணுவை சந்தோஷப்படுத்தினார். மேலுமவர், ஹம்ச குஹ்யம் என்ற ஸ்தோத்திரத்தால் பகவானைத் துதித்தார். அதனால் தட்சரிடம் பகவான் சந்தோஷமடைந்தார். அந்த ஸ்தோத்திரத்தை உமக்குச் சொல்லுகிறேன்.

ஹம்ஸ குஹ்யம்

23–34. எல்லோருக்கும் மேலானவரும், அமோகமான சித்சத்தியுள்ளவரும், ஜீவனுக்கும், மாயைக்கும், பந்துவும் குணங்களையே தத்துவமாக நினைத்தவர்களால் பார்க்க முடியாத ஸ்வரூபமுள்ளவரும், அசங்கர மற்றவரும், தாமாகப் பிரகாசிப்பவருமான புருஷனுக்கு நமஸ்காரஞ் செய் கிறேன். மேலும் குணமானது குணமுள்ளதை எப்படித் தெரிந்து கொள்கிறதில்லையோ. அப்படி ஜீவன் தன் னுடைய சரீரத்திலேயே வசித்து இந்திரியங்களைப் பிரவர்த்திக்கச் செய்வது முதலிய உதவி செய்து கொண்டிருக்கும் தோழனாகிய பரமாத்மாவைத் தெரிந்து

கொள்ளுகிறதில்லை. (திருஷ்டாவானவர் திருச்யமாக ஆகிறதில்லை என்று கருத்து) அப்படிப்பட்ட மஹேச் வரனுக்கு நமஸ்காரம். குணமானது ஜடமாகையால் அது குணியைத் தெரிந்து கொள்ளாமலிருப்பது நியாயம். ஜீவன் சேதனனாகையால் அவனால் பரமாத்மா ஏன் அறியப்படவில்லை என்றால் தேகம் பிராணன்கள், இந்திரியங்கள். அந்தக்கரணம், பூதங்கள், தன்மாத்ரைகள் ஆகிய இவைகள் தங்களுடைய ஸ்வரூபத்தையும், இந்திரியங்களையும், அபிமானி தேவதைகளையும் தெரிந்துகொள்ளச் சக்தியற்றவர்கள். ஜீவன் அவைகளையும், அவைகளுக்குக் காரணங் களாகிய குணங்களையும் அறியக்கூடிய சக்தியுள்ளவன். ஆனாலும் எந்த ஸர்வஞ்ஞராகிய புருஷனை அறிய மாட்டானோ, அந்த அனந்தரைத் துதிக்கிறேன். நாமங்களையும், ரூபங்களையும் பிரகாசப்படுத்தும் மனமானது எப்பொழுது வியவகாரமற்றிருக்குமோ திருச்யத்தின் நினைவானது எப்பொழுது வியவகார மற்றிருக்குமோ, திருச்யத்தின் நினைவானது எப்பொழுது நாசமடையுமோ, அப்பொழுது சுத்தமான மனத்தில் எவர் நிஜரூபத்துடன் பிரகாசிக்கிறாரோ. அந்த ஹம்ஸருக்கு நமஸ்காரம். இருபத்தேழு தத்துவங்களால் மறைக்கப்பட்டவரும், ஹிருதயத்தில் தியானத்தால் நிலைக்கச் செய்யப்பட்டவருமான எந்தப் பகவானை, வித்வான்கள் பதினைந்து ஸாமிதேனி" மந்திரங்களால் பிரகாசிக்கக்கூடியதும், கட்டையில் மறைந்திருப்ப துமான அக்னியைக் கடைந்து எடுப்பதுப் போலத் தெரிந்துகொள்கிறார்களோ, நிரூபிக்க முடியாத மாயா சக்தியுள்ளவரும், ஜகத் ஸ்வரூபியும் ஸகல நாமங்களுள்ளவரும் ஸகல விசேஷங்களுள்ள மாயை அற்றவராகையால் கேவல சுகானுபவ ஸ்வரூபியுமான

அந்தப் பகவான் என்னிடம் தயை செய்யட்டும். எது வாக்கினால் சொல்லப்பட்டதோ, எது புத்தியால் நிரூபிக்கப்பட்டதோ, எது இந்திரியங்களாலும், மனத்தாலும் நிரூபிக்கப்பட்டதோ அது பகவானுடைய சுயம் பிரகாச ரூபமாக ஆகிறதில்லை. ஏனென்றால், அது குணங்களுடைய உற்பத்தி நாசம் ஆகிய இவைகளால் ஏற்பட்டது. மேலும் புருஷன் எதில், எதனிடமிருந்து. எதனைக்கொண்டு, எதற்கு, எதற்காக, எதனைச் செய்கிறானோ, செய்விக்கிறானோ அதற்குக் காரணமும், ப்ரஹ்மா முதலிய மேலானவர்களுக்கு காரணமும், எல்லாவற்றிற்கும் முந்தியதும் ஸஜாதீய மற்றதும், ஒன்றாயும் இருப்பதே ப்ரஹ்மம். அந்த ப்ரஹ்மத்தினுடைய சக்திகளே வாகிகளுடைய விவாதத்திற்குக் காரணங்களாக இருக்கின்றன. அவைகளே அடிக்கடி வித்வான்களுக்கும் மோகத்தை உண்டுபண்ணுகின்றன. அளவற்ற குணங்களுள்ள அந்த மகா புருஷனுக்கு நமஸ்காரம். மேலும் யோக சாஸ்திரம் பரமாத்மாவிற்கு அவயவங்களற்றவரென்றும் விருத்தமாகச் சொல்லுகின்றன. ஆனாலும் இவ்விரண்டு சாஸ்திரங்களுக்கு சமமும், மேலானதும்; அனுகூலமும், பூர்ணமுமானதே ப்ரஹ்மம். அவருக்கு நமஸ்காரம். பகவான் நாமரூபங்களற்றவரானாலும் தம்மைச் சரணமடைந்தவர்களைக் காப்பாற்றுவதற்காக அவதாரங்களைச் செய்து நாமங்களையும் அடைகிறார். அந்தப் பகவான் என்னிடம் சந்தோஷமடையட்டும். வாயுவானது பூமியின் குணமாகிய கந்தத்தை அடைந்து பலவகையாகத் தோன்றுவது போல எந்த பகவான் பிரகிருதி சம்பந்தத்தாலேற்பட்ட உபாசனா மார்க்கங்களால் அந்த அந்த வாசனைக்குத்தக்கபடி அந்தர்யாமியாக விருந்து அவரவர்கள் விரும்பிய பலனைக்

கொடுக்கிறாரோ, அப்படிப்பட்ட ஈச்வரன் என்னுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்யட்டும்.

35–41. அந்த அகமர்ஷணமென்ற தீர்த்தத்தில் மேற்சொல்லிய மந்திரங்களால் பகவான் துதிக்கப்பட்டு அவ்விடத்தில் தட்சருக்குத் தரிசனங் கொடுத்தார். அப்பொழுது பகவான் கருடன் மீது பிரகாசித்திருந்தார். அவர் எட்டுக் கைகளுடையவர்; சங்கம், சக்ரம், கத்தி கேடயம், பாணம், வில், பாசம், கதாயுதம் ஆகிய இவைகளைத் தரித்திருந்தார் மேலுமவர் பீதாம்பரத்தைத் தரித்தவர்; மேகம்போல் கருத்த திருமேனி உள்ளவர் பிரசன்ன முகமுள்ளவர் வனமாலை தரித்தவர். ஸ்ரீவத்ஸம், கௌஸ்துபம் இவைகளுள்ளவர். உத்தமமான கிரீடம், வளை, மகரகுண்டலம் ஆகிய இவைகளால் பிரகாசிப்பவர்; காஞ்சி, தோள்வளை, மோதிரம், வளை, பாதஸரம் இவைகளால் அலங்கரிக்கப்பட்டவர்; அவருடைய ரூபமானது மூவுலகத்தையும் மோஹிக்கச் செய்யக்கூடியதாக இருந்தது. மேலும் நாரதர், நந்தர் முதலிய பார்ஷதர்களும் அவருடனிருந்தார்கள்; ஸித்தர்களும், கந்தர்வர்களும், சாரணர்களும் அவரைத் துதித்தார்கள்; மிகவும் அற்புதமான அந்த ஸ்வரூபத்தைக் கண்ட தட்சர் பயப்படாமல் தண்டம் போல் நமஸ்கரித்தார். ஆனாலும் அவர் மலையாறுகளால் நிறைந்த நதிகள்போல் ஆனந்தத்தால் பூரணராகிப் பேச முடியாதவராக விருந்தார்.

42–54. ஸகல பிராணிகளுடைய அபிப்ராயத்தை அறிந்தவராகிய பகவான் பக்தராகிய பிரஜாபதியை நோக்கி "பிரசேதஸ்ஸின் குலத்தில் பிறந்த ஓ மிகுந்த பாக்யமுள்ளவரே! தபசின் சித்தியை அடைந்தீர்;

சிரத்தையுடன் என்னிடத்தில் மனத்தைச செலுத்தினீர்; பிராணிகள் விருத்தியடைய வேண்டுமென்பதே என்னுடைய அபிப்ராயம். உம்முடைய தபஸானது லோகத்தை விருத்தி செய்யக்கூடியதாகையால் உம்மிடத்தில் நான் சந்தோஷமடைந்தேன். ஜனங்களை சிருஷ்டிக்கக்கூடிய ப்ரஹ்மதேவர், பரமசிவன், நீர், மனுக்கள் தேவ சிரேஷ்டர்கள் ஆகிய எல்லாரும் என்னுடைய விபூதிகளேயாம். யமம், நியமம் முதலிய வைகளுடன் கூடிய ஸந்தியாவந்தனமாகிய தபஸே ஹிருதயம், வித்தையே தேஹம், தியானம் முதலிய கிரியைகளே ஸ்வரூபம், யாகங்களே அங்கங்கள். தர்மமே ஆத்மா, தேவர்களே பிராணங்கள். இந்த ஜகத் உண்டாகிறதற்கு முந்தி நான் மாத்திரம் இருந்தேன். கிராஹ்யமாவது கிராஹகமாவது ஒன்றுமில்லை. இந்திரிய வியாபாரங்கள் சைதன்னிய மாத்திரமாக இருந்தபடியால் தூங்கினவை போலிருந்தன. அளவற்ற குணமுள்ள என்னிடத்திலிருந்து மாயையும், அதனிடமிருந்து பிரம்மாண்டமும், அப்படியே ப்ரஹ்மதேவரும் உண்டானார்கள். அந்த ப்ரஹ்மதேவர் மேலான வீரியத்துடன் ஸகல லோகத்தையும் சிருஷ்டிக்கும் விஷயத்தில் முயற்சித்துக்கொண்டு தம்மை ஸமர்த்தனாக நினைத்தார். அப்பொழுது நான் அவரைக் கடுமையான தபஸை செய்யும்படி ஆக்ஞாபித்தேன். அவர் தபஸ் செய்து பிரஜாபதிகளான உங்களை முதலில் சிருஷ்டித்தார், பஞ்சஜனர் பிரஜாபதியினுடைய புத்ரியான அஸிகநீ என்பவளை நீர் கல்யாணம் செய்துகொள்ளும். அவளிடத்தில் நீர் பல பிரஜைகளை உண்டுபண்ணுவீர். உமக்குப் பிற்பட்ட பிரஜைகளும் என்னுடைய மாயையின் மகிமையால் மகளிருடன் சேர்ந்து கிரீடித்து,

பிரஜைகளை உண்டுபண்ணுவதுடன் என்னுடைய ஆக்ஞையைப் பரிபாலிப்பார்கள்!" என்று சொல்லி விட்டு, தட்சர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே பகவான் மறைந்தார். அது அவருக்கு கனவு போலிருந்தது.

அத்தியாயம்–5

தட்சர் நாரதரை சபித்தது

1–9 விஷ்ணுமாயையால் மோஹித்த அந்த தட்சர் அஸிக்நி என்பவளிடத்தில் ஹார்யச்வர் என்ற பெயருள்ள பதினாயிரம் புத்திரர்களை உண்டுபண்ணினார். அந்தப் புத்திரர்கள் எல்லோரும் ஒரே மாதிரியான ஸ்வபாவ முள்ளவர்கள். அவர்களைப் பார்த்துத் தட்சர் பிரஜை களை சிருஷ்டிக்கும்படி ஏவினார். அதனைக்கேட்ட அவர்கள் மேற்கு திக்கை நோக்கிச் சென்று ஸிந்து, சமுத்திரம் இவைகளுடைய சங்கமத்தில் இருக்கும் நாராயண தீர்த்தத்தை அடைந்தார்கள். அதில் ஸ்நானஞ் செய்ததால் அவர்களுடைய மனமானது சுத்தமாயிற்று; முக்தி மார்க்கத்தில் ஆசை உண்டாயிற்று; ஆனாலும் அவர்கள் பிரஜைகளை விருத்திசெய்யும்படி பிதா வினால் ஆக்ஞாபிக்கப்பட்டபடியால் மிகவும் கடுமை யாகத் தபஸ் செய்தார்கள். தேவரிஷியாகிய நாரதர் அவர்களை நோக்கி, ஓ ஹார்யச்வர்களே! நீங்கள் அஞ் ஞானிகள்; பூமியின் எல்லையைத் தெரிந்துகொள்ளாமல் ஜனங்களை எப்படி சிருஷ்டிக்கப் போகிறீர்கள். மேலும், நீங்கள் ஒரே மனிதனுள்ள ராஜ்யத்தையும் உட்பிரவேசித்தவன் வெளியில்வரமுடியாத பிலத்தை யும், பலவகையான மாதர்களையும் விபசாரியின் பர்த்தாவாகிய புருஷனையும், இரண்டு பக்கமும் பிரவஹிக்கும் நதியையும், இருபத்தைந்து பிராணி களுடைய கிரகத்தையும், பலவகையான வார்த்தை களைச் சொல்லிக் கொண்டிருக்கும் ஹம்ஸத்தையும், கத்தியினாலும், வஜ்ரத்தாலும் செய்யப்பட்டது போல கூர்மையும், கெட்டியுமான சுத்திக் கொண்டிருக்கும்

சக்கரத்தையும் தெரிந்து கொள்ளாமலும், பிதாவினுடைய ஆக்ஞையைத் தங்களுக்குத் தகுதியானதாகத் தெரிந்து கொள்ளாமலும் நீங்கள் பிரஜைகளை எப்படி சிருஷ் டிக்கப் போகிறீர்கள்" என்று வினவினார்.

10–21 அதனைச் செவியுற்ற ஹர்யச்வர்கள் நாரதருடைய மறைவான வார்த்தையை இயற்கையான தங்களுடைய புத்தியினால் யோசிக்கலானார்கள். எப்படியென்றால், "பூமியென்பது ஜீவன் என்ற லிங்க சரீரம். அதனால் ஆத்மாவுக்குப் பந்தமுண்டாகிறது. அதனுடைய நாசத்தை தெரிந்து கொள்ளாமல் மோட் சத்திற்கு உபயோகமில்லாத கர்மங்களை அனுஷ்டிப் பதாலென்ன பிரயோஜனம்? மேலும் ஈச்வரன் ஒருவரே. எல்லாவற்றுக்கும் சாக்ஷியாக இருப்பவர். அவர் தம்மையே ஆதாரமாகக் கொண்டவர். பரன் நித்யமுக்தர் அவரைத் தெரிந்து கொள்ளாமல் அவரிடத்தில் சமர்ப்பிக்கப்படாத கர்மங்களால் என்ன பிரயோஜனம்? புருஷன் எதை அடைந்தால் திரும்பி வரமாட்டானோ, அந்த ப்ரஹ்ம ஜோதிஸ்ஸை அறியாதவனுக்கு மற்ற கர்மங்களாலென்ன பிரயோஜனம்? சிருஷ்டி நாசம் இவைகளைச் செய்யக் கூடியதும், அகங்காரம் முதலிய வைகளைக் கொண்டு வெளிவர முடியாமல் தடுப்பது மான மாயையைத் தெரிந்துக் கொள்ளாமல் அதனால் மோகித்திருப்பவனுக்கு மாயையால் ஏற்படும் கர்மங் களாலென்ன பிரயோஜனம்? ஈச்வரனை நிரூபிப்பதும் பந்தம் மோட்சம் இவைகளைக் காண்பிப்பதுமான. சாஸ்திரத்தை விட்டு ஏகாந்தமான பதத்தைத் தெரிந்து கொள்ளாமல் செய்யப்படும். பகிர்முகங்களான கர்மங் களால் என்ன பிரயோஜனம்? மிகக் கடுமையான காலசக்கரமானது ஜகத்தை இழுத்துக் கொண்டு

ஸ்வதந்திரமாகச் சுற்றுகிறது. அதனைத் தெரிந்து கொள்ளாதவனுக்குக் கிராம்ய கர்மங்களாலென்ன பிரயோஜனம்? (சாஸ்திரத்தினுடைய) பிதாவினுடைய ஆக்ஞையின் உண்மையான கருத்தையறியாமல் பிரவிருத்தி மார்கத்தில் விசுவாசமுள்ள புருஷன் சிருஷ்டி முதலியவைகளை எப்படி ஆரம்பிப்பான்?" என்று ஹர்யச்வர்கள் எல்லோரும் ஒரே புத்தியுள்ள வர்களாக நாரதருடைய உபதேச வார்த்தைகளுக்கு உண்மையான அர்த்தம் இதுதானென்று தெரிந்து கொண்டு நாரதரைப் பிரதட்சணஞ் செய்து அந்த மார்கத்தை அடைந்தார்கள்.

22–33 நாரதரும் நாதப்ப்ரஹ்மத்தில் நேரில் பார்க்கப்பட்ட ஸ்ரீ பகவானுடைய பாதாரவிந்தத்தில் தம்முடைய மனத்தை வைத்து லோக சஞ்சாரஞ் செய்தார். பிறகு தட்சப் பிரஜாபதி நாரதரால் தம்முடைய புத்திரர்கள் மோட்சத்தை அடைந்தார் களென்பதைக் கேள்விப்பட்டு புத்திரர்கள் நல்ல ஸ்வபாவமுள்ளவர்களாகையால் அவர்களுடைய நாசம் மிகுந்த துக்கத்தை உண்டு பண்ணிற்று. அப்பொழுது ப்ரஹ்மதேவர் தட்சரை ஸமாதானம் செய்ய அவர் அஸிக்னி என்னும் தம்முடைய பத்னியிடத்தில் சபளாச்வர்கள் என்ற ஆயிரம் புத்திரர்களைப் பெற்றார். அவர்களும் பிதாவின் ஆக்ஞையின்படி தபசுக்காக முன்னோர்கள் ஸித்தியடைந்த நாரயண தீர்த்தம் சென்றார்கள். பின்னுமவர்கள் அந்தத் தீர்த்தத்தில் நீராடி அதனால் சுத்தசித்தர்களாகி, பிரணவத்தை ஜபித்துக் கொண்டு கடுந்தபஸ் செய் தார்கள். பின்னுமவர்கள் சில மாதங்கள் ஜலத்தை புஜித்துக் கொண்டு, சில காலம் காற்றை புஜித்துக்

கொண்டும், 'மஹாத்மாவும்' சுத்தமான ஸத்வகுணத் திற்கு ஆச்ரயரும், பரம ஹம்ஸரும், பூர்ணருமாகிய நாரயணருக்கு நமஸ்காரம்' என்ற மந்திரத்தை ஜபஞ்செய்து கொண்டு விஷ்ணுவை ஆராதித்தார்கள். அந்தத் தருணத்திலும் நாரத மகரிஷி அவ்விடம் வந்து பிரஜைகளைச் சிருஷ்டிக்க முயன்றுகொண்டி ருக்கும் சபளாச்வர்களை நோக்கி முன் போலவே கூடமான வார்த்தைகளைச் சொல்லி, 'ஓ தட்ச புத்திரர்களே! நான் சொல்லுவதைக் கேளுங்கள். உங்களுடைய மூத்த சகோதரர்கள் சென்ற மார்கத்தை நீங்களும் அடையவேண்டும். நீங்கள் சகோதரர்களி" டத்தில் பிரீதியுள்ளவர்கள்; எவன் ஜ்ஞேஷ்டனுடைய மார்கத்தை அனுஷ்டிக்கிறானோ, அந்தப் புண்ணிய பந்துவாகிய புருஷன் மருத்துக்களுடன் சந்தோஷப் படுகிறான்" என்று சொல்லி நன்மையளிக்கும் தரிசனமுள்ள நாரதர் தமது இஷ்டப்படி சென்றார். அந்த சபளாச்வர்களும் நாரதருடைய உபதேசத்தால் ஹர்யச்வர்களுடைய மார்கத்தை அடைந்தார்கள். க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடிய ஆத்ம மார்க்கத்தை அடைந்த அவர்கள், சென்ற இராத்திரிபோல இன்னமும் திரும்பி வரவில்லை.

34–43 இப்படி இருக்கும்போது தட்சருக்குச் சில அபசகுணங்கள் நேர்ந்தன. அவற்றைக் கண்ட தட்சர் புத்திரர்களை பற்றி விசாரிக்க, ஹர்யச்வர்களைப் போல் இவர்களையும் நாரதரே மரிக்கச் செய்தா ரென்பதைக் கேள்விப்பட்டு, புத்திர சோகத்தால் மோஹமடைந்து நாரதரிடங் கோபித்துக் கொண்டு உதடுகள் துடிக்க, "ஓ அஸாதுவே 'ஸாது போல்' வேஷங்கொண்டு என்னுடைய குழந்தைகளுக்கு

சந்நியாசிகளுடைய மார்க்கத்தை காண்பித்துக் கெடு தலைச் செய்தீர். அவர்கள் மூன்று வகையான கடன்களை நிவர்த்தித்துக் கொள்ளாதவர்கள்; கர்மங்களை விசாரிக் காதவர்கள்; அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு இந்த லோகத்திலும், பரலோகத்திலும் க்ஷேமத்திற்கு இடை யூறைச் செய்தீர். நீர் இம்மாதிரி குழந்தைகளுடைய புத்தியைமாற்றி வெட்கமில்லாமல் பார்ஷதர்களுக்குள் ஒருவராகச் சஞ்சரிக்கிறீர். நீர் குற்றமற்றவர்களிடத்தில் விரோதத்தைச் செய்பவர்; விசுவாஸத்தைக் கெடுப்பவர்; உம்மைத் தவிர மற்றவர் பாகவதர்களுக்கு அனுக்கிரகத் தையே செய்வார்கள். இம்மாதிரியான உபதேசத்தால் புருஷனுக்கு வைராக்கியம் உண்டாகிறதில்லை. புருஷன் விஷயங்களை அனுபவித்து அவைகளைத் துச்சங்க ளென்று வைராக்கியத்தை அடைவதுபோல இம்மாதிரி புத்தியை மாற்றிவிடுவதால் வைராக்கியம் உண்டாகிற தில்லை. ஸாதுக்களும் கிரகஸ்தர்களுமான எங்களுக்கு உம்மால் செய்யப்பட்ட அபராதமானது சகிக்க முடியாததாயினும் நான் பொறுத்துக் கொண்டேன். ஓ புத்திரர்களை நாசஞ்செய்தவரே! என்னுடைய புத்திரர்களுக்கு இரண்டு லோகத்திலும் இடமில்லாமல் நீர் செய்ததனால் உமக்கும் ஓரிடத்திலும் நிலையான இருப்பிடமில்லாமல் நீர் எப்பொழுதும் சுற்றிக் கொண்டே இருக்கக்கடவீர்" என்று சொன்னார்.

44. அதனைக் கேட்ட ஸாதுக்களில் சிறந்தவராகிய நாரதர் அந்தச் சாபத்தை அங்கீகரித்தார். பதில் சாபங் கொடுக்கத் திறமையுள்ளவரானாலும் நாரதர் அதனைப் பொறுத்துக் கொண்டாரென்பதே அவருடைய ஸாது குணத்தைக் காட்டியது.

அத்தியாயம்–6

தட்ச கன்னிகைகளின் வம்சம்

1–22. பிறகு தட்சர் ப்ரஹ்மதேவரால் ஸமாதானப் படுத்தப்பட்டு அஸிக்நியினிடத்தில் அறுபது பெண் களைப் பெற்றார்: அவர்கள் தகப்பனாரிடத்தில் பிரீதி யுள்ளவர்கள். அந்தப் பெண்களில் பத்துப் பெண்களைத் தர்மனுக்கும், பதின்மூன்று பெண்களைக் காச்யபருக்கும் இருபத்தேழு பெண்களைச் சந்திரனுக்கும். பூதம், அங்கிரஸ், கிருசாச்வர் இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே இரண்டு பெண்களையும்,.

தாட்சியரென்ற பெயருடைய காச்யபருக்கே நாலு பெண்களையும் கொடுத்தார். அந்தப் பெண்களுடைய புத்திரன், பௌத்திரன் முதலியவர்களால் மூவுலகமும் பூர்ணமாயிற்று. அந்தப் பெண்கள், அவர்களுடைய குழந்தைகள் ஆகிய இவர்களுடைய நாமதேயங்களைச் சொல்லுகிறேன், கேளும் பானு, ஸம்பா, ககுப், ஜாமி, விச்வா, ஸந்தியா, மருத்வத்தீ, வஸு, முகூர்த்தா, ஸங்கல்பா என்ற பத்துப் பெண்களும் தர்மனுடைய பத்தினிகள். பானுவினுடைய புத்திரன் வேத ரிஷபன். அவனுடைய புத்திரன் இந்திரஸேன், லம்பையினு டைய புத்திரன் வித்யோதன் அவனுடைய புத்திரர்கள் மேகங்கள். ககுப் என்பவளுடைய புத்திரன் ஸங்குடன் அவனுடைய புத்திரன் கீகடன் அவனிடத்திலிருந்து பூமியிலிருக்கும் துக்கங்களுக்கு அபிமானிகளான தேவதைகள் உண்டாயின. ஜாமியினுடைய புத்திரன்

ஸ்வர்க்கன். அவனுடைய புத்திரன் நந்தி விச்வேயினுடைய புத்திரர்கள் விச்வே தேவர்கள். அவர்கள் அபுத்திரர்கள். ஸாத்யையினுடைய புத்திரர்கள் ஸாத்யர்கள். அவர்களுடைய புத்திரன் அர்த்த ஸித்தி மருத்வான், ஜயந்தனென்ற இருவர்களும் முத்வதியின் புத்திரர்கள் ஜயந்தனென்பவன் பகவானுடைய அம்சம். அவனையே உபேந்திரனென்றும் சொல்கிறார்கள். முகூர்த்தை என்பவளின் புத்திரர்கள். அவர்கள் பிராணிகளுக்கு அந்த காலத்திற்குத் தக்கபடி பலத்தைக் கொடுக்கிறார்கள். ஸங்கல்பை என்பவளின் புத்திரன் ஸங்கல்பன். அவனுடைய புத்திரன் கான். வஸீ என்பவளின் புத்திரர்கள் துரோணன், பிராணன் துருவன், அர்க்கன், அக்னி, தோஷன் விபாவஸு என்ற எட்டு வஸீக்கள். துரோணனுக்கு அபிமதி என்ற மனைவியிடத்தில் ஹர்ஷம், சோகம், பயம் முதலிய புத்திரர்கள் பிறந்தார்கள். பிராணனுக்கு ஊர் ஜஸ்வதி என்பவளிடத்தில் ஆயுஸ், புரோஜவன் என்ற இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். துருவனுடைய பத்தினியாகிய தரணி என்பவளிடத்தில் பலவகையான பட்டணங்கள் (பட்டணத்துக்கு அபிமானியான தேவதைகள்) பிறந்தன. அர்க்கனுக்கு வாஸனை என்பவளிடத்தில் தர்ஷம் முதலிய புத்திரர்கள் பிறந்தார்கள். அக்னிக்கு வஸோத்தாரை என்பவளிடத்தில் த்ரவிணகன் முதலிய வைகளும், கிருத்திகா நடசத்திரங்களுக்கும் புத்திரரான ஸ்கந்தரும் புத்திரர்கள். தோஷனுக்கு சர்வரி என்பவளிடத்தில் சிம்சுமாரனென்று ஒரு புத்திரனுண்டானார். அவர் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் அம்சம். வஸ்து என்ப வருக்கு அங்கிரஸ் என்பவளிடத்தில் விசுவகர்மா என்ற புத்திரர் பிறந்தார். அவர் சில்பங்களுக்கு ஆசாரியர் அந்த விசுவகர்மாவுக்கு சாட்சஷ மனு புத்திரர்.

மனுவிற்கு ஸாத்யர்கள் புத்திரர்கள். விபாவஸுவிற்கு உஷை என்பவளிடத்தில் வியுஷ்டி, ரோசிஸ், ஆதபன் இவர்கள் உண்டானார்கள். ஆதபனிடத்திலிருந்து ஐந்து யாமங்களுள்ள பகல் உண்டாயிற்று. அந்தத் பகலில் பிராணிகள் தங்கள் தங்கள் காரியத்தைச் செய்கிறார்கள். பூதனுடைய பத்னியாகிய சுருபை என்பவள் கோடிக் கணக்கான ருத்ரர்களை உண்டுபண்ணினாள். ரைவதன், அஜன், பவனன், பீமன், வாமன், உக்ரன், விருஷாகபி, அஜைகபாத், அஹிர்புதயன், பகுரூபன், மஹான் என்றவர்கள் ருத்ருடைய பார்ஷதர்கள்; மற்றவர்கள் கோரஸ்வரூபமுள்ள பிரேதங்களும், விநாயகங்களுமாம் அங்கிரஸ் என்னு பிரஜாபதியின் பத்தினியான ஸ்வதா என்பவள் பிதிருக்களை உண்டுபண்ணினாள். அந்த அங்கிரஸின் இரண்டாவது பத்னியான ஸதியென்பவள் அதர்வாங்கிரஸ் என்ற வேதத்தைப் புத்திரனாக அடைந்தாள். கிருசாச்வர், அர்ச்சிஸ் என்பவளிடத்தில் வேதசிரஸ், தேவலன், வயுனன், மனு என்பவர்களையும் உண்டு பண்ணினார். தார்ட்சயன் விந்தையிடத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் வாகனமாகிய கருடனையும், சூரியனுக்கு ஸாரதியாகிய அருணனையும், கர்துரு என்பவளிடத்தில் அநேக நாகங்களையும், பதங்கி என்பவளிடத்தில் பலபங்களையும் (வெட்டுக் கிளியும் முதலியவைகள்) உண்டு பண்ணினார்.

23–24. கிருத்திகை முதலிய நட்சத்திரங்கள் சந்திரனுடைய பத்தினிகள். அந்தச் சந்திரன் தட்சருடைய சாபத்தால் க்ஷயரோகத்தை அடைந்தான். அந்த ஸ்திரீகளிடத்தில் அவனுக்குப் புத்திரனும் பிறக்கவில்லை. திரும்பவும் அந்தச் சந்திரன் தட்சரைப் பிரார்த்தித்து அவருடைய அனுக்கிரஹத்தால் கலைகளை

அடைந்தான். காச்யபருடைய பத்தினிகளுடைய பெயர்களைக் சொல்லுகிறார்கள் கேளும். அந்தப் பெயர்கள் லோகத்திற்கு க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியவைகள். அவர்களாலேயே இந்த ஜகத் உண்டு பண்ணப்பட்டது. அவர்கள் அதிதி, திதி, தநு, காஷ்டா, அரிஷ்டா, ஸுரஸா. இளா, முனி, குரோதவசா, தாம்ரா, ஸுரபி, ஸரமா, திமி என்ற பெயருள்ள வர்களாம். ஜலஜந்துக்கள் யாவும் திமியினிடத்திலிருந்து உண்டானவைகள். மிருகங்கள் தரமையின் புத்திரர்கள். எருமைகளும், பசுக்களும், இரட்டைக்குளம்புள்ள மற்றவைகளும் ஸுரபியின் புத்திரர்கள். பருந்து கழுகு முதலியவைகள் தாமரையின் புத்திரர்கள். அப்ஸரஸ் ஸுக்கள் முனியின் புத்திரர்கள் ஸர்ப்பங்கள் குரோத வகையின் புத்திரர்கள். விருட்சங்கள் யாவும் இளை யென்பவளிடத்திலிருந்து உண்டானவைகள், யாது தானர்கள் ஸுரஸையின் புத்திரர்கள் கந்தர்வர்கள் அரிஷ்டையின் புத்திரர்கள். இரட்டைக் குளம்பில்லாத பிராணிகள் காஷ்டையிடத்திலிருந்து உண்டானவைகள். தநுவிற்கு அறுபத்தோறு புத்திரர்களானாலும் அவர் களுக்குள் முக்கியமானவைகளைச் சொல்லுகிறேன் விதுமூர்த்தா, சம்பான், அரிஷ்டன், ஹயக்ரீவன், விபாவஸு, அயோமுகன், சங்குசிரஸ், ஸ்வரபானு, கபிலன், அருணஇ, பு லோமோ, விருஷபாவா, ஏகசச்ரன் அனுதாபகன், தூர்மகேசன், விரூபாக்ஷன், விப்சித்தி தூர்ஜயன் என்றவர்கள் முக்கியர்கள். ஸ்வரபானுவின் புத்திரியாகிய ஸுப்ரை என்பவளை நமுவி என்பவர் விவாகஞ்செய்துகொண்டார். விருஷபர்வாவின் புத்திரி யான சர்மிஷ்டை என்பவளை நஹுஷருடைய புத்திரர் னையாத விவாகம் பண்ணிக்கொண்டார். வைச்வானர னென்ற தனுவினுடைய புத்திரனுக்கு உபதானவி

ஹயசிரஸ், புலோமா, காலகா என்ற நான்கு புத்திரிகள். அவர்களில் உபதானவி என்பவளை ஹிரண்யாக்ஷனும், ஹயசிரஸ் என்பவளைக் கிருது என்பவனும் கல்யாணஞ் செய்து கொண்டார்கள். புலோமா, காலகை என்ற இரண்டு பெண்களையும் ப்ரஹ்மதேவருடைய தாண்டு தலால் காச்யபர் கல்யாணஞ் செய்துகொண்டார். அந்தப் புலோமையினுடைய புத்திரர்களும், காலகை யினுடைய புத்திரர்களுமான அறுபதினாயிரம் புத்திரர் களும் யாகம் முதலிய கர்மங்களைச் கெடுத்துக் கொண்டிருந்தார்கள், அவர்களை உம்முடைய பிதாவுக்குப் பிதாவும் இந்திரனுக்குப் பிரியத்தைச் செய்பவருமாகிய அர்ஜுனன் கொன்றார். ப்ரசித்தி என்பவன் ஸம்ஹிகியினிடத்தில் நூற்றொரு புத்திரர் களைப் பெற்றான். அவர்களுக்குள் மூத்தவன் ராகு மற்றவர்கள் கேது முதலியவர்கள். இவர் கிருகமா யிருக்கும் தன்மையை அடைந்தவர்கள். அதிதியின் வம்சத்தைக் கிரமமாகச் சொல்லுகிறேன். அந்த வம்சத்தில் ஸ்ரீமந் நாராயணன் தம்முடைய அம்சமாக அவதரித்தார்; அதிதிக்கு விவஸ்வான், அர்யமா, பூஷா, த்வஷ்டா; ஸவிதாபகர், தாதா, விதாதா, வருணன், மித்ரன், சக்கரன், உருக்ரமன் என்ற புத்திரர்கள் பிறந்தார்கள். விவஸ்வானுடைய பத்தினியாகிய ஸம்ஞ்ஞை யென்பவள் சிரார்த்த தேவன், மனு, யமன் என்ற புத்திரர்களையும். யமி என்ற பெண்ணையும் உண்டுபண்ணினாள். அவளே பூமியில் படப்பையாக ஆகி அஸ்வினி தேவர்களை உண்டுபண்ணினாள். சாயையென்ற மற்றொரு பத்தினியானவள் சனைச்சரன், ஸாவர்ணிமனு, தபதியென்ற பெண் ஆகிய இவர்களை உண்டுபண்ணினாள் அந்தப் பெண் ஸம்வர்ணனைர் கணவனாக அடைந்தவள். அர்யமா என்பவனுடைய

பத்தினியாகிய மாதிருகா என்பவள் சர்ஷணிகள் என்ற புத்திரர்களைப் பெற்றாள். அவர்களிடத்திலி ருந்து மனுஷ்ய ஜாதியானது ப்ரஹ்மதேவரால் ஏற்படுத்தப்பட்டது. பூஷா என்பவர் அபுத்ரர். மாலை புசிப்பவர் அவருக்குப் பற்களில்லை; தட்ச பாகத்தில் தட்சனிடத்தில். கோபித்த பரமசிவனைப் பார்த்துப் பற்கள் வெளியில் தெரியும்படி சிரித்தபடியால் அவருடைய பற்கள் உதிர்ந்து போயின துவஷ்டாவின் பத்தினியாகிய ரசனை யென்பவளுக்கு ஸந்நிவேசன் என்பவனும், பராக்ரமசாலியான விச்வரூபனும் புத்திரர்கள். ஒருக்கால் தேவர்கள் பிரகஸ்பதி பகவானை அலட்சியஞ் செய்ததால் அவர் அவர்களுக்கு புரோகிதராக இருக்கவில்லை; அந்தச் சமயத்தில் அவர்கள் சத்ருக்களின் ஸஹோதரியின் புத்திரனா னாலும் விச்வரூபனைப் புரோகிதராக இருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

அத்தியாயம்–7

விச்வரூபன் புரோகிதனாக இருந்தது.

1. அதனைக் கேட்ட அரசர் மகரிஷியை நோக்கி "தம்முடைய சிஷ்யர்களான தேவர்களைப் பிரகஸ்பதி பகவான் எதற்காகப் பரித்தியாகஞ் செய்தார். தேவர்கள் என்ன அக்கிரமஞ்செய்தார்கள்; அதனைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

2–19 அதனைக் கேட்ட சுகர், இந்திரன் இன்று லோகங்களுக்கு அதிபதியாயிருப்பதினால் கர்வங் கொண்டு நன்மார்கத்திலிருந்து தவறி மருத்துக்கள், வஸுக்கள், ருத்ரர்கள், ஆதித்யர்கள், மகர்ஷிகள், விச்வேதேவர்கள், ஸாத்யர்கள், அச்வினி தேவர்கள், ஸித்தர்கள், சாரணர்கள், கந்தர்வர்கள், ப்ரஹ்மவாதி களான முனிகள், வித்யாதர்கள், அப்ஸரஸுக்கள், கின்னரர்கள், பக்தர்கள், உரகர்கள் ஆகியஇவர்களால் சேவிக்கப்பட்டு ஸபையில் இந்திராணியுடன் ஆசனத் திலிருந்தார். அப்பொழுது தேவர்கள் சந்திர மண்டலம் போன்ற குடையாலும், சாமம் முதலியவை களாலும் அவரை உபசரித்தார்கள். அந்தச் சமயத்தில் தேவர்களுக்கும், மகேந்திரனுக்கும் ஆசாரியராகிய பிரகஸ்பதி பகவான் அந்தச் சபைக்கு வந்தார். அவர் தேவர்களாலும், அசுரர்களாலும் வணங்கக்கூடியவர். அவரைப் பார்த்ததும் மகேந்திரன் ஆசனத்திலிருந்து எழுந்திருக்காமலும் எதிர்கொண்டழைக்காமலும், ஆசனங் கொடுக்காமலும், உபசரிக்காமலும் இருந்தார். அப்பொழுது அந்தப் பிரகஸ்பதி பகவான் சிஷ்ய னுடைய அக்கிரமத்தைப் பார்த்து மௌனமாகத்

தம்முடைய கிருகஞ் சென்றார். பிறகு மகேந்திரன் ஆசார்யனை அவமதித்தோமென்பதைத் தெரிந்து கொண்டு சபையில் பின்வருமாறு தன்னை நிந்தித்துக் கொண்டார். 'அற்ப புத்தியுள்ள நான் கெட்ட காரியத்தைச் செய்து விட்டேன். ஐசுவரிய மதத்தால் ஆசாரியனை அவமதித்தேன். நான் தேவர்களுக்கு அதிபதியாக இருந்தும் அந்த ஐசுவரிய மதத்தால் அசுர ஸ்வபாவத்தை அடைந்தேன். ஆனதால் வித்வானாக இருப்பவன். ஐசுவரியத்தை விரும்புவானா? சிலர் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும் அரசன் வந்தவர்களை உபசரிப்பதற்காக எழுந்திருக்கக்கூடாது' என்று சொல்லுகிறார்கள்! அவர்கள் தர்மத்தை அறிந்த வர்களல்ல. அவர்கள் கெட்ட மார்க்கத்தை உபதேசிப் பவர்கள்; அவர்களுடைய வார்த்தையை எவர்கள் நம்புகிறார்களோ அவர்கள் கற்களால் செய்யப்பட்ட ஓடத்தின் மீதேறியவர்கள் போலக் கெடுதியை அடை வார்கள். ஆனதால் கம்பீர புத்தியுள்ள ஆசாரியனாகிய பிரகஸ்பதி பகவானை நமஸ்கரித்து நல்ல வார்த்தை சொல்லுகிறேன்' என்று யோசித்துக் கொண்டு ஆசாரியனுடைய கிருகஞ் சென்றார். அவ்விடத்தில் பிரகஸ்பதி தம்முடைய மாயையால் மறைந்துவிட்ட படியால் மகேந்திரனுடைய கண்ணுக்குப் புலப்பட வில்லை. அதனைப் பற்றிப் பலவகையாக யோசித்தும் அவருடைய மனத்திற்கு சுகம் உண்டாகவில்லை. அதனைத் தெரிந்துகொண்டு அசுரர்கள் எல்லோரும் சுக்ராச்சாரியருடைய அனுமதியின்பேரில் மிக்க கர்வத்துடன் தேவர்களுடன் யுத்தஞ் செய்ய முயன்று பாணங்களால் தேவர்களை அடித்தார்கள். அவைகளால் தேவர்களுடைய அவயவங்கள் வெட்டப்பட்டு, தேவர்கள் தலைகுனிந்து மிகுந்த துக்கத்துடன் ப்ரஹ்மதேவரைச் சரணமடைந்தார்கள்.

20–26 அப்பொழுது ப்ரஹ்மதேவர் அசுரர்களால் பீடிக்கப்பட்ட தேவர்களை நோக்கி "ஓ தேவசிரேஷ்டர்களே நீங்களே மிகவும் பாபமான காரியத்தைச் செய்தீர்கள். ப்ரஹ்மத்தை அறிந்தவரும், சாந்தருமான ப்ராஹ்மணனை ஐசுவரிய மதத்தால் லட்சியம் செய்யாமலிருந்தீர்கள். ஓ மகேந்திர! குருவை அலட்சியம் செய்ததால் நீங்கள் குறைந்து போனீர்கள். குறைந்திருந்த அசுரர்கள் சுக்ராசாரியரை ஆராதித்து விருத்தியடைந்திருக்கிறார்கள். நீங்கள் குருவை அலட்சியம் செய்ததால் சத்துருக்களால் அபஜயப்பட்டீர்கள். சுக்ராசாரியரையே தெய்வமாகக் கொண்ட அசுரர்கள் என்னுடைய இடத்தையும் அபகரிப்பார்கள். பிறருக்குத் தெரியாத ஆலோசனையுள்ள சுக்ராசாரியருடைய சிஷ்யர்கள் ஸ்வர்க்கத்தை லட்சியஞ் செய்வார்களா? ப்ராஹ்மணனையும், ஸ்ரீமந் நாராயணனையும், பசுக்களையும் தெய்வமாகக் கொண்டவர்களுக்கு ஒருபொழுதும் கெடுதி நேரிடாது. ஆனதால் நீங்கள் துவஷ்டாவின் புத்திரரும்; இந்திரியங்களை ஜயித்தவருமான விச்வரூபரென்ற ப்ராஹ்மணரைப் புரோகிதராக வைத்துக் கொள்ளுங்கள். அவரைப் பூசித்தீர்களானால் உங்களுக்கு க்ஷேமத்தைச் செய்வார். ஆனால், அவருக்கு அசுரர்களிடத்தில் விசுவாசமுண்டு; அதனை நீங்கள் சகித்துக் கொள்ள வேண்டும்" என்று சொன்னார்.

27–34 அதனைக் கேட்ட தேவர்கள் கவலையற்று துவஷ்டாவின் புத்திரராகிய விச்வரூபரிடம் வந்து அவரை நோக்கி, 'ஓ ப்ராஹ்மணோத்தமா! உம்முடைய ஆசிரமத்திற்கு நாங்கள் அதிதிகளாக வந்திருக்கிறோம். அதிதிகள் பிதிருக்களுக்குச் சமானர்களாகையால்

எங்களுடைய இஷ்டத்தை நிறைவேற்றும். புத்திரர்கள் தாங்கள் புத்திரனுள்ளவர்களாயிருந்தாலும் பிதிருக்களுக்குப் பணிவிடை செய்வதே அவர்களுக்கு மேலான தர்மம். அப்படியிருக்க ப்ரஹ்மசாரிகள் விஷயத்தில் என்ன சந்தேகம்? ஆசாரியன் ப்ராஹ்மணனுக்கு ஸமானன். தகப்பன் பிரஜாபதிக்கு ஸமானன். சகோதரன் மகேந்திரனுக்கு ஸமானன். தாய் பூமிக்கு ஸமமானவள். சகோதரியானவள் தயையின் ஸ்வரூபமானவள். அதிதியானவள் தர்மத்தின் ஸ்வரூபம். அப்யாகதன் (எதிர்பாராமல் வந்தவன்) அக்னியின் ஸ்வரூபம், ஸகல பிராணிகளும், நாராயணனுடைய ஸ்வரூபம் ஆனதால் சத்துருக்களால் அவமதிக்கப்பட்டு உபத்திரவத்தை அடைந்த பிதிருக்களாகிய எங்களுடைய துக்கத்தை தபஸினால் நிவர்த்திக்க வேண்டும். ப்ரஹ்மத்தை அறிந்தவரும் ப்ராஹ்மணருமாகிய நீர் எங்களுக்குப் புரோகிதராக இருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். உம்முடைய தேஜஸ்ஸால் சத்துருக்களை ஜயிக்க விரும்புகிறோம். ஆனால், நீர் எங்களைவிட வயதில் சிறியவரானாலும் உம்மை ஆசாரியராக வரித்து நாங்கள் நமஸ்கரிப்பது நியாய விரோதமல்ல. ஏனென்றால் நீர் வேதத்தை அறிந்த வராகையாலும் மந்திரங்களை எங்களுக்கு உபதேசிப்பவராகையாலும் இந்த விஷயத்தில் வயதில் முதிர்ந்தவர்கள் மூத்தோர்களல்ல" என்று பிரார்த்தித்தார்கள்.

35–41 இதனைக் கேட்ட விச்வரூபர் தேவர்களை நோக்கிச் சிரித்துக் கொண்டு, "தர்மஸ்வபாவமுள்ளவர்கள் புரோகிதராக இருப்பதை நிந்திக்கிறார்கள். புரோகிதராக இருப்பதால் ப்ரஹ்மதேஜஸ் குறைகிறது. ஆனாலும் லோகபாலர்களாகிய நீங்கள் யாசிக்கும்

போது நான் அதனை எப்படிச் செய்யாமலிருப்பேன். உங்களுடைய வார்த்தையை அங்கீரிப்பதே என்னுடைய வேலை. ஓ தேவர்களே! ஏழைகளுக்கு ஸிலம், உஞ்சம் (வயல் முதலியவைகளில் யஜமானன் தான்யங்களை எடுத்துப்போன பின்பு இறைந்திருப்பதைப் பொறுக்கிக் கொள்வது ஸிலம். ஹட்டம் முதலிய இடங்களில் இறைந்து கிடக்கும் தான்யங்களையெடுத்துக் கொள்வது உஞ்சம்) இவைகளே பணம் அவைகளைக் கொண்டு நற்காரியங்களை ஸாதுக்கள் செய்வார்கள். புரோகிதராக இருப்பது நிந்திக்கக் கூடியதாகையால் அதனால் அற்ப புத்தியுள்ளவன் சந்தோஷப்படுவான். அந்தக் கெட்ட காரியத்தை நான் எப்படிச் செய்வேன். ஆனாலும் பெரியோர்களான நீங்கள் கேட்டுக் கொள்வதால் அதனை எப்படித் தடுத்துச் சொல்வேன். உங்களுடைய காரியங்களைப் பிராணனைக் கொண்டும், அர்த்தத்தாலும் செய்கிறேன்" என்று சமாதானஞ் செய்து மிகுந்த தபஸ்வியான விச்வரூபர் மிக்க முயற்சியுள்ளவராகித் தேவர்களுக்குப் புரோகிதராய் இருந்தார். மேலுமவர் சுக்ராசாரியருடைய ஸாமர்த்யத்தால் அசுரர்களிடத்திலிருந்து தேவராஜ்ஜியத்தை விஷ்ணு சம்பந்தமான வித்தையைக் கொண்டு (நாராயண கவசம்) இந்திரனிடம் திருப்பிக் கொடுத்தார். அந்த வித்தையினால் முன் ஒருக்கால் இந்திரன் காப்பாற்றப்பட்டு அசுர சைன்யங்களை ஜயித்தார். அதனை இப்பொழுது மிகுந்த புத்திசாலியாகிய விஸ்வரூபர் மகேந்திரனுக்கு உபதேசித்தார்.

அத்தியாயம்–8

நாராயண கவசம்

1–2. அதனைக் கேட்ட அரசர் மகரிஷியை நோக்கி. "ஓ பகவான்! எந்த நாராயண கவசத்தால் மகேந்திரன் எதிர்த்து வரும் சத்துரு சைந்நியங்களை ஜயித்து மூவுலகத்தின் ராஜ்ஜியத்தை அனுபவித் தாரோ, அந்த நாராயண கவசத்தைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

3–42. அதனை கேட்ட சுகர் அரசரை நோக்கி தேவர்களுக்கு புரோகிதராகிய விச்வரூபர் மகேந்திரனுக்கு உபதேசித்த நாராயண கவசத்தைச், சொல்லுகிறேன்; கவனமாகச் கேளும். கால் கைகளை அலம்பி, ஆசமனஞ் செய்து, சுத்தராக வடக்கு முகமாக உட்கார்ந்து அங்கந்யாஸ கரந்யாஸங்களைச் செய்துகொண்டு ஆபத்து வந்த காலத்தில் நாராயண கவசத்தை ஆரம்பிக்கவேண்டும். கால்களிலும், முழங்கால்களிலும். தொடைகளிலும், வயிற்றிலும், ஹிருதயத்திலும், உரஸிலும், முகத்திலும், சிரஸிலும் அஷ்டாக்ஷர மந்திரத்தால் கிரமமாகவாவது, மாறுதலாகவாவது அங்கந்யாஸஞ் செய்யவேண்டும். பின்பு பிரணவம் முதல் யகாரம் வரையில் துவாதசாக்ஷரி வித்தையால் விரல்களின் கணுக்களில் கரந்யாஸஞ் செய்யவேண்டும். ஹிருதயத்தில் ஓங்காரத்தையும், வி என்பதை சிரஸிலும், ஷகாரத்தை புருவங்களின் மத்யத்திலும் நகாரத்தை சிகையிலும், வேகாரத்தை நேத்ரங்களிலும் நகாரத்தை ஸந்திகளிலும் (மணிகட்டு முதலியவை), மகாரத்தை ஆஸ்த்ரமாகவும், தியானஞ் செய்துகொண்டவன்

மந்திர சரீரமுள்ளவனாக ஆகிறான். விஸர்க்கத்துடன் பட் என்பதைக் கடைசியாக வைத்துக்கொண்டு ஸகல திக்குகளிலும் தியானிக்கவேண்டும். விஷ்ணுவிற்கு நமஸ்காரம் என்று சொல்லி ஐசுவரியம் முதலிய ஆறு சக்திகளுடன் கூடினவரும், வித்தை, தேஜஸ், தபஸ் இவைகளின் ஸ்வரூபியுமான பகவானைத் தியானஞ் செய்யவேண்டும். மேலும் பின்வரும் மந்திரத்தையும் உச்சரிக்கவேண்டும். கருடன் மீது வீற்றிருப்பவரும்; சங்கம் சக்கரம், கதாயுதம்' கத்தி பாணம், வில், பாசம் இவைகளை எட்டுக் கைகளால் தரிப்பவரும் அணிமா முதலிய அஷ்ட ஐசுவரியமுள்ளவருமான ஸ்ரீ நாராயணன் என்னை எப்பொழுதும் எவ்விடத்திலும், காப்பாற்றட்டும். மத்ஸ்ய சரீரமுள்ள பகவான் ஜல ஜந்துக்கள். வருண பாசம் ஆகிய இவைகளிருந்து என்னை ரட்சிக்கட்டும். வாமன சரீரமுள்ளபகவான் நிலத்தில் என்னை சம்ரட்சிக்கட்டும் திருவிக்கரம சரீரமுள்ள பகவான் ஆகாசத்தில் என்னை ரட்சிக் கட்டும். அசுரசிரேஷ்டர்களுக்குச் சத்ருவான நரஸிம்ம மூர்த்தியானவர் வனம், சண்டை முதலிய துர்க்கமான இடங்களில் என்னைக் காப்பாற்றட்டும். அவர் அட்டகாசம் செய்தபோது திக்குகளில் எதிரொலி உண்டாயின; கர்ப்பங்கள் கலங்கி விழுந்தன. யஞ வராகமாக அவதரித்துத் தம்முடைய சிங்கப்பற்களால் பூமியைப் பாதாளத்திலிருந்து கொண்டு வந்த பகவான், மார்க்கத்தில் சம்ரட்சிக்கட்டும். பரதனுக்குத் தமைய னாகிய ராமன் லக்ஷ்மணனுடன் மலையில் சிகரங் களிலும், தேசாந்திரத்திலும் என்னைக் காப்பாற்றட்டும். நாரயணரூபியான பகவான் ஆபிசார கர்மத்திலிருந்து என்னை ரக்ஷிக்கட்டும். தத்தாத்ரேயராக அவதரித்த பகவான் யோகப்ரம்மத்திலிருந்து (யோகாப்யா

ஸத்திலிருந்து தவறுவது) காப்பாற்றட்டும். கபிலாவதா ரஞ்செய்த பகவான் கர்மபந்தத்தை நிவர்த்திக்கட்டும் ஸனத்குமா ரூபியான பகவான் மன்மதனிடத்திலிருந்து ரட்சிக்கட்டும். ஹயக்ரீவர் மார்க்கத்தில் தேவர்களுக்குச் செய்த அபராதத்திலிருந்து (வழி நடப்பதற்கு முன் தேவர்களை நமஸ்கரிக்காமல் செல்வது தேவர்களை அவமதித்ததாகும்) காப்பாற்றப்படும் நாரத ரூபியான பகவான் மகாவிஷ்ணுவின் ஆராதனத்தில் நேரும் முப்பத்திரண்டு அபராதத்திலிருந்து காப்பாற்றட்டும் கூர்ம ரூபியான பகவான் ஸகல துக்கங்களிருந்தும் சம்ரட்சிக்கட்டும். தன் வந்திரியானவர் அபத்யத்திலி ருந்தும் மனத்தை ஜயித்தவரான ரிஷபதேவர் சுக துக்கத்தாலுண்டாகும் பயத்திலிருந்தும் காப்பாற் றட்டும். யஜ்ஞராக அவதரித்த பகவான் ஜனங் களுடைய அபராதத்திலிருந்து ரக்ஷிக்கட்டும், பலராமன் ஜனங்களால் செய்யப்படும் உபத்ரவத்திலிருந்து காப்பாற்றட்டும். ஆதிசேஷன் கோபஸ்வபாவமுள்ள ஸர்ப்பங்களிலிருந்து சம்ரட்சிக்கட்டும். வியாச பகவான் மோகத்திலிருந்து புத்தர் பாஷண்டர்களிடமிருந்தே, தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக அவதரித்த கல்கி யானவர் கலியின் மகிமையாலுண்டான பிரமாதத்திலி ருந்தும் சம்ரட்சிக்கட்டும். கேசவன் கையில் கதா யுதத்தைக் கொண்டு என்னை ரட்சிக்கட்டும். புல்லாங் குழல் கொண்டிருக்கும் கோவிந்தர் ஸங்கவகாலம் வரையிலும்' கம்பீர சக்தியுள்ள நாராயணன் பன்னிரண்டு நாழிகை வரையிலும், சக்ரபாணியாகிய பகவான் மத்யான காலத்திலும், மிக்க கடுமையான வில்லைத் தரித்தவரும், மது என்ற அசுரனை கொன்றவருமான பகவான் அபரான்ன காலத்திலும் மூன்று சரீரமுள்ள மாதவன் ஸாயங்காலத்திலும் ஸ்ரீ வத்ஸத்தைத் தரித்த

பகவான் விடியற்காலத்திலும் என்னைக்காப்பாற்றட்டும். பகவானால் பிரயோகிக்கப்பட்டதும், கூர்மையான முனையுள்ளதும், நாலு பக்கமும் சுற்றிக்கொண்டிருப்ப துமான சக்ரமானது காற்றுடன் கூடிய அக்னி புதரை எரிப்பது போல சத்துரு சைனியத்தை எரிக் கட்டும். வஜ்ராயுதம்போல கெட்டியாயும், நெருப்புப் பொறிகளில்லாததும், பகவானுக்கு மிக்க பிரியமான ஓ கதையே! கூச்மாண்டங்கள், விநாயகங்கள், யக்ஷர்கள், ரக்ஷஸ்ஸுக்கள், பூதங்கள், கிரகங்கள் ஆகிய சத்துருக் களைச் சூர்ணமாக்கும்! நாசஞ்செய்யும், பயங்கரமாகிய சப்தமுள்ள ஓ சங்கமே; நீ யாது தூதர்கள், பிரமத கணங்கள், பிரேதங்கள் மாதிரு கணங்கள், பிசாசங்கள், ப்ரஹ்மராக்ஷஸர்கள் முதலிய கோர ஸ்வபாவமுள்ள வர்கள் பயப்படச் செய்ய ஈச்வரனால் பிரயோகிக்கப் பட்ட கூர்மையான முனையுள்ள ஓ கத்தியே! என் னுடைய சத்துரு சைனியத்தை நாசஞ்செய். அநேக சந்திரன் போன்ற அடையாளமுள்ள ஓ கேடகமே! உக்கிரமான பார்வையுள்ள சத்துருக்களின் கண்களை மறைந்துவிட்ட கிரஹங்கள், கேதுக்கள், மனிதர்கள், மலைபாம்புகள், புலி முதலிய ஜந்துக்கள், பூதங்கள், பாபிகள் ஆகிய சூக்ஷம விரோதிகளான இவர்களி டத்திலிருந்து எனக்கு உண்டாகும். பயமானது, பகவானுடைய நாமமாகிய அஸ்திரத்தைச் சொல்வதால் நசிக்கட்டும். பகவானுக்கு வாகனமும், ரதந்தரம் முதலிய ஸாமங்களால் துதிக்கப்பட்டவரும் வேதமூர்த்தி யுமாகிய கருட பகவான் எல்லாக் கஷ்டத்திலிருந்து என்னை சம்ரட்சிக்கட்டும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் நாமதேயம், வாகன ஆயுதம் முதலியவைகள் எல்லா ஆபத்திலிருந்தும் காப்பாற்றட்டும். பகவானுடைய பார்ஷதர்களுக்குட் சிறந்தவர்கள் புத்தி, இந்திரியங்கள்,

மனம், ப்ராஹ்மணன் ஆகிய இவைகளை ரட்சிக் கட்டும், உண்மையில் மூர்த்தம்' அமூர்த்தாகிய இந்த ஜகத் முழுவதும் பகவத் ஸ்வரூபமாகையால் அந்த ஸத்யத்தால் எல்லா உபத்திரவகளும் நசிக்கட்டும். எல்லாவற்றையும் பகவத் ஸ்வரூபமாகப் பாவிப்பவர் களுக்கு விகற்பமற்வராகத் தோன்றும். பகவான் தம்முடைய மாயையால் ஆபரணம், ஆயுதம், அடை யாளம் முதலிய சக்திகளைத் தரிக்கிறார். ஸகல ஸ்வரூபியும், எப்பொழுதும் எங்கும் இருப்பவரும், எல்லாவற்றையும் அறிந்தவருமாகிய மகாவிஷ்ணு உண்மையான அந்தப் பிரமாணத்தைக் கொண்டு என்னை ரக்ஷிக்கட்டும் நரஸிங்க மூர்த்தியான பகவான் திக்குகளிலும் விதிக்குகளிலும்' மேலும் கீழும், உள்ளும், வெளியிலும் நாலு பக்கத்திலும் தம்முடைய கர்ஜித்தலால் பயத்தைப் போக்கடிக்கட்டும்" என்று விசுவரூபன் நாராயண கவசத்தை மகேந்திரனுக்கு உபதேசித்து "மகேந்திர! இந்த கவசத்தை ஜபித்துக் கொண்டு எவனைப் பார்க்கிறாயோ, எவனைக் காலால் தொடுகிறாயோ அவனுக்கும் பயம் நேரிடாது, இந்த வித்தையைத் தரிப்பவனுக்கு அசுரர்கள், திருடர்கள், வியாதி, கிரகங்கள் முதலிய ஓரிடத்திலும் பயமில்லை, முன்னோருகால் குசிக வம்சத்தில் பிறந்த ஒரு ப்ராஹ்மணர் ஜலமில்லாத காட்டில் இந்தக் கவசத்தை ஜபித்து யோக மகிமையால் சரீரத்தை விட்டார். பின்பு கந்தர்வர்களுக்கதிபதியான சித்ரரதன் ஸ்திரீ களுடன் விமானத்தின் மீதேறி அந்தப் ப்ராஹ்மணன் மரணமடைந்த இடத்திற்கு மேலாகச் சென்றான். அப்பொழுது விமானத்துடன் தலை கீழாகப் பூமியில் விழுந்தான். பிறகு அவன் வாலகில்யர்களுடைய உபதேசத்தால் அந்தப் ப்ராஹ்மணருடைய எலும்புகளை ஸரஸ்வதி நதியில் போட்டு ஸ்நானஞ் செய்து

தன்னுடைய லோகஞ் சென்றான். எவன் இதனைக் கேட்கிறானோ, ஆதரவுடன் தரிக்கிறானோ. அவனை ஸகல பிராணிகளும் நமஸ்கரிக்கிறார்கள். அவன் ஸகல பயத்திலிருந்தும் நிவர்த்தி அடைகிறான்" ஓ மஹாராஜ! விச்வரூபரால் உபதேசிக்கப்பட்ட இந்த வித்தயை மகேந்திரன் அடைந்து, அசுரர்களை ஜயித்து, மூன்று லோகங்களையும் அனுபவித்தார்.

குறிப்பு

முப்பத்திரண்டு – தேவாலயத்தில் பாதுகையைத் தரித்துக் கொண்டாவது, வாகனத்தின் மீதேறியாவது செல்வது பகவானுடைய ஸன்னதியில் தவறுதல் செய்வது, அசுத்தனாக இருக்கும்போதும் பகவானை நமஸ்கரிப்பது; ஒரு கையால் நமஸ்கரிப்பது, பின்பிரதக்ஷிணஞ்செய்வது, ஸன்னதியில் கால் நீட்டுவது, கட்டில் முதலியவை களைப் போட்டுக்கொள்வது, படுத்துக்கொள்ளுவது, போஜனஞ்செய்வது, பொய் சொல்வது, உரக்கப் பேசுவது, ஒருவருக்கொருவர் சண்டை செய்வது, அழுவது, நிக்ர ஹிப்பது, அனுக்ரஹிப்பது, ஸ்திரீகளையும் மனிதர் களையும், நிஷ்டூரமாகப் பேசுவது, கம்பளம் போர்த்துக் கொள்வது, பிறரை நிந்திப்பது, பிறரைத் துதிப்பது அமங்கள வார்த்தையைச் சொல்வது, அபானவாயுவை விடுவது, சக்தியிருக்கும்பொழுது சொற்ப உபகாரஞ் செய்வது, நிவேதனஞ் செய்யப்படாததைப் புஜிப்பது, அந்த அந்தக் காலத்திலுண்டான பழங்கள் முதலிய வைகளைப் பகவானுக்கு நிவேதனஞ் செய்யாமலி ருப்பது, நிவேதனம் பண்ணி பாக்கியான வியஞ் சனத்தைப் பிறருக்குக் கொடுப்பது, பின் காட்டி உட் காருவது. தகாதவர்களை நமஸ்கரிப்பது, ஆசாரியனை துதிக்காமல் தன்னை புகழ்ந்துக் கொள்ளுவது, தேவதைகளை நிந்திப்பதுமாகியவைகள். – நாரதர்.

அத்தியாய–9

விஸ்வரூப வதம்

1–10 அந்த விஸ்வரூபருக்கு ஸோமபீதம், ஸுராபீதம் அந்நாதமென்ற மூன்று தலைகளுண்டென்று கேள்விப் பட்டிருக்கிறோம். அவர் யக்ஞத்தில் 'இது இந்திரனுக்கு, இது அக்னிக்கு' என்று வணக்கத்துடன் ஹவிர்ப் பாகத்தைத் தேவர்களுக்குச் சொன்னார். ஏனென்றால், தேவர்கள் அவருக்குப் பிதிருக்கள். ஆனாலும் அவர் மாதிரு சிநேகத்தால் தேவர்களுக்குத் தெரியாமலேயே அசுரர்களுக்குப் பாகத்தைக் கொடுத்து வந்தார். தேவர் களை அவமதிப்பதாகிய அவருடைய தலையை வெட்டினார். ஸோமபீதமென்ற அவருடைய சிரஸானது கபிஞ்ஜலமாயிற்று. ஸுராபீதமென்றது கலவிங்கமாயிற்று. அந்த நாதமானது தித்திரியாயிற்று. மகேந்திரன் விஸ்வரூபரைக் கொன்றதால் நேர்ந்த ப்ரஹ்மஹத்தியை நிவர்த்தித்துக் கொள்ளும் சாமர்த்தியமுள்ள வரானா லும் அதனை அஞ்சலியால் பெற்றுக் கொண்டார். ஒரு வருஷத்திற்குப் பிறகு லோக அபவாதத்தை நிவர்த்திப்பதற்காகப் பூமி, ஜலம், மரம், ஸ்தீரிகள் ஆகிய இவர்களிடத்தில் நான்கு வகையாகப் பிரித்துக் கொடுத்தார். பூமியானவள் வெட்டின இடம் திரும்பவும் பூர்த்தியாகும்படி வரத்தைப் பெற்றுக் கொண்டாள். அந்த ப்ரஹ்மஹத்தியின் ஸ்வரூபமானது ஊஷா பூமியாக இருக்கிறது. (களர் நிலம்). மரங்களும் வெட்டின. அவயவங்கள் திரும்பவும் முளைக்க வேண்டு மென்ற வரத்தைப் பெற்றுக்கொண்டு, தோஷத்தின் நாலில் ஒரு பாகத்தைப் பெற்றுக் கொண்டன. அவைகளில் இந்த தோஷமானது பிசினாகக்

காணப்படுகிறது. ஸ்திரீகள் பிரசவிக்கிறவரையில் புருஷனுடைய ஸம்போகம் இருக்க வேண்டும் என்ற வரத்தைக் கேட்டுக் கொண்டு, அந்தத் தோஷத்தின் நான்கிலொரு பாகத்தைப் பெற்றுக்கொண்டார்கள். அந்தத் தோஷமானது ஒவ்வொரு மாதத்திலும் ரஜஸ்ஸாகக் காணப்படுகிறது. ஜலமானது தான் பால் முதலிய திரவியங்களில் சேர்ந்து மிகுதியாக ஆகவேண்டுமென்ற வரத்தைப் பெற்றுக் கொண்டு அந்தத் தோஷத்தைக் கிரகித்துக் கொண்டது. அந்த ஜலத்தில் காணப்படும் குமிழ், நுரை ஆகிய இவை களே அந்தத் தோஷத்தின் ஸ்வரூபங்களாம்.

11–19 பிறகு துவஷ்டாவானவர் புத்திரசோகம் உள்ளவராகிச் சத்துருவாகிய இந்திரனைக் கொல்ல விரும்பி, 'இந்திரனுக்குச் சத்துருவாக விருத்தியடை' என்ற அர்த்தமுள்ள வாக்கியத்தை உச்சரித்து ஹோமஞ் செய்தார். அப்பொழுது தக்ஷிணாக்னியிலிருந்து ஒருவன் உண்டானான். அவன் பயங்கரமான பார்வையுள்ளவன், பிரளய காலத்திய யமன்போன்றவன் ஒவ்வொரு நாளும் நான்கு பக்கத்திலும் ஒரு விற்கடை தூரம் விருத்தி யடையும் சரீரமுள்ளவன். நெருப்பினால் எரிக்கப்பட்ட மலை போன்றவன்; ஸந்தியாகால மேகம் போன்ற காந்தியுள்ளவன்; நெருப்பில் காய்ச்சப்பட்ட தாமிரம் போன்ற தலைமயிர், மீசை இவைகளுள்ளவன். மேலும், அவனுடைய கண்கள் மத்யான்ன சூரியன் போல உக்கிரமாயிருக்கின்றன; அவனுடைய முச்சூலமானது ஆகாசம், பூமி இவைகளை வியாபித்திருக்கிறது. மேலுமவன் நர்த்தனம் பண்ணிக்கொண்டும், கர்ஜித்துக் கொண்டுமிருக்கிறான். மேலும் அவனுடைய அடிவைப் பினால் பூமி அசைகின்றது; அவனுடைய முகமானது

மலையின் குகைபோல் இருப்பதால் ஆகாசத்தை விழுங்குகிறவன்போலும், நாக்கினால் நட்சத்திரங்களை நக்குகிறவன்போலும் மூன்று லோகத்தையும் பட்சிக் கிறவன் போலும் பிரகாசித்தான். மேலுமவன் பயங்கர மாகிய சிங்கப்பற்களுள்ளவன்; அடிக்கடி கொட்டாவி விடுகிறவன். அவனைக் கண்டு ஸகல ஜனங்களும் பயந்து பத்துத் திக்குகளிலும் ஓடினார்கள். அவனுக்கு விருத்ரன் என்று பெயர் விளங்கிற்று. அவனைக் கண்ட தேவர்கள் தங்கள் தங்களுடைய திவ்யமான அஸ்திரங்களாலும், ஆயுதங்களாலும் அவனை அடித் தார்கள். அவன் அவை யாவையும் விழுங்கினான். பிறகு அதனைக் கண்ட தேவர்கள் ஆச்சரியம்; துக்கம் இவைகளை அடைந்து, அந்தர்யாமியும் ஆதிபுருஷனு மாகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவைப் பின்வருமாறு தோத்திரஞ் செய்தார்கள்.

20–41 "வாயு, ஆகாசம், அக்னி, ஜலம், பூமி ஆகிய ஐந்து பூதங்களும்; மூன்று லோகங்களும் ப்ரஹ்மா முதலிய நாங்களும் எவருடைய ஆக்ஞையை அனுசரிக்கிறோமோ இந்த யமனும் எவரிடத்தில் பயப்படுகிறானோ அவரைச் சரணமடைகிறோம். அந்தப் பகவான் அகங்காரமற்றவர்; சாந்தர்; ஆத்ம லாபத்தாலேயே பூர்ணர்; உற்பத்தியற்றவர்; அப்படிப் பட்ட பரமேசுவரனை விட்டு மற்றவர்களை எவன் சரணமடைகிறானோ, அவன் அடன். நாயின் வாலைக் கொண்டு சமுத்திரத்தைத் தாண்ட விரும்பினவனுக்குச் சமமானவன்.எவருடைய பெரியதான சிங்கத்தில் ஓடம் போன்ற பூமியைக் கட்டி மனுவானவர் சங்கடங்களை நிவர்த்தித்துக் கொண்டாரோ, அந்த மத்ஸ்யமூர்த்தி யாகிய பகவான் அந்த விருத்ராசுரனிடத்தில் நேர்ந்த

பயத்திலிருந்து நம்மைக் காப்பாற்றட்டும். கடுமையான காற்றுகளால் பயங்கரமான பிரளய ஜலத்தில் தொப்புளி லிருக்கும் தாமரைப் புஷ்பத்திலிருந்து விழுந்த ப்ரஹ்ம தேவர் எவருடைய ஒத்தாசையால் அந்தப் பயத்திலி ருந்து க்ஷேமத்தை அடைந்தாரோ, அவர் நம்மைக் காப்பாற்றட்டும். எந்தப் பகவான் ஒருவராயிருந்தும் தம்முடைய மாயையைக் கொண்டு எங்களைச் சிருஷ் டித்தாரோ, எவரால் அனுக்ரகிக்கப்பட்ட நாங்கள் ஜகத்தைச் சிருஷ்டிக்கிறோமோ, அவர் எங்களுக்கு முந்தியே அந்தர்யாமியாக இருப்பதால் தனித்தனி ஈசுவரனென்ற அபிமானமுள்ள நாங்கள் அவருடைய ஸ்வரூபத்தைத்தெரிந்து கொள்ளவில்லை. மேலும், அவர் தேவர்கள், ரிஷிகள் திர்யக்ஜாதி, மனிதர் ஆகிய இவைகளில் தம்முடைய மாயையைக் கொண்டு அவதரித்து ஒவ்வொரு யுகத்திலும் சத்துருக்களால் பீடிக்கப்படும் எங்களைச் சம்ரட்சிக்கிறார். ஆனதால் ஆத்மாவும், தேவதையும், ஜகத்ரூபியும், ஜகத் காரணரும், மாயையின் ஸ்வரூபியும், சரணமடையக் கூடியவருமான அந்தப் புருஷனைச் சரணமடைகிறோம். அவர் பக்தர்களான நமக்கு க்ஷேமத்தைச் செய்வார்" என்று தேவர்கள் தோத்திரஞ் செய்தார்கள். அப்பொழுது தேவர்களுக்கு முன்பாக மேற்குத் திக்கில் சங்கம், சக்கரம், கதை முதலியவைகளைத் தரித்தவரும், ஸ்ரீவத்ஸம், கௌஸ்துபம் தவிர மற்ற ஆபரணங்களால் தமக்குச் சமானர்களான ஸுனந்தர் முதலியவர்களால் சேவிக்கப்பட்டவருமான ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் பிரகாசித்தார். சரத்காலத்திய தாமரை மலர் போன்ற கண்கள் உள்ள அந்தப் பகவானைத் தரிசித்து மிகவும் சந்தோஷமடைந்த தேவர்கள் பூமியில் தண்டம்போல் விழுந்து எழுந்திருந்து அந்தப் பகவானை நோக்கி,

யக்ஞத்தை வீர்யமாக உடையவரும், காலரூபியும், அசுரர்களிடத்தில் சக்கரத்தைப் பிரயோகிப்பவரும், அழகான அநேக திவ்ய நாமங்களுள்ளவருமான உமக்கு நமஸ்காரம். முக்குணங்களுக்குக் கதிபதியான உம்முடைய நிர்க்குண ஸ்வரூபத்தை உம்மால் சிருஷ்டிக்கப்பட்டவன் அறிய மாட்டான். அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம். ஓ பகவன்! நாராயண! வாஸுதேவ! எல்லாவற்றிற்கும் முந்தியவரே! மிகுந்த மஹாத்மியமுள்ளவரே! மிகுந்த மங்களகரமுள்ளவரே! மிகுந்த தபஸுள்ளவரே! பரமஹம்ஸர்களான சந்நியாசிகள் சித்தத்தை அடக்கி, பகவானை ஸேவிப்பதாகிய தர்மத்தை அனுஷ்டித்து. அதனால் தமோ குணமாகிய கதவைத் திறந்து, சுத்தமாகிய சித்தத்தில் பிரத்யக்ஷ ரூபமாய்ப் பிரகாசிக்கும் எந்தச் சுகத்தை அனுபவிக்கிறார்களோ, அந்த அனுபவம் நீரே. உம்முடைய விளையாட்டானது ஒருவராலும் அறிய முடியாதது. நீர் எல்லாவற்றிற்கும் ஆதாரமேயொழிய உமக்கு ஆதாரமொன்றுமில்லை. மேலும் நீர் சரீரமற்றவர்; குணங்களற்றவர்; அப்படியிருந்தும் எங்களுடைய ஒத்தாசையை எதிர்பாராமல் ஸகுணமான ஜகத்தைத் தாமே சிருஷ்டிக்கிறீர் காப்பாற்றுகிறீர்; நாசஞ் செய்கிறீர் ஜனங்கள் வீடு முதலானவைகளைக் கட்டி அதில் வசித்துக் கொண்டு தங்களுடைய புண்ணிய பாவத்தின் பலனை எப்படி அனுபவிக்கிறார்களோ, அப்படி நீர் ப்ரஹ்ம ரூபியானாலும், ஜீவ ரூபியாக ஸம்ஸாரத்தை அடைந்து சுக துக்கங்களை அனுபவிக்கிறீரா? அல்லது ஆத்மா ராமராக இருந்து சாட்சியாக இருக்கிறீரா என்பது எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் மேற்சொல்லிய இரண்டு வகையும் உம்மிடத்தில் பொருந்தும். நீர் அளவற்ற குணங்களுள்ளவர்;

சுதந்திரர்; விகற்பம், விதர்க்கம், விகாரம் என்ற பிரமாண ஆபாஸங்கள், அவற்றிற்கு உதவியான குதர்க்கம் இவைகளின் நிரூபிக்கும் சாஸ்திரங்களால் கலங்கிய அந்தக் கரணமுள்ளவர்களும், துர் அபிமானமுள்ளவர்களுமான வாதிகளுடைய விவாதத்திற்கு எட்டாதவரும் ஸம்ஸாரமற்றவரும், சித்ரூபியாயுமிருக்கிற ஸ்வரூபத்தில் மாயையைக் கொண்டு எது தான் பொருந்தாது? இரண்டு வகையான சபையில்லாதினால் சம்பூத்தியுள்ளவர்களும், விஷம புத்தியுள்ளவர்களுமான ஜனங்களுடைய அபிப்பராயப்படி மாயையால் அனுக்கிரகமாவது, நிக்ரகமாவது உம்மிடத்தில் தோன்றுகிறது. கயிற்றைப் பார்த்து ஸர்பமென்று நினைத்தவன் பயத்தை அடைகிறான்; அதனைக் கயிறென்றே நினைத்தவன் பயத்தை அடைகிறதில்லை. எல்லா வஸ்துக்களிலும் பலவகையாகத் தோன்றுகிறவரும், ஸத்ரூபியும், எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்கிறவருமான அவர் ஒருவரே என்று வேதத்தால் நிஷேத முகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஓ மது என்ற அசுரனைக் கொன்றவரே! புருஷார்த்தத்தை அடைவதில் ஸமர்த்தர்களும், உம்மையே பிரியமாஹிருத்தாகக் கொண்டவர்களுமான ஸாதுக்கள் உம்முடைய பாதாரவிந்த ஸேவையை விடுவார்களா? உம்முடைய பாதாரவிந்தத்தை ஸேவித்தவன் திரும்பவும் ஸம்ஸாரத்தை அடையமாட்டான். உம்முடைய மகிமையாகிற அமிருத ரஸத்தால் நிறைந்த ஸமுத்திரத்தின் ஜலத்துளியை ஒரு தடவை பானஞ்செய்து அதனால் விஷய சுகங்களை மறந்த பரமபாகவதர்கள் ஸகல பிராணிகளுக்கு ஸுஹிருத்தும், ஸகல ரூபியுமான உம்மையே தியானஞ் செய்து ஆனந்தத்தை அடைகிறார்கள். மேலும் நீர், மூன்று லோகங்களையும்

ஸ்வரூபமாகவும், வீடாகவும் வைத்துக் கொண்டிருக்கிறீர். மூன்று பாதங்களுள்ளவர்; மூன்று லோகங்களையும் காப்பாற்றுகிறவர். மூன்று உலகங்களாலும் கொண்டாடக்கூடிய மகிமையுள்ளவர்; தேவர்களும், அசுரர்களும், மனிதர்களும் உம்முடைய விபூதிகளேயாம். அவர்கள் முயற்சிக்கக்கூடிய காலம் இது அல்லவென்று நினைத்துத் தம்முடைய மாயையால் தேவனாகவும், மனிதனாகவும், நரஸிம்மமாகவும், ஜலஜந்துவாகவும் அவதரித்து அவரவர்களுடைய அபாராதத்திற்குத் தக்கபடி சிட்சையைச் செய்தீர். அப்படியே இந்த விருத்திராசுரனையும் கொல்லும். ஓ பகவன்! உமக்கு இஷ்டமிருக்குமானால் உம்மைச் சார்ந்தவர்களும், உம்முடைய பாதாரவிந்தத்தைத் தியானஞ் செய்து கொண்டிருப்பவர்களுமான எங்களுக்கு உம்முடைய ஸ்வரூபத்தைப் பிரகாசப்படுத்தி தயையுள்ளதும், அனுராகத்தால் நிறைந்ததும், அழகானதும், குளிர்ந்ததுமான பார்வையாலும், இனிமையான அமிர்தம் போன்ற வார்த்தையாலும் தாபத்தைப் போக்கடிக்க வேண்டும். ஓ பகவன் ஸகல ஜகத்தைப் படைப்பது, ஸம்ரக்ஷிப்பது, நாசஞ் செய்வது இவைகளில் உம்முடைய மாயை காரணமாயிருக்கிறது. மேலும் நீர் ஸகல பிராணிகளுடைய ஹிருதய குகையில் ப்ரஹ்ம ஸ்வரூபியாயும், அந்தர்யாமியாயும் தேகத்தின் இருப்பு இதற்குத் தக்கபடி அவைகளுக்கு உபாதான காரணமாகவும், உபலம்பகமாகவும் இருக்கிறீர். ஸகல புத்திக்கும் சாட்சியாகவும், ஆகாசம் போன்ற சரீரமுள்ளவரும், ஸாக்ஷாத் பரப்ரஹ்மமாகவும் இருக்கிறீர். அப்படிப்பட்ட பரமாத்மாவாகிய உம்மிடத்தில் எங்களால் சொல்லிக் கொள்ளக்கூடியது என்ன இருக்கிறது? எல்லாம் தங்களுக்குத் தெரிந்த விஷயமே. அக்னிக்கு அதன் பொரிகள் பிரகாசத்தை

உண்டுபண்ணுமா? ஆனதால் பகவானும், பரமகுருவுமான உம்முடைய பாதச் சாயையை நாங்கள் எதற்காக ஆசிரயித்திருக்கிறோமோ, அதனைப் பூர்த்தி செய்யும். அந்தப் பாதச் சாயையானது பலவகையான துக்கத்தைக் கொடுக்கும். சம்ஸார சிரமத்தை நிவர்த்திக்கக் கூடியது. ஈசுவரா! இந்த விருத்திரனால் எங்களுடைய தேஜசும், அஸ்திரங்களும், ஆயுதங்களும் விழுங்கப்பட்டன. அந்த விருத்திரனைக் கொல்லும் ஹம்ஸரும், ஸகல பிராணிகளுடைய ஹிருதயத்தில் வசிப்பவரும், சாட்சியும், கீர்த்தியுள்ளவரும், சுத்தரும், ஆதியற்றவரும், ஆனந்த ரூபியும், சாதுக்களால் சேவிக்கப்பட்டவரும், ஸம்சாரமாகிய மார்க்கத்தில் கஷ்டப்படுவோர்களைக் காப்பாற்றுபவருமான உமக்கு நமஸ்காரம்".

42–51 இப்படி தேவர்களால் துதிக்கப்பட்ட ஸ்ரீ மகாவிஷ்ணு அவர்களை நோக்கி, "ஓ தேவ சிரேஷ்டர்களே! உங்களுடையை ஸ்தோத்திரத்தால் நான் பிரீதி அடைந்தேன். உங்களால் செய்யப்பட்ட ஸ்தோத்திரத்தால் ஸம்ஸாரம் நிவர்த்தி, பகவானுடைய ஸ்மரணம், பக்தி இவைகள் உண்டாகின்றன. ஏ தேவர்களே! நான் சந்தோஷம் அடைந்தால் எதுதான் கிடைக்காது? ஆனால் என்னிடத்திலேயே மனதைச் செலுத்தியவன் வேறு ஒன்றையும் யாசிக்கமாட்டான். விஷயங்களை விரும்பும் அவனுக்கு அவனைப் போலிருப்பவன் அவைகளைக் கொடுப்பான். வித்துவானாக இருப்பவன் மூடனுக்குக் கர்மத்தை க்ஷேமகர மென்று சொல்லமாட்டான். ரோகமுள்ளவன் அபத்தியமான வஸ்துவை விரும்பினாலும் சிறந்த வைத்தியன் அதனைக் கொடுக்கமாட்டான். ஓ மகேந்திர! நீங்கள் தத்யக் என்ற மகரிஷி (ததீசி) யினிடம் சென்று வித்தையாலும், விரதத்தாலும்,

தவத்தினாலும் கெட்டியான அவருடைய சரீரத்தைக் கொடுக்கும்படி பிரார்த்தியுங்கள். அந்த மகரிஷி சுத்தமான ப்ரஹ்மத்தை அறிந்தவர். அசுவசிரஸ் என்ற பெயருள்ள நாராயண கவசத்தை அசுவினி தேவர் களுக்கு உபதேசஞ் செய்து அவர்களைத் தேவர்களாகச் செய்தார். பின்னும் அவர் துவஷ்டாவுக்கு அதனை உபதேசித்தார். துவஷ்டா விஸ்வரூபருக்குச் சொன்னார். விஸ்வபரிடமிருந்து நீ பெற்றுக் கொண்டாய். அந்த மகரிஷியை அசுவினி தேவர்களும் நீங்களும் யாசித்தீர் களானால் உங்களுக்குத் தமது சரீரத்தைக் கொடுப்பார். அவருடைய எலும்புகளால் விசுவகர்மா ஆயுதத்தைச் செய்வான். அந்த ஆயுதங் கொண்டு என்னுடைய தேஜஸால் நிறைந்தவனாகி விருத்திரனைக் கொல்வாய். அவன் அடிபட்ட பிறகு நீங்கள் தேஜஸ், அஸ்திரம், ஆயுதம், சம்பத்து முதலியவைகளைத் திரும்பவும் அடைவீர்கள். என்னைச் சார்ந்தவர்கள் ஒருபொழுதும் துக்கத்தை அடையமாட்டார்கள். உங்களுக்கு க்ஷேமம் உண்டாகும்" என்று அனுக்கிரகித்தார்.

குறிப்பு

ஹோமஞ் செய்தார்;— மந்திரத்தை அக்ஷரப் பிழையுடனாவது ஸ்வரப் பிழையுடனாவது உச்சரித் தால் அதன் பயனைக் கொடுக்கிறதில்லை; இந்திர சத்ரோவர்த்தச்வ என்று ஹோமஞ் செய்தார். ஆனால் ஸ்வரப்பிழை உண்டானதால் இந்திரனால் கொல்லக் கூடிய புத்திரன் பிறந்தான். அசுவினி தேவர்களுக்கு;— முன்னொருகால் அசுவினி தேவர்கள் தத்யக் என்ற மகரிஷியினிடஞ் சென்று தங்களுக்கு நாராயண கவசத்தை உபதேசிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள்.

அவர் அப்பொழுது கர்மகாலமாகையால் 'பிந்தி உபதேசிக்கிறேன்' என்றார். பின்பு மகேந்திரன் மகரிஷியினிடம் வந்து, 'ஓ மகரிஷியே' அசுவினி தேவர்களுக்கு வித்தை உபதேசிக்கக் கூடாது. என்னுடைய வார்த்தையை மீறி உபதேசித்தால் உம்முடைய தலையை வெட்டுவேன் என்றான். பின்பு அசுவினி தேவர்கள் வந்து கேட்டார்கள். அப்பொழுது மகேந்திரன் சொன்னதை மகரிஷி சொன்னார். அதனைக் கேட்டு அவர்கள், ஓ மகரிஷியே! உம்முடைய தலையை நாங்கள் வெட்டி, குதிரையின் தலையை உடலில் ஒட்டிவிடுகிறோம். அந்த முகத்தைக் கொண்டு வித்தையை எங்களுக்கு உபதேசியும். இந்திரன் அத்தலையை வெட்டின பின்பு உம்முடைய தலையை ஒட்டிவிடுகிறோம். அதனைக் கேட்ட மகரிஷி அஸ்வமுகத்தால் அவர்களுக்கு வித்தையை உபதேசித் தார். அதனால் அதற்கு அஸ்வசிரஸ் என்னும் பெயர் உண்டாயிற்று.

அத்தியாயம்–10

விருத்திராசுர யுத்தம்

1–4. ஸ்ரீ மஹாவிஷ்ணு இம்மாதிரி மகேந்திரனுக்குக் கட்டளையிட்டு தேவர்கள் பார்த்திருக்கும் போது மறைந்தார் தேவர்களும் பகவானுடைய கட்டளையின் படி தத்யக் மகரிஷியைக் கேட்டார்கள். கதைக்கேட்டு மகரிஷி சிரித்துக் கொண்டு தேவர்களை நோக்கி, "ஓ தேவர்களே! பிராணிகளுக்கு மரணத்தில் நேரிடும் துக்கமானது மிகவும் சகிக்கக் கூடாதது, அதனை நீங்கள் அறியமாட்டீர்கள், உயிரை வைத்திருக்க வேண்டுமென்ற விருப்பமுள்ளவர்களுக்கு ஆத்மாவானது மிகவும் பிரியமான வஸ்து அதனை யாசிட்டவர் விஷ்ணுவே யானாலும் யார்தான் கொடுப்பான்" என்றார்.

5–6. அதனைக்கேட்ட தேவர்கள் மகரிஷியை நோக்கி, "ஓ ப்ராஹ்மணோத்தம! பிராணிகளிடத்தில் தயவுள்ளவர்களும் புண்ணிய சுலோகர்களால் சிலாகிக்கக் கூடிய சரிதமுள்ளவரும், உம்மைப் போன்றவர்களுமான மகான்கள் எதனைதான் கொடுக்கமாட்டார்கள்? யாசகர்களும் தம் காரியத்தையே முக்கியமாகக் கொண்டவர்கள். பிறருடைய உபத்திரவத்தை அறியாதவர்கள். அப்படிப் பிறருடைய உபத்திரவத்தை அறிவார்களேயானால் சரீரத்தைக் கொடுக்கும்படி யாசிப்பார்களா? பிரபுவானவன் யாசகர்களுடைய உபத்ரவத்தை அறிவானேயானால் அவன் கொடுக்க மாட்டேனென்று சொல்லாமாட்டான்" என்றார்கள்.

7–12. அதனைக் கேட்ட மகரிஷி அவர்களை நோக்கி, "உங்கள் முகமாகத் தர்மத்தைக் கேட்க

விரும்பிக் கொடுக்க மாட்டேனென்று சொன்னேன். என்னை விட்டுப் பிரிந்து போகக்கூடிய சரீரத்தை நானே விட்டுவிடுகிறேன். எந்தப் புருஷன் நிலையற்ற சரீரத்தில் அபிமானம் வைத்துத் தர்மத்தையும் கீர்த்தியையும் கெடுத்துக் கொள்ளுகிறானோ. அவன் தாவரங்களாலும் துக்கிக்கத் தகுந்தவனாக ஆகிறான் பிராணிகள் சந்தோஷிப்பதனால் எவனுடைய ஆத்மா சந்தோஷிக்கிறதோ இதுவே பெரியோர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட சாசுவதமான தர்மம். நாய் நரி முதலியவைகளால் பட்சிக்கக்கூடியதும், தனக்கு உபயோகப் படாததுமான மனது, புத்திரன் முதலிய பந்துக்கள், சரீரம் இவைகளால் பிறருக்கு உபகாரஞ் செய்யாமலிருப்பது மிகவும் கஷ்டமான காரியம்" என்று சொல்லி, சித்தத்தைப் பரப்ரஹ்மத்தினிடம் செலுத்திச் சரீரத்தைவிட்டார். இந்திரியம், மனது புத்தி, பிராணன் இவைகளை அடக்கிகொண்டும் ஆத்ம தத்துவத்தைத் தரிசித்துக்கொண்டும் மேலான யோக்கியதை அடைந்திருந்த அந்த மகரிஷிக்குச் சரீர நாசமும் தெரியவில்லை.

13–33. பிறகு அந்த மகரிஷியின் எலும்புகளைக் கொண்டு விசுவகர்மாவானவர் வஜ்ராயுதத்தைச் செய்தார். மகேந்திரன் அதனை எடுத்துக்கொண்டு பகவானுடைய தேஜஸை அடைந்து, தேவகணங்களுடைய ஐராவதத்தின் மீதேறி மகரிஷிகளால் தோத்திரஞ் செய்யப்பட்டு மூன்று லோகத்தையும் சந்தோஷப்படுத்திக்கொண்டு விருத்திரனை அசுர சைனியங்கள் சுற்றிக்கொண்டிருக்கின்றன. மேலும் பிரளயகால ருத்ரன் போலக் கோபித்துக் கொண்டிருந்தான். திரேதா யுகத்தின் முன்பாகமாகிய அந்தக்

காலத்தில் நர்மதையின் கரையில் முதல் மகாயுகத்தில் தேவர்களும் அசுரர்களுக்கும் யுத்தம் நேர்ந்தது. அப்பொழுது ருத்திரர்களும். வசுக்களும் ஆதித்யர்களும்; அசுவினி தேவர்களும்; பிதிருக்களும், அக்னிகளும். மருத்துக்களும், ரிபுக்களும், சாத்தியர்களும். விசுவே தேவர்களும் இந்திரனைச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். அதனைக்கண்ட அசுரர்கள் போறாமை கொண்டு நமுசி, சாம்பரன், அநர்வா, துவிமூர்த்தா. விருஷபன், சம்பான், ஹயக்ரீவன், சங்குசிரஸ், விப்ரசித்தி அயோமுகன். புலோமா, விருஷபர்வா, பிரஹேதி, ஹேதி, தூம்ரகேசன், விருபாக்ஷன் கபிலன், விபாவசு, இல்வலன், பல்வலன்; தந்தசூடன். விருஷத்துவஜன், கலாநாபன், மகாநாபன்; பூதசந்தபனன், விருகன், சிமாலி, மாலி முதலியவர்கள் விருத்திரனை முன்னிட்டுக் கொண்டு மகேந்திரனை எதிர்த்தார்கள். மேலுமவர்கள் கதாயுதம்; பரிகம், பாணம்; பிராஸம், முத்கரமம், தோமரம் சூலம், பரச்வதம்; கட்கம், சதக்ரிமமுச்டி முதலிய ஆயுதங்களையும் அஸ்த்ரங் களையும் தேவர்களின் மீது பிரயோகித்தார்கள். அவைகளால் தேவ சைனியம் மறைக்கப்பட்டுப் பிரகாசிக்கவில்லை. தேவர்கள் பின்பு சஸ்திரங்களாலும் அஸ்திரங்களாலும் அசுர சைன்யங்களை அடித்தார்கள். அப்பொழுது அசுரசைன்யத்திற்கு அஸ்திரங்களும், சஸ்திரங்களும் குறைந்தன. பின்பு அவர்கள் கற்களையும் மலைகளையும் மரங்களையும் தேவர்களின் மீது வர்ஷித்தார்கள். தேவர்கள் அதனையும் நாசஞ் செய்தார்கள். இப்படி அஸ்த்ரங்களாலும் சாஸ்திரங் களாலும். மரங்களாலும், கற்களாலும் மலைகளாலும் அடிக்கப்பட்டும் தேவர்கள் க்ஷேமமாய் இருப்பதைப் பார்த்த அசுரர்கள் பயந்தார்கள். அசுரர்களால் தேவர்கள்

விஷயமாய்ச் செய்யப்பட்ட எல்லா முயற்சிகளாலும் ஸ்ரீ கிருஷ்ண பக்தர்களான மகான்களிடத்தில் அற்பற்களால் பிரயோகிக்கப்பட்ட கடுஞ் சொற்கள் போல் வியர்த்தமாயின. அப்பொழுது அவர்கள் தங்களுடைய முயற்சி பயனற்றதாக இருப்பதைப் பார்த்து யுத்தத்தை விட்டுவிடுவதற்கு யத்தனித் தார்கள். இப்படிப் பயந்து ஓடுகிற அசுரர்களைக் கண்டு விருத்திரன் சிரித்துக் கொண்டு, ஓ விப்ரசித்தியே, நமுசியே, புலோமாவே, ஓ மய, ஓ அநர்வாயே; ஹேசம்பர! நான் சொல்வதைக் கேளுங்கள். ஜனித்த வனுக்கு மரணம் நேரிடுவது நிச்சயமே. அது நிவர்த்திக்க முடியாதது. ஆனால் அந்த மரணத்தால் சுவர்க்கமும், கீர்த்தியும் கிடைக்குமானால் எவன்தான் அதனை விரும்பமாட்டான்? ப்ரஹ்மத்யானத்தால் சரீரத்தை விட்டு மரணமடைவதும், யுத்தத்தில் பயப் படாமல் யுத்தஞ் செய்து மரணத்தை அடைவதும் சாஸ்திர சம்மதமே" என்றான்.

அத்தியாயம்–11

(முன் அத்யாயத் தொடர்ச்சி)

1–27 அசுரர்கள் விருத்திரனுடைய தர்மமான வார்த்தையைக் கேட்டும், பயத்தால் விவேகமற்றவர் களாகித் திரும்பாமலே ஓடினார்கள். தேவர்களுக்கு நல்ல காலமாகையால் அவர்களிடமிருந்து பயந்து ஓடும் அசுர சைனியத்தைப் பார்த்து இந்திரனுக்குச் சத்ருவாகிய விருத்திரன் தேவர்களை அதட்டி, ஓ தேவர்களே! யுத்தத்தில் பயந்து ஓடுகிறவர்களைச் சூரர்கள் கொல்லுவார்களா? அதனால் அவர்களுக்குச் ஸ்வர்க்கம் கிடைக்குமா? ஓ அற்பர்களான தேவர்களே! உங்களுக்கு யுத்தஞ் செய்யவேண்டுமென்று விருப்பமும் மனத்தில் தைரியமும் இருக்குமானால் கிராமிய சுகத்தில் ஆசையில்லாமலுமிருந்தால் என் முன்பாகக் கணநேரம் நில்லுங்கள் என்று கர்ஜித்தான். அந்தப் பேரொலியைக் கேட்டு லோகங்கள் மூர்ச்சை அடைந்தன. தேவர்களும் வஜ்ஜிரத்தால் அடிபட்டவர்கள் போல மூர்ச்சையடைந்து விழுந்தார்கள். அப்பொழுது அசுரன் சூலாயுதத்தை உயரத் தூக்கிக் கொண்டு மதங்கொண்ட யானையானது தாமரையை நாசஞ் செய்வது போலக் கண்களை மூடிக்கொண்டு, துன்பங்களைச் சகித்துக் கொண்டிருக்கும் தேவ சைனியத்தைக் காலால் உதைத்துப் பிடித்தான். அதனைப் பார்த்த மகேந்திரன் மிகவும் பொறாமை கொண்டு பெரிதான கதாயுதத்தை அந்த அசுரன் மீது பிரயோகித்தார். சகிக்க முடியாத அந்த ஆயுதத்தை அந்த அசுரன் இடதுகையால் கிரகித்துக் கொண்டான். பின்பு அந்த அசுரன் மிகுந்த கோபத்துடன் கதாயுதத்தால் இந்திரனுடைய

வாகனமாகிய ஐராவதத்தின் தலையிலடித்தான். அதனை எல்லோரும் கொண்டாடினார்கள். வஜ்ஜிரத்தால் அடிபட்ட மலை போல விருத்திரனுடைய கதையாலடிபட்ட ஐராவதமானது ரத்தத்தைக் கக்கிக் கொண்டு ஏழுவிற்கடை தூரம் பின்சென்றது. அப்பொழுது அசுரன் ஐராவதம் அடிபட்டதால் வருத்தமடைந்திருக்கும் இந்திரனிடத்தில் ஆயுதத்தைப் பிரயோகிக்கவில்லை. மகேந்திரன் அமிருதப் பெருக்குள்ள தம்முடைய கையால் ஐராவதத்தைத் தொட்டு, அதனால் அதை சுகப்படுத்தினார். பிறகு யுத்தத்திற்காக எதிரில் நிற்பவனும் விசுவரூபரைக் கொன்றவருமான மகேந்திரனைப் பார்த்து அசுரன் அவர் செய்த காரியங்களை நினைத்து, சோகம், மோகம் இவைகளை யடைந்து சிரித்துக் கொண்டு, "சந்துருவாகிய நீ தெய்வச்செயலாய் என் முன் வந்தாய், நீ ப்ராஹ்மணனைக் கொன்றவன்; ஆசாரியனைக் கொன்றவன்; பிரகோதரனைக் கொன்றவன்; ஓ அசத்துக்களுக்குட் சிறந்தவனே! சூலத்தால் உன்னுடைய கல்போன்ற ஹிருதயத்தைப் பிளந்து கடனில்லாதவனாக ஆகிறேன். (விசுவரூபனைக் கொன்றதற்குப் பதில் செய்கிறேன் என்று தாத்பரியம்) ப்ரஹ்மத்தை அறிந்தவரும், ப்ராஹ்மணரும், உனக்கு ஆசாரியரும், பாபமற்றவருமான என் சகோதரனுடைய தலையைக் கத்தியால் நீ ஸ்வர்க்கத்தை அடைய வேண்டி வெட்டினவனல்லவா? நீ தயை வெட்கம், சம்பத்து இவைகளற்றவன்; ராட்சதர்களாலும் நிந்திக்கக் கூடிய கர்மத்தைச் செய்பவன்; அப்படிப்பட்ட உன்னுடைய சரீரத்தைச் சூலத்தால் பிளக்கிறேன். அதனைக் கழுகுகள் சீக்கிரத்தில் புசிக்கப் போகின்றன. மேலும் உன்னைச் சார்ந்த சடர்களான எவர்கள்

அஸ்திரங்களால் அடிக்கிறார்களோ, அவர்களுடைய கழுத்தைச் சூலத்தால் பிளந்து பூதகணத்தால் என்னுடைய தலையை வெட்டுவாயானால் நான் கர்ம பந்தத்தை விட்டு என்னுடைய உடலால் பூதங்களைத் திருப்தி செய்து பெரியோர்களால் அடையக்கூடிய உத்தம கதியை அடைவேன். ஓ இந்திரா! கிருபணனை யாசித்தால் அது எப்படிப் பயனைக் கொடுக்காதோ அதுபோல் உன்னுடைய வஜ்ஜிரமானது வியர்த்தமாகப் போய்விடுமென்றும் நீ சந்தேகப்படவேண்டாம். அது அமோகமான அஸ்திரம். எதிரில் நிற்கும் சத்ருவாகிய என்மீதில் ஏன் அதைப் பிரயோகிக்கவில்லை? மேலும் இந்த வஜ்ரமானது மகாவிஷ்ணுவின் தேஜசினாலும், ததீசி மகரிஷியின் தவத்தினாலும் கூர்மையாக இருக்கிறது. அதைக் கொண்டு சத்துருவை அடிக்கும் படி மகாவிஷ்ணு உனக்கு ஆக்ஞை செய்தாரல்லவா? மகாவிஷ்ணு ஜயம், சம்பத்து; குணங்கள் இவைகளைக் கொடுக்கக்கூடியவர். நான் சங்கர்ஷணர் சொன்னபடி அவருடைய பாதார விந்தத்தில் மனத்தைச் செலுத்தி உன்னுடைய வஜ்ரத்தின் வேகத்தால் கிராம்மியமான ஆசைகளை ஒழித்துச் சரீரத்தை விட்டு யோகிகளா லடையக் கூடிய பக்திசெய்த பக்தர்களுக்குச் ஸ்வர்க்கம், பூமி, பாதாளம் இவைகளிலுள்ள ஐசுவரியத்தைக் கொடுக்கிறதில்லை. ஏனென்றால் அவைகளால் விரோதம், பயம், மனோவிசாரம், மதம், யுத்தம், துக்கம், சிரமம், இவைகள் உண்டாகின்றன. ஓ மகேந்திர! என்னுடைய நாதனாகிய பகவான் தர்மம், அர்த்தம், காமம் இவைகளில் ஆசைப்படாமலிருக்கும்படி செய்வார். அதனால் பகவானுடைய பிரசாதமேற்பட்ட தென்று ஊகிக்க வேண்டும். அது மற்றவர்களால் அடைய முடியாதது. (உனக்கு பகவானுடைய

பிரசாதம் நன்றாக உண்டாகாததனால் சம்பத்துக்கள் கிடைத்திருக்கின்றன என்று தாத்பரியம்) ஓ பகவன் நாராயண! உம்முடைய பாதாரவிந்தத்தையே சரண மடைந்த தாஸர்களுக்கு நான் மிகவும் தாஸனாக இருக்கிறேன். பிராணநாதனாகிய உம்முடைய குணங்களை என்னுடைய மனமானது நினைக்கட்டும். வாக்கானது அவைகளையே உச்சரிக்கட்டும். சரீர மானது உம்மையே பூஜிக்கட்டும். ஓ பகவன் உம்மை விட்டுப் பிரிந்து துருவபதத்தையாவது, ப்ரஹ்மலோகத் தையாவது, எல்லாப் பூமிக்கும் அரசனாயிருப்பதை யாவது, யோக சித்திகளையாவது மோட்சத்தையாவது நான் விரும்பேன். தாமரை மலர் போன்ற கண்களுள் ளவரே. இறக்கை முளையாத பறவைகள் தாயை அபேட்சிப்பது போலவும், தும்பினால் கட்டப்பட்ட இளங்கன்றுகள் பாலை அபேட்சிப்பது போலவும், மன்மதனால் பிடிக்கப்பட்ட ஸ்திரீயானவள் தேசாந்திரம் போன புருஷனை எதிர்பார்ப்பது போலவும் என்னு டைய மனமானது உம்மைப் பார்க்க விரும்புகிறது. ஓ நாத! உம்முடைய மாயையால் ஸம்ஸார சக்கரத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் எனக்கு உத்தம சுலோகர் களாகிய மகான்களிடத்தில் சிநேகம் உண்டாக வேண்டும். புத்திரன், ஸ்திரீ , தனம், வீடு இவைகளிலும் இவைகளில் ஆசைகொண்டவர்களிடத்திலும் எனக்குப் பிரியம் திரும்பவும் உண்டாக வேண்டாம்" என்றான்.

அத்தியாயம்–12

விருத்திர வதம்

ஓ பரீக்ஷித் மகாராஜ! விருத்திராசுரன், சத்ரு ஜயிப்பதைக் காட்டிலும் மரணமே மேலானது என்று நினைத்து சரீரத்தை விடவிரும்பி, சூலாயுதத்தை எடுத்துக்கொண்டு மகேந்திரனை எதிர்த்தான் அது பிரளய ஜலத்தில் கைடபன் என்ற அசுரன் ஸ்ரீ மகாவிஷ்ணுவை எதிர்த்ததுபோல இருந்தது. பின்பு அசுரன் பிரளயகால அக்னிபோல் ஜ்வலித்துக் கொண்டிருக்கும் சூலத்தைச் சுழற்றி மகேந்திரன் மீது பிரயோகித்தான் "அடபாபியே! இதனால் நீ அடிக்கப் பட்டாய்" என்றும் கோபத்துடன் உரக்கச் சொன்னான். பிறகு மகேந்திரன் கிரகம் போலவும் கொள்ளிபோலவும் ஆகாசத்தில் வரும் அந்தச் சூலத்தைப் பார்த்துப் பயப்படாமல் நூறு முனைகளுள்ள வஜ்ராயுதத்தால் அந்த சூலத்தையும், வாசுகியினுடைய உடல் போன்ற அவனுடைய கையையும் வெட்டினார். பின்பு அசுரனின் ஒரு கையினால் பரிசம் என்ற ஆயுதத்தை எடுத்து, பரபரப்புடன் தேவேந்திரனுடைய கன்னத்தில் அடித்ததுமன்றி ஐராவதத்தையு ம் அடித்தான்.அதனால் மகேந்திரனின் கையிலிருந்த வஜ்ராயுதம் கீழே விழுந்தது. அந்த அற்புதமான அசுரனுடைய பராக் கிரமத்தை சித்தர்களும், சாரணர்களும் தேவர்களும் அசுரர்களும் கொண்டாடினார்கள். ஆனால் இந்திரனுக்கு நேர்ந்த சங்கடத்தைப் பார்த்து 'ஹா ஹா' என்று வருத்தத்தையும் அடைந்தார்கள். இந்திரன் வெட்கம டைந்து கீழே விழுந்த வஜ்ராயுதத்தையும் திரும்பவும் எடுத்துக்கொள்ளவில்லை. அவரை நோக்கி அசுரன்,

"ஓ மகேந்திர! வஜ்ராயுதத்தை எடுத்துக்கொள்ளும்: சத்துருவைக் கொல்லும்' துக்கப்படுவதற்கு இது காலமல்ல; சத்துருக்களைக் கொல்ல விரும்பி யுத்தம் செய்பவர்களை தேகாபிமானமுள்ள பிராகிருத ஜனங்களுக்கு எப்பொழுதும் ஜயமே வருமென்ற நிச்சயமில்லை. ஆனால் உத்பத்தி லயம், பரிபாலனம் ஆகிய இவைகளுக்கு அதிபதியும், எல்லாவற்றையும் அறிந்தவரும், எல்லாவற்றிற்கும் முந்தினவரும் புராண புருஷருமாகிய மகாவிஷ்ணு ஒருவரே எப்பொழுதும் ஜயத்தை அடைகிறார். லோகபாலர்கள் முதலிய எல்லோரும் அந்த பகவானுக்கு ஸ்வாதீனர்களாகக் கர்மங்களைச் செய்கின்றார்கள். மேலும், பறவைகள் வலையால் கட்டப்படுவதுபோல் ஜனங்கள் காலத்திற்கும் வசப்பட்டிருப்பதால் ஜயத்திற்கும் அபயத்திற்கும் அந்தக் காலரூபியான பகவானே காரணம், தேஜஸ், மனோபலம், தேகபலம், பிராணன், அமிருதம், மிருத்யு இவைகளுக்கு அந்தப் பகவானே காரணமென்பதை ஜனங்கள் தெரிந்து கொள்ளாமலே மூடர்களாகத் தங்களையே காரணமாக நினைக்கிறார்கள். கட்டையால் செய்யப்பட்ட பெண் பொம்மை போலவும்; யந்திரத்தால் சுற்றப்பட்ட மிருகம் போலவும் பிராணிகள் பரமேசு வரனுக்கு சுவாதீனப் பட்டவர்களாக இருக்கிறார்கள். புருஷன், பிருகிருதி, மகத்தத்வம், அகங்காரம் மகா பூதங்கள், இந்திரியங்கள், மனது ஆகிய இவைகள் சிருஷ்டி முதலிய காரியங்களை அந்தப் பரமேசுவரனு டைய அனுக்ரஹத்தாலேயே செய்கின்றன. இதனுடைய உண்மையை அறியாதவன் அசமர்த்தனாகிய தன்னை சுவதந்திரனாக நினைக்கிறான். உண்மையில் அந்தப் பகவானே பிராணிகளைக் கொண்டு பிராணிகளைச் சிருஷ்டிக்கிறார். மேலும் ஆயுள்; சம்பத், கீர்த்தி,

ஐசுவர்யம் இவைகள் எந்தக் காலத்தில் எவனுக்கு, எவைகள் கிடைக்க வேண்டுமோ அவன் அவைகளை விரும்பாவிடினும் அந்த அந்தக் காலத்தில் அவனுக்கு அவை கிடைக்கின்றன, அப்படியே அபகீர்த்தி முதலிய வைகளும் அந்த அந்தக் காலத்தில் அவரவர்களை அடைகின்றன. ஆனதால், அபகீர்த்தி, கீர்த்தி, ஜயம். அபஜயம் சுகம் துக்கம்; மரணம் பிழைத்திருப்பது இவைகளில் சம புத்தியுள்ளவனாக இருக்கவேண்டும். சத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்கள் பிரகிருதியைச் சார்ந்வைகள்; ஆத்மாவினுடையவைகளல்ல. ஆத்மா சாட்சியாக இருப்பவர் என்று எவன் தெரிந்து கொள்ளுகிறானோ அவனுக்குக் கர்மபந்தம் இல்லை. ஓ இந்திர! என்னுடைய ஆயுதங்களும், கையும் உன்னால் வெட்டப்பட்டன. அப்படியும் நான் சக்தியுள்ளவரையில் உன்னைக் கொல்வதற்கு முயற்சிக் கிறேனல்லவா? இந்த யுத்தமானது சொக்கட்டானாட் டத்திற்குச் சமானம். வாகனங்களே சொக்கட்டான் பலகை, பாணங்களே காய்கள். பிராணனே பந்தயத் திரவ்யம், இந்த விளையாட்டில் இன்னாருக்கு ஜயம் இன்னாருக்கு அபஜயம் என்று அறியமுடியாது" என்றான்.

18–35. அதனைக் கேட்ட மகேந்திரன் அசுரன் கபடமற்றுப் பேசினதற்காக சந்தோஷித்து வஜ்ராயுதத்தை எடுத்துக்கொண்டு கர்வமற்றவனாகிப் புன்சிரிப்புடன், "அட அசுர! நீ சித்தனாய்விட்டாய். உனக்கு இம்மாதிரி யான நல்ல எண்ணம் உண்டானது மிகவும் வியக்கத் தக்கது எல்லாவற்றிற்கும் அதிபதியாகிய ஸ்ரீ மகா விஷ்ணுவை மூன்று கரணங்களாலும் சேவித்தாய். ஜனங்களை மோஹிக்கச் செய்யும் விஷ்ணு சம்பந்தமான

மாயையை நீ தாண்டினாய். அசுரத்தன்மையை விட்டு மகாபுருஷனாய் விட்டாய். ரஜோ குண ஸ்வபாவமுள்ள உனக்கு பகவானும், ஸகல ஸ்வருபியுமான ஸ்ரீ வாசு தேவரிடத்தில் திருடமான பக்தி உண்டானது மிகவும் ஆச்சரியப்படக் கூடியது. அமிருத சமுத்திரத்தில் விளையாடுகிறவனுக்கு அற்ப ஜலங்களால் எப்படிப் பிரயோசனமில்லையோ, அப்படி மோட்சத்திற்கதிபதி யான பகவானிடத்தில் பக்தி செய்பவனுக்கு ஸ்வர்க்கம் முதலியவைகளால் என்ன பிரயோசனம் என்று சொல்லிய பின்பு இந்திரன், விருத்ரன் இருவர்களும் யுத்தஞ்செய்ய ஆரம்பித்தார்கள். அப்பொழுது அசுரன் இரும்பினால் செய்யப்பட்ட பரிசம் என்ற ஆயுதத்தை இடது கையால் எடுத்து, அதனைச் சுழற்றி இந்திரன் மீது பிரயோகித்தான். மகேந்திரன் வஜ்ராயுதத்தால் அந்தப் பரிகத்தை அடித்து ஓடித்ததுமின்றி அசுரனு டைய மற்றொரு கையையும் வெட்டினார். அப்பொழுது அசுரனுக்கு இரண்டு கையும் வெட்டப்பட்டதனால் ரத்தமானது பெருகியது. அப்படிப்பட்ட அசுரன் முன்காலத்தில் இந்திரனால் இறக்கைகள் வெட்டப் பட்டு ஆகாசத்திலிருந்து விழுந்த மலைபோல் பிரகாசித்தான். பின்பு அந்த அசுரன் கீழுதட்டைப் பூமியிலும் மேலுதட்டை ஆகாயத்திலும் வைத்துக் கொண்டு ஆகாயம் போல கம்பீரமான முகமுள்ள வனாகி, மிருத்யுவினுடையவை போன்ற சிங்கப்பற் களால் மூன்று லோகத்தையும் விழுங்குகிறவன் போலப் பருத்த சரீரத்துடன் காலால் சஞ்சரிக்கும் மலைபோலப் பூமியை அசைத்துக் கொண்டு மகேந்திரனிடம் வந்து ஐராவதத்துடன் அவரை விழுங்கினான். அது பெரிதாகிய சர்ப்பம் பறைவையை விழுங்கினது போலிருந்தது. அதனைக்கண்டு பிரஜாபதிகள், தேவர்கள். மகரிஷிகள்

முதலிய எல்லோரும் 'கஷ்டம், கஷ்டம்' என்று கதறினார்கள். அசுரனால் விழுங்கப்பட்ட மகேந்திரன் ஸ்ரீ நாராயணனாகிய கவசத்தைத் தரித்திருந்தபடியாலும் யோக பலத்தாலும் மாயா பலத்தாலும் மரணத்தை அடையவில்லை. ஆனால் அவர் வஜ்ராயுதத்தால் அவனுடைய வயிற்றைப் பிளந்து வெளியில் வந்து மலையின் சிகரம் போன்ற அவனுடைய தலையை வெட்டினார். மிகுந்த வேகமுள்ள வஜ்ரமானது. அவனுடைய தலையை, நான்கு பக்கமும் வெட்டி, முன்னூற்று அறுபது தினங்களுள்ளதும் இரண்டு அயனங்களுள்ளதுமான ஸம்வத்ஸர சக்ரத்தில் விருத்திரனைக் கொல்லக் கூடிய தினத்தில் அவனுடைய தலையை வெட்டித் தள்ளியது. அப்பொழுதும் ஆகாயத்தில் தேவதுந்துபிகள் முழங்கின. கந்தர்வர்களும், மகரிஷிகளும், விருத்திரனைக் கொன்ற மகேந்திரன் அவருடைய பராக்கிரமங்களைக் குறிப்பிடும் மந்திரங்களைக் கொண்டு தோத்திரம் செய்தது மன்றிப் புஷ்பங்களையும் வர்ஷித்தார்கள், அப்பொழுது ஸகல லோகங்களும் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது அசுரனுடைய தேகத்திலிருந்து கிளம்பிய தேஜஸ்ஸானது பகவானை அடைந்தது.

அத்தியாயம்–13

ப்ரஹ்மஹத்யா தோஷமுள்ள இந்திரன் விஷ்ணுவினால் காப்பாற்றப்பட்டது

விருத்திரன் அடிபட்டபிறகு ஸகல லோகத்தினரும் சந்தோஷித்தார்கள். தேவர்கள், மகரிஷிகள், பிதிருக்கள், பூதங்கள், தேவர்களைச் சார்ந்த தைத்யர்கள், ப்ரஹ்மா, பரமசிவன் முதலியவர்கள் இந்திரனுக்குச் சொல்லிக் கொள்ளாமலேயே தங்கள் தங்கள் லோகம் சென்றார்கள். ஆனால் இந்திரன் மாத்திரம் சந்தோஷப்படவில்லை என்று சுகர் சொல்லக் கேட்ட அரசர், 'ஓ மகரிஷியே! தேவர்கள் முதலிய எல்லோருக்கும் சந்தோஷத்தை உண்டுபண்ணிய விருத்திரவதமானது மகேந்திரனுக்கு ஏன் சந்தோஷத்தை உண்டுபண்ணவில்லை? அதனைச் சொல்லவேண்டுமென்று கேட்டார்.

4–15 அதனைக் கேட்ட சுகர் அரசரை நோக்கி, விருத்திரனுடைய பராக்கிரமத்தால் பயந்த தேவர்களும், மகரிஷிகளும் அவனைக் கொல்லவேண்டுமென்று மகேந்திரனைக் கேட்டுக் கொண்டார்கள். மகேந்திரன் ப்ராஹ்மணனைக் கொல்வதில் இஷ்டமில்லாதவராக அவர்களை நோக்கி, "விஸ்வரூபரைக் கொன்றதாலுண்டாகிய தோஷத்தை ஸ்திரீ, பூமி ஜலம், மரம் ஆகிய இவர்கள் பிரித்து எடுத்துக் கொண்டார்கள். விருத்திரனைக் கொன்றதாலுண்டாகிய தோஷத்தை எவ்விடத்தில் நிவர்த்திப்பேன்" என்று சொன்னார். அதனைக் கேட்ட மகரிஷிகள், 'ஓ மகேந்திரா நீர் பயப்பட வேண்டாம். உமக்கு அச்வமேதயாகம் செய்து வைக்கிறோம். எவன் அஸ்வமேதம் செய்து பரமாத்மாவைப் பூஜிக்கிறானோ அவன் ஜகத்தை நாசஞ் செய்தவனா

னாலும் சுத்தனாவான். மேலும் ப்ராஹ்மணனை கொன்றவன், பிதாவைக் கொன்றவன், பசுவைக் கொன்றவன், மாதாவைக் கொன்றவன், ஆசாரியனைக் கொன்றவன், நாய் மாம்சத்தைப் புசிப்பவன், சண்டாளன் ஆகிய யாரானாலும் எந்தப் பகவானுடைய நாமத்தை யுச்சரித்தால் சுத்தர்களாவார்களோ அந்தப் பகவானை நீர் சிரத்தையுடன் எங்களால் செய்யப்படும் அசுவமேதமென்னும் பெரிதான யாகத்தால் பூஜித்தீரேயாகில் ப்ராஹ்மணர்களுடன் கூடிய இந்த ஜகத்தைக் கொன்றாலும் நீர் சுத்தராகி விடுவீர். துஷ்டனைச் சிட்சிப்பதால் உமக்கு தோஷம் ஏற்படுமா' என்று சமாதானஞ் சொன்னார்கள். மகேந்திரன் விருத்திரனைக் கொன்றார். பின்பு அவருக்கு ப்ரஹ்மஹத்யா தோஷம் நேர்ந்தது. அதனால் இந்திரன் சத்துருவை ஜயித்தும் சந்தோஷத்தை அடையவில்லை. புருஷன் குணசாலியானாலும் ஐசுவரியமுள்ளவனானாலும் பிறரால் நிந்திக்கக்கூடிய தோஷம் உள்ளவனானால் அந்த ஐசுவரியங்கள் அவனுக்கு சுகத்தைக் கொடுக்கிறதில்லை. அப்பொழுது அந்தப் ப்ரஹ்மஹத்தியானது இந்திரனைப்பின் தொடர்ந்தது. அது சண்டாள ஸ்திரீபோல் இருந்தது; க்ஷயரோக முள்ளது; சிவந்த வஸ்திரமுள்ளது; நில் நில் என்று சொல்லிக் கொண்டிருக்கிறது; அது மத்ஸ்யகந்தமுள்ளதாயிருப்பதால் மார்க்கமெல்லாம் துர்நாற்றம் உண்டாகிறது. மகேந்திரன் அதனால் துரத்தப்பட்டு எல்லாத்திக்குகளிலும் அலைந்து ஈசான திக்கை நோக்கிச் சென்று மானஸ ஸரஸில் தாமரைத் தண்டின் நூலில் வசித்தார். அவர் அக்கினியைத் தூதராகக் கொண்டவராகையால் ஜலத்தில் வசிக்கும் வரையில் யக்ஞபாகம் அவருக்குக் கிடைக்கவில்லை. இப்படி ப்ரஹ்மஹத்தியா தோஷத்திலிருந்து எப்பொழுது

Released by Maran's Dog, Toronto , Canada

சுத்தனாவேன் என்று யோசித்துக் கொண்டே ஆயிர வருஷங்களைக் கழித்தார்.

16–23 அந்த காலத்தில் வித்தை, தபசு, யோகபலம் இவைகளுடைய மகிமையுள்ள நகுஷனென்ற அரசன் மகேந்திரனாக இருந்து ஸ்வர்க்கத்தைப் பரிபாலித்தார். அவர் ஐசுவரிய மதங்கொண்டு இந்திராணியிடம் ஆசை கொண்டதால் மலைப்பாம்பாக ஆனார். பிறகு இந்திரன் வேதவாக்கியத்தால் அழைக்கப்பட்டு, பகவானைத் தியானஞ் செய்ததால் பாபமற்றவராகி ஸ்வர்க்கத்திற்கு வந்தார். விஷ்ணுவின் சக்தியாலும் ஈசான திக்கிற்கு அதிபதியான ருத்திரனாலும் காப்பாற்றப்பட்ட அந்த மகேந்திரனை ஆயிரம் வருஷங்களிலும் அந்தத் தோஷமானது உபத்திரவிக்க வில்லை. பின்பு ப்ரஹ்ம ரிஷிகள் மகேந்திரனுக்குத் தீட்சை செய்வித்து அஸ்வமேதத்தை ஆரம்பித்தார்கள். அதனால் ஸகல தேவ ஸ்வரூபியாகிய பகவான் பூஜிக்கப்பட்டு, சந்தோஷமடைந்தார். உடனே விருத்திரனுடைய வதத்தால் ஏற்பட்ட பாபமானது மிகுந்த தானாலும் அந்தப் பகவதாரதனத்தால் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கியது. மரீசி முதலிய மகரிஷிகள் விதிப்படி அசுவமேதத்தைச் செய்து; புராண புருஷனைப் பூஜித்து, மகேந்திரனுடைய தோஷத்தை விலக்கினார்கள். இந்த யாகமானது ஸகல பாபங்களையும் போக்கக்கூடியது; பகவானிடத்தில் பக்தியை உண்டு பண்ணக் கூடியது; பக்த ஜனங்களுடைய மகிமையுள்ளதும், இந்திரன் சுத்தனாகியதுமான இதனை எல்லோரும், எப்பொழுதும் படிக்க வேண்டும். ஒவ்வொரு பர்வத்திலும் இந்த இதிகாசத்தைக் கேட்க வேண்டும். இதனால் தனம், கீர்த்தி, பாப நிவர்த்தி, சத்ரு ஜயம், க்ஷேமம், தீர்க்கமான ஆயுள் இவைகள் விருத்தியடையும்.

Released by Maran's Dog, Toronto , Canada

அத்தியாயம்–14

விருத்திரனுடைய வரலாறு

அதனைக்கேட்ட அரசன் மஹரிஷியை நோக்கி, "ஓ ப்ராஹ்மண! ரஜோ குணம், தமோ குணம் ஆகிய இவைகளின் சுபாவமுள்ள மிக்க பாபியான விருத்திரனுக்குப் பகவானாகிய ஸ்ரீமந் நாராயணனிடத்தில் திருடமான பக்தி உண்டாவதற்கு என்ன காரணம்? சத்துவ குண ஸ்வரூபிகளான தேவர்களுக்கும், சுத்த சித்தமுள்ள மகரிஷிகளுக்கும் ஸ்ரீ பகவானுடைய பாதத்தில் பெரும்பாலும் பக்தி உண்டாகிறதில்லையே. பூமியின் தூள்கள் எப்படிக் கணக்கிடக்கூடாதவைகளோ அப்படியே ஜனங்கள் அநேகர்; அவர்களில் க்ஷேம மார்க்கத்தை விரும்புவோர் மிகவும் சொற்பமானவர்கள்; ஓ ப்ராஹ்மணோத்தம! சில ஜனங்களே மோட்சத்தை அடைய வேண்டுமென்று விரும்புகிறார்கள்; அப்படி விரும்பிய அநேகர்களுக்குட் சிலருக்கே வைராக்கியம் உண்டாகிறது; அப்படி வைராக்கியமடைந்த அநேகர் களுக்குட் சிலரே ஆத்ம தத்துவத்தைத் தெரிந்து கொள்ளுகிறார்கள். முக்தர்களான கோடி ஜனங்களுக்குள் ஸ்ரீ நாராயணனையே தியானஞ்செய்து கொண்டு அவரிடத்திலேயே ஆசக்தியுள்ளவனாக இருப்பவன் மிகவும் அரிது. அப்படியிருக்க, ஸகல உலகங்களையும் உபத்திரவிப்பவனாகிய விருத்திரனனுக்கு யுத்த காலத்தில் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் திருடமான பக்தி உண்டான விஷயத்தில் எனக்கு மிகுந்த சந்தேகமிருக்கிறது. அதனைச் சொல்ல வேண்டும். அந்த அசுரனுடைய பராக்கிராமத்தால் மகேந்திரனும் சந்தோஷித்தாரே" என்று கேட்டார்.

8–13. அதனைக் கேட்ட வியாஸ புத்திரராகிய சுகர் கேள்வியைப் பற்றிச் சிலாகித்து, சிரத்தையுள்ள அரசரை நோக்கி, "ஓ மகாராஜ! ஒரு இதிகாசத்தைச் சொல்லுகிறேன். அதனைச் சாவதானராகக் கேளும். நான் வியாசரிடமிருந்தும் நாரதரிடமிருந்தும், தேவரிட மிருந்தும் தெரிந்து கொண்டேன். சூரசேனமென்ற தேசத்தில் சித்ரகேது என்ற ஓர் அரசனிருந்தார். அவருக்குப் பூமிதேவி ஸகல வஸ்துக்களையும் உண்டு பண்ணிக்கொண்டிருந்தாள். அவருக்குக் கோடி பாரியைகள் இருந்தார்கள். அரசன் யுவாவாக இருந்தும் அவர்களிடத்தில் அரசனுக்குப் புத்திரன் உண்டாக வில்லை. அரசன் அழகு, ஔதார்யம், வயது, சூலம், வித்தை, ஐசுவரியம், காந்தி ஆகிய இவைகளுள்ள வரானாலும் புத்திரனில்லாததனால் மிக்க கவலை அடைந்தார். அவர் ஸகல சம்பத்துக்களிலும் அநேக பாரியைகளிடத்தில், ராஜ்ஜியத்திலும் பிரியப்படவில்லை. இப்படியிருக்கையில் ஒரு நாள் அங்கீரஸ் என்ற மகரிஷி லோக சஞ்சாரம் செய்துகொண்டு தெய்வச் செயலாக அந்த அரசனுடைய அரண்மனைக்கு வந்தார். அரசன் மகரிஷியை சாஸ்திர முறைப்படி பூஜித்து ஆதித்தியஞ்செய்து மகரிஷி ஆசனத்தில் உட்கார்ந்த பிறகு வணக்கத்துடன் தலைகுனிந்து தாம் பூமியில் உட்கார்ந்தார். அப்பொழுது மகரிஷி சித்ரகேதுவை நோக்கி, "க்ஷேமமா? பிரகிருதிகள் க்ஷேமமாய் இருக் கிறார்களா? (யஜமானன், மந்தபரி, தேசம், கோட்டை, பொக்கிஷம், தண்டம், மித்திரம் ஆகிய ஏழும் பிரகிருதி எனப்படுகின்றன.) மேலும், ஜீவன் மகத்தத்துவம் முதலிய ஏழு பிரகிருதிகளால் காப்பற்றப்படுவது போல் அரசனும் மேற்காட்டிய பிரகிருதிகளால் காப்பாற்றப் படுகிறான். ஆனதால் அவைகளை அனுசரித்திருக்கும்

அரசன் அனுவர்த்தித்தால்தான் சம்பத்தை அடைவார்கள். ஓ மகாராஜ! பிரஜைகளும் மந்திரிகளும், மித்திரர்களும் பிரதானர்களும் பட்டணத்திலிருப்பவர்களும், தேசவாசிகளும், அரசர்களும், புத்திரர்களும் உம்முடைய உத்தரவின்படி நடக்கிறார்களா? எவனுக்கு மனது வசப்பட்டிருக்கிறதோ அவனுக்கு மேற்சொல்லியவர்களும் சுவாதீனப்படுவார்கள். ஸகல லோகத்தினரும் அவனைப் பூஜிப்பார்கள். நீர் இப்பொழுது மனத்தாலும் ப்ரீதியில்லாமலிருக்கிறீரா? அல்லது பிரியமில்லாமலிருக்கிறீரா? ஸ்வபாவத்தில் இப்படி இருக்கிறீரா? உம்முடைய முகத்தைப் பார்க்கும்பொழுது கவலையுள்ளவராக இருக்கிறீர் என்று நினைக்கிறேன். அதனைச் சொல்லும்" என்றார்.

24–27. அதனைக்கேட்ட சித்திரகேது, "ஓ பகவன் தவம் ஞானம், சமாதி இவைகளால் சுத்தர்களான யோகிகளுக்குப் பிராணிகளுடைய மனத்திலும் வெளியிலுமிருக்கிற விஷயங்கள் நன்றாகத் தெரியும். ஆனதால் என்னுடைய அபிப்ராயத்தை முற்றிலும் அறிந்தவரான நீர் கேட்பதால் அதனைச் சொல்லுகிறேன் லோகபாலர்களாலும் பிரார்த்திக்கக்கூடிய ராஜ்ய சம்பத்தானது எனக்கு இருந்தும் அபுத்திரனாக இருப்பதால் அவைகள் எனக்குச் சந்தோஷத்தை உண்டு பண்ணவில்லை, பசி தாகத்தால் வருத்தப்பட்டவனுக்குச் சந்தனம், புஷ்பம் இவைகளால் சந்தோஷமுண்டாகுமா? ஆனதால் பிதிருக்களுடன் நான் நரகத்தை அடையாமலிருப்பதற்காகப் புத்திரன் உண்டாகும் படி அனுக்கிரஹியும்" என்று கேட்டுக்கொண்டார்.

28–30. இதனைக் கேட்ட ப்ரஹ்ம புத்திரரான

அந்த அங்கீரஸ் மகரிஷி துவஷ்டாவைத் தேவதையாகக் கொண்டு சருவைப் பாகஞ்செய்து துவஷ்டாவைப் பூஜித்தார். மேலும் அவர் அரசனுடைய பத்தினிகளுக்குள் மூத்தவளும், சிறந்தவளுமான கிருதத்யுது என்பவளுக்கு யக்ஞ சேஷத்தைக் கொடுத்தார், பிறகு அரசனை நோக்கி,"ஓ மகாராஜ சந்தோஷத்தையும் துக்கத்தையும் கொடுக்கக்கூடிய ஒரு புத்திரன் உண்டாவான்" என்று சொல்லத் தமது இஷ்டப்படி சென்றார்.

31–62. அந்தக் கிருதத்யுதி என்பவள் அந்த யக்ஞ சேஷத்தைப் புசித்ததால் கர்ப்பிணியானாள். அது கிருத்திகாதேவி அக்னியிடமிருந்து கர்ப்பத்தைத் தரித்தது போலிருந்தது மேலும் அவளுடைய கர்ப்பமானது ஒவ்வொரு நாளும் சுக்லபக்ஷ சந்திரன் போல் விருத்தியடைந்தது. பின்பு பிரசவகாலம் நேர்ந்தபொழுது அந்த கிருதத்யுதி குமாரனைப் பெற்றாள். அப்பொழுது சூரசேன தேசத்தில் வசிக்கும் ஜனங்கள் அதனைக் கேட்டு மிகவும் சந்தோஷம் அடைந்தார்கள், அரசன் மகுந்த சந்தோஷத்துடன் ஸ்நானஞ் செய்து சுத்தனாக அலங்காரங்கள் செய்துகொண்டு ப்ராஹ்மணர்களை கொண்டு ஸ்வஸ்திவாசனம் செய்வித்து ஜாதகர்மம் செய்தார். மேலுமவர் ப்ராஹ்மணர்களுக்குத் தங்கம், வெள்ளி, வஸ்திரம், ஆபரணம், கிராமங்கள், யானைகள், குதிரைகள், ஆறு அற்புதப் பசுக்கள் ஆகிய இவைகளைக் கொடுத்ததுமின்றி அவரவர்களுக்கு இஷ்டமான வஸ்துக்களை வருணன் மழை பெய்வது போல் வருஷித்தார்கள். பின்னும் அவர் குமாரனுக்குக் கீர்த்தி, தீர்க்கமான ஆயுள், சம்பத்து இவைகளை உண்டுபண்ணக்கூடியவைகளையே செய்துவந்தார். தரித்திரனுக்கு

மிக்க சிரமப்பட்டுக் கிடைத்த பணத்தில் எப்படிப் பிரீதியிருக்குமோ அப்படி சிரமப்பட்டுப் பிறந்த அந்தப் புத்திரனிடத்தில் அந்த அரசனுக்கு ஒவ்வொரு நாளும் பிரீதி விருத்தியடைந்தது. மாதாவான கிருதத் யுதிக்கு இரண்டு மடங்கு அதிகப் பிரீதியுண்டாயிற்று, மற்ற ஸபத்னிகளுக்கு தங்களுக்குப் புத்திரனில்லாத தனால் விசேஷ வருத்தமுண்டாயிற்று. அரசரும் பிரிய முள்ளவராக இருந்தார்; மற்ற பத்தினிகளிடத்தில் பிரியப்படவில்லை. அப்பொழுது மற்ற ஸ்திரீகள் தங்களுக்குப் புத்திரனில்லாதிருப்பதாலும், அரசன் தங்களிடத்தில் பிரியப்படாதிருப்பதாலும், மிகவும் வருத்தப்பட்டுத் தங்களுக்குள் பின்வருமாறு யோசிக் கலானாள்; "புத்திரனில்லாதவளும், அதனால் மிக்க பாபியும், பர்த்தாவினுடைய மனத்திற்குப் பிடிக்காத வளும், நல்ல பிரஜைகளுள்ள ஸபத்னிகளால் வேலைக் காரியைப்போல் அவமதிக்கப்பட்டவளுமான ஸ்திரீயை நிந்திக்க வேண்டும். ஆனால் தாசிகள் யஜமானியான ஸ்திரீயைச் சேவிக்க வேண்டியதேயொழிய அவர்களுக்கு வருத்தமேது? வேலைக்காரியின் வேலைக்காரி எப்படியோ அதுபோல நாங்கள் எல்லோரும் அதிருஷ்ட மில்லாதவர்கள்" என்று விசேஷமாகத் துக்கித்து கிருதத்யுதியின் புத்திரனிடத்தில் மிக்க விரோதத்தை அடைந்தார்கள், அந்த விரோதத்தால் விவேகமில் லாதவர்களாகி அந்த குழந்தைக்கு விஷத்தைக் கொடுத் தார்கள். கிருதத்யுதியானவள் பத்னிகளால் செய்யப் பட்டதை அறியாதவளாகி அந்தக் குழந்தை தூங்குகிறான் என்றே நினைத்திருந்தாள். பிறகு சிறிது நேரம் கழித்து வேலைக்காரியை ஆக்ஞாபித்தாள். அவள் குழந்தையின் சமீபம் சென்று பார்க்கும்பொழுது அக்குழந்தையின் கண்கள் வெளியில் வந்திருந்தன. மேலும் அந்தப்

பாலன் பிராணன் இந்திரியம், ஜீவன் இவைகளால் விடப்பட்டவனாயிருந்தான். அதனைக்கண்ட அவள் பூமியில் விழுந்து புரண்டு அழுதாள் அதனைக்கேட்டு கிருதத்யுதியானவள் இருகைகளால் மார்பில் அடித்துக் கொண்டு குழந்தையின் சமீபம் சென்று பூமியில் விழுந்து மூர்ச்சை அடைந்தாள். இப்படித் தலைமயிரை விரித்துக்கொண்டு துக்கப்படும் ராஜ பத்தினியைப் பார்த்து அரசனுடைய அந்தப்புரத்தில் வசிக்கும் புருஷர்களும், ஸ்திரீகளும் சம துக்கமுள்ளவர்களாக அழுதார்கள் அந்த ஸபத்னிகளும் ஒன்றையும் அறியாத வர்கள் போலத் துக்கித்தார்கள். அரசர் தன்னுடைய புத்திரனுக்கு நேர்ந்த மரணத்தைக் கேட்டுக் கண் தெரியாதவராகி வழியில் விழுந்துகொண்டு மூர்ச்சை யடைந்து பிரகிருதிகளாலும், பிராம்மணர்களாலும் சூழப்பட்டு, வஸ்திரம் அவிழ்ந்தவராகித் தலைமயிரை விரித்துக்கொண்டு அந்தப் பாலனுக்குச் சமீபத்தில் வந்து விழுந்தார், பின்னுமவர் தீர்க்கமாயும் உஷ்ணமா யும் பெருமூச்சுவிட்டுக் கண்ணீரால் கண்டம் அடைத்துப் பேசமுடியாதவராக இருந்தார். அப்பொழுது கிருதத்யுதியானவள் தன்னுடைய புருஷன் துக்கிப் பதையும் குலத்திற்கு ஒரே சந்ததியான புத்திரன் மரணமடைந்ததையும் ஜனங்கள் துக்கிப்பதையும் பார்த்துக் கண்ணீரால் இரண்டு ஸ்தனங்களையும் நனைத்துக்கொண்டு விரித்து தலைமயிர்களுடன் குரரியென்ற பட்சிபோலப் பலவகையாக பிரலாபித்தாள். எப்படியென்றால்; "ஓ ப்ரஹ்மதேவரே! நீர் மிகவும் மூடர்! உம்முடைய சிருஷ்டிக்கு விரோதமானதைச் செய்கிறீர். வயது சென்றவர்கள் ஜீவித்திருக்கும் போது சிறுவன் மரணத்தை அடைகிறான். இம்மாதிரியான விபரீதத்தை நீர் செய்வதால் லோகத்திற்கு நீர்

சத்துருவேயாம் 'நான் ஜீவர்களுடைய கர்மத்தை அனுசரித்து அவர்களை உண்டுபண்ணுகிறேன், சுயமாக ஒன்றும் செய்கிறதில்லை. பிராணிகளுக்கு மாணம், ஜனனம் இவைகள் கிரமமாக உண்டாகிறதென்பது இல்லை' என்று சொல்வீரானால் அவரவர்களுடைய கர்மங்களாலேயே அவரவர்களுக்கு ஜனன மரணங்கள் உண்டாகின்றன உம்மால் என்ன பிரயோஜனம் உண்டுபண்ணப்பட்ட சிநேக பாசத்தை நீரே கெடுக்க லாமா. ஓ குழந்தாய்! அநாதையான என்னையும் துக்கிக்கும் பிதாவையும் விட்டுத் துபவில்லாத யமனுடன் நீ செல்லுவது நியாயமல்ல. அபுத்திரர் களுக்கு ஏற்படும் நரகத்தை உன்னால் தாண்ட வேண்டும் ஓ ராஜபுத்திர! உன்னுடைய தோழர்கள் விளையாடுவதற்கு தேடுகிறார்கள் நீ தூங்கி வெகு நாழியாகி விட்டது எழுந்திரு; என்னுடைய ஸ்தன்யத்தைப் பானஞ்செய் பந்துக்களுடைய துக்கத்தை போக்கடி.; நான் உன்னுடைய சமீபம் வந்தபொழுது புன்சிரிப்புள்ள உன் முகத்தைப் பார்க்கவில்லை. இப்பொழுது இனிமையான உன்னுடைய வார்த்தை களையும் கேட்கவில்லை திரும்பி வராமல் சென்றாயே" என்று அழுதாள். அப்பொழுது சித்தர கேதுவும் மிகுந்த துக்கத்துடன் வாய்விட்டு அழுதார் அவ்விருவர்களும் துக்கிக்கும் பொழுது அங்கிருக்கும் ஜனங்கள் எல்லோரும் அழுதார்கள். இதனைத் தெரிந்துக் கொண்ட அங்கீரஸ் என்னும் மகரிஷி நாரதருடன் அவ்விடம் வந்தார்.

அத்தியாயம்–15

சித்திரகேதுவுக்கு ஞானோபதேசம் செய்தது

அந்த இரண்டு மகரிஷிகளும் மரணமடைந்த பாலகனுடைய சமீபத்தில் விழுந்து, இறந்தவனுக்குச் சமமாயிருக்கும் அரசனை நோக்கி, 'ஓ சிறந்த அரசனே! இப்பொழுது யாரைப்பற்றி நீர் துக்கிக்கிறீரோ அவனுக்கும் உமக்கும் என்ன சம்பந்தம்? முந்திய சிருஷ்யில் இவனுக்கு நீர் யார்? இனி உமக்கும், அவனுக்கும் என்ன சம்பந்தம்? ஜலத்தின் வேகத்தால் மணல்கள் ஒன்றோடொன்று சேருவதுபோலவும் ஜனங்கள் காலத்தால் சேருவதும் பிரிவதுமாக இருக்கிறார்கள். விதைகளில் வேறு விதைகள் எப்படி சிலகாலஞ் சேர்ந்தும், சில காலஞ்சேராமலும் இருக் கின்றனவோ, அப்படி பிராணிகள் ஈசுவரனுடைய மாயையால் தூண்டப்படுகிறார்கள். ஓ மகாராஜ! நான், நீர், இங்கிருப்பவர்கள் ஆகிய எல்லோரும் ஜனனத்திற்கு முந்தியும், மரணத்திற்குப் பிறகும் எப்படி சேர்ந்திருப் பதில்லையோ அப்படியே இப்பொழுது என்று தெரிந்துக்கொள்ளும். ஈசுவரன் ஒன்றிலும் பற்றுத லில்லாதவரானாலும் குழந்தைபோல விளையாட்டாகப் பிராணிகளைக் கொண்டு பிராணிகளைச் சிருஷ்டிக் கிறார்; காப்பாற்றுகிறார்; நாசஞ் செய்கிறார். பிதா வினுடைய தேகத்தால் மாதாவினுடைய தேகத்திலிருந்து புத்திரனுடைய தேகம் உண்டாகிறது. விதை யிலிருந்து விதை உண்டாகவில்லையா? ஆனால் ஜீவன் நித்தியன், சாமானியன் விசேஷமென்று வஸ்துவின் இடத்தில் விபாகம் ஏற்படுத்தியது போல தேகமுள்ளவன், தேகம் என்பது அவிவேகத்தால் ஏற்பட்டதேயாம்.

கட்டையினுடைய விகாரங்கள் அக்னியில் தோற்றுவது போல பலவகையாக இருப்பது ஜன்மநாசம், குறைவு விருத்தி கர்மபலம், ஆகிய இவைகள் தேகத்தின் சேர்க்கையால் தேகியான ஆத்மாவினிடத்தில் தோன்றுகின்றன. தூங்குகிறவனுக்கு அந்த சமயத்தில் அகங்காரமில்லாததனால் கோரமான சம்ஸாரம் அவனுக்குத் தோன்றவில்லை. அதுபோலவே முக்தனுக்கும் அகங்காரம் இல்லாதாதனால் ஜாக்ரதவஸ்தையில் சம்ஸாரம் தோன்றுகிறதில்லை. ஆனதால் அகங்காரமாகிய தமோ குணத்தைப் போக்கடித்துக் கொள்ளும் பகவானாகிய வாசுதேவரும், ஈச்வரனும், எல்லோரும் ஆத்மாவுமான மகாபுருஷனிடத்தில் மனத்தைச் செலுத்தும்" என்று சொன்னார்கள்.

13–20 அதனைக் கேட்ட சித்திரகேது முகத்தைத் துடைத்துக் கொண்டு கவலையற்றவனாகி, "நீங்கள் யார்? பெரியோர்களுக்கும் பெரியோர்களாக இருக்கிறீர்கள். அவதூத வேஷத்துடன் இவ்விடம் வந்திருக்கிறீர்கள். பகவத்பக்தர்களான ப்ராஹ்மணர்கள் பைத்தியங் கொண்டவர்கள் போல என்னைப்போலொத்தவர்களைக் காப்பாற்றுவதற்காகப் பூமியில் சஞ்சரிப்பார்கள். ஸனத்குமாரர், நாரதர், ரிபு, அங்கிரஸ் தேவலார் அஸிதர், மார்க்கண்டேயர், கௌதமர், வசிஷ்டர், ஜாதுகர்ணி, ஆருணி, ரோமசர், சியவர், தத்தர், ஆசுரி, தேவசிரஸ், போத்தியர், பஞ்சசிகர், இரணிய நாபர், கௌசல்வியா, சிருததேவர், ரிதத்து வஜர் ஆகிய இவர்களும் இன்னும் மற்ற சித்தர்களும் அக்ஞர்களுக்கு ஞானத்தை உபதேசிப்பதற்காக சஞ்சரிக்கிறார்கள். ஆனதால் கிராம்ய விஷயத்திலும் ஆசைப்பட்டவனும் மூடனும், சம்சாரத்தில் மூழ்கியவனுமான

எனக்கு ஞானத்தை உபதேசியுங்கள்" என்று கேட்டார்.

21–30 அதனைக் கேட்டு அங்கிரஸ் என்ற மகரிஷி "ஓ மகாராஜ! நீர் அபுத்திரனாக இருந்த காலத்தில் உமக்குப் புத்திரனுண்டாகும்படி அனுக்கிரகித்த அங்கிரஸ் என்பவன் நான். இவர் ப்ரஹ்ம புத்திரராகிய நாரத மகரிஷி, இப்பொழுது புத்திர சோகத்தால் துக்கிக்கும் உமக்கு ஞானோபதேசஞ் செய்து, விஷ்ணு பக்தராகிய உம்மை அனுக்கிரகிப்பதற்காக நாங்கள் இவ்விடம் வந்தோம். ப்ராஹ்மணர்களைத் தெய்வமாகக் கொண்ட பகவத்பக்தன் துக்கிக்கத் தகுந்தவனல்ல. முந்தி உமக்குப் புத்திரனுண்டாகும்படி அனுக்கிரகித்தது போல இப்பொழுது மேலான ஞானத்தைக் கொடுக்கிறேன். இப்பொழுது புத்திரன் இல்லாதவர்கள் வருத்தப்படுவதுபோலத் துக்கப்படுகிறீர். இந்த மாதிரியே ஸ்திரீகள், வீடு, பணம் பலவகையான சம்பத்து, சபதம் முதலிய விஷயங்கள், ராஜ்யம், பூமி, சேனை, பொக்கிஷம்; வேலைக்காரர்கள்; மந்திரிகள், மித்திரர்கள் ஆகிய எல்லோரும் அநித்தியர்கள்; சோகம், மோகம், பயம் இவைகளைக் கொடுப்பவர்கள். இவைகள் சொப்பனம் போலவும் மாயை போலவும்; மனோரதம் போலவும் மித்தியா பூதமான மாயைகளேயாம். மேலும், கந்தர்வ நகரம் போன்றவைகள்; மனத்தால் சங்கற்பிக்கப்பட்டவைகள்; உண்மையான வைகளில்லை. உண்மையாக இருந்தால் எப்பொழுதும் இருக்கவேண்டும், அப்படி இல்லை. மேலும் கர்ம வாசனைகளைக் கொண்டு விஷயங்களைத் தியானிப்பதால் மனதாலேயே கர்மங்கள் ஏற்படுகின்றன. இந்தத் தேகமானது திரவியம், ஞானம் ஆகிய இவைகளின் சரூபமானது, இதனாலேயே தேகியான ஜீவனுக்குப்

பலவகையான சந்தர்ப்பம் உண்டாகிறது; ஆனதால் ஸ்திரமான மனத்தால் ஆத்மாவின் உண்மையை அறிந்து, துவைதத்தை உண்மையென்று நம்பாமல் வைராக்கியத்தை அடையும்" என்றார்.

31–32 பிறகு நாரதர் அரசனை நோக்கி, "ஒரு மந்திரத்தை உமக்கு உபதேசிக்கிறேன். அதனைப் பெற்றுக் கொள்ளும். அதனை ஏழு நாள் ஜபம் செய்தால் சங்கர்ஷண பகவானை நேரில் தரிசிக்கலாம். அந்தப் பகவானுடைய பாதத்தை உபாசித்த பரமசிவன் முதலியவர்கள் இந்தத் துவைதப் பிரம்மத்தை விட்டு மேலானதும்; நிகரற்றதுமான மகிமையை அடைந்தார்கள். அதற்கும் மேலானது ஒன்றுமில்லை. நீரும் சீக்கிரத்தில் அம்மாதிரியான மகிமையை அடைவீர்" என்றார்.

அத்தியாயம்–16

சித்திர கேதுவுக்கு நாரதர் வித்தையை உபதேசித்தது

பிறகு தேவரிஷியாகிய நாரதர் மரணமடைந்த ரஜோ புத்திரனைத் தம்முடைய யோக பலத்தால் பிழைக்கச்செய்து துக்கிக்கும் பந்துக்களுக்கு முன்பாக "ஓ ஜீவாத்மாவே! உனக்கு க்ஷேமம் உண்டாகட்டும். உன்னுடைய தாயும், தகப்பனாரும் மித்திரர்களும், பந்துக்களும் உன்னுடைய மரணத்தால் துக்கிக்கிறார்கள். ஆனதால் இந்தச் சரீரத்தில் இன்னும் சிலகாலம் இருந்து போகங்களை அனுபவி. அரசனுடைய சிம்மாசனத்தையடைந்து, ராஜ்ஜியத்தைக் காப்பாற்று" என்று சொன்னார்.

4–11. அதனைக் கேட்ட அந்த ஜீவன் அவரை நோக்கி, "ஓ ப்ராஹ்மண! எந்த ஜன்மத்தில் எனக்கு இவர்கள் தாய் தகப்பனாக இருந்தார்கள்? கர்மங்களாக தேவசரீரத்திலும், திர்யக் ஜாதிகளின் சரீரத்திலும், மனித சரீரத்திலும் சுற்றிக்கொண்டிருக்கும் ஜீவனுக்கு எல்லோரும் பந்துக்களாகவும் ஞாதிகளாகவும், சத்துருக்களாகவும், மத்தியஸ்தர்களாகவும் மித்திரர்களாகவும், உதாசீனர்களாகவும்; துவேக்ஷிகளாகவும் ஆகிறார்கள். விற்கக்கூடியதும், வாங்கக்கூடியதும் தங்கம் முதலிய வஸ்துக்கள்வியாபாரிகளிடத்தில்சுற்றிக்கொண்டிருப்பது போல ஜீவனும் அநேக யோனிகளில் சுற்றிக்கொண்டிருக்கிறான். ஸ்திரமான இருக்கும் பசு முதலிய வஸ்துக்களும் ஒருவனிடத்திலேயே நிலைத்திருக்கிறதில்லை. அதனால் வஸ்துக்களுக்கும் புருஷனுக்கும்

சம்பந்தம் நித்தியமல்ல. எதுவரையில் சம்பந்தமிருக் கிறதோ அதுவரையில் அந்த வஸ்துவினிடத்தில் என்னு டையது' என்ற அபிமானம் இருக்கிறது. இப்படியே ஜீவன் சரீரத்தை அடைந்து, பிதா முதலியவர்களுடைய சம்பந்தத்தை அடைந்தாலும் அவன் நித்தியனேயாம். உண்மையில் அபிமானமற்றவன்; எந்தச் சரீர சம்பந்தத்தை எதுவரையில் அடைகிறானோ. அது வரையில்தான் அந்தச் சரீரத்தில் அபிமானம் இல்லை இந்த ஜீவன் உண்மையில் நித்தியன்; குறைவற்றவன்; ஜனனம் முதலியவைகள் இல்லாதவன்; தானாகப் பிரகாசிப்பவன்; தன்னுடைய மாயாகுணங்களால் தன்னையே ஜகத் ரூபமாகச் சிருஷ்டிப்பவன்; இவனுக்கு மிகவும் பிரியனாவது, பிரியனில்லாதவனாவது, பந்து வாவது அன்னியனாவது ஒருவனும் இல்லை, குண தோஷங்களை உண்டுபண்ணுகின்ற ஸகல பிராணிகளு டைய புத்திக்குச் சாட்சியாக இருப்பவன், மேலும் அவன் சுகத்தையாவது துக்கதையாவது, கர்ம பலத்தையாவது அடைகிறதில்லை. காரிய காரணங் களுக்குச் சாட்சியாகவும், உதாசீனனாகவும். சுதந்திர னாகவும் இருக்கிறான். ஆனதால் எனக்கும் உங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை" என்று சொல்லி அந்த ஜீவன் சென்றான்.

12–26. அதனைக் கேட்ட அந்த பந்துக்கள் சிநேக பாசம் அற்றவர்களாகித் துக்கத்தை விட்டார்கள், பின்னும் அவர்கள் அந்த தேகத்திற்கு சம்ஸ்காரங்கள் செய்து சோகம், மோகம், பயம் ஆகிய இவைகளைக் கொடுக்கும் விடமுடியாத துக்கத்தை விட்டார்கள். அந்தக் குழந்தையை விஷங் கொடுத்துக் கொன்ற வர்களான ஸபத்தினிகள் வெட்கம் அடைந்து,

பாலஹத்தியால் ஏற்பட்ட தோஷத்தை நிவர்த்தித்துக் கொள்ளுவதற்காக அங்கிரஸ் சொன்னபடி யமுனா நதியில் விரதத்தை அனுஷ்டித்தார்கள். அந்தச் சித்திர கேது என்ற அரசனும் அந்தப் ப்ராஹ்மணருடைய வார்த்தையைக் கேட்டு , விவேகத்தை அடைந்து, சம்சாரமாகிய பாழுங்கிணற்றை விட்டு வெளியில் வந்தான். அது சேற்றில் அகப்பட்டிருந்த யானையானது அதிலிருந்து நிவர்த்தி அடைந்தது போலிருந்தது. பின்னும் அவன் யமுனையில் ஸ்நானம் செய்து பிதிரு தர்ப்பணம் முதலியவைகளை முடித்து, மௌனமாக இந்திரியங்களை அடக்கிகொண்டு, ப்ரஹ்மதேவரின் பித்திரர்களான அந்தப் பிராம்மணர்களை நமஸ்கரித் தார் பிறகு நாரதர் சித்தரும், பக்தரும், சரணமடைந்த வருமாகிய அரசனுக்கு அந்த வித்தையை உபதேசித்தார்; "பகவானாகிய உமக்கு நமஸ்காரம். வாசுதேவராகிய உம்மைத் தியானம் செய்கிறோம். பிரத்யும்ன ஸ்வரூபியும், அனிருத்தரும், சங்கர்ஷணருமாகிய உமக்கு நமஸ்காரம் ஞான ஸ்வரூபியும், ஆனந்த மூர்த்தியும் ஆத்மாவிடத் திலேயே ரமிப்பவரும் சாந்தருமான உமக்கு நமஸ்காரம், மாயையால் உண்டான ராகத்து வேஷம் முதலிய வைகளை ஆத்மானந்தானுபவத்தால் போக்கடித்தவரும், இந்திரியங்களும் அதிபதியும் அளவற்ற சக்தியுள்ள வருமான மகாபுருஷனுக்கு நமஸ்காரம். வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாதவரும், நாமரூபங்களற்றவரும். காரிய காரணங்களுக்கு மேலானவரும். சித்ரூபியுமாகிய பகவான் நம்மைக் காப்பாற்றட்டும். மண்ணால் செய்யப்பட்ட வஸ்துக்களில் அதன் ஜாதி (மண்) தொடர்ந்திருப்பது போல எந்தப் பகவானிடத்திலிருந்து இந்த ஜகத்தானது உண்டாகிறதோ, எவரிடத்தில் வசிக்கிறதோ; எவரிடத்தில் லயமடைகிறதோ அந்தப்

பிரம்மத்திற்கு நமஸ்காரம். ஆகாசம்போல் உள்ளிலும் வெளியிலும் வியாபித்திருக்கும் எவ்ரை மனம், புத்தி, இந்திரியங்கள், பிராணன் இவைகள் தொடுகிறதில் லையோ; தெரிந்துகொள்ளுகிறதுமில்லையோ அவருக்கு நமஸ்காரம் அக்கினியால் காய்ச்சப்பட்ட இரும்பானது திருணங்களை எரிப்பதுபோல தேகம், இந்திரியங்கள், பிராணன், மனது, புத்தி ஆகிய எவருடைய சைதன்ய சம்பந்தத்தால் சேஷ்டிக்கின்றனவோ. எவருடைய சைதன்ய சம்பந்தமில்லாதபொழுது (சுஷுப்தி மூர்ச்சைகளில்) சேஷ்டிக்கின்றதில்லையோ, ஜாக்ரத் முதலிய அவஸ்தைகளில் ஜீவன் திரஷ்டா என்ற பெயரை எவருடைய அனுக்கிரஹத்தால் அடைகிறானோ அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். ஓ சிறந்த பக்தர் களுடைய அஞ்சலியினால் பூஜிக்கப்பட்ட பாதார விந்தமுள்ளவரே! எல்லோருக்கும் மேலானவரே! எல்லோருக்கும் அதிபதியே! மிகுந்த மகிமை உள்ள வரும் மகா விபூதிகளுள்ளவரும், மகா புருஷரும். பகவானுமாகிய உமக்கு நமஸ்காரம்" என்று இம்மாதிரியான வித்தையை பக்தரான அரசனுக்கு நாரதர் உபதேசித்து அங்கிரஸ் என்ற மகரிஷியுடன் தம்மிருப்பிடம் சென்றார்.

27–48. சித்திரகேது நாரதரால் உபதேசிக்கப்பட்ட அந்த வித்தையை ஏழு நாள் ஜலத்தைப் புசித்து ஜபித்தார். கடைசியில் அந்த வித்தையின் மஹிமையால் வித்தியாதரர்களுக்கு அதிபதியாயிருப்பதை அடைந்தார். பிறகு சில தினங்களில் ஆதி சேஷனுடைய பாதார விந்தத்தை அடைந்தார். (அவரைத் தரிசித்தாரென்று கருத்து) அந்தச் சேஷன் தாமரைத் தண்டு போல வெளுத்த சரீரமுள்ளவர்; கருத்த வஸ்திரமுள்ளவர்

கிரீடம், தோள் வளை, அரைஞாண், வளை இவைகளால் ப்ரகாசிப்பவர்; பிரசன்னமான முகமுள்ளவர்; சிவந்த கண்களுள்ளவர் சித்தர்களால் சுற்றப்பட்டவர்; அப்படிப்பட்ட பகவானைத் தரிசித்து, அரசன் சகல பாபங்களற்றவராகி, சித்த சுத்தி அடைந்து, மிகுந்த பக்தியுடன் ஆனந்தத்தால் கண்ணீரைப் பெருக்கி மயிர்கூச்சலடைந்து புராண புருஷரான அந்தப் பகவானைத் துதிக்கலானார். அந்த அரசன் உத்தம சுலோகராகிய பகவானுடைய பாதாரவிந்தத்தை ஆனந்தஜலத்தால் நனைத்து, பகவானிடத்திலிருக்கும் பிரீதிவிசேஷத்தால் கண்டமடைந்துத் தோத்திரம் பண்ணுவதற்கு முடியாதவராக வெகுகாலம் இருந்தார் பிறகு மனத்தைச் சமாதானம் செய்து கொண்டு வெளியிலிருக்கும் விஷயங்களில் செல்லும் இந்திரியங் களை அடக்கிக்கொண்டு தத்வ சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட சரீரமுள்ளவரும், ஜகத்குருவுமாகிய பகவானைத் துதிக்கலானார். "ஓ பகவான்! நீர் ஒருவராலும் ஜயிக்கப்படாதவரானாலும். சமபுத்தியுள்ள பக்தர்களால் ஜயிக்கப்படுகிறீர். அந்தப் பக்தர்களும் உம்மால் ஜயிக்கப்படுகிறார்கள். ஒன்றையும் விரும்பாத வர்களானாலும், அவர்களுக்கு ஆத்மாவைக் கொடுக்கிறீர்" ஓ பகவன்! ஜகத்தைப் படைப்பது, காப்பாற்றுவது, நாசஞ்செய்வது முதலியவை உம்முடைய அம்சத்தின் அம்சமேயாம். ஆனால் அவர்கள் தாமே ஈசுவர னென்ற அபிமானத்தை அடைந்து, வீணாகச் சண்டை செய்கிறார்கள். பரமாணுவுக்கும், பரம மகத்தான காரியத்திற்கும் முதலிலும், கடைசியிலும் மத்தியிலும் இருப்பவர் நீரே, ஆதி, அந்தம், மத்தியம் என்ற மூன்றும் உமக்கு இல்லை. காணப்படும் காரியங்களில் ஆதியிலும் கடைசியிலும் எது இருக்கிறதோ. அதுவே

மத்தியிலும் இருக்கக்கூடியது. இந்த அண்ட கோசமானது பூமி முதலில் ஏழு ஆவரணங்களும் ஒன்றைவிட மற்றொன்று பத்துமடங்கு பெரியதானவை. அந்த அண்டகோசமானது மற்றகோடி அண்டங்களுடன் உம்முடத்தில் பரமாணுபோல இருக்கிறது. அதனால் நீர அனந்தரென்று சொல்லப்படுகிறீர். விஷயத்தில் ஆசைகொண்ட பசுக்கள் போன்ற மனிதர்கள் உம்முடைய விபூதிகளாகிய இந்திரன் முதலியவர்கள் உபயோகிக்கிறார்கள்; உம்மை உபாசிக்கிறதில்லை. அரசனுடைய அரண்மனை நாசம் அடைந்தபோது சேவகர்களுக்கும் எப்படிக் கெடுதி நேரிடுகிறதோ, அப்படி அந்த இந்திரன் முதலிய தேவர்களுடைய ஐசுவரியம் நசிக்கும்போது உபாசகனுக்கும் கெடுதி உண்டாகிறது, ஓ மேலானவரே! விஷய ஆசையி னாலாவது உம்மை உபாசித்தால், அந்தக் காமமானது வறுக்கப்பட்ட விதைபோல முளைக்கிறதில்லை. (வேறு சரீரத்தை உண்டுபண்ணுகிறதில்லை) உண்மையில் ஞானசுரூபியும் குண சம்பந்தமில்லாதவனுமான ஜீவனுக்கு குணத்தாலேயே சுக துக்கங்கள் உண்டா கின்றன. ஓ பகவான்! நீர் தோஷமற்ற பாகவத தர்மத்தை எப்பொழுது சொன்னீரோ அப்படிப்பட்ட உம்மை ஆத்மாவிடத்திலேயே ரமிப்பவர்களான சனத்குமாரர், முதலியவர்கள் மோட்சத்திற்காக உபாசிக்கிறார்கள். அதனால் நீரே எல்லோருக்கும் மேலானவர். இந்த பாகவத தர்மத்தில் 'நான், நீ உன்னுடையது என்னுடையது என்ற பேத புத்தி இல்லை, காம்ய தர்மமானது பேத புத்தியினாலேயே ஏற்பட்டது. அது சுத்தமானதல்ல; அநித்தியமானது; அதர்மமுள்ள தனக்கும் பிறருக்கும் துரோகத்தைச் செய்யும் தர்மத்தால் என்ன பிரயோசனம்?

ஆத்மாவிற்கு துரோகம் செய்வதால் உமக்குக் கோபம் உண்டாகிறது. பிறரை இம்சிப்பதால் அதர்மம் நேரிடுகிறது. பாகவத தர்மத்தில் துரோகம் முதலிய வைகள் இல்லை. தாவர ஜங்கம பிராணிகளிடத்தில் சமபுத்தி உள்ளவர்களான பெரியோர்கள் அதனை உபாசிக்கிறார்கள். உம்முடைய சங்கற்பமானது ஒருபொழுதும் உண்மையை விடுகிறதில்லை, ஓ பகவன்! உம்மைத் தரிசித்ததால் ஸகல பாபங்களும் நசிக்கின்றன. என்பது ஆச்சரியம் அல்ல. உம்முடைய நாமதேயத்தை ஒருகால் ச்ரவணஞ் செய்ததால் சண்டாளனானாலும் சம்சாரத்திலிருந்து நிவர்த்தி அடைகிறான். ஆனதால் உம்மைத் தரிசித்து சுத்த சித்தனாக ஆனேன், உம்முடைய பக்தராகிய நாரத மகரிஷியால் சொல்லப் பட்டது மாறுதலை அடையுமா? சூரியனுக்கு மினுமினுப் பூச்சிகளால் எப்படிப் பிரயோசனம் இல்லையோ அதுபோல ஸகல ஜகத்ரூபியும் எல்லா ஜனங்களுடைய அபிப்பிராயத்தை அறிந்தவருமான உமக்கு நான் சொல்லக் கூடியது ஒன்றுமில்லை, எல்லா ஜகத்தையும் படைத்துக் காப்பாற்றி நாசஞ் செய்பவரும், அற்பர்களான யோகிகளால் பேத புத்தியைக் கொண்டு அறிய முடியாதவரும், பரமஹம் ஸருமான உமக்கு நமஸ்காரம் செய்கிறேன் எந்தப் பகவான் சேஷ்டித்தால் பிரஜாபதிகளும் கர்மங்களைச் செய்கிறார்களோ, எவர் பாரத்தால் இந்திரியங்கள் அவைகளின் சாமரத்தியத்தையடைகின்றனவோ எவருடைய சிரசில் பூமண்டலமானது கடுகு போல இருக்கிறதோ அந்த ஆயிரம் தலையுள்ள பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன்.

49–65. இம்மாதிரியாக சித்திரகேதுவினால்

துதிக்கப்பட்ட பகவான் அவரை நோக்கி, "நாரதர், அங்கிரஸ் இவ்விருவர்களும் எதனை உமக்கு உபதேசித் தார்களோ. அந்த வித்தையாலும் என்னைத் தரிசித்தாலும் சித்தனாக ஆயிவிட்டாய். நானே ஸகல பிராணிகளின் சூக்ஷுமமாகவும் பிராணிகளுக்குக் காரணமாகவும் இருக்கிறேன். மேலும் எனக்கு சப்த ப்ரஹ்மம் பரப்ப்ரஹ்மம் என்ற இரண்டு சரீரங்கள் இருக்கின்றன. போக்கியமாகிய பிரபஞ்சத்தில் போக் தாவாக இருக்கும் ஆத்மாவையும் போக்கியமாயி ருக்கும் லோகத்தை ஆத்மாவிடத்தில் வியாபித்திருப்ப தாயும், அவ்விரண்டும் என்னால் வியாப்தமமாக இருப்பதையும்: என்னிடத்தில் அவ்விரண்டும் கற்பித மென்றும் நினைக்க வேண்டும் தூங்கும் புருஷன் மலை, காடு முதலியவைகளைத் தன்னிடத்தில் இருப்பதாக எப்படிப் பார்க்கிறானோ, தூங்கி எழுந்திருக்கிறானோ, அதுபோல ஜீவனுக்கு ஜாக்கிரத், அவஸ்தை முதலியவைகள் மாயையால் ஏற்பட்டவைகள் என்று தெரிந்துகொண்டு, அவைகளுக்குச் சாட்சியும் உபாதியற்றவருமான ஆத்மாவை நினைக்கவேண்டும். தூங்கும் சமயத்தில் புருஷன் இந்திரியங்களுக்குப் புலப்படாத சுகத்தையும், துக்கத்தையும் எந்த ஸ்வரூபத்தால் அறிகிறானோ, அதனையே ப்ரஹ்மம் என்று தெரிந்துகொள். (தூங்கி விழித்தவன் சுகமாகத் தூங்கினேன் என்று சொல்லுகிறான் ஆனால் அந்த சுகம் இம்மாதிரியென்று சொல்ல முடியவில்லை) தூக்கம், ஜாக்ரதவஸ்தை ஆதிய இரண்டையும் அனுபவிக்கும் புருஷனுக்கு இரண்டு காலத்திலும் எது தொடர்ந்து இருக்கிறதோ அந்த ஞானமே பரப்ரஹ்மம். அதுவே நான் இந்த என்னுடைய ஸ்வரூபத்தை எவன் மறந்து விடுகின்றானோ அவனுக்கு ஆத்மாவை விடப் ப்ரஹ்மம்

வேறாகத் தோன்றும். அதனால் ஜனனமரண ரூபமான சம்சாரம் உண்டாகும் சாஸ்திரத்தை படிப்பதால் உண்டாகும் ஞானம் அபரோட்ச ஞானம் ஆகிய இவைகளை உண்டுபண்ணக்கூடிய மனித சரீரத்தை அடைந்தும் எவன் ஆத்ம தத்துவத்தைத் தெரிந்து கொள்ளவில்லையோ, அவன் ஒருபொழுதும் க்ஷேமத்தை அடையமாட்டான் மேலும், புருஷன் ஆசையால் உண்டாகும் கஷ்டத்தையும் ஆசைப்படாமலிருப்பதால் மோட்சம் கிடைப்பதையும் நினைத்து ஒன்றையும் சங்கற்பிக்காமல் இருக்கவேண்டும். மேலும், ஸதிபதிகள் சுகத்தை அடைவதற்கும், துக்கத்தை நிவர்த்தித்துக் கொள்வதற்கும் கர்மங்களைச் செய்கிறார்கள். அதனால் துக்கமும் நிவர்த்தியாகிறதில்லை; சுகமும் கிடைக்கிற தில்லை தங்களை ஞானமுள்ளவர்களென்று நினைத் திருக்கும் மனிதர்களுக்கும் மேற்சொல்லியபடி பலத்தில் மாறுதல் உண்டாவதையும், ஆத்மாவினுடைய நான்கா வது அவஸ்தையையும் அறிந்து இகலோகம், பரலோகம் ஆகிய இவைகளில் அடையக்கூடிய விஷயங்களில் ஆசைப்படாமல் ஞானத்தாலும், விஞ்ஞானத்தாலும் சந்தோஷமடைந்து. புருஷன் என்னிடத்தில் பக்தனாய் இருக்கவேண்டும் மந்திரத்தை அறிந்தவர்களும், யோகத்திலும் சாமர்த்தியமுள்ள புத்தியுள்ளவர்களுமான புருஷர்கள் பரமாத்மாவைத் தெரிந்து கொள்வதையே புருஷார்த்தமென்று நினைக்க வேண்டும். ஓ அரசனே! நீரும் என்னுடைய வார்த்தையைச் சிரத்தையுடன் புத்தியில் தரித்து ஞானம், விஞ்ஞானம் இவைகளை அடைந்து சீக்கிரத்தில் சித்தியடைவீர்" என்று ஜகத் குருவாகிய பகவான் சித்திர கேதுவைச் சமாதானஞ் செய்து அவர், பார்த்து கொண்டிருக்கும் பொழுதே மறைந்தார்.

அத்தியாயம்–17

சித்திரகேது சாபத்தால் அசுர ஜன்மத்தை அடைந்தது

எந்த இடத்தில் பகவான் மறைந்தாரோ, அந்த திக்குக்கு நமஸ்காரஞ் செய்து சித்திர கேதுவானவர் ஆகாசத்தில் சஞ்சரித்தார்; அவர் யோகைச்வர்யத்தை அடைந்தவராகையால் சித்தர்களாலும், சாரணர்களாலும், மகரிஷிகளாலும் தோத்திரம் பண்ணப்பட்டவராகி பலம், இந்திரியம், சாமர்த்தியம் இவைகள் குறையாமல் லட்ச வருஷகாலம் குலபர்வதங்களின் குகைகளில் ஸ்திரீகளுடன் பகவானுடைய சரித்தத்தைக் கானஞ்செய்து கொண்டு ரமித்தார். ஒருநாள் அந்த சித்திரகேது விஷ்ணுவினால் கொடுக்கப்பட்ட விமானத்தின் மீதேறி சஞ்சரிக்கும்போது பரமசிவனைக் கண்டார். அந்தப் பரமசிவன் பார்வதியை ஆலிங்கனஞ் செய்து கொண்டு மகரிஷிகளுடைய கூட்டத்தில் சித்தர்களாலும், சாரணர்களாலும் தோத்திரம் செய்யப்பட்டிருந்தார். அப்பொழுது சித்திரகேது சிரித்து, பார்வதி கேட்டுக் கொண்டிருக்கும்போது, "இவர் லோகத்திற்கு குரு; ஸகல பிராணிகளுக்கும் தர்மத்தை சொல்பவர்; ஜடையைத் தரித்துக் கொண்டு கடுமையாகத் தபஸ் செய்பவர்; சாதுக்களுக்கு அதிபதி; அப்படியிருந்தும் பிராகிருத புருஷன்போல சபையில் ஸ்திரீயை ஆலிங்கனஞ் செய்துகொண்டு வெட்கமில்லாமல் உட்கார்ந்திருக்கிறார். பிராகிருத ஜனங்கள்கூட பெரும் பாலும் ஸ்திரீயை ரகசியத்தில் ஆலிங்கனஞ் செய்து கொள்கிறார்கள். மேலான விரதத்தைத் தரிக்கும் இவர் சபையில் பாரியையை வைத்துக் கொண்டிருக்கிறார்"

என்று பரிகசித்தார். அதனைக் கேட்ட கம்பீர புத்தி யுள்ள பகவான் சிரித்துக் கொண்டு மௌனமாக இருந்தார். சபையிலிருப்பவர்களும் பகவானுடைய அபிப்ராயத்தை அனுசரித்து மௌனமாக இருந்தார்கள். இம்மாதிரி பகவானுடைய மகிமையை அறியாமல் சித்திரகேது பரிகாசம் செய்ய, அதனைக் கேட்ட பார்வதி கோபங் கொண்டு பின்வருமாறு சொன்னாள்; 'இவன் வெட்கமில்லாத நம்மைப் போலொத்த துஷ்டர்களைச் சிட்சிக்கும் பிரபுவா? ப்ரஹ்மதேவரும் அவருடைய புத்திரர்களான பிறகு நாரதர் முதலியவர் களும் சனத்குமாரரும் கபில மகரிஷியும் சாஸ்திரத்தை மீறி நடக்கும் பரமசிவனைத் தடுக்க வில்லையாதலால் அவர்கள் தர்மத்தை அறியாதவர்களா? மேற்சொல்லிய வர்களால் தியானம் பண்ணக் கூடிய பாதாரவிந்த முள்ளவரும் ஜகத்துக்கு குருவும் மேலான மங்களார்த் தியுமான பரமசிவனை இந்த க்ஷத்திரியன் (வித்வான் களை அவமதித்துப்) பரிகசிப்பதால் இவன் சிட்சிக்கக் கூடியவன். சாதுக்களால் சேவிக்கப்பட்ட ஸ்ரீ நாராயண னுடைய பாதார விந்தத்தை அகங்காரமுள்ளவனும் வணக்கமில்லாதவனுமாகிய இவன் அடையத்தகுந்தவன் அல்ல. ஆனால் நீ அசுரஜன்மத்தை அடையக்கடவாய். இப்படி சிட்சிக்கப்பட்டால்தான் இனியாவது இம்மாதிரியான கெட்ட செய்கையைச் செய்யாமலி ருப்பாய்" என்று சபித்தாள்.

16–25 இந்தச் சாபத்தைக் கேட்ட சித்திரகேது விமானத்திலிருந்து இறங்கிப் பார்வதியை நமஸ்கரித்து நல்வார்த்தை சொன்னார். ஓ அம்பிகே! உம்முடைய சாபத்தை அங்கீகரிக்கிறேன். தேவர்கள் மனிதர்களுக்கு எதனைச் சொல்கிறார்களோ, அது முந்தியே ஏற்படுத்தப் பட்டதேயாம். இந்த சம்சாரத்தில் பிராணிகள்

அஞ்ஞானத்தால் மோகமடைந்து சுகத்தையும், துக்கத்தையும் எங்கும் எக்காலத்திலும் அனுபவிக்கிறார்கள். தன்னுடைய சுகதுக்கங்களுக்கும் பிறருடைய சுக துக்கங்களுக்கும் ஒருவனும் கர்த்தாவல்ல வித்வான்கள் பரமாத்மாவையே கர்த்தாவாக நினைக்கிறார்கள். மாயா குணங்களுடைய பிரவாகமுள்ள இந்த சம்சாரத்தில் சாடமேது? அனுக்கிரகம் எது? ஸ்வர்க்கம் எது? நரகம் எது? சுகதுக்கங்கள் எவை? பகவான் ஒருவரே சகல லோகத்தையும் தம்முடைய மாயையைக் கொண்டு படைக்கிறார். இந்த பிராணிகளுக்கு பந்தத்தையும், மோட்சத்தையும், சுகத்தையும், துக்கத்தையும் உண்டு பண்ணுகிறார். அவருக்கு வேண்டியவனொருவனுமில்லை. அவருக்கு விரோதியுமில்லை. ஞாதியுமில்லை, பந்துவு மில்லை. தம்மைச் சார்ந்த சமரும், உபாதியற்றவருமான அந்தப் பகவானுக்கு ஆசையும் துவேஷமும் உண்டாகுமா? ஆனாலும் அவருடைய மாயா சக்தியால் பிராணிகளுக்கு சுக துக்கங்களும், ஹிதமும், அஹிதமும்; பந்தமும், மோட்சமும், ஜனனம், மரணம் ஆகிய இவைகளும் உண்டாகின்றன. அதனால் சாபத்தை நிவர்த்திக்க வேண்டுமென்று நான் பிரார்த்திக்கவில்லை. நான் பரிகாசம் செய்ததாக நினைத்தாயல்லவா? அந்த என்னுடைய அபராதத்தை மன்னிக்க வேண்டுமாகப் பிரார்த்திக்கிறேன்" என்று சித்திரகேது பார்வதியையும் பரமசிவனையும் சமாதானஞ் செய்து, அவர்கள் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது விமானத்தின் மீது ஏறி சென்றார்.

26–35 பின்பு பரமசிவன் பார்வதியை நோக்கி தேவர்கள், ரிஷிகள், தைத்தியர்கள், சித்தர்கள், பார்ஷதர்கள் ஆகிய இவர்கள் கேட்டுக் கொண்டிருக்கும்

போது அற்புதமான காரியங்களைச் செய்யும் ஸ்ரீ மகாவிஷ்ணுவினுடைய வேலைக்காரர்களை அனுசரித்த வர்களுடைய மகிமையைப் பார்த்தாயா? அவர்கள் ஆசையற்றவர்கள். நாராயணனையே தெய்வமாகக் கொண்டவர்கள்; ஒரிடத்திலும் பயப்படாதவர்கள், ஸ்வர்க்கம், மோட்சம்; நரகம் ஆகிய இவைகளையும் சமமாகப் பார்ப்பவர்கள்; பிராணிகளுக்கு சுக துக்கம் ஜனனம், மரணம்; சாபானுக்கிரக மென்ற துவந்து வங்கள் பகவானுடைய மாயையால் ஏற்படுகின்றன. புஷ்பமாலையை சர்ப்பமென்று நினைப்பதுபோல ஆத்மாவினிடத்தில் பேத புத்தியும், குண தோஷங் களும், அவிவேகத்தால் ஏற்பட்டவைகளேயாம். பகவா னாகிய வாசுதேவரிடத்தில் பக்தி செய்பவர்களும், ஞான பலமுள்ளவர்களும், வைராக்கிய பலமுள்ளவர்களுமான பக்தர்கள் ஒன்றையும் விரும்பார்கள். நான் ப்ரஹ்ம தேவர், சனத்குமாரர், நாரதர், பிரதம புத்திரர்களான மகரிஷிகள், தேவசிரேஷ்டர்கள் ஆகிய எல்லோரும் பகவானுடைய அம்சத்தின் அம்சமுள்ளவர்களானாலும் அவருடைய லீலையை அறியச் சக்தியற்றவர்களாக இருக்கிறோம். அப்படியிருக்க தாமே ஈசுவரனென்று நினைத்திருப்பவர்களால் அறியமுடியுமா? அவருக்கு மிகுந்த மித்திரனாவது, துவேஷியாவது, பந்துவாவது, அன்னியனாவது ஒருவருமில்லை. ஸகல பிராணிகளுக்கும் ஆத்மாவாக இருப்பதால் ஸ்ரீ மகாவிஷ்ணு ஸகல பிராணிகளுக்கும் பிரியமானவர். இந்த சித்திரகேது அந்தப் பகவானுடைய பக்தர்களிடத்தில் பிரீதியுள்ள வன்; எல்லாவற்றையும் சமமாகப் பார்ப்பவன்; சாந்தன்; நானும் ஸ்ரீ மகாவிஷ்ணுவிடத்தில் பிரீதி யுள்ளவன்; ஆனதால் மகாபுருஷனிடம் பக்தியுள்ளவர்களும், சாந்தர்களும், சமமாகப் பார்ப்பவர்களுமான புருஷர்களி டத்தில் கோபிக்கக் கூடாது" என்றார்.

36–41 அதனைக் கேட்ட பார்வதிதேவி கோபமற்ற வளானாள். பகவத் பக்தனாகிய சித்திரகேது பார்வதிக்கு பதில் சாபம் கொடுக்கும் சக்தியுள்ளவனானாலும் அப்படிச் செய்யாமல் சாபத்தைப் பெற்றுக் கொண்டான்) இதுவே சாதுவின் அடையாளம். அந்தச் சித்திரகேது துவஷ்டாவினுடைய தட்சிணாக்கினியில் விருத்திர னென்ற பெயருடன் அசுரனாகப் பிறந்தான். அசுரனாகிய விருத்திரனுக்கு பகவானிடத்தில் பக்தியுண்டாக காரணம் இதுதான். இந்த சித்திரகேதுவின் இதிகாசத் தைச் சிரவணஞ் செய்வதால் ஸகல பந்தங்களும் நிவர்த்தியாகின்றன. எவன் காலையில் எழுந்திருந்து பகவானை ஸ்மரித்து சிரத்தையுடன் இந்த இதிகாசத்தைப் படிக்கிறானோ அவன் உத்தம கதியை அடைவான்.

அத்தியாயம்–18

மருத்துகளின் உற்பத்தி

(ஆறுவது அத்தியாயம் முதல் துவஷ்டாவின் வம்சம் சொல்லப்பட்டது, இனி சவிதாவின் வம்சம் நிரூபிக்கப்படும்)

1. சவிதாவின் பத்னியாகிய பிரச்னி என்பவள் சாவித்திரியையும், மூன்று வியாகிருதிகளையும், ஸோம யாகத்தையும் சாதுர்மாஸ்யத்தையும், பஞ்சமகாயஜ்ஞத் தையும் உண்டு பண்ணினாள்.

2. பகருடைய பத்தினியாகிய சித்தியென்பவள் மகிமா, விபு, பிரபுவென்ற புத்திரர்களையும், அசிஸ் என்ற பெண்ணையும் பெற்றாள்.

3. தாதாவின் பத்தினியாகிய குஹூ என்பவள் ஸாயனென்ற புத்திரனையும் (சாயங்காலம்) ஸிநீவாலீ என்பவள் பிராதகாலத்தையும் (விடியற்காலம்), அனுமதி என்பவள் பூர்ணிமையையும் பெற்றாள்.

4. விதாதா என்பவர் கிரியை என்பவளிடத்தில் புரிஷ்யர்களென்று ஐந்து அக்கினிகளை உண்டு பண்ணினார்.

5–6. வருணருடைய பத்தினியாகிய சர்ஷணியி டத்தில் ப்ரஹ்ம புத்திரராகிய பிருகு திரும்பவும் பிறந்தார் யோகியாகிய வால்மீகியும் வருணருடைய புத்திரர். வல்மீகத்திலிருந்து வெளிப்பட்டதால்

வால்மீகியானார். (ஆனதால் பிருகுவும் வால்மீகியும் சகோதரர்கள்) மித்திரன் வருணன் ஆகிய இருவர்களும் ஊர்வசியென்ற அப்ஸரஸ்திரீயைக் கண்டு மோகித்துத் தங்களுடை ரேதஸ்ஸை ஒரு குடத்தில் விட்டார்கள். அதிலிருந்து அகஸ்தியரும் வசிஷ்டரும் உண்டானார்கள். அதனால் அவ்விருவர்களும் மித்திராவருணர்களுடைய புத்திரர்களானார்கள்.

7–9. மித்திரனென்பவர் ரேவதி என்பவளிடத்தில் உத்ஸர்க்களையும்; அரிஷ்டனையும், பிப்பலனையும் உண்டு பண்ணினார். சக்கிரனென்பவர் (இந்திரன்) பௌலோமி என்பவளிடத்தில் ஜயந்தன், ரிஷபன், வித்வான் என்ற மூன்று புத்திரர்களை உண்டு பண்ணினாரென்று கேள்விப்பட்டிருக்கிறேன். மேலும், திருவிக்கிரமாவதாரஞ் செய்த மாயா வாமனருடைய பத்தினியாகிய கீர்த்தியினிடத்தில் சௌபகன் முதலிய சிறந்த புத்திரர்கள் உண்டானார்கள். அவர்களுடைய சரிதம்; குணங்கள், பராக்கிரமம் ஆகிய இவைகளையும் காசியபருடைய பத்தினியாகிய அதிதியினிடத்தில் பகவான் அவதாரஞ் செய்ததையும் பின்பு சொல்லுகிறேன்.

10–11. பின்னர் காசியபருடைய புத்திரர்களான தைத்யர்களைப் பற்றிச் சொல்லுகிறேன் அந்த வம்சத்தில் பிரகலாதர். பலி ஆகிய இரண்டு புத்திரர்களே பரமபாகவதர்கள். மேலும் ஹிரண்யகசிபு என்றும் ஹிரண்யாட்சன் என்று இரண்டு புத்திரர்கள் இருந்ததாகச் சொல்லியிருக்கிறோம். இவ்விருவர்களும் தைத்தியர்களாலும் தானவர்களாலும் நமஸ்கரிக்கப் பட்டவர்கள். ஹிரண்யகசிபுவின் பத்தினி கயாது

என்பவள். அவள் ஜம்பனுடைய பெண். அவளுக்குப் ப்ரஹ்லாதன் அனுஹ்லாதன் ஸம்ஹ்லாதன், ஹ்லதான் என்ற நான்கு புத்திரர்களுண்டானார்கள். அந்தக் கயாதுவின் ஸஹோதரியான சிஹ்மிகை என்பவள் விபரசித் என்பவரை விவாகஞ் செய்துகொண்டு ராகு வென்று புத்திரனைப் பெற்றாள். அவன் அமிருதபானம் செய்யும்பொழுது ஸ்ரீமந் நாராயணன் சக்கரத்தால் அவனுடைய தலையைவெட்டினார். ஸம்ஹ்லாதருடைய பத்தினியாகிய கதியென்பவள் பஞ்சஜனன் என்பவனைப் பெற்றாள். ஹ்லாதருடைய பத்தினியாகிய தமனீயென் பவள் வாதாபி, இல்வலன்தான் அதிதியான அகஸ்தியருக்காக வாதாபியைக் கொன்று சமைத்தான், அநுஹ்லாதனுடைய பத்தினியாகிய சூர்மமியை என்பவள் பாஷ்கலன் மஹீஷதன் என்ற புத்திரர் களை யுண்டுபண்ணினாள். பிரஹ்லாதருடைய புத்திரன் விரோசனன் என்பவர். அவருடைய புத்திரன் பலி யென்பவர். அவருக்கு அசனை என்பவளிடத்தில் நூறு புத்திரர்கள் பிறந்தார்கள் அவர்களுக்குள் மூத்தவர் பாணன் என்பவர். பலியின் மஹிமை கானஞ் செய்யக் கூடியது, அது பிந்திச் சொல்லப்படும் பாணன் பரமசிவனை ஆராதித்து அவருடைய பார்ஷதராக ஆனார். அவனுடைய பட்டணத்தைக் காப்பாற்றிக் கொண்டு பகவான் இப்பொழுதும் இருக்கிறார். நாற்பத்து ஒன்பது மருத்துக்கள் திதியின் புத்திரர்களாம், அவர்கள் இந்திரனால் தேவர்களாகச் செய்யப் பட்டார்கள்" என்றார்.

அதனைக்கேட்ட அரசன், "ஓ குருவே! அவர்கள் இயற்கையான அசுர சுபாவத்தை விட்டு தேவத் தன்மையை எப்படி அடைந்தார்கள் ? அவர்கள் செய்த

நல்ல காரியம் என்ன? இதனைக்கேட்க நானும் இந்த (மஹரிஷிகளும் சிரத்தைப் படுகிறோம்; சொல்ல வேண்டும்") என்றார்.

22–36. ஓ சௌனகரே! சுக மகரிஷியானவர் இம்மாதிரியான பரீட்சித்தினுடைய சொற்ப அட்சரங் களுள்ளதும், மிக்க அர்த்தமுள்ளதுமான வார்த்தையைக் கேட்டு அதனை சிலாகித்துப் பதில் சொல்லலானார். ஸ்ரீ மகாவிஷ்ணுவைச் சகாயமாகக் கொண்ட இந்திரனால் திதியின் புத்திரர்கள் கொல்லப்பட்டார்கள். அப்பொழுது திதிதேவி துக்கத்தையும், கோபத்தையு மடைந்து யோசித்தாள். சஹோதரர்களைக் கொன்றவனும், தயை இல்லாதவனும், பாபியுமான மஹேந்திரனைக் கொன்று கவலையில்லாமல் எப்பொழுது தூங்குவேன்? எந்தச் சரீரரத்துக்கு கடைசியில் கிருமி, விட், பஸ்மம் என்ற பெயருண்டாகிறதோ, அந்தத் தேகத்திற்காக பூதத் துரோகத்தைச் செய்பவன் தனக்கு ஹிதமானதை அறியான். பிராணிகளுக்குத் தேகத்திற்காக பூதத் துரோகஞ் செய்வதால் நரகம் நேரிடுகிறது, இந்தத் தேகத்தை நித்தியமென்று நினைத்தவனும், கெட்ட மார்க்கத்தில் பிரவர்த்தித்த மனமுள்ளவனுமான இந்திரனுடைய கர்வத்தைப் போக்கக்கூடிய புத்திரன் பிறக்கும் உபாயத்தைச் செய்யவேண்டும்" என்று யோசித்து, சிசுருஷை செய்வது, பிரியமாகப் பேசுவது வணக்கம். இந்திரியங்களை அடக்குவது! பக்தி, கடைக்கண் பார்வை முதலியவைகளால் பர்த்தாவை உபசரித்து அவரைச் சுவாதீனப்படுத்திக் கொண்டாள்; அந்தக் காச்யபர் வித்துவானானாலும் ஸ்திரீயினால் ஜயிக்கப்பட்டு அவளுடைய அபிப்பிராயத்திற்கு வசப்பட்டார். ஆனால் ஸ்திரீகள் பர்த்தாவை

வசப்படுத்துவது ஆச்சரியமல்ல. பரமசிவன் முன் காலத்தில் பிராணிகள் தனித்திருப்பதைப் பார்த்து, சிருஷ்டி விருத்திக்காக ஸ்திரீயைப் பாதி சரீரத்தில் வைத்துக்கொண்டார், ஸ்திரீகள் புருஷர்களுடைய புத்தியை அபஹரிப்பவர்கள்; இப்படி மிகவும் சிசுரூஷை செய்யும் திதியை நோக்கிக் காசியபர் சிரித்துக் கொண்டு, "ஓ அழகான தொடையுள்ளவளே! உன்னி டத்தில் சந்தோஷமடைந்தேன். இஷ்டமான வரத்தைக் கேள். பர்த்தா ஸ்திரீகளிடத்தில் பிரியமடைந்தால் எதுதான் கிடைக்காது? பர்த்தாவே ஸ்திரீகளுக்கு முக்கியமான தெய்வம் எந்தப் பகவான் ஸகல ஜனங் களுடைய மனத்திலும் வசிக்கிறாரோ ஸ்ரீ தேவியின் பதியாகிய எவர் நாமரூபங்களுடன் பலவகையான தேவதைகளாக இருக்கப்படுகிறாரோ அவரே பர்த் தாவாக இருப்பதால் க்ஷேமத்தை விரும்பிய பதிவிரதை களான ஸ்திரீகள் தங்கள் புருஷனைப் பகவானாக நினைத்துப் பூஜிக்கிறார்கள். இம்மாதிரியான எண்ணத் துடன் என்னைப் பூஜித்தபடியால் கெட்ட ஸ்திரீ களுக்கு அரிதாகிய எதனை உனக்குச் செய்யவேண்டும்?" என்று கேட்டார்.

37. அதனைக் கேட்ட திதியானவள், "ஓ ப்ராஹ்மண! எனக்கு நீர் வரங்கொடுப்பவரானால் என்னுடைய புத்திரர்களை இந்திரன் கொன்றதால் அவனைக் கொல்லக்கூடிய சக்தியுள்ள புத்திரன் பிறக்கும்படி அனுக்கிரஹிக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

38–45. அதனைக் கேட்ட காசியபர் கவலையடைந்து "மிகுந்த அனர்த்தம்; என்ன செய்கிறது" என்று துக்கித்தார், விஷயங்களிலும் இந்திரியங்களிலும்

ஆசைப்பட்டு ஸ்திரீ ரூபமான மாயையால் பீடிக்கப் பட்டு நான் நரகத்தில் விழப்போகிறேன். ஸ்திரீயாகிய திதியின்மீது என்ன குற்றம்? அவளுடைய இனிமை யான வார்த்தையால் மோகித்து நான் என்னுடைய அனுகூலத்தில் தவறுதலடைந்தேன் என்னை நிந்திக்க வேண்டும்; ஸ்திரீகளுடைய முகமானது சரத்காலத்திய தாமரை மலர்போல் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியது: வார்த்தையோ கேட்க இனிமையானது; இருதயமோ கத்தியன் முனைபோன்றது; அவர்களுடைய சரித்தத்தை யாரால் அறியமுடியும்? ஸ்திரீகள் தங்கள் காரியத்தையே முக்கியமாகக் கொண்டவர்கள்; அவர்கள் புருஷனையும் புத்திரனையும் சகோதரனையும் கொல்வார்கள், கொல்லும்படி செய்வார்கள் ஆனால் கேட்டதைக் கொடுக்கிறேன் என்று பிரதிக்ஞை செய்ததும் வீணாகக் கூடியதல்ல, இந்திரனுக்கும் கெடுதி நேரிடக்கூடாது அதற்கு ஒரு உபாயம் செய்கிறேன்" என்று யோசித்துக் காசியபர் கோபம் கொண்டு திதியை நோக்கி, "ஒரு வருஷ காலம் நான் சொல்லும் விரதத்தை நீ அனுஷ்டிப்பாயானால் இந்திரனைக் கொல்பவனான புத்திரனுண்டாவான். விரதத்தில் குறைவு நேரிடுமா னால் தேவர்களுக்குப் பந்து ஆவான்" என்றார்.

40. அதனைக் கேட்ட திதியானவள் "என்னால் செய்யக்கூடிய விரதத்தைச் சொல்லும், அதற்கு என்ன செய்ய வேண்டியது? எவைகளைத் தள்ள வேண்டியது? விரதத்தைக் கெடுக்கக்கூடியவைகள் எவை?" என்று கேட்டாள்.

47–54. அதனைக் கேட்ட காசியபர் திதியை நோக்கி "இந்தவிரத்தை அனுஷ்டிப்பவர்கள் பிராணிகளை

இம்சிக்க கூடாது; பிறரை நிந்திக்கக்கூடாது; பொய் சொல்லக்கூடாது; நகத்தைக் கிள்ளுவது, மயிர்களை வெட்டுவது அசுத்தமான வஸ்துக்களைத் தொடுவது ஆகிய இவைகளைச் செய்யக்கூடாது; ஜலத்தில் ஸ்நானம் செய்யக்கூடாது; கோபிக்கக்கூடாது; துஷ்டர் களுடன் பேசக்கூடாது சுத்தமில்லாத வஸ்திரத்தைத் தரிக்கலாகாது; நிர்மாலியமான புஷ்பமாலை முதலிய வைகளைத் திரும்பவும் தரிக்கக்கூடாது எச்சில் பத்திர காளிக்கு நிவேதனஞ் செய்யப்பட்ட அன்னம், கீழ்குலத் தார் கொண்டு வந்த மாமிசம், ரஜஸ்வலையினால் பார்க்கப்பட்ட அன்னம் ஆகிய இவைகளைப் புசிக்க லாகாது. அஞ்சலியால் ஜலத்தைக் குடிக்கக்கூடாது. சந்தியா காலங்களில் தலைமயிரை அவிழ்த்துக் கொண்டாவது அலங்காரஞ் செய்து கொள்ளாமலாவது போர்வையில்லாமலாவது வெளியில் போகக்கூடாது. கால்களை அலம்பாமலும், அசுத்தையாகவும் ஈரமான வஸ்திரத்துடனும். வடக்குத்திக்கில் தலை வைத்துக் கொண்டும் மேற்கில் தலைவைத்துக் கொண்டும்; மேலும் சந்தியா காலங்களில் படுக்கக்கூடாது பிறருடன் சேர்ந்தும் படுக்கக்கூடாது சுத்தமான வஸ்திரம் உடுத்திக்கொண்டு மங்களமான அலங்காரமுள்ள வளாகிக்காலையில் போஜனம் செய்வதற்கு முன் பசுக்களையும் பிராம்மணர்களையும் ஸ்ரீ தேவியையும்; ஸ்ரீ மஹாவிஷ்ணுவையும் பூஜிக்கவேண்டும். சுமங்கலி களான ஸ்திரீகளைச் சந்தனத்தாலும், புஷ்பத்தாலும், உபசாரத்தாலும் பூஜித்துத் தன்னுடைய பர்த்தாவையும் பூஜித்து, மனத்திலும் வெளியிலும் தியானிக்க வேண்டும் இம்மாதிரியான பும்ஸவனமென்ற விரதத்தை ஒரு வருஷகாலம் பூரணமாக யாதொரு குறையும் அன்னியில் அனுஷ்டித்தால் சத்துருவைக் கொல்லும் புத்திரன் பிறப்பான்" என்றார்.

55–63. அதனைக்கேட்ட திதியானவள் அப்படியே அனுஷ்டிப்பதாக ஒப்புக்கொண்டு விரதத்தை அனுஷ்டித்தாள். கர்ப்பத்தையும் அடைந்தாள். மகேந்திரன் திதியின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டு திதியின் ஆசிரமஞ் சென்று அவளுக்குச் சிசுருஷை செய்தார்கள். மேலுமவர் ஒவ்வொரு நாளும் புஷ்பம், பழம், கிழங்கு, சமித்து, தர்ப்பம், இலைகள், தளிர்கள், மண், ஜலம் ஆகிய இவைகளைக் கொண்டுவந்தார். மிருகத்தைக் கொல்வதற்காக வேடன் மிருக வேடத்தைத் தரிப்பது போல விரதத்திற்குக் குறைவு நேரிடும் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டு மகேந்திரன் கபடமாகச்சிசுருஷை செய்தார். அவளுடைய விரதத்தில் குறைவு நேரிடவேயில்லை. அப்பொழுது இந்திரன் தமக்கு க்ஷேமம் எப்படி உண்டாகுமென்று கவலை அடைந்தார் ஒருநாள் மிகுந்த சிரமத்தால் திதியானவள் சந்தியா காலத்தில் அசுத்தையாகக் காலை அலம்பாமல் படுத்துத் தூங்கினாள். அந்தச் சமயம் பார்த்து மகேந்திரன் யோக பலத்தால் அவளுடைய வயிற்றில் பிரவேசித்தார். பின்னும் அவர் சுவர்ணம் போலப் பிரகாசிக்கும் அந்தக் கர்ப்பத்தை ஏழு துண்டுகளாக வெட்டினார். பின்னும் ஒவ்வொரு துண்டையும் ஏழாக வெட்டினார், அப்பொழுது அந்தக் கர்ப்பம், அழுதது. அதனை 'அழாதே' என்றும் சொன்னார். அப்பொழுது அந்தத் துண்டுகள் எல்லாம் கைகூப்பி, "ஓ இந்திர! சகோதரர்களான மருத்துக்களை ஏன் கொல்லுகிறாய்?" என்றன.

64–67. அதனைக்கேட்ட இந்திரன், 'நீங்கள் எனக்குச் சகோதரர்கள்தான்; பயப்படாதீர்கள்' என்று சொல்லி அந்த மருத்துக்களைத் தம்முடைய

பார்ஷதர்களாக வைத்துக் கொண்டார். ஓ பரீட்சித்தே! அசுவத்தாமாவினுடைய அஸ்திரத்தால் அடிக்கப்பட்டும் பகவானுடைய கிருபையால் நீர் பிழைத்ததுபோல அந்தக் கர்ப்பமானது வஜ்ஜிரத்தால் வெட்டப்பட்டும் ஸ்ரீ நாராயணனுடைய அனுக்கிரஹத்தால் மரணம் அடையவில்லை. பகவானை ஒருதடவை தரிசித்தாலும் அவருடைய சாரூப்பியத்தை அடைகிறார்கள். கொஞ்சம் குறைவாக ஒரு வருஷ காலம் திதியானவள் பகவானைப் பூஜித்தபடியால் அக்குழந்தைகள் மரணமடையவில்லை. அந்த நாற்பத்தொன்பது மருத்துக்களும் இந்திரனுடைய ஐம்பது மருத்துக்களானார்கள். திதியின் குற்றத்தை நினையாமல் மகேந்திரன் அவர்களைச் சோமபான முள்ளவர்களாக செய்தார்.

68–70. திதியானவள் தூங்கி விழித்து அக்கினி போல பிரகாசிக்கும் புத்திரர்களை இந்திரனுடன் கண்டு களித்தா பிறகு இந்திரனை நோக்கி, "தேவர்களுக்கு பயத்தை உண்டுபண்ணக்கூடிய ஒரு புத்திரன் பிறக்க வேண்டி இந்த விரதத்தை அனுஷ்டித்தேன். அப்படியிருக்க நாற்பத்தொன்பது புத்திரர்கள் எப்படி உண்டானார்கள்? உனக்குத் தெரியுமானால் உண்மையைச் சொல்" என்றாள்.

71–78. அதனைக்கேட்ட மகேந்தரன் திதியை நோக்கி, "உன்னுடைய அபிப்பிராயத்தை தெரிந்து கொண்டே நான் உனக்குச் சிசுருஷை செய்வதற்கு வந்தேன். அசுத்தையாகத் தூங்கும் சமயம் பார்த்து உன்னுடை கர்ப்பத்தை வெட்டினேன். நான் தருமத்தை அறியாதவன் தன் காரியத்திலேயே நோக்கமுள்ளவன்; உன்னுடைய கர்ப்பமானது ஏழு துண்டுகளாக வெட்டப்பட்டு ஏழு

புத்திரர்களாக ஆயிற்று பின்னும் அவைகளை ஏழேழாக வெட்டியும் அவைகள் மரணமடையவில்லை. அம்மா! அந்த ஆச்சரியத்தைப் பார்த்து இது மகாபுருஷனுடைய பூஜையின் சித்தி" என்று நிச்சியித்தேன். பகவானை பலனை உத்தேசியாமல் ஆராதிப்பவர்களான எந்த மகான்கள் மோட்சத்தையும் விரும்புகிறதில்லையோ, அவர்கள்தான் தங்களுடைய அனுக்கிரஹத்தைத் தேடியவர்கள். ஜகத்திற்கு அதிபதியான தேவதேவராகிய பகவானை ஆராதித்தும் எவன் விஷய போகத்தை விரும்புவான்? (ஒருவனும் விரும்பமாட்டான், என்று கருத்து,) அந்த விஷய பாகமானது நரகத்திலும் கிடைக்கிறது, ஓ அம்ம; தெய்வச் செயலாகக் குழந்தைகள் மரணமடையவில்லை. ஆனதால் மூடனாகிய என்னால் செய்யப்பட்ட குற்றத்தை மன்னிக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார். அப்பொழுது திதியானவள் கபடமற்றுச் சந்தோஷமாக இந்திரனுக்கு விடையளித்தாள். பின்பு மகேந்திரன் அவளை நமஸ்கரித்து மருத்துக்களுடன் மங்களமாகிய ஸ்வர்க்கஞ் சென்றார். ஓ மகாராஜ! உம்மால் கேட்கப்பட்ட மங்களமாகிய மருத்துக்களின் உற்பத்தியைச் சொன்னேன். இனி எதனைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

அத்தியாயம்–19

பும்ஸவன விரதத்தின் ஸ்வரூபம்

அதனைக் கேட்ட அரசன் மகரிஷியை நோக்கி, "ஓ ப்ராஹ்மணோத்தம் பும்ஸவனம் என்ற விரதத்தைச் சொன்னீரல்லவா? ஸ்ரீ மகாவிஷ்ணுவிற்குப் பிரியமான அந்த விரதத்தின் ஸ்வரூபத்தைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

2–33 அதனைக் கேட்ட மகரிஷி அரசனை நோக்கி மார்க்கசீரிஷ மாதத்தில் சுக்லபட்சத்தில் இந்த விரதத்தைப் பர்த்தாவினுடைய அனுமதி பெற்றுக்கொண்டு ஸ்திரீகள் அனுஷ்டிக்க வேண்டும். இது சகல இஷ்டத்தையும் கொடுக்கக் கூடியது; ஸ்நானஞ் செய்து சுத்தையாக, சுத்தமான வஸ்திரத்தை உடுத்திக் கொண்டும், அலங்காரஞ் செய்து கொண்டும்; முதலில் மருத்துக்களின் உற்பத்தியைக் கேட்டு ப்ராஹ்மணர்களிடம், உத்தரவு பெற்றுப் போசனஞ் செய்வதற்கு முந்தியே லக்ஷ்மீதேவியுடன் ஸ்ரீ பகவானைப் பூஜிக்க வேண்டும். ஓ பகவன்! *நீர் பூரணர். உமக்குப் பிறரால் காரியமில்லை; ஒன்றிலும் உமக்கு அபேட்சையில்லை; நீர் மகா விபூதிகளுக்கு அதிபதி; அணிமா முதலிய ஸகல சித்திகளுள்ளவர்; மேலும் நீர் விபூதியையும், தேஜஸையும், தேக பலத்தையும்; காந்தியையும் அடைந்திருப்பது போல ஸகல குணங்களாலும், பூர்ணராக இருக்கிறீர்; அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். விஷ்ணுவின் பத்தினியாகிய ஓ மாயையே! மகா புருஷனுடைய குணங்களுள்ளவளே! ஓ பிரியையே! மகாபாக்கியமுள்ளவளே; லோகமாதாவாகிய உமக்கு

நமஸ்காரஞ் செய்கிறேன் என்று நமஸ்காரஞ் செய்ய வேண்டும். பகவானும்; மகா புருஷனும், மகானு பாவருமாகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவை மகா விபூதிகளுடன் பூஜை செய்கிறேன் என்ற மந்திரத்தால் பிரதிதினமும் ஸ்ரீ விஷ்ணுவிற்கு ஆவாகனம், ஆசனம், அர்க்கியம், பாத்தியம்; ஆசமனீயம், ஸ்நானம்; உபவீதம்; பூஷணம், சந்தனம், புஷ்பம், தூபம்; தீபம், அன்னம் முதலிய நிவேதனம் ஆகிய உபசாரங்களைச் சாவதானமாகச் செய்யவேண்டும். மீதியான ஹவிஸ்ஸைப் பகவானும், மகா புருஷனும், மகா விபூதிகளுள்ளவருமாகிய பகவானுக்கு என்ற மந்திரத்தால் அக்கினியில் பன்னி ரண்டு தடவை ஹோமஞ்செய்ய வேண்டும். ஸ்ரீ தேவியும், மகா விஷ்ணுவும் ஸகல காமங்களையும் கொடுக்கக் கூடியவர்கள். ஆனதால் சம்பத்தை விரும்பி யவர்கள். பக்தியுடன் அவர்களைப் பூஜிக்க வேண்டும். பக்தியால் வணங்கிய மனத்துடன் நமஸ்கரிக்க வேண்டும். மந்திரத்தைப் பத்துத் தடவை ஜபிக்க வேண்டும். பின்பு தோத்திரஞ் செய்ய வேண்டும். எப்படியெனில் நீங்கள் இருவர்களும் லோகத்தில் எங்கும் இருப்பவர்கள்; லோகத்திற்குக் காரணர்கள். இந்தப் பிரகிருதியானவள் சூட்சுமமான மாயா சக்தி. அதற்கு அதிபதியான ஈசுவரன் நீர் ஒருவரே. நீர் சகல யஜ்ஞ ஸ்வரூபி இவள் யாகத்தை செய்ய வேண்டும் என்று புத்தியை உண்டுபண்ணும் பாவனை என்ற சம்ஸ்காரஸ்வரூபி. கிரியாஸ்வரூபி நீர் அதன் பலனை அனுபவிப்பவர்; இவள் குணங்களின் பிரகாசமாய் இருப்பவள். நீர் அவைகளைப் பிரகாசப்படுத்துகிறவர்; நீர் அதன் பலனை அனுபவிப்பவர்; நீர் ஸகல

ஸ்வரூபியான ஆத்மாவாக இருப்பவர்; லக்ஷ்மீயானவள் தேஹ இந்திரியங்கள் ஆகிய இவைகளை ஆச்சிரயித் தவள்; நாமரூபங்களாக இருப்பவள்; லட்சுமிதேவி; நீர் அவைகளைப் பிரகாசிக்கச் செய்பவர்; அவைகளுக்கு ஆதாரமாயிருப்பவர். நீங்கள் இருவரும் எல்லா ஜனங் களுக்கும் வரத்தைக் கொடுப்பவர்களாகவும், அதிபதி களாகவும் இருப்பது போல என்னுடை ஸகாமங்கள் பலிக்கும்படி அனுக்கிரகிக்க வேண்டும்என்று லட்சுமீ தேவியுடன் பகவானைத் துதித்து உபசாரம் முதலிய வைகளைச் சமர்ப்பித்து ஆசமனியங்கொடுத்தும் பூஜிக்க வேண்டும். பின்பு சிஷ்டமான அன்னத்தை முகர்ந்து, பின்னும் பலவகையான தோத்திரஞ் செய்து ஸ்ரீ மகா விஷ்ணுவைப் பூஜிக்க வேண்டும். பர்த்தாவையும் மகா புருஷனாகப் பாவித்து, பிரியமான வார்த்தை முதலான வைகளால் அவரையும் உபாசிக்க வேண்டும். பர்த்தாவும் மிகுந்த பிரியத்துடன் அந்த விரதத்தின் காரியங்களை நிர்வகிக்க வேண்டும். தம்பதிகளுக்குள் யாரால் செய்யப் பட்டாலும் அது இருவர்களாலும் செய்யப்பட்டதேயாம். பத்தினியால் செய்ய முடியாதுபோனால் பர்த்தாவே செய்யலாம். இந்த விஷ்ணு விரதத்தை எப்படியாவது நடத்த வேண்டும். கெடுக்கக் கூடாது. இப்படி பிராமண ஸ்திரீகள் புஷ்ப மாலைகளாலும், சந்தனத்தாலும், அன்னம் முதலியவைகளாலும் அலங்காரத்தாலும் நியமத்துடன் பகவானைப் பூஜிக்கவேண்டும். பின்பு நிவேதனஞ்செய்து அன்னத்தை அவருடைய முன்பாகப் புசிக்க வேண்டும். அதனால் சித்த சுத்தியையும், ஸகல கர்மங்களையும் அடைவார்கள். இப்படி பன்னிரண்டு மாதங்கள் கொண்ட ஒரு வருஷம் விரதத்தை அனுஷ் டித்துக் கார்த்திகை மாதத்தின் கடைசியான நாளில் பகவானை உபாசிக்கவேண்டும். மறுநாள் காலையில்

சுத்தையாக முன்போல் ஸ்ரீ கிருஷ்ணனைப் பூஜித்துப் பாலில் பக்குவமான அன்னத்தை நெய்யுடன் ஹோமஞ் செய்ய வேண்டும். இப்படி பர்வத்தில் செய்யப்படும் ஸ்தாலீபாக விதிப்படி பன்னிரெண்டு ஹோமம் செய்ய வேண்டும். பின்பு பன்னிரெண்டு பிராமணர் களுக்குப் போசனம் செய்விக்க வேண்டும். மேலும் அவர்களுக்கு உபபாத்திரம், எள்ளு, வெல்லம் ஆகிய இவைகளைக் கொடுத்து, ப்ராஹ்மணர்களுடைய ஆசீர் வாதத்தைப் பெற்று, அவர்களை நமஸ்கரித்து அவர் களுடைய உத்தரவின் பேரில் ஆசாரியரை முன்னிட்டுப் பந்துக்களுடன் புசிக்கவேண்டும். ஹோமஞ்செய்து எஞ்சிய சருவைப்பத்தினிக்குக் கொடுத்துப் புசிக்கச் செய்யவும். அது நல்ல புத்திரனைக் கொடுக்கக் கூடியது. இந்த விரதத்தை முறைப்படி அனுஷ்டித்த புருஷன் ஸகல இஷ்டத்தை அடைவான். ஸ்திரீ அனுஷ்டித் தால் சம்பத்து, பிரஜை நீண்ட ஆயுள் உள்ள புருஷன் கீர்த்தி நற்குணங்கள் ஆகிய இவைகளை அடைவாள். கன்னிகையாக இருப்பவள் அனுஷ்டித்தால் அழகான புருஷனை யடைவாள். விதவை அனுஷ்டித்தால் உத்தம கதியை அடைவாள். எவளுக்குக் குழந்தைகள் சிறு வயதிலேயே மரணமடைகின்றனவோ, அவள் இந்த விரதத்தை அனுஷ்டித்தால் தீர்க்க ஆயுசுள்ள புத்திரனை அடைவாள். பணமுள்ளவளானாலும் எவள் அழகில்லாதவளோ, அவள் அழகை அடைவாள். எவள் அழகுள்ளவளோ அவள் மேலான ரூபத்தை அடைவாள். எவள் வியாதியுள்ளவளோ அவள் ரோக மற்றவளாக ஆவாள். அவளுடைய தேகமானது திருடமான இந்திரியங்கள் உள்ளதாகும். இதனைப் பிதிரு காரியங்களில் படித்தால் பிதிரு தேவர்கள் மிகவும் திருப்தி அடைவார்கள். ஹோமஞ் செய்த

பின்பு அக்கினியும் ஸ்ரீமந் நாராயணனும் சந்தோஷத்தை அடைந்து ஸகல காமங்களையும் கொடுப்பார்கள். ஓ மகாராஜா! மருத்துக்களுடைய பிறப்பையும் புண்ணிய கரமான திதியின் விரதத்தையும் சொன்னேன்" என்றார்.

சுபம்

ஸ்ரீ கிருஷ்ணாய பரமாத்மனே நம:

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்கந்தம் 7

அத்தியாயம் 1

பார்ஷதர்களுடைய சாபம்

அதனைக் கேட்ட அரசன் மகரிஷியை நோக்கி, "ஓ ப்ராஹ்மண! ஸ்ரீ பகவான் எல்லாப் பிராணிகளையும் சமமாகப் பார்ப்பவர். ஸுஹிருத்தாக இருப்பவர்; அப்படிப்பட்ட பகவான் இந்திரனுக்காகப் பிராகிருத புருஷன்போல அசுரர்களைக் கொல்வது நியாயமா? பரமானந்த சுருபியான பகவானுக்குத் தேவர்களால் ஆகவேண்டிய காரியம் ஒன்றுமில்லையே. அசுரர்களிடத்தில் அவருக்குத் துவேஷமும் இல்லை. மேலும், குணங்களற்றவராகிய அந்தப் பகவானுக்குப் பயமும் இல்லையே. ஓ மகாபாக்கியமுள்ளவரே! ஸ்ரீமந் நாராயணனுடைய குணங்களைப் பற்றி மிகுந்த சம்சயமிருக்கிறது. அதனை நிவர்த்திக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

4–22 அதைக் கேட்டுச் சுகர் அரசனை நோக்கி, 'ஓ மகா பாக்கியமுள்ளவரே! ஸ்ரீ மகாவிஷ்ணுவின் சரிதம் மிகவும் அற்புதமானது; பாகவதரான பிரகலாதருடைய மகிமை பகவானிடத்தில் பக்தியை விருத்தி செய்யக் கூடியது என்று நாரதர் முதலிய மகரிஷிகளால் கானஞ்செய்யப்படுகிறது. மேலானதும், புண்யகரமானதுமான அந்த ஹரிகதையை ஸ்ரீ கிருஷ்ண பகவானை

நமஸ்கரித்துச் சொல்லுகிறேன். பிரகிருதிக்கும் மேலானவரும், சகல ஜகத்திற்கும் காரணரும், உற்பத்தியற்றவருமாகிய பகவானுக்கு ஒருவரிடத்தில் பிரீதி, மற்றொருவரிடத்தில் துவேஷமென்ற பேதபுத்தி இல்லை. ஆனாலும், அவர் தம்முடைய மாயையின் குணத்தால் சிலருக்கு க்ஷேமத்தைச் செய்பவரும், சிலருக்கு கெடுதியைச் செய்பவருமாக ஆகிறார். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்கள் பிரகிருதியின் குணங்கள். அவைகள் ஆத்மாவின் குணங்களல்ல. அவைகள் ஒரே சமயத்தில் விருத்தியடைகிறதும் இல்லை, குறைகிறதுமில்லை. ஸத்வகுணம் விருத்தியாகும்பொழுது தேவதைகளையும் மகரிஷிகளையும் பகவான் அந்தக் காலத்திற்குத் தக்கபடி அடைகிறார். ரஜோகுணத்திற்கு ஜயகால மேற்படும்பொழுது அந்தக் குணத்தைப் பிரதானமாகக் கொண்ட அசுரர்களையும், தமோகுணத்தின் ஜயகாலத்தில் அதனைப் பிரதானமாகக் கொண்ட யக்ஷர்களையும், ராக்ஷஸர்களையும் அனுக்ரகிக்கிறார். அக்கினியானது ஒன்றானாலும் எப்படிக் கட்டை முதலியவைகளை ஆசிரயித்து அநேக விதமாகத் தோன்றுகிறதோ, எப்படி ஜலமானது ஒன்றானாலும் பாத்திர பேதத்தால் பலவகையாகத் தோன்றுகிறதோ, அப்படி ஆத்மா ஒருவரானாலும் பலவகையாகத் தோன்றுகிறார். தேகம் முதலியவைகளைக் காட்டிலும் விலட்சணரென்று தனியே தோன்றவில்லை. ஆனாலும் வித்வான்கள் காரியம், காரணம் இவைகளை நன்றாக விசாரித்து விவேகத்தால் தெரிந்து கொள்கிறார்கள். எப்பொழுது ஜீவனுடைய உபயோகத்திற்காகத் தேகத்தைச் சிருஷ்டிக்க வேண்டுமென்ற இச்சை உண்டாகிறதோ! அப்பொழுது ரஜஸைத் தனியே சிருஷ்டிக்கிறார். விசித்திரங்களான அந்தத் தேகங்களில்

கிரீடிக்க விரும்பும்பொழுது ஸத்துவத்தை ஸிருஷ்டிக் கிறார். சம்ஹரிக்க விரும்பியபொழுது தமஸ்ஸைத் தனியாகப் பிரிக்கிறார். ஓ அரசனே! பிரகிருதி, புருஷன் ஆகிய இவர்களை நிமித்தமாக வைத்துக் கொண்டு அமோகமாக காரியத்தைச் செய்யும் ஈசுவரன் அவை களுக்கு ஸகாயமாகச் சஞ்சரிக்கும் காலத்தைச் ஸிருஷ் டிக்கிறார். அந்தக் காலமும் ஸத்துவத்தை விருத்தி செய்கிறது. பகவான் தேவர்களை விருத்தி செய்கிறார். மேலும் விசேஷ கீர்த்தியுள்ள் பகவான் அவர்களுக்கு விரோதிகளும், ரஜஸ், தமஸ் இவைகளின் ஸ்வாவமுள்ள வர்களுமான அசுரர்களை நாசஞ் செய்கிறார். மேலும், தம்மால் ஸிருஷ்டிக்கப்பட்ட ஜகத்தைப் பரிபாலிப் பதற்காக விஷ்ணுவாகிய நீர், தேவகணங்களை விருத்தி செய்கிறீர். (காலத்தின் மகிமையால் கலங்கிய குணங் களால் மாறுதல் ஏற்படுகிறதேயொழிய பகவானுக்கு வைஷம்யமில்லை. ஸன்னிதி மாத்திரத்தால் தோன்றுகிற தென்று தாத்பரியம்) தர்மபுத்திரருடைய ராஜசூயத்தால் நாரதரால் சொல்லப்பட்ட ஒரு இதிகாசத்தை இந்த விஷயத்தில் உதாரணமாகச் சொல்லுகிறேன். அது மிகவும் புண்யகரமானது. தர்மபுத்திரர் தம்முடைய ராஜசூய யாகத்தில் சிசுபாலன் பகவானிடத்தில் ஸாயுஜ்யமடைந்ததான ஆச்சரியத்தைக் கண்ணுற்று மற்ற மகரிஷிகள் கேட்டிருக்கும்பொழுது அவ்விடத் திலிருக்கும் நாரத மகரிஷியை நோக்கி, பகவானாகிய வாசுதேவரிடத்தில் சிசுபாலன் ஸாயுஜ்யமடைந்தது அற்புதமாக இருக்கிறது; இது ஏகாந்த யோகிகளுக்கும் கிடைப்பதரிது. பகவானை நிந்தித்ததால் வேனனைப் ப்ராஹ்மணர்கள் சபித்தார்கள். தமகோஷனுடைய புத்திரனாகிய சிசுபாலனும், தூர்ப்புத்தியுள்ள தந்தவக்கிரனும் பாலியம் முதல் இதுவரையில் ஸ்ரீ

கிருஷ்ணனிடத்தில் விரோத புத்தியுடன் நிந்தித்துக் கொண்டிருந்தார்கள். பரப்ரஹ்மமாகிய ஸ்ரீகோவிந்தனை எப்பொழுதும் நிந்தித்த அவர்களுடைய நாக்கில் குஷ்டமுண்டாகவில்லை; மிகுந்த கஷ்டமும் நேரிட வில்லை. அறியமுடியாத தேஜஸுள்ள பகவானிடத்தில் அப்படிப்பட்ட அவர்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது எப்படி லயத்தை அடைந் தார்கள்? இந்த சம்சயத்தால் பெருங்காற்றில் அகப்பட்ட தீபஜ்வாலைபோல் என்னுடைய புத்தி அலைகிறது. இதனைச் சொல்ல வேண்டும்" என்றார்.

21–35 அதனைக் கேட்டு நாரதர் தர்மபுத்திரரை நோக்கி "நிந்திப்பது ஸ்தோத்திரஞ் செய்வது, பூஜிப்பது; அவமதிப்பது ஆகிய இவைகள் ஜீவன், தேகம் இவை களுடைய உண்மையை அறியாததனால் (அபிமானத் தால்) ஏற்பட்டவை. பிராணிகளுக்கு 'நான் என் னுடையது என்ற அபிமானத்தால் இம்சை தண்டம், நிஷ்டூரமாகப் பேசுவது ஆகிய இவைகள் உண்டாகின்றன. எந்தச் சரீர சம்பந்தத்தால் அபிமானமுண்டாகிறதோ, அந்தச் சரீரத்தின் வதத்தால் பிராணிகளுக்கு வதம் நேரிடுகிறது. ஸகல ஸ்வரூபியும் தாமொருவருமாகிய பகவானுக்கு மேற்சொல்லிய வைஷம்ய முண்டாகிற தில்லை. அனுகூலத்திற்காகவே சிட்சிப்பவரான பகவானுக்கு இம்சை யாரால் செய்ய முடியும்? ஆனதால் விரோதத்தினாலாவது விரோதமில்லாதிருப்பதி னாலாவது, பயத்தினாலாவது சிநேகத்தாலாவது காமத்தாலாவது மனத்தைப் பகவானிடத்தில் சமர்ப்பிக்க வேண்டும்! பேதபுத்தி வைக்கக்கூடாது. மேலும், பகவா னிடத்தில் விரோத புத்தியை வைத்துத் தன்மயமாக ஆவது போல் பக்தியோகத்தால் சித்தியடைகிறது

இல்லை. சுவரில் புழுவை வைத்து அதன்மீது குளவி யானது கூடு கட்டி எப்பொழுதும் சப்தித்துக் கொண்டு அதனைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. உள்ளிருக்கும் புழுவானது துவேஷத்தாலும் பயத்தாலும் அதனையே நினைத்துக் கொண்டு தானும் அதுவாக ஆகிறதுபோல மாயாமனிதனும், உண்மையில் ஈசுவரனுமாகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் விரோதத்தால் புத்தியைச் செலுத்தி, பாபமில்லாதவர்களாகச் சுத்தர்களாகி அந்தப் பகவானைச் சிலர் அடைகிறார்கள். அநேகர்கள், கர்மத்தாலும்; துவேஷத்தாலும் பயத்தாலும் சிநேகத்தாலும், பக்தி யாலும் பகவானிடத்தில் மனத்தைச் செலுத்தி சுத்தர் களாகி அவருடைய கதியை அடைந்தார்கள். காமத் தால் கோபிகைகள் நல்ல கதி அடைந்தார்கள். கம்ஸன் பயத்தால் பகவானையே நினைத்து நல்ல கதியை அடைந்தான். சிசுபாலன் முதலியவர்கள் துவேஷத் தாலும் விருஷ்ணிகள் சம்பந்தத்தாலும் நீங்கள் சிநேகத்தாலும் நாங்கள் பக்தியாலும் நல்ல லோகத்தை (பகவானை) அடைந்தோம். மேற்சொல்லிய பக்தியில், ஒருவித பக்தியும் வேனனால் செய்யப்படவில்லை. அதனால் அவனுடைய பாபம் பலித்தது. ஆனதால் எந்த உபாயஞ் செய்தாவது மனத்தை ஸ்ரீ கிருஷ்ணனி டத்தில் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் உமக்குச் சிறிய தாயாருடைய புத்திரர்களாகிய சிசுபாலன், தந்தவக்திரன் ஆகிய இவர்கள் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பார்ஷதர்களாக இருந்தவர்கள். ப்ராஹ்மண சாபத்தால் அந்தப் பதத்தை விட்டு பூமிக்கு வந்தவர்கள்" என்று சொன்னார்.

36–37 அதனைக் கேட்ட தர்மபுத்திரர் நாரதரை நோக்கி, "ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பக்தர்களுக்குச் சாபம் எப்படி ஏற்பட்டது? பகவானிடத்தில் ஏகாந்தமாக பக்தி

செய்யும் பக்தர்களுக்குத் திரும்பவும் ஜனனமேற்பட்ட தென்பது நம்பக் கூடியதாகத் தோன்றவில்லை. பிராகிருதமான தேகம் இந்திரியங்கள், பிராணன் ஆகிய இவைகளற்றவர்களான வைகுண்ட லோகத்தில் வசிப்பவர்களுக்குப் பிராகிருத தேகத்தின் சம்பந்தம் எப்படி உண்டாயிற்று? அதனைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

38–50 அதனைக் கேட்ட நாரதர் தர்மபுத்திரரை நோக்கி, "ஒருகால் ப்ரஹ்மதேவருடைய புத்திரர்களான சநந்தர் முதலியவர்கள் முவுலகமும் சஞ்சரிக்கும்போது தெய்வச்செயலாக விஷ்ணுலோகம் சென்றார்கள். அவர்கள் ஐந்தாறு வயதுள்ள சிறுவர்கள் போன்றவர்கள். முன்னோர்களுக்கும் முந்தியவர்கள்; திக்குகளையே வஸ்திரமாகக் கொண்டவர்கள். அவர்களைக் கண்ட விஷ்ணுவின் துவார பாலகர்கள். சிறுவர்களென்று நினைத்து உள்ளே போகக்கூடாதென்று தடுத்தார்கள். அப்பொழுது அந்தக் குமாரர்கள் துவாரபாலகர்களை நோக்கி, ரஜோ குணம், தமோ குணம் இவைகளில்லாத ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பாத பலத்திலிருக்கும் உங்களுக்கு இந்த ஸ்தானம் தகுதியில்லை. ஆனதால் மூர்க்கர்களான நீங்கள் சீக்கிரம் அசுர ஜன்மத்தை அடைவீர்கள்" என்று சபித்து, மூன்று ஜன்மத்திற்கு பிறகு பார்ஷதர் களாக வருவீர்களென்றும் கிருபையுடன் அனுக்கிரகித் தார்கள். அவர்கள் ஹிரண்யகசியு; ஹிரண்யாட்சன் என்ற பெயருடன் திதிக்குப் புத்திரர்களாக பிறந்தார்கள். அவர்களில் ஹிரண்யகசிபு என்பவன் நரசிம்ம ரூபியான பகவானால் கொல்லப்பட்டான். ஹிரண்யாட்சன் என்பவன் பூமியைப் பாதாளத்திலிருந்து கொண்டு வந்த வராக ரூபியான பகவானால் கொல்லப்பட்டான்.

ஹிரண்ய கசிபு என்பவன் பகவானிடத்தில் பக்தனும், தன்னுடைய புத்திரனுமாகிய ப்ரஹ்லாதனைக் கொல்ல விரும்பி, பலவகையாக உபத்திரவித்தான். அந்தப் ப்ரஹ்லாதன் சகல பிராணிகளுக்கும் ஆத்மாவாக இருந்த தாலும்; சாந்தராக இருந்தபடியாலும் எல்லாரையும் சமமாகப் பார்ப்பவரானதாலும் பகவானுடைய தேஜஸால் காப்பாற்றப்பட்டிருந்தாலும் அவரைக் கொல்ல முடியவில்லை. பிறகு அவர்கள் கேகவியினிடத்தில் விசிரவசு என்பவருக்கு ராவணன், கும்பகர்ணன் என்ற பெயருள்ள புத்திரர்களாகப் பிறந்தார்கள். அவர்கள் ஸகல லோகங்களுக்கும் உபத்திரவத்தைச் செய்தபடியால் பகவான் ஸ்ரீ ராமனாக அவதரித்து அவர்களைக் கொன்றார். அந்த ஸ்ரீ ராமனுடைய சரிதத்தை மார்க்கண்டேயர் உமக்குச் சொல்வார். அவர்களே இப்பொழுது உம்முடைய சிறிய தாயாருக்குப் புத்திரர்களாக பிறந்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணனுடைய சக்கரத்தால் அடிக்கப்பட்டுச் சுத்தர்களானார்கள். பகவானிடத்தில் இடைவிடாமல் விரோதத்தைச் செலுத்தி, அதனால் எப்பொழுதும் அவரைத் தியானஞ் செய்து ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பார்ஷதபதத்தை அடைந்தார்கள்' என்றார். அதனைக் கேட்டு தர்ம புத்திரர் நாரதரை நோக்கி, "ஓ பகவன்; புத்திரனிடத்தில் பிதாவுக்குத் துவேஷமுண்டாவதற்கு என்ன காரணம்? மேலும், அசுரனாகிய ப்ரஹ்லாதன் ஸ்ரீ கிருஷ்ண பக்தராக இருந்த காரணம் என்ன?" என்று வினவினார்.

குறிப்பு

அடைகிறார்;— அவர்களுடைய தேகத்தில் ப்ரவேசித்து விருத்தி செய்கிறார். அவரவர்களுடைய கர்மத்திற்குத் தக்கபடி சத்துவகுணம் விருத்தியாகும்.

பொழுது தேவர்களையும், மகரிஷிகளையும் பகவான் அனுக்கிரஹிக்கிறார். ஞானம் எப்பொழுது விருத்தி அடையுமோ அப்பொழுது சத்துவ குணம் விருத்தி யடைந்திருப்பதாகத் தெரிந்து கொள்ளவேண்டும். ரஜோகுணம் விருத்தியாகும் பொழுது அதிக ஆசையும் கர்மங்களை ஆரம்பிப்பதும், சாந்தி அடையாமலி ருப்பதும் இவைகள் உண்டாகின்றன. தமோ குண காலத்தில் ஒன்றும் தோன்றாமலிருப்பது. ஒரு காரியத் திலும் பிரவர்த்தியில்லாமலிருப்பது பகவத்கீதை;— எல்லாப் பிராணிகளுக்கும் அந்தர்யாமியாக இருக்கும் பகவான் ஒருகால் தேவர்களுக்கு ஜயத்தையும், மற்றொரு காலத்தில் அசுரர்களுக்கு ஜயத்தையும், கொடுக்கிறார்; என்பதில்லை. ஆனால் அவரவர்களுடைய கர்ம பரிபாகத்திற்குத் தக்கபடி சத்துவம் முதலிய குணங்கள் விருத்தியாகின்றன. அப்பொழுது அவரவர்களுக்கு ஜயமாவது அபஜயமாவது உண்டாகிறது. ஆனதால் பகவானுக்கு ராகமாவது துவேஷமாவது இல்லை. ஆட்சேபம்; சத்துவ குணம் விருத்தியாகும் பொழுது சத்துவ குண ஸ்வபாவமுள்ள தேவர்களைப் பகவான் அடைந்து அனுக்கிரக்கிறார் என்பது யுக்தம். ரஜோ குணம், தமோ குணம் ஆகிய இவைகளின் விருத்தி காலத்தில் அசுரர்களை அனுக்கிரக்கிறாரென்பது நியாயமாகுமா? அந்தக் குணங்களின் விருத்தியானது துக்கத்தையும், மோகத்தையும் உண்டுபண்ணக் கூடிய தல்லவா? சமாதானம்: தேவர்களுக்குப் பெரும்பாலும் சத்துவ குணமே இருக்குமாகையால் பெரும்பாலும் ஜயமுண்டாகிறது. அசுரர்கள் பெரும்பாலும் ரஜோ குணம் தமோ குணமுள்ளவர்களாகையால் பெரும்பாலும் அபஜயமும் ஒரு கால் ஜயமும் உண்டாகிறதென்று கண்டு கொள்க.

அத்தியாயம்–2

ஹிரண்யகசிபு தன் மாதாவைச் சமாதானஞ் செய்வது

அதனைக் கேட்ட நாரதர் தர்மபுத்திரரை நோக்கி, "ஹிரண்யாட்சனை வராகமூர்த்தியான பகவான் கொன்ற பிறகு அவனுடைய பிராதாவாகிய ஹிரண்யகசிபு வானவன் மிகுந்த கோபத்தாலும், துக்கத்தாலும் தாபமடைந்தான்; மேலுமவன் கோபத்தால் உதடுகளை கடித்து, ஜ்வலிக்கும் கண்களால் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு சிங்கப் பற்களால் பயங்கரமாகிய பார்வை உள்ளவனாகி, புருவ நெரித்தலுடன் சூலத்தை உயரத் தூக்கி, சபையில் தானவர்களை நோக்கி, "ஓ தானவர்களே! தைத்தியர்களே! திரிமூர்த்தாவே! ஓ திரயட்ச! ஓ சம்பர! ஓ சதபாகுவே; ஓ ஹயக்ரீவா, ஓ நமுசியே! ஓ பாக! ஓ இல்வல! ஓ விப்பிரசித்தியே! ஓ புலோமன்! ஓ சகுனன் முதலியவர்களே நான் சொல்வதைக் கேளுங்கள் தாமதியாமல் அப்படிச் செய்யுங்கள்; ஸ்ரீ மகாவிஷ்ணு எல்லாரிடத்திலும் சமமாக இருப்பவரானாலும் நமக்குச் சத்துருக்களும், அற்பர்களுமான தேவர்கள் அவரை உபாசித்து அவருடைய சகாயத்தால் என்னுடைய பிரியனாகிய சகோதரனைக் கொன்றார்கள். அந்த மகாவிஷ்ணு தம்முடைய ஸ்வபாவத்தை விட்டவர்; (எல்லாரையும் சமமாகப் பார்ப்பதென்ற சுபாவத்தை) தேஜோரூபியானாலும் மாயையால் வராக ரூபத்தைத் தரித்தவர்: சிறுவன் போல் தம்மை உபாசிப்பவன் இஷ்டப்படி நடக்கக்கூடியவர். இம்மாதிரி சஞ்சல ஸ்வபாவமுள்ள அந்த விஷ்ணுவினுடைய கழுத்தைச் சூலத்தால் வெட்டி, அதிலிருந்து பெருகிவரும் ரத்தத்தால் பிரியம்

உள்ள என்னுடைய பிராதாவைத் திருப்தி செய்கிறேன்; கவலையை நிவர்த்தித்துக் கொள்ளுகிறேன். அந்த மகாவிஷ்ணு தேவர்களுக்குப் பிராணன் போலிருப்பவர் அவரைக் கொன்றால் வேரற்ற மரத்தின் கிளைகள் உலர்ந்து போவது போலத் தேவர்கள் சக்தியற்றவர் களாவார்கள். ஆனதால் நீங்கள் எல்லோரும் பிராம் மணர்களாலும், க்ஷத்திரியர்களாலும் நிறைந்த பூமிக்குச் சென்று தவம், யாகம் அத்தியயனம், விரதம் தானம் ஆகிய இவைகளைச் செய்பவர்களைக் கொல்லுங்கள். ப்ராஹ்மணர்களால் செய்யப்படும் அனுஷ்டானமே ஸ்ரீ மகாவிஷ்ணுவிற்குக் காரணமாயிருக்கிறது. மேலும், அவர் யஜும் தர்மம் ஆகிய இவைகளின் ஸ்வரூபம், தேவர்களுக்கும், ரிஷிகளுக்கும்; பித்ருக்களுக்கும், பூதங் களுக்கும் தர்மத்திற்கும் முக்கியமாகச் சகாயஞ் செய்பவர். ஆனதால் எந்த எந்தத் தேசத்தில் பிராமணர் களும், பசுக்களும், நிறைந்திருக்கின்றனவோ, எந்தத் தேசத்தில் வேதாத்தியயனம் செய்கிறார்களோ மேலும் எந்தத் தேசத்தில் வர்ணாஸ்ரமத்திற்கும். ஆஸ்ரமங்களுக்கும் உரிய கர்மங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றனவோ அந்தத் தேசத்திற்குச் சென்று அக்னியை வைத்துக் கொளுத் துங்கள்; நாசஞ் செய்யுங்கள்" என்று ஆக்ஞாபித்தான். அதனைக் கேட்ட அசுரர்கள் அவனுடைய உத்தரவை சிரஸால் வகித்துப் பிரஜைகளை உபத்திரவித்தார்கள் இயற்கையிலேயே அவர்கள் பிறரை உபத்திரவிப்பதில் பிரியமுள்ளவர்கள். பட்டணங்கள் கிராமங்கள் பசுக்கள இருக்குமிடம்; ரத்தினம் விளையும் பூமி, பயிரிடு வோர்கள் வசிக்கும் பூமி: மலையின் குகை, இடைச் சேரிகள் ஆகிய இவைகளில் அக்னியை வைத்து கொளுத்தினார்கள் சிலர் மண்வெட்டியை எடுத்து அணைகளையும் பிராகாரங்களையும்; கோபுரங்

களையும் பிளந்தார்கள் சிலர் கோடாரியால் ஜீவிகைக்குச் சாதனமாகிய விருட்சங்களை வெட்டினார்கள், மற்றுஞ் சிலர் ஜ்வலிக்கும் கொள்ளிகளை கொண்டு ஜனங்களுடைய வீடுகளை எரித்தார்கள். இப்படி ஹிரண்யகசிபுவின் வேலைக்காரர்கள் லோகத்திற்கு உபத்திரவத்தைச் செய்யும்பொழுது தேவர்கள் ஸ்வர்க்கத்தை விட்டு பூமியில் மறைந்து சஞ்சரித் தார்கள்.

17–35. ஹிரண்யகசிபுவானவன் தன்னுடைய பிராதாவிற்குத் திலோதகம் (தர்ப்பணம்) முதலிய வைகளைச் செய்து அவனுடைய புத்திரர்களுக்குச் சமாதானஞ் சொன்னார். பின்னும், காலத்தை அறிந்த ஹிரண்யகசிபு சகுனி, சம்பன், தார்ஷ்டி, பூதசந்தாபனன் விருகன், காலநாபன், மகா நாபன், ஹரிமச்ருதோத்தசன் என்ற ஹிரண்யாட்சனுடைய புத்திரர்களையும் அவர் களுடைய மாதாவான விருஷ்த்பனு என்பவளையும் தன்னுடைய மாதாவாகிய ததியையும் நோக்கி, "ஓ அம்ம! ஓ நாட்டுப் பெண்களே, ஓ சூரர்களான புத்திரர்களே, நீங்கள் துக்கிப்பது உசிதமல்ல, யுத்தத்தில் சத்துருவைக் கண்டு பயப்படாமல் யுத்தஞ் செய்து மரணமடைவதே சூரர்களுக்கு மேலானது. மேலும், கர்மத்தால் ஜனங்கள் சில சமயம் ஒரேவிடத்தில் சேர்ந்திருக்கிறார்கள்; கர்மத்தாலேயே பிரிக்கப்படு கிறார்கள். இது தண்ணீர்ப் பந்தலில் ஜனங்கள் சேர்ந்து பிரிவது போலிருக்கிறது. ஆத்மா நித்தியன்! நாசமற்றவன்! சுத்தன்! எங்குமிருப்பவன்! எல்லா வற்றையும் அறிந்தவன்! மேலானவர்! ஆனாலும் தன்னுடைய மாயையால் குணங்களால் சிருஷ்டித்துச் சரீரத்தை அடைகிறான். ஜலம் அசையும்பொழுது அதில் பிரதிபிம்பித்த மரங்கள் அசைவதுபோலத்

தோன்றுகின்றன. அல்லவா? (இதனால் உபாதியின் தர்மம் உபயோகத்தில் காணப்படுகின்றது என்று காட்டப் பட்டது! கண்கள் சுற்றும்பொழுது பூமி சுற்றுகிறது போல் தோற்றுகிறது.) (இதனால் கிரஹிக்கிறவனு டைய தர்மமானது கிரஹிக்கப்படுவதினுடைய தர்மமல் லவென்று காட்டப்பட்டது.) ஆனதால் ஆத்மாவானவன் லிங்கமில்லாதவனானாலும், பூர்ணனானாலும், குணங் களால் சுற்றப்படும் மனத்தின் சாம்யத்தை அடைந்து, சரீரமுள்ளவன் போல் பிரகாசிக்கிறான், சரீரமற்ற வனாகிய ஆத்மா தேகாபிமானத்தை அடைந்திருப்பதே ஆத்மாவின் மாறுதல், இப்படியே பிரியமான வஸ்துக்களே அடையாமலிருப்பது. அப்பிரியத்தை அடைகிறது: கர்மம் சம்சாரம் இவைகளும் ஆத்மா விற்கு அபிமானத்திலேயே ஏற்படுகின்றன. மேலும் உற்பத்தி, விநாசம், பலவகையான துக்கம் அவிவேகம் சிந்தை, ஆப்தனால் போதிக்கப்பட்டும் விவேகத்தை மறந்துவிடுவது ஆகிய இவைகளே சம்சாரமாம். இந்த விஷயத்தில் யமனுக்கும் பிரேதத்தின் பந்துக்களுக்கும் நேர்ந்த சம்வாத ரூபமாகிய இதிகாசத்தைச் சொல்லு கிறேன். உசீனர தேசத்தில் சுயக்ஞரென்று ஓர் அரசனி ருந்தார்! அவர் யுத்தத்தில் சத்ருக்களால் கொல்லப் பட்டார். அவருடைய ரத்தினமயமாகிய கவசம் உடைந்தது. ஆபரணங்களும் மாலைகளும் சிதறின. பாணத்தால் அடிக்கப்பட்டு ரத்தத்தால் பூசப்பட்டு யுத்தஸ்தலத்தில் விழுந்தார். அவருடைய தலைமயிர் அலங்கோலமாயிருந்தது அவர் உதடுகளைக கத்துக் கொண்டிருந்தார் அவருடைய முகமானது தூளிகளால் வியாபிக்கப்பட்டிருந்தது. ஆயுதங்களும், கைகளும் வெட்டப்பட்டிருந்தன. இப்படி தெய்வச் செயலால் அடிக்கப்பட்டுப் பூமியிற் கிடக்கும் அந்த சுயக்ஞரைச்

சுற்றி அவருடைய பந்துக்கள் உட்கார்ந்து துக்கித் தார்கள், மேலும் அவருடைய பத்தினிகள், ஓ நாத, அடிக்கப்பட்டோம், என்று சொல்லி மார்பில் இருகை களால் அடித்துக்கொண்டு அவருடைய காலில் விழுந்தார்கள். அவர்களுடைய கண்களிருந்து பெருகி வரும் தண்ணீர் ஸ்தனத்தில் விழுந்து அங்கிருக்கும் குங்குமத்தைக் கரைத்துக் கொண்டு அரசனுடைய காலில் விழுந்தது மேலுமவர்கள் ஆபரணங்களைச் சுழற்றியும் தலைமயிரை அவிழ்த்துக் கொண்டு பின்வருமாறு பிரலாபித்தார்கள். அவர்களை பார்க்கும் ஜனங்கள் வருக்கப்படும்படி இருந்தது. "ஓ மகாராஜ எந்தப் ப்ரஹ்மதேவர் உம்மை உசீனர தேசத்திற்கு அதிபதியாகச் செய்தாரோ; அவர் தயவில்லாமல் உம்மை எங்களுடைய கண்களுக்குப் புலப்படாமலி ருக்கும்படி செய்தார் இந்தத் தேசத்திய ஜனங்கள் மிகவும் துக்கிக்கிறார்கள் செய்த உபகாரத்தை அறிந்த வரும், மிகவும் சுகிருத்துமான உம்மைவிட்டுப்பிரிந்து நாங்கள் எப்படி வசிப்போம்? ஓ சூரராகிய மகாராஜ நீர் எவ்விடத்திற்குப் போகிறீரோ அவ்விடத்திற்கு எங்களையும் அழைத்துக்கொண்டு போகவேண்டும்" இம்மாதிரி அவர்கள் பிரலாபித்து மரணமடைந்த அரசனுடைய சரீரத்தை சம்ஸ்காரம் செய்ய மனமில்லாத வர்களாக இருக்கும்போது சூரியன் அஸ்தமனத்தை அடைந்தார்.

36–62. அந்தக் சமயத்தில் யமன் ஒரு சிறுவனு டைய உருவத்தைத் தரித்து சுயக்ஞருடைய பந்துக் களை நோக்கி, வயதில் முதிர்ந்தவர்களான நீங்கள் இப்படித் துக்கிப்பது மிகவும் ஆச்சரியம். ஜனங்கள் பிறப்பதையும், மரணமடைவதையும் அடிக்கடி

பார்த்திருக்கிறீர்கள். இந்த அரசன் எதனிடமிருந்து உண்டானாரோ அதனிடத்திற்குச் சென்றார். மரண மடையக் கூடியவர்களான நீங்கள் அவரைப்பற்றி வீணாகத் துக்கிக்கிறீர்கள். நான் தாய் தகப்பனில்லாத வனானாலும் அவர்களை நினைக்கிறதில்லை. மிகவும் தன்யனாக இருக்கிறேன். நான் பலமற்றவனானாலும் செந்நாய் முதலியவைகளால் பட்சிக்கப்படாமல் க்ஷேமமாகச் சஞ்சரிக்கிறேன். எந்தப் பகவான் என்னை கர்ப்பத்தில் காப்பாற்றினாரோ அவர் இப்பொழுதும் சம்ரட்சிக்கிறார். மேலும் எந்தப் பகவான் இந்த ஜகத்தை சங்கற்பத்தால் படைக்கிறாரோ, காப்பாற்று கிறாரோ, நாசஞ் செய்கிறாரோ அவருக்குத் தாவர ஜங்கமங்களடங்கிய ஜகத்தானது கிரீடா கிருகமென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள் நிக்ரஹிப்பதிலும், சம்ரட்சிப்பதிலும் அவரே பிரபுவாக இருக்கிறார். வழியில் நழுவி விழுந்ததானாலும் தெய்வத்தால் காப்பாற்றப்பட்டிருக்கிறது வீட்டிலிருப்பதானாலும் தெய்வத்தால் உபேட்சிக்கப்பட்டால் கேட்டுப்போகிறது. காட்டில் அனாதனாக இருப்பவனும் பகவானால் அநுக்ரஹமில்லாதவன் வீட்டில் சம்ரட்சிக்கப்பட்டி ருந்தாலும் நாசமடைகிறான். (ஆத்மாவிற்கு ஜனன மரணங்களிருப்பதாக ஒப்புக்கொண்டு சமாதானஞ் சொல்லப்பட்டது. இனி, உண்மையில் ஆத்மாவிற்கு ஜனன மரணங்களில்லை யென்பது சொல்லப்படு கிறது) லிங்க சரீரத்திற்கு காரணமாகிய கர்மங்களால் தேவாதி சரீரம் உண்டாகிறது. அந்தப் பிராகிருத தேகத்தை ஆத்மா அடைந்தவனானாலும் அதன் தர்மங்களாகிய ஜனன மரணங்களை அடைகிறதில்லை ஏனென்றால், சரீரத்திற்கும் ஆத்மாவிற்கும் மிக்க பேதமிருக்கிறது. இந்தச் சரீரமானது புருஷனுக்கு

அவிவேகத்தால் ஏற்பட்டது. கிருகம் முதலியவைகளில், தான், என்ற அபிமானமுள்ளவனாகிலும் உண்மையில் பார்ப்பவனை விடப்பார்க்க கூடியவஸ்துக்களான அவைகள் எப்படி வேறானவைகளோ அப்படி திரஷ்டாவாகிய ஆத்மாவிடத்திருச்யம் வேறானதேயாம். மேலும் ஜல பரமாணுக்களால் உண்டாகும் குமிழ் முதலியவைகளும், பிருதிவியின் பரமாணுக்களாலு ண்டான குடம் முதலியவைகளும், தஜஸின் பரமாணுக் களாலுண்டான குண்டலம் (சுடுக்கன்) முதலியவை களும் எப்படி நசிக்கின்றனவோ அப்படி அந்த 3 பரமாணுக்களால் ஏற்பட்ட சரீரமானது நசிக்கிறதே யொழிய ஆத்மா நாசமடைகிறதில்லை. அக்னியானது கட்டையை அடைந்து பலவகையாக எப்படித் தோன்றுகிறதோ, தேகத்தை அடைந்த வாயுவானது மூக்கு முதலியவைகளின் தனியாக இருப்பதுபோல எப்படித் தோன்றுகிறதோ, ஆகாசமானது எங்குமிருந் தாலும் ஒன்றிலும் எப்படி சம்பந்திக்கிறதில்லையோ, அப்படி சகல குணங்களுக்கு ஆசிரயணாகிய புரஷன் அதன் குணங்களில் சம்பந்திக்கிறதில்லை. ஓ மூடை களான ஸ்திரீகளே! இந்த சுயக்ஞன் தூங்குகிறானா என்ன? அவனைப்பற்றித் துக்கிக்கிறீர்களே அதனை அவன் காதினால் கேட்கப் போகிறானா? பதில் சொல்லப் போகிறானோ? இவனுடைய ஜனனத்திற்கு முன் இவனைப் பார்த்திருப்பீர்களா? இந்த சரீரத்தில் இருக்கும் முக்கியனான பிராணன் கேட்கிறவனாகவாவது, பதில் கூறுகிறவனாகவாவது இல்லை. பிராணன், தேகம் ஆகிய இவைகளைவிட வேறானதும், இந்திரியங் களுள்ளதுமான ஆத்மாவே திரஷ்டவாக இருக் கிறார். மேலும் பூதங்கள், இந்திரியங்கள், மனது ஆகிய இவைகளால் காணப்படும் பலவகையான

சரீரங்கள் அவைகளைக்காட்டிலும் விலட்சணனாக இருக்கும் ஆத்மா அடைகிறான். பிறகு தன்னுடைய விவேகத்தால் அபிமானத்தை யொழித்து முக்தனாக ஆகிறான். மேலும், ஆத்மா லிங்க தேகத்தில் எது வரையில் அபிமானம் வைத்திருக்கிறானோ அது வரையில் அவனுக்குக் கர்மங்கள் பந்தங்களாகின்றன. அதுவரையில் மாயையின் சம்பந்தமும் கஷ்டமும் அனுசரிக்கும் ஸ்வப்னமானது எப்படி மித்யையோ அப்படி சுகம் முதலியவைகளைச் சத்தியங்களென்று நினைப்பதும், சொல்லுவதும் வீணான அபிநிவேசத்தால் ஏற்பட்டன. நித்யா நித்யத்தை அறிந்து வித்வான்கள் ஆத்மாவைப் பற்றியாவது சரீரத்தைப் பற்றியாவது துக்கிக்க மாட்டார்கள். வித்வான்களாக இருந்தும் துக்கித்தார்களே யாகில் அவர்களுக்கு ஞானம் திருட மில்லை. ஒரு காட்டில் பறவைகளுக்கு யமனாகிய ஒரு வேடன் வலையை விரித்திருந்தான். அப்பொழுது குலிங்க பட்சிகள் ஆணும் பெண்ணுமாக அவ்விடம் வந்தன. அவைகளின் பெண் பட்சியானது வேடனுடைய கானத்தால் வலையில் அகப்பட்டுக் கொண்டது. அதனைப் பார்த்த ஆண் பட்சியானது மிகவும் துக்கப்பட்டு ஒன்றையும் செய்யமுடியாமல் பின் வருமாறு அழுதது; கிருபையற்ற தெய்வமானது தீனையும் துக்கிப்பவளுமான என்னுடைய ஸ்திரீயை அபஹரித்து என்ன செய்யப்போகிறது? பாதி சரீரத்தாலென்ன பிரயோசனம்? என்னையும் தெய்வம் அழைத்துப் போகட்டும்; பார்யையில்லாமல் தீனனாக ஜீவிப்பதைவிட மரிப்பது மேலானது; இறக்கை முளைக்காத குஞ்சுகளைத் தாய் இல்லாமல் நான் எப்படி வளர்ப்பேன்? என்னுடைய குழந்தைகள் அதிருஷ்டமில்லாதவைகள்; அவைகள் கூட்டிலிருந்தது

கொண்டு மாதாவின் வரவை எதிர்பார்த்திருக்குமே' என்று அழுது கொண்டிருக்கும் அந்த ஆண்பட்சி யையும் வேடன் மறைந்திருந்து பாணத்தால் அடித்தான். அதுபோல் உங்களுக்கு வரும் அபாயத்தை கவனியாமல் பார்த்தாவைப் பற்றி துக்கிக்கிறீர்கள். நூறு வருஷங்கள் சென்றாலும் இவனை நீங்கள் அடையப் போகிறதில்லை" என்று சொன்னான். அந்த சிறுவனு டைய வார்த்தையைக் கேட்ட அவர்களெல்லோரும் அச்சரியமடைந்து, எல்லாவற்றையும் அநித்யமென்று நினைத்தார்கள். அந்தச் சிறுவனும் இம்மாதிரி சொல்லி அவ்விடத்திலேயே மறைந்தான் சுயக்ஞனுடைய பந்துக்களும் அவனுக்கு உத்தரக்ரியை செய்தார்கள். ஆனதால் நீங்கள் தன்னைப்பற்றியாவது பிறரைப்பற்றி யாவது துக்கப்படவேண்டாம். 'தான் என்பது யார்? பிறர் என்பது யார்? தன்னைச் சார்ந்தவன் யார்? பிறரைச் சார்ந்தவன் யார்? இவைகள் அவிவேகத்தால் உண்டாகும் அபிமானத்தால் ஏற்பட்டனவேயாம்" என்ற ஹிரண்ய கசிபுவின் வார்த்தையைக் கேட்டுத் திதியானவள் நாட்டுப் பெண்களுடன் புத்திர சோகத்தை விட்டதுமல்லாமல் தத்துவத்தில் சித்தத்தைச் செலுத்தினாள்.

அத்தியாயம்–3

ஹிரண்யகசிபு வரம் பெற்றது

1–13 பின்பு ஹிரண்யகசிபு, தான் பிறரால் ஜயிக்க முடியாதவனும் கிழத்தனம், மரணம் இவைகளற்றவனும்; நிகரற்றவனும், ஒரே அரசனுமாக ஆக வேண்டும் என்று விரும்பி அதற்காக மந்தர பர்வதத்தின் குகையில் இரு கைகளையும் உயரத் தூக்கி ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு, கால் கட்டைவிரலால் பூமியில் நின்று கடுந்தவம் புரிந்தான். அப்பொழுது அவன் தன்னுடைய ஜடைகளின் காந்தியால் பிரளய காலத்தில் சூரியன் போலப் பிரகாசித்தான். அந்தக் காலத்தில் தேவர்கள் அவரவர்களுடைய அதிகாரத்தை அடைந்திருந்தார்கள். அப்பொழுது அவனுடைய தலையிலிருந்து தபோக்னியானது புகையுடன் கிளம்பியது. மேலும் அது மேலுலகத்திலும், கீழும், நாற்புறங்களிலும் பரவியது. நதிகளும், சமுத்திரங்களும் கலங்கின. பூமியானது மலைகளுடனும் தீவுகளுடனும் அசைந்தது; கிருகங்களும், நட்சத்திரங்களும் ஆகாயத்திலிருந்து விழுந்தன; பத்துத் திக்குகளும் ஜ்வலித்தன; அந்தத் தாபத்தைச் சகியாமல் தேவர்கள் ஸ்வர்க்கத்தை விட்டுப் ப்ரஹ்மலோகஞ் சென்று பிரம்மதேவரை நோக்கி, "ஓ தேவர்களுக்குத் தேவரே, ஹிரண்யகசிபுவின் தவத்தினால் தஹிக்கப்பட்டு, சுவர்கத்தில் வசிக்க முடியவில்லை. உமக்கு இஷ்டம் இருக்குமானால் அதற்குச் சாந்தியைச் செய்யும். உம்மைப் பூஜிக்கும் உலகங்கள் நாசமடைவதற்கு முன்னமேயே அதனைச் செய்யவேண்டும். ஓ எல்லாவற்றிற்கும் அதிபதியாக இருப்பவரே! அந்த ஹிரண்யகசிபு எதற்காகத் தவஞ்

செய்கிறானென்றால் அவனுடைய எண்ணம் உமக்கே நன்றாகத் தெரியும். ஆனாலும் நாங்கள் தெரிவிக் கிறோம். ப்ரஹ்மதேவர் ஸ்தாவர ஜங்கம சுபமான ஜகத்தைத் தவத்தினாலும் யோக சமாதியாலும் படைத்து எல்லாவற்றிற்கும் மேலான ஸத்ய லோகத்தை அடைந்திருக்கிறார். நானும் தபஸ் செய்து யோக ஸமாதியால் அந்தப் பதத்தை அடைகிறேன். இந்த ஜன்மத்தில் அது கிடைக்காவிடினும் காலம் ஆத்மா ஆகிய இவைகள் நித்தியங்களாகையால் அநேக ஜன்மங்கள் எடுத்தாவது அந்தப் ப்ரஹ்ம பதத்தை யடையாமல் இருக்கிறதில்லை. பின்னும், இந்த ஜகத்தை முன் போலில்லாமல் மாறுதலாகச் செய்து விடுகிறேன். (புண்யஞ் செய்தவர்களுக்கு துக்கம், பாபம் செய்தவர் களுக்கு சுகம்) அநித்தியங்களான மற்ற பதங்களால் என்ன பிரயோசனம், என்ற எண்ணத்துடன் அந்த அசுரன் கடுந்தவம் செய்வதாகக் கேள்விப்படுகிறோம். ஓ மூன்று லோகங்களுக்கும் அதிபதியாக இருப்பவரே! நீர் இந்தப் பதத்தை அடைந்திருப்பது ப்ராஹ்மணர் களுக்கும், பசுக்களுக்கும், உற்பத்தி, சுகம், ஐசுவரியம் கிடைத்ததைக் காப்பாற்றுவது ஐயம் ஆகிய இவை களுக்குக் காரணமாயிருக்கிறது. ஆனதால் இந்த விஷயத்தில் எதனைச் செய்தால் யுக்தமோ அதைச் செய்யும்" என்றார்கள்.

14–40 அதனைக் கேட்ட ப்ரஹ்மதேவர் பிருகு, தக்ஷர் முதலியவர்களுடன் ஹிரண்யகசிபுவின் ஆச்சிரமஞ் சென்றார். அவ்விடத்தில் ஹிரண்யகசிபுவின் சரீரமானது புற்றினாலும், திருணங்களாலும், மூங்கில் களாலும் கட்டப்பட்டிருந்தது. எறும்புகள் அவன் மீது சஞ்சரித்து அவனுடைய மேதஸ், மாமிசம், தோல்,

இரத்தம் இவைகளைப் புசிக்கின்றன. மேலுமவன் தவத்தினால் உலகங்களுக்குத் தாபத்தை உண்டு பண்ணிக் கொண்டு மேகத்தால் மறைக்கப்பட்ட சூரியன் போல் இருந்தான். அவனைப் பார்த்து ப்ரஹ்மதேவர் மிகவும் ஆச்சரியம் அடைந்து அசுரனை நோக்கி, 'ஓ காசியபருடைய புத்திரனே! எழுந்திரு; எழுந்திரு, நீ தவத்தில் சித்தியையடைந்தாய்; உனக்கு வரங்கொடுப்பதற்காக வந்திருக்கிறேன்; வேண்டியதைக் கேட்கலாம். உன்னுடைய மனோதைரியத்தைத் தெரிந்து கொண்டேன். காட்டுக்கொசு முதலியவை களால் உன்னுடைய சரீரம் பட்சிக்கப்பட்டது. பிராணனும் எலும்புகளும் இருக்கின்றன. இம்மாதிரி யான தவம் முந்தி மகரிஷிகளாலும் செய்யப்படவில்லை. இனியும் செய்யப்படப் போகிறதில்லை. எவன் ஜலத் தையும் புசியாமல் தேவமானத்தால் நூறு வருஷங்கள் பிராணனுடன் இருப்பான்? ஓ திதியின் புத்திரனே! தைரிய முள்ளவர்களாலும் செய்ய முடியாத தவத்தை நீ அனுஷ்டித்தபடியால் உன்னால் ஜயிக்கப்பட்டேன். (உன்னிடத்தில் சந்தோஷமடைந்தேன்) மனிதனாகிய நீ தேவனாகிய என்னைத் தரிசித்தது வீணாகாது. ஆனதால் உனக்கு இஷ்டமான எல்லா வரங்களையும் கொடுக்கிறேன் என்று சொல்லிக் கமண்டலுவிலி ருக்கும் திவ்யமான ஜலத்தைப் புரோட்சித்தார். பின்பு மூங்கிற் காட்டில் புற்றுகளால் மறைக்கப்பட்டிருந்த அந்த அசுரன் மிகுந்த தேஜஸ் பலம் ஆகிய இவை களுள்ளவனாகி வெளியில் வந்தான். அவனுடைய குறைந்துபோன அவயவங்கள் பூர்ணங்களாயின. மேலும் அவன் வஜ்ஜிரம் போலக் கெட்டியான சரீரமுள்ள வனும், யௌவன வயதுள்ளவனும், புடம் போட்ட தங்கம் போன்ற காந்தியுள்ளவனுமாயிருந்தான்.

இப்படிக் கட்டையிலிருந்து அக்னி பிரகாசிப்பது போலப் புற்றிலிருந்து வெளிப்பட்ட அசுரன் ஆனாயத்தில் ஹம்சத்தின்மீது வீற்றிருக்கும் ப்ரஹ்மதேவரைப் பார்த்து மிகுந்த சந்தோஷத்தை அடைந்து; நமஸ்கரித்து எழுந்திருந்து; வணக்கத்துடன் கைகூப்பி, ஆனந்தத்தால் கண்ணீரைப் பெருக்கி; மயிர்க்கூச்சலுள்ளவனாகிக் கண்டமடைத்து பின்வருமாறு தோத்திரம் செய்ய லானான். "எவர் பிரளய காலத்தில் பிரகிருதி; குணம் இவைகளாகிய இருட்டால் சுற்றப்பட்ட இந்த உலகத்தைத் தம்முடைய தேஜஸால் பிரகாசிக்கச் செய்தாரோ, எவர் இந்த லோகத்தை முக்குண ரூபமான மாயையைக் கொண்டு படைக்கிறாரோ, காப்பாற்று கிறாரோ, நாசம் செய்கிறாரோ, அந்தப்பரமேசுவரனை நமஸ்கரிக்கிறேன். அவர் ரஜோகுணம், சத்துவ குணம், தமோ குணம் ஆகிய இவைகளுக்கு ஆச்ரயமாயிருப்பவர். மேலும் அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர்; காரண மாக இருப்பவர்; ஞான ஸ்வரூபி; பிராணன் இந்திரி யங்கள்; மனது, புத்தி, ஐந்து பூதங்கள் ஆகிய இவை களால் காரிய ரூபத்தை அடைந்தவர்; அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். நீர் ஜங்கமங்களுக்கும் ஸ்தாவரங்களுக்கும் அதிபதி; முக்கிய பிராண சுரூபியாக இருப்பதால் எல்லாப் பிரஜைகளுக்கும் அதிபதியாக இருப்பவர் பின்னும் மனதிற்கும் சைதன்னியத்திற்கும் இந்திரியங்களுக்கும் அதிபதியாக இருப்பவர். ஆனதால் ஆகாசம் முதலிய பூதங்களுக்கும் நீரே அதிபதி; நான்கு ஹோதாக்கள் செய்ய வேண்டிய கர்மங்களைச் சொல்லுகின்ற வேதமாகிய சரீரத்தால் அக்னிஷ்டோமம் முதலிய யாகங்களை வெளிப்படுத்து கிறீர். நீர் ஒருவரே ஸகல பிராணிகளுக்கும் ஆத்மாவாக இருப்பவர்; ஆதியற்றவர்; நாசமற்றவர், கரையற்றவர்;

எல்லாவற்றையும் அறிந்தவர்; அந்தர் யாமியாக இருப்பவர். மேலும் நீர் காலஸ்வரூபியாக இருந்து லவம், க்ஷணம், தினம் முதலிய அவயவங்களால் ஜனங்களுடைய ஆயுளை அபகரிக்கிறீர். ஆனதால் நீர் கூடஸ்தராகிய ஆத்மா. பரமேசுவரன் உற்பத்தியி ல்லாதவர்; அளவிடக்கூடாதவர். மேலும், நீர் ஸகல பிராணிகளுக்கும் ஆத்மாவாகவும், ஜீவனாகவுமிருக் கிறீர்; (பிழைப்பதற்குக் காரணம்) காரிய காரணம் ஸ்வரூபமும் தாவர ஜங்கம ரூபமுமான ஜகத்தில் உம்மைத் தவிர வேறு பதார்த்தம் ஒன்றுமில்லை. ஸகல வேதங்களும் கலைகளும் உம்முடைய சரீரங்களாகும். நீர் பிரதானத்தைவிட மேலான ஹிரண்ணிய கர்ப்ப ராகவும் பரமாத்மாவாகவும் இருக்கிறீர். ஓ பிரபுவே! காரிய ரூபமாகிய ஜகத்தானது உம்முடைய ஸ்தூல சரீரமாக இருக்கிறது. நீர் அளவற்ற ஐசுவரியமுள்ள ஸ்தானத்தில் இருப்பவரானாலும் காரணசுரூபியானா லும் புராணபுருஷரானாலும் மேற்காட்டிய சரீரத்தைக் கொண்டே பிராணன், இந்திரியம், மனது ஆகிய இவைகளுடைய குணங்களை அனுபவிக்கிறீர். ஓ நாசமற்றவரே! காரண ரூபத்தால் ஜகத்முழுவதையும் வியாபித்திருக்கிறீர். மேலும் வித்தை, மாயை இவைகளுக்கு ஆசிரயமாகவுமிருக்கிறீர். அப்படிப்பட்ட பகவானாகிய உமக்கு நமஸ்காரம். ஓ வரங்கொடுப்ப வர்களுக்குட் சிறந்தவரே! எனக்கு இஷ்டமான வரத்தை நீர் கொடுக்கிறதானால் உம்மால் சிருஷ்டிக்கப்பட்ட ஜனங்களாலும் மற்றவர்களாலும் எனக்கு மரணம் நேரிடாமலிருக்க வேண்டும். பகலிலும், இரவிலும் ஆயுதங்களாலும் பூமியிலும் ஆகாயத்திலும் எனக்கு மரணம் நேரிடக் கூடாது. பின்னும் மனிதர்கள்! மிருகங்கள், உயிரில்லாதவைகள், உயிருள்ளவைகள்,

தேவர்கள், அசுரர்கள், உரகர்கள், ஆகிய இவர்களாலும் கொல்ல முடியாதவனாக நான் இருக்க வேண்டும். மேலும் நான் நிகரில்லாதவனும் ஜனங்களுக்கு ஒரே அரசனாகவும் இருக்க வேண்டும். எந்த ஐசுவரிய மானது ஒருபொழுதும் குறையாததோ அப்படிப்பட்ட லோகபாலகர்களுடைய அணிமா முதலிய ஐசுவரியங் களை எனக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

அத்தியாயம்–4

இரணியகசிபு உலகத்தை உபத்திரவித்தது

1–3. அதனைக் கேட்ட ப்ரஹ்மதேவர் இரணியக சிபுவின் தவத்தினால் பிரியமடைந்து அவனை நோக்கி ஓ இரண்ய கசிபுவே! உன்னால் கேட்கப்படும் வரங்கள் மிகவும் அரிதானவை. ஆனாலும் அவைகளை உனக்குக் கொடுக்கிறேன் என்று சொல்லி அவனுடைய இஷ்ட ப்படி அனுக்ரஹித்தார். வீண் போகாத அனுக்கிரஹமுள்ள அந்தப் ப்ரஹ்மதேவரை இரண்யகசிபு பூஜித்தான்; பிரஜா பதிகள் துதித்தார்கள். அப்படிப்பட்ட ப்ரஹ்ம தேவர் தமது உலகஞ் சென்றார்.

4–20. துர்லபங்களான வரங்களைப் பெற்றுக் கொண்டவனும் தங்கம் போன்ற சரீரமுள்ளவனுமாகிய அந்த அசுரன் ஸ்ரீ மகாவிஷ்ணுவினால் தன்னுடைய சகோதரன் கொல்லப்பட்டதை நினைத்துப் பகவானி டத்தில் விரோத புத்தியைச் செய்தான். பின்னும் அவன் எல்லா திக்குகளிலும் சென்று எல்லோரையும் ஜயித்து சிறந்த தேவர்கள் அசுரர்கள் மனிதர்கள் கந்தர்வர்கள் கருடர்கள் உரகர்கள் சித்தர்கள் சாரணர்கள் வித்தியா தரர்கள் மகரிஷிகள் பிதிருபதிகள் முனிகள் சிறந்த யக்ஷர்கள் ராக்ஷதர்கள் பிசாசங்கள், பிரேதங்கள் பூதபதி களாகிய இவர்களையும் ஸகல பிராணிகளுக்குட் சிறந்த வைகளையும் சுவாதீனப்படுத்திக்கொண்டான். பின்னும் அவன் லோக பாலகர்களுடைய தேஜஸையும் ஸ்தானத் தையும் அபஹரித்தான். மேலும் அவன் மஹேந்திரனைத் துரத்தி விட்டு ஸ்வர்க்கத்தில் வசித்தான் அந்த ஸ்வர்க்கமானது தேவர்களுடைய உத்தியானங்களால்

அலங்கரிக்கப்பட்டது. அதில் விசுவகர்மாவினால் உண்டு பண்ணப்பட்ட மஹேந்திரனுடைய கிரஹமிருக்கிறது, அது மூவுலகத்திய லட்சுமிக்கு இருப்பிடமானது ஸகல ஐசுவரியமுள்ளது. அவ்விடத்தில் இஷ்டத்தை கொடுத்தது. ஆகாசமானது பலவகையான ஆச்சரியத்தையுண்டு பண்ணிற்று. ரத்தினம் விளையும் பூமியும். உப்பு சமுத்திரம் நெய் சமுத்திரம் தயிர் சமுத்திரம் பால் சமுத்திரம் கருப்பஞ்சாறு சமுத்திரம் மத்திய சமுத்திரம் சுத்தோதகம் முதலிய சமுத்திரங்களும் மிகுந்த ரத்தினங்களை யுண்டுபண்ணின. அவைகளுடைய பத்தினிகளாகிய நதிகள் அந்த ரத்தினங்களை அலைகளால் வகித்தன, பர்வத குகைகள் விளையாடுகிற ஸ்தலங்களாக இருந்தன. மரங்களெல்லாம் எல்லாருதுக்களிலும் பழங்களையும் புஷ்பங்களையும் உண்டு பண்ணிக்கொண்டிருந்தன. இப்படி அந்த அசுரன் தான் ஒருவனாகவே அநேக லோகபாலகர்களால் செய்யப்படும் காரியங்களை நடத்திவந்தான். பின்னும் அவன் ஸகல லோகங்களையும் ஜயித்து ஒரே அரசனாக இருந்து பிரியமான விஷயங்களை யனுபவித்தும் திருப்தியடையாதவனாக இருந்தான். இப்படி ஐசுவரியத்தால் மதித்தவனும், சாஸ்திர விரோதமாக நடப்பவனுமாகிய அந்த அசுரன் ப்ராஹ்மணர்களுடைய சாபத்தை அடைந்தவனாகி வெகு காலத்தை கழித்தான்.

21–30. அவனுடைய உக்கிரமான தண்டத்திற்குப் பயந்து லோகபாலர்கள் முதலிய தேவர்கள் தங்களைக் காப்பாற்றுபவர்களைத் தேடி ஸ்ரீ மகா விஷ்ணுவைச் சரணம் அடைந்தார்கள்; மேலும் பின்வருமாறு தோத்திரஞ் செய்தார்கள். எந்தத் திக்கில் சகல பிரஜைகளுக்கும் ஆத்மாவாகிய ஸ்ரீ மகாவிஷ்ணு

வசிக்கிறாரோ, எதனை அடைந்து சுத்தர்களான சன்னியாசிகள் திரும்புகிறதில்லையோ (முக்தர்களாகிறார்கள்) அந்தத் திக்குக்கு நமஸ்காரம் செய்கிறோமென்று அந்தத் தேவர்கள் இந்திரியங்களை ஜயித்தவர்களாகிய பகவான் நம்மை சம்ரட்சிப்பார் என்ற நிச்சயமுள்ளவராகி, பிராணன், சரீரம் ஆகிய இவைகளை ஜயித்துச் சாவதானர்களாக ஆறுவகையான குணங்களால் நிறைந்தவரும் மிகுந்த மகிமையுள்ளவரும் சுத்தமான ஆத்மானுபவத்தாலுண்டாகும் ஆனந்த ஸ்வரூபியுமான வாசுதேவருக்கு நமஸ்காரம்" என்று தோத்திரம் செய்தார்கள். அப்பொழுது ஓ தேவ சிரேஷ்டர்களே! பயப்படவேண்டாம் உங்களெல்லோருக்கும் க்ஷேமமுண்டாகும். என்னைப் பூஜிப்பது எல்லாருக்கும் சகல க்ஷேமத்தையும் கொடுக்கக்கூடியது அந்த அசுரனுடைய துஷ்ட சரித்தத்தை நான் ஏற்கனவே தெரிந்து கொண்டிருக்கிறேன். அதனை நான் போக்கடிக்கிறேன். சொற்ப காலம் பொறுத்துக்கொள்ளுங்கள் எவனுக்கு வேதங்களிடத்திலும் தேவர்களிடத்திலும் பசுக்களிடத்திலும் ப்ராஹ்மணர்களிடத்திலும், சாதுக்களிடத்திலும் தர்மத்திலும் என்னிடத்திலும் விரோத புத்தி உண்டாகிறதோ அவன் சீக்கிரம் நாசமடைவான். மேலும் அந்த அசுரன் விரோத புத்தியற்றவனும் சாந்தனும் மகாத்மாகிய பிரகலாதனென்ற புத்திரனுக்கு எப்பொழுது துரோகஞ் செய்வானோ அப்பொழுது ப்ரஹ்மதேவரிடம் வரம்பெற்றுப் பலிஷ்டனாயிருந்தாலும் அவனைக் கொல்வேன் என்று மேக கர்ஜிதம்போல் ஒரு ஆகாசவாணி உண்டாயிற்று. அதனால் சகல திக்குகளிலும் எதிரொலி உண்டாயிற்று, மேலும் அந்த வார்த்தையானது சாதுக்களுக்கு அபயத்தைக் கொடுக்கக் கூடியதாக இருந்தது.

அதனைக் கேட்ட தேவர்கள் லோக குருவாகிய பகவானை நமஸ்கரித்து பயமற்றவர்களாகி அசுரனைக் கொன்றதாகவே நினைத்துத் தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றார்கள்.

31–43. அந்த அசுரனுக்கு அற்புதர்களான நான்கு குமாரர்களுண்டு. அவர்களுக்கு ப்ரஹ்லாதரென்பவர் சிறந்த குணங்களுள்ளவர். பெரியோர்களை ஸேவிப்பவர் ப்ராஹ்மண பக்தியுள்ளவர். நன்னடையுள்ளவர். சத்திய பிரதிக்ஞர் இந்திரியங்களை ஜயித்தவர். ஸகல பிராணி களுக்கும் ஆத்மாபோல மிக்க சுகிருத் தாஸன்போல் பெரியோர்களை நமஸ்கரிப்பவர். தகப்பன் போல் தீனர்களிடத்தில் பிரீதியுள்ளவர் சகோதரன் போல சிநேகமுள்ளவர் ஆசாரியர்களை ஈசுவரனாக பாவிப் பவர். வித்தை அர்த்தம் பந்து அழகு முதலியவை களுள்ளவரானாலும் அகங்காரமற்றவர் அவருடைய சித்தமானது துக்க காலத்தில் வருத்தப்படுகிறதில்லை. கேட்கப்பட்டவைகளும் பார்க்கப்பட்டவைகளுமான விஷயங்களில் ஆசையற்றவர். விஷயங்களை வஸ்துவாக நினைக்காதவர். அவர் அசுரர் வம்சத்தில் பிறந்தவரா னாலும் அசுர ஸ்வபாவமற்றவர். அவருடைய இந்திரி யங்கள் பிராணன் சரீரம் புத்தி ஆகிய இவைகள் அவருக்கு வசப்பட்டு இருந்தன. அந்தப் ப்ரஹ்லாதரி டத்தில் மேலான பல குணங்களிருந்தன. அவைகள் இக்காலத்திலும் கவிகளால் வர்ணிக்கப்படுகின்றன. பகவானுடைய குணங்கள் போல் எப்பொழுதும் அவைகள் லோகத்தில் பிராகாசிக்கின்றன. அசுரர் களுக்கு விரோதிகளான தேவர்களும் ஸத்கதை நடத்தும் சபையில் அவரைத் திருஷ்டாந்தமாகச் சொல்வது வழக்கம். அளவிடக் கூடாதவைகளான அவருடைய

குணங்களால் அவருடைய மகாத்மியம் காண்பிக்கப்படு கின்றது அவர் இயற்கையில் பகவானாகிய வாசுதேவரி ட்த்தில் பக்தியுள்ளவராக இருந்தார். அவர் பால்ய வயதிலேயே விளையாட்டுச் சாமான்களை விட்டு பகவானிடத்திலேயே மனத்தைக் செலுத்தி ஸ்ரீ கிருஷ்ண னாகிய கிரஹத்தால் பிடிக்கப்பட்டு ஜடன்போல் பிரபஞ்சத்தை யறியாதவராக இருந்தார். மேலுமவர் உட்கார்ந்திருக்கும் பொழுதும் சஞ்சரிக்கும் பொழுதும் தீர்த்தம் முதலியவைகளைக் குடிக்கும் பொழுதும் பேசும் பொழுதும் ஸ்ரீ கோவிந்தரிடத்திலேயே மனத்தைச் செலுத்தியிருந்த படியால் இந்த ஜகத்தை மறந்திருந்தார். சில சமயத்தில் பகவானைத் தியானித்துக் கலங்கியி ருக்கும் மனமுள்ளவராக அழுவார். சிலவேளை பகவானையே நினைத்து அதனாலுண்டான ஆனந்தத் தால் சிரிப்பார் கானஞ் செய்வார் சில சமயத்தில் பகவானைத் தாமாகப் பாவித்து அந்த பகவத் ஸ்வரூபியாக இருந்து பகவானுடைய சேஷ்டைகளைத் தாம் செய்வார். சில சமயம் வாயை விட்டுக் கதறுவார் வெட்கமில்லாமல் நர்த்தனஞ் செய்வார். சில சமயத்தில் பகவத் ஸ்வரூபியாகத் தம்மைப் பாவித்து அதனால் மயிர்க்கூச்சலுள்ளவராகிப் பகவானிடத்தில் மிகுந்த பிரியம் வைத்ததனாலுண்டாகும் ஆனந்த பாஷ்பத்தால் கண்களை மூடிக்கொண்டு இருப்பார் இப்படி அந்தப் ப்ரஹ்லாதர் சாதுக்களுடைய சங்கத்தால் உத்தம சுலோகராகிய பகவானுடைய பாதாரவிந்தத்தைச் சேவித்து மிகுந்த சுகத்தை அடைந்த துஷ்டர் களுடைய சேர்க்கையால் தீனர்களாயிருப்பவர்களுடைய மனத்திற்கு சாந்தியையுண்டு பண்ணிக் கொண்டி ருந்தார், ஓ அரசனே! மிகுந்த பாக்கியமுள்ளவரும் மகாபாகவதரும் மகாத்மாவுமான புத்திரனுக்கு

ஹிரண்யகசிபுவானவன் துரோகஞ் செய்தான்" என்றான்.

44–47. அதனைக் கேட்ட தர்மபுத்திரர் நாரதரை நோக்கி, "ஓ தேவரிஷியே! சுத்தனும் சாதுவுமான புத்திரனுக்குத் தகப்பன் துரோகஞ் செய்வதற்கென்ன காரணம்? புத்திரர்களிடத்தில் பிதாவுக்கு இயற்கையி லேயே ப்ரீதியிருக்குமாகையால் தமக்கு விரோதமாக நடக்கும் புத்திரர்களையும் நல்வழிக்குக் கொண்டு வருவதற்காகச் சிட்சிப்பார்களே யொழியச் சத்ருக்கள் போல் துரோகஞ் செய்யமாட்டார்களே. அப்படியிருக்க ஆசார்யனைத் தேவதையாகக் கொண்டவனும், சாதுவும், சுவாதீனப்பட்டவனுமான புத்திரனைக் கொல் வதற்கு முயற்சிப்பார்களா? ஓ நல்ல விரதங்களை அனுஷ்டித்த ப்ராஹ்மணோத்தம! நான் இதனைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற விருப்பமுள்ள வனாக இருப்பதால் இந்த சந்தேகத்தை நிவர்த்திக்க வேண்டும்" என்று கேட்டார்.

அத்தியாயம்–5

பிரகலாதரைக் கொல்ல முயற்சித்தது

1–5 அசுரர்கள் தங்களுக்குப் புரோகிதராக இருக்க வேண்டுமென்று சுக்ரபகவானை வேண்டிக் கொண்டார்கள். அவரும் சம்மதித்து அவர்களுக்குப் புரோகிதராக இருந்தார். அதனால் அவருடைய புத்திரர்களான சண்டன்; அமர்க்கன் என்ற இருவர் களும் ஹிரண்ய கசிபுவின் அரண்மனையில் வசித் தார்கள். அப்பொழுது ஹிரண்ய கசிபுவானவன் தன்னுடைய புத்திரனாகிய ப்ரஹ்லாதரென்பவரை குருபுத்திரர்களிடம் ஒப்புவித்து வித்தை கற்பிக்கும்படி வேண்டிக் கொண்டான். அந்தப் ப்ரஹ்லாதர் சாஸ்திரங் களை அறிந்தவர். அப்பொழுது குரு புத்திரர்கள் ப்ரஹ்லாதருக்கும், மற்ற அசுரக் குழந்தைகளுக்கும் வித்தையைக் கற்பித்துவந்தார்கள். அப்பொழுது ஆசாரியனால் சொல்லப்பட்டதைக் கேட்டும், படித்தும் ப்ரஹ்லாதர் அதை நல்லதென்று ஒப்புக் கொள்ள வில்லை. ஏனென்றால்; அவரால் உபதேசிக்கப்பட்டன யாவும் 'தான், பிறர் பந்து சத்ரு'! என்ற அகங்கார புத்தியுள்ளதாக இருந்தது.

ஒருகால் அசுரர்களுக்கு அரசனாகிய ஹிரண்ய கசிபுவானவன் தன்னுடைய புத்திரராகிய ப்ரஹ்லாதரை மடியில் வைத்துக்கொண்டு, 'ஓ குழந்தாய்! நீ வித்யாப் பியாசஞ் செய்துவருவதில் எதனை நல்லதென்று (க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது) அறிந்திருக்கிறாய்? அதனைச் சொல்ல வேண்டும்' என்று கேட்டான். அதைக் கேட்ட ப்ரஹ்லாதர், "ஓ அசுரர்களுக்குட்

சிறந்தவரே! பிராணிகள் அகங்காரமுள்ளவர்களாகிப் புத்திரன் முதலியவற்றில் அபிநிவேசத்தை (ஆசையை) அடைந்து துக்கத்தை அனுபவிக்கிறார்கள். அப்படிப்பட்ட ஜனங்களுக்குக் கிருகம் முதலியவை பாழுங் கிணறு போலக் கெடுதியை உண்டு பண்ணக்கூடியன; ஆகையால் அகங்காரத்திலிருந்து பயந்து துக்கத்தை நிவர்த்தித்துக் கொள்ள விரும்பியவர்கள் கிருகத்தை விட்டு வனஞ் சென்று, ஸ்ரீ மகா விஷ்ணுவைச் சேவிப்பதே உசிதமென்று நினைக்கிறேன்" என்று சொன்னார்.

6–10 அதனைக் கேட்ட ஹிரண்யகசிபுவானவன் தனக்குச் சத்ருவாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவினிடத்தில் ப்ரஹ்லாதனுக்கு ஏற்பட்டிருக்கும் பக்தியைப் பார்த்து, "குழந்தைகளுடைய புத்தியானது சத்துருக்களுடைய வார்த்தையால் கலைக்கப்படுகிறது" என்று சிரித்து; 'விஷ்ணுவைச் சார்ந்தவர்கள் ஆசாரியருடைய கிரகத்தில் மறைந்திருந்து கொண்டு இவனுடைய புத்தியைக் கலைக்கிறார்கள்; அதனை நன்றாக விசாரியுங்கள் என்றும் சொன்னான். பின்பு அசுரனுடைய புரோகிதர்கள் ப்ரஹ்லாதரைத் தங்கள் வீட்டிற்கு அழைத்துவந்து; "ஓ குழந்தாய்; ப்ரஹ்லாத! உனக்கு க்ஷேமமுண்டாகட்டும்; உன்னுடைய உண்மையான அபிப்ராயத்தைச் சொல். எங்களால் உபதேசிக்கப்படுவதை விட்டு வேறான தோற்றம் உனக்கு உண்டாவதற்கென்ன காரணம்? உன்னுடன் சேர்ந்து படிக்கும் பிள்ளைகளுக்குள் ஒருவனுக்காவது இம்மாதிரியான எண்ணம் உண்டாகவில்லையே? இது உனக்குப் பிறரால் உபதேசிக்கப்பட்டதா? அல்லது இயற்கையிலுண்டானதா? அதனை கேட்க விருப்பமுள்ளவர்களும், உனக்கு ஆசாரியர்

களுமான எங்களுக்குச் சொல்ல வேண்டும்" என்று நல்ல வார்த்தையாகக் கேட்டார்கள்.

11–14 அதனைக் கேட்டுப் ப்ரஹ்லாதர் அவர்களை நோக்கி, "தன்னைச் சார்ந்தவன், சத்துரு என்ற அபிமானமானது எவருடைய மாயையால் ஏற்பட்டதோ (உண்மையிலில்லை) அந்தப் பகவானுக்கு நமஸ்காரம். அப்படிப்பட்ட பேதபுத்தியானது மாயையால் மோகித்த உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறதேயொழிய எனக்கில்லை. பகவானுடைய அனுக்கிரகம் எப்பொழுது உண்டாகுமோ அப்பொழுது நான்; நீ, பிறர் என்ற பேத புத்தியானது மாறிவிடும் (எல்லாம் பகவத்ரூபமென்ற எண்ணமுண்டாகும். பகவானுடைய அனுக்கிரகத்தால் அப்படிப்பட்ட புத்தி உண்டாயிற்று என்று தாத்பரியம்) ஆத்மா ஒருவராணாலும் அவருடைய ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்ள முடியாமலிருப்பதால் மூட ஜனங்கள் நான், நீ என்ற பேத புத்தியை அடைகிறார்கள். வேதங்களுடைய அர்த்தத்தை நன்றாய் அறிந்து, பிறருக்கு உபதேசிப்பவர்களான ப்ரஹ்மதேவர் முதலியவர்களும் பரமாத்மாவின் ஸ்வரூபத்தை நன்றாகத் தெரிந்து கொள்ளாமல் மோகிக்கிறார்கள். ஓ ப்ராஹ்மண! இரும்பானது அயக் காந்தத்தைக் கண்டவுடன் தான் அதற்கெதிரில் செல்லுவது போல் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் சன்னிதியில் தெய்வச் செயலால் என்னுடைய மனமானது மாறுகிறது" என்று சொன்னார்.

15–22 அதனைக் கேட்ட அரசனுடைய சேவகரான ஆசாரிய புத்திரன் கோபங்கொண்டு, தீனனாகி; "அட! பிரம்பைக் கொண்டுவா; குலத்தைக் கெடுப்பவனும், துர்ப்புத்தியுள்ளவனுமான இவனை நான்காவது

உபாயத்தால் அடக்க வேண்டும். சந்தனமரக்காட்டில் முள்மரம் முளைத்தது போல் அசுர குலத்தில் இவன் பிறந்திருக்கிறான். மேலும் இவன் அசுரர்களான வனத்திற்குக் கோடரி போன்ற மகாவிஷ்ணுவிற்கு ஒத்தாசையாகவும் இருக்கிறான்" (கோடரிக் காம்பு என்று அர்த்தம்) என்று பலவிதமாக அதட்டி தர்மம், அர்த்தம், காமம் இவைகளைச் சொல்லும் சாஸ்திரத்தைப் படிப்பித்தார். பின்பு ஆசாரியர். "இவன் நான்கு உபாயத்தையும் அறிந்தவன்" என்று தெரிந்துகொண்டு ஒரு நாள் பிரகலாதரை ஹிரண்யகசிபுவிடம் அழைத்து வந்தார். அவர் அப்பொழுது மாதாவினால் அப்யங்க ஸ்நானஞ் செய்விக்கப்பட்டும் அலங்கரிக்கப்பட்டும் இருந்தார். அப்பொழுது அந்தப் பிரகலாதர் பிதாவாகிய ஹிரண்யகசிபுவின் பாதங்களில் நமஸ்கரித்தார். ஹிரண்யகசிபுவும் குழந்தைக்கு ஆசீர்வாதஞ்செய்து தழுவி மிகுந்த பிரியத்தை யடைந்தான். பின்னம் அவன் புத்திரனை மடியின்மீது வைத்துத் தலையில் ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி, குழந்தையை நோக்கி, 'பிரகலாத! இத்தனை நாள் உபாத்தியாயரிடமாக எதனைக் கற்றுக் கொண்டாய்? நீ தெரிந்து கொண்ட மேலான விஷயத்தைச் சொல்' என்று கேட்டான்.

23–24 அதனைக் கேட்ட பிரகலாதர் பிதாவை நோக்கி, "ஸ்ரீ மகாவிஷ்ணுவின் குணங்களைக் கேட்பது, அவருடைய திவ்ய நாமங்களை உச்சரிப்பது, பகவானுடைய ரூபத்தைத் தியானிப்பது, பாதங்களைச் சேவிப்பது, விக்கிரகம் முதலியவைகளைப் பூஜிப்பது, நமஸ்கரிப்பது, வேலைக்காரனாக இருப்பது, சிநேகம் வைப்பது, ஆத்மசமர்ப்பணம் செய்வது ஆகிய ஒன்பது வகையாக ஸ்ரீ மகாவிஷ்ணுவினிடம் பக்தி செய்வதே

மேலானது" என்று நான் படித்துத் தெரிந்து கொண்டேன் என்றார்.

25–27 புத்திரனுடைய வார்த்தையைக் கேட்ட ஹிரண்யகசிபு கோபங்கொண்டு உதடு துடிக்க, குரு புத்திரரை நோக்கி, "ஓ ப்ராஹ்மணோத்தம! தூர்ப்புத்தி யுள்ள நீ என்னை லட்சியஞ்செய்யாமல் என்னுடைய சத்துரு பட்சத்திலிருந்து என் குழந்தைக்குக் கெட்ட மார்க்கத்தை உபதேசித்தாய். மித்திரர்கள் போல வெளிக்கு அபிநயஞ் செய்து கொண்டிருக்கும் கபட ஸ்வபாவமுள்ள துஷ்டர்கள் உலகத்தில் இருக்கிறார்கள். பாபிகளுக்கு அவர்கள் செய்த பாப பலனை அனுபவிக்கவேண்டிய காலத்தில் வியாதி உண்டாவது போல அந்தத் துஷ்டர்களுக்கு யஜமானனிடத்தில் விரோத புத்தி உண்டாகிறது" என்றான்.

28–29 அதனைக் கேட்ட குரு புத்திரர், "ஓ மகேந்திரனுக்குச் சத்துருவாக இருப்பவரே! உம்முடைய புத்திரன் இயற்கையான புத்தியால் இப்படிச் சொல்லுகிறானே ஒழிய இது என்னால் சொல்லப்பட்டதுமல்ல; பிறரால் உபதேசிக்கப்பட்டதுமல்ல; ஆனதால் கோபிக்க வேண்டாம். எங்களை வருத்தப்படச் செய்ய வேண்டாம்" என்றார். அதனைக் கேட்ட ஹிரண்ய கசிபுவானவர் புத்திரனை நோக்கி, "உனக்கு ஆசாரியன் இப்படி உபதேசிக்கவில்லை என்று சொல்லுகிறாரோ; அப்படியானால் இந்தத் தூர்ப்புத்தி உண்டான காரணம் யாது?" என்று வினவினான்.

30–50 அதனைக் கேட்ட ப்ரஹ்லாதர், "இந்திரியங்களை ஜயிக்காமல் சம்சாரத்தை அடைந்து; அனுபவித்த

விஷயங்களையே திரும்பவும் அனுபவித்துக் கொண்டி
ருக்கும் கிருகஸ்தர்களுக்கு ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில்
பிறருடைய உபதேசத்தாலாவது, இயற்கையிலாவது
பக்தி உண்டாகிறதில்லை. விஷயங்களில் ஆசைகொண்ட
அவர்கள் ஆத்மாவையே புருஷார்த்தமாகக் கொண்ட
வர்களால் அடையக் கூடிய பகவானை அறியார்கள்.
ஏன் என்றால், அவர்கள் அற்பமான பாக்ய விஷயங்
களையே பெரியவைகளாக நினைப்பவர்கள். மேலும்
அவர்கள் குருடர்களால் அழைத்துக் கொண்டு போகப்
படும் குருடர்கள் போல மார்க்கம் தெரியாமல்
பள்ளத்தில் விழுகிறார்கள். பின்னும், பசுக்கள்
தும்பினால் கட்டப்படுவதுபோல் பகவானுடைய
ஆக்ஞையாகிய வேதத்தால் கட்டப்பட்டிருக்கிறார்கள்.
பகவானிடத்திலே மனத்தைச் செலுத்தி வேறு
பிரயோசனத்தை அபேட்சிக்காமலிருக்கும் மகான்களு
டைய பாதசேவை செய்யாமலிருந்தால் துக்கத்தைப்
போக்கக்கூடிய ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பாதாரவிந்தம்
கிடைப்பதரிது. (தாயாருடைய கர்ப்பத்தில் வசிக்கும்
பொழுது நாரதருடைய உபதேசத்தால் எனக்கு
இம்மாதிரி புத்தியுண்டாயிற்று என்று தாத்பரியம்)
என்று சொன்னார். அதனைக் கேட்ட ஹிரண்யகசிபு
மிகுந்த கோபமுள்ளவனாகி, மடியிலிருக்கும் குழந்தையைப்
பூமியில் கிடத்தினான். பின்னுமவன், 'ஓ ராட்சதர்களே!
மிகவும் குற்றஞ் செய்தவனாகிய இவனைக் கொல்
லுங்கள்; துரத்திவிடுங்கள், இவன் சிறிய தகப்பனைக்
கொன்றவரான ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பாதங்களைத்
தானென்போல் பூஜிக்கிறான். ஆனதால் இவன்
என்னுடைய சகோதரனைக் கொன்றவனாகிறான்.
ஐந்து வயதுச் சிறுவனாகிய இவன் தாய் தகப்பனார்
களிடத்தில் கூட சிநேகத்தை ஒழித்திருக்கிறான்.

(இவனுடைய சித்தம் நிலையில்லாத தென்று கருத்து)
இவன் ஸ்ரீ மகாவிஷ்ணுவிற்கு நல்லதைச் செய்வானா?
செய்ய மாட்டான். (ஸ்ரீ மகாவிஷ்ணு இவனை
அங்கீகரிப்பதும் உசிதமில்லை) பிறரானாலும் நல்ல
ஔஷதம் போல அனுகூலத்தைச் செய்வதால்
அவனே புத்திரனாவான். தன் பிள்ளையானாலும்
வியாதி போல் கெடுதியைச் செய்வானானால் அவனைத்
தள்ளிவிட வேண்டும். தன்னுடைய அவயவமானாலும்,
ரோகம் முதலியவையால் கெடுதியை உண்டுபண்ணு
வதனால் அதனை வெட்டி விடலாம். அப்படிச்
செய்வதால் மற்ற அவயவங்கள் சுகத்தை அடையும்.
மேலும் கெட்ட வழியில் செல்லும் இந்திரியமானது
முனிக்கு எப்படி சத்ருவோ அப்படியே இவன்
நமக்குச் சத்துரு; மித்ரன் போல் இருப்பவன். ஆனது
பற்றி ஆகாரம் கொடுப்பது, படுக்கை முதலிய
வைகளில் விஷம் முதலியவைகளைப் பிரயோகித்துப்
பல உபாயங்களாலும் இவனைக் கொல்லுங்கள்" என்று
ஆக்ஞாபித்தான். அதனைக் கேட்ட ராட்சதர்கள்
வெட்டு, குத்து என்று சொல்லிக் கொண்டு சூலங்
களால் ப்ரஹ்லாதரைக் குத்தினார்கள். அவர்களுடைய
தலைமயிரும், மீசையும், செம்பு போன்றது. எல்லா
வற்றிற்கும் மேலானதும், இம்மாதிரியென்று குறிப்பிட
முடியாததும், சகல ஸ்வரூபியுமான பரமாத்மாவிடத்தில்
ப்ரஹ்லாதர் மனத்தைச் செலுத்தியிருந்தபடியால்
ராட்சதர்களால் அவரிடம் செய்யப்பட்ட உபத்திரவங்
கள் பயன்படவில்லை. அது நாஸ்திகன் செய்யும் நல்ல
முயற்சிகள் போலாயின. அதனைக் கண்டு ஹிரண்யகசிபு
மிகுந்த ஆலோசனை உள்ளவனாகி நிர்பந்தமாக
அவரைக் கொல்வதற்குப் பல உபாயங்களைச் செய்தான்.
எப்படி என்றால் திக்கஜங்களாலும்; சர்ப்ப

சிரேஷ்டங்களாலும், ஆபிசாரப் பிரயோகத்தாலும், மலை முதலியவைகளிலிருந்து கீழே தள்ளுவதாலும் மாயைகளாலும், சங்கட ஸ்தலங்களில் அடைத்து வைப்பதாலும் விஷத்தைக் கொடுப்பதாலும், ஆகார மில்லாமல் செய்வதாலும், பனி, வாயு, அக்கினி, ஜலம் ஆகிய இவைகளாலும் மலையைப் புரட்டுவதாலும் ப்ரஹ்லாதரைக் கொல்ல முயற்சித்தான். அப்படியும் பாபமற்றவனாகிய புத்திரனைக் கொல்ல முடியவில்லை. அப்பொழுது ஹிரண்ய கசிபு மிகுந்த கவலை அடைந்து, 'இவன் சிறுவனானாலும் விவேகமுள்ளவன். இவனைக் கொல்வதற்காக வெகு உபாயங்களைச் செய்தோம். கடுஞ்சொற்களையும் சொன்னோம்; அவைகள் யாவும் வீணாயின. இவன் தன்னுடைய தேஜஸால் காப்பாற்றப் பட்டிருக்கிறான். நம்மிடத்தில் கோபிக்கவில்லை. சுனச்சேபன் போல் விகாரமற்ற மனது உள்ளவனாக இந்திரியங்களை ஜயித்திருக்கிறான். ஆனதால் இவனு டைய மகிமை அளவிடக் கூடாதது; இவனுக்கு ஒருவரி டத்திலும் பயம் இல்லை; மரணமற்றவன்; இவனை விரோதித்துபடியால் எனக்கு மரணம் நேரிடுமோ என்று யோசித்துக் கொண்டு வாடின முகமுள்ள வனாகித் தலை குனிந்தான். அப்பொழுது சுக்கிரா சாரியாருடைய புத்திரர்களான சண்டன், அமர்க்கன் என்ற இருவர்களும் ஏகாந்தத்தில் அசுரனை நோக்கி; 'ஓ பிரபுவே! உம்முடைய புருவ நெரிதலைக் கண்டு லோகபாலர்கள் நடுங்குகிறார்கள். நீர் ஒருவராக மூவுலகங்களையும் ஜயித்தீர்; அப்படிப்பட்ட நீர், எதற்காக கவலைப்படுகிறீர்? புத்திரனுடைய சரிதத் தைப் பற்றித் துக்கிப்பது நியாயமல்ல. (சிறிது காலஞ் சென்றால் புத்திரனுக்கு நல்ல புத்தி உண்டாகுமென்று கருத்து) இவன் வெளியில் ஓடிப் போகாமலிருக்கும்படி

வருண பாசத்தால் கட்டி சுக்கிராசாரியார் வருகிற வரையில் காப்பாற்றி வைக்கவேண்டும். சில காலஞ் சென்றால் பெரியோர்களைச் சேவித்து நல்ல புத்தியை அடைவான்" என்றார்கள்.

51–54 அதனைக் கேட்ட ஹிரண்யகசிபு அவர்களை நோக்கி, "கிருகஸ்தர்களான ராஜாக்களுடைய தர்மத்தைப் ப்ரஹ்லாதனுக்கு உபதேசியுங்கள்" என்று சொன்னான். அவர்களும் தர்மம், அர்த்தம், காமம் ஆகிய இவைகளைப் பற்றிய சாஸ்திரத்தை வணக்கமுள்ளவரான பிரகலாத ருக்கு உபதேசித்தார்கள். அப்பொழுது குருக்களால் உபதேசிக்கப்பட்ட தர்மம், அர்த்தம், காமம் ஆகிய இவைகளை சூக்ஷமகரங்களாகப் ப்ரஹ்லாதர் நினைக்க வில்லை. ஏனென்றால், அவைகள் ஆசை துவேஷம் இவைகளை உண்டுபண்ணி விஷயங்களில் பிரவர்த் திக்கச் செய்கின்றன. மனிதர்கள் வியவகாரத்திற்காகப் பேதத்தை ஏற்படுத்தினார்கள்.

55–58 ஒரு நாள் ஆசாரியன் கிருக கிருத்யங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது ப்ரஹ்லாதருடன் சேர்ந்து படிக்கும் சிறுவர்கள் விளையாடுவதற்காகப் ப்ரஹ்லாதரை அழைத்தார்கள். அப்பொழுது விவேகியான பிரகலாதர் அவர்களை நோக்கி மிகுந்த சிருபையுடன் ஜனனம், மரணம் இவைகளைப் பற்றிச் சொன்னார். அதைக் கேட்ட சிறுவர்கள் அவரிடத்தில் மிகுந்த கௌரவ புத்தி வைத்து விளையாட்டுச் சாமான்களை எறிந்துவிட்டுச் சுத்த சித்தர்களாகப் ப்ரஹ்லாதரையே பார்த்துக் கொண்டு அவரை உபாசித்திருந்தார்கள். அவர்களை நோக்கி மகாபாகவதரும், மிகுந்த கிருபை யுள்ளவருமான ப்ரஹ்லாதர் பின்வருமாறு சொல்லலானார்.

இந்த அத்தியாயத்தில் 58 சுலோகங்களிருப்பதாக ஸ்ரீதரீய வியாக்கியானத்துடன் கிரந்தாட்சரத்தில் அச்சிடப்பட்டிருக்கும் புத்தகத்தில் காணப்படுகிறது. மற்ற புத்தகங்களிலும், ஓலைப் புத்தகங்களிலும் 54–வது சுலோகம் காணப்படவில்லை. ஆனதால் அதற்கு அர்த்தம் எழுதப்படவில்லை.

குறிப்பு

வியாதி உண்டாவது – ப்ரஹ்மஹத்யைச் செய்பவன் க்ஷயரோகத்தை அடைவார்கள். குடிப்பவன் சொத்தைப் பற்கள் உள்ளவனாவான், தங்கத்தைத் திருடினவன் சொத்தை நகமுள்ளவனாவான், ஆசாரிய பத்னியைப் புணர்ந்தவன் சரும ரோகமுள்ளவனாவான். ஸ்மிகுதி, சுனக்சேபன் – அயோத்யா நகரத் தரசனாகிய அம்பரீஷனென்பவர் யாகஞ்செய்யும்பொழுது யாகப் பசு காணாமற்போய் விட்டது. அப்பொழுது பிராம் மணர்கள் "பசு காணமற்போனதால், அதற்காக மனிதனைப் பசுவாக வைத்து யாகத்தை முடிக்கவேண்டும்; அப்படிச் செய்யாவிடில் யஜமானனுக்குக் கெடுதி நேரிடும்" என்றார்கள். அதனைக் கேட்டு அரசன் அநேக தனங்களை எடுத்துக் கொண்டு நர பசுவைத் தேடி வெகு தேசங்களில் அலைந்தார். பிறகு துந்தத்தில் ரிசீகரென்று ஒரு மகரிஷி இருந்தார். அவருக்கு மூன்று குமாரர்கள் இருந்தார்கள். அரசன் அந்த மகரிஷியின் சமீபம் சென்று தம்முடைய காரியத்தைத் தெரிவித்து, ஒரு புத்திரனைக் கொடுக்க வேண்டுமென்று பிரார்த் தித்தார். அதனைக் கேட்ட மகரிஷி அரசனை நோக்கி, "மூத்த குமாரனை விற்கமாட்டேன்" என்றார். அருகிலி ருந்த அவருடைய பத்னியானவள், இளைய குமாரனை

விற்கமாட்டேன்" என்றாள்; அவ்விருவருடைய வார்த்தையைக் கேட்ட நடுப்பிள்ளை சுனக்சேபன் தாயும், தகப்பனும் தன்னை விற்றுவிட்டார்கள் என்று தெரிந்து கொண்டு அரசனை நோக்கி, "என்னை அழைத்துப் போகலாம். என் தாய், தந்தைகளுக்கு இஷ்டமான வஸ்துக்களைக் கொடும்; போவோம்" என்றான். அதனைக் கேட்டு அநேகம் பசுக்களைக் கொடுத்து அவனை விலைக்கு வாங்கிக் கொண்டு தமது நகரஞ் செல்லும் வழியில் புஷ்கர க்ஷேத் திரத்தில் தங்கினார். அவ்விடத்தில் விசுவாமித்திரர் தவஞ் செய்துகொண்டிருந்தார். சுனச்சேபன் அவரைச் சரணமடைந்து அவரால் உபதேசிக்கப்பட்ட மந்திரங் களால் அரசனுடைய யாகத்தைப் பூர்த்தி செய்து, தன்னுடைய உயிரையும் காப்பாற்றிக் கொண்டான். தாய், தகப்பனார் செய்த அபகாரத்தை மனத்தில் வைக்கவில்லை – ஸ்ரீ வால்மீகி ராமாயணம், பால காண்டம் – 61வது அத்தியாயம்.

அத்தியாயம்–6

பிரகலாதர் சிறுவர்களுக்குத் தத்துவத்தை உபதேசித்தது

1–5. ஓ சிறுவர்களே! பலவகையிலும் சூக்ஷமகரமான வார்த்தையைச் சொல்லுகிறேன், கேளுங்கள். உங்களுடைய தோழர்களான சிறுவர்கள் மரணமடைந்ததைப் பாருங்கள் வீணாக விளையாட்டினால் காலத்தைக் கழித்து விடவேண்டாம் நாமெல்லோரும் முந்தி பாலர்களாக இருக்கவில்லை: ஆத்மாவிற்குப் பிரியத்தை விரும்பியவர்களே. ஆசாரியர் அனர்த்தத்தை அர்த்தம் போல் சொல்வதால் அதனைக் கேட்க வேண்டாம்; அஞ்ஞானமாகிய தூக்கம் பிடித்தவன் அதனைக்கேட்டு விழித்துக்கொள்ள மாட்டான். அவருடைய வார்த்தையில் நம்பிக்கை வைப்பானா? ஆத்மாவிற்குச் சத்துருவாக இருப்பவன் யார்? உதாசீனனாக இருப்பவன் யார்? மித்திரன் யார்? எது பிரயோசனம்? (1 முதல் 5 சுலோகங்கள் பழைய புத்தகங்களில் காணப்படவில்லை).

6–37. ஜன்மங்களில் மனுஷ்ய ஜன்மம் கிடைப்பதரிது; அதுவும் நிலையற்றது; ஆனாலும் சூக்ஷமத்தைக் கொடுக்கக் கூடியது. ஆனதால் பாலியவயதிலேயே இந்த மனுஷ்ய ஜன்மத்திலேயே விவேகியாயிருப்பவன் பகவானை அடைவதற்குச் சாதனங்களான தர்மங்களை அனுஷ்டிக்கவேண்டும். ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பாதத்தைச் சேவிப்பதே மனிதனுக்கு முக்கியமான தர்மம். அந்தப் பகவான் ஸகல பிராணிகளுக்கும் பிரியராகவும் ஆத்மாவாகவும் ஈசுவரனாகவும், சுஹிருத்தாகவுமிருக்கிறார். ஓ

சிறுவர்களே! இந்திரிய விஷயமான சுகம் முன் ஜன்மத்திய அதிருஷ்ட வசத்தால் பசு முதலிய திர்யக் ஜாதிகளுக்கும் பிரயத்ன மின்றி கிடைக்கிறது. அதற்காக முயலுவது வீணானதேயாம். விஷய சுகத்திற்காக முயலுவதால் ஆயுள் வீணாகச் செலவாகிறதே யொழிய சூக்ஷமத்தைக் கொடுக்கக்கூடிய முகுந்தருடைய பாதாரவிந்தம் கிடைக்கிறதில்லை. ஆனதால் சம்சாரியாக இருப்பவன் இந்தச் சரீரம் நாசமடைவதற்கு முன்னமேயே சூக்ஷமத்தை அடைவதற்கு முயலவேண்டும். புருஷனுக்கு நூறு வருஷங்கள் பரம ஆயுசு என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதில் பாதி ஆயுசைத் தூக்கத்தில் (ராத்திரியில்) கழித்துவிடுகிறான். பால்யத்திலும், கிசோரனாக இருப்பதிலும் விளையாட்டினாலும் இருபது வருஷங்களைக் கழித்துவிடுகிறான். அபரவயதில் கிழத்தனத்தை அடைந்து, ஒன்றையும் செய்ய முடியாதவனாகி இருபது வருஷங்களைப் போக்கிவிடுகிறான். பாக்கியான சொற்ப ஆயுளானது செய்யமுடியாத காமத்தாலும் மோகத்தாலு பூர்த்தி விஷயங்களில் ஆசைகொண்டு கழிக்கப்படுகிறது. மேலும், மிக்க சிரமப்பட்டு சம்சாரத்தை விரும்புகிறவர்களான நம்முடைய ஜாதிகளுக்கு ஏற்பட்டிருக்கும் புத்தி வித்யாசத்தைப பாருங்கள், பலவகையான யோனிகளில் கர்ப்பத்தையடைந்து சரீரத்தை அடைந்தவன் சக்கரவர்த்தியானாலும் என்ன சுகத்தை அடையப் போகிறான்? காலத்தின் மஹிமையால் எல்லாம் நிலையில்லாமல் இருப்பதால் எந்தக் கர்மாவை நல்லதென்று சொல்லக்கூடும் எதனைச் கெட்டதென்று சொல்லக்கூடும்? இந்திரியங்களை ஜயிக்காமல் புத்திரன், களத்திரம் முதலியவைகளில் ஆசை கொண்டவனும், திருடமான சிநேகபாசத்தால் கட்டப்பட்டவனுமான

ஆத்மாவை அதிலிருந்து நிவர்த்தித்துக் கொள்ள எவன்தான் விரும்புகிறான்? ஏனென்றால் இந்திரியங் களுக்கு வசப்பட்டிருக்கிறான்; அர்த்தத்தில் ஆசையை யொழிப்பது மிகவும் அரிது. அந்த அர்த்தமானது பிராணனைக் காட்டிலும் மிக்க பிரியமான வஸ்துவாக இருக்கிறது திருடனும், சேவகனும் வியாபாரிகளும் பிராணனைக்கூட லட்சியம் செய்யாமல் பணத்தைச் சம்பாதிக்க முயற்சிக்கிறார்கள் அல்லவா? மேலும், தன்னிடத்தில் பிரியமுள்ள களத்திரத்தையும் அவளால் செய்யப்படும் ஹிதோபதேசத்தையும் நினைத்துக் கொண்டு சுகிருத்துக்கள் புத்திரன் ஆகிய இவர்களி டத்திலுள்ள சிநேகத்தால் கட்டப்பட்டு குழந்தை களுடைய இனிமையான வார்த்தைகளைக் கேட்டும் சம்சாரத்தில் முழ்கியிருப்பவன் அதனை விடுவதற்கு விரும்புவானா; பின்னும், புத்திரர்கள் பெண்கள், சகோதரர்கள் தங்கைகள் தாய் தகப்பனார்கள், அழகான படுக்கை முதலிய சாமக்கிரிகள் நிறைந்த வீடு, வம்ச பரம்பரையான விருத்திகள் பசுக்கள் வேலைக்காரர்கள் ஆகிய இவைகளிடத்தில் மிகுந்த அபிமானத்தை அடைந்து அவைகளையே நினைத்துக் கொண்டிருக்கிறான். மேலும் புழுவானது தான் வெளியில் வருவதற்குக்கூட வழியில்லாமல் கூடு கட்டிக் கொள்வது போலக் காமத்தில் போதுமென்று திருப்தியில்லாமல் கர்மங்களைச் செய்துகொண்டு இனிமையான ஆகாரத்தையும் ஸ்திரீ சம்போகத்தையும் மேலானதென்று நினைத்திருக்கிறான். இப்படி விசேஷ மோகமுள்ளவனாக இருப்பதால் ஸம்ஸாரத்தி லிருந்து எப்படி வைராக்யத்தை அடைவான்? குடும்பத்தைக் காப்பாற்றுவதே புருஷார்த்தமென்று நினைத்து அதிலேயே ரமித்துக்கொண்டு அதனைக்

காப்பாற்றுகிற விஷயத்தில் ஆயுளைச் செலவிடுகிறான்; புருஷார்த்தத்தை அடைகிறதில்லை; மூவகையான தாபததை அனுபவிக்கிறான், ஆனால் அதனைத் துக்கமாக நினைக்கிறதில்லை பிறருடைய பணத்தைத் திருடினவர்களுக்கு இவ்வுலகத்தில் அரசனுடைய தண்டனையும், பரலோகத்தில் நரகமும் உண்டாகு மென்று தெரிந்து கொண்ட வித்வான்களும் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டி திருடுகிறார்கள். எப்பொழுதும் பணத்திலேயே ஆசை கொண்டிருக்கிறார்கள்; வித்வானா னாலும். 'தம்மைச் சார்ந்தவன்; பிறர்' என்ற பேத புத்தியுள்ளவனாகையால் குடும்பத்தைப் போஷித்துக் கொண்டு மூடன் போல் ஸம்ஸாரத்தை அடைகிறானே யொழிய ஆத்ம ஸ்வரூபத்தைப் பார்க்கிறதில்லை. மேலும், வித்வானானாலும் தன்னுடைய ஆத்மாவைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் தீனனாக இருக்கிறான். ஸ்திரீ களுக்குக் கீரீடாமிருகம் போலிருக்கிறான். புத்திரன் முதலியவர்கள் புருஷனுக்கு விலங்கு போலிருக்கிறார்கள். ஓ தைத்யர்களே! விஷயங்களிலே ஆசையுள்ளவர்களான அசுரர்களிடத்தில் ஆசையை யொழித்து, ஆதிதேவ ராகிய ஸ்ரீமந் நாராயணனைச் சேவியுங்கள் வைராக்ய முள்ளவர்கள் விரும்பிய மோட்சபதம் அவரேயாம். ஓ அசுரக்குழந்தைகளே! ஸ்ரீ பகவானைச் சேவிப்பதில் வெகு தூரம் செல்லவேண்டியது முதலிய சிரமமில்லை அந்த நாராயணன் ஸகல பிராணிகளுக்கும் ஆத்மா; சித்துமான வஸ்து; தாவரம் முதல் ப்ரஹ்மா வரையி லுள்ள மேலான பிராணிகளிடத்திலும், தாழ்ந்தவர் களிடத்திலும் குடம் முதலியவைகளிலும், ஆகாசம் முதலிய மகா பூதங்களிலும் மகத் அகங்காரம் முதலிய வைகளிலும் இருப்பவர். பகவான் ஒருவரே . அவர் எல்லாவற்றிற்கும் அதிபதி; நாசமற்றவர்; பிரத்யகாத்ம

ஸ்வரூபமாகப் பிரகாசிப்பவர் பிரபஞ்ச ஸ்வரூபமாகவுமி ருப்பவர், வியாப்யர் (சொற்ப தேசத்திலிருப்பவர்), வியாபகர் (அநேக இடங்களிலிருப்பவர்) என்று சொல்லப்பட்டவர், உண்மையில் குறிப்பிட முடியாதவர். அந்தப் பரமாத்மா அனுபவாத்மகமான ஆனந்தசுரூபி, ஆனால் அவர் தம்முடைய மாயையால் தம்முடைய ஐசுவரியங்களை மறைத்துக்கொண்டிருக்கிறார். ஆனதால் நீங்கள் அசுர ஸ்வபாவத்தை விட்டு சகல பிராணிக ளிடத்திலும் தயை, சிநேகம் ஆகிய இவைகளைச் செய்யுங்கள். இப்படிச் செய்வதால் ஸ்ரீமந் நாராயணன் சந்தோஷத்தை அடைகிறான். நாசமற்றவரும் எல்லா வற்றிற்கும் முந்தியவருமான பகவான் சந்தோஷ மடைந்தால் எது தான் கிடைக்காது? பகவானுடைய பாதாரவிந்தத்தைச் சேவித்து, அதன் அனுபவத்தை அடைந்து கானம் செய்பவர்களான நமக்குத் தர்மம் முதலியவைகளால் என்ன பிரயோஜனம்? அவைகள் சத்துவம் முதலிய குணங்களால் ஏற்பட்டவை; முயற்சியில்லாமலேயே ஸித்தித்தவை. அப்படிப்பட்ட எங்களுக்கு மோட்சத்தாலும் பிரேயோசனமில்லை. மேலும் தர்மம்; காமம் என்ற மூன்று வர்க்கங்களும், ஆத்ம வித்யையும் கர்ம வித்யையும், நீதியும், தவமும் பலவகையாக வேதத்தால் சொல்லப்பட்டவைகளா னாலும் அவையெல்லாம் "சகல லோகங்களுக்கும் சுகிருத்தாகிய பரமபுருஷனுடைய ஆத்மார்ப்பணத்தில் (ஆராதனத்தில்) உபயோகப்படுமானால் அவைகள் சத்தியங்கள்" (பிரயோஜனமுள்ளவை) என்று நினைக் கிறேன். இந்த நாராயணன் நாரதருக்கு உபதேசித்தார், ஆனால் பகவானையே பிரயோசனமாக நினைத்த வர்களும், பகவானுடைய பாதார விந்த தூளியால் ஸ்நானம் செய்தவர்களுமான (பாதங்களைச் சேவித்தவர்கள்)

எல்லா பக்தர்களுக்கும் அந்த ஞானம் உண்டாகும், (நாராயணர் நாரதருக்கு உபதேசித்து ஞானத்தில் நமக்கு அதிகாரம் ஏற்படுமோவென்று சந்தேகப்பட வேண்டாம். பக்தர்கள் எல்லாருக்கும் அதிகாரம் உண்டென்று கருத்து) ஞானம் விஞ்ஞானம் ஆகிய இவைகளுள்ள சுத்தமான இந்தப் பாகவத தர்மத்தை மிகவும் ஞானியாகிய நாரதரிடமாக உபதேசம் பெற்றேன்" என்றார்.

38–39. அதனைக் கேட்ட சிறுவர்கள் ப்ரஹ்லாதரை நோக்கி; "ஓ ப்ரஹ்லாத! நீயும் நாங்களும் இந்த இரண்டு ஆசாரியர்களைத் தவிர வேறு குருவை அறியோம். மேலும், அந்தப்புரத்திலேயே வசிக்கிறோம். எங்களை விட்டு நீயும் பிரியவில்லை. அப்படியிருக்க நாரதரை நீ எப்பொழுது சந்தித்தாய்? இந்த விஷயத்தில் எங்களுக்கு இருக்கும் சந்தேகத்தைப் போக்கடிக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்கள்.

(இந்த அத்தியாயத்தில் 39–சுலோகங்கள் மூலத்தில் காணப்படுகின்றன, ஆனால் 1 முதல் 5–சுலோகங்களும், 36–வது சுலோகமும் பழைய புத்தகங்களில் இல்லை.)

அத்தியாயம்–7

நாரதருடைய உபதேசம்

1–11 அசுரக் குழந்தைகளுடைய வார்த்தையைக் கேட்டு மகா பாகவதராகிய ப்ரஹ்லாதர் அவர்களை நோக்கி தன்னுடைய வார்த்தையை நினைத்துக் கொண்டு சிரித்துப் பின்வருமாறு சொல்லலானார். எப்படியென்றால், "ஓ குழந்தைகளே! நம்முடைய பிதாவாகிய ஹிரண்ய கசிபுவானவர் முன்னொருகால் தவம் செய்வதற்காக மந்தர பர்வதம் சென்றார். அந்தச் சமயத்தில் தேவர்கள் அசுரர்களுடன் யுத்தம் செய்ய முயற்சித்தார்கள். பின்னும் இந்திரன் முதலிய தேவர்கள் 'லோகத்திற்கு உபத்திரவத்தைச் செய்பவனான இந்த அசுரன் எறும்புகளால் சர்ப்பமானது கொல்லப்படுவது போலத் தன்னுடைய பாபத்தால் நாசஞ் செய்யப் பட்டான்' என்றும் சொல்லிக் கொண்டார்கள். அப்பொழுது அசுரர்கள் தேவர்களால் அடிக்கப்பட்டுப் பயந்து அவர்கள் களத்திரம், புத்திரன், பணம் இஷ்டர்கள், வீடு , பசுக்கள் முதலிய சாமக்கிரியைகளைக் கூட அபேட்சியாமல் உயிர் தப்பிப் பிழைத்தால் போதுமென்று பல திக்குகளை நோக்கி ஓடினார்கள். மகேந்திரன் இரண்யகசிபுவின் பத்தினியும், என்னுடைய மாதாவுமான கயாது என்பவளைப் பிடித்துக் கொண்டு சென்றார். அப்பொழுது அவள் குரரி என்ற பறவைபோல் அழுதாள். அப்பொழுது தெய்வச்செயலாக நாரதர் மகேந்திரனை வழியில் சந்தித்து, 'ஓ தேவ சிரேஷ்ட! குற்றஞ் செய்யாதவளும், பதிவிரதையும், பரஸ்திரீயுமான இவளை அபகரிப்பது உசிதமில்லை. ஓ மிகுந்த அதிருஷ்டமுள்ளவரே! இவளை விட்டு

விடும்!' என்று சொன்னார். அதனைக் கேட்ட மகேந்திரன் நாரதரை நோக்கி, "இவளுடைய வயிற்றில் இரண்யகசிபுவின் வீரியம் இருக்கிறது (கர்ப்பிணியாக இருக்கிறாள்), ஆனதால் பிரசவிக்கிற வரையில் என்னிடம் இருக்கட்டும். இவள் பிரசவித்த பிறகு குழந்தையைக் கொன்றுவிட்டு இவளை விட்டுவிடுகிறேன்" என்றார். அதனைக் கேட்ட நாரதர் மகேந்திரனை நோக்கி, இவளுடைய வயிற்றிலிருப்பவர் பாகவதர்களுக்குட் சிறந்தவர், பாபமற்றவர்; ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பக்தர்; அவரைக் கொல்வதற்கு உம்மால் முடியாது" என்றார். அதனைக் கேட்டு மகேந்திரன் நாரதருடைய வார்த்தையில் கௌரவப் புத்தியை வைத்து; என் மாதாவை விட்டு அவளைப் பிரதட்சிணம் செய்து தம்முடைய லோகம் சென்றார்.

12–57 பின்பு நாரத மகரிஷி என்னுடைய மாதாவைச் சமாதானம் செய்து தம்முடைய ஆசிரமத்திற்கு அழைத்துப் போய், உன்னுடைய பர்த்தா வருகிறவரையில் இவ்விடத்திலிரு என்றார். அவளும் அதனை ஒப்புக்கொண்டு பயமற்றதான அந்த ஆச்சிரமத்தில் வசித்ததுமன்றித் தன்னுடைய கர்ப்பம் க்ஷேமமாக இருக்கவேண்டியதற்காகவும் தன்னுடைய பர்த்தா வந்த பிறகு பிரசவம் ஆகவேண்டுமென்பதற்காகவும் மிகுந்த பக்தியுடன் அந்த மகரிஷிக்குச் சிசுரூஷை செய்துவந்தாள். அப்பொழுது தயையுள்ளவராகிய அந்த மகரிஷி கர்ப்பத்திலிருக்கும் என்னை உத்தேசித்து தர்மத்தின் ரகசியத்தையும் நிர்மலமாகிய ஞானத்தையும் அவளுக்கு உபதேசித்தார். வெகுநாளைக்கு முந்தி நடந்ததானதாலும் ஸ்திரீயானதாலும் அந்த ஞானமானது என் மாதாவிற்கு மறந்துவிட்டது

மகரிஷியின் அனுக்கிரக விசேஷத்தால் எனக்கு அது மறக்கவில்லை. என்னுடைய வார்த்தையில் உங்களுக்கு நம்பிக்கையும், கூர்மையான புத்தியும் இருக்குமானால் அந்தத் திவ்யமான ஞானம் உங்களுக்கும் உண்டாகும், அந்த மகரிஷியால் உபதேசிக்கப்பட்டது, என்ன வென்றால், மரங்கள் ஜீவித்திருக்கும்பொழுது அதன் பழங்களுக்கும் பரிணாமம் (பிஞ்சு, காய், பழம் முதலியவை) ஏற்படுவது போல வஸ்துக்களைப் பலவகையாக மாற்றும் சக்தியுள்ள காலத்தால் உற்பத்தி முதலிய ஆறு விகாரங்கள் ஜீவனிருக்கும் பொழுது சரீரத்திற்கு ஏற்பட்டிருக்கின்றன. ஆத்மாவுக்கு அவைகள் இல்லை. (ஆத்மா உண்டாகிறதுமில்லை; இளைக்கிறதுமில்லை; மரணமடைகிறதுமில்லை (ஆத்மா நித்தியர், குறைவற்றவர்! தோஷமற்றவர். ஒருவர், க்ஷேத்திரக்ஞர் எல்லாவற்றிற்கும் ஆசிரயமாக இருப்பவர் விகாரமற்றவர்; தாமாகப் பிரகாசிப்பவர். எல்லா வற்றிற்கும் காரணனாக இருப்பவர். சகல உலகங் களையும் சிருஷ்டித்தவராகையால் வியாபகர். ஒன்றிலும் சம்பந்தப்படாதவர், ஒன்றாலும் மறைக்கப்படாதவர், இம்மாதிரியான ஆத்மாவின் பன்னிரண்டு லட்சணங் களால் ஆத்மாவின் உண்மையைத் தெரிந்து கொண்டு தேகம் முதலிய அனாத்ம பதார்த்தங்களில் 'நான்; என்னுடையது என்ற அபிமானத்தை ஒழிக்க வேண்டும். தட்டான் உரைகல்லில் ஒட்டியிருக்கும் ஸுவர்ணத்தைத் தகுந்த உபாயத்தால் எடுத்து எப்படி அடைகிறானோ, அப்படி காரியம், காரணம் ஆகிய இவைகளை அறிந்தவனாகிய புருஷன் சரீரத்திலி ருக்கும் ஆத்மாவை ஆத்ம யோகத்தால் அடைந்து ப்ரஹ்மமாக ஆகிறான். மூலப் பிரகிருதி மகத் தத்துவம், அகங்காரம், ஐந்து தன்மாத்திரைகள் ஆகிய எட்டும்

பிரதிடிதிகள். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்றும் அவைகளின் குணங்களேயாம். பதினோரு இந்திரியங்கள், ஐந்து மஹாபூதங்கள் ஆகிய பதினோரு இந்த்ரி யங்கள் இவைகளில் சாட்சியாக அனுவர்த்தித்தி ருப்பதால் புருஷன் ஒருவனேயாம். எல்லா விகாரங்களின் சமூகமே தேகமெனப்படுகிறது. அது ஜங்கமம், ஸ்தாவரம் என்ற இருவகை உள்ளது. இந்தச் சரீரத்திலி ருக்கும் வஸ்துக்களின் சுபாவத்தை விசாரித்து, ஒவ்வொன்றையும் அனாத்மா என்று நிச்சயித்து, இது ஆத்மாவில்லை, இது ஆத்மா இல்லை, என்று ஆத்மாவைத் தே_வேண்டும். அனாத்ம வஸ்துக்களுடைய கூட்டத்திலிருந்து ஆத்மாவை எப்படிப் பிரித்து எடுக்கிறதென்றால் ஜாக்கிரதவஸ்தை (விழித்துக் கொண்டிருப்பது) ஸ்வப்பனம்: ஸுஷுப்தி என்ற அவஸ்தைகள் புத்தியின் விருத்திகள். அவைகள் எவனால் அனுபவிக்கப்படுகின்றனவோ, அவனே சாட்சியாகிய புருஷன், மேலானவன். மேற்சொல்லிய விருத்திகள் முக்குண ஸ்வபமாயுள்ளவை. கர்மங்களால் உண்டானவை. ஆனதால் அந்த புத்தி பேதங்கள் ஆத்மாவினுடைய தர்மங்களல்ல. அனாத்ம தர்மங்களேயாம். புஷ்பத்தின் குணமாகிய வாசனையைக் கொண்டு அதற்கு ஆசிரயமாகிய வாயுவைத் தெரிந்து கொள்வதுபோலப் புத்திக்குள் சாட்சியாக இருப்பது ஆத்மாவின் ஸ்வருபமென்று தெரிந்து கொள்ளவேண்டும் மேலும், ஜகத்தைப் படைப்பது; பரிபாலிப்பது சம்கரிப் பது ஆகிய இவைகளுக்கு பரமாத்மாவே காரணமென்று ஸ்ருதியில் சொல்லப்பட்டிருப்பதாலும் எல்லாவற்றிலும் ஆத்மாலே இருப்பதாலும் அந்த ஆத்மாவைச் சுத்தமான மனத்தால் அனாத்மக் கூட்டத்திலிருந்து அவசரப்படாமல் பிரித்தெடுக்க வேண்டும். வாயுவிற்குப்

புஷ்பத்தின் சம்பந்தம் உண்மையிலிருக்கிறது. ஆத்மாவிற்கு ஸம்ஸார பந்தம் உண்மையிலில்லை. புத்தி குணங்களாலும், கர்மங்களாலும் ஏற்படுகிறது. அதற்கு அஞ்ஞானமே காரணம். மித்தியா பூதம். (உண்மையானதல்ல) ஸ்வப்னம் போலப் புருஷனால் அடையப் படுகிறது. ஸ்வப்னத்திலும் ஜாக்கிரதவஸ்தையிலும் அனுபவிக்கப்படும் ஸகல விஷயங்களும் மனோமயங் களாகையால் சமமானவைகளே. அவைகள் பார்க்கப் பட்டாலும் மறைந்தாலும் செய்பவனுக்குச் சோகத்தை யும், மோகத்தையும், பயத்தையும் கொடுக்கின்றன. குணங்களற்றவரானாலும் பரமாத்மாவிற்குக் குணங் களின் சேர்க்கையால் சம்சாரமேயொழிய உண்மையிலில்லை மேலும் சரீர தர்மமாகிய ஜனனமும், மரணமும் சரீர சம்பந்தத்தால் ஜீவனுக்கு இருப்பதாகத் தோன்று கின்றனவேயொழிய இயற்கையிலில்லை. ஆனதால் முக்குண ஸ்வரூபமான கர்மத்தின் பீஜத்தை (விதையை) நாசஞ் செய்யவேண்டும் அதுவே யோகம். அது புத்தியின் பிரவாகமான ஜாக்ரத் முதலிய அவஸ்த் ஸதகளை ஒழிப்பதேயாம் அநேக உபாயங்களிருக் கின்றன. ஆனாலும் எவைகளை அனுஷ்டித்தால் பகவானிடத்தில் பக்தி உண்டாகுமோ; அவைகளை அனுஷ்ப்படதே மேலான உபாயம், என்று ஈசுவரனால் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகள் எவை என்றால், ஆசாரியனுக்குச் சிநேகிப்பது, செய்வது, எல்லாரிடத் திலும் சிநேகிப்பது, கிடைத்தவை எல்லாவற்றையும் ஈசுவரனிடத்தில் சமர்ப்பிப்பது; பகவத் பக்தர்களுடைய சங்கத்தாலும் ஈசுவரனை ஆராதிப்பது. பகவானு டைய கதையில் சிரத்தை வைப்பது. அவருடைய குணங்களையும் சரிதங்களையும் சொல்வது, அவருடைய பாதார விந்தத்தைத் தியானிப்பது,

பகவானுடைய விக்கிரகத்தைத் தரிசிப்பது முதலிய வைகளாம். ஸ்ரீமந் நாராயணன் எல்லாருடைய இருதயத்திலும் வசிக்கிறார். ஆனதால் எல்லாரையும் மனத்தால் பூஜிக்க வேண்டும். இப்படி காமம் முதலிய ஆறுவகைகளைச் சத்ருக்களை ஜயித்து பகவானாகிய வாசுதேவரிடத்தில் பிரீதி செய்ய வேண்டும். இதனால் பக்தி சித்திக்கும், பகவான் ராமனாகவும், ஸ்ரீ கிருஷ்ணனாகவும் அவதரித்து செய்த ஒப்பற்ற சரிதங்களைக் கேட்டும், தன் வாக்கினால் உச்சரித்தும் புருஷன் மிகுந்த சந்தோஷத்தை அடைகிறான். மயிர்க்கூச்சலடைகிறான். ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி அதனால் கண்டமடைத்துப் பேச முடியாத வனாகிறான். பகவானிடத்தில் மிகுந்த ஆசையுடன் கெட்டியாகக் கானஞ் செய்கிறான். நர்த்தனஞ் செய்கிறான்; பிசாசம் பிடித்தவன்போல் சிலவேளை சிரிக்கிறான்; கதறுகிறான்; தியானஞ் செய்கிறான். கண்டவர்களை நமஸ்கரிக்கிறான்; அடிக்கடி பெருமூச்சு விடுகிறான்; பரமாத்மாவிடத்திலேயே புத்தியைச் செலுத்தியவனாகையால் வெட்கமில்லாமல்; ஓ ஜகத்திற்கு அதிபதியே! ஹரியே! நாரயணா! என்று சொல்லுகிறான். பின்னும் அந்த நிலைமையை அடைந்த புருஷன், பகவான் செய்த சேஷ்டைகளை மனத்தாலும் சரீரத்தாலும் பாவித்து, மிகுந்த பக்தி பிரவாகத்தால் அஞ்ஞானம் வாசனை ஆகிய இவை களைப் போக்கடித்துக் கொண்டு ஸகல பந்தத்திலி ருந்து நிவர்த்தியடைந்து ஸ்ரீமந் நாராயணனை அடைகிறான். மேலும், சரீரமுள்ளவர்களுக்கு ஸ்ரீ பகவானை அடைவதே சம்சார சாகரத்தை நிவர்த் திக்கக் கூடியது" என்று சொல்லுகிறார்கள். அதனையே ப்ரஹ்மானந்த சுகம் என்று சொல்லுகிறார்கள்.

ஆனதுபற்றி நீங்கள் ஈசுவரனை இருதயத்தில் தியானம் செய்யுங்கள். சத்திய ஸ்வரூபியும், ஸகல பிராணிகளுக்கும் மித்திரருமான பகவானை இருதயா காசத்திம் தியானஞ் செய்வதில் அதிகப் பிரயாசம் ஏது? விஷயங்களைச் சம்பாதிப்பதால் என்ன பிரயோசனம்? மேலும், பணம் களத்திரம் பசுக்கள், புத்திரன் முதலிய ஐசுவரியங்கள் அர்த்தங்கள் காமங்கள் முதலியவை எல்லாம் நிலை யில்லாதவை; அவைகள் மனிதனுக்கு எவ்விதப் பிரியத்தை உண்டுபண்ணப்போகின்றன? ஸ்வர்க்கம் முதலிய லோகங்களும் யாகங்களால் கிடைக்கக் கூடியவைகள். புண்ணியத்தின் தாரதம்யம் வித்தியாசமுள்ளவை களாக இருக்கின்றன; ஆனாலும் நித்தியங்களல்ல ஆனதால் அழிவற்றவராகிய பகவானைப் பக்தியினால் அடை யுங்கள். அவர் தோஷமற்றவர்; (அவரிடத்தில் தோஷமி ருப்பதாக பார்த்ததில்லை. கேட்டதுமில்லை) மேலானவர்; அதனால் ஆத்ம லாபம் கிடைக்கும். அகங்காரமுள்ள வித்வானாகிய புருஷன் எந்த பலத்தை உத்தேசித்து அடிக்கடி கர்மங்களைச் செய்கிறானோ அதற்கு விரோதமான பலத்தை அவஸ்யம் அடைகிறான். பின்னும் புருஷன் சுகத்தை அடைவதற்கும், துக்கத்தை நிவர்த்தித்துக் கொள்வதற்கும் சங்கற்பித்தே கர்மங் களைச் செய்கிறான். ஆசையில்லாமல் இருந்தபொழுது எவன் சுகமடைந்திருந்தானோ, அந்தப் புருஷனே ஆசையை அடைந்தபோது துக்கத்தையே அடை கிறான். பின்னும் இந்தப் புருஷன் எந்தச் சரீரத்தைப் போஷிப்பதற்காக விஷயங்களில் ஆசைப்படுகிறானோ அந்தச் சரீரமானது, பிறருடையது (நாய்க்குச் சொந்த மானது) அநித்தியமானது; போகிறதும் வருகிறதுமாக இருக்கிறது) மேலும், குழந்தைகள், களத்திரம்; வீடு, பணம் முதலியவை ராஜ்யம், பொக்கிஷம், சைனியம்,

மந்திரி வேலைக்காரர்கள், ஆப்தர்கள் ஆகிய இவைகள் அகங்காரத்திற்குக் காரணங்களாக இருப்பவைகள்; சரீரத்தைவிட வேறாகக் காணப்படுகின்றவைகள். இவைகள் அற்பங்கள்; அநித்தியங்கள்; அர்த்தம் போலத் தோன்றுகிறவைகள்; உண்மையில் அனர்த் தத்தைக் கொடுக்கக்கூடியவைகள்; நித்தியமான ஆனந்த சமுத்திரமான ஆத்மாவிற்கு மேற்சொல்லிய வைகளால் என்ன பிரயோசனம்? ஓ அசுரக் குழந்தைகளே, முன் செய்த கர்மங்களால் நிஷேகம் (ஸ்திரீயினிடத்தில் புருஷனால் செய்யப்படும் கர்ப் பாதானம்) முதலிய அவஸ்தைகளில் கஷ்டப்படும் ஜீவனுக்கு என்ன புருஷார்த்தம் கிடைக்கிறது? யோசித்துப் பாருங்கள். ஜீவனுள்ள தேகத்தால் கர்மங் களைச் செய்ய முயற்சிக்கிறான். கர்மங்களால் சரீரம் ஏற்படுகிறது. தேகம், கர்மம் ஆகிய இரண்டும் சுரூபத்தை அறியாததால் ஏற்படுகின்றன. ஆனதால் தர்மங்களும், அர்த்தங்களும்; காமங்களும் எவரை ஆசிரயித்திருக்கின்றனவோ, ஆசை அற்றவரான அந்த ஈசுவரனாகிய ஸ்ரீமந் நாராயணனை ஒன்றையும் விரும்பாமல் (பலனை உத்தேசியாமல்) சேவியுங்கள். ஹரியானவர் ஸகல பிராணிகளுக்கும் ஆத்மாவாகவும், ஈசுவரராகவும், பிரியராகவும் இருக்கிறார். மேலும் அவர் தம்மால் சிருஷ்டிக்கப்பட்ட மகா பூதங்களுடன் சம்மந்தப்பட்ட படியால் ஜீவனென்று பெயரை அடைந்திருக்கிறார். நீங்கள் அசுரர்களானாலும், மனிதனானாலும், ராக்ஷஸனானாலும், கந்தர்வனானா லும் ஸ்ரீ முகுந்தருடைய பாதாரவிந்தத்தைச் சேவித் தால் மேன்மேலும் க்ஷேமத்தை அடைவீர்கள். பகவான் சுத்தமான பக்தியால் ஸந்தோஷப்படுவது போல், ப்ராம்ஹண ஜன்மத்தை அடைந்திருப்பதாலும் தேவனாக

இருப்பதாலும், மகரிஷியாக இருப்பதாலும், தானத் தாலும், தவத்தினாலும், யாகத்தாலும், சௌசத்தாலும், விரதங்களாலும் பிரியமடைகிறதில்லை. மற்றவை அபிநயங்களேயாம். ஓ அசுரர்களே! தங்களை உபமானமாக வைத்துக் கொண்டு சகல சுரூபியாக இருக்கும் பகவானாகிய ஸ்ரீமந் நாராயணனிடத்தில் பக்தி செய்யுங்கள். அவர் ஸகல பிராணிகளுடைய சுரூபியாக இருப்பவர். மேலும், சில தைத்தியர்களும், யக்ஷர்களும், ராக்ஷஸர்களும், ஸ்திரீகளும், தாழ்ந்தவர் களும், கோபர்களும், பறவைகளும், மிருகங்களும் பாபஞ் செய்த ஜீவர்களும், பகவத் பக்தியினால் ஆத்ம ஸ்வரூபத்தை அடைந்திருக்கிறார்கள். ஆனதால் ஸ்ரீ கோவிந்தரிடத்தில் ஏகாந்தமாகப் பக்தி செய்து எல்லா வற்றையும் பகவத் ஸ்வரூபமாகப் பார்ப்பதே புருஷனுக்கு மேலான புருஷார்த்தமென்று சொல்லப் பட்டிருக்கிறது.

குறிப்பு

ஜீவனுள்ள;– உயிருள்ள சரீரத்தில் தங்களை உபமானமாக – பிறர் நமக்கு அபாகரஞ் செய்தால் நமக்கு எப்படி மன வருத்தம் உண்டாகிறதோ அப்படியே பிறருக்கு நாம் கெடுதி செய்தால் அவர்கள் மனம் வருத்தப்படுமே யென்று தங்களைத் திருஷ்டாந்தமாக நினைத்து.

அத்தியாயம்–8

ஹிரண்யகசிபுவின் வதம்

1–7. அதனைக் கேட்ட அசுரக்குழந்தைகள் எல்லாரும் ப்ரஹ்லாதரால் சொல்லப்பட்ட விஷயம் தோஷமற்றதாக இருந்தபடியால் அதனைக் கிரஹித்துக் கொண்டார்கள். ஆசாரியனால் சொல்லப்பட்டதை விட்டுவிட்டார்கள். பின்பு சுக்கிரனுடைய புத்திரர்; குழந்தைகள் எல்லோருடைய புத்திகளும் ப்ரஹ்லாத ருடைய புத்தியை அனுசரித்து ஒருவகைப்பட்டிருப் பதைப் பார்த்துப் பயந்து சீக்கிரம் ஹிரண்யகசிபுவின் சமீபம் சென்று சமாசாரத்தைத் தெரிவித்தார். அப்பொழுது ஹிரண்யகசிபு, 'ப்ரஹ்லாதரால் மற்ற குழந்தைகளின் புத்தி மாற்றப்பட்டது' என்பதைக் குருமுகமாகக்கேட்டு மிகுந்த கோபத்தால் நடுங்கிய சரீரமுள்ளவனாகி, புத்திரனைக் கொல்லவேண்டும் என்று நினைத்துப் பிரகலாதரை வரவழைத்தான் பின்னும் இயற்கையில் குரூர சுபாவமுள்ள அவன் காலால் மிதிக்கப்பட்ட சர்ப்பம்போல் பெருமூச்சுவிட்டு, குறுக்கான பார்வையுடன் ப்ரஹ்லாதரைக் கடுமையாகப் பார்த்தான் அப்பொழுது ப்ரஹ்லாதர் இருகைகளையும் கூப்பி வணக்கமுள்ளவராக இருந்தார். அவரை நோக்கி ஹிரண்யகசிபு, 'மூட! குலத்தைக் கெடுப்பவனாகிய ஓ அதம! நான் கோபமடைந்தால் மூவுலகங்களும் லோகபாலகர்களும் பயப்படுகிறார்கள். நீ பயமற்ற வனாக என்னுடைய ஆக்ஞையைமீறி நடக்கிறாய். யாருடைய சகாயத்தை வைத்துக்கொண்டு இப்படிச் செய்கிறாய்? அப்படிப்பட்ட உன்னை நான் கொன்றுவிடுகிறேன்" என்றான்.

8–11. அதனைக்கேட்ட ப்ரஹ்லாதர் ஹிரண்யகசிபுவை நோக்கி, "ஓ மகாராஜ! எவருக்குப் ப்ரஹ்மதேவர் முதலிய எல்லாரும் சுவாதீனர்களாக இருக்கிறார்களோ அவரே உமக்கும், எனக்கும் மற்ற பலசாலிகளுக்கும் பலத்தை கொடுப்பவர் அந்த ஈசுவரன் மிகுந்த பராக்கிரமமுள்ளவர்; இந்திரியங்களுக்கு சாமர்த்தியத்தைக் கொடுப்பவர்; மனத்திற்குச் சக்தியைக் கொடுப்பவர்; காந்தி, புத்தி, தைரியம் ஆகிய இவைகளைக் கொடுக்கும் ஆத்மாவாக இருப்பவர்; பரம புருஷனாகிய அவரே தம்முடைய சக்திகளைக்கொண்டு சிருஷ்டிப்பது பரிபாலிப்பது; சம்கரிப்பது ஆகிய இவைகளைச் செய்கிறார். அவர் முக்குணங்களுக்கும் அதிபதியானதால் அசுரத்தன்மையை விட்டுவிடும். மனத்தைச் சமாதானம் செய்துகொள்ளும். தனக்கும் வசப்படாமல் கெட்ட மார்க்கத்தில் செல்லும் மனதே புருஷனுக்கு விரோதி; வேறு சத்துருக்களில்லை, மனத்தை வசப்படுத்திக்கொள்வதே பகவானைப் பூஜித்ததாகும். விவேகத்தை அபஹரிப்பவைகளான காமம் முதலிய ஆறு திருடர்களை ஜயிக்காமல் உம்மைப் போன்ற சிலர் ஸகல திக்குகளை ஜயித்ததாகச் சொல்விக்கொள்கிறார்கள். மனத்தை ஜயித்தவனும், சகல பிரகிருதிகளிடத்திலும் சமபுத்தியுள்ளவனும், ஞானியுமாகிய சாதுவுக்குச் சத்துருக்களேது? சத்துருவென்பது மோகத்தாலல்லவா ஏற்படக்கூடியது?" என்றார்.

12–15. அதனைக்கேட்ட ஹிரண்யகசிபு புத்திரனை நோக்கி "அட மூடா! சாகுந்தருணத்தில் ஜனங்கள் பலவகையாகப் பேசுவார்கள். இப்பொழுது நீ மிகுந்த வித்வான்போல் எனக்கு உபதேசம் செய்கிறாய். உனக்கு மரணம் சமீபித்திருக்கிறது. என்னைவிட வேறொருவன்

ஜகத்திற்கு அதிபதியிருப்பதாகச் சொன்னாயல்லவா? அவன் எவ்விடத்தில் இருக்கிறான்? எங்கும் இருப்பவன் ஆனால் இந்தத் தூணில் இருக்கிறானா? நான் இப்பொழுது உன் தலையை வெட்டுகிறேன்! நீ யாரைச் சரணமடைகிறாயோ அவன் உன்னைக் காப்பாற்றட்டும்" என்று கடுஞ்சொற்களைச் சொல்லிக் கத்தியைக் கையிலெடுத்துச் சிம்மாசனத்திலிருந்து எழுந்திருந்து கையை முஷ்டி செய்துகொண்டு ஒரு தூணை அடித்தான்.

16–25. அப்பொழுது அந்தத் தூணிலிருந்து பயங்கரமாகிய ஒரு சத்தம் உண்டாயிற்று. அந்தச் சத்தத்தால அண்டகடாஹம் வெடித்தது. ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் தங்கள் தங்கள் லோகத்தில் அந்தச் சத்தத்தைக் கேட்டுத் தங்களுடைய ஸ்தானத்திற்குக் கெடுதி நேர்ந்ததென்று நினைத்தார்கள் புத்திரனைக் கொல்ல விரும்பிய ஹிரண்யகசிபுவானவன் அற்புதமான சத்தத்தைக் கேட்டுச் சபையின் மத்தியில் அதற்குத் காரணம் என்னவென்று தேடியும் அறியவில்லை. அசுர சேனாதிபதிகள் அதனைக் கேட்டு நடுங்கினார்கள். அப்பொழுது பகவான் தம்முடைய பக்தனாகிய ப்ரஹ்லாதருடைய வார்த்தையையும் எங்கும் தாமிருப்பவர் என்பதையும் காண்பித்துக் கொண்டு நரசிங்க ஸ்வரூபியாக அந்தக் கம்பத்திலிருந்து அவதரித்தார். (அந்த ஸ்வரூபம் மனிதனாகவும் இல்லை சிங்கமாகவும் இல்லை) இப்படி கம்பத்திலிருந்து அவதரித்த ஸ்வரூபத்தைப் பார்த்து ஹிரண்யகசிபுவானவன் "இது மனிதனாகவும் இல்லை மிருகமாவுமில்லை. இதென்ன!" என்று சந்தேகித்தான் அந்த நரசிம்மருடைய ஸ்வரூபமானது உருக்கிவிட்ட தங்கம் போன்ற கண்களுள்ளது.

ஜடைகளாலும் பிடரி மயிர்களாலும் பிரகாசிக்கும் முகமுள்ளது, அசைவற்றவைகளும் உயரத் தூக்கினவை களுமமான காதுகளுள்ளது. மேலும் அவருடைய வாயானது மலையில் குஹைபோல் அற்புதமானது. கன்னங்கள் பிளந்திருப்பதால் பயங்கரமானது. சரீரமோ ஆகாயம் வரையில் உயர்ந்திருக்கிறது. அதிக நீளமில் லாததும், பருத்ததுமான கழுத்துள்ளது. அகலமான மார்புள்ளது. இளைத்த இடுப்புள்ளது; சந்திரனுடைய கிரணங்கள் போல வெண்மையான மயிர்களுள்ளது; நான்கு பக்கங்களிலும் பரவிய அநேகம் கைகளுள்ளது, நரகத்தையே ஆயுதமாகக் கொண்டது; நெருங்க முடியாதது சக்கரம் முதலிய ஆயுதங்களால் தேவ விரோதிகளான அசுரர்களை நாசஞ் செய்தது; அதனைக்கண்ட ஹரண்யகசிபுவானவன்; 'மிகுந்த மாயாவியாகிய ஸ்ரீமந் நாராயணன் என்னைக் கொல் வதற்காக இம்மாதிரியான பிராணியைச் சிருஷ்டித் திருக்கிறாரோ? இதனால் என்ன செய்யமுடியும்?' என்று தனக்குள் யோசித்துக் கொண்டே கர்ஜித்து கதாயுதத்தை யெடுத்து நரசிங்கரை எதிர்த்தான். அப்பொழுது நரசிங்கருடைய தேஜஸில் வீழ்ந்து அசுரன் தீபஜ்வாலையில் அகப்பட்ட சலபம் (விளக்கு விட்டில் பூச்சி) போல் காணப்படாதவனானான். அந்தப் பகவான் சிருஷ்டிக்கு முந்தி பிரளய காலத்திய இருட்டைப் பானஞ் செய்தார். ஆனதால் ஸத்வ குணத்திற்கு ஆசிரயமான பகவானிடத்தில் அசுரனுடைய பராக்கிரமம் வீணாகப் போனது ஆச்சரியமல்ல.

26–35. பின்பு அசுரன் மிகுந்த வேகமுள்ள கதையால் பகவானை எதிர்த்து அடித்தான், பகவான் அவனைப் பிடித்துக்கொண்டார். அது கருடன் மகா

சர்ப்பத்தைப் பிடித்தாற்போலிருந்தது. அப்பொழுது அசுரன் அவருடைய கையிலிருந்து வெளிவந்தான். மேகத்தில் மறைந்து இதனைப் பார்த்துக் கொண்டி ருக்கும் லோக பாலகர்கள் வருத்தப்பட்டார்கள். பின்பு அசுரன் தான் பகவானை ஏமாற்றிவிட்டோம் என்று நினைத்துக் கத்தி, கேடயம் இவைகளை எடுத்துக் கொண்டு சிரமில்லாதவனாகித் திரும்பவும் அவருடன் எதிர்த்தான். பின்னும் ஆகாயத்திலும் பூமியிலும் பருந்துபோல் மிகுந்த வேகத்துடன் கத்தி நுழைய இடமில்லாமல் சுற்றிவந்தான். அப்பொழுது அந்த நரசிங்கர் பயங்கரமாக அட்டகாசஞ் செய்தார். அதனைக்கேட்டு அசுரன் இரு கண்களையும் மூடிக் கொண்டான். மிகுந்த வேகமுள்ள பகவான் அசுரனைப் பிடித்துக் கொண்டார். அந்த அசுரன் வஜ்ரத்தால் அடிக்கப்பட்டும் காயப்படாமல் மகேந்திரனை ஜயித் தவன்; ஆனாலும் பிடிப்பட்டபடியால் துடித்துக் கொண்டிருந்தான். அப்படிப்பட்ட அசுரனை பகவான் பிடித்து வாசற்படியில் தன் தொடைமீது தள்ளிக் கொண்டு கருடன் மிகுந்த விஷமுள்ள சர்ப்பத்தைக் கிழிப்பதுபோல் சிரமமின்றிக் கிழித்தார். பின்னுமவர் யானையைக் கொன்ற சிங்கம் போலக் கோபத்தால் பயங்கரமாகிய கண்களுள்ளவராகி வாயைத்திறந்து கொண்டும். நாக்கினால் கடைவாயை நக்கிக்கொண்டும். ரத்தத்தால் பூசப்பட்டுச் சிவந்த பிடரி மயிர்களுள்ள முகமுள்ளவராகித் தம்முடைய நகங்களால் ஹரண்யக சிபுவின் மார்பைக் கிழித்து அவனுடைய சைனியங் களையும் கொன்றார். அந்த நரசிங்க ஸ்வரூபத்தின் ஜடைகளால் மேகங்கள் அடிக்கப்பட்டன. அவருடைய கண்களின் தேஜஸ்ஸால் கிருஹங்களுடைய காந்தி குறைந்தது. பெருமூச்சினால் சமுத்திரங்கள் கலங்கின.

Released by Maran's Dog, Toronto , Canada

அட்டகாசத்தைக் கேட்டுப்பயந்து திக்கஜங்கள் மதமற்ற வைகளாயின த்யுலோகமானது அவருடைய ஜடையால் அடிக்கப்பட்டு அசைந்தது; பூமியானது அவருடைய பாதங்களால் அடிப்பட்டுச் சிரமத்தை அடைந்தது அவருடைய வேகத்தால் மலைகள் அசைந்தன; அவருடைய தேஜஸ்ஸால் ஆகாயமும் திக்குகளும் பிரகாசிக்கவில்லை; பின்பு அந்தப் பகவான் தம்முடைய உக்ரமான தேஜஸை அடக்கிக்கொண்டு சிம்மாசனத்தில் உட்கார்ந்திருந்தார். அவரை எதிர்த்து யுத்தஞ் செய்யக் கூடியவர் ஒருவருமில்லை. அவருடைய முகமானது பயங்கரமாக இருந்தது. அதனைக்கண்டு அவரிடம் ஒருவரும் செல்லவில்லை.

36–41. மூவுலகத்திற்கும் வஜ்ரம்போலிருந்த அந்த அசுரன் பகவானால் கொல்லப்பட்டான் என்பதை கேட்டுத் தேவஸ்திரீகள் முகமலர்ச்சியுள்ளவர்களாகிப் புஷ்பமாரி பெய்தார்கள். பகவானைத் தரிசிப்பதற்காக வந்த தேவர்களுடை விமானத்தால் ஆகாயம் நிறைந் திருந்தது. ஆனகம், துந்துபி முதலிய தேவ வாத்தியங்கள் முழங்கின; சிறந்த கந்தர்வர்கள் கானஞ் செய்தார்கள்; அப்ஸரஸ் ஸ்திரீகள் நர்த்தனஞ் செய்தார்கள். மேலும் ப்ரஹ்ம தேவர், பரமசிவன், மகேந்திரன் முதலிய தேவர்கள், மகரிஷிகள் பிதிருக்கள், சித்தர்கள், வித்யாதரர்கள், உரகர்கள், மநுக்கள், பிரஜாபதிகள், கந்தர்வர்கள் அப்ஸரஸுமக்கள், சாரணர்கள், யக்ஷர்கள், கிம்புருஷர்கள், பூதங்கள், பேதாளங்கள்சுனந்தர்முதலிய விஷ்ணுபார்ஷதர்கள் ஆகிய எல்லோரும் சிரஸில் அஞ்சலி செய்துகொண்டு மிகவும் உக்ரதேஜஸுள்ள பகவானுடைய சமீபஞ்சென்று தனித்துத் தோத்திரஞ் செய்ய ஆரம்பித்தார்கள்.

42. ஆனந்தரும் அற்புதமான மஹிமையுள்ளவரும், பரிசுத்தியை உண்டுபண்ணும் சரிதங்களுள்ளவரும் தம்முடைய விளையாட்டினால்லோகத்தைப்படைப்பது பரிபாலிப்பது, சம்ஹரிப்பது முதலியவைகளைச் செய்பவரும், நாசமற்ற ஸ்வரூபமுள்ளவருமான பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன் என்று ப்ரஹ்மதேவர் தோத்திரஞ்செய்தார்.

43. பரமசிவன் பகவானை நோக்கி, "ஓ பக்தர்களிடம் பிரீதியுள்ளவரே! உமக்குக் கோபம் வருஞ் சமயம் பிரளய காலமல்லவா? இந்த அற்பனாகிய அசுரன் கொல்லப்பட்டான்; அவனுடைய புத்திரனும், உம்முடைய பக்தனுமாகிய ப்ரஹ்லாதனைக் காப் பாற்றும்" என்றார்.

44. மகேந்திரன், "ஓ நரசிங்கமூர்த்தியே! ஓ மேலானவரே எங்களைச் சம்ரட்சிட்டவரே! எங்களுக்குக் கிடைக்காமலிருந்த ஹவிர்ப்பாகங்கள் திரும்பவும் எங்களுக்குக் கிடைக்கும்படி செய்தீர், அவை எங்களு டைய பாகமென்று சொல்லப்பட்டாலும், நீர் சகல ஸ்வரூபியாக இருப்பதால் உம்முடையவைகளேயாம் உமக்கு வாசஸ்தலமான (அந்தர்யாமியாக இருப்பதால்) எங்களுடை ஹிருதய கமலமானது ஹரண்யகசிபு வினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. அது இப்பொழுது மலர்ந்தது. (அசுரனிடத்தில் பயந்து அவனையே தியானித்துக் கவலைப்பட்டிருந்தோம். அந்தக் கவலை நீங்கியதென்று தாத்பர்யம்) உம்மைச் சேவிப்பவர்கள் மோட்சத்தையும் மேலானதென்று நினைக்கமாட்டார்கள். (உமக்குச் சிசுரூஷை செய்வதே மேலானதென்று கருத்து) அப்படியிருக்க அறியுள்ளதாகிய இந்திர

பதத்தாலும், மற்ற ஐசுவரியங்களாலும் என்ன பிரயோசனம்? என்றார். (ஹவிர்பாகம், இந்திர பதம் ஆகிய இவைகள் கிடைத்தது. புருஷார்த்தமல்ல. உமக்குச் சிசுரூஷை செய்வதே புருஷார்த்தம். அசுரனைக் கொன்றுவிட்டபடியால் கோபத்தைத் தணித்துக் கொள்ளும் என்று தாத்பர்யம்.

45. மகரிஷிகள் நரசிங்கமூர்த்தியை நோக்கி, "ஓ காப்பாற்றுவதற்குரியவர்களைக் காப்பாற்றுகிறவரே! நீர் தம்மிடத்தில் லயந்திருக்கிற ஜகத்தை எதனால் சிருஷ்டித்தீரோ, எது உம்முடைய மஹிமையாக இருக்கிறதோ, அந்த மேலான தவத்தை (தியானத்தை) எங்களுக்கு உபதேசித்தீர். அதனை ஹிரண்யகசிபு கெடுத்துவிட்டான். இந்தச் சமயத்தில் நீர் அவதரித்து அந்தத் தவத்தை இடையூறின்றிச் செய்யும்படி அனுக்ரஹித்தீர். அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம் செய்கிறோம்" என்றார்.

46. பிதிருக்கள் பகவானை நோக்கி,"எங்களை உத்தேசித்துப் புத்திரர்களால் கொடுக்கப்படும் சிராத்தங்களையும் (சிரத்தையுடன் கொடுக்கப்படும் பிண்டம் முதலியவை) திலோகத்தையும் (எள்ளும் ஜலமும்) எந்த அசுரன் எங்களுக்குச் சேரவொட்டாமல் பலாத்காரமாகத் தான் புசித்தானோ; அவனுடைய வயிற்றை நகங்களால் கிழித்து ஈரலைப் பிடுங்கினீரல்லவா? அப்படிப்பட்டவரும், ஸகல தர்மங்களை காப்பாற்றுகிறவரும், நரசிங்கமூர்த்தியுமான உமக்கு நமஸ்காரம் செய்கிறோம்" என்றார்கள்.

47. சித்தர்கள். "ஓ நரசிங்கமூர்த்தியே! எங்களுடைய அணிமா முதலிய ஐசுவரியத்தை எந்த அசுரன்

யோக பலத்தாலும் தபோபலத்தாலும் அபஹரித்தானோ அந்த பலவகை அகங்காரமுள்ள அசுரனை நகங்களால் கிழித்தீர். அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம்" என்றார்கள்.

48. வித்யாதரர்கள் பகவானை நோக்கி, "எந்த அசுரன் பலத்தாலும், வீரியத்தாலும் கர்வமுள்ளவனாகி எங்களுடைய அந்தர்தான வித்தையைத் தடுத்தானோ அந்த அசுரனை யுத்தத்தில் பசுவைபோலக் கொன்றீர். அப்படிப்பட்ட மாயாநரசிம்ஹராகிய உமக்கு எப்பொழுதும் நமஸ்காரஞ் செய்கிறோம்" என்றார்கள்.

49. நாகங்கள் அவரை நோக்கி, "எந்த அசுரன் எங்களுடை படத்திலுருக்கும் ரத்னங்களையும், ஸ்திரீ ரத்னங்களையும் அபஹரித்தானோ அந்த அசுரனுடைய மார்பை பிளந்து அந்த ஸ்திரீகளுக்கு ஆனந்தத்தை உண்டுபண்ணீர் அல்லவா? அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம்" என்றார்கள்.

50. மனுக்கள் பகவானை நோக்கி, ஓ தேவ! நாங்கள் தர்மத்தைப் பரிபாலிப்பதற்காக உம்மால் ஏற்படுத்தப்பட்ட மனுக்கள். உம்முடைய உத்தரவின்படி நடப்பவர்கள். எங்களால் ஏற்படுத்தப்பட்ட வர்ணாச்சிரம தர்மங்களை எந்த அசுரன் கெடுத்தானோ, அவனை நாசஞ் செய்தீர். ஓ பிரபுவே! எங்களால் செய்யப்பட வேண்டியதென்ன? ஆக்ஞாபிக்க வேண்டும்" என்றார்கள்.

51. பிரஜாபதிகள் அவரை நோக்கி, "ஓ ஸத்வமூர்த்தியே! பிரஜாபதிகளாகிய நாங்கள் உம்முடைய

ஆக்ஞையால் பிரஜைகளைச் சிருஷ்டிக்கிறோம். அதனை எந்த அசுரன் தடுத்தானோ, அவன் உம்மால் கொல்லப்பட்டான் உம்முடைய அவதாரமானது ஜகத்திற்கு மங்களத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது" என்றார்கள்.

52.கந்தர்வர்கள் அந்தப் பிரபுவை நோக்கி, "ஓ பிரபுவே! நாங்கள் உமக்கு நடர்கள் (நர்த்தனஞ் செய்பவர்கள் நாட்டியம், கானம் ஆகிய இவைகளைச் செய்பவர்கள்) அப்படிப்பட்ட எங்களை எந்த அசுரன் பராக்கிரமத்தால் சுவாதீனப்படுத்திக் கொண்டானோ, அவன் இம்மாதிரியான அவஸ்தையை அடைவிக்கப் பட்டான் கெட்ட மார்க்கத்தை அடைந்தவன் க்ஷேமத்தை அடைவானா?" என்றார்கள்.

53. சாரணர்கள் பகவானை நோக்கி, "ஓ ஹரியே! சாதுக்களுடைய இருதயத்திற்கு உபத்திரவத்தை உண்டுபண்ணின இந்த அசுரனை நீர் கொன்ற படியால் ஸம்ஸாரத்தை நிவர்த்திக்கக் கூடியதும், மோக்ஷத்தை கொடுக்கக்கூடியதுமான உம்முடைய பாதாரவிந்தத்தை ஆசிரயிக்கிறோம்" என்றார்கள்.

54. யக்ஷர்கள் பகவானை நோக்கி, "இருபத்து நான்கு தத்துவங்களுக்கு அதிபதியான ஓ பிரபுவே! நரஹரியே! எந்த அசுரன் எங்களை வாகனமாகச் செய்துகொண்டானோ, எவன் ஜனங்களுக்கு உபத்திரவத்தை உண்டுபண்ணினானோ அவனை நீர் கொன்றீர். உம்முடைய மனோகரமான காமங்களால் உமக்கு முக்கியமான சேவகர்களாக இருக்கிறோம் என்றார்கள்.

55. கிம்புருஷர்கள் பகவானை நோக்கி, "நாங்கள் கிம்புருஷர்கள் (அற்பர்கள்) நீரோ மகாபுருஷன்! உம்மைத் தோத்திரஞ் செய்ய எங்களால் முடியுமா வென்று கருத்து) சாதுக்களால் எப்பொழுதும் நிந்திக்கப்பட்ட இந்த புருஷா தமன் (புருஷர்களுக்குள் அதமன்) நாசமடைந்தான் என்றார்கள்.

56. வைதானிகர்கள் பகவானை நோக்கி, "சபைகளிலும் யாகங்களிலும் சுத்தமான உம்முடைய சரிதத்தை நாங்கள் கானஞ் செய்வதால் எல்லோரும் எங்களைப் பூஜிக்கிறார்கள் அப்படிப்பட்ட எங்களை உபத்திரவித்து எவன் சுவாதீனஞ் செய்துகொண்டானோ. அந்த அசுரன் லோகங்களுக்கு வியாதி போல உபத்திரவத்தைச் செய்து கொண்டிருந்தான். அந்தத் துஷ்டனைக் கொன்றீர்" என்றார்கள்.

57. கின்னரர்கள் பகவானை நோக்கி, "ஓ நரசிம்ஹ! ஓ ஈச! நாங்கள் கின்னர கணங்கள். நாங்கள் அசுர னுக்குச் சம்பளம் வாங்காமல் வேலைசெய்தோம். அப்படிப்பட்ட பாபியான அசுரன் உம்மால் கொல்லப் பட்டான், எங்களுக்கு ஐசுவரியத்தைக் கொடும்" என்றார்கள்.

58. விஷ்ணுவின் பார்ஷதர்கள் அவரை நோக்கி "பக்தர்களாகிய எங்களுக்கு ஆசிரயமாக இருப்பவரே, ஓ ஈச! அற்புதமான உம்முடைய இந்த நரசிம்ஹ ரூபத்தை இப்பொழுதுதான் பார்த்தோம். இது சகல லோகங்களுக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியது ஆனால் இந்த அசுரன் உம்முடைய வேலைக்காரன் தான். ப்ராஹ்மண சாபத்தால் அசுர ஜன்மத்தை அடைந்தான். அவனைக் கொன்றது அவனுக்கு அனுக்ரஹமென்றே நினைக்கிறோம்" என்றார்கள்.

அத்தியாயம் 9

ப்ரஹ்லாத ஸ்துதி

1–7 ப்ரஹ்மதேவர், ருத்திரன் முதலிய தேவர்கள் அதிகக் கோபம், பரபரப்பு ஆகிய இவைகளுள்ள அந்த நரசிங்கமூர்த்தியின் சமீபஞ் செல்வதற்குப் பயந்து லக்ஷ்மீதேவியை அனுப்பினார்கள். அவளும் இதற்குமுன் பார்க்கப்படாததும், கேட்கப்படாததும், ஆச்சரியமுமான அந்த ஸ்வரூபத்தைப்பார்த்துப் பயந்து நெருங்கவில்லை. அதனைக் கண்ட ப்ரஹ்மதேவர், சமீபத்திலிருக்கும் ப்ரஹ்லாதரை நோக்கி, "ஓ குழந்தாய்! ப்ரஹ்லாத! உன்பிதாவினிடம் கோபமுள்ளவரான பகவானுடைய சமீபஞ் சென்று சமாதானப்படுத்து" என்று சொன்னார். அதனைக் கேட்ட மகா பாகவதராகிய ப்ரஹ்லாதர் மெள்ள மெள்ளப் பகவானிடஞ் சென்று இரு கைகளையும் கூப்பி, பூமியில் விழுந்து நமஸ்கரித்தார். அதனைக் கண்ட பகவான் பக்த சிரோமணியான ப்ரஹ்லாதரை இரு கைகளால் தூக்கித் தமது தாமரை மலர் போன்ற கைகளை ப்ரஹ்லாதருடைய சிரசில் வைத்தார். அது காலமாகிய சர்ப்பத்தைக் கண்டு பயந்த புத்தியுள்ளவர்களுக்கு அபயத்தைக் கொடுக்கக் கூடியது. பகவானுடைய கையால் தொடப்பட்ட படியால் ஸகல அசுபங்களும் அவருக்கு நிவர்த்தியாயின. சீக்கிரம் பரமாத்மாவின் பிரகாசம் உண்டாயிற்று. அப்பொழுது பகவானுடைய பாதார விந்தத்தை தியானஞ் செய்து சுகத்தை அடைந்தார். அதனால் மயிர்க்கூச்சலுண்டாயிற்று; ஆனந்த பாஷ்யம் பெருகியது; இருதயம் தெளிந்தது; மேலும் அவர் சித்தத்தை ஒருவகைப்படுத்திச் சாவதானராகித் தம்முடைய

இருதயம், பார்வை ஆகிய இவைகளைப் பகவானிடத்திலே செலுத்தி அதிகப் பிரேமையால் கத்கத வாக்குடன் பின்வருமாறு தோத்திரஞ் செய்யலானார்.

8–50 "ப்ரஹ்மா முதலிய தேவ கணங்கள் மனன சீலர்களான ஞானிகள் ஆகிய ஸத்வகுணப் பிரதானர் களும் பலவகையான குணங்களால் எவரைத் தோத்திரஞ் செய்யச் சக்தியற்றவர்களாக இருக்கிறார் களோ, அப்படிப்பட்ட பகவானை அசுரஜாதியான என்னால் தோத்திரஞ் செய்ய முடியுமா? பணம், நல்ல குலத்தில் பிறந்திருப்பது, ரூபம், தவம், படித்தி ருப்பது, இந்திரியசாமர்த்தியம், காந்தி, பிரதாபம், தேகபலம், புருஷப்பிரயத்னம், புத்தி, யோகம் ஆகிய இவைகளாலும் பரமபுருஷன் சந்தோஷப்படுகிறதில்லை. பக்தியால் மாத்திரம் சந்தோஷப்படுகிறார் என்று நினைக்கிறேன். சிறந்த யானையினிடம் அதன் பக்திக் காகவே சந்தோஷமடைந்தார். சண்டாளனானாலும் மனம், வாக்கு, ஆசை, அர்த்தம், பிராணம் ஆகிய இவைகளை ஸ்ரீ பகவானிடத்தில் செலுத்தினவனா னால் அவனே மேலானவன். அவன் குலத்தைப் பரிசுத்தப்படுத்துகிறான். ஸ்ரீ பகவானிடத்தில் பக்தி யற்றவன் ப்ராஹ்மணனானாலும் அவன்மேலான வனல்ல. அவன் தன்னைக்கூடச் சுத்திசெய்து கொள்ள முடியாதவன்; (நல்ல குலத்தில் பிறந்திருப்பது முதலிய குணங்கள் பகவத் பக்தியில்லாதவனுக்குக் கர்வத்தைக் கொடுக்கக் கூடியவைகளேயொழியச் சுத்தியைக் கொடுக்கக்கூடியவைகளல்லவென்று தாத்பரியம்.) பிரபுவாகிய ஈசுவரன் அற்பர்களான ஜனங்களிடமிருந்து தாம் பூஜையைப் பெறவேண்டுமென்று நினைக்கிறதி ல்லை. (ஆத்ம லாபத்தால் பூரணர்.) ஆனாலும்

பிரஜைகளிடத்தில் மிகுந்த கருணையால் ஜனங்களுடைய க்ஷேமத்திற்காக அவர்கள் செய்யும் பூஜையை அங்கீகரிக்கிறார். மேலும் முகத்தில் இருக்கும் திலகம் பிரதி பிம்பத்தில் காணப்படுவது போலப் பகவானிடத்தில் சமர்ப்பிக்கப்படும் பூஜை தன்னிடத்தில் காணப்படுகிறது. ஆனது பற்றி நான் பயம் இல்லாமல் தக்கபடி பகவானுடைய மஹிமையைச் சொல்லுகிறேன். பகவான் மாயையால் ஸம்ஸாரத்தை அடைந்து அற்பனாக இருக்கும் புருஷன் புருஷோத்தமனுடைய குணங்களை வர்ணிப்பதால் பரிசுத்தமாகிறான் ஓ ஈச! உம்முடைய உக்கிரமான ஸ்வரூபத்தைப் பார்த்து ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் பயப்படுகிறார்கள். ஆனால் இவர்கள் உம்முடைய பக்தர்கள். அசுரர்களான எங்களைப் போல் விரோத புத்தியுள்ளவர்களல்ல. மேலும், நீர் அழகான அவதாரங்களைச் செய்து விளையாடுவது இந்த ஜகத்திற்கு க்ஷேமத்தையும், ஐசுவர்யத்தையும் ஆத்ம சுகத்தையும் கொடுப்பதற்கே யொழியப் பயத்தை உண்டு பண்ணுவதற்கல்ல. ஆனதால் இந்த ஸ்வரூபத்தை உபஸம்ஹாரஞ் செய்து கோபத்தைத் தணித்துக் கொள்ளவேண்டும். இந்த ஸ்வரூபத்தை எதற்காகத் தரித்தீரோ அந்தக் காரியம் முடிந்துவிட்டது. (ஹிரண்யகசிபு கொல்லப்பட்டான்) ஜனங்களெல்லோரும் அதனால் விசேஷ சந்தோஷத்தை அடைந்தார்கள். மிகுந்த சாதுவானாலும் தேள், சர்ப்பம் ஆகிய இவைகளுடைய நாசத்தைப் பார்த்து சந்தோஷப்படவேண்டும். அசுரனைக் கொன்று தங்களுக்கு க்ஷேமத்தைச் செய்தபடியால் இந்த நரசிங்க ஸ்வரூபம் தங்களுக்கு அபயத்தைக் கொடுத்தது என்றே நினைக்கிறார்கள். ஒருவராலும் ஜயிக்கப்படாத வரே! இந்த உம்முடைய ஸ்வரூபமானது பயங்கரமான முகம் நாக்கு, சூரியன் போன்ற கண்கள், புருவ

நெரித்தல், பயங்கரமான சிங்கப்பற்கள் ஆகிய இவைகளுள்ளது. நரம்பை மாலையாகக் கொண்டது; ரத்தத்தால் சிவந்த பிடரிமயிர்களுள்ளது; உயரத்தூக்கிய காதுகளுள்ளது; திக்கஜங்களும் கேட்டு நடுங்கக்கூடிய கர்ஜிதமுள்ளது; சத்ருவை நாசஞ் செய்தது. இப்படிப்பட்ட தானாலும் இதைக் கண்டு நான் பயப்படவில்லை. ஸம்ஸார சக்ரத்தில் நேரிடும் துக்கத்திற்கு பயப்படுகிறேன். முந்திய கர்மத்தால் கட்டுப்பட்டு மேற்சொல்லிய சம்சாரத்தில் தள்ளப்பட்டிருக்கிறேன். ஆபத்தை அடைந்தவர்களிடத்தில் பிரீதியுள்ளவரே! நீர் என்னிடத்தில் சந்தோஷத்தை அடைந்து, எப்பொழுது மோக்ஷமாகிய கிருகத்திற்கு அழைத்துப் போவீர்? உம்முடைய பாதார விந்தத்தைச் சரணமடைந்தேன். ஓ,விசேஷ ஐசுவரிய முள்ளவரே! அநேக ஜன்மங்களை அடைந்து பிரியத்தை அடையாமலும் அப்பிரியத்தை (கெடுதியை) அடைந்தும் துக்கமாகிய அக்னியால் எரிக்கப்பட்டு மிகவும் சிரமத்தை அடைந்திருக்கிறேன். துக்கத்தை நிவர்த்தித்துக் கொள்வதற்காகச் செய்யப்படும் முயற்சியும் துக்கமாகவே இருக்கிறது. அனாத்மாவாகிய சரீரம் முதலிய அபிமானமுள்ளவனாகி யிருப்பதால் மோட்சத்தை அடைந்திருக்கிறேன். ஆனதால் அதனை நிவர்த்தித்துக் கொள்ளும் உபாயத்தை நீர் உபதேசிக்க வேண்டும். (உமக்குத் தாசனாக இருந்தால் உமக்கு என்னிடம் பிரீதியுண்டாகுமென்றால் அந்த ஞானமே எனக்கு உண்டாவதற்கு நியாயமில்லாமலிருப்பதால் நீரே அதனையும் உபதேசிக்க வேண்டுமென்று தாத்பரியம்.) அப்படிப்பட்ட நான் ஸகல லோகங்களுக்கு பிரியரும் மேலான தெய்வமுமாகிய உம்முடைய சரிதங்களை கானஞ்செய்து என்னுடைய விக்னங்களைப் போக்கடித்துக்

கொள்கிறேன். அந்த சரிதங்களை ப்ரஹ்மதேவரும் கானஞ் செய்கிறார். (சம்பிரதாயமாகக் கிடைத்த தென்று தாத்பர்யம். மேலும், நான் குணங்களுடைய சம்பந்தமுள்ளவனானாலும் உம்முடைய பாதார விந்தங்களை ஆசிரயித்து, சாதுக்களுடைய சங்கத்தால் (சேர்க்கையால்) உம்முடைய குணங்களைக் கானஞ் செய்யத் தகுந்தவனாகிறேன். (பகவானுடைய அனுக் கிரகத்தால் சாது சேர்க்கையுண்டாகும். அதன்பிறகு வைராக்கியம்.அதன் பிறகு பகவானுடைய குணங் களையே வர்ணிப்பது; அதன்பிறகு துக்கம் முதலிய வைகளின் நிவர்த்தி ஆகிய இவைகள் உண்டாகின்றன வென்று தாத்பரியம்.) ஓ பிரபுவே! பிராணிகளுக்கு இவ்வுலகத்தில் துக்கத்தைப் போக்கடிக்கும் உபாயங்கள் ஏற்பட்டிருந்தாலும் அவை அந்த க்ஷணத்தில் துக்கத்தை நிவர்த்திக்குமே யல்லாமல் பாக்கியன்னியில் நிவர்த்திக் கிறதில்லை. எப்படியென்றால் சிறுவனைத் தாய் தகப்பன் கள் சம்ரட்சிப்பவர்களென்று சொல்லக்கூடாது அவர்களே சில சமயம் அவனைக் கொல்லுகிறார்கள். காப்பாற்றினாலும் இவனுக்கு துக்கம் நிவர்த்தியாகிறதி ல்லை. ரோகமுள்ளவனை ஔஷதம் காப்பாற்றுகிறதி ல்லை. கடலில் மூழ்கிறவனுக்கு ஓடம் சகாயமாக ஆகிறதில்லை, (ஓடத்துடனும் கடலில் மூழ்குகிறதுண்டு) துக்கத்தை நிவர்த்திக்கும் சாதனங்களும் உம்முடைய கிருபை இல்லாதவர்களுக்கேயாம். ஆனதால் எல்லோ ருக்கும் துக்கத்தை அடியோடு நிவர்த்தித்துக் காப்பாற்று கிறவர் நீர் ஒருவரேயாம். மேலும், வெவ்வேறான ஸ்பாவமுள்ள தகப்பன் முதலியவர்களும், ப்ரஹ்மதேவர் முதலியவர்களும், கர்த்தாக்கள் (செய்பவர்கள்) எந்த விடத்தில், எது நிமித்தம், எந்தக் காலத்தில் எந்த சாதனத்தைக் கொண்டு, எந்தக் காரணத்தால்;

எதனிடமிருந்து எதற்காக எந்த இஷ்டத்தை, எப்படிச் செய்கிறார்களோ, வேறாக மாற்றுகிறார்களோ அவர்கள் எல்லோரும் பகவத் ஸ்வரூபமேயாம். (ரட்சிப்பவன் எவனானாலும் அந்த ரூபியாக இருந்து பகவான் காப்பாற்றுகிறாரென்று தாத்பரியம்.) உம்முடைய அனுக்கிரகத்தால் மாயையானது காலத்தால் தூண்டப் பட்ட கர்ம ஸ்வரூபமும் ஜயிக்க முடியாததுமான மனத்தை உண்டு பண்ணுகிறது. அந்த மனமானது வேதத்தில் சொல்லிய காரியங்களைப் பிரதானமாகக் கொண்டது. ஜீவனுடைய போகத்திற்காக மாயையால் ஏற்படுத்தப்பட்ட பதினாறு விகாரங்களுள்ளது; சம்சார சக்கர ஸ்வரூபமாயுள்ளது. அதனை யாரால் ஜயிக்க முடியும்? உம்மைச் சேவித்து உம்முடைய அனுகிர கத்தை அடைந்தவன் அதனை ஜயிப்பான்.

மேலும் நீர், தம்முடைய சித் சக்தியால் புத்தியின் குணங்களை ஜயித்தவர். காரியகாரண சக்தியை வசப்படுத்திக் கொண்டவர். காலரூபியாக இருப்பவர். நான் பதினாறு விகாரங்களுள்ள மனமாகிய சம்சார சக்கிரத்தில் தள்ளப்பட்டு பீடிக்கப்பட்டிருக்கிறேன்.

ஓ பிரபுவே! சரணா கதனாகிய என்னை அந்தச் சக்கரத்திலிருந்து உம்முடைய சமீபஞ் சேர்த்துக் கொள்ளும். பின்னும் எந்த ஐசுவரியங்களைத் தாங்கள் அடைய வேண்டு மென்று ஸகல ஜனங்களும் நினைக் கிறார்களோ, அந்த லோகபாலர்களுடைய ஆயுள், ஐசுவரியம் முதலிய போகங்களை பார்த்தேன். அவைகள் என்னுடைய பிதாவாகிய ஹிரண்யகசிபு கோப காலத்தில் உண்டாகும் சிரிப்பினாலும், புருவ நெரிசலாலும் நாசமாயின. அப்படிப்பட்ட ஹிரண்யகசிபு உம்மால்

கொல்லப் பட்டான். ஆனதுப்பற்றிப் பிராணிகளால் விரும்பக் கூடிய ஆயுள், ஐசுவர்யம் முதலியவைகளை யும், ப்ரஹ்மலோகம் வரையிலுள்ள லோகங்களையும் நான் விரும்பவில்லை. அவைகள் கால ஸ்வரூபியான உம்முடைய மகிமையால் நாசஞ் செய்யப்படக்கூடியவை. என்னை உம்முடைய பக்தர்களுக்குள் ஒருவனாக அங்கீகரிக்க வேண்டும். கேட்பதற்கு சுககரங்களும், ,கானல் போன்ற விஷய சுகம் எங்கே? ஸகல வியாதி களுக்கு இருப்பிடமான சரீரம் எங்கே? இவைகளை அறிந்த வித்துவானும் இதில் வைராக்கியத்தை அடைகிறதில்லை. காமாக்கினியைச் சொற்ப சுகத்தால் அணைத்துக் கொண்டிருக்கிறான். என்னுடைய சிரசில் தாமரை மலர்போன்ற உம்முடைய கையை வைத்தீரல்லவா? அதுவே புருஷார்த்தம். அது ப்ரஹ்ம தேவருக்கு கிடைக்கவில்லை,பரமசிவனால் அடையப் படவில்லை. லக்ஷ்மீதேவிக்கும் கிடைக்கவில்லை. இம்மாதிரியான உம்முடைய அனுக்கிரகமே காரணம். இல்லாவிடில் ரஜோ குணத்தால் ஜன்மத்தை அடைந்த வனும், தமோ குண ஸ்வபாவமுள்ள அசுரகுலத்தில் பிறந்தவனுமான எனக்கு உம்முடைய தயை எப்படிக் கிடைக்கும்? கற்பக விருட்சமானது எல்லாவற்றையும் கொடுக்கக் கூடியதானாலும் தன்னிடம் வந்த யாசகர்கள் நினைக்கும் வஸ்துவை மட்டில் கொடுப்பதுபோல் பகவானாகிய நீரும், பக்தர் விரும்பப்படும் பலனைக் கொடுக்கிறீர்; நீர் எல்லா ஜகத்திற்கும் ஆத்மாவிற்கும் சுகிருத்தாக இருப்பவர்; ஆனது பற்றி ப்ரஹ்மதேவர்கள் முதலிய தேவர்கள் மேலானவர்கள்; அசுரன் தாழ்ந்தவன் என்ற பேத புத்தி உமக்கு இல்லை. ஜன்ம மாகிய சர்ப்பங்களுள்ள கிணற்றில் விழுந்து காமங் களையே விரும்பியவனுமான என்னை உம்முடைய

பக்தரான நாரத மகரிஷி அனுக்கிரகத்தால் உம்முடைய கிருபைக்கு பாத்திரமானேன். அந்த மகரிஷியின் சேவையை விடமாட்டேன். என்னுடைய பிதாவாகிய ஹிரண்யகசிபு வானவன் கையில் கத்தியை எடுத்துக் கொண்டு "என்னைக் காட்டிலும் ஈசுவரன் வேறொருவன் இருப்பானானால் உன்னைக் காப்பாற்றட்டும்; உன்னுடைய தலையை வெட்டுகிறேன் என்று கெட்ட வார்த்தைகளைச் சொல்லும் பொழுது அசுரனை கொல்வதற்கும், என்னுடைய பிராணனைக் காப்பாற்று வதற்கும் நீர் அவதரித்தவரல்ல. ஆனால் உம்முடைய வேலைக் காரராகிய (பக்தர்) மகரிஷியின் வார்த்தையை உண்மையாகச் செய்யவேண்டியே அவதாரஞ் செய்தீர் என்று நினைக்கிறேன். ஓ பகவன்! உலகம் உண்டா வதற்கு முன்னும்; உலகம் நாசமடைந்த பிறகும் சக்தியாக இருப்பவர் நீர் ஒருவராகையால் மத்திய காலமாகிய உலகம் இருக்கும்பொழுதும் நீர் ஜகத் ஸ்வரூபியாகவும் இருக்கிறீர்.ஆனாலும் தம்முடைய மாயையால் முக்குண ஸ்வரூபமான லோகத்தைப் அதில் அந்தர்யாமியாகப் பிரவேசித்துச் சிருஷ்டிப்பவர் போலும், காப்பாற்றுகிறவர் போலவும், நாசஞ்செய்பவர் போலவும் தோன்றுகிறீர். (பக்தர்களிடத்தில் பட்ச பாதம் வைத்து அசுரனைக் கொல்லுவது, பக்தர்களைக் காப்பாற்றுவது ஆகிய இவைகள் மாயையால் வைகளே யொழிய உமக்கு இயற்கையானவை அல்ல என்று தாத்பரியம்;) மேலும் ஓ ஈசா! காரிய காரண ஸ்வரூபியுமான இந்த லோகமானது உம்முடைய ஸ்வரூபமே யொழிய நீர் உலகத்தை காட்டிலும் வேறா னவர். (உலகம் உண்டாவதற்கு முந்தியும், உலகத்திற்கு பின்னும் பகவான் இருப்பதால் பின்னும் தன்னைச் சார்ந்தவன், பிறர் என்ற பேதபுத்தியே மாயை.

அது பிரயோசன மற்றது. எதனுடைய உற்பத்தியானது எவருடைய சங்கற்பம், பிரகாசம் ஆகிய ஏற்பட்டதோ. எதனுடைய நாசம் ஸ்திதி ஆகிய இரண்டும் எவரிடத்தில் ஏற்பட்டிருக்கின்றனவோ அந்த ஜகத் அவரேயாகும். மரம் அதன் விதை ஆகிய இவைகளால் பிரகிருதி பீஜமாகிய பூத சூக்ஷம ஸ்வரூபமாக இருக்கிறது. (காரிய காரண ஸ்வரூபமாகிய லோகமானது பரம காரணராகிய உம்முடைய ஸ்வரூபம் என்று கருத்து.) மேலும் நீர் ப்ரளய காலத்தில் ஆத்ம சுகத்தையே அனுபவித்து இந்த உலகத்தை தன்னிடத்தில் அடக்கிக் கொண்டு பிரளய ஜலத்தில் தூங்குகிறீர். ஆனால் யோகத்தால் கண்களை மடிக் கொண்டு ஸ்வயம்பிரகாசமாக இருப்பதால் அந்த நித்திரை அக்ஞர்களுடைய நித்திரை போன்றதல்ல. நான்காவது அவஸ்தையாகிய ஸ்வரூபத்தில இருப்பவராகையால தமோகுணத்தின் சம்பந்தமில்லை. ஜாக்ரத், ஸ்வப்னம் முதலிய அவஸ்தைகளில் விஷய சம்பந்தம் ஏற்படுவது போல் விஷயங்களை நீர் சேர்கிறதில்லை. மேலும் தம்முடைய கால சக்தியால் தூண்டப்பட்ட பிரகிருதியின் தர்மங்களை உடையவரும் ஆதிசேஷனாகிய படுக்கையிலிருந்து எழுந்திருப்பவருமான உமக்கு இந்த உலகமானது சரீரமாக இருக்கிறது. ஆலம் விதையிலிருந்து மரம் உண்டானதுபோல உம்முடைய ஸ்வரூபத்தில் அடங்கியிருந்த ஜகத் ஸ்வரூபமான தாமரை மலர் முதலில் உண்டாயிற்று. அந்த தாமரை புஷ்பத்திலிருந்து ப்ரஹ்மதேவர் உண்டானார். அவர் அந்த தாமரை மலரைவிட வேறு யாதொன்றையும் காணாமல் அதன் காரணத்தை பார்க்க விரும்பி எங்கும் வியாபித்திருக்கும் உம்மை வெளியில் தேட ஆரம்பித்து, நூறு வருஷ காலம் ஜலத்தில் மூழ்கி இருந்தார்.

அப்படியும் உம்மைக் காணவில்லை. மரம் முளைத்த பின் விதையைப் பார்க்க முடியுமா ? பின்பு அந்த ப்ரஹ்மதேவர் மிகவும் ஆச்சரியமடைந்து, அந்தத் தாமரை மலரில் திரும்பவும் வந்து உட்கார்ந்தார். அப்பொழுது அவர் கடுந்தவம் செய்து சுத்த சித்தராகி பூதங்கள், இந்திரியங்கள், ஆகிய இவைகளின் ஸ்வரூபமாகி தம்மிடத்தில் காரணரூபியான உம்மை தரிசித்தார். அது அநேக முகங்கள், கால்கள், தலைகள், கைகள் , தொடைகள் வாய்கள், காதுகள், கண்கள் ஆகியவைகளுள்ளது. திவ்யமாக ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டது; மாயாமயமானது. பிரபஞ்சத்திற்கு தகுதியான கை, கால் முதலிய அவயவங்களுள்ளதுமான அந்த மகா புருஷனுடைய சரீரத்தைப் பார்த்து மிகுந்த சந்தோஷத்தையும் அடைந்தார். பின்னும் ஒருகால் தமோ குணமுள்ள மது கைடபன் என்ற அசுரர்கள் வேதங்களை அபகரித்தார்கள். அந்த சமயத்தில் நீர் ஹயக்ரீவராக அவதரித்து,அசுரனால் கொண்டு போகப்பட்ட வேதங்களைத் திருப்பிக் கொடுத்து ப்ரஹ்மதேவரை அனுக்கிரகித்தீர். சத்துவமே உமக்கு பிரியமான சரீரமென்று சொல்லுகிறார்கள். ஓ மகா புருஷ! மனிதனாகவும், திர்யக் ஜாதியாகவும், மகரிஷியாகவும், தேவனாகவும்,மத்ஸ்யமாகவும் நீர் அவதரித்து லோகங்களைக் காப்பாற்றுகிறீர். உலகத்திற்கு விரோதிகளான அசத்துக்களை நாசஞ் செய்கிறீர். யுக–தர்மத்தைச் சம்ரட்சிக்கிறீர். ஆனால் கலியுகத்தில் அம்மாதிரிய அவதாரங்கள் இல்லாததினால் மறைந்திருக்கிறீர். அதனால் திரியுகரென்று உமக்குப் பெயருண்டாயிற்று. ஓ வைகுண்டத்திற்கு அதிபதியாக இருப்பவரே! பல வகையான தோஷமுள்ளவரும், வெளியிருக்கும் விஷயங்களில் பற்றுதலுள்ளதும், போஷிக்க முடியாததும்,

சந்தோஷம், துக்கம், பயம் பவகையான ஆசை ஆகிய இவைகளால் பீடிக்கப்பட்டதுமான என் மனது உம்முடைய கதையைக் கேட்க விரும்பவில்லை. மனத்தால் உம்முடைய உண்மையை எப்படி விசாரிப்பேன்? ஓ நாசமற்றவரே! என்னுடைய நாக்கு, ஆண்குறி, தோல், வயிறு, காது, சபலமான மூக்கு, கர்மேந்திரியங்கள் ஆகிய இவைகள் தனித்தனி விஷயங்களில் என்னை இழுத்துக் கொண்டு செல்லுகின்றன. அது அநேக ஸ்திரீகளை விவாஹம் செய்து கொண்ட மனிதனை அந்த ஸ்த்ரீகள் கஷ்டப்படுத்துவதுப்போல் இருக்கிறது. இம்மாதிரியான கர்மத்திற்கு வசப்பட்டு சம்சாரமாகிய வைதரணீ நதியில் விழுந்து ஜனனம், மரணம், வியாதி ஆகிய இவைகளில் மிகவும் பயந்தவனும் தான் பிறர் என்ற பேதபுத்தியுள்ளவனும், விரோதம், சிநேகம் இவைகளுள்ளவனும், மூடனுமாகிய என்னைக் கிருபா திருஷ்டியால் அனுக்கிரகித்துக் காப்பாற்றவேண்டும். ஓ தீனபந்துவே! உம்முடைய பக்தர்களைச் சேவிப்பவர்களான எங்களைச் சம்சாரமாகிய வைதரணீ நதியைத் தாண்டும்படி செய்வதில் உமக்கென்ன பிரயாசம்? உம்முடைய பக்தர்களை ஆசிரயிப்பதாலேயே சம்சாரம் நிவர்த்தியாகின்றதென்று தாத்பரியம்) மேலும், நான் உம்முடைய சரிதத்தை கானம் செய்வதாகிய அமிருதத்தில் மூழ்கிய சித்தமுள்ளவனாக இருப்பதால் இந்தச் சம்சாரத்திலிருந்து பயப்படேன். ஆனால் உம்மிடத்தில் பக்தி செய்யாமல் இந்திரிய சுகத்திற்காகக் கஷ்டப்படும் மூடர்களைப் பற்றி துக்கிக்கிறேன். (மூடர்களுக்கும் மோட்சம் கொடுக்க வேண்டுமென்று தாத்பர்யம்). ஓ தேவ! முனிவர்கள் ஏகாந்தமான இடத்திலிருந்து கர்மத்தை விடாதவர்களாகித் தவஞ்செய்கிறார்கள்.

அப்படிப்பட்ட முனிவர்களை விட்டு நான் ஒருவன் தனியே மோட்சத்தை அடைய இஷ்டப்படவில்லை. உம்மைக் காட்டிலும் சரணம் எனக்கு வேறொருவரும் இல்லை. என்னை அனுக்ரகிப்பது மாத்திரம் போதாது. உம்மை தவிர எனக்கு வேறு கதியும் இல்லை. தினவினால் கைகளுக்கு துக்கம் ஏற்படுவதுபோல் மிகவும் அற்பமாக காம சுகமான துக்கத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. அந்தக் காம சுகத்தை தைரியமுள்ள வித்வான் ஜயிப்பான். மேலும் மௌன விரதம், சாஸ்திரம், தவம், அத்தியயனம், தனக்குரிய தர்மம், ஏகாந்தத்தில் வசிப்பது, ஜபம், சமாதி ஆகிய இவைகள் பெரும்பாலும் மோட்ச சாதனங்கள். இந்திரியங்களை ஜயித்தவர்களுக்கு மேற்காட்டியவைகள் ஜீவனோபாயங்களாகின்றன. தர்மமுள்ளவர்களுக்கு ஜீவனத்திற்கு உபயோகப்படுமோ இல்லையோ வென்று சந்தேகிக்க கூடியவைகள் (பக்தியால் தான் தத்துவ ஞானத்தை அடையவேண்டும்) விதையும் முளையும் போல் பிரவாக நித்தியங்களான காரிய காரண ரூபங்களால் சரீரங்கள் உமக்கு இருப்பதாக வேதத்தால் சொல்லப்பட்டிருக்கிறது. வேறு சரீரம் உமக்கில்லை. மறைந்திருக்கும் அக்கினியைக் கடைந்து எடுத்துக் கொள்வது போல பக்தர்கள் மேற்காட்டிய காரிய ஸ்வரூபியாக உம்மைப் பார்க்கிறார்கள். பின்னும் வாயு, அக்னி, பூமி, ஆகாசம், ஜலம் தன்மாத்திரைகள், பிராணன், இந்திரியங்கள், இருதயம் சித்தம், அகங்காரம், ஸ்தூலம், சூட்சுமம் ஆகிய இவைகள் யாவும் உம்முடைய ஸ்வரூபமேயாகும். மனத்திற்கும், வாக்குக்கும் புலப்படுவது உம்முடைய ஸ்வரூபத்தைவிட வேறில்லை. ஓ தேவ! மனம் குணாபிமானிகளான எல்லாதேவதைகளும் ஜனன மரணமுள்ளவர்கள். (ஜடோபாதிகளா

கையால்) என்பதை வித்துவான்கள் தெரிந்து கொண்டு புத்திக்கு மோககரமான வேதாத்தியயனத்தை விட்டு உம்மையே உபாசிக்கிறார்கள். ஓ மேலானவரே! நமஸ்காரம்,தோத்திரம் பூஜை, சிசுருஷை, உம்முடைய பாதங்களை ஸ்மரிப்பது, கதையைக் கேட்பது ஆகிய ஆறுவகையாக உம்மைச் சேவித்தால் பரமஹம்ஸர்கள் அடையக் கூடிய உம்மிடத்தில் பக்தி உண்டாகும். பக்தியால் மோக்ஷம் கிடைக்கும். ஆனதால் தாஸ்ய யோகம் கிடைக்கும்படி அனுகிரஹிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

51–53. அதனைக் கேட்ட நிர்க்குணராகிய பகவான் கோபமற்றவராகி, பக்தராகிய ப்ரஹ்லாதரை நோக்கி, மிகுந்த பிரியத்துடன், "ஓ அசுர சிரேஷ்ட! ப்ரஹ்லாத! உன்னிடம் மிகுந்த சந்தோஷத்தை அடைந்தேன். உனக்கு க்ஷேமமுண்டாகட்டும். நான் மனிதர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்பவன். உனக்கு இஷ்டமான வரத்தைக் கேட்கலாம். ஓ தீர்க்காயுளுள்ளவனே! என்னுடைய கிருபையை அடையாதவன் என்னைத் தரிசிக்க முடியாது. என்னைத் தரிசித்தவன் தன்னைப் பற்றித் துக்கிக்க மாட்டான். ஆனதால் வித்வான்களும் மிகுந்த அதிருஷ்டமுள்ளவர்களும் ஸ்ரேயஸ்ஸை விரும்பியவர் களுமான சாதுக்கள் ஸகல வரத்தை யளிப்பவனாகிய என்னை மூன்று கரணங்களாலும் உபாஸிக்கிறார்கள்" என்றார்.

54. இவ்வாறு பகவான் சாமானிய ஜனங்கள் விரும்பக்கூடிய வரங்களைக் கொடுப்பதாகச் சொல்லி யும் ப்ரஹ்லாதர் அவைகளை விரும்பவில்லை.

அத்தியாயம்–10

பகவான் பிரகலாதரை அனுக்ரஹித்தது

பக்தியோகத்திற்கு விஷயங்களை விக்னங்கள் என்று ப்ரஹ்லாதர் நினைத்துச் சிரித்துக் கொண்டு பகவானை நோக்கி,"இயற்கையில் காமங்களில் ஆசை கொண்டவனாகிய என்னை வரங்கொடுப்பதாகச் சொல்லி ஏமாற்ற வேண்டாம் நான் காமங்களில் பயந்து வைராக்யத்தை அடைந்து; மோட்சத்தை அடைய விரும்பி உம்மை ஆசரியித்திருக்கிறேன். காமங்கள் ஸம்ஸாரத்திற்கு விதைகள். இருதயத்திற்குப் பந்தங்கள் (உபத்திரவத்தைக் கொடுக்கக் கூடியவைகள்) என்னை நீர் அனுக்ரஹித்தது என்னுடைய மனோபாவத்தைப் பரீக்ஷிப்பதற்காகவே யொழிய வேறில்லை. மேலும் அஞ்ஞானத்தில் மூழ்கினவனைக் காப்பாற்றுபவர் நீர் ஒருவரே. அப்படிப்பட்ட கருணையுள்ள நீர் பக்தனை அனர்த்தத்தில் ஆசைப்படும்படி செய்வீரா ? நீர் ஸகல லோகங்களுக்கும் குருவல்லவா ? எந்த வேலைக்காரன் யஜமானிடமிருந்து தான் செய்த வேலைக்காகப் பலனை விரும்புகிறானோ, அவன் வேலைக்காரனல்ல. எந்தப் பிரபு, தான் யஜமானனாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தால் வேலைக்காரனுக்கு வேண்டியவைகளைக் கொடுக்கிறானோ, அவன் பிரபுவுமல்ல, விஷயத்தில் ஆசையில்லாமல் குணத்தில் ஆசைப்பட்ட வேலைக் காரனே மேலானவன்; அப்படிப்பட்ட யஜமானனே மேலானவன். உம்முடைய பக்தனாகிய நீர் பற்றுதலில் லாதவர்; அரசனுக்கும் சேவகனுக்கும் உள்ள சேவிய சேவக பாவமானது எப்படி ஆசையால் ஏற்படுகிறதோ, அப்படி நம்மிருவர்களுடைய சம்பந்தம் காமத்தால் ஏற்பட்டதல்ல. ஓ ஈச! வரத்தையளிப்பவரே! எனக்கு

இஷ்டமான வரத்தை நீர் கொடுக்கிறதானால் என் மனத்தில் சங்கற்பம் (விஷய ஆசை) உண்டாகாமல் இருக்கும்படி அனுக்ரஹிக்கவேண்டும். அதே மேலான வரம். காமம் எவனுடைய இருதயத்தில் முளைக் கிறதோ (உண்டாகிறதோ) அவனுடைய இந்திரியங்கள், மனது, பிராணன், தேஹம், தைரியம், புத்தி, வெட்கம், காந்தி, தேஜஸ், நல்ல எண்ணம், சத்தியம் ஆகிய இவைகள் நாசமடைகின்றன. ஓ புண்டரீகாக்ஷ! (தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரே) மனிதன் மனத்திலிருந்து ஸகல ஆசைகளையும் எப்பொழுது ஒழித்துவிடுகிறானோ அப்போது பகவானாக ஆகிறான். மகாத்மாவும், புருஷரும், ஹரியும், அற்புத சிம்மஸ்வரூபியும். பரப்ரஹ்மமுமான உம்மை நமஸ்கரிக் கின்றேன்!" என்றார்.

12–15. அதனைக் கேட்ட பகவான் ப்ரஹ்லாதரை நோக்கி, "என்னிடத்தில் அனன்யமாகப் பக்திசெய்யும் உன்னை போன்ற பக்தர்கள் காமங்களை விரும்பமாட் டார்கள் ஆனாலும் இந்த மன்வந்தரம் முழுவதையும் அசுரர்களுக்கு அதிபதியாக இருந்து என்னையே மனத்தில் தியானித்து, என்னுடைய கதைகளையே சொல்லி கொண்டு போகங்களை அனுபவி. ஸகல பூதங்களிடத்திலும் வசிக்கும் ஒருவராகிய என்னைக் கர்மங்களைச் செய்து சந்தோஷப்படுத்து கர்மங்களை என்னிடத்தில் சமர்ப்பிப்பதனால் அந்தக் கர்மமானது உனக்குக் கெடுதியைச் செய்கிறதில்லை. பிராரப்த கர்மத்தின் பலனை அனுபவிப்பதாலும் புண்ணியத்தைச் செய்வதால் பாபங்களையும் நிவர்த்தித்துக் கொண்டு, தேவர்களால் செய்யப்படும் கீர்த்தியை லோகத்தில் பரவச் செய்து ஸகல பந்தங்களற்றவனாகிச் சரீரத்தை

விட்டு என்னை அடையப் போகிறாய். எவன் உன்னால் செய்யப்பட்ட இந்த ஸ்தோத்திரத்தைப் படிக்கிறானோ. உன்னையும் என்னையும் ஸ்மரிக்கிறானோ அவன் கர்மத்தால் கட்டப்படமாட்டான்" என்றார்.

16–18. அதனைக்கேட்ட ப்ரஹ்லாதர் பகவானை நோக்கி, "வரத்தைக் கொடுப்பவர்களுக்குட் சிறந்தவரே! மகேசுவர! அவித்வானாகிய என்னுடைய பிதாவாகிய ஹிரண்யகசிபு ஸகல லோகங்களுக்குக்குருவும், பிரபுவும், ஈசுவரனும் தேஜோரூபியுமான உம்மிடம் பொறாமை யுள்ளவனாகி நிந்தித்தானல்லவா? தன்னுடைய ஸஹோதரனைக் கொன்றவர் என்று உம்மிடத்திலும், அப்படிப்பட்ட உம்மை நான் சேவிப்பதால் என்னி டத்திலும் துவேஷ முள்ளவனாயிருந்தான். ஆனாலும் தீனர்களிடத்தில் பிரீதியுள்ள நீர், கிருபையுள்ள பார்வையால அவனை அனுக்ரஹித்து அந்தப் பாபத் திலிருந்து சுத்தனாகும்படி செய்யவேண்டும். இந்த வரத்தை கொடுக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

19–24. அதனைக் கேட்ட பகவான் ப்ரஹ்லாதரை நோக்கி, "ஓ சாதுவே! குலத்தைப் பரிசுத்தப்படுத்து கிறவனான நீ இந்தக் குலத்தில் ஜனித்தபடியால் உன்னுடைய பிதா இருபத்தொரு தலைமுறைகளுடன் சுத்தனானான். மேலும் சாந்தர்களும், சமமாகப் பார்ப்பவர்களும், பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப் பட்ட ஆசாரமுள்ளவர்களுமான என்னுடைய பக்தர்கள் எந்தத் தேசத்தில் எந்தக் குலத்தில் ஜனிக்கிறார்களோ அது மிகவும் நீசமானாலும் சுத்தமாகிவிடும். ஓ தைத்யர்களுக்குட் சிறந்தவனே! என்னிடத்தில் மனத்தைச்

செலுத்தி, விஷயங்களில் ஆசைகளை யொழித்தவர்கள் பலவகையான பூதங்களில் ஒன்றையும் இம்சிக்கமாட்டார்கள். நீ என்னுடைய பக்தர்களுக்குட் சிறந்தவன். ஆனதால் உன்னை அனுசரித்தவர்களும் என்னுடைய பக்தர்களாவர்கள். என்னுடைய சரீர ஸ்பரிசத்தால் உன்னுடைய பிதா சுத்தனானான். அவனுக்குப் பாபமே இல்லை. அவனுக்கு உத்தரக்கிரியைகளைச் செய். தகப்பனாருடைய ராஜ்யத்தை அனுபவிக்கலாம். வைதிகர்களால் சொல்லப்பட்டபடி மனத்தை என்னிடம் செலுத்தி, ஸகல கரணங்களையும் என்னிடமாகச் சமர்பித்து கர்மங்களை யனுஷ்டித்தால் அந்தக் காரியங்கள் கெடுதியை யுண்டுபண்ணுகிறதில்லை" என்று அனுக்ரஹித்தார்.

25–31. அதனைக்கேட்ட ப்ரஹ்லாதரும் பிதாவிற்கு உத்தரக்கிரியைகளைச் செய்து முடித்தார். பின்பு ப்ராஹ்மணர்கள் அவருக்கு ராஜ்யாபிஷேகஞ் செய்தார்கள். மகா பாகவதராகிய அந்தப் ப்ரஹ்லாதர் நன்றாக ராஜ்யபரிபாலனம் செய்துவந்தார். பின்பு ப்ரஹ்மதேவர் சாந்தராகிய நரசிம்ரைப் பார்த்து தேவர்களுடன் சுத்தமான வாரத்தைகளால் பின்வருமாறு துதிக்கலானார்; ஓ தேவர்களுக்கும் தேவரே! எல்லாவற்றிற்கும் அதிபதியே! பிராணிகளுக்கும் அந்தர்யாமியாக இருப்பவரே! எல்லாவற்றிற்கும் முந்தியவரே! இந்த ஹிரண்யகசிபு என்னால் சிருஷ்டிக்கப்பட்ட பூதங்களால் கொல்ல முடியாதவன் என்ற வரத்தை என்னிடமிருந்து பெற்றுக்கொண்டு, தவத்தினாலும், யோக பலத்தாலும் மதித்து, தர்மங்களைக் கெடுத்துவந்தான் அப்படிப்பட்ட லோகத்தை உபத்திரவித்த அசுரனைக் கொன்றீர் பின்னும், அவனுடை புத்திரனும் மிக்க சாதுவும்,

மகா பாகவதனுமாகிய ப்ரஹ்லாதரை அனுக்ரஹித்தீர். இந்த உம்முடைய ஸ்வரூபமானது தியானஞ் செய்பவனை மிருத்யு முதலிய பயத்திலிருந்து காப்பாற்றுகிறது இந்தப் பிரகலாதன் ஸகல வேத ஸ்வரூபியும், ஸகல யாகஸ்வரூபியும், ஸகல தபோரூபியும், ஸகல தீர்த்த மயமான சுத்தருமாகிய உம்மை அடைந்து அக்னியை அடைந்த ஸுவர்ணம் போல் சுத்தனானான்" என்றார்.

32–36. அதனைக்கேட்ட பகவான் ப்ரஹ்மதேவரை நோக்கி, "ஓ தாமரை மலரிலிருந்து உண்டானவரே! குரூர ஸ்வபாவமுள்ளவர்களுக்கு இம்மாதிரியான வரத்தை இனி கொடுக்கவேண்டாம். அது சர்ப்பத்திற்குப் பாலைக் கொடுப்பது போலிருக்கிறது" என்று சொல்லி, பிரம்ம தேவரால் பூஜிக்கப்பட்டு அந்தர்த்தானத்தை அடைந்தார். பின்பு பகவானுடைய அம்சமாகிய ப்ரஹ்லாதர் பரம சிவன், ப்ரஹ்மதேவர், மற்ற தேவர்கள் ஆகிய இவர்களைப் பூஜித்து நமஸ்கரித்தார். அதன்பின் ப்ரஹ்மதேவர் சுக்ராசாரியார் முதலியவர்களுடைய அனுமதியால் மகரிஷிகளுடன் ப்ரஹ்லாதரைத் தைத்யர்களுக்கும். தானவர்களுக்கும் அதிபதியாகச் செய்தார். இப்படி ப்ரஹ்லாதரால் பூஜிக்கப்பட்ட ப்ரஹ்மா முதலிய தேவர்கள் அவரைச் சிலாகித்து ஆசீர்வதித்து, தங்களிருப்பிடஞ் சென்றார்கள்.

37–57. விஷ்ணுவின் பார்ஷதர்கள் ப்ராஹ்மண சாபத்தால் அசுர ஜன்மத்தை அடைந்து, விரோத புத்தியால் பகவானை மனத்தில் வைத்து அவரால் கொல்லப்பட்டார்கள். பின்னுமவர்கள் கும்பகர்ணன், ராவணன் என்ற ராக்ஷஸர்களாகப் பிறந்தார்கள். பகவான் ராமனாக அவதரித்து அவர்களை நிக்ரஹித்தார்.

அவர்கள் ராமனுடைய பாணங்களால் அடிக்கப்பட்டு அவரையே தியானித்துச் சரீரத்தை விட்டார்கள். அவர்களே சிசுபாலன், தந்தவக்திரன் என்ற பெயருடன் திரும்பவும் பிறந்தார்கள். அவர்கள் பகவானிடத்தில் விரோத புத்தி வைத்து, நீர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே மகா புருஷனை அடைந்தார்கள். அப்படியே ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் விரோத புத்தியுள்ள அரசர்கள் பகவானுடைய தாரதம்மியத்தை அடைந்திருக்கிறார்கள். புழுவானது குளவியைத் தியானித்துத் தானும் அதுவாக ஆகிறதில்லையா? பாகவதர்கள் பகவானிடத்தில் மிகுந்த பக்திசெய்து பகவானை அடைவது போலச் சிசுபாலன் முதலிய அரசர்களும் பேத புத்தியால் ஈசுவரனை அடைந்தார்கள். ஓ தர்மபுத்திரரே! சிசுபாலனை பற்றி உம்மால் கேட்கப் பட்ட விஷயத்தைச் சொன்னேன். இந்த உபாக்கியானத்தில் பிராமணர்களேயே தெய்வமாகக் கொண்டவரும் மகாத்மாவுமான ஸ்ரீ கிருஷ்ணனுடைய அவதார கதை ஹிரண்யாட்சன், ஹிரண்யகசிபு இவர்களுடைய வதம், மகா பாகவதராகிய ப்ரஹ்லாதருடைய சரிதம், பக்தி, ஞானம் வைராக்கியம், பகவானுடைய தத்துவம், ஸிருஷ்டி, ஸ்திதி, லயம் ஆகிய இவைகளுக்கும் அதிபதியான பகவானுடைய சரிதம், தேவர்கள், அசுரர்கள் ஆகிய இவர்களுடைய ஸ்தானத்தின் மாறுதல், பகவானை அடையக்கூடிய பாகவத தர்மங்கள், ஆத்ம விஷயம் ஆகிய இவைகள் வர்ணிக்கப் பட்டிருப்பதால் இது மிகவும் புண்ணியகரமானது. ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சரிதங்கள் நிறைந்த இந்தக் கதையை எவன் சிரத்தையுடன் உச்சரிக்கிறானோ, அவன் கர்ம பாசத்திலிருந்து நிவர்த்தி அடைவான். மேலும் எவன் நரசிம்ஹமமாக அவதரித்த ஆதி

புருஷனுடைய சரீரத்தையும், ஹிரண்யகசிபுவின் வதத்தையும், சாதுக்களுக்குட் சிறந்தவராகிய ப்ரஹ்லாதருடைய புண்ணியமான சரித்தத்தையும் பக்தியுடன் படிக்கிறானோ அவன் நிர்ப்பயமான லோகத்தை அடைகிறான். யோகிகளாலும் அடையமுடியாத பரப்ரஹ்மமானது மனித சரீரத்துடன் உங்களுடைய கிரஹத்தில் வசிப்பதால் நீங்கள் மிக்க பாக்கியசாலிகள் இந்த ஸ்ரீ கிருஷ்ண பகவான் ப்ரஹ்மம்; மகான்களால் தேடக் கூடிய மோட்ச சுகானுபவ ஸ்வரூபம்; அவரே உங்களுக்கு **அம்மான் சேய்** ஆகவும், சுகிருத்தாகவும் வேலை செய்பவராகவும் குருவாகவும் இருக்கிறார். அவருடைய ஸ்வரூபத்தைப் பரமசிவன், ப்ரஹ்மதேவர் முதலியவர்களாலும் இன்னதென்று குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. ஆனதால் மௌனத்தாலும் பக்தியாலும், உபசாரத்தாலும் பூஜிக்கப்பட்டு இந்த ஸ்ரீ கிருஷ்ண பகவான் நம்மிடத்தில் கிருபை செய்யட்டும் மேலும் இவர் மாயாவியாகிய மயனைக் கொண்டு பரமசிவனுடைய கீர்த்தியைப் பரவச் செய்தார்" என்று நாரதர் சொன்னார்.

54. அதனைக் கேட்ட தர்ம புத்திரர் நாரதரை நோக்கி "எந்த காரியத்தில் பரமசிவனுடைய கீர்த்தியானது மயனால் கெடுக்கப்பட்டது? எப்பொழுது அதனை ஸ்ரீ கிருஷ்ணன் விருத்தி செய்தார்? அதனைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

55–73. அதனைக் கேட்ட நாரதர் அரசனை நோக்கி ஸ்ரீ கிருஷ்ணனுடைய சகாயமுள்ளவர்களான தேவர்களால் அசுரர்கள் ஜயிக்கப்பட்டு மாயாவிகளுக்குட் சிறந்தவனாகிய மயனென்பவனைச் சரணமடைந்தார்கள்.

அவன் அசுரர்களுக்காகச் தங்கம், வெள்ளி, எஃகு ஆகிய இவைகளால் மூன்று பட்டணங்களை உண்டு பண்ணினான். அவைகளின் சேர்க்கையும், பிரிவும் பிறரால் அறியமுடியாதவை. அவைகளுடைய சாமக் கிரியைகளும் இன்னது என்று உளஹிக்க முடியாதவை. அந்தப் பட்டணங்களில் அசுரர்கள் வசித்து, கண்ணுக்குப் புலப்படாமல் முந்திய விரோதத்தை நினைத்துக் கொண்டு மூவுலகத்தையும் லோகபாலர்களையும் இம்சித்தார்கள். அப்பொழுது ஸகல லோகங்களும் லோக பாலர்களும் பரமசிவனை சரணமடைந்து, "மாயையால் உண்டுபண்ணப்பட்ட பட்டணங்களில் வசிக்கும் அசுரர்கள் எங்களை உபத்திரவிப்பதால் உம்மைச் சார்ந்தவர்களான எங்களைக்காப்பாற்றும்" என்று வேண்டிக் கொண்டார்கள். அதனைக் கேட்ட பகவான் 'பயப்படாதீர்கள்' என்று அபயப்பிரதானம் செய்து தனுஸில் பாணத்தைப் பூட்டி திரிபுரர்களை உத்தேசித்து அஸ்திரத்தைப் பிரயோகித்தார். சூரிய மண்டலத்திலிருந்து கிரணங்கள் வெளிப்பட்டாற் போல அக்னிபோன்ற பாணங்கள் அந்த அஸ்திரத் திலிருந்து கிளம்பி அந்தப் பட்டணங்களை மறைந்தன. அந்தப் பாணங்களால் அடிக்கப்பட்ட அசுரர்கள் மரணமடைந்தார்கள். பின்பு மகா யோகியான மயன் மரணமடைந்த அசுரர்களை அமிருதக்கிணற்றில் போட்டான். சித்தமான அமிருத ரசத்தின் சம்பந்தத்தால் அவர்கள் பிழைத்து. வஜ்ரம் போன்ற சரீரமுள்ள வர்களாகி மேகத்தைப் பேதிக்கும் மின்னலாகிய அக்னிகள் போல உயரக் கிளம்பினார்கள். அதனைக் கண்ட பரமசிவன் தம்முடைய எண்ணம் நிறை வேறாமல் கவலையை அடைந்திருந்தார். அதனைக் கண்ணுற்ற ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் அதற்கு ஓர்

உபாயஞ் செய்தார். அதாவது ஸ்ரீ மகாவிஷ்ணு பசுவின் ஸ்வரூபத்தைத் தரித்து ப்ரஹ்மதேவர் கன்றாக இருந்து கிணற்றிலிருந்து அமிருதத்தைப் பானஞ் செய்தார்கள். அதனை அசுரர்கள் பார்த்திருந்தாலும் ஸ்ரீ மகா விஷ்ணுவின் மாயையால் மோஹித்துத் தடைசெய்யாம லிருந்தார்கள். பின்பு யோகியாகிய மயனானவன் அமிருத ரசத்தைச் சம்ரட்சிக்கும் காவலாட்களை நோக்கி தெய்வகதியை நினைத்துத் துக்கமற்றவனாகி, "தேவனானாலும் அசுரனானாலும், தனக்காவது பிறருக்காவது இருவர்களுக்குமாவது தெய்வத்தால் ஏற்படுத்தப்பட்டதை மாற்றுவதற்கு முடியாது. ஆனதால் இந்த ஸ்ரீ கிருஷ்ணன் பரமசிவனுக்குத் தமது சக்தி களுடன் ஒத்தாசை செய்கிறார்" என்று சொன்னான். பின்பு பரமசிவன் யுத்தத்தில் தகுந்த முயற்சியுடன் ரதத்தின் மீதேறி, தனுஸில் பாணத்தைப் பூட்டி அபிஜித் என்ற முகூர்த்தத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் தேஜஸால் காப்பாற்றப்பட்டு, திருபுரங்களை எரித்தார் அப்பொழுது ஆகாயத்தில் தேவ துந்துபிகள் முழங்கின. அநேக விமானங்கள் ஆகாயத்தில் வந்தன. தேவர்கள் மஹரிஷிகள், பிதிருக்கள், சித்தர்கள் ஆகிய இவர்கள் 'ஜய' என்ற சப்தத்தைச் சொல்லிப் புஷ்பமாரி பெய்தார்கள்; கானஞ் செய்தார்கள்; அப்ஸரஸ்ஸுக்கள் நர்த்தனஞ் செய்தார்கள் இப்படிப் பரமசிவன் திருபுர சம்ஹாரஞ்செய்து ப்ரஹ்மா முதலியவர்களால் துதிக்கப் பட்டுத் தமது லோகம் சென்றார். ஸகல ஜகத்திற்கும் குருவாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணு தமது மாயையால் பூலோகத்தில் அவதரித்துக் செய்த சரிதங்கள் மஹரிஷி களால் கானஞ் செய்யப்படுகின்றன; லோகத்தைப் பரிசுத்தப்படுத்துகின்றன; வேறு எதனைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

ஸ்ரீ ராம நாம வங்கியின்

முதல் ஸஹஸ்ர கோடி ராம நாம லேகன

யக்ஞம் பூர்த்தியை ஒட்டி

வெளியிட்ட மிகச் சிறப்பான மலர்

கலியுக தர்ம சாஸ்திரம்

பெரிய அளவில் ப்ரசார நோக்கத்துடன்

மிக அதிகமான காப்பிகள்

தயாரிக்கப்பட்டது.

ப்ரஸாதமாக

வழங்கப்படுகிறது.

ஸ்ரீ ராம நாமம் எழுதுவதற்கு நோட்டுகளை இலவஸமாக

வழங்கி பக்தர்கள் மூலம் நாமா எழுதுவிக்கின்ற

வேள்வியை நடத்தி வருகின்ற

ஸ்ரீ ராம நாம வங்கியின் பிரசாரப் பிரிவான

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada



Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்

தமிழ் வசனம்

பாகம் –1

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்கந்தம் 1 அத்தியாயம் 1 முதல்
ஸ்கந்தம் 3 அத்தியாயம் 19 வரை

Released by Maran's Dog, Toronto , Canada

இஞ்சிக்கொல்லை
R. சிவராம சாஸ்திரிகள்
அவர்களால் 1908ல் மொழி
பெயர்க்கப்பட்டது.

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ராம நாம வங்கியின் ப்ராசாரப் பிரதாப் பிரிவு
ராம மந்திரம் –2, விளாங்கம் தெரு,
சென்னை – 600 033. ☎: 24893736

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்
தமிழ் வசனம்

TITLE	:	SRIMAD BHAGAVATHAM, TAMIL VACHANAM
AUTHOR	:	INZIKOLLAI R. SIVARAMA SASTRIGAL WRITTEN IN 1908
SIZE	:	CROWN OCTAVE
EXTENT	:	2736 PAGES CONSISTING OF SEVEN VOLUMES
PRICE	:	RS.600/ SET
FIRST EDITION	:	1996
SECOND EDITION	:	2004
THIRD EDITION	:	2007

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பகவன் நாம போதேந்திர
ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின்
பாத கமலங்களிலும்

பரஞ்ஜர் மஹாத்மா
ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள்
அவர்களின்
பாத கமலங்களிலும்

சமர்ப்பணம்

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்

புத்தக விலைப்பட்டியல்...

அரியதும், பழையதுமான க்ரந்தங்களையும், நாமறிந்தாராத விஷயங்களையும் வெளியிடும் பணியில்...

ரூ.	
1500	ஸ்ரீமத் பாகவதம் ப்ரதி பத அர்த்தம்
700	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் மூலம் தமிழில் பெரிய எழுத்தில்
600	ஸ்ரீமத் பாகவதம் வசனம் 7 பாகம்
550	ஸ்ரீமத் பாகவதம் மூலம் தமிழில் பெரிய எழுத்தில்
450	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் மூலம் தமிழில்
350	ஸ்ரீ துளஸீ ராமாயணம் மூலமும் வசனமும்
300	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் வசனம்
300	ஞானேஸ்வரி
250	ஸ்ரீமத் பாகவதம் மூலம் தமிழில்
200	நாராயணீயம் ப்ரதிபத அர்த்தம்
200	ஸ்ரீகிருஷ்ண சைதன்யர்
200	கர்க ஸம்ஹிதை
200	நந்த நந்தன்
150	உஜ்ஜ்வல நீலமணி
140	பார்த்தஸாரதி
100	த்வாரிகாதீசன்
100	பகவான் வாசுதேவன்
100	திருப்பாவை உபன்யாஸம்
100	ஸ்ரீபகவன் நாம ரஸோதயம்
100	பக்த துகாராம் திவ்யசரித்திரம்
100	ஸ்ரீ மத் பாகவத கதாம்ருதம்
60	கீதகோவிந்தம் ப்ரதிபத அர்த்தம்
60	ஸ்ரீ ஞானேஸ்வர் திவ்ய சரித்திரம்
60	ஸ்துதி மணிகள்
60	ஸ்ரீமத் பகவத் கீதை ப்ரதி பத அர்த்தம்
60	ராதே/பருந்தாவனராதே!!
60	பாதுகா ஸஹஸ்ரம் -பாசுரங்கள்
60	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்-பாசுரங்கள்
50	நாராயணீயம் -பாசுரங்கள்
50	ஹரி ஸங்கீர்த்தன மாலா
50	தர்ம சாஸ்திரம்
50	ஸ்ரீமத் பாகவத ஸங்க்ரஹம்
40	கோவிந்தபுரம் பஜன பத்ததி
40	தக்ஷிண ஸம்ப்ரதாய பஜன மாலா
40	ஸ்ரீமத் ராமாயணம் ஸங்க்ரஹம்
40	ஏகநாதர் திவ்ய சரித்திரம்
40	ஸ்ரீ ருக்மிணி கல்யாணம்-பாசுரங்கள்
35	தக்ஷிண ஸம்ப்ரதாய கல்யாண மாலா
35	அபங்க முத்தாரம்
35	நாம ஸங்கீர்த்தனாவளி
30	வ்ரஜ ரஸம்
30	ப்ரேம சாம்ராஜ்யம்
30	பக்தி
	பஞ்சகீதை
	ஸ்ரீ க்ருஷ்ண கர்ணாம்ருத ரஸாயனம்
	ஸ்ரீ க்ருஷ்ண கீதாம்ருதம்
	சிவானந்த லஹரீ - ப்ரதிபத அர்த்தம்
	ஸௌந்தர்ய லஹரீ - ப்ரதிபத அர்த்தம்
	ஐயாவாளின் நாம அனுபவங்கள்
	ஸ்ரீ சுந்தர காண்டம்



25	ஸ்ரீ ராம மாதுரீ
25	பக்த ரத்தினங்கள்
25	பாண்டுரங்க லீலைகள் -பாசுரங்கள்
25	கிருஷ்ண கர்ணாம்ருதம் -பாசுரங்கள்
25	தியாகராஜர் அனுபவங்கள்
25	ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் கீர்த்தனைகள்
25	ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம்
25	பக்தை மீரா
25	பக்த ஸாம்ராஜ்யம்
25	நாம ஸாம்ராஜ்யம்
25	ஸ்ரீ லலிதா பஜனை கீர்த்தனைகள்
25	மனாசே ஸ்லோக
25	பகவன் நாம ரஸாயனம்
20	ஸ்ரீ பாத ஸப்ததி
20	ஸ்ரீ யாக்ஞவல்கியர் திவ்ய சரித்திரம்
20	ஸ்ரீ துளஸி தாஸர் திவ்ய சரித்திரம்
20	ஸௌந்தர்யலஹரி - தமிழ் பாடல்கள்
15	ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம்
15	குருவாயூரப்பன் அந்தாதி-பாசுரங்கள்
15	தயாசதகம்-பாசுரங்கள்
15	ஸம்க்ஷேப ராமாயணம் -பாசுரங்கள்
15	ஸ்ரீ ஆண்டாள் கல்யாணம்
15	ஸ்ரீ ராதா மாதவ - பஜனை பத்ததி
15	நவராத்திரி கீர்த்தனைகள்
15	பக்தி ஸந்தேஹ த்வாந்த பாஸ்கரம்
15	ஸ்ரீ ப்ரும்மேந்திராள் திவ்ய சரித்திரம்
15	நந்தன் சரித்திரக் கீர்த்தனைகள்
15	ஸ்ரீ ப்ரும்மேந்திராள் கீர்த்தனைகள்
15	ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் திவ்ய சரித்திரம்
15	திருமாலை
15	**Divine History**
	(Hindi, English, Malayalam, Telugu, Tamil)
	Sri Bodendral
	Sri Sridhara Ayyaval
	Sri Sadguru Swamigal
10	கீத கோவிந்தம்
10	ஹரி பாட்
10	ஸ்ரீ ஸமர்த்த ராமதாஸர் திவ்ய சரித்திரம்
7	திருவரங்கன் திருவந்தாதி- பாசுரங்கள்
7	பரமார்த்த ஸ்துதி- பாசுரங்கள்
7	நாமாயணம்
6	ஸ்ரீ போதேந்திராள் கீர்த்தனைகள்
6	ஸ்ரீ போதேந்திராள் நாம வந்தனம்
6	நாமப்ரபாவம்
5	ஸ்ரீபோதேந்திராள் அஷ்டோத்திரம்
5	ஸ்ரீ ராம நாம மஹிமை
5	அபங்கப்ரவாஹம்
4	ஸ்ருதிகளிலிருந்து ராமநாமத்தின் பெருமை
3	புருஷ ஸூக்தம்
3	ஸ்ரீ ஸூக்தம்

Released by Maran's Dog, Toronto , Canada

100 Nos விநியோகவெளியீடு

75	ஸ்ரீ ராம நாமாவளி
75	ஸ்ரீ நவீன ராமாயணம்
75	ஸாதுக்கள் மஹிமை
75	ப்ராத ஸ்மரண ஸ்தோத்திரம்
100	நெய்க்குடத்தை
100	பாசுரப்படி ராமாயணம்
100	ஸ்ரீ ஸப்த ரிஷி ராமாயணம்
100	ஸ்ரீ சந்திர ஸேகராஷ்டகம்
100	ஸ்ரீபோதேந்திராள்சரித்திரசுருக்கம்

Sanskrit Prasadhams

தேவீ நாமஸ்தோத்திர மஞ்ஜரீ
ஸ்ரீ வாஞ்சிய க்ஷேத்ர மாஹாத்ம்யம்
ஸ்ரீ நடராஜ நாம மஞ்ஜரீ
ஸ்ரீ நடராஜ ஸ்தவ மஞ்ஜரீ
ஸ்ரீ பாலா ஸபர்யா
ஸ்ரீசிவ நாம மஞ்ஜரீ
ஸ்துதி த்ரயீ
ஸ்ரீ மீனாக்ஷீ ஸ்தோத்ரமஞ்ஜரீ
ஸ்ரீஸ்கந்த ஸ்தவ மஞ்ஜரீ
ஸ்ரீதத்தாத்ரேய ஸ்துதிமஞ்ஜரீ
ஸ்ரீமத்த்யார்ஜுனக்ஷேத்ர மாஹாத்ம்யம்
ஸ்ரீவிஷ்ணுஸ்துதிமஞ்ஜரீ
ஆத்ட நாதஸ்துதிமஞ்ஜரீ
ஸ்ரீபகவத்ஸ்துதிமஞ்ஜரீ
அனுமன் நாற்பது
கோபால விம்ஸதி
ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்
ஸ்ரீமத் ராமாயணரஹஸ்யம்
கலியுக தர்ம சாஸ்திரம்
பூஜா கல்பம்

Released by Maran's Dog, Toronto , Canada

கோஸம்ரக்ஷணம்
தினசரிராமாயணம்
தினசரிபாகவதம்
ஆசாரமும் ஆஹாரமும்
பூஜா ராமாயணம்
ஸ்ரீ வாசுதேவ ப்ரம்மம் திவ்ய சரித்திரம்
மன அமைதி வேண்டுமா?
ஜய கல்யாண ஸ்ரீக்தி லஹரீ
நாமவைபவம்
நாமச் சிறப்பு
நாமவிசேஷம்
ஸ்ரீபகவன் நாம மகிமை
ஆயிரம் நாமக் குறிப்புகள்
போதேந்த்ர அமுதம்
ஸ்ரீ ஆலங்குடி சுவாமிகள் திவ்ய சரித்திரம்
ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு ஸஹஸ்ர நாமம்
ஸ்ரீ த்யாகப்ரும்ம அஷ்டோத்திரம்
100 / 100
ஸ்ரீ கீதா ஸாரம் -பாசுரங்கள்
நாரத பக்திசூத்ரம்
நித்ய ஸ்லோக பத்ததி

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவத ரகசியம்

1000 பக்கங்கள்

இந்த நூல் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ ராம நாம வங்கியின்
நாம உதவிகளுக்கு
நாமத்தை ஆஸ்ரயிப்பவர்களுக்கு
ப்ரஸாதமாக வழங்கப்படுகிறது.

ஸ்ரீமத் பாகவதம்

மூலம் தமிழில்

904
பக்கங்கள்
விலை
ரூ.250/-

ஸ்ரீமத் பாகவத விஷயம்

கர்க ஸம்ஹிதை
நந்த நந்தன்
பார்த்தஸாரதி
பகவான் வாசுதேவன்
த்வாரிகாதீசன்
ஸ்துதி மணிகள்
ஸ்ரீமத் பாகவத ஸங்க்ரஹம்
தினசரி பாகவதம்
ஸ்ரீமத் பாகவத கதாம்ருதம்

ஸ்ரீமத் பாகவதம்

பெரிய எழுத்தில்
மூலம் தமிழில்

1064 பக்கங்கள்
விலை ரூ. 550/-

ஸ்ரீமத் பாகவதம்
ப்ரதி பத அர்த்தம்

மூல ஸ்லோகங்கள் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும், பதப்பிரிப்பும்
அர்த்தமும் தமிழில்,
7 பாகங்கள் - 6224பக்கங்கள்
விலை ரூ. 1500/

ஸ்ரீ பகவன் நாம்மா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

ஸ்ரீமத் ராமாயண விஷயம்

ராமாயண ஸங்க்ரஹம்
(SANSKRIT)
தினசரி ராமாயணம்
சுந்தரகாண்டம்

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

மூலம் தமிழில்

899 பக்கங்கள்
விலை ரூ. 450/-

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

தமிழ் வசனம்

7 பாகங்கள்
1322 பக்கங்கள்
விலை ரூ. 300/

ஸ்ரீமத் ராமாயண ரஹஸ்யம்

616 பக்கங்கள்

இந்த நூல் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ ராம நாம வங்கியின்
நாம உதவிகளுக்கு
நாமத்தை
ஆஸ்ரயிப்பவர்களுக்கு
ப்ரஸாதமாக வழங்கப்படுகிறது.

ஸ்ரீ துளஸீ ராமாயணம்

தமிழில் மூலமும் உரையும்

விலை ரூ. 350/-

764 பக்கங்கள்
8 வண்ணப்படங்கள் அடங்கியது

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

நந்தலாவின் எழுத்துக்களில்

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமஹாபாரதம்

ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்

இராமாயண ரஹஸ்யம்

பகவான் வாசுதேவன்

நந்த நந்தன்

பார்த்தஸாரதி

த்வாரிகாதீசன்

கர்கஸம்ஹிதை

உஜ்வல நீலமணி

ஸ்ரீ ஞானேஸ்வர்

பக்த துகாராம்

ஏகநாதர்

ராதே!பருந்தாவன ராதே!!

வ்ரஜ ரஸம்

ப்ரேம சாம்ராஜ்யம்

பக்தி

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீ பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு :-

முன்னுரை

பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் கலிகாலத்தில் பிறக்கப் போகும் ஜனங்களின் துக்கம், மனக்கவலை, அறியாமை இவற்றைப் போக்கி, அவர்களுக்கு பரம அனுக்ரஹம் செய்யவே, தன் திவ்ய லீலை களை விவரிக்கும் ஸ்ரீ பாகவதத்தின் மூலம், ஸாதுக் களின் காதுக்கு அம்ருதமாயுள்ள தன் புகழை உலகில் பரவச் செய்தார். இந்த அம்ருதத்தை காதுகள் ஆகிய பாத்திரத்தில் வாங்கி அனுபவிக்கும் மனிதன், பக்திக்கும் முக்திக்கும் இடையூறாக இருக்கும் கர்மவாஸனையாகின்ற பந்தம் நீங்கப்பெற்று அவற்றை அடைகிறான் என்று ஸ்ரீபாகவதம் 9வது ஸ்கந்தம் 24வது அத்யாயம் 61,62 ஸ்லோகங்களில் கூறப்பட்டிருக்கிறது. மேலும், ஸ்ரீபாகவதத்தில் கலியில் கலுஷிதமான ஜீவன்களுக்கு ஏற்ற பகவன் நாம கீர்த்தனம், பகவானிடம் உறவு கொண்டுள்ள ஸாதுக்களின் ஸங்கம், க்ருஷ்ண பக்தியை வளர்க்கும் கதாச்ரவணம் இவற்றின் மஹிமையே கூறப்பட்டு இருக்கிறது.

வியாசர் ஸகல ஸாஸ்திரங்களையும் வெளியிட்டும், மன நிம்மதியின்றி எல்லா ஸாஸ்த்ரங்களின் ஸாரமாக பகவத் குண கீர்த்தன பிரதானமான ஸ்ரீபாகவதத்தை வெளியிட்டார். அதன் பின்னரே அவர் நிம்மதியடைந்தார். இதில் வேதோபனிஷத் ஸாரமே நிரம்பியுள்ளது.

Released by Maran's Dog, Toronto , Canada

பாகவதமே பகவான். பகவானே பாகவதம். ஸ்ரீக்ருஷ்ணன் தன் அவதார கார்யம் முடிந்தவுடன் பாகவதத்திலே நுழைந்து விட்டான். பாகவதத்தில் நுழைந்த பகவானை அதை படிப்பதாலேயே பார்க்க முடியும்.

இந்த பாகவதாம்ருதம் யாவருக்கும் எளிதில் கிடைக்கும்படி ஸ்ரீ பாகவத்தின் பாவ அர்த்ததுடன் கூடிய இந்த தமிழாக்கத்தை வெளியிட்டிருக் கிறோம். யாவரும் படித்து அனுபவித்து ஸ்ரீகிருஷ்ண க்ருபைக்கு பாத்திரர்கள் ஆகும்படி பிரார்த்திக் கிறோம்.

நாவுண்டு நீயுண்டு நாமம் தரித்து ஒத
பாவுண்டு தெஞ்சே பயமுண்டோ
பூவுண்டு வண்டு உறங்கும் சோலை மதில் அரங்கத்தே
உலகையுண்டு உறங்குவான் ஒருவனுண்டு.

இங்ஙணம்

"ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்"

ஸ்ரீமத் பாகவதம்-தமிழ் வசனம்

பாகம்–1

பொருளடக்கம்

		பக்கம்
முன்னுரை		1
	ஸ்கந்தம் –1	
1.	சௌனக ப்ரச்னம்	67
2.	ஸூதர் ப்ரத்யுத்தரம்	84
3.	பகவதவதாரங்கள்	94
4.	வியாசர் கவலை அடைந்தது	105
5.	வியாசருக்கு நாரதர் உபதேசம்	111
6.	நாரதருடைய முன் ஜன்மம்	123
7.	அர்ஜுனன் அச்வஸ்த்தாமாவை சிக்ஷித்தது	131
8.	பகவானை குந்தி ஸ்தோத்திரம் செய்தது	144
9.	பீஷ்மர் தர்மம் உரைத்தது	154
10.	ஸ்ரீகிருஷ்ணன் துவாரகை சென்றது	165
11.	துவாரகா வாசிகள் பகவானை உபசரித்தது	172
12.	பரீக்ஷித்தின் உற்பத்தி	181
13.	த்ருதராஷ்ட்ரர் வெளியில் சென்றது	188
14.	தர்மபுத்திரருக்கு நேர்ந்த அபசகுனங்கள்	199
15.	தர்மபுத்திரர் பரலோகம் சென்றது	206
16.	பரீக்ஷித் தர்மத்தைத் கண்டது	216
17.	பரீக்ஷித் மஹாராஜன் கலியை நிக்ரஹித்தது	223
18.	பரீக்ஷித்துக்கு நேர்ந்த ப்ராஹ்மண சாபம்	230
19.	கங்கை கரைக்கு சுகர் வந்தது	238

ஸ்கந்தம் –2

		பக்கம்
1.	விராட்புருஷனுடைய அவயவங்கள்	245
2.	பகவானிடத்தில் மனத்தை செலுத்தும் வகை	256
3.	பகவத் குணங்களின் மேன்மை	269
4.	பரீக்ஷித் ஜகத் சிருஷ்டியைப் பற்றி கேட்டது	274
5.	ஜகத்சிருஷ்டி	279
6.	விராட் புருஷனுடைய விபூதிகள்	288
7.	பகவானுடைய லீலாவதாரம்	297
8.	பரீக்ஷித்தின் கேள்வி	313
9.	சுகருடைய மறுமொழி	318
10.	தத்துவங்களின் உற்பத்தி உரைத்தது	328

ஸ்கந்தம்–3

1.	விதுரருக்கும் உத்தவருக்கும் சம்வாதம்	338
2.	உத்தவர் ஸ்ரீ கிருஷ்ண சரிதத்தை வர்ணித்தது	348
3.	ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதங்கள்.	355
4.	விதுரர் மைத்ரேயரைச் சந்தித்தது	360
5.	மைத்ரேயருக்கும் விதுரருக்கும் ஸம்வாதம்	366
6.	விராட் ஸிருஷ்டி	375
7.	விதுரருடைய பிரச்னங்கள்	381
8.	ப்ரஹ்மதேவருடைய உற்பத்தி	388
9.	ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ப்ரஹ்மதேவர் ஸ்தோத்திரஞ்	395
10.	பத்து வகையான சர்க்கங்கள்	405
11.	காலத்தின் ஸ்வரூபம்	410
12.	ஸனகர் முதலியவர்களுடைய ஸிருஷ்டி	417
13.	வராஹாவதாரம்	424
14.	திதி தேவி கர்ப்பத்தை அடைந்தது	433
15.	ஜய விஜயர்களுடைய சாபம்	442
16.	ஜய விஜயர்களுக்கு அனுக்கிரகம்	455
17.	திதிக்குப் புத்திரர்கள் பிறந்தது	462
18.	யக்ஞவராஹருக்கும் ஹிரண்யாக்ஷனுக்கும் யுத்தம்	467
19.	ஹிரண்யாக்ஷவதம்	472

ஸ்ரீமத் பாகவதம்

முன்னுரை

இது ஸ்ரீ பகவானுடைய அற்புத லீலைகளையும் அனந்த கல்யாண குணங்களையும் முக்கியமாய் வர்ணிக்கும் சுகருக்கு இது வ்யாச மஹர்ஷியால் சுகருக் கு உபதேசிக்கப் பட்டது, ஸ்ரீ சுகர் பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சொன்னார், அப்பொழுது சூதர் அவ்விட மிருந்து இக்கதையை ஸ்ரீ சுகபகவானின் அனுமதியின் பேரில் தெரிந்து கொண்டார். பிறகு அவர் நைமி சாரண்யத்தில் வசிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்குச் சொன்னார்.

ஸ்ரீமத் பாகவதம் என்பது யாது?

ஸ்ரீமத் பாகவதம் என்ற புராணம் எல்லா வற்றிலும் மேலானது (1) ஸகல உபநிஷத்துக் களால் நிரூபிக்கப்படும் பரமாத்மா இதனால் வர்ணிக்கப்பட்டிருக்கிறார். (2) வ்யாஸ மஹர்ஷியானவர் விஸ்தாரமான வேதங்களை பிரித்தும் பாரதம் முதலிய இதிஹாசங்களைச் செய்தும் தனது மனது ப்ரஸன்னமாகாததால் பகவானுடைய குணங்களையே முக்கியமாக வர்ணிக்க வேண்டும் என்று இதைச் செய்தார். (3) கீதா, ஸஹஸ்ரநாம, ராமாயண, இந்த சப்தங்கள் தனியே உச்சரிக்கப்பட்டாலும், அவை

முறையே பகவத்கீதை, விஷ்ணு சகஸ்ரநாமம், ஸ்ரீவால்மீகி ராமாயணம் என்பவற்றையே குறிப்பிடுதல் போல பாகவதம் என்ற சப்தமும் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் குணத்தைச் சொல்லும் விஷ்ணு பாகவதத்தையே காட்டுகிறது.(4) மேலும் இது ஸகல லோகங்களாலும் நமஸ்கரிக்கப்பட்ட பாதங்கள் உள்ள ஸ்ரீசுகமஹர்ஷியாலும் அத்யயனம் செய்யப்பட்டது. (5) இது மோக்ஷத்தை விரும்பிய பரீக்ஷித்து மஹாராஜனுக்கு சுகமஹர்ஷியால் மோக்ஷசாஸ்திரம் என்று உபதேசிக்கப் பட்டுள்ளது.

ஆட்சேபம்: "ஹேமாத்ரி என்னும் பெயருள்ள ஒரு ப்ரபுவினுடைய அரண்மனை வித்வான்களின் முக்கியரான போப தேவர் என்ற பண்டிதர் இருந்தார். அவர் கோபால பக்தனாக இருந்த அந்தப் ப்ரபுவை ஸந்தோஷப்படுத்துவதற்காக அவருடைய நியமனப்படி இந்தப் புராணத்தை எழுதி அரசனிடம் கொடுத்தார். அரசன் அதை முழுதும் மற்ற பண்டிதர்களுடன் பரிசோதித்து அதில் உள்ள பதச்சேர்க்கை முதலியவைகளால் ஆச்சர்யப்பட்டு அதனை உலகில் பரவச்செய்ய விரும்பி அதனை அனேகம் பிரதிகள் எழுதுவித்து பண்டிதர்களைக் கொண்டு வ்யாக்யானமும் செய்து பரவச்செய்தார்" என்ற ஒரு கதையை பெரியோர்களால் சொல்லக்கேட்டு இருக்கிறோம்; அப்படியிருக்க வ்யாஸர் செய்தார் என்பது பொருந்துமா ? என்றால்':–

ஸமாதானம்: இந்த விஷ்ணுபாகவதம் போப தேவர் செய்ததன்று. ஹேமாத்ரி என்ற ப்ரபு ஒரு

நாள் சபையில் வித்வான்களை நோக்கி," இரண்டு முகூர்த்தங்களில் பாகவதத்தின் அத்யாயச் சுருக்கங்களை ச்லோகமாகச் சொல்ல உங்களில் யார் சக்தியுள்ளவர்" என்று கேட்டார். அப் பொழுது போபதேவர் என்ற பண்டிதர் நாளைய தினம் சொல்கிறேன் என்றார். மறுநாள் பாகவதாத்யாயஸாரம் என்ற கதானு க்ரமணிகையை செய்து அந்த ப்ரபுவிடம் கொடுத்தார்.

அதன் முதல் ச்லோகம் பின்வருமாறு:" வித்வானாகிற போபதேவரால் மந்திரியாகிய ஹேமாத்ரியின் திருப்திக்காக இதில் ஸ்ரீமத் பாகவதத்தின் அத்யாய ஸாரம் நிரூபிக்கப் படுகின்றது." இதனால் ப்ரபு திருப்தி அடையா மலிருந்து அவருடைய நியமனப்படி பக்தி முக்தாபலம், பக்திலஹரி என்ற இரண்டு பக்தி நிரந்தங்களைச் செய்தார். அதனால் ப்ரபு பண்டிதரை மிகவும் கௌரவப்படுத்தினார்.

தவிர போபதேவர் செய்த க்ரந்தங்களின் விவரமானது பக்திமுத்தாபலம் என்னும் க்ரந்த த்தின் வியாக்யானத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதாவது ஸாஸ்திரங்களை படித்த வர்களுக்குள் சிறந்தவரான போப தேவரால் வ்யாகரணவிஷயமாக 10 க்ரந்தங்களும் மனிதர் களின் வைத்ய விஷயமாக 15 க்ரந்தங்களும் 16 வ்யாக்யானங்களும் ஸாஹித்ய விஷயமாக 3 க்ரந் தங்களும் செய்யப்பட்டன. அவைகள் யாவும் ஸல்லோராலும் கொண்டாடத்தக்கவைகளே. தவிரவும் இந்த போபதேவர் ஸ்ரீமத் பாகவத

க்ரந்தத்தை 22 தடவை படித்தார் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அவரால் வேத வ்யாஸ ஸ்தோத்திரமும் ஸ்லோகமாக செய்யப் பட்டு இருக்கிறது. மேற்காட்டிய காரணங் களால் முன்னே சொன்ன ஆக்ஷேபத்துக்கு இடமே இல்லை. தவிரவும் ஸ்ரீமத் பாகவதத்தின் முதல் ச்லோகத்தின் வ்யாக்யானத்தில் ஸ்ரீதரா சார்யாள் அவர்கள் "பாகவதம் என்பது வேறு என்று சந்தேகப்படக்கூடாது" என்பதாகச் சொல்லி இருக்கிறார்.

ஆட்சேபம்: ஸ்ரீமத் பாகவதம் வ்யாசரால் செய்யப்பட்டது என்பது முற்றிலும் பொருந்தாது. அந்த மஹர்ஷியினால் செய்யப்பட்ட மஹா பாரதம், ஸ்காந்தம், விஷ்ணு புராணம் முதலிய கிரந்தங்கள் எளிதில் படிக்கக்கூடியவை களாகவும் எளிதில் அர்த்தம் செய்து கொள்ள க்கூடியவைகளாகவும் இருக்கின்றன. இந்த பாகவதத்திலோ மேற்காட்டியவைகள் முற்றிலும் மாறிஇருக்கின்றன. ஒருவரால் செய்யப்பட்ட க்ரந்தங்களில் இவ்வளவு மாறுதல்கள் இருக்க நியாயமில்லை. ஆகையால் இதன் கர்த்தா வ்யாஸர் அல்லர் என்பதேயாம்.

சமாதானம்: சொல்லிய ஆக்ஷேபம் சரியானதே. ஆனாலும், ஸ்ரீவ்யாஸ பகவான் ஸ்ரீ நாராயணனுடைய அவதாரம். அவர் வேத–ராசியை ஜனங்கள் அத்யயனம் செய்ய முடியாமல் புத்திக் குறைவுள்ளவர்களாக இருக்கும் காலத்தில் அக்குறையை நீக்கு வதற்காக வேதங்களை நான்கு சாகைகளாகப்

பிரித்தார். அவற்றைப் படிப்பதற்கும் கேட்பதற்கும் அதிகாரம் இல்லாத ஸ்திரீகள், சூத்ரர்கள் இவர்களுக்காக மஹாபாரதம், இதிஹாஸம் முதலியவைகளை எளிதில் அர்த்தமாகும்படி எளிய நடையில் எழுதி வெளியிட்டார். அப்படியே வேதார்த்தத்தை பகவத்கீதை, ப்ரம்ஹஸூத்திரம் இவை களால் வெளியிட்டார். இப்படி மந்தாதிகாரிகளை உத்தேசித்து எளியவைகளைச் செய்தார். உத்தமாதி காரியான வித்வான்களுக்கு உபயோகப்படும்படி ஸகல வேதங்களால் நிரூபிக்கப்படும் பரமாத்மா வை கடினமான சந்தர்ப்பத்தால் வர்ணித்தார். ஆகையால் அதிகாரி பேதத்தால் நடையின் பேதம் ஏற்பட்டதே ஒழிய கர்த்தாவின் பேதத்தால் ஏற்பட்டதல்ல.

ரகுவம்சம், மேகசந்தேசம், நளோதயம், ஹரிச்சந்திரோபாக்யானம், நளோபாக்யானம் இவைகள் மஹா கவியான காளிதாஸரால் செய்ய ப்பட்ட கிரந்தங்கள். இவைகளின் பதங்கள், அவைகளின் சேர்க்கை, விருத்தி, பாகம் முதலியவைகள் வெவ்வேறாக காணப்படுகின்றன, அதனால் இவைகளை காளிதாஸர் எழுதவில்லை எனச் சொல்லக்கூடுமா?

மேலும், ஆத்மபோதம், ஸௌந்தர்யலஹரி இவைகள் ஸ்ரீமத் பகவத்பாதர்களால் செய்யப் பட்டவைகளானாலும், ஒன்றுக்கொன்று மேற்காட்டிய விஷயங்களில் மாறுபட்டுள்ளவைகளாக இருக்கின்றன. ஆகையால் ஸர்வக்ஞர்களாயும் பகவானுடைய அவதார பூதராயுமான வ்யாஸ மஹர்ஷியினுடைய வாக்கானது கங்காப் பிரவாஹம்

போலத் தடையற்றது.

ஆட்சேபம்: பாகவதம் என்பது தேவீபாகவதமே ஒழிய வ்யாஸ மஹர்ஷியால் செய்யப்பட்டது அல்ல. ஏனென்றால் "ஸ்ரீமத் பாகவதத்தை எழுதி ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்தில் வைத்துத் தானஞ்செய்பவருக்கு மோக்ஷம் கிடைக்கும்" மத்ஸ்ய புராணம். இதே விஷயத்தை ஸ்ரீ தரா சார்யாள் முதலியவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பற்றி கொஞ்சம் யோசிப்போம். ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்துக்கும் ஸ்ரீமத் பாகவதத் திற்கும் என்ன சம்பந்தம். ஸ்ரீமகாவிஷ்ணுவுக்கு கருடன் வாகனம் என்று பிரசித்தமே தவிர, சிங்கம் வாகனம் என்பது ஓர் இடத்திலும் சொல்லப்படவில்லை. வேறு வாகனமிருப்பதாகவும் தெரியவில்லை; பகவானே நரஸிம்ஹாவதாரஞ் செய்தவராகையால் ஸிம்மம் என்று சொல்லி இருக்கிறதென்று யோசிப்போமானால் பரமாத் மாவின் ஸ்வரூபமாகிய ஸிம்மத்தின் மீது அவரை நினைப்பிக்கும் க்ரந்தத்தை வைத்து தானஞ்செய்வது நியாயமாகுமா? ஆகையால் தேவீபாகவதம் என்று சொல்வதே உக்தமம். ஸிம்மம் ஸ்ரீதேவியின் வாகனமாகையால், அதில் வைத்துத் தானஞ் செய்வது மோக்ஷத்தைக் கொடுக்கும் என்பது பொருந்தும்.

ஸமாதானம்: முன்னே காட்டியுள்ள ஆக்ஷேபம் முற்றிலும் பொருந்தாது. ஸகல ஸ்வரூபியான ஸ்ரீ பகவானுக்கு, ஆஞ்சநேயர், குதிரை, யானை இவைகள் வாகனமாக இருக்கின்றன. இப்பொழுது தேவாலயங்களில் உத்ஸவ காலத்தில்

மேற்காட்டிய வாகனங்களில் பகவானை அலங்கரிப்பது வழக்கமாக இருந்துவருகிறது. "விஷ்ணுவின் வாகனங்களைச் சொல்கிறோம்: முதல்நாள் ஹம்ஸம், இரண்டாம் நாள் ஸிம்மம், முன்றாம் நாள் ஆஞ்சநேயர், நான்காம் நாள் ஆதிசேஷன், ஐந்தாம் நாள் கருடன், ஆறாம் நாள் யானை, ஏழாம் நாள் ரதம், எட்டாம் நாள் குதிரை, ஒன்பதாம் நாள் பல்லக்கு, பத்தாம் நாள் புஷ்பகம்" வைகானஸ தந்திரம், – தெய்வீக யக்ஞாதிகாரம், உத்ஸவ படலம்."பகவான் உத்ஸவ தினங்களில் ஹம்ஸம், ஸிம்மம், ஹனுமான், ஆதிசேஷன், கருடன், யானை, ரதம், குதிரை, பல்லக்கு, புஷ்ப மண்டபம் ஆகிய வாஹனங்களில் முறையே வீற்றிருந்து அர்ச்சாவதாரத்தின் மஹிமையை காண்பிக்கிறார்; அதிகாரிகை இதே விஷயம் வைசம்பாயன காரிகையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் பகவானுடைய அனந்த கல்யாண குணங்களை வர்ணித்து இருக்கும் ஸ்ரீமத் பாகவதம் ஸ்ரீமந் நாராயண ஸ்வரூபமே தவிர வேறில்லை. அதை ஸிம்ஹாஸனத்தில் வைத்து தானம் செய்வதில் கொஞ்சமேனும் ந்யாய விரோதமில்லை; 'ரிஷியின் அம்சம் இல்லாதவன் காவியம் எழுதமாட்டான்; விஷ்ணுவின் அம்சம் இல்லாதவன் அரசனாகிறதில்லை' என்றபடி அரசன், விஷ்ணுவின் அம்சம் உள்ள வனாகையால் ஸிம்ஹாஸனத்துக்குரியவனாகிறான். அப்படி இருக்க பகவானுக்கு ஸிம்ஹாஸனம் உண்டென்று ஏன் சொல்லக்கூடாது? ஹேமாத்ரி முதலிய க்ரந்தங்களில் தானப் பிரகரணத்தில் ரோகிகளின் வ்யாதி நிவர்த்திக்காக, அந்தந்த வ்யாதிக்குத்

தக்கபடி ஒரே தேவதையை அநேக வாகனங்களில் பூஜித்து தானம்செய்யும்படி சொல்லப் பட்டிருக்கிறது. அப்படிப்போல் ஸம்ஸார வ்யாதியால் உபத்திரவம் அடைந்தவனுக்கு அதன் நிவர்த்திக்காக இம்மாதிரியான தானம் பிராய சித்தமாகச் சொல்லப்பட்டது. தேவீ பாகவதம் முதலிய சக்தியை நிரூபிக்கும் க்ரந்தங்களில் தேவிக்கு ஸிம்மவாஹனம் என்று சொல்லப்பட்டு இருந்தாலும் ஸிம்மம் ஸ்ரீதேவியின் வாகனமே ஒழிய பகவானுடையதல்ல, என்று சொல்ல முடியாது. ஏனென்றால் ஸ்ரீதேவி மஹாவிஷ்ணுக்கு பத்னியாகையால் தான் பர்த்தாவினுடைய வாகனங்களில் தனதிஷ்டப்படி ஒருவேளை கருடன்மீதும், ஒருகால் ஸிம்மத்தின்மீதும் பின்னர் யானைமீதும் ஏறி ஸஞ்சரிக்கலாமே ஒழிய அவருக்குச் சொந்தமான வாகனம் இன்னதென்று கல்பிப்பது பொருந்தாது. வீடு, தோட்டம், வயல், பணம், வேலைக்காரர்கள், வேலைக்காரிகள், வாகனம், பசு, ஆபரணம், கடன் இவைகளில் பர்த்தாவுக்கு அதிகாரமே ஒழிய பத்னிக்கு அதிகாரம் இல்லையென்று மனுஸ்மிருதி முதலிய வைகள் சொல்லுகின்றன. ஸ்திரீ ஒருபொழுதும் ஸ்வாதந்திரயத்தையடையத்தக்கவளல்ல. புருஷன் உடைய வாகனங்களில் அவர்களுடைய பத்னி ஏறினதால் அவைகள் அவர்களுடையதாகி விடுமா? அப்படி உலகத்தில் வழக்கமும் இல்லை.

ஆட்சேபம்: ஸ்ரீ வ்யாஸ மஹர்ஷியானவர் இந்தப் பாகவத சாஸ்திரம் எல்லா உபநிஷத்துக்களுக்கு ஸமமானது என்று காட்டுவதற்காகவே ஸகல

வேதார்த்தங்களைச் ஸ்லோக ரூபமாகச் செய்தார். சில இடங்களில் வேதத்தில் உள்ளபதச் சேர்க்கையே காட்டி இருக்கிறார். வேதத்தின் அர்த்தம் அறியாமலேயே சம்பிரதாயப்படி படிப்பதால் மேலான பலன் கிடைப்பது போல் வேதத்திற்குச் சமமான ஸ்ரீமத்பாகவத கிரந்தத்தை தானஞ் செய்வதாலும் மோக்ஷம் கிடைக்கும் என்று சொல்லப்பட்டது. இதனால் புத்தகதானத்திற்கே இவ்வளவு பலன் கிடைக்குமாகில், குருமுகமாக சாஸ்த்ரமுறைப்படி இதைத் தெரிந்துகொண்டவனுக்கு முக்தி கிடைப்பது நிச்சயம் என்று பொருள். மோக்ஷத்தை விரும்பியவர்களும் இடையூராகிய பாபத்தை நிவர்த்தித்துக் கொள்ள முடியும். அதனால் பாகவத தானத்தால் மோக்ஷம் கிடைக்குமென்று வியாசமஹர்ஷி சொன்னார். "புத்தியள்ளவன் கலியுகத்தில் தானத்தாலேயே பாபத்தை நிவர்த்தித்துக் கொள்ளவேண்டும்"–விஷ்ணு ஸ்மிருதி. "மூவுலகத்திலும் தானத்தைவிட மேலானது ஒன்றுமில்லை. தானத்தால் ஸ்வர்க்கம், லக்ஷ்மி, சத்ருஜயம், வித்யை, ஸ்திரீகள், வ்யாதிநிவர்த்தி ஆகியவைகள் கிடைக்கும். —ஸௌர புராணம். இவ்வுலகத்திலும், பரலோகத்திலும் தானமே முக்கியமான க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது. இதுவே மோக்ஷத்துக்கு ஸாதனம் என்று வேதம் சொல்லுகிறது. ப்ரஹ்ம கைவர்த்த புராணம். க்ருதயுகத்தில் தபஸும், த்ரேதா யுகத்தில் ஞானமும், துவாபர யுகத்தில் யக்ஞமும், கலியுகத்தில் தானமும் க்ஷேமத்தைக் கொடுக்கும் —மனுஸ்மிருதி. ஆகையால் தானமே மேலானது —ச்ருதி. "ஸ்ரீகிருஷ்ண பகவான்,

அர்ஜுனனுடைய வார்த்தையை கேட்டு தர்ம புத்திரரை தமது கையால் தடவிச் சொன்னதாவது, ஓ அரசனே ப்ருஹ்ம ஹத்தியை, கள் குடிப்பது, திருடுவது, ஆசார்ய பத்னியைப் புணர்வது முதலிய பாபங்கள் தானத்தாலேயே நிவர்த்தி யாகின்றன. புத்திரன், பணம், புண்ணியம் முதலியவைகள் தானத்தாலேயே கிடைக்கின்றன —ஸ்காந்தம்.

ஆட்சேபம்: பாகவதத்திற்கு வ்யாக்யானம் செய்த ஸ்ரீதராசார்யார் முதலானவர்கள் முதல் ஸ்லோகத்துக்கு வ்யாக்யானம் செய்யும்பொழுது பாகவதலக்ஷணமாகக் காட்டிய வசனங்கள் பின் வருமாறு கண்டுகொள்க.

எந்தக் க்ரந்தத்தில் காயத்ரி மூலமாக தர்ம விஸ்தாரம் வர்ணிக்கப்பட்டிருக்கிறதோ விருத்ரா ஸுரனின் கதை எதில் இருக்கிறதோ அந்த 18000 க்ரந்தங்களுள்ளதே பாகவத புராணம் என்று சொல்லப்பட்டது. —மத்ஸ்ய புராணம். எதில் ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யை விருத்ராஸுர வதம் 18000 க்ரந்தங்கள் 12 ஸ்கந்தங்கள் ஆகிய இவைகள் இருக்கின்றனவோ எது காயத்ரியால் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறதோ அதை பாகவதம் என்று சொல்லுகிறார்கள் —ஸ்காந்தம். ஓ அம்பரீஷா! ஸம்ஸார பந்தம் நிவர்த்தியாக வேண்டுமானால் சுகரால் சொல்லப்பட்ட பாகவதத்தை பிறர் சொல்லக்கேட்கவேண்டும். தானாகவாவது படிக்க வேண்டும்—பத்மபுராணம். இது ப்ருஹ்ம ஸூத்ரங்களுடைய அர்த்தம்; மஹாபாரதத்தின் உண்மையான அர்த்தம் காயத்ரீ மந்திரத்துக்கு

பாஷ்யம். புராணங்களுடைய ஸாரம் வேதத்தின் அர்த்தங்களால் நிறைந்தது. 12 ஸ்கந்தங்கள் உள்ளது; 100 விச்சேதமுள்ளது, 18000 க்ரந்தங்கள் உள்ளது; பாகவதம் என்ற பெயருள்ளது— கருட புராணம்.

இதில் சொல்லியுள்ள லட்சணங்கள் யாவும் தேவீ பாகவதத்தில் பொருந்தி இருக்கின்றனவே ஒழிய விஷ்ணு பாகவதத்தில் பொருந்தியவைகளாக இல்லை. மேலும் மஹா மாயா ரூபியான சக்தியின் மஹிமையால் மஹாவிஷ்ணு ஹயக்ரீவர். ஆனார். தேவீ பாகவதம் ஸ்கந்தம் 1. அத்யாயம் 5, ஹயக்ரீவபரமாத்மா அகஸ்தியமஹர்ஷிக்கு உபதேசித்த தேவீ விஷயமான க்ரந்தங்களுக்கு ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யையென்று பெயர். அந்த வித்யை விஷ்ணுபாகவதத்திலாவது, மற்ற புராணங்களிலாவது சொல்லப்படாததானாலும், தேவீபாகவதமே பாகவதமென்பதற்கு அர்த்தம்.

ஸமாதானம்: பாகவதம் என்றால் விஷ்ணு பாகவதமென்றே அர்த்தம் கொள்ளவேண்டும். ஹயக்கிரீவ ப்ருஹ்மவித்யை என்றால் ஹயக்ரீவ பரப்ருஹ்மத்துக்கு மற்றவர் சொன்ன வித்தை என்றாவது ஹயக்ரீவர் பிறருக்குச் சொன்ன வித்தை என்றாவது அர்த்தம் செய்யக்கூடாது. ஹயக்ரீவர் பிறரிடம் உபதேசம் பெற்றார் என்றாவது பிறர்க்கு உபதேசித்தார் என்றாவது ஒரு க்ரந்தத்திலும் சொல்லவில்லை. பிரளய காலத்தில் எல்லா வித்தையும் காணாமல் கொண்டு

வந்தார், ஆதலால் ஹயக்கிரீவரால் கொண்டு வரப்பட்ட வித்யை என்றே அர்த்தம் செய்ய வேண்டும். மேலும் ப்ரஹ்ம சப்தத்துக்கு வேதம் என்று அர்த்தம் வைத்துக்கொண்டால் வேத வித்யை என்றும், உண்மை என்று அர்த்தம் கொண்டால் தத்வ ஞானம் என்றும், தபஸ் என்று அர்த்தம் கொண்டால் தபோ வித்யை என்றும், நான்கு முகங்கள் உள்ள ப்ருஹ்மதேவர் என்று அர்த்தங்கொண்டால் ப்ருஹ்மதேவருக்கு உபதேசம் செய்யப்பட்ட ப்ருஹ்ம வித்யை என்றும், ப்ராஹ்மணர்கள் அர்த்தம் செய்யக்கூடிய வித்யை யென்று அர்த்தம் ஏற்படுகிறதே ஒழிய தேவீ விஷயமான வித்யை என்ற அர்த்தம் ஏற்படவில்லை. ஆகையால் ஹயக்ரீவ ப்ருஹ்மவித்யை விஷ்ணு பாகவதத்திலேயே நிரூபிக்கப்பட்டு இருக்கிறது.

ஆட்சேபம்: தேவீ விஷயமான க்ரந்தங்களில் அகஸ்திய மஹர்ஷிக்கு ஹயக்ரீவர் மகாவித்யை உபதேசித்தார் என்று சொல்லி இருப்பது பொருந்துமா ?

ஸமாதானம்: பொருந்தும். ஹயக்ரீவரால் எடுத்து வரப்பட்டவைகளில் அகஸ்திய மஹர்ஷிக்கு உபதேசிக்கப்பட்ட மந்திரங்களும் சேர்ந்தவையாம். பூர்ணிமா திதியில் தானம் செய்யவேண்டும் என்று சொல்லி இருக்கிறது. சிவாலயங்களிலும், விஷ்ணு ஆலயங்களிலும் பஞ்ச பர்வங்களில் பூர்ணிமா திதியில் விசேஷமான ஆராதனம் செய்கிறார்கள். தேவீ ஆலயங்களில் பூர்ணிமா திதியில் யாதொரு விசேஷ ஆராதனமும்

நடப்பதாகத் தெரியவில்லை. மேலும் ஏகாதசி, பூர்ணிமா இந்தத் தினங்களில் ஹயக்ரீவரை ஜபித்தவன் மகானுபாவனாக ஆகிறான். ஹயக்ரீவோபநிஷத் ப்ருஹ்ம ஸூத்திரங்களுடைய அர்த்தமே "பாகவதம்" என்ற கருட புராணத்தில் சொல்லிய லக்ஷணம், தேவீ பாகவதத்தில் கொஞ்சமேனும் இல்லை விஷ்ணு பாகவதத்திலேயே பொருந்தி இருக்கிறது.

ஸ்ரீமத் பாகவத மஹிமை

முன்னொரு காலத்தில் நைமிசாரண்யத்தில் வசிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகள் ஸூதரை நோக்கி கோரமாகிய இக்கலியுகத்தில் பிராணிகள் அதர்மத்தில் ஆசையுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு பக்தி, ஞானம் வைராக்யம் விவேகம் ஆகிய இவைகள் எதனால் உண்டாகும்? எது பலவிதமான ச்ரேயஸ்ஸான தனங்களில் மேலானது? எது சுத்தமானவைகளுக்கும் பரிசுத்தியை உண்டு பண்ணுகிறது? எது ஸ்ரீ கிருஷ்ணனுக்கு மிகவும் பிரியத்தை உண்டு பண்ணக்கூடியது? சிந்தாமணியானது இவ் வுலகத்திய சுகத்தை மட்டும் கொடுக்கும். மகேந்திரன் ஸ்வர்க்க ஸுகத்தை மாத்திரம் கொடுப்பான். ஆச்சார்யர்களுக்கு சந்தோஷ முண்டானால் யோகிகளுக்கும் கிடைக்க அரிய தான வைகுண்ட பதத்தையும் கொடுப் பார்கள். ஆனதால் அதைச் சொல்லவேண்டும் என்று கேட்டார்கள்.

இதைக் கேட்ட ஸூதர் சௌனகரை நோக்கி, உமக்கு இவ்விஷயத்தில் பிரியம் உண்டானதால் எது ஸம்சார தாபத்தை நிவர்த்தி செய்யுமோ, எது ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு சந்தோஷத்தை உண்டு பண்ணுமோ, எது பக்தியை விசேஷமாக வ்ருத்தி செய்கிறதோ, அதனை யோசித்துச் சொல்லுகிறேன். ஜாக்கிரதையாக கேளுங்கள். பரீக்ஷித்து மஹாராஜனுக்கு சுகரால் உபதேசிக் கப்பட்ட ஸ்ரீமத் பாகவத சாஸ்திரமே சித்த சுத்தியை உண்டுபண்ணக்கூடியது; ஜன்மாந்திரத்தில்

புண்ணியம் செய்தவன்தான் பாகவதத்தைக் கேட்பான், படிப்பான். சபையில் பரீக்ஷித்துக்கு சுகர் பாகவத கதையைச் சொல்லும் பொழுது தேவர்கள் அனைவரும் அமிர்த குடத்தை எடுத்துக்கொண்டு வந்து சுகரை நமஸ்கரித்து இந்த அமிர்தத்தை அரசன் புஜிக்கட்டும். நாங்கள் பாகவதமாகிய அமிருதத்தை பானஞ் செய்கிறோம். நீர் அமிர்த குடத்தை அரசனுக்கு கொடுத்துவிட்டு கதாமிருதத்தை எங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். அதனைக் கேட்டு சமீபத்தில் இருக்கும் சக்ரவர்த்தியானவர், ரத்னத்துக்கும், காசமணிக்கும் எவ்வளவு பேதமோ அவ்வளவு தாரதம்யம் பகவத் கதைக்கும் அமிருதத்துக் குமுள்ளது என்று யோசித்து தேவர்களை நோக்கி சிரித்தார். சுகரும், தேவர்கள் பகவத் பக்தி இல்லாதவர்கள் என்று நினைத்து கதாம்ருதத்தை தேவர்களுக்குக் கொடுக்க சம்மதிக்கவில்லை. ஆகையால் பாகவதக் கதையானது தேவர்களுக்கும் அரிதாயிற்று. பின்பு பரீக்ஷித்து மகாராஜனுக்கு ஸ்ரீமத் பாகவதக் கதையால் மோக்ஷம் கிடைத்ததைப் பார்த்து ப்ருஹ்மதேவர் ஆச்சரியம் அடைந்து ஸத்ய லோகத்தில் தராசைக் கட்டி மோக்ஷ சாதனங்கள் எல்லாவற்றையும் நிறுத்தார். ஸ்ரீமத் பாகவதமே பாரமுள்ளதாக இருந்தது. மற்றவை இலகுவாகவிருந்தன. அதனைக் கண்டு ஸகல மஹர்ஷிகளும் மிகவும் ஆச்சரியப்பட்டு ஸ்ரீமத் பாகவதத்தை பகவானுடைய ஸ்வரூபமாக நினைத்தார்கள். அதனைப் படிப்பதாலும், கேட்பதாலும் உடனே மோக்ஷம் கிடைக்கும். இந்த

க்ரந்தத்தை ஏழு தினங்களில் முழுமையும் விதிப்படி கேட்டால் ஸகல பலன்களும் ஸித்திக்கின்றன. இதனை ஸனகர் முதலான யோகிகள் நாரதருக்கு முன் காலத்தில் உபதேசித்தார். தேவர்ஷியாகிய நாரதரும் ப்ருஹ்மத்தை வர்ணிக்கும் இந்தக் க்ரந்தத்தை கேட்டார். ஏழு நாட்களில் இதைக் கேட்க வேண்டிய முறையும் நாரதருக்கு அவர்களால் உபதேசிக்கப்பட்டது, என்று சொன்னார்.

இதைக் கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்கும் முறையைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற விருப்பம் நாரதருக்கு உண்டான காரணம் என்ன? அவர் பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை நன்றாக அறிந்தவர் அல்லவா? மேலும் ஸனகர் முதலிய ப்ருஹ்ம புத்திரர்களோடு நாரதருக்கு ஸம்வாதம் எவ்விடத்தில் நேர்ந்தது? இதற்குப் ப்ரத்யுத்தரம் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

அதனைக் கேட்டு ஸூதர் பின்வருமாறு விடை சொல்லலானார். "ஹே சௌனகரே சுகர் என்னை அந்தரங்க சிஷ்யனாக நினைத்து எனக்கு எதனை உபதேசித்தாரோ அதனை உமக்கு சொல்லுகிறேன். முன் ஒரு காலத்தில் விசாலா நகரத்தில் நான்கு மஹரிஷிகள் ஸாது ஸங்கம் செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் சேர்ந்தார்கள். அப்பொழுது அவ்விடத்தில் தெய்வச்செயலால் தேவர்ஷியாகிய நாரதரும் வந்தார். அவர்கள் நாரதரைக்கண்டு,

ஓ ப்ருஹ்மபுத்திரரே! நீர் ஒரு விஷயத்திலும் ஆசை இல்லாதவர்: அப்படி இருந்தும் மிக்க வேகமாக எவ்விடம் செல்லுகிறீர்? உம்முடைய முகம் வாடினதாகக் காணப்படுகிறது, அதற்குக் காரணம் என்ன? ஜனங்கள் பொருள் செலவழித்த காலத்தில் எப்படி வருத்தப்படுவார்களோ அப்படி சூன்ய சித்தராக இருக்கிறீர். நீர் இப்படி இருப்பது உசிதமல்ல. ஆதலால், அதன் காரணத்தைச் சொல்ல வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

அதைக் கேட்டு நாரதர் விடை சொன்னதாவது:– "நான் பூமியையே எல்லாவற்றிலும் மேலானது என்று நினைத்து, புஷ்கரம், பிரயாகை, காசி, கோதாவரி, ஹரிக்ஷேத்திரம், குருக்ஷேத்திரம், ஸ்ரீரங்கம், இராமேச்வரம் முதலிய தீர்த்தங்கள் சென்று எங்கும் அலைந்தேன். அப்படியும் மனதுக்கு சந்தோஷம் ஏற்படவில்லை. இந்தப் பூமி முழுவதையும் கலி அதர்மத்துடன் வியாபித்துக் கொண்டுவிட்டான். அதனால் சத்யம், தபஸ், சௌசம், தயை, கொடுப்பது ஆகிய இவை ஓர் இடத்திலாவது இருப்பதாகக் காணப்படவில்லை. எல்லா ஜனங்களும் தங்கள் தங்கள் வயிறு நிரம்ப புஜிப்பதில் மாத்திரம் ஆசையுள்ள வர்களாகவும், கபடமாகப் பேசும் தன்மை உள்ளவர் களாகவும், பாஷண்டர் களிடத்தில் (வேதவிரோதிகள்) ப்ரீதி உள்ளவர் களாகவும் இருக்கிறார்கள். ஒவ்வொரு வீடுகளிலும் ஸ்திரீகளே பிரபுவாயிருந்து அதிகாரம் செய் கிறார்கள். மைத்துனனே புத்தி சொல்லுகிறான். எல்லோரும் பெண்களை விலைக்குவிற்கிறார்கள்.

தம்பதிகள் ஒருவருக்கொருவர் கலகஞ்செய்து கொள் கிறார்கள். ஆசிரமங்கள், புண்ய தீர்த்தங்கள், நதிகள், தேவாலயங்கள் ஆகிய இவைகள் பெரும்பாலும் துஷ்டர்களால் கெடுக்கப்பட்டன. யோகி, சித்தன், ஞானி நல்ல கர்மாவைச் செய்பவன் ஆகிய இவர்கள் ஒருவரும் காணப்படவில்லை. நல்ல காரியங்கள் யாவும் கலியாகிய அக்னியால் எரிந்து சாம்பலாக்கப்பட்டன. ஒவ்வொரு தேசத்திலும் ஜனங்கள் அன்ன விக்ரயம் செய்கிறார்கள். ப்ராஹ்மணர்கள் வேதத்தை விற்கிறார்கள். ஸ்திரீகள் பெரும்பாலும் விபசாரம் செய்கிறார்கள். இம்மாதிரியான கலியின் விளையாட்டை எங்கும் பார்த்துக் கொண்டு நான் யமுனையின் கரைக்கு வந்தேன். அதுதான் ஸ்ரீ கிருஷ்ண பகவான் விளையாடின இடம். அவ்விடத்தில் ஒரு அற்புதத்தைக் கண்டேன். அதாவது யௌவன வயதுடைய ஒரு பெண் மனவருத்தத்துடன் அவ்விடம் இருந்தார். அவளுடைய பக்கத்தில் இரண்டு வயது சென்றவர்கள் பிரக்ஞை இல்லாதவர்களாக பெருமூச்சு விட்டுக்கொண்டு படுத்திருக்கக் கண்டேன். அந்தப் பெண் அவர்களுக்குப் பணிவிடை செய்தும், அழுது கொண்டும், தன்னைக் காப்பாற்றுகிறவர் யார் என்று பத்து திக்குகளையும் பார்த்துக் கொண்டு இருந்தாள். வெகு தூரத்திலேயே அவர்களைப் பார்த்து மிகுந்த ஆச்சரியம் அடைந்து உண்மையை தெரிந்து கொள்ள விரும்பி அவர்களுடைய சமீபம் சென்றேன். அந்தப் பெண் என்னை நோக்கி, "ஓ சாதுவே க்ஷணகாலம் தாங்கள் இவ்விடம் இருக்கவேண்டும்.

என்னுடைய கவலையை தீர்க்க வேண்டும். தங்களைப்போல் உள்ள சாதுக்களை தரிசித்தால் ஸகல பாபங்களும் நிவர்த்தியாகும் என்பதில் ஸந்தேகமில்லை. தங்களுடைய தரிசனம் வரும் க்ஷேமத்தைக் காட்டுகின்றது. தங்களுடன் ஸம்வாதம் செய்தால் பலவகையிலும் கவலை தீர்ந்துவிடும்." என்று தெரிவித்துக் கொண்டாள்.

அதைக்கேட்டு அந்தப் பெண்ணை நோக்கி "நீ யார்? இவ்விருவர்களும் யார்? ஓ தேவி! நீ கவலைப்படும் காரணம் என்ன? இவைகளை விஸ்தாரமாகச் சொல்" என்று கேட்டேன்.

அதனைக் கேட்டு அந்தப்பெண் சொன்னதாவது: எனக்கு பக்தி என்று பெயர். இவ்விருவரும் என்னுடைய புத்திரர்கள். ஒருவனுக்கு ஞானம் என்று பெயர். மற்றவனுக்கு வைராக்யம் எனப் பெயர். இவ்விருவர்களும் காலமஹிமையால் கிழத்தனத்தை யடைந்தார்கள். இந்தப் பெண்கள் கங்கை முதலிய நதிகள். என்னை சேவிப் பதற்காக வந்தவர்கள், மேலும் நான் தங்களிட த்தில் என் விஷயத்தை விஸ்தாரமாக தெரிவிக்க வேண்டியவளாக இருக்கிறேன். அதாவது நான் திராவிட (தமிழ்) தேசத்தில் பிறந்தவள். கர்நாடக தேசத்திலும், மஹாராஷ்ட்ர தேசத்தின் சில பாகங்களிலேயும் வளர்ந்தவள். கூர்ஜர தேசத்தில் கிழத்தனத்தை அடைந்தேன். மிக்க பாவியான கலியின் சாபத்தால் பாஷண்டர்கள் என்னுடைய அவயங்களை துண்டித்துவிட்டார்கள். ஆகையால் தேகபலம் குறைந்து புத்திரர்களுடன் மிகுந்த சிரமத்தை

அடைந்து இந்த பிருந்தாவனம் சேர்ந்தேன். இவ்விடம் வந்தவுடன் அழகான சரீரம் உள்ள யௌவனமுடையவளாக ஆனேன். இதோ படுத்துக்கொண்டு இருக்கும் இவ்விரு குழந்தைகளும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கிழத்தனமுள்ளவர்களாக இருப்பதால் அவர்களைப் பார்த்து நானும் துக்கிக்கிறேன். உலகத்தில் தாய் வயது சென்றவளாகவும் புத்திரர்கள் யௌவனமுள்ளவர்களாகவும் இருப்பது பழக்கம். இப்பொழுது புத்திரர்கள் வயது சென்றவர்களாகவும், புத்திரர்களுடைய தாயாகிய நான் யுவதியாகவும் இருக்கக் காரணம் யாது? நாங்கள் நால்வரும் எப்பொழுதும் சேர்ந்தே சஞ்சரித்துக் கொண்டிருக்கிறோம். தாங்கள் யோகிகளுக்குள் சிறந்தவர்களாகையால் இவ்விஷயத்தை அறிந்து சொல்ல வல்லமை உள்ளவராவீர். ஆதலால் என்னிடம் கிருபை வைத்து என்னுடைய சந்தேகத்தைத் தீர்க்கவேண்டும்'' என்று கேட்டாள்.

அதைக் கேட்ட நான் அந்தப் பெண்ணை நோக்கி "ஓ பால்யப்பெண்ணே நான் எல்லா விஷயத்தையும் ஞானக் கண்ணால் அறிந்து சொல்கிறேன். நீ கவலைப்பட வேண்டாம் ஸ்ரீ நாராயணன் உனக்கு க்ஷேமத்தைச் செய்வார் என்று சமாதானம் செய்து ஒரு க்ஷணநேரத்தில் அவ்விஷயங்களைத் தெரிந்துகொண்டு, பின்னும் அந்தப் பெண்ணைப் பார்த்து பின்வருமாறு சொன்னேன். பெண்ணே இந்தக்கலியுகம் மிகவும் மோசமானது. அதனால் நல்லொழுக்கம், யோகமார்க்கம், தவம் ஆகிய இவைகள்

கெடுக்கப்பட்டன. எல்லா ஜனங்களும் அசுரர்கள் போல் கெட்ட காரியத்தையே செய்கிறார்கள். ஸாதுக்கள் துக்கப்படுகிறார்கள். அஸாதுக்கள் சந்தோஷிக்கிறார்கள். இந்தக்காலத்தில் எவன் நல்ல காரியத்தை அனுஷ்டிக்கிறானோ அவனே தீரன் என்று சொல்லப் படுகின்றான். இந்தப் பூமி ஒவ்வொரு வருஷங்களிலும் முறையே ஸ்பர்சிக்க தகாதவர்களும் பார்க்கத்தகாதவர்களும் ஆதிசேஷனுக்குச் சுமையாகிவிட்டாள். நல்ல கர்மங்கள் ஒரிடத்திலும் காணப்படவில்லை. உன்னையும் உன்னுடைய புத்திரர்களையும் இக்காலத்தில் ஒருவரும் பார்க்கிறதில்லை. ஜனங்கள் விஷயங்களில் ஆசைக்கொண்டு காரியம் அகாரியம் என்ற பகுத்தறிவு இல்லாதவர்களாகி உன்னை ஆதரிக்காமல் உபேக்ஷித்தபடியால் நீ இளைத்திருக்கிறாய். இந்த பிருந்தாவனத்தின் மஹிமையால் நீ யுவதி ஆனாய். பக்தியானது இவ்விடத்தில் இல்லாததினால் இவர்களுக்கு கிழத்தனம் போகவில்லை என்று மறுமொழி சொன்னேன். அப்போது அந்தப்பெண் மிக்க பாபியான கலியை பரீக்ஷித்து மகாராஜன் ஏன் உலகத்தில் வைத்திருந்தார்? கலியுகம் வந்தவுடன் முன்னிருந்த ஸகல வஸ்துக்களின் ஸாரங்களும் எங்கே போயின? மிகுந்த தயையுள்ள ஸ்ரீ மஹாவிஷ்ணுவும் ஏன் பார்த்திருந்தார்? என்று கேட்டாள். அதைக்கேட்டு நான் பின்வருமாறு சொன்னேன்: ஸ்ரீ கிருஷ்ணபகவான் பூமியில் இருந்து வைகுண்டம் சென்ற தினத்திலேயே உலகத்தில் கலி வந்துவிட்டான். அப்பொழுது அரசனாக இருந்த பரீக்ஷித்து திக்விஜயம்

செய்துவரும் காலத்தில் வழியில் கலியைக் கண்டார் அவனும் அவரை சரணம் அடைந்தான்.

அவர் தவம், யோகம், சமாதி ஆகிய இவைகளால் அடையக்கூடாத உத்தமமான பிரயோசனம் பகவானுடைய நாமங்களை பஜனை பண்ணுவதனால் இக்கலியில் எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது என்று நினைத்து கலியுகத்தில் பிறக்கும் மனிதர்களுடைய ஸௌக்கியத்தின் பொருட்டே கலியைக் கொல்லவில்லை. கெட்ட காரியங்களைச் செய்வதனால் வஸ்துக்களுடைய ஸாரம் போய்விட்டது. ப்ராஹ்மணர்கள் ஒவ்வொரு வீட்டிலும் அரிசிக்கு ஆசைப்பட்டு பாகவத கதையைச் சொல்ல ஆரம்பித்ததால் கதையின் ஸாரம் போய்விட்டது. மேலும் ப்ராஹ்மணர்கள் மிக்க கோரமான பல காரியங்களையும் செய்து நாஸ்திகர்களாக (பரலோகத்தில் சிரத்தை இல்லாதவர்களாக) ஒவ்வொரு தீர்த்தக் கரைகளில் வஸிப்பதால் தீர்த்தத்தின் ஸாரம் போய்விட்டது. காமம், கோபம், லோப விஷயங்களில் ஆசை ஆகிய இவைகளால் கலங்கிய மனம் உள்ளவர்கள் தவம் செய்வதால் தவத்தின் ஸாரம் போய்விட்டது. மனிதர்கள் மனதை அடக்காமல் உலோபம் உம்பம் இவைகளை அடைந்து பாஷண்ட மதத்தை ஆசிரயித்தும் தியான யோகத்தின் ஸாரம் போய்விட்டது. வித்வான்களும் மோக்ஷத்தையடைய முயற்சியாமல் எருமைகள் போல் ஸ்திரீகளுடன் ரமித்து புத்திரர்களை உண்டு பண்ணுவதிலேயே சாமர்த்தியத்தை அடைந்திருக்கிறார்கள். பெரியோர் களுடைய சம்பிரதாயப்படியுள்ள விஷ்ணுபக்தி

ஒரிடத்திலும் இல்லை. இம்மாதிரி ஒவ்வோரிட ங்களிலும் வஸ்துக்களின் ஸாரம் போய் விட்டது. ஆனால் இது யுகத்தின் தர்மம். எவர் மீது குற்றஞ் சொல்லக்கூடும்? அதனால் தானே சமீபத்தில் இருக்கும் புண்டரீ காக்ஷன் (தாமரைக்கண்ணன்) இதை சகித்துக் கொண்டி ருக்கிறார் என்று சொன்னேன். இதனைக்கேட்டு அந்த பெண்ணானவள் "ஓ தேவ ரிஷியே! நீர் மிகவும் மேலானவர் என்னுடைய அதிர்ஷ்ட வசத்தால் நீர் இவ்விடம் வந்தீர். ஸாதுக் களுடைய தரிசனம் ஸகல சித்திகளையும் கொடுக்கும். தங்கள் உபதேசத்தால் ப்ரஹ்லாதர் என்பவர் மாயையைக் கடந்து ஆத்ம ஸ்வரூபத்தை அடைந்தவராக விளங்குகிறார். மேலும் தங்களுடைய கிருபையால் துருவர் என்பவர் சாஸ்வதமாகிய (துருவ) பதத்தை அடைந்தார். ஆகையால் ஸகல க்ஷேமத்தைக் கொடுப்பவரும் ப்ருஹ்மதேவரின் புத்திரருமாகிய தங்களை நமஸ்கரிக்கிறேன். என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள். அதனைக்கேட்டு நான் பின்வருமாறு சொன்னேன். "ஓ சிறு பெண்ணே! ஏன் கவலைப்படுகிறாய்? ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரை மலர்போன்ற பாதங்களை இடைவிடாது தியானஞ்செய்: துக்கம் ஒருபோதும் நேரிடாது. துச்சாதனன் முதலியவர்களால் செய்யப்பட்ட உபத்திரவித்திலிருந்து திரௌபதியைக் காப்பாற்றினார். கோப ஸ்திரீகளை ஸம்ரக்ஷித்தார். அவர் இப்பொழுது தேசாந்திரம் போகவில்லை. உன்னிடத்தில் தமது ப்ராணனைக்காட்டிலும்

விசேஷமான ப்ரியம் வைத்திருக்கிறார். பக்தியாகிய உன்னால் அழைக்கப்பட்டு அவர் நீசர்களுடைய வீட்டுக்கும் வருகிறார். கிருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம் இம்மூன்று யுகங்களிலும் முறையே ஸத்யம், ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகள் மோக்ஷத்துக்கு ஸாதனங்களாக இருந்தன. இக்கலியுகத்தில் பக்தி மாத்திரத்தாலேயே மோக்ஷம் கிடைக்கிறது; ஆனது பற்றியே ஞான ஸ்வரூபியாகிய பகவான் உனக்கு சரீரத்தை உண்டு பண்ணினார். பின்பு நீ ஒருக்கால் இரு கைகளையும் கூப்பிக்கொண்டு நான் என்ன செய்யவேண்டும் என்று பகவானைக் கேட்டாய். அப்பொழுது அவர் என் பக்தர்களை போஷிக்க வேண்டும் என்று ஆக்ஞாபித்தார். நீயும் அதனை ஒப்புக் கொண்டாய். அதனால் பகவான் சந்தோஷித்து முக்தியை உனக்கு ஊழியப் பெண்ணாக இருக்கும்படி செய்தார். பின்னும் ஞானம், வைராக்கியம் என்ற இவர்களை உன்னிடம் ஒப்படைத்தார். பின்பு நீ வைகுண்டத்தில் உன்னுடைய நிஜ ரூபத்துடன் இவர்களை போஷித்து வந்தாய். பூமியில் பக்தி விருத்தியாக் வேண்டியதற்காக சாயா ஸ்வரூபமயமான ரூபத்துடன் முக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய இவர்களுடன் பூமிக்கு வந்தாய். கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் ஆகிய இம் மூன்று யுகங்களிலும் மிகுந்த ஆனந்தத்துடன் இருந்தாய். கலியில் முக்தி என்னும் பெண் பாஷண்டர்களாகிய வியாதியால் மிகவும் குறைந்துவிட்டாள். அவள் உன்னுடைய அனுமதியினால் வைகுண்டத்துக்கு மறுபடியுஞ் சென்றாள்..

உன்னால் நினைக்கப்படும் போதெல்லாம் வைகுண்டத்திலிருந்து வருவதும் போவதுமாக இருக்கிறாள். ஞானம், வைராக்கியம் இவ்விருவர் களும் புத்திர சிநேகம் கொண்டு உன்னால் காப்பாற்றப்பட்டும், இக்கலியில் ஜனங்கள் அவர்களை உபேஷித்து விட்டபடியால் வயது சென்றவர்களாகி விட்டார்கள். ஆனாலும் உன்னுடைய கவலையை நான் போக்கடிக்கிறேன். இக்கலியுகத்துக்குச் ஸமமான யுகம் வேறில்லை. இந்த யுகத்திலும் ஒவ்வொரு ஜனங்கள் இடத்திலும் உன்னை ஸ்திரமாக இருக்கும்படி செய்கிறேன். அப்படிச் செய்யாவிடில் நான் விஷ்ணு பக்தன் அல்ல. கலியில் முக்கிய பாவிகளான ஜனங்களும் பகவத் பக்தியை பெற்று வைகுண்டத்தை அடைகிறார்கள். யமன், பிசாசங்கள், ராக்ஷதர்கள், அசுரர்கள் ஆகிய இவர்கள் பக்தி உள்ளவர்களை உபத்திரவிக்க மாட்டார்கள். பக்தியால் பகவான் வசப்படுவது போல தவம், வேதம், ஞானம், நல்லகர்மா இவைகளால் ஸ்வாதீனப் படுவதில்லை. அந்த விஷயத்தில் புண்ணியம் செய்தால் தான் பக்தி பண்ணவேண்டுமென்ற விருப்பமுண்டாகும்.கலியில் பக்தியே மேலானது. பக்தியை நிந்தித்ததால் துர்வாஸர் துக்கத்தை அடைந்தார். அனேக விரதங்களாலும், புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் பண்ணுவதாலும், போகங்களாலும், யாகங்களாலும், முக்தியைக் கொடுக்கக்கூடியது, என்று சொன்னேன். "இதனைக் கேட்டு பக்தியாகிய அந்தப்பெண் என்னை நோக்கி "ஓ நாரதரே நீர் மிகவும் மேலானவர். உம்மிடத்தில் எனக்கு மிகுந்த பிரீதி

உண்டாகி யிருக்கிறது. உம்மை ஒருபொழுதும் விடமாட்டேன். உம்முடைய மனதில் எப்பொழுதும் வசிப்பேன். தங்களுடைய அனுக்கிரஹத்தால் என் கவலை தீர்ந்துவிட்டது. ஆனாலும் என்னுடைய இந்த புத்திரர்களுக்கு மூர்ச்சை தெளிய வில்லை. இவர்களை எழுப்பிவிடும்'' என்று வேண்டிக் கொண்டாள்.

அப்பொழுது எனக்கு அவளிடத்தில் தயை உண்டாயிற்று. பின்பு நான் அவ்விருவர்களுடைய காதில் உபநிஷத் வாக்கியங்களையும் கீதா வாக்கியங் களையும் சொல்லி ''ஓ ஞானமே விழித்துக்கொள். ஓ வைராக்கியமே எழுந்திரு'' என்று இரைந்து சொன்னேன். அப்பொழுது அவர்கள் கொட்டாவி விட்டுக்கொண்டு எழுந்து இருந்தார்கள். ஆனாலும் பசி, தாகம் முதலிய வற்றால் வருத்தப்பட்டு மறுபடியும் படுத்துத் தூங்க யத்தனித்தார்கள். அது கண்டு நான் என்ன செய்கிறது என்று பகவானை த்யானஞ் செய்தேன். அப்பொழுது ''ஓ மஹர்ஷியே! ஏன் விசனப்படுகிறீர். புண்ணிய கர்மாக்களை அனுஷ்டிப்பீர் ஆனால், இவர்களுடைய தூக்கமும் கிழத்தனமும் நீங்கும். அந்தக் கர்மங்களை சில ஸாதுக்கள் உபதேசிப்பார்கள். அதனால் பக்தியானது உலகம் முழுவதும் பரவிவிடும் என்று ஆகாசத்தில் இருந்து ஒரு தொனி உண்டாயிற்று. அதனை நானும் மற்றவர்களும் கேட்டு ஆச்சரியம் அடைந்தோம். பின்பு ஆகாச வாணியால் சொல்லப்பட்டபடி எப்பொழுது, எந்தவிடத்தில் எவர்கள் எந்த கர்மங்களை நமக்கு உபதேசிப்பார்களோ என்று நான்

யோசித்து ஞானம், வைராக்யம் இவ்விருவர் களையும் அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு ஒவ்வொரு புண்ய தீர்த்தங்களுக்கும் சென்று இவ்விஷயத்தைப் பற்றி ஒவ்வொரு மஹர்ஷி களையும் கேட்டுக் கொண்டே சஞ்சரித்தேன். ஒருவரும் எந்தக் கர்மாவை அனுஷ்டிக்க வேண்டும் என்று நிச்சயமாகச் சொல்லவில்லை. சிலர் இதைச் செய்ய முடியாத காரியம் என்றும், பின்னும் சிலர் இதனைத் தெரிந்து கொள்வதே சிரமம் என்றும் சொன்னார்கள். சிலர் பேசாமலே இருந்துவிட்டார்கள். சிலர் இதனைக் கேட்டு இருந்த இடத்தைவிட்டே ஓடிப் போனார்கள். மேலும் எல்லா வேதங் களாலும், கீதா வாக்கியங்களாலும் விழித்துக் கொள்ளாத ஞான வைராக்கியங்கள் வேறு எந்த உபாயத்தால் எழுந்திருக்கப் போகிறார்கள்.? நாரத மஹர்ஷியாலும் அறியப்படாத விஷயம் மற்ற மஹர்ஷிகளால் சொல்லமுடியுமா? என்று ஜனங்கள் ரகசியமாக பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். அப்பொழுது எனக்கு யாதொரு நிச்சயமும் உண்டாக வில்லை. ஆனாலும் பதரிகா வனம் சென்று தவம் செய்யத் தொடங்கினேன். அவ்விடத்தில் மிக்க தேஜஸ் விகளான ஸனகர் முதலிய யோகிகளைக் கண்டேன். கண்டவுடன் விசேஷ ஆனந்தம் அடைந்து அவர்களை நோக்கி ஓ யோகி சிரேஷ்டர்களே! நான் செய்த பாக்ய விசேஷத்தால் தங்களைக் கண்டேன்.

நீங்கள் ஐந்து வயதுள்ளவர்களானாலும் முன்னோர்களுக்கும் முந்தியவர்கள். எப்பொழுதும்

வைகுண்டத்திலேயே இருப்பவர்கள். ஸ்ரீ மஹா விஷ்ணுவின் லீலைகளை கானஞ் செய்பவர்கள். எப்பொழுதும் பகவானையே சரணமடைந்தவர்கள். ஆகையால் ஜரை (கிழத்தனம்) உங்களை உபத்திரவிப் பதில்லை. ஆகையால் என்னை அனுக்கிரஹிக்க வேண்டும். ஆகாச வாணியால் சொல்லப்பட்ட கர்மங்கள் எவை? பக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகள் எல்லா வர்ணாச்சரமங்களிலும் ஸ்திரமாய் வசிக்கும்படி என்ன உபாயம் செய்யலாம் அதனைச் சொல்லவேண்டும் என்று கேட்டேன். அப்பொழுது அவர்கள் என்னைப் பார்த்து ஓ தேவரிஷியே இவ்விஷயத்தில் லகுவான உபாயமொன்றிருக்கிறது. நீர் வைராக்கியத்தை அடைந்தவர்களுள் மேலானவர். பகவத் பக்தர்களுட் சிறந்தவர். ஆகையால் பக்தியை உலகத்தில் ஸ்தாபிப்பதற்கு நீர் தகுதியானவரே அனேக மகரிஷிகள் அனேக மார்க்கங்களை காட்டியிருக்கிறார்கள். ஆனாலும் அவைகள் பெரும்பாலும் ஸ்வர்க்கத்தையே கொடுக்கக் கூடியவைகளாகவிருக்கின்றன. மேலும் ச்ரமப்பட்டு செய்யக் கூடியவைகளாயுமிருக்கின்றன; மோக்ஷத்தை கொடுக்கும் மார்க்கம் மிகவும் ரஹஸ்யமானது. அதனை உபதேசிப்பவர்கள் கிடைப்பதரிது. ஆகாச வாணியால் சொல்லப்பட்ட கர்மம் யாதெனில் ஜ்ஞான யக்ஞமேயாம். சிலர் திரவ்ய யஜ்ஞத்தை (யாகம்) அனுஷ்டிக்கிறார்கள். பின்னும் சிலர் தபோ யஜ்ஞத்தையும் மற்றும் சிலர் யோக யஜ்ஞத்தையும், இன்னும் சிலர் ஸ்வாத்யாய யக்ஞத்தையும் (வேதங்களை அத்யயனம் செய்வது) அனுஷ்டிக்கிறார்கள். இவைகளில் ஜ்ஞான யஜ்ஞமே

மேலானது. அது சுகரால் பரீக்ஷித் மஹாராஜனுக்கு உபதேசிக்கப்பட்ட பாகவதத்தைக் கேட்பதேயாகும். அந்தப் பாகவத சாஸ்த்ரத்தைக் கேட்பதால் பக்தி ஜ்ஞான வைராக்கியங்களுக்கு நேர்ந்த கஷ்டமும் விலகும். மேலும், சிங்கத்தின் சப்தத்தைக் கேட்ட செந்நாய்கள் போலப் பாகவதக் கதையைக் கேட்ட மாத்திரத்தில் கலியின் தோஷங்கள் யாவும் ஓடுகின்றன. பக்தியானது, ஜ்ஞானம் வைராக்யம் ஆகிய இவைகளுடன் ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு ஜனங்களிடத்திலும் நன்றாய் ப்ரகாசிக்கும் என்று உபதேசித்தார்கள்.

அப்பொழுது நான் அவர்களைப் பார்த்து "ஓ ப்ரம்ஹ தேவரின் குமாரர்களே! வேதாந்த வாக்யங்களாலும், கீதா பாடத்தாலும் விழித்துக் கொள்ளாத அவர்கள் பாகவத பாடத்தால் எழுந்திருப்பார்களா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் பின்வருமாறு விடை சொன்னார்கள். ஸ்ரீமத் பாகவத கதையானது உபநிஷத்துக்களின் ஸாரத்தால் செய்யப்பட்டதாகையால் இது மிகவும் மேலானது. பாலில் நெய் இருந்தாலும் அது எப்படி தனியாகத் தெரியவில்லையோ அதுபோல வேதத்தில் ஸாரமானது எங்கு இருந்தாலும் நன்றாய்ப் பிரகாசிக்கவில்லை. ஆனாலும், அந்தப் பாலைக் காய்ச்சிக் கடைந்து அதிலிருந்து தனியாக நெய் எடுக்கப்பட்டால் அது தேவர்களுக்கு மிகவும் திருப்தியை உண்டு பண்ணுகிறது. தவிரவும் கரும்பில் அடி முதல் நுனி வரையில் சர்க்கரை இருந்தாலும் அதனைப் பிரித்தெடுத்த பிறகுதான் புஜிக்கக்

கூடியதாகிறது. அது போலவே வேதத்திலுள்ள ஸாரங்கள் எல்லாவற்றையும் எடுத்து ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்டது. இது பக்தி, ஞானம், வைராக்யம் இவைகளை உலகத்தில் ஸ்தாபிப்பதற்காகவே வெளியிடப்பட்டது. முன் னொருகால் ஸ்ரீவேதவ்யாஸ மஹர்ஷி ஸ்ரீமத் மஹாபாரதத்தைச் செய்தும், வேதங்களை அத்யயனஞ் செய்தும் உபநிஷத்துக்களின் உண்மையான அர்த்தத்தைத் தெரிந்து கொண்டும், பகவத் கீதையைச் செய்தும், அக்ஞானம் விலகாமல் தாபமடைந்து ஸரஸ்வதி நதிக்கரையில் கவலைப் பட்டுக் கொண்டிருக்கும்பொழுது உம்மால் நான்கு ச்லோகங்கள் உபதேசிக்கப்பட்டன; அவைகளைக் கேட்டு அவர் உடனே கவலை தீர்ந்தவராக, அவைகளைக் கொண்டு பாகவதத்தைச் செய்தாரல்லவா ?அப்படி இருக்க பாகவதத்தை கேட்பதால் துக்கம் விலகுமாவென்று நீரே கேட்பது மிகவும் ஆச்சர்யமாக விருக்கிறது' என்று சொன்னார்கள். பின்பு நான் அவர்களைக் கொண்டாடி, அவர்களை நோக்கி இந்த ஞான யஜ்ஞத்தை எவ்விடத்தில் செய்யலாம் ? எவ்வளவு நாட்களில் பாகவதம் கேட்கப்படவேண்டும் ? அதன்முறை எப்படி ? பாகவத சாஸ்த்ரத்தின் மஹிமையை ஸகல வேதங்களுமறிந்த தாங்களே சொல்லவேண்டும்' என்று கேட்டுக் கொண்டேன்.

அப்பொழுது அவர்கள், "ஓ நாரதரே! கங்கையின் ஸமீபத்தில் ஆனந்த வனமென்பது ஒன்று உண்டு. அது மிகவும் ஏ்காந்தமான இடம். ஜலஸௌக்யமுள்ளது; அனேக மஹர்ஷிகள்

அவ்விடத்தில் வஸிக்கிறார்கள்' அவ்விடத்தில் வஸிக்கும் பறவை முதலியவைகளுக்கும் இயற்கையான விரோதம் இல்லை. அவ்விடத்தில் பாகவத கதையைச சொல்லுவதாகிய ஜ்ஞான யஜ்ஞத்தை நீர் நடத்த வேண்டும், அவ்விடத்திற்கு பக்தியானவள் தன் புத்ரர்களுடன் வருவாள். அந்தக் கதையைக் கேட்ட மாத்திரத்தில் அவர்கள் யௌவன வயஸை அடைவார்கள்' என்று சொல்லி என்னை அழைத்துக் கொண்டு பாகவத கதையைக் கேட்பதற்காக ஆனந்தவனம் சென்றார்கள். அப்பொழுது இதனைக் கேட்டுப் பூலோகம், தேவலோகம், ப்ரஹ்மலோகம் ஆகிய இவ்விடங்களிலிருந்து பகவத் பக்தர்கள் எல்லோரும் ஆனந்தவனம் சென்றார்கள். அன்றியும் ப்ரகு, வஸிஷ்டர், ச்யவனர், கௌதமர், மேதாதிதி, தேவலர், தேவராதர், பராசுராமர், விச்வாமித்ரர், சகலர், மார்க்கண்டேயர், பிப்பலாதர் முதலிய மஹர்ஷிகளும், வ்யாஸர், பராசரர் முதலிய யோகிகளும், சாயாசுகர், ஜாஜலி, ஜஹ்னு முதலியவர்களும் தங்கள் தங்களுடைய ஸ்திரீகள், புத்ரர்கள், சிஷ்யர்கள் முதலியவர்களுடன் கங்காதீரஞ் சென்றார்கள். மேலும் ஆறு சாஸ்த்ரங்களும், பதினேழு புராணங்களும், நான்கு வேதங்களும், கங்கை முதலிய நதிகளும், புஷ்கரம் முதலிய குளங்களும், க்ஷேத்ரங்களும் பத்து திக்குக்களும், தண்டகை முதலிய வனங்களும், மேரு முதலிய மலைகளும் திவ்ய சரீரமுள்ளவைகளாய்க் கதையை கேட்பதற்காக அவ்விடம் வந்து கூடின. மேலும் தேவர்கள், கந்தர்வர்கள், கின்னரர்கள் ஆகிய இவர்களும்

வந்தார்கள். எல்லோருக்கும் ஆசார்யர்களான ஸனகர் முதலியவர்களை ப்ரகுமஹர்ஷி தாம் நேரில் அழைத்து வந்தார். அப்பொழுது அந்த ஜ்ஞான யஜ்ஞத்தில் நான் தீக்ஷை செய்து கொண்டு அந்தக் குமாரர்களுக்கு ஆஸனங் கொடுத்து நமஸ்காரஞ்செய்து அவர்களைப் பூஜித்தேன். அங்கே ஒருபக்கத்தில் மஹர்ஷிகளும் மற்றொரு பக்கத்தில் தேவகணங்களும், இன்னொரு பக்கத்தில் வேதம் உபநிஷத் முதலியவைகளும், மற்றொரு பக்கத்தில் தீர்த்தங்களும், இன்னொரு பக்கத்தில் ஸ்திரீகளும், தங்களுக்குத் தகுந்த ஆஸனங்களில் உட்கார்ந்தார்கள். 'ஜய்' என்றும், 'நமஸ்காரம்' என்றும் சப்தங்கள் மிகுதியா யுண்டாயின, சங்க வாத்தியங்கள் முழங்கின. ஆகாசத்தில் தேவர்கள் விமானங்களிலிருந்து கல்பக விருக்ஷத்தின் புஷ்பங்களின் மழையைப் பெய்தார்கள். இப்படி எல்லோரும் ஒரே மனமாய் பாகவத மாஹாத்மியத்தைக் கேட்க விரும்பியிருக்கும் பொழுது என்னை உத்தேசித்து ப்ரஹ்ம குமாரர்கள் பின்வருமாறு சொன்னார்கள்: 'ஸ்ரீமத் பாகவத கதையை ஜனங்கள் எப்பொழுதும் கேட்வேண்டும். அதனைக் கேட்டமாத்திரத்தால் பகவான் மனதில் ஆவிர்ப்பவிக்கிறார். இது பதிமிண்ணாயிரம் க்ரந்தங்களடங்கியது. பன்னிரண்டு ஸ்கந்தங்கள் உள்ளது. பரிக்ஷித்து மஹா ராஜனுக்கு சுகரால் உபதேசிக்கப்பட்டது. இதுவே மோக்ஷத்தை கொடுக்கக்கூடியது. மற்றப் பலவையான சாஸ்த்ரங்கள் புத்திக்கு மயக்கத்தை யுண்டுபண்ணுகின்றன. எந்த வீட்டில் பாகவத கதை படிக்கப்படுகிறதோ

அதுவே புண்ய க்ஷேத்ரமாகும், அச்வமேதயாகங்கள், நூறு வாஜபேயங்கள் இவைகளை ஆயிரம் செய்தாலும், அதனாலுண்டாகும் புண்யமானது பாகவத கதையைப் படிப்பதனா லுண்டான ஸுகிருதத்தின் 16ல் ஒரு பாகத்திற்கும் ஸமமாகாது. ஒவ்வொரு நாளும் பாகவதத்தில் ஒரு ச்லோகத் தையாவது அதன் பாதியையாவது அவசியம் படிக்க வேண்டும். ஒவ்வொரு வேதங்களின் முதல் மந்த்ரங்கள் வேத மாதாவாகிய காயத்ரீ மஹாமந்தரம், புருஷ ஸூக்தம், வேதங்கள், பாகவதம், த்வாதசாக்ஷரம், ஸூர்யன், ப்ரயோகம், ஸம்வத்ஸரமாகிய காலம், ப்ராஹ்மணர்கள், அக்னிஹோத்ரம், காமதேனு, த்வாதசி திதி, துளஸி, வஸந்தருது, புருஷோத்தமராகிய நாராயணர், ஆகிய இவர்களுக்குள் தாரதம்யமில்லை. எவன் ஒவ்வொரு நாளும், பாகவதத்தை படித்து அதன் அர்த்தத்தை தெரிந்துகொள்ளுகிறானோ, அவனுக்கு கோடி ஜன்மங்களில் செய்யப்பட்ட பாபங்களும் நிவர்த்தியாகின்றன. தவிரவும், மரண காலத்தில் இந்தச் சுக சாஸ்த்ரத்தைக் கேட்பதால் வைகுண்டத்தையடைவார்கள். இந்தப் பாகவத புஸ்தகத்தை ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்தில் வைத்து விஷ்ணுபக்தர்களுக்குத் தானம் செய்கிறவன் ஸ்ரீகிருஷ்ணனுடைய ஸாயுஜ்ய பதத்தையடைகிறான். பிறந்தது முதல் ஒரு பொழுதாவது பாகவத கதையைக் கேட்காதவன் சண்டாளனுக்கும், கழுதைக்கும் ஸமானனென்று சொல்லப்படுகிறான். தவிரவும், அவனை பக்தர்கள் உயிருள்ள பிணமென்றும், பூமிக்குச்சுமையாயிருப்பவனென்றும் சொல்லுகிறார்கள். இந்த கதையை இந்திரியங்களை

ஜயித்து, மனத்தை அடக்கி வெகுநியமத்துடன் கேட்கவேண்டுமாதலால் அவ்வளவு நியமத்தை அனுஷ்டிப்பது இக்கலி காலத்து ஜனங்களால் முடியாததாகுமென்றும், இவர்களுக்கு ஆயுஸ் மிகக் குறைந்ததென்றும் யோசித்து சுகர் ஏழு நாளில் இதைக் கேட்கவேண்டுமென்று ஒரு விதி நியமித்திருக்கிறார்.

அந்த விதிப்படி ஏழு நாளில் பாகவதத்தை கேட்பதனால் ஸகல யாகங்கள் செய்த பலன்களும், ஸகல வ்ரதங்களை அனுஷ்டித்த பலன்களும், ஸகல தீர்த்தங்களில் ஸ்நானம் செய்த பலன்களும் உண்டாகும் என்று எனக்கு உபதேசித்தார்கள் என்று ஸூதர் சௌனகர் முதலிய மஹர்ஷி களுக்குச் சொன்னார். இதைக் கேட்டுச் சௌனகர், பாகவத புராணம் மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியதென்றும், மற்றவைகளைக் காட்டிலும் மேலானதென்றும், தாங்கள் சொல்லக் கேட்டு மிகவும் ஆச்சர்யமடைந்தோம். அவ்வளவு மேன்மை அந்தச் சாஸ்த்ரத்திற்குக் கிடைத்த காரணமென்ன? சொல்ல வேண்டும் என்றார். அதனைக் கேட்டு ஸூதர் அவரை நோக்கிச் சொன்னார். "ஓ சௌனகரே! ஸ்ரீ கிருஷ்ண பகவான் பூமியை விட்டுத் தம் உலகம் போகும் முன்னிலையில் உத்தவர், பகவானை நோக்கித் தாங்கள் வைகுண்டம் சென்றால் பக்தர்களை யார் ஸம்ரக்ஷிப்பார்? கலியுகத்தில் ஜனங்கள் துஷ்டர்களாகிவிடுவார்கள்; நிர்குணமாகிய உம்முடைய ஸ்வரூபத்தை ஜனங்கள் உபாஸிப்பது மிகவும் கஷ்டம். அதற்காகவே தாங்கள் பூமியில் அவதாரஞ் செய்திருக்கிறீர்கள். ஆகையால்

இவ்வுலகத்திலேயே வஸிக்க வேண்டுமேயொழிய மேலுலகம் செல்லக் கூடாது என்று வேண்டிக் கொண்டார். இதனைக் கேட்டு பகவான், 'பக்தர்களுக்காக நாம் செய்யவேண்டியதென்ன? என்று யோசித்து? தேஜோ ரூபியாக ஸ்ரீமத் பாகவதத்தில் ப்ரவேசித்தார். அதனாலேதான் அது எல்லாவற்றிலும் மேலானது. அதனைக் கேட்பதாலும், படிப்பதாலும் துக்கம், தாரித்ரியம், பாபம் முதலாகிய இவைகள் நிவர்த்தி யாகின்றன. ஏழு நாளில் இந்த க்ரந்தம் முழுவதையும் விதிப்படிக் கேட்டால் தேவர்களாலும் தாண்ட முடியாத விஷ்ணுவின் மாயையைக் கடந்து ஸ்வரூபஜ்ஞானத்தை அடையலாம். 'ஓ சௌனகர் முதலியவர்களே! இப்படி பாகவதத்தின் மஹிமையை வர்ணித்தவுடன் ஆனந்தவனத்தில் பக்தியின் புத்ரர்களான ஜ்ஞான வைராக்கியர்கள் மிக்க பலத்துடனும் அழகான சரீரத்துடனும் எழுந் திருந்தார்கள். பக்தியும், ஹே கிருஷ்ண!, ஹே கோவிந்த! ஹே முராரே! என்று சொல்லிக் கொண்டு விசேஷ சந்தோஷமடைந்தாள். பின்னும் அவர்களுடைய ஆஜ்ஞையால் பகவத்பக்தருடைய மனதில் வஸித்து வந்தாள். மேலும் அவ் விடத்தில் ஸ்ரீமந்நாராயண மூர்த்தி நீருண்ட மேகம் போலக் கறுத்த திருமேனியோடு நான்கு கைகளிலேயும் சக்ரம் முதலிய ஆயுதங்களை ஏந்திப் பீதாம்பரத்தையுடுத்திக் கொண்டு துளஸி மாலையால் அலங்கரிக்கப் பட்டுக் கோடி மன்மதனைப் போல அழகு உள்ளவராகி பக்தர்களுக்கு தர்சனங் கொடுத்தார். அப்பொழுது எல்லோரும் பரமானத்தத்தை யடைந்து பகவானை ஸ்தோத்ரம் செய்தார்கள். மேலும் ஸ்ரீமத் பாகவதமே மேலானதென்றும்

தெரிந்து கொண்டார்கள்.

ப்ராஹ்மணர்களுடைய பொருள்களை அபஹரிப் பதாகிய மஹாபாபங்களைச் செய்தவர்களும் ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்பதனால் பரிசுத்தராகி விடுகிறார்கள் என்பதில் ஸந்தேக மில்லை. துங்கபத்ரா நதிக்கரையில் ஒரு பட்டணத்தில் ஆத்மதேவரென்ற ஒரு ப்ராஹ்மண ச்ரேஷ்டரிருந்தார். அவர் ஸகல வேதங்களையும் அத்யயனஞ் செய்தவர். ஸூர்யன் போன்ற தேஜஸ் உள்ளவர். தன்னுடைய வர்ணாச்ரம தர்மங்களைக் குறைவின்றி நடத்தி வருபவர். ஆனால் அவர் மிகுந்த ஏழை. அவருக்குத் துந்துலீ என்ற பத்னியொருத்தியுண்டு. அவள் மிகவும் அழகுள்ளவள், மேலான குலத்தில் பிறந்தவள், ஆனாலும் வெகுவாகப் பேசுகிறவள், வீட்டு வேலைகளில் மிகவும் ஸாமார்த்திய முள்ளவள். சண்டையில் மிகுந்த ப்ரியமுள்ளவள். தான் சொன்னதே சரியென்று ஸ்தாபிக்கும் ஸ்வபாவமுள்ளவள். அந்தத் தம்பதிகளிருவர்களும் பல வகையான தர்மங்களை அனுஷ்டித் தார்கள். அப்படியும் அவர்களுக்குப் பெண்ணாவது பிள்ளையாவது பிறக்கவில்லை. அதனால் கவலையடைந்து அந்த ப்ராஹ்மணன் வீட்டை விட்டுக் காட்டுக்குச் சென்றார். அவ்விடத்தில் மத்யானகாலத்தில் ஒரு குளத்தில் ஸ்நானம் பண்ணித் தாஹத்தைத் தீர்த்துக் கொண்டு தெய்வச் செயலால் அவ்விடம் வந்த ஒரு ஸன்யாசியின் அருகிற் சென்று அவரை நமஸ்கரித்துப் பெருமூச்சு விட்டு அவருடைய பக்கத்தில் நின்றார். அவரைப் பார்த்து

ஸன்யாஸியானவர், ஓ ப்ராஹ்மண! நீர் ஏன் துக்கப்படுகிறீர் என்று கேட்டார். அதனைக் கேட்டுப் ப்ராஹ்மணன் அந்த ஸன்யாஸியை நோக்கி, எனக்குப் புத்திரனில்லை என் வீட்டில் இருக்கும் பசுவும் மலட்டாயிருக்கிறது, என்னால் வைத்து வளர்க்கப்பட்ட மரமும் புஷ்பிக்கிறது மில்லை காய்க்கிறதுமில்லை, என் வீட்டிற்கு கொண்டு வந்த பழங்களும் காய்ந்து போகின்றன. குழந்தைகளிலில்லாமலும், பாக்யமில்லாமலும் இருக்கும் நான் பிழைத்திருந்து என்ன ப்ரயோஜனம் என்று சொல்லி மிகவும் கதறினார்.

அதனைக் கேட்டு அந்த ஸன்யாஸியானவர் அவருடைய நெற்றியில் எழுதப்பட்டிருக்கும் அக்ஷரங்களை வாசித்துப் பார்த்து ப்ராஹ்மணனை நோக்கி, ஓ ப்ராஹ்மண! உமக்கு ஏழு ஜன்மம் வரையில் பிள்ளை பிறக்காது, ஸகரர் என்னும் ராஜன் புத்ர சோகத்தை அடைந்தாரல்லவா? ஆகையால் பிள்ளை பிறக்கவில்லை யென்று நீர் வருத்தப்படுவது நியாயமில்லை. ஆகையால் குடும்பத்தின் ஆசையை யொழித்து ஸன்யாஸஞ் செய்துகொள்ளும் என்றார். அதனைக் கேட்டும் ப்ராஹ்மணன் கொஞ்சமேனும் அதற்கு ஸம்மதிக் காமல் விஷய ஸுகத்திலேயே ஆசைப்பட்டு பிள்ளை பிறக்கும்படி அனுக்ரஹிக்க வேண்டுமென்று பலவாறாக வேண்டிக் கொண்டார். ஸன்யாஸி யானவர்; "ஓ ப்ராஹ்மண! தெய்வச் செயலை மாற்றுவதற்கு யாரால் முடியும்? அதனை மாற்ற முயன்றால் துக்கத்தையே அடையும்படி நேரிடும். ஆகையால் உமக்கு புத்ரஸுகம்

கிடைக்காது. ஆயினும் உமக்கு ஒரு பழத்தைக் கொடுக்கிறேன். இதனை உம்முடைய பத்னியிடம் கொடுத்து புஜிக்கும்படி செய்யும். உத்தமமான புத்ரன் பிறப்பான் என்று சொல்லிப் பழத்தைக் கொடுத்தார். ப்ராஹ்மணன் அதைப் பெற்றுக் கொண்டு தம்முடைய வீட்டிற்கு வந்து தமது பத்னியிடம் கொடுத்து அவளை நோக்கி, இது முதல் ஒரு வருஷம் வரையில் ஒருவேளை போஜனம் செய்துகொண்டு, ஸத்யம், சௌசம், தயை, இவைகளில் தவறாமல் நியமத்துடன் நீ இருக்கவேண்டும். இப்பழத்தை புஜி. நல்ல பிள்ளை பிறக்கும், என்று சொல்லிவிட்டு, கிராமாந்தரம் போய்விட்டார். அந்தத் துந்துலீ என்பவள் தன்னுடைய தோழிகளின் முன்பாக இவ்விஷயங்கள் எல்லாவற்றையும் சொல்லி வருத்தப்பட்டாள். எப்படியென்றால் இந்தப் பழத்தை நான் புஜித்த மாத்திரத்தில் வயிற்றில் கர்ப்பம் உண்டாய்விடும். வயிறு பெருத்துவிடும். ஆசாரம் குறைந்துவிடும். தேஹத்தில் வலிமை குறையும். வீட்டு வேலைகளை எப்படிச் செய்ய முடியும்? வயிற்றுக்குள்ளிருக்கும் கர்ப்பமானது வெளி வருவது மிகவும் கஷ்டம், ஒருக்கால் சிசு வயிற்றில் குறுக்காக விழுந்துவிட்டால் நான் உயிரையிழக்கும்படி நேரிடுமே! ப்ரஸவ காலத்தில் உண்டாகும் உபத்ரவத்தை நான் எப்படி ஸஹிப்பேன்? இந்த ஒருவருஷம் நியமமா யிருப்பது மிகவும் கஷ்டம். நான் ப்ரஸவித் திருக்கும்பொழுது வீட்டிலிருக்கும் எல்லா தனங்களையும், பர்த்தாவின் ஸஹோதரியானவள்

அபஹரித்துவிடுவாள். ப்ரஸவித்தபிறகு குழந்தையைக் காப்பாற்றுவது மிகவும் கஷ்டம். ஆகையால், மலடியாகவாவது விதவையாகவாவது இருப்பதே மேலானதென்று நினைக்கிறேன். என்று சொல்லி அப்பழத்தை அவள் புஜிக்கவில்லை. பின்பு ப்ராஹ்மணன் தமது பத்னியை நோக்கிப் பழத்தை புஜித்தாயா என்று கேட்க அவள் புஜித்தேன் என்றும் அவருக்குச் சொன்னாள். இந்தச் சமயத்தில் அந்த துந்துலியின் ஸஹோதரி ஒருத்தி தெய்வச் செயலாய் அவள் வீட்டுக்கு வந்தாள். அப்பொழுது துந்துலீ அவளிடத்தில் இவ்விஷயம் முழுவதையும் சொன்னாள். அதைக் கேட்டு அவள் துந்துலியை நோக்கி நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். நான் இப்பொழுது கர்ப்பமாயிருக்கிறேன், நான் ப்ரஸவிக்கிற வரையில் நீ வீட்டிற்குள்ளேயே இருந்து கர்ப்பிணியாகயிருப்பதுபோலப் பிறருக்குச் சொல்லிக்கொண்டு இரு. உன் வீட்டிலிருக்கும் பணம் முழுவதையும், நீ என் புருஷனுக்கு கொடுத்துவிடுவாயானால், எனக்குப் பிறக்கும் குழந்தையை உனக்குக் கொடுத்து விடுகிறேன். உன் வீட்டில் வந்திருந்து, குழந்தையையும் வளர்க்கிறேன். இந்தப் பழத்தைப் பசுவுக்குக் கொடுத்து விடு, என்று சொன்னாள். அவளும் அப்படியே செய்தாள். பின்பு அவள் ப்ரஸவித்ததும் அந்தக் குழந்தையை அதன் தகப்பன் ரஹஸ்யமாகத் துந்துலியினிடம் கொடுத்தான். துந்துலியும் 'ஸுகமாய் ப்ரஸவித்தேன்' என்று தன்னுடைய பர்த்தாவிடம் தெரிவித்தாள். அந்த ஆத்மதேவர் மிகுந்த ஸந்தோஷமடைந்து

ஜாதகர்மம் முதலியவைகளைச் செய்தார். அப் பொழுது துந்துலியானவள் தனது பர்த்தாவை நோக்கி, 'ஸ்தனத்தில் பாலில்லை, எத்தனை நாள் அன்யர்களுடைய பாலைக் கொண்டு குழந்தையை வளர்க்க முடியும். என்னுடைய தங்கையின் குழந்தை இறந்து போய் விட்டதால் அவளுக்குப் பால் மிகுதியா யிருக்கிறது. அவளை வரவழைத்து வீட்டில் வைத்துக் கொண்டு குழந்தையை வளர்க்கும்படி செய்ய வேண்டும்' என்று சொன்னாள், அவரும் அதற்கு சம்மதித்து அப்படியே செய்தார். அந்தக் குழந்தைக்கு துந்துகாரி என்று பெயர் வைக்கப்பட்டது. அதற்குப்பின் மூன்று மாதம் கழித்து வீட்டிலிருந்த பசுவானது ப்ரஸவித்தது. நல்ல தேஜஸ்வியும், அழகுள்ளவனுமான புத்ரன் பிறந்தான். ஆனால் அக்குழந்தைக்கு காது மட்டும் பசுவின் காது போலிருந்தது, அதனால் அவனுக்கு கோகர்ணனென்னு பெயரிடப்பட்டது. அவன், வித்வானாயும், சுத்தனாயும், ஆசாரமுள்ளவனாயு மிருந்தான். துந்துகாரியோ மிகவும் துஷ்டனாகியும், திருடனாகியும், அசுத்தனாகியும், மஹா பாபியாகியுமிருந்தான். இப்படிச் சில காலம் சென்ற பிறகு துந்துகாரியானவன் தாஸிகள் இடத்தில் ஆசைப்பட்டுப் பணம் முழுவதையும் செலவழித்துத் தாய் தகப்பன் இருவர்களையும் அடித்து வீட்டிலிருக்கும் பாத்திரங்களையும் பிடுங்கிக் கொண்டு போனான். அப்பொழுது அவனுடைய தகப்பனாராகிய ஆத்மதேவர், அபுத்ரனாயிருப்பதே மேலானது; இந்தத்

துஷ்டப்பிள்ளையையடைந்து நான் மிகவும் கஷ்டப்படுகிறேன். என்னை இப்பொழுது யார் காப்பாற்றுவார்கள்? என்று கத்தினார். அப் பொழுது கோகர்ணன் ஸம்ஸாரத்தின் துக்கங்களை அவருக்குச் செவ்வையாக எடுத்துரைத்து வைராக்யத்தை உண்டுபண்ணினான். பின்பு அவர் புத்ரனுடைய உபதேசத்தால் வீட்டை விட்டுக் காட்டுக்குச் சென்று ஒவ்வொரு நாளும் பாகவதத்தில் பத்தாவது ஸ்கந்தத்தைப் படித்து அதனால் ஸ்ரீகிருஷ்ண ஸாயுஜ்யத்தையடைந்தார். பிறகு அந்தத் துந்துகாரியென்பவன், தாயாரை நோக்கி வீட்டில் பணம் எங்கேயிருக்கிறது? சொல்லு, இல்லாவிடில் உன்னை கொல்வேன், என்று அதட்டினான். அதனால் அவள் ஒருநாள் இரவில் ஒரு கிணற்றில் விழுந்து மரண மடைந்தாள். கோகர்ணனென்பவன் விஷயங்களில் ஆசையில்லாதவனாகித் தீர்த்தயாத்ரை செய்து கொண்டிருந்தான். துந்துகாரியென்பவன் வீட்டிலேயே ஐந்து தாஸிகளை வைத்துக் கொண்டு அவர்களைப் போஷிப்பதற்காக கெட்ட காரியங்களையே செய்து வந்தான். அந்தத் தாஸிகள் நகை வேண்டுமென்ற விருப்பத்தால் அவனை நிர்ப்பந்தித்தார்கள். அதற்காக அவன் தேசாந்தரம் சென்று நல்லவஸ்தரங்கள் நகைகள் முதலியவைகளைத் திருடிக் கொண்டு வந்து கொடுத்தான். இப்படி மிகுதியான பணத்தையும் நகைகளையும் இவன் திருடிக்கொண்டு வந்திருக் கிறான் என்று தெரிந்து அந்தத் தாஸிகள் ஒரு நாள் ராத்ரி இவன் இவ்வளவு வஸ்துக்களையும்

திருடிக்கொண்டு வந்திருப்பதனால் அரசனுடைய சேவகர்கள் இவ்விடம் வந்து நம்மை பிடித்துக் கொள்வார்களே என்று யோஜித்து ஒருவருக்கும் தெரியாமல் கயிறுகளால் இவனைக் கட்டி கழுத்தில் சுருக்கிட்டார்கள். அப்படியும் அவன் சீக்கிரத்தில் மரிக்கவில்லை. அப்பொழுது அவர்கள் அக்னியை அவன் முகத்திற்போட்டு உபத்ரவிக்க அவன் இறந்தான். பின்பு அவன் சரீரத்தை ஒருவருக்கும் தெரியாமல் ஓரிடத்தில் அடக்கம் செய்தார்கள். மறுநாள் துந்துகாரி எங்கேயென்று கேட்பவர்களுக்குப் பணம் ஸம்பாதிப்பதற்காக தேசாந்தரம் போயிருக்கிறானென்றும், ஒரு வருஷத்தில் திரும்பி வருவானென்றும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இறந்துபோன துந்துகாரி அவனுடைய பாபத்தால் ப்ரேத ஜன்மத்தையடைந்து வாயு சரீரத்துடன் அங்குமிங்கும் அலைந்து கொண்டு வெயில், குளிர், பனி, மழை இவைகளை ஸஹித்தும்; பசி, தாஹத்தால் துன்பத்தை யடைந்தும் மிகவும் துக்கித்துக் கொண்டிருந்தான். சில காலத்தில் கோகர்ணன் துந்துகாரி இறந்து போனானென்பதைக் கேள்விப்பட்டு அவனை உத்தேசித்து கயாக்ஷேத்திரத்தில் ச்ராத்தம் செய்ததுமின்றி ஒவ்வொரு தீர்த்தங்களிலும் அவனை உத்தேசித்துப் பிண்டதானம் முதலிய வைகளையும் செய்தான்.

பிறகு சில காலத்தில் தன்னுடைய பட்டணம் வந்து தன்னுடைய வீட்டின் திண்ணையில் அன்று ராத்ரிப் படுத்திருந்தான். அப்பொழுது

ப்ரேத ரூபியாயிருக்கும் துந்துகாரி, அவ் விடத்தில் படுத்திருக்கும் தன் பந்துவைப் பார்த்து, ஒருக்கால் ஆடுபோலவும், பின்னு மொருக்கால் யானை போலவும், எருமை போலவும், இந்திரன் போலவும், அக்னி போலவும், புருஷன் போலவும், பலவகையான ரூபத்தை எடுத்துக் கொண்டான். கோகர்ணன் அவனைப் பார்த்து, 'நீ, யார்? ப்ரேதமா அல்லது பிசாசமா அல்லது ராக்ஷஸனா? என்று கேட்டான். இதைக்கேட்டு விடை சொல்லமுடியாமல் அழுது கொண்டு அது ஜாடை காட்டினது. அப்பொழுது கோகர்ணன் இருகையிலும் ஜலத்தையெடுத்து ப்ரோக்ஷித்தான். அதனால் அது தன்னுடைய பாபங்கள் விலகி விடை சொல்ல ஆரம்பித்தது. 'நான் உன்னுடைய ஸஹோதரன், எனக்கு துந்துகாரியென்று பெயர். நான் செய்த பாப கர்மங்களால் ப்ராஹ்மண ஜன்மம் போய்விட்டது; அனேக ப்ராணிகளை ஹிம்ஸித்துத் தாஸிகளைப் போஷித்து வந்தேன்; கடைசியில் அவர்களாலேயே கொல்லப்பட்டேன்; அதனால் ப்ரேத ஜன்மத்தை அடைந்து கஷ்டப்படுகிறேன்; நீ எனக்குப் பந்துவாகையால் என்னிடத்தில் தயைசெய்து என்னைக் காப்பாற்று' என்றது.

அதனைக் கேட்ட கோகர்ணன், 'ஓ' துந்துகாரியே உனக்காக கயா க்ஷேத்திரத்தில் விதிப்படி பிண்டதானஞ் செய்தேன். அப்படியிருக்க உனக்கு ப்ரேதமாயிருக்கும் தன்மை ஏன் போகவில்லை? இனி நான் செய்யவேண்டிய

தென்ன ? என்று கேட்டான். அதைக் கேட்டு அந்த ப்ரேதமானது நூறு கயா ச்ரார்த்தம் செய்தாலும் என்னுடைய பாபம் நிவர்த்தி யாகாது. ஆகையால் வேறு ஓர் உபாயத்தை யோஜிக்கவேண்டும் என்றது. அதைக்கேட்டு கோகர்ணன், உன்னுடைய பாபங்கள் விலக்கத் தகுந்த உபாயத்தை ஆலோசித்து அதை அனுஷ்டிக்கிறேன். அதுவரையில் நீ கவலை யற்றவனாகியிரு என்று சொல்லிவிட்டு, ராத்ரி முழுவதும் அது விஷயமாக யோசித்தும் யாதொரு நிச்சயமும் தோன்றாதவனாயிருந்தான்.' காலையில் அந்தப் பட்டணத்திலிருக்கும் ஜனங்கள் எல்லோரும் தேசாந்தரத்திலிருந்து வந்த கோகர்ணனைப் பார்த்து, க்ஷேமம் விசாரித்தார்கள். கோகர்ணன் ராத்ரியில் நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் அவர்களிடம் தெரிவித்தான். அவர்கள் யோசித்து ஒன்றும் தோன்றாமல் ஸூர்ய பகவானைக் கேட்க வேண்டுமென்று சொன்னார்கள். உடனே கோகர்ணன் ஸூர்யனை ஸ்தோத்திரம் செய்து அவர் வேகத்தைத் தடுத்துவிட்டான். அப் பொழுது ஸூர்யபகவான், ஏழுநாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்டால் ப்ரேதத்வம் நிவர்த்தியாகும் என்று அனுக்ரஹித்தார். அதனைக் கேட்டு கோகர்ணன் பாகவத கதையைப் படிப்பதற்கு முயற்சித்தான். அதனைக் கேட்பதற்காகப் பல தேசங்களிலிருந்தும், பல கிராமங்களிலிருந்தும் நொண்டிகள், கண்ணில் லாதவர்கள், ரோகிகள் ஆகிய இவர்கள் வந்தார்கள். இன்னும் அநேகம் பெரியோர்களும்

கூடினார்கள். அவ்விடத்துக் கருகிலிருந்த ஏழு கணுக்களுள்ள ஒரு மூங்கிலில் வாயு சரீரத்தை யுடைய அந்த ப்ரேதம் ஸ்ரீமத் பாகவதத்தை கேட்பதற்காக வந்து சேர்ந்தது. அப்பொழுது கோகர்ணன் விஷ்ணுபக்தனாகிய ஒரு ப்ராஹ்மணனைக் கேட்பவராக வைத்துக் கொண்டு பாகவத கதையை வர்ணித்தார். முதல்நாள் கதை முடிந்தவுடன், அருகிலிருந்த மூங்கிலில் ஒரு கணு வெடித்ததுமின்றி ஏழாவது நாளில் ப்ரேதமானது தனது பூர்வ சரீரத்தைவிட்டு மேகம்போலக் கருத்த திருமேனியுடன், பீதாம்பரம், கிரீடம், குண்டலம், துளஸீமாலை இவைகளால் அலங்கரிக்கப்பட்டு திவ்ய ரூபத்தையடைந்து கோகர்ணனை நோக்கி "ஓ ஸாதுவே நான் உன்னால் க்ஷேமத்தை யடைந்தேன் என்று ச்லாகித்தது. இந்த சமயத்தில் விஷ்ணு தூதர்கள் வைகுண்டத்திலிருந்து விமானத்துடன் வந்தார்கள். எல்லோரும் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே, துந்துகாரி அவ்விமானத்தில் ஏறினான். அப்பொழுது கோகர்ணன் விஷ்ணு தூதர்களைநோக்கி 'ஓ விஷ்ணு தாஸர்களே இவ்விடத்திலிருக்கும் எல்லா ஜனங்களும் ஸ்ரீமத் பாகவதக் கதையைக் கேட்டார்களே; ஆதலால் பலத்தில் பேதமுண்டாகக் காரணமென்ன என்று வினவினான். அதனைக்கேட்ட ஹரி தாஸர்கள், ஓ ஸாதுவே எல்லோரும் ச்ரவணம் பண்ணினவர்களானாலும் இந்த ப்ரேதமானது, செய்தது போல மற்றவர்கள் செய்யவில்லை; ஆகையால் தான் பலன் வேறாயிற்று. 'இது பலத்தைக் கொடுக்குமோ கொடாதோ என்று

சந்தேகப்பட்டு ஜபித்த மந்தரமும் பலவிடங்களில் மனத்தைச் செலுத்திக்கொண்டு செய்த ஜபமும்; விஷ்ணு பக்தர்களில்லாத தேசமும், பாத்ரமான ப்ராஹ்மணர்களில்லாத ச்ராத்தமும், வேதாத்யயனஞ் செய்யாதவனுக்குக் கொடுத்த தானமும், அனாசாரமுள்ள குலமும் ஆகிய இவைகள் ப்ரயோசன மற்றவைகள். குருவின் வார்த்தையில் நம்பிக்கையும், தன்னைத் தீனனாக நினைத்துக் கொள்வதும், மனஸை அட்க்கிக் கொள்வதும், கதையைக் கேட்பதில் ஸ்திரமான புத்தியும் ஆகிய இவைகளுடன் கதையைக் கேட்பது மேலானது. இன்னொரு தடவை இந்தக் கதையைக் கேட்டால் எல்லோருக்கும் வைகுண்டம் கிடைக்கும். ஓ கோகர்ணா! உனக்குப் பகவானாகிய கோவிந்தர் கோலோகத்தைக் கொடுப்பார் என்று சொல்லி வைகுண்டம் சென்றார்கள்.

பின்பு கோகர்ணன் ஆவணி மாதத்தில் மறுபடியும் படனத்தை நடத்தினான். அவர்களும் கேட்டார்கள். கதை முடிந்தவுடன் அநேக விமானங்களுடன் நாராயணமூர்த்தியே நேரில் வந்து சங்கத்தை ஊதினார். பின் அவர் கோகர்ணனைக் கட்டிக் கொண்டு தமக்குச் சமமாக அவனைச் செய்து மற்ற எல்லோர்களையும் விமானத்தில் வைத்துக் கொண்டு கோலோகம் சென்றார். ஸப்தாஹ யஞ்ஞத்தின் மஹிமை இப்பேர்ப்பட்டது. ஸப்தாஹ யஜ்ஞத்தால் கிடைக்கும் பலம் காற்று, ஜலம், இலை இவைகளைப் புஜித்து கடும் தபஸ் செய்வதாலும், யோகத்தாலும் அடையமுடியாது. இந்த இதிகாஸத்தை சித்ரகூட பர்வதத் திலிருக்கும் சாண்டில்ய மஹர்ஷியும் படித்து

பரமானந்தத்தையடைகிறார். இது மிகவும் பரிசுத்தமானது. ஒரு தடவை கேட்ட மாத்திரத்தில் ஸகல பாபத்தையும் நிவர்த்திக்கக் கூடியது. ச்ராத்த காலத்தில் படித்தால் பித்ருக்களுக்கு த்ருப்தி உண்டாகும். இதனை நித்யம் படித்தால் மோக்ஷமும் கிடைக்கும்.

'ஓ சௌனகரே ஸ்ரீமத் பாகவதத்தை ஏழுநாளில் படிப்பதற்குச் சில விதிகள் உண்டு. எப்படி யென்றால் முதல் ஜ்யோதிஷ சாஸ்திரம அறிந்தவர்களை கொண்டு நல்லமுஹூர்த்தம் பார்த்து அதில் ஆரம்பிக்க வேண்டும். ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி இந்த மாதத்தில் ஆரம்பிப்பது மேலானது. 'இன்னகாலத்தில் பாகவதம் படிக்க ஆரம்பிக்கப் போகிறோம், அதனைக் கேட்க தாங்கள் எல்லோரும் வரவேண்டும். ஏழு நாளுமிருக்க முடியாமல் போனால் ஒரு நாளாவது கேட்க வேண்டும். இந்த ஜ்ஞான யஜ்ஞத்தில் ஒரு க்ஷணம் கிடைப்பது மிகவும் அரிது. ஆகையால் குடும்பத்துடன் எல்லோரும் வர வேண்டும் என்று ஒவ்வொரு தேசங்களிலும் கிராமங்களிலும் பத்திரிகை மூலமாக ப்ரஸித்தப் படுத்தவேண்டும். வந்தவர்களுக்கு இடம் முதலியவைகளைக் கொடுத்து உபசரிக்கவேண்டும். வாழை, மாந்தளிர் முதலிய மங்கள த்ரவ்யங்களால் மண்டபத்தை அலங்கரித்து நான்கு திக்குகளிலேயும் த்வஜங்கள் கட்டி வந்தவர்களுக்கு உட்காரத் தகுந்த இடங்களைச் செய்விக்கவேண்டும். மேலும் கதை சொல்பவருக்கு, திவ்யமான ஆஸனம் அமைத்து வைக்கவேண்டும். கதை சொல்லு

கிறவர் வைராக்ய முள்ளவராகவும், வேத சாஸ்திரங்களை யறிந்தவராகவும், விஷ்ணு பக்தராகவும், அதிக ஆசையில்லாதவராகவும், உதாரணம் சொல்வதில் ஸமர்த்தராயும், ப்ராஹ்மணராகியும் இருக்க வேண்டும். சொல்லுகிறவர்க்கு உதவி செய்வதற்காக அவர் போன்ற மற்றொருவர் அவருடைய பக்கத்திலிருக்கவேண்டும். சொல்லுகிறவர் வ்ரதம் — ஆரம்பிப்பதற்கு முன்பு க்ஷௌரம் செய்து கொள்ளவேண்டும். அருணோதயத்திற்குள் தம்முடைய நித்யகர்மங்களைச் சுருக்கமாகவாவது முடித்துக் கொண்டு கதையை ஆரம்பிக்க வேண்டும். மண்டபத்தில் ஸ்ரீமத் பாகவத புஸ்தகத்தையும் பகவானுடைய விக்ரஹத்தையும் நன்றாகப் பூஜித்து ப்ரதக்ஷிண நமஸ்காரஞ் செய்து கடைசியில், 'ஹே கிருஷ்ண! ஸம்ஸாரமாகிய ஸமுத்திரத்தில் முழுகியிருக்கும் தீனனாகிய என்னைக் காப்பாற்றும்' என்று ஸ்தோத்திரம் செய்யவேண்டும். பிறகு கதை சொல்லு பவருக்கு வஸ்த்ரம், ஆபரணம் முதலியவைகள் கொடுத்து, 'சுகரால் சொல்லப்பட்ட ஸ்ரீமத் பாகவதத்தை அறிந்த ப்ராஹ்மணோத்தம! இந்தக் கதையை உபதேசித்து என்னுடைய அஜ்ஞானத்தைப் போக்கும், என்று கேட்டுக் கொள்ள வேண்டும். பணம், வீடு, புத்ரன் இவைகளில் அபிமானத்தை யொழித்து சுத்தசித் தனாயிருந்து கதையை கேட்கவேண்டும். கதையைச் சொல்லுகிறவர் ஸூர்யோதயம் முதல் முன்றரை யாமம் கதை சொல்ல வேண்டும். மத்யா ன்னத்தில் மாத்யான்ஹிக கர்மத்திற்காக இரண்டு நாழிகை நிறுத்திவிட வேண்டும். மல மூத்ர

உபத்ரவமில்லாம விருப்பதற்காக மிதமாய் புஜிக்க வேண்டும். கதை கேட்கிறவன் ஒரு தடவை ஹவிஸை புஜிக்கலாம். சக்தியிருந்தால் ஏழு நாள் உபவாஸமிருப்பது மேலானது. அல்லது நெய், பால், இவைகளை புஜிக்கலாம். பழங்களையாவது புஜிக்கலாம். எப்படியிருந்தால் கதை கேட்க விக்னமில்லாமலிருக்குமோ அப்படி சக்திக்கனுகுணமாக நடத்த வேண்டும். ஆனால் ஸ்திரீஸங்கம், பாயில் படுப்பது இவைகள் கூடாதெனவாம். ஒவ்வொரு நாளும் கதை முடிந்த பிறகே போஜனம் பண்ண வேண்டும். வேதங்களையும், பக்தர்களையும், ப்ராஹ்மணர்களையும் நிந்திக்க கூடாது.

இப்படி ஏழு நாளான பிறகு புஸ்தகத்தையும், அதன் கதையைச் சொல்லுகிறவர்களையும் பூஜித்து, கதை கேட்டவர்களுக்கு ப்ரஸாதம் (துளசி) கொடுக்கப்படவேண்டும். பின்பு மிருதங்கம், தாளம், வீணை முதலியவைகளோடு பகவானுடைய குணத்தைக் கானம் பண்ணவேண்டும். அதன் பிறகு கதை சொன்னவருக்கும், மற்ற ப்ராஹ் மணர்களுக்கும், யாசகர்களுக்கும் தனம் அன்னம் முதலியவைகளைக் கொடுக்கவேண்டும். கேட்கிறவர்கள் ஸன்யாஸியாயிருந்தால் மறுநாள் பகவத் கீதையைப் படிக்கவேண்டும். கிரஹஸ் தராயிருந்தால் தசமஸ்கந்தத்தில் எவ்வளவு சுலோகங்களிருக்கின்றனவோ, அவ்வளவு ஹோமம் பண்ண வேண்டும். ஹோமம் பண்ணச் சக்தியில்லாவிட்டால், யஜ்ஞத்தின் மத்தியில் நேர்ந்த ஸகல தோஷங்களையும் நிவர்த்திப்பதற்காக விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தைப் படிக்கவேண்டும்.

அதன் பிறகு பன்னிரண்டு ப்ராஹ்மணர்களுக்கு போஜனம் செய்துவைத்து அவர்களுக்கு ஸுவர்ணம், பசு, இவைகளைக் கொடுக்க வேண்டும். சக்தியிருக்குமானால் மூன்று பலம் தங்கத்தால் சிங்கத்தின் உருவத்தைச் செய்து அதில் பாகவத புஸ்தகத்தை வைத்து அதைப் பூஜித்து அதை ஆசார்யனுக்கு கொடுக்க வேண்டும். இது ஜ்ஞான யஜ்ஞமாம்.

ஓ சௌனரே! ஆனந்த வனத்தில் ஸனகாதிகள் ஜ்ஞான யஜ்ஞத்தை விதிப்படி முடித்தபிறகு தெய்வச் செயலால் அவ்விடம் சுகர் வந்தார். அவர் வ்யாஸருக்குப் புத்ரர் ஞானமாகிய ஸமுத்திரத்திற்குச் சந்திரன் போன்றவர். ஆத்ம லாபத்தால் பூர்த்தியடைந்தவர். எப்பொழுதும் ஸ்ரீமத் பாகவதத்தைப் படிப்பவர். பதினாறு வயதுள்ளவர். அவரைக் கண்டு அங்கிருந்த ஸதஸ்யர்கள் எல்லோரும் விதிப்படி பூஜிக்க அவர் ஸ்ரீமத் பாகவதத்தின் முதலாவது ஸ்கந்தத்தின் இரண்டு மூன்று ச்லோகங்களில் குறிக்கப்பட்ட விஷயத்தை விஸ்தாரமாகச் சொன்னார். அப்பொழுது பகவான் தம்முடைய பக்தர்களான ப்ரஹ்லாதர், மஹாபலி, உத்தவர் ஆகிய இவர்களுடன் அவ்விடம் வந்து அவர்களை அனுக்ரஹித்ததுமல்லாமல் ஜ்ஞான யஜ்ஞும் நடக்கும் இடத்தில் நாம் இப்படியே ஸான்னித்யம் செய்கிறோம்' என்று அனுக்ரஹித்தார். ஆனதால் ஸ்ரீமத் பாகவதமானது, ஸம்ஸாரமாகிய ஸமுத்ர்த்தில் முழுகிய ஜனங்களைக் காப்பாற்றுகிறேன் என்று கர்ஜித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்.

இதனைக் கேட்டு சௌனகர் ஸூதரை நோக்கி "ஸூதரே சுகர் பரீக்ஷித்துக்கு எந்தக் காலத்தில் உபதேசித்தார்? கோகர்ணர் படித்த காலம் எது? ஆனந்தவனத்தில் குமாரர்கள் சொன்ன ஸமயம் எது? என்று கேட்டார். அவற்றைக் கேட்ட ஸூதர், சௌனகரை நோக்கி" சௌனகரே! ஸ்ரீகிருஷ்ணபகவான் வைகுண்டம் சென்ற நாள் முதல் நூற்று முப்பது வருஷங்களுக்குப் பிறகு கலியுகத்தில் புரட்டாசி மாதம் நவமியில் சுகர் பரீக்ஷித்துக்கு ஸ்ரீமத் பாகவதத்தைச் சொல்ல ஆரம்பித்தார். அது முதல் இருநூறு வருஷங்களுக்குப் பிறகு ஸ்ரீமத் பாகவத கதையைச் சொன்னார். அதில் இருந்து நூற்றுமுப்பது வருஷத்துக்குப் பிறகு (மூவாயிரம் வருஷமென்று சிலர் சொல்லுகிறார்கள்) சுக்லபக்ஷ நவமியில் ப்ரஹ்மபுத்திரர்களான ஸனகாதிகள் சொன்னார்கள். நான்குவித புருஷார்த்தங்களை கொடுக்கிறதற்கு இக்கலியில் ஸ்ரீமத் பாகவத சாஸ்திரத்தைத் தவிர மேலானது ஒன்றுமில்லை. மிகவும் ரஹஸ்யமானது, ஸகல சாஸ்த்திரங்களுடைய ஸாரமானது. ஆகையால் இதனை பக்தியுடன் படியுங்கள் என்று ஸூதர் சொல்லி முடித்தார். (பத்ம புராணம், உத்ர காண்டம் அத்யாயம் ஒன்று முதல் ஆறுவரையில்)

பாகவத பேதங்கள்

அடியில் கண்டபடி ஒரு தமிழ் புஸ்தகத்தால் தெரியவருகிறது. எப்படி யெனில்: பாகவதமானது ஏழு வகையுள்ளது.

1. இதிஹாஸ பாகவதம்: இது வ்யாஸ மஹர்ஷியால் செய்யப்பட்டது. 18,000 ஸ்லோகம் அடங்கியது. இதில் அத்யாயங்கள் 200 இருக்கின்றன. மேலும் இது 12 ஸ்கந்தங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. பரீக்ஷித் மஹாராஜனுக்குச் சுகரால் உபதேசிக்கப்பட்டது.

2. புராண பாகவதம்: இது நாரதரால் ருக்மிணீதேவிக்குச் சொல்லப்பட்டது. இதைச் செய்தவர் வ்யாஸ மஹர்ஷியே. மேலும் இது 600 அத்யாயங்களுள்ளது.

3. ஸம்ஹிதா பாகவதம்: வைசம்பாயனரால் ஜனமேஜயருக்கு உபதேசிக்கப்பட்டது. 50,000 க்ரந்தங்கள் அடங்கியது. 1100 அத்யாயங்கள் அடங்கிய 12 கண்டங்களாகப் பிரிக்கப் பட்டது.

4. உபஸம்ஹிதா பாகவதம்: இது ஸூதர் ஸனகருக்கு அகஸ்திய மஹர்ஷியால் உபதேசிக்கப் பட்டது. இதிலுள்ள 70,000 ஸ்லோகங்கள், 2,000 அத்யாயங்களாகவும் 100 பரிச்சேதங் களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

5. விஷ்ணு ரஹஸ்ய பாகவதம்: இது காச்யபருக்கு ஹாரீதரரால் சொல்லப்பட்டது. இடையிலே தண்டகங்கள் கலந்த 1,00,000 (லக்ஷம்) ஸ்லோகங்களுள்ளது. ஆயிரம் அங்கங்களுள்ளது. 10,000 அத்யாயங்களுள்ளது.

6. விஷ்ணு யாமள பாகவதம்: இது

பராசரால் மைத்ரேயருக்கு உபதேசிக்கப்பட்டது. இதில் 80,000 ச்லோகங்களிருக்கின்றன. மேலும் 800 அத்யாயங்களுள்ளது. 8 ஸ்தானங்களுள்ளது.

7. கௌதம ஸம்ஹிதா பாகவதம்: கௌதமர் கௌசிகருக்குச் சொன்னது. 100 அத்யாயங்கள் உள்ளது. 10,000 ஸ்லோகங்களுள்ளது. 4,00,000 ஸ்லோகங்களுள்ள கௌதம ஸம்ஹி தையில் க்ரந்தலக்ஷண கண்டத்தில் பாகவத லக்ஷணமென்ற முதல் அத்யாயத்தில் மேல் காட்டிய விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸப்தாஹவிதி

முன்னொரு காலத்தில் பரமசிவன் பார்வதியை நோக்கி ஏ! பார்வதீ! ஏழு நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தைப் படிப்பவன், முதலில் வ்யாஸரையும், சுகரையும் நமஸ்கரித்து மஹா விஷ்ணுவை த்யானம் செய்து கொண்டு, முதல் நாளில் முதலாவது ஸ்கந்தம் முதல் ஹிரண்யா க்ஷவதம் வரையில் படிக்க வேண்டும். இரண்டாம் நாளில் பரதனுடைய சரிதம் வரையிலும், மூன்றாம் நாளில் பகவான் ப்ரஹ்லாதரை அனுக்ரஹித்த கதை வரையிலும், நான்காம் நாளில் பத்தாவது ஸ்கந்தத்தில் ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் வரையிலும், ஐந்தாம் நாளில் ருக்மிணி கல்யாணம் வரையிலும், ஆறாம் நாளில் உத்தவருடைய ஸம்வாதம் வரையிலும், ஏழாம் நாளில் முடிவு வரையிலும் படிக்க வேண்டும். படிக்கும்போது அத்யாயத்தின் நடுவில் நிறுத்தக் கூடாது. அப்படி நிறுத்தினால் மறுபடியும் அந்த

அத்யாயத்தை அடிமுதல் படிக்க வேண்டும். படிக்கும்போது அர்த்தத்தைத் தெரிந்துகொண்டே படிக்கவேண்டும். சொல்லுகிறவன் வடக்கு முகமாகவும் கேட்கிறவன் கிழக்கு முகமாவும் அல்லது மாறுதலாகவும் இருக்கலாம். ஒவ்வொரு அத்யாயம் படித்தவுடனும் ஐந்து குந்துமணி நிறையுள்ள தங்கத்தைத் தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டும். முழுவதும் முடிந்தபிறகு பசுவை தக்ஷிணையாகக் கொடுக்கலாம். அந்தப் பசுவின் கொம்புகள் ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப் படவேண்டும். ஏ தேவீ! இம்மாதிரியான விதிப் பிரகாரம் ஸ்ரீமத் பாகவதத்தை யார் படிக்கிறார்களோ, கேட்கிறார்களோ அவர்களுக்கு ஸர்வாபீஷ்டமும் நிறைவேறும். இதனைப் படிக்குங்காலத்தில் ஸகல தேவர்களும், ஸகல மஹரிஷிகளும் ஸ்ரீ விஷ்ணுவின் பார்ஷதர்களும் மஹாவிஷ்ணுவும் அவ்விடத்தில் எப்பொழுதும் மிகுந்த ஆனந்தத்துடன் வஸிக் கிறார்கள், என்று சொன்னார். பத்ம புராணம், பாதாள காண்டம், அத்யாயம் 71.

ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்ட காலம்

கலியுகத்தில் முதல் ஆயிரம் வருஷங்களில் ஸ்ரீமத் பாகவதம் செய்யப்பட்டது.

த்வாபர யுகத்தில் பகவான், வ்யாஸரூபியாய் அவதரித்து வேதங்களைப் பிரித்து, அவைகளை பைலர் முதலானவர்களிடம் ஒப்புவித்தார். பின்பு அவற்றைப் படித்தல், முதலியவைகளில் அதிகாரம் இல்லாத ஸ்த்ரீகள், சூத்ரர்கள் முதலியவர்

களுக்காக, அவைகளின் அர்த்தத்தையே, மஹா பாரதமாகச் செய்து வெளியிட்டார். மேலும் அவரால் மஹா புராணங்களும், உப புராணங்களும் வெளியிடப்பட்டன. கடைசியில் ஸ்ரீமத் பாகவதமும் செய்யப்பட்டது.

ஆக்ஷேபம் — பெரியோர்கள் ஆத்மச்லாகை (தன்னைத் தானே புகழ்வது) செய்து கொள்ள மாட்டார்களாகையாலும், இதிஹாஸ புராணங்களில் வ்யாஸ மஹர்ஷியை ச்லாகித்திருப்பதாலும் சொல்வது பொருந்துமா?

ஸமாதானம்:- அப்படியில்லை. வ்யாஸமஹர்ஷி வேதங்களைப் பிரித்துத் தாம் செய்த மஹா பாரதத்தைச் சுருக்கமாய்ச் செய்யும்படி தமது சிஷ்யர்களான வைசம்பாயனர், ஜைமினி யென்னும் இவர்களுக்கு ஆக்ஞாபனஞ் செய்தார். அவர்களும் தனியே பாரதச் சுருக்கம் செய்தார்கள். இப்பொழுது வழங்கிவரும் பாரதம் வைசம்பாயனர் செய்ததேயாம். மேலும் புராணங்கள், வெகு காலத்திற்கு முந்தியே மார்க் கண்டேயர் முதலிய மஹர்ஷிகளால் செய்யப் பட்டிருந்தன. ஆனாலும் கால மஹிமையால் அவைகளில் சிலவற்றில் சில பாகங்களும் பின்னும் சிலவற்றில் சில ஸர்க்கங்களும் சிலவற்றில் ஸந்தர்ப்பம், விஷயம் இவைகளைச் சொல்லும் — ஸ்லோகங்களும் காணாமல் போயின. சில புராணங்கள் பூர்த்தியாகச் செய்யப்படாமலிருந்தன. இப்படி பற்பல வகையாக குறையுள்ள புராணங்களை வ்யாஸ மஹர்ஷி அந்தந்த புராண நடைக்குச்

சமமான நடையிலேதான் சீர்த்திருத்தினார். பின்னும் அவருடைய சிஷ்யர்கள் அவைகளுக்கு உபோத்காதம் (முகவுரை) அவைகளிலுள்ள ச்லோகம் முதலியவைகளின் ஸங்க்யை, அனுக்ர மணிகை, அந்தந்த புராணத்தைச் சொன்னவர்கள், கேட்டவர்கள் அவர்களுக்குள் நேர்ந்த ஸம்வாதம் முதலியவைகளை எழுதிச் சேர்த்தார்கள்.

பின்பு அவைகளை விட மேலானதாக வ்யாஸ மஹர்ஷி ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்து தம்முடைய புத்ரராகிய சுகருக்கு உபதேசித்தார். பின்பு ஸூதர் அந்த பாகவதத்தைச் சுகரிடமிருந்து தெரிந்து கொண்டு சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்குச் சொன்னார். ஆகையால் இந்த விஷ்ணு பாகவதம் வ்யாஸரால் செய்யப்பட்டதேயாம். மற்ற புராணங்கள் அவரால் சீர்திருத்தப்பட்டதேயாம்.

பரீக்ஷித்து மஹாராஜனுக்குக் கலியும் வந்த பிறகு தர்ம புத்ரர் ராஜ்யாபிஷேகம் செய்வித்ததாக பாகவதம், விஷ்ணு புராணம், பாரதம் முதலிய வைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னமேயே பாகவதம் செய்யப்பட்டிருக்குமாகில் பரீக்ஷித்தின் சரித்திரம் அதில் சொல்ல நியாய மில்லை, ஆகையால் இது கலியுகத்தின் ஆரம் பத்தில் செய்யப்பட்டதேயாம்.

ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தவர்

பாகவதத்தைச் செய்தவர் ஸ்ரீ வேதவ்யாஸ மஹரிஷி. வேதங்களைப் பிரித்த காரணத்தால் இவருக்கு இப்பெயருண்டாயிற்று. இவர் மஹா

விஷ்ணுவின் அவதாரம். இவருடைய பிதா பராசர மஹர்ஷி. இவருடைய தாய் ஸத்யவதி. இவள் வஸுவின் வீர்யத்தைப் புஜித்த மத்ஸயத் தினிடம் உண்டானவள். ஆனது பற்றி இவளுக்கு மத்ஸயகந்தி என்னும் பெயர் சிலகாலம் வழங்கின துண்டு. பராசர மஹர்ஷி ஒருக்கால் தீர்த்த யாத்திரை செய்துவரும் பொழுது வழியில் ஆற்றில் ஓடம் தள்ளிக் கொண்டிருக்கும் வலையன் கன்னியான மத்ஸயகந்தியைக் கண்டார். மேலுமவர் அவளுடைய லாவண்யத்தைக் கண்டு மோஹித்து அவளிடம் ஆசை கொண்டார். அப்பொழுது நல்வாசனையுண்டாகும்படி அனுக்ரஹித்தார். அதுமுதல் அவளுக்கு யோஜனகந்தியென்று பெயர் வழங்கினது. அவ்விருவர்களுக்கும் பிறந்தவர் வ்யாஸமஹர்ஷி.

அவர் வேதங்களைப் பிரித்தும் ஸ்த்ரீ, சூத்ரர் களுக்காக ஐந்தாவது வேதமாகிய பாரதத்தையும் செய்தார். அப்படியும் அவர் மனத்திற்கு சந்தோஷ முண்டாகாததனால் கவலையுள்ளவராக ஸரஸ்வதீ நதிக்கரையில் சம்யப்ராஸமென்ற ஆச்ரமத்தில் வசித்தார். அப்பொழுது தெய்வச் செயலாய் அவ்விடம் வந்த நாரதரிடம் உபதேசம் பெற்று ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தார்.

கதை நடந்த க்ஷேத்ரம்

கலியுகத்தில், ஸூதர் நைமிசாரண்யத்தில் வஸிக்கும் சௌனகர் முதலிய மஹர்ஷிகளுக்கு இந்த பாகவத கதையைச் சொன்னார். மேலும்

நைமிசமென்பது ஒரு புண்யக்ஷேத்ரம் ஆனது பற்றி அவ்விடத்தில் அநேக மஹர்ஷிகள் வஸிப்பார்கள். அனேக பெரியோர்கள் அவ்விடத்திற்கு வருவது முண்டு. ப்ரஹ்மதேவர் ப்ராஹ்மணர்களை நோக்கி இந்த மனோமயாகிய சக்ரத்தை ப்ரயோகிக்கிறேன்; இதனுடைய நேமி (முனை) எவ்விடத்தில் மழுங்குமோ அதுவே தபஸ் செய்ய தகுதியான க்ஷேத்ரம் என்று சொல்லி ஸூர்யனுக் கொப்பான சக்ரத்தை மனத்தால் ஸிருஷ்டித்து, பரமசிவனைக் குறித்து நமஸ்காரம் செய்து அதை ப்ரயோகித்தார். அதைப் பார்த்திருந்த ப்ராஹ்மணர்களும் மிகுந்த ஸந்தோஷத்துடன் அதன்பின் சென்றார்கள். அது கீழே விழுந்து அதன் நேமி மழுங்கின இடத்திற்கு நைமிசமென்று பெயருண்டாயிற்று. அவ்விடத்தில் மஹர்ஷிகள் வஸித்தார்கள். வாயு புராணம். அந்த க்ஷேத்ரத்தை நைமிஷமென்று சொல்வதுண்டு. ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் கௌரமுகரென்ற மஹர்ஷியை நோக்கி ஒரு நிமிஷத்திற்குள் அஸுர ஸைன்யங்கள் இவ்விடத்தில் கொல்லப்பட்டபடியால் இவ்விடத்திற்கு நைமிஷமென்று பெயருண்டாகட்டும். இது ப்ராஹ்மணர்கள் முக்யமாய் வஸிக்கும் இடம் என்று சொன்னார் வராஹபுராணம்.

மஹர்ஷிகளுக்கு உபயோகமாகிய மரங்கள் நிமிஷங்களென்று சொல்லப்படுகின்றன. அவைகள் ஏராளமாக இருக்குமிடமே நைமிஷமெனப் படுகிறது. அல்லது நிமிஷரென்னும் மஹர்ஷி தபஸ் செய்த இடமாகையால் நைமிஷமென்று அதற்குப் பெயருண்டாயிற்று. விஜயத்.

ஸூதருடைய வரலாறு

"இந்த விராட்ரூபியான மஹாபுருஷனுடைய முகத்திலிருந்து ப்ராஹ்மண ஜாதியும், கைகளிலிருந்து க்ஷத்திரிய ஜாதியும், துடைகளிலிருந்து வைச்ய ஜாதியும், பாதங்களிலிருந்து சூத்ரர்களும் உண்டானார்கள். என்று ஸ்ருதியில் சொல்லப்பட்டிருப்பது போல அவருடைய ரோமாஞ்சத்திலிருந்து (மயிர்க்கூச்சிலிருந்து) ஸூத ஜாதியி உண்டாயிற்று. அவரே ரோமஹர்ஷணர். மஹாபாரத தாத்பர்ய நிர்ணயம் – அத்யாயம் 90, பகவானுடைய கதையைக் கேட்டுக் கொண்டு இருக்கும்போது பக்தி விசேஷத்தால் மயிர்க்கூச்சிலுண்டானபடியால் அவருக்கு ரோமஹர்ஷணர் என்று பெயருண்டாயிற்று. இவர் ஸூத ஜாதியிற் பிறந்தவர் –அபியுக்தர்கள். அவருக்கு ஸ்ரீ வேத வ்யாஸ மஹர்ஷியானவர் ஸகல புராணங்களையும், இதிஹாஸங்களையும் உபதேசித்தார்.

பிறகு ரோமஹர்ஷணர் நைமிசாரண்யத்தில் வஸிக்கும் மஹர்ஷிகளுக்குப் புராணங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்படியிருக்கையில் ஒருநாள் பலராமன் அவ்விடம் வந்தார். அவரைக் கண்டவுடன் ஸகல மஹர்ஷிகளும் எழுந்திருந்து விதிப்படி மரியாதை செய்தார்கள். அப்பொழுது ரோமஹர்ஷணர் மாத்திரம் ஆஸனத்திலிருந்து எழுந்திருக்கவில்லை. அதைக் கண்ட பலராமன் மிகவும் கோபங்கொண்டார். பிறகு அவர் 'தாழ்ந்த குலத்தில் பிறந்தவராகிய இந்த ரோமஹர்ஷணர் நம்மைக்கண்டு எழுந்திருக்காமலும், இந்த மஹர்ஷிகளின் முன்பாக உயரமான ஆஸனத்திலுட்கார்ந்து

மிருக்கிறார், இவரை நிக்ரஹிக்கவேண்டும்' என்று எண்ணிக் கையிலிருந்த தர்ப்பத்தால் அவரையடித்தார். அதனால் ரோமஹர்ஷணரும் உடனே இறந்தார். அப்பொழுது மஹர்ஷிகளனைவரும் பலராமனை நோக்கி பிரபுவே! நீர் செய்தது தர்மத்திற்கொத்ததல்ல. இவருக்கு நாங்கள் ப்ரஹ்மாஸனத்தைக் கொடுத்து அவருடைய தேஹத்தில் ச்ரமம் உண்டாகாமலிருக்கும்படியும், அவர் வெகுகாலம் ஜீவித்திருக்கும்படியும் அனுக்ரஹித்திருந்தோம். நீர் லோகத்தை அனுக்ரஹிப்பதற்காக அவதரித்தவராகையால், எங்களுடைய வார்த்தை பொய்யாகமலிருக்கும்படிச் செய்ய வேண்டும். இந்த தோஷத்தை நிவர்த்தித்துக் கொள்வதற்காக நீர் ப்ராயச்சித்தத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்றார்கள். அதைக் கேட்ட பலராமன் அவர்களை நோக்கி பிதாவிற்கும் புத்திரனுக்கும் பேதமில்லையென்று ஸ்ருதியில் சொல்லப்பட்டிருப்பதனால், ரோமஹர்ஷணருடைய குமாரராகிய உக்ரச்ரவஸ் என்பவர் அந்த ஆஸனத்தில் உட்கார்ந்து உங்களுக்குப் புராண கதைகளைச் சொல்லட்டும். அவருக்கு எவ்வளவு நாள் கதை சொன்னாலும் தேஹத்தில் ச்ரமமில்லாமலிருக்கட்டும். மேலும் வெகுநாள் ஜீவித்திருப்பார் என்று சொல்லி தீர்த்த யாத்திரைக்குச் சென்றார். (பாகவதம் ஸ்கந்தம் 10, அத்தியாயம் 78)

மேல் காட்டியபடி ரோமஹர்ஷணருக்குப் பிறகு அந்த உக்ரச்ரவஸ், அந்த ஆஸனத்திலிருந்து மஹர்ஷிகளுக்குப் புராணங்களைச் சொல்லிக்

கொண்டிருந்தார். அந்த ரோமஹர்ஷணர் ஸூத ஜாதியில் பிறந்தவராகையால் அவருக்கு ஸூத ரென்று பெயருண்டு. அவருடைய பிள்ளைக்கும் ஸூதரென்று பெயர் வழங்கி வருகிறது. பல ராமன் பாரதயுத்தம் நடக்கும்போது நைமிசாரண்யஞ் சென்றார். ஆகையால் அதுவரையில் அவ்விடத்தில் கதை சொல்லிக் கொண்டிருந்தவர் ரோமஹர்ஷணரேயாம். பிறகு அவருடைய புத்ரராகிய உக்ரச்ரவஸே புராணஞ்சொன்னார். ஆகையால் ஸ்ரீமத் பாகவதத்தைச் சொன்னவர் உக்ரச்ரவஸ் என்ற ஸூதரேயாம். இவர் ஸகல புராணங்களையும் இதிஹாஸங்களையும் அறிந்தவர். த்ரையாருணி, கச்யபர், ஸாவர்ணி, அகிருதவ்ருணர், சிம்சுபாயனர், ஹாரீதர் ஆகிய ஆறு பேர்களும் வ்யாசமஹர்ஷியின் சிஷ்யராகிய என் தகப்பனார் இடமிருந்து ஒவ்வொரு ஸம்ஹிதையை அத்யயனஞ் செய்தார்கள். நான் இவர்கள் எல்லோருக்கும் சிஷ்யனாக இருந்து எல்லா புராண ஸம்ஹிதைகளையும் தெரிந்து கொண்டேன் என்று ஸூதர் சொன்னார். (பாகவதம் ஸ்கந்தம் 12 அத்யாயம் 6, ச்லோகம் 5 , 6)

சுகருடைய சரிதம்

முன்னொரு காலத்தில் மஹாமேரு பர்வதத்தில் ஸ்ரீவேத வ்யாஸ மஹர்ஷி உத்தமனாகிய புத்ரனையடைய வேண்டித் தபஸ் செய்தார். அதனால் பரமசிவன் ஸந்தோஷப்பட்டு அவரை நோக்கி 'ஓ மஹர்ஷியே உம்முடைய இஷ்டப்படி மிகுந்த தேஜஸுள்ளவனும், கீர்த்தியுள்ள

வனுமாகிய புத்ரன் உண்டாவான்' என்று அனுக்ரஹித்தார். பிறகு ஒருக்கால் ஒப்பற்ற ரூபமுள்ள கிருதாசி என்ற அப்ஸரஸ்த்ரீ அவ்விடம் வந்தாள். அவளைக் கண்டவுடன் இவருக்கு மன்மத தாபமுண்டாகியது. அப்பொழுது மஹர்ஷியானவர் கிளி வேஷத்தையெடுத்துக் கொண்டார். பிறகு மிகவும் தைர்யத்தால் மன்மத தாபத்தை மஹர்ஷியடக்க முயன்றும் அது குறையாமல் விருத்தியாயிற்று. மேலும் அவருடைய வீர்யம் நழுவினது. அதிலிருந்து உண்டான புத்ரர்தான் சுகரென்ற பெயரையடைந்தார். இவர் பிறந்தவுடனே கங்கா நதியானவள் திவ்ய சரீரத்துடன் அவ்விடம் வந்து அவருக்கு ஸ்னானஞ் செய்துவைத்தாள். ஆகாயத்திலிருந்து தண்டம், கிருஷ்ணாஜினம் ஆகிய இவைகள் விழுந்தன. விச்வாஸு முதலிய கந்தர்வர்கள் கானஞ்செய்தார்கள், தேவதுந்துபிகள் முழங்கின. இந்திரன் முதலிய லோக பாலர்களும் அவ்விடம் வந்ததுமின்றி புஷ்பங்களை வர்ஷித்தார்கள். பரமசிவன் பார்வதியுடன் அக்குழந்தைக்கு விதிப்படி உபனயனம் செய்தார். மஹேந்திரன் அற்புதமான கமண்டலுவை கொடுத்தார் இவருடைய பிதாவாகிய வ்யாஸ மஹர்ஷி பிறந்தவுடன் ஸகல வேதங்களும் தோன்றியது போலச் சுகருக்கும் வேதங்களும், ஸகல புராணங்களும், இதிஹாஸங்களும் தோன்றின. மேலும் அவர் ப்ரஹஸ்பதி பகவானை ஆசார்யராகவரித்தார். ஆனதால் அந்தச் சுகர் எல்லாவித்தைகளையும் அப்யஸித்தவர். அவர் பால்யவயதுள்ளவரானாலும் தேவர்களாலும் மஹர்ஷிகளாலும் மற்றவர்களாலும்

கொண்டாடக் கூடியவராக இருந்தார். மேலும் அவருடைய மனஸானது மோக்ஷ தர்மத்திலேயே விருப்பமுள்ளதாக விருந்ததேயொழிய விஷயத்தில் செல்லவில்லை. பிறகு அவர் தம்முடைய பிதாவாகிய வ்யாஸ மஹர்ஷியை நோக்கி மோக்ஷ தர்மங்களைச் சொல்லவேண்டும் என்று கேட்டார். அதைக்கேட்ட வ்யாஸ மஹர்ஷியானவர் தன் புத்ரரை நோக்கி மோக்ஷ தர்மம் தெரிந்து கொள்ள வேண்டுமானால் மிதிலா நகரத் தரசராகிய ஜனகரிடம் போய் தெரிந்து கொள்ளும் என்றார். அதைக் கேட்ட சுகர் அப்படியே மிதிலா நகரம் சென்று ஜனகருடைய அரண்மனைக்கு போகும் போது அவ்விடமிருந்த காவலாட்களால் தடுக்கப்பட்டார். ஆனாலும் கோபங்கொள்ளவில்லை. வெகுதூரம் நடந்து வந்த தால் சரீரத்திற்கு நேர்ந்த ச்ரமத்தையும், பசி தாஹம் இவைகளால் நேர்ந்த துக்கத்தையும் ஸஹித்தார். பிறகு அவ்விடமிருந்த ஒரு காவலாள் அவரை வணங்கி உள்ளே அழைத்து நிழலில் உட்காரச் செய்தான். அதனாலும் அவர் ஸந்தோஷிக்கவில்லை. பிறகு மந்திரியானவர் மிக வணக்கத்துடன் வந்து சுகரை வணங்கி அந்தப் புரத்திற் கழைத்துபோய் திவ்யமான ஆஸனத்தில் உட்காரவைத்தார். பிறகு மிகவும் ரூபவதிகளான சிறு பெண்கள் அனேகர்கள் அவ்விடம் வந்து உத்தமமாகிய அன்னத்தால், வாத்ய கோஷங்களாலும் நர்த்தனங்களாலும் பிரியமான வார்தைகளாலும் உபசரித்தார்கள். மேலும், அவரைத் தோட்டத்திற்கழைத்துப்போய் அழகான மரங்களையும், பக்ஷிகளையும், தாமரஸ ஓடை

களையும் காண்பித்தார்கள். இப்படி அவர்களால் உபசரிக்கப்பட்டும் அவைகளில் பிரியப்படாமலேயே மோக்ஷ மார்க்கத்தையே த்யானித்துக் கொண்டு அன்றைய ராத்திரியைக் கழித்தார். மறுநாள் காலையில் ஜனகமஹாராஜன் இவரை சபைக்கு வரவழைத்து உபசரித்து மோக்ஷ தர்மத்தை உபதேசித்தார். (மஹாபாரதம், சாந்திபர்வம், அத்யாயம் 323 - 325)

ஸ்ரீ கிருஷ்ணாவதார காலம்

ஸ்ருஷ்டி முதல் 28வது மஹாயுகத்திற்குட் பட்ட த்வாபர யுகத்தின் முடிவில், தேவகியின் இடம் பகவான் அவதரித்தார். 28 வது மஹா யுகத்தில் த்வாபரயுகத்தின் கடைசியில் யது வம்சத்தில் பகவான் அவதரிக்கப் போகிறாரென்று கர்க்காசார்யர் முன்னமே சொல்லியிருக்கிறார் விஷ்ணு புராணம் 5வது பாகம், அத்யாயம் 23.

மேற்காட்டிய த்வாபர யுகமானது நிகழும் கலியுகத்திற்கு முந்தியேயாம். பகவான் பூலோகத்தில் கிருஷ்ணனாக அவதரித்து 125-வருஷங்கள் பூமியில் வஸித்து, பிறகு வைகுண்டம் சென்றார். ஓ ப்ரபுவே! யதுவம்சத்தில் அவதரித்து 125 வருஷங்களாயின. ஸ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம் 11 அத்யாயம் 6.

"வஸுக்கள், அச்வினீ தேவர்கள், மருத்துக்கள், ஆதித்யர்கள், ருத்ரர்கள், ஸாத்யர்கள் ஆகிய இவர்களுடன் மஹேந்திரனனான். என் முகமாகப்

பின்வருமாறு விக்ஞாபனம் செய்கிறான். கெட்ட நடத்தையுள்ள அஸுரர்களைக் கொன்று பூமியின் பாரத்தை நிவர்த்தி செய்தீர். ஸ்வர்க்கத்தில் இருக்கும் எல்லாத் தேவர்களும் உங்களால் யஜமானனுள்ளவர்களாக ஆகட்டும். நீங்கள் பூமியில் அவதரித்து 125 வருஷங்கள் ஆயின. உங்களுக்கு இஷ்டமிருந்தால் வைகுண்டம் வரலாம் விஷ்ணு புராணம் பாகம் 5, அத்யாயம் 37.

இப்படித் தேவர்கள் ப்ரார்த்தித்தவுடன் ஸ்ரீ பகவான் உத்தவரை நோக்கி, இன்றைய முதல் 7வது நாளில் ஸமுத்ரம் இந்தப் பட்டணத்தைக் கவர்ந்து கொள்ளும். அவ்வுலகத்தை நான் விட்டவுடன் இவ்வுலகம், மங்களகார்யமற்றதும், கலியினால் அவமதிக்கப்பட்டதுமாய் விடும் ஸ்ரீ மத் பாகவதம் ஸ்கந்தம் 11, அத்யாயம் 7.

"என்றைய தினத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஸ்வர்க்கம் சென்றாரோ அன்றைய தினமே கலியுகம் வந்தது. விஷ்ணு புராணம் பாகம் 4, அத்யாயம் 24.

இதனால் தேவர்கள் ப்ரார்த்தித்தவுடன் தாமதம் இன்றிப்பகவான் வைகுண்டஞ் சென்றாரென்று தெரிய வருகிறது.

ஆகையால் 28 வது மஹாயுகத்தில் த்வா பாயுகத்தின் கடைசி பாகத்தில் பகவான் அவதரித்து 125 வருஷங்கள் பூலோகத்தில் வஸித்தார். பின்பு வைகுண்டம் செல்லும்போது கலி வந்து விட்டது (த்வாபரயுகம் முடிந்தது.)

Released by Maran's Dog, Toronto , Canada

"என்றைய தினம் ரோஹிணி நக்ஷத்திரமோ அன்றைய தினம் ராத்திரி இருட்டில் தேவகியினிடம் பகவான் அவதரித்தார். பாகவதம் ஸ்கந்தம் 10, அத்யாயம் 3.

"நான் வருஷா காலத்தில் ச்ராவண மாஸத்தில் க்ருஷ்ண பக்ஷத்திய அஷ்டமி திதியில் தேவகியினிடம் அவதரிக்கப் போகிறேன் விஷ்ணு புராணம், பாகம் 5, அத்யாயம் 1.

"ச்ராவண மாஸத்தில் க்ருஷ்ணபக்ஷத்திய அஷ்டமி திதியில் ரோகிணி நக்ஷத்திரத்தில், அர்த்தராத்திரி காலத்தில், சந்த்ரோதயமாகும் ஸமயத்தில், அபிஜித் முஹூர்த்தத்தில், தேவகியிடம் மஹாவிஷ்ணு வானவர் அவதரித்தார். அதே காலத்தில் அவருடைய மாயையும் யசோதையினிடம் கோகுலத்தில் புத்ரியாகப் பிறந்தாள். ஹரிவம்சம் பாகம் 1, அத்யாயம், 25.

மேற்காட்டிய ப்ரமாணங்களால் 28 வது மஹாயுகத்தில் த்வாபர யுகத்தில் 8, 63, 875வது வருஷத்தில் ச்ராவண மாஸத்தில் கிருஷ்ண பக்ஷம் அஷ்டமீ திதியில், ரோகிணி நக்ஷத்திரத்தில், அர்த்தராத்ரியில், பகவான் அவதரித்தாரென்று நிச்சயிக்கப்படுகிறது. ஆகையால் பகவான் அவதரித்த காலம் முதல் நிகழும் 24 வது பரிவிருத்தியில் ஸௌம்யவருஷம் வரையில் **5230** வருஷங்கள் ஆயினவென்று பெரியோர்களால் சொல்லப் படுகிறது.

♣ ♣ ♣ ♣

Released by Maran's Dog, Toronto , Canada

Released by Maran's Dog, Toronto , Canada

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்ரீ கிருஷ்ணாய பரமாத்மனே நம:

அத்யாயம்-1

சௌனக ப்ரச்னம்.

Released by Maran's Dog, Toronto , Canada

"எதனிடமிருந்து ஸகல ப்ரபஞ்சங்களும் உண்டாகின்றனவோ, எதனால் காப்பாற்றப்படுகின்றனவோ, எதனிடத்தில் லயிக்கின்றனவோ, அது ப்ரஹ்மம்" என்ற ச்ருதியில் சொல்லியபடியுள்ள தடஸ்த லக்ஷணமுள்ளவரும், அன்வய வ்யதிரேகங்களால் ஸகல ஜகத்காரணரும், எல்லாவற்றையும் அறிந்தவரும், ஸ்வயமாய் ப்ரகாசிப்பவருமான எந்தப்பரமேச்வரர், நான்கு முகங்களுள்ள ப்ரஹ்மதேவருக்கு வேதங்களை மனத்தால் உபதேசித்தாரோ, (அந்த வேதங்களைத் தெரிந்து கொள்வதில், வித்வான்களும் மோஹிக்கிறார்கள்.) தேஜஸ், ஜலம், பூமி ஆகிய இவைகள் ஒன்றில் ஒன்று மாறுதலாகத் தோன்றுகிறது போல எந்தப் பரமாத்மாவிடம் (அவர் ஸத்யராகையால் முக்குணங்களுடைய கார்யமும், ஸத்யமாகத் தோற்றுகிறதோ, அந்த ஸத்ய ஸ்வரூபியாகிய பரமாத்மாவைத் த்யானிக்கிறோம். அவர் தம்முடைய தேஜஸினால் மாயாகார்யமாகிய ப்ரபஞ்சத்தைத் தாண்டினவர்.

2. வேதவ்யாஸ மஹாமுனியால் செய்யப்பட்டதும், அழகு பொருந்தியதுமான, ஸ்ரீமத் பாகவத க்ரந்தத்தில் மோக்ஷத்தைக் கூட விரும்பாமல் செய்யும், ஈச்வரருடைய ஆராதனரூபமாகிய உத்தம தர்மமானது காட்டப் பட்டிருக்கிறது. பிறருடைய மேன்மையை ஸஹிக்காம

Released by Maran's Dog, Toronto , Canada

விருப்பதாகிய மாத்ஸர்யமில்லாத ஸாதுக்களால், அறியக்கூடியதும் (ஜீவன், மாயை, ஜகத் என்னுமிவை கள் பரமாத்மாவைவிட வேறானவையல்ல) மேலான ஸுகத்தைக் கொடுக்கக்கூடியதும், மூன்று வகையான தாபங்களைப் போக்கக்கூடியதும், உண்மையுமான வஸ்துவானது இதில் நன்றாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. மற்ற சாஸ்த்ரங்களாலும் இதர ஸாதனங்களாலும் ஈச்வரனை ஹிருதயத்தில் நிலைக்கச் செய்யமுடியுமா? ஆகையால் அவைகளால் என்ன பிரயோஜனம். இந்த ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்க விரும்பிய புண்யவான் களுடைய மனத்தில் கேட்ட க்ஷணத்திலேயே பகவான் ஸ்திரமாக வஸிக்கிறார்.

3. வேதமாகிய கல்பக விருக்ஷம் அதனுடைய பழம் ஸ்ரீமத் பாகவதமேயாம். இது வைகுண்டத்திலி ருந்து நாரதரால் எனக்கும், என்னால் சுகருக்கும், அவர் முகமாகப் பூமியிலும் நழுவியது. (பரவிற்று) இது அமிருத த்ரவமுள்ளது (ருசியுள்ளது) ரஸரூபமா யுள்ளது. ஓ! ரஸத்தையறிந்தவர்களே! அதன் விசேஷ பாவனையில் ஸமார்த்தியமுள்ளவர்களே! மேற்காட்டிய பழத்தை முக்தர்களாக இருக்கும் பொழுதும், அடிக்கடி புஜியுங்கள்.

4–231/2. ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் க்ஷேத்ரமாகிய நைமிசமென்னும் வனத்தில், சௌனகர் முதலிய மஹர்ஷிகள், ஸ்வர்க்கலோகத்தை யடைவதற்காக, ஆயிரம் வருஷங்கள் ஸத்ரமென்னும் யாகத்தை யனுஷ்டித்து வந்தார்கள். அப்பொழுது ஒருநாள் அவர்கள் காலையில் அக்னிகார்யங்களை முடித்துக் கொண்டு, எல்லோராலும் பூஜிக்கப்பட்டு, ஸுகமாய்

உட்கார்ந்திருக்கும் ஸூதரை நோக்கி மிக்க ப்ரீதியுடன் "ஓ பாபமற்றவரே! புராணங்கள், இதிஹாஸங்கள், தர்மசாஸ்த்ரங்கள் இவைகளை நீர் படித்திருப்பதுடன் அவ்வவற்றின் அர்த்தத்தைப் பிறருக்கும் தெரியும்படி சொல்லியுமிருக்கிறீர். ஓ ஸாதுவே! வேதங்களை யறிந்தவர்களுக்குட் சிறந்தவராகிய வ்யாஸபகவானுக்கு தெரிந்தவைகளும், பரம்(ஸகுணப்ரஹ்மம்) அபரம் (நிர்குணப்ரஹமம்) இவைகளை நன்றாய் அறிந்த மற்ற மஹர்ஷிகளுக்குத் தெரிந்தவைகளும், அவர்களுடைய அனுக்ரஹத்தால் தங்களால் உண்மையாக அறியப்பட்டவைகளே! ஆசார்யர்கள், ரஹஸ்யமான விஷயத்தையும், ப்ரியனாகிய சிஷ்யனுக்குச் சொல்வது வழக்கம். ஆகையால் [எப்பொழுதும் க்ஷேமத்தையே கொடுப்பது இன்னதென்று ஸகல க்ரந்தங்களைப் படித்து தாங்கள் நிச்சயமாகத் தெரிந்து கொண்டதை எங்களுக்கு உபதேசிக்கவேண்டும்.] ஓ ஸூதைக்குரியவரே! இந்தக் கலியுகத்தில் ஜனங்கள் பெரும்பாலும் அதிக காலம் ஜீவித்திருப்பதில்லை; சோம்பலுள்ளவர்கள்; அதிலும் மிகவும் மந்தபுத்தியுள்ளவர்கள்; தவிரவும் பாக்யக் குறைவுள்ளவர்கள்; (விக்னங்களால் வருத்தப் பட்டவர்கள்)வியாதி முதலியவைகளால் துன்பமடைந்த வர்கள்; ஆகையால் வெகுகாலம் அநேக சாஸ்த்ரங்களைக் குருமுகமாய்க் கேட்கவும், அவைகளில் சாரத்தை தாமாகத் தெரிந்துகொள்ளவும் சக்தியற்றவர்கள்; பலவகை கர்மங்களைச் சொல்லும் அநேக சாஸ்த்ரங்களோ, தனித்தனியே தெரிந்துகொள்ள வேண்டியவைகளாக இருக்கின்றன. ஆனதால் எதனால் பரமாத்மாவின் ப்ரஸாதம் ஸித்திக்குமோ அந்த ஸாரமான விஷயத்தை தங்களுடைய புத்திக்குத் தோன்றியபடி எடுத்து உபதேசிக்க வேண்டும்.

அதனால் ஸகல ப்ராணிகளும் க்ஷேமத்தையடைவார்கள். ஓ! ஸூதரே! தங்களுக்கு இவ்விஷயம் யாவும், தெரிந்த வையே. நமக்கு க்ஷேமமுண்டாகட்டும். அளவில்லாத, ஐச்வர்யம் முதலியவைகளுள்ள, ஸாத்வதர்களுக்கு நாதனாகிய புருஷோத்தமன், தேவகியினிடம் வஸுதேவருக்குப் புத்ரனாக எதனைச் செய்வதற்காக அவதரித்தாரோ அந்தச் சரிதத்தைக் கேட்க விரும்பும் எங்களுக்கு தாம் உபதேசிக்கவேண்டும். எந்த பகவான் பூமியில் அவதரித்ததால் ப்ராணிகளுக்கு க்ஷேமம், ஐச்வர்யம், இவைகள் கிடைத்தனவோ, கோரமாகிய ஸம்ஸாரத்தை (இறப்புப்பிறப்பை) அழிந்தவன் எவருடைய திவ்யநாமங்களை உச்சரித்த மாத்ரத்தில் அதிலிருந்து விடுபடுகிறானோ, எவருடைய நாமத்தை கண்டு பயமும் பயப்படுகிறதோ, மேலும் இந்திரியங்களை ஜயித்தவர்களான முனிகள் எவருடைய பாதங்களையே ஆச்ரயித்திருக்கிறார்களோ, எவருடைய பாதத்திலிருந்து உண்டான கங்கையின ஜலமானது, தர்சிப்பவர்களையும், தொடுகிறவர்களையும், ஆசமனம் செய்பவர்களையும், பரிசுத்தர்களாகச் செய்கிறதோ; புண்ய ச்லோகர்களால் கொண்டாடக்கூடிய அந்தப் பகவானுடைய சரிதம் ஸம்ஸாரதுக்கத்தைப் போக்குமாகையால் சுத்தனாக வேண்டுமென்ற எண்ணமுள்ள எவன்தான் அதைக் கேட்கமாட்டான். ஆகையால் நாரதர் முதலிய ஞானிகளால், எப்பொழுதும், கானஞ் செய்யப்பட்டதும், ஸம்ஸார துக்கத்தை நிவர்த்திப்பதுமான, மேலான அந்த சரிதத்தை கேட்க நாங்கள் மிக ச்ரத்தையுள்ளவர் களாக இருக்கிறோம். ப்ரஹ்மா,ருத்ரன், முதலிய மூர்த்தி பேதத்தைத் தரிப்பவரும், தம்முடைய மாய மஹிமையால் லீலைகளைச் செய்பவருமாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அவதார கதைகளைச் சொல்ல

வேண்டும். அவைகளைப் போதிக்க தாங்கள் வல்லமை யுள்ளவர்களே. உத்தமச்லோகராகிய பகவானுடைய சரிதத்தைக்கேட்கக் கேட்க எங்களுக்கு போதுமென்ற திருப்தியுண்டாகிறதில்லை, பகவானுடைய சரிதமானது, கேட்பவர்களான ரஸிகர்களுக்கு அடிக்கடி இன்பத்தை கொடுக்கும். ஸ்ரீமஹா விஷ்ணுவானவர் மாயையால் மனிதனாக அவதரித்து, பலராமனுடன் சேர்ந்து மனிதர்களால் செய்யமுடியாத கோவர்த்தன பர்வதத்தை தூக்கியது முதலிய லீலைகளைச் செய்தாரல்லவா? இப்பொழுது கலியுகம் வந்துவிட்ட படியால், நாங்கள் விஷ்ணுவின் பதத்தையடைய விரும்பி மேல் சொல்லிய பகவானுடைய சரிதத்தைக் கேட்பதற்காகவே தீர்க்க ஸத்ரஞ் செய்வதான காரணத்தைக் கொண்டு இந்த நைமிசாரண்யத்தில் வஸிக்கிறோம். ஸமுத்ரத்தைத் தாண்ட விரும்பியவர் களுக்கு ஓடக்காரன் கிடைத்தாற்போல அதர்மத்திற்கு பந்துவாகிய இந்தக்கலியைக்கடக்க விரும்பிய எங்களுக்கு, உம்முடைய தர்சனம் தெய்வச்செயலால் நேர்ந்தது. தர்மத்தைக் காப்பாற்றி வந்தவரும், யோகிகளுக்கு அதிபதியுமான ஸ்ரீகிருஷ்ணபகவான் மனித சரீரத்தைவிட்டு தன்னுடைய ஸ்வரூபத்தை யடைந்தபின்பு தர்மம் யாரைச் சரணமடைந்தது சொல்லவேண்டும் என்று கேட்டார்கள்.

நோட்டு.

ஸ்ரீ வேதவ்யாஸபகவான் பாகவத சாஸ்த்ரத்தைச் செய்யவிரும்பி இடையூறின்றி முடியவேண்டியதற்காக பெரியோர்களுடைய ஸம்ப்ரதாயப்படி பரமாத்மாவை ஸ்மரிப்பதாகிய மங்களத்தைக் காட்டுகிறார். – ஸ்ரீ தரியம்.

1–1. எவரிடமிருந்து–ஸ்ரீ பாதராயணர் என்னும் வ்யாஸ பகவான், ஸகல ஜனங்களையும், ஸம்ஸார பந்தத்திலிருந்து நிவர்த்தித்து, அனுக்ரஹிப்பதற்காக வேதாந்தத்தாலே அறியக்கூடியதும், மற்றப்ரமாணங் களுக்குப புலப்படாததுமான பரப்ரஹ்மத்தை எல்லா வர்ணத்தார்களும் அறியச்செய்ய நினைத்து, ஸ்ரீமத் பாகவதமென்னும் க்ரந்தத்தை நாரதருடைய உபதேசத் தால் செய்யவிரும்பினார். அது, விக்னமில்லாமல் முடியவேண்டியதற்காக பரமாத்மாவை த்யானஞ் செய்தார். "எதனிடமிருந்து இந்த ப்ரபஞ்சம் உண்டாகின்றதோ"–"இந்த ஆகாசரூபமாகிய ஆனந்த மில்லாமற்போனால் எவன் ஜீவிப்பான்" என்ற அன்வயவ்யதிரேகச்ருதிகளால் ப்ரஹ்மம், ஜகத்காரண மென்றும், அர்த்தேஷு அபிக்ஞ: என்று அன்வயஞ் செய்து, ஸகல பதார்த்தத்தையறிந்தவர் என்று அர்த்தஞ்செய்வதால், ப்ரஹ்மத்தினிடத்தில் எல்லா வற்றையும் அறிந்திருப்பது முதலிய ஸகலகல்யாண குணங்களிருப்பதாயும், காட்டப்பட்டது. பரமாத்மா வானவர், ப்ரஹ்மதேவருக்கு தேஜஸ், ஜலம், பூமி இவைகளை ஒன்றோடொன்று கலந்து ஸிருஷ்டிக்கும் வகையை உபதேசித்தது போல ப்ரீதியுடன் வேதத்தையும் உபதேசித்தார். "வேதங்கள் முடிவில்லாத துகள்" என்றபடி வேதங்களை பூராவாகத் தெரிந்து கொள்ள முடியாததாகையால், தடையற்ற ஞானமுள்ள யோகிகளும் மோஹிக்கிறார்கள். "அந்த விஷ்ணுவின் மேலான பதத்தை எப்பொழுதும் ஸூரிகள் பார்க்கிறார்கள்." என்றபடி நித்திய ஸூரிகள், நாராயணனுடைய திவ்ய மங்களதேஹத்தின் ஒப்பற்ற காந்தியை தர்சித்து மோஹிக்கிறார்கள். மேல்காட்டிய மூன்று பூதங்களுடைய த்ரிவிருத்கரண ஸ்ருஷ்டியானது,

எவரிடத்தில் பொய்யாக இருக்கிறதோ (அது பகவானிடத்தில் ஸம்பந்திக்கிற தில்லையென்று கருத்து) மேலும் எவர் தன்னுடைய தேஜஸினால் ஸகல தோஷங்களையும் நாசம் செய்கிறாரோ முக்காலத்திலும் இருப்பவராகையால் எவர் நித்யரோ, ருத்ரன் முதலியவர்களைவிட சிறந்தவராகையால பரனோ, அந்த பர ப்ரஹ்மத்தை த்யானிக்கிறோம்– பாகவத சந்த்ரிகா.

ஒருகால் அஸுரர்கள் பூமியில் அரசர்களாகப் பிறந்து அந்த பாரத்தால் பூமி மிக வருத்தமடைந்தாள். அப்போது ப்ரஹ்மா, ருத்ரன் முதலிய தேவர்கள், பூமிக்கு நேர்ந்த ச்ரமத்தை நிவர்த்திக்குபடி ஸ்ரீ மஹா விஷ்ணுவை வேண்டிக்கொண்டார்கள். பகவான், அவர்களுடைய ப்ரார்த்தனைக்கிசைந்து, வெகுகாலமாய் தபஸ் செய்துகொண்டிருக்கும் ஸத்யவதியினிடம் பராசரருக்கு புத்ரனாக அவதரித்தார். இவர்தான் வ்யாஸரென்று சொல்லப்படுகிறார். இவர் மந்தபுத்தி யுள்ள ஜனங்களிடத்தில் மிகுந்த கருணையுள்ளவராய் வேதங்களை பிரித்து அதன் அர்த்தத்தை நன்றாய் காட்டுவதற்காக ப்ரஹ்ம ஸூத்ரங்களைச்செய்தார். பின்பு அதைப் படிக்கத்தகாத ஸ்த்ரீகள் சூத்ரர்களுக்காக புராணங்களையும் வெளியிட்டார். பின்னும் அவர் வேதத்தின் அர்த்தத்தை நன்றாய் காட்டுகிறதும் 12 ஸ்கந்தமுள்ளதும், 18,000 க்ரந்தங்களடங்கியதுமான பாகவத புராணத்தைச் செய்ய ஆரம்பித்து, தான் எப்பொழுதும் ப்ரஹ்ம ஸாக்ஷாத் காரமுள்ளவரான்லும் இயற்கையில் விக்ன ஸம்பந்தமில்லாதவரானாலும், க்ரந்தாரம்பத்தில் செய்யவேண்டிய ஸம்ப்ரதாயத்தை வித்வான்களுக்குத் தெரிவிப்பதற்காக, நாராயண

ஸ்மரணமாகிய மங்களத்தைச் செய்தார். அதாவது பரனைத் த்யானஞ்செய்கிறோம். க்ரந்தத்தின் ஆரம்பத்தில் நமஸ்கரிக்கக்கூடிய தேவதைகள் இருவகையானவைகள். 1. ஆதிகாரிகதேவதை—ஸூரியன் முதலிய க்ரஹங்கள். 2. அபிஷ்டதேவதை.— பகவான். இருவகையான தேவதைகளின் ஸ்வரூபியும் ஸகல கல்யாண குணங்கள் நிறைந்தவருமான பரமாத்மாவே இந்த பாகவத ஸாஸ்த்ரத்தால் வர்ணிக்கப்படுகிறார். நாராயணனைவிட பரன் வேறொருவருமில்லை "அந்த புண்டரீகாக்ஷனே தேவன், அந்த நாராயணனே பரன்" - ஹரிவம்சம்.

"ப்ரஹ்மத்தை யறிந்தவன் பரனை யடைகிறான்"
—ச்ருதி.

இவர் ஜகத்திற்கு காரணமாயிருப்பவர், "எவரிடமிருந்து இந்த பூதங்கள் உண்டாகின்றவோ, எவரால் உண்டானவைகள் ஜீவிக்கின்றனவோ, எவரிடம் லயிக்கின்றனவோ ? அதுவே ப்ரஹ்மம்" —ச்ருதி.

நான் எல்லாவற்றிற்கும் உற்பத்தி ஸ்தானம், என்னிடமிருந்தே எல்லாம் உண்டாகின்றன. எல்லா பிராணிகளையும் ஸ்ருஷ்டிக்கிறவனும், காப்பாற்றுகிறவனும், நாசஞ்செய்கிறவனும், நானொருவனே" —ஸ்மிருதி.

மேல்காட்டிய அன்வயத்தால் விஷ்ணுவே ஜகத் காரணரென்று ஏற்படுகிறது.

ஆக்ஷேபம்: ருத்ரன் முதலியவர்களும், ஜகத்திற்குக்

காரணமென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே அப்படிக்கிருக்க மேற்காட்டியது எப்படி பொருந்தும்.

ஸமாதானம்: வேதத்தில் சிலபாகத்தில் அப்படி சொல்லப்பட்டிருந்தாலும், பெரும்பாலும் விஷ்ணுவே ஜகத்காரணம் என்றே சொல்லப்பட்டிருக்கிறது 'எல்லா வேதங்களும் எந்தபதத்தைச் சொல்லுகின்றனவோ' —ச்ருதி.

"ஸகல வேதங்களாலும் அறியக்கூடியவன் நானே"
—ஸ்மிருதி.

ஆக்ஷேபம்:— பரமாணுவே ஜகத்காரணம், என்று ஏன் சொல்லக்கூடாது ?

ஸமாதானம்:— அப்படியல்ல, ப்ரத்யக்ஷத்திற்கும் ஆகமத்திற்கும் விரோதமில்லாத யுக்தியால், ப்ரஹ்மமே ஜகத்காரணமென்று சொல்லக்கூடும். புத்ரனுக்கு பிதாவே காரணமென்று தெரியவருகிறதல்லவா ? அது போல் ப்ரஹ்மதேவர் முதலியவர்களுக்கு சேதனனே காரணமாயிருக்க வேண்டும், மாயை முதலியவைகள் அசேதனமாகையால் அவைகளைக் காரணமென்று சொல்லக்கூடாது. இந்தவிஷயம் ச்ருதியில் பலவிடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பரமாணுவே ஜகத்திற்கு காரணமென்று சொல்பவர்கள் ச்ருதி விருத்தமான யுக்தியைக் காட்டுவதனால் அது ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல. அந்த பரமாத்மா எல்லாவற்றையும் பொதுவாகவும் விசேஷமாகவும் அறிந்தவர். அதனால் ப்ரஹ்மதேவருக்கு வேதங்களை யுபதேசித்தவர். அவருடைய அனுக்ரஹமில்லாதவரையில் ப்ரஹ்ம தேவர் முதலியவர்களும் மோஹிக்கிறார்கள். தேஜஸ்,

ஜலம், பூமி, இவைகளின் கார்யம் எப்படி ஸத், அஸத் இவைகளைவிட வேறாக ஆகிறதில்லையோ? பகவானால் செய்யப்படுகிறபடியால் ஈச்வர ஸிருஷ்டி, ஜீவஸ்ருஷ்டி, ஜடஸிருஷ்டி, ஆகிய இவைகள் மூன்றும் பொய்யானதல்ல. மாயைக்கடந்த ஆனந்தானுபவ ரூபராயுமிருக்கும் பரமபுருஷனைத் த்யானிக்கிறோம். தேஜஸ் ஒன்றானாலும்,தான் தன் கார்யமான பூமி முதலியவைகளில் பிரவேசித்து சிலகாலத்தில் வெளிப் படுவது போல, பகவான் ஜகத்தை ஸிருஷ்டித்து, அவைகளில் பிரவேசிக்கிறார். பின்பு பக்தர்களை அனுக்ரஹிப்பதற்காக கிருஷ்ணன் முதலிய அவதாரஞ் செய்கிறார். இதுவே ஈச்வர ஸிருஷ்டியெனப்படும், ஸூர்யன் முதலிய தேஜஸினால் ஜலத்தில் அனேக ப்ரதிபிம்பங்கள் ஸ்தூலசரீரம் முதலிய உபாதிகளால் ஈச்வரனுடைய ப்ரதிபிம்பங்களாகிய ஜீவர்கள் உண்டாகிறார்கள். இதுவே ஜீவஸர்க்கம் எனப்படும். மண்ணினால் குடம் முதலியவைகளை யுண்டு பண்ணுவதுபோல ஈச்வரன் அஹங்காரம் முதலியவை களை ஸிருஷ்டிக்கிறார். இதுவே ஜடஸர்க்கம்,– விஜயத் வஜீயம்:

1–4: லக்ஷணம்– இருவகை (1) தடஸ்தலக்ஷணம்– மேற்காட்டியது 2. ஸ்வரூப லக்ஷணம்–ஸத்யஸ்வரூபி. ஸகலத்தையுமறிந்தவர் ஸகல சக்தியுள்ளவரென்பது அன்வயம்– ஆகாசம் முதலிய கார்யங்களின் ஸத்தை யானது, ஆத்மாவின் ஸத்தையால் என்பது. வ்யதிரேகம்–எதிலில்லாததால் அது இல்லையோ அது (உதா) ஆகமஸத்தையில்லாததனால் ஆகாசபுஷ்பங் களில்லை– ஸ்ரீத.

பரமாத்மா, ஸத்ரூபியாய் ஏல்லாவற்றிலும் அனுவ்ருத்தித்திருப்பதால் எல்லாவற்றிற்கும் காரண மாகிறார் (உதா) மண்ணானது அதன் கார்யமாகிய குடம், மடக்கு, தோண்டி முதலியவைகளிலும், தங்கமானது அதன் கார்யமாகிய குண்டலம் முதலிய நகைகளிலும், படர்ந்திருக்கிறது– ஸ்ரீத.

5. அறிந்தவரும் – ப்ரதானம் (மாயை) ஜகத்காரண மானாலும் அதல்லவென்று காட்டப்பட்டது. "மாயை ஜடமாகையாலும், வேதத்தில் ஸிருஷ்டிக்க ஸங்கல் பித்தாரென்று சொல்லியிருப்பதாலும், அம்மாதிரியான ஸங்கல்பம் மாயையினிடம் ஏற்பட நியாயமில்லாததனா லும், மாயை ஜகத்காரணமல்ல– வ்யாஸஸூத்ரம்.

2–1 ப்ரகாசிப்பவர்.– இதனால் சேதனனாகிய ஜீவனைவிட மேலானவரென்று காட்டப்பட்டது.

2–2 உபதேசித்தாரோ.–"எல்லாவற்றிற்கும் முந்தி ஹிரண்யகர்ப்பர் உண்டானார். அவர் ஸகல பூதங்களுக்கும் ஒரே யஜமானனாக விருந்தார். அவர் பூமியையும் அந்தரிக்ஷத்தையும், காப்பாற்றிவந்தார் என்ற ச்ருதிப்படி ப்ரஹ்மதேவருக்கும் மேலானவரென்று காட்டப்பட்டது. எவர் முதலில் ப்ரஹ்மாவை யுண்டு பண்ணுகிறாரோ, எவர் அவருக்கு வேதங்களை உபதேசிக்கிறாரோ, அந்த ஸ்வப்ரகாசரான தேவனை மோக்ஷமடைய விரும்பிய நான் சரணமடைகிறேன்." –ச்ருதி.

மனதால்– ப்ரஹ்மதேவர் பிறரிடத்தில் வேதாத்ய யனஞ் செய்தாரென்று ஓரிடத்திலும் சொல்லப்

படாமலிருந்தாலும் பரமாத்மாவின் ஸங்கல்ப மாத்ரத்தால் ப்ரஹ்மதேவருக்கு வேதங்கள் தோன்றினவென்று தாத்பர்யம்.

வேதங்கள்.— ப்ரஹ்மா தானாக வேதங்களைத் தெரிந்துகொண்டவரல்லவென்பது கருத்து.— ஸ்ரீத.

ப்ரஹ்மதேவருக்கும் ஞானத்தையுபதேசித்தவரும், இயற்கையில் அளவற்ற நித்ய ஞானமுள்ளவரும், எல்லாவற்றையும் ப்ரகாசிக்கச் செய்பவரும் மற்ற தேஜஸை அபேக்ஷியாமலேயே ப்ரகாசிப்பவரும். ஸத்ய ஸ்வரூபியாயுமுள்ள பரமாத்மாவே ஜகத்காரணம், அவரே திவ்ய மங்களஸ்வருபி, அவரை த்யானிப்பதால் ஸகல க்ஷேமங்களும் கிடைக்கும்.

இந்த புராணத்தில் காயத்ரியின் அர்த்தமாகிய பரப்ரஹ்மவித்யை நன்றாய் காட்டப்பட்டிருக்கிறது.— அந்த காயத்ரீ, வேதமாதா, இது வேதத்தையே ப்ரமாணமாய் கொண்டது. "எதில் காயத்ரியை அனுஸரித்து தர்மங்கள் விஸ்தாரமாக வர்ணிக்கப்படுகின்றனவோ, எதில் வ்ருத்ராஸுரவதத்தின் கதை சொல்லப்பட்டிருக்கிறதோ அது பாகவதமென்று சொல்லப்படுகிறது. அதை எழுதி ஸுவர்ணத்தால் செய்யப்பட்ட ஸிம்ஹ ப்ரதிமையுடன் புரட்டாசி மாஸத்திய பௌர்ணமியில் எவன் தானஞ்செய்கிறானோ அவன் உத்தமகதியையடைகிறான். இது 18,000 க்ரந்தங்களுள்ளது"— மத்ஸ்யபுராணம், "ஓ அம்பரீஷ! உனக்கு ஸம்ஸார பந்தம் நிவர்த்தியாக வேண்டுமானால் சுகஸ்வாமியால் உபதேசிக்கப்பட்ட ஸ்ரீமத் பாகவதத்தை பிறர் சொல்லக் கேளும் தானாகவாவது படியும்," — பத்மபுராணம்,

ஸகலஜகத்தையும், படைத்து அவைகளைக் காப்பாற்றுகிறவர் என்றாலும் ஸ்வயம் ப்ரகாசர் என்றாலும் காயத்ரியின் அர்த்தமானது காட்டப்பட்டிருக்கிறது. 6. மாறுத— கோடைகாலத்தில் மாத்யாஹ்னவேளையில் வனம் முதலிய சூன்யமாகிய விடங்களில், வெயிலை ஜலமென்று நினைத்து தாஹமுள்ள ஜனங்கள் அதனால் தாஹத்தைப் போக்கிக்கொள்ளலாமென்று அதையனுஸரிக்கிறார்களல்லவா ? அவ்விடத்தில் தோற்றுகிற ஜலமானது வாஸ்தவமல்ல. ஆச்ரயமாகிய தேஜஸ் உண்மையானதால் (வ்யவஹாரகாலத்தில்) ஜலமிருப்பதுபோல தோன்றுகிறதுபோல ஸத்வம், ரஜஸ், தமஸ், ஆகிய முக்குணங்களால் உண்டாகியிருக்கும் ஸிருஷ்டிகள் யாவும், ஸத்யமன்று. ஆச்ரயமாகிய ஆத்மாவின் ஸத்தையால் ஸத்தாகத் தோற்றுகிறது. ஸ்ரீத, 11.— வ்யாச மஹா— வ்யாச மஹாமுனியால் செய்யப்பட்ட இந்தப் பாகவதமென்ற க்ரந்தத்தில் பக்தியாகிய தர்மம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆபிசார ப்ரயோகமாகிய ச்யேனயாகம் போல் இது பாபமுள்ளதல்ல. மோக்ஷஸாதனமாகையால், மிகவும் மேலானது. மாத்ஸர்யம் முதலிய துர்க்குணமில்லாத ஸாதுக்களால் அனுஷ்டிக்கக்கூடியது. இதனால் நித்ய வஸ்துவாகிய பரமாத்மாவே அறியக்கூடியவர். அவரே அக்னிமுதலிய ரூபமாகவிருந்து ஸ்வர்க்கம் முதலியவைகளைக் கொடுக்கிறார். முவ்வகையான தாபத்தைப் போக்குகிறார், புண்யசாலிகள் இந்த கிரந்தத்தைக் கேட்க வேண்டுமென்று விரும்பிய க்ஷணத்திலே அவர்களுடைய ஹிருதயத்திலே பகவான் ஸ்திரமாக வஸிக்கிறார். மற்ற க்ரந்தங்கள் இதுபோல பக்தியையுண்டுபண்ணி அதனால் ஈச்வரனை மனத்திலிருக்கச் செய்கிறதில்லை. ஆகையால் இதுவே உத்தமமானது.—சந்திரிகா. அழகு—

"தோஷமற்ற ஸகல புராணங்கள் பாகவதமில்லாத காலத்தில் ஸாதுக்களுடைய ஸபையில் ப்ரகாசிக்கும்" என்றபடி பந்தகமாகாத "ஓ அர்ஜுன! நீ செய்கிறதை யும், புஜிக்கிறதையும், ஹோமஞ்செய்கிறதையும் தானஞ் செய்கிறதையும், தபஸ்செய்வதையும் எனக்கு அர்ப்பணம் செய்துவிடு"– பகவத்கீதை. என்றபடி பலனையுத்தேசியாமல் செய்யும் கர்மங்களே மேலான வைகள். அவைகளே கபடமற்ற தர்மங்கள். "பகவானுடைய நாமங்களைச் சொல்லுவது முதலிய பக்தியே மனிதர்களுக்கு மேலான தர்மம். அதனாலேயே பகவான் ஸந்தோஷப்படுகிறார்" என்றபடி பக்தியே மேலானதர்மம்.– விஜயத்வஜீயம். மோக்ஷத்தை விரும்பியவர்களுக்கு மிகரமணீயமானது– ஸ்ரீத. 28– அமிருதத்ரவ– மோக்ஷத்திற்கு ஸாதனமாகிய பக்திரஸமுள்ளது. இதை சரீரம் போகும்வரையில் பானஞ்செய்யுங்கள். சந்த் செய்யப்பட்ட–கர்த்தா வினுடைய மேன்மையால் க்ரந்தத்திற்கு மேன்மை காட்டப்பட்டது. அறியக்கூடியதும்.– ஞானகாண்டத் தை உயர்ந்ததென்று காட்டப்பட்டது.– புண்ய 23– புண்யம் செய்யாதவர்களுக்கு ஸ்ரீமத் பாகவதத்தை கேட்கவேண்டுமென்ற ஆசையுண்டாகாது. 24– ஸ்திர மாக.– தேவதாகாண்டத்தைவிட மேலானதென்று கருத்து. மேற்காட்டியபடி கர்ம காண்டம் தேவதா காண்டம். ஞானகாண்டம் மூன்று பாகங்களடங்கிய வேதார்த்தம் முழுவதும் தெரிந்துகொள்ளக் கூடியதா யிருப்பதால் ஸகல சாஸ்த்ரத்தை விட இது மேலானது. ஆகையால் ஸாதுக்கள் முகமாய் கேட்டுத் கொள்ள வேண்டும்– ஸ்ரீத. பரவிற்று– சிஷ்ய பரம்பரையாய். நசுக்கிவிடாமல் ஜாக்ரதையாய் கொண்டுவரப்பட்ட தென்று காட்டப்பட்டிருக்கிறது. சுகருக்கு உபதேசஞ்

செய்தது முதலியவைகள் பாகவதஞ்செய்த காலத்திற்கு பிந்திய காலத்தில் நடந்ததானாலும் வருங்கார்யமும் நடந்தது போலவே சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீத. அமிருதம் சுகமென்றால் கிளியால் கொத்தப்பட்ட பழம் மிகரஸமுள்ளதென்று பிரஸித்தம் அமிருதம்– மேலான ஆனந்தம் அதேரஸம், அதையுடையது," அவரே ரஸம், ரஸத்தை யடைந்தே இவன் ஆனந்தமுடையவனாக ஆகிறான்" ச்ருதி. ரஸரூப:– மற்ற பழங்களில் எப்படி மேற்புறத் தில் தோலும் அதற்குள்ளே ரஸமுமிருக்கிறதோ? அடபடி இதில் தோல் முதலிய ரஸமற்ற பாகங்களில்லை;

ஆக்ஷேபம்– பழமென்றும் அதையே ரஸமென்றும் சொல்வது பொருந்துமா? ரஸமுள்ள பழமென்று சொல்ல வேண்டாமா?

ஸமாதானம்:– மற்ற பழங்கள் போல தோல் முதலியவைகளில்லாமல் ரஸமாகவே இருக்கிறதென் பதை காண்பிப்பதற்காக ரஸமென்று சொல்லப்பட்டது. பூமியில் விழுந்த ரஸமென்றால் அது த்ரவரூபமாய் போய்விடாமல் புஜிக்கதக்க பழமென்பதால் காட்டப் பட்டது முக்தர்– ஆத்மாவிடத்திலேயே ரமித்து கொண்டிருப் பவர்களும், மற்ற க்ரந்தங்களில் ஆசையில்லாத வர்களுமான மஹர்ஷிகளும் பகவானிடம் யாதொரு காரணமுமில்லா மல் பக்தி செய்கிறார்கள். இம்மாதிரியான குண முள்ளவர் ஸ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம்,1–"அத்யாயம்" 7. ஸ்வர்க்க லோகத்தை– ஸ்வர்காய– பகவான். அவரே லோகம் (பக்தர்களுக்குருட்டிடம்) அவரை யடைவதற்காக–ஸ்ரீத ஸ்வர்க்க– மேலான ஆனந்தம், அப்பேர்பட்டலோகம் பரமபதம், அதையடைவதற்காக– ஸத்ரம்– எந்த யாகத்தில் ரித்விக்குகளே யஜமானர்களாக விருக்கிறார்களோ

அது முனி.. ஸத்ரம்—ஸாதுக்களைக் காப்பாற்றுகிறது. —விஜ. அக்னி—நித்ய நைமித்திக ஹோமங்களை— முனி. புராணங்கள் 1.ப்ரஹ்ம புராணம் 2. பாத்மம். 3. விஷ்ணுபுராணம். 4. சிவபுராணம் 5. நாரதபுராணம் 6. மார்கண்டேயம், 7. ஆக்னேயம். 8. பவிஷ்யபுராணம். 9. ப்ரஹ்மகைவர்த்தம். 10 லிங்க புராணம் 11. வராஹபுராணம் 12. ஸ்காந்தம். 13. வாமனம். 14 கூர்மபுராணம். 15. மத்ஸ்யபுராணம். 16.கருடபுராணம். 17. ப்ரஹ்மாண்டம். 18வது ஸ்ரீமத் பாகவதபுராணம். 24—பல— அனேகசாஸ்த்ரங்களை அப்யஸித்தாலும் அவ்வளவு பலன் கிடைக்கிறதில்லை யென்று கருத்து ஸ்ரீத. 3—31 க்ஷேம.—ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் கதையைக் காலதாமதமின்றிக் கேட்க வேண்டுமென்று விரும்பி சுருக்கமாய் ஆசிர்வாதஞ் செய்தார்கள். "ஒரு முஹூர்த்தமாவது ஒரு க்ஷணமாகிலும் ஸ்ரீ வாஸுதேவரை ஸ்மரிக்காமலி ருப்பதே கெடுதிக்கு காரணம்.— ஸ்ரீத. 32—ஸாத்—பகவத் பக்தர்கள். ஸ்ரீத. 4—14 நாரதர்— இவர் ப்ரஹ்மதேவருடைய மனத்திலிருந்து உண்டா னவர். இவர் தேவர்ஷி இவருடைய குணங்கள் மஹாபாரதம் ஸபாபர்வத்திலும், சாந்திபர் வத்திலும் நன்றாக வர்ணிக்கப் பட்டிருக்கின்றன. இவர் கானவித்தையை அப்யளித்த கதை அத்புத ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர் ஞானத்தை பிறகுக்குபதேசிப்பதாலும், அக்ஞானத்தைப் போக்குவதாலும் நாரதரென்ற பெயரை யடைந்தார். 21— உத்தம—எவருடைய பெயரை உச்சரித்த மாத்ரத்தில் புண்யம் கிடைக்குமோ, அவர் சொல்லவேண்டும்— மஹர்ஷியின் கேள்விகள் ஆறு.

அவைகளில் 1. சாஸ்த்ரங்களுடைய ஸாரமானது எது, 2. ஸ்ரீ கிருஷ்ணபகவான் செய்த கார்யங்கள் எவை, 3 ஸிருஷ்டி முதலிய லீலைகள், 4 அவதார கதைகள். 5. பகவானுடைய சரிதம், 6. தர்மத்தை ஸம்ரக்ஷித்தது. ஸ்ரீத.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–2.

ஸூதர் ப்ரத்யுத்தரஞ் சொன்னது.

ரோமஹர்ஷணருடைய புத்ரரான ஸூதர் அந்த ப்ராஹ்மணர்களுடைய நல்வார்த்தைகளைக் கேட்டு ஸந்தோஷித்து அவர்களுடைய கேள்வியை ச்லாகித்துப் ப்ரத்யுத்தரஞ் சொல்ல ஆரம்பித்துப் பின்வருமாறு தன் குருவை வணங்கினார்.

2–31/2. சுகர் அதி பால்யவயதிலே (உபநயனஞ் செய்யப்படாமலிருக்கும் வயதிலே) கர்மமார்க்கத்தில் விருப்பமில்லாதவராய், துறவியாகப் போகும்பொழுது, பிதாவாகிய வ்யாஸர் பிள்ளையை விட்டுப் பிரியமன மில்லாதவராய் ஓ! புத்ரா! என்று உரக்க அழைத்தார். அப்பொழுது மரங்கள் விடைகூறின. (மரங்களின் ரூபமாயிருந்து பிதாவின் ப்ரீதியைக் குறைப்பதற்காகச் சுகரே அப்படிக்கூறினார் என்பதாம்) அவர் ஸகல ப்ராணிகளுடைய ஹ்ருதயத்தில் வசிப்பவர், அந்த சுக மஹாயோகியை நமஸ்கரிக்கிறேன். எவர் ஸம்ஸாரமா கிய இருட்டைக்கடக்க விரும்பிய ஜனங்களிடத்தில், கருணை வைத்து ஒப்பற்ற, மஹிமையுள்ளதும், ஸகல வேதங்களின் ஸாரமாயும், நிகரில்லாததாயும், ஆத்ம தத்துவத்தைக் காட்டுவதில் தீபமாயுள்ளதுமான, ரஹஸ்யமாகிய புராணத்தை வெளியிட்டாரோ, வ்யாஸருடைய புத்ரரும், முனிகளுக்குக் குருவுமாகிய அந்தச்சுகருக்கு நமஸ்காரம் செய்கிறேன். நாராயண ரையும், மனிதர்களுக்குட் சிறந்தவரான நரனையும், ஸரஸ்வதி தேவியையும், வ்யாஸரையும் நமஸ்காரஞ் செய்து பின்பு (ஜயத்தை) க்ரந்தத்தைச் சொல்லுகிறேன்.

4–35. 'ஓ மஹர்ஷிகளே! நன்றாய்க் கேட்டீர்கள், தாங்கள் கேட்டவிஷயம் உலகத்திற்கே மங்களத்தைக் கொடுக்கக்கூடியது. எதனால் பரமாத்மா ஸந்தோஷி ப்பாரோ அம்மாதிரி ஸ்ரீ கிருஷ்ணன் விஷயமாகக் கேட்டீர்கள். பலனை உத்தேசியாமல் இடையூறின்றி ஸ்ரீ மஹா விஷ்ணுவிடத்தில் செய்யும் பக்தியே மேலான தர்மம். அதனால் பரமாத்மா மிகவும் ஸந்தோஷமடை கிறார். பகவானாகிய வாஸுதேவரிடத்தில் பக்தி செய்தால், வைராக்யமும் காரணமற்ற உண்மையான ஞானமுமுண்டாகும். புருஷர்கள் குறைவின்றி தங்களுக்குரிய தர்மங்களை யனுஷ்டித்தும் அதனால் பகவானுடைய கதையைக்கேட்க வேண்டுமென்ற ஆசையுண்டாகாவிட்டால் அது பயன்படாததேயாகும். மஹாவிஷ்ணுவின் கதையாகிய அமிர்தத்தைப் பானஞ் செய்தும் (கதையைக் கேட்டும்) சித்தமுருகுதல், ஆனந்தத்தால் கண்ணீர் பெருகுதல், மயிர்க் கூச்சலிடல், என்னும் இவைகள் எவனுக்கு உண்டாகவில்லையோ, அவன் ஆத்மதத்துவத்தை பலதடவை குருமுகமாகக் கேட்டாலும் அதன் உண்மையை அறியமாட்டான். (பகவத்பக்தி, வைராக்யம், ஆத்மஞானம், என்னும் இவைகளே மேலான தர்மமென்று கருத்து). மோக்ஷத் திற்கு உபயோகமாகிய தர்மத்திற்கு இரண்டாவது புருஷார்த்தமாகிய அர்த்தம் பலனென்றும் தர்மத்தை விட்டுபிரியாத அந்த அர்த்தத்திற்குக் காமம் ப்ரயோஜன மென்றும் சிலர் சொல்வது மஹரிஷிகளால் ஒப்புக் கொள்ளபடவில்லை. இது பிரசித்தமான விஷயம். இந்திரியங்களை திருப்தி செய்வதே (விஷயானுபவம்) காமத்திற்கு பலனென்று சொல்வதும் சரியல்ல. ஆனால் ஜீவிப்பதற்குப் போதுமான அளவு விஷயத்தை அனுபவிப்பதே பலனாம். தத்துவத்தைத் தெரிந்து

கொள்ள விரும்பியவனுக்கு கர்மங்களால் கிடைக்கும் பலன் பயன்படாது. உண்மையை அறியவேண்டுமென்ற விருப்பமே அவனுக்குப் பலன். மேலும், நாசமற்றதான ஞானஸ்வரூபத்தையே தத்வமென்று, உண்மையை யறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். அதனையே உப நிஷத்தை அத்யயனஞ் செய்தவர்கள் ப்ரஹ்மம் என்றும், ஹிரண்யகர்ப்பனை உபாஸிப்பவர்கள், பரமாத்மாவென் றும், ஸாத்வதர்கள் பகவான் என்றும் சொல்லுகிறார்கள் "ஆகையால் ச்ரத்தையுள்ள முனிகள் வேதாந்தம் முதலிய சாஸ்த்ரங்களைக் குருமுகமாகக் கேட்டு, ஸ்திரமான ஞானம்,வைராக்யம், பக்தி இவைகளை அடைந்து ஜீவனுக்கும், பரமாத்மாவுக்கும் பேதமில்லை என்று தெரிந்துகொள்கிறார்கள். ஓ! ப்ராஹ்மண ச்ரேஷ்டர்களே! அவரவர்களுடைய ஜாதிக்கும், ஆச்ரமத்திற்கும் தகுதியான தர்மத்தை ஸாங்கமாய் (குறைவின்றி) அனுஷ்டித்தால், அவர்களிடத்தில் ஸ்ரீ நாராயணன் ப்ரியப்படுகிறார். இதுவே அதற்குப் பலமாகும். ஆகையால் பகவானுடைய கதையைக் கேட்கும்போதும் அவருடைய நாமபஜனம் செய்யும் போதும், அவரைத்யானஞ் செய்யுங்காலத்திலும், அவரைப் பூஜிக்கும் போதும், வேறு விஷயத்தில் மனத்தைச் செலுத்தாமலிருக்க வேண்டும்.விவேகிகள் பகவத்யானமாகிற கத்தியால் அஹங்கார ஸம்பந்தத்தை யுண்டுபண்ணும் கர்மபந்தத்தை வெட்டுகிறார்கள். ஆகையால் பகவானுடைய கதையைக் கேட்பதில் விருப்பமில்லாதவர் யார்? (எல்லோரும் விரும்புவார்கள்) ஓ! ப்ராஹ்மணர்களே! புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வதால் பாபங்கள் நீங்குகின்றன, பின்பு பெரியோர்களுடைய சேர்க்கையுண்டாகின்றது. பிறகு தர்மத்தில் ச்ரத்தையும் அதன்பின் வாஸுதேவருடைய

கதையைக்கேட்க விருப்பமும், பின்பு அதில் ப்ரீதியு மாகிய இவைகள் முறையே உண்டாகின்றன. தம் கதையைக் கேட்பவர்களுக்கும், நாமபஜனஞ் செய்பவர் களுக்கும், புண்யத்தைக்கொடுப்பவரும், ஸாதுக்களுக்கு அனுகூலத்தை செய்பவருமான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா தம்முடைய கதையை கேட்பவர்களுடைய ஹ்ருதயத்தில் வசித்துக்கொண்டு காமம், கோபம் முதலியவைகளை நாசஞ்செய்கிறார். எப்பொழுதும் பகவத் பக்தர்களை ஸேவிப்பதாலும், பாகவத சாஸ்த்ரத் தைப் படிப்பதாலும் பெரும்பாலும் அக்ஞானம் விலகும். அதனால் உத்தமச்லோகராகிய (புண்யகரமான பெயருள்ள) பகவானிடம் ஸ்திரமான பக்தியுண்டாகும். அப்பொழுது ரஜோகுணம், தமோகுணம் ஆகிய இவைகளாலுண்டாகும் காமம், க்ரோதம் முதலிய வற்றால் அவர்களுடைய மனஸ் விகாரமடையாமல் ஸத்வகுணமுள்ளதாய் சாந்தமாயிருக்கும். இப்படி பகவானிடம் பக்தி செய்கிறவனுடைய மனஸானது அதன் மஹிமையால் சாந்தமாய் விடும். ஆசைகளும் ஒழிந்துவிடும்; பின்பு பரமாத்மாவின் உண்மையான ஸ்வரூபஞானமுண்டாகும். ஆத்மரூபியான ஈச்வரனு டைய ஸாக்ஷாத்காரமுண்டானவுடன் அஹங்காரம் அடியோடே நாசமடைகிறது. ஸம்சயங்கள் யாவும் நிவர்த்தியாகின்றன. ப்ராரப்தகர்மம் தவிற மற்றவைகள் நசிக்கின்றன. ஆகையால் வித்வான்கள் பகவானாகிய வாஸுதேவரிடத்தில் எப்பொழுதும் மிகுந்த ஸந்தோஷத் துடன் பக்திசெய்கிறார்கள். அதனால் அவர்களுடைய சித்தம் சுத்தமாகிறது. பரமபுருஷன் ஒருவரானாலும் உலகத்தைக் காப்பாற்றுவதற்கு ஸத்வ குணத்தாலும், ஸ்ருஷ்டிப்பதற்கு ரஜோ குணத்தாலும், ஸம்ஹரிப்ப தற்கு தமோ குணத்தாலும், முறையே ஹரி, (விஷ்ணு)

பிரஹ்மா, ருத்ரன் என்னும் பெயரடைகிறார். ஆனால் ஸ்த்வமூர்த்தியான வாஸுதேவரிடமிருந்து மனிதர் களுக்கு க்ஷேமங்கள் யாவும் கிடைக்கின்றன. அக்னியானது கட்டையைப்பிடித்து எரிக்கும்போது அந்தக் கட்டையாகிற உபாதி ஸம்பந்தத்தால் புகை உண்டாகிறது. அதிலிருந்து வேதங்களில் சொல்லிய கர்மங்களுக்கு யோக்யமான அக்னி விருத்தியடைகிறது அதுபோல லயஸ்வரூபமாகி தமஸ்ஸினிடமிருந்து ரஜோகுணமும், அதனிடமிருந்து ஸத்வகுணமும், அதன்னால் ப்ரஹ்மப்ராப்தியும் உண்டாகிறது. முன் காலத்தில் பெரியோர்களான முனிவர்கள் சுத்த ஸத்வ மூர்த்தியும், பகவானுமாகிய, மஹாவிஷ்ணுவை (இந்த்ரியங்களுக்குப் புலப்படாதவரை) பஜித்தார்கள். ஆகையால் அந்த மார்க்கத்தை அனுஸரிப்பவர்கள், ஸம்ஸாரத்திலிருந்து க்ஷேமத்தை அடைவார்கள். மோக்ஷத்தை விரும்பியவர்கள், கோரஸ்வரூபமுள்ள பரமசிவன், பித்ரு கணங்கள், முதலியவைகளை உபாஸியாமல் அவர்களை நிந்திக்காமலும், சாந்தங் களான, நாராயணனுடைய கலைகளை, (அம்சங்கள்) உபாஸிக்கிறார்கள். ரஜோகுணம், தமோகுணம், இந்த ஸ்வபாவமுள்ள ஜனங்கள், ஐஸ்வர்யம், புத்ரன், அழகு, இவைகளை அடையவிரும்பி தங்களுக்கு ஸமமான ஸ்வபாவமுள்ள, பித்ருக்களையும், ருத்ரன், ஹிரண்ய கர்பன், முதலியவர்களையும், ஸேவிக்கிறார்கள். வேதங்கள், யாகத்தின் ஸ்வரூபத்தைச் சொல்லுகின்ற வைகளானாலும் யாகத்தால் ஆராதிக்கப்படும் தேவதை விஷ்ணுவாகையால், அவைகள் யாவும், வஸுதேவரு டைய புத்ரனாகிய பகவானையே சொல்லுகின்றன.

யோக சாஸ்த்ரங்கள் எல்லாம் ப்ராணாயாமம்

முதலியவைகளை, நிரூபிப்பவைகளானாலும், அவைகள் பகவானை அடைவதற்கு உபாயமாகையால் அந்தப் பரமாத்மாவையே சொல்லுகிறவைகளாகின்றன. மற்ற கர்மங்களும், அந்தப் பரம புருஷனுடைய ஆராதனத் திலேயே உபயோகிக்கப்படுகின்றன. ஞானசாஸ்த்ரம், தபஸ். தர்மசாஸ்த்ரம், கர்மத்தின் பலனாகிய ஸ்வர்க்கம், முதலியவைகள் யாவும், பரமாத்ம பரங்களேயாகின்றன. நிர்குணராயும், எங்கும் நிறைந்தவருமான அந்த பகவானே காரணரூபமாயும், கார்யரூபமாயுமிருந்து, முக்குண ஸ்வரூபமாயுள்ள தம்முடைய மாயையால் முதலில் உலகத்தை ஸ்ருஷ்டித்தார். மேலும் அவர் அந்த மாயையால் உண்டாகி ப்ரகாசிக்கும் ஆகாயம் முதலியவைகளில் உட்பிரவேசித்து இயற்கையில் தாம் குணமற்றவரானாலும், குணமுள்ளவர்போலத் தோன்று கிறார். அவர் விஞ்ஞானத்தால் (சித்சக்தி) நிறைந்தவர் கட்டைகளில் ஜ்வலிக்கும் அக்னி உண்மையில் ஒன்றானாலும், ஆச்ரய பேதத்தால் வெவ்வேறாகத் தோன்றுகிறது போல ஜகத்ரூபியான பரமபுருஷன் ஒருவரானாலும், ஒவ்வொரு ப்ராணிகளிடத்திலும், வெவ்வேறாகக் காணப்படுகிறார். அந்தப் புருஷோத்த மனே பூதஸூக்ஷ்மங்கள், இந்த்ரியங்கள், மனம் ஆகிய இவைகளால் உண்டுபண்ணப்பட்ட ப்ராணிகளிடத்தில் ப்ரவேசித்து விஷயங்களை அனுபவிக்கச்செய்கிறார். லோககர்த்தாவாகிய ஈச்வரன் திர்யக் (புறவை பசு முதலிவைகள்) தேவர்கள், மனிதர்கள் இவைகளில் ஸத்வ மூர்த்தியாய் அவதரித்து உலகங்களைக் காப்பாற்று கிறார். இவைகளே லீலாவதாரமெனப்படுகின்றது.

நோட்டு.

11–22. பால்ய– எனக்கு உபநயனம் செய்ய

வேண்டும் என்று ஆசார்யரிடம் வராதவர், அல்லது, தான் ஒருவராகப்போனார்.– ஸ்ரீத– தேஹம் முதலிய வைகளில் அபிமானமற்றவர்.– இவர் ருத்ரனுடைய அவதாரம்– விஜய. 12–4– ஸரஸ்வதி தேவியென்றால் ஸ்ரீதேவி,நரனென்றால் வாயுபகவான் – விஜ, ஜயம்– ஸம்ஸாரத்தை ஜயிப்பதால் இப்பெயர் கிடைத்தது, 14–நாரண தாரண– "ஓ அர்ஜுன! நான் வேதங்களாலும், தபஸினாலும், யாகத்தாலும் அறியமுடியாதவன்" என்ற ஸ்மிருதியின்படி பக்தியைவிட வேறு காரண மற்ற–ஸ்ரீத.– வீர. விஷ்ணுவின் பிரஸாதத்தால் உண்டான ஞானம். விஜ.

12–24 தர்ம–மோக்ஷத்திற்கு ஸாதனமாகிய தர்மத்திற்கு பணம் பலனல்ல. தர்மத்திற்காகவென்று, ஸம்பாதிக்கப்பட்ட பணத்திற்கு காமம் ப்ரயோஜன மாகாது. விஜ 11–12 ஹரி–

ஆக்ஷேபம்:– விஷ்ணு ஒருவரே ப்ரஹ்மா, பரமசிவன், என்ற பெயரை அடைகிறார் என்று சொன்னதால், மூன்று தேவர்களும் ஒருவரென்றும், ஒருவருக்கொருவர் பேதமில்லாதவர்களென்றும் ஏற்படுகிறது. "ப்ரஹ்மாவும், சிவனும் நாராயணனே" ச்ருதி. நாராயணர் என்ற பெய்ருடைய ப்ரஹ்மதேவர் கல்பத்தின் முதலில் ஜனங்களை ஸிருஷ்டித்தார். பிறகு அந்த பகவானாகிய விஷ்ணுவானவர் காலாக்னி ருத்ரரூபியாயிருந்து ஸகல லோகத்தையும் ஸம்ஹரித் தார். பகவான் ஒருவரே உலகத்தை ஸ்ருஷ்டிப்பது, பரிபாலிப்பது, நாசம் பண்ணுவது, ஆகிய கார்யங்களை முறையே ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் ஆகிய பெயருடன்

நடத்திவருகிறார்."– ஸ்மிருதி, ஆகையால் மஹாவிஷ்ணு மும்மூர்த்திகளுக்குள் ஒருவரென்றே ஏற்படுகிறது. மேலும், இம்மூவர்களைக் காட்டிலும் மேலான பரதத்வம் ஒன்றிருப்பதாகவும் ஏற்படுகிறது. அந்தப் புருஷனால் ஜகத்முழுவதும் பூர்ணமாயிருக்கிறது." "அதைக்காட்டிலும் எது மேற்பட்டதோ, அது ரூபமற்றது எவர்கள் இதையறிகிறார்களோ அவர்கள் மரண தர்மமில்லாதவர்களாக ஆகிறார்கள்."– ச்ருதிகள் "இவர் அமிர்தத்துக்கு ஹேதுவாயிருப்பவர்"– ச்ருதி இதனால் மும்மூர்த்திகளுக்கும் மேலான பகவத் ஸ்வரூபமே ஸகல ஜகத்திற்குக் காரணம். அதை பஜிப்பவர்களே மோக்ஷத்தையடைவார்கள். நாராயணனை பஜிப்பவர்கள் மோக்ஷத்தையடையமாட்டார்கள். அவர் பரமாத்மாவுமல்ல.

ஸமாதானம்:– மும்மூர்த்திகளும் ஒருவரேயென்று சொல்வது ந்யாயமல்ல "நாராயணனிடமிருந்து ப்ரஹ்மா உண்டாகிறார், நாராயணனிடமிருந்து ருத்ரன் உண்டாகிறார், நாராயணனிடமிருந்து பன்னிரண்டு ஆதித்யர்களும், பதினோரு ருத்ரர்களும், எட்டு வஸுக்களும், எல்லாவேதங்களும் உண்டானார்கள்" "நாராயணன் ஒருவரேயிருந்தார். ப்ரஹ்மாவும், ருத்ரனும் அப்பொழுது இல்லை. நாராயணர் ஒருவரேயிருந்தார். சங்கரராவது, ப்ரஹ்மாவாவது அப்பொழுது இல்லை. "அவர் முனியாகவிருந்து ஸங்கல்பித்தார். அவரிடமி ருந்து இவையாவும் உண்டாயின." "எவருடைய தொப்பிளில் தோன்றிய தாமரஸ புஷ்பத்திலிருந்து மஹாத்மாவான ப்ரஜாபதி உண்டானாரோ." "அதில் ப்ரஹ்மா உண்டானார்." "அவர் முந்தி மூன்று கண்களுள்ளவரும், மூன்று தலைகளுள்ளவரும்,

மூன்று கால்களுள்ளவருமான ஸம்ஹாரமூர்த்தியை யுண்டுபண்ணினார்" ப்ரஹ்மதேவர், தக்ஷர் முதலியவர் கள், காலம், மற்ற ஸகல ப்ராணிகள் இவைகள் யாவும் மஹாவிஷ்ணுவின் விபூதிகளேயாம். மேலும், ருத்ரன், காலன், அந்தகன் நான்குவிதமான ப்ராணிகள், இவைகள் ஜனார்த்தனனுடைய வீபூதியே. மேற்காட்டிய ச்ருதிகளாலும், ஸ்மிருதிகளாலும், ப்ரஹ்மா, ருத்ரன் இருவர்களும், மஹாவிஷ்ணுவால் ஸிருஷ்டிக்கப்பட்ட வர்கள் என்று தெரியவருகிறது. நாராயணனைக் காட்டிலும் மேற்பட்ட வேறு தத்வமிருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஸகல ஜகத்தும் புருஷனேயாம். ஜகத்தானது அவனை உபஜீவிக்கிறது." "அவருக்கு ஸமானனும் மேற்பட்டவனும் காணப்படவில்லை" ச்ருதிகள் ஓ! அர்ஜுனா! என்னைக்காட்டிலும் மேலானதொன்று மில்லை." ஸ்மிருதி. ப்ரளய காலத்தில் எல்லாம் ப்ரகிருதியில் லயித்திருக்கும் பொழுது ஸகல ஜகத் ரூபியான நாராயணன் ஒருவரேயிருக்கிறார். புண்டரீ காக்ஷனைவிட வேறு மேலான தெய்வமில்லை. மேல்காட்டிய ப்ரமாணங்களால் மஹாவிஷ்ணுவே மேலானவைரென்று ஏற்படுகிறது.

ஆக்ஷேபம்– மும்மூர்த்திகளும் ஒருவரென்றும், விஷ்ணுவைக்காட்டிலும் மேலான தத்வமிருக்கிற தென்றும் ப்ரமாணங்களை காட்டியிருக்கிறோமே.

ஸமாதானம்– அதிற்சொல்லிய சிவ, சம்பூ ஈச, முதலிய சப்தங்களுக்கு நாராயணனென்றே அர்த்தங் கொள்ளவேண்டும். ருத்ரன் முதலியவர்கள் கர்மத்துக்கு வசப்பட்டவர்களென்று சொல்லியிருக்கிறது. வாஸு

தேவன் கர்மவச்யரென்று ஓரிடத்திலும் சொல்லப் படவில்லை. ஆகையால் நாராயணனே எல்லா தெய்வங்களிலும் மேலானவர். அவரை அடைவதற்கு அவரே காரணம். வீர.15–6 ஞானசா –கபிலரால் சொல்லப்பட்ட ப்ரகிருதி புருஷ விஷயமான க்ரந்தம், தபஸ், சாந்த்ராயணம் முதலியவை. வீர. லீலாவதார– ஈச்வரனுடையவை கர்மாதீனமல்ல வென்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–3

பகவதவதாரங்கள்

உலகங்களை ஸிருஷ்டிப்பதற்காக, பகவான் ஆதியில் மஹத்தத்வம், அஹங்காரம் முதலியவைகளுடன் கூடியதும், 16 கலைகளுள்ளதுமான புருஷதேஹத்தை எடுத்துக்கொண்டார். பின்பு ஜலத்தால் உலகமுழுவதும் மூடப்பட்டிருக்க, அவர் அந்த ஜலத்தில் படுத்து யோகநித்ரை செய்தார். அப்பொழுது அவருடைய மடுப்போலிருக்கும் தொப்புளிற் தோன்றிய தாமரை புஷ்பத்திலிருந்து ஒருவர் உண்டானார்;அவரே மரீசி முதலிய ப்ரஜாபதிகளுக்கு அதிபதியாகிய ப்ரஹ்மதேவர். மேற்சொல்லிய புருஷரூபத்தில் ஏற்பட்டிருக்கும் அவயவங்களின் அமைப்புகளால் தேவர்கள், மனிதர்கள் முதலியவர்கள் ஸிருஷ்டிக்கப்பட்டு உலகமானது விஸ்தாரமாகிற்று. மேற்காட்டிய பகவத் ரூபமே சுத்தமானது மேலான ஸத்வகுணமுள்ளது ஞானக் கண்ணுள்ள யோகிகள் இந்த பகவத் ஸ்வரூபத்தை அனேகங்கால்கள், கைகள், முகங்கள், தலைகள், கண்கள், மூக்குகள், காதுகள் என்னும் இவைகளால் அற்புதமான தாகவும், அனேக கிரீடங்கள், குண்டலங்கள் முதலிய வைகளால் ப்ரகாசிப்பதுமாக பார்க்கிறார்கள்:அந்த தேஹத்திலிருந்தே அனேக அவதாரங்கள் வெளிப் படுகின்றன.காரியம் முடிந்தவுடன் அதனிடத்திலேயே அடங்குகின்றன. மேலும் அந்த ரூபம் நாசமற்றது. அதனுடைய அம்சம், ப்ரஹ்மதேவர். அவருடைய அம்சமுள்ளவர்கள், மரீசி முதலிய ப்ரஜாபதிகள். அவர்களாலே தேவர்களும், மனிதர்களும், பசு, பக்ஷி முதலியவைகளும், ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன.

6–28. புருஷ தேஹத்தை அங்கீகரித்த அந்த தேவனே கௌமாரமென்ற ஸிருஷ்டியில் ப்ராஹ்ம மணராயிருந்து, ப்ரஹ்மசர்ய வ்ரதத்தை அனுஷ்டித்து வந்தார். இது ஒரு அவதாரம். மேலுமவர் பன்றி சரீரமெடுத்து பாதாளலோகஞ் சென்று, அவ்விடமிருந்த பூமியை இவ்வுலகத்திற்கு கொண்டு வந்தார். இது மற்றொரு அவதாரம். தவிர ரிஷி ஜன்மாவில் தேவ ரிஷியான நாரதராய் அவதரித்து ஸாத்வத தந்த்ர மென்ற பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தைச் செய்து வெளியிட்டார். அதில் சொல்லிய கர்மங்கள் துக்கத்தைக் கொடுக்கிறதில்லை, (பகவானுடைய ஆராதன ரூபங்களாகையால்) அந்த மஹாபுருஷனே தர்மகலையின் ஸிருஷ்டியில் நரன், நாராயணன் என்ற திவ்யநாமங்களுடன் ரிஷிகளாக அவதரித்தார். அந்த நான்காவது அவதாரத்தில் இந்த்ரியங்களையும் மனத்தையும் அடக்கி கடுமையான தபஸ் செய்தார். அவரே கபிலரென்ற மேலான பெயருடன் ஸித்த புருஷனாக 5–வது அவதாரஞ்செய்து காலமஹிமையில் ஒளிந்து போன தத்வங்களின் உண்மையைத் தெரிவிக்கும் ஸாங்க்ய சாஸ்த்ரத்தை ஆஸுரி என்ற ப்ராஹ்மணருக்கு உபதேசித்தார். பின்னுமொரு சமயத்தில் அத்ரி மஹர்ஷியானவர் மஹாவிஷ்ணுவை நோக்கி "உமக்கு சமமான புத்ரன் எனக்கு உண்டாகும் படி அனுக்ரஹிக்க வேண்டும்" என்று பிரார்த்திக்க பகவான் அப்போர்ப்பட்ட புத்ரன் தம்மைத்தவிர வேறொருவரும் இல்லாமையால் தம்மை அத்ரி ஏமாற்றி விட்டாரென்று வெறுப்பில்லாமல், தானே தத்தாத்ரே யராக அவதரித்தார். மேலும் அவர் அலர்க்கன் என்ற அரசனுக்கும், ப்ரஹ்லாதன் முதலியவர்களுக்கும், ஆன்வீக்ஷகியை (ஆத்மவித்தையை) உபதேசித்தார்.

பின்னுமவர் ஆகூதி என்பவளிடம் ருசி என்பவருக்கு 'யக்ஞர்' என்ற பெயருடன் அவதரித்து ஸ்வாயம்புவ மன்வந்த்ரத்தில் தாம் இந்த்ரனாகவிருந்து தம்முடைய புத்ரர்களான யாமன் முதலிய தேவர்களுடன், உலகத் தைக் காப்பாற்றினார். இன்னும் அந்த பகவான் ஆக்னீதரருடைய புத்ரராகிய நாபி என்பவருக்கு மேருதேவியினிடத்தில் ரிஷபரென்ற பெயருடன் அவதரித்து எல்லா ஆச்ரமங்களிலும் மேலான பரமஹம் ஸாச்ரமத்தை யோகிகளுக்கு உபதேசித்தார். பின்னு மொருக்கால் மஹர்ஷிகளால் ப்ரார்த்திக்கபட்டு ப்ருது வென்ற ராஜர்ஷியாக அவதரித்து, பசுவின்ரூபத்தை தரித்து பூமியினிடமிருந்து ஸகல வஸ்துக்களையும் கறந்து உலகத்தைக்காப்பாற்றியதால், இந்த அவதாரம் மிகவும் விரும்பத் தக்கதாயிருந்தது. தவிரவும் சாக்ஷுஷமன்வந்தரத்தில் ஸத்யவ்ரதருக்காக மாயையால் காண்பிக்கப்பட்ட ப்ரளயத்தில், மத்ஸ்யரூபத்தை தரித்து பூமியாகிய ஓடத்தில் வைவஸ்வத மனுவாக ஆகப்போகிற ஸத்யவ்ரதரை வைத்து காப்பாற்றினார். அந்தப்ரபுவே, தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து ஸமுத்ரத்தை அமிருதத்திற்காகக் கடையும்போது, ஆமை உருவம் கொண்டு மத்தாகிய மந்தரமலையை, முதுகில் தாங்கினார். அவரே தன்வந்தரியாக அவதரித்தும், பிந்தி மோஹினி வேஷங்கொண்டு, அஸுரர்களை மோஹிக்கச் செய்து, தேவர்களுக்கு அமிருதத்தைக்கொடுத்து புஜிக்கவும் செய்தார். மிக்க பலிஷ்டனாகிய, ஹிரண்யகசிபுவை நரஸிம்ம சரீர மெடுத்து பாயைப் பின்னுகிறவன் கோரையைப் பிளப்பது போல் நகங்களால் துடையில் கிழித்து அவனைக்கொன்றார். இது பதினான்காவது அவதாரம். பின்னுமொரு ஸமயத்தில், மஹாபலியென்ற அஸுரன்

யாகஞ்செய்யும்பொழுது, பகவான் வாமனரூபியாக அவனுடைய யாகசாலை சென்று மூன்றடி பூமியை யாசித்தார். மேலும் அதனால் அவனிடமிருந்து ஸ்வர்க்க ராஜ்யத்தை பிடுங்கிக்கொண்டு அவனை நிக்ரஹித்தார். இது பதினைந்தாவது அவதாரம். பின்னுமொருக்கால் பூமியில் பரசுராமனாக அவதரித்து தர்ம விரோதஞ் செய்யும் அரசர்களை கோபத்துடன் இருபத்தொருதரம் கொன்று பூமியில் க்ஷத்ரிய வம்சமில்லாமலொழியச் செய்தார். இது பதினாறாவது. அந்த பரமபுருஷனே ஸத்யவதியிடத்தில் பராசரருக்கு வ்யாஸராய் அவதரித் தார். இவருடைய காலத்தில் மந்தபுத்தியுள்ளவர்களாக யிருந்த படியால் வேதங்கள் சாகை சாகையாக பிரிக்கப்பட்டன. மேலும், ராவணன் முதலிய ராக்ஷஸர் களை கொல்வதற்காக ஸ்ரீ ராமாவதாரஞ்செய்து, ஸமுத்ரத்தில் அணைகட்டியது முதலிய ஆச்சர்யங் களைக் காட்டினார். இது பதினெட்டாவது அவதாரம். பின்பு விருஷ்ணி குலத்தில் பலராமன், ஸ்ரீ கிருஷ்ணன் என்ற திவ்ய நாமதேயங்களுடன் அவதரித்துப் பூமியின் பாரத்தை நிவர்த்தித்தார். இது பத்தொன்பதாவது அவதாரம். பின்பு கலியுகத்தில் கீகடம் (மத்ய கயை) என்ற தேசத்தில் புத்தனென்ற பெயருடன் ஜினருக்கு (சுத்தோதனனென்று சிலர்) புத்ரனாக அவதரிப்பார். கலியின் முடிவில் யுகஸந்தியில் அரசர்களெல்லோரும் பெரும்பாலும் திருடர்களாக ஆய்விடுவார்கள். அப்பொழுது ஜகத்திற்கு குருவாகிய பகவான் கல்கியென்ற பெயருடன் விஷ்ணுயசஸ் என்பவருக்குப் புத்ரனாக அவதரிப்பார். இது இருபத்தொன்றாவது அவதாரம்.

ஓ! "ப்ராஹ்மணர்களே! குறையாத, ஜலமுள்ள

பெரிதாகிய ஏரியிலிருந்து அனேக வாய்க்கால்கள் ஒடுவது போல, ஸத்வ மூர்த்தியாகிய விஷ்ணுவின் அவதாரங்கள் கணக்கிட முடியாதவைகள். ரிஷிகள், முனிகள், தேவர்கள், மனுவின் புத்ரர்கள், ப்ரஜாபதிகள் எல்லோரும் மஹாவிஷ்ணுவின் அம்சாவதாரமே தவிர வேறில்லை. மேலும், முன்காட்டிய படியுள்ள பகவானுடைய அம்சங்கள், கலைகள், விபூதிகள், ஸாக்ஷாத் விஷ்ணுவாகிய கிருஷ்ணன் இவர்கள், அஸுரர்களால் உலகத்திற்கு உபத்ரவம் நேரும்போது அவர்களை நிக்ரஹித்து உலகத்தைச் ஸுகிக்கச் செய்கிறார்கள்.

29. இந்தப் பகவானுடைய அதிரஹஸ்யமான அவதாரங்களைக் காட்டும் ச்லோகங்களைக் காலையிலும், மாலையிலும், சுத்தனாய் பக்தியுடன் படித்தவன் ஸம்ஸார துக்கத்திலிருந்து நிவர்த்தியடைகிறான்.

30–39. ரூபமில்லாதவனும், சித்ரூபியாயுமிருக்கும் ஜீவனுக்குப் பகவானுடைய மாயையின் குணங்களாகிய மஹத்தத்வம் முதலியவைகளால் இந்த ஸ்தூலசரீர மேற்படுத்தப்பட்டது. வாயுவை (காற்றை) ஆச்ரயித்த மேகங்கள் ஆகாயத்திலிருப்பதாயும், பூமியின் தூளிக்காற்றிலிருப்பதாகவும், அக்ஞர்கள் நினைப்பது (ஆரோபிப்பது) போல எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாயிருக்கும் ஆத்மாவினிடம் சரீரம் ஆரோபிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஸ்தூல சரீரத்திற்கு மேற்பட்டதும் கை, கால் முதலிய அவயவ பரிமாணங்களற்றதும், பார்க்கப்படாததும், கேட்கப்படாததாயும், ஸூக்ஷ்மமாயும், ஜீவனுடைய உத்கிறந்தி (வெளியில் போவது) முதலியவைகளுக்கு ஸாதனமாயுமுள்ள லிங்க சரீரமும் முன்காட்டியதுபோல ஆரோபிக்கப்படுகிறது. ஸ்தூல

சரீரம் லிங்கசரீரமாகிய இவைகள் பரமாத்மாவினிடம் ஆரோபிக்கப்படுவதற்குக்காரணம் அவித்யையே, உண்மையில் ஆத்மாவிற்கு இவ்விரண்டின் ஸம்பந்தமுமில்லை. இம்மாதிரியான உண்மையான ஸ்வரூபஜ்ஞானம் எந்தக்காலத்தில் உண்டாகிறதோ அப்பொழுது ஜீவன், ஞான ஸ்வரூபியான ப்ரஹ்மாத்ம பாவத்தையடைவான். ஈச்வரனுடைய மாயையானது ஓய்வடையுமானால் அப்பொழுது ஜீவன் ப்ரஹ்மமாக ஆகிறான். பரமானந்த ரூபியாய் விளங்குகிறான். அந்தர்யாமியான பகவான் ஒன்றையுஞ் செய்யாமலிருப்பவரானாலும் கர்மங்களை செய்கிறவரென்றும், உத்பத்தியில்லாதவரானாலும் பிறந்தாரென்றும், கவிகள் வேதத்தின் ரஹஸ்யமான விஷயத்தை வர்ணிப்பது ஜீவனுக்கு பிறப்பு முதலியவைகளுண்டென்று சொல்வதுபோல மாயையேதவிற வேறில்லை. வீண்போகாத லீலைகளுள்ளவரும், ஸகல ப்ராணிகளிடம் மறைந்திருப்பவருமான ஈச்வரனே இந்த லோகத்தைப் படைக்கிறார்;காப்பாற்றுகிறார்; ஸம்ஹரிக்கிறார். ஆனாலும் ஸ்வதந்தரராகையால் ஆறு இந்த்ரியங்களுக்கு யஜமானராயிருப்பதால் அதுகளின் விஷயங்களை வெகு தூரத்திலிருந்தே க்ரஹிக்கிறார். அவைகளில் ஸம்பந்தப்படுகிறதில்லை. மூடன் எப்படி நடனம் (நர்த்தனம் செய்கிறவனால்) செய்யப்படும் அபினயத்தை அறியமாட்டானோ அப்படி அற்பபுத்தி யுள்ளவன் ஸகல ஜகத்தைப் படைப்பவரும், ஸங்கல்பத்தால் ரூபங்களையும் வாக்கினால் பெயர்களையும், விஸ்தரிப்பவருமான பகவானுடைய லீலாவிபூதிகளை யுக்தி(தர்க்கம்) முதலியவைகளின் ஸாமர்த்யத்தால் அறியமாட்டான். ஆனால், நல்மார்க்கத்தை ஸ்தாபிப்பவரும், சத்ருக்களை ஜயிக்கும் வீர்யமுள்ளவரும் சக்ராயுதம் தரித்தவருமான பரமாத்மாவின் ஸ்வரூபத்தை,

இடைவிடாமல் கபடமற்று பகவானுடைய பாதங்களாகிய தாமரஸ புஷ்பத்தின் வாஸனையை ஸேவிக்கும் பக்தனே ச்ரமபட்டு தெரிந்துகொள்ளுகிறான். ஓ ப்ராஹ்மணர்களே! இதைத் தெரிந்து கொண்டு ஸகல லோகத்திற்கும் நாதராகிய ஸ்ரீ வாஸுதேவரிடம், எவர்கள் இடைவிடாமல் மனத்தைச் செலுத்துகிறார்களோ, அவர்களுக்குக் கர்ப்பவாஸம் முதலிய துக்கத்தை உண்டுபண்ணும் பிறப்பு இறப்பு நேரிடமாட்டாது. ஆதையால் எல்லாவற்றையும் அறிந்த அந்த பக்தர்களே தன்யர்கள் (மேலானவர்கள்)

40–44. ஸர்வஜ்ஞரான வேதவ்யாஸ மஹர்ஷி உத்தமச்லோக (நல்வினையை கொடுப்பதால் மேலான பெயருள்ள) ராகிய பகவானுடைய சரித்தத்தைக் காட்டுகிறதும். வேதங்களுக்கு ஸமமாயுள்ளதுமான ஸ்ரீமத் பாகவத புராணத்தைச் செய்து முடித்தார். பிறகு உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டி ஸகல மங்களங்களுக்கும் இருப்பிடமாயும், அர்த்தத்தாலும், சப்தத்தாலும் மிகவும் மேலானதுமான அந்தப் புராணத்தை, யோகிகளுக்குட் சிறந்தவரும், தம்முடைய புத்ரரத்னமுமாகிய சுகருக்கு உபதேசித்தார். அந்தச்சுகர் எல்லாவேதங்களிலும், இதிஹாஸங்களிலுமிருந்து அவற்றின் ஸாரத்தை எடுத்து செய்யப்பட்ட இந்தச் சாஸ்த்ரத்தை, கங்கைக்கரையில் மிகுந்த வைராக்கியத்துடன், ப்ராயோபவேசஞ் செய்திருக்கும் பரீக்ஷித்து மஹாராஜனுக்கு, அனேக மஹர்ஷிகள் கேட்டிருக்கும் போது சொன்னார். இவ்விதமாக அது பூமியில் பரவியது. ஓ! ப்ராஹ்மணர்களே! அந்த ஸமயத்தில் நான் அவ்விடம் போனேன். மேலும் அவ்விடத்தில் உட்கார்ந்திருந்த மிகுந்த தேஜஸுள்ள அந்த ப்ரஹ்ம

ரிஷியான சுகருடைய அனுக்ரஹம் பெற்றேன்; நீங்களனைவரும் 'அதன் விஷயத்தை தெரிந்துகொள்ள வேண்டும்' என்று மிகுந்த ஆவலுள்ளவர்களாய் இருப்பதால் நான் சுகரிடம் கேட்டபடி, என்புத்திக் கெட்டியவரையில் சொல்லுகிறேன். (கிருஷ்ணபகவான் தர்மம், ஞானம் இவைகளுடன் தமது லோகஞ்சேர்ந்த பிறகு கலியில் ஞானக்கண்ணில்லாமல் கஷ்டப்படும் ஜனங்களுக்கு இந்த புராணமாகிய ஸூர்யன் உதயமாகி இருக்கிறது.)

நோட்டு.

17–22. 16 கலைகள்– இந்த்ரியங்கள் 11, ஐந்து பூதங்கள், இந்த பதினாறு கலைகள், பகவானுடைய சரீரம் உண்மையில் இப்போர்ப்பட்டதல்ல. ஆனாலும், விராட்தேஹத்தின் அந்தர்யாமியாயிருக்கும் பகவானை விராட்ரூபமாக உபாஸிப்பதற்குபயோகமாகச் சொல்லப் பட்டது. ஸ்ரீத. 18–12. [illegible]ளமார– இவருக்கு ஸனத்குமாரரென்று பெயர். ஆனால் இவர் ஸனகர் முதலியவர்களில் சேர்ந்தவரல்ல. விஜயத் ஆதிபுருஷன் ப்ரஹ்மதேவருடைய ஸ்வரூபமாகவிருந்து ஸனத்குமாரர் முதலியவர்களாக அவதரித்தார். பிறகு ஈச்வரனை யுபாஸித்தார். அவர்கள் அனுப்ரவேசாவதார ரூபிகளெனப்படுவார்கள். மேலுமவர்கள் அவித்யையுள்ளவர்களேயாம். ஆனாலும் பகவானையுபாஸித்துக் காலாந்தரத்தில் ஞானத்தை யடைவார்கள். வீர இது இந்த ஒரு அத்யாயத்தில் 21 அவதாரங்கள் நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. ஆனாலும் அவைகள் வரிசையாகச் சொல்லப்படவில்லை. ஆனாலும் இவ்விடத்தில் சொல்லிவருவதில் முதலாவது என்பதேயாம். ஸ்ரீத.

16 தேவர்ஷி–மஹிதாஸரென்ற மஹர்ஷி. விஜ20. தர்ம– யமனுடைய அம்சம். ஸ்ரீத. கபிலர்– இவர் ப்ரஸித்தராகிய கபிலரல்லவென்று சிலர். விஜ. 31 வெறுப்–மூலத்தில் அனஸூயயா என்றிருப்பதால், அத்ரியின் பத்னியாகிய அனஸூயை யென்பவளால் அடையப்பட்டார்.– வீர. விஜ. 19–4. யாம– ஒவ்வொரு மன்வந்தரத்திலும் தேவர்களுடைய பெயர் மாறுகிறதுண்டு– விஜ. நாபி–ஸ்வாயம்புவ மனுவின் புத்ரர்– வீர. இந்த்ரனுடைய புத்ரன்.– முனிமஹர்ஷி– வேனனைக்கொன்ற பிறகு.– வீர மாயையால்– மன்வந்தரத்தின் முடிவில் ப்ரளயமில்லாமற் போனாலும், அக்காலத்தில் மார்க்கண்டேயருக்குக் காண்பித்தது போல காண்பிக்கப்பட்டது– ஸ்ரீத. துடையில்– மடியில் வைத்துக்கொண்டு. விஜ வாமன– துஷ்டர்களுடைய கர்வத்தைக் குறைப்பதால் இப்பெயர் கிடைத்தது– ஸ்ரீத. கோபத்துடன்.– சக்தியில்லாதவனுக்குக் கோபமுண்டாகுமேயல்லாமல், ஸாமர்த்யமுள்ளவர்களுக்கு கோபமுண்டாக ந்யாய மில்லையாகையால் கோபங்கொண்டவர்போல வென்பது கருத்து– விஜ. ரிஷிகள்– மனுவின் புத்ரர்களாகிய ப்ரியவ்ரதர் முதலியவர்கள்.– விஜ. கலைகள்– குமாரர்கள், நாரதர் முதலியவர்கள். கலாவதாரபூதர்கள், அதிலும் குமாரர் முதலியவர்கள் ஞானமுள்ளவர்கள் ப்ருது முதலியவர்கள் பகவானு டைய சக்தி விசேஷமுள்ளவர்கள்– ஸ்ரீத. விபூதிகள்– "எந்தப்ராணிகள் விபூதியுள்ளனவைகளோ, எது அழகு பொருந்தியதோ, எது பலமுள்ளதோ, அவைகள் யாவும் என்னுடைய தேஜஸ்ஸின் அம்சத்திலிருந்து உண்டானவர்கள்" பகவத்கீதை. ரூபமில்லாத–ஜீவனுக்கு தேஹஸம்பந்தம் விஷ்ணுவின் மாயையால் ஏற்பட்ட

தாகையால் ஞானத்தால் அந்த அவித்யை நிவர்த்தி யாகிறதென்பது இதுமுதல் ஐந்து ச்லோகங்களால் காட்டப்பட்டிருக்கிறது. ஸ்ரீத. ஆரோபி- நான் தேவன், இந்த சரீரம் என்னுடையது, என்ற அபிமானத்திற்கு விஷயமாகச் செய்யப்பட்டிருக்கிறது. உண்மையில் தேவர்கள் முதலிய சரீரம் ஜீவனுடைய ஸ்வரூபமல்ல.

ஆக்ஷேபம்– தேவசரீரம் முதலியவைகள் அவை களுக்கு அபிமானியாகிய ஜீவனால் தரிக்கப்படுகிற தாகையால் அவனுடையதென்று ஏன் சொல்லக்கூடாது?

ஸமாதானம்– "எவனுக்கு ஆத்மா சரீரமோ எவன் ஆத்மாவினிடத்திலிருக்கிறானோ" என்ற ச்ருதிப்படியும். ஜீவனும் பரமபுருஷனால் தரிக்கப்படுகிறபடியால் எல்லாவற்றிற்கும் பரமாத்மாவே முக்யமான ஆதாரம்– வீர. ஆகாயம் வாயு இவைகள் கண்ணிற்குப் புலப்படாதவைகளானாலும், மேகக்கூட்டத்தை ஆகாசமென்றும், பூமியிலிருந்து கிளம்பும் தூளிகளை வாயுவென்றும் சொல்வதுபோல, அக்ஞஜனங்கள் ப்ரதிமையைப் பார்த்து அதையே ஈச்வரனென்று சொல்லுகிறார்கள். அதனால் ஸர்வ ஸாக்ஷியான பகவான், இந்த்ரியங்களால் பார்க்கக்கூடியவர் (த்ருச்யர்) என்றும் சித்ரூபியான அவர் ஜடரென்றும் ஏற்படுகிறது. ஆகையால் இது ப்ராந்தியேயாம்.– விஜ. ஸூக்ஷ்மம்– "இவன் அவ்யக்தன், நினைக்கமுடியாதவன் விகாரமற்ற வன்"– பகவத்கீதை. ஒன்றையும்– புண்யபாபங்களற்ற வர், கர்மாதீனமான சரீரமில்லாதவர்–வீர. ரஹஸ்யம்.– உத்பத்தியை அடையாமலே பலவகையாக உண்டா கிறார்" என்ற ச்ருதியில் உத்பத்தியடையாதவரென்றால்

ஜீவன்போல் கர்மாதீனமாக ஜன்மமில்லாதவரென்றும் தனதிஷ்டப்படி பகவானுக்கு உத்பத்தியுண்டென்றும் அர்த்தம். அதைக் கவிகளே அறிவார்கள். "தீரர்கள் அந்தப் பகவானுடைய சரீரத்தை அறிகிறார்கள்" ச்ருதி: ஆகையால் பகவானுடைய ஜன்மகர்மங்கள், ஜீவனுடையது போன்றவைகள் என்று நினைக்கக் கூடாது என்பது வேதவாக்யத்தாலேயே காட்டப் பட்டிருக்கிறது– வீர லீலைகள் ஜீவன் அனாதியாகிய கர்மத்தால் புண்ய பாபங்களைச் செய்து அதனால் ஸகல துக்கங்களை அடைவதுபோல் பகவானுடைய செய்கைகள் அவரைக்கட்டுப்படுத்துகிறதில்லை. மேலும் அவைகள் அவருக்கு லீலைகளாகும். அவைகள் வீண் போகாதவைகள் என்றதால் ஜீவனுடைய கர்மங்கள் அனேக விக்னமுள்ளவைகள் என்று காட்டப்பட்டன. இப்படி பலவகையிலும் ஜீவனைக்காட்டிலும் மேலானவரென்பது தாத்பர்யம். ஆறு– ஞானம், சக்தி, தேஹபலம், ஐச்வர்யம், வீர்யம் தேஜஸ் இவைகளுக்கு அதிபதி. அல்பபுத்தி– நான், என்னுடையது என்ற அபிமானமுள்ளவன். நடன– வேஷதாரியானவன், பலவகையான வேஷங்களைத் தரித்தாலும் எப்படி இவன் வேறாக ஆகிறதில்லையோ, அப்படி பகவான் மத்ஸ்யம், ஆமை முதலியவைகளின் உருவங்கொண்டாலும் அவருடைய உண்மையான ரூபம் மாறுகிறதில்லை மேலும் வேஷம் தரிப்பது முதலிய சேஷ்டைகள் அவனுக்கு விளையாட்டாயிருப்பது போல் பகவானுக்கும் அவைகள் லீலைகளேயாகும். அறிந்த– பகவந்த: என்ற பதத்திற்கு நீங்கள் என்று அர்த்தங்கொண்டு ஏ சௌனகர் முதலியவர்களே! நீங்கள் மேலானவர்கள். ப்ராயோபவேசம்– ஜீவித்திருப்பதில் ஆசையில்லாமல் ஆஹாரமில்லாமலிருக்கிறதாகிய வ்ரதம் வீர.–விஜய.

அத்யாயம்–4.

வியாஸர் கவலை யடைந்தது.

அதனைக் கேட்டுத் தீர்க்கஸத்ரம் செய்துகொண்டிருக்கும் மஹர்ஷிகளுக்குள் வயது சென்றவரும், கூட்டத்தில் முக்யரும், ரிக்வேதியுமாகிய சௌனகரென்பவர் ஸூதரைக் கொண்டாடிப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினார்.

2–13. "ஓ மிகுந்த பாக்யமுள்ள ஸூதரே! பரீக்ஷித்து மஹாராஜனுக்குச் சுகஸ்வாமியால் சொல்லப்பட்ட புண்யகரமான ஸ்ரீமத் பாகவதகதையை எங்களுக்குச் சொல்லவேண்டும். கதை சொல்வதில் தாங்கள் மிக்க ஸாமர்த்யமுள்ளவர்கள். இந்தக்கதை எந்தயுகத்தில் எந்தவிடத்தில் நடந்தது எதற்காக யாரால் தூண்டப்பட்டு, இந்த கிரந்தத்தை வ்யாஸமஹாமுனிவர் செய்தார். மேலும் அவருடைய புத்ரரான சுகரென்பவர் மஹாயோகி; தாம், பிறர் என்ற பேதபுத்தியில்லாமல் எல்லாவற்றையும் ப்ரஹ்ம ஸ்வரூபமாகப் பார்ப்பவர். பரமாத்மாவினிடத்திலேயே புத்தியைச் செலுத்தியவர், மாயையாகிய தூக்கத்தைவிட்டு விழித்தவர். இவருடைய ஸ்வபாவம் வெளியில் தெரியாது. பார்வைக்கு மூடன்போல் தோன்றுகிறவர். இவர் குரு ஜாங்கலமென்னும் தேசத்தில் ஹஸ்தினாபுரத்தில் பயித்தியம் பிடித்தவன் போலவும், ஊமையன் போலவும், மூடன் போலவும் ஸஞ்சரிக்கும்போது, இவருடைய உண்மையைப் பட்டணத்து ஜனங்கள், எப்படித்தெரிந்து கொண்டார்கள்? இவர் எல்லா ஆசைகளையும் ஒழித்துத் துறவியாய்ப் போகும்போது பிதாவாகிய

வ்யாஸமஹர்ஷி புத்ரஸ்நேஹத்தால் அவர் பின்செல்ல வ்ழியில் ஜலக்ரீடை செய்துகொண்டிருந்த அப்ஸர ஸ்த்ரீகள், வஸ்த்ரமில்லாதவரும், யுவாவுமாகிய சுகரைக் கண்டு வெட்கப்படவில்லை. இவருக்குப்பின்னே வருகின்றவரும், மரவுரியை யுடுத்திக்கொண்டவரும் வயது சென்றவருமான வ்யாஸ மஹர்ஷியைப் பார்த்த வுடன் வெட்கமடைந்து தம்தம் ஆடைகளையுடுத்திக் கொண்டார்கள். இந்த ஆச்சர்யத்தைக் கண்ணுற்ற மஹர்ஷியானவர், அவர்களை இது விஷயமாகக் கேட்க அவர்கள் மஹர்ஷியை நோக்கி "புருஷன், ஸ்திரீ, என்ற பேதபுத்தி உமக்கிருக்கிறது. சுத்த திருஷ்டியுள்ள உம்முடைய புத்ரருக்கு அம்மாதிரியான எண்ணமில்லை" என்று பிரத்யுத்தரஞ் சொன்னார்கள். அப்போர்ப் பட்ட சுகருக்கும், பாண்டுவின் வம்சத்தில் பிறந்த பரீக்ஷித்து மஹாராஜனுக்கும் எப்படி ஸம்வாதம் (பேச்சு) நேர்ந்தது? அதனாலல்லவா இந்த பாகவத கதை வெளிப்பட்டது. இவர் கிருஹஸ்தர்களுடைய வீட்டிற்குப் பிக்ஷைக்காகச் சென்றால் அந்த கிருஹத்தை சுத்தப்படுத்துவதற்காக ஸ்வல்பகாலம் (மாடு கறப்பதற்கு எவ்வளவுகாலம் பிடிக்குமோ அவ்வள காலம்) காத்திருப்பார். இவர் ஒரே இடத்திலிருந்து பாகவத கதையைச் சொன்னது மிக ஆச்சர்யம். ஏ! ஸூதரே! ஜனங்கள் அபிமன்யுவின் புத்ரராகிய பரீக்ஷித்து மஹா ராஜனைப் பாகவதர் (பகவானுடைய பக்தர்கள்)களுக் குட் சிறந்தவராகச் சொல்லுகிறார்கள். அவருடைய பிறப்பு, மிகவும் அத்புதமானது. ஆகையால் அவருடைய சரிதத்தைச் சொல்லவேண்டும். பாண்டவர்களுக்குக் கீர்த்தியை விருத்தி செய்தவரான அந்தச்சக்ரவர்த்தி தமது அளவற்ற ராஜ்யத்தையும், லக்ஷ்யஞ்செய்யாமல், என்ன காரணத்தால் கங்கையின் கரையில் ப்ராயோப

வேசஞ் செய்தார். ஓ! ஸூதரே! சத்ருக்கள் உத்தம வஸ்துக்களை காணிக்கையாக எடுத்துவந்து தங்களுடைய க்ஷேமத்திற்காக அவருடைய பாதபீடத்தை (கால் வைத்துக்கொள்ளும் ஆஸனம்) நமஸ்கரிக்கிறார்களோ அவ்வளவு பராக்ரமமுள்ள மஹாராஜன் யௌவனமுள்ளவராயினும், ஒழிக்கமுடியாத பணத்தின் ஆசையையும், ப்ராணனிடத்திலுள்ள அபிமானத்தையும், விடவேண்டுமென்று எப்படி விரும்பினார்? உத்தமச்லோகராகிய பகவானிடத்திலேயே ,மனத்தைச் செலுத்தியவர்கள், லோகத்திற்கு க்ஷேமம், ஐச்வர்யம் இவைகளை உண்டுபண்ணுவதற்காக ஜீவிக்கிறார்களே தவிர சொந்தமான கார்யத்திற்காகவல்ல. ஆகையால் இந்த அரசன், சரீரத்தைவிட விரும்பிய காரணம் யாது? (பிறருக்கு உபயோகமான சரீரத்தை தான் கெடுப்பது ந்யாயமல்லவென்பது கருத்து) வேதத்தின் அர்த்தம் தவிர இதிஹாஸ புராணங்களின் அர்த்தங்களைச் சொல்வதில் மிக்க ஸாமர்த்யமுள்ள வரென்று உங்களை நினைக்கிறேன். ஆகையால் என்னால் கேட்கப்பட்ட எல்லா விஷயங்களையும் சொல்லவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

14–18 இவற்றைக்கேட்ட ஸூதர் சொல்லத் தொடங்கினார் மூன்றாவது த்வாபரயுகத்தின் கடைசியில் வஸுவின் வீர்யத்திற்குண்டான ஸத்யவதியினிடம், பராசரருக்கு புத்ரனாக அவதரித்த ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அம்சம் இந்த வ்யாஸ மஹாமுனியே. இவர் மஹாயோகி. நடந்தது, நடக்கப்போகிறது இவைகளை அறிந்தவர். அவர் ஒருக்கால் ஸரஸ்வதீ நதிக்கரையில் ஆசமனஞ் செய்து சுத்தராய் ஸூர்யோதய காலத்தில், தாம் தனியாய் உட்கார்ந்து "அறியக்கூடாத

வேகமுள்ள காலமஹிமையால் யுகதர்மங்கள் கலந்து போய்விட்டன. ஜந்து பூதங்களுக்கும் சக்தி குறைந்து விட்டது, ஜனங்களுக்கு ச்ரத்தை, தேஹபலம், ஸத்வகுணம், ஆயுஸ் இவைகளும் குறைந்துபோயின. புத்தியோ கெட்டமார்க்கத்தில் செல்லுகிறது" என்று ஞானக்கண்ணால் பார்த்து எல்லா ஜாதியார்களுக்கும் எல்லா ஆச்ரமிகளுக்கும் என்னசெய்தால் அனுகூலம் உண்டாகுமென்று எல்லோருக்குமுபகாரமான விஷயத்தைச் செய்ய விரும்பி யோசித்தார்.

19–23. வேதத்தில் சொல்லப்பட்டதும், நான்கு ரித்விக்குகளால் முடிக்கக்கூடியதும், சுத்தமானதுமான யாகமே ஜனங்களுக்கு அனுகூலத்தைச் செய்யக்கூடிய தென்று நிச்சயித்து அந்தக் கர்மம் எப்பொழுதும் தொடர்சியாய் நடந்தேறி வருவதற்காக ஒன்றாயிருந்த வேதராசியை நான்காகப் பிரித்தார். மேலும் அந்த நான்கு பாகங்களும் ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வம், என்று பெயர்களுண்டாயின. (பாரதம் முதலிய) இதிகாசங்களும்,(பாகவதம் முதலிய) புராணங்களும், ஐந்தாவது வேதமென்று சொல்லப்படுகின்றன. மேற் காட்டிய 'ரிக்,யஜுஸ், ஸாமம், அதர்வ'என்ற நான்கு வேத சாகைகள் பைலர், வைசம்பாயனர், கவியாகிய ஜைமினி, ஸுமந்து என்கிற மஹர்ஷிகளிடம் முறையே ஒப்புவிக்கப்பட்டன. என்னுடைய பிதாவாகிய ரோம ஹர்ஷணரிடம் இதிஹாஸங்களும், புராணங்களும், கொடுக்கப்பட்டன. மேற்சொல்லிய மஹர்ஷிகளே தங்கள் தங்களுடைய வேதசாகைகளை பல வகையாகப் பிரித்தார்கள். அவைகள் அல்ப புத்தியுள்ள இக்காலத்து ஜனங்களால் அத்யயனஞ் செய்யப்படுகின்றன. அவர்கள் தங்கள் தங்கள் சிஷ்யர்களுக்கும் அத்யயனஞ்

செய்வித்து, அவைகளை உலகத்திற் பரவச் செய்தார்கள். யார் யார் எந்த எந்த சாகைகளை அத்யயனஞ் செய்தார் களோ, அவர்வர்களுக்கு அந்த அந்த சாகைகள் சொந்தமாயின.

24–32. தீனர்களிடத்தில் ப்ரீதியுள்ள பகவானாகிய வ்யாஸ மஹர்ஷியால் இப்படி வேதங்கள் பிரிக்கப் பட்டன. ப்ராஹ்மணர், க்ஷத்ரியர், வைச்யர் ஆகிய இவர்களுக்குள், அதமர்களாகிய த்விஜபந்துக்களுக்கும், ஸ்திரீகளுக்கும், சூத்ரர்களுக்கும், வேதத்தைக் கேட்க அதிகாரமில்லாததனால், அவர்கள் இதிஹாஸத்தால் க்ஷேமத்தை யடையட்டுமென்னுங் கருணையால், வ்யாஸமஹர்ஷி மஹா பாரதம் என்ற க்ரந்தத்தைச் செய்தார். ஓ! ப்ராஹ்மணர்களே, இப்படி எப்பொழுதும் எல்லாப் பிராணிகளுக்கும் க்ஷேமத்தை செய்வதிலேயே நோக்கமுள்ள அந்த மஹர்ஷியானவர் எல்லாவற்றையு மறிந்தவராயிருந்தும் அவருடைய மனத்திற்கு சாந்தி உண்டாகவில்லை; அதனால் அவர் ஸந்தோஷமில்லா மல் ஸரஸ்வதி நதியின் சுத்தமான கரையில் தாம் ஒருவராயிருந்து யோஜித்து பின்வருமாறு சொல்லலா னார். "நான் வ்ரதமுள்ளவனாய் வேதங்களை அத்யயனஞ் செய்தேன். குருக்களையும், அக்னியையும் பூஜித்தேன். ஆசார்யனுடைய கட்டளையின்படி கபடமற்று நடந்தேன். பாரதமென்ற வ்யாஜத்தால், வேதத்தின் அர்த்தத்தை எல்லோருக்கும் தெரியும்படி வெளியிட்டேன். அதில் ஸ்திரீகளாலும், சூத்ரர்களாலும், அறியக்கூடியவைகளான தர்மங்கள் காட்டப்பட்டன. அப்படியிருந்தும் என்னுடைய ஆத்மா(ஜீவன்) இயற்கையில் பூர்ணனானாலும், ப்ரஹ்மவர்சஸ் உள்ளவர்களுக்குட் சிறந்தவனானாலும், ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை யடையாதவன் போலத் தோற்றுகிறான்.

இதற்கென்ன காரணம்? இது ஆச்சர்யமாயிருக்கிறது ஆனால் பாகவத தர்மங்கள் விஸ்தாரமாக வெளியிடப் படவில்லை. அவைகளில் பரம ஹம்ஸர்களுக்கு மிகவும் ப்ரியமிருக்குமே. அவைகளே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிற்கு ப்ரியமானவைகள், அதனால்தான் நம்முடைய மனத்திற்கு ஆனந்தமுண்டாகவில்லையோ" என்று யோஜித்து ஆத்மாவை சூன்யனாக நினைத்து வருத்தமடைந்தார்.

33. இந்த ஸமயத்தில் ஸரஸ்வதி நதிக்கரையில் இருக்கும் அந்த வ்யாஸமஹர்ஷியின் ஆச்ரமத்திற்கு நாரதர் வந்தார். அப்பொழுது அந்த மஹர்ஷியானவர் தேவர்களால் பூஜிக்கப்பட்ட நாரதரைக் கண்டு எதிர் கொண்டழைத்து சாஸ்த்ரமுறை தவறாமல் அவரைப் பூஜித்தார்.

நோட்டு.

25–3. தீர்க்க– அநேக வர்ஷங்களால் முடிக்கக்கூடிய யாகம்– சந்த் 14– பேத– மூலத்தில் நிர்விகல்பக என்றிருப்பதால் நிச்சய ஞானமுள்ளவர். ஸமதிருக்– மித்ரன். சத்ரு,. மற்றவர் ஆகிய இவர்களிடத்தில் ஸமபுத்தியுள்ளவர். ஏகாந்தமதி– ஜனஸஞ்சாரமற்ற விடத்தில் வஸிப்பதில் ப்ரியமுள்ளவர். மூட–– எல்லாவற்றையும் அறிந்தவராயிருந்தும் தன்னுடைய ஸாமர்த்யத்தை வெளியிடாதவர்– சந்த். 16–விழித்த–– "ஸகல ப்ராணிகளுக்கும் எது ராத்ரியோ, அதில் யோகியானவன் விழித்துக் கொண்டிருக்கிறான்.பகவத் 26–33. மூன்றாவது– மஹாயுகத்தில். 26–28. வேதத்தின்– இவர் ஸூதஜாதி யாகையால் வேதத்தில் இவருக்கு அதிகாரமில்லையென்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–5.

வ்யாஸருக்கு நாரதர் உபதேசித்தது.

பின்பு மிகுந்த கீர்த்தியுள்ளவரும், எப்பொழுதும் வீணையைத் தரித்தவரும், தேவர்ஷியுமான நாரதர் ஸமீபத்தில் ஸுகமாய் உட்கார்ந்திருக்கும் ப்ரஹ்மர்ஷி யாகிய, வ்யாஸமஹர்ஷியை நோக்கி ப்ரஸன்னமுக முள்ளவராய்ப் பின்வருமாறு சொல்லத்துடங்கினார்; "ஓ! மஹா பாக்யமுள்ள பராசர புத்ரரே! உம்முடைய சரீராபிமானியான ஆத்மாவானது (ஜீவன்) அந்தச் சரீரத்தாலும், மனத்திற்கு அபிமானியான ஆத்மா வானது, அந்த மனத்தாலும் ஸந்தோஷப்படுகிறதா? அறியவேண்டிய ஸகல தர்மங்களையும் பூர்ணமாகக் காட்டுவதும், ஆச்சர்யத்தை யுண்டுபண்ணுகிறதுமான மஹா பாரதத்தை விஸ்தாரமாகச் செய்தவர் நீரன்றோ? ஆகையால் விஷயம் யாவும் உமக்குத் தெரிந்திருக்க லாமே. மேலும் நீர் நித்யவஸ்துவாகிய, பரமாத்ம ஸ்வரூபத்தை நன்றாக விசாரித்து அறிந்தவரல்லவா? அப்படியிருந்தும், ஒன்றையும் அறியாதவர் போல ஏன் துக்கிக்கிறீர்?" என்று கேட்டார்.

4–11. இதனைக் கேட்ட வ்யாஸ மஹா முனியானவர், பின்வருமாறு சொல்லத் தொடங்கினார். "தாங்கள் சொன்னவைகள் யாவும் என்னிடம இருக்கின்றன. ஆனாலும் என்மனத்திற்கு ஸந்தோஷம் உண்டாகவில்லை. அதன் காரண மின்னதென்றும் விளங்கவில்லை பரம் (கார்யம்) அபரம் (காரணம்) இவைகளுக்கு அதிபதியும், ஸங்கல்பமாத்ரத்தால் முக்குணங்களைக் கொண்டு ஜகத்தை ஸிருஷ்டிப்பவரும்

அவைகளைக் காப்பாற்றுபவரும் பின்னும் அவைகளை நாசஞ்செய்பவரும், அவைகளில் ஸம்பந்தப் படாதவருமான புராண புருஷனை, நீர் உபாஸித்தவர், ரஹஸ்யங்களான விஷயங்கள் யாவும் தங்களுக்குத் தெரியும். மேலும் நீர் ஸூர்யன்போல மூவுலகத்திலும் ஸஞ்சரிப்பதால் எல்லாவற்றையும் அறிந்தவர். ஸகல ப்ராணிகளினுள்ளில் ஸஞ்சரிக்கிற ப்ராணவாயுபோல எல்லாருடைய புத்தியின் ப்ரவர்த்தியையும் அறிந்தவர். ஆனதுபற்றி ப்ரஹ்ம புத்ரராகிய உம்மைக் கேட்கிறேன் வேதங்களை முறைப்படி அத்யயனஞ்செய்து, அதன் உண்மையான அர்த்தத்தைபறிந்து, வ்ரதங்களை யனுஷ்டித்து, யோகத்தால் ப்ரஹ்மஸ்வரூபத்தையும் அறிந்தேன். அப்படியிருந்தும் எந்தப் பாகம் எனக்கு மிகவும் குறைவாயிருக்கிறதோ அந்த பாகத்தை யுபதேசிக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்தார். அதனைக்கேட்ட நாரதர், வ்யாஸமஹாமுனியை நோக்கி, "இயற்கையில் பரிசுத்தமான பகவானுடைய யசஸ்ஸை, (குணங்களை) வர்ணிப்பதால் பரமாத்மா ஸந்தோஷிப்பார். மற்ற ஞானத்தால் பகவான் திருப்தி அடையமாட்டார்; ஆகையால் தர்மாதி ஞானத்தைக் குறைந்ததாக நினைக்கிறேன். உம்மால் அந்த பகவானுடைய குணங்கள் பெரும்பாலும் முக்யமாக வர்ணிக்கப்படவில்லை. மஹாபாரதம் முதலியவைகளில் ஈச்வரனுடைய குணங்கள் வர்ணிக்க பட்டிருந்தாலும் தர்மங்களையும் அதன் ஸாதனங்களையும், முக்யமாக, மஹர்ஷிகள் ஸ்மிருதிகளில் சொல்லியிருப்பதுபோல, பரமாத்மாவின் மஹிமையையே ப்ரதானமாக நீர் வர்ணிக்கவில்லை. எச்சிற்குழியில் கிடக்கும் சித்ரான்னம் முதலியவைகளைக் காக்கைகள் தின்று திருப்தி அடையுமேயொழிய, மானஸ ஸரஸில் ஸஞ்சரிக்கும்

ஹம்ஸங்கள். அவைகளில் ஆசைப்படுகிறதில்லை. அப்படிப்போல லோகத்தைப் பரிசுத்த படுத்தும் பகவானுடைய மஹிமையை வர்ணிக்காத க்ரந்தங்கள், அற்புதமான பதச்சேர்க்கையுள்ளவைகளானாலும், அவற்றால் காமிகள் ஸந்தோஷப்படுவார்களே யொழிய ப்ரஹ்மிஷ்டர்களான பரமஹம்ஸர்கள் திருப்தியடைகிற தில்லை. ஒவ்வொரு ச்லோகத்திலும் அபசப்தங்கள் இருந்தாலும், நாசமற்றவராகிய பகவானுடைய திவ்ய நாமங்களும், மஹிமையும் வர்ணிக்கபட்டிருந்தால் அந்த க்ரந்தம் ஜனங்களுடைய பாபங்களை போக்கும். அதைச் சொல்பவர்களிருந்தால் பெரியோர்கள் கேட்பார்கள். கேட்பவர்களிருந்தாலும் அவர்கள் சொல்லுவார்கள். இரு வகையாருமில்லாத போது தாமே கானஞ்செய்வார்கள்.

12–22. உபாதிகளின் ஸம்பந்ததத்தை நிவர்த்திக்கும், ப்ரஹ்மஞானமும், பகவத்பக்தியில்லாதவனுக்குப் பலனை (அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தைக்) கொடுக்கிறதில்லை. மேலும் கர்மங்கள் எப்பொழுதும் துக்கரூபங்கங்களே. ஆதலால் பலனையுத்தேசித்துச் செய்யப்பட்டனைகள் ஆனாலும், பலனை யுத்தேசியாமல் செய்யப்பட்டவை களானாலும், பகவானிடம் அர்ப்பிக்கபடாதவரையில் அவைகள் ப்ரகாசிக்கிறதில்லை. ஓ! மஹாபாக்யமுள்ள வ்யாஸமஹர்ஷியே! நீர் உண்மையான ஞானமுள்ளவர்; சுத்தமான கீர்த்தியுள்ளவர்; ஸத்யத்திலேயே ஆசை உள்ளவர்; வ்ரதங்களை யனுஷ்டித்தவர்; ஆகையால் ஸகலபந்தங்களும் நிவர்த்தியாக வேண்டியதற்காகப் பகவானுடைய பலவகையான லீலாவிபூதிகளை ஒரே மனதாகச் சிந்தியும். பகவானுடைய சரித்தில் ஆசையில்லாமல், மற்ற சரிதங்களைச் சொல்ல

விரும்பியவர்களுடைய புத்தியானது தேவதா ரூபங்களையும், அநேக நாமங்களையும், சிந்தித்து நிலைபெறாமல் பெருங்காற்றிலகப்பட்ட கப்பல் போல, ஒரு நிலையாய் இருக்கிறதில்லை. ஜனங்கள் இயற்கையாகவே காம்ய கர்மங்களில் ஆசையுள்ளவர்கள். அந்தக்கர்மங்கள் ஞானிகளால் நிந்திக்கக்கூடியவைகளானாலும் அவைகளை தர்மங்களென்றே சொல்லியிருக்கிறீர். ஆகையால் அவைகளை ப்ராகிருத ஜனங்களும் அப்படியே நினைத்திருக்கிறார்கள். "கர்மங்களாலும், ப்ரஜையாலும், தனத்தாலும், மோக்ஷத்தையடைய முடியாது" என்ற ச்ருதியின்படி காம்ய கர்மங்கள் சிறந்தவைகளல்ல என்று ஞானிகளுடைய வார்த்தையை அக்ஞர்கள் நம்புவதற்கு ந்யாயமில்லாமல் இருக்கிறது. இப்படி நீர் செய்தது, ஒரு பெரிய சாஸ்த்ர விருத்தமான கார்யம். ஆனது பற்றி, காலத்தாலும், தேசத்தாலும், அளவிடக் கூடாத ப்ரபுவின் ஸகலஸ்வரூபத்தை நிவிர்த்தி மார்க்கததைக்கொண்டு வித்வான்தான் தெரிந்து கொள்வான். அது அக்ஞனால் அறிய முடியாது. ஆகையால தேஹம் முதலியவைகளில் அபிமானம் உள்ளவர்களும், ஸத்வம் முதலிய குணங்களால் விஷயத்தில் செல்லுகிறவர்களுமான ப்ராகிருதஜனங் களுக்காகப் பகவானுடைய லீலைகளை வர்ணியும். பின்னும் உலகத்தில் தன் ஜாதிக்கும், ஆச்ரமத்திற்கும் உரியதான தர்மத்தைவிட்டு பகவானுடைய தாமரை மலர் போன்ற பாதங்களை ஸேவித்துக் கொண்டு இருந்தவன் பக்தியின் பயனை அடைவதற்கு முன்னமே பலன் பாதியில் மரணம் அடைந்தாலும், பக்தியின் தொடர்ச்சியற்றுப் போனாலும் அவனுக்கு அந்த

வாஸனையிருக்குமாகையால் ஒரு போதும் அந்த க்ஷேமக்குறைவு நேரிடாது. மேலும் ஈச்வரனிடம் பக்தி செய்யாமல் தன்னுடைய தர்மத்தை நன்றாய் அனுஷ்டித்தாலும் அதனால் என்ன கிடைக்கப்போகிறது? (ஒன்றும் இல்லையென்பது தாத்பர்யம்) ப்ரஹ்மதேவர் முதல் ஸ்தம்பமென்ற புழு வரையில் ஸம்ஸாரத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் எல்லா ப்ராணிகளாலும், எந்தவஸ்து அடையப்படவில்லையோ அதையடைய முயற்சிக்கவேண்டும். எப்படி நாம் விரும்பாமல் இருக்குங்காலத்திலும், துக்கம் நேரிடுகிறதோ அப்படியே விஷயஸுகமும் எந்தவிடத்திலும் அந்த அந்தக்காலத்தில் கர்மத்தின் மஹிமையைக்கொண்டு ஜனங்களால் அடையப்படுகிறது. கர்மத்தை மாத்ர மனுஷ்டித்தவன் ஸம்ஸாரதுக் கத்தையடைவது போல, ஒருவன் பகவத் பக்தி செய்து அந்த ஜன்மாவில் அது பூர்த்தியடையாமல் தாழ்மையான வேறு ஜன்மமடைந்திருந்தாலும் அதில் அவனுக்கு துக்கம் நேரிடுகிறதில்லை பகவானுடைய பாதங்களில் பக்தி செய்தவன் மறுஜன்மத்திலும் அவைகளை மறக்கமாட்டான்; அவைகளுக்கு வசப்படுவான். ஈச்வரனை விட்டு ஜீவன் எப்படி வேறில்லையோ அப்படி ப்ரபஞ்சம் பகவானைவிட வேறில்லை அவரிடமிருந்தே இந்த ஜகத் உண்டானது அவராலேயே காப்பாற்றப்படுகிறது. அந்த பரமாத்மாவை நீரே தெரிந்து கொள்வீர்; ஆனாலும் ஸ்வல்ப பாகத்தைத் தெரிவித்தேன்; வீணாகாத ஞானமுள்ள நீர் பிறப்பில்லாத பரம புருஷனுடைய அம்சமேயாம். மேலும் நீர் இயற்கையில் ஜனனமரணமில் லாதவரானாலும், உலகத்தின் க்ஷேமத்திற்காக சரீரமெடுத்துக் கொண்டீர். ஆகையால்

இவ்விஷயத்தைத் தெரிந்துகொள்ளும். அந்தமஹா மஹிமை பொருந்திய பரம புருஷனுடைய சரிதத்தை வர்ணியும். சாஸ்த்ரங்களைக் கேட்பது (ச்ரவணம்) யாகஞ் செய்தல், குளம், கிணறு, வெட்டுவித்தல், ப்ரியமான வார்த்தை சொல்லுதல், மஹாதானஞ் செய்தல் ஆகிய இவைகளின் பலன் என்னவென்றால் உத்தமச்லோகராகிய பகவானுடைய குணங்களை வர்ணிப்பதேயாம். இதுவே சாச்வதமாகிய பலன். இதற்கு உதாரணமாக என்னுடைய முன்ஜன்ம விருத்தாந்தத்தைச சொல்லுகிறேன்.

23–38. நான் முன்ஜன்மத்தில் ப்ராஹ்மணர் களுடைய வீடுகளில் வேலைசெய்து கொண்டிருந்த சூத்ரஸ்த்ரீயின் புத்ரனாகவிருந்தேன். அப்பொழுது மழைகாலத்தில் ஒரே இடத்தில் வஸிப்பதாகிய சாதுர் மாஸ்யவ்ரதத்தை யனுஷ்டித்த சில ஸன்யாஸிகளுக்கு பால்யத்திலேயே நான் சுச்ரூஷை செய்துவந்தேன். பால்யமுள்ளவனானாலும், விளையாட்டு ஸாமான்களை வைத்துக்கொள்ளாமலும், பால் சாபல்யமில்லாமலும், இந்த்ரியங்களை ஜயித்து அவர்கள் ஏவினதைச் செய்வதிலேயே நோக்கமுள்ளவனாயிருந்தேன். அப்பொழுது ஸமபுத்தியுள்ள அவர்களுக்கு ஸ்வல்ப மாய்ப்பேசும் என்னிடத்தில் கருணையுண்டாயிற்று. ஒருநாள் அவர்கள் புஜித்த பிறகு, பாத்ரத்தில் எஞ்சி இருந்த, அன்னத்தை அவர்களுடைய அனுமதியின் பேரில் நான் புஜித்தேன். அதனால் ஸகல பாபங்களும் நிவர்த்தியாகிச் சுத்தனானேன். இப்படிச் சித்தம் சுத்தமான போது, அவர்கள் அனுஷ்டிக்கும் பகவத் பக்தியாகிய தர்மத்திலேயே எனக்கு ப்ரியம் நேர்ந்தது அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய லீலைகளைக்

கானஞ் செய்துகொண்டிருந்தார்கள். இனியவைகளான அவைகளை நான் எப்பொழுதும் அந்தரங்க ப்ரியத்துடன் கேட்டேன். அதனால் எனக்கு பக்தி அதிகரித்தது. அதிலேயே விசேஷ நோக்கமுள்ள எனக்குப் பகவானிடம் ஸ்திரமான பக்தியுண்டானதால், அப்பொழுதே பரப்ரஹ்மமானது ப்ரபஞ்ச ஸம்பந்த மற்றதென்றும், அதுவே நானென்றும், என்னிடத்தில் ஸ்தூல ஸூக்ஷ்மசரீரங்கள் அவித்யையால் (பொய்யாக ஆரோ பிக்கப்பட்டனவேயொழிய, உண்மையிலில்லை என்றும் நான் தெரிந்து கொண்டேன். இப்படி மழைகாலம், சரத்காலம் ஆகிய இரண்டு ருதுக்களிலும் மஹாத்மாக்களாகிய, அந்த ஸன்யாஸிகளால் சொல்லப்பட்ட மஹாவிஷ்ணுவின் மஹிமையை மூன்று காலங்களிலும் ச்ரவணஞ்செய்தேன். அதனால் சிறந்த பக்தியுண்டானது மன்றி, ரஜோகுணமும், தமோ குணமும், என்னைவிட்டு விலகின. அவர்களுக்குச் சுச்ரூஷை செய்வதிலேயே ஆசையுள்ளவனும், வணக்கமுள்ளவனும், பாப மில்லாதவனும், ச்ரத்தை யுள்ளவனும், இந்த்ரியங்கள் ஜயித்தவனும், பால்ய வயதுள்ளவனும், எப்பொழுதும் கூடவே ஸஞ்சரிப்பவனுமாகிய எனக்கு அந்த முனிவர்கள் தீனர்களிடத்தில் ப்ரீதியுள்ளவர்களாகையால் விச்வரூபயாத்ரைக்கு முன்னிலையில், ப்ரஹ்ம வித்தையை யுபதேசித்தார்கள். அது மிகவும் ரஹஸ்ய மானது. ஈச்வரனால் நேரில் சொல்லப்பட்டது. அதனால் நான் ஸகல ப்ரபஞ்சங்களையும் ஸிருஷ்டிக்கும் வாஸு தேவராகிய பகவானுடைய மாயாமஹிமையைத் தெரிந்துகொண்டதுமன்றி அவருடைய பதத்தை அடையும் ஸாதனத்தையும் தெரிந்து கொண்டேன். ஓ! நன்றாய் வ்ரதங்களையனுஷ்டித்த ப்ராஹ்மணோத்தம!

வ்யாதியையுண்டுபண்ணும் த்ரவ்யங்கள், வேறு பதார்த்தத்தின் சேர்க்கையால் ரோகத்தை நிவர்த்திப்பது போல, கர்மமானது ஸம்ஸாரமாகிய வ்யாதியைக் கொடுக்கக்கூடியதானாலும், பரமாத்மாவிடம் ஸமர்ப்பிக்கப் பட்டால், அது முவ்வகையான தாபங் களையும் போக்குகிறது என்ற தர்மரஹஸ்யத்தையும், அவர்கள் எனக்கு உபதேசித்தார்கள். கர்மயோகங்கள் எல்லாம், ஸம்ஸாரத்தைக் கொடுக்கின்றவைகள் ஆனாலும், மேற்காட்டிய ஈச்வரனுடைய ஸந்தோஷத்திற்காகச் செய்கிறோம் என்ற எண்ணத்துடன் செய்து அவரிடத்தில் ஸமர்ப்பிக்கப்படுமானால் அவை பந்தகங்களாகிறதில்லை. பகவானுடைய ஸந்தோஷ மாகிய பலனை விரும்பிச் செய்யப்படும் கர்மமானது, பக்தியோகத்துடன் கூடிய ஞானத்தை உண்டு பண்ணுகிறது. "எதனைச் செய்கிறாயோ, எதனைப் புஜிக்கிறாயோ, எதனை ஹோமஞ்செய்கிறாயோ, எதனைக்கொடுக்கிறாயோ அதனை என்னிடம் கொடுத்துவிடு" என்ற பகவான் உடைய ஆக்ஞையின்படி பெரியோர்கள் கர்மங்களைச் செய்கிறார்கள். கிருஷ்ணனுடைய கல்யாண குணங்களையும், திவ்ய நாமங்களையும், வாக்கினால் உச்சரிக்கிறார்கள் அவரை த்யானஞ்செய்கிறார்கள். பக்தியோகத்தால் நல்ல ஞானமுள்ள புருஷனானவன்" வஸுதேவருடைய புத்ரராயும், ப்ரத்யும்னராயும், அனிருத்தராயும், ஸங்கர்ஷண மூர்த்தியாயுமிருக்கும் பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறோம்" என்று த்யானஞ்செய்து, யக்ஞபுருஷனாகிய பகவானை உபாஸிக்கிறான். அந்த ஈச்வரனுக்கு மேற்காட்டிய மந்த்ரத்தால் குறிக்கப்பட்ட சரீரத்தை விட வேறு சரீரமில்லை.

39–40 பகவானுடைய கட்டளைப்படி நடந்த

எனக்கு, அந்தப் பகவான், தம்முடைய ஞானம் முதலிய வைகளுக்குச் சமமான ஞானத்தையும் ஐச்வர்யத்தையும், தம்மிடத்தில் பக்தியையும் கொடுத்தார். அனேக சாஸ்த்ரங்களைக் குருமுகமாக கேட்ட வ்யாஸரே! ப்ரபுவாகிய பகவானுடைய மஹிமையை நீரும் வர்ணியும். அதனால் வித்வான் களால் அறியவேண்டிய விஷயங்கள் யாவும் உம்மால் அறியப்படும். துக்கத் தினால் வருத்தமடைந்தவர்களுக்கு அதனை நிவர்த்தி செய்யும் உபாயம் இதுவேயொழிய வேறில்லை.

நோட்டு.

28–17. ஆத்மா–சரீரவ்யாதி, மனோவ்யாதி முதலிய துக்கங்களில்லாமல், பகவத் பஜனத்தால் ஸந்தோஷ மடைந்திருக்கிறானா. சந்த். வீர. 21– பாரதம்தேசத்தாலும், காலத்தாலும், அளவிடக்கூடாத பரப்ரஹ்மத்தை விசாரித்தும் அர்த்தத்தாலும், சப்தத்தாலும், மஹத்தான சப்த ப்ரஹ்மமாகிய வேதத்தையும் நன்றாய் விசாரித்திருக்கிறீர். ஆனதால் தாங்கள் பூமியில் அவதரித்ததின் கார்யம் முடிந்து விட்டது. அப்படியி ருந்தும், அவதரித்த கார்யத்தைச் செய்யாதவர்போல் கவலைப்படுகிறீர்.– பரம் –ப்ரஹ்மா, ருத்ரன் இவர்கள். 30–அபரம்– இந்த்ரன் முதலியவர்கள். ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் மேலானவர். வீர. யோகத் தால்– "யாகம், நல்ல ஆசாரம் இந்த்ரிய நிக்ரஹம், பிறருக்கு ஹிம்ஸை செய்யாமலிருப்பது தானம் வேதாத்யயனம் முதலிய கர்மங்களுக்குள் யோகத்தால் ஆத்மாவின் உண்மையை அறிவதே மேலானது"– யாக்ஞ்யவல்க்யஸ்மிருதி அத்புதமான– யமகம் முதலிய சப்தாலங்காரங்களும்,

உத்ப்ரேக்ஷை முதலிய அர்த்தாலங்காரங்களும் பொருந்தியிருந்தாலும். ஸ்ரீத. கானம்– விசேஷ ஆனந்தத்தை உண்டுபண்ணுவதால் கானஞ்செய்கிறார் கள். ஸ்தோத்ரஞ்செய்து பாபங்களைப் போக்கடித்துக் கொள்ளுகிறார்கள். ஸ்ரீத. "பரம ஹம்ஸர்களுக்கு அவை ப்ரியமானவைகள். அவைகளே பகவானுக்கு ப்ரியமானவைகள்." என்றபடி பாகவத தர்மங்களை வர்ணிக்காமலிருக்கும் க்ரந்தங்கள் பரமஹம்ஸர்களால் ஆதரிக்கக்கூடியவையல்லவென்று காட்டப்பட்டது– வீர. நிலைபெறாமல் "ஓ அர்ஜுன! பரமாத்மாவைவிட வேறு ஒன்றுமில்லை என்னும் புத்தியானது ஒருவகையேயாம். அந்த நிச்சயமில்லாதவர்கள் இந்த்ரன, அக்னி முதலிய தேவதைகளைச் சிந்தித்து புத்தியைப் பலவகையாகச் செலுத்துகிறார்கள்." பகவத் கீதை– என்னபலன்? பகவத் பக்தியின்றி தர்மத்தை மாத்ரம் அனுஷ்டிப்பவனிடம் பகவான் ப்ரீதி செய்கிறதில்லை. அதனால் பாபம் நீங்குகிறது மில்லை. அதனால் ஆரம்பித்த கார்யம் பூர்த்தியாகிறது மில்லை ஸ்ரீத. சுற்றி– ஸ்வர்க்கம் முதலிய மேலுலகங் களிலும், பூமி முதலிய கீழ் உலகங்களிலும் ஸஞ்சரிக்கும் ஜனங்கள், அவர்களால் முந்திச் செய்யப்பட்ட பாபபுண்யங்களால் துக்கத்தையும் ஸுகத்தையும் அடைவதுபோல புண்ய பாபங்களைக் கொண்டு மோக்ஷத்தையடைய முடியாதாகையால், அதனை அடைவதற்கு முயற்ச்சிக்கவேண்டும். சந்த்– ப்ரபஞ்சம்– அசையும் பொருள் அசையாப்பொருள் இவைகளடங்கியது. "இந்த ப்ரபஞ்ச முழுவதும் பரப்ரஹ்மம்."–ச்ருதி. ஸ்வல்ப– "நல்ல ஆசார்யர்களை யடைந்த புருஷன் பரமாத்மாவைத் தெரிந்துகொள்ளு கிறான்" ச்ருதி– வ்யாஸரென்ற திவ்யநாமத்துடன் பகவான்

ப்ரகாசிப்பதுபோல ப்ரபஞ்சமென்ற பெயருடனும் அவரே விளங்குகிறார்– சந்த். நான்–பெரியோர் களுடைய சேர்க்கையால் க்ஷேமம் கிடைக்கு மென்பது காட்டப்பட்டது. சாதுர்மாஸ்யம்–ஒவ்வொரு வர்ஷத்தி லும் நான்கு மாஸங்கள் ஸஞ்சாரத்தை நிறுத்தி ஒரே இடத்தில் வஸிக்கவேண்டும் என்று ச்ருதியில் சொல்லியிருக்கிறபடி ஸன்யாசிகள், "வர்ஷக் காலமானது ப்ராணிகள் உண்டாகும் ஸமயமானதால் பெரும்பாலும் மார்க்கங்கள் ஜந்துக்களால் நிறைந்து இருக்கும் ஆகையால் அவர்களுக்கு ஹிம்ஸை நேரிடாமலிருப்பதற்காக நான்கு பக்ஷங்கள் இந்தக் கிராமத்திலேயே வஸிப்பதாக உத்தேத்திருக்கிறோம். உங்களுடைய ஸௌகர்யத்தைத் தெரிவிக்கவேண்டும்." அவர்கள் அப்படிக் கேட்ட ஸன்யாஸியை நோக்கி, தாங்கள் இவ்விடத்திலேயே ஸுகமாய் வஸியுங்கள், எங்களால் கூடிய சுச்ரூஷைச்செய்து நாங்கள் க்ருதார்த்தர்களாக ஆகிவிடுகிறோம்" என்று பதில் சொல்லுவார்கள். பின்பு ஆஷாடமாஸத்திய பூர்ணமி முதல் நான்கு பக்ஷங்கள் ஒரே இடத்தில் போக்குவார்கள். இதுவே சாதுர்மாஸ்ய விரதமெனப்படும். பிறகு ஐந்தாவது பக்ஷத்தின் பிரதமையில் ஸஞ்சாரத்திற்கு ஆரம்பிப்பார்கள். அதுவே விச்வரூப யாத்ரையாகும். புஜித்தேன்–எச்சிலான ஸ்தலத்தை சுத்திசெய்வது முதலியவற்றையுஞ் செய்தேன்.– விஜ. ஆக்ஞை– ச்ருதிகளும் ஸ்மிருதிகளும் பகவானுடைய கட்டளை. ப்ரத்யும்ன– இதுமுதல் இரண்டு ச்லோகங்களால் பகவானுடைய குணங்களையும் நாமங்களையும் ஸ்மரிப்பதும், பலத்தையுத்தேசியாமல் கர்மானுஷ்டா னம் செய்யும் ப்ரகாரங்களும். அப்படிச் செய்பவனே

மேலானவனென்றும் காட்டப்பட்டிருக்கிறது."ஓம் தத்ஸத் என்பது பரப்ரஹ்மத்தை முவ்வகையாக சொல்வதாக ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது" என்று பகவான் சொல்லிருப்பதனால் வாஸுதேவ, ப்ரத்யும்ன, அனிருத்த, ஸங்கர்ஷண இந்த நான்கு ரூபமாய் இருக்கும் பகவானுக்கு நமஸ்காரம் பண்ணுகிறோம் என்பதால் பகவானுடைய திவ்ய நாமத்தை உச்சரிக்கவேண்டிய வகை காட்டப்பட்டது. மூலத்தில் தீமஹி–த்யானம் செய்கிறோம்' என்று இருப்பதால் ப்ரணவ சப்தத்தால் காட்டப்பட்ட அனந்த கல்யாணகுணங்கள் நிறைந்த பகவானைத் த்யானம் பண்ணுகிற ப்ரகாசமும், ரக்ஷிப்பது என்ற அர்த்தமுள்ள ' அவ' என்ற தாதுவிலிருந்து ப்ரணவம் ஏற்பட்டதாகையால் எல்லாரையும் ரக்ஷிப்பதாகிய பரமாத்மாவின் குணமும், மேலும் அந்த ப்ரணவம் அகாரம், உகாரம், மகாரம் இம்மூன்று அக்ஷரங்களால் அமைந்திருப்பதால் எல்லாவற்றிற்கும் பரமாத்மா காரணமென்றும், எல்லாவற்றிற்கும் அதிபதியென்றும் காட்டப்பட்டிருக்கிறது. தவிரவும், வாஸுதேவ என்பதால் பரமாத்மாவானவர் எல்லாவற்றிற்கும் ஆதாரமென்றும், எல்லோருக்கும் அந்தராத்மாவென்றும், ப்ரத்யும்ன என்பதால்,"அவ்விடத்தில ஸூர்யன் ப்ரகாசிக்கிற தில்லை, சந்த்ரனும் நக்ஷத்ரங்களும், மின்னல்களும் அக்னியும் விளங்குகிறதில்லை" என்ற ச்ருதிப்படி நிகரில்லாத ப்ரகாசமுள்ளவர் என்பதும்; அனிருத்த என்பதால் ஸர்வவ்யாபகரென்றும். ஸங்கர்ஷண என்பதால் இந்த்ரியங்களுக்குப் புலப்படாத விஷயங்களைத் தெரிவிப்பவரென்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. வீர ஐச்வர்யம்– அணிமா முதலியவைகள். பக்தி–இடை விடாமல் பகவானை ஸ்மரிப்பது– ஸ்ரீத.

அத்யாயம்–6.

நாரதருடைய முன்ஜன்மம்.

ஸத்யவதியின் புத்ரராகிய வ்யாஸமஹர்ஷியானவர், தேவர்ஷியாகிய நாரதருடைய பிறப்பு, சரிதம், ஆகிய இவைகளைக் கேட்டுப் பின்னும் அவரை நோக்கி ஓ! நாரதரே! உமக்கு ஞானோபதேசஞ் செய்த ஸன்யாஸிகள் சென்றபிறகு, பால்யவயதுள்ளவரான நீர் என்ன செய்தீர்? ப்ரஹ்மதேவருடைய புத்ரரே! அபரவயதில் என்ன செய்துகொண்டிருந்தீர்? தேஹவியோக காலம் நேர்ந்த போது சரீரத்தை எப்படிவிட்டீர்? ஜீவன் ஒரு சரீரத்தைவிட்டு மற்றொரு சரீரமடைந்தபின் முன் ஜன்மத்தின் விஷயங்கள் காலமஹிமையால் மறந்து போகின்றனவே அப்படிக்கிருக்க முன்காலத்தில் நடந்த விஷயம் எப்படித் தங்கள் ஞாபகத்திலிருக்கிறது? என்றார். அதனைக்கேட்ட நாரதர் வ்யாஸமஹர்ஷியை நோக்கி "எனக்கு ஞானோபதேசஞ்செய்த ஸன்யாஸிகள் தேசாந்தரம் போனபிறகு சிறுவயதுள்ள நான் என்ன செய்தேனென்றால், என் தாயாருக்குக் குழந்தை நானொருவனே; ஆனதுபற்றியும் எனக்கு வேறு கதியில்லாததனாலும் என்னுடைய தாயார் என்னிடம் மிகவும் ப்ரியம் வைத்திருந்தாள். அவள் ஒன்றையும் அறியாதவள்; வேலைசெய்து ஜீவிப்பவள்; மரத்தால் செய்யப்பட்ட ப்ரதிமை மனிதர்களால் ஆட்டி வைக்கப் படுவதுபோல, இந்த ஜனங்கள்யாவும் ஈச்வரனுக்கு ஸ்வாதீனப் பட்டிருக்கிறார்கள். என்தாயார் என்னுடைய யோகக்ஷேமத்தை வஹிக்க விரும்பினவளானாலும் அதை நடத்த ஸாமர்த்யமற்றவளாக விருந்தாள். திக்கு, தேசம், காலம் ஆகிய இவைகளின் பிரிவையறியாத ஐந்து வயதுள்ள சிறுவனாகிய நான்மாத்ரு ஸ்நேஹத்தா

அந்த ப்ராஹ்மண கிருஹத்திலேயே வஸித்தேன். ஒருநாள் ராத்ரி என் தாயார் மாடு கறப்பதற்காக வீட்டிற்கு வெளியே வரும்போது ஒருபாம்பைக் காலால் மிதித்தாள். அப்பொழுது அனாதையான அவளை அந்தஸர்ப்பம் காலனால் தூண்டப்பட்டு கடித்தது. உடனே அவள் மரணமடைந்தாள். அப்பொழுது நான் "ஈச்வரன் பக்தர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுப்பதி லேயே நோக்கமுள்ளவராகையால் நமக்கு நேர்ந்த மாத்ருதுக்கம் அனுக்ரஹமேயொழிய வேறில்லை என்று நினைத்து வடக்குத்திக்கை நோக்கிப் புறப்பட்டேன். ஸம்பத்துள்ள அனேக தேசங்களையும், கிராமங்களையும், கோகுலங்களையும், ரத்னம் விளையும் பூமிகளையும், பயிரிடுபவர்கள் வஸிக்கும் இடங்களையும், மலையடிவாரங்களையும், பாக்குமரம் முதலியவைகளின் தோட்டங்களையும், தானாக முளைத்த மரங்களிருக்குங் காடுகளையும், மரங்கள் வைத்து விருத்திசெய்யப்பட்ட இடங்களையும், பல வகையான தாதுக்களால் அழகான மலைகளையும், யானைகளால் முறிக்கப்பட்ட கிளைகளுள்ள மரங்களை யும், நல்ல ஜலமுள்ள குளங்களையும், தேவர்கள் ஜலக்ரீடை செய்யும் தாமரஸ ஓடைகளையும், அவைகளிலிருக்கும் அழகான குரலுள்ள பக்ஷிகளையும், தேனீக்களையும், அவைகளால் அலங்கிருதமான தாமரைத்தடாகங்களையும், பார்த்துகொண்டு நான் ஒருவனாக அவைகளைக் கடந்துசென்று, பயங்கரமாகிய ஒரு வனத்தைக் கண்டேன். அது கோரைகளும், மூங்கில்களும், வண்டுகளால் துளைக்கப்பட்ட மூங்கில்களும், நாணல்களும், தர்ப்பங்களும், அடர்ந்து இருப்பதாலும், ஸர்ப்பங்களும், கோட்டான்களும், நரிகளும் வஸிக்குமிடமாயிருந்தாலும் மிகவும் பயங்கர

மாயிருந்தது. அப்பொழுது நான் வெகுதூரம் நடந்த தால், பசி, தாஹமுண்டாகி, அவற்றால் இந்த்ரியங்கள், சரீரம் இவைகளின் வலிமை குறைந்து களைப்படைந் தேன். பின்பு ஒரு நதியின் மடுவில் ஸ்நானஞ்செய்து, ஆசமனம் பண்ணிச்ரமத்தை நிவர்த்தித்துக் கொண்டேன். பின்பு மனிதர்களுடைய ஸஞ்சாரமில்லாத அந்தக் காட்டில் ஒரு அரசமரத்தின்கீழ் உட்கார்ந்து ஸன்யாஸிகளிடம் உபதேசம் பெற்றப்படி ஹிருதயத்தி லிருக்கும் பரமாத்மாவை த்யானஞ் செய்தேன். பகவானுடைய பக்தியால் மனத்தை ஒருவகைப்படுத்தி அவருடைய தாமரை போன்ற பாதத்தை த்யானஞ் செய்யும்போது என்னுடைய இருகண்களிலிருந்து ஆனந்தபாஷ்யம் பெருகியது. அப்பொழுது ஸ்வல்ப காலத்தில் என்னுடைய ஹிருதயத்தில் பகவத் ஸ்வரூபம் ப்ரகாசித்தது ஓ! வ்யாஸ மஹர்ஷியே! விசேஷ ப்ரேமையால் மயிர்க்கூச்சலுண்டாயிற்று. அதனால் மிக்க ஸுகமுள்ளவனாய் ஆனந்த ப்ரவாஹத்தில் மூழ்கி என்னையும் பகவத் ஸ்வரூபத்தையும் மறந்திருந்தேன். இப்படியிருக்க மிக்க அழகுள்ளதும், ஸகல துக்கங்களை யும் போக்கடிக்கக்கூடியதுமான அந்தப்பகவானுடைய ரூபம் மறைந்தது. உடனே அதனைக்காணாமல் மிகவும் மனவருத்தமடைந்து சீக்ரமாக எழுந்திருந்தேன். மறுபடியும் அந்த பகவத் ஸ்வரூபத்தைப் பார்க்கவிரும்பி மனத்தையடக்கி அதே ரூபத்தை ஹிருதயத்தில் த்யானஞ்செய்தேன். அப்படியும் அந்த ரூபம் நேரில் தோன்றவில்லை. ஒரு தடவை பார்த்ததால் த்ருப்தி யுண்டாகாததனால் மனக்கவலையடைந்தேன்.

21–26. இப்படிக் காட்டில் கவலையுடனிருக்கும் என்னை நோக்கி வேதவாக்யங்களுக்கு விஷயமாகாத

பகவான் "ஓ! குழந்தாய்! கர்மம் முதலிய தோஷங்கள் அற்றுப்போகாத யோகிகளால் என்னைப் பார்க்க முடியாது. ஆனதால் இந்த சூத்ர ஜன்மத்தில் நீ என்னைப் பார்க்கத் தகுந்தவனல்ல. ஆனால் ஒரு தரம் என் ரூபத்தைக் காண்பித்த காரணமென்னவெனில்.. ஒரு தரம் என் ரூபத்தைப் பார்த்தவனுக்குப் பின்னும் பார்க்கவேணுமென்ற எண்ணம் உண்டாகும். அதனால் என்னிடமே மனத்தைச் செலுத்தியவர்களுக்கு ஸகல மனோதோஷங்களும் நிவர்த்தியாய் விடுகின்றன. வெகுகாலம் ஸாதுக்களுக்குச் சுச்ரூஷை செய்ததால் உனக்கு என்னிடத்தில் ஸ்திரமான பக்தியுண்டாயிற்று. ஆனதால் தோஷத்தை யுண்டுபண்ணும் இவ்வுலகத்தை விட்டு என்னுடைய பார்ஷதனாக ஆய்விடுவாய் என்னிடத்தில் உனக்கு உண்டான பக்தியொருபொழு தும் குறையாமலிருக்கும். மேலும் ப்ரளய காலத்திலும் என்னுடைய அனுக்ரஹத்தால் முந்திய ஞாபகம் தவறாமலிருக்கும்" என்று அனுக்ரஹித்தார். இப்படி அனுக்ரஹிக்கப்பட்ட நான் மஹாபூதமாயும், ஆகாச சரீரமுள்ளவரும், எல்லாருக்கும் அதிபதியாயும், எல்லாருக்கும் ஸமீபத்திதலிருப்பவரானாலும், ஒருவராலும் அறியப்படாதவருமான அந்தப் புருஷனுக்கு நமஸ்காரஞ்செய்தேன்.

27–32. பின்பு அனந்த (நாசமற்ற)னுடைய திவ்ய நாமங்களை வெட்கப்படாமல் உச்சரித்துக்கொண்டும் அவரால் செய்யப்பட்ட ரஹஸ்யமான லீலாவிபூதிகளை நினைத்தும் மற்ற ஆசைகளை யொழித்தும், கர்வம், மாத்ஸர்யம் இவைகளை விலக்கிக் காலத்தை எதிர்பார்த்து ஸந்தோஷமாகப் பூமியில் ஸஞ்சரித்தேன். இப்படி ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலேயே மனத்தைச் செலுத்தி,

ஒன்றிலும் பற்றுதலில்லாமல் சுத்த சித்தனாகவிருந்தேன். இப்படிக்கிருக்கையில் சுத்தமான ஆகாசத்தில் மின்ன லுடன் மேகவரிசை தோன்றினாற்போல திடீரென்று மரணகாலம் நேர்ந்தது. அப்பொழுது சுத்தமான அந்தப்பார்ஷத சரீரத்திற்குப் பகவதிச்சைப்படி நான் போகும்போது ப்ராரப்தகர்மம் நசித்து ஐந்து பூதங்களா லேற்பட்டிருந்த பழய சரீரம் கீழேவிழுந்தது. பிறகு நான் இந்த மூவுலகத்தையும் காரணரூபமாய் அடக்கிக் கொண்டு ப்ரளயகாலத்தில் ஸமுத்ர ஜலத்தில் ஸ்ரீ நாராயணன் சயனஞ் செய்துகொண்டிருக்கும்போது, பின்பு அவரிடம் சயனஞ்செய்ய விரும்பிய ப்ரஹ்ம தேவரின் ச்வாஸத்தின் வழியாக அவருடைய ஹிருத யத்தில் ப்ரவேசித்தேன். பிறகு 1000 சதுர்யுகங்கள் கொண்ட ப்ரஹ்மதேவருடைய ராத்ரி முடிந்தவுடன் மறுநாள் காலையில் ப்ரஹ்மதேவர் ஜகத்தை ஸிருஷ்டிக்க யத்தனித்தார். அப்பொழுது அவருடைய இந்த்ரியங்களிலிருந்து மரீசி முதலிய ப்ரஜாபதிகளும் நானும் உண்டானோம். நான் குறைவின்றி ப்ரஹ்மசர்ய விருதங்களையனுஷ்டித்து, மூவுலகத்தில், உள்ளிலும் வெளியிலும் மஹாவிஷ்ணுவின் அனுக்ரஹத்தால் ஒரிடத்திலும் தடையற்ற நடையுள்ளவனாகிச் சஞ்சரிக்கிறேன்.

33–37. தவிரவும், இந்த வீணை ஈச்வரனால் கொடுக்கப்பட்டது. இது ஷட்ஜம் முதலிய ஸ்வரங்களா கிய நாதப்ரஹ்மத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. ஆனதால் மூர்ச்சனை முதலியவைகளுடன் ஸ்ரீ நாராயணனுடைய கதையைக் கானஞ்செய்து கொண்டே ஸஞ்சரிக்கிறேன். பகவானுடைய மஹிமையை நான் கானஞ் செய்யும்போது, ஜகத்தை பரிசுத்தப்

படுத்தும் பாதங்களுள்ளவரும், எல்லோராலும் ப்ரியப் படக்கூடிய லீலைகளுள்ளவருமான பகவான் என்னால் அழைக்கப்பட்டவர் போல என் மனத்தில் வந்திருந்து தர்சனங் கொடுக்கிறார். விஷயத்தில் ஆசையால் அடிக்கடி அவைகளையே கவர்ந்து கொண்டிருக்கும் சித்தமுள்ளவர்களுக்கு பகவானுடைய லீலைகளை வர்ணிப்பதே ஸம்ஸாரஸாகரத்தை தாண்டச்செய்யும் ஓடமென்று நிச்சயிக்கப்படுகிறது. காமம் முதலிய ஆறுவகை சத்துருக்களால் பீடிக்கப்படும் மனது பகவானை ஸேவிப்பதால் சுத்தமாவதுபோல யமம் முதலிய யோக ஸாதனங்களால் சுத்தப்படுகிறதில்லை. தோஷமற்றவரே என்னுடைய பிறப்பு, என்னுடைய சரிதம் முதலிய ரஹஸ்யங்களைப்பற்றி உம்மால் கேட்கப்பட்டவைகளெல்லாவற்றையும் உம்முடைய மனம் ஸந்தோஷப்படும்படி விஸ்தாரமாகச் சொன்னேன் என்று சொன்னார்.

38–39. ஓ! சௌனகர் முதலிய மஹர்ஷிகளே! இப்படி தெய்ச்செயலாய் வந்த நாரதர் ஸத்யவதியின் புத்ரராகிய வ்யாஸருடன் ஸம்பாஷணை செய்து 'நான் போய்வருகிறேன்' என்று சொல்லி வீணையை மீட்டிக்கொண்டே சென்றார். நாரதர் உலகமெங்குஞ் சென்று சார்ங்கமென்ற வில்லைத்தரித்த ஈச்வரனுடைய சரிதத்தை வாக்கினாலும், வீணையைக் கொண்டும் கானஞ்செய்து, ஸகல லோகத்தையும் ஸம்ஸாரதுக்கத் திலிருந்து காப்பாற்றுகிறார்; ஆகையால் இவரே பாக்யசாலி. இது இப்படி இருப்பது ஆச்சரியம்.

நோட்டு.

ஸன்யாஸிகள் மூலத்தில் பிக்ஷுவென்றிருப்பதால்

ஞானபிக்ஷை கொடுப்பவர்களென்று அர்த்தம்– விஜ. யோகம்–இல்லாதவைகளை ஸம்பாதிப்பது. க்ஷேமம்– ஸம்பாதித்தவைகளைக் காப்பாற்றுவது– வீர. தாயார் என்னிடத்தில் மிக்கப்ரியம் வைத்திருந்தபடியால் பெரியோர்கள் பின் நான் போகவில்லை– விஜ. ஸ்நேஹத்தால்– எப்பொழுது இதன் நேஹம் குறையு மென்று எதிர்பார்த்திருந்தேன் ஸ்ரீத. நினைத்து– "எவனையனுக்ரஹிக்க வேண்டுமென்று விரும்புகிறேனோ அவனுடைய பணத்தையும் பந்துக்களையும் நாசஞ் செய்கிறேன்"– ஸ்ருதி. புறப்பட்டேன்– மாதாவிற்கு அபரக்ரியை செய்தபிறகு– விஜ க்ராமங்கள்–"ப்ராஹ்மணர்களும் அவர்களுடைய வேலைக்காரர்களும் வஸிக்குமிடம், அல்லது சூத்ரர்கள் அவர்களுடைய வேலைக்காரர்களும் வஸிக்குமிடம்"– ப்ரகு வேத– எதையடையாமல் வாக்குகள் மனத்துடன் திரும்புகின்றனவோ– ச்ருதி திருப்தி– விஷயத்தில் ஆசையுள்ளவனுக்கு ஒருதடவை விஷயத்தையனுபவித் தால் திருப்தியுண்டாகாததுபோல– வீர. மஹாபூதம்– ரிக்வேதம் முதலியவைகள் இந்த மஹாபூதத்தின் நிச்வாஸமே"– ச்ருதி. காலத்தை– ப்ராரப்த கர்மத்தின் முடிவை– ஸ்ரீத. ப்ரவேசித்தேன்– "ப்ரஹ்மதேவர் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் தேஹத்தில் ப்ரவேசித்து அவருடன் ஒன்றாய் கலந்து யோகநித்ரையை யடைந்தார்"– கூர்மப்புராணம்.1000 சதுர்யுக– மனுஷ்யமானத்தால் 1000 சதுர்யுகமானால் ப்ரஹ்மதேவருக்கு ஒரு பகல் முடியும், அவ்வளவு காலங்களடங்கியது ஒரு ராத்ரியாகும். இம்மாதிரியான பகலும் ராத்ரியும் சேர்ந்தால் ஒருதினம், அப்படி 30 தினங்கள் ஒருமாதமாகும், அப்போர்பட்ட மாஸங்களில் 12 கொண்டது ஒரு வர்ஷம், அப்படி நூறு வர்ஷங்கள்

ப்ரஹ்மதேவருக்கு பரமாயுஸ். இதுவே ப்ராஹ்மமான மெனப்படும். மரீசி– வஸிஷ்டர் முதலிய மஹர்ஷிகளும்– வீர.– வெளியிலும்– கர்மிகள் முவ்வுலகத்திலும் வெளியில் வரமாட்டார்கள், தபஸ், முதலியவைகளால் ப்ரஹ்மலோகத்தை யடைந்தவர்கள். இதற்குள் வருகிறதில்லை. ஸ்ரீத ஈச்வரனால்– ப்ரஹ்மதேவரால் கொடுக்கப்பட்டது– சந்த். மூர்ச்சனை.– ஸ்வரத்தின் ஆரோஹாவரோஹம்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–7.

அர்ஜுனன் அச்வத்தாமாவைச் சிக்ஷித்தது.

சௌனக் மஹர்ஷியானவர், ஸூதரை நோக்கிப் "பிறகு பகவானாகிய வ்யாஸமஹர்ஷி, நாரதருடைய அபிப்பிராயத்தை யறிந்து எதனைச்செய்தார்" என்று கேட்டார்.

2–8. இதனைக்கேட்ட ஸூதர், சௌனகரை நோக்கி ப்ரஹ்ம பத்னியாகிய ஸரஸ்வதி நதியின் மேல் கரையில் 'சமயாப்ராஸம்' என்னும் ஒரு ஆச்ரமமுண்டு. அது மஹர்ஷிகள் யாகஞ் செய்யுமிடம். மேலும் அது இலந்தை மரங்களால் அலங்கரிக்கப்பட்டது. அந்த முக்யமான ஆச்ரமத்தில் வ்யாஸ மஹர்ஷியானவர், ஆசமனஞ்செய்து, சுத்தராய் உட்கார்ந்து, மனத்தை ஒரு வகைப்படுத்தி த்யானஞ்செய்தார். பக்தி யோகத்தால் சுத்தமாயும், ஸ்திரமாயுமுள்ள மனத்தில் புருஷோத்தமனையும், அவரை ஆச்ரயித்த மாயையும் தர்சித்தார். "மேலும் ஜீவன் உண்மையில் மாயையைக் கடந்த ஸ்வரூபமுள்ளவனானாலும், அந்த மாயைக்கு வசப்பட்டு பிரமித்து, தான் முக்குண ஸம்பந்த முள்ளவனென்றும், மாயாகுணங்களால் செய்யப்படும் கார்யங்களைத் தான் செய்வதாக நினைத்துமிருக்கிறான்" என்றும் தெரிந்துகொண்டார். பின்னும் அந்த அனர்த் தத்தை போக்கக்கூடிய பக்தியோகத்தையும் அறிந்தார். பின்னும் அவர் உலகத்திற்கு ஏற்பட்டிற்கும், இவ்வித மான அக்ஞானத்தை நிவர்த்திப்பதற்காக, ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தார். அதனைக் கேட்ட மாத்ரத்தில் பரமபுருஷனாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானிடத்தில்,

ஸ்திரமான பக்தியுண்டாகிறது. அதனால் சோகம் மோஹம், பயம், ஆகிய இவைகள் நிவர்த்தியாகின்றன. மேலும் அவர் தம்மால் செய்யப்பட்ட அந்த ஸம்ஹிதையைப் பரிசோதித்து நிவிர்த்திமார்க்கத்தில் ஆசையுள்ள தம்முடைய குமாரராகிய சுகருக்கு அதை உபதேசித்தார்" என்று சொல்லி முடித்தார்.

9–20. இதனைக்கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஓ ஸூதரே! அந்தச்சுகர் ஒருவிஷயத்திலும் ஆசையில்லாதவர்; நிவிர்த்திமார்க்கத்திலேயே நோக்க முள்ளவர்; ஆத்மாவிடமே ரமிப்பவர்; அப்படியிருக்க அந்தப் பெரிதாகிய க்ரந்தத்தை எதற்காக அவர் அப்யஸித்தார் என்று கேட்டார். அதனைக்கேட்டு ஸூதர் சௌனகரை நோக்கி, "ஓ சௌனகரே! மஹர்ஷிகள், ஆத்மாராமர்களானாலும், பகவத் ஸ்வரூபத்தை நன்றாய் அறிந்தவர்களாகையால் ஸம்சய மற்றவர்களானாலும், க்ரந்தங்களைப் படிப்பதில் ஆசையில்லாதவர்களானாலும், பகவானிடத்தில் பலனை உத்தேசியாமலே பக்திசெய்கிறார்கள், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சரிதங்கள், வைராக்யமடைந்த மனத்தையும் வசப்படுத்திக்கொள்ள ஸாமர்த்யமுள்ள வைகள், ஆனதால் சுகமஹர்ஷி, பகவத் குணங்களில் விசேஷ ஆசையுள்ளவராகி அந்தப் பெரியதாகிய உபாக்யானத்தை அப்யஸித்தார். அவர் வ்யாஸ மஹர்ஷியின் புத்ரர். அவரிடத்தில் விஷ்ணு பக்தர்கள் ப்ரியப்படுவார்கள். ஓ! மஹர்ஷிகளே! பரீக்ஷித் என்ற ராஜரிஷியின் பிறப்பு, அவர்செய்த கார்யங்கள், அவருடைய மரணம், பாண்டவர்களுடைய மஹா ப்ரஸ்தானம், இவைகளை கிருஷ்ணகதையைச் சொல்லு வதற்கு உபயோகமாகச் சொல்லுகிறேன். எப்படியெனில்,

கௌரவர்களும், ஸிருஞ்ஜயர்களும், யுத்தத்தில் அடிக்கப்பட்டு ஸ்வர்க்கமடைந்தார்கள். பீமஸேனன் தன்னுடைய கதாயுதத்தால் துர்யோதனனுடைய துடையை அடித்து முறித்தான். பின்பு "த்ரோணருடைய புத்ரராகிய அச்வஸ்தாமாவென்பவர் த்ரௌபதியின் புத்ரர்களை நாசஞ்செய்வதே தம்முடைய யஜமானாகிய துர்யோதனனுக்கு ப்ரியமான கார்யம்" என்று நினைத்து உபபாண்டவர்கள் தூங்கும் ஸமயத்தில் அவர்களுடைய தலையை வெட்டினார். இது துர்யோதனனுக்கு ப்ரியமன்று. மேலும் அதை எல்லோரும் வெறுக்கக் கூடிய கார்யம் என்று நிந்தித்தார்கள். அப்பொழுது அக்குழந்தைகளுடைய தாயாகிய த்ரௌபதிதேவி புத்ரசோகத்தால் பரிதபித்துக் கண்ணீரைப் பெருக்கி அழுதாள். அந்தஸமயத்தில் அவளை நோக்கி அர்ஜுனன், "ஓ! நல்ல ஸ்வபாவமுள்ளவளே! என்னுடைய காண்டீவத்தில் பாணங்களைத்தொடுத்து அவைகளை ப்ரயோகித்து ப்ராஹ்மணர்களுக்குள், அதமனும், ஆயுத பாணியும் ஆததாயியுமான அச்வஸ்தாமாவினுடைய தலையை உன்னிடம் கொடுத்து உன்னுடைய துக்கத்தை நிவர்த்திக்கிறேன். அந்தத் தலையை ஆஸனமாகச் செய்து புத்ரசோகத்தை போக்கிக்கொள் வாய்" என்று ஸமாதானஞ்செய்தான். இப்படி அழகான வார்த்தைகளைச் சொல்லி ஸமாதானஞ்செய்து தகுந்த முயற்சியுடன் குரு புத்ரராகிய அச்வஸ்தாமாவை அர்ஜுனன் துரத்தினார். அவருக்கு மித்ரரும், ஸாரதியு மாயிருப்பவர் ஸ்ரீ கிருஷ்ணனே. அவருடைய வில் பயங்கரமானது. ரதமோ, ஹனுமத்வஜமுள்ளது. சிசுக்களைக் கொன்றவரான அந்த அச்வஸ்தாமா பின் தொடர்ந்துவரும் அர்ஜுனரை வெகுதூரத்தில் கண்டு பயந்து ப்ராணனைக் காப்பாற்றிக்கொள்ள

வேண்டி, பூமியில் எதுவரையில் போகக்கூடுமோ அதுவரையில் "சிவபெருமானிடத்தில் பயந்து ப்ரஹ்ம தேவர் ஓடியதுபோலத் திரும்பிப்பாராமலே ஓடினார். அப்படியும் தம்மைக் காப்பாற்றக்கூடியவர் கிடைக்காத தனாலும், குதிரைகள் களைத்துப்போனபடியாலும் அவர் ப்ரஹ்மாஸ்த்ரமே தன்னைக் காப்பாற்றுமென்று நினைத்தார். பின்பு ஆசமனஞ்செய்து சுத்தராய், ப்ரயோகித்த அஸ்த்ரத்தைத் திருப்பும் வகையறியாத வராயிருந்தும் ப்ராணனுக்குக் கெடுதி நேரிடும் ஸமயமாகையால் அந்த அஸ்த்ரத்தை ப்ரயோகித்தார்.

21–26. பின்பு எல்லா திக்குகளிலும் அந்த அஸ்த்ரத்தின் தேஜஸ் பரவியது. அதனைக்கண்டு அர்ஜுனன் தம்முயிர்க்குச் சேதம் வந்ததென்று நினைத்து ஸாரதியாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானை நோக்கி "ஓ! கிருஷ்ண! கிருஷ்ண! மிகுந்த பராக்ரம முள்ளவரே! பக்தர்களுக்கு நேரும் பயத்தை நிவர்த்திப் பவரே! ஸம்ஸாரத்தால் கஷ்டப்படும் ஜனங்களுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பவர் தாமொருவரே. நீரே முந்திய புருஷன். நீரே எல்லாவற்றிற்கும் பிரபு. ப்ரகிருதியைக்காட்டிலும் வேறானவர். ஆனந்த ஸ்வரூபத்திலிருப்பவர். நீர் மாயையைக்கடந்தவரானாலும், மாயைக்கு வசப்பட்டு ஸம்ஸாரத்தில் மூழ்கியிருக்கும் ஜனங்களுக்கு தர்மம் முதலிய புருஷார்த்தங்களைக் கொடுக்கிறீர். வேறிடத்தில் மனஸைச் செலுத்தாமல் தம்மையே பஜிப்பவர்கள் இந்த திவ்யமங்கள சரீரத்தை த்யானஞ் செய்கிறார்கள். ஓ! தேவர்களுக்குத்தேவனே! இதோ மிகவும் பயங்கரமான தேஜஸ் எங்கும் பரவிவருகிறதே, இது இன்னதென்று தெரியவில்லை. இதனைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

27–28. அதனைக்கேட்டுக் கிருஷ்ணபகவான் அர்ஜுனனை நோக்கி த்ரோணருடைய புத்ரராகிய அச்வஸ்தாமாவினால் ப்ரஹ்மாஸ்த்ரம் ப்ரயோகிக்கப் பட்டிருக்கிறது. இது அதன் தேஜஸ்ஸை தவிர வேறில்லை அவருக்கு அதனைத் திருப்பி பெற்றுக்கொள்ளும் வழி தெரியாமையால் இதுவரையில் உபயோகிக்காம லிருந்து இப்பொழுது தம் உயிருக்குச் சேதம் வருஞ் சமயமாகையால் தம்மைக்காப்பாற்றிக் கொள்ளவேண்டி அதனை உபயோகித்திருக்கிறார். அதனைத் தடுக்க முடியாது. உனக்கு அந்த ப்ரஹ்மாஸ்த்ரம் நன்றாகத் தெரியுமாகையால் அதனை ப்ரயோகித்து எதிரியின் அஸ்த்ரத்தை நாசஞ்செய் என்றார்.

29–39. இப்படிப் பகவான் சொல்லிய வார்த்தையைக் கேட்டுச் சத்ருக்களைக் கொல்லும் வல்லமையுள்ள அர்ஜுனன் ஆசமனஞ்செய்து, ஸ்ரீ கிருஷ்ணபகவானை ப்ரதக்ஷிணஞ் செய்து எதிரியின் அஸ்த்ரத்தை யடக்குவதற்காக ப்ரஹ்மாஸ்த்ரத்தை ப்ரயோகித்தார். அவ்விரண்டு அஸ்த்ரங்களுடைய தேஜஸ்ஸுகளும், ப்ரளய காலத்தில், அக்னியும், ஸூர்யனும் விருத்தியடைவது போல பூமி, அந்தரிக்ஷம் ஆகிய இவைகளை ஆக்ரமித்து ப்ரகாசித்தன. அவ்விருவர்களுடைய அஸ்த்ரங்களின் தேஜஸானது மூவ்வுலகங்களையும் தஹித்தது, அந்தத் தாபத்தை ஸஹியாமல் ஜனங்கள் இது ப்ரளயகாலத்திய அக்னி என்றே நினைத்தார்கள். அப்பொழுது ப்ரஜைகள் உபத்ரவப்படுகிறதையும், லோகங்களுக்கு நாசம் நேர்ந்ததையும் பார்த்து அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணனுடைய அனுமதிப்படி அந்த இரண்டு அஸ்த்ரங்களையும் உபஸம்ஹரித்தார். பிறகு அச்வஸ்தாமாவின் ஸமீபம் சென்று பசுவை

ரசனையால் கட்டுவது போல் கோபத்தால் சிவந்த கண்களுள்ளவனாகிய கிருபியின் புத்ரரைக்கட்டினார். பின்னுமவரைத் தம்முடைய கூடாரத்திற்குக் கொண்டு போக முயன்றார். அப்பொழுது தாமரைமலர் போன்ற கண்களுள்ள கிருஷ்ணபகவான் மிகுந்தகோபத்துடன் அர்ஜுனனை நோக்கி "ஏ பார்த்த! இவன் ராத்ரியில் தூங்கிக்கொண்டிருந்த யாதொரு அபராதமும் செய்யாத குழந்தைகளைக் கொன்றவன், ப்ராஹ்மணர்களுக்குள் அதமன், ஆனதால் இவனைக் கொல்லவேண்டுமே தவிர காப்பாற்றுவது உசிதமல்ல. மத்யம் முதலியவை களைக் குடித்து மதித்திருப்பவன், அஜாக்ரதையா யிருப்பவன், பயித்யங்கொண்டவன், தூங்குகிறவன், பாலியவயதுள்ளவன், முயற்சிக்காதவன், சரணமென்று வந்தவன், ரதமில்லாதவன் பயந்து ஓடுகிறவன், ஆகிய இம்மாதிரியான சத்ருக்களை தர்மத்தையறிந்தவர்கள் கொல்லமாட்டார்கள். எவன் ப்ராணிகளிடத்தில் தயையில்லாமல் பிறரைக்கொன்று தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ளுகிறானோ அந்த துஷ்டனை சிக்ஷிப்பதே அவனுக்கு க்ஷேமமெனப்படும். தண்டிக்கப் படாதவரையில் பாபம் விலகாது; அதனால் நரகத்தையடைவான். மேலும் த்ரௌபதியின் முன்பாக உன் குழந்தைகளைக் கொன்றவருடைய தலையை உன்னிடம் சேர்ப்பிக்கிறேன்" என்று நான் கேட்டிருக்கும் போது உறுதி செய்திருக்கிறாய். இவன் தன்னுடைய யஜமானனாகிய துர்யோதனனுக்கு இஷ்டமில்லாத கார்யத்தைச் செய்தவன். குலத்திற்கு அபகீர்த்தியை யுண்டு பண்ணினவன்; மிகுந்த பாபீ, ஆததாயீ. உன்னுடைய புத்ரர்களை நரிசஞ்செய்தவன். ஆனதால் இவனைக் கொல்லவேண்டும் என்று (அர்ஜுனனுடைய புத்தியைப் பரிசோதிப்பதற்காகச்) சொன்னார்.

40–41. இம்மாதிரி கிருஷ்ணபகவானால் தூண்டப்பட்டும் மஹாத்மாவாகிய அர்ஜுனன் அச்வஸ்தாமா தமது பின்னைகளைக் கொன்றவரானாலும், குருபுத்ரராகையால் வதஞ் செய்ய இஷ்டப்படவில்லை. பின்பு மித்ரராகிய ஸ்ரீ கிருஷ்ணன் ஸாரத்யஞ் செய்ய அர்ஜுனன் தம்முடைய கூடாரஞ் சேர்ந்து புத்ரநாசத்தால் துக்கிக்கும் த்ரௌபதியை நோக்கி ஓ! த்ரௌபதி! உன்னுடைய புத்ரர்களைக் கொன்றவர் இதோ இருக்கிறார். உன்னிஷ்டப்படி இவருக்குச் சிக்ஷை செய்கிறேன் என்றான்.

42–48. யாகத்தில் கொல்லுவதற்காக யூபத்தில் கட்டப்பட்ட பசுபோல கயிற்றினால் கட்டப்பட்டவரும் கெட்டகார்யம் செய்ததால் தலைகுனிந்தவருமான குரு புத்ரரைக்கண்டு த்ரௌபதியானவள்; நல்ல ஸ்வாபமுள்ளவளாகையால் ஆசார்யருடைய புத்ரரென்று கௌரவத்தாலும், தைன்யமடைந்தவரென்ற தயையாலும் அவருக்கு நமஸ்காரஞ்செய்தாள். பின்னும் பதிவ்ரதையான த்ரௌபதியானவள், அவரைக்கட்டிக் கொண்டு வந்ததை ஸஹியாதவளாகி தன்னுடைய பர்த்தாவை நோக்கி "இவரை விட்டுவிடவேண்டும். இவர் ப்ராஹ்மணர்;தவிரவும் குருபுத்ரராகையால் ஆசார்யர். ரஹஸ்யமந்த்ரங்கள், உபஸம்ஹாரம், ப்ரயோகம் ஆகிய இவைகளுடன் எல்லா அஸ்த்ரங்களையும் இவருடைய பிதாவான த்ரோணரிடமிருந்து தாங்கள் அப்யஸித்தீர்கள். அவரே புத்ரரூபியாக இருக்கிறார். அதனால்தான் சூரனாகிய புத்ரனை அடைந்த கிருபியானவள் த்ரோணருடைய பாதிசரீரமாயிருந்தும் அவருடன் உடன்கட்டையேறவில்லை. தாங்கள் ஸகலதர்மங்களையும் அறிந்தவர்கள்; மிகுந்த பாக்யமுள்ளவர்கள்; ஆதலால் ஆசார்யருடைய

வம்சமானது, துக்கப்படும்படி தாங்கள் செய்வது உசிதமல்ல அது எப்பொழுதும் பூஜிக்கத்தக்கது; நமஸ்கரிக்கக்கூடியது; மேலும் இவரைக்கொன்று விட்டால் இவருடைய மாதாவும், பர்த்தாவையே தைவ மாகக் கொண்டவளுமான கிருபி என்பவள் புத்ர நாசத்தால் நான் வருத்தமடைகிறது போல துக்கப் படுவாளல்லவா? ப்ராஹ்மணவம்சத்திற்குக் கோப முண்டாகும். க்ஷத்ரியர்கள் செய்தார்களேயாகில், அந்த க்ஷத்ரிய வம்சம் பரிவாரங்களுடன் துக்கிக்கும்படி நேரும். ஆதலால் ப்ராஹ்மணகுலத்தால் நம்முடைய க்ஷத்ரிய குலம் எரிக்கப்படவேண்டாம்" என்று சொன்னாள்.

49–50. ஓ! ப்ராஹ்மணர்களே! தர்மத்திற்கொத்ததும், ந்யாய விரோதமில்லாததும், தயையுள்ளதும், கபட மற்றதும், ஸமபுத்தியுடன் சொல்லப்பட்டதும், மேன்மையுள்ளதுமான (பூஜிக்கக்கூடியது)த்ரௌபதியின் வார்த்தையைக் கேட்டு அருகிலிருந்த அரசனாகிய தர்மபுத்ரர், நகுலர், ஸஹதேவர், ஸாத்யகி, அர்ஜுனன், தேவகியின் புத்ரரான கிருஷ்ணபகவான், மற்றவர்கள், ஸ்த்ரீகள் ஆகிய எல்லோரும் அது உசிதமென்று ஒப்புக்கொண்டார்கள்.

51. அப்பொழுது பீமஸேனன் "இவரைக் கொல்வதே அவருக்கு க்ஷேமகரமான கார்யம், இவர் நித்ரை செய்து கொண்டிருக்கும் சிசுக்களை வீணாக வதஞ் செய்தார்; அதனால் இவருக்காவது, இவருடைய யஜமானனாகிய துர்யோதனனுக்காவது, யாதொரு ப்ரயோஜனமுமில்லை." என்று மிகுந்த கோபத்துடன் சொன்னான்.

52–58. மேல்காட்டிய இவர்களுடைய வார்த் தையைக் கேட்டு நான்கு கைகளுள்ள ஸ்ரீகிருஷ்ண பகவான், தம்முடைய மித்ரரத்னமாகிய அர்ஜுனனை நோக்கி "ஓ! அர்ஜுன! ப்ராஹ்மணனைக் கொல்லக் கூடாதென்ற சாஸ்த்ரத்தாலும், ஆததாயியை வதஞ் செய்யலாமென்றும் சாஸ்த்ரமிருப்பதால் அந்த சாஸ்த்ரம் என்னுடைய ஆக்ஞாரூபமாகையாலும் அப்படியே நீ செய்யவேண்டும். தவிரவும் த்ரௌபதியினிடம் உன்னால் செய்யப்பட்ட ப்ரதிக்ஞையையும், நிறை வேற்றவேண்டும்; பீமஸேனனுக்கும், த்ரௌபதிக்கும் எனக்கும் இஷ்டமானதைச் செய் என்று சிரித்துக் கொண்டு ஆக்ஞாபித்தார். இதனைக் கேட்டவுடனே பகவானுடைய அபிப்ராயமின்னதென்று, அர்ஜுனன் தெரிந்துகொண்டு, கத்தியினால் அந்த ப்ராஹ்மண ருடைய தலையிலிருக்கும் ரத்னத்தை மயிர்களுடன் எடுத்துப்பின்பு, கட்டை அவிழ்த்து அவ்விடமிருந்து துரத்தினான். அப்பொழுது அவருக்கு பாலஹத்யாதி தோஷத்தாலும் ஸஹஜமான ரத்னமில்லாததனாலும், தேஜஸ் குறைந்து விட்டது. க்ஷௌரஞ்செய்துவிடுதல், பணத்தை யபஹரித்துக்கொள்ளுதல், இருக்குமிடத்தை விட்டுத் துரத்திவிடுதல், ஆகிய இவைகள் வதத்திற்குச் சமமானவைகள். ப்ராஹ்மணதமர்கள் கொல்லக்கூடிய குற்றஞ்செய்தாலும், அவர்களுக்கு மேற்காட்டிய வதமே யொழிய, தேஹநாசஞ் செய்வது உசிதமல்ல. பின்பு பாண்டுபுத்ரர்கள், த்ரௌபதியுடன் புத்ரசோகமுள்ள வர்களாகி இறந்து போன தம்முடைய பந்துக்களுக்குச் செய்யவேண்டிய தஹனம் முதலிய உத்தர ஸம்ஸாரங்களைச் செய்து முடித்தார்கள்.

நோட்டு.

ப்ரஹ்மபத்னி"– ப்ரஹ்மாவையே தெய்வமாயுடையவள். அல்லது ப்ராஹ்மணர்களால் ஸேவிக்கப்பட்டது– ஸ்ரீத. சம்யா– யாகத்திற்கு உபயோகமான சம்யா என்னும் மரத்தின்கிளை விழுந்தவிடத்தில் ஏற்பட்ட ஆச்ரமம். மஹர்ஷிகளின் ஆஹாரத்திற்கு உபயோகமாகிய இலந்தைப் பழங்களுள்ளதென்பது தாத்பர்யம்.– விஜ. சோகம்–ஈச்வரன் எல்லாவற்றையும் அறிந்தவர். ஸர்வசக்தியுள்ளவர். அவருடைய மாயையால் நிஜரூபத்தை மறந்தவன் ஜீவன். அவனுக்கு பகவத்பக்தியால் ஞானமுண்டாகிறது. அதனால் மோஷத்தையடைகிறான். "ஆனந்தரூபமாகிய சித்சக்தியால் நிறைந்தவர் ஈச்வரன், அவித்யையால் தன்னுடைய உண்மையான ரூபத்தையறியாதவனும், ஸகல துக்கங்களுக்கு இருப்பிடமுமாயிருப்பவனே ஜீவன்," ஸ்வாமி மாயையானது எவருடைய வசத்திலிருக்கிறதோ. அவர் ஈச்வரனெனப்படுகிறார். எவன் அந்த மாயைக்கு வசப்பட்டு கஷ்டப்படுகிறானோ அவன் ஜீவன் என்று சொல்லப்படுகிறான்' ஸம்ஸாரத்திலுண்டான முவ்வகை தாபத்தாலுண்டானது சோகம், சரீரத்தை ஆத்மாவென்று நினைப்படதே மோஹம். நரகம் முதலியவைகளில் உண்டாவது பயம். அவைகளைப் போக்குவது பக்தியெனப்படுகிறது– சந்த். ஆசையில்லாத– நல்ல சிஷ்யனை ஸம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையில்லாதவர்– விஜ. க்ரந்தங்களை– "மோஹத்தால் கலங்கியிருக்கும் உன்னுடைய புத்தியானது எப்பொழுது தெளியுமோ? அப்பொழுது கேட்டது, கேட்கவேண்டியது இவைகளிலிருந்து நிர்வேதத்தையடைவாய்," பகவத்கீதை, பலனை– அனேக

ஜன்மங்களில் பரமாத்மாவை நேரில் பார்த்தவர்களும், முக்தியில் விசேஷ ஆனந்தமுள்ளவர்களுமான சுகர் முதலியவர்களுக்கு பாகவதத்தில் ஆசையுண்டாயிற்று என்பதில் என்ன ஆச்சர்யம்.– விஜ. ஆசையுள்ளவராகி– பகவானுடைய கல்யாணகுணங்கள் யாவும் அனுபவத்தாலேயே அறியக்கூடியவைகள் என்று வேதாந்த சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், ஸ்வாத்யாயத்தால் யோகத்தை அடையவேண்டும், யோகத்தால் ஸ்வாத்யாயமுள்ளவனாக ஆகிறான்' என்றபடி பகவானுடைய குணங்களை வர்ணிக்கும் க்ரந்தத்தை அப்யஸிப்பது அவச்யமேயாம். மேலும் பகவானுடைய அவதாரங்களும், அவைகளின் குணங்களும், பக்தர்களும், அவர்களுடைய குணங்களும், வேதாந்தத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. அவைகள் யாவும் இந்த பாகவதத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறதுமன்றி வேதாந்தத்தில் சொல்லியிருக்கும் குணங்களைவிட அதிகமாக பகவத்குணங்கள் நன்றாகக் காட்டப்பட்டிருக்கின்றன. வீர. அப்யஸித்தார்– பிறருக்குமுபதேசித்தார். விஜ. சிவபெருமானிடம்– பரமசிவன் ப்ரஹ்மதேவருடைய ஐந்தாவது தலையை வெட்டுகிறதற்காக வரும்போது அவர் ஓடினார். ஆர்கியென்று ஒருபாடமுண்டு. அதற்கு பரமசிவனுடைய மூன்றாவது கண்ணின் தேஜஸினால் எரிக்கப்பட்டு பயந்து சனீஸ்வரன் ஓடினார் என்று அர்த்தங்கொள்ளவேண்டும்.–விஜ.

முன்னொருக்கால் ப்ரஹ்மதேவர் தன்னால் ஸிருஷ்டிக்கப்பட்ட ஒரு அப்ஸர ஸ்த்ரீயினிடம் ஆசைப்பட்டு மான்வேஷங்கொண்டு ரமிக்க முயற்சித்தார். அப்பொழுது பரமசிவன் அவரைத்துரத்தினார். அர்க

யென்னும் ஒரு பாடமுண்டு. அதற்கு ஸூர்யன் ஓடியது போலவென்று அர்த்தம். அதாவது வித்யுன்மாலி யென்று ஒரு ராக்ஷஸனிருந்தான். அவனுடைய தபஸினால் பரமசிவன் ஸந்தோஷமடைந்து அவனுக்குத் தங்க விமானமொன்றைக் கொடுத்தார். அவன் அந்த விமானத்திலேறிக் கொண்டு ஸூர்யன் பின்னே போய்க்கொண்டிருந்தான். அப்பொழுது ராக்ஷஸனுடைய விமானத்தின் காந்தியானது, ஸூர்யதேஜஸை விட மேலானதாக விருந்தபடியால் அந்த விமானத்தை உருகிப்போகச்செய்தார். அதனால் பரமசிவன் கோபங் கொண்டு ஸூர்யனை துரத்த ஸூர்யன் பயந்து ஓடினார். அப்பொழுது பரமசிவனுடைய கடும் பார்வையால் ஸூர்யன் எரிக்கப்பட்டு காசியில் விழுந்தார். அவருக்கு இப்பொழுதும் லோலார்கனென்று (அலைந்த ஸூர்யன்) பெயர் வழங்கிவருகிறது. இது வாமனபுராணத்தில் விஸ்தாரமாய் சொல்லப்பட்டிருக் கிறது.– ஸ்ரீத. தக்ஷப்ரஜாபதியானவர் பரமசிவனுக்கு ஹவிர்பாகங்கொடாமல் யாகஞ்செய்ய அப்பொழுது பரமேச்வரன் வீரபத்ரராக அவதரிக்க அவரிடமிருந்து ஓடினார்– வீர. ஆர்கியென்றபாடத்தில்– ஸூர்யனு டைய பிள்ளையாகிய மிருத்யுவானவர் பரமசிவனைக் கண்டு ஓடினார்– சந்த். கிருஷ்ண–பூமியிலுள்ள ஸகல ஜனங்களுக்கும் ஸுகத்தை யுண்டுபண்ணுகிறவர்– ஸ்ரீத. மிகுந்த– மூலத்தில் மஹாபாஹு வென்றிருப்ப தால் க்ஷத்ரியர்களை யுண்டுபண்ணிய கைகளுள்ளவர் என்று காட்டப்பட்டது– வீர. நரகபாபத்தைச்செய்த மனிதர்கள் அதற்குத் தக்கபடி அதனால் சிக்ஷிக்கப் படுவார்களானால் அவர்கள் சுத்தர்களாகி புண்யசாலிகள் போல ஸ்வர்க்கத்தை யடைகிறார்கள்”–ஸ்மிருதி

ஆததாயி– அக்னிவைப்பவன், விஷங்கொடுப்பவன், ஆயுதம்பிடித்தவன், பணம், பூமி, பார்யை இவைகளை யபஹரிப்பவன் ஆகிய ஆறு பெயர்கள். மேல்காட்டிய ஆததாயியை ஆலோசிக்காமலேயே கொன்றுவிடலாம்– ஸ்ரீத. பாதிசரீரம்– “பத்னியென்பவள் பர்த்தாவினுடைய சரீரத்தின் பாதிபாகம்” –ச்ருதி.

♣♣♣♣

அத்யாயம்–8

பகவானைக் குந்தி ஸ்தோத்ரஞ் செய்தது.

பின்பு அந்த பாண்டவர்கள் யுத்தத்தில் இறந்து போன பந்துக்களுக்குத் தர்ப்பணம் (எள்ளுஞ்ஜலமும்) செய்வதற்காக ஸ்ரீ க்ருஷ்ண பகவானுடன் ஸ்த்ரீகளை முன்னிட்டுக்கொண்டு கங்கையின் கரை சேர்ந்தார்கள். மேலும் அவர்கள், அந்தக் கங்கா ஜலத்தில், ஸ்நானஞ் செய்து தர்ப்பணம் பண்ணி, பகவானுடைய பாதத்தி லிருந்து உண்டானதால் பரிசுத்தமாயிருக்கும் அந்தத் தீர்த்தத்தில் பின்னும் ஸ்நானஞ் செய்தார்கள்.

3–11. பிறகு அவ்விடத்தில் தம்முடைய தம்பி களுடன் உட்கார்ந்திருக்கும் தர்மபுத்ரரையும், த்ருதராஷ்டரரையும், புத்ரசோகமுள்ள காந்தாரியையும், குந்தியையும், த்ரௌபதியையும் நோக்கி ஸ்ரீ க்ருஷ்ண பகவானானவர், மஹர்ஷிகளுடன் "பந்துக்கள் மரண மடைந்தார்களென்று நீங்கள் துக்கப்படுவது நியாயமல்ல காலமஹிமையால் ப்ராணிகளுக்கு நேரிடும் நரகம் தடுக்கமுடியாதது என்று ஸமாதான வார்த்தைகளைச் சொல்லி, துர்யோதனனால் அபஹரிக்கப்பட்டிருந்த அஜாதசத்ருவின் (எவ்விடத்திலும் விரோத புத்தி யில்லாதவர்) ராஜ்யத்தை அவருக்கு வசப்படுத்தினார். மேலும் த்ரௌபதிதேவியின் தலைமயிரைப் பிடித்து இழுத்ததால் ஆயுஸ் குறைந்தவர்களான துச்சாஸனன் முதலியவர்களைக் கொல்வித்தார். மஹேந்த்ரனுடைய கீர்த்தியை உபேந்த்ரர் உலகத்தில் பரவச்செய்தது போல முக்ய கல்பங்களுள்ள மூன்று அச்வமேத யாகங்களைச் செய்வித்துப் பரிசுத்தமான அவருடைய

கீர்த்தியை விஸ்தாரப்படுத்தினார். பிறகு வ்யாஸ மஹா முனி முதலியவர்களைப் பூஜித்து அவர்களால் தாம் கொண்டாடப்பட்டு ஸாத்யகி, உத்தவர் முதலானவர் களுடன் பாண்டவர்களுக்குச் சொல்லிக்கொண்டு ரதத்தின் மீதேறி த்வாரகையை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது உத்தரையானவள் மிகவும் பயந்தவளாய் ஸ்ரீ க்ருஷ்ணனிடம் வந்து அவரை நோக்கி "மஹா யோகியே! தேவர்களுக்கும் தேவரே! ஸகல ஜகத்திற்கும் அதிபதியே! என்னைக் காப்பாற்றும். பயத்தை நிவர்த்திப்பவர் நீர் ஒருவரேயொழிய மற்றவைகளெல் லாம் ஒன்றுக்கொன்று பயத்தை யுண்டுபண்ணுகின்றன ஏ நாத! அக்னிபோல் கொதித்துக் கொண்டிருக்கும் எஃகுமுனையுள்ள பாணமானது எனக்கு எதிரில் வருகிறது. அதனால் என் சரீரம் எரிக்கப்பட்டாலும் எனக்கு ஸம்மதம், என் வயிற்றிலிருக்கும் சிசுவுக்கு மாத்ரம் கெடுதி நேரிடாமல் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக்கொண்டாள். பக்தர்களிடம் வாத்ஸல்ய முள்ள பகவான் அதனைக்கேட்டு 'இது பாண்டவர்களை நாசஞ்செய்வதற்காக அஸ்வஸ்தாமாவினால் ப்ரயோகிக்கப்பட்ட அஸ்த்ரம்' என்று நிச்சயித்தார்.

12–37. அப்பொழுது பாண்டவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு எதிரில்வரும் பாணங்களைப் பார்த்து அதனைத் தடுப்பதற்காக சிறந்த அஸ்த்ரங்களை எடுத்தார்கள். ஸ்ரீ பகவான் தம்மிடத்திலேயே மனத்தைச் செலுத்திய பக்த சிரோமணிகளான பாண்டவர்களுக்கு நேர்ந்த விஸனத்தைப் பார்த்து அந்த அஸ்த்ரம் வேறு அஸ்த்ரங்களால் தடுக்க முடியாததாகையால் தம்முடைய ஸுதர்சனமென்ற சக்ரத்தை ப்ரயோகித்து, அதனால் அவர்களை

ரக்ஷித்தார். மேலும் ஸகல ப்ராணிகளிடத்திலும் அந்தர்யாமியாயிருக்கும் யோகேசராகிய அந்த க்ருஷ்ண பரமாத்மாவானவர் விராடபுத்ரியான உத்தரையின் வயிற்றிலிருக்கும் கர்பத்தைத் தம்முடைய மாயையால் மறைத்தார். ஏ சௌனகரே! ப்ரஹ்மாஸ்த்ரமென்பது மற்றவைகளால் தடுக்க கூடியதல்ல. வீணாய்ப் போகாதது. ஆனாலும் விஷ்ணுவின் தேஜஸையடைந்து அடங்கினது. பகவான் மாயையால் ஸிருஷ்டி, பரிபாலனம், ஸம்ஹாரம் ஆகிய இவைகளைச் செய்கிறவராகையாலும், ஸகல ஆச்சர்யரூபியாயிருப்ப தாலும், அவரிடத்தில் மேற்சொல்லிய விஷயத்தை அத்புதமென்று நினைக்கவேண்டாம். இப்படிப் பாண்டவர்கள் பகவானுடைய ஒத்தாசையால் ப்ரஹ்மாஸ்த்ரத்திலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். அப்பொழுது பதிவ்ரதையான குந்திதேவியானவள் த்வாரகா நகரத்திற்கு ப்ரயாணமாயிருக்கும் க்ருஷ்ண பகவானை நோக்கி தன்னுடைய புத்ரர்களுடனும், த்ரௌபதியுடனும், பகவத் ஸ்வரூபத்தை அறியாத வளான நான் எல்லாவற்றிற்கும் முந்தியபுருஷனை நமஸ்கரிக்கிறேன். அவர் ஸகலத்திற்கும் ஈச்வரன். ப்ரகிருதி (மாயை)க்கு மேற்பட்டவர். ஸகலத்திற்கும் மேற்பட்டவர். ஸகலப்ராணிகளாலும் பார்க்கமுடியாத வர். ஆனால் ப்ராணிகளுடைய உள்ளிலும் வெளியிலும் இருப்பவர். மாயையாகிய திரையால் மறைக்கப்பட்டவர். இந்திரியங்களுக்குப் புலப்படாதவர். நாசமில்லாதவர். அந்தப் பரமபுருஷனாகிய நீர், வேஷதாரி(நடன்) போல தேஹாபிமானமுள்ளவர்களால் அறியப்படுகிறீரில்லை. சுத்தசித்தர்களும் மனனம்செய்யும் ஸ்வபாவமுள்ளவர் களுமான பரமஹம்ஸர்களும், உம்முடைய ஸ்வரூபத் தைத் தேடுகிறார்கள். அப்படியிருக்க, ஸ்திரீகளாகிய

நாங்கள் பக்தியோகத்தை யடைவதற்காக உம்மை எப்படி தர்சிப்போம்? க்ருஷ்ணன், வாஸுதேவர், தேவகீநந்தனர் (தேவகியின் புத்ரர்) கோவிந்தர் என்னும் திவ்ய நாமங்களுள்ளவரும், நந்தனென்ற கோபரு (யாதவர்)க்குப் புத்ரரும், தாமரைமலருடன் கூடிய நாபியுள்ளவரும், தாமரஸ புஷ்பமாலையுள்ளவரும், தாமரைமலர் போன்ற கண்கள், கால்கள் ஆகிய இவைகளுள்ளவருமான உமக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். ஏ! ப்ரபுவே! துஷ்டனாகிய கம்ஸனால் துன்பப்படுத்தப் பட்ட தேவகியை எப்படிக் காப்பாற்றினீரோ அப்படியே என்னையும் என்னுடைய புத்ரர்களையும் கூட்டங் கூட்டமாக ஆபத்துக்கள் வந்தாலும், அவைகளிலிருந்து ஸம்ரக்ஷிக்கிறீர் (தமக்கு மாதாவிடமிருக்கும் ப்ரீதியைக் காட்டிலும் என்னிடம் அதிக விச்வாஸமென்பது கருத்து) விஷம், அக்னி, ராக்ஷஸர்கள், அஸத்துக்களுடைய ஸபை, வனவாஸ கஷ்டம், ஒவ்வொரு யுத்தத்திலும் மஹாரதர்களாகிய பீஷ்மர் முதலியவர்களுடைய அஸ்த்ரங்கள், கடைசியாக அச்வத்ஸ்தாமாவின் ப்ரஹ்மாஸ்த்ரம் ஆகிய இவைகளிலிருந்து உம்மால் காப்பாற்றப்பட்டோம். மேலும் துர்யோதனனால் தூண்டப்பட்டு, எங்களை சபிப்பதற்காக வந்த துர்வாஸ மஹாமுனியை ஸகல ஜகத்துடன் திருப்தியடையச் செய்து அவரிடமிருந்தும் காப்பாற்றினீர். நீர் ஸகல ஜகத்திற்கும் குருவாயிருப்பவர், தங்களுடைய தர்சன மானது மோக்ஷத்தை கொடுக்கத்தக்கது, அப்போர்ப்பட்ட உம்முடைய தர்சனம் ஆபத்காலங்களில் கிடைப்பதால் அந்த விபத்து அடிக்கடி வந்தாலும் ஸம்மதம். மேலான குலத்தில் பிறந்திருப்பது, ஐச்வர்யம், சாஸ்த்ரங்களை படித்திருப்பது, அழகு ஆகிய இவைகளால் மிகுந்த கர்வமுள்ள புருஷன் உம்முடைய பெயரை உச்சரிக்க

மாட்டான். தரித்ரனாலேயே அந்த திவ்யநாமதேயம் இடைவிடாமல் சொல்லப்படும். (ஸம்பத் க்ஷேமத்திற்கு விரோதியென்று கருத்து) தங்களுக்கு பக்தர்களே பணம். முக்குணங்களின் வ்ருத்திகள் தங்களிடத்தில் ஸம்பந்தக்கிறதில்லை. நீர் ஆத்மாவிலேயே ரமிப்பவர்; சாந்தர்; மோக்ஷத்தைக்கொடுக்கும் ஸாமர்த்யமுள்ளவர்; இப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரஞ்செய்கிறேன். நீர் தேவகியின் புத்ரரானாலும், ப்ராகிருத சிசுக்கள் போன்றவரல்ல. உம்மைக் காலரென்றும், எல்லாவற்றிற் கும் ஈச்வரரென்றும்; ஆதியந்தமற்ற ப்ரபுவென்றும், எல்லாரிடத்திலும் ஸமமாக ஸஞ்சரிப்பவரென்றும் நான் நினைக்கிறேன். உமக்கு ஓரிடத்திலும் பக்ஷபாத மில்லை. ஜனங்கள் ஒருவருக்கு ஒருவர் சண்டை செய்வதற்கும் நீரே நிமித்தம்; வேறில்லை மேலும் சிலர் விரோதிகளென்றும். சிலர் மித்ரர்களென்றும் பேதபுத்தி உமக்கில்லை. நீர் மனுஷ்ய சரீரமெடுத்து அவர்கள்போல் அபினயஞ் செய்வதால் உம்மிடத்தில் பேதபுத்தி யிருப்பதாகத் தோன்றுகிறதேயொழிய உண்மையிலில்லை. (அனுக்ரஹத்தையாவது நிக்ரஹத் தையாவது செய்கிறதில்லை) தங்களுடைய அபிப்ராயம் ஒருவராலும் அறியமுடியாதது. ஜகத்ருபியாயிருக்கும் ப்ரபுவே! பிறப்பில்லாதவரும், ஒன்றையுஞ்செய்யாதவரும், பரமாத்மாவாக விருப்பவருமான நீர்,வராஹ(பன்றி) மாகியும், மத்ஸ்யமாகியும், வாமனராகியும் அவதரித்தீ ரென்பது பொருந்துமா? அது லோகத்தை அனுஸரித்ததேயொழிய உண்மையில் உமக்கு ஜன்மமில்லை. கோகுலத்தில் நந்தருடைய கிரஹத்தில், தயிர்பானையை உடைத்ததற்காக யசோதை, உம்மைக் கட்டுவதற்கு கயிற்றை எடுத்தாளல்லவா? அப்போது நீர் கண்களிலிருந்த மை கரையும்படி கண்ணீரைப்

பெருகிக் கொண்டு கலங்கிய கண்களுள்ளவராய்த் தலைகுனிந்து மிகவும் பயந்தவர் போல் அபினயஞ் செய்தீரல்லவா? அது எனக்கு மோஹத்தை யுண்டு பண்ணுகிறது. உண்மையில் ஜனனம், மரணம் முதலியவைகளும் உம்மிடமிருந்து பயப்படுகிறது. உம்முடைய சரிதம் ஜகத்திற்கு மோஹகரமாகையால் உம்முடைய ஜன்மங்களைப் பலவகையாய்ப் பெரியோர் கள் சொல்லுகிறார்கள். அதாவது "புண்ய ச்லோகராகிய யதுவின் கீர்த்தியை விருத்தி செய்வதற்காக அவருடைய வம்சத்தில், மலயபர்வதத்தை கௌரவப் படுத்துவதற்கு, அதில் சந்தனவிருக்ஷம் முளைத்தது போல் அவதரித்தீர்" என்று சிலர் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் "வஸுதேவர், தேவகி இவர்களால் ப்ரார்த்திக்கப்பட்டு உண்மையில் பிறப்பில்லாதவரானா லும், தேவ விரோதிகளை நாசஞ்செய்து இவ்வுலகத் திற்கு க்ஷேமத்தை யுண்டுபண்ணுவதற்காக தேவகியின் புத்ரராக அவதரித்தீர்" என்று கூறுகிறார்கள். மற்றுஞ் சிலர் "பூமியில் துஷ்டர்கள் அதிகமாயிருந்த படியால் மிகுந்த பாரத்தால் ஸமுத்ரத்தின் நடுவில் தத்தளிக்குங் கப்பல்போல் கஷ்டப்படும் பூமியின் பாரத்தை நிவர்த்திப்பதற்காக ப்ரஹ்மதேவருடைய வேண்டு கோளின்படி அவதரித்தீர்" என்று சொல்லுகிறார்கள் இன்னுஞ்சிலர் "ஆத்மாவின் ஆனந்த ஸ்வரூபத்தை யறியாமல் தேஹம் முதலியவைகளில் அபிமானம் வைத்துக் கர்மங்களைச் செய்துகொண்டு கஷ்டப்படும் ஜனங்களுக்கு மேற்காட்டிய துக்கத்தை நிவர்த்திக்க வேண்டி கேட்பதற்கும் ஸ்மரிப்பதற்கும் தகுதியான லீலைகளைச் செய்வதற்காக ஜன்மாவை அங்கீகரித்தீர்" என்கிறார்கள். எந்த ஜனங்கள் உம்முடைய சரிதத்தை பிறர்சொல்லக் கேட்கிறார்களோ, தம் வாக்கினால்

உச்சரித்து கானஞ்செய்கிறார்களோ, அடிக்கடி நினைக்கிறார்களோ, நினைத்து ஆனந்தப்படுகிறார்களோ, அவர்கள் பிறப்பு, இறப்பு ஆகிய இவைகளைப் போக்குகிற உம்முடைய பாதங்களை வெகு சீக்ரமாக அடைவார்கள்.

38–44. பக்தர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும் ப்ரபுவே! தங்களிடம் விசேஷ ப்ரியமுள்ளவர் களும், தங்களுக்கு வேலைக்காரர்களுமான எங்களை விட்டுப்போவது உசிதமல்ல துர்யோதனன் முதலிய அரசர்கள் நிமித்தமாக விசேஷ பாபங்கள் செய்த எங்களுக்கு உம்முடைய பாதாரவிந்தத்தைத் தவிர வேறு கதியில்லை. மேலும் இந்த்ரியங்களுக்கு அதிபதி யான ஜீவனில்லாத வரையில் எப்படி நாமரூபங்கள் பயன்படுகிறதில்லையோ அப்படி உம்முடைய ஸான்னித்யமில்லாத வரையில் யாதவர்களுடன் கூடிய பாண்டவர்களாகிய எங்களுடைய கீர்த்தியும், ஸம்பத்தும் பயன்படாதவைகளேயாம். மேலும், எங்களுடைய ராஜ்யத்திற்குட்பட்ட இந்த பூமியானது உம்முடைய பாதங்களிலுள்ள த்வஜரேகை, வஜ்ரரேகை, அங்குசரேகை முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு விளங்குகிறது. நீர் அப்புறம் போனால் இந்தப்பூமி பிரகாசிக்காது. உம்முடைய கடாக்ஷ வீக்ஷண்யத்தால் இந்த தேசத்தில் ஐச்வர்யம் விருத்தியடைகின்றன.செடி கொடி முதலியவைகள் நன்றாய் விருத்தியடைகின்றன. ஓ! ஜகத்பதியே! ஜகத்ரூபியாயிருப்பவரே! ஜகத்தில் அந்தர்யாமியாயிருப்பவரே! பந்துக்களான பாண்டவர் களிடத்திலும், விருஷ்ணிகளிடத்திலும் எனக்கிருக்கும் ஸ்நேஹ(அபிமான)மாகிய பந்தத்தை நிவர்த்தியும். ஓ! மதுரா நகரத்தரசனாகிய க்ருஷ்ணா! கங்கையின்

ப்ரவாஹமானது இடையில் நேரும் விக்னங்களை லக்ஷ்யஞ்செய்யாமல் ஸமுத்ரத்தையே யடைவதுபோல என்னுடைய மனஸும் வேறிடஞ்செல்லாது இடை விடாமல் உம்மையே பஜிக்கும்படி அனுக்ரஹிக்க வேண்டும். ஓ! க்ருஷ்ண! அர்ஜுனனுக்கு மித்ரரே! விருஷ்ணிகளுக்குட் சிறந்தவரே! பூமிக்குக் கெடுதி செய்யும் அரசர்களை நாசஞ் செய்பவரே! குறைவற்ற வீர்யமுள்ளவரே! ஏ கோவிந்த! (காமதேனுவின் ஐச்வர்யத்தை யடைந்தவர்) பசுக்கள், ப்ராஹ்மணர்கள், தேவர்கள் ஆகிய இவர்களின் உபத்ரவத்தை போக்கடிப் பவரே! யோகிகளுக்கு அதிபதியும், ஜகத்திற்கு குருவாயு மிருப்பவரே! பகவானாகிய உமக்கு நமஸ்காரம் செய்கிறேன் என்று ஸ்தோத்ரம் பண்ணினாள்.

45–46. இந்தப்படி குந்திதேவியால் இனிமையான வாக்யங்களைக் கொண்டு ஸ்தோத்ரஞ் செய்யப்பட்ட பகவான் தம்முடைய ஸகல மஹிமைகளையும் வெளியிட்டு கொஞ்சம் சிரித்து, தமது மாயையால் அவளை ப்ரமிக்கச்செய்தார். பின்பு குந்தியின் ப்ரார்த் தனைப்படி "எப்பொழுதும் என்னிடத்திலுனக்கு ஸ்திரமாக பக்தி இருக்கட்டும்" என்று அனுக்ரஹித்து ஹஸ்தினாபுரஞ் சேர்ந்து அவ்விடத்தில் ஸுபத்ரை முதலிய ஸ்த்ரீகளுக்கு சொல்லிக்கொண்டு தமது பட்டணத்திற்குப் போக முயற்சித்தார். அப்பொழுது இவ்விடத்தில் தாங்கள் சிலகாலம் வஸிக்கவேண்டும் என்று தர்மபுத்ரர் அன்புடன் கேட்டுக்கொள்ள, பகவானும் அதை அங்கீகரித்து அவ்விடத்தில் வஸித்தார்.

47–53. பிறகு பகவானுடைய அபிப்ராயத்தை

அறியாத வ்யாஸமஹர்ஷி முதலியவர்களாலும், அத்புதகார்யங்களைச் செய்யும் க்ருஷ்ண பகவானாலும், பலவகையான இதிஹாஸங்களை கொண்டு தர்மபுத்ரர் ஸமாதானஞ் செய்யப்பட்டும் அதனால் அவருக்கு துக்கம் நீங்கவில்லை. ஓ ப்ராஹ்மணர்களே! தர்ம புத்ரர் யுத்தத்தில் இறந்துபோன பந்துக்களையே நினைத்து, அவிவேகமுள்ளவராய் அபிமானம், மோஹம் என்னும் இவைகளுக்கு வசப்பட்டு பின்வருமாறு சொல்லலானார். 'துராத்மாவாகிய என்னுடைய மனத்தில் ஸ்திரமாயிருக்கும் அறியாத்தன்மை மிகவும் ஆச்சர்யப்படத்தக்கது. நாய், நரி முதலியவைகளுக்குச் சொந்தமான இந்த சரீரத்திற்காக அனேக அக்ஷௌஹிணி ஸைன்யங்களைக் கொன்றேன். பாலர்கள், ப்ராஹ்மணர்கள், மித்ரர்கள், பிதிருவ்யர்கள், ஸஹோதரர்கள், குரு ஆகிய இவர்களுக்கு த்ரோஹஞ்செய்த நான், அனேகவர்ஷங்கள் பாபத்தின் பலனாகிய நரகத்தை அனுபவித்தாலும் ஒருபொழுதும் மோக்ஷத்தையடையப் போகிறதில்லை.யுத்தத்தில் சத்ருக்களைக் கொல்வது அரசர்களுக்கு தர்மமேயொழியப் பாபமில்லை' என்று சாஸ்த்ரத்தில் சொல்லியிருப்பது என் விஷயத்தில் பொருந்தாது. ஏனென்றால் 'அரசன் தன்னுடைய ப்ரஜைகளுக்கு, சத்ருக்களால் உபத்ரவம் நேரிடும்போது, அவர்களைக்கொல்வது ந்யாயம்' என்பது சாஸ்த்ரத்தி னுடைய தாத்பர்யம். துர்யோதனனால், ப்ரஜைகள் காப்பாற்றப்பட்டு ஸுகமாய் வஸிக்கும்போது ராஜ்யமடையவேண்டுமென்ற ஆசையால் மாத்ரம் நான் சண்டைசெய்து பந்துக்களைக் கொன்றேனாகையால், என் புத்திக்கு ஸமாதானமாகவில்லை இப்படிப் புருஷர்களைக்கொன்றதால் அவர்களுடைய பந்துக்களான ஸ்த்ரீகளுக்கும் நான் த்ரோஹஞ் செய்தவனாகிறேன்.

இந்தப் பாபம் க்ரஹஸ்தாச்ரமத்தில் செய்யக்கூடிய ஸத்கர்மங்களால் நிவர்த்தித்துக் கொள்ளமுடியாது. அநேக ப்ராணிகளை (அறியாத்தன்மையால்) கொன்ற தால் நேர்ந்த இந்த பாபத்தை புத்தி பூர்வமாகச் செய்யும் ஹிம்ஸையுள்ள யாகத்தால் நிவர்த்திசெய்து கொள்ளவும் முடியாது. 'கலங்கிய ஜலத்தால் கலங்கிய ஜலத்தை சுத்தப்படுத்த முடியுமா? மத்யத்தால் உண்டான அசுத்தியானது, மத்யத்தால் நிவர்த்தி யாகுமா?' என்று பலவாறாகத் துக்கித்தார்.

நோட்டு

பயத்தை–மிருத்யுவிற்கு வசப்பட்டிருக்கும் மனிதனால் மற்றொருவனை மிருத்யுவினிடமிருந்து காப்பாற்ற முடியாதென்று கருத்து– வீர. அறியாத– பீஷ்மர் மரணமடையப் போகிறார், அதற்காக எல்லோரும் கங்கையின் கரைக்குச் செல்லவேண்டும், அவ்விடத்தில் அவரிடமாக தர்மங்களைக் கேட்கச்செய்து அதனால் தர்மபுத்ரருடைய துக்கத்தைப் போக்கவேண்டுமென்பது பகவானுடைய அபிப்பிராயம்.– ஸ்ரீ த. அக்ஷௌஹிணி– ரதங்கள் 21870, யானைகள் 21801, குதிரைகள் 65610, காலாட்கள் 109350 யாகத்தால்– "எவன் அச்வமேதஞ் செய்து பகவானை பூஜிக்கிறானோ அவன் ப்ரஹ்மஹத் யை முதலிய பாபங்களிலிருந்து விடுபடுகிறான்" என்று ச்ருதியில் சொல்லப்பட்டிருந்தாலும் என்பது கருத்து.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–9

பீஷ்மர் தர்மம் உரைத்தது.

இப்படி தர்மபுத்ரர் "பந்துக்களுக்கு த்ரோஹஞ் செய்தோமே" என்று பயந்து ஸகல தர்மங்களையும் தெரிந்துகொள்ள விரும்பி பீஷ்மர் வஸிக்கும் குருக்ஷேத்ரம் சென்றார்.

ப்ராஹ்மணர்களே! அப்பொழுது அவருடைய தம்பிகளும், பகவானும், வ்யாஸரும், தௌம்யர் முதலானவர்களும், உத்தமமான குதிரைகள் பூட்டிய ரதங்களிலேறிக்கொண்டு அவர்பின் சென்றார்கள். மேலும் ஸ்ரீ க்ருஷ்ணபகவானும் அர்ஜுனருக்கு ஸாரத்யம் செய்துகொண்டு சென்றார். அவர்களுடைய நடுவில் அந்தத் தர்மபுத்ரர் குஹ்யகர்களால் சூழப்பட்ட குபேரன்போல ப்ரகாசித்தார்.

4–8. அவ்விடத்தில் ஸ்வர்க்கத்திலிருந்து விழுந்திருக்கும் தேவரைப்போல், பூமியில் கிடக்கும் பீஷ்மரைக்கண்டு, பாண்டவர்களும், அவர்களுடைய பரிவாரங்களும், ஸ்ரீ க்ருஷ்ணபகவானும், அவருக்கு நமஸ்காரஞ் செய்தார்கள். அந்த ஸமயத்தில் ஸகல ப்ரஹ்மர்ஷிகளும், சிறந்த தேவர்ஷிகளும், ராஜர்ஷிகளும், அந்தப்பீஷ்மரைப் பார்ப்பதற்காக வந்து கூடினார்கள். மேலும், பர்வதர், நாரதர், தௌம்யர், வ்யாஸபகவான், ப்ரஹதச்வர், பரத்வாஜர், அவருடைய சிஷ்யர்கள், ரேணுகையின் புத்ரராகிய பரசுராமர், வஸிஷ்டர், இந்த்ரப்ரமதர், ச்ருதர், கிருதஸ்மதர், அஸிதர், நக்ஷீவான், கௌதமர், அத்ரி, விச்வாமித்ரர்,

ஸுதர்சனர், காச்யபர், ப்ரஹஸ்பதி, சுகர் முதலிய நிர்மல ஸ்வபாவமுள்ள மற்றவர்களும் தங்கள் தங்கள் சிஷ்யர்களுடன் அவ்விடமே வந்துசேர்ந்தார்கள்.

9–24. தேசத்தையும் காலத்தையும், நன்றாக அறிந்த பீஷ்மர் வந்தவர்களைத் தனியே தெரிந்துகொண்டு மிக்க பாக்யசாலிகளான மஹர்ஷிகளைப் பூஜித்தார். மேலும் ஸமீபத்தில் உட்கார்ந்திருப்பவரும், ஜகதீசரும், மாயையால் சரீரமெடுத்தவருமான ஸ்ரீ க்ருஷ்ண பகவானைப் பார்த்து, அவருடைய மஹிமையை அறிந்தவராகையால், அவரை ஹிருதயத்தில் வைத்து அர்ச்சித்தார். பின்னும் அவர் மிகுந்த வணக்கத்தோடும் ப்ரேமையோடும், பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் பாண்டவர்களைப் பார்த்து அபிமானத்தால் கண்ணீரைப் பெருக்கி அதனால் கண் தெரியாதவராய்ப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினார். "ஏ தர்மபுத்ர! நீங்கள் ப்ராஹ்மணர்களையும் தர்மத்தையும், ஸ்ரீ க்ருஷ்ண பகவானையும் ஆச்ரயித்தவர்களாகவிருந்தும் கஷ்டப்பட்டு ஜீவிப்பது ந்யாயமல்ல இது வெறுக்கக் கூடிய கார்யம். உங்களுடைய பிதாவும் அதிரதருமாகிய பாண்டு மரணமடைந்த பிறகு உங்களுடைய மாதாவாகிய குந்திதேவி பால்யவயதுள்ள குழந்தைகளுடன் அடிக்கடி மிகுந்த கஷ்டத்தை அனுபவித்தாள். மேகங்கள் வாயுவுக்கு வசப்பட்டிருப்பதுபோல, ஜனங்கள் காலத்திற்கு வசப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் உங்களுக்கு நேர்ந்த கஷ்டங்கள் யாவும் அந்தக் காலத்தால் செய்யப்பட்டவைகளேயாம். எந்த பக்ஷத்தில் அரசனாகிய தர்மபுத்ரரும், கதாயுதத்தைக் கையில் பிடித்த பீமஸேனனும் காண்டீவமென்னும் வில்லையுடைய அர்ஜுனனும் இருக்கிறார்களோ, மேலும்

அவர்களுக்கு க்ருஷ்ணபகவான் மித்ரரோ அவ்விடத்திலும் ஆபத்துநேரிட்டதென்பது காலத்தின் மஹிமையேயாம்:

இதோ இருக்கும் க்ருஷ்ண பகவானுடைய எண்ணத்தைத் தெரிந்துகொள்ள ஒருவராலும் முடியாது. கவிகளும், யோகிகளும், இவருடைய ஸ்வரூபத்தை அறிய விரும்பியும், அதை அறியாமல் மோஹிக்கிறார்கள். ஏ! தர்மபுத்ரரே! மேற்சொல்லிய காரணத்தால் 'இவையாவும் ஈச்வரனுக்கு வசப்பட்டவை என்று நிச்சயித்து அந்த ஈச்வரனை அனுஸரித்து அனாதர்களான ப்ரஜைகளைக் காப்பாற்றும்; ஸிருஷ்டிக்கு முந்தியிருந்த புராண புருஷராகிய பகவான் இவர்தான். இவரே நாராயணன் ஆனாலும் தம்முடைய மாயையால் லோகத்தை ப்ரமிக்கச் செய்து கொண்டு (தன் ஸ்வரூபத்தைக் காட்டாமல்) விருஷ்ணிவம்சத்தில் ப்ரகாசிக்கிறார். இவருடைய மஹிமை மிகவும் ரஹஸ்யமானது; அதனைப் பகவானாகிய பரமசிவனும், தேவர்ஷியாகிய நாரதரும், கபிலருமே அறிவார்கள். நீங்கள் இவரை அம்மானுடைய பிள்ளை (அம்மான் சேய்) என்றும் உங்களுடைய இஷ்டப்படி நடப்பவரென்றும், பிரதி உபகாரத்தை எதிர்பாராமல் உபகாரஞ்செய்பவர் என்றும், நினைத்து அவரை மந்த்ரியாகவும், தூதராகவும், ஸாரதியாகவும், ஸ்நேஹவிசேஷத்தால் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அப்படி நினைப்பது அறியாத்தன்மையே. ஸகல ஜகத்ருபியும், ஸமமாயிருப்பவரும், ஒருவராய் விளங்குபவரும், அஹங்காரமில்லாதவரும், ஆசை முதலியவைகளில்லாதவருமான, இந்தப் பகவானுக்கு மேலான கார்யமென்றும், கீழான கார்யமென்றும், தகுதியுடையது

என்றும், வேறுபாடு தோன்றுகிற பேதபுத்தி ஒரிடத்திலும் உண்டாகிறதில்லை. ஆனாலும் இடைவிடாமல் பக்தி செய்பவர்களிடத்தில் இவருக்கு க்ருபை உண்டாகிறது. இப்போது நான் உயிரைவிடஸித்தனாயிருக்கையில், ஸ்ரீ க்ருஷ்ணபகவான் எனக்கு தர்சனங் கொடுப்பதற்காக நேரில் இவ்விடம் வந்திருக்கிறார். ஆகையால் இடைவிடாமல் பக்திசெய்பவர்களிடத்தில் பகவானுக்கு உண்டாகும் க்ருபையை பாருங்கள். மனிதனானவன் தன்னுடைய மனதை பகவானிடத்தில் பக்தியுடன் செலுத்தியும் அவருடைய பெயரையே வாக்கினால் உச்சரித்துக்கொண்டும் சரீரத்தைவிடுவானாகில் அவன் காமங்களாலும் கர்மங்களாலும் பாதிக்கப்படமாட்டான் ஆகையால் தேவர்களுக்கும் தேவரும், சிரிப்பினாலும், சிவந்தகண்களாலும், அழகான முகமுள்ளவரும், த்யானத்திற்கு விஷயமானவரும், நான்கு கைகளுள்ளவருமான பகவான் நானிந்த சரீரத்தை விடுகிறவரையில் என் முன்பு இருக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

25. இதனைக்கேட்டு தர்மபுத்ரர் சரதல்ப (ப்ராணப் படுக்கை)த்தில் படுந்துக் கொண்டிருக்கும் பீஷ்மரை நோக்கி மற்ற மஹர்ஷிகள் கேட்டுக்கொண்டிருக்கும் போது பலவகையான தர்மங்களைச் சொல்லவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

26–28. ஸகல தர்மங்களையு மறிந்தவராகிய பீஷ்மர் மனுஷ்ய ஜாதிக்குப் பொதுவானவைகளும், வர்ணாச்ரமங்களுக்கு உரியவைகளும், வைராக்ய ஸம்பந்தத்தால் ஏற்படும் நிவிருத்தி ரூபமாயும் ஆசையின் ஸம்பந்தத்தால் ஏற்படும் ப்ரவிருத்தி ரூபமாயுமுள்ள

தர்மங்களையும், ராஜதர்மங்கள், தானதர்மங்கள், மோக்ஷதர்மங்கள், ஸ்த்ரீதர்மங்கள், பகவத்தர்மங்கள், ஆகிய இவைகளையும், தனித்தனியாகப் பிரித்துச் சுருக்கமாகவும், விஸ்தாரமாகவும் சொன்னார். மேலும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்களையும், அவைகளை அடைவதற்கு தகுந்த உபாயங்களையும், அனேக இதிஹாஸங்களிலும், உபாக்யானங்களிலும் சொல்லியபடி வர்ணித்தார்.

29–31. இப்படி தர்மங்களை யுபதேசித்துக் கொண்டிருக்கும்போது உத்தராயணம் வந்தது. இஷ்டப்படி மரணமடையச் சக்தியுள்ள யோகியாகிய பீஷ்மரால் தமது மரணத்திற்காக எதிர்பார்க்கப்பட்டிருந்த காலம் இதுவேயாம். அப்பொழுது ஆயிரம் ரதிகர்களைக் காப்பாற்றும் வல்லமையுள்ள பீஷ்மர் மௌனமாக (வார்த்தைகளை அடக்கிக்கொண்டு) ஆதிபுருஷரும், பீதாம்பரத்தை ,தரித்தவரும், நான்கு கைகளுள்ளவரும் எதிரில் உட்கார்ந்திருப்பவருமாகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் ஸகல ஆசைகளையும் ஒழித்து சுத்தமாக விருக்கும் மனத்தை கண்களை மூடிக் கொள்ளாமலேயே செலுத்தினார். மேலும் அவருக்கு இம்மாதிரி பரிசுத்தமாகிய த்யானவிசேஷத்தால் அசுபங்கள் விலகின. பகவானுடைய கருணைநிறைந்த பார்வையால் ஆயுதங்களாலுண்டாகிய காயங்களும் அவற்றின் உபத்திரவமும் நீங்கின. சகல இந்திரியங்களும் பலவிடங்களில் செல்லாமல் ஒருவழிப்பட்டன. பின்னும் ஸாத்வதர்களுக்குட் சிறந்தவரும், ஒப்பற்ற மஹிமையுள்ளவரும் தம்முடைய ஸ்வரூபமான பரமானந்தத்தை யடைந்தவரும், ஸிருஷ்டிக்குக் காரணமாகிய ப்ரகிருதியின் ஸம்பந்தத்தை சிலகாலம் லீலையாக அங்கீகரிப்பவருமான பகவானிடத்தில்

ஒருவித ஆசையுமில்லாத தமது புத்தியைச் செலுத்தினார். இப்படி எல்லாவகையிலும் பகவத் பரராயிருந்து சரீரத்தை விடுகிறவரையில் ஸ்ரீ கிருஷ்ணனை பின்வருமாறு ஸ்தோத்ரஞ் செய்யலானார்.

32–35. "மூவ்வுலகத்திலும் மிகுந்த அழகுள்ளதும், பச்சிலை போல் நீலவர்ணமுள்ளதுமான திவ்யசரீரத்தை யடைந்தவரும், ஸூர்ய கிரணம்போல் பொன்னிறமான வஸ்த்ரத்தை தரித்தவரும், நான்குபுறத்திலும் தொங்கும் சிறந்த தலைமயிர்களால் அழகான முகமுள்ளவரும். அர்ஜுனனுக்கு தோழருமான பகவானிடத்தில் பலனையுத்தேசியாமல் எனக்கு ஸ்திரமான பக்தியுண்டாகட்டும். மேலும் யுத்தத்தில் அர்ஜுனனுக்கு ஸாரத்யஞ் செய்யும்போது குதிரைகள் ஓடியதால் பூமியிலிருந்து கிளம்பிய தூளிகள் எவருடைய தலைமயிரில் படிந்தனவோ, எவருடைய முகம் அப்படிப்பட்ட மயிர்களோடு கூடிய வேர்வை ஜலத்துளிகளால் அலங்கரிக்கப்பட்டதோ, எவருடைய கவசம் என்னுடைய பாணங்களால் மூடப்பட்டு ப்ரகாசித்ததோ, அந்த கிருஷ்ண பகவானிடத்தில் என்னுடைய மனஸானது ரமிக்கட்டும்; பின்னும் எந்த பகவான் தம்முடைய ஸ்நேஹிதனாகிய அர்ஜுனனுடைய வார்த்தையின்படி இரண்டு பக்கத்து ஸைன்யங்களுடைய நடுவில் ரதத்தைச்செலுத்தி சத்ரு ஸைன்னியத்திலிருப்பவர்களனைவரையும் 'இவர் த்ரோணர், இவர் பீஷ்மர், இவர் க்ருபர்' என்று சுட்டிக்காட்டிப் பார்வையாலேயே அவர்களுடைய ஆயுஸைக்குறைத்து, அதனால் அர்ஜுனனுக்கு ஜயத்தை யுண்டுபண்ணினாரோ. அந்த கிருஷ்ணனிடத்திலேயே என் மனம் ஸந்தோஷமடையட்டும்.

36–42. அர்ஜுனன் சத்ரு ஸைன்யத்தில் யுத்தத் திற்கு ஸன்னத்தனாயிருந்த, நான் முதலிய் பந்துக்களைப் பார்த்து இவர்களைக் கொல்வதால் பாபம் நேரிடுமென்ற எண்ணத்துடன் யுத்தஞ்செய்வதில் ஆசையில்லாதவனாக விருக்கும்போது, அவனுக்கு ஆத்மவித்யை யுபதேசித்து, அந்த எண்ணத்தை எவர் மாற்றினாரோ, அந்த பரமபுருஷனுடைய பாகங் களையே என் மனஸ்த்யானிக்கட்டும்; மேலும் ஸ்ரீ கிருஷ்ணன் ஆயுதமெடுக்காமல் யுத்தத்தில் ஒத்தாசை செய்வதாகப் பாண்டவர்களுக்கு ப்ரதிஜ்ஞை செய்தவரானாலும், ஸ்ரீ கிருஷ்ணனை ஆயுதமெடுக்கச் செய்கிறேன் என்று என்னால் செய்யப்பட்ட ப்ரதிஜ் ஞையை நிறைவேற்றுவதற்காக, அர்ஜுனனுடைய ரதத்தைவிட்டுக் கீழே இறங்கி சக்ராயுதத்தை எடுத்துக் கொண்டு யானையைக்கொல்வதற்கு சிங்கம்வந்தாற் போல பூமி அசையும்படியாகவும். மேல்வஸ்த்ரந்தவறி விழும்படியாகவும் வெகு வேகமாயோடி வந்தார். அப்பொழுது நான் சிரித்துக்கொண்டு அவரை பாணங்களாலடித்தேன். அதனால் அவருடைய கவசம் உடைந்தது; சரீரமுழுவதும் ரக்தத்தால் நனைந்தது. அப்பொழுது அர்ஜுனனால் தடுக்கப்பட்டும் அவனை மீறிக்கொண்டு என்னைக் கொல்வதற்காக ஓடிவந்தார். அந்தப் பகவானாகிய முகுந்தரே எனக்குக் கதி. பின்னும் அவர் ஒரு வகையில் குதிரையோட்டுங் கோலையும். மற்றொருகையில் குதிரைகளின் கடிவாளங்களையும் பிடித்து ஸாரதி வேஷம்பூண்டு, அனேக அகார்யங்களைச் செய்தாவது அர்ஜுனனுடைய ரதத்தைக் காப்பாற்றிக்கொண்டிருந்தார். இந்த பகவானைத் தர்சித்ததால் சண்டையில் அடிபட்டு

மரணமடைந்தவர்களனைவரும் பகவத் ஸாரூப்யத்தை அடைந்தார்கள். ஆகையால் மரணமடையும் தசை யிலிருக்கும் என்னுடைய சித்தம் இந்தப் பரம புருஷனிடத்தில் கலந்திருக்கட்டும். மேலும் அழகான நடை, லீலை, சிரிப்பு, ஸ்நேஹமான பார்வை இவை களால் கௌரவப்படுத்தப்பட்டவர்களும், பகவானிடத் திலேயே ஸதா மனதைச் செலுத்தி அவரால் செய்யப்பட்ட லீலைகளை அனுஸரிப்பவர்களுமான கோபஸ்த்ரீகள் வேறு விஷயத்தில் சித்தமில்லாதவர்களாக பகவத் ஸ்வரூபமாகிய பரமானந்த ரூபத்தை யடைந்தார்கள். ஆனதுபற்றி அவரிடமே என்னுடைய சித்தம் வஸிக்கவேண்டும். தவிரவும் தர்மபுத்ரர் ராஜஸூய யாகஞ் செய்தபோது, அநேக முனிவர்களாலும், அரசர்களாலும் நிறைந்த யாகசஸையின்நடுவில் இந்த கிருஷ்ணபகவான் எல்லாராலும் பார்க்கக்கூடிய அத்புத சரீரமுள்ளவராய்ப் ப்ரகாசித்ததுமல்லாமல் எல்லாருக்கும் முந்தி பூஜிக்கப்பட்டார். அந்த புருஷோத்தமனாகிய இவர் என்னுடைய கண்களுக் கெதிரில் ப்ராகாசிக்கிறார். எனக்கு மிகுந்த பாக்யம் கிடைத்தது. இது மிகுந்த ஆச்சர்யம். காற்றானது மூங்கிலை எரிப்பதற்கு அக்னியை யுண்டு பண்ணுவது போல எந்தப்பகவான் பூமியின் பாரத்தைத் துலைப் பதற்காக கௌரவர்களுக்கு இந்த்ரிய சாபல்யத்தை யுண்டுபண்ணினாரோ, பக்தர்களுடைய உபத்ரவத்தை நிவர்த்திக்கும் பாதங்களை யுடையவரும், எதிரிலிருப் பவருமான பகவானை ஹிருதயத்தில் வைத்துக் கொண்டு இந்த மனித சரீரத்தை விட்டுவிடுகிறேன்.

43. ஸூர்யன் ஒருவனானாலும் பார்ப்பவர்களுடைய கண்களின் தோஷத்தால் பலவகையாகத் தோன்றுகிறது

போல பகவான் ஒருவரானாலும், தன்னால் ஸிருஷ்டிக்கப் பட்ட ஒவ்வொரு ப்ராணிகளின் ஹிருதயத்திலும் வெவ்வேறாகத் தோற்றுகிறார். இதற்கு அவித்யையே காரணம் (அதிஷ்டான பேதத்தால் பேதமேயொழிய உண்மையில் பேதமில்லை என்பது கருத்து) என்று தெரிந்துகொண்டேன். பேதபுத்தியும், மோஹமும் நாசமாயின. ஆதியந்தமில்லாத ஆத்ம ஸ்வரூபத்தை அவருடைய கிருபையால் நன்றாய் தெரிந்து கொண்டேன். தன்யனாகிவிட்டேன் என்றார்

44–48. இப்படிச்சொல்லிவிட்டு மனோவ்யாபாரம், வாக்வாயாபாரம், கண்களின் வ்யாபாரம் ஆகிய இவைகளை கிருஷ்ணனிடத்தில் செலுத்தி ச்வாஸத்தை அடக்கி பரமாத்மாவிடம் லயித்தார். அப்பொழுது அவ்விடமிருந்து எல்லோரும் பீஷ்மரானவர் உபாதி ஸம்பந்தமில்லாத பரப்ரஹ்மமாக ஆனதைக்கண்டு ஸாயங்காலத்துப் பறவைகள்போல் மௌனமாய் இருந்தார்கள். அப்பொழுது தேவர்களும், மனிதர்களும் துந்துபி வாத்யங்களை முழக்கினார்கள். அங்கிருந்த அரசர்களுக்குள் ப்ரஹ்மிஷ்டர்கள் ச்லாகித்தார்கள். ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி பெய்தது. பரமாத்ம ஸ்வரூபத்தையடைந்த அந்த பீஷ்மருக்கு உத்ரக்ரியை களை தர்மபுத்ரர்செய்து ஸ்வல்பகாலம் துக்கித்தார் அப்பொழுது மஹர்ஷிகள் மிகுந்த ஸந்தோஷத்துடன் பகவானுடைய ரஹஸ்யமாகிய பெயர்களைச்சொல்லி கிருஷ்ணனை ஸ்தோத்ரம்பண்ணி அவரையே த்யானஞ் செய்துகொண்டு தங்களுடைய ஆச்ரமஞ் சென்றார்கள்.

49–50. பிறகு தர்மபுத்ரர் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடன் ஹஸ்தினா பட்டணம் போய் புத்ரசோகத்தால் துக்கிக்கும் காந்தாரியையும்

த்ருதராஷ்ட்ரராலும், ஸ்ரீ வாஸு தேவராகிய பகவானாலும் அனுமோதிக்கப்பட்டு வம்சபரம் பரையாய் கிடைத்த ராஜ்யத்தை தர்மமாகப் பரிபாலித்தார்.

நோட்டு

தேசத்தை– தான் பாணங்களின் மீது படுத்திருப்பதனால் எதிர்கொண்டழைப்பதற்கும், நமஸ்கரிப்பதற்கும் இது ஸமயமல்லவென்று மனத்தால் பகவானை பூஜித்தார். மித்ரரோ– ஸ்ரீ கிருஷ்ணன் பாண்டவர்களுக்கு மித்ரராயிருந்து காலத்தையே அனுஸரித்திருந்தார் என்று காட்டப்பட்டிருக்கிறது. "த்ரவ்யம், கர்மம், காலம், ஸ்வபாவம், ஜீவனம் ஆகிய இவைகள் பகவானுடைய அனுக்ரஹத்தால் கிடைக்கின்றன. அவருடைய அனுக்ரஹமில்லாதவரையில் மேற்சொல்லியவைகள் மனிதனுக்குக் கிடைக்கலாம்"– வீர. முந்தியிருந்த– ஜகத் ஸிருஷ்டிக்குமுன் ஸத்தாகவே இருந்தது. நாராயணன் ஒருவரே இருந்தார்"– ச்ருதி. பகவான்– பகவான் புருஷன் என்ற சப்தங்கள் சாச்வதராகிய வாஸுதேவரையே குறிக்கின்றன" "ஓ! மைத்ரேய! பகவான் என்ற சப்தமானது பரப்ரஹ்ம மாகிய வாஸுதேவரைச் சொல்லுகிறதேயொழிய மற்றவைகளைச் சொல்லுகிறதில்லை" ஸ்ரீத– ஒருருவாய்– இந்த ஜகத்தில் பரமாத்மாவைக் காட்டிலும் வெவ்வேறான வஸ்துக்களில்லை. அனேக வஸ்துக்களி ருப்பதாகப் பார்ப்பவன் ஸம்ஸாரத்தை யடைகிறான்" எப்பொழுது இவனுக்கு எல்லாம் ஆத்மஸ்வரூபமாகத் தோற்றுகிறதோ அப்பொழுது எதைக் கொண்டு எதைப் பார்க்கப்போகிறான்– நான்கு கை– பீஷ்மருக்கு

நான்கு கைகளுள்ளதாக பகவத் ஸ்வரூபம் ப்ரகாசித்தது. வீர– ஒப்பற்ற மஹிமை– எந்த நிலமையில் வேறுவிஷயத்தைப் பார்க்கமாட்டானோ வேறு விஷயத்தைக் கேட்கிறதில்லையோ அதுவே பூமா எனப்படும்" "மேலும் கீழும் முன்னும் பின்னும் இருபக்கங்களிலும் அவரே இருக்கிறார். காணப்படும் ஜகத் முழுமையும் அவரே" என்ற ச்ருதிகளில் சொல்லிய அனுப்ரவேசஞ் செய்தார். ஒருவராகவிருக்கும் பரமாத்மாவை பலவகையாக நினைக்கிறார்கள்"– ச்ருதி. லயித்தார்– பீஷ்மர் ப்ரஹ்மத்தினிடம் பேதமில்லாமல் கலந்து விட்டாரென்று அர்த்தங் கொள்ளக்கூடாது. "அப்பொழுது ஸத்துடன் சேருகிறான்" என்று ச்ருதியில் சொல்லியபடி ஸம்பந்தித்தார் என்றே அர்த்தம். மேற்காட்டிய ச்ருதியிலும் அபேதமாகக் கலக்கிறான் என்றே சொல்லப்பட்டிருப்பதாய் அர்த்தங்கொள்வோமானால் ஸுஷுப்தியில் பரமாத்மாவிடம் கலந்து ஒன்றாக ஆன ஜீவன் மறுபடி பிரிய ந்யாயமில்லை. மேலும்– அந்தக்கரணரூபமாகிய உபாதி நாசத்தால் அபேதத்தை யடைந்த ஜீவன் விழித்துக்கொள்ளும்போது மேற் காட்டிய உபாதி ஸம்பந்தத்தையடைந்து பரமாத்மா வினிடமிருந்து பிரிகிறான் என்று சொல்லுவதும் பொருந்தாது. மனது ப்ராணனாகிய ப்ரஹ்மத்தினிடம் பறவைபோலக் கட்டுப்பட்டிருப்பதாகச் சுருதியில் சொல்லியிருப்பதால் லயிக்கிறதில்லை– சந்த்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்–10

ஸ்ரீ க்ருஷ்ணன் த்வாரகை சென்றது.

இதனைக்கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "ஓ! ஸூதரே! தர்மசிந்தனையுள்ளவர்களுக்குள் சிறந்த வராகிய தர்மபுத்ரர் ராஜ்யத்தில் ஆசைப்பட்டு யுத்தத்திற்கு வந்தவர்களான துர்யோதனன் முதலிய வர்களைக் கொன்று, தம்முடைய தம்பிகளுடன் ராஜ்யத்தை அடைந்து, மிகுந்த போகங்களை யனுபவித்து ராஜ்யத்தை எப்படி பரிபாலித்தார்? பிறகு எதனைச் செய்தார்? அதைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

2–3. அதைக்கேட்ட ஸூதர் சொல்லத் தொடங்கினார். குரு வம்சமாகிய வனமானது அதிலிருந்து உண்டான கோபமாகிய அக்னியால் எரிக்கப்பட்டபோது, ஸம்ஸார்த்தை விருத்தி செய்பவ ராகிய பகவான் அதை மறுபடியும் முளைக்கச்செய்து (பரீக்ஷித்தைக் காப்பாற்றி) தர்மபுத்ரருக்கு ராஜ்யத்தைக் கொடுத்து மிகுந்த ஆனந்தத்தை யடைந்தார். பின்பு, பீஷ்மருடைய வார்த்தைகளைக் கேட்டதாலும், ஸ்ரீ க்ருஷ்ணனுடைய உபதேசத்தாலும், தர்மபுத்ரருக்கு 'நான் செய்கிறவன்' 'பலனை யனுபவிக்கிறவன்' என்ற மோஹம் நீங்கியது 'ஜகத்தானது பரமேச்வராதீனமே யொழிய ஸ்வதந்த்ரமுள்ளதன்று என்று ஞானமுண்டா யிற்று. அப்படிப்பட்ட தர்மபுத்ரர் நாசமற்றவரான பகவானை மஹேந்த்ரன்போல ஆச்ரயித்து, ஸமுத்ரத் திற்குட்பட்ட பூமியைத் தம்முடைய தம்பிகளுடன் பரிபாலித்தார்.

4–6. ஒருவரிடத்திலும் விரோத புத்தியில்லாத வராகிய தர்மராஜன் அரசு புரிந்து வரும் நாளில் காலத்தில் மழைபெய்தது; பூமியானது ஜனங்களுக்கு வேண்டிய வஸ்துக்களை யுண்டுபண்ணிற்று; பெரிய மடியுள்ள பசுக்கள் பாலால் கொட்டில் முழுவதையும் நனைத்தன. ஆறுகள் பூரணப்ரவாஹ முள்ளவைகளாகி, வயல்களுக்கு ஜலத்தைக்கொடுத்துப் பயிர்களை விருத்திசெய்து வந்தன. ஸமுத்ரம் முத்து முதலிய ரத்னங்களை விசேஷமாக உண்டுபண்ணிற்று. மலைகள் மனோசிலை முதலிய தாதுக்களை விருத்திசெய்தன. எல்லா ருதுக்களிலும் கொடிகள், மரங்கள் ஆகிய இவைகள் பழங்களாலும், புஷ்பங்களாலும் நிறைந் திருந்தன. நெல், பயறு, கடலை, கோதுமை முதலிய தான்யங்களை அவ்வவற்றின் பயிர்கள் விருத்திசெய்தன. மேலும் மனோவ்யாதி, சரீரவ்யாதி, குளிர்ச்சி, உஷ்ணம் இவைகளால் நேரிடும் உபத்ரவம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம், ஆத்யாத்மிகம் ஆகிய முவ்வகை தாபங் களும் ஜனங்களுக்கு ஒருபோதும் நேரிடவேயில்லை.

7–18. அப்பொழுது ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தியானவர், ஹஸ்தினா பட்டணத்தில் சில மாஸங்கள் வஸித்துத் தம்முடைய மித்ரர்களின் துக்கத்தை நிவர்த்தித்து, ஸஹோதரியான ஸுபத்ராதேவிக்கு அதிக ப்ரியத்தை யுண்டுபண்ணி, பின்பு தர்மபுத்ரரைத் தழுவி நமஸ்கரித்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு ரதத்திலேறினார். அப்பொழுது சிலர் பகவானை ஆலிங்கனம் செய்ய நமஸ்கரித்தார்கள். இப்படி பகவான் த்வாரகைக்குப் போக, முயற்சித்ததைப் பார்த்து, ஸுபத்ரை, த்ரௌபதி, குந்தி, உத்தரை, விதுரர், தர்மபுத்ரர், த்ருதராஷ்ட்ரர், யுயுதஸு

(த்ருதராஷ்டருக்கு வைச்யஸ்த்ரியினிடம் பிறந்தவர்) கிருபர், நகுல, ஸஹதேவர்கள், பீமஸேனர், தௌம்யர் முதலாகிய எல்லோரும் பகவானைவிட்டுப் பிரிந்திருப் பதை ஸஹியாமல், வருத்தப்பட்டார்கள். மனோஹர மாகிய பகவானுடைய கதையை ஒருதடவை கேட்டதினாலேயே, நல்ல ஞானமுண்டாகிறது; சரீரம் முதலியவைகளில் அபிமானம் விலகுகிறது; ஆகையால் வித்வான்கள், அதனையொருபொழுதும் விட மாட்டார்கள். அப்படியிருக்க அவரை எப்பொழுதும் பார்ப்பது, ஆலிங்கனம் செய்துகொள்வது, பேசுவது, சேர்ந்துபடுத்துக்கொள்வது, ஒரே இடத்தில் உட்காருவது, சேர்ந்து புஜிப்பது, ஆகிய இவைகளால் அந்த பகவானிடத்திலேயே புத்தியைச் செலுத்திய பாண்டவர்களால் அவரைவிட்டுப் பிரிந்திருக்க முடியுமா? ஆகையால் அவர்களெல்லாரும் கண் கொட்டாமலேயே அவரைப் பார்த்துக்கொண்டு, விசேஷ ஸ்நேஹமுள்ளவர்களாய் அந்த அந்த இடங்களில் நின்றார்கள். அவர்களுடைய மனஸானது, அவர்பின் சென்றது. அப்பொழுது ஸ்ரீ க்ருஷ்ணபகவான் அரண்மனையிலிருந்து வெளியில் வரும்போது, அவர்மீதிருந்த ப்ரியத்தால், ஸுபத்ரை முதலிய ஸ்த்ரீகள், 'கண்ணீரைப்பெருக்குவது அமங்கலம்' என்று நினைத்து, அடக்கிக் கொண்டார்கள். மேலும் அப்பொழுது, மிருதங்கம், சங்கம், பேரி, வீணை, பணவம், கோமுகம், சர்சரீ, ஆனகம், கண்டா, துந்துபி ஆகிய பத்துவகை வாத்யங்களும் முழங்கின. கௌரவ ஸ்த்ரீகள் அனைவரும் ப்ரேமை, வெட்கம், சிரிப்பு இவைகளுடன், மேல்மாடியிலிருந்து பகவானைத் தர்சித்து, அவர்மீது புஷ்பங்களை வர்ஷித்தார்கள். ஸ்ரீ பகவானிடத்தில் மிகுந்த ப்ரீதியுள்ளவரும், சுருட்டை

மயிருள்ளவருமாகிய அர்ஜுனர், தம்மிடத்தில் மிக்க விச்வாஸமுள்ளவராகிய ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவிற்கு, ரத்னகாம்புள்ளதும், முத்துமாலைகளால் அலங்கரிக்கப் பட்டதுமான வெள்ளைக்குடையைப் பிடித்தார். உத்தவரும், ஸாத்யகியும் மிக அத்புதங்களான சாமரங்களையெடுத்து விசிறினார்கள். இப்படி பகவான், புஷ்பம் முதலியவைகளால் வீதியில் பூஜிக்கப்பட்டு ப்ரகாசித்தார்.

19—30. அப்பொழுது ப்ராஹ்மணர்கள் மனுஷ்யாவதாரமெடுத்த பகவானுக்குத் தகுதியானவைகளும், சுத்த ஸ்வரூபத்திற்குத் தகாதவைகளுமான ஆசீர்வாதங்களைச் செய்தார்கள். உத்தமச்லோகராகிய ஸ்ரீ க்ருஷ்ணனிடத்திலேயே மனத்தைச் செலுத்தினவர்களான பட்டணத்திலிருக்கும் ஸ்த்ரீகள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளும் வார்த்தைகள் எல்லோருக்கும் த்ருப்திகரமானவைகளாகவும், ஸகல உபநிஷத்துகளுக்கு ஸம்மதமானவைகளுமாயிருந்தன. எப்படியென்றால் க்ருஷ்ணனுடைய தேஜஸ்ஸைப் பார்த்து ஆச்சர்யமடைந்த சில ஸ்த்ரீகளை நோக்கி சிலர் சொல்லுகிறார்கள். ப்ரளயகாலத்தில் ஜீவோபாதிகளான ஸத்வம் முதலியவைகள் ஈச்வரனிடத்தில் அடங்கியிருக்கும்போது குணங்களுடைய சேர்க்கைக்குமுன் எவர் ப்ரபஞ்ச ஸம்பந்தமில்லாத ரூபத்துடன் ஒருவராகவிருந்தாரோ, அவரே இந்த க்ருஷ்ண பகவானாக அவதரித்திருக்கிறார். (ஸிருஷ்டிக்குமுன்னும், ப்ரளயத்திலும், ப்ரபஞ்ச ஸம்பந்தமில்லாமலிருப்பவர் இவரே என்று கருத்து) அந்த பரமாத்மாவே ஸகல வேதங்களையும் வெளியிட்டு மறுபடியும் தன்னுடைய காலசக்தியால் தூண்டப்பட்டதும், ஜீவர்களை

மோஹிக்கச்செய்வதும், ஸிருஷ்டிக்க விரும்பியதுமான ப்ரகிருதியை அனுஸரித்தார். அந்தப்ரகிருதியே பெயர் ரூபம் இவைகளில்லாத ஜீவனிடத்தில அவைகளை யுண்டுபண்ணிற்று. யோகிகள் இந்த்ரியங்களை ஜயித்து, ச்வாஸத்தையடக்கி விசேஷ பக்தியால் சுத்தமான மனமுள்ளவர்களாய் எவருடைய பதத்தையடைகிறார் களோ; அந்தப்புருஷன் இவரே. நம்முடைய புத்தியைப் பரிசுத்தப்படுத்துவதற்கு தகுந்தவர், இவரேயொழிய யோகம் முதலியவைகளால் முடியாது. அடி தோழி! ஆத்மாவின் ரஹஸ்யத்தையறிந்த வித்வான்கள், எவரை ஸ்தோத்ரஞ்செய்கிறார்களோ, வேதங்களிலும், ரஹஸ்யமான ஆகமங்களிலும், எவர் வர்ணிக்கப்படுகிறாரோ, எந்த ஈச்வரன் ஜகத்தை உண்டுபண்ணுவது பரிபாலிப்பது, நாசஞ்செய்வது ஆகிய பற்றுதலில்லையோ, அவரே க்ருஷ்ணனுடைய சரீரமெடுத்துக் கொண்டிருக்கிறார். எந்த காலத்தில் அரசர்கள் தமோ குணங்களுள்ளவர்களாகி தங்கள் ப்ராணனை மாத்திரம் போஷிக்கிறார்களோ அந்தக்காலத்தில், ஐச்வர்யம், செய்த பிரதிஜ்ஞையைக் காப்பாற்றுவது, உண்மையை யுபதேசிப்பது, தயை, கீர்த்தி ஆகிய இவைகளை வெளிப்படுத்துவதற்காக ஒவ்வொரு யுகத்திலும் இவரே ஸத்வகுணரூபியாய் அவதரிக்கிறார். யதுவினுடைய குலம் மிகவும் மேலானது, மதுராநகரம் மிகவும் புண்ய பூமியுள்ளது. புருஷோத்தமரும், ப்ரியமான கீர்த்தியுள்ளவருமான பகவான் தம்முடைய அவதாரத்தாலும் நடையினாலும், அவைகளை அலங்கரிக்கிறார். ஆச்சர்யம்! த்வாரகாநகரத்தின் பாக்யம் அத்புதமானது; எல்லா நகரங்களிலும் ஸ்வர்க்கம் மேலானது என்ற ஸ்வர்க்கத்தின் கீர்த்தியைப் போக்கக்கூடியது; அதில் வஸிக்கும் ஜனங்கள், தங்களை அனுக்ரஹிப்பதற்காகவே

அவ்விடத்தில் வஸிப்பவரும், புன்சிரிப்புள்ள பார்வை யுள்ளவருமான ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவை எப்பொழுதும் தர்சிக்கிறார்கள். அந்தப் பகவானுடைய பத்னிகள் முன் ஜன்மத்தில் வ்ரதங்கள், ஸ்நாநம், ஹோமம் முதலியவைகளால் ஈச்வரனையுபாஸித்தவர் களென்பதில் ஸந்தேஹமில்லை. தவிரவும் கோபஸ்த்ரீகள் எல்லோரும், அவருடைய அதரத்தைப் பானஞ்செய்கிறார்கள் தவிரவும் அதையே மனததில் நினைத்து மோஹிக்கிறார்கள். பலிஷ்டர்களான சிசுபாலன் முதலியவர்களை ஸ்வயம்வரத்தில் ஜயித்து பகவானால் விவாஹஞ்செய்து கொள்ளப்பட்டவர் களும், ப்ரத்யும்னன், ஸாம்பன் முதலியவர்களுக்குத் தாயார்களுமான ருக்மிணி, ஸத்யபாமா முதலியவர் களுடைய வீடுகளிலும், நரகாஸுரனைக் கொன்று ஸ்ரீ க்ருஷ்ணனால் அபஹரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மற்ற ஸ்த்ரீகளுடைய கிருஹங்களிலும், பகவான் எப்பொழுதும் அவர்களுக்கு வேண்டியதை ஸம்பாதித்துக் கொடுத்து அவர்களை ஸந்தோஷப்படுத்திக்கொண்டு வஸிக்கிறார். ஆனதால் ஸ்த்ரீகளுக்கு ஸ்வாதந்த்ரயம், சௌசம் இவைகளில்லாமலிருந்தும், ஸ்த்ரீயாக விருப்பதே மேலானதென்று விளங்குகிறது" என்று பேசிக்கொண்டார்கள்.

31. இம்மாதிரியான பட்டணத்து ஸ்த்ரீகளுடைய வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ க்ருஷ்ணன், பார்வையா லேயே, அவர்களை ச்லாகித்துச் சிரித்துக்கொண்டு சென்றார். அப்பொழுது தர்மபுத்ரர் சத்ருக்களிடத்தில் ஸந்தேஹப்பட்டு, பகவானைக்காப்பாற்றுவதற்காக அவரிடம் ப்ரியத்தால் சதுரங்க ஸைன்யத்தையனுப் பினார். பின்பு ஸ்ரீ க்ருஷ்ணபகவான் வெகுதூரம் தம்மை

பின்தொடர்ந்து வந்தவர்களும், தம்மைவிட்டுப் பிரிய மனமில்லாதவர்களும், ஸ்திரமான பக்தியுள்ளவர்களு மான கௌரவர்களைத் திருப்பிவிட்டுத் தமது நகரம் நோக்கி புறப்பட்டார். அவர் குருஜாங்கலம், பாஞ்சால்ம், சூரசேனம், யமுனையின் கரையிலிருக்கும் தேசம், ப்ரஹ்மாவர்தம், மத்ஸ்யம், ஸரஸ்வதி நதிக்கரையிலுள்ள தேசம், ஜலமில்லாத தேசம், அல்ப ஜலமுள்ள தேசம், ஸௌவீரம், ஆபீரம், ஸைந்தவம் ஆகிய இவைகளைத் தாண்டி ஆனர்த்த தேசம் போனார். குதிரைகள் கொஞ்சம் களைப்படைந்தன. அந்தந்த இடத்தில் வஸிப்பவர்கள் பகவானை எதிர்கொண்டழைத்துப் பூஜித்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணபகவான் ரதத்தைவிட்டு இறங்கி ஜலமிருக்குமிடஞ் சென்று ஸந்தியோபாஸ்தி செய்தார்.

நோட்டு.

பிரகிருதி– மாயை "மாயையை ப்ரகிருதியென்றும், மாயையை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டிருப்பவனை மஹேச்வரனென்றும் தெரிந்து கொள்ள வேண்டும்." ச்ருதி– சுத்தமான மேலான ஸூக்ஷ்மபுத்தியினால் பார்க்கப்படுகிறார்"– ச்ருதி.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்—11

துவாரகாவாஸிகள் பகவானை உபசரித்தது

இப்படி ஸ்ரீ கிருஷ்ணபகவான் மிகுந்த ஐசுவரியம் உள்ள தன்னுடையதான ஆனர்த்த தேசத்தையடைந்து திவ்யமாகிய சங்கத்தை ஊதினார். அப்பொழுது மிகவும் வெண்மையான மத்ய பாகமுள்ளதும், பகவான் உடைய உதடுகளின் காந்தியால் சிவந்ததுமான அந்தச் சங்கமானது செந்தாமரை புஷ்பத்தில் உரக்கச் சப்தித்துக் கொண்டிருக்கும் ஹம்ஸம் போல விளங்கிற்று. அதனைக் கேட்டு அந்தத் தேசத்தில் வஸிப்பவர்கள் கிருஷ்ணன் வருகிறார் என்பதை தெரிந்துகொண்டு அவரை விட்டுப் பிரிந்திருந்ததாலுண்டான தாபத்தை விட்டுச் சந்தோஷமடைந்தார்கள். மேலும் அவர்கள் எல்லோரும் ஸம்ஸார பயத்தைப் போக்கக்கூடிய அந்தச் சப்தத்தைக் கேட்டவுடன் தங்கள் யஜமானனாகிய ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையுள்ள வர்களாக அவருக்கு எதிரில் சென்றார்கள். அந்த பகவான் தன்னுடைய ஆத்மாவிலேயே ரமிப்பவர். ஆனந்தானு பவத்தால் எப்பொழுதும் பூர்ணகாமர்; எல்லோருக்கும் அனுகூலத்தைச் செய்பவர். அப்போர்ப்பட்ட பகவான் இடத்தில் சூரியனிடத்தில் தீபத்தைக் கொடுப்பது போல ஜனங்கள் காணிக்கைகளைச் சமர்ப்பித்து, பிதாவைக் கண்ட குழந்தைகள் போல மலர்ந்த முகமுள்ள வர்களாய், கத்கத ஸ்வரத்துடன் தங்களைக் காப்பாற்றும் அந்தப்பகவானை நோக்கி, வேறாத ப்ரஹ்மதேவராலும், ஸனகர் முதலியவர்களாலும், இந்திரன் முதலியவர் களாலும் நமஸ்கரிக்கப்பட்ட தாமரை மலர் போன்ற உம்முடைய பாதங்களுக்கு நமஸ்காரஞ் செய்கிறோம்.

அவைகள் இவ்வுலகத்தில் ஸுகத்தை விரும்பியவர் களுக்கு முக்கிய கதியானவைகள். ஸகல வஸ்துக் களையும் பக்குவஞ்செய்யும் ஸ்வபாவமுள்ள காலமானது எல்லாவற்றிற்கும் மேலானதனாலும் உம்முடைய பாதங் களுக்கு சுவாதீனப்பட்டதேயாம். (உம்முடைய பாதார விந்தங்களை ஆசிரயித்தவர்களுக்குப் பிறப்பு , கிழத்தனம், மரணம் முதலியவைகள் இல்லையென்பது கருத்து:)

'ஓ ஜகத்திற்கு அந்தர்யாமியாயிருப்பவரே தாம் எங்களுக்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டும். நீரே ஸகலத்திற்கும் மாதா, மித்திரர், பிதா, பதி, நீரே நல்ல ஆசாரியர். முக்கியமாகிய தெய்வம், உம்மை யனுசரித் ததாலேயே நாங்கள் தன்யர்களானோம். ஸ்வர்க்கவாஸி களான தேவர்களாலும் பார்க்க முடியாததும் பிரியமான சிரிப்பு, மனோகரமான பார்வை ஆகிய இவை களுடன் கூடிய முகமுள்ளவரும், ஸகல விதத்திலும் அழகு பொருந்திய தம்முடைய சரீரத்தை எப் பொழுதும் நாங்கள் தரிசிக்கும்படி நேர்ந்ததால் நாங்களே நாதனுள்ளவர்கள். தாமரை மலர் போன்ற கண்களுள்ளவரே! நீர் பந்துக்களைப் பார்க்கவேண்டி குரு நகரத்திற்காவது மதுரா நகரத்திற்காகவது சென்றால், அப்பொழுது நாங்கள் சூரியனில்லாத ஸமயத்தில் கண்கள் போல ஒவ்வொரு நிமிஷத்தையும் கோடி வருஷங்களுக்குச் சமமாகக் கழிக்கிறோம்' என்று ஸ்தோத்ரஞ் செய்தார்கள்.

10–34 இப்படி ஜனங்கள் செய்த ஸ்தோத்திரத்தைக் கேட்டுப் பக்தர்களைக் காப்பாற்றும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவர்களைக் கடாக்ஷித்தால் அனுக்ரஹித்துக் கொண்டு பட்டணத்திற்குள் சென்றார். அந்த நகரம்

ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் சமமாயுள்ள பலசாலிகளான போஜர்கள், மனுக்கள், தாசார்ஹர்கள், குகுரர்கள், அந்தகர்கள், விருஷ்ணிகள் ஆகிய இவர்களால் போகவதி என்னும் பட்டணம் நாகங்களால் ரட்சிக்கப்படுவது போல, காப்பாற்றப்பட்டிருந்தது. மேலும் அந்தப் பட்டணமானது எல்லா ருதுக்களிலும் புஷ்பிப்பவைகளும் பலிப்பவைகளுமான புண்ய விருஷங்களாலும் கொடிகளாலும், கொடி வீடுகளாலும், உத்யான வனங்களாலும் (பழங்களையே பிரதானமாயுள்ள மரங்கள் உள்ளது), புஷ்பத்தோட்டங்களாலும், விளையாடும் தோட்டங்களாலும், தாமரையோடைகளாலும் அழகாய் இருந்தது. கோபுர வாசல்களிலும் வீட்டு வாசல்களிலும் மங்கள தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. வீதிகளில் பலவகையான த்வஜங்கள் கட்டப்பட்டு வெயிலினாது தாபமில்லாமலிருந்தது. ராஜவீதி, கடைவீதி, நாற் சந்திகள், மற்ற வீதிகள் ஆகிய இவைகள் குப்பையில்லாமல் சுத்தஞ் செய்யப்பட்டிருந்தன. பழங்கள், புஷ்பங்கள், அட்சதைகள் முதலிய மங்கள திரவியங்கள், இறைக்கப்பட்டிருந்தன; வாசனை ஜலம் தெளிக்கப் பட்டிருந்தது. ஒவ்வொரு வாசலும் தயிர், அட்சதை, பழங்கள், கரும்பு இவைகளாலும், பூர்ண கும்பங்களாலும், தூபங்களாலும், தீபங்களாலும், பலிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பின்னும் வஸுதேவர், அக்ரூரர், உக்ரஸேனர், அற்புதமான பராக்கிரமுள்ள பலராமர், பிரத்யும்னன், சாருதேஷ்ணன், ஸாம்பன், கதன் முதலியவர்கள் மிகவும் பிரியராகிய பகவான் வருகிறார் என்று கேள்விப்பட்டு யானையை முன் நடத்தி, ப்ராஹ்மணர்களை முன்னிட்டுக் கொண்டு அதிக ஸந்தோஷத்தால் படுக்கை, போஜனம் இவைகளிலும் மனமில்லாதவர்களாக ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு எதிரே

சென்றார்கள். மேலும் அப்பொழுதும் சங்கம் முதலிய வாத்தியங்கள் முழங்கின. வேதங்கள் கோஷிக்கப்பட்டன. இப்படி எல்லோரும் விஸ்வாசத்தால் உண்டான பரப்பரப்புள்ளவர்களாக ரதங்கள் மீதேறிக்கொண்டு எதிர்க்கொண்டு சென்றார்கள். சிறந்த தாஸிகளும் கூட்டம் கூட்டமாக வாகனங்களின் மீதேறிக்கொண்டு அவரைப் பார்க்க வேண்டுமென்ற மிகுந்த ஆசையுடன் சென்றார்கள். அவர்கள் காதில் அணிந்திருந்த குண்டலங்களுடைய காந்தியால் அவர்களுடைய முகம் பிரகாசித்தது. ரஸாபினயஞ் செய்யக்கூடிய நடர்களும், தாளம் முதலியவைகளை யனுசரித்து நர்த்தனஞ் செய்பவர்களும், பாடுகிறவர்களும், ஸூதர்களும், மாகதர்களும், வந்திகளும் உத்தமச்லோகராகிய பகவானுடைய அற்புதமான சரிதத்தைக் கானஞ் செய்தார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் தம்மைப் பார்ப்பதற்காக வந்த பந்துக்களுக்குத் தக்கபடி வணங்குவதாலும், நமஸ்கரிப்பதாலும், தழுவுவதாலும், கையைப் பிடிப்பதாலும், புன்சிரிப்புக் கொண்ட பார்வையாலும், சண்டாளன் வரையிலுள்ள எல்லாருக்கும் அபயங் கொடுத்து, அவரவர்களுக்கு இஷ்டமான வரங்களை அளித்து மரியாதை செய்தார்.

மேலும் ஆசாரியர்களும், ப்ராஹ்மணர்களும், பெரியோர்களும், மற்றவர்களும் அவரவர் ஸ்திரீகளுடன் பகவானுக்கு ஆசீர்வாதஞ் செய்தார்கள்; வந்திகள் ஸ்தோத்திரம் செய்தார்கள்; துவாரகா பட்டணத்தில் கிருஷ்ணன் இராஜவீதியில் வரும்பொழுது குல ஸ்திரீகள் அவரைத் தரிசிப்பதற்காக மாடிகளின் மீதேறினார்கள். லக்ஷ்மிதேவிக்கு இருப்பிடமாகிய

பகவானுடைய சரீரத்தைத் துவாரகா வாஸிகளான ஜனங்கள் எப்பொழுதும் பார்த்தவர்களானாலும் அவர் களுக்குப் போதுமென்ற திருப்தி உண்டாகவில்லை. அவருடைய மார்பு, கைகள், பாதங்கள் ஆகிய இவைகள் லக்ஷ்மிதேவிக்கும், லோகபாலர்களுக்கும், பக்தர் களுக்கும் முறையே வஸிக்குமிடமாக இருக்கின்றன. அப்போர்ப்பட்ட ஸ்ரீ கிருஷ்ண பகவான் வழியில் வெள்ளைக் குடை, சாமரங்கள் ஆகிய இவைகளால் பூஜிக்கப்பட்டும். பூக்களால் வர்ஷிக்கப் பெற்றும் பீதாம்பரத்தாலும், துளசி மாலையாலும் பிரகா சித்தார். அது சூரியன், சந்திரன், இந்திரன், வில், மின்னல், இவைகளுடன் மேகம் சேர்ந்து பிரகாசித்தது போலிருந்தது. பின்னுமவர் வஸுதேவர், தேவகி இவர் களுடைய அரண்மனை சென்று, வஸுதேவருக்கும் தேவகி முதலிய ஏழு தாயார்களுக்கும் சந்தோஷமாக நமஸ்காரஞ் செய்தார். அவர்களும் இவரைத் தழுவி னார்கள். தேவகி முதலிய ஸ்திரீகள் கிருஷ்ணனை மடியில் உட்கார வைத்துக்கொண்டு ஆனந்தக்கண்ணீ ரால் அவருக்கு அபிஷேகம் செய்தார்கள். பிறகு அந்தப் பரமாத்மா 16,000 பத்தினிகளுடைய அரண் மனைகள் அடங்கிய தமது அரண்மனைக்குச் சென்றார். அது ஸகல வஸ்துக்களாலும் நிறைந்ததும் சிறந்த துமாக விருந்தது. அப்பொழுது அங்கிருந்த ருக்மணி முதலிய ஸ்திரீகள் தேசாந்தரத்திலிருந்து வந்த தங்கள் உடைய பர்த்தாவைச் சமீபத்தில் கண்டு அளவற்ற ஆனந்தமடைந்து ஆசனத்திலிருந்து சரீரத்தாலும் அந்தக்கரணத்தாலும் சீக்கிரமாக எழுந்திருந்தார்கள். அவர்கள், பர்த்தா தேசாந்திரம் போயிருக்கும் காலத்தில் செய்யவேண்டிய விரதங்களை யனுஷ்டித்துக் கொண்டு இருந்தவர்கள். கடைக்கண்ணால் பார்ப்பவர்களாலும்

வெட்கத்தால் தலை குனிந்தவர்களாகவுமிருந்தார்கள். ஓ சௌனகரே கம்பீர மனமுள்ள பகவானைக் காணாத போது மனத்தாலும், நேரில் பார்த்த போது பார்வைகளாலும் (புத்ரர்களைக் கொண்டு தழுவ செய்பவர்கள் போல) ஸ்ரீ கிருஷ்ணனை ஆலிங்கனம் செய்து கொண்டார்கள். (ப்ரீதியாகப் பார்த்தார்கள் என்பது கருத்து) அப்பொழுது தங்களுடைய கண்களி லுண்டான ஆனந்த ஜலத்தை வெட்கத்தால் அந்த ஸ்திரீகள் அடக்கிக்கொண்டிருந்தும் அது அடங்காமல் பெருகியது; ஸ்ரீ கிருஷ்ணன் எப்பொழுதும் அவர் களுடைய பக்கத்திலேயே வஸிக்கிறார். ஆனாலும் அவர்களுக்கு அவருடைய பாதங்கள் புதியவைகளாக தோன்றுகின்றன. சஞ்சல ஸ்வபாவமுள்ள ஸ்ரீதேவியும் அவரிடத்திலேயே ஸ்திரமாக வசிப்பதால் எவளுக்குத் தான் அவரிடம் பிரேமை யிராது?

35–40 காற்றானது மூங்கில் காட்டில் அவைகளைக் கொண்டே அக்னியை உண்டுபண்ணி அதனால் அவை களை எரிப்பதுபோல ஸ்ரீ கிருஷ்ணன், தாம் ஆயுதம் எடுக்காமலே பூமிக்குப் பாரமாயிருந்த அனேக அக்ஷௌஹிணி சைன்யங்களால் விருத்தியடைந்த தேஜஸுள்ள அரசர்களுக்குள் ஒருவருக்கொருவர் விரோ தத்தை உண்டு பண்ணி, அதனால் அவர்களை நாசஞ் செய்து சாந்தியடைந்தார். இப்படி பகவான் பிராகிருத புருஷன்போல பூமியில் மாயாவதாரஞ் செய்து அநேக உத்தமஸ்திரீகளின் நடுவிலிருந்து விளையாடினார். ஸ்திரீகள் கம்பீரமாகிய அபிப்பிராயத்தைக் காண் பிக்கும் கடாக்ஷமுள்ளவர்கள், மனோகரமான மந்தகாச முள்ளவர்கள். வெட்கமுள்ளவர்கள். அவர்களால் பரம சிவனும் மோகித்து வெட்கமடைந்துவில்லை எறிந்தார்.

ஸ்திரீகள் அப்போர்ப்பட்ட சக்தியுள்ளவர்களானாலும் தங்களுடைய விலாசங்களால் கிருஷ்ணனை ஆசைப்படச் செய்ய முடியாதவர்களாகவிருந்தார்கள். (சம்சாரத்தில் பற்றுதல் இல்லாதவரென்பது கருத்து.) இப்படி ஸ்ரீ கிருஷ்ணன் வைராக்யமுள்ளவராக விருந்து ஜனங்கள் தங்களைப்போல அவரையும் ஸம்சாரியென்றே நினைக்கிறார்கள். அதனால் தான் அஜ்ஞர்களென்று சொல்லப்படுகிறார்கள். ஆத்மாவினிடமிருக்கும் ஆனந்தம் முதலிய குணங்களில் ஆத்மாவை ஆசிரயித்திருக்கும் புத்தியானது சம்பந்திக்காமல் இருப்பது போல், பகவான் பிரகிருதி காரிய மாகிய சம்சாரத்திலிருந்தும் அதன் குணங்களாகிய சுகம், துக்கம் இவைகளுடன் சம்பந்தப்படாமல் இருக்கிறார். அதுவே அவருடைய ஐசுவரியமென்று சொல்லப்படுகிறது. அகங்காரமானது ஆத்மாவைத் தனது வசப்பட்டவனாக நினைப்பதுபோல் ஸ்ரீ கிருஷ்ணனுடைய உண்மையை அறியாதவர்களான அந்த ஸ்திரீகளெல்லோரும் கிருஷ்ணன் தங்கள் இடத்தில் ஆசை கொண்டவர், தங்களையே அனுஸரித்திருப்பவர் என்று அஜ்ஞானத்தால் நினைத் திருந்தார்கள்.

நோட்டு

ஸூர்ய-ஜகத்தைத் தம்முடைய தேஜஸால் பிரகா சிக்கச் செய்பவரும், வேறு பிரகாசத்தை அபேட் சியாமல் விளங்குகிறவருமான சூரியனுக்குத் தீபத்தால் எப்படி பிரயோசனமில்லையோ அப்படி ஸகல வித காமங்களால் பூர்ணராகிய பகவானுக்கு ஜனங்களால்

கொடுக்கப்படும் காணிக்கைகளால் ஒருவித பயனுமில்லை என்று காட்டப்பட்டது, கத்கதஸ்வர-ஆனந்தம், துக்கம் இவைகள் நேரும்போது கண்ணீர் பெருகி அதனால் கண்டம் அடைத்துப்போகும். அப்பொழுது தாராள மாகப் பேசமுடியாமல் சிரமப்பட்டுப் பேசும் ஸ்வர மேயாம். ஸனகர்-மூலத்தில் வைரிஞ்ச என்றிருப்பதால் அதற்குச் சங்கரனென்று அர்த்தம் விஜ, பசுவின் கன்றுகளைப் ப்ரஹ்மதேவர் அபகரித்த பிறகு அவரால் நமஸ்கரிக்கப்பட்டது. பகவான் பாணாசுரனிடத்தில் யுத்தஞ் செய்யும்போது, சங்கரனால் ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டது. சந்த். க்ஷேமம்-மோக்ஷம் விஜயமாதா - பிறந்தது முதல் போஷிப்பதால். மித்ரர்- எல்லா வற்றிற்கும் அந்தராத்மாவாக விருப்பத்துடன் ஸத்காரி யத்தைச் செய்யும்படி தூண்டுவதால். பிதா-இது ஹிதமென்றும், இது அஹிதமென்றும் உபதேசித்து, சாஸ்திரத்தைக் கொண்டு சிட்சிப்பதால், பதி-பர்த்தா, ஜீவனம் முதலியவைகளைக் கொடுத்துக் காப்பாற்று வதால், ஆசாரியர்-அர்ஜுனனை நிமித்தமாய் வைத்துக் கொண்டு உலகத்தில் கீதா சாஸ்திரத்தைப் பரவச் செய்ததாலே. தெய்வம்- மோட்சத்தைக் கொடுப்பதால் சந்த், ஸுதர்கள்- புராணத்தை யறிந்தவர்கள் ஸுதர்களென்று சொல்லப்படுகிறார்கள். வம்சாவளியைச் சொல்புவர்கள் மாகதர்களெனப்படு வார்கள். ஸமயத்திற்குத் தக்கபடி பேசக்கூடிய புத்தி சாலிகள் வந்திகளெனப்படுவார்கள். மேகம்-இது அபூதோபமை யென்று சொல்லப்படுகிறது, மேகம் போன்றவர் பகவான், சூரியன் போன்றது வெண்குடை, புஷ்பவர்ஷம் போன்றது நட்சத்திரங்கள் என்பர் சிலர்.

சூரியன் போன்றது கீரிடம், சந்திரன் போன்றது வெண்குடை, இந்திரனுடைய வில் போன்றது வனமாலை மின்னல் போன்றது பீதாம்பரம். ஏழு தாயார்–வசு தேவருக்குப் பதினெட்டு ஸ்திரீகள். அவர்களெல் லோரையும் நமஸ்கரித்தார். அவர்களுக்குள் முக்கிய மானவர்கள் ஏழு ஸ்திரீகள், 1. தேவகீ, 2. ச்ருததேவா, 3. சாந்திதேவா, 4. உபதேவா, 5. ஸ்ரீதேவா, 6. தேவரக்ஷிதா, 7. ஸஹதேவா, தழுவ –தேசாந்திரத் திலிருந்து வந்த பகவானைப் ப்ரத்யும்னன் முதலிய வர்களைக் கொண்டு கட்டிக் கொள்ளச்செய்வது போல மனத்தால் தியானம் செய்தார்கள், பின்னும் மிகுந்த ஆசையுடன் பார்த்தார்கள். பரமசிவனும்– மூலத்தில் அமதன: என்று பதம் பிரித்து இப்படி ஸ்ரீ தரஸ்வாமி அர்த்தஞ்செய்தார். மதன: என்று பதம் பிரிப்பதால் மன்மதன் என்று அர்த்தம் –வீர, விஜ.

அத்தியாயம் 12

பரீக்ஷித்தின் உற்பத்தி

சௌனக மகரீஷியானவர் ஸூதரைப் பார்த்து 'ஓ ஸூதரே! அசுவத்தாமாவினால் பிரயோகிக்கப்பட்ட ப்ரஹ்மாஸ்த்ரத்தின் தேஜஸால் எரிக்கப்படும் உத் தரையின் கர்ப்பத்தை ஸ்ரீ கிருஷ்ணபகவான் மறுபடி பிழைக்கச் செய்தாரென்று சொன்னீர்களே, மிக்க புத்திசாலியும் மகாத்மாவுமான அக்குழந்தையின் பிறப் பையும், அதன் சரித்திரத்தையும், அவருக்கு சுகர் ஞானோபதேசம் செய்ததையும், அவருடைய முடி வையும், மரணமடைந்த பிறகு அவருக்கு நேர்ந்த கதியையும் சிரத்தையுடன் கேட்க விரும்புகிறேன். சொல்லக்கூடியதானால் சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

4–6 இதனைக் கேட்டு ஸூதர் சொல்லுவதாவது தர்மபுத்திரர் கிருஷ்ணனுடைய பாதங்களைச்சேவித்து ஸகல ஆசைகளையும் ஒழித்துத் தகப்பன் குழந்தை களைக் காப்பாற்றுவதுபோல பிரஜைகளைச் சந்தோ ஷப்படுத்திக் காப்பாற்றி வந்தார். அவருக்குப் பகவானுடைய அனுக்கிரஹத்தால் ஸகல சம்பத்துகளும், ராஜசூயம் முதலிய யாகங்களின் பலனாகிய உத்தம லோகங்களும், திரௌபதி முதலிய ஸ்திரீகளும், பீமசேனன் முதலிய தம்பிகளும், ஸகல பூமியும். ஜம்பூத்வீபத்திற்கு ஆதிபத்யமும், ஸ்வர்க்கம் வரையில் பரவிய கீர்த்தியும் கிடைத்தன. பசியுள்ளவனுக்கு அன்னத்தின் மேலே விருப்பமிருக்குமே யொழி வேறு

விஷயத்தில் ஆசையுண்டாகிறதில்லை. அதுபோல் ஸ்ரீ பகவானிடத்திலேயே சித்தத்தைச் செலுத்தி, அதனால் ரமித்துக் கொண்டிருக்கும் தர்மபுத்ரருக்கு தேவர்களாலும் விரும்பத்தக்க சுகங்கள் கிடைத்திருந்தும் அவைகளால் அவர் சந்தோஷமடையவில்லை.

7–14 1/2, ஓ சௌனகரே! உத்தராதேவியின் கர்ப்பத்திலிருந்த சிசுவானது அச்வஸ்த்தாமாவினுடைய ப்ரஹ்மாஸ்திரத்தின் தேஜஸ்ஸால் எரிக்கப்படும்பொழுது ஒரு புருஷன் அந்தச் சிசுவிற்கு நேரில் தோன்றினார். அவர் கட்டைவிரல் அளவுள்ளவர், சுத்தர், சுவர்ண கீரிடமுள்ளவர், மிக்க அழகான பார்வையுள்ளவர், பீதாம்பரம் தரித்தவர், ஜன்மம் முதலிய விகாரங்கள் அற்றவர், அழகு பொருந்தியவைகளும், நீண்டவை களுமான கைகளுள்ளவர், சுத்த ஸ்வர்ண குண்டலங் களுள்ளவர், 'என் பக்தனுக்கும் உபத்திரவம் நேரிடு கிறதா?' என்ற கோபத்தால் சிவந்த கண்கள் உள்ளவர், கதாயுதத்தைத் தரித்தவர். மேலும் அவர் குறைக்கொள்ளி போன்ற தம் கதையைச் சுழற்றிக் கொண்டு. அக்குழந்தைக்கு நான்கு புறத்திலும் சஞ்சரித்து, சூரியன் பனியைப் போக்குவதுபோல அஸ்திர தேஜஸ்ஸை அக்குழந்தையின் சமீபம் வர வொட்டாமல் தடுத்துக்கொண்டுமிருந்தார். அவரைப் பார்த்து அந்தக் குழந்தையானது இவர் யாரென்று ஆச்சரியத்துடன் ஆலோசித்துக் கொண்டிருந்தது. இப்படி ஒன்பது மாத காலஞ் சென்றது. பத்தாவது மாதத்தில் அளவிடக் கூடாத ரூபமுள்ளவரும், தர்மத்தைப் பரிபாலிப்பவரும், எங்கும் நிறைந்தவரு மான அந்தப் பிரபுவானவர் அக்குழந்தை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே அவ்விடத்தில் மறைந்தார்.

அதன் பிறகு வரும் மேலான சிரேயஸை காண்பிக்கத் தக்க சுப லக்னம் நேர்ந்தது. அதிலிருந்த சுபகிரகங்கள் ஒருவருக்கொருவர் மித்ரர்களாக இருந்தார்கள். அப் போர்ப்பட்ட சமயத்தில் பாண்டுவின் வம்சத்தை விருத்திசெய்யும் புத்திரனானவன் பாண்டுவே மறு படியும் பிறந்ததுபோல அவதரித்தான். அப்பொழுது தர்மபுத்ரர் மிகுந்த சந்தோஷத்துடன் தௌம்யர், கிருபர் முதலிய ப்ராஹ்மணர்களைக் கொண்டு ஜாதகர்மம் ஸ்வஸ்திவாசனம் ஆகிய இவைகளைச் செய்வித்தார். மேலும், அவர் தானத்திற்குரிய பாத்திரம் தேசம் காலம் என்னும் இவைகளை அறிந்தவரா கையால், உத்தமமாகிய அந்தப் புண்ணிய காலத்தில் ஸ்வர்ணம், பசு, பூமி, கிராமங்கள் சிறந்த குதிரைகள் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்தது மல்லாமல் போஜனமும் செய்வித்தார்.

15–17 1/2. அப்பொழுது ஜ்யோதிஷ சாஸ்திரத்தை நன்றாய்க் கற்றுணர்ந்த எல்லாப் ப்ராம்ஹ்மணர்களும் மிகுந்த சந்தோஷமுள்ளவர்களாய் வணக்கமுள்ள அவ் வரசனை நோக்கி, 'ஓ புருஷவம்சத்திய அரசர்களில் சிறந்தவரே தடுக்க முடியா தெய்வ வசத்தால் புரு வம்சத்தின் தொடர்ச்சியற்றுப் போகும் சமயத்தில் அந்த வம்சத்தில் பிறந்தவர்களான உங்களுடைய க்ஷேமத்திற்காக) ஸ்ரீ மகா விஷ்ணுவே இப்புத்ர ரத்னத்தை அனுக்ரகித்திருக்கிறார். விஷ்ணுவினால் கொடுக்கப்பட்டவனாகையால் இவன் விஷ்ணுராத னென்று பிரசத்தியடைவான். இவன் மிகுந்த கீர்த்தி யுள்ளவனும், பாகவதர்களுள் சிறந்தவனுமாவான். இவ் விஷயத்தில் ஸம்சயப்பட வேண்டாம் என்றார்கள்.

18–29 1/2, இதனைக் கேட்ட தர்மராஜன் ப்ராஹ்ம

விஷயத்தில் ஆசையுண்டாகிறதில்லை. அதுபோல் ஸ்ரீ பகவானிடத்திலேயே சித்தத்தைச் செலுத்தி, அதனால் ரமித்துக் கொண்டிருக்கும் தர்மபுத்ரருக்கு தேவர்களாலும் விரும்பத்தக்க சுகங்கள் கிடைத்திருந்தும் அவைகளால் அவர் சந்தோஷமடையவில்லை.

7–14 1/2, ஓ சௌனகரே! உத்தராதேவியின் கர்ப்பத்திலிருந்த சிசுவானது அச்வஸ்த்தாமாவினுடைய ப்ரஹ்மாஸ்திரத்தின் தேஜஸ்ஸால் எரிக்கப்படும்பொழுது ஒரு புருஷன் அந்தச் சிசுவிற்கு நேரில் தோன்றினார். அவர் கட்டைவிரல் அளவுள்ளவர், சுத்தர், சுவர்ண கீரிடமுள்ளவர், மிக்க அழகான பார்வையுள்ளவர், பீதாம்பரம் தரித்தவர், ஜன்மம் முதலிய விகாரங்கள் அற்றவர், அழகு பொருந்தியவைகளும், நீண்டவை களுமான கைகளுள்ளவர், சுத்த ஸ்வர்ண குண்டலங் களுள்ளவர், 'என் பக்தனுக்கும் உபத்திரவம் நேரிடு கிறதா?' என்ற கோபத்தால் சிவந்த கண்கள் உள்ளவர், கதாயுதத்தைத் தரித்தவர். மேலும் அவர் குறைக்கொள்ளி போன்ற தம் கதையைச் சுழற்றிக் கொண்டு. அக்குழந்தைக்கு நான்கு புறத்திலும் சஞ்சரித்து, சூரியன் பனியைப் போக்குவதுபோல அஸ்திர தேஜஸ்ஸை அக்குழந்தையின் சமீபம் வர வொட்டாமல் தடுத்துக்கொண்டுமிருந்தார். அவரைப் பார்த்து அந்தக் குழந்தையானது இவர் யாரென்று ஆச்சரியத்துடன் ஆலோசித்துக் கொண்டிருந்தது. இப்படி ஒன்பது மாத காலஞ் சென்றது. பத்தாவது மாதத்தில் அளவிடக் கூடாத ரூபமுள்ளவரும், தர்மத்தைப் பரிபாலிப்பவரும், எங்கும் நிறைந்தவரு மான அந்தப் பிரபுவானவர் அக்குழந்தை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே அவ்விடத்தில் மறைந்தார்.

அதன் பிறகு வரும் மேலான சிரேயஸை காண்பிக்கத் தக்க சுப லக்னம் நேர்ந்தது. அதிலிருந்த சுபகிரகங்கள் ஒருவருக்கொருவர் மித்ரர்களாக இருந்தார்கள். அப் போர்ப்பட்ட சமயத்தில் பாண்டுவின் வம்சத்தை விருத்திசெய்யும் புத்திரனானவன் பாண்டுவே மறு படியும் பிறந்ததுபோல அவதரித்தான். அப்பொழுது தர்மபுத்ரர் மிகுந்த சந்தோஷத்துடன் தௌம்யர், கிருபர் முதலிய ப்ராஹ்மணர்களைக் கொண்டு ஜாதகர்மம் ஸ்வஸ்திவாசனம் ஆகிய இவைகளைச் செய்வித்தார். மேலும், அவர் தானத்திற்குரிய பாத்திரம் தேசம் காலம் என்னும் இவைகளை அறிந்தவரா கையால், உத்தமமாகிய அந்தப் புண்ணிய காலத்தில் ஸ்வர்ணம், பசு, பூமி, கிராமங்கள் சிறந்த குதிரைகள் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுத்தது மல்லாமல் போஜனமும் செய்வித்தார்.

15–17 1/2. அப்பொழுது ஜ்யோதிஷ சாஸ்திரத்தை நன்றாய்க் கற்றுணர்ந்த எல்லாப் ப்ராம்ஹ்மணர்களும் மிகுந்த சந்தோஷமுள்ளவர்களாய் வணக்கமுள்ள அவ் வரசனை நோக்கி, 'ஓ புருஷவம்சத்திய அரசர்களில் சிறந்தவரே தடுக்க முடியா தெய்வ வசத்தால் புரு வம்சத்தின் தொடர்ச்சியற்றுப் போகும் சமயத்தில் அந்த வம்சத்தில் பிறந்தவர்களான உங்களுடைய க்ஷேமத்திற்காக) ஸ்ரீ மகா விஷ்ணுவே இப்புத்ர ரத்னத்தை அனுக்ரகித்திருக்கிறார். விஷ்ணுவினால் கொடுக்கப்பட்டவனாகையால் இவன் விஷ்ணுராத னென்று பிரசத்தியடைவான். இவன் மிகுந்த கீர்த்தி யுள்ளவனும், பாகவதர்களுள் சிறந்தவனுமாவான். இவ் விஷயத்தில் ஸம்சயப்பட வேண்டாம் என்றார்கள்.

18–29 1/2, இதனைக் கேட்ட தர்மராஜன் ப்ராஹ்

Released by Maran's Dog, Toronto , Canada

மணர்களை நோக்கி, புண்ய ச்லோகர்களும் ராஜர்ஷி களுமான நம்முடைய முன்னோர்கள் போல இக் குழந்தையும் நல்ல கீர்த்தியுள்ளவனாய் இருப்பானா? என்று மிக்க ஆதரவுடன் கேட்டார். அப்பொழுது ப்ராஹ்மணர்கள் தர்ம புத்ரரை நோக்கி, 'ஓ குந்தியின் புத்ரரே! இவன் மனுவின் புத்ரராகிய இக்ஷ்வாகுபோல, பிரஜைகளைக் காப்பாற்றுவான், தசரத புத்ரராகிய ஸ்ரீ ராமன் போல ப்ராஹ்மணர்களிடம் பிரியமுள்ள வனாவான். வீணாகாத பிரதிக்ஞையுள்ளவனாயி ருப்பான். ஔசீனர தேசத்திற் கதிபதியான சிபிச் சக்ரவர்த்தி போலச் சரணமென்று வந்தவர்களைக் காப்பாற்றுவான், மிகுந்த தாதா, துஷ்யந்தருடைய புத்ரனான பரதன் போலத் தன் பந்துக்களுக்கும், யாகம் செய்பவர்களுக்கும் விசேஷ கீர்த்தியை உண்டு பண்ணுவான். மேலும் இவன் உம்முடைய தம்பியாகிய அர்ஜுனன், கார்த்தவீர்யன் ஆகிய இவர்கள் போல வில்லைப் பிடித்தவர்களுக்குள் சிறந்தவனாவான், அக்னி போல ஸமீபத்தில் நெருங்க முடியாதவனாவான், சிங்கம் போலப் பராக்கிரமமுள்ளவனாவான்' ஹிம்வத் பர்வதம்போல ஸாதுக்களால் ஸேவிக்கத்தக்கவனா வான், பூமிபோலப் பொறுமையுள்ளவனாவான், மாதா பிதிருக்கள், புத்ரர்களின் விஷயமாய் நேரும் சிரமங் களைச் சகிப்பதுபோல ப்ரஜைகள் விஷயமாக உண்டாகும் சிரமத்தைப் பொறுத்துக் கொள்ளும் ஸ்பாவமுள்ளவனாவான். எல்லோரையும் சமமாய்ப் பார்ப்பதில் ப்ரஹ்மதேவரையொத்தவனாவான், அண்டின வர்களிடத்தில் தயவு செய்யும் விஷயத்தில் பரமசிவன் போன்றவனாவான். லக்ஷ்மீபதியாகிய மஹாவிஷ்ணு போல ஸகல பிராணிகளுக்கும் இருப்பிடமாவான், ஸ்ரீ கிருஷ்ணன்போல ஸகல நற்குணங்களால் ஏற்படும்

மஹிமையுள்ளவனாவான், கொடுப்பதில் ரந்திதேவன் போன்றவனாவான். யயாதிபோலத் தர்மசிந்தையுள்ள வனாயிருப்பான், பலிசக்கரவர்த்தி போலத் தைரிய முள்ளவனாவான், பிரஹ்லாதர் போல ஸ்ரீ கிருஷ்ண னிடம் பக்தியுள்ளவனாவான். மேலும் இவன் அநேக அசுவமேத யாகங்களைச் செய்வான். பெரியோர் களை ஸேவிப்பான். இவனுடைய புத்ரர்கள் ராஜ ரிஷிகளாக விருப்பார்கள். கெட்ட மார்க்கத்தை அனுஷ்டிப்பவர்களைச் சிக்ஷிப்பான், தர்மத்தை ஸம்ர க்ஷிப்பதற்காகக் கலியை நிக்ரஹிப்பான். பின்னுமிவன் (சிருங்கி என்ற) ப்ராஹ்மண புத்திரனால் தூண்டப் பட்ட தக்ஷகனால் தனக்கு மரணம் நேரிடப் போவதாய்க் கேள்விப்பட்டு, ஸகல ஆசைகளையும் ஒழித்து வைராக்கியத்தை யடைவான். பிறகு வியாஸ புத்ரராகிய சுகரிடம் ஆத்ம தத்வத்தை உபதேசம் பெற்று, கங்கைக் கரையில் இந்தச் சரீரத்தை விட்டு நிர்ப்பயமான விஷ்ணுபதத்தை யடைவான் என்று வருங் காரியத்தைச் சொல்லி தர்ம புத்திரரால் ஸம்மானிக்கப்பட்டுத் தங்களிருப்பிடம் சென்றார்கள்.

30–31 1/2 பிறகு அந்தக் குழந்தை மாதாவின் கர்ப்பத்தில் தன்னால் பார்க்கப்பட்டவரை மனத்தில் தியானஞ் செய்து கொண்டே 'அந்தப் புருஷன் இவர் தானோ, இவர்தானோ என்று ஒவ்வொருவரிடமும் பரீக்ஷித்தான். ஆனதுபற்றி அவனுக்கு, 'பரீக்ஷித்' என்ற பெயருண்டாயிற்று. அந்த ராஜகுமாரன் சுக்ல பக்ஷத்தில் பதினைந்து கலைகளால் சந்திரன் நாளுக்கு நாள் விருத்தியடைவதுபோல, தர்மபுத்ரர் முதலிய வர்களால் போஷிக்கப்பட்டு வளர்ந்தான். ஸகலவித்தை களும் அவனையடைந்தன. அப்பொழுது தர்மராஜன்

பந்துக்களின் வதத்தால் நேர்ந்த பாவங்களை நிவர்த் தித்துக் கொள்வதற்காக அசுவமேதஞ் செய்யவேண்டு மென்று விரும்பினார். ஆனாலும் 'நியாயமான வரி வாங்குவதாலும், குற்றவாளிகளுக்கு அவர்களுடைய குற்றத்திற்குத் தக்கபடி அபராதம் விதிப்பதாலும் ஸம்பாதித்த பொருள் பிரஜைகளை ரக்ஷிப்பதற்கே போதுமானதாயிருந்ததாகையால் அந்தப் பொருளைக் கொண்டு யாகத்தை முடிக்க முடியாதே என்ன செய்கிறது என்று கவலைப்பட்டிருந்தார்.

33–361/2 அப்பொழுது அவருடைய அபிப்ராயத் தையறிந்து ஸ்ரீ கிருஷ்ணனால் தூண்டப்பட்ட பீமசேனன் முதலியவர்கள் வடக்குத் திக்கில் சென்று மருத்தருடைய யாகத்திற்கு உபயோகப்பட்டு மிகுந்து கிடக்கும் தனத்தைக் கொண்டு வந்தார்கள். அவை களைக் கொண்டு யாக சாமகிரிகளைச் சம்பாதித்துத் தர்மபுத்ரர் ஸ்ரீ கிருஷ்ணனை வைத்துக் கொண்டு குறைவில்லாமல் நிறைவேற்ற வேண்டும் என்ற பயம் உள்ளவராய், பாப நிவர்த்திக்காக மூன்று தரம் அசுவ மேதத்தை யனுஷ்டித்து, யக்ஞ புருஷராகிய பகவானை ஆராதித்தார். ஸ்ரீ கிருஷ்ணனும் ப்ராஹ்மணர்களைக் கொண்டு தர்மராஜனுக்கு யாகஞ் செய்வித்து மித்ரர்களான பாண்டவர்களுடைய இஷ்டப்படி சில காலம் அவ்விடத்தில் வசித்தார். பின்பு ஸ்ரீ கிருஷ்ணன் அரசனிடத்திலும் திரௌபதியினிடத்திலும் விடை பெற்றுத் தம்முடைய பந்துக்களுடனும், அர்ஜுனன் உடனும் துவாரகா நகரஞ் சென்றார்.

நோட்டு

இந்த அத்தியாயத்தில் வைராக்கியத்தின் பிரகாரமும், பகவான் பக்தர்களிடத்தில் தயையுள்ளவரென்பதும், காட்டப்பட்டிருக்கிறது விஜ. சகல ஸம்பத்துக்களும் –காமாதுரனுக்கு ஐசுவரியத்தில் பிரியமிருக்குமே யல்லாமல் வைராக்கிய முள்ளவனுக்கு அவைகளில் பிரீதி உண்டாகிறதில்லை என்று காட்டப்பட்டது விஜ, புண்ணிய காலத்தில்-"கொப்பூழ்க் கொடி அறுப்பதற்கு முன் சூதகமில்லை" "புத்திரன் பிறந்த காலத்திலும் வியதபாத புண்ணிய காலத்திலும் செய்யப்பட்ட தானங்கள் குறையாத பலனைக் கொடுக்கின்றன," – ஸ்மிருதி "ப்ராஹ்மணர்களுடைய வீட்டில் புத்திரன் பிறந்த காலத்தில் ஸகல தேவர்களும் பிதிரு தேவர்களும் அந்த வீட்டிற்கு வருகிறார்கள். ஆதலால் அந்தக் காலம் 'நூறு சூர்ய கிரகணங்களைக் காட்டிலும் மேலான புண்ணிய காலம்" -ஸ்மிருதி. சிபி- இவர் தம்மைச் சரணமடைந்த புறாவைக் காப்பாற்றவேண்டிப் பருந்துக்கு தம்முடைய மாமிசத்தைக் கொடுத்தார் ஸ்ரீத. இவர் உசினருடைய புத்ரர் - வீர. விஜ.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்–13

திருதராஷ்டிரர் வெளியில் சென்றது

விதுரர் தீர்த்த யாத்திரை செய்வதற்காக ஹஸ்தினா புரத்திலிருந்து புறப்பட்டுச் ஸகல தீர்த்தங்களுக்கும் சென்று, அவைகளில் ஸ்நானம் முதலியவைகளைச் செய்து, வழியில் மைத்ரேயரைக் கண்டு, அவரிடமாக ஸ்ரீமத் நாராயணனே தமக்குக் கதியென்று தெரிந்துக் கொண்டு, அதனால் அறிய விரும்பியதை அறிந்தும் ஹஸ்தினாபுரஞ் சென்றார். மேலும், கர்மயோகம், ஞானயோகம் ஆகிய இவைகளைப்பற்றி விதுரர் கேட்ட கேள்விகளுக்கு மைத்திரேயர் சிலவற்றிற்குப் பதில் சொல்லி வரும்பொழுதே விதுரருக்கு ஸம்சயங்கள் யாவும் நீங்கின. ஸ்ரீ கோவிந்தரிடத்தில் ஸ்திரமான பக்தி உண்டாயிற்று. அதனால் அதற்குமேல் அவர் கேட்கவில்லை.

3–6 தர்மபுத்திரர், அவருடைய தம்பிகள், திருதராஷ்டிரர் யுயுத்ஸு, ஸஞ்சயர், கிருபர், குந்தீதேவி, காந்தாரி, திரௌபதி, ஸுபத்ரை உத்தரை, த்ரோணருடைய பத்தினியாகிய க்ருபி, இன்னும் மற்ற பந்துக்களின் ஸ்திரீகள், பாண்டுவின் பந்துக்கள் ஆகிய எல்லோரும் தங்களுடைய பிள்ளைகளுடனும், ஸ்திரீகளுடனும் எதிர்சென்று வெகுநாள் தீர்த்தயாத்திரை செய்து திரும்பிவந்த பந்துவாகிய விதுரரைக் கண்டு மிகுந்த சந்தோஷத்துடன் அழைத்தார்கள். அப்படி அழைத்ததானது கை, கால் முதலிய அவயவங்கள் ப்ராணனைக் கண்டு சந்தோஷமடைந்தது போலிருந்தது. மேலும் அவர்கள் விதுரரிடம் வந்து முறைப்படி ஆலிங்கனம்

நமஸ்காரம் முதலியவைகளைச் செய்து வெகுநாள் பிரிந்திருந்ததனால் மிகுந்த ஆசையுள்ளவர்களாய் ஆனந்தக்கண்ணீரைப் பெருக்கினார்கள். அரசனாகிய தர்மராஜனும் ஆசனத்தில் உட்கார்ந்திருக்கும் அந்த விதுரரைப் பூஜித்தார்.

7–11, பிறகு ஆகாரத்தை யுண்டு களைதீர்ந்து ஸுகமாய் உட்கார்ந்திருக்கும் அவரை நோக்கி, தர்ம புத்திரர் பின்வருமாறு கேட்கலானார். பறவைகளால் தங்கள் தங்கள் குஞ்சுகள் சிறகுகளால் மறைத்துக் காப்பாற்றப்படுவது போல நாங்களனைவரும், எங்களுடைய மாதாவுடன் விஷம், அக்னி முதலிய ஆபத்துக்களிலிருந்து உம்மால் காப்பாற்றப்பட்டோம். ஆதலால் எங்களுடைய ஞாபகம் உமக்கிருக்கிறதா? பூமி முழுவதும் சுற்றிய தங்களுக்குத் தேச யாத்ரை எப்படி நடந்தது? எந்தெந்த தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தீர்கள்? எந்தெந்த க்ஷேத்திரம் சென்றீர்கள்? உங்களைப் போன்ற பகவத் பக்தர்களே மிக்க பரிசுத்தமானவர்கள். ஆதலால் அவர்கள் தங்களுடைய மனதில் எப்பொழுதும் பகவான் வஸிப்பதால் தீர்த்தங்களைப் பரிசுத்தப்படுகிறார்கள். மேலும் ஸ்ரீ பகவானையே தெய்வமாகக் கொண்ட நமது சிநேகிதர்களும் பந்துக்களும் யாதவர்களும் உம்மால் பார்க்கப் பட்டார்களா? அவர்களைப் பற்றிக் கேள்விபட்டதுண்டா? அவர்களுடைய பட்டணங்களில் சுகமாக இருக்கிறார்களா?! என்றார்.

12–15 அதனைக் கேட்டு விதுரர் தீர்த்தயாத்திரையின் நிமித்தமாகச் சென்ற விடங்களில் நடந்த சமாசாரங்களைப் பூர்ணமாகத் தர்மராஜனுக்கு சொன்னார்.

ஆனால் யதுகுலத்திற்கு நேர்ந்த கெடுதியை மாத்திரம் சொல்லவில்லை. மனிதர்களால் துக்கம் சகிக்க முடியாதது. ஆகையால் அதை அவர்கள் விரும்புகிற தில்லை யல்லவா ? தவிரவும் விதுரர் மிகுந்த கருணை யுள்ளவர். துக்கமுள்ளவர்களைப் பார்த்துச் சகிக்க மாட்டார். 'ஆனதால் யதுக்களுக்குக் கெடுதி யுண்டாயிற்று என்று சொன்னவுடன் பாண்டவர்கள் வருத்தப்படுவார்கள். அவர்களைப் பார்ப்பது மிகவும் கஷ்டமான கார்யம்' என்று நினைத்தே அதைச் சொல்லவில்லை. பின்பு அந்த விதுரர் பெரிய தமையனராகிய திருதராஷ்டிரருக்கு ஆத்ம தத்துவத்தை உபதேசித்தும், மற்றுமுள்ளவர்களுக்குப் பிரியத்தை விருத்திசெய்து கொண்டும் சில காலம் அவ்விடத்தில் வசித்தார். அவர்கள் விதுரரைத் தெய்வமாக நினைத்துப் பூஜித்தார்கள். மாண்டவ்ய மஹர்ஷியின் சாபத்தால் யமனே இப்படி ஜன்மத்தை அடைந்து விதுரராக பிறந்தவர்; யமன் இப்படி அநேக வர்ஷங்கள் பூலோகத்திலிருக்கும் காலத்தில் அவருடைய உலகத்தில் அர்யமா வென்பவர் பாபிகளுக்கு தக்க சிக்ஷை விதித்துக்கொண்டு அந்த வேலையை நடத்தி வந்தார்.

16. பகவானுடைய சகாயத்தால் தர்மபுத்திரர் ராஜ்யத்தை அடைந்து, தம்முடைய குலவிருத்திக்குக் காரணரும், பௌத்ரருமாகிய பரீக்ஷித், லோகபாலர்கள் போன்ற தம்பிகள் ஆகிய இவர்களுடன் விசேஷ ஐசுவர்யங்களைப் பெற்று ஆனந்தமடைந்தார்.

17–18. பிறகு கிருஷ்ண பகவான் தர்மபுத்திரர் முதலியவர்களிடம் விடைபெற்று, பின் தொடர்ந்துவரும்

பந்துக்களைத் தடுத்துத் திருப்பிவிட்டு அர்ஜுனன், உத்தவர், ஸாத்யகி என்பவர்களுடன் துவாரகா நகரம் சென்றார். இப்படி கிருஹ கிருத்யங்களிலேயே ஆசை யுள்ளவர்களாகவும், அவற்றால் மதித்தவர் களாகவும் அவர்கள் வெகு காலம் கழித்தார்கள். காலத்தை மீறுவதற்குப் ப்ரஹ்மதேவராலும் முடியாதன்றோ ?

19–29. அப்பொழுது விதுரர் அஜ்ஞர்களாகவே இவர்கள் வெகுகாலத்தைப் போக்கிவிட்டார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு திருதராஷ்டிரரை நோக்கி, 'ஓ அரசனே! சமீபத்தில் பயம் நேரிடுகிறதைப் பாரும். சீக்கிரம் பட்டணத்தை விட்டு வெளியில் போகவேண்டும். கால மஹிமையால் நேரும் பயம் ஓரிடத்திலும் ஒரு வகையாலும் தடுக்கமுடியாத தாகையால் அது நம்மெல்லோருக்கும் சமீபித்துவிட்டது. அந்தக் காலம் நேரிடு மானால் ப்ராணனுக்கே அபாயம் உண்டா கிறது. அப்படி யிருக்கையில் பணம் முதலியவைகள் போய் விடுகிறதே என்பதில் என்ன ஆச்சர்யம் ? பிதா, சகோதரர்கள், சிநேகிதர்கள், புத்திரர்கள் ஆகிய இவர்கள் எல்லோரும் சண்டையில் கொல்லப் பட்டார்கள். வயது சென்று விட்டது. சரீரத்தில் ஜரை வந்துவிட்டது; இயற்கையிலேயே நீர் கண் இல்லாதவர். இப்போது கிழத்தனத்தால் உமக்குக் காதுகளும் கேட்கும் சக்தியுள்ளவைகளாயிருக்கவில்லை. புத்தியும் குறைந்திருக்கிறது. பற்கள் உதிர்ந்துபோயின. வயிற்றில் அக்கினி குறைந்து போயிற்று. வியாதி அதிகரித்திருக்கிறது. கபத்தின் வேகம் அதிகமா யிருக்கிறது. இவ்வளவு கஷ்டமான நிலைமையிலும் இன்னும் பிழைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் உமக்கிருப்பது ஆச்சரியப்படத்தக்கதே. மேலும் நீர்

வீட்டில் நெருப்பு வைத்தும், விஷம் கலந்த அன்னத்தைக் கொடுத்தும், இராஜ்யம் முதலிய ஐசுவர்யங்களை அபகரித்தும், இன்னும் பலவகையான கெடுதிகளைப் பாண்டவர்களுக்குச் செய்ததுமல்லாமல் அவர்களுடைய பத்னியை ஸபையில் அவமானப் படுத்தியும் இருக்கிறீர். அவைகளை நினைத்து நினைத்து மிகுந்த கோபத்துடன் பீமஸேனன் வீட்டைக் காத்திருக்கும் நாய்க்குச் சோறு போடுவது போல உமக்கு அன்னம் போடுகிறான். அதனைப் புஜிக்கிறீர், இது மேலான ஜீவனமா? இவ்வளவு தைன்ய மடைந்தும் இனியும் வெகுகாலம் ஜீவிக்க வேண்டு மென்று விரும்புகிறீர். ஆனாலும் கால மகிமையால் வஸ்திரங்கள் கிழிந்துபோவதுபோல உம்முடைய சரீரம் கிழத்தனத்தால் குறைகிறது. கீர்த்தி முதலிய வையிலும், பிரயோஜனமற்ற சரீரத்திலும் அபிமானம் முதலியவைகளை விட்டு எவன் சரீரத்தை விடு கிறானோ அவனே தீரனென்று சொல்லப்படுகிறான். அவன் இன்ன கதியை அடைந்தான் என்று பிறரால் அறிய முடியவில்லை. தவிரவும் குருவின் உபதேசத் தாலாவது, தானாகவாவது, ஸம்ஸாரத்தில் வைராக்யத் தையடைந்து ஸ்திர சித்தமுள்ளவனாகி, ஸ்ரீ மஹா விஷ்ணுவை மனதில் தியானஞ் செய்துகொண்டு வீட்டை விட்டுப் போகிறவனே உத்தமன். இனி வருங்காலம் பெரும்பாலும் நற்குணங்களைக் குறைக்கக் கூடியதாகையால் நீர் பந்துக்களுக்குத் தெரியாமல் வடக்குத் திக்கை நோக்கிச் செல்லும் என்றார்.

30–31. அஜமீட வம்சத்தில் பிறந்த கண்களில்லாதவ (குருட)ரான திருதராஷ்டிரர் தம்பியான விதுரருடைய வார்த்தைக் கேட்டு, பந்துக்களிடம் தமக்கிருக்கும்

ஸ்திரமான அபிமானத்தை விட்டு, தம்பியால் உப தேசிக்கப்பட்ட வழியே வடக்கு திக்கை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது அவருடைய பத்னியும் நல்ல நடத்தையுள்ளவளும், மிக்க பதிவிரதையுமான காந்தாரி என்பவள் தன் புருஷன் பின் சென்றாள். அவ்விருவர்களும் ஹிமய மலைக்குப் போனார்கள். சூரர்களுக்குச் சண்டையில் ஸந்தோஷ முண்டாவது போல் இராஜ்யத்திலிருந்து ஒழிவடைந்தவர்களுக்கு அந்தப் பர்வதமானது மிகுந்த ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியது.

32–35. அன்றைய தினம் காலையில் தர்மபுத்ரர் ஸந்தியோபாஸ்தி செய்து, அக்னி கார்யத்தை முடித்து, எள், பசு, ஸுவர்ணம் ஆகிய இவைகளைப் ப்ராஹ்மணர்களுக்குத் தானஞ்செய்து குருக்களை நமஸ்கரிப் பதற்காக வழக்கப்படி அவர்களுடைய அரண்மனை சேர்ந்தார். அவ்விடத்தில் விதுரர், திருதராஷ்டிரர், காந்தாரி ஆகிய அவர்களையுங் காணாமல் மிகவும் நடுக்கமுள்ளவராய் அங்கிருக்கும் ஸஞ்சயரை நோக்கி, ஓ காவல்கணருடைய புத்ரரே; நம்முடைய பிதிரு வ்யரைக் காணோமே, அவர் எங்கே போனார்? வயது சென்றவரே, தவிரவும் கண்களில்லாதவ வராயிற்றே, தாயாரான காந்தாரியும் எவ்விடம் சென்றாள்? அவள் புத்ர சோகமுள்ளவளே; இவர் களுக்குச் சிநேகிதராகிய விதுரர் போனவிடம் தெரியவில்லையே? நாம் அறியாமையால் ஏதாவது குற்றஞ் செய்தேனோ? அதனால் திருதராஷ்டிரர் என்னிடத்தில் கோபங்கொண்டு மற்ற பந்துக்கள் இறந்து போன துக்கத்தால் தமது பார்யையுடன் கங்கையின் ஜலத்தில் விழுந்து மரணமடைந்தாரா?

எங்களுடைய பிதாவாகிய பாண்டு மஹாராஜன் காலஞ் சென்றபோது சிசுக்களாகிய எங்களை விதுரரும் திருதராஷ்டிரருமே காப்பாற்றினார்கள், அப்படிப்பட்டவர்கள் எவ்விடஞ் சென்றார்கள்? சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

36–38 1/2. இதனைக் கேட்டு ஸஞ்சயர் தம் யஜமானனைக் காணாமல் கவலையுள்ளவராக மிகுந்த தைன்யத்துடன் சிநேகத்தாலுண்டான அதைரியத்தால் வருத்தப்பட்டு உடனே மறுமொழி உரைக்கவில்லை. பின்பு அவர் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே தைரியத்துடன் திருதராஷ்டிரருடைய பாதங்களை நினைத்துக்கொண்டே தர்மபுத்திரரை நோக்கி அவர்கள் போனவிடம் எனக்கும் தெரியாது: மஹாத்மாக்களான அவர்கள் என்னையும் ஏமாற்றிவிட்டார்கள்; நானும் அவர்களைக் காணாமல் கவலையுள்ளவனாயிருக்கிறேன்' என்றார்.

39–41 1/2. இப்படி அவ்விருவர்களும் பேசிக்கொண்டு இருக்கும் பொழுது நாரதர் தும்புருவுடன் அவ்விடத்திற்கு வந்தார். அவரைக் கண்டு தர்ம புத்திரர் தம்பிகளுடன் எழுந்திருந்து நமஸ்காரஞ் செய்து விதிப்படி பூஜித்து, ஓ நாரதரே! மிகுந்த மஹிமை பொருந்திய உம்முடைய தரிசனம் தெய்வச் செயலால் கிடைத்தது. எங்களுடைய பிதாவின் ஸஹோதரர்களான விதுரரும், திருதராஷ்டிரரும், புத்ர சோகமடைந்த காந்தாரியும் இன்னவிடம் போனார்களென்று தெரியவில்லை. அவர்களைக் காணாமல் துக்கமாகிய சமுத்திரத்தில் சழ்கியிருக்கிறோம். அது கரையற்றது, இந்த சமயத்தில்

கப்பல்காரர்போல நீங்கள் வந்திருக்கிறீர்கள், எங்களைக் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

42–63. இதைக் கேட்டு நாரதர் தர்மபுத்திரரை நோக்கி, 'ஓ தர்மபுத்திரரே! ஜகத் யாவும் ஈசுவரனுக்கு வசப்பட்டவை. (பிராணிகளைச் சேர்த்துவைப்பவர் அவரே. அவைகளைப் பிரிப்பவரும் அவரே) ஆகையால் ஒருவரைப் பற்றியும் துக்கிக்காதீர். மூக்குக் கயிறுள்ள எருதுகள் போலும் தந்திரியில் (பிணையல்) சிறு கயிறுகளால் கட்டப்பட்ட பசுக்கள் போலவும் எல்லா லோகங்களும், லோக பாலர்களும் வேதங்களாகிய நீண்ட கயிற்றில் வர்ணாசிரமம் முதலிய சிறுகயிறுகளால் கட்டப்பட்டு, பரமேசுவரனுடைய கட்டளையை நிறைவேற்றுகிறார்கள். உலகத்தில் விளையாட்டுக் கருவிகளை விளையாடுகிறவன் தனதிஷ்டப்படி சிலவேளை சேர்த்தும், பிரித்தும் வைப்பதுபோல மனிதர்கள் சேர்ந்திருப்பதற்கும் பிரிந்து போவதற்கும் பகவான் உடைய விருப்பமே காரணம். இவ்வுலகத்தை ஜீவரூபமாக நித்யமென்று நினைத்தாலும் எவ்விதத்திலும் பந்துக்களைப் பற்றித் துக்கிக்க நியாயமில்லை. மோகத்தால் அபிமானம் வைத்ததாலேயே துக்கம் நேரிடுகிறது. மேலும் ஜகத்தை நித்யா நித்யமென்று சொல்வது பொருந்தாது. ஆகையால் அஞ்ஞானத்தால் ஏற்பட்ட அதைரியத்தை விட்டு விடும். ஆனால் என்னை விட வேறு கதியில்லாத திருதராஷ்டிரர் முதலியவர்கள் நானில்லாமல் எப்படி ஜீவிப்பார்கள், என்று கேட்கலாம், அப்படி நினைப்பது சரியன்று. பத்துப் பூதங்களாலுண்டான இந்தச்சரீரம் காலத்திற்கும், கர்மத்திற்கும் வசப்பட்டது. ஆகையால் நம்முடைய சரீரமே அழியும் சுபாவமுள்ளது. மலைப்

பாம்பின் வாயில் அகப்பட்டவனால் எப்படி மற்றவனை இரட்சிக்க முடியாதோ அதுபோல், நாம் பிறரைக் காப்பாற்றுவது சாத்தியமன்று. கைகளுள்ள ஜந்துக்களான மனிதர்கள் முதலியவர்களுக்குக் கைகளில்லாத பசு முதலியவைகளும், நாற்கால் பிராணிகளுக்குப் புல் முதலியவைகளும், புலி முதலிய பெரிய ஜந்துக்களுக்கு அல்படலமுள்ளவைகளும் எப்படி ஆகாரமாகின்றனவோ அப்படி எல்லா ஜீவனும் வேறு ஜீவனுக்கு ஆகாரமா யிருக்கிறது. ஆதலால் எல்லாம் மரணடயமுள்ளதாகவே காணப்படுகின்றன. ஏ தர்மபுத்திரரே! இந்த ஜகத் யாவும் பகவானுடைய ஸ்வரூபமேயொழிய வேறில்லை. அவர் ஒருவரே, போக்தர் (அனுபவிப்பவர்) போக்தா வின். ஸ்வரூபமாய் இருப்பவர் அவரே. போக்கிய ருபமாயுமிருப்பவர் அவரே. ஆனாலும், மாயையால் பலவகையாகத் தோன்றுகிறார். ஏ மகராஜ! ஸகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாக வசிக்கும் பகவான் தேவவிரோதிகளான அசுரர்களைக் (அசுரர் களுடைய அம்சமுள்ள இராஜாக்களைக்) கொல் வதற்காகக் காலங்காலமாய் துவாரகையில் வசிக்கிறார். தேவகாரியம் அநேகமாக முடிந்துவிட்டது. மிச்சமான பாகத்தை முடிக்கக் காலத்தை எதிர்ப் பார்த்திருக்கிறார். பகவான் இவ்வுலகத்திலிருக்கும் வரையில் நீங்களும் இவ்வுலகத்தில் வசிக்கலாம். திருதராஷ்டிரர் தம்பியாகிய விதுரருடனும், காந்தாரி யுடனும் இமயமலையின் தென்பாகத்தில் மகர்ஷி களுடைய ஆசிரமம் போயிருக்கிறார், அவ்விடத்தில் கங்கா நதியானது ஸப்தரிக்ஷிகளுடைய பிரீதியின் நிமித்தம் ஏழு வகையாக ஓடிற்று. அதனால் ஸப்த ஸ்ரோதஸ் என்று பெயருண்டாயிற்று. அந்தத் தீர்த்தத்தில் ஒவ்வொரு காலத்திலும் திருதராஷ்டிரர் ஸ்நானஞ்

செய்து அக்னிகாரியஞ்செய்து ஜலத்தைப் புசித்து, சாந்தமனமுள்ளவராய் ஆசைகளையும் ஒழித்து, சாஸ் திரத்தில் சொல்லியபடியுள்ள ஆசனத்தையடைந்து சுவாசத்தை யடக்கி, இந்திரியங்களை விஷயங்களில் செல்ல வொட்டாமல் அடக்கிப் பகவானையே மனத்தில் தியானஞ் செய்து அதனால் ராஜஸ, தாமஸ தோஷங்களை நிவர்த்தித்துக்கொண்டு, மனத்தை ஸ்தூல தேஹத்திலிருந்து புத்தியுடன் ஒன்றாகச் சேர்த்து, அந்தப் புத்தியைப் பார்க்கப்படும் விஷயங்களிலிருந்து க்ஷேத்ரக்ஞனுடன் சேர்த்து, அந்த க்ஷேத்ரக்ஞனைப் பார்க்கிறவரிடமிருந்து பிரித்து, கடாகாசத்தைக் கடத்திலிருந்து பிரித்து மகாகாசத்தில் சேர்ப்பது போல ஸகலத்திற்கும் ஆதாரமாகிய ப்ரஹ்மத் தினிடம் சேர்த்து, மாயையின் வாஸனையை யழித்து, இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கி, ஆகாரங் களை நிவர்த்தித்துக் கட்டைபோல அசையாமல் இருக்கிறார். ஸகல கர்மங்களையும் விட்டவரான அவருக்கு நீர் இடையூறாக வேண்டாம். மேலும் இன்று முதல் ஐந்தாவது நாளில் அவர் சரீரத்தை விடப் போகிறார். அந்தச் சரீரம் உடனே எரிந்து போகும் திருதராஷ்டிரருடைய சரீரம் பர்ணசாலை யுடன் கார்ஹபத்யம் முதலிய அக்னிகளால் எரிக்கப் படும்போது ஆசிரமத்திற்கு வெளியிலிருக்கும் அவருடைய பத்னியும் பதிவ்ரதை யுமான காந்தாரி யானவள் உடன் கட்டையேறிச் சரீரத்தை விட்டு விடுவாள், விதுரர் இந்த ஆச்சரியத்தைக் கண்டு திருதராஷ் டிரருக்கு நல்ல கதி கிடைத்ததால் சந்தோஷித்து அவரை விட்டுப் பிரிந்ததால் கொஞ்சம் துக்கத்தை அடைந்தும் தீர்த்த யாத்திரைக்குப் போவார். ஆகையால் அவர்களை அழைத்து

வருவதற்காகவது, அவருடைய சரீரத்தைத் தகிப்பதற்காகவது நீர் போக வேண்டியதில்லை என்று சொல்லி, நாரதர் தும்புருவுடன் ஸ்வர்க்கம் சென்றார். தர்மபுத்திரரும் நாரதருடைய வார்த்தையைக் கேட்டு அதை மனத்தில் வைத்துச் ஸகல துக்கங்களையும் நிவர்த்தித்துக் கொண்டார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம் 14

தர்மபுத்திரருக்கு நேர்ந்த அபசகுனங்கள்

பந்துக்களைப் பார்ப்பதற்கும், புண்ணிய ச்லோக ராகிய கிருஷ்ணனுடைய அபிப்ராயத்தைத் தெரிந்து கொள்ளுவதற்கும் துவாரகா நகரஞ் சென்றிருந்த அர்ஜுனன், சென்று சில மாஸங்களாகியும் திரும்பி வரவில்லை, அப்பொழுது அஸ்தினாபுரத்தில் மிக்க கோரங்களான அபசகுனங்கள் ஏற்பட்டன. மனிதர்கள் உடைய மனதில் கோபம், ஆசை, பொய், ஆகிய இவைகளுண்டாயின. மனிதர்கள் பாபமான காரியத்தைச் செய்து ஜீவித்தார்கள். பெரும்பாலும் ஜனங்கள் கபடமாகப் பேசினார்கள். தோழர்களும் வஞ்சனையாக பேசிக் கொண்டார்கள். பிதா, மாதா, மித்ரன், சகோதரர்கள், தம்பதிகள் ஆகிய இவர்கள் யாவரும் ஒருவருக்கொருவர் கலகம் செய்து கொண் டார்கள். தகப்பன்மார்கள் பணம் வாங்கிக் கொண்டு பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொடுத்தார்கள். புத்திரர்கள் பிதாவைக் காப்பாற்றுவதில்லை. ப்ராஹ்மணர்கள் வேதத்தில் சிரத்தை இல்லாதவர்கள் ஆனார்கள். மேலும் சூத்திரர்கள் வேதத்தைப் படிக்க ஆரம்பித்தார்கள். இப்படிக் காலகதி கோரமா யிருந்தது. இப்படி காலமானது மாறிப் போனதால், மனிதர்களுக்கு ஏற்பட்டிருக்கும் லோபம் முதலிய மனத்தின் துர்க்குணங்களையும், அதர்மத்தை அனுஷ் டிப்பதாகிய சரீர துர்க்குணத்தையும், மிகுந்த அபச குனங்கள் நேரிடுவதையும் கண்டு தர்மபுத்திரர் பீமசேனனை நோக்கி, 'ஓ பீம! பந்துக்களைப் பார்ப் பதற்காகவும், புண்ணிய ச்லோகராசிய கிருஷ்ணன்

னுடைய எண்ணத்தைத் தெரிந்து கொள்ளு வதற்காகவும் துவாரகா நகரம் சென்ற அர்ஜுனன், ஏழு மாதங்களாகியும் இன்னும் வரவில்லை, அதன் காரணமும் இன்னதென்று தெரியவில்லை, எவருடைய அனுக்கிரகத்தால் இராஜ்யம், ஸ்திரீ, ப்ராஹ்மணன், குலவிருத்தி, சத்ருக்களை ஜயிப்பது, ஐசுவரியம், உத்தம லோகங்கள் ஆகிய இவைகள் நமக்குக் கிடைத்தனவோ, அந்தப் பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய சரீரத்தை விடப் போகிறாரென்று தேவர்ஷியாகிய நாரதர் சொன்ன காலம் வந்து விட்டது போலிருக்கிறது. அந்தப் பகவானை விட்டுப் பிரிவதைக் காட்டிலும் வேறு நமக்கு கெடுதி நேரிட நியாயமில்லை. ஓ புருஷசிரேஷ்டா! ஆகாயத்தில் உண்டானவைகளும், பூமியில் உண்டாகின்றவைகளும், சரீரத்தில் காணப்படுகின்றவைகளுமான அபசகுனங் களைப்பார். புத்திக்கு மோகமும் மிக்க கடுமையுமான பயம் வரப்போகிறதென்பதை இவைகள் காட்டு கின்றன. இடக்கண்ணும், இடத்தொடையும் அடிக்கடி துடிக்கின்றன. இருதயத்தில் நடுக்க முண்டாகிறது. அந்த தைஹிகமான அபசகுனத்தால் வெகு சீக்கிரத்தில் கெடுதி நேரிடுமென்று காட்டப்படுகிறது.

13-23. இந்தப்பெட்டை நரியானது குறைக் கொள்ளியை வாயில் கௌவிக்கொண்டு உதயமாகும் சூரிய மண்டலத்தைப் பார்த்து ஊளையிடுகிறது. நாயானது என்னைப் பார்த்துப் பயமில்லாமல் அழுகிறது. என்னைப் பசு முதலிய மேலானவைகள் இடமாகவும், கழுதை முதலியவைகள் வலமாகவும் சுற்றுகின்றன, குதிரைகள் அழுகின்றன. வரும் மரணத்தைக் குறிக்கும் மாடப்புறாவும், கோட்டானும்

அதற்கு விரோதியான காக்கையும் விகாரமாகக் கத்துகின்றன. இவைகளைக் கேட்க மனம்நடுங்கு கிறது; ஜகத்தானது சூனியமாய் விடுமென்று நினைக் கிறேன். திக்குகள் அழுக்கடைந்து நன்றாய் விளங்க வில்லை, பரிவேஷம் (சூரியன், சந்திரன் இவர்களைச் சுற்றிக் கோட்டைக் கட்டுவது) உண்டாயிருக்கிறது; பூமியானது மலைகளுடன் அசைகிறது. மேகங்களின் மறைவில்லாமல் ஆகாயம் சுத்தமாயிருக்கும்போதும் இடியுண்டாகிறது; அகாலத்தில் மேக கர்ஜிதம் கேட்கிறது. மண்காற்று கடுமையாக வீசுகிறது. இருட்டுப் பரவுகிறது. மேகங்கள் வெறுக்கக் கூடிய வையாக எல்லா விடங்களிலும் இரத்த மழையைப் பொழிகின்றன; சூரியனுடைய தேஜஸ் மங்கிவிட்டது ஆகாயத்தில் கிரகங்கள் யுத்தஞ் செய்கின்றன, ருத்ரருடைய பரிவாரங்களாகிய பூதகணங்கள் மற்ற ப்ராணிகளுடன் சேர்ந்து எங்கும் பரவியிருப்பதால் ஆகாயம், பூமி இவைகள் தீப்பட்டவைபோலிருக் கின்றன. ஆறுகளும், நதிகளும் (மேற்கு முகமாய்ச் செல்லுகிறவைகள்), குளங்களும் ஏரிகளும், பிரஜை களுடைய மனமும் கலங்கிவிட்டன. ஆஜ்யம் (நெய்) முதலியவைகளை ஹோமஞ் செய்வதால் அக்னி ஜ்வலிக்கிறதில்லை, இந்தக் காலம் எதனைச் செய்யப் போகிறதோ தெரியவில்லை. மேலும் குழந்தைகள் ஸ்தன்ய பானஞ் செய்யவில்லை. தாயார்களுடைய ஸ்தனங்களில் பாலும் பெருகவில்லை. பூக்கள் கண்ணீரைப் பெருக்கி அழுகின்றன. கொட்டிலி லிருக்கும் ஹ்ருஷபங்கள் சந்தோஷமாக இருக்கவில்லை. தேவதாப் பிரதிமைகள் அழுகின்றவை போலிருக் கின்றன, அவை அசைகின்றன. இந்தச் தேசமும், கிராமங்களும், பட்டணங்களும், உத்தியானங்களும்,

இரத்தினம் விளையும் பூமிகளும், ஆசிரமங்களும் பிரகாசியாமல் இருப்பதுடன் அவைகளில் வசிப்பவர்களும் சந்தோஷமற்றவர்களாய் இருக்கிறார்கள், இவைகள் நமக்கு எவ்விதமான துக்கத்தைக் காண்பிக்கப் போகின்றனவோ, இப்படிப்பட்ட பெரிய உற்பாதங்களைப் பார்க்கும் போது மற்ற புருஷர்களுடைய பாதங்களில்லாத வஜ்ரரேகை முதலியவைகளால் அலங்கிருதமான ஸ்ரீ பகவானுடைய பாதங்களின் ஸ்பரிசம் பூமிக்கு இல்லாமல் பூமிதேவி பாக்கியக்குறை உள்ளவளாய் ஆகிவிடுவாள்போலத் தோன்றுகிறது என்றார்.

24–45. இப்படி தர்மராஜரும் பீமஸேனரும் பேசிக் கொண்டிருக்கும்போது அர்ஜுனன் துவாரகா நகரத்திலிருந்து திரும்பிவந்து தர்மபுத்திரரை நமஸ்கரித்தான். அப்பொழுது அர்ஜுனன் முன்போலிராமல் மிக்க மனவருத்தமுள்ளவனாகவும், தலையைக் குனிந்து இரு கண்களிலும், நீரைப் பெருக்கித் துக்கித்தவனாயுமிருந்தான்; இப்படிச் சோபையில்லாமலிருக்கும் அர்ஜுனனைப் பார்த்து தர்மபுத்திரர் பயந்து, பந்துக்களின் நடுவில் தம்பியை நோக்கி, ஓ அர்ஜுன துவாரகா நகரத்தில் நம்முடைய பந்துக்களாகிய யாதவர்கள், போஜர்கள், தாசார்ஹர்கள், ஸாத்வதர்கள், வ்ருஷ்ணிகள், தூயரும் பூஜ்யருமாகிய, மாதாமகர், அம்மானாகிய வசுதேவர், அவருடைய தம்பிகள் உக்ரசேனருடைய சகோதரிகளும், வசுதேவருடைய பத்தினிகளுமான தேவகி முதலிய ஏழு ஸ்திரீகள், அவர்களுடைய புத்திரர்கள், மருமகள் ஆகிய இவர்கள் க்ஷேமமாயிருக்கிறார்களா? கெட்ட பிள்ளையுள்ள அரசனாகிய உக்ரசேனர், அவருடைய

தம்பியாகிய தேவகர் ஆகிய இவர்கள் பிழைத்திருக்கிறார்களா? மேலும் ஹிருதிக (ச்வல்பர்)ருடைய பிள்ளையான அக்ரூரர், ஜயந்தன், கதன், சாரணன், ஸத்யஜித் அல்லது சத்ருஜித் முதலியவர்கள் க்ஷேமமாய் இருக்கிறார்களா? மேலும் சாத்வதர்களுக்கு அதிபதியான பலராமன் ஸகல விருஷ்ணிகளுக்குள் மகாரதரும் யுத்தத்தில் கம்பீர வேகமுள்ளவருமான பிரத்யும்னர், ஸுஷேணர், சாருதேஷ்ணர் ஜாம்பவதியின் புத்திரராகிய சாம்பர், மற்ற ரிஷப குமாரர்கள், பகவானுடன் சஞ்சரிக்கும் சுருததேவர், உத்தவர் முதலியவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனையும் பல ராமனையும் ஆசிரயித்த யாதவ சிரேஷ்டர்களாகிய சுநந்தர், தந்தர் முதலியவர்கள் ஆகிய பந்துக்கள் எல்லாரும் க்ஷேமமாயிருக்கிறார்களா? மேலும் அவர்கள் நம்மிடத்தில் பிரியத்துடன் நம்மை நினைத்துக் கொண்டிருக்கிறார்களா? ப்ராஹ்மணர்களிடம் விசேஷ பக்தியுள்ளவரும், பக்தர்களிடத்தில் பிரீதியுள்ளவருமான ஸ்ரீ கிருஷ்ண பகவான், உலகங்களுடைய மங்களத்திற்காகவும் க்ஷேமத்திற்காகவும் (கிடைத்ததைக் காப்பாற்றுவதற்காகவும்) துவாரகா நகரத்தில் மித்திரர்களுடன் ஸுதர்மையில் ஸுகமாக வசிக்கிறாரா? எந்த ஸ்ரீ பகவானுடைய இருகைகளால் காப்பாற்றப்பட்ட துவாரகையில் பந்துக்கள் நன்றாகப் பூஜிக்கப்பட்டு மிகுந்த ஆனந்தத்துடன் பார்ஷதகணங்கள் போல ஸஞ்சரிக்கிறார்களோ, அந்த ஸ்ரீ பகவான் பலராமனுடன் யதுகுலத்தில் பிரகாசிக்கிறாரா? ஸத்யபாமா முதலிய பதினாயிரம் ஸ்திரீகளும் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய பாதஸேவையே தபஸ் முதலியவைகளைக் காட்டிலும் மேலானது என்று நினைத்து அவருக்குச் சிசுருஷை செய்து வருகிறார்களா?

அவர்களுக்குப் பகவான் தம்முடைய பலத்தால் தேவர்களை ஜயித்து, அவர்களால் அனுபவிக்கக் கூடியவைகளும் இந்திராணிக்குத் தகுதியானவை களுமான பாரிஜாதம் முதலியவைகளைக் கொடுத் தாரல்லவா? எந்தப் பகவான் தேவர்களை ஜயித்து, தேவ சிரேஷ்டர்கள் வசிக்கக்கூடிய சுதர்மா என்ற சபையை பலாத்காரமாகப் பூமியில் கொண்டுவந்து, அதில் தம்முடைய கைகளின் பலத்தை அவலம்பித்து, ஜீவிக்கும் யாதவர்கள் வஸிக்கும்படியாகச் செய்தாரோ, அந்தப் பரமபுருஷன் ஸுகமாக வாசஞ் செய்கிறாரா? (அவர் பூமியில் வஸித்தால்தான் நமக்கும் ஜனங்கள் ளுக்கும் க்ஷேமமுண்டாகுமென்பது கருத்து) மேலும் குழந்தாய் அர்ஜுன! உனக்குத் தேஜஸ் குறைந்திருப் பதாகத் தோற்றுகிறதே, சரீரத்தில் வியாதி இல்லாம லிருக்கிறதா? வெகுநாளாகத் துவாரகா நகரத்தில் வசித்ததால் பந்துக்கள் உன்னைக் கௌரவப்படுத்த வில்லையா? அல்லது அவமதித்தார்களா? அல்லது பிரியமற்ற நிஷ்டூர வார்த்தைகளைச் சொன்னார்களா? அதனால் மனவருத்த மடைந்தாயா? அல்லது யாசகர்களுக்குச் சிலவற்றைக் கொடுப்பதாகப் ப்ரதிக்ஞை செய்து, பின்பு ஆசையால் அவற்றை அவர்களுக்குக் கொடுக்கத் தவறிப் போனாயா? எல்லாரையும் நீ காப்பாற்றும் ஸ்பாவமுள்ள வனன்றோ? அப்படிப்பட்டவன், ப்ராஹ்மணன், குழந்தை, பசு, வயது சென்றவர், வியாதியுள்ளவர், ஸ்திரீ, மற்றைப் ப்ராணிகள் இவர்களில் சரண மடைந்தவரைக் காப்பாற்றாமல் விட்டுவிட்டாயோ? ஆசைப்படக்கூடாத ஸ்திரீயினிடம் ஆசைபடாமலிருக் கிறாயா? விரும்பக்கூடிய ஸ்திரீ அழுக்கு வஸ்திரம் முதலியவைகளுள்ளவளானாலும் அவளிடம் அனுராகம்

வைக்காமலிருக்கிறாயோ? அல்லது வழியில் மேலான வர்களாலாவது, ஸமமானவர்களாலாவது? ஜயிக்கப் படாமலிருக்கிறாயோ? அல்லது குழந்தைகளுக்கு அன்னமிடாமல் புசித்தாயோ? (அதிதிகள் வேலைக் காரர்கள் கர்ப்பிணி, ரோகிகள், கன்னிகைகள் இவர்களுக்கு ஆகாரங் கொடாமல் புசித்தாயோ?) இன்னும் மற்ற கெட்ட காரியங்கள் எவையேனும் உன்னால் அனுஷ்டிக்கப்பட்டனவோ? மிகவும் பிரியரும், அந்தரங்க பந்துவுமான ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப் பிரிந்தோமேயென்று வருத்தப்படுகிறாயோ? உனக்கு இதை விட வேறு வியாதி ஒன்று மிருக்க நியாயமில்லை என்று கேட்டார்.

♣ ♣ ♣ ♣

அத்தியாயம்15

தர்மபுத்திரர் பரலோகஞ்சென்றது.

1–7, இம்மாதிரி தர்மபுத்திரர் பலவகையாகச் சந்தேகம்படும்படி அர்ஜுனனுடைய சரீரத்தில் காந்தியின் குறைவு முதலியவைகள் உண்டாயிருந்தன. அவர் ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப் பிரிந்ததால் விசேஷ வருத்தமடைந்தார். அந்தத் துக்கத்தாலேயே தாமரை மலர்போன்ற அவருடைய முகமும் ஹிருதயமும் வாடி இருந்தன. தேஜஸ் குறைந்திருந்தது. பிரபுவாகிய அந்த ஸ்ரீ கிருஷ்ணபகவானையே மனத்தில் தியானித்துக் கொண்டிருந்ததனால் சீக்கிரமாக விடைசொல்ல முடியாதவராயிருந்தார்.

பிறகு மிகச் சிரமப்பட்டுத் துக்கத்தை மனத்தில் அடக்கிக் கைகளால் கண்களைத் துடைத்து, பகவான் தம்மிடம் வைத்திருந்த சக்யம். மைத்ரி, ஸமஹ்ருத் துவம் முதலியவைகளை நினைத்துக் கொண்டும் துக்கத்தினால் கண்டமடைத்து அரைகுறையான வார்த் தையுள்ளவராகத் தமையனை நோக்கி. ஓ மகாராஜ! ஸ்ரீ கிருஷ்ண பகவான் பந்துவாக விருந்து என்னை ஏமாற்றினார். தேவர்களாலும் ஆச்சரியப்படக்கூடிய என்னுடைய மிகுந்த தேஜஸ்ஸை அபஹரித்தார். எந்தப் பகவான் பூமியை விட்டுப்போனதால் இவ்வுலகம் முழுவதும் ப்ராணனில்லாத சரீரம் போலப் பார்க்க அழகாக இருக்கவில்லையோ, (துரித்திரன் போலவென்றும் சொல்வதுண்டு) தவிரவும், துருபத மகாராஜனுடைய சபையில் திரௌபதியின் சுயம்வரத்திற்காக வந்தவர்களும், மன்மதனால் மதித்த

வர்களுமான அரசர்களுடைய தேஜஸை எவர் தமது பார்வையாலேயே அபகரித்தாரோ, எவருடைய அனுக்கிரகத்தால் நான் மத்ஸ்ய யந்திரத்தைப் பிளந்து திரௌபதியைக் கல்யாணஞ் செய்து கொண்டேனோ, எவருடைய ஸான்னித்தியத்தால் காண்டவ வனத்தை அக்கினி பகவானுக்குக் கொடுத்து அதற்கு விரோதஞ்செய்யும் தேவேந்திரனை ஜயித் தேனோ, எவருடைய ஒத்தாசையால் மயனால் உண்டு பண்ணப்பட்டதும், மிகவும் ஆச்சரியகரமானதும், மாயா மயமாயுள்ள சபையானது நம்மால் அடையப் பட்டதோ, மேலும் எவருக்காக வந்த அரசர்கள் மிக்க உத்தம வஸ்துக்களைக் காணிக்கையாகக் கொடுத்தார்களோ, எந்த பரம புருஷன் சமீபத்தில் இருந்தால் உங்களுடைய தம்பியும் அநேக யாஜனை பலமுள்ளவருமான பீமஸேனர் ராஜஸூயயாகத் திற்காக ஜராசந்தன் என்பவனைக் கொன்றாரோ, ஜராசந்தனால் காராகிருகத்தில் அடைக்கப்பட்டிருந்த அரசர்கள் எவரால் விடுவிக்கப்பட்டு உங்களுடைய யாகத்திற்குக் காணிக்கைகளுடன் வந்தார்களோ, ராஜஸூயயாகத்தில் மஹாபிஷேகத்தையடைந்ததும், மேலானதுமான திரௌபதியின் தலைமயிரை துச்சாதனன் பிடித்து இழுக்கும்பொழுது உம்முடைய பத்னியாகிய அவள் எந்தப் பகவானை ஸ்மரித்தாளோ, எவர் உடனே அவ்விடம் வந்து சேர்ந்தாரோ, எவரை நமஸ்கரிக்கும் பொழுது திரௌபதியின் கண்ணீர் எவருடைய காலில் விழுந்ததோ, எவர் துச்சாசனன் முதலியவர்களுடைய ஸ்திரீகள் தலைமயிரை விரித்துக்கொண்டு அழும்படி செய்தாரோ, மேலும் பதினாயிரம் ஸிஷ்யர்களுடன் போஜனம் செய்பவரான துர்வாசஸஸ் என்னும் மஹர்ஷி

நமது சத்துவாகிய துர்யோதனனால் தூண்டப்பட்டு, நம்முடைய ஆசிரமம் வந்தபொழுது எந்தப் பகவான் (கீரையை) தாம் புசித்து அதனால் மூவுலகத்தில் இருக்கும் துர்வாசஸ் முதலிய மகரிஷிகளையும் திருப்தியடையச் செய்து நம்மைக் காப்பாற்றினாரோ, யாருடைய தேஜஸ்ஸினால் பரமசிவன் பார்வதியுடன் கூட ஆச்சரியமடைந்து பாசுபதமென்ற தமது அஸ்திரத்தை எனக்குக் கொடுத்தாரோ, மற்றுமுள்ள தேவர்களும் அவரவர்களுடைய அஸ்திரங்களையும் கொடுத்தார்களோ, இச்சரீரத்துடனேயே நான் ஸ்வர்க்க லோகத்தில் இந்திரனுடைய ஆசனத்தையும் அடைந்தேனோ, மேலும் ஸ்வர்க்கத்திலேயே வெகு காலம் வசித்துத் தேவர்களுக்கு விரோதியான அசுரர்களைக் கொன்றேனோ, அந்தப் பரமபுருஷன் என்னை இப்பொழுது ஏமாற்றிவிட்டார். கரையற்ற கௌரவ ஸைன்யமாகிய சமுத்திரத்தை எவருடைய ஒத்தாசையால் நான் ஒருவனாகத் தாண்டினேனோ, பின்னும் சத்துருக்களால் அபகரிக்கப்பட்ட பசுக்களையும் அவர்களுடைய தேஜஸ்ஸிற்கு இருப்பிடமான இரத்தினக் கிரீடங்களையும் பிடுங்கிக் கொண்டேனோ, பீஷ்மர், கர்ணர், துரோணர், சல்யர் இவர்களுடைய ஸைனியங்கள் மிகுந்த பலமுள்ள க்ஷத்திரியர்களால் அலங்கரிக்கப்பட்டவையானாலும், அவைகளின் நடுவில் எந்தக் கிருஷ்ண பகவான் என்னுடைய ரதத்தில் சாரதியாகவிருந்து ஒவ்வொரு சேனாதிபதிகளுடைய ஆயுஸ்ஸையும், மனோபலத்தையும், தேகபலத்தையும் பார்வையாலேயே குறைத்து விட்டாரோ, விஷ்ணுபக்தனாகிய ப்ரஹ்லாதன் இடத்தில் ஹிரண்யகசிபுவினால் தூண்டப்பட்ட அரசர்களுடைய கொடுமைபோல் எந்தக் கிருஷ்ணனால்

காப்பாற்றப்பட்ட என்னிடத்தில் அளவற்ற மஹிமையுள்ளவர்களான துரோணர், பீஷ்மர், கர்ணன், அசுவத்தாமா, ஸுசர்மா, சல்யர், ஜயத்ரதர், பாஹ்லீகர் இவர்களால் ப்ரயோகிக்கப்பட்ட அஸ்திரங்கள் வீணாகப்போயினவோ, மேலும்; ஜயத்ரதனைக் கொல்லும்பொழுது தண்ணீர் குடிக்காததனால், குதிரைகள் களைத்துப்போக, இரதத்திலிருந்து எந்தப் பகவான் கீழே இறங்கி, பாணத்தால் பூமியைப் பிளந்து. அதிலிருந்து ஜலத்தையுண்டுபண்ணினாரோ, அப்பொழுது எவருடைய மஹிமையால் சத்ருக்கள் மெய்மறந்து என்னை அடிக்காமலிருந்தார்களோ, அந்த மகாபுருஷரும், மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியவருமாகிய பகவானை சாரதியாய் வைத்துக் கொண்டேனோ, நான் மிகவும் அற்ப புத்தியுள்ளவன். அந்த அபராதத்தால்தான் என்னை அவர் ஏமாற்றிவிட்டாரோ, தெரியவில்லை!

18–27. லக்ஷ்மீபதியாகிய பகவான், "ஓ பார்த்த! (குந்தியின் புத்ரன்) ஓ அர்ஜுன! ஓ குரு நந்தனா! (கௌரவர்களைச் சந்தோஷப்படுத்திகிறவன்) ஏ தோழா! என்று சிரித்துக்கொண்டு பலவகையாக வேடிக்கை வார்த்தைகளைப் பேசினார் அல்லவா? அவைகள் யாவும் இப்பொழுது என் மனத்திலிருக்கின்றன.ஒரே படுக்கையில் படுத்துக்கொள்வது, ஒரே ஆசனத்தில் உட்காருவது, சேர்ந்தே ஸஞ்சரிப்பது புசிப்பது, தம்முடைய குணங்களை தோத்திரம் செய்து கொள்வது, ஆகிய இவைகளால் எங்களிருவர்களுக்கும் மனமும் ஒன்றுபட்டிருந்ததால் சில சமயம் நீர் சொன்ன படி செய்தார் அல்லவா என்று நான் கிருஷ்ணனைப்

பரிகாசஞ் செய்தாலும் தகப்பன் பிள்ளை செய்த பிழையைப் போலவும், அற்ப புத்தியுள்ள என்னுடைய குற்றத்தை விசேஷ மஹிமை பொருந்திய வராகையால் ஸகித்திருந்தார், என்னிடத்தில் மிகவும் மித்ரரும், அளவற்ற பிரீதியுள்ளவரும், அனுகூலத்தைச் செய்ய விரும்பியவருமான புருஷோத்தமனை விட்டுப்பிரிந்து, வழியில் அந்தப் பகவானுடைய களத்திரங்களைக் காப்பாற்ற முயன்றும் சக்தியற்றவனாக அஸத்துக்களால் ஸ்திரீயானவள் போல கோபர்களால் ஜயிக்கப் பட்டேன். இந்த காண்டீபம், பாணங்கள், ரதம், குதிரைகள், ரதியாகிய நான் ஆகிய எல்லாம் முன்னிருந்தவைகளானாலும் பகவானிருந்த. வரையில் அவையெல்லாம் காரியத்திற்கு உபயோகப்பட்டன; பகவான் ஸ்வர்க்கம் போன பிறகு ஒருக்ஷணத்திற்குள் சாம்பலில் செய்த ஆஹுதிபோலவும், வஞ்சகனுக்குத் தானம் செய்தது போலவும், களர் பூமியில் பயிரிடுதல் போலவும் பிரயோசனமற்றவைகளாயின. ஓ மகாராஜ! துவாரகா நகரத்தில் வசிக்கும் பந்துக்களுடைய க்ஷேமத்தை விசாரித்தீரல்லவா? அவர்கள் எல்லாரும் ப்ராஹ்மண சாபத்தால் மூடர்களாய், மத்யத்தைக் குடித்து மதங்கொண்ட..வர்களாய் ஒருவருக்கொருவர் பந்துக்களல்லாதவர்கள் போல் முஷ்டியால் அடித்துக் கொண்டு, நான்கு ஐந்து பெயர்கள் தவிர மற்றவர்கள் எல்லாரும் இறந்தார்கள், பிராணிகள் ஒருவரை யொருவர் காப்பாற்றுவதும், ஒருவரை யொருவர் கொல்வதுமாகி எல்லாம் பகவானுடைய இச்சையே தவிர வேறில்லை, ஜலத்தில் மத்ஸ்யம் முதலிய ஜந்துக்களில் பெரியவைகள் சிறிய ப்ராணிகளைக் கொல்வதுபோல் ஸகல ப்ராணிகளிலும் பலசாலிகள் அற்ப பலமுள்ளவர்களை ஜயிக்கிறார்கள், இப்படியே

யாதவர்களும் ஒருவருக்கொருவர் அடித்துக்கொள் ளும்படி பகவான் செய்து பூமியின் பாரத்தைப் போக்கினார், தேசத்திற்கும் காலத்திற்கும் தகுந்த வைகளும், மனத்தின் தாபங்களைப் போக்கக் கூடிய வைகளுமான கோவிந்தனுடைய வார்த்தைகளை நினைக்க நினைக்க அவைகள் மனதை அபஹரிக் கின்றன என்று பிரலாபித்தார்.

28–31. இப்படி அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய தாமரைமலர் போன்ற பாதங்களை நினைத்து அவரிடம் விசேஷ பக்தியை அடைந்தார். அதனால் சித்த சுத்தி உண்டாயிற்று. சண்டையில் பகவானால் உபதேசிக்கப்பட்ட ஞானமானது, கால மகிமையாலும், கர்ம வசத்தாலும் தமோ குணத்தாலும் மறைக்கப்பட்டிருந்தது, அதனால் அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய திவ்ய சரணங்களைத் தியானித்து பூர்ணமான பக்தியை அடைந்துமனத்தில் இருந்து எல்லா அழுக்கும் நீங்கினவராய் முந்திய ஞானத்தை நினைத்துக்கொண்டார்.

முக்குணங்கள் புண்யபாபங்கள், ஸ்தூல சரீரம் ஆகிய இவைகளின் பற்றுதல் (சம்பந்தம்) அற்றுப் போயிற்று. உத்பத்தி முதலியவைகள் விலகின. ஸ்வரூப ஞானம் உண்டானது. ஸகல ஸம்ஸயங்களும் நாசமாயின. ஆனதால் அர்ஜுனன் எந்த வகையிலும் துக்கமற்றவனானான்.

32–33. இம்மாதிரி பகவான் வைகுண்டம் சென்ற தையும், யதுகுலத்தின் நாசத்தையும் அர்ஜுனன் இடமாகத் தர்மபுத்திரர் தெரிந்து கொண்டு அந்தக்

அந்தக்கரணத்தையடக்கித் தானும் ஸ்வர்க்கம் போக விரும்பினார். குந்திதேவியும் அர்ஜுனன் வார்த்தையைக்கேட்டு பகவானிடத்தில் இடைவிடாமல் பக்தி செய்து அவரிடத்திலேயே மனத்தைச் செலுத்தி ஸம்சாரத்திலிருந்து வைராக்யத்தை யடைந்தாள். (ஜீவன் முக்தியை அடைந்தாளென்பது கருத்து)

34–35. காலில் தைத்த ஒரு முள்ளைப் பின்னும் ஒரு முள்ளினால் எடுப்பதுபோல, பகவான் யது குலத்தில் கிருஷ்ணனாக அவதரித்து, பூமியின் பாரத்தை நிவர்த்தித்து, அந்தச் சரீரத்தையும் விட்டுவிட்டார். பூமிக்குப்பாரமாயிருந்த, சரீரமும், அதைப் போக்கடித்த கிருஷ்ண சரீரமும் பகவானுடையதாகையால் அவைகளில் அவருக்கு சமான ப்ரீதியே தவிர பேதமில்லை. மேலும் வேஷதாரியான நடன் மறுபடி வேஷத்தைக் கலைத்து விடுவதுபோல ஈசுவரன் மத்ஸ்யம், கூர்மம் (ஆமை) முதலிய உருவங்களையெடுத்து, அவைகளை விட்டு விடுகிறார். அப்படியே கிருஷ்ணனாகவிருந்து பூமிக்குப் பாரமாயுள்ள அரசர்களை நாசஞ் செய்து அந்தச் சரீரத்தையும் விட்டுவிட்டார்.

36–38 1/2. எல்லோராலும் கேட்கக் கூடிய திவ்ய சரிதமுள்ள பகவான் என்றைய தினம் இவ்வுலகத்தை விட்டு வைகுண்டஞ் சென்றாரோ, அன்றையதினமே அஞ்ஞர்களைக் கலி சூழ்ந்து கொண்டது. அப்பொழுது பட்டணத்திலும், தேசத்திலும், வீடுகளிலும். மனத்திலும் கலி நெருங்குவதால் பணக்காரர்களுக்கு நல்ல பாத்திரத்தில் தானஞ் செய்ய வேண்டுமென்ற எண்ண மில்லாமலிருப்பது, பொய் சொல்வது, கபடமாகப் பேசுவது, பிறரை ஹிம்சிப்பது ஆகிய

அதர்மங்கள் யாவும் பரவின, அதனைப் பார்த்து வித்வானாகிய தர்மபுத்திரர் இவ்வுலகத்தைவிட்டுப் போக முயற்சித்தார். பின்பு, அவர் தமக்குச் ஸமான குணங்கள் பொருந்தியவருமான பரீக்ஷித்திற்கு ஹஸ்தினாபட்டணத்தில் ராஜ்யாபிஷேகஞ் செய்வித்து, சூரஸேனருடைய புத்திரராகிய வஜ்ரரையும் மதுரா நகரத்திற்கு அரசனாகச் செய்தார்.

39–50. பின்பு மிக்க ஸாமார்த்தியமுள்ள தர்மபுத்ரர் பிராஜாபத்யம் என்ற இஷ்டியைச் செய்து அக்னிகளை ஆத்மாவில் ஆரோபித்துக்கொண்டார். அப்பொழுது சரீரத்தில் அணிந்து கொண்டிருந்த வளை முதலிய ஆபரணங்களையும், பட்டு முதலியவைகளையும் விட்டு மோஹம், அஹங்காரம் முதலியவைகளை விட்டவராய், ஸகல பந்தங்களையும் நிவர்த்தித்துக் கொண்டார், ஸகல இந்திரியங்களை மனத்திலும், அதனைப் ப்ராணனிடத்திலும், அதனை அபானனிடத்திலும், அதனை வ்யாபாரத்துடனும், மிருத்யுவினிடத்திலும், அதனை ஐந்து பூதங்களால் ஏற்பட்ட சரீரத்திலும், அதனைக் குணத்திலும, அதனை அவித்தையிலும், அதனை ஜீவனிடத்திலும் அந்த ஜீவனை நாச மற்றவரும் கூடஸ்தருமாகிய பரப்ரஹ்மத்திலும் லயப் படுத்தினார். மேலுமவர் மரவுரியை உடுத்திக்கொண்டு ஆஹாரமில்லாமலும் மௌனியாகவும், தலையை அவிழ்த்துக்கொண்டு மூடன் போலவும், பைத்தியம் பிடித்தவன்போலவும், பிசாசு போலவும், ஒன்றையும் பாராதவராய்ச் செவிடன் போலப் பிறர் சொல்வதைக் கேளாமல் பெரியோர்களான முன்னோர்கள் போன வழியாக வடக்குத் திக்கை நோக்கிச் சென்றார். அப்பொழுது எதை அடைந்தவர்கள் மறுபடியும்

ஸம்ஸாரத்தை அடையமமாட்டார்களோ, அந்தப்பர மாத்வையே தியானித்துக் கொண்டிருந்தார். அவருடைய தம்பிகள் அனைவரும் நிச்சயமுள்ளவர்களாய்த் தர்ம புத்திரர் பின் சென்றார்கள். அதர்மத்தின் ஒத்தாசை யுள்ள கலியானது பிரஜைகளைப் பார்த்து அவருடைய சமீபத்திலும் சென்றது. அப்பொழுது ஸகல தர்மங் களையும் நன்றாக அனுஷ்டித்தவர்களான தர்ம புத்திரர் முதலியவர்கள் ஸ்ரீ நாராயணருடைய சரணங்களே நமக்குச் சரணமென்று நினைத்து, அதனால் பக்தி அதிகரித்தவர்களாகி, சித்தசுத்தியை யடைந்து, பரம புருஷனாகிய ஸ்ரீ நாராயணனிடத்தில் ஸ்திர புத்தியுள்ளவர்களாய், யோகிகளால் அடையக் கூடியதும் ஸம்ஸாரிகளுக்குக் கிடைக்காததுமான மேலான கதியை அடைந்தார்கள். மேலும் ஞானியாகிய விதுரரும் ப்ரபாஸ தீர்த்தக்கரையில் ஸ்ரீ கிருஷ்ணன் இடத்தில் சித்தத்தைச் செலுத்தி. இந்தச் சரீரத்தை விட்டுப் பித்ரு தேவதைகளால் அழைக்கப்பட்டுத் தமது உலகஞ் சென்றார். அப்பொழுது திரௌபதியும் தன்னுடைய பதிகளுக்குத் தன்னிடத்தில் ப்ரீதியில் லாமையைப் பார்த்து வாஸுதேவரிடம் இடை விடாமல் பக்தி செய்து உத்தமகதியையடைந்தாள்.

51. பகவான் வைகுண்டம் சென்றதும், பாண்டவர்கள் பகவானை யடைந்ததுமாகிய இக்கதைகள் மிகவும் பரிசுத்தமானவைகள். இவைகளைச் ச்ரத்தையுடன் கேட்பவர்களுக்கு ஸ்ரீ மஹாவிஷ்ணுவிடத்தில் பக்தியும், அதனால் மோக்ஷமும் கிடைக்கும்.

நோட்டு

ஸக்யம்:அனுகூலத்தைச் செய்ய விரும்பியிருப்பது. மைத்ரி: உபகாரியாகவிருப்பது, ஸஹிருத்வம் பந்துவாகவிருப்பது. ஸ்ரீத. ஸக்யம்-சமான வயது உள்ளவராக இருப்பதால் ஏற்படக்கூடியது. மைத்ரி உபகாரத்தால் ஏற்படக்கூடியது; அதிகப் ப்ரேமை யால் உண்டாகக் கூடியது, சந்த்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்-16

பரீக்ஷித்து தர்மத்தைக் கண்டது

1-4 'பரீக்ஷித்து பிறந்தபோது அவருடைய ஜாதகத்தைப் பார்த்து ஜ்யோதிஷ சாஸ்திரமறிந்த ப்ராஹ்மணோத்தமர்கள் சொன்னபடியே பின், ஹஸ்தினாபுரத்தில் உத்தரையின் புத்திரர் அரசனாக இருந்து ப்ராஹ்மணர்களுடைய கட்டளையின்படி பாகவதர்களுக்குள் சிறந்தவராகி இராஜ்யத்தைக் காப்பாற்றிவந்தார். அவர் உத்தரனுடைய பெண்ணாகிய இராவதீ என்பவளை விவாஹஞ் செய்துகொண்டார். பின்னும் அவர் கிருபரைக் குருவாக வைத்துக் கொண்டு கங்கையின் கரையில் மூன்று அச்வமேத யாகங்களைச் செய்தார். அவைகளில் தேவர்கள் நேரில் வந்து ஹவிர்ப்பாகங்களைப் பெற்றுக் கொண்டார்கள். மேலும் அவர் திக் விஜயஞ் செய்து வரும்பொழுது வழியில் ஒரு எருதையும் பசுவையும் ஒரு சூத்திரன் காலால் உதைக்கக் கண்டார். அவன் ராஜவேஷம் பூண்டிருந்தான். அவனே கலிபுருஷன், அவனைத் தமது பலத்தால் நிக்ரஹித்தார் என்று ஸூதர் சௌனகருக்குச் சொன்னார்.

5–10 'இதனைக் கேட்டு சௌனகர் "ஓ ஸூதரே! பரீக்ஷித் மஹாராஜா கலியை நிக்ரஹிக்க காரணமென்ன? அவன் அரசனாகவும் சூத்ரனாகவுமிருந்து பசுவைக் காலால் ஏன் உதைத்தான்? அந்த விஷயம் பகவத் கதையிலடங்கினதாலும், ஈசுவரனுடைய பாதங்களாகிய தாமரைப் புஷ்பங்களிலிருந்து பெருகி

வரும் மதுவைப் பானஞ் செய்து திருப்தியடைந் திருக்கும் மஹான்களுடைய கதையில் சேர்ந்ததாலும் அதைச் சொல்ல வேண்டும். அற்ப ஆயுள் உள்ள வர்களும் மரிக்கும் ஸ்பாவ முள்ளவர்களுமான மனிதர் களுக்கு மோட்சத்தில் விருப்பமிருக்குமாகில் பகவான் உடைய கதையைக் கேட்பது முதலியவைகளால் அவர்கள் ஆயுஸ்ஸைக் கழிக்க வேண்டுமே அல்லாமல் கெட்ட விஷயங்களால் வீணாக அதைச் செலவிடக் கூடாது. இந்த யாகத்திற்காக மஹர்ஷிகள் அந்தகனை (யமனை) வரவழைத்திருக்கிறார்கள். பகவானுடைய லீலைகளையே கேட்கவேண்டும். சோம்பல், புத்திக் குறைவு, அற்பமான ஆயுள் ஆகிய இவைகளுள்ள புருஷனுடைய ஆயுஸ்ஸானது இராத்திரியில் தூக்கத் தாலும்' பகலில் ஸம்ஸாரத்திற்கு உபயோகமான காரியங்களிலும் செல்லுகிறது. ஆகையால் பகவான் உடைய கதையைக் கேட்பதில் காலத்தை உபயோகியா தவர்களுடைய ஜீவனம் வீணானது என்றார்கள்.

11–17 இதனைக் கேட்டு ஸூதர் சௌனகரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார். பரீக்ஷித்து மகாராஜன் திக்விஜயம் செய்து வருங்காலத்தில் தம் உடைய ஆளுகைக்குட்பட்ட குருஜாங்கலம் இவை களில் கலி வந்து பிரவேசித்தாரென்ற அப்ரியமான வார்த்தையைக் கேட்டவுடன் யுத்தத்தில் மிகவும் சாமார்த்தியம் உள்ளவராகையால் ஆயுதத்தை எடுத்துக் கொண்டு கறுத்த குதிரைகள் கட்டிய இரதத்திலேறிப் புறப்பட்டார். அந்த இரதமானது சிம்மத்வஜமுள்ளது. ஸகல அலங்காரமுள்ளது. யானைகள், குதிரைகள் ரதங்கள், காலாட்படைகள் ஆகிய இவைகளுள்ள சேனைகள் அவரைச் சூழ்ந்து

கொண்டன. அவர் பத்ராச்வம், கேதுமாலம், கிம் புருஷம், பாரதம், உத்தரகுரு ஆகிய வர்ஷங்களில் சென்று அங்கிருக்கும் அரசர்களை ஜயித்து அவர் களிடம் கப்பம் பெற்றுக்கொண்டார். ஒவ்வொரு வர்ஷங்களிலும் வஸிக்கும் ஜனங்கள் பரீக்ஷித்தின் முன்னோர்களாகிய பாண்டவர்களுடைய சரித்தத்தைச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அதில் கிருஷ்ண பகவானுடைய மஹிமையும் இடையில் வர்ணிக்கப் படுகிறது. அச்வஸ்த்தாமாவினுடையை அஸ்திரத்தினிட மிருந்து பரீக்ஷித்தைக் காப்பாற்றின கதையையும், விருஷ்ணிகளுக்கும் குந்தி புத்திரர்களுக்கும் ஏற்பட் டிருந்த விசேஷ சிநேகத்தைப் பற்றியும், அவர்களுக்குப் பகவானிடமிருந்த அதிக பக்தியைப் பற்றியுஞ் சொல்லிக் கொண்டார்கள். அவற்றைக் கேட்டு, 'பரீக்ஷித்து மகாராஜன் கண்கள் மலர்ந்தவராக விசேஷ சந்தோஷத்துடன் அவர்களுக்கு விலையுயர்ந்த வஸ்திரங்கள், ஹாரங்கள் ஆகிய இவைகளை வெகுமதி செய்தார். பின்னுமவர் மிகுந்த பக்தியுள்ள பாண்டவர்களிடத்தில் விசேஷ பிரீதியால் பகவான் சாரத்தியஞ் செய்தது, சபாநாயராகவிருப்பது, பாண்டவர் களுடைய மனம்போல் நடப்பது, தோழனாயிருப்பது, தூதனாயிருப்பது, ராத்திரியில் கத்தியைக் கையில் வைத்துக்கொண்டு தூங்காமல் காப்பாற்றுவது, அவர்கள் ஏவினதைச் செய்வது, அவர்கள் மஹிமையைப் பற்றி தோத்திரஞ் செய்வது, ஆகிய கதைகளையும் சொல்லி ஸகல ஜகத்தும் பகவானை நமஸ்கரிப்பதையும் பார்த்து ஈசுவரனுடைய சரணங்களில் பக்தி செய்தார்.

18–25 இப்படி அந்தப் பரீக்ஷித்து மகாராஜன் முன்னோர்கள் செய்தபடி ஒவ்வொரு நாளும் தாமும்

நடத்தி வந்தார். அப்பொழுது சமீபத்தில் ஒரு ஆச்சரியத்தைக் கண்டார். அதென்னவெனில் தர்ம மானது விருஷப ரூபமெடுத்து ஒரு காலைப் பூமியில் ஊன்றிக்கொண்டு குழந்தைகள் இறந்து போனதால் துக்கப்படும் தாய் போலக் காந்தி குறைந்து கண்ணீரைப் பெருக்கி அழுது கொண்டிருக்கும் ஒரு பசுவை நோக்கி பின்வருமாறு கேட்டது. மங்களமாகிய ஸ்பாவமுள்ளவளே! சௌக்யமாயிருக்கிறாயா? உன் னுடைய முகம் வாடியிருக்கிறது. தேகத்தில் காந்தி குறைந்திருக்கிறது. ஓ அம்மா! மனத்தில் கவலையுள்ள வளாகத் தோன்றுகிறாய். தேசாந்திரம் போயிருக்கும் பந்துக்களைப் பற்றி வருத்தப்படுகிறாயா? அல்லது ஒரு காலால் நிற்கும் என்னைப் பற்றி துக்கிக்கிறாயா? அல்லது கெட்ட அரசர்களால் அனுபவிக்கப்படும் உமது சரீரத்தைப் பற்றி கவலைப்படுகிறாயா? அல்லது யாகங்கள் விதிப்படி செய்யப்படாததால் அசுரர்கள் அவைகளை அபகரிக்கிறார்களேயென்று வருத்தப்படுகிறாயா? காலத்தில் மழை பெய்யாமல் இருப்பதால் கஷ்டப்படும் ப்ரஜைகளைப் பார்த்துச் ச்ரமப்படுகிறாயா? அல்லது பர்த்தாவினால் காப்பாற்றப் படாத ஸ்திரீகளையும, தாயார், தகப்பன் முதலியவர் களால் ரட்சிக்கப்படாத பாலர்களையும், ராக்ஷஸர்கள் போலக் குரூரஸ்பாவமுள்ளவர்களால் உபத்திரவிக்கப் பட்ட சிசுக்களையும், துராசாரமுள்ள ப்ராஹ்மணர் களிடத்திலிருக்கும் வாக்தேவியையும், ப்ராஹ்மணர் களைச் சம்ரட்சிக்காத க்ஷத்திரியர்களை சேவித்துக் கொண்டிருக்கும் மேலான குலத்தில் பிறந்தவர்களைப் பற்றிக் கவலையடைகிறாயா? அல்லது கலியினால் வியாபிக்கப்பட்ட க்ஷத்திரியர் தங்களைப் பற்றியும் இஷ்டமானவிடங்களிலும் இஷ்டப்பட்ட காலங்களிலும்

படுத்துக் கொள்வது, உட்காருவது, புசிப்பது, குடிப்பது, மைதுனம் ஆகிய இவைகளில் ஆசையுள்ள ப்ராணிகளைப் பற்றியும் துக்கிக்கிறாயா அம்மா?! அல்லது துஷ்டர்களைக் கொன்று உன்னுடைய பாரத்தை நிவர்த்திப்பதற்காக அவதாரஞ் செய்த ஸ்ரீ கிருஷ்ணபகவான் வைகுண்டஞ் சென்றதால் மோக்ஷத்தைக் கொடுக்கும் அவருடைய சரிதங்களை நினைத்து அவருடைய விரகத்தைச் ஸகிக்காமல் துன்பமடைகிறாயா? மிக்க பலசாலியான காலத்தின் மஹிமையால் உன்னுடைய அழகு போய்விட்டதா? நீ வருத்தப்படுங் காரணமென்ன? சொல்ல வேண்டும் என்று கேட்டது.

26–35 இதைக் கேட்டுப் பூமிதேவி தர்மதேவதையை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானாள் "ஓ தர்மமே! நான் வருத்தப்படும் விஷயமின்னதென்று உனக்கே தெரிந்திருக்கலாம், உலகத்திற்குச் சௌக்கியத்தைக் கொடுக்கும் நான்கு கால்களோடு நீ இருந்ததற்கு எவர் காரணமோ, எவரிடத்தில் சத்தியம், சுத்தனாக விருப்பது, தயை, பொறுமை, கொடுப்பது, சந்தோஷம், கபடமில்லாமலிருப்பது. மனது ஸ்திரமாயிருப்பது, வெளியிலிருக்கும் இந்திரியங்களை ஜயிப்பது, தனது தர்மத்தை யனுஷ்டிப்பது, சத்ரு மித்ரர் என்ற பேத புத்தியில்லாமலிருப்பது, பிறர் செய்த அபாரதத்தைப் இருப்பது, இலாபங் கிடைத்தாலும் அதில் உதாசீனனாக பொறுப்பது, சாஸ்திரங்களை விசாரிப்பது ஆத்மஞானம், வைராக்கியம் எல்லா வற்றிற்கும் எஜமானனாக விருப்பது; காரியங்களில் சாமர்த்தியம், அழகு, தைர்யம், மிருது ஸ்பாவமுள்ள வனாகவிருப்பது, பக்தி, விசேஷ வணக்கம், சுபாவம்;

மனோபலம், ஞானபலம், இந்திரியபலம், மேலான ஞானம் முதலியவைகளில் கம்பீர மனமுள்ளவராக இருப்பது, அசையாத சித்த முள்ளவராக விருப்பது சிரத்தை, கீர்த்தி, மானம், அகங்காரமில்லாமலிருப்பது ஆகிய இவைகளும் மற்ற எல்லாராலும் ஆசைப்படக் கூடியவைகளுமான மகாகுணங்கள் எப்பொழுதும் வஸித்துக் கொண்டிருந்தனவோ, அந்தக் குண நிதியாகிய ஸ்ரீநிவாஸன் இவ்வுலகத்திலில்லாததனால் பாப ஸ்பாவமுள்ள கலி இவ்வுலகத்தில் வியாபித்தான். அதனால் எனது ஸ்வரூபத்தையும், உன்னையும் தேவர்களையும், மஹர்ஷிகளையும், பிதிருக்களையும், மற்ற சாதுக்களையும், எல்லா ஜாதியார்களையும், ஆச்ரமிகளையும் பற்றிக் கவலைப்படுகிறேன், ப்ரஹ்ம தேவர் முதலியவர்கள் எந்த லக்ஷ்மீதேவியின் கடாக்ஷத்திற்காக வெகுகாலம் தபஸ் செய்தார்களோ, அந்த லக்ஷ்மீதேவியானவள் மேலானவர்களால் ஆசிரயிக்கப்பட்டவளானாலும், தான் வஸிக்குமிடமான தாமரைமலர்களின் வனத்தை விட்டுப் பகவானுடைய பாதங்களாகிய தாமரைப் புஷ்பங்களை மிகுந்த ப்ரீதியுடன் ஸேவிக்கிறாள்; வஜ்ரம், அங்குசம், துவஜம் ஆகிய இந்த ரேகைகளுள்ள அந்தப் பகவானுடைய திவ்ய விபூதிகளையறிந்து மூவுலகிலும் மேலானவளாக இருந்தேன். இப்படி கர்வமுள்ள என்னை ஈசுவரன் கடைசியில் விட்டுப்பிரிந்தார், அவர் எனக்குப் பாரமா யிருந்த அஸுராம்சமுள்ள அரசர்களுடைய அனேக அக்ஷௌஹிணியை நாசஞ் செய்வதற்காகவும், நான்கு பாதங்களுடன் உலகத்தில் உன்னை ஸஞ்சரிக்கும்படி செய்வதற்காகவும் யதுகுலத்தில் அவதரித்தார்.

36 எந்தப் புருஷோத்தமர் பிரியமான பார்வை,

அழகான சிரிப்பு, மனோஹரமான பேச்சு ஆகிய இவைகளால் ஸத்யபாமை முதலியவர்களுடைய மானத்தையும் தைர்யத்தையும் போக்கடித்தாரோ, எவருடைய பாதத்தின் அடி வைப்பினால் அலங்கரிக்கப் பட்ட எனக்கு மயிர்க்கூச்சலுண்டானதோ, அந்தப் பரமபுருஷனை விட்டுப் பிரிந்திருக்க யாரால் முடியும்" என்றாள்.

37. இப்படி இருவரும் பேசிக் கொண்டிருக்கும் பொழுது பரீக்ஷித்து என்ற ராஜரிஷியானவர் குருக்ஷேத்திரத்தில் கிழக்கு முகமாய் ப்ரவஹிக்கும் ஸரஸ்வதி நதிக்கரை வந்தார்.



அத்தியாயம்- 17

பரீக்ஷித் மகாராஜன் கலியை நிக்ரஹித்தது

1–15. அவ்விடத்தில் பரீக்ஷித் மஹாராஜர் ஒரு எருதையும், ஒரு பசுவையும், ஒரு சூத்திரன் ராஜ வேஷந்தரித்துக் கையில் தடியை எடுத்து அடித்துக் கொண்டிருக்கக் கண்டார். அவைகளில் தாமரைத் தண்டு போல் வெளுப்பான விருஷபமானது (எருது) மிகவும் பயந்து மூத்திரம் பெய்வதுபோல் நடுக்கம் அடைந்து, அந்தச் சூத்திரனால் அடிக்கப்பட்டு ஒரு காலால் நின்று மிகவும் துன்பமடைந்திருந்தது. பால் முதலியவைகளைக் கொடுக்கும் அந்தப் பசுவானது கன்றில்லாமல் அழுதுகொண்டிருந்தது. அல்லாமல் இளைத்துமிருந்தது. புல் முதலிய ஆஹாரத்தில் விருப்பமுள்ளதாகவுமிருந்தது. அதனைச் சூத்திரன் காலால் உதைத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஸுவர்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட இரதத்தின் மீதேறியிருக்கும் அந்தப் பரீக்ஷித் மஹாராஜன் வில்லில் நாணை பூட்டிக்கொண்டு பின்வருமாறு மேகம் கர்ஜிப்பது போலக் கம்பீரமாகக் கேட்கத் தொடங்கி 'அட மூட நீ யார்? என்னால் காப்பாற்றப்படுகிற தேசத்தில் பலிஷ்டனான நீ, பலமில்லாதவர்களை உபத்திரவிக்கின்றனை. உனது வேஷத்தால் அரசனாகத் தோன்றுகின்றனை. சூத்திரனுடைய காரியத்தை செய்கின்றனை யாதலால் வேஷதாரி போலிருக்கின்றாய் ஸ்ரீ கிருஷ்ண பகவானும், அர்ஜுனனும் இத்தேசத்தை விட்டு வெகு தூரஞ் சென்றுவிட்டபடியால் இரஹஸ் யத்தில் பலமில்லாதவர்களை ஹிம்ஸிக்கின்றனை. ஆகையால் நீ என்னால் கொல்லத்தகுந்தவன். ஓ

தாமரைத் தண்டு போல வெளுத்த சரீரத்துடன் விருஷப ரூபமெடுத்து ஒரு காலால் ஸஞ்சரிப்பவரே! நீர், தேவதைகளுக்குள் யார்? உம்மைப் பார்க்க எங்களுக்கு வெகு துக்கமாயிருக்கிறது. கௌரவர்களுடைய வைகளால் காப்பாற்றப்படும் பூமியில் துக்கத்தால் உண்டாகும் கண்ணீர் விழுகிற வழக்கமில்லை. ஆதலால் நீர் துக்கிக்கவேண்டாம். சூத்திரனிடமிருந்து பயம் உமக்கு நிவர்த்தியாகிவிட்டது. ஓ அம்மா! பசுவே! துஷ்டர்களை நான் சிக்ஷித்து வரும்பொழுது நீ ஏன் அழவேண்டும்? எந்த அரசனுடைய இராஜ்யத்தில் துஷ்டர்களால் ஸாதுக்களுக்கு உபத்திரவம் நேரிடு கிறதோ அவனுடைய கீர்த்தி, ஆயுள், பாக்யம் ஆகிய இவைகள் குறைவு படுவதல்லாமல் அவனுக்குக் நல்ல லோகமும் கிடைக்கிறதில்லை. உபத்திரவப் பட்டவர் களுடைய துன்பத்தை நிவர்த்திப்பதே அரசர்களுக்கு முக்கியமாகிய தர்மம். ஆனதால் பிராணிகளுக்கும் கெடுதியைச் செய்கின்ற மிக்க அஸத்தாகிய இவனைச் சிக்ஷிக்கிறேன். ஓ விருஷபமே! உன்னுடைய மூன்று கால்களை எவன் வெட்டினான்? ஸ்ரீ கிருஷ்ணன் அனுஸரித்த அரசர்களுடைய இராஜ்யத்தில் ஜனங்கள் உன்னைப் போலிருப்பது உசிதமல்ல. நிரபராதியும் ஸாதுவுமாகிய உனக்குக் கெடுதியைக் குறைக்கும் அஸத் யார்? அவனைச் சொல் உனக்கு க்ஷேமம் உண்டாகும். குற்றஞ் செய்யாதவர்களை எவன் உபத்திரவிக்கிறானோ அவனுக்கு என்னிடமிருந்து பலவகையிலும் பயமுண்டாகும். கொஞ்சமாவது பயமில்லாமல் குற்றமற்றவர்களுக்குக் கெடுதி செய்பவன் தேவனானாலும் தோள் வளைகளுள்ள அவனுடைய கையை, வெட்டி விடுவேன். கெட்ட நடையுள்ளவர்களை,

சாஸ்திர முறைப்படி சிக்ஷிக்கும் அரசர்களுக்குத் தமது தர்மத்தை யனுஷ்டிப்பவர்களைக் காப்பாற்றுவதே ஸ்வதர்மம் என்று சொன்னார்.

16–19½. இதனைக் கேட்டு தர்மமானது அரசனை நோக்கி, ஓ மஹாராஜ! எவர்களுடைய குணங்களால் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவர்களுக்கு, தூதனாக விருப்பது முதலியவைகளைச் செய்தாரோ, அந்தப் பாண்டவர்களின் குலத்தில் பிறந்தவர்களான நீங்கள் பயந்தவர்களுக்கு அடய வார்த்தை சொல்வதே உசிதம். ப்ராணிகளுக்குத் துக்கமுண்டாகுங் காரணத்தைப் பற்றிப் பல வகையான மதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சிலர் ஆத்மாவே துக்கத்திற்குக் காரணமென்றும், லோகாயதகர்கள் நவகிரஹங்களின் அதிதேவதையே துக்கத்திற்குக் காரணமென்றும், மீமாம்ஸகர்கள் கர்மமே காரணமென்றும், சிலர் ஸ்வாபவமே காரணமென்றும், சிலர் ஈசுவரனே காரணமென்றும், சொல்லுவதால் ஊகிக்க முடியாததும், குறிப்பிடக் கூடாததுமான ஏதோ ஒரு காரணத்திலிருந்து துக்கம் உண்டாகிறது. ஒன்றையும் நிச்சயமாகச சொல்லக் கூடவில்லை. இப்படி மதபேதத்தால் மோஹித்து இருப்பதால் எந்தப் புருஷனிடமிருந்து துக்கங்கள் நேரிடுகின்றனவோ அந்தப் புருஷன் இன்னாரென்று நாம் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனது பற்றி அதன் காரணத்தை நீரே உம்முடைய புத்தியால், யோசித்துத் தெரிந்து கொள்ளும் என்று சொல்லிற்று.

20–27. இதனைக் கேட்டு அரசன் யோசித்து மோஹமும் இல்லாதவராகத் தர்மத்தை நோக்கிப் பின்வருமாறு சொன்னார். தர்மமமாகிய வார்த்தையைச் சொல்வதால்

நீ தர்மமேயாம். விருஷபத்தின் சரீரத்தை தரித்து இருக்கின்றனை. அதர்மத்தை யனுஷ்டித்தவனுக்கு எவ்வித ஸந்தோஷமேற்படுமோ அது கோட் சொன்னவனுக்கு (அவனைக் காட்டிக் கொடுத்தவனுக்கு) உண்டாகிறது. அல்லது ஈசுவரனுடைய ஸங்கல்பமானது ப்ராணிகளுடைய மனத்திற்கும், வாக்குக்கும் எட்டாத தாகையால் அதை அறியமுடியாததென்பது நிச்சயம். தபஸ், சௌசம், தயை, ஸத்யம் ஆகிய நான்கு தர்மத்திற்குப் பாதங்களாகக் கிருதயுகத்தில் ஏற்படுத்துப் பட்டன. அதர்மத்தின் பாதங்களாகிய கர்வம், ஆசை, மதம் இவைகளால் தர்மத்தின் மூன்று பாதங்கள் முறிக்கப்பட்டன. இப்பொழுது நான்காவது பாதமாகிய ஸத்யத்தை அஸத்யத்துடன் கூடி கலி பிடிக்க முயற்சிக்கின்றன. இவள் பூமி தேவியே. இவளுடைய பாரத்தைப் பகவான் நிவர்த்தித்தார் அவருடைய திவ்யமாகிய அடிவைப்பினால் ஸந்தோஷமடைந்து இருந்தாள். இப்பொழுது அந்தப் பகவானை விட்டுப் பிரிந்து பூமிதேவியானவள், ப்ராஹ்மணர்களைக் காப்பாற்றாதவர்களும் ராஜவேஷத்தை மாத்திரம் தரித்த வர்களுமான சூத்திரர்கள் தமக்கு அதிபதியாக ஆகிவிடுவார்களே என்று கண்ணீரைப் பெருக்கிப் பாக்கியமற்றவள் போல் துக்கிக்கிறாள் என்று சொல்லித் தர்ம தேவதையையும், பூமியையும் ஸமாதானஞ் செய்தார்.

28-33. பின்னும் மஹாரதராகிய அவ்வரசன் அதர்மத்திற்குக் காரணமாகிய கலியைச் சிக்ஷிப்பதற்காகக் கூர்மையான கத்தியை எடுத்தார். அப்பொழுது கலியானவன் அரசன் தன்னைக் கொல்ல விரும்பியதைத் தெரிந்துகொண்டு இராஜவேஷத்தை விட்டு மிகவும்

பயந்தவனாக அவருடைய சரணங்களில் நமஸ்கரித் தான். அப்பொழுது தம்முடைய காலில் விழுந்த கலியைப் பார்த்து, தீனர்களிடத்தில் வாத்ஸல்யமுள்ள வரும், தைர்யமுள்ளவரும், கொண்டாடக்கூடியவரும், சரண்யருமான அரசன் கருணையுடன் அவனைக் கொல்லாமலிருந்ததுமன்றி அவனை நோக்கிச் சிரித்துக் கொண்டு அர்ஜுனனுடைய கீர்த்தியை காப்பாற்றி வரும் நாங்கள், கைகூப்பிச் சரணமடைந்தவர்களைக் கொல்லுகிறதில்லை. ஆனாலும் நீ, அதர்மத்திற்குப் பந்துவானதால் நமக்குச் சொந்தமான இவ்விடத்தில் வசிக்கக்கூடாது. இராஜ சரீரத்தில் நீ வசிக்கும்போது ஆசை, பொய்சொல்லுதல், திருடுவது, துஷ்டனாயிருப்பது, தன்னுடைய தர்மத்தை விட்டுவிடுவது, அலக்ஷ்மீ கபடம், கலஹம், டம்பம் ஆகிய அதர்மத்தின் கூட்டமும் உன்னை யனுஸரிக்கிறது. ஆதலால் அதர்ம பந்துவாகிய ஏ கலியே! ஸத்யம், தர்மம் ஆகிய இவைகள் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும், ப்ரஹ்மாவர்த்தத்தில் நீ வசிக்கக் கூடாது. இவ்விடத்தில் யாகத்தின் விதியை நன்றாக அறிந்தவர்கள் யக்ஞேசரராகிய பகவானை யாகத்தால் பூஜிக்கிறார்கள். மேலும் யாக ஸ்வரூபியான பகவான் யாகஞ் செய்பவர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கிறார். தவிரவும், ,ஸ்தாவர ஜங்கமங்களாகிய எல்லாப் ப்ராணிகளிடத்திலும் வாயுவைப் போல் அந்தர்யாமியாயிருந்து அவரவர்கள் இஷ்டத்தை நிறைவேற்றுகிறார் என்று சொன்னார்.

34–36. அதனைக் கேட்டு அந்தக் கலி மிகவும் நடுக்கமுள்ளவனாகி முயற்சியுள்ள யமனைப்போலக் கத்தியைக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் பரீக்ஷித்தை நோக்கி, ஓ ஸார்வபௌமரே! தங்களுடைய

உத்தரவுப்படி எவ்விடத்திலாவது வசிக்கிறேன். எவ்விடத்திலிருந்தாலும், வில்லையும் பாணத்தையும் கையில் வைத்துக் கொண்டிருக்கும் உம்மை பார்ப்பேன். தர்ம சிந்தையுள்ளவர்களுக்குள் சிறந்தவரே! எவ்விடத்தில் வசிக்கும்படி நீர் ஆஞ்ஞாபிக்கிறீரோ அவ்விடத்திலேயே வசிப்பேன். அப்போர்ப்பட்ட ஸ்தானத்தை எனக்குக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.

37–39. அப்பொழுது இம்மாதிரி கலியால் பிரார்த்திக்கப்பட்ட பரீக்ஷித்து மஹாராஜா. சொக்கட்டான் ஆட்டம், மத்யபானம், ஸ்திரீ ஸங்கமம், ப்ராணி ஹிம்ஸை ஆகிய நான்கு அதர்ம ஸ்தானங்களிலும் வசிக்கும்படி ஆஞ்ஞாபித்தார். அதிலும் திருப்தியடையாமல் பின்னும் சிலவிடங்கள் கொடுக்க வேண்டுமென்று கலி கேட்டுக்கொள்ள, அப்பொழுது அரசன் ஸுவர்ணத்திலிருக்கும்படி சொன்னார். அதனாலும் கலி திருப்தி யடையாமலிருக்க, பின்னும் அரசன் பொய், மதம், காமம், ரஜோ குணம், விரோதம் ஆகிய ஐந்து இடங்களையும், கலிக்குக் கொடுத்தர். இப்படி உத்தரையின் புத்திரரால் கொடுக்கப்பட்ட இந்த விடங்களில் அவருடைய உத்தரவின்படி கலி வசித்துக்கொண்டிருந்தான்.

40-44. ஆனதால் க்ஷேமத்தை விரும்பியவர்கள் இவைகளை ஸேவிக்கக் கூடாது. அவைகளில் ஆசைப்படவே கூடாது. பிறகு அவர் தபஸ், சௌசம், தயை இவைகளை உலகத்தில் பரவச் செய்து முறிந்துபோன தர்மத்தின் மூன்று பாதங்களையும் விருத்தி செய்தார். பூமியையும் விருத்தி செய்தார். அந்தப் பரீக்ஷித்து என்பவர், தர்ம புத்திரர்

காட்டிற்குப் போகும் முன்னிலையில் அவரால் தமக்குக் கொடுக்கப்பட்ட இராஜ்யத்தை அடைந்து விசேஷ கீர்த்தியுள்ளவராய் பிரகாசித்தார். அபிமன்யுவின் புத்திரராகிய அந்த அரசன் இவ்வளவு மஹிமையுள்ளவர். அவர் ராஜ்ய பாலனஞ் செய்யும் காலமாகிய இப்பொழுது நீங்கள் ஸத்ரஞ் செய்ய ஆரம்பித்திருக்கிறீர்கள்.

♣ ♣ ♣ ♣

அத்யாயம்-18

பரீக்ஷித்திற்கு நேர்ந்த ப்ராஹ்மண சாபம்

1-10 எந்தச் சக்கரவர்த்தியானவர் தாயாருடைய கர்ப்பத்திலிருக்கும்போது அச்வஸ்த்தாமாவினுடைய அஸ்திரத்தால் எரிக்கப்பட்டும் அதியற்புதமாகிய செய்கைகளுள்ள ஸ்ரீ கிருஷ்ணனுடைய அனுக்ரஹத்தால் மரணமடையவில்லையோ எவர் ப்ராஹ்மணருடைய சாபத்தால் தக்ஷனால் தமக்கு உயிர்ச் சேதம் நேர்ந்ததும் அதனால் கொஞ்சமேனும் கவலைப்படாமல் இருந்தாரோ, சுகருடைய சிஷ்யராகிய அந்த மஹா ராஜன் ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலேயே தமது மனதைச் செலுத்தி, ஸகல ஆசைகளையும் ஒழித்து, பகவான் உடைய ஸ்வரூபத்தையறிந்து கங்கா நதிக்கரையில் சரீரத்தைவிட்டார். எந்தப் புருஷர்கள் உத்தமச் லோகருடைய கதைகளைச் சொல்வதால் காலத்தைக் கழிக்கிறார்களோ, எவர்கள் மரணகாலத்திலும் பகவான் உடைய சரணாரவிந்தங்களைத் தியானஞ் செய்கிறார் களோ அவர்களுக்கு மோஹம் உண்டாவதில்லை. மேற்சொல்லிய அபிமன்யுவின் புத்திரராகிய சக்ரவர்த்தி அரசனாயிருக்கும்போது லோகத்தில் கலி வந்திருந்தாலும் அதர்மம் பரவாமலிருந்தது. என்றைய தினம் எந்த க்ஷணத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் பூமியை விட்டு மேலுலகஞ் சென்றாரோ, அன்றைய தினமே லோகத்தில் அதர்மத்தை விருத்தி செய்யும் கலி பிரவேசித்தான். தேனீ போல் ஸாரத்தைக் க்ரஹிப்பவராகிய பரீக்ஷித்து மஹாராஜன் கலியைக்கொன்று விடவில்லை. அவன் உடைய சக்தி பரவாமலிருக்கச் செய்தார். ஏனென்றால், அந்தக் கலியின் காலத்தில் ஸங்கல்ப மாத்திரத்தில்

புண்யங்களும், செய்கையால் பாபங்களும் சித்திக் கின்றன. தைர்யமற்றவர்களிடம் சூரனாகியும், தைர்யம் உள்ளவர்களிடம் பயப்படும் ஸ்வாவமுள்ளவனாயு மிருக்கிற கலியானவன் அஜாக்ரதை உள்ளவர்களைப் பிடித்துக்கொள்ள செந்நாய்போல மிக்க ஜாக்கிரதை யுள்ளவனாக இருக்கிறான் (அவன் என்ன கெடுதியைச் செய்யப் போகிறான் என்பது கருத்து) ஓ மஹர்ஷிகளே! உங்களால் கேட்கப்பட்டதும் மிக்க புண்யகரமுமான பரீக்ஷித்தின் சரிதத்தை ஸ்ரீ வாஸுதேவருடைய திவ்ய கதைகளுடன் சொன்னேன். ஆதலால் க்ஷேமத்தை விரும்பிய மனிதர்கள் பகவானுடைய குணங்கள், சரித்திரங்கள் ஆகிய இவைகளடங்கிய கதைகளையே சொல்ல வேண்டும். அவைகளையே கேட்க வேண்டும். மற்ற கதைகளை ஸேவிக்கக் கூடாதென்பது கருத்து, என்று ஸூதர் சொன்னார்.

11–18 இதனைக் கேட்டு மஹர்ஷிகள் அவரை நோக்கி, 'ஓ ஸூதரே! நீர் மரண தர்மமுள்ள எங்களுக்கு அமிருதமான ஸ்ரீ கிருஷ்ண கதையைச் சொன்னதால் வெகுகாலம் ஜீவித்திருக்கும் எங்களால் இப்பொழுது அனுஷ்டிக்கப்படும் ஸத்ரத்தை யாதொரு குறைவுமின்றி முடிப்பது அரிதாகையால் அதன் பூர்ண பலத்தை அடைவோமென்பது நிச்சயமில்லை, ஆகிலும், அதனைச் செய்து கொண்டு புகையினால் கறுத்த சரீரமுள்ள வர்களாகிக் கஷ்டப்படும் எங்களுக்கு ஸ்ரீ கோவிந் தருடைய பாதங்களாகிய தாமரை மலரின் தேனைக் கொடுத்தீரல்லவா? பகவத் பக்தர் களுடைய சேர்க் கையின் சிறிது பாகத்திற்குச் ஸ்வர்க்கமாவது, மோக்ஷமாவது, மற்ற ராஜ்யம் முதலியவைகளாவது ஸமமானவையல்ல. மஹான்களுக்கு முக்கியமான

கதி பரம புருஷனே. அவரிடத்தில் ப்ராகிருத குணங்களில்லை. அவரிடத்தில் பொருந்தியிருக்கும் கல்யாண குணங்கள் இவ்வளவென்று பரமசிவன், ப்ரஹ்மா முதலிய தேவர்களாலும் அறிய முடியவில்லை. அப்பேர்ப்பட்ட பகவானுடைய கதையைக் கேட்டு ரஸிகனான எவன்தான் போதுமென்று திருப்தி அடைவான்? ஆதலால் பகவத் பக்தர்களுக்குள் முக்கியரும் எல்லாவற்றையு மறிந்தவருமான நீர் மிக்க கம்பீரமாயும், பரிசுத்தமாயுமுள்ள மஹா விஷ்ணுவின் சரிதத்தைக் கேட்க விரும்பும் எங்களுக்கு விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும். மஹா பாகவத சிரோமணியான அந்தப் பரீக்ஷித்து மஹாராஜன் சுகரால் உபதேசிக்கப்பட்ட ஞானத்தால் மோக்ஷமென்ற பெயருள்ள ஸ்ரீ நாராயணனுடைய சரணத்தையடைந் தாரல்லவா? மிகுந்த புண்யத்தைக் கொடுப்பதும், மிகவும் அற்புதமுமாகிய யோகத்தைக் காட்டுவதும், நாசமற்றவராகிய பகவானுடைய சரீரத்தால் அலங்கரிக் கப்பட்டதும், பக்த பக்தர்களுக்கு மனோஹரமாய், பரீக்ஷித்துக்குச் சுகரால் உபதேசிக்கப்பட்டதுமான ஸ்ரீமத் பாகவதமென்ற ஆக்யானத்தை நன்றாகத் தெரியும்படி சொல்ல வேண்டும் என்று ப்ரார்த்தித் தார்கள்.

18–23 இதனைக் கேட்டு ஸூதர் சொல்லுகிறார். ஆச்சரியம், யான் விலோம ஜாதியுள்ளவனானாலும் என்னுடைய பிறப்பும் இப்பொழுது பெரியோர்களைச் ஸேவித்ததால் சபலமாயிற்று. மிக்க மகான்களாகிய புருஷர்களுடன் பேசக் கூடிய பாக்யம் கிடைத்த தாலேயே தாழ்ந்த குலத்தில் பிறந்ததால் உண்டான மனக்கவலை நீங்கியது. எந்தப் புருஷன் அளவற்ற

சக்தி, அளவற்ற குணங்கள் ஆகிய இவைகளுள்ளவரோ, நாசமற்றவரோ; அதனால் அனந்தரென்று சொல்லப் படுகிறாரோ, மகான்களுக்கு முக்கிய கதியாயிருக்கும் அந்தப் புருஷோத்தமருடைய குணங்களைச் சொல்லுகிற எனக்குத் துக்கமே நேரிடாது. லக்ஷ்மீ தேவியானவள் தன்னைப் ப்ரார்த்திக்கும் ப்ரஹ்மா முதலிய தேவர்களை லக்ஷியம் செய்யாமல் தன்னை விரும்பாதவரான ஸ்ரீ நாராயணனுடைய பாததூளியை சேவிக்கிறாள். அவருக்குச் சமமானவராவது, மேற்பட்ட வராவது ஒருவருமில்லை. இதனாலேயே அவருடைய மஹிமை நன்றாக விளங்கும். தவிரவும், எவருடைய சரண நகத்திலிருந்து பெருகியதும், ப்ரஹ்மதேவரால் சேவிக்கப்பட்டதுமான கங்காஜலம் பரமசிவன் முதலிய எல்லோரையும் பரிசுத்தப்படுத்துகிறதோ, அந்த முகுந்தனைத் தவிர வேறு யாரைப் பகவான் என்று சொல்லக்கூடும்? அந்த ஸர்வேசனிடம் அந்தரங்கத்தைச் செலுத்தியவர்கள் தைர்யமுள்ள வர்களாகத் தேகம் முதலியவைகளில் வெகுநாளாக உண்டாகியிருக்கும் விசேஷ அபிமானத்தை யொழித்து, அஹிம்சை, சமம் இவைகளுடன் கூடி பரமஹம் சர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆனதால் ஸூர்யனுக்குச் சமமான தேஜஸுள்ள ஓ மஹர்ஷிகளே! பகவான் உடைய சரிதத்தைச் சொல்லுகிறேன். பறவைகள் தம்முடைய சக்திக்குத் தக்கபடி ஆகாயத்தில் பறக்குமே அல்லாமல் வெகு உயரத்தில் சக்தியை மீறிப் பறக்க அவைகளால் முடியுமா? வித்வான்கள் தமது புத்திக்கு எட்டியவரையில் மஹாவிஷ்ணுவின் லீலைகளை வர்ணிக் கிறார்கள். அப்படிப்போல எனக்குத் தெரிந்தவரையில் பகவானுடைய சரிதத்தைச் சொல்லுகிறேன் என்று பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்.

24–31 பரீட்சித்து மஹாராஜன் ஒரு நாள் காட்டில் வேட்டையாடி வரும்போது மிருகங்களை நாடிச் சென்றதால் மிகுந்த பசி தாகமுள்ளவராய், ஏரி குளங்களைத் தேடிப் போகும்போது ஒரு ஆசிரமத்தைக் கண்டார். பின்பு அதனுள் சென்று அவ்விடத்தில் கண்களை மூடிக்கொண்டு நிஷ்டையிலிருக்கும் ஒரு மஹர்ஷியைக் கண்டார். அந்த மஹர்ஷி இந்திரியங் களையும் ஸ்வாசத்தையும் அடக்கிக் கொண்டிருந்தார். அவருடைய புத்தியானது விஷயங்களிற் செல்ல வில்லை. ஜாக்ரத், சுவப்னம், சுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளையும் தாண்டி விகாரமற்ற ப்ருஹ்ம ஸ்வரூபியாயிருந்தார். அவருடைய ஜடைகள் நாலு பக்கங்களிலும் அவரை மறைத்துக் கொண்டிருந்தன. தவிரவும் மானின் தோலைப் போர்த்துக் கொண்டு இருந்தார், அவரை நோக்கி அரசன் மிகுந்த தாகத்தால் அதிக வருத்தப்பட்டுத் தண்ணீர் கொடுக்கும்படி பல தரம் வேண்டிக்கொண்டார். இப்படி மகாராஜன் கேட்டு அவருக்கு குடிக்க நீர் கொடாமலிருந்தது இன்றி ஆசனங் கொடுப்பது உட்காருவதற்கு இடம் காட்டுவது. அர்க்கியம், ப்ரியமான வார்த்தை முதலியவைகளாலும் அவரை உபசரிக்கவுமில்லை. அப்பொழுது அரசன், 'மஹர்ஷி தம்மை அவமதித்தார்' என்று நினைத்துப் பசி, தாகம் இவைகளால் துன்பப்பட்டவராகையாலும் அவருக்கு மஹர்ஷியினிடம் கோபமும் விரோதமும் உண்டாயின. இம்மாதிரியான கெட்டகுணம் இதற்கு முன் நேர்ந்தது இல்லை, பின்பு அரசன் ஆசிரமத்திலிருந்து வெளியில் வரும்போது, 'இந்த மஹர்ஷி உண்மையில் நாம், வந்தது தெரியாமல் நிஷ்டையிலிருக்கிறாரா, அல்லது க்ஷத்திரியன் வந்தாலென்ன, போனாலென்னவென்று

கபடமாகக் கண்களை மூடிக்கொண்டிருக்கிறாரா? என்று பரீட்சிப்பதற்காக உயிரிழந்த ஒரு பாம்பை வில் கழியின் நுனியால் தூக்கி அவருடைய கழுத்தில் போட்டுத் தமது பட்டணம் சென்றார்.

32–38 அப்பொழுது மிகுந்த தேஜஸ்வியான சிருங்கி யென்னும் அந்த மஹர்ஷியின் புத்திரன் தோழர் களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அந்த இடத்தில் அரசன் செய்த காரியத்தைக் கேள்விப் பட்டு, தன் தோழர்களை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானான்." ஆச்சரியம் அதர்மம் மேலிட்டது. நாய்களைக் காவலுக்காக வைப்பதுபோல க்ஷத்திரியர்களைப் ப்ராஹ்மணர்கள் காவலாளர்களாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். வாசலில் காத்துக்கொண்டு இருக்கும் அவன் எப்படி பூஜிக்கத் தக்கவனாவான்? பலியைப் புஜிக்கும் காக்கைகள் போலும் (ஜனங் களால் கொடுக்கப்படும் வரியைக் கொண்டு ஜீவிப்பவ னென்பது கருத்து). வாசலைக்காத்திருக்கும் நாய்கள் போன்ற கொழுத்த க்ஷத்திரியர்கள் யஜமானனுக்குக் குற்றஞ்செய்யும்படி நேர்ந்ததே. கெட்ட மார்க்கத்தில் சஞ்சரிப்பவர்களைச் சிக்ஷிப்பவரான ஸ்ரீ கிருஷ்ண பகவான் வைகுண்டஞ் சென்றாலும் மரியாதை தவறினவர்களை நான் நிக்ரஹிக்கிறேன் என்னுடைய பலத்தைப் பாருங்கள் என்று சொல்லி கோபத்தால் கண்கள் சிவக்க, கௌசிகீ நதியின் ஜலத்தால் ஆசமனஞ் செய்து, என்னுடைய பிதாவிற்கு அபராதஞ் செய்தவனும், மரியாதை தவறினவனும், குலத்திற்கு நெருப்புத் தணல் (குலத்தைக் கெடுப்பவனென்று கருத்து) போன்றவனுமாகிய அரசனை இது முதல் ஏழாவது நாளில் தக்ஷகன் கடித்து எரிந்து விடுவானாக